# அபிதான சிந்தாமணி

ஆ. சிங்காரவேலு முதலியார்

# ABITHANA CHINTAMANI

THE ENCYCLOPEDIA OF TAMIL LITERATURE

A. SINGARAVELU MUDALIAR



# அபிதான சிந்தாமணி

ஆ. சிங்காரவேலு முதலியார்

# ABITHANA CHINTAMANI

## THE ENCYCLOPEDIA OF TAMIL LITERATURE

A. SINGARAVELU MUDALIAR

திருத்தியது

ஆ. சிவப்பிரகாச முதலியார்

ASIAN EDUCATIONAL SERVICES

NEW DELHI ★ MADRAS ★ 2002

**ASIAN EDUCATIONAL SERVICES**

* 31, HAUZ KHAS VILLAGE, NEW DELHI - 110016
  Tel : 6560187, 6568594 Fax : 011-6494946, 6855499
  e-mail : asianeds@nda.vsnl.net.in

* 5, SRIPURAM FIRST STREET, MADRAS - 600 014
  Tel : 8115040 Fax : 8111291
  e-mail : asianeds@md3.vsnl.net.in

www.asianeds.com

Price : Rs. 465 (Special Popular Edition for Tamil Nadu Only)
First Published : Madras, 3rd edn. 1934
First AES Reprint : New Delhi, 1981
Eleventh AES Reprint : New Delhi, 2002
ISBN : 81-206-0007-X

Published by J. Jetley
for ASIAN EDUCATIONAL SERVICES
31, Hauz Khas Village, New Delhi - 110 016
Processed by Gautam Jetley
for AES Publications Pvt. Ltd., New Delhi-110 016
Printed at Shubham Offset Press, DELHI - 110 032

உ

கடவுள் துணை

# இரண்டாம் பதிப்பின்

# முன்னுரை

---

தமிழ்நூலின்கண்ணே வழங்கிவரும் சிறப்புப் பெயர்களைக் குறித்தும் பழக்க வழக்கங்களைக் குறித்தும் எளிதில் அறிந்துகொள்ளக் கூடிய சாதன மொன்றுமில்லை. திவாகரம் பிங்கலந்தை முதலிய நூல்கள் சொல்லுக்குப் பொருள் கூறுவனவேயன்றி சிறப்புப் பெயர்களைக் குறிக்கவுமாட்டா, விவரிக்கவுமாட்டா. அக்குறையை நீக்க எழுந்தது அபிதான சிந்தாமணி என்னும் இந்நூல்.

மதுரையின்கண்ணே நிறுவப்பட்டுள்ள தமிழ்ச் சங்கம் வாயிலாக, இற்றைக்கு இருபத்துநான்கு ஆண்டுகட்கு முன்னர் 1910-ம் ஆண்டில் எனதருமைத் தந்தையார் திருவாளர் ஆ. சிங்காரவேலு முதலியார் அபிதான சிந்தாமணி எனப் பெயரிய பெரியதொரு அகராதியை வெளியிட்டார்கள். அப்போதுமுதலே எனது தந்தையார் அந்நூலில் விடப்பட்டுப்போனதாகக் கண்டவற்றையும் பின்னும் தம் ஆராய்ச்சியி ல் தெரிந்தனவற்றையும் அவ்வப்போது குறித்துவந்தார்கள். முதற்பதிப்பு 1050 பக்கங்கள் கொண்டன. இந்நூலோ 1634 பக்கங்களுடையன. அதுகொண்டே இந்நூலில் வந்துள்ள புதிய சொறகளும் இது அடைந்துள்ள திருத்தங்களும் ஒருவாறு விளங்கும்.

இந்நூலை எனது தந்தையார் அச்சுக்குக் கொடுத்துத் தாமே ஆயிரம் பக்கங்கள் வரை அச்சுத்தாள்களைத் திருத்திவந்தார்கள். பின்னர் நோய்வாய்ப்பட்டு 1931-ம் ஆண்டு நவம்பர்மீ (பிர) சிவபெருமானது திருவடி நீழலை யடையவே, அதனை அச்சிட்டு வெளியிடும் பொறுப்பு என்னைச் சார்ந்தது. என்னுடைய உத்தியோகத்தோடு இவ் வேலையையும் செய்வது சிறிது அசாத்தியமாகவே இருந்தது. ஒரு நாள் தற்செயலாக சென்னை யூனிவர்சிட்டியைச் சார்ந்த தமிழ் லெக்ஸிகன் ஆபீசில் எனது தந்தையாருக்குப்பின் அவர் ஸ்தானத்தில் வேலைபார்த்துவரும் எனது நண்பர் இலக்கணவிளக்க ஆசிரியர் பாம்பரை திருவாரூர் சோமசுந்தர தேசிகரவர்களைச் சந்திக்க நேர்ந்தபோது அவர்களை அச்சுத்தாள்கள் திருத்துவதோடு முடியும்வரை ஆவன செய்து முடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர்களும் ஒத்துக்கொண்டு பிற்பாகத்து அச்சுத்தாள்களைப் பார்த்தும், தன்னாலியன்ற திருத்தங்களைச் செய்தும் வேண்டும் உதவி புரிந்தார்கள். அவற்றின் பலனாக இந்நூல் இப்பொழுது வெளியாகின்றது. இதனை அழகுற அச்சிட்டுமுடித்த சென்னை வி. குமாரசாமி நாயுடு கம்பெனியாருக்கும் திரு. சோமசுந்தர தேசிகரவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

திருமயிலாப்பூர்<br>
சிமுக தைத்திங்கள் மீ.

ஆ. சிவப்பிரகாச முதலியார், B. A.,<br>
*Offg. Assistant Presidency Postmaster,*<br>
*General Post Office (Sorting), Madras.*

# INTRODUCTION

## (TO THE FIRST EDITION)

BY

MR. V. KANAKASABAI PILLAY, B.A., B.L.,

AUTHOR OF

*The Tamils Eighteen Hundred Years Ago;*

*Superintendent of Post Offices, Presidency Division, Madras.*

*17th February, 1899.*

I have read a few pages of the Sarvartha Siddhi (Abithana Chintamani) or Encyclopædia of Tamil Literature which the compiler M. R. Ry. Singaravelu Mudaliar, Tamil Pandit, Pachaiyappa's Charities, kindly offered for my perusal and found them very interesting, written in a simple and easy style, and presented for the first time in the form of an Encyclopædia. As the book supplies a long-felt want, I have no doubt it will prove very useful to teachers as well as to students of the Tamil Language. The author has spared no pains in making the work as comprehensive as possible by consulting all the Tamil Puranams and classical works which have been printed hitherto and by condensing the information available therein to such a limit as to permit ready reference. I have, therefore, great pleasure in recommending the work to Tamil gentlemen, whose support the author may seek for the publication of his work.

V. KANAKASABAI.

## PREFACE TO THE FIRST EDITION

GENTLEMEN AND LOVERS OF TAMIL LITERATURE,

I began to write this 'Abithana Chintamani, the Encyclopædia of Tamil Literature, some twenty years ago. For the materials of this book, I went to several places in the Madras Presidency and secured the needed information. The book does not treat of a single subject but treats of many. It contains amongst other things (1) Biographical sketches of deities, saints and other illustrious personages. (2) Descriptive and explanatory notes on places of sanctity and antiquity. (3) Explanations of allusions to Hindu mythology. (4) Grammar, Literature and Logic. (5) Genealogical, Geographical and Historical facts. (6) Dissertation on different systems of philosophy and religion. (7) Description of the birth and growth of the Hindu sects and creeds that are extant. (8) Genealogy of the principal characters that figure in our annals. (9) Origin of precious stones. (10) Physiognomy, Astrology and Medicine. (11) History of illustrious Tamil Authors and Madathipathies and many other items interesting to the student of Tamil Literature and the antiquarian, all arranged alphabetically. The facts gleaned are from classic authorities, Puranas, Srutis and Smritis. In short, the work is the compendium of the results of vast research in Tamil Literature presented in the form which would facilitate reference—a Tamil Encyclopædia in a nut shell. The book is written in a simple and easy style so as to be useful to all. It is written without any bias or prejudice.

After the completion of this work, as my income as a Tamil Pandit was not sufficient to publish this elaborate work, I showed the manuscript copies of the work to many wealthy and educated gentlemen in Madras, who simply stated, without offering any help, that the publication would cost much. Then I thought of publishing it in monthly parts and to that effect published leaflets with specimen pages of my book. As very few joined as subscribers and as I feared that my attempt would be a failure, I gave up the idea. While I was thus dejected and disheartened, one of my leaflets reached the hands of Sriman Pandithoraiswami Thevar, the President-Founder of Madura Tamil Sangam and Zemindar of Palavanatham, Ramnad. He came to Madras, looked into some portions of the book and kindly consented to publish this work. I shall not expatiate on the various troubles and difficulties that I have undergone in writing and publishing this work. The merit of this work is left to the judgment of those who may consult it as a book of reference whenever difficulties present themselves to them. My thanks are due to those gentlemen who have rendered me invaluable help with informations and with books and especially to Sriman Pandithoraiswami Thevar who has rendered me timely help in undertaking to publish this elaborate work. I wish him prosperity and success.

A. SINGARAVELU MUDALIAR,

*Tamil Pandit, Pachaiyappa's Institution, Madras.*

உ

கடவுள் துணை

# முதற் பதிப்பின்

# முகவுரை

---

மதிமிசை யிலங்கு மாப்பெரு மிமயந்
நுதிபெறு கன்னித் துறையா யமைந்த
அந்தமில் பாரதப் பதியி னருந்தமிழ்
நந்த லில்லாத் தமிழ்நா வலர்முன்
பந்த மொருவாப் பசுவா நாயேன்
கொந்தா ரிரவிமுன் கொளுமின் மினியும்
அலகிரை யளக்கர்மு னருநீர்க் காலென
புன்மொழி கொண்டு புகல்சில வாசகம்
என்னு லியன்ற தெழுதின னதனிடை
மாசுள தாயின் மறுவில தாக
வேச லிலாது வேற்றுக் கொள்கை
கடமையென் றெண்ணிக் கதைபல கொண்ட
நடையமை சிந்தா மணிநவின் றேனே.

**அருங்கருணை நிறைந்த அன்பர்காள் !**

நானிந்த அபிதான சிந்தாமணி யென்னு நூலைச் சற்றேறக்குறைய 1890-ம் வருஷங்களுக்குமுன் தொடங்கினேன். இது எனது அரிய நண்பரும் சென்னை பச்சையப்ப முதலியார் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டருமாகிய ம-ா-ா-ஸ்ரீ சி. கோபாலராய ரவர்கள், B. A., எனமண்டரம் வெங்கடராமையரவர்கள் செய்த புராணநாம சந்திரிகை போல், தமிழில் ஒன்று இயற்றின் நலமாமென்று அந்தப் புத்தகமும் ஒன்று கொடுத்துதவ, அதை முதனூலாகக் கொண்டு புராண நாமாவலி யென்று பெயர் புனைந்து எழுதத்தொடங்கினது. அந்நூல் எனக்குக் காட்சி மாத்திரை யாயிற்றேயன்றிச் சாலப்போதாது. ஆதலினது நிரம்பிய நூலன்றெனத் தேறிப் பன்னூலாராயத் தொடங்கி வேறுபொழுது போக்காக் கொள்ளாது, இத்னிடை முயன்று வருந்தினேன். இதனை விளையாட்டாகத் தொடங்கினேன். பின்னரிதனை முடிப்பது எவ்வாறென்ற கவலைமிக்கது.

இது காரணமாக நான் ஒருவனே பலர்கூடிச் செய்யவேண்டிய இதனை "கலைகபோதநியாயமாக" பல விடங்களிற் சென்று பல அரிய கதைகளைப் பல புராண, இதிஹாஸ, ஸ்மிருதி, ஸ்தல புராணங்களிலும், மற்றுமுள்ள நூல்களி...

முள்ள விஷயங்களையும், உலக வழக்குகளையும் அவற்றினுட் கருத்துக்களையும் தழுவியதாகும். இதலடங்கியவை: வேதப்பொருள் விளக்கம், பல மஹா புராண கதைகள், ஸ்தலபுராண கதைகள், பாரதாதி இதிஹாசங்கள், ஸ்மிருதி விஷயங்கள், பலநாட்டுச் சமைய நிச்சயங்கள், பலஜாதி விஷயங்கள், பாதம், இரத்திஞேற்பத்தி, வைத்யம், சோதிடம், விரதம், நிமித்தம், தானம், கணநிலை, பலசமய அடியாராழ்வார்களின் சரிதைகள், பல வித்வான்களின் சரிதைகள், சிவாலய விஷ்ணுவாலய மான்மியங்கள், சூர்ய சந்திர ராக்ஷச இருடிகளின் பரம்பரைகள், சைவ வைஷ்ணவ மாத்வ ஸ்மார்த்த சமயவரலாறுகள், சைவாதீன பண்டார சந்நதிகளின் மடவரலாறுகள், இந்துதேசம் ஆண்ட புராதன அரசர் வரலாறுகள் முதலிய பல அரிய விஷயங்களாம்.

இது ஒரு தத்வ கலாரத்னகாமாய் மந்திர சாஸ்திரமாயுள்ள அரிய விஷயங்கள் நீங்க மற்றவைகளின் சாரசங்கிரகமாகும். இதனை எழுதப்புகுங்கால் சிலர் வாயிலாகக் கேட்டதை அப்போதைக்கப்போது மறப்பெனுங் கள்வ னவற்றை வஞ்சியாது என் கைப்புத்தகத்தில் முதலில் குறித்துக்கொண்டு, பின்னர் கதையெழுதும் புத்தகத்தில் பதித்து, அவற்றைச் சின்னாள் பொறுத்து அகராதி முறைப்படுத்தி, மீண்டும் பெயர்த்து எழுதினேன். இதற்குள் என் அன்பர் கோபாலராயர் காலமாயினர்.

இந்நூல் இற்றைக்கு (131) பாரங்களுக்குமேல் இராயல் எட்டுப்பக்கங்கள் கொண்ட உருவத்தில் சற்றேறக்குறைய லெட் இல்லாமல் (1050) பக்கங்கள் ஸ்மால் பைகாவில் முடிந்தது. இதனை நோக்கு மறிவாளர் இதனை நான் ஒரு முறைத் தனித்தனிக் கதையி னுருக்கொண்டு எழுதிப் பின்னொரு முறை அகராதி முறைப்படப் பெயர்த்தெழுதிப் பின்னதனைச் சுத்தப் பிரதியாக்கிய பிரயாசையை யறியாதிரார்.

இந்நூல் இவ்வாறு ஒருவாறு முற்றுப் பெற்றபின் இதனைச் சென்னையிலிருந்த பிரபுக்கள் சிலரிடம் காட்டினேன். 'அவர்கள் இத்தகைய நூல் தமிழிற் கின்றியமையாததே: அதனை வெளியிடுக' என்றனரேயன்றி யதனை யச்சிட்டு வெளிப்படுத்த ஒன்றும் கூறிற்றிலர்.

பின்பு யாழ்ப்பாணம் ம-ா-ா-ஸ்ரீ கனகசபைப் பிள்ளை, பி.ஏ., பி.எல்., அவர்களிடம் இதின் ஒரு பாகத்தைக் காட்டினேன். அவர் இஃது அரிய தமிழ்க்கதை அகராதி; இதனைச் சென்னையிலுள்ளார் ஆதரிக்க வேண்டுமென ஒரு பத்திரம் எழுதித்தந்தனர். புரொபஸராயிருந்த சேஷகிரி சாஸ்திரியார் அவர்களிடம் காட்டினேன். அவர் இதனையொப்ப நானும் ஒரு நூல் எழுதிக்கொண்டு வருகிறேன் என்று கூறினரே அன்றி வேறொன்றுங் கூறவில்லை. அவர் கருத்தென்னோ அறியேன். அதற்குப் பின்னிதனைச் சென்னை கிறிஸ்டியன் காலேஜ் தரும் பச்சையப்பன் கல்விச்சாலைத் தரும விசாரணையின் எடிகேஷனல் டிரஸ்டியுமாகிய பிரம்மஸ்ரீ வ. கிருஷ்ணமாசாரியரிடம் காட்டினேன். அவர் பல அச்சாபிசுக்காரர்களிடம் காட்டி செலவு அதிகம் பிடிக்கும் எனக் கூறி விடுத்தனர். நான் கூடிய அளவில் உயர்தரக் கல்வி போதிக்க வல்லேனாயினும் ஊழ்வலியால் சென்னை பச்சையப்பன் விசாரணைக்குட்பட்ட பி. டீ. செங்கல்வாராய நாயகர், கோவிந்தநாயகர் கலாசாலைகளில் அமர்ந்து செல்வாக்கிலாததால் வருவாய் மட்டாக அச்சிடப் பொருளிலாது இதனைச் சஞ்சிகை வாயிலாக வெளியிட ஒரு அறிக்கைப் பத்திரம் வெளியிட்டேன். அதன் பொருட்டுப் பலரிடம் கையொப்பம்

கேட்டேன். அவர்கள் இது தொடர்ந்த கதையாயின் வாங்கலாமெனவும், சிலர் முற்றுறப் பலநாள் பிடிக்கும் எனவும், சிலர் கையொப்பமிட்டுஞ் சென்றனர். இச் சோர்வால் எனக்கு அக்கார்யத்தில் ஊக்கஞ்செல்லாது நூலைப் புற்றிடுவோமா என எண்ணினேன். இதற்குள் சிலர் இதனையொத்த சிறு நூல்களியற்றினர். அதனைக் கண்டும் திருவுளப்பாங் கென்றிருந்தேன். இது நிற்க, நான் வழிபடு கடவுளாகிய மலைமகணாயகர் உள்ளக் குறிப்போ, அல்லது நான் முதன்முறை வெளியிட்ட அறிக்கைப் பத்திரிகையோ, அல்லது இரண்டாமுறை வெளிப்படுத்திய அறிக்கையோ, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரசிடெண்டும் பாலவனத்தம் ஜமீன்தார் அவர்களும், தமிழ் வளர்த்த ஸ்ரீமான் பொன்னுசாமி தேவரவர்களின் திருக்குமாரரும், என் தளர்ச்சிக்கூன்றுகோல் போல்பவருமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைசாமித் தேவரவர்களின் கைப்பட்டுத் தாமே சென்னைக்கு வந்து நான் எழுதிய நூலைக் கண்டு களித்து அதனை மதுரைத் தமிழ்ச் சங்க அச்சுயந்திரசாலையில் அச்சிடுவான் எண்ணி என்னிடமிருந்த பிரதிகளைத் தாமே மதுரைக்கு எடுத்துச்சென்று அவ்விடத்தில் நாம் எழுதிய அனைத்தையும் பலரைக்கொண்டு சுத்தமாய் எழுதுவித்து மீண்டுமவற்றைச் சென்னையிலுள்ள அச்சுயந்திரசாலையில் என் முன்னிலையில் அச்சிட, வுத்தரவளித்து அப்போதைக்கப்போது பொருளுதவி செய்து வந்தனர். அவர்கள் அருஞ்செயலை இப் புத்தகத்தை நோக்கும் அறிவாளிகள் புகழாமற் போகார்.

இந்நூல் ஒருதனி நூலன்று. இது பல சான்றோரியற்றிய நூல்களின் தொகுபபாம். இதனை எழுதுமிடத்து எனக்குச் சென்னை பிரசிடென்ஸி காலேஜ் தமிழ்ப் பண்டிதரும் மஹாமஹோபாத்யாயருமாகிய பிரம்மஸ்ரீ வெ. சாமிநாத ஐயரவர்கள் வெளிப்படுத்திய சங்கச் செய்யுட்கள் எனக்குதவிய வாதலால் அவர்களுக்கும், மதுரைச் செந்தமிழ் வாயிலாக வெளிவந்த பல அரிய விஷயங்கள் எனக்கு உதவிய வாகையால் அப்பத்திராசிரியருக்கும், பலநூல்களிலிருந்தும் பல அரிய விஷயங்களைத் திரட்டினேனாதலால் அந்நூலாசிரியர்களுக்கும், இந்நூற்கு வேண்டிய புத்தகங்களை நான் கேட்கும்போது நோவாது உதவிய பண்டிதர்களுக்கும், எனக்குச் சமண தீர்த்தங்கரரின் சரிதைகளைத் தம் வேலைவிட்டு அருகிருந்து விளக்கிய வீடூர் வித்வான் ம-ா-ா-ஸ்ரீ, அப்பாசாமி நயினாருக்கும், இதில் நான் தவறிய விஷயங்களைப் பெருநூலென்று பொறுத்துத் திருத்திக்கொள்ளும் பொறையாளர்க்கும் நான் பன்முறை வந்தனம் புரியக் கடமைப்பட்டவனாகிறேன். இந்நூல் என்னை எழுதும் வகைத் தூண்டி யென்முயற்சியிலாது அதனை முற்றுறச் செய்வித்த முக்கண்மூர்த்தி மூவாமுதல்வன் செக்கர்மேனிச் சிவனடி யென்றும் பாசி படர்ந்த குட்ட நிகர்த்த ஆசுடை மனத்து அமர்ந்து வாழ்க.

இங்ஙனம்:

**ஆ. சிங்காரவேலு முதலியார்,**

கிருஷ்ணம்பேட்டை, சென்னை.

# பொருளடக்கம்


| விஷயம் | பக்கம் |
|---|---|
| அகோபிலமடம் | 1603 |
| அணு வம்சம் | 1599 |
| அதர்வணவேத பரம்பரை | 1601 |
| அநுபந்தம் | 1569 |
| அபிதான சிந்தாமணி | 1 |
| அமிருதாதி யோகங்கள் | 1583 |
| அம்சோற்பத்தி | 1589 |
| அறுபத்துமூவர் திருநக்ஷத்திரம் | 1567 |
| ஆநந்தாதி யோகம் | 1584 |
| ஆந்திர வம்சம் | 1623 |
| ஆழ்வாராதிகள் திருநக்ஷத்திரம் | 1568 |
| ஆரியர் காலத்துத் தேசங்கள் | 1632 |
| இருக்குவேத பரம்பரை | 1601 |
| இருடிகளின் பரம்பரை | 1592 |
| இலங்கை | 1630 |
| எசுர்வேத பரம்பரை | 1601 |
| ஓரங்கல் கணபதிராஜ வம்சம் | 1625 |
| கங்க வமிசாவளி | 1625 |
| காகதீய வம்சம் | 1625 |
| காச்மீர ராஜ்யம் | 1624 |
| காண்வ வம்சம் | 1622 |
| காதி வம்சம் | 1599 |
| கார்வார் வம்சம் | 1624 |
| குறும்பரசர் | 1621 |
| கீழைச சாளுக்கியர் | 1620 |
| கூர்ஜர ராஜ்யம் | 1625 |
| கொங்கர் | 1621 |
| சங்கராசாரியர் மடம் | 1604 |
| சந்திர வம்சம் | 1598 |
| சாதிப் பட்டப்பெயர்கள் | 1590 |
| சாத்ததன்வா மரபு | 1599 |
| சாமவேத பரம்பரை | 1601 |
| சாளுக்கியர் வம்சம் | 1619 |
| சிவக்ஷேத்ரம் | 1531 |
| சுங்க வம்சம் | 1622 |
| சுத்தசைவ ஆதீனங்கள் | 1609 |
| சுவாயம்புமனு சந்ததி | 1598 |
| சூரிய வம்சம் | 1596 |
| சேதுபதிகள் | 1628 |
| சேர ராஜாக்கள் பரம்பரை | 1617 |
| சைவ மடங்கள் | 1602 |
| சைவா ஆதீன மடங்கள் | 1604 |
| சோழ வம்சம் | 1609 |
| சௌஹாண அரசர் | 1624 |
| தருமபுர ஆதீனம் | 1605 |
| திருவாவடுதுறை மடாதீனம் | 1604 |
| திவ்யபிரபந்த வியாக்கியான பரம்பரை | 1603 |
| திருத்துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகள் மடம் | 1608 |
| தென்கலை வானமாமலை மடம் | 1603 |
| தென்னுசாரிய சம்பிரதாய குரு பரம்பரை | 1602 |
| தேவார வைப்புத்தலங்கள் | 1565 |
| தொகை | 1574 |
| தொண்டைமண்டலம் | 1629 |
| நாயக வம்சம் | 1626 |
| பஞ்சபக்ஷி | 1586 |
| பரகாலசுவாமி மடம் | 1603 |
| பரத வம்சம் | 1600 |
| பல்லவர் | 1617 |
| பாண்டிய வம்ச பரம்பரை | 1613 |
| பார்மார வம்சம் | 1624 |
| புராண பரம்பரை | 1602 |
| புலத்தியர் மரபு | 1595 |
| மகத வம்சம் | 1622 |
| மத்வ மடங்கள் | 1604 |
| மத்வாசாரிய பரம்பரை | 1603 |
| முன்னுரை முதலியன | iii |
| முனித்திரய சாம்பிரதாயம் | 1603 |
| மேற்குச் சாளுக்கியர் | 1620 |
| யது வம்சம் | 1600 |
| யயாதி வம்சம் | 1599 |
| ரகஸ்ய கிரந்த பரம்பரை | 1603 |
| விஜயநகர வம்சம் | 1626 |
| விருஷ்ணி வம்சம் | 1601 |
| விஷ்ணுத்தல மான்மியம் | 1558 |
| வேங்கி தேசம் | 1625 |
| வைஷ்ணவ குருபரம்பரை | 1602 |
| ஹேஹய வம்சம் | 1599 |
| ஸ்ரீபாஷ்ய பரமபரை | 1603 |



சென்னை பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியரும்
"அபிதான சிந்தாமணி"யின் நூலாசிரியருமாகிய
காலஞ்சென்ற
**ஆ சிங்காரவேலு முதலியார்**

உ

கடவுள் துணை

# அபிதான சிந்தாமணி

## கடவுள் வாழ்த்து

கலிநிலைத்துறை

பொன்னேமணக்கும் புவிபுரக்கும் புரவலர்க்குப் புடவிமிசை
தன்னே ரில்லாத் தவமணக்குந் தவத்தினோர்க டகுங்குணத்துச்
சொன்னேர் பொருளும் யாப்பணியுந் துகடீர்புலவர் வாய்மணக்கு
மென்னேர் மனத்தி லெஞ்ஞான்று மிறைவன்பதமே மணந்தருமால்.

## அகத்தியமுனிவர்

**அகத்தியமுனிவர்—1.** தாரகன் முதலிய அரக்கர் உலகைவருத்த அவர்களை நிவர்த்திக்க, இந்திரன், அக்நி, வாயு முதலியவர்களுடன் கூடிப்பூமியில் வந்தனன். அதைக்கண்டு அசுரர் கடலில் ஒளித்தனர். ஒளித்த அசுரர், தேவர்களை வருத்த உபாயந்தேடுகையில் அக்நி, அவர்களுடைய துராலோசனையையறியாமல் அசுரர் கடலிற்பயந்து ஒளித்தாராதலின் வருத்தலாகாதென முயற்சியின்றி யிருந்தனன். பின் அசுரர், காலாவதியிற்பூமியில்வந்து தேவர், மக்கள், நாகர், இருடிகள் முதலியவர்களை வருத்த இந்திரன், மருத்துக்களோடு கூடிய அக்நியைப்பார்த்து நீ சும்மாவிருந்தமையால் இத்துன்பம் விளைந்தது. ஆகையால் கடலிலுள்ள நீரை வறட்டின் அசுரர் அகப்பட்டு நம்மாலழிவரென அக்நி, இந்திரனைப்பார்த்து அசுரர் பொருட்டுக்கடல் நீரை வறளச்செய்தால் சலசரங்கள் அழியுமென்று கூற, இந்திரன் கோபித்து நீ என் சொல்லை மறுத்தனையாதலால், வாயுவுடன் கூடிப் பூமியிற்போய்க் கும்பத்திற்பிறந்து கடனீரெல்லாங் குடிக்க என்றனன். பிறகு தேவசரீரங்கொண்ட அக்நி, மருத்துக்களுடன் கூடிப் பூமியில் விழுந்து அகத்தியனாயினன். எவ்வாறெனில், பூர்வம் விஷ்ணுமூர்த்தி, தருமன் குமாரனாய்க் கந்தமாதன பருவதத்தில் தவஞ் செய்கையில், அத்தவத்தைக் கெடுக்க, இந்திரன், அப்சரசுக்களை யனுப்ப, அத்தபோதனர், சலிக்காமல் தம் தொடையினின்றும் அதிரூபலாவண்யத்துடன் ஒரு பெண்ணைச் சிருட்டித்து ஊர்வசியெனப் பெயரிட்டனர். அந்த ஊர்வசியை மித்திரன் மணந்து அவளோடு கூடியிருக்கையில் வருணன், அவளை விரும்பினன். அதற்கு அவள், புன்னகையுடன் என்னை யொருவன் மணந்திருக்கையில் அந்நியன் விரும்பலாமோவென, வருணன், அவளைப்பார்த்து ஆயின் அம்மித்திரனுடன் நீ கூடியிருக்கையில் உன் எண்ணமாத்திரம் என்னிடத்தில் வைக்க என, அதற்கு ஒப்புக்கொண்டு மித்திரனுடன் கலந்திருந்தனள். இதனை ஞானதிருஷ்டியால் அறிந்த மித்திரன், ஊர்வசியைப் பார்த்து, நீ, வேறு எண்ணத்துடன் என்னிடமிருந்தனையாகையாற் பூமியில் மனுஷப்பிறவி யடைந்து புரூரவன் தேவியாக எனச் சாபமிட்டனன். இவ்வகைப் பட்ட ஊர்வசியின் மோகத்தால் மித்திராவருணருக்கு வெளிப்பட்ட ரேதஸு ஒரு கும்பத்திலடைபட, அதிலிருந்து நிமிபிறந்தனன். அந்த நிமி அநேக பெண்களுடன் கூடி விளையாடுகையில் வசிட்டமுனிவர் வர, அவரை அவன், மரியாதை செய்யாதனால் அவர் கோபித்து நீ தேகமில்லாதவனாக எனச்சபித்தனர். அச்சாபஞ் சகியாத நிமி, வசிட்டரையும் அவ்வாறு தேகமில்லாதிருக்கச் சபித்தனன். இவ்வகை ஒருவர்க்கொருவர் சாபமேற்று நிமி பிரமனிடத்திற்போகப் பிரமன், நிமியை நேத்

திரத்தில் வசிக்கச் செய்தனன். அது காரணமாக நிமிஷம் உண்டாயிற்று. பிறகு நிமிசாபத்தால் தேகமிழந்த வசிட்டர், மித்திராவருண வீரியமுள்ள கும்பத்திருந்து முதலினும், இரண்டாவது சதுர்ப்புஜத்துடன் கமண்டலங் கொண்டவராய் அகத்தியரும், பிறந்து தவமியற்றி, தாரகாசுரன் முதலியவர்களைக் கொல்லுதல் வேண்டிச் சமுத்திரபானஞ் செய்து, இரண்டாவது மிருத்தயுவை நியமித்து, கடலிற்பிறந்த காலகூட விஷத்தை வியர்த்தமாக்கி யிருக்கையில், இவரிடம் திரிமூர்த்திகள் வந்து உனக்கென்னவரம் வேண்டுமென்ன, ௨௫,0000000000 கணக்குள்ள சிருட்டிகர்த்தாக்கள் மாறுமளவும் தக்ஷிணபதத்தில் ஆகாசவீதியிலிருக்க வரங்கேட்டுப் பெற்றனர். (மச்ச புராணம்). இவரைப் புலத்திய புத்திரர் என்றும் கூறுவர்.

2. வாதாபி, வில்வலன் என்னும் அரக்கர் இருவரில், வில்வலன் வேதியர் உருக்கொண்டு வழியிற்செல்லும் வேதியர் இருடிகள் முதலாயினரை விருந்திற்கு வலிய அழைத்துவந்து, வாதாபியை ஆடாக்கியறுத்துப் பாகஞ் செய்து விருந்தாக வந்தவரையுண்பித்து இறுதியில் வில்வலன் வாதாபியை அழைப்பன். அவனுண்டோர் வயிற்றைக்கிழித்து வெளிவர இறந்தவனை அவ்விரண்டு அரக்கருந் தின்று பசிதீர்வர். இவ்வகையியற்றும் இந்த அரக்கர்து தீமைகளை இருடிகள் அகத்தியருடன் முறையிட அகத்தியர், அவர்களிடம் விருந்தாகச்சென்றுண்டனர். வில்வலன் அகத்தியர் வயிற்றிலிருக்கும் வாதாபியைக் கூப்பிட, அகத்தியர் 'வாதாபேஜீர்ணோபவ' என்று வயிற்றைத் தடவ அரக்கனிறந்தனன். வாதாபி வாராமை கண்ட அரக்கன், கோபித்து அகத்தியரை யடிக்கச்செல்ல முனிவர், சினத்துடன் நோக்கித் தருப்பையில் பாசுபதமந்திரமேவி அரக்கனைக் கொல்லமுயன்றனர். பின் வில்வலன், அகத்தியர் வேண்டியபொருள்களைக்கொடுத்து உயிர்ப்பிச்சையேற்றுப் பிழைத்தான் என்ப (பாரவன - பூ).

3. சிவபிரான், பார்வதிதேவியாரைத் திருமணஞ்செய்த காலையில் தேவர் முதலியோர் வடதிசை நிறையத் தென்திசை யுயர்ந்ததால் சிவபிரான் கட்டளைப்படி அகத்தியர், தென்திசையிற் பொதிகைமலையிலிருக்க வருகையில் ஒருமரத்தில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்த இருடிகூட்டங்களைப்பார்த்து நீங்களேன் இவ்வகைத் தொங்குகின்றீர்களென இருடிகள், எங்கள் சந்ததியில் அகத்தியன் என்ற ஒருவன் பிறந்து இல்லறமடையாது இருக்கின்றானதலால் எங்களுக்கு இத்துன்பம் நேரிட்டதென மறுமொழிகூற, அகத்தியர் கேட்டுத் திடுக்கிட்டு, அவர்களைத் தன்னைச்சபியாதிருக்கவேண்டி, நானே அகத்தியன், அதிசீக்கிரத்தில் இல்லறமடைந்து உங்களை இத்துன்பத்தினின்று நீக்குகின்றேனென்று, விதர்ப்பநாடடைந்து அவ்வரசன் யாகத்திற்பிறந்த உலோபா முத்திரையை அதிக பொருள் தந்து மணந்து தாதைகளைச் சுவர்க்கமடைவித்தவர். (பார - வன)

4. இவர், தென்திசைநோக்கிச் செல்லுகையில் விந்தமலையின் மிகுதியைத் தேவர் அகத்தியருக்குக் கூறினர். அதைக்கேட்ட அகத்தியர், அவ்விடம் வருகையில் விந்தம், மேருவுடன் மாறுபட்டு வழியிலாது நிற்றலைக்கண்டு அதனிடஞ் சென்றனர். விந்தம் முனிவரைப்பணிய அகத்தியர், நாம் தென்திசைநின்று மீளும் வரையில் இவ்வகை பணிந்திருக்கவென்று பொதிகையிலெழுந்தருளி இராவணன் தமிழ் நாடாளாமல் அவனைக்காந்தருவத்தாற் பிணித்தவர். (திருநெல்வேலிப்புராணம், தொல்காப்பியப்பாயிரம்).

5. தமிழ்நாட்டைக் கந்தமூர்த்தி அகத்தியருக்குக் கொடுக்க இருடி, பாண்டியனுக்குக் கொடுத்தனர். (நெல் - புரா).

6. அகத்தியருக்குத் தாமிரபர்ணி சிவமூர்த்தியாற் கொடுக்கப்பட்டது.

7. மதியநங்கை யென்பவள், தவத்திற்கிடையூறுசெய்ய, அவளை மனிதப்பிறவி யடையச் சபித்தவர்.

8. தேவர்களைவருத்தியவிருத்திராசுரன் இந்திரனது வச்சிராயுதத்திற்குப் பயந்து கடலில் ஒளிக்கத் தேவர்வேண்டுகோளாற் சமுத்திர ஜலத்தை ஆபோசனஞ் செய்து அவனை இந்திரன் கொலை புரிய, மீண்டும் ஜலத்தை விடுத்தவர். (திருவிளை)

9. சந்திரவம்சத்தரசனாகிய நகுஷன் என்போன், இந்திரபட்டமடைந்து புலோமசையிடம் விருப்பங்கொண்டு அவளைக் கேட்க, அவள், சத்த இருடிகள் தாங்குஞ் சிவிகையிலூர்ந்து என்னிடம்வரின் அவ்வகை உடன்படுவேனென அவ்வாறே இருடிகள் தாங்கச் சிவிகையிலேறிச் செல்

லுவோன் காமவெறியால் இருடிகள்என்று மதியாமல் "சர்ப்ப சர்ப்ப" என்ன அந்த இருடிகளின் முதலிலிருந்த இவர் அவனைச் சர்ப்பமாகச் சபித்தனர். (திருவிளையாடல்.)

10. ஒருமுறை இருடிகள், மூவாண்டு நெற்கொண்டு யாகஞ் செய்துவர, தேவர்கள் கோபித்து வேள்வியை அடையாமல் அகத்தியரிருக்கும் நாட்டினும் மழையிலாது வளங்கள் குன்றும்படி செய்துவேள்விக்கு இடையூறு செய்வித்தனர். இருடிகள், அகத்தியரிடம் வந்து முறையிட முனிவர், உத்தாகுருவிலிருந்து பொருள்களை வருவித்து வேள்வியை நடத்தித் திரிமூர்த்திகளுக்கு அவிர்ப்பாகந்தர இருக்கையில் தேவர்கள் நடுங்கி அபராதக்ஷமை வேண்டி யாகதரிசனஞ் செய்து அவிர்ப்பாகங்கொண்டு மழைபொழியச் செய்தனர். (பார - வன).

11. நீரிற்படுத்துப் பன்னிரண்டு வருடந் தவஞ் செய்தவர்.

12. ஸ்ரீ இராமமூர்த்திக்கு விருந்தளித்துத் திவ்யபாணங்கள் கொடுத்து அப்பாணங்களின் வரலாறும் மந்திரமுங் கூறியவர். (இரா).

13. சுவேதனுக்குப் பிணந்தின்னுஞ் சாபம் போக்கியவர். (உத்தரராமாயணம்).

14. இவர், நைமிசாரண்ய முனிவர்களுடன் மாறுபட்டுத் தென்னுடடைந்துபொதிகையிற் கந்தமூர்த்தியை வழிபடக் கந்தமூர்த்தி, அவரது இருக்கையில் ஒரு மணமுண்டாக்க அகத்தியர் அதனை எடுக்க அது பரிமளித்த இனிமை நோக்கித் தமிழென, அதுமுதல் தமிழெனப்பட்ட பாஷையை வளர்த்தவர்.

15. தாடகை, தன் கணவன் சுந்தன் அகத்தியராலிறந்தபின் அகத்தியரை வருத்த அவளை அரக்கியாகச் சபித்தவர் (இரா).

16. சிவாநுக்கிரகத்தாற் சிவபூசையின் பொருட்டுக் கமண்டலத்திற் கங்கையைப் பெற்றுத் திரும்பி வருகையில் மாயமாபுரத்தருகில் மலையுருவாயிருந்த கிரவுஞ்சன்மாயையிற்பட்டு அதினின்றுந் தெளிந்து அவனை மலையுருவாகவே இருந்து குமாரக்கடவுளின் வேலாற் பிளப்படையச் சாபமளித்து நீங்கிக் காசித்தலத்தைச் சேவித்தவர். (காசி - கா).

17. தேவர் வேண்டுகோளால் விநாயகமூர்த்தி, அகத்தியர் கமண்டலத்திலுள்ள சலத்தைக் காகவுருக்கொண்டுசாய்த்தோட, அகத்தியர் விநாயகரைக் கோபித்துப்பின்தொடர விநாயகர், கைக்கு அகப்படாது விலக வருந்திப்பின்னர் அருகுவர அகத்தியர் குட்டநினைக்க, கணபதி தமது உருக்காட்டப் பிழைபொறுக்க வேண்டிக் குட்ட நினைத்ததைத்தாமேசெய்துகொண்டு அவ்வகை உலகத்தவரும் செய்ய வரம் பெற்று, காவிரியிற்சிறிது கணபதிபாற் பெற்றவர்.

18. திருக்குற்றாலமடைந்து அவ்விடமிருந்த விஷ்ணு ஆலயத்துட் புக இவரது சிவவேடத்தைக் கண்ட வைணவர் மறுக்க, மீண்டு வைணவவேடம் பூண்டு கோயிலுட் சென்று விஷ்ணு மூர்த்தியைச் சிவமூர்த்தியாகத் தியானித்து மூர்த்தியைத் தொட்டுச் சிவலிங்க மாக்கினவர். (திருக்குற்றால-பு).

19. கந்த மூர்த்தியை எண்ணித் தவம் புரிந்து சகலகலைகளையும் பெற்றவர். (பழனித்தல-பு).

20. சூரியனிடந் தமிழைக் கற்றவர் என்றுங் கூறுவர்.

21. மணிமந்தனை மனிதனுலிறக்கச் செய்தவர்.

22. கொல்லாபுரத்தில் திருமகளை வணங்கி அவள் குமரவேள் உனக்கு வேண்டியவை கொடுப்பர் எனக் கூறக் கேட்டுக் களித்தவர்.

23. இந்திரத்துய்மனை யானையாகச் சபித்தவர்.

24. கவேரன குமரியாகிய காவிரியை மணந்தவர். இவளே உலோபாமுத்திரையெனக் காவிரிபுராணங் கூறும். இவளை விதர்ப்பராசபுத்திரியெனப் பாரதம் கூறும்.

25. பிரமதேவன், உருப்பசியின் நடனத்தைக் கண்டு தன் வீரியத்தை விட அதிலிருந்து அகத்தியர் பிறந்தனர் என்பர். (காவிரிபுராணம்).

26. ஒருகாலத்து அகத்தியர், இந்திரன் சபைக்குச் செல்ல இந்திரன் உருப்பசியை நடனஞ்செய்ய ஏவினன். இவள் சித்திரசேநன் யாழ் அமைப்ப நடனஞ் செய்பவள் சயந்தனிடம் வைத்த காதலால் இசைபிறழ நடித்து இந்திரனையும் சபையி லுள்ளோரையுங் களிப்பித்திலள். அதனுல் சயந்தனையும், உருப்பசியையும் பூமியிற் பிறக்கச் சபித்தவர். (சிலப்பதிகாரம்).

27. அங்கிராமுனி, அறிவிற் குறியையெனக் கூறக் கேட்டுச் சத்திரிஷி, சிவ்ரி

பெற்று அறிவடைந்து குமாரக்கடவுளருளால் இலக்கணமியற்றியவர். (பழனித் தலபுராணம்.)

28. "தேவரெல்லாருங் கூடியாஞ்சேர இருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசையுயர்ந்ததற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற்கு உரியர் என்று அவரை வேண்டிக்கொள்ள அவரும் தென்றிசைக்கட்போதுகின்றவர், கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு பின்னர், யமதக்கினியாருழைச்சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியனாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை அவர் கொடுப்ப நீருடன் பெற்றுப்பெயர்ந்து, துவாரவதிவந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும், பதினெண் கோடி வேளிருள்ளிட்டாரையும், அருவாளரையும் கொண்டு வந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதிகையிலிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் கட்டி (வசித்து) இராக்கதர் தென்னாடடையாமற் செய்து திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி நீர் சென்று குமரியாரைக்கொண்டு வருக என்ன, அவரும், எம் பெருமாட்டியை எவ்வகைக் கொண்டு வருவன் என்றார்க்கு, முன்னாகப்பின்னாக நாற்கோல் நீளமகல நின்று கொண்டு வருக என்றார்க்கு, அவரும் அங்ஙனங்கொண்டு வருகையில் வையைநீர் கடுகிக் குமரியாரையீர்த்துக்கொண்டு போயவழி, தொல்காப்பியனார், கட்டளை கடந்து சென்று ஒரு மூங்கிற்கோலை முரித்து நீட்ட அதுபற்றி யேறினார். அது குற்றமென்று அகத்தியனார், குமரியாரையும் தொல்காப்பியனாரையும் சுவர்க்கம் புகாப்பிரெனச் சபித்தார். யாங்கள் ஒரு குற்றமுஞ் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையால், எம்பெருமானுஞ் சுவர்க்கம் புகாதிருக்கவென அகத்தியனாரையும் சபித்தனர். அதனாலவர் கோபித்தனராதலின், இவன் செய்த நூலை அதங்கோட்டாசிரியரைக் கேளற்க என்று கூறியவர்." (தொல் - பா).

29. வதுவாதிபராசன், திராவிடபூபதி, கிருதபவன, இந்த அரசர்களைப் பொருள் கேட்க அவர்களிடம் பொருளிலாதது கண்டு அவர்களையும் உடனழைத்துக்கொண்டு அசமுகி குமாரனும்வாதாபியின் சகோதரனுமாகிய வில்வலனிடஞ் சென்று பெருஞ்செல்வமடைந்து அம்மூன்றரசருக்கும் கொடுத்தவர்.

30. புலத்தியருக்கு ஆவிர்பூவிடம் உதித்த குமரன் என்பர். சிவசன்மாவைக் காண்க.

31. இவர் வண்டுருக்கொண்டு புஷ்பங்களிலிருந்த தேனையெடுத்துச் சிவபூசை செய்ததாலிங்கோய்மலையென்னுந்தலமுண்டாயிற்று. (திருச்செங்கோட்டுப்புரா).

32. இந்திரசாபத்தால் பூமியில் வேசையாகப் பிறந்த அரம்பையின் சாபத்தைப் பார்வையாற் போக்கியவர். (அவிநாசித் தலபுராணம்).

33. மதியநந்தையென்பவளுக்கு மானிடஜன்மம் வரச் சபித்தவர்.

34. காந்திருவர் சிலர், தமது சிவபூசை வேள்விக் கிடையூறு விளைவிக்க அவர்களைச் சபித்தவர். விஷங்களுக்கஞ்சி இவரால் இருக்குவேதத்தில் ஒருகீதம் செய்யப்பட்டிருக்கிறது. இவர் காய்சினவழுதி காலத்து முதற்சங்கத்தில் முதல்வராயிருந்து தமிழைவளர்த்து வருகையில் மதுரை கடல் கொண்டு அழிந்தது. குமரியாற்றினருகே (சக) நாடுகளு மழிந்தன. இவர் பெயரால் ஒரு நக்ஷத்திர மாகாயத்திலிருந்து உதயத்தில் கடலலையை வற்றச்செய்யும்.

35. துட்பண்ணியனுக்கு யானையாயிருந்த சாபம் போக்கியவர். துட்பண்ணியனைப் பார்க்க.

36. கிருதாசி எனும் அரம்பையை அங்காரகை எனும் அரக்கியாகச் சபித்தவர்.

37. இந்திரனைச் சபிக்க அவன் பூமியில் விழுந்து பிரமகத்தியால் பீடிக்கப்பட்டு மானத தடாகத்திலுள்ள தாமரை நாளத்தில் ஒளித்திருந்தனன் (தேவி - பாகவதம்).

38. காந்தன் எனும் அரசன் வேண்டுகோளால் தமது கமண்டலத்துள்ள காவிரியைப் பெருகச்செய்தவர். அவ்வரசன், பரசிராமருக்குப் பயந்து தம்மிடம் அடைக்கலம் புகுந்தகாலத்து அவனைக் காத்தவர்.

39. தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் காலத்துக் காவிரிப்பூம் பட்டினத்து இந்திரன் விழாவை யெடுப்பித்தவர். (மணிமேகலை).

40. இவர்தம் மாணாக்கர்கள், திரணதூமாக்கினி அல்லது தொல்காப்பியமுனிவர்,

அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமநன் முதலியவர்கள். இவர்க்குக் கும்பமுனி, குறுமுனி, கலசயோநி எனப்பல நாமங்களுண்டு. இவர் செய்தநூல்கள் அகத்தியம், (இது ஐந்திலக்கண மடங்கியநூல்) வைத்தியநூல்கள், பெருந்திரட்டு, ஆயுள்வேதபாஷ்யம், விதிநூன் மூவகைக்காண்டம்; வைத்தியசிந்தாமணி, செந்தூரம் ௩00, மணி ௪000, சிவசாலம், சத்திசாலம், சண்முகசாலம், வைத்தியக்கண்ணுடி, வைத்தியரத்நாகரம், வைத்தியம் ௧௫00, ௪௬00, கர்மவியாபகம், கரிசில் பஸ்மம் ௨00, தண்டகம், பக்ஷணி, நாடி. இவர், முதல் இடைத் தமிழ்ச் சங்கங்களில் புலவரா யிருந்தவரென்ப. அகஸ்திய சம்மிதையெனும் வைத்திய வடநூலிவராற் செய்யப்பட்டது. அகத்தியர் என்ற சப்தத்திற்குப் பொருள் விந்தமலையை யடக்கியவர் என்பது.

41. இவருக்கு இத்மவாகு, அல்லது திருடன் என ஒரு குமரன் உண்டு (பார - வந) இவரது சிஷ்யர் அக்னிவேச்யர். இவர் யாகஞ்செய்யத்தனம் வேண்டிச் சுருதர்வணன், பிரத்னச்வன், திரிசதஸ் என்பவரிடஞ் சென்று செல்வ மடைந்தனர். இவர் யக்ஷேப்யனைச் சபித்தனர்.

**அகத்தியன்**—(2) ஒரு வேதியன் நபாகனைக் காண்க.

**அகத்தியம்** — அகத்தியரா லியற்றப்பட்ட எழுத்துச் சொற்பொருள், யாப்பு, அணி முதலிய அடங்கிய இலக்கணத் தமிழ் நூல். இது, இறந்தது.

**அகத்திய தீர்த்தம்**—ஒரு தீர்த்தம், இது,தென் கடற்கரைக்கருகிலுள்ளது. இதில் அருச்சுனன் தீர்த்த யாத்திரையில் தங்கினன். இதில் நீராடில் மகாபாதகங்கள் நீங்கும். (பார - ஆதி).

**அகத்தியநக்ஷத்திரம்**—ஒரு நக்ஷத்திரம், இது கடலலையை நிறுத்துவது.

**அகத்தியபக்தவிலாசம்** — சிவனடியார்கள் சரிதையை வடமொழியிற் கூறும் நூல்.

**அகத்திய பர்வதம்**—காலாஞ்சர பர்வதத்தருகிலுள்ள மலை.

**அகத்தியப்பிராதா** — அகத்தியனுடன் பிறந்தவன். வயிற்றிலேயே ஞானமடைந்தவன்.

**அகத்தியவடம்**— இமயத்தருகிலுள்ள ஒரு தீர்த்தம். (பார - ஆதி)

**அகத்திய வேளாளன்** — அகத்தியர் செய்த வைத்திய நூலை விருத்தி செய்தவன்.

**அகத்தியாச்சிரமம்**—பஞ்சவடிக்குச் சமீபத்திலுள்ள புண்ய க்ஷேத்ரம். இந்த இடத்தில் லோமசேனனுடன் யுதிஷ்டிரன் சென்றான். இது நாசிக் எனும் இடத்திற்கு (௨௪) மைல் தூரத்திலுள்ளது. (பார). Agastipuri 24 mile's to the South - east of Nasik, now called Agastipuri.

**அகத்திணைக்குரிய பதினன்கு வகைக்கருப்பொருள்கள்**—தெய்வம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ்,பண், தொழில், என்பன. (அகப்).

**அகத்துழிஞை**—மாறுபாடுகெடக் கோபமிக்க உழிஞையார் எயிலினுள் நொச்சியாரைப் போரை வென்றது. (பு-வெ).

**அகண்டாநந்தர்**—பௌத்த முனிவரிற் ஒருவர், பொதிகையில் இருந்தனராம்.

**அகநானூறு**—இது எட்டுத்தொகையில் ஏழாவது. பாரதம்பாடிய பெருந்தேவனர் முதலிய புல்வர் பலரால் அகப்பொருட் பகுதியையே பொருளாகக் கொண்டு பாடப்பட்டது: இது களிற்றுயானைநிரை எனவும், மணிமிடைபுவளம் எ-ம், நித்திலக்கோவை எ-ம் பிரித்துத் தொகுக்கப்பட்டது. இது, தொகுத்தான் உருத்திரசன்மன், தொகுப்பித்தான் உக்கிரப்பெருவழுதி, இதற்கு நெடுந்தொகை எனவும் பெயர்.

**அகப்பாட்டுறுப்புக்கள்**—திணை, கைகோள், கூற்று, கேட்போர், இடன், காலம், பயன், முன்னம், மெய்ப்பாடு, எச்சம், பொருள் வகை, துறை, எனப் பன்னிரண்டு வகைத்து. (அகம்).

**அகப்புறக் கைக்கிளை**—காமஞ்சாலா இளந்தலை மகளிடத்துக் குறிப்பறியாது சென்று சேர்ந்து அவளோடு மேன்மேலுங் கூறுவது. (அகம்).

**அகப்புறப் பெருந்திணைக் குரியவை**—மட்லேறல், விடைதழுவல், குற்றிசை, குறுங்கலி, சுரநடை, முதுபாலை, தாபதநிலை, தபுதாரநிலை, எனக்கூறினவையியற் பெயர் பொருந்தாது வருவன.

**அகப்பேய்ச்சித்தர்** — ஒரு சித்தர். இவர் தம் மனதைப் பேயாக அலைதல்பற்றிப் பேயென உருவகப்படுத்தி அலையாது நிற்க

என அறிவுகூறிப் பாடியவர். இவர் செய்த நூல் அகப்பேய்ச்சித்தர் பாடல்.

அகப்பை—இச்சொல் அகழ்ப்பை யென்பதின் மரூஉ; இது, அன்னத்தைத் தோண்டும் கருவி. இது, மரத்தினாலும், தேங்காயின் ஓட்டினாலும் செய்யப்பட்டது.

அகப்பொருள்—இது, கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என்னும் எழு வகைப் பொருள்களை விரித்துக்கூறும் நூல்.

அகப்பொருட்பெருந்திணை—அகன்று ழிக் கலங்கல், மடற்கூற்று, குறியிடையீடு, தெளிவிடை விலக்கல், வெறிகோள்வகை, விழைந்துடன்போக்கு, பூப்பியலுரைத்தல், பொய்ச்சூளுரைத்தல், தீர்ப்பிலூடல், போக்கழுங்கியல்பு, பாசறைப்புலம்பல், பருவமாறுபடுதல், வன்புறையெதிர்ந்து மொழிதல், மனைவியுந்தானும்வனமடைந்து நோற்றல், பிறவுமாம். (அகம்).

அகமலர்ச்சியணி—ஒன்றன் குணகுற்றங்களான் மற்றொன்றற்கு அவையுளவாதலைச் சொல்லுதலாம். இதனை உல்லாசாலங்காரம் என்பர். (குவல).

அகமருஷணம்—விந்திய மலைக்கருகிலுள்ள ஒரு தீர்த்தம்.

(2) ஒரு மந்திரம் இது, நீரில் மூழ்குவோர் கூறுவது.

அகமருஷணன்—சூ-சந்தியின் குமரன்.

அகமர்ஷன்—மதுச்சந்தன் புத்ரன். இருக்குவேதி.

அகமுடையார்—இவர்கள், தமிழ் நாட்டில் பரவியுள்ள ஒருவகைச் சாதியார், இவர்கள் இராமநாதபுரம், மதுரை முதலிய இடங்களில் கோவில் வேலை செய்கிறார்கள். சிலர் ஜமீன்தார்கள் வீடுகளில் வேலையாட்களுமாயிருக்கின்றனர். இவர்கள் மறவர் கள்ளர் முதலியவர்களிலிருந்து அகமுடையராய்ப் பிறகு நாகரிகத்தினால் வேளாளர் எனத் தம்மைக்கூறுகின்றனர். (தர்ஸ்டன்)

அகம்பனன்—ஒரு அரசன், இவன் சத்ருக்களுடன் யுத்தஞ் செய்கையில் இவன் குமரனாகிய அரி இளையவன் சத்ருக்களுடன் யுத்தஞ்செய்து மரணமடைந்தான். இதனால் இவன் விசனமடைய நாரதர் இவன் விசனத்தை மிருத்யுவின்கதைகூறிமாற்றினர். (பார - து)

அகம்பன்—இவன் சுமாலியின் புத்திரனாகிய அரக்கன், கரன், தூஷணன், திரிசிரன முதலியோரை இராமமூர்த்தி வதைத்த காலத்தில் இராவணனுக்கு இறந்த செய்தி அறிவித்தவன். இராமமூர்த்தி இலங்கையை முற்றுகைசெய்தகாலத்து அநுமனால் கொல்லப்பட்டவன். முற்பிறப்பில் கந்தமூர்த்தியாலிறந்த தாருகன், கானுக்கு மந்திரி. (இரா) (ஸ்கா).

அகம்பன்மாலாதனார்—அகம்பல் எனும் ஊர்க்குத்தலைவர். இவர் மதுரை ஜில்லாவிலுள்ள அகமலை யென்னும் கிராமவாசியாக இருக்கலாம். இவர் நற்றிணையில் முல்லைத் திணையைப்பாடி யிருக்கின்றனர்.

அகம்யாதி—பூரு வம்சத்தவனான சம்யாதியின்குமரன். பாரி, பானுமதி; கார்த்தவீரியன் தங்கை.

அகவற்பா—காற்சீர் கொண்ட அளவடியதாய், இயற்சீர் பயின்றும், அயற்சீர் விரவியும், தன்றளை தழுவியும், பிறதளை மயங்கியும், கருவிளங்கனி, கூவிளங்கனி, யெனுமிரு சீருங்கலவாது, மூன்று முதலிய பல வடிகளான் வருவது. அது நேரிசை யாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலமண்டில வாசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா என (௪) வகை. (யாப்பு - இ).

அகர்க்கரன்—கத்துருகுமரன்.

ஒரு சர்ப்பம். (பார - ஆதி).

அகர்த்தவிருஷ்ணர் — உரோமகருஷணருக்கும் சுகருக்கும் மாணாக்கர்.

அகலிகை—(1) கௌதமமுனிவர் பத்தினி முத்கலமுனிவர் குமரி. இவளைக் கணவன் கங்காதீர்த்தத்திற்கு நீங்கிய சமயங்கண்ட இந்திரன், கணவனைப்போ லுருக்கொண்டு புணர்ந்து கற்புக் குலைத்தனன். முனிவர், தம்வரவறிந்து பூனையுருக்கொண்டு செல்லுமிந்திரனை நோக்கி நீ ஆயிரம் பெண்களுக்குரிய குறியும், பீஜமறுகையும் பெறுகவெனச் சபித்துப் பாரியையுங் கல்லாகச் சபித்தனர். பின் அகலிகை வேண்ட முனிவர், மனதிரங்கி இராமமூர்த்தி மிதிலைக்கு வரும்காலத்தில் அவரது திருவடித் துகளால் உருப்பெற, கருணைசெய்தனர். இவள் பஞ்சகன்னியராகிய கற்புடைப் பெண்களில் ஒருத்தி. இவள் பாற்கடலிற் பிறந்தவள் என்பது சிவபுராணம். இவள் குமரர், சதாநந்த ருஷி. (இரா).

(2) இந்திரத்துய்ம்மன் எனும் மகதநாட்டரசன் தேவி. இவள் வஞ்ச இந்திரனுடன் களவுப்புணர்ச்சி செய்ததி னிமித்தம் நாட்டைவிட்டுக் கணவனா லகற்றப்பட்டனள்.

அகளங்கநாட்டாழ்வார்—திருவரங்கர் சந்நிதியின் காரியங்களைப் பார்க்க இளையாழ்வாரால் நியமிக்கப்பட்டவர். உடையவர் திருவடி சம்பந்தி. உடையவரிட மிருந்து பிரதிபக்ஷ நிரசனம் செய்பவர்.

அகளங்காசாரியர்—அகளங்காஷ்டகம் செய்தபண்டிதர்.

அகனிஷ்டன்—புத்தன்

அகன்—வசுக்கள் எணமரில் ஒருவன். இவன் குமாரன் ஜ்யோதி. இவனுக்கு ஆபச்சைவன் என்றும் பெயர்.

அகாசுரன்—இவன், பகாசுரன் சகோதரன். கஞ்சன் ஏவலால் விருந்தாவனத்திலிருந்த கிருஷ்ணபகவானைப் பாம்புருவாக விழுங்கி அவரால் கொல்லப்பட்டவன். (பாக).

அகி—பிரமன் கேசங்களிலுதித்த பாம்புகளின் வகை

அகிச்சத்திரம்—உத்தர பாஞ்சாலத்தில் உள்ள தேசம். துரோணாசாரியரால் கொள்ளப்பட்டது. Ramnagar 20 miles west of Bereli. It was the capital of North-Panchala in Rohilkhand.

அகிதமிஷ்டிரன்—ஒரு அசுரன், விதாமனைக் காண்க.

அகிநன்—கு - தேவாரணிகன் குமரன்.

அகிருத்திரமவிஷம் — தாவரசங்கமங்களாலுண்டாம் விஷம். இதில் தாவரவிஷம் விருக்ஷம், பூண்டு, செடி, கொடி, புல், கிழங்கு, வேர், பட்டை, பால், பிசின், இலை, புஷ்பம், காய், கனி, பாஷாணம் முதலிய வற்றிலுண்டாம் விஷம்

அகிர்ப்புத்தியன்—பூதனுக்குச் சுரபியிடமுதித்த குமரன். ஏகாதச உருத்திரருள் ஒருவன்.

அகிர்ப்புத்தநீயன் — சுதரிசனம் வேண்டித் தவஞ்செய்து சுதரிசன தீர்த்தம் கண்டவன்.

அகிலதான் — பத்திராதன்குமரன, இவன் குமரன் பிரகத்ரதன்.

அகிலேசன் — காசித்தலத்திலெழுந்தருளிய சிவமூர்த்திக்குப் பெயர்.

அகில்—அருமணவன், தக்கோலி, கிடாரவன், காரகில் முதலியன சேர்ந்தது.

அகிற்கூட்டு—சந்தனம், கற்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.

அகிற்புத்தி—திருவேங்கடமலையில் தவஞ்செய்து சித்திபெற்ற இருடி. (திருவேங்கட தல - பு).

அகிக்ஷேத்ரம்—உத்தரபாஞ்சாலத்து ராஜதானி.

அகீநரன்—(சந்) உதயன்குமரன். இவன் குமரன் தண்டபாணி.

அகுதை—மதுரையில் இருந்த ஒரு வள்ளல். எற்பார்க்கு யானை கொடுப்பவன். போர் வல்லன். இவனைப் புகழ்ந்தபுலவர் கபிலர். (புற - நா).

அகுர்தவருணன்—பிரம்மரிஷி இவன் பரசுராமனுக்கு நண்பன், இவனிடம் யுதிஷ்டிரன், அன்புற்றிருந்தனன். (பார) வனபர்.

அகுர்ஷன்—கத்துரு தநயன்.

அகூபாரன்—ஒரு ஆமை, இந்திரத்துய்மனம் எனும் தடாகத்திருந்தது.

அகோபிலமடம்—சடகோபாசாரியரைக் காண்க. இதற்கு அழகிய சிங்கர் மடமெனவும் பெயர்.

அகோரசிவாசாரியர் — ஆதிசைவர். பதினெண்பத்ததி செய்தவர்களில் ஒருவர். இவர் ஸ்ரீ சிதம்பரத்தில் வசித்தவர் என்பர். இவர் செய்த பத்ததி அகோர பத்ததி எனப்படும். இவர் பத்ததியே சித்தாந்த சைவர்களால் பரத கண்டத்தில் கையாளப்படுகிறது.

அகோரமூர்த்தி — இவர் வெண்மை கலந்த கருநிறத்தராய், காதிற்குண்டலம், மீசை, சிகை, கோரப்பல், பயங்காமுகம், கபால மாலை, சர்ப்பபூஷணம், கட்வோங்கம், கபாலம், கேடயம், பாசம் முதலிய இடக்கரங்களிலும்; சூலம், கோடரி, கத்தி, தடி, வலக்காங்களிலும் பெற்று எட்டுத் தோள்களையுடையராய் இருப்பர். (அகோரபத்)

அகோரம்—சதாசிவ மூர்த்தியின் திருமுகங்களுள் ஒன்று. நீலகற்பத்தில் பிரமன் நினைக்க அவன் முன் தோன்றி அருள் புரிந்த சிவாவசரம். இவர் பிரமனுக்கு நான்கு இருடிகளைச் சிருட்டித்துக் காட்டினவர்.

அகோராஸ்திரமூர்த்தி—சத்ததந்து என்னும் அசுரனைக் கொலை செய்ய எழுந்தசிவாவசரம். (சிவ-பார) (2) சிவாஸ்திரம்.

அக்கபாதர்—நியாயநூல் இயற்றிய கௌதமருக்கு ஒரு பெயர்

அக்கமாதேவி — உடுதடை யெனும் கிராமத்தில் நின்மலன் என்பவனுக்கும், சுமதி யென்பவளுக்கும் பிறந்து மாதேவியெனப் பெயரடைந்து அழகிற் சிறந்தவளாய்

இருந்தனன். இவளை விச்சலன் என்னும் சமண அரசன் மணக்கவிருந்தது அறிந்து அவன் தன்னை வலியத் தொடாதிருக்கச் சபதம் பெற்று அவனை நீ வீர சைவனாக என்று கூற அவன் மறுத்ததால் துறவு பூண்டு ஞானசாரியரைத் தேடித்திரிந்து அல்லமரைக் கண்டு ஞானோபதேசம் பெற்றுக் கதலி வனத்தில் நிஷ்டைகூடி யிருந்தவள். (பிரபுலிங்கலீலை).

அக்கமாலை — அருந்ததி.

அக்கரச்சுதகம்—இது சித்திரக்கவி வகையுள் ஒன்று. இது ஒருபொருள் பயப்பதொரு சொற்கூறி அதனில் ஒவ்வொரு எழுத்தாக நீக்க,வெவ்வேறு பொருள் தரப் பாடுவது. மாத்திரைச்சுதகமுமுண்டு அது எழுத்தின் மாத்திரை சுருங்கல். (தண்டி)

அக்கன்—இராவணன் குமரன்.

அக்காரக்கனிநச்சுமனர்—கடைச்சங்கப் புலவர் நாற்பத்தொன்பதின்மருள் ஒருவர் உக்கிரப்பெருவழுதியால் ஆதரிக்கப் பட்டவர். (திருவள்ளுவமாலை.)

அக்கி—அக்கினி.

அக்கிரகேசன் — காசிபர் புத்திரர்களாகிய அசுரர்களில் தலைவன்.

அக்கிரசன்மன்—பிரமன்.

அக்கிரோசுரன் — ஒரு அசுரன். இவன், ௱000 அண்டங்களுக்கு அரசனாய், ௱000 விஷ்ணுக்கள், ௱000 பிரமர், ௱000 இந்திரர் முதலியோர் தனக்கு எவல் செய்ய ஆண்டுகொண்டிருக்கையில் தேவர் வேண்டுகோளால் சிவமூர்த்தி பூமனுக்குப் புத்திரராய்க் கந்தமூர்த்தி தமக்குத் தம்பியாக இராசசேகரர் எனும் பெயருடன் வந்து இவனைக் கொலை செய்தனர். (சிவபராக்கிரமம்.)

அக்குரூர்—யது வம்சத்தவர், சுவபல்கன் குமரர். தாய் காந்தினி, கம்சன் மந்திரி, இவர் தந்தைக்குச் சுவபலர் என்றும்பெயர் கூறுவர். இவர், கம்சன் வேண்டுகோளால் நந்தகோபரிடம் சென்று தனுர்யாகச் செய்தி கூறிப் பலராம கிருஷ்ணரை அழைத்துக்கொண்டு யமுனா நதிக்கரையடைந்து தாம் தனித்துச் சலத்தில் மூழ்கி ஸ்நானஞ்செய்தனர். இவர் பலராம கிருஷ்ணரிடத்து அந்தரங்க பக்தியுடையவராகையால் பலராமகிருஷ்ணர்கள் இருவரும் இவருக்குச் சலத்திற்குள் இரதத்துடன் தரிசனம் தரத் திடுக்கிட்டு வெளியில் வந்து அவர்களைக்கண்டுகளித்து மீண்டும் ஸ்நானம் செய்து சேஷசயனத்துடன் பரமபத நாதனாகிய விஷ்ணுமூர்த்தியைச் சலத்திற் கண்டு தரிசித்து ராம கிருஷ்ணர்களை அழைத்துச்சென்று கம்சனுக்கு வரவு கூறிய பரமச் சிரேட்டர். சததன்வாவிடத்தில் இருந்த சியமந்தகமணியை அவனிடமிருந்து கவரச்செய்து அதைக் கண்ணபிரான் அறியாதிருக்க, கங்கையாத்திரை செய்து மீண்டும் கண்ணனால் வெளியிடப் பட்டவர். இவரது பாரி, சித்திராதை குமார் தேவவா, உபதேவன். (பாக).

2. சுவர்கன் குமரன்.

3. ஒரு இருடி, திருக்காஞ்சியில் வாதராசர் அருள்பெற்றவர்.

4. இடையெழுவள்ளல்களில் ஒருவர்.

அக்குரோதன் — (சங்) குருவம்சத்தவனான அயுதானன் குமரன். இவன்தாய் பாசை; இவன் தேவிகண்டு, புத்ரன், தேவாதிதி (பார - ஆதி.)

அக்நி — 1. விச்வாநரன் புத்திரன். தவத்தால் திக்குப்பாலகனானவன், பிரசாபதிக்குச் சாண்டிலியிடம் பிறந்தவன். இவன் பாரி சுவாகாதேவி. இவனுக்கு இரண்டு முகம், நீண்ட எழு நாக்குகள், நான்கு கொம்புகள், மூன்றுபாதம். இவன் பட்டணம் தென்கிழக்கில் உள்ள தேஜோவதி, வாகனம் ஆடு, இவனுக்குக் குமரன் என்னும் பெயருள்ள ஒரு குமரன் உண்டு.

2 அமிர்தம் சுமக்க அஞ்சித் தீர்த்தத்தில்ஒளித்த காலத்துத்தேவர்கள்தேடினர். அப்போது மீன்கள் காட்டியபடியால்அக்நி அம்மீன்களைத் தூண்டிலில் அகப்படச்சபித்துத் தவஞ்செய்து அமிர்தம் சுமக்க வலிபெற்றவன். இம்மீன்களுக்குத் தேவர் இமையாவிழி அளித்தனர்.

3. இவன் தந்தையாகிய விசுவாநரன் தவஞ்செய்யச், சிவமூர்த்தி தரிசனந்தந்து உனக்கு என்னவரம் வேண்டுமென்ன, உம்மைப்போல் புத்திரன் வேண்டுமென்றனன். அதனால் அக்நி, இவனிடம்பிறந்து வளருகையில் நாரதர் தந்தையிடம் வந்து உன்குமரன் பன்னிரண்டாம் வயதில் இடிவிழுந்து இறப்பன் என்றனர். கேட்ட தந்தை, விசனமடைந்து குமரனுக்கு அறிவிக்க, அக்நி சிவமூர்த்தியை எண்ணித் தவஞ்செய்தனன். சிவமூர்த்தி இவனது நிலையறிய இந்திரனைப்போல் தரிசனம் தந்து என்ன வேண்டுமென்ன, உன்னி

டம் யாதும் விரும்பேன் எனக், கேட்டுக் கோபித்தவர்போல், வச்சிரத்தை நோக்கினர். அது கண்டு குமரனாகிய அக்நி பயப்படத் தமது உருக்காட்டி உனக்கு, யமபுரிக்கும் தெய்வ உலகிற்கும் நடுவிலிருக்கும் பதமளித்தோமென்று முதுகைத் தடவி மறைந்தனர். (காசிகாண்டம்).

4 இவன் தக்ஷயாகத்தில் வீரபத்திரமூர்த்தியால் எழு நாவும், கையும் அறுப்புண்டு மீண்டும் பெற்றான். சுவாகாவைக் காண்க.

5. சுவேதகியாகத்தில் பன்னிரண்டுவருஷம் நெய்யுண்டதால் மந்த நோய்கொண்டு அருச்சுநனிடம் அது தீர்த்துக்கொள்ளக் காண்டவ வனத்தைத் தகித்துண்டவன் (பாரதம்)

6. காண்டவ வனத்தில் இருந்த தக்ஷகன் குமரனாகிய அசுவசேநனை விட்டு விட்டபடியால் கண்ணனால் நிலையில்லாதவனாகச் சபிக்கப்பட்டவன்.

7. நீலனுக்கு உதவிபுரிந்தவன்.

8. ஒருமுறை சத்த இருடிகள் யாகஞ் செய்து ஒரு கருமவசத்தால் தங்கள் மனைவியரை அந்த யாகாக்நி அவியாது வளர்க்கச்செய்து நீங்க, அக்நி அந்த எழுவர் பத்தினிகளையுங்கண்டுமயல்கொண்டு வருந்தினன். இதையறிந்த மனைவியாகிய சுவாகாதேவி, அருந்ததி ஒழிந்த அறுவர்போலத் தனித்தனி உருக்கொண்டு ஆசையைத் தணிக்கத் தணிந்தவன்.

9. அவுரவமகருஷியின் மனைவியின் தொடையில் நெடுநாள் மறைந்திருந்தவன்.

10. வசிட்டரால் பூமியில் சிகண்டி வயிற்றில் பாவகன், பவமானன், சுசி என் மூவருவாய்ப் பிறந்தவன்.

11. தன் அம்சத்தால் சூர்ய வம்சத்தில் உபகுபதனெனப் பிறந்தவன்.

12. சிபிச்சக்கரவர்த்தியின் சத்தியதலை யறியப் புறவாகச் சென்றவன்.

13. ஒரு காலத்து நிகும்பனுடன் யுத்தஞ் செய்து தோற்றவன்.

14. இராம ராவணயுத்தத்தில் நீலன் என்னும் வாநரவுருக்கொண்டவன். (இரா).

15. இலங்கையில் சிறையிருந்த சீதை, தன்கற்பினை உலகறியும்படி தீயில் குளிக்க, அவளது கற்பின் தீயால் சுருக்குண்டு சீதாபிராட்டியைத் தாங்கி இராமமூர்த்தியிடம்வந்து முறையிட்டு உண்மையாகிய பிராட்டியைக்கொடுத்தவன்.(இரா).

16. இவன், சுதரிசனை என்பவளிடம் ஆசை கொண்டிருக்க, இவன் தந்தை தனக்கு அவளைக் கொடுக்காததனால் தன் கலைகளைச் சுருக்கிப் பூமியில்யாகாதி காரியங்களை அடக்கினன். அவை நடவாமை கண்ட அப்பெண்ணின் தந்தை, வேதியர் உருக்கொண்ட அக்நிக்கு அவளை மணஞ் செய்வித்தனன்.

17. அக்நி, தேவர்களிடத்துக் கோபமாய்க் கபிலைப்பசுவின் வயிற்றில் ஒளிக்க, அப்பசுவைத் தேவர் வேண்டி அக்நியின் நிலையறிந்து அழைத்துச்சென்று பசுவினைப் புண்ணியதேகியாக ஆசீர்வதித்தனர். (காஞ்சி - புரா).

18. அக்நி, சிவவீரியத்தைத்தாங்க முடியாது பூமியில் விட, அது பொன்னாயிற்று. அதனை, வேதியர் தானப்பொருளாகக் கொண்டனர்.

19. மருத்து யாகத்தில் இந்திர தூதனாய்ச்சென்று வியாழபகவானைக் குருவாகக் கொள்ளக் கூறினவன்.

20. உதங்கர், குண்டலமிழந்து அதைத் தேடி நாகலோகஞ் சென்று வழியறியாது தியங்கியபோது, குதிரை உருக்கொண்டு வந்து காதில் ஊதப்பெற்றவன். (பாரதம்.)

21. நீலனுக்கு அருச்சுநன் பெருமைகளைக் கூறியவன். கடோற்கசன், சகாதேவன் இருவரும் நீலனுடன் போர் செய்ய வந்தகாலத்துச் சமாதானஞ் செய்வித்தவன். (பாரதம்).

22. கலிபிறந்தபின் பாணடவர், தங்கள் நாடுகளை விட்டுத் தவசிகளாய்ச்செல்லுகையில் அருச்சுனன் தன் காண்டீவம் கொண்டு செல்வதறிந்து அவன் முன் தோன்றிக் காண்டீவத்தினை வாங்கி ஒடித்துக் கடலில் எறிந்தவன். (பாரதம்)

23. பரதனும், அவன் தாயும், என்னுடன் நண்புபாராட்ட வரமருள் என, இராமருக்கு அவ்வகை அளித்தவன். (இரா).

24. தேவர் வேண்டுகோளால் குமாரக்கடவுள் தேரில் கோழிக்கொடியானவன். (கந்த).

25. சிவபிரான் முகத்திற் பிறந்த தீப்பொறிகளைத் தாங்கிச்சென்று கங்கையில் விட்டவன். (கந்த).

26. சந்தனு அரசாக்ஷியில், விச்வாமித்திரர் வேள்வியில், தனக்கு நாயூன் அவி கொடுத்ததால் கோபித்து மழையிலாக் குறை யென்று அறிந்து மூங்கிலில் ஒளித்

தனன். தேவர்கள், எவ்விடத்தும் தேடிக் காணுது ஒருயானை கூறக் கேட்டு உணர்ந்தனர். அக்நி, அந்த யானையைக் கொம்பிழக்கச் சபித்து, அவ்விடம்விட்டு நீங்கி, ஒரு அரசமரத்தில் மறையப் பிரமன் ஒரு மரத்திலிருந்த கிளிப்பிள்ளை சொன்னதைக்கேட்டு அரசமரத்திடம் செல்ல அக்நி கிளிப்பிள்ளைக்கு வாக்கொழியச்சபித்து, நீங்கித் தீர்த்தத்தில் ஒளிந்தனன். அவ்விடத்தும், ஒரு தவளை, பிரமனுக்கு அக்நியின் இருத்தலைச்சொல்ல அக்நி, அதற்கு நா ஒழியச் சபித்து, வெளிவந்து இந்திரன் மழையிலாது செய்த கொடுமையைப் பிரமனுக்குக் கூறி, அவனால் மழை பெய்வித்து முன் சபித்தவைகளுக்கும் அவைபெற அநுக்கிரகம் செய்தவன்.

27. சிவமூர்த்தி பார்வதி தேவியாருடன் ஏகாந்தத்தில் இருக்கையில் அக்நி, தேவர்களின் ஏவலால் காலமறியாது புருவுருக்கொண்டு சென்றனன். இதையறிந்த பார்வதியார், அக்நியைப் புருவாக இருந்து கல் தின்று சகோதரத்தைப் புணரச் சாபம் தரப் பெற்றுச் சிவவீர்யம்தாங்கிச் சரவணத்தில் விட்டுச்சாபம் நீங்கினவன். (பூவாளூர்ப்புராணம்).

28. பிருகுவால் அசுத்தம் புசிக்கச் சாபமேற்றுப், பிரமனால் அவ்வகை புசித்தும் தூய்மையுட னிருக்க வரம்பெற்றவன் (பார - சா).

29. விருத்திரனது பிரமகத்திக்கு அஞ்சி ஒளித்த இந்திரனுக்கு ஐராணி நகுடனால் விரும்பப்பட்டமை யறிவித்து இந்திரனால் வேள்வியில் தன்னுடன் அவிபெற வரம்பெற்றவன். (பூவாளூர்ப்புராணம்).

30. சீதை, அநுமனைத் தகிக்காதிருக்க வேண்ட அவ்வகை புரிந்தவன். (இரா).

31. மகருஷிகள், இவ்வக்நிச்வாலையினைச் சூர்ய சந்திராதித்தரிடத்துச் சோதியாகவும், மேகத்து மின்னலாகவும், பூமியில் தீயாகவும், கடலில் வடவையாகவும், ஆன்மாக்களிடத்தில், ஜடராக்நியாகவும், இருக்குமென்பர். இவ்வக்நி மண்டலவாசிகள் அகலர் முதலிய நாற்பத்தொன்பதின்மர். அவருள் தலைமை பெற்றுன் அபிமானுக்னியெனப்படுவோன். இவன் குமரர் பாவகன், சுசி, பவமானன், இம்மூவரும் (சகூ) குமரர்களைப் பெற்றனர். (வேதப் பொருள் விளக்கம்).

32. இவனுக்கு இரண்டு சகோதரர் இருந்தனர். அவர்கள், தேவர்களின் அவி சுமந்து மாய்ந்தனர் என்பது (பாடலவன புராணம்).

33. இவன் சகல பக்ஷணனாது சீதை கொடுத்த சாபம். (சிவமகா - புரா).

34. இவன், சுவாகாதேவியை மணந்து அவளுடன் கூடினன். சுவாகாதேவி, பல்ளிகொண்டு தேவவருஷம் கருத்தாங்கி, தக்ஷிணாக்னி, கார்ஹபத்யம், ஆகவனிய முதலிய குமாரரைப் பெற்றுள். (பிரம்மகைவர்த்தம்)

35 பிரஜாபதியின் கோபத்திற் பிறந்தவன். தேவி - தக்ஷப்ரஜாபதியின் குமரி. குமரன் - ஸ்கந்தன். (பாரதம் - சாந்)

36. முதலில் பிரமன் முகத்திற் தோன்றியது. இது, ஔபாஸனம், ஆவஸத்யம், ஸப்யம், பசுனக்னி என்று வகுக்கப்படுகிறது. த்விஜன், தன் வீட்டிலுள்ள எந்த மூலாக்னியில் ஹோமம் செய்கிறுனே அந்த ஆவஸத்யம் எனும் அக்னியைப் பசனக்னி யென்பர். அவைகளுள் ஸப்யையடைந்த அக்னியை ஸப்யம் என்பர். கார்ஹபத்யம், தக்ஷிணக்னி,ஆகவனீயம் தனித்தனி காண்க. ஆலஸத்யம் பிரஜாபதியாகிறது. சப்யம் சுப்ரமண்யன் (பார - அச்வ)

37. இக்ஷுவாகு வம்சத்துத் துரியோதனன் புத்திரியை மணந்தவன். (பாரதம் - அநு)

2. பதினன்காம் மன்வந்தரத்து இருடி.

3. வசுக்களில் ஒருவன். தருமனுக்கு வசுவிடம் உதித்தகுமரன். பாரி வசோர்த்தாரை, அல்லது கிர்த்திகை.

அக்நி—(டு) இராகம், கோபம், காமம், சடம், தீபனம்.

அக்நிகர்ப்பை—பூமிதேவி.

அக்நிகேசர் — கௌதமரிடம் சிவார்ச்சனு விசேடம் கேட்டுணர்ந்தமுனிவர் (சிவரஹ)

அக்நிகேது — ஒரு இராவண சேநாபதி.

அக்நிகோத்ரபட்டர்—ஒரு வடநூற் புலவர்.

அக்நிகோத்ரமுனி—துரோணனுக்கும், பாஞ்சாலனுகிய துருபதனுக்கும், வில்லாசிரியர். இவருக்கு அக்நிவேசியர் என்றும் பெயர். பரத்துவாஜருடன் பிறந்தவர்; அகத்தியர் மாணுக்கர். (பார - ஆதி)

அக்நிகோத்ரஹவணி—நாள்தோறும் ஓமம் செய்பவன், காலை மாலை வேள்வித்தீக் காரியத்தில் ஓமம் செய்கிற பால் முதலிய ஹவிதிரவியங்களைச் சேகரித்து வைக்கும்படி திருத்தப்பட்ட மரபாத்திரம். ஓமம் செய்த பின்பு இப்பாத்திரத்தை நக்கித்

தருப்பைச்சலத்தால் சுத்தி செய்வது வழக்கம். பராச - மா

அக்நிசயனம்—இது, சாந்தியக்னும். இது தபன் என்னும் அக்நி புத்ரர் பதினெழுவரால் கவரப்பட்ட யாகபலசாந்தியின் பொருட்டுச் செய்யப்படுவது.

அக்நிசருமன்—நருமதாநதிதீரத்து இருந்த விஷ்ணுசருமனுக்கு, அக்நிசருமன், சோமசருமன் என இருவர் குமரர் இருந்தனர். அவர்களுள் அக்நிசருமன், காசியடைந்து தவம்புரிந்து அஷ்டசித்தி பெற்று முத்தியடைந்தனன். சோமசருமன், அவனை மதியாது சித்திபெற்றுத் தெய்வநிந்தை கூறி நன்மையைத் தீமையாகவும் தீமையை நன்மையாகவும் மாற்றியுழன்று, மரித்து, மறுபிறப்பில் மிலேச்சனாகி இறந்து நரகவேதனை படுகையில் காசியின் நினைவுவர மீண்டும் வேதியனாய்ப் பிறந்து கங்கையாடி முத்தி பெற்றவன். (காசிரகசியம்).

அக்நிசுவத்தர்—தேவர்களுக்குப் பிதுரர்.

அக்நிசுவார்த்தர்—பிதுர்க்கணங்களைச் சேர்ந்தவர். கசியபபுத்திரர்கள். (ஹரிவம்சம்)

அக்நிசூலி—ஒரு இருடி. விருஷத்தருவனைக் காண்க.

அக்நிதாரை—கௌதமருடைய ஆச்ரமத்துக்கு அருகிலுள்ள ஒரு தீர்த்தம். (பாரதம்)

அக்நிதீர்த்தம்—யமுனாநதிக்குத் தக்ஷணத்தில் உள்ள ஒரு தீர்த்தம். (பாரதம்-வனபர்வம்)

அக்நிதுருவன்—பிரியவிரதன் குமரன். தாய் சுகன்னி, மனைவி பூர்வசித்தி. இவன் சம்புத்தீவினையாண்டவன். இவனுக்கு ஒன்பது குமரர். அக்குமரராவார்—நாபி, கிம்புருஷன், அரி, இளாவிருதன், ரம்யன், இரண்யவந்தன், குரு, பத்ராச்சுவன், கேதுமாலி. இவர்களுக்குத்தன் இராச்சியத்தைப் பகுத்துக்கொடுத்தனன். இவர்களுள் நாபி யென்பவனுக்குப் பாதகண்டத்தையும், கிம்புருடனுக்கு ஏமகூடத்திற்குத்தெற்கிலுள்ள இடத்தினையும், அரி என்பவனுக்கு நிடதத்தையும், இளாவிருதனுக்கு இளாவிருதகண்டத்தையும், ரம்யனுக்கு இளாவிருதத்திற்கும் நீலாசலத்திற்கும் நடுவிடத்தையும், இரண்யவந்தனுக்குச் சுவேதகண்டத்தையும், குருவிற்குச் சிருங்கவத்தால் சுற்றப்பட்ட இடத்தையும், பத்திராசுவனுக்கு மேருவிற்குக் கிழக்கில் இருக்கும் இடத்தையும், கேதுமாலிக்கு மேற்கிலிருக்கும் இடத்தையும் கொடுத்தனன். இவையே நவகண்டமாம்.

அக்நிதேச்யன் — இவன் துரோணாசாரியனுக்கு வில்லாசிரியன். (பாரதம்)

அக்நித்துயோதன்—கிருஷ்ணமூர்த்தியிடம் விவாகத்தின் பொருட்டு உருக்குமணி தேவியால் அனுப்பப்பட்ட தூதன்.

அக்நிநாள்—நக்ஷத்திரம் காண்க.

அக்நிபர்வதம்— (Volcanoes) இது, சிகரத்தில் ஒரு பெரிய, துவாரத்தையுடைய மலை. அநேக நூற்றாண்டுகளுக்குமுன் இவ்வுலகம் தீக்கோளமாக இருந்து பின் இவ்வாறு குளிர்ந்து பூமியாயிற்றென்பர். ஆதலால், இந்தப் பூமியினடியில் எப்போதும் எரிந்துகொண்டிருக்கும் நெருப்பிருக்கிறது. அந்நெருப்பு, இந்த மலையிலிருக்கும் துவாரத்தின் வழியாகச் சில காலங்களில் புகை, அக்னிசுவாலை, கற்கள், உருகிய பாறை இவற்றை மும்முரமாய் ஆகாயத்தில் அதிக உயரமாய்ச் செல்லும்படி கக்கும். கரிய சேறுபோலும் உருகிய கல்லின் குழம்பு, ஆறுபோல் பெருகும். பல நாட்கள் கொதிப்பு அடங்காது. படிப்படியாக ஆறும். இதற்கு எரிமலை யெனவும் பெயர்.

அக்நிபிரபன்—பிருகுகுலத்தில் உதித்தவன். இவனை ஒரு நாய், சிறுத்தை முதலியவைகளுக்கஞ்சிச் சரணடைய இதை முதலில் சிறுத்தையாகவும் பின் புலியாகவும், யானையாகவும், சிங்கமாகவும், சரபமாகவும் செய்வித்தான். பின் அந்நாய்,மீண்டும் நம்மை ஒருகால் இவன் நாயாக்குவான் என்று முனிவனைக்கொல்ல எண்ணிற்று. இதன் எண்ணத்தை யறிந்த முனிவன், பழமைபோல் இதனை நாயாக்கினன். (பார-சாந்தி)

அக்நிபுராணம்—ஆக்னேயபுராணங்காண்க.

அக்நிமாதா—பாஷ்களருக்குச் சிஷர்.

அக்நிமான்—பிராயச்சித்த அக்னி விசேஷம்.

அக்நிமித்ரன்—1. மகததேசத்து அரசனாகிய புஷ்பமித்ரன் குமரன்.

2. சுங்கன் குமரன். இவன் குமரன் சுசியேஷ்டன்.

அக்நிமுகன்—சூரபன்மன் குமரன். இவனுக்கு இரண்டு முகம். வீரவாகுவுடன் பிறந்தவரைக்கொன்று பிறகு வீரவாகு தேவருடன் யுத்தஞ்செய்து ஆற்றாது தேரில் விழுந்து தன் குலதேவதையாகிய காளியையேவி அவன் பின்னிடைந்த பின் வீரவாகுதேவரால் இறந்த வீரன். தாய் பதுமகோமளை. (ஸ்கா-பு)

**அக்நியோகம்**—ஞாயிற்றுக்கிழமையில் துவாதசியும், திங்களில்சஷ்டியும், செவ்வாயில்சத்தமியும், வெள்ளியில் தசமியும், சனியில் ஏகாதசியும் வருவதாம்.

**அக்நிவர்ச்சஸ்** — பௌராணிகராகிய சூதருஷியின் மாணாக்கர்.

**அக்நிவர்ணன்**—இவன், இராமர் சந்ததியில் இருபத்தாறாவது அரசன். இவன் தந்தை சுதரிசநன்.

**அக்நிவான்**—சு. சந்தனன் குமரன்.

**அக்நிவிந்து**—திருமாலைப் பூசித்து அவரைக் காசியில் பஞ்சநதத்தில் எழுந்தருளச் செய்தவன். இதனால் அங்கு எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கு விந்துமாதவன் என்று பெயர். (காசிகாண்டம்)

**அக்நிவேசன்**—இக்ஷுவாகுவின் சகோதரனும், நரிஷ்யந்தன் வம்சத்தவனுமாகிய தேவதத்தன் குமரன் இவன் கானீனன், சாதுகர்ணன் எனப்பட்ட இருடியாயினன். இவன் வம்சத்தில் அக்நிவேச்ய பிராமணர் பிறந்தனர்.

**அக்நிவேசியர்** — அக்நிகோத்ர முனியைக் காண்க.

**அக்நிவைச்யாயனம்**—அக்நிவேசன் குலம். இவன் குலத்தவர் வேதியராயினர்.

**அக்நிஷ்டோமம்**—ஒருயாகவிசேஷம். இது வசந்தகாலத்தில் ஐந்து நாட்களில் செய்து முடிப்பது.

**அக்நிஷ்டோமன்**—சக்ஷுர்மனுவின் குமரன்.

**அக்நிஷோமர்**—வைசுவ தேவபலி கொள்ளுந் தேவதைகள்.

**அக்நிஸ்தோமன்**—பிரமனால் வசுக்களுக்கு யாகஞ் செய்விக்க நியமிக்கப்பட்ட ஒரு இருடி. (யசுர்).

**அக்நிஹோத்ரம்**—யாகங்களால, ஹோர - என்பது விஷாதம் எனப் பொருள்படும், த்ரம், காப்பது, துக்கத்தைக் காப்பது என்பது. (பார - அச்).

**அக்நீத்ரன்**—அக்நியைப் பிரகாசிக்கச் செய்பவன்.

**அக்ரஹாயி**—திருதராஷ்டரன் புத்திரன்.

**அக்ரஹணி**—அக்னி விசேஷம்.

**அங்கக்கிரியை**—(கூ) சரிகை, புரிகை, சமகலி, திரிகை, ஊர்த்வகலிகை, பிருட்டகம், அர்த்தபிருட்டகம், சுவத்திகம், உல்லோலம், குர்த்தனம், வேட்டனம், உபவேட்டனம், தானபதப்பிராயவிருத்தம், உக்ஷேபணம், அவக்ஷேபணம், நிகுஞ்சனம் என்பன.

**அங்கசன்**—மன்மதனுக்கு ஒரு பெயர்.

**அங்கணமாமுனி**—இவர், தவத்திலிருந்தபொழுது தவச்சுவாலை தேவர் உலகைவருத்த தேவர் சிவமூர்த்தியை வேண்டினர். சிவமூர்த்தி, இவரிடம் எழுந்தருளி எழுக என்று கூற, இவர் எழுந்திராதிருந்தமையால் அங்கிருந்த ஒரு பாறையை விரலினால் தட்டினர். அதிலிருந்து அக்நி உண்டாகி இவர் தவத்தைக் குலைக்க எதிரில் சிவமூர்த்தியைத்தரிசித்து அபராதக்ஷமை வேண்டிய முனிவர்.

**அங்கதபுரம்** — இலக்குமணன் குமாரனாகிய அங்கதன் ஆண்ட பட்டணம்; இமயமலைக்கு அருகிலுள்ளது.

**அங்கதபூபதி** — இராயசிங்கு அங்கதபூபதியிருவருஞ் சகோதரர். இவர்கள் வடநாட்டிலிருந்தோர்; அங்கதபூபதியின் மனைவி பாகவத விசுவாசியாய் ஒருநாள் தனக்கு உபதேசித்த ஆசாரியர் வர அவருக்கு அமுதளிக்க எண்ணிப் போசனாதிகள் சமைத்திருக்கையில் அங்கதபூபதி, தன் மனைவியை நோக்கிக் கற்புடையாருக்குக் கணவனிலும் தெய்வம் வேறுளதோ இருந்தாற் காட்டுகவென முகந்திரிந்து நோக்கினர். இவ்வாறு சினத்துடன் கூறிய மாற்றங்கேட்ட மனைவியார், விசனமடைந்து மூன்றுநாள் அன்ன முதலிய இலாது உபவாசமாய் நாராயண ஸ்மரணையுடனிருந்தனர். இவ்வகை இருக்கப், பெருமாள் அங்கதன் கனவிடைத்தோன்றி நீ உன் மனைவியைக் காட்டக் கேட்ட தெய்வம் நானேயெனக் கூறிமறைய, அங்கதபூபதி விழித்து மனைவியிடஞ் சென்று உன்னை வீணே கோபித்தேனென வேண்டி அவளிஷ்டப்படி பெருமாளையும் பாகவதரையும் சேவித்திருக்கச்செய்தனர். இவ்வகையிருக்கையில் மனைவியாருக்குபதேசித்த ஆசாரியர்வர மனைவியார், அவரைக் கொண்டு கணவருக்கும் தீக்ஷை செய்வித்தனர். இவ்வாறு வருகையில் தமயனாகிய இராயசிங்கன், தம்பியை நோக்கி, நீ சேனையுடன் சென்று நம்மேல் வந்த பகைவனையும் அவன் படைகளையும் வென்று வருகவென, அவ்வாறிசைந்து பகைமேற் சென்று அவன் பொருள்களைக் கொள்கையில் பெரிய வயிரமணி ஒன்று கிடைத்தது. அதனை அங்கதபூபதி சகந்நாதனுக்கெனப் பத்திரப்படுத்தி வைத்தனர். இதனைப் பலராலறிந்த இராயசிங்கு அதனைப் பலவாறு தன் கைப்படுத்தத்

தம்பியைக் கேட்க, அவர் மறுத்ததுகண்டு தம்பியைக் கொலைபுரியத் தங்கையிடம் விஷமளித்து இதை அங்கதனுக்கு அன்னத்திலிடுகவென்றனன். தங்கை, தமயன் கட்டளைக்கஞ்சி அன்னத்தில் விஷமிட்டனள். அங்கதன் அதனை நாராயணப் பிரீதி செய்து உண்ணத் தொடங்குகையில் ஜகந்நாதன் கைமேலாக, இது விஷங்கலந்த அன்னம் உண்ணேலெனக்கூறக் கேட்டும் இது தேவப்பிரீதிசெய்த அன்னம் உண்ணொழியேன் எனவுண்டு ஊறிலாதிருந்தனர். இனி யீண்டிருக்கின் அடாதென மனைவியுடன் யோசித்துச் சகந்நாதம் நோக்கிச் செல்லுகையில் தமயனறிந்து அவ்விருவரையும் மறித்து அவரிடம் இருக்கும் வைரத்தைக் கவர்ந்து வரும்படி அமைச்சனைச் சேனையுடனனுப்பினன். அமைச்சன் சென்று மறுக்க அங்கதபூபதி அருகிருந்த ஆற்றில் இது சகந்நாதனுக் கர்ப்பணமென அவன் காணும்படி எறிந்தனர். அமைச்சன், தன் சேனைகளை நோக்கி இதனை நீவிர் தேடிக்கொண்டு வருகவென, அவர்கள் அவ்வாறு செய்து இளைத்து அகப்படாது மீண்டனர். இதனைக்கண்ட அங்கதர், நீங்களேன் வருந்துகிறீர்கள் என்னுடன்வரின் அதனைச் சகந்நாதன் மார்பிலிருக்கக் காட்டுகிறேனென்றனர். அமைச்சன் பின்றொடர அங்கதரும் சகந்நாதஞ் சென்று பெருமாளைச் சேவித்தனர். சேவிக்கையில் பெருமாள் மார்பிலிருந்த வயிரத்தைக் கண்டு இதுவெதென மந்திரி அர்ச்சகரை விசாரிக்க அருச்சகர், இவ்வயிரம் மூன்றுநாட்களுக்கு முன் அங்கதர் இதனை எமக்குக் கொடுத்தனர். இதனைப் பதக்கத்திற் பதிப்பித்து எமக்குச் சாத்துகவெனச் சகந்நாதன் கட்டளையிட்ட வண்ணம் செய்தோமென்னக் கேட்டு நடந்தவற்றை இராயசிங்கனுக்கு அறிவிக்க இராயசிங்கன், தம்பி ஜகந்நாதனுக்கு அன்பனென தறியாமல் இயற்றினேனென வருந்தித் தம்பிக்கு நீ ஜகந்நாதனருளை நாடினை; உனைக்காண எனக்கு ஆசை மிகுகின்றது. ஜகந்நாதன் ஆணைப்படி திரும்புக எனக் கடிதமெழுதினன். இக்கடிதங் கண்ட அங்கதபூபதி, அண்ணனுக்குச் சகந்நாதன் நல்லறிவு தந்தானெனச் சகந்நாதனிடம் விடைப்பெற்றுத் திரும்பித் தமயனையணுகத், தமயன் தம்பியைத் தழுவி இனி நீ உன் மனப்படியிருக்கவெனக்கேட்டு அன்புடன் நாராயணபஜனை செய்திருந்தவர். (பக்தமாலை).

அங்கதன் — வாலியின் புத்ரன், இந்திரனம்சம். அநுமான் சீதையின் இருக்கை கண்ட செய்தி கேட்டுவந்த களிப்பால் மதுவனத்தை உண்ணச்சென்று அவ்விடம் காவலோனாகிய ததிமுகன் எதிர்க்க அவனைக் கொன்றவன். இவன் அநுமனுடன் கூடிச்சீதையைத் தேடுகையில் துமிரன் என்னும் இராக்கதன், இவன் உறங்குங்காலை, மார்பில் அறைய அவ்வரக்கனை அவ்வகை அறைந்து கொன்றவன். நராந்தகன் எனும் பெயருள்ள இராவண புத்திரனைக் கொன்றவன். இராமரிடம் வாகுவலயம் பெற்றவன். சீதையைத் தேடச் சென்றகாலத்து ஒரு பெண்ணினால் பாதாளத்து இருந்து வெளிவரப் பெற்றவன். சீதையை விட்டுவிடும்படி இராமமூர்த்தியால் இராவணனிடம் அனுப்பப்பட்டுச் செய்திகூற, அவன் இவனைக் கொல்ல நால்வரை ஏவ, அந்த நால்வரைக் கொன்று மீண்டவன். கும்பகர்ண யுத்தத்தில் அவனடியால் சோர்ந்தவன். அதிகாயன் யுத்தத்தில் இலக்குமணருக்கு வாகனமானவன். இந்திரஜித்தின் தலையை இராமரிடம் கொண்டு சென்றவன். தன் தந்தையைக் கொன்றபழி தீர்க்கக் கிருஷ்ணாவதாரத்தில் வேடனாய்க் கண்ணனை எய்து பழிதீர்த்தான் என்பர். (இரா).

2. இலக்குமணருக்கு மூத்தகுமரன். இராமர் சொற்படி காருபதம் அரசாண்டவன்.

3. ஒரு நிமித்திகன். (சூளா)

4. ஒரு க்ஷத்திரியன் திருதராஷ்டிரன் புத்திரன்.

அங்கதீயா—காருபதத்தில் புத்திரர் பொருட்டு இலக்குமணரால் நியமிக்கப்பட்ட பட்டணம்.

அங்கதேசம்—இது, உரோமபதன் அரசாட்சியில் மழையில்லாமலிருந்தது பின்னால் ருசியசிங்க முனிவர் வரவால் மழை பெய்யப் பெற்றது. இந்த ராஜ்யத்தைத் துரியோதனனால் கர்னன் பெற்று அரசாண்டான் The Country of Bhagalpur. (பாரதம்—ஆதிபர்வம்).

அங்கநாடு—விசயவரன் என்னும் அரசனுடைய நாடு. இதன் தலைநகர் சண்பை. (பெருங்கதை.)

அங்கமோகினி—திவோதாஸன் தேவி.

அங்கம்—(ச) யானை, தேர், பரி, காலாள்.

2. (ய) மலை, ஆறு, நாடு, ஊர், மாலை பரி, கரி, முரசு, கொடி, செங்கோல்.

3. (ரு) திதி, வாரம் நக்ஷத்திரம், யோகம், கரணம்.

4. ஒரு தேசம், இது, மன்மதனது எரிந்த உடம்பிலிருந்த என்புகள், சிந்திய இடம். ஆதலாலிப்பெயர் பெற்றது. கங்கை, சரயு இந்த இரண்டு நதிகளும் கூடுமிடத்திலுள்ளது. இது, கர்ணபுரி, லோமபாதபுரி எனவும் பெயர் பெறும். இது, வங்காளத்தில் பகல்பூர், கர்ணன் பட்டணம்.

5. துச்சயன் நாடு. இந்நாட்டின் இராசதானிகச்சயநகரம். (மணிமேகலை).

அங்கயுக்—1. வாயுரூபமாய்த் தேகத்திலிருந்து உண்டாம் துடிப்பு முதலிய அசைவால் சுபாசுபங்களைத் தெரிவிக்குந் தேவதை. (மார்).

2. ஒரு தேவதை; இவள், இந்திரிய நிக்கிரகமில்லாப் புருடரை யடைந்து பலத்தைப் போக்குபவள். (மார்).

அங்கயோகம்—(அ) இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி.

அங்கவுறுப்புக்களினிலக்கணம்-இது, மனித சரீர அகப்புற உறுப்புக்களையும் அவற்றின் தொழில்களையுங் கூறுவது. மனிததேகத்தில் பற்களுடன் சேர்ந்து (249) வெவ்வேறான எலும்புகள் உண்டு. இவ்வெலும்புக் கூடுகள், பலவித தொழில்களைச் செய்கின்றன. (1) அவை உடம்பைத் தாங்க ஆதாரமாகின்றன. (2) அவை உடம்பினுள் உள்ள உள் அங்கங்களைக் காக்கின்றன. (3) அவை நாம் இடம்விட்டு நகரவன்மை தருகின்றன. நீங்கள் மனித உடம்பைக் கவனித்துப் பாருங்கள், உடம்பில் எலும்புக்கூடு இல்லாவிடின் உள்ளிருக்கும் மெதுவான உறுப்புக்கள் நில்லா என்பதை அறிவீர்கள். தலையிலுள்ள முக்கியமான உறுப்பு மூளை. இது ஒரு பெட்டிக்குள் அடங்கியிருப்பதுபோலிருக்கிறது. இருதயம், இரத்தாசயம் முதலியவை ஒரு கூண்டுக்குள் அடைத்தவைபோலக் காணப்படுகின்றன. கால்களும் அவற்றை யடைந்த தசைகளும் இக்கனத்த உடலைத்தாங்கத் தூண்கள்போலிருக்கின்றன.

எலும்புகள்—இவை, தேகத்தின் மேல் பாகத்தில் எழும்பியிருத்தலா லிப்பெயர் பெற்றன. இவை ஒருவகைச் சுண்ணும்பும், வச்சிரத்தை ஒத்த பசையும் சேர்ந்த பொருள்கள். குழந்தைகளுக்கு உள்ள எலும்பை எலும்பெனக் கூறுவதற்கில்லை. அவர்களின் எலும்பு, வளையுமே ஒழிய முறியாது. இதற்குக் குருத்தெலும் பென்று பெயர்.

தலை—மண்டைக்கூண்டு, இது முட்டை வடிவான எலும்புகளால் இணைக்கப்பட்டுள்ளது. இது, மூளையைத் தன்னில் அடக்கிக் கொண்டிருக்கிறது. இது, எட்டு எலும்பின் பாகங்களைக் கொண்டது. அவை நெற்றி யெலும்பு 1. சுவர்போன்ற எலும்புகள் 2. கன்னப் பொறிச்சம்பந்தமான எலும்புகள் 2. தலையின் பின்பக்க சம்பந்தமான எலும்பு 1. வட்டமான எலும்பு 1. சல்லடை எலும்பு 1. நெற்றி எலும்பு தலைக்கு முதலாக முன்னிற்பது. சுவர் போன்ற எலும்புகள், இவை, பக்கச்சுவர் போன்று தலையின் மேல்பாகத்தையும் மண்டையின் பின்புறத்தையும் காப்பவை. கன்னப்பொறிச் சம்பந்தமான எலும்புகள் இவை, காதைச்சுற்றி யிருக்கும் காதெலும்புகள். தலையின் பின்பக்க சம்பந்தமான எலும்பு, இது, மண்டையின் பின்புறத்தினடியிலுள்ளது; இது, அகலமும் தட்டையுமானது. இது முதுகெலும்பின் மேல்பாகத்தில் உள்ளது. முதுகெலும்பு இதிலுள்ள தொளையினின்று ஒருவித சாரத்தைப் பெறுகிறது.

வட்ட எலும்பு—இது, சிரத்தின் நடுவில ஆப்புப்போலவும் தளவரிசை யிட்டதுபோலவும் சில சிறு எலும்புகளால் நெருங்கி முகத்தின் எலும்புகளுக்கும் கபால சம்பந்தமான எலும்புகளுக்கும் நடுவிலுள்ளது.

சல்லடை எலும்பு—இது, சல்லடைபோன்று சிறு தொளைகளுடனமைந்தது. இது, முக எலும்பிற்கும் கபாலத்திற்கும் நடுவில் மூக்கின்தொடக்கத்தில் தங்கித் தன்னிடமுள்ள தொளைகளின் வழியாக வாசனையைக் கிரகிக்கிறது.

முகம்—முகத்தில் (கச) எலும்புகளிருக்கின்றன. அவை i. மூக்கெலும்புகள் 2, ii. கடற்காளான் போன்ற எலும்புகள் 2, iii. கண்ணீர் சம்பந்தமான எலும்புகள் 2, iv. மூக்கைப் பிரிக்கும் தட்டை யெலும்பு 1, v. தாடை எலும்புகள் 2, vi. மேற்கன்ன எலும்புகள் 2, vii. மேல்வாய் எலும்புகள் 2, viii. கீழ் கன்ன எலும்பு 1

1. மூக்கெலும்புகள்—இவை, இரண்டு எலும்புகளின் சேர்க்கையுள்ளவை. இவை, பாலம் போன்று உறுதியாய்க் கபாலத்தை நோக்கிச் செல்வன.

2. கடற்காளான்போன்றஎலும்புகள் — இவை இரண்டு, இவை, பின்னல் போன்று ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டு மூக்கின் சுவாச வழியினீட்சியை வளர்க்கின்றன.

3 மூக்கின்கண்ணீர் சம்பந்தமான எலும்புகள்—?, இவை, சிறு எலும்புக் கால்வாய்கள், இவை கண்குழியிலிருந்து கண்ணீரைக்கொண்டு வருவன.

4. மூக்கைப் பிரிக்கும் தட்டை எலும்பு ஒன்று — இது, சலப்பையிலுள்ள உழு படை போன்று மூக்கின் இரண்டு தொளை களுக் கிடையில் சுவர்போன்றிருப்பது.

5. தவடை எலும்புகள் — இரண்டு, இவை தவடையின் இருபுறத்திலும் உள்ளவை.

6 மேல்கன்ன எலும்புகள்—இரண்டு, இவை, குழந்தைப்பருவ நீங்கிய பாலியத்தில் எட்டுப் பற்களைக் கொள்ளும்.

7. மேல்வாய் எலும்புகளிரண்டு— இவை வாய்க்குக், கூரைபோன்று வாயைக் காப்பது.

8. கீழ்க்கன்ன எலும்பு ஒன்று, இது, பதினாறு பற்களைக் கொண்டு காதுகளுக்கு முன்னுள்ள கீல்களின் உதவியால் மேலுங் கீழும் அசைவது.

கட்குழி—இது, எலும்பாலான பள்ளம், இதில் கண் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கட்குழியின் பின்புறத்திலும் ஒரு துவாரம் இருக்கிறது. அத்துவாரத்தின் வழியாக மூளையிலிருந்து பார்வை நரம்புகள் கண்களுக்கு வருகின்றன.

தலையின் அமைப்பை நோக்குகையில் தலையிலும் முகத்திலுமுள்ள எலும்புகளின் அடிகள், வாளின் பற்களைப்போல இருக்கின்றன. இளமைப் பருவத்தில் இவை யொன்று சேரா. பால்யத்தில் சிறுகச்சிறுகப்பெருகி ஒன்று சேர்ந்து உறுதிப்படுகின்றன.

உடல்—அல்லது முண்டம், இது, இரண்டு பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று மார்பு, மற்றொன்று வயிறு. இந்த முண்டத்தில் (ருடு) எலும்புகள் உள்ளன. கழுத்தில், கழுத்தின் சம்பந்தமாய் எழு எலும்புகளும், மார்பு சம்பந்தமாய் மொத்தத்தில் (௨௭) எலும்புகளும், வயிற்றின் சம்பந்தமாக (௬) எலும்புகளும் இருக்கின்றன. முதுகெலும்பு சம்பந்தமான பன்னிரண்டெலும்புகளில் விலாவெலும்புகள் 24, இணைக்கப்பட்டுள்ளன. மார்பெலும்பு (க) இடுப்பின் பின்பாகத்தெலும்புகள் (ரு) திரிகாஸ்தி எலும்பு (க) இடுப்பு எலும்புகள் 2, முதுகெலும்பினடி எலும்பு (க) முது எலும்புகள், உறுதியாய் ஒன்றின் மேலொன்று பொருந்தி நடுவில் அவைகளைத்தாங்கச் சும்மாடுபோல் ஒருதாங்கியைப் பெற்றிருக்கின்றன. முதுகெலும்பின்முள், துவாரத்துடன் கூடிய திரிசூல வடிவினதாகக் காணப்படும்.

முதுகெலும்பின் தொளை, மண்டைவரையில் ஊடுருவிச் செல்லும். முது கெலும்பினடிப்பாகம், சிறு எலும்புகளால் முடிகிறது.

தோளைச்சார்ந்த எலும்புகள்—இதன சம்பந்தமான புஜ எலும்பு (க) முன்கை எலும்புகள் (௨) மணிக்கட்டு எலும்புகள், (அ) உள்ளங்கையில் எலும்புகள், (ரு) கையில் கட்டை விரலில் வெவ்வேறான எலும்புகளும், மற்ற நான்கு விரல்களில் மும்மூன்று வெவ்வேறான எலும்புகளும் உண்டு.

காலைச்சேர்ந்த எலும்புகள்— காலைச்சார்ந்த எலும்புகள், தொடையில் எலும்பு, (க) முழங்காலில் இரண்டு நீண்ட எலும்புகளும், முழங்காலையும் தொடையையுமிணைக்கும் சிப்பி எலும்பு (க) முழங்காலும் பாதமும் (எ) கணுக்கால் எலும்புகளால் இணைக்கப்பட்டன்வ. பாதத்தில் (ரு எலும்புகள் உள்ளன. கட்டை விரலில் (௨) எலும்புகளிருக்கின்றன, மற்ற விரல்கள் ஒவ்வொன்றிலும் (௩) துண்டெலும்புகள் உண்டு. மேற்கூறிய புஜமும் தொடையும் முறையே கழுத்தெலும்பின் சம்பந்தமான கீலிலும், முதுகெலும்பின் சம்பந்தமான பூட்டிலும் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கீல்கள் மூன்று வகை, ஒன்று பந்துபோல் தலையுடையதாய் ஒரு பள்ளத்தில் பொருந்தி யிருப்பது. அது, எப்படித் திரும்பினும் திரும்பும், அது, தோளினெலும்பை ஒத்தது. ஒன்றுபெட்டியின் கீல்போல முன்பின் அசைவது; அது, மணிக்கட்டுப் போல்வது. மற்றது மூளை மூட்டு, கபாலத்தைத் தாங்கி நிற்பது.

தசைநார்—இது, மேல்தோலுக்கு அடியில் செந்நிறமாய்க் காணப்படுவது. இதில் பல இரத்தக் குழாய்கள் ஊடுருவிச் செல்வதால் செந்நிறத்ததா யிருக்கிறது. இது, தேகத்தை அசைக்கவும் திருப்பவும் பல விதத்தில் உதவுகிறது. இதன் உதவியில்லாமல் அசையமுடியாது. தேகத்தில் இவ்வகையான தசைகளின் அடுக்கு பல இருக்கின்றன. இத் தசைநார்களில் சில நீளமாயும், சில அகலமாயும், சில நடுப்பருத்தும், நுனிசிறுத்தும் இருக்கின்றன. இத் தசைநார்களின் நுனிகளில் ஒன்று அசையும் எலும்பிலும், மற்றது அசையா எலும்பிலும்பொருந்தியிருக்கும். தேகத்திலுள்ளும் புறம்புமா யிருவித தசைகளுண்டு. ஒன்று நம்மனதிற் கிஷ்டப்படி செய்வது, ஒன்று தன்னிஷ்டப்படி செய்வது, தன்னிஷ்டப்படி செய்வது குடல், சீரணக்கருவி, இருதயம் முதலிய. நம்மிஷ்டப்படி செய்வன கைகால்களிலுள்ளவை.

நரம்புகள் — தலை மூளையிலிருந்து முதுகெலும்புகளுடன் சேர்ந்து அரசிலையின் பெருநரம்பிலிருந்து நரம்புகள் வியாபித்திருப்பதுபோல், தேகமெங்கும் வியாபித்துச் சத்த பரிச ரஸ ரூப கந்தங்களையும் மற்றத் தொழில்களையும் செய்வன இவை பலவகை.

தோல்—இது, தேகத்தின் மேற்போர்வை; இது, தேகத்தில் தனக்கடியிலுள்ள மற்றப்போர்வைகள் செய்யுந்தொழில்களை வெளிப்படுத்துகிறது. இந்த மேற்றோலுக் கடியில் மற்றொரு தோல், குழல்களுடன் தசையுடனமைந்து உள்தோலாயிருக்கிறது. இந்த உள்தோலுக் கடியில் சுவேதகோளம், நிணக்கோளம், மயிர்க்கால் இரத்த நரம்புகள், ஸ்பர்ச நரம்புகள், வேர்க்குறுவை ஒத்த சிறு மேடுகள் உள.

இரத்தம்—இது, தேகத்தை மரத்திற்கு நீர் போன்று வளர்க்கும் திரவப்பொருள். இது, நரம்புகளின் வழியாய்த் தேகமுழுதும் வியாபித்திருக்கிறது. இப்படி வியாபிப்பதற்கு இருதயமே மூலம். இது, இருதயத்திலிருந்து பெருங்குழாய், நடுத்தரமான குழாய், சிறு குழாய்களாகப் பிரிந்து எற்றவிரக்கமாகப் பாய்ந்து தேகத்தைப் போஷிக்கும்.

இருதயம்—இது, ஆழ்ந்தசதைத்தேமாரிக் காய்ப்போன்ற உறுப்பு. இதுவே இரத்தவோட்டத்திற்கு மூலம். இதில் மரணம் வரையில் இரவும் பகலும் இடைவிடாது வேலைசெய்யும் குழாய் ஒன்றுண்டு. இது, ஒரு மெல்லிய ஜவ்வுபோன்ற மூடியால் சுற்றப்பட்டிருக்கிறது. இருதயம், மார்பினிடையில் மார்பெலும்பின் பின்னும், வல இடங்களிலுள்ள இரண்டு ஆசயங்களுக்கிடையிலு மிருக்கிறது. இது, சற்றேறக்குறைய (5) அங்குல நீளமும், (3½) அங்குல அகலமும், (2½) அங்குல கனமுள்ளதாக இருக்கிறது. இதில் (௪)அறைகள் உண்டு. (௨) மேலும், (௨) கீழுமாக இருக்கும். இரு மேலறைகளுக்குச் சிரவம் எனவும், இரு கீழறைகளுக்கு ஜடரம் எனவும் பெயர். வல இடப்பக்க அறைகளுக்கு இடையில் தடித்த தசைச்சுவரிவற்றைப் பிரிக்கிறது. இருதயத்தின் வலப்பக்கத்தில் கறுத்த இரத்தமும், இடது பக்கத்தில் சிவந்த இரத்தமும் இருக்கும். இரு சிரவங்களிலுள்ள இருவகை ரத்தங்களும் ஜடரங்களில் விழும்படி ஒவ்வொரு சிரவத்தினடியிலும் பெரிய துவாரம் அமைந்துள்ளது. ஜடரம் அடைந்த உதிரம் மீண்டும் சிரவத்திற்குப் போகவொட்டாமல் தடுக்கச் சிரவங்களினடியில் ஜவ்வு கபாடங்கள் உண்டு. இருதயத்திலிருந்து இரத்தம் ஓடுகையில் இரத்தத்தை வெளிப்படுத்தலும், அடக்கலுமாகிய இத்தொழிலே இருதயத் துடிப்பாம். இந்த இருதயத் துடிப்பே நாடி நடை. இது, அந்த ஓசையில் மிகினும் குறையினும் நோயைக் காட்டும்.

நுரையீரல்—இவை இருதயத்தினிரண்டு பக்கங்களிலு முள்ளவை. இவற்றில் காற்றுப் பைகள் உண்டு. இவையே சுவாசகோசம். நெஞ்சுலராமலிருக்கக் காற்றுக் குழல்கள் கோழையை உண்டாக்கி ஈரத்தைத் தருகின்றன. காற்றுக் குழலின் மேற்பாகம் தொண்டையிலிருக்கிறது. அதுவே தூல்வளை. நாம் உட்கொள்ளும் வாயு, காற்றுக்குழல் வழியாகச் சுவாசப் பைக்குச் செல்லுகிறது.

கல்லீரல்—இது, கீழறையின்பிரிவிலுள்ளதுஇது, கருஞ்சிவப்பு நிறமுள்ளது. இது, பித்தநீரை உண்டாக்கிப் பித்தப்பையில் சேர்க்கிறது. இப்பித்தநீர், ஒரு சிறுகுழல் வழியாகச் சிறுகுடலுக்குள் சென்று ஆகாரத்தைச் சீரணிக்கச் செய்கிறது. கல்லீரலின் இடப்புறத்தில் இரைப்பை யிருக்கிறது. நாம் உண்ணும் உணவு வாயின் வழியாகத் தொண்டைக்குள்சென்று அன்

னக்குழல் வழியாய் இரைப்பையை யடைகிறது. இரைப்பைக்கு இடது பாகத்தில் மண்ணீரல் இருக்கிறது. இரைப்பைக்கு அடியில் (௨௩) அடி நீளமுள்ள ஒரு குழற் சுருள்,சுருள் சுருளாய்ச் சுருண்டிருக்கிறது. அதன் ஒருமுனை இரைப்பையிலும், மற்றொருமுனை பெருங்குடலிலும் இருக்கிறது. அதற்குச் சிறுகுடல் எனப்பெயர். சிறுகுடலை அடுத்து ஆறு அடி நீளமுள்ள பெருங்குடல் இருக்கிறது. இது, தலைகீழாய்த் திரும்பிய (⌐) பகரவுருப்போலச் சிறுகுடலைச் சுற்றி இருக்கிறது. இப் பெருங்குடல் அபானத்தை வந்தடைகிறது. மூத்திரகோசங்கள் இவை, இரைப்பைக்குப் பின் முதுகெலும்பை ஒட்டினதுபோல இரண்டு பக்கங்களிலும் இருக்கும் மாங்காய்ப்போன்ற உறுப்புகள். இவற்றை மாங்காயீரல் என்பர். இவற்றிலிருந்து ஒவ்வொரு மெல்லிய குழல் மூத்திரப்பைக்குப்போகிறது. இதிலிருந்து மூத்திரம் வெளிப்படுகிறது.

வாய் — இது, முகத்திலுள்ள பேசும் உறுப்பு. இது, நாம் உட்கொள்ளும் ஆகாரத்தைச் செவிக்கு அடியிலும், கீழ்த்தாடையிலும், நாவிற்கடியிலுள்ள சவ்விற்குப் பக்கத்திலுமுள்ள பல உமிழ் நீர்க்கோளங்களினீர்களால் நனைத்துப் பற்களால் அரைத்து உட்செலுத்துகிறது.

நாக்கு—இது, தடித்த தசைப் பொருள். வாயிலடங்கியது. நாக்கினடியிலும் மேலும் முட்கள் போன்ற சதைகளுண்டு. மூளையிலிருந்து நாவிற்குச் சிறுநரம்புகள் வருகின்றன. இந் நரம்புகள் நாவின்மேலிருக்கும் முட்களில் மலர்ந்து முடிகின்றன. நாம் உருசியுள்ள பொருள்களை வாயிற்கொண்டவுடன் கரையச்செய்து நாவில் மலர்ந்துள்ள நரம்பில்பட ருசியை மூளைக்கறிவிக்கும். வாயிற்கொண்ட பொருளைத் தொண்டையின் வழியாய் உட்செலுத்தும்.

பற்கள்—இவை வாயினுள் ஆகாரத்தை மெல்வதற்கு உதவியான கருவிகள். இவை மேல்வாயினிருபக்கங்களிலும் பதினாறாகவும், அடிவாயினிருபக்கங்களிலும் பதினாறாகவும் முப்பத்திரண்டு இருக்கின்றன. குழந்தைப் பருவத்திலுண்டாம் பற்கள் நிலைத்தவையல்ல. அவை பிள்ளைகளுக்கு (௭)ஆம்மாதம் முதல், இரண்டு வருஷத்திற்குள் உண்டாகும். இவை, (௫-௬) வருஷம் வரையில் பயன்பட்டுப் பிறகு விழுந்துவிடும். அந்தப் பற்களைப் பால் பற்கள் என்பர் (௭) வயதிற்குமேல் முளைக்கும் பற்கள் நிலையான பற்கள். அவை முன்பற்கள் (௮) கோரப்பற்கள் (௪) கடைவாய்ச் சிறிய பற்கள் (௮) கடைவாய்ப் பெரிய பற்கள் (௧௨) ஆக (௩௨) பற்கள். இவை, எழுத்துக்களை நன்றாய் உச்சரிப்பதற்கும், ஆகாரத்தைக் கடித்திழுத்து மெல்லுவதற்கும் உதவி புரிகின்றன.

மூக்கு—நமக்கு அருகிலும் தூரத்திலும் உள்ள பொருள்களின் மணத்தை அறியும் உறுப்பு. இவற்றினிலக்கணம் முகத்தில் கூறப்பட்டது. இதன் மேல் பாகம் எலும்பினலும் கீழ்ப்பாகம் ஜவ்வினலும் எற்பட்டு உட்புறம் இடையிலுள்ள கலப்பையடி போன்ற தண்டால் இருபாகங்களாகப் பிரிக்கப்படுகிறது. இத்துவாரங்கள், தொண்டை வரையில் செல்கின்றன. நாசித்வாரத்தின்மேற் பக்கத்தில் வாசனை நரம்புகள் பரவி இருக்கின்றன. இவற்றின் வேர் மூளையிலிருந்து வருகிறது. இவை மேற் பக்கத்திலிருப்பதால் நாம் வாசனை அறிய மூச்சை இழுக்கவேண்டியிருக்கிறது. ஒவ்வொரு நாசித்வாரத்தினும் மூன்று பள்ளங்கள் உண்டு. அடியிலிருக்கும் பள்ளத்தில் கண்ணிலிருந்து நசித்வாரத்திற்குப் போகும் குழல் இருக்கிறது. நாசித்வாரத்தை அணைந்திருக்கிற ஜவ்விலிருந்துசளி சுரக்கிறது. நாசியின் உட்பிரதேசத்தில் தூசு முதலிய உட்புகாவண்ணம் உரோமங்கள் உண்டு. வாய்க்குட் செல்லும் பொருளைச் சோதித்தனுப்ப மூக்குமேலமைக்கப்பட்டிருக்கிது.

காது—இது, தலைக்கு வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் உள்ள ஓசை அறியுமுறுப்பு. காது மூன்று பிரிவினையுடையது. (௧) வெளிக்காது, (௨) நடுக்காது, (௩) உட்காது, வெளிக்காது, காதின் மடலும், காதிற்குள் செல்லும் தொளையும் சேர்ந்தது. மடல் ஓசையைக் கொண்டுவரும் காற்றினலைகளைத் தடுத்துக் காதின்தொளை வழியாய் அதை உட்புகச் செய்கிறது. காதின் தொளை, ஓரங்குல அளவு நீண்டு சற்று வளைந்திருக்கும். இத்தொளை வழியிலிருக்கும் மயிரும் குறும்பியும் காதில் தூசு முதலிய உட்செல்லாது தடுக்கும். நடுக்காது இது, காதின் தொளைக்குள்ளிருக்கும் ஜவ்வு இருக்கும் பாகம். காதினுட் செல்லும் ஓசை உட்சென்று

இந்தச் சவ்வின் மேற்பட இந்த ஜவ்வதிரும்; அந்த அதிர்ச்சியை உட்காது பெறும். இது, ஒரு பள்ளமும், வளைவாய் குழல் போன்ற (௩) எலும்புகளையும், நத்தைச் சிப்பி போன்ற ஓர் எலும்புங் கொண்டது. அதனை அடுத்த மூன்று அறைகளுள் ஒரு விதஜலம் நிறைந்திருக்கிறது. அச்சலத்தில் மூளையின் சம்பந்தமான கேள்வி நரம்புகள் மிதந்துகொண்டிருக்கின்றன. மேற் கூறிய ஜவ்விற்பட்ட அதிர்ச்சி, வளைந்த (௩) எலும்பில்பட அவ்வளைந்த எலும்புகள் ஜலத்தில் மிதக்கும் நரம்புகளைத் தாக்க அவை மூளைக்குச் சத்தத்தை அறிவிக்கும்.

**கண்கள்**—இவை, சிரசிற்கு இன்றியமையாதன. இவற்றிற்குத் தீங்கு நேராதபடி இவை, ஒரு எலும்பின் குழியில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவை அக்குழியில் உள்ள கொழுப்புப்போன்ற பொருளில் நான்கு பக்கங்களிலும் சுழன்றுவர எளிதாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிற்கு அதிக வெளிச்சம், அபாயம் நேரிடாதபடி இவை இமைகளென்னும் மூடிகளால் காக்கப்பட்டு இருக்கின்றன. விழியில் (௩) புரைகள் உள்ளன. முதல் புரைக்கு வெள்விழியென்று பெயர். இது, உறுதியான வெள்ளைச் சவ்வினால் ஆனது. இது கண் மணியை ஒழித்து மற்றைப் பாகங்களை மூடிக்கொண்டிருப்பது. முற்பாகம் வளைந்து முதல் புரையோடு சேர்ந்துள்ள ஜவ்விற்குக் கருவிழியின் மேல்தோல் அல்லது சுக்லமண்டலம் என்று பெயர். இது கறுப்பாயிருப்பதன் காரணம் பின்னால் கறுத்த ஜவ்வைப் பெற்றிருப்பதனால் என்பர். இது பக்கத்திலுள்ள ஜவ்வில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. கருவிழியின்மேல் தோலையடுத்து ஒருவகை நீர் இருக்கிறது. இரண்டாம்புரை இரத்த நரம்புகளால் ஏற்பட்டது. இதனிறம் கறுப்பு, இது மெல்லிய புரை, இது விழிக்குள் செல்லும் அதிகமான ஒளியைக் கிரகிப்பது. இது இல்லாவிடிற் பார்வை சிதறும். மூன்றாவது புரைக்கு ரூப உற்பத்தி ஜவ்வு எனப்பெயர். இது வெண்ணிறமானது. பார்வை நரம்புகள் மலர்ந்து இந்தச் சவ்வு உண்டாகிறது. இந்தச் சவ்வின்மேல் வஸ்துக்களின் உருவம் விழுகிறது. இவ் வீழ்ச்சி, பார்வை நரம்புகளின் வழியாய் மூளைக்குச் செல்ல மூளை மனதிற்குத் தெரிவிக்கிறது. விழியிலுள்ள கறுத்த ஜவ்விற்குக் கண்வரி என்றுபெயர். இதனிடையிலுள்ள த்வாரத்திற்குப் பாவை, கண்தாரை, கருமணி எனப்பெயர். கண்வரி சுருங்கின் கண்தாரை விரியும்; அப்போது வெளிச்சம் கண்ணிற்செல்லும். கண்வரி பலநிறமாயிருக்கும். கண்வரிக்குப்பின் வெள்ளையாய் உருண்டு காணப்படும் உறுப்பு, ஒளிவட்டம் எனப்படும். விழிக்குப் பின்னால் குழகுழப்பாய் முட்டையின் வெள்ளைக்கருவைப்போல் ஒருவகை நீர் ஒரு ஜவ்விற்குள்ளடங்கி விழியின் முக்கால் பாகம் நிறைந்திருக்கும். இதனால் எல்லாச் சவ்வுகளும் மலர்ந்திருக்கும். இந்த நீர் போய் விட்டால் கண் நொள்ளையாகும். நாம் காணும் வஸ்துக்களின் உருவம், (௧) சுக்லமண்டலம், (௨) நீர்ப்பாகம், (௩) கண்வரி, (௪) கண்மணி, (௫) ஒளிவட்டம், (௬) ஒருவகை நீர், (௭) ரூப உற்பத்தி ஜவ்வு, இவற்றின் வழியாக வர, அவ்வுருவத்தைப் பார்வைநரம்பு, மூளைக்கு அறிவிக்கிறது. கண்ணிற்கு வெளிப்புறத்தில் மூக்கிற்குச் சற்றுத் தூரத்தில் கண்ணீர்க்கோளங்களிருக்கின்றன. அவற்றிலிருந்து கண்ணீர் கசிந்து கண்ணின் மேற் புறத்தை நனைத்துத் தூசு, துரும்புகள் கண்ணில் வராமல் காக்கின்றது. இக்கண்ணீர்க் கோளங்கள் குழல்களாக மூக்குடன் சேர்ந்திருப்பதால் நாம் அழுகையில் மூக்கில் நீர் வடிகிறது. (V. T. Murche & V. K. N) இயற்கைப் பொருட்பாடம்.

**அங்கனை**—வடக்கின்கணுள்ள பெண்யானை.

**அங்கன்**—1. யயாதியின் நான்காம் புத்திரனும் அணுகுலத்தரசனாகிய பலிக்கு மூத்தகுமரன்.

2. உன்முகன் மூத்தகுமரன். இவன் பாரி சுநீதை, தாய் நட்வலை அல்லது பிரீததேசி, குமரன்வேநன்.

3. உசீநரன் குமரன். தீர்க்கதமர் இவன் தாயின் அங்கத்தைப் பரிசிக்கப் பிறந்ததனால் இப்பெயர் பெற்றனன். இவனாண்ட நாடு அங்கம்.

4. விரோசகன் புத்ரன். ஓர் அரசன்.

5. துர்யோதன பக்ஷத்தைச் சேர்ந்த மிலேச்ச அரசன். பீமனால் கொல்லப்பட்டான். இவன் புத்திரன் நகுலனால் கொல்லப்பட்டான். (பாரதம் - துரோணபர்வம்)

6. அநுவம்சத்தில் பிறந்த பலி என்னும் பெயருள்ள அரசனுக்குச் சுதேஷ்ணை என்னும் தேவியினிடத்தில் தீர்க்கதமன் என்னும் ரிஷியினால் பிறந்தவன். இவனுடைய

சகோதரர்கள் அங்கன், கலிங்கன். (பாரதம் - ஆதிபர்வம்)

7. பூருவம்சத்தில் பிறந்தவன. இவன் மகாயாகங்களைச் செய்து யாகதக்ஷிணை அதிகம் கொடுத்துச் சுவர்க்கமடைந்தவன். (பார - துரோ)

அங்காகமம் — ஒரு ஜநாகமத்தொன்று.

அங்காடிப்பூதம்—இந்திரன் விழாவை மறந்தாரை வருத்தும் பூதம். (மணிமேகலை)

அங்காயி — அங்காளம்மனை இவ்வாறு கூறுவர். பெரியாண்டாவனைக் காண்க.

அங்காரகன் — ஸ்ரீபார்வதி தேவியார் நீங்கவும், சிவபெருமான் யோகத்திருந்தனர். இவர் நெற்றிக்கண்ணில் வியர்வுண்டாய்ப் பூமியில் வீழ இவன் குழந்தை வடிவாய்த் தோன்றினன். இவனைப் பூமிதேவி வளர்த்தனள். இவன் தவஞ்செய்ய, யோகாக்கினி இவன் தேகத்திலுண்டாயிற்று. அதனால் அங்காரகனாய்க் கிரகபதம் பெற்றனன்.

2. தக்ஷயாகத்தை அதஞ்செய்து திரிலோகத்தையும் நீறுக்கத்தொடங்கிய வீரபத்திரமூர்த்தியைத் தேவர்கள் வேண்ட அந்த உருவத்தை மாற்றிச் சௌமியராக வேறுருக்கொண்டு அங்காரகன் எனப்பட்டனர். (மச்சபுராணம்).

3 பிரமனுக்குப் பூராடத்ததித்தவன்.

4 பாரத்துவாச முனிவர் ஸ்நானத்திற்குச் சென்று ஒரு பெண்ணைக் கண்டு மோகித்த மனதை மீட்கவும், தாளாது வீர்யம் கலிதமாய்க் குழந்தையுருவாயிற்று. அதைப் பூமிதேவி வளர்த்துப் பாரத்துவாசரிடம் அனுப்பிச் சகல கலைகளையுங் கற்பித்தனள். இவன் தவத்தால் கிரகபதமடைந்தான். புதனுக்குமேல் இரண்டு லக்ஷம் யோசனை உயரத்தில் இருப்பவன். இவன் தேரில் எட்டுக் குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். இவனுக்குக் குசன், பௌமன், மங்கலன், ஆரல், குருதி, வக்கின் எனப் பலபெயர்கள் உண்டு. யௌவனமுடையவன்.

5. ஏகாதசருத்திரரில் ஒருவன்.

6. ஜயத்ரதனுடன் பிறந்தவன் க்ஷத்ரியன்.

அங்காரகை—இவள் கிருதாசியெனும் அரம்பை, அகத்தியருக்குச் செய்த தீமையால் அரக்கியாகிச் சுவேதமுனிவரை வருத்தி வருகையில் அவர் இவள்மீது ஏவிய பாணம், இவளைப்பின்றொடர்தல் கண்டு பயந்து சேதுவில் விழுந்து தன்னுருப் பெற்றவள். (சேது-பு).

அங்காரதாரை—ஒரு அரக்கி. இவள் அநுமன் இலங்கைக்குச் சீதாபிராட்டியாரைத் தேடிச் சென்றகாலத்து வழிமறித்து அவனை வாயினுள் புகும்படி சொல்லினள். அவ்வகை அநுமன் புகுந்து குடல்கொண்டு வெளிவர இறந்தவள். (இரா).

அங்காரவருணன்—அருச்சுனனுடன் யுத்தஞ்செய்து அவனது அக்கியஸ்திரத்தால் தகிக்கப்பட்டுச் சித்திரரதன் எனும் பெயருடன் எழுந்து அருச்சுனனை நட்புக்கொண்டு பாண்டவர்க்குத் தௌமியரைப் புரோகிதராக இருத்தியவன். இவன் பாரி கும்பீநசி. (பார).

அங்காரவேகன்—சுவலனபுரத்தரசன் (சூளா)

அங்காளம்மாள்—ஒரு தேவதை. காளன் என்னும் வீரபத்திரரின் தேவி. தக்ஷயாகம் அழிக்கச்சென்று கோரவுருக்கொண்ட மகாகாளி. இவளுக்கு எலும்பு மாலை; கபாலம், சடைமுடி முதலிய சின்னங்கள். இவளை ஆராதிப்போரும் அவ்வகைச் சங்காளம் பூண்டு ஆடுவர்.

அங்கிசு—ச. அநுகுமாரன். இவன் குமரன் சரத்துவதன்.

அங்கிசுமான்—அஞ்சுமான் எனவும் பெயர். சூரியகுலத்து அசமஞ்சன் புத்திரன். சகரனுக்குப் பேரன். இவன் சகரனால் ஏவப்பட்ட குதிரையைக் கபிலரிடமிருந்து பெற்றுச்சகரனிடம் விடுத்து யாகத்தைப் பூர்த்தி செய்வித்தவன். இவன் கங்கைபூமிக்குவரத் தவஞ்செய்து பலனடையாமல் லோகாந்தரத்தை அடைந்தவன். இவன் குமரன் திலீபன். (பாகவதம்).

அங்கிரன்—ஒரு வேடன். இவன் மகாபாபி. மேலைச்சிதம்பரத்தில் நற்கதியடைந்தவன். (அவநாசிபுராணம்).

அங்கிரசி—வாஸ்துவெனும் வசுவின்தேவி. குமரன் விசுவகர்மன்.

அங்கிரா—விஷ்ணுவின் மானசபுத்திரர்.

2. அங்கீரசைக் காண்க.

3. பிரமரிஷி. பிரமாவின் மானசபுத்திரன்.

அங்கிராமுனி — அகத்தியரை, உருவத்தைப்போல் அறிவிலுங் குறுகியவனெனக்கூறித் தவஞ்செய்யச் சொன்னவன். (பழனி-பு).

அங்கிமுகன்—சிவகணத்தவரில் ஒருவன்.

அங்கீரசன்—பிரமனுக்கு முகம் பிரதானாங்கம், தேஜோவந்தமாகும் பிரதானங்கத்தால்

பிறந்தபடியால் இப்பெயர் பெற்றனன். இரம் என்பது தேஜஸைத் தெரிவிக்கும். இவனுக்கு அங்கிரன், அங்கிரா, அங்கிரசன் எனவும் பெயர். இவன் பிரமன் மானஸ புத்திரர்களுள் ஒருவன். இவனுக்கு உதத்தியன் அல்லது சம்வர்த்தனன் பிரகஸ்பதி என்று இருவர் குமாரும், யோகசித்தி என்று ஒரு குமரியும் உண்டு. அக்நி ஒருமுறை தேவரவியைச் சுமக்க வலியற்று வனத்திற் செல்ல அந்தக் காலத்தில் இவனைத் தேவர் அக்நிபதத்தில் இருத்தினர். பிறகு அக்நிவர இவன் அக்நியை முதலாக வைத்துத் தானிரண்டாவதாய்ப் புத்திரனுயினன். இவன் பாரி சிவை. இவளிடத்திலிவனுக்குப் பிரகச்சோதி, பிரகத்கீர்த்தி, பிருகன்முகன், பிருகன்மதி, பிருகத்பானன், பிருகஸ்பதி, பிருகற்பிரமன் எனுங் குமாரும் அநுமதி, இராகை, சிநிவாலி, குகு, அர்ச்சிஷ்மதி, அவிஷ்மதி, மார்மதி எனும் பெண்களும் பிறந்தனர். இக்குமரர் எல்லாரும் அக்கினிகளாயினர். இவன் குமரியாகிய யோகசித்தி பிரபாவசு வெனும் வசுவை மணந்து விசுவகர்மனைப் பெற்ருள். பார்யைச் சிமிருதி.

2. (இக்ஷ) உன்முகனுர்குப் பிரீதகேசியிடம் உதித்த குமரன்.

அங்கீரன் — அங்கிரசுவிற்கு மிருதியிடமுதித்த குமரன்.

அங்குலன் — இவன் திருவோமாம்புலியூரிலிருந்த வேடன், இவனைப் புலி காட்டிற் றுரத்த அஞ்சி அங்கிருந்த வில்வ மரத்தில் எறிக்கொள்ளப் புலியும்விடாது அடியிற் படுத்தது. இவனும் இராமுழுதும் தனக்குத் தூக்கம் வாராதிருக்க மரத்திலிருந்த வில்வத்தைப் பறித்தெறிய, அவை அடியிலெழுந்தருளியிருந்த சிவமூர்த்தியின் மேல்விழுந்தன. அதனல் சிவமூர்த்தி காட்சி தந்து தம்மை இராமுழுதும் நோக்கியிருந்த புலிக்கும் வேடனுக்கும் முத்திதரப் பெற்றவன்.

அங்குராமன்—சரசுவதி யென்பவளின் குமரன். இவன் தேவி அமிஷை.

அங்கேங்கரா — ஏம கூடத்தருகிலிருக்கும் தீர்த்தம்.

அங்கேளவை—ஒளவைக்கு விருந்திட்டு ஒளவையின் சொல்லால் சோழன் [illegible]ான் ஆடு சீதனந்தரப் பெற்றவள்.

அசகணர்—ஒரு வீரசைவர். வசவதேவர் காலத்திலிருந்தவர். (பச).

அசகன்—புரூரவ வமிசத்தவனுகும் சந்நு என்பவனுக்குப் பேரன்.

2. (சந்) பாலகன் குமரன்.

அசகரான்—ஒரு இருடி. இவன் நாம் தவம் பூண்டால் நம்மைக் காப்பவர் யாரென்று காட்டிற் செல்கையில் இடம் விட்டுப் பெயரா ஒரு மலைப்பாம்பைக் கண்டு இதனைக் காப்பவன் நம்மைக் காப்பானென்று தவமேற்கொண்டவன். இவன் பரமதருமத்தினைப் பிரகலாதனுக்கு உபதேசித்தவன். இவன் காவிரி நதிக்கரையில் சக்ய பர்வத தடத்திலிருந்தான். (தே-பா).

2. வீரபத்திரரால் கொலையுண்ட அசுரன்.

3. ஒரு அசுரன். இவன் மலைப்பாம் புருக்கொண்டு பாலவிநாயகரை விழுங்க விநாயகர் இவனுடலைப்பிளந்து வெளி வந்தனர். (விநாயகபுராணம்).

4. ஒரு பாம்பு, பீமசேனனைப் பிடித்துக்கொண்டது. தமயந்தியைப் பிடித்துக் கொண்டது. நந்தன் என்பவனைப் பிடித்துக்கொண்டது. யுதிஷ்டிரனிடம் சம்வாதம் செய்தது.

அசகாவிரதம்—முதலை தன் அருகில் வந்த பொருளைப் புசிக்கும்; அதுபோல் சந்யாசி தனக்கு நேரிட்டதை யுண்டு திருப்தியடைவன் என்பது. (பாரா-சாந்).

அசக்கிரீவன்—கத்துரு குமரன். இவனுக்கு அயக்கிரீவன் என்றும் பெயர்.

அசக்நி—தக்ஷனுக்குப் பாரி. பஞ்சசேனன் பெண்.

2. பிரமன் குமரி. தக்ஷன்தேவி. இவளுக்கு 5000 குமரர்.

அசங்கன்—வாநரத்தலைவன்.

2. பிளயோகன் சந்ததியான். இவன் தேவி சசுவதி. இவன் பெண்ணுகவுருமாறப்பட்டுப் பின் மேதையதிதி யென்பவனுடைய தோத்திரத்தால் ஆண் வடிவமாக மாற்றப்பட்டவன். மேதையதிதிக்கு அதிகமாகத் தானஞ்செய்தவன்.

3. அக்ரூரன் தம்பி.

4 மிதிலைநாட்டுக்குனிகுமரன்.

அசதி—இவர் பிறப்பால் தொண்டைநாட்டு இடையர்; மகாகொடையாளி; இவர் பாதிரிரவில் விருந்தாகவந்த ஒளவைக்குப் பொன்னிலையில் அன்னமும் வேண்டியவும் கொடுத்துக் கோவைப்பிரபந்தம் தம் பெயராற் பெற்றவர். அது அசதிக் கோவை யெனப்படும்.

அசதிக்கோவை — ஔவையாரால் அசதி யென்னும் கோவைசியப்பிரபாரீது பாடப் பட்ட பிரபந்தம்.

அசமஞ்சர்கள்—போஜபுத்திரர்கள்.

அசமஞ்சன்—(சூ) சகரன் குமரன். தாய் கேசினி, இவன் முதற்பிறப்பில் யோகியாயிருந்து . அதினின்றும் தவறியதால் கேசினியிடம் பிறந்து பூர்வக்ஞானத்தால் இல்லறத்திருந்து நீங்க எண்ணித் தெருவில் விளையாடும் பிள்ளைகளைச் சரயுவில் எறியத் தந்தை கோபித்து இவனைக் காட்டிற் றுரத்தக் கட்டளையிடக் களிப்புற்று முன் எறிந்த குமாரர்களை எழுப்பித்தந்து காடடைந்து தவமேற் கொண்டவன். (பாகவதம்).

அசமஞ்சசன்—(சூ) சுகேசினி என்பவளுக்குச் சகரனால் பிறந்த குமரன். இவன் குமரன் அஞ்சுமந்தன், இவன் மிகத்தீயவனாய் இருந்தபடியால் இராச்சியத்தை விட்டுத் தகப்பனால் துரத்தப்பட்டனன்

அசமவாயிகாரணம் — எது, சமவாயிகாரணத்தனுகி இருப்பதும், துணிந்த காரணத்தன்மையுடையதுமா யிருப்பது. (தரு)

அசமாதி—இக்ஷுவாகு சந்ததியான்; இவன், தன் பூர்வாசாரியர்களைவிட்டு வேறு ஆசாரியர்களைக் கொண்டதால் அவர்கள் இவனிடத்துக் கோபித்து அரசன்கெட மந்திரோச்சாரணஞ் செய்தனர். இவனது புதியகுருக்கண்மார் எதிராக வேறு மந்தரமேவி அவர்களில் ஒருவனை மரணமடைவித்தனர். இவனுடனியைந்த மற்ற வேதியர் அவனது பிழைப்பிற்காக முயன்றனர். (இருக்கு).

அசமீடன்—(சங்.) பௌரவ வம்சத்தவனாகிய அத்தி குமரன். இவன் குமரர்கள் பிருகதிக்ஷுன், நீலன், இருஷன்.

2. இவன் ஒரு க்ஷத்திரியன். சந்திர வம்சத்தைச் சேர்ந்தவன் புமன்யூ புத்திரனாகிய சுஹோத்தானுடைய புத்திரன். இவன் தாய், எட்சுவாக்கி. இவன் உடன் பிறந்தார் சுமீடன், புருமீடன். இவன் தேவியர் மூவர். தூமினி, நீலி, கேசினி, முதலோர்; தூமினி இவள் புத்திரன் ருக்ஷசன். நீலி, இவள் புத்திரர்கள். துஷ்யந்தன். பரமேஷ்டி. கேசினி, இவள் புத்திரன் ஜகுறு (பாரதம் ஆதிபர்வம்).

3. சந்திரவம்சத்து விகுஞ்சனன் புத்திரன். தாய் சுந்தரி. இவனுக்கு ஐந்து தேவியர். கைகேயி, நாகை, காந்தாரி, விமலை, ரூட்சை, ரூட்சையின் புத்திரன் சம்வர்னன். (பாரதம் - ஆதிபர்வம்)

அசமுகன்—சண்முகசேநாவீரன்.

2. ஒரு அரக்கன், மது எனும் பூதகணத் தலைவன்மீது நாராயணாஸ்திரம் பிரயோகஞ்செய்து அதனால் மாண்டவன்.

அசமுகி—(அசு) மாயை எனும் அசுரப் பெண், நான்காஞ் சாமத்தில் ஆட்டினுருக் கொண்டு காசிபரைப் புணரப் பிறந்தவள். இவள், துர்வாசரை வலிதிற் புணர்ந்து வாதாபி வில்வலனைப் பெற்றனள். இந்திராணி தனித்திருக்கக் கண்டு அண்ணனுக்கு ஆவள் என்று இழுத்துச் செல்லுகையில் மகாகாளரால் கையறுப்புண்டு சூரனுக்குத் தனக்கு நேரிட்டதை உணர்த்திப் பிரமனால் கைவளரப் பெற்றவள். (ஸ்கா).

அசம்பவம்—இலக்கியத்தில் இலக்கணமிராது, இலக்கியமல்லாததின் கண் இலக்கண மிருத்தல். (தரு).

அசான்—கத்ரு குமரன்.

அசரீரி—ஆகாய வாணியெனவுங் கூறுவர். (தருமதேவதை) கடைச்சங்கத்தில் திருக்குறள் அரங்கேறச்செய்த காலத்தில் திருக்குறளை உருத்திரசன்மருடனிருந்த ஆகாசவாணியால் சொல்வித்த முதற் றெய்வம். இவரை ஒரு புலவர் எனவும் கூறுவர் (திருவள்ளுவமாலை) "திருத்தகு தெய்வத் திருவள்ளுவரோ, டுருத்தகு நற்பலகை யொக்க—விருக்க, வுருத்திர சன்மரென வுரைத்துவானி, லொருக்க வோ வென்றதோர் சொல்." பல காலங்களில் அடியவர்க்கு ஆகாயவாணியாக உபசரிக்குந் தெய்வம்.

அசலகீர்த்தி—கனகமாலையின் சகோதரருள் ஒருவன் (சிந்).

அசலமுனி—யானையிடம் பிறந்த இருடி.

அசலன்—1 சண்முகசேநாவீரன்.

2. கயமுகனுடன் விநாயகர் யுத்தஞ் செய்யச் சென்றகாலத்து அவரைத் தாங்கிச்சென்ற பூதகணத் தலைவன். (விநாயக புராணம்).

3. புத்திசேநன் பிதா.

4. பசுவயிற்றிற் பிறந்த முனிவன் (மணிமேகலை).

5. காந்தார தேசத்து அரசனாகிய சகுனிக்கு உடன்பிறந்தவன் ஏகரதன். அர்சுனனால் கொல்லப்பட்டவன். (பாரதம். துரோணபர்வம்).

அசலிகை—ஒரு நிர்த்தய

அசனிகச்சீர்பாதன்—சிவகணத்தவரில் ஒருவன்.

அசனிதேவர்—ஒரு சிவயோகி, இவர் சிவத்தியானஞ்செய்து கொண்டிருக்குங்காலத்தில் ஆற்றுநீர் பெருக அதைக்கண்ட இவ்யோகியர் கோபங்கொண்டனர். அக்கோபத்தீயால் ஆறு வடிந்தது.

அசனிவேகம்—ஜீவகன் பட்டத்துயானை

அசனை—1. பாணாசுரன் தாய்; பலியின் தேவி.

2. அர்க்கன என்னும் வசுவின் தேவி; இவளிடத்து ஆசை முதலிய பிறந்தன.

அசன்—1. (சூ.) இரகு புத்திரன். இவன் குமரன் தசரதசக்கிரவர்த்தி. இவன் விதர்ப்பநாட்டரசனாகிய போசன் புத்திரியாகிய இந்துமதியின் சுயம்வரத்திற்குச் செல்லுங்கால் வழியில் பூர்வத்தில் ஒரு இருடி சாபத்தால் யானையுருவடைந்து உலாவிக்கொண்டிருந்த பிரியம்பதன் எனும் காந்தருவனாகிய யானையைக்கண்டு ஒரு அம்பெறிந்து கொல்லச் செல்லுகையில் யானையுருப்பெற்ற காந்தருவன், நான் மதங்கருஷிசாபத்தால் இவ்வுருவடைந்தேனென்று அவனுக்கு முன் தோன்றி அவனுக்கு அஸ்திரவித்தைகள் அநேகம் உபதேசிக்க அந்த அஸ்திர சகாயத்தால் சுயம்வரத்தில் எதிர்த்த அரசர்களை வென்று இந்துமதியை மணந்தவன். இவன், ஒருநாள் மனைவியுடன் இருந்த காலத்தில் ஆகாயத்திலிருந்து மாலையொன்று மனைவிமீது விழுந்தது. அது காரணமாக மனைவி சுவர்க்கமடைந்தனள். அதனால் அரசன் வருந்தினன். அதை வசிட்டர் அறிந்து அரசனுக்கு இந்துமதி மானுடப்பெண் அல்லள். தேவர்கள், திரணபிந்து செய்த யாகத்தைத் தடுக்க அரினியென்பவளை யேவ அவள், அவ்வகைசென்று புரிகையில் இருடிகோபித்து நீ மானுடவுருக்கொள்கவெனச் சபித்தனர். அவளே இந்துமதியாகப் பிறந்து உன்னை மணந்தனள். அவள் சாபந்தீர்ந்ததால் மேனாடடைந்தனள் என, அசன் தேறிக் குமாரனுக்குப் பட்டமளித்து மேனாடு அடைந்தனன்.

2. பூதனுக்குச் சுரபியிடம் உதித்தவன்; ஏகாதசருத்திரருள் ஒருவன்.

3. நிமிவம்சத்து ஊர்த்தகேதுவின் குமரன்.

4. பிரமன் சபையிலுள்ள தேவர். அஜர் என்பர்.

அசாதகத்துருவன்—விதிந்திரன் குமரன். இவனது குமரன் துருபதன்.

அசாதசத்ரு—1. தருமராசன்.

2. காசிதேசத்தரசன்; பாலாகி யென்னுங் குருவிற்கு ஞானோபதேசஞ் செய்தவன்.

3. இக்ஷ்வாகு வம்சததவனாகிய விதிசாரன் குமரன். மகததேசாதிபதி. இவனும் சாக்யமுனியும் ஒரு காலத்திருக்கலாம்.

அசாதாரணலக்ஷணம்—(உண்மைலக்ஷணம்) அது அந்நியஜாதியின் லக்ஷணங்களும், தன் ஜாதியின் லக்ஷணங்களுமகன்று நிற்பது. (சிவ - சித்).

அசாத்தியசுரலக்ஷணம்—இது, ரோகிக்குத் தேக நடுக்கலுடன் நோவு, மேல்மூச்சு, மூர்ச்சை, இரைப்பு, கண்ணில் நோயுடன் குத்தல், முகம் குங்குமம்போல் சிவத்தல், ஈனத்தொனி, சிலேஷ்ம காடிவேகம், சுவாசம் சில்லிடல், மார்பு, உந்தி, மூக்கு, உள்ளங்கை, உள்ளங்கால் குளிர்தல், சிரம் அக்னிபோல் சுடுதல், நாடிகள் குடிலமாக நடத்தல், தேகங்குளிரல், மேல்மூச்சு, அடித்தொடை வீக்கம், இரவில் தேக எரிவு, கண்டத்தில் சிலேஷ்மம், நாசி, கை, கால் குளிர்ச்சி முதலிய தீக்குறிகளிருத்தலாம். (ஜீவ).

அசாத்யவாதரோகங்கள்—எந்த வாதரோகத்தில் அதி நடுக்கல், வீக்கம், சகிக்கக்கூடாத நோவு, சருமத்தில் திமிர், தேகஞ் சுஷ்கித்துச் சுருங்கல் முதலிய இக்குணங்கள் கண்டால் ரோகம் அசாத்யம், அன்றியும், வாதரோகம், அபஸ்மாரகம், ரத்தவாந்திரோகம், க்ஷயம், குன்மம், மேகரோகம், இவைகளுக்கு உடனே சிகிச்சை செய்யாவிடில் பிரபலப்பட்டு அசாத்யமாம். (ஜீவ).

அசாமீடன் — சந்திரகுலத்தரசன். இவன் தந்தை அத்தி, குமரர் பிரகதிஷன், நீலன், ருக்ஷன், இவனால் பார்ஹதிஷ, பாஞ்சால, கௌரவ வம்சங்களுண்டாயின.

அசாமீளன் — கன்னியாகுப்தபுரத்திலிருந்த ஒரு வேதியன்; இவன் மகா பாபி. இவன் இறக்கும்போது தன் குமாருள் ஒருவன் பெயராகிய நாராயணனமத்தை அபுத்திபூர்வகமாய் அழைத்து யமபடரினின்று

நீங்கி விஷ்ணுபதமடைந்தவன். இவனுக்கு அசாமேளன் எனவும் பெயர்.

அசி—ஒரு நதி. காசிக்கருகிலுள்ளது.

அசிக்னி – இரண்டாவது தக்கன் மனைவி.

அசிக்கினி—இது ஒரு நதி.(Chandrabhaga) The river Chenab.

2. வீரிணியைக் காண்க.

அசிதர்—கௌதம புத்தர் பிறந்த காலத்து அவர் அவயவங்களைக் கண்டு ஞானவானென்று துதித்த தவத்தவர்.

2. இவர் இந்திர சாபத்தால் தர்ம வழி தப்பி நடந்து சிவபூசையால் தர்மத்தையும் தீர்க்காயுளையும் பெற்றார். இவர்க்குத் தேவலர் எனவும் பெயர். (பார - அநுசா).

அசிதன்—1. திருதராட்டிரன் குமரன்.

2. ஒரு ருஷி, தருமபுத்திரனுக்குத் தர்மம் உபதேசித்தவர்.

3. சூர்யகுலத் தரசரில் ஒருவன்; இவன் அரசாண்டு மரணமடையப் பிரிவாற்றாது உடன் செல்லத் துணிந்த கருவுற்ற மனைவியைச் சியவனருஷி, உன் வயிற்றில் நல்லகுமரன் உதித்து மரபு விளங்க இருத்தலால் நீ சாகாமலிருக்கவெனத் தடுத்தனர். அதனால் அவ்வரசன் மனைவி உயிர் பெற்றிருக்கையில் மாற்றவள், வயிற்றிலிருந்த கருவைக்கொல்ல விஷங்கலந்த அன்னமூட்ட இருடியின் வரபலத்தால் துன்பமில்லாமல் விஷத்துடன் சகரன் எனப் பெயர்பெற்ற புத்திரனைப் பெற்றவள். (அயோத்...ம்).

4. சைநதீர்த்தங்காரில் இரண்டாவதானவர்; இவர் சிதசத்ரு மகாராஜாவின் குமரர், தாய் விசயசேனை, இவர் காலத்தரசன் சகரச்சக்கிரவர்த்தி. இவர் உயரம் சுகூ விஸ், அஉ லக்ஷபூர்வம் ஆயுஷ்யம், சுவர்ண வர்ணம், இருதயுகம், மாசிமீ சுக்ல பக்ஷம், தசமிதிதி, உரோகணி நக்ஷத்திரம் ஜநநம் (மாபுராணம்)

5. அங்கநாட்டரச புரோகிதன். சிவாலயத்து வாழையைச் சொந்தப் பிரயோசனத்தில் உபயோகித்து நரகமடைந்தவன்.

அசிதை—அப்சரஸ்திரிகளில் ஒருத்தி.

அசித்தபேதம்பன்னிரண்டு — அவை (க) சொருபாசித்தன், (உ) வியாத்திகரணாசித்தன், (ங) விசேஷ்யாசித்தன், (ச) விசேஷணாசித்தன், (ரு) பாகாசித்தன் (சா) ஆச்ரயாசித்தன் (எ) ஆச்ரய ஏகதேசாசித்தன் (அ) வியாத்த விசேஷ்யாசித்தன், (கூ) வியாத்த விசேஷணாசித்தன், (கய) சந்தேகாசித்தன், (கக) சந்தித்த விசேஷ்யாசித்தன் (கஉ) சந்தித்த விசேஷணாசித்தன். (சிவ-சித்)

அசித்தன்—பப்பர நாட்டுச் சுபானன் குமரன். தீயொழுக்கமுள்ளவனாய் ஒரு பார்ப்பினியைக் களவில் புணருகையில் பூஜாகாலம் வர, அவள் மூலையைச் சிவலிங்கமாகப் பூசித்து மறுபிறப்பில் மன்மதனாகப் பிறந்தவன்.

அசிபத்திரவநம் — இருப்புவாள் போலும் செடிகள் நிறைந்த காடு; இது பாபிகள் நரகத்திற்குச் செல்லும் வழியில் உள்ளது; க,000 யோசனைகளுள்ளது. அதி உஷ்ணமுள்ள சூர்யகிரணம் நிறைந்து உள்ளது. இந்த வனத்தில் பாபிகள் முட்செடிகளாலும் துஷ்டமிருகாதிகளாலும் துன்பப்படுவர். (கருடபுராணம்).

அசிர்க்காரோகம் — (பிரதரரோகம்) இது பெண்களின் ரோகத்தொன்று. இது அல்குலின் துவாரத்தைச் சுருக்கி மூடிக்கொண்டதனால் சேர்ந்திருக்கும் உதிரத்துடன் வாயு கூடி உதிரத்தைக் கெடுத்துத் துர்க்கந்த முண்டாக்கி அகாலத்தில் வேதனையுடன் வெளிப்படுவது. இது உபவாசத்தாலும், துக்கத்தாலும், மிருபுணர்ச்சியாலும், உஷ்ண வஸ்துக்களைப் புசித்தலாலும் உண்டாவது. இது, வாதம், பித்தம், சிலேஷ்ம, சந்நிபாத அசிர்க்கரமென நான்கு வகைப்படும் (ஜீவ).

அசீகிர்தன் — ஒரு வேதியன், சுநச்சேபன் தந்தை. இவனை இருடியெனவுங் கூறுவர். இவன் அரிச்சந்திரனுக்குச் சுநச்சேபனை யாகப்பசுவாக விற்றவன். இவன் முதலில் (க000) பசுக்களை வாங்கிக்கொண்டு விற்றும், மீண்டும் (கOO) பசுக்களைப் பெற்று யூபத்தில் கட்டியும், சுநச்சேபனை யெவரும் பலியிடச் சம்மதியாதபோது பின்னும் நூறு பசுதரின் பலியிடுவேன் என்று (கOO) பசுக்களைப் பெற்றுக்கொண்டு கத்தியைக் கையிற் கொள்கையில் சுநச்சேபன் தேவர்களைத் தியானித்து யூபத்தம்பத்தினின்று விலகி விச்வாமித்திரர் மடியிலிருக்க, அசீகிருதன் தன் குமரனைத் தரக்கேட்க விச்வாமித்திரர் மறுத்தனர். பின் விச்வாமித்திரருக்குச் சுநச்சேபன் புத்திரன் ஆனான். (தேவி - பாக).

அசீமகிருஷ்ணன்—(சங்.) அசுவமேதகன் குமரன்; இவன் குமரன் நிச்சக்கிரன்.

அசீரணரோகம் — இது கண்கள், தவடை அதைப்பு, உண்ணுதபோதும் உண்டது

போக் கெப்பம், வாய்நீரூறல், வயிற்றில் வேதனை முதலிய உண்டாக்கும், இது ஆமாசீரணம், விதர்தாசீரணம், விஷ்டம்பாசீரணம், விளம்பிகாசீரணம், ரசசேஷாசீரணம், உற்சுகாசீரணம், சாமான்யாசீரணம், தூமாசீரணம், வீதூமாசீரணம், விஸ்பவ்ஷ்டம்பாசீரணம், ரஸசேஷாசீரணம் எனப் பலவிதப்படும். இவைகளைக் குடாரிச் சூரணம், கண்டாத்திரிசூரணம், அஸ்வகந்திச்சூரணம் முதலியவற்றால் வசமாக்கலாம். (ஜீவ).

அசுபதி—மத்திரதேசாதிபதி; தேவி மாளவி.

அசுரர்—சுரராகிய தேவர்க்கு விரோதிகள். பிரமன் சகனத்திலுதித்து அப்பிரமனைப் பெண்ணாக நினைத்து இச்சித்தமையால் அசுரராயினர். அமிர்தபான மொழிந்தவர்.

அசுரேந்திரன் — 1. (அசு) அசுரத்தலைவன். கஜமுகாசுரன் பிறப்பிற்குக் காரணமானவன்.

2. (அசு) தாருகன் குமரன். சூரனுக்குத் தனக்குற்ற துன்பமுணர்த்திப் பிரமனால் அறுந்த கைவளரப் பெற்றவன். சூரபதுமனுக்குத் தன் தந்தையின் மரண முணர்த்தி யுத்தத்திற்கு அனுப்பியவன். (ஸ்காந்த புராணம்).

அசுவஇருதயம் — நளன் ருதபர்ணனுக்கு கூறிய அசுவசாஸ்திரம்.

அசுவசேனன் - 1. தக்ஷன் குமரன், காண்டவ வனத்தில் அக்கியில் அகப்பட்டு இந்திரனால் காக்கப்பட்டவன். அருச்சுனனைக் கொல்லக் கர்ணனிடம் நாகாஸ்திரமாக இருந்து அருச்சுனன் முடியைக் கவர்ந்தவன். அருச்சுனனால் கொல்லப்பட்டவன்.

அசுவதரன்—ஒரு நாகராசன். இவனும் கம்பளனும் சரஸ்வதியிடம் கானவித்தை பெற்றுச் சிவமூர்த்தியைப் பாடிச் சித்தி யடைந்தனர். இவர்களுள் அசுவதரன், குவலயாசுவன் மனைவி மதாலசையை அரக்கன் வஞ்சஞ் செய்து கொன்ற செய்தி கேள்வியுற்றுச் சிவமூர்த்தியைப்பாடி அவர் தரிசநந்தர அவரிடம் குவலயாசுவன் அல்லது இரதத்துவசன் எனும் நண்பனது தேவி மதாலசை இறந்தகாலத்து எந்த வயதுடன் இறந்தனளோ அந்த வயதுடனும், அப்போதிருந்த நினைவுடனும் தன்னிடம் பிறக்க வரங்கேட்க, சிவமூர்த்தி, நாகராசனை நோக்கி, நீ பிதுர் சிரார்த்தஞ்செய்து நடுப்பிண்டத்தையுண், உனது நடுப்படத்தில் அவள் பிறப்பளென அவ்வாறு செய்து அப்பெண்ணினைப் பெற்றுத் தன் குமாரரால் அரசனை வருவித்து அரசனுக்குக் கொடுத்தவன். இவர்களிருவரும் கான வித்தை பெற்றுச் சிவபெருமானைப்பாடிச் சிவபெருமான் திருச்செவிக்குத் தோடுகளாயினர். (பாரதம்)

அசுவதீர்த்தம்—கன்னியாகுப்சத்துக்கு அருகிலுள்ள தீர்த்தம். The confluence of the Ganges and the Kalinadi in the district of Kanouj.

2. கங்கையிற் காலநதி கூடுமிடத்துள்ள தீர்த்தம். காதி, தன் மகளை மணக்க வந்த இரிசிகனை ஆயிரம் அசுவங்கள் கேட்ப அச்சத்தியவதி பொருட்டுக் குதிரைகள் தந்த இடம்.

அசுவத்தாமா — துரோணர் மனைவியாகிய கிருபியின் கற்பினை நாரதரால் அறிந்த ருத்திரன், அதனையறிய நிருவாண பிக்ஷை கேட்டு இவள் அழகினைக்கண்டு வீர்யத்தைத் தட்டில்விட அதனை அவள் துரோணர் குதிரையிடம் வைத்ததனால் குதிரையின் முதுகைக் கிழித்துக்கொண்டு அசுவத்தாமா பிறந்தான். இவனுக்கு மயிற்கொடி; இவன் பஞ்சசிரத்தாற் பாண்டவரைக் கொலைபுரிய நினைத்து அதைவிட, விஷ்ணுமூர்த்தி சக்கரத்தால் பாண்டவரைக் காத்தனர். இளம் பஞ்சபாண்டவர்களைப் பாசறை யுத்தத்திற் கொன்று வியாசரால் சாபமடைந்து பிறகு பாண்டுபுத்திரரால் சிரோமணி கவரப்பட்டு அவமானமடைந்தவன். மகாவீரன். நாராயணாஸ்திர முதலியவற்றைப் பாண்டவர்மீது ஏவ அவை பயன்படாதது கருதிக் காடுநோக்கித் தவஞ்செய்யச் செல்லுகையில் வழியில் வியாசரைத் தரிசித்து உறுதிபெற்றவன். பாரத யுத்தத்தின் பதினெட்டாநாளிரவு பாசறை யுத்தத்திற்குச் செல்ல அங்குச் சிவாஞ்ஞையால் பூதமொன்று மறுக்க ஏக்கங்கொண்டு ஒரு தடாகம் அடைந்து தவம்புரிகையில் இவன் தவம் நடவாதிருக்கச் சிவபூதங்களிவனைத் தூக்கி அக்கிகுண்டத்தருகில் விட்டன. சிவபூசைக்கு இடையூறு வந்ததென அசுவத்தாமன் குண்டத்தில் வீழ்ந்து இறக்கத் துணிந்தனன். அப்போது சிவமூர்த்தியும் உமையும் தரிசனந்தந்து வேண்டிய தென்னவெனப், பாரதப் போரில் மிகுந்த வீரர்களைக் கொல்லவேண்டு மென்றனன். சிவபிரான் ஒரு வாளைப் பிரசாதித்து இன்றிரவு யாரைச் சந்திக்கின்ற

னையோ அவர்கள் மாய்வர் என்று மறைந்தனர். அவ்வாறே பாசறை யுத்தத்தில் எதிர்த்தவரை மாய்த்துப் பாண்டவர் பத்தினிகள் பெற்ற கருக்குலையப் பாணம் விட்டுக் கிருஷ்ணனுல் குட்டவியாதியடைந்து (௩௦௦௦) வருஷம் கருவில்லாமலும் நல்ல ஆகாரமில்லாமலுமிருக்கச் சாபம் பெற்றவன். அப்பாணம் கருக்களைச் சேதித்து உத்தரையின் வயிற்றிலிருக்கும் கருவிடஞ் செல்ல அந்தக் கருப்பத்தில் கண்ணபிரான் ஒரு சிறு உருவமாயிருந்து உங்கரிப்பப் பாணமஞ்சி நீங்க அவமதிப்படைந்தவன். (பார) (பாக).

2. மாளவ தேசாதிபதியின் யானை. இந்த யானை இறந்ததாகத் தருமர் கூறக் கண்ணன் மாறுபாடு செய்தனர்.

அசுவநதி — குந்திதேவி கர்ணனைப் பெட்டகத்து வைத்து விட்ட நதி.

அசுவநாமன்—சந்தனுவின் மந்திரி.

அசுவமேதம்—இது உத்தமமான குதிரையின் நெற்றியில் அரசனது வீரம் முதலியவைகளை வரைந்த பட்டத்தைக் கட்டிப் பூப்பிரதக்ஷணம் செய்வித்துப் பின் யாகஞ் செய்வித்தல். அசுவமேதம் என்று சொல்லப்படுகிற யாகக்கிரியையின் விஷயமாய் இருக்கிற அசுவம், விராட்டுக்கு அல்லது மூலகாரணமான சர்வ விளக்கமான வஸ்துவிற்கு உறுதியான அடையாளமாக இருக்கின்றது. தைத்திரிய யஜுர் வேதத்தின் கடைசிப் பிரகாரணத்தில் அசுவ உடலினது பலவித பாகங்கள் காலத்தின் பிரிவுகளைக் காட்டப்பட்டவைகளாக இருக்கின்றன. காலைப்பொழுது, அதன் சிரசாகவும், சூரியன் அதன் கண்ணாகவும், வாயு அதன் மூச்சாகவும், சந்திரன் அதன் காதாகவும் கூறப்பட்டிருக்கிறது. அசுவமேதத்திலும், புருஷமேதத்திலும், மனிதர்களும், அசுவங்களும் பலி கொடுக்கப்படுவார் அல்லர். அசுவதமேத யாகச் சடங்கில் அநேக விதங்களாகச் சொல்லப்படும் அறுநூற்றொன்பது காட்டுமிருகங்கள், குடிமுறைக்கு அடுத்த மிருகங்கள், பக்ஷிகள், மச்சங்கள், புழுப்பூச்சிகள், இருபத்தொரு ஸ்தம்பங்களில் கட்டப்படுகின்றன. சாதுவான மிருகங்களைக் கற்றூண்கள் மத்தியில் கட்டிச் சில தோத்திரங்கள் ஓதப்பட்ட பின்பு பலியாகிய யாதொரு துன்பமும் இல்லாமல் அவிழ்த்துவிடப்படுகின்றன. புருஷமேதத்திலும் பலவித குலங்களும் நடைகளும் தொழில்களுமுடைய நூற்றெண்பத்தைந்து மனிதரைப் பதினொரு ஸ்தம்பங்களில் கட்டி நாராயணபலியைக் குறித்து ஓதப்பட்ட கீதங்களுக்குப் பின்பு அவிழ்த்து விடப்படுகிறது.

அசுவமேததத்தன் — சந்திர வம்சத்து அரசன். தாய் வைதேகி. ஜெனமேஜெயன் பேரன்.

அசுனம்—இது பேடையை விட்டு நீங்காத பறவை. இதனிறம் உருவம் முதலிய நன்ருக விளங்கவில்லை. இதன் ஓசையை தலைவனிக்கத்தில் தலைவி பொருமைக்குத் தமிழ் நூலார் உவமை கூறுவர்.

அசுராயணன் — விச்வாமித்திரபுத்திரன்.

அசுவரோகிதம் — இந்திரப்பிரத்தத்திற்கு அருகிலுள்ள தீர்த்தம்.

அசுவாருடமூர்த்தி—பாண்டியனிடங் குதிரை விற்கவந்தகாலத்து வேதத்தைப் பரியாக ஏறிவந்த சிவமூர்த்தியின் பரிமேலழகிய திருவுரு. (சிவபார).

அசேயசூரன்—அலம்புதன் குமரன்.

2. பாரத வீரருள் ஒருவன்.

அசை—எழுத்துக்களாலாக்கப்பட்டுச் சீர்க்கு உறுப்பாய் வருவது. அது, தொகை, வகை, விரியால் I. நேரசை, II. நிரையசை யென்னுந் தொகையானும், 1. நேரசை, 2. நிரையசை, 3. நேர்பசை, 4. நிரைபசை யென்னும் வகையானும், 1. சிறப்புடைநேரசை, 2. சிறப்பில்நேரசை, 3. சிறப்புடைநிரையசை, 4. சிறப்பில்நிரையசை, 5. சிறப்புடைநேர்பசை, 6. சிறப்பில்நேர்பசை, 7. சிறப்புடைநிரைபசை 8. சிறப்பில்நிரைபசை யென்னும் விரியானும் மூவகைப் பாகுபாட்டை அடையும். (யா - வி).

அசைகபாத்—பூதனுக்குச் சுரபியிடம் உதித்த குமரன். ஏகாதசருத்திரருள் ஒருவன்.

அசோகன்—1. தசரதன் மந்திரிகளில் ஒருவன்.

2. மகததேசாதிபதியாகிய ஒரு புத்த அரசன். மயூரியவம்சத்தரசன். இவன் சந்திரகுப்தனுக்குப் பேரன். தந்தை பிந்துசாரன். புத்தமதத்தை யெங்கும் பரவச்செய்தவன். (B. C. 260) இல் ஆண்டவன். இவனும் இவன் குமாரனும் புத்தசமயத்தைப் பலவாறு எங்கும் பரவச்செய்தனர். இவன் குமரன் மாகிந்தன், இலங்கையில் புத்தமதத்தைப் பரவச்செய்தவன். (B. C. 222) இல், இறந்தான்.

3. பீமசேன தேர்ப்பாகன்.

அசோகவர்த்தன்—மகதநாட்டரசன். சந்திர குப்தன் பேரன்.

அசோகவர்த்தனன்—வாரிதாரன் குமரன். இவன் குமரன் சுசேசு.

அசோதரம் — இரவிவன்மன் நகரம். (மணி).

அசோதரன்—ஒரு முனிவன். சிவகன் முற்பிறப்பில் பெற்றபெயர். (சிந்).

2. ஒரு முனிவன். (சூளாமணி).

அசோதை—நந்தகோபன் தேவி. கண்ணன் மண்ணையுண்ணும்போது வாய் திறந்து காட்டப் பயமுறுத்தி அவன் வாயைக் காட்டியகாலத்துச் சகல அண்டங்களையும் வயிற்றிற் கண்டவள். (பாக).

அசோமுகிநாடகம் — அருணசலக்கவிராயராற் செய்யப்பட்ட அசோமுகிகதை.

அச்சணந்தி — இவன் வெள்ளிமலைக் கருகிலுள்ள வாரணவாசிக்கரசன் ஜீவகனுக்காசிரியன் இவனுக்கு லோகமாபாலன் என்று பெயர். இவன் யானைத்தீநோயால் வருந்தி ஸ்ரீ வர்த்தமான சுவாமிகளிடத்து அருள் பெற்று நோய் தீர்ந்தவன்.

அச்சநாபம்—பரதகண்டத்தின்முதற்பெயர்.

அச்சரப்பாக்கத்தவர் — செட்டிகளில் ஒரு பகுதியர்.

அச்சார்—ஒரு தேவசாதியார்.

அச்சுதக்களப்பாளர்—1. இவர் நடு நாட்டில் திருக்கடந்தை யென்றும், திருப்பெண்ணுகடம் என்றும் கூறப்படும் திருத்தூங்கானை மாடத்திலிருந்த வேளாளர். சந்தான குரவர்களில் முதல்வராகிய மெய்கண்டாருக்குத் தந்தையார்.

2. இவர் தமிழ் நாட்டு மூவேந்தரையும் சிறையிலிட்டவர். இவர் ஒரு அரசராக இருக்கலாம் எனத் தோன்றுகிறது. இவ்வச்சுதகளப்பாளர் சிதம்பரத்தி லிருந்தவராக மூவேந்தர் செய்யுட்களால் தெரிகிறது. (தமிழ்நாவலர்சரிதை.)

அச்சன் — பாலகாட்டி லுள்ளவர்களின் பட்டம்.

அச்சுதபிரேக்ஷர்—இவர், ஆனந்ததீர்த்தர் எனும் மத்வாசாரியருக்குச் சந்நியாசங் கொடுத்த ஆசாரியர். இவர் இதற்கு முன் பிறப்பில் அஸ்தினபுரத்தில் மதுகாவிருத்தி செய்திருந்து திரௌபதிதேவி தன் சாத்தாலிட்ட அன்னத்தால் நிருமலராய் இப்பிறவியில் துறவியானவர்.

அச்சுதாசன்—திருவள்ளுவர்காலத்தவன். அழகாநந்தரைப் பெற்று ஏலேலசிங்கர் புகழ்ந்தகாலத்து அக்குமங்கை மடிமேல் வரப்பெற்றவன். (திருவள்ளுவர் சரித்திரம்).

அச்சுதன்—1. எக்காலத்தும் அழிவில்லாதவன், விஷ்ணு, சிவன்.

2. சண்முகசேநாவீரன்.

அச்சுதாலி—வாணியரில் ஒரு பகுதியர்.

அச்சுதேந்திரர்—இருஷபதீர்த்தங்கரின் எட்டாவது பிறப்பு.

அச்சுவகண்டன்—இரத்தினபல்லவத்தரசன், மயூரகண்டன் மகன், பூலோக வித்தியாதர லோகங்கள் முழுதும் திறை பெற்று அதிபதியாயிருந்தவன். பிரதிவாசுதேவர்களிலொருவன் இவனுக்கு அச்சுவக்கிரீவன் எனவும் பெயர். (சூளாமணி).

அச்சுவசேனன்—1. ஒருபாரத வீரன்.

2. கர்ணன் குமரன்.

அச்சுவபுரம் — ஒரு வித்தியாதர நகரம். (சூளாமணி).

அச்சுவப்பெருமகன் — இவன் கேகய நாட்டின் அரசன். குற்றமற்ற புகழையுடையவன். முடியுடைமன்னன். மிக்கவீரன். தருசகன்பால்மிக்கஅன்பினன். (பெருங்கதை).

அச்சுவரோகி—இந்திரப்பிரத்தத்தின் வழியிலிருக்குந் தீர்த்தம்.

அச்சுவேளாளர்—பட்டினவர்களுக்குள் ஒரு பகுதியர்.

அச்சோதம்—இது சோதையென்னும் நதிக்குற்பத்தி ஸ்தானம்

2. ஒரு பொய்கை.

3. காஸ்மீரத்திலுள்ள சித்த ஆச்ரமத்துக்கு அருகிலுள்ள நதி. (In Kashmir near Marttanda).

அச்சோதை—இவள், ஒரு புண்ணிய நதி வடிவமான பெண் இவள் மரீசிமக்களாகிய பிதுர்க்களுக்குக் குமரி. இவள் தம் பிதுரரால் நிருமிக்கப்பட்ட அச்சோதமென்னும் நதிக்கரையில் (க000) வருஷம் தவஞ்செய்ய, பிதுர்க்கள் பிரத்தியக்ஷமாயினர். அவர்களுள் ஒருவனாகிய மாவசு வென்பவனை நாயகனாக எண்ண அதனால் அவள் விபசாரியாய்ச் சுவர்க்கத்திலிருந்து தள்ளப்பட்டுப் பூமியில் விழாது அந்தரத்து நின்று தவஞ்செய்தனள். அவள் வசமாகாத மாவசு, இச்செய்தி நடந்ததினத்தை அமாவாசை யாக்கினன். அவள் மீண்டும் அவர்களை வேண்ட நீ தேவர் கர்மத்தைப்புசித்து, (உஅ)வது, துவாபர யுகத்தில் ஒரு மீன்வயிற்றில் சத்தியவதியெனப் பிறந்து பராசரனைக்கூடி வியாசனைப்

பெற்றுப் பிறகு சந்தனுவின் தேவியாய் இரண்டு புத்திரரைப்பெற்று அப்பால் அச்சோதை யெனும் புண்ணிய நதியாக வென அருளிப்போயினர். இத்தினத்தில் அப்பிதுர்க்களை நினைத்துக் கர்மாதிகள் செய்யின் அவை பிதுர்ப் பிரீதியைத் தரும். (மச்சபுராணம்).

அச்மகன் — (சூ) கல்மாஷபாதன் குமரன். இவன் குமரன் மூலகன். இவன் தாய் இவனைப் பெறுங்காலத்தில் பிரசவவேதனை யதிகமடைய வசிட்டர் அவள் வயிற்றைக் கல்லாற் கீறிச் சிசுவை வெளிப்படுத்தினர். கல்லாற் கீறப்பட்டு வந்தமையால் இவனுக்கு இப்பெயர் வந்தது. (அயோ...ம்).

அச்மரிரோகம் — இது மூத்திரரோகத்தின் வகை. இது மூத்திரத்தில் கற்களை உண்டு பண்ணுவது, இது நாபியில் நோவு, நீர், ஆட்டின் மூத்திர நாற்றமாய் வருத்தத்துடனிறங்கல், சுரம், அரோசகம் இவைகளை உண்டாக்கும். இது வாதபித்த சிலேஷ்ம அஸ்மரிகள், சுக்லாஸ்மரி, சர்க்கராஸ்மரி எனப் பாகுபாடடையும். இதுவே கல்லடைப்பு ரோகம். இவைகளைச் சலமஞ்சரி, வெடியுப்புச் சுன்னம் முதலிய இவற்றால் வசமாக்கலாம்.

அச்மர் — ஒரு இருடி விதேக தேசாதிபதியாகிய ஜநகருக்கு ஞானோபதேசஞ் செய்தவர். (பரா - சாந்)

அச்வசிரசு — அச்வநிதேவர்களால் உபாசிக்கப்பட்ட ஒரு மந்திரம்.

அச்வசிரன் — இவன் கபிலோபதேசத்தால் வனமடைந்து தவமியற்றி இஷ்டசித்தி பெற்ற அரசன். (வராஹ - புரா).

அச்வத்தநாராயணன் — இவன் தர்ப்பசயனத்தில் தவம்புரிந்து திருமாலருள் பெற்றவன்.

அச்வநிதேவர்கள் — விவச்சுவான் எனும் சூரியன், தன் பாரி சஞ்ஞை அல்லது தவஷ்டரை, தன்னை விட்டுப் பெட்டைக் குதிரை உருக்கொண்டு தவஞ் செய்வதை யறிந்து ஆண் குதிரை உருக் கொண்டு தொடர அப்பெட்டைக் குதிரையாகிய சஞ்ஞாதேவியின் இரண்டு மூக்கின் தொளைகளிலிருந்து சூரியரேதஸால் பிறந்தவர்கள். தேவவைத்தியர். சியவநர் பாரி சுகன்னியைச் சோதித்துச் சியவநருக்கு யௌவனமளித்தவர்கள். சுகன்னியைக் காண்க. சையாதியஞ்ஞத்தில் இவர்களுக்குச் சியவநரால் சோமபானங் கொடுக்கப் பட்டது. இந்தச் சோமபானத்திற்கு இந்திரன் கோபித்து வச்சிரமெறிய இந்திரனுக்குக் கையில் வாத முண்டாயிற்று. இதனை இவர்கள் போக்கினதால் தேவர்களுடன் அவிபெற வரம் பெற்றனர். வேத மந்திரங்களில் இவர்களைப் பலவாறு கூறப் பட்டிருக்கிறது. (பாரதம்).

2. நாஸத்யன், தஸ்ரன். இவ்விருவரும் சூர்ய புத்திரர். சம்ஞா தேவியின் மூக்கிலிருந்து பிறந்தவர் (பார - அநு).

அச்வபதி — மத்திர தேசாதிபதி. இவன் பதினெட்டு வருஷம் சாவித்திரியை நோக்கித் தவஞ்செய்து சாவித்திரி யெனும் பெண்ணைப் பெற்றனன்.

2. கேகயநாட்டரசன். பெண், கைகேசி. குமரன் யுதாசித்.

அச்யுதர் — சக்ரபாணியார் குமரர். இவர் குமரர் செந்தாமரைக்கண்ணர். இவர் நம்மாழ்வாருக்கு நான்காம் பாட்டர்.

அச்வமகாராசன் — (சூ) அரசன், இவன் புத்திரனிலாது வருத்தமடைந்து பிருகுமுனிவரையடைந்து புத்திரகாமேஷ்டி செய்வித்துக் கொள்கையில் நடுச்சாமத்தில் தாகங் கொண்டு யாக தீர்த்தத்தை யுண்டனன். அதனால் வயிற்றில் கருவுண்டாகி (க00) வருஷம் கருச் சுமந்து மாந்தாதாவைப் பெற்றுச் சுவர்க்கமடைந்தவன்.

அச்வமேதன் — (சந்) சுதாநீகனுக்கு வைதேகியிடம் பிறந்தவன். சகமேசயன் பௌத்திரன். (பாரதம்).

அச்வலக்ஷணம் — குதிரைகள், சாமவேதத்தின் நாவினும், பிரமதேவர் ஓமஞ்செய்த போது அவர் கண்ணினும், அக்நியினும், அவர் கைவழியொழுகிய நீரினும், இந்திரன் முதலிய திக்குபாலகர் எண்மரிடத்தும், கடலிற்றோன்றிய அமுதினிடத்தும், இலக்ஷ்மி சாபத்தால், பிரமன் கோட்டானை அக்கோட்டான் முட்டையிலும் பிறந்தன. இந்தக் குதிரைகள் பாடலம், கோடகம், இவுளி, வன்னி, குதிரை, பரி, கந்துகம், புரவி என எட்டு வகையாகக் கூறப்படும். அவற்றுள்:—1. பாடலம் என்பது, நெய்த்து மாந்தளிர் நிறமான நாவும், உயர்ந்து நீண்ட குளம்புகளும், சரியொத்த பற்களும், பாம்பின் படம்போல் விரிந்த கழுத்தும், மார்பும் கொண்டது. 2. கோடகம் என்பது, விசாலமான நெற்றியும், நீண்ட தலைமயிர்போல் ஒரு நிறமான பு

மயிரும், மூன்று கோணமாய் அழகிய கழுத்தையும் உடையது. 3. இவுளி என்பது, யுத்தத்தில் முகத்திற் கத்திகொண்டு வெட்டினும் எதிர்த்துச் சண்டை செய்ய வல்லதாய்க் குரங்கு, வேங்கை, யானை, நரி, சரபம், முயல்கள் போலும் வேகம் உடையதாம். 4. வன்னி என்பது, உன்னதமாய்ச்சங்கு, கற்கண்டுகளைப்போல் வெண்மையுடையதாய், நுரையுடையதாய்ப் பின்னமான ஒரு நிறமும், மைந்நிறமும் உள்ளதாம். 5. குதிரை என்பது, கழுத்தில் தெய்வமணியும் அஷ்டமங்கலமும் அழகிய பஞ்சகல்யாணமும் உடையதாம். 6. பரி என்பது, குங்குமம், கற்பூரம் அகில் முதலியவற்றின் மணம் வீசுவதாய்ச் சங்கு, மேகம், சரபம், சிங்கம் இவைகளைப்போல் அனுமானிப்பதாம். 7. கந்துகம் என்பது, நான்குகால்களும் கடைந்து எடுத்து நாட்டின போன்றதாய் கொள்ளிவட்டம் போல் வட்டம் இட்டுச் சுழல்வதாய் மேலேறின வீரன் காலுக்குள் அடங்கினதாம். 8. புரவி என்பது, மலைமேற் கோட்டையையும், கோட்டை மதில்களையும், அகழி, ஆறு முதலியவற்றையுந்தாண்டும் வலியுள்ளதாய் மேற்கூறிய இலக்கணங்கள் முழுதும் கொண்டதாம்.

இனிக் குதிரைகளின் பொதுநிறங்களாவன: வெள்ளி, முத்து, பால், சந்திரன், சங்கு, வெண்பனி இந்த நிறமுள்ளது வெள்ளைக்குதிரை. மாதுளம்பூ, செம்பஞ்சிக்குழம்பு இந்த நிறங் கொண்டது சிவப்புக் குதிரை. குயில், வண்டு, மேகம் இந்த நிறமுள்ளது கறுப்புக் குதிரை. கோரோசனை நிறம் உள்ளது பொன்னிறக் குதிரை. இந்த நான்கு நிறமும் கலந்து இருப்பது மிசிரக்குதிரை. முகம், மார்பு, உச்சி, வால் நான்குகால்கள் வெளுத்து இருப்பது அஷ்ட மங்கலம். முகமும், நான்கு கால்களும் வெளுத்து இருப்பது பஞ்சகல்யாணியாம். எந்த நிறப்பேதங்கள் மிகுந்திருந்தாலும் வெண்மை கலந்திருப்பின் நன்றாம். கறுத்த குதிரைக்கு வயிற்றினும், மார்பாயினும் சிவந்திருந்தால் வெற்றியைத் தரும். வயிறும், மார்பும், வெண்மையாயிருக்கின் அதற்கு வாருணம் எனப் பெயர். அந்தக் குதிரை போரில் வெற்றியைத் தரும். பிடரி வெளுத்திருந்தால் உடையவனுக்குப் புத்திரலாபம் உண்டாம். மார்பு வெளுத்திருந்தால் சந்தோஷத்தைக் கொடுக்கும். மணிக்காலும், கண்டமும் வெளுத்திருந்தால் பொருள் சேரும். முகம் வெளுத்திருந்தால் வெற்றியைத் தரும். பின்பக்கத்தினிடம் வெளுத்திருந்தால் சுகங்கொடுக்கும். இடுப்பு வெளுத்திருந்தால் புத்திரப்பேறும், வலப்புறம் வெளுத்திருந்தால் தனதானியமும் பெருகும். முதுகு, வால், முகம் வெளுத்திருந்தால் ஜயம் உண்டாம். உந்திமுதல் முன்புறமெல்லாம் சிவந்தும் பின்புறமெல்லாம் வெளுத்துமுள்ள குதிரை பகலில் வெற்றிதரும். முன்புறம் வெளுத்துப் பின்புறமெல்லாம் செந்நிறமுள்ள குதிரை இரவில் வெற்றிதரும். மூன்றுகால்கள் வெளுத்தும் ஒருகால் கறுத்தும் வெள்ளையான கண்களும், பெருந்திண்டியும், நீலகண்டமும், பீஜமில்லாமையும், ஏற்றக்குறைவான பெரிய பீஜமும், அசைவு இல்லாமையும் தீது. முகம், வால், நான்குகால்களில் சுழிகள் இலாமையும் குற்றமாம். நரி, பூனை, காக்கை, பேய், நாய், பன்றி இவைகளின் ஓசைபெருமல் கடல், மேகம், சங்கம், இடபம், பேரிகை இவைகளைப்போல ஓசை யுடையனவாய்ப் புலி, காடி, கழுதை, செந்நாய், பூனை, நரி, காகம், தீ, புகைகளின் நிறங்கள் பொருந்தாதனவாய், வாயுவேகத்துடன் இயைந்து, வெண்முத்து, சந்திரன், நீலரத்னம், தாமரையின் மகரந்தம், பொன், காயாம்பூ, செவ்வரத்தம்பூ, நல்ல பச்சைக்கிளிபோலும் நிறம் உடையனவாய், நெற்றி பரந்து, உயர்ந்த மேல்உதட்டைப் பெற்றும் வெண்ணிறம் நிறைந்து தம்மில் வரிசையாய் ஒத்து விளங்குகின்ற பற்களையுடையனவாய், நன்மணம் வீசும் நாக்கு, மாந்தளிர்போல் சிவந்து இமையின் மயிர்கள் திரண்டு, கண்கள் அமர்ந்த பார்வையுடையனவாய்த் தேகத்தில் அதிக மாமிசம் இல்லாமல் உள்ளே வளைந்து முக்கோணமாயுள்ள முகத்தையுடையனவாய் வலிமைகொண்ட குளம்புகளுள்ளனவாய் நரம்புகள் புறந்தோன்றுத் தசையுடையனவாய், முழங்கால் நெறித்தல் இல்லாமல் நெளிப்பாகிய முதுகு உடையனவாய்ப் பருத்த தொடைகள் திரண்டனவாய்க் கால்கள் நீண்டு சிவந்தன நன்று. பின்னும் இந்தக் குதிரைகள் மங்காளன், சாரங்கன், கங்காநீலன், மௌவழகன், கோங்காளன், சன்னசம்பான்,

குங்குமச்சோரன், கரியான், நீலன், சாரன், மள்ளான், உரஞ்சிவந்தான், நல்லான், பொல்லான், கருங்காற்சம்பான், எனப் பல நிறங்கொண்டிருக்கும். இக்குதிரைகள், காலை யூன்றி வைக்கின் பந்து வைத்ததுபோலவும், நின்றால் மலைபோலவும், அனுமானிக்கின் யானைபோலவும் சிங்கம்போலவும், வேகத்தில் வாயுபோலவும், ஆட்டத்தில் நடிப்பவன் போலவும், நடக்கின் யானைபோலவும், சிங்கம்போலவும், குலமகளிர்போலக் கவிழ்ந்த முகமும், கருநெய்தல்போல் மணமும், கண்ணும், மேகநிறமும், மலராலும், மணத்தாலும், அலங்கரிக்கின் நீங்காத சந்தோஷமும் கொண்டன உத்தமக் குதிரைகளாம். உத்தமக் குதிரைக்கு உயரம் நூறுவிரல் அளவு. மத்திமக் குதிரைக்களவு எண்பத்து நான்கு விரல். அதமக் குதிரைக்கு அளவு அறுபத்தொரு விரல். கொம்பைப் போலிருக்கும் நீண்ட காதும் முருக்கிய காதும் ஆகாவாம். இவற்றின் ஓட்டம், நாகபந்தம், விருத்தம், நெடுவீதி யெனப்படும். பின்னும் இவற்றின் சுழிகளின் இலக்கணங்களின் வகையாவன :—தண்டையடியிலிருக்கிற அண்டவர்த்தம், உடலின் ஒரு புறத்திலிருக்கும் கேளவகம், காகவர்த்தம், முன்வலைச்சுழி, கேதாரிச்சுழி, காலிலிருக்கும் கேசாவர்த்தம், கச்சை நிலையிலிருக்கும் பட்டடையாகச் சொல்லப்பட்ட சுழியும் ஆகாவாம். கழுத்து அடியில் மார்க்கண்ட மிரட்டையிராமல் சிரசில் இரண்டு சுழியும், நாபியில் நான்கு சுழியும் மார்பில் இரண்டு சுழியும், நெற்றியில் ஒரு சுழியும், உதட்டில் ஒரு சுழியும் ஆகிய சுழிகள் பத்துங் குறையாது இருத்தல் நலந்தரும். கழுத்தில் வலஞ்சுழித்திருந்தால் அதைத் தெய்வமணி யென்பர். முகம், தலை, மார்பு, நாசி இந்த நான்கிடங்களிலும் இரண்டு சுழிகளும், நடுநெற்றி, பின்பக்கம் இரண்டிடத்தும் ஒவ்வொரு சுழியும் பெற்ற குதிரை உத்தமம் உள்ளதாம். வெவ்வேறாக மார்பில் ஐந்து சுழிகள் இருந்தால் அதற்குச் சீவத்சம் எனப்பெயர். நெற்றியில் இரண்டு சுழியாவது மூன்று சுழியாவது இருக்கின் நன்று. அப்படி இல்லாவிடின் நெருக்கமாக நான்கு சுழிகள் வலஞ்சுழித்து இருக்கின் நன்மைதரும். இரண்டு சுழிகள் முன்னங்காலிலும், காலின் மூலத்தினும் இருந்தால் நலம் என்பர். கண்டத்தின் நடுவே இரட்டைச்சுழி பெற்ற குதிரை தலைவனுக்கு வறுமை, துன்பம், மரணம் இவற்றைத் தரும் என்பர். இரட்டைச்சுழி கணைக்காலில் இருந்தால் அக் குதிரையுடையானுக்குப் பயம், துன்பம், விலங்கு உண்டாம். மேலுதடு, முன்காலடி, கபோலம், முழங்கால் இந் நான்கிடங்களில் சுழிகளிருந்தால் தன் தலைவனைக் கொல்லும். இந்தச் சுழிகளையுடைய குதிரைகளை ஏறாமல் குதிரைக் கூடத்தில் கட்டிவைக்கினும் குற்றமாம். இந்தக் குதிரைகளுக்கு வயது முப்பத்திரண்டு. அவஸ்தை பத்து. அவஸ்தை ஒன்றுக்கு வருஷம் ஒன்று, மாதம் இரண்டு, நாள் பன்னிரண்டு என்பர். குதிரையின் மெல்லியநடை சுவரிதகம். விரைவானநடை, ஆக்ராந்திகம். இருகாற்றூக்கி ஆடிவருநடை, வல்கிதம், சுற்றியோடல், இரேசிதம். முழுவோட்டம், புலிதம் எனப்படும். சக்கிரிதம்—வட்டமாகச்சுழன்றோடல். தௌரிதம்—கால்களை வளையாமல் விரைந்து அழகாச் செல்லல். ஆப்புலுதம் — நான்கு கால்களாலும் துள்ளிச் செல்லல். துரம்—விரைந்தோடல். மந்தம் மெலிய நடை. துடிலம்—வளைந்து செல்லல். பரிவருத்தனம் பின்னுக்குப்போதல், நடத்துவோனது குதிகால் தாக்கலால் விரைந்தோடல் தாரை. விஜயம்—தனங்களின் நடுப்பாகத்தில் இரட்டைச் சுழிகளுள்ளது புகழைத்தரும். பதுமம் — தோளினிருபக்கங்களிலும் சுழிகளையுடையது. செல்வந்தரும். பூபாலன் — மூக்கினடுவில் - ஒன்று அல்லது (௨) சுழிகளையுடையது. இது குதிரைகளில் சக்ரவர்த்தி. சிந்தாமணி — கழுத்திற் பெரிதாக ஒற்றைச் சுழியுள்ளது. அது பொருளையும் இன்பத்தையுந்தரும். சுற்கம் — நெற்றியிலும், கழுத்திலும் சுழிகளுள்ளது, செல்வத்தையும், புகழையுந் தரும். கிருதாந்தம் — குறி, வால், திரிகம், (௨) இடத்தும் சுழிகளையுடையது. இது அச்சத்தைத்தரும். சியாமகன்னம் — உடல் முழுதும் ஒரே நிறமும், செவியில் நீல நிறமுடைய குதிரை. சயயங்கலம் — வைடூர்ய நிறம்போன்ற கண்களையும் பலவகை நிறத்தினையு முடையது. தளபஞ்சி — நெற்றியில் வெண்மையும் உடல் முழுதும் வேறு நிறம் பெற்றது. இதன் விரிவைச்

சுக்ரநீதியிற்காண்க. (திருவிளை). (சுக் - நீ).

அஞ்சகன்—சகுனி புத்ரன்.

அஞ்சமந்தன்—1. சூரியன்.

2. அசமஞ்சசன் குமரன்; சூர்யவம்சம். இவன் குமரன் திலீபன்.

அஞ்சலன்—சாணக்கியன்.

அஞ்சனகிரி—திருவேங்கடமலை. அஞ்சனை தவஞ்செய்ததால் வந்த பெயர்.

அஞ்சனாகுமாரன்—விராடதேசாதிபதி. பாண்டவர் அச்வமேதம் செய்தகாலத்தில் அருச்சுநனுடன் சிநேகங்கொண்டவன்.

அஞ்சனபருவன்—பாரதயுத்தத்தில் அசுவத்தாமனாற் கொல்லப்பட்ட கடோற்கசன் குமரன்.

அஞ்சனம்—அட்டதிக்கு யானைகளில் ஒன்று, மேற்கிலுள்ளது. இதனது பெண்யானை தாமிரபர்ணி வருணனது.

அஞ்சனவர்மன்—பாண்டவர் படைவீரன். கடோற்கசன் குமரன். (கச)ஆம் போரில் அசுவத்தாமனால் இறந்தான்.

அஞ்சனாக்ஷி — தஞ்சாவூரில் இருந்த கல்வி மாதாகிய தாசி. கம்பர் இராமாயணத்திற்கு "அம்பரா அணி சடையரனயன் முதல், உம்பரால் முனிவரால் யோகராலுயார், இம்பராற் பிணிக்கருமிராம வேழஞ்சேர், கம்பராம் புலவரைக் கருத்திருத்துவாம்." எனும் துதிகூறியவள்.

அஞ்சனாவதி — வட கிழக்கிலுள்ள திக்கு யானையாகிய சுப்பிரதீபத்தின் பிடி.

அஞ்சனை —1. இவள் ஒரு காந்தருவமாது. சாபத்தால் காமரூபிணி யென்னும் வானரமாகக் குஞ்சரனெனும் வானரத்திற்குப் பிறந்த கேசரி யெனும் வானரனை மணந்தவள். இவள் ஒருநாள் தன் உண்மைவடிவத்துடன் உலாவுகையில் வாயு கண்டு காமுற்று இவளைப் புணர்ந்தனன். அதனால் இவள் வயிற்றில் அநுமன் பிறந்தனன். (உத் - ரா).

2. இவள் புத்திரப்பேறு வேண்டித் திருவேங்கடமலையில் தவஞ்செய்தனள். இவ்வகையிருக்க வனப்பார்க்க வந்த ருத்ரமூர்த்தி சத்திகளிருவருக்கு முன் ஆணும் பெண்ணுமாகிய குரங்குகள் இரண்டு நடித்துப்புணர அவற்றைக்கண்ட ருத்ரமூர்த்திக்குக் கலிதமான வீர்யத்தை வாயு ஏந்தித் தவஞ்செய்யும் அஞ்சனையின் கையில் இட்டனன். அதனைப் பழமென வுட்கொண்டு அநுமனைப் பெற்றனள். (திருவேங்கடபுராணம்).

3. வடபாகத்திலிருக்கும் பெண்யானை. இதனாண் சாருவபூமம்.

அஞ்சி — இவன், அதியமானெடுமானஞ்சி யெனவும் பெயர் பெறுவன். அதியர் மரபினனாதலின் அதியமானெனக் கூறப்படுவான். இயற்பெயர் அஞ்சியென்பது போலும் 'ஆர்கலி நறவினதியர் கோமான், போரடு திருவிற் பொலந்தாரஞ்சி" (புறம் கூக.) இதனை (அகம் நடுஉல்)(அஞ்சி அத்தை மகனார்) என்ற வாக்கியத்தாலும் பிறவற்றாலும் அறிக. கொல்லிக் கூற்றத்து மலையினின்று இவன் பெருஞ்சேரலிரும்பொறையொடு போர் செய்தவனென்று பதிற்றுப்பத்து எட்டாம் பதிகத்தாலறியப்படுதலால் இவனது தகடூர் கொல்லிக் கூற்றத்தின் கண்ணதெனக்கொள்க. இவன் சேரமானுக்கு உறவினனாதலால் பனைமாலையுடையவன். குதிரைமலைக் குத்தலைவன். இவன் முன்னோர்க்கு வரங்கொடுக்கும் பொருட்டுத் தகடூரின் கண்ணே வானவர் வந்து தங்கிய சோலையொன்றிருந்தது. வேற்று நாட்டுச் சென்று அங்குள்ள கரும்பைக்கொண்டு வந்து இந் நாட்டிற்பரவச் செய்தவர் இந்த அஞ்சியின் முன்னோரே; (புறம் கூகூ) ஒரு காலத்து இவன், தன்பாற் பாடிச் சென்ற ஔவையார்க்கு யாதும் பரிசில் கொடானாகி நீட்டிப்ப அவர் வெகுண்டு மீள்வாராயினர் (புறம் உ0சு) அதனையறிந்த அஞ்சி, பயந்துவந்து உடையும், நெல் முதலிய பிறவும் அளவு கடப்பக்கொடுத்து அவரால் புகழ்ந்து பாடப்பெற்றான். (புறம் நுகூ0) பிறிதொரு பொழுது இவன் மாற்றரசனுக்கு அஞ்சித் தன்னிலைத்தோடு காட்டகத்து ஒளித்திருந்தனன் "சினமிகுமுன்பின் வயமானஞ்சி யினங்கொண்டொளிக்கு மஞ்சுவருகவலை" (அகம் சகரு) அஞ்சியொளித்ததினால் அஞ்சியெனப்பட்டான் எனவுங் கருதற்கிடனாகிறது. ஒருபோது இவனது கொடைத் தன்மையாற் பாண்மகளாகிய ஔவையார் புதியனவாகச் சில பாடல்பாடிப் பொருள் கூறக்கேட்டு மகிழ்ந்திருந்தனன். அதனை யறிந்த இவனது அத்தை மகனாற் புகழ்ந்து பாடப்பெற்றனன் (அகம் நுருஉ) வேறொருகாலத்து இவன் திருக்கோவலூரை வென்றபொழுது பரணராற் புகழ்ந்து பாடப்பெற்றான் (அகம் நுஎஉ) அதனை யெடுத்துக்காட்டிப் பரணராற்பாடப்பெற்றநீயன்றோவென்று

ஔவையார் சிறப்பித்துக் கூறியுள்ளார்; (புறம் கூக) இவனொருகால் மலைமேற் சென்றபொழுது அங்குவிடரிலுள்ள கருநெல்லியின் பழத்தைக்கண்டு அதனையுண்டார், சாவாது நெடுங்காலம் உயிரோடிருப்பரென்பதனை அறிந்ததனால் அப்பழத்தைப் பறித்து, வந்து ஔவையார்க்குக் கொடுத்து உண்பித்து அப்பால் அதன் சிறப்பைக் கூறி அவரால் பாடப் பெற்றான் (புறம் - கூக) பெருஞ்சித்திரனாரெனும் புலவர் பரிசிலுக்கு வந்திருக்கிறாரென்று கேட்டவளவில் அவரை நேரிற் காணாமல் பரிசில்வர விடுத்தனன். அதனை அவர் ஏற்றுக் கொள்ளாராய் வெறுத்துப் பாடப் பெற்றான். (புறம் உ0அ) ஔவையாரால் பலகால் புகழ்ந்து பாடப் பெற்றவன் (நற் ருஅக) (குறு கூக) (புறம் அஎ) நெடுநாட் பிள்ளைப்பேறின்றி அரிய தவத்தாற் பிறந்த தன் மகனைப் பார்க்க எண்ணி அப்பொழுது வேற்று நாட்டிலே தான் செய்யும் போரை நிறுத்தித் தான் கொண்ட போர்க்கோலத்தோடு வந்து நோக்கிய காலை ஔவையாராற் புகழ்ந்து பாடப்பெற்றான். (புறம் க00) இவன்கோவலூரை அழித்துக் கைக்கொண்டதனால் அதன் தலைவனாகிய மலையமான் திருமுடிக்காரி இவனை எதிர்க்கவலியின்றித் தோற்றோடிப்போயினன். அங்ஙனஞ் சென்ற காரி, தான், மூவேந்தர்க்குந் துணைபோகக் கூடியவனாதலிற் (புறம் சஉஉ) பேரரசனாகிய பெருஞ்சேரலிரும் பொறையையடுத்து நிகழ்ந்ததுகூறி அங்கு வைகுவானாயினன். அந்நாளிற் பெருஞ்சேரலிரும் பொறை கொல்லிமலையைத் தான் பெறவேண்டு மென்னுங் கருத்துடையனாதலையறிந்த காரி, படையொடு சென்று கொல்லிமலையை அரசாண்டிருந்த வல்வில் லோரியைப் போரிலே கொன்று அம்மலையைச் சேரமானுக்குக் கொடுத்து விட்டனன். (அகம் உ0அ, உ0க) அது தேன் முதலாய மிக்க வருவாயை யுடையது "கொல்லிமலைத் தேன் சொரியுங் கொற்றவா" (கம்பர்) என்பதனாலறிக. பின்பு திருமுடிக்காரியின் முயற்சியாலே சேரமான் படையெடுத்துத் தகடூரை முற்றுகை செய்தான். அதனை யறிந்த அஞ்சி தனக்கு நட்பாளராகிய பாண்டியனுக்குஞ் சோழனுக்குந் தூது விடுத்து அவர் வருவதற்குச் சிறிது காலம் தாழ்த்தமையாலும் தகடூர் மிக்க வீரராற் காக்கப்படுதலாலும் தன்னூர் பகைவராற் பிடித்தற் கரியதென்று எதிர்த்துப் போர்புரியாது தகடூரினுள்ளேயே இருந்துவிட்டான் (தொல். பொரு. கூஉ, உரை). பாண்டியருஞ் சோழரும் படையொடு தனக்குத் துணையாக வந்தவுடன் அக்கொல்லிக் கூற்றத்திலியே பெரும் போர் நடந்தது (பதிற்றுப்பத்து, எட்டாம்பத்துப்பதிகம்) அப்போர்செய்தற்குச் சேரமான் புறப்பட்டது முதல் போர் புரிந்துவென்று மீண்டுவருமளவும் நிகழ்ந்தவற்றைக் கூறு நூல் தகடூர் யாத்திரையெனப்படும். அப்போர் நிகழுங் காலத்து ஔவையார் பாடின பாடல்கள் பல. அப்போரில் அதியனெழினியென்பான் யானையெறிந்த வேல் பாய்ந்திறந்தானென்று தெரிகின்றது. அஞ்சியின் மகன் பொகுட்டெழினியோ வென்றையப்படுதற் கிடமாகிறது. (அதியனெழினியருநிறத்தழுத்திய, பெருங்களிற் றெஃகம்போல, (அகம் உசகூ) பின்னர் புண்பட்டுநின்று(புறம்கூஉ) ஈற்றிற் பகைவரெறிந்த வேல் மார்பிலே பாய அதனாலிறந்தான்;(புறம் உஙரு) இவனுக்குத் துணையாகிவந்த சோழனும் பாண்டியனும் தத்தங் குடையுங் கலனும் முரசுங் களத்தேபோட் டோடிவிட்டார்கள் (பதிற். எட்டாம் பத்து பதிகம்). அக்காலத்து ஔவையார் புலம்பியழுத பாடல் கேட்போரிரங்குந்தன்மையது (புறம் உஙரு) பின்பு அவனைத் தகனஞ் செய்துவிட்டு (புறம் உஙக) அவ்விடத்திலே கல் நாட்டிவிட்டார்கள். (புறம் உஙஉ) அஞ்சியைவென்ற பெருஞ்சேரலிரும்பொறை அவனது குதிரைமலையைக் கைப்பற்றித் தன் சேனாபதி பிட்டங் கொற்றனுக்கு முற்றூட்டாக அளித்தனன். இவனை நற்றிணையிற் பாடியவன் ஔவை. இந்த அஞ்சி மரபு கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின்னரும் இருந்ததாகத் தெரிகிறது; இது விடுகாதழகிய பெருமாள் சாதன மொன்றில் வரும். "வஞ்சியர் குலபதியெழினி வகுத்த வியக்கரியக்கியரோ, டெஞ்சிய வழிவு திருத்தியெண்குண விறைவனை மலைவைத்தான், அஞ்சிதன் வழிவருமவன் முதலிக லதிகன வகனூல்? விஞ்சையர் தகைமையர் காவலன் விடுகாதழகிய பெருமாளே" என்னுஞ் செய்யுளாற் புலப்படுகின்றது.

அஞ்சிலஞ்சியார் — இவர் அஞ்சில் எனும் ஊரினராக இருக்கலாம். இவர் இயற்

பெயர். அஞ்சியார். இவர் நற்றிணையில் மருதத்தைப் பாடியுள்ளார். (நற்றிணை).

அஞ்சியத்தைமகனர்—கடைச்சங்க மருவிய புலவர். (அகநானூறு).

அஞ்சிலாந்தையார்—இவர் அஞ்சில் எனும் ஊரிலிருந்தவராகக் காணப்படுகிறது. இவர் அவ்வூரிலிருந்த ஆதன் என்பானுக்குத் தந்தையாராக இருக்கலாம். ஆதன் தந்தை ஆந்தை இவர் நற்றிணையினும் குறுந்தொகையினும் ஒவ்வொரு செய்யுள் பாடியவர். (நற்றிணை).

அஞ்சுமதி—சத்தியாதனனைக் காண்க.

அஞ்சுமான்—மருசியின் தந்தை. (சூளாமணி)

அஞ்சுலன் — இவன் சாணக்கிய குலத்தவன் இராஜநீதி நூலாசிரியன்.

அஞ்ஞு—பள்ளரில் ஒருவகையர்.

அஞ்ஞாதம் — வாதியும் சபையிலுள்ளவர்களும், வாக்யார்த்தத்தை யறியாதிருத்தல். (சிவ - சித்).

அடமானன்—மேகசுவாதி குமரன். இவன் குமரன் அரிஷ்டகாமன்.

அடவிநன்னுடைஐம்பது—இடவகனுக்குச் சீவிதமாக உதயணனுற் கொடுக்கப்பட்டவை. (பெருங்கதை).

அடவியரசன் — தருசகனேடு போர் செய்தற்கு வந்து தோற்றுப்போன அரசர் எழுவர்களுள் ஒருவன். (பெருங்கதை).

அடி—சீர்கள் ஒன்றும் பலவுமடுத்து வருவது அது, குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐவகைப்படும். பின்னும் அதனை 1. இயலடி 11. உரியடி, 111. பொதுவடி என்னுந்தொகையானும்; 1. குறளடி, 2. சிந்தடி, 3 அளவடி, 4. நெடிலடி, 5. கழிநெடிலடி என்னும் வகையானும்; 1. இயற்குறளடி, 2. உரிக்குறளடி, 3. பொதுக்குறளடி, 4. இயற்சிந்தடி, 5. உரிச்சிந்தடி, 6. பொதுச்சிந்தடி, 7. இயலளவடி, 8. உரியளவடி, 9. பொதுவளவடி, 10. இயநெடிலடி, 11. உரிநெடிலடி, 12. பொதுநெடிலடி, 13. இயற்கழிநெடிலடி, 14. உரிக்கழிநெடிலடி 15. பொதுக்கழிநெடிலடி என்னும் விரியானும் பலபடக் கூறுவர். (யா - வி).

அடிகளின்வகை — இருசீரான் வருவது குறளடி, முச்சீரான் வருவது சிந்தடி, நாற்சீரான் வருவது அளவடி, ஐஞ்சீரான் வருவது நெடிலடி, ஐஞ்சீரின் மிக்கு வருவன கழிநெடிலடியாம்.

அடிகள்—இவர்கள் அடிமைகளாகத்திருவாங்கூரில் கூறப்படுவோர். இது உயர்ந்தவர்களுக்கும் பட்டமாகக் கூறப்படுகிறது.

அடிதானவன்—அந்தகாசுரன் குமரன். இவன் தன் னுண்மைப்புருவத்தால் யாரும் வெல்லாதிருக்க வரம்பெற்றவன். இவன் ஒருகால், பார்வதியார் உருக்கொண்டு சிவமூர்த்தியிடஞ் செல்லுகையில் கபடமறிந்த சிவமூர்த்தி இவனைக் கொன்றனர்.

அடிப்படவிருந்தல் — பகைவர் தாம் சினத்தை உமிழத் தன் ஆணையை எற்றுக்கொண்டு நாடுவழிப்பட நெடுங்காலம் இருந்த இருப்பிலே இருந்தது. (பு-வெ).

அடிமறிமண்டிலஆசிரியப்பா — எல்லா அடியுமளவொத்து எவ்வடியை முதலடி இறுதியாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் வழுவாது நிற்பது. (யாப்பு - இ).

அடிமறிமாற்றுப்பொருள்கோள் — செய்யுளிலுள்ள அடிகளைப் பொருளுக்கேற்குமிடத்து எடுத்துக் கூட்டினுமிசையும் பொருளுமாறுதது. (நன்).

அடியார்க்குநல்லார் — சிலப்பதிகார உரையாசிரியர். இவரது நாடு முதலியவை நன்கு புலப்படவில்லை. இவர் நிரம்பை யென்னும் ஊரிற் பிறந்தவர் என்பதை "ஆருந்தெரியவுரைவிரித்தானடியார்க்கு நல்லான், காருந்தருவுமனையா னிரம்பையர் காவலனே" என்பதால் அறிக. இவர் பொப்பணகாங்கயன் காலத்திலிருந்தவர் என்பதை "காற்றைப்பிடித்து...பொப்பைய காங்கயன் கோனளித்த...கொல்வித்ததே" என்பதால் அறிக.

2. மதுரையில் உலவாக் கோட்டை பெற்ற அடியவர்.

அடியான்—வேலைக்காரன். இவன் தம்பிரான்களுக்கு வேலை செய்பவன்.

அடியோடி—அடிமை. மலைநாட்டைச் சேர்ந்தவன்.

அடூட்டன் — மலைநாட்டு அம்பட்டன.

அடுப்பு—இது சமைத்தற்குமுழிலுக்கும் வேறுகாரியங்களுக்கும் உபயோகப்படும் நெருப்பின் இருக்கை இது ஒற்றையடுப்பு, கிளையடுப்பு, இரட்டை யடுப்பு, சரியடுப்பு, இரும்படுப்பு, காளவாயடுப்பு, நெல் அவிக்கும் அடுப்பு, வெள்ளாவி அடுப்பு எனப் பலவகைப்படும்.

அடைநெடுங்கல்லியார்—இவர் ஒரு தமிழ்ப் புலவர். புறநானூற்றில் மருதத்தைப் பாடியவர். இவர் ஊர் விளங்கவில்லை (புற-று).

**அட்டகன்** — விச்வாமித்திரன் குமாரர்களில் ஒருவன்.

(2) யயாதியின் தௌகித்ரன். யயாதியிடம் தருமங் கேட்டுச்சுவர்க்கமடைந்தவன். (மச்சபுராணம்)

**அட்டகோணமகருஷி** — 1. கண்டுவருஷியின் புத்திரர். சுப்பிரபையை மணக்க மாமன் சொற்படி குபேரனைக்கண்டு அங்ஙனம் நிற்கையில், ஒரு பெண் இவரை மயக்க, மயங்காது பிரமசர்யவிரதம் பூண்டிருந்து மீண்டு தம் பதிக்கே வந்து வதான்ய முனிவன் பெண்ணை மணந்தவர்.

2. இவர், தம் தாயுடன் பிறந்தார் கணவராகிய தானவரிடம், வேத முதலிய வுணர்ந்து தம் தந்தையை வெற்றி கொண்ட வந்திகரை வென்று தந்தைக்கு வெற்றி கூறிக் களித்தவர்.

3. இவர், இருந்த இடத்தில் விஷ்ணு, பிரமன், உரோமமகருஷி முதலியோர் வந்து ஆயுட்காலங் கேட்டுச் சென்றனர்.

4. இவர் யமுனைக்கரையில் தவம் புரிகையில், தீர்த்தமாடவந்த மந்தாதாவின் புதல்வியர் இவரழகைக்கண்டு மணந்து, இவர் நிற்கக் கோணவிருந்தமை கண்டு மறுக்க, அதனால் கோபித்து அப்பெண்களைக் கூனிகளாகச் சபித்தவர்.

5. இவர், சத்தியவுலகு சென்று பிரமனைத் தொழ இவரது நிலைகண்டு சரஸ்வதி சிரித்தனள். முனிவர் கோபித்துப் பூமியில் பெண்ணாக வெனச் சபிக்க, அவ்வகையே காசியரசன் புத்திரியாகப் பிறந்தனள். அரசன், இவளை ஒரு வேதியனுக்குக் குமரியாகத் தந்தனன். அவ்வேதியனிடம் வளர்ந்து மற்றொருவனை மணந்து ஒரு குமரனைப்பெற்று அவனுக்குச் சாரஸ்வதன் எனப் பெயரிட்டு வேத முதலிய ஓதுவித்து வந்தனள். இவ்வாறிருக்க க்ஷாமத்தால் வருந்திய இருடிகள், கங்கா சலம் குடித்துச் சிறிதுநாளிருப்போமென்று எண்ணிக் கங்கைக் கரைக்குச் சென்றனர். அவ்விடம் வேதமோதும் சாரஸ்வதன் படனத்தைக் கேட்டுத் தவறென, சாரஸ்வதன் நான் கூறுவது தவறன்றென்று பிரமனிடஞ் செல்லப், பிரமன், புல்லாரண்யம்வந்து அவ்விடமிருந்த அரசமரத்தைக் காட்டி நீங்கள் ஓதுவதில் தவறுள்ளவானால் தவறொன்றிற்கு மரமசையும், தவறிலாதிருக்கின் மரமசையாதென்ன, இருடிகள் ஓதப் பலமுறை மரமசையக் கண்டனர். சாரஸ்வதனோத, மரமசையாதிருத்தல் கண்டு பாடத்தைத் திருத்தினர். அநேக பத்தரைக் காண்க. உரோமமுனியைக் காண்க. உரோமருஷி ஒருவர் இறந்தால் இவருக்கு ஒருகோண நிமிரும். இவரைக் ககோடருஷியின் குமரர் எனவும், தாய் உத்தாலகருஷியின் குமரியெனவுங் கூறுவர். இவர் தந்தை, ஒரு புத்தனுடன்வாதிட்டுநீரில்மூழ்குஞ்சமயத்தில் தந்தைக்கு உதவிசெய்ததால்தந்தை களிப்புற்று இவரைச் சாமங்க நதியில் மூழ்குவித்துக் கோணலை நிமிர்த்தினர்.

**அட்டசித்தி** — அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பனவாம். அவற்றுள் அணிமா — ஆன்மாவைப்போலணுவாதல். மகிமா — மகத்தாதல். கரிமா — தன்னுடல் கண்டிப்பின்ருய்க் கண்டிப்புள்ளவற்றையுருவவல்லனாதல். இலகிமா - இலகுத்துவமாதல். பிராப்தி — வேண்டுவன அடைதல். பிராகாமியம் — நிறையுள்ளனாதல். ஈசத்துவம் — ஆட்சியுளனாதல். வசித்துவம் — தன் வசமாக்க வல்லவனாதல்.

**அட்டதிக்குப் பாலகர்** — இந்திரன், அக்நி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன்.

**இவர்களின் உருவம்** — **இந்திரன்**, ஐராவதமென்னும் யானைவாகன முடையவனாய்த் தங்கமயசரீரம் உற்றவனாய்க் கிரீடம் ஆயிரங் கண்கள் வச்ராயுத உடையனாயிருப்பன்.

**அக்நி**, ஏழு பிரிவினையுடைய சுவாலை, ஜபமாலை, கமண்டலம், சிவப்புவர்ணம், ஜ்வாலாமாலை, சத்தி, ஆயுதம், நாகாசனம் உடையனாயிருப்பன்.

**யமன்**, எருமைவாகனம், தண்டம், பயங்கரமானமுகம், கபாலம், ப்ாசம், கறுத்த நிறம் உடையனாயிருப்பன்.

**நிருதி**, ரத்தக்கண், பிணவாஹனம், நீலோத்பலநிறம், வாளேந்தியகை, ரத்தபானங்களையுடைய ராக்ஷஸசேனை உடையனாயிருப்பன்.

**வருணன்**, நாகபாசத்தைத் தரித்தவனும், ரத்தப்பிரகாசம், சந்திரனையொத்த வெண்மை, மகராசனம் உடையனாயிருப்பன்.

**வாயு**, பெருத்தவுரு, பச்சைநிறம், அசையும் தவஜம், பிராணதாரபூதம், மான் வாஹனம் உடையனாயிருப்பன்.

குபோன், நரவாகனம், பெருமிதம் வளைந்தவுருவம், பொன்னிறம், கையிற் கதாயுதம் உடையனுயிருப்பன்.

ஈசானர், ருஷபாரூடம், மூவிலைச் சூலம், சர்ப்பாபரணம்,சரத்கால சந்திரவர்ணம், சந்திரமௌலி, முக்கண் உடையாரயிருப்பர். (அ. பத்ததி)

**அட்டதிக்கஜம்** — ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீகம். இவற்றின் பெண்யானைகள், முறையே அப்பிரமை, கபிலை, பிங்களை, அனுபை, தாம்பிரபர்ணி, சுபதந்தி, அங்கனை, அஞ்சநாவதி.

**அட்டமங்கலம்**—1. கண்ணடி, நிறைகுடம், கொடி, சாமரம், தோட்டி, முரசு, விளக்கு, இணைக்கயல். (புராணம்).

2. கண்ணடி, பூர்ணகும்பம், ருஷபம், இரட்டைவெண்சாமரம், லக்ஷ்மியுரு, ஸ்வஸ்திகம், சங்கம், தீபம், இவற்றையுடையார், ஊர்வசி, மேனகை, ரம்பை, திலோத்தமை, சுமுகீ, சுந்தரி, காமினி, காமவர்த்தினி என்பவர்களாம். (ஆகமம்).

**அட்டமணம்**—பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம். இவற்றின் விரிவை மணத்திற்காண்க.

**அட்டமாநாகர்**—அநந்தன், வாசுகி, தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன்.

**அட்டமூர்த்தம்**—பிருதிவி முதலிய ஐந்து பூதங்களிலும் சூரியன், சந்திரன், ஆன்மா முதலிய இடங்களிலும் அந்தர்யாமியாகிய சிவமூர்த்தம். இவற்றின் அதிதேவதையர்—பவன், சர்வன், ஈசானன், பசுபதி, பீமன், உக்ரன், மகாதேவன், உருத்திரன். இவர்களின் தேவியார்—உஷை, சுகேசி, சிவா, சுவாகா, திசை, தீக்ஷை, ரோகணி, சுவர்ச்சலை. புத்திரர்—சுக்ரன், செவ்வாய், அநுமான், கந்தன், சுவர்க்கன், சந்தானன், புதன், சநேச்சுரன். பிரமனுக்கு இவ்வுருக்கொண்டு சிருட்டித்தொழில் அறிவிக்கவந்த மூர்த்தங்களெனவுங் கூறுவர்.

**அட்டவக்கிரன்**—ருஷி. ககோலன் புத்திரன் வித்தாலகனுடைய தௌகித்திரன் தாய். சுஜாதா.

**அட்டவசுக்கள்**—அனலன், அணிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூஷன், பிரபாசன் முதலியவர்கள். இவர்கள் பிரமன் புத்திரர்கள் எனவும், தக்ஷன் குமரிகளாகிய பதின்மரில் வசு என்பவளுக்குப் பிறந்தவர்கள் எனவுங் கூறுவர். இவர்கள் வசிட்ட ஓமதேனுவைத் திருடி அவரால் மனிதப் பிறவி பெறச் சபிக்கப்பட்டுச் சந்தனுவின் தேவியாகிய கங்கையிடம் ஜனித்தனர். இவர்களுள் மிகுந்த குற்றவாளியாகிய பிரபாசன், மற்ற வசுக்களும் பிறந்து தாயால் கங்கையில் எறியப்பட்டதற்குப் பிறகு, தான் பிறந்து, அரசன் தன் பாரியைக் குழந்தையைக் கொல்லாதிருக்கவேண்ட வளர்ந்து பீஷ்மாச்சாரியாயினன். (பாரதம்).

**அட்டவர்க்கம்**—"இந்திரவிக்காறெட்டாமம் புலிக்கொன், ஞெட்செனிசேய் முப்பத்தொன்பதாம்-இட்டபுதற், கைம்பத்திஞன்கு குருக்கா றெட்டோ, டெட்டா மைம்பத்திரண்டுபுதற்காம்" இவ்வாறு அந்தந்தக் கிரகங்களுக்குச் சொன்ன பரலை அந்தந்தக் கிரகங்களிருக்கிற வீடு முதலாகக் கொண்டு லக்னத்தைத் தொட்டும் எண்ணிப்போடுவது.

**அட்டவித்யேசுவரர்** — இவர்கள் மாயைக்கு மேல் சுத்தவித்தைக்குக் கீழிருக்கும் புவனவாசிகள். அநந்தர், சூக்ஷ்மர், சிவோத்தமர், ஏகநேத்ரர், ஏகருத்ரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி; இவர்களின், உரு, அஷ்டதிக்குப்பாலகர் எண்மரின் நிறம், ஒருமுகம், அஞ்சலி அத்தம், முக்கண், சந்திரசடாமகுடம், சூலம், கண்ணடியுடைமை.

**அட்டாங்கஇருதயம்** — வாகபடரால் வடமொழியில் செய்யப்பட்ட வைத்தியநூல். இது (கஉ0) அத்யாயங்களுடையது.

**அட்டாலை மண்டபம்** — திரு ஆலவாயிலில் இப்பெயருள்ள மண்டபமொன்று பண்டைக்காலத்திற் கீழை மதிலைச்சார இருந்ததென்று தெரிகிறது ; இக்காலத்து மண்டபூர்த் தெப்பக் குளத்தின் வாயுமூலையில் (கசு) கால்களால் ஆகியதோர் மண்டபமாக இருக்கிறது. இதற்கு வடக்கேயுள்ளது யானைமலை. (திருவிளையாடல்).

**அணி**—இது, மாடத்திற்குச் சித்திரமும், மாநகர்க்குக் கோபுரமும், ஆடமைத்தோள் நல்லார்க்கு அணியும்போல் செய்யுளை அலங்கரிப்பதான அணியிலக்கணமாம். இது சொல்லணி, பொருளணியென இரண்டாம்.

**அணிகலன்கள்** — மக்கள், பொன் வெள்ளி முதலியவற்றுல் அணிந்து கொள்ளும்

அணிகளாம். ஆண் அணிகளாவன — முடி, குண்டலம், வாகுவலயம், வீரகண்டை, அரைஞாண் முதலியன. பெண்களின் அணிகளாவன — கால்விரல்அணிகள், மகரவாய்மோதிரம், பீலி, கான்மோதிரம் முதலியன. காலணிகளாவன-- பாதசாலம், சிலம்பு, பாடகம், சதங்கை, காற்சரி, பரியகம் முதலியன. தொடையில் அணி ஆபரணமாவது—குறங்குசெறி என்பது. அல்குலிடத்து அணிவ்து— விரிசிகை என்னும் அணி. தோளிடத்தணிவது—மாணிக்கவளை, முத்துவளை. கையணியாவது—சூடகமும், பொன்வளையும், நவமணிவளையும், சங்கவளையும், பவழவளையுமாம். கைவிரல் அணியாவது— நெறி, பல ரத்தினங்கள் இழைத்த மோதிரங்கள், கழுத்தணிகளாவன—வீரசங்கிலி, நேர்ஞ்சங்கிலி, பொன்னூல், சவடி, சரப்பளி. காதில் அணிவன—கடிப்பிணை, வாளி, குழை முதலிய. தற்காலத்தவர் காலத்திற்கு இயைந்தபடி பலவகைப்படச் செய்து அணிவர். தலைக்கு அணிகலன்களாவன—ஸ்ரீதேவியார் எனும் பணி, வலம்புரிச்சங்கும், பூரப்பாளையும், தென்பல்லி வடபல்லியும், புல்லகமும், சூளாமணி, பொன்னரிமாலை முதலியன. இடைக்கணி முதலிய இக்காலத்து அணிகள் ஒட்டியாணம் முதலியவாம். மூக்கிலும், காதிலும் இக்காலத்து அணியும் அணிகள் பலவுள அவற்றை அறிந்து தெரிக. பின்னும் ஆடவர் அணிவது—முடி, பதக்கம், தோளணி, குண்டலம், காதணி, குணுக்கு, தோடு, கங்கணம், கைவளை, சுட்டி, பட்டம், பாதகிண்கிணி, சதங்கை, சிலம்பு. காற்சரி, பாதசாலம், பாடகம், ஓசை செய்தளை, கழல். பெண்களணியாவன— காஞ்சி, மேகலை, கலாபம், பருமம், விரிசிகை, அரைப்பட்டிகை, அரைஞாண், செவிமலர்ப்பூ, ஆழி, பூணுநூல், நுதலணி, தெய்வவுத்தி, தலைக்கோலம், தலைப்பாளை, கிம்புரி, பெருஞ்சூட்டு, சரப்பணி, மதாணிமுதலிய.

**அணியியலுடையார்**—ஓர் தமிழாசிரியர்.

**அணியியல்** — ஒரு அணியிலக்கணம்.

**அணிலன்** — வசுக்களிலொருவன். பிரசாபதிக்குச் சுசனையிடம் பிறந்தவன். மனைவி சிவை. குமரர் புரோசநன், அவிக்யாதமதி.

**அணிலாடுமுன்றிலார்**—'பெண்பாலர்' இவர் கணவன் பிரிவு கண்டு வருந்திய தலைவியினிலை அணிலாடுமுன்றில்போல புல்லென்றிருந்ததெனக் குறுந்தொகையில் "காதலருழை ... மக்கள் போகிய வணிலாடுமுன்றில்" என்ற செய்யுள் பாடியதால் இப்பெயர் பெற்றனர். (குறுந்தொகை).

**அணில்**—இது சிறிய உருவமுள்ள பிராணி. இதன் தேகம் மயிரடர்ந்து மூன்று வரிகளைப் பெற்றிருக்கும். தலை உருண்ட வடிவானது. சாம்பல் நிறமுள்ளது. வயிற்றின் ரோமம் வெண்மை. இதன் உடல் சற்று நீண்டிருக்கும். இது ஓடித் திரிகையில் வாலைத் தூக்கிக்கொள்ளும். காதுகள் மேனோக்கியும், கண்கள் உருண்டும் இருக்கும். இதன் பற்கள் முன்னீண்டிருக்கும். பற்களின் உதவியால் கடினமான கொட்டைகளையும் பிளந்து வித்தைத் தின்னும். அணிலின் முன்னங்கால் பின்னவற்றினும் சிறியவை. இது குதித்துக் குதித்து ஓடும். இது இரைகளைத் தின்கையில் பின்னங்காலிற் குந்திக்கொண்டும் வாலை யுயர்த்திக்கொண்டு முன்காலில் இரையைப் பற்றித் தின்னும். இது சிறுகொடிகளின்மேற் செல்கையில் வாலினுதவியால் உடற்பாகத்தைச் சரிப்படுத்திக் கொள்கிறது. இச் சாதியில் **வெள்ளணில்** எனவும், **பறக்கும் அணில்** எனவும், **பெருஞ்சேவ்வணில்**, **சிறுநரை அணில்** எனப் பேதமுண்டு. பறக்கு மணிலுக்கு இறகுகளில்லை ஆயினும், முன்பின் கால்களுக்கு ஒரு தடித்த தோல் உண்டு, அதன் உதவியால் (ங0) அடிகளுக்குமேல் பாயும்.

**அணிவகுப்பு**--ஆனை-ய, தேர்-ந, குதிரை-ா, காலாள் (க000) இவைகொண்டது பதாதி. இந்தப் பதாதி (அஉ) கொண்டது ஒரு தண்டு. தண்டின் தொகை தேர்-ஙசகூ, யானை-அஉய, குதிரை அ0உா, காலாள்-அஉ00, இவ்வகையான தண்டு (ா) கொண்டது ஒரு அக்குரோணி. இன்னும் அக்குரோணிக்கு தேர்-உச,0கூா, குதிரை அஉய00, ஆனை-அஉ00, காலாள் அஅ-லக்ஷம் என்றும் கூறுவர். பின்னும் யானை (உ௫) ஒரு அக்குரோணி எனவும், குதிரை (அ௫) ஒரு மொத்தம் எனவும் கூறுவர். பின்னொருவகை க-யானை, ங-குதிரை, க-ரதம், ௫-காலாள் கொண்டது ஒரு பத்தி. இந்தப் பத்தி மூன்று கொண்டது சேனுமுகம். சேனுமுகம் மூன்று கொண்டது குமுதம். குமுதம் மூன்று

கொண்டது கணம். கணம் மூன்று கொண்டது வாகினி. வாகினி மூன்று கொண்டது பிரளயம். பிரளயம் மூன்று கொண்டது சமுத்திரம். சமுத்திரம் மூன்று கொண்டது அநீகினி. அநீகினி பத்து கொண்டது அக்ஷோகிணி எனப் படும். அக்குரோணிக்கு தேர் உகஅஎ0, யானை - உகஅஎ0, குதிரை - கூடுகூக0, காலாள் - க0கூங௫0 எனவுங் கூறுவர். பின்னும் இச் சேனையை நிறுத்தும் வகை தண்டம், போகம், மண்டலம், என மூவகை எனவும், தண்டம் சேனையைக் குறுக்காக நிறுத்துதல் எனவும், அவற்றின் பிரிவு (கஎ) வகை எனவும், **போகம்** சதுர் அங்கங்களையும் ஒன்றின்பின் ஒன்று நிறுத்துகை எனவும், அவற்றின் பேதம் (௫) எனவும், **மண்டலம்** வட்டமாக சர்ப்ப சரீரம்போல் நிறுத்துகை எனவும், அவற்றின்பேதம் ஸர்வதோபத்ரம் முதலிய தூர்ச்சயபேதங்கள் எனவும் கூறுப. இவற்றின் விரிவை அவ்விலக்கணம் சொன்ன நூல்களுள் பாக்கக்காண்க. பின்னொரு விதம் சமுத்திரம் (௩) கொண்டது சங்கம். சங்கம் (௩) கொண்டது அநீகம். அநீகம் (௩) கொண்டது அக்குரோணி எனவும், அந்த அக்குரோணி (அ) கொண்டது ஏகம். ஏகம் (அ) கொண்டது கோடி. கோடி (அ) கொண்டது மகாசங்கம். மகா சங்கம் (அ) கொண்டது விந்தம். விந்தம் (அ) கொண்டது குமுதம். குமுதம் (அ) கொண்டது பதுமம். பதுமம் (அ) கொண்டது நாடு. நாடு (அ) கொண்டது சமுத்திரம். சமுத்திரம் (அ) கொண்டது வெள்ளம். இவ்வகைப் பத்திகொண்ட சேனைகளை வியூகமாக வகுக்கவேண்டியது. அந்த வியூகம் பல வகைப்படும். அவற்றுள் சிலவருமாறு தெண்டவியூகம், சகடவியூகம், வராகவியூகம், மச்சவியூகம், சூசிகாவியூகம், காருடவியூகம். அவற்றுள்: **தெண்டவியூகமாவது**—முன்னே சேனைத் தலைவனும், நடுவில் அரசனும், பின் சேனாபதியும், இருபுறமும் யானை, குதிரைகளும் இதற்கப்புறம் காலாட்களும் இருப்பது. **சகடவியூகமாவது**—முன்னே கொஞ்சஞ் சேனையும், பின்னால் அதிக சேனையுமாக இருப்பது. **வராகவியூகமாவது** — முன்னும்பின்னும் சொற்பசேனைகளும் இடையில் பெருஞ் சேனைகளைக் கொண்டிருப்பது. **மச்சவியூகமாவது** — சிற்றெறும்பின் ஒழுங்கு போல்வது. **காருடவியூகமாவது** — கருடனை ஒப்பது. **சூசிகாவியூகமாவது** — சூசியை யொப்பது. தெண்டவியூகத்தால் நாற்புறத்தும் சண்டை நேரிடுகையிலும், சகட வியூகத்தால் பின்னால் பயம் உண்டாகும்போதும், வராகவியூகம், காருடவியூகம், இவற்றால் இருபக்கத்திலும் பயமுண்டாகும் போதும், மச்சவியூகத்தால் முன்னும் பின்னும் பயமுண்டாகும்போதும், சூசிகாவியூகத்தால் முன்னே பயமுண்டாகும்போதும்எதிர்க்கவேண்டும்.

**அணு** — 1. யயாதி குமாரரில் ஒருவன்.

2. (ய) குருவசன் குமரன்.

3. கபோதலோமன் குமரன்.

**அணுகன்**—1. விப்பிரசன் குமரன். இவன் பாரி கீர்த்திமதி. இவன் சுகர் குமரியாகிய கிருத்தியிடத்தில் பிரமதத்தனைப் பெற்றான்.

2. அநாயுவுக்கு ஒரு பெயர்.

3. அணுசதாசிவர்கள். சதாசிவதத்வ புவனவாசிகள் காண்க.

**அண்டகோசலக்ஷணம்** — இவ்வண்டமானது, நூறுகோடி யோசனையுயரமும், நூறுகோடி யோசனை பரப்பும் உள்ளதாம். இவ்வகை ஆயிரங்கோடி அண்டங்களுண்டு. இந்தத் தூலப்பிருதிவியில் ஒரு அண்டலக்ஷணமாவது, ஒரு அண்டத்தின் கனம் ஒருகோடி யோசனை, இது, மந்தமாய்ப் பொன்னிறமான வர்ணமுடையதாய்ச் சுற்றும் அற்புதயோசனை படுவான தூலமுடையதாய் (க00) கோடி யோசனை யுயரமும் மகம்மேருவிற்கு மகம்மேரு கூடச்சுற்றும் (க0) கோடி யோசனை பரப்புமாயிருக்கிறது. இப்பிரமாண்டத்தைப் பிரமதேவன் கொப்பரை யாகாரமாய் இரண்டு சிப்பிகள்செய்து தானதிற் புகுந்து நடுவாக விருந்துகொண்டு கரண்டகம்போலக் கீழ்மேல் சிப்பியை யமிழ்த்தியதிற் புவனரஸனைகள் செய்கையினாலே இதற்கு **பிரமாண்ட**மென்று பெயருண்டாயிற்று. இப்பிரமாண்டத்தைச் சுற்றி வாரி பூரிதமாயிருக்கும். இந்த வாரியில் திவ்ய சிங்காதனத்திலிருந்துகொண்டு ஜலஸ்தம்பமாய் விளங்குவது **ஆதாரசத்தி**. இது சர்வசோபித சர்வாயுதத்துடன் ஹிரண்மயச்வரூபமாயிருக்கும். இச்சத்தி ஈச்வரத்யானமா யிருக்கும். இச்சத்தியின் சிரத்தில் இரண்மய கமலம்போல் (க00). கோடி யோசனை அகலமாய்ச் சுவர்ணமய

மான **கூர்மம்** இருக்கும். இந்தக் கூர்மத்தின் முதுகில் அஷ்டதிக்கிலும் அஷ்டகஜங்க ளிருக்கும். இவற்றின் நடுவே எட்டுத்திக்கிலும் எட்டுநாகங்களிருக்கும். இந்த நாகங்கள் (௩௦,௦௦௦) யோசனை அகலமான (௧௦௦௦) சிரசுகளுடன் பிடரியை வளைத்துப் படங்களால் (௮) திக்குகளையும் தாங்கிக்கொண்டிருக்கும். மேற்சொன்ன கூர்மத்தின் நடுமுதுகில் **மகாசேஷ** னிருக்கும். இச்சேஷன் படமீதில் கோடியோசனை கனமுள்ள சர்வாதாரமான சுவர்ணமயபூமியிருக்கும். இக்கடாக பூமியின் புறத்தில் துவாரவாசற் காவலாளராய் (௧௦௦) ருத்திரரிப்பர். இந்தக் கடாகத்தினுள்ளில் இந்திராதி தேவர்களுடன் பத்துத்திக்கினும் (௧௦) ருத்திரர் இருப்பர். அவர்க்கு மத்தியில் நாயகராய்க் **காலாக்னிருத்ரர்**, தம் **காலாக்னிருத்ர புவனத்திலிருப்பர்**. இவர்கள் புவனம், ஐந்துகோடி யோசனை அகலமும் ஒருகோடி யோசனை உயரமுமா யிருக்கும். இப்புவனத்தின் புகை (௫) கோடி யோசனை. இப்புகையின்மேல் யமன் ஆக்ஞையால் (௬௦) லக்ஷம் யோசனை வெளிக்குமேல் (௩௩) பட்டணங்களுண்டு. அவற்றின்மேல் (௨௮) இராஜ நரகங்களாய் ஒவ்வொன்றை ஒவ்வொருகோடி நரகம்தற்சூழ (௨௮) கோடி நரகங்களிருக்கும். இந்த நரகங்களின் மேல் (௩௦.௦௦௦) யோசனை வெளியுண்டு. இதன்மேல் (௬) லக்ஷம் யொசனை பூமியுண்டு. இதற்கு மேற்புறம் (௪௦) லக்ஷம் யோசனை சுவர்ணபூமி யிருக்கும். மற்ற (௪௦) லக்ஷம் யோசனை கிழக்குத் திசையிற் பொன்மயமாயும் இருப்புமயமாயும் பூமியிருக்கும். இந்த (௬) லக்ஷத்திற்கும் முன்சொன்ன நரகங்களுக்கும் அதிபதியானயமனுக்கும் **கூஷ்மாண்டர்** தலைவராயிருப்பர். இவரிருக்கும் புவனம் **கூஷ்மாண்டபுவனம்** எனப்படும். இந்தக் கூஷ்மாண்டத்தின்மேல் பல்லாயிரம் உயரமாய் ஒவ்வொன்று (௧௦,௦௦௦) யோசனை உயரமும் (௨௦,௦௦௦) யோசனை அகலமுமாய் **ஏழுபாதாளங்கள்** (௭௦,௦௦௦) யோசனை கூடியதா யிருக்கும். அப்பாதாளங்களாவன:—மகாதல, ரசாதல, தராதல. சுதல, நிதல, விதல, அதலம் என்பவை. இவை முறையே பொன், வெள்ளி, செம்பு, வெண்கலம், இரும்பு, மணல், மண் ஆனவையாம். இவ்வேழிற்கும் பலன் முதலிய எழு அரசர்களிருப்பர். இவை ஒவ்வொன்றிலும் மூன்று பாகமாய்த் தயித்தியர், புஜங்கர், ராக்ஷதர் இருப்பர். இந்தப் பாதாளத்தில் (௮) லக்ஷம் கன்னியர் இருப்பர். இவாகளுடைய தேககாந்தியால் அப்பாதளங்கள் சூரிய வொளியிலாது பிரகாசித்துக் கொண்டிருக்கும். இப்பாதளங்களின்மேல் (௨) கோடி (௮௮) லக்ஷம் யோசனைகளுக்குமேல் முன்சொன்ன எழு பாதாளங்களுக்குந் தலைவராய் **ஆடகேசுர புவனத்தில் ஆடகேசுரர்** இருப்பர். இதன் மேல் பூமி ஒருகோடி யோசனை உயரம்; அதற்குமேல் பூலோகம் இருக்கும். இனி பூலோகத்தின் அளவாவது:

## மத்யவுலக வர்ணனை

இந்தப் பூலோகம் எவ்வளவு அகலமென்னின் (௧௦௦) கோடி யோசனையாயிருக்கும். மக்கட்கு நாபிநடுவானுற்போல இந்தப் பூமிக்கு நடுவே **மகம்மேரு** நிற்கும். அம் மகம்மேருவானது முற்கூறிய பாதாளத்திற்கு மேலாய் எழு சமுத்திரங்களாலும் சூழப்பட்ட பூமியினடுவே பொருந்திப் பூமிக்குக் கீழ்ப்பதினாயிரம் யோசனையளவு புதைந்து, பூமிக்குமேல் (௮௪,௦௦௦) யோசனை உயரமாயிருக்கும். அதன் அடி விரிவு (௧௬,௦௦௦) யோசனை, அதன் நுனி விரிவு (௩௨,௦௦௦) யோசனை, இது தாமரைக்காய்போல் அடி சிறுத்தும் தலைவிரிந்து மிருக்கும். அதன் புடையில் ஒன்றுக்கொன்று விரிவு அதிகமாய் மூன்று மேகலைகள் பொருந்தும். மேருவினடியில் அந்தராளம் (௨௫,௦௦௦) யோசனை உயரம். அதற்குமேல் முதன்மேகலையினுயரம் (௩,௦௦௦) யோசனை. அதன் புடைவிரிவு (௧௦,௦௦௦) யோசனை. அதன் மேலிரண்டாம் அந்தராளம் (௨௫,௦௦௦) யோசனையுயரம். அதன்மேலிரண்டாம்மேகலை (௩,௦௦௦) யோசனை உயரம். அதன் புடைவிரிவு (௧௪,௦௦௦). அதற்குமேல் மூன்றுமந்தராளம் (௨௫,௦௦௦) யோசனை உயரம். அதற்குமேல் மூன்றுமேகலை உயரம் (௩,௦௦௦) யோசனை. அதன் புடைவிரிவு (௧௮,௦௦௦) யோசனை. ஆக மேகலை மூன்றுக்கும் அந்தராளம் மூன்றுக்கும் உயரம் (௮௪,௦௦௦) யோசனை உயரம். இதில் ஆயிரம் கொடுமுடிகளுண்டு. ஒவ்வொன்றிலும் தேவகணங்கள் வசிப்பர். இம்மேருவின் மேற்கங்கணத்தில் இந்திரனுக்கு

அமராவதியும், அக்நிக்குத் தேஜோவதியும், யமனுக்குச் சம்யமனியும், நிருதிக்கு ரக்ஷோவதியும், வருணனுக்குச் சுத்தவதியும், வாயுவிற்குக் கந்தவதியும், குபேரனுக்கு மகோதயபுரியும், ஈசானனுக்கு கைலையும் இருக்கும். இப்பட்டணங்களைச் சூழ அநேக பட்டணங்களுமிருக்கும். நடுக்கங்கணத்தில் சிவபிரான் தேவருஷிகணங்களுடன் சூழக்கொலுவிருப்பர். கீழ்க்கங்கணத்தில் கந்தருவரிருப்பர். மேருவிற்கு அடிவாரத்தில் கீலகபர்வதங்களுண்டு. இதற்குக் கிழக்கில் மந்தரகிரி, தெற்கில் கந்தமாதனம், மேற்கில் விபுலகிரி, வடக்கில் சுபார்சுவகிரியுமுண்டு. மேற்கூறிய நான்கு மலைகளுக்கும் இடையில் நான்கு விருக்ஷங்களுண்டு. அவை முறையே கதம்பம், சம்பு, வடம், அச்வத்தம்; சம்பு விருக்ஷத்தின் கனியிலுண்டாம் ரஸத்தினால் சம்புநதி பெருகி யோடுகிறது. கிழக்கிலுள்ள மந்தரகிரியில் நந்திநதி பிறக்கும். கந்தமாதனத்தில் பத்திரைநதி பிறக்கும், விபுலகிரி மூலத்தில் சுரதிநதி பிறக்கும், சுபார்சவகிரியிற் சுமனைநதியும் பிறக்கும். மேற்கூறிய கிரிகளுக் கிடையே சித்தாந்த சாருகுந்தம், திரிகூடம், வைடூர்யம், சங்ககூடம் முதலிய அநேக பர்வதங்களுண்டு. மேருவைச் சுற்றிலும் **நவ கண்டமிருக்கும்**; அவை இளாவிருத முதலியன.

(1) **இளாவ்ருதகண்டமாவது**, நீலநிஷாத மால்ய வந்த கந்தமாதன கிரிகளுக் கிடையில் (கூ,000) யோசனை அகலமுள்ளதாய் அநேக குலபர்வதங்களும், நதிகளும் பெருகிப் பல பட்டணங்களுடனிருக்கும். இதில் தேவகாந்தருவர் வசிப்பர்.

(2) **பத்ராச்வ வருஷ கண்டமாவது**, மேருவுக்குக் கிழக்காக (க,000) யோசனைக் கப்பாலிருக்கிற மால்யவந்தமாகிற சீமாகிரிமுதல் கிழக்குலவண சமுத்திரமட்டாய்ச் சந்திரகாந்த வர்ணமாயிருக்கும். இதில் அநேக பர்வதங்களும், மகாநதிகளும், பூஞ்சோலைகளும், தடாகாதிகளுமுண்டு. இதில் சந்திரகாந்த மயமான ஜனங்கள் (கo,000)வரு ஜீவித்திருப்பர்.

(3) **கேதுமால்ய வருஷகண்டமாவது**, மேருவிற்கு மேற்கில் (கூ,000) யோசனைக்கு அப்பாலிருக்கிற கந்தமாதன பருவதமுதல் மேற்கு லவண சமுத்திரமட்டாகப் பொன்னிறமுள்ள பூமியாய் (கூஉ00) யோசனை யுள்ளதாயிருக்கும். இதில் அநேக குலபர்வதங்களும், மகாநதிகளும், பல புரங்களும், வாவிகளும், நந்தனவனங்களுமுண்டு. இதில் பொன்னிறமான ஜனங்கள் பலாப்பழரஸமுண்டு (கo,000)வரு ஜீவித்திருப்பர்.

(4) **ரம்யக்வருஷகண்டமாவது**, மேருவிற்கு வடக்கு (கூ,000) யோசனைக்கு அப்பாலிருக்கிற நீலச்சுவேதகிரிகளிரண்டற்கு நடுவே கிழக்கு மேற்குச் சமுத்திரமட்டாக இருக்கும். இதில் அநேக குலபர்வதங்களும், நதிகளும், நந்தனவனங்களும், மடுக்களும் உண்டு. இது நீலவர்ணமான பூமி. இதிலுள்ள சனங்கள் நீலாஞ்சனக்காந்தியுடன் கருப்பஞ்சாறுண்டு (கஉ,000)வரு ஜீவித்திருப்பர்.

(5) **இரண்ய்வருஷகண்டமாவது**, சிவேத சிருங்கமாகிற சீமாகிரியிரண்டிற்கு நடுவே (கூ,000) யோசனை விஸ்தாரமாய் வெண்ணிறமுள்ள பூமியாயிருக்கும். இதில் அநேக குலபர்வதங்களும், மகாநதிகளும் நந்தனவனங்களும், தடாகாதிகளும் உண்டு. இதிலுள்ளவர்கள் சந்திரகிரணம்போல லாகுள விருக்ஷபழம் புசித்து (கஉ,000)வரு ஜீவித்திருப்பர்.

(6) **குருவருஷகண்டமாவது**, சிங்ருக்கிரி முதலாக லவண சமுத்திரமீறாக (கூ000) யோசனை விரிவுற்றதாய்க் கற்றாழைப்பூ வர்ணமாயிருக்கும். இதில் அநேக குலபர்வதங்களும், நதிகளும், சோலைகளும், தடாகங்களும் உண்டு. ஜனங்கள்கொசும்பைப் பூவர்ணமாய் நாவற்பழம் புசித்து (கூஉ,000)வரு ஜீவித்திருப்பர்.

(7) **அரிவருஷகண்டமாவது**, மேருவின் பிரதேசத்தில் நிஷத ஏமகூட மென்கிற இரண்டு கிரிகளுக்குப் புறத்தில் (கூ,000) யோசனை அகலத்தில் வெள்ளிமயமான பூமியாய்க் கிழக்கு, மேற்கு லவணசமுத்திர பரியந்தம் சத்தகுல பர்வதங்களையும், மகாநதிகளையும், நந்தனவனம் தடமுதலியவைகளைக்கொண்டு விளங்கும். இதிலுள்ளார் வெண்மயமாய்க் கரும்புரஸம் உண்டு (க,௬00)வரு ஜீவித்திருப்பர்.

(8) **கிம்புருஷவருஷகண்டமாவது**, ஏமகூட ஏமசைலங்களுக்கு நடுவில் (கூ,000) யோசனை விரிவாய்ப் பொன்மயமான பூமியாய்க் கிழக்கு மேற்கு லவணசமுத்திரமளவும் அநேக குலபர்வதங்களுடனும்,

மகா நதிகளுடனும் கூடியிருக்கும். இதில் பொன்வர்ணமான ஜனங்கள் (க,000)வூ ஜீவித்திருப்பர்.

(9) **பாதவருஷகண்டமாவது.** ஹேம சயிலத்திற்குமேல் கிழக்குமேற்குச் சயில பரியந்தம் (கூ,000) யோசனை நானுவர்ண பூமியாய் எறிட்ட வில்லைப்போலிருக்கும். இது வெகு கண்டங்களா யிருக்கும். இதை அநேக ராஜாக்கள் அரசாண்டிருந்தனர். அவர்களில் சகரசக்ரவர்த்தியின் குமரரால் தோண்டப்பட்ட பூமியில் கடல் வந்து பாய முழுகினவைபோக கரைகளால் தீவுகள் உண்டாயின. அவை: **இந்திரத்தீவு, குசத்தீவு, தாம்பிரத்தீவு, கபஸ்திமத்தீவு, சௌமியத்தீவு, கந்தத்தீவு, வாருணத்தீவு** முதலியவாம். ஒவ்வொன்றும் (க,000) யோசனை அகலமுள்ளது. இவற்றில் மிலேச்சாதியர் வசிப்பர். இதில் மிகுந்த **ஆயிரம்** யோசனை பூமி இமயபர்வதபர்யந்தமாய்க் கன்னிகா தீபமென்று பெயராய்ப் பிராமணுதியர் வசிக்குமிடமாம். இதில் இமசேது மத்யப்ரதேசம் (எ00) யோசனை பரதகண்டமாம். அதில் மஹேந்திர, மலைய, சம்சிய, மந்த, விருக்ஷநந்த, விந்திய, பார்யாத்ரமென்கிற சத்தகுல பர்வதங்களுண்டு. அவற்றிற்பிறக்கும் நதிகளாவன மகேந்திர கிரியில் திரிசாம், புஷிகுலம் (உ); மாலய கிரியில் கிருதமாலினி, தாம்பிரபர்ணி (உ); சம்சயகிரியில் கோதாவரி, பீமரதி, கிருஷ்ணவேணி (௩); விருக்ஷநந்த பருவதத்தில் தாபி, பயோஷ்ணி (உ); விந்திய கிரியில் நர்மதை, சுரசம் (உ); பாரியாத்ரகிரியில் வேதி, சயது (உ); ஹேமவந்தகிரியில் சதத்ரு, சந்திரபாகை (உ) பின்னும் கங்கையே முதலாக அநேக புண்ய நதிகளும் ஸ்ரீ சைலமுதல் சேதுஈறான க்ஷேத்ரங்களும், அங்கம், வங்கம் முதலிய (௫௬) தேசங்களும் இதில் இருக்கின்றன. இதிலுள்ளார் உழவாதி கிரியைகள் செய்து அற்ப வாழ்நாளுள்ளவராய்த் துக்கிகளாய்ச் சுவர்க்கநரகம் அனுபவித்து நானு ஜீவர்களாய்ப் பிறப்பர். இப்படிச் சொல்லப்பட்ட நவகண்டமும் கூட லக்ஷம் யோசனை அகலமாய் மனோரம்யமா யிருக்கும். இதற்குச் **சம்புத்தீவு** என்று பெயர். இந்தச் சம்புத்தீவை வளைந்துகொண்டு லவண சமுத்திரம் லக்ஷம் யோசனை விசாலமாயிருக்கும். இச்சமுத்திரம் அநேக சலசரங்கள் முத்து, பவள முதலிய மணிகளுக்குப் பிறப்பிடமாய் அதிகோஷமாயிருக்கும். இந்த **லவணவாரியை** வளைந்துகொண்டு சுப்ர வர்ண பூமியாய்ச் **சாகத்தீபம்** (உ) லக்ஷம் யோசனையா யிருக்கும். இதில் (எ) கண்டங்கள், (எ) மலைகள், (எ) நதிகள் உண்டு. இதிலுள்ள ஜனங்கள் (௩) தாளப் பிரமாணமாய் (க,உ00)வூ ஆயுளுடையரா யிருப்பர். இந்தச் சாகத்தீவை வளைந்திருக்கிற **பாற்கடல்** (உ) லக்ஷம் யோசனை அகலமாயிருக்கும். இதில் விஷ்ணு சேஷசாயியாய்ப் பள்ளிகொண்டிருப்பர். இந்தப் பாற்கடலை வளைந்துகொண்டு நீல வர்ண பூமியாய்க் **குசத்தீவு** (௪) லக்ஷம் யோசனை யகலமாயிருக்கும். இது எழு பங்காய் எழுகிரி, நதிமுதலிய கொண்டிருக்கும். இதிலுள்ள ஜனங்கள் ஒரு தாளப்பிரமாணம் உயரமாய்க் கற்பகவிருக்ஷபலஹாரத்தாலே (உ0,000)வூ ஜீவித்திருப்பர். இந்தக் குசத்தீவைச் சூழ்ந்த **தயிர்க்கடல்** (௪) லக்ஷம் யோசனை வளைந்துகொண்டிருக்கும். இதைச்சூழ (௮) லக்ஷம் யோசனை விசாலமாய்க் கபிலவர்ண பூமியாய்க் **கிரவுஞ்சத்தீ** விருக்கும். இத்தீவு எழுபாகமாய் எழுகிரிகள், நதிகள், சோலைகள் கொண்டிருக்கும். இதிலுள்ள ஜனங்கள் (௩) தாளப் பிரமாணமாய்க் கற்பக விருக்ஷ பல ஹாரமுள்ளவர்களாய் (உ0,000)வூ ஜீவித்திருப்பார். இந்தக் கிரவுஞ்சத்தீவை வளைய **நெய்க்கடல்** (௮) லக்ஷம் யோசனை விரிவுள்ளதாயிருக்கும். இதைச்சூழச் செந்நிறமுள்ள பூமியாய் (௧௬) லக்ஷம் யோசனை விசாலமாய்ச் **சான்மலித்தீவிருக்கும்**. இது எழுபாகமாய் எழுகிரி, எழுநதிகள், சோலைகள் முதலிய கொண்டிருக்கும். இதிலுள்ள ஜனங்கள் (௩) தாளப்பிரமாணமாய்க் கற்பக விருக்ஷ பல ஹாரத்தாலே (உ0,000)வூ ஜீவித்திருப்பார். இந்தச் சான்மலித் தீவை வளைய இக்ஷு ரஸஸமுத்ரம். (கருப்பஞ் சாற்றுக் கடல்), (௧௬) லக்ஷம் யோசனை விசாலமாய் வளைந்திருக்கும். இந்தச்சமுத்திரத்தைச் சூழ இரத்தவர்ண பூமியான **கோமேதகத்தீவு** (௩உ) லக்ஷம் யோசனையாய் வளைந்திருக்கும். இது எழுபாகமாய் எழுமலை, நதி முதலியவைகள் நிரம்பப் பெற்றிருக்கும். இதிலுள்ள ஜனங்கள் (௩) தாளப்பிரமாணமாய்க் கற்பக விருக்ஷ

பல ஹாராதிகளாலே (உ0,000)வு ஜீவித்திருப்பர். இதைச் சூழச் **சுராசமுத்ரம்** (௩உ) லக்ஷம் யோசனையாய் வளைந்திருக்கும். இந்தச் சுராசமுத்திரத்தைச் சூழத் தவளவர்ண பூமியான **புஷ்கரத்தீவு** (௬௪) லக்ஷம் யோசனையாயிருக்கும். இது இரண்டு பாகமாயிருக்கும். இதனிடையில் சோத்ர பர்வதமிருக்கும். இதில் குலபர்வதங்களும், மகாநதிகளும் இருக்கும். இதிலுள்ள ஜனங்கள் (௩) தாளப்பிரமாணமாய் (உ0,000)வு ஜீவித்திருப்பர். இந்தப் புஷ்கரத்தீவை வளைந்துகொண்டு **சுத்தோதகசமுத்ரம்** (௬௪) லக்ஷம் யோசனை விசாலமா யிருக்கும். இது சமஸ்தமேகங்களுக்கும் ஜலத்தைக் கொடுத்து லோகோபகாரமா யிருக்கும். இச்சுத்த ஜலக்கடலை வளைந்துகொண்டு **இரண்மயபூமி** (௧0) கோடி யோசனை விரிந்திருக்கும். இதிற் சனங்களில்லை. இதை வளைந்துகொண்டு சராசரங்களுக்கு ஆஸ்பதமாய்ச் சூரியனது ரதசக்ரத்திற்கு ஸ்தலமாயிருக்கிற **லோகாலோக சக்கிரமேன்கிற சக்ரவாளகிரி** இருக்கும். இதன் தென்பாகத்தில் சூரியப்பிரகாசமுண்டாய் உத்தர பாகத்தில் சூர்யப்பிரகாச மில்லாமல் இருளாய் இரண்மயபூமி வளைந்துகொண்டு (௧0,000) யோசனை விசாலமும் (௫0,000) யோசனை உயரமுமா யிருக்கும். இந்தச் சக்ரவாளத்தைச் சூழ ஒரு கோடியே யிருபத்தேழு லக்ஷம் விரிவாய்ப் **பெரும் புறக்கடல்** இருக்கும். இதை வளையப் பேரந்தகாரமாய் வெகு இருள் (௩௫) கோடியும் (௯௩) லக்ஷத்து (௪0,000) யோசனை விரிவாயிருக்கும். இதில் நிசாசரர் வசிப்பர். இந்தக் கடலில் **தக்ஷிணாவர்த்த சங்ககிரி** யுண்டு. இக்கடலினடுவுள் பர்வதாகாரமான ஆமையொன்று பிரகாசமா யிருக்கும். இதற்கப்பால் பிரமாண்ட கடாகாந்த பரியந்தமாயிருக்கிற வெளி, கோடி யோசனை விசாலமாயிருக்கும். இது மத்ய பூமி லக்ஷணம்.

### ஊர்த்வலோக வர்ணனை

மத்யபூமி யகல நூறுகோடிக்கு மேரு நடுவாகையால் மேருவைச் சுற்றி (௫0) கோடியாம். மேருவைச் சுற்றி நான்கு திக்கிலும் (௧௨0) கோடி யோசனை யகலம். இனி ஊர்த்வ லோகமாவது பூமிமுதல் துருவமண்டல மந்தமாக (௧௫) லக்ஷம் யோசனை **புவலோகம்**. இந்தப் புவலோகத்தில் வாயுவாதாரமாய்ச் சமஸ்த மேகங்களும் ஒன்றின்மே லொன்றாய் இருக்கும். முதலில் தத்வ்வாயுவிலுண்டான அசுண்டவாயு பூமியில் வியாபித்துச் சீவர்களுக்குத் தீபனாதிகளையும், இராக்ஷதர் பக்ஷி முதலியோர்க்குக் கமனாதாரமாயும் இருக்கும். இதிலுண்டான பிரசேதனென்கிற வாயு, அக்கினியை யெழுப்பிச் சுழல்காற்றாய் வடவையை நிலைத்திருக்கச் செய்யும். இதன்மேல் (௧00) யோசனை யளவாயிருக்கிற ரெசனி என்கிற வாயு ரூகமென்கிற மேகத்தைச் சுத்தோதகக் கடலுக்காயினும், லவண சமுத்திரத்திற்காயினும், கொண்டுபோய் முழுகச்செய்து அதில் மொண்ட நீரைப் பூமிக்குமேல் (௧௫0) யோசனை மட்டாக எழுப்பி மழையாகப் பெய்விக்கும். பின்னும் முன்சொன்ன (௧௫0) யோசனைக்கு மேலாக (௧00) யோசனை உயரத்தில் ரெசனியென்கிற வாயு சத்துவவகம் என்கிற மேகத்தால் மழை பொழிவித்துத் தவளை, மீன் முதலிய ஜலசரங்களைச் சாகச் செய்யும். இதன்மேல் (௫0) யோசனை யுயரத்தில் மோகமென்கிற வாயு, கௌஷமென்கிற மேகத்தால் அதிமழைவருஷித்து ஜனங்களுக்குத் துக்கத்தை யுண்டாக்கும். இதன்மேல் (௫0) யோசனை உயரத்தில் அமோகமென்கிற வாயு மாருகமென்கிற மேகத்தால், மழை பெய்வித்துப் பூமியிலிருக்கிற பிராணிகளுக்கு மரணத்தை யுண்டாக்கும். இதன்மேல் (௫0) யோசனை உயரத்தில் வச்ராங்க னென்கிற வாயு பலகாம்யமென்கிற மேகத்தால் மழை பொழிவித்து விருக்ஷங்களைத் தளிர்க்கப் பூக்கக் காய்க்கச் செய்யும். இதன்மேல் (௫0) யோசனை உயரத்தில் வைத்துதிய மென்கிற வாயு அப்பெயருள்ள மேகத்தால் பூமியை அதிரச்செய்யும். இதற்கு (௫0) யோசனைகளுக்குமேல் ரைவகமென்கிற வாயு விருஷ்டிவக மென்கிற மேகத்தால் மனுஷருக்குப் புஷ்டியை யுண்டாக்கும். இதற்குமேல் (௫0) யோசனைக்கு அப்பால் சம்வர்த்தனென்கிற வாயு குரோதமென்கிற மேகத்தால் பூமியில் ரோகங்களை யுண்டாக்கும். இதன்மேல் மோகனென்கிற வாயு வாதாரலோகத்தில் ததை, விஷணகாளிக, வீமரூபிணி முதலான பிசாச சத்திகள் பூலோகத்தில் பிள்ளைகளை விசடஞ்

செய்துகொண்டிருப்பர். பின்னும் இதன் மேல் அமோக வாயு ஆதாரமான பட்டணத்தில் (ஙo,oOO) விநாயகர்கள் பூமியில் தூர்மார்க்கர் செய்யும் பூசை யேற்றிருப்பர். இதன்மேல் வச்சிரகம்ப வாயு வாதாரமான லோகத்தில் பலவீர தேவதைகள் பூலோகத்தில் ஸ்மசானபூத வேதாளாச்ரயிகளாய் வீரர்பொருட்டு நாட்டியிருக்கிற கற்சிலைகளிலிருந்து பூசை கொள்வர். இதன்மேல் வைத்துதி என்கிற வாயு வாதாரபட்டணத்தில் வீரசுவர்க்கமடைந்தவர்களிருப்பர். இதன்மேல் ரைவதனென்கிற வாயு வாதாரமான மேகாச்ரய பட்டணத்தில் சித்தரிருப்பர். இதன்மேல் சசம்வர்த்தவாயு ஆதாரமான மேகாச்ரய பட்டணத்தில் வித்யாதரரிருப்பர். இதன் மேல் விதுர்தகவாயு ஆதாரமான மேகாச்ரய பட்டணத்திலும் வித்யாதரரிருப்பர். இதற்குமேல் (கOO) யோசனை தசவாயு வாதாரமான மேகாச்ரயமிருக்கும். இதில் காந்தருவாதியரிருப்பர். இதன்மேல் (கO,OOO) யோசனையில் சத்தமாதாக்கள் யோகினிகளிருப்பர். இதன்மேல் கண தேவரிருப்பர். இதன்மேல் (கO,OOO) யோசனையில் இந்திரனது ஐராவத முதலிய விருக்கும். இதன்மேல் (கO,OOO) யோசனையில் கருடன் வசிப்பன். இதன் மேல் (கO,OOO) யோசனையில் தேவகங்கா சலம் (கO) லக்ஷம் யோசனை விரிவாயிருந்து பாபக்ஷயம் பண்ணும். இதன்மேல் (கO,OOO) யோசனையில் பிரமதகணங்களிருக்கும். இதன்மேல் (கO,OOO) யோசனையில் தக்ஷப்பிரசாபதியிருப்பர். இதன் மேல் (கO,OOO) யோசனையில் ஒருவாயு, மேகங்களுக்கு விமானஸ்தானமாயிருக்கும். இதன்மேல் சூரியன் புவலோக மிருக்கும். இது பூமிக்கு லக்ஷம் யோசனைகளுக்கு மேலே யிருக்கும். இதிற் சூரியன், தனது தடிநி, வாலநி, தமு, மரீசி, ஜ்வாலினி, ருசி, சுஷ-ஒந்துணே, போக்தா, விஸ்வா, போதினி, தாரினி, க்ஷேமா முதலிய (கஉ) கலைகளுடன் ஹேமகிரணம் (ஙஙங), உஷ்ணகிரணம் (ஙஙங), வருஷகிரணம் (ஙஙங), பீஜப்ரமதாங்குரமான அமிர்தகிரணம் (க) இப்படி (க,OOO) கிரணங்களோடும் (கக) ஆயிரம் யோசனை உயரமும், (உஎ,OOO) அகலமும், மண்டலமுங்கூடி (கஙசு,OOO) யோசனை விசாலமுள்ள இடம் பெற்றிருப்பன். இதன்மே

லிரண்டு லக்ஷம் யோசனைக்கு அப்பால் சந்திரலோக மிருக்கும். இதில் தக்ஷர் முதலான எழு விச்வதேவதைகளுடனும் பிதுர் தேவதைகளுடனும் ஒஷதீச்வரனை சந்திரனிருப்பன். இவனது ரதத்தைத் துருவன், சம்பகம் என்னும் கயிற்றைக் கொண்டு நடப்பிப்பன். பின் இதன்மேல் லக்ஷம் யோசனைக்கு அப்பால் நக்ஷத்ரமண்டல மிருக்கும். இதற்குமேல் (உ) லக்ஷம் யோசனைக்கு அப்பால் செவ்வாயிருப்பன். இதன்மேல் (உ) லக்ஷம் யோசனைக்கு அப்பால் புதனிருப்பன். இதன்மேல் (உ) லக்ஷம் யோசனைக்கு அப்பால் பிரகஸ்பதி யிருப்பன். இதன்மேல் (உ) லக்ஷம் யோசனைக்கு அப்பால் சுக்ர னிருப்பன். இதன்மேல் (உ) லக்ஷம் யோசனைக்கு அப்பால் சநி இருப்பன். இந்தக் கிரகங்களால் சூரிய சந்திரர்களொழிந்தவைகளைத் துருவன், வராகவாயுக் கயிற்றைப்பற்றி நடப்பிப்பன். மேற் சொன்ன சநி மண்டலத்துள் இராகு, கேதுக்களிருப்பர். இவர்களின்மேலிருக்கிற துருவன், பரிவகவாயுவாகிற கயிற்றைக் கொண்டு நடப்பிப்பன். சநி உலகத்திற்குமேல் (அOரு) லக்ஷம் யோசனையில் சப்தருஷி மண்டல மிருக்கும். இச் சப்த்தருஷி மண்டலத்திற்கு லக்ஷம் யோசனைக்குமேல் சிஞ்சுமாரசக்ர மிருக்கும். இது முதலை வடிவுடையது. இதனது சிரசு முதலிய அவயவங்களில் சர்வ தேவதைகளும் வசிப்பர். இதற்கப்பால் (உ) லக்ஷம் யோசனைக்குமேல் தேவேந்திரன், தேவர்கள் சேவிக்கச் சுரலோகத்தில் வீற்றிருப்பன். இதற்கப்பால் (உ) கோடி யோசனைக்கு மேல் மகாலோக மிருக்கும். இதில் மார்க்கண்டர் முதலிய ருஷிகளிருப்பர். இதற்கப்பால் (அ) கோடி யோசனையில் ஜநலோக மிருக்கும். (இதுவே பிதுர் உலகம்). இதில் வசிட்டர் முதலியோர் பிதுர்க்களுடன் வசிப்பர். அப்பால் (கஉ) கோடி யோசனையில் தபோலோக மிருக்கும். இதில் சநகர் முதலிய மகருஷிகளிருப்பர். அப்பால் (கசு) கோடி யோசனையில் சத்தியலோக மிருக்கும். இதில் பிரமதேவர் எழுந்தருளியிருப்பர்.

அப்பால் நாலுகோடி யோசனையில் வைகுண்ட மிருக்கும். இதில் விஷ்ணுமூர்த்தி லக்ஷ்மிதேவியுடன் எழுந்தருளியிருப்பர். அப்பால் கோடியோசனையில்

கந்தபுவன மிருக்கும். அப்பால் கோடி யோசனையில் கோவுலகமிருக்கும். இதிற் காமதேனுமுதலிய சுரபிகள் வசிக்கும். இதற்குமேல் (௩) கோடி யோசனையில் உருத்திரபுவன மிருக்கும். இதுவே கைலாசம். அப்பால் கடாகாந்த மிருக்கும். இது பிரமாண்டலக்ஷணம். இந்தப் பிரமாண்ட வளையாகார உச்சியில் சிவலோக மிருக்கும். இவ்வகை அண்டகோசலக்ஷணம் சுருக்கிக் கூறியதென்றறிக. (சிவதர்மோத்தரம், தத்வநிஜாநுபோகசாரம்).

**அண்டகோளங்கள்**—இவை ஆகாயத்தை, தமக்கிடமாக்கொண்டு அந்த வெளியில் முதலில் வியாபித்திருப்பன. வாயுபூதமும், அக்னிபூதமும், ஜலபூதமும், அந்த வெளியில் திரட்சியடைந்து கோளமாக விளங்குகின்றன. அவ்வாகாயத்திலியங்கும் அக்னிகோளம் சூரியன், அதனை யடுத்த கோளங்கள் கிரகங்கள் எனப்படும். அந்தக் கிரகங்களைச் சிறு கிரகங்கள் சுற்றி வருகின்றன. அவற்றிற்கு உபக்ரகங்கள் என்று பெயர். இவ்வகை பல அண்ட கோளங்கள் ஆகாயவெளியில் உலாவுகின்றன. இவையே அண்டகோளங்களாம். இவற்றில் எக்காலமும் இடம்விட்டுப் பெயராது பிரகாசிப்பவை அண்டாதிபதிகளாகிய சூரியர்களாம். மற்றவை கிரகங்களாம். இவ்வாறு கணக்கிட முடியாத பல கோடி அண்டங்கள் உண்டு என்பர்.

**அண்டபிண்டம்**—அண்டத்தில் உள்ளவை பிண்டத்தில் உண்டு. எவ்வகையெனின் : உள்ளங்கால் அதலம், கணைக்கால்விதலம், முழந்தாள் சுதலம், அதற்குமேல் நிதலம், ஊருதலாதலம், குஹ்யம் ரசாதலம், இடை பாதாளம், நாபி பூலோகம், வயிறு புவர்லோகம், இருதயம் சுவர்க்கம், தோள் மகாலோகம், முகம் ஜனலோகம், நெற்றி தபோலோகம், சிரம் சத்தியலோகம், திரிகோணம் மேரு, கீழ்க்கோணம் மந்தரம், அக்கோணத்துக்கு வலபக்கம் கைலை, இடப்பக்கம் இமயம், மேற்பக்கம் நிஷதம், தென்பக்கம் கந்தமாதனம், இடக்கையின் உள்ளங்கைகளிலுள்ள ரேகைகள் வருண பருவதம், எலும்பு நாவலந் தீவு, மேதசு சாகத்தீவு, தசை குசத்தீவு, நரம்பு கிரௌஞ்சத்தீவு, தொக்குச்சான்மலித்தீவு, மயிர்த்திரள் பிலக்ஷத்தீவு, உகிர் புஷ்கரத்தீவு, மூத்திரம் உப்புக்கடல், நீர் பாற்கடல், கபம் சுராக்கடல், மச்சை நெய்க்கடல், வாய்நீர் கருப்பங்கடல், இரத்தம் தயிர்க்கடல், வாயில் உண்டாம் மதுரப்புனல் சுத்தோதகம், சரீரத்தில் இரண்டு சக்கரங்கள் உள. அவற்றில் நாதசக்கிரத்தில் சூரியனும், பிந்துசக்கிரத்தில் சந்திரனும், நேத்திரங்களில் அங்காரகனும், இருதயத்தில் புதனும், வாக்கில் குருவும், சுக்கிலத்தில் சுக்கிரனும், நாபியில் சனியும், முகத்தில் ராகுவும், காலில் கேதுவும், இருக்கின்றனர் ஆதலால், அவ்வாறு கூறுவர். (கருடபுராணம்).

**அண்டரோகம்**—இது, பீசங்கள் தடித்து வீங்கும் ரோகம். இது, வாத, பித்த, சிலேஷ்ம அண்டங்கள், குடல் அண்டம், குமுறலண்டம், நீரண்டம், தசை அண்டரோகமெனப் பேதப்படும். இத்தசைஅண்டரோகம் போன்ற ரோகம் பெண்களுக்கும் பெண் குறியில் உண்டாதலுண்டு. இவை கஷ்ட சாத்தியங்கள். (ஜீவரக்ஷாமிர்தம்).

**அண்டர்பாணன்**—சண்முகசேநாவீரன்.

**அண்டர்மகன் குறுவழுதி**—ஒரு புலவன். இவன் பொதுவனாகப் பெயரினால் தோன்றுகிறது. ஆயினும் வழுதியென்பதால் பாண்டியர் வம்சத்தவனாக இருத்தல்கூடும். (புற - 346-காஞ்சி). (குறுந் - 345-நெய்) (அகத் - 228-குறிஞ்).

**அண்டிரன்**—ஆயைக் காண்க.

**அண்ணம்** — (அண்மை) பதங்கள் தம் பொருளை விளக்க இடையீடின்றி விரையக் கூறுதல். (தரு).

**அண்ணர்**—திருவாய்மொழிப் பிள்ளைக்குத் தந்தை. பிள்ளை லோகாசாரியர் திருவடி சம்பந்தி.

**அண்ணன்**—நயனாசாரியர் திருவடிசம்பந்தி. நயனாசாரியார் திருக்காஞ்சியில் இருக்கையில் ஒரு மாய சந்நியாசி வாதத்திற்கு வர, இவனைக்கண்டு எல்லாரும் அஞ்சி நிற்க அண்ணன் தாம் வாதித்து சயங்கொண்டு வந்தாராகையால் இவர்க்குப் பிரதிவாதி பயங்கரம் அண்ணன், என்று ஆசாரியரால் பட்டப் பெயர் இடப்பட்டது. (குருபரம் பரை).

**அதங்கோட்டாசிரியர்**—அகத்தியர் மாணாக்கருள் ஒருவர். இடைச்சங்கத்தவர். தொல்காப்பியத்திற்குக் குற்றங்கூறத் தொடங்கி ஆசிரியர் கூறிய சமாதானத்தால் அடங்கினவர்.

**அதச்சிரசு**—லஞ்சம் வாங்குவோர் போம் நரகம்.

**அதமயன்**—அத்திரியின் குமரன். இவன் ஆசாரிய புத்திரருக்கு (௨,000) பசுக்களைத் தானஞ் செய்தவன். ஆசாரியருக்கு (௯0,000) யானைகளையும், அவ்வளவு தாதிகளையுங் கொடுப்பதாக வாக்களித்தவன்.

**அதரிடைச்செலவு**—செருவினைப் பொருநர் ஊரிலே நிற்கக் காலனை யொப்பக் கோபித்துப் பகைவர்போன வழியிடத்தே சென்றது. (பு. வெ).

**அதர்மன்**—1. சேஷ்டாதேவிக்கு வருணனுக்குண்டான குமரன். இவன் பாரி நிருதியின் பெண்ணாகிய இம்சை. குமாரர் பயன், மகாபயன் மிருத்யு. பெண்கள் சுரை, நிந்தனை. அதர்மன், மாருஷையை மணந்ததாகவும், அவளிடத்தில் தம்பன் எனும் குமரனும், மாயையெனுங் குமரியும் பிறந்ததாகவும், அவ்விருவர்க்கும் லோபன் எனுங் குமரனும், நிக்ருதியெனும் குமரியும் பிறந்தனர் எனவும், அவர்க்குக்குரோதன், ஹிம்சைஎன்பவர்கள் பிறந்தனர் எனவும், அவர்க்குக் கலியும், துருக்தியும் பிறந்தனர் எனவும், அவர்க்கு மிருத்யு, பீதியும் பிறந்தனர் எனவும், அம்மிருத்யுவுக்குப் பீதியிடம் நிரயன், யாதனையும் பிறந்தனர் என்றும் பாகவதங் கூறும். பின்னும் விஷ்ணு புராணத்தில் அதர்மனுக்கும் இம்சைக்கும் அந்ருதன் எனும் குமரனும், நிக்ருதி எனும் குமரியும் பிறந்ததாகவும், நிக்ருதியிடம் அந்ருதனுக்குப் பயன், நரகன் எனும் இருவர் குமரரும், மாயை, வேதனை யெனும் இருவர் குமரியரும் பிறந்தனர் எனவும், அவர்களுள் மாயையிடம் மிருத்யுவும், நரகனுக்கு வேதனையிடம் துக்கன் என்பவனும் பிறந்தனர் எனவும், கூறியிருக்கிறது. பின்னும் மிருத்யுவிற்கு வியாதி, ஜரை, சோகன், திருஷ்ணன், குரோதன், என்பவரும் பிறந்து உலக நாசத்தைச் செய்வர் என்று கூறப்பட்டிருக்கிறது.

2. இவன் வேதபுரியில் இருந்த திரியம்பகவேதியன் புதல்வன். ஒருநாள் காட்டுள்சென்று, ஆங்குத் தவமேற்கொண்டு புற்றால் மூடப்பெற்றிருந்த முனிவரது கண்ணைத் தொளைவழியிற் கண்டு தன் கையில் இருந்த கோலாற் குத்தி அவரால் தீயனாய்க் காட்டில் திரியச் சாபம் எற்றுத் தந்தையிடஞ் செல்லத் தந்தை, சில புத்தி போதிக்கக்கேளாது தந்தையைக்கொன்று பசியால் புலைச்சேரியில் ஊனருந்தித் தாகங்கொண்டு அங்கிருந்த கள்ளைக் குடித்து வெறிகொண்ட காமத்தால் புலைச்சியைக் கூடிச் சிலர் அடிக்கப் பயந்து ஓடிச் சாபால முனிவர் இருக்குமிடம் அணைய அவர் கமண்டலநீர் கருணையுடன் அவன்மீது இறைக்க நல்லறிவு சிறிதுபெற்றுத் திருப்பெருந்துறையில் இறைவன் பெயர் கூறிப் பாபநீக்கம் அடைந்தவன். இவனை இலக்குமி என்னும் காம்பிலிநாட்டுப்பெண் கணவனைக்கொன்று கொள்ளிவாய்ப் பேயானவள் பிடிக்கவந்து அவளும் இச்சாபால முனிவரால் சாபம் நீக்கினள்.

**அதர்வணருஷி** — கர்த்தமப் பிரசாபதியின் குமரியான சாந்தியை மணந்தவர்.

**அதர்வணவேதம்**—இது, (௫0) சாகைகளையுடைய நான்காம் வேதம். இதற்குள்ள உபநிடதங்கள் : பிரச்சினம், முண்டகம், மாண்டூக்யம், அதர்வசிரசு, அதர்வசிகை, பிருகத்சாபாலம, நிருசிம்மதாபனி, நாரத பரிவிராசகம், சீதை, சரபம், திரிபாத் விபூதிமகாநாராயணம், இராம ரகசியம், இராமதாபனி, சாண்டில்யம், பரமஹம்ச பரிவிராசகம், அன்னபூரணை, சூரியன், ஆத்மம், பாசுபதம், பரப்பிரமம், திரிபுராதாபனி, தேவி, பாவனை, பஸ்மசாபாலம், கணபதி, மகாவாக்யம், கோபாலதபனம், கிருஷ்ணம், அயக்ரீவம், தத்தாத்திரேயம், காருடம் என முப்பத்தொன்று. இவற்றுள், அதர்வசிகோபநிடதம், கைவல்யோபநிடதம், சுவேதாச்வதரம் காலாக்னிருத்ரம் என்னும் ஐந்தும் பஞ்சருத்ரம் என்னப்படும்.

**அதர்வணாசாரி**—ஒரு வடநாட்டுப் புலவர்.

**அதர்வா**—1. ஒரு இருடி. ததீசியின் தந்தை.

2 ஒரு இருடி. இவர் தேவி - சாந்தி. குமரன் - தத்யங்கன்.

**அதலம்**—கீழுலகத்தொன்று.

**அதலர்**—நாகர். அதோலோகவாசிகள்.

**அதவியார்** — தஞ்சாவூர், திருநெல்வேலி முதலிய ஜில்லாக்களில் உள்ள நெசயக்காரர். (தர்ஸ்டன்).

**அதிஉஷ்ணமுள்ளபிரதேசம்** — அமெரிகா கண்டத்துக் காலிபோர்னியா எனுமிடத்திற்குக் கீழ்பாகத்திலுள்ள டெத்வாலி யெனும் பாலைவனப் பள்ளம். இதில் உஷ்ணம் (௧௩௪) டிகிரிக்கு அதிகப்படுகிறது. இதில் பெய்யும் மழை அந்தரத்திலேயே மாறிவிடுகிறதாம்.

**அதிகண்டன்**—சௌபாக்கிய நகரத்துவேதியன். இவன் இளமைப்பருவத்தில் தெருவிற் போம்போது ஒரு ருத்ராக்ஷம் கண்டெடுத்து ஒரு வேதியனுக்குக் கொடுத்து நற்பதம் பெற்றவன். (உபதேசகாண்டம்).

**அதிகமான்** — சேரமானால் வளர்க்கப்பட்டவர். இவர் பாணபத்திரரைப் பரிபாலித்தவர். இவர், சோழதேசத்தில் ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்து அரசராய்ப் பாணபத்திரருக்குச் சிவமூர்த்தி அளித்த திருமுகப்பாசுரத்தால் பொருளளித்துப் பொன்வண்ணத்தந்தாதி முதலிய பாடி ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் திருக்கைலைக்குச் சென்று திரு ஆதியுலா அரங்கேற்றினவர். இவர் ஒருவகை வீரர்பாற்பட்ட அதியர் குடியினர். திருவள்ளுவருடன் பிறந்தவர். தகடூரில் வசிந்தனர். (திருவள்ளுவர்சரிதை)

**அதிகமானெடுமானஞ்சி மகன் பொகுட்டெழினி**—கொடையும்,இன்பமும் உள்ளவன். இவன் பெயர் அதியமான் மகன் பொகுட்டெழினி யெனவும் வழங்கும். இவன் மீது "அலர்பூந்தும்பை" "எருதேயிளைய" "மதியேர் வெண்குடை" என (௩) செய்யுட்கள் ஒளவையார் பாடினர். (புற-நா).

**அதிகன்**—1. இவன் ஒளவைக்குத் தான் பெற்ற கருநெல்லிப்பழத்தைத் தந்தவன். இவனுக்கு அதிகமான் எனவும் பெயர். இவன் புகழ்ச்சோழநாயனார் காலத்திருந்த அதிகனே அன்றோ என்று துணிந்து சொல்லக்கூடவில்லை. இப்பெயர்கொண்ட அரசன் ஒருவன் கேரளதேசத்தில் இருந்ததாகவும், அவனுக்கு இராஜராஜனென்று ஒரு பெயர் உண்டென்றும், அவன் வம்சத்தில் எழினி என்னுமொருவன் இருந்தனனென்றும், அவன் வம்சத்தில்வந்த விடுகாதழகியபெருமாள் என்பவன் தகடூரையாண்டான் என்றும், இந்த அதிகன், நெடுஞ்சடையனால் அயிரூரிற் செயிக்கப்பட்டான் என்றும் புறநானூற்றுரையிற் கூறப்பட்டிருக்கிறது.

2. புகழ்ச்சோழநாயனார் சேனைகளால் வெல்லப்பட்ட மலைநாட்டரசன்.

**அதிகாயன்**—ஒரு அரக்கன். இராவணன் குமாரர்களுள் ஒருவன். பிரமனிடம் கவசம் பெற்றவன். யுத்தத்தில் இலக்குமணரால் பிரமாஸ்திரம் விட்டுக் கொல்லப்பட்டவன். இவன் முற்பிறப்பில் கைடவன் என்னும் அசுரன். சிவபெருமானிடம் பெற்ற வில்லுடையவன், பலசாலி. (இராமாயணம்)

**அதிகாரிப்பிள்ளை**—எழுபத்துநான்கு சிங்காசனாதிபதிகளில் ஒருவர் ஸ்ரீ வைஷ்ணவர் (குருபரம்பரை).

**அதிகோரன்**—1. இராக்ஷசசேனாபதி.

2. சூரபதுமன் சேநாபதி. வீரமாயேந்திரவாயிற் காவலாளி. (கந்த).

**அதிசயவணி**—கருதிய பொருளின் வனப்பை யுவந்து கூறுகையில், உலகநடை கடவாது உயர்ந்தோர் வியப்பக் கூறுவது. இது, பொருள், குணம், தொழில், ஐயம், துணிவு, திரிபால் வேறுபடும். இதுவே உயர்வு நவிற்சி, இதனை (அதிசயோக்தியலங்காரம்) என்பர். (தண்டியலங்காரம்).

**அதிசாரரோகம்**—இது மார்பு,குதம், வயிறு, முதலிய இடங்களில் நோய், உடம்பிளைப்பு, மலபந்தம், வயிறுப்பிசம், அஜீரணம், இவைகளைப் பழைய உருவமாகப் பெற்றது. பின்னும், கெட்டுலர்ந்த மாமிசம், வேகாப்பதார்த்தம், மந்தவஸ்துக்கள், அதிதிண்டி, மிகுநடை இவற்றால் வாயு அதிகரித்துத் தாதுக்களைக் கெடுத்து மலத்தைச் சலம்போலாக்கி அபானவழியால் தள்ளும். இது, வாத, பித்த, சிலேஷ்ம திரிதோஷ, பய, துக்க அதிசாரங்களென அறுவகையாகியும் மற்றும், சாம, நிராம, ரத்த, குதபிரம்ச, சர அதிசாரமெனப் பலவிதமாம். இது, தயிர்ச்சுண்டிச் சூரணம், சப்தகபாடமாத்ரை, முதலியவற்றால் வசமாம். (ஜீவரக்ஷாமிர்தம்).

**அதிசாரன்**—நிதந்துவின் குமாரன்.

**அதிசுஷ்கரோகம்** — தேகத்தில் சமாகனியால் செழித்த மாமிசம், அக்னிக் குறைவால் சீரணக்குறை பெற்றுத் தேகம் சுஷ்கிப்பதுமன்றி, நரம்புகள், கீல்கள், கழுத்து, வயிறு, தொடைகள் முதலிய உலர்ந்து சூம்பும். அப்போது ஆயாசம், துர்ப்பலம் உண்டாம். இதற்குக் கூஷ்மாண்டகிருதம் முதலிய நன்மைதரும். (ஜீவரக்ஷாமிர்தம்).

**அதிசூரன்**—1. ஏனாதிநாதநாயனாரை வஞ்சனையாற் கொலைபுரிந்த மாபாவி. இவன் சரிதையை ஏனாதிநாதநாயனாரைக் காண்க. (பெரியபுராணம்).

2. சிங்கமுகாசூரன் குமரன்.

3. சூரன் முதலிய பதினெண்மரில் முதல்வன். நீதிநெறிச்சோழன் காலத்தில் அரசர்களைக் கொலைபுரிந்து வருத்திக் கொண்டு வல்லான் என்று ஒரு வல்லவன்

இருந்தனன். அவனை வெல்லச் சென்று பல வருத்தமுற்றுத் தன்னொடு அவனை வெல்லவந்தவர்களைப் பரிகொடுத்துத்தான் ஒருவனே அவனைச் சிறைசெய்து அவன் குதிரை ஆயுதம் முதலியவற்றைக் கவர்ந்து அரசனுக்குக் காட்டி எப்படி வல்லான் தலையை வெட்டினுயென்று அரசன் கேட்க, இப்படித்தானென்று தானும் வெட்டிக்கொண்டு இறந்தவன். இவன், சூரன் என்பவன் செய்த குமாரசுவாமி பூசையால் உயிர் பெற்றனன்.

**அதிதர்**—வைராசனுக்குச் சம்பூதியிடம் உதித்த குமரர், விஷ்ணுவினவதாரம்.

**அதிதி**—1. (சூ) ஸ்ரீராமபிரான் பேரன், குசன் குமரன். இவன் குமரன் நிஷதன்.

2. காசிபர் பாரி. தக்ஷன்பெண், துவாதசாதித்தரையும், வாமநமூர்த்தியையும் பெற்றவள். இவள் காதணியை நாகாசுரன் கவர்ந்தனன். இவளது சரித்திரத்தைக் காசிபரைக் காண்க.

3. தேவர்கள் அசுரர்களைக் கொல்லுவார்கள் என தேவர்களுக்கு அன்னத்தைப் பாகஞ் செய்தாள். புதன் பசியாயவ்விடம் அதிதியானுன். அவள் தேவர்களுக்கு முதலிலிட்டுப் பிறகு அளிப்பேனென, புதன் கோபித்து உன் கர்ப்பத்தில் பீடையுண்டாகவென்ச் சபித்தனன். (பார-சாந்).

**அதிதூலரோக** — தேகமாமிசம், போகத்தாலும் ரோகத்தாலும் வளருங் காரணத்தால் சரீரம் பருத்து ஸ்தனம், வயிறு, தொடை, அளவுக்கதிகமாகப் பருத்து கடினமாகும். இதனுல் நடையிற் குலுங்சல், ஆயாசம், இரைப்பு, கபாதிக்கம், பாடியிருமல், பெருமூச்சு, முதலிய துர்க்குணங்களுண்டாம். இது, சுக்ல சோணிதங்களைக் கெடுத்துக் கர்ப்ப நாசத்தைத் தரும். இதனைக் கோமூத்ரம், அசுவகந்திச்சூரணம் முதலியவற்றுல் வசஞ்செய்யலாம். (ஜீவரக்ஷாமிர்தம்).

**அதிபத்தநாயனுர்**—இவர், சோழநாட்டில் நாகப்பட்டினத்துக் கடற்கரை யடுத்த ஆரில் அவதரித்த செம்படவர். இவர், தமக்கு, வலையிற்படும் முதல் மீனினை நாடோறும் சிவமூர்த்திக்கு என்று விட்டுவிடுவது கடமையாக் கொண்டவர். இவ்வகை நடத்துகையில் சிவாஞ்ஞையால் சிலநாள் ஒரு மீனே பட்டது. இதனுல் குடிமுழுதும்வறுமையுண்டாயிற்று. பிறகு பொன்மீன் ஒன்றுபட அதனையும் சிவாற்பணமென விடுத்து வருந்தாதிருந்தமை கண்டு சிவமூர்த்தி இடபாரூடராகத் தரிசனந்தந்து முத்தியளிக்கப் பெற்றவர். (பெரியபுராணம்).

**அதிபதி**—சண்முகசேநாவீரன்.

**அதிபலமாமுனி**—ஒரு இருடி புங்கவர்.

**அதிபலன்**—1. சிவபூதகணத்தவரில்ஒருவன்.

2. மகாபலன், தந்தை சைநன்.

**அதிபலை** — ஸ்ரீராமருக்கு விச்வாமித்திரர் உபதேசித்த மந்திரம்.

**அதிபாத**—ஒரு அப்சரஸ்திரி, அரிஷ்டையின் புத்ரி.

**அதிமதுரகவி** — திருமலைராயன் சமஸ்தான வித்துவான். காளமேகரை யமகண்டம் பாடுவித்தவன். காளமேகரைக் காண்க.

**அதியமான்** — ஒரு அரசன். தகடூர் பொருதவன். போர்வல்லவனும் கொடையாளியுமானவன். அரிசிற்கிழாராற் பாடப்பட்டவன். இவனை அதியமான் தகடூர்பொருது வீழ்ந்த எழினி யென்பர் (புற. நா.)

**அதியமான்நெடுமானஞ்சி** — அஞ்சியைக் காண்க.

**அதியன்விண்ணத்தனுர்** —கடைச்சங்க மருவிய புலவர். (அகநானூறு).

**அதியுச்சம்** — (சூரி) க்கு மேஷத்தில் (௧0) பங்கு வரையிலும், (சந்) க்கு ரிஷபத்தில் (௩) பங்கு வரையிலும், (செவ்) க்கு மகரத்தில் (உ௮) பங்கு வரையிலும், (புத) க்கு கன்னியில் (௧௫) பங்கு வரையிலும், (குரு) க்கு கற்கடகத்தில் (௫) பங்கு வரையிலும், (சுக்) க்கு மீனத்தில் (உ௭) பங்கு வரையிலும், (சநி)க்கு துலாத்தில் (உ0) பங்கு வரையிலும் அதியுச்சமாம்.

**அதிரதன்** — சத்தியகர்மன் குமரன், இவன் கங்கைக்கரையில் குந்தியால் எறியப்பட்ட கன்னனையெடுத்து வளர்த்தவன். இவன் மனைவி ராதை. இவள் குமரர் சத்ருதபன், துருமன், விருகாதன், சத்ருஞ்ஜயன், விபாடன், முதலியோர் (பாரதம்).

**அதிரதர்முதலியவர்** — அதிரதர் தம்மையும் தமது சேனையையுங் காத்துக்கொண்டு பல தேர்வீரர்களோடு போர்செய்யும் வீரர். மகாரதர் தம்மையும் தாமேறிய தேர், குதிரை, சாரதி, சேனைகளையுங் காத்துக்கொண்டு சில தேர்வீரரோடு போர்செய்பவர். சமரதர் தம்மையும் தம்முடைய தேர், சாரதி, குதிரைகளையுங் காத்துக்கொண்டு ஒரு போர்வீரனோடு போர்செய்

பவர். அர்த்தரதர் தம்மை மட்டுங் காத்துக்கொண்டு ஒரு தேர்வீரனோடு போர்செய்பவர்.

**அதிராத்ரன்**—சாக்ஷுசமனுவிற்கு நட்வலையிடம் உதித்தகுமரன்.

**அதிராவடிகள்** — மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை அருளிச்செய்த சிவனடியவர்.

**அதிராஜம்**—இராஜசூயயாகத்தின் பொருட்டு சகதேவனால் ஜயிக்கப்பட்ட தேசம். அரசன். தந்தவக்கரன். குவாலியரில் உள்ளது. Datiha in The Gwalior territory, where Dantavakara was killed.

**அதிராஜேந்திரன்** — வீரராஜேந்திரன் குமரன். முன்வேங்கைநாடு, வீரராஜேந்திரனால் விஜயாதித்தனுக்குக் கொடுக்கப்பட்டது. அந்த நாட்டின் இளவரசன் குலோத்துங்கன், நாடிழந்து துன்புற்றிருந்தான். அதிராஜேந்திரன் பட்டம்பெறவே அவனை வென்று பட்டினத்தைத் தான் அடையவேண்டுமெனக் குலோத்துங்கனெண்ணினன். இதனால் மேலைச் சாளுக்கியனாகிய விக்ரமாதித்யன் தம்பி சோமாசுரன் (11) உடன் சிநேகித்துச் சோழராஜ்யத்தின்மீது படைகொண்டு சென்று அதிராஜேந்திரனைக் கொன்று பரகேசரி இராஜேந்திர சோழனுக்குத் தௌகித்ர பார்த்யங்கொண்டு சோழ ராஜ்யாதிபதியாயினன். குலோத்துங்கன் தாயாகிற அம்மங்காதேவி தனக்குப் பிள்ளைபிறந்ததும் தன் தகப்பன் பெயராகிய இராஜேந்திரசோழன் பெயரைப் பிள்ளைக்கிட்டாள். இப்பெயர் இந்தக் குலோத்துங்கனுக்கு (௨) வருஷம் வழங்கியது.

**அதிர்ச்யநதி** — இவள், சித்ரமுகன் பெண். இவள் வசிஷ்ட குமரனாகிய சத்தியை மணந்தவள். இவளுக்குப் பராசரர் பிறந்தார். (பார-அநுசா).

**அதிவிடன்** — ஒரு வேதியச்சிறுவன். காமச்செருக்கால் ஒருத்தியைக்கூடி இரவில் தாகங்கேட்க அவள் கள்ளுண்டவெறியில் கள்ளை நீரென்று கொடுத்தனள். அதனை வாங்கியுண்டு கள்ளென்றறிந்து வேதியரிடம் நடந்தவைகூறிப் பிராயச்சித்தங் கேட்டனன். வேதியர் நெய்யை மழுப்போலுருக்கி வாயில்விடுவதே பிராயச்சித்தமென்று உருக்கிவிட இருக்கையில் தாய் தந்தையர் பரிதபித்த நிலையறிந்து சாண்டில்யமுனிவர் தோன்றிப்புண்ணிய தீர்த்தமாடச் செய்யப் பாபம் நீங்கிச் சுத்தமானவன்.

**அதிவியாப்தி**—இலக்கியத்திலேயே யன்றி இலக்கியமல்லாததின் கண்ணும் இலக்கண மிருத்தல். (தர்)

**அதிவீரன்**—ஓர் அசுரன். யாளிமுகன் குமரன், இலங்கை, நீரில் அமிழ்வது கண்டு மானம்பாதிக்க வீரவாகு தேவருடன் யுத்தஞ்செய்து மாண்டவன். (கந்தபுராணம்).

**அதிவீரராமபாண்டியர்**—பாண்டிநாட்டுமன்னரில் ஒருவர். சிவபக்திமான், சுவாமிதேவனிடம் சிவதீக்ஷை பெற்றுக் காசிகாண்ட முதலியவியற்றியவர். இவர் சகோதர வரதுங்கபாண்டியர், தமிழிற் கொக்கோகஞ் செய்தவர். இவர் தமிழில் வல்லவராகி முதலில் நளன்கதை பாடத்தொடங்கிப் பாடிக்கொண்டு வருகையில் ஒரு நாள், தாயுடன் உண்ணும் வழக்கத்தினராதலால் காலந்தாமதித்து உணவுகொள வந்தனர். தாய் காலதாமதத்திற்குக் காரணங்கேட்க, இவர் தாம் செய்யும் நைடதம் தாமதிக்கச் செய்ததெனத் தாய் அக்கதையில் அருவருப்புற்றுப் பசுநூல் பாடத்தொடங்கினை யென்று "செஞ்சுடரின் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும், பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே-விஞ்சு, விரதமே பூண்டிந்த மேதினியையாண்ட, பரதனையும் ராமனையும் பார்" எனும் கவியைக் கூறித் தமயன் சொற்படி நடக்கக் கட்டளையிட்டனள். அவ்வகை தமயன் சொற்படி அதிசீக்கிரத்தில் நைஷதத்தை முடித்துக் காசிகாண்டம், திருக்கருவையந்தாதி முதலிய செய்து முடித்துப் புலவர்கள் செய்யுளில் குற்றங்கூறின் அவர்களைக் குட்டியும் புலவர்க்குப் பரிசளித்தும் வந்தனர். இவர் புலவர்க்குமுன் தாம்செய்த நைடதகவிகளைக் காட்டி இதற்கும் இராமாயணத்திற்கும் யாது பேதமென்ன, அவர்கள் உமது செய்யுள் கரும்பு, அவரது வேம்பெனக் கூறக்கேட்டுப் புலவர்களின் கருத்தறிந்தவர்.

இவர் நைஷதத்தை அரங்கேற்றுகையில் "வாய்ந்தமின்னை மடந்தைய ராக்கி விண், போந்திடாமலன்றோ மலர்ப் புங்கவன், சாந்தணிந்த தமனியக்குன்றென, எந்து வெம்முலைப்பார மியற்றினன்" எனுஞ் செய்யுளைப் பிரசங்கிக்கையில் புலவர்கள்

கேட்டு மின்னில் தமனியக்குன்று நிற்குமோ என ஆக்ஷேபிக்கையில், அரசன் விடைகூறமயங்கி நாளை கூறுவோமென்று வீட்டில்வந்து ஒருவாறு சிந்திக்கையில் மனைவிகண்டு களிப்புடனிருக்காதற்குக் காரணம் வினவிக் கூறகேட்டு அது முலைக் காம்பென்னும் முறுக்காணிகொண்டு முறுக்கியிருந்ததால் நிற்கிறதெனக் கூறக்கேட்டுக் களித்து மறுநாள் புலவர்க்குக்கூறிக் களித்தவர் எனவும் ஒருகதை கூறுவர்.

**அதிஷ்டானபுரம்**—சேதிநகரத்தின் இராஜதானி.

**அதீர்க்கன்**—திருதராஷ்டிரன் குமான்.

**அதீனன்**—சகதேவன் புத்திரன்.

**அதுலகீர்த்திபாண்டியன்** — அதுல விக்ரம பாண்டியனுக்குக் குமான். இவன் குமான் கீர்த்திபூஷணபாண்டியன்.

**அதுலவிக்ரமபாண்டியன்**—சமர கோலாகல பண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் அதுலகீர்த்தி.

**அதுஷ்டாவிரணம்**—சிகிச்சைகளால் வசமாவது. அது ரஸவாததுஷ்டவிரணம், ரஸபித்தாதுஷ்டவிரணம், ரஸசிலேஷ்மாதுஷ்டவிரணம், ரஸவாதபித்தாதுஷ்டவிரணம், ரஸவாதசிலேஷ்மாதுஷ்டவிரணம், ரஸசிலேஷ்மபித்தாதுஷ்டவிரணம், ரஸதிரிதோஷாதுஷ்டவிரணம் என்பனவாம். (ஜீவரக்ஷாமிர்தம்).

**அதூர்த்தன்**—குசனுக்கு மூன்றும் புத்திரன். இவன் குமரன் ராஜருஷியான கயன்.

**அதோத்தராஜன்**—சூரியவம்சத்து அரசன். கயனுக்குத் தந்தை.

**அதோக்ஷசன்**—விஷ்ணுவிற்கொரு பெயர்.

**அத்தாமலகன்**—ஒரு வேதியன். இவன் குமரன் ஆக்கினவர்க்கன். இவன் பதினறு வயதில் அவதூதாச் சிரமியாயினன்.

**அத்தாமலகாசாரியார்**—ஒருசித்தர். யமுனையாற்றங்கரையில் தவஞ்செய்து கொண்டிருக்கையில் இவரது தவநிலை அறியாத ஒருத்தி, தன் குழந்தையை இவரிடம் விட்டு நீராடச்செல்லக் குழந்தை தவழ்ந்து சென்று யமுனையில் வீழ்ந்து இறந்தது. இதனைக் கூக்குரலால் அறிந்த சித்தர் அக்குழந்தை உடலில் சென்று சங்கராசாரியரை அடுத்தனர்.

**அத்தி**—1. சராசந்தன் பெண். கஞ்சன் தேவி.

2. ஒரு சிவகணத்தவன். இவன் திருக்கைலையில் சிவமூர்த்தி ஏகாந்தத்திலிருக்கையில் வாயிற்காவலர் தடுக்கவும் உட்சென்று பார்வதியாரால் யானையாகச் சாபம்பெற்றுப் பார்வதியாரை வேண்ட அவர் இரக்கப்பட்டு நீ கஜாரண்யத்தில் சிவபூஜை செய்து முன்பே அவ்விடம் பூஜை செய்து கொண்டிருக்கும் காளனுடன் மாறு கொண்டு இறந்து முத்தியடைக என்ற சொற்படி பூஜைசெய்து முத்தியடைந்தவன். (திருக்காளத்திபுராணம்).

3. சந்திரகுலத்து அசமீளன் தந்தை.

4. அஸ்தியைக் காண்க.

5. சந்திரவம்சத்து அரசன். சுகோத்திரன் புத்திரன். தாய் ஜயந்தி. புத்திரன் விகுஞ்சன். பாரியை யசோதரை. ஜயந்திக்குச்சுகுமாரி என்றும், விகுஞ்சனனுக்கு விகுண்டன் எனவும், யசோதைக்கு யசோதரை எனவும் வேறு பெயர்கள். இவன் அத்தினபுரியை நிர்மாணஞ் செய்தவன்.

**அத்திகன்** — 1. சலற்காரன் குமான். தாய் சலற்காரை. ஆதிசேடன் முதலிய மாதுலரைக் காக்கச் சனமேசயன் சர்ப்பயாகத்தை நிறுத்தினவன். இவன் தாய் தன்னை விட்டுப் பிரியும் கணவனை எனக்கு என்ன கதியென ருஷி அஸ்தியென்று கூறிச் சென்ற பிறகு இவர் பிறந்ததால் இவர்க்கு இப்பெயர் இடப்பட்டது.

2. பூரு வம்சத்து அகோத்ரன் குமரன். இவனுண்ட காரணத்தால் இவன் பட்டணத்திற்கு அத்தினபுரமென்று பெயர். இவன் குமாரர் அசமீளன், தவிமீளன், புருமீளன்.

3. வசுதேவனுக்கு உரோசனையிடம் உதித்தகுமரன்.

**அத்திகிரி** — இது காஞ்சிமாநகரத்திலுள்ள மலை. பூர்வம் ஐராவதமென்னும் யானை விஷ்ணுமூர்த்தியைப் பூசித்துப் பேறு பெற்ற இடம். பிரமன் அசுவமேதயாகஞ் செய்த தலம். (காஞ்சிபுராணம்).

**அத்திபதி** — காந்தாரநாட்டரசன். நீலபதி கணவன், இராகுலன் தந்தை, இவனது இராஜதானி இடவயம் என்ப. பிரமதருமன் கட்டளையால் அவந்தியை இராசதானியாகக் கொண்டவன். (மணிமேகலை)

**அத்திமேசம்**—தேவர் பூஜித்த காசியிலுள்ள சிவபிரதிட்டை.

**அத்திரஇதயம்** — ஒரு வித்யை. இது பகைவரை நசிக்கும் பொருட்டுச் சிவமூர்த்தியால் சுவாயம்பு மநுவிற்கும் அம்மநு, வசிட்டருக்கும், வசிட்டர், சித்திராயுதனை

னும் காந்தருவனுக்கும், அச் சித்திராயுதன் தன் தௌஹித்திரியாகிய மனோரமைக்கும், அவள் சுவாரோசிஷ மனுவிற்கும் உபதேசித்தது.

**அத்திரி**—1. அகாம் ஈச்வரனைத் தெரிவிக்குஞ் சப்தம், திரி என்பது திரிகுணாத்மக மாகும் பிரகிருதியைத் தெரிவிக்கும்; இவ்விரண்டினும் சமமான பக்தியை வைத்தவராதலால் இப்பெயர் பெற்றவர். பிரமன் நேத்திரத்தில் பிறந்தவர். திரிமூர்த்திகள் குமாரர்களாய் வரத் தவஞ்செய்தவர். இவர் தேவி அநசூயை, இவர் காமத்தால் அநசூயையை நோக்க வீரியம் வெளிப்பட்டது. அதை வாயு, திரட்டி ஆகாயத்திலிட அது சந்திரன் ஆயிற்று. இவர் உடம்பில் விஷ்ணு புகுந்து வேதியராகப் பிறந்து அநசூயையின் பாலுண்டு தத்தாத்திரேயர் ஆயினர். இவரை ஏகயன் கோபித்துக் கொல்லவரத் துருவாசரிவரிடம் (ஏ) நாட்களிற் பிறந்து அவனை யெரித்தனர். இவர் ஆச்சிரமத்தில் ஸ்ரீராமமூர்த்தி தங்கி ஆரண்யஞ் சென்றனர். தேவாசுர யுத்தத்திற் பயந்த சூர்ய சந்திரர்களுக்குப் பயத்தைப் போக்கி அசுரரை ஒரு சொல்லில் வென்றவர். அருந்ததிக்குத் தந்தை. இருக்குவேதத்தின் ஐந்தாவது காண்டத்தின் அதிகாரியானவர்.

2. சண்முகசேநாவீரன்.

3. ஒரு பிராமணர், தயிரிய மகாராசனிடஞ் சென்று செல்வம் பெற்றுப் பிள்ளைகளுக்குக் கொடுத்துத் தவத்திற்குச் சென்றவர்.

4. ஒரு தீர்த்தம்.

5. அத்திரி குலவேதியன். இவன் குமரன் ஆத்திரேயன். இவன் காமத்தால் காயத்திரி முதலிய விடுத்துத் திருக்குற்றாலமலயமாருத பரிசத்தால் பாவநீங்கி முத்தியடைந்தவன். (குற்றாலபுராணம்).

**அத்யந்தாபாவம்**—முக்காலத்தினு மின்மை. இது வாயுவில் உருவமின்மை. பூதலம் கடமுடையதன்று என்றாற்போல்வது.

**அத்யாத்மராமாயணம்**—விச்வாமித்திரரால் செய்யப்பட்ட இராமகதை.

**அத்ரிகை**—இவள் ஒரு அப்சரஸ்திரி. இவள் கங்கையில் ஸ்நானஞ் செய்துகொண்டிருந்த ஒரு முனிவரின் காலைப் பற்றி இழுக்க முனிவர், யோக திருஷ்டியால் இவள் காந்தர்வ ஸ்திரீ என்றறிந்து மீன்போல் என்னை யிழுத்துச் சந்தியாவந்தனத்தைத் தடுத்தமையால் மீனாகக்கடவை எனச் சாபம் பெற்றவள். பின்னர், அப்பெண் முனிவரை வணங்கி அனுக்கிரகிக்கக் கேட்க அவர் நீ சிலகாலஞ் சென்று இரண்டு குழந்தைகளைப் பெறுவாய். அக்குழந்தைகளுக்குப் பிறகு சுவர்க்கம் அடைவாய் என்று நீங்கினர். இவள், மீனுருப்பெற்று உபரிசரவசுவின் வீரியத்தை விழுங்கி வலையன் வலையில் அகப்பட அவன், வயிற்றைச் சேதிக்க அதில் இரண்டு குழந்தைகள் இருக்கக்கண்டு அரசனுக்கு அறிவிக்க அரசன், குமரனைத் தான் எடுத்துக்கொண்டு குமரியை வலையனுக்குக் கொடுத்தனன். அவ்வலையன், காளி அல்லது மச்சகந்தி எனப் பெயரிட்டு இவளை வளர்த்தனன். இவளே மச்சகந்தி. (பார-ஆதி.)

**அத்ரி**—மூன்று தினம் அத்யயனம் செய்யாத ராத்ரி கிடையாது எனும் பொருளில் த்ரி-மூன்று முறைஅத்யயனமில்லாத, ரா-ராத்ரி அ-இல்லை (அராத்ரி) எனும் பெயர் அத்ரி என மருவியது.

**அத்திரிலோசனன்**—துரியோதனன் தம்பி.

**அத்திவல்லன்**—கங்கவம்சத்தரசன்.

**அத்துவா**—இது, ஷடத்வாவெனச் சைவர்களால் கூறப்படுவது. அவ்வத்துவாக்கள் கலாத்வா, புவனத்வா, வர்ணத்வா, மந்திராத்வா, பதாத்வா, தத்வாத்வா என்பன. இவற்றைச் சிவபிரானுக்குத் திருமேனியாக ஆகமங்கள் கூறும். சாந்தியாதீதகலை திருமுடி, சாந்திகலைதிருமுகம், வித்தை மார்பு, பிரதிஷ்டைகுய்யம், நிவர்த்தி முழந்தாளும் பாதமும் ஆகிய பஞ்சகலைகளும் அங்கங்களாம். புவனங்கள் ரோமம், வன்னங்கள் தோல், மந்திரங்கள் உதிரம், பதங்கள் நரம்பு, தத்வங்கள் எலும்பும் தசையும் சதா சிவர்க்குத் திருமேனியும், பிராணன் பரமசிவனும்.

**அத்துழாயம்மாள்**—பெரியநம்பிகளின் திருமகள். இந்தம்மாள் நீராடப்போகையில் மாமியாரைத் துணையழைக்க அவள் உங்கள் வீட்டிலிருந்து வெள்ளாட்டி கொண்டு வந்தையோ வென வெறுக்க இதை இந்தம்மாள் உடையவரிடம் தெரிவிக்க, உடையவர் இவளுக்கு முதலியாண்டானை வேலையாளாகநியமித்து, மீண்டும் அழைத்துக்கொண்டனர். இந்தம்மாள் பெரியநம்பிகள், மாறநேர் நம்பிக்குச் சரமகைங்கர்யம் செய்ததற்காகப் பெரியநம்பிகளைச் சிலர் கோவிலுள் வரவொட்டாது விலக்க

இவள் பெருமாள் திருத்தேர் தெருவில் வரத் தரிசித்துப் பெரியநம்பிகள் செய்தது திருவுளத்திற்குவப்பு, அல்லது அன்று என்று தெரிவித்தபிறகே அப்புறம்போக வேண்டுமென்று வேண்டப், பெருமாள், உகப்புடனக் கந்தாடை அண்ணன்தோண் மீது பெரிய நம்பியைத் திருத்தேர்த் தட்டிற்குக் கொண்டுவரக் கட்டளையிடக் களித்தவள். இவள், கூரத்தாழ்வான் சரம தசை யடைந்தபோது அவர் முடியைத் தம்மடிமீது வைத்துக்கொண்டவள். (குருபரம்பரை.)

**அத்தோதயமகோதயம்**— ஆதித்தியனுஞ் சந்திரனும் மகரத்துத் திருவோணத்திலே நிற்க ஞாயிற்றுக்கிழமையில் வியதிபாத யோகமுங்கூடிலத்தோதயம். இவை சோமவாரங்கூடின் மகோதயமெனப்படும். (விதானமாலை).

**அத்வநி**—பல்லாரிக்கு அருகிலுள்ள அதோனியெனும் பட்டணம்.

**அத்வைதமதம்**—சுத்தப் பிரமமாகிய சர்வ சாக்ஷியினிடத்தில் அக்கியிற் சூடுபோல அபின்னமாக விருக்கின்ற ஒரு சத்தி உண்டு. அச்சத்தி அவ்வதீதப் பிரமத்தினிடத்தில் அடங்கியிருக்கும்போது அதற்குச் சுத்தப்பிரமம் என்று பெயர். மேற்கூறிய சத்தி, விச்ரம்பித்துச் சுத்தப் பிரமத்தை வியாபிக்கும்போது அப்பிரமம் பரைவியாபகத்துளிருந்தபடியால் அதற்குப் பிரமம் என்று பெயர். அப்பிரம சந்நிதானத்தில் லக்ஷண சூன்யமான சத்தியினிடத்தில் அவிகிருத குணங்களாகிய சுத்த சத்வம், சுத்த ரஜஸ், சுத்த தமஸ், எனும் மூன்று குணங்கள் தோன்றின. இந்தச் சுத்த சத்வத்திற்கு ஆனந்தரூப சத்தியெனவும், சுத்த ரஜஸுக்குச் சித்ரூபசத்தியெனயும், சுத்ததமஸுக்குச் சத்ரூபசத்தியெனவும் பெயர். மேற்கூறிய பிரமம், ஆனந்தரூபசத்தியுடன் கூடிச் சுழுத்தியையடைகையில் பரமானந்தன் எனவும், சித்ரூபசத்தியுடன்கூடிச் சுவப்பனத்தை யடைகையில் பரிபூரணன் எனவும், சத்ரூபசத்தியுடன்கூடிச் சாக்ரத்தை யடைகையில் பரன் எனவும் படும். மூற்கூறிய சச்சிதானந்த பிரமத்தினிடத்தில் மூலப்பிரகிருதி உண்டாயிற்று. மூலப் பிரகிருதியின் சத்வகுணத்திற்கு மாயை எனப் பெயர். அம்மூலப்பிரகிருதியின் தமோகுணத்தில் ஆவரண விக்ஷேபசக்திகளுண்டாயின. அம்மூலப்பிரகிருதியின் ரஜோகுணத்தில் அவித்தை உண்டாயிற்று. ஆவரணசத்தி சீவர்களை யுண்மையறிய வொட்டாமல் மறைக்குஞ் சத்தி. விக்ஷேபசத்தியில் பிரபஞ்சம் தோன்றுவதற்கான ஆகாசம் தோன்றிற்று. அவ்வாகாசத்திடம் ஒன்றிலொன்ருய் மற்றப் பூதங்கள் தோன்றிப் பிரபஞ்சம் உண்டாயிற்று. அவித்யை, அபாரமார்த்திகம், சதசத்விலக்ஷணம், ஜடம், அஞ்ஞானரூபமாயிருப்பது; பிரமம், சுத்தசைதன்னியம், மாயாவச்சின்னசைதன்னியம், அந்தக்கரணுவச்சின்னசைதன்னியம், விருத்தியவச்சின்னசைதன்னியம், விஷயாவச்சின்னசைதன்னியம் என ஐவகைப்படும். இந்த வேறுபாடுகள் சுத்தசைதன்னியத்திற்கு உபாதி பேதங்களாலுண்டாகின்றன. சுத்தசைதன்னியம் என்பது சுத்த பிரமம். மாயாவச்சின்னசைதன்னியம் என்பது பிரபஞ்ச சிருட்டிக்குக் காரணமாய்ச் சர்வாந்தர்யாமியாகிய ஈச்வரன். அந்தக்கரணுவச்சின்னசைதன்னியம் என்பது ஆன்மா, ஆகாசத்திலிருக்குஞ் சூரியன் கடத்திலிருக்குஞ் சலத்தில் பிரதிபலிப்பதுபோல் பிரமம் அந்தக்கரணுவச்சின்னர்களாகிய சீவர்களிடத்தில் பிரதிபலித்திருப்பது; எங்ஙனம் ஆகாச சூர்யனுக்கும் கடசூரியனுக்கும் பேதமில்லையோ அவ்வகை பிரமத்திற்கும் சீவர்களுக்கும் பேதம் இன்று. விருத்தியவச்சின்னசைதன்யம் என்பது ஞானம். விஷயாவச்சின்னசைதன்யம் என்பது கடபடாதிகள். அப்பிரமம், பிரபஞ்சத்திற்கு விவர்த்தோபாதான காரணம். விவர்த்தோபாதானம் என்பது, கிளிஞ்சல் வெள்ளியெனும் பிராந்திபோல்வது. இவ்வகைப்பிரபஞ்சத்திற்குப் பிரளயம் மூவகைப்படும். அப்பிரளயம் நித்யம், நைமித்யம், ஆத்யந்திகம். இவற்றுள், கடையிற்கூறிய ஆத்யந்திகப் பிரளயம் பிரம சாக்ஷாத்காரம் அதாவது அவித்யாரூபகாரணத்துடன் பிரபஞ்ச நிவர்த்திபெற்றுப் பிரமத்துடன் ஏகமாகக் கலத்தல், இந்த ஐகபத்யம் சிரவண, மநந, நிதித்தியாஸத்துடன்கூடிய வேதாந்த ஞானத்தாலுண்டாம். அவற்றுள், சிரவணம், ஆசார்யனுல் வேதாந்த போதனையைக் கேட்டல், மநநம், கேட்டவற்றை ஐயந்திரச்சிந்தித்தல், நிதித்தியாஸம், அநாதிப் பழக்கத்தால் விஷயங்களில் பிரவர்த்

திக்கும் மனதை நிறுத்தல். இந்த ஞானம் கர்மாநுஷ்டானங்களைச் செய்த பாபக்ஷயத்தால் உண்டாம். சிரவணாதிகளில் மோக்ஷ இச்சையுள்ளவர்களுக்கே அதிகாரிகள் என்று பெயர். அது, சாதன சதுஷ்டயத்தால் உண்டாம். அச்சாதன சதுஷ்டயங்களாவன: நித்யாநித்யவஸ்துவிவேகம், இகமுத்ரார்த்தபலபோகவிராகம், சமாதி சட்கசம்பத்தி, முமுட்சுத்வம். இவற்றுள் நித்யாநித்யவஸ்துவிவேகம் என்பது — பிரமமே நித்யம் எனவும் சகத்து அநித்யமெனவும் பகுத்தறிவது. இகமுத்ரார்த்த பலபோகவிராகமாவது — இகபர வைராக்யங்களாற் சகல போகங்களையும் சுகதுக்க கன்மங்களையும் விட்டு நிராசையாயிருப்பது. சமாதிசட்கசம்பத்தியில், சமமாவது — மனோநிக்ரகம் அதாவது மனதைச் சலியாமல் அடக்குதல். தமமாவது—பாகியேந்திரியநிக்ரகம். உபரதியாவது — மண், பெண், பொன் என்கிற ஈஷணாத்ரயத்தியாக பூர்வகமான சர்வ கர்ம சன்னியாசம். திதிக்ஷையாவது —சுகதுக்கங்கள் வரிற் பொறுத்திருத்தலாம். சமாதானமாவது — சடேந்திரியங்களையும் சிரவணத்திருத்தல். சிரத்தையாவது — குருவிடத்திலும் ஈச்வரனிடத்திலும் சித்தத்தை ஏகாக்ரமாக வைப்பது. மேற்சொல்லிய உண்மை ஞானமடைய வலியில்லார் பிரம உபாசனை செய்தல் வேண்டும். அவ்வுபாசனை சகுணப் பிரம உபாசனையெனவும் நிர்க்குணப்பிரமவுபாசனை யெனவு மிருவிதப்படும். அவற்றுள் சகுணப்பிரம உபாசனையால் மனம் வயப்படுமாயின் நிர்க்குணப்பிரமஉபாசனை செய்து உலகம் மருமரீசிகையிடத்தில் சலங்காலத்திரயத்திலும் இல்லாதவாறு போலவும் ரச்சுவினிடத்தில் சர்ப்பமில்லாதது போலவும் பொய்யெனக்கண்டு சகல சங்கற்பங்களும் நாசமாகப் பூரணமாயிருக்கும் அப்பிரமமே தானென்று பாவித்து அதில் லயமடைதல், இதுவே முத்தி. (தத்துவநிஜானுபோகசாரம்).

**அத்வைதானந்தன்** — ஒரு அத்வைத சந்நியாசி.

**அத்தினபுரம்** — குரு குலத்தரசன் நகரம். அசமீளன் தந்தையாகும் அத்தியென்பவன் ஆண்டது. ஒருமுறை துரியோதனன் பெண்ணைக் கவர்ந்த கண்ணன் குமாரனாகிய சாம்பனைக் கௌரவர் சிறைசெய்யப் பலராமர், சமாதானஞ்செய்து கேளாமையால் கலப்பையால் இது கங்கையில் மூழ்கப் பிரயத்தனஞ் செய்தனர். அப்போது இந்நகர் கடல்கொண்டது. வங்காளராஜ்யத்திலுள்ளது.

(2) அஸ்தியென்னும் பெயருள்ள அரசனால் நிருமிக்கப்பட்ட பட்டணம். The Capital of the Kurus, north east of Delhi entirely diluviated by the river Ganges. It was situated (22) miles north east of Mirat and the south west of Bijnor, on the right bank of the Ganges.

**அத்தினபுரத்தரசர்** — தருசகனோடு போர் செய்யவந்தவர்களுள் எலிச்செவி யரசனுடைய முன்னோர் (பெருங்கதை.)

**அநகன்**—1. யதுவம்சத்தவனான வசுதேவன் தம்பி.

2. நிமிவம்சத்துக்குறிதன் குமரன்.

**அநங்கன்**—1. மன்மதனைக் காண்க.

2. கர்த்தமப் பிரசாபதியின் குமரன். இவன் குமரன் நன்னிதி.

**அநங்கமாலை** — நாடகப்பரத்தையருள் ஒருத்தி.

**அநங்கலேகை**—சிவசந்மாவைக் காண்க.

**அநங்கவிலாசினி**—கனகமாலைக்குத் தோழி.

**அநசுவான்** — சந்திரவம்சத்து அரசன். புருவம்சத்தில் பிறந்த குரு புத்திரனாகிய விதரன் என்பவனுடைய புத்திரன். தாய் சம்பிரியை. இவளுக்கு மாகதி என்றும் பெயருண்டு. தேவி, அமிர்தை, புத்திரன் பருட்சித்து. (பாரதம்-ஆதிபர்வம்.)

**அநசூயை** — தக்ஷன் பெண், அத்திரிக்குத் தேவி, குமரர் சந்திரன், முதலியவர். பஞ்சகன்னியரில் ஒருத்தி. கௌசிகன் தேவியிடஞ் சென்று பொழுதுவிடிய வேண்டிய நன்மைக்குத் திரிமூர்த்திகளைக் குமாரராகப்பெற்று அந்த மூர்த்திகளிடம் வரம்பெற்று அவர்களைத் துருவாசர், தத்தாத்திரேயர், சோமர் முதலிய புத்திரராகப் பெற்றவள். ஸ்ரீராமன் தண்டகவனத்துச் சீதாபிராட்டியுடன் சென்று அத்திரி ஆச்சிரமத்தில் தங்க இவள் பிராட்டிக்கு வழியில் நீக்கம்வராது மங்கல அணி அணிந்து வேண்டிய தருமங்கூறி அனுப்பினவள். கர்த்தமப் பிரசாபதியின் பெண் என்றுங் கூறுவர். அத்திரிமுனிவர் தவஞ் செய்கையில் தானும் கூடச் சிவபூஜையிலிருந்து கணவற்கு வேண்டிய

உபசாரஞ் செய்துகொண்டு வந்தனள். இவ்வாறு ஐம்பத்துநான்கு வருடங்கள் முடியவும் மழையிலாது பிராணிகள் வருந்துகையில் முனிவர் எழுந்து மனைவியை நோக்கி "நீர் வேண்டும்" என அனசூயை கமண்டலங்கொண்டு நீர்க்குச் செல்லுகையில், பெண்ணுருக்கொண்டு கங்கை பிரத்தியக்ஷமாகி எங்குச் "செல்கின்றாய்" என "அனசூயை நீர் யார்?" எனக் கங்கை, தான் "கங்கை" யென "ஆயின் என் கணவர் தவம் முடியுமளவும் இங்கிருக்க" வெனக் கேட்க, கங்கை நீ "செய்த தவத்தில் ஒருமாதபலந் தருக" என வேண்ட அவ்வாறு கொடுத்துத் தன் கணவர்க்கு நடந்தவைகூறி ஒருவருஷ பலம் கங்கைக்குக் கொடுத்து எக்காலத்தும் தக்ஷிணத்தில் காமதவனத்தில் இருக்க வரமடைந்தவள்.

**அநதாரியப்பமுதலியார்** — இவர் வாயல் எனும் ஊரிலிருந்த கும்பமுதலியார் குமாரர். இவர் ஒரு வித்வானுக்குத் தம்மை விற்றுப் புகழ்பெற்றவர். இவரும் சிறந்த தமிழ்க் கவி. இவர் தமிழில் பாகவதபுராணம் பாடியவர் வேளாளர். "கம்பனென்றுங் கும்பனென்றுங் காளியொட்டக்கூத்தனென்றும், கும்பமுனி யென்றும் பேர் கொளவரோ—அம்புவியில், வன்ன வலர் புடைசூழ் வார்க்குடந்தை யாரியப்பன், அந்நாளிலே யிருந்தக் கால்" இக்கவி இவர் மீது பாடப்பட்ட தென்கிறார்கள். இவர் தொண்டைநாட்டு வாயற்பதியினர். இவர் உறத்தூரிலிருந்த வேதியரிடத்துத் தமிழ் கற்கப் புகுந்து அவராற் சிங்காரயனுக்கு விற்கப்பட்டவர் எனவுங் கூறுவர். இவர் கன்றாப்பூரிலிருந்த தண்டாயுதனென்பவன்மீது "திரம்பெறு கன்றாப்புடைய சிங்கப்பெருமா, னுரம்பெறுதண்டாயுதனுக் கோலை—பெரும்பகலே, யந்திவரு நீ நினைந்தாலல்லவென்றாலுங்காலம், பிந்திவரு முந்திவரும் பேச்சு" எனக் கவி பாடினவர். இவர் சுந்தரபாண்டியமெனப் பெயரிய திருவாலவா யுடையார் திருவிளையாடலைக் கச்சிவீரப்பன் எனும் மன்றை எனும் ஊர்க்குரிய மதுரை அரசனுக்கு மந்திரியாகிய செவ்வந்தியின் துணைவனை திருவிருந்தான் எனும் உபகாரிவேண்ட இயற்றினர் என்பர்.

**அநந்தகுணபாண்டியன்** — குலோத்துங்க பாண்டியன் குமரன். இவன் அரசாளுகையில் சமணர் அபிசாரயாகஞ்செய்து அந்த யாகத்தில் பெரும்பாம்பை உண்டாக்கித் தமிழ்நாட்டு மதுரைமேலேவினர். அதை வருதலறிந்த பாண்டியன் சிவாநுக்கிரகத்தாலதைக் கொல்லப், பாம்பு விஷத்தைக் கக்கிற்று. அந்த விஷச்சுவாலையாற் சனங்களிறக்கப் பாண்டியன் சிவமூர்த்தியை வேண்டினன். சிவமூர்த்தி அமுததாரையால் விஷச்சுவாலையைப் போக்கினர். இவன் காலத்துச் சமணர் மதுரைமீது மீட்டும் பசுவை ஏவினர். அதைச் சிவமூர்த்தி நந்திமாதேவாற் கொல்வித்தனர்.

**அநந்தசிவாசாரியர்** — சித்தாந்த சாராவளி யெனும் பத்ததிக்கு உரைசெய்த ஆதிசைவ சிவாசாரியர்.

**அநந்தசூரிகள்**—புண்டரீகாக்ஷயஜ்வாவின் குமரர். தோதாரம்மன் புருஷர்; திருவேங்கடமுடையான் கட்டளைப்படி திருவேங்கடஞ் சென்றிருக்கையில் சுவப்பனத்தில் திருவேங்கடமுடையான் பிராமணப் பிள்ளைபோல்வந்து திருமணிதர அதனைவாங்கி மனைவியிடந்தந்து அதனால் வேதாந்த தேசிகரைப்பெற்றவர். (குருபரம்பரை).

**அநந்தசோமயாஜியார்**—எழுபத்து நான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். இவர் குமரர் புண்டரீகாக்ஷயஜ்வர். (குருபரம்பரை).

**அநந்தப்பன்**—நயனாசாரியர் மாணாக்கன்.

**அநந்தநேமி**—உசசயனியாண்ட புத்த அரசன். இவனுக்குத் தந்தை பிரத்தியோதன்.

**அநந்தருஷி** — ஆதிசேஷர் அவதாரமாய்ப் புரிகாபுரியில் வித்துருமனென்பவனிடத்தில் நபும்சக உருவாய்ப் பிறந்தனர். இதனால் தந்தை குற்றமடைந்து சிவனைநோக்கித் தவமியற்றி நபும்சக நீங்கிப் பும்சத்துவமடைய வரம்பெற்றார். பின் ஆண்தன்மையடைந்த அநந்தருஷி எக்யாதன் பெண்ணாகிய குணவதியை மணந்தார். இவர் மாதாபிதாக்கள் களிக்க விஷ்ணுமூர்த்தியால் உபதேசிக்கப்பட்டனர். இவர் மனைவியுடன் தவம்புரிந்து வருகையில் பன்னிரண்டாம் வருடதுவாதசியில் சமுத்திரஸ்நானஞ் செய்யப் போய் ஜலத்தில் மூழ்கி யெழுந்திருக்கச் சக்தியற்றவராய் ஜலசரங்களால் உபத்திரவஞ் செய்யப்பட்டு ஜலத்திலிருக்கையில் விருத்தசர்மா என்கிற பிராமணன் இவரைத்தூக்கி உபசரித்து வீட்டுக் கழைத்துச் சென்று பிள்ளையைப்போல் வளர்த்தான். இவர் அவன்

பெண்ணாகிய அசாருமதியை விவாகஞ் செய்துகொண்டு ஜயன், விஜயன், கமலன, விமலன், புதன் எனும் ஐந்து புதல்வர்களைப் பெற்றனர். பின் மூத்தகுமாரனாகிய புதனுக்குத் தர்மசாரனென்பவன் தன் பெண்ணைக் கல்யாணஞ் செய்வித்தான். இவ்வகை அநந்தருஷி களித்திருக்கையில் மகோததி சமுத்திர ஸ்நானத்திற்குப் போய்ப் பாகவதர் கானசிநேகிதர்களைக் கண்டு ஒன்றுந்தோன்றாம லிருக்கையில் ஒரு பெண் இவரைக்கண்டு அழுதுகொண்டு இருந்தாள். அவளைக் கண்டு இவர் "என் அழுகிறாய்?" என்றார். அப்போது, ஓர் அன்னப்பறவை வந்தது. அங்கேயிருந்த ருஷிகள் இவர் என் திகைத்து நின்றாரென்று கேட்டார்கள். இக்கதை கிடைத்தவரையில் எழுதப்பட்டது. (கல்கிபுராணம்).

**அநந்தர்**—அசுத்தபுவனங்களைப் பிரேரித்து எழுந்தருளியிருக்கும் சிவாதிஷ்டான மூர்த்தம். இவர் அநாதருடைய மூர்த்திபேதம்.

**அநந்தவிரதம்**—இது புரட்டாசிமாதம் பூர்வ பக்ஷசதுர்த்தசியில் நதிக்கரையில் விதிப்படி சுத்தஞ்செய்து கலசமமைத்து விஷ்ணுமூர்த்தியை அதில் ஆவாகனஞ் செய்து ஒருகயிற்றில் (க௪) முடியிட்டு அக்கயிற்றைக் குங்குமத்தில் நனைத்துப் பலவித பலகாரங்களை நிவேதித்து இஷ்டசித்தியைவேண்டி வலக்கரத்திற் கட்டி விரதமிருப்பது. கிருஷ்ணமூர்த்தி பாண்டவர்க்கு உபதேசித்த விரதம்.

**அநந்தவிஜயம்**—தருமன் சங்கு.

**அநந்தவிஜயன்**—பிரச்னோத்தரமாலை செய்த கவி.

**அநந்தனர்** — பதினாலாவது ஜைநதீர்த்தங்கரர். தந்தை சிம்மசேநமகாராஜா. தாய் செயசியாமை, ஆனிமாசம் கிருஷ்ணபக்ஷ துவாதசிதிதி ரேவதிநக்ஷத்திரம் ஜனனம்; உன்னதம் (௯)வில், சுவர்ணவர்ணம் (௩0) லக்ஷ வருஷம் ஆயுஷ்யம். புத்ரன் அநந்தவிசயன் சயாச்சியர்முதல் கணதரர் (௫0) பெயர். இவர்காலத்து ராஜாக்கள் சுப்பிரபன், பலதேவன், புருஷோத்தமவாசுதேவன், மதுசூதன பிரதிவாசுதேவன்.

**அநந்தன்**—1. சிவன், விஷ்ணு, ஆதிசேஷன்.

2. ஆதிசேடன், கத்ருகுமாரன். வைசயந்திமாலை தரித்தவன். இவன் தனது ஆயிரஞ் சிரங்கொண்டு பூமியைத் தாங்குவான். இவன் ராமாவதாரத்தில் லக்ஷ்மணனாகவும், கிருஷ்ணாவதாரத்தில் பலராமனாகவும் பிறந்து விஷ்ணுவைப் பிரியாது அவருக்குத் திருப்பாற் கடலில் அணையாகவும், நிற்கும்போது குடையாகவும், பாதுகையாகவுமிருந்து கைங்கர்யஞ் செய்பவன். இவன் சிவமூர்த்தியின் நடனதரிசனங்காண விஷ்ணுவின் கட்டளையால் பூமியில் பதஞ்சலி முனிவனாகப் பிறந்து சிதம்பரத்தில் தவஞ்செய்து நடனதரிசனங் கண்டவன். (சிதம்பரமான்மியம்)

3. ஆதிசேடனைக் காண்க.

4. பராசருஷியின் புத்ரன்.

5. ஒரு தமிழ்ப்புலவன். வில்லியெனும் புலவனுக்குத் தோற்று, என் பெயர், ஆதிசேடனுக்கும் உண்டெனக் காதறுப்புண்ணாது தப்பினவன்.

**அநந்தாதிகள் எண்மர்**—அநந்தர், சூக்ஷமர், சிவோத்தமர், ஏகநேத்திரர், ஏகருத்திரர், திரிமூர்த்தி, ஸ்ரீகண்டர், சிகண்டி இவர்களே அஷ்டவித்யேசுவரர் எனப்படுவர். இவர்கள் வாமாதி சத்திகளோடு கூடியவர். அதிகாரமலம் உள்ளோர். சுத்தாத்வாவில் ஈச்வரதத்வவாசிகள்.

**அநந்தாழ்வார்** — "இவர், திருவேங்கடமாமலையிலே ராமானுஜபுத்தேரிகட்டும்போது மணல் சுமவாநிற்க, பிள்ளைகளிலே யொருவர் வந்து கூடையை வாங்கப்புக, அநந்தாழ்வானும் "நான் கூடையைவிடிலிளைப்புற்று நீ கூடையைத் தொடில் இளைப்புதியென்ன;" பிள்ளையுமிளைப்பாகாதென்று கூடையை வாங்கப்புக, நான் ஜீவிக்கிற ஜீவனத்தை வாங்கவேணுமோ நீயுமொரு கூடையை எடுத்துச் சுமக்கலாகாதோ வென்றருளிச் செய்தார். பின்னையுமொருநாள் அநந்தாழ்வார், கர்ப்பவதியான தேவிகள்மேலே மண் சுமத்தா நிற்கத் திருவேங்கடமுடையார் ஒரு பிள்ளையாய்வந்து எதிரே கூடையை வாங்கிக்கொண்டுபோக, தேவிகள் கடுகி வருமதுகண்டு இதென்ன கடுகி வருகிறாய் என்ன, தேவிகளும் ஒரு பிள்ளை கூடையை எதிரே வாங்கிக்கொண்டு போகிறானென்ன அநந்தாழ்வானும் கைங்கர்ய விக்கினகாரீ கூடையைத் தொடாதே என்று கொட்டெடுத்து ஓடி யடிக்கப்புகத் திருவேங்கடச்செல்வன் கோவிலிலே புகுந்தானென்பார்கள். அநந்தாழ்வான் திருநந்தவனத்திலே திருப்பள்ளித் தாமமெடா

நிற்க ஸர்ப்பம் ஸந்தஷ்டமாக இவரும் நீராடிக் கைங்கர்யத்திலே புகுதத் திருமே னிக்குப் பரிவாயிருப்பார், விஷந்தீர்க்க வேண்டாவோ வென்று கேட்க இவரும் வேண்டாவென்றார்.' திருவேங்கடமுடை யான், சந்நிதியிலே அநந்தாழ்வானைப் பார்த்து விஷந்தீர்க்க வேண்டாவென்று என்ன நினைத்துச் சொன்னாய் ஏன்ன? அநந்தாழ்வானும், "கடித்த பாம்பு வலிதா கில் விரஜையிலே தீர்த்தமாடி ஸ்ரீ வை குண்டநாதனைச் சேவித்துக்கொண்டிருக்கி றேன்; கடியுண்டபாம்பு வலிதாகில் திருக் கோனேரியில் தீர்த்தமாடி, தேவரீரைச் சேவித்துக்கொண்டிருக்கிறேன் என்றி ருந்தேனென்று விண்ணப்பஞ் செய்தார்." அநந்தாழ்வான் போசல ராஜ்யத்துக்கு எழுந்தருளும்போது தீர்த்தப்பிரசாதங்கள் கொண்டெழுந்தருள ஓரிடத்தில் நீராடி யமுதுசெய்யப் புக்கவாறே பட்டை யடங் கலும் சிற்றெறும்பா யிருக்கக்கண்டு துணுக்கென்று (எம்பெருமான் பொன் மலைமேலேதேனுமாவேனே) என்கிற படியே இப்படி சிதலாய்த் திரிவார்கள். ஆகையால் இப்படியே வைத்து வாருங் கள் என்று எழுந்தருளினார். பின்னையு மொருநாள் அநந்தாழ்வான் திருமாலைச் சேர்க்கும்பலகையிலேயிருந்து திருமாலைச் சேர்க்கும்போது திருவேங்கடமுடையா னருளப்பாடிட இவரும் பேசாதே எழுந் தருளியிருந்து திருமாலைச் சேர்த்துக்கொ ண்டு ஸந்நிதியிலே சென்றவளவிலே திரு வேங்கடமுடையான், நானழைப்ப வரா திருப்ப தென்னென உம்மைக்கொண்டு கார்யமென்? ஆசார்ய கைங்கர்யமான கரு முகைமொட்டு வெடியா நிற்கவென்று விண்ணப்பஞ் செய்தார். திருவேங்கட முடையான் உம்மை இங்கிலும் போகச் சொன்னால் என் செய்வீரென்ன; ஆழ்வா னும் இவ்விடம், தேவரீரை ஆச்ரயித்த வர்களதன்றோ தேவரீர் ஒரு கிழமை முற் படரீரித்தனை பரன்சென்று சேர் திரு வேங்கடமன்றோ, நாங்கள் திருமலையை யாச்ரயித்தோமென்று விண்ணப்பஞ்செய் தருளினார்." (குருபரம்பரை).

**அநந்தை**—சுவாயம்புமநுவின் தேவி. இவ ளது குமாரர், பிரியவிரதன், உத்தானபா தன் முதலியோர். (மசசபுராணம்).

**அநபாயச்சோழமகாராஜன்** — 1. இவன் சோழச் சக்கிரவர்த்திகளில் ஒருவன். இவன் அரசாண்டு வருகையில் இவனுக் குச் சேக்கிழார் அமைச்சுத் தொழில் பூண்டு இருந்தனர். இவர், அரசன் சமண நூலாகிய சீவகசிந்தாமணியிடை அன்பு கொண்டிருத்தல் அறிந்து அதனை நீக்கல் வேண்டி அரசனை இச்சிந்தாமணி சமணப் புரட்டுநூல், இந்நூல் மறுமைப்பயனைத் தராது என்று கூறினர். கேட்ட அரசன் ஆயின் மெய்ந்நூல் என் என்ன? முனிவர் அரசனை நோக்கி மெய்ப்பொருளாகிய பரமபதி முதலெடுத்துத் தர "தில்லைவா ழந்தணர்" எனத்தொடங்கிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் சுருக்கி அருளிய திருத் தொண்டத் தொகைக்குத் திருநாரையூர் பொல்லாப்பிள்ளையார் பொருள் கூறக் கேட்டறிந்த நம்பியாண்டார் நம்பி தமது பெயரை முன்னிட்ட கலித்துறையந் தாதி இயற்றியருளினர். அதனை ஒரு வாறு கூறுகிறேனென்று அரசன் மகிழக் கூறினர். கேட்ட அரசன், களிப்படைந்து அவ்வகையினை விரிநூலாக்குக என வேண்ட, அவ்வாறே சேக்கிழார் இயற்ற அதற்குப் பெரியபுராணமெனப் பெய ரிட்டு அரங்கேற்றக்கேட்டு அத்திருமுறை யினை யானைமீது வைத்துச் சர்வவிபவங் களுடன் வீதிவலம் வரக்கண்டு சிந்தா மணியை நீக்கினவன். (பெரியபுராணம்).

2. கம்பர் காலத்திலிருந்த குலோத் துங்கனுக்கும் அநபாயன் என்று ஒரு பெயரிருந்த தென்று கூறியிருக்கிறது. அதனை "இன்றும் யான் மீள்வதறியே னிரணியனை, யன்றிரு கூறு யடர்த்தரு ளிக்--கன்றுடனே ஆவின்பின்போன, வந கனனபாயன், மாவின் பின்போன மனம்." என்றும் "ஆழிப்பெருமானபயனனபா யன்" எனவும் கூறிய குலோத்துங்க சோழனு லாவாலும், அறிக. இவன் சிவ பத்திமான். திருத்தில்லையில் திருப்பேரம் பலம் பொன் மேய்ந்தான் என்ப. இவன் திருக்காமக்கோட்டத்திருப்பணியுஞ் செய் வித்தவன்.

**அநபாயாதியோகம்** — யோகமறியுமிடத்து யாவனொருவன் சென்மித்தகாலத்துச் சந் திரனுக்கு (கஉ) இடத்துச் சுபக்கிரகங்கள் நின்றால் அனபாயோகமென்றும், (உ) ம் இடத்துச் சுபக்கிரகங்கள் நின்றால் சுனபா யோகமென்றும், இவையிரண்டு யோகமு முண்டானால் துருதுராயோகமென்றும் பெயராம். இதிலனபாயோகத்துப் பிறந்

தால் ஆயுராரோக்ய மிகவுமுண்டாம். அனபாயோகத்து மிப்படியே. துருதரா யோகத்துப் பிறந்தால் ஆயுராரோக்கிய மும், ஐசுவரியமும், சந்தானவிர்த்தியு மிகவுமுண்டாம். சென்மவிலக்கனத்துக்கு (எ) ம், இடத்துநின்ற பூரணசந்திரனுக்கு இரண்டு பாரிசங்களினுஞ் சுபக்கோணின் ருல் அதியோகமென்று பெயராம். இதிற் பிறந்தால் மிகவும் பிரபுத்வமாம். (விதான மாலை).

**அநமித்ரன்**—(சங்.) சிநி குமரன். இவன் குமரன் சத்திராசிதன், பிரசேநன்.

**அநரண்யன்**—1. (சூ.) காகுத்தன் குமரன்.

2. (சூ.) வசுதன்குமரன். இவன்குமரன் அர்யச்வன். இவனை இராவணன் வருத்துகையில் இவன் தோற்றது கண்டு நகைத்ததால் இவன் இராவணனை நோக்கிப் போரில் இளைத்தல் வீரர்க்கியல்பு, என்னைக்கண்டு நகைத்ததால் என் வம்சத்தில் இனிப் பிறக்கும் இராமனு லிறக்கவெனச் சபித்தவன். இவனுக்கு அநாரணியன் என்றும் பெயருண்டு. (உத்தரராமாயணம்).

3. திரிசதசுவின் குமரன்.

4. (சூ.) பாணன் குமரன்.

**அநலகேசன்**—சண்முகசேநாவீரருள் ஒருவன்.

**அநலர்**—அக்னிகள், இவர்கள் (சுசு) வகையினர், இவர்கள் முதல்வன் அபிமானன். அவற்கு, பாவகன், பவமானன், சுசி, என மூவரும், அவருக்கு (சகு)குமாரும் உண்டு

**அநலன்**—அக்நி.

2. குசன் வமசததவனுன நிஷாதன் குமரன்.

3. மாலியின் புத்திரன் அரமகன்.

4 வசுக்களில் ஒருவன்.

5. கிருஷ்ணமூர்த்திக்குப் பத்திரையிடம் உதித்த குமரன்.

6. அரக்கன், விபீஷணனுககு மந்திரி.

**அநலாசுரன்**—1. ஒரு அசுரன் தேவரைத் துன்பப்படுத்திச் சிவமூர்த்தியின் நெற்றிக் கண்ணுலெரிந்தவன். (சிவபராக்ரமம்).

2. யமன் தன் சபையில் நடித்த திலோத்தமையைக் கண்டு வீரியத்தை விட அதினின்றுந் தோன்றித் தேவரை வருத்தின அசுரன். இவனை விநாயகமூர்த்தி விழுங்கினர். (விநாயகபுராணம்).

**அநலி**—இராக்ஷத சேநாதிபதி சிங்கனுல் இறந்தவன்.

2. சூரபத்மனுக்குப படைத்தலைவன்.

**அநலை**—மாலியவானுககுச் சுந்தரி வயிற்றிற் பிறந்த புத்ரி.

2. சுரபி புத்திரியாகிய ரோஹணியின் புத்ரி. அவள் புத்திரி சுகி.

**அநவஸ்தை** — முடிவின்மை யெனும் குற்றம்.

**அநாகதசிவன்** — யோகிகளால் வியோம வியாபினிக்கப்பால் அறியப்படும் தேசோமூர்த்தி. (சதாசிவரூபம்.)

**அநாகுலன்**—இடைச்சங்கத்தார் காலத்திருந்த தெய்வப்பாண்டியன். திலோத்தமையுடன் புணர்ந்து சாரகுமாரனைப் பெற்றவன்.

**அநாசிருதம்** — அநாசிரிதரெழுந்தருளியிருக்கும் ஒரு புவநம்.

**அநாசிரிதர்**—பரசிவத்தில் ஆயிரத்தொருகூறு வலியுள்ளவர். இவரைப் பிரியாத சத்தி **அநாசிரிதை**. இவர் பரயை அதிட்டிக்கையால் **பரன்** எனவும் கூறப்படுவர். தேவி **பரை** யெனவும் படுவள். இவர் ஒருவரை ஆச்ரியாதபடியால் **அநாசிரிதர்** எனப் படுவர். இவரைக் கிழக்கில் அனுதா, அநாதையெனும் சத்தியுடன் கூடியம், தெற்கில் அநந்தர் அநந்தையெனும் சத்தியுடன் கூடியும், வடக்கில் வியோமரூபா, வியோமரூபியெனும் சத்தியுடன் கூடியும், மேற்கில் வியாபகர், வியாபினியெனும் சத்தியுடன் கூடியும் தோத்திரஞ் செய்துகொண்டிருப்பர். சமனையெனும் பரையும் உன்மனையெனும் பரமும் தம்மிற் கூடி ஆன்மாக்களைத் திருவுளத்தடைத்த அவதாரம் அநாசிருதர் என்பர். இவர், ஆன்மாவை அருளுக்கு மேற்படுத்திச் சிவாநுபூதியாகிய சிவாநந்தத்தைச் சடுதியிலநுக்ரகிப்பர். பராசத்தியால் சிவசாதாக்யத்தில் பஞ்சகிருத்யம் நடத்துபவர். (சதா).

**அநாதர்**—கிரியாசத்தியால் அசுத்த பஞ்சகிருத்யம் நடத்தும் சிவாம்சம்.

**அநாதிநாதர்**—ஒரு சித்தர்.

**அநாதிருஷ்டன்**—சந்திர வம்சத்து அரசன். புருவம்சத்துப் பிறந்த ரௌத்திராசுவன் குமரன்.

**அநாதிருஷ்யன்** — திருதராட்டிரன் குமாரருள் ஒருவன்.

**அநாமித்ரன்** — யதுவம்சத்துதித்த யுதாசித்தின் குமரன். இவன் குமரர்கள் நிக்நன், சிநி, பிரசுநி.

**அநாயு**—தக்ஷப்பிரசாபதியின் குமரன்.

**அநாரண்யன்**—அநரண்யனைக் காண்க.

**அநாவிலன்** — புவனகிரிக்கரசன். அருச்சுனன் திக்குவிஜயத்திற்குச் சென்றகாலையில் இவனிடத்தில் யுத்தஞ் செய்தனன்.

**அநிட்டன்** — நிரைமீட்சியில் அருச்சுநனால் கொல்லப்பட்டவன்.

**அநிதன்**—சண்முக சேநாவீரன்.

**அநித்தியசமை**—அநித்யமான திருஷ்டாந்தத்தின்சாதர்மியத்தினால் சர்வபதார்த்தமும் அநித்தியமாம் என்று நிரூபித்தல். (தரு).

**அநிந்திதையார்**—திருக்கைலையில் பார்வதிபிராட்டியார் சந்நதியில் திருத்தொண்டு செய்துகொண்டிருந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்து ஆசைப்பட்ட அபசாரத்தால் பூமியில் சங்கிலிநாய்ச்சியாராய் ஞாயிறு எனும் தலத்தில் ஞாயிறு கிழவர்க்குப் புத்திரியாய் அவதரித்துச் சுந்தரமூர்த்திகளைத் திருவொற்றியூரில் மணந்தவர். இவரது சரித்திரத்தைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காண்க. (பெரியபுராணம்).

**அநிமிஷன்**—கருட புத்திரன்.

**அநிருத்தன்**—1. நாராயணனது வியூகாவதாரத்தில் ஒன்று.

2. (ய) கிருஷ்ணன் பேரன். பாணாசுரன் குமரியாகிய உஷையைச் சித்திரரேகையாற் களவிற்புணர்ந்து வாணனால் சிறையிடப்பட்டுக் கிருஷ்ணனால் மீட்கப்பட்டவன். பிரத்யும்நன் குமரன். இவன் குமரன் வச்சிரசுவரூபன்.

3. காமன் குமரன்.

4. அட்டவசுக்களில் ஒருவன்.

**அநிலன்**—1. கருட புத்திரன்.

2. அட்டவசுக்களில் ஒருவன். இவன் தேவி சிவை. புத்திரன் மனோஜவன்.

3. மாலியின் மகன்.

**அநீகன்**—1. யதுவம்சத்தவனான வசுதேவனுக்குத் தம்பி.

2. யதுவம்சத்தவனான அநகன் குமரன்.

**அநு** — 1. (ச.) யயாதிக்குச் சன்மிஷ்டையிடம் பிறந்த குமரன். இவன் குமரன் சபாநரன்.

2. புருவசன் குமரன். இவன் குமரர் புருஜோத்ரன், அங்கிசு

3. விலோமாகுமரன். இவன குமரன் துந்துபி.

**அநுகீதை** — பாரதம் அசுவமேதயாகத்திற் கூறப்பட்ட வேதாந்தநூல்.

**அநுகை**—காசிபர் மனைவி. தக்ஷன் பெண். இவள் குமரர் சித்தர்.

**அநுக்லோதன்** — திதிவம்சத்தவனான இரண்யகசிபின் குமரன். பிரகலாதன் தம்பி. பாரி சூசமி. குமரர் பாஷ்கிலன், மகிஷன்.

**அநுக்ரோகா**—நவசத்திகளில் ஒருத்தி.

**அநுக்ரோதன்**—குரோதத்தால் நஷ்டமடைந்த அரசன்.

**அநுசதிகன்**—நூறு காலாட்களுக்குத் தலைவன். சதானீகனுக் குதவி செய்பவன். (சுக்கிரநீதி).

**அநுசாமந்தன்**—அ்ரசனால் நூறு கிராமங்களுக்கு அதிபதியாக நியமிக்கப்பட்டவன். (சுக்கிரநீதி).

**அநுசுகன்**—திருதராட்டிரன் குமரன்.

**அநுதாபகன்**—தநுவின் குமரன்.

**அநுதிதகாலம்**—இராக்காலத்தைப் பதினாறு பங்காக்குமிடத்துக் கிரகங்களும் நக்ஷத்திரங்களும் பிறவுங் காணப்படுகின்ற கடைப்பாகம். (பாராசரமாதவியம்).

**அநுபசங்காரி** — அந்வய திருட்டாந்தமும் வியதிரேக திருட்டாந்தமும் இல்லாதது.

**அநுபதேவன்**—1. யதுவம்சத்தவனான தேவகன் குமரன்.

2. அக்குரூரன் இரண்டாம் புத்ரன்.

**அநுபமர்**—அக்நிபிரபனைக் காண்க.

**அநுபமை**—நிருதிதிக்கு யானை.

**அநுபம்**—கார்த்தவீரியன் பட்டணம். மகாவ்ஷமதி. (Mhow in Malwa).

**அநுபலத்தி** — இன்மையைத் தெரிவிக்கும் பிரமாணம்.

**அநுபலப்திசமை**—வாதி அநுபலப்தி வசநங்களால் சிலபதார்த்தங்களை அங்கீகரியாதிருக்கையில் பிரதிவாதி அநுபலப்தி வசநங்களால் வாதி அங்கீகரித்துள்ள சில பதார்த்தங்களின் அபவாதத்தைச் சாதிப்பது. (தரு).

**அநுபாயி**—பீமனால் கொல்லப்பட்ட திருதராஷ்டிர புத்திரன்.

**அநுபாவுகன்** — (ச.) ராதியின் குமரன். இவன் குமரன் ரோதனன்.

**அநுப்பர்**—திருநெல்வேலி, மதுரை, கோயம்புத்தூர் முதலிய இடங்களில் வசிக்கும் கன்னட உழவர் சாதி. (தர்ஸ்டன்).

**அநுமதி**—1. ஆங்கிரஸ இருடிக்குச் சிரத்தையிடம் உதித்த குமரி.

2. தாதா எனும் ஆதித்தனுககுத் தேவி. குமரன் பூர்ணமாசன்.

3. வைசுவதேவ பலிகொள்ளும் தேவதை.

**அநுமதீயம்**—அநுமனால் கூறப்பட்ட பாத சாஸ்திரம்.

**அநுமாநம்**—இலிங்கபராமரிசம். (குறியினாலறியப்படுவது. வன்னியின் வியாப்பியமான புகையையுடையது இம்மலையென்னுமிடத்தில் குறியால் இம்மலை நெருப்புடைமை அறியப்படுதலால் இலிங்கபராமரிசம் அநுமானம். இந்த இம்மலை நெருப்புடையதென்பது அநுமிதி. இது கண்ட பொருளை அநுமித்தறிதல். இது தன்னைவிட்டு நீங்காத வியாத்தி பொருந்தின எதுவைக்கொண்டு மறைந்த பொருளை யறிவது; இது ஸ்வார்த்தாநுமானம், (தன்பொருட்டநுமானம்,) பரார்த்தாநுமானம், (பிறர்பொருட்டநுமானம். எனவும் **தர்மாதர்மியநுமாநம்** — (பூர்வக்காட்சி யநுமாநம்) பூர்வத்தில் புஷ்பத்தையும் வாசனையையும் ஓரிடத்திற்கண்டு அபபுஷ்பத்தைக் காணாதிருக்கவும் புஷ்பமுண்டென அநுமித்தல். **வசநலிங்காநுமாநம்** (கருதலநுமானம்) ஒருவன் சொன்ன வாக்கியத்தினாலறிவினளவறிவது **ஆகமலிங்காநுமாநம்** (உரையாலநுமானம்) சுகதுக்கங்களால் புண்ணியபாவங்களினிலையறிவது எனவும் வேறுபடும்.

**அநுமாபகம்**—அநுமிதியை உண்டுபண்ணுவது. (தர்).

**அநுமாலர்**—தேவாங்கஜாதிவகை.

**அநுமானுபாசம்** — அநித்யம் சத்தம், கணாற் காணப்படுதலால் என்பது. இதனை அப்ராசித்திவிசேஷியம் எனபர்.

**அநுமான்**—புஞ்சிகஸ்தலை யென்னும் அப்சரஸு, சாபத்தால் அஞ்சனை யென்னும் வாநர ஸ்திரீயாகிக் கேசரி யென்பவனை மணந்திருந்தனள். ஒருநாள் வாயு, இவளது நிஜவுருக்கண்டு கூட, அவனது அம்சத்தால் பிறந்தவர். இவர், பிறந்து வளர்கையில் சூரியனை இராகு பற்ற அவனைப் பழமெனக்கண்டு கவரப்போகையில், இராகு இந்திரனையடைய இந்திரன் தனது வச்சிராயுதத்தால் அடிக்க அநுமுரியப்பெற்றவர். இவரை இந்திரன் எறிந்ததனால் வாயு கோபித்துத் தம்பித்திருக்கப், பிரமன்முதலிய தேவர்கள்வந்து அநுமுரிந்ததால் அநுமன் எனப் பெயரிட்டுப் பிரமாத்திரத்தாலும் தேவாத்திரத்தாலும் சாவில்லாவரந் தந்தனர். இளமையில் சூரியன் இரதத்திற்கு முன்சென்று நவவியாகரணங் கற்றவர். வீமனுடன் நட்புக்கொண்டவர். அருச்சுனன் இரதத்திற் கொடியாயிருந்தவர். இவர் சுக்கிரீவனென்னும் வாநரனுக்கு நண்பனாகத் திரிந்துகொண்டு இருடிகள் ஆச்சிரமத்திற்சென்று அவர்களுக்கு மனவருத்தத்தைத் தருங் காரியத்தைச் செய்து கொண்டிருந்தனர். அதனால் இருடிகள் கோபித்து, உனக்கு உன்னைப்புகழுங்காலந்தவிர மற்றக்காலங்களில் இராமன் உன்னைக் காணுமளவும் உன் பலம் உனக்குத் தோன்றாதிருக்கவெனச் சபித்தனர். இவ்வாறு தன்பலந் தோன்றாது திரிந்துகொண்டிருக்கையில் இராமன் வநவாசம் வந்தகாலத்து மாத்தின் மீதிருந்து இராம லக்குமணரைக் கண்டு தந்தை சொற்படி திருமாலவதார மெனத் தேறிப் பிராமண வுருக்கொண்டு வந்து பணிந்தனர். இராமலக்குமணர் இவரைக் கண்டு புகழ அவர்களைத் தம் நண்பன் சுக்கிரீவனுக்கு நட்புச் செய்வித்து இராமபிரான் சொற்படி திருவாழிபெற்று ஜாநகியைத் தேடச்சென்று ஒரு பாலைவனத்தின் அழலுக்குச் சகிக்காது சாம்பனுடன் ஒரு பிலத்திற் புகுந்து வழிதெரியாமல் திகைக்கையில் பின்தொடர்ந்த வாநரர்களைத் தம் வாலைப் பிடித்துக்கொள்ளக் கட்டளையிட்டுப் பிலத்தினுள் புகுந்து, சுவயம்பிரபையைக் கண்டு அவள் சாபத்தைப் போக்கி அவளைச் சுவர்க்கத்திற்கனுப்பினவர். அங்கிருந்து நீங்கிச் சம்பாதியைக்கண்டு வழியறிந்து மகேந்திரமேறித் தாவி வழியில் மறித்தமைநாகத்தைத் தலைகீழாகத்தள்ளி அநுக்கிரகித்து, சுரசையென்பவள் வாயுட்புகுந்து வெளிவந்து, வழிமறித்த அங்காரதாரை, சாயாக்கிரகி யென்னும் அரக்கியரைக் கொன்று தாண்டி இலங்கையிலுள்ள பவளமலை சென்று சேர்ந்து இலங்கணியையறைந்து அவளாலுளவறிந்து இலங்கைமாநகரஞ் சென்று தேடுகையில் கும்பகர்ணன் உறங்கும் பெருமூச்சிற்பட்டுத் திரும்பி, அசோகவனஞ் சென்று சீதையைக் கண்டு பணிந்து திருவாழிதந்து தேற்றித் தன் குறுகிய உருவத்தை விட்டுப் பெரிய உருவத்தைக் காட்டிச் சில அடையாளங்களையும், சூடாமணியையும் சிரஞ்சீவித்வமும் அவளிடம்பெற்று அசோகவனத்தை அழிக்கையில் எதிர்த்த கிங்கரரை வதைத்துச் சம்புமாலி, பஞ்சசேநாபதிகள், அக்ஷகுமாரன் முதலியோரைக்கொன்று இந்திர

சித்தாற் பிரமாத்திரத்தாற் கட்டுண்டு இராவணன் எதிரில் தன்வாலை ஆசனமாகக் கொண்டிருந்து, அவன் வாலில் தீயிடுவிக்க அத்தீயைக்கொண்டு இலங்கையை யெரித்து மீள்கையில் ஜானகியைக் கண்டுவிடைபெற்று மைநாகமடைந்து நீங்கிக் கடலைக் கடந்து மகேந்திரஞ் சென்று வரவுபார்த்திருந்த அங்கதன் முதலானவருடன் சீதையைக் கண்ட செய்தி கூறிக்களித்து இராமமூர்த்தியைக்கண்டு சுபசெய்தியை அறிவித்துச் சீதைதந்த அடையாளங்களையும், சூடாமணியையும் கொடுத்தவர். ஸ்ரீராமமூர்த்தியுடன் இலங்கைக்கு யுத்தத்திற்கு வந்து துன்முகனைக் கொன்று இலக்குமணருக்கு அக்ஷயத்தூணி அறுந்தகாலத்து இராவணன் மத்தியில் இருந்து தன்னையொரு குத்துக்குத்தென்று இராவணனைக் கேட்டு அவன் குத்த அதனால் சற்றுச் சலித்துச் சகித்து அவனைத் தாம் குத்தி முன் திக்குயானைகளால் அவன் தேகத்திற் புதையுண்ட தந்தங்கள் உதிர்ந்து இரர்வணன் சாயக்கண்டு களித்தவர். முதனாள் யுத்தத்தில் இராவணன் வேலினால் மூர்ச்சித்த இலக்குமணரைக் குட்டி போல் தூக்கிச்சென்றவர். இராமமூர்த்திக்கு வாகனமாயிருந்தவர். கும்பகர்ணன் மீது மலைகளையெறிந்து அவனது அஞ்சா நிலைகண்டு சலித்தவர் சுக்கிரீவன் மீது கும்பகர்ணன் எறிந்த வேலைத் துண்டுகளாக்கி அதிகாயன் யுத்தத்தில் தேவாந்தகனையும், திரிசிரனையுங்கொன்று பிறகு நிகும்பன், தூமாக்ஷன், வச்சிரதந்தன், அகம்பன் என்னும் துஷ்டர்களாகிய அசுரர் முதலியோரை வதைத்து இலக்குமணர் முதலியோர் மூர்ச்சையடைந்தகாலத்துச் சாம்பவந்தராலேவப்பட்டுச் சஞ்சீவிமலை சென்று சஞ்சீவி கொண்டு வந்து அவர்களைப் பிழைப்பித்தவர். இராவணன் வஞ்சகமாகக் கொலை செய்வித்த மாயா சீதையைக் கண்டு புலம்பி இராமருக்குச் செய்தி கூறியவர். இராவணன் மூல பலத்துடன் யுத்தத்திற்குவந்து விபீஷணர்மீது எவிய வேலை இலக்குமணர் தாங்கி மூர்ச்சையடைந்தபோது, மீண்டும் சஞ்சீவி கொண்டு வந்து 'மூர்ச்சை தெளிவித்தவர். இராமபிரான் கட்டளையால் சீதாபிராட்டியை மீட்க விபீஷணருடன் சென்று கொண்டு வந்து இராமமூர்த்தியிடங்காட்டியவர். குகனுக்கும் பரதனுக்கும் ஸ்ரீ ராமமூர்த்தியின் வரவறிவித்து முத்திரைமோதிரங்காட்டித் தீயில்விழாது தடுத்து மீண்டு இராமமூர்த்தியை யடைந்து சிரஞ்சீவி பெற்றவர். விபீஷணர், இவர் இலங்கையில் செய்த வீரத்தை இராமமூர்த்திக்குக் கூறிய போது இராமமூர்த்தி களித்துப் பிரமபதம்பெற வரமளிக்கப் பெற்றவர். பஞ்சபூதங்களால் அழியாதவர், பெண்புணர்ச்சியற்றவர். இவருக்கு மாருதி, ஆஞ்சனேயன், கேசரிபுத்திரன், வாயுபுத்திரன் எனவும் பெயர். இராமமூர்த்திக்குச் சிவபூஜையின்பொருட்டுக் காசியினின்றும் சிவலிங்கங் கொணர்ந்து தாபித்தவர். ஒருமுறை இராமமூர்த்தியின் சிவபூஜைக்குக் கங்காதீர்த்தம் அநுமான் கொண்டு வந்தனன். அவ்வநுமான் வருவதற்குமுன் இராமர் சிவபூஜை முடித்தனர். அதனால் அநுமான் அத்தீர்த்தக்குடத்தை யெறிய அதில் ஒரு நதி உண்டாகிப் பெண்ணைநதியில் கலந்தது. இவர் சஞ்சீவியின்பொருட்டு உத்தரதிசை செல்கையில் தான்யமாலியின் சாபம் போக்கினவர். அந்தக் காலத்துக் கபடமாகத் தவஞ்செய்து கொண்டிருந்த காலநேமியை வதைத்தவர். சஞ்சீவிகொண்டு வருகையில் எதிர்த்த மால்யவந்தனைக் கடலில் எறிந்தவர். மயில்ராவணனைக் கொன்றவர். கந்தமாதனனைச் சத்தியஉலகஞ் சென்று அழைத்து வந்தவர், சதகண்டராவணனாலுதையுண்ட சுக்ரீவ விபீஷணர்களை வாற்பாலத்தால் வருவித்தவர், சதகண்டன் உதிரத்தில் பிறந்த சதகண்டர்களை வதைக்கக் குரங்கு, நரசிங்கம், கருடன், வராகம், குதிரை ஆகிய பஞ்சமுக ஆஞ்சநேயராக உருக்கொண்டு அரக்கனை வதைத்து இராமனிடம் ரத்னமாலை பெற்றவர். இராமபணி முடித்துக் கந்தமாதனமடைந்து கதலிவனத்தில் தவம்புரிந்தவர். கருடனது கர்வத்தை வாலையசைத்து அவனை த்வாரகையில் தள்ளிக் கர்வமடக்கினவர். ருக்மணியைச் சீதையாகவும் கண்ணனை இராமனாகவுங்கண்டு சத்தியபாமையின் கர்வபங்கம் செய்தவர். நாரதவீணையில் கானம்பாடிக் கல்லை உருகச்செய்து அதில் தாளத்தையிட்டு இறுகச்செய்து மீண்டும் கல்லுருகப் பாடுக என அவர்கள் பாடாதது கண்டு கர்வமடக்கினவர். புஷ்பயாத்திரை சென்ற வீமனது கர்வத்தை வாலைத் தூக்கச்செய்து அடக்கினவர். (இராமாயணம்).

அநுமிதி—அநுமானத்திற்குக் காரணத்தைச் செய்வது. பகுதீதறிதலாலுண்டாகும் அறிவு. (தர்).

அநுலோமன் — உயர்குலத்தானும் இழிகுலப் பெண்ணுங் கூடிப் பிறந்தவன்.

அநுல்கை—இரண்யகசிபின் புத்திரன்.

அநுவர் — சமதக்கியின் குமரர். தாய் ரேணுகை.

அநுவர்தியை—பிராதபுத்ரி. அப்சரசு.

அநுவாதம் — அந்நியப்பிரமாணத்தால் சித்தித்த அர்த்தத்தைக் கூறுவது. (தரு)

அநுவிந்தன்—அவந்திதேசத்து அரசன். துர்யோதனபக்ஷத்தைச் சேர்ந்தவன். அர்ச்சுனனால் கொல்லப்பட்டவன்.

2. கேகயதேசத்து அரசன். துர்யோதனபக்ஷத்தைச் சேர்ந்தவன். சாத்தகியால் கொல்லப்பட்டவன்.

3. துர்யோதன பக்ஷத்தைச் சேர்ந்தவன். பீமனல் கொல்லப்பட்டவன்.

4. திருதராட்டிரன் குமரன்.

அநுஜாஸே—இவள் ஒரு அப்சரஸ்திரி.

அநுற்பத்திசமை—உற்பத்தியினபாவத்தால் ..திர்த்துவருவது.

அநுஹன்—பாத்வாசரைக் காண்க.

அநுஷிராதன்—குரோதத்தால் நஷ்டமடைந்த அரசன்.

அதூந—அருணன். தொடையிலான் என்பது பொருள்.

அநேகபத்தர்—ஓர் இருடி. தேவி சுசாது. இவர் பிள்ளைகளிடம் ஆசையால் பலபிள்ளைகளுக்கு வேதமுதலிய போதித்து வருகையில் ஒரு மாணக்கன் உறங்கினன். அவனைக்கண்டு முனிவர் அதட்டினர். இதைக்கேட்ட இவரது தேவியின் கருப்பத்திருந்த கரு, இராப்பகல் நித்திரையிலாது ஓதினல் தூக்கம் வாராதோவென்ன முனிவர் கோபித்து என்னை மறுத்துக் கூறியபடியால் நீ பூமியில் விழும்போது எட்டுக்கோணலாக எனச் சபித்து மனைவியின் பிரசவத்துக்காக மருந்து சேகரிக்க மிதிலைசென்று அங்கிருந்த வந்திகர்செய்த வாதத்திற்கு விடைதரா அறியாது கடலில் க்டுந்தவமியற்றச் சென்றவர்.

அநேகேசுவரவாதிமதம் — இவன், தேர், வீடு மண்டப முதலிய, அநேகர் கூடிச் செய்வதுபோல உலகம் அநேக ஈசுரர்கள் காரியப்படுத்த உண்டாகி அக்கடவுளர் தமது தொழிலைவிறுத்த ஆன்மாக்கள் லயப்பட்டுச் சுக்கிலத்தில் அடங்குமென்பன். இதுவே முத்தியுமாமெனவுங் கூறுவன்.

அநேநஸ்—1. ஆயுவின் குமரன். இவன் குமரன் சுத்தன். இவன் நகுஷனுக்குச் சகோதரன்.

2. காகுத்தன் குமரன். இவனுக்கு அநரண்யன், சுயோதனன் என்றும் பெயர்.

3. (சூ.) புரஞ்சயன் குமரன்.

அந்தகராசித்தோஷாபவாதம் — உதயராசிக்கு உபசயத்தானத்திலே சந்திரன் சுபாங்கிசகனுய் நிற்பினும், அன்றி இடபகர்க்கடத்திலே நிற்பினும், அன்றிச் சுபாங்சகனுய் நின்ற சந்திரன் (௭) ம் இடமாதல் (௯௦) ம் இடமாதல் நிற்பினுஞ் சொல்லப்பட்ட வந்தகராசித்தோஷமில்லை. (விதானமாலை).

அந்தகர் — யதுகுல சாதிபேதம். கம்சன் பகைவர். பிராமணசாபத்தால் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டிறந்தவர்.

அந்தன் — விப்பிரசித்தியெனுந் தானவனுக்குக் குமரன்.

2. அதலலோகத்தவன்.

3. துருக்கியன் குமரன்.

4. திருதராட்டிரனுக்கு ஒரு பெயர்.

அந்தகன்--1. இயமனிடமிருக்குந் தேவதை.

2. திருதராட்டிரனுக்கு ஒரு பெயர்.

3. யதுவம்சத்துச் சாத்வதன் குமரர்களில் ஒருவன். இவனுக்குப் பஜமானன், குகுரன், கம்பளபர்ஷன், சுசி முதலியோர் புத்திரர்.

அந்தகக்கவிவீரராகவமுதலியார் — இவர் செங்கல்பட்டு ஜில்லாப் பொன்விளைந்தகளத்தூரில் சைவவேளாளர் குலத்தில் வடுகநாத முதலியார் குமாரராய் அந்தகராகப் பிறந்து இயற்கையில் கவிவல்லராய்க் கற்பினையுடைய மனைவியை மணந்து ஒருமுறை அயலூருக்குச் சென்று திரும்பி வருகையில் வீட்டு ஏவலாளிகள் தலைவிக்கு முதலியார் வரவை அறிவித்தனர். தலைவி விளையாட்டாக முதலியார் யானைக்கன்றும் வளநாடும் பொற்பந்தமும் பெற்று வருகின்றனரோ என்றனள். அதனைப் பிறாலறிந்த முதலியார் தேசயாத்திரை செய்யவெண்ணிக் கட்டமுது பெற்றுக் கொண்டு ஓரிடத்திலிறங்கிக் கைகாலலம்பிவர வைத்துச் செல்லுகையில் அதை நாய் தூக்கிச்சென்றது. அதனல் பசிகொண்டு “சீராடையற்ற வயிரவன் வாகனஞ் சேரவந்து, பாராளும் நான்முகன் வாகனந்தன்னை முன்பற்றிக் கௌவி,

நாராயணனுயர் வாகனமாயிற்று நம்மை
மூகம், பாரான் மை வாகனன் வந்தேவயிற்
றினிற் பற்றினனே" எனப் பாடினர்.
பின், புலவர் சோணாடு சென்று ஆங்குச்
சிலநாள் தங்கி ஈழநாடடைந்து அரசன்
பராஜ சேகரன் தரிசனம் அகப்படாமல்
காத்திருக்கையில் இவரது வீணைவல்ல
திறத்தையும் கவிவன்மையையும் பிறரா
லறிந்த பரராஜசிங்கனென்னும் அரசன்
தேவி, கவியைச் சம்மானிக்காததற்குக்
கோபத்துட னிருந்தனள். அரசன் அவ்
வூடலுக்குக் காரணமறியாது மறுநாள் சிங்
காரவனஞ்செல்ல அவ்விடத்தில் ஒருகிளி,
மரப்பொந்தினின்றும் வெளியேவருவதும்
உள்ளே புகுவதுமாயிருந்தது. அரசனுக்கு
முன்னம் மனைவியூடலுடன் இதுவும் ஒரு
கவலையாயிற்று. அரசன் கொலுவிற்கு
வந்ததும் கண்டசுத்திபாடும் புலவரைத்
தன் மனவெண்ணம் அறிவிக்கக் கூறினன்.
கேட்டபுலவர், அந்தகக்கவியின் ஆற்றலை
யெடுத்துக்கூறி அரசன்முன் விட்டனர்.
அரசன், இவரது வரவறிந்து இவரது வர
கவியின் உயர்வறியத்திரையிட்டுக் கையில்
வில்லும் அம்பும் ஏந்தியிருந்தனன். புலவர்
கொலுவினுட் சென்று சிதம்பரம் என்று
மாணாக்கன் கூறியதால் குறுக்கில் திரை
யென அறிந்து குறுக்கேதிரையோ வென்
று தாம் உட்கார்ந்து அரசன் நிலையறிந்து
"வாழுமிலங்கைக்கோமானில்லை மானில்
லை, ஏழுமராமரமோ வீங்கில்லை — ஆழி,
அலையடைத்த செங்கையபிராமாவின்று,
சிலையெடுத்தவாறெமக்குச் செப்பு" என்
னுஞ் செய்யுளைப் பாடினர். அரசன்
மகிழ்ந்து பின்பு புலவரைக் கண்டசுத்தி
பாடக் கூறப், புலவர் "வடவைக்கனலைப்
பிழிந்துகொண்டு மற்றுமொருகால் வடித்
தெடுத்து, வாடைத் துருத்திவைத்தூதி
மழுகக்காய்ச்சிக் குழம்பு செய்து, புடவிக்
கயவர் தமைப் பாடிப் பரிசுபெறுமற்றி
ரும்பிவரும், புலவர்மனம்போற் சுடுநெருப்
பைப் புழுகென்றிறைத்தாற் பொறுப்
பாளோ, அடவிக் கதலிப் பசுங்குருத்தை
நச்சுக்குழலென்றஞ்சியஞ்சி, அஞ்சொற்
கிளிகள் பஞ்சரம் விட்டகலாதுறையுமக
ளங்கா,' திடமுக்கட வாரணமுகைத்ததே
வேதேவசிங்கமே, திக்குவிஜயஞ்செலுத்தி
வரும் செங்கோனடாத்து மெங்கோனே"
என்றனர். இவர் பொற்பந்தம்பெற்ற
போது பாடியது. "பொங்குமிடியன் பந்
தம்போயதே யென்கவிதைக், கெங்கும்
விருதுபந்தமேற்றதே — குங்குமந்தோய்,
வெற்பந்தமான புய வீர பர ராசசிங்கம்,
பொற்பந்த மின்றளித்தபோது." யானை
பெற்றபோது பாடியது "இல்லென்னுஞ்
சொல்லறியாத சீமையில் வாழுதானைப்
போய் யாழ்ப்பாணன்யான், பல்லை விரித்
திரந்தக்கால் வெண்சோறும் பழந்தூசும்
பாலியாமற், கொல்ல நினைந்தே தனது
நால்வாயைப் பரிசென்று கொடுத்தான்
பார்க்குள், தொல்லையெனதொருவாய்க்
கும் நால்வாய்க்கு மிரையெங்கே தரப்பு
வேனே" என்றனர். இவரை ஈழநாட்டுப்
புலவர் கேட்ட வினாக்களுக்கு இவர் கூறிய
விடைகள்: (க) உதிரமுண்ணும் பறவை
யாது? விடை—துக்கம். (உ) பசும்பால்
எனும் பண்புத்தொகைக்குப் பொருளென்
னை? விடை—கார்காலத்து வெள்ளாட்டுப்
பால். (ங) "பங்கமில் மாது பசுமஞ்சணன்
றிழந்தும், மங்கலமுநன்கலமுமற்றிழக்
காள்." பின்னிரண்டடிகள் எவை என்ன?
புலவர் விடையாகத் தனிச்சொல், "சங்கை
யென்ன," என்பதைக் கூட்டி "மங்கல
மென்ப மனை மாட்சி மற்றதன் நன்கல
நன்மக்கட்பேறு" என்று கூறினர். இவர்
இராமாயண மவதானித்துக் கூறியபோது
அரசன் "இன்னங் கலைமகள் கைமீதிற்
புத்தக மேந்தி யந்தப், பொன்னம்புயப்
பள்ளி புக்கிருந்தாளென்ன புண்ணியமோ,
கன்னன் களந்தைக் கவி வீரராகவன் கச்சி
யிலே, தன்னெஞ்சமேடெனக்கற்றுஒரு
முத்தமிழையுமே" என்ற செய்யுளைப்
பாடிக் களிப்பித்தனன். இவர் அரசன்மீது
வண்ணம் பாடியபோது அரசன் வியந்து
"விரகன் முத்தமிழ்க்கவிவீரராகவன், வர
கவிமாலையை மதிக்கும்போதெல்லாம், உர
கனும் வாணனுமொப்பத் தோன்றினற்
சிரகரகம்பிதஞ் செய்யலாகுமே." என்ற
னன். இவர் செய்த ஆரூருலாவைக்
கேட்டுப் பரராசசிங்கம் பாடியது. "புவி
யோர் பெறுந்திருவாரூருலாவைப் புல
வர்க்கெல்லாஞ், செவியே சுவைபெறு
மாறு செய்தான் சிவஞானமதா, பவியே
யெனு நங்கவிவீரராகவன் பாடியநற்,
கவியே கவியவனல்லாத பேர்கவிகற் கவி
யே." எனப்பாடினன். இவர் தம்மூர்க்குத்
திரும்பிவர மனைவியார் என்ன கொணர்ந்
தீர் என இவர் கூறியது. "இம்பர்வா
னெல்லை யிராமனையே பாடி யென்

கொணர்ந்தாய் பாணு நீயென்ருள் பாணி,
வம்பதாங்களபமென்றேன் பூசுமென்ருள்,
மாதங்கமென்றேனும் வாழ்ந்தேமென்ருள்,
பம்புசீர்வேழமென்றேன்றின்னுமென்ருள்
பகடென்றேன் உழுமென்ருள் பழனந்
தன்னைக், கம்பமா வென்றே. னற்களியா
மென்ருள் கைம்மாவென்றேன் சும்மா
கலங்கினளே." இவர் மயிலை கிருஷ்ணப்ப
வாணனைப் பாடிய சீட்டுக்கவி, 'இனிதினி
தெனச் சேரசோழபாண்டியர் மெச்சு
முச்சித மதுரவாக்கி, ஈழமண்டல மளவுந்
திறைகொண்ட கவி வீரராகவன் விடுக்கு
மோலை, வனிதையர் விசார மன்மதராஜ
ரூபன் மயிலையாதிபதி சக்கிரவாளத்தியாகி
நங்காளத்தி கிருஷ்ணப்பவாணனெதிர்
கொண்டு காண்க, கனதமிழ்த்துறையறி
மரக்கலங் காதல்கூர் கன்னிகாமாட நன்
னூற், கட்டுபேர் கொட்டாரம் வாணிசிங்
காதனங் கவிநாடகஞ் செய்சாலை, வினவு
சிவகதையிற் சர்க்கரை யெனத்தக்க வினை
யேனுடம்பு நோயால் மெலியுமோ மெலி
யாத வகைபால் பெருத்ததொரு மேதி
வரவிடல் வேண்டுமே" எனப் பாடிப்பெற்
றனர். இவர் கயத்தாற்றரசன்மீது ஒரு
உலாப்பாடியபோது ஆங்கிருந்த புலவர்
ஒருவர் கூறியது "ஒட்டக்கூத்தன் கவியும்
ஓங்கியகம்பன் கவியும், பட்டப் பகல்விளக்
காய்ப் பட்டதே — அட்டதிக்கும், வீசுங்
கவி வீரராகவனும்வேளாளன், பேசுங்கவி
கேட்டபின்" என்றனர். இவர் அநந்தை
யாதிபதி சந்திரவாணன்மீது ஒரு கோவை
பாடினரென்பது "மின்னுமாளிகை
யனந்தை யாதிபதி சந்திரவாணமகிபாலன்
முன், வீரராகவன் விடுக்குமோலைதன்
விருப்பினுல் வலியவேயழைத், துன்னு
காவியமதிற் பெருத்ததொரு கோவை
யோதுகெனவோதினன், ஒதிமாதமொரு
மூன்று மோதியொருநாலு மாதமளவாக
வும், இன்னமுந்தனது செவியிலேறவிலை
யென்னிலென்ன வுலகெண்ணுமோ, விரா
சராசர் திறைகொள்ளுமென்கவிதை யிங்கு
வந்து குறையாகுமோ, தன்னையென்
சொல்வாரென்னையென்சொல்வர் தான்
தமிழ்க்கு மணமல்லவோ, தன் புகழ்க்கு
மிது நீதியோ கடிதுதானின்னேவர
வேணுமே" என்றனர். இவர் திம்மய்ய
அப்பய்யன் வேண்டுகோளால் திருக்கழுக்
குன்றபுராணம் பாடினர் என்பதை
"இந்நாளிருந்தபேர் புதியபாகம் பண்டி
ருந்த பேர் பழையபாகம், இருபாகமும்
வல்லலக்கணக்கவி வீரராகவன் விடுக்கு
மோலை, அன்னுதிதானப் பிரவாகன் பிர
சங்கத்தனந்த சேடாவதாரன், அகிலப்
பிரகாசன் திம்மய்ய அப்பய்யன் மகிழ்ந்து
காண்க, தன்னுளும் ஓலையும் வரக்கண்டு
நாம் வேதசயிலபுராணத்தை யித்தனை
நாளிருந்தோதினேம் அரங்கேற்றுவது
தான் வந்தலாமவில்லை, நன்னுவலோருட
னிதைக் கேட்டெனைச் சோழநாட்டுக்
கனுப்ப வேண்டும், நவிலோலை தள்ளா
மலே சுக்கிரவாரத்து நாளிங்கு வரவேண்
டுமே" என்றனர். இவருடைய சீட்டுக்
கவியை நிரஞ்சன கவிஞர் சிறப்பித்தது.
"சீட்டுக்கவியென்று சொல்வார் சிலர் அந்
தத், தீட்டுக்கவி காட்டுக்கெரித்த நிலவா
கிப்போஞ் செங்கனகரத்நச், சூட்டுக்கிரீட
முடி வேந்தருற்பத்திச் சூறைகொள்ளும்,
நாட்டுக்கிலக்கியம் கவிவீரராகவ னற்கவி
யே" என்றனர். இவர் சந்திரவாணன்மீது
கோவைப்பிரபந்தம் பாடிப் பிரசங்கிக்கை
யில் "மாலேநிகராகுஞ் சந்திரவாணன்
வரையிடத்தே, பாலேரிபாயத்தேன்
மாரிபெய்ய நற்பாகுகற்கண்டாலே யெரு
விட முப்பழச் சேற்றினமுதவயன்.
மேலேமுளைத்த கரும்பேபோவிம் மங்கைக்கு
மெய்யெங்குமே" என்ற செய்யுளில், அச்
சபைக்கணிருந்த அம்மைச்சி யென்பாள்
"கவிராயருக்குக் கண்கெட்டது மதியுங்
கெட்டதோ, கரும்பு புஞ்சைப்பயிரன்றே
சேற்றில் முளைக்குமோ" வென்னப் புல
வர் சற்று நிதானித்துத் தன் மாணுக்கனை
நோக்கிக் கொம்பைவெட்டிக் காலை நடு
வென்ன, அவர் அவ்வகை, "சேற்றின்"
என்பதைச் "சாற்றின்" என மாற்றப் புல
வர் களித்தனர். மறுநாள், பிரசங்கத்திற்கு
அம்மைச்சி வரவுகேட்ட புலவர் "கலை
மகளு நாணிநின்று கைகட்டிப் போற்றச்,
சிலைமதவேள் முன்கணையேதாங்கக்—குல
மருவு, கொம்மைச்சிங்காரமுலைக்கோதில்
திருப்பனங்காட் டம்மைச்சி வாராளதோ"
என்றனர். இதனைக்கேட்ட அம்மைச்சி
அன்றுமுதல் நட்பாயிருந்தனள். இவர்
வைத்தியநாதநாவலரை "ஐம்பதின்மர் சங்
கத்தாராகி விடாரோ, நாற்பத், தொன்ப
தின்மரென்றே யுரைப்பரோ — இம்பர்
புகழ், வன்மீகநாதனருள் வைத்தியநாதன்
புடவி, தன்மீதந் நாட்சரித்தக்கால்" எனப்
புகழ்ந்தனர். இவர் காஞ்சிபுரத்தில் வாசித்

தபோதுஇவரைக்கந்தபுராணங்கச்சியப்பர்
பாடியது. "பொங்குதமி ழயோத்தியில்
வாழ்தசரதனென்போ னிடத்தும் பூதூர்
வேந்தன், துங்கவடு கன்னிடத்தும் வீரரா
கவரிருவர் தோன்றினரால், அங்கொருவ
னொருகலைமா னெய்திடப்போய் வசை
பெற்றானவனிபாலன், இங்கொருவன்
பலகலைமா னெய்திடப்போய்க் கவியினா
லிசைபெற்றானே." இவர் ஸ்ரீ வில்லிபுத்
தூரிற் பாடிய கவி. "வேசையரே மல்கு
மூர் வீதியிலார் வந்தாலும், பேசிவலை
வீசிப் பிடிக்குமூர் — ஆசைமயல், பூட்டு
மூர், கையிற் பொருள்பறித்தே யோடுகொ
டுத், தோட்டுமூர் சீவிலிபுத்தூர்." அரிய
லூர் மழவராயன் படிகொடுத்ததற்குப்
பாடியது. "சேயசெங்குன்றைவரு மொப்
பிலாதிக்குச் செங்கமலத், தூயசெங்கண்ண
னிணை யொப்பனே தண்டுழாயணிந்த,
மாயனளக்கும்படி மூன்றுகிட்டிணைய மாம
ழவ, ராயனளக்கும்படி யொருநாளைக்
கிலக்கமுண்டே." இவன் சகம் ௧௬௬௪-ல்
திரிசிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள அரிய
லூர்க்கதிபன், இவன்பெயர் கிருஷ்ணை ஒப்
பில்லாத மழவராயன் என்பது. இவர்
குமாரஒப்பில்லாதான் சங்கீதத்தைக் கேட்
டுப் பாடியது. "வாழொப்பிலாதவன் சே
யொப்பிலாதமழவதிசை, ஆழக்கடல்விட்டு
நீபாடுங்காலத் தரிசெலுங்கால், நீழற்கவுத்
துவ நீத்துச்செல்வானந்த நீண்மணிதான்,
காழொப்பினும் நின்னிசைகேட்குங்காற்
கரைந்தேகுமன்றே." தீத்தான் சங்கீதத்
தைக்கேட்டுப் பாடியது. "வாவியபொற்
பரியாவூரில் வீரையன்மைந்தபஞ்ச, காவி
யந்தேர்கின்ற தீத்தாசங்கீதத்திற் காவலா
தாம்? ஒவியசாலையெல்லாங் கொல்லியா
முள்ளுருகும் ரத்னம், மேவியகூடமெல்
லாந் திரிகூடத்தின்மேற்படுமே." செழிய
தரையன் பரிசில் கொடுத்தனுப்பின
போது சில பொருள்வேண்டிப் பாடியது.
இவர் சேலத்தரசரா யிருக்கலாம்போலும்.
"சாலப்பழுத்தமரம் பார்த்தெறிவர் தண்
ணீர்சுரக்கும், ஞாலத்தகழ்வர் கறக்கின்ற
வாவைநற் காறளைவர், நீலக்கடல்விட்டுப்
பாலாழிமத்திட்டுநிற்பரென்னீர், சேலத்து
வேந்த னகத்தாகந்தீர்த்த செழியனுக்கே."
செழியதரையனுக்கு விடுத்த தீட்டுக்கவி.
"எடாயிரங்கோடி யெழுதாது தன்மனத்
தெழுதிப்படித்த விரகன், எதுசொலினு
மதுவே யெனச்சொலுங் கவிவீரராகவன்
விடுக்குமோலை, சேடாதிபன்சிர மசைக்
குங்கலாகரன் திரிபதகை குலசேகரன்,
தென்பாலைசேலஞ் செயித்ததாகந்தீர்த்த
செழியனெதிர் கொண்டுகாண்க, பாடாத
கந்தருவ மெறியாதகந்துகம் பத்திகோ
ணாதகோணம், பறவாதகொக்கு அனற்
பண்ணாதகோடை வெம்படையாய்த் தொ
டாதகுந்தம், சூடாதபாடலம் பூவாதமாத்
தொடை தொடுத்துமுடி யாதசடிலம்,
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன்
றெங்குந் துதிக்கவர விடவேண்டுமே."
இடும்பாவனத்திற் பாடிய கவி. "பசி
யுருக நோவதல்லாற் பாழ்வீட்டிற் பாழ்
த்த, கொசுகுகடியாலுங் குமைந்தோம்—
மிசையில், நெடும்பாவம் யாம்செய்தா
னீரென்ன செய்வீர் இடும்பாவனநாதரே."
நாகதேவனைப் பாடியது. "வாயிலொன்று
கல்லுமொன்று நெல்லதானவண்ணமும்,
வாடலாகவாறுமாதம் வைத்திருந்த கத்தி
ரிக், காயிலுப்பிலாத கஞ்சியைக்கலந்த
வண்ணமுங், காம்பொடிந்ததோரகப்பை
கைப்பிடித்தவண்ணமும், மோயிலாதமீன்
கள்வந்து மொலுமொலென்ற சட்டியும்,
மோருதர்க் கிடக்கொணர்ந்த............;
நாகதேவ னிட்டவூணை நாம்மறப்பதில்லை
காணுமே." சிரையன் தினகரனைப் பாடி
யது. "சிரையன் தினகரனைச் செந்த
மிழ்க்குநல்ல, துரையென்று நாங்கவிதை
சொன்னோஞ் — சுரையுண்ணும், வண்
ணமே செய்தான் வரகவிக்கு வண்மை
யென்னும், எண்ணமே செய்தானிலை."
நந்தியமாணிக்கத்தைப் பாடியது. "மாதா
வைப்போற் பிறக்கத் தந்தையைப்போற்
செனிக்கவிந்த வையந்தன்னில், ஏதேனு
மொன்றல்லால் நந்தியமாணிக்கமிவனேற்
றம் பாரீர்.................., பாதாதிகேச
மெல்லாந்தன் றாயைப்போற் படைத்தான்
பதுமத்தானே." சடையாண்டியைப்
பாடிய வசை. "கொடையாண்ட மன்ன
ரிற்கச்சி நல்லானைக் குறுகியன்னோன்,
தொடையாண்ட முல்லைப் புயவரைச்சார
விற் றுன்னிழப்பான், உடையாண்டிரு
ந்து கவிமதமாக்க ளுடன்பொருத, சடை
யாண்டிகையிற் குசங்காணவாமுத் தமிழ்ச்
சிங்கமே". ஒரு தாதிநிமித்தமாகக் குடந்
தைப்பயணந் தவிர்த்திருந்தபோது பாடி
யது. "மனந்தான் றளர்ந்தார்க்கும் வாயு
முண்டோகச்சி, அனந்தா புதனுளகல்
வோஞ்—சினந்து, வடித்தெடுத்த வேற்

கண் மணியிரண்டுகொண்ட, கொடிதடுத்தர்லா ரேகுவார்." இவர், விஜயராஜன் தம் பல்லக்கைப் பின்பற்றியபோது "திருமாலு மீசனும் பின்போயுந் தூதுசெலத் துணிந்தும்; அருமாதுரியத் தமிழ் வளர்த்தாரவரோடு பங்காய், வருமா மறையவன் பேர்சாதித்தே மிகவண்ட மிழ்க்குப், பெருமான் சிவிகைக்குப் பின் சென்ருன் விஜயரமனுமே" என்றனர். காஞ்சிபுரத்திவிருந்த அம்மைச்சியினிடம் விரோதங் கொண்ட வைணவர்கள், பெருமாள் ரதத்தை அம்மைச்சி வீட்டின்மீது விட்டிடிக்கத் தொடங்குகையில் ஆங்கிருந்த இவர் அவர்களைச் சமாதானப்படுத்தியும் கேளாதபோது ரதத்திலிருந்த பெருமாளை நோக்கி "பார்ப்பார் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ, தேப்பெருமானே கச்சி செல்வரே - கோப்பாகக், கொம்மைச் சிங்காரலங்கைக் கோட்டையென்று வந்திரீ, தம்மைச்சிவாழுமகம்." எனாதம் ஒதுங்கிற்றென்பர். இவ்வாறு பல பிரபந்தங்கள் பாடி இல்லறநடாத்திச் சிவபத மடைந்தனர். இவர் தேகவியோகங்கேட்ட கயத்தாற்றரசன் பாடிய கையறம் "இன்னமூதப் பாமாரி யிவ்வுலகத்திற்பொழிந்து, பொன்னுலகிற் போய்ப்புகுந்தால்—மன்னும், புவிவீரராகமன்னர்பொன்முடிமேற் சூட்டும், கவிவீரராகவமேகம்." "தோற்றுதொளிந்திருந்தலக்கவிகளெல்லா, மேற்றுரகையின் விளங்கியவே—யேற்றுலும், கன்னவதாரன் கவிவீரராகவனும், பொன்னுருஞ் செங்கதிரோன் போய்." "முன்னாட்டுத் தவமுனியுஞ் சேடனும் வான்மீகனுமுன் முன்னில்லாமற், தென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்தும் சென்று சேர்ந்தார், இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே கவிவீரராகவா நீ, பொன்னாட்டுப் புலவருடன் வாதுசெய்யப் போயினையோ புகலுவாயே." என இரங்கினர். இவர் செய்த நூல்கள் திருக்கழுக்குன்றபுராணம், திருக்கழுக்குன்றமாலை, சேயூர்முருகன்பிள்ளைத்தமிழ், சேயூர்க் கலம்பகம், திருவாரூருலா, சந்திரவாணன் கோவை, கயத்தாற்றரசனுலா, பல சீட்டுக் கவிகள். (தமிழ்நாவலர் சரிதை).

**அந்தகாசுரன்**—1. இவனைத் தநு என்னும், தானவன் குமரன் என்றும், இரண்யாக்ஷன் குமரன் என்றுங் கூறுவர். இவன் பிரமனையெண்ணித் தவம்புரிந்து பலவரங்களைப்பெற்றுத் தேவரை வருத்தத் தேவர்கள் சிவமூர்த்தியை வேண்டினர். சிவமூர்த்தி வடுகக்கடவுளை யேவ வெள்ளி அசுரகுருவாதலின் இடையிற்புகுந்து இறந்தவரை மிருத்துஞ்சயமந்திரத்தாலெழுப்பினர். இதைச் சிவமூர்த்தி யறிந்து வெள்ளியைவிழுங்க, வடுகநாதர் சூலத்தாற் குத்திச் சிவசந்நிதானத்தின்முன் கொண்டுபோனகாலத்து அந்தகன் வேண்டச் சிவமூர்த்தி கருணைசெய்து பூதகணத்தலைமை யளிக்கப்பெற்றவன். (காசிகாண்டம்).

2. இவன் ஒரு அசுரன். இவன் துங்காசுரன் அம்பாசுரனுடன்கூடி இருள்மலை மேகவுருக்கள்கொண்டு மழை வருஷித்து நிற்க, மகோற்கடப் பெயருள்ள விநாயகமூர்த்தி, ஓர் பறவை யுருக்கொண்டு அவற்றை நீக்க, மீண்டும் அம்மூன்று அசுரரும் ஆலமரமாகவும், கன்னியாகவும், வேடனாகவும் உருக்கள்கொண்டு பக்ஷியாகிய விநாயகரைத் துரத்த, விநாயகர், இம் மூவரையும் மூக்காலும், காலாலும் கௌவித் தவலோக வுயரஞ்சென்று இவர்கள் தாயாகிய பிரமரையிடம் பிரேதங்களாக வீழ்த்தினர். (விநாயகபுரார்ணம்).

3. சிவபெருமான் கண்களைப் பிராட்டியார் விநோதமாக மூடியகாலத்து உண்டான அச்சத்தால் தேகத்தில் வியர்வை உண்டாயிற்று. அவ் வியர்வை யானது இறைவன் நெற்றிக்கண்ணூற் சூடுண்டு மூடிய விரலிலேயே ஒரு கருப்பமாயிற்று. அவ்வகைக் கருவில் அசுரவுருவமாக ஒருவன் கோரத்துடன் ஜனித்தான். இவன் பிறவிக் குருடனுகத் தோன்றினமையால் அந்தன் எனப் பெயருற்ருன். இவன் இரணியாக்ஷனுக்குச் சிவபெருமானுல்கொடுக்கப்பட்டுப் பிரமதேவரையெண்ணி ஒருவராலுஞ் செயிக்கப்படாத வன்மையும் கண்களும் பெற்று அரசுசெலுத்திப் பார்வதிதேவியைக் கண்டு மோகிதனுய்ச் சிவபெருமான்மீது யுத்தத்திற்குவந்து அவரது சூலத்தாற் குத்தப்பட்டு அச்சூலத்தின் மேல் பலநாள் உலர்ந்திருந்து சிவபெருமானைத் துதித்ததால் கருணைபெற்றுச் சிவகணத்தவனுயினவன். (சிவமகாபுராணம்.)

4. இவனது நாசத்தின் பொருட்டுத் தேவர் சிவபிரானை வேண்ட, சிவபிரான் முகத்தில் ஒரு சுவாலை உண்டாயிற்று. அதில் அஷ்டமாத்ருகைகளுண்டாய் அசுர

னது உதிரத்திலுண்டான அநேக அந்தகா சுரரை மாய்த்தனர். (வராகபுராணம்).

**அந்தசில்**—விந்தியமலையில் தோன்றிய நதி.

**அந்நனன்**—துரியோதனனன் தம்பி.

**அந்தராயம்** — இ. தானந்தராயம், லாபாந்தராயம், போகாந்தராயம், உபபோகாந்தராயம், வீர்யாந்தராயம். (சினபத்ததி).

**அந்தாரளன்**—அநுலோமத்தாணிற்கும் பிரதிலோமப் பெண்ணிற்கும் பிறந்தவன்.

**அந்தரி** — விந்தமலையை இருப்பிடமாகக் கொண்ட துர்க்கை, இவளுக்கு விந்தாகடிகை எவலாளி. (மணிமேகலை)

**அந்தரிஷன்**— முராசுரன் குமரன். கண்ணனாற் கொல்லப்பட்டவன்.

2. (சூ.) ருக்ஷகன் குமரன்.

**அந்தரிக்ஷன்**—ருஷபனுக்குச் சயந்தியிடம் உதித்த குமரன்.

**அந்தர்தீபம்**—தவாரகையிலுள்ள ஒரு தீவு. இதில் மகாதேவனுடைய திருவிழாவின் பொருட்டு யாதவர்கள் சென்றார்கள்.

**அந்தர்த்தானன்**—விசித்திரசுவனைக் காண்க.

**அந்தலிளங்கீரன்**—கடைச்சங்க மருவிய புலவன். அகநானூறில்,"நிறைந்தோர்" எனும் பாலையைப் பாடியவன். (அகநானூறு).

**அந்திசாரன்** — (பூரு) மதிசாரனுக்கு ஒரு பெயர்.

2. யதுவம்சத்துச் சாத்வகன் புத்ரன், இவன் புத்ரர் பசமாநன், சுசி, குங்குரன், கம்பளகிஷன்.

3. தனுபுத்ரன்.

**அந்திதேவன்**—ஒரு அரசன். பசுக்கள் இவனிடம் வந்து யாகஞ்செய்யக் கேட்டுக்கொண்டபின் இவன் யாகஞ்செய்து கொண்டு வருகையில் ஒரு பசு தன் கன்றைவிட்டுப் பிரிதலாற்றாது வருந்த யாகத்தை நிறுத்தினவன். இவன் நாள் ஒன்றுக்கு உ௦,000 பிராமணர்களுக்குப் போஜனஞ் செய்வித்துச் சத்திரயாக முடித்து இராச்சியமாண்டு புண்ணியவுலகடைந்தவன்.

**அந்திபதி**—காந்தாரநாட்டுள்ள பூர்வதேசத்தரசன். இவன் பிரமதருமன் கட்டளையால் அவந்தியை இராஜதானியாகக் கொண்டவன்.

**அந்திமான்**—இடையெழு வள்ளல்களிலொருவன். இவன் இதற்கு முன்ஜனனத்தில் பிராமணன். கிருத்திகைவிரதத்தை அநுட்டித்து வள்ளலாயினன்.

**அந்துவஙகீரன்**—ஒரு வள்ளல். காவட்டனாரால் பாடல்பெற்றவன். "பானுபட" எனும் பெருங்காஞ்சிபாடியவன். (புற-நா)

**அந்துவஞ்சாத்தன்**—இவன் ஒல்லையூர் தந்த பூதபாண்டியனால் "மடங்கலிற்" எனும் பாடல்கூறப் பெற்றவன். (புறநானூறு).

**அந்துவஞ்செள்ளை**—மையூர்கிழான் மனைவி.

**அந்நபூரணி**—காசியில் எழுந்தருளியிருப்பவள். ஈச்வரி.

**அந்நம்பட்டர்**—தர்க்கசங்கிரகஞ் செய்த சமஸ்கிருதகவி.

**அந்நியதாகர்மஜஜைசயோகம்**—யாண்டு ஒன்றன் தொழிலால் சையோக முண்டாகின்றதோ அது. (தரு).

**அந்நியோந்யாபாவம்** — இது ஒன்றினொன்றின்மை, இது குடம் ஆடையன்று என்பது. இது அபேத சம்பந்தத்தால் வரைந்து கொள்ளப்பட்ட அபாவம். ஏனைய சம்பந்தத்தால் வரைந்து கொள்ளப்பட்ட அபாவம் சம்சர்க்கா பாவமாம். இந்தச் சம்சர்க்காபாவம், பிராகபாவம், பிரத்வம்சாபாவம், அத்யந்தாபாவம் என (௩) வகை இவற்றைத் தனித்தனிகாண்க.(தரு)

**அந்நீ**—ஒரு அரசன். திதியால் வெல்லப்பட்டவன்.

**அந்வக்பாநு**—சந்திரவம்சத்து அரசன் புருவின் பேரனாகிய மநு என்பவன். மிசாகேசி என்னும் அப்சரசுக்குப் பிறந்தவன்.

**அந்வயவியதிரேகிஅநுமானங்கள்** — இவற்றிற்குப் பக்ஷதருமத்வம், சபக்ஷசத்வம், விபக்ஷத்வாத்வியாவிர்த்தி, அபாதிதவிஷயத்வம், அசத்பிரதி பக்ஷத்வம் என்னும் ஐந்துஅவயவங்கள் உண்டு. இவை பக்ஷத்திலுண்டாயிருக்கை, விபக்ஷத்திலில்லாதிருக்கை, கெடுக்கப்படாத விஷயமாயிருக்கை, பிரத்தியக்ஷ மில்லாமலிருக்கை என்பனவாம். (சிவ-சித்).

**அபக்ருஷசமை** — அவ்யாப்தமான திருஷ்டாந்த தருமத்தால் அவ்யாபகமான தருமத்தின் அபாவத்தை வருவித்தல். (தரு).

**அபகர்ஷை** — வித்வேஷிணியின் குமரி. பொய்ச்சாக்ஷி சொல்லுவோரிடத்தும் தார்மார்த்த காமங்களை நீக்குவோரிடத்தும் வசிப்பவள். (மார்).

**அபசதர்**—பிராமணனுக்குத் தனக்குத் தாழ்ந்த மூன்றுசாதியிலும், க்ஷத்திரியனுக்குத் தனக்குத் தாழ்ந்த இரண்டு சாதியிலும், வைசியனுக்குத் தனக்குத் தாழ்ந்த ஒரு சாதியிலும் பிறக்கிறவர்கள்.

**அபசன்** — கிருகத்தனுகிய வேதியன் தன்னிடம் வந்த அதிதிக்கு அன்னமிடாது தானே தின்பவன். (சிவ-சித்).

**அபசித்தாந்தம்**—ஒரு சித்தாந்தம் சொல்லத் தொடங்கி அதற்கு விருத்தமா யிருக்கிற சித்தாந்த வசனஞ்சொல்லுகை. (சிவ-சித்)

**அபஞ்சிகன்**—காசிநகரத்து வேதியன். சாலி யென்பவளுக்குக் கணவன். இவன் வேத மோதுவிக்குந் தொழிலே உடையோன். (மணிமேகலே)

**அபதானம்**—சூத்திரபிடகத்தொன்று

**அபத்தியபதார்த்தங்கள்**—கொள்ளு, காடி, குமட்டிக்காய், கொம்புபாகல், முற்றின அவரை, காராமணிக்காய், சேப்பங்கிழங்கு, வள்ளிக்கிழங்கு, மாங்காய், மாதுளங்காய், இளநீர், மாப்பண்டம், சேவல், பன்றி, கொக்கிறைச்சி, புளி, கடுகு, தேங்காய், எருமை நெய், ஷை பால், கிழங்குவகை, முப்பழங்கள், வெங்காயம், பெருங்காயம், பலவகை மதுக்கள் முதலியவாம். (தேரையர்).

**அபமார்வன்**—இவன் சிவபிரானே யெதிர்க்கத் தள்ளிவந்து உதைபட்டு முதுகு முரிந்து இறந்த அசுரன்

**அபயகுலச்சோழமகாராஜா**--இவர் சோழ ராஜாக்களில் ஒருவர். சம்பந்தர் முதலிய சைவசமயாசாரியர்களால் அருளிச் செய்யப்பட்ட தேவாரங்கள் இருக்கு மிடத்தை நம்பியாண்டார் நம்பிகளால் அறிந்து எடுக்கச் செல்கையில் தீக்ஷிதர்கள், வைத்தவர்கள் வந்தாலன்றி எடுக்க லாகாதென அவ்வண்ணமே சமயாசாரியர்கள் மூவருக்கும் சிறப்புச் செய்வித்து உற்சவங்கொண்டருளச்செய்து அத்திருமுறைகள் இருக்குமிடத்தில் எழுந்தருளச் செய்வித்துத் திருமுறைகளேப் புற்றுமூடி யிருக்கக்கண்டு விசனமுற்றுத் திருமுறைகளுக்குப் பரிமளதைல முதலிய அபிடேகஞ்செய்வித்துப் பூசித்து வெளியிட்டவர்.. இவருக்குத் திருமுறைகண்டசோழரெனப் பெயர். இராஜராஜ தேவரைக் காண்க.

**அபயர்**—ஒருவகை இராக்கதர்.

**அபயன்**—1. திருதராட்டிரன் குமாருள ஒருவன்.

2. தருமன் குமாரில் ஒருவன்.

3. இயமனுக்குத் தயையிடம் உதித்த குமரன்.

**அபரக்கிரியை**—இது, மதத்தவர் தங்கள் ஆகமபுராணுதிகளில் சொன்னபடி நடத்துவது. சைவர்செய்யுஞ் சடங்குகளாவன. மிருதமடைந்த பின்னர் (க) சூர்ணேற்சவம், (உ) சிவப்பிரசாதம், (ங) சாவியாலங்காரம், (ச) தேகாந்தியேஷ்டி. கரும ஆரம்பத்தில் (க) கணபதிபூஜை, (உ) புண்யாஹவாசனம், (ங) பூதசுத்தி, (ச) அந்தர்யாஹம், (ரு) ஆசார்யாலங்காரம், (சு) பஞ்சகவ்வியம், (எ) விக்ராமம், (அ) புத்தளியந்தியேஷ்டி, (கூ) புத்தளியந்தியேஷ்டி சஞ்சயனம், (ய) நக்னசிரார்த்தம், (கக) பாஷாணஸ்தாபனம், (கஉ) திலோதகம், (கங) வாசோதகம், (கச) பிண்டம், (கரு) நவச்ரார்த்தம், (கசு) ஏகோத்ரவிருத்தி, (கஎ) பிரபூதபலி, (கஅ) சிலோத்வாசனம், (ககூ) விருஷோற்சர்ஜனம், (உ0) ஏகோதிஷ்டம். இவை யொருநாள் செய்யவேண்டியது. இவை செய்த மறுநாள் (க) ஷோடசம், (உ) சபிண்டீகரணம், (ங) பிண்டபிரதானம், (ச) பிண்டசம்யோசனம், (ரு) சுவர்க்கபாதேயம், (சு) புனர்பிண்டம், (எ) சோதகும்பம், (அ) அநுமாசியம், (கூ) ஆநந்தஹோமம், (ய) கிரகயக்யம். வைஷ்ணவர்கள் ஸ்ரீ சூர்ணபரிபாலனம். சுவாமி பிரசாதம். கர்மாரம்பத்தில் (க) அக்நிஸந்தானம், (உ) பிராயச்சித்தாதிகள், (ங) சமஸ்காரம், (ச) பாஷாணஸ்தாபனம், (ரு) சஞ்சயனம், (சு) வாஸோதகாதி, (எ) நக்னசிரார்த்தம், (அ) ஏகோத்ர விருத்தி, (கூ) நமசிரார்த்தம், (ய) தசாஹம், (கக) விருஷோற்சர்ச்சனம், ஆனந்தஹோமம், சாந்திஹோமம், புனர்விருஷோற்சர்ச்சனம், (கஉ) ஏகாஹம், (கங) ஷோடசம், (கச) சபிண்டீகரணம், (கரு) வைதரணிகோதானம், (கசு) தசதானம், (கஎ) பரலோகபாதேயம், (கஅ) பிண்ட சம்யோஜனம், (ககூ) புண்யாவாசனம், (உ0) சோதகும்பம், (உக) இயல் அல்லது சேவாகாலம்.

**அபரநந்தை** — ரிஷபகூட பர்வதத்திற்குச் சமீபத்திலுள்ள நதி. சுக்கிரிநதி என்றும் பெயர். (A small stream which flows through the districts of Gaya and Patna and falls into the Ganges).

**அபரநாதகலேகள்** — இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்தவகாமினி.

**அபரவிந்துகலேகள்**—நிவர்த்தி, பிரதிஷ்டை வித்தை, சாந்தி, சாந்தியதீதை. (சதா).

**அபராசிகன்**—திருதராட்டிரன் குமாரர்களில் ஒருவன்.

**அபராசிதமகாராஜன்**—இவன் சக்ரபுரத்தாசன். இவன் தேவி வசுந்தரை. இவன் குமரன் சக்ராயுதன். இவன் தேவி சித்திரமாலே. இவன் குமரன் காபிஷ்ட கல்பத்தில் தேவனுகிய கிரணவேகன் அல்லது வச்ராயுதன். இவன் தேவி இரத்தினமாலே (இவள்முன் தவத்தினுல் தேவனுகிய ஸ்ரீதரை) இவன் குமரன் இரத்னயுதன் இவர்களில் அபராஜிதனும் சக்ராயுதனும் சினதீக்ஷைபெற்று உலகுச்சியடைந்தனர்.

**அபராசிதன்**—1. திருதராஷ்டர குமரன்.

2. ஒரு பாம்பு.

3. ஓர் அரசன்.

**அபராசிதை**—அஷ்டசத்திகளில் ஒருத்தி

**அபராசினன்** — சந்திரவம்சத்து அரசன். புருவம்சத்தில் பிறந்த ஜயத்சேனன் புத்திரன். தாய் சுசிரவை. தேவி மரியாதை. புத்திரன் ஹரி.

**அபராதிகன்**—கத்ரு குமரன் நாகன்.

**அபராந்தம்**—ஒரு தேசம். Konkan and Malabar.

**அபரோகம்**—இது பூமியிலுண்டாம ஒருவகை கண்ணடிபோன்ற பொருள். இது இந்தியாவில், சென்னே ராஜதானியில் நெல்லூர் ஜில்லாவில் இருக்கிறது. இது தகடுபோல் உரிக்கக்கூடிய பளபளப்புள்ள பொருளாதலின் இதனுல் விளக்குக்கூடுகளும்மற்றும் வேடிக்கைப் பொருள்களும் செய்கின்றனர். ஒளஷதங்களும் செய்யப்படுகின்றன.

**அபர்ணே**—மேனேயின்புத்திரி. பித்ருக்களேக் காண்க. இவள் தளிர் முதலியனவும் புசிக்காமல் சிவமூர்த்தியை எண்ணித் தவயியற்றியதால் இப்பெயர் பெற்றவள். (மார்க்கண்டபுராணம்).

**அபலே**—இராமமூர்த்திக்குப் பசி இளேப்பு முதலிய துன்பம் வாராதபடி விச்வாமித்திரரால் உபதேசிக்கப்பட்ட மந்திரம். (இரா-பால).

**அபஸ்மாரரோகம்**—நுரை நுரையாகக் கககுதல், பற்கடித்தல், உதறல், கால்பின்னல், புத்திதோன்ருமை, பிரமை, கிடந்த இடத்தில் கிடத்தல் இவற்றைத் தனக்கு உருவமாகக்கொண்டு வருவது. இது வாதம், பித்தம், சிலேஷ்மம், திரிதோஷ அபஸ்மாரரோகம் எனக் கூறபடும். இது ஜெந்துக்களின் பிச்சுக்களாலாகிய ஆக்ராணம், கலிக்கம், மலக்குடாரிவமன விரேசனம், நன்னுரிகஷாயம் முதலியவற்ருல் வசமாம். (ஜீவரக்ஷாமிர்தம்).

**அபாநமித்ரன்**—கத்ருவின் குமரன்.

**அபாநன்**—தசவாயுக்களுள் ஒன்று.

**அபாந்தரதமர்** — விஷ்ணுவின் வாக்கிற் பிறந்த புத்ரர். இவர் சுவாயம்பு மன்வந்தரத்தில் வேதத்தைப் பிரித்தவர். கலியுகத்தில் வியாசராகப் பிறந்தவர். இவர்க்குப் பிராசீனகர்ப்பர் எனவும் பெயர்.(பார-சாந்)

**அபாரோசன்**—பீமனுடன் யுத்தஞ்செய்து தோற்றவன்

**அபார்த்தகம்** — அந்வயத்தில் அர்த்தமாகாதிருக்கிற பதவாக்யங்களேச் சொல்லுகை. (சிவ-சித்)

**அபாவஅணி** — ஒன்றனது இன்மையைக் கூறுவது. அது என்றுமபாவம், இல்லதனபாவம், ஒன்றினென்றபாவம், உள்ளதனபாவம், அழிவுபாட்டபாவம் என ஐந்துவகையாம். (தண்டி).

**அபாவம்**—இல்லேயென்னும் ஞானத்திற்கு விஷயம். பிரதியோகியின் அபேக்ஷையுடைய ஞானத்திற்கு விஷமாயிருப்பது. இது, சம்சர்க்காபாவம், அந்நியோந்யாபாவம் என இருவகைப்படும். (தரு).

**அபிசாரர்**—காச்மீரத்தருகில் வசிப்பவர்.

**அபிசாந்தி**—ஒரு தீர்த்தம்.

**அபிசாரம்**—தக்ஷசிலேக்கு வடக்கில் உள்ள ஒரு தேசம். சித்திரசேனனுக்கு உரியது. இராசசூயயாகத்தின்பொருட்டு அர்ச்சுனனல் ஜெயிக்கப்பட்டது. (The Country of Hayara).

**அபிசித்**—1. சந்திரன் தேவிகளில் ஒருத்தி.

2. ஒரு நக்ஷத்திரம், சந்திரனுக்குமேல் லக்ஷம் யோசனே உயரத்தில் இருப்பது நக்ஷத்திரம் காண்க.

3. கணன் தந்தை.

4. யதுவம்சத்த அரசன்

**அபிசித்துமுகூர்த்தம்**—ஒருமுகூர்த்தமாவது (உ) நாழிகையாகப் பகலளவில் ஆதித்தியன் மத்தியமான காலத்திலெட்டாமுகூர்த்தம். அதற்கு உத்தமமான வபிசித்து முகூர்த்தமென்று பெயராம். இம்முகூர்த்தம் நூறுயிரங் குற்றத்தைக் கெடுக்கும். (விதானமாலே)

**அபிதர்மபிடகம்**—பௌத்தாது மூன்ருவது ஆகமம். இது தர்மசங்கணி, விபங்கம், கதாவஸ்து, பிரகாணம், புத்கலப்பி[illegible]தி,

நாதுகதை, யமகம், பிரஸ்தானபிரகரணம் என எழு பிரிவுகளை யுடையது.

**அபிநந்தனர்**—1. சைநநாலாவது தீர்த்தங்கரர், இக்ஷுவாகுவம்சம், சுயம்வரமகாராஜாவின்குமரர், தாய் சித்தார்த்தாதேவி. இவர் மாகமீ சுக்லபக்ஷம் துவாதசி புனர்பூச நக்ஷத்திரத்தில் சநநம். இவர் உன்னதம் (கூ௫0)வில் சுவர்ண வர்ண்ம்.(டு௰) லக்ஷம் பூர்வம் ஆயுஷ்யம்.

**அபிநந்தனன்** — இந்திரபதம்பெற யாகஞ் செய்ய, இந்திரன் காலரூபி யென்பவனை வேண்டி யாகத்தை அழிப்பிக்க யாகமிழந்தவன்.

2. ஒரு சாரணன். (சூளாமணி).

**அபிநவதத்தன்**—இவன் மந்திர சித்தியால் சங்கராசாரியருக்கு மூலநோய் ஏவியவன்.

**அபிநவகுப்தாசாரியன் மதம்** — இம்மதம், சங்கராசாரியருக்கு (உஉக) வருஷங்களுக்குப்பின் காச்மீரத்தில் பிறந்த மகாமகேச்வராசாரியர் என்ற பிருதுப் பெயரடைந்த அபிநவகுப்தாசாரியரால் கற்பிக்கப்பட்டது. இது, ஒருவித சைவ மதம். இவ்வுலகம், ஆண்டவனுகிய சிவனது ஆகாரம், பதார்த்தங்களும், ஆத்மாவும் சிவனின் வேறுபட்டவை. சிவனே சுவதந்திரன். மற்றத் தேவர்கள் அச்வதந்திரர், மாயை யென்று ஒரு பொருள் உண்டு. குரு உபதேசத்தினுல், தான் ஈசனென்று அறியின் முத்தியடைவன் என்னும். இவர், பிரத்தியபிஞ்ஞா விவ்ருதி விமர்சனி யெனும் பெயரால் சைவசூத்ர பாஷ்யஞ் செய்திருக்கின்றனர்.

**அபிபூ**—காசிராஜன் புத்திரன். பாண்டவர் பக்ஷத்தைச் சேர்ந்தவன். வசுதானபுத்திரனுல் கொல்லப்பட்டவன்.

**அபிமதி**—துரோணன் பாரி. இவளிடத்துச் சோகம், பயம் முதலிய உதித்தன.

**அபிமன்யு** — இவன் அருச்சுநனுக்குச் சந்திரன் அம்சத்தால் சுபத்திரையிடம் பிறந்தவன். பாரியை விராடராசன் பெண்ணுகிய உத்தரை. இவன் பாரதப்போரில் பதின்மூன்ருநாள் பதுமயூகத்துள் புகுந்து பேதித்துத் துன்முகன்,விடசேனன்,லக்னகுமரன், முதலியோரை மாய்த்துச் சயந்தனுல் கொல்லப்பட்டவன். இவனிறந்த காலத்து இவன் மனையாள் வயிற்றில் பரீக்ஷித்துக் கருவாயிருந்தான். இவனது மற்ற குமரர் சுதசேநன், வீமசேநன், உக்கிரசேநன். (பாரதம்).

**அபிமான்**—அநலன் முதற்குமரன்.

**அபிரன்**—பிராமணனுக்கு அம்பஷ்ட கன்னிகை இடம் பிறந்தவன். (மநு.)

**அபிராமன்**—காளமேகனை நாலுபாஷையிலும் கவிபாட ஏவினவன்.

**அபிராமி**—சத்தமாதர்களுள் ஒருத்தி.

**அபிராமிபட்டர்** — இவர் சோழநாட்டுத் திருக்கடவூரிலிருந்த பௌரோகிதர். இவர் வாமியின் பூசை மேற்கொண்டவர். அபிராமியிடம் அந்தரங்க அன்புள்ளவராய்ப் புறத்தில் யார்க்கும் அதைத் தெரிவிக்காமல் பஞ்சமகாபாதகர்போல் நடித்து வருகையில் இவரிடம் வெறுப்புக்கொண்ட வேதியர் தஞ்சை சரபோஜி அரசனிடங் குறைகூறினர். அரசன் உணர்ந்து இவரை அழைத்துவரக் கட்டளையிடச் சேவகர் இவரை அரசனிடங் கொண்டுபோய் விட்டனர். அரசன் பட்டரை நோக்கி நீர், கையில் வைத்திருப்பது என்னவெனப் பட்டர்,அது பஞ்சாங்கம் என்றனர். ஆயின் நாளை என்ன திதியெனப் பட்டர், அமாவாசையைப் பௌர்ணிமா என்றனர் உடனே அரசன் இது மதிகெட்ட தினம் என்று பட்டரை நோக்கி நாளை முழுமதியைக் காட்டக்கூடுமோ என்ன, அதற்கு உடன்பட்டு அரசன் கட்டளைப்படி சிறையிலிருந்து அக்னிகுண்டத்தைக் கீழே கொளுத்தி உறியிலிருந்து பாடி ஒவ்வொரு கவிக்கு ஒவ்வொரு கயிறுகளை நறுக்கி "விழிக்கே யருளுண்டு" எனுங் கவியில் தேவி தரிசனந்தர, தேவியை அபிராமி அந்தாதி பாடி உபாசனைசெய்து அவள் தரிசநத்தில் தமது குறைக்கூறி இரந்து அம்மையாரிடம் குண்டலம் பெற்று அவள் கட்டளைப்படி ஒன்றை ஆகாயத்தில் விட்டெறிந்து மறுநாள் சாயங்காலம் அரசனும் மற்றவரும் அஞ்சும்படி ஆகாயத்தில் பூரண சந்திரனைக் காட்டியவர். இவர் பாடிய அபிராமி அந்தாதி சொன்னேக்கம் பொருளேக்கமும் பிராட்டியருளுந்தரத்தக்கது.

**அபினி**—இது கசகசாச்செடியின் காயைக்கிள்ளுதல்,பிளத்தல்முதலியஇடங்களிலிருந்து ஒழுகும் பால். காற்றுப்பட இறுகுவது. தின்ருல்மயக்கம் உண்டு உறக்கமுண்டாம்.

**அபிஷியந்தன்**—சந்திரவம்சத்து அரசன்குரு புத்திரன். தாய் வாகினி (பாரதம்.ஆதி.)

**அபிஷேகர்** — பண்டாரத்தார் வகைகளில் ஒருவகை வேளாண் ஜாதியார், இவர்கள்

சிவாகமப்படி சைவர் வீடுகளில் சில சடங்குகளைச் செய்வோர். (தர்ஸ்டன்).

**அபிஷேகபாண்டியன்** — வீரபாண்டியன் குமரன். இவன் இளமையாயிருக்கையில் இவன் தந்தைக்குப் போகஸ்திரீகளிடம் பிறந்தார் பொக்கிஷத்திருந்த முடி முதலியவற்றைக் களவிற் கைக்கொண்டனர். இவன் முடிசூடுங்காலத்தில் தக்க முடியும் அதில் அணிய மாணிக்கமும் இல்லாமை கண்டுசிவமூர்த்தியைவேண்டச்சொக்கநாத சுவாமிகள் தாமேரத்னவியாபாரியாகவந்து மாணிக்கம் விற்றுமுடிசெய்யச் செய்தனர். இவன் காலத்தில் வருணன் கோபித்து மதுரைமீது மேகங்களையும் கடலையும் எவி அழிப்பிக்க அரசன், சிவானுக்கிரகத்தால் அவ்விபத்தினின்று நீங்கினன். இவன் எல்லாம்வல்ல சித்தராய் வந்த சிவமூர்த்தியைக் கல்லானைக்குக்கரும்பருத்த எவிக் கல்லானையுண்ணக் கண்டு பணிந்து புத்திரப்பேறு வேண்டிப் பெற்று விக்கிரம பாண்டியனைப் பெற்று நற்கதி அடைந்தவன். (திருவிளையாடல்.)

**அபீஷ்டதிரிதியை**—இது மார்கழிமாத சுக்லபக்ஷ திரிதியையில் விதிப்படி கலசத்தில் சிவசத்தியைத் தாபித்துப் பூசிப்பது. இது அபீஷ்டத்தைத் தரவல்ல விரதம்.

**அபுவர்ணன்**—சாவித்திரியின்குமரன். தேவி சவுந்தரி.

**அபூர்வன்**—(ச.) நிருபஞ்சயனுக்குக் குமரன். இவன் குமரன் நிமி.

**அப்சரசுக்கள்**—அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை, கிருதாசி, முதலியவர்கள். இவர்கள் பாற்கடலிற் பிறந்தவரெனவும் காசிபர்க்கு முனியென்னும் பாரியிடம் பிறந்தவரெனவும் புராணங்கள் கூறும்.

**அப்சரர்**—ஒரு தேவசாதியர்.

**அப்பர்**--திருநாவுக்கரசுசுவாமிகளைக் காண்க.

**அப்ரகம்**—ஒருவகை லோகக்கல். இதனைப் பூவிந்து நாதமென்பர். இது எமாப்ரகம் பொன்னப்பிரகம், இரசதாப்ரகம், தேனப்ரகம், கிருஷ்ணப்ரகம், கந்தகாப்பிரகம் எனப் பலவகைப்படும்.

**அப்பன்**—1. குருகைக் காவலப்பனுக்கு ஒரு பெயர்.

2. சிம்மாத்திரி பெருமாள.

**அப்பாஜி**—இவன் வேலூராண்ட கிருஷ்ண தேவராயன் மந்திரி. இவன் நியோகிப் பிராமணன். இளமையில் தாய் தந்தையரை இழந்து கல்வியறிவிலாது ஆடுமாடுகளை மேயத்தும் துணிகளைத் தைத்தும் பரிசாரகனுகியும் யதேச்சையாகத் திரிந்தவன். இவன் ஒருநாள் காட்டுவழியில் தன்னை யறியாது தூங்கிக்கொண்டிருக்கையில் நாகமொன்று வெயிற்படாது முகத்தைக் காத்திருந்தது. அந்தவேளையில் வழிப்போன பட்டுமூர்த்தியார் அதனைக்கண்டு இவனெழுந்தபின் அப்பா உனக்குச் சிலநாளில் இராஜ்யசம்பத்து உண்டாகும் அந்தக் காலத்தில் என்னை ஆதரிக்கின்றுயா என, அப்பாஜி எழுத்தறியாத எனக்கு இராச்சியமேது அப்படி உண்டாகுங்காலத்தில் செய்கிறேன் எனக்கூறினன். சிலநாள் தரித்து அப்பாஜி இராசாங்க உத்தியோகத்தைச் சேர்ந்து ஒரு சிறு அலுவல் பெற்று முறையாக உயர்ந்து அதிக புத்தி நுட்பமுடையவனுய் மந்திரிபதம் பெற்றுத் தனக்குச் செல்வம் வருமென்றவனைத் தேடி ஆதரித்தவன். இவனுக்குச் சாளுவ திம்மராசு அப்பாஜி எனவும் பெயர். இவனைப் பற்றிப் பல சிறுகதைகள் உண்டு.

**அப்பாலுமடிசார்ந்தார்**--தமிழ் நாடொழிந்த மற்ற பாஷைகள் வழங்கும் நாடுகளிலிருந்து சிவத்தியானத்தால் முத்தியடைந்த அடியவர்களின்தொகை (பெரியபுராணம்)

**அப்பாவையர்** — இவர் திருவதிகைவீரட்டான புராணம் பாடியபுலவர்.

**அப்பிரசித்து**—சண்முகசேநாவீரன்.

**அப்பிரதி**—மேருதேவியின் பெண். கிம்புருஷன் பாரி.

**அப்பிரதிட்டம்**—ஒருவித நரகம். இதில் பாபிகள் யந்திரங்களால் திருப்பப்பட்டு இரத்த மாம்சங்களைக் கக்கிக்கொண்டிருப்பர்.

**அப்பிரதிபத்தி**—வாதியானவன், தான் சொன்னதும், பிரதிவாதி சொன்னதும் அறியாதிருப்பது. (சிவ-சித்)

**அப்பிரதிரதன்**—(சங்.) மதிசாரனுக்கு மூன்றும் புத்திரன். கண்வனுக்குத் தந்தை.

**அப்பிரதிஞை** — வாதி சொன்னதற்குத்தானும் அங்கீகரித்திருக்கையும், அதற்கு உத்தரம் சொல்லாதிருக்கையும். (சிவ-சித்.)

**அப்பிரமை**—கிழக்குத்திக்கிலுள்ள பெண் யானை. இதனுண் ஐராவதம்.

**அப்பிராத்தகாலம்** — வாதம் பண்ணுமிடத்து வாதிபஞ்சா அவயவங்களை அடைவில் மாறிப் பிரயோகித்தல். (சிவ-சித்).

**அப்பிராப்தி** — சமன மனைவி.

**அப்பிராப்திசமை**—அடைவின்மையால் எதிர்த்து வருவது.

**அப்பு** — இது அம்புத்தன்மை சாமான்யத்தோடுகூடியது. இரசனேந்திரியம், சரீரம், ஆறு, கடல், பனி, ஆலி, முதலிய உருவமுடையது. நித்தம்; பரமாணுரூபம். (தரு)

**அப்புறுசால்முனி** — ஓர் இருடி.

**அப்புள்ளார்** —இடாம்பி. ஸ்ரீரங்கராஜருக்குக் குமரர். இவர் கல்வி கேள்விகளில் வல்லவராய் இருந்ததுபற்றி அங்கிருந்தார் இவர்க்கு இப்பெயரிட்டனர். நடாதுரம்மாளை ஆச்ரயித்தவர். அம்மாளிடத்தில் காலக்ஷேபஞ் சேவித்திருக்கையில் புறமதத்தவர் வாதத்திற்கு வர அவர்களைவென்று வாதிஹம்ஸாம்புதர் என விருதுபெற்றவர். (குருபரம்பரை).

**அப்பூதியடிகணாயனார்** — இவர் சோழமண்டலத்தில் திங்களூரில் பிராமணகுலத்தில் திருவவதரித்தவர். இவர் திருநாவுக்கரசு சுவாமிகளைக் காணுதிருந்தும் அவரிடத்தில் மிகுந்த அன்புபூண்டு அவர் பெயரையே எல்லாருக்கும் வைத்தழைத்து அவர் பெயரால் தண்ணீர்ப்பந்தல் வைத்திருந்தனர். இவர் செய்திகளைத் திங்களூருக்கு வந்த திருநாவுக்கரசுசுவாமிகள் கேள்வியுற்று அவ்விடத்திலுள்ளாரை இடம் வினவி அவர் சமீபத்திற் சென்று நீர் உம்முடைய பெயரால் தண்ணீர்ப்பந்தல் முதலிய அறச்சாலைகள் வையாமல் வேறொருவர் பெயரால் வைத்தற்குக்காரணம், என்ன என, அப்பூதியடிகள் சமணசமயத்தினின்று நீங்கிக் கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடந்த அத்திருப்பெயரினும் மற்றப்பெயர் விசேடமோ நீர் சைவராயிருந்தும் அறியாது கேட்கிறீர் நீர் யார் என்றார்? அதற்குத் திருநாவுக்கரசு சுவாமிகள் நான் பரமசிவம், சூலைகொடுத்து ஆட்கொண்டவன் என்று கூறக்கேட்டு ஆனந்தக்கடலில் வீழ்ந்து எழுந்து அடிபணிந்து திருவமுதுசெய்ய வேண்டினர். அரசுகள் உடன்பட்டு இருக்கையில் அப்பூதியடிகள் திருநாவுக்கரசுகளுக்கு அன்னம் பரிமாறத் தமது குமாரரையழைத்து வீட்டின் புறத்தில் இருக்கும் வாழையில் ஒரு இலைகொண்டுவர ஏவினர். குமரர் வாழையிலை யறுக்கையில் நாகமொன்று தீண்ட இலையை அறுத்துத் தந்தையாரிடங் கொடுத்து நடந்ததைக்கூறி மரணமூர்ச்சையடைந்தனர். அப்பூதியடிகள் சவத்தை மறைத்துத் திருநாவுக்கரசுகளுக்கு அமுது பரிமாற, அரசுகள் உண்ணுமுன் எல்லாருக்கும் விபூதி பிரசாதிக்க மனத்தில் ஏதோ கவலைகொண்டு உமது மூத்தகுமரன் எங்கேயென, இருகுரவரும் அவன் இப்போது தேவரீர்க்கு உதவான்; தேவரீர் அமுதுகொள்க என, நாயனார் உண்மை கூறுகவெனக் கேட்டு அறிந்து சிவசந்நிதானத்துச் சென்று விஷம் நீங்க "ஒன்று கொலாம்" எனும் திருப்பதிகம் பாடி உயிர்ப்பித்து அமுதுண்டு சென்றனர். இதற்குப் பிறகு சிலகாலம் அப்பூதியடிகள் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவடியைத் தியானித்திருந்து பரமசிவன் திருவடி யடைந்தனர். (பெரியபுராணம்.)

**அப்பையதீக்ஷிதசுவாமிகள்** — இவர், வடமொழியில் வல்ல மகாவித்வான். சிவபக்திமான். இவரிடங் காஞ்சியிலிருந்த தாதாசாரியார் என்பவர் உட்பகைகொண்டு இவரைக் கொல்ல வகைதேடிச் சிவன் விஷமுண்டது நீரும் உண்ணும் பார்ப்போமென விஷமுண்பிக்க அதனை வாங்கிச் சிவார்ப்பணஞ்செய்து உண்டு சலியாதிருந்தவர். அரசன் தீக்ஷிதருக்கும் தாதாசாரியாருக்கும் சால்வைகள் மரியாதை செய்விக்கத் தாதாசாரியர் அதனை வாங்கித் தாம் அலங்கரித்துக்கொண்டிருந்தனர். தீக்ஷிதர் அதனைச் சிவாக்னி வளர்த்தி அதிவிட்டனர். இச்சால்வையைத் தீயிலிட்ட செயலைக் கேள்வியுற்ற தாதாசாரியர் அரசனிடம் நீர் தீக்ஷிதருக்குக் கொடுத்த சால்வையை அவர் அவமதித்துத் தீயில் இட்டுக் கொளுத்தினர் என்று கூறி அரசனுக்குத் தீக்ஷிதர் விஷயத்தில் சற்று மனவெறுப்பு உண்டாக்கினர். அரசன், தீக்ஷிதரைநோக்கி நாம்கொடுத்தசால்வை எங்கே இருக்கிறதென, அதனை நாட் வைக்குமிடத்தில் வைத்தோ மென்றனர். ஆயின் அதனை நான் பார்க்கவேண்டுமெனத் தீக்ஷிதர் உடன்பட்டு அரசனைச் சிவமூர்த்தியின் சந்நிதானத்து அழைத்துச் சென்று சிவமூர்த்தி அணிந்திருக்கக் காட்டினர். அரசன் தீக்ஷிதர் விஷயத்தில் முன்னிலும் அதிக பக்தியுமச்சமுமுடையவனாயிருந்தனன். தீக்ஷிதர் விஷயத்தில் அரசன் அன்புகொண்டிருத்தலைத் தாதாசாரியர் அறிந்து தீக்ஷிதரை வாதத்திற்கு அழைக்க அரசனுக்குக் குறிப்பிக்க, அரசன் அதைத் தீக்ஷிதருக்குத் தெரிவித்தனன். தீக்ஷிதர் மத்தியஸ்தர் வேண்டுமென, அரசன் வியாஸபட்டர், பராசபட்டர், எனும்

இரண்டு மார்த்தவ கவிகளை உருவித்து
மத்தியஸ்தராக்கினன். தாதாசாரியர்,
தீக்ஷிதருடன் எழுநாள் வாதித்துத் தோற்
றனர். இந்த வாதங்களை அறிந்த இரண்டு
மார்த்தவரும் சைவராயினர். இதற்குப்
பிறகு தீக்ஷிதர் இன்னும் பாராயினும்
வாதத்திற்கு உளரோ என, வரநந்தி
யென்னும் புத்தன் வாதிட்டுத் தோற்றனன்.
தோற்றதனால் வெட்கமடைந்த தாதாசாரி
யர் தீக்ஷிதரைக் கொல்ல வகைதேடித்
தீக்ஷிதசுவாமிகள் ஒருநாள் ஆற்றிற்கு
ஸ்நானத்திற்குப்போன சமயமறிந்து
கொன்றுவிட்டுவரச் சிலரையேவ அவர்
கள் அந்தப்படி செல்லுகையில் தீக்ஷித
ரிடம் பலர் சூலபாணிகளாய் நிற்கக்கண்டு
அஞ்சித் தாங்கள் வந்தசெய்தி கூறினர்.
தீக்ஷிதர் அச்செய்தி கேட்டு அந்த இடத்
தில் சிவபிரானிடம் சிவனடியவர்க்குத்
தீங்கு செய்பவரைப்பற்றி முறையிடத்
தாதாசாரியர் இடி விழுந்திறந்தனர் என்
பது தீக்ஷிதவைபவம்.

**அமங்கலநாள்**—நக்ஷத்திரம் காண்க.

**அமணமலை**—சைனர்களிருந்த மலை; இது
மதுரைக்குமேற்கே யுள்ளது; இதிற்
சைனர்களிருந்த குகைகள் பல காணப்படு
கின்றன. (திருவிளையாடல்.)

**அமணன்**—ஒப்பிலாமணிப்புலவரைக்
காண்க. இவன் ஒரு வள்ளல்.

**அமநஸ்கர்**—ஆன்மாக்களின் மனதிற் கெட்
டாது சோதி சுவரூபமாக விளங்குஞ் சிவ
மூர்த்தி.

**அமரகம்**—காமகலை உணர்த்தும் வடநூல்.
சங்கராசாரியரால் இயற்றப்பட்டது.

**அமரகன்** — ஒரு அரசன். இவனது உயிர்
நீங்கிய உடலில் சங்கராசாரியார் புகுந்து
இவன் தேவியிடம் காமகலை பயின்று அம
ரகம் என ஒரு நூல் இயற்றினர். இவனை
மன்மதன் அம்சம் என்பர். இவனுக்கு
நூறு மனைவியர்.

**அமரசிங்**—இரசபுத்ர அரசனாகிய பிரதாப
சிங்கின் குமரன். இவன் சற்றுமந்த நிலை
கொண்டவன். அக்பருக்குப் பின் பட்ட
மடைந்த ஜிஹாங்கீர் இவன்மீது படை
யெடுத்து வருவதறிந்தும் சும்மாவிருக்க
இரசபுத்திரத் தலைவனாகிய ஸலம்ப்ர ராஜ
புத்ரத்தலைவன், பிரதாபசிங்கிடம் வாக்க
ளித்தபடி அமரசிங்கை வலிய சிங்காசனத்
திருந்து இழுத்து யுத்தத்தை நடத்தினன்.
இதில் முகம்மதியர்கள் இரண்டு முறை
தோல்வியடைந்தனர். பின் ஜீஹாங்கிர்
சக்கர் எனும் இராஜபுத்ரனைச் சித்தூ
ருக்கு ராஜா ஆக்கினால் ராஜபுத்திரர் பின்வு
படுவரென்று அவனை அரசனாக்கினன்.
அவன் ரஜபுத்ரன் ஆகையால் தங்கள் முன்
னோர் கோட்டையின் சீர்கெட்ட நிலை
கண்டு பரிதபித்து அமரசிங்கிடம் கோட்
டையை ஒப்புவித்து நீங்கினன்.
ஜிஹாங்கிர் இவனை யழைத்து ஏன் இப்ப
டிச் செய்தாய் என அவன் தன் வாளை
யுருவித் தற்கொலை செய்து கொண்டான்.
இவர்கள் மகம்மதியர்கள் வசமிருந்த ஒந்த
லம் எனும் கோட்டையைப் பிடிக்கச் சண்
டாவதரெனும் ராஜபுத்ரரும் சுக்தாவத
ரென்போரும் போட்டி போட்டுக்கொண்
டனர். கடைசியில் சண்டாவதரே பிடித்த
னர். இதனால் ரோஷமடைந்த சுக்தாவத
ரின் தலைவன், யானையைத் தன்மீது பாயச்
செய்திறந்தான். அமரசிங்கின் பலம்குறை
யும் காலம் வந்தது. இராஜபுத்ர சேனபலம்
குறைவடைந்தது. துருக்கியரின் பலம்
வளர்ந்து வரத்தலைப்பட்டது. இதனால்
மனக்கலக்கமடைந்த அமரசிங் தன் கும
ரனை டெல்லி சக்ரவர்த்தியிடம் அனுப்பி
னன். பிறகுதான் தன் குமரனுக்குப் பட்ட
மளித்துத் துருக்கியனைப் பணியாது நவ
சோகி யென்னுமிடத்தில் தனித்திருந்து
காலத்தைப் போக்கினன்.

**அமரசிங்கமகாராஜா** — இவன் தஞ்சாவூர்
ராஜா என்பர். இவன் தன் பெண்கள்
இருவரையும் ஸ்ரீரங்கத்தில் அரங்கநாயக
ருக்கு விளக்கெடுக்கச் செய்வித்தவன்.

**அமரசிங்கன்**—விக்கிரமார்க்கன் காலத்திரு
ந்த சைநபண்டிதன். வடமொழி நிகண்டு
தன் பெயரால் செய்தவன். (அமரம்).

**அமரசுந்தரி**—பூமி சந்திரன் எனும் அரசன்
மனைவி. புண்ணியராசனை வளர்த்தவள்
(மணிமே [illegible] [மணி).

**அமராபுரம்** -ஒரு [illegible] வதயாதரநகரம். (சூளா

**அமராவதி**—இது தேவேந்திரன் முப்பத்து
முக்கோடிதேவர்கள்சூழ அரம்பைமுதலிய
தேவமாதர்கள் ஏவல்செய்யக் கற்பகத்தரு
சந்தானம், பாரிசாதம், காமதேனு,நவநிதி,
தன்வந்திரி, சசி, உச்சைச்சிரவம், ஐரா
வதம், தேவவிமான முதலிய செல்வங்க
ளுடன் அரசாளுமிடம். பூவுலகத்திற் புண்
ணியஞ் செய்தோர் அடையும் [illegible].

**அமர்** — திரேதாயுகத்தில் [illegible]விற்கு
[illegible] பேர்.

**அமர்க்கன்**—சுக்கிராசாரியின் குமரன்.

**அமர்நீதிநாயனுர்** — இவர் பழையாறைப் பதியில் வணிகர் குலத்தில் அவதரித்துச் சிவனடியவரிடத்திலன்பு பூண்டு அவர்கள் பொருட்டுத் திருநல்லூரில் மடங்கட்டுவித்து அடியவர்க்கு அமுது செய்விக்கையில் சிவமூர்த்தி இவரது அன்பை உலகத்தவர் அறிய ஒரு பிரமசாரி உருவமாக எழுந்தருளி "நாம் நித்தியகன்மம் முடித்து வருகிறோம், இந்தக் கோவணத்தைப் பத்திரப்படுத்திவைக்க"வெனக் கட்டளை தந்து சென்றனர். நாயனுர் வீட்டிலதைப் பத்திரப்படுத்திவைக்கச் சிவமூர்த்திமாயையால் அதை மறைத்தனர். சிவமூர்த்தி சற்றுப்பொறுத்து ஸ்நானமுடித்து மழையில் நனைந்து அடியவரிடம் வந்து முன் தாம் கொடுத்துவிட்டுப்போன கோவணத்தைக் கேட்டுப் பெருது "வேறொன்று தருகிறே"னென அடியவர் கூறக் கோபங்கொண்டவர்போல் அடியவரைப் பார்த்து "நான் முன் கொடுத்த கோவணத்திற்கொத்த கோவணம் என்னிடத்தில் மற்றொன்று இருக்கிறது அதற்குத் தகுந்தது உன்னிடம் உள்ளதேல் நிறுத்துத் தருக" வெனக்கேட்டுத் தமது கோவணத்தை நிறையிட வைத்தனர். நாயனுர் தம்மிடமிருந்த புதிய கோவணமொன்றை நிறையிடவைக்கச் சரிவராமைகண்டு தம்மிடம் இருந்த உடைகளையும் பொருள்களையும் மற்றவைகளையும் வைத்து இடையொவ்வாமைகண்டு கடைசியாகத் தாமும் மனைவி மைந்தருடன் துலையேறித் தேவர்பூமாரி பொழியத் துலையே விமானமாகச் சிவபுரஞ் சென்றவர். (பெரியபுராணம்.)

**அமாத்தியன்** — காலமிடங்களை நன்ருக அறிந்தவன். (சுக்கிரநீதி.)

**அமாவசு** — புரூரவன் குமரன்.

**அமாவடம்** — ஒரு பாம்பு.

**அமாவாஸ்யை**—அச்சோதையைக் காண்க.

**அமிதத்துவசன்** — காண்டிக்கியன் தந்தை.

**அமிததேசன்**—அருக்ககீர்த்தியின் மகன் (சூ)

**அமிதாசுவன்** — இக்ஷ்வாகு வம்சத்தவன்.

**அமிதோசன்**—திரைப்புறமென்கிற நகரத்து அரசன்.

**அமித்தி** — 1. திருதராட்டிரன் குமாருள் ஒருவன்.

2. (சூ.) சுதபஸ்து என்பவனுக்குக் குமரன்.

**அமித்திரன்**—ஒரு முனிவன். இவன் பொருட்டு வருஷத்திற்கொருமுறை பழுக்கும் நெல்லிக்கனியை அருச்சுநன் திரௌபதி சொற்கேட்டு எய்துகொடுத்து மீண்டும் கண்ணனருளாலதைப் பொருந்தச் செய்தனன். (பாரதம்.)

**அமிர்தகண்டன்** — குடிமிக்குயவர்க்கு முதல்வன். (குலாலபுராணம்).

**அமிர்தகவிராயர்** — பொன்னங்காலிற பிறந்த சைவவேளாளர். கவிபாட வல்லவராய்த் தளவாய் இரகுநாதசேதுபதி என்னும் சிற்றரசன் சமஸ்தான வித்துவானுயிருந்து ஒருநாள் அச்சமஸ்தான வித்வான்களைச் சேதுபதி "நீவிர், ஒரு துறையாக எத்தனை கோவைபாடவல்லீர்"களென அவர்கள், ஒவ்வொருவரும் நான் அறுபது, எழுபது எனப் பலவாறுகூற இவர் "நான் நூறு பாடவல்லே"னெனச், சொன்னயத்தால் அரசனும் வித்வான்களும் "நீர் நானூறு பாடவல்லீரோ"வென "அது வென்ன பொருட்டா"வென நானூறு செய்யுட்களடங்கிய நாணிக்கண் புதைத்தல் துறையில் கோவை பாடியகவி. இரகுநாத சேதுபதிமீது அப்பெயர் கொண்ட கோவைபாடிப் பரிசுபெற்றவர். இவர் காலம் (௨00) வருஷமிருக்கலாம்.

2. இவர் ஒருதுறைக்கோவை பாடிய அமிர்தகவிராயரின் வேறு இவர் இருக்கைதொண்டைமண்டலத்துப் பாலூர் போலும். கோகுலசதகம் பாடியவர்.

**அமிர்தகிரணன்** — சந்திரன்.

**அமிர்தசாகரம்** — பிரதாபசிங்கன் செய்த வைத்தியநூல்.

**அமிர்தபிரபாஸ்** — எட்டாவது மன்வந்தரத்துத் தேவர்.

**அமிர்தபிரபை** — சயம்பிரபை என்பவளுக்குத் தோழி. (சூளாமணி.)

**அமிர்தமதனம்** — கிருதயுகத்தில் தேவர்களும் அசுரர்களும் பாற்கடலில் மந்திரத்தை மத்தாக நாட்டி வாசுகியைத் தாம்பாகப் பூட்டி இருகூட்டத்தாரும் இரண்டு பக்கத்திலிருந்து பாற்கடலைக் கடைந்தனர். அந்தக் காலத்தில் மந்திரம் நிலையாதிருந்ததனுல் விஷ்ணு ஒரு கையால் அதனை அசையாமலழுத்தியும் கூர்ம உருக்கொண்டும் தாங்கினர். இதில் தேவாசுரர் சலிக்க விஷ்ணு இழுப்பவரில் தாமும் ஒருவராயிருந்து இழுத்தனர். இத் தொழிலாற் கடலிலிருந்து விஷமுண்டாயிற்று. அதைக்

கண்டு தேவர் முதலியோர் அஞ்சியோடிச் சிவமூர்த்தியை வேண்ட அதனைச் சிவமூர்த்தி யுண்டு நீலகண்டன் எனப் பெயரடைந்தனர். (அந்த விஷத்தை விஷ்ணு உண்டு மிருந்ததைச் சிவனுக்குக் கொடுத்தனர் என்பர் வைணவர். அதனை உண்ணப் போகையில் விஷச்சுவாலை பொறுக்காது உடல் கறுத்துத் திரும்பினர் என்பர் சைவர்). பின்பு தேவாசுரர் கடைகையில் அக்கடலினின்றும் திருமகள், இந்திராணி, சந்திரன், உச்சைச்சிரவமெனுங் குதிரை, ஐராவதம், கௌத்துவமணி, ஐந்தருக்கள், காமதேநு, தன்வந்திரி, வாருணி, தேவமாதர், அமுதகலசம் பிறந்தன. பிறந்தவைகளில் திருமகள், கௌத்துவமணி, இவ்விரண்டினையும் விஷ்ணுமூர்த்தியும், காமதேநுவினை இருடிகளும், வாருணியை அசுரரும், மற்றவைகளைத் தேவ இந்திரனும் கிரகித்தனர். அமிர்தத்தின் பொருட்டுத் தேவாசுரர் யுத்தஞ் செய்யுங் காலத்தில் விஷ்ணு, மோகினி யுருக்கொண்டு அதனைத் தேவருக்குப் பரிமாறுகையில் இராகு கேதுக்கள் தேவவுருவால் அதைக் கிரகிக்க அதனைச் சூரிய சந்திரர்களால் அறிந்த விஷ்ணுமூர்த்தி சக்கிரத்தால் அவர்களைச் சேதித்தனர். மேற்சொன்ன இந்திரனது செல்வங்கள் பலமுறை தூர்வாசர் முதலிய இருடிகள் சாபத்தால் கடலில் ஒளிக்கத் தேவர்கள் பலமுறை கடலைக் கடைந்தனர் என்று புராணங்கள் கூறும். அந்தக் காலங்களில் பலமுன்னவர்களாகிய பலர் தேவர்களுக்கு உதவியாகக் கடைந்தனர் என்பர். ஒருமுறை வாலி, கார்த்தவீரியார்ச்சுநன் முதலியவர் உதவி செய்தனராம். (பாகவதம்).

**அமிர்தலிங்கசுவாமிகள்** — இவர் திருவண்ணாமலை ஆதீனத்தவர். திருமயிலைப் புராணம் பாடியவர்.

**அமிர்தஸரசு** — இது சீக்கியருடைய குருவாகிய இராமதாசரென்பவரால் (கி-பி 1581) இல் வெட்டப்பட்ட ஒரு குளம். இது (௫௦௦) அடி சதுரமாய் எவ்வளவு ஜனங்கள் நீராடினும் கலங்காததாயிருக்கிறது. இது, பாஞ்சாலதேசத்து வைதிக நகரம். சீக்கியருக்குமுக்கியமானது. [மணி]

**அமிழ்துபதி** — ஒரு வித்யாதர நகரம். (சூளா

**அமுசன்** — பிரமன் புத்திருள் ஒருவன். நைட்டிக பிரமசரிய மநுட்டித்த இருஷி.

**அமுதகடகன்** — இராகுவின் குமரன்.

**அமுதகடிகை** — பரணி, மிருகசீரிடம், பூரம், இவற்றுக்கு முப்பதின்மேலும், பூசத்துக்குப் பதினொன்றின் மேலும் அச்சுவினிக்கிருபத்தொன்றின்மேலும் கார்த்திகைக்கு ஐம்பதின்மேலும், திருவாதிரை, ஆயிலியம், இவற்றுக்கு நாற்பதின்மேலும், பூராடம், பூரட்டாதி இவற்றுக்குப் பத்தின்மேலும், அத்தத்துக்கு எழின்மேலும், உத்திரட்டாதிக்குப் பதினெட்டின் மேலும், சோதிக்கு இருபத்திரண்டின் மேலும், இரேவதிக்குப் பன்னிரண்டின் மேலும் அடைவே (௪) நாழிகை யமிர்தகடிகையாம் (விதான மாலை).

**அமுதகடிகை** — அனுடம், மூலம், உத்திராடம், அவிட்டம், புநர்பூசம், உரோகிணி, இவற்றுக்குப் பதினலின் மேலும், சித்திரைக்குப் பதினறின்மேலும் கேட்டைக்கு முப்பத்தொன்றின்மேலும், விசாகம், திருவோணம், மகம், சதயம், இவற்றுக் கிருபதின்மேலும், உத்திரத்துக்கு முப்பத்துமூன்றின் மேலும் அடைவே (௪) நாழிகை யமிர்தகடிகையாம்.

**அமுதகதிர்** — சூர்யகிரணத்திலொன்று.

**அமுதக்கோடி** — முருகக்கடவுளை நாயகராகப் பெறச் சரவணப்பொய்கையில் தவமியற்றிய சத்தி.

**அமுதசாகரர்** — தமிழ்ச் செய்யுள் இலக்கணத்தை உறுப்பியல், செய்யுளியல், பொதுவியல் என மூன்று உறுப்படக்கிய பிண்டமாக்கிக் கட்டளைக் கலித்துறையால் காரிகையெனப் பெயரிட்டுச் செந்தமிழ்ப் புலவருக்கு உதவியவர். இவர் சைநசமயத்தவர் (இவரைக் குணசாகரர் "பண்டையோருரைத்த தண்டமிழ்யாப்பிற் கொண்டிலா தகுதியினோரைக் குறிக்கொள்ளுதல் காரணமாகச் செய்யப்பட்ட நூலுடையார் என்பர்).

**அமுதசுரபி** — தென் மதுரையில் கலாகிய மத்துள்ள சிந்தாதேவியால் ஆபுத்திரனுக்குக் கொடுக்கப்பட்ட தெய்வத்தன்மையுள்ள பாத்திரம். இது எடுக்கக் குறையாத அன்னமுடையது. இது, சிலநாள் ஆபுத்திரன் கையிலிருந்து பலவுயிர்களுக்குப் பசியொழித்து மணிப் பல்லவத்துற்ற கோமுகி யெனும் பொய்கையில் அவனுவிடப்பட்டு மணிமேகலையிடம் வந்து பல உயிர்களின் பசியையும் காயசண்டிகையின் தீராப்பசியையு மொழித்து அவரின்

பஸ்மக வியாதியையும் போக்கியது (மணிமேகலை).

**அமுதந்தி**—ஒரு இருடி, மானுருக்கொண்டு மனைவியுடன் புணருகையில் பாண்டுவால் எய்யப்பட்டுப் பாண்டுராஜனுக்கு நீ இனி உன மனைவியைச் சேர்கையில் இறக்க வெனச் சாபமளித்தவன். (பாரதம்)

**அமுதபதி**—இரவிவன்மன் தேவி. இவள் குமரியர் தாரை, வீரை, இலக்குமி (மணி).

**அமுதனூர**—திருவரங்கத்த முதனுரைக் காணக.

**அமூர்த்தசாதாக்யம்**—சாந்தியெனும் பெயரையுடைய ஆதிசக்தி, அருபியாதலால் அமூர்த்தியெனும் பெயரடைந்து, வடிவறுதி ஆதலால் விகற்பமான கலைகளுக் கப்பாற் பட்டு, துணுகாரமான லிங்கமாய், கோடிசூர்யப்ரகாசமான லிங்கத்தி னடுவே காண்டற்கரிய வடிவைக் கற்பித்திருப்பது.

**அமெரிந்தியர்**—கொலம்பஸ் முதல் முதல் அமெரிக்காவைக் கண்டு பிடித்தபோது அதனை இந்தியாவென எண்ணி அதிலுள் ளாரை இந்தியர் என்றான். பிறகு இந்தியருக்கும் அப் பெயருள்ளதால் அவர் களை வேறறிய அமெரிந்தியர் என்றனன். (Amerinds).

**அமோகன்**—1. சூரனுக்கு முதல் மந்திரி.

2. சணமுகசேனாவீரன்.

**அமோகவருஷன்** — தொண்டைமண்டலத் தில் அரசிருந்த சைநஅரசன்.

**அமோகை**—சிவசூர்யனிடம் அமருஞ் சிவ சத்தி.

**அம்சகம்** — மேருவின் வடக்கின்கணுள்ள ஒரு மலை.

**அம்சர்** — திரேதாயுகத்தில் விஷ்ணுவிற் கொரு பெயர்.

**அம்சகன்**—குனி புத்திரன்.

**அம்சகீதை** — பிரமன் அன்ன உருவமாய் இருடிகளுக்குக் கூறிய ஞான நூல்.

**அம்சத்துவசன்**—(சந்.) ஒரு அரசன். இவ னது குமரன் சுவசலன்.

**அம்சன்**—1. வசுதேவருக்கு ஸ்ரீதேவியிடம் உதித்த மூன்றாங் குமரன்.

2. சராசந்தனுக்குச் சிநேகன். மகாபரா க்கிரமசாலி. பலராமனால் (கள)-ஆம் நாள் பாரதயுத்தத்தில் மூர்ச்சை யடைந்தவன்.

3 ஒரு காந்தருவராசன்.

4 ஞானப்பியாச நிஷ்டையாக்கிய சந் ந்யாசி

5. இடிசிகனைக் காண்க.

6. கஸ்யபபுத்ரன், தாய் அதிதி. (பார)

7. அரிஷ்டையின் புத்திரனான கந்தர் வன். இவனே திருதராஷ்டிரனாகப் பிறந் தவன். (பாரதம் - ஆதிபர்வம்.)

**அம்சி**—ஒரு அரசன். அம்சர் எனப்படும் யோகியரை வசப்படுத்தி வைத்துக்கொண் டிருந்தவனாதலால் இவனுக்கு இப்பெயர் வந்தது.

2. பகீரதன்புத்ரி. கௌசரிஷியின் பாரி யை. (பாரதம் - அநு.)

**அம்சு**—புருகோத்ரன் குமரன்.

**அம்சுமான்**—1. (சூர்.) அசமஞ்சன் குமரன். இவன் குமரன் திலீபன். சகரன் பௌத் ரன் (பாரதம் - ஆதி பர்வம்).

2. (க்ஷத்.) திரௌபதியின் ஸ்வயம்வரத் திற்கு வந்தவன். (பாரதம்).

3. (க்ஷத்) பாண்டவருக்ஷத்தவன் போஜ வம்சத்தவன், துரோணாசார்யனால் கொல் லப்பட்டவன். (பாரதம் கர்ணபர்வம்).

**அம்சுமாலி**—ஒரு சூரியன். இவனுக்கு ஆறு முகம் பன்னிரண்டு கைகள் சிவப்புவர்ணம், இரண்டு கைகளில் இரண்டு கமலங்கள், தோமரம், வாள், பட்டயம், கேடயம், பாசம், அங்குசம், சத்தி, வேதாளம், அப யம், வரதம் இவற்றை வல இடக்கராங் களில் கொண்டிருப்பன்.

**அம்பட்டன்** — வைசியப்பெண் பிராமண னைக் கூடிப் பிறந்த குமரன். பிராமணன் சூத்திரப்பெண்ணைக்கூடியும், அரசன் வைசியப் பெண்ணைக்கூடியும் பிறந்தவன் என்பர். இவனுக்குப் பரிகாரி யெனவும் பெயர். இவன் தொழில் கிராமத்தில் தலைசிறைத்தலும் வைத்யம்செய்தலுமாம்; பெண்கள் மருத்துவத்தொழில் செய்வர். இவ்வகுப்பினர் ஜகந்நாதத்தில் பெருமா ளுக்கு நிவேதனம், பூஜை முதலிய செய்கி றார்கள். சேலம் ஜில்லாவில் கொங்கு வேளாளர் கல்யாணத்தில் இவர்கள் கல் யாணப் பெண்ணுக்கு மங்கலநாண் தரிக் கின்றனர் என்பர். இவர்கள் எல்லாச் சுபாசுபகாரியங்களுக்கு உரியவர்கள். (தர்ஸடன்).

**அம்பரன்**—திதிபுத்திரனாகிய அசுரன்.

**அம்பர்**—1. சோணாட்டிலுள்ள ஓர் ஊர்.

2. தஞ்சாவூர்க் கல்வெட்டுகளில் கூறப் பட்டிருக்கிற சிவஸ்தலம்.

3 திவாகர மியற்றுவித்த ஒரு சிற்றர சு.

4. ஓர் மரப்பிசின். இது அஸ்ஸாம், சீனு, ஜபான், இந்தியாவில் தக்கன், திருவாங்கூர் முதலிய இடங்களில் அகப்படும் மருந்துச்சரக்கு.

**அம்பர்கிழானருவந்தை** — கலலாடரால் பாடப்பெற்ற வள்ளல், திவாகரரால் திவாகரத்துள் புகழப்பட்டவன். இவனுக்கு அருவந்தையெனவும் பெயர். (புற - நா.)

**அம்பர்மாகாளம்** — அம்பன், அம்பாசுரன் எனும் அசுரர் இருவர்களைக் காளி கொலை செய்த, பாவம்நீங்கப் பூசித்த சிவஸ்தலம். (வீரசிங்காதன புராணம்).

**அம்பரீஷன்** — 1. (சூ.) நபாகன புத்திரன். இவன், விஷ்ணுவை எண்ணித் தவம் புரிய விஷ்ணு இந்திரனுருக்கொண்டு எதிர்வர அரசன் உம்மை நினைந்து தவம் புரியவில்லை உமது பதஞ்செல்க என, விஷ்ணுமூர்த்தி தம்முருக்காட்ட மகிழ்ந்து பலவரம் பெற்றவன். இவன் பெண் ஸ்ரீமதி. இவன் அரண்மனையில் ஸ்ரீ சைல முனிவனை விஷ்ணு அபகரித்தனர். இவன், இந்திரனுடன் ஒரு ஆசனத்திருந்தவன். இவன் சேனாபதி, சுவேதன். பருவதன், நாரதன் இவ்விருவரும் ஸ்ரீமதியை விரும்பி, இவனிடஞ்சென்று விஷ்ணுமாயையால் அவளை இழந்து கோபத்தால் அந்த சாபத்தையேவ அதை விஷ்ணு கொடுத்த சக்கிரத்தாற் காத்துக்கொண்டவன். இவன் ஒருகாலத்தில் யாகப்பசுவை இழந்ததனால் அப்பசுவிற்குப் பதில் நரப்பசுகொள்ள எண்ணி இருசிகன் குமாரனாகிய சுனச்சேபனை விலைகொடுத்து வாங்கிச் செல்லுகையில் சுனச்சேபன் விச்வாமித்திரரிடம் நடந்தது கூற, விச்வாமித்திரர் அவனுக்கு மிருத்யுஞ் ஜப மந்திரம் உபதேசித்து அனுப்பினர். சுனச்சேபன் யாகத்தில் மந்திரத்தைச் செபிக்கத் தேவர் அரசனைக் கண்டு நாங்கள் அவிபெற்றோமெனக் கூறி இப்புதல்வனைக் காத்தனர். இவன் ஏகாதசி விரதம் அநுஷ்டித்து முடிவில் அறுபது கோதானஞ் செய்து துவாதசியில் பாரணை செய்ய இருக்கையில் துருவாசர் அதிதியாகவந்து அன்னம்வேண்ட அரசன் களிப்புற்று வருகவென்றனன். முனிவர், காளிந்தி நதிசென்று தீர்த்தமாடுகையில் அரசன் துவாதசி கடத்தலை எண்ணிப்பயந்தவனாகிச் சலபானஞ் செய்தனன். தம் கருமம் முடித்துத் திரும்பிய முனிவர், அரசன் செய்கையறிந்து கோபித்துத் தம்மை அவமதித்துச் சலபானஞ்செய்த அரசனைக் கொல்ல எண்ணித் தமது சடையிலொன்றைக் கோபத்துடன் பூமியிலெறிய அதினின்றும் ஒரு பூதமுண்டாகி அரசனை எதிர்க்க அரசன் அதை விஷ்ணு சக்கிரத்தாற் கொன்றனன். பிறகு சக்கிரம் முனிவரைத் துரத்த, முனிவர், திரிமூர்த்திகளிடஞ் சென்றும் விடாமை கண்டு அரசனை அடைக்கலம் புகுந்து வேண்ட அரசன் சக்கிரத்தை வேண்டிக் கொல்லாது காத்தனன். முனிவர் பயநீங்கி அரசனை ஆசீர்வதித்தனர். இவன் குமரர் விருபன், கேதுமான். இவனது சரித்திரத்தைப் பருவதனைக் காண்க. (பாகவதம்).

2. இக்ஷ்வாகுவம்சத்து மாந்தாதாவின் குமரன். இவன் குமரன் யவனாச்வன்.

3. ஓர் அரசன். இவன் குமரன், சிந்துத்வீபன்.

**அம்பலக்காரர்** — மறவர் கள்ளர்களில் தலைவர். இவர்கள் தெலுங்கு நாட்டு முத்திரியரை யொத்தவர்கள். இவர்களுக்கு விதவா விவாகம் உரித்து. இவர்களுக்குச் சேர்வைக்காரர் எனவும், மீளவராயர், முதாரசர், வன்னியர், எனவும் பட்டமுண்டு. இவர்கள் கண்ணப்பர் சந்ததியென்பர். ஒவ்வொரு அம்பலக்காரனுக்கும் ஒரு வேலைக்காரன் உண்டு. அவன் குடிப்பிள்ளை. (தர்ஸ்டன்).

**அம்பலவாசிகள்** — இவர்கள் மலபார் நாட்டில் கோயில்வேலை செய்பவர்கள். இவர்களில் புதுவரல், சாக்கியர், நம்பியாசான், பிடாரன், பிசிரோதி, வாரியன், நம்பி, தெய்யம்பாடி, புஷ்பகன், பூப்பள்ளி, அடிகள், நம்பிடி, பிளப்பள்ளி, நாட்டுப்பட்டம், தையாத்துணி, குருக்கள், எனப பல வகுப்புண்டு. இவர்களிற் சிலர் கோவில் வேலை செய்யாமலும் இருக்கின்றனர். (தர்ஸ்டன்).

**அம்பலவாணக்கவிராயர்** — 1. சதுரகிரி அறப்பளீசுரரை முன்னிட்டு அறப்பளீசுர சதகமெனும் நீதிநூல் பாடியகவி. அருணசலக்கவிராயர் குமரர்.

2. இவர் மருதூரிலிருந்த கவிவல்லவர். ஆதித்தபுரி புராணம் பாடியவர்.

**அம்பலவாணதேசிகர்** — பண்டார சாத்திரத்தில் பதினொன்றாகிய அதிசயமாலை, உபதேசவெண்பா, உபாயநிட்டைவெண்பா, உயிரட்டவணை, சன்மார்க்கசித்தியார், சித்தாந்தசிகாமணி, சித்தாந்த பஃறொடை,

சிவாச்சிரமத்தெளிவு, தசகாரியம், நமச்சிவாயமாலை, நிட்டைவிளக்கம் இயற்றியவர்.

**அம்பலவாணபண்டிதர்** — இவர் யாழ்ப்பாணத்து வித்வான்களில் ஒருவர். தமிழ் வல்லவர். இவர் கோப்பாய் அருளம்பல முதலியாருக்கு மைந்தர். சேனாதிராய முதலியாருக்கு மாணவகர். வேளாளர். சைவசமயத்தவர். காலம் இற்றைக்கு (கூஎ) வருடங்களுக்குமுன் என்பர். இவர் நூல்கள் ஒன்றுஞ் செய்திலர்.

**அம்பஷ்டதேசம்** — உசீநரன் குமரன் நிருமித்த தேசம்.

**அம்பா** — 1. காசியரசன் குமரி.
2. ஒரு சத்தி.

**அம்பாலிகை** — அம்பிகையைக் காண்க.

**அம்பிகா** — ஒரு மாயாதேவி.

**அம்பிகாபதி** — கம்பநாடர் குமரர். இவர் கம்பர் அருளிய இராமாயணத்திற்குச் "சம்பநாடன்னுமைசெவி" எனும் சிறப்புப்பாயிரங் கூறினர் என்பர். இவர் ஒருநாள், நிலவில் அரசன் அரண்மனை வழியாகச் செல்லுகையில் உப்பரிகைமீதிருந்த அரசன் புத்திரியைக் கண்டு "பூவாச நிழலிலே புத்நிலாத்தனில்" எனுஞ் செய்யுளைப்பாட அரசகன்னிகை அரசனிடங் கூற அரசன் அம்பிகாபதியை அழைத்துக் கேட்க அம்பிகாபதி அரசனுக்கு அக் கவியை மாற்றிப்பாடித் தப்பினர். பின்பு அரசகுமரி, இவரது கவிவன்மையையும் வனப்பையுங் கண்டு மயல்பூண்டு வாயில்களால் வருவித்துக் களவிற்புணர்ந்து வருவதை மந்திரியறிந்து அரசனுக்குக் குறிப்பித்தனன். அரசன், புலவர்க்கு விருந்திட்டுக் களவுகாண எண்ணிப் பல புலவர்களை வருவித்துத் தன் குமரியைப் பரிமாறச்செய்ய அம்பிகாபதி, அரசகுமரி அடிவருந்தி வருவதைச் சகியாதவராகி "இட்டடிநோவ எடுத்தடி கொப்புளிக்க வட்டில் சுமந்து மருங்கசைய" எனும் இரண்டடிகளைக் கூறியதை அருகிருந்த தந்தையாராகிய கம்பநாடர் கேட்டு மோசம் வந்ததென்று மற்ற இரண்டடிகள் முடியுமுன் "கொட்டிக், கிழங்கோ கிழங்கென்று கூறுவாளுவில், வழங்கோதை வையம் பெறும்" என்று முடித்தனர். இதைக் கேட்ட அரசன் முதலியோர் சந்தேகித்து வினவியதற்குக் கம்பர் சரஸ்வதி தெருவில் கிழங்கு விற்றுச் சென்றனள் அதனைக்கேட்ட அம்பிகாபதி கூறினன் எனப் பிரத்தியக்ஷத்திற் காட்டி ஐயம் நீக்கினர். பின்பு அரசன் மந்திரி சொல்லால் அம்பிகாபதிக்குச் சந்தனம் பூசி இராஜகுமரியிடம் முத்துச்சுன்னம் பெற்றுவர ஏவ அவ்வகைசென்று அரசகுமரியால் தழுவப்பெற்றுச் சின்னங்களுடன் வந்ததைக் குறிப்பாலுணர்ந்து நீர், பேரின்பம்பட (௧00) செய்யுட்களைப் பாடின் என் குமரியை உமக்குத் தருவன் அன்றேல் கொலைபுரிவன் என, உடன்பட்டு (௧௧) செய்யுட்கள் பாடி முடித்து ஒரு செய்யுள் பாடத் தொடங்குகையில் அரசிளங்குமரி இதைக் கேட்டிருந்து விநாயகர் வணக்கமுட்பட (௧௦0) செய்யுட்கள் முடிந்தனவெனக் களித்துப் புலவரையெட்டிப் பார்க்கப் புலவர் அவளைப் பார்த்து "சற்றே பருத்த தனமே குலுங்கத் தாளவடந், துற்றேயசையக் குழையூசலாடத் துவர்கொள் செவ்வாய், நற்றேனொழுக நடனசிங்கார நடையழகின், பொற்றேரிருக்கத் தலையலங்காரம் புறப்பட்டதே" எனும் செய்யுளைப்பாடி அரசனால் கொலையுண்டனர் என்ப. இராஜகுமரியும் துக்கமேலீட்டால் இறந்தனள் என்பர். இவர், தம்பெயராற் செய்த கோவை அம்பிகாபதிக்கோவை யெனப்படும். இவர் குமரர் தண்டி யென்பர் "அருளம்பிகாபதி பொன்னடித் தாமரை சூட்டியகப், பொருளம்பிகாபதிகம் புனைந் தேனிப்புனைந்த செஞ்சொல், தெருளம் புலவர்முன் செப்பியபோதுளதப்புரையார், மருளுங்குழவி மழலைக் கொன்னே பொருண்மற்றிங் கன்றே" இது, இவர் தம் கோவையினவையடக்கம் (அம்பிகாபதிக்கோவை). இப் பெயர்கொண்ட மற்றொருவர் ஒட்டக்கூத்தர்க்கு மாணுக்கராக இருந்திருக்கலாமென்பது "ஏகாவடம்" என்ற செய்யுளால் தெரிகிறது.

**அம்பிகை** — 1. பரமேச்வரி.

2. காசியரசன் பெண். இவள் அம்பாலிகையின் உடன்பிறந்தவள். இவ்விருவரையும் பீஷ்மாசாரியர் காசியரசனிடம் பெற்றுக்கொண்டு விசித்திரவீர்யனுக்கு மணஞ் செய்வித்தனர். இவ்விருவரும் விசித்ரவீர்யனுக்குப் பிறகு சத்தியவதி பின் கட்டளையால் வியாசரைக்கூடித் திருதராட்டிர பாண்டுக்களைப் பெற்றவர்கள். (பாரதம்)

3. பவன் எனும் ஏகாதசருத்ரன் தேவி.

**அம்பிகைபாகர்** — இவர் யாழ்ப்பாணத்து இணுவில் பிறந்த சைவவேளாளர். தமிழ் வல்லவர். இணுவையந்தாதி இயற்றியவர்.

**அம்புசழனி**—குலாலகுரு. தேவி உதபதி. இவர் சுவாயம்பு மனுவென்பர் குலாலர். (குலாலபுராணம்).

**அம்புதாரை**—ஆயுஷ்மனுவின் தேவி.

**அம்பை**—1. ஒரு நதி. உயிர்கள் மழையிலாது வருந்தியகாலத்தில் பார்வதி பிராட்டி நதியுருக்கொண்டு வந்தனள் என்பர். இருடிகள் மாமரவுருக்கொண்டு இதன் கரையில் தவஞ்செய்ததால் இதற்கு ஆம்பிராநதி யெனவும் பெயர்.

2. பார்வதி

3. காசியரசன் பெண். இவள் சகோதரிகள் அம்பிகை, அம்பாலிகை. இவர்களின் பருவகாலத்தில் இவர்களின் தந்தை சுயம்வரம்நாட்ட பீஷ்மர், சாளுவன் முதலாயினரைத் துரத்தி மூன்று கன்னியரையும் வலிவிற்கொண்டு தம் தம்பியாகிய விசித்ரவீர்யனுக்கு மணக்கப்போகையில் அறிவோர், முன்பே அம்பை அவள் தந்தையாற் சாளுவனுக்குக் கொடுக்கப்பட்டாளாகையால் அவள் ஒழிந்த இருவருமே மணக்கத்தக்கவர்கள் என்றனர். அதைக் கேட்ட வீஷ்மர்,அவளைச் சாளுவனிடம் அனுப்பினர். சாளுவன், ஒருவன் வலிவிற்கொண்ட உன்னை நான் மணக்கேனென்று மறுத்தனன். என்னை இவ்வகைசெய்த உன்னை உயிர்போக்குகிறேனென்று தவஞ்செய்து காளி வரத்தால் துருபத தேசாதிபதியாகிய இராஜசேநனிடம் சிகண்டியெனும் பெயருடன் பிறந்து பத்தாநாள் பாரதயுத்தத்தில் பீஷ்மரை மாய்த்தவள். (பாரதம்).

**அம்பை, விருத்தை**—இவ்விருவரும் சமற்கான் என்னும் அரசன் குமரிகள். இவர்கள் மணப்பருவம் அடைந்து இரண்டரசர்களை மணந்தனர். அரசர் இருவரும் யவனதேசத்தாருடன் போரிட்டு மாண்டனர். அதனுல் இவ்விருவரும் சத்தியை எண்ணித் தவம்புரிந்து அவள் பிரசன்னமாகப் பகைவரை வென்று சித்தி அடைந்தவர்கள். இரண்டு சத்திகள்.

**அம்போதரங்கம்**—இது, கலிப்பாவின் உறுப்புக்களில் ஒன்று. இது நாற்சீரடியாகிய ஈரடியாலிரண்டும், ஒரடியானுன்கும், முச்சீரடியாலெட்டும், இருசீரடியால் பதினுறுமாக வருவது.

**அம்போதரங்க வொத்தாழிசைக்கலிப்பா**—வண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவில் அராகம் ஒழிய வருவது.

**அம்போருதன்**—விஸ்வாமித்திரபுத்திரன்.

**அம்மங்கிப்பெருமாள்** — எழுபத்திநான்கு சிங்காசனுதிபதிகளில் ஒருவராகிய வைணவாசிரியர். (குருபரம்பரை).

**அம்மங்கியம்மாள்**—உடையவர் திருவடி சம்பந்தி.

**அம்மங்கியாண்டான்** — எழுபத்திநான்கு சிங்காசனுதிபதிகளில் ஒருவராகிய வைணவாசிரியர். உடையவர்க்குப் பாலமுது காய்ச்சும் கைங்கர்யம் மேற்கொண்டவர். (குருபரம்பரை).

**அம்மணியாழ்வான்**—பட்டர் திருவடிகளை ஆச்ரயித்தவர்.

**அம்மள்ளனார்**—மள்ளனார் எனப் பலபேர் உளராதலால் அவர்களினின்றும் வேறுபடுத்த இவர் அம்மளனாரெனப்பட்டார் போலும். இவர் குறிஞ்சித்திணையைப் பாடியுள்ளார். இவர் பாடலில் முருகவேளும், வள்ளியம்மையும் உவமிக்கப் பட்டுள்ளனர்; தலைமகன் தலைமகளை அழைத்தல் மிக்க இனிமை யுடையது. இவர் பாடியது நற். (அஉ)-ஆம் செய்யுள்.

**அம்மவ்வை**—பெச்சமாதேவியைக் காண்க.

**அம்மூவனார்** — மூவன் என்பது இவர் இயற்பெயர். அடைமொழி புணர்த்தி அம்மூவனாரெனப்பட்ட தென்று எண்ணலாம். ஆயினும் இவர் பாடலில் மேலைக் கடற்கரையின்கணுள்ள தொண்டி, மாந்தை முதலாய சேரநாட்டு ஊர்கள் சிறப்பித்துப் பாடியிருப்பதுபற்றி இவர் சேரநாட்டு மேலைக் கடற்கரையிலிருந்தவரென்று கருதற்கிட மிருத்தலாலும், இக்காலத்தும் அந்நாட்டில் அம்மு, திம்மு, திப்பு என்னும் பெயர்கள் மக்களுக்கிடப்பட்டு வழங்கி வருதலாலும், இவரது இயற்பெயர் அம்மூவென்றுமிருக்கலாம். இவர் பாடியவற்றுள் அகம்(கூ௯)-ஆஞ் செய்யுளொன்றுமே பாலைத் திணையாகவும், ஏனையவெல்லாம் நெய்தற்றிணையாகவும் காணக்கிடத்தலின் இவர் நெய்தனிலவளத்தைச் சிறப்பித்துப் பாடுதலில் வல்லவராவர். நற்றிணையில் (எசு) - ஆஞ் செய்யுளைப் பாலைத் திணையிற் பாடத்தொடங்கியவர், கிளவித் தலைவியை நெய்தனிலத்தினளாக வமைத்ததனுல் இவரது ஆற்றல் பெரிதும் விளங்கும். நற்றிணையில் இவர் கூறிய உள்ளுறை

கன் பாடிப்போர்மனத்தைக் கவர்ந்துகொள்ளுந் தன்மையவாயுள. தமிழ்நாட்டரசர்களுள் சேரன், பாண்டியன், என்னும் முடியுடை வேந்தர் இருவராலும், திருக்கோவலூரையாண்ட காரியென்னும் வள்ளலாலும் ஆதரிக்கப்பெற்றவர். பாண்டிநாட்டுக் கொற்கை நகரும், நடுநாட்டின்கண்ணதாகிய திருக்கோவலூரும், பெண்ணையாறும், சோழநாட்டுக்கோயில் வெண்ணியும், இவராற் பாடப்பெற்றுள்ளன. தலைமகன் காமவேட்கையால் உப்புவிற்பாளைத் தடுத்துக் கூறல் வியக்கத்தக்கது; அகம் (௩௯௦). தலைமகளைப் பெறவேண்டிய தலைமகன் ஆங்கு அடிமைத் தொழில் செய்தேனும் பெறுவேமோ வென்பதும் அத்தன்மையதாகும். அகம் (௨௮௦) கீழைக் கடற்கரையைச் சிறப்பித்துப் பாடும் உலோச்சனுரும், மேலைக்கடற்கரையைச் சிறப்பித்துப் பாடும் இவருமாகிய இவ்விருவரும் தமிழ்நாட்டிற்கு இருபாலும் விளங்கும் இரண்டு வளரிளஞாயிறெனவும், இரண்டு கண்களெனவும், இரண்டு இரத்தினங்களெனவும் கூறத்தக்கவராவார். இவரியற்றியனவாக நற்றிணையில் பத்துப் பாடல்களும், குறுந்தொகையில் பதினொன்றும், ஐங்குறுநூற்றுல் நெய்தற்பாட்டு நூறும், அகநானூற்றில் ஆறுமாக (௧௨௭) பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (நற்றிணை)

**அம்மெய்யனுகனுர்** — நாகன் என்பது இவர் இயற்பெயர்; நாகன் என்னும் பெயருடையார் பலராதலால் அவரின் இவர் வேறு என்பது தெரிய இவர் இயற்பெயருக்கு முதலில் "அம்மெய்யன்" என்னும் பெயர் புணர்த்தப்பட்டது. அம்மெய்யனென்பது தந்தையின் பெயர்போலும். இவர் பாலைத்திணையைப் புனைந்து பாடியுள்ளார். இவர் காதலியை வருணித்திருப்பது வியக்கத்தக்கது. இவர் பாடியது நற். (௨௫௨)-ம் செய்யுள். (நற்றிணை).

**அம்மை**—வனப்புகள் (௧௦) இல், ஒன்று. சிலவாய மெல்லியவாய சொற்களால் தெள்ளிய பொருண்மேல் சிலவடிகளால் சொல்லப்படுவது. (யாப்பு - வி,

**அம்மைச்சி**—இவள் காஞ்சிபுரத்திலிருந்த ஒரு தாசி, கவிவல்லவள். இவள் வீடு வரதராஜர் தேரோடும் வீதியிலிருந்ததென்றும் இவளிடம் பொருமைகொண்ட வேதியர் இவளிருந்த வீட்டை இடிக்கவேண்டி ரதத்தி? [illegible] டின்மீது விட்டனரென்றும் கூறுவர். இவள், வீடிடிந்தபோது பாடியது. "பெருமாள் திருநாளைப் பேயாக்கவென்றே, வருமாண்டு தோறுமிந்தமாண்பர் — ஒருநாளும், மாக்குதிரையேறறியாமாசனங்களாமணக்கஞ், சாக்குதிரையேறினுர்தாம்" எனக் கூறினள். அக்காலத்தவ்விடமிருந்த அந்தகக்கவி வீரராகவமுதலியார் இவர்களது பொருமைகண்டு "பாப்புக் குரங்கைப் படையாகக் கூட்டிவந்தீர், தேப்பெருமாளே கச்சிச் செல்வரே,—கோப்பமைந்த, கொம்மைச் சிகரலங்கைக்கோட்டையென்றுகொண்டீரோ, அம்மைச்சிவாழ்வாளகம்." என்றனர். (தமிழ் நாவலர் சரிதை).

**அயக்கண்டன்** — அயக்கிரீவனுக்கு ஒரு பெயர். இவனுக்கு அச்வகண்டன் எனவும் பெயர்.

**அயக்கிரீவன்** — 1. மதுகைடவர் வேதங்களைத் திருடிச்சென்றகாலத்துக் குதிரையின் கழுத்துள்ள திவ்யவுருக்கொண்டு சென்று அவர்களைக் கொலைபுரிந்து அவற்றைக் கொண்டுவந்து உதவிய விஷ்ணுவின் திருவுரு.

2. சண்முகசேநரவீரன்.

3. நரகாசூரனுக்கு மந்திரி. நரகாசூரவதையில் கண்ணனுல் கொலைசெய்யப்பட்டவன். (பாகவதம்).

4. பிரமன் சத்திரயாகத்துதித்த விஷ்ணுவினம்சம். (பாகவதம்).

5. திதிபுத்திரனுகிய அசுரன், விஷ்ணுமூர்த்தியாற் கொல்லப்பட்டவன்.

6. பிரமன் உறங்குகையில் வேதங்களைத் திருடிச்சென்று விஷ்ணுவால் கொல்லப்பட்ட அசுரன்.

7. நக்கீரரைப் புசிக்க எடுத்துச்சென்ற பூதம்.

**அயக்ரீவர்** — ஒருகாலத்தில் விஷ்ணு அசுரரோடு பதினுயிரம் வருடம் யுத்தஞ் செய்து சோர்வு அடைந்தவராகி ஓரிடத்திற் சென்று நாணினை முகவாய்க்கட்டையில் ஊன்றிக்கொண்டு நித்திரை செய்யத் தொடங்கினர். அந்தக்காலத்து இந்திரன் முதலானோர் ஓர் யாகத்தைச் செய்ய விரும்பி வைகுண்டத்தில் விஷ்ணுவைக் காணுமல் ஞானதிருஷ்டியால் இருக்குமிடம் உணர்ந்து அவ்விடம் பலநாள் காத்திருந்தும் விஷ்ணுவிற்கு உறக்கந் தெளியாததனுல் விசனம் அடைந்து இந்திரன் தன் பரிவாரங்களை நோக்கி இவரது நித்

திரை தெளியும் விதம் ஆலோசிக்க என அவர்களுள் உருத்திரர், செல்லுருக்கொண்டு நாணியைப் போக்கின் விஷ்ணுவிற்கு நித்திரை தெளியும் என, பிரமன் இந்திரனை நோக்கி நீ செல்லுருக்கொண்டு அவ்வாறு செய்யின் யஞ்ஞத்தில் பக்கமாக எது விழுகிறதோ அது உன்னுடைய பாகமாக அறிதி எனக்கூற, இந்திரன் செல்லுருக்கொண்டு நாணியை அறுத்தான். அறுந்த அந்தச் சத்தத்தால் திசைகள் எல்லாம் நடுங்கின. உடனே விஷ்ணுவின் சிரம் அறுந்து விழுந்தஇடந் தெரியாமற் போயிற்று. இதனால் இந்திரன் முதலானோர் துக்கிக்க அவர்களைப் பிரகஸ்பதி தேற்றத் தேறினர். பின் பிரமதேவர் தேவர்களை நோக்கித் தேவியைத் துதிக்கக் கூறத் தேவி அசரீரியாய்க் கூறுவாள். ஒரு காலத்தில் விஷ்ணு மிக்கசுந்தரமுள்ள திருமகளின் முகத்தைப் பார்த்து இகழ்ந்து கூறினார். அதனால் கவலையுற்ற திருமகள் இது நம்மிற் பொருமைகொண்ட ஒருத்தி செய்த கலகத்தால் விளைந்தது என எண்ணி, விஷ்ணுவின் தலை அற்றுவிழக் கடவது என்று சபித்தனள். ஆதலால் இப்போது விஷ்ணுவின் தலை லவண சமுத்திரத்தில் ஆழ்ந்து போயிற்று. இதன் காரணம் முன்னொரு காலத்தில் அயக்கிரீவன் என்னும் அசுரன், ஆயிரம் வருஷம் என்னை நோக்கித் தவஞ் செய்தனன். அவனுக்கு எதிரில் நான் பிரத்தியக்ஷமாகி உனக்கு என்ன வரம் வேண்டும் என அவன் எவ்விதத்திலும் எனக்கு மரணம் நேரிடாதவிதம் அருளுக என, அவ்வாறே நான், உன்னை எவருங் கொல்லார். உன் வேண்டுகோளின்படி உன்னை ஒப்பவனால் உனக்கு முடிவு நேர்க என்று வரந் தந்தேன். அவ்வரம்பெற்ற அசுரன் தேவர் முனிவர்களைத் துன்பஞ் செய்து கொண்டிருந்தனன். அவனைக் கொல்ல வேண்டி இது நேர்ந்தது. ஆதலால் அஞ்சற்க எனத் தேவர்களை நோக்கிப் பிரமன் ஒரு குதிரையின் சிரத்தை விஷ்ணுவின் தேகத்தில் பொருத்துவன். விஷ்ணு எழுந்து உங்கள் காரியத்தை முடிப்பர் எனக் கூறக்கேட்ட தேவர்கள் பிரமனை வேண்டப் பிரமன் ஒரு குதிரையின் தலையை அறுத்து விஷ்ணுவின் தலையிற் பொருத்த விஷ்ணுமூர்த்தி எழுந்தனர். அன்றுமுதல் அயக்கிரீவநாமம் விஷ்ணுவிற்கு உண்டாயிற்று. பின் அயக்கிரீவராகிய விஷ்ணுவால் அவ்வசுரன் கொலை செய்யப்பட்டனன். (தேவிபாகவதம்).

**அயக்ரீவன்** — 1. விஷ்ணுவின் அவதாரம் மதுகைடபரைக் கொல்ல வெழுந்த அவசரம். இவர் சந்திரகாந்தியுடைய தேகம் உடையராய்த் தேவர்களெல்லாரும் தம்முருவிலமைத்து அயக்ரீவ உருவமாய்ப் பாதாளஞ் சென்று வேதசிக்ஷையிலுண்டான உத்கீதஸ்வரத்தை உண்டு பண்ணினார். இந்தச் சுவரம் வந்தவழி அசுரர்வந்து திருமாலிடம் போரிடத் திருமால் அசுரரைக் கொன்றனர். (பாரதம்-சாந்தி).

2. இவன் ஓர் அரசன், இவன் தன் இராஜ்யத்தை அரசுசெய்து சுவர்க்க மடைந்தவன். இவனது சரிதம் வியாசரால் தருமருக்குச் சொல்லப்பட்டது. (பார-சாந்).

**அயசிரை** — 1. வைச்வாநரன் பெண்.

2. சூரியனுடைய ரூபவிசேடம்.

**அயதி** — நகுஷபுத்திரன். யயாதியின் உடன் பிறந்தான்.

**அயத்ரிமுனிவர்** — துரியோதனனுக்கு நீதி கூறிப் பாகந்தரச்சொல்ல, மறுத்த துரியோதனனை, வீமனால் தொடை முரியச் சபித்தவர்.

**அயனம்** — இது சூரியகதியைத் தெரிவிப்பது. 1. உத்தராயனம், தக்ஷணாயனம், பூராணயனம் எனப்படும்.

2. சூரியன் ருதுதிரயத்தில் சாருகும் காலம். இது, தைமீ முதல் ஆறுமாதம் உத்தராயனம். ஆடிமீ முதல் ஆறு மாதம் தக்ஷிணாயனம். மேஷவீதி உத்தராயனம் ருஷபவீதி பூராணயனம். மிதுனவீதி தக்ஷிணாயனம். உத்தராயணம் சூரியன் தென்கிழக்குத் திசையிலிருந்து வடகிழக்கிற்குச் செல்லல் தேவர்க் குரியது. தக்ஷிணாயனம் சூரியன் வடகிழக்குத் திசையிலிருந்து தென்கிழக்குத் திசைக்குச் செல்லுங்காலம். அசுராதியர்க் குரிய காலம் இக்கதியால் ருதுக்கள் உண்டாம்.

**அயனாதிசங்கிரமம்** — இரண்டயனங்களுக்கு முன் (௧) நாளும், பின் (௨) நாளுங் கழிக்கப்படுவது. (௨) விஷுவங்களுக்கு முன் ஒன்றரை நாளும், பின் ஒன்றரை நாளுங் கழிக்கப்படுவது. அல்லாத மாசசங்கிரமங்களுக்குமுன் (௧0) நாழிகையும் கழிக்கப்படுவது. நாட்களுக் காதியந்தகளில் இவ்விரண்டு நாழிகைகள் கழிக்கப்படும். திதிக

ளுக்கு ஆதியந்தங்களின் மும்மூன்று நாழிகைகள் கழிக்கப்படும். சாவண வாண்டுக்கு (௪) நாள் தவிரப்படும். நக்ஷத்திரவாண்டுக்கு (௨) நாட்கள் தவிரப்படும். சௌரவாண்டுக்கு (௩) நாட்கள் தவிரப்படும். குரு வாண்டுக்கு (௮) நாட்கள் தவிரப்படும். சந்திரவாண்டுக்கு (௬) நாட்கள் தவிரப்படும்.' (விதானமாலை).

அயன் — 1. பிரமனுக்கு ஒரு பெயர்.

2. தந்து என்பவனுக்குப் பிதா. சூரிய வம்சத்து அரசன்.

அயா —'அநேக யாகங்கள் செய்த அரசன்.

அயாசிதநீக்ஷதர்—சங்கராசாரியருக்கு நெல்லிக்கனிதந்த அம்மணியின் வீட்டுக்காரர்.

அயிந்தவர் — இவர் காசிபர் குலத்துதித்த சிந்து என்போனது மறுபிறவியாய்ப்பிரமபட்டமடைந்து பிரமனுக்குப் பதில் உலக சிருட்டி செய்தவர்.

அயிரவேகம் — ஓர் தீர்த்தம்.

அயிராமகாதேவி—சாந்திதீர்த்தங்காருக்குத் தாய். சைநமதம். (மா-புராணம்).

அயிநூர், புகழியூர்—நெடுஞ்செழியன், அதியனுடன் போரிட்டுவென்ற இடம். காவிரி வடகரையிலுள்ளது.

அயிரை—ஓர் நதி. (சிலப்பதிகாரம்).

அயிர் — இது ஒரு மணப்பொருள். இது குடகுதிசையினின்றும் கீழ்த்திசையினின்றும் இறக்குவது. அவற்றுட் குடதிசை அயிர்யவன தேசத்தது, குணதிசை அயிர் காரகில் இதினுறுப்பு-கட்டி, செந்தேன், நிரியாசம், பச்சிலை, ஆரம், அகில் என ஐந்தாம்.

அயிலன்—புரூரவனுக்கு ஒரு பெயர்.

அயிள்பினி—(சூ) தசரதன் குமரன்.

அயுகன்--(சங்.) வசுவிற்குப் புத்திரகாமேஷ்டி யாகத்தில் பிறந்தவன்.

அயுதசித் — (சங்.) பஜமானன் குமரன். சகத்திரசித்துடன் பிறந்தவன்.

அயுதாயு—(சூ.) சிந்துத்தீபன்குமரன். இவன் குமரன் இருதுபர்ணன். இவனுக்கு அயுதாயுசு எனவும் பெயர்.

அயுத்தன் — சண்முகசேநாவீரன்.

அயை — கோசலநாட்டரசன் பெண். மகேந்திரன் தேவி.

அயோகவன்—சூத்திரனுக்கு வைசியஸ்திரீ, க்ஷத்திரியஸ்திரீ, பிராமணஸ்திரீ இவர்களிடத்தில் பிறந்தவன். இவனுக்கு க்ஷத்தா என்றும் பெயர். இவனை மனிதருக்குள் தாழ்ந்த சண்டாளன் என்பர். இவனுக்குத் தச்சுவேலை என்பர். (மநு.)

அயோத்தி — இது, எழு முத்தித்தலங்களுள் ஒன்று. இது, பகைவரால் யுத்தத்தில் ஜெயிக்கப்படாதது. இது பூர்வம், பரமபதத்தில் இருந்து சுவாயம்பு மநுவால் பெறப்பட்டுப் பூமியில் கொண்டுவரப்பட்டது. இப்பட்டணம், பெண்ணுருக்கொண்டு குசலவதியை ஆண்ட குசனிடத்திற் சென்று தன்னையாளும்படி வேண்டிற்று. இது சூர்யவம்சத்து அரசர்களுக்கு இராஜதானி. இதில் சகஸ்திரதாரை, சுவர்கத்துவாரம், இராமதந்ததாவனகுண்டம்,அனுமகுண்டம், கஜேந்திரகுண்டம், சீதாகூபம், ஞானகூபம், சுக்ரீவகுண்டம், அக்னிகுண்டம், வசிட்டதிலோதகிசங்கமம், கணேசதீர்த்தம், தசரதகுண்டம், கோசலைகுண்டம், சுமித்திராகுண்டம், யோகினிகுண்டம், ஊர்வசிகுண்டம், மகப்பிரம், தூர்ப்பரசரசு, பிரகஸ்பதிதீர்த்தம்,ருக்மணிகுண்டம், க்ஷீரோதகம், தனக்ஷயதீர்த்தம், ரணவிமோசனதீர்த்தம், பாபவிமோசனதீர்த்தம், வைதரணிகோஷராக்கம் எனும் சூர்யகுண்டம், ரதிகுண்டம்,காந்தருவகுண்டம், குசுமாயுதகுண்டம், மந்திரேசுரதீர்த்தம், இந்திரதீர்த்தம், தூர்க்காகுண்டம், நாராயணகுண்டம், வான்மீகதீர்த்தம், புண்ணிய அரிதீர்த்தம், கிருதாசிதீர்த்தம், சரயுகர்க்கரசங்கம், சம்புதீர்த்தம், அகஸ்தியசரசு, ஸ்ரீகுண்டம், குடிலநதி கலக்கும் வாசிரோதசு தீர்த்தம், குப்ஜாதீர்த்தம், மகஸ்தானம், இராமரேகை முதலிய பல தீர்த்தங்களும், விக்னேச்வரப்பிரதிட்டை, நாகேச்வரப்பிரதிட்டை, தூர்க்கேச்வரப்பிரதிட்டை, மந்திரேச்வரப்பிரதிட்டை, க்ஷீரேசுவரப்பிரதிட்டை, பைரவப்பிரதிட்டை, சொப்பனேச்வரிபிரதிட்டை, சீதளாதேவி, வந்திதேவிகளின்பிரதிட்டை, சுடகிபிரதிட்டை, சந்திரஅரி, தருமஅரி, இராகவப்பிரதிட்டை, விஷ்ணு அரிப்பிரதிட்டை, சக்ரஅரி, குபுதஅரி, லக்ஷ்மி முதலிய பிரதிட்டைகளும்அயோத்தியாபீடம், இரத்நமண்டபம், கனகமண்டபம், ஜனனஸ்தானம், கண்டகம் என்கிற யமஸ்தலம், பொக்கிஷசாலை, வேதிகை, சீதை உத்தியானவனம், சித்தபீடம் முதலியவைகளும் இருக்கின்றன. இது சரயுநதிக்கண் (௮௮) மைல் நீளமும் (௧௨) மைல் அகலமும் கொண்ட தேசம். இதனைச் சாகேதமெனவுங்

கூறுவர். சரயூநதி தீரத்திலுள்ள கோசல தேத்து இராஜதானி. Oudh, the birth place of Rama.

2. இக்குவாகு குலத்தரசர் நகரம் (சூளா.)

**அயோத்தியரசன்**—தருசகனேடுபோர்செய்தற்கு வந்து தோல்வியுற்றுச் சென்ற அரசர்களுள் ஒருவன். (பெருங்கதை.)

**அயோமுகன்**—திதிபுத்திரனாகிய அசுரன்.

**அயோமுகி** — தண்டகவனத்தில் இருந்த அரக்கி. இராம லக்குமணர் சீதையைப் பிரிந்து வனத்திலிருக்கையில் இராமமூர்த்திக்காகச் சலத்திற்குவந்த இலக்குமணரைக் கண்டு மோகித்து அவரால் மூக்குங் காதும் அறுப்புண்டவள். (இராமாயணம்.)

**அரக்கு**—இது ஒருவகை மரத்தின் பிசின். இது, இந்தியா, இலங்கை முதலிய இடங்களில் உண்டாகிறது. இந்தப் பிசினைச் சலத்தில் ஊறப்போட்டால் இதில் ஊதாவர்ண முள்ள பொருள் ஜலத்தில் கரையும். அதை வடிகட்டி இறுகச்செய்து சாய்க்காரர் பட்டு முதலியவற்றிற்குச் சாயம் போடுகிறார்கள். ஜலத்தில் நிறம் கரைந்தபின் தங்கியது பிசின், இது தவிட்டினிறங்கொண்டிருக்கும் இதுவே அரக்கு. இதில் கொம்பரக்கு, அவலரக்கு, செவ்வரக்கு முதலிய உண்டு.

**அரங்கதாசன்** — திருவேங்கடத்தில் புஷ்ப கைங்கர்யஞ் செய்ததால் மறுஜென்மத்தில் தொண்டைமானாகப் பிறந்தவன். (திருவேங்கடபுராணம்.)

**அரங்கத்துவாரம்** — ஓர் தீர்த்தம்.

**அரங்கம்** — திருவரங்கம் பெரியகோயில் எனும் காவிரிசூழ்ந்த தீவு. விஷ்ணுத்தலம். திருவரங்கம் காண்க. (சிலப்பதிகாரம்.)

**அரசகேசரி** — 1. தனதத்தன் பெருமையுணர்ந்து சிவபூஜை கடைப்பிடித்து நாகையில் சிவாலயம் புதுக்கியவன்.

2. இவர் யாழ்ப்பாணத்து நல்லூரினர். இவர் பராசசேகரி மகாராஜாவின் மருகர். பாண்டிநாட்டு ஆழ்வார் திருநகரியிலிருந்த அஷ்டாவதானி இராமாநுச கவிராயரிடம் கல்விபயின்றவர். இவர் காலம் சற்றேறக்குறைய முந்நூறு வருடங்களுக்கு முன் என்பர். இவர் வடநூல் இரகு வம்சகாவியத்தைத் தமிழில் செய்யுட்களாக இயற்றியவர்.

**அரசசேவையில்செய்யத்தகாதன**— அரசர் வாயிலில் செல்லத் தடையுண்டானுல் கோபித்தலும், அரசருடன் அதிக சொரக்கம் பாராட்டுவதும், அரசர் தமக்கு வெகுமானம் சம்மானஞ் செய்யுமிடத்து அவை தமக்கு அமையாவென்று இகழ்தலும், அரசனுக்கு ஒப்பத்தம்மை அலங்கரித்துக் கொளலும், அரசவையை யூடறுத்துச் சென்று வேறொருவனைச் சேர்ந்திருப்பதும், தம்முறுதியையும், அரசனால் பிறர்க்கு உதவியாகிய கட்டுரைகளையும் அரசனிடங் கூறலும் ஆகாது.(ஆசாரக்கோவை).

**அரசச்சின்னம்**—(உக) முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி மதிள், தோரணம், நீர்க்குடம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம் முதலிய.

**அரசபந்து**—ஒரு அரசன், பூர்வஜன்மத்தில் பிரம்மசாரியாகிப் பிறகு புலையனாகிய ஒருவனால் வேதியர் பொருளின்தன்மை இவ்வகையெனத் தெரிந்துகொண்டவன்.

**அரசப்பிரகிருதிகள்** — (க0) புரோகிதன், பிரதிநிதி, பிரதானன், சசிவன், மந்திரி, நீதியதிபன், பண்டிதன், சுமந்திரன், அமாத்தியன், தூதன், இவர்களுடைய இலக்கணங்களைத் தனித்தனி காண்க. (சுக்-நீ)

**அரசமுல்லை** — பொரும்பகையை வருத்தும் சிவந்த சோதியாற்பொலிந்த நெடிய வேலினையுடைய பெரிய புவியைக்காக்கும் அரசன் றன்மையைச் சொல்லியது (பு.வெ)

**அரசயானை இலக்கணம்** — நான்கு காலும், துதிக்கையும், கோசமும், வாலும் ஆகிய எழு உறுப்பும் நிலத்திற் றோய்வதும், பாலையும் சங்கையும் ஒத்த வெண்ணிறம் வாய்ந்த கால்நகம் உடையதுமாய்க் காலினாலும், துதிக்கையினாலும், சரீரத்தாலும், வாலினாலும், கொம்பினாலும், கொல்லவல்லதாய் எழுமுழம் உயர்ந்து ஒன்பது முழம் நீண்டு பதின்மூன்றுமுழம் சுற்றுடைத்தாய்ச் சிறிய கண்களையும் சிவந்த புள்ளிகளையும் உடையதாய் முன்பு முற்கூறியவாறு உயர்ந்து பின்பு தாழ்ந்தது அரசயானையென்று கூறுவர். பத்ரம், மந்திரம், மிருகம் இவை யானையின் ஜாதிவிசேஷம். (இராமாயணம்)

**அரசரதுதொழில்**—ஓதல், பொருதல், நாடுபுரத்தல், ஈதல், வேட்டல், படைபயிறல் (பிங்கலம்)

**அரசரேழுவகைநிலை**—அறம், பொருள், இன்பம், இம்மை, மறுமை, புகழ், மதிப்பு. (பிங்கலம்.)

**அரசரைப்பற்றிய வருவாய்வகை** — சாமந்தன் - குடிகளை வருத்தாமல் வருடத்தில்

கருடமென்னும் அளவுள்ள பொன் வருவாய் பெற்றவன். கருடம் (கo) மாடஅளவினது மாடம். (கo) குன்றி ஏடை. நிருபன்-மேற்கூறிய காசுமூன்றிலக்கமளவு வருஷத்தில் வருவாயுள்ளவன். மண்டலிகன் - ஷை காசு பத்திலக்ஷம் வரையில் ஆண்டுதோறும் வருவாயுள்ளவன். கோடி முதல் பத்துக்கோடி வருவாயுள்ளான் சம்ராட் (கo) கோடிமுதல் (டுo) கோடி வரை வருவாயுள்ளவன் விராட்டு (எ) தீவுகளைத் தன்வசப்படுத்தி ஆள்வோன் சக்ரவர்த்தி சார்வபௌமன். அக்காசு (சo) முதல் (உo) வரை ஆண்டில் வருவாயுள்ளவன் அரசன் (உo) முதல் டு ) வரைஆண்டு தோறும் வருவாயுள்ளான் பேராசன்(டு ) கோடி வரை வருவாயுள்ளவன் சுராட்டு. (சுக்கிரநீதி).

**அரசர்** — (௩) சேரன், சோழன், பாண்டியன்.

**அரசர்க்குத் தழு** — மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர். (திவா).

**அரசர்க்குத் துணைவர்**—(அ) மந்திரியர், கருமாதிகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர்.

**அரசர்க்குறுதிச்சுற்றம்** — (டு) நட்பாளா, அந்தணாளர், மடைத்தொழிலாளர்,மருத்துவக்கலைஞர், நிமித்திகப்புலவர். (பிங்கலம்).

**அரசர்தானை**—வேல், வாள், வில், தேர், பரி, யானை. (பிங்கலம்).

**அரசர்சூளாமணிச் சோழன்** — சநநாத சோழனுக்குப் புத்ரன். இவன் திரிசிராமலை தரிசித்து நீங்குகையில் கோழி யொன்று இவன் சேனைகளின் மீதும் இவன் மீதும் குதித்துத் தடுத்தது. அரசன் இவ்விடம் ஏதோமகிமை இருக்கிறதென்று அறிந்து அவ்விடம் அப்பெயரால் ஒரு பட்டினங்கட்டினன். ஆதலால் அப்பட்டினத்திற்குக் கோழியென்று பெயர். அரசனுக்குக் கோழிவேர்தன் என்று பெயர். இந்தமரபில் சூர ஆதித்தசோழன் பிறந்தான். (செவ்வந்திபுராணம்).

**அரசர்மீளி** — (சங்.) நிகும்பன் குமரன்.

**அரசவாகை**-நகத்திற் பகலாணிபோன்ற நடுநிலைச்சொல்லினையுடைய மாயூபாட்டாற் சிறந்த மன்னனது தன்மையைச் சொல்லியது. (புறப்பொருள்வெண்பாமாலை).

**அரசவுழிஞை** — காவற்செய்தி மிக்கு நடக்கும் பூமி காவலன்றன்கீர்த்தியைச் சொல்லியது. (புறப்பொருள்வெண்பாமாலை).

**அரசவையில் தவிர்வன** — அரசனெதிரில் இராஜசபையில் மற்றொருவனுடன் இருந்துகொண்டு ஒரு காரியத்தை ஆராய்தலும், அரசனுக்கு அருகில் நிற்றலும், அரசன் வேறொருவனிடம் பேசுகையில் செவிகொடுத்துக் கேட்டலும் ஆகா. (ஆசாரக்கோவை).

**அரசியல்**—(சு) படை, குடி, கூழ, அமைச்சு, நட்பு, அரண், (பின்னும்) அறநிலைபறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம் என்பன. இவற்றில் அறநிலையறமாவது நான்கு வருணத்தவரும், தத்தம் வருணத்திற் பிறழாதுகாத்தல், மநிலையறமாவது நிரைமீட்டலும், பகைவெல்லுதலுமாகிய .செஞ்சோற்றுக்கடன் கழியாதாரைத் தண்டித்துக் குறைவுறச்செய்தல். அறநிலைப் பொருளியலாவது, நெறிவழிநின்று தத்தநிலையினால் முயன்று பெறுபொருளாம். மறநிலைப் பொருளியலாவது, பகைஞர் பொருளும், திறைப்பொருளும், குற்றம் செய்தோரையொறுக்கும் பொருளும், சூதில் வெல்பொருளுமாம். அறநிலையின்பமாவது, குலமும் ஒழுக்கமும், குணமும், பருவமும், ஒத்த கன்னிகையை மணஞ்செய்து கொண்டு இல்லறத்தொழுகல், மறநிலை இன்பமாவது, ஏறுதழுவலும், வில்லாலிலக்க மெய்தலும், பொருள்கொடுத்துக் கோடலும், வலிந்துகோடலும் ஆகிய நெறியால் மணத்தலாம். (சுக்கிரநீதி.)

**அரசு, ஒரு விருக்ஷம்**—விஷ்ணுமூர்த்தியின் வலக்கண்ணில் உதித்தது. இதனை அவர் எல்லா விருக்ஷங்களுக்குந் தலைமையாம் அபிஷேகம் புரிந்து அரசு எனப் பெயரிட்டனர். இதனைப் புராணங்கள் கூறியபடி வாரந்தோறும் பூஜிப்போர் வேண்டுஞ் சித்திகளைப் பெறுவர். இது திரிமூர்த்தி ஸ்வரூபம். இதைத் தினந்தோறும் பிரதக்ஷணம் செய்பவன் மூவரையும் பிரதக்ஷணம் செய்தவனாகிறான். புண்யவுலகங்களை அடைந்தவனாகிறான். இவ்விருக்ஷத்திற்கு ஒரு கெடுதியும் செய்யக்கூடாது. (திருமுட்டபுராணம்).

**அரசுநம்பி**-மணக்கால் நம்பியின்திருவடிகளை ஆச்ரயித்த ஆசாரியர். (குருபரம்பரை).

அரசை—சுக்கிரன்பெண் கண்டகனுற் கற்பழிக்கப்பெற்றுத் தந்தையால் நிருமிக்கப்பட்ட சோலையிலிருந்தவள்.

அரசன்—கிருஷ்ணமூர்த்திக்கு மித்திர விந்தையிடம் உதித்த குமரன்.

2. பிரமன், இந்திரன், வாயு, இயமன், சூரியன், அக்னி, வருணன், சந்திரன், குபேரன், ஆகிய இவர்களுடைய கூறுகளாகப் பிரமனால் படைக்கப்பட்டான். இவனுக்கு எட்டுத்தொழில்கள், தீயரை ஒறுத்தல், ஈதல், காத்தல், வேட்டல், அறநெறி பிறழாது பொருளீட்டல், திறைகோடல், பகைவரைத் தொலைத்தல், மேன்மேல் நிலங்கொளல். (சுக்கிரநீதி.)

அரட்டன்—கோவலனுக்கும் கண்ணகிக்கும் நேர்ந்த துன்பத்தை மாடலன் சொல்லக் கேட்டு இறந்த மனைக்கிழத்தியும் கண்ணகியின் தாயும் தனக்குப் புத்திரியாக வந்து பிறக்கப்பெற்ற சேரநாட்டானாகிய ஒரு செட்டி. (சிலப்பதிகாரம்.)

அரணபாதம்—ஓர் மலை. இதில் சிவன் ஆலயம் இருக்கிறது.

அரணி—இருசிகசிங்கர்க்குத் தந்தை.

அரணை—ஒரு பிராணி இதன், முகம் சற்றுக் குறுகி உடல் நீண்டு கால்கள் குட்டையாகத் தடித்தவாலுடன் மினு மினுத்த உடல்பெற்றது. இதுஉருவத்தில்பெருத்த பல்லிபோன்றது. இதன்நாக்குப் பிளவுபட்டிருக்கும். இது முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பது. இதன் கடி கெடுதி செய்யும. அரணை கடித்தால் மரணம் என்ப.

அரண்—(அ) மலை, காடு, மதில், கடல்.

2. பகைவராற்றுன்பம் நேர்ந்தவிடத்து அது தனக்கும் அரசனுக்கும் காத்தலாகவுள்ளது. அந்த அரண் (கூ) வகைப்படும். (க) **களர்நிலவரண்** பிறர் உட்புக இயலாதவாறு பள்ளம், முள், கல் இவற்றால் அமைக்கப்படுவது. (உ) **அகழியரண்** கோட்டையைச்சுற்றிலும் நான்குபுறத்திலும் மிக்க ஆழமாகத்தோண்டி நீர் நிறைத்திருப்பது. (ங) **மதிலரண்** செங்கற்களாலும், மலைக்கற்களாலும் மண்ணாலும் எடுக்கப்பட்ட கனத்த சுவர்களால் சூழப்பட்டது (ச) **காட்டரண்** பெரியமுள் மரக்கூட்டங்களைச் சூழ அமைத்திருப்பது. (ரு) **நிலவரண்** நீரும், நிழலுமின்றி நாற்புறத்துமுள்ள பெருவெளி. (சு) **நீரரண்** நாற்புறத்து மிக்க நீர்ப்பரப்பை யுடையது (எ) **மலையரண்** மனித சஞ்சாரமில்லாத இடத்தில் நல்ல நீரைப் பின்புறத்தில் கொண்டு மலைகளால் சூழப்பட்டிருப்பது. (அ) **படையரண்** தேர்ந்த போர்வீரரால் சூழப்பட்டுப் பகைவரால் வேறு படுக்கப்படாதது. (க) **துணையரண்** துணையாகிய சுற்றத்தவரால் காக்கப்படுவது. (சுக்கிரநீதி.)

அரதத்தாசாரியசுவாமிகள்—இவர், சோழநாட்டில் காவிரிக்கு வடகரைக்கண் உள்ள கஞ்சபுரத்திலுள்ள வைணவ அக்ராரத்தில் வாசுதேவாசாரியர் அல்லது மதுசூதனசாரியர் என்பவருக்குப் புத்திரராகப் பிறந்து சுதர்சனசாரியர் என நாமமிடப்பெற்று வளர்ந்து தந்தை வைணவராயிருக்கவும் தாம் சிவபக்தி மேலீட்டால் குழந்தைப் பருவத்திலேயே விபூதி,ருத்ராக்ஷ முதலிய சிவசின்னங்களில் அன்பு பூண்டிருந்தனர். இதைக்கண்ட தந்தை, தம் மதத்திற்கு மாறாக ஒழுகுதலை யெண்ணிக் குமரரை வெறுக்கத் தொடங்கிப் பிள்ளாய் நீ நீறிடுவோரின் ஒழுக்கமேற்கொண்டாய்,நீ இனி நமக்குரிய திருமண் முதலிய சாத்தா தொழுகின் உனக்கு அன்னமிடோமெனச்சினந்தனர். அதனைச் செவிகொளாத குமரரைத் தந்தையார் பலவகை வளாரினலடித்து உருக்கியுங், கேளாததுகண்டு, தாம், அவன் இல்லம்வரின் அவற்கு என் உத்தரம் இன்றி அன்னமளிக்காதையென மனைவிக்குக் கட்டளையிட்டனர். இதனையறிந்த சுவாமிகள், அவ்வூர்க்கண் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அக்நீசுரர் திருவாலயத்துச் சென்று சிவபிரானைப் பணிந்து முறையிடச்சிவபிரான் தரிசனந் தந்து சிவமந்திர முபதேசித்து அரதத்தாசாரியர் எனப்பெயருமிட்டு அஞ்சாதை யென அநுக்ரகித்து அனுப்பினர். பின் அரதத்தர், வீட்டிற்கு வந்து அன்னையைப் பசிக்கிறது அன்னமிடுக எனக்கேட்க, அவள் தந்தைகூறியதுரைத்தனள். இங்ஙன கழுகையில் தந்தை வெளிவந்து நீ சிவாலயஞ்செல்லாது விபூதிபூசாது ஒழிவையேல் அன்னமிடுவன் என்று சிவதூஷணஞ்செய்தனர். கேட்ட அரதத்தர், சினந்து விஷ்ணுவிற்கும் சிவத்திற்கு முள்ள தாரதம்மியங்களைப் பிரசங்கிப்பாராயினர். இவ்வகை வாதத்தின்கண் அவ்வூர்க்கண் உள்ள சைவ வைணவர் பலருங் கூடினர். வாதம் ஒருவாறும் முடிவுறாமை யறிந்தோர், இங்ஙனம் வாதித்தலிற் பயனில்லை. ஒருநாள் குறித்து அதனைப் பல நாடுகளினும் அறி

வித்துப் பலரும் வந்து கூடியபின் வாதத்
தில் மத்தியஸ்தர்களை நியமித்து வாதஞ்
செய்யின் நலமென்று, ஒருநாள் நிச்சயித்து
அந்நாளில் அவர்கள் கேட்டுக்கொண்டபடி
அவ்வூரின்கணுள்ள திருமால் ஆலயத்து
மண்டபத்தில் பலருங் காணப் பழுக்கக்
காய்ந்த இருப்புமுக்காலிமீதிருந்து வாதஞ்
செய்யத் தொடங்கிச் சுருதிபுராணக்
கருத்துக்களடங்கிய "காயத்ரீவல்லபத்
வாத்" என்பதாதியான, அதாவது "உயர்
காயத்ரிக்குரிய பொருளாகலிற்" எனுங்
கருத்துக்களடங்கிய சுலோகங்களைப் பிர
சங்கித்தும், சதுர்வேத தாற்பர்ய சங்கிர
கத்தாலும் வாதிட்டும் வென்றனர். இத
னல் வந்த வைஷ்ணவர்கள் பயந்து அ! ங்
கிச் சைவராயினர். அன்றுமுதல் வாதி
டத்தொடங்கிய தந்தையாரும் சைவராகிக்
குமாரரிடம் பஞ்சாக்ஷர உபதேசம் பெற்
றுச் சைவராயினர். பின்னர் ஆசாரிய
சுவாமிகள் இல்லறத்திருக்கையில் தந்தை
யார் குமாரருக்கு மணஞ்செய்யவெண்ணி
வாதுலகோத்திரத்தில் ஒரு மணமகளைப்
பேசி மணமியற்றினர். இவரது அற்பு
தச் செயல்களைக் கேட்ட சிவலிங்கபூபதி
எனும் அரசன் ஆசாரிய சுவாமிகளிடம்
வந்து அடிமைப்பட்டுத் தொண்டுபூண்டு
சுவாமிகளுக்கு வேண்டிய தந்து உபச
ரித்து வந்தனன். சுவாமிகள் நாடோறும்
நித்ய கன்மாநுட்டானுதிகள் முடித்து
அக்நீசுவரர், திருக்கோடிகா, திருவாலங்
காடு, திருஆவடுதுறை முதலிய தலங்க
ளைத் தரிசித்து வருவர். இங்ஙனம் வரு
நாட்களுள் ஒருநாள் அக்நீசுரர் ஆலயத்திற்
குக் காலந்தவறிச் செல்லுகையில் இராத்
திரி திருக்கோயிற்றிருத்தொண்டிற்கு
வராத உருத்திர கணிகையரிற் சிலரைக்
கோவிலதிகாரிகள் மண்டபத்தின்மீதே
ற்றி வருத்த, சுவாமிகளைக் கண்ட கணி
கையர் தமது வருத்தங்கூறச் சுவாமிகள்
காரணம் வினவித் தம்மை இவ்வாறு தண்
டிப்பா ரில்லையோவென மிகவும் பரிதபிக்
கையில் கோவிலதிகாரிகள். இவரது பரி
விற்கு அஞ்சிக் கணிகையரை இறக்கி
விட்டனர். இவர் ஒருநாள் சிவபூசைசெய்
யுங் காலத்தில் நாயொன்று நீர்வேட்கை
யால் எதிர்வந்து நீர்விரும்பச் சுவாமிகள்
அபிஷேகசலத்தை நீட்டினர், நாயுண்டு
மறைந்தது. அருகு நின்றோர் நாயுண்ட
சேஷம் அபிஷேகிக்கத் தகுமோ வென்
னச் சுவாமிகளும் நாயுருக்கொண்டு சிவ
மூர்த்திவரின் நான் என் செய்வேன்
என்றனர். இவரிருந்த அக்ராகாரத்து
வேதியர்களுள் ஒருவன் அபுத்தி பூர்வக
மாக வைக்கோற்சுமையைப் பசுவின் கன்
றின்மீதிட அது இறந்ததைக் கண்ட
வேதியர் இவனைக் கோஅத்தி செய்தவ
னென்று தமது கோஷ்டியினின்று நீக்க,
அவன் சுவாமிகளில்லம் புகுதுகையில்
வாயிற்படி தலையிலிடிக்கச் சிவசிவ என்ற
னன். இதனைச் செவியுற்ற சுவாமிகள்
வெளியில் வந்து சிவனடியவர் என்று உப
சரிக்கப் பிராமணன் நடந்தவைகூறச் சுவா
மிகள் நீ செய்த பாபம் முதலிற்கூறிய
சிவசப்தத்தால் ஒழிந்தது. இரண்டாமுறை
கூறிய சிவசப்தத்தால் முத்தியுமுண்டா
யிற்றெனக் கூறி அனுப்பினர். இதனைக்
கேட்ட வேதியர் பரிகசிக்கக்கண்டு, அப்
பாவஞ் செய்த வேதியனை நோக்கி நீ
அக்கிராத்தவர்களுடன்சென்று அக்நீசுரர்
ஆலயத்திற் கெதிரிலுள்ள நந்திதேவருக்கு
அறுகம்புல்லை இட்டு நான்செய்த பாபம்
ஒழிந்ததாயின் இப்புல்லை நீ அருந்துகவெனக்
கூறுக என அவனும் அவ்வாறு அருத்த
நந்திதேவர் உண்ணக்கண்டு வேதியர்கள்
சுவாமிகள் கட்டளைக்கஞ்சி விலகினர்.
ஒருநாள் அதிக வறுமைகொண்ட வேதி
யர் ஒருவர் தமது வறுமை எவ்வாறு
நீங்குமென ஆராய்கையில் ஒரு சிவயோகி
யர்க்கு அன்னமிடின் ஒழியுமென்று தேர்
ந்து, சுவாமிகளைப் பிக்ஷைக்கு அழைத்துச்
சென்று அன்னமிட்டனர். சுவாமிகள்
உண்டு பசிதீர்ந்து விபூதி பிரசாதிக்கை
யில் அரசனது சேவகர் அன்னமிட்ட
வேதியரை அரசன் அழைப்பதாக அழைத்
துச்சென்றனர். அரசன் வேதியரை எதிர்
கொண்டு பணிந்து வேண்டிய பொருள்
களை உதவி, வேதியரின் வறுமை நீக்கி
னன். மற்றொருநாள் அரசன் சுவாமிக
ளுக்கு நானூறு தானியப்பொதிகளை
அனுப்பினன். அவர்கள் கொண்டுவருகை
யில் வெள்ளத்தில் இருநூறுபொதிகள்
அடித்துச் சென்றன. இதுநிற்க ஒருநாள்
சுவாமிகளின் தாயார் சிவநிவேதனத்தின்
பொருட்டு ஒரு வேதியரிடம் பதக்குத்
தானியம் கடன்வாங்கி உலர்த்துகையில்
அதை ஒரு காளைவந்து தின்றது. அதனை
அரதத்தர் கண்டு மீண்டும் இருந்த நெற்
களை உண்பிக்கத் தாயார் அதனை வெருட்டி

ஓட்டினள். அரதத்தர் அதனை ஓட்டின காரணத்தால் உனக்கு வரும் பலத்தில் பாதி ஒழியும் என்றனர். இது நடவா நிற்கையில் அரசன் ஏவலாளர் வந்து மூட்டைகளிழந்த செய்தி கூறினர். சுவாமிகளின் மனைவியார் ஒருநாள் அரிசி களையும்போது நாயொன்று வந்து அரிசியில் வாயிட அந்தம்மாள் அங்கிருந்த அரிவாளைக் கொண்டெறிய அது மாய்ந்தது. கண்ட சுவாமிகள், பரிதபித்து அது மனைவி கதவினை அடைக்காத தோஷமென எண்ணி அதற்குப் பஞ்சாக்ஷர மந்திரம் உபதேசித்து முத்தியளித்தனர். தமது கிருகத்தில் தாயாரும் மனைவியாரும் பசுங்காளையை அடித்ததற்கும், நாயினைக் கொன்றதற்கும் பிராயச்சித்தம் விரும்பி ஒரு சுலோகம் எழுதி வைத்துவிட்டுத் தீர்த்தமாடப்போக அதனைச் சிவபெருமான் சுவாமிகளைப்போல் வந்து சிவநாம உச்சாரணமே பிராயச்சித்தமென எழுதிவைக்கக் கண்டு சிவபிரான் கருணைக்குப் பணிந்தனர். இவர் ஒருநாள் காவிரி ஸ்நானத்திற்குச் சென்று ஆங்குத் தம் மனைவி காவிரியில் ஸ்நானமாடுதல் பாபங்களைப் போக்குமெனக் கூற அதனைக் கூடாது, காவிரியிலுள்ள மணல் எல்லாம் சிவலிங்கம் நாம் பரிசிக்கவும் அருகரல்லோம் என மறுக்கும் புலையனது பாதரக்ஷைகளைச் சிரசில் வைத்துக்கொண்டு நடனஞ்செய்து, உலகத்திற் பலர் பலவகையாகத் தெய்வங்களைக் கொள்ளுகின்றனர். நாம் சிவனடியவரின் பாதரக்ஷைகளை அவலம்பிக்கிறோம் என்றனர். இவர் ஒருநாள் மடைப்பள்ளியுள் நாயொன்று அன்னத்தையுண்ண அது சிவநிவேதனம், சிவமூர்த்தி அவ்வாறு வந்துண்டதாகக் கூறிப் பலருடனும் அவ்வன்னம் புசித்தனர். ஒருநாள் ஸ்நானத்திற்குக் காவிரிக்குச் செல்கையில் எதிரில் பசிகொண்டு புலையனாக வந்து அன்னம்வேண்டிய சிவமூர்த்திக்குக்கஞ்சிவார்த்துச்சிவாக்யசோழமகாராஜனால் சிவமூர்த்தியென்று தெரிந்துகொண்டவர். சிவாக்ய சோழமகாராஜனுக்கு நாடோறுஞ் சுவப்பனத்தில் தரிசனந்தரும் சிவபெருமான் கஞ்சிகுடித்த மறுதினம் அரசன் சிவபிரானுக்கு மகாபிஷேகஞ் செய்து பலவித சித்ரான்னங்கள் நிவேதிக்கவும் அன்றைக்குச் சுவப்பனந் தராமையால் விசனமுற்றிருக்கச் சிவமூர்த்தி கனவிடைத்தோன்றி நேற்று அரதத்தன் வார்த்த கஞ்சிக்கு இணையல்ல உன் அன்னமென்ன, விழித்துக்கொண்டு, சோழன் அரதத்தரைப்போய்ப் பணிந்து அடிமைபூண்டனன். இவர்தம்மைச் சரணடைந்து சோழன் மோக்ஷம் வேண்டச் சுவாமிகள் அரையாமத்தில் அக்நீச்சுரத்திற் கருகிலுள்ள ஏழு சிவாலயங்களையுஞ் சேவித்துவருவையேல் முத்தியுண்டாகும் எனக் கூறக்கேட்டுத் தான் குதிரையுடன் குடையாள் பின்றொடரச் சென்று ஏழு சிவாலயங்களையுந் தரிசித்து நிற்கக் குதிரையும் குதிரைஆளும் சிவலோகஞ்செல்ல அரசன் தனித்திருந்து இரங்கச் சுவாமிகள் நீயும் பாதசாரியாக அவ்வாறு செல்வாய் எனக் கூறக்கேட்டு அவ்வகைசெய்து உடலோடு சிவபுரஞ் சென்றனன். ஒரு விலைமாது தன்னிடம் யாரோ ஒரு வேதியன் தமது குமாரனென்று வந்து ஒன்றுங் கொடாது சென்றனன் என அவளுக்கு விலைபெற்ற ஆபரணந் தந்து எடுத்துச் செல் என அவள் செல்லுகையில் சுவாமிகளின் குமரர் அவ்வாறு செய்யாரெனப் பலர்கூறக் கேட்டு அவள் அவ்வணிகளை மீண்டுந் தரப்போகச் சுவாமிகள் மறுத்துத் திருப்பணிசெய்யக் கட்டளை தந்தனர். அக்நீசுரர் இரதோற்சவத்திற்குச் செல்ல ஆபரணம் வேண்டிய தமது குமரியர்களுக்குப் பசுவின் காலடிகளின் சுவடுகளில் ஆபரணங்காட்டி அவைகளை அணியக்கூறிக் களிப்பித்தவர். ஒருநாள் திருவாவடுதுறை ஆலய தரிசனஞ் செய்து நீங்குகையில் பொழுதுபோய் மழையுண்டாகச் சிவபெருமான் கோபால வுருக்கொண்டு நானும் கஞ்சனூர் வருவோன் என்று துணைசென்று சுவாமிகள் இட்ட அன்னத்தை வாங்கிக்கொண்டுவந்து பலிபீடத்தருகிற் இறைத்துவிட்டு அசரீரியாக நடந்தவை கூறினர். பஞ்சாக்ஷர உபதேசத்தைப் பரிபாகம் வருதற்குமுன் உரைக்கலாகாதென்று சீடன் வருதற்குமுன் தேகநீங்குதலெண்ணி அங்கிருந்த மணலில் அதனை எழுதக்கண்ட, கழைக்கூத்தி அம் மந்திரத்தைக் காதோலையில் எழுதி அணிந்துகொண்டதை அறிந்த மாணக்கர் கழைக்கூத்திக்குப் பலநாள் ஏவல்செய்து அவளுண்ட சேஷமுதலிய வுண்டு அவள் தரப்பெற்ற மந்திரம் பெற்றுப் பிராயச்சித்தத்தின் பொருட்டுச் சுவாமிகளைச்

சரண்புகச் சுவாமிகள் பூசநக்ஷத்திரத்தில் காவிரி ஸ்நானஞ்செய்து சிவதரிசனஞ் செய்யின் ஒழியுமெனக் கேட்டு அவ்வாறு செய்தும், அக்கிராரத்து வேதியர் சம்மதிக்காமையால் தாம் சென்று திருவிடைமருதூர் ஆலயத்துள் அனைவருங் காண அசரீரியாகச் சிவமூர்த்தி பாபநீங்கிற்று எனக் கூறக் கேட்பித்தவர். மூடவராகிய தமது சகோதரியாரின் குமரர் காசியில் மணிகர்ணிகாகட்ட ஸ்நானம் விரும்ப, அவரைத் தம்மூரிலுள்ள அக்நி தீர்த்தத்தில் மூழ்குவித்துக் காசியில் மணிகர்ணிகையில் தோன்றச்செய்து அங்குச் சொக்கட்டானுடிக்கொண்டிருந்த தம்பதிகள் சுவாமிகள் க்ஷேமத்தை விசாரிக்க, கூறி அவர்கள் சொற்படி மணிகர்ணிகையில் மூழ்கி அக்நி தீர்த்தத்திலெழுந்து நடந்த செய்தி கூறக்கேட்டுக் களித்தவர். சிவப்பிரியரெனும் வேதியருக்கு முற்பிறப்பில் அடிமைகளாக இருந்த நந்தன், வீரன் என்பவர்கள் இப்பிறப்பில் அவருக்குச் சுமதி, தருமபாலன் எனப் பிறந்து கரும ஒழிவில் விஷபேதியாலும் பாம்பின் கடியாலுமிறக்கக்கண்ட தந்தை விசனமுறக் கேட்டு அவர்களை உயிர்பெறக் கூறி அவர்களது செய்தி தெரிவித்துச் சிவபதம் தந்தனர். ஒருநாள் அரசன் வீட்டிற் களவு செய்த கள்வன் ஒருவன், சேவகர் தொடர்வல் கண்டு அடைக்கலம்புக அவனுக்கு விபூதிதந்து உணவளிக்கச் சேவகர் உள் புகுந்து கள்வன் எங்கென இங்கு நமது புதல்வன் உணவு கொள்கிறான் எனக் காத்தவர். இவர் தாம் முத்திக்குச் செல்லுகையில் தம்முடனிருந்த பதினன்கு வீட்டினர்க்கும் தமது வைச்சுவதேவ பலியுண்ணும் நாய்க்கும் முத்தி யளித்தனர். இவர் கிரகத்தாச்சிரமத்தால் முத்தியடைந்தவர். இவர்க்கு எட்டு குமரர்கள். இரண்டு குமரியர் என்பர். இவர்செய்த நூல்கள்: சதுர்வேதசாரம், தத்வநிரூபணம், அரிஅர தாரதம்யம், ஸ்ரீகண்டபாஷ்ய சமர்த்தனம், உஜ்வலம், ஞானரத்நாகரம், சிவாதிக்யசிகாமணி, பக்தாதிக்யசிகாமணி, சைவாகமபூஷணம், விபூதிருத்ராக்ஷபஞ்சகம் முதலிய.

**அரதனதத்தன்** — காவிரிப்பூம்பட்டினத்து வர்த்தகன்

**அரதனமாலையணி** — அஃதாவது, சொல்லத் தொடங்கிய பொருள்களை முன்பின் முறை வழுவாதுவரச் சொல்லுதலாம். இதனை வடநூலார் ரத்னவளி யலங்காரமென்பர்.

**அரதன்** — (சங்) புரீசன் குமரன். இவன் குமரன் அரம்மியாசுவன்.

**அரதீர்த்தங்கரர்** — பதினெட்டாவது சைந தீர்த்தங்கரர், குருசாங்கல தேசம், அத்தினபுரம், குருவம்சம், இவர், தந்தை சுதரிசன மகாராஜா. தாய் பிரபாவதி. உன்னதம் (௩0) வில், சுவர்ண வர்ணம். அச,000 ௵ ஆயுஷ்யம், மார்கழி௴ பூர்வ பக்ஷம் நவமிதிதி ரேவதி நக்ஷத்ரம் ஜநநம். புத்ரன் அரவிந்தன். இவர் காலத்து (௩0) கும்பாதி கணதரர், நந்திஷேண பலதேவர், புண்டரீக வாசுதேவர், சுபௌமன் சக்கிரவர்த்தி.

**அரபத்தநாவலன்** — திருப்பெருந்துறையில் வேளாளர் குலத்துதித்துத் தமிழிற் பரத சாத்திரஞ் செய்தவன்.

**அரபத்தர்** — ஓர் இருடி. இவர் ஒருகற்பத்தில் வேதத்திற்குப் பொருள் தெரியாதிருந்த இருடிகளை மதுரையில் சிவவிரதம் அநுட்டிக்கச் செய்ய அவர்களுக்குச் சிவமூர்த்தி ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளி வந்து வேதத்திற்கு பொருள் அருளிச்செய்தனர்.

**அரப்பாயம்** — நாடகவிகற்பத்தொன்று. அருளில்லாதோர் தலைமக்களாய்ப் பெண்ணுடைத்தாய் வாரம் போலியாவது. இதனை அர்ப்பீடமெனினு மொக்கும். (வீரசோ)

**அரம்பன்** — விவும்சதியின் குமரன்.

**அரம்பை** — தெய்வதாசிகளில் ஒருத்தி. ஒருமுறை பரத்துவாசரை மயக்கியவள். விசுவாமித்திரரின் தவமழிக்கச்சென்று அவர் சாபத்தாற் கல்லாகிக் காவிரியில் ஸ்நானஞ் செய்து சுத்தையானவள். நளகூபரன் தேவி. (காவிரிபுராணம்).

**அரம்பையர் உலகம்** — இவ்வுலகத்திற் பாற்கடலிற் பிறந்த அலம்புசை, மனோகரை, உருப்பசி, உமாவதி, கிருது, திலோத்தமை, சந்திரகலை, சுநகை, மேனகை, கலாவதி, காந்திமதி, கலாநிதி, மோகினி, அரம்பை, சந்திரவிலேகை முதலிய ௬0,000 தெய்வப் பெண்கள் இருப்பர். இவர்கள் இளமை நீங்காது வேண்டிய உருவெடுப்பர். இவர் உலகத்தை, விரதந்தவறிய பெண்களும், கணவருடன் இருமனப்பட்டுப் புணர்ந்தவர்களும் அடைவர்.

**அரம்மியாசுவன்** — (சங்.) அரதன் குமரன். இவன் குமரன் முத்கலன். இவன் தன்

பிள்ளைகள் ஐவரும் ஐந்து காரியஞ் செய்யப் பாஞ்சாலர் எனப்பட்டனர்.

**அராருட்கிழங்கு**—(Arrow-Root) இது, அமெரிகா கண்டத்துக் கிழங்கு வகையைச் சேர்ந்தது. இதில் மாச்செய்து உணவாதிகளுக்கு உபயோகிக்கின்றனர். இது வியாதியாளருக்கும், குழந்தைகளுக்கும், பலவீனப்பட்டவர்களுக்கும், பத்தியச் சாப்பாடாக உபயோகப்படுகின்றது.

**அரவான்** — அருச்சுனனுக்கு நாககன்னிகையாகிய உலூபியிடம் உதித்த குமரன். பாரதயுத்தத்திற்கு முதற்பலியாக உதிரந் தந்தவன். எதிர் உரோமம் உள்ளவன். துரியோதனன் பாரதயுத்தத்தில் தனக்கு முதற்பலியாக இருக்கவேண்ட உடன்பட்டவன். பிறகு பாண்டவர்க்கும் உடன்பட்டுக்களப்பலியாக உதிரந்தந்தவன் (பாரதம்)

**அரவிந்தப்பாவை** — வங்கிபுரத்தாய்ச்சியின் குமரி. நாதமுனிகளுக்குத் தேவியார். ஈசுவரமுனிகளுக்குத் தாய்.

**அரளை**—சிற்பியின் மகள். சூரியன் தேவி.

**அரன்**—1. சர்வ சங்கார காலத்தில் அனைத்தையுமொழித்துத் தனித்து நிற்கும் சிவன் திருநாமங்களில் ஒன்று.

2. மாலியின் குமரன். விபீஷணனுக்கு மந்திரி.

3. ஏகாதச ருத்ரரில் ஒருவன்.

4. கலிங்கலை தேசத்தரசன்.

**அராகம்**—இது கலிப்பாவின் உறுப்புக்களில் ஒன்று. இது அளவடிமுதல் எல்லா அடிகளாலும் நான்கடி முதல் எட்டடி அளவாக வருவது.

**அராலி**—விஸ்வாமித்திர புத்திரன்.

**அரி**—1. விஷ்ணுவின் திருநாமம். சுவாயம்பு மநுவைக் காண்க.

2. ருஷபனுக்குச் சயந்தியிடம் உதித்த குமரன்.

3. தாரகாக்ஷன் புத்திரன்.

4. பாண்டவபக்ஷத்தவனான சேதி தேசத்தவன். கர்னனால் கொல்லப்பட்டவன்.

5. அகம்பன் என்னும் பெயருள்ள ராஜ புத்திரன்.

6. கருடபுத்திரன்.

**அரி அஸ்வன்**—அயோத்தி நகரத்து அரசன். சூரியவம்சத்து யயாதி புத்திரியாகிய மாதவியிடத்தில் பிறந்தவன். இவனுக்கு வசுமனன் என்னும் பெயர்.

2. காசிதேசத்து அரசன். புத்திரன் சுதேவன், பேரன் திவோதாசன். (பா-அது)

**அரி ஆனந்த வைஷ்ணவர்**—இவர் இராமாநந்தர் சீடர். இவர் மாணாக்கரில் ஒருவர் மாப்பிச்சைகொண்டு பலர்க்கும் உணவருத்தி வருவர். இவ்வகை இருக்கையில் இராமாநந்தரை இச்சீடர் காண இராமாநந்தர் நாளைநீ இறப்பை என்றனர். அதைக் கேட்ட மாணவகர், தம் ஆசிரியர் பால்கூற ஆசிரியர் சீடரைச் சகுணோபாசனை செய்யச் சொல்லித் தாம் யோகத்திலிருந்தனர். சீடர் சங்கு முதலிய பஞ்சாயுதங் கொண்டோனைத் திருமாலைத் தியானிக்கத் திருமால் திருவாழியால் காலன் அவனைக் கண்டு அஞ்சி நீங்கினன். காலனீங்கியதுணர்ந்த சீடர் ஆசிரியர் யோக நீங்கியபின் நடந்தவை உணர்த்திப் பஜனை செய்திருந்தனர். (பக்தமாலை).

**அரிகண்டம்** — கழுத்திற் பூட்டிக்கொண்டு நினைத்தது முடியுமளவும் கழற்றாதிருக்கும் ஓர் இருப்புவட்டம். இது அரியும் முட்களை யுடையது.

**அரிகண்டன்**—(சு) கீதமாகராஜகுமரன்.

**அரிகாபுத்திரன்**—மாசாத்தர், ஐயனார் என்று பெயர் கொண்டவர். விஷ்ணுமோகினியுருக்கொண்ட காலத்துச் சிவவீரியத்தால் உதித்த குமரர். இவர் சூரபன்மனால் இடையூறடைந்த இந்திரன் தேவியாகிய இந்திராணி, தன்னைக் காக்கும்படி இவரை வேண்ட மகாகாளரால் காவல் செய்வித்தவர். இவர்க்கு ஆயுதம் செண்டு வாகனம் யானை தேவிமார் பூரணை, புட்கலை. இவரை ஒரு சோழன் செண்டு வேண்டிப் பெற்று மேருவின்மீதெறிந்து தனம்பெற்றுப் புலிக்குறி வைத்தான் என்பர். சிலப்பதிகாரநூலாசிரியர்.

**அரிகான்**—ஒரு பாதி சிவனும் ஒரு பாதி விஷ்ணுவுமாக நின்ற சங்கரநாராயணன் திருவுரு. இதனைக் கேசவார்த்த மென்பர்.

**அரிகன்**—சந்திரவம்சத்து அரசன். அபராசினபுத்திரன். தாய். மரியாதை. மனைவி ஆங்கி. குமரன். மகாபவுமன்.

2. நாலாம்மன் வந்தரத்துத் தேவன்.

**அரிகிராமம்**—விதர்ப்பதேசத்திலுள்ள ஒரு பட்டணம்.

**அரிதாவன்**—நாயர் ஜாதிகளில் ஒருவகை.

**அரிகேசன்**—வசுதேவர் தம்பியாகிய சியாமகன் குமரன்.

2. பூர்ண பத்திரன் எனும் யக்ஷன் குமரன். இவன் சிவசிந்தனையுட னிருத்தலைக் கண்ட தந்தை வெறுப்புற்று இவனை அக

ந்ற இவன் காசிக்ஷேத்திரமடைந்து தவஞ் செய்து சிவபெருமான் பிரசன்னராகத் துதித்துக்காசிக்ஷேத்திரபாலகனுகத்தண்டமொன்று பெற்றுத் தண்டபாணியாய்ச் சிவாஞ்ஞையால் உத்பிரமன், சம்பிரமன் எனும் இரண்டு எவலாளருடன் கங்காஸ்நானஞ் செய்வோர், தன்னை வணங்கும் பதம் பெற்றவன். (சிவமகாபுராணம்).

**அரிகேது**-ஒரு வித்யாதரன் மாயாசிங்கமாகத் திவிட்டனிடம் அரிமஞ்சுவால் அனுப்பப் பட்டவன். (சூளாமணி)

**அரிசகன்**—(சந்.) உருசுகன்குமாரன். மனைவி தக்ஷகன் குமரியாகிய சுவாலாதேவி.

2. உருமண்ணுவாவின் புதல்வன்.

**அரிசி**—பிரமன் மானசபுத்திரரில் ஒருவன். உடலில் உதித்தவன். புத்திரன் காசிபன்.

**அரிசில்** — சோணாட்டிலுள்ள நதிகளில் ஒன்றன் பெயர்.

**அரிசில்கிழார்** — கடைச்சங்கத்துப் புலவர்களில் ஒருவர். இவர், தகடூரெறிந்த பெருஞ் சேரலிரும்பொறையென்னும் அரசனைப் பாடி ஒன்பது நூறாயிரம் பொற்காசு பரிசில் பெற்றதன்றி அவன் கொடுத்த அரசாட்சிக்குரிய சிங்காதனத்தை அவனுக்கே மீட்டும் இரந்துகொடுத்து அவன்பால் அமைச்சுரிமை பூண்டு விளங்கினர். "கிழார்" என்பது வேளாளர்க்கே உரிய சிறப்புப்பெயராக இருந்ததென்று தெரிதலின் இவரை வேளாண் மரபினரென்று சொல்லவேண்டும். அரிசிலென்பது ஈண்டு ஒரு நதியின் பெயரோ, ஒரூரின் பெயரோ, யாதும் விளங்கவில்லை. சோழநாட்டிலுள்ள நதிகளுள் அரிசிலென்று ஒரு நதியும், மைசூரைச்சார்ந்த ஊர்களுள் அரிசிற்கரையென்று ஒரூரும் உள்ளன. வையாவிக்கோப்பெரும்பேகனுல் துறக்கப்பட்ட கண்ணகியை அவனுடன் சேர்த்தல்வேண்டி அவனைப் பாடினர். அதிகமான் தகடூரெறிந்து வீழ்ந்த எழினியென்பவனுடைய பிரிவாற்ருது வருந்திப் புலம்பினர். தகடூர் யாத்திரையென்னு நூலில் அவ்வச்சமயங்களில் இவர் செய்தனவாகச் சில பாடல்களுண்டென்று தெரிகிறது. மேற்கூறிய சேரவரசனும், உக்கிரப்பெருவழுதியாரும், பேகனென்னும் வள்ளலும், அதிகமானும் இவர்காலத்துத் தலைவர்கள். திருவள்ளுவமாலையில் "பாந்தபொருள்" என்னும் (கூ) ம் செய்யுள் இவர் செய்ததாகத் தெரிதலின், [illegible] புலவர்களும், திருவள்ளுவரும், ஔவையாரும், உக்கிரப்பெருவழுதியாரைப் பாடிய ஐயூர்மூலங்கிழாரும், வையாவிக்கோப்பேகனைப்பாடிய பரணர், பெருங்குன்றூர் கிழார் முதலியோரும், தகடூர்யாத்திரையில் வந்துள்ள பொன்முடியாரும், இவர்காலத்துப் புலவர்களென்று எண்ணுதற் கிடமுண்டு. இவர் செய்தனவாக இப்பொழுது (உ0) செய்யுட்கள் கிடைக்கின்றன.

**அரிசேநன்**—ஒரு வித்யாதரன். அச்வகண்டனுக்குத் தோழன். (சூளாமணி).

**அரிச்சத்திரம்**—குருமக்கள் சேனையின் இருக்கை.

**அரிச்சந்திரபுராணம்**—நல்லூர், வீரகவிராயரால் தமிழில் விருத்தப்பாவால் இயற்றப் பட்டது. இது (கം ககு) செய்யுட்கள் அடங்கியது

**அரிச்சந்திரன்**-(சூ.) திரிசங்குவின் புத்திரன். இவன் வருணனை நோக்கி எனக்குப் புத்திரசந்ததி நேருமேல் அக்குமாரனைப் புருஷப் பசுவாகக்கொண்டு உன்னைத் திருப்தி செய்விக்கிறேன் எனக்கூறி அவ்வனம் உதித்த குமரனை யாகப்பசுவாக்கா திருந்தனன். தந்தையின் செய்கையுணர்ந்த குமரன் தன்னிலை உணர்ந்து பயந்து காட்டில் வசித்தனன். பின்பு வருணன் அரிச்சந்திரனுக்கு மகோதரநோயுண்டாக்கினன். தந்தை மகோதரத்தால் பீடிக்கப்படுகிருனென வினவுற்று நகரநோக்கி வருகையில் இந்திரனுல் வனத்தில் ஆறுவருஷம் தடைபட்டு அந்த ஆறும் வருஷக் கடைசியில் அசிகிரதன் என்பவனிடத்தில் சுனச்சேபனை விலையாகக்கொண்டு தந்தைக்கு அளித்தனன். அரசன் சுனச்சேபனை யாகப் பசுவாக்கி வருணனைத் திருப்தி செய்வித்தனன். குமரன் தந்தையை வருணகோபத்தாலுண்டாகிய மகோதரத்தினின்றும் நீக்கினன். இவன் சம்ராட். இவன்தேவி சந்திரமதி. மந்திரி. சத்தியகீர்த்தி. ஒரு முறை தெய்வசபையில் இந்திரன், தேவர் முதலியவரை நோக்கிப் பூமியில் சத்தியந் தவருதவன் யார் எனக்கேட்கையில் வசிட்டர் எழுந்து என் சீடன், அரிச்சந்திரன் சத்தியந் தவருதவன் என்றனர். இதைக் கேட்ட விச்வாமித்திரர் எழுந்து அப்படியாயின் அவனைப் பொய்சொல்விக்கிறேன் என்று சபதஞ் செய்துகொண்டு பூமியில் அயோத்தியையடைந்து அரிச்சந்திரனைத் [illegible] யாகஞ் செய்யவேண்டி யிருந்த பிர

வியங்கேட்டு அவன் கொடுக்கப் பெற்று அவனிடமே அதனை வைத்துச்சென்றனர். சிலநாள் கழித்து விச்வாமித்திரர் அரிச்சந்திரனிடம்வந்து அவன் பூமியைத் தானமாகப்பெற்றுத் தாம் முன்பு வைத்துப்போன பொருளினுக்கும் வட்டிகேட்க அரசன் காசிநகர் சென்று மனைவியையும் குமரனையும் வேதியனுக்கு விற்றுத் தான் புலையனுக்கு அடிமைப்பட்டு விச்வாமித்திருக்கு பொருளை அளித்தனன். விச்வாமித்திரர் அரசனை இவ்வளவு துன்பப்படுத்தியும் பொய் பிறவாமைகண்டு அரிச்சந்திரன் குமரன் தர்ப்பை கொய்யுங்காலையில் பாம்பு கடித்திறக்கச்செய்தனர். இதனைக் கூடச் சென்ற பிள்ளைகளால் அறிந்த தாய் தன் குமரனைத் தேடிச்சென்று மயானத்திட்டுத் தன் புருஷனைக்கண்டு, அவன் சொற்படி வேதியரிடம் ஈமக்கடன் பெற்றுவரத் திரும்புகையில் மாயையால் விச்வாமித்திரர் காசியரசன் புத்திரனைக் கொலைசெய்வித்து வழியில் எறியச்செய்தனர். அர் ‹ காசியரசன் புத்திரனைத் தன் புத்திரனென்று உணர்ந்து பார்க்கையில் அரசன் காவலர் கடுகிப் பிள்ளையைக் கொன்றுளெனப் பிடித்துச் சென்றனர். அரசன் இவளிடத்துக் குற்றக்குறி காணுதிருந்தும் மந்திரியர் சொல்லால் கொலை செய்விக்கக் கட்டளையிட்டனன். காவலர் சந்திரமதியைக் கொலைசெய்யும்படி அரிச்சந்திரனிடங் கொடுக்க அரிச்சந்திரன் வெட்டச் செல்லுகையில் தேவர் முதலியோர்சூழத் திரிமூர்த்திகள் தரிசனந் தந்து குமரனை எழுப்பி அரிச்சந்திரனுக்கு வேண்டிய வரமளித்து விச்வாமித்திரன் சபதப்படி அவனது தபத்தையும் வாங்கித் தந்தனர். அரிச்சந்திரனை வருத்தியதால் வசிட்டர் விச்வாமித்திரனைக் கோபித்துக் கொக்காகவென்ச் சபிக்க விச்வாமித்திரர் வசிட்டரைக் கூகையாகெனச் சபித்தனர். இவ்விருவரும் உலகம் நடுங்கச் சண்டை செய்யப் பிரமதேவர் தோன்றிச் சமாதானஞ் செய்வித்தனர். அரிச்சந்திரனைக் கொடுமை செய்ததைச் சகிக்காத விச்வதேவர் விச்வாமித்திரரிடங் கோபிக்க அவரை விச்வாமித்திரர் கோபித்து நீங்கள் மணமும்புத்திரரும் இலலாமல் மனிதராக என அவ்வகையே விச்வதேவர் திரௌபதியின் வயிற்றில் இளம் பஞ்சபாண்டவராக உதித்திறந்தனர். இவன், புத்திரப் பேறு வேண்டிச் சிவபூசை செய்து சத்தியை வணங்காததனுல் புத்திரன் அரவா விறக்கச் சாபம் பெற்றுப் பின் அநுக்கிரகம் பெற்றான். (அரிச்சந்திரபுராணம்).

**அரிச்சிதர்**—ஓர் இருடி. இவரை ஆயமங்கையர் பூஜித்துப் புத்திரப்பேற்றை யடைந்தனர். இதனை இப்பெண்களின் கணவர்கள் தவருகவெண்ணி அரசனிடம் முறையிட அரசன் ஆய்ச்சியர் கற்புடையார் என்பதை ஆயர்க்கு அப்பெண்களினுல் அறிவித்தனன்.

**அரிடிகம்**—சிற்பநூல்களில் ஒன்று.

**அரிட்டகாமன்**—அடமானன் குமரன். இவன் குமரன் ஆலயன்.

**அரிட்டநேமி**—1. ஓர் பிரசாபதி சகரனுக்கு அநேக தர்மங்களை உபதேசித்தவன்.

2. நிமிவம்சத்துப் புருசித்தின் குமரன்.

3. காசிபன்.

4. விநதையின் புத்திரன்

5. யமன் சபையில் உள்ளக்ஷத்திரியன்.

6. சகதேவன் விராடநகரத்தில் வைத்துக்கொண்ட பேர்.

7. ஒரு வேதியன் சகரனுடன் மோக்ஷத்தின்பொருட்டுச் சம்வாதம் செய்தவன்.

**அரிட்டன்**—1. கிருஷ்ணவதாரத்தில் கம்சனுல் ஏவப்பட்டுக் கண்ணனைக் கொலை புரிய இடபமாக வந்து கோபாலரை வருத்திக் கண்ணனுல் கொம்பிழந்து மாய்ந்த அசுரன்.

2. தனுவின் குமரனுகிய ஒரு தானவன்.

3. மித்திரனுக்கு இரேவதியிடம் உதித்த குமரன்.

**அரிட்டை**—1. காசிபர் தேவி, தக்ஷன் குமரி. இவளிடம் காந்தருவர் பிறந்தனர்.

2. மகாசுவேதையின் பாட்டி.

**அரிணுங்கன்**—சந்திரன்.

**அரிணி**—1. காசிபர் புத்திரி, குரங்குகளைப் பெற்றவள்.

2. அரிமேதசின் பாரி.

3. ஒரு தானவன்.

4. பிரமன் புத்திரர், நைட்டிகப் பிரமசரியம் அநுட்டித்தஇருடி. ஊர்த்வரேதஸ், இவர் பிறந்தகாலத்து அருணனைப்போல் விளங்கியதால் இப்பெயர் பெற்றனர்.

5. இரண்யகசிபின் புத்தரி. அக்னியின் தேவி.

**அரிதர்**—1. பன்னிரண்டாவது மன்வந்தரத்துத் தேவர்.

2. ஓர் இருடி

**அரிதன்**—1. யுவனாசுவன் குமரன். இவன ரச்னுயினுந் தவத்தால் இருடியாயினன். இவன் முதலாக அரிதகோத்ரர் எனும் வேதியர் பிறந்தனர்.

2. (கு) ரோகிதாச்வன் குமரன்.

**அரிதாசர்**—ஒரு பாகவதர். இவர் திருமலையில் முதலாழ்வார்கள் மூவர்களின் அருள் பெற்று அக்ஷயபாத்திரமும் திருவாழியும் பெற்றுத்திருமலையில் ஜீர்ணேக்காரணஞ் செய்தவர்.

**அரிதாசன்** — தமிழில் இருசமயவிளக்கஞ் செய்த புலவன்.

**அரிதாரம்**—இது, ஒருவகை மஞ்சணிறமுள்ள சரக்கு. இது வைப்புச் சரக்கிலொன்று, இது பொன்னரிதாரம், தாளகம், கட்டியரிதாரம், கரட்டரிதாரம், தகட்டரிதாரம், மடலரிதாரம், வைப்பரிதாரம் எனப்பேதப்படும்.

**அரிதாசமதம்** — வடமதுரைக் கருகிலுள்ள கோல எனுங்கிராமத்தில் சநந்தனன் எனும் வேதியன் ஒருவன் கிருஷ்ணமூர்த்தியைக் கிராமத்தில் பிரதிஷ்டித்தான். இவனுக்கு விக்ரமசகம் (சகசக) இல் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. இவனுக்கு ஹரிதாசன் என்று பெயர். இவன் கல்வி வல்லவனுகத் தவமேற் கொண்டிருக்கையில் இவனிடத்தில் தயாளுதாஸ் என்பவன் தான்பெற்ற பொன் செய்யுங் கல்லையிழந்தமை கூறக்கேட்டு இவன் யமுனையிலுள்ள ஒருகல்லை எடுத்துப் பார்க்க என அவ்வாறே தயாளுதாஸ் எடுத்துப் பார்க்க அது பொன்னுயிருக்கவும் தான் இழந்த பொற்கட்டி போலவுங்கண்டு வியப்புற்றுச் சீடன் ஆயினன். இவ்வகை பல வியப்புக்கள் காட்ட பலரும் இவனிடம் மோகப்பட்டுச் சீடராயினர். இவர்கள் விஷ்ணு பக்தர். இவர்கள் தத்வ விசாரஞ்செய்து சர்வ தர்மபரித் யாகஞ்செய்து சுத்த சந்யாசம் அடைதல் உண்மை யென்பர்.

**அரிதி**—கத்ரு குமரன்.

**அரித்திரகன்**—கத்ரு குமரன்.

**அரித்துவசன்** — தமிழ்நாட்டரசன். இவன் ஆதிசேடனுக்குச் சுவதியிடம் பிறந்த நாக கன்னிகையை மணந்தவன்.

**அரித்துவாரம்**—ஒரு மகாதலம். இது தக்ஷப் பிரசாபதி யாகஞ்செய்த இடம். மதுவைச் சம்மாரஞ் செய்தவிஷ்ணுமூர்த்தியை மது, இனி இது,புண்ணியத்தலமாக என வேண்டினமையால் அவ்வகை விஷ்ணுமூர்த்தி எழுந்தருளிப் புண்ணியத் தலமாக்கிய தலம். மாயாவைக் காண்க.(காசிகாண்டம்)

**அரிந்தமன்**—விஷ்ணுமூர்த்தி.

**அரிபாளதாசர்**—இவர் அதிக செல்வமுள்ளவராய் அரிபக்தி மேற்கொண்டு பாகவதர்க்கு அன்னம் அளித்துத் தமது செல்வங்களெல்லாம் போகச் சாதுக்களுக்குத் தரச் செல்வமிலராய்க் கள்ளவேடம்பூண்டு காட்டின் வழிச் செல்வோரை வழிபறித்து வந்து பாகவதரை உபசரித்து வருகையில் ஒருநாள் பொருளிலாமல் வருந்திக் காட்டின் வழி வில்லும் அம்புமாக நிற்கையில் காலதாமதமாதல் நோக்கிப் பாகவதர் வருந்துவரே யெனக் கவலுகையில் பெருமாளும் தேவியாரும் வணிகவுருக் கொண்டு வழிவரக்கண்டு களிப்புடன் எதிர்சென்று மறித்துப் பொருள்பெற்று உபசரித்தனர். இதைக்கண்ட தேவியார் பெருமாளை நோக்கி உம் பக்தனது பெருமை இவ்வாறெனப் பரிகசிக்க, பெருமாளவனது தன்மைகாட்டக் கிழவுருக் கொண்டு அவர் வீடடைந்து சீதாராம என உட்கார்ந்தனர். தாசர் எதிரடைந்துபசரித்து அன்னமிட்டு வேண்டிய தென் எனக், கிழவர் நாங்கள் வணிகர் இவ்வழி வருகையில் எங்களைக் கள்ளன் ஒருவன் வழிபறித்தனன் ; அதனால் நொந்தடைந்தோமென்று முன்னைய வணிக வுருக்கொள்ளத் தாசர் இவர் பெருமாளென வேண்டிக்கொண்டு இவ்வகைப் பெருமாளுக்குத் தீமை செய்தேனென வருந்துகையில் பெருமாள் தரிசனந்தந்து இனித் திருடவேண்டாம் உனக்கு எல்லாச் சித்திகளும் உண்டாம் என அருள் செய்து மறைய அன்றுதொட்டுப் பாகவத சேவையும் உபசாரமும் செய்திருந்தவர். (பக்தமாலை.)

**அரிபுரம்**—ஒரு வித்யாதரநகரம். (சூளாமணி)

**அரிமஞ்சு**-அச்சுவக்கிரீவனுக்குமந்திரி. (சூளா)

**அரிமர்த்தனபாண்டியன்** — குலேசபாண்டியன் குமரன். இவன் காலத்து மாணிக்கவாசகர் சரித்திரம் நடந்தது. திருவாதவூரைக் காண்க. (திருவிளையாடல்.)

**அரிமித்திரன்**—ஓர் விஷ்ணு பாகவதன். புவனேசனால் செல்வ முதலிய இழந்து விஷ்ணுபதம் பெற்றவன்.

**அரிமேதசு** — விஷ்ணுவினம்சாவதாரமாகிய ஸ்ரீ அரியைப்பெற்ற ஓர் இருடி புங்கவர், பாரி. அரிணி.

**அரிமேதன்**—தவஜவதி என்பவளின் தந்தை.

**அரியசுவனன்**—(சங்.) கிருதன் குமரன். இவன் குமரன் சகதேவன்.

**அரியசுவன்** — 1. பிருதுச்சக்கரவர்த்திக்கு அர்ச்சசியிடத்தில் உதித்த குமரன்.

2. (சூ.) அநரண்யன் குமரன்.

3. திடாசுவன் குமரன். (சூ)

4. நிமிவம்சத்துத் திருஷ்டகேதின் குமரன்.

**அரியசுவாசர்** — இவர்கள் பதினயிரவர். தக்ஷனுக்கு அசக்னி யிடத்துதித்த குமரர்கள், இவர்கள் நாரதரால் உபதேசிக்கப்பட்டு ஞானம் அடைந்தனர். இவர்களுக்கு அரியசுவர் எனவும் பெயர்.

**அரியமன்**—1. அத்திரி ரிஷியின் குமரன்.

**அரியமா**—1. காச்யபருக்கு அதிதியிடம் உதித்த குமரன். துவாதசாதித்தரில் ஒருவன்.

2. ரம்மியக வ்ருஷமாள்பவன்.

**அரியமாரையர்**—ஒரு சிவனடியவர். இவரிடத்து ஒருவன் பிச்சைக்கு வர இவர் அவனுக்கு அன்னம் இட்டனர். அப்போது சிறிது அன்னம் பூமியிற் சிந்தியது. அன்னத்திற்கு வந்தவன் அத்தருணம் சிவனல்லார் பெயர் கூறினன். இவர் கோபித்துப் பிச்சைக்கு வந்தவனைச் சட்டுவத்தால் தலையில் இடித்து வீழ்த்தினர். இதனை அரசன் அறிந்து அரியமாரையரை வருவிக்க வேவுகாரரை அனுப்ப இவர் சிவசந்நிதானத்திற் புகுந்து "நான் அரசன் முன்போகவோ" என்று சிவசாருப்பியம் பெற்றவர். (பசவபுராணம்.)

**அரியார்**—பட்டினவ சாதிப்பகுப்பு. (தர்)

**அரிளி**—ஒருவகை ஸ்தானிகர்.

**அரிவருஷன்**—அக்கியித்ரனுக்குப் பூர்வசித்தியிடம் உதித்த குமரன். தேவி. உக்ரதமஷ்ட்ரை.

**அரிவாட்டாய நாயனர்**—இவர் சோழநாட்டுக் கணமங்கலம் என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் தாயனர் என அவதரித்துச் சிவபக்தியிற் சிறந்து தமது மனைவியாருடன் இல்லறம் நடத்திவரும் நாட்களில் நாடோறும் பரமசிவத்திற்குச் செந்நெல்லரிசியும், செங்கீரையும், மாம்பிஞ்சும் படைத்துவருவதே நியமமாகப் பூண்டு படைத்து வருவர். இவ்வகை நடத்திவரும் நாட்களில் வறுமை வந்தது. அந்தக் காலத்தும் கூலிக்கு வேலைசெய்து வந்த செந்நெல்லரிசியைச் சிவமூர்த்திக்கென்று வைத்துத் தாம் கார்அரிசி யன்னம் புசித்து வந்தனர். இவரது அன்பின் நிலையை அறிவிக்கும்படி சிவமூர்த்தி அவ்வூர் முழுதும் செந்நெல்லே விளைவித்தனர். அடியவர் அக்கூலிகொண்ட செந்நெல்முழுதும் சுவாமிக்கு வைத்துவிட்டுத் தாம் தம் மனைவியார் சமைத்து வைத்த கீரை முதலியவற்றையே ஆகாரமாகக் கொண்டு வந்தனர். இவ்வகை புரிந்தும் கீரை முதலியவை கெட்டகாலத்து நீர் முதலியவை உண்டு பசி தீர்ந்து விரதம் விடாது நடத்தி வந்தனர். ஒருநாள் தாம் செந்நெல்லரிசியும், செங்கீரையும், மாவடுவுந்தாங்கி முன்செல்ல, மனைவியார், பஞ்சகவ்யந்தாங்கிப் பின்செல்லச் சிவாலயத்திற்குப் போகையில் தாயனர் அன்னமில்லா இளைப்பாலும் அரிசி முதலிய தாங்கிச் செல்லுதலாலும் காலிடறி வீழ்கையில் பின்சென்ற தேவியார் தாங்கவும் தரியாது அரிசி மாவடு முதலிய திரவியங்களைக் கமரிற் சிந்தினர். தாயனர் இனி ஆலயத்திற்குச் செல்வதிற் பயனில்லையென்று தம்மிடமிருந்த அரிவாளெடுத்து ஊட்டியை அரியச் சிவமூர்த்தி கமரிடமிருந்து தமது திருக்கரத்தை நீட்டித் தாயனர் கரத்தைப் பிடித்துக்கொண்டு மாவடுவைக் கடிக்கும் "விடே லென்னும் ஓசையைக் காட்டினர்." தாயனர் அவ்வோசை கேட்டு மனமகிழ்ந்து பணியச் சிவமூர்த்தி நமது சிவலோகத்தில் வாழ்ந்திருவென்று திருவுருக் கரந்தனர். இவர் அரிவாளால் ஊட்டியரிந்த காரணத்தால் அரிவாட்டாயனர் எனப் பெயரடைந்தனர். (பெரியபுராணம்.)

**அரிவியாசர்** — இவர் பரமபாகவதர். வடமதுரையில் வாழ்ந்தவர். இவர் ஜகந்நாதமடையவேண்டி யாத்திரை செய்கையில் ஒரு சோலையிடையடைய அவ்விடம் ஒரு காளிகோயிலிருக்க, அக்கோயிலுக்கு ஆட்டினை ஒருவன் பலியிடக் கண்டு அப்பொழில்விட்டு நீங்கி வேறோரிடஞ் செல்கையில் அக்கோயிலிலிருந்த காளி, இவரையடைந்து என்னிடம் விருந்துண்டு செல்க எனத் தாசர் இன்று முதல் உயிர்க்கொலை விரும்பாதிருக்கினுடன்படுவேனென அவ்வாறு காளி சம்மதித்துக் கூற, விருந்துண்டவர். அரசன் கனவில் காளி தோன்றி தனக்கு இனி உயிர்க்கொலை செயின் உன்னை வருத்துவேனென அரசன் பயந்து ஊரில் கொலை செய்யாதிருக்கப் பறை யறைவித்தனன். பின் அரசன்

தாசரையடைந்து அருள் பெற்றனன். தாசர் ஜகந்நாதமடைந்து பெருமாளைச் சேவித்திருந்தனர். (பக்தமாலை).

**அரிணி**—தெய்வப்பெண். தேவர் ஏவலால் திரணபிந்துவின் தவத்தை அழிக்கச் சென்று அவரால் மானிட வுருப்பெற்றுப் போஜன் புத்திரியாக இந்துமதியெனப் பெயரடைந்து அஜனை மணந்து நாரதர் விழச்செய்த பூமாலை காரணமாக முன்னுருக்கொண்டு தேவருலகடைந்தவள். இவள் குமரன் தசரதன்.

**அரிஷ்டன்**—யமன் சபையில் உள்ள க்ஷத்திரியன்.

**2.** தார்ட்ச்யாபரன் என்னும் பெயர் உள்ள ரிஷி.

3. ரிஷப உருவம் பெற்ற அசுரன். கிருஷ்ணனால் கொல்லப்பட்டவன்.

**அரீதன்**—1. விச்வாமித்திரன் குமரன். இக்கோத்திரத்திற் பிறந்த குமரர் அரீதகோத்ர பிராமணராயினர்.

2. மலைநாட்டுத் திருமூழிக்களத்தில் திருமா லருள்பெற்ற ஓர் இருடி.

**அருகமதம்**—இம்மதம் பாட்ன நகரத்தில் உதிட்டிரசகம்(கசசஅ)-ம்வருஷத்தில் பிறந்த ஆருகதன் என்பவனால்ஸ்தாபிக்கப்பட்டது. இவன் ஜயினமதத்தைக் கண்டித்தவன். இவன் அருகன், சர்வஞ்ஞனெனவுந் திரிலோகத்தாராலும் கொண்டாடப்பட்டவனென்றும் எக்காலத்தும் சத்தியத்தைப் போதிப்பவனென்றுங் கூறுவன். இம்மதத்தில் பதார்த்தங்கள் (எ) விதம். அவை யாவன: ஜீவம், அஜீவம், ஆஸ்ரமம், சம்வரம், நிர்ச்சரம், பந்தம், மோக்ஷம் என்பன. (க) ஜீவ மென்றால் போக்தாவான ஆத்மா. (உ) அஜீவமென்றால் போக்ய பதார்த்தங்கள். (ங) ஆஸ்ரமமென்றால் சத்தாதி விஷயங்களைப்பற்றிச் சுரோத்திரேந்திரியங்கள் செல்லுதல். (ச) சம்வரமென்றால் இந்திரிய வியாபாரங்களைத் தொலைக்கத் தகுந்த இயமநியமாதிகள். (ரு) நிர்ஜரமென்றால் பாப பரிகாரமான தப்த சிலாரோகணுதி காயசுத்திகள். (சா) பந்தமென்றால் கர்மம். (எ) மோக்ஷமென்றால் கர்மபாபநாசமான சத்வலோகாகாசத்தைப் பிரவேசித்து எக்காலமும் ஊர்த்வகமனத்தையடைதல். அருகமதசித்தாந்தம்,(க)ஸம்யக்தரிசனம் எனின் அருகனால் கூறப்பட்ட தத்வார்த்தங்களில் நம்பிக்கை வைத்தல். (உ) ஸம்யக்ஞானம் எனின் ஜீவாதிபதார்த்தங்களில் ஆசையின்றி இருத்தல். (ங) ஸம்யக்சாரித்திரம் எனின் பாதகங்களை உண்டாக்கும் கர்மங்களைவிடுகை. இவை அநுட்டித்தல் முத்தி. இம்மத சந்நியாசிகள் பிக்ஷையேற்று உண்பவர்களாய்க் கையில் குண்டிகை யுள்ளவர்களாய்ச் செந்நிற வஸ்திரமணிந்தும் சிலர் வெள்ளுடை தரித்துமிருப்பர் எனின் சிலர் சுவேதாம்பரரென்றும் சிலர் திகம்பரர் என்றுங் கூறப்படுவர் இவ்விரண்டு சந்நியாசிகளும் தலைமயிரைத் தாங்களே பிடுங்கிக்கொள்வர், க்ஷௌரம் செய்துகொள்ளார். (தத்வநிஜாநு.)

**அருகதாசன்**—ஒரு சைநகவி. சுத்திமுக்தாவலி செய்தவன்.

**அருகன்**—1. ஒரு அரசன். பாஷண்டமதத் தாபகன்.

2. சிநனுக்கு ஒரு பெயர்.

**அருக்ககீர்த்தி**—சடியரசன் மகன். திவட்டன் மைத்துனன். (சூளாமணி).

**அருக்கசந்திரன்** — இவன் உஞ்சைமா நகர வாசி. குண்டலகேசிக்கு அருகமதசித்தாந்தம் உபதேசித்தவன்.

**அருக்கபாணி**—ஒரு காந்தர்வ ஸ்திரி.

**அருக்கனிலை**—சனிக்கிழமை - இரா - (ஙo) நாழிகையும், ஞாயிற்றுக்கிழமை பகல் (ஙo) நாழிகையும் தெற்கிலும், ஞாயிறு - இரா - (ஙo)ம், திங்கள் (சுo)-ம் தென்மேற்கிலும், செவ்வாய் - பகல் - (ஙo)-ம், இரா - (கo)-ம், மேற்கிலும் மற்ற (உo) ம் புதன்கிழமை பகல் - (ஙo) ம், வடமேற்கிலும், புதன் - இரா - (ஙo)-ம், வியாழம் பகல் - (ஙo)-ம், இரா - (கo) - ம் வடக்கிலும் மற்ற (உo)-ம் வெள்ளி (சுo)-ம், வடகிழக்கிலும் அருக்கனிருக்கும். அக்னி மூலை பாழ்.

**அருக்கன்**—1. சூர்யனுக்கு ஒரு பெயர்.

2. ஒரு பூதன் சண்முக சேநாபதி.

**அருசி**—பிருது சக்கிரவர்த்தியின் தேவி.

**அருசிமாலை**—மருசியின் தாய். (சூளாமணி).

**அருச்சராதிமார்க்கம்**—பர்வணையால் பூசிப்போரடையும் ஆதித்யாதி மண்டல மார்க்கம்.

**அருச்சுநகன்**—கௌதமியைக் காண்க.

**அருச்சுநன்**—1. இவன் பூர்வம் நரன் எனும் ஒரு இருடி. பூபார நிவர்த்தியின்பொருட்டுப் பாண்டுவின் தேவியாகிய குந்திதேவியிடம் இந்திர மந்திரத்தால் பங்குனியுத்திரத்தில் பிறந்து தந்தையாகிய பாண்டு இறக்கப் பெரிய தந்தையாகிய திருதராட்

டிரனிடம் வளர்ந்து துரோணரிடம் வில் வித்தை முதலிய கற்று வல்லவனாய்த் தன் சகோதரருடன் இருந்தனன். ஒரு நாள் துரோணர்ஸ்நானத்திற்குச் சென்றபோது முதலைபற்றத் துரியோதனாதியர் அவரை மீட்க வலியற்றது கண்டு அம்முதலையைக் கொன்று அவரை மீட்டவன். துரோணர் கட்டளைப்படி பாஞ்சாலனைத் தேரில் கட்டிச்சென்றவன். இந்த அருச்சுநன் முதலிய ஐவரும் உயிருடனிருக்கின் தனக்குப் புகழும், இராச்சியமும் நிலைக்காவென்ற கருத்துள்ள துரியோதனன், சூதால் அரக்குமாளிகை கட்டுவித்துத் தந்தையால் பாண்டவர்களை வருவித்து அதிற் பாண்டவர் இருக்கையில் அதைக் கொளுத்துவித்தனன். பாண்டு புத்திரர் அதினின்று நீங்கி நிலவறை வழியாகத் தப்பிப் பிராமணவேடம் பூண்டு வேத்திரகீய நகரடைந்து வாழ்கையில் அருச்சுநன் துருபதன் கட்டிய மச்சயந்திரத்தை அறுத்துத் திரௌபதியைக் கொணர்ந்து தாய் சொற்படி நால்வருடன் மணந்து திருதராட்டிரன் சொல்லால் அத்தினபுரஞ் சேர்ந்து இந்திரப்பிரஸ்தத்தை ஆண்டு வந்து அத்தினபுரத்தில் மண்டபங் கட்டினதைப் பார்க்கச்சென்று அங்குச் சூதாடி நாடு முதலிய இழந்து தமயனார் சொற்படி அடங்கியிருந்து தாயத்தார் தமது மனைவியின் துகிலையுரியப் பொறுத்துக் கடைசியில் கர்ணனைக் கொல்லச் சபதஞ்செய்து நீங்கி ஆரண்யஞ்சென்று இந்திரன் வருவிக்கச் சென்று அங்கு உருப்பசி மோகிக்க உடன்படாது பேடியுருவாக அவளாற் சாபம் பெற்று, அவ்வுரு சமயத்தில் வரும்படி வரம்பெற்றுக்கொண்டு நீங்கி அக்கி வேண்டக்காண்டவவனத்தை அக்கிக்கவித்து அந்த அக்கியிடத்தில் காண்டீபமென்னும் வில்லையும் அக்ஷயத்தூணீரத்தையும், இரதத்தையும் பெற்று வீமனால் அநுமக்கொடியடைந்து திரௌபதை கேட்க மித்திரனென்னும் இருடிக்காகக் கனிந்த நெல்லிக்கனியைக் கொய்து தந்து பிராமணன் பொருட்டுத் திருடர்களைக் கொல்ல முயலுகையில் திரௌபதியும் தருமனும் இருக்கக்கண்டு தீர்த்தயாத்திரை சென்று நாரீதீர்த்தத்தில் முதலைகளாயிருந்த பெண்களின் சாபத்தைத் தீர்த்தவன். உலூபியென்னும் நாககன்னிகையை மணந்து அராவானைப் பெற்று மணலூர் புரத்தின் அரசனாகிய சித்திரவாகனன் பெண்ணாகிய சித்திராங்கதையை மணந்து பப்புருவாகனனைப் பெற்று, முதலையாக இருந்த காந்தருவன் சாபத்தைப் போக்கி, சுபத்திரைபொருட்டுத் தவசிவேடங்கொண்டு துவாரகைசென்று அவளை மணந்து அபிமன்யுவைப் பெற்று, பாசுபதத்தின் பொருட்டுச் சென்று தவஞ்செய்கையில் துரியோதனனால் ஏவப்பட்ட பன்றியுருக்கொண்ட மூகதானவனென்னும் அரக்கனைக் கொல்லச் செல்லுகையில் வேடராக வந்தெதிர்த்த சிவமூர்த்தியைப் பழித்து அவரால் துன்பமடைந்து வருந்தியபோது அவர் காட்டிய உண்மையுருவைக் கண்டு தரிசித்து மோக்ஷம் வேண்ட, நீ என்னை வேடனென நிந்தித்தபடியால் மறுபிறப்பில் திண்ணன் எனும் வேடருக்கொண்டு பூசித்து முத்தியடைக என்னும் வரமும், பாசுபதமும் பெற்று மீண்டு, அஞ்ஞாதவாசத்தில் விராடபுரத்தில் பேடியுருவங்கொண்டு, மறைந்திருந்து, நிரைமீட்சிசண்டையால் வெளிப்பட்டுப் பாரதப்போரில் ஐந்தாநாள், ஏழாநாள், பத்தாநாட்களில் பீஷ்மருடன் சண்டைசெய்து, பத்தாநாள் இறுதியில் அவரைப் போரில் விழச்செய்து, பதின்மூன்றாநாளில் தன் குமாரனாகிய அபிமன்யு இறக்கச் சூரியன் அஸ்தமிக்குமுன் என் குமாரனைக் கொன்றவனைக் கொல்லுவேனெனச் சபதஞ்செய்து சயத்திரதனைக் கொன்று, அவன் தலையைத் தவஞ்செய்யும் அவன் தந்தைகையில் விழச்செய்து பதினான்காநாள் பூரிச்சிரவன் கையை அறுத்துப் பதினேழாநாள் கர்ணனைக்கொன்று பதினெட்டாநாளிறுதியில் அக்கி கொடுத்தவரத்தின்படி தேர் எரியக் கண்டு வியப்படைந்து சகோதரருடன் அரசாட்சி புரிந்து யாதவவம்ச அழிவைத்தாரசனாற் கேள்வியுற்று விசனமடைந்து துவாரகைசென்று வசுதேவரைத் தேற்றி யாதவர்களின் பாரிகள் முதலியவரை அழைத்துக்கொண்டு இந்திரப்பிரத்தஞ்சென்று வச்சிரதந்தனைக் காவலாக்கி மீண்டு, கண்ணன் உடலைத் தகனமாக்குவித்துக் கண்ணன் தேவியர்களை அழைத்துக்கொண்டு வருகையில் வேடரிடத்தில் அவர்களைப் பறிகொடுத்து வெல்ல வலியில்லாமல் இதம் பேசித் தப்பித்துக்கொண்டு இந்திரப்பிரத்தஞ் சென்று வச்சிரனுக்குப் பட்டங்கட்டி வியாசரைக்கண்டு நடந்தவைகளைக் கூறி

னன். வியாசர் அருச்சுநனை நோக்கி நீங்கள் தவமேற் கொள்ளுங்களென அதைத் தமயனுடன் கூறி ஐவரும் கலியுகத்தின் தொடக்கத்தில் தவமேற்கொண்டு செல்லுகையில் அருச்சுநன் காண்டீபத்துடன் செல்வது கண்ட அக்நி, எதிர் தோன்றிக் காண்டீபத்தைக் கேட்கக் கொடுத்துச் சண்டையில் ஒருநாளில் செயிக்கிறேனென்று மூன்றுநாள் கழித்ததனால் நகுலனுக்குப் பின்னிறந்தவன். மகாவீரன், அதிசௌந்தர்யன், இவனுக்கு வெண்ணிறமாயிருத்தலால் **அருச்சுநன்** எனவும், பங்குனி உத்திரத்தில் பிறந்ததால் **பற்குநன்** எனவும், பிரதையெனும் குந்தி புத்திரனாகையால் **பார்த்தன்** எனவும், இந்திரனால் தரிக்கப்பட்ட கிரீட முடையவனாதலால் **கிரீடி** யெனவும், வெள்ளைக்குதிரைகள் கட்டிய தேருடையானாதலால் **சுவேதவாகனன்** எனவும், பகைவர் வெறுக்கப் போர் செய்வோனாகையால் **வீபற்சு** எனவும், யுத்தத்தில் வெற்றியுள்ளோனாகையால் **விஜயன்** எனவும், அஞ்ஞானத்தை நீக்கவல்லவனாகையால் **கிருட்டினன்** எனவும், இடம் வலம் என்கிற இரண்டு கைகளாலும் எய்ய வல்லவனாகையால் **சவ்வியசாசி** எனவும், உத்தரகுருவரையுஞ் சென்று பகைவரிடம் தனம் பெற்றவனாதலால் **தனஞ்சயன்** எனவும் (௧0) பெயர்களுண்டு. இவன் சங்கத்திற்குத் தேவதத்தமென்று பெயர். இவன் முதற் பிறப்பில் நரனாகவும், இரண்டாவது இலக்ஷ்மணனாகவும், மூன்றாவது அருச்சுநனாகவும் பிறந்து விஷ்ணுமூர்த்தியை நீங்காதிருந்தவன். தித்திரி, கல்மாஷம், மண்டூகம் இவை, அருச்சுநன் காந்தருவரிடமிருந்து திக்கு விஜயத்தில் காணிக்கையாகக் கொண்ட குதிரைகள். (பாரதம் - சபா பருவம்.)

2. (சூ.) ச்ரவதன் எனும் மநுப்புத்திரன்.

3. சமீகநக்குச் சுதானியிடம் உதித்த குமரன்.

4. ஒரு வேடன், பிராமண ஸ்திரீயின் புத்திரன் பாம்பு கடித்து இறக்கக் கண்டு அப்பாம்பைப் பிடித்து மிருத்யு முதலியவரைக் கண்டவன். அப்பிள்ளையின் தாய் வேண்டப் பாம்பைக் கொல்லாது விடுத்தவன்.

5. கார்த்தவீர்யார்ச்சுநனுக்கு ஒரு பெயர்.

**அருச்சுநி**—1. வாணசுரன் புத்ரி. இவளுக்கு அருச்சுனை யெனவும் பெயர்

2. ஒரு நதி.

**அருச்சுனை**—பாகுதை யென்பவளின் பெயர்.

**அருஞ்சயன்**—1. விசையைக்குப் பாட்டன்.

2. இந்திர சஞ்சயராஜகுமாரன். (சூளா).

**அருட்சத்தி**—பரமசிவனைப் பிரியாதிருக்குஞ் சக்தி.

**அருட்டநகர்**—உச்சயினிக்கும் சயந்தி நகருக்கும் இடையேயுள்ள பட்டணம். (பெருங்கதை).

**அருணகிரிநாதர்** — பட்டினத்து அடிகள் திருஅருணைக்கு எழுந்தருளிய காலத்துக் கருமவசத்தால் கோயில்தாசியைக் கண்டு மோகித்தனர். அத்தாசி தன் தாயிடங் கூறத் தாய் பெண்ணை அழைத்துவருமுன் சுவாமிகள் வீரியத்தை அரசிலையில் வைத்து அவளது வரவறிந்து உன்னை நினைத்தவன் தொன்னையில் இருக்கிறான் என்றனர். தாசி அவ்வீரியத்தை அருந்த அதனால் கருக்கொண்டு இவரைப் பெற்றனள் என்பர். அருணகிரியார் வளருமிடத்து இளமையில் தாயிறக்கத் தமக்கைவளர்க்க வளர்ந்து இருந்த செல்வ முதலியவைகளைக் காமங் காரணமாகச் செலவழித்துத் தமக்கை கர்ணகடோமாகக் கூறிய வார்த்தை கேட்டுப் பெண்களில் வெறுப்படைந்து திருவண்ணாமலையார் திருச்சந்நிதானத்தில் வல்லாளராசனால் கட்டப்பட்டிருக்கும் கோபுரத்தின்மீதிருந்து உயிர் போக்கிக்கொள்ளக் குதித்து உயிர் நீங்காமல் அவ்விடம் தறவியாகவந்த குமாரக்கடவுளால் சடாக்ஷரம் உபதேசிக்கப் பெற்றுத் துறவடைந்து குமாரக்கடவுள் எழுந்தருளியிருக்கும் ஆலயங்கள்தோறுஞ்சென்று **திருப்புகழ்**பாடிக் கோபுரத்தில் எழுந்தருளி யிருக்கையில் வில்லிபுத்தூரர் என்னும் கவி அருணைக்கு வந்து அரசன் அநுமதிபெற்று அருணகிரியாரிடம் வாதிடத் தொடங்குகையில் அருணகிரிநாதர் வில்லிபுத்தூராருக்கு மரியாதை முதலிய செய்யவும் வில்லிபுத்தூரார் செய்யாதிருந்ததனால் அருணகிரிநாதர் விகடபரிமளம் விளம்பக் கவி கோபித்ததை அரசனறிந்து வில்லியை அடக்கி நடுவாக நின்று அருணகிரியாரை ஒரு அந்தாதி பாடச்செய்து அதற்கு வில்லியை உரைகூறச் செய்து, தோற்றவர் வென்றவர் மனப்படி நடக்கக் கட்டளையிட்டனன். அக்கட்டளைப்படி அருண

கிரிநாதர் கந்தரந்தாதி பாட அதற்கு வில்லி உரை கூறிக்கொண்டுவந்து "திதத்தத் தத்தித் தத்திதி தாதை தாத துத்தித் தத்திதா," என்னுஞ்செய்யுட்கு உரைகூற அறியாது மயங்கித் தோற்க வில்லிபுத்தூரார் காதைக் காட்டினர். அருணகிரிநாதர் அது உமக்கு நாம் கொடுத்ததாக எனவிட்டுக் கோபுரத்தில் எழுந்தருளியிருந்தனர். இதுநிற்கச் சம்பந்தாண்டான் எனும் தேவி உபாசகனாகிய சமணன், பிரபுட தேவமகாராசனை ஏவி. அருணகிரியாரைக் கந்தமூர்த்தியை வருவிக்கவெனக் கூறித் தான் தேவியை உபாசித்து அவரது வரவைத் தடுக்கச் செய்தனன். அவ்விதஞ் செய்தும் கந்தமூர்த்தி அருணகிரியார்க்கும் அரசனுக்கும் தரிசனந் தந்தனர். கந்தமூர்த்தியின் பேரொளியால் அரசனுக்குக் கண்ணொளி மழுங்கிற்று. இதனால் அரசன் விசனமடையச் சம்பந்தாண்டான் அரசனை நோக்கி அருணகிரியாரைக் கொண்டு தெய்வலோகத்துப் பாரிசாதமலர்கொண்டுவரத் தூண்டினன். அவ்வகை அரசன் வேண்டுகோளால் அருணகிரியார் தமது தேகத்தை மலையிலடக்கஞ் செய்து கிளியுருக்கொண்டு பறந்து தேவலோகஞ் சென்று இந்திரனால் உபசரிக்கப்பட்டு இருந்தனர். அருணகிரியார் தேகமிருந்ததை அறிந்த சம்பந்தாண்டான் அருணகிரி பொய்கூறி உயிர் நீங்கினரென்று அரசனுக்குத் தெரிவித்தனன்; அரசன் அருணகிரிநாதர் தேகத்தைத் தகிக்கும்படி ஏவினன். கிளியுருக்கொண்டு நீங்கிய அருணகிரியார் மலர்கொண்டு மீண்டு அரசன் கொலுவிற்குவர அரசன் விசனமடைந்து புஷ்பத்தால் கண் பெற்றனன். இவைகளைக்கண்ட சம்பந்தாண்டான் பொறாமைகொண்டு காளியை உபாசிக்கக் காளி தரிசனந் தரவும் வணங்காததினால் அவளாற் கொலை யுண்டனன். இவர் இக்கிளி யுருவுடன் முருகக்கடவுள் கட்டளையால் அவரது வலதுதோளில் வீற்றிருந்தனர். இவர் செய்த நூல்கள், திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி. (கர்ணபரம்பரை).

**அருணந்திசிவாசாரியர்**—இவர், திருத்துறையூரில் ஆதிசைவர் குலம் செய்த தவப்பேற்றால் திருவவதரித்துக் காமிகாதி ஆகமங்கள் முதலியவற்றில் வல்லவராகச் **சகலாகம பண்டிதர்** எனத் திருநாமம் அடைந்து தம்மையடைந்த அடியவர்களுக்குச் சிவதீக்ஷை செய்துவரும் நாட்களில் ஒருநாள் மெய்கண்டதேவர் தம்மை யடைந்த மாணாக்கர்க்கு அருளுபதேசஞ் செய்துவருதலைக் கேட்டுத் தம்மிடம் அவர் வராமையால் தாமே அவரைக் காண்பான் எண்ணிச் செருக்குடன் வருதலைக்கண்ட மெய்கண்ட தேவர், அக்காலம் தமது மாணாக்கர்க்குப் பாச பதார்த்தமாகிய ஆணவ இலக்கணத்தை விளக்குவோர், அதற்குக் காட்டாகத் தம்பாலடைந்த சகலாகமபண்டிதரைக் காட்டினர். அதனைக் கேட்ட பண்டிதர் ஒன்று முரையாடாது தேசிகரது ஞானநோக்கத்தால் அதிதீவிர பக்குவமடைந்து பணிந்து நின்றனர். மெய்கண்டதேவரும் அவரது பக்குவத்தால் அவருக்கு ஞானதீக்கை செய்து தாமருளிச்செய்த சிவஞானபோதத்தை உபதேசித்தனர். சகலாகமபண்டிதரோ அவற்றை நன்குணர்ந்து அச்சிவஞான போதத்தின் வழிநூலாக "பார்விரித்த நூலெல்லாம் பார்த்தற்குச் சித்தியிலே யோர் விருத்தப் பாதிபோதும்." "சிவனுக்குமேற் றெய்வமில்லை சிவஞான சித்திக்குமேற் சாத்திரமில்லை" எனக்கூறும் **சிவஞானசித்தியார்** எனும் சைவசித்தாந்த சாத்திரத்தை அருளிச்செய்து தேசிகர் சந்நிதானத்தில் எழுந்தருளச் செய்தனர். அதனை மெய்கண்டார் கடைக்கணித்தருளி அருணந்தியெனும் திருநாமமும் இட்டனர். பின் அருணந்திசிவாசாரியர் தேசிகர்மீது இருபா இருபது எனும் ஒரு சாத்திரமுஞ் செய்து தேசிகர் திருவடி நீங்காதிருந்து திருக்கடந்தை மறைஞானசம்பந்தருக்கும் மற்றவருக்கும் உபதேசித்துச் சிவபெருமான் திருவடி யடைந்தனர்.

**அருணபுரத்தாழ்வான்** — எழுபத்து நான்கு சிங்காசனாதிபதிகளில் ஒருவர். வைஷ்ணவாசாரியர். (குருபரம்பரை).

**அருணபுரத்துநம்பி**—எழுபத்துநான்கு சிங்காசனாதிபதிகளில் ஒருவர். வைஷ்ணவாசாரியர். (குருபரம்பரை).

**அருணமச்சிவாயதேவர்**—உமாபதி சிவாசாரியர் மாணாக்கர். சித்தாந்த சைவாசாரியர்களில் ஒருவர்.

**அருணர்**—கிருஷ்ணன் குமரர்.

**அருணன்**—1. காசிபருக்கும், விநதைக்கும் பிறந்தவன். இவன் தாய், தன் மாற்றாளாகிய கத்துருக்கு முதலில் குமரர்கள் பிறந்

தனர் என்று பொருமையால் தான் அவயங் காத்திருந்த முட்டையைப் பருவம் அடையாதமுன் உடைக்க அதிலிருந்து காலில்லாதவனாக இவன் பிறந்து என்னைக் காலில்லாதவனாகச் செய்தபடியால், நீ மாற்றவளுக்கு அடிமையாகிப் பின்பு என் சகோதரன் கருடனால் நீங்குக என்று சபித்தவன். இவன் பார்யை ஸ்யேனி. குமரர் சம்பாதி, சடாயு. தம்பி கருடன். இவன் சூரியனுக்குச் சாரதியாயினன்.

2. இவன், இந்திரன் கொலுவின் விநோதங்களைக் காணப் பெண்ணுருக் கொண்டுசெல்ல இவனை இந்திரன் கண்டு புணர்ந்தனன். அதனால் வாலி பிறந்தனன். பின்பு சூரியன் இவனது தாமதமறிந்து நடந்ததை வினவி அப்பெண்ணுருக்கொளச்செய்து புணரச் சுக்கிரீவன் பிறந்தனன். இவன் புத்திரன் உத்தாலகன் என்பர். (திருவொத்தூர்புராணம்).

3. முராசுரன் குமரன் கண்ணனுடன் பொருது மாண்டவன்.

4. இவன் ஒரு அசுரன் சிவசத்தியாகிய பிரமராம்பிகையால் கொல்லப்பட்டவன். (பிரமராம்பிகையைக் காண்க.)

**அருணாசலக்கவிராயர்**—சோழமண்டலத்திலே தில்லையாடியிலே, கார்காத்தவேளாண் மரபிலே, நல்லதம்பிபிள்ளையும், கற்பிலே சிறந்த அவரது மனைவி வள்ளியம்மையும், புரிந்த அரிய தவப்பேற்றினாலே, அருணாசலக்கவிராயரென்பவர், பிறந்து உரியபருவத்தே கல்வி பயின்று வருங்காலத்தில் இவரது (கஉ) வது வயதில், தாய் தந்தையர்கள் தேகவியோகமடைந்தமையால் கல்விப்பயிற்சிக்கு இடையூறுயினும் ஊழ்வலி துணைக்காரணமாய்ச் சமீபமாயுள்ள, திருக்கைலாய பரம்பரை நிகமாகம சித்தாந்த சைவாசாரிய பீடமாக விளங்கும் தருமபுரவாதீனத்தைச் சார்ந்து அப்போதைய பண்டார சந்நிதிகளால், அபிமானிக்கப்பெற்று அவ்வாதீனத்துப் பிரபலவித்துவானாகிய அம்பலவாணக்கவிராயரிடத்தே (உ0) வது வயதுவரையில் உபயபாஷாப் பிரணீதங்களாகிய, பொது நூல்களையும், சைவசமய நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து வருங்காலத்து அவ்வாதீனத்துப் பண்டாரச் சந்நிதிகள் இவரது புத்தி நுட்பத்தையும், கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்து விளங்கும் பரிபக்குவத்தையும் உணர்ந்து தீக்ஷை செய்து, திருவுந்தியார் முதல் சங்கற்ப நிராகரணமீறாகவுள்ள சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கையும் உரையுடனே விதிப்படி உபதேசிக்க உணர்ந்து அவற்றின் மெய்ப்பொருளாவார் சிவபெருமானே என்றும் தெள்ளிதிற்றுணிந்து தெளிந்தனர். பின்பு திருவள்ளுவநாயனார் அருளிச்செய்த திருக்குறளில், அறத்துப்பாலில் முதற்கண் இல்லறமும் பின்னர் துறவறமும் கூறியிருத்தலால், தாமுமவ்வாறே இல்லறத்தை அடையவேண்டுமென்னும் விருப்பைப் பண்டாரச் சந்நிதிகளுக்கு விண்ணப்பஞ்செய்து அநுமதி பெற்றுத் தமது ஜனனபூமியாகிய தில்லையாடியை அடைந்து (கூ0) வது வயதில் அபிஷேகக் கட்டளைக் கருப்பூரில் குலமுறைக்கேற்ற ஒரு கன்னிகையை விதிப்படி விவாகஞ்செய்துகொண்டு தில்லையாடியிலிருந்து இல்லறத்தை நடத்துதற்குத் துணைக்காரணமாகிய பொருளைப் பிறவுயிர்களுக்குக் கேடுபயவாத நன்னெறியிலீட்டி, நித்திய கருமத்துக்கும், பொருளீட்டுதலுக்கும், உரியகாலமல்லாக் காலமெல்லாம் அவமாக்காது புண்ணிய நூலாராய்ச்சி செய்யவுங் கருதிக் காசுக் கடைத்தொழிலைக்கொண்டு இல்வாழ்வாராயினர். வாழுநாளில் தமது வியாபார நிமித்தம் புதுவைக்குச் செல்கையில் சீகாழிக்கோயில் கட்டளைவிசாரணை கர்த்தரும் முன்னர்த் தம்மோடு பயின்றவருமாகிய சிதம்பரநாத முனிவரை ஷை யூர் தெற்கு வீதிக் கட்டளை மடத்திற் கண்டிருவரு நெடுநாட் பிரிந்த பிரிவு நீங்கப் பரஸ்பரம் தழுவி யத்யந்த விநயத்தோடு சம்பாஷிக்குங்கால் முனிவர் சீகாழிக்குப் பள்ளுப் பாடுவதற்குப் பீடிகை இட்டதையும், அதை முடிக்கப் பிரமேசர் கைங்கரியத்தால் தனக்கவகாசம் இன்மையையுங் கூறி இவர் கையிற் கொடுக்க அன்று இரவிலேயே, இவர் சொற்சுவை, பொருட்சுவை, அமையப் பள்ளைப் பாடிமுடித்து அவசியம் தாம்புதுவைக்கேகும் பயணச்செய்தியை முனிவரிடங்கூறாது அவரது அணுக்கத் தொண்டினர்பாற் கூறிக் காழிப்பள்ளைக் கொடுத்து விட்டுப் புதுவைக்கேகிச் சிலகாலம் அங்கு வசித்தார். சிதம்பரநாதமுனிவர் வைகறையிற் றமது தொண்டரால் காழிப்பள்ளின் முடிவையும் கவிராயர் பயணச் செய்தியையும், கண்டும், கேட்டும், களித்தும்,

சலித்தும் அவரை எவ்வாற்றானும் இவ்விடம் இருத்த வேண்டுமென்னுங் கருத்தால் அவருக்கென்றே ஒரு கிருகம் வடக்கு வீதியிற் கட்டுவித்து அவரது குடும்பத்தைக் கவிராயர் வருவிப்பதுபோற் சீகாழிக்குத் தாம் வருவித்து, புதுவைக்குச் சென்ற கவிராயர் இங்ஙனம் விரைவில் வருவாரென அவர்களுக்குத் திடவாக்களித்துத் தம்மாற் கட்டுவித்த புதுக்கிருகத்திற் சுபதினத்திற் பிரவேசம் பண்ணுவித்தனர். கவிராயர் புதுவைநீங்கிச் சீகாழிக்குச் சிதம்பரநாதமுனிவரிடம் வந்தபோது கவிராயரும், முனிவரும் உலாப்போவது போற் சென்று இவர் குடும்பத்தார் வசிக்கின்ற புதுக்கிருகத்திற் புகுந்தார்கள். கவிராயர், தமது மனைவி முதலாயினோர் அங்கு இருக்கக் கண்டு வியப்புற்று அவர்களால் நடந்த எல்லா வரலாற்றையும் அறிந்து குருலிங்க சங்கம க்ஷேத்திரமாயும், திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருவவதாரத் தலமாயும் விளங்கும், சீகாழித்தலத்தில் வசிக்க ஆகூழிருந்தமையையு முணர்ந் தம் முனிவர் வேண்டுகோளுக்கு இசைந்து அவ்விடத்திலேயே வசித்திருந்தார். ஆதலால் இவர் அன்றுதொட்டுச் சீகாழி அருணசலக்கவிராயரெனப் பேர் பெற்றனர். இவரிடத்தே கம்பராமாயணங் கற்றுவல்லராகிய சட்டநாதபுரம் கோதண்டராமையர், வெங்கிடராமையர் என்னும் சங்கீத வித்வான்கள் வந்து இராமாயணத்தைக் கீர்த்தனைகளாகப் பாடித் தருகவென அவ்வாறே அவர்கள் வேண்டுகோளின்படி கீர்த்தன ரூபமாக ஷை இராமாயணத்தையும் அதனுடன் அசோமுகி நாடகம், அநுமார் பிள்ளைத் தமிழ், காழியந்தாதி, காழிக் கலம்பகம், காழிக்கோவை, தியேகேசர் வண்ணம், சம்பந்த சுவாமிகள் பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்களையும் இயற்றினர்; பின்னர் சிதம்பர நாதமுனிவர் வேண்டுகோளின்படி வடமொழியிலுள்ள சீகாழித்தலபுராணத்தைத்தென்மொழியில் (௩௧) அத்தியாயமாக இயற்றிச் சிவபெருமான் சந்நிதியில் எழுந்தருளப் பண்ணி விதிப்படி அருச்சித்து நமஸ்கரித்து இருந்துகொண்டு அங்கு வந்திருந்த உபயபாஷா பண்டித சைவசித்தாந்த சாஸ்திரிகள் முதலாயினோரும், சிதம்பரநாதமுனிவரும் கேட்டு மகிழப் பிரசங்கித்து அரங்கேற்றினர். இவர் சாலிவாகன சகாப்தம் (௧௬௩௪)வில் பிறந்து (௧௭௦௧)ல் சீகாழியில் சிவபெருமானுடைய திருவடியை அடைந்தார்.

**அருணசலமுதலியார்**—இவர் திருமயிலையிலிருந்த தமிழ் வித்வான். இவர் செய்த நூல்கள்: கொடியிடைமாலை, சிதம்பரம் சிவகாமியம்மைப்பதிகம், திருமுல்லைவாயில் மாசிலாமணியீசர் பதிகம்.

**அருணசுவன்** — இக்ஷ்வாகு வம்சத்தவனான பர்ஹிணசுவன் இரண்டாம் புத்திரன்.

**அருணதித்தன்** — அருணன் தவஞ் செய்ய அவன் முன் சூரியன் தோன்றித் தனக்குப் பாகனாக என வேண்டியதால் இப் பெயர் பெற்றனன். (காசிகாண்டம்).

**அருணி**—பிரமன் மானசபுத்ரருள் ஒருவன்.

**அருணை**—1. பஞ்சபூதத் தலங்களிலொன்று. இது தேயுத்தலம். இதில் சிவாலயம் ஒன்று இருக்கிறது. இது திருவண்ணாமலையென்று வழங்கும். வடஆற்காடு ஜில்லா.

2. வசிட்டரைக் காண்க.

**அருண்மொழித்தேவர்**—சேக்கிழார் குடியிற் பிறந்த பெரியபுராணம் பாடிய சேக்கிழாருக்கு ஒரு பெயர். (பெரியபுராணம்).

**அருத்தாபத்தி**—பொருள், இது, கங்கையில் இடைச்சேரி யென்றால் கங்கைக்குள் என்றுணராமல் அதன் கரையிலென்றுணரலாம்.

**அருத்தாபத்திசமை**—அருத்தாபத்தியைமுன்னிட்டுச் சாத்தியா பாவத்தைக் காட்டல்.

**அருந்ததி**—1. கருத்தம முனிவர்குமரி. வசிட்டர் தேவி. மகா பதிவிரதை. இவள், தன் நாயகனிடம் சந்தேகித்ததால் கருநிறமியைந்த செந்நிற முள்ளவளாய் யாவருங் காண நக்ஷத்திர பதம்பெறச் சாபமடைந்தனள். இவள் குமரர் சத்திமுனிவர் முதலிய நூற்றுவர். பஞ்சகன்னியரில் ஒருத்தி. உலகத்தவர் மணஞ்செய்து கொள்கையில் கற்பிற்கு இலக்ஷியமாகத் தங்கள் மனைவியர்க்கு இவளைக் காட்டுதல் மரபு. துருவமண்டலத்தருகு சப்தருஷி மண்டலம். இந்த எழு நக்ஷத்திரங்களுக்கிடையில் வசிட்டர் இருப்பர். அவர்க்கருகில் அருந்ததி இருப்பள். சிவமூர்த்தி பூர்வம் பாலவேடந் தரித்தெழுந்தருளிய காலத்து நிலைகலங்காத பதிவிரதை. திகம்பரராகத் தாருகவன மடைந்த காலத்தும் நிலைகலங்காதவள். இவளை மணவினை காலத்துக் கணவன் தன்னிடம் அன்புடனிருக்கவும், தனவானாகவும், அன்ய ஸ்திரீசங்கமம்

வேண்டாதிருக்கவும் விரும்பித் தம்பதிகள் தரிசித்துப் பிரார்த்திப்பது வழக்கம். இவளிடம் சூரியன், இந்திரன், அக்கி மூவரும் ஸ்திரீகளின் மனோபாவமறிய வேதியருருக்கொண்டு சென்றனர். இவர்களைத் தேவரென்று அறிந்துகொண்ட அருந்ததி, அர்க்கிய பாத்தியத்திற்கு நீர்கொண்டு வரச் செல்ல இம்மூவரும் அவளைத் தடுத்து நாங்களே இக்கும்பத்தை நீரால் நிறைக்கிறோமென்று முதலில், இந்திரன் ஜன்மத்தால் பிராமணனிடத்தில் பயமிலாதும், தவம், பிரமசரியம், அக்கிஹோத்ராதிகளால் என் பதவியை ஒருவன் அடைவது சத்தியமாயின் இக்குடம் காற்பங்கு நீரால் நிறைக எனவும், அக்கி, யாகத்தைக் காட்டிலும் அதிதியைப் பூசித்தன்னமளிப்பதில் யான் திருப்தியடைவது சத்தியமாயின் மற்ற காற்பங்கும் நீர் நிறைக எனவும், சூரியன், நாடோறும் மந்தேஹர்கள் செய்யுந் தீமையை வேதியர் செய்யும் அர்க்கிய பிரதானமாகிய பிரமாஸ்திரம் நீக்குவ துண்மையாயின் மிகுதி காற்பங்கு நிறைக எனவும், அருந்ததி, இரகசிய ஸ்தானமும் இதர புருஷ சம்பாஷணையுங் கிடைக்காவெல்லை ஸ்திரீகள் பதிவிரதைகள் ஆதலின் ஸ்திரீகளைச் சாக்ரதையாகக் காக்க என முழுதும் நிரம்பியது. இவள் சுவாகாவால் அநுக்ரகம் பெற்றவள். (சிவமகாபுராணம்.)

2. ஒரு பர்வதம்.

3. (அநருந்ததி) இதில் (ந) கெட்டது. நாயகனின் விருப்பத்தை அநுசரிப்பவள். (பாரா-அநுசா.)

4. பதரபாசனம் காண்க.

**அருந்தமன்**—குபேரனைக் காண்க.

**அருமருந்துதேசிகர்** — இவர் பாண்டி நாட்டுத் திருச்செந்தூரிலிருந்த சைவர். பல இலக்கியங்களிலிருந்த சொற்களைத் திரட்டி ஒரு சொற் பல பொருளுடையவாக அரும்பொருள்விளக்கமெனும் நிகண்டியற்றியவர். அஃது (௭௦௦) விருத்தமுடையது. தில்லை மன்றில் அரங்கேற்றியது.

**அருமன்** — இவன் ஒரு பிரபு. சிறுகுடியென்னு மூரிலே பாம்பரைச் செல்வமுடைய மரபிலே தோன்றியவன். எக்காலத்தும் வருவார்க்கு வரையாது சோற்றுணவு கொடுப்பவன். இவன் வீட்டில் நாள்தோறும் தெய்வத்துக்கு நிவேதித்துப் போடும் பலியுணவை உண்ணவேண்டிக் காக்கைகள் கூடியிருப்பதை "கொடுங்கட் காக்கைக் கூர்வாய்ப்பேடை" என்னுஞ் செய்யுளில் நக்கீரர் வெகு சிறப்பாக எழுதுகிறார் (௩௬௭) இவனுடைய சிறுகுடியென்னுமூர் மிகப் பழமையுடையதாகக் கொண்டு மூதூரென்னும் பெயராலே கூறுவர்; கள்ளில் ஆத்திரேயனார் "ஆதியருமன் மூதூரன்ன" என்றார். குறு. (௨௯௩) இவனை நற்றிணையிற் பாடியவர் நக்கீரர். (நற்றிணை).

**அரும்புகட்டிகள்** — வேளாளரில் ஒருவகையார். இவர்கள் சிவாலயத்தில் பூமாலை தொடுக்கும் தொழில் மேற்கொண்டவர்கள். இராமநாதபுரம் ஜில்லாவில் உள்ளவர்கள். இவர்கள் ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன் தொண்டை நாட்டிலிருந்து சென்றவர்கள். (தர்ஸ்டன்.)

**அரும்பைத்தொள்ளாயிரம்** — ஒட்டக்கூத்தராற் பாடப்பட்ட ஒரு பிரபந்தம்.

**அருவந்தை**—அம்பர் கிழானருவந்தையைக் காண்க.

**அருவர்**—கஞ்சம் தாலூக்காவில் கரையோரத்திலுள்ள உழவர்கள். (தர்ஸ்டன்).

**அருவாநாடு** — தென்னாற்காடு. பெண்ணையாற்றிற்குத் தென்பாகம் (கூடலூர், மஞ்சகுப்பம்).

**அருவாவசு**—(1) பராவசுவைக் காண்க.

2. ரைப்பியரிஷியின் இரண்டாவது புத்திரன். இவன் சகோதரன் பராவசு.

**அருவாவடதலை**—செங்கற்பட்டு ஜில்லா.

**அருளாளதாசர்**—இவர்க்குமதுரகவிவரதராஜ ஐயங்கார் எனவும் பெயர். இவர் நெல்வி நகர்வாசி, கவிபாடுவதில் வல்லவர். இவர் தமிழில் ஒரு பாகவதபுராணம் பாடியிருக்கின்றனர்.

**அருளாளப்பெருமாளெம்பெருமானார்**—யஞ்ஞமூர்த்தியைக் காண்க.

**அருளாளப்பெருமாள்**-ஞானசாரம் பிரமேயசாரமென்னும் நூலியற்றிய வைஷ்ணவர். இவர் உடையவருடைய நியமனப்படி பேரருளாளரைத்திருவாராதனஞ்செய்திருக்க நியமனம் பெற்றவர். (14th Century)

**அருளாளன்**—ஒரு மறையவன் திருச்சோற்றுத்துறையில் சிவமூர்த்தியால் அளவுபடாத சோறு பெற்றவன்.

**அருளையர்**—தாயுமான சுவாமிகள் என்பவரிடம் உபதேசம் பெற்றவர். தாயுமான சுவாமிகளின் சிறியதாயின் குமாரர்.

**அருளோடுநீங்கல்** — முழங்கும் கடலுலகத்துத் துயரத்தைப் பார்த்துப் பற்றையொழிந்தது. (புறப்பொருள் வெண்பாமாலை.)

**அருள்மாரி**—திருமங்கையாழ்வார் திருமதில் கட்டுகையில் தொண்டரடிப்பொடிகள் திருமாலைகட்டும் மண்டபத்தை விட்டுக் கட்டியபடியால் இவருக்குப் பெருமாள் இட்டபெயர்.

**அருள்வித்தர்**—ஒரு வேதியர், சிவபூசைக்கு மாலைகொண்டு பூக்குடலையுடன் ஆற்றில் இறங்க வெள்ளம் அடித்துச் சென்றது. அப்படிச் செல்லவும் பூக்குடலையை விடாமல் இருந்து சிவத்தியானத்தால் கரையேறிச் சிவமூர்த்தி ஆசாரியராக உபதேசிக்கப்பெற்றுச் சித்தியடைந்தவர்.

**அநஜன்** — இராவணனுக்கு உதவிபுரியவந்த இராக்ஷசன். விபீஷணனால் கொல்லப்பட்டவன்.

**அருஷணர்**—சூதருஷியின் புத்திரர். இவர்க்கு உரோம அருஷணர் எனவும் பெயர்.

**அருஷன்**—தருமன் எனும் மனுவின் புத்திரன். மனைவி நந்தி.

**அருபப்பிரமர்**—உலகம் முப்பத்தொன்றனுள் இருபத்தெட்டாவதாகிய ஆகாசாநந்தியாயதனலோக முதலிய நான்குலங்களிலும் முறையே தங்கும் நான்குவகைப் பிரமகணங்கள். இவர்களைத் தியானமைந்தனுள் ஐந்தாவதிற் றேறியவர் என்பர். (மணிமேகலை)

**அநுபை**—ஒரு தெய்வம். ப்ஜஹாரிணியின் குமரி. வீர்யகவித முண்டு செய்பவள். (மார்.)

**அரைஞாண்கட்டுதல், சிற்றுடையுடுத்தல்** — பிள்ளை பிறந்த ஒருவயதாகிய பிறந்த மாதம் பிறந்த நக்ஷத்திரத்திலே பிள்ளையைச் சுத்த ஜலத்திலே முழுக்காட்டிப் பிராமணருக்கு ஆராதனை செய்து சுபக்கோளுதயமாகப் பொன்னரைஞாண் தரித்துச் சிற்றுடை யுடுத்துஞ் சடங்கு.

**அரையம்**—இது பெரியதொரு நகரம். சிற்றரையம், பேரரையமென்னும் இரண்டு பிரிவினையுடையது. (புறநானூறு.)

**அரோசகரோகம்**—இது நாவையும் மனதையும் அநுசரித்த திரிதோஷங்களால் பிறப்பது. இது, வாத, பித்த, சிலேஷ்ம, சந்நிபாத,துக்கமென ஐந்து வகைப்படும். இது, நாவை உருசி தெரியவொட்டாது வேறுபடுத்தும். இதனை வேம்பின் லேகியம், நவரஸத்துவையல், வில்வாதிலேக்யம், தீபாக்னிசூரணம், முதலியவற்றால் வசமாக்கலாம். (ஜீவரக்ஷாமிர்தம்.)

**அரோராபோரியாலிஸ்** — துருவவொளி, இது, துருவத்தை யடுத்துத் தோன்றும் ஒளி, இது இராக்காலத்தும் ஒளியாகவே இருப்பது. இவ்வொளி, சில காலங்களில் ஒரே நிலையாகவும், சில சமயங்களில் புழுக்கள்போல் நெளிந்து அசைந்து கொண்டு மிருக்கிறது. சில வேளைகளில் தனித்தனி துணிக்கைகளாகக் காணப்படுகிறது. இது, பலவிதநிறமாக மின்னற்காட்சிபோல் காணப்படுகிறது. (கக) வருஷங்களுக் கொருமுறை இக் காட்சிகள் மாறுகின்றன என்கின்றனர். அக்காலங்களில் சூரிய கோளத்திற் காணப்படும் புள்ளிகளும் மாறுகின்றனவாம். ஆதலால் இப் பூ மண்டல துருவமுனைக்கும் சூரியனுக்கும் ஏதோ சம்பந்தம் இருப்பதாக எண்ணப்படுகிறது. இதுவன்றி அத்துருவ முனையின் வடகோடியில் வட்டவடிவான மின்னற்சோதி எக்காலத்தும் பிரகாசித்துக்கொண் டிருக்கிறதாம். அவ்வட்டத்தின் நடுவிடம் திணிந்த இருளாகத் தோற்றுகிற தென்கிறார்கள். இந்த இடங்களிலும் சிலர் வாழ்ந்துகொண் டிருக்கின்றனராம். அவ்வொளி அவர்களின் போக்குவரவிற்கு உபகாரமானதாயிருக்கிறதென்பர்.

**அர்க்கதந்தர்**—சோமகரைக் காணக.

**அர்க்கன்**—வசுக்களிலொருவன் தருமனுக்கு. வசுவிடம் உதித்த குமரன். பாரி அசனை.

**அர்ச்சகன்**—ஒச்சன்,கிராமதேவதைபூஜகன்.

**அர்ச்சசு** — வேனன் தோளைக் கடைந்ததினால் உண்டான பெண்ணுரு. இவள் இலக்ஷுமி அம்சம்; பிருதுவை மணந்தனள்.

**அர்ச்சிகம்**—ஓர் மலை.

**அர்ச்சிசு**—தக்ஷன் குமரி. கிரிசாசுவன தேவி. குமரன் தூம்ரகேசன்.

**அர்த்தசித்தி**—சாத்தியருக்குப் பிறந்த குமரன்.

**அர்த்தர்சி**—பதினேழாவது புத்தன்.

**அர்த்தநாரீசன்**—பார்வதிபிராட்டி கௌதமர் ஆச்சிரமத்தில் தவஞ்செய்து சிவமூர்த்தியின் திருவுருவில் பாதியுருப் பெற்றனள். அன்றுமுதல் அர்த்தநாரிபாகன் ஆயினன். பிருங்கியைக் காண்க.

**அர்த்தபிரகாசன்**—புதன் குமரன்.

**அர்த்தமூலம்**—நக்ஷத்திரம் காண்க.

**அர்த்தவசு**—இரப்பியன் புத்திரன்.

**அர்த்தவீரன்**—அர்த்தாசுரனைக் காண்க.

**அர்த்தன்**—யமனுக்குப் புத்தியிடம் உதித்த குமரன்.

**அர்த்தஹாரி** — தேவதை. சுயம்ஹாரியின் குமரி. அநாசாரர்களைச் சேர்ந்து தீமை செய்பவள். (மார்)

**அர்த்தாசுரன்**—இந்த அசுரன் அர்த்தவீரனுடன் கூடித் தேவரை வருத்தினன். தேவர் தமது குறைகளை இருடிகளிடம் முறையிட்டனர். இருடிகள் அசுரரைக் கொல்ல யாகஞ் செய்தனர். அவ்விடம் இந்த அசுரர் இருடிகளை விழுங்க வர இருடிகள் பயந்து சிவமூர்த்தியை அடைக்கலமாக அடைந்தனர். சிவமூர்த்தி கௌரியை நோக்கச் சத்தி அவ்வசுரரிடம் போர்செய்கையில் அவர்கள் உதிரம் விழுந்த இடந்தோறும் அசுரர் வெளிப்பட்டு யுத்தத்திற்கு வரப் பிராட்டி கோபித்ததில் அக்கோபத்தில் காளி தோன்றி அவ்வசுரர்களின் உதிரம் பூமியில்விழாது உறுஞ்சி உயிர் போக்கினள்.

**அர்த்தாந்தரம்**—பிரதிவாதி சொன்ன தூஷணத்திற்குத்தான் அதற்கேற்ற வசனஞ் சொல்லாமல் அதற்குபயோகமில்லாத வார்த்தையை அவ்விடத்திற் சொல்வது. (சிவ - சித்).

**அர்ப்புதமணி**—மேகவாகனன் எனும் பெயருள்ள அரசன். இவன் தலையில் ஒரு மாணிக்கமிருந்ததால் இப்பெயரடைந்தனன்.

**அர்ப்புதம்**—இந்திரப்பிரத்தத்தின் வடமேற்கிலுள்ள மலை, இது ஆனர்த்த தேசத்தில் இருக்கிற தென்பர்.

**அர்யச்வன்**—1. நிகும்பனுக்குத் தந்தை.

2. அநாரண்யன் குமரன். சுமனசுக்குத் தந்தை.

3. திருஷ்டகேதுவிற்குக் குமரன்.

**அர்ஷவர்த்தனன்**—இவன் (எ)-வது நூற்றாண்டில் வடஇந்தியாவில் அரசனாயிருந்தவன். இவன் சகோதரனும் இவனுக்குமுன் ஆண்டவனும் இராஜ்யவர்த்தனன். இவர்களுக் குடன்பிறந்தவள் ராஜ்யஸ்ரீ இவள் புருஷன் கிரகவர்மன் இவன் மாளவ, வங்காள தேசத்தரசர்களால் கொல்லப்பட்டான். ஆதலால் இராஜ்யவர்த்தனனிருவரையும் எதிர்த்தான். வெற்றி இவனதே ஆயினும் வங்காள அரசனால் கொல்லப்பட்டான். இவனுக்குப்பின் ஹர்ஷன் பட்டமடைந்து வங்காள முதலிய பல நாடுகளையும் செயித்தான். சாளுக்ய வம்சத்தவனான புலிகேசியின்மீது யுத்தம்புரிந்து பின்னிடைந்தான். இவன் கல்வியிடத் தாவலுள்ளவன். பல பண்டிதர்களை ஆதரித்தான். மதத்வேஷம் இல்லாதவன். புத்தன், சூரியன், சிவன் முதலிய விக்ரகங்களுக்குத் திருவிழா செய்வித்தான். இவன் அரசாட்சியில் சீன யாத்ரிகனாகிய ஹியான்சான் என்பவன் புத்தருடைய அவதாரத்தலங்களைச் சேவிக்க வந்தான்.

**அர்ஷன்**—தருமனுக்குச் சிரத்தையிடம் பிறந்த மூன்றாங் குமரன். இவன் தேவி நந்தை. சகோதரர் சமன், காமன்.

**அலகநந்தை**—கங்கையின் கிளைநதி.

**அலக்ஷுமி**—பிரமன் புத்திரி.

**அலங்காரமாலை**—இலக்கணையின் தோழி.

**அலங்காரவேங்கடவர்** — உடையவர் திருவடி சம்பந்தி. பரமைகாந்தியரில் ஒருவர்.

**அலசரோகம்**—அபக்குவான்னத்தைப் புசிப்பதாலும், மந்தாக்னியாலும், பதினான்கு வேகத்தை யடக்கலாலும், ஆமாசயத்திலதிகரித்த திரிதோஷங்கள் அவ்வன்னத்தோடு கலந்து சிலேஷ்மத்தால் மறிபட்டு ஆசனத்தில் ஆப்படித்ததுபோல் ஸ்தம்பித்து உபத்திரவங்களை உண்டாக்கும். இது ஆமாலசம், தண்டாலசம், விஷாலசம் என மூன்றுவகை. இதனைத் தாளிசவடகம், வச்சிரவல்லிவடகம் முதலியவற்றால் வசமாக்கலாம். (ஜீவரக்ஷாமிர்தம்.)

**அலந்தன்**—(சு). நாபாகன் குமரன்

**அலம்பகன்**—1. பகாசுரன் தம்பி.

2. பகாசுரன் குமரன். கடோற்கசனால் இவ்விருவரும் இறந்தனர்.

**அலம்பலை**—விசாலன் தாய். இக்ஷ்வாகு வம்சத்தவனான திரணபிந்துவின் பார்யை.

**அலம்பன்**—அலாயுதனென்னும் அரக்கனுடனிருந்த அரக்கன்.

**அலம்புசை**—1. ஒரு அப்சரசு. திரணபிந்துவை நாயகனாக யடைந்தவள்.

2. இக்ஷ்வாகுவின் தேவி. குமரன் விசாலன்.

3. அஷ்டசத்திகளில் ஒருத்தி. இவள் வாகனம் காகம்.

4. விதுமனைக் காண்க.

**அலம்புதன்**—1. ஒரு அரக்கன். இவன் ஜடாசுரன் புதல்வன்... ரூசேய சூரன்.

2. சடாசுரன் குமரன். பகாசுரன் தம்பி அரவானைக் கொன்றவன். கடோற்கசனல் இறந்தவன். இவனுக்கு அலம்பஸன் எனவும் பெயர்.

**அலரி** ஒருவிதபூஞ்செடி. இதனுடைய வோானது மிகவும் விஷமுடையது. இதை உள்ளுக்குக் கொண்டால் மரணம். இதன் மலர் வெகு அழகாயிருக்கும். இந்த அலரி செவ்வலரி, குங்குமவலரி, வெள்ளலரி, ஆற்றலரி, ஈழத்தலரி, நீரலரி என பேதப் பட்டுக் குணங்களும் வேறுபடும்.

**அலர்க்கன்**—1. தியுமான் குமரன். இவன் யுவாவாய் (௬௬,000) வருஷம் இராச்சிய பாரஞ் செய்தான். குமரன் சந்நிதி, தத்தாத்திரேயரால் உபதேசம் பெற்றவன். குவலயாச்வன் குமரன் எனவுங் கூறுவர்.

2. இருதுத்துவசன் குமரன்.

**அலர்மேன்மங்கை**—வியனைக் காண்க.

**அலாசுரன்** — பார்வதிபிராட்டி வேண்டச் சிவபிரானுற் கொல்லப்பட்ட அசுரன்.

**அலாதனி**—ஒரு விஷ்ணு பக்தன்.

**அலாதனிகஞ்சமபிரசாபதி** — சோணுட்டுள் திருவாலி நகரத்துள் விஷ்ணுவால் சித்தி பெற்றவர்.

**அலாதன்**—பிரகலாதனுக்குத் தம்பி.

**அலாயுதன்**—1. பலராமனுக்கு ஒரு பெயர்.

2. பதிஞன்காநாள் இராச்சண்டையில் வீமார்ச்சுநரிடம் போர்செய்து இறுதியில் கடோற்கசனல் மாண்ட அரக்கன். இவன் ஒருகாலத்து இராவணனைப் பின்னிடச் செய்தவனும்.

3. ஒரு சிவனடியவர், இவரது வைராக்கியத்தைத் தெரிவிக்கச் சிவமூர்த்தி சிறுத்தொண்டருடனிவரிடத்திற்சென்று சிறுத்தொண்டரின் வரலாறு கூற, அலாயுதர் கொலைத்தொழில் மேற்கொண்ட அவனும் சிவனும் சிவனடியவர்க்குப் புறம்பென்ன, உமையும் சிறுத்தொண்டர் மனைவியும் இவரிடத்தில் வந்து புறம்பைப் போக்க வேண்டிப் பெற்று அலாயுதர்க்கு முத்தியளித்தனர்.

**அலிநாள்**—நக்ஷத்திரம் காண்க.

**அலிமுகப்பாண்டுரோகம்** — பாண்டுரோகத்தில் சோபையுண்டாக்கிப் பிறகு வாத பித்தம் அதிகமாதலினல் சரீரம் நீலம் அல்லது மஞ்சள் நிறமாகும். அப்போது, பிரமை, தாகம், அற்பசுரம், சோம்பல், துர்ப்பலம், அக்னிமந்தம் இக்குணங்களைத் தரும். இது தேகம் நீலநிறத்தைத் தருதலால் இதற்கு இப்பெயர் உண்டாயிற்று.

**அலுமீனியம்**—உலோகவகைகளில் ஒன்று. இது மண்ணிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட உலோகம். இது நிறத்தில் வெண்மையாயும், இலேசாயும், திருப்பற்ருததாயும், அழுத்தமும், நயப்புமுள்ளதாயுமிருக்கிறது. இதனல் சமையற்குரிய சாமான்கள் செய்யப்படுகின்றன. இன்னும் பலவிதத்தில் இதைப் பயன்படுத்துகின்றனர். இது பலவிடங்களில் உண்டாகின்றது.

**அலோலகன்**—திருதராட்டிரன் குமரன்.

**அல்லங்கீரனர்**—கீரன் என்னும் பெயருடையார் பலராதலால் அவரின் இவர் வேறென்பது தெரிய அல்லங்கீரனரெனப் பட்டார்போலும். இஃது ஊர்பற்றி வந்த பெயர்; அல்லம் என்பது சேரநாட்டிலுள்ள ஓர் ஊர்; இவர் நெய்தலைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். முகம்புகுகிளவி பாடவல்லவருள் இவருமொருவர். இவ் பாடியது நற்றிணை "நகையாகின்றே" எனும் (௨௪௫) ம் செய்யுள். (நற்றிணை).

**அல்லமாப்பிரபு**—இவர் வள்ளிகாவையென்னும் ஊரில் நிராங்காரன், சுஞ்ஞானி இருவருஞ் செய்த தவாக்னியில் பிறந்தவர். சிவாம்சமாயுள்ளவர். யாவர் மனத்தையும் அறிந்தவர். கையில் இலிங்கமுள்ளவர். இவர் சஞ்சரிக்குங்காலையில் தருக்கள், காடுகள், மலைகள் முதலிய இவரைப் பணியும். இத்தன்மையுள்ள இவர், வச்சலபுரமெழுந்தருள வசவதேவர் இவர் திருவடியை அடைந்து சிங்காதனத்திருத்தி அமுதுக்கு எழுந்தருளச்செய்ய அங்ஙனமிசைந்து, வசவர் லக்ஷத்து எண்பதினயிரம் பெயர்களுக்கு வைத்திருந்த உணவுகளைப் புசித்துவிட, வசவர் பயந்து அடியேனே அமுது படைப்பவனென்ன அநுக்கிரகித்தவர். இவர் வசவரிடமிருந்த அன்னமெல்லாம் உண்டதனல் வந்திருந்த சங்கமரனைவரும் பசி தீர்ந்தனர். இவர் தம்மை மயக்கவந்த மாயையை மயக்கித் தாம் கொக்கிதேவர், முத்தாயிஅம்மை, வேடன் இவர்களுக்கு உபதேசஞ்செய்து வசவரிட்ட சூனிய சிங்காதனத்திலிருந்து வசவருக்கு அருள்புரிந்தனர். இவர் காயகற்பஞ் செய்திருந்த கோரக்கரிடஞ்சென்று அவர், தம்மை வாள்கொண்டு வெட்டச்சொல்ல வெட்டி அறுதிருந்தது கண்டு மெச்சித், தம்மை அவரை வெட்டச்செய்து வாள் தேகத்

தில் நுழைந்துவரக்கண்டு அவர் பணிய அவர்க்கு அநுக்கிரகம் புரிந்தவர். (பிரபுலிங்கலீலை)

**அல்லமையர்**—வசவர்காலத்து இருந்த சங்கமர்.

**அல்லியரசி**—சித்ராங்கதையைக் காண்க.

**அல்லையர்,மதுவையர்**--இவர்கள் இருவரையும் விச்சலராசன் கண்ணைப் பிடுங்கினன். வசவர் இவனைக் கோபித்து ஊரைவிட்டு நீங்கிச் சபித்துக் கூடலசங்கமம் மேவினர். இதனையறிந்த மொல்லையர், பொம்பையர், சகதேவர் மூவரும் அரசனைக் கோபித்து அவன் சேனைகளைக் கொன்றனர். பின்பு அரசனும் இறந்தனன். வசவரும் தமது கூட்டத்துடன் சிவத்திற் கலந்தனர்.

**அல்வழிப்புணர்ச்சி**—சொற்கள் புணருகையில் இடையில், வேற்றுமையுருபுகள் வராமல் புணர்வது. அதுபதினன்குவகையுடையது. தொகை, (ரு) தொடர் (கூ) தொகை வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை. மற்றவை தொடர்கள். அவை, எழுவாய்த்தொடர், விளித்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், தெரிநிலைவினை முற்றுத்தொடர், குறிப்புவினைமுற்றுத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் என்பனவாம். (நன்னூல்.)

**அவகீதன்** — பரத்துவாசருஷிபுத்திரன். இவன் தவத்தால் வேதங்களுணர்ந்து கர்வித்து ரைப்பியன் கோபத்திற் பிறந்த அரக்கனுற் கொல்லப்பட்டு ரைப்பியன் புத்திரனுகிய அர்த்தவஸு என்பவனுல் மீட்டும் உயிர் பெற்றவன்.

**அவகீர்ணக்ஷேத்ரம்** — சரஸ்வதிநதிதீரத்திலுள்ள தீர்த்தகட்டம். தாலப்யரைக் காண்க. இதில் பலராமர் தீர்த்தயாத்திரையில் தங்கினர். இதில் பிரகஸ்பதி அசுரநாசத்தின் பொருட்டு மாம்சத்தால் யாகஞ் செய்தனர். (பாரதம்-சல்லி).

**அவகீர்ணி**—விரதானுஷ்டானமுள்ள பிரமசாரி, பெண்போகம் விரும்பி அவளுடன் புணரின் அவனை அவகீர்ணி யென்பர். இவன் ஒற்றைக் கண்ணுள்ள கழுதையின் வபையினுல் நிருதி, வாயு, குரு, இந்திரன், அக்னி இவர்களுக்கு ஹோமஞ்செய்து அக்கழுதையின் தோலைப் போர்த்துக் கொண்டு (எ) வீட்டில் ஒரு வருஷம் பிக்ஷையெடுத் துண்ணவேண்டும்.

**அவகீர்ணிபசு**—பிரமசாரி பெண்புணர்ச்சி செய்யின் அந்தப் பாபம் நீங்கக் கழுதையைப் பசுவாகச்செய்து வேள்விசெய்வது. (பாராசரமாதவீயம்.)

**அவதூதன்** — புரஞ்சயனுக்கு உற்பதேசத்தைக் காட்டினவன்.

**அவத்தை**—இவ்வவத்தை, சாக்கிரம், சுவப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐவகைப்பட்டுக் கீழாலவத்தை, மேலாலவத்தை, சுத்தாவத்தை என மூன்று பிரிவுபடும். அவற்றுள் **கீழாலவத்தை வருமாறு** ஆன்மா, ஞானேந்திரியங்கள் (ரு), கருமேந்திரியங்கள் (ரு), தன்மாத்திரைகள் (ரு), அந்தக்கரணங்கள் (ச), உள்ளம் (க), வாயுக்கள் (ய), வசனுதிகள் (ரு), ஆகிய (நரு) கருவிகளுடன் லலாடத்தானத்தில் நின்ற அவசரம், **சாக்கிரம்**, ஞானேந்திரியங்கள் (ரு)-ம் கருமேந்திரியங்கள் (ரு)-ம் ஆகிய (ய)-ம், லலாடத்தானத்தில் நிற்க-(உரு) கருவிகளுடன் கண்டத்தானத்தில் நின்ற அவதரம், **சுவப்பனம்**, தன்மாத்திரைகள் (ரு) சித்தமொழிந்த அந்தக்கரணங்கள்-(ந) பிராணவாயு ஒழிந்த வாயுக்கள் (கூ) வசனுதிகள்-(ரு) ஆகிய (உஉ)-கருவிகளும் கண்டத்தானத் திருக்க, சித்தமும், பிராணவாயுவும், உள்ளமும் ஆகிய -(ந) கருவிகளுடனும் இருதயத்தில் நின்ற அவதரம். **சுழுத்தி**. சித்தமொன்றும் இருதயத்தானத்தில் இருக்க, பிராணவாயுவும், உள்ளமும் ஆகிய இரண்டுகருவிகளுடனே, நாபித்தானத்திலே நின்ற அவதரம், **துரியம்**, பிராணவாயுவொன்றும் நாபித்தானத்திலே நிற்க உள்ளமொன்றுடனே மூலாதாரத்தில் அடங்கின அவதரம், **துரியாதீதம்**. **மேலாலவத்தையாவது**, இவ்வகைக் கேவலாவத்தைப்பட்டு அதீதப்பட்டுக் கிடந்த ஆத்மாவிற்கு விந்து சத்தி ஆன்மாவிற்குள்ள கருமத்துக்கீடாக வாக்குகளைத் தோற்றுவிப்பதாம். அவை பஞ்சமை, சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரியென்னும் வாக்குகளின் காரியப் பாட்டினுல் உண்டாவதாம். இனிச் **சுத்தாவத்தை**, நின்மலசாக்கிர முதலாக ஐவகைப்படும். **நின்மல சாக்கிரமாவது** உலகம் அநித்தியமெனத் தோன்ற ஆசாரியனை யடைந்து பசுகரணங்கள் பதிகரணமாகப் பெறுகை. **நின்மலசுவப்பனமாவது**, அருந்தல், பொருந்தல், மனதில் பொருந்தாதிருத்தலாம். **நின்மலசுழுத்தி**

யாவது, இவ்வகைப் பேறு பெற்றேமென்னும் நிராசையால் பரிணமத்தை அடைகை. நின்மலதுரியமாவது, தனக்கின்பந்தோன்றிச் சம்பூரண திசையை அடைகை. நின்மலதுரியாதீதமாவது, முற்கூறிய நான்குமின்றி நிறைய வுண்டவனைப்போலச் சிவப்பேற்றின் தன்மையடைதலாம்.

2 காட்சி, வேட்கை, ஒருதலையுள்ளுதல், மெலிதல், ஆக்கஞ்செப்பல், நாணுவரையிறத்தல் நோக்குவவெல்லாமவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு.

**அவநுதி அணி**—சிறப்பினதூஉம், பொருளினதூஉம், குணத்தினதூஉமான உண்மையை மறுத்துப் பிறிதொன்றாகவுரைப்பது. அவநுதியென்னுமலங்காரமாம். இவ்வலங்காரம் பிறவலங்காரங்களோடு கூடியும் வரும். (தண்டியலங்காரம்).

**அவந்தி**—1. முத்தித்தலங்களெழினுள்ஒன்று. இதில் ஆடகேசுரர், தாரகேசுரர், மாகாளர் எழுந்தருளியிருப்பர். இதில் ஒரு ஆலமரம் இருக்கின்றது. அதற்கருகிலிருக்கும் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அவ்விடமிருக்கும் சிவமூர்த்தியைத் தரிசித்தவர் முத்தியடைவர். இதனை விக்ரமார்க்கன் ஆண்ட உச்சயனி பட்டணம் என்பர். இது நருமதைக்கும் மகாநதிக்கும் இடையிலுள்ள மாளவதேசம். (சிலப்பதிகாரம்).

2. மாளவதேசத்தில் உள்ள பட்டணம். விந்தானுவிந்தர்களால் ஆளப்பட்டது. இதில் பலராமகிருஷ்ணர்கள் சாந்தீபினிரிஷியினிடம் வித்தைகள் கற்றனர். (விஷ்ணுபுராணம்). (The Country of which ujjain was the Capital).

3. இந்நாட்டின் தலைநகர் உஞ்சேனை. இதன் அரசன் பிரச்சோதனன். (பெருங்).

**அவமாகம்**—நக்ஷத்திரம் காண்க.

**அவமிருது**—கேதுவின் குமரன்

**அவயமுல்லை**—குற்றங்கெட நடுவுசொல்லும் அவைக்களத்துச் சான்றோர் தன்மையைச் சொல்லியது. (புறப்பொருள்-வெண்பா).

**அவரை**—ஒருவகை காய்த்தானிய வகையிற் சேர்ந்தது. இந்த அவரை, நாட்டவரை, காட்டவரை, கொத்தவரை, சீனியவரை, கோழியவரை, செவ்வவரை, தீவாந்தர அவரை, நகரவவரை, பேயவரை, பேரவரை, முருக்கவரை, வாளவரை, வெள்ளவரை எனப் பேதப்பட்டுக் குணங்களும் (...)றுபடும்.

**அவரோதன்**—கேயன் குமரன். தாய் செயந்தி.

**அவர்ணியசமை** — சாத்திய ஏதுக்களைப் பக்ஷத்தில் ஒப்பாகச் சாதிப்பது.

**அவலோகமுனிவர்**—இவர் சைநர். இவரை அகத்தியருக்குத் தமிழாசிரியர் என்பர். இவர் இருக்கை பொதிகையில் என்பர். இவரை அவலோகிதர் என்றுங் கூறுவர்.

**அவாய்நிலை**—எப்பதத்திற்குளப்பதமின்றிப் பொருள் கோளுணர்ச்சியை உண்டாக்குந் தன்மையில்லையோ அது. அதாவது ஒரு தொடர், தன்பொருளை விளக்க வேறொரு பதத்தை அவாவிநிற்றல். (தரு).

**அவி**—பூர்வசிருட்டியில் தேவர்கள் பிரமன் சபையை அடைந்து தங்களுக்கு ஆகாரங் கேட்க, பிரமன் தியானத்தால் நாராயணரைப் பூசித்தனன். அப்போது நாராயணர், யஞ்ஞவுருவடைந்து என்னிடத்தில் சொரியும் அவியைத்தேவர் உணவாகக் கொள்க என்றனர். பின்னர் தேவர்கள், இருக்கை சென்று மீண்டும் பிரமன் சபையை அடைந்து ஆகாராபாவத்தை விண்ணப்பிக்கப் பிரமதேவன் பிரகிருதியைப் பூசிக்கப் பிரகிருதியக்கிக்குத் தாஹிகாசக்தியாயும், ஆத்மகாமினியாகும் சுவாகாதேவியாயும் ஆயினள். இவ்விருவரையும் பிரமன் பூசித்து நீங்களின்றி அக்நிதகிக்கும்வன்மை யின்றி இருக்கிறனதலால் நீங்களவனை அடைக என வேண்ட, அவ்வகையாயினர். பின் தேவர் அவிசை உணவாகக்கொண்டனர். (பிரம்மகைவர்த்தம்.)

**அவிகாரவாதசைவன்** — இவன் வெயிலில் விடாய்பட்டோன் நிழல் தேடுமாறுபோல் நிர்விகாரமாகிய பதிப்பொருளை ஆன்மா தானே பக்குவமடைந்த காலத்து அடையும் என்பன்.

**அவிக்யாதார்த்தம்**—பிரதிவாதி ஒரு ஏதுவை மூன்றுதரஞ் சொல்லுகையிலும் சபையிலுள்ள பரீக்ஷித்துக்கள் அறுவாதிக்கையிலும், பிரதிவர்தியானவன் எனக்கிந்த ஏது தெரியாதென்கை. (சிவ-சித்.)

**அவிக்யாதி** — புரஞ்சயனுக்கு நண்பன். (அவிக்யாதா).

**அவிசேஷசமை**—எல்லாம் சமானமாக இருத்தலைக் காட்டுவது.

**அவிச்சி**—ஒரு நரகம்.

**அவிஞ்ஞாதமதி**—அணிலன் என்னும் வசுவின் குமரன். தாய் சிவை.

**அவிப்பலி** — தெளிந்த வாட்பூசவிடத்துச் செஞ்சோற்றுக் கடனன்றி நினையாத மறவர் உயிரைப் பலியாகக் கொடுத்தது.

**அவிநயம்**—இது பாவகம், அஃது (உ௪) வகைப்படும். அவை வெகுண்டோன் அவிநயம், ஐயமுற்றோன் அவிநயம், சோம்பினோன் அவிநயம், களித்தோன் அவிநயம், உவந்தோன் அவிநயம், அழுக்காறுடையோன்அவிநயம், இன்பமுற்றோன் அவிநயம், தெய்வமுற்றோன் அவிநயம், ஞஞ்ஞையுற்றோன் அவிநயம், சிந்தை உடன்பட்டோன் அவிநயம், உறங்கினோன்அவிநயம், துயிலுணர்ந்தோன் அவிநயம், செத்தோன் அவிநயம், மழை பெய்யப்பட்டோன்அவிநயம், பனித்தலைப் பட்டோன்அவிநயம், வெயிற்றலைப்பட்டோன்அவிநயம், நாணமுற்றோன் அவிநயம், வருத்தமுற்றோன்அவிநயம், கண்ணோவுற்றோன்அவிநயம், தலைநோவுற்றோன் அவிநயம், அழற்றிறம் பட்டோன் அவிநயம், சீதமுற்றோன் அவிநயம், வெப்பமுற்றோன் அவிநயம், நஞ்சுண்டோன் அவிநயம் என்பன. அவற்றுள்:—

1. வெகுண்டோன் அவிநயமாவது, மடித்த வாயும், மலர்ந்த மார்பும், துடித்த புருவமும், சுட்டிக்காட்டும் விரலும், கன்றின மனமும், கைபுடைத்தலுங் கூடியது.

2. ஐயமுற்றோன் அவிநயமாவது, வாடிய உறுப்பும், மயங்கிய கண்ணும், நிலைகெட்ட மனமும், பேசாதிருத்தலும், மாறுபட்ட செய்கையும், ஆகாயத்தைப் பார்த்தலும் ஆம்.

3. சோம்பினோன் அவிநயமாவது, கைநொடித்தல், கொட்டாவி பலவிடல், மூரிவிடல் (திமிர்) கோபத்துடன் ஒன்றைச் செய்தல், காரணம் இல்லாது ஆழ்ந்து சோம்பியிருத்தலும் பிறவுமாம்.

4. களித்தோன்அவிநயமாவது, ஒளித்த செய்தியை வெளிவிடல், கவிழ்ந்தும், சோர்ந்தும், தாழ்ந்தும், தளர்ந்தும், தளர்ந்த சொல்லுடன் சாய்ந்து நடத்தலும், களித்த கண்ணுடன் பார்த்தலுமாம்.

5. களிப்புற்றோன் அதாவது சந்தோஷமடைந்தோன் அவிநயமாவது, எறிட்ட களித்தபார்வையுடைமையும், செம்மையுடைய மனமுடைமையும், கோபமில்லாதிய நகையுடைமையும், உட்கார்ந்து இருத்தலும், உலாவுதலும், பாட்டுப் பாடுதலும் முதலியவாம்.

6. அழுக்காறுடையோன் அவிநயமாவது, குற்றத்துடன் தோன்றும் சொல்லும், பொருளுமுடைமையாதலும், கூம்பிய வாயுடைமையும், செம்மையான சொல்லில்லாமையும், பல படக்கைகளை விதிர்த்தலுடைமையும், குற்றப்பட்ட கோபமுடைமையும், காரணமின்றி மெலிந்த முகமுடைமையும், மெலிவொடு புணர்ந்த இடும்பையும் என்ப.

7. இன்பமொடு புணர்ந்தோன் அவிநயமாவது, துன்பம் நீங்கி வலிகொண்ட தேகமுடைமையும், தயங்கித் தாழ்ந்த பெருமகிழ்வுடைமையும், மயங்கி வந்த சொல்லுதலுடைமையும், அழகோடுகூடிய சொற்களையுடைமையும், அழகிய மலர்ச்சூட்டுடைமையும், அணிகளணிந்த தோளும், மார்பும், உடைமையும் என்ப.

8. தெய்வமுற்றோன்அவிநயமாவது கைவீச்சுடைமையும், வாயை மடித்துப் பற்களைக் கடித்தலும், துடித்த புருவமுடைமையும், அசைந்த நிலையுடன் கூடியிருத்தலும், சிவந்த முகமுடைமையும், செருக்குடைமையும் என்பர்.

9. ஞஞ்ஞையுற்றோன் அவிநயமாவது, கடிப்பதுடன், இறுகிய பற்களுடைமையும், நாத்தம்பித்தலுடைமையும், நுரை வழிந்து குவிந்த வாயுடைமையும், காண்போர்க்கு ஏதோ கூறுவான்போன்று கூறுதுடைமையும், உணர்விலாமையும், விழித்துக்காண்போன்போலக்காணுதிருத்தலும், கிடையாக் கிடத்தலும், நடவாமையும், விளக்கமுற்ற முகம் அழுங்கிக்கிடத்தலும் பிறவுமாம்.

10. சிந்தையுடம்பட்டோன் அவிநயமாவது, முந்தையாயினும் உணராநிலைமையும், பிடித்தகை மேலடைத்த கவினும், முடித்தலுறாத கருமநிலையும் சொல்லுவது யாதுமுணரா நிலைமையும்போல்வனவாம்.

11. தூங்காநின்றோன் அவிநயமாவது, மூடித்திறக்கும் விழிகளுடைமையும், மூச்சுப்பெருக உயிர்த்தலுடைமையுமாம்.

12. துயிலுணர்ந்தோன் அவிநயமாவது, சிறு கொட்டாவி விடுதலுடைமையும், உயிர்ப்பும், தூங்கிய முகமும், அசைந்த தேகமும் ஓங்கிய திரிபும் உடைமையாம்.

13. செத்தோன் அவிநயமாவது, அச்சமுடைமையும், கெடலும், உயிர்த்தலும்,

பற்களிறுகுதலும், வேர்வரும்பலும், உறுப்புகள் விறைத்தலும், மார்பு மென்மைப்படலும், கண் நட்டுப் பஞ்சடைதலுமாம்.

14. மழைபெய்யப்பட்டோன் அவிநயமாவது, இழிதகவுடைமையும், தேகநடுக்கமும், வஸ்திரத்தைப் போர்த்துக்கொள்ளுதலுடைமையும், தேகம் முகத்துடன் கவிழ்ந்திருத்தலும், நன்மனமிலாத உலறிய கண்ணுடைமையும், விளியினும் துளியினும் மடிந்த செவியுடைமையும், குளிர் மிகவுடைமையும், நடுங்கிய பல வொலியுடைமையும் பிறவுமாம்.

15. பனித்தலைப்பட்டோன் அவிநயமாவது, நடுக்கமுடைமையும், நகைபடுநிலைமையும், சொற்றளர்ந்திசைத்தலும், அற்றமில் அவதியும், போர்வை விழைதலும், புந்திநோவுடைமையும், நீரும்விழியும், சிறு முனிதலும் முதலியவாம்.

16. உச்சிப்பொழுதின்வந்தோன் அவிநயமாவது, நெருப்புப்பட்டதுபோல் உடலெரிந்து சிவந்த கண்ணும் அயர்ந்த நோக்கமும் உடைமையாம்.

17. நாணமுற்றோன் அவிநயமாவது, வணங்கிய தலையும், மறைந்த செய்கையும், வாடிய முகமும், கோடிய உடம்பும், கெட்டவொளியும், கீழ்க்கண்ணோக்கமும் உடைமையாம்.

18. வருத்தமுற்றோன் அவிநயமாவது, பொருத்தமில்லாத துன்பமுடைமையும், சோர்ந்தவுடலும் முடியும், மிக்க வியர்வுடைமையும், வருத்தமும், வற்றிய வாயும், வணங்கிய உறுப்பும் உடைமையாம்.

19. கண்ணோவுற்றோன் அவிநயமாவது, கண்ணிலிருந்து ஒழுகும் கண்ணீரை விரலாற் றெறித்தலும், வளைந்த புருவமுடைமையும், வாடியமுகமுடைமையும், வெளியில் காண்பதற்கில்லாத கண் கூசுதலுடைமையும் பிறவும் ஆம்.

20. தலைநோவுற்றோன் அவிநயமாவது, நிலைத்தவிலாத் தலையாட்டுடைமையும், கோடியவிருக்கையும், தளர்ந்த வேர்வையும் பெருவிரலிடுக்கிய நெற்றியுடைமையும், ஒடுங்கிய கண்ணுடைமையும் பிறவும் ஆம்.

21. அழற்றலைப்பட்டோன் அவிநயமாவது, நிழல் வேண்டும் விருப்புடைமையும், அழலையும் வெயிலையும் சுடரையும் அஞ்சுதலும், நிழல் நீர் சோறு முதலிய விரும்பலும், பனிநீர் பாதிரி முதலிய விரும்பலும் பிறவும் ஆம்.

22. சீதமுற்றோன் அவிநயமாவது, மனவருத்தத்துடன் உலாவலும், ஈரமாகிய போர்வை யுறுத்தலும், மிக்கவெயிலிலுழந்து நெருப்பையும் விரும்பலும், மூரசியும் முரன்றும், உயிர்த்தும் பேசலும் முதலியவாம்.

23. வெப்பன அவிநயமாவது, கடைப்பிடித்தன்மையும், தாகமும், நெருப்பையொத்த வெப்பத்துடனியைவும், வெருவருமியக்கமும், வெம்பியவிழியும், நீருண் வேட்கையும், நிரம்பாவலியும் பிறவும் ஆம்.

24. நஞ்சமுண்டோன் அவிநயமாவது, கொஞ்சிய மொழியிற் கூறெயிறமடித்தலும், வாயினுரையுடைமையும், தன்னுற்றுரை நோக்கியின்சொல் கூறுவான் போன்று கூறுமையும் பிறவும் ஆம்.

பின்னும் அவிநயம் சுவை முதலிய ஒன்பது வகைப்படும். அவற்றுள் 1. வீரச்சுவை அவிநயமாவது, விரிந்த புருவமும், சிவந்தகண்ணும், பிடித்தவாளும், கடித்த வெயிறும், மடித்த உதடும், சுருட்டிய நுதலும், திண்ணென உற்றசொல்லும், பகைவரை மதிக்கா இகழ்ச்சியும் பிறவுமாம்

2. அச்சு அவிநயமாவது, ஒடுங்கிய உடம்பும், நடுங்கிய நிலையும், மலங்கிய கண்ணும், கலங்கிய உள்ளமும், ஒளித்துவாலும், கையெதிர் மறுத்தலும், பரந்தநோக்கமுடைமையும் பிறவுமாம்.

3. இழிப்பின் அவிநயமாவது, இடுங்கிய கண்ணும், எயிறு புறம்போதலும், ஒடுங்கிய முகமும், உஞற்றுக் காலும், சோர்ந்த வாக்கையும், சொல் நிரம்பாமையும் பிறவுமாம்.

4. அற்புத அவிநயமாவது, சொற்சோர் உடைமையும், சோர்ந்தகையுடைமையும், மெய்ம்மயிர் சிலிர்ப்பும், வியப்புடைமையும், இமைத்தலும், விழித்தலும் உடைமையாம்.

5. காம அவிநயமாவது, துவுள்ளுறுத்த தொழிலும், காரிகைகலந்த கடைக்கணும், சிரித்தலும், மலர்ந்த முகமும், இரந்த கிளவியும் பிறவுமாம்

6. அவலத் தவிநயமாவது, கவலையொடு புணர்ந்த கண்ணீர் ஒழுக்கும் வாடிய நீர்மையும், வருந்திய சொல்லும், பீடழி யருமையும், பிதற்றிய சொல்லும்.

நிறைகை யழிதலும், நீர்மையில்கிளவியும், பொறையின்ருகலும் பிறவுமாம்

7. நகையி னவிநயமாவது, மிகைபடு நகையும், பிறர் நகையுடைமையும், கோட்டியமுகமும், விட்டுமுரி புருவமும், விலாஉறுப்புடைமையும் செய்வது பிறிதாய் வேறு சேதிப்பது என்ப

8. நடுவுநிலை யவினயமாவது கோட்பாடறியாக் கொள்கையும், மாட்சியும், அறந்தரு நெஞ்சமும், ஆறியவிழியும், பிறழ்ந்த காட்சி நீங்கியநிலையும், குறிப்பின்ருகலும், துணுக்கமின்மையும், தட்பமுடைமையும் அளத்தற் கருமையும், அன்பொடு புணர்தலும், கலக்கமொடு புணர்ந்த நோக்கும் கதிர்ப்பும் பிறவுமாம்.

9. ருத்திரச் சுவை அவிநயமாவது, கைபிசைதலும், வாய் மடித்தலும், கண் சிவத்தலும், பெருமூச் செறிதலும், உடல் நடுங்குதலும், வியர் வரும்பலும், வெகுண்டெழுதலும் பிறவுமாம். (சிலப்பதிகாரம்.)

**அவிநயனர்**—அகத்தியர் மாணுக்கர்கள் பன்னிருவரில் ஒருவர். இவர் யாப்பியல் சூத்திரஞ் செய்தவர். அதற்கு அவிநயம் என்று பெயர். இச்சூத்திரங்களில் காரிகையுரையிற் சிலவே ஆங்காங்கு உதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. நூல் இறந்தது. இவர் செய்த நூல் அவிநயம்.

**அவிநாசி**—கொங்கு நாட்டிலுள்ள ஒரு சிவத்தலம்.

**அவிநாபாவம்**—விட்டு நீங்காத சம்பந்தம்.

**அவிந்தியன்**—ஒரு இராக்ஷசன்.

**அவிபூ**—விரசினவாவின் புத்திரன். இவன் குமரன் திரிசங்கு.

**அவிமுத்தம்**—சிவமூர்த்திஉமையை மணந்து காசியடைந்து ஒரு சிவலிங்கமியற்றி உமைக்குக் காட்டிய தலம். சிவமூர்த்தி யாவரும் உணராவகை எழுந்தருளி யிருத்தலாலும் உலகம் அழிந்தகாலத்தில் சிவபெருமான் காசியை மஞ்சமாகக் கொண்டிருத்தலாலும் இப்பெயரடைந்தது. (காசிகாண்டம்)

**அவிரோதிநாதன்**—திருநூற்றந்தாதி நூலாசிரியன் சைநன்.

**அவிர்த்தானன்** — அந்தர்த்தானன் அல்லது விஜயாஸ்வனுக்கு நபஸ்வதியிடத்திற் பிறந்த பிள்ளை. இவனுக்குப் பிராசீனபர்கி, கயன், சுக்கிலன், கிருஷ்ணன், ஸத்தியன் அல்லது யஜன் என்று அறுவர் குமரர். பிராசீனபர்கி யென்பவனுக்குப் பதின்மர் குமரர்கள் பிறந்தனர். அவர்கள் பிரசேதசர் எனப்படுவர். இவனை விகிதாசுவன் குமரன் என்பர். இவன் பாரி அவிர்த்தானி. இவன் குமரரை இவ்வகையும் கூறுவர். பரிகிஷித், சேயன், சிதப்பிரபன் என்பர்

**அவிர்த்தானி**—அவிர்த்தானன் பாரி.

**அவிர்புக்கு**—புலத்தியன் பாரியை. இவளிடம் அசத்தியனும் விசிரவாவும் பிறந்தனர்.

**அவிர்பூ**—அவிர்புக்குக்கு ஒரு பெயர்

**அவிர்முகன்**—கத்ருதநயன்

**அவிழ்தவாதிமதம்** — அவிழ்தம் உணவாகவும், உணவாகப் பிழைக்கச்செய்தலாலும், சாகின்றவர்களைப் பிழைக்கவைத்தலாலும் வியாதிகளைத் தீர்த்தலாலும்,விஷமாகவும், விஷத்தீர்வாக இருத்தலாலும், காயசித்தி, தீர்க்காயுள், தருதலாலும், சராசரங்களின் பசிகளைத் தீர்த்துப் பிழைப்பித்தலாலும் பிராணிகளின் நோய்களைத் தீர்த்துப் பிழைப்பித்தலாலும் அவிழ்தமே தெய்வம் என்று கூறும் மதம். (தத்வநிஜானு)

**அவிஜிஹ்வன்**—கைலாயத்தின் வடமேற்கு வாயிற் காவலாளி.

**அவிஷ்மதி**—ஆங்கிரசரிஷியின் புத்திரி.

**அவிஷ்மான்**—ஆருமன்வந்தரத்து ரிஷி

**அவீக்ஷித்து**—யயாதி வம்சத்துக் கரந்தமன் குமரன். இவன் குமரன் மருத்துச் சக்கிரவர்த்தி. இவன் பிறந்த காலத்துக் கிரகங்கள் தீயவீக்ஷண்ய மில்லாமையால் அவீக்ஷித்து என்று பெயர். இவன் எமவர்ணன் என்னுமரசன் குமரியின் சுயம்வரத்தைக்கேட்டுச் சென்று அரசர்களை வென்று அவளை மணந்தனன். அப்படியே சுயம்வரம்நாட்டுந் தலங்களுக்கெல்லாஞ் சென்று அவ்விடம் அந்தப் பெண்களைப் பலாத்காரமாகக் கொண்டு வருவன். இவன் ஒருமுறை சுபத்திரை, கௌரியென்னும் கன்னியரையும் பலாத்காரமாய்க் கொண்டுவந்தான். இவ்வாறு செய்துவருகையில் விசிதபுரத்து அரசன் குமரியாகிய வைசாலினி சுயம்வரத்தைக் கேட்டுச் சென்று அவளையும் அவ்வாறு செய்ய அரசர்களெல்லாம்கூடி அவனிடம் போரிட்டு வெல்லாமல் பலர் அநியாயப் போரிட்டு ஒருங்குகூடி ஒருவன் வில்லையும் மற்ெருருவன் கையையும் பிடித்துக்கொண்டு கட்டி விசாலனிடம்விட விசாலன் வைசாலினிக்குக் காட்டினன். வைசாலினி அவீக்ஷித்துத் தவிர மற்றவர்களை மணக்கேன் என்றனள். அவீக்ஷித்து விசால

னிட மிருப்பதைத் தந்தையாகிய கரந்தமன் கேட்டுப் படையெடுத்து அரசர்களை வென்று அவீக்ஷித்தை மீட்டனன். பிறகு விசாலன் தன் குமரியை மணக்கும்படி வேண்ட அவீக்ஷித்து நான் கன்னியரெதிரில் அவமானமடைந்தபடியால் இவளேயல்லாமல் இனி எந்தப் பெண்களையும் மணக்கேன் என்றனன். இதனை விசாலை கேட்டு இவனைத்தவிர மற்றவர்களை மணப்பதில்லையென்று தானும் தவத்திற்குச் சென்றனள். இது நிற்க ஒரு நாள் அவீக்ஷித்து வேட்டைக்குச் சென்றனன். அங்கே ஒரு மூலையில் "ஐயயோ நான் அவீக்ஷித்தின் தேவி என்னை அநியாயமாக இந்தத் திருடகேசி யென்னு மரக்கன் எடுத்துச் செல்கின்றான்" என்னும் ஓசை தன் செவியிற்படக் கேட்டு அவள் சரித்திரத்தைப் பின் ஆராய்வோம் என்று அவ்விடஞ்சென்று அரக்கனைக் கொன்று அவளை விடுவித்தான். பின்பு அரசன் அவளை நீ யார் என்று வினவி அவள் வாய்ச்சொல்லால் விசாலை யென்று அறிந்து நீங்குகையில் தேவர் வெளிப்பட்டு உனக்கு என்னவரம் வேண்டும் என்ன அரசன் எனக்கு ஒரு புத்திரன் வேண்டும் என்றனன். தேவர் அரசனை நோக்கி உனக்கு இந்த விசாலையினிடத்து ஒரு புத்திரன் பிறப்பான் என்று வரந்தந்து சென்றனர். அரசன் விசாலையை நோக்கி நீ இவ்விடம் எப்படி வந்தனையென்ன? நீர் என்னைவிட்டுப் பிரிந்தவுடன் நான் தவம் ஆசரிக்கையில் ஒருநாகன் என்னைக் கௌவி நாகலோகத்திற்குச் சென்றனன். அவ்விடமிருந்த நாகர் எனக்கு இளமை கொடுத்து என்னால் அவர்கள் குடும்பத்திற்கு இடையூறுவாராதிருக்க என்னிடம் வரம் பெற்று என்னைக் கௌவிச் சென்ற நாகனிடம் என்னைக் கூட்டிப் பூமிக்கனுப்பினர். நான் இவ்விடம் வந்து தவஞ்செய்து கொண்டிருக்கையில் எனக்கு இவ்வித இடையூறு நேர்ந்தது. உன்னால் மீண்டேன் என அவீக்ஷித்து களிப்படைந்து என் தந்தை தனக்குப் பௌத்திரன் வேண்டும் என்றதால் இப்போதே மணக்கின்றேன் என்றனன். அப்போது சுனையன் என்னுங் காந்தருவன் தோன்றி அரசனைப் பார்த்திவள் முன் சன்மத்தில் மதியநந்தை என்பவள் அச்சன்மத்தில் அகத்திய முனிவரைக் கோபம்வரச் செய்தமையால் அவர் மனித வுருப்பெறச் செய்தனர். நீ தடையின்றி மணக்க என, அரசன் அவளைக்கூடி மருத்து என்பவனைப் பெற்றுத் தந்தையாகிய கரந்தமனிடம் தந்து அவனுக்குப் பட்டம் அளிக்கச்செய்து தான் பட்டம் ஏற்காமற் களித்திருந்தனன்.

**அவுணர்கூற்றன்** — சண்முகசேனைவீரருள் ஒருவன்.

**அவுநாசிபி**—யயாதி தௌகித்ரன்.

**அவுரவமகருஷி** -இவர் ஒரு இருஷி. இவரது தேவி அக்நிதேவனைத் தன் வல்லமையால் தொடையில் அடக்கிவைத்து இருந்தனள். சகரனுடைய தாய் புருஷனுடனிறவாமல் தடுத்து அவள் வயிற்றிலிருந்த கருப்பத்தைக் கலைக்கும்படி மாற்றாந்தாயாரூட்டிய விஷத்தாற் சகரனிறவாது காத்தவர். இவரைச் சவநர் என்றுங் கூறுவர்.

**அவுரி**—ஒருவித செடி, இது (௩) அடி வளருகிறது. இது இந்தியாவில் விசேஷம் பயிராகிறது. இது முதிர்ந்தவுடன் செடிகளைப் பிடுங்கி நீர்த்தொட்டியிலிட்டு அவற்றின் நிறமாறியவுடன் மற்றோர் தொட்டியில் அந்நீரைவிட்டுச் சுண்டக்காய்ச்ச ஜலமிறுகி நீலக்கட்டிகளாகின்றன. இதிலிருந்து நீலநிறக்கட்டிகள் உண்டாக்கிச் சாய முதலிய போடுகிறார்கள். இச் செடியின் சத்து மகாபாஷாணங்களின் விஷங்களையும் மாற்றும் வன்மையுள்ளது. மலையாளதேசத்தில் இதன் வேர் கஷாயமாகக் கொடுக்கப்படுகின்றது.

**அவேதுசமை**—முக்காலத்திலும் ஏதுத்தன்மை சம்பவியாமையால் ஏது அன்றென்று கூறுவது. (தரு)

**அவை**—(சவை) இது நான்கு வகைப்படும், நல்லவை, தீயவை, குறையவை, நிறையவை.

**அவ்யகர்ணன்**—கத்ருதநயன். (நாகன்).

**அவ்யம்**—தெய்வத்தை உத்தேசித்துச் செய்யுஞ் சடங்கு. **கவ்யம்** பிதுர்க்களை உத்தேசித்துச் செய்யுஞ் சடங்கு.

**அவ்யவாகன்**--அக்நி, அவிகளைச் சுமப்பவன் என்பது பொருள். அக்கினியைக் காண்க.

**அவ்வியாப்தியபிதானன்**—யாதொன்று மூர்த்தம் அது நித்யம், கடம்போல், என்பதில். இந்த ஏதுவிற்குத்தானே கடம்போலென்கிற திருஷ்டாந்தத்தினாலே யாதொன்று மூர்த்தம் அது நித்யம், கடம்போலென்கிற தலத்திலே யொழியப் புறத்தில் வியாத்தி தோன்றாதபடியினால் என்ப.

**அவ்வியாப்தி**—இலக்கியத்தின் ஏகதேசத்தில் இலக்கண மிருத்தல்.

**அவ்வியேயன்**--சூத்திரசாதனியைக் காண்க.

**அழகர்மலை** — இது பாண்டிநாட்டிலுள்ள மலைகளில் ஒன்று. இதனைத் திருமாலிருஞ்சோலைமலை என்பர். இது முதலில் குமரவேள் குன்றென்றும் பின் திருமாலுக்கிடமென்றுங் கூறுவர். இப்போது இது சுரப்பிரதேசமாயிருக்கின்றது. இதில் புண்ணியசரவணம், பவகாரணி, இட்டசித்தியென்னும் மூன்று பொய்கைகளும், சிலம்பாறென்று ஒரு ஆறும் உள்ளன. இம்மலையில் திருமால் நின்ற கோலத்துடன் எழுந்தருளியிருக்கிறார். இக்கோயில் வாயிற்படியிற் பதினெட்டாம்படிக்கறுப்பன் என்னும் க்ஷுத்ரதேவதையின் கோயில் இருக்கிறது. (சிலப்பதிகாரம்)

**அழகாநந்தர்** — ஏலேலசிங்கர்க்குக் குமரர். இவர் அரசர் நினைத்தபோது மடியில் வந்திருந்தனராம்.

**அழகியசிற்றம்பலக்கவிராயர்**-இவர்பாண்டிநாட்டுச் சிவகங்கையை அடுத்த மிதிலைப்பட்டியிலிருந்த சைவசமயத்தினர். கட்டளைக் கலித்துறை பாடுதலில் வல்லவர். இவர் காலம் இற்றைக்கு (௨௦௦) வருஷங்களுக்கு முன் என்பர். இரகுநாதசேதுபதியரசர்மீது தளசிங்கமாலை யென்னும் நூல் இயற்றிப் பரிசு பெற்றவர்.

**அழகியமணவாளப்பெருமாணாயினார்**-பிள்ளைலோகாசாரியர் தம்பி, தேசிகரிடத்து விரோதித்துத் தேசிகர், வீட்டிலிருந்து புறப்படுகையில் அவர் தலையிற்படும்படி செருப்புக்கட்டி வைத்துத் தேசிகரது பொறுமைகண்டு அபராதக்ஷமணஞ் செய்து கொண்டவர். இவர் செய்த நூல்கள் அருளிச்செயல்ரஹஸ்யம், ஆசார்யஹிருதயம், மாணிக்கமாலை, அமலனாதிப்பிரான், கண்ணினுண்சிறுத்தாம்பு வியாக்யானம், திருப்பாவை வியாக்யானம் ஆறாயிரப்படி.

**அழகியமணவாளன்** — 1. திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமாளின் திருநாமம்.

2. மணவாளமாமுனிகளுக்குத் தந்தையிட்ட பெயர்.

**அழது** — செய்யுட் சொல்லாகிய திரிசொல்லால் ஓசையினிதாக நன்கினிது யாக்கப்படுவது (யாப்பருங்கலவிருத்தி).

**அழலாசுரன்**--விநாயகரால் விழுங்கப்பெற்ற ஓர் அசுரன்

**அழிசி**—இவன் சோழர் மரபினனாகிய ஒரு சிற்றரசன். மிகுந்தகொடையாளி, சோழநாட்டிலுள்ள ஆர்க்காடென்னு மூரிலிருந்தவன். இவன் ஆர்காட்டையும், சிலவூர்களையுங் கைக்கொண்டு ஆண்டு வருநாளில் இவனுக்குப் புதல்வனொருவன் பிறந்தனன். அவன் சேந்தனெனப் பெயரிட்டு வளர்க்க வளர்ந்து (திதலை யெஃகிற் சேந்தன் றந்தை, தேங்கமழ் விரிதாரியறேரழிசி..... .....அரியலங்கழனியார்க்காடு" நற்றிணை (௧௯௦) பின்பு உறையூரைக் கைப்பற்றி அரசாண்டு வந்தனன். "எந்து கோட்டி யானைச் சேந்தனுறந்தை" குறுந். (௨௫௮) இவனை நற்றிணையிற் பாடியவர் பெயர் தெரியவில்லை. (நற்றிணை).

**அழிசிநச்சாத்தனார்**—இவர் பெயர் சாத்தனாராய் இருக்கலாம் ஊர் அழிசிபோலும். இவர் குறுந்தொகையில் தலைமகற்கு வாயில் நேர்ந்துபுக்கத் தோழிக்கு "அருவியன்ன" எனும் செய்யுள் தலைமகள் கூறியதாகப் பாடல் பாடியுள்ளார். (குறுந்தொ.)

**அழிபடைதாங்கல்** — தம்படைத் தாழ்விற்குக் கோபித்து மாறுபாடு மிகக் கெட்டசேனை எயிலைக்காத்தது. (பு-வெ)

**அழும்பில்**—சேரநாட்டுக் குறுநிலமன்னனது ஊர். (சிலப்பதிகாரம்)

**அழும்பில்வேள்**—செங்குட்டுவனுடைய நட்பாளனாகிய ஒரு குறுநிலமன்னன். (சிலப்)

**அளகநந்தை**—பதரிகாச்சிமத்திலுள்ள ஒரு தீர்த்தம். இது மகாபாதகங்களைப் போக்குகிறது.

**அளகந்தை** — கைலைமலைக்கருகிலுள்ள ஒரு நதி.

**அளகை**—குபேரன் பட்டணம்.

**அளபெடை**:—(௨) உயிரளபெடை, ஒற்றளபெடை. செய்யுளில் ஓசை குறையின் உயிரும் ஒற்றுந் தமக்குச் சொன்ன அளவைக் கடந்து நீண்டொலிப்பது. (நன்).

**அளர்க்கம்**—ஒருபுழு, இது எட்டுக்காலும் கூர்மையான பற்களும், தேகமுழுதும் கூர்மையான மயிர்களுடையதுமானது. இது, கர்ணன்தொடையில் பரசுராமருறங்குகையில் கர்ணனது தொடையைத் தொளைத்தது, தம்சனைக்காண்க. (பார-சாந்தி)

**அளவர்** — மதுரை திருநெல்வேலி பக்கத்துள்ள உப்பளங்களில் வேலை செய்யும் ஆட்கள். இவர்களுக்குப் பண்ணையன் மூப்பன் என்பது பட்டம். இவர்கள் கோவில்

களில் பிரவேசிக்கக்கூடாது. இவர்களுக்குப் பச்சைகுத்தலும் ஒரு தொழில். (தர்)

**அளவழிச்சந்தங்களின்பெயர்** — நிகர்த்து, விராட், புரிக், சுராட், பவமத்திமம், தோரையிடைச்செய்யுள், பிபீலிகாமத்திமம், எறும்பிடைச்செய்யுள், பாதிச்சமச்செய்யுள், அளவழிப்பையுட்சந்தம், முதலிய. இவற்றின் விரிவை யாப்பருங்கலத்திற் காண்க. (யாப்பருங்கலவிருத்தி)

**அளவியனுர்**—ஒரு தமிழாசிரியர்.

**அளவுகருவிகள், எடுத்தலளவை** — தூக்கு, தராசு பெருந்தராசு, சிறுதராசு, பொன்னிறுக்குந்தராசு, மணிநிறுக்குந்தராசு, கட்டைநிறுக்குந்தராசு. இது, அளவு கோலின் மூன்று தொளைகளைப் பெற்றது கோலின் கடைசியிலுள்ள தொளைகளிலிரண்டு தட்டுகள் கோக்கப்பட்டு நடுத்துவாரத்தில் கயிறிட்டுத் தூக்கி அளவு காண்பது. மற்றவையுமப்படி, முருக்குக் கம்பி தராசு, ரோமன் ஸ்டீல்யார்ட், டேனிஷ் ஸ்பீடியார்ட், கப்பி புல்லி, நகருங்கப்பி, மட்ட யந்திரம், ஜலமட்ட யந்திரம், நிலை ஜல யந்திரம், வாயுவிளக்கும் வாயுமானி. **முகத்தலளவு கருவிகள்** மரக்கால், படி, அரைப்படி, உழக்கு, ஆழாக்கு முதலிய. **நீட்டலளவு** அங்குலம், சாண், அடி, முழம், கஜம், பாகம் முதலிய.

**அளவை**—(1)நிறுத்தளத்தல்,பெய்தளத்தல், சார்த்தியளத்தல், நீட்டியளத்தல், தெறித்தளத்தல், தேங்கமுகந்தளத்தல், எண்ணியளத்தல் என எழுவகைப்படும். பின்னும் அளவை, எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல், தெறித்தல் என ஐவகைப்படும். பின்னும் காட்சி, அநுமானம், அருத்தாபத்தி, ஆகமம், உவமானம், அபாவம், சம்பவம், ஐதிகம் என (௮) விதம்.

(2) (பொன்னிறைப்பெயர்). சிறுபுழைவழிவருஞ் சூரிய கிரணத்திலே நுண்ணிதாகக் காணப்படுகின்றதுகளுக்குத் திரிசரேணுவென்று பெயர். திரிசரேணு (௮) கொண்டது ஈர், ஈர் (௩) கொண்டது மன்கடுகு, மன்கடுகு (௩) கொண்டது வெண்கடுகு, வெண்கடுகு (௬) கொண்டது நடுத்தரயவம், நடுத்தரயவம் (௩) கொண்டது குன்றி, குன்றி (௫) கொண்டது. மாடம் (அதற்குக் கருஷமென்றும், அக்ஷமென்றும், பெயர். மாடம் (௧௬) கொண்டது. பொன், பொன் (௪) கொண்டது பலம் (அதற்கு நிட்கமென்று பெயர்) பலம் (௧௦) கொண்டது தரணம். (வெள்ளிநிறைப்பெயர்) குன்றி (௨) கொண்டது வெள்ளிமாடம். வெள்ளிமாடம்(௧௬) கெண்டது வெள்ளித் தரணம் (அதற்குப் புராணமென்றும் பெயர்) வெள்ளித்தரணம் (௧௦) கொண்டது பலம், (அதற்குச் சதமாமென்றுபெயர்) செம்பினிறைப்பெயர். பொன்னிறையிற் காட்டிய பலத்தில் நாவிலொருபங்கான தாம்பிரத்திற்குக் காருடிக மென்றும், காரூடாபணமென்றும், பணமென்றும் பெயராம். (விவகாரசாரசங்கிரகம்.)

(3) **குன்றி, மாடம், கருடம், பதார்த்தம், பிரத்தம்.** இவை ஒன்றினென்று பதின் மடங்கதிகம். குன்றி (௧௦) கொண்டது மாடம், மாடம் (௧௦) கொண்டது கருடம், கருடம் (௧௦) கொண்டது பதார்த்தம், பதார்த்தம் (௧௦) கொண்டது பிரத்தம், பிரத்தம் (௫) கொண்டது ஆடகம், ஆடகம் (௮) கொண்டது அருமணம். அருமணம் (௨௦) கொண்டது காரிகை. இவை நாடுகள்தோறும் வேறுபடும். ஐந்தங்குல ஆழமும் நான்கங்குல நீளமும் உள்ள பாத்திரம் முகத்தலளவையில் கால் பிரத்தம் (சுக்கிரநீதி).

(4) **நிலத்தின் அளவு**—(௫000) முழம் ஒரு குரோசம் என்று பிரசாபதியினுலும், (௪000) முழம் குரோசம் என்று மநுவினுலும் சொல்லப்பட்டன. பிரம்மாவின் கொள்கைப்படி (௨½) கோடி முழங்கள் அல்லது (௨௫00) சதுர நிவர்த்தனங்கள் ஆதல் ஒரு குரோசத்தின் சதுர அளவாம். நடுவிரலின் நடுவிலுள்ள இரண்டு கணுக்களுள் நடுப்பாகம் நீளம் அங்குலம் என்று கூறப்படும். யவம் என்னும் தானியத்தின் நடுப்பாகம் (௮) கொண்ட நீளமும் அதன் (௫) கொண்ட அகலமும் ஒரு அங்குலமாகும். அங்குலம் (௨௪) கொண்டது ஒரு முழம். (௪) முழம் கொண்டது ஒரு கோல், (௫) முழம் கொண்டது இலகு, யவதானியத்தின் நடுப்பாகம் (௭௯௮) கொண்டது ஒருகோல் என்பது பிரஜாபதியின் கருத்து. யவதானியத்தின் நடு அளவு (௧00) கொண்டது ஒரு கோல் என்பது மநுவின் கருத்து. இவ்வாறு (௨௫) கோல்கள் கொண்டது நிவர்த்தனம். (௯௨௫) கோல்கொண்டது பரிவர்த்தனம். பரிவர்த்தன அளவு விஷயத்தில் (௨௫) கோல்கள் கொண்டது ஒரு

புயமாகும். (௬) புயங்களின் அளவுள்ளது உழவுநில பரிவர்த்தனம் என்று கூறப்படும். (சுக்கிரநீதி).

**அளிதாங்கன்**—திரிபுராசகுமாரன் (சூளா.)

**அளைமறிபாப்புப்பொருள்கோள்** — செய்யுளின் ஈற்றினின்ற சொல் இடையினும் முதலினும் சென்று முடிவது.

**அள்ளூர் நன்முல்லையார்** — (பெண்பாலார்) ஒரு தமிழ்ப்புலவர், இவர் இடம் அள்ளூராக இருக்கலாம். கடைச்சங்க மருவியவர். இவர் குறுந்தொகையில் கிள்ளை வாயிற்கொண்ட வேம்பின் பழம் பொற்காசேய்க்கும் எனவும், கூறினர். இவர் பாடிய செய்யுட்கள் உவமை பொதிந்தனவாக இனிமை தருவன. (அகநானூறு, குறுந்தொகை.)

**அறக்கான்மதம்**—இத்தேசத்தவர், பலதேவர்களை ஆராதித்து வருவராயினும் குவேபுரூக்கிறயா என்னும் தேவதையை ஆராதனை செய்துகொண்டு பூஜை உற்சவாதிகள் செய்வர். இவர்கள் தங்கள் குருக்களை ரேவினியன் என்பர். சந்நியாசிகள் மஞ்சள் வஸ்திரந்தரித்து முண்டிதர்களாயிருப்பர். இவர்கள் புனர்ஜன்மமேற்றுக் கொள்வர். இத்தேச புருஷர்கள் நாலு ஸ்திரீகளுக்குஅதிகமாகவே விவாகஞ் செய்துகொள்வார்கள்.

**அறத்துறுப்பு(அ)**—ஐயப்படாமை, வெறுப்பின்மை, விருப்பின்மை, மயக்கமின்மை, பழியைநீக்கல், அழிந்தோரைநிறுத்தல், அறம்விளக்கல், பேரன்புடைமை.

**அறத்தொடுநிற்றல்** — களவை முறையே வெளிப்படுத்தி நிற்றல், வெளிப்படுத்தலாவது. தலைவி பாங்கிக்கறத்தொடு நிற்கும், பாங்கி செவிலிக்கறத்தொடு நிற்கும், செவிலி நற்றாய்க்கறத்தொடு நிற்கும், நற்றாய் தந்தை தன்னையர்க்கறத்தொடு நிற்கும் என்பது. இது முன்னிலை, முன்னிலைப்புறமொழி என இரண்டு வகையினையும், கையறு தோழி கண்ணீர் துடைத்தல், தலைமகள் கலுழ்தற் காரணங் கூறல், தலைவன் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை கூறல், இறைவி தலைவனி கந்தமையியம்பல், பாங்கியயற் பழித்தல், தலைமகளியற்படமொழிதல், தெய்வம் பொறைகொளச் செல்குவமென்றல், இல்வயிற் செறித்தமையியம்பல், செவிலிகனையிருள் அவன் வரக்கண்டமைகூறல், எறிவளைவேற்றுமைக் கேதுவினவல், பாங்கிவெறிவிலக்கல், வெறிவிலக்கிய வழிசெவிலி பாங்கியைவினாதல், பூத்தரு புணர்ச்சியாலறத்தொடு நிற்றல், புனல் தருபுணர்ச்சியால் அறத்தொடு நிற்றல், களிறுதருபுணர்ச்சியாலறத்தொடு நிற்றல், தலைமகள் வேற்றுமைகண்டு நற்றாய் செவிலியை வினாதல், செவிலிநற்றாய்க்கு முன்னிலை மொழியால் அறத்தொடுநிற்றல், எனும் விரியினையும் உடைத்து. (அகப்பொருள்)

**அறநெறிச்சாரம்**—தமிழ் நீதிநூல்களுளொன்று. முனைப்பாடியாராலியற்றப்பட்டது. சைநநூலாகத் தெரிகிறது.

**அறந்தாங்கியார்**—திருவழுதி வளநாடர்க்கு குமரர். இவர் குமரர் சக்கிரபாணியார். இவர் நம்மாழ்வார்க்கு நான்காம் பாட்டர்.

**அறம்**—இல்லறம், துறவறம் என இருவகை. இல்லறம், கொடுத்தலு மளித்தலும் கோடலும், இன்மையும், ஒழுக்கம், புணர்தல்,புணர்ந்தோர்ப் பேணல் மற்றையவுமாம். **துறவறமாவது**-துறவும்,அடக்கமும், தூய்மையும், தவமும். அறவினையோம்பலும், மறவினை மறுத்தலும், பிறவுமாம். (வீரசோழியம்)

**அறம் முப்பத்திரண்டு**—ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தோர்க்குண்டி, பசுவிற்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவு வளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ்சுடல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தர், மடம், தடம், கா, ஆவுறுஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறு விடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம் முதலியனவாம்.

**அறம்வளர்த்தநாயகி**—பார்வதி பிராட்டியார் சிவபிரானை நோக்கி நான் அறம் வளர்க்க வேண்டுமென, சிவபிரான் இருநாழி நெல்லளித்து இதைப் பூலோகத்திற் கொண்டு சென்று உழவுத் தொழிலால் பெருக்குக என அவ்வாறே கங்கைநாட்டு உழவர்பால் நெல்லளித்து விருத்திசெயச்செய்து காஞ்சியடைந்து தவஞ்செய்து நெற்கொண்டு உழவாலதைப்பெருக்கிஅறம்வளர்த்தனள்.

**அறம்வளர்த்தான்முதலியார்** — இவர் அம்பி என்னும் ஊரார். கிருஷ்ணதேவராயருக்கு

மந்திரி. ஞானப்பிரகாசசுவாமிகளுக்கு முதலில் மடம் உண்டாக்கி வேளாளருக்கு அவரைக் குருவாக்கினவர். இம் மடம் நாட்டுமடம் எனனப்படும். முதலியாரிடம் பகைகொண்ட சிலர், வேளாளப் பெண்கள்போல்வேடமிட்டுஅடிக்கச் செய்தனர். முதலியார் அவர்களைத் தண்டித்து ஓட்டினர். இவர் பல புலவர்களாலும் புகழப்பட்டவர்.

**அறவணவடிகள்**—காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த புத்த சங்கத்திலுள்ள ஒரு முனிவர். கோவலன் சொலையுண்டது கேட்டு வருந்தியடைந்த மாதவிக்குத் தருமோபதேசஞ் செய்து துறவுபூணச் செய்தவர். பாதபங்கயமலையைத் தாம் தரிசித்ததன்றித் துச்சயன் எனும் அரசனைத் தன் மனைவியுடன் தரிசிக்கச் செய்தவர், மணிமேகலைக்கு ஆபுத்திரன் வரலாறு அமுதசுரபியின் பெருமை, உணவளித்தலின் விசேஷம், போதித்துப்பலருக்கும் உணவளிக்கச் செய்து தருமோபதேசஞ் செய்தவர். தீவதிலகையாலும், கந்திற்பாவையாலும் புகழப்பட்டவர். காவிரிப்பூம் பட்டினம் கடல்கொண்ட பின்னை, வஞ்சிநகரடைந்து அவ்விடம் துறவு பூண்டிருந்த கோவலன் தந்தையுடன் அளவளாவி அப்பாற் காஞ்சிநகரஞ் சென்று தவஞ் செய்திருந்தவர். (மணிமேகலை.)

**அறிவனுர்**—பஞ்சமரபு என்னும் நூலியற்றிய தமிழாசிரியர்.

**அறிவன்வாகை**—தன் கீர்த்தியைச் சொல்ல மூன்று கால நிகழ்ச்சியையும் அறியுமவன் தன்மையைச் சொல்லியது. (பு. வெ).

**அறிவானந்தசித்தி**—வலங்கை மீகாமனியற்றிய தமிழ்த் தத்துவநூல்.

**அறிவின்வேறுபாடு**—(ரு) புத்தி தற்காலோசிதமான பொருளைக் கிரகிப்பது. மதிமேல் வரும் காரியத்தைக் கிரகிப்பது. ஸ்மிருதி யாதாமொருவன் முன் சொன்ன விஷயத்தை யறிவது. பிரஞ்ஞை முற்காலத் துண்டாகிய வியாபாரத்தை யறியு மறிவு. பிரதிமை பிரஞ்ஞையின் மிகுந்த அறிவு.

**அறிவுடைநம்பி** — பாண்டியன் அறிவுடைநம்பி யென்பவரிவரே. புதல்வரில்லார்க்கு இருமைப்பயனுமில்லை யென இவர் புறம் (கஅஅ) ஆம் பாடலில் விளங்கக் கூறியுள்ளார். இவர் பிசிராந்தையாராற் பொருண்மொழிக்காஞ்சிபாடப் பெற்றவர்; புறம் (கஅச)தலைவியை அச்சுறுத்தித் தினைப்புனங் காவலோம்புமாறு தோழி கூற்றாக இவர் பாடியது இனிமைதரும். அகம் (உஅ) இவர் நெய்தலையுங், குறிஞ்சியையும் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் (கரு)ம் பாடலொன்றும், குறுந்தொகையில் ஒன்றும், அகத்திலொன்றும் புறத்திலொன்றுமாக (ச) பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (நற்றிணை)

**அறுகு**—ஒருவிதமான பூண்டு. இதைக் கஷாயம் செய்து மிகவும் விருப்பமான உருசியுள்ள, குளிர்ச்சியுண்டாக்குகிற குடிநீராக உபயோகப் படுத்துகின்றனர். இது உப்பறுகு, கூந்தலறுகு, சிற்றறுகு, புல்லறுகு, பேரறுகு, பானையறுகு, வெள்ளறுகு எனபேதப்பட்டுக் குணங்களும் மாறுபடும். இது, தேவர்கள்பொருட்டு அநலாசுரனை விநாயகர் விழுங்கியகாலத்து வெப்பந் தணிவுற முனிவர் பூசித்தலாலும், விரோசனையால் விநாயகமூர்த்தி பசியாக வந்தகாலத்திற்பசிதணியநிவேதிக்க இட்டமையாலும், ஆசிரியையெனும் ரிஷிபத்தினியால் தேவேந்திரனிடம் துலையேறப் பெற்றுத் துலையில் தேவேந்திரன் செல்வத்தினும் உயர்ந்தமையாலும், தருப்பைகளில் ஒன்றுதலாலும் ஏற்றமுடைத்தாம். (விநாயக புராணம்)

**அறுகை**—மோரிய வம்சத்தரசன். இவன் மோகூர் அரசனுகிய பழையனுக்குப் பகைவன். இவன் பொருட்டுச் சேரன் செங்குட்டுவன் பழையனுடன் போர்புரிந்தான். இவ்வறுகை செங்குட்டுவனுக்கு நண்பனுக இருக்கலாம்.

**அறுசமயம்**—சைவம், வைணவம், சாத்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம்.

**அறுசுவை**—கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு. (நாலடியார்)

**அறுநாட்டார்**—இவர்கள் மொட்டை வேளாளர் எனப்படுவர். இவர்கள் மீசையையெடுத்துவிட்டுச் சிறு குடுமி வைத்திருத்தலால் வந்த பெயராம். இவர்களுக்கு ஆறு நாடுகள். அவற்றில் மூன்றுஆறு கொள்ளப்பட்டன. இப்பொழுதுள்ளவை இரண்டு. ஒன்று சீர்குடிநாடு, மற்றது ஓமாண்டூர் நாடு. (தர்ஸ்டன்)

**அறுபகை**—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

**அறுபத்துநாலுகலை**—கலைஞானம் காண்க.

**அறுபத்துமூவர்**—நாயன்மார் அறுபத்து மூவர் காண்க.

**அறுமுகக்கடவுள்** — சூராதிகளின் ஒடுக்கத்தின்பொருட்டு, தேவாதியர் சிவமூர்த்தியை வேண்ட அக்காலத்தில் அறுமுகத்துடனிருந்த சிவமூர்த்தியின் நெற்றி விழிகளாறினும்ஆறுபொறிகள் சிதறின. அவற்றைச் சிவமூர்த்தியின் ஏவலால் வாயுவும் அக்நியும்தாங்கிக் கங்கையில் விடக் கங்கை சரவணத்தில் வைக்கக் குழந்தையுருவாகி வளர்கையில் தேவரேவலாற் கார்த்திகை முதலறுவரும் பாலூட்டவுண்டு வளர்ந்து சூரன் முதலாயினரை வென்ற திருவுரு. (ஸ்காந்தம்)

**அறுமுறைவாழ்த்து**—முனிவர், பார்ப்பார், ஆனிரை, மழை, முடியுடை வேந்தர், உலகு என்ற ஆறனையும் பற்றிக்கூறும் வாழ்த்து.

**அறுவகைநிலை**—வைணவம், சமநிலை. வைசாகம்,மண்டலம், ஆலீடம், பிரத்யாலீடம்.

**அறுவகைப்படை**—மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை.

**அறுவைவாணிகனார்இளவேட்டனார்**—கடைச்சங்கமருவிய புலவர். மதுரை அறுவை வாணிகனா ரிளவேட்டனாரைக் காண்க.

**அற்பகன்**—துருபதன் குமரன். இவனுக்கு நந்திவர்த்தன ஆசயன் என்பவன் குமரன்.

**அற்புதம்**—இந்திரப்பிரத்தத்தி னருகிலுள்ள ஒரு மலை.

**அனந்தகுணபாண்டியன்** — குலோத்துங்க பாண்டியன் குமரன். இவன் கர்லத்து நாகமெய்தது, மாயப்பசுவை வதைத்தது.

**அனந்தசதுட்டயம்**—அனந்தஞானம், அனந்ததரிசனம், அனநதவீரியம், அனந்தசுகம். (சீவக)

**அனந்தசுகபாண்டியன்**--அனந்தகுணபாண்டியனுகுப்பின் மதுரையாண்டவன்.

**அனந்தபாரதி ஐயங்கார்**—இவர் தஞ்சாவூரிலிருந்தவித்வான். உத்தரராமாயண கீர்த்தனை, பாகவ்ததசமஸ்கந்தநாடகம், தேசிகப்பிரபந்தம், மருதூர்வெண்பா, யானைமேலழகர்நொண்டிச்சிந்து, முப்பாற்றிரட்டு செய்தவர்.

**அனவர்த்தி** — விருத்தாசலபுராணம் நாதசன்மா இடம் கேட்டவர்.

**அனுசாரங்கள்**—இவை, இல்லறம் துறவறத்திருப்போர் அநுட்டிக்கும் ஒழுக்கங்கள். ஆடையின்றி ஸ்நானஞ்செய்தலும், இரண்டன்றி ஓராடை மாத்திரம் உடுத்துக்கொண்டு உண்ணுதலும், ஒருவர் தாம் உடுத்த ஆடையைத் தோய்த்துத் தண்ணீரிலே பிழிதலும், ஓராடை உடுத்துக்கொண்டு சபையில்போதலும் கூடா. தலையில் தேய்த்த எண்ணெயை வழித்து மற்ற அவயங்களில் பூசுதலாகாது. மற்றவர்கள் உடுத்த அழுக்கு வஸ்திரத்தைத் தீண்டுதல் கூடாது. பிறருடைய செருப்பைக் காலில் அணிந்து கொள்ளுதல்கூடாது. தண்ணீரிலே தம்முடைய நிழலைப் பார்த்தலும், சும்மா உட்கார்ந்து கொண்டு தரையைக் கீறுதலும், இரவில் ஒரு மரத்தின் அருகிலே போதலும், நீரைத் தொடாமல் எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதலும், எண்ணெய் தேய்த்துகொண்டபின் உடம்பின்மேல் நீரைத் தெளித்துக்கொள்ளாமல் புலையனைப் பார்த்தலும் ஆகா. ஐங்குரவர் சொல்லிய சொல்லைக் கடந்து ஒரு காரியத்தையும் செய்யலாகாது. முடிவு பெறாத குறைவிரதம் உடையவர்கள் அவ்விரதத்தை மறத்தல் கூடாது. பூரணையில் பல் தேய்த்தலு மாகாது. மரங்களை வெட்டுதலுமாகாது. ஒருவர் உட்கார்ந்திருக்கின்ற இடத்திற்கும், விளக்கிற்கும் நடுவிலே போதலாகாது. சுவரின்மேல் எச்சிலை உமிழ்தல் கூடாது. பிறர் உடுத்துக் கிழிந்த அழுக்கு வஸ்திரத்தைக் கீழே போட்டுக் கொள்வதும் மேலே போர்த்துக் கொள்வதும் ஆகாது. எப்படிப்பட்ட சமயத்திலும் தாம் உடுத்திருக்கின்ற வஸ்திரத்தின் காற்று மற்றவர்மேல் படும்படி செல்லுதல் கூடாது. பலர் நடுவில் தாம் உடுத்திருக்கின்ற வஸ்திரத்தை உதறுதல் கூடாது. காலொடு காலைத்தேய்த்தலாகாது மனைவி பூப்புநாள் மூன்றிலும் அவளை நோக்குதல் ஆகாது. நடுப்பகலிலும் நள்ளிரவிலும், மாலையிலும், திருவாதிரையிலும், திருவோணத்திலும், அமாவாசை, பௌர்ணமியிலும், அஷ்டமியிலும், பிறந்தநாளிலும், கலவிசெய்தல் ஆகாது. அளக்கும் படியை மணைமேல் வைத்தலும், புதுவஸ்திரத்தைத் தலைக்கடையில் பிரித்தலும், தலைக்கடையில் கட்டிலிட்டுப் படுத்தலும் கூடா. தம்மை யறியாதாரெதிரில் நிற்றலொழிக. கல்லியாண பந்தலின்கீழ் துடைப்பம், செத்தை, பூவின் புறவிதழ்,பழைய கரிப்பானை, கிழிந்த கட்டில் ஆகிய இவைகளைப் பரப்பலாகாது (ஆசாரக்கோவை)

**அனுசீப்பூ**—இது ஜபான் தேசத்தில் வளர்கிற ஒருவித மரத்தின் பூவாக இருக்கிறது. இதில் ஒருவிதமான மணமுண்டு. இதன் உருசியும், வாசனையும் சோம்புக்குச் சரியாக இருக்கும். இதைச்சேர்த்து வாசனையெண்ணெய் செய்கிறார்கள். இதனை மருந்தாகவும், உணவாதிகளில் மணமுண்டாகவும் சேர்க்கிறார்கள்.

**அனுகற்பவிபூதி** — அனுகற்பவிபூதியாவது சித்திரைமாதத்தில் வனத்தில் பசுமந்தைகளில் சென்று உலர்ந்து கிடக்கும் கோமயங்களை ஒரிடத்திலே குவித்து உரலிலே போட்டு இடித்துத் தூளாக்கி வாமதேவ மந்திரத்தினால் கோஜலத்தை வார்த்துக் கலந்து அகோரமந்திரத்தினால் பிசைந்துருட்டித் தற்புருடமந்திரத்தினால் பதரை விரித்துவைத்துச் சிவாக்கினியில் தகனஞ் செய்து ஈசானமந்திரத்தினால் எடுத்துக் கொள்ளும் தன்மையுடையதாம். (சைவ சமயநெறி)

**அனுபந்தம்**—(ச) அதிகாரி, விடயம், சம்பந்தம், பிரயோசனம்.

**அனுமானவுறுப்பு**—(ரு) பிரதிஞ்ஞை, எது, உதாரணம், உபநயம், நிகமனம். (தருக்கசங்)

**அன்னக்குழிமண்டபம்**-மதுரையில் மேலைச் சித்திர வீதியிலுள்ளது; இது பூதமுண்ட திருவிளையாடல் விழா நடைபெறுதற்கு இடமாக இருக்கின்றது. இதிற் பல தெய்வ வடிவங்கள் உள்ளன. இதிலிருந்த குண்டோதர வடிவம் இக்காலத்துத் திருக்கல்லியாண மண்டபத்தில் வைக்கப்பெற்றுள்ளது. (திருவிளையாடல்)

**அன்னபேதி** — ஒருவகை மருந்து. இது அன்னத்தைப் பேதித்தலால் இப்பெயர் பெற்றது. இதன்வகை மாம்சபேதி, சொர்ணபேதி, அஸ்திபேதி, சகஸ்திர பேதி என்பன.

**அன்னப்பறவை**—இது நீர்வாழ் பறவையினத்தில் வாத்தின் உருவத்தைச் சேர்ந்தது. இது வாத்தைப் பார்க்கிலும் பெரிதாய் அழகாய் வெண்ணிறத்ததாய்மூக்கும் கால்களும் சிவந்திருக்கும். கருநிற அன்னமும் உண்டு. அன்னத்தினிறகுகள், உடம்போடொட்டி அடர்ந்திருக்கின்றன. வாத்தின் உடம்புபோல அன்னத்தின் உடலும் படகை யொத்திருக்கிறது. கழுத்து நீண்டு வளைந்திருக்கும். இதன் தலையில் கருநிறத்த கொண்டை யொன்றுண்டு. இது ஆற்றோரங்களில் கூடுகட்டி வசிக்கும். பெண்ணன்னம் பசுமைகலந்த வெண்மையான பல முட்டைகளிடும். இவை கூட்டங்கூட்டமாக வசிக்கும். இவை நீரிலிருக்கும் கிழங்கு முதலியவைகளையும் புழுப் பூச்சிகளையுந்தின்று ஜீவிக்கும். இதனிறகுகளைத்தலையணைக்கு உபயோகிப்பர். வெண்ணிற முடையதும் செவந்த நிறமுள்ளதும் ராஜஹம்ஸம். அழுக்கடைந்த மூக்குடையது மல்லிகமெனும் ஜாதி. கறுத்த மூக்குள்ளவை தார்த்தராஷ்டாங்கள் என்ப. இதனைப் பிரமதேவர் வாகனமென நூல்கள் கூறும். இச்சாதியில் ஒன்று நளனுக்குத் தமயந்தியிடம் தூதுசென்றது.

**அன்னம்**—எந்தக் காரணத்தால் அன்னத்தின் வழியாகப் பிரம்ம விஞ்ஞானம் உண்டாகின்றதோ அந்தக் காரணத்தால் அன்னத்தை நிந்திக்கக்கூடாது. பிரத்வி ஆகாசங்களிரண்டும் ஆபோஜ்யோதிகளிரண்டும், அன்னமும் பிராணமும்போல் ஒன்றிலொன்றிருத்தலால் அன்ன ஸ்வரூபமாகவும், ஒன்றுக்கொன்று ஆதாரமாதல்பற்றி அன்னாதமாகும் பிராணஸ்வரூபமாகவும் இருக்கின்றன. இவ்வாறு சரீரப்பிராணங்களிரண்டினையும் அன்னான்னாதங்களாகத் தெரிந்துகொள்பவன் அன்ன அன்னாதஸ்வரூபனாய்ப் புத்ராதி சந்தான நிறைவாலும் கவாச்வாதி பசு சம்பத்தாலும்,பிரம்ம தேஜசாலும், உலகத்திற் புகழாலும் மிக்க உயர்ந்தவனாகிறான். அன்னத்தைப் பல வகையிலும் சம்பாதித்தல் வேண்டும். அச்சம்பாதித்த அன்னத்தை அன்னார்த்திகளுக்குக் கொடுத்தல் வேண்டும். அவ்வாறு எந்த வயதுகளில் கொடுக்கிறானோ அந்த வயதுகளில் அது அவனுக்குதவுகிறது. இது பிரம்மதேவரின் ஸ்ருஷ்டி ஞானத்தை உண்டுபண்ணக்கூடிய எல்லா ஸாதனங்களுக்கும் பாவனங்களான எல்லா யஞ்ஞங்களுக்கும் சாதனமானது. இதன் பெருமை அன்னபூர்ணோபநிஷத்தும் தைத்திரீயோபநிஷத்தும் காண்க.

2. அன்னம் ஒன்றுக்கு நாழிகை (சு) அது பூர்வான்னம், பரான்னம், மத்தியான்னம், அபரான்னம், சாயான்னம் ஆக. (ரு)

**அன்னம் புசிக்கத்தகாத இடங்கள்**—மதம் பிடித்தவன், கோபி, நோயாளி, சிசுஹத்தி செய்தவன் இவர்கள்பார்த்த அன்னத்தினையும், மயிர், புழு விழுந்த அன்னத்தினையும்,

யாதவிடாய் ஆனவளுக்கு இட்டுமிகுந்த அன்னத்தினையும், காக்கை, நாய் இவைகள் தீண்டிய அன்னத்தினையும், பசுவினால் மோக்கப்பட்ட அன்னம், தருமசத்திரத்தில் அதிதிக்காகச்சமைத்தஅன்னம், சாமானிய ஜனங்களைக் கூட்டிப்போடும் அன்னம், வேசியின் அன்னம், பெரியோர்களுக்கு இஷ்டமாகாத அன்னம், திருடன், பாடகன் இவர்களின் அன்னம், வட்டியினால் பிழைக்கிறவன், தீக்ஷிதன், கிருபணன், காவலில் வைக்கப்பட்டவன், இவர்களின் அன்னம், பஞ்சமகாபாதகன், பேடி, குடிசைக்காரி, டம்பாச்சாரி இவர்களின் அன்னம், முரிந்த பால்சேர்ந்த அன்னம், சூத்திரனுக்கு இட்டு மிகுந்த அன்னம், வைத்தியன், வேட்டைக்காரன், கொடுமையுள்ளவன், எச்சிற்பொறுக்கி, அனுலோமசாதியான், அரசன் இவர்களின் அன்னம், பிரசவித்தவளுக்குச் சமைத்த அன்னம், பந்தியில் ஒருவன் எழுந்தபின் போடப்படும் அன்னம், தீட்டுக்காரன் அன்னம், தேவாராதனை செய்யாத அன்னம், கணவன் பிள்ளையின்றி ஸ்திரீயால் சமைக்கப்பட்ட அன்னம், சத்துருவின் அன்னம், பதிதன் அன்னம், தும்மினவன் எச்சிற்பட்ட அன்னம், கோளன், பொய்ச்சான்றுரைப்பான், எக்யபலனை விற்பான், நட்டுவன், தோணிக்காரன், செய்ந்நன்றி மறந்தவன், கருமான், செம்படவன், கூத்தாடி, நட்டான், பிரம்புவேலை செய்பவன், கத்தி முதலிய ஆயுதம் விற்பவன், வேட்டைக்காக நாய் வளர்ப்பவன், கள்விற்பவன், வண்ணான், துணிக்குச் சாயம் போடுகிறவன், காதகன் இவர்களது அன்னம், கள்ளபுருஷனை யுடையாளது அன்னம், இறந்த தீட்டுள்ளான், அன்னம், தன்மனதுக்குச் சகியாதவன் அன்னம், இவைகளைப் புசிக்கக்கூடாது. (மநு)

**அன்னபூரணி**—காசியிலமர்ந்த சிவசத்தி.

**அன்னவாகு**—திதி புத்திரனாகிய அசுரன்.

**அன்னி**—இவன் சோழநாட்டுப் பாபவிநாசம் ரெயில்வே ஸ்டேஷனுக் கருகிலுள்ள ஒரு கிராமத்திலிருந்த சிற்றரசன். இவன் இருந்தவூர் பிற்காலத்து இவன் பெயராலே அன்னிகுடியென்று வழங்கி வருகிறது. இவன் மயூரத்தின் மேற்கிலுள்ள திருவழுந்தூரிலிருந்த அகம் (௧௪௯) வேளிர் மரபினனாகிய திதியனுக்குரியதும் நந்திபுர விண்ணகர மென்னும் திருமால் கோயிற் கடுத்த குறுக்கையென்னு மூரிலுள்ளதும் அத்திதியனது காவன்மரமுமாகிய ஒரு புன்னை மரத்தை விரும்பி (அகம் ௩௬) வைப்பூரிலுள்ள எவ்வியென்பவன் அடக்கவும், அடங்காமல் (அகம் ௧௨௬) அந்தப் புன்னைமரம் நிரம்ப பூத்திருக்கும்பொழுது அதனை வெட்டிச் சாய்த்தனன். (அகம் ௧௪௫) அது காரணமாகத் திதியனுக்கும், அன்னிக்கும் போர் மூண்டது. அப்போரும் புன்னையை வெட்டி வீழ்த்திய குறுக்கையிலேயே போர் செய்தற்குரிய ஓரிடத்தில் நடந்தது. அப்போரில் திதியன் வெற்றிகொண்டு அன்னியைப்பற்றி அவன் கண்ணைப் பிடுங்கிவிட்டான். (அகம் ௧௪௯) அன்னியின் புதல்வனாகிய மிஞிலி யென்பவன் கடுஞ்சினமடைந்து தனக்குப் படைத்துணை பெருகுமளவும் தான் பரிகலத்துண்ணாமையும் வெளிய உடைகளை உடுக்காமலும், சிலகாலமிருந்தான். (அகம் ௨௬௨) பின்பு வெற்றி மிக்க குறும்பியனென்பவனால் திதயனை மரபோடழியக் கொல்லுவித்து மிக்க மகிழ்ச்சி யுடையவனாகித் திருவழுந்தூரிற் பெரிய ஆரவாரத்தோடு சென்று வந்தானென்பதாம். குறுக்கை யென்பது கும்பகோணம் ரெயில்வே ஸ்டேஷனுக்குத் தென்பால் இரண்டுமைல் தூரத்திலுள்ளது. வைப்பூர் நாகப்பட்டினந் தாலுக்காவிலுள்ள தோரூர். அன்னியின் கதையைக்கூறும் நற்றிணை (௧௮௦) ம் பாட்டைப் பாடினோர் பெயர் தெரியவில்லை. (நற்றிணை)

**அன்மொழித்தொகை**—இது குறிப்பு மொழிகளிலொன்று. வேற்றுமைத் தொகை முதலிய ஐவகைத் தொகையின் புறத்துப் பயனிலைக் கல்லாதமொழி தொக்கு நிற்பது. (நன்னூல்.)

**அன்வய இலக்கணம்** — (௫) விசேடணம், விசேடியம், கருத்தா, கருமம், கிரியை.

**அன்றகன்**—தத்தாத்திரேயரிடம் தத்வ உபதேசம் பெற்றவன்.

**அனுதம்**-விச்சுவவுருவன் சிரத்திலொன்று. தித்திரி பக்ஷியுருக்கொண்டது.

**அஜைகபாதன்**—இவன் சிவகணன், இவனுக்கு நான்குவாய், ஆயிரம்புஜம், காளவதனம், சங்குகர்ணம், நூறுகால்களுமுடையவன். ஒரு காலத்துச் சிவபெருமானுக்கு வாகனமானவன்.

**அஷ்டகணநாதர்**—நந்தி, மகாகாளர், பிருங்கி, கணபதி, இடபம், கந்தர், பார்வதி, சண்டர்.

**அஷ்டகணபதிகள்**—ஆதிகணபதி, மகாகணபதி, நடனகணபதி, சத்திகணபதி, வாலைகணபதி, உச்சிட்டகணபதி, உக்ரகணபதி, மூலகணபதி. (வைத்யம்).

**அஷ்டகணம்**—செய்யுட்குரிய வெண்கணம் அவை, ஆகாயம், இயமானன், சூரியன், தீ, நிலம், நீர், மதி, வாயு.

**அஷ்டகணிதம்**—கனமூலம், கனம, குணனம், சங்கலிதம், பாகாரம் வருக்கமூலம், வருக்கம், விபகலிதம்.

**அஷ்டகர்மம்** — இது வசியம், மோகனம், உச்சாடனம், தம்பனம், பேதனம், ஆகருஷ்ணம், வித்வேஷணம், மாரணம் என எட்டு விதமாம். அவற்றுள் **வசியம்** பலவித மூலிகைகள், கருக்கள், சேர்ந்தமையினல் வசமாக்கல். அது லோகவசியம், ராஜவசியம், ஸ்திரீவசியம், புருஷவசியம், மிருகவசியம், பூதபிரேதவேதாளவசியம் என்பன. இவை மந்திரதந்திரங்களால் வேறுபடும். **மோகனம்** மனத்தைக் கவர்தல். இதுவும் அவ்வாறே கருக்கள் மூலிகைகள் சேர்ந்தமையினல் தேவர்களையும், பூதபிரேத பைசாசங்களையும், மனுஷரையும் மோகிப்பச் செய்தல். **உச்சாடனம்.** துரத்தல். இது தன் வசப்பட்ட தேவதைகளைப் பகைவர்மீது துன்பப்படுத்த ஏவுதல். **தம்பனம்** பகைவனையும், தானெண்ணிய பொருள்களையும், இருந்த நிலைபெயராது தம்பிக்கச் செய்தல். அது ஜலஸ்தம்பம், அக்கினிஸ்தம்பம், வாயுஸ்தம்பம், வாக்குஸ்தம்பம் முதலிய பலவற்றைச் செய்யும். **பேதனம்** நட்புக்கொண்ட இருவரைப்பிரித்தல். **ஆகருஷணம்** தான்நினைத்தபொருள் எவ்விடத்து இருக்கினும், காண்போர் முன்வரச் செய்வது. **வித்வேஷணம்** இது ஒருவர்க் கொருவரை விரோதிகளாக்குங் கருமம். **மாரணம்**, தான் எண்ணினவனுக்கு மரணத்தை உண்டாக்கல்.

**அஷ்டகல்யாணி**—கால், முகம், தலை, வால், மார்பு, இவை வெளுத்தகுதிரை (அசுவசா.)

**அஷ்டகன்**—1. யயாதிவம்சத் தரசன்.
2. விசுவாமித்திரன் குமரன்.

**அஷ்டகாசிரார்த்தம்**—மார்க்கசிரம், புஷ்யம், மாசம, எனு மாதங்களில் அபரபக்ஷத்தில், சப்தமி, அஷ்டமி, நவமி, எனும் (ங) நாட்களிலும் செய்யத்தக்க காமிய பலத்தைத்தரும் (கூ) நாளைய சிரார்த்தம். இது ஷிலாஷ்டகம் எனவும்படும்.

**அஷ்டகாதியர்**—யயாதியின் குமரியின் வயிற்றுதித்தவர். அஷ்டகன், பிரதர்த்தன், வசுமன், அவுசி, நாஞனசிபி முதலியோர்.

**அஷ்டகீடபேதம்**—இவை (கூஎ) வகைப்படும். அவை, ஒணன் (ச), தவளை (அ), காட்டீ (கூ), பல்லி (ஓ), காட்டுக் கொசுகு (ச), குளவி (கூ), மலை எறும்பு (கூ), சிலந்தி (உஅ)

**அஷ்டதலபர்வதம்**—இமயம், மந்தரம், கைலாசம், விந்தியம், நிடதம், ஏமகூடம் நீலம், கந்தமாதனம். (பிங்கலம்.)

**அஷ்டதுற்றம்**—அந்தராயம், ஆயு, கோத்திரம், ஞானவரணியம், தரிசனவரணியம், நாமம், மோகநீயம், வேதநீயம்.

**அஷ்டதுன்மம்**—சூலைகுன்மம், வாதகுன்மம், பித்தகுன்மம், சிலேத்துமகுன்மம், எரிகுன்மம், சத்திகுன்மம், வன்னிகுன்மம், சலிகுன்மம், வாதபித்தகுன்மம், வாதசிலேத்மகுன்மம், பித்த சிலேத்மகுன்மம், திரிதோஷகுன்மம், ரத்தகுன்மம், வாதபித்த சிலேத்மகுன்மத்துடன் எட்டாக இவ்வாறுங்கூறுவர். (ஜீவரக்ஷாமிர்தம்.)

**அஷ்டசத்திகள்**—சயை, விசையை, சயந்தி, அபராசிதை, சித்தை, இரத்தை, அலம்புசை, உற்பலை (எ-ம்.) வாமை, சேஷ்டை, ரௌத்திரி, காளி, கலவிகரிணி, பலவிகரிணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி. (எ-ம்) கூறுவர்.

**அஷ்டதயாவிருத்தி**—பிறரையந்தீர்த்தல், தீமைக்கஞ்சல், பிறர்துயர்க்கிரங்கல், நன்மைகடைப்பிடித்தல், பிறர்கருமத்திற் குடன்படல், பிறர்கருமமுடிக்க விரைதல், பிறர்க்குப் பொருள்வரவையுவத்தல், பிறர்செல்வம் பொறுத்தல்.

**அஷ்டதனம்**—அழகு, குணம், ஆயுள், குலம், சம்பத்து, வித்தை, விவேகம், தனம்.

**அஷ்டதாது** — பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தரா, வங்கம், துத்தநாகம்.

**அஷ்டதானபரீக்ஷை**—இதனை அஷ்டவிதபரீக்ஷையிற் காண்க.

**அஷ்டதிக்கஜம்**—அட்டதிக்கஜம் காண்க.

**அஷ்டதிக்கு**—கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேல், மேற்கு, வடமேல, வடக்கு, வடகீழ்.

**அஷ்டதிக்குப்பாலகர்**—அட்டதிக்குப் பாலகர் காண்க.

அஷ்டதேவகணங்கள்—ஆதித்யர், வசுக்கள், ருத்ரர், விச்வதேவர், சாத்யர், மருத்துக்கள், பிருகு, அங்கிரர்.

அஷ்டபந்தனம்—சுக்கான்கல், கொம்பரக்கு, சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன்மெழுகு, எருமைவெண்ணெய்,குங்கிலியம்,நற்காவி.

அஷ்டபரிசம்—ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல்.

அஷ்டபாலகர்தறி — இடி, புகை, சீயம், ஞாளி, இடபம், கழுதை, யானை, காகம்.

அஷ்டபுஷ்பங்கள்—அஹிம்சை, இந்திரிய அடக்கம், க்ஷாந்திபுஷ்பம், தயாபுஷ்பம், ஞானபுஷ்பம், தவபுஷ்பம்,சத்தியபுஷ்பம், பாவபுஷ்பம் ஆக-(அ)

அஷ்டபோகம்—பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

2. விக்கிரயம், தானம், அடகு, ஜலம், தரு, பாஷாணம், நிதி நிக்ஷேபம்

3. அட்சிணி, ஆகாமி, ஜலாமிருதம், பாஷாணம், நிதி, நிக்ஷேபம், சித்தி, சாத்தியம்.

அஷ்டப்பிரமாணம்—அளவை காண்க.

அஷ்டமகாரோகங்கள்—வாதரோகம், கல்லடைப்புரோகம், குஷ்டரோகம், மேகரோகம், மகோதரரோகம், பகந்தரரோகம், மூலரோகம், கிரகணிரோகம். இவை யெட்டும் எளிதில் வசமாகா. (ஜீவ).

அஷ்டமாசிக்கூறு—நக்ஷத்திரம் காண்க.

அஷ்டமாசித்தி—அட்டசித்தி காண்க.

அஷ்டமாத்ருகைகள் —அந்தகாசுரவதத்தின் பொருட்டுச் சிவபிரான் முகத்திலுண்டானவர்கள்இவர்கள் அஷ்டமூர்த்திகளிடமிருந்துண்டானவர்கள். காமம், யோகீச்வரி, குரோதம் மாகேச்வரி, மதம் பிரம்மாணி, லோபம்வைஷ்ணவி, மோகம் கௌமாரி, மாச்சர்யம் இந்திராணி, பிசுநம்,யமதண்டி, அசூயை, வாராகி. (வராக-புராணம்.)

அஷ்டமாநாகம்—அட்டமாநாகர் காண்க.

அஷ்டமாந்தம் — செரியாமாந்தம், போர் மாந்தம், மலடிமாந்தம், பெருமாந்தம், வாதமாந்தம், சுழிமாந்தம், வலிமாந்தம், கணமாந்தம் (வைத்தியம்.)

அஷ்டமூலம்—சுக்கு, அரத்தை, செவ்வியம், சித்திரமூலம், கண்டுபரங்கி, கோரைக் கிழங்கு, நன்னாரிவேர், காஞ்சொறிவேர்.

அஷ்டலக்ஷ்மி—தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, வித்யாலக்ஷ்மி. இவர்களுக்கு முறையே உருவங்கள், தனலக்ஷ்மி, சதுர்ப்புஜம் உள்ளவளாய் இரண்டு கரங்களில் தாமரைகொண்டு ஒரு கரத்திற் தனப்பெட்டியும், மற்றொரு கரம் அபயமுள்ளவளாய் விளங்குவள். தான்ய லக்ஷ்மி, நான்கு புஜங்கள் உள்ளவளாய் இரண்டு கரங்களில் தான்யக்கதிர் வந்திக் கொண்டும் மற்றிரண்டு கரங்கள் வரதம், அபயம் கொண்டிருப்பள். தைர்யலக்ஷ்மி, நான்கு கரங்களிலும் முறையே, வேல், வில், பலகை, அம்பு தாங்கியிருப்பள். விஜயலக்ஷ்மி, மூன்று கரங்களில் தாமரை கொண்டு ஒரு கரத்தை லம்பிதம் கொண்டிருப்பள். வீரலக்ஷ்மி, இரண்டு கைகளில் தாமரைகள் மற்றிரண்டு கரங்களில் வாள், பலகை கொண்டிருப்பள். சந்தான லக்ஷ்மி, இரண்டு கைகளில் தாமரைகள் மற்றிரண்டு கரங்களில் குழந்தையை ஏந்தியிருப்பள். கஜலக்ஷ்மி, இரண்டு கரங்களில் தாமரைகளேந்தி மற்றிரண்டு கரங்களை அபயவரதமாகக் கொண்டிருப்பள். இவள் ஏந்தி நிற்கும் தாமரைகளை இரு புறங்களிலும் இரண்டு யானைகள் துதிக்கையால் அபிஷேகிப்பது போன்று விளங்குவள். வித்யாலக்ஷ்மி. இரண்டு கரங்களில் தாமரைகள் ஒருகரம் அபயம், மற்றொருகரம் புத்தகம் கொண்டிருப்பள். இவற்றுள் தைர்யலக்ஷ்மி நீக்கி யோக லக்ஷ்மி கூறுவாருமுளர். அவள் இரண்டு கரங்களில் தாமரைகொண்டு ஒருகரம் சின் முத்திரையாகவும், மற்றொருகரம் அபயம் கொண்டும் விளங்குவள்.

அஷ்டலோஹி — கம்மாளன் எழுலோகமாகிய பொன் முதலிய வேலை செய்வோன்.

அஷ்டவக்ரமுனிவர்—இவர் வதான்ய முனிவர் குமரியாகிய பிரபா என்பவளை மணக்க வதான்யரைக்கேட்க, வதான்யர் வடக்கில் கந்தமாதன முதலிய கடந்து திசா என்பவளைக் கண்டு அவள் கூறுவதை எனக்கறிவித்து மணந்து கொள்க எனக் கேட்டு வடக்கே சென்று உத்தரதிக்கில் அத்திக்கின் தலைவியாகிய திசாவைக்கண்டு அவள் இவரைப் பலவிதத்தில் மயக்கியு மயங்காது அவள் ஸ்திரீகள் காமத்திலதியாசையுடையாரென்று அவரைப் புகழ்ந்து அநுப்பவந்து வதான்யருக்கு அறிவித்துப் பிரபாவை மணந்து கொண்டவர். (சிவமகாபுராணம்).

**அஷ்டவக்கிரன்**—இது ஒரு பாம்பு.

**அஷ்டவசுக்கள்**—அட்டவசுக்களைக் காண்க.

**அஷ்டவயிரவர்**—காளியைக் காண்க. இவ்வயிரவராவார், சுதந்திரவயிரவன், சுவேச்சாவயிரவன், உலோகவயிரவன், காலவயிரவன், உக்ரவயிரவன், பிரச்சையாவயிரவன், நின்மாணவயிரவன், பூஷணவயிரவன். மற்றொருவகை, சங்காரகாலவயிரவன், அசிதாங்கவயிரவன், குரோதவயிரவன், சண்டவயிரவன், உன்மத்தவயிரவன், கபாலவயிரவன், விபீஷணவயிரவன், மார்த்தாண்ட வயிரவன் எனவுங் கூறுவர்.

**அஷ்டவர்க்கர்**—1. சீரகம், கருஞ்சீரகம், சுக்கு, மிளகு, திப்பிலி, இந்துப்பு, பெருங்காயம், ஓமம்.

2. சோதிடத்தில் ஒருவகை.

**அஷ்டவிதபரீக்ஷை** — இது நோயாளிகளை நோயின் நிதானமறிய எட்டு வகையாகச் சோதிப்பது. (க) நாடிகளைச் சோதித்தறிதல், (உ) பரிசித்தறிதல் (ங) ரூபமறிதல், (ச) சத்தமறிதல், (ரு) நேத்திரக்குறி, (சு) மூத்திரக்குறி, (எ) நாவின்குறி, (அ) மலக்குறி அறிதல். இச்சோதனைகளால் இன்ன நோய் என்று அயுள் வேதியர் நிதானித்தறிவது.

**அஷ்டவிவாகம்**—அட்டமணம் காண்க.

**அஷ்டவூறு**—சருச்சரை, சீர்மை, தண்மை, திண்மை, நொய்மை, மென்மை, வன்மை, வெம்மை.

**அஷ்டாங்கயோகம்**—அங்கயோகம் காண்க.

**அஷ்டாதசதுணம்** :— பசி, தாகம், பயம் கோபம், சந்தோஷம், விருப்பம், நினைவு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், துன்பம், செயலின்மை. (ஆக-கஅ)

**அஷ்டாதசமூலம்**—கொடிவேலி, எருக்கு, நொச்சி, முருங்கை, மாவிலிங்கம், சங்கங்குப்பி, தழுதாழை, குமிழ், பாதிரி, வில்வம், கண்டங்கத்திரி, கறிமுள்ளி, சிற்றுமல்லி, பேராமல்லி, வேர்க்கொம்பு, கரந்தை, தூதுளை, நன்னாரி

**அஷ்டாதசரகஸ்யம்**—இது முமூக்ஷுப்படி, தத்வத்ரயம், அர்த்தபஞ்சகம், ஸ்ரீ வசநபூஷணம், அர்ச்சராதி, பிரமேயசேகரம், பிரபன்னபரித்திராணம், சாரசங்கிரகம், சம்ஸாரசாம்ராஜ்யம், நவரத்னமாலை, நவவித சம்பந்தம், யாத்ருச்சிகப்படி, பாந்தபடி, ஸ்ரீயப்பதிப்படி, தத்வசேகரம், தனித்வயம், தனிச்சரமம், தனிப்பிரணவம் முதலிய விசிட்டாத்வைத சித்தாந்தத்தைப் பரக்கக் கூறும் வைணவ நூல்கள்.

**அஷ்டாவதானம்**—ஒரே சமயத்தில் எட்டுக் காரியங்களிற் கவனஞ்செலுத்துகை. இலாடசங்கிலிசேர்ப்பு, ஒருவரிருவர் வினவிற் குத்தரம், சொக்கட்டான், முதுகிலிட்ட பரல் எண்ணல், சதுரங்கம், புதுக்கவிதை கூறல், கண்ட பத்திரிகை,கணிதம் கூறல், குதிரையடி கூறல் முதலிய.

**அஷ்டாவதானம் வீராசாமிசெட்டியார்** — இவர், சென்னை சூளையிலிருந்த வைசிய குலத்தவர். இலக்கண இலக்கியங்களில் வல்லவர். சென்னையில் பலர்க்கு இலக்கணப் பயிற்சி செய்வித்தவர். தமிழில் விநோதரஸமஞ்சரி யெனும் நூல் எழுதியவர். இவர் சற்றேறக்குறைய நூறு வருஷங்களுக்கு முன்னிருந்தவர்.

**அஷ்டைசுவரியம்** — இராசாங்கம், மக்கள் சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

**அஷ்டோத்தரசதோபநிடதம்** — உபநிடதம் காண்க.

**அஸ்தமகன்**—1. (சூ) கல்மாஷபாதன் குமரன். தாய் மதயந்தி. இவன் குமரன் மூலகன்.

**அஸ்நன்**—சுகோத்ரன் குமரன். இவனுக்கு அத்தியெனவும் பெயர்.

**அஸ்தி**—1. அந்தகாசுரனுக்கு மைந்தன்.

2. வசுதேவருக்கு ரோசனையிடம் உதித்த குமரன்.

3. சராசந்தன் குமரி. கம்சன்தேவி.

4. சுகோத்ரன் குமரன். இவனே அத்தினபுர மாண்டவன். இவன் குமரர் அசமீடன் முதலியோர்.

**அஸ்திகர்**—சலத்கார முனிவருக்கு நாக கன்னிகையாகிய சலத்காரையிடம் பிறந்த முனிவர். இவர் ஜனமேசயனை வேண்டிச் சர்ப்பயாகத்தை நிறுத்தினவர்.(தேவி-பா).

**அஸ்திசிராவம்** — (எலும்புருக்கி) ரஸதாது கொதிப்பினால் ரத்தஸ்வபாவம் கெட்டதனால் அல்குல் மார்க்கமாக இரத்தம் வெண்மையடைந்தும், மிகச் செவந்தும் துர்க்கந்தமடைந்தும் எலும்புகளின் இடையிலுள்ள மச்சைகளை யுருக்கிச் சூலையுடன் வெளிப்படின் அஸ்திஸ்ராவமென்பர்

**அஸ்திநபுரம்** — அத்தினபுரங் காண்க.

**அஸ்திபத்ரன்**—கத்ரு தநயன்.

**அஸ்திரஇருதயம்**—ஒருமந்திர வித்தை. இது சத்ருநாசத்தையும், கீர்த்தியையும் தரவல்லது. இது சிவமூர்த்தியிடம் சுவாயாம்புமனுவும், சுவாயாம்புவிடம் வசிட்டரும், அவரிடம் சித்ராயுதனெனும்காந்தருவனும், அவனிடம் அவனது தௌகித்ரியாகிய மனோரமையும், அவளிடம் சுவரோசியும் பெற வந்தது.

**அஸ்திரங்கள்** — தண்டசக்கரம், தருமசக்கரம், காலசக்கரம், விஷ்ணுசக்கரம, ஐந்திராஸ்திரம், சைவாஸ்திரம், வச்சிராஸ்திரம், சூலம், பிரமசிரோஸ்திரம், ஐஷீகாஸ்திரம், பிரமாஸ்திரம், மோதகி, சிகரி, தர்மபாசம், காலபாசம், வருணாஸ்திரம், சுஷ்கம், ஆர்த்திரம், பைநாகாஸ்திரம், நாராயணாஸ்திரம், ஆக்னேயாஸ்திரம், வாயவியாஸ்திரம், அயசிரோஸ்திரம், கிரௌஞ்சாஸ்திரம், விஷ்ணுசக்தி, ருத்திரசக்தி, கங்காளம், காபாலம், கங்கணம், வைத்தியாதராஸ்திரம், காந்தருவாஸ்திரம், பிரஸ்வாபனாஸ்திரம், சௌராஸ்திரம், தர்ப்பணம், கோஷணம், சந்தர்ப்பணம், விலாபனம், மதனம், மோகனாஸ்திரம், தமசம், சௌமனம், சம்வர்த்தம், மௌசலம், சத்தியாஸ்திரம், மாயாதராஸ்திரம், தேஜப்பிரபாஸ்திரம், சௌம்யாஸ்திரம், துவஷ்டாஸ்திரம், விதேஷ~, மானவாஸ்திரம், சத்தியவந்தம், சத்தியகீர்த்தி, திரஷ்டம், ரபஸம், பிரதிகாரதரம், பிராமுகம், அவாங்முகம், வட்சாக்ஷம், விஷமம், திருடநாபம், சுநாபகம், சோதிஷம், கிருசனம், நைராசியம், விமலம், யோகந்தரம், அரித்திரம், சார்ச்சி, சர்மாலி, திருதிர்மாலி, விரத்திமான், ருசிகரம், பிதருசௌமனசம், விதூனம், மகரம், கரவீகரம், தனம், தான்யம், காமரூபம், காமருசி, மோகம், ஆவரணம், ஜிரும்பகம், சர்வநாபம், சந்தானம்; வாணம் என்பன. (அயோ-ம்.)

**அஸ்திரசஸ்திரங்கள்**—தண்டசக்கிரம், தர்மசக்கிரம், காலசக்கிரம், விஷ்ணுசக்கிரம், இந்திராஸ்திரம், வஜ்ராஸ்திரம், மஹாசூலம், பிரம்மசிரஸ், ஐஷீகம், பிரம்மாஸ்திரம், மோதகி, சிகரி, தர்மபாசம், காலபாசம், வருணபாசம், வருணாஸ்திரம், சுஷ்காசநி, ஆர்த்திராசநி, பைநாகாஸ்திரம், நாராயணாஸ்திரம் ஆக்னேயாஸ்திரம், சிகரம், வாயவ்யம், ஹயசிரஸ், கிரௌஞ்சம், விஷ்ணுசக்தி, ருத்ரசக்தி, கங்காளம், கோரமூஸலம், காபாலம், கங்கணம், நந்தனம், காந்தர்வம், மானவம், பிரஸ்வாபனம், பிரசமனம், சௌரம், தர்ப்பணம், சோஷணம், சந்தாபனம், விலாபனம், மதனம், கந்தர்ப்பதயிதம், பைசாசம், மோஹனம், தாமஸம், சௌமனம், சம்வர்த்தம், மௌஸலம், ஸத்யம், மாயாதரம், தேஜஸ்ப்ரபம், சிசிரம், சுதாமனம், சிதேஷூ இந்த அஸ்திரங்கள் பிருசாச்வ புத்ரர்கள். இவை விச்வாமித்திரரால் இராமருக்குக் கொடுக்கப்பட்டவை. (இரா-பால)

**அஸ்திரபாலர்**· நான்குமுகம் நானகு கைகள், பிரகாசிக்கின்ற அக்நிப் பிரபையின் ஸ்வரூபம், வல இடக்கைகளில் சத்தி, சூலம், அபயம், வரதம் சடாமகுடத்தில் மூன்றும் பிறையணிந்தவரா யிருப்பர்.

**அஸ்வஇருதயம்**—இது குதிரைகளின் மனநோக்க மறியும் வித்தை. இதில் நளனும், நகுலனும் வல்லவர்கள். இவ் வித்தையால் இருதுபர்னனுக்கு நளன் தேர் செலுத்தினன். அசுவ இருதயம்காண்க.

**அக்ஷத்ரிதீயை**—ஒரு விரதம். இது சித்திரைமீ சுக்கிலபக்ஷத்திரிதியை முதல் வைகாசிமீ திருதியை வரையில் பார்வதிபிராட்டியை ஆவாகித்துப் பூசிப்பது.

**அக்ஷபாதமதம்**—இது பாதத்தில் கண்ணுடைய கௌதமமுனிவரால் கற்பிக்கப்பட்ட மதம். இம்மதசித்தாந்தம். ஆத்மா சரீரேந்திரியாதிகளுக்குப் பின்னன் எனவும், உடல்கள்தோறும் ஆன்மா வேறுவேறு, (எ-ம்.) ஆத்மா ஒரு சரீரத்தைவிட்டு மற்றொரு சரீரத்திற்குப் பாய்வன், (எ-ம்.) பரமாத்மா ஒருவனே, (எ-ம்.) தன்னைத்தான் அறிதலே சுகம், (எ-ம்.) கூறும். இம்மதத்தவருக்குப் பிரத்யக்ஷம், அநுமானம், உபமானம், சப்தம் எனும் நான்கும் பிரமாணங்கள். பிரமேயங்கள் (கஉ)ஆத்மா, சரீரம், இந்திரியம், அர்த்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோஷம், பிரேத்யம், பாவம், பலதுக்கம், அபவர்க்கம் என்பனவாம். ஆக பதார்த்தங்கள் (கஉ) ஆதலால் பதார்த்த தத்வஞானமே மோக்ஷத்திற்கு முக்கிய சாதனம் என்பர்.

**அக்ஷபாதர்** — கௌதமர், பாதத்தில் கண்ணுள்ளவர்.

**அக்ஷமாலை** — 1. வசிஷ்டரால் விவாகஞ்செய்து கொள்ளப்பட்ட தாழ்ந்த ஜாதிப்பெண்.

2. வசிஷ்ட பத்னி. (அருந்ததி) பாரதம் (ஆதி - பர்.)

**அக்ஷயகுமாரன்** — (அக்ஷன்) இராவணன் குமாரர்களிலொருவன். அநுமனாற் கொல்லப்பட்டவன்.

**அக்ஷயதேவர்**—ஒரு சிவனடியவர்.

**அக்ஷயபாத்திரம்** — சூரியனிடமிருந்து தர்மன் பெற்ற வற்ருத அன்னம் அளிக்கும் பாத்திரம்.

**அக்ஷயவடம்**—காசிக்கருகில் கௌதமபுத்தர் நிஷ்டைகூடியிருந்த ஆலமரம்.

**அக்ஷராரம்பம்** — அக்ஷராரம்பம்பண்ணுமிடத்து உத்தராயணத்து மாசிமாதமொழிய (ச) வயது சென்று (ரு) வயதிலே பூருவ பக்கத்துப் பகற்காலத்திலே பஞ்சாங்க சுத்தியுண்டாகத் திருவாதிரை, திருவோணம், இரேவதி, அனுஷம், புநர்பூசம், அத்தம், சித்திரை, சோதி, அசுவதி இந் நாட்களிலே ஸ்திரராசியுதயமாக எ, அ, இவ்விடங்கள் சுத்திபெற அக்ஷராரம்பம் பண்ணுவது. சிலர் (ச)ம் இடஞ்சுத்தியாக வேண்டுமென்பர். அக்ஷராரம்பத்துக்குத் திருவாதிரை, திருவோணம், அநுஷம், புநர்பூசம், பூசம், அவிட்டம், அத்தம், சோதி, மிருகசீரிஷம், அசுவதி, சித்திரை, சதயம் இவை உத்தமம். இரேவதி, உரோகிணி, உத்திரத்திரயம் இவை மத்திமம். ஸ்திரராசி யுதயமும், பக்கங்களில் திரயோதசி, சத்தமி இவையொழிந்த சுபதிதிகளும் நன்ரும் (விதானமாலை.)

**அக்ஷரேகைகள்**—நிரக்ஷரேகைக்கு வடக்கிலுந் தெற்கிலும் துருவங்கள்வரையிலும், ஒரு டிகிரி தூரத்திற்கு ஒன்றுவீதம் பூமியுருண்டையைச் சுற்றி வரையப்பட்ட கோடுகள்.

**அக்ஷன்**—அக்ஷய குமாரனுக்கு ஒரு பெயர். இவனுக்கு அக்ஷயன் என்றும் பெயர்.

**அக்ஷஹிருதயம்**—த்யூதசாஸ்திரம், ருதுபர்ண நளசம்வாதத்தில் பெற்றது. (பாரதம் வன - பர்.)

**அக்ஷித்திரயம்** — விசாலாக்ஷி, காமாக்ஷி, மீனாக்ஷி.

**அக்ஷீணன்**—விஸ்வாமித்ரபுத்ரன். (பாரதம் அநு - பர்.)

**அக்ஷோப்யமுநி**—வித்யாரண்யருடன் வாதிட்டு வேதாந்ததேசிகர் எழுதியனுப்பிய நியாயத்தாற் களிப்படைந்தவன்.

## ஆ

**ஆஅய் அண்டிரன்**—ஆயைக்காண்க.

**ஆகண்டிதன்**—துரியோதனன் தம்பி.

**ஆகமம்**—சிவ விஷ்ணுக்களால் இருஷிகள் பொருட்டு அருளிச்செய்யப்பட்ட நூல்கள். அவற்றுட் சிவாசமம் இருபத்தெட்டு வகை. அவை சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களிலிருந்தும் தோன்றின. அவை, சிவபேதம், ருத்ரபேதம் என இருவகைப்படும். அவற்றுள் முதலாவது காமிகாகமம், இது பரார்த்த தொகையுள்ளது. இதனைக் (கேட்டோர்) பிரணவர், திரகலர், ஹரர், இதன் உட் பிரிவு, வக்த்ராரம், பைரவோத்தரம், நாசிங்கம். (உ - வது) யோகசம், இது லக்ஷசங்கியை (கேட்டோர்) சுதர் முதலியோர். (உ-பி) வீணசிகோத்தரம், தாரம், ஆத்மயோகம் முதலிய. (ந-வது) சிந்தியம், (கே-ர்) சுதீப்தர் முதலியோர். (உ-பி) சுசிந்தியம் முதலிய மூன்று. (ச-வது) காரணம் (கேட்டோர்) காரணர் முதலியோர் (உ-பி) பாவநம் முதலிய ஆறு. ஐந்தாவது அசிதம், (கே - ர்) சுசிவர் முதலியோர். (உ - பி) பிரபூத முதலிய நான்கு. ஆருவது தீப்தம். (கே - ர்) ஈசர் முதலிய மூவர். (உ-பி) அமேயம் முதலிய ஒன்பது. எழாவது சூக்ஷமம், (கே-ர்) சூக்ஷமர் முதலிய மூவர். எட்டாவது சஹச்சரம், (கே-ர்)காலர் முதலியமூவர். (உ-பி) அதீத முதலிய பத்து. ஒன்பதாவது அம்சுமான், (கே-ர்) அம்பு முதலிய மூவர், (உ - பி) வித்யாபுராண முதலிய பன்னிரண்டு. பத்தாவது சுப்ரபேதம், (கே-ர்) தசேசர் முதலிய மூவர். இதுவரையிற் கூறிய ஆகமங்கள் சிவபேதமாம். இனிக் கூறுவன ருத்திரபேதம். பதினொராவது விஜயம், (கே-ர்) அநாதிருத்ரர் முதலிய இருவர், (உ - பி) விஜயம் முதலிய எட்டு. பன்னிரண்டாவது நிச்வாசம், (கே - ர்) தாசார்ணர் முதலிய இருவர், (உ-பி) நிச்வாச முதலிய எட்டு. பதின்மூன்ருவது ஸ்வயம்பூ, (கே-ர்) நிதநேசர் முதலிய இருவர், (உ-பி) பிரசாபதி பத்மம் முதலி...

மூன்று. பதினான்காவது ஆக்நேயம், (கே-ர்) வியோமர் முதலிய இருவர். பதினைந்தாவதுவீரம், (கே-ர்) தேசசுமுதலிய இருவர், (உ-பி) பிரஸ்தாரம் முதலிய பதின்மூன்று. பதினாறாவது ரௌரவம், (கே-ர்) பிராம்மணேசர் முதலிய இருவர், (உ-பி) காலக்நம் முதலிய ஆறு. பதினேழாவது மகுடம், (கே-ர்) சிவர் முதலிய இருவர். (உ-பி) மகுடம்முதலிய இரண்டு. பதினெட்டாவது விமலம், (கே-ர்) சர்வாத்மகர் முதலிய இருவர். (உ-பி) அநந்தம் முதலிய பதினாறு. பத்தொன்பதாவது சந்திரஞானம், (கே-ர்) அநந்தர் முதலிய இருவர். (உ-பி) ஸ்திரம் முதலிய பதினொன்கு. இருபதாவது முகபிம்பம் (கே-ர்) பிலசாந்தர்முதலிய இருவர். (உ-பி) சதுர்முகம் முதலிய பதினைந்து. இருபத்தொன்றாவது ப்ரோத்கீதம், (கே-ர்) சூலி முதலிய இருவர். (உ-பி) கவசம் முதலிய பதினாறு. இருபத்திரண்டாவது லளிதம், (கே-ர்) ஆலயேசர் முதலிய இருவர், (உ-பி) லளிதம் முதலிய மூன்று, இருபத்துமூன்றாவது சித்தம், (கே-ர்)பிந்துமுதலிய இருவர், (உ-பி) சாரோத்தரமுதலிய நான்கு இருபத்துநான்காவது சந்தானம், (கே-ர்) சிவநிஷ்டர் முதலிய இருவர். (உ-பி) இலிங்காத்யக்ஷம் முதலிய எழு. இருபத்தைந்தாவது சர்வோத்தமம், (கே-ர்)சோமர் முதலிய இருவர். (உ-பி) சிவதர்மோத்தரம் முதலிய ஐந்து. இருபத்தாறுவது பாரமேச்வரம், (கே-ர்) ஸ்ரீதேவி முதலிய இருவர். (உ-பி) மதங்கம் முதலிய எழு. இருபத்தேழாவது கிரணம், (கே-ர்) தேவவிபவர் முதலிய இருவர். (உ-பி) காருடம் முதலிய ஒன்பது. இருபத்தெட்டாவது வாதுளம், (கே-ர்) சிவர் முதலிய இருவர். (உ-பி) வாதுளம் முதலிய பன்னிரண்டு (ஸ்ரீ-காமிகம், சித்தாந்த சாராவளி). இனி வைஷ்ணவாகமங்கள், வைகாநசம். பாஞ்சராத்ரம்என இருவிதப்படும். அவற்றினை அப்பெயர் கூறியவிடத்துக் காண்க.

**ஆகமங்களில் சிவபேதம் (௩0) கேட்டபரம்பரைகள்**—சதாசிவர் பிரணவருக்கும் அங்கிருந்து பரம்பரையாக, திரிகலர், சுரர் சுதர், பஸ்மர், விபு, சுதீப்தர், கோபதி, அம்பிகை, காரணர், சர்வருத்ரர், பிரஜாபதி, சுசிவர், சிவர், அச்சுதர், ஈசர், ஈசானர், உதாசநர், சூக்ஷமர், வைசரவணர், பிரபஞ்சனர், காலர், பீமர், தர்மர், அம்பு, சுக்ரர், ரவி, தசேசர், விக்னேச்வரர், சசி. இவர்கள் சிவபேதமாகிய பத்து ஆகமங்களைக் கேட்டோர். (காமிகம்.)

**ஆகமங்களில் ருத்ரபேதம்(௧௮)கேட்டோர்**-அநாதிருத்ரர், பரமேசர், தசார்ணர், சைலசர், நிதநேசர், பிரமர், வ்யோமர், உதாசநர், தேஜசு, ப்ரஜாபதி, ப்ராம்மணேசர், நந்திகேசர், சிவர், மகாதேவர், சர்வாத்மகர், வீரபத்ரர், அநந்தர், பிரகஸ்பதி, பிரசாந்தர், ததீசி, சூலி, கவசர், ஆலயேசர், லளிதர், பிந்து, சண்டிகேசர், சிவநிஷ்டர், அசம்வாயர், சோமர், நிருசிம்மர், ஸ்ரீதேவி, உசனர், தேவவிபவர். சம்வர்த்தகர், சிவர், மகாகாளர். (காமிகம் )

**ஆகர்ஷணசக்தி**—காந்தசக்தி மின்சாரசக்தி, (Magnet Power) இது அக்னியின் சக்தி, இது அசைவால்நெகடிவ், பாஸிடிவ் என்ற பிரிவுடைத்தாய் இயங்கிப்பின்ஒன்றுடனொன்று கூடுதலாகிய வழியில் ஒடுங்குகிறது இது இக்காலத்துப் பல வழியில் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இதன் சக்தியால் தீபங்கள் எரிகின்றன. கம்பித் தந்திகள் கம்பியிலாத் தந்திகள், நெடுந்தூரவார்த்தைகளைக் கேட்டல், யந்திர இயக்கம், கப்பலோட்டல்முதலிய பல வேலைகளைச் செய்கின்றனர்.

**ஆகன்**—யாதவ வம்சத்தவன். அநேக லக்ஷத்தவரில் கடைசியிற் பிறந்து கீர்த்தியை அடைந்தவன்.

**ஆகா**—ஒரு கந்தருவன்.

**ஆகாசராசன்** — இவன் ஸ்ரீலக்ஷ்மிதேவியைச் சிவபூசைக்குப்பரிக்குங்கமலத்திடம் குழந்தையுருவாகக் கண்டு எடுத்து வெங்கடேசுவரசுவாமிக்குத் திருமணஞ் செய்வித்தவன்.

**ஆகாமியம்**—பிராரத்தம் புசிக்கையில மனோ வாக்குக் காயங்களால் செய்யப்படும் நல்ல தீய கருமங்களால் வந்தேறுகிற கன்மம்.

**ஆகாயகப்பல்**—இதுபுகைக்கப்பலைப்போல ஆகாயத்தில் வேகமாகச் செல்லும் கப்பல். இது தனக்குமுன், முன்தள்ளும் இரண்டு கருவிகளையும், ஒரு சுக்கான்போன்ற நடத்தும் கருவியையும் கொண்டிருப்பது. இது காற்றின் சகாயத்தால் செல்லும்தன்மையுடையது.

**ஆகாயம்** — இது சத்ததன்மாத்திரையினின்று தூலமாகத் தோன்றிப் பல வேறு வகைப்பட்ட சத்தமுடைத்தாய்ப் பிராணிகளின் போக்கு வரவிற்கு இடங்கொடுத்து

நிற்பது. சத்தத்தைக் குணமாகவுடையது. இது சத்தம், சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகம் எனும் ஆறு குணங்களுடையது.

**ஆகாயவாணி** — அசரீரியாகிய தருமதேவதை. எல்லாக் கருமத்திற்கும் சாக்ஷியாக இறைவனால் நியமிக்கப்பட்ட சத்தி. இவ்வசரீரியின் ஒலி பலபுராண கதைகளாற் காண்க.

**ஆகிண்டிகன்**—நிஷாதனுக்கு வைதேக ஸ்திரீயிடம் பிறந்தவன். இவனுக்குக் குற்றவாளிகளை அடித்தல், கட்டுதல், கொலை செய்தல் தொழில். (மநு.)

**ஆகு**—இவன் ஓர் அசுரன். இவன் பெருச்சாளி முகமுள்ளவன். இவன் தேவர்களை வருத்திவந்ததால் தேவர்கள் விநாயகக் கடவுளை வேண்ட விநாயகக் கடவுள் இவனைப் பந்துபோல் ஆகாயத்தே எறிந்து கொன்றனர். இவன் விநாயக பூசையால் விநாயகரைத் தாங்கும் வரம்பெற்றான். (திருவோத்தூர்ப் புராணம்.)

**ஆகுகன்**—1. ஒரு யாதவன். புனர்வசுவின் குமரன். இவன் குமரர் தேவகன், உக்ரசேனன்.

2. அர்ப்புதமென்னும் பர்வதத்தில் தன் மனைவி ஆகுகியுடனிருந்த வேடன். இவன் தன் மனைவியுடன் கூடி அருகிருந்த சிவாலயத்து நியமம் தவறாமல் சிவபூசை செய்து வருகையில், ஒருநாள் சாயங்கால வேளையில் சிவயோகி ஒருவர் அவ்விடம் வர ஆகுகி எதிர்சென்று உபசரித்து வேண்டியதென்னென முனிவர் ஒன்றுமுரையாதிருக்கக் கணவன் வெளிப்பட்டு முனிவரை உபசரிக்கையில் முனிவர் இராத்திரிக்கு இருக்க இடந்தரவேண்டும் எனக் கேட்க, ஆகுகன் தன் குடிலில் இடங்கொடுத்துத் தானும் தன்மனைவியும் காத்திருக்கக் கண்ட யோகியர், பெண்பாலாதலின் அவளையுங் குடிலிலிருக்கக் கட்டளையிட்டுத் தாம் சிவயோகம் புரிந்தனர். ஆகுகனே வெளியில் வில்லேந்தி இரவுமுழுதுமிருக்கப் புலியால் கொல்லப்பட் டிறந்தனன். இதனால் கணவனுடன் உயிர்துறக்க எண்ணிய ஆகுகி, தீமூட்டிச் சிந்திய தன் கணவன் உறுப்புகளைத் தீயிலிட்டு நிற்கையில் சிவபெருமான் தரிசனந்தந்து நீ,விதர்ப்ப தேசத்தில் வீமராசன் புத்திரியாகச் சநிப்பாய். உன் கணவன் நிடததேசத்தில் வீரசேநன் குமரனாகிய நளனாகச் சநிப்பான். உங்களைப் பிரித்த சிவயோகி அன்னமாகப் பிறந்து உங்களிருவருக்கும், மணமுடித்து வைப்பன். அப்பிறப்பில் நீங்கள் முத்திபெறுவீர்கள் என்று திருவுருக் கரந்தனர். (சிவமகா புராணம்).

**ஆகுகன்**—ஜாம்பவதியின் தந்தை. (பாரதம் அநு - ம்.)

**ஆகுகி**—ஆகுகனைக் காண்க.

**ஆகுதை**—புனர்வசுவின் குமரி.

**ஆகுதி**—1. தேவகனுக்கு நல்லத்தை.

2. சுவாயம்பு மனுவின் குமரி. ருசிப்பிரசாபதியின் தேவி. இவளுக்கு ஆகுநாதி எனவும் பெயர்.

3. பிரிதுஷேணன் தேவி.

**ஆகுநாதி**—ஆகுதிக்கு ஒரு பெயர்.

**ஆகுபெயர்** — ஒரு பொருளினியற்பெயர் அதனோடியைந்த வேறு பொருளுக்காகி வருதல். இது பொருள்முதலிய அறுவகையாலும் பிறவற்றாலும் வரும். (நன்)

**ஆகுலம்**—வருஷக் கடையில் (கு) நாட்களும், மாதக்கடையில் ரு-நாட்களும், நக்ஷத்திர முடிவில் உ - நாழிகைகளுமாம். இவை சுபகாரியங்களுக்கு ஆகா. (சோதிடம்)

**ஆகூதி**—1. இவள் சுவாயமபு மனுவிற்கு சதருபையிட முதித்த குமரி. இவள் தமக்கை பிரசூதி. இவள் பிரஜாபதியை மணந்து அவனால், அஞ்ஞன் என்னுங் குமரனையும், தக்ஷிணை யென்னுங் குமரியையும் பெற்றனள்.

2. சர்வதேஜஸன பாரி. சக்ஷுர் மனுவிற்குத் தாய்.

**ஆகோள்**—பகைவா முனையினைக் கடந்து ஆரவாரித்து வெற்றியினைப்பெற்ற வீரர் கன்றுடனே பசுநிரையைக் கைக்கொண்டது. (புறப்பொருள் - வெண்பாமாலை.)

**ஆக்கியவல்லியர்**—பாஷ்களர் மாணக்கர்.

**ஆக்கியாளவான்**—ஆளவந்தார் காலத்து வித்வான்களைப் பங்கப்படச்செய்து, மகாபாஷ்ய பட்டரையும் தனக்குக் கப்பமிடப் பட்டயமனுப்பினவன். இவனுடன் ஆளவந்தார் வாதித்துத் தோற்பித்தனர்.

**ஆக்கினவர்க்கம்**—அத்தாமலகனைக் காண்க.

**ஆக்குரோசன்**—தசார்ண தேசாதிபதி.

**ஆக்நியித்ரன்**—1. பிரியவிரதனுக்குக் குமரன். தாய் பெரிஹிஷ்மதி. தேவி பூர்வசித்தி. இவ னிவளுடன் கூடி வருஷந்தோறும் ஒவ்வொரு குமரரைப் பெற்றான். இவன் குமரர், நாபி, கிம்புருஷன்,

அரிவருஷன், இளாவிருதன், இரம்யகன், இரண்மயன், குரு, பத்ராசுவன், கேதுமாலன், முதலியவர்கள். இவர்களால் நவவருஷங்கள் உற்பத்தியாயின.

2. பன்னிரண்டாவது மன்வந்தரத்து ருஷி (பாகவதம்.)

**ஆக்நேயம்**—சூரிய வெப்பத்தாற் பிறக்கும் மேகம்.

**ஆக்நேய புராணம்**—இது மகாபுராணங்களுள் ஒன்று. 8,000-கிரந்தமுள்ளது. இது சிவ தீக்ஷாவிதி, விஷ்ணு தீக்ஷாவிதி, அக்நிகார்யம், விஷ்ணுவின் அவதார விசேஷம், பிரபஞ்ச விவரணம், இராஜநீதி, சத்தம், சோதிடம், ஔஷதம் முதலியவற்றைச் சுருக்கிக் கூறும்.

**ஆங்கரிஷ்டன்**—ஒரு அரசன் காமந்தகருஷிக்குத் தருமம் உபதேசித்தவன். (பார.)

**ஆங்கி**—சந்திரவம்சத்தவள். அபராஜின புத்திரனை ஹரிகன் தேவி. இவள் புத்திரன் மகாபவுமன்.

**ஆங்கீரசர்**—1. சில இருஷிகணங்கள், இவர்களின் வடிவைச்சுதரிசனன் என்னும் வித்யாதரன் கண்டு நகைக்க முனிகணங்கள் கோபித்து நீ கொண்ட அழகாற் செருக்கடைந்து சிரித்தபடியால், மலைப்பாம்பாக எனச் சபித்தனர். பின்பு வித்தியாதரன் வேண்ட யது குலத் தலைவனாகிய நந்தகோபன், அம்பிகை பூசைக்கு வரும் போது அவனை விழுங்குவாய். அக்காலத்துக் கிருஷ்ணமூர்த்தியா லிச்சாபம் நீங்கி முன்னினுமதிக அழகுள்ளவனவை என்றனர்.

2. ஒரு இருஷி. இவர் அக்நிக்கு மூத்த குமாரனனபிறகு அவர்க்குப் பிறந்த குமரர்களி லொருவனாகிய வியாழன் என்பர்.

3. உன்முகன் குமாரர்களி லொருவன்.

**ஆங்கீரசப் பிராமணர்**—இரதிதனைக் காண்க.

**ஆங்கிரசு**—பிரமன் குமரர்களில் ஒருவன். தேவி சிரத்தை, சுதா, சதி. தக்ஷனுக்கு மருகன். இவனை அதர்வணவேதியென்பர். இரதிதனைக் காண்க. சித்திரகேதுவிற்கு ஒருகாற்புத்திரகாமேஷ்டி செய்வித்தவன். கரந்தமனிடம் நட்புக்கொண்டு நற்பதவி தந்தவன்.

2. ஒரு இருஷி. இவர் அக்நிக்கு மூத்த குமாரனன பிறகு அவர்க்குப் பிறந்த குமரர்களி லொருவனாகிய வியாழன் என்பர்.

3. உன்முகன் குமாரர்களி லொருவன்.

**ஆசகரன்**—ஒரு பிராமணன் பிரஹலாதனுடன்வாதிட்டவன். (பாரதம்சாந்திபர்வம்.)

**ஆசங்கர்**—சுவபலருக்குக் கார்ந்தினியிட முதித்த குமரர்.

**ஆசவபாணீடேசர்**—ஒருவற்குக் கள்குடுவையிலிருந்து தரிசனந்தந்து மோக்ஷந்தந்த காசித்தலத்தி லெழுந்தருளி யிருக்கும் சிவமூர்த்தம்.

**ஆசாடி**—இவர்கள் தெலுங்கு நாட்டுமாலஜாதியின்வகுப்பு.பாடிப்பிழைப்போர்.(தர்)

**ஆசாபூரகர்**—விநாயகருக்கு ஒரு பெயர்.

**ஆசாரக்கோவை**—பதினெண்கீழ்க் கணக்குகளுள் ஒன்று. பெருவாயின் முள்ளியார் இயற்றியது. இருடிகள் சொல்லிய ஆசாரங்களைக் கோத்துரைக்கும் பலவகை வெண்பாக்கள் தற்சிறப்புப் பாயிரமுட்பட நூற்றொன்றுடையது.

**ஆசாரமிலிகளாவர்** — அறியாததேசத்தார், தரித்திரர், மூத்தோர், சிறுவர், உயிரிழந்தார், பயமுற்றூர், உண்பார், அரசர் தொழில்தலைக் கொண்டார் மணாளன் எனும் ஒன்பதின்மர். (ஆசாரக்கோவை.)

**ஆசாரி**—தட்டான், கம்மாளன், கன்னான், கருமான் முதலியவர்க்குப் பட்டப் பெயர்.

**ஆசாரியர்** — மூவகையர், பிரோகாசிரியர், போதகாசிரியர், முத்திதாசிரியர். இவர்களுள் பிரோகர், இவனுனக்குத் தக்க ஆசிரியனிவனிடத்து நீயுபதேசங்கொள்க எனப் பிரேரிப்பவர். போதகர் தன்னை யடைந்த மாணாக்கனுக்குச் சமயவிசேட தீக்கை செய்பவர். முத்திதர் பாசநீக்கம் வரச் செய்து முத்திவரச் செய்பவர். (சைவசமயநெறி.)

**ஆசார்யன்**—உபநயனஞ் செய்வித்து வேதவேதாங்கங்களையும் யாக மந்திரங்களையும் ஓதுவிப்பவன். (மநு. அ-1.)

**ஆசார்லு**—தென்கலைவைஷ்ணவ பிராமணர்களுக்குப் பட்டப் பெயர்.

**ஆசியாகண்டம்**—இது,வடக்கில் உத்தரமகாசமுத்திரம் கிழக்கில் பஸிபிக்மகா சமுத்திரம், தெற்கில் இந்து மகாசமுத்திரம், மேற்கில், செங்கடல், மத்யதரைக்கடல், கருங்கடல், ஐரோப்பா கண்டங்களையெல்லைகளாகப் பெற்றிருக்கிறது. ஆசியகண்டப் பிரிவுகள் ஆசியருஷியா, சீனா ஜபான், ஆனம், ஸயாம், பர்மா, இந்தியா, அரேபியா, ஆசியதுர்க்கி, பாரசீகம், ஆப்கனிஸ்தானம், பெலுசிஸ்தானம், துர்க்கிஸ்தானம்.

**ஆசிரியத்தாழிசை** — எனைத்துச் சீரானும் தம்முள் ஒத்த மூன்றடியாய்த் தனித்தேனும், ஒரு பொருண்மேல் மூன்றடுக்கியேனும் வருவது. (யாப்பு-இலக்கணம்).

**ஆசிரியத்துறை**—எனைத்துச்சீரானும் வரும் அடிகள் நான்குடையதாய் ஈற்றயலடி குறைந்தேனும், முதலடியு மூன்றாமடியும் குறைந்தேனும் வருவது. (யாப்பு-இ).

**ஆசிரியநிகண்டு** — இது ஆசிரியப்பாவால் ஆண்டிப்புலவராலியற்றப்பட்ட தமிழ் நிகண்டு.

**ஆசிரிய விருத்தம்** — அளவொத்த கழிநெடிலடி நான்காக வருவது.

**ஆசிரியர்நல்லந்துவனார்**—கடைச்சங்கப் புலவருள் ஒருவர், கலித்தொகை செய்தவர்.

**ஆசிரியன் பெருங்கண்ணன்**—இவர் கடைச்சங்க மருவிய புலவர்களிலொருவர். இவர்க்கு ஆசிரியர் என்பது பட்டமாக இருக்கலாம். இவர்க்குப் பெயர் உறுப்பால் வந்திருக்கக்கூடும். (குறுந்தொகை)

**ஆசிரியன் வரலாறு**—மேன்மையாகிய குலமும், மேலாகிய கருணையும், கடவுள் வழிபாடும், பல நூல்களில் பழகிய தேற்றமும், நற்பொருளை மாணாக்கனுக்கு எளிதினுணர்த்தும் உரைவன்மையும், நிலத்தையும், மலையையும், துலாக்கோலையும், பூவையுமொத்த மேன்மையும், உலகநடையறியுமறிவுடன் உயர்ந்த குணமும் பிறவும் அமைந்தவன் நூலாசிரியனவன். மேற்கூறிய குணமில்லாரும் தாழ்ந்த குணங்களினியற்கையும், பொருமை, ஆசை, வஞ்சனை, அவைக்கு அஞ்சல், கழற்குடம், மடற்பனை, பருத்திக்குண்டிகை, முடத்தெங்கொத்த முரண்கொள் சிந்தையுடையோர் ஆசிரியர் ஆகார். (நன்னூல்)

**ஆசிரியை** — கௌண்டினியர் தேவி. தம் கணவன் தந்த அறுகம்புல்லை, இந்திரன் குபேரன் முதலியவர்க்குக் காட்டி அவ்வளவு பொன்கேட்டு அவ்வறுகைத் துலையேற்றி அவர்கள் செல்வ முதலிய யாவுங் கவர்ந்து கணவனை யடைந்தவள்.

**ஆசீவகன்**—சைந ஏகதேசி, இவன் தேகாதிவிலக்ஷணனான ஆத்மா தேகபருமிதனாய், மத்திமபரிணாமத்தாலே சங்கோசவிகாச தன்மயுக்தனாயிருப்பன் என்பன். இனி முத்தி ஆகாசத்திலுத்தரோத்தர கமனமென்பன். (தத்துவநிஜாநுபோகசாரம்.)

**ஆசீவிஷம்** — ஆதித்தியனுஞ்சந்திரனுங் கூடின நாளான வமாவாசையுற்ற நாளுக்கிரண்டாநாள் விரோதம். ஒன்பதாநாட் பரிகம். பதின்மூன்றாநாள் வச்சிரம், ஆறாநாள் தண்டம். பதினாறாநாள் கண்டம். பதினெட்டா நாள் சூலம். பத்தொன்பதாநாள் வியதிபாதம், என்று சொல்லப்பட்ட வழியோகத்துக்கும் ஆசீவிஷ மென்று பெயராம். (விதானமாலை.)

**ஆசீவிஷாபவாதம்**—பூருவபக்கத்துச் சந்திரன், ஆதித்தியனிவர்கள் சுபாங்கி சத்துநிற்பப் பிரகஸ்பதி கேந்திரத்திலாதல், திரிகோணத்திலாதல்,வர்க்கோத்தமத்திலாதல் நிற்கிற், சொல்லப்பட்ட ஆசீவிஷ தோஷமில்லை. (விதானமாலை.)

**ஆசுகவிராஜசிங்கன்** — ஒரு தமிழ்க்கவி. இவர் கடிகையாரைப் புகழ்ந்து பாடியவர். "செந்தமிழோர் தங்கள்சீபாததூளிபோல், வந்தபுலவோர்தம்மார்பாணி-கந்தன், அடிகை யாற்பரவு மாசுகவி ராஜன், கடிகையார் கோலாகலன்."

**ஆசுசி**—பகனுக்குச் சித்தியினிடம் உதித்த குமரி.

**ஆசுரம்**—சிங்கமுகாசுரன் பட்டணம்.

**ஆசுவமேதகன்** — சகஸ்ராநீகன்குமரன். இவன் குமரன் அசீமகிருஷ்ணன்.

**ஆசுவலாயனர்** — இருக்கு வேதக்கருத்து நிரம்பிய சூத்திரஞ் செய்தவர், சௌநகர் மாணாக்கர்.

**ஆசூரி**—1. கபிலரிஷியின் மாணாக்கன்.
2. தேவதாசித் என்பவனுக்குத் தேவி.

**ஆசூரிகேசவப்பெருமாள்** — தெய்வத்துக்கரசு நம்பிக்கு மருமகர். பூமிபிராட்டியென்பவளுக்கு நாயகர், வைஷ்ணவாசாரியர்.

**ஆசூரிப்பெருமாள்** — எழுபத்திநாலு சிங்காசனாதிபதிகளிலொருவர். வைஷ்ணவாசாரியர். (குருபரம்பரை).

**ஆச்சான்** — கிடாம்பி ஆச்சானுக்கு ஒரு பெயர். உடையவர் திருவடி சம்பந்தி.

**ஆச்சிரமம்** — பிரமசரியம், இல்வாழ்க்கை, வானப்பிரத்தம், சந்நியாசம் என நான்கு வகைப்படும்.

**ஆச்சிரிதன்**—துஷ்யந்தன் பேரன். சேரன், சோழன் பாண்டியன் மூவருமிவன் குமரர்கள்.

**ஆச்யபதாதிகள்**—பிதுர்பேதம், இவர்க்கு ஆச்யபாள் என்று பெயர். பித்ருக்களைக் காண்க.

**ஆச்ரய ஏகதேசாசித்தன்** — இது பிரதானமும், ஆத்மாவும், ஈசுவரனும், நித்யம்.

ஒருவராற் பண்ணப்படாதிருக்கையினால், இந்த ஏதுவில், பக்ஷமாயிருக்கிற பிரதானம், ஜீவன் ஈச்வரனிவர்களுக்குள்ளே பிரதானம் அசித்தம் ஆகையினால் என்க.

ஆச்ரயவீனன் — இந்த வேதுவிற்கு ஆகாசத்திற்பூப்போல, என்கிற திருட்டாந்தமாயிருக்கிற ஆகாசப் புஷ்பமில்லாதபடியால் ஆச்ரயவீனன் என்ப.

ஆச்ரயாசித்தன் — இது, தனக்கு மாறாக நிற்கிற வாதியின் கருத்தறிய ஏதுவிற்குப் பொருந்திய தர்மமில்லையாகிய ஏதுவைக் காட்டல். அதாவது, சாங்கியன், பிரகிருதியுண்டு விசுவம் பரிணாமி யாகையினால். இந்த ஏதுவில், ஆச்ரயமாயிருக்கிற பிரதானம், தார்க்கிகனுக் கில்லாதபடியினால் என்க. (சிவஞானசித்தியார்)

ஆச்லேஷசக்தி — கனபதார்த்த அணுக்களையும், திரவபதார்த்த அணுக்களையும் ஒன்று சேர்க்கும் சக்தி. (Adhesion).

ஆச்வலாயனன் — ஆசுவலாயனனைக் காண்க.

ஆஞ்சநேயன் — அஞ்சனை வயிற்றிலுதித்தவன். அநுமனைக் காணக.

ஆஞ்சிக்காஞ்சி — தலைவன் உயிரினை நீக்கின அயிலாலே மனைக்கிழத்தி இனிய ஆவியை ஒழிப்பது. (புறப்பொருள் வெண்பாமாலை)

2. அன்பினையுடைய தன் கொழுநனோடு செறிந்த நெருப்பிலே அழுந்தும் காதலையுடைய மெய்த்தென்ற தன்மையாற் சிறந்தவள் தன் மிகுதியைச் சொல்லியது. (பு. வெ).

ஆடகன் — 1. சண்முகசேநாவீரருள் ஒருவன்.

2. சூரபதுமன் மூன்றாங் குமரன்.

ஆடகமாடம் — திருவனந்தபுரத்திலுள்ள ஓரூர். (சிலப்பதிகாரம்.)

ஆடகேசுரர் - பாதலத்தைக் காக்கின்ற கோடி உருத்திரர்க்குத் தலைவர்.

ஆடலரங்கினமைதி — தேவர் கோயில், மடம், பக்ஷிக்கூடு இருந்த இடம், புற்றெழுந்த இடம், பூழி, கல்லப்பட்ட மண், யானைக்கூடம், குதிரைப்பந்தி, கூபம், குளம், கா, போர்க்களம், சேரி இவைகளை நீக்கி, நுண்மையுடன் திண்மை யுடைத்தாய் இனிப்புடன் நன்மண முடைத்தாய், நல்ல மாட்சிமை பெற்றதாய், உத்தமன் கைப் பெருவிரலால் இருபத்துநான்கு விரல் கொண்ட ஒரு கோலால் எழுகோல் அகலமும், எண்கோல் நீளமும், ஒருகோல் உயரமும் உடையதாய்ப் புகவும் வெளிவரவும் வாயில்கள் உடையதாய், நால்வகை வருணராகிய வச்சிரதேகன், வச்சிரதந்தன், வருணன், இரத்தகேசுரன் முதலிய பூதநடைத்தாய்த் தூண்கள் பெற்றதாய், நிலை விளக்குகள் உளதாய், இடத்தூணிடத்தே உருவுதிரையாகிய ஒருமுக எழினியும், இரண்டு வலத்தூண்களிடத்தும் உருவுதிரையாகிய பொருமுக எழினியும், மேற்கட்டுத் திரையாகக் கரந்து வரல் எழினியும், சித்திரவிதானமு முடையதாய்ச் சந்திரன், குரு, அங்காரகரை அதிதேவதைகளாகப்பெற்ற வெண்மை, பொன்மை, செம்மை யென்னும் முத்துமாலைகள் தொங்கவிட்டதாய் இருப்பது.

ஆடல் — என்பது நிருத்தம், அது பதினொரு வகை.— அல், கொட்டி, குடை, குடம், பாண்டரங்கம், மல், துடி, கடையம், பேடு, மரக்கால், பரவை என்பனவாம். இவற்றுள் :—

(க) அல்லியம் - மாயவன் ஆடல் அதற்கு உறுப்பு ஆறும். (உ) கொட்டி விடையோன் ஆடல் அதற்கு உறுப்பு நான்காம். (ங) குடை அறுமுகன் ஆடல் அதற்குறுப்பு நான்காம். (ச) குடம் கண்ணன் ஆடல் அதற்குறுப்பு ஐந்தாம். (ரு) பாண்டரங்கம் சிவனிருத்தம் அதற்குறுப்பு ஆறும். (சு) மல் விஷ்ணுவின் ஆடல் அதற்குறுப்பு ஐந்தாம். (எ) துடி முருகன் ஆடல் அதற்குறுப்பு ஐந்தாம். (அ) கடையம் இராணி ஆடல் அதற்குறுப்பு ஆறும். (கூ) பேடு காமன் ஆடியது அதற்குறுப்பு நான்காம். (கo) மரக்கால் காளி ஆடிய கூத்து அதற்குறுப்பு நான்கு. (கக) பாவை திருமகளாடல் அதற்குறுப்பு இரண்டு. மேற்கூறிய ஆடல்கள் அசுரர் வதையின் பொருட்டு ஆடினவை. அல்லியம் கஞ்சன் வஞ்சத்தின் ஏவிய யானையின் கோட்டை ஒசித்தற்கு ஆடியது. இது ஆடலின்றி நிற்கும் கூத்துள் ஒன்று. கொடுகொட்டி என்பது, சிவமூர்த்தி திரிபுரம் தீமடுத்து எரியக் கண்டு இரங்காது கைகொட்டி நின்று ஆடுதலிற் கொடுமை யுடைத்தாதல் கண்டு கூறியதென்க. குடை என்பது அவுணர் தாம் போர்செய்தற் கெடுத்த படைக்கலங்களைப் போரிற் காற்றாது போகட்டு வருத்தமுற்ற வளவிலே முற்கூறிய முருகன் குடையை முன்னே சாய்த்து அதுவே ஒருமுக எழினியாக நின்றாடியது. குடம் என்பது காமன் மகன் அநிருத்தனைத் தன் மகள் உஷைகாரணமாக வாணன் சிறை

வைத்தலின் அவனுடைய சோவென்னும் நகரவீதியிற்சென்று கண்ணன் பஞ்சலோகங்களாலும் மண்ணாலும் குடங்கொண்டு ஆடியது. பாண்டரங்கமாவது தேவர்களாகிய தேரில் வேதப்பரி பூட்டி நெடும்பு மறைத்துக் கூர்முள் பிடித்துத் தேர்முன் நின்ற திசைமுகன் காணப் பாரதிவடிவாய இறைவன் பாரதி காண ஆடுதலில் இப்பெயர் பெற்றது. மல் என்பது வாணனாகிய அவுணனை வெல்லுதற்கு மல்லனாய்ச் சேர்ந்தாரிற் சென்று அறைகூவி உடற் கரித்தெழுந்து அவனைச் சேர்ந்த அளவில் சடங்காகப் பிடித்து உயிர்போக நெரித்துத் தொலைத்தமையிற் பெற்ற பெயர். துடி என்பது சூரனது வேற்றுருவாகிய வஞ்சத்தை யறிந்து அவன் போரை வென்ற குமாரக்கடவுள் அக்கடல் நடுவண் திரையே அரங்கமாக நின்று துடிகொட்டி ஆடியது. கடையம் என்பது வாணனுடை நகரின் வடக்குவாயிலில் உள்ள வயலில் நின்று அயிராணி ஆடியது. பேடு என்பது, ஆண்மைத்தன்மையிற்றிரிந்த பெண்மைக் கோலத்தோடு காமன் ஆடிய கூத்து. இதனைப் பேடுகாண்க. மரக்கால் என்பது அவுணர்களுடன் காளி போரிடுகையில் அவர்கள் இவளுடன் உண்மைப் போர் செய்யின் வெல்லலாகாதென வஞ்சப் போர் செய்ய எண்ணிப் பாம்பு, தேள் முதலியவாகப் புகுதல் எண்ணி அவள் அவற்றை உழக்கிக் களைதற்கு மரக்கால் கொண்டு ஆடினமையின் பெற்ற பெயராம். பாவையென்பது—அவுணர் வெவ்விய போர்செய்தற்குச் சமைந்த போர்க்கோலத்தோடு மோகித்து விழும்படி கொல்லிப் பாவை வடிவாகத் திருமகள் ஆடியது.

**ஆடல்பாடலரங்கேற்றகாலம்** — பூசம், பரணி, இரேவதி, பூராடம், அவிட்டம், சித்திரை, திருவாதிரை, கார்த்திகை, விசாகம், இந்நாட்களிலே சுபதிதிகளில் மிதுனம், சிங்கம், விருச்சிகம், கர்க்கடகம், தனு, துலாம், மீனம், இவ்விராசிகளுதயமாகத் திங்கள், புதன், வியாழன், வெள்ளி, இவர்கள் வாரத்தில் கூத்துக் காப்பிய முதலிய பாட்டுக்க ளரங்கேற்றுவது. (விதானமாலை)

**ஆடவர்பருவம்**—பாலன், காளை, குமாரன், ஆடவன், மூத்தோன், விருத்தன்.

**ஆடன்மா**—திருமங்கையாழ்வாரின் குதிரை.

**ஆடாதோடை**—இது ஒருவிதச்செடி. இதன் இலையை முக்கியமாய்க்கெண்டை வாங்கல் வலி, நரம்புப்பிடிப்பு, காசரணவாதம், கொறண்டல்வாதம், இவைகளுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். ஈழை, காசம், மாந்தாரகாசம், கபவியாதி, இவைகளுக்கும் உக்கிரமாய் வருகிற நளிர்ச்சுரம் வராமல் தடுக்கவும், கஷாயமாகவுஞ் செய்து கொடுக்கிறார்கள். இது கொஞ்சம் கசப்பாயிருக்கும்.

**ஆடி**—ஒரு அசுரன் பார்வதியார் சிவமூர்த்தியை நீங்கியிருக்குந் தருணம் பார்த்துக் காவலாயிருக்கும் வீரகனையும் உத்தாலகுசுமையென்னும் பார்வதியாரின் தோழியையும் நீங்கிச் செல்லுதலருமையென ஒரு பாம்புருக்கொண்டு உட்சென்று பார்வதியார் வடிவங்கொண்டு காமக்குறி செய்கையில் உணர்ந்த சிவமூர்த்தி இவனுடன் சரசஞ் செய்பவர்போல் அவனைக் கொன்றனர். (சிவமகாபுராணம்.)

**ஆடிக்குறி** — ஆடி௴ வளர்பிறை பஞ்சமி, ஞாயிற்றுக்கிழமையில் வரில் கொஞ்சம் மழை. திங்களில் வரில் வெள்ளங் காணும். செவ்வாயில் வரில் சண்டையுண்டாம். புதனில் வரில் பெருங்காற்றடிக்கும். வியாழனில் வரில் நல்ல விளைவுண்டாம். வெள்ளியில் வரில் பெருமழையுண்டு. சநியில் வரில் விளைவில்லை.

**ஆடி௴ உத்திராடக்காற்று**—ஆடி௴ உத்திராட நக்ஷத்திரத்தில் உதயத்தில் கீழ் காற்றடித்தால் பின்மாரியுண்டாம். அக்னிமூலைகாற்றும், தென்காற்று மடித்தால் கலகமும், பஞ்சமும் உண்டாம். தென்மேற்குக் காற்றடித்தால் நல்ல மழை. வடமேற்குக் காற்றடித்தால் மிருகப் பலிப்பும், விட்டிலும், புழுவும் உண்டாம். வடகிழக்குக் காற்றடித்தால் முன்மாரி உண்டாம். அப்போது பூரணையுங் கூடினால் உத்தமம். அன்றுதயத்தில் பொழுதுகட்டினால் நல்ல மழை.

**ஆடித்திதிக்குறி**—ஆடிமாதம் வளர்பிறையும், சோதிநக்ஷத்திரமும் கூடின நாளில் மந்தாரமாவது, மழையாவது, காற்றாவது, குமுறலாவது, மின்னலாவது உண்டானால் முன்மழை. தசமியும், விசாகமும் கூடிய போது இக்குறியுண்டானால் நடுவில் மழை. ஏகாதசியும், அனுஷமும் கூடினபோது இக்குறிகள் காணின் பின்மழை. ஆடி௴ தேய்பிறை தசமியுடனேயாவது, ஏகாதசி

யுடன் ரோகணி நக்ஷத்திரங் கூடினபொழுதாவது, பொழுதுகட்டினுல் நல்லமழை உண்டு.

**ஆடிப்பஞ்சமி சித்திரைச் சங்கிரகபலன்:-** ஆடிமாதத்துப் பூருவபக்கப் பஞ்சமியும், சித்திரை விஷுவமுமுற்ற வாரத்தின் பலன், அற்பவிருட்டி அதிவிருட்டி, யுத்தம் மகாவாதம், சுபிட்சம், பிரளயகாலம் நாசம் என்ற எழுபலனும் ஞாயிற்றுக் கிழமை முதலாக அடைவே அறியப்படும். (விதானமாலே.)

**ஆடு**—இது பசுவின் சாதியைச்சேர்ந்த சாகபக்ஷணி, உருவத்தில் சற்று நீண்ட முகமுள்ளதாயும் ஒரு அங்குல மயிர் அடர்ந்த தோலே யுடையதாயும், சிறுத்த தலேயுள்ளதாயும், மூக்கு குறுகியும், காது சிறுத்தும், கண்கள் தலேயின் இருபக்கங்களிலமைந்து பெருத்தும், பிளவுள்ள குளம்புகளுள்ளதாகவும், தலேயில் கொம்புகளிரண்டைப் பெற்றும் இருக்கும். இது பயந்த சாதுவான பிராணி. குளிர்ந்த தேசங்களிலுள்ள ஆடுகளுக்கு மயிரடர்ந்து நீண்டிருக்கும். இது இரண்டு குட்டிகளுக்கதிகம் போடும். இதில் செம்மறியாடு, வெள்ளாடு, குறும்பாடு,வரையாடுமுதலிய பல. பள்ளேயாடு இந்த ஆடு, பசுவைப்போலவே தீனிப்பைகள் பெற்றிருக்கும். இதன் தசைக்காக ஆசைகொண்டு வளர்த்துக் கொல்லுகிறார்கள். இதன் பாலும் தோலும் பயன் தரும். இது அக்னிக்கும், குமாரக்கடவுட்கும் வாகனமாம். குமாரக்கடவுளேக்காண்க.

**ஆடுகோட்பாட்டுச்சேரலாதன்** — இவன் இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனுக்கு வேளாவிக்கோமானுன பதுமன் குமரியிடம் பிறந்த (உ)-வது குமரன். களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலுக்குத் தம்பி. இவன் தண்டாரண்யமெனும் வடநாட்டாரால் கவரப்பட்ட பசு நிரைகளே மீட்டுத் தொண்டியிற் சேர்ப்பித்ததாலிப்பெயர்பெற்றுன். இவன் காக்கைபாடினியார் நச்செள்ளேயார்க்கு அணிகள்பொருட்டு (கூ) காப்பொன்றும் நூறுயிரம் காணமும் கொடுத்துத் தன் கொலுவில் வைத்திருந்தான். இவன் (உகு) ஆண்டு ஆட்சி செய்தான்.

**ஆடுதுறைமாசாத்தனுர்**—சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன் இறந்ததைச் சகியாமல் வருந்திக் கூற்றத்தை நோக்கி வெறுப்புடன் 'நனிபேதையே நயனில் கூற்றம், விரகின்மையின் வித்தட்டுண்டனே ...பசிதீர்ப்போரே'எனப்பாடிய புலவர். இவர் ஊர் ஆடுதுறை போலும்.

**ஆடைஅதிபன்**--அரசனுக்குப் படாம்செய்த நாட்டின்வேற்றுமை, நூலின் சாதிவேற்றுமை, பட்டு பருத்தி முதலியவற்றின் இழை அளவை, விலே முதலிய நன்கறிவிப்பவன். (சுக்கிரநீதி.)

**ஆட்கொண்டான் கன்னனூர்**—இது வில்லிபுத்தூரரரை ஆதரித்த வரபதியாட்கொண்டான் ஆண்ட இடமாக இருக்கக்கூடும் என ஊகிக்கப் படுகிறது. திருப்பத்தூர் தாலூகா செங்கம்மா. (சாசனம்)

**ஆட்டனத்தி**—ஒரு சேரநாட்டரசன் ஆதிமந்தியைக் காண்க.

**ஆணவமலம்**—இது ஆன்மாக்களுக்கு அநாதியாய் ஒன்ருய், செம்பிற் களிம்புபோலச் சகசமாய், தனது அதிகாரமுடிவில் அழிகின்ற புருஷன்தோறும் ஞானத்தை மறைக்கும் அநேக சத்தியுள்ளதாய், வஸ்துவாய், ஆன்மாவின் சரீராதிகளுக்கு நிமித்தமாய், பரிபாக காலத்தில் சத்தி குறைவதாய், ஆன்மாவைச் சர்வஞ்ஞத்வத்தினின்று கிஞ்சித்வம்செய்வித் தணுவெனும் பெயர் தருவதாயுள்ளது. இது, மோஹம், மதம், ராகம், விஷாதம், தாபம், சோஷம், வைசித்ரியம் எனும் காரியங்களேச் செய்யும். இதன் பெயர்கள், ருக், பசுத்வம், அஞ்ஞானம், ஆவ்ருதி, மூலம், ம்ருத்யு, மூர்சை. அஞ்சனம், நீவாரம், அவித்தை, பாபம், க்ஷயம்,மிருத்யு,கிலானி, என்பன.

**ஆணிமாண்டவ்யர்**-மாண்டவ்யரைக்காண்க.

**ஆண்டாள்**--இந்தம்மாள் கலியுகத்தில் (சுஅ) வது ஆன, நளஸூ ஆடிமீ சுக்ல சதுர்த்தசி செவ்வாய்க்கிழமை கூடிய பூரநக்ஷத்திரத்தில் பெரியாழ்வார் கொத்திவைத்த பூமியில், துளசியடியில் திருவவதாரஞ் செய்தனள். இவளேப் பெரியாழ்வார் எடுத்து வளர்த்துக் கோதையென நாமகரணஞ் செய்தனர். இவள் பெரியாழ்வார் பெருமாளுக்குத் தொடுக்கும் மாலேகளேத் தானே சூடிக் கண்ணுடியிற்றன்னழகைக்கண்டு இந்த அழகு பெருமாளுக்குப் பொருந்துமோவென வெண்ணிக் கொடுத்தனுப்புவள். இவ்வகையே நாடோறுஞ் செய்துவந்தனள். ஒருநாள் கோதை பெருமாளுக்குத் தொடுத்த மாலேகளேத் தான் சூடிக்கொண்டதைப் பெரியாழ்வார் கண்டு இது தகாதகாரிய மென்றனர். பெரியாழ்வார், பெருமாள் சந்நி

க்கு மாலைதொடுத்து எடுத்துச் செல்ல, பெருமாள் கோதை சூடிய மாலையே நமக்கு உகப்பாமென, ஆழ்வார் அன்று முதலிம்மங்கையைப் பூமிபிராட்டி முதலிய மூவரில் ஒருத்தியாயிருக்கவேண்டுமென்றெண்ணிச் சூடிக்கொடுத்தாளெனத் தாம் பெயரிட்டு அழைத்து வந்தனர். இவ்வகை கோதை வளர்ந்துவருகையில் மணப்பருவம் நெருங்குதல் கண்டு அம்மே, நீ யாருக்கு வாழ்க்கைப் படவுள்ளாய் என, ஆண்டாள் "மனிதனெனில் வாழேன் மணிவண்ணனல்லது என்றனள்." அவன் எவ்வூரான் என, கோதை, பெருமாள் எழுந்தருளியிருக்கும் திவ்ய தேசங்களையெல்லாம் சொல்லும்படி கேட்டுத் திருவரங்கன் பெயர்கேட்டு நாணினள். ஆழ்வார் இம்மணங் கூடும்வகை எவ்விதமென்றிருக்கையில் இவரது சுவப்பனத்திற் பெருமாள் நீர், திருமணக்கோலமாய்க் கோதையைக் கோயில் என்னும் திருவரங்கத்திற்கு அழைத்து வருகவென்று கட்டளை கொடுத்துக் கோயிற் பரிசனங்களுக்கும் அவள் வரவு தெரிவித்தனர். பரிசனங்கள் கோதையை எதிர் சென்று அழைத்துவந்து பெருமாளிடத்தில் விடக் கோதை பெருமாளிடம் மறைந்தனள், இவளருளிச் செய்த நூல்கள் நாய்ச்சியார் திருமொழி திருப்பாவை முதலிய. (குருபரம்பரை).

**ஆண்டான்** — திருமலையாண்டானுக்கு ஒரு பெயர்.

**ஆண்டிகள்**—தமிழ்நாட்டு இரந்துண்போர். இவர்களுக்குப் பண்டாரங்கள் என்றும் பெயர். இவர்கள் பலவகைப் பட்ட ஜாதியார். ஜங்கமாண்டி,ஜோகியாண்டி, கோவிலாண்டி, முடவாண்டி, கோமணாண்டி லிங்கதாரி, உப்பாண்டி, பஞ்சத்தாண்டி, பரம்பரையாண்டி முதலியோர் இவர்கள் வீடுவாசல் இல்லாமல் பிக்ஷை யெடுத்தலே தொழிலாக் கொண்டவர்கள். (தர்ஸ்டன்.)

**ஆண்டிநியர்**-தொம்சாதியர்தவளைதின்போர்.

**ஆண்டிப்புலவர்**—இவர் செஞ்சியை யடுத்த ஊற்றங்காற் கிராமத்திற் பிறந்தவர். இவருக்குப் பிதா பவதேவன். இவர்க்குப் பாவாடை வாத்தியார் எனவும் பெயர் கூறுவர். நன்னூலுக்கு ஒரு உரை செய்தனர். அதற்கு உரையபி நன்னூலென்று பெயர். இவர் ஒரு நிகண்டு இயற்றினர். அதற்கு ஆசிரியநிகண்டென்று பெயர்.

**ஆண்டுநிறைவு**—ஆதித்திய கெதியால் ஓராண்டு சென்ற, சென்மமாதஞ் சென்ம நக்ஷத்திரத்திலே யாதல், பஞ்சாங்கயோகம் நன்றாகப் பொருந்தினநாளிலே யாதல், சுத்த சலத்தினாலே பிள்ளையை முழுக்காட்டிப் பிராமணருக்குப் போசனங்கொடுத்து விதானநூல் சொல்லுகிறபடியே சுபக் கோளுதயமாக ஆண்டு நிறைவிற் சிற்றாடை உடுத்திப் பொன்னரை ஞாணுந் தரிப்பது. (விதானமாலை).

**ஆண்பாலெழுத்து**—அ, இ, உ, எ, ஒ, (இலக்கண விளக்கம்).

**ஆண்பாற்கிளவி**—வேட்கை மிகும் ஆசை எல்லைகடப்ப எக்கமுற்று மயங்கியிருந்த தலைவன் சொல்லியது. (புறப்பொருள் வெண்பாமாலை.)

**ஆண்பாற் பிள்ளைத்தமிழ்** — காப்பு. செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் பெற்றது.

**ஆண்பெண் அலிநாட்கள்** — பரணி, கார்த்திகை, உரோகிணி, புநர்பூசம், பூசம், அத்தம், அனுடம், திருவோணம், பூரட்டாதி, உத்திரட்டாதி இவை புருஷ நக்ஷத்திரங்கள். மிருகசீரிடம், சதயம், மூலம் இவை அலிநக்ஷத்ரங்கள் ஒழிந்த அசுபதி, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், சித்திரை, சோதி, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், இரேவதி, இவை பெண்ணாட்களாம். கிரகங்களிற் செவ்வாய், வியாழன், ஆதித்தியன், இவை ஆண். சனி, புதன், இவை அலி. வெள்ளி, சந்திரன், இராகு, கேது இவை பெண்ணும். (விதானமாலை).

**ஆண்ராசி** — மேஷம், மிதுனம், சிங்கம், துலாம், தனசு, கும்பம் ஆக ௬.

**ஆததாயிகள்**—வீட்டிற்குத் தீயிடுவோர், ஆயுத முதலியவற்றாற் கொலை புரிவோர், பிறர்பொருளை முற்றுங் கவர்வோர், பிறர் மனைவியை விரும்புவோர். (சுக்கிரநீதி)

**ஆதபன்**—விபாவசு என்னும் வசுவிற்கு உஷையிடம் பிறந்த குமரன்.

**ஆதனழிசி** — ஒல்லையூர் தந்த பூதபாண்டியனுக்கு நண்பன். (புறநானூறு)

**ஆதனுங்கன்** — கள்ளில் ஆத்திரையனாரால் பாடப்பெற்ற வள்ளல் வேங்கடமென்னும் ஊரிலிருந்தவன். புலவர் இவனை உன்னை எக்காலத்தும் மறவேன் என்றுங் கருத்தமைந்த "எந்தைவாழி ஆதனு"

எனவும், "நீர் நுங்கின் கண்வலிப்ப" எனவும் பாடினர். (புறநானூறு.)

**ஆதன்ஓரி**—ஓரியைக் காண்க.

**ஆதாரசத்தி** — இவள் உலகத்திற் காதாரமான சத்தி. கூர்மபீடம், வெள்ளைநிறம், சிரசில் அங்குராகாரம், வரதம், அங்குசம், பாசம், அபயம் உடையவளாய்ப் பூமியைத் தாங்கி நிற்பவள்.

**ஆதாரம்**—(௬) மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, இவற்றிற்கு முறையே, குதம், குய்யம், நாபி, இதயம், அடிநா, நெற்றி, இடங்களாம்.

**ஆதானம்**—சிரௌத விதிப்படி அரணியைக் கடைந்து தீயை உண்டாக்கிக்கொள்ளும் கருமம்.

**ஆதி**—1. கலியுகத்தில் வேதகிரியிற் கழுகு உருக்கொண்டு பூசிக்கு முனிவர்.

2. தவமுநியென்னும் வேதியன் அருன்மங்கை யென்பவளைப் புணரப் பிறந்தவள். இவள் பிறந்த பிறகு, பிறந்தவூர் மண்மாரியாலழிய, இவள் ஒருத்தியும் பிழைத்து, உறையூர்ப் பெரும் பறையன் வீட்டிலும், நீதியையனிடத்தும் வளர்ந்து பகவனை மணந்து ஔவைமுதலியவரைப் பெற்றாள்.

**ஆதிசத்தி**—பராசத்தியில் ஆயிரத்தொருகூறு வலி யுடைத்தாய்ப் பெத்த முத்திகளில் வியாபிப்பது. (சதா·ம்)

**ஆதிசாரம்**—சிற்பநூல்களில் ஒன்று.

**ஆதிசேடன்** — கத்ருவின் குமரன், நாகன், (௧) மந்தரகிரியைப் பெயர்த்துத் தேவர்க்குதவினவன். (௨)அமுதகலசம்கருடன்கொண்டுவர அது மறைந்தது கண்டு அவ்விடமிருந்த தருப்பையை அமுதம் உண்ணும் விருப்பத்தால் நக்கி நாப்பிளவு பட்டவன். (௩)பிரமன் கட்டளையால் பாதலத்திலுள்ள நாகர்க்குத் தலைமைபூண்டு பூமியைத்தாங்கவும், கருடனிடம் சிநேகமும் பெற்றவன். (௪) பிருகு சாபத்தால் பலராமன், இலக்குமணன் முதலியவராகப் பூமியிற் பிறந்தவன். (௫) ஒருகாலத்தில் வாயுதேவனிடம் தன் பலம் அதிகம் என்று மாறு கொள்ளத் தேவர் யுத்தஞ்செய்தல் தகாது என்றனர். ஆதிசேடன் நாமிருவரும் மேருசிகரத்திற் செல்வோமெனச் சென்று தேவர் சொற்படி சேடன், நான் மேருவின் சிகரத்தைக் கவித்துக்கொள்ளுகிறேன் நீ அச்சிகரத்தைப் பெயர்த்து விடுகெனச் சபதங் கொண்டனர். வாயு, தன் முழுவலியாலு முயன்றுங் கூடாதது கண்டு தேவர், சேடனைச்சிறிது தலை தூக்கவஞ்சிக்க, வாயு அச்சமயத்தில் மலையின் சிகரத்தைக் கவர்ந்து கடலிலிட்டனன். அது இலங்கைத் தீவென்பர். (௬) பாற்கடலில் விஷ்ணுமூர்த்திக்குப் படுக்கையாகவும், பரமபதத்தில் ஆசனமாகவும், நடந்தாற் குடையாகவும் உதவுவோன் (௭) இவன், விஷ்ணுமூர்த்தியைத் தாங்கிக்கொண் டிருக்கையில் விஷ்ணுமூர்த்தியின் தேக வியர்வையைக் கண்டு காரணங்கேட்க விஷ்ணுமூர்த்தி சிவமூர்த்தி நடித்த நடனத்தில் மத்தளங் கொட்டியதால் வியர்வு தோன்றிற்று எனக்கூற அறிந்து அந்நடனங்காணச் சிதம்பரத்தலத்தில் பதஞ்சலியாய்த் தவஞ்செய்தவன். (கோயிற்புராணம், வடாரண்யபுராணம்). (௮) சிவமூர்த்தியின் முடியிலிருந்து நாம் சகலராலும் பூசிக்கப்படுகிறோம் என்று இறுமாந்த காலத்துச் சிவமூர்த்தியா விழுத்து எறியப்பட்டுச் சிரம் (௧000) பிளவுகளாயின. அவைகளைத் தவத்தாற் றலைகளாகப் பெற்றுச் சிவமூர்த்தியை அடைந்தவன். அதிக புத்தியுடையன். சகல கலைகளுமறிந்தவன். (௯) பதஞ்சலியாகப் பிறந்து சிவபூசை செய்தவன். (௧0) இவன் சுவதியென்னுந் தேவியைப் புணர்ந்து நாககன்னிகையைப் பெற்று அரித்துவசனுக்கு மணஞ்செய்வித்தான். (அவி-தலபுராணம்)

**ஆதிசைவர்**—சதாசிவமூர்த்தியின் திருமுகத்துதித்த கௌசிகர், காசிபர், பாரத்வாஜர், கௌதமர், அகஸ்தியர் முதலிய ரிஷிகோத்திரோத்பவராகிய வேதியர். இவர்கள் முதலில் சதாசிவமூர்த்தியால் தீக்ஷிக்கப்பட்டவர்களாதலின் இவர்கள் ஆதிசைவர்கள் எனப்பட்டனர். இந்த ரிஷிகளின் வழிவந்தவரும் ஆதிசைவர். இவர்களே கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் செய்யத்தக்கவர் ஆவார். மற்ற வேதியருக்கு அந்த அதிகாரம் இல்லை. இச்சைவர் அநாதிசைவர், ஆதிசைவர், மஹாசைவர், அநுசைவர், அவாந்தரசைவர், பிரவரசைவர், அந்யசைவர் எனவுங் கூறப்படுவர். இவர்களுள் அநாதிசைவர் சதாசிவமூர்த்தி. ஆதிசைவர் அவர் முகத்திற்றோன்றிய ரிஷிவம்சத்தவர். மஹாசைவர் ஆதிசைவரிடம் சிவதீக்ஷை பெற்ற வேதியர், அநுசைவர் சிவதீக்ஷை பெற்ற க்ஷத்ரிய வைசியர், அவாந்திரசைவர் சிவதீக்ஷை

பெற்ற சற்சூத்திரர். இவரொழிந்த மற்ற சைவர் அந்யசைவர் எனப்படுவர்.

2. சைவ வேளாளராகிய சைவாசாரியர்கள், தென்னாட்டில் தேவார திருவாசகங்களை ஓதும் ஓதுவார். இவர்களுந்தங்களை ஆதிசைவரென்பர்.

**ஆதிதிராவிடர்**—பறையரைக் காண்க.

**ஆதிதெய்விகம்** — தெய்வத்தா லுண்டாம் கன்மம், இது மாதாவின் கருப்பத்திலுண்டாம் விசனம், சநநம், நரை, திரை,மூப்பு, சுவர்க்க, நரகாதிகள் முதலிய.

**ஆதிதேயர்**—1. கச்யப பிரஜாபதிக்கு அதிதி தேவியிடம் பிறந்த குமாரர் இவர்களே. துவாதசாதித்தர் எனப்படுவர். அவர்களாவார்—தாதை, மித்திரன், அரியமான், சுக்ரன், வருணன், அஞ்சுமான், பகன், விவச்வந்தன், பூஷன், சவிதன், துவஷ்டா, விஷ்ணு. ஒரு கற்பத்திற் பிரசைகளைச் சிருட்டிசெய்யப் பிரமனால் சிருட்டிக்கப்பட்டவர்கள். இவர்கள் சயர் எனப்படுவர். பிரமன் கட்டளையை மறுத்தமையால் மன்வந்தரந்தோறும் பிறக்கும்படி சாபமேற்றவர்.

2. அதிதிபுத்ரர். தேவர்கள்.

**ஆதித்தகேது**—துரியோதனன் தம்பி. திருதராட்டிரன் குமரன்.

**ஆதித்தகேயன்**—திருதராட்டிரன் குமரன்.

**ஆதித்தசோழன்**--விஜயாலயன்குமரன்.இவனுக்குக் கோவிராஜகேசரிவர்மன், இராஜேந்திரசோழன் எனவும் பெயர். இவன் கொங்கு நாட்டின்மேல் படைகொண்டு சென்று அவ்விடத்தரசனாயிருந்த பிரிதிவிபதியின் குமாரனாகிய சிவமாரனைவென்று கொங்குநாட்டை வசப்படுத்தி இராஜாதிராஜன் எனப் பெயர்பெற்று உறையூரைத் தனது இராஜதானி யாக்கினான். இவன் கோவிஜய நிருபதுங்கன் மகளை மணந்து பல்லவதேசத்தையு முட்படுத்தினான் என்பர். இவன் தில்லையில் பல திருப்பணிகள் செய்தவன். இவன் பாலாற்றங் கரையில் களந்தையில் ஆதித்தேச்சுரம் என ஒரு சிவாலயங் கட்டுவித்தான். சூபன் எனும் செங்குந்தனைத் துணையாகக்கொண்டு இராஜாதிராஜ சோழன் பகைவனான ஈழநாட்டரசனை வென்றவன். இவனுடைய சமஸ்தானத்தில் ஒட்டக்கூத்தர் இருந்தார் என்பர். இவன் மகன் குலோத்துங்க சோழனுக்கு இவர் கல்வி பயிற்றுவித்தார்.

**ஆதித்ததிருஷ்டி**—சூரியன் நின்ற நாளுக்கு முன் மூன்று, பின் மூன்றுநாளும் குருட்டு நாள்களாம். அதற்கு முன்னான்கும், பின்னான்கு நாள்களும் ஒருகண் பார்வையுள்ள நாள்களாம். மற்ற நாட்கள் இருகண் பார்வையுள்ளனவாம்.

**ஆதித்தர்பன்னிருவர்**—வைகத்தன், விவச்சுதன், வாசன், மார்த்தாண்டன், பார்க்கரன், இரவி, உலோகப்பிரகாசன், உலோகசாக்ஷி, திரிவிக்கிரமன், ஆதித்தன்,திவாகரன், அங்கிசமாலி. இவர்கள் மாதம் ஒருவராய்க் கடவுளாஞ்ஞைப்படி இருளைப் போக்குவர்.

**ஆதித்தன்**—1. இவன் விஜயாலயன்குமரன், இவன் காலத்துத்தான் நிருபதுங்கபல்லவனுக்கும் சோழ பாண்டியர்களுக்கும் திருப்புறம்பியம், அரைசூர், வேம்பில் முதலிய இடங்களில் போர் நடந்தது. இதில் சோழபாண்டியர்கள் சுவாதீனமடைந்தனர். இந்த யுத்தத்தில் அபராஜிதவன்மனென்னும் நிருபதுங்கனுக்குத் துணைசெய்த கங்க அரசனாகிய பிரதிவிபதி வரகுண பாண்டியனால் திருப்புறம்பியத்தில் கொல்லப்பட்டான். ஆதித்தன்-1-க்கு பராந்தகன், கன்னரதேவன் என இரண்டு குமாரர்கள்.

2. சேரநாட்டரசருள் ஒருவன்.

3. சூரியன்.

**ஆதித்தியன்** — 1. நான்குமுகமுடைய சூரியன் சிவசூரியனுக்குப் பின்புறத்திலிருப்பவன்.

2. சிவகணத்தவரில் ஒருவன்.

**ஆதித்யமூர்த்தி** — ஏகமுகம், இரண்டு கைகளில் கமலங்கள், மாதளம்பூ நிறம், செவப்பு வஸ்திராத்ணபரணங்கள் உடையவராயிருப்பர்.

**ஆதித்யஹிருதயம்**—இது அகத்தியரால் சூரியனுக்கு உபதேசிக்கப்பட்ட மந்திரம்.

**ஆதிநாதர்**—சைன தீர்த்தங்கரரில் ஒருவர்.

**ஆதிபாரசன்** — மத்திரதேசாதிபதியின் குமரன்.

**ஆதிபௌதிகம்**—பஞ்ச பூதங்களால் ஆன்மாக்களுக்குண்டாம் நலந்தீங்குகள். குளிர், வெம்மை, மழை, காற்று, மின்னல் இடி, வீடிடிந்து விழல், மரம் விழல் முதலிய.

**ஆதிமந்தியார்** — இவர் ஓர் பெண்பாலர். இவர் திருமாவளவன் எனச் சிறந்த கரிகாற்சோழன் மகளார். சேரநாட்டரசனாகிய ஆட்டனத்தி என்பவனை மணந்தவர்

இவர் தம் நாயகனுடன் காவிரிக்குப் புதுப் புனல் விழவிற்குச் சென்று விளையாடு கையில் கணவனைக் காவிரி வவ்வியதனுல் எங்குந்தேடிக் காணுது கலுழ்ந்த கண்ண ராய்க் காவிரியோடும் வழியெல்லாம் புக் குக் கடல்வாய்ச் சென்று கணவனைக்கூவி யரற்றக் கடலே அவனைக் கொணர்ந்து கொடுக்கப் பெற்றவர். "மள்ளர் குழீஇய விழவினுனும், மகளிர் தழீஇய துணங்கை யானும், யாண்டுங்காணேன் மாண்டக் கோனை, யானுமோராடு களமகளே யென் கைக், கோடீரிலங் குவளைநெகிழ்ந்த, பீடு கெழுகுரி சிலுமோராடு களமகனே" என வருந்திப் பாடினர். (குறுங்) இச்செய்தி யைப் பாணர். "பாலை பாடியதில் அகம் "ஆதிமந்தியினறிவு பிறிதாகிப் பேதுற்றி சினே" எ-ம், மற்ருேரிடத்து "ஆட்டனத் தியைக்காணீரோவென நாட்டிஞட்டினூரி ஞரிற், கடல்கொண்டன்றெனப் புனலொ ழிந்தன்றெனக்,கலுழ்ந்தகண்ணற் காதலற் கெடுத்த ஆதிமந்திபோல, வேதஞ் சொல் விப் பேது பெரிதுறலே." எ-ம், அகம் குறிஞ்சியில் - வானுற - - - ஆட்டனத்தி நலனயந்துரைஇத், தாழிருங் கதுப்பின் காவிரிவவ்வலின், மாதிரந்துழைஇ மதி மருண்டலந்த, ஆதிமந்திகாதலற் காட்டிப், படுகடல் புக்கப்பாடல்சால் சிறப்பின் - - - வீர்ந்தணுறே" என எடுத்துக் காட்டினர். (அகம்) (குறுந்தொகை).

**ஆதியக்கன்**—திருதராட்டிரன் புத்ரன்.

**ஆதியாவிரதன்**—இருஷபனுக்குச் சயந்தி யிட முதித்த குமரன்.

**ஆதியான்மிகம்**- தன்னுலுண்டாம் நலந்தீங்கு கள் அவை, தேகவியாதி, மிருகம், பசாசு, அரசன், கள்வர், பகைவர் முதலியவர் களாலுண்டாவன. பிறருடைய செல்வம், கல்வி, மனை முதலிய கண்டு பொருமை இச்சை முதலிய கொளல் முதலிய.

**ஆதிரதன்**—சத்தியகர்மாவின் குமரன். இவ னுக்குப் புத்திரர் இல்லை. இவன் கங் கைக்குச் செல்ல அவ்விடம் கர்ணனைக் கிடத்திக் குந்தி ஆற்றில்விட்ட பெட்டியை எடுத்துக் கர்ணனை வளர்த்தவன்.

**ஆதிராஜன்**—உபமன்னியரைக் காண்க

**ஆதிரை**—1. ஒரு நக்ஷத்திரம். பிரமன் சரஸ் வதிதேவியைச் சிருட்டித்துத் தான்புண ரச் செல்லுகையில் சரஸ்வதி மானுருக் கொண்டோடினள். பிரமனும் அவ்வு ருக்கொண்டு தொடர்ந்தனன். தேவர் வேண்டுகோளாற் சிவமூர்த்தி வேடுருக் கொண்டு ஆண்மானை எய்ய, அதினின் றும் ஒரு சோதி தோன்றி ஆதிரை நாளா யிற்று.

2. சாதுவன் மனைவி, கணவனிறந்த தாற் றீப்புகத் தீச்சுடாமையால், கணவன் வரவை அசரீரி சொல்லக்கேட்டு கணவன் வரக் கண்டு கூடிவாழ்ந்தவள். மணிமே கலைக்கு முதற்பிச்சை யிட்டவள். (மணி மேகலை).

**ஆதிவண்சடகோபசீயர்** — சடகோபாசாரி யரைக் காண்க.

**ஆதிவராககவி**—இவர் சோழநாட்டு வேதி யர், வடமொழியில் பாணகவி இயற்றிய காதம்பரி எனும் கிரந்தத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடலாகப் பாடியவர்.

**ஆதிவராககேது**—விராடனுக்குச் சுரதையி யிடம் பிறந்த குமரன்.

**ஆதிவராகமூர்த்தி**—உலகம் சலத்தில் மூழ் கிற்றென்று ஏங்கிய பிரமதேவன் நாசி யில் உதித்து இரண்யாக்ஷனைக் கொலை செய்து ரக்ஷித்த விஷ்ணுமூர்த்தியின் அவ தாரம்.

**ஆதிவாயிலார்**—பரதசேனாபதிய நூலாசிரி யர்.

**ஆதூர்த்தன்**—அதூர்த்தனைக் காண்க.

**ஆதோண்டைச்சக்கரவர்த்தி** — கரிகாலச் சோழன் வேட்டைக்குச் சென்று நாக கன்னிகையைக் கண்டு மோகிக்க, அக் கன்னிகை யாசனை நோக்கி என்னிடம் பிறக்கும் குமானுக்கு உன் அரசு கொடுப் பதாயின் மணப்பேன் என, அவ்வகையே அரசன் உடன்பட்டு உன்னிடம் பிறக்கும் குமரன் வயதுவந்து நான் என் குமா னென்றவனை அறியும்படி, இப்போது நாமிருக்கு மிந்த ஆதொண்டையின் மலர் மாலை சூட்டியனுப்பின் அவ்வகை செய்கி றேன் என்றனன். நாககன்னிகை, அரச னைக்கூடித் தன்னுலகஞ் சென்று, குமா னைப்பெற்று வளர்த்து அவனுக்குப் பரு வம் வந்தபின் ஆதொண்டைமாலை சூட்டிக் கடலில் விட்டனள். கடல் அவனைக் கரை யிற் சேர்த்தது ; ஆதலால் திரையன் எனப்பட்டு அரசன் அவைசென்று தன் வரவினைச் சோழனுக்கறிவிக்க அரசன் மறுத்தனன். பின்பு ஆகாசவாணியாலும் ஆதொண்டைமாலையாலும் தன் குமா னென முன்பு அறிந்து இளவரசாகப் புத் திரனுக்குக் காவிரிக்கரையைச் சார்ந்த

நாட்டினைக் கொடுத்து நாககன்னிகையின் குமரனுக்குக் காஞ்சிமண்டலத்தை யளித்து ஆதொண்டைச் சக்கரவர்த்தியெனப் பெயருமிட்டனன். அதுமுத லிவனுண்ட நாடு தொண்டைநாடெனப்பட்டது. இவன் புழற்கோட்டத்திருந்த குறும்பரசரை வெல்லச் செல்லுகையில் அரசன் ஏறியிருந்த யானையின் கால் முல்லைக்கொடியாற் கட்டுண்டது. அரசன் கையிலிருந்த வாளால் அதனை வெட்டினன். அவ்வெட்டு அவ்விட மெழுந்தருளியிருந்த சிவலிங்கமூர்த்தியின் மீதுபட்டு உதிர வெள்ளம் உண்டாயிற்று. அரசன் பயந்து வேண்டச் சிவமூர்த்தி காக்ஷிகொடுத்து, நந்திபிரானை அழைத்துப் படைத்துணையேவிக் குறும்பரசரை வெல்வித்தனர். இச்சிவமூர்த்தி தரிசநந்தந்த தலம் திருமுல்லைவாயி லெனப்பட்டது.

**ஆத்திகன்**—ஜரத்காருரிஷிக்கு ஒரு பெயர்.

**ஆத்திசூடி**—ஔவையார் அருளிச்செய்த நீதி நூல்.

**ஆத்திசூடிபுராணம்** — ஆத்திசூடியினீதியை முதலாகவும், சூத்திரப்பொருள் மாறுமலும் விருத்தத்தால் பாடியநூல். இதிற் பெரும்பான்மை பெரியபுராணக் கதைகள் அடங்கியுள்ளன.

**ஆத்திசூடிவெண்பா** — ஆத்திசூடி நீதியை இறுதி யடிதோறுங்கொண்டு வெண்பாவாற் பாடப்பட்ட ஒரு நூல்.

**ஆத்தியந்திகப்பிரளயம்**—எல்லாப்பொருள்களும் அதனதன் காரணத்துள் ஒடுங்க ஆன்மா ஞானத்தால் முத்தியை அடையும் பிரளயம்.

**ஆத்திரேயர்**—1. அத்திரியைக் காண்க.

2. திருவல்லிக்கேணியிற் பெருமாளைப் பிரதிட்டைசெய்து பூசித்த இருடி.

**ஆத்திரையன் பேராசிரியன்**—ஒரு தமிழாசிரியர். இவர் செய்த நூல்கள் காணப்படவில்லை. ஒரு பொதுப்பாயிரங் காணப்படுகிறது. இவர் தொல்காப்பியத்திற்கு உரை எழுதியவர்போலும்.

**ஆத்மா**—இது ஆன்மத்வ சாமான்யமுடையது. சுகதுக்க முதலிய வேறுபாட்டாற் பல. இதற்குச் சங்கிய முதலிய ஐந்தும் சாமான்ய குணங்கள், புத்தி, சுகம், துக்கம், இராகம், த்வேஷம், பிரயத்னம், தர்மம், அதர்மம், பாவனை முதலிய (கூ) விசேஷ குணங்கள். (தருக்கம்)

2. இது பலவாய், நித்யமாய், ஆணவாதி மலத்தால் மறைப்புண்டு பசுவெனப்பட்டுக் கர்மத்திற்கீடாகத் தேகமெடுத்துப் போகங்களைப் புசித்து அப்புசிப் பாலுண்டாகிய இதாகிதங்களால் பாவ புண்ணியங்களையார்ச்சித்து அவற்றால் இறந்தும் பிறந்தும் வருவது. இவ்வான்மாக்கள் ஆணவாதி மாயாகன்மங்களின் இன்மையுண்மைகளால் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூவிதப்படுவர். (சித்தா).

**ஆத்மாச்ரயம்**—தன்னைத் தானே பற்றுதல் எனும் குற்றம்.

**ஆநகதுந்துபி**—1. வசுதேவருக்கு ஒரு பெயர்.

2. இவன், சாளுவனுடன் கர்ணன் போர்செய்ய, கர்ணன் அவனால் அந்தப் போரைவிட்டு நீங்கும்படி மாயையால் உருவாக்கப்பட்டுச் சாளுவனால் வெட்டப்பட்ட மாயாவசுதேவவுருக்கொண்டவன்.

**ஆநகன்**—1. வசுதேவருக்குத் தம்பி. பாரி கர்நகை. குமரன் இருததாமன்.

2. சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரன்.

**ஆநந்தகிரி**—ஒரு சம்ஸ்கிருத கவி. சங்கராசாரியரின் மாணாக்கர். இவர்க்குத் துரோடகாசாரியர் எனவும் பெயர்.

**ஆநந்தக்கூத்தர்**—திருவாசகத்திற்கு உரையியற்றிய புலவர்.

**ஆநந்தசித்தர்**—ஒரு சித்தர்.

**ஆநந்ததீர்த்தர்**—மத்வாசாரியர், இவர் சாலிவாகனசகம் (க0சகூ) இல் பிலவங்க வருஷம் பிறந்தவர். இவர் தேவர்கள், கலியில் தெய்வபக்தி குறைதல்நோக்கி விஷ்ணுவைப் பிரார்த்திக்க விஷ்ணுமூர்த்தி வாயுவின் அவதாரமாக இவரைப் பூமியில் உடுபி எனும் ரஜிதபீடபுரத்தையடுத்த சிவரூப்யமென்னும் கிராமத்திருந்த மத்யகேஹபட்டாசாரியரின் மனைவியிடம் பிறப்பித்தனர். இவர் பிறந்து வாசுதேவாசாரியர் என்று முதற்பெயர் பெற்றுப் பூர்வாலயன் தந்த பசுவின் பாலுண்டு வளர்ந்து தந்தை தாயாரால் காட்டின்வழிச் செல்லுகையில் பிசாசங்களால் பீதியடைந்த வழிப்போக்கரைக் காத்து, தாய் காரியவசமாக வெளியிற் சென்றிருக்கையில் அழுது தமக்கையால் கொள்ளினை உண்பிக்கவுண்டு, துன்பமிலாதிருந்து ஓராண்டில் பசுவின் வாலைப்பிடித்து மறைந்து போய்ச் சாயங்காலம் வீடுவந்து சேர்ந்து,

தம் தந்தை எருதுவாங்கின கடனுக்குத் தொந்தரை செய்தவனுக்குப் புளியங் கொட்டைகளைப் பொன்னாக்கிக் கடனளித்து, நெடுந்தூரத்தில் நடந்த கல்யாணத்திற்குத் தாய் தந்தையருடன் சென்று குழந்தைப்பருவத்தில் தனித்துக் காட்டின் வழி மீண்டு உடுப்பி பட்டணமடைந்து, அதிவிரைவில் கல்வி வல்லவராய்க் கிருதவல்லி கிராமத்திற் சென்று சிவபட்டென்பவன் பிரசங்கித்ததற்குத் தவறுகூறிச் சரிப்படுத்தி, தம் தந்தை பிரசங்கித்த புராணத்தில் கூறாதுவிட்ட லிகுசபதத்திற்குப் பொருள்கூறி, உபநயனாதிகளைப் பெற்றுப் பாம்புகடிக்க அதைக் கட்டைவிரலால் நசுக்கித் துன்பமிலாதிருந்து, ஒரு குருவிடத்தில் வேதாத்யயனஞ் செய்கையில் விளையாடுவதைக்கண்ட குரு அத்யயனஞ் செய்ததைக் கூறுக என அக்குரு வியப்படையுமாறு தவறாதுகூறி, ஒரு காட்டில் தம்முடன்வந்த நண்பனொருவனுக்கு இளமை முதலிருந்த தலைநோயைக் காதில் ஊதிப் போக்கி, தாம் துறவடைய எண்ணிக் குருவைத் தேடிச் செல்லுகையில் ஒரு கிராமத்தில் அச்சுதபிரேக்ஷர் எனும் துறவியைக்கண்டு, தமக்குத் துறவீய வேண்டுகையில் தந்தை தாயார் மறுக்கக் கண்டு இதை மறுப்பிரேல் நான் உங்கள் கண்ணெதிர்ப்படாது எங்கேனும் போய் விடுவே னென்றதைக் கேட்ட தாய் தந்தையர் முன்னிருப்பினும் கண்டு களிக்கலாமென்று உத்தரவளிக்கச் சன்னியாசாச்சிரமம் பெற்று, பூர்ணபிராஞ்ஞர் எனும் தீக்ஷாநாமம் அடைந்து, கங்கையாட வெண்ணிப் பெருமாளருளால் அக் கங்கையை உடுப்பியிலுள்ள தடாகத்தில்வரப் பெற்று மூழ்கி, வாசுதேவன் முதலிய பிரதிவாதிகளைச் செயித்துத் தம் ஆசாரியர் உபதேசித்த அத்வைத கிரந்தமாகிய இஷ்டசித்தியின் முதற் சூத்திரத்திற்கு முப்பத்திரண்டு குற்றங்கூறி, அங்கிருந்தாருக்கு மாயாவாதம் பொய்ம்மதமென்று பிரசங்கித்து, தவறாக அச்சுதப்ரேக்ஷரிடம் சீடர் வாசித்த பாகவத சுலோகத்தைத் திருத்தி வியாசர் கருத்துக்கூறிக் களிப்பித்தனர். இவ்வாறு சில நாட்கள் கழிந்தபின் அச்சுதபிரேக்ஷதீர்த்தர் பிரமமீமாம்சாசாத்திர விருத்தியின் பொருட்டுப் பூர்ணபிரஞ்ஞாசாரியரை நியமிக்கக் கருதிச் சங்காபிஷேகஞ் செய்து ஆநந்த தீர்த்த நாமங் கொடுத்தனர். அதுமுதலிவருக்கு ஆநந்ததீர்த்தர் என்று பெயருண்டாயிற்று. மாயாவாதி ஒருவனுடன் வாதிட்டுச் செயித்து அநுமானதீர்த்தர் என்று பெயரடைந்து, வாதிசிங்கன், புத்திசாகரன் எனும் பௌத்தரிருவரை வென்று, கேரளதேசத்தில் சங்கரபாஷ்யத்தின்மீது குற்றங்கூறிச் சங்கரரைப் பரிகசித்து, புண்யக்ஷேத்ரங்களைத் தரிசித்து, பள்ளிக்கொண்டை கிராமமடைந்து ஆங்குத் தம்மை எதிர்த்து வாதித்தவர்களை வென்று தம்மிருக்கையடைந்து கீதாபாஷ்யஞ் செய்து பதரிகாச்சிரம யாத்திரைசெய்ய எண்ணிக் குருவி னநுமதிபெற்றுச் சென்று பதரியில் ஆநந்தமடத்தை அடைந்து அங்கிருந்த பெருமாள்முன் தாம் செய்த கீதாபாஷ்யத்தைப் பிரசங்கித்துப் பெருமாளைக் களிப்பித்து, மௌனவிரதஞ் சரித்து, வியாசரைக் கண்டு அவர் கட்டளையால் அவர் வசிக்குமிடஞ் சென்று அவரைத் தரிசித்து அவரிடம் சில இரகசியங்களை உணர்ந்து, அங்கிருந்த நாராயண மூர்த்தியின் அநுஞ்ஞையால் பிரம்ம சூத்ரபாஷ்யஞ் செய்யத் திரும்பித் தம்மிருப்பிடம் வர வெண்ணுகையில் இடையில் கோதாவரிக்கரைக்கண் தம்மை எதிர்த்து வாதிட்ட பாட்ட, பிரபாகர வாதிகளை வென்று, சோபனபட்டு என்பவனுக்கு வேண்டியவை உபதேசித்து ரஜிதபீடபுர மடைந்து ஒரு கிருஷ்ண விக்ரகம் பிரதிஷ்டிக்கவெண்ணிக் கடற்கரையிலிருக்கையில் கப்பலொன்று துறைதடுமாறக் கப்பலாளி இது துறைசேரவேண்ட, அங்ஙனமே அது துறைபுகக்கண்ட கப்பற்காரன் இக்கப்பலில் தங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளுக என இவர் அதிலிருந்த கோபி சந்தனக்கல்லினை யெடுத்து மடமடைந்து அதனை அலம்பக் கட்டளை யிட்டனர். அது ஒரு கிருஷ்ணவிக்ரகமாக இருக்க அதனைத் தமதிருக்கையில் பிரதிட்டித்து அபிஷேகாதிகள் செய்து மீண்டும் பதரி யடைந்து தாம் இயற்றிய பிரம்மசூத்ர பாஷ்யத்தை அவர்முன்கூறித் திரும்பி ரஜிதபீடபுர மடைந்தனர். இவர் பதரிகாச்சிரமஞ் செல்கையில் ஈச்வரதேவனெனும் அரசன் வழிப்போக்கரை அழைத்துக்குளமெடுக்கச்சொல்வதுபோல் இவரையும் அவ்வாறு செய்யக்கூற இவர் நீர் தோண்டிக்காட்டி னவ்வாறு செய்வே

னெனக் கேட்டு அவ்வகையே பொழுது போம்வரையில் அவன் செய்து ஆசாரியரிடத்துப் பரவசப்பட்டனன். இவர் கங்கையைத் தாண்டப் படகிலாமைகண்டு தம் மாணுக்கர் தம்மைப் பிடித்துவரக் கங்கையை நடந்து தாண்டி, அச்கங்கைக்கரைக்கணிருந்த துருக்க அரசனொருவனுக்கு அவன் பாஷை அறியாதிருந்தும் அவன் பாஷையில் விடையளித்து, தம்மிடம் வந்த கள்வரை அவர்க்கவரே வதையுண்டு சாகச்செய்து, மற்றொரு இடத்தில் நூறு கள்வர் எதிர்க்கத் தமது சீடராகிய உபேந்திர தீர்த்தரிட மிருந்த கோடரியால் அவர்களைத் தாமே வதைத்து, இமயபர்வதத்தருகில் பூஜைப்பெட்டகம் தாங்கித்தமக்கு முன்செல்லும் சத்தியதீர்த்தரைப் புலியுருககொண்டு கொல்லவந்த அரக்கனைக் கையாலறைந்து கொன்று பதரியடைந்து வியாசரைக்கண்டுஅவர் தமக்குக் கொடுத்த எட்டு விஷ்ணுமூர்த்திகளைப் பெற்று அவர் கட்டளையால் பாரததாத்பர்யம் செய்ய உத்தரவு பெற்று மீண்டு, கங்கையைத் தம்பிக்கச்செய்து அதில் நடந்து தாண்டி அதின் தீரத்தில் கங்கை பெண்ணுருவடைந்து தம்மை வணங்கப்பெற்று, தம் சீடர் பலத்தால் செருக்கடைந்தமைகண்டு அவர்களை அடக்கவெண்ணிப் பதினைவரைத் தாம் ஒருவரே பூமியில் தள்ளியெழுந்திராதிருக்கச் செய்து, இந்திரபுரியெனும் மாயசந்நியாசிகர்மம் பிரதானமென்று எதிர்க்க அவனைவென்று, கோவிஷயகிராமத்தில் பூவாது காயாதிருந்த மரங்களைக் காய்க்கச்செய்து, மாயாவாதியாகிய புண்டரீகபுரி என்பவனை வாதில் வென்று, பத்மதீர்த்தனை வென்று, ஜயசிங்கராசனை நட்புக்கொண்டு, திரிவிக்ரம பண்டிதனைச் சிஷ்யனாக்கிக்கொண்டு, முப்பத்தேழுகிரந்தங்களியற்றினர். இவர் மாணுக்கர்கள், விஷ்ணுதீர்த்தர், இருஷிகேசதீர்த்தர்,ஜனார்த்தனதீர்த்தர், நரஸிம்மதீர்த்தர், உபேந்திரதீர்த்தர், வாமனதீர்த்தர், ஸ்ரீராமதீர்த்தர், அதோக்ஷதீர்த்தர், திரிவிக்ரம பண்டிதர் முதலியோர். இவர், தம் மாணுக்கருக்குப் பாடஞ் சொல்லுகையில் தீபமவியக்கால் விரலில் ஒளியுண்டாக்கிப் படிப்பித்து, மனிதரெடுக்கக் கூடாத ஒரு பெரும்பாறையைத் தூக்கிப் பலர்க்கும் பயன்பெறச் செய்து, கடிஜா எனும் பலாஷ்டிகனும் அவன் சகோதரனும் கூடி இவர் கழுத்தைநெருக்கி அவர்கள் களைத்து விழ, அவர்களுக்குத் தமது கைப்பெருவிரலை ஊன்றியதைத் தூக்கக்கூறி அவர்களதை இடம்விட்டுப் பெயர்க்கா தினைக் கண்டவமதித்து, சிலகாலமிருந்து தமது பூசை முதலியவைகளைப் பத்மநாபதீர்த்தரிடம் ஒப்புவித்துத் தாம் பதரியடைந்தனர்.

**ஆநந்தமதம்** — இம்மதத்தாபகர் இராமாநந்தர். இவர் கிறிஸ்து பிறந்த (கஉ) வது சகாத்தத்தில் பிரபலமான விஷ்ணு பக்தராயிருந்தனர். இவர் மதம் சற்றேறக்குறைய இராமாநுஜ மதத்தை யொத்தது. இம்மதத்தவர் கோபி சந்தனத்தால் தென்கலை திருமண்போலிட்டு இராம மூர்த்தியை உபாசிப்பர். இம்மதத்தவர் ஆக்ரா முதலிய தேசங்களில் அதிகம்.

**ஆநந்தன்**—சூரியசன்மாவைக் காண்க.

**ஆநர்த்தம்** — துவாரகைக் கருகிலுள்ள ஒரு தேசம். ஆநர்த்தனுல் நிருமிக்கப்பட்டது.

**ஆநர்த்தன்**—(சங்.) சர்யாதியின் குமரன். இவன் குமரன் ரைவதன். குசத்தலி என்னும் பட்டணத்தை ஆண்டவன்.

**ஆநாகரோகம்** — அபானவாயுவும், உதானவாயுவும் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து வயிற்றைப் பெருவாக இழுத்துக்கொண்டு வயிற்றிரைச்சல், மலச்சிக்கல், சுரம், சுவாசம் முதலிய உபத்திரவ முண்டாக்குவது. இது அஷ்டிலாரோகம், பிரத்தியஷ்டிலாரோகம், துனிரோகம், பிரதிதுனிரோகம், சலகூர்மரோகம் எனப் பாகுபடும். இந்தச் சலகூர்மரோகத்தை நீராமைக்கட்டியென்றும், ஊராமைக்கட்டியென்றும், கொண்டைகட்டி, வல்லைகட்டி யெனவுங் கூறுவர். (ஜீவரக்ஷாமிர்தம்.)

**ஆநீகன்**--ஆநகன் குமரன். யதுவம்சத்தவன்.

**ஆந்தாகம்**—கிருஷ்ணு, காவேரி நதிகளுக்கு மத்தியிலுள்ள தேசம். (The Country between Godavery and Krishna.)

**ஆந்தான்** — பலியின் மனைவியிடம் தீர்க்கதபசா லுதித்த குமான்.

**ஆந்திரம்** — கண்ணுவர் முதலியவரால் நிருமிக்கப்பட்ட தெலுங்கு பாஷை. இப்பாஷை வழங்குந் தேசத்திற்கும் ஆந்திரம் என்று பெயர். இது மேற்குத்தொடர்ச்சி மலையை மேற்கிலும், கோதாவரி கிருஷ்ணை நதிகளை வடக்கிலும் தெற்கிலுமாகக்கொண்ட தேசம். இது தெலிங்காணு எனப்படும்.

**ஆந்திரர்** — பரதகண்டம் ஆண்ட அரசருள் ஒருவகையர்.

**ஆந்தை**—எயிலியூர்க்குத் தலைவன். ஒல்லையூர் தந்த பூதபாண்டியனுக்கு நண்பன். 2. ஒரு பறவை. இதன் முகம் உருண்டும், கண்கள் திரண்டும், தலைபருத்தும், இறகுகள் தடித்தும், நகங்கள் வளைந்து கூராகவும், கபிலநிறமாகவும் உள்ளது. இது பகலெல்லாம் மரப்பொந்து பாழிடங்களில் தூங்கி இரவில் இரைதேடப் புறப்படும். நிறம் கபிலம். எலி, பூச்சிகள் முதலிய உணவு.

**ஆந்தைக்காதல்**—இது ஆந்தையின் கூப்பிடலால் சுபா சுபங்களை அறிதல். ஒருரை உரைக்கு மாகிலுற்றதோர் சாவு சொல்லும். ஈருரையுரைக்குமாகி லெண்ணிய கரும நன்றாம், மூவுரையுரைக்கு மாகில் மோகமாய் மங்கை சேர்வாள், நாலுரையுரைக்கு மாகில் நாழியிற்கலகஞ் சொல்லும், ஐயுரையுரைக்கு மாகிலங்கொரு பயணஞ் சொல்லும், ஆறுரையுரைக்கு மாகிலடுத்தவர் வரவுகூறும், எழுரையியம்புமாகி விறந்த பண்டங்கள் போதும், எட்டுரையுரைக்கு மாகில் திட்டெனச் சாவு சொல்லும், ஒன்பதும் பத்துமாகி லுத்தம மிகவு நன்றே.

**ஆபகம்**—ஒரு நதி. The Ayuk-nadi to the west of the Ravi in Punjab.

**ஆபர்சைவன்**—வசுக்களில் ஒருவன். அகனுக்கு ஒரு பெயர்.

**ஆபதோத்தாரணமூர்த்தி** — தேவர் முதலியோர்க்குத் துன்பம் வந்தகாலத்து அதைப் போக்க எடுத்த சிவன் திருவுரு.

**ஆபத்தம்பர்**—யசுர்வேத விதிகளைப்பற்றிச் சூத்திரஞ் செய்த மகருஷி. இவர் செய்த சூத்திரம் ஆபத்தம்பம் எனப்படும்.

**ஆபன்**—வசுக்கள் எண்மரில் ஒருவன். குமரர்கள் சதபதன், சிரமன், சிராந்தி, துனி.

**ஆபிஞத்திரன்**—சூரியவமிசத்தரசன். யோகியாயினன்.

**ஆபிரம்**—ஒரு தேசம். சிந்துநதிக்கு வடக்கிலுள்ளது.

**ஆபிரர்**—பரதகண்டமாண்ட பூர்வ அரசசாதிகளி லொருவகையர்.

**ஆபிரிக்காகண்டம்**—இது வடக்கில் மத்யதரைக்கடல், கிழக்கில் செங்கடல், இந்து மகாசமுத்ரம், மேற்கில் அத்லாந்திக் மகா சமுத்ரங்களால் சூழப்பட்ட பூபாகம். ஆப்ரிகாவின் தேசங்கள் ஐரோப்பியர், பலரால் ஆளப்பட்டு வருகின்றன. இவற்றில் ஆங்கிலர், கேப்காலனி, நெடால் ஆரெஞ்சு நதிகாலனி, டிரான்ஸ்வால் முதலியவும், பிராஞ்சியர், ஆல்ஜீயரியா, டியூனிஸ், ஸெனிகாம்பியா, காங்கோ, சோமாலிலாண்ட் முதலியவும், ஜெர்மானியர், கண்டத்தின் மேற்பாகத்திற் சிலவும், சாட் ஏரியடுத்த சிலபாகங்களும், டாங்கினியாகா எனும் ஏரியடுத்த பாகங்களையும், போர்த்துகேசியர் அங்கோலா முதலிய சிலபாகங்களையும், ஸ்பானியர் கண்டத்தின் மேல்பால் சிலவற்றையும் ஆளுகின்றனர். இதில் சுதேசராஜ்யங்கள், மொராகோ, அபிஸீனியா, லிபரீயா முதலிய.

**ஆபீரம்**—ஆரியாவர்த்தத்தி லிருக்கும் ஒரு தேசம்.

**ஆபுத்திரன்**—சாலியின் புதல்வன். தென் மதுரையில் கலாநியமத்துப் பிறந்தநாள் முதல் எழுநாள் பசும்பாலூட்ட உண்டு வளர்ந்தவன். சிந்தாதேவி தந்த அமுதசுரபி யென்னும் பாத்திரம் பெற்றுப் பலவுயிர்களைக் காத்து மணிப்பல்லவத்து இறந்து பின்பு சாவகநாட்டுள்ள நாகபுரத்தில் பசுவயிற்றிற் பொன்முட்டையிற் றங்கிப் புண்ணியராசனாகப் பிறந்தவன். (மணிமேகலை).

**ஆப்தங்கள்**—பாண்டவாப்தம், சாலிவாகன சகாப்தம், விக்ரமாதித் யாப்தம், போஜராஜாப்தம், கொல்லாப்தம், ராமதேவாப்தம், பிரதாபருத்ராப்தம், கிருஷ்ணராயாப்தம்.

**ஆப்தன்**—கத்ரு குமரன், நாகன்.

**ஆப்தியர்**—அப்புபுத்திரர். இவர்கள் மூன்று சகோதரர்கள். இவர்கள் ஒரு வனாந்தரத்தில் யாத்திரை செய்கையில் தாகமேலிட்டது. இவர்களில் ஒருவன், மற்ற இருவர்பொருட்டு அங்கு இருந்த கிணற்றில் நீர்மொள்ள இறங்கிச் சலம் ஏந்தினன், தண்ணீர்பெற்ற சகோதரர்கள், அவ்வனிடம் இருந்து ஜலத்தைப் பெற்றுக்கொண்டு ஒரு பாரமான வண்டிச்சக்கரத்தால் அக்கிணற்றில் அவன் அடங்க மூடிச் சென்றனர். இவன் அக்கிணற்றி லிருந்து சில வேதகீதங்களை ஓதினன். (இருக்குவேதம்).

**ஆப்பியாயினி** — பதுமையின் பார்ப்பனத் தோழி. அவளோடு ஒருங்கு வளர்ந்தவள். தோழமைக்குரிய இயல்புகளிற் சிறந்த

வள். உதயணனுடைய பார்ப்பனத்தோழனாகிய இசைச்சனென்பவனால், இவள் மணஞ்செய்து கொள்ளப்பட்டாள். இப்பெயர் யாப்பியாயினியெனவும் வழங்கும். (பெருங்கதை).

**ஆப்பியாள்**—ஆறும் மன்வந்தரத்துத் தேவர்கள்.

**ஆமணக்கு**—ஒருவித எண்ணெய்தரும் வித்தமைந்த செடி. இது செவ்வாமணக்கு, மலையாமணக்கு, கடலாமணக்கு, காட்டாமணக்கு, எலியாமணக்கு, புல்லாமணக்கு, பறங்கியாமணக்கு, மணியாமணக்கு, பேராமணக்கு, படுக்கையாமணக்கு, சிற்றாமணக்கு எனப் பலவகை.

**ஆமூர்**—1. மகா பலிதல மென்பர்.

2. இது முக்காவனாட்டுள்ளது (புற-நா)

**ஆமூர்க்கவுதமன்சாதேவனார்**--இவர் கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். இவர் ஆமூர்வானவனைச் சிறப்பித்துப் பாடினவர். இவர் அந்தணராயிருக்கலாம். (அக-கடுக).

**ஆமூர்முதலி**—களப்பாளனைக் காண்க.

**ஆமை**—இது ஊர்வனவற்றில் ஒரு பிராணி. இது நீரிலும் தரையிலும் உண்டு. இதன் மேலுங்கீழுமாக ஓடுகள் உண்டு. மேலோடு (கங) சிறு ஓடுகளால் இணைக்கப்பட்டது. மேல்மூடியி லிரண்டு த்வாரங்களுண்டு. மேல்த்வாரத்தின் வழியாகத் தலை கைகளை நீட்டும், கீழ்த்வாரத்தால் கால்களையும் வாலையும் நீட்டும். இதற்குப் பல் இல்லாவிடினும் உறுதியான தாடைகளுண்டு. இது எந்தப் பிராணிகளையும் இம்சிக்காது. இது நீரில் சுவாஸம் விடாமல் பலநாள் ஜீவிக்குமாம். இது (சுO) வருஷங்களுக் கதிகம் ஜீவிக்கும். இது வெளியில் முட்டையிடும். முட்டைகள் சூர்ய வெப்பத்தால் பொரியும். இவ்வினத்தில் கடலாமை பெரியது. பச்சையாமையும் உண்டென்பர். இவை (கசுO) முட்டையிடுமென்பர். இவ்வுரு, திருமாலால் அசுரவதைபொருட்டுக் கொள்ளப்பட்டது.

**ஆமோதன்**—பிரியவிரதன் பேரன். கிருதபிருஷ்ணன் குமரன்.

**ஆம்பிகேயன்**--அம்பிகையிடத்து வியாஸராற் பிறந்தவன் திருதராட்டிரன்.

**ஆயண்டிரான்**—ஆயைக் காண்க.

**ஆயதி**—மேருவின் குமரி. தாதாவின் தேவி. குமரன் மிருகண்டு.

**ஆயம்** — ஆண்டுதோறும் மாதந்தோறும் நாடோறும் அரசனுக்குரியவாகவரும் பொன், பசு, நெல், குதிரை முதலிய வரவு. (சுக்கிரநீதி).

**ஆயர்** — இடையர், இவர்கள், இடையர், கோலாயர் என இருவிதப்படுவர்.

**ஆயனார்** — திருக்குருகூரில் எழுந்தருளிய பெருமாள்.

**ஆயாதி**—நகுஷன் குமரன்.

**ஆயியாழ்வான்பிள்ளை** — தீர்த்தபிள்ளைக்கு ஒரு பெயர்.

**ஆயிரக்கவசன்**—ஓர் இராக்கதன். இவன் தேவர்களை வருத்த நரநாராயணரிவனிடம் யுத்தஞ்செய்து இவன் பூண்ட தொளாயிரத்துத்தொண்ணூற்றென்பது கவசங்களை அறுத்தனர். ஒரு கவசமிருக்கையில் சூரியனிட மடைக்கலமாகப்புகுந் துயிர் பிழைத்தவன். இவனே மறுபிறப்பிற் கவசத்துடன் பிறந்த கர்ணன்.

**ஆயிரத்தெட்டுச்சிவத்தலங்கள்** — மகாஸ்காந்தம், அண்டகோசப்படலத்திலும் சிவரகஸ்யத்திலும் கூறப்பட்டிருத்தல் காண்க.

**ஆயிரபாதன்**—1. ஒரு முனிவன். இவன் ஒரு முனிவராற் பாம்பாகச் சபிக்கப்பட்டு உரூரவமுனிவராற் சாபநீக்கமடைந்தவன்.

2. சண்முகசேநாவீரன்.

**ஆயிரம்பரிக்கோர்சேவகசோழன்**—இவன் சுந்தரேச பாதசேகர பாண்டியனுடன் யுத்தஞ்செய்து மடிவி லிறந்தவன்.

**ஆயிரவாகு**—1. சண்முகசேநாவீரருள் ஒருவன்.

**ஆயிரவேலி**—நெடுஞ் செழியன் அதியனைப் பொருதுவென்ற இடம்.

2. பாரதப்போரில் பதினான்காம் நாள் அருச்சுனனாலிறந்தவன்.

**ஆயு**—1. (சங்.) புரூரவனுக்கு உருப்பசியினிடம் பிறந்த குமாரன். இவன் குமரர் நகுஷன், க்ஷத்ரவிரதன், ரசி, ரம்பன், அநேநஸ். இவனுக்கு ஆயுசு எனவும் பெயர்.

2. காசிபர் மனைவி. குமரர் விசயன், விசரன், வீரன், விருத்திரன் முதலியோர்.

**ஆயுசு**—1. ஆயுவுக்கு ஒரு பெயர்.

2. சந்திரவம்சத் தரசரில் ஒருவன், காண்டவப்பிரத்த மாண்டவன்.

3. பிராணனெனும் வசுவின் குமரன்.

**ஆயுதப்போது**—வளைவிற்பொறி (இது வளைந்து தானே எய்வது), கருவிரலூகம் (இது குரங்குபோலிருந்து சேர்ந்தாரைக் கொல்வது), கல்லுமிழ்கவண், கல்விடு

கூடை (இடங்கணி யென்னும் பொறிக்குக் கல்விட்டுவைக்கும் கூடை), தூண்டில் (இது தூண்டில் வடிவாகச் செய்து அகழியிலிட்டு மதிலேறுவார் அதிற் சிக்கியபின் இழுத்துக் கொள்வது), தொடக்கு (கழுத்திற் பூட்டியிழுக்கும் சங்கிலி), ஆண்டலையடுப்பு (சேவல் வடிவாகச்செய்யப்பட்டுப் பறக்கவிட உச்சியைக் கடித்து மூளையை எடுப்பது), கவை (இது கிடங்கிலேறின் மறியத்தள்ளும் ஆயுதம்), கழு,புதை, (அம்புக்கட்டு), ஐயவித்துலாம் (இது பகைவர் கதவை அணுகாதபடி அம்புகள் வைத்தெய்யும் யந்திரம்). கைப்பெயர்ஊசி, (மதிற்றலையைப் பற்றுவாரைக் கையைப் பொதிர்க்கும் ஊசி), எரிசிரல் (இது சிச்சிலி வடிவாய்க் கண்ணைக் கொத்தும்ஆயுதம்),பன்றி (இது மதிற்றலையில் ஏறினருடலைக் கோட்டாற் கிழிக்க இரும்பாற்செய்தது), பனை (மூங்கில் வடிவாகச்செய்து அடித்தற்கமைத்த பொறி), எழு, சீப்பு, கணையம், கோல், குந்தம், வேல், சதக்னி, தள்ளிவெட்டி, களிற்றுப்பொறி, விழுங்கும்பாம்பு, கழுகுப்பொறி, புலிப்பொறி, குடப்பாம்பு, சகடப்பொறி, தகர்ப்பொறி, அரிநூற்பொறி, ஞாயில் (குருவித்தலை), பிண்டிபாலம், சூலம், எழு, மழு, வாள், கவசம், தோமரம், கதை, தண்டம், நாராசம், இருப்புமுள், கழுமுள், கூன்வாள், சிறுவாள், கொடுவாள், அரிவாள், ஈர்வாள், உடைவாள், கைவாள், கணையம், சுழல்படை, கோடாலி, தோட்டி, வேல், வச்சிரம், குறுந்தடி, ஈட்டி, கவண், சிறுசவளம்,பெருஞ்சவளம், சக்கரம், கன்னம், உளி, பாசம், தாமணி, சாலம், ஊசி, முசுண்டி, முசலம், இடங்கணி, அள், பலகை முதலியன.

**ஆயுதம்**—அத்திரம், சத்திரம் என இருவகை. அவை கைவிடுபடை, கைவிடாப்படை என்பன.

**ஆயுதமகாராஜன்**—சேசபனை யென்னும் பெண்ணின் தந்தை. இவன் மண்டூகநாதன், தவளைகளுக் கரசன்.

**ஆயுதிகன்** — பதினாயிரம் காலாட்களுக்குத் தலைவன். (சுக்கிரநீதி)

**ஆயுர்வேதோற்பத்தி**—பிரமன் நான்கு வேதங்களையும் படைத்து அதன் சாரமாகிய ஆயுர்வேதத்தைப் படைத்தான். இவன் ஆயுர்வேதத்தை ஐந்தாம் வேதமாக்கி அதைச் சூரியனுக் குபதேசித்தான். அச்சூரியன் அதை உணர்ந்து மற்றொரு சம்மிதையைச் செய்தான். அவ்வழியாகப் பின் வந்தார் அதைப் பரவச்செய்தனர். தன்வந்திரி, திவோதாசன், காசிராஜன், அச்வநிதேவர், நகுலன், சகதேவன், யமன், சியவனன், ஜனகன், புதன், சாவாலன், ஜாஜலி, பைலன், காதன், அகத்தியன். இவர்கள் வைத்தியநூலை முறையா யறிந்து வைத்தியசாத்திரம் இயற்றியோர்.

**ஆயுஷ்டோமேஷ்டி**—ஆயுளைவிரும்பினவன் செய்யும் காமியயாகம். (பராச-மா,

**ஆயுஷ்மநு**—(சூ.) இருஷபரைப் பெற்றவர்.

**ஆயுஷ்மந்தன்**—அசுரன். பிரகலாதன் குமரர்களி லொருவன்.

**ஆயை**—சிவப்பக்தி மிகுதியால் புருஷனை விட்டு நீங்கின ஒரு பெண்.

**ஆயோதநப்பிரவீணபாண்டியன்** — துவிராஜ குலோத்தம பாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் இராசகுஞ்சர பாண்டியன்.

**ஆய் எயினன்**—இவன் அகநானூற்றிற் பலவிடங்களிற் கூறப்படுகின்றான். இவனைப் பாடியவர் பரணர் முதலியோர். வேள் ஆயைப் பாடியவராகக் கூறப்பட்ட புலவர்கள் இவனைப் பாடியவராகக் காணவில்லை. ஆயெயினனும் புலவர்க்குப் பேருபகாரியாயிருந்தவனென்று தெரிகின்றது. இவன், வேளாகியஆய் அண்டிரனின் வேறுபட்டவன். "எயினன்" என்னும் சொற்புணர்ப்புடனேயே வழங்கப்படுகின்றான். வேள் ஆயைத் தனியே 'அண்டிரன்' எனவும் கூறுதல்போல, இவனைத் தனியே 'எயினன்' எனவும் வுழங்குவர். இதனை "வண்மை யெயினன் வீழ்ந்தனன்" என வரும் அகநானூற்றடியால் ஆயண்டிரனின் முற்றும் வேறானவனென்பது அறிக. அன்றியும் ஆயெயினன், மிஞிலி என்பானோடு புரிந்த பெரும்போரில் உயிரிழந்தவனென்பது, அகநானூற்றிற் பரணர் பாடல் பலவற்றால் அறியக்கிடக்கின்றது.

**ஆய்**—இவனுக்கு ஆய் அண்டிரன் எனவும் பெயர். இவன் வேளாண் மரபினன். இவனது ஊர் பொதிகைக் கருகிலுள்ள ஆய்க்குடி யென்பது. கடையெழுவள்ளல்களுள் ஒருவன், சுரபுன்னைமாலையையுடையவன். இவ்வள்ளல் "வேளிர்" கூட்டத்தைச் சேர்ந்தவனென்பது "மாவேள்ஆய்" "தேர்வேள்ஆய்" எனப் புறநானூற்றில் வருந்தொடர்களாற் றெரிகின்றது. அந்

நூலில் "கழறொடியாஅய் மழைதவழ் பொதியில்" எனவும் "தென்றிசையாய் குடி" எனவுங் கூறப்படுதலால், ஆய்நாடு பொதியின் மலைப்பக்கத்துள்ள தென்பதும், அவன் தலைநகர் "ஆய்குடி" யென்னும் பெயர் பெற்றதென்பதும் தெளிவாம். இவன் மலை வேற்றரசரால் தாக்க முடியாத அரண்வலி யுடையதென்பர். ஆய் நாட்டில் யானைகள் மிகுந்த காடுகளுண்டென்றும், பரிசிலர்க்கு யானைக் கொடை மிகுதியாக அளித்தவன் ஆய் என்றும் சொல்லப்படுகின்றன. இவ்வள்ளலுக்கு "அண்டிரன்" என்னும் மறு பெயரு முண்டென்பது. இவனைப்பற்றிய பாடல்கள் பலவற்றிற் காணலாம். புறநானூற் றுரையாளரும் "அண்டிரன் ஆய்க்கொரு பெயர்" என்பர். புறப்பாட்டில் "ஈகையரிய விழையணி மகளிர்" "கோடேந்தல்குற் குறுந்தொடி மகளிரொடு" என வருதலால் ஆய், மகளிர்ப் பலரை மணம் புரிந்தவனென்பது அறியப்படும். இவன் இன்சொல்லே தன்சொல்லாக வுடையன் என்பர். ஆய், கொங்கு நாட்டாரோடு போர்புரிந்து அவரை மேல் கடற்பக்கத்தே ஓட்டினவனென்று (௧௩௦) வது புறப்பாட்டுக் கூறுகின்றது. இவன், ஒருகால் நீலநாகமொன்றால் தான பெற்ற அருமை பெருமை வாய்ந்ததோர் ஆடையை, சிவபிரானே அணியத்தக்கவர் என்று கருதி அப்பிரானுக்கு உவந்து சாத்தினனென்று சிறு பாணாற்றுப் படையில் வியக்கப்படுகின்றான். இதனை, "நீலநாக நல்கிய கலிங்கம், ஆலமர் செல்வற் கமர்ந் தனன் கொடுத்த, சாவந்தாங்கிய சாந்து புலர் திணிதோள், ஆர்வ நன்மொழி ஆய்" என்பதனால் அறிக. இவ்வரலாறு, ஆய் சிவபக்திமிக்க வைதிக மதத்தின னென்பதைக் குறிப்பது. இவ்வள்ளலின் நாளோலக்கம் மிகச் சிறந்து விளங்கு மென்பர். (நற்-௯௦). இவனைப் பாடிய புலவர்:— உறையூர் ஏணிச்சேரி முடமோசியார், துறையூர் ஓடைகிழார், குட்டுவன்கீரனார் என்போர். இவருள் முடமோசியார் அந்தணரென்பது தொல்காப்பிய மரபியலுரையால் விளங்குகின்றது. இம்மோசியாரே, ஆயின் அருமை பெருமைகளை அதிகமாக வெளியிட்டவர். வேள் பாரிக்குக் கபிலர் போலவும், அதிகமானுக்கு ஒளவைபோலவும், வேள் ஆய்க்கு மோசியார் பெரிதும் வேண்டிய புலவரென்பது 'திருந்து மொழி, மோசிபாடிய ஆயும்" எனப் பெருஞ் சித்திரனார் என்னும் பழைய புலவர் கூறுதலால் தெரிகின்றது. வேள்-ஆயின் வள்ளன்மையையும் அருங்குணங்களையும் புறநானூற்றில் வரும் பாடல்கள் மிக வழகுபெற விளக்குவன. மோசியார், ஆயின் அரண்மனையைப் பற்றிப் பேசுமிடத்து, "அவன் தன் மனைவியரது மாங்கல்ய சூத்திரமொழிய மற்றவை யனைத்தையும் பரிசிலர்க்கு வழங்கி விட்டனனாயினும், கொடுக்கு மின்பத்தை அநுபவித்தறியாது தம் வயிறருத்திக் கழியும் மற்றப் பெருஞ் செல்வர்கள் பெருமனைபோலப் பொலிவிழக்கா, ஆயின் அரண்மனை அழகுபொலிந்து விளங்கும்" என்று புகழ்கின்றார். இப்புலவர் ஆயைக் காணாத முன்பு தாம் அவனைப் பற்றிக்கொண்ட எண்ணங்கள் அவனைக் கண்டதும் முற்றும் மாறுபட, அதற்கிரங்கி "முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேனே, ஆழ்கென்னுள்ளம் போழ்கென்னுளே, பாழூர்க்கிணற்றிற் றூர்கவென் செவியே" எனத் தம் மறியாமையை இழிப்பதன்மூலம், ஆயின் குணங்களைப் புகழ்ந்தனர். ஒருகால் இப்புலவர் காட்டுவழியே சென்றபோது ஆண்டு வாழும் யானைக்கூட்டங்கள் தம் கண்ணுக்குப் புலப்பட, அப்போது, "மழைக்கணஞ்சேக்கு மாமலைக் கிழவன், வழைப்பூங்கண்ணி வாய்வா ளண்டிரன், குன்றம் பாடின கொல்லோ, களிறுமிக வுடையவிக் கவின்பெறு காடே" என்னும் இனிய பாடலைப் பாடினர். ஆயின் யானைக் கொடை, காட்டியானைகளைக் கண்டதும் தம் நெஞ்சில் தோன்ற அப்போது தானே சுரந்த பாடல் இது. இன்னும் மோசியார், ஆயது ஒப்புயர்வற்ற ஞானத்தையும் தூய்மையையும் குறித்து, "இம்மைச் செய்தது மறுமைக்காமெனும் அறவிலை வாணிக னாஅ யல்லன் பிறருஞ் சான்றோர் சென்ற நெறியென ஆங்குப் பட்டன் றவன்கைவண் மையே" என்று பாடுகின்றனர். இக்கருத்து வேள்-ஆயின் உயர்ந்த மனநிலையை விளக்குவதாகும். இனி, மோசியார் மற்றோரிடத்தில், "வட திசை யதுவே வான்றோய் இமயந், தென் திசை யாஅய் குடியின்றாயிற், பிறழ்வது மன்னோவிம் மலர்தலை யுலகே" என ஆய் உலகிற்குப் புரியும் பேருபகாரத்தை விய

கின்றனர். இவ்வாறு வேள் ஆய் பெருவள்ளலாய் உலகினர் தன்னை என்றும் நினைக்கும்படி விளங்கி, பின், "காலனென்னுங் கண்ணிலியுய்ப்ப மேலோருலக மெய்தினன்." இவன் பிரிவினை யாற்ருது, அவனதுரிமை மனைவியர் தீப்பாய்ந்து உயிர்விட் டொழிந்தனர். ஆய் இறந்தபோது அவனது பிரிவுக்கு இரங்கிப் பாடிய புலவர்:— முடமோசியார், குட்டுவன் கீரனுர் என்போர். இவருள் மோசியார், ஆய் அண்டிரன் விண்ணுலகு சென்றதற்கிரங்கி அடியில் வரும் இனிய பாடலைப் பாடினர் "திண்டேரிரவலர்க் கீத்த தண்டார், அண்டிரன் வரூஉமென்ன வொண்டொடி, வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுட், போர்ப்புறு முரசங் கறங்க; ஆர்ப்பெழுந் தன்றால் விசும்பினனே" என்பதா லறிக. (புறநானூறு).

**ஆய்குடி**—இஃது ஆயென்னும் வள்ளலின் ஊர், பொதியின் மலைச் சாரலினுள்ளது (புறநானூறு).

**ஆய்தம்** — இது (ஃ) முப்புள்ளி வடிவினதாய் உயிரு மாகாமல், மெய்யு மாகாமல் தனி நிலையாய் நிற்கும் ஒரெழுத்து. (நன்).

**ஆரஞ்சாத்துசோழன்** — இவன் கோடை வெப்பம் நீங்கச் சிவாலயங்கட்கு அபிஷேகஞ் செய்வித்துக் கொண்டு வருகையில் திருவானைக்காவி லெழுந்தருளிய சிவமூர்த்திக்குச் சாத்தமுத்தின் ஆரங்கொண்டு சென்றனன். அந்த முத்தாரம் தான் ஸ்நானஞ்செய்கையில் ஆற்றில் விழுந்ததனுற் றுக்கமடைந்து பூசை முதலிய முடித்துச் சிவதரிசனத்திற்கு ஆலயத்திற்குச் செல்கையில் அரசன் போக்கிய முத்தாரம், அபிஷேகத்திற்குக் கொண்டு வந்த சலத்துடன் குடத்தில்வந்து சுவாமியின் திருமேனியிலிருந்தது. அரசன்சிவமூர்த்தியின் திருமேனியில் முத்தாரத்தினைக் கண்டு விசனம் நீங்கிக் களித்தனன். ஆதலால் அன்றுமுத லிவனுக்கு இப்பெயர் வந்தது.

**ஆரட்டம்**—பாகலிக்க தேசம் (The Province of Punjab).

**ஆரணமுனிவர்**—ஓர் இருஷி.

**ஆரண்யம்**—தண்டகாரண்யம், பதரிவநம், நைமிசாரண்யம், சுவேதாரண்யம், வேதாரண்யம் முதலிய.

**ஆரண்யதீர்த்தம்**—ஒரு நதி.

**ஆரத்தன்**—சேதுவின் குமரன். இவன் குமரன் காந்தாரன்.

**ஆரந்தாங்குபாண்டியன்**—உக்ரகுமார பாண்டியனுக்கு ஒரு பெயர்.

**ஆரபடி**:—நாடகவகை உறுப்பினுள் ஒன்று.

**ஆரம்**—மலையாரம். தீமுரண்பச்சை, கிழான் பச்சை, பச்சைவெட்டை, அரிச்சந்தனம், வேர், சுக்கொடி முதலிய.

**ஆராத்யர்**—இவர்கள் கன்னட வீர சைவ வேதியர். இவர்கள், கடப்பை, கர்னூல், மைசூர் முதலிய இடங்களில் வசிப்பவர். இவர்கள், ரேவணராத்யர், மருளாராத்யர், ஏகோராமாராத்யர், பண்டிதாராத்யர், என நான்கு வகையர். இவர்கள் வீர சைவர்.

**ஆராத்யம்**—சிவசூர்ய பீடம்.

**ஆராத்யன்** — பொன்மை நிறங்கொண்ட சிங்கவுருவாய் அநந்தரிட மிருக்கும் சிவபடன்.

**ஆராவமுதன்** — திருக்குடந்தையி லெழுந்தருளிய விஷ்ணுமூர்த்தியின் திருநாமம்.

**ஆரிட்டசேனன்**—கந்தமாதன பர்வதத்தில் இருந்த ஒரு ரிஷி. பாண்டவர்கள் இவனிடம் தங்கிச் சென்றார்கள். (பாரதம் வனபர்வம்).

2. ஒரு ராஜ ரிஷி. தவத்தால் பிராமணனவன்.

**ஆரிதன்**—1. விச்வாமித்திரர்க்குக் குமரன்.

2. உரோமகர்ஷணருக்கும், சுகருக்கும் மாணக்கன்.

3. அம்பரீஷன் குமரன்.

**ஆரியசித்தாந்தம்**—ஒரு சோதிடநூல்.

**ஆரியசேகரன்**—ஒரு பிரபு, புலவர் இவன் மீது பாடிப் பரிசுபெற்றதாகக் கூறப்பட்டவன். "பாவலர் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்கும், காவலர் நிற்கும் படி வைத்த வாகண்டி யொன்பதினும், மேவலர் மார்பினும் திண்டோளினும் செம்பொன் மேருவினும், சேவெழு தம்பெருமான்சிங்க வாரிய சேகரனே."

**ஆரியநந்தி**—ஜீவகனுக்கு ஆசிரியன்.

**ஆரியபட்டன்**—இவன் பூமி சுற்றிவருகிறதெனச் சித்தாந்தஞ்செய்த சோதிடப் புலவன்.

**ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன்**—இவன் சேரன் செங்குட்டுவன்காலத்திருந்த பாண்டிநாட்டரசன். இவன் வட நாட்டரசரை வென்றவன். இவனே கோவலனைக்கொல்வித்தவன். இவனே தான் செய்த செயல நீதியென்று தன் மனைவியுடன் உயிர் விட்

டவன் இவனே அரசு கட்டிலிற்றுஞ்சிய பாண்டியனெடுஞ் செழியன், இவன் வீரனும் புலவனுமாவன் இவன் பாடிய செய்யுளொன்று புறநானூற்றில் காணப்படுகிறது.

ஆரியப்பப்புலவர் — திருக்குடந்தையிற் பிறந்த வேளாளர். இவர் பாகவதத்தைத் தமிழில் (சகஎ0) விருத்தப்பாவா லியற்றினவர் என்பர். (பாகவத புராணம்).

ஆரியமாலை—காத்தவராயன் தேவி.

ஆரியர் — வடநாட்டிலிருந்து பரதகண்டத்தில் வந்து ஸரஸ்வதிநதிதீரத்தில் வசித்தவர்கள்.

ஆரியவாசன் யாழ்ப் பிரமதத்தன்:—இவர் செந்தமிழேயன்றி யாழிலும் வல்லவராக இருக்கலாம். இவர் பெயரில் அரசன் என்பதால் வேதியரில் தலைமைவாய்ந்தவர் போலும். குலத்தில் அந்தணராக இருக்கலாம். (குறு - 184).

ஆரியை — பதுமையின் தோழி. அவளுடைய மனக்குறிப்பறிந்தே ஒழுகுபவள். மிக்க மென்மையையுடையவள். பந்தடித்தலில் மிக்க ஆற்றல் வாய்ந்தவள். (பெருங்).

ஆரிஷபாள்—ஒருவித இராஜாக்கள்.

ஆரீதர்—சாபாலி முனிவரின் குமரர்; வைசம்பாயனக் கிளியை ஆச்சிரமத்திற் சேர்த்தவர்.

ஆருகதம்—சைநபேதமாகிய மதம். இது எல்லாக்கர்மங்களையும் விட்டு நின்றவிடமே மோக்ஷம் என்னும். அருகமதம் காண்க.

ஆருகதன்—அருக சமயசித்தாந்தஞ் செய்தவன்.

ஆருத்ராதரிசநம் — சிவமூர்த்தி சிருட்டியாதியாகிய தொழில்களைச் செய்யச் சகளீகரித்தநாள். இந்த நாளிற் சிவாலயங்டோறும் பஞ்சகிருத்திய உற்சவ நடத்துவர்.

ஆருஷி—பிருகு புத்திரனான சவனரிஷியின் தேவி, மனுவின் புத்திரி. இவள் புத்திரன் அவுருவன்.

ஆருணி—தௌமியர் மாணாக்கன்.

ஆருணியாசன்—இவன் பாஞ்சால தேயத்தரசன், மிக்க பராக்கிரமத்தையும், மிக்க வீரியமுமுள்ள சேனையையு முடையவன். கோசல தேயத்தரசனை வென்று அவனது ஊரையழித்து அவன் மகள் வாசவதத்தை முதலியவர்களைப் பிடித்து வந்து தன் உரிமைமகளிர்க்குத் தாதியர்களாக அமைத்தனன். இவன் பட்டத்து யானைக்கு மந்திரமென்று பெயர். ஏயர்குலத்தாரோடு, குலப்பகை ஞனதலின், அக்குல அரசாட்சிக்கு உரியனான உதயணன் சிறைப்பட்ட பொழுது பெரும்படையோடு சென்று கோசம்பி நகரத்தைக் கைப்பற்றிக்கொண்டு முரசறைவித்துத் தன் கொற்றத்தை யாவர்க்கும் தெரிவித்து அந்நகரையே தனது இராசதானியாகக் கொண்டு பின்பு ஆட்சி புரிந்தனன். காளமயிடனென்னும்ஒற்றனாற்பகைப்புலத்தே நிகழும் செய்திகளை அறிந்துகொண்டே வந்தவன். பூரண குண்டலனென்பவன் இவனுக்கு முக்கிய மந்திரி. பின்பு உதயணன்வந்து செய்த பெரும் போரில் அவனாற் கொல்லப்பட்டான். அவனால் வெட்டுண்டபோது இவன்பாற் சிறிதும் அச்சக்குறிகள் நிகழவேயில்லையென்று கவி இவன் வீரத்தைப் பாராட்டுகிறார். இவன் பாஞ்சாலராய னென்றும் வழங்கப்படுவான். (பெருங்கதை).

ஆரூடசக்கரம்—ஒத்த நிலத்திலே கிழக்கு நோக்கியிருந்து சதுரமாக வொரு வட்டத்தையிட்டு, அதிலே கிழக்கும், வடக்குமாக நான்கு ரேகைகள் கீறிப்பார்க்க (உகு) அறைகளாம். இதில் வடகீழ் மூலையறையை விட்டு, இதன் தென் திக்கிலறை மேடம். இதன் தென்மேலையறை யிடபம். இதன் தென் கீழ் மூலையறை மிதுனம்; இதன்மேல் மூலையறை கர்க்கடகம். இதன் வட மேல் மூலையறை சிங்கம். இதன் தென் மேல் மூலையறை கன்னி. இதன் வட மேல் மூலையறை துலாம். இதன் வடகீழ் மூலையறை விருச்சிகம், இதன் வட மேல் மூலையறை தனு. இதன் வட கீழ் மூலையறை மகரம். இதன் தென் கீழ் மூலையறை கும்பம். இதன் வட கீழ் மூலையறை மீனம். இப்படிச் சேர, மும்மூன்று ராசியுமடுப்புக் கூட்டம் போலப் படும். இச்சக்கரத்தினடுவில் வீதியிற் கீழ் தலையறையிலே யாதித்தியன். இப்படிச் சுற்றும், புறம்பும் வீதியில் அக்கினி மூலையிற் செவ்வாய். தெற்கு வீதியில் வியாழன். நிருதி மூலையிற் புதன், மேற்கு வீதியிற் சுக்கிரன். வாயு மூலையிற் சனி. வடக்கு வீதியிற் சந்திரன். ஈசான மூலையில் இராகு. இப்படி (கஉ) இராசியும் எட்டுக் கோளும் நிறுத்தி நடுவிலறை பிரமத்தானத்துக்கு இருப்பாகவும், இதற்கீசானத்துப் பரிவேடம், இதற்கக்கினித்தூமம், இதற்கு நிருதி இந்திரதனு, இதற்கு

வாயுதட்பம். இப்படி (உகு) அறையும், (உகு) கோளுக்கிடமாக நியமிக்கப்பட்டது ஆருடசக்கிரமாம். (விதானமாலை).

ஆரூரன்—சுந்தரமூர்த்தி நாயனுர்க்குப் பாட்டன்.

ஆரெயிலுழிஞை — வாளினையுடைய வீரர் தம்மைப் பணியாதாருடைய உயர்ந்த புரிசையின் திண்மையைச் சொல்லியது (பு. வெ).

ஆர்—வெற்றியினையுடைய சேனைவீரர்தம் வெய்ய பூசலைக்கண்ணிற் கொடுவினைப் பூசலைச் செய்யவல்ல சோழன் புனையும் மலரினைச் சொல்லியது. (பு.வெ. பொதுவியற்).

ஆர்க்காடுகிழார்மகனுர்வெள்ளைக்கண்ணத்தனுர்—இவரியற் பெயர் வெள்ளைக் கண்ணத்தனுர்,இவர்க்குக்கண்ணிடத்து ஏதோ வெண்மை யிருக்கலாம். இவர் தந்தையார் ஆர்க்காடு கிழார், இவரூர் ஆர்க்காடு போலும், இவர் கடைச்சங்க மருவிய புலவர்களிலொருவர். (அகம் - கூச).

ஆர்ச்சிகன்—ஓர் இருடி.

ஆர்த்தாஸ்ஸ்—குசன் மூன்றும் புத்ரன்.

ஆர்த்திகன்—சூரிய வம்சத்து அரசன். இக்ஷ்வாகுவம்சத்தவனை விஸ்வகன் புத்திரன். இவன் புத்திரன் யுவனுஸ்வன்.

ஆர்த்திக்யன்—கிருதவர்மனுக்கு ஒரு பெயர்.

ஆர்த்திமான்—இவர் ஒரு ரிஷி. இவர் நினைத்த மாத்திரத்தில், சர்ப்பம் தீண்டிய விஷம்போம்.

ஆர்யகர்-(சூ.)தர்மகேதுவின் வம்ச முதல்வர்.

ஆர்யகன்—கத்ரு குமரன் நாகன்.

ஆர்யாம்பாள்—மகிபண்டிதன் குமரி.

ஆர்யாவர்த்தம்—கிழக்குச் சமுத்திரம் தொடங்கி மேற்குக் கடலீருகவும், இமயமலை தொடங்கி விந்தமலை யீருகவும் உள்ள மத்யப்பிரதேசம். இது புண்ய பூமி.

ஆர்வமொழியணி — உண்ணிகழும் ஆசை பற்றி நிகழும்மொழி மிகத் தோன்றக்கூறுவது. (தண்டி)

ஆர்ஷ்டிஷேணர் — இவர் ஒரு பிராமணர். இவர் குருகுலத்தில் வசித்து வித்யாப்யாஸம் செய்து வந்தார். இவர்க்குக் கல்வி முற்றுப் பெறவில்லை. பிறகு ஸரஸ்வதி தீரத்திலுள்ள பிருதக தீர்த்த ஸ்நானஞ் செய்து ஞானம்பெற்று மகருஷியுமாயினர். இதில் சிந்துத்வீபரும், தேவாபி, விச்வாமித்ரர் முதலியோர் நன்மை படைந்தனர். பலராமர் இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தனர். (பார-சல்லி)

ஆலகாலன்—சிவபூதகணத்தலைவரி லொருவன்.

ஆலங்கானம்—1. விபுலகிரியின் பக்கத்தில் மிருகாவதியின் தந்தை தவஞ்செய்து கொண்டிருந்த இடம். (பெருங்கதை).

2. பூக்கொய்தற்கு வந்த பத்திராபதி யென்னுந் தெய்வ மகள், யானையின் புணர்ச்சியைக்கண்டு மனம் வேறுபட்டுப் பெண் யானையாகப் பிறக்கும்படி குபேரனுற் சாபம் பெற்ற இடம். இது விந்திய மலையின் பக்கத்தே நருமதை யாற்றங் கரையிலுள்ளது. (பெ. க)

3. இது தலையாலங்கானமென்னும் பெயரையுடையது. தற்காலம் தலையாலங்காடென்று வழங்கப்படுகின்றது. (புற. நா)

ஆலங்குடி—சோணுட்டுள்ள வூர்.

ஆலங்குடிவங்கனுர் — இவர் ஆலங்குடியிலுள்ள வங்கனென்னும் இயற்பெயருடையவர். இவர் பாடியவற்றுட் புறத்திணையொன்ருெழிய ஏனையவெல்லாம் மருதத்திணையினவாதலின் மருத நிலத்துள்ள ஆலங் குடியின ரெனக் கருதப்படுகின்றனர். மருத நிலத்தில் ஆலங்குடி யென்று பல வூருள வாதலின் இவரூர் இன்னதெனத் துணியக் கூடவில்லை. இவர் பாடியன வெல்லாம் பெரும்பாலும் பரத்தையிற் பிரிவே. ஒவ்வொரு செய்யுளும் இனிமைதாரா நிற்கும். நற்றிணையின் (உகo, சoo) ஆம் பாடல்களிலுள்ளுறையும் அகம் (கoசு) பரத்தை கூறுங் கூற்றும் வியக்கத்தக்கன. இவர் பாடியனவாக நற்றிணையில் மூன்று பாடல்களும், குறுந்தொகையில் இரண்டும், அகத்திலொன்றும், புறத்தொன்றும், திருவள்ளுவ மாலையிலொன்றுமாக (அ) பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (நற்றிணை).

ஆலத்தூர்க்கிழார் — இவர் ஆலத்தூர் என்னும் ஊரிலிருந்த வேளாளர்போலும். இவர் கடைச் சங்கத்தவர். இவர் சோழன் நலங்கிள்ளியின் படைப்பெருக்கினைக்கூறுகையில் படைசெல்லும் வழியிலுள்ள பனைமரங்களின் நுங்குகளைத் தலைப்படையும், பழங்களை இடைப்படைகளும், அப்பழங்களின் கொட்டைகளாலாகிய கிழங்குகளைக் கடைப்படைகளும் நுகர்ந்துசென்றன எனத்தமிழரசன் படைமிகுதி கூறினர். "தலையோர் நுங்கின் தீஞ்சாறு மிசைய, இடையோர் பழத்தின் பைங்

சனிமாந்தக், கடையோர், விடுவாய்ப் பிசிரொடு சுடுகிழங்கு நுகர" (புறம்-௩௪௨) எனக் கூறினர்.

**ஆலமரம்**—இது, இந்தியாவில் உள்ள விருக்ஷங்களில் நெடுநாளிருக்கும் மரம். இது சிறிய விதையிலிருந்து உண்டாகிப் பெருஞ் சேனையும் தங்கும்வகைப் பரந்து நெடுநாளிருப்பது. இது அகல மரமாதலின் இதனை ஆலமரம் என்றனர். இதன் இலையை உண்கலமாகவும், சிறு விழுதைப் பல் தேய்க்கவும் உபயோகிக்கிறார்கள். இதன் அடிமரம், கெட்டாலும் விழுதால் தாங்கப்பெற்றுப் பலநாளிருப்பது. இதன் விதையைக் குளிர்ச்சிக்கு லேகியங்களில் தமிழ் வைத்தியர்கள் உபயோகப்படுத்துகிறார்கள், பல்வலி, ஈறுவலி, இவைகட்கு இம்மரத்தின் கொழுந்தின் பாலை உபயோகப்படுத்துகிறார்கள். இதன் பால் கால்வெடிப்புகளுக்குச் சிறந்த மேல் பற்றாக உபயோகப்படுகின்றது. இந்த மரத்தின் பட்டை நீரிழிவு வியாதிக்கு நல்ல பலமான துவர்ப்புடைய மருந்தென்று தமிழ் வைத்தியர்கள் அபிப்பிராயம். இது குறு ஆல், கல்லால், சிற்றால், இத்தியால், கொடியால் எனப் பேதப்படும். இதில், அச்வத்தாமன் பாண்டவர்களைக் கொல்ல யோசிக்கத் தங்கிக் கோட்டான் காக்கைகளை யோட்டக் கண்டான்.

**ஆலம்பாயனர்**—இவர் இந்திரனுக்கு நண்பர். இவர் கோகர்ணத்தில் நூறு வருஷகாலம் தவஞ்செய்து சிவப் பிரசாதத்தால் நூறு புத்திரர்களைப் பெற்றார். ருத்ரமாகாத்மியம் கூறியவர் (பார - அநுசா ம்)

**ஆலம்பேரிசாத்தனார்**—இவர் மதுரையைச் சார்ந்த ஆருலவியநாட்டு ஆலம்பேரியென்னு மூரிலுள்ள சாத்தனென்னு மியற்பெயருடையவர். ஏடெழுதுவோரின் மிகையால் வாலம்பேரிசாத்தனாரெனவுங் கூறப்படுவர். இவர் பாடலால் இவர் நெய்தனிலத்தும், பாலைநிலத்தும் நன்றாகப் பயின்றவரென்று தெரிகின்றது. நற் (௧௫௨) எல்லாத் துன்பமும் மடல்முதலாயின தந்தனவென்று தலைவனொந்து கூறுங் கூற்றம். நற் (௨௫௫) ல் ஆறுபார்த் துற்ற வச்சமும், நற் (௩௦௩) ல் வேட்கை தாங்காது தலைமகள் இரவுறு துயரங்கூறுவதும், மிக்க சுவையுடையனவாகும். மற்றும் இவர், அகம் (௮௧) ல் கடலானது விளங்கிலென்னு மூரையும், அகம் (௧௪௩) ல், வானவன்பிட்டன் குதிரை மலையையும், அகம் (௧௭௫) ல் நெடுஞ்செழியன் போர் வென்ற திருத்தலையாலங்கானத்தையும், நெவியனென்னும் கொடையாளி யொருவனையும் பாராட்டிக் கூறியிருத்தலானே அவர்கள் காலத்தவரென்று கொள்ளலாகும். இவர் பாடியனவாக நற்றிணையில் நான்கு பாடல்களும், அகத்தில் நான்குமாக எட்டுப் பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**ஆலயதரிசனவிதி** — தெய்வ வழிபாடுடையான் தேவாலயத்திற்குச் செல்லுதற்கு முன் ஸ்நானஞ்செய்து தோய்த்து உலர்ந்த வேட்டிகள் உடுத்துச் சந்தியாவந்தனம் முடித்துத் தேங்காய், பழம், தாம்பூலம், கற்பூரம் முதலிய தட்டிற்கொண்டு பாதசாரியாகத் தேவாலயத்தை நெருங்கி ஆண்டுள்ள தீர்த்தத்தில் கை கால்களைச் சுத்தப்படுத்தி ஆசமனஞ் செய்துகொண்டு திருக்கோபுரத்தைத் தரிசித்துத் தேவஸ்மரணையுடன் கோயிலின் உட்புகவேண்டும். உட்புகுந்து பலிபீடத்தையும், துவஜஸ்தம்பத்தையும், சிவாலயமாயின் இடபதேவரையும், விஷ்ணுவாலயமாயின் பெரிய திருவடிகளையும் நமஸ்கரித்து உட்புக ஆஞ்ஞைபெற்று அபிஷேக நிவேதன சமயம் அல்லாத சமயத்தில் திருச்சந்நிதிக்குமுன் ஆடவர் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்டிர் பஞ்சாங்க நமஸ்காரமும், ௩, ௫, ௭, ௯, ௰௨ முறை செய்தல்வேண்டும். பின் சந்நிதானத் துட்புகுந்து துவாரபாலகரை வணங்கி அனுமதிபெற்றுச் சந்நிதானம் அடைந்து அங்கிருக்கும் அருச்சகரிடம் தாம் கொண்டுசென்ற பொருள்களைத் தந்து தேவாராதனைசெய்யத் தரிசித்துக் கடவுளுக்குத் தன் புறத்தைக் காட்டாது திரும்பல்வேண்டும். திரும்பிக் கைகளைக் குவித்து மந்திரோச்சாரண ஸ்தோத்திரங்களைச் செய்துகொண்டு மூன்றுமுதல் இருபத்தொன்றுவரை ஒற்றையாகப் பிரதக்ஷணஞ் செய்தல்வேண்டும். அவ்வாறே தேவியார் சந்நிதி யுட்புகுந்து நான்குமுறை நமஸ்காரஞ்செய்து தரிசித்துப் பிரதக்ஷணஞ் செய்துகொண்டு வீட்டிற்குத் திரும்பல்வேண்டும். திருக்கோயிலுள் ஆசாரமில்லாது போதல், மலம், சலம், எச்சில் விமோசனஞ்செய்தல், மூக்குச் சிந்தல், தாம்பூலம் தரித்தல், பலகாராதிகள் உண்ணல், சயனித்தல், ஆசனத்

திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல், மயிர்முடித்தல், தலையிலுந் தோளிலும் வஸ்திரம் தரித்துச் செல்லல், நிர்மால்யத்தை மிதித்தல், கடத்தல், ஸ்தூபி, துவஜஸ்தம்பம், விக்கிரகங்களின் நிழலை மிதித்தல், தாண்டுதல், வீண்வார்த்தை பேசல், சிரித்தல், விளையாடல், சுவாமிக்கும் பலிபீடத்திற்கும் நடுவே குறுக்கிடல், ஒருமுறை இருமுறை வலம்வரல், அகாலத்தில் தரிசித்தல், அபிஷேக நிவேதன காலங்களில் தரிசித்தல், வீதி உற்சவங் கொண்டருளும்போது கோயிலுட்புகுந்து வணங்குதல் கூடாவாம். ஆலயத்தில் வாசலில்லா வழியால் நுழைந்துபோதல் கூடாது. கறுப்புக் கம்பளிப்போர்வையுடன் ஆலயத்துள் போகக்கூடாது. வெளிச்சம் இல்லா இடத்தில் மலர்மாலை தொடுத்தல்கூடாது. வீண்காரியஞ் செய்யக் கூடாது. பகவானது சொத்துக்களைத் தன்பொருட்டு உபயோகித்துக்கொள்ளக் கூடாது. (சிவாலய தரிசனவிதி) பிரபன்ன பாரிஜாதம்).

**ஆலயன்** — அரிஷ்டகாமனுக்குக் குமரன். இவன் குமரன் ஸ்தம்பகன்.

**ஆலவாய்** — தென்மதுரை கடல்கொண்ட காலத்துச் சிவபெருமான் கட்டளையால் எல்லையறிய நாகத்தால் அளக்கப்பட்டதால் வந்த பெயர். (திருவிளையாடற் புராணம்).

**ஆலாலசுந்தரர்**—திருக்கைலையில் சிவபிரான் சந்நிதியி லிருப்பவர். இவர் சிவமூர்த்தியி னேவலால் அமிர்தமதனத்தி லுண்டான விஷத்தைத் திரட்டிச் சிவமூர்த்தியின் சந்நிதியிற் கொண்டுவந்தவர். இவரது பிற்பிறப்பு சுந்தரமூர்த்தி சுவாமிகள். சுந்தரமூர்த்தி சுவாமிகளைக் காண்க.

**ஆலியார்**—ஒரு தமிழ்ப் புலவர். இவர்க்கு ஆனியாரெனவும் பெயர். (புற-நா.)

**ஆவகன்**—திரிமதி யென்பவளுக்குக் குமரன். இவனை ஆவாகனென்பர்.

**ஆவணிக்கிழவன்மகருஷிகோத்ரன்**---யானையை எடைபோட்டுக் கீர்த்திபெற்றவன், வணிகன். (வைசியபுராணம்).

**ஆவணி முழக்கம்** — ஆவணிமாதம், (௬)உ மேகம் முழக்கில் மழையுண்டு.

**ஆவந்தியன்**—சயமுனிவர்க்கு ஒரு மாணாக்கன்.

**ஆவாணன்**—பரதருக்குப் பஞ்சசேநியிடத்தி லுதித்தவன்.

**ஆவர்த்தம்**—சப்த மேகங்களில் ஒன்று.

**ஆவி** -- ஒரு குறுநிலமன்னன். இவன் மலை பொதினி (ஆவிமலை) இது, அரிசில் கிழாராற் பாடப்பட்ட தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை என்னுஞ் சேரமானுடைய தாயாகிய பதுமன் தேவையின் தந்தைக்கு வேளாவிக்கோ என்பது பேராதல் பதிற்றுப்பத்தா லறியற்பாலது. பேகன் எனும் வள்ளலை வையாவிக்கோ பெரும்பேகன் என ஆவியர் குடிச்சிறக்கக் கூறியுள்ளது. இவற்றால் ஆவினன்குடி, வையாபுரி என்பன இவர் மலையும் நகரமுமாம்.

**ஆவிசன்**—யானையுருக் கொண்டு பாலவிநாயகரைத் துன்பப்படுத்தவந்து அவராலிறந்த அரக்கன். (பார்க்கவ - புராணம்).

**ஆவிதீக்ஷன்**—கரந்த மனுக்குக் குமரன். இவன் குமரன் மருத்து.

**ஆவிநன்குடி**--பழனி. ஆவிகாண்க. பொதினி மலை பழனிமலையென மருவிற்று.

**ஆவியர்**—தமிழ்நாட்டுக் குடிகள்.

**ஆவிருதவாதம்**—இது பிராணவாயு முதலிய ஐந்து வாயுக்கள், பித்தம், சிலேஷ்மம், ரத்ததாதுக்கள். (௬) அன்னம், மூத்ரம், மலம், இவை (கசு). இவை ஒன்றையொன்று சூழும்போது ஆவிருத பேதங்களுண்டாம். அவை, பித்தாவிருதம், சிலேஷ்மாவிருதம், ரத்தாவிருதம், மாம்சாவிருதம், மேதோஆவிருதம், அஸ்தியாவிருதம், மச்சாவிருதம், சுக்கிலாவிருதம், அன்னவிருதம், மூத்திராவிருதம், மலாவிருதம், சகலதாது ஆவிருதம், பித்த பிராண ஆவிருதம், பித்தவுதான ஆவிருதம், பித்தவியான ஆவிருதம், பித்தசமான, பித்த அபான ஆவிருத மெனவும், சிலேஷ்ம பிராண, உதான, வியான, சமான, அபான ஆவிருத மெனவும் பேதப்படும். (ஜீவ)

**ஆவிர்பூ**—கர்த்தமர் பெண். புலத்தியன் தேவி.

**ஆவிர்வோத்திரன்** — ருஷபனுக்குச் சயந்தியிட முதித்த குமரன்.

**ஆவூர்**—இது தஞ்சாவூர்க் கல்வெட்டுக்களிற் கூறப்பட்டிருக்கிற பழையவூர். முன்னுளி விருந்திருக்கலாம்.

**ஆவூர்க்காவிதிகள் சாதேவனூர்**--சாதேவன் என்பது ஸஹதேவன் என்னும் வடசொல்லின் திரிபு. காவிதி யென்பது

பாண்டிநாட்டு வேளாளரில் உழுவித்துண் போர் அரசராற் பெறுவதொரு பட்டம். அகத்தில் இவர் பெயர் ஆவூர்க் கவுதமன் சாதேவன் என்று காணப்படுகிறது. புலவர் பெரும்பாலோர் தத்தம் ஊரைச்சிறப்பித்துக் கூறும் வழக்கின்படியே இவர் சேரநாட்டு ஆமூர் என்பதனைச் சிறப்பித்துக் கூறியிருத்தலின் ஆமூர்க் கௌதமன் சாதேவனுர் என்றிருக்க வேண்டிய இவர் பெயர், ஏடெழுதுவோரின் மிகையால் ஆவூர்க்காவிதிகள் சாதேவனு ரென்றெழுதப்பட்டது போலும். அங்ஙனமாயின் இவர் சேரநாட்டு ஆமூரிலுள்ள கௌதம கோத்திரத்துப் பிறந்த ஸஹதேவனென்னும் அந்தணராவர். ஆமூர்,குறும்பொறையென்னும் மலையின் கீழ்பாலுள்ள பாலை நிலத்தின் கண்ணது. அதற்கேற்ப இவர் பாடல்கள் பாலைத்திணையை வர்ணிப்பனவாகும். கொண்டு தலைக்கழிந்த தலைமகள் நீ அஞ்சாது கொண்டைமேற் காற்றடிக்க செல் என்றது சுவையுடையதாகும். இவர் பாடியனவாக நற்றிணையில் (உகச) ஆம் பாட லொன்றும் அகத்தி லொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (நற்றிணை)

**ஆவூர்க்கிழார்** — ஒரு புலவர் வேளாளர். இவர்க்கு ஆவூர் அழகியார் எனவும் பெயர். (புற-நா)

**ஆவூர்க்கிழார் மகனர் கண்ணனர்**—கடைச் சங்க மருவிய புலவர் வேளாளர். (அக-நு)

**ஆவூர்க்கௌதமன்சாதேவன்** — கடைச் சங்க மருவிய புலவர். பாலையைப் பாடியவர். (அக-நு)

**ஆவூர்மூலங்கிழார்**--சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியபுலவர். இவர் வேளாளர். (புற-நா) (அக-நா)

**ஆவூர்மூலங்கிழார் மகனர் பெருந்தலைச் சாத்தனர்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். இவரியற் பெயர் சாத்தனர். இவர் ஆவூருக்குப் பெரியவராக இருக்கலாம். இவர் தந்தையார் மூலங்கிழார் வேளாளர் முல்லையைப் பாடியவர். (அகம்-உஉச).

**ஆவேசன்**—சிவகணத் தலைவருள் ஒருவன்.

**ஆழ்ந்த கிணறுகள்**—ஜர்மனி தேசத்திலுள்ள மேல் சைலீஷியாவில் (7559) அடிகள் ஆழமும் ஸ்பெப்பர்க் எனும் ஊரில் (9124) அடிகள் ஆழமும் உள்ள இரண்டு கிணறுகள் உலகத்தில் ஆழமுள்ளவை.

**ஆளத்தி**—இது, அச்சு பாரணை என்று பெயர் பெறும். அச்சுக்கு எழுவாய் குற்றெழுத்து, பாரணைக்கு எழுவாய் நெட்டெழுத்து, அச்சு தாளத்துடன் நிகழும். பாரணை கூத்துடன் நிகழும். ஆளத்தி செய்யுமிடத்துத் தென்ன என்றும், தென என்றும், இரண்டு அசையும் கூட்டித் தென்ன தென என்று பாடப்படும். இவைதாம், காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணளத்தி என மூன்று வகைப்படும். இவற்றுள் காட்டாளத்தி அச்சுடன் நிகழும். நிறவாளத்தி நிறம் குலையாமல் பாரணையுடன் நிகழும். பண்ணளத்தி பண்ணையே கருதி வைக்கப்படும். பின்னும் மற்றொருவகைக் குற்றெழுத்தாலும், நெட்டெழுத்தாலும் ஆளத்தி செய்யப்படும். மற்றும் மெய்யெழுத்துப் பதினெட்டின் உள்ளும் மவ்வும், நவ்வும், தவ்வும் என மூன்று எழுத்து இனமுமல்லா மற்றை எழுத்துக்கள் ஆளத்திக்கு வரப்பெறு. இவற்றுள் மவ்வினம் சுத்தத்திற்கு உரித்து. நவ்வினம் சாளத்திற்கு உரித்து. தவ்வினம் தமிழிற்கு உரித்து. இங்ஙனம் மூலாதாரம் தொடங்கி எழுத்தின் நாதம் ஆளத்தியாய்ப் பின்னிசை என்றும், பண் என்றும் பெயராம். பல இயற்பாக்களுடன் நிறத்தை இசைத்தலால் இசை என்று பெயராம். பெருந்தானம் எட்டினும் கிரியைகள் எட்டாலும் பண்ணப்படுதலால் பண்ணென்றும் பெயராயிற்று. பெருந்தானம் எட்டாவன: நெஞ்சும், மிடறும், நாவும், மூக்கும், அண்ணுக்கும், உதடும், பல்லும், தலையும் என்பவைகளாம். கிரியைகள் எட்டாவன: எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பிதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்பவைகளாம். "மகாத்திஞெற்றுச் சுருதி விரவும், பகருங் குறினெடில் பாரித்து—நிகரிலாத், தென்ன தெனவென்று பாடுவரே லாளத்தி, மன்னவிச் சொல்லின் வகை" முதல் பாடுமிடத்து மகாத்தின் ஒற்றுலே நாதத்தை உச்சரிக்கும் மரபு பகரில் பாரித்து முற்கூறிய நாதத்தினைத் தொழில் செய்யுமிடத்துக் குற்றெழுத்தாலும் நெட்டெழுத்தாலும் செய்யப்படும். (சிலப்பதிகாரம்).

**ஆளவந்தபிள்ளையாசிரியர்**-ஓர் உரையாசிரியர், ஊர் தெரியவில்லை. மலைபடுகடாத்துக்கு, 'தீயினன்னவொண் செங்காந்தள்' என்பதி லானந்தக் குற்றங் கூறியவர்.

**ஆளவந்தார்**—1. மணக்கால் நம்பிக்குப் பின்வந்த வைஷ்ணவாசாரியர். இவர் கலி (௩0௪௭) க்குமேல் தாது வருஷம் ஆடிமீ புதன்கிழமை வீரநாராயண புரத்தில் அவதரித்தவர். தாய் அரங்கநாயகியம்மை. இவர் சிம்மானனும்சம். நாதமுனிகள் பௌத்திரர். ஈசுரமுனிகளுக்குக் குமரர். மகாபாஷ்யபட்டருடன் சாஸ்திராப்பியாசஞ் செய்தவர். ஆக்கியாழ்வான் என்னும் சமஸ்தான வித்வானுக்குக் கப்பங் கட்டும்படி மகாபாஷ்யபட்டருக்குத் திருமுகம்வர, அதைக் கிழித்தெறிந்து அரசன் அனுப்பிய தண்டிகையிற்சென்று ஆக்கியாழ்வானை வாதத்தில் வென்று, இராஜபத்தினியாகிய திருவரங்கத் தம்மையால் என்னை யாளவந்தவர் எனப் புகழப்பட்டு அரசன், வென்றவருக்குப் பாதிராஜ்யமும் தோற்றவர்க்குப் பணி செயலும் எனக் கூறிய பந்தயத்தில் இராஜ்யம் மாத்திரம் கொண்டு பணிசெய்தலை விலக்கிக் கிரகத்தாய்ச் சொட்டை நம்பி,தெய்வத்துக்கரசு நம்பி, பிள்ளை யரசு நம்பி, திருவரங்கப் பெருமாளரையர், முதலிய புத்திரர்களைப் பெற்றுச் சுகித்திருந்தவர். மணக்கால் நம்பி இவர் பிரபாவத்தினைக் கேட்டுச் சந்தோஷித்து இவரைக் காணவந்தவிடத்துக் கட்டுங் காவலுமாயிருக்கக் காணக்கூடாமல் பரிசாரகரைக் கண்டு இவர் இனிப்பாயுண்ணும் பொருள் எது என வினவினர். அவர்கள் தூதுளையெனக் கேட்டு அதனை நாடோறுங் மடைப்பள்ளிக்குக் கொடுத்துவந்து ஒருநாள் நிறுத்தினர். ஆளவந்தார், போசனகாலத்தில் தூதுளையில்லாமையால் பரிசாரகரை வினவினர். பரிசாரகர், ஒரு விருத்தர் நாடோறுங் கொண்டுவந்து கொடுத்து வந்தனர்; அவர் இன்றைக்கு வராமையால் அது நின்றது என்றனர். அதைக் கேட்டு ஆளவந்தார் அவ்விருத்தர்வரின் என்னிடம் அனுப்புகஎனப் பரிசாரகர் கேட்டு அவ்வகையே புரிய, ஆளவந்தார் மணக்கால் நம்பியைக் கண்டு பணிந்து என்னிடம் வந்தகாரணம் என்ன என்றனர். நம்பி, ஆளவந்தாரை நோக்கி நாம் உம்மிடத்து விரும்பியதொன்றுமின்று, ஆயினும் உன் பிதாமகார் வைத்த பொருளை என்னிடம் இருந்து கைக்கொள்கவென்று, அதைக் கொள்வதற்கு ஏகாந்தத்தில் நாமிருவருமேஇருந்து தரப்பெற்றுக்கொள்ள வேண்டுமென்று ஏகாந்தத்திலிருந்து அன்றுமுதல் ரகஸ்யங்களை உபதேசித்து நாளுக்குநாள் சம்ஸாரத்தில், அருசிபிறக்கச் செய்து திருவரங்கத்திற்கு அழைத்துச் சென்று நம்பிதாமகர் தேடி வைத்த மாநிதி இதுவேயெனப் பெருமாளைக்காட்ட, ஆளவந்தார் தங் குமாரர்களையும், நம்பி திருவடிகளிலிட்டு, ஆச்ரயிக்கச் செய்து, ஆத்மசமர்ப்பணஞ்செய்து, சதுசுலோகி யருளிச் செய்து, துரியாச்சிரமத்தைக் கைக்கொண்டனர். ஆளவந்தார் திருவடிகளில் ஆச்ரயித்தவர்கள்: பெரியநம்பி, திருக்கோட்டியூர்நம்பி ஆளவந்தாராழ்வார், பெரிய திருமலைநம்பி, திருமாலையாண்டான், தெய்வவாரியாண்டான், வானமாமலை யாண்டான், ஈசாண்டான், திருமோகூரப்பன், திருமோகூர் நின்றான், தெய்வப் பெருமாள். மாறனேறிநம்பி,திருக்குருகூர் தாசர், திருமாலிருஞ் சோலைதாசர், திருவரங்கத்தம்மை, திருக்கச்சி நம்பி முதலியவராம். பின், குருகைக்காவலப்பன் யோகு செய்யுமிடத்தில், பின்னால் நின்று அவரழைக்க முன்னின்று, அவர் சொற்படி வரமறந்து, இளையாழ்வாருக்குப் பெருமாள் வில்லியருக்கொண்டு, கடாக்ஷித்ததைக் கேட்டு ஸ்ரீ காஞ்சிநகர்க்குச் சென்று இளையாழ்வாருடன் பேசின் யாதவப்பிரகாசனிடம் வாசிப்பதற்குப் பங்கம் வருமென்று, அவரைக் குளிரக் கடாக்ஷித்துப் பெருமாளையும் பணிந்து, திருவரங்க மெழுந்தருளினர். சிலநாட் கழித்து இளையாழ்வாரைக் காண ஆவலுற்றவராகிப் பெரிய நம்பிகளை அனுப்பஅவர் வருவதற்குமுன், திருநாட்டுக் கெழுந்தருளினர். இளையாழ்வார் வந்து, சரமவிக்கிரகத்தைச் சேவிக்கையில் மூன்று விரல்கள் முடங்கி யிருக்க, இருந்தவர்களை வினவியுற்ற துணர்ந்து, பெருமாள் தலைக்கட்டக் கடவரென, அவை நிமிர்ந்தன. பின் இளையாழ்வார் பெரியபெருமாளைச் சேவியாது, ஸ்ரீ காஞ்சிக் கெழுந்தருளினர். இவர்க்கு யமுனைத் துறைவரென்றும் யாமுநாசாரியர் எனவும் பெயர். இவர் செய்த நூல்கள் ஆகமப் பிராமாண்யம், புருஷநிர்ணயம், ஆத்மசித்தி, ஈச்சுரசித்தி, கீதார்த்த சங்கிரகம், ஸ்ரீ தோத்திரம், சதுச்லோகி முதலியன. (குருபரம்பரை).

2. இவர் பாண்டியநாட்டு வீரையூரிற் பிறந்த தமிழ்ப் புலவர். ஞானவாசிட்டத்தைத் தமிழிற் செய்யுளாகச் செய்தவர்.

**ஆளவந்தாராண்டான்**—எழுபத்து நான்கு சிம்மாசனதிபதிகளி லொருவர். (குருபரம்பரை)

**ஆளவந்தாராழ்வார்**—திருவரங்கப் பெருமாளரையருக்கு ஒரு பெயர். ஆளவந்தார் திருவடிசம்பந்தி. இவர்ஆளவந்தார் நியமனப்படி கீழையகத்தாழ்வானுடன் பெரிய பெருமாளுக்கு த்வயப்பிரபந்தம் பாட அனுப்பப்பட்டவர். (குருபரம்பரை)

**ஆளிமுகன்**—சூரபதுமனுக்குள்ளடங்கி இலங்கையை ஆண்டவன். இவன் ஆயிரம் யாளிகளின் முகமுடையான். இவனில்லாத காலத்துவீரவாகுதேவர் இவன் குமாரனைக் கொன்றாரென்று, அவருடன் பகைத்து யுத்தஞ்செய்து மாண்ட அசுரன்.

**ஆளிவிரை**—இது சிறிய விதை. இவ்விரை சீனதேசத்தி லிருந்து கொண்டுவரப்படுகின்றது. மந்தாரகாசம், ஈளை, இந்த வியாதிகளுக்குக் கொடுக்கப்படுகின்றது.

**ஆளுடையதேவநாயனர்**—இவர் திருவிசலூரிற் பிறந்தவர். உய்யவந்த தேவநாயனருக்கு மாணாக்கர் இவர் மாணாக்கர், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனர்

**ஆளுடையார்கோயில்**--திருப் பெருந்துறை சிவபெருமான் ஆசிரிய வடிவங்கொண்டு திருவாத வூரடிகளை ஆட்கொண்டருளிய இடமாதலின் இஃது இப்பெயர் பெற்றது இது துறையெனவும் வழங்கும். (திருவிளையாடல்)

**ஆளேறிபிள்ளை**—பொருவாரை எதிர்விலக்கித் தானொருவனுமேயாகி வீரரை வெட்டியது. (பு-வெ)

**ஆள்வினைவேள்வி**— கைத்தொழில் முடிவு பெற்ற செறிந்த கழலினை யுடையோன் இல்லறத்தினை யுடைய நிறைவைச் சொல்லியது. (பு. வெ. பாடாண்)

**ஆறதாரம்**—மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம் அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை, என ஆறும். அவற்றுள் மூலாதாரம் குதத்திற்கும், கோசத்திற்கும் நடுஇடம், முக்கோணம் நாலிதழ்க்கமலம், மாணிக்க நிறம், கணபதி, குண்டலிசத்தி, ஓங்காரம். **சுவாதிட்டானம்** கோசத்திற்கும் நாபிக்கும் நடு, நாற்சதுரம், ஆறிதழ்க்கமலம், செம்பொனிறம், பிரமா, சரஸ்வதி, நகரம். **மணிபூரகம்** நாபிகமலம், மூன்றாம்பிறை, பத்திதழ்க்கமலம், மரகத நிறம், விஷ்ணு, லக்ஷ்மி, மகாரம். **அநாகதம்**, இருதய கமலம், பன்னிரண்டிதழ்க்கமலம், முக்கோணம், ஸ்படிக நிறம், உருத்திரன், பார்வதி, சிகாரம். **விசுத்தி** கண்டம், பதினறிதழ்க்கமலம், அறுகோணம், மேகநிறம், மகேசுவரன், மகேச்வரி, வகாரம். **ஆஞ்ஞை** லலாடத்தானம், மூன்றிதழ்க்கமலம், வட்டம், படிகநிறம், சதாசிவம், மனோன்மனி, யகாரம். இவை ஆருதாரங்களுக்கும், தானம், ஆசனம், ம[illegible]ரம், தேவதையினிறம், தெய்வம், சத்தி [illegible]ரம் முதலியவாம். (சித்தா)

**ஆறு**—மலையில் பெய்த மழை அதனால் கிரகிக்கப்பட்டு அதினின்றும் வெளிவருவது. இது பல சிற்றாறுகள் தன்னிடம் கூடப்பேராறும்.

**ஆறுமுகநாவலர்**—இவர் சாலிவாகன சகம் 1745 சித்ரபானுிற் பிறந்தவர். இவர் யாழ்ப்பாணத்து நல்லூரினர். கார்காத்த வேளாளர் குலம், சுத்தசைவர். இவர் தந்தையார் கந்தப்பிள்ளை, இவர் நைட்டிக பிரமசரியம் அநுட்டித்தவர். தமிழ் இலக்கிய இலக்கணங்களைச் சேநாதிராய முதலியாரிடத்தும், சரவணமுத்துப் புலவரிடத்தும் கற்றவர். கல்வியறிவேயன்றித்தெய்வ வழிபாடுமுடையவர். சைவநிந்தை பொறாதவர். இவர் செய்த சிறுநூல்கள் அராலி சித்தி விநாயகர் விருத்தம், நல்லை கைலாசப்பிள்ளையார் மங்கள விருத்தம், வசந நூல்கள், பெரிய புராணவசனம் பாலபாடங்கள், இலக்கணச் சுருக்கம். இவர் தமது பொருள்களைத் தமிழ்க்கல்வி விருத்தியின் பொருட்டு உபயோகித்து வண்ணார்பண்ணையிலும் சிதம்பரத்திலும் சைவப்ரகாச வித்யாசாலை ஸ்தாபித்த தமிழ் அறிஞர்.

**ஆறுமுகசுவாமிகள்**—குகை நமசிவாயச் சுவாமிகளுக்கு மாணாக்கர். தமிழில் நிஷ்டாநுபூதி செய்தவர்.

**ஆற்றூர்க்கிழான்**—இவர் தொண்டைமண்டலத்து வேளாளர். ஆற்றூரிலிருந்த புலவர் ஒருவர், ஒரு குதிரை கேட்க, அவர்க்கு ஆயிரங்குதிரை யளித்தவர்.

**ஆனகோந்தி**—இருஷியமூக பர்வதத் தருகிலுள்ள ஒரு நகரம்.

**ஆனந்தக்கூத்தர்** — இவர் பாண்டி நாட்டு பொருநை யாற்றங்கரைக் கணுள்ள வீரவநல்லூர்ச்சைவர். இவர் சிவத்தலயாத்திரை செய்து தக்ஷிண கைலாசமென்னுந் திருக்காளத்தியில் தங்கியிருக்கையில் ஆங்கிருந்தார் வேண்டுகோளின்படி திருக்காளத்தி புராணம் இயற்றியவர்.

**ஆனந்தநமசிவாயபண்டாரம்**—இவர் சிதம்பரம் குருநமசிவாய மூர்த்திகளின் மாணுக்கர். இவர்க்குக் கர்நாடகத்தரசன் வேங்கடபதி தேவன் - I (சகம், 1514) இல், ஒரு மடம் கட்டித்தந்தனன். (விரிஞ்சி - சா - ம்).

**ஆனந்தப்பையுள்** (1) இடும்பை மிக மூங்கில் போன்ற தோளிணையுடையாள் கணவனிறப்ப மெலிந்து வருந்தியது. (பு. வெ. பொது).

2 என்பது களவினும், கற்பினும் தலைவனும் தலைவியும், பிரிந்த காலத்துக் கையறு துயரமொடு காணுதற்கு விரும்பித் துன்பத்துடன் நாயகனது நாடு ஊர் முதலிய குறித்து அவனது ஊரில் அன்றில் கூவினும், குயில் கூவினும், ஆயர் குழலிசை கேட்பினும் உயிர்கழியு மென்பதும், பிறவாற்றானும் துன்ப முறுதல். (யாப்பு, வி)

2. அசையும் மூங்கில் போன்ற தோளிணையுடையாள் நற்சொல்லும் நிமித்தமும் விகற்பிப்பப் பயப்பட்டு நடுக்கமுற்றது.

3. மிகப் பெரிய வெய்ய பூசலிற் பொருந்திய வீரனுக்கு வருந்தினும் முன் பிற்றுறையேயாம். (பு. வெ. பொது).

**ஆனந்தம்** — இது சொல்லணியிலொன்று. இது அறுவகைப்படும். எழுத்தானந்தம், சொல்லானந்தம், பொருளானந்தம், யாப்பானந்தம், தூக்கானந்தம், தொடையானந்தம் என்பன. **எழுத்தானந்தமாவது** பாடப்படுவோன் பெயரைச்சார்த்தி, எழுத்தளபெழப் பாடுவது. **சொல்லானந்தமாவது** இயற்பெயர் மருங்கின் மங்கலமழிய தொழிற்சொல்லைப் பாட்டுடைத்தலைவன்மேல் ஏறப்பாடுவது. **பொருளானந்தம்**—பாட்டுடைத்தலைமகன் நாட்டின் யாதானுமொன்றைச்சிறப்பித்துச் சொல்லலுற்ற விடத்து அத்திணைக்குரிய இறைச்சிப் பொருளை ஊறுபடச் சாவவும்,கெடவுஞ்சொல்வதும், மங்கலமழியப் புகல்வதும், மங்கல உவமைக்கு அமங்கல உவமேயத்தைக் கூறுதலுமாம். **யாப்பானந்தமாவது** முன்தொடுக்கப்பட்ட சிறப்புடை மொழியின் பின், பாட்டுடைத் தலைவன்பெயர் நிறுவி,அதன் பின் சிறப்புடை மொழிநிறுவிச் சிறப்பிக்கப்படுவதனை இவ்வாறிடர்ப் படப் பாடுவது. **தூக்கானந்தம்**—கஞ்சத்தாளம் முதலிய கருவிகளோடும், இசைந்த இசைக்கீழ்ப் பாடுதற்கண் அவன் பெயரைச் சார்த்தி உயரவும் இறுகவும், பெயர் பிளந்து பண்ணியும், ஒருவர்க்குப் பெயர் புலனாகாமையுஞ் சொல்லுதல். **தொடையானந்தம்**—அளபெடைத் தொடைப் பாட்டினுள் பாட்டுடைத் தலைவன் பெயர் சார்த்தி அளபெடுப்பத் தொடுப்பது.

**ஆனந்தநுபசத்தி**—சுத்த சத்துவசத்தி.

**ஆனர்த்தம்**—இது துவாரகைக்குச் சமீபத்திலுள்ள ஒரு நாடு. இதில் சரியாதி மகன் ஆனர்த்தன், குசத்தலி யெனும் பட்டணம் நிருமித்தான்.

**ஆனயநாயனர்**—மழநாட்டில் மங்கலவூரில் ஆயர்குலத்தில் ஆனயர் என அவதரித்தவர். இவர், வேய்ங்குழலிற் பஞ்சாக்ஷரத்தை விதிப்படி இசைத்துவருவர். இவ்வகை இசைத்துவருபவர், பசுக்காத்தற் பொருட்டுப் பசுக்கூட்டத்துடன் சென்று, காட்டில் நிறையப் பூத்த கொன்றை விருக்ஷத்தைக் கண்டு, அதனடியிற் சென்று பஞ்சாக்ஷரத்தை வேய்ங் குழலில் இசைத்தனர், அதனற் சராசரங்களெல்லாம் இசைவயப்பட்டுத் தம்பித்தன. சாயகீதப் பிரியராகிய சிவமூர்த்தி தரிசனந்தந்து, அன்பனே நீயிவ்வகை நமது சந்நிதானத்தில் இருக்க என்ன, நாயனர் வேய்ங்குழலிசைத்துக்கொண்டு கைலைக் கெழுந்தருளினர். (பெரிய புராணம்.)

**ஆனைமாமலை**—சைநர்களின் மடங்களிலிருந்த இடம்போலும், இது இந்த இடமென தெரியவில்லை. (தேவாரம்.)

**ஆன்பொருநை**—வஞ்சிமாநகரத்துள்ள ஆறு இதற்கு ஆனி, வானி, ஆன்பொருந்தம், தண்பொருநை, சூதநதி யெனவும் பெயர்.

**ஆன்பொருந்தம்** — இது கருவூரைச்சார்ந்த ஓராறு; ஆன்பொருநையென்றும் பொருநையென்றும் வழங்கப்படும். (புற-நா)

**ஆன்மதத்துவம்**-ஆன்மா நிலைத்த தேகத்தின் தத்வங்கள். இவை (24) கூடியன. பூதம் (5) பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் தன்மாத்திரை. (5) சத்தம், பரிசம், ரஸம், ரூபம், கந்தம், கன்மேந்திரியம். (5) வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம். ஞானேந்திரியம் (5) சோத்ரம், தொக்கு, சக்ஷு, சிங்நுவை, ஆக்ராணம். அந்தக்கரணம் (4) மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

**ஆஸ்திகமுனிவர்** — ஜரத்காரு முனிவர்க்குக் குமரர். மானஸா தேவியின் குமரர். மானஸாதேவியைக் காண்க.

ஆஸ்திரேலியா—இது ஓஷேனியாவின் ஒரு பிரிவு. இது நான்கு புறத்தும் பஸிபிக் இந்துமகா சமுத்ரங்களால் சூழப்பட்டது. இதன் பிரிவுகள், தென்வேல்ஸ், குவீன்ஸ் லண்ட், விக்டோரியா, தென் ஆஸ்திரேலியா, மேற் காஸ்திரேலியா, டாஸ்மானியா, தென் புதிய வேல்ஸ் என்பார். புது ஸீலாண்ட், மலினீஷியா, நியுகினியா, சாலமன் தீவுகள், ஜர்மன் தீவுகள், பிராஞ்சிய தீவுகள், பாலினிஷியா, முதலிய தீவுகள் பஸிபிக் கடல் முதலியவற்றிலிருக்கின்றன.

ஆஸ்மாகி—பாரசீனவதன் பாரியை யாதவி. புத்திரன் சையாதி.

ஆஸ்வலாயனன்—விச்வாமித்திர புத்திரன்.

ஆஹவநீயம்—ஆஹூதி யென்பது எல்லாம் என்பதை அறிவிப்பது, ஹவ்யம் என்பது வஹிக்கை (= சுமத்தல்) எல்லா ஹவ்யங்களையும் வஹிப்பது ஆதலால் இப் பெயர் பெற்றது. ஹோமம், தொடங்கி முடியுமளவும் இதன் முகத்தில் செய்யப்படுகிறது. இது ஸ்வர்க்கமாக எண்ணப்படுகிறது. ஸ்வர்க்கமானது நான்கு கோணங்களுள்ளதும், நிர்மலமும், வியாதியற்றதுமாக இருப்பது ஆதலால் நான்கு கோணங்களுள்ளதாம். (பார அச்)

# இ

இகழ்ச்சியணி—அஃதாவது, ஒன்றன் குணகுற்றங்களான் மற்றொன்றற்கு அவையுளவாகாமையைச் சொல்லுதலாம். இதனை வட நூலார் அவஞ்யாலங்காரம் என்பர்.

இசை—(ந) மந்தரம், மத்திமம், தாரம். இசை (எ) குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம். இவற்றுள் மிடற்றால், குரல், நாவால், துத்தம், அண்ணத்தாற் கைக்கிளை, சிரத்தால் உழை, நெற்றியால் இளி, நெஞ்சால் விளரி, மூக்கால் தாரம். (இவற்றிற்கு ஓசையுவமை) முறையே மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை (சுவையுவமை) பால், தேன், கிழான், நெய், எலம், வாழை, மாதுளங்கனி. (மணவுவமை). மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னுவிரை, புன்னை. (அக்ஷரங்கள்) ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ, (மாத்திரைகள்) குரல் ச, துத்தம் ச, கைக்கிளை உ, உழை ந, இளி ச, விளரி ந, தாரம் உ, இவற்றுள், ஏழுபாலை பிறக்கும். பாலையைக் காண்க.

இசைச்சன்—இவன் உதயணனுடைய பார்ப்பனத்தோழன். அவனுடை அமைச்சனுகவுங் கூறப்படுவன். இளமையில் இருமுது குரவரையுமிழந்தோன். வாசவதத்தையையும், யூகியையுமிழந்ததனல் மிகுந்த கவலையுற்று மெலிந்த உதயணனை நோக்கி "இறந்த வாசவதத்தை பிறந்த இடத்தை அறிந்து பழைய உடம்போடு அவளைத் தருதற்குரிய மந்திர விச்சையில் வல்லவராகிய பெரியவ ரொருவர் இராசகிரிய நகரின் பக்கத்தே யுள்ளார் அவரை அடைந்து வழிபட்டால் வாசவதத்தையையும் யூகியையும் நாம் பெற்றுவருதல் எளிது" என்று சொல்லித்தேற்றி அவனை வேற்றுவடிவங் கொள்வித்து மற்றைத் தோழர்களோடு அந்நகர்க்கு அழைத்துச் சென்றவன். சென்ற இடத்துக் காமன் கோட்டத்தின் வாயிலிற் காணப்பட்ட பதுமாபதி தன்னை விரும்பின னென்று வேட்கையுற்ற உதயணனுக்கு மகததேயத்து மகளிரது நிறையுடைமையைக்கூறி அவனது காம வேகத்தைத் தணிவித்தவன். அவன் பதுமாபதியின் கன்னிமாடத்தில் வேற்று வடிவங்கொண்டு மறைந்திருந்த காலத்தில் மற்றத் தோழர்களோடு தானும் வேற்றுவடிவம் கொண்டு அயலிடத்திலிருந்து அவனைப் பாதுகாத்து வந்தோன். தருசகனோடு பெரும் போர்புரிதற்கு வந்த பகைவருடன் போர் செய்தற்குச் சென்ற உதயணனுக்குத் துணையாகச் சென்றவன். பதுமாபதியை நீ மணஞ்செய்துகொள்ள வேண்டும் என்று தருசகன் உதயணனை வற்புறுத்தியபொழுது இசைச்சனென்னும் உயிர்த்தோழ னருமறை நாவினந்தணனவன் றனக் கிருமுது குரவருமிறந்தனராதலின் வேதத்தியற்கையின்னேதந் தீரக்கிரிசையின் வழா அ வரிசை வாய்மையோரந்தணன் கன்னியை மந்திர விதியினவன் பாற்படுத்த பின்னரென்னையும் மிதன் பாற்படுக்கஎன உதயணனுற் கூறப்பெற்று ஒழிக்கினும், குலத்தினும் விழுப்பமிக்க ஆப்பியாயினி யென்னும் அந்தணக் கனியை மணஞ்செய்துகொண்டவன். பல வருவாயையுடைய பல ஊர்களைச் ... வித

மாக உதயணன்பாற் பெற்றவன் "மயக்கமில்கேள்வியிசைச்சன்" வாய்மொழிந்தாய்ந்த வுயர்ச்சியுள்ளத் திசைச்சன் "இழுக்காவியல் பினிசைச்சன்" என்பர். (பெருங்கதை).

**இசைஞானியார்**—சடையனார் பத்தினியார், சுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பெற்றவர். (பெரியபுராணம்).

**இசைநுணுக்கம்**—இது சாரகுமார னிசையறிதற் பொருட்டுச் சிகண்டியாற் செய்யப்பட்ட இசைநூல். அகத்தியர் காலத்திருந்தது. இடைச்சங்க மருவியதென்றுங் கூறுவர்.

**இசையானந்தம்** — அவலமுற்றிருந்தோர்க்குரிய இசைகள், தலைவன் பாட்டிற்கு இசையாகி வரப்புணர்க்கும் நூற்குற்றம் (யா-வி).

**இசையெச்சம்** — வாக்கியத்திற் சொற்கள் எஞ்சிய பொருளுணர்த்தி வருவது. (தொல். சொல். 440).

**இச்மிருதி**—யமனுக்கு மேதையிட முதித்த குமரன்.

**இச்சாசத்தி**—இது, ஆதி சத்தியில் ஆயிரத்தொரு கூறாக வடிவைப் பிரேரிப்பது. (சதா-ம்)

**இச்சுவா**—தக்ஷன்பெண். அத்திரிக்குத் தேவி.

**இஞ்சியம்** — பிரமன் மூச்சிற் றோன்றிய மேகம்.

**இடக்கரடக்கல்**—நன்மக்களிடத்தே சொல்லத்தகாத இடக்கான வார்த்தைகளை மறைத்துப் பிறவற்றாற் சொல்வது. தகுதி வழக்குளொன்று. (நன்)

**இடைக்கழிநாட்டுநல்லூர்நத்தத்தனார்**— இவர் எறுமாநாட்டு நல்லியக்கோடன்மீது சிறுபாணாறுபாடிப் பரிசுபெற்ற புலவர்.

**இடங்கழிநாயனார்**—கோனாட்டுக்குள்ளிட்ட குறிஞ்சிநிலமாகிய எயினர் வாழும் கொடும்பாளூரில், சூரியவம்சக் குறுநிலமன்னர் குலத்தில், திருவவதரித்து அரசாட்சி செய்துகொண்டு, சிவபத்தி மேலிட்டவராக இருக்கையில், சிவனடியார்க்கு அமுதுபடைக்கும் நியமம் பூண்ட அடியவர் ஒருவர், அடியவர் பூசைக்குப் படைக்க அமுதில்லாமல், இராஜாவின் அம்பாரத்தில் திருட, சேவகர் பிடித்து அரசன் முன் விட்டனர். அரசன் அடியவரை நோக்கி என் திருடினீரென, சிவனடியவர்க்கு அமுதுபடைக்க இல்லாமையால் திருடினேன் என்ன, அரசன் கேட்டு இரக்கமுற்றுத் தமது பொக்கிஷத்தையும், அம்பாரத்தையும், சிவனடியவர் கொள்ளை கொள்ளவிட்டு அரசுசெய்து முத்தியடைந்தவர். இவர் கோச்சிங்கப்பல்லவன் காலத்தவர் என்பர். இவ்வம்சத்தவன் விசயாலயன் எனும் சோழன். (பெரியபுராணம்).

**இடந்தலைப்பாடு**—முதனாளில் இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் மற்றைத்தினத்தி லவ்விடத்தேவந்து தலைமகளைக் கூடுதல். இது தெய்வந்தெளிதல், கூடல், விடுத்தல் எனும் வகையினையும், தந்த தெய்வந் தருமெனச் சேறல், முந்துறக் காண்டல், முயங்கல், புகழ்தல், ஆயத்துய்த்தல் எனும் விரியினையு முடையது. (அகம்) இரண்டாநாள் முடிவு.

**இடச்சுத்தம்**—குடிபுக-(கஉ)ம், முடிபுனைய (கக)ம், அன்னப் பிராசனத்திற்கு (க0)ம், மயிர்கழிக்க (க)ம், உபநயனத்திற்கு (அ)ம், விவாகத்திற்கு (எ)ம். கோடியுடுக்க (சு)ம், யாத்திரைக்கு (ரு)ம், வித்யாரம்பத்திற்கு (ச)ம், பொன் பூண (உ)ம், நிஷேகாதிகளுக்கு லக்னமும், சுத்தமாக இருத்தல் வேண்டும்.

**இடச்பதி** — யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷணையிடத் துதித்த குமரன்.

**இடபகிரி**—திருவேங்கடம், வ்ருடபாசுரனைக் காண்க.

2. இது சோலைமலையெனவும் வழங்கும். (திரு).

**இடபதீர்த்தங்கரர்**—இவர் ஜைன தீர்த்தங்கரரில் முதற்றீர்த்தங்கரர். இவர் இத்தீர்த்தங்கர ராதற்குமுன் பத்துப் பிறவியெடுத்தனர். முதலாவது ஜயவர்மா, உ-வது மகாபலர், ந-வது லளிதாங்கதேவர், ச-வது வச்சிரசங்கர், ரு-வது போகபூமியில் ஆரியமனுஷன், சு-வது ஸ்ரீதரதேவர், எ-வது சுவிதிராசர், அ-வது அச்சுதேந்திரன், கூ-வது வச்சிரநாபிசக்கிரவர்த்தி, ய-வது சர்வார்த்தசித்தி அகமிந்திரதேவர். இந்த ருஷபதீர்த்தங்கரருக்குத் தந்தை நாபிமகாராசா, தாய் மருதேவி. இவர் கருவில் வந்தவுடன் தாய் பதினாறு சுவப்பனங்கள் கண்டாள். இவர் பிறந்தவுடன் தேவர்களிவரைத் தாய்தந்தைய ரறியாது எடுத்துச் சென்று மேருசிகரத்திலுள்ள பாண்டுக சிலையில்வைத்து க்ஷீரசமுத்திர சலத்தால் அபிஷேகஞ்செய்து, அலங்கரித்து மீண்டும் தந்தையிடம் விட்

டனர். இவர்க்குத் தேவிமார் யசச்சுதி, சுநந்தை. அவருள் யசச்சுதிக்குப் பரதேசுரர், இருஷபசேநர் முதலிய (கக) குமரரும், பிராமியென்னும் ஒரு பெண்ணும், சுநந்தைக்குப் பாகுபலியென்னும் ஒரு குமரனும், சுந்தரியென்னும் ஒரு பெண்ணும் உண்டு. இவர் சிலநா ளரசுபுரிந்து, தீக்ஷை மேற்கொண்டு, (கOஅ) கர்மங் கெடுத்துத் தீர்த்தங்கரராயினர். இவர் உன்னதம் (டுOO) வில், ஆயுள் (அஉ) லக்ஷம் பூர்வம், (நிறம்) பொன்மை. இவரிடமிருந்தார் (அஉ) கணதரர். அவருள் முதல்வர் ருஷபசேனர்.

**இடபதேவர்**—இடபவடிவாக மூன்றுகண், மனதில் சிவத்யானம், சாக்ஷாத் தர்மஸ்வரூபம், சுத்தஸ்படிகநிறம், சமஸ்த்தத்திற்கும் ஆதாரபூதம், கூர்மையான கொம்புகளுடன் மகாபலம் உள்ளவராக இருப்பர். (ஆகமம்) இவர் சிவபூசைசெய்து எக்காலத்தும் சிவபெருமானை நோக்கி எதிரில் தரிசிக்கும் வாகனமாயிருக்கும் வரமும் பெற்றவர். (சிவரஹஸ்யம்)

**இடபத்துவசன்**—ஏகாதச ருத்திரருள் ஒருவன், தேவி சற்பி.

**இடபத்வசன்** — காசியிலுள்ள சிவலிங்கத்தொன்று.

**இடபநேசர்**—ருஷபதீர்த்தங்கரருக்கு யசச்சுதியினிடம் பிறந்த குமரர்.

**இடபநேசன்**—பாரதவீரருள் ஒருவன்.

**இடபயோகி**—மேருதேவியின் குமரர், விஷ்ணுவின் அம்சம்.

**இடபநுபன்** — சண்முகசேனைவீரருள் ஒருவன்.

**இடபவீதி**—மீனம், மேடம், கன்னி, துலாமென்னு மிராசிகளடங்கிய சூரியனியங்கும் நெறி. (பிங்கலம்).

**இடபன்**—1. உபரிசரவசு வம்சத்தவன்.

2. சுக்கிரீவன் சேனையிலுள்ள ஒரு வானரன், வயமத்தனென்னும் அரக்கனைக் கடலில் விழத்தள்ளிக் கொன்றவன்.

3. இந்திரனுக்கு இரண்டாம் புத்திரன்.

4. நாபியின் குமரர், மகாயோகி. இவருக்குப் பரதன் முதல் நூறுகுமரர் இருந்தனர். அவர்களில் மூத்தோனாகிய பரதனுக்கு இராச்சியங் கொடுத்துத் தவநிலைக்குச் சென்றார். தாய் மருதேவி. தேவி சூர்யபுத்திரியாகிய சயந்தி, இவர் விஷ்ணுவி னவதாரமென்பர். இவர் தம் நூறு குமரருக்கும் ஞானோபதேசஞ் செய்தனர். இவர் மகாசித்தராய் மலமுதலானவைகளால் பூசப்பட்டாலும், நல்ல மணமுடையவராய் ஆகாயகமனம் முதலிய செய்து காட்டி, யோகியர்கள் சரீரத்தை விடுகை இவ்வகையென்று விட்டுக் காட்டினர். பிறகு இவர் தேகம் மாத்திரம் யோகவாசனையால் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. அத்தேகம் குடனசலமென்னும் காட்டருகு பித்தனைப்போல் மயிர்விரித்தலையக் காட்டுத்தீயாற் றகிக்கப்பட்டது. இவரை ருஷபதீர்த்தங்கரரென்று ஜைநர் கூறுவர். பாகவதம்

5. ஒரு கோபாலன்.

6. சக்கிர னென்னும் ஆதித்தனுக்குப் பௌலோமியிட முதித்தவன்.

7. அதலலோகத்தவன்.

8. அயோத்தியை இராமருக்குப்பின் செழிப்பித்த சூர்யவம்சத் தரசன்.

9. பிருகத்ரதனைக் காண்க.

**இடபாசுரன்** — ஒருநாள் திருமால் வேட்டைக்குச் சென்றனர். அப்போது இவன் எதிர்க்கத் திருமால் சக்கிராயுதத்தை ஏவினர். அதனால் அசுரன் திருமாலென அறிந்து வேண்டித் தன் பெயர் அவனிருந்த மலைக்கு வர வரம்வேண்டி முத்தியடைந்தவன். அதுவே இடப மலை. (திருவேங்கடபுராணம்).

**இடபாந்திகமூர்த்தி** — சிவமூர்த்தி சர்வசம்மாரஞ் செய்த காலத்து, எக்காலத்தும் அழியாத தருமம் இடபவுருக் கொண்டு இறைவனை அடைய அதற்கு அடைக்கலங் கொடுத்து ஆதரித்த திருக்கோலம்.

**இடபாருடமூர்த்தி**—சிவமூர்த்தி திரிபுரமெரித்தகாலத்து, வந்த விஷ்ணு, இடபமாகி நிற்க, அவரை வாகனமாக ஏறிய திருக்கோலம்.

**இடம்**—(ந) தன்மை, முன்னிலை, படர்க்கை.

**இடம்பன்**—அதர்மத்தின் குமரன்.

**இடவகன்**—உதயணனுடைய மந்திரிகளில் ஒருவன், அவனுடைய உயிர்த்தோழன். சூழ்ச்சி, வாய்மை, நன்றியறிவு, வீரம், இவை இவனுடைய சிறப்பு குணங்கள், வசவதத்தையை உதயணன், உஞ்சை நகரத்திலிருந்து வரைந்து அழைத்துவரும் பொழுது பகைவரால் அவனுக்கு யாதோரிடையூறும் உண்டாகாதபடி நீ இங்கே சேனைகளுடனிருந்து பாதுகாக்கவேண்டும் என்று யூகிசொல்லியவண்ணம் புட்பக

நகரத்திற் சன்னத்தனக இருந்தவன். உதயணனுடைய மேம்பாட்டை அறிந்து பொருமையுற்றுத் தந்திரமாக அவனை அடக்கப் பிரச்சோதனனுடைய தமர் கண்ணபிரானை அகப்படுத்துதற்காகத் துர்யோதனன் அமைத்ததுபோலப்படைக்கலங்கள் உள்ளே நிறுவப்பெற்ற பொய்ந்நிலமொன்றை அமைத்து அதனைக் காட்டி அவனை வீழ்த்தினர் என்று பொய்மொழி யொன்றைக் கேட்டு வருந்தி இச் செய்தி மெய்மையாயின் யானும் உயிர் துறப்பேன் என்று நிச்சயித்துக்கொண்டு உடனே உண்மைதெரிந்து வரும்படி உஞ்சைநகர்க்கு ஒரொற்றனை அனுப்ப நினைந்து புறப்பட்டுநின்ற பொழுதில் வந்த வயந்தகனைக் கண்டு உயிர்த்துணைத்தோழ னுளனென வுவந்து பெயர்ச்சியி லுலகம்பெற்ருன் போலச் செந்தாமரைக்கட் காவலன் செவ்வியை முந்துறக்கேட்ட பின்றை உதயணன் கூறிவிடுத்த அடையாளச் சொல்லால் வயந்தகனைநம்பி அவனுடன் பெரும்படை தொகுத்துக்கொண்டுபோய்த் தான் இன்னுனென்று அறியாத புளிஞ்சர் சவரர்களால் வளைப்புண்டு துணையற்றுநின்ற உதயணனையும், வசவதத்தையையும் கண்டு மிக்க உபசாரத்தோடும் அழைத்துச்சென்று சயந்திநகரிற் சேர்த்தியவன். அங்ஙனம் சேர்த்தியபொழுது "துன்பப் பெருங்கடற் றுறைகட்பொருந்திய வின்பப்பெரும்புணை யாயினிரெமக்கு" என மனங்குளிர்ந்து உதயணனுற் பாராட்டப் பெற்ற பெருமை வாய்ந்தவன். உஞ்சை நகரத்திலிருந்து பிறரறியாதபடி நேரே தன்பால் தனியே வந்து வினவிய யூகிக்கு உதயணன் செய்தி முழுவதையுங் கூறிச் சயந்தியில் வாசவதத்தையை மணந்த பின்பு, "மாகவிசும்பின் மதியமும் ஞாயிறும், எழுதலும் படுத்தலும் அறியாவின்பமோடு அரசன் இருக்கின்றனன். ஆருணியரசன் கோசம்பியைக் கைப்பற்றிக்கொண்டு ஆளுதலையும் அவனறிகிலன். தன்னுயிரன்ன தம்பியரையும், நினைந்திலன் பொன்னகர் புகுந்த நகுடன்போல்கின்ருன், அவனது சமயம் யாருக்கும் கிடைத்திலது என்று விளங்கச்சொல்லி மேலே ஆகவேண்டியவற்றை யூகி ஆராய்ந்து செய்யும்படித் தூண்டியவன். தருசகன் பொருட்டுப் பகைவரோடு போர்செய்தற்கு உதயணன் சென்றபொழுது அவனுக்குத் துணையாகப் பல வீரர்களுடன் சென்று போர்செய்து வெற்றியடையும்படி செய்தவன். ஆருணியரசனைக் கொன்று கோசம்பியைக் கைப்பற்றுதற்கு வருடகாரனுட ஞராய்ந்து இவன் செய்த உதவிகள் பல. ஆருணி இறந்தபின் "உதயணனையன்றி வேறு யாரையும் உள்ளே விடோம்" என்று கோட்டைவாயிலை அடைத்துக்கொண்டிருந்த கோசம்பி நகரத்தார் இவன் வந்தமை தெரிந்தவுடன் மிக்க மரியாதையோடு அழைத்துக்கொண்டு உள்ளே சென்ருர்கள். உதயணனுல் இவன் சீவிதமாகப் பெற்றவை புட்பகமென்னும் நகரமும் சிறு நாடுகள் ஐம்பதும், பிறவருவாய்களும், இவன் புட்பகத்தையே தலைநகராக்கி அரசாட்சி செய்துகொண்டிருந்து அழைத்தபொழுதுசென்று உதயணனுக்கு வேண்டியவைகளைச் செய்துவருபவனுக இருந்தான். (பெருங்-க).

**இடவயம்**—காந்தாரநாட்டுப் பூர்வ நகரம். இதற்கரசன் அத்திபதி. (மணிமேகலை).

**இடவாகுபெயர்** — இடத்தின்பெயர் அவ்விடத்திலுள்ள பொருளுக்கு ஆகிவருவது. (நன்னூல்)

**இடவிவரம்**—க, ச, எ, கo-கேந்திரம்; ரு, கூ-திரிகோணம் கு, அ, ௬-ஷஷ்டாஷ்டகம்; ங, சு, அ, கஉ-மறைவிடம்; க-லக்னம்; உ-கண், வாய், முகம், குடும்பம்; ங-வெற்றி, சகோதரம்; ச-வாகனம், பூமி; ரு - புத்ரஸ்தானம்; சு - ரோகம், சத்ரு, சோரம்; எ-களத்ரம்; அ-மாரகம், ஆயுள்; கூ-பிதா, குரு, செல்வம்; கo-உத்யோகம்; கக-லாபஸ்தானம், தமயன்; கஉ-விரயம்.

**இடாகினி**—பிணந்தின்னும் பேய், ஒரு வஞ்சதுஷ்டதேவதை.

**இடி**—மழைபெய்யுங் காலத்தில் மேகங்கள் பூமிக்கருகில் வருவதால் அம் மேகங்களிலிருந்து மின்சாரம் பேரொளியாகப் பாய்வது. இந்த மின்னல், அதிக உஷ்ணமாக இருப்பதால் இதன் வழியிலிருக்கும் எந்தப் பொருளையுந் தகர்த்து எரித்து ஒடித்துவிடும். இம் மின்னலின் உஷ்ணத்தினுல் காற்றுள் பிளவு உண்டாகி உடனே சேருவதால் இடியெனும் ஒரு பேரோசை உண்டாகிறது. இம் மின்சாரம், இரும்புகள், செப்புக் கம்பிகள், பெரிய கண்ணுடிகள், முதலியவற்ருல் இழுக்கப்படுதலால் இவைகளுள் உயர்ந்த இடங்களினடியிலிருத்தல் அபாயத்தை விளைக்கும். இங்

தக் காரணத்தால்தான் உயர்ந்த கட்டடங்களுக்குக் காந்தக் கம்பிகள் பொருத்திப் பூமியில் விட்டிருப்பது.

**இடிசீகன்**—சராசந்தன் நண்பன். இவர்களிருவரும் ஆயுதங்களா லிறப்பிலாது வரம் பெற்றவர்கள். இவனும் அம்சனென்போனுங் கண்ணனுடன் போரிடுகையில் இருவருள் ஒருவன் இறந்தான் என்று வெறுஞ்சத்த முண்டாயிற்று. உண்டாதலும் அதைக்கேட்டு இடிசிகனிறந்தான். இடிசிகனிறந்த சங்கதிகேட்டு அம்சனுமிறந்தான். இவனுக்கு இடிம்பிகனெனவும் பெயர்.

**இடிபிகன்**—அம்சனுடன் பிறந்தவன்.

**இடுமருந்தின்வகை**—ஸ்திரீகள் தங்கள் புருஷரையும், புருஷர் ஸ்திரீகளையும், தொழிலாளிகள் எசமான்களையும் வசியப்படுத்தும்பொருட்டு அன்ன முதலிய உண்ணும் பொருள்களிலாவது, நீர் முதலிய பானஞ் செய்யும் பொருள்களிலாவது, தாம்பூலாதிகளிலாவது சேர்த்துக் கொடுக்கப்படுகிறடற்பல செந்துக்களின் கபாலபஸ்பம், அ ்பவீரியவிஷம், மலமூத்ர ஔஷதம், பச்சிலை முதலியவாம். (ஜீவ).

**இடும்பன்**—1. ஒரு அரக்கன். இவன் வனத்தில், அரக்குமாளிகையினின்றும் உயிர்பிழைத்த வீமன், சகோதரருடன் அறியாது புக இடும்பன் வீமனுடன் போர்செய்து மாண்டனன்.

2. அசுரர்க்கு ஆயுதவித்தை கற்பிப்பவன். இவன் தாருகன், சூரன் முதலியவர் தோற்றகாலத்தில் காட்டிற் றவம்புரிந்தனன். இவனை அகத்தியமுனிவர் கண்டு நீ யாரெனத் தனது வரலாறு கூறிச் சூரன் குமரன் இரணியன், குமாரக்கடவுள் வலிக்குத் தோற்றுத் தந்தையர்க்கு நீர்க்கடன் செய்யக் கடலிலொளித்தனன்; நான் காட்டில் வசிக்கிறேன் எனக் கூறக்கேட்டுச் சடாக்ஷரத்தை முனிவர் உபதேசிக்கப் பெற்று அகத்தியர் கட்டளைப்படி சத்திகிரி, சிவகிரிகளைக் காவடிபோ லேந்திவருகையில் குமாரக்கடவுள் வேடனைப்போல் வந்து, மலைகளை யிறுத்திவிட இடும்பன் கோபித்துக் குமாரக் கடவுளுடன் சண்டை செய்யக் குமாரக்கடவுள் இடும்பனுடன் போரிட்டு அவனை, மூர்ச்சிக்கும்படி செய்தது கண்டு, இடும்பியழக், குமாரக்கடவுள் தரிசனந்தந்து இடும்பனை உயிர்ப்பித்து, அவன் துதிக்கத் தமது கணத்தலைவனுக்கினர். (பழனித்தலபுராணம்).

3. காடிகளுக்குத் தலைவன். இராமருக்குத் துணையா யமர்ந்தவன்.

**இடும்பாசுரன்**—விநாயக ரவதரித்த இடத்தில் மலையுருக் கொண்டிருந்து விநாயகர் பெருமூச்சா லிறந்தவன்.

**இடும்பி** — இடும்பன் சகோதரி அரக்கி. அரக்குமாளிகையி னின்றும் உயிர் தப்பி வந்து, இடும்பன் வனமடைந்து தன்னைக் கொல்லவந்த இடும்பனைக் கொன்று நின்ற வீமனை மோகித்தவள். வீமன், தாய் சொற்படி இவளை மணந்தனன். இவளிடத்து வீமனுக்குக் கடோற்கசன் பிறந்தனன். இவளுக்குக் கமலக்கன்னி யெனவும் பெயர். இவள் முக்காலமு முணர்ந்து சொல்பவள்.

**இடும்பில்**—ஓர் ஊர். (சிலப்பதிகாரம).

**இடைக்காடர்** — இவர், தொண்டைமண்டலத்தில் இடையன் திட்டிவிருந்த இடையர். பொதிகைமலைச் சாரலில் ஆடுமேய்த்திருக்கையில், நவசித்தரில் ஒருவர் வந்து பால்கேட்க அவருக்குப் பால் முதலியன கொடுத்து உபசரித்ததனல், அவர் ஞானேபதேசஞ்செய்து போயினர். அதனுற் சித்தியடைந்து சித்தராயினர். ஒருமுறை மழையிலாது நாடு பன்னிரண்டு வருடம் வற்கடமாகுமென முன்னறிந்து இவர், தம் ஆடுகளுக்கு எருக்கிலை முதலியன கொடுத்துப் பழக்கிக் குருவிரகு என்னும் தானியத்தைச் சேற்ருேடு கலக்கிச் சுவர்வைத்துக் குடிசை யொன்று கட்டி அதில் தம் ஆடுகள் எருக்கிலை தின்னும் ஊறலாற் சுவரில் தேய்க்க, உதிர்ந்த சிறிது தானியத்தைப் புசித்து வாழ்ந்து வந்தனர். நாடுவற்கடமாய் உயிர்கள் எல்லாமழிய, இவரும் இவர் ஆடுகளும் மாத்திரம் பிழைத்திருப்பதை அறியும்படி நவக்கிரகங்களு மிவரிடத்து வந்தனர். சித்தரெதிர்கொண் டுபசரித்து விருந்தினர்க்கு ஆட்டின்பாலில் குருவரகைப் பாகஞ்செய்து இடக் கிரகதேவர்கள் புசித்துமயக்கத்தா லுறங்கினர். அந்தச் சமயத்தில் சித்தர், ஒன்றுடன் ஒன்று மாறுகொண்டுலகத்தை வருத்திய கிரகங்களை மழை பெய்தற்கு வேண்டியபடி மாற்றியிருத்தினர். உடனே நல்லமழை பெய்தது. கிரகதேவர்கள் விழித்துத் தம் நிலையடைந்த

னர். இவர் சாரீரம் என்னும் வயித்திய நூல் இயற்றினர். இவரைப் போகர் மாணுக்கர் என்பர். மதுரைக்குக் கிழக்கிலுள்ள இடைக்காட்டில் பிறந்தவர் எனக் கூறுவர். இவர் காலம் கடைச்சங்கத்தவர் காலம், திருவள்ளுவர்க்குக் "கடுகைத் துளைத்தெனும்" கவிசாற்றிக் கொடுத்தவர். இவர் இடைக்கழி நாட்டிற் பிறந்தவர் எனவும், ஊசிமுறி இவரா லியற்றப்பட்டதெனவும் கூறுவர். இவர் குலேசபாண்டியன் காலத்திருந்தவர் என்பர். இவர் கபிலருடன் சேர்ந்து அரசனைக் காண அரசன் மரியாதை செய்யாததால், கோபித்து நீங்கக் கபிலர் முதலிய புலவரும் உடன் நீங்கினர். அரசன் இடைக்காடரை உபசரித்தழைக்க மற்றைப் புலவரும் வந்தனர் என்பர். இவர் விஷ்ணுவி னவதாரமென்பர். சங்கமழியச் சாபமிட்டவர். இவரிடம் சித்தர் சிலர் வந்து விஷ்ணுவின் தசாவதாரத்தில் வணங்கத்தக்கவை எவையென "ஏழை, இடையன், இளிச்சவாயன்" எனக்கூறிச் செல்லச் சித்தர்கள் தெரிந்து சென்றார்கள் என்பர். (கர்ணபாம்பரை.) இவர் மலையாளம் ஜில்லாவிலுள்ள இடைக்காடென்னும் ஊரினராக இருக்கலாம். இவர் குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடியிருத்தலின் அவன் காலத்தவர்போலும். இவர் இடையரது ஆடுமேய்த்தலை வர்ணித்திருத்தலின் இவர் பொதுவராதல் வேண்டும். முல்லைத் திணையைச்சிறப்பாகக் கூறியுள்ளார், ஆயர் மழையில் நனைந்தபடியே ஊன்றுகோல் மேல் கால்வைத்து நின்று ஆட்டையழைக்கப் பாடியதும், அங்ஙனம் அழைப்பது கண்டு அங்கு ஆட்டைக் கவர்ந்துபோக வந்து பதுங்கியிருந்த நரி அஞ்சியோடா நிற்குமெனக் கூறியதும் சுவை யுடையன (நற் - கசஉ, அகம் - உஎச) வம்பமாரி யென்று தோழி தலைவியையே மாற்றியது இனிமைதரும். (நற்-நுகசு) இவர் முயற்கண்ணிற்கு நெல்லிக்கனியை உவமைகூறினர். (அகம் உஅச) இவர், நற்றிணையில் (உ'ம், குறுந்தொகையில் (ச)ம், அகத்தில் (ஙி)ம், புறத்தில் (க)ம், திருவள்ளுவ மாலையில் (க)ம், ஆக (கக) பாடல்கள் பாடினதாகத் தெரிகிறது.

**இடைக்குன்றூர்க்கிழார்** — தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய புலவர். (புற. நா).

**இடைச்சங்கம்**—இச்சங்கம் பாண்டி நாட்டில் கபாடபுரத்தில் வெண்டேர்ச்செழியன் காலமுதல் முடத்திருமாறன் காலமீறாக (௩எ00)வரு இருந்தது. இதிலிருந்து தமிழாராய்ந்தார், அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க்கருங்கோழி, மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன்மாறன், துவரைக்கோமான், கீரந்தை முதலிய (நுகூ) பெயர். இவரை யுள்ளிட்டு (௩எ00) பெயர் பாடினர். சங்கத்து நூல்களும், மருவிய நூல்களும், கலி, குருகு, வெண்டாளி, வியாழமாலையகவல், இசைநுணுக்கம், அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், பூதபுராணம் முதலியன. நாடு கடல்கொண்டபிறகு சங்கங்கெட்டது.

**இடைச்சொல்**—தனித்தியங்கு மாற்றலிலாதனவாய்ப் பெயரினும் வினையினும் பின்னு முன்னுமாகிய இடத்து ஒன்றும் பலவுமாய் வருஞ் சொற்கள். (நன்).

**இடைநிலை**—பெயர்வினைகளின் பகுதி விகுதிகளுக்கு இடையில் நிற்கும் ஓர் உறுப்பு. (நன்னூல்)

**இடைப்பிறவரல்**—வேற்றுமை யுருபுகளும் முற்றுக்களும் எச்சங்களும் கொண்டுமுடியும் பெயர்க்கும் விளக்குமிடையே ஆண்டைக்குப் பொருந்துவனவாகப் பிறசொற்கள் வருவன.

**இடைநிலைமெய்ம்மயக்கு**—சொல்லினிடையில் மெய்யெழுத்துக்கள் ஒன்றோடொன்று கூடும் நிலை (நன்னூல்).

**இடைமருது** — திருஇடைமருதூருக்கு ஒரு பெயர். இதற்கு மத்யார்ச்சுனம் எனவும் ஒரு பெயர் வழங்கும். இது மல்லிகார்ச்சுனம் புடார்ச்சுனம் இவ்விரண்டனுக்கும் இடையிலிருப்பதால் இப் பெயர் பெற்றது. (வீரசிங்-பு).

**இடையர்**—சூத்திரன் வைசியக் கன்னிகையைப்புணரப் பிறந்தவர். இவர்கள் ஆடுமாடுகள்மேய்த்து வாழ்வர். (அருணகிரி புராணம்). (இவர்க்குத் தசாங்கம்) மலை, கோவர்த்தனம், நதி, யமுனை, நாடு, நந்தமண்டலம், நகரம், கோகுலம், கொடி, கருடன், வாத்யம், முரசம், மாலை, முல்லை, வாகனம், யானை குதிரை. இவர்களைக் கோவைசியர் என்று சூடாமணி நிகண்டு கூறும். தமிழ்நாட்டு ஆடு மாடு மேய்த்துச் சீவிப்போர். இவர்கள் யாதவர் எனப்படுவர். இவர்களிற் சிலர் சைவராகவும

இருக்கின்றனர். இவர்கள், கால்கட்டி, பாசி, பெண்டுக்குமேக்கி, சங்குகட்டி, சாம்பன், புதுக்காட்டார், பெருந்தாலி, சிறுதாலி, பஞ்சரம்கட்டி, மணியக்காரன், சோழியன், ஆனைக்கொம்பு, பெருமாள் மாட்டுக்காரன், பூஇடையன், புதுநாட்டிடையன், போண்டன், கோனர் என வகைப்படுவர் (தர்ஸ்டன்).

**இடையநெடுங்கீரனர்**—கடைச்சங்க மருவிய புலவர். (அக-று.)

**இடையன்சேந்தன்கொற்றனர்** — கடைச்சங்கமருவிய புலவர். (அக-று.)

**இடையாகெதுகை**--அடிதோறும் இரண்டாமெழுத்தொன்றே யொன்றிவரத் தொடுப்பது. (காரிகை).

**இடையாலத்துமுதலியார்** — தொண்டைமண்டலத்து இடையாவ மென்னும் ஊரிலிருந்து, தமிழ்ப் புலவரை ஆதரித்து, அடையாத வாயிலுடையான் எனக் கவி பெற்றவர்.

**இடையினமோனை**—இடையினத்துள் யகர வகரங்கள் ஒன்றற்கொன்று மோனையாக வருவது. (காரிகை).

**இடையினவெதுகை** — இடையினத்துள் வந்த எழுத்தன்றி அவ்வினத்து வேறெழுத்து இரண்டாமெழுத்தாக நிற்கவரும் எதுகை. (காரிகை)

**இடையெண்**—மூச்சீர் ஓரடியாக வரும். அம்போதரங்கவகை. (காரிகை).

**இடையெழுத்துக்கள்**—இது மெய்யெழுத்துக்களில் வன்மை, மென்மையெனும் ஓசைகொண்ட எழுத்துக்களுக்கு இடைநிகரானவாக ஒலிக்கும் ய், ர், ல், வ், ழ், ள் எனும் ஆறுமாம். (நன்).

**இடைவள்ளல்கள்**—அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன் தந்தவக்கிரன், கன்னன், சந்தன்.

**இட்சுர்மதி**—ஒரு நதி. இந்த நதிதீரத்தில் சடபரதர் வசித்தனர்.

**இட்சுமான்**—தேவசிர வசுவிற்குச் சங்கவதியிட முதித்த குமரன்.

**இட்டசித்தி**—ஒரு பொய்கை. அழகர் மலையிலுள்ளது. நினைத்தவை யெல்லாந் தரத்தக்கது. (சிலப்பதிகாரம்).

**இடைக்குறளாசிரியப்பா**—ஈற்றடியும், முதலடியும் அளவடியாக இடையடிகள் பல குறளடியானும் சிந்தடியானும் வரும் அகவல். (காரிகை).

**இணைக்கை**—அஞ்சலி, பதுமாஞ்சலி, கபோதம், கர்க்கடகம், சுவத்திகம், கடகாவருத்தம், நிடதம், தோரம், உற்சங்கம், புட்பபுடம், மகரம், சயந்தம், அபயவத்தம், வருத்தமானம். (சிலப்).

**இணைத்தொடை** — அளவடியுள் முதலிரு சீர்க்கண்ணும் மோனை முதலாயின வரத் தொடுப்பது.

**இணைமோனை**—ஓரடியின் முதலிரு சீரினும் மோனை இயைந்து வருந்தொடை. (காரிகை).

**இணையளபெடை**—முதலிரு சீரினும் அளபெடை வருந்தொடை. (காரிகை).

**இணையாரமார்பன்**—கம்பர் சோழநாட்டை வெறுத்துப் பாண்டிநாட்டிலிருந்தபோது அவரை அழைத்துவரப் பாண்டியன் சமஸ்தானத்திற்குச் சென்றவர். இவர் சராமமுதலியாருக் கிளையார்.

**இணையியைபு**—ஓரடியின் ஈற்றுச் சீரிரண்டும் இணைந்து வருந்தொடை (காரிகை).

**இணையெதுகை**—ஓரடியின் முதலிரு சீரினும் எதுகையியைந்து வருந்தொடை. (காரிகை).

**இதரவிதரம்** — உவமைகளுள்ள இரண்டு வாக்கியங்களுள், முதலாவதன் உபமேய உபமானங்கள் முறையே இரண்டாவதன் உபமான உபமேயங்களாகத் தொடர்ந்து வருமாறு இரண்டு வாக்கியமாகச் சொல்லப்படும் ஒருவகை உவமையணி (தண்டி).

**இதமன்** — யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷணையிட முதித்த குமரன்.

**இதிகாசம்**—இராமாயணம், பாரதம், சிவரகசியம் முதலியனவாம்.

**இத்மசிக்துவன்** — பிரியவிரதனுக்குப் பெரிகிஷ்மதியிட முதித்த குமரன்.

**இத்மவாகன்**—1. அகத்தியன் பேரன்.

2. ஓர் இருடி. இவனுக்குத் தந்தை மலயத்துவசன். இவனுக்குத் திரட்சுதன் எனவும் பெயர்.

3. துருவி நீதனுக்குத் தந்தை. இவன் தேவி, உருசி.

**இந்தியத்தீவுகள்**—லக்ஷத்தீவுகள், மாலத்தீவுகள் — இது, மலபாரிலிருந்து (50) மைல் தூரத்திலுள்ளது. இலங்கைத்தீவு—இந்தியாவின் தென் கோடியிலுள்ளது. இராமேச்வரம் — இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நடுவிலுள்ள தீவு. அந்தமான் நைகோபார் — இது, வங்காளக்குடாக் கடலிலுள்ள இரண்டு தீவு

கள். இதை இந்தியக் குற்றவாளிகளைச் சேமிக்கும் இடமாக அரசாக்ஷியார் வைத்திருக்கின்றனர்.

**இந்தியாரப்பர்** — இது ஒருவகை மரத்தின் பால். இது, ஈஸ்டிண்டிஸ், பிரேசில், இந்தியா முதலிய சில உஷ்ண ப்ரதேசங்களில் வளர்வது. இந்த மரத்தின் நடுவிலும் கிளைகளிலும், வேரினும் துளைகளிட்டு அவற்றில் குழாய்களைப் பொருத்தி வைக்கக் குழாய்களின் வழியாகப் பால் ஒழுகும். ஒழுகிய பாலின் ஒரு பாகம் பசையுள்ளதாகவும் ஒரு பாகம் நீராகவும் பிரியும். பிறகு அந்த ரஸத்தைக் காய்ச்சினல் ரப்பராகும். இதைப் பலவிதமாகஉபயோகப்படுத்துவர். பென்ஸலால் எழுதியதை அழிக்கவும், துணியில் தோய்த்து மழை நீர்படாது தடுக்கவும் உபயோகிப்பர்.

**இந்தியாவின்நதிகள்—சிந்துநதி**--இது, இமயமலையின் வடபால் மானஸஸரஸில் தோன்றி அரபிக்கடலில் சேருகிறது. காபூல், ஜீலம், சீனப், ரெவி, பியாஸ், ஸட்லேஜ் என்பவை சிந்துநதியின் உபநதிகள்

பிரமபுத்ரா—இது மானஸஸரசில்தோன்றிக் கிழக்கு நோக்கிச் சென்று சம்புவெனவும், பின் தெற்குமுகமாகத் திரும்பி தீஹாங் என்றும் கூறப்படும். இதன் மேல்பாகம் கோனே எனப்படும். இதன் கிழக்குப்பாகம் மெக்னஎனப்படும். இதன் நீளம் (1,800) மைல். இதன் கிளை நதிகள் திக்கு, சுர்மா, கும்தி, நில்கோமார், தீஸ்தா என்பன.

கங்கை—இது பாகீரதி, அலகநந்தையுடன் கூடியது. இது, இமயமலையின் தென்பாகத்திற் பிந்துஸாசிற் பிறந்து அரித்வாரத்தருகில் பூமியிற் பிரவேசித்து 1500 மைல் ஒடி வங்காளக்குடாவில் சங்கமமாகிறது. இதன் கிளைநதிகள் யமுனே, செம்பல், பெத்வா, சோணே, ராமகங்கை, கௌமதி, கோக்ரா, குமதி, கூசி, தோணே, கர்மநாசம், பாகீரதி, ஊக்லி முதலியவை.

உலூனே — இது, அரவல்லிமலையிற் றோன்றி அரபிக்கடலில் விழுகிறது.

நருமதை—இது, இராமகாம் எனும் ஜில்லாவில் உள்ள அமரகண்டகம் எனுமிடத்தில் தோன்றி விந்தியமலைக்குத் தெற்காக (800) மைல் சென்று காம்பே குடாவில் விழுகிறது

தபதீ—இது, பெய்தவால் எனுமிடத்தில் தோன்றி (450) மைல் மேற்காக ஒடிச் சூரத்திற்கருகிலுள்ள காம்பே குடாவில் விழுகிறது.

மகாநதி — இது, வங்காளத்திற்குத் தென்மேற்கிலுள்ள நியூயகதை யெனுமிடத்தில் தோன்றி (520) மைல் ஒடி வங்காளக்குடாவில் விழுகிறது.

கோதாவரி — இது, நாசக்குக்கருகில் மேற்குத்தொடர்ச்சி மலையில் தோன்றித் தென்கிழக்காக ஐதராபாக்கம், வடசர்க்கார் வழியாக (900) மைல் ஒடி வங்காளக் குடாவில் சங்கமமாகிறது. மைஞ்சூரை, பூரணே, பிராணஹிதை, பேனகங்கை, வேணுகங்கை, இந்திரவதி இதன் உபநதி கிளைநதிகள்.

கிருஷ்ணநதி—இது மேற்குத்தொடர்ச்சி மலைகளின் கீழ்பால் மகாபலேச்வாத் தருகில் தோன்றித் தென்கீழ்ப்பாகமாக (800) மைல் ஒடி வங்காளக்குடாவில் விழுகிறது. துங்கபத்ரை, மலப்ரபை, பீமை, இதன் உபநதிகளும் கிளைநதிகளுமாம்.

காவேரி—இது, வட இந்தியாவிற்குக் கங்கை போலத் தென்னிந்தியாவிற்குப் பெருநதி. இது, குடக நாட்டில் மேலை மலைத் தொடரைச் சார்ந்த பிரமகிரியில், தலைக்காவிரி யென்னுமிடத்தில் உற்பத்தியாகி அந்நாட்டினூடாக வந்து மைசூரின் தென்பாகத்தில் பாய்ந்து சேலம், கோயமூதூர்களுக் கிடையில் ஒழுகித் திரிசிராப்பள்ளி வழியாகத் தஞ்சாவூரடைந்து பல கிளைகளாகப் பிரிந்து (470) மைல் ஒடி வந்து சமுத்திர சங்கமமாகின்றது. இதன் உபநதிகள், பவானி, அமராவதி, நொய்யல்.

வடபெண்ணே—இது, மைசூரிலுள்ள சந்திர தூர்க்கம் ஏரியில் தோன்றி (355) மைல் பாய்ந்து ஒடி வங்காளக் குடாவில் விழுகிறது.

பாலாறு—இது மைசூரில் தோன்றி (200) மைல் ஒடிச் செங்கல்பட்டு ஜில்லாவாகிய சதுரங்கபட்டணத்தை யடுத்து வங்காளக் குடாவில் சங்கம மாகிறது.

தென்பெண்ணே—இது,மைசூரிலுள்ள நந்திதுர்க்க மெனும் மலையிற் றோன்றி (244) மைல் ஒடிச் சென்று வங்காளக் குடாவில் சங்கம மாகிறது.

**இந்திரகாளீயம்**—1. யாமளேந்திரர் செய்த இசைத்தமிழ் நூல்.

2. ஒரு யாப்பிலக்கண நூல்; இதனை வெண்பா பாட்டியலுக்கு முதனூ லென்பர்.

**இந்திரகீலம்**—ஒரு பர்வதம், இதில் அருச்சுனன் சிவபெருமானைக் குறித்துத் தவம் இயற்றினன்.

**இந்திரகோபப்பூச்சி**—இது பட்டுப்போல் மழமழத்த உருவமுடைய சிறு பூச்சி. செம்பட்டின் தோற்றமுடையது. இது பூமியில் காணப்படின் பட்டுத்துண்டுகளைத் துணித்துப் போட்டது போலக் காணப்படும். இதனைத் தம்பலப் பூச்சென்பர்.

**இந்திரசஞ்சயம்**—ஒரு வித்யாதர நகரம்.

**இந்திரசந்தனம்**—ஒரு நதி.

**இந்திரசாவர்ணி** — பதினான்காம் மன்வந்தரத்து மநு.

**இந்திரசித்**—இவன் அரக்கன். இராவணன் குமரன். இவன் பிறந்தவுடன் மேகமெனக் கர்ச்சித்தமையால், மேகநாதன் எனப் பெயர் பெற்றவன். இவன் தவத்தாற் சிவமூர்த்தியிடம் எங்குமுலாவுந் தேரும், யுத்தத்தில் யாருமறியாது ஒளித்து யுத்தஞ் செய்யும் வலிமையும் பெற்றவன். மகா மாயாவி. இராவணன் இந்திரனுடன் யுத்தஞ் செய்கையில், இவன் இந்திரனை மாயையாற் கட்டிச் சிறையிட்டுப் பிரமன் வேண்ட விடுத்தவன். இவனுக்கு இராவணியென ஒரு பெயருண்டு. பதினான்கு வருஷம் ஆகாரம் நித்திரையில்லாதவன் எவனோ அவனா லிறக்க வரம்பெற்றவன். அநுமன் இலங்கைக்கு முதலில் வந்த போது, பிர்மாஸ்திரத்தைக் கொண்டு கட்டித் தந்தைமுன் விட்டவன். இவன் கையிற் கொண்டவில், பிரமன் இந்திரனுக்குக் கொடுக்க இந்திரனிட மிருந்து அம்பறாத் தூணியுடன் இவனாற் கவரப்பட்டது. இவன் (௬0) வெள்ளஞ் சேனைகளுடன் முதலில் யுத்தத்திற்கு வந்து அநேக வானரர்களை மாய்த்துக் கடைசியில் இலக்குமணருடன் போரிட்டு முடியாது நாகாஸ்திரப் பிரயோகஞ்செய்து கட்டிவிட்டு மறைந்தோடி வாநரவீரர்களெல்லாரையும் மூன்றுமுறை மூர்ச்சிக்கச் செய்தவன். மீண்டும் இலக்குமணருடன் போரிட்டுக் கவசமறக்கண்டு ஆகாயத்தில் மறைந்து, இலங்கைப் பட்டணஞ் சென்று பிரமாத்திரத்திற்குப்பூசைசெய்து மகோதரனுக்குப் பின்னால் மறைந்து, இராமமூர்த்தி தவிர மற்றவரிறக்கும்படி பிரமாஸ்திரப் பிரயோகஞ் செய்தவன். மாயையாற் சீதையுரு நியமித்து அநுமனுக்கு முன் வெட்டியெறிந்து, நிகும்பலைக்கு யாகஞ்செய்யச் சென்று அநுமனாற் பங்கப்பட்டு மீண்டும் இலக்குமணருடன் போரிட்டு விபீஷணரை நிந்தித்துப் பாணப் பிரயோகஞ் செய்து மூன்றாம் முறை மறைந்து இலங்கைக்குச் சென்று வேறொரு தேரேறிவந்து இலக்குமணருடன் போரிட்டுத் தோழிய வில்லுடன் கையறுப்புண்டு, அர்த்தசந்திரபாணத்தால் தலை யறுப்புண்டவன். இவன் தேகத்தை இராவணன் தைலத்திட்டு வைத்தனன்.

**இந்திரசேனன்**—1. வேதருஷபர் குமரன்.

2. சூரிய புத்திரன்.

3. தருமன் குமரன்.

4 நளன் குமரன். பிராமணனாற் பாட்டனிடம் ஒப்புவிக்கப்பட்டவன். இவன் குமரன் சந்திராங்கதன்.

5. சூரியவம்சத்துச் சனுவானின் குமரன்.

6. ஒரு அரசன். இவன் பாம்புகடித்து இறக்க விண்டுசேநனாகிய குமரன் கயாதீர்த்தத்தில் சிரார்த்தஞ்செய்யத் தந்தை கனவில் தோன்றி என் பாவம் நீங்கினேனல்லன் நீ காகதீர்த்தத்தில் சிரார்த்தம் செய் என, அவ்வாறுசெய்யப் பாவமொழிந்தனன்.

7. பாண்டவர் தூதன்.

8. ஜனமேஜய புத்திரன்

**இந்திரசேனை**—1. முத்கலர் தேவி.

2 நளன் குமரி.

3 நாளாயினியின் ஒரு பிறப்பு.

4. நரிஷ்யந்தனைக் காண்க.

**இந்திரத்வஜ உற்சவம்**—உபரிசர வசுவால் செய்யப்பட்ட உற்சவம்.

**இந்திரத்துய்ம்மன்**—1. பரதன் குமாரனாகிய சுமதியின் குமரன். இவன் ஒரு முறை கொலுவில் யோகவானா யிருக்கையில், இவன் கொலுவிற்கு அகத்தியமுனிவர் வந்தனர். அரசன் எழுந்து உபசரிக்காமையால் முனிவர் கோபித்து, நீ மத்தயானைபோல் மதியாதிருந்தமையால் யானையாகக் கடவையென்று சபித்தனர். அரசன், சாபவசத்தால் கஜேந்திரனென்னும் யானையாயினன். இவ்யானை காட்டில் நெடுநா ளுலாவித்திரிந்து ஒருநாள் நீருண்ண ஒருதடாகத்திற்குச் சென்றது. அவ்விடம் சாபத்தால் வேற்றுருக் கொண்டிருந்த முதலை, யானையின் காலைப் பிடிக்

துக்கொண்டது. யானை தன்வலி முழுதும் பயன்படுத்தி வெளியிலிழுக்கவும் பயனற்று முடிவில் தன்வசமற்று, நாராயணனை எண்ணி ஓலமிட விஷ்ணுமூர்த்தி சக்கரத்தை ஏவி முதலையைக் கொலை செய்வித்துத் தரிசனந் தந்தனர். அதனால் பரமபத மடைந்தவன். (பாகவதம்)

2. சந்திரகுலத் தரசருள் ஒருவன். தேவருலகத்தி லநேகநா ளிந்திர பட்டம் அடைந்து ஆண்டு, தேவர்களால் பூமியில் தள்ளப்பட்டு மார்க்கண்டேயரைக் கண்டு வரலாறு கேட்டவன். வெள்ளைக் குதிரையாய் மார்க்கண்டேயரைத் தாங்கினவன்.

3. கிருஷ்ண மூர்த்தியால் செயிக்கப்பட்ட அரசன்.

4. பாத்ம கற்பத்திலிருந்த ஒரு பாண்டியன். இவன் புராணங்கேட்டு மறுபிறப்புப் பிராமணனா யுதித்து, விஷ்ணுவை எண்ணித் தவம்புரிய விஷ்ணுமூர்த்தி தரிசனந்தந்து, தவத்திலிருத்தி முத்தியடைவித்தனர். இவன் குமரன் சுத்துய்மன், விப்பிரவாகு எனவும் கூறுவர்.

5. மகதநாட்டரசன். இவன் தேவி அகலிகை. இவன் வஞ்ச இந்திரன் தன் மனைவியுடன் கள்ளப்புணர்ச்சி நடத்தியதறிந்து, தன் மனைவியையும் அவனையும் ஊரைவிட்டு நீக்கியவன்.

6. பல்லவி சந்ததியான் (சாமவேதம்.)

**இந்திரத்துய்ம்மம்**—ஒரு மடு. இந்திரத்துய்ம்மன் என்னும் அரசன் தானஞ்செய்த பசுக்களின் குளம்புகளா லுண்டாகியது.

**இந்திரத்யும்நன்** — ஒரு அரசன், ஜகந்நாத க்ஷேத்ர நிர்மாணஞ் செய்தவன். (பிரகன்னாரதீய-புரா.)

**இந்திரப்பிரத்தம்**—இந்திர னேவலால் விச்சுவகர்மனால் நிருமிக்கப்பட்ட பட்டணம். இது பாண்டவ ரிருக்கை. இதற்குக் காண்டவப்பிரத்த மெனவும் பெயர். இது தற்காலம் டில்லிப்பட்டணத்திற் கருகிலிருக்கிறது. The old Delhi on the banks of the river Jumna.

**இந்திரப்பிரமிதி**—வியாசர்மாணாக்கராகிய பைலவருக்குச் சீடர். இவர் இருக்கு வேதத்தினை நான்கு சங்கிதைகளாகப் பிரித்துப் பாஷ்கலர், போத்யர், யாஞ்ஞுவல்கர், பராசர், மாண்டுகேயர், அக்கிமதியென்பவருக்கு உபதேசித்தனர்.

**இந்திரமுனிவர்** — திருமூலர் மாணாக்கரில் ஒருவர்.

**இந்திரவர்மன்**—1. ஒரு அரசன். இவன் இராச்சியத்தை இழந்து மீண்டுந் தவஞ்செய்து அந்த இராச்சியத்தை அடைந்தவன்.

2. மாளவதேசாதிபதி. இவன் யானை அசுவத்தாமா, பாரதம் பதினெந்தாம்போரிலிறந்தது.

**இந்திரவதி**—கோதாவரியின் உபநதி.

**இந்திரவாகன்**—(சூ.) புரஞ்சயன் அல்லது காகுத்தனுக்கு ஒரு பெயர். இவனை இந்திரன் வாகனமாகத் தாங்கினதால், இப்பெய ரடைந்தனன்.

**இந்திரன் A**—1. தேவராசன். காசிபமுனிவர்க்கு அதிதிதேவியிடம் உதித்த குமரன். இவன் இராஜதானி அமராவதி ; ஆயுதம். வச்சிரம் ; தேவி, இந்திராணி ; வாகனம், ஐராவதமெனும் யானை, உச்சைச்சிரவம் எனும் வெள்ளைக்குதிரை ; சபை, சுதர்மை ; வனம், நந்தனம் ; சாரதி, மாதலி ; செல்வம், கற்பகத்தரு ; சநதானம், அரிச்சந்தனம் ; பாரிசாதம், மந்தாரம் ; உப்பரிகை, வைசயந்தம் ; குமரன், சயந்தன் ; இரதம், வியோமயானம் ; பானம், அமிர்தம் ; தேவவைத்தியர், அச்வநிதேவர், தன்வந்தரி ; அரம்பையர், ஊர்வசி, திலோத்தமை முதலியவர். இவன், நூறு அஸ்வமேதயாகஞ் செய்து இந்திரபதம் அடைந்தவன். கிழக்குத் திக்குப்பாலகன்.

2. தக்ஷகனைச் சர்ப்பயாகத்தில் காக்கும் பொருட்டு அபயந்தந்தவன்.

3. வசு என்பவனுக்கு விமான முதலிய பெற வரம் அளித்தவன்.

4. கோபாலர் தனக்குச் செய்யும் பூசையை நிறுத்தினதால் கோபித்துச் சத்த மேகங்களை ஏவி அவர்கள் பாடியை அழிக்க முயலுகையில் கிருஷ்ண மூர்த்தியால் கர்வ பங்கப்பட்டவன். பிரமன் ஏவலால் கிருஷ்ணமூர்த்திக்குக் கோவிந்த பட்டாபிஷேகஞ் செய்து அபராதக்ஷமை பெற்றவன். (பாகவதம்)

5. துர்வாசர் சாபத்தால் செல்வங்களை இழந்து அமிர்த மதனத்தால் அச்செல்வங்களைப் பெற்றவன்.

6. ஒருமுறை பிரகஸ்பதி, இவன் சபைக்குவர அவரைக் கண்டு மரியாதை செய்யாததனால் குரு மறைந்தனர். ஆசாரியரைத் தேடியுங் காணாமல் பிரமனிடங் குறைகூறப் பிரமன் வினவிவிளவறிந்து துவட்டாவின் புத்திரனாகிய விச்சுவ

வுருவனைக் குருவாகக் கொள்க என அவ்வகைகொண்டு ஒரு யாகஞ்செய்ய என உடன்பட்டு விச்சுவ வுருவனைக்கொண்டு யாகஞ் செய்விக்கையில் அவன் வாக்கால் தேவர்க்கு ஆக்கங்கூறி மனதினுல் அசுரர்க்கு ஆக்கமுண்டாகத் தேவர் துன்பமடைக என யாகஞ் செய்தலை ஞான நோக்கினுல் இந்திரன் உணர்ந்து, வச்சிரத்தினுல் அவனது மூன்று சிரங்கள் கழுகு, பருந்து, காகம் ஆகிய மூன்று பறவைகளாகப் பறந்தோட வெட்டினன். அதனுல் இந்திரனைப் பிரமகத்தியடைய, அதை மரம், மண், சலம், பெண்கள் முதலியவர்க்குத் தேவர் பகுந்தளிக்கச் சுத்தமடைந் திருந்தனன். விச்சுவவுருவனுக்குத் தந்தை தன் குமரன் இந்திரனுல் இறந்ததறிந்து ஒருவேள்விசெய்து அதில் விருத்திராசுரனை உண்டாக்கி இந்திரன் மீது ஏவினன். அவ்வசுரன் இந்திரனிடம் யுத்தத்திற்குவர மகவான் சண்டையிட்டுத் தோல்வியடைந்து ததீசிமுனிவர் தந்த முதுகெலும்பால் புதிய வச்சிரஞ் செய்துகொண்டு அவன் நடுக்கடலில் தவஞ் செய்வதுபோல் ஒளித்திருந்ததால் அகத்தியரைவேண்டிக் கடலைப் பானஞ் செய்வித்து அவனைக் கொலை புரிந்தவன். விருத்திரனைக் கொல்ல விஷ்ணுவிடஞ் சத்தி பெற்றவன் என்பர். பிரமகத்தியடைந்து தீர்த்தயாத்திரையால் பவித்திரனனவன். (திருவிளையாடற் புராணம்).

7. சியவநமுனிவர் அச்வநிதேவர்க்கு அவிர்ப்பாகங் கொடுக்கையில் இவன் கோபங்கொண்டு அவர்மீது வச்சிரம் எறிந்ததனுல் முனிவர் கோபங்கொண்டு அவ்வச்சிரங்கொண்ட கை தம்பிக்கத் தண்டனையேற்றுக் கடலில் ஒளித்தவன்.

8. மலைகள் சிறகு பெற்ற காலத்தில் அவற்றின் துன்பம் பொருமல் சிறகுகளை அரிந்தவன். இதனுல் மைநாகபர்வதம் கடலில் ஒளித்தது. மலைகளின் உதிரம் சிந்திய இடத்தில் பவளமுண்டாயின.

9. கௌதமர் பாரியாகிய அகலிகை இடத்து ஆசையுற்றவனுய் அவரை ஸ்நாநத்திற்குப் போக நடு இராத்திரியில் கோழியாகக் கூவி எழுப்பி அவர் கங்காஸ்நாநத்திற்குப் போனபின் அவரைப் போல் உருவெடுத்து அவளுடன் புணர்ந்து அகப்பட்டு முனிவரால் ஆண்குறியும் பீஜமுமறவும் பெண்களுக்குள்ள அநேகம் குறிகள் தேகத்தில் வரவும்பெற்று நாணத்தால் தாமரைத் தண்டில் ஒளித்திருந்து தேவர் வேண்டுகோளால் முனிவர், அவை மற்றவர்க்குக் கண்களாகவும்.இவனுக்குப் பெண்குறிகளாகவுந் தரப்பெற்றுத் தன்னுல கடைந்தவன். தேவர் ஆட்டின் பீஜத்தை இவனுக்குப் பீஜமாகப் பொருத்தினர் (இராமாயணம்.)

10. அசுவசேநன் என்னும் நாகன் காண்டவனத் தீயிற்பட்டு இறவாமல் வரம் தந்தவன். (பாரதம்.)

11. அருச்சுனன் காண்டவ வனத்தை அக்கினியின் பசிக்குத்தர எரிக்க அருச்சுனனுடன் யுத்தஞ் செய்தவன். (பார.)

12. விந்தமலையின் கர்வமடங்க அகத்தியரை வேண்டினவன். (காந்தம்.)

13. சிபிச்சக்கரவர்த்தியை வேடனுகச் சென்று சோதித்தவன். (ரகுவம்சம்).

14. சௌநகரால் உடல் தம்பித்து அவர் ஏவிய பூதத்திற் கஞ்சி இருடியைச் சரண்புகுந்து சுகமடைந்தவன்.

15. மகாபலிக்குப் பயந்து அநேககாலம் தாமரைத்தண்டில் ஒளித்திருந்தவன்.

16. பிருது சக்கிரவர்த்தியின் அஸ்வமேதத்தில் யாகக்குதிரையைத் திருடிச் சென்றவன்.

17. ஆபிசார யாகஞ்செய்து இரசியின் (ஜி) குமரரையுங் கொன்றவன்.

18. கண்ணனிடம் சென்று நரகாசுரன் செய்யும் துன்பங்கூறிக் கொல்வித்தவன். (பாகவதம்).

19. சிவபூசை செய்து கைலைசென்று அவ்விடமிருந்து பாரிஜாத விருக்ஷம் கொண்டுவந்து தெய்வலோகத்தில் வைக்க, அதைக் கிருஷ்ணன் அபகரிக்கப்பொருது யுத்தஞ்செய்து காசிபர் சொல்லால் சமாதானம் அடைந்தவன். (பாகவதம்.)

20. இராவணவதத்தில் இராமருக்குத் தேர் அனுப்பினவன். (இரா.)

21. வச்சிரமந்திரத்தால் விரோசனன் குமரியைக் கொன்றவன்.

22. சகரன் அச்வமேதத்தின் பொருட்டு விட்ட குதிரையைக் கபிலருக்குப் பின் ஒளித்தவன். (இரா.)

23. திதிவயிற்றில் தன்னை வருத்த இருந்த கருவை எழு கூருக்கி மருத்துக்களாக வரந்தந்தவன். (இரா)

24. ஒருமுறை அம்பரீஷனது யாகப் பசுவை மறைத்தவன்.

25. சரபங்கரைச் சத்தியவுலக மழைக்க அவர் மறுத்து நீங்குகையில் இராமமூர்த்தியைக் கண்டு தரிசித்தவன்.

26. கோரதவஞ் செய்திருந்த முனிவர் தவத்தைக் கெடுக்க, அவரெதிரில் தோன்றி ஒரு வாளைக் கொடுத்து அவர் முதலில் புல், கொடி முதலியவற்றை அறுத்துப் பிறகு உயிர்க்கொலை செய்து தவம் நீங்கக் கண்டவன்.

27. மாண்டு கண்ணரை மயக்க அரம்பையரை ஏவினவன். (காஞ்சி-பு.)

28. மயனை உயிர் போக்கினவன்.

29. இராவணயுத்தத்தில் இறந்த வானரர்கள் பிழைக்க இராமர்க்கு வரந்தந்தவன். (இராமாயணம்.)

30. சூரிய வம்சத்து அரசனாகிய ககுத்துவை எருதாகத் தாங்கினவன்.(அயோம்)

31. தன் தாயின் காதணியைப் பறித்துச்சென்ற நாகனிடம் கண்ணனை ஏவிச் சண்டையிடக் கூறினவன்.

32. சீர்காழியில் சூரபதுமனுக்குப் பயந்து மூங்கிலில் ஒளித்திருந்து சிவபூசை செய்ய நந்தவனம் வைத்து அது உலர்ந்ததனால் அதைச் செழிப்பிக்க அகத்தியரிடம் காவிரி இருப்பதை நாரதரால் உணர்ந்து விநாயகரை வேண்டிக் காவிரிபெற்று வனம் செழிக்கக் களித்தவன்.

33. தான் கைலைக்குச் செல்லுகையில் தன் தேவியின் தனிமைக்கஞ்சி மகாசாத்தாவால் மகாகாளரைக் காவலாக வைத்துச் சென்று இந்திராணிக்கு அசமுகியால் நேரிட்ட துன்பத்தை நாரதரால் அறிந்து மீண்டு மகாகாளரைத் துதித்து மனைவியை அணைந்தவன்.

34. சூரபதுமன் யுத்தத்தில் மயிலாகிக் கந்தமூர்த்தியைத் தாங்கினவன். (காந்தம்.)

35. ஒருகாலத்தில் தெய்வபக்தி பூண்டு அரசாக்ஷியில் கவலையில்லா திருந்தது கண்ட குருவாகிய பிரகஸ்பதி, அரசாக்ஷியில் விருப்பமுண்டாக்குவிக்க உலகாயதமதம் போதிக்கக் கேட்டு அவ்வழியிருந்து நீங்கினவன்.

36. நந்திதேவரிடம் அன்னம் யாசித்துப் பெற்று ஒருவனுக்குச் சுவர்க்கமளித்தவன்.

37. அபிமன்யு இறந்தசெய்தி அருச்சுனன் அறியாமுன்னம் அருச்சுனன் காணப் பிராமணவுருக்கொண்டு ஒரு தீக்குழி உண்டாக்கி அதில்விழ ஆயத்தமாகி இருப்பவன்போல் நடித்தனன். அதை வழிப்போக்கனாகிய அருச்சுனன் தடுக்க, உனக்கு அப்படி உண்டாகுங் காலத்தில் சாகாதிருக்கின் நான் தீக்குளியா திருக்கிறேனென்றுகூறி அவ்வாறே வாக்குப் பெற்றவன் (பாரதம்).

38. தேவசன்மன் தேவியாகிய உரிசையை மோகித்து விபுலனைப் பணிந்து தன் குற்றத்தை மன்னிக்கவேண்டியவன்.

39. சுநச்சக ருஷியாய்ச் சத்த இருடிகளின் கிழங்கு மூட்டையை ஒளித்து அவர்களைக் கொல்லவந்த பூதத்தைக் கொன்று மூட்டையைக் கொடுத்தவன்.

40. ஒருமுறை கௌதமரிடம் திருதராட்டிரன்போல் சென்று யானைக்குட்டி யாசித்தவன்.

41. மருத்துக்களுக்கு அவிர்ப்பாகம் கொடாததனால் அவர்கள் பெரும்பூதத்தைச் சிருட்டித்து அனுப்பப் பயந்து சவனருஷியால் உயிர் தப்பினவன்.

42. வியாழபகவானை மருத்து யாகத்திற்குப் போகாதிருக்கத் தடுத்து அக்நியையும் காந்தருவனையும் தூதாக அனுப்பி வியாழபகவானால் யாகஞ் செய்தல் நலம் எனக்கூறி அவர் மறுத்தது கண்டு வச்சிரத்தை ஏவ அது சம்வர்த்தனரால் தடைபட்டது கண்டு வெட்கினவன்.

43. உதங்கர் குருகாணிக்கையாகக் கொண்டுவந்த குண்டலத்தை ஐராவதமென்னும் நாகன் திருடிச்செல்ல அவ்விடம் வந்து நாகலோகத்திற்கு உதங்கருக்கு வழி தெரிவித்தவன். (பாரதம்.)

44. அகத்தியர்பசு நீக்கி, நெற்கொண்டு செய்த வேள்விக்கு இடையூறு விளைத்து அவர் கோபத்திற்குப் பாத்திரனாகாமல் க்ஷமை வேண்டினவன்.

45. சிலாதாருக்குயுகதருமம், சிவபூசை, தேவியிடம் பிரம னுற்பத்தி கூறினவன்.

46. யக்ஷனாக வந்த சிவமூர்த்தியால் சத்தியைக் கவரப் பெற்றவன்.

47. தன் பட்டத்திற்கு மாந்தாதா வாராமல் தடைசெய்ய எண்ணி அவனுக்கு லவணாசுரனைக் காட்டிப் போரிட்டு இறக்கச் செய்தவன்.

48. சிவதரிசனத்திற்குச் சென்று கர்வமடைந்து பூதவுருக்கொண்ட சிவமூர்த்தியால் வச்சிரம் இழந்து நொந்தவன்.

49. தக்ஷயாகத்தில் வீரபத்திரமூர்த்திக்குப்பயந்து குயிலாக ஓடி ஒளித்தவன்.

50. பிரகலாதனைச் செயிக்க அவனிடத்து அடிமைவேலை செய்து அவனிடத்துள்ள ஒழுக்க முதலியவைகளைத் தானம் பெற்று அவனை வென்றவன்.

51. பிராமணவுருக் கொண்டு காசிதேசத்து வேடனால் எய்யப்பட்ட உலர்ந்தமரத்திலிருந்த நன்றிமறவாக் கிளியின் பொருட்டுப் பட்டமரம் தளிர்க்க வரமளித்தவன்.

52. பங்காசுவனைப் பெண்ணுருவுடன் இருக்கச் செய்தவன்.

53. சூரபத்மன் ஏவலால் மீன்பிடித்து அரண்மனைக்கு இட்டவன். சூரபத்மன், தாருகன் முதலியவர்க்குப் பயந்து தன் ஆபரணங்களைச் சீர்காழி வனதேவதையிடம் ஒப்புவித்துத் தாருகன் இறந்தபின் அத்தேவதை அந்த ஆபரணங்களைத் தரப் பெற்றவன். (ஸ்காந்தம்).

54. முசுகுந்தன் உதவியால வலனைக் கொன்று தான் விஷ்ணுமூர்த்தி இடம் பெற்றுப் பூசித்துவந்த சோமாஸ் கந்தமூர்த்தியை அவன் கேட்க, கொடுக்க மனமிலாது வேறு ஆறுசோமாஸ்கந்தமூர்த்தங்களை மயனால் நிருமிப்பித்துத்தர அவன் மறுத்ததுகண்டு விஷ்ணுவால் பூசிக்கப் பட்ட அந்த மூர்த்தத்தையே கொடுத்துச் சிவகோபத்தால் நீச்சனைத் திருவாரூரிற் பிறந்தவன். (திருவாரூர்-புரா.)

55. சலந்தரன் தேடிய பெண்ணிடத்தில் தானும் மயல்கொண்டு அவனுடன் கடலில் தேடியவன்.

56. சுகோதரன் அரசாட்சியில் இடைவிடாது பொன்மாரி பொழிவித்தவன்.

57. குமதியெனும் அரக்கியை வதைத்தவன்.

58. சிவவிஷ்ணுக்களின் பலாபலமறிய இரண்டு விற்கள் நிருமித்துத் தந்து சிவமூர்த்தியின் வில்முரிந்ததுகண்டு அதைப் பெற்றுச் சனகனிடம் வைத்தவன்.

59. சுவயம்பிரபை, ஒரு அசுரனுக்கும், அரம்பைக்கும் பிலத்தி னிருப்பிடம் கூறி, அவர்களுடன் இருக்க அசுரனைக்கொன்று, அரம்பையைத் தெய்வலோகத்திற்கு அனுப்பிச் சுவயம்பிரபையைப் பூமியில் அநுமான் வருமளவும் பிலத்தி லிருந்து வருந்தச் சாபமிட்டவன்.

60. கட்டுவாங்கனை வேண்டி அசுரரைச் செயித்தவன்.

61. கபந்தன் தலை, வயிற்றில் அழுந்த வச்சிரத்தால் எறிந்தவன். (இரா.)

62. சுக்கிரசன் என்பவனிடம் பக்ஷி உருவாகச் சென்று நரமாமிசம் வேண்டுமெனக் கேட்டு அவன் மறுக்கச் சென்றவன்.

63. தன் அங்கத்தில் ஒரு பிரிவைப் பிரித்துக் கோழியாக்கிக் கந்தமூர்த்திக்குக் கொடியாகக் கொடுத்தவன். (ஸ்கா.)

64. இரணியகசிபின் தேவியைச் சிறைகொண்டு நாரதர் இதோபதேசத்தால் விடுத்தவன்.

65. செம்பன எனும் அசுரனைக் கொன்றவன்.

66. இவன் யாகஞ் செய்தலால் தேவர்களுக்குப் புகழ்வருதல் கண்ட விஷ்ணு இவர்களது யசசைக் கவர்ந்தோட, தேவர் யுத்தத்தால் விஷ்ணுவை வெல்லாது அஞ்ச, இந்திரன் செல்லுருக் கொண்டு விஷ்ணுமூர்த்தியின் வில்லின் நாணியை அறுத்து யசசைக் கவர்ந்தவன்.

67. முகுந்தையிடம் உருக்குமாங்கதன் உருக்கொண்டு புணர்ந்து கிரிச்சமதமுனிவரைப் பெற்றவன்.

68. கபிலமுனிவர் விருந்திட அவருக்குச் சிந்தாமணி கொடுத்தவன்.

69. அசுரருக் கஞ்சிய முசுகுந்தனைக் காக்கப் பூதத்தை அனுப்பிப் [illegible]காள்ளச் செய்தவன்.

70. தக்ஷகன், ஜனமேசயன் செய்யும் சர்ப்ப யாகத்திற்கு அஞ்சி இந்திரனிடம் அடைக்கலம் புக, மந்திரம் இவனுடன் இழுக்க அஸ்திகன் ஜநமேசயனை வேண்டி யாகத்தை நிறுத்தினன். (பார.)

71. துருவாசர் சிவபூசை செய்தபுஷ்பத்தை மதியாது யானைமேல் வைத்து அவர் கோபத்திற்குப் பாத்திரனாகி உக்கிரகுமார பாண்டியனால் முடிசிதறவும் வெள்ளையானை காட்டானையாகவும் சாபமடைந்தவன். (திருவிளை.)

72. உக்கிரகுமார பாண்டியனிடம் மாறுகொண்டு கடலையேவி அவனுடன் யுத்தத்திற்கு வந்து வளையால் முடி சிதறுண்டவன். (திருவிளை.)

73. வலாசுரனுடன் யுத்தஞ் செய்து ஆற்றாது அவனை என்ன வரம் வேண்டுமென்ன, வலன் உனக்கு என்ன வரம் வேண்டும் என்ன, எனக்கு நீ யாகப்பசுவாக வேண்டுமென்ன வேண்டி அவ்வகை பெற்று அவனைக் கொன்றவன்.

74. ஒருமுறை தாருகாசுரனுக்குப் பயந்து எறும்பினுருவாகப் பூமியில் ஒளித்திருந்தவன் (எறும்பியூர்ப் புராணம்.)

75. இவன் அரம்பையர்களுடன் கூடி இருக்கையில் நாரதர் வர அவரை உமக்கு இப் பெண்களில் வேண்டியவரைப் பணிவிடைக்கு ஏற்றுக்கொள்க என்று வபு என்பவளை அவர்க்குக் கொடுத்தவன்.

76. பூபார நிவர்த்தியின் பொருட்டுப் பூமிதேவி வேண்ட இவனிடம் இருந்த பிரமஒளி பஞ்சபூதத்தில் ஒடுங்கக் குந்தியிடம் ஐந்து உருவாகி வெளிப்பட்டவன். இவர்களே பாண்டு புத்திரர். இவர்கள் பொருட்டு இந்திராணி துருபதன் யாகத்தில் திரௌபதி ஆயினள்.

77. வச்சிராங்கியின் தவத்தைக் குரங்காகச் சென்று கெடுத்தவன்.

78. இவன், நளாயினிக்கு ஆசையுற்றுக் கைலாசத்திற்கு அழைத்துச்சென்று, ஈச்வரியுடன் நிருத்தஞ் செய்யும் சிவமூர்த்தியைக் கண்டு வச்சிராயுதத்தால் ஓங்க, அப்போது சிவமூர்த்தி திரும்பிப் பார்க்க அதனால் கைவழக்கமற்று வலது தோளில் வாதவியாதியாய்த் துக்கத்தையுற்று வலியிழந்தவன்.

79. பார்க்கபூமி யென்பவனால் அசுரரைக் கொல்வித்தவன்.

80. பிரமகத்திக்கு அஞ்சி ஒளித்திருந்த காலையில் அக்நியால் இந்திராணியின் செயல் அறிந்தவன்.

81. அமுதம் வேண்டித் தவஞ்செய்த உதங்கரிடம் நீசவுருக்கொண்டு அமுதம் தர அவர் மறுத்ததுகண்டு நீங்கி அவரால் செல்வமிழக்கச் சாபம் பெற்றவன். (பூவாளூர்ப் புராணம்.)

82. பிரதாத்தனுக்கு வேதாந்த சாத்திரம் உபதேசித்தவன்.

83. பிரமஞான மில்லாத (100) சந்நியாசிகளின் தலைகளை உடைத்து நரிகளுக்கு இரையாக்கினவன்.

84. இந்திராணி ஒருமுறை மகாலுவில் சகல போகத்துடன் இருக்கும் இவனைக் கண்டு என்னால் இப்போகம் உனக்கு வந்ததெனக் கூறக் கேட்டுச் சினந்து நீ பூமியில் பெண்ணாகு எனச் சபிக்க, இந்திராணியும் அவ்வாறே கணவனை நீ ஆணாகு எனச் சபித்தனள். இவர்கள் இருவரும் பூமியில் புண்ணியகீர்த்தி என்பவனுக்குப் புத்திரனும் புத்திரியாயும் பிறந்தனர். (நாகைக்காரோண புராணம்).

85 கலி என்னும் அசுரனுடன் யுத்தஞ் செய்து ஆற்றாது அஞ்சி மறைந்து திரிந்தவன்.

86. இந்திரன் பொருட்டு மழைக்காக உலகத்தவரால் செய்யப்படும் விழவேற்பவன். (இதனைச் சிலப்பதிகாரம் இந்திரன் விழவூரெடுத்த காதையால் அறிக).

87. வற்சநாபனைக் காண்க.

88. வாலகில்லியரைப் பரிகசித்துக் கருடனால் அவமதிப்படையச் சாபமடைந்தவன். கருடனைக் காண்க.

89 பாரிஷதன் எனும் அரசன் மனைவியாகிய வபுஷ்டமையிடத்து ஆசையுற்றுப் பலவகையிலும் எண்ணம் முடியாமல், அவ்வரசன் அசுவமேதயாகஞ் செய்ய ஒரு புரவியைக் கொல்லக் கண்டு உயிர்விட்ட அந்தப் புரவியின் உடலில் புகுந்து இருந்தனன். யாகமுறைப்படி யாக கர்த்தாவின் மனைவியாகிய வபுஷ்டமை யுடலுக்கும் குதிரையின் குறிக்கும் சம்பந்திக்கும் சமயம் பார்த்து இந்திரன் தன் எண்ணத்தை முடித்தனன். இதனால் யாகம் பலனற்றதாயிற்று. (சிவமகா புராணம்).

90. இவன், தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியனால் விழாக்கொள்ளும்படி வேண்டப்பட்டான். மணிப்பல்லவத்தில் புத்தபீடிகையை நியமித்துத் தரிசித்தோருடைய பழம்பிறப்பைத் தெரிவிக்கும் பெருமையை அதற்குண்டாக்கி அதனைக் காக்கும்படி தீவதிலகையை நியமித்தான். உயிர்களைக் காக்கும் ஆபுத்திரனுக்கு வரமளித்தற்கு வந்து தன்வார்த்தையை அவன் மதியாததை எண்ணி இரப்பாரில்லாதவகை மழை பெய்வித்து இரப்பொழித்தவன். தனது ஆசனமாகிய பாண்டு கம்பளத்தி னடுக்கத்தால் உலகிலுள்ள அறவியல்புடையார் வேண்டியவற்றைச் செய்பவன். சாவக நாட்டுள்ள நாகபுரத் தரசர் இவன் பரம்பரையோர். (மணிமேகலை).

91. இவன் சுரபியை நோக்கி இறவாதிருக்கவேண்டச் சுரபி நீ கன்றாகி என் பாலை உண்பையாயி னிறவாமையும் பெரும்பலமும் அடைவாய் என அவ்வாறு கன்றாய்ப் பாலுண்டு துன்ப நீங்கினன்.

92. பிராமண உருவாகச்சென்று ஒரு காலத்தில் சம்பராசுரனிடம் பிராமணரின் மகிமையைக் கேட்டுணர்ந்தான்.

93. இந்திரன் கௌதமர் சாபத்தால் அகல்யையைச் சேர்ந்ததால் பச்சை நிறமான மீசையை யடைந்தான். அண்டமில்லாத வனுமானுன்.

**இந்திரன்**—பதரபாசனம் காண்க.

B. வஞ்: இந்திரனுக்கு ஒருபெயர்

C. சண்முகசேனுபதி. தருமகோபனுடன் யுத்தஞ்செய்து மூர்ச்சை யடைந்தவன்.

**இந்திரர் பதினுல்வர்**—அரி, விபசித்து, சுசாந்தி, சிபி, விபு, மனேசவன், புரந்தரன், மாவலி, அற்புதன், சாந்தி, விருடன், இருததாமன், திவஸ்பதி, சுசி இவர்களுள் விபுவை, வசு, இரவி எனவும் புரந்தரனை ஓசஸ்வி எனவுங் கூறுவர்.

**இந்திரவிழா**—அகத்திய முனிவர் கட்டளையின்படி தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியனுல் தொடங்கப்பட்டு வருடந்தோறும் காவிரிப்பூம் பட்டினத்திற் சோழ பரம்பரையோரால் இந்திரனுக்கு நடத்தப்பட்டு வந்த உற்சவம். இதனை நெடுமுடிக்கிள்ளி யென்னும் சோழன் செய்யாதொழிந்ததால் காவிரிப்பூம் பட்டினம் கடல் கொள்ளப்பட்டது. (மணிமேகலை.)

**இந்திர விகாரம் ஏழு** — காவிரிப்பூம் பட்டினத்துள்ள புத்தாலயத்தில் இந்திரனுல் நியமிக்கப்பட்டுள்ள ஏழரங்குகள். (மணி.)

**இந்திரஸ்பிருத**—ருஷபனுக்குச் சயந்தியிடத் துதித்த குமரன்.

**இந்திராணி**—1. பாற்கடலிற் பிறந்து, இந்திரனை மணந்தவள்.

2. சிவமூர்த்தியிடம் சூரனுதியர் செய்யுந் துன்பத்தை முறையிடச்சென்ற இந்திரன் இவள் தனிமைக் கஞ்சி, மகாசாத்தாவைக் காவலிருக்கவேண்ட, சாத்தன் அவ்வகையிருக்க அருள் புரிந்தனர் இந்திராணி, பூஞ்சோலையிற் கைலைசென்ற நாயகன் விரைவாக வரத் தவமியற்றி யிருந்தனள். இவளை அசமுகியென்னும் அரக்கி கண்டு இவள் தன் தமயனுக்கு உகந்தவளெனக் கைப்பற்றி இழுத்தனள். அதனுல் இந்திராணி வருந்திய குரல்கேட்டு, மகாகாளர் அசமுகியின் கையைத் தறித்து, இந்திராணியை விடுவிக்க, இந்திராணி பாதலவழியாக மறைந்தனள்.

3. பாண்டவராகப் பிறக்கும் இந்திரன் பொருட்டுத் துருபதன் யாகத்தில் துரௌபதியாகப் பிறந்தவள்.

4. நகுஷன் இந்திரபதம்பெற்றுத் தன்னைப் புணரவர அவனை நோக்கி நீ, சத்த இருடிகள் சுமக்கும் பல்லக்கில் என்னிடம் வரின் உடன்படுவேனென்று மறுத்தவள்.

5. நகுஷனுல் மனைவியாகக் கேட்ட பொழுது விசனமடைந்து உபசுருதி தேவியைவேண்ட அவள் கணவனிருக்கும் இடத்தைக்காட்ட, கணவன் சொற்படி மகருஷிகளால் தாங்கப்பெற்ற சிவிகையில் வருகவென்று கூறினவள். (பாரசாந்.)

6. இவள் சத்தமாதர்களில் ஒருத்தி. இவளைத் துவஷ்டாவின் மகள் என்பர். இந்திரனுக் கொப்பாக வச்சிரம், சூலம், கதை முதலியவைகளைத் தரித்து யானை வாகனம் ஏறியிருக்குஞ் சத்தி.

7. ஒருமுறை கண்ணனை நோக்கி யுன் மடிமிசை நானிருக்க அருள் செய்யென்ருள் இதைக் கேட்ட திருமால் அணங்கே நீ பூமியிற்சென்று (௬0,000) ஆ தவஞ்செய்யின் நாம் துவாரகையில் கிருஷ்ணனுக அவதரித்து நீ விரும்பியபடி செய்வோமென்ன அவ்வகை இந்திராணி தவம் புரிந்து இராதையாகக் கோகுலத்தில் கண்ணனுடன் விளையாடி அவன் துவாரகை சென்றபின் வருந்தி வேறுருக்கொண்டு கண்ணனைத் தரிசிக்க, கண்ணன் இவளை எடுத்து மடியிலிருத்தினன். இதனைக் கண்ட ருக்மணி பொருளாய்த் திண்டீரவனஞ் சென்று தவமியற்றினள். கண்ணன் இவளைத் தவவேடங்கொண்டு திண்டீரவனஞ் சென்று கண்டு ருக்மணி யென்னை விட்டுத் தவஞ்செய்கின்றனையென ருக்மணி நீ யார் என, நான் உன்பதியென நீ வஞ்சவுருக்கொண்டிருக்கின்ருய் அகல்க என்று அகன்று தவமேற் கொண்டனள்.

**இந்திராயுதம்** — சந்திராபீடனது குதிரை; கபிஞ்சலன் வைமானிகனது சாபத்தால் இவ்வாறு ஆயினன்.

**இந்திராவரஜன்**—உபேந்திரன்.

**இந்திரியக்காட்சி**--ஆத்மா, இந்திரியங்களும், கலாதிகளும், சூர்யாதி பிரகாசங்களுடன் கூடி உருவமுதலியவற்றை ஐயக்காட்சி முதலிய குற்றமின்றி அறிவது. இது, சையோகம், சையுக்த சமவாயம், சையுக்த

சமவேத சமவாயம், சமவாயம், சமவேத சமவாயம், விசேடணவிசேடியபாவம். என அறுவகை. (சிவ-சித்.)

இந்திரேசுவரர்—இந்திரன் பெயரால் ஐராவதம் ஸ்தாபித்துப் பூசித்த சிவலிங்கப் பெருமானுடைய திருநாமம். (திருவிளையாடல்)

இந்திரோதர்- ஒருவேதியர் ஜநமேசயனுக்கு ஆபத்தருமம்கூறியவர். சௌநகன் எனும் பெயருள்ள ரிஷி. (பார-சாந்.)

இந்தீவராக்ஷன்—நளநாபன் எனுங் காந்தருவன் குமரன். இவன் கபடமா யொருகுருவினிடத்து வில்வித்தை கற்றுப் பின் குருவைப் பரிகசித்த காரணத்தால் வேடனாகவும் அரக்கனாகவும் அவராற் சபிக்கப்பட்டு ஸ்வரோசி ருஷியால் நீங்கப் பெற்றவன். பிரமமித்திரர் எனும் மௌநி, தம்சீடருடன் உபதேசித்த மந்திரத்தை மறைந்து கேட்டு அரக்கனானவன். குமரிமனோரமை.

இந்து—சந்திரனைக் காண்க.

இந்துசேனன் — பகையரசரா லரசுதுறந்து அகத்தியர் மகேசுரவிரதம், அநுஷ்டிக்கக் கூறியபடி அதை அநுஷ்டித்துக் குபேரனாற் செல்வம் பெற்றவன்.

இந்துதேசத்திலுள்ள மலைகள் — இமயம் அட்டகுலாசலங்களில் ஒன்று. இதிற் கங்கை முதலிய மகாநதிகள் உற்பத்தியாகின்றன. தென்கடலி விருந்து (௲000) யோசனையிலுள்ளது. இதன் விஸ்தாரம் (உ000) யோசனை. தனியே காண்க.

சுவாலிக்மலை — இது, கங்கை, பீயஸ் எனும் நதிகளுக்கிடையில் உள்ள மலை.

அரவாலிமலை — விந்து, கங்கைகளுக்கிடையிலுள்ளது. இதில்பெரிது ஆபுமலை.

விந்தியபர்வதம் — இது அரவாலி மலையிலிருந்து மாஹி மலையால் பிரிக்கப்பட்டது.

கைமூர்மலை — இது விந்திய பர்வதத்தின் ஒரு கிளை.

சாத்புராமலை—இது, நருமதை தபதிகளுக்கு இடையிலுள்ளது.

வடக்குத்தொடர்ச்சிமலை—இது, தக்ஷிணத்திற்கு வடக்கிலுள்ள தொடர்ச்சி.

மேற்குத்தொடர்ச்சிமலை — இது, தபதியிலிருந்து தொடர்ச்சி. கன்னியாகுமரி வரையில் கீழ்க்கரை யோரமானது. இதில் சையாத்ரி, மகாபலேச்வரம், நீலகிரி முக்யமானவை. தோடபெட்டா—நீலகிரியில் முக்யமானது.

கிழக்குத்தொடர்ச்சிமலை — தக்ஷிணத்தில் தொடர்மலை. இதில் முக்கியமானது சேர்வராயமலை.

பழனிமலை — கிழக்குத்தொடரின் ஒரு கிளை. வேறு சிறு மலைகளும் உள.

இந்துமதி—அகன்தேவி, தசரதன் தாய், விதர்ப்பதேயத் தாசனாகிய போஜன் பெண். அரினியைக் காண்க

இப்பர்—செட்டிகளின் பேதம்.

இமயமலை — இது உலகத்திலுள்ள எல்லா மலைகளிலும் உயர்ந்தது. இது நீளத்தில் 1500 மைல். இதன் அகலம் (200) மைல், இது செங்குத்தாக உயர்ந்திருக்கிறது. கம்பீரமான தோற்றமுடையது. உலகத்திலுள்ள எல்லா சீதோஷ்ண சமநிலைகளையுந் தன்னிடம் பெற்றது. இதிலுள்ள சீதோஷ்ணநிலையால் இதனை (3) நிலையாகப் பிரித்திருக்கின்றனர். இதன் சிகரங்களென்றும் நிலையாகப் பனியால் மூடப்பட்டிருக்கின்றன. காலை வேளையிலிதை அண்ணாந்து நோக்கின் பனி படர்ந்திருப்பது தெரியுமன்றிச் சிகரம் தோற்றாது. இதை நோக்குவோர் மண்ணுலகினின்றும் விண்ணுலகத்திற்குச் செல்லும் ஏணியென்பர். இம் மலைத்தொடர்.ஒரே அளவாக உயர்ந்திருக்க வில்லை. ஒன்றின்மேலொன்றாகப் படிப்படியாக உயர்ந்து இருக்கிறது. இதில் அநேக கொடுமுடிகள் ஒன்றன்பின் ஒன்றாக உயர்ந்திருக்கின்றன. இம் மலையின் பின்புறமாக உயர்ந்த சிகரங்கள் இருக்கின்றன. அவைகள்: நங்கை பர்வத், நந்திதேவி, தவளகிரி, யவரஸ்த், கின்சின்சிங்கா. இவற்றுள், யவரஸ்ட் கடல் மட்டத்திற்குமேல் (29,000) அடி உயர்ந்திருக்கிறது. கின்சின்சிங்கா 28,000 அடி, தவளகிரி 26,000 அடிகள் உயர்ந்திருக்கின்றன. இதின் அமைப்பு ஓரிடத்தில் உள்ளதுபோல் ஓரிடம் இல்லை. இதன்மேலுண்டாம் நதிகள், கீழ்புரண்டோடி அடியில் சதுப்புண் டிருக்கிறது. அந்த இடங்கள் காட்டு விருக்ஷங்களடர்ந்து போக்குவரவில்லாம லிருக்கின்றன. அடிதொடங்கி (5000) அடிவரையில் முதற்பாகம், இதில் உஷ்ணதேச விருக்ஷங்கள் மிருகங்களுண்டு. அதன்மேல் (9000) அடி வரையில் இரண்டாம் பிரிவு இதில் சமசீதோஷ்ணபிரிவிலுள்ளவிருக்ஷங்களும்பிராணிகளும் உண்டு. ஐரோப்பிய செடி பறவை மிருகங்களிருக்கின்றன. அதன்மேல்

மூன்றும் பிரிவு இது, ஐரோப்பா, அமெரிகா கண்டத்து வடபாகத்துச் சீதோஷ்ண நிலையை யொத்தது. இதன் நுனி துருவ தேசங்களைப்போல் எப்போதும் பனி படர்ந்தே யிருக்கும். இதில் கைலாசமலை முக்கியமானது. இம்மலை பல பெருநதிகளுக்கும் பிறப்பிடமானது. இவற்றுள் சிறந்தவை, கங்கை, பிரமபுத்ரா, சிந்து. இவற்றுள் பிரமபுத்ரா, சிந்து, இவ்விரண்டும் கைலாசமலையிலுள்ள மானஸஸரவில் ஒன்றுக்கொன் றெதிர்முகமாகத் தோன்றுகின்றன. செங்குட்டுவனென்னுஞ் சேரன் கண்ணகி யுருவத்தைச் சமைப்பித்தற்கு வருவித்த கல் இம் மலையினதே. (மணிமேகலை.)

**இமயவரம்பன் தம்பி பல்யானைச் சேல் புகழ்க்குட்டுவன்**—இவன் சேரன், பாலைக் கௌதமனாராற் பாடப்பட்டவன். இவன் உம்பர்க் காட்டைத் தன் கைப்படுத்தி ஒன்பது வேள்விகள் செய்வித்து மேற்கடல் கீழ்க்கடல் நீர்களை ஒருநாளில் ஆடி அயிரை மலையிலுள்ள தேவியை வணங்கிப் பாரதாயனாரை வேள்வியால் சுவர்க்கம் புகச்செய்தவன்.

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்**—இவன் சேரவம்சத்துக் கீர்த்திபெற்ற அரசன். வடநாட்டின்மீது படைகொண்டு சென்று அவர்களை வென்றவன். இவனை "வடவருட்கும் வான்றோய் நல்லிசை குடவர் கோமான் நெடுஞ்சேரலாதன்" எனவும் "ஆரியர் துவன்றிய பேரிசை யிமயம், தென்னங் குமரியோடாயிடை, மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே" எனவும் பதிற்றுப்பத்தில் புகழப்பட் டிருக்கிறது. இவன் குமரர் சேரன் செங்குட்டுவன், இளங்கோவடிகள். இவன் தந்தை உதியஞ்சேரல். இவன் தாய் வெளியன் வேண்மான் மகள் நல்லினி. இவன் இமயம்வரை படையெடுத்துச் சென்று அம்மலைமீது தன் முத்திரையாகிய வில்லைப் பொறித்தான். தன்னுடன் எதிர்த்த ஆரிய அரசரை வென்றான். யவன அரசரை வென்று அவர்களைக் கட்டியவரிடம் தனம் பெற்று அவற்றை வஞ்சியிலுள்ளார்க்கு அளித்தான். கடலிடையிருந்த பகைவரை வென்று அவரது காவன் மரமாகிய கடம்பைவெட்டி யெறிந்தான். இவனைக் குமட்டூர் கண்ணனார்பாடி உம்பற்காட்டில் (௫௱) ஊர் பிரமதாயமும் தென்னாட்டு வருவாயிற் பாகமும் பெற்றனர். இவன் ௫௮-ஆண்டு அரசாண்டான்என்பர். இவன் தம்பி பல் யானைச் செல்கெழு குட்டுவன் இவன் தேவியர் சோழன் மணக்கிள்ளியின் மகள் நற்சோணை, மற்றொருத்தி வேளாவிக்கோமானான பதுமன் என்பவனின் மகள். இவனுக்குப் பதுமன் மகளிடம் பிறந்த மக்கள் களங்காய்க்கண்ணிநார்முடிச் சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனுமாவர். இவன் வேற்பஃறடக்கை பெருநற் கிள்ளி எனும் சோழனுடன் போர் புரிந்த தொந்த யுத்தத்தில் இருவருமே மாண்டனர். இவர்களிருவருமிறந்து கிடத்தலைக்கண்டு கழாத்தலையாரும், பரணரும் உருகிப்பாடினர். இவன் சிவபிரான் திருவருளால் செங்குட்டுவனைப் பெற்றான். இவன் உயிர் நீத்தபோது நற்சோணையும் உடனுயிர் நீத்தாள் என்பது. (புறநானூறு.)

**இமயவல்லி**—உமை, இவள் மணத்தின் பொருட்டுத் தேவர்வேண்டச் சிவமூர்த்தி உமையிட மறிவித்து மீண்டுந் திருக்கல்யாணகாலத்து ஒரு குழந்தை யுருக்கொண்டு, அம்மையார் மடிமீதிருக்கத் தேவர் சினங்கொள்ளப் பிரமனறிந்து, துதிக்கச் சிவமூர்த்தி சோதியுருக் காட்டினர்.

**இமவான்**—1. இவனுக்கு, இமவந்தன் எனவும் பெயர். இவன் பர்வதராசன். இவன் மேனையை மணந்து, கங்கை பார்வதி யென்னும் பெண்களைப் பெற்றுச் சிவமூர்த்திக்குக் கொடுத்தனன். மேருவிற்குப் பந்து.

2. இவன்பாரியை பிதுருக்களின்புத்திரியாகிய மேனை, புத்திரன் மைநாகன், இவனுக்கு மூன்று பெண்கள் (1) அபரணை. (2) ஏகவருணை. (3) ஏகபாடலை. அபரணை என்பவள் மகாதேவனையும், ஏகவருணை, அசிதருஷியையும், (3) ஏகபாடலை, ஜயக்கீஷௌய ரிஷியையும் மணந்தனர். (மச்சபுராணம்.)

**இம்பூறல்**—ஒரு பூண்டு. இதன் வேர், கடுக்காய் படிகாரஞ் சேர்த்துச் சிவப்புச்சாயம், கிச்சிலிப்பழச்சாயம், ஊதாச்சாயம் போடுகிறதற்கு உபயோகப்படுகின்றது. இது, ராமேச்சுரத்தில் விஸ்தாரமாக விளைகிற படியால் இராமேச்சுர வேரென்று சொல்லப்படுகின்றது. இந்தச் செடிக்குச் சிறிய வெளுப்பான பல இலைகள் உண்டாயிருக்கின்றன. இது சிறுகசப்பாகவும், ருப்ப

யில்லாத உருசியுடையதாகவும் இருக்கின்றது. பேதியாக்குகிற மருந்தாகவு மிருக்கின்றது. இதை உலர்த்தி இடித்துச் சூரணமாக்கி அரிசிமாவோடு சேர்த்த அடை சுட்டுக் கயரோகம், அல்லது சுவாச ரோகஸ்தர் அருந்துவர்.

**இம்மித்திரபட்டாசாரியர்** — சுரேச்வராசாரியருக்குத் தந்தை.

**இம்மென்கீரனர்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர். இவர் இயற்பெயர் கீரனர்போலும். இவர் தாம்பாடிய குறிஞ்சியில் "இம்மென்றலமரன் மழைக்கண் டெண்பனி மல்க" என்று இம்மெனத் தொடுத்தமையின் இப்பெயர் பெற்றனர் போலும். (அகம் - நகஅ.)

**இயக்கர்** — இராக்கதரைக் காண்க.

**இயக்கன்** — பூதபாண்டியனுக்கு நண்பன். (புற-நா).

**இயக்கி** — (இசக்கி) ஒரு பெண் தெய்வம். (சிலப்).

**இயமநியமம்** — இவற்றுள் இயமமாவது, பிரமசரியம், தயை, பொறுமை, தியானம், சத்தியம், சரியாயிருத்தல், இம்சைசெய்யாமை, திருடாமை, யாவர்க்கும் பிரியனு யிருக்கை, இந்திரியநிக்ரகம்செய்கை ஆகப் பத்து. நியமமாவது ஸ்நானம், மௌனம், உபவாசம், தேவபூசை, வேதாத்யயனம், புணராமை, குருசிசுருஷை, பரிசுத்தம், கோபமின்மை, ஜாக்ரதை ஆகப் பத்து.

**இயமன்** — 1. சூரியபுத்திரன். தென் திசைக்கிறை. இவன் வாகனம் எருமைக்கிடா. ஆயுதம் தண்டு பாசமுதலிய. பிரஜைகளை நியமிக்கிற யமாள் எனும் கிங்கரர்களுக்குத் தலைவன். யமுனையுட னிரட்டையாகப் பிறந்தவன். அஞ்சனமலைபோன்ற கருநிறம் பதினெட்டுக் கைகள் பிறைபோன்ற பற்கள், தீப்பொறி சிதறும்விழிகள், துடிக்கும் இதழ்களுடன் மிருத்யு காலன், அந்தகன், முதலினேர் சூழத் தன பட்டணத்தில் வீற்றிருப்பவன். மாற்ருன்ருயை உதைத்ததாற் சாபம் பெற்றவன்.

2. ஓர் இருஷி சாபத்தாற் கீழ்ப்பிறப்பிற் பிறந்தவன்.

3. சிவேதன் பொருட்டும் மார்க்கண்டர் பொருட்டும் சிவபெருமான் கோபத்துக்குள்ளாகி உயிர்நீங்கி மீண்டும் அடைந்தவன்.

4. பாண்டவரைக் காக்கப் பிரமசாரியுருக்கொண்டு, அவரிடஞ் சென்று ஒருமான் என் மான்ரேலைப் பிடுங்கிக்கொண்டது வாங்கிக் கொடுங்கள் என அபயங் கேட்டவன்.

5. சாவித்திரி தொடர்ந்து வந்ததனுல் அவள் கணவன் உயிரைத் தந்தவன்.

6. தருமனுக்கு அஞ்ஞாத வாசத்தில் யார் கண்ணுக்குங் காணப்படாதிருக்க மந்திர முபதேசித்தவன்.

7. உசீனரதேசத் தரசனுகிய, சுவயக்கியன் மனைவியருக்குப் பாலனுய்த் தோன்றி அநித்தியங் கூறினவன். இவன் பாண்டு புத்திரரிற் றருமராசனுகப் பிறந்தான் என்பர்.

8. ஒருமுறை சிபிச்சக்ரவர்த்தியி னுண்மையறிய வல்லூருகச் சென்றவன்.

9 இறலித்தீவிலிருந்த அரக்கரால் ஒருமுறை விலங்கிடப்பட்டவன்.

10. பாண்டவர், ஆரண்ய வாசத்திற் காளமா முனியினுல் விடுக்கப்பட்ட பூதத்தாலிறவாவகை நச்சுநீரா லுயிர்நீங்கித் தருமரைத் தடுத்துச் சில தருமசந்தேகம் வினவியவன்.

11. பாண்டு புத்திரனுகிய தருமன் சுவர்க்கஞ் சென்றபோது நாயுருக்கொண்டு சென்று தருமனது உறுதியைத் தெரிவித்தவன்.

12. சுவர்க்கஞ் சென்றபோது ஆகாய கங்கையில் ஸ்நானஞ் செய்தபின் தரிசனந் தந்தவன்.

13. ஞானசுதரிசனன் றேவியாகிய யோகவதியைப் புணர்ந்து கற்புநிலை தெரிவித்து, யமவாதனை நீக்கினவன். இவனைச் சுதர்சனன் என்பர் (இலிங்க புராணம்.)

14. ஆணிமாண்டவ்யர் சாபத்தால் விதுரனுகப் பிறந்தவன்.

15. இராவணன், திக்குவிஜயஞ் செய்துவருகையில், அவனுடன் எதிர்த்துப் போரிட்டுத் தன் ஆயுதங்களை இழந்து, கடைசியில், எவினுல் உயிர் வாங்காமல் நீங்காத காலதண்டத்தை ஏவ இருக்கையில், பிரமன் தோன்றி இவன் மகாவரப் பிரசாதி இதை எய்வையேல், உயிர் வாங்காது மீளாதெனத் தடுத்துச் சமாதானஞ் செய்விக்க அடங்கினவன். (உத்தரராமாயணம்).

16. இவன், புண்ணியர்க்குச் சாந்தமுள்ளானுயும் பாவிகளுக்குக் கோரவுருவுடனும் தோன்றுவன். ஆதிசேஷன் மூச்சிற் றேன்றிப் பிராணிகளைத் தண்டிப்ப

வன். இவன் பட்டணம் சையமினி, தேவியர் அப்பிராப்தி, சாமளே, இரி என்பர்.

**இயல்புபுணர்ச்சி** — விகாரமின்றிச் சொற்கள் புணர்வது. (நன்னூல்)

**இயல்புவழக்கு**—1. எப்பொருளுக்கு எப்பெயர் இயல்பிலமைந்ததோ அப்பெயராலேயே அப் பொருளைக் கூறுகை. இது, இலக்கண முடையது - இலக்கண நெறியில் விளங்குவது, இலக்கணப்போலி - இலக்கணத்தைப்போல் சொல் முன் பின் மாறி வருவது, மரூஉ - இலக்கணஞ் சிதைந்து மருவியது. என மூன்றுவகையை யுடையது. (நன்னூல்)

**இயற்கைப்புணர்ச்சி**—தெய்வத்தாலும் தலைவியாலும் புணரும் புணர்ச்சி. இது வேட்கையுணர்த்தல், மறுத்தல், உடன்படல், கூட்டம் என நான்கு வகையினையும், இரந்து பின்னற்றற்கெண்ணல், இரந்து பின்னிலை நிற்றல், முன்னிலை யாக்கல், மெய்தொட்டுப் பயிறல், பொய் பாராட்டல், இடம்பெற்றுத் தழால், வழிபாடுமறுத்தல், இடையூறுகிளத்தல், நீடு நினைந்திரங்கல், மறுத்தெதிர் கோடல், வறிதுநகைதோற்றல், முறுவற்குறிப்புணர்த்தல், முயங்குதலுறுத்தல், புணர்ச்சியின் மகிழ்தல், புகழ்தல் முதலிய பதினைந்து விரியினையு முடையதாம்.

**இயற்சொல்**—யாவருக்கும் பொருள் விளங்குஞ் சொல்.

**இயற்பகைநாயனர்** — சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தில் வைசியர் குலத்திலுதித்துச் சிவனடியவர்க்கு வேண்டியவைகளைக் கொடுத்திருக்கு நாட்களிலே சிவபெருமான் ஒரு காமுகவேதிய ருருக்கொண்டு வந்து அவர் மனைவியைத் தாம் பெற்றுச் செல்கையில் வழியில் சுற்றத்தார் தடுக்க நாயனர், அவர்களுடன் போரிட்டு விலக்கி மனைவியாரை வேதியர்க்குப் பின் அனுப்ப, வேதியர் திருச்சாய்க் காடு என்னும் சிவஸ்தலம்வரை நாயனர் பின் வரச்சென்று, நாயனர் நிற்றல் கண்டு ஏதோ பயந்தவர்போல் கூவ, நாயனர் கேட்டு விரைந்து செல்லச் சிவமூர்த்தி தரிசனந்தர முத்திபெற்றவர். (பெரியபுராணம்).

**இயன்மொழிவாழ்த்து** — மயக்கமற்ற மிக்க புகழினையும், குதிரையாற் பூட்டப்பட்ட தேரினையுமுடைய அரசன் தன்மையினைச் சொல்லினும், இத தன்மையோர் இத் தன்மைய வழங்கினர் நீயும் அத் தன்மையார் போல் அப்படியான பொருள்களை எமக்குத் தருவாயாக என்று சொல்லி எத்தன்மையோரும் உணர உயர்த்துச் சொல்லுவது. (பு. வெ. பாடாண்).

**இயைபின்மையணி**—அஃதாவது, ஒருவாக்கியத்துள் ஒரு பொருளையே உபமானமாகவு முபமேயமாகவுஞ் சொல்லுதலாம். இதனை வடநூலார் அநந்வயாலங்காரமென்பர்; தண்டியாசிரியர் பொது நீங்குவமை யென்பர்.

**இயைபு**—ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள, என்ற பதினொரு புள்ளியீருய் வந்த பாட்டு. (யாப்பு-வி.)

**இரதகுணன்** — சிந்துதேசாதிபதி. சடபரதரைப் பல்லக்கு எடுப்பித்து விரைவாகச் செல்லும்படி கோபித்து அவரைப் பிறகு மெய்யுணர்ந்தா ரென, அறிந்து அவரால் ஞானேபதேசம் பெற்றவன் இவனுக்குச் சவ்வீரராசனென்னும் பெயரும் உண்டு.

**இரதநாதசேதுபதி**—இவர் இராமநாதபுரத்தரசர்களி லொருவர். தமிழருமை யுணர்ந்து புலவரை ஆதரித்தவர். ஒரு துறைக் கோவை இவர்மீது அமுதகவிராயராற் பாடப்பட்டது சேதுபதிகளின் வரலாறு காண்க.

**இரதுபதி**—சித்தூரை ஆண்ட இராஜபுத்ர அரசர்களில் ஒருவன். இவன் கி. பி. 1201 - இல், பட்டமடைந்து மாண்டாரா நாட்டின்மீது படையெடுத்து அதைக் கைக் கொண்டான். சிரோதா எனும் பட்டணத்தைக் கட்டினவன் இவனே. இதனல் மீவார் நாட்டு இராஜபுத்ரர் சிசோதயர் எனப்பட்டனர்.

**இரதுமகாராஜன்**—(சூர்.) தீர்க்க பாகுவின் குமரன். இவனது குமாரன் அஜன். இவன் விச்வசித் என்னும் யாகஞ்செய்து வறியனாய் இருக்கையில் கவசர் என்ற ஒரு வேதியர் இவனிடங் குருதக்ஷிணைக்காக வந்தார். அரசன் எதிர்கொண்டு மட்பாத்திரத்தாற் கால் கழுவ நீர் தந்ததைக் குறிப்பால் அரசன் யாகஞ்செய்ததால் வறுமையடைந்தனனென்றுணர்ந்து திரும்புகையில் அரசன் வேதியரை மறுத்து வந்தகாரியம் வினவினன். வேதியர் நான் குருதக்ஷிணையாகப் பதினன்கு கோடி பொன்பெற வந்தனன். நீ மட்பாத்திரத்தால் நீர்தந்த நிலையறிந்து செல்கின்றேன் எனக்கேட்டுஅரசன் பிராமணரைஇருத்திக்

குபேரனிடம் யுத்தத்திற்குச் செல்லத் துணிந்தனன். குபேரனிதையறிந்து அரசன பொக்கிஷத்தை நிரப்பினன். இதனை ம்வவுகாரரா லறிந்த அரசன் வேதியரைத் திருப்திசெய்தனுப்பினன்.

இரகுவம்சம்—சூரியவம்சத்தரசர் சரித்திரம் சொன்ன நூல் தமிழில் அரசகேசரி யென்பவராற் செய்யப்பட்டது.

இரக்ததந்தி—சத்தியைக் காண்க.

இரக்தபிக்ஷாடனம்—பிக்ஷாடனராய்ப் புறப்பட்டு விஷ்ணுமூர்த்தியின் நெற்றியினைச் சூலத்தாற் கீறி நரம்பின்வழி ரக்த பிக்ஷையேற்ற பைரவத்திருக்கோலம்.

இரங்காரி — ஒருவகை மராட்டிய ஜாதி. தொழில் சாயந் தோய்த்தல், தையல் வேலை செய்தல், இவர்கள் அம்பாபவானியை வணங்குவர். இவர்கள் தங்களை க்ஷத்திரியர் என்பர், இவர்கள் இராமனுடன் படைத்துணையாக இலங்கை சென்றதால் லங்காரி என்று தங்களுக்குப் பெயர் என்பர். இப்பெயர் ரங்காரியென மாறியதென்பர்.

இரங்குதுடிக்குன்றநாடன்—கடைச்சங்க மருவிய தமிழ்ப்புலவன்.

இரங்கேசவெண்பா — அரங்கப முனிலையாக்கிப் பாதிவெண்பாவிற் குறளும், பாதிவெண்பாவி லதற்கியைந்த பழங்கதையும் சொன்ன நீதிநூல். இது சாந்த கவிராயன் கூறியது.

இரசகற்பூரம்—கந்தகத்துடன் இரசத்தைச் சேர்த்துப் பதங்கமிடின் இரசகற்பூரமாம். வைத்தியநூற்களைக் காண்க. இது வைப்புச் சரக்கு.

இரசக்கியன்—புரஞ்சயனுக்கு நண்பன்.

இரசதாஸ்வன்—சௌனேயன் சாத்தியகி. (பார-து.)

இரசபுத்ரர்—இவர்கள் பூர்வ ராஜாக்களின் புத்திரராகக் கூறுபவர். இவர்கள் வட இந்தியாவில் தாகூர், சத்ரி எனப் பட்டமடைவர். இவர்களில் சிலர் வடஆற்காடு, சித்தூர், வேலூரில் குடியிருக்கின்றனர். இவர்கள் ராஜபுதனத்திலிருந்து மகம்மதிய அரசர் சேனைகளுடன் வந்தவர்கள். இவர்களிற் பெரும்பான்மையோர் போர்ச்சேவகரா யிருந்து உபகாரச்சம்பளம் பெற்று ஜீவிக்கின்றனர். பழக்க வழக்கங்கள்: இவர்கள் மகுடம்பூண்ட மறுநாட்காலையில் அரசன் தன் சேனைகளுடன் புறப்பட்டுத் தனக்குப் பகைவனது நாட்டின்மீது படைகொண்டுசென்று செயித்தல் வேண்டும். பகைவர் இல்லாவிடின் ஒரு போலி படையெழுச்சியாவது நடத்தவேண்டும். திருமண வழக்கம்: பெண்ணைக் கொடுக்க எண்ணியவர்கள் ஒரு தேங்காயை மணமகனுக் கனுப்ப வேண்டும். அதனை அங்கீகரிப்பது மணத்திற் குடன்பட்டதாம். அதனை அங்கீகரியாமை உடன்படாமை. அங்கீகரித்த மணமகன் பெண்வீட்டாரிடஞ்சென்று நல்யாணகாலத்தில் முக்கோணம்போன்ற (3) மரச்சட்டங்களின் மீது வைக்கப்பட்டிருக்கும் ஒரு மயிற் பிரதிமையை மணமகன் குதிரைமீதேறி ஈட்டியினால் அந்த முக்கோண தோரணத்திலுள்ள மயிலையும் தோரணத்தையும் முரித்துவிடவேண்டும். அந்தச் சமயத்தில் அருகிருக்கும் பெண்கள் மணமகன்மீது பாடல்களைப் பாடிக்கொண்டு புஷ்பபாணங்களையும், மஞ்சட்பொடிகளையும் தூவுவர். (தர்ஸ்டன்)

இரசம்—1. (க) - சிங்காரம், வீர்யம், பெருநகை, கருணை, ரௌத்ரம், குற்சை, சந்தம், அற்புதம், பயம்.

2. இது (பாதரஸம்) வெள்ளிபோல் பளபளப்பான திரவபதார்த்தம். தொட்டால் கையில் ஒட்டாது. பளுவானது. உஷ்ணமான நெருப்பில் ஆவியாகிப் போய்விடும். கீழ்கொட்டினால் சிதறிவிடும். இது ஐரோப்பா, அமெரிக்கா, திபெத், சீனு முதலிய இடங்களில் சுனிகளில் வெட்டி யெடுக்கப்படுகிறது. இந்துக்களிதைச் சிவவீர்யம் என்பர். இதை மருந்துகளில் உபயோகிக்கையில் இதற்குள்ள எண்வகைத் தோஷங்களை நீக்கத்தக்க எண்வகைச் சுத்திசெய்து உபயோகிக்கவேண்டியது. அவ்வகை உபயோகிக்காவிடின் பல விகாரங்களை உண்டாக்கும். எண்வகைத் தோஷங்கள்: சர்ப்பம், வங்கம், கந்தி, வன்னி, சாஞ்சலம், மலம், காளம், மந்தம், என்பன இவைகளை நீக்காது உபயோகித்தால் முறையே ரணம், பெருவியாதி, தீச்சுவாலை, தபித்தல், நிறமாறல், வீர்யநாசம், மரணம், சோபம் என ௮-வித ரோகங்களுண்டாகும். இதனுவின்னும் துணியைக் கிழித்தல், கல்லாலடித்தல், உயரத்திருந்து குதித்தல், தண்ணீரில் மூழ்கிமூழ்கிக் கிளம்பல், மயங்கிப் பித்துக்கொள்ளல், அழலைகொள்ளல், வாயில் ஜலமூறல், வேர்வை பெருகல்,

பிரலாபம் உண்டாம். சுத்திவைத்திய நூல்களிற் காண்க. (பதார்த்தகுண சிந்தாமணி).

3. நாவால் கிரகிக்கப்படுவது. விசேஷகுணம், பிருத்வி, புனல்களி லிருப்பது

**இரசனை**—பூஷாவின் தேவி.

**இரசன்**—1. ஆயுவெனுஞ் சந்திரவம்சத்தரசன் சந்ததியான். இவனுக்கு (105) புத்திரர்கள். இவன் இந்திரன்வேண்டுகோளால் தானவரை வென்று அவனுக்கு இந்திரபதமளித்தான். பின் சிலகாலம் பொறுத்து இவன் புத்திரன் இந்திரனுடன் போர்புரிந்து இந்திரபத மடைந்தான். மீண்டும் இந்திரன் அவன் பதத்தைப் பெற்றான். (பிரமபுராணம்).

2. விரசன் குமாரன்.

**இரசஸ்**—திரிகருத்துத் தந்தை.

**இரசாதலம்**—ஒருபாதாள உலகு. இதுகற்கள் நெருங்கியது. இதன் முக்கிய பட்டணம் போகவதி. இதிற் பலியிருப்பன்.

**இரசாதி** — இவை யாகத்திற் குரியவை. ரஸம், நெல்லிக்காய்கந்தகம், சாதிலிங்கம், அரிதாரம், சிலாசத்து. (சைவ-பூ).

**இரசானை**—1 மகாகாளனென்னும், ஏகாதசருத்ரன் தேவி.

2. திதியின்பெண். துவட்டாவின் தேவி.

**இரசி**—ஆயுசின் குமரன், புரூரவன் பேரன். இவனுக்கு (ரு) குமரர். இவன் இந்திரனாற் பிரார்த்திக்கப்பட்டுத் தைத்தியரைக் கொலைபுரிந்தவன். பிரகலாதனுக்குப் பயந்த இந்திரனுக்குத் தன்னைத் தத்தம் செய்தவன். சிலநாள்பொறுத்து இரசி லோகாந்தரத்தை அடைந்தனன். இந்திரன் சுவர்க்கத்தை வேண்டிப் புத்திரரைக் கேட்கப் புத்திரர் மறுத்து யஞ்ஞபாகத்தையும் கவர்ந்துகொண்டனர். அதனாலிந்திரன் கோபித்து ஆபிசாரயாகஞ்செய்து நூறு குமாரரையுங் கொலை செய்வித்தனன்.

**இரச்சு**—ஒரு வட்டத்தையிட்டு இதன் புறம்பாக மூன்று வட்டத்தையிட்டு இதிலே தன்னிலொக்கக் கதிர்போல மூன்று விட்டத்தையிடின் அது இரச்சுச்சக்கிரமாம். இதன் புறம்பில்வட்டத்தி லொருவிட்டத்தின்றலைதொடங்கி அஸ்வினி முதலாக உள்ளேபுக (ரு) நாளெண்ணிப் பின்பு பிரதக்கிணமாகத் திருவாதிரைமுதல் (ச)நாட் புறப்படவெண்ணிப் பின்பு மகமுதல் (ரு) நாளுள்ளே புகவெண்ணிப் பின்பு சோதிமுதல் (ச) நாட் புறப்படவெண்ணிப், பின்பு மூலமுதல் (ரு) நாளுள்ளேபுக வெண்ணிப், பின்பு சதயமுதல் (ச) நாட் புறப்படவெண்ணி, இப்படி (27) நாளுமெண்ணி நின்ற உச்சமத்தியத்திலே மிருகசிரிடம், சித்திரை, அவிட்டம், கூடக்கிடக்க வெண்ணுவது. அஃதாவது மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம், சிரோரச்சு, உரோகிணி, திருவாதிரை, அத்தம், சோதி, திருவோணம், சதயம் இவ்வாறு நாளுங்கண்டரச்சு, கார்த்திகை, புநர்பூசம், உத்திரம், விசாகம், உத்திரட்டாதி, பூரட்டாதி இவ்வாறுநாளு முதராச்சு. (சிலர் பரணி, பூசம், பூரம், அனுடம், பூராடம், உத்திரட்டாதி இவ்வாறையும் ஊருரச்சென்பர்.) பரணி, பூசம், பூரம், அநுடம், பூராடம், உத்திரட்டாதி இவ்வாறுநாளும் யோனிரச்சு. அசுவதி, ஆயிலியம், மகம், கேட்டை, மூலம், இரேவதி, இவ்வாறு நாளும் பாதரச்சு இப்படி நாலுவட்டமும் நடுவுந் தலை, கழுத்து, வயிறு, யோனி காலெனப்படும். இவையிற்றிலே வட்டத்திலொரு விட்டத்திலே திரிபுமான்கள் நாட்கிடக்கில் ரச்சுப் பொருந்தாது. பின்னமாகிற் பொருந்தும். (விதானமாலை)

**இரச்மிகேது**—ஒரு இராவணபடன்.

**இரச்சுமிஸ்புடம்**—இது, (எ) இராசியும் (க0) பாகையும்வைத்து இதில் ஆதித்யன் சுத்தபுடத்தைக் களைவது. (க0) இராசியும் (அ) பாகையையும் வைத்து இதில் செவ்வாய் வியாழனுடைய சுத்தபுடத்தைக் ச[illegible]து. (கூ) இராசியும் (கஎ) பாகையும் வைத்து இதில் புதன் சுத்தபுடத்தைக் களைவது. (ரு) இராசியும் (க) பாகையும் வைத்து இதில் சுக்கிரன் சுத்தபுடத்தைக் களைவது. (எ) இராசியும் (எ) பாகையும் வைத்து இதில் சநி சுத்தபுடத்தைக் களைவது. இரண்டிராசியும் (கஉ) பாகையும் வைத்து இதில் கேதுவின் சுத்தபுடத்தைக் களைவது. (அ) பாகைவைத்து ராகுவின் சுத்தபுடத்தைக் களைவது. இப்படிக் களைந்து நின்ற சேடம், இரச்சுமிஸ்புடமெனப் பெயர் பெறும். இதனை நாள் பார்க்கும் படியே பார்த்து உற்றநாளில் சுபகாரியங்கள் தவிரப்படும். (விதானமாலை'

**இரர்வரோயன்**—சுவர்ணரோமன் குமரன்.

**இரட்சிதை**—ஒரு அப்சரசு.

**இரட்டைக்கிளவி**—இரட்டைச்சொற்க ளவ்விரட்டையினின்று பிளவுபடாதது

**இரட்டைச்சேக்கர்**—வாணியரில் ஒருவகையார். (தர்ஸ்டன்)

**இரட்டையர்**—கவிவல்ல தெய்வப் புலவர். ஒரு வேளாளன் தன் மனைவியுடன் புத்திரப்பேறு வேண்டிச் சிவபணி செய்து வந்தனன். சிவமூர்த்தி தவசிபோல் வந்து உமக்கு என்ன வேண்டும் என்றனர். அவ்விருவரும் குணமும் கல்வியும் ஒத்த இரு குமாரர் வேண்டும் என்றனர். ஆயினும் உறுப்புக் குறையில்லாத குமாரரைக் கேட்கிலர், ஆதலால் பூர்வம் அச்வினிதேவர் வேண்டுகோளின்படி சிவமூர்த்தி அவர்களை இவர்களுக்குப் புத்திரரா யுதிக்கச் செய்தனர். இவர்கள் பல சமஸ்தானங்கள் சென்று, எது தரினும் வேண்டாது ஒரு பணம் மாத்திரம் பெற்றுச் செல்வர். இவர்களில் இளையவர் அந்தகர், மூத்தவர் முடவர். இவ்விருவருந் தெய்வத் தருளாற்றமிழில் வல்லமைபெற்று அந்தகர் முடவரை முதுகிற் சுமந்து பல தலயாத்திரை செய்துவருவர். இவர்கள் இளஞ்சூரியர், முதுசூரியர் எனப்பட்ட பெருங்கவிப் புலவர்கள் எனவும், திருவக்கையி லிருந்த ஆட்கொண்டான் எனப் பெயரிய கொங்கராயன்காலத் திருந்தவர்கள் எனவும், அக்கொங்கராயனலும் கச்சியிலிருந்த சம்பராயனலும் நன்று போற்றப்பட்டவர்கள் எனவும், திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடினூர்கள் எனவும், திருவண்ணமலைச் சம்பந்தன் சொன்ன சமுத்தி பாடினர்க ளெனவும் ஆறுவிலகப் பாடினர்க ளெனவும், வறுமைமிகுத்துக் குன்றும் வனமுங் கடந்துபோய்ப் பிறரைப் புகழ்ந்துபாடி வாணுள் கழிந்தனர் எனவும் தமிழ்நாவலர் சரிதையால் அறியலாவன. 'கலம்பகத்திற் கிரட்டையர்கள்' எனப் பிற்காலத்தார் பாடியது. இவர்களியற்றிய திரு ஆமாத்தூர்க் கலம்பகம் பற்றியே யாமெனத் தோன்றுகின்றது. ஒரு செய்யுளை ஒருவர் பாதியும் மற்றொருவர் பாதியுமாகப் பாடி முடிப்பார்கள் எனவுங் கூறுவர். இரட்டையர் திருவக்கைக் கொங்கராயன் அசனம் இடுவித்தபோது பாடிய கவி "சாணர்க்கு முன்னிற்கு மாட்கொண்டநாயன்றமிழ்க்கொங்கர்கோன், பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே, ஊனுக்கு வாரா திருப்பாய் விருப்பாகி யுயர்வானிலே, வீணுக்கு நின்ஞக மெலிகின்ற தெவ்வாறு வெண்டிங்களே." திருவண்ணமலைச் சம்பந்தன் சமுத்தி பாடச்சொன்னபோது பாடியது, "மன்னுதிரு வண்ண மலையிற்சம் பந்தனுக்குப், பன்னு தலைச்சவரம் பண்ணுவதென்—மின்னி, னிளைத்த விடைமடவா ரெல்லாருங்கூடி, வளைத்திழுத்துக் குட்டாமலுக்கு." சம்பராஜன் விகடசமுத்தி பாடச்சொல்லப், பாடியது, "எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம்பரன் சம்பனெண்டிசைக்கும், பொறிக்கும் புலிக்கொடி யான் புயம் வேட்டபின் பூவையன்னுள், வெறிக்குங் குமக்கொங்கை மீதே விழிசொரி வெள்ளந்துள்ளித்,தெறிக்குந்துவலை பழிக்குஞ்சிந் தூரத் திலகத்தையே." படைவீடு முற்றியிருந்த பாண்டியனுக்குப் பாடியது "காற்று லலைப்புண்டு கண்ணன் கடல்கடைந்து. மேற்றுனெடுத்து வளைத்தெய்து—மாற்றாத, செம்பொன் மலையில் லைச் சேலுக் கிடங் கொடுக்கச், சம்பன் மலைகைக்குவா." ஆறுவிலகிய பாட்டு: "ஆற்குழையோ வரவோ வாயர்பாடியருமனையோ, பாற்கடலோ தம்பமோதங்கு மாவம் பலபல்வா, மாற்கமு மாகி நின் றூர்மாதை நாதர் வலங்கொள்பம்பை, மேற்கரை கோயில் கொண்டார்புரஞ் சீறியவெங்கணைக்கே." திருவாமாத்தூர்க் கலம்பகம் பாடச்சொன்னபோது பாடியது. "தொல்காப்பிய தேவர் சொற்ற தமிழ்ப் பாடலன்றி, நல்காத் திருச்செவிக்கு நாமுரைத்த தேறுமோ, மல்காப் புனறதும்ப மாநிலத்துக் கண்பிசைந்து, பல்காற் பொருளழற்கும் பாற்கடலொன் றீந்தார்க்கே." காட்டு வழியிற் போகும்போது இளஞ்சூரியர் வினவுக்கு முதுசூரியர் விடைகூறியது. "குன்றும் வனமுங் குறுகி வழிநடந்து, சென்று திரிவதென்றுந் தீராதோ—வொன்றுங், கொடாதாரைச் சங்கென்றுங்கோ வென்றுஞ் சொன்னு, லடாதோவதுவே யிது." இவ்விருவரும் தலயாத்திரையால் வருந்திப் பசித்துன்பத்தால் ஆங்கூர் சிவாலயத்திற் சிவதரிசனஞ்செய்து நீங்குகையில் இவ்விருவரில் தமயனர் "தேங்குபுகழ் ஆங்கூர்ச் சிவனேயல் லாளியப்பா, நாங்கள் பசித்திருக்க நியாயமோ" என்ன, மற்றொருவர்—போங்காணும் "கூறுசங்குதோன் மூரசு கொட்டோசை யல்லாற். சோறு கண்ட மூளியார் சொல்" என நீங்கி வேறொருவனைப் பாடி அவன் செய்யுளின்

அருமை யறியாதவனுதலால், "மூடர்
முன்னே பாடன் மொழிந்தாலறிவரோ,"
என வசைபாடி நீங்கி, மாங்காடடைந்து
அவ்விடமிருந்த வேளாளன், சற்றுப் பரா
மரிக்கையாய் மகளுடன் ஊர்விட்டு மரு
மகனிடம் நீங்குகை கண்டு "மாங்காட்டு
வேளாளன் மகளை மருமகன்பால், போங்
காட்டி. வின்பம் புணர்ந்தானே, அங்கா
ணும், மக்கண் மெய்தீண்டல் உடற்கின்ப
மற்றவர், சொற்கேட்ட வின்பஞ் செவி
க்கு" எனப் பாதி வெண்பா ஒருவர் பாடு
தல்கண்ட வேளாளன் பயந்து பணிந்து
உபசரிக்க. மற்றவர் மற்றப்பாதி வெண்பா
வைத் துதியாகப்பாடி நீங்கினர். இவர்கள்
திருவாரூர்சென்று "நாணென்ருல் நஞ்சி
ருக்கும் நற்சாபங்கற்சாபம்" என மதிவி
லெழுதி வெண்பா முடிக்காது சென்று
பலதல யாத்திரைகள் செய்து மீண்டும்
அத்தலத்திற்குவந்து எழுதிய வெண்பா
வைக்கண்டு "பாணந்தான் மண்தின்ற
பாணமே — தாணுவே, சீராரூர் மேவுஞ்
சிவனேநீயெப்படியோ நேரார்புரமெரித்த
நேர்" என முடித்திருத்தல் கண்டு காள
மேகப் புலவரால் முடிந்ததென்றறிந்து
அவரைக் காணச் சென்று, அவரன்றைக்
குச் சிவபதமடைந்துவேகுதல்கண்டு "ஆசு
கவியாலகிலவுல கெங்கும் வீசு புகழ்க்காள
மேகமே—பூசுரா, விண் கொண்ட செந்
தழலாய் வேகு தேயையையோ, மண்டி
ன்ற பாணமென்றவாய்" எனப் பாடி விச
னமடைந்து நீங்கிக் காஞ்சி எகாம்பரநாதர்
மீது, எகாம்பரர் உலாப்பாடிப் பல்லவரா
யன் சமஸ்தானத்தில் அரங்கேற்றுகை
யில், முதல் வெண்பாவில் ஆயிரக்கால்
மண்டபம் விகடசக்கர விநாயகர் எனக்
கூறியதால் அரசன் இல்லாததைக் கூறி
னீர் எனப், புலவர் அரசனை நோக்கி
நாமுமறியோம் அவளும் பொய் சொல்
லாளென்று பிரசங்கித்துப் பரிசு பெற்று
நீங்கினர். சிலநாள் தரித்துப் பல்லவன்
கோபுரத் திருப்பணிசெய்ய அங்கிருந்த
மண்மேட்டை நீக்க, அவ்விடம் ஆயிரக்
கால் மண்டபத்தையும் விகடசக்கர விநா
யகரையுங் கண்டு வியப்படைந்து உலா
வுக்குத்தெய்வீக உலாவென்று பெயரிட்ட
னன். இவர்கள் சிவாக்ஞையால் திருவா
மாத்தூர்சென்று ஆமாத்தூர்க் கலம்பகம்
பாடி அந்நாட்டரசன் சமஸ்தானத்துப்
பிரசங்கிக்கத் தொடங்கி முதற்செய்
யுளில் திருமால் துயர் தீர்த்தானுக்குப்
பம்பையாற்றுக்கு மேற்கில் ஆலயமிருக்
கிறதெனக் கூறினர். இதைக்கேட்ட அந்
நாட்டுப் புலவரும் அரசனும் இது பொய்
யென நகைத்த துணர்ந்து இது திருவரு
ளின்செயல் இது உண்மைப்படினன்றிப்
பிரசங்கிக்கோமென்று நிறுத்தினர். அன்
றிரவு பெருமழை வருஷித்து, பம்பை
வெள்ளங்கொள்ள ஆற்றிற்கு மேற்குக்
க்ரையிற், கோவில் தோன்றியது. அரச
னும் மற்றப் புலவரும் மகிழ்ந்து வியப்
படைந்து புலவரை வணங்கிப் பிரசங்கங்
கேட்டுப் பொருள் தருகையிலிரட்டையர்
பொருள் பெருது எமக்கு அவமானம்
வராது காத்தான் காப்பன் என நீங்கினர்.
இவர்கள் இயற்றிய நூல்கள் தில்லைக்
கலம்பகம், கச்சியுலா, கச்சிக்கலம்பகம்,
திரு ஆமாத்தூர்க் கலம்பகம், பலதனிப்
பாடன் முதலியன. இவர் காலம் வக்க
பாகை வரபதியாட்கொண்டான் எனும்
கொங்கர் குலபதிகாலம். வக்கபாகைநடு
நாட்டின் கண்ணது. இற்றைக்கு (450)
வருஷங்களுக்கு முன்னுயிருக்கலாம்.

**இரணஞ்சயன்**—(சு.) தனஞ்சயன் குமரன்

**இரணபேரிகை**—(உ) அது யானைமுரசம்,
ஒட்டகமுரசம், போர்தொடுக்க அறைதல்
யானைமுரசு, போர்விடுக்க அறைதல் ஒட்
டகமுரசு.

**இரணமத்தன்**—இராவணசேநாபதி. இவன்
பெயர் கேட்டமாத்திரத்திற் பகைவர் ஒடுங்
கும்படியான வலியுள்ளவன்.

**இரணமோசனம்** — அனுஷமாதல், வியதி
பாதயோகமாதல் உத்திரட்டாதியாதல் இந்
நாட்களுடனே இருத்தைகளாதல் வியா
ழக்கிழமை, சனிக்கிழமையாதல், குளிக
ஞதல் சனியங்கிசம், மகரம், கும்பம்,
உதயமாதல்வரப் பூருவபக்கத்துச் சந்தி
ரோதயமான காலத்துப் பகலிலே தனிசு
வாங்கினபொருள் கொடுத்துச் சீட்டுக்
கிழிப்பது. (விதானமாலை)

**இரண்மயன்** — அக்கினியித்திரனுக்குப் பூர்
வசித்தியிட முதித்தகுமரன். தேவிசநதை.

**இரண்ய அச்வதானம்** — (௧00அ) அல்லது
(௧0அ) கழஞ்சு பொன்னல் ஒரு குதிரை
செய்வித்து, வெள்ளியினல் முகமுங் காலு
மமைத்து அலங்கரித்து, வேதம் நன்றாக
அறிந்த வேதியனை அழைத்து அவனை இந்
திரனுகப்பாவித்து (டு) கழஞ்சு பொன்,

தக்ஷிணை வைத்து வேதியர்க் குணவளித்தளித்தலாம். இதைச் செய்தவர் சுவர்க்காதிகளை அடைவர்.

இரண்யஇடபதானம் — முகமுங் கொம்பும் வெள்ளியாலும் வால் கழுத்து முசிப்பு இவைகளுக்குப் பதுமராகம், கோமேதகம், முத்து இவைகளைப் பதிப்பித்து, பொன்னு விடப வுருச் செய்வித்து, படிகத்தாற் பிறைசெய்து கழுத்திலணிந்து முத்துக்களாற் பலவணிகள் செய்திட்டுக் கிழக்கு நோக்கவைத்து வேதியர்க்குத் தக்ஷிணையுட னளித்து அமுது செய்வித்தலாம். இவை செய்தவர் சுவர்க்காதிபோகமடைவர்.

இரண்யகசிபு—காசிபருக்குத் திதியிட முதித்த அசுரன். இவன் மூத்தவன், இவனது கனிஷ்டன் இரண்யாக்ஷன். இவர்களிருவரும் வைகுந்தத்திலிருந்த துவாரபாலகர். சநந்தனாதிகளின் செல்லுகையைத் தடுத்துப் பூமியிற் பிறக்கச் சாபம் பெற்றுப் பிறகு விஷ்ணுமூர்த்தியை வேண்ட அவர் நம்மிடம் பகைவராவீரேல் மூன்று பிறவியில் வைகுந்த மடைவீர்கள் என அவ்வகையே அசுரர் முதலியவராகப் பிறந்தவர்கள் இவர்கள், முதற்பிறப்பில் இரண்யகசிபு, இரண்யாக்ஷன். இரண்டாவது இராவணன், கும்பகர்ணன். மூன்றாவது சிசுபாலன், தந்தவக்கிரன். திக்குவிஜயத்தில் விஷ்ணுமூர்த்தி இவன மூக்கில் ஒளித்து மறைந்தனர். இவன் பாரி கியாதி, குமரர் அநுகிலாதன், சமகிலாதன், கிலாதன், பிரகலாதன்; குமரி சிம்மகி. இவர்களுள் முதலில் விஷ்ணுமூர்த்தியால் தம்பியாகிய இரண்யாக்ஷன் கொல்லப்பட, இரண்யகசிபு விசனமுற்றுப் பிரமனை நோக்கித் தவம்புரிந்து எங்கும் எவராலுமிறவா வரம்பெற்றுத், தவ வன்மையாற் றேவர் இருடிகளை வருத்திவந்தனன். இதனாற் றேவர் முதலியோர் விஷ்ணுமூர்த்தியை வேண்டினர். அசரீரி அவர்களை நோக்கித் தேவர்களே இவனுக்கு நான்கு புத்திரர்; அவர்களுள் பிரகலாதன் என்பவனிடம் இவனுக்கு எக்காலம் பகைமையுண்டாகிறதோ அக்காலம் அவனுக்கு மரணம் நேரும் என்றது. அதனைக் கேட்ட தேவர்கள் சமயம் பார்த்திருந்தனர். இவன், பிரகலாதனிடம் பகைமைபூண்டு நரசிம்மமூர்த்தியாற் கொல்லப்பட்ட செய்தியைப் பிரகலாதனைக் காண்க. இவன் பேரர் கும்பன், கிருபன், விரோசநன். (பாகவதம்) நரசிங்கபுராணம்.

இரண்யகருப்பமதம்—இதனைப் பிராணாத்மவாதிமத மெனவுங் கூறுவர். தேகத்தில் செவி, கண், வாக்கு முதலிய இந்திரியங்கள் குறைந்தகாலத்தில் முறையே செவிடு, குருடு, மூங்கை உண்டாயினும் தேகமாத்திரம் இருக்கும். பிராணமில்லையாயின் தேகநாச முண்டாகிறது. ஆகையால் ஆத்மா இந்திரியாதிகளுக்கு வேறென்பர். இவர்கள் பிராணநீக்கமே மரணம் ஆதல் பற்றிப் பிராணனே ஆத்மா என்பர்.

இரண்யகற்பன்—1. தமோசிருட்டி செய்து விட்டவுடல் நீக்கி வேறுடல்கொண்டு பிரமன் பெற்ற பெயர்.

2. இரண்யமயமான அண்டத்திற் பிறந்தவனாகையாற் சூரியனுக்கு ஒரு பெயர்.

3. கேதாரம் தரிசித்து முத்தியடைந்த ஒரு பாசுபதன்.

4. காசியிலிருந்து அகமபிரமவாதங் கூறிக் காலவயிரவரால் தண்டிக்கப்பட்ட ஒரு மடாதிபதி. (காசிரகசியம்).

இரண்யகற்பதானம்—பொன்னினால் மனிதன் புகத்தக்க ஒரு குடம் விதிப்படி செய்வித்து, யாகவேதிகையிலிருத்திப் பூசித்து அதில் யஜமானன் புகுந்து கிழக்காயிருக்குங்காலையில் கருப்பாதானம், சீமந்தம் முதலியன செய்து, வலப்பால் அறுகும் அத்திப்பழத்தையும் பிழிந்து, பின் புருஷன் குடத்தினின் றெழுந்த பின்பு சாதகர்ம முதலியன செய்வித்து வேதியர்க்கமுதளித்து, முப்பதுகழஞ்சியிற் பெண்ணுருச் செய்வித்து ஆலயத்திற்கு அதைத் தானஞ்செய்து குடத்தையும் மற்றுள்ள அதிக பொருள்களையும் வேதியர்க்குத் தானஞ் செய்தலாம்.

இரண்யகற்பேசம்—காசியிற் பிரமனால் பிரதிட்டைசெய்து பூசித்த சிவலிங்கம்.

இரண்யகன்னிகாதானம்—ஒரு பிராமணக் கன்னிகையைத் தந்தையரிடம் விலைக்கு வாங்கி, அவளைப் பொன்னாலும் ஆடையாலும் அணிந்து பிரமசாரிக்குத் தீமூன்னர்ப் பாணிக்கிரகணஞ் செய்வித்துப் பூமி முதலிய தானஞ்செய்து வேயதிரை அருத்துவதாம்.

இரண்யகேசன்—சியாமகனுக்குச் சூரபூமியிட முதித்த குமரன்.

இரண்யதனு—ஏகலைவனது தந்தை.

**இரண்யநாபன்**—1. (சூர்.) விவச்வசன் குமரன். இவன் யஞ்ஞவல்கிய முனிவரிடம் யோகம் உணர்ந்தவன். சுகவர்மாவின் மாணாக்கன் எனவுங் கூறுவர்.

2. (சூ.) துர்த்தி குமரன். இவனிடம் யஞ்ஞவல்கிய முனிவர் அத்யாத்மயோகம் பெற்றனர். இவன் குமரன். பாஷ்யன்.

**இரண்யபிந்து**—ஓர் நதி.

**இரண்யபுரம்**—நிவாதகவச காலகேயர் பட்டணம்.

**இரண்யபூதானம்**—ஒரு துலாம் பொன்னிலாவது அல்லது அதிலரைப் பாகத்தாலாவது சதுரத்தகடு செய்வித்து, அதில் சத்ததீவுகள், எழுகடல்கள், குலாசலங்கள், நதிகள், மேரு, வருஷங்கள், விருக்ஷங்கள் முதலிய அமைப்பித்து, ஓமமுதலிய சடங்குகள் முடித்து, பஞ்சகவ்ய பூசை தகட்டிற்குச் செய்வித்து வேதியர்க்கன்னதானஞ் செய்வித்துத் தகட்டை உத்தமனாகிய வேதியனுக்குத் தானஞ் செய்தலாம். (ஸ்ரீலிங்கபுராணம்.)

**இரண்யமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்**—நன்னன்மீது மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படைபாடிப் பரிசுபெற்ற புலவர். இவரது ஊர் இரண்யமுட்டத்துப் பெருங்குன்றூர்போலும். இவர், கௌசிகரென்றதனால் அந்தணராயிருக்கலாம்.

**இரண்யரததானம்**—பொன்னால் துலைக்குச் சொன்ன அளவில் தேர் செய்வித்து, அதிற் சுற்றித் தேவர்க் கிருக்கையமைத்து அ, ச, உ பொற் குதிரைகளைப் பூட்டி இடையிற் சூரியனை எழுந்தருளச் செய்வித்து மான்தோலில் எள்ளைப் பரப்பித் தேரில்வைத்து வலஞ்செய்வித்து வேதியர்க்குத் தானஞ் செய்தலாம். (புராணம்.)

**இரண்யரேதஸ்** — பிரியவிரதனுக்குப் பெரிஹிஷ்மதியிட முதித்த குமரன்.

**இரண்யரோமன்**—1. ஐந்தா மன்வந்தரத்து ருஷி

2. உலகபாலகர் நால்வரி லொருவன்.

**இரண்யவர்மன்** — தசாரணவ தேசாதிபதி. சிகண்டியின் சுற்றத்தான்.

**இரண்யவன்மன்**—1. ஓர் இருடி.

2. சிங்கவருமனைக் காண்க.

**இரண்யன்** — சூரபன்மனுக்குக் குமரன். இவன் நீதிமான். தந்தைக்குக் குமாரக் கடவுளுடன் போர் செய்யாதிருக்க நீதி கூறத் தந்தை கோபித்த தறிந்து வீரவாகு, சிங்கன், நீலன் முதலியோருடன் போரியற்றி வீரவாகுதேவர் ஏவியபடைக் கஞ்சியும், தந்தைக்குத் திலதர்ப்பணம் முதலிய செய்யவும் மீனுருக்கொண்டு கடலில் ஒளித்துச் சூரபன்மன் இறந்பிளவுபட்ட பின்பு கடலினின்று வெளிப்பட்டுத் துக்கித்து அவற்குச் செய்யவேண்டிய நீர்க்கடனை ஆசாரியரைக்கொண்டு செய்வித்துத் தவமேற்கொண்டவன். (ஸ்காந்தம்.)

**இரண்யஹஸ்தர்**—காலவிருக்ஷரைக் காண்க.

**இரண்யஸ்தாயன்**—அங்கிரசன் சந்ததியான். ஓர் இருடி.

**இரண்யாஸ்தன்**—ஒரு ரிஷி புத்திரனாகிய மகரிஷி, பாரியை மதிராசுவன் புத்திரியாகிய சுமத்தியமை. (பா-சா-அநு.)

**இரண்யாக்ஷன்**—1. காசிபருக்குத் திதியிட முதித்த குமரன். இவன் சகோதரன் இரண்யகசிபு. இவர்கள் வைகுண்டத்தி லிருந்த துவாரபாலகர்களாகிய, சய, விசயர், சனந்தனாதியர் சாபத்தா லிப்பிறப்படைந்தனர். இவன் கதாபாணியாக இந்திராதிதேவர்கள், இருடிகள் முதலியோரை வருத்தி ஒருமுறை பூமியைப் பாய்போற் சுருட்டிக்கொண்டு கடலில் ஒளிக்க விஷ்ணுமூர்த்தி சுவேதவராகவுருக்கொண்டு கொம்பினா லிவன்மார்பைப் பிளந்து பூமியைப் பழமைபோல் நிறுத்தினர். (நாரசிங்க புராணம்.)

2. யதுவம்சத்துச் சியாமகன் குமரன். தாய் சூரபூமி.

3. இவன் பிரமனது இடது நாசிக்கண் தோற்றிப் பூமியை அபகரித்துச் சென்ற அசுரன். இவனை விஷ்ணுமூர்த்தி பிரமனது மூக்கினின்று நீலவராகராகத் தோன்றிக் கொலை புரிந்தனர். இவனுக்கு ஆதியிரண்யாக்ஷன் எனப்பெயர். (திருமுஷ்ட-புராணம்)

**இரண்வதி** — குருக்ஷேத்திரத்திற்கு அருகிலுள்ள ஒரு நதி.

**இரதகாரன்** — அரசன் சோரத்தால் அரசகன்னிகையைக் கூடிப் பெற்ற குமரன்.

**இரதசப்தமி**—இது சூரியனது ரதம் உத்தராயணத்திற் றிரும்புங்காலம். இக்காலத்திற் சூரியனை எண்ணிப் பலகாராதிகள் செய்து நிவேதிப்பர்.

**இரதநாபுரம்**—ஒரு வித்தியாதர நகரம். (சூ.)

**இரதந்தரி**—இலினன் பாரியை இவள் புத்திரர். துஷ்யந்தன், சூரன், பீமன், பிரவசு முதலானவர்கள். (பா-ஆதி.)

இரதம்—இது பல சக்கரங்கள், ஆர், தட்டு, பார், கொடிஞ்சி, கூம்பு, கிடுகு முதலிய உறுப்புக்களா லாக்கப்பட்டு இரண்டு முதலிய பல குதிரைகளா லிழுக்கப் படுவது.

இரதவாகனன்—விராடன் உடன் பிறந்தவன். (பா-துரோண.)

இரதி—1. இவள் இல்லாத இடத்துச் சந்தோஷமில்லாததனால் இப்பெயர் அடைந்தனள். மன்மதன் தேவி, பாற்கடலிற் பிறந்தவள். மன்மதன் தேவரேவலால் தன் வலிமையைச் சிவமூர்த்தியிடங்காட்டியவரால் நீறாயினன். அதனா லிரதி சிவபெருமானை நோக்கி இரக்க, உன் புருடன் உனக்கு மாத்திரம் உருவமாகவும் மற்றவர்க்கு அரூபியாகவும் சில நாளிருந்து கிருஷ்ணனிடம் அவன் பிறக்குங்காலையில் உருவத்துடன் உன்னிட மிருப்பனென வரம்பெற்றவள். மனுவின் குமரியெனவுங் கூறுப. சம்பராசுரன் மனையிற் பிறந்து மன்மதனை மணந்தவள். (பூவாளூர்ப்புராணம்.)

2. இவள் மயன் வீட்டில பிறந்திருக்கையில் சம்பரன் என்னும் அசுரன் இவளைப் பலாத்காரமாகக் கொண்டுபோக இரதி தன்னைப்போல் மரத்தாற் பதுமை செய்வித்து அதனை அலங்கரித்துப் பிராணப் பிரதிஷ்டைசெய்து தான் பிரத்தியும்நனை அடைந்தனள். சம்பரன் பொய்ப் பிரதிமையுடன் இன்பம் அநுபவித்திருந்தனன். (சிவமகாபுராணம்.)

இரதிகன்—ஜயத்சேநன் குமரன்

இரதிதன்—(சூ.) பிரஷதச்வன் குமரன், இவனுக்குப் புத்திரரில்லாமையாலிவன் தேவியிடத்தில், ஆங்கிரசர் புத்திரோற்பத்தி செய்தனர். அவர்களே ரதீதகோத்திரத்தவர்கள். ஆங்கிரசப்பிராமணர்கள்.

இரதிமுகன்—கத்ரு குமரன் நாகன்.

இரதீதகோத்திரம்—இரதிதனைக் காண்க.

இரதீதரன்—(சூ.) இக்ஷ்வாகு வம்சத்தரசனாகிய அம்பரீஷன் புத்ரன்.

இரதை—பிரசாபதியின் மனைவி. குமரன் நகுஷன்.

இரதையன்—திருதராட்டிரனுக்குச் சாரதி. தன்னிளைப் பேழையிற் கங்கையினிடம் கண்டெடுத்து ஆகாயவாணி சொற்படி தன்மகனென்று பெயரிட்டவன்.

இரத்தகற்பம்—இது முப்பதாவது கற்பம். இதிற் பிரமன், சிவபெருமானை எண்ணித் தவம்புரிந்து நான்கு முனிவரை உதவப்பெற்றனன்.

இரத்தகன்னன்—(அர.) இராவண சேநாவீரருள் ஒருவன் மகரக்கண்ணனுக்குத் துணையாக வந்தவன். நளனென்னும் வாநரவீரனாற் கொலை செய்யப்பட்டான். இவனுக்குக் குருதிக்கண்ணனெனவும் பெயர். (இராமாயணம்.)

இரத்ததூணம் — (சு) இராசியும், (கஅ) பாகையும் வைத்ததிலேயற்றைச் செவ்வாயுடைய சுத்த புடத்தைக் கழித்து நின்றதனை, நாள் பார்க்கும்படியே பார்த்தால் அற்றை நாளுறில் அந்நாள் இரத்ததூணமென்று பெயராம். இந்நாள் சுபகன்மங்களுக்காகாது. (விதான.)

இரத்தபித்தரோகம்—இது, ரத்த விருத்தியினாலும், ரத்தக் கெடுதியினாலும், வாதாதிகளின்கூட்டத்தினாலும் வெளிப்பட்டு அபாயத்தைத் தருவது. ரத்தத்திற்குத் துர்க்கந்தமின்றிச் சுபாவகந்தமாகவும், சுபாவவன்னமின்றி ரத்தம் மாறுவர்ணமாகவும் இருப்பதாலிதற்கு இப் பெயருண்டாயிற்று. இந்த ரத்தம் இருதயத்திற்கு இடவலப் புறங்களிலுள்ள மாமிச கண்டத்திலிருந்து வரும். இது தேகத்திலுள்ள கண், காது, மூக்கு, வாய், ஆண்குறி ரோமம், மலத்வாரங்களின் வழியாய் வெளிப்படும். இவ்விரோகம் தலைப்பாரம், அரோசகம், தேககறுப்பு, வாயின்ருசி வேறுபடல், கண்ணினிறமாறல் முதலியவற்றைப் பூர்வரூபமாகப்பெறும். (ஜீவ)

இரத்தபீசன்—சும்பநிசும்பருக்கு மருமகனாகிய அரக்கன். இவன் தன் உதிரம் எவ்வளவு பூமியில்விழுமோ அவ்வளவு கோடி அரக்கர்கள் பிறந்து பகைவரைக் கொல்லும்படி வரம்பெற்றவன். இவனைக் காளி ஒரு துளி உதிரமும் பூமியில் விழாமல் உதிரத்தையுண்டு கொன்றனள். (தேவிபாகவதம்.)

இரத்தமாடியுடையான் — காஞ்சியிற் காமாக்ஷி சந்நிதியில் பலியிடக்கொண்டு சென்ற குசப்பெண் வயிற்றிற் பிறந்த குசவன். (குவால புராணம்.)

இரத்தாக்ஷன்—கத்ருதநயன் நாகன்.

இரத்தினகண்டன் — அசுவகண்டன் மக்கள் நூற்றுவரில் மூத்தவன். (சூளா.)

இரத்தினங்கள்—வயிரம், முத்து, பவழம், கோமேதகம், இந்திரநீலம், வைடூரியம், புட்பராகம், மரகதம், மாணிக்கம். இவை

நவமணிகளாம். வைரம் எல்லாவற்றினும் சிறந்ததாம். கோமேதகமும், பவழமும் எல்லாவற்றினும் தாழ்ந்தனவாம். மரகதமும் மாணிக்கமும், முத்தும் தலையாய மணிகளாம். இந்திரநீலமும், வைடூரியமும் இடையாயமணிகளாம். இந்த இரத்தினங்கள் சருக்கராபம், சிபிடம், தளாபம், வருத்துலம் என (௪ வகைப்படும். சருக்கராபம் சுக்கான்கல் போல்வது, சிபிடம் அவல்போலிருப்பது. தளாபம் நீண்ட உருவுள்ளது, வர்த்துலம் உருண்டை வடிவுள்ளது. (சுக் - நீ.)

இரத்தினசாநு—மேருவிற் கொருபெயர்

இரத்தினசூடன் — சங்கசூடன் புதல்வன். இரத்தினாவலிக்குப் புருஷன்.

இரத்தினதீபன்--இரத்தினாவலியைக் காண்க.

இரத்தினதீவகம் — இது மணிப்பல்லவத்திற்கு அயலிலுள்ள ஒரு சிறுதீவு. இதில் புத்தருடைய பாதப்படிமை அமைக்கப்பட்ட ஒரு மலை உண்டு. இதுவே இலங்கை. அம்மலைக்குச் சமனொளி எனப் பெயர். (மணிமேகலை.)

இரத்தினதேனுதானம் — வேதிகை செய்வித்து அதில் வெள்ளுப்புப் பரப்பி அதில் கன்றினுடன் பசு எழுதி மூக்கில் நூறு புட்பராகம், முகத்தில் (அக) பதுமராகம், நெற்றியில் முத்து, பொற்பட்டம், கண்களில் நூறு முத்துக்கள், கழுத்தில் நூறு கோமேதகம், முதுகில் நூறு நீலம், இரண்டு பக்கங்களில் நூறு சிவரத்நங்கள், பற்களுக்குப் பளிங்கு, வாலில் நூறு முத்துகள், அரையில் நூறுமாணிக்கம், பொன்னாற் குளம்பு, மூக்கில் சூர்ய சந்திரகாந்திகற்கள், வெள்ளியால் நாபி, சந்தனம், குங்குமம், கற்பூரம் முதலியவைகளால் உரோமகூபங்கள் செய்வித்துக் கருடப்பச்சைதன்னாற் கால்க ளமைத்து, சந்திகளினவமணிகள் பதித்து, கற்கண்டிற் கோமய மமைத்து நெய்யைக் கோசலமாக வைத்து, கன்று மிவ்வாறமைத்து, காலில் கவடிகட்டி, இடங்கள்தோறும் நெல் முதலிய குவித்து வேதிகையிற் பூசைமுதலிய செய்வித்து வேதியர்க் கருத்தித் தக்ஷிணையுடன் தானஞ் செய்வதாம். (ஸ்ரீலிங்க புராணம்.)

இரத்தினபல்லவம்--ஒரு வித்தியாதர நகரம்.

இரத்தினபுரம்--காந்தார நாட்டிலுள்ளதொரு நகரம். (பெருங்கதை.)

இரத்தினமாலை—நீலன் பாரி

இரத்னலிங்கம் — எண்வகை. வச்ரலிங்கம் மாணிக்கலிங்கம், வைடூர்யலிங்கம், ஸ்படிகலிங்கம், பவளலிங்கம், இந்திர நீலலிங்கம், கோமேதகலிங்கம், மாகதலிங்கம். (சைவபூ.)

இரத்தினாவதி—ஆநர்த்த தேசாதிபன் குமரி. இவள் சிவபூசையால் சித்தி யடைந்தவள்.

இரத்தினாயுதன் — இவன் சக்ரபுரததாசன் குமரன். இவன் மோஹத்தால் மயங்கியிருந்தனன். இவனது பட்டத்து யானை வச்ரதந்தனெனும் முனிவருபதேசத்தைக் கேட்டுப் பூர்வத்தில் தானிருந்த நிலையுணர்ந்து கவளங்கொள்ளாதிருக்க அரசனுங்கிருந்த முனிவரைக் கேட்க முனிவர் அஸ்தினபுரத்தில் பீரீதிபத்திரனெனுமரசன் ஒருவனிருந்தான். அவன் தேவி வசுந்தரை புதல்வன் பிரீதிங்கரன், மந்திரி சித்திரமதி, இவன் தேவி கமலை, இவர்கட்குப் புதல்வன் விசித்திரமதி, அரசகுமரனு மிவனு மில்லற வெறுப்படைந் திருந்தனர். அக்காலத்துப் புத்திஷேணை இவர்களில் பிரீதிங்கரன் உபதேசத்தால் நன்னடையடைந்ததைக்கூற விசித்திரமதி அவளிடம் மோகங்கொண்டு அந் நகரத்தரசனாகிய கந்தமித்திரனுக்குச் சமையற்காரனாகி அவனதுதவியால் புத்திஷேணையைச் சேர்ந்தான் அவனே பட்டத்து யானையானன். இச்சரிதங்கேட்டு இரத்னாயுதன் விரக்தி பெற்றுப்பட்டத்தை மகனுக்குக் கொடுத்து வச்ரதந்தரிடம் உபதேசம் பெற்று உலகு துச்சியடைந்தனன். அபராசிதனைக் காண்க. (மேருமந்தரம்.)

இரத்தினாவலி—1. இவள் பூர்வசன்மத்திற் கலாவதியென்னுங் கூத்தி. சிவபூசையால் வசுபூதி யென்னுங் காந்தருவன் மகளாகப் பிறந்து, இரத்தினேசனென்னுஞ் சிவமூர்த்தியைப் பூசித்துவருகையில் சிவமூர்த்தி, உன் பெயர்கொண்ட புருஷன் உன்னை மணப்பான் என்றனர். இரத்தினாவலி தன் கனவி லவனைக் கண்டு விரும்பித் தோழியாகிய சந்திரலேகை சித்திரித்துக் காட்டிய சித்திரத்தால் அவன் நாகலோகத்துப் புருடனென நினைத்து இருக்கையில், சுவா என்னும் அரக்கன் இவளைத் தூக்கிச் செல்லச் சங்கசூடனெனும் நாகராஜன் குமாரனாகிய இரத்தினசூட னரக்கனைக் கொன்று இவளை மணந்தனன். (காசிகாண்டம்.)

2. இரத்தின தீபன குமரி இவள் மந்தாரதாமன் எனுங் காந்தருவன் குமாரனு

கிய பரிமளாலயனை மணந்து சிலநாளிருந்து இருவரும் முத்தியடைந்தனர். இவர்கள் பூர்வசன்மத்திற் புருக்கள்; ஒரு பருந்துடன் சண்டையிட்டு அயோத்தியில் உயிர் நீங்கியதால் மறுசன்மத்திற் புருஷ உரு எடுத்தனர். இவர்கள் தோழியர் கலாவதி, பிரலாவதி.

இரத்தினேசன் — காசியிலுள்ள சிவப்பிரதிட்டை. இது, பர்வதராசன் தன் குமரியாகிய பார்வதியாருக்குக் கொடுத்த இரத்தினங்கள் சிவலிங்கமானதா லிப்பெயர் பெற்றது.

இரத்தினோற்பத்தி—வலன் எனும் அசுரன், சிவபூசைசெய்து முக்கண்மூர்த்தி பிரத்தியக்ஷமாய் என்னவரம் வேண்டும் என்ன, யான் யுத்தத்தில் சாகா வரமும், அங்ஙனம் விதியா லிறப்பின் என்னுடல் எவரும் விரும்புகின்ற நவமணிகள் ஆகக்கேட்டனன். அவ்வகை வரமளிக்கப் பெற்று அரசாண்டு இந்திரன்செய்த வஞ்சனையால் அவனுக்கு யாகப்பசுவாயினன். இவன் உடல், விலையுயர்ந்த இரத்தினங்களாயின. இந்திரனுக்கு யாகப்பசுவான வலன் இரத்தம் மாணிக்கங்கள் ஆயின. பற்கள் முத்துக்களாயின. மயிர்கள் வைடூரியமாயின. எலும்புகள் வைரமாயின. பித்தம் மரகதமாயிற்று. நிணம் கோமேதகமாயிற்று. தசைகள் பவளமாயின. கண்கள் நீலமாயின. கபம் புஷ்பராகமாயிற்று. இவற்றின் இடங்களும், நிறங்களும், சாதிகளும், தெய்வங்களும், ஒளிகளும், குற்றங்களும், பயனும் சுருக்கிக் கூறுகிறேன். மாணிக்கங்கள் கிருதயுகத்தில் யவனதேசத்தில் மக்கத்திலும், திரேதாயுகத்தில் காளபுரத்திலும், துவாபரயுகத்திலும், கலியுகத்திலும், சிங்களத்திலும் உற்பத்தியாம். அந்த மாணிக்கமென்ற பதுமராகம், ஒன்பதுவகை நிறத்துடன் இருக்கும். அவை:—தாமரைப்பூ, மாதுளம்பூ, மாதுளவிரை, நெருப்பு, செங்கழுநீர், மின்மினி, நாரத்தம்பழம், விளக்கு, இந்திரகோபம் என்கிற நிறங்களைப் பொதுவில் பெறும். இதில் பிராமணசாதி சாதரங்க மெனவும், க்ஷத்திரிய சாதி குருவிந்தம் எனவும், வைசியசாதி சௌகந்திகம் எனவும், சூத்திரசாதி காவாங்கம் எனவும் கூறப்படும. மேற்கூறிய சாதரங்கத்தின் நிறம் பத்துவகை. அவை தாமரைப்பூ, கருநெய்தற்பூ, சூரியனொளி, நெருப்பு, மின்மினி, மாதுளம்பூ, மாதுளவிரை, மேகம், விளக்கு, இந்திரகோபம். இம் மாணிக்கங்களில் பன்னிரண்டு குணமும் பதினாறு குற்றமும் இலாதன கொள்க. குருவிந்தத்திற்கு நிறம் எட்டுவகை, குன்றிமணி, முயலிரத்தம், விளாம்பூ, பலாசப்பூ, மஞ்சாடிப்பூ, செவ்வரத்தம்பூ, முள்ளிலவம்பூ, எரிபொன். சௌகந்திகத்திற்கு நிறம் ஆறுவகை, இலவம்பூ, குயிலின்கண், அசோகின்தளிர், அவிர்பொன், செம்பஞ்சு, ஐவனப்பூ. காவாங்கத்திற்கு நிறம் நால்வகை; குரவம்பூ, குசும்பைப்பூ, செங்கல், கொவ்வைக்கனி முதலியவற்றின் நிறத்துடன் இருக்கும். இவற்றைச் சோதிக்கும் இடத்துக் கெட்டியாய் மேலே காந்தினால் உத்தமம், கீழே காந்தினால் மத்திமம், சுற்றுப் பக்கத்தில் காந்தினால் அதமம் என்பர். சாதரங்கத்தை அணிந்தவர், வித்யாதானம், கோதானம், கன்னிகாதானம் முதலிய பலதானங்களைச் செய்த பலனும் அச்வமேதயாக பலனும் அடைவர். குருவிந்த மணிந்தவர்கள், உலகம் ஆண்டு வீ லக்ஷ்மியுடன் வாழ்வர். சௌகந்திக மணிந்தோர் செல்வம், கீர்த்தி முதலிய பெறுவர். காவாங்கத்தை அணிந்தவர்கள் வீட்டில் பாலும் மலைபோல் நெற்குவியல்களும் அகண்ட ஐச்வர்யத்தையும் பெறுவர். இவர்களிடம் மற்ற இரத்தினங்களும் வந்துசேரும். இவற்றில் புள்ளி, புள்ளடி, கீற்று, வேறுநிறச்சார்பு, தராசம் என்கிற குற்றம் இலாது இருக்கின் அணிந்தோன் பகைவென்று விசயலக்ஷ்மி நேசனாவன். அவனைப் பாம்பு, துஷ்டமிருகங்கள், பைசாசு, பூதம், தாமததெய்வங்கள், தரித்திரம், வியாதி, பாபக்கிரகங்கள், யமவாதை முதலிய சேரா. பின்னும் இரத்தின பரீக்ஷை தெரிந்தோர் வயிரத்தினையும், முத்தினையும், வேதியசாதி யெனவும், மாணிக்கத்தையும் பவளத்தையும் க்ஷத்திரியசாதி யெனவும், புஷ்பராகத்தையும் வைடூரியத்தையும் கோமேதகத்தையும் வைசியசாதி யெனவும், மரகதத்தையும் நீலத்தையும் சூத்திரசாதியெனவுங் கூறுவர். முத்தையும் வயிரத்தையும், பச்சையையும் சாத்விக குணமுடையவெனவும், பவளத்தையும், மாணிக்கத்தையும், கோமேதகத்தையும் இராசதகுணம் உள்ளவை யெனவும், நீலத்தினைத் தாமதகுணமான

ளவை யெனவுங்கூறுவர். இவ்விரத்தினங்களை மதிப்போர் திங்களில் முத்தினையும் செவ்வாயிற் பவளத்தினையும், புதனில் பச்சையினையும், வியாழனில் புஷ்பராகத்தினையும், வெள்ளியில் வயிரத்தினையும், சனியில் நீலத்தினையும், ஞாயிறில் கோமேதகத்தையும், திங்களில் வைடூரியத்தையும், மதிக்குங் காலமெனக்கூறுவர். இனி, முத்துக்கள் தலசம், சலசம், என இருவகை. தலசம், பூமியிலுள்ள பொருள்களிலுண்டாவன. சலசம், நீரிலுண்டாம் பொருள்களில் பிறப்பன. அவை சங்கு, மேகம், மூங்கில், பாம்புத்தலை, பன்றிக்கொம்பு, வெண்ணெல், இப்பி, மீன்றலை, கரும்பு, யானைக்கொம்பு முதலிய இடங்களிலுண்டாம். கொக்கின்றலை, கற்புடை மகளிர் கண்டம்முதலியவற்றில் உண்டாம் எனவுங் கூறுவர். அவையறிய, அவற்றில் யானைக்கொம்பிற் பிறக்கும் முத்து மாடப்புறாவின் முட்டைபோற் றிரண்டு வெண்ணிறமா யிருக்கும். மேகத்தின் முத்து இளஞ்சூரிய னிறமாயிருக்கும். மூங்கில் முத்து மழைத்துளி நிறமாகும். பாம்பின் முத்து நீலநிறமாயிருக்கும். பன்றிக்கொம்பின்முத்து இரத்த நிறமாம். நெல்லின் முத்து பச்சையாயிருக்கும். மீன்முத்து பாதிரிப்பூ நிறமாம். கரும்பின் முத்து பொன்னிறமா யிருக்கும். இம் முத்துக்கள் நக்ஷத்திரம்போல் ஒளியும் உருட்சியும், அழுக்கில்லாமையும், கையில் எடுத்துப் பார்க்கையில் கெட்டியும், பார்வைக் கழகும் படிகநிறத்துடன் கூடியிருப்பின் உத்தமமாம். இவற்றை அணியின் லக்ஷ்மியியும், ஆயுளும், செல்வமு முண்டாம். மூதேவி நீங்குவள். இனித் ததீசிமுனிவரின் எலும்பும், வலாசுரன் எலும்பும், கோசலமுதலிய நாடுகளில் விழுந்து வயிரமுண்டாயின. அவ்வயிரங்களுள் கோசல நாட்டிற் கிடைப்பன குணத்திற் சிறந்தனவாம். அது உறுதியாய்த் தெள்ளியதாய் விலை மதிப்புள்ளதா யிருக்கும். இதைக் குறுநிலமன்னன் அணியினும் உலகங்களை வென்று சயமடைந்து செல்வம் உடையன் ஆவன். தரித்திரம், வியாதி, மிருகங்களால் வரும் வருத்தம், அற்பாயுசு, பூதகணங்களால் இம்மையுண்டாகா. இரத்தினங்களில் வயிரத்தையே முதல் என்று கற்றோர் கூறுவர். அது மற்ற இரத்தினங்களைத் தொளையிடத் தகுந்ததுமாம். தன்னைத்தானே அறுக்கும் தொளையிடுமன்றி மற்றொன்றில் அறுபடாது. மரகதம் வலாசுரன் பித்தத்தினைப் பக்ஷிகள் மூக்கினால் கொத்தித் தமக் கிரையாகக் கொண்டு சென்றகாலத்து மூக்கினின்று சிதறிவிழுந்த இடங்களே மரகதரத்தினத்திற்கு உற்பத்தித்தலங்கள் ஆம். பின்னும் வினதை இடத்தில் அருணன் பிறந்த முட்டையின் ஓட்டைக் கருடன் ஓரிடத்தில் பத்திரமாக வைத்து இருக்க அந்த இடம் தவறிக் கடல்சூழ்ந்த தீவில் விழுந்த அந்த இடமும் மரகதம் பிறக்கும் இடமாம். மற்றும் விஷ்ணுமூர்த்தி மோகினியுருவாகச் சென்றகாலத்து ருத்ர மூர்த்தி பின்றொடர்ந்து மந்தரமலையிற் கூடி அரிகரனைப் பெற்றபோது சிதறிய வீரியத்தைக் கருடன் கடலிலும் துருக்கநாட்டிலும் இட, அது கருடப்பச்சை யாயிற்று. அந்தக் கருடப்பச்சைக்குக் காடம், சுப்பிரம், காவம் என மூன்று குணங்கள் உண்டு. அவற்றுள் காடம் அறுகம்புல்லின் நிறம் உள்ளது. அந்தக் காடம், சகுணமெனவும் சதோடமெனவும் இருவகை யென்பர். இவற்றில் சகுணமாவது காடம், உல்லசிதம், பேசலம், பித்தகம், முத்தம், பிதுகம் என அறுவகைப்படும். அவற்றில் காடம் புல்லின் நிறம், உல்லசிதம் மெலிதாயிருக்கும், பேசலம் குளச் செந்நெல் நிறமாயிருக்கும், பித்தகம், பச்சைக் கிளிச்சிறகின் நிறமாம். முத்தம், துளசி நிறமாம். பிதுகம், தாமரையிலையின் நிறமாம். சதோடமானது, தோடலேசாஞ்சிதம், துட்டம், தோடமூர்ச்சிதம், தோடலேசம் மந்ததோடம் என்று ஐந்து வகைப்படும். அவற்றில் தோடலேசாஞ்சிதம், எலுமிச்சை நிறமாயிருக்கும். துட்டம், அலரியிலை நிறமாயிருக்கும். தோடமூர்ச்சிதம், புல்லின் நிறமாகும். தோடலேசம், தாமரையிலையின் நிறமாகும். மந்ததோடம் மயிலிறகின் நிறமாகும். இவ்வகை மரகதாதிகளின் இனங்களை அணிவோர் தீர்க்காயுள் உள்ளவர்களாய்ச் சகல ஐச்வரியங்களும் அடைவர். மரகதப் பச்சைக்குக் குற்றம் எட்டுள. அவை கருகல், வெள்ளை, கல், மணல், கீற்று, பரிவு, தார், சாயையிறுகுதல் என்பன. குணம் எட்டாவன. "நெய்த்த மயிற் கழுத்தொத்த பைம்பயிரிற், பசுத்தல் பொன்மை தனலுடன் பசுத்தல், வக்கிபாய்தல் பொன்

வண்டின் வயி ஒருத்துத் தெளிதலோடு எட்டும்குணமே'' என்ப. நீலங்கனினினம் இந்நீலம் வலாசுரன் கண்களாம். அது சிவமூர்த்தியின் கண்டத்தின் ஒளிபோல் விளங்கும். அது மாநீலம் எனவும், இந்திரநீல மெனவும் இருவகைப்படும். அவற்றுள், இந்திரநீலம் விசுவரூபனை இந்திரன் கொன்ற பாபம் தீர அச்சுவமேதஞ் செய்தனன். அந்த யாகப்புகை குதிரைகளின் கண்களில் நுழைந்து கலங்கிச் சேறுபோல வழிந்து ஒழுகிய இடங்களின் உண்டான நீலமாம். மாநீலமாவது, சூரியன், தேவி சஞ்ஞை, அவனது வெப்பம் பொறுக்காது பெட்டைக்குதிரை யுருக்கொண்டு ஓடினகாலையில் சூரியன் ஆண் குதிரை வடிவாகப் பின் தொடர்ந்தனன். அக்காலையில் அவன் வீரியம் சிதறின இடத்தில் உண்டானவையாம். இந் நீல ரத்தினங்கள் வெண்மை கலந்து இருக்கின் பிராமணசாதி, செம்மைகலந்து இருக்கின் க்ஷத்திரியசாதி, செம்பொன்னிறங் கலந்து இருக்கின் வைசியசாதி, மிக்க கறுப்புக் கலந்திருக்கின் சூத்திரசாதியாம். இந்த நீலரத்தின மணிவோர் சகல மங்களமும் பெற்று வாழ்வார்கள். நீலத்திற்குக் குணம் பதினொன்று, குற்றம் எட்டு. "கோகுலக் கழுத்துக் குவளை சுரும்பர், ஆகுலக்கண்கள விரிச்சாறு - - - - கா யாநெய்தல் கனத்தல் பத்தி, பாய்தலெனக் குணம் பதினொன்றுமே." **கோமேதகம்** இது வலாசுரன் நிணம் சிதறிய இடங்களில் உண்டாவதாம். இது உருகிய நெய்த்துளி, தேன்றுளி, கோசலம் இவைகளினிறமாய்ச் சிவந்து பசும்பொன்னிறமாய் மென்மையாய்ச் சுத்தமாய் உறுதி கொண்டிருக்கும். இதை அணியின் அஞ்ஞானம் நீங்கிச் சுத்த முண்டாகும். **புஷ்பாகம்** விஷ்ணுமூர்த்தி வராக அவதாரங்கொண்டு தமது பிலம் போலும் வாயைத் திறந்து அட்டகாசம் செய்தபோது வாயினின்றும் விழுந்த கபம் சிந்திய இடத்திலும், வலாசுரன் கபம் விழுந்த இடத்திலும் உண்டானது. அது பாரியாத்ர கிரியின் கொடிமுடியாயும் மந்தரமால்வரைக்குப் புறஞ்சூழ் மேகலையாயும இருக்கும். மயன் இந்த ரத்தினத்தினால் இந்திரனுக்குப் பட்டணமும், மண்டபமும் உண்டாக்கினன். இந்த ரத்தினம் அணிவோர் பகைவரை வென்று வெற்றி பெறுவர். **வைடூரியம்** வலாசுரன் ரோமம எல்லாம் இளாவிருத கண்டத்திலும் கோரக்கம், மகதம், சிங்களம், மலயம், பாரசிகம், திரிகூடம் முதலிய தேசங்களிலும் மற்றத் தீவுகளிலும் பரந்து உண்டாயின. இது மேகம் இடிக்கையில் கடலிலும் உண்டாகும். இது மூங்லினிலை, மேகம், மயிலின் கழுத்து, பூனைக்கண், தேன், இந்நிறங்களையுடையதாய்க் கனமாய், தெள்ளியதாய், உறுதியாய் இருக்கும். இது அழகாய் வலப்புறத்து ஒளி வீசின் பிராமண சாதியாம். இடப்புறத்தில் ஒளி வீசின் க்ஷத்திரியசாதியாம். மேலே ஒளி வீசின் வைசிய சாதியாம். அடிப்புறம் ஒளி வீசின் சூத்திர சாதியாம். இதனை அணிவோர் சம்பத்தை யடைவர். **பவளம்** வலாசுரன் மாமிசம் விழுந்த இடத்தில் உண்டாயிற்று. இன்னும் பிரமன் சந்தி வடிவமாகிய தென்புலத்தவரைச் சிருஷ்டிக்கையில் அவர்கள் உடலின் அழுக்குச் சிந்திய இடத்தினும், திருமால் மதுகைடவரைக் கொன்ற காலத்து அவர்களின் உடலினும், இரத்தம் ஒழுகிய இடங்களிலும், இந்திரன் மலைகளின் சிறகுகளை வெட்டியபோது அவற்றின் உதிரம் சிந்தின இடங்களிலும் உண்டாயிற்று. இப்பவளம், முருக்கம்பூ, பச்சைக் கிளிமூக்கு, செவ்வரத்தம்பூ, கொவ்வைக்கனி இவைகளின் நிறமாகும். இவைகளில் திருகல், கோணல் புழுவரித்தல், முகமொடிதல் குற்றமாம். இவைகளைப் பெண்களே அணிவர். அணியின் புத்திரலாபம் முதலிய உண்டாம். இந்த நவரத்தினங்கள் அன்றிச் சந்திரகாந்தக் கல்லும் சூரியகாந்தக் கல்லும் உண்டு என்பர். இவ்விரத்தினங்களுக்குக் குற்றம் பன்னிரண்டாவன, சரை, மலம், கீற்று, சம்படி, பிளத்தல், தொளை, கரிவிந்து, காகபாதம், மிருத்துக் கோடிகள் இலாதன, கோடி முரிந்தன, தாரை, மழுங்கல் என விவை. இனிக் குணமைந்தாவன. எட்டுப் பலகையும், ஆறு கோடியும், தாரையும், சுத்தியும், தாராசமும் என இவை. இக் குற்றங்கள் நான்கின் பயனாவன, காகபாதம், நாகம் கொல்லும். மலம் பிரியாதது நிலந்தரு கிளைகெடும். விந்து சிந்தையின் சந்தாபம் தரும். கீற்றுவாலினை யேற்றவர் மாய்வர். இவற்றின் சாதி அந்தணன் வெள்ளை, அரசன் சிவப்பு, வைசியன் பச்சை, சூத்

திரன் கருமை. இவற்றினை அணியின் முறையே அச்சாதியாகப் பிறந்து நலம் பெறுவர். இதைப் பெரும்பான்மை வயிரத்திற்குங் கூறுவர். (திருவிளையாடல்)

இரத்தை—அஷ்டசத்திகளு ளொருத்தி

இரந்திதேவன்—1 சங்கிரதி குமரன். இகத்தில் வெறுப்புள்ளவனாய்த் தனக்குத் தெய்வகதியால் வரும் அன்னத்தை அதிதிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து (சO) நாள் ஆகாரமில்லாதிருந்தனன். ஒருநாள் தனக்குக் கிடைத்த அன்னத்தையும், பாயசத்தையும் நீரையும் உண்ண ஆவலுடன் வருகையில் முதலில் ஒருவேதியன், இரண்டாவது சூத்திரன், மூன்றாவது மிலேச்சன் மூவருந் தனித்தனி விருந்தினராக வர, அவர்களுக்கு முறையாக முதலில் வந்தவனுக்கு அன்னத்தையும், இரண்டாவது வந்தவனுக்குப் பாயசத்தையும், மூன்றாவது வந்தவனுக்குத் தண்ணீரையும் கொடுத்துத் தான் ஆகாரமில்லாதிருக்கத் திரிமூர்த்திகளும் தரிசனந்தந்து, அநுக்கிரகித்தனர். (பாகவதம்.)

2. இவன் யாகத்தில் பசுக்கள் தாமே தம்மை நல்லவழியில் உபயோகிக்கவேண்டுமென வந்தன. இந்தப் பசுக்களின் சருமச்சுவையிலிருந்து ஒழுகிய நீர் சர்மண்வதியென ஓர் ஆறாயிற்று. (பார-சாந்.)

இரபசன்—இரம்பன் குமரன். இவன் குமரன் கம்பீரன்.

இரப்பர்மரம்—இந்தமரம் மலேயா தீவுகளிலும், அமெரிக்காதேசக் காடுகளிலும் பயிராகிறது. இம்மரத்தைப் பலவிடங்களில் தொளைத்துத் தொளைக்கப்பட்ட இடத்தில் தகரக்கிண்ணங்களைத்தொடுத்துவிட அதில் மஞ்சள் நிறமான அதன்பால் வடிகிறது. அப்பால்களைச் சேர்த்துத் தொட்டிகளில் ஊற்றிக் கொள்ளுகின்றனர். அது காற்றுப்பட வெண்ணிறமாய் மிருதுவாகிறது.

இரப்பியர்—ஒரு இருடி புங்கவர். பாரத்துவாசருக்கு நண்பர். இவர்குமாரர் பராவசு. பாரத்துவாசர் குமாரராகிய துல்லியவக்ரரைப் பூதங்களை யேவிக் கொலை செய்வித்தவர். இவர் பிருகுத் தய்ம்மராசனிடத்து யாகஞ் செய்விக்கப் போன பிள்ளையைத் தேடிக்கொண்டு காட்டின்வழி வர, அவ்விடந் தருப்பைக்கு வந்திருந்த குமாரன் தன்னைப் புலி பிடிக்க வருகிறதென்றெண்ணி இருளிற் தருப்பையை அபிமந்திரித்து எவத் தருப்பை தந்தையைக் கொன்றது. இவர் பிள்ளைகளிருவரும் அரசன் யாகத்துக்கு வந்த தேவர்களை வேண்டி இறந்த தந்தையையும், பாரத்துவாசரையும், துல்லியவக்கிரரையும் உயிர்ப்பித்தனர்.

இரமணகம்—ஒரு தீவு. இதில் பூர்வம் காளியன் என்னும் நாகராசன் வசித்திருந்தனன். இதில் கருடன் நாகர்களைச் சுமந்தான். (பா-ஆதி)

இரமணகன்—சதிகோத்ரன் குமரன், புட்கரத்தீவை யாண்டோன்.

இரம்பன்—1. வாநரத்தலைவன்.

2. ஆயுசின் குமரன். புரூரவசுவின் குமரன். இவன் குமரன் ரபசன்.

3. மகிஷாசுரனுக்குத் தந்தை.

இரம்யகன்—அக்கினியித்திரனுக்குப் பூர்வசித்தியிட முதித்த குமரன்.

இரம்யதாரன்—தேவா வணத்தரசன். (சூளா.)

இரம்பை — மேருவின்தேவியின் பெண். இளா விருதன் பாரி.

இரயிக்குவன் — இவன் ஒரு வேதியன். பிறக்கையில் முடவனாகப் பிறந்து ஒரு வண்டியில் ஏறிக் காட்டின்வழிச் செல்லுகையில் ஒரு பாலைவனத்தின் பாழ்ங்கிணற்றில் இருந்து வந்த (கா) எனும் ஒலிகேட்டு அது தம் பிதுரர்களின் ஓசை என உணர்ந்து அவர்கள் சொற்படி கயாபல்குனித்தீர்த்தம் ஆடித் தம்பிதுரர்களைச் சுவர்க்கம் அடைவித்தவன். (பூவா.)

இரயுக்வன்—சயுக்குவனைக் காண்க.

இரவாளர்—இவர்கள் கோயம்புத்தூர்ஜில்லா முதலிய இடங்களில் வசிக்கும் ஒரு காட்டுவாசிகள். இவர்களிற் சிலர் தமிழும் சிலர் மலையாளமும் பேசுவர்.

இரவி—நான்கு முகமுடைய சூர்யன். சிவசூர்யனுக்கு இடப்புறத் திருப்பவன்.

இரவிதர்மனு — திருவரங்கத்திற் பெருமாள் பிரத்தியக்ஷம் பெற்றவன்.

இரவிபுரம்—மலைநாட்டிலுள்ள ஓர் ஊர்.

இரவிவன்மன்—அமுதபதியின் கணவன். அசோதரநகரத் தரசன். (மணிமேகலை)

இரவிவீரன்—விக்கிரமார்க்கன் குமரன். இவனுண்டது விஜயநகரம்.

இரவுக்குறி—தலைவன் தலைவியை இரவுக்குறியிற் கூடுதல். இது, வேண்டல், மறுத்தல், உடன்படல், கூட்டல், கூடல், பாராட்டல், பாங்கிற்கூட்டல், உயங்கல், நீங்கல், எனும் வகைகளையும், இறைவி இருட்குறி வேண்டல், பாங்கி நெறியருமைகூறல்.

இறைவன் நெறியினெளிமைகூறல், பாங்கியவனுட்டணியியல்வினுதல், கிழவோனவனுட்டணியியல் வினுதல்,அவற்குத்தன்னுட்டணியியல் பாங்கி சாற்றல், இறைவிக்கிறையோன் குறை யறிவுறுத்தல், நேராதிறைவி நெஞ்சொடு கிளத்தல், நேரிழை பாங்கியொடு நேர்ந்துரைத்தல், நேர்ந்தமைபாங்கி நெடுந்தகைக் குரைத்தல்,குறியிடை நிறீஇத் தாய் துயிலறிதல், இறைவிக்கிறைவன் வரவறி வுறுத்தல், அவட்கொண்டுசேறல், குறியுய்த்தகறல், வண்டுறைதாரோன் வந்தெதிர்ப் படுதல், பெருமகளாற்றினதருமை கண்டிரங்கல், புரவலன்றேற்றல், புணர்தல், புகழ்தல், இறைமகளிறைவனைக் குறி விலக்கல், அவன் இறைவியை யில்வயின் விடுத்தல், இறைவியையெய்திப் பாங்கி கையுறை காட்டல், இற்கொண்டேகல், பின்சென்றிறைவனை வரவு விலக்கல், பெருமகன் மயங்கல், தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தல்,திருமகட் புணர்ந்தவன் சேறல், ஆகிய விரிகளையுடைத்து. இவ்வளவும் எழாநாள் செய்தி. (அகம்.)

இரவுக்குறியிடையீடு—எட்டாம் நாள் இரவுக்குறிக்கண் வந்ததலைவன், அல்லகுறிப் பறிதலால் இடையீடு பட்டுப்போதல். இது அல்லகுறி, வருந்தொழிற்கருமை யெனும வகையினையும், இறைவிக்கிகுளை யிறை வரவுணர்த்தல், தான் குறிமருண்டமை தலைவி யவட்குணர்த்தல், பாங்கி தலைவன் தீங்கெடுத்தியம்பல், புலந்தவன் போதல், புலர்ந்தபின் வறுங்களம் தலைவி கண்டிரங்கல், தலைவி தன் துணைக்குரைத்தல், தலைமகளவலம் பாங்கி தணித்தல், இறைவன்மேற் பாங்கி குறிபிழைப்பேற்றல், இறைவிமேலிறைவன் குறிபிழைப்பேற்றல், அவள்குறி மருண்டமையவளவற்கியம்பல், அவன்மொழிக் கொடுமை சென்றவளவட் கியம்பல், என்பிழைப்பன்றென்றிறைவிநோதல், தாய் துஞ்சாமை, நாய்துஞ்சாமை, ஊர்துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல், கூகை குழறல், கோழி குரல் காட்டுதல் என்பனவிரி. (அகம்.)

இரவுத்தலைச்சேறல் — தலைவனைக் காண வேண்டு மென்னும் ஆசையோடு செறிந்த இருளையுடைய ஒத்த யாமத்து மாட்சிமை பட்டமென்மையால் தன் இல்லினின்றும் இறந்தது. பெருந்திணை. (பு. வெ.)

இரஷபன்—ஆயுஷ்மனுவிற்கு அம்புதாரையிட முகித்த குமரன்

இரஸிகமுராரிதாசர்—மதுராபுரியில் சாயன நகரத்தில் கிருஷ்ணபூசையி லன்புற்றவரர்ப் பாகவதபத தீர்த்தங்கொண்டு அவர்களுக்கு அமுதுபடைத்து ஆசார்யபக்தி யதிகமாய்க்கொண்டு ஒழுகுநாட்களில் ஆசாரியர் நில முதலியவைகளை ஒரு மிலேச்ச அரசன் ஜப்திசெய்தது கேட்டு அவனிடஞ் சென்றனர். அவ்வரசன் இவர்மீது யானையையேவ அவ்யானையை இவர் தாரகமந்திரத்தால் வசஞ்செய்து கொண்டு மான்ய முதலியவைகளை ஆசார்யருக்கு மீண்டுங் கொடுப்பித்துப் பரமபதமடைந்தவர். (பக்தமாலை)

இரக்ஷாபந்தனம் — காப்பு நாணணிதல். ஆசிரியன் வடக்காக இருந்து அணிந்து கொள்ளுபவனைக் கிழக்காக நிறுத்தி ஒரு பாக்கும் மூன்று வெள்ளை வெற்றிலையும் ஒரு தேங்காயும் ஒரு பாத்திரத்தில் வைத்துப் பொற்காப்பு அல்லது, ௩, ௫, இழைமுதலாக ஒற்றைப்படும் இழையினல் முறுக்கப்பட்ட பருத்தி நூலாற் செய்த காப்பாவது பாத்திரத்தில்வைத்து மந்திரித்து மூன்று முறை மந்திரத்தால் அதை உருவிக் கட்டிக் கொள்வோனது வலக்கையில் கட்டுவதாம். (சைவ - பூ.)

இரக்ஷேமுகன்—கத்ருவின் குமரன் நாகன்.

இரா—கச்யமன் தேவி.

இராகம்—இதனைப் பாடுமிடத்துச் சித்திர வஞ்சனைகளை அறிந்து பாடுதல் வேண்டும், அவையாவன:— சித்திரப் புணர்ப்பு என்பது இசை கொள்ளும் எழுத்துக்களின் மேல் வல்லெழுத்து வந்தபோது மெல்லொற்று நிறுத்தல். வஞ்சனை புணர்ப்பாவது இசைகொள்ளா வெழுத்துக்களின் மேல் வல்லொற்று வந்தவழி மெல்லொற்றுப்போல நெகிழ்த்துப் புணர்த்தல். இராகம் பாதத்திற் கூறினும்.

இராகத்ததுதி (௪) — இடம், பசையுள, குணம், காலம். இவற்றுள் இடம், பற்றிய இராகம், ஐந்திணை இராகம். செய்யுள் பற்றிய இராகத்துள் வெண்பா இராகம், சங்கராபரணம். அகவல் இராகம். தோடி. கலி இராகம், பந்துவராளி. கலித்துறை இராகம்பைரவி. தாழிசைஇராகம்,தோடி. விருத்த இராகம், கல்யாணி, காம்போதி, மத்யமாவதி முதலிய. உலா இராகம், சௌராட்டிரம். தோடையஇராகம், சௌ

ராட்டிராம், நாட்டை. மங்களராகம், மங்கள கௌசிகை. தேவாரத்தினிராகம்,பூபாளம், பிள்ளைக்கவி இராகம், கேதார கௌளம். குணம்பற்றிய இராகத்துள் ஆகிரி, கண்டாராகம், நீலாம்புரி, பியாகடை புன்னாக வராளி துக்கராகங்கள். இரக்க இராகம், வராளி. காம்போதி, சாவேரி, தன்னியாசி, மகிழ்ச்சி யிராகம். நாட்டை யுத்த இராகம். காலம்பற்றிய இராகத்துள் வசந்தகால இராகம் காம்போதி, அசாவேரி, தன்னியாசி. மாலையிராகம், கல்யாணி, காபி, கன்னடம், காம்போதி. யாமராகம், ஆகிரி, விடியலிராகம், இந்தோளம், இராமகலி, தேசாக்ஷரி, நாட்டை பூபாளம். உச்சி யிராகம், சாரங்கம், தேசாக்ஷரி அன்றியும், ஆகிரி, இந்தோளம், இராமகலி சாரங்கம், பூபாளம், நீக்கி நின்ற மற்றவை எக்காலத் திற்கும் பொதுமைய. (பரத சாத்திரம்.)

**இராகவன்**—இரகு என்பவனது வமிசத்திற் பிறந்த விஷ்ணுமூர்த்தியின் திருநாமம்.

**இராகவாநந்தர்** — ஏகான்மவாதி, திருவேங்கடசுவாமிக்கு ஆசிரியன்.

**இராகா**-1. ஆங்கிரச ருஷிக்குச் சிரத்தையிட முதித்த குமரி.

2. சுமாலியின் பெண். கரதூஷணர் தாய். விசிரவசுவின்தேவி.

3. தாதா வென்னும் ஆதித்தனுக்குப் பாரி. குமரன் பிராதம்.

**இராகாகும்பார்**—இவர் குஜராத்தி தேயத்திலுள்ள குயவர். இவர் தேவி பாங்கா பாயி. இவர் மட்கலஞ்சுட்டுப் பிழைத்து வருங்காலத்து ஒருநாள் சூளை போடும்படியாக வைத்த சாலில் ஒரு பூனை, குட்டி போட்டு வளர்த்து வந்தது. அத்தாய்ப் பூனை இரைக்குப் போயிருந்த சமயம் ஆதலால் ராகாகும்பார் இதனை அறியாமல் குட்டிகளிருந்த மட்பாண்டங்களைச் சூளையிலடுக்கித் தீயிட்டனர். பின் இரைக்குச் சென்ற தாய்ப்பூனை திரும்பிக் குட்டியிருந்த சாலைக் காணுமல் கத்துங்காலத்தில் சூளையிலிருந்த குட்டிகள் கேட்டுக் கதற ராகாகும்பார் அதிக விசனத்துடன் தன்னுடைய மனைவிக்குக் கூற மனைவி பூனைகள் படும் பாடும் தன்னயகன் படும் பாட்டையும் கண்டு மூர்ச்சையடைந்து பண்டரிநாதனை வேண்டி இந்த அபாயத்தினின்றும் காப்பாயேல் மட்கலஞ் சுடுந்தொழில் இனிச்செய்யேன் என்று புலம்பி மண்ணிற் புரண்டு அழுதனன். மூன்றும் நாள் சூளை நெருப்பாறியபின், சூளையைப் பிரிக்கக் குட்டிகளிருந்த பாண்டம் வேகாமல் குட்டிகளும் தாயைக்கண்டு களித்தன. இதனைக் கண்ட கும்பாரும் மற்றைய குயவர்களும் வியப்படைந்தனர். கும்பாரும் மனைவியரும் இந்தத் தொழிலை விட்டுக் காட்டில் கட்டைவெட்டி விற்றுக் குப்பையிலுள்ள சீலைகளையுடுத்தி ஜீவனஞ்செய்து வருங்காலத்து இவர் குமரி 'வங்கா' என்பவள், வீமநதிக்கரையில் ஸ்நாநமுடித்துப் பூசை புரிகையில் நாமதேவர் குமரி, குயவன் புத்திரிக்குப் பூசையு முண்டோ வென்ன 'வங்கா' நாமதேவர் செத்த பசுவை உயிர்ப்பித்தது காமியமென் றிகழ்ந்து கூறக்கேட்டுத் தந்தையிடங் கூற, நாமதேவர் பெருமானை ராகாகும்பர் காமியோ நிஷ்காமியோவென்று கேட்கப் பெருமான் நிஷ்காமியரென அதைக் காட்டுகவென நாமதேவர் கேட்க, பெருமாள் தம்தேவியுடன் ஒரு வேதியராய் ராகாகும்பார் கட்டை வெட்டுமிடத்திற் சென்று லக்ஷ்மியின் பொற்கங்கணத்தை அடியில் வைத்து மேலே கட்டைகளைப் பரப்பித் தூரத்தில் நின்றனர். ராகாகும்பார் விறகைத் தேடி வருங் காலத்தில் பொற் கங்கணத்தைக் கண்டு தூர விலகிச் சென்று தன் மனைவியாருக்கு அறிவிக்க மனைவியாரும் தூர விலகிச் சென்றனர். இதனைக் கண்ட நாமதேவர் உண்மையான பக்தி யுள்ளாரென்று பெருமானை வேண்டப் பெருமானுந் தம் முண்மை உருவை ராகாகும்பாருக்குத் தரிசனங்கொடுக்க இராகாகும்பார் கண்டு பணிந்தனர். (பக்தமாலை).

**இராகு**—கிரகபதமடைந்தவர்களில் ஒருவன். இவன் தந்தை விப்ரசித்தி. தாய் சிம்மிகை. தம்பி கேது. இவர்களிருவரும் கச்யபருக்குப் பேரன்மார். விஷ்ணுமூர்த்தி சகன்மோகினி யுருக்கொண்டு தேவர்களுக்கு அமுது பகுந்தளித்த காலத்தில், இராகு தேவவுருக்கொண்டு சூரிய சந்திரரிருவருக்கும் இடையிலிருந்து வாங்கிப் புசித்தனன். இவ் விருவரும் இராகுவை விஷ்ணுமூர்த்திக்குக் குறிப்பித்தனர். மோகினி யுருக்கொண்ட விஷ்ணு, இராகுவைத் தலையிற் சட்டுவத்தா லடித்தார். பிரிந்த சிரம் இராகுவென்றும் மற்ற தேகம் கேதுவென்றும் பெயருற்றுச் சூர்யசந்திரர் தங்களைக் குறிப்

பித்த காரணத்தால், அவர்கண்மேற் பகைமைகொண்டு தவவன்மையால் மறைப்பர் என்பர். இவர்கள் தவத்தால் கிரகபதமடைந்தனர். இவர்கள் விஷ்ணுவையெண்ணித் தவமியற்றிக் கரும்பாம்பு செம்பாம்பின் உருவாயினர். சூர்யனுக்கு (கக,000) விஸ்தார யோசனையுள்ள மண்டலத்தி லிருப்பவர்கள். இவன் தேர் (அ) குதிரைகள் பூட்டிச் செல்லும். இந்த இராகு,கேதுக்கள் முறைப்படி கிரகங்கள் அல்ல. இந்துக்கள் இவற்றைச் சாயா கிரகம் என்பர். ஆயினும் இவை சூரியனை ஒரு முறை சுற்றிவர (18½) வருஷங்கள் ஆகின்றன என்பர்.

இராகுகாலம் — ஞாயிறு, மாலை 4½ - மணி முதல் 6-மணி வரையில், திங்கள், காலை 7½-முதல் 9-வரையில், செவ்வாய், மாலை 3-முதல் 4½-வரையில், புதன், நடுப்பகல் 12-முதல் 1½-வரையில், வியாழன், பகல் 1½-முதல் மாலை 3-வரையில், வெள்ளி, காலை 10½-முதல் 12-வரையில், சநி,காலை 9-முதல் 10½-வரையில், இக்காலங்களில் சுபகாரியங்கள் நீக்கப்படும்.

இராகுபணிச் சக்கரம்—இராகுநின்ற நக்ஷத்திரம் முதல் அன்றைய நக்ஷத்திரம் வரை எண்ணும்போது 27, 26 25 வரையில் சிரசுநாள்; 23, 22, 21 கழுத்துநாள். 19, 18, 17, 15, 14, 13, 11, 10, 9, 7; 6,5, வயிற்றுநாள்; 3, 2, 1 வால்நாள், 24, 20, 16,12,8,4 வெளிநாள்; சிரநாளாகிற் பயிர் தீயும், கழுத்து நாளாகில் வெள்ளஞ்சுழிக்கும், வயிற்றுநாளாகில் நெல்விளையும், வால்நாளாகில் சாவியாம். வெளிநாளாகில் கிருமி, கீடம், மிருகம் இவைகளால் கேடு உண்டு. நெல் விதைக்க வயிற்றுநாட்கள் உத்தமம்.

இராதலன் — அத்திபதி யென்னு மாசன் குமரன். தாய் நீலபதி. தேவி இலக்குமி. இவன் திட்டிவிடமென்னும் பாம்புகடித்திறந்து உதய குமாரனாகப் பிறந்தான். (மணி.)

இராக்கதர்—பிரமன், இவர்களையும் இயக்கர்களையும் வித்தையிற் சிருட்டித்தனன். உடனே இவர் பிரமனை நோக்கிப் பசியாற் பக்ஷிக்கவேண்டு மென்றனர். மற்றவர் இரக்ஷிக்கவேண்டு மென்றனர். இப்படிப் பட்ட புதல்வரைப் பிரமன் நோக்கிப் பக்ஷிக்கவேண்டு மென்றவர்களை இராக்கதராகவும், ரக்ஷிக்கவேண்டு மென்றவரை யக்ஷராகவும் ஆக என்றனர். காசிபருக்குச் சுரசையிடம் பிறந்த குமார் எனவுங் கூறுவர்.

இராசகம்பீரபாண்டியன்—இராசேசபாண்டியன் குமரன். இவன் குமரன் வங்கியதீபபாண்டியன்.

இராசகிரியம்—இது புகழ்பெற்றதும், மிகப் பழமையானதுமான ஒரு பெரிய நகரம், பலவகை நகர்ச்சிகளை யுடைமையாலும், அச்சத்தை விளைவித்தலாலும் பவணலோகத்தையும், செல்வமிகுதியால் அமராவதியையு மொப்பது. இது மகதநாட்டின் தலைநகர், பல விண்மீன்களுக்கு நடுவே தோன்றும் முழுமதிபோலச் செல்வம் நிரம்பிப் பல ஊர்களுக்கிடையே தோன்றுவது. இதன் புறத்தே யவனச்சேரிகள் நூறும்,எறிபடைப்பாடிகள் நூற்றறுபதும் தமிழ்வீரர்களின் சேரிகள் ஆயிரமும், கொல்லர் சேரிகள்பலவும், மிலேச்சச்சேரிகள் பலவும், சித்திரசாலைகள் முதலிய பலவகை இடங்களும், தண்ணீர்ப் பந்தர் முதலிய பல தருமத்தானங்களும், பலவகைத் தேவாலயங்களும் இருந்தன. அழகிய அகழிகளாலும் பல உறுப்புக்கள் வாய்ந்த மதில்களாலுஞ் சூழப்பெற்ற இதன் அகநகரில் பெரும் படைச்சேரி, போகச்சேரி, உழவர்சேரி, வணிகர்சேரி, அந்தணர்சேரி, அமைச்சர்சேரி, முதலியன அமைந்த வீதிகள் பலவற்றாற் சூழப்பெற்று இடையே விளங்கும், இராசமாளிகை, ஒரு தாமரை மலரிற் பலவகை இதழ்கள் சூழப்பெற்ற பூம்பொகுட்டைப் போல விளங்கியது. இந்நகரத்தோர் யாவரும் தத்தம் குல வொழுக்கங்களிற் சிறிதும் வழுவாமலிருந்தனர். இதனரசன் தருசகனென்பவன்,உதயணன் பார்ப்பனப் பிரமசாரி வடிவங்கொண்டு தோழர் முதலியவர்களுடன்சில மாதங்கள் மறைந்திருந்து அவருக்கு உதவிசெய்து பின்பு அவனுடைய நட்பைப்பெற்று அவன் தங்கையாகிய பதுமையை மணந்து சிலநாள் இதில் தங்கியிருந்தனன். இஃது இராசகிரியெனவும் வழங்கும். (பெ - கதை.)

இராசகுஞ்சரபாண்டியன்—ஆயோதனப்பிரவீணபாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் துவிசராச குலோத்துங்கன்.

இராசசார்த்தூலபாண்டியன்— இராசசூடாமணி பாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் துவிசராசகுலோத்துங்கன்.

இராசசிங்கன்—இராசேந்திர பாண்டியனைக் காண்க.

இராசசூடாமணிபாண்டியன்—1. இராசமார்த்தாண்ட பாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் இராசசார்த்தூலன்.

2. குலசூடாமணி பாண்டியனுக்குக் குமரன்.

இராசசூயம்—ஒருயாகம். இது செய்தவன் வருணபதமும் சந்திரபதமும் அடைவன்.

இராசசேகரபாண்டியன் — விக்கிரமபாண்டியன் குமரன். இவன் அரசாட்சியில் கரிகாற்சோழனிட மிருந்து ஒரு புலவன் வந்து எங்கள் அரசனுக்குச் சகலகலையும் வரும். உமக்குப் பரதம் தெரியாது என்றனன். பாண்டியன் பரதங்கற்க எண்ணி வல்லபுலவரால் கற்றுணர்ந்தனன். ஒரு நாள் சிவதரிசனத்தின்பொருட்டுச் சந்நிதியிற்சென்று அங்கு வெள்ளியம்பலத்துள் நடனத் திருக்கோலமாய் எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்தியைத் தரிசித்து நின்றனன். வயது முதிர்ந்து பரதம் கற்கத் தொடங்கி அதிக வருத்தத்துடன் கற்றுணர்ந்தவனுதலால் நடராச மூர்த்தியைக் கண்டு மனமுருகித் தேவரீர் எக்காலத்தில் தூக்கிய திருவடியோ அறியேன். அது தேவரீருக்கு வருத்தத்தை விளைக்குமாதலின் தூக்கிய திருவடியை ஊன்றியும் ஊன்றிய திருவடியைத் தூக்கியும் நடிக்க வேண்டும் என வேண்டினன். அரசன் வேண்டியபடி நடராஜர் செய்யாதிருக்கப் பாண்டியன், என்னுயிரை இவ்வாளுக்கு இரையாக்குகிறேன் எனத் தன்னுயிரை நீக்கத் தொடங்கினன். அச் சமயத்தில் சிவமூர்த்தி அவன் காண அவன் வேண்டியபடி மாறிநடித்தனர். பாண்டியன் ஆனந்தக் கடலில் குளித்துச் சிவமூர்த்தியைப் பணிந்து இம்மதுரையில் எக்காலத்தும் யாருங் கண்டு களிக்க அத் திருக்கோலத்துடன் எழுந்தருளவேண்டி வரம்பெற்றுச் சிறிது காலம் அரசாண்டு தன் குமரன் குலோத்துங்க பாண்டியனுக்கு அரசளித்து முத்தியடைந்தனன். (திருவிளையாடல்.)

இராசதபுராணம் — பிரமம், பிரமாண்டம், பிரமவைவர்த்தம், மார்க்கண்டேயம். பவுடியம், வாமனம். பிரமனைத் துதிக்கும் புராணத் தொகுதி.

இராசபயங்கரபாண்டியன்— இராசகுஞ்சர பாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் உக்கிரசேன பாண்டியன்.

இராசபுரந்தரபாண்டியன் — இராசேந்திர பாண்டியனுக்கு ஒரு பெயர்.

இராசப்பகவி — திருக்குற்றாலக் குறவஞ்சி பாடிய கவிராயன்.

இராசப்பகவிராயர்—இவர் நடுநாட்டுத் திருவெண்ணெய் நல்லூரினர். திருநாவலூர்ப் புராணம் பாடியவர்.

இராசப்பிரபுதெரிசனம்—கேட்டை, ஆயிலியம், திருவாதிரை, பூரத்திரயம், பரணி, கார்த்திகை இவை யொழிந்த சுப நாட்களிலே சுபவாரோதயங்களிலே திராசி, உபயராசி, உதயமாக இராசபிரபு தெரிசனம் பண்ணுவது. (விதானமாலை.)

இராசமாதேவி—நெடுமுடிக்கிள்ளியின் மனைவி. உதயகுமாரனுடைய தாய். மணிமேகலைக்கு விஷ முதலிய ஊட்டியும் அவள் சலியாதது கண்டு அவளை அஞ்சி அவள்கூறிய அறமொழி கேட்டுப் புத்திர சோகம் நீங்கினவள். இவளது இயற்பெயர் சீர்த்தி. இவள் மாவலி பரம்பரையிற் சேர்ந்தவள். (மணிமேகலை.)

இராசமாபுரம்—சீவகன் பட்டணம்.

இராசமார்த்தாண்டபாண்டியன் — சித்திர விக்கிரமபாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் இராசசூடாமணி பாண்டியன்.

இராசராசசோழன் — 1. இவன் குலோத்துங்கசோழன் குமரன். இவன்மீது ஒட்டக்கூத்தர் இராஜராஜ தேவனுலாப்பாடினர். இவனுக்கு வீரன் எனவும் ஒரு பெயருண்டு.

2. இவன் சுங்கந்தவிர்த்த அபயன் மகனை விக்ரமன் மகனும், சிற்றம்பலம், பேரம்பலம், காமக்கோட்டம் முதலிய பெரிய திருப்பணிகளியற்றியகுலோத்துங்கனுக்கு மகனுமாவன்.

இராசராசதேவர்—இவர் திருமுறை கண்ட சோழர். இவரே அபய குலசேகர சோழ மகாராஜா. இவர் சில சிவனடியவர்கள் தேவாரம் ஓதக்கேட்டு மனமுருகி முழுதும் பெறும் வகை எவ்வகையென முயன்று நம்பியாண்டார் நம்பிகளால் தேவாரமிருக்கும் இடமறிந்து தேவாரங்களை எடுத்துச் சிவாஞ்ஞையால் திருநீலகண்டத்து யாழ்ப்பாணநாயனர் மரபில் ஒரு பெண்ணினல் பண்ணமைக்கப் பெற்று இன்புற்றவர். இப்பெயர் கொண்டவர் தஞ்சையாண்ட முதலாவது பராந்தகச் சோழனுக்கு மூன்றும்பேரர் ஒருவர் இருந்தனர். அதாவது இரண்டாம் பராந்தக

னுக்குப் புதல்வரும் திருவிசைப்பா பாடிய கண்டராதித்தருக்குச் சகோதரருமானவர். இவர் தம்பெயரால் இராஜராஜேஸ்வர மென்னும் சிவாலயங் கட்டுவித்தனர்.

இராசராசபாண்டியன் — வரகுணபாண்டியனுக்குக் குமரன். இவன் காதற் பரத்தையரில் ஒருத்தி பாணபத்திரன் மனைவியுடன் இசைப்பொருட்டால் பகைகொண்டு பிறரைக்கொண்டு வெல்விக்கக் கருதி யாழ்ப்பாணத்திருந்து யாழ்வல்ல ஒருத்தியை அரசனால் வருவித்தனள். இவள், அரசனை நோக்கித் தன் கருத்தை அறிவித்துப் பாணபத்திரன் மனைவி எவ்வாறேனும் தோற்றாளென நீர் கூற வேண்டும் எனக் கேட்க, அரசனும் அவ்வாறிசைந்தனன். பின்பு அரசன் பாடுவார் இருவரையும் வருவித்துச் சபை கூட்டிப் பாடுவிக்கையில் தோற்றவர் வென்றவரைத்தோளிற் றூக்கவேண்டுமென, உடன்பட்டு இருவரும் பாடினர். அதில் முதன் முறை வென்றவள் பாணன் மனைவியாயினும், அரசன் பாணன் மனைவி தோற்றாள் எனக் கூறியதுபற்றிச் சபையிலிருந்த மற்றவரும் அவ்வாறு கூறினர். அரசன் மீண்டும் சபையாரை நோக்கி இவ்வொரு நாளில் வெற்றி தெரியாது ஆதலால் இதை மறுநாளும் நடத்துவோம் எனச் சபை சேர்க்கச் சபையாரும் உடன்பட்டனர். பத்திரன் மனைவி, துன்பமேலிட்டவளாய்ச் சொக்கநாதரைத் துதித்தனள். சொக்கர் கனவிற்றோன்றி நாளை நீ வெல்வை எனக் கூறி மறைந்தனர். பத்திரன் மனைவி களிப்படைந்து மறுநாள் அரசன் கொலுவிற் சென்று நீங்கள் நடுநிலை தவறியிருக்கின்றீர்கள். சொக்கர் சந்நிதியில் வந்து வெற்றி தோல்வி கூறுக என வேண்டினள். அப்படியே அரசனும் மற்றப் புலவரும் உடன்பட்டுச் சொக்கர் சந்நிதியில் பாடத் தொடங்கச் சொக்கர் வித்வானுயெழுந்தருளியிருந்தனர். இரண்டா முறை இருவரும் பாடப் பத்திரன் மனைவி வெல்லச் சபையோர் யாழ்ப்பாணி பக்கம் சொல்ல வாயெழாமல் பத்திரன் மனைவி பக்கஞ் சொல்லினர். அரசனும் தெய்வ சங்கற்பத்தா லவ்வாறு கூறினன். இவரைக் கண்ட சொக்கர் பாணன் மனைவி வென்றனள் எனக் கூறி மறைந்தனர். அரசன் சபதப்படி பத்திரன் மனைவியை யாழ்ப்பாணி மீதேற்றிப் பத்திரன் மனைவிக்கு முதல் மரியாதை செய்து யாழ்ப்பாணிக்கும் வேண்டிய கொடுத்து அனுப்பினன். இவன் குமரன் சகுணபாண்டியன்.

இராசராசன் III — கி. பி-1216 இவன் குலோத்துங்கனுக்குப் பின் பட்டத்திற்கு வந்தான். இவன் பட்டத்திற்கு வந்த காலத்தில்மாறவர்மன் சுந்தரபாண்டியன் பட்டத்திற்கு வந்தான். இவனை அவனியாளப் பிறந்தான் கோப்பெருஞ் சிங்கன் எதிர்த்தான். இதில் இவன் ஆபத்தில்பட்டு இராஜ்யமிழந்துமீண்டும்இராஜ்யமடைந்து (1246) வரையில் அரசாண்டான்.

இராசராசேந்திரசோழன் — 1. இவன் குலசேகரபாண்டியனுக்குக் குமரியாகிய கமலினியை மணந்து பிரதாபருத்திரனுடன் சண்டைசெய்து அவன்நடுநெற்றியிலிருந்த கண்ணைச் சிவமூர்த்திக்கும் கண், உனக்கும் கண்ணு, எனக் குத்திவென்று தன் மகன் வீரமார்த்தாண்ட சோழனுக்குப் பட்டங் கட்டி எழுபத்தெட்டு வருஷம் அரசாண்டு சுவர்க்கமடைந்தவன்.

2. குலோத்துங்க சோழனுக்குத் தந்தை. இவன் கம்ப ரொட்டக்கூத்தர் காலத்தவன்.

இராசவர்த்தனன் — (சூ.) தமன் குமரன்.

இராசனை — பதுமையின் தோழி, மிக்க அழகுடையவள், உதயணனது விருப்பின்படி இவளை உருமண்ணுவா மணஞ்செய்து கொண்டான். பந்தாட்டத்தில் தேர்ச்சியுள்ளவள். (பெ - கதை.)

இராசாதித்தன் — பராந்தகன் 1. குமரன். இச்சோழன. இவன் பக்தியிற் சிறந்தவன். திருநாமநல்லூரில் ஒரு சிவாலயம் நிருமித்தான். அவ்வூர் இவன் பெயரால் இராஜாதித்தபுரம் என வழங்குவதாயிற்று. இவன் மனைவியார் மலைநாட்டரசர் புத்திரியாகிய மஹா தேவடிகள். இவன் இராஷ்டிரகூடத தரசனான கிருஷ்ணன் உடன் போர் செய்செய்கையில் உடன் பிறந்தான் புருஷனான பூதுகனால் கொல்லப்பட்டான் கி. பி. 949 - E. P. I.

2. கி. பி. 947-சிங்காசனம் பெற்றவன். இவன் துங்கபத்திரியில் அரசாண்ட இராஷ்டரகூட அரசனாகிய கன்னரதேவனைத் தக்கோலத்தில் ஜெயித்தான். இந்த ராஜாதித்தனைக் கன்னர தேவனுடைய மைத்துனன் பூதுகன் பூதராஜன் வஞ்சனையால் கொன்றான். இவன் மனைவி இலாடத்தரயன் பிரதிவிபதியின் மகள்.

இராஜாதித்தன் இறந்தபின் சோழராஜ்யம் கன்னரதேவன் வசமாயிற்று.

இராசாலுவன் — விருகனுக்குத் தருவாக்ஷியிடம் உதித்தவன்.

இராசி—1. சூரியன் தன் வீதியிற் செல்லும் போக்கை நோக்கி ராசி மண்டலத்தைப் பன்னிரண்டு சமபாகங்களாக வகுத்திருக்கின்றனர். இராசி மண்டலத்தின் சுற்றளவு 360-டிகிரி, ஒவ்வொரு சமபாகமும் 30-வீதம், 12-சமபாகங்களமைந்திருக்கின்றன. இவற்றின் முதலிலுள்ள நக்ஷத்ர கூட்டங்களுக்கு மேஷம் என்று பெயர். இவ்வாறே மற்றவை ஒவ்வொரு ராசிக்கும் ($2\frac{1}{4}$) நக்ஷத்திரம், சூரியன், மேஷராசியில் 1-வது டிகிரியிலிருந்து 30-வது டிகிரி நகர ஒரு மாதமாகிறது. இவ்வாறு சூரியன் மற்ற பதினொரு ராசிகளைக் கடந்து முந்திய மேஷத்தில் வர ஒரு வருஷம் ஆகிறது. ஒவ்வொரு தினத்திலும் ஒவ்வொரு இராசியும் ஒன்றின்பின் ஒன்றாய் 2-மணிக்கு ஒரு ராசி வீதம் கிழக்கில் உதிக்கிறது. இதை லக்னம் என்பர்.

2. இராசி பன்னிரண்டு. இவை மேஷம், ரிஷபம், மிதுனம், கர்க்கடம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தநுசு, மகரம், கும்பம், மீனம் முதலியன. இவை சித்திரை முதல் பங்குனி வரையில் முறையே எண்ணப்படும். இவை நாளொன்றில் முறையாக சவ, சஅ, ௫வ, ௫௨, ௫வ, ௫, ௫, ௫வ, ௫, ௫வ, சஅ, சவ, ஆக நின்று (௬௦) நாழிகையை நிரப்பும். அந்தந்த மாதங்களில் அந்தந்த ராசிகள் முதலாக வரும். மேற்சொன்ன ராசிகள் அவற்றின் பெயர்கொண்ட உருவங்களாம்.

இராசிகளின் உருவங்களும் அங்கங்கள் முதலியவும்—மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம். இவற்றின் உருவங்களும் அங்கங்களுமுறையே, வெள்ளாடு, எருது, ஸ்திரிபுருஷர், நண்டு, சிங்கம், பெண், தராசு, தேள், வில், முதலை, குடம், மீன், அங்கங்கள் தலை, முகம், கழுத்து, தோள், மார்பு, பக்கம், முதுகு, பீஜம், தொடை, முழங்கால், கணுக்கால், பாதம் என்பனவாம். இவற்றின் திக்குகள் மேஷருஷபமிதுனம் கிழக்கு. கடகம், சிங்கம, கன்னி தெற்கு. துலாம், விருச்சிகம், தனுசு மேற்கு. மகரம்,கும்பம்,மீனம் வடக்கு. சாதி கட, விருச், மீன, பிராமணன், சிங், தனு, மேஷ க்ஷத்ரியசாதி, துலா, கும்ப, மிது, வைசியசாதி, கன்னி, ரிஷபம், மகரம் சூத்ரசாதி, மேஷம் வேளாளன், ரிஷபம் இடையன், மிதுனம் சக்கிலி, கடகம் கன்ஞன், சிங்-பிராமணன், கன்-நாவிதன், துலாம்-செட்டி, விருச்-வேடன், தனு-தட்டான், மகர-வண்ணான், கும்பம்-குயவன், மீன-பறையன்-நிறம் மகர-கன், மிது-கறுப்பு. விரு, கும், மீன-பச்சை, மேஷ, தனு, சிங்-சிவப்பு, ரிஷபம், துலாம், கர்க்கடகம்-வெள்ளை. பகல்விழிப்பு-சிங், கன், துலா, விருச், கும்ப, மீன-௬. இராவிழிப்பு-மேஷ, ரிஷ, மிது, கர்க்கட, தனு, மகரஆ-௬. சரராசி மேஷ, கட, துலா, மகர-௪, ஸ்திர ரிஷ, சிங், விரிச், கும்பஆ-௪, உபயராசி-மிது, கன் தனு, மீனஆ-௪, ஆண் அல்லது ஒற்றை-மேஷ, மிது, சிங், துலா, தனு, கும்ப, ஆ-௬. பெண் அல்லது இரட்டை-ருஷ, கட, கன், விரி, மக, மீன ஆ-௪. இருகால் மிது, கன், துலா, கும்ப ஆ-௪. நாற்கால் மேஷ, ரிஷ, சிங், தனு ஆ-௪. பலகால்-கட, விருஆ-௨. பறக்கும் ராசி-மகரம், மீனம்ஆ-௨. தலையுதயம் மிது, சிங், கன், துலா, விரு, கும்பஆ-௬. இவை பகல் வலியுடையன. காலுதயராசி மேஷ, ருஷ, கட, தனு, மகரஆ-௫. இரா வலியுடைய. உடலுதயராசி-மீனம். சூட்சராசி-மிது, சிங், கன்னிஆ-௩. லக்னத்யாஜ்யம்-மேஷ-ருஷ-கன், தனு (௫) நாழிகை. மிது, சிங், துலா, கும்ப, நடுவில் (௫) நாழிகை, கர்க்கட, விருச், மகர, மீன, கடையில் (௫) நாழிகைகளாம்.

இராசியதிபதிகள்—ஆதித்தியனுக்கு வியாழன், சந்திரனுக்கு வியாழனும், புதனும், செவ்வாய்க்குப் புதனுஞ்சுக்கிரனும், இவை நட்பு. அன்னியர் சத்துரு. புதனுக்கு ஆதித்தியன், வியாழனுக்குச் செவ்வாய் சுக்கிரனுக்குச் சந்திராதித்தர், சனிக்குச் சந்திராதித்தர் செவ்வாய் இவை சத்துரு. அன்னியர்மித்துரு. ஸ்திரிபுமான்களுடைய ராசிக்கதிபதி மித்துருவாகிற் பொருந்தும் சத்ருவாகிற் பொருந்தாது. (விதா.)

இராசேசபாண்டியன் — இராசேந்திரபாண்டியன் குமரன். இவன் குமரன் இராசகம்பீரன்.

இராசேந்திரசோழன் — குலோத்துங்க சோழனுக்குத் தந்தை. சற்றேறக்குறைய (௯௦௦) வருஷத்திற்கு முன்னிருந்தவன். கம்பர், ஒட்டக்கூத்தர் காலத்தவன்.

**இராசேந்திரதேவன்**—(கி. பி - 1052) இவனுக்கு விஜயராஜேந்திரதேவன் எனவும் பெயர். இவனை யானை மேற்றுஞ்சிய பெருமாள் விஜயராஜேந்திரன் எனச் சாசனம்கூறும். இவன் கொல்லாபுரம் கைக்கொண்டு ஒரு ஜயத்தம்பம் நாட்டினன். இவன் குந்தலத்தின்மேல் படை கொண்டு ஆகவமல்லனுடன் போரிட்டு முதலில் சற்று அபஜயப்பட்டுப் பின் வெற்றிகொண்டான். இவன் இந்த யுத்தத்தில் சில யானைகளையும் சாளுக்யவராகக் கொடியையும், சத்தியவ்வை சாங்கப்பை யெனும் அவன் தேவிமார்களையும் பிடித்துக்கொண்டான். இவன் ஈழத்தின்மீது படைகொண்டு மானாபரணனையும், வீரசலாமேகனையும் செயித்தான் என்பர். இவன் மகள் மதுராந்தகி முதலாவது குலோத்துங்கனை மணந்தாள். இவன் காலத்து ஓர் க்ஷாமம் உண்டாயிற்று. கலிங்கத்துப் பரணியில் "மனுவினுக்தமும் மடிநான் மடியாஞ்சோழன்" எனவும், விக்ரமசோழ னுலாவில் "பாடரவப்பள்ளி மேயார்க்குப்பன் மணியா, லாடரவப் பாயலமைத் தோனும்" எனப் புகழப்பட்டவனு மிவனே. ஸ்ரீரங்கத்தில் இவன் பெயரால் இராஜமஹேந்திரன் திருவீதி என்று ஒன்று ஆக்கப்பட்டிருக்கின்றது.

**இராசேந்திரபாண்டியன்** — குலபூஷண பாண்டியனுக்குக் குமரன். இவனுக்கு இராசபுரந்தரன் எனவும் பெயர். இவன் காலத்துக் காடுவெட்டிய சோழன் இவனிடம் நட்புக்கொண்டு தன் குமரியை இவனுக்குக் கொடுக்க எண்ணினன். இந்தப் பாண்டியனுக்குச் சகோதரனாகிய இராசசிங்க பாண்டியன் இந்தச் சோழனிடம் வந்து அந்தப் பெண்ணைத் தனக்குக் கொடுக்கும்படிக் கேட்டுத் தான் மணந்தனன். பின்பு சோழன், மருகன் சொல்லால் இராசேந்திர பாண்டியன்மீது படையெடுக்கப் பாண்டியன், சொக்கரை வேண்டினன். சொக்கர் அசரீரியாய்க் கூறிய சொற்கொண்டு பாண்டியன் சண்டைக்குச் சென்றனன். சொக்கர் பாண்டியன் சேனை இளைப்படையாமல் தண்ணீர்ப்பந்தல் வைத்து இளைப்பு நீக்கச் சேனைகள் சோழனது சேனைகளை வென்று சோழனையும் இராசசிங்கனையும் பிடித்துக்கொண்டு வந்தனர். பாண்டியன் சொக்கர் சொற்படி சோழனுக்கு மரியாதைசெய்து தம்பிக்குப் பாதிராச்சியம் கொடுத்தனுப்பினன். இவன் குமரன் இராசேசபாண்டியன்.

**இராசேந்திரன்** — 1. பிரம்மாவர்த்த தேசத்திருந்த அரசன் சிவபூசையால் முத்தியடைந்தவன். (சிவரஹ.)

2. இராசேந்திரன் III - இவனமூன்றாம் இராஜராஜன் குமரன், கி. பி. 1246-இல் பட்டமடைந்தான். இவன் தன் குமரன் வீரசோமீசுவரனை அதிதாழ்ந்த நிலையில் வைத்திருந்தான். இவன் கேரள பாண்டியர்களை வென்றான். தன் மாமனைப் பகைத்தான். சோழவம்சம் இவனுடன் முடிந்தது. கி. பி. 1251 - இல் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் இராஜாதிராசன் பட்டந் தரித்துக்கொண்டு தான் சோழவம்சமெனு மலைக்கு இடியே றென்றும் கர்நாடக அரசனாகிய வீரசோமேசுவரனைத் துரத்தி யடித்தவனென்றும், காடக தேசாதிபதியாகிய கஜபதிக்குத்தான் ஓர் குளிர்காய்ச்சல் என்றும், விஜயகண்ட கோபாலன் எனும் காட்டுக்குத் தீயெனவும், காஞ்சிபுரத்திற் கதிபனான கணபதியாகிய மானுக்குப் புலியெனவும் தன்னைப் புகழ்ந்திருந்தவன்.

**இராச்சியவர்த்தனன்**—தமனைக் காண்க.

**இராச்சியாபிஷேக விவரணம்** — அபிஷேகத்தை அடையவேண்டிய அரசன், ஒரு வருடத்திற்கு முன்பே வேதசாஸ்திரம் உணர்ந்த புரோகிதரை வருவித்து மந்திரியருடன் ஆராய்ந்து உபகரணங்களைச் சேகரித்து ஒரு வருடமானபின் நல்ல முகூர்த்தத்தில் அரசன் அப்யங்கனஞ் செய்து புரோகிதர் முதலியோர்க்கும் அப்யங்கனஞ் செய்வித்து அரசன் உபவாசியாய்த் தன்னாசனத்தில் இருக்க, புரோகிதர், இந்திரன்முதலிய திக்குப்பாலகர்க்குச் சாந்தி செய்து மந்திரங்களுடன் ஹோமம் முதலிய முடித்து விஷ்ணு, இந்திரன், சாவித்திரி, விச்வதேவதைகள் முதலியோரைப் பூசித்து அக்கினிதிக்கிலும், தென்திக்கிலுமாகிய இரண்டு பக்கங்களிலும் இரண்டு கலசங்களைத் தாபித்துப் பூசித்துப் பின் பொன், வெள்ளி, தாம்பிரம், மண்ணிவற்றாலாகிய கலசங்களை நான்கு திக்கிலும் ஸ்தாபித்து அவற்றைப் பூசித்தல் வேண்டும். பின் பர்வதத்தின் உச்சியின் மண்கொண்டு அரசனது உச்சியினையும், புற்றுமண்கொண்டு இரண்டு காதுகளையும், விஷ்ணு ஆலயத்தின் மண்ணால் முகத்தி

ளையும், இந்திராலயத்தின் கிழக்குத் திக்கின் மண்கொண்டு கழுத்தினையும், யானையின் தந்தத்திலுள்ள மண்ணினால் தக்ஷிண புஜத்தினையும், இடப்பக்கத்தின் கொம்பிலுள்ள மண்ணினால் வலது புஜத்தினையும், குளத்தின் மண்ணால் பிருஷ்டத்தினையும், நதிசங்கமத்தின் மண்ணினால் வயிற்றினையும், இரண்டு தடங்களின் மண்களால் பார்ச்வங்களையும், வைசியன் வாயிற்படி மண்ணினால் கடிப்பிரதேசத்தினையும், யஞ்ஞஸ்தானத்திலுள்ள மண்ணினால் தொடைகளையும், பசுவின் கொட்டில் மண்ணால் முழங்கால்களையும், குதிரை கட்டுமிடத்துள்ள மண்ணால் கணுக்கால்களையும், இரதத்தின் சக்கரத்து அடிமண்ணால் பாதங்களையும் தேய்த்துச் சிரசினைப் பஞ்சகௌவியத்தால் அபிஷேகஞ் செய்வித்துப் பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரராகிய நான்கு மந்திரிகளும் நான்கு திக்கிலும் ஸ்தாபித்துள்ள கலசங்களில் பிராம்மண மந்திரி பொற்கலசத்திலுள்ள நெய்யினாலும், க்ஷத்திரிய மந்திரி வெள்ளிக் கும்பத்திலுள்ள பாலினாலும், வைசிய மந்திரி தாமிர கும்பத்திலுள்ள தயிரினாலும், சூத்திரமந்திரி மட்குடத்திலுள்ள சலத்தினாலும் அபிஷேகிக்கவேண்டும். பின் வேதியர்கள் தேன் முதலியவற்றாலும், தருப்பையின் ஜலத்தாலும், அபிஷேகித்து அரசனுக்கு இராஜ்ய சித்தியின்பொருட்டு வேதமந்திரங்களால் அக்கினி காரியம் செய்து சகஸ்திரதாரையுள்ள பொற்றாம்பாளத்தால் சர்வ ஒஷதிகள் நிறைந்துள்ள கும்பத்தினை எடுத்து அபிஷேகித்துச் சகல புண்ணிய தீர்த்தங்களாலும் அபிஷேகிக்கக் கடவர். பின் அரசன், விஷ்ணு, இந்திரன் முதலியவரையும் கிருகதேவரையும்பூசித்துப் பஞ்சசருமத்தின்மேலிருக்கப் புரோகிதர் ராஜ்யசித்தியின் பொருட்டுப் பட்டங்கட்டவேண்டும். பட்டம் அடைந்த அரசன் புரோகிதர்க்கு வேண்டிய அளவு தானாதிகளைச்செய்து பசுவினைப் பூசித்துக் கஜாரூட அசுவாரூடனாய்த் தானாதிகளைச் செய்து தன்நகரத்தைவலம்வரல்வேண்டும்.

**இராட்சடப்பிரத்து**—பரதருக்குப் பஞ்சசேனியிடம் உதித்த குமரன்.

**இராணுகாதீர்த்தம்** — இது ஒரு தீர்த்தம் பாண்டவர் வனவாசத்தில் தீர்த்தமாடியது. பாஞ்சாலத்திலுள்ளது. (In the Punjab, about 16 miles North of N-ahan.)

**இராதாதேவி** — இவள் பிரகிருதி யம்சம், இவள் கோலோகத்தில் ராசமண்டலத்தில் கார்த்திகைமாத பூரணையில் கிருஷ்ணமூர்த்தியால் பூசிக்கப்பட்டுப் பின் கோபிகைகள் முதலியவர்களால் பூசிக்கப்பட்டனள். (தேவி - பா.)

**இராதாவல்லபமதம்** — இதனை ஹிதஹரி வம்சாசார்ய மதமெனவும் கூறுவர். விக்ரமசகம் (கருகக) இல், அர்ஷபூர்ஜில்லாவைச் சேர்ந்த தேவவனத்தில் இருந்த கௌடப் பிராமணன் புத்திர னில்லாது வருந்துகையில், டில்லிச் சக்ரவர்த்தியினிடம் உத்யோகத்தால் தன்னூர் விட்டுப் போகையில் வழியில் தன் தேவி கருக்கொண்டு மதுராபுரிக் கருகிலுள்ள தேவவனத்தில் ஒரு புத்திரனைப் பெற்றான். இப் புத்திரனுக்கு அரிவம்சன் என்று பெயரிட்டனர். இவனுக்கு யுக்த வயசில் ருக்மணியென்பவளை விவாகஞ் செய்தனர். அந்த ருக்மணியிடம் இரண்டு ஆண்பிள்ளைகளும் ஒருபெண்ணும் பிறந்தனர். மூத்தவன் பெயர் மோகனசந்திரன். இவனுக்குச் சந்ததி இல்லை. இளையவன் கோபிநாதன் இவர்களை விட்டுச் சந்நியாசம்பெற வருகையில் வழியில் ஒரு விருத்த வேதியர் தன் னிரண்டு குமாரத்திகளையும் மணஞ் செய்துகொள்ளும்படி தேவாஞ்ஞை இருக்கிறபடியால் அவ்வாறு செய்துகொள்க என உடன்பட்டு மணந்து அந்த வேதியர் கொடுத்த இராதாவல்லப சுவாமியைப் பிருந்தாவனத்தில் பிரதிட்டை செய்தனர். இம்மதத்தவர் கிருஷ்ண உபாஸகர், கழுத்தில் துளசிமணி தரிப்பர். இவர்களுக்கு ஏகாதசியில் தாம்பூலம் தரித்துக்கொள்ளக் கிருஷ்ணாஞ்ஞை யுண்டு.

**இராதி**—செயசேனன் குமான். இவன் குமரன் அனுபாவுகன்.

**இராதிதேவி** — சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரி. இவள் சயஸ்துசயனை மணந்தாள். இவள் குமரர் விந்தானுவிந்தர்.

**இராதை**—1. கண்ணன் தேவியரில் ஒருத்தி. 2. அதிரதன் என்னும் தேர்ப்பாகன் தேவி. கர்ணனை வளர்த்தவள்.

**இராநித்திரைபங்கவிதி**—இரவில் நித்திரை செய்யாதவர்களிடத்தில் புத்தி மயக்கம், தெளிவின்மை, ஐம்புலச்சோர்வு, சுட்கம், பயம், அக்கினிமந்தம், முதலிய நோய்கள் மெத்தவும் நம்பிக்கையாகத் தொடரும்.

நித்திரையில்லாதவரைப் பற்பல நோய்கள் கவ்விக்கொள்ளும்.

இராமகண்டர்--சைவசித்தாந்த பத்ததி செய்தவர்களில் ஒரு ஆசிரியர்.

இராமகவிராயர் — திருவாய்ப்பாடிப் புராணம், சாரப்பிரபந்தம் முதலிய செய்தவர். பிரம்பூர் ஆனந்தரங்கனைப் பாடிப் பரிசு பெற்றவர்.

இராமகிருஷ்ணன் — கிருஷ்ணதேவராயர் சமஸ்தானத்து வித்துவான்கள் எண்மர்களில் ஒருவன், விகடகவி. இவன் பிறந்தவூர் தெனுவி. இவனுக்குத் தெனுவி ராமன் எனவும் பெயர்.

இராமசந்திரகவி — தொண்டை நாட்டில் இராசநல்லூரிற் பிறந்து சென்னபட்டணத்தில் வசித்தவர். இவர் காலம் சற்றேறக்குறைய (கூO) வூ த்துக்குமேல் இருக்கலாம். இவர் பாரத கதைகளை விலாசமாகப் பாடினவர். இவர் செய்த வேறு நூல்கள் இரண்ய வாசகப்பா, இரங்கூன் சண்டை நாடகம், சகுந்தலை விலாசம், தாருக விலாசம் முதலிய.

இராமசந்திரபட்டர் — அமளாள கிராமத்திலிருந்த அரசனது ஆசிரியரான வேதியர். அரிபக்தி மிகுந்தோர். இவர் அரசனுக்காசாரியராயிருந்தும் பொன் முதலியவற்றில் வெறுப்புற்று நாடோறும் பிக்ஷைபெறுவர். இவரது செய்கையறிந்த அரசன் மனைவி, பட்டரின் தேவியாரை வருவித்து வேண்டிய மணியும் பொன்னும் தந்து பிக்ஷை செய்யாதிருக்க என, அதைக் கொண்ட அம்மையார் கணவர்க் கறிவித்தனர். பட்டர், இதில் விருப்புளதேல் நம்மைப் பெருமாள் அடையார் என்று கொடுத்த மணி, பொன் முதலியவற்றை நித்யாக்னியி விட்டனர். இதனைக்கேள்வியுற்ற அரசன், ஆசிரியரையடைந்து தாம் கொடுத்தமணி, பொன்களைக் கேட்கப் பட்டர் பெருமாளைவேண்ட அவை முன்னிலும் ஒளிகொண்டு ஓம குண்டத்தில் தோன்றின. இதை அவர் அரசனுக்குக் கொடுக்க அரசன் கொடுத்தவைகளைப் பெறேன்எனப் பட்டர்அதனைப் பலர்க்குத் தானஞ்செய்து அரிபத மறவாதிருந்தனர். (பக்தமாலை).

இராமசுவாமிபிள்ளை — இவர் பாண்டிநாட்டு இராமநாத புரவாசி, பின்னர் மதுரையில் வசித்தனர். இவர் திருவாவடுதுறை ஆதீனத்துச்சீடர். இலக்கிய இலக்கணங்களிலும் சைவசித்தாந்த சாத்திரங்களிலும் தேர்ச்சியுடையர். கம்பரந்தாதி. முல்லையந்தாதி, திருவிளையாடற் புராணம் முதலியவற்றிற்கு உரைகண்டவர்.

இராமசோமயாஜி — கூரத்தாழ்வானுக்குத் தந்தை.

இராமதாசர்—இவர் ஒருவேதியர், தடாங்கூரிலிருந்தவர். துளசி வளர்த்து நூற்றைம்பது கோச தூரத்திலிருக்கும் கண்ணனுக்குக் கைங்கர்யம்செய்து வருபவர். இவ்வாறு ஐந்து வருடம் நீங்க ஒருநாள் போகுதல் ஒழிந்து பின்னர் துவாரகை சென்று கண்ணனைநோக்கி என் மூப்பினால் வருதல் ஒழிந்தனன், இனி அவ்வாறு நான் வாராதொழியினும் பொறுக்கவேண்டுமென்று திருவடியைப் பிடித்து வேண்ட, கண்ணன் தரிசனந்தந்து மார்புடன்தழுவி உனக்கு யான் கடன்காரனாயினேன் என்னை உன்னுடன் அழைத்துச்செல் என்ன, தாசர், உன்னை எப்படி அழைத்துச் செல்வேன் என்ன, இப்போது ஒரு தேர் தோன்றும் அதில் ஏற்றிச் செல்கவென்ன அவ்வாறு ஏற்றித் தம்மூர் செல்கையில் வழியில் கண்ணனை நோக்கி உம்மை அர்ச்சகர் தேடி என்னிடம் வரில் என் செய்வேனென்னப் பெருமாள், சும்மாயிருத்தல் கண்டு தாசர் தம் மனை புகுந்திருந்தனர். அர்ச்சகர் பெருமாளைக் கோயிலில் காணமல் தாசர் எடுத்துப்போயிருக்கலாமென்று சிலர் கூறக்கேட்டுத் தாசரிடஞ் சென்று கேட்கையில் வரவறிந்த தாசர் பெருமாளை ஓர் கிணற்றிலிட்டு நானறியேன் என்றனர். அர்ச்சகர்கள் இவர் வீடுமுழுதுந் தேடிக் காணுது கிணற்றில் ஒருவேளை இருக்கின்றனரோவென்று தேடிக் கண்டு எடுத்துச் செல்கையில் தாசர், என்னைவிட்டு நீங்குகின்றாயோ எனத் துக்கிக்க நான் உன்வீட்டில் எக்காலத்து மிருக்கின்றேன் விசனப்பட வேண்டாமென்ன, அர்ச்சகர் தேரிலிருக்கும் நீ என்னிடம் எவ்வாறு வருவா யென்று தாசர் கேட்கப் பெருமான் என் நிறைக்குத் தக்க பொன்கொடுத்து என்னை நீகொள்கவென்னத்-தாசர் என்னிடம் பொன்னேது என்னப் பெருமாள் உன் மனைவியின் மூக்கிலிருக்கும் மூக்கணியோடு என்னை நிறுக்கில் நான் ஒத்திருப்பேன் அதைத் தந்துகொள்க வென்ன, தாசர் அர்ச்சகரிடஞ்சென்று இவ்விடம் விரும்பிவந்த

பெருமாளை எனக்குத்தரின் அவன் நிறைக்குத் தருந்தபொன் தருகின்றேன் என்ன அர்ச்சகர் தாசரது வறுமையைக் கண்டு பரிகசித்து அறிவோமென்று இசைந்தனர். தாசர் ஊரிலுள்ளாரை யெல்லாங் கூட்டித் துலையேற்றிப் பெருமாளை ஒரு துலையிவிட்டு உட்சென்று மனைவியின் மூக்கணியைக் கைக்கொண்டு நின்றனர். அர்ச்சகர் முதலியோர் பொருளெங்கென்னத் தாசர் மூக்கணியைக் காட்டக்கண்டோர் இது ஒக்குமோவென்னத் தாசர் ஒக்குமென்று துலையிவிட மூக்கணி பெருமாளினும் நிறை மிகுந்திருத்தலைக்கண்டு அர்ச்சகர் பெருமாளின் சித்தம் இவ்வகையாயின் என்செய்வதெனப் பெருமாளை விட்டுத் துவாரகைசென்று வேறு பிரதிட்டை செய்துகொண்டனர். (பக்தமாலை)

**இராமதேவர்**—ஒரு சித்தர் நாகப்பட்டணத்தில் வீற்றிருந்து சிவபூசா விசேஷத்தால் எல்லாச் சித்தியு மடைந்தவர். இவர் வைத்தியநூல் செய்திருக்கின்றனர். அதற்கு இராமதேவர் வைத்தியம் என்று பெயர். இவர் காசியிலிருந்து சட்டைநாதரை எழுந்தருளச்செய்து நாகையில் தாபித்தனர்.

**இராமநாதசிவன்** — சைவசித்தாந்த பத்ததி செய்த சைவாசாரியருள் ஒருவர்.

**இராமநாதர்** — இராமரால் தாபிக்கப்பட்ட சிவலிங்கம்.

**இராமநாதன்**—துடிநூல் செய்தவாசிரியன்.

**இராமபாரதி**—ஆத்திசூடி புராணம் தமிழில் பாடிய புலவர். இவர் தொண்டைநாட்டுப் பாகை நகரிலிருந்த வேளாளர்.

**இராமப்பிரியர்** — திருநாராயண புரத்தில் எழுந்தருளியிருக்கும் உற்சவமூர்த்தியின் திருக்கோலம். டில்லி பாதுஷாவின் குமரியால் ஆராதிக்கப்பட்டு உடையவரால் செல்வப்பிள்ளை யெனப் பெயரிடப்பட்டவர்.

**இராமமிசிரர்** — மணக்கால் நம்பிக்கு ஒரு பெயர்.

**இராமமூர்த்தி**—1. அயோத்தியாண்ட சூரிய வம்சத் தரசர்களில் அசன் புத்திரனாகிய தசரதன்தான் புத்திரன் இல்லாமல் கலைக்கோட்டு முனிவரால் புத்திரகாமேஷ்டியாகஞ் செய்விக்க, அந்த யாகத்தில் ஒருபூதம் தாம்பாளத்தில் பாயசமேந்தித் தந்தது. அதனைத் தசரதன் தனதுமனைவியர் மூவருக்கும் பகுத்துத் தந்தனன். அதனால் முதற்றேவியாகிய கோசலையிடத்துத் தேவர், அரக்கர் உபத்திரவத்தைச் சகிக்காது விஷ்ணுமூர்த்தியை வேண்ட அந்தத் திருமால் நாம் தசரதன் புதல்வனாகப் பிறந்து உமது குறை தீர்க்கிறோம், என்றபடி சித்திரை மாசம் நவமிதிதி புனர்பூச நக்ஷத்திரத்தில் திருவவதரித்து இராமனெனப் பேர்பெற்றுத் தன் மாற்றாந்தாயாகிய சுமித்திரையின் குமாராகிய இலக்குமணரைப் பிரியாது கொண்டு பலகலையும் கற்று ஒருநாள் கூனியின் முதுகில் உண்டைவிட்டு அவளது உட்பகைகொண்டு, தந்தையின் கட்டளையால் விச்வாமித்திர முனிவருடன் சென்று அங்கநாடு கடந்து ஒரு பாலைவனங் கண்டு, அங்கு விச்வாமித்திரர் உபதேசித்த பலை, அதிபலை யென்னும் மந்திரங்களைப் பெற்றுப் பாலைவனம் கடந்து, தாடகையைவதைத்து, முனிவர் யாகத்தைப் பூர்த்தியாக்கிக் கோமதி யென்கிற கௌசிகியாற்றின் வரலாறுஅவராலுணர்ந்து,கல்லாகவிருந்த அகலிகையின் சாபத்தைப் போக்கி அவளைக் கௌதமரிடஞ் சேர்ப்பித்து, மிதிலை சென்று சிவமூர்த்தி இந்திரனிடங் கொடுத்த வில், சனகனிடமிருக்க அதனை வளைத்துச் சாநகி யென்னும் சீதாபிராட்டியை மணந்து, தம் நாடுசேரத் திரும்புகையில் வழியில் பரசுராமர் தந்த வில்லை வளைத்து அவர் தவத்தைக்கொண்டு, அந்த வில்லைத் தாம் கேட்கும்போது கொடுக்கும்படி வருணனிடம் கொடுத்து, அயோததி அடைந்தனர். இவர் தந்தை, யுவராஜ்ய பட்டாபிஷேகஞ் செய்விக்க முயற்சிசெய்வதை அறிந்தகூனி உட்பகை கொண்டவளாதலால் கைகேசியிடஞ்சென்று அவள் மனத்தை வேறுபடுத்தி இராமனைக் காட்டிற்கேவச் செய்யத் தசரதனிடம் முன்பெற்ற மூன்றுவரத்தைக் கேட்பித்தனள். அவ்வகையே கைகேசி வரம் பெற்றுத் தசரதர் சொல்லென்று இராமமூர்த்திக்கு வனம் செல்லக் கட்டளையிட்டு இராமமூர்த்தியைக் காட்டிற்கேகச் செய்தனள். இராமர், தன் மனைவியுடனும் பிரியாத இலக்குமணருடனும் நாடு நீங்கிக் காகாசுரன் அபசாரத்திற்கு அவன் ஒரு கண்ணைப் போக்கிக், கங்கையில் ஓடத்தலைவனாகிய குகனை நட்புக்கொண்டு, பரத்துவாசாச்சிரமத்திற் றங்கி, அப்பால் காளிந்திநதி கடந்து சித்திரகூடபர்வதஞ் சேர்ந்து, தாமும் தம் தேவியும் அம் மலைவளங்களைப் பார்த்து வருகையில் சண்டதபர்

சாபத்தால்பெருச்சாளியாகச்சாபமடைந்த
சேது எனுங் கந்தருவன் குமரனது சாபத்
தைப் போக்கி அவனைக் குபேரனிடம்
சேர்ப்பித்து, பரதரைக்கண்டு அவர் பிரி
தலைச் சகிக்காமல் வேண்ட அவருக்குப்
பாதுகையைக் கொடுத்து நீங்கி, விராத
னென்னும் அரக்கனை வதைத்துச் சாபங்க
ருஷிக்கு முத்தியளித்துத் தண்டகவன
த்து ருஷிகளுக்கு அபயமளித்து, சுதீக்ஷ
ணமுனிவரைக் கண்டு பணிந்து அவரளி
த்த தவத்தைப்பெற்று, அகத்தியரைக்
கண்டு விருந்து முதலிய செய்யப்பெற்று
நீங்கிச், சடாயுவைக் கண்டு அவருக்குத்
தம் வரவை அறிவித்துப் பஞ்சவடி
சென்று சூர்ப்பனகையின் பங்கங்கண்டு,
தூஷணன், திரிசிரன் முதலியவர்களை
யொரு முகூர்த்தத்தில் கொன்று, கானு
டன் போர்புரிகையில் இவர் கைவில் முரி
யத் தாம் மிதிலையினின்று வரும் வழியில்
வருணனிடம் கொடுத்த வில்லை அவனுத
வப் பெற்றுக் கரனை வதைத்து, மாயமா
னாக் வந்த மாரீசனைப் பிடித்துத்தரச்
சீதை வேண்டியபடி அதன்பின் சென்று
அது மாயமானென்றுணர்ந்து அதனைக்
கொன்று, கபட சந்நியாசியாகிய இராவ
ணனால் சீதையை யிழந்து துக்கித்து, இர
ண்டாமுறைச் சடாயுவைக்கண்டு அவரால்
சீதை நிலையுணர்ந்து சீதையைத் தூக்கிச்
சென்ற காலத்து அவனிடம் யுத்தஞ்செய்
து இராமமூர்த்தி வருமளவும் உயிர்தாங்கி
அவருக்குச்செய்திகூறி உயிர்நீங்கிய சடாயு
விற்குக் கர்மாதி கிரியைகள் முடித்துக்
கவந்தனைக்கொன்று, சபரிக்கு முத்தியளித்
தனர். பின் இலக்குவரைப் பிரியாத
இராமமூர்த்தி பம்பாநதிக் கரையடைந்து
அநுமனைக் கண்டு, அவன் முகக்குறிப்பால்
அதிமேதாவி யென்று புகழ்ந்து அவனால்
சுக்கிரீவனை நட்புக்கொண்டு மராமரம்
ஏழும் ஒரு பாணத்தால் தொளைத்துக்காட்
டித் துந்துபியின் எலும்பின் குவியலைக்
காலாற்றள்ளித் தமது வலியறிவித்து,
சுக்கிரீவன் வாலியைக் கொல்லவேண்டச்
சரணாகதியடைந்த அவன்பொருட்டு வேற்
றுமை தெரியும் வகைச் சுக்ரீவனைப் பூச்
சூடி யுத்தத்திற்குச் செல்லெனக் கட்டளை
யிட்டு வேற்றுமையுணர்ந்து மறைவாக
இருந்து வாலியைக் கொன்று, சுக்கிரீவ
பட்டாபிஷேக முடித்து, மழைக்காலம்
மாறுமளவும் பிரச்சிரவண மலையிலிருந்து
சுக்கிரீவன்வரத் தாமதித்ததால் இலக்கு
மணரை ஏவிப் படை சேர்ப்பித்துச் சான
கியைத் தேடச்செய்து, விரலாழி தந்து
அநுமனால் சீதை இலங்கையி லிருப்பதறி
ந்து, கடல் கடக்க அணை கட்டவேண்டி
வருணனை எண்ணி ஏழுநாள் சரசயனத்
திருக்கவும் வாராததனால் கோபித்து அத்
திரத்தையெடுக்க வருணன் பயந்து ஒரு
மணிமாலை கொண்டுவந்து சரணடைய
நானெடுத்த அம்பிற்கு இலக்கென்னென
அவன் சொற்படி அதனை மருக்காந்தார
இராக்கதர்மீதேவிக் கொலைபுரிந்து, வரு
ணனைத் தாங்கக் கட்டளையிட்டு அவன்மீது
அணை கட்டுவித்து இலங்கையடைந்து அங்
கதனைத் தூதனுப்பினர். இராமபிரான்
வரவை இராவணன் கனவிற்கண்டு
பயந்து தனித்துவந்து வேண்டிச் சீதை
யைக் கொடுக்கிறேன் என, சண்டை செய்
யாது ஒருநாள் தாமதித்து அவன் மந்திரி
யர் சொற்கேட்டு வித்யுச்சுவன் அனுப்பிய
மாயசீதையால் அதிகோபங்கொண்டு இரா
வணனுடன் யுத்தஞ் செய்ய ஆரம்பித்த
னர். இராமமூர்த்தி முதனாள் இராவண
னுடன் யுத்தஞ்செய்யத் தொடங்கி அந்த
இராவணன் தேர், குடை, முடி ஆயுதம்,
சேனை முதலியவைகளை நாசப்படுத்தி
அவன் நிராயுதனாய்த் தனித்து இருக்கக்
கண்டு, நீ யுத்தத்தில் இன்று அதிகமாய்
வருந்தினை இன்றுபோய் நாளை வெகு
சேனை சேர்த்துக்கொண்டு வா வென்ற
னுப்பிச் சுக்கிரீவன் சொல்லால் கும்பகர்
ணனை நட்புக்கொள்ள விபீஷணரைச்
செலுத்த அவன் மறுக்க அவனது கரங்
களையறுத்து அவன் வேண்டியபடி வர
மளித்து மாய்த்து இந்திரசித்து ஏவிய
நாகாத்திரம் இலக்குமணரை மூர்ச்சிக்கச்
செய்ததால் துக்கித்துக் கருடனாலதை
விலக்குவித்து மகாபாரிசுவனை இருபிள
வாக்கி மகரக்கண்ணனை வதைத்துப் பிர
மாத்திரத்தால் இலக்ஷுமணர் மூர்ச்சித்த
காலத்துத்தாமும் விசனத்தால் மூர்ச்சித்து
அநுமன் கொணர்ந்த சஞ்சீவியால் மூர்ச்
சைதெளிந்து அநுமனைச் சிரஞ்சீவியாக
வாழ்த்தி மாயாசீதையைத் தமக்குமுன்
கொல்லக்கண்டு துக்கித்து இந்திரசித்தைக்
கொல்ல இலக்குமணருக்குக் கவச முத
லிய கொடுத்தனுப்பி, மூலபலசைந்யத்
தைத் தாம் ஒருவராக நின்று நாசமாக்கி
இராவணன் வேலால் மூர்ச்சையடைந்த

இலக்குமணரை இரண்டாமுறை சஞ்சீவி கொணர்ந்து மூர்ச்சை தெளிவித்த அநுமனைத் தழுவி வாழ்த்தி இராவணனைக் கொல்ல இந்திரன் அனுப்பின தேரில் ஏறி இலக்குமணர்மீது சென்ற மகோதரனைக்கொன்று, இராவணனது சிரம், கரம் முதலியவற்றைப் பலமுறை கொய்து கடைசியில் பிரமாத்திரத்தால் உயிர்நீக்கி அவனுடலிலிருந்த வடுவால் மனநொந்து விபீஷணர் சொல்லாற்றேறி விபீஷணருக்கு இலக்குமணரால் பட்டந் தரிப்பித்துச் சீதையை வருவித்து அவளைக் கற்பிழந்தவளெனத் தூஷித்து அக்நியில் குளிக்கச்செய்து அக்நிதேவன் சொல்லால் தேறி மேலேற்றிக்கொண்டு அந்த அக்நிதேவனிடம் பரதனும் கைகேசியும் தம்மிட நட்புடனிருக்க வரம்பெற்று வைகுந்தமடைந்த தசரதரைக்கண்டு களித்து வரம்பெற்று, யுத்தத்திலிறந்த வானரர்களைப் பிழைப்பிக்க இந்திரனிடம் வரம்பெற்றுச் சீதைக்கு எதிரிலுள்ளவைகளைக் காட்டிக்கொண்டு சேதுவின் கரையடைந்து இராவணனைக்கொன்ற பிரமஹத்தி நீங்கச் சிவபூசைசெய்து நீங்கிப் பரத்துவாசராச்சிரமமடைந்து பரதருக்குச் சொன்ன காலவளவு நெருங்குதலறிந்து அநுமனிடம் தமது விரலாழிகொடுத்தனுப்பிப் புஷ்பகமேறி அயோத்தியடைந்து சரயுநதியில் மூழ்கிச் சடைமுடிமாற்றி வசிட்டரால் திருமுடி சூட்டப்பெற்றுப் பிரமனால் இக்ஷுவாகுவுக்குக் கொடுக்கப்பட்ட வாகுவலயத்தை அங்கதனுக்குக் கொடுத்து அநுமனுக்கு வச்சிரப்பதக்கமளித்து அரசாண்டகாலத்தில் சம்புகன் என்னுஞ் சூத்திரன் தவஞ்செய்ததால் பிராமணப்பிள்ளை இறக்கப் பிராமணன் அகாலமிருத்தியுவென்று விசனப்படுகையில் இதனை நாரதராலுணர்ந்து இராமமூர்த்தி சூத்திரனைச் சங்கரிக்கப் பிராமணப்பிள்ளை யுயிர்பெற்றெழுந்தனன். சீதை இரண்டாமுறை வனம்போக இச்சைகொண்ட காலத்தில் ஊரார்சொல்லை வியாசமாகக்கொண்டு காட்டிற் கனுப்பி அச்வமேதத்தில் குசலவராகிய புத்திரர்களைக் கண்டு ஆனந்தங்கொண்டு சீதையைப் பிரமாணஞ் செய்விக்கக் கேட்டு அவள் பூமியில் மறைய விசனமும் கோபமும் அடைந்து பூமிதேவியை மருட்டிப் பிரமனால் ஒருவிதந் தேறித் தாம் பதினோராயிரம் வருஷம் அரசாண்டு தம் குமாரராகிய குசலவர்க்கு உத்தரதக்ஷிண கோசலநாட்டைத் தந்து பரத இலக்ஷ்மண குமாரருக்குக் காருகபதம், மல்ல பூமி முதலியவற்றைக்கொடுத்து வீற்றிருந்தனர். இவர் ஒருநாள் காலமுனிவர் வர அவரை ஏகாந்தத்தில் கொண்டு இலக்குமணரை யார்வரினும் விடவேண்டாமென வாயிலில் காவல் வைத்துத்தனித்து வசனித்துக் கொண்டிருந்தனர். அப்போது துருவாசர் இராமரைக் காணவந்தனர். இலக்குமணர் அவரை விட்டதால் இராமமூர்த்தி யவரிடம் கோபித்துத் தேவரெதிர்கொள்ளச் சரயுவடைந்து சோதியிற் கலந்தருளினர். இவரரசாட்சி திரேதாயுகம். இவருக்குத் தாசரதி, இரகுநந்தனன், இராகவன், சக்கிரவர்த்தித் திருமகன், காகுத்தன், கௌசல்யாநந்தனன், பரதாக்கிரசன், கோதண்டபாணிஎனப்பெயர். (அத்யாத்மவான்மீகிராமாயணம்.)

2. தந்தைசொற்படி வனத்தில் வசிக்கநேர்ந்தபோது பிதுர்க்களுக்குச் சிரார்த்தஞ்செய்ய நாள்வந்தது. இதனால் இராமர் தம்பியைநோக்கி ஏதேனும் தானியங்கொண்டு வரக்கட்டளையிட்டனர். இலக்ஷ்மணர் நாணத்தால் சென்று கேளாது சிராத்தகாலங் கழியும்வரை பொழுதுபோக்குகையில் இராமரும் தம்பியைத் தேடிச் சென்றனர். இவ்விருவரும் வருதற்கு தாமதித்தால் சீதை சிரார்த்தகாலஞ் சமீபித்ததறிந்து தாபசம், இங்குதி இவற்றின் பழத்தைக்கொண்டு பிதுர்களுக்கு மாவினால் பிண்டமிட்டனள். இதைப் பிதுராகவந்த தசரதர் ஏற்றுக் களிக்கச் சீதை அவரை நீர் யார் என்றனள். நான் உன்மாமனாகிய தசரதன் என்றனர். நீர் பிண்டம் உண்டதை என் கணவர் எப்படி நம்புவர் என நீ தக்கசாக்ஷி வைத்துக்கொள் என்றனர். அப்போது சீதை அவ்விடமிருந்த பல்குநதி, பசு, அக்நி, தாழை இவற்றைச் சாக்ஷி வைத்தனள். பின்பு கிராமத்திற்குத் தான்யத்தின் பொருட்டுச் சென்ற இராமலக்ஷ்மணருக்குச் சீதை நடந்தவைகூற அவர்கள் நம்பாமையால் சாக்ஷிகளைவிசாரிக்க அவர்கள் பயந்து இல்லையென்றமையால் இருவருஞ் சிரார்த்தந் தொடங்குகையில் அசரீரியாய்த் தசரதராலும் சூரியனாலும் உண்மை கூறக்கேட்டுச் சிரார்த்தத்தை நிறுத்தினர். பொய்

கூறினவர்களாகிய பல்குநதியை அந்தர்வாகினியாகவும், தாழம்பூவினைத் தன்னாற் பூசிக்கப்படும் சிவமூர்த்திக் குதவாதபடியும், பசுவிற்கு முன்புறம் அயோக்யமும் பின்புறம் யோக்யமாகவும், அக்நி ஸர்வ பக்ஷகனாகவும் ஆகச், சீதை சபித்தனள். (சிவமகாபுராணம்).

3. சீதையுடன் வனவாசஞ் செய்யச் செல்கையில் ஒருநாள் கடற்கரைக்கருகில் சீதையுட-னுலாவுகையில் அக்கினிதேவன் தோன்றிச் சீதையை அபகரிக்கும் காலஞ் சமீபித்தது. நான் தேவர்களா லனுப்பப் பட்டேன். சீதையை என்னிடம் கொடுத்துவிடும். நான் கொடுக்கும் மாயா சீதையைப்பெற்றுக்கொள்ளும். அசுரவதம் முடிந்தபின் சீதையை உம்மிடம் சேர்க்கிறேன் என்றனன். அவ்வாறே உண்மையான சீதையை அக்னியிடம் சேர்ப்பித்தனர். (தேவி - பா.)

4. இவர், இராவண வதஞ் செய்து திரும்பிக் கிட்கிந்தைக்குவந்து ராவண திரிசிராதிகள் வதை நீங்கக் கௌதமிதீரத்தில் கிஷ்கிந்தா தீர்த்தம் கண்டு சிவலிங்கப் பிரதிட்டை செய்து சிவபூஜை செய்தனர். (155 - ஆம் அத்தியாயம் பிரமபுராணம்.)

5. சமதக்னி புத்திரராகிய பரசிராமருக்கொரு பெயர். இவர் சிவமூர்த்தியை எண்ணித் தவமியற்றிப் பரசுபெற்றுப் பரசிராமர் எனப் பெயர் பெற்றனர்.

6. ஒரு வேதியன். இவன் திருவேங்கடமலையில் சநற்குமாரமுனிவரா லுபதேசிக்கப்பட்டு நற்கதி யடைந்தவன்.

7. தருமன் எனும் மனுப்புத்திரன். இவன் மனைவி நிருதி.

இராமராஜர்—இவர் ஒரு அரசர். இவர் ராமபக்தி மிகுந்து தம் சமூகத்தி லெக்காலும் இராமாயணப் பிரசங்கங்கேட்டு வருவார். இவ்வகை வருநாட்களுள் இராமனுக்குத் துன்பம் நேரும்போது அரசன் விசனமுறுதல்கண்டு இராமஜெயம் என்று பிரசங்கிப்போர் கூறிவருவது வழக்கம். இதனால் அரசன்விசனம் நீங்கிக் கதை கேட்டு வருவன். பிரசங்கிக்கு ஒருநாள் நோய்வர, புராணிகர் தம் புதல்வரை அனுப்பி அரசனுக்கு இராமஜெயங்கூறுக வேறு ஒன்றுங் கூறவேண்டாமென, குமரர் அதை மறந்து இராவணன் மாரீசனால் மயக்குவித்துச் சீதையை இலங்கைக்குக் கொண்டுபோயினன் எனப் பிரசங்கஞ் செய்யவும், அரசன் சேனையுடன் எழுந்து சேதுவிற்குச் சமீபித்துக் கடலைக்கடந்து சென்று பிராட்டியை மீட்கக் கடலிடை நெருங்குமுன் ராமபிரான் சீதா லக்ஷ்மணருடன் காட்சி தந்து சீதையை மீட்டுவந்தேன் எனக் கூறக் கோபந்தணிந்து நகரமடைந்து பகவத் பக்தியிலிருந்தவர். (பக்தமாலை.)

இராமலிங்கம்—இராவணவதையில் நேர்ந்த பிரமஹத்தி நீங்கும்படி இராமமூர்த்தி பிரதிட்டித்துப் பூசித்த சிவலிங்கம். இது சேதுவிலுள்ளது.

இராமலிங்கஐயர்—இவர் பிறப்பால் வேதியர். நல்லூரிற் பிறந்து கல்வி வல்லவராய்ச் சோதிடத்தில் சந்தான தீபிகை இயற்றியவர்.

இராமலிங்கசுவாமிகள் — திருவருட்பிரகாச வள்ளலாரென்று வழங்கப்படுகிற இராமலிங்கசுவாமிகள், சோணாட்டில் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள மருதூரில் கருணீகர் குலத்தில் இராமையபிள்ளை யென்பவர்க்குச் சின்னம்மையா ரென்பவரிடத்தில் கலியாப்தம் சO௯௨ - ஷு - இல் நிகழும் சுபானுஷு புரட்டாசிமீ ௨௧௳ [1823ஷு அக்டோபர்மீ 5௳] சிவபிரானுடைய திருவருளால் பிறந்தவர். இவருடைய சிறுபிராயத்திலேயே தந்தை இறந்ததனால் இவருடைய தமையனாகிய சபாபதிபிள்ளை யென்பவர், சென்னைக்குத் தமது தாய் தம்பிமார் முதலியவர்களோடுவந்து அங்குள்ளதொரு வித்தியாலயத்திற் போதகாசிரியராயிருந்து அதிற் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு குடும்பத்தைப் போஷித்து, தமது தம்பிமார்க்கு வித்தையையும் போதித்தார். இந்த இராமலிங்க சுவாமிகள் அதனை வியாசமாகக்கொண்டு நல்லறிவுதோன்றச் சுப்பிரமணியக் கடவுளை உபாசித்து அவரது திருவருளைப் பரிபூர்ணமாகப்பெற்று ஞானமுதிர்ச்சி யடைந்தார். பின்பு இவருக்கு விருப்ப மில்லாதிருக்கையில் இவர் அண்ணனார் தமக்கைமகளை மணம்புரிவித்தனர். இவர் பற்றற்றவராய் சதாநந்த சகஜநிஷ்டை சாதனமுடையாராய் பல பாடல்களையும் அருளிச்செய்து கொண்டிருந்தனர், பின், இவர் சிதம்பரத்தின் நான்கு கோபுரமுந் தோன்றுமெல்லையாகிய வடலூரென்கிற பார்வதிபுரத்தில் சத்திய தருமசாலை, சத்திய ஞானசபை, சமரசவேத பாடசாலை, சன்மார்க்கசங்கத் திருக்கோயில், ந்ருத்தசித்தி

விநாயகராலயம் முதலியவைகளைத்தாபிக்க முயன்றனர், பின், இவர் வடலூரையடுத்த கருங்குழி கருகில்மேட்டுக்குப்பமென்னுஞ் சிற்றூரில் சித்திவளாகத் திருமாளிகையில் சிவத்தியானத்துட னெழுந்தருளி யிருக்கையில், சிவஞானயோக முதிர்ச்சியால் தோன்றிய சோதிவடிவமான அருட்பெருஞ்சோதியைத் தரிசித்துப் பின் கலியாப்தம் சகூஎஅ-ஆவதான ஸ்ரீமுகஞு தைமீ ககூஉ. சுக்கிரவாரத்தில் செயற்கையுடல் இயற்கையுடலாகத் திரிவுபடுஞ் சின்மாத்திர சகஜசமாதியில் அசைவறவிருந்து சற்குருவைச் சிந்தித்துத் தாம் அமர்ந்திருந்த அறையை மூடிப் பூட்டிக்கொள்ளத் தமது அன்பர்க்கு குறிப்புணர்த்தித் தாமும் தமது இந்திரியக்கதவை மூடி மவுனநிட்டை கூடி நித்தியானந்தமுற்றனர். இவர் அவ்வப்போது கடவுளுடைய திருவருளாற் பாடிய பாடல்களை ஆறு திருமுறைகளாகத் தொகுத்து இவருடைய மாணுக்கராகிய தொழுவூர் வேலாயுத முதலியார் முதலியோர் அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

இராமாபாயி—இவள் காசியிலிருந்த சந்தராஜன் புத்ரி, அரிபக்தியும் பாகவதபக்தியும் கொண்டவள். இவளை யொருவனுக்கு மணஞ் செய்விக்க அவன் ஊன்தின்பதில் அவாவுற்றவனாய் அரிதினத்தில் ஒரு ஆட்டைக் கொலைசெய்து சமைக்கக்கூற மனைவி இது தகாதகாரியமெனப் பல நீதி கூறியும் கேட்காதவனாக இருந்தான். இதனையறிந்த மனைவி, இவ்வூரில் பெருமாள் கோயில் உண்டோ பாகவதரின்ரோ வென அறிந்துகொண்டு தனது குழந்தைக்கு விஷமூட்டி இறப்பித்தனள். மைந்தனிறக்கக்கண்ட தந்தையும் சுற்றத்தாரும் தாய் கவலையுறுதிருத்தல் கண்டு வினவ, அழியும் பண்டம் என்றும் அழியுமென விடைகூறி யிருந்தனள். பின் கணவனை நோக்கிப் பாகவதர் பாததீர்த்தம் கொள்ளின் மைந்தன் பிழைப்பன் எனக் கூறத் தந்தை பாகவதரை அழைத்து அவர்க்குபசார நடத்திப் பாததீர்த்தங்கொண்டு குழந்தை வாயில்விடக் குழந்தை உயிர்பெறத் தந்தை உவந்து அன்றுமுதல் திருமாலிடம் அன்பு மிக்கவனாய் மனைவி சொற்படி வாழ்ந்து வந்தான். (பக்தமாலை.)

இராமஹ்ருதம்—இது ஒரு தீர்த்தம். Ramahrada. A Sacred tank near Thaneswar, where Parasurama is said to have given oblations to the names of his ancestors after destroying the Kshatriyas.

இராமாயணஉத்தரகாண்டம் — ஒட்டக்கூத்தப் புலவரா லியற்றப்பட்டது. (கங௬௦) செய்யுட்களும் (உஉ) படலங்களுங் கொண்ட தமிழ்நூல்.

இராமானுசகவிராயர்—இவர் பாண்டிநாட்டு இராமநாதபுர வாசி. இவர் திருவாவடுதுறை சோமசுந்தரக் கவிராயரிடம் கல்வி கற்றுச் சென்னையில் வசித்தவர். இவர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நன்னூல், ஆத்மபோதப்ரகாசிகை, திருக்குறள், திருவேங்கட அநுபூதி, பச்சையப்பவள்ளல் மீது பஞ்சரத்னமாலிகை, பார்த்தசாரதி மாலை, வரதராஜர் பதிற்றுப்பத்தந்தாதி முதலியவும், சிலவற்றிற்கு நல்லுரையுமியற்றியவர்.

இராமானுசப்பிள்ளான் — 1. கிடாம்பியாச்சான் குமரர். இவர் குமரர் ஸ்ரீரங்கராசர். குமரி தோத்தாரம்மன்.

2. கிடாம்பி ஸ்ரீரங்கராசர் குமரர். இவருக்கு அப்புள்ளார் எனவும் பெயர்.

இராமானுசர் — எம்பெருமானாரைக் காண்க.

இராமேச்சுரம் — இராவணவதத்தால் வந்த பாவம் நீங்க இராமமூர்த்தி பிரதிட்டித்துப் பூசித்த தலம். இது சேதுவிற் கருகிலுள்ளது.

இராயர்—இது மார்த்தவப் பிராமணர்களுக்குப் பட்டமாக வழங்கி வருகிறது. த! காலம்; பூணூல் தரித்துக்கொண்ட வன்னியர் சிலர் இப்பட்டத்தைப் பெற்றிருக்கின்றனர்.

இராவதீ—உத்தரனுடைய புத்திரி. பரீக்ஷித்தின் தேவி. இவள் புத்திரர் நால்வர், அவர்களில் மூத்தோன் சநமேசயன்.

இராவண அஸ்தம்—ஒற்றைத் தேங்கா யோட்டில் வீணாதண்டம் நுழைத்து மூன்று தந்திகள் பூட்டி முறுக்காணி கொண்ட இசைக்கருவி. இது, இராவணன் தன் தலையைப் பூட்டித் தன் அஸ்தத்தைத் தண்டாயமைத்து நரம்புகளிணைத்துச் சிவபிரானைப் பாடியதைக் குறிப்பிக்கும்.

இராவணியம்—இராவணனா லியற்றப்பட்ட இசைநூல்.

இராவணன்—1. விசிரவசுவிற்குக் கேகசியிடம் பிறந்தவன். இவன் தாய் இவனைப் பெற்ற பிறகு குபேர செல்வத்தைப் பெறத் தவஞ்செய்க என, இவன் பஞ்சாக்

கினி மத்தியிலிருந்து பிரமனை யெண்ணித் தவஞ்செய்து ஆயிரவருட முடிந்தபின் தனது தலைகளில் ஒன்றைத்திருகி அக்கினியி லிடுவன். இவ்வாறு தலைகளை யெல்லாந் திருகிப் பத்தாஞ் சிரத்தைத் திருகுகையில் பிரமன் தரிசனந் தந்து தேவர், விஞ்சையர், அவுணர், சித்தர், உரகர் முதலியவர்களால் இறப்பிலாதும் யுத்தத்தில் அற்றசிரங்கள் கரங்கள் மீண்டும் வளரவும் வரந்தரப் பெற்றவன்.

2. பிரகத்தனைக் குபேரனிடத்து இலங்கா நகரங் கேட்க அனுப்பி அவன் தர இலங்கையைப் பெற்று அரசாண்டவன்.

3. இவன் இலங்கை அழியாதிருக்கச்சிவ பெருமானை எண்ணித் தவஞ்செய்தனன். அவர் தரிசனந்தந்து ஒரு சிவலிங்கங் கொடுத்து இதனை அசுத்தத்துடன் தொடலாகாது, இலங்கை போமளவும் பூமியில் வைக்கலாகாதெனத் திருவாய் மலரக் கேட்டு அதனைப் பெற்று இலங்கைக்கு மீண்டனன். இதனை யறிந்த தேவர் இவன் இலங்கையில் இம்மூர்த்தியைப் பிரதிட்டிக்கின் இவனரசழியா தாகையால் இதற்கோர் ஆலோசனை செய்யவேண்டுமென்று விநாயகரிடங் குறைகூறி வருணனை வயிற்றில் நீர் சுரப்பிக்க எவினர். அவ்வகை வருணன் செயலால் இராவணனுக்குச் சிறுநீரின் உபத்திரவ மதிகமாயிற்று. அச்சமயத்தில் விநாயகர் ஒரு பிரமசாரியாய் எதிர்வரக்கண்டு நான் கைகால் சுத்திசெய்து வருமளவும் நீர் இச்சிவலிங்கத்தைத் தயைசெய்து பிடியும் என வேண்டினன். இவனது வேண்டுகோளுக் கிரங்கிய வேதியச் சிறுவர், இராவணனை நோக்கி நான் சிறுவன் இலிங்கபாரம் நான் பொறுக்காவிடின் கீழே வைத்து விடுவேனெனக்கூறி அவன் தமது கையிற் கொடுத்துப்போன சிறிது நேரத்தில் அவனை அழைத்தனர். அவன் வாராமையால் பூமியில் சிவலிங்கத்தை வைத்து நின்றனர். அவன் வந்து எடா வைத்தனை யென்று வெருட்ட அப்பா இதன் வலிமை என்னால் பொறுக்கக்கூடவில்லையென்று அகல நின்றனர். இராவணன் தன்னாற்றல் முழுதும் சிவலிங்கத்திடஞ் செலுத்தித் தூக்கியும் சிவலிங்கஞ் சற்றேனும் பெயராது பசுவின் காதுபோற் குழைந்தது. அதனால் இராவணன் சலித்து இது மகாபலலிங்க மென்றனன். அதுவே அந்த மூர்த்திக்குப் பெயராயிற்று. இந்தச் சிவலிங்கம் பசுவின் காதுபோற் குழைந்தது பற்றி அந்தத் தலத்திற்குக் கோகர்ணமெனப் பெயராயிற்று. பின்பு இராவணன் பிரமசாரியிடங் கோபங்கொண்டு சென்று பிரமசாரியைக் குட்ட விநாயகமூர்த்தி இவனைத் தமது துதிக்கையால் செண்டாடினர். அதனால் இராவணன் வலியொடுங்கி வேண்ட அநுக்கிரகித்து என்ன வரம் வேண்டுமென நான் தேவரீரைக் குட்டினதுபோல் உலகத்தவர் தமக்குமுன் செய்து கொள்ளின் இஷ்டசித்தி பெற அநுக்கிரகிக்க என அவ்வகை அருள்புரிந்து மறைந்தனர்.

4. பின்பு, இராவணன் இலங்கை யடைந்து ஒருநாள் வேட்டைக்குச் சென்று மயன் குமரியாகிய மந்தோதரியை மணந்தனன்.

5. இவன் தேவரை வருத்துதலைக் கேட்ட குபேரன், சகோதரன் என்ற உரிமை பற்றி, நான் தவத்தால் சிவமூர்த்தியிடந் தோழமை பெற்றேன், நீ தேவரை வருத்தாதை யெனத் தூதனிடங் கூறியனுப்ப அத்தூதனை வெட்டி யெறிந்து குபேரனிடம் யுத்தஞ் செய்யப்போய் மணிபத்திரனைக் கொலைசெய்து குபேரனை அடித்து அவனிடமிருந்த புட்பக விமானத்தைப் பிடுங்கிக்கொண்டு அந்த விமானத்திலேறிச் சரவணத்தருகில் வருகையில் விமானம் நின்றுவிட நந்திதேவர், இராவணனைப் பார்த்து இது சிவமூர்த்தியினிருக்கை நீ போகல் தகாதென இராவணன், நந்திதேவரைக் கண்டு குரங்கு முகனெனப் பரிகசிக்க, நந்திதேவர் கோபங்கொண்டு உன்பட்டணங் குரங்காலழிகவெனச் சாபமேற்றுக் கைலையை எடுக்க முயன்றனன். அதுகண்ட சிவமூர்த்தி தம் திருவடி விரலாலழுத்த மலையில் கைகளகப்பட்டு நசுக்குண்டு ஆயிரம் பருவம் அழுததால் இராவண னெனப்பெயரடைந்து அவ்வழியில் வந்த வாகீசமுனிவர் சொல்லால் சாமகானம் பாடிச் சிவாநுக்கிரகம் பெற்றவன். (இரா-உத்தரகாண்டம்).

6. அகத்தியரால் காந்தருவத்தால் பிணியுண்டவன்.

7. தவஞ்செய்யும் வேதவதியைத்தொட்டுக் குலமழியச் சாபமேற்றவன்.

8. மருத்துவின் ஓமசாலையுள் புகுந்து அவனிடம் தோற்றேனெனச் சொல்லச் சொல்லிக் கேட்டுக் களித்தவன்.

9. காதியையும், மயனையும், துற்சந்தனையும் வென்றவன்.

10. அயோத்தியை அடைந்து அனரணியனை வென்றவன்.

11. நிவாதகவசருடன் யுத்தஞ்செய்யச் சென்று பிரமனால் சமாதானஞ் செய்யப் பெற்றவன்.

12. (கூக) திங்கள் பாதாளத்தில் தங்கித் தேனுவைப் பணிந்து வருணனைச் செயித்து அவன் பாசத்தைப் பிடுங்கிக்கொண்டு அவன் மைந்தரையுஞ் செயித்து அவனிடமிருந்த மாதரைக் கவர்ந்து இலங்கைக்கு வந்தவன்.

13. சூர்ப்பநகையினைக் கரனூரிலிருக்கச் செய்தவன்.

14. கும்பினசியைக் கவர்ந்த மதுவைக் கொல்லச் செல்லுகையில் கும்பினசி வேண்டுகையால் மதுவுட னட்புக்கொண்டவன்.

15. நளகூபரன் தேவியாகிய அரம்பையை வலிவிற்புணர்ந்து அவனால் இனியுடன்படா மாதரைத்தொடின்தலை வெடிக்கவெனச் சாபம் பெற்றவன்.

16. கார்த்தவீரியனுடன் யுத்தஞ் செய்யப்போய் அவனாற் கட்டுண்டு சிறையிற்றங்கிப் புலத்தியரால் மீண்டவன்.

17. வாலி சிவபூசை செய்யுந் தருணத்தில் அவனுடன் தனித்து யுத்தத்திற்குச் சென்று அவன் கக்கத்தி லகப்பட்டு நசுங்கி அஞ்சி நட்புக் கொண்டவன்.

18. திக்கு யானைகளின் தந்தங்களால் குத்துண்டு அவற்றின் தந்தங்களை முதுகில் பெற்றவன்.

19. சூரியனை இலங்கையில் வரவொட்டாமல் தடுத்தவன்.

20. ஆகாச வீதியிற் புட்பகத்திற் சென்று அசுமநாகத்தைக் கண்டு அங்கிருந்த பலியைக் கண்டு யுத்தத்திற் கழைத்தனன். பலி இவனைநோக்கித் தானின்னவன் விஷ்ணுவால் சிறையி லிருக்கிறேனென்ன நான் உன்னை விடுவிக்கின்றேனென்று இராவணன் கூறினன். அதைக் கேட்ட பலி குலுங்க நகைத்து அவனைச் செயிப்பதற்குமுன் இதோ என் னெதிரி லிருக்கும் இந்தக் குண்டலத்தைத் தூக்குப் பார்ப்போமென்ன, இராவணன் தன்னாலானமட்டும் தூக்கி உதிரங் கக்கிக்கொண்டு பூமியில் வீழ்ந்தனன். பலி இராவணனைநோக்கி இக் குண்டலத்தைத் தரித்திருந்தவன் என் பாட்டனான இரணியகசிபு. அப்படிப்பட்ட வலியுள்ளவனையும் மற்றும் அநேக அரக்கர் அசுரர்களையும் கொன்றவனை வென்று என்னை விடுவிப்பது உன்னால் தரமல்ல என இராவணன் கோபித்து வாயில் காவலாகவிருந்த திருமாலிடம் யுத்தத்திற்குச் செல்ல அவனைக்கொல்லவெண்ணிய திருமால் பிரமன் வரத்தைக் காக்கவேண்டி அவன் முன்றோன்றாது மறைந்தனர்.

21. இவன் சூரியனிடம் யுத்தத்திற்குச் செல்லச் சூரியன் தண்டியிடம் சொல்லியனுப்பிய செய்தியால் வெற்றிமுரசு முழக்கி அவ்வுலகம் நீங்கினவன்.

22. பருவதமுனிவரைக் கண்டு யார் என்னிடம் போரிடவல்லாரெனக் கேட்டு அவர் அயோத்தி யரசனாகிய மாந்தாதாவெனக் கூறக்கேட்டு யுத்தத்திற்குச் சென்று சமயுத்தஞ்செய்ய இருவரும் பிரமாஸ்திரம், பாசுபதாஸ்திரம் பிரயோகிக்க எடுத்தகாலையில் புலத்திய முனிவரும் காலவமுனிவரும் தோன்றிச் சமாதானஞ் செய்ய ஒத்துக்கொண்டு நீங்கினவன்.

23. சந்திரனிடம் யுத்தஞ் செய்யச் சென்று பிரமனால் தடையுண்டு அவரால் மந்திரசித்தி யடைந்தவன்.

24. மேற்கடற்கரை யடைந்த ஒரு தீவில் பொன்னிறமும் தீப்போன்ற காந்தியுமுள்ள புருட னிற்கக்கண்டு அவனை நோக்கிப் போரிட வல்லையோவென அவனும் ஓர் முட்டியால் இராவணனைத் தாக்கினன். அதனால் இராவணன் பல குண்டாங்கரணங்கள் போட்டுத் தரையில்வீழ்ந்து மூர்ச்சை யடையக்கண்டு அப்புருடன் பிலத்தில் புகுந்தனன். பின்பு இராவணன் மூர்ச்சை தெளிந்து தானும் வாளேந்திக்கொண்டு பிலத்துள் புகுந்து அங்கு முன்கண்டபுருஷனைப்போல அநேகரைக் கண் டஞ்சி அவ்விடம் பாம்பணையிற் பள்ளிகொண்டு சுற்றிலு மக்கினிச்சுவாலை சூழ ரூபலாவண்யத்துடன் சாமரை யிரட்ட இருந்த திருமகளைக்கண்டு மயல்கொண்டு எடுக்கப்போக அங்கிருந்த மகாபுருடனாகிய கபிலன்மேற் போர்வை நீக்கி இவனைக்கண்டு நகைக்க இராவணன் அப்புருடனது சுவாலாமாலையா லெரிந்து மூர்ச்சித்து வலியடங்கி நீங்கி இலங்கை யடைந்து அரசாண்டிருந்தவன். சூர்ப்பநகை தன்னை இராம லக்குமணர் செய்த

பங்கங்களைச் சொல்லிச் சீதையின் அழகைப்பற்றி வர்ணிக்கக் கேட்டு மாரீசன் கூறிய புத்தி கேளாமல் அவனை மானாக ஏவித்தான் கபடசந்நியாசி யுருக்கொண்டு சீதாப்பிராட்டி தனித்திருக்கையில் அதிதி போல்சென்று தன்னைப் புகழ்ந்து அவளைப் பர்ணசாலையுடன் தூக்கி இரதத்திலிட்டுச் செல்லுகையில் சடாயு தடை செய்து சண்டையிட அவருடன் போரிட்டு மரணமூர்ச்சையாக்கிச் சீதையை யசோகவனத்திற் கொண்டுபோய்ச் சிறைப்படுத்தித் திரிசடையுட னரக்கியரைக் காவலாக்கிப் பலமுறை தன்னைமணக்கும்படி சீதையைவேண்டி, அநுமனைக் குத்தி வலிகண்டு தானும் குத்துண்டு அநுமன் வாலில் தீயிட வெவி அநுமன் இலங்கையைச்சுட அதை முன்போல் நிருமிக்கச் செய்து குடிபுகுந்து மாலியவானும் விபீஷணருங்கூறிய புத்திகேளாமல் சுகசாரணரையேவிப் பகைவரது சேனாபலங் கண்டு வரச்செய்து அவர்கள் கூறியது கேட்டஞ்சி இராமரிடம் தனித்துவந்து சரண்புகுந்து சீதையைத் திருவடியிற் சேர்க்கிறேனெனச் சென்று மந்திரிகளின் சொற்கேட்டு மாயாசீதையை அனுப்பி இராமமூர்த்திக்கு மிகுந்த கோபமுண்டாக்கி அங்கதனால் முடியிழந்து முதனாள் யுத்தத்திற் பிரமனால் கொடுக்கப்பட்ட வேலெறிந்து இலக்குமணரை மூர்ச்சிக்கச் செய்து அவரைத் தூக்கிச்செல்ல முயன்று தூக்கமுடியாது வெட்கினவன். பின் இராமமூர்த்தியுடன் யுத்தஞ்செய்து ஆயுத முதலிய இழந்து வெறுங்கையுடன் நிற்க, இராமர் இன்றுபோய் நாளைவாவெனக் கூறி அனுப்ப வோடிவந்து மாலியவான் கூறிய நீதிகேளாமல் மகோதரன் துற்புத்திகேட்டுக் கும்பகர்ணன் மறுக்கக் கேளாது அவனை யுத்தத்திற் கனுப்பி இந்திரசித் திறந்ததற்கு விசனமடைந்து சீதையைக்கொல்லச்சென்றுமகோதரனால் விலக்கப்பட்டு மூலபலத்துடன் யுத்தத்திற்கு வந்து வேலையெய்து ஓடிப் பின்பு யுத்தத்திற்குவந்து இராமரெய்த பிரமாத்திரத்தால் அபரபக்ஷ பஞ்சமியில் மாய்ந்தவன். இவன் மாய்ந்தவுடலில் மந்தோதரி வீழ்ந்து உயிர்விட்டனள். இவன் இராமருடன் எழுநாள் இராப்பகல் யுத்தஞ் செய்தனன். இவனுக்கு மூன்றரைக்கோடி ஆயுள். வீணைக்கொடி. (இராமாயணம்.)

25. சாம்பான் வீட்டிலிருந்த மாயாரதியைக் கவர எண்ணி மயனால் நிருமிக்கப்பட்டிருந்த பாசத்திற்பட்டுத் துன்புறுகையில் மந்தோதரியின் வேண்டுகோளால் மயன் தன் குமரியாகிய மாயாவதிக்குக் கூற மாயாவதி தன் கணவனுக்குக்கூறி விடுவித்தனள். (சிவமகாபுராணம்).

இராவணி—இந்திரசித்திற் கொருபெயர்.

இராவான் — அருச்சுனனுக்கு உலூபியிடம் பிறந்த குமரன். இவனுக்கு அராவானெனவும் பெயர்.

இராவுத்தன்—லப்பைகள், மரக்காயர், சோனகர்க்குப் பட்டம்.

இராவ்—மார்த்தவ பிராமணர், ஜயினர், சேர்வைக்காரர், முதலியவர்களுக்குப் பட்டப் பெயர்.

இராணாகும்பன்—இவன் சித்தூரை ஆண்ட, ராணாலக்காவிற்குப் பௌத்திரனும் ராணா மொகல் என்பவனுக்குக் குமரனுமாகிய இரசபுத்ர அரசன். இவன்கி.பி. 1419இல் சிங்காசனம் ஏறினான். இவன்தன் ராஜதானியைக் காக்கும்பொருட்டு (86) கோட்டைகளைக் கட்டினான். அவற்றுள் ஒன்று செங்குத்தான மலைமீது கட்டப்பட்ட கோமல்மர் கோட்டை, இவன் ஆபு சிகரத்திலுள்ள கோட்டையிலு மிருப்பதுண்டு இங்குள்ள கோவிலில் இவன் உருவச்சிலை உண்டு. இவன் கட்டுவித்த கோவில்களில் பெரிது ஸாத்ரிக்கணவாயிலுள்ளது. இவனும் இவன் மனைவியும் கல்வி விருப்பமுள்ள கவிஞர்கள், இவன் கீதகோவிந்தமெனும் நூலுக்குப் பாஷ்யம் எழுதினான். இவன் மனைவி மீராபாயி. இவன் மகாவீரன் மால்வா, குஜராத் சைந்யங்களை முறியடித்தான். மாமூதைச் சிறையிட்டான். இவன் மாமூதை தயாளகுணத்துடன் அவனிடம் ஒன்றும் பெறாமல் விடுதலை செய்வித்தான். இவனுடைய பெருங்குணத்தை அபுல்பேசல் எனும் சரித்திரக்காரர் புகழ்ந்திருக்கிறார். இவன் காலத்தில் இவனால் கட்டுவிக்கப்பட்ட ஜயத்தம்பம் இன்னும் காணப்படுகிறது. இந்தச் சயத்தம்பம் கட்டிமுடிக்கப் பத்து வருஷங்களாயினவாம். இவ்வாறு ராணா கும்பன் (50) வருஷம் அரசாண்டான். இவன் ஆட்சியில் ஐம்பதாவது வருஷக் கொண்டாட்டம் நடத்த இருக்குந் தருணத்தில் இவன்மகன் இவனைக் குத்துவாளால் குத்திக்கொன்றான். இக்குடிகெடு

க்கவந்த குடிகேடி இடிவிழுந்திறந்தான். இவன் குமார் ரேமால், ஸங்கன் முதலிய நால்வர்.

இராணுசங்கன்—இவன் கி. பி. (1509) இல் பட்ட மடைந்தவன். ராணுகும்பன் குமரர்களிலொருவன். இவன் தன் ராஜ்யத்தை வெகுதூரம் விசாலப்படுத்தி ஆண்டவன். நிலையிலாது அலைந்து திரிந்த தார்த்தாரிய அரசனாகிய பாமர், டில்லியரசனாகிய இப்ரீமை வென்று ராஜபுத்ர அரசனாகிய ராணுசங்கனுடன் போரிட்டு முதலில் தோல்வியடைந்து பிறகு தன்சேனைகளுக்குத் தைரியம் கூறிப்போரிட்டு வெல்ல, சங்கனும் மானத்தை விடாமல் போரிட்டான். முன்பு தன்சகோதரனுடன் செய்த யுத்தத்தில் ஒருகண் போய்விட்டது. டில்லி அரசனுடன் செய்த யுத்தத்தில் ஒருகை விழுந்துவிட்டது. ஒருகுண்டு அடிபட்டதனால் காலும் குறைந்துவிட்டது. சரீரமுழுதும் ஆயுதங்களால் (80) இடங்களில் புண்கள் ஆயின. இவ்வகைப் புறங்கொடாவீரன், வெற்றிபெருமல் சித்தூருக்குள் நுழைவதில்லையென அருகிருந்த மலைநாட்டி லிருந்தான். இவனுக்குப் பிறகு இவன் குமரன் ரத்நன் பட்டமடைந்தான். இவனும் தம்முன்னோர் கௌரவம்போல் வீரதீர முள்ளவன். இவன் பிரிதுவிராஜ குமரியைக் களவாக மணம்புணர வெண்ணித் தன்வாளைத் தனக்குப் பிரதியாக வைத்து மணஞ்செய்து கொண்டான். இச் செய்தி ரகசியம். பின்பு அவளைப் பூண்டிநாட்டரசன் ஹரன்மணந்தான். அவ்வரசியும் களவைப்பற்றி வெளியிடவில்லை. இது ரத்நன் மனதை வருத்தி ஹரனைக் கொலை செய்யக் காலத்தை நோக்கியது. அகைரியா வசந்த பண்டிகையில் அரசர்கள் தங்கள் காட்டில் வேட்டையாடும் வழக்கம்போல் ரத்நன் தன் னாட்டை யடுத்துச் சென்று அதற்கடுத்திருந்த பூண்டிக் காட்டில் ஹரனைக் கொல்ல ஒளித்திருந்து ஹரன்மீது ஒரு அம்பு விட்டான். அது அவனைக் கீழே வீழ்த்தியது. ஹரன வஞ்சகப்போர் செய்த ரத்நனைத் தூஷித்தான் தூஷணை பொருத ரத்நன் இவனைக் கொன்றே நீங்கவேண்டுமென்று சமீபிக்கையில் சாகுந்தருவாயிலிருந்த ஹரன் தன் கால்களால் ரத்நன் குதிரையைத் தாக்க ரத்நன் நிலை தவறிக் கீழே வீழ்ந்தான். உடனே ஹரன் உயி ரோட்டிப் பிடித்துக் கொண்டெழுந்து ரத்நன் மீது பாய்ந்து பழிக்குப் பழி வாங்கினான். ரத்நன் சகோதரனாகிய விக்ரமஜித் இவனுக்குப் பிறகு பட்டமடைந்தான்.

இராணுலக்கா—சித்தூர் இராஜ புத்திர அரசனாகிய ராணு ஹமீரின் குமரன். இவன் அரசாண்டிருக்கையில் இவன் குமரன் சண்டனை இளவரசனாக்கினன். சண்டனுக்கு மாண்டாராநாட் டரசனிடமிருந்து முகூர்த்த தேங்காய் வந்தது. அக்காலத்துச் சண்டன் ஊருக்கு வெளியில் சென்றிருந்ததால் காய்கொண்டு வந்தவர்களை லக்காதானே உபசரித்து என்னைப்போன்ற கிழவனுக்குத் தேங்காய் கொண்டுவரவில்லையென மீசைமீதுகைபோட்டு அவர்களைப் பார்த்துச் சொன்னான். சண்டன் திரும்பி வந்ததும் இவ்விஷயங்களைத் தெரிந்து தந்தைக்கு மணஆசை யிருப்பதறிந்து தான் தேங்காயை ஏற்பதில்லை. அதனைத் தந்தையே ஏற்கவேண்டும் என்றனன். ஆயின் எனக்குப் பிள்ளை பிறந்தால் அவனுக்கே முடிசூட்டி வைக்க வேண்டுமெனச் சண்டன் சபதஞ் செய்தபின் லக்கா மணஞ்செய்து கொண்டான். 1 வருஷத்தில் மோகல் பிறந்தான்.

இராணுஹமீர்—இவன் சித்தூர் ராணுவாகிய லக்ஷ்மணசிங்கின் பௌத்ரனும் ஆர்சிங்கின் குமரனுமாகிய இராஜபுத்திர அரசன், சித்தூரை ஆண்டவன். அலாவுதீன் சித்தூரை முற்றுகைசெய்த காலத்தில் தப்பியோடிய அஜேசிங் ஹாராவளி மலைப் பிரதேசங்களின் பள்ளத்தாக்குகளின் மேட்டில் கட்டப்பட்ட கைல்வாரா என்னும் பட்டணத்தில் வசித்துவந்தான். இதிலும் முஞ்சன் எனும் மலைநாட்டரசன் இவனை அடிக்கடி வருத்திவந்தான். இது அஜேசிங்கிக்கு மிக்க வருத்தம். இதனைக் கண்ட சகோதரன் குமரனாகிய ஹமீர், முஞ்சனை வென்றல்லது திரும்பேன் எனச் சபதஞ்செய்து புறப்பட்டுச்சென்று சில நாட்களில் முஞ்சன் தலையை வில்லின் முனையில் தூக்கிக்கொண்டு சிற்றப்பனிடம் திரும்பினன். சிற்றப்பன் களிப்படைந்து இவனுக்கே தன் முடியைச் சூட்டினான். இவனுக்குத் தன் பிதூரார்சிதமான சித்தூரைக் கைக்கொள்ளவேண்டும் எனும் எண்ணமுண்டு. பலமுறை இவனது சைந்யங்கள் சித்தூரையடுத்த இடங்களை நாசப்படுத்திக்கொண்டு வந்

தன. இந்த உபத்திரவத்தைச் சகியாத அலாவுதீனால் நியமிக்கப்பட்ட சித்தூர் அரசனாகிய மால்தேவன் தனது குமரியை ஹமீருக்கு மணம் செய்விக்க வேண்டுமென்ற எண்ணங்கொண்டான். அவ்வாறே மணமுடிந்தது. ஹமீரின் மனைவி கணவனுடன் கைல்வாராசென்று கருப்பிணியாய்க் கருவுயிர்த்தபின் சித்தூரிலுள்ள தங்கள் குலதேவதைக்குச் சிறப்புச்செய்ய வந்தனள். அந்தச் சமயத்தில் மால்தேவனாகிய தந்தை சித்தூரைவிட்டு வெகு தூரத்தில் நடக்கும் போருக்குச் சென்றிருந்தான். இது தக்க சமயமென்று ஹமீரின் மனைவி கணவனுக்கறிவிக்க, ஹமீர் சேனைகளுடன் வந்து தங்களது புராதன ராஜதானி சித்தூரைக் கைப்பற்றினான். இதில் முகம்மதியர் துரத்தப்பட்டு முகம்மதிய அரசனும் சிறையாக்கப்பட்டான். மால்தேவன் குமரனுக்கு ஒரு ஜாகீர் கொடுக்கப்பட்டது. இவன் காலத்திலும் இவனுக்குப் பின் வந்த கைத்சிங், லக்கா என்பவர்கள் காலத்தில் இராஜபுத்ர அரசாட்சி பிரபலப்பட்டது. இவன் காலத்தில் அதிக திரவியச்செலவால் பல ஜயத்தம்பங்களும் மகம்மதியரால் இடிக்கப்பட்ட பல தேவாலயங்களும் மீண்டும் புதுபபிக்கப்பட்டன.

இராஜகுலோத்துங்கபாண்டியன்—மதுரையாண்ட (33) வது பாண்டியன்.

இராஜகேசரிஅல்லதுஇராசகேசரி—ஈழநாட்டரசன் ரகுவம்சம் தமிழிற்செய்தோன்.

இராஜகேசரி இராஜாதிராஜன் — இவன் இராஜேந்திர சோழனுக்குப்பின் பட்டத்திற்கு வந்தான். இவன் கி. பி. 1018-இல் பட்டமடைந்தான். இவன் மானாபரணன், வீரகேரளன், சுந்தரபாண்டியன் எனும் பாண்டியருடன் போரிட்டு மானாபரணன் தலையைக் கொய்து வீரகேரளன் தலையை யானையால் மிதிப்பித்துச் சுந்தரபாண்டியனை முல்லையூர்புகச் செய்தனன். வேணாட்டரசன் ஒருவனைச் செயித்தான். இவன் காந்தளூர்ச்சாலையில் கலமறுத்தான். இவன் குந்தளரின் அரசனாகிய ஆகவமல்லனையும் அவன் குமரர் சேனாபதிகளையும் வென்றான். பின் ஈழத்தின்மீது படைகொண்டுசென்று விக்ரமபாகு, விக்ரமபாண்டியன் என்பவர்களை வென்றான். பின்னும் குந்தளருடன் போரிட்டுக் காம்பிலியைப் பிடித்துக்கொண்டு கொப்பத்தில் போர்புரிகையில் இறந்தான். இவனுக்கு ஜயங்கொண்ட சோழன் எனவும் பெயர். இவன் தம்பி இராஜேந்திர தேவன்.

இராஜகோபாலப்பிள்ளை—இவர் சென்னை கோமளீசுரன் பேட்டையில் பிறந்த வடுகு யாதவர் குலத்தவர். அஷ்டாவதானம் சபாபதி முதலியாரவர்களிடத்தும், அஷ்டாவதானம் வீராசாமி செட்டியாரவர்களிடத்தும் கல்வி கற்றவர். சென்னை சர்வகலாசாலைத் தமிழ்த் தலைமைப் புலமை நடத்தியவர். இலக்கண இலக்கியங்களில் வல்லவர். தமிழில் எம்பார் ஜீயர் வைபவம் பாடியவர். நாலடியார், நீதிநெறி விளக்கம், பாரத வெண்பா முதலியவற்றிற்கு புத்துரை எழுதினவர். எனக் கியற்றமிழாசிரியர்.

இராஜசிங்ராணா—இவன் அமரசிங்கின் குமரன், சித்தூர் ராணாக்களில் ஒருவன். ஜிஹாங்கிர் கட்டளைக் குட்பட்டுச் சித்தூரை ஆண்டவன். இவன் காலத்து ஒளரங்கசீப் எனும் முகல் அரசன் ரூபநகரத்து ராஜபுத்ரியைத் தான் கொள்ள இச்சித்தான். ராஜகுமாரி ராஜசிங்குக்குக் கடிதமெழுதித் தன்னைக் காக்கக்கூறினாள். உடனே அம்பர்நாட்டு ஜயசிங்கும் மார்வார்நாட்டு யசஸ்வந்தசிங்கும் துணையுடன் சென்று முகம்மதியரை வென்று ராஜகுமரியை மீட்டனர். இதனால் ஒளரங்கசிப் ஜசியா தலைவரியை இந்துக்களுக்கு விதித்தான். ஒளரங்கசீப் ராணாவைத் தாக்கப் பெருஞ்சேனை சேர்த்துத் தன் பிள்ளையை அனுப்ப அவன் ராஜபுத்திரர்களுடன் வேண்டி யுயிர்தப்பி ஓடினன். ஒளரங்கசீப் பலமுறை ராணாவையெதிர்க்க எண்ணியும் வஞ்சனைசெய்தும் நிஷ்பலமாயிற்று. ராஜசிங் தன் காலத்தில் பன்னிரண்டு மைல் சுற்றளவுடையதும் அதிக உறுதியுமுள்ள ராஜராஜ சமுத்ரமெனும் ஏரியைக் கட்டினான். ராஜநகர் எனும் பட்டணமும் கட்டப்பட்டது. இவனுக்குப்பின்வந்த ரஜபுத்ர அரசர் சிந்தியா ஹோல்கார் எனும் மராட்டியரால் துன்புற்று ஆங்கிலேயரால் ராஜ்யம் பெற்றனர்.

இராஜசூயம்—ஒரு யாகம் தர்மரால் செய்யப்பட்டது.

இராஜசூயம்வேட்டபெருநற்கிள்ளி-உலோச்சனாரால் பாடப்பட்ட சோழன்.

**இராஜதருமம்**—அரசன் திக்குப்பாலகர் சுவரூபம் ஆதலால் அனைவரையும் அடக்கி ஆளும் சக்தி அவனுக்கு உண்டாயிற்று. அரசன் காரியாகாரியங்களையும், தேசகாலங்களையும் எண்ணி அடங்கியும் பலமுள்ளபோது உயர்ந்தும் வருவான். அரசனை ஒருவனும் அவமதிக்கக்கூடாது. அவன் கையிற் கொள் கோல் சகலபிராணிகளின் ரக்ஷகத்தின் பொருட்டாம். அது ஈசுவர சுவரூபமாகவும் சராசரங்கள் அஞ்சத்தக்கதாகவும் இருக்கிறது. அரசன் தண்டத்தை ஆளாவிட்டால் பொருள், பசு, தானியம், ஜாதி, யஞ்ஞம், அழியும். அத்தண்டத்தைப் பட்டாபிஷேகம் உள்ளவனும், உண்மை பேசுகிறவனும், பொய், மெய் இவைகளை யறிந்து தீர்மானிப்பவனும், நீதிசாஸ்திரஞானம் உள்ளவனும், தர்மார்த்தகாமங்களை அறிந்தவனும் பெற வேண்டும். அரசன் நாடோறும் நீதிசாத்திரம் அறிந்தோரை உபசரித்து நீதிசெலுத்த வேண்டும். இந்திரிய நிக்ரகஞ்செய்த அரசனுக்கு உலகம் வசப்படும். காமத்தால் உண்டான வேட்டையாடல், சூதாடல், பகலுறக்கம், வம்பளத்தல், ஸ்திரீலோலனுயிருத்தல், குடித்தல், பாட்டு, கூத்து, வாத்தியம் இவைகளில் விருப்பங்கொளல், வீண்திரிச்சல் ஆகிய பத்தும், கோள், துணிவு, துரோகம், பொருமை, பிறன் குணத்தைச் சகியாமை, ஒருவன் பொருளை அபகரித்தல், காரணம் இன்றி அடித்தல், திட்டுதல் ஆகிய எட்டையும் ஒழித்தல் வேண்டும். தன் பாட்டன்நாள்முதல் மந்திரித்தனம் செய்தார் மரபில் கலைவல்லாராகிய எழு எட்டுப் பெயரைத் தெரிந்து, மந்திரியராக்கிக் கொள்ளல் வேண்டும். பொருளை விருத்தி செய்பவராயும், ஞானமுள்ளாராயும் உள்ள வேறுசிலரை பொக்கிஷ முதலான இடங்களில் நியமிக்க வேண்டியது. பலம், சாமர்த்தியம், நற்குலப் பிறப்புள்ளவர்களைப் பொக்கிஷம், தங்கசாலை, நெற்கள முதலிய இடங்களில் நியமிக்க வேண்டியது. பயந்தோரை மடைப் பள்ளியிலும் அந்தப்புரத்திலும் இருத்த வேண்டியது. கல்வி அறிவுள்ள தூதனை அழைத்துக்கொள்ளவேண்டியது. ஆயுத வித்தையில் பழக்கமுள்ள சேனையைச் சேனாதிபனிடத்தும், தேசவிசாரணை பொக்கிஷம் முதலியவற்றைத் தன்னுதினத்திலும், சண்டைசெய்வதும் சமாதானமாவதும் ஆகிய இரண்டையும் தூதனிடத்தும் நியமிக்க வேண்டியது. தன் பட்டணத்திற்குச் சமீபத்தில் உபகிராமங்களை ஏற்படுத்த வேண்டியது. தனக்காகப் பல அரண்களுள்ள கோட்டைகளையும் மனையையும் கட்டிக்கொள்ளல் வேண்டும். தான் வாங்கவேண்டிய தீர்வையை ஆறிலொன்றுவாங்கி அவற்றைத் தேவர்கோயில் தேசரக்ஷணத்திற்கு உபயோகித்தல் வேண்டும். பூமியைச் சாமபேத தானதண்டங்களால் பகைவரை அடக்கி ஆளவேண்டும். துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் செய்தல் வேண்டும். மூடத்தனத்தால் பெரியோரைப் பகுத்தறியாமல் துன்பப்படுத்துகிறவன் புத்திரமித்திர களத்திராதிகளுடன் அழிகிறான். அரசன் கடன்கோடல் முதலிய பதினெட்டு வகைத்தாகிய வழக்கத்தையும் புத்திநுட்பத்தால் அறிந்து தீர்க்க. (மநு.)

**இராஜபுரம்**—கலிங்கதேசத்தில் உள்ள பட்டணம். சித்திராங்கதன் ஆண்டது.

**இராஜராஜன்**—1. (இராஜகேசரி) இவன் காந்தளூரில் கப்பல்களைத் தாக்கினன். அமரபுஜங்கன் எனும் பாண்டியனை வென்றான். பிறகு கங்கபாடி, நுளம்பபாடி, வேங்கைநாடு, குடகு முதலியவற்றையும் கைக்கொண்டான். கி. பி. 1006-இல் கலியூரில் இவன் சேனாபதி கொத்தமண்டலமுடையானான அப்பிரமேயன் போஜன் மந்திரியாகிய நாகண்ணனை வென்றனன். இதில் தானு மிறந்தான். இவன் (கி. பி. 972) இல் தன் மகன் வேங்கைநாடு அரசிலாமை யிருப்பதுகண்டு தன் மகன் இராஜேந்திரனை அனுப்பி அந்நாட்டைத் தன் வசப்படுத்தினன். இராஜேந்திரன் அந்நாட்டுடன் சாளுக்கிய அரசனான விமலாதித்தியனைப் பிடித்துச் சிறையாக்கித் தஞ்சைக்குக் கொணர்ந்து சிலநாள் பொறுத்துத் தங்கை குந்தவ்வையை இவனுக்கு மணஞ் செய்வித்து அவனாட்டைத் தந்தான்.

2. இவனது தண்டநாயகரில் ஒருவனான பஞ்சவமாராயன் பனசோகேயெனும் இடத்தில் வெற்றிகொண்டதினிமித்தம் தண்டநாயகனை வேங்கைமண்டலம், கங்கமண்டலாதிபதியாக்கி க்ஷத்ரிய சிகாமணி, கொங்கான்வான் எனப் பட்டமளித்தான். கொல்லமென்னும மலைநாடும், இராஜராஜனால் செயிக்கப்பட்டது. இவனால் ஈழமும் செயிக்கப்பட்டது. இவன்

பாண்டி, சேர, ஈழமண்டலங்களை வென்றதால் இவனுக்கு மும்மடிச்சோழன் என ஒரு பெயர் உண்டு. இவன் காலமுழுதும் மேற்குச் சாளுக்கியருடன் போரிட்டான். இவனுக்குச் சிவபாதசேகரன், அருண்மொழி, இராஜாச்ரயன், க்ஷத்ரியசிகாமணியெனவும் பெயருண்டு, இவனுக்கு, பஞ்சவண்மாதேவி, அபிமானவல்லி, சோழமாதேவி, தந்திசத்திவிடங்கி, திரைலோக்யமாதேவி என ஐவர் தேவியர். இவன் குமரன் பரகேசரி ராஜேந்திர சோழன், இருவர் குமரியர் சந்தவ்வை, மாதேவடிகள், நடுவிற் பெண்ணையென மற்றொருத்தி இருந்ததாகத் தெரிகிறது.

3. இவன் தன்னுட்சியின் 29-ஆம் வருஷத்தில் துலாபாரதானஞ் செய்தான். இவன் தர்ம பத்தினியாகிய தந்திசக்தி விடங்கி இரண்ய கர்ப்பம்புக்க கதையைத் திருவிசலூர் சாசனம் கூறும். இவன் தஞ்சையில் இராஜ ராஜேசுரர் ஆலயம் கட்டுவித்தான், இவனைப் புகழ்ந்து கருவூர்த் தேவர் பதிகத்தில் பாடியிருக்கிறார். இவன் தமிழ்ப் பாஷாபிமானி இவன்மீது இராஜ ரேஜேசுர நாடகம் பாடப்பட்டது. நம்பியாண்டார்நம்பிகளும், கண்டாரதித்தேவரும் இவன் காலத்தவர்கள். இவன் சைவப்பற்றுள்ளவனாயினும் மற்ற மதங்களில் வெறுப்புற்றவனல்லன். இவன்நாகப்பட்டினத்து ஜைனவிஹாரத்திற்கு ஆனைமங்கலமென்று ஒரு கிராம மளித்தான். வைஷ்ணவாலயங்களுக்கும் நந்தா விளக்குகள் பல வைப்பித்தான். இவனது முக்ய மந்திரி ஸ்ரீ கிருஷ்ணன் ராமனான மும்மடிச்சோழ பிரம்ம மாராயன். இவன் குடிகளிடம் ஆறிலொரு கடமையே வாங்கினன். (சாசனம்.)

இராஜாதி ராஜபாண்டியன் — மதுரையாண்ட ௨0-வது பாண்டியன்.

இராஜாதேவி—வாசுதேவன் தங்கை. ஜயசேநன்பாரி, விந்தானுவிந்தர்தாய்.

இராஜு—இவர்கள் தெலுங்கரில் ஒரு பிரிவினர். இவர்கள் பூணூல் தரிப்பர் இவர்கள் தங்களை க்ஷத்ரியர் என்பர். இவர்கள் தெலுங்ககாபு, வெலமர்கள். இவர்கள் தாங்கள் வீரர் என்பதைக் குறிக்கத் தங்கள் கல்யாணத்தில் வாளைவைத்து வணங்குவர்.

இராக்ஷசசத்திரம் — தந்தையைக் கொன்ற இராக்ஷசவதைப் பொருட்டுப் பராசரரால் செய்யப்பட்ட யாகம். (பாரதம்-ஆதி.)

இராக்ஷடபிரந்து—பாதருக்குப் பஞ்சசேநியிடத் துதித்த குமார்.

இராக்ஷதகணநக்ஷத்ரம்—கார்த்திகை, ஆயிலியம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம்.

இராஷ்டரபலி—உக்ரசேநன் குமரி.

இராஷ்டரபாலன் — (யது.) உக்ரசேநன் குமரன். கம்சன் தம்பி.

இராஷ்டரன் — காசியின் குமரன். இவன் குமரன் தீர்த்தபசு.

இரி — தக்ஷனுக்குப் பிரசூதியிட முதித்த குமரி. யமன் தேவி.

இரிசிகர் — (ருஷி) இவர் பிருகுருஷியின் புத்திரர். தமக்குச் சத்தியவதியைத் தேவியாக்கும்படி காதியை யாசிக்க அவர் ஒரு காது பசுமையையும் மற்ற உறுப்புக்கள் வெண்மையுமான (௧000) குதிரைகள் கொண்டு கொடுத்து மணந்து கொள்க என்றனர். அவ்வகையே வருணனிடம் ஆயிரங் குதிரைகள் பெற்றுச் சத்தியவதியை மணந்தவர். இவர்குமார் சமதக்னி இவரை மாமியாரும் தேவியும் புத்ரன் வேண்டுமென யாசித்தனர். இவர் மந்திர மூலமான அவிசைப்பாகஞ் செய்து வைத்து ஸ்நானத்திற்குச் சென்றனர். சத்தியவதி தனக்கென்று வைத்திருந்ததைத் தன் தாய்க்குக் கொடுத்து மற்றதைத் தான் அறியாது புசித்தனள். ஸ்நானத்திற்குச் சென்ற முனிவர் இதனை யறிந்து மனைவியை நோக்கி உன்னிடம் தண்டநாயகனும், உன் தாயிடம் பிரமஞானியுமுதிப்பர் என்று தன் மனைவியை விட்டுச் சுவர்க்கஞ் செல்ல மனைவியாகிய சத்தியவதி யல்லது (கௌசிகை) பிரிவாற்றாது உடன்தொடர முனிவர் திரும்பிப் பார்த்துக் கட்டளையின்றி வந்ததால் கௌசிகி நதியாகவெனச் சபித்துச் சென்றனர். (பாகவதம்.)

இரிடி—இவர் உத்தாலகர் குமரர். நலபர்வதத்தில் சிவபூசைசெய்து சிவகணத்தவருள் ஒருவராம் பதம் பெற்றனர்.

இரிதுத்தாமன்—கோமுகனுக்குக் கற்கனிகையிட முதித்த குமரன்.

இரிதேயு—மேதாதி குமரன்.

இரித்துவஜன்—தியுமானுக் கொருபெயர்.

இரிபன்—யதுவின் குமரன்.

இரிபு—1 வேதசிரனுக்குத் துஷிதையிட முதித்த விஷ்ணுவினவதார விசேஷம்.

2. பிரமன் குமரர். இவர் நிதாகருக்கு ஆசிரியர்.

இரிபுஞ்சயன்—1. விசுவசித்தின் குமரன்.
2. மகததேசத் தரசன் மந்திரியரால் கொல்லப்பட்டவன்.

இரிபுமர்த்தனபாண்டியன் — வமசததவச பாண்டியனுக்குக் குமான்.

இரிபுஜித் — ரௌரவமுனிவரின் அநுக்ரகம் பெற்ற அரசன். (பிரகன்னாரதீய புரா.)

இரிக்ஷன்—1. அஜாமீடன் குமரன். இவன் குமாரன் சமாவர்ணன்.
2. தேவாதிதி குமரன். இவன் குமரன் பீமசேனன்.

இரீதன் — சாக்ஷுஸமனுவறகு நட்வலையிட முதித்த குமரன்.

இரு—அதிதிதேவிக் கொருபெயர்.

இருகதாச்சு—(ரிக்ஷாஜசு). இவன், வடபால் சென்று, வந்தவர் பெண்ணுருவடையுந் தலத்தை அறியாது செல்லப் பெண்ணுருவடைந்தனன். பெண்ணுருவடைந்த இவனை இந்திரன் புணர்ந்து வாலியையும், சூரியன் புணர்ந்து சுக்கிரீவனையும், பெற்றனர். இவன் பிரமன் அநுக்கிரகத்தால் மீண்டும் ஆணுருவடைந்து வாலிக்குப் பட்டங் கட்டினன்.

இருகன்—விருகன் தந்தை.

இருகால் இராசி—மிதுனம், கன்னி, துலாம், கும்பம், ஆக-4.

இருத—1. சத்திய இதன் குமரன.
2. சவனன் குமரனாகிய பிரமதிக்கும் கிருதாசி யென்னும் காந்தருவ ஸ்திரியினுக்கும் பிறந்த இருடி. இவன் தேவி பிரமத்துவரைப் பாம்புகடித் திறந்தனள். அதனால் பாம்புகளை இவன் கொலை செய்துவருகையில் பாம்புருவடைந்திருந்த சகஸ்திரபாதருஷி வேண்டுகையால் பாம்புகளைக் கொலை செய்யாமல் நிறுத்தினன். இவனை இருருவெனவுங் கூறுவர்.

இருக்குமணி — பிரத்துயும்நன் தாய். பீஷ்மகன் குமரி. தமயனாகிய இருக்குமி தன்னைச் சிசுபாலனுக்கு மணப்பிக்க விருந்ததை ஒரு பிராமணர் மூலமாகக் கண்ணனுக் கறிவித்துக் கௌரீபூசையால் கண்ணனுடன் சகல அரசருங் கண்டிருக்க இரதத்திலேறித் துவாரகை சென்றனள். இதனால் இருக்குமி கண்ணனை யெதிர்த்து யுத்தஞ்செய்யக் கண்ணன் இருக்குமியின் சிரத்தைக் கொய்யச் சரமெடுத்தலைக் கண்ட இருக்குமணி தமயனைக் கொல்லாதிருக்க வேண்டினள். இவளுக்குப் பிரத்தியும்நன் முதலிய (௧௦) குமார்கள்.

இருக்துமன்—1. இருகன் குமரன்.
2. ருசன் குமரன்.

இருக்துமாங்கதன்—1. சூர்யவம்சத தாசன். இவன் தேவி சந்தியாவளி. இவனை வசிட்டர் இந்திரசபையில் புகழ்ந்து கூறினர். அதனால் இந்திரன் அதனுண்மையறிய நாரதரை அவன் சபைக் கனுப்பினன். அரசன் நாரதர் வர அவரை எதிர்கொண்டுபோய் வணங்கி ஆசனத்திருத்தி வழிபாடு முதலியவை குறைவிலாது செய்து தன் பூந்தோட்டத்திலுள்ள அரிய பூக்களைத் தொடுத்து மாலைசெய்வித்து மாலை சாத்தினன். இந்த மாலைபூண்ட நாரதர் தேவசபைக்கு மாலையுடன் செல்ல இந்திரன்கண்டு இம்மாலை எதென்றனன்? நாரதர் இது இருக்குமாங்கதன் பூந்தோட்டத்திலுண்டாம்மலர்கள் என்றனர். இந்திரன் இந்த நல்ல மலர்களிடத் தாசைகொண்டு தன் தூதர்களை அழைப்பித்து இன்று முதல் இருக்குமாங்கதன் தோட்டத்திலுள்ள மலர்களைக் கொய்துவருக என அவ்வகையே செய்துவந்தனர். இவ்வகை தினமும் செய்துவர அரசன் தோட்டத்துக் காவற்காரரைக் கோபித்தனன். தோட்டக்காரர் எவ்வகைத் தேடியுங் காணாது வருந்தி ஒரு நாளிரவில் இருளின் மிகுதியால் உலர்ந்த கத்திரிச்செடிகளின் பூண்டுகளைக் கொளுத்தினர். இப்புகை மிகுதியால் விமானத்தின் வலியடங்கத் தேவர் காவற்காரர் வசத்தி லகப்பட்டனர். காவலாளிகள் தேவரை அரசனிடங் கொண்டுவர அரசன் கண்டு வணங்கி இருப்பிடஞ் செல்ல அனுப்பினன். தேவதூதர் அரசனை நோக்கி அரசனே கத்திரிப்பூண்டின் புகையால் தேவவிமானம் ஆகாயத்திற் செல்லும் வலியற்றது. ஏகாதசி விரதமிருந்தயாராயினும் அந்த விரதபலத்திற் சிறிது தருவரேல் நாங்கள் விமானத்துடன் எங்களிட மடைகின்றோமெனத் தேவர் கூறக் கேட்டு அவ்விடம் யாரையுங்காணாது ஏகாதசியில் தன் கணவனுடன் சண்டைசெய்து உணவு கொள்ளாமல் அன்று இராப்பகல் முழுதும் பட்டினியிருந்த வண்ணாத்தி ஒருத்தி ஏகாதசியில் விரதமிருந்த பலத்தைத் தரப்பெற்றுச் சுவர்க்கமடைந்தனர். இதனை அரசனுணர்ந்து தன் நாட்டிலுள்ளார் அனைவரையும் ஏகாதசிவிரத

மிருக்கச்செய்து தானும் விரதமிருந்தனன். இவனிடம் ஒருமுறை துருவாசமுனிவர் அதிதியாக வந்து பாரணைக்கு வருகிறேனென்று சொல்லி ஸ்நானத்திற்குச் சென்று சற்றுத் தாமதித்திருந்தனர். அரசன் பாரணைகாலம் தவறுவதறிந்து இருடி வாராமையால் அன்னம் புசியாமல் விரத காலந் தவறாமல் தீர்த்தபானஞ் செய்தனன். இருடிவந்து நடந்ததறிந்து மிக்க கோபங்கொண்டு சாபமிடத் தொடங்குகையில் அரசன் நாராயணனைத் துதிக்க, விஷ்ணு சக்கரம் இருடியைத் துரத்தத் தொடங்கியது. இருடி பயந்து சக்கரத்திற்கு ஒளிமழுங்கச் சாபந்தந்து அரசனிடம் வந்து குறையேற்று இருப்பிடஞ் சென்றனர். இவனுட்டிலுள்ளார் அனைவரும் ஏகாதசி விரதம் அனுட்டித்து வருகையில் யமன் தனக்கு வேலையின்றிப் பிரமனிடம் முறையிட அவன் மோகினியை யேவி அரசனை மயக்குவிக்க அரசன் அவளிடத்து மயங்கி யிருந்தனன். ஒருநாள் ஏகாதசி யென்று முரசு அறையக்கேட்டு நீங்க, மோகினி அரசனைப்பார்த்து உன்னை நீங்காதிருக்கின்றேன் கேட்டது தருகின்றேன் என்றசொல்லை மறந்தீரோ என அரசன் நீ எது வேண்டினு மீவேன் ஏகாதசி விரதம் இழக்கேன் என்றனன். மோகினி ஆயின் உன் குமரனைத் தாய் பிடிக்க நீ கொலைபுரிந்து தருகஎன அவ்வகையே தன் தேவியிடத்துக் கூறிக் குமரனைக் கொலைசெய்கையில் தேவர்கள் தரிசனந் தந்து குமரனை உயிர்ப்பித்து அரசனுக்கு வேண்டிய வரந்தந்து தமதிருக்கை சென்றனர். அரசன் சிறிது காலம் அரசாண்டு தன் குமரன் தருமாங்கதனுக்குப் பட்டமளித்து நல்லுலக மடைந்தனன். (நாரதீய புராணம்.)

2. சல்லியனுடைய குமரன். (பா-ஆதி.)

இருக்குமி—1. விதர்ப்பநாட்டரசன், இருக்குமணியினுடன் பிறந்தவன்.

2. பீஷ்மகன் குமரன்.

3. போசகட நாட்டரசன்.

இருக்குமேகு—ருசகன் குமரன்.

இருக்குமேஷு—இருகன் குமரன்.

இருக்குவேதம் — நான்கு வேதங்களில் ஒன்று. இது இருபத்தொரு சாகைகளுடையது. இதற்குள்ள உபநிடதங்கள் ஐதரேயம், கௌஷீதகி, நாதபிந்து, ஆத்மப்பிரபோதம், நிருவாணம், முத்கலை, அக்ஷமாலிகை, திரிபுரை, சௌபாக்யம், வக்விருச்சானை எனப் பத்தாம்.

இருக்மரதன் — 1. மத்திராதிபதியாகிய சல்லிய புத்திரன் இவன் புத்திரர்கள் அனைவரும் அபிமன்யுவால் கொல்லப்பட்டனர். (பா-பீஷ்).

2. துரோணசாரியருக்கு ஒரு பெயர்.

இருங்கிருசன்—சமீக முனிவருக்குப் பாம்பைச் சூடியவன் இன்னான் என்று சிருங்கி முனிவருக்குக் கூறியவன்.

இருங்கோவேள்—இவன், வடபக்கத்தில் ஒரு முனிவருடைய வேள்வியில் தோன்றித் துவாராபதியை ஆண்ட (சக) வேளிருள் ஒருவன். ஒரு பெரியவர் தவஞ்செய்துகொண்டிருந்த காலத்தில் அவர்க்கு இடையூறு செய்யவந்த புலியை அவர் உத்தரப்படி கொன்று புலிகடிமால் என்று பெயர் பெற்றவன். இறந்த வேள்பாரியின் பெண்களை மணந்துகொள்ளக் கூறிய கபிலர்சொல்லை மறுத்து அவரால் வெறுக்கப்பட்டவன். இவன் முன்னோரில் ஒருவன் கழாத்தலையாரை இகழ்ந்து அரையநாட்டிருந்த சிற்றரையம், பேரரையம் இழந்தனன். கொடையாளி, "நீயே வடபான்முனிவன் றடவினுட்டோன்றிச், செம்புபுனைந்தியற்றிய சேணெடும்புரிசை, யுவராவீகைத்துவரை யாண்டு, நாற்பத்தொன்பது வழிமுறை வந்த வேளிருள் வேளே" "ஒலியற் கண்ணி புலிகடிமால்" என்ப. (புறநானூறு.)

இருங்கோன்ஒல்லை ஆயன்செங்கண்ணனார் — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் சாதியில் இடையராக இருத்தல் கூடும். இவரது இயற்பெயர். செங்கண்ணனார். உறுப்பால் வந்தபெயர். இவர் அகத்தில் பொருள்வயிற் பிரிந்து போகாநின்ற தலைவன் கல்நெஞ்சினை நோக்கிப் பரிதபித்தலைக் கூறுதல் இனிமை தரும். (279.)

இருசமயசோதி — சைவவைஷ்ணவ சமயங்களின் ஏற்றத் தாழ்வைக் கூறிய நூல்.

இருசமயவிளக்கம் — சைவவைஷ்ணவ சமயங்களின் ஏற்றத் தாழ்வைக் கூறிய நூல் அரிதாதனியற்றியது.

இருசி—1. ஒரு பிரசாபதி.

2. ஒரு க்ஷுத்ர தேவதை.

இருசிகசிங்கர்—அரணி புத்ரர் என்பர். விபாண்டகர் புத்ரர் எனவுங் கூறுவர். இவர் உரோமபதன் நாட்டில் மழையிலா

திருக்கையில் வேசையரால் வஞ்சிக்கப்பட்டு அங்நாடடைய மழை பெய்தது. அது கண்ட அரசன் எதிர்கொண்டு வணங்கி க்ஷமைவேண்டித் தன் குமரியாகிய சாந்தையை மணம்புரிவிக்கப் பெற்றவர். தசரதனுக்குப் புத்திரகாமேஷ்டியாகம் செய்வித்தவர். கலைக்கோட்டுமுனிவரெனவும், பெயர். விபாண்டகரைக் காண்க. (பாகவதம் இராமாயணம்).

இருசிகன் —1. ஊருவன் குமரன் எனவும், பிருகுவின் குமரன் எனவுங்கூறுவர். இவன் விச்வாமித்ரன் உடன்பிறந்தவளாகிய சத்யவதியை மணந்தனன் என்பர். இவனை இரிசிகன் எனவுங் கூறுவர். ஒருமுறை சூர்யவம்சத்தாசருள் ஒருவனாகிய அம்பரீஷன் யாகப்பசுவினை யிழந்து அதற்குப் பதில் நாப்பசுவேண்டித்தேடி வருகையில் அவனுக்கு இவன் தன் குமரர் மூவரில் முன்னோனும், கடையவனுமொழிய நடுப்பிறந்தவனாகிய சுனச்சேபனை விற்றுப் பொருள் பெற்றனன். அம்பரீஷன் அந்த வேதியச்சிறுவனை அழைத்து வருகையில் சிறுவன், வழியில் சந்தித்த அம்மானாகிய விச்வாமித்திரனைக் கண்டு அழுதனன். விச்வாமித்திரன் அவன் காதில் மந்திரமுபதேசித்து இதை நீ செபித்து இரு, இதனால் தேவர் திருப்தி அடைவர் எனக் கேட்டு அவ்வகை செய்து உயிர்பிழைத்தனன். இவன் குமரன் சமதக்னி.

2. சௌநகன் குமரன்.

3. தருமன் குமரன். இவன் குமரர் சியாமகன், பிரது, இருக்மேஷு, இருக்மன், புருசித்.

இருசியசிங்காச்ரமம்—கௌசகிநதியின் தீரத்தில் உள்ள இடம். அதில் லோமசேனனுடன் தர்மபுத்திரன் சென்றதாகப் பாரதம் கூறுகிறது.

The hermitage of the Rishi near the river Kusi situated at Singheswar in the District of Bhagalpur.

இருசிகர்—பிருகுபுத்ரர். இருசிகரைக்காண்க.

இருசியமுகம்—ஒரு மலை. இது கிஷ்கிந்தைக் கருகிலுள்ளது. இதில் சுக்ரீவன் வாலிக்குப் பயந்து ஒளித்திருந்தனன். பம்பை விரசு இதற்கருகிலுள்ளதெனவுங் கூறப்பட்டிருக்கிறது. A mountain situated 8 miles from Anagundi on the bank of the river unga Thungabhadra.

இருசுவரோமா—சுவர்ணரோமாவின்குமரன்

இருசேயன் — ரௌத்திராசுவன் மூத்தகுமரன்.

இருஞ்சிறை—பாண்டியன் மேகங்களைக் கட்டிச் சிறைப்படுத்திய இடம் "கட்டுநெல்லூரிருஞ்சிறை"என வழங்கும்; மாதுமதுரைக்குச் சமீபமானது. (திருவிளையாடல்).

இருடிகோல்லியம்—கலிங்க தேசத்திலுள்ள நதி. (This is a river on which Ganjam is situated. It rises in the Mahendra hills.)

இருடிகம் — வடதிசையில் காமம்பொஜ நாட்டிற்கு சமீபத்திலுள்ள தேசம். (The Russian Empire.

இருணத்திரயம் — கிரியாருணம், பிரமசாயருணம், அல்லது தேவருணம், ரிஷிருணம், பித்ருருணம்.

இருதலைப்பக்ஷி—இது தலைக ளிரண்டும் உடல் ஒன்றுமாகவுள்ள பக்ஷி யென்பர். இப்பக்ஷியை அவ்வுருவமாக எழுதுகிறார் களேயன்றி அவ்வகை பக்ஷியிருக்குமிடம் செய்கை ஒன்றும் கண்டதில்லை.

இருதத்துவசன்—1. காச்யன் வம்சத்தவன்.

2. குவலாயுசுவனுக்கு ஒரு பெயர். இவன் சத்துருசித்தின் குமரன். காலவமுனிவர் ஒருநாள் தங்களை வருத்தப்படுத்தும் அரக்கனைப்பற்றிச் சிந்திக்கக் குவலயாசுவமெனும் ஒரு குதிரை ஆகாயத்திலிருந்து சூரியனாலனுப்பப்பட்டது. உடனே அசரீரி, முனிவரைநோக்கி இந்தக்குதிரையைச் சத்ருசித்தின் குமரனாகிய இருதத்துவசனிடம் தரின் அவன் உங்கள் பகையை வெல்வானென்று மறைந்தது. முனிவர் அந்தக் குதிரையைக்கொண்டு சத்ருசித்தினிடம் வந்து நடந்ததைக் கூற அரசன் தன் குமரனை முனிவர்எண்ணப்படி அனுப்பினன். இருதத்துவசன் அந்தக் குவலயாசுவம் ஏறினமையால் குவலயாசுவன் எனும்பெயரடைந்து முனிவருக்குப் பின் செல்ல, அசுரன் முனிவராச்சிரமத்தில் பன்றியுருக்கொண்டு தீமை செய்வதறிந்து அவனைத் தொடரப் பன்றியுருக்கொண்ட அசுரன் பலகாதமோடி ஒருபிலத்தில் மறைந்தனன். அரசனும் விடாது பின்பற்றி அப்பிலத்தின் வழிச்சென்று அங்கு நிர்ச்சனமான நகரம் தோன்றக் கண்டு அவ்விடம் ஒருபெண் வாய்பேசாமல் போதல் கண்டு தன்குதிரையை அவ்விடமிருந்த மாத்தில் கட்டிவிட்டுப் பின்தொடர அவள் திவ்யமான மாளிகை யொன்றில்

புக அரசனுஞ் சென்று அம்மாளிகையில் ஒரு பொன்மயமான மஞ்சத்தில் அழகு குடி கொண்டாற்போல் ஒருபெண்ணிருக்கக் கண்டனன். அந்தப்பெண், அரசகுமரனைக் கண்டு மயல்கொண்டு மஞ்சத்தில் விழுந்தனள். இவளைக் குண்டலை யென்னும் அவளது நண்பி தேற்றி அரசனை நோக்கி, அரசனே இந்தப் பெண், விசுவாவசு எனும் காந்தருவராசன் பெண், பெயர் மதாலசை, இவளைப் பாதாளவாசியாகிய வச்சிரகேதுவின் மகன் பாதாளகேது எனும் அரக்கன் கவர்ந்து இவ்விடம் வைத்திருக்கின்றான். இவள் சாகத் துணிகையில் காமதேனுதோன்றி இவளை நோக்கி இந்த அரக்கன் மண்ணுலகடைகையில் எவன் கையில் மாளுகிறானோ அவனே உனக்கு நாயகன் எனக் கூறியது. அதனால் இவள் சாகாதிருக்கின்றாள் என்றனள். அரசகுமரன் அவ்விடமிவளை மணந்து திரும்புகையில் பாதாளகேதுவுடன் கூடிய அரக்கர் எதிர்க்க அவர்களைவென்று மனைவியுடன் தன் னகரடைந்தனன். இவன் ஒருநாள் வேதியரைக் காக்கக் காட்டின் வழிச் செல்லுகையில் பாதாளகேதுவின் தம்பி தாலகேது தவசிவேடம் பூண்டு இவனுக்குமுன் வந்து அரசனே உன்மார்பிலிருக்கும் பதக்கத்தைத்தரின் இந்த யமுனையில் மூழ்கி வருணயாகம் முடித்து இந்தப் பதக்கத்தைத் தக்ஷிணை கொடுத்து வருகிறேன், அதுவரையில் இந்தக் கரையிலிரு என்ன, அரசன் உடன்பட்டுப்பதக்கத்தைத் தந்தனன். அரக்கன் அதனைப் பெற்று நீரில் மறைந்து மதாலசையிடஞ் சென்று அரசன் அரக்கனு லிறந்தனன் என்று பதக்கத்தைக்காட்டப் பிரிவாற்றாத மதாலசை யிறந்தனள். அரக்கன் பதக்கத்தை யவ்விடம் எறிந்து மீண்டும் அரசனை அவனிடம்போகக்கூறி மறைந்தனன். அரசன் பட்டணஞ் சென்று அரக்கன் செய்த வஞ்சனை யறிந்து விசனமடைந்திருந்தனன். இவ்வரசனுக்கு அசுவதரன் குமரர் நண்பர். இந்த அசுவதரன், எனும் நாகராசன் தன் குமாரரால் குவலயாசுவனுக்கு நேர்ந்த ஆபத்தறிந்து சிவமூர்த்தியை எண்ணித் தவம்புரிந்து அவர் சொற்படி அவளைத் தன்படத்தில் மீண்டும் பழைய நினைவுடனும் வயதுடனும் பெற்று அரசனைக் குமரரால் வருவித்து இரண்டாமுறை மதாலசையை மணப்பித்தனன். இவன் குமாரர் விக்ராந்தன், சுபாகு, சத்ருமர்த்தனன், அலர்க்கன் முதலியோர்.

**இருததாமன்**—வசுதேவன் தம்பியாகிய அநகன் குமரன்.

**இருதம்தகை**—துஷ்யந்தன் தாய்.

**இருதயதேவர்** — சந்திரவர்ணமாய், பதமாசனராய் மூன்றாம் பிறையைச் சடையிற்றரித்தவராய் முக்கண் நான்குபுஜம் சத்திசூலம், அபயம், வாதம், உடையவராய்ச் சர்வாபரணபூஷிதரா யிருப்பர்.

**இருதவாக்கு**—ஒரு ராஜருஷி. இவனுக்கு ரேவதி நக்ஷத்திரத்தில் பிள்ளை பிறந்து தீயவன் ஆனமையால் இவன் அந்நக்ஷத்திரத்தைப் பூமியில் விழச் சபித்தனன். ரைவதமனுவைக் காண்க.

**இருதன்** — மிதிலை யரசனாகிய விசயன் குமரன்.

**இருதீ**—பௌண்டரீகனுக்குச் சகோதரன்.

**இருதீகன்**—போசன்குமரன், இவன் குமரர் தேவமீடன், சததன்வா, கிருதவர்மா.

**இருதுசர்மா**—பன்னிரண்டா மன்வந்தரத்து இந்திரன்.

**இருதுக்கள்**—ஆறு. அவை. பன்னிரண்டு மாதங்களை இவ்விரண்டாகக் கொள்வதாம். அந்தருதுக்கள் வசந்தருது, கிரீஷ்மருது, வர்ஷருது, சரத்ருது, எமந்தருது, சசிரருது, என்பன. இவைகளில் வசந்தருது பிராம்மணருக்கும், க்ரீஷ்மருது - அரசர்க்கும், சரத்ருது-வைசியருக்குமாம். இவைகளில் வசந்தருது வருஷத்தின் முகமென்னப்படும். மேற்கூறிய ருதுக்கள் சாந்திர சௌரமென இருவகைப்படும். அந்த மாதத்தில் சித்ராநக்ஷத்திரம் பௌரணையுடன் கூடிவரின் சாந்திரருது. மீன மேஷங்களில் சூரியன் எவ்வளவு காலம் இருப்பின் அது, சௌரம் எனப்படும்.

**இருதுபர்ணன்** (சூ.)—அயுதாயுவின் குமரன். சர்வகாமனுக்குத் தந்தை இவனிடத்தில் நளன் நாட்டையிழந்து வேற்றுருவடைந்து சமையற்றொழில் செய்திருந்தனன். நளனிடத்தில் அச்வ இருதயவித்தை கற்று அதற்குப்பதில் அஸ்திரவித்தை தந்தவன். (பாகவதம்).

**இருத்தை**—ஒரு பெண் தேவதை. இவள், சுபங்கள் எல்லாவற்றையும் கெடுப்பவளும் காலதூதியும், நெஞ்சில் சற்றேனும் இரக்கமில்லாதவளும் ஆவள். இவள் சிறப்பில்லாத துகிலையும், சிவந்த கண்ணையும்,

நெருங்கிய வலிய வெண் பல்லினையும், முழ அளவு நீண்ட நகத்தினையும் உடையவன். இவன் காலம் இரண்டு பக்ஷங்களிலுமுள்ள சதுர்த்தி, சஷ்டி, நவமி, துவாதசி, சதுர்த்தசியுமாம். இவை சுபகருமங்களுக்கு ஆகாவாம். இவற்றைப் பக்கச்சித்திரையென நீக்கினார்கள். ஆகாவென்ற பக்ஷங்களில் தோஷமான நாழிகை சதுர்த்தி, ௯ நவமி ௨௫, சஷ்டி ௯, அஷ்டமி ௧௪, துவாதசி ௧௦, சதுர்த்தசி ௫, இந்நாழிகைகளைக் கழித்தால், இத்திதி நன்றென்க. சந்திரன் சிங்கத்தினின்று, குருவுதயத்தினிற்க உச்சமெய்தில் சுபகருமஞ் செய்யலாம்.

இருதுஹாரி — ஸ்திரீகளை ருதுகாலத்தில் அபகரிப்பவன்.

இருத்விக் — அக்னிசந்தானம், பாகயஞ்ஞம், அக்னிஷ்டோமம் முதலியவற்றைச் செய்விக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்பட்டவனாய்ச் செய்விக்கிறவன். (மநு - அத்தியாயம் - 1.)

இருத்விக்குகள் — இவர்கள் பதினறுவகையர். பிரம்மா, உத்காதா, ஹோதா, அத்வர்யு, பிராம்மணன், பிரஸ்தோதா, மைத்ராவருணன், பிரதிபாஸ்தாதா, புரோதா, பிரதிஹர்த்தா, அச்சாவாகன், நேஷ்டா, அக்நீத்ரன், சுப்ரமண்யன், கிராவஸ்துத், உன்னேதா.

இருநிதிக்கிழவன் — 1 குபேரனுக்கொரு பெயர்.

2. கோவலன் தந்தை கோவலனிறந்தமை கேட்டுத் துறவுபூண்டோன். (சிலப்)

இருந்தையூர்க் கருங்கோழி மோசியார் — இடைச்சங்கத்திருந்த தமிழ்ப் புலவருள் ஒருவர்.

இருந்தையூர்க்கொற்றன்புலவன் — கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். இவரியற்பெயர் கொற்றன். இவரது ஊர் இருந்தையூர் போலும் இவர் அகத்தில் குறிஞ்சியில் மகளிரையே மாற்றிக் குரங்குகள் தினை கவர்ந் துண்ணலைப் பாடியுளார். (அகம் - ௩௩௫)

இருபத்தோரு தலைமுறை — பிதாமுதல் முன்னேழுபெயர் தன் முதல் பின்னேழு பெயர் தாய் வம்சத்தில் பாட்டன் முதல் ஏழு பெயர்.

இருபன்—பிரமன் புத்திரர்களி லொருவன். இவன் சிருட்டியி லிச்சைபெறாது தவமேற்கொள்ளப் பிரமன் மறுபடியும் மரீசி முதலியவரைப் படைத்தனன். இவனுக்கு இடபன் எனவும் பெயர்.

இருபு — பிரமபுத்ரர். நைட்டிகப் பிரமசரியமனுட்டித்த இருடி.

இருபுக்ஷன் — இந்திரன்.

இருப்புப்பாதைவண்டி — இது நீராவி யந்திரத்தால் ஓடும் வண்டி இந்த யந்திரத்தை முதல் முதல் தன் யுக்தியால் கண்டுபிடித்தவன் ஜார்ஜ் ஸ்டீவின்ஸன்.

இருமல்செடி (Coughing Plant) — இது, அமெரிக்காவிலும் அதை அடுத்த பாகங்களிலுமுள்ள ஒருவகைச் செடி. இச்செடியின் காய்கள் முற்றி வெடித்து இலைகள்மீது விழுகையில் இலைகள் மூச்சுவிடும் பாகத்தில் காற்று நிறைந்து ஒரு குழந்தை இருமுகிறதுபோல் சத்தத்துடன் புழுதியை மேலெழுப்பி விதையை விசிறிக்கொண்டு இலை வெடிக்கிறது.

இருமை — உ. இம்மை, மறுமை.

இரும்பிடர்த்தலையார் — இவர் பாண்டியன் கருங்கை யொள்வாட் பெரும் பெயர் வழுதியைப் புகழ்ந்த காலத்து "பெருங்கை யானை யிரும்பிடர்த் தலையிருந்து" எனக் கூறினமையி னிவருக்கு இப் பெயர் வந்ததுபோலும். இவர், சோழன் கரிகாலனுக்கு அம்மான். அவனுக்குப்பெருந்துணையாயிருந்தவர். இதனை "சுடப்பட்டு யிருய்ந்த சோழன்மகனும் பிடர்த்தலைப் போரானைப் பெற்றே—கடைக்காற், செங்கோல் செலீஇயினான்" என்னும் பழமொழி வெண்பாவானும் அறிக. (புறம் - செ. ௪.)

இரும்பு — உலோகங்கள் எல்லாவற்றிலும் மிக்க உறுதியுள்ளதும் உபயோகமுள்ளதுமான லோகம். பூமியில் ஆழ்ந்த இடத்தில் மண் கல்களுடன் கலந்து இருப்பது. இதனைக் கழுவிக் கரியும் சுண்ணாம்பும் சேர்த்து உருக்கினால் சுத்தமாம். இது கறுப்புநிறமுள்ளது. இதை உருக்கிவார்த்தால் தண்டவாளம் என்பர். இரும்புடன் நூற்றுக்கு ஒரு பங்குகரியைச் சேர்த்து உருக்கினால் எழுது ஆகிறது. நயப்பில் எஃகுபொன்னிற்கிரண்டாவதாகக் கூறலாம். எழுகினால் கத்தி, வாள், ஊசி, கடிகாரப் பொருள்கள் மற்றும் உறுதியான கருவிகளும், யந்திரங்களுக்குரிய கருவிகளும் செய்யப்படுகின்றன. இரும்பில் துரு எறும். இது, எல்லாத் தொழில்களுக்கும் உதவுதலால் இதை ராஜலோகம் என்பர். காந்தமும் சற்றேறக்குறைய இதனிறம் உடையது

இதனுடன் கலந்திருப்பது. காந்தம் ஒன்றே இரும்பைக் கவரவல்லது. இது, எல்லாக் கண்டங்களிலும் அகப்படுகிறது. வார்ப்பிரும்பைக் காய்ச்சியதிலுள்ள கரியை நீக்கினால் தேனிரும்பாகிறது. இது துவளக்கூடியது. இதனால் ஆணி முதலிய செய்வர்.

இரும்புமலை — இரும்பு பல இடங்களில் மண்ணுடன் கலந்தெடுக்கப்படும் பொருளாம், வட அமெரிகா கண்டத்து மெக்ஸிகோ நாட்டில் (640) அடி உயரமும் (4) சதுரமைல் விசாலமுமுள்ள ஒரு இரும்புமலை உண்டு.

இருவருந்தபுநிலை — போர்செய்யும் சேனைகளிரண்டும் களத்திற்பட இருவரசரும் மாறுபாட்டாற் பட்டது.

இருளப்பன் — பாண்டிநாட்டில் கொண்டாடப்பட்ட ஒரு க்ஷுத்ரதேவதை.

இருளர் — இவர்கள் நீலகிரி முதலிய இடங்களிலுள்ள சாதியார். இவர்கள் இருள்நிறமுடையவர்கள், கோடர், படுகர், கன்னடர், குறும்பர், தோடர் இவர்கள் எல்லாம் மலை முதலிய காட்டு வாழ்க்கையர். இவர்கள் தமிழ் பேசுவர். (தர்ஸ்டன்)

இருளாயி — பாண்டிநாட்டில் கொண்டாடப்பட்ட ஒரு பெண் க்ஷுத்ரதேவதை.

இருஷபம் — 1. ஒரு மலை, பாண்டி நாட்டில் உள்ளது. தர்மபுத்திரன் தீர்த்தயாத்திரையில் தங்கியது. (Alagiri hills in the District of Madura.)

2. மகததேசத்தில் உள்ள ஒரு பர்வதம்.

3. வட சமுத்திரத்தின் கரையிலுள்ள ஒரு மலை. இதில் சாண்டிலி என்னும் பிராமணன் தவம் செய்தான்.

4. ஒரு தீர்த்தம். கோசலதேசத்திலுள்ளது.

5. சர்பவிசேஷம்.

இருஷபன் — இடபனைக் காண்க.

இருஷிகள் — அத்திரி, அரிஷ்டநேமி, ஆங்கிரஸர், உசத்தியர், இந்திரப்பிரதமர், இத்மவாகர், அதிதி, ஆரக்ஷணர், அவுசவர், அகத்தியர், இரிடி, அசிதர், அவாந்தரதமசு, ஆசுரி, இலிகிதர், உத்தாலகர், உபமன்யு, அவிஷ்மார், இருசிக்சிங்கர், இருக்குவர்யர், ஆமலகப்பிரியர், ஆர்த்திகர், உக்ரவீரர், ஏகபாதர், உத்தமான், இரண்யாக்ஷன், ஆபத்தர், உலேலுபர், அதர்ப்பர், அப்பிரீதர், அக்நிவர்ணர், இலம்பகர், அக்நிவேசர், அரீதர், ஆத்திரேயர், ஆபத்தம்பர், ஐதிசயானர், அவடர், அரஷ்டிஷேணர் அனுபர், ஔசித்யர், கட்சீவான், கௌடமுகர், கௌதமர், கமஷ்டர், கபிலர், காலவர், கவிஷ்டர், கச்யபர், கிருது, கர்த்தமர், க்ரணர், கைவல்யர், கங்கணர், காலாக்னிருத்ரர், கல்லாரர், களாதரமுனி, கிலீபர், காலரூபர், காலமாலி, கார்க்கயர், காத்யாயனர், கண்ணுவர், கபிலர், சாரத்துவரர், சௌநகர், சநற்குமாரர், சுகர், சாவருணி, சங்கர், சுவேதகேது, சாண்டில்யர், சம்வர்த்தர், சுமந்து, சமதக்நி, சியவனர், சநகர், சநந்தர், சநத்குமாரர், சநச்சுசாதர், சைகிஷவ்யர், சிதசத்ரு, சுகர், சுவேதாச்வதரர், சுவேதவாகு, சங்கு, சம்பு, சக்திதர், சங்குகன்னர், சனைச்சரர், சபாவர்ணர், சமக்கிரீபர், சரகர், சுசுருதர், சுகர்னர், சௌமியர், சாதாதபர், சுதீக்ஷணர், சரபங்கர், சாவர்ணி, சீவந்தி, சாபாலி, தேவலர், துருவாசர், தீர்க்கதமர், தாண்டியர், தேவஹோத்ரர், திரிபாதர், துவிபாதர், தக்ஷர், நாரதர், பிருகு, பராசர், பாசுராமர், பாரத்துவாசர், பிரபிலாதர், பருவதர், பதஞ்சலி, பாண்டாயினி, பைலர், புலகர், பிரசேதர், புலத்தியர், பிருங்கி, பதுமநாபர், பக்ஷர், பிலர், பேளர், பார்க்கவர், போதாயனர், பார்த்தர், மித்திராவருணர், மேதை, மைத்ரேயர், மார்க்கண்டேயர், மரீசி, மணி, மகரசேநர், மகாவீரர், மகோதரர், மகாவாகு, மசகாண்டர், மாண்டுகர்னர், யஞ்ஞவற்கர், வசிட்டர், விச்வாமித்ரர், வியாசர், வியாக்ரபாதர், வைசுவாநரர், வான்மீகர், வைசம்பாயனர், வாலகில்லியர், விபாண்டகர், வாமதேவர், விரசர், விசுவர், வச்சர், வைரோஹிதி, வீதிஅவ்யர், வாத்யஸ்வர், வைநர் முதலியர். மற்றும் பலர்.

இருஷிகள் பதினேருவர் — அத்திரி, வசிஷ்டர், புலத்தியர், கிருது, பரத்வாசர், விச்வாமித்ரர், பிரசேதஸ், ருசிகர், அகஸ்தியர், ததீசி, தூர்வாசர்.

இருஷிகன்—பாரதவீரரில் ஒருவன். நிகும்பனம்சம்.

இருஷிகருமன் — திருதராட்டிரன் குமரன்.

இருஷிகுல்லி — 1. பூமாவின் தேவி. ருஷிகுல்லி யெனவுங் கூறுவர்.

2. ஒரு நதி. ஆடகதேசத்து ருஷபர்வதத்தி லுள்ளது.

இருஷிகேசன் — விஷ்ணுவிற் கொருபெயர்.

இருஷிகை — மகேந்திர பருவதத்திலிருந்து பாயும் ஒரு நதி. (ருஷிகை) வேஷியச்

சிறுமி இளமையில் விதவையாய் நருமதா நதிக் கரையிலுள்ள நந்திகேசுவரர்க் கருகில் சிவபூசை செய்கையில் மூடன் எனும் தைத்தியன் வருத்த அவன்பொருட்டு நந்திமாதேவரும் கங்கையும் பிரத்தியக்ஷமாய் இடையூறு நீக்க இஷ்டசித்தி பெற்றவள்.

இருஷியம் — ஒரு பர்வதம். அத்திரிமுனிவர் இருக்கை. மகததேசத்தில் வராகமலைக்கெதிரிலுள்ளது.

இருக்ஷகன் — (கு.) சுநக்ஷத்ரன் குமரன்.

இருக்ஷதேவன் — க்ஷத்திரியன். சந்திரவம்சத்து அரசன். துருபத புத்திரனாகிய சிகண்டி புத்திரன்

இருக்ஷம் — ஒரு பர்வதம் மாளவதேசத்தருகிலுள்ளது.

இருக்ஷயன் — மகாவீரியன் குமரன். இவன் குமரர் திரையாருணி, கவி, புஷ்காராருணி. இச்சந்ததியார் வேதியராயினர்.

இருக்ஷன் — 1. அசாமீளன் மூன்றாங் குமரன். இவன் பேரன் குரு.
2. புரூசன் குமரன். பாமியாச்வன்.
3. தேவாதிதி குமரன்.

இருக்ஷவான் — குலபர்வதங்களில் ஒன்று. (The Eastern Part of Vindhya Range.)

இருக்ஷவிரசன் — ஒரு குரங்கு. ஒருமுறை பிரமன் யோகத்திலிருந்தனன். அவன் கண்ணிலிருந்து ஒரு துளிநீர் பூமியில் விழுந்தது. அந்நீர் ஒரு ஆண்குரங்காய் வனமெங்குஞ்சரித்துப்பார்வதியார்வனத்திலிருந்த தடாகத்தில் நீருள் முழுகிற்று. உடனே ஒரு அழகுள்ள பெண்குரங்காயது. இக்குரங்கை இந்திரனும் சூரியனும் கண்டு மோகித்து ரேதசைப் பதித்தனர். இவர்கள் இரேதசில் சூரியன் இரேதசு கிரீவத்தில் விழுந்தது. அதனால் சுக்கிரீவன் பிறந்தனன். இந்திரன் ரேதஸ்வாலில் விழ வாலி பிறந்தனன். வாலிக்கு இந்திரன், பிறர் இவனிடம் யுத்தஞ்செய்யின் அவர் பலத்தில் பாதி வரவும் பொன்மாலையும், தந்தனன்.

இருக்ஷை — அஜமீளன் தேவி புத்திரன் சம்வர்னன்.

இரேஞ்சிஷ்டன் — பிரியவிரதன் பேரன். கிருதபிருஷ்டன் குமரன்.

இரேகைலக்ஷணம் — இது புருஷரின் அங்கத்திலுள்ள இரேகைகளை நோக்கிப் பலன் கூறுதல். நெற்றியில் நான்கு வரைகளும், கழுத்தில் ௩ வரைகளுமிருந்தால் அவனுக்குத் தாரம் இரண்டு. பிதவியாதியால் துன்புறுவன். நெற்றியில் ௩, கழுத்தில் ௨ இரேகைகள் இருந்து, முதுகின் வலப்புறம் மறுவொன்று காணப்படின் ஒருதாரம் கெடும், மறுதாரம் நிலைக்கும், வறுமையடைவன். நெற்றியில் ௨ ரேகைகளிருக்க இடப்பக்க மறுவுண்டாயின் மனைவிமக்கள் பகைமை கொண்டிருப்பர். பொருள் நஷ்டமாய் உதவியின்றியிருப்பன். நெற்றியில் ஐந்து வரைகள் இருக்கின் விசனம், பொருள் நில்லாது. நெற்றியிலும், கழுத்திலும் மும்மூன்று ரேகைகள் இருப்பின் பொருளுண்டாகிக் கெடும். வேளாண்மையில் அரைப்பலன், நெற்றியில் ௩ ரேகைகளும் கழுத்தில் ஒன்றும் இருக்கின், ஜலபயம், பொருள் சேரும், இடரில்லை, அதியோகம், குழந்தைகளுண்டாம். நெற்றியில் ௩ இரேகைகளிருக்கக் கண்கள் கறுத்து மூக்கு நீண்டிருக்கின், இரண்டுதாரம் உடையவன், சமர்த்தன் இவனுக்கு ௩௧-வது வயதில் ஆண்மகவுண்டாம், செல்வமும் கடனும் ஒத்துநிற்கும். நெற்றியில் ௩ இரேகைகளும் இடது புறத்தில் மங்கு மறுவிருக்கின் பெருந்துயர், பொருள் நில்லாது, உயிர்ச்சேதம், மனைவிசேதம். நெற்றியில் ௪ இரேகைகளும் வலப்புறத்தில் மங்கிருக்கின் துன்பம் நீங்கும். நெற்றியில் ௫ வரைகளும், கழுத்தில் மூன்று வரைகளும் மத்தகத்தில் மாலைபோல் ௩ வரைகளுமுள்ளவனாய்க் கன்னத்தில் மறுவுள்ளவன் விசனமும் அலைச்சலுமுள்ளவன் ஆவான். நெற்றியில் ௪, ௨ வரைகள் துண்டித்து நிற்க உட்கழுத்தில் ௩ வரைகளுள்ளவன் பொருளற்றவன் ஆவான். நெற்றியில் ௪ வரைகளும், கழுத்தில் ஒருவரையும் உள்ளவன் கல்வி, பொருள் அற்றவனாய்க் கடனுள்ளவன் ஆவன். நெற்றியில் பொன்போன்றவரை ௪ இல், ஒன்று துண்டாக நிற்கக் கழுத்தில் இரண்டு ரேகைகளுள்ளவன் செல்வன், யோகவான், உபகாரி, சிறுவயதில் கண்டம். நெற்றியில் இரண்டு வரைகள் நிலைகுலைந்து தோன்றில் பொருளற்றவனவன். கையில் அன்னவரை மேலேறி அதனருகில் கறுத்ததுபோல் ஒரு ரேகை இருந்தாலும், சிறுவிரலில் நான்குவரைகளிருந்தாலும், ஓரங்குலத்தில் இரண்டுவரைகளிருந்தாலும் வறுமையால் வீட்டைவிட்டு விலகுவன். முத

வித் பெண் பிறந்து மாயும்; பிறகு செல்வமுண்டாம். கையில் அன்னவரை கீழ் நோக்க அதன் அருகில் இரண்டு வரைகளிருந்தால் பொருளற்றவன், கடனுண்டாம், விசனமுண்டு. மணிக்கட்டில் இரேகைகள் ௨ இருக்கின் இராஜ போகமுள்ளவன். ௩ இருக்கப் பெற்றவன் ஸ்திரிலோலன், ௪ இருக்கப் பெற்றவன் பிரபுவா யிருப்பன். இவை கங்கணரேகைகள் எனப்படும். அங்கை விரிவாய் ரேகைகள் அதிகமின்றி யிருப்பின் தீர்க்காயுளுள்ளவனும் போகியாயு மிருப்பன். அங்கை சிவக்கின் தனவான். பசந்திருப்பின் பெண்போகி. சுண்டுவிரற்குச் சற்று இறக்கத்தி லுண்டாய் மேல் நோக்கும் இரேகை ஆயுஷ்யரேகை. அது சுட்டுவிரலைத் தாண்டிச் செல்லின் அவனுக்குத் தீர்க்காயுள், அது எந்த விரல்களி னடியில் நிற்கிறதோ அவ்விரல்களுக்கு ௨௰ வயதுகளாகக் கணித்துக்கொள்க. ஆயுஷ்யரேகை சிதறித் தடையுண்டு நிற்கில் வியாதி முதலானவற்றால் கண்டம். ஆயுஷ்யரேகையை அடுத்தரேகை ஸ்திரிரேகை. பெருவிரற்குக் கீழ் மணிக்கட்டிற்கு நடுவிற் பிறந்து மேலேறும் ரேகை புருஷரேகை என்று பெயர். புருஷரேகை பெண்ரேகை இரண்டும் கலந்திருப்பின் தம்பதிகள் சிநேக பான்மையாய்க் கலந்திருப்பர், கலவாதிருப்பின் வியோகமுண்டாம். புருஷரேகை அதிகமாகப் பெருகியிருக்கின் புருஷசந்ததியாம். பெண்ரேகை, வளர்ந்திருப்பின் பெண்களுண்டாம். இப் புருஷரேகை பெண்ரேகைக ளிரண்டும் கலவாதிருப்பின் மணமாகாது. விவாகமாயினும் பலனில்லை. அங்கையில் ஆயுஷ்யரேகை புருஷரேகை பெண்ரேகைகள் (௩) மாத்திரம் இருக்கின் சம்பத்துண்டாம். பலரேகைகள் இருக்கின் வறுமை. மணிக்கட்டின் நடுவிடத்திற் பிறந்து ஸ்திரீ புருஷரேகைகளுக்கு நடுவாக நீண்டு ஆயுஷ்யரேகைக்குக் குறுக்கில் செல்லும் ரேகை தனரேகையாம். அது செவ்வையாக மேற்சென்றிருக்கின் அவன் அதிக சீமானாய்ச் செல்வனா யிருப்பன். அது முதலில் வளைந்து புருஷரேகையுடன் கலந்திருப்பின் செல்வம் சுயார்ஜிதம். தனரேகையினிடையில் தடையுள்ள ரேகைகள் வரின் செல்வம் கள்வராலும் செலவாலும் அழியும் (௪) கத்திரி ரேகைகள் இருக்கின் தரித்திரனவன். தனரேகை சிதறித் தோன்றின் அப்போதைக் கப்போது தனவருவாயுண்டாம். தனரேகை இல்லாதிருக்கின் வறியனாவன். சிறிதிருக்கின் கொஞ்சம் சம்பாதிப்பன். ஆயுஷ்யரேகைக்கு மேலாய்த் தனரேகைக்கு இடப்பக்கமாய் நீண்டிருக்கும் ரேகை வித்தியாரேகையாம். அது எவ்வளவு பிரபலமா யிருக்கிறதோ அவ்வளவிற்கு வித்வானாம். அங்கையின் விளிம்பில் ஆயுஷ்யரேகைக்கு மேலும் சுண்டுவிரற்குக் கீழ்பாகத்தில் நடுவிலுள்ள குறுக்கு ரேகைகளுக்குப் பத்தினிரேகைகள் என்று பெயர். அவை ஒன்றுக்கு அதிகமாக இருக்கின் பத்னிகளே அன்றி விலைமாதரும் பல ரிருக்கலாம். குதிரை, யானை சவாரி, குடை, கிரீடம், சங்கு, தாமரை, துவசம் இவை அங்கையில் இருக்கப் பெற்றவன் பிரபு ஆவன். சூர்யரேகை, சந்திரரேகை இருக்கப்பெற்றவன் தெய்வபக்தி யுள்ளவனாய் லோக பூஜ்யனாவன். மச்சரேகையுள்ளவன் செல்வமுள்ளவனாய்ப் பலர்க்கு அன்னம் அளித்துப் புண்யவனாய்ப் புத்ரசந்ததி உள்ளவனாவன். தராசின் ரேகையுள்ளவன் பாக்யவான் ஆவன். விரல்களின் நுனியில் ஒரு சக்கரமிருக்கப் பெற்றவன் போகியாவன். இரண்டுள்ளவன் ராஜபூஜிதனாவன். மூன்று சக்கரமுள்ளவன் லோகசஞ்சாரியாவன். நான்கிருக்கப்பெற்றவன் பண்டிதனாவன். அங்கையின் பெருவிரலின் மேற்கணுவில் அரிசிபோலவும், கோதுமை போலவும், உள்ளரேகை யவரேகையென்று பெயர். அது பெற்றவன் தான்ய சம்பத்துள்ளவனாய்ப் போகத்தை அனுபவிப்பன். பெருவிரலின் நுனி சுட்டு விரலின் நடுக்கணுவைப் பொருந்தி யிருப்பவன் சில்பம், சஸ்திரம், எழுத்து இவற்றில் பெயர் பெற்றவன் ஆவன். பெருவிரலின் புறத்தின் கணுவின் உள்ளரேகைகள் புத்ரரேகைகளாம். அவற்றில் கீறுள்ளவை பெண்கள், பின்னல் போன்றவை குமாரர்கள். அவற்றில் நீண்டவை தீர்க்காயுளுள்ளவை. குறியவை அற்பாயுளுற்றவை. அந்த ரேகைகள் இல்லாவிடின் சந்தானம் இல்லை. சுட்டுவிரலின் அடியில் குறுக்காக இரண்டு ரேகைகளுள்ளவன் கார்யசித்தியடைவன். நடுவிரலடியி லவ்வாறு பெற்றவன் தனம், ஸ்திரீபோகம், சந்தானம், செல்வமுள்ளவனாவன். மோதிரவிரலில் அவ்வாறு பெற்

றவன் வித்வான் ஆவன் சுட்டு விரலடியிற் பெற்றவன் இளமையில் விளையாட்டால் சுகமடைந்தவன்.

இரேணு—1. ஒரு அரசன். இவன் கங்கையைப் புதல்வியாகப் பெறத் தவஞ் செய்யக் கங்கை, அத் தம்பதிகளுக்கு நடுவில் ஒரு குழந்தை வடிவாய்ப் பார்வதி சாபத்தால் பிறந்தனள். இவளுக்குத் தந்தை தாயார் ஆதிரையெனப் பெயரிட்டனர். இவளை மலயமலை வேந்தன் வளர்த்தச் சிவமூர்த்திக்கு மணஞ் செய்வித்தான். இவள் அம்மலையில் நதியுருவாய்ப் பிரவகித்துப் பச்சைமலையெனப் பெயரடைந்தனள்.

2. இரேணுகையின் தந்தை.

இரேணுகபீடம்—சத்திபீடங்களில் ஒன்று.

இரேணுகம்—இது ஒரு யானை. (பார-அநு)

இரேணுகர் — அமிர்தரக்ஷகராகிய தேவர். (பார - ஆதி.)

1. திக்கு யானைகளிடத்தில் தருமங் கேட்ட யானை. நாகபலி காண்க.

இரேணுகர்—சிவகணத் தலைவரில் ஒருவர். இவரால் அகத்தியருக்குச் சித்தாந்த சிகாமணி யுரைக்கப்பட்டது.

இரேணுகாசாரியர்—இவர் திருக்கைலையில் துவாரபாலகர்களில் ஒருவர். இவரைச் சிவபெருமான் அழைக்க இவர் தாருகரைக் கடந்து வந்தமையால் நீ பூமியில் பிறக்க என்றனர். அவ்வாறே இவர் தெலுங்கு நாட்டில் கொல்லிபாகம் எனுந் தலத்தில் சோமலிங்கத்தில் அயோநிஜராகப் பிறந்து வீரசைவாசாரியராக இருந்தவர். (வீரசிங்காதன புராணம்.)

இரேணுகை—இரேணுவின் புத்ரி. வருமராஜன் பெண்ணெனவுங் கூறுவர். சமதக்கியின் தேவி. இவள் கங்கைக்குச் செல்ல அவ்விடம் அந்தரத்திற் சென்ற சாந்தருவனாகிய சித்ரசேநனை நீரில்கண்டு மனங்கெட்டுக் கற்புக் குலைந்து கணவர் முன்னின்றனள். அதனை முனிவர் அறிந்து பரசிராமரை நோக்கி இவளைக் கொலை செய்க என்றனர். அவ்விதம் தந்தை சொற்படி கொலைபுரியச் செல்லுகையில் பலர் விலக்க அவர்களையுங் கொலை புரிந்து தாயைக் கொலைசெய்து மனக்கவலையுடன் நிற்கத் தந்தை, குமரன் மனநிலை யறிந்து தாயை எழுப்பவேண்டுமென மந்திரநீர் தந்து எழுப்பிவாக் கூறினர். அவ்வகை பரசுராமர் சென்று தாயினுடல் பல உடல்களுடன் கலந்திருத்தலால் வேறுபாடறியாது ஒரு உடலில் தன்தாயின் சிரத்தைப் பொருத்தி எழுப்பினர். எழுந்தவள் கணவரை அடைந்து நிற்க இருடி நீ கிராமங்களில் நிலைத்து, அவர்கட்கு உண்டான நோயைப் போக்கி அவர் செய்யும் பலியைப் பெறுக என்ன அவ்வகையிருந்து பூசை பெறுபவள். இந்தக் கோயில்களில் தலைமாத்திரமே இருக்கும். இவள் கார்த்தவீரியனை மோகித்தனள் என்பது சிவபுராணம். இவள், கணவன் கார்த்தவீர்யன் குமாரரால் இறந்ததுபற்றி விசனமடைந்து பரசுராமரைக் கண்டு எழுமுறை மார்பிலறைந்துகொள்ளப் பரசிராமர் அரசரை எழு தலைமுறை கருவறுத்தனர். இவள் குமரர் தன்னுவன், அனுவன், விசுவாவசு பரசிராமன். மாரி காண்க.

இரேவணசித்தர்—வீரசைவ ஆசாரியர்களில் ஒருவர். இவர் ஜமதக்னிமுனிவரின் தேவியாகிய ரேணுகைக்குத் தீக்ஷைசெய்து படைவீடு எனுங் கிராமத்தில் அமர்த்தினர். (வீரசிங்காதன புராணம்.)

இரேணுவதி — நகுலன் பாரி. குமரன் நிர்மித்திரன்.

இரேடியம்—ஒருவித லோகசத்துப் பொருள் இது பிச்சுப்பிளண்டியெனும் தாதுவிலிருந்து எடுக்கப்படுகிறது. இது தோற்றத்தில் மாசடைந்த உப்புபோல் காணப்படுகிறது. இதன் ஒளி உலோகப்பொருள்களையும் ஊடுருவிச் செல்லுதலால் இதன் விலை மற்ற உலோகப் பொருள்களினும் அதிகப்படுகிறதென்பர். இது இங்கிலாந்தில் காரன்வாலிலும், போர்த்துகல்தேசத்தில் குவார்டா எனு மிடத்திலு மகப்படுகின்றது. இதன் ஒளியால் மற்ற இரத்தினங்களுக்கு ஒளியூட்டி விலை மதிப்பேற்றுகின்றனர்.

இரேயன்—(க.) புரூரவசுவிற்கு உருவசியிடமுதித்த குமரன். இவன் குமரர் துருதன், ஏகன்.

இரேவணாராத்திரியர் — இவர் ஒரு புலவர். இவர்க்குப் பேரானம் இரேவணாராத்திரியர் எனப் பெயர். இரேவணசித்தர் எனவும் கூறுவர். இவர் சிதம்பரத்தி லிருந்தாகக் கூறுகின்றனர். வீரசைவர் இவர் செய்த நூல்கள், பரமாசசியம், பட்டீச்சுர புராணம், சிவஞானதீபம், இரேவண சித்தர் நிகண்டு முதலிய.

இரேவதன் — 1. ஆனர்த்தன் குமரன். இவன் சமுத்திர மத்தியில் ஒரு பட்டணம் நிருமித்து அதற்குக் குசஸ்தலி யென்னும் பெயரிட்டு ஆனர்த்ததேச முதலிய உண்டாக்கினவன். இவற்கு நூறு குமாரும் இரேவதி யென ஒரு குமரியும் உண்டு. இவன் சத்தியவுலகஞ் சென்று பிரமனைத் தன் பெண்ணுக்குத் தக்கவரானை வினவ, சதுர்முகன் அரசனை நோக்கி நீ இந்த உலகத்திற்கு வந்து (உஎ) சதுர்யுக முடிந்தன. இனி நீ பூமியடைந்து அவ்விடத்தி லவதரித்திருக்கும் பலராமபிரானுக்கு உன் பெண்ணைக்கொடு என அரசன் அவ்வகை செய்து பதரியடைந்து தவமியற்றினன். (பாகவதம்).

2. இவன் ஒருமுறை உச்சைசிரவமெனும் குதிரையேறி வைகுண்டஞ்செல்ல இவன் குதிரையைக் கண்டு லக்ஷ்மி மனம் விலங்காது கண்டு விஷ்ணு சாபத்தால் குதிரையாயினன். (தே-பா)

3. குதிரை யுருக்கொண்ட தன் மனைவியைத் தொடர்ந்து சென்ற சூரியரேதஸில் பிறந்தவன்.

இரேவந்தன்—ஒரு குய்யகன்.

இரேவதீ—1. மித்திரன் எனும் ஆதித்தன தேவி.

2. இரேவதன் குமரி. இரைவதமனுவைக் காண்க. பலராமர் தேவி.

3. நக்ஷத்திரத்தி லொன்று.

4. பிப்பிலன் தேவி. அரிஷ்டன் தாய்.

இரைப்பியன்—ஒரு இருடி. தன்னை மயக்க வந்த ஊர்வசியை விகாரவடிவாகச் சபித்தவன். இவன் அவகீர்த்தியைக் கோபாக்கினியிற் பிறந்த அரக்கனால் கொல்வித்தவன். இவன் குமரன் அர்த்தவசு.

இரையுமணல்—(Singing Sand) இது, பசிபிக்சமுத்திரத்திலுள்ளஹாவாவியன் தீவுகளிலும், கோலராடோ, வனந்தரத்திலும் காணப்படுகிறதென்பர். பெருங் காற்று வீசுகையில் இம்மணல் பறவைகள் கத்துவதுபோல் சத்தமிடுகிறதாம். மணலைக் கையிலள்ளிக் கசக்கினால் ஆந்தை அகவுவதுபோல் சத்தமுண்டாகிறதாம். ஒரு சாக்கில் மணலை நிரப்பிக் குலுக்கின் நாய் குலைக்கும் சத்தமுண்டாகிற தென்பர்.

இரைவதகம் — இது ஒரு மலை. துவாரகைக்குச் சமீபத்தில் உள்ளது என்பர். Mount Girnar near Junagar in Guzerat, north of Prabhasa Somnath.

இரைவதன்—1. பூதனுக்குச் சுரபியிட முதித்த குமரன். ஏகாதச ருத்திருள் ஒருவன்.

2. இரேவதனுக்கு ஒரு பெயர்.

3. தாபசமனுவின் சகோதரன். துர்த்தமன் குமரன். ரேவதியின் குமரன். ஐந்தாம்மனு.

4. சுமதி குமரன். இளிநனுக்கு ஒரு பெயர்.

5. பராவசு அர்த்தவசுக்களின் தந்தை.

இரைவதமனு — ரு - வது மனு. ருதவாக் எனும் அரசன் நெடுநாள் புத்திரர் இலாது சிந்திக்கையில் இவனுக்கு ரேவதி நக்ஷத்திரம் நாலாம் பாதத்தில் ஒரு குமரன் பிறந்தனன். அவன் வளர்ந்து மகாபாதகம் முதலிய தீச்செயல்களைச் செய்து பழிபாவங்களைத் தாய்தந்தையர்க்குச் சேர்ப்பித்ததால் தந்தை விசனமடைந்து கர்க்கமுனிவரிடம் போய்த் தன் குமரன் குறைகளைக் கூறினன். முனிவர், அரசனை நோக்கி இது உன்மகன்குற்றமன்று. இரேவதி நாலாம் பாதத்தில் உதித்த குற்றமென்றனர். அதனால் அரசன் நக்ஷத்திரத்தைக் கோபித்து அது பூமியில் விழுக எனச் சபித்தனன். அவ்வாறே அது பூமியில் ஒரு மலைமேல் விழுந்தது. அம்மலை ரைவதம் எனப்பட்டது. அந்த ரேவதி அம்மலையில் ஒரு மடுவாக அம்மடுவில் ஒரு கன்னிகை பிறந்தனள். அக்கன்னிகையைப் பிரமுச்சர் எனும் முனிவர் கண்டு அவளுக்கு இரேவதியெனப் பெயரிட்டு வளர்த்தனர். அவள் யௌவனம் அடைகையில் முனிவர் குமரிக்குத் தக்க நாயகன் வேண்டி அக்நியைப் பிரார்த்தித்தனர். அக்நி, முனிவனை நோக்கி உன் குமரிக்குத் துர்த்தமன் எனும் அரசன் நாயகனாவான் என்றனன். அவ்வாறே குறிதநாளில் அவளை அவ்வரசனுக்கு மணஞ்செய்விக்க நாள் பார்க்கையில் ரேவதி தந்தையிடஞ் சென்று ரேவதி நக்ஷத்திரத்தில் மணஞ்செய்விக்க வேண்டுமேயல்லாமல் வேறு நக்ஷத்திரத்தில் மணஞ்செய்துகொள்ள உடன்படேன் என்றனள். தந்தை, குமரியைநோக்கி அது ருதவாக்குச் சாபத்தால் பூமியில் விழுந்தது எனக் குமரி, ஆயின் அதை ஆகாயத்தில் ஏற்றி மணம் இயற்றுக என வேண்ட அவ்வாறே முனிவர் செய்து, மணம் முடித்தனர். பிறகு அரசன் முனிவனை நோக்கி நான் சுவாயம்பு மனு வம்சத்தில் பிறந்த

வன், எனக்கு மன்வந்தராதிபனாய் ஒரு குமரன் வேண்டும் என முனிவர் அப்படியே அருள்செய்தனர். சிலநாள் தரித்த பிறகு இந்தத் தர்த்தமனுக்கும் ரேவதிக்கும் ரைவதமனுப் பிறந்தனன். பலராம கிருஷ்ண அவதாரம் இந்த மன்வந்தரத்தி லிருக்கலாம்.

இரைவதம் — இரைவதமனுவைக் காண்க. இதிலருச்சுநன் சந்நியாசி வேடங்கொண்டிருந்தான். இதற்குக் குமுதம் எனவும் பெயர்.

இரௌகிதம்—பாண்டவர் படைதங்கிய நாடு.

இரௌத்திரகேது—அங்க தேசத்திருந்த வேதியன். இவனுக்குச் சாரதையெனும் மனைவியிடம் தேவாந்தகன், நராந்தகன் என இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். இவர்களிருவரும் நாரதருபதேசத்தால் தவஞ்செய்து பல சித்தியடைந்தனர்.

இரௌத்திராசுவன் — (சங்.) சங்கிரதியின் குமரன். பாரி கிருதாசி. குமரர் இருதேயு முதலியவர்,

இரௌத்திரி — அக்நிக்கதிட்டான சத்தி, ஆதாரதேவர், ருத்ரர் அல்லது பசுபதி,

இரௌத்ரிதேவி—உருருவைக் காண்க.

இரௌரவம்—1. நான் எனது எனும் அகங்காரங்கொண்டவ னடையும் நரகம்.

2 சிவாகமத்தில் ஒன்று. ருரு என்னும் இருடிக்குக் கூறியது:

இலகீர்மதி—நகுலன் பாரி. குமரன் மித்திரன்.

இலதலி — இருபத்தெட்டாஞ் சதுர் யுகத்தில் வேதவியாசர் காலத்தில் சுடலையிற் கிடக்கும் ஒரு பிணத்தினுட் சிவபெருமான் புகுந்து லகுலி எனும் பிரமசாரியாய்த் தோன்றுவரென இலிங்க புராணம் (24-ம் அத்யாயம் கூறும் என ஸ்ரீராம கிருஷ்ண கோபால பண்டார்கர் கூறுவர்.

இலதளீசன்—சிவகணத்தவரில் ஒருவன்.

இலதளேசமூர்த்தி — அப்புத் தத்துவத்திலுள்ள புவனங்களின் மத்தகத்திலுள்ளலகுளமென்னும் புவன வாசிகளால் ஆராதிக்கப்பட்ட சிவமூர்த்தியின் திருவுரு.

இலக்கணம் — இது தமிழில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகைப்படும். இதில் எழுத்து, மொழிக்குக் காரணமாய் நாதகாரிய வொலியாகும். அது எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல், ஈறு, இடைநிலை, போலி எனப் பத்து வகைப்படும். மேற்கூறிய பத்துவகை இலக்கணத்துடன் கூடிய எழுத்துக்கள் தனித்தாயினும் இரண்டு முதலியவாகத் தொடர்ந்தும் பொருள்தரின் பதமாம். அப்பதம் ஒன்றுடன் ஒன்று நிலைமொழி வருமொழிகளாக இயைவது புணர்ப்பாம். அப்புணர்ப்பு உயிர்ஈறு மெய்யீறு உருபுமாகப் புணர்கையில் தோன்றல், திரிதல், கெடுதல் எனும் விகாரம் அடைந்தும் அடையாமலும் புணர்வதும் புணர்ப்பாம். இனிச்சொல்லாவது மேற்கூறிய பதம் பொருள் குறித்து நிற்பதாம். அது பெயர், வினை, இடை, உரி என நால்வகைத்து. அப்பெயர், இருதிணை ஐம்பால் மூவிடம் வேற்றுமையேற்றுப் பொருளை விவகரிக்கும். வினைச்சொல், பொருள்களின் தொழிலை மேற்கூறிய திணைபால் இடங்களைப்பெற்று முதனிலை, தொழிற்பெயர், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சமாக நின்று அவை அவாவிநிற்கும் பெயர்வினைகளைக்கொண்டு முடியும். இடைச்சொல், பெயர் வினைகளையடுத்து அவற்றிற்கிடையே பொருள் குறித்தும் குறியாதும் வருவது. உரிச்சொல் பெயர் வினைகளின் குணவிசேஷங்களாய் வருவது. இனிப்பொருள் அகப்பொருள், புறப்பொருள் என இருவகைத்து. அவற்றுள் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என எழுவகைப்படும். கைக்கிளையென்பது, ஒருதலைக்காமம். ஐந்திணை யென்பது அன்புடைக்காமம். பெருந்திணை யென்பது பொருந்தாக்காமம். ஐந்திணை யென்பது குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பனவாம். இவற்றில் முதல், கரு, உரிப்பொருள்களையும் களவி முதலியவற்றையும் பரந்த நூல்களிற் காண்க. ஒருவாறு சுருக்கிக் கூறின் ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடும் கூட்டத்தில் பிறந்த இன்பம் அக்கூட்டத்தின் பின் அவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு இருந்தது எனக் கூறப்படாததாய் யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொருளாம். இனிப்புறப் பொருளாவது அறம், பொருள் எனப்படும் இயல்பினை யுடையதாய்ப் புறம்பே நிகழும் ஒழுக்கமாம். அது வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என எழுவகைப்படும். வெட்சி

யாவது நிரைகவர்தலாம். உழிஞையாவது பகைவர் அரணை வளைப்பதாம். தும்பையாவது பகைவருடன் சண்டை செய்வதாம். வாகையாவது பகைவரை வெற்றிகொள்வதாம். காஞ்சியாவது எதிரூன்றலாம். பாடாணாவது பாடுதற்குரிய ஆண்மகனது ஒழுக்கத்தைப் புகழ்ந்து கூறுவதாம். இவற்றின் விரிவுகளைப் பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை, தொல்காப்பியம் முதலியவற்றிற் காண்க. யாப்பாவது பல சொற்களால் அகம்புறமென்னும்பொருட்குஇடனாகக் கற்றுவல்ல புலவர் அணிபெறப் பாடுவது. அப்பா, பாஎனவும், பாவினம் எனவும் இருவகைப்படும். அவ்விருவகைக்கும் உறுப்புக்கள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என ஆறும். பின்னும் அப்பா, வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என நான்காம். பாவினம் மேற்கூறிய பாக்களுடன் தாழிசை, துறை, விருத்தம், கூடுவதாம். இனி அணி யென்பது செய்யுட்கு அழகுசெய்து நிற்பதாம். அது, தன்மை, உவமை, உருவகம், தீவகம், பின்வருநிலை, முன்னவிலக்கு, வேற்றுப்பொருள்வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரைநிரை, ஆர்வமொழி, சுவை, தன்மேம்பாட்டுரை, பரியாயம், சமாயிதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக்கூட்டம், விரோதம், மாறுபடுபுகழ்நிலை, புகழாப்புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை, பரிவர்த்தனை, வாழ்த்து, சங்கீரணம், பாவிகம் எனப் பலவாம். இவை தண்டியாசிரியர் கூறியவை. இனிக் குவலயானந்தம் என்னும் அணிநூல் நூறு அலங்காரம் கூறும். அவற்றின் விரிவெலாம் அவ்வவ்விலக்கண நூல்களிற் பரக்கக் காண்க.

இலக்கர்—1. சண்முகசேனாவீரர்.
2. விநாயகருக்குச் சித்திதேவியிடம் பிறந்தவர்.

இலக்கணை-1. சீவகன் மனைவியரில் ஒருத்தி.
2. பிருகத்சேநன் குமரி. கிருஷ்ணன் தேவி.

இலக்கணன் — துரியோதனன் குமரன் இலக்கினன்.

இலக்கணக்கொத்து — தமிழிலக்கணத்திலுள்ள சில அரிய நுட்பங்களைத் திரட்டிய இலக்கணநூல். இது திருவாவடுதுறை சாமிநாத தேசிகரா லியற்றப்பட்டது. தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களிலும், இலக்கியங்களிலும் அருகிவரும் விதிகளைத்தழுவியும், வடநூல் இலக்கணங்களைத் தழுவியும் செய்தது. இந் நூற்கு இவரே உரையுஞ்செய்து போந்தனர்.

இலக்கணஞ் சிதம்பரநாதமுனிவர் — சிவஞானமுனிவர் மாணாக்கர். திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம் பாடியவர்,

இலக்கணப்போலி — இலக்கண மில்லாததாயினும், இலக்கணமுடையது போலச் சான்றோரால் தொன்றுதொட்டு வழங்கப்படுவது. (நன்னூல்).

இலக்கணமுடையது — இலக்கண வழியால் வருவது. (நன்னூல்).

இலக்கணவிளக்கம்—தொல்காப்பியம் அருகிவழங்குதலும், நன்னூல் சின்னூலாயிருத்தலுங்கண்டு தருமபுர ஆதினத்து வைத்தியநாத தேசிகர் செய்தது. இவ்விலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து பகுதியினையும் உடையது. இவரும் புதியனகொள்ளும் முறையான் தம்காலத்துவழக்காறு நோக்கி வடமொழி இலக்கணத்தையுந் தழுவிக்கொண்டனர். இவர்தாமேஇதற்கோருரையுஞ்செய்தனர்.

இலக்கணவிளக்கச்சூறவளி—இது ஆசிரியர் சிவஞான யோகிகள் எழுதியது. இது இலக்கணவிளக்கம் என்னும் நூலிலுள்ள குற்றங்களைக் காட்டுவதோர் கண்டனநூல்.

இலக்கணை — ஒரு பொருளின் இலக்கணத்தை மற்றொன்றற்கு ஏற்றிக்கூறுதல் அது விட்ட இலக்கணை, விடாத இலக்கணை, விட்டுவிடாத இலக்கணை என மூன்றாம்.

இலக்கன்—கணனது சேனைகளைக் கொல்ல சித்திதேவியால் சிருட்டித்தனுப்பப்பட்ட கணபதியின் வீரன். (பார்க்கவ புராணம்).

இலக்கினதசை — யாவனொருவன் பிறந்தபொழுது நின்ற உதயராசியின் நவாங்கிசத்தையுடைய ராசியில் (கூ) காலின் சுடர்த்தொகையாலாயு சறியப்படும், வலநாளிவிட நாளுண்ணுமிடத்தும் இடநாளில் வல நாளுண்ணுமிடத்தும் தத்தென்றறியப்படும். தத்துமிடத்து இடைப்பட்ட ராசிகளிலே இராகு நின்றானாகில் அக்காலத்தின் மரணமாம். (விதானமாலை.)

இலக்கினன்—துரியோதனன் குமாரில் ஒருவன். பாரத முதனாள் யுத்தத்தில் அபிமன்னனுடன் போர்செய்து இறந்தவன்,

**இலக்கினபலன்**—பிரதமார்த்தத்துத் தோன்றின இலக்கினம் துலா, மிதுனம், கும்பம், மகரம், சிங்கமானூற் போகவதியாம். தனு, விரிச்சிகம் மேடம், மீனம், திருவிலியாம். இடபம், கர்க்கடகம், பரதாரமாம். கன்னியாகின் அருந்ததிபோன்ற கற்பாம். (விதானமாலை)

**இலக்கினமிருந்து** — உதயத்தும் ௬-ம் இடத்தும், ௨-ம் இடத்தும், ௭-ம் இடத்தும், ௯-ம் இடத்தும், ௫-ம் இடத்தும், ௮-ம் இடத்தும், ௧௨-ம் இடத்தும், ௧௦-ம் இடத்தும், பாபகிரகங்கள் நின்றால், முகூர்த்தத்துக்குத் தீமை உண்டாக்குவர்; ௩-ம் இடத்தும், ௬-ம் இடத்தும், ௧௧-ம் இடத்தும் இவர்கள்நிற்கில் அம்முகூர்த்தத்துக்கு மிகவும் நன்மை உண்டாக்குவர். இரவு சந்திரோதயகாலமும், ஆதித்தியன் அத்தமயகாலமுந் தோஷகாலமாம். சுபகிரகங்கள் ௮-ம்இடத்தும், ௯-ம்இடத்தும், ௧௨-ம் இடத்தும் நிற்கில் முகூர்த்தம் தீதாம். இந்த இடங்களும் மிருத்து முகூர்த்தமாகச் சொன்னவிட்டு மொழியச் சுபக்கிரகங்கள் நிற்கில் நல்ல முகூர்த்தமாம்.

**இலக்கினம்**--இராசிகளுடைய உதயத்திற்குப் பெயர்.

**இலக்கின விஷாதி நிஷத்தாபவாதம்**—இடபம் மேடம், தனு, கன்னி, இவற்றின்முதற் கூற்றிற்பாம்பு உண்ணும். கும்பம், துலாம், மிதுனம், சிங்கம், இதினடுக்கூற்றில் கழுகுண்ணும். விருச்சிகம், கர்க்கடகம், மீனம், மகரம், இதன் கடைக்கூற்றில் பன்றியுண்ணும். இக்கூறுகளிற் சுபகன்மங்கள் பண்ணப்படா. சுபக்கிரக முதயமாகி விந்தத் தோஷமில்லை. (விதானமாலை.)

**இலக்குமனர்**—1. தசரதருக்குச் சுமித்திரையிடம்பிறந்த குமரர். இவர் இராமரைவிட்டு நீங்காது மிதிலைசென்று சநகபுத்திரியாகிய ஊர்மிலையை மணந்து தமயனைவிட்டு நீங்காமல் தாய் சொற்படி காடுசென்று இராமபிரானுட னிருக்கும்போது நித்திரைவாநாங்கள் (௧௪) வருஷம் வனஞ்சென்று வருமளவும் வாராதையென்று கட்டளை தந்து தண்டகவனஞ் சென்று சூர்ப்பநகை நாசியைப் பங்கப்படுத்திச் சீதாபிராட்டிக்குக் காவலிருந்து மாரீசன் குரல்கேட்டுப் பரிதபித்த சீதைக்குத் தேறுதல் சொல்லியுங் கேளாத அவள்கூறிய கடுஞ்சொல்லிற்கும் அவள் மரணத்திற்கும் அஞ்சிவிட்டு நீங்கித், தமயனைக் கண்டு நடந்தது கூறிச் சீதையைத் தேடச்செய்து தமயன் தாகத்திற்குக் கேட்க, நீர் தேடிச்செல்லுகையில், அயோமுகியெனும் அரக்கியைக் கண்டு அவள்செய்த தீமைபற்றி மூக்கையும் காதையு மறுத்து, அநுமான், சுக்கிரீவர் முதலியோர் நட்புகொண்டு, தமயன் சொற்படி துந்துபியின் உடலைக் காவாற்றூக்கி யெறிந்து, கார்கால மாறுமளவும் பொறுத்து வாநரவீரர் வாராமையால் கோபித்து, அவர்கள் இருக்கை சென்று தாரை முதலியோரால் தேறித் திரும்பி அநுமனால் பிராட்டியி னிருப்பிடமறிந்து, தமயனுடன் இலங்கைக்குயுத்தத்திற்குச்சென்று முதனாள் யுத்தத்தில் இராவணன்விட்ட வேலினால் மூர்ச்சித்துத் தெளிந்து, அதிசாயனுடன் போர் புரிகையில் அங்கதனை வாகனமாக ஏறி அவனுடன் பெருத்த யுத்தஞ் செய்து அவன் சாகாம லிருந்தது கண்டு வாயுபகவான் கூறிய சொற்படி பிரமாத்திரப் பிரயோகஞ்செய்து கொன்றவர். இந்திரசித்துடன் போரிடுகையில் அநுமனை வாகனமாகக் கொண்டு இந்திரசித்தின் கவச முதலியவற்றை அறுத்து அவன் ஏவிய நாகபாசத்தால் கட்டுண்டு மூர்ச்சையடைந்து அக்காலத்துவந்த கருடபகவானால் மூர்ச்சை நீங்கினவர். மாலி, யாககேது, விரூபாக்ஷன், பிசாசன் முதலியவரைக் கொன்று இந்திரசித்தைத் தாமே கொல்லும்படிச் சபதஞ் செய்துகொண்டு இந்திரசித்துப் பிரயோகித்த பிரமாத்திரத்தால் மூர்ச்சித்துத் தெளிந்து அவனைச் செயிக்க இராமமூர்த்தியிடம் வில், கவசம் முதலிய பெற்று அவனிடம் யுத்தஞ்செய்து இலங்கைக் கோடச்செய்தவர். தேர்பெற்று மீண்ட இந்திரசித்தை வில்லுடன் கையை அறுத்து அர்த்தசந்திர பாணத்தால் உயிர் போக்கினவர். இராவணனுடன் யுத்தஞ்செய்கையில் அவன் விபீஷணர்மேலேவிய வேலைத் தாம் மார்பிலேற்று மூர்ச்சித்து அநுமனால் சஞ்சீவி தரப் பெற்று மூர்ச்சைநீங்கி இராமபிரானிடஞ்சென்று இராவண வதைக்குப் பின் இராமமூர்த்தியின் ஏவலால் விபீஷணருக்குப் பட்டமளித்துச் சீதையின் கற்பறிவிக்கத் தீமூட்டி இலங்கைநீங்கிப் பாத்துவாசராச்சிரமம் அடைந்து தம்மிடம் வந்த நித்திராதேவியைக் கண்டு நகைத்துத் தமயன் கட்டளைப்படி தம் குமாரருக்குக்

காருபதம்செயித்துப் பட்டமளித்து இராம பிரான் ஏகாந்தத்தி லிருக்கையில் துருவாசரை விடுத்து அவர் கோபத்திற்குப் பாத்திராராக இராமமூர்த்தியை நீங்கிச் சரயுநதியடைந்து யோகத்திருந்து தேவர்க ளெதிர்கொள்ள ஸ்ரீ வைகுண்ட மடைந்தவர். இவர்க்குச் சௌமித்திரி, இளைய பெருமாள், இராமாநுசன் எனவும் பெயர். இவரை ஆதிசேஷா அவதாரம் என்பர்.

2. இந்திரசித்து மரணமடையும்போது அவன் தேகத்திலிருந்து ஓர் நாகச்சுரம் உண்டாய் இவருடைய தேகத்தில் பிரவேசித்தது; ஏனெனில், பிரமசந்ததியில் பிறந்து அக்கிஹோத்ரம் செய்ததால் பிரம தேஜஸ் ஓர் நாகச்சுரமாய்விட்டது. அதனால் இவர் தாபத்தையடைய த்விதன் என்ற வானரன் தான் அஸ்வனிதேவ அம்சத்தில் பிறந்தவனுதலாலும் தன்வந்திரி போல் வைத்தியன் ஆதலாலும் லக்ஷ்மணருக்குச் சிகிச்சை செய்வதில் பயனில்லையென் றுணர்ந்து லக்ஷ்மணருக் கெதிரில் இராமருடையபிரதிமையை எழுதிக்காட்ட உடனே லக்ஷ்மண ரெழுந்து உனக்கு என்னவரம் வேண்டுமென்றனர். அதைக் கேட்ட வானரன் "உம்முடைய கையால் யான் இறந்துவானரஜன்மம் நீங்கவேண்டு" மென்ன இலக்குமணர் "த்விதா! இச்சன்மத்தில் உனக்கு இது நீங்காது, சமுத்திரத்தின் வடகரையில் பலராம ரூபியான என்னுடைய சரத்தால் உனக்கு நல்ல ஜன்மமுண்டாகும்" என்றனர். இப் படமானது நாகச்சுரத்தைப் போக்கும்படியானது என்று ஒரு பத்திரம் தந்தவர். (கல்கி புராணம்).

3. துரியோதனுக்குக் குமரன்.

**இலக்குமணை** — 1. மத்திர தேசாதிபதியாகிய விருசேநன் குமரி. இவளைக் கிருஷ்ணன், அரசர் எல்லாருங் காண மச்சயந்திர மறுத்துத் துவாரகைக்குக் கொண்டு வந்து விவாகஞ் செய்து கொண்டனன். இவளுக்குக் கோத்ரவான், பிரகோடன் முதலிய பத்துப்பெயர் குமரர்.

2. துரியோதனன் குமரி. இவளுக்குத் துரியோதனன் சுயம்வரஞ் சாற்றிய காலத்தில் சாம்பன் பலவந்தமாகத் தூக்கிக்கொண்டு வந்து விவாகஞ் செய்து கொண்டனன். இதனுல் கௌரவர் கோபித்து யுத்தத்திற்குவரப் பலராமர் அவர்களையும் அவர்கள் பட்டணத்தையும் கலப்பையால் பேர்த்துக் கங்கையில் தள்ள யத்தனிக்கையில் கௌரவர் நடுங்கிப் பணிந்தது கண்டு சினந் தணிந்தனர்.

**இலக்குமி** — A. இவள் இடதுகையில் வில்வப்பழம், வலக்கையில் பதுமம், தங்கநிறம், இரண்டு யானைகள் பொற்கலசங்களில் கங்காசலங் கொண்டு இரண்டு புறங்களிலும் துதிக்கைகளால் அபிஷேகங்கொள்ள இருப்பள். பிருகுருஷிக்குக் கியாதியிடத்தும், அமிர்த மதனத்தில் திருப்பாற் கடலில், ஜேஷ்டா தேவியுடனும் பிறந்து திருமாலை மணந்தவள். ஒருமுறை பசுக்களின் 'சோமயத்தையும் கோமூத்திரத்தையும் இடமாக் கொண்டவள். பிருகுவாலுதையுண்ட திருமாலின் மார்பினின்று நீங்கிக் கபிலரிடத் திருந்தவள். இரத்த பிக்ஷாடனத்தில் பிக்ஷாடன மூர்த்தியை விஷ்ணுவின் உயிர்ப்பிச்சைவேண்டியவள். பிரமன் சிரங்கிள்ளிய வைரவர்க்கு அக்கபாலம் கையைவிட்டு நீங்கப் பிக்ஷையிட்டவள். தத்தாத்திரேயரிடமிருந்து அசுரர் கொள்ளச் சிலதூரஞ் சென்று மறைந்தவள், இராமாவதாரத்தில் சீதையாகவும் கிருஷ்ணவதாரத்தில் இருக்மணியாகவும் வேதவதியாகவும்,சூடிக்கொடுத்தாளாகவும் மற்றும் அடியவர் வேண்டியபடியும் திருவவதரித்து உலகத்து உயிர்களுக்கு வேண்டிய பெருவாழ்வு அளித்துவரும் விஷ்ணுவின் சத்தி. இவள், சாபத்தாற் சோட்டானக அம்முட்டைகளில் குதிரைகள் பிறந்தன. இலக்ஷ்மி, விஷ்ணுவுட னிருக்கையில் வாலகில்லியர் வந்தனர். அவர்களது வரவை மதியாமல் நகைத்ததுபற்றி விஷ்ணு மூர்த்தியால் குலக்கேடியாகச் சாபமேற்றவள். (திருப்பூவணபுராணம்). இந்த லக்ஷ்மி, தன முதலிய உதவுதலால் தனலக்ஷ்மி, தான்யலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, வீரலக்ஷ்மி எனப் பலபெயர் பெறுவள், இலக்ஷ்மி, சிருட்டி முதலில் நாராயணனது வாமபாகத்தில் தோன்றித் தானே இருகூறாய் ராதையென்றும், லக்ஷ்மியென்றும் பெயரடைந்தனள். இவள் தனது யோகத்தால் பல உருவடைந்து சுவர்க்கத்தில் சுவர்க்க லக்ஷ்மியாயும் அரசர்களிடத்து இராஜலக்ஷ்மியாயும் கிருகத்தில் கிருஹ லக்ஷ்மியாயும், சம்பத்ஸ்வ ரூபிணியாயும், கோக்களில் சுரபியாயும், யஞ்ஞன் தேவியாகிய தக்ஷிணையாயும், க்ஷீரசமுத்திர கன்னிகையாயும், சூர்யசந்திரர்களிடம் சோபா

ரூபிணியாயும் மற்ற மங்கலப்பொருள்களி லெல்லாம் நிறைந்து மங்கள ரூபிணியாயும் இருப்பள். இலக்குமி பூர்வத்தில் நாராயண னால் பூசிக்கப்பட்டவள். இவள், எல்லாத் தேவர்களாலும் அரசர்களாலும் பூசிக்கப் பெற்றவள். இவள் சர்வைச்வர்யங்களுக்கு மதிதேவதை. இவள், இந்திரனுக்குச் செல்வங்கெடத் துருவாசரிட்ட சாபத்தால் வைகுண்டமடைந்து மீண்டும் தேவர் அச் செல்வம் பெறக் கடல் கடைந்தபோது பாற்கடலிற் பிறந்தனள். (பிரம்மகை வர்த்தம்.) வராககற்பத்தில் நக்னசித்தின் குமரியாய் விஷ்ணுவை மணந்தவள்.

B. இலக்ஷ்மி, ரேவந்தன் ஏறியிருந்த குதிரையி னழகைக்கண்டு அதில் மனதைச் செலுத்தியிருந்து விஷ்ணுமூர்த்தி கேட்கும் வினவிற்கு விடை கூறாதிருந்தமை யால் நீ எல்லாப்பொருள்களிலும் ரமித் திருப்பதால் ரமையெனவும், எவ்விடத் தும் நிலையற்றிருப்பதால் சஞ்சலை யென வும் பெயர்பெறுக என்றும் பின் குதிரை யைக் கண்டு மனதழுந்தியபடியால் பெண் குதிரையாகுக எனவும் சாபமடைந்து, பூமி யில் வந்து காளிந்தி நதிக்கும் தமசாநதிக் கும் நடுவிடத்தில் தவஞ்செய்யச் சிவ மூர்த்தி "உன்னை விஷ்ணு ஆண் குதிரை யாக வந்து அழைத்துச் செல்வர்" என்று மறைந்தனர். அவ்வண்ணமே விஷ்ணு மூர்த்தி ஆண்குதிரையாக வர அவ்விடம் அக்குதிரைக ளிரண்டும் புணர ஓர் அழ கிய புத்திரன் உற்பத்தியாயினன். இக் குழந்தை பிறகு ஏகவீரன் எனப் பெயர் பெற்றனன். மற்ற சரிதைகளை ஏகவீர னைக் காண்க. (தேவி பாகவதம்).

C. இரவிவன்மனுக்கு அமுதபதி வயிற் றிற் பிறந்தவள். தாரை, வீரையென்பவர் களின் தங்கை. இராகுலனுடைய மனைவி திட்டிவிடத்தால் கணவனிறந்தவுடன் தீப் பாய்ந்து உயிரை நீத்தவள்; சாது சக்கர னெனும் முனிவனுக்கு உணவளித்த புண் ணியத்தால் மணிமேகலையாக வந்து பிற ந்து பௌத்ததருமங் கேட்டவள். (மணி மேகலை).

D. ஒரு கற்பத்தில் கண்ணுவமுனிவர் சாபத்தால மானுருவடைந்து வனத்தி லலைந்து கணவரைத் தேடித் திரிகையில் ஒரு வனத்தில் தவம் புரிந்து கொண்டிருந்த திருமாலைக்கண்டு மனங்களித்துக் கருவுற்று ஒரு பெண்ணைப் பெற்று வேடரைக்கண்டு மறைந்தனள். இக் குழந்தையை வேட ரெடுத்து வளர்த்தனர். (திருவோத்தூர் புராணம்.) சரஸ்வதியைக் காண்க.

E. தருமன் எனும் மறுவின் தேவி.

இலக்குமிதானம் — ஆயிரமுதல் நூறு கழஞ் சிறுதியான பொன்னில் இலக்ஷ்மியின் உருச்செய்து விதிப்படி பூசித்துத் தக்ஷிணை யுடன் வேதியர்க்குத் தானஞ் செய்வது.

இலங்கணி — இலங்கையைக் காத்திருந்து அநுமன் வந்தகாலத்து அவனைத் தடை செய்து அவனா லறையுண்டிறந்த அரக்கி.

இலங்கை — 1. இது தென்கடலில் திரிகூட சிகரத்தின் உச்சியில் ௭00 யோசனை விஸ் தாரமாயுள்ள தீவு. இதன் கோட்டையரண் விச்வகர்மனால் இலக்ஷம் யோசனை ஆழ்ந்த தாகச் சிருட்டிக்கப்பட்டது. இதனை முத லில், மால்யவந்தனும், இரண்டாவது குபேரனும், மூன்றாவது இராவணனும் ஆண்டு இறுதியாக விபீஷணனுக்கு விட் டனர். இது ஒருமுறை அநுமனாலும், இரண்டாவது வாநரவீரராலுந் தீயிடப் பட்டது. இதன் உற்பத்தியை ஆதிசேட னைக் காண்க.

2. இது கயவாகுவென்னு மரசனுடைய இராசதானி. இதனை இக்காலத்து அநு ராதபுர மென்பர். (சிலப்பதிகாரம்).

இலச்சை — தருமன் தேவி. தக்ஷன் பெண்.

இலஞ்சிமன்றம் — காவிரிப்பூம் பட்டினத் திருந்த மன்றம் ஐந்தனுள் ஒன்று. இது நோய்களைத் தீர்க்கும் பொய்கையுடையது (சிலப்பதிகாரம்).

இலதீபுஷா — இவர் ஒரு துருக்கர். இவர் ராமபக்தியைக் கடைப்பிடித்து அரிபஜனை செய்துவருகையில் துருக்கர் அரசன் இவர் வீட்டினைக் கொள்ளையிடப் பரிஜனங்களை ஏவினன். பரிவாரங்கள், லதீபுஷாவிடம் வர இவர் அரிபஜனையில் ஈடுபட்டவராய் அரசன்பணியை மறந்திருந்தனர். அரசன் தானே வந்து லதீபுஷாவைக் கண்டு அவ ரிருந்த வீட்டில் கிருஷ்ணனுக்கு ராதா பிராட்டி தாம்பூலம் மடித்துத்தரும் கோல த்தைச் சுவரில் எழுதியிருக்கக்கண்டு லதீ புஷாவை நோக்கிக் கண்ணன் அவள் கொடுக்கும் தாம்பூலத்தை ஏன் வாங்க வில்லையென்று கேட்டனன். லதீபுஷா பகவானை அவ்வாறு செய்யப் பிரார்த்திக் கக் கண்ணன் பிரதிமை அவ்வாறு செய்யக் கண்டு களித்தவர். (பக்தமாலை).

இலதை—1, மேருதேவியின் பெண். இளாவிருதன் பாரி.

2. ஒரு காந்தருவப் பெண். ஸ்ரீதீர்த்தம் காண்க

இலத்திமலை—இது பாண்டியனைக் கொல்லுதற்குச் சைனர்கள் அனுப்பிய யானையின் மீது அட்டாலைச் சேவகர் நரசிங்கக்கணையை எவியபொழுது அந்த யானை அஞ்சிச் சொரிந்த இலத்தியாவாகியது.(திருவிளை)

இலந்தை—பதாபாசனம் காண்க.

இலபிதை—ஒருமான் பேடு. மந்தபாலமுனிவர் மானுருக்கொண்ட காலத்து உடனிருந்தது.

இலப்சேஞ்ச் மதம்—இம்மதம் மத்ய ஆஷியாவில் சுமார் 2800, வருடங்களுக்கு முன்னிருந்த லப்சென் என்னும் இராஜகன்னிகையால் ஸ்தாபிக்கப்பட்டது. இவர்களுக்கு விக்கிரக ஆராதனை இல்லை. பிரகிருதி அங்கீகரிக்கார். அவதாரங்கள் ஒத்துக்கொள்ளார்.

இலப்பைகள்—தமிழ் நாட்டிலுள்ள மகம்மதிய மதத்தைத் தழுவிய தமிழ் மககள். இவர்கள், மரக்காயரின் வேறுபட்டவர்கள். இவர்கள் சில நூற்றுண்டுகளுக்கு முன் இராக்கில் கவர்னராயிருந்த ஹாஜி பென்குஸாப் என்பவனுல் தன்னுட்டிலிருந்து தாத்தப்பட்டு இந்தியாவின் மேற்பாகத்திலும் சிலர் கன்யாகுமரி துறையிலும் குடிபுகுந்த அரபியர். இவர்கள் பலஅரசர்களாலும் மகம்மதியராலும் துன்புறுங்காலத்தில் (லபெக்) நாங்களுங்களடிமை யெனும் பொருளுள்ள இச்சொல்லை உபயோகித்ததனுல் லப்பைகளெனப்பட்டனர். இவர்கள் சோனகம் எனும் அரேபியாவிலிருந்து வந்ததால்சோனகர்எனப்படுவர். தொழில், வெற்றிலை வியாபாரம், மீன் பிடித்தல், துணி, பாய்நெய்தல், படகோட்டல், இவர்களில் ஆண்பிள்ளைகள் மகமதியர்போலவும், பெண்கள் தமிழர்கள்போலவும் உடைதரிப்பர். இவர்கள் படகோட்டலால் மரக்காயர் எனப்படுவர். காயல்பட்டன வாசிகளாதலால் காயலார் எனப்படுவர். (தர்ஸ்டன்.)

இலம்பகம்—இது ஒரு தேசம். Lamghan on the Northern bank of the Kabul river.

இலம்பாடியார் — இலவண வர்த்தகசாதியென்று கூறப்படும் சாதி (இலவணம்) உப்பு இவர்கள் மார்வாடிஜாதியைச் சிறிது ஒத்தவர்கள். இவர்கள் பேசுவது மாராட்டி. இவர்கள் நிலையற்ற நாடோடிகள். இவர்களின் பெண்கள் மணிக்கட்டு முதல் தோள்வரையில் தந்தவளையல் பூண்டிருப்பர். வர்த்தகத்தின்பொருட்டு ஊர்ஊராகத் திரிவர். (தர்ஸ்டன்.)

இலம்பை—தக்ஷன் பெண். குமரன் வித்யோதன்.

இலம்போதகன்—பௌரணமாசன்குமரன். இவன் குமரன் சிபவுகன்.

இலம்போதரன்—விநாயகர்க்கு ஒரு பெயர்.

இலவிதை—வந்த்யைக் காண்க.

இலவக்கோட்டை — இராமபிரான் புத்திரனுகிய லவனுல் கட்டப்பட்ட கோட்டை இதுவே லாகூர்.

இலவங்கப்பட்டை—இது பட்டை வகைகளில் மணமுள்ள பொருள். காரமுள்ளது. இது இலங்கை முதலிய தீவுகளில் பயிரிடப்படுகிறது. இச்செடி ஏறக்குறைய 20, 25 அடியும் வளரும். இதனை அதிகம் வளரவிடுவதில்லை. இது, (10, 12) அடிகள் வளர்ந்தவுடன் கிளைகளைச் சீவிப் பட்டையெடுத்துக் கொள்கின்றூர்கள். இதன் இலைகள் வட்டமாகவும், பூக்கள் உட்புறம் மஞ்சள் நிறமாகவும், வெளிப்புறம் வெண்மை கலந்த நீல நிறமாகவும் இருக்கும். இது, வாசனையுள்ள பொருள்களில் ஒன்று ஆதலால் இதனை மருந்துகளிலும் சம்பாரவருக்கங்களிலும் சேர்த்து உபயோகப்படுத்துவர். இலவங்கப் பூச்செடி இதனின் வேறு.

இலவங்கப்பூ—இது அரும்பு வகையில் மணமுள்ளதும் காரமுள்ளதுமான ஒரு செடியின் அரும்பு. இச் செடிகள் இந்தியா, மௌலுகஸ் முதலிய இடங்களில் பயிராகின்றன. இச் செடி, (40) அடிகள் உயரம் வளருகிறது. இலைகள் தடிப்புள்ளவாகவும் அழுத்தமாகவும் இருக்கின்றன. இது, கொத்துக் கொத்தாகப் பூக்கத்தொடங்கி மலராமுன் இதனரும்புகளைப் பறித்து உலர்த்திப் பதப்படுத்துகின்றனர். இதன் அரும்பு மலர்ந்துவிடின் மணம் குறைந்து விடுகிறது. இதன் பழத்தில் ஒரேவிதை காணப்படுகிறது. இது, மருந்துவகைகளில் ஒன்றூகவும், சம்பார வகைகளில் ஒன்றூகவும் எண்ணப்படுகிறது.

இலவணன்—A. மதுவின் குமரன். இவன் இருடிகள் முதலியவரைத் தொந்தரைசெய்ய இராமபிரான் ஏவலால் சத்துருக்

னன் இவன் ஆகாரத்திற்குச் சென்றிருக்குஞ் சமயங்கண்டு இவனுடன் யுத்தஞ் செய்து கொல்லப் பெற்றவன். இவன் பட்டணம் வடமதுரை. மாந்தாதாவைக் கொன்றவன்.

B. உத்தரபாண்டவ நாட்டரசன். இவனரசில் சித்தன் ஒருவன் வந்து தன்னிடமிருந்த பீலியை அரசன் காணச்சுற்ற ஒரு குதிரை வந்தது. அதைக்கண்டு சித்தன், அரசனே இது நல்லகுதிரை இதில் ஏறுக என அரசனுக்கு ஒரு முகூர்த்த காலம் சோகம் உண்டாயிற்று. உடனே அரசன் தெளிவடைந்து கூறுவான். நான் குதிரையேறிச் சவாரிசெய்து வேட்டைக்குச் சென்றேன். என்னைக் கொடியொன்று தடுக்க நான் கொடியைப் பிடிக்கக் குதிரை என்னைவிட்டு நீங்கிற்று. நான் இரவுமுழுதும் கொடியிலிருந்து நானே இறங்கி வேறொருவரையுங் காணாது விகாரமான ஒரு புலைச்சியைக் கண்டு அவளை மணந்து மூன்று புத்திரரைப் பெற்று காமத்தால் வருந்தி உறவினர் இறக்க நானும் என் மனைவி மக்களும் நீங்கி ஒரு பனையடியில் தங்கினோம். அவ்விடம் எனது இளையகுமரன் பசிக்கு மதுமாமிசம் கேட்டுத் தளர்வதைக் கண்டு நான் பொறுக்காமல் அக்நியில் வீழ்ந்து இறக்க இருக்கையில் விழித்தேன் என்று அரசன் மந்திரியருடன் கூறி வெளியிற் சென்று மேற்கூறிய செய்தியாலாகிய விளைவைப் பிரத்தியக்ஷமாகக் கண்டவன். (ஞானவாசிட்டம்.)

இலவணாசுரன்—இவன் சிவபிரான் வரத்தால் பெற்ற அஸ்திரத்தால் மாந்தாதாவைக் கொன்றான். (பாரதம் - அநுசா.)

இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் இவன் பாண்டி நாட்டரசர்களில் ஒருவன். நக்கீரர் முதலியோரால் பாடப்பெற்றவன்.

இலவன் — இராமபுத்ரன், வான்மீகரால் காவல்காரணமாகத் தர்ப்பையின் அடிப்புறத்தால் தடவப்பெற்றதா லிப்பெயர் பெற்றவன். இவனாண்ட பட்டணம் சரஸ்வதி.

இலவுகாதுஷி—பவுஷ்பஞ்சி மாணாக்கன்.

இலவு, வாயு—இவை விருக்ஷம், காற்று இவ்விரண்டிற்கும் தன்னினும் வலியுள்ளானுக்கு அஞ்சவேண்டும் என நாரதர் செய்த கலகத்தால் இலவு வாயுவுடன் பகைத்து இலை முதலிய நீங்கின்றது. (பார-சாந்தி).

இலளிதாங்கதேவர் — இருஷப தீர்த்தங்கரின் மூன்றாவது பிறப்பு. (சைநர்).

இலளிதை—1. விதுமனைக் காண்க.

2. சிவமூர்த்தியின் வலது பாகத்தில் திருவவதரித்தவள். இவளது வலம், இடம் நெற்றி முதலிய நேத்திரங்களில் பிரம, விஷ்ணு, ருத்ரர்களும், முகத்தில் அக்நி, வேதியர், வேதம், சந்திரன் முதலியோரும் பிறந்தனர். இவளது மற்ற உறுப்புக்களில் சராசரங்களுண்டாயின.

இலக்ஷன் — விநாயகருக்குச் சித்தியிடம் பிறந்த குமரன்.

இலக்ஷ்மி-1 திருமகள் (அஷ்டலக்ஷ்மி காண்க)

2. சும்பனென்னும் அசுரன் குமரி. நிசும்பனைக் காண்க.

இலக்ஷ்மிதுவாரம் — இது கைலாயத்தின தென்வாயில்.

இலாங்கலக்கினாசுரன் — அஷ்டதிக்குப்பாலகரை வருத்திச் சிவமூர்த்தியா லிறந்த அசுரன்.

இலாங்கலன்—பவுஷ்பஞ்சியின் மாணாக்கன்.

இலாங்கிலினி — மகேந்திரகிரியி லுற்பத்தியாகும் நதி.

இலாடர்—மைசூர் நாட்டிலுள்ள ஒருவகை வர்த்தக சாதியார். இவர்கள் குஜராத்தியிலுள்ள லாத்தேசத்தவரென எண்ணப்படுகின்றனர்.

இலாடுபாவரி—இவர் ஜோத்பூர் என்னும் நகரவாசி. விரக்தராகித் தீர்த்தயாத்திரை செய்துவருங்கால் நரபலி செய்வோர் மூவர் இவரைப் பிடித்து இருவர் பிடித்துக்கொண்டும் ஒருவன் வாளுருவிக்கொண்டும் காளிமுன் நிறுத்தக்கண்டு பெருமாளைத் தியானிக்கக் காளி கோரரூபத்துடன் எதிர் தோன்றிக் கொல்லநின்ற மூவரையுங் கொலைபுரிந்து தாசரை என்னவேண்டுமென இன்றுமுதல் நீ நரபலி வேண்டாதிருக்க என அவ்வாறு உடன்பட்டு அரசன் கனவிடைத்தோன்றி இனி ஊரார் நரபலி எனக்கிடின் ஊரிலுள்ளாரைத் துன்புறுத்துவேன், நீயு மற்றவரும் என் கோயிலிடம் வந்திருக்கும் பாகவதர் அருளைப் பெறுகவெனக் கூறி மறைந்தனள். அரசன்விழித்துக் கொலைசெய்யாதிருக்கப் பறையறைவித்துத் தானும் தாசர் அருள் பெற்றான். தாசர் பெருமாளைப் பணிந்திருந்தனர்.

இலாட்சி — துஷ்யந்தன் பாரியை. இவளுக்கு இலட்சணை என்றும் ஒரு பெயர்

உண்டு. புத்திரன் ஜனமேஜயன். (பாரதம் ஆதி).

**இலாபன்** — புத்திதேவியின் கோபத்திற் பிறந்தவன், விநாயகபுத்ரன்.

**இலாப்லாண்டர்மதம்**--இத்தேசத்தவருக்கு ஜூமலா என்பவர் சிருட்டிகர்த்தா. அஜிகா, ஸ்தோர்ஜன்கரா, பெயூவி என்னும் மும்மூர்த்திகளுளர். இவர்களுக்குத் துணையாக அநேகபிசாசங்களுண்டு. அவர்களைத் திருப்திசெய்ய ஆடுமாடுகளைப் பலிகொடுப்பர். இவர்கள் வீட்டில் யாராவது இறந்தால், அவர்கள் அவ்வீட்டில் ஆறுமாதம் குடியிரார்.

**இலாமயன்**—ஓரந்தணன். இனிய மொழியை யுடையவன். மந்திரவித்தையிற் சிறந்தவன் உதயணனுக்கு இவன்பால் நன்கு மதிப்புண்டு. இவனிருந்த இடம் காளவனமென்பது. (பெருங்கதை.)

**இலாவந்தன்**—அருச்சுநனுக்கு உலூபியிடம் பிறந்த குமரன்.

**இலாவாணகம்**—இஃது உதயணனுக்குரிய பெரிய நகர்களுள் ஒன்று. பகைவர் வருதற்கு மிக அஞ்சும் போரணிகள் முதலியவற்றையும், இடையே மிக அழகிதான ஓரரண்மனையையும் உடையது. இதன் பக்கத்தே பலவகை வளமுள்ள ஒருமலை உண்டு. அதன்சாரல் மிக்க இன்பம் பயப்பதாக இருந்தது. உண்டாட்டுக்குரிய பலவகை மரங்கள், கொடிகளையுடைய பூஞ்சோலைகளும், சுனை முதலிய நீர் நிலைகளும் படமாட முதலியான அமைத்தற்குரிய இடவிசேடங்களும், இச்சாரலில் இருந்தன. முனிவராச்சிரமங்களும், தேவாலயங்களும் மோகூறிய சோலைகளில் இருந்தன. தவஞ்செய்து கொண்டிருந்த ஓரரச முனிவருடைய புத்திரியாகிய விரிசிகை யென்னும் கன்னியின் வேண்டுகோட் கிரங்கி அவள்கொடுத்த பலவகை மலர்களைக் கண்ணி முதலியனவாகக் கட்டி உதயணன் சூட்டியது அச்சோலைகளுள் ஒன்றிலே தான் அக்கன்னிகைவேறொன்றையுமணியாமல் அம்மாலையுடனே இருந்துமுயன்று உதயணனுக்குத் தேவியாயினள். உருமண்ணுவாவிற்கு அவனாற்கொடுக்கபட்டசீவிதங்களுள் இந்நகரமும்ஒன்று. இஃதுஇலாவாணமென்றும் வழங்கும். (பெருங்கதை)

**இலாலா**—இவர்கள் பந்தல் கண்டிலிருந்து பல இடங்களில் குடியேறிய பொந்திரிய வகுப்பார்.

**இலிகிதர்** — 1. இவர் சங்கரெனும் ருஷியின் சகோதரர். இவர்கள் பாகுதை யெனும் நதிக்கரையி லாச்ரமம் கொண்டிருந்தவர்கள். ஒரு கால் இலிகிதர் சங்கர் ஆச்ரமஞ் சென்று அங்கிருந்த பழங்களைப் பொறுக்கித் தின்கையில் வெளிச்சென்றிருந்த சங்கர் நீ என் ஆச்ரமத்திலிருந்த பழங்களைத் திருடினையாதலால் அதற்குத் தக்க தண்டனை சுத்யுமநனென்னும் அரசனிடம் பெறுகவென, அவ்வாறே தமயன் சொற்படி அரசனிடஞ் சென்று கையறுப்புண்டு மீண்டும் தமயனருளால் தீர்த்த ஸ்நானஞ் செய்து கைவளரப்பெற்ற ருஷிசிரேட்டர். சுத்யும்நரைக் காண்க. (பார - சாந்தி.)

2. கண்வருஷியின் குமரர். லிகிதஸ்மிருதி செய்தவர்.

**இலிங்கபுராணம்**—இது பதினொராயிரங் கிரந்தமுடையது. இது சீவர்களுடைய சீலம், ஐச்வர்யம், சுகமோக்ஷம், அண்டகோசம், மன்வந்தரம் முதலியவற்றைக் கூறும் பதினெண் மகாபுராணங்களுள் ஒன்று.

**இலிங்கம்** — ஒலி முதலிய புலன்களுக்கும் மனோவாக்குகளுக்கு மெட்டாததாய், அளவில்லாத பேரொளியாய்த் தனக்குமேல் நாயகமில்லாததாய், அருவமாய், நிர்மலமாய், குணரகிதமாய், அநந்தகுணமணியாய், வண்ணமற்றதாய், நாசரகிதமாய்ச் சர்வசகத்தும் தோற்றுதற்கும் ஒடுங்குதற்கும் ஏதுவாய், அவ்யக்தமெனப் பழமறை பகர்வதாகி ஆன்மாக்களின் தியானபாவனை நிமித்தம் நிட்களசகளத்திருவுருக்கொண்ட நிலையாம். அவ் விலிங்கத்தின் பிண்டிகையே சத்தியுரு, இலிங்கம் சிவவுரு. ஆகவே இலிங்கம் ஞானசத்தி யுருவம், பீடம் கிரியா சத்திவடிவம், ஆதலின் இவ்விரண்டுஞ் சிவனதிஷ்டிக்குந் தேகம். இது திரிமூர்த்தி சுவரூபமும் ஆம். சிவலிங்கத்தின விருத்தசீம ருத்ரபாகமாம். பீடத்தின் அதோபாகத்தின் அடிநான்கு மூலை பிரம பாகம், நடுவின் எட்டுமூலை விஷ்ணு பாகம், இது பிரணவசுரூபமாம். இலிங்=லயம், கம்=தோற்றம், ஆகவே சிருட்டியாதி பஞ்சகிர்த்தியத்தைச் செய்யுமீசுரப்பிரபாவம் இலிங்கம். இதன்விரிவை எழுதப்புகின் விரியுமாதலின் மிகச்சுருக்கி எழுதுவேன். இதன் விரிவை வேதாதி காமிக வாதுளாகமங்களினும், இலிங்கம் முதலிய மகாபுராணங்களினும், திருமந்

திரம் முதலிய தமிழ் நூல்களினும் பாக்கக் காண்க. பின்னும் இவ்விலிங்கம், ஆட்யம், அநாட்யம், சுரேட்யம், ஸர்வசமம் என நான்குவிதமாம். இது சலம், அசலம் என இருவிதமுமாம். பின்னும் அவை வியக்தம, வ்யக்தாவியக்தம், அவ்யக்தம் என மூவகைப்படும். அவற்றுள் சகளமான பிரதிமாவுரு வியக்தம், சகளநிஷ்களம் வியக்தாவியக்தம், நிஷ்களம் அவ்யக்தம். கிருகங்களில் பூசிப்பது சலம் எனவும், ஆலயங்களில் ஸ்தாபிக்கப்பட்டது அசலம் எனவுங்கூறப்படும். அசலம் ஸ்திரலிங்கம், சுயம்பு தானே உண்டானது, தைவிகம் தேவர்களாற் பூசிக்கப்பட்டது, காணபம் கணேசராற் பூசிக்கப்பட்டது, ஆரிஷம் ருஷிகளால் ஸ்தாபிக்கப்பட்டது, மானுஷ்யம் மனுஷரால் ஸ்தாபிக்கப்பட்டது என ஐவகைப்படும். பின்னும் ஸ்படிகலிங்கம், ரத்னதி லிங்கங்களு முள. அவைகளினிலக்கணங்களை ஞானரத்நாவளி முதலியவற்றிற் காண்க. இவ்வகை இலிங்கங்கள் அதமாதமந் துவக்கி உத்தமோத்தமம் வரையில் ஒரு ஹஸ்தப்பிரமாண முதல் ஒன்பது ஹஸ்தப்பிரமாணம்வரை செய்யத்தக்கவை. மேற்கூறிய நால்வகையிலிங்கங்களுக்கும் மேலே ருத்ரபாகம் விருத்தமாகவாவது (கசு) அல்லது (ஙஉ) அல்லது (சுச) மூலையாகவாவது இருக்கலாம். பிரமபாகம் அடியில் நாலுமூலை, விஷ்ணுபாகம் நடுவில் எட்டு மூலை, பின்னும் பிரம பாகம் நபும்ஸகம் எனவும், விஷ்ணுபாகம் ஸ்திரி லிங்கமெனவும், ருத்ரபாகம் பும்லிங்கமெனவும் கூறும். ஆட்யலிங்கத்தின் சிரம் அர்த்தசந்திர வடிவமாகவும், அநாட்யலிங்கத்தின் சிரம் வெள்ளரிப்பழவடிவாகவும், சுரேட்யலிங்கத்தின் சிரம் கோழியின் முட்டை போலவும், சர்வசமலிங்கத்தின் சிரம் குடைவடிவமாகவும் கூறப்பட்டிருக்கிறது. இந்த அர்த்தசந்திராதி நால்வகை வடிவும் தனித்தனி நனனுங்கு விதமாகப் பேதப்படும். ஆட்யலிங்கத்தில் (க௦௦க) லிங்கஞ்செய்ய வேண்டும். சுரேட்யலிங்கத்தில் (க௦அ) லிங்கஞ்செய்யவேண்டும். சர்வசமலிங்கத்தில் ரு, ச, முதலியமுகங்களுள்ள லிங்கங்கள்செய்ய வேண்டும். ஆட்யாநாட்ய சுரேட்ய லிங்கங்களில் முகலிங்கஞ்செய்யக்கூடாது எனவுங் கூறுப. முகலிங்கத்தில் ஈசானதி யைந்து முகங்களுமாம். இலிங்கத்தின் மஸ்தகத்தில் ஈசானம், கிழக்கே தற்புருடம், தெற்கே அகோரம், வடக்கே வாமதேவம், மேற்கே சத்யோசாதமுஞ் செய்ய வேண்டும். நான்குமுக லிங்கமாயின் ஈசானந்தவிரச் செய்ய வேண்டும். இருமுகமான லிங்கத்தில் தத்புருஷமும் சத்யோசாதமும் செய்ய வேண்டும். ஒரு முகலிங்கத்திற்குத் தத்புருஷ மாத்திரஞ் செய்ய வேண்டியது. இவற்றின் நிருமாண முதலியவற்றைப் பிரதிமாசாஸ்திர மறிந்து செய்க. இனிப் பாணலிங்கமாவது எப்போதும் ஈச்வராதிட்டானமா யிருக்கும். இப் பாணலிங்கம் (அரைக்கால்) அங்குலமுதல் ஒரு ஹஸ்தப்பிரமாண முள்ளதாகவும், பக்குவமான நாவற் பழத்தினிறம் போலவும் தேனினிறமாகவும், வண்டினிறமாகவும், காசுக்கல் நிறமாகவும், நீலவர்ணமாகவும் கொவ்வைக் கனிபோலவும், பச்சை நிறமாகவும், தன்னிறமான பீடங்களுள்ளதாகவும், திக்குப் பாலகர்களிறமாகவும், பசுவின் மூலை போலவும், கோழியின் முட்டைபோலவும், கண்ணாடிபோல மழமழப் புள்ளதாகவும் இருக்கும். இனிப் பாணலிங்கத்தின் வரலாறுவது :— பாணனென்னுமோ ரசுரன் தான் பூசித்துச் சித்தி பெறும் வகை அன்புடன் ஈச்வரனைப் பிரார்த்திக்க அவர் பலவகைப்பட்ட பதினான்குகோடி லிங்கங்கள் கொடுத்தனர். அவன் பூசித்து அவற்றை முடிவில் லிங்காசலத்திலும், காளிகாகர்த்தத்திலும், ஸ்ரீநாகத்திலும், கன்னிகாசிரமத்திலும், நேபாளத்திலும், மகேந்திரத்திலும், அமரேச்வரத்திலும், மற்றும் நதிமத்தியிலும், பர்வதமத்தியிலும் எழுந்தருளச் செய்தான். அவை தாம் பாண லிங்கங்கள். அவை சுவயம்பு லிங்கசமமென்று காமிகாதி ஆகமங்களிற் கூறப்படும். இவற்றிற்குப் பீடஞ்சிலை, மிருத்து, லோஹம், நல்லவிருக்ஷம், ரத்னம் இவற்றூற் செய்யலாம். பீடம் லிங்கஸமான வர்ணமா யிருத்தல் வேண்டும். இவையன்றி இந்திரனால் பூசிக்கப்பட்ட லிங்கம ஐந்திரலிங்கமெனப்படும். அது பசும்பொன்னிறமாயும், அறுகோணமாயும், வச்சாரங்கிதமாயுமிருக்கும். அது ராஜ்யசம்பத்தைத் தரும். ஆக்னேயலிங்கம் அக்நியாற் பூசிக்கப்பட்டதாம். அது தாம்பிரவர்ணமாய்ச் சத்தியங்கிதமாய் உஷ்ணபர்சமுள்ளதா யிருக்கும். அது தேஜோவிர்த்தியைக் கொடுக்கும். யாம்யலிங்கமானது யமனாற் பூசிக்

கப்பட்டது. தண்டாகாரமாய் அல்லது தண்டாங்கிதமாய் அவ்யக்தமாய் முகூர்த்த காலத்தில் நிருமிக்கப்பட் டுண்டாவதாய்க் கறுப்புவர்ணமாயிருக்கும். அது சத்ருநாசஞ் செய்விக்கும். நைருதலிங்கம் நிருதியாற் பூசிக்கப்பட்டது. இது கட்கநிறமாய்க் கட்காங்கிதமாய்த் தூமவர்ணமா யிருக்கும். இது சத்துருக்ஷயஞ் செய்விக்கும். வருணலிங்கம் வட்டமாய்ப் பாசாங்கிதமாய்ச் சுக்லவர்ணமா யிருக்கும். அதைச் சலத்தில் விட்டால் அந்தச் சலம் இனிப்பாய் நிர்மலமாயிருக்கும். வாயவ்யலிங்கம் தூமவர்ணமாய்த்து வஜாங்கிதமாயிருக்கும். அதின் சிரத்தில் பஞ்சை வைத்தால் காற்றில்லாம லசையும். அது உச்சாடன முதலான கர்மவிஷய பூசைக்குரியதாம். கௌபேரலிங்கமானது கதாகாரமா யல்லது கதாங்கிதமாயிருக்கும், நடுவிற் பொன்னிறமா யிருக்கும். அதை இரவில் பயிர் நடுவில் வைத்தால் பயிர் விருத்தியாகும். ஈசானலிங்கமானது சூலநிறமா யல்லது சூலாங்கிதமாய்ப் பனி, முல்லை, சந்திரனையொத்த நிறங்களுள்ளதா யிருக்கும். அது சகல சித்திகளையுந் தரும். வைணவலிங்கமானது சங்க சக்ர கதாபத்ம ஸ்ரீவத்ஸ சின்னங்களும் மச்சிய கூர்மவராகாதி சின்னங்களுள்ளதா யிருக்கும். இது சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கும். பிரமலிங்கமானது பத்மாங்கிதமாய்ப் பத்மவர்ணமாய் அக்ஷமாலை கமண்டலு இவற்று லலங்கரிக்கப்பட்டதாய் மாலை, தண்டமிவற்றின் குறியுள்ளதா யிருக்கும். இது புத்ராதிவிர்த்தியைக் கொடுக்கும். இவ் விலிங்கங்கள் பொருள்களுட னிறுக்கில் கனமுள்ளனவாகவும் வெள்ளத்தில் விடின் மறுபடியுமகப்படுவனவாயு மிருக்கும். இவையே பூசிக்கத்தகுந்தவை. இந்த (கச) கோடி பாணலிங்கங்கள் அமரேச்வரம், மகேந்திர பர்வதம், நேபாளபர்வதம், கன்யாதீர்த்தம், அதையடுத்த ஆச்ரமம் இவைகளில் ஒவ்வொரு கோடியாக வைத்து கோடியும், ஸ்ரீசைலம், லிங்கசைலம், காளிகாகர்த்தம் என்னு மூன்று தலங்களில் மும்மூன்று கோடியாக ஒன்பது கோடி ஆகப் பதினைந்து கோடியாம். மற்றவை விரிந்த நூல்களிற் காண்க. காஞ்சியில் பிரதிவி லிங்கமும், திருவானைக்காவில் அப்பு லிங்கமும், திருவண்ணாமலையில் தேயுலிங்கமும், சீகாளத்தியில் வாயுலிங்கமும், சிதம்பரத்தில் ஆகாயலிங்கமும் பிரதிட்டை என்ன புராணங்கள் கூறும். இரஸத்தால் சிவலிங்கஞ் செய்து பூசிக்கின் பஞ்சமகாபாதகங்களைப் போக்கும். சுயம்புலிங்கங்கள் அநந்தருடைய சிரம் அசைதலால் காலாக்னிருத்ரருடைய கோபாக்கினியினின்றும் (க) தீப்பொறிக ளுண்டாயின. அத் தீப்பொறிகள் மூன்றும் நிர்மூலலிங்கம், சமூலலிங்கம், பிரதுவிலிங்கமென மூன்றுவகை. நிர்மூல லிங்கம் ஜலத்துளிருப்பது, சமூலலிங்கம் பூமியில் மலையை ஆதாரமாகவுடையது. பிருதுவிலிங்கம் மண்முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டது.

இலிங்கசரீரம் — புரியஷ்டக சரீரம் காண்க.

இலிங்காயதர்—வீரசைவ மதத்தைச் சேர்ந்த இலிங்கதாரணம் செய்துகொண்ட சமயத்தவர். தர்ஸ்டன்.

இலிங்கி—இவனும் விருடாகபியும் விபூதி ருத்ராக்ஷதாரிகளாய் வனத்தில் விளையாடுகையில் புருவொன்று தன் பெட்டையுடன் புணரக்கண்ட இலிங்கி அதனை இகழ்ந்தனன். விருடாகபி தன்னை இகழ்ந்ததாக எண்ணி இவனுடன் சண்டையிட இருவரும் மாண்டனர். இவ்விருவரும் அத்தேசத்து அரசனுக்கும் மந்திரிக்கும் பராவதன் வலிமுகன் எனப் பிறந்து அரசாண்டு முக்திபெற்றனர்.

இலிங்கோற்பவம் — ஒரு காலத்துச் சிவமூர்த்தியோகத் திருக்கையில் அவரது திருமேனியில் வியர்வை உண்டாயிற்று. அவ் வியர்வையினிடம் அநேக கோடி லிங்கங்கள் உண்டாயின. (சிவரகஸ்யம்.)

இலீலாட்டியன்—விஸ்வாமித்திர புத்திரன்.

இலேசம்—கருதியது வெளிப்படுக்கும் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றால் நிகழ்ந்தனவாக மறைத்துச் சொல்வது. இது, புகழ்வதுபோலப் பழித்தல், பழிப்பதுபோலப் புகழ்தல். குற்றத்தைக் குணமாகவும் குணத்தைக் குற்றமாகவுஞ் சொல்லுதல். (தண்டி.)

இலவித்துண்டாம்மரம் — ஐரோப்பாவின் வடபாகத்திலும் வேறு இடங்களிலும் பியர்ட்ரீ, பார்பரிட்ரீ என்பவைகளின் இலைகள், முதிருங்காலத்தில் இலைகளினடிப்புறத்தில் அரும்புகள் உண்டாகி முதிர்ந்து காய்கள் போன்று வெடித்து விதைகளை நாற்பக்கமும் பரவச் செய்கின்ற ஓர்வகை மரம்.

இலிங்கோற்பவம்—ஒரு கற்பத்தில் பாற் கடலில் யோக நித்திரைசெய்யும் விஷ்ணு மூர்த்தியைப் பிரமன், தட்டியெழுப்பி மகனே என அழைத்தனன். விஷ்ணுமூர்த்தி நீ என் குமாரனுயிருக்க என்னைக் குமரனென்பதென்னென வாதிட்டு இருவரும் போரிட்டனர். அவ்விருவர் இடையிலும் சிவபெருமான் தாணுமூர்த்தமாகத் தோன்ற இருவரும் நம்மில் யார் இந்த உருவின் அடிமுடி அறியவல்லோமோ அவர்களே பெரியர் எனச் சபதங்கொண்டு இருவரும் பன்றியும் கழுகுமாகி அடியும் முடியுந்தேடி அறியாது திகைத்திருக்கையில் ஓமென்னும் பிரணவவொலி கேட்க ஐந்து திருமுகங்களுடன் அந்த இலிங்கத்திடை காட்சிதந்து முத்தொழிற்கும் மூல காரணன் நாமென அதில் லயித்த திருவுருவம். இக்கதையை வாமன புராணத்திலும், சிவமகாபுராணம் முதல் அத்தியாயத்திலுங் காண்க.

இலீலாப்பிரமவாதிமதம் — சமுத்திர நீர் ஒன்றே, அலை,திவலை, நுரை, குமிழி, ஆயினாற்போல, பிரமம் ஒன்றே, தனு, காண, புவன, போகங்களாய்ச் சநநமரணப்பட்டு மேற்சொன்ன அலை முதலிய, நீருள் அடங்குவதுபோல, சகத்தெல்லாந் தன்னுள் ஒடுங்கி நிற்பது என்று கூறுவது.

இலீலாவதி—1. இரண்யகசிபின் தேவி.

2. வடமொழிக் கணிதநூல் செய்தவள்.

இலீலை—பதுமன் தேவி. இவள் சரஸ்வதியை வேண்டி ஞானமடைந்து புருஷனுடன் நற்பத மடைந்தவள்.

இலைவாணியன்—(சுசுகன்) வைசியன் சூத்திரகன்னிகையைப் புணரப் பிறந்தவன். இவன் வெற்றிலைப்பாக்கு விற்பவன். (அருணகிரி புராணம்).

இலேசகேத்தையர்—இவர் தீப்பட்டெரிந்த நெல்லினை விதைத்து ஒன்று கோடியாக்கிய வீரசைவர். வசவர்காலத் திருந்தவர்.

இலேபகர்—பிதுர்க்கள் பதின்மரில் மூவர்.

இல்லத்தலைவன்—திருக்கோயி லரண்மனை அகழி மதில் பிரதிமை, யந்திரம், அணைக்கட்டு, வாவி, கிணறு, தடாகம், புட்கரிணி, குண்டம், நீர் முதலியவற்றை மேனோக்கிச் செலுத்தும் பொறி முதலியவற்றைச் சிற்ப நூற்படி அமைக்கும் அறிவுடையவன். (சுக்ரநீதி).

இல்லவை நகுதல் — உள்ளன அல்லாதவற்றை உரைத்துவிளங்கும் பல்லினையுடைய மடவரல் அழகிய பழனஞ் சூழ்ந்தவூரனை நகையைப் பெருக்கியது. (பு. வெ. பெருந்திணை).

இல்லறக்கிழத்தியர் இல்லிற்குச் செய்வன. அதிகாலையிலெழுந்து வீட்டைச் சுத்தி செய்து பாத்திரங்களைத் துலக்கி வீடுமுழுதும் சாணநீர் தெளித்து நீர்ச்சால் காகங்களை மலரணிந்து அடுப்பினுள் தீமூட்டுக. இவ்வாறு செய்யின் நல்ல செல்வம் உண்டாம். (ஆசாரக்கோவை).

இல்லாண்முல்லை—பொருந்திய காதற்கணவனை வாழ்த்திப் பலருமிசைக்கும் அனுகாணத்தினையுடைய கீர்த்தியாற் சிறந்த இல்லின் மிகுதியைச் சொல்லியது. (பு. வெ. பொது).

இல்வலன்—1. வில்வலனைக் காண்க. வில்வலனுக்கு ஒரு பெயர்.

2. கிலாதனுக்குத் தெமனியிட முதித்த குமரன்.

இல்வாழ்க்கை—(இது கற்பியலின் தொடக்கம்) என்பது, தலைவனும் தலைவியும் இல்லின்கண் வாழும் வாழ்க்கையைக் கூறுதல். இது, உள்ள மகிழ்ச்சியும், ஊடலும், ஊடலுணர்த்தலும், பிரிவும் கூறும். இது, இல்வாழ்க்கை, பரத்தையிற் பிரிவு, ஓதற்பிரிவு, காவற்பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற்பிரிவு, பொருள் வயிற்பிரிவு, எனும் கிளவிகளையும், கிழவோன் மகிழ்ச்சி, கிழத்தி மகிழ்ச்சி,பாங்கி மகிழ்ச்சி, செவிலி மகிழ்ச்சி எனும் வகையினையும், தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல், தலைவனைப் பாங்கிவாழ்த்தல், பாங்கி தலைவியை வரையு நாளளவும் வருந்தாதிருந்தமை உரையாயென்றல், பெருமகளுரைத்தல், தலைவனைப் பாங்கி வரையு நாளளவு நிலைபெற வாற்றிய நிலைமைவினுதல், மன்றன்மனை வருசெவிலிக் கிளையன்புறவுணர்த்தல், பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக் குரைத்தல், மணமனைச் சென்றுவந்த செவிலி நற்றாய்க் குரைத்தல், நன்மனை வாழ்க்கைத் தன்மையுணர்த்தல், செவிலி நற்றாய்க்கு இருவர் காதலையுமறிவித்தல், எனும் விரியினையும் உடைத்து. (அகம்).

இழிகட்பெருங்கண்ணனார் — கடைச்சங்கப் புலவர்களில் ஒருவர். (திருவள்ளுவமாலை)

இழிசோல்—பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல்.

இழுமதி — The River Kalinadi in the District of Rohilkhand.

இழைபு — வல்லொற்று வாராது செய்யுளியலுடையரால் எழுத்தெண்ணி வகுக்கப்பட்ட குறளடி முதலாப்பதினேழ் நிலத்து ஐந்தடியு முறையானே உடைத்தாய் ஒங்கிய சொற்களான் வருவது.

இளங்கண்டீரக்கோ — பெருந்தலைச் சாத்தனாரைக் காண்க. கண்டீரக் கோவின் தம்பி. (புறநானூறு).

இளங்கீரந்தையார் — கடைச் சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் இளங்கீரனாரின் வேறாக இருக்கலாம். அகத்தில் முல்லையைப் பாடியதில் இளஞ் சிறாரணிந்த கிண்கிணியின் முகப்புத் தவளையின் வாயையொக்கு மென உவமை கூறியுள்ளார். (அகம். கஅச).

இளங்கீரனார் — இவர் தந்தை எயினந்தை ஆதலின் இவரை எயினந்தை மகனார் இளங்கீரனார் என்பர். இவர் பாலைநிலத்துள்ள வேடரைச் சிறப்பிதுப் பாடுதலின் இவர் அம்மரபினராக இருத்தல் கூடும். இவர் உதியஞ்சேரல் செய்த போரையும் மகளிர்பிறை தொழும் வழக்கத்தையும், நாயகன் பிரிவுழி நாயகி சுவரில் கோடிட்டு நாளெண்ணுதலையும் யாககுண்டத்தியாமையை வைத்து மூடலையும் சிறப்பித்துப் பாடியுள்ளார் இவர் பாடியன. நற்-க-ம். அகத்தில்-அ, ம், ஆக-கசு. (நற்றிணை).

இளங்குமணன் — குமணன் தம்பி. பெருந்தலைச்சாத்தனாரைக் காண்க. (புற-நா).

இளங்கோவடிகள் — இவர் சேரநாட்டு வஞ்சிநகராண்ட நெடுஞ்சேரலாதனுக்குக் குமரர். சேரன் செங்குட்டுவனுக்கு இளையார் இளங்கோவேள் எனப்படுவர். இவர் பேரறிவும் உத்தம குணமும் வாய்ந்தவர். ஒரு நாள் சேரலாதன் தன் மக்களுடன் அத்தாணி மண்டபத்திருக்கையில் நிமித்திகன் ஒருவன் மக்களிருவரையும் உற்று நோக்கி அரசனைக் கண்டு இனி நீ விண்ணுலகாளும் காலம் நெருங்கிற்று உன் மக்களிருவருள் இளையோனே உன்னரசாள்வான் எனக் கூறினன். இதனைக் கேட்ட இளையார் அவ்வாறு முறை கெடக் கூறியதற்கு அவனை வெகுண்டு தன் தமயன் பெற்ற மனவாட்டம் ஒழிய அந்த அவைக்கண்ணே அரசாள் ஆசை ஒழியத் துறவு பூண்டனர். இவரைத் தேவந்தியின்மீது ஆவேசித்த பத்தினிக் கடவுளும் புகழ்ந்து கூறினள். இவர் துறவடைந்தபின் இளங்கோவுடன் அடிகள் புணர்க்கப் பெற்றனர். பின் வஞ்சிமா நகரின் கீழ்பாலுள்ள குணவாயிற்கோட்டம் என்ற இடத்து வசித்துவந்தனர். இவர் அக்காலத்திருந்த புலவர்களுள் ஒருவராகவும் விளங்கினர். இவர் தமிழ் ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம் இயற்றியவர். இந்நூல் பாடுதற்குக் காரணமா யிருந்தவர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனார். இவர் தாம் இயற்றிய சிலப்பதிகாரத்தைச் சாத்தனாரைத் தலைமையாக் கொண்ட அவைக்கண் அரங்கேற்றினர் இவர் தமிழ்நாட்டு வேந்தரையும் புகழ்ந்துள்ளார். இவர் சைநசமயப் போக்காக நூலியற்றின ரேனும் வைதிக சமயாசாரங்களையும் தழுவினராகவே எண்ணப்படுகிறார். இவர் காலத்திருந்த புலவர்கள் சாத்தனார், பரணர் முதலிய கடைச்சங்க மருவிய புலவர்களிற் சிலராவர். இவர்காலத்து இலங்கையை ஆண்ட கயவாகு இருந்ததாகத் தெரிகிறபடியால் இவர் காலம் சற்றேறக்குறைய (கஎகூ0) வருஷங்களுக்குமுன்னிருக்கலாம். இவர்க்கு இளங்கோவேந்தன், சோமுனி எனவும் பெயர்.

இளங்கோசர் — கொங்குதேசத்தரசர். (சில).

இளங்கோன் — உதய குமரன்.

இளஞ்செழியன் — கொற்கை நகரத்திருந்த வெற்றிவேற்செழியன். (சிலப்பதிகாரம்).

இளஞ்சேட்சென்னி — கரிகாற் பெருவளவனுக்குத் தம்பி.

இளஞ்சேரலிரும்பொறை — இவன் பெருஞ்சேரலிரும் பொறை எனுஞ் சேரர்தலைவனுக்கு மையூர் கிழான் வேண்மாள் அந்துவஞ் செள்ளையெனும் மனைவியிடம் பிறந்தவன். இவன் இரு பெருவேந்தரும் விச்சியும் வீழ ஐந்தெயில் எறிந்து பொத்தி ஆண்ட பெருஞ் சோழனையும் பழையன் மாறனையும் வென்றவன். இவனைப் பதிற்றுப்பத்தில் (கூ)ஆம் பத்தால் பெருங்குன்றூர் கிழார் "நிழல் விடுகட்டி, வினை நவில் யானை, பஃறோற்றொழுதி, தொழினவில் யானை, நாடுகாணெடுவரை, வெந்திறல் தடக்கை, வெண்டலைச் செம்புனல், கல்கால் கவணை, துவராக்கூந்தல், வலிகெழு தடக்கை" எனும் செய்யுட்களால் பாடி மருளில்லார்க்கு மருளக்கொடுக்க என்று உவகையின் முப்பத்திராயிரம் காணமும், ஊரும் மனையும், எரும் இன்பமும், அருங்

கலங்களும் அவராறியாமலமைத்து அவனை வெறுமனே அனுப்பினன் என்ப.

**இளநாகனர்** — நாகன் என்னும் பெயருடையார் பலரிருத்தலின் அவரின் இவர்வே றென்பது தெரிய இளநாகனா ரெனப் பட்டார். இவர் பாலையையும், நெய்தலையும் புனைந்து பாடியுள்ளார். தலைவியைக் கருதித் தலைமகன் செலவழுங்கியது நயமிக்கதாகும். இவர் பாடியன நற்றிணையில் இரண்டு பாட்டு (உ0௫, உஙக).

**இளந்தத்தன்** — சோழன் நலங்கிள்ளியிடமிருந்து காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளியிடம் ஒற்றனாக வந்து அவனால் கொல்லப் புகுந்தவிடத்துக் கோவூர்க்கிழாராற் பாடி விடுவிக்கப்பட்டவன். (புறநானூறு).

**இளந்திரையனார்** — தொண்டைமான் இளந்திரைய னென்பவர் இவரே. இவர் கடியலூர் உருத்திரங்கண்ணனாரென்னும் அந்தணராற்பாடப்பட்ட பெரும்பாணாற்றுப்படை கொண்டவர் "ஆழியிழைப்பப் பகல்போமிரவெல்லாந், தோழி துணையாய்த் துயர் தீரும்—வாழி, நறுமாலை தாராய் திரையவோ ஒவென்னுஞ், சிறுமாலை சென்றடையும்போது" எனப் பொய்கையாராற் பாராட்டிப் பாடப்பெற்றவரு மிவரே. இவர் நெய்தலைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் காதலி காதலனைக் கடிந்து கூறுவது வியக்கத்தக்கது. (நற். கசு) வம்பமாரியென்று தலைவியை ஏமாற்றுதல் சுவையுடையதாகும். (நற். கக) இவர் பாடியனவாக நற்றிணையில் மூன்று பாடல்கள் உள. அவை, கசு, கக, க0க.

**இளந்திரையன்** — இளந்திரையம் செய்வித்தோன்.

**இளந்தேவனார்** — மதுரைப் பண்டவாணிகன் இளந்தேவனா ரென்பவர் இவரே; பண்டம்—பலசரக்கு. இவர் வணிகர் மரபினர். பாலையையுங் குறிஞ்சியையும் புனைந்து பாடியுள்ளார். காதலிவிருந்து புறந்தரு தலைவியப்புறப் பாடியிருக்கிறார்.(நற்-௪க) தலைவன் இரவுக்குறி வருதலைக் கூறுவது பாராட்டற்பாலது. (அகம் உ௯அ). இவர் பாடியனவாக நற்றிணையில் ௪க-ஆம் பாடலொன்றும், அகத்தில் மூன்றுமாக நான்கு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (நற்றி.)

**இளம்பஞ்சபாண்டவர்** — பாண்டு புத்திரர்க்குப் பிறந்தவர். அரிச்சந்திரனைக் காண்க. அசுவத்தாமனால் பாசறையுத்தத்தி லிறந்தவர். இவர்கள் விச்வதேவரம்சம்.

**இளம்புல்லூர்க்காவிதி** — இவரியற் பெயரெழுதப்படவில்லை; காவிதிபட்ட முடைமையால் பாண்டிநாட்டு உழுவித்துண்ணும் வேளாளரென்று கொள்ளத்தகும். இவர் முல்லைத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்; வாடைக் காற்றானது யானை பெருமூச் செறிந்தாற் போன்றதென்று. இவர் கூறிய உவமை வியக்கத் தக்கது. இவர் பாடியது. நற்-அகூ. (நற்றிணை).

**இளம்பூதனார்** — கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் பூதனார் என்னும் புலவரின் வேறு என்பதறிய இளம்பூதனார் எனப்பட்டனர் போலும். அகத்தில் நெய்தலைப் பாடியுள்ளார். (அகம்-ஙஙச.)

**இளம்பூரணர்** — இவர் உரையாசிரியர் எனச் சிறப்புப்பெயர் பெற்றவர். இவர் முதலில் தமிழிற் சிறந்த இலக்கணக்கடலாகிய தொல்காப்பியத்திற்கு உரையியற்றினவர். இவர் வேறு நூல்கள் செய்ததாகக் காணப்படவில்லை. இப் பெரியோர், பழைய தமிழிலக்கணநூலாகிய தொல்காப்பியத்துக்கு முதன் முதல் உரை யிட்டதனால், "உரையாசிரியர்" என்னும் பொதுப்பெயர் இவர்க்குரிய சிறப்புப் பெயராக வழங்குவதாயிற்று. பின் வந்த சேனாவரையர் முதலிய பிரபல ஆசிரியர், இளம்பூரணவடிகள் ஒரோவிடங்களில் தவறியதை அறிந்தவராயினும், அதுபற்றி அவ்வடிகள் பால் வைத்த மதிப்பை மாற்றினவரல்லர். உரையாசிரியர் கொள்கையைச் சேனாவரையர் மறுக்க நேரும் இடங்களில் "அவர் பிறர்மதம்பற்றிக் கூறினாரென்க" எனவும் "மாணாக்கர்க்கு உய்த்துணரவைத்தல் அவர்க்கியல்பாகலாற் செய்யுண் முடிபென்று கூறாராயினார்"எனவும் "உரையாசிரியர்க்கு அது கருத்தன்றென்க"எனவும் இவ்வாறே எவ்வளவு அச்சத்துடனும் மரியாதையுடனும் எழுதுகின்றா ரென்பதைச் சேனாவரையத்தால் அறியலாம். அறிதற்கரிதாகிய தொல்காப்பியக் கடலைத் தம் மதிவலி கொண்டு கடைந்து முதன்முதல் இலக்கணவமுதம் அளித்த பெரியார், மானுடவியற்கைக்குற்ற தவறுகளுடைய ராதல் பற்றி இகழற்பால ரல்லரென்பதும், பெருங்காரிய மொன்றைத் தொடங்குவோர் ஒரோவிடங்களின் மயங்குத லியல்பே யென்பதும், அம் மயக்கமும் பின்னவர்க்கு நன்மையளித்தற் கேதுவாகக் கூடுமெனபதும் சேனாவரையர் முதலியோரது

மேலான கொள்கைகளாகும். இளம்பூரண வடிகள் தொல்காப்பியமுழுவதிற்கும்உரை செய்தவரென்று தெரிகிறது. உரையாசிரியர் துறவுபூண்ட பெரியோரென்பது, அடியார்க்கு நல்லார் சிலப்பதிகாரத்திலே "உரையாசிரியாகிய இளம்பூரணவடிகள்" எனக் கூறுதலாலும், "அடிகளென்றது துறத்தலான்" என அவரே அடிகள் என்ற சொற்குப் பொருள் உரைத்தமையானும் தெளிவாகின்றது. இனி, நன்னூலியற்றிய பவணந்தி முனிவர், தம் சூத்திரங்கள் சிலவற்றை, இளம்பூரணவடிகள் உரைக் கருத்தைத் தழுவியே இயற்றிப் போந்தமையால், பவணந்தியார்க்கு முந்தியவர், உரையாசிரியர் என்று ஊகிக்க இடந் தருகிறது.

இளம்பெருமானடிகள் — இவர் பொய்யடிமையில்லாத புலவர் கூட்டத் தலைவர். சிவமூர்த்தியினிடத்து அன்பு பூண்டவர். இவர் சிவபெருமான் திருமும்மணிக் கோவை யென்னும் பிரபந்தஞ் செய்தனர். அதனைப் பதினொராந் திருமுறையிற் சைவாசாரியர்கள் சேர்த்துக்கொண்டு அத்தியயனஞ் செய்து வருகின்றனர்.

இளம்பெருவழுதியார் — இவர் பாண்டி நாட்டு அரசர் வகையிற் சேர்ந்தவர். இளமையிலேயே கல்வி கேள்விகளில் வல்லவராயிருக்கலாம். புறநானூற்றில் கடலுள் மாய்வதற்முன் இவர்க்கு இப்பெயர் உண்டாயிருத்தல் கூடும் என எண்ணப்படுகிறது. இவர், பரிபாடலில் திருமாலைப் பாடி யிருக்கின்றனர்.

இளம்போதியார் — போதியார் என்றதனாலே இவர் புத்தசமயத்தினர் போலும். இவர் நெய்தற் றிணையைப் புனைந்து கூறியுள்ளார். தலைமகன் வரையாது களவின் வருதற்கு அஞ்சுகின்றுனென்று தோழி கூறுவதாக இவர்கூறியது வியக்கத்தக்கது. இவர் பாடியது இப்பாட லொன்றேயாம். (நற்றிணை - எஉ.)

இளவிச்சிக்கோ — பெருந்தலைச் சாத்தனரைக் காண்க. இவனுக்கு இளவச்சிரக்கோ எனவும் பெயர். (புறநானூறு).

இளவேயினனர் — எயினென்னும் பெயர்க் காரணத்தால் இவர் வேட்டுவமரபினரென்று தெரிகின்றது. நெய்தற் றிணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் கூறிய உள்ளுறை வியக்கத்தக்கது. இவர் பாடியது. நற் - (உகூங) செய்யுள்.

இளவெளிமான் — பெருஞ் சித்திரனர் வெளிமானின் தம்பி, வெளிமானிறந்தபின் இவனைப் பாட இவன் பரிசு தராததனல் அவனை இகழ்ந்தும் பாடினர். (புற-நா.)

இளவேட்டமகருஷிகோத்ரன் — சோழ ராஜாவினிடத்தில் வாணியம்பாடியெனும் கிராமம் பரிசாகப் பெற்றவன் வணிகன். இக்கோத்திரத்திற்கு முதல்வர் ஓர் இருடி இப்பெயர்கொண் டிருக்கலாம்.

இளவேட்டனர் — மதுரையிற் பிறந்தவர். தமிழிற் சிறந்த புலவர். இப் பெயரால் இவர் வணிகருள் இளவேட்ட மகருஷி கோத்திரத்தவர் என்று காணப்படுகிறது. இவர் வஸ்திரம் விற்கும் வணிகக்குலத்தவரா யிருக்கலாம். இவரை மதுரை அறுவைவாணிகர் இளவேட்டனர் என்பர் சிலர். கடைச்சங்கத்துப் புலவருள் ஒருவர். இளவேட்டனரென்று அடைமொழி கொடாது கூறப்படுதலின் இவர் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனரின் வேறு போலும். இவர் பாலைத் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்; கூதிர்ப் பருவத்து நதிகளில் நீர் குறைவதை வெகு அழகாகக் கூறியுள்ளார்; இவர் பாடியவை நற்றிணையில் இரண்டு பாட்டுகள். (கூ௫, கூஎ).

இளன் — கருத்தமப் பிரசாபதிக்குக் குமரன். பாகுலிக தேசத்தை ஆண்டவன். இவன் சிவமூர்த்தி உமையுடன் இருந்த நந்தவனத்தில் கட்டளையின்றிச் சென்று பெண் வடிவடைந்து பார்வதிதேவியின் கட்டளையால் ஒருமாதம் ஆணுருவும், மற்றொரு மாதம் பெண்ணுருவுமா யிருந்தவன். இவன் பெண்ணு யிருந்தகாலத்துப் பெயர் இளை. இவன் குமரன் சசபிந்து. இவன் அச்வமேதத்தால் சாபநீங்கிப் பிரஷ்டா நகராண்டு புரூரவனுக்குப் பட்டமளித்தவன்.

இளா — 1. வசுதேவருக்குப் பாரி.

2. காச்யபர் தேவி. தக்ஷன் குமரி, விருக்ஷங்களைப் பெற்றவள்.

இளாவதி — காலன் எனும் ஏகாதசருத்திரனுக்குத் தேவி.

இளாவந்தன் — அருச்சுனனுக்கு உலூபியிட முதித்த குமரன்.

இளாவிருதவருஷம் — இது நவவருஷங்களுள் ஒன்று. சுமேருவைச் சூழ்ந்திருப்பது.

இளாவிருதன் — 1. அக்னியித்ரனுக்குப் பூர்வசித்தியிட முதித்த குமரன். தேவி, வதை.

2. இருஷபனுக்குச் சயந்தியிட முதித்த குமரன்.

இளிபிளன் — 1. சந்திரவம்சத் தரசன். இவன் காண்டவப் பிரத்தம் ஆண்டவன்.

2. குபேரனுக்குப் புத்திரன்,

இளிபிளி — தசரதன் மகன்.

இளிபிலா — திரணபிந்திற்கு அலம்புசை யிட முதித்தவள். புலத்தியர் தேவி, குமரன் குபேரன்.

இளீனன் — 1. இரப்பியனுக்கு ஒரு பெயர்.

2. சந்திரவம்சத்து அரசன். தாய் காளிந்தி பாரியை, ரதந்தரி, குமரர், துஷ்யந்தன், சூரன், பீமன், பிரவசு, வசு முதலியவர்கள்.

இளா — A. வாயுவின் குமரி. துருவனுக்கு இரண்டாவது பாரி, குமரன் உற்பவன்.

B. கச்யபர் தேவி. தக்ஷப்பிரசாபதியின் பெண்.

C. வசுதேவனுக்குத் தேவி. குமரர் உருவலகன் முதலியோர்.

D. ஊர்த்தரேதஸென்னும் ஏகாதசருத்திரரின் தேவி.

E. வைவச்சுதமனுவின் குமரி. இப் பெயர்கொண்ட பெண் பிறக்க அரசன் சம்மதியில்லாமல் வசிட்டரைப் பார்க்க வசிட்டர், அரச னெண்ணமறிந்து பகவானை வேண்டி அப் பெண்ணைச் சுத்தியும்நனென்னும் அரசனாக்கினர். சுத்யும்நன் அரசனாய்த் தன் பரிவாரங்களுடன் குமாரவனஞ் சென்று மீண்டும் பெண்ணாய்ப் புதனைப் புணர்ந்து புரூரவசுவைப் பெற்றான். வசிட்டரிதனை உணர்ந்து சிவமூர்த்தியை வேண்ட அந்த மூர்த்தி ஒரு மாதம் ஆணுருவும் ஒருமாதம் பெண்ணுருவுமாக இருக்க அருள் புரிந்தனர். சுத்யும்நன் இவ்விரண்டுருக் கொண்டே உத்கலன், கயன், விமலன் முதலிய மூவரைப் பெற்றனன். (பாகவதம்.)

இளையாட்டக்குடி — நாட்டுக் கோட்டை செட்டிமார் வகுப்பு.

இளையாழ்வான்—1. உடையவர் பிள்ளைத் திருநாமம்.

2. எழுபத்திநான்கு சிங்காசனாதிபதிகளில் ஒருவர். வைஷ்ணவாசாரியர். (குரு பரம்பரை.)

3. இலக்குமணருக்கு ஒரு பெயர்.

இளையான்குடிமாறநாயனர் — இளைசையம் பதியில் வேளாளர் குலத்திற் பிறந்து நாடோறுஞ் சிவனடியவர்க்கு அமுது செய்து படைத்து நாளுக்குநாள் வறுமையடைந்தும், ஒழுக்கங் குறையாதிருத்தலை அறிவிக்கவேண்டிச் சிவமூர்த்தி பாதியிரவில் வேதியராய் மழையில் நனைந்து, நிற்க இடமில்லாது அவர் மனைக்கு எழுந்தருளத் தம்பதிகள் இருவருங் கண்டு உபசரித்து ஈரவஸ்திரங்களைந்து வேறு தந்து மனைவியாரை அமுதுபடைக்க வினவ, மனைவியார் ஒன்றுமிலாமையைத் தெரிவித்துக் கொடுப்பாருமில்லை, நாழிகையோ அதிகமாயிற்று ஆயினும் பகல் கழனியில் விதைத்த நெல்லை வாரிவரின் அமுது சமைக்கிறேனென்ன, அவ்வகையே நாயனர் செய்ய, அடுப்பெரிக்க விறகு இல்லாமல் கூரையைப்பிடுங்கி அடுப்பெரித்துக் குழிப் பயிரைக் கறியாக்கி அமுதுசமைத்து வேதியரை எழுப்ப வேதியர் ஒரு பெருஞ் சோதியுருவா யிருக்கக்கண்டு மயங்கியிருக்கையில் சிவபிரான் ருஷபாரூடராய்த் தரிசனந்தர முத்திபெற்றவர். (பெரிய புராணம்.)

இறங்குடிக்குன்றநாடன் — கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவரது பெயர் இடத்தால் வந்ததுபோலும். இவர் அகத்தில் பாலையில் எருவைகள் அழிந்த ஆடவரது கண்மணிகொண்டு பெடைக் கருத்தும் பாலை யெனப் பாலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். (215.)

இறந்துமிறவாதார் — கவி, தியாகி, சுத்தவீரன், செங்கோல்வேந்தன், தருமி.

இறப்புப் பிறப்புகளின் தீட்டு—பல் முளைக்கும்போதும் முளைத்த பின்னும் சௌளம் செய்த பின்னும், குழந்தை இறக்கின் பத்துநாள் தீட்டு உண்டு. தனக்குப் பிற இடத்தில் பிள்ளை பிறந்தால் மூன்று நாள் தீட்டு உண்டு. இறந்த குருவுக்குச் சிஷ்யன் கருமஞ் செய்தால் பத்துநாள்தீட்டு உண்டு. கர்ப்பத்தில் மூன்றுமாத முதல் எழுமாதத்திற்கு உள்ளாகச் சிசுமரித்தால் எத்தனை மாதத்தில் மரித்ததோ அத்தனை நாள் தீட்டு உண்டு. ருதுவான ஸ்திரீ அது நின்றவுடன் ஸ்நானம் செய்யின் சுத்தப்படுவாள். இரண்டு வயதிற்குமுன் சிசுமரிக்கின் அதை ஊர்க்கு வெளியில் புதைக்க வேண்டியது. சஞ்சயனம் கிடையாது. அதற்குத் தகன தர்ப்பணாதிகள் கிடையா. பங்காளிகள் மூன்று நாள் தீட்டு இருக்க வேண்டியது. தன்னுடன் ஓதினவன் இறந்தால் ஒருநாள் தீட்டு. ஒரு பெண்ணை

நிச்சயஞ் செய்தபின் அவள் இறந்தால் யாருக்காக நிச்சயப்படுத்தப் பட்டாளோ அவரும் அவர்களின் ஞாதியரும் மூன்று நாள் தீட்டு இருக்கவேண்டியது. தீட்டு உள்ளோர் உப்பு, மாமிசம், புணர்ச்சி மூன்றையும் நீக்கவேண்டும். தேசாந்தரத்தில் இருக்கையில் ஞாதிகளின் இறப்பைப் பத்து நாட்களுக்குப் பிறகு கேட்டால் அப் பத்து நாட்களுடன் தீட்டு நீங்கும். சபிண்டர் பத்து நாளைக்குப்பின் கேட்டால் மூன்று நாள் தீட்டு. ஒரு வருடத்திற்குப் பின் கேட்டால் ஸ்நானத்தோடே போகும். பிறந்த செய்தியைப் பத்து நாளைக்கு மேலே கேட்டால் தீட்டில்லை. சபிண்டகன் ஞாதிகளின் இறப்பை, பிறப்பைப் பத்து நாளைக்குள் கேட்டால் கட்டின உடையுடன் ஸ்நானஞ் செய்தால் தொட யோக்கியனாகிறான். பத்து நாள் தீட்டுள்ள இறப்பு பிறப்புகளில் வேறொரு தீட்டு நேரின் முன்னைய பத்துநாளோடு இதுவும் ஒழியும். அக்கினிஹோத்திரம் செய்கிறவனாயின், ஆசாரியன் இறந்தாலும் தன் பங்காளி இறந்தாலும் வேதம் ஓதின பிராமணன் தன் வீட்டில்வந்து இறந்தாலும், அம்மான் இறந்துபோனாலும் மூன்று நாள் தீட்டு உண்டு. ஆசாரியன் மனைவி இறந்தால் ஒருநாள் தீட்டுஉண்டு. மாணாக்கன், அம்மான் குமரன் முதலிய சுற்றத்தவர்கள் இறந்து போனால் (௩0) நாழிகைக்குத் தீட்டு உண்டு. இராசா பகலில் இறந்தால் பொழுதுபோகிற வரையிலும், இரவிலானால் நக்ஷத்திரம் மறைகிற வரையிலும் தீட்டு உண்டு. இவ்வாறுகூறிய தீட்டுக்களில் பிராமணர்களுக்குப் பத்து நாட்கள் தீட்டும், க்ஷத்திரியருக்குப் பன்னிரண்டு நாட்கள் தீட்டும், வைசியனுக்குப் பதின்மூன்று நாட்கள் தீட்டும், சூத்திரனுக்கு முப்பதுநாட்களும் தீட்டுண்டு. பறையன், தூரஸ்திரீ, பதிதன் பிரசவித்தவள் பிணம், பிணத்தைத் தொட்டவன், இவர்களைத் தெரியாமல் தொட்டவன் ஸ்நானஞ் செய்தால் பரிசுத்தனாவான். நித்யகர்மங்களை விட்டவர்கள், சங்கரசாதியாரில் பிறந்தவர்கள், வேதத்தைத் தூஷித்துச் சந்நியாசி வேஷம் பூண்டவர்கள், விஷத்தைச் சாப்பிட்டாவது, கழுத்தில் சுருக்கிட்டுக் கொண்டாவது இறந்தவர்கள், விபசாரிகள், கருப்பத்தை அழிக்கிறவர்கள், கணவனுக்குத்துரோகம் செய்கிறவர்கள், மத்ய பானஞ் செய்கிறவர்கள் இவர்களுக்குத் தர்ப்பணஞ் செய்யவேண்டியது இல்லை. அரசன் திக்குப்பாலகர் தன்மையையடைந்து இருப்பதால் அவனுக்குத் தீட்டில்லை. ஒரு கிராமத்தில் பிணங்கிடக்கின் அது தகனம் ஆம் வரையில் கிராமத்தார் சோறும், நீரும், தாம்பூலமும் உண்ணலாகாது. ஆசௌசம் உடையோர், தேவதாராதனம், ஓமம் முதலிய செய்தலாகாது. ஆசௌசம் உடையோர் வீட்டில் அது நீங்கும் வரை எவரும் உண்ணலாகாது. ஒருவனுக்குப் பெண் பிறந்தால் அவன் தாயத்தாருக்கு ஆசௌசம் இல்லை. தாய்க்குப் பத்துநாட்கள் ஆசௌசம்உண்டு. மணக்கோல காலத்திலும், யாககாலத்திலும், உற்சவத்திற்குக் கங்கணம் பூண்ட காலத்திலும் ஆசௌசம் நேர்ந்தால் அத்தொழில் பூண்டானுக்கு ஆசௌசம் கிடையாது. பந்துக்களின் பிணத்தைத் தூக்கினால் மூன்று நாள் தீட்டு உண்டு. பிணம் தூக்குகிறவன் தீட்டு உள்ளான் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு இருந்தால் அவனுக்குப் பத்து நாள் தீட்டு உண்டு. பிணத்தைத் தொடர்ந்தவன், கட்டின வஸ்திரத்துடன் ஸ்நானஞ் செய்தால் தீட்டு இல்லை. சிசுசூதகம் — கருப்பந் தரித்து ஆறுமாதத்திற்கு உட்பட்டு எந்த மாதத்திலாயினும், அந்தக் கருப்பம் கரைந்து விழுந்தால் விழுந்த மாதம் ஒன்றாயின் ஒரு நாளும், இரண்டாயின் இரண்டுநாளும் மூன்றாயின் மூன்று நாளும் முறையே நாலு, ஐந்து, ஆறு மாதங்களாயின் அத்தனைக் கணக்குள்ள நாட்கள் மாதாவிற்கு மாத்திரம் ஆசுசம் உண்டு. பிதாவிற்கு இல்லை. கரு அழியாமல் பிறந்து மூன்று வயதிற்குள் மாண்டால் மாண்ட அக்குழந்தையைக் குறித்துப் பாற்சோறும் தயிர்ச் சோறும் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். மூன்று வயதிற்குமேல் ஐந்து வயதிற்குள் இறந்தால் மேற்சொன்னபடி பாலகர்களுக்கு அன்னம் அளித்தல் வேண்டும். பிறந்து ஒரு மாதத்திற்குள் மாய்ந்தால் பால் பாயசாதிகளைக் குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டும். (மநு).

இறைப்பொருட்டிலவன் — குடிகளுக்கு வேண்டுவன உதவி நலஞ்செய்து அவர்களிடம் குடியிறை கொள்ளுவோன். (சுக்-நீ)

இறையணி — ஒரு வினாவிற்கு விடை கூறுதல். இது மறைப்பிறை ஒரு அபிப்பிரா

யத்தைத் தன்னுள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கும் உத்தரம். வியப்பிறை- ஒரு வினவிற்கு அதனையே விடையாகவும் பல வினக்களுக்கு ஒன்றே விடையாகவுங் கூறுதல். இதனை உத்தராலங்காரம் என்பர். (குவலயாநந்தம்).

**இறையனாரகப்பொருள்** — மதுரையி லெழுந்தருளி யிருக்கும் சொக்கலிங்க மூர்த்தியால் அருளிச் செய்யப்பட்டு மூங்கைப் பிள்ளையார் அல்லது உப்பூரிகுடிக் கிழார் மகனார் உருத்திரசன்மனார் முன்னிலையில் உரை அரங்கேற்றப்பட்ட அகப்பொருளிலக்கணம். இந்நூல் (௬௦) சூத்திரங்கள் கொண்டது. இதற்குச் சங்கப் புலவருள் பலர் உரை கூறினர். அவற்றுள் மதுரை மருதனிள நாகனார் உரைபொரோ விடங்களினும், பெரும்பான்மையும் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரையுமே சிறந்தன.

**இறையனார்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர். சொக்கலிங்க மூர்த்தியையே ஒரு புலவராகக் கூறுவர். இவர், பாண்டியன் அகப்பொரு ளிலக்கணம் வேண்டி வருந்திய காலத்தில் அவனெண்ணத்தை நிறைப்ப இறையனார் அகப்பொருளென ஒரு அகப்பொரு ளிலக்கணம் திருவாய்மலர்ந்து அதனைச்செப்பேட்டில் எழுதித் தாம் எழுந்தருளி யிருக்கும் திருப் பீடத்தினடியில் விட்டு ஆதிசைவா சாரியரைக் கொண்டெடுப்பித்து அரசனுக்குக் கொடுப்பித்தவர். தருமி யெனும் வேதியர் பொருட்டுக் 'கொங்குதேர்' எனும் கவியும் பாணபத்திரர் பொருட்டு 'மதிமலிபுரிசை' எனும் கவியும் திருக்குறளுக்கு 'என்றும் புலராது' எனும் பாயிரமு மியற்றியவர்.

**இறைவனெண்குணம்** — 1. பவமின்மை, இறவின்மை, பற்றின்மை, பெயரின்மை, உவமையின்மை, வினையின்மை, குறைவிலறிவுடைமை, கோத்திரமின்மை. (பிங்.)

2. தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களி னீங்கல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்பமுடைமை. இவை சைவாகமம், கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு. (ஆருகதம்).

**இற்கொண்டுபுகுதல்** — வேந்தர் போரிடத்துப் பட்டவனுடைய கல்லென்று சொல்ல வழுத்தினராய்ச் செறிந்த கோயிலெடுத்துப் புக்கது. (பு. வெ. பொதுவியல்)

**இனமோனை** — வல்லினமோனை, மெல்லினமோனை, இடையினமோனை, இனவெழுத்தால் வரும்மோனை. (காரிகை).

**இனவெதுகை** — வல்லினவெதுகை, மெல்லினவெதுகை, இடையினவெதுகை, இனவெழுத்தால் வரும் எதுகை. (காரிகை).

**இனன்** — சூரியன்.

**இனிசந்தநாகனார்** — இவர் இனிய சுரலோடுபாட வல்லராதல்பற்றி இவ்வடைமொழி கொடுக்கப்பட்டார் போலும். சந்தம் - குரல், இனிய சந்தம் இனிசந்தமென விகாரப்பட்டு நின்றது. இவர் பாலையைப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடிய நற்றாய் மணமருட்சி கேட்போர் யாவரையும் மருளப்பண்ணும், இவர் பாடியது நற் ௬௬-ம் செய்யுள். (நற்றிணை)

**இனியவை நாற்பது** — சங்க மருவிய பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்றதாகிய நீதிநூல். மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் இயற்றியது.

**இன்பம்** — இது வைதருப்பசெய்யுணெறியிலொன்று. இது, சொல்லினால் சுவைபடத் தொடுத்தலும், பொருளினால் சுவைபடத் தொடுத்தலுமாம். (தண்டி)

**இன்பவணி** — முயற்சியின்றி விரும்பப்பட்ட காரியஞ் சித்தித்தலும், விரும்பப் பட்ட பொருளினு மதிகஞ் சித்தித்தலும், உபாயஞ் சித்தித்தற் பொருட்டுச் செய்யு முயற்சியால் பலமே சித்தித்தலுமாம். இதனைப் பிரஹர்ஷணவலங்காரம் என்பர்.

**இன்மைநவிற்சியணி** — யாதேனு மொன்றில்லாமையால் வர்ணியத்தை உயர்வடைவதாகவேனும் தாழ்வடைவதாகவேனும் கூறுவது, இதனை விநோக்தியலங்காரமென்பர்.

**இன்னா நாற்பது** — கபிலரியற்றிய நீதிநூல். பதினெண்கீழ் கணக்கினுள் ஒன்று.

**இன்னாரிதனால் கெட்டாரென்பது** — வணக்கமில்லாததாற் கெட்ட அரசர் வேனன், நகுஷன், சுதாசன், யவனன், சுமுகன், நிமி. சூதால் கெட்டோர் நளன், தருமர், உருக்குமி. பரதார மோகத்தால் கெட்டோர் இராவணன், கீசகன், இந்திரன், வாலி முதலியோர். காமத்தால் துன்புற்றோர் சும்பநிசும்பர், பிரத்யும்நன், உருரு, அந்தகாசுரன், சம்பராசுரன், இராவணன், அசுரர்

திருப்பாற்கடல் கடைகையில் தோன்றிய அப்ஸாஸஸுகளைக் கண்டு மயங்கி அமுதமிழந்து தேவரோடு போரிட்டு மடிந்தனர். விஷ்ணுமூர்த்தி அமிர்த மதனத்தில் அசுரரைப் பின்றொடர்ந்து பாதாளஞ் சென்று அவ்விடமிருந்த அப்சரஸ்திரிகளைக் கண்டு மோகித்து நெடுங்காலமவர்களுடன் கூடியிருந்து பலபுத்திரரைப் பெற்றனர். பிரமதேவன் பிராட்டியார் திருவடி அழகைக் கண்டு மயங்கி அபராதக்ஷமை வேண்டினன். இந்திரன் அகலிகைபொருட்டுச் சாபம் பெற்றான். சந்திரன் தாரையிடமும், இந்திரன் வபுஷ்டமையிடமும் சோரப்புணர்ச்சிசெய்தனர். வாயு குசநாபன்புத்திரிகளை விரும்பி அவர்கள் முதுகொடித்தனன். சூரியன் சஞ்ஞைப்பொருட்டுக் குதிரை வடிவேற்றுத் தன்னொளியைச் சாணையில் தந்தனன். அவ்வொளிப் பொடியால் தேவர் பல ஆயுதங்கள் செய்துகொண்டனர். இவன் குந்தி யிடத்துக் கர்ணனைப் பெற்றனன். சந்திரன் ரோகிணியிடம் மிக்க ஆசைவைத்தலால் தக்ஷசாபத்தால் கலையிழந்தனன். தாரையைப் புணர்ந்தனன். மித்ராவருணர் ஊர்வசியைக் கண்டு மோகித்துக் கும்பத்தில் வீர்யதானஞ் செய்தனர். தக்ஷன் வித்யுத் பர்ணையால் துன்புற்றான். யவக்கிரீவன் காமத்தாலுயிரிழந்தனன். சகோதரனை இகழ்ந்துகெட்டோன்வாலி, இராவணன். கேட்டவார்த்தையா லழிந்தவன் சிசுபாலன். சொல்லிச்செய்யாது கெட்டவன் உத்தரன். வஞ்சனையால் கெட்டவன் மாரீசன்,வில்வலன். அகங்காரத்தா லழிந்தவன் துரியோதனன், இரண்யாக்ஷன். கள்ளாலழிந்தவன் சுக்கிரன். கோபத்தாற் கெட்டவர் தக்கன் முதலியோர். கொடுங்கோலாற் கெட்டவன் கம்சன். புல்லறிவாற் கெட்டோர் மதுகைடவர், சலந்தரன். உட்பகையாற்கெட்டவன் சம்பரன். பெரியோர்ப் பிழைத்ததனல் கெட்டோர் இந்திரன், நால்வேந்தர் முதலியோர். களவால் தீமையடைந்தோர் வசுக்கள் எண்மர். ஆணுருவா யிருந்து பெண்ணுருவானோர், இளன், இருகதாச்சு அல்லது ரிக்ஷரஜசு.

இன்னிசை வெண்பா — நான் கடியாய்த் தனிச் சொலின்றி வருவதும், அடிதோறும் தனிச்சொற்பெற்றும் நேரிசைவெண்பாவிற் சிறிது வேறுபட்டு வருவன. ாம்.

இன்னிலை — பொய்கையார் பாடியது. மதுரையாசிரியர் பூதனார் தொகுத்தது. கடவுள் வாழ்த்து பாரதம்பாடிய பெருந்தேவனார் இயற்றியது. அறப்பால் பத்தும், பொருட்பால் ஒன்பதும், இன்பப்பால் பன்னிரண்டும், வீட்டிலக்கப்பால் பதினன்கும் ஆகிய நாற்பத்தைந்து வெண்பாக்களையுடையது.

இஷ்தகன் — சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரன்.

இஷிகம் — பிருந்தாவனத்தைச் சார்ந்த ஒரு அரண்யம்.

இஷிகன் — கங்காதீரவாசியாகிய ஒரு பிராமணன் இவனிடத்தில் சிகண்டி ஆண்தன்மை யடைவதற்குச் சென்று இருந்தனன். (பாரதம் ஆதிபர்வம்).

இஷிகாஸ்திரம் — பாண்டவர் வதையின் பொருட்டு அஸ்வத்தாமனால் விடப்பட்ட அம்பு.

இஷுமந்தன் — (ய) வசுதேவன் தம்பியாகிய தேவச்சிரவனுக்கு இரண்டாவது குமரன்.

இஷ்டன் — வச்சிரனுக்குக் குமரன்.

இக்ஷவாகு — (சு) ஒரு நாள் மநு தும்புகையில்அவன் மூக்கிலிருந்து பிறந்தவன். இவனுக்கு விகுக்ஷி, நிமி, தெண்டன் முதலிய நூறு குமாரர். ஒரு நாள் தந்தை விகுக்ஷியைச் சிரார்த்தத்திற்கு மாமிசம் கொண்டு வரும்படி காட்டிற் கனுப்பினன். விகுக்ஷி காட்டிற்குச் சென்று சிரார்த்த மிருகங்களை வேட்டையாடிப் பசியினால் மறந்து முயலைப் புசித்துக் கொண்டு போய்க் கொடுத்தனன். வசிட்டர், இந்த மாமிசம் உச்சிட்டமானதை அரசனுக்கு அறிவிக்க அரசன் சிரார்த்தத்திற்குத் தடைசெய்த அந்தக் குமாரனை நாட்டிலிருந்து ஒட்டித் தானும் தவமேற் கொண்டனன். இவன் பிரமனிடத்தில் வாகுவலயம் பெற்றவன். கௌசிகன் என்கிற முனிவனிடத்தில் சபத்தைத் தானம் வாங்கினவன். இவனுக்கு அலம்புசையிடம் விசாலன் பிறந்தனன். இவனைச் சூரிய வம்சத்து இக்ஷுவின் குமரன் என்பர். திருவரங்கனைப் பிரதிட்டைசெய்தவன். (பாகவதம்)

இக்ஷு — பிரசானியன் புத்ரன். இவன் புத்திரன் இக்ஷவாகு.

இக்ஷுமதி — குசத்துவசன் இராஜதானியாகிய சாங்காசிய புரிக்கணுள்ள ஒரு நதி. கபிலாச்சிரமம் இதன் கரைக்கண்ணது என்பர்.

## ஈ

ஈ — இது முதுகெலும்பில்லாப் பிராணி வகையைச் சேர்ந்தது. இதற்குத் துதிக்கை உண்டு. அதனுல் பொருள்களில் உட்கார்ந்து தன்னெச்சிலால் நனைத்துச் சத்தையுறுஞ்சும். இதில் பெரு ஈ முதலிய பல நிற ஈக்கள் உண்டு.

ஈங்கச்சோளாண்டான் — மணக்கால் நம்பியின் திருவடி சம்பந்தி.

ஈசாண்டான் — ஆளவந்தார் திருவடி சம்பந்தி. (குருபரம்பரை)

ஈசானசிவர் — சைவ சித்தாந்தபத்ததி செய்த ஆசிரியரில் ஒருவர்.

ஈசானமுனிவர் — வரதுங்கராமபாண்டியனுக்கு ஆசிரியர். இவர் வேப்பத்தூர் சங்கத்தைச் சேர்ந்தவர்.

ஈசானமூர்த்தி — படிக நிறம், மூன்றுகண் உடையராய்ச் சௌமியராய், புருஷாகாரமாய், சூலம், அபயம் உடையராயிருப்பர்.

ஈசானம் — சிவனின் ஐந்து திருமுகத்தொன்று.

ஈசானர் — வாயுவை அதிட்டித்து நிற்கும் சிவமூர்த்தம். இவரது சத்தி காளி. இவர்க்குக் காலர் எனவும் பெயர்.

ஈசானன் — திக்குப்பாலகரில் ஒருவன்.

ஈசானு — நவசத்திகளில் ஒருத்தி.

ஈசானி — ஒரு மாயாதேவி.

ஈசானியசுவாமிகள் — இவர் திருவாவடுதுறை யாதினத்தவர். கவிவல்லவர். கடம்பற் கோயிற் புராணம் பாடியவர்.

2. பொம்மபுர வாதீனத்தவர். கவிவல்லவர். வசவபுராணம் பாடியவர்.

ஈசுரதத்வம் — சுத்த மாயையில் சூக்ஷ்மமாய்க் காரியங்தோன்றற்கு உத்யுத்தனுய் நின்ற முதல்வன், அதிகார அவத்தையினின்று கிரியா சத்தியை மிக்குச் செலுத்திப் பிரவிருத்தி செய்தவழி, சூக்ஷ்மமாய்க் காரியப்பட்ட சுத்தமாயையின் நான்காம் விருத்தி, ஈசுரனுய் நின்ற சிவனுலதிட்டிக்கப்படுவது. (சிவ-போ.)

ஈசுவரமுனிகள் — வீரநாராயண புரத்தில் நித்யவாசியாய்ச் சடமர்ஷண குலத்தவராய்ச் சொட்டைக்குலத் தரசென்று பெயர் பெற்ற ஈச்வரபட்டாழ்வாருக்குப் பௌத்ரர். நாதமுனிகளுக்குக் குமார். இவர் குமார் ஆளவந்தார்.

ஈசுவராசன் — கிருஷ்ணதேவராயனுக்குப் பாட்டன்.

ஈச்சமரம் — இது, பேரீந்து, நாட்டீந்து சிற்றீந்து எனப் பலவேறு படும். பேரீந்து அரேபியாவில் உள்ளது. இதனிலைகள், நடுத்தண்டில் தென்னைபோல் பலகிளைத்து நடுநரம்புடன் கூடியவை. இதன் குலை, பல காய்களைப் பெற்றிருக்கும். மரம், சற்றேறக்குறைய 60-அடி உயரமிருக்கும். ஓலையால் பாய்முடைவர், மட்டையால் கூடை முதலிய கட்டுவர். பழம், உணவு, குதிரை யுணவு, சாராயம் முதலியவாக உதவும்.

ஈச்சம்பாடி ஸ்ரீநிவாசாசாரியார் — இவர் தமிழிலும் வடமொழியிலும் வல்லவர். சென்னை சர்வகலாசாலைத் தமிழ்ப்புலமை நடாத்திய புலவர்களில் ஒருவர். தமிழில் விஷ்ணுபுராண வசனம், உத்தரராமாயண வசனம், அதிக கதாசங்கிரக வசனம் குவலயாநந்த வசனம் எழுதியவர்.

ஈச்சம்பாடிசீயர் — உடையவர் திருவடி சம்பந்தி.

ஈச்சம்பாடியாச்சான் — எழுபத்திநாலு சிம்மாசனுதிபதிகளில் ஒருவர். வைஷ்ணவாசாரியர். (குருபரம்பரை).

ஈச்சுரன்குணம் — இறைவனெண்குணம் காண்க.

ஈச்சுரன் பிரபுத்வ சாமார்த்தியகுணம் (ங) — கர்த்தத்துவம், அகர்த்தத்துவம், அன்யதாகர்த்தத்துவம்

ஈச்சுரன் முகம் — ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம்.

ஈட்டி எழுபது — இது, செங்குந்த மரபினர் மீது ஒட்டக்கூத்தரியற்றிய புகழ்ச்சிப் பிரபந்தம்.

ஈயசெந்தூரம் — ஈயம், பிராணவாயு சேர்ந்த பொருள் இதனுடன் நல்லெண்ணெய் சேர்த் துருக்கி ரணங்களுக்குப் போடுகிறார்கள்.

ஈயம் — (வங்கம்) இது, கனிகளில் உண்டாம் லோகங்களில் ஒன்று. இது சையாம் தேசத்திருந்தும் அரக்கன் தேசத்திருந்தும் கொண்டுவரப் படுகிறது. அரேபிதேசத்தில் ஓமன் என்ற இடத்தில் ஈயக்கனி உண்டாயிருக்கிறது. இது, நீரினும் 11-மடங்கு கனமுள்ளது. வெட்டினவுடனுட்

பகுதி பளபளப்பாகவும் காற்றுப் படப்பட மங்கியும் போம். இது இயற்கையில் வெண்மை கலந்த கருநிற முடையது. நயப்புள்ளது, எளிதில் உருகத் தக்கது. இதை வெட்டியெடுக்கையில் வேறு பல பொருள்களுடன் கலந்திருக்கும். அதில் கந்தகமும் சேர்ந்திருக்கும் என்பர். இதில் பலவித குழைகள், துப்பாக்கி ரவைகள், சிற்சில ஔஷதங்கள் செய்யப்படுகின்றன. இதனை அண்டிமொனி யெனும் ஒருவகை உலோகத்துடன் சேர்த்து அச்செழுத்து வார்க்கின்றனர். இதனால் கறுப்புப் பென்ஸில் செய்கிறார்கள். இது ஸ்பெயின், இங்கிலாந்து, ஐக்யமாகாணங்கள் முதலிய இடங்களிலும் எடுக்கப்படுகிறது.

ஈயவெள்ளை — ஈயம், கரிப்பொருள், பிராணவாயு இவை சேர்ந்தது. இதனுடன் மாஎண்ணெய் சேர்த்து வர்ணம் பூசுகிறார்கள் விஷமுள்ளது.

ஈயுண்ணிமாதவர் — நம்பிள்ளையின் திருவடி சம்பந்தி.

ஈயுண்ணியாண்டான் — உடையவர் திருவடி சம்பந்தி. (குருபரம்பரை).

ஈரந்தூர் — இது ஈரங்தை என்றும் வழங்கப்படும் ஊர். (புறநானூறு).

ஈரந்தூர்கிழான் — இவர் வேளாண்மரபினர். அமைச்சுத் தொழில் மேற்கொண்டவர் போலும், கோனாட்டு எரிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனால் பாடல் பெற்றவர். இவர் பரிசிலர்க்கு இல்லை யென்னாது கொடுப்பவர். இவர் தம்மரசருக்கு வந்த துன்பந்தாங்கிப் பகைவரை வென்றவர். இவர்க்கு ஈரந்தூர்கிழான் தோயன்மாறன் எனவும் பெயர் (புறநானூறு).

ஈழத்துப்பூதன்றேவன் — இவர் ஈழநாட்டவர்போலும். கடைச்சங்கத்தவருள் ஒருவர். (குறு-343.)

ஈழம் — பரதகண்டத்துத் தெற்கிலுள்ள ஒரு தீவு. இதனைக் குபேரனும், இராவணனும், சோழரும், பாண்டியரும், மகதநாட்டவரும், அவரைச் சார்ந்த பௌத்தரும் அரசாண்டனர். இதனை இலங்கையென்றும், சிங்களத்வீபமென்றும் சேரத்வீபமெனவுங் கூறுவர்.

ஈழன் — இவன் ஒரு அரசன். இவன் பெண்ணுரு அடைந்து புண்ணிய நதியில தீர்த்தமாடி ஆணுருவடைந்தவன்.

ஈளினன் — ரப்யனென்னும் பெயருள்ள புரூரவம்சத்தவன்.

## உ.

உகதன் — நிச்சக்கிரன் குமரன். இவன் குமரன் சித்திராதன்.

உகாய்க்குடிகிழார் — இவர் உகாய்க்குடி எனும் ஊரினர் போலும். வேளாளராக இருக்கலாம். கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். (குறு-43.)

உக்கழகரன் — கத்ரு குமரன், நாகன்.

உக்கருஷணி — நவசக்திகளில் ஒருத்தி.

உக்கலம்மாள் — உடையவர் திருவடிசம்பந்திகளில் ஒருவர். உடையவருக்கு ஆலவட்ட கைங்கர்யஞ் செய்தவர். (குருபரம்பரை).

உக்கலாழ்வான் — எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். வைஷ்ணவாசாரியர். (குருபரம்பரை).

உக்கிரகுலம் — இது சைனநூல்களிற் காணப்படும் ஐந்து குலங்களுள் ஒன்று. மற்ற நான்காவன இக்ஷவாகுகுலம், ஹரிகுலம், குருகுலம், நாதகுலம் என்பவை. இக்குலத்திற் பிறந்தவன் சண்பை நகரத் தரசனான் விசயவரனென்பவன். (பெருங்கதை)

உக்கிரப் பெருவழுதி — இவன் பாண்டிநாட்டரசன், கடைச்சங்கத்தை ஆதரித்தவன், சங்கப்புலவருடன் ஒப்பப்பாடும் ஆற்றலுடையான். இவன் வேங்கை மார்பன் எனும் கானப்பேர் (காளையார் கோயில்) அரசனை வென்று கானப்பேரெயில் கடந்தபாண்டியன் உக்கிரப் பெருவழுதியெனப் பெயர்பெற்றவன். இவன் மாவெண்கோ எனும் சேரமானுடனும், இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியுடனும் நட்புப் பூண்டவன். ஔவையாராலும், ஆவூர்மூலங்கிழாராலும் பாடப்பெற்றவன். உப்பூரிக்குடிக்கிழார் மகனார் உருத்திரசன்மனைக்கொண்டு அகநானூறு தொகுப்பித்தோன். இவனது அவையில் திருக்குறள் அரங்கேற்றப் பட்டது. நற் ௧-ம்-௮௧-௧ திருவள்ளுவமாலை ௧-ஆக (௫) பாடல்கள் இவன் கூறியவை. இவன் காலம் ௫-ஆம் நூற்றாண்டென்ப.

உக்கிரவேகன் — பாரத யுத்தவீரன்.

உக்தி — இவன் வீடுகளிலிருந்து சுபாசுபங்களைப் பேசும்போது சதாஸ்து என்பவன். இவன் குமரன் காலசிக்வன்.

**உக்ரகுமாரபாண்டியன்**—சோமசுந்தர பாண்டியனுக்கும் தடாதகைப் பிராட்டியாருக்கும் பிறந்து சகலகலைகளும் கற்றுக் காந்திமதியை மணந்து அரசாக்ஷி கைக்கொண்டு ஆளும் நாட்களில் (சுகூ) யாகங்கள் செய்ய இந்திரன் பொறாமைகொண்டு கடலை விட்டனன். கடல் மதுரையை வளைக்கப் பாண்டியன் தாமதித்திருக்கக் கண்டு சிவமூர்த்தி சித்தவடிவுகொண்டு தரிசனந் தந்து வேலெறிய ஏவி மறைந்தனர். பாண்டியன் வேலெறிந்து வருணனது வீறடக்கினன். இவனரசாக்ஷியில் நாடு மழையிலாது வறப்ப மூவேந்தரும் தேவருலகு சென்று இந்திரன் சபையைச் சேர இந்திரன் மூவர்க்கும் ஆசனமிட இருவரும் அவனிட்ட ஆசனத்திருக்கப் பாண்டியன் இந்திரனுடன் ஓர் ஆசனத்திருந்தனன். இதனால் இந்திரன் மனம் பொறாதவனாய்ச் சேர சோழர்க்கு மரியாதை செய்து அவர்கள் நாட்டில் மாத்திரம் மழை பொழிவித்து, உக்ரபாண்டியனுக்கு மரியாதை செய்பவன்போல் அநேகரால் தாங்கப்பட்ட ஒரு பெரிய மாலையைக் கழுத்திலிட்டனன். அதனைச் சலிக்காது தாங்கி ஆரந்தாங்கு பாண்டியன் எனப் பெயரடைந்து இந்திரனை ஒன்றுங்கேளாது தன்னுடடைந்து சில நாட்கள் பொறுத்து வேட்டைக்குச் சென்று காட்டில் வந்து மேய்ந்து கொண்டிருந்த இந்திரனது மேகங்களைப் பிடித்துச் சிறையிட்டனன். இதைக் கேட்ட இந்திரன் யுத்தத்திறகு வர அவன் முடிமேல் வளையெறிந்து முடி விழும்படி பங்கஞ் செய்து பின்னிடையச் செய்தனன். பிறகு, இந்திரன் மழை பெய்விக்கிறேன் மேகத்தை விடுக்க எனத் தூதனுப்புவிக்கச் சம்மதிக்காது இருக்க, வேளாளர் இந்திரனுக்குப் பிணையாகி விடுவிக்க விடுத்தனன். இவன் அரசு செய்கையில் மழையிலாதிருக்கப் பாண்டியன் சோமசுந்தரமூர்த்தியை வருந்திக் கேட்கச் சிவமூர்த்தி இவ்வகை ஒருவருடமிருக்கும் அது தீர நீ மேருமலையிற் சென்று அங்கிருக்கும் பொன்னறை திறந்து நிதிகொண்டு அவ்வறையைமூடி உன் முத்திரையிட்டு மீளுக எனப் பாண்டியன் அவ்வகை சென்று மேருத் தெய்வத்தினை அழைக்க அதுவராது தாமதிக்கத் தனக்குச் சிவமூர்த்தி அருளிய செண்டை விட்டெறிய அவ்வடியால் நடுநடுங்கி முன்னின்று பொன்னறைகாட்டி வேண்டிய கொண்டு செல்க என்றது. பாண்டியன் அவ்வகை செய்து தன்னுடு சேர்ந்து குடிகளுக் களித்து வறுமை நீக்கித் தன் குமரன் வீரபாண்டியனுக்கு அரசளித்துச் சிவாநந்தவாழ் வடைந்தனன். இவனுக்கு உக்ரபாண்டியன், ஆரஞ்சாத்துப் பாண்டியன் எனவும் பெயர்.

**உக்ரசிரவன்**—1. திருதராஷ்டர புத்திரன்.

2. உரோமகர்ஷன் குமரன். சூதபுராணிகருக்குப் பெயர். சூதனைக் காண்க.

**உக்ரசேநபாண்டியன்**—இராசபயங்கர பாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் சத்துருஞ்சயன்.

**உக்ரசேநன்** — 1. வடமதுரைக்கு அரசன். தேவகன் தமயன். கம்சன் தந்தை.

2. அபிமன்னனுக்குப் பௌத்ரன். சர மேஜயன் தம்பி.

**உக்ரச்யோதி**—சைவசித்தாந்த பத்ததி செய்த சிவாசாரியருள் ஒருவர்.

**உக்ரதமஷ்டரா** — அரிவருஷனுக்கு மேருதேவியிட முதித்த குமரன்.

**உக்ரபீடம்** — சத்திபீடங்களி லொன்று.

**உக்ரர்** — சூர்யாதிட்டான தேவர், இவரது சத்திபலப் பிரமதனி.

**உக்ரவீரியர்** — சிவபூசா துரந்தரராகிய ஒரு இருடி.

**உக்ரன்** — A. க்ஷத்திரியனுக்குச் சூத்திர மனைவியிடம் பிறந்தவன். எலி; உடும்பு முதலிய பிடித்தல் தொழில். (மநு).

B. சிவன் திருநாமங்களில் ஒன்று.

C. பூதனுக்குச் சுரபியிடத் துதித்த குமரன். ஏகாதசருத்திருள் ஒருவன்.

D. சண்முக சேநாவீரன், மகாபலசாலி. அதிசூரனிடம் பெரும்போரிட்டு இளைக்காமல் அவனைக் கொன்றவன்.

E. சூத்திரப்பெண்ணை வணிகன் கூடிப் பெற்ற பிள்ளை.

F. பிரமதேவன் கோபத்தி லுதித்து அவரா லிறந்தவன்.

G. சாக்ஷுசமனுவைக் காண்க.

**உக்ராயுதன்** — பூருவம்சத்தவன், கிருதி குமாரன், சந்தனு மரணமடைந்தபின் யோசனைகந்தியிடத்து மோகித்துப் பீஷ்மனால் கொல்லப்பட்டவன். இவன் குமரன் க்ஷேமியன்.

**உக்ரோசன்** — சண்முக சேநாவீரன்.

**உக்னம்** — பாசுபதர் வசிக்கும் உலகம்

**உசகச்சன்** — வியாழன் சகோதரன்.

**உசகத்தியர்** — ஆங்கிரஸ ருஷிக்குச் சிரத்தையிடம் முதித்த குமாரர்.

**உசங்கு** — ஒரு ருஷி, இவரது ஆச்ரமத்தில் ஆர்ஷ்டிஷேணர் தவஞ்செய்தனர். இவர் தம் புத்திரர்களை அழைத்துத் தம்மைச் சரஸ்வதிநதி தீரத்துள்ளபுருதக தீர்த்தத்திற் கொண்டுபோகக் கட்டளையிட அவர்களவ்வாறு செய்யப் போய்த் தீர்த்த ஸ்நானஞ் செய்து உயிர் விட்டனர். இந்தத் தீர்த்தம் புண்ணிய தீர்த்தமாதலின் பலராமர் தீர்த்தயாத்திரையில் ஸ்நானம் செய்தனர். (பார - சல்ய.) இந்த இடத்தில் விஸ்வாமித்திரன் தவம் செய்து பிராமணத்வமடைந்தான். இவனுக்கு ருசங்கு என்றும் ஒரு பெயர்.

**உசத்தியர்**—இவர்க்குச் சந்திரன் தன் குமரியாகிய பத்திரையைமணஞ்செய்வித்தான். இவளிடத்தில் வருணன் நெடுநாள் ஆசை வைத்திருந்ததால் அவளைத் தூக்கிச்சென்று தன் மாளிகையில் வைத்திருந்தனன். இதனை அறிந்த முனிவர் நாரதரிடம் மனைவியை யளிக்கக்கூறி யேவினர். அவர்கூறியும் வருணன் கொடாததனால் இருடிகோபித்து எல்லாநீர்களையும்கடலையும் குடித்துவிட்டனர். அதனால் பூமிதேவி நீங்கப் பூமி மருக்காந்தாரமாயிற்று. இதனால் துன்பமடைந்த வருணன் பத்ரையை ருஷியிடம் விட்டுப் பணிந்தான். ருஷியும் பழையபடி பூமியை நீருடன் நிறுத்தினர். (பார-அநு)

**உசத்தியன்**—1. ஒரு முனிவன், இவன் தன் குமரியரிருவருடன் மாகஸ்நானத்திற்குச் செல்லுகையில் காட்டானை துரத்தப் பெண்களிருவரும் கிணற்றில் வீழ்ந்திறந்தனர். இதனால் வருந்திய உசத்தியனுக்கு முன் மிருகசிங்க முனிவர் தோன்றி மிருத்தஞ்சய மந்திரத்தால் பெண்களை எழுப்பித் தந்தனர். (பதும புராணம்.)

2. ஆங்கிரசன் புத்திரன் உடன்பிறந்தார். சம்வர்த்தன் பிரகஸ்பதி, தேவி மமதை, புத்திரன் தீர்க்கதமனன். இவன் தேவியினிடத்தில் பிறந்தவன் பரத்துவாஜன். (பாரதம், விஷ்ணு புராணம்.)

3. அநாமயமென்னும் வனத்தில் தவம் புரிந்து கொண்டிருந்த பிரகஸ்பதியின் தமயன், தேவி மங்கலை.

**உசநகு** — தருமன் குமரன். இவன் நூறு அசுவமேதஞ் செய்தனன். இவன் குமரன் ருசகன்.

**உசநன்** — 1. வேதசிரசையின் குமரன்.

2. வெள்ளிக்கு ஒரு பெயர்.

**உசீகன்** — கிருதியின் குமரன். இவன் குமரன் சேதி.

**உசீநரன்** — மகாமநுவின் மூத்த குமரன். சிபிக்குத் தந்தை. வகாமனசின் குமரன் என்பர். தீர்க்கதமரால் புத்திரப்பேறடைந்தவன்.

**உசீரபீசம்** — மருத்துமகாராஜன் யாகஞ் செய்த இடம்.

**உசேநஸ்** — வேதசிரன் குமரன்.

**உச்சவசங்கேதர்**—எழுகூட்டமாகிய அரசர்.

**உச்சைசரவன்** — சந்திர வம்சத்து அரசன். தாய் வாகினி

**உச்சைச்சிரவம்** — பாற்கடற் பிறந்த வெள்ளைக்குதிரை, இந்திரற்குரியது. இதைப் பலிச்சக்ரவர்த்தி கொண்டான் என்பர்.

**உச்சையந்தம்** — பிரபாச தீர்த்தத்திற்குச் சமீபத்திலுள்ள பர்வதம். (Mount Girnar, close to Junagar in Kathiwar.)

**உஞ்சமான்** — ஒரு மலை.

**உஞ்சல்**—மரத்தால் வீச்சாகச் செய்யப்பட்டு விட்டத்திலுள்ள சங்கிலியில் தொங்குவது.

**உஞ்சானகம்** — ஒரு தீர்த்தம். (A sacred place on the river Indus immediately west of Kashmir.)

**உஞ்சேனை** — உச்சைனி நகரம்; உஞ்சையெனவும் வழங்கும். இஃது அவந்திநாட்டிலுள்ளது. பிரச்சோதனனுடைய இராசதானி. மதில் முதலிய அரண்களாலும், சேனைகளாலும், பலவகைச் செல்வங்களாலும் சிற்ப அமைதிகளாலும், சிறப்புற்றது. குளிர்ச்சியும், பலவகை நுகர்ச்சியும், இதில் அதிகம் அகநகர், புறநகர்களின் டாகுபாடுகளினால் மிக்கது. யாதொரு குற்றமு மில்லாதது, சத்ருபயம் இதற்கில்லை. இதில் வாழ்வோர் பெரும்பாலும் முருகக் கடவுளை வழிபடுவாரென்று தெரிகிறது. இது பெருநகர் மாநகரெனவும் வழங்கப்படும். இதனயலில் மாகாளவனம் அல்லது காளவனமென்ற ஒரு தவவனமும், அதில் ஒரு காளிகோயில் முதலியனவும், ஒரு நதியும், அந்நதி பாயப்பெற்று ஒரு யோசனை அளவுள்ளதான ஒரு பொய்கையுமுண்டு. அந்நதியின் இருகரையிலும், அப்பொய்கைக் கரையிலும், இந்நகரத்தார் வருடத்திற்கு ஒருமுறை நீர்விழவு, அயரா நிற்பர், யாதொரு கவலையும் தமக்கு இல்லாமையாலும், இன்பவகையையே பெறுத

லாலும், இந்நகரமாந்தர் "எமக்கு எந்தப் பிறப்பும் இந்நகரத்திலேயே எய்தவேண்டும், இந்நகரம் நீடூழி வாழ்க என்று மகிழ்ந்து கூறுவர். உதயணன் வஞ்சனையாற் பிடிக்கப்பட்டுச் சிறையிலிருந்ததுமுதல் வாசவதத்தையை அவன் பிடிமேலேற்றிச் சென்றது இறுதியாகவுள்ள கதைப்பகுதி இந்நகரில் நிகழ்ந்தது இந்நகரம் அவந்தியென்றுங்கூறப்படும். இதுமுத்திநகரங்கள் ஏழனுள் ஒன்று. பழைய நூல்களாலும், சில சாசனங்களாலும் இதிற் சைனமுனிவர் பலரிருந்ததாகத் தெரிகிறது. வடநூல்கள் பலவற்றிலும், சிலப்பதிகாரம், யசோதர காவிய முதலிய தமிழ் நூல்களிலும், மிகப் பாராட்டபட்டுள்ளது. உச்சைனி மகாகாளமென்னும் ஒரு சிவக்ஷேத்திரம் இதில் உண்டு. (பெருங் கதை)

உஞ்சை — உச்சினிபுரம். அவந்திநாட்டு இராஜதானி, உஞ்சேனைகாண்க.

உடலவர்த்தனை — (க), மெய்சாய்த்தல் (க), இடைநெரித்தல் (உ), சுழித்தல்(ங),அணைத்தல் (ச), தூக்குதல் (ரு), அசைதல் (சு), பற்றல் (எ), விரித்தல் (அ), குவித்தல் (கூ) முதலிய.

உடலற்ற நாள் — நக்ஷத்திரம் காண்க.

உடலுதயராசி — மீனம்.

உடனிகழ்ச்சியணி — அஃதாவது கற்றோரை மகிழ்விக்கு முடனிகழ்தலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் சகோத்திய லங்கார மென்பர். தண்டியாசிரியர் புணர்நிலை யென்பர்.

உடன்போக்கிடையீடு — இது நம்மனையில் வரைந்துகொள்ளாது தன்னூரில் வரைந்தாலென்று தலைவி சுற்றத்தார் வெறுப்படைதலால் தலைவியை உடன்கொண்டு போம்போது தலைவி சுற்றத்தாரிடை ஈடுபட்டு மீண்டு தலைவி வருதல். இது, போக்கறிவுறுத்தல், வரவறிவுறுத்தல், நீக்கமிரக்கம், மீட்சியென நால்வகை யினையும், நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன் செலவுணர்த்தி விடுத்தல், தலைமகன் தன் செலவின்னாட் குணர்த்தி விடுத்தல், நற்றாய்க் கந்தணர் மொழிதல், தலைவற் குணர்த்தல், தலைமகளைத் தலைமகன் விடுத்தல், தமருடன் செல்பவள் அவன் புறநோக்கிக் கவன்றரற்றல் எனும் விரியினையு முடைத்து. (அகம்).

உடன்போக்கு—இது, தலைமகன் தன்னூர்க்குத் தலைவியை உடன்கொண்டு போதல். அது, போக்கு, கற்பொடு புணர்ந்த கௌவை, மீட்சி, என மூன்றுவகை. அவற்றுள் போக்கு, போக்கறிவுறுத்தல், போக்குடன்படாமை, போக்குடம்படுத்தல், போக்குடம்படுதல், போக்கல், விலக்கல், புகழ்தல், தேற்றல் என எட்டுவகை. இது, பாங்கி தலைவற்கு உடன் போக்குணர்த்தல், தலைவன் உடன்போக்கு மறுத்தல், பாங்கி தலைவனை உடன்படுத்தல், தலைவன்பேரக் குடன்படுதல், பாங்கி தலைவிக்கு உடன்போக் குணர்த்தல், தலைவி நாணழிவிரங்கல், கற்பின் மேம்பாடு பாங்கி கழறல், தலைவி ஒருப்பட்டொழுகல், பாங்கி சுரத்தியல் புரைத்துழி தலைமகள் சொல்லல், பாங்கி கையடை கொடுத்தல், பாங்கி வைகிருள் விடுத்தல், தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல், தலைமகன் தலைமகளசைவறிந்திருத்தல், உவந்தலர் சூட்டியுண் மகிழ்ந்துரைத்தல், கண்டோரயிர்த்தல், கண்டோர் காதலின் விலக்கல், கண்டோர் தன் பதி அணிமைசாற்றல், தலைவன் தன் பதியடைந்தமை தலைவிக் குணர்த்தல் என்பனவாம். (அகப்)

உடுண்டிவிநாயகர் — வக்ரதுண்டரைக் காண்க.

உடுண்டுபன் — ஒரு பாம்பு, சர்ப்பங்களைக் கொல்லும் விரதமேற்ற குருவைக் கண்டு நான் பூர்வத்தில் ஒரு வேதியன், எனக்கு மேககன் என்று ஒரு நண்பன் இருந்தான். அவன் மகாவிரத ஒழுக்கம் உள்ளவன். நான் அவனிடத்தில் அவன் அஞ்சத்தக்க சில விளையாட்டுகளை விளையாடிக் கொண்டு வரும் நாட்களில் ஒருநாள் ஒரு பொய்ப் பாம்பைச் செய்து அவன் அக்நிஹோத்திரஞ் செய்புங் கிருகத்தில் இருக்கும் போது அவன் அருகிற்போட்டு இதோ பாம்பு பாம்பு என்று அலறினேன். அது கண்டு அவன் அறிவுதப்பி நடுங்கிப் பின் பொய்ப் பாம்பென்று கண்டு தெளிந்து என்னைப் பயப்படச்செய்த நீ மெய்ப் பாம்பு ஆகுக எனச் சாபம் அளித்தனன். நான் சிநேகமுறையாக அவனை விமோசனங் கேட்கக் குருவால் நீங்கும் என்றனன். ஆதலால் உன்னைக் காண எனக்குச் சாபம் நீங்கியது. நீ இனிச் சர்ப்பங்களைக் கொல்லற்க எனக் கூறிச் சென்றவன்.

உடுப்பின்வகை— இவை, உலகத்தவர் உடுக்கும் உடைகள். அங்கவஸ்திரம், தோவத்தி, முழுஅங்கி, அரைஅங்கி, உள்ளங்கி,

துண்டம், குட்டை, தலைப்பாகை, குல்லாய், தொப்பி, பனியன், ஷர்ட், கோட், லங்கோட்டா, நிஜாரு, கச்சு, டை, காலர், சால்வை, துப்பட்டி, புடவை, ரவிக்கை, ஜாகெட், பாடி, துகில், மயிர்ப்படாம், சித்திரப் படாம், கம்பளிப்படாம், சட்டை, பாவாடை, மாராப்பு, தாவணி, விசேந்தலைப்புலுங்கி ஜிப்பா முதலியன.

உடும்பு — இது மலையோணன், இது ஓணானைப்போல் உருவமுடையது. இது இரண்டடி நீளமுடையது. மலைகளினிடேக்குகளிலும், காடுகளிலும் வளை தோண்டிக் கொண்டு வாழ்வது. இதன் நாக்குச் சற்று நீண்டது நகங்கள் கூர்மையுடன் உறுதி பெற்றவை, கால்கள் குறுகியும் உடல் நீண்டும் இருக்கும். இது முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பது. செல்லு பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். இதன் நகங்களும் கால்களும் உறுதியுள்ளவையாதலால் அரசர்கள் பகைவரது கோட்டைமேற் செல்லக்கூடாத இடங்களில் இதனை ஏறவிட்டு அதனைக் கட்டிய கயிற்றைப் பற்றிக் கொண்டு மேலேறுவர் என்பர்.

உடையநங்கை — நம்மாழ்வாருக்குத் தாய். காரி முதலியாருக்குத் தேவியார்.

உடையார்—இவர்கள் கொங்குநாட்டு வேடர் சாதியின் வகுப்பு. இவர்களில் மூன்று பிரிவுண்டு. நட்டமான், மலையமான், சுதர்மான், நட்டமான் காட்டுக் குரியவன், மலையமான் மலைக்குரியவன், சுதர்மான் வீரன். இவர்கள் சோாராஜ குமாரர்கள் என்பர். இப்பட்டம் குசவர்க்கும் உண்டு.

உட்கலம் — கலிங்கதேசத்துக்கு வடக்கிலுள்ள தேசம் (Orissa).

உட்ணசிகை — ஆதித்யன், செவ்வாய், சநி, இவர்கட் கடைத்த இராசிகளில் கிடந்த காட்கள், இவர்கள் காலாகிய அம்சங்கள் உட்ணசிகை என்பர் ஓரம்சம் (15 நாழிகை. இதில் ஆதித்யனம்சத்தில் முதலைந்தும், செவ்வாயம்சத்தில் நடுவில் ஐந்தும், சநியம்சத்தில் கடையில் ஐந்து நாழிகையும் கழித்துக் கொள்வது. இதில் சுப கன்மங்கள் நீக்கவேண்டும். (விதானமாலை).

உட்ணீசர் — ஒருவகை அரக்கர்.

உட்பகை — சு. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

உணபு — மரீசி பிரசாபதியின் தேவியரிலொருத்தி. இவள் குமார் செய்தி மரீசியைக் காண்க.

உணர்ந்ததை உணர்தல்—முன்பு குளிர்வந்தற்றகாலத்து நெருப்பு மருந்தென்றுணர்ந்தவன் பின்பு அது வந்தகாலத்து அதற்கு அது மருந்தென உணர்தல்.

உணவாதி வகைகள் — பாகசாலை முதலியவற்றில் சமைக்கும் உணவு, உயிர்களின் பசி முதலிய பிணிகளை நீக்கித் தேகத்தை ஆரோக்கியமாகச் செய்வதாம். இது கிரியா பேதங்களால் பலவகைப்படும். இது நாவிற்கு இனிமை தந்து மனதைச் சுகப்படுத்தும். இதனைச் சித்தஞ் செய்வதற்கு ஏற்ற கருவிகளின் வகையும் இதனைச் சித்தஞ் செய்வதற்குப் பாகசாலையின் முறையுமாவன. (௩உ) அடி நீளமும், (அ) அடி அகலமும் உள்ளதாய் மேலில் புகை முதலிய செல்வதற்கும், அக்நிக்கு உதவியாகிய காற்று இயங்குவதற்கும், புகைக்கூண்டு, பலகணிகள், நீர்த்தாரைகளைப் பெற்றதாய்ச் சுத்தமுள்ளதாய் ஒரு பெரிய அறை இருக்கவேண்டும். இவ்வறைக்கு அக்கிநி திசையிலாவது இந்திரதிசையிலாவது பரணி, கிருத்திகை முதலிய நக்ஷத்திரங்களில் பசுவின் வால் போல் செங்கல்லினாலாவது, களிமண்ணிலாவது அடுப்பு நிருமித்தல் வேண்டும். அவ்வடுப்பின் இருபுறத்திலேனும் ஒரு புறத்திலேனும் மீயடுப்பு, கிளையடுப்பு, புடையடுப்பு இருத்தல் வேண்டும். அடுப்பின் அடிப்புறத்தில் சாதம் வடிப்பதற்குக் கஞ்சிநீர்க்குழியும், ஏனைப் பதார்த்தபாண்டங்களை அமைத்தற்குச் சிறு குழிகளையும் வைக்கவேண்டியது. இவ்வகைச் செப்பஞ் செய்த அடுக்களையை நாடோறும் மெழுகிட்டுக் கோலமிட்டு மலரிட்டு இஷ்டதேவதைகளையும், நவக்கிரகங்களையும், கிரகதேவதைகளையும், பூசித்து அடுப்பில் அக்கினியைப் பதித்தல் வேண்டும். இவ்வடுக்களைக்கு வேண்டிய உபகாணங்களில் அக்கினியை அல்லது தீபத்தை அக்கினிதிசையிலும், யமன்திசையில் விறகையும், வருணதிசையில் நீர்க்குடத்தையும், வாயுதிசையில் விசிறி முதலியவற்றையும், நிருதிதிசையில் முறம், தடைப்பம் முதலியவற்றையும், குபேரதிசையில் தானியம், காய்கறி முதலிய பொருள்களையும், ஈசானிய திசையில் உரல், அம்மி, உலக்கை முதலியவற்றையும், அமைத்தல் வேண்டும். வலதுபக்கத்தில் பாகபாத்திரங்கள் அமைத்திருக்க வேண்டும். இவ்வகை

அமைந்த பாகசாலையில் சமைப்போன் அரோகியாய்த் தேகபுஷ்டி யுள்ளானாய், பதார்த்த இலக்ஷணம் அறிந்தவனாய், நற்குலத் துதித்தவனாய் உள்ளவன், தான் ஸ்நானஞ்செய்து அரையில் சிறுதுண்டும் மேலில் சிறுதுண்டும் உடையவனாய்ச் சிகையை நன்றாய்த்தட்டி உதறி அவிழா முடியிட்டு நகங்களை நன்றாகச் சுத்திசெய்து கைகால் அலம்பி அடுக்களையில் பிரவேசித்துச் சுத்தபாத்திரங்களாகிய பாகபாத்திரங்களை உபயோகப்படுத்த வேண்டும். பாகபாத்திரங்களுக்கு உரிய கருவிகளாவன. அகப்பை, கரண்டி, உரல், முறம், சல்லடை, அம்மி, குழவி, மாக்குழவி, இருப்புவாணு, சில்லிக்கரண்டி, அரிவாள்மணை முதலிய. பித்தளைப் பாத்திரங்கள் இருக்கின் ஈயம் பூசப்பட்டனவாக இருத்தல் வேண்டும். சாதம் சமைக்கும் லக்ஷணமாவது: செம்மையாகக் குத்தித் தவிடு போக்கிய அரிசியை உமி, கல் முதலிய இல்லாமல் பலமுறை அலம்பி, அதன் குற்றங்கள் நீங்கும் அளவும் அரித்துப் பின் தூய்மையை உடையதென அறிந்து அரிசியிலும் மூன்றுபாகங் கொள்ளத்தக்க அளவுள்ள பாத்திரத்தில் வைத்த உலையில் அரிசியை ஒருமிக்கப் பெய்து அடிக்கடி துழாவிப் பதத்தில் பாலாவது நெய்யாவது சிறிதுவிட்டுத் துழாவி வடிபதத்தில் வடிதட்டால் வடிகுழிக்கு மேலிட்டு வடித்துவிடல் வேண்டும். வடித்த சாதத்தில் கஞ்சியிருக்குமேல் ரோகத்தை விளைக்குமாதலின் அக்கஞ்சி சுவறச் சிறிது நெருப்பை வெளியிற்றள்ளி அதன்மீது சாதபாத்திரத்தை வடியுமட்டும் வைத்தல் தகுதியாம். இவ்வகை சமைக்காத அன்னம், எண்வகைக் குற்றங்களுக்குள்ளாகி உண்பவனை ரோகியாக்கும். அதற்கு எண்வகைத் தோஷங்களாவன: அஸ்திரீதம், பிச்சளம், அசுசி, குவதிதம், சுஷுமிதம், தக்தம், வீரூபம், அநர்த்தஜம் என்பனவாம். இவற்றுள் அஸ்திரீதம், கஞ்சி சுற்றிக்கொண்ட அன்னம். இதைப் புசிப்போர்க்கு ஆமயம் முதலிய ரோகங்களுண்டாம். பிச்சளம், அளிந்த அன்னம், இதைப் புசிப்போர்க்குக் குன்மாதி ரோகங்களுண்டாம். அசுசி, புழு, மயிர், சேர்ந்த அன்னம், இதைப் புசிப்போர்க்கு வாய்நீர் ஒழுகல் உண்டாம். குவதிகம், நருக்கரிசி பட்ட அன்னம் இதைப் புசிப்போர்க்கு அஜீரண ரோகமுண்டாம். சுஷுமிதம், சிறிது வெந்தும் வேகாத அன்னம், இதைப் புசிப்போர்க்கு இரத்தபீடனம் உண்டாகும். தக்தமாவது காந்தின அன்னம், இதைப் புசிப்போர்க்கு இந்திரிய நாசமுண்டாம். விரூபம் விறைத்த அன்னம், இதைப் புசிப்போர்க்கு ஆயுள்க்ஷீணம் உண்டாகும். அனர்த்துஜம் பழஞ்சாதம், இதை உண்போர்க்கு அதி நித்திரை சீதாதிரோகங்கள் உண்டாம். இவ்வகை அன்னமும், பலகாரங்களும் சமைக்கும் அரிசியாவன. ஈர்க்குச் சம்பா, புழுகு சம்பா, கைவரைச் சம்பா, செஞ்சம்பா, மல்லிகைச்சம்பா, குண்டுசம்பா, இலுப்பைப்பூச்சம்பா, மணிச்சம்பா, வளைதடிச் சம்பா, கோரைச்சம்பா, குறுஞ்சம்பா, மிளகுசம்பா, சீரகச்சம்பா, காளான்சம்பா, மைச்சம்பா, கோடைச் சம்பா, காடைச் சம்பா, குன்றுமணிச் சம்பா, அன்னமழகி அரிசி, கார் அரிசி, மணக்கத்தை அரிசி வாலான், கருங்குருவை, சவ்வரிசி, மூங்கிலரிசி, கோதுமையரிசி, கம்பரிசி, சாமையரிசி, தினையரிசி, சோள அரிசி, வரகரிசி, கேழ்வரகரிசி; இவையன்றிக் கேடி லிச்சம்பா, கலிங்கஞ்சம்பா, கனகம்சம்பா, கலப்புச்சம்பா, கம்பஞ்சம்பா, காடைக்கழுத்தன் சம்பா, கோடன்சம்பா, பாசடைச்சம்பா, சன்னசம்பா, சின்னசம்பா, சிறுமணிச் சம்பா, சுரைக்காய்ச்சம்பா, சுகுதாச்சம்பா, செம்பாளைச் சம்பா, சொரியஞ்சம்பா, திருவரங்கச்சம்பா, துய்யமல்லிகைச்சம்பா, பாலாஞ்சம்பா, பெருஞ்சம்பா, பேய்வள்ளைச்சம்பா, பைகோச்சம்பா, மங்கஞ்சம்பா, மணல்வாரிச் சம்பா, மலைகுலிக்கிச்சம்பா, மாவாம்பைச் சம்பா, மூனைவெள்ளைச்சம்பா, கார்த்திகைக்கார், முட்டைக்கார், சித்திரைக்கார், கருமோசனம், 'வெள்ளைமோசனம், வால்மோசனம், பொச்சாரி, அருஞ்சோதி, இரங்கமாட்டான், ஈசுரக்கோவை, பிச்சவாரி, செம்பாளை, கல்லுண்டையரிசி, புட்டரிசி, குளிப்பியரிசி, குச்சலாடியரிசி, கௌரிகுங்கவரிசி முதலிய பலவாம். இவற்றால் பலவிதமாகிய சுத்தான்னங்கள், சித்ரான்னங்கள், பலகாரங்கள் செய்து இலைக்கறிகள், காய்கள், பிஞ்சுகள், கனிகள், பயறுகள் முதலியவற்றை ஐங்காயமிட்டுச் சமைத்த துணையுடன் அருந்துக. அவ்வாறு அருந்தின உடற்கு நோய்கள் வாரா.

**உண்கலவகைகள்** — பொன், வெள்ளி, வெண்கலம், இவற்றால் செய்வித்த கலங்கள், வாழையிலை, பலா, முந்திரி, தாமரை, மந்தாரை, காட்டுமுருக்கு மற்ற இலைகளால் தைத்த கல்லைகள்.

**உண்டாட்டு** — கட்டி ஆர்க்கும் வீரக்கழலினையுடைய தறுகண்ணர் மதுவை உண்டு மனங் களித்து ஆடியது (பு. வெ).

**உண்டி** — இது, வாய்குவிந்து காசிடமாத்திரம் நுவாரமுள்ள பேழை. இந்த வகையில் மேல்நாட்டார் பலவகையாகக் கண்டு பிடித்திருக்கின்றனர். தற்காலம் இருப்புப் பாதையில் பிளாட்பாரம் டிகட் வாங்குவதற்கு ஒரு அணு துண்டை உண்டியிலிட்டால் ஒரு டிகட்டு வருகிறது. இது ஒரு வகை.

**உண்ணுமுலைஎல்லப்பநயினர்** — இவர் ஒரு புலவர். திருவண்ணாமலையி லிருந்தவர். சேறைக் கவிராஜ பண்டிதர் காலத்தவர். இவரைப் பற்றி வேறொன்றுந் தெரியவில்லை. "பாழ்ப்பாய் மடத்துப் பரமாவுன் பாண்கவிதை கேட்பாரெல்லாம் புத்தி கேட்டபேர் — தோட்பாவும், ஒணன் விழுந்தாலு முண்டு பரிகாரமிது வாணாளவே வரும்." இவர் கவிராசரைப் பாடியது.

**உண்மை** — (சம்பவம்) ஒரு கல் இரும்பை ஈர்த்ததெனில் அது காந்தமென அறிதல்.

**உண்மையாநந்தர்** — அரிசிற் கரைப்புத்தூரிற் சிவபூசைசெய்து பேறடைந்தவர்.

**உதக்சேநன்** — விஷ்வக்சேநனுக்குக் குமரன் விசுவசேநன் குமான் என்றுங் கூறுவர். இவன் குமரன் பல்லாதன்.

**உதங்கமேகம்** — உதங்கர் நீர் வேண்டிக் கண்ணனை வேண்ட அவ்வகையே கண்ணன் அமுதங்கொடுக்க இந்திரனுக்குக் கட்டளையிட அவன் நீசவுருக்கொண்டு தோற்பையில் அமுதங்கொண்டுவர உதங்கர் கோபித்து இது கண்ணன் வஞ்சனையென்று எண்ணுகையில் கண்ணன் எதிர் நின்று உதங்கருக்குண்மை கூறி நீ எக்காலத்து ஜலத்தை விரும்புகின்றனையோ அப்போது மேகங்கள் உனக்குச் சலத்தை வருஷிக்கும் அந்த மேகங்கள் உன்பெயர் கொள்க என்றனர். (பாரதம் - அச்வ.)

**உதங்கர்** — 1. பிருகு வம்சத்தவர். பயிலவ முனிவர்க்குச் சிடர். இவர் ஒருமுறை ஆசாரியர் பொருட்டுக் காட்டிற்சென்று விறகுசுமை தூக்கிக்கொண்டுவந்து கீழிறக்கினபோது விறகில் சடையொன்று சிக்கிக்கொண்டு அறுந்தது. அறுந்த அந்தச் சடைவழியாய் உதிரம் ஒழுகி அக்கியாய் உபத்திரவப்படுத்தப் பயிலவர், தமது குமரியையேவி அவரைத் தூக்கித் தேறுதலை செய்வித்துத்தமது குமரியை மணம் புணர்ப்பித்தனர். பாரதயுத்த முடித்துத் துவாரகைக்குச் செல்லுங் கண்ணனை வழியில் சந்தித்து நீ பதினெட்டு அக்குரோணிப் படைகளின் உயிர்களைக் கொலைசெய்வித்தமையால் உன்னைச் சபிக்கிறேன் என்னக் கண்ணன் இவரைச் சமாதானப்படுத்தி அவர்க்கு விச்வரூப தர்சனங் காட்டி உண்மை தெரிவிக்கத் துதித்தவர். இந்த உதங்கர் குருதக்ஷிணையின் பொருட்டுக் குருவின் பத்தினி விருப்பின்படி பௌடிக மகாராஜன் பாரிக்கு ஒரு முனிவர் கொடுத்த நாகரத்தின காதணியை வாங்கிக்கொண்டு வந்த சமயத்தில் அது வழியில் தக்ஷகனால் கவரப்பட்டது. அதனைப் பூமிதேவியின் சகாயத்தால் நாகலோகஞ் சென்று குதிரையாக வந்துதவிய அக்கிதேவன் காதிலூதி நாகரைத் துன்பப்படுத்திக் குண்டலத்தை மீண்டும்பெற்றுக் குருபத்தினிக்குத் தந்து குரு விசுவாசம் பெற்றவர். சனமேசயனைச் சர்ப்பயாகஞ் செய்யத் தூண்டியவர். குவலயாசுவனால்துந்துவைக் கொலை செய்வித்தவர் இவர் அமுதம் பெறும்படி தவஞ்செய்ய அத்தவாக்கிதேவரை வருத்தியதால் இந்திரன் சிவமூர்த்தியிடம் முறையிடச் சிவமூர்த்தி அவனுக்கு வேண்டியது அமிர்தம் அதை அவனுக்குக் கொடுக்க என இந்திரன் கோபத்தால் நீசவுருக்கொண்டு அமிர்தங் கொள்க என முனிவர் நீசனுக்கு அமிர்தம் எது என்றெண்ணித் தூர அகல்க என இந்திரன அகல, முனிவர் இந்திரன் வஞ்சனை அறிந்து இந்திரன், அமுதத்தை இழக்கச் சாபமிட்டனர்.

2. சூதர் சீடரில் ஒருவன் இவன் க்ஷயரோகத்தால் வருந்தி ஆசாரியரை வேண்ட அவர் விபூதிகுண்ட ஸ்நானஞ் செய்கவென அங்ஙனம் ஸ்நானஞ் செய்து நீங்காமை கண்டு ஆசாரியரை இகழ ஆசாரியரால் காகவுருப் பெற்ற விபூதிப் பையினைத் தின்னுமுணவெனக் கிரகித்து அவ் விபூதி பரிசத்தால் சாபம் நீங்கியவன்.

3. சங்கராசாரியரை வழிபட்ட ஆசிரியர்.

உதங்கன் — உத்துங்க முனிவன் குமரன். திருதமன் குமரியாகிய பிரபையை மணந்து கங்கா யாத்திரைசெய்து, கங்கையில் ஸ்நானம் செய்கையில் இவன் தேவியை முதலை பிடித்துச் செல்ல விசனம் அடைந்து மீண்டவன்.

உதச்சியர்—ஆவந்தியர் மாணாக்கா.

உதட்டில் உண்டாகும் (கக) ரோகங்கள் — 1. கண்டோஷ்ட ரோகம் 2. வாதோஷ்ட ரோகம் 3. பித்தோஷ்டரோகம் 4. சிலேஷ்மோஷ்டரோகம் 5. சந்நிபாதோஷ்ட ரோகம் 6. ரத்தோஷ்டரோகம் 7. அற்புதோஷ்டரோகம் 8. மாமிசோஷ்டரோகம் 9. மேதோஷ்டரோகம் 10. க்ஷதோஷ்ட ரோகம் 11. சலாம்புதோஷ்டரோகம். (ஜீவரக்ஷாமிர்தம்.) .

உதத்தன்—ஓர் அசுரன்; நராந்தகன் ஏவலால் இவனும் தம்பியுங் கூடிக் கிளி யுருக் கொண்டு, மகோற்கடரைக் கொல்ல வந்து பருந்துருக்கொண்ட விநாயகமூர்த்தியாற் கொல்லப்பட்டவன்.

உதத்தியன்—சத்தியவிரதனைக் காண்க.

உதத்யன் — உசத்தியன் காண்க.

உதயகிரி—இருக்ஷபர்வதம்.

உதயகுமரன் — காவிரிப்பூம் பட்டினத்தரசனாகிய நெடுமுடிக்கிள்ளியின் புதல்வன். இவன் இதற்கு முன்பிறப்பில் இராகுலன். இவன் அப்பிறப்பில் மணிமேகலைக்கு நாயகன்; இப்பிறப்பிலும் அவளிடத்து ஆசைகொண்டு பலமுறை அவளிடஞ் சென்று தன்னை மணக்க விரும்பினவன். மணிமேகலை இவன், விருப்பத்தை மாற்ற காய சண்டிகையின் உருக்கொள்ள இவன் தனித்து மணிமேகலை இருந்த இடஞ் செல்லக் காயசண்டிகை என்னும் வித்தியாதர மங்கையின் கணவனாகிய காஞ்சனன் மணிமேகலையைத் தன் தேவி யென்று எண்ணித் தன் தேவியிடம் இவன் களவுப்புணர்ச்சி வேட்டுவந்தான் என்று கொலைபுரிய அவனாற் கொலையுண்டவன். (மணிமேகலை).

உதயசிங்—இவன் இராஜபுத்ர அரசன் ராணாசங்கன் குமரன். மொகல் அரசனாகிய அக்பரை எதிர்க்காமல் ஹராவலி பள்ளத்தாக்கில் ஒளிந்தவன். இந்த யுத்தத்தில் அரசனில்லாமலே ரசபுத்ர வீரர் மனைவியர் சகிதராகச் சென்றனர். சிலராஜ புத்திரிகள் வாளெடுத்து யுத்தஞ்செய்து மாண்டனர். இதில் சித்தூர்கோட்டைத் தரையாக்கப்பட்டது. பல ராஜபுத்திரிகள் தீப்புகுந்தனர்

உதயணகுமாரகாவியம் — இது ஒரு தமிழ் நூல், இது வத்சதேசத் தரசனாகிய உதயண குமாரனுடைய சரித்திரத்தைக் கூறுவது. உதயணன் கதை — இது, பெருங்கதை யென்றும் வழங்கப்படுந் தமிழ் நூல்.

உதயணன் — குரு குலத்திற் பிறந்தவன். சதானிகனுக்கு மிருகாவதிபாற் றோன்றியவன். இவன் நாடு வத்தவநாடு; இராசதானி கோசம்பிநகர். சூரியோதயகாலத்திற் பிறந்ததுபற்றி இவனுக்கு இப்பெயர் அமைந்தது. தேவியார் வாசவதத்தை முதலிய நால்வர். தன்னிகரில்லாதவனே தொடர்நிலைச்செய்யுட்குத் தலைவனாக இருத்தல் வேண்டு மென்று ஆன்றோர் கூறியதற்கேற்பக் கல்விமுதலிய சிறப்பியல்புகள் பலவற்றாலும் ஒப்பற்று விளங்கியவன். இவன். அரசர்க்கரசனென்றும், ஏகச்செங்கோலினனென்றும்வழங்கப்படுவோன். இவனுடைய தாய்மரபு, தந்தைமரபு இரண்டும் மிகப் புகழ்பெற்றவை. தந்தையின் குலம் குருகுலம். தாயின் குலம் ஏயர் குலம். இவன் இந்த இரண்டு குலத்திற்கும் உரிமைபூண்டு விளங்கினான். ஏயர் குடிக்கும், சேதி நாட்டிற்கும், உரியவர் இவன் தாய் மரபினர். வத்தவநாட்டிற்கும், குருகுலத்திற்கும் உரியவர் இவன் தந்தை மரபினர். இயற்கை யழகிலும், செயற்கை யழகிலும் சிறந்தவன். மிக்க இளமைப் பருவத்திலேயே பலவகைக் கலைகளையும், பழம் பிறப்பிற் செய்த தவத்தால் முற்றக்கற்றுத் தேர்ந்தோன். விற்படை முதலியவற்றிலும், யானை ஏற்றம் முதலியவற்றிலும், யாழ் விச்சையிலும் வல்லுநன். விற்படை முதலியவைகளைக் கற்பித்தலிலும், சிறந்தவன். இது பற்றியே ஆசான், தேசிகனென்றும் சிறப்புப் பெயர்களுக்கு உரியனாக இவன் விளங்கினனென்றும் விச்சை வீரனென்று சிறப்பித்துப் பாராட்டுதற்கு உரியனாக இருந்தானென்றும் தெரிகின்றன செல்வத்துட் செல்வமாகிய கேள்விச் செல்வமும் இவன்பால் அமைந்திருந்தமை புலனாகின்றது. இன்னும், இவன் யானையை அடக்கும் ஆற்றலுடையானென்றும், யானை யிலக்கணத்தை நன்கறிந்தவன் என்றும், யானைப் பேச்சில் வல்லவனென்றும், கருதப்படுகிறான். பிரச்சோதனுடைய

பட்டத்து யானையாகிய நளகிரியென்பது மதவெறிகொண்டு திரிந்து ஒருவருக்கும், அடங்காமல் உஞ்சேனை நகரத்தைப் பாழ்படுத்திய பொழுது அவன் வேண்டுகோட்கிரங்கிச் சிறையினின்றும் சென்று அதனை மிக எளிதில் அடக்கியது பற்றியே அவனாலும், மற்றையோராலும் மிக மதிக்கப்பட்டு விளங்கினன். இதனாலேதான் பிரச்சோதனன், உஞ்சேனை நகரியின் குஞ்சரச்சேரியிலுள்ள மாளிகையை இவனுக்கு இருப்பிடமாக அமைத்தனன் போலும். இவனுடைய யாழின்பெயர் கோடபதி என்பது; அஃது எக்காலத்தும் தன் தன்மை திரியாதது; அஃது இந்திரனாற் பிரமசுந்தர முனிவருக்கும் அவரால் இவனுக்கும் கொடுக்கப்பட்டது; அதன் பால் இவனுக்கு மிக அன்பு உண்டு. யாழிற்குரிய மரங்களினியல்பையும், நரம்புகளின் இலக்கணங்களையும் இவன் நன்கு அறிந்தவன். அதிவிசித்திரகரமான கண்ணி கட்டுதலிலும், வாழைக்குருத்தில் நகத்தினாற் பொய்கை முதலிய பலவகையான சித்திரங்கள் பொதித்தல் முதலியவற்றிலும், வல்லவனாக இருந்தான். தன்னைச் சுமந்து வந்தபிடி இறக்கும் தருணத்தில் நற்கதியடையுமாறு பஞ்ச மந்திரத்தை அதன் காதில் ஓதினனென்றும் தெரிதலாலும், பிறவற்றாலும் இவன் மந்திர வித்தையில் வல்லவனென்று தெரிகிறது. ஒவ்வொன்றையும், ஆராய்ந்தே தெளிபவன். இவனுக்கு இடவகன், உருமண்ணுவா, யூகி, வயந்தகனென்னும் நான்கு முக்கிய மந்திரிகளும், வேறு பல மந்திரிகளும் இருந்தனர். அவர்கள் இவனுக்காகச் செய்த உதவிகள் மிகப் பல. இந் நால்வரும், இவனுடைய தோழர்களாகவும் விளங்கினார்கள். அவர்களிடத்து இவனுக்கு விசேஷ அன்பு உண்டு. மேற் கூறிய மந்திரிகளாகிய தோழர்களை யன்றி இசைச்சன் முதலிய அன்புடைத் தோழர்கள் பலர் இவனுக்கு இருந்தார்கள். அறப்போரிலும், மறப்போரிலும் போராற்றலுடையவர். குறித்த இலக்கை ஊடுருவிக்கொண்டு அப்பாலுள்ளவற்றையும் துளைத் துருவும்படி எய்ய வல்ல இராமன் ஓரி என்பவர்களைப்போல் அம்புகளை எய்யும் வீரருள் வீரனாக இவன் விளங்கியதுபற்றி வில்வல்லி யென்றும் பாராட்டப்படுவோன். நன்றி யறிவிற் சிறந்தவன். (பெருங்கதை).

**உதயபலம்** — புதன் உதயத்து நிற்கின் (௱) குற்றத்தைப் போக்குவன். சுக்கிரனும் உதயத்துநிற்கின் (௱ )குற்றத்தைப் போக்குவன் வியாழன் உதயத்து நிற்கில் (கா) லக்ஷம் குற்றம் நீக்குவன். இவர்கள் கேந்திரங்களில் நின்றாலும் தோஷங்களைப் போக்குவர். இவை நட்பாட்சி உச்சமாகில் நலம் என்ப. பகை நீசமாகி லாகாது.

**உதயன்** — 1. சதாநீகன் குமரன். இவன் அகீநரன்.

2. சகத்திராநீகன் குமரன்.

**உதயாசீவன்** — அசாதசத்ருவின் பேரன், பாடலி புத்ரநகரம் நிருமித்தவன்.

**உதயையோடை** — இவள் பதுமாபதியின் நற்றாய். சிவமதியின் சகோதரி. காசியரசன் மனைவி (பெருங்கதை).

**உதரரோகம்** — வாயினடியும், உதடும் சுருங்கல், கைகால் வீங்கல், பலம், நடை அசனம் குறைதல், தேகம் உலரல், வயிறு வீங்கல் இவைகளைப் பூர்வரூபமாகப் பெற்றிருக்கும். இது வாத உதரரோகம், பித்த உதரரோகம், சிலேஷ்ம உதரரோகம், திரிதோஷ உதரரோகம் பீலிகோதர ரோகம், பத்தோதர ரோகம், க்ஷதோதர ரோகம், சலோதரரோகம், யகுர்தோதரரோகம் ஜலஸ்தம்போதர ரோகம் எனப் பலவகை. இதனை மகோதரம், பெருவயிறு, துந்தி ரோகம் என்பர். இதனைப் பில்வாதிலேக்யம், அயச்செந்தூரம் முதலியவற்றால் வசமாக்கலாம். (ஜீவரக்ஷாமிர்தம்).

**உதவகன்** — சண்முக சேநாவீரன்.

**உதவாசு** — 1 (சூ.) சநகன் குமரன்.

2. பிரசை குமரன்.

**உதாசநன்** — அக்நி.

**உதாசித்** — கேகயநாட்டரசன் தூதன். பாதனைக் கேகயத்திற்கு அழைத்துச் சென்றவன்.

**உதாசீநமதம்** — இம்மதம், நாநக் என்பவனால் தாபிக்கப்பட்டது. இதற்குச் சீக்மதம் எனவும் பெயர். இந்த நாநக் என்பவன் பஞ்சாபில் பியாஸ்நதிதீரத்திலிருக்கும் ராமபுரத்தில் இக்ஷ்வாகு வம்சத்தவனான கல்யாணசந்த் என்பவனுக்கு (கசுகக) இல் பிறந்தவன். இவன் முதலில் தன் மதத்தைவிட்டுப் பிறகு மகம்மதிய மதத்தைப் பின்பற்றினன் எனினும் மகம்மதியர்க்குரிய சுந்நத்தென்னும் சடங்கைச் செய்துகொள்ளவில்லை. இவன் இந்து மதத்தில் சிலவற்றைக் கைக்கொண்டு வேறொரு

புதிய மதத்தை ஸ்தாபித்தான். இவன் தன் சீடரை மிக்க சாந்தராகச் செய்வித்தான். இவனுக்குப் பின் வந்த குரு கோவிந்தென்னும் சீடன், சீக்கியரைச் சூரர் ஆக்குவித்தான். அதுமுதல் இச் சாதியார் ஆயுதபாணிகளா யிருக்கின்றார்கள். இம் மதத்தவர் இம்சை செய்யாமையைப் பரமதர்மமாகக் கொண்டிருக்கின்றனர்.

**உதாத்தவணி** — வியக்கத்தக்க செல்வத்ததும், மேம்பட்ட உள்ளத்ததுமான உயர்ச்சியை மிகுத்துச் சொல்வது. இதனைத் தமிழ்நூலார் வீறுகோளணி யென்பர்.

**உதாரம்** — இது வைதருப்பச் செய்யுணெறியிலொன்று. இது சொல்லப்பட்ட செய்யுளில் சொற்படு பொருளின்றி, அதன் குறிப்பினல் ஒரு பொருள் நெறிப்படத் தோன்றுவது. (தண்டியலங்காரம்).

**உதார்மன்** — 1. பாரதயுத்தத்து விடசேனனுடன் போர்புரிந்தவன்.

2. பாஞ்சாலன் குமரன்.

**உதாவகன்** — சூரபதுமன் படைத்தலைவன்.

**உதாவர்த்தரோகம்** — இதுவும் மூலரோகத்தை யொத்த ரோகம். இது வாதபேதிகட்கு பயறு, வரகு, சோளம், கடலை காரவஸ்துக்கள் சேர்க்கையில் வாயு அதிகரித்துக் குதத்தில் நோவையும், மலபந்தத்தையுஞ் செய்யும். இது குதத்தில் வேதனை செய்வதால் குதகீலம் என்பர். இதற்கு மூலரோக சிகிச்சை நலம். (ஜீவரக்ஷாமிர்தம்).

**உதிதகாலம்** — சூரியன் கிரணங்களுடன் கோடு கிழித்தமாத்திரையே எதுவரையில் காணப்படுகிறானே அக்காலம் (பாரசு-ம).

**உதிட்டிரன்** — பாண்டுபுத்ரனுகிய தருமராஜனுக்கு ஒரு பெயர். இவன் குமரன் பிரதிவிந்தியன். இவற்குக் கௌரவியிடத்துத் தேவகன் பிறந்தான்.

**உதியஞ்சேரல்** — இவன் ஒரு சேரர்தலைவன். நெடுஞ் சேரலாதனுக்குத் தந்தை. இவன் தேவி நல்லினி.

**உதியன்** — இவர் சேரலர் மரபினன் பாரதப் போரில் இருபடை யாளர்க்கும் போர்முடியுமளவும் உணவளித்தவனுதலிற் பெருஞ் சோற்றுதியஞ் சேரலெனவுங் கூறப்படுவான். முதற்சங்கப் புலவராகிய முரஞ்சியூர் முடிநாகராயராற் புகழ்ந்து பாடப்பெற்றவன். புறம் உ. தன் குலத்து முதியோரிறந்தார்க்குச் செய்யுங் கடன்களெல்லாம் குறைவறச் செய்து வனையோரை ஆதரித்து வந்தவன். "முதியர்ப்பேணிய வுதியஞ் சேரல்" அகம் உ௩௩. தனது நாட்டினைத் துன்பமெய்தாதபடி பாதுகாத்து வந்தவன் "நாடு கன்கைற்றிய வுதியஞ் சேரல்" அகம் ௬௫. பதிற்றுப்பத்து முதற் பத்துக்குத் தலைவன் இவனேயென்றாகிக் கப்படுகின்றது. இவன் புதல்வர்கள் இமையவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் என இருவர். இவ்விருவரும் முறையே பதிற்றுப்பத்து உ-ம் பத்துக்கும் ௩-ம் பத்துக்கும் தலைவராயினர். இவ்வுதியஞ் சேரலை நற்றிணை ௧௧௩-ல் பாடியவர் எயினந்தை மகனர் இளங்கீரனர்.

**உதிரன்** — மித்திரசக னென்னுஞ் சூர்யவம்சத்தரசன். வசிட்டர் சாபத்தால் அரக்கனய் விச்வாமித்ரர் ஏவலால் வசிட்டர் புத்ரர்களைக் கொன்றவன்.

**உதீச்சீதேவர்** — இவர் தொண்டமண்டலத்துப் பையூர் கோட்டத்து ஆரணிநெடுந்துறை ஆற்பாகை, சைநர். திருக்கலம்பகமெனுஞ்சைநக்கலம்பகஞ் செய்தவர் (திருக்கலம்பகம்.)

**உத்கசம்** — ஒரு புண்யதீர்த்தம்.

**உத்கருஷசமை** — அவ்யாப்தமான திருஷ்டாந்த தருமத்தால் சாத்யபக்ஷ அவ்வியாபகமான தருமத்தை வருவித்தல்.

**உத்கலம்** — (1) ஒட்டிரதேசம்.

(2) புருஷோத்தம க்ஷேத்ர மென்னும் ஜகந்நாத க்ஷேத்ரம். இந்த க்ஷேத்ரமகிமை பிரகன்னாரதீய புராணத்தில் கூறியிருக்கிறது.

**உத்கலன்** — 1. துருவன் மூத்த குமரன். இவன் தம்பி வத்சரன். இளமையில் உண்மை ஞானம் பிறந்து இராஜ்யத்தை விட்டுத் தவநெறி யடைந்தவன். இவனுண்டதேசம் உத்கலம் ஒட்டிரதேசம் என்பர்.

2. சுத்யமன் குமரன்.

**உத்கலை** — சம்பிராட்டின் தேவி.

**உத்காதா** — தேவதைகளைக் கெட்டியாய்த் துதிப்பவன்.

**உத்கீதன்** — பூமாவின் குமரன். தாய் ருஷிகுல்வி, தேவி தேவகுல்வி, குமரன் பிரஸ்தாவன்.

**உத்தமச்சோழப் பல்லவராயன்** — ஒரு சோழன், சேக்கிழாருக்குத் தனதுரிமைச் செங்கோன் மரியாதை செய்து திருத்தொண்டர் புராணங் கேட்டுச் சைநசமயத் திருந்து சைவசமயமாகத் திருந்தியவன்.

உத்தமநம்பி — மணவாளமாமுனிகள் காலத்தில் திருவரங்கத்தில் பெருமாளுக்குத் திருவாலவட்ட கைங்கர்யம் செய்துகொண்டிருந்தவர்.

உத்தமபாநு — பாண்டவர் படை வீரன்.

உத்தமலக்ஷணம்—(ஙஉ)நகங்கள், கண்கள், மூக்கு, தன்மத்யபாகம், முழங்கால்கள், எனும் ஐந்துறுப்புக்கள் நீண்டிருத்தல் வேண்டும். கழுத்து, கணுக்கால், முதுகு, குறி, எனும் நான்கும் குறுகியிருத்தல் வேண்டும். நகம், தோல், கூந்தல், பற்கள், விரல்களின் கணுக்கள் எனும் ஐந்தும் மிருதுவா யிருத்தல்வேண்டும். வயிறு, பிடரி, தோள்கள், மூக்கு, மார்பு, நெற்றி, இந்த ஆறும் உயர்ந்திருக்க வேண்டும். கண்கள், உதடு, மோவாய்க்கட்டை, உள்ளங்கால், உள்ளங்கை, நகம், பீஜம் எனும் ஏழும் சிவந்திருத்தல் வேண்டும். முஷ்டி, மணிக்கூடு, மார்பு எனும் மூன்றும் வலுத்திருத்தல் வேண்டும். நெற்றி, மார்பு இரண்டும் விரிந்திருத்தல்வேண்டும். (சைவபூஷணம்)

உத்தமறி — தாமசனுடன் பிறந்தவன்.

உத்தமன் — 1. மூன்றும் மநு. பிரியவிரதனுக்கு இரண்டாவது பாரியிடத்து உதித்த குமரன். இவன் உலகையாண்டு தேவர்க்கு நன்மைசெய்து உத்தமன் எனும் மநுவாயினன்.

2. உத்தானபாதனுக்குச் சுருசியிடம் பிறந்த குமரன். இவன் வேட்டைக்குச் சென்று இயக்கன் ஒருவனுடன் சண்டை செய்து கொல்லப்பட்டான். இந்தத் துயர் சகிக்காத தாய் இவனைத் தேடிச் சென்று காட்டிலிறந்தாள். இவன் தன் பத்தினியைக் கள்குடிக்கச் சொல்ல அவள் மறுத்ததனால் அவளைக் காட்டிற்கு அனுப்பினன். அரசனை நீங்கிய தேவி, பாதாளத்திலுள்ள சாலபோதகன் என்னும் நாகராசனால் கிரகிக்கப்பட்டு இருந்தனள். நாகன் அவளை வலிய அணையச் செல்லுகையில் தன் குமரியால் மறுக்கப்பட்டு இருந்தனன். அரசன் பல தர்மநூல்களாலும் பத்தினியில்லாமல் நடத்தும் அறம் வீணெனக்கண்டு முனிவர்களைக் கேட்டுத் தன் பத்தினியிருக்கும் நிலையறிந்து தன் நண்பனாகிய பலாகனால் வருவித்து அவளைக்கூடி உத்தமன் என்னும் குமரனைப் பெற்றான்.

உத்தமௌசா — துருபதன் குமரன். திருட்டத்துய்ம்மன் தம்பி. பாசறை யுத்தத்தில் தூங்குகையில் அச்வத்தாமனால் கொல்லப்பட்டவன். பாஞ்சாலன்.

உத்தரகீதை — பாரதத்தில் ஒரு பாகமாகிய வேதாந்தநூல்.

உத்தரகுரு — போக பூமியிலொன்று. இது இமயம், ஏமகூடம், நிடதம், மேருமுதலிய வற்றிற்கு அப்பாலிருப்பது சஞ்சீவியைக் காண்க. அநுமான் சஞ்சீவி பொருட்டுச் சென்றபோது இதனைக் கண்டு பொழுது விடிந்ததென்று திடுக்கிட்டு இது வேறு கண்டமெனத் தேறினன். (சிலப்பதிகாரம்)

உத்தரகோசமங்கை—இது பாண்டி நாட்டிலுள்ள தலம், திருவாதவூரடிகள் உபதேசம் பெற்றதலம். அம்பிகை இத் தலமான்மியத்தை வினவ இறைவன் உத்தரத்தை (கோசம்) இரகசியமாகக் கூறியதால் இப்பெயரடைந்தது. (வீரசிங்காதனபுராணம்)

உத்தரகௌத்தன்—வாரணாசிநகரத் தரசன். (சிலப்பதிகாரம்.)

உத்தரசிந்து — ஒருநதி வடக்கிலுள்ளது.

உத்தரநல்லூர் நங்கை—இவள் ஒரு பெண்கவி, இவள் பிராமணரை வசைபாடினள். "சந்தனமரமும் வேம்பும் தனிமையாக் கந்தநாறும், அந்தணர் தீயில்வீழ்ந்தா லது மண நாறக்காணேன், செந்தலைப் புலையனுக்குத் தீமணமதுவே நாறும், பந்தமும் தீயும் வேறோ பாய்ச்சலூர் கிராமத்தாரே" என்றாள்.

உத்தரமீமாம்சை — மீம்சா சாத்திரத்தின் பிற்பகுதி.

உத்தரம்—இது, வாதி பிரதிவாதிகளால் ஐயமிலாதும், செவ்விதாகப் பொருண்முற்றியதும், எளிதிலுணரத் தக்கதும், மிக்க விரிவில்லதுமானது. அது, சத்தியோத்தரம், மித்தியோத்தரம், காரணோத்தரம், பூர்வநியாயோத்தரம் என நான்கு வகைத்து. பூர்வ நியாயோத்தரமாவது முன்னமே இவன் இந்த விவகாரத்தில் நியாயத்தானத்தில் என்னால் வெல்லப்பட்டான் என்பது. மற்றவை வெளி. (விவகார சங்கிரகம்)

உத்தரவேதி — 1. ஒரு நதி.

2. குருக்ஷேத்ரம் காண்க.

உத்தரன் — 1. விராடன் குமரன். தாய் சுதக்ஷணை. பாண்டவர் அஞ்ஞாதவாசத்தில் விந்த இடத்தில் இருக்கின்றார்களென்று துரியோதனாதிகள் பசுக்கூட்டத்தைக் கவர உத்தரன் பேடியைச் சாரதியாகக் கொண்டு அவ்விடஞ் சென்றகாலத்தில் அந்தச் சேனையைக்கண்டு பயந்து பின்னிடப்

பேடியுருக் கொண்ட அருச்சுனன் உண்மையுருக் காட்டியகாலத்தில் அருச்சுனனுக்குத் தேரோட்டிப் பசுக்கூட்டத்தை மீட்டவன். முதனுள் யுத்தத்தில் சல்லியனுல் மாண்டவன்.

2. கனகவிசயர்க்குத் துணையான ஓர் அரசன். (சிலப்பதிகாரம்).

**உத்தராதித்தன்** — விரதன் என்னும் வேதியனுக்கும் சுபவிரதை யென்றவளுக்கும் சுலக்ஷணை யென்னும் ஒரு புத்திரி இருந்தனள். இவள் உத்தராதித்தனை அடைந்து தவஞ்செய்கையில் ஒரு ஆடு அவளை வலஞ்செய்து வந்தது. ஒரு நாள் சிவபிரான் பிராட்டியுட னணைந்து வேண்டிய கேள் என்ன சுலக்ஷணை இந்த ஆட்டிற்கு நற்பதவிதருக எனப் பிராட்டியார் இந்த ஆடு காசிமன்னன் புதல்வியாய்ப் பிறகு முத்தியடைக என்று சுலக்ஷணையைத் தோழியாகக் கொண்டனள்.

**உத்தராபதி** — சிறுத்தொண்டர் பொருட்டு ஆத்தி விருக்ஷத்தடியில் இருந்த சிவமூர்த்தியின் பெயர்.

**உத்தரை** — மச்ச தேசாதிபதியாகிய விராடன் குமரி, தாய் சுதக்ஷணை, பரீக்ஷித்தின் தாய், அருச்சுனனிடம் நடனம் பயின்றவள். அசுவத்தாமன், பாண்டவர் கருவறுக்க ஏவிய அத்திரம் இவள் கருவிலிருந்த பிண்டத்தைச் சேதிக்கப் புகுந்தகாலத்தில் அவ்வத்திரத்தால் கெடுதி உண்டாகமல் விஷ்ணு மூர்த்தியால் காக்கப்பட்டவள். அபிமன்யுவின் தேவி.

**உத்தவசித்கனர்** — தாரூர் எனும் கிராமத்தில் இருந்த வேதியர். இவர் ராமபஜனை செய்து கொண்டிருக்கும் நாட்களில் ஸ்ரீ ராமநவமியன்று பிதருபட்டண மடைந்து உற்சவங் கொண்டாடுகையில் திருவிழா வீதி வலம்வர அவ்விடமிருந்த துருக்கர் வலம் வராதபடி தொந்தரைசெய்து வேதியரை அடிக்க வேதியர்கள் உத்தவசித்கனரிடம்கூறத் தாசர் பெருமாளைத் துதிக்கப் பெருமாளிட மிருந்த அநுமன் கோபங்கொண்டு அவ்விடமிருந்த மசீதை இடித்துத் தள்ளினன். இதை அறிந்து துருக்கராசன் கோபிக்க அவனுக்கு வயிற்றுவலி கண்டு வருந்தி அவ்விடமிருந்த பக்கிரியிடங்கூறப் பக்கிரி அநுமனைத் துதித்துத் தாசரிட மடைந்து பிரார்த்திக்கத் தாசர் பெருமாளை வேண்டி அவனடைந்த நோயைப் போக்கி முன்போல் திருவிழா நடத்தினர்.

**உத்தவர்** — 1. பிரகஸ்பதியின் சீடர். வசுதேவன் தம்பியாகிய தேவபாகன் குமரர். கண்ணனைப்போலுருவியற்றிப் பூசித்தவர். விதுரருக்குத் தத்வமுபதேசித்தவர். பூர்வசன்மத்தில் வசுவாயிருந்தவர். கிருஷ்ணனுக்கு மந்திரி. இவர் கிருஷ்ணனுல் நந்தகோபிகைகளைச் சமாதானஞ் செய்விக்க அநுப்பப்பட்டவர். கிருஷ்ணனுல் தத்வோபதேசம் பெற்றவர்.

2. நகுஷன் குமரன்.

**உத்தாநபரிகசு**—(சு) சையாதியின் குமரன்.

**உத்தாநபர்கி**—சர்யாதி குமரன்.

**உத்தாநபாதன்**—சுவாயம்பு மனுவிற்குச் சதரூபியிட முதித்த இரண்டாங் குமரன். இவனுக்குச் சுநீதி, சுருசி என இரண்டு பாரிகள். இவ்விருவரில் சுருசியிடத்தில் அரசன் ஆசைவைத்துச் சுநீதியையும் அவள் குமரனையும் அலக்ஷியம் செய்திருக்கையில் சுநீதி குமரனுகிய துருவன், தாய் தந்தையரை விட்டு நீங்கித் தவமேற்கொண்டு காசிபராச்சிரமமடைந்து உபதேசம் பெற்று விஷ்ணுவை யெண்ணித் தவமியற்றித் துருவபதம் பெற்றனன். இவனுக்குச் சுருசியிடம் பிறந்த குமரன் உத்தமன்.

**உத்தாமதசுமை**—உமாதேவியாரின் தோழியரில் ஒருத்தி, தேவி கௌரியாக வரம் பெற நீங்கியகாலத்துத் திருக்கைலையில் காவலாக நின்றவள்.

**உத்தாரகன்**—உபமன்யு.

**உத்தாரமடங்கம்** — இது நாடக விகற்பத்தொன்று. இது, மக்கள் பலரைத் தலைவராகப் பெற்றும் பெரும் பொல்லாத பேருடைத்தாய்ப் பெண்களாலாற்றப்பட்டுச் சந்தி ஐந்துமுடையது. (வீரசோழியம்).

**உத்தாலகர்** — 1. தௌமியர் மாணக்கர். இவர்குமரன்சுவேதகேது. முதலில்பெண்கள், வரம்பில்லாமல் பரபுருஷரைப் புணர்ந்திருந்தனர். ஒருநாள் இவர் தேவி ருதுஸ்நானஞ்செய்து மீளுகையில் ஒரு வேதியன் இவர் மனைவியைப் புத்திர வாஞ்சைக்காக யாசிக்க இவர் கோபித்து இது முதல் பெண்கள் பரபுருஷரைச் சேரக்கூடாதெனக் கட்டளையிட்டவர்.

2. அருணன் புத்ரர்.

**உத்தி** (௩௨) — நுதலிப்புகுதல், ஒத்துமுறைவைப்பு, தொகுத்துச்சுட்டல், வகுத்

துக்காட்டல், முடித்துக்காட்டல், முடிவிடங்கூறல், தானெடுத்துமொழிதல், பிறன்கோட் கூறல், சொற்பொருள்விரித்தல், தொடர்சொற்புணர்த்தல், இரட்டுறமொழிதல், ஏதுவின்முடித்தல், ஒப்பின்முடித்தல், மாட்டெறிந்தொழுகல், இறந்தது விலக்கல், எதிரதுபோற்றல், முன் மொழிந்துகோடல், பின்னது நிறுத்தல், விகற்பத்தின் முடித்தல், முடிந்ததுமுடித்தல், உரைத்துமென்றல், உரைத்தாமென்றல், ஒருதலைதுணிதல், எடுத்துக்காட்டல், எடுத்தமொழியினெய்தவைத்தல், இன்னதல்லது இது வென மொழிதல், எஞ்சிய சொல்லின் எய்தக்கூறல், பிறனுன் முடிந்தது தானுடம்படுதல், தன்குறிவழக்க மிகவெடுத்துரைத்தல், சொல்லின் முடிவினப்பொருண்முடித்தல், ஒன்றின முடித்தல், தன்னின முடித்தல், உய்த்துணர வைப்பு என்பனவாம்.

2. ஒரு இலக்கணத்தால் உணர்த்தப்படும் பொருளை நூல் வழக்கொடும் உலக வழக்கொடும் பொருந்தக் காட்டி அப்பொருளைமற்றேரிலக்கியப் பொருளினும் ஏற்குமிடமறிந்து இவ்விடத்திற் கிது ஆகுமெனத் தக்க வகையாகச் செலுத்துவது. (நன்-பா).

உத்தியணி — தனது மர்மததை மறைத்தற் பொருட்டுச் செய்கையான் பிறரை வஞ்சித்தலாம். இதனை யுத்தியலங்காரம் என்பர்.

உத்துங்கன் — ஒரு முனிவன், இவன் தேவி குணவதி. இவனுக்கு இவளிடம் உதங்க முனி பிறந்தனன். குவலயாசுவனுடன் சென்று துந்துவைக் கொலை செய்தவன். (பிரமபுராணம்)

உத்தேசம் — பெயர் மாத்திரையாற் பொருளைச் சொல்வது.

உத்பலாவதி — ஸ்வராட்டின் பாரி. தாமஸ மனுவிற்குத் தாய். ஒரு இருடியின் சாபத்தால் பெண்மானுருக்கொண்டு ஸ்வராட் தொடுதலால் கருவுற்றவள்.

உத்பலினி — ஒரு நதி இமயமலைக்குக் கிழக்கிலுள்ளது.

உத்பாதங்கள் — ௩. திவ்யம், அந்தரிக்ஷம், பார்த்திவம்.

உத்பிரமன் — அரிகேசனைக் காண்க.

உத்ரேசுரம் — சேடதாசையரைக் காண்க.

உத்விருந்தம் — ஒருமலை. இந்திரப்பிரத்தத்திற் கருகிலுள்ளது.

உபகரணப்பொருளதிபன் — வேந்தன் காரியங்களுக்கு வேண்டிய உபகரணங்களை அமைப்பவன்.

உபகற்பவிபூதி — உபகற்ப விபூதியாவது காட்டிலே மரங்கள் ஒன்றோடொன்று இணைந்து தானே உண்டாகிய அக்கினியிலே வெந்து விளைந்த சாம்பலையும், செயற்கையாலுண்டான செங்கற்சூளை, குயவன்சூளை முதலியவற்றின் சாம்பல்களையும், வாமதேவ மந்திரத்தினால் பஞ்சகவ்வியத்தை வார்த்துக் கலந்து அகோர மந்திரத்தினலே பிசைந்துருட்டித் தற்புருட மந்திரத்தினலே பதரை விரித்து வைத்துச் சிவாக்கினியிலே தகனம்பண்ணி ஈசானமந்திரத்தினலே எடுத்துக்கொள்வதாம்.

உபகீசகர் — கீசகனுக்குத் தம்பிமார்கள் கேகயன் என்னும் பெயருள்ள சூதபுத்திரர்கள். இவர்கள் பீமசேனனால் வதைக்கப்பட்டார்கள்.

உபதுப்தன் — (சூ.) உபகுரு புத்ரன். இவன் அக்நி வம்சம்.

உபதரு — (சூ.) சத்தியாதன் குமரன்.

உபக்கிரகங்கள் — சூரியனைச் சுற்றிவரும் எட்டுக் கிரகங்களைப் பல கிரகங்கள் சுற்றி வருகின்றன. அவை சற்றேறக்குறைய (700) உள்ளவாகக் கணித்திருக்கின்றனர். அவற்றில் (400) க்குப் பெயருண்டு. மற்றவற்றிற்குப் பெயரிடப்படவில்லை. இவ்வுபகிரகங்களில் பெரிது சந்திரன். மற்ற உபக்கிரகங்கள், குறுக்களவில் (450) மைல் உள்ளனவாய்ச் சிறிய உருவாகக் காணப்படுகின்றன.

உபசயகேந்திரங்கள் — இலக்னத்திற்கு ௩-ம் இடம், ௬-ம் இடம், ௧௦-ம் இடம், ௧௧-ம் இடம், இந்நான்கிடங்களும் உபசயங்களாம், இலக்னத்திற்கும், ௪-ம் இடத்திற்கும், ௧௦-ம் இடத்திற்கும் ௭-ம் இடத்திற்கும் முதலாம் இடத்திற்கும், கேந்திரம், கண்டம், சதுட்டயம் எனும் பெயர்கள் வழங்கும். (விதானமாலை)

உபசாரம் (௧௬) — தவிசளித்தல், கைகழுவ நீர் தரல், கால்கழுவ நீர் தரல், முக்குடி நீர் தரல், நீராட்டல், ஆடைசாத்தல், முப்புரி நூல் தரல், தேய்வைபூசல், மலர்சாத்தல், மஞ்சளரிசி தூவல், நறும்புகை காட்டல், விளக்கிடல், கருப்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைகாய்தரல், மந்திர மலரால் அருச்சித்தல் (௩௨) ஆவாஹனம், ஆச

ணம், அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம், ஸ்நானம், வஸ்திரம், எஞ்ஞசூத்திரம், பூஷணம், கந்தம், அக்ஷதை, புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம், அமுதவாசனம், நீராசனம், தர்ப்பணம், பலார்ப்பணம், தாம்பூலம், பிரதக்ஷிணம், நமஸ்காரம், ஸ்தோத்திரம், புராணபடனம், சத்திரம், சாமரம், விசிறி, மஞ்சம், சங்கீதம், நிருத்தம், வாச்சியம் ஆத்மாரோபணமாம்,

உபசுந்தன்—இரண்யகசிபுவின் குலத்தவன் நிகும்பன் குமரன். திலோத்தமையைக் காண்க.

உபசுருதி — 1. அபிமான தேவதையாகிய துர்க்காதேவி. இந்திராணியால் பூஜிக்கப் பட்டவள்.

2 தருமதேவதை. இந்திராணியைக் காண்க.

3. ஒரு காரியத்தை யெண்ணிச் செய்கையில் சமயத்திற்கும் வார்த்தைக்கும் பொருந்தியும் பொருந்தாமலும் அந்நியர் கூறும் வாக்கு என்பர்.

உபச்கான்—புரஞ்சயனுக்கு நண்பன்.

உபச்சரான்—ஒரு அரசன் தேவரும் முனிவரும் யாகத்தில் உயிர்வதை செய்தல் நன்றோ (அசம.) மூன்றுவருஷத்து நெற்கொண்டு யாகஞ்செய்தல் நலனோ என்று கேட்கத் தேவர்பக்ஷமாய் உயிர்க்கொலை நன்றெனத் தீர்மானித்தவன்.

பதானவி—இரண்யாக்ஷன் பாரி. விச்சுவாநரன் பெண்.

பதிட்டன்—சண்முகசேனாவீரன்.

பதிட்டா—சம்வர்த்தனன் தேவி.

பதேவன்—1. அக்குரூரன் குமரன்.

2. தேவகன் குமரன.

3. ருத்திரசாவர்ணி மநுப்புத்ரன்.

உபதேவா — தேவகன் குமரி.

உபதேவி — தேவகன் பெண். வசுதேவன் பாரி. இவள் குமாரர்கள் கல்பவிருஷ்டி முதலியவர்.

உபநந்தன் — 1 யதுவம்சத்து நந்தன் தம்பி வசுதேவன் குமரன். தாய், மத்திரை அல்லது பத்திரை.

2. திருதராட்டிரன் குமரன்.

உபநிதி — எந்தப் பொருள் அதன் உருவக் கணக்கைக் கூறாது அயலானிடத்தில் கொடுக்கப்பட்டதோ அப்பொருள் உபநிதி யெனப்படும். அப்பொருள் கொடுத்த வண்ணமே பெறத்தக்கது.

உபநிஷத்து -- 1. இறைவனைக் குறித்துத் துதிக்கும் வேதபாகம். இச்சொல், உப, நி, சத்து எனும் மூன்று பதத்தால் ஆகியது. உப - என்பதற்கு, அருகென்றும், நி - என்பதற்கு, செம்மையென்றும், சத்- என்பதற்கு அடையப்பட்ட தென்பது பொருள். பின்னும் உபநிஷத்திற்கு, வேதாந்தமென்றும், வேதசிரம் என்றும், ரகஸ்யமென்றும் பல நாமங்கள் உள. இருக்கு எசஸ் சாமாதர்வண வேதங்களிலிருந்து (ககஅ0) உபநிஷத்துக்கள் தோன்றின. எவ்வாறெனின் இருக்கினின்று (உக) சாகைகளும், எசுர் வேதத்தில் (க0கூ) சாகைகளும், சாமவேதத்தில் (க000) சாகைகளும், அதர்வண வேதத்தில் (ரு0) சாகைகளும் உண்டாயின. இவற்றுள் சில (அ௪0) கர்மங்களைப் போதிப்பன ஆதலால் அவை கர்மகாண்டமென்றும், சில (உ௩உ) த்யேய பிரமத்தைப் போதிக்குமாதலால் அவை உபாசனா காண்டமெனவும், சில (க0அ) ஞேயப்பிரமத்தைப் போதிக்குமாதலால் அவை ஞானகாண்டம் என்றும் பெயர் பெறும். சிலர் உபநிஷத்துக்கள், (உ௩ரு) என்றும், சிலர், (கஅ0) என்றும், சிலர் (க0அ) என்றுங்கூறுவர். (க0அ) வழங்கி வருகின்றன. இவற்றுள் தசோபநிஷத்துக்கள் மிக்கபிரசஸ்தமாக விருக்கின்றன. தசோப நிஷத்துக்களாவன, ஈசோவா சோபநிஷத்து, கேனோப நிஷத்து, முண்டகோப நிஷத்து, மாண்டூக்யோப நிஷத்து, தைத்திரீயோபநிஷத்து, ஐதரேயோபநிஷத்து, சாந்தோக்யோப நிஷத்து, பிருகுதாரண்ய கோபநிஷத் என்பனவாம். உபநிஷத்துக்களின் நூற்றெட்டு பேதமாவன. க. வாஜஸ நேயம், உ. தலவகாரம், ௩. கடோபநிஷத், ௪ பிரச்நோப நிஷத், ரு. முண்டகோபநிஷத், ௬. மாண்டூக்யோபநிஷத், எ. தைத்திரீயோபநிஷத், அ. ஐதரேயோபநிஷத், கூ. சாந்தோக்யோபநிஷத், க0. பிருகதாரண்யம், கக. பிரம்மோபநிஷத், கஉ. கைவல்யோபநிஷத் க௩. சாபாலோபநிஷத், க௪. சிவேதாச்வதரோபநிஷத், கரு. அம்சோபநிஷத், க௬ ஆருணிகோபநிஷத், கஎ. கர்ப்போபநிஷத், கஅ. நாராயணோபநிஷத், ககூ. பரமஹம்சோபநிஷத், உ0. அமிர்தபிந்தூபநிஷத், உக. அமிர்தநாதோபநிஷத், உஉ. அதர்வசிரோபநிஷத், உ௩, அமிர்தசிகோபநிஷத், உ௪. மைத்திராயண்யுபநிஷத், உரு. கௌ

ஷீதபிராம்மணேபநிஷத், ௨௬. பிருகத் சாபாலோபநிஷத், ௨௭. நிருசம்மதாபநீ யோபநிஷத், ௨௮. காலாக்னிருத்ரோப நிஷத், ௨௯. மைத்திரேயோவுபநிஷத், ௩௦. சுபாலோபநிஷத், ௩௧. க்ஷுரிகோப நிஷத், ௩௨. மந்திரிகோபநிஷத், ௩௩. சர்வசாரோபநிஷத், ௩௪. நிராலம்போப நிஷத், ௩௫. சுகரஹஸ்யோபநிஷத், ௩௬. வச்ரசூசியுபநிஷத், ௩௭. தேஜோபிந்தூப நிஷத், ௩௮. நாதபிந்துபநிஷத், ௩௯. தியானபிந்துபநிஷத், ௪௦. பிரமவித்யோ பநிஷத், ௪௧. யோகதத்வோ பநிஷத், ௪௨. ஆத்மபோதோபநிஷத், ௪௩. நாரத பரிவிராசகோபநிஷத், ௪௪. திரிசிகிபிராம் மணோபநிஷத், ௪௫. ஸீதோப நிஷத், ௪௬. யோகசூடாமண்யுபநிஷத், ௪௭. நிர்வா ணோபநிஷத், ௪௮. மண்டலப்பிராம்மணே பநிஷத், ௪௯. தக்ஷிணமூர்த்தியுபநிஷத், ௫௦. சரபோபநிஷத், ௫௧. ஸ்கந்தோப நிஷத், ௫௨. திரிபாத்விபூதி மஹாநாராய ணோபநிஷத், ௫௩. அத்வயதார கோப நிஷத், ௫௪. ராமரஹஸ்யோநிஷத், ௫௫. ராமதாபநீயோபநிஷத், ௫௬. வாசுதே வோபநிஷத், ௫௭. மூத்கலோபநிஷத், ௫௮. சாண்டில்யோபநிஷத், ௫௯. பைங்க லோபநிஷத், ௬௦., பிக்ஷுகோபநிஷத், ௬௧. மஹோபநிஷத், ௬௨. சாரீரகோப நிஷத், ௬௩. யோகசிகோபநிஷத், ௬௪. துரியாதீதாவதூ தோபநிஷத், ௬௫. ஸந்யாஸோபநிஷத், ௬௬. பரமஹம்ஸப ரிவ்ராஜகோபநிஷத், ௬௭. அக்ஷமாலிகோ பநிஷத், ௬௮. அவ்யக்தோபநிஷத், ௬௯. ஏகாக்ஷரோபநிஷத், ௭௦. அந்நபூர்ணோப நிஷத், ௭௧. சூர்யோபநிஷத், ௭௨. அக்ஷ்யு பநிஷத், ௭௩. அத்யாத்மோபநிஷத், ௭௪. குண்டிகோபநிஷத், ௭௫. சாவித்ரியுப நிஷத், ௭௬. ஆத்மோபநிஷத், ௭௭. பாசு பதபிரம்மோபநிஷத், ௭௮. பரப்பிரம்மோ பநிஷத் ௭௯. அவதூதோபநிஷத், ௮௦. திரிபுரதாபிந்யுபநிஷத், ௮௧. தேவ்யுப நிஷத், ௮௨. திரிபுரோபநிஷத், ௮௩. கடோ பநிஷத், ௮௪. பாவனோபநிஷத், ௮௫. ருத்ர ஹ்ருதயோபநிஷத், ௮௬. யோக குண்டல்யுபநிஷத், ௮௭. பஸ்மசாபாலோ பநிஷத் ௮௮. ருத்ராக்ஷஜாபாலோபநிஷத், ௮௯. கணபத்யுபநிஷத், ௯௦. தர்சனோப நிஷத், ௯௧ தாரஸாரோபநிஷத், ௯௨. மஹாவாக்யோபநிஷத், ௯௩. பஞ்சப்பிரம் மோபநிஷத், ௯௪. பிராணாக்னி ஹோத் ரோபநிஷத், ௯௫. கோபாலதபனோப நிஷத், ௯௬. கிருஷ்ணோபநிஷத், ௯௭. யாஞ்ஞவல்கோபநிஷத், ௯௮. வராகோ பநிஷத், ௯௯. சாட்யாய நீயோபநிஷத், ௧௦௦. அயக்கிரீவோபநிஷத், ௧௦௧. தத்தா த்ரேயோபநிஷத், ௧௦௨. காருடோபநிஷத், ௧௦௩. கலிஸந்தரணோபநிஷத், ௧௦௪. சாபால்யுபநிஷத், ௧௦௫. சௌபாக்யலக்ஷ்மி யுபநிஷத், ௧௦௬. சரஸ்வதீரஹஸ்யோப நிஷத், ௧௦௭. பஹ்ருசோபநிஷத், ௧௦௮. முக்திகோபநிஷத் முதலியவாம்.

உபபத்திசமை — உபயபக்ஷ சாதர்மியத்தி னல் சாதனம் பொருந்துமாறு கூறுதல். (தரு)

உபபர்க்கணன்—நாரதரைக்காண்க. இவன் பூர்வத்தில் நாரதமுனி. பிரமசாபத்தால் த்ரமினனுக்கும் களாவதிக்கும் புத்திரனா ய்ப் பிறந்தவன்.

உபபாண்டவர் — இளம்பஞ்ச பாண்டவர்க் கொரு பெயர்.

உபபாதகங்கள்-கோவதை, காலத்தில் உபந யனம் அடையாதிருத்தல், களவு, கடன் தீர்க்காதிருத்தல், ஆஹிதாக்கினி இன்றி இருத்தல், விற்கக்கூடாப்பொருள் விற் றல், மூத்தோன்மணஞ் செய்யாதமுன் மணங்கொள்ளுதல், பொருள் கொடுத்து வேதாத்யயனம் அடைதல், பொருள் பெற்றுவேதாத்யயனம் கூறல், பரதார கமனம், நிஷேதவட்டி வாங்கல், உப்புண் டாக்கல், க்ஷத்திரியர் வைசியர் சூத்திரர் ஸ்திரீகளை வதைத்தல், நிந்திக்கத்தக்க பொருளால் ஜீவித்தல், கடவுள் இல்லை என்றல், விரதலோபம், பிள்ளைகளை விற் றல், தனதான்ய பசுக்களைக் களவுசெய் தல், யாகஞ்செய்ய அருகரலார்க்கு யாகஞ் செய்வித்தல், தாய்தந்தை குமாரரை விட்டு விடல், கன்னியர்மேல் குற்றங்கூறல், சம யன் விவாகமின்றி இருக்கத் தம்பியால் யாகஞ்செய்வித்துக் கொளல், கடம், விரதலோபம், ஸ்வபிரயோஜனம் பற்றி பாகாதி கிரியாரம்பம், கள்குடித்த ஸ்திரீ யுடன்போகித்தல், வேதாத்யயனம் யாகாக் னிவிடல், குமரனைநீக்கிவிடல், பந்துக்களை விட்டுவிடல், சமைத்தற்பொருட்டு மரங் களை வெட்டுதல், ஸ்திரீகளாலும் ஹிம்சை யாலும் ஔஷதத்தாலும் ஜீவனஞ்செய்தல், சொக்கட்டான் சூது முதலிய ஆட்டுவித் தல், தன்னை விக்ரயித்தல், சூத்திர சேவ் யம், நீசனுடன் சிநேகம், ஹீனஸ்திரீயி

னிடம்போகித்தல், ஆச்சிரமம் இன்றி இருத்தல், பரான்னத்தால் தேகபோஷணஞ் செய்து கொள்ளல், சத்தில்லாத சாஸ்திர அப்யாசம், பெண்டு விற்றல் முதலியவாம்.

உபப்பிலாவியம்—பாண்டவர் பாரதயுத்தத்திற்கு முன்னிருந்த இடம்.

உபமன்யு—1. வியாக்கிரபாதருஷியின் குமரர். இவர் வசிட்டதேனுவினிடம் உண்ட பாலால் அத்தன்மைத்தான பால் விரும்பித் தாயைக்கேட்கத் தாய் மாவைக் கரைத்துப் பால் என உண்பிக்க அஃதறிந்த குழந்தை தாயை நோக்கத், தாய் எல்லாமுடையான் சிவமூர்த்தி அவனை எண்ணித் தவம்புரிக என அவ்வாறு செய்யச் சிவமூர்த்தி இந்திரனுருக்கொண்டு எதிர்தோன்றிச் சிவனை இகழ அச்சொற்களைக் கேளேனென இந்திரனைச் சினந்துநிற்கச் சிவமூர்த்தி தம்முருக்கொண்டு பாற்கடலையுண்ண அநுக்கிரகித்தனர். (ஆதித்ய புராணம்)

2. இவர் அதிதிகளுக்கு அன்னமிட்டு அந்தப் பரிகலத்தைப் புறத்திலெறிந்தனர். அது அவ்விடம் பல்லியுருக் கொண்டிருந்த தம்பதிகள்மீது பட்டு அவற்றின் தலைகள் பொன்னுருவடைந்து பூர்வஞ்ஞானத்தால் முனிவரைத் துதிக்க முனிவர் பல்லிகளைப் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்ய ஏவிப் புனிதராக்கினர்.

3. இவர் கிருஷ்ணமூர்த்திக்குச் சிவதீக்ஷை செய்து தவத்திற் கனுப்பினர். இவர், உமாதேவியைப் பூசிக்கையில் கால் பீடத்தில் பட்டு முயலுருப்பெறச் சாபமடைந்து காட்டில் வசிக்கையில் ஆதிவீசன் எனும் அரசன் வேட்டைக்கு வர அவனாலடியுண்டு பாதிரி விருக்ஷத்தருகில் சாபம் நீங்கப்பெற்றுப் பண்டையுருப் பெற்றனர்.

4. தாம் திருப்பாற்கடல் வேண்டித் தவம்புரிகையில் மரீசிமுனிவரால் பேயுருவடைந்த சில முனிபுத்திரர்கள் தவத்திற்கிடையூறு விளைக்க அவர்களைப் பஞ்சாக்ஷர ஜபத்தால் பேயுரு வொழித்தனர். இவர் தவஞ்செய்கையில் சிவபெருமான் இந்திரனுருக்கொண்டு எதிர்சென்று சிவபெருமானைப் பலவாறு நிந்திக்க முனிவர் அகோராஸ்திர மந்திரத்தை உச்சரித்து விபூதியெடுத் திந்திரன்மீது எறிந்தனர். அதனை நந்திமாதேவர் தடுக்க முனிவர் மூலாக்னியால் உயிர்விட எண்ணுகையில் சிவபெருமான் காட்சிகொடுத்து வேண்டிய ...த்திகளை அருளினர்.

5. இவர் த்ருமன்யு என்பவரின் புத்ரர். இவர் பிறந்தபின் தாய் பால் இல்லாமையால் அரிசிமாவினைச் சர்க்கரை கலந்து நீராக்கி ஊட்டி வளர்த்து வந்தனள். இவ்வாறு ரு - வயதுவரையி லுண்டுவருகையில் தாய் தன் சகோதரராகிய வசிட்டரிடஞ் சென்று ஒரு மாதமிருக்கையில் அருந்ததி ஓமஞ்செய்து மிகுந்த காமதேனுவின் பாலைத்தர உண்டுவந்தனர். அவ்விடம்விட்டு நீங்கிய அன்னை தம் வீடு வந்து தமக்கு மாவின்பால் தர, வேண்டாது ரோதனஞ் செய்யத் தாய் பூர்வம் சிவபூசை செய்தவர்க்கே எல்லா நலமும் உண்டாம். நமக்கில்லாமையால் வறுமை அடைந்திருக்கிறோமென்று புலம்பத் தமது ரோதனத்தை விட்டுச் சிவமென்பதென்ன அதனைப் பூஜைசெய்யும் வகை எவ்வகையெனத் தாயைக்கேட்கத். தாய் தந்தையை வினவக் கூறக், கேட்டுணர்ந்து தந்தையிடம் தீக்ஷைபெற்றுத் தவமேற் கொண்டு திரிகூடபர்வதத்தில் சிவோபாசனைசெய்து மகாதவஞ்செய்யச் சிவபெருமான் எழுந்தருளி என்ன வரம் வேண்டுமென்னப் பரமபதியே எம் தாய் தந்தையர் பாலன்னம் புசிக்கவும் நான் காமதேனுவின் பாலினுமினிய பாலுண்ணவும் வேண்டுமென்ன அவ்வாறே அவர்கள் புசிக்கவும் இவர்க்குத் திருப்பாற்கடலையும் தந்து யாவர்க்கும் ஆசிரியராம் பதமும் தரப் பெற்றுத் தாய் தந்தையரை அடைந்தவர். (சிவரஹஸ்யம்).

உபமேயம்—உபமானத்தை ஏற்ற பொருள்.

உபயகர்மஜசையோகம் — யாண்டு இரண்டன் றொழில்களால் சையோக முண்டாகின்றதோ அது.

உபயகோமுக்தானம் — பசுவின்கன்று தாய் வயிற்றைவிட்டுத் தலையை வெளிபபடுத்தினவுடன் முன்னும் பின்னுமாக இரண்டு முகங்கள் இருக்கும். அக்காலத்தில் அந்த வெளியில் வராத கன்றுடன் பசுவினை விதிப்படி தானஞ்செய்தல்.

உபயதன்மவிகலன் — காட்டபட்ட திருட்டாந்தத்தில் சாத்யமாயுள்ள துணிபொருளும், சாதனமாயுள்ள ஏதுவும் நிறையாது குறைவுபடுதல்.

உபயபாரதி — சரஸ்வதி அம்சமானவள். இவளுக்குச் சாரதா, சரச்சுவாணி, மந்திரேசுவரி, அக்ஷரமாதுருகை, வாக்குவாதினி என்று பெயர். இவள் துருவாசர் வேதம் ஓதுதல் கண்டு நகைத்ததால், பூமியில்

விஷ்ணுமித்திரன் குமரியாகப் பிறந்து சுரேச்வராசாரியரை மணந்தனள்.

உபயராசி — மேஷம், மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம்.

உபயவியாவிருத்தன் — எது சாத்யங்களுக்குக் கடாதியைப்போல என்கிற திருஷ்டாந்தம் பொருந்துதல். (சிவ-சித்.)

உபயாசன் — கங்கைக்கரையில் தவஞ்செய்து கொண்டிருந்த வேதியன். துருபதனுக்குப் புத்திரகாமேஷ்டியாகஞ் செய்வித்தவன்.

உபரிசரவசு — 1. இவன் சேதிநாட்டரசன். இந்திரனையெண்ணித் தவம் செய்து ஆகாயத்தில் சஞ்சரிக்க விமானம் பெற்றவன். இவன் கனவில் பிதருக்கள் தோன்றி வேட்டையாடக் கூறுகையி லதற்கிசைந்து வனஞ் செல்லுகையில் மனைவியின் ருதுகாலமறிந்து வருந்த வீரியம் வெளிப்பட்டது. இவன் தன் வீரியத்தைத் தொன்னையில் வைத்துத் தான் வளர்த்த டேகையிடம் கொடுத்துத் தன் மனைவியிட மனுப்ப அதை மற்றொரு டேகை கண்டு ஏதோ இரையென்று மறத்துப் பிடுங்க அவ்வீர்யம் சலத்தில் விழுந்தது. அதை ஒரு மீன் விழுங்கிற்று. அம்மீனிடம் ஒரு பெண்ணும் குமாரனும் பிறந்தனர். பெண் மச்சகந்தி, குமரன் மச்சன். அப்பெண்ணைச் சந்தனு மணந்தனன். இவன் குமரர் பிரகதாறு,குசாபன், மச்சியன், பிரத்தியக்கிரன், சேதிமாத்தியன், மணிவாகனன், சௌபலன், யது, இராசன்யன். இவன் சரிதையை வசுவைக்காண்க. இவன் முனிவர் சாபத்தால் பாதாளத்திலிருக்க இவனைத் திருமால் கருடனையேவிப் பூமியில் கொண்டுவந்துவிட்டு அரசளிப்பித்தனர். இவன் பல இடங்களில் திருமால் அருள் பெற்றவன். இவன்தேவி கிருகா. இவளிட மிவனுக்கு ஐந்து குமரர். இவனைக் கிருதியின் குமரன் என்பர். அத்திரிகையைக் காண்க.

2. சராசந்தன் குலத்தரசன்.

3. ஒரு காலத்தில் ருஷிகள் மாம்சம் புசிக்கக் கூடாதெனப் புசிக்கலா மென்றதால் ஆகாயத்திலிருந்து தள்ளப்பட்டான். பின்னும் அவ்வாறேகூறியதால் பாதாளத்திற் தள்ளப்பட்டான்.

4. பிரகஸ்பதியின் சீடன். இவன் தம் ஆசிரியரைக்கொண்டு ஒரு யாகஞ் செய்வித்தான். அதில் நாராயணர் நேராக அவி கொள்ளாது முனிவர்க ண்ணிற்றேன்றூது அவிகொண்டனர். அதனுல் முனிவர் கோபித்தனர். பின் பிரம புத்ரர்களாகிய ஏகதர், துவிதர், திரிதர், என்பவர்களால் சமாதானஞ் செய்யப்பட்டார். பின் ஒரு முறை இந்திரயாகத்தில் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் யாகப்பசுவைப்பற்றி வாதம்வர வசுதேவர்களுக்காகப் பொய்கூற இருடிகள் இவனைப் பூமியில் விழச் சபித்தனர். இவன் சாபத்தால் பூமியில் விஷ்ணுவைப்பூசைசெய்ய விஷ்ணு கருடனையேவி இவனைத் தூக்கி ஆகாயத்தில்விடக் கட்டளையிட அவ்வாறு செய்ய இவன் ஆகாயவாசி ஆயினன். (பா-சாந்.)

உபலப்திசமை — சாதனுபாவம் வாதியாற் காட்டப்படினும் சாத்தியம் காணப்படுவதாகக்கூறல்.

உபவீதம் — 1. இது, சுருதி,ஆகமஸ்மிருதி அனுட்டான முடையோர் பூணும் நூல். இதனை மூன்றிழை சேர்ந்த பருத்தி நூல் சேர்த்துத் திரித்து அதனை முப்புரியாக்கி முறுக்கிக்கொள்ளல் வேண்டும். சூத்ருக்கு ஒரு சாமும், வைசியருக்கு இரண்டு சாமும், க்ஷத்ரியருக்கு மூன்று சாமும், அந்தணருக்கு ஏழு சாமும் பூணுதல் தகுதி. அவ்வாறன்றி ஐந்து சாமேனும் மூன்று சாமேனும் பூணல் தகுதி. செய்யும் வகை, நூலிழையை நான்கங்குலப் பிர்மாணத்தில் (கூக) சுற்றுச்சுற்றி,அவ்வாறு மூன்றிழையெடுத்து ஒன்றுசேர்த்து ஜலத்தில் நனைத்துக் கிழக்கு முகமாக இருந்து சமமாகவும், நன்றாகவும், கீழ் முறுக்காகவும் முறுக்குதல் வேண்டும். பின் அந்த முறுக்கியநூலை முப்புரியாகப் பிடித்து வலதுகாத்தில் ஏற்றி மேல்முறுக்கு முறுக்குதல் வேண்டும். பூமியில் விழின் நீக்குதல் வேண்டும். முறுக்குங் காலத்தில் எவ்விதமாகப் பூமியை அடையக்கூடுமோ அவ்விதமாகச் செய்க. மாமுதலியவற்றின்மேல் வைத்து முறுக்கின் முனிவர்கள் திருப்தி அடைவர். ஆயுளைக் கோரினவன் அநேகந் தரித்தல் வேண்டும். இரட்டை தரித்தல் ஆகாது. மற்றை விஷயங்களில் அபேக்ஷித்தவன் ஒற்றைப்படையும், சுவல்ப சூத்ரமும் தரித்தல் வேண்டும். யஞ்ஞோபவீதத்தை முறுக்கியபின் தன் கண்டத்திலிருந்து இரண்டுபாகஞ் செய்து விதிப்படி ஸ்தனத்திற்கு நேராகக் கொண்டு அச்சூத்திரத்தினுல் முடிச்சில் மூன்று சுற்றுச்சுற்றி மூன்று முடியாகப் போடவேண்டும். உத்தரீயாக்ருதியாகிய யஞ்ஞோபவீதம் அவை

யிற் பாதிப்பிரமாணம் பருமனிருத்தல் உத்தமமாகக் கருதப்படுகிறது. எஞ்ஞசூத்ரம் காண்க.

2. வேதியன் பூணூலையாவது உத்தரீயத்தையாவது இடது தோளிலும் வலது கையின் கீழிலும் போட்டுக் கொள்ளல். (மனு. அத்-1).

உபவேதங்கள்—நான்கு வேதங்களினின்று முறையே நான்கு உபவேதங்கள் உண்டாயின. அவை ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், அர்த்தவேதம் என்பனவாம். அவற்றுள் ஆயுர்வேதத்தை இயற்றியோர் பிரமன், அஸ்வனிதேவர், தன்வந்தரி பகவான் முதலியோர். இதனுள் ரோகஉற்பத்தி, ரோகநிதானம், சிகிச்சை முதலிய கூறப்படும். தனுர்வேதம்—இதனை விச்வாமித்திரர் இயற்றினர். இதனுள் முக்தம், அமுக்தம், முக்தாமுக்தம், யந்திரமுக்தம் என்று நான்குவேறுபாடுகள் உண்டு. சக்ராதிகளை விடுதல் முக்தம், வாள் முதலிய அமுக்தம், நார்ாசாதிகள் முக்தாமுக்தம், சதக்னி முதலிய யந்திரமுக்தமாம். இவ்வேதத்தில் அத்திரசஸ்திர பிரயோக மந்திரங்களும், பகைவர் நாசமும், சிஷ்டபரிபாலனமும், ஜாரசோராதிகளின் கண்டனமும், கூறப்பட்டிருக்கின்றன. காந்தருவவேதம்—இது, பரதமுனிவரால் கூறப்பட்டது. இதனுள் ஸ்வர, தாள, மூர்ச்சாதிகளும், நிருத்ய,வாத்யாதிகளின் விஷயங்களும் தெளிவாகக் கூறப்படும். அர்த்தவேதம்—இதற்குப் பலர் ஆசிரியர், இதில் சில்பம், பாகம், நீதி, அஸ்வசாஸ்த்ரம் முதலிய கூறப்படும்.

உபஸ்மிருதி — தருமநூல், அவை கண்ணுவம், கபிலம், லோகிதம், தேவலம், காத்யாயனம், லோகாக்ஷி, புதஸ்மிருதி, சாதாதபம், அதிஸ்மிருதி, பிரசேதம், தக்ஷம், விஷ்ணு, விருத்தவிஷ்ணு, விருத்தமனு, தௌமியம், நாரதம், பௌலஸ்தியம், உத்தராங்கிரம் என்பன.

உபாசனை — இது இரண்டுவகை, தூலம், சூக்ஷமம். கன்மகாண்டம்பற்றியது தூலம். ஞானகாண்டம்பற்றிய உபாசனை சூக்ஷமம்.

உபாதி — சாத்தியத்தில் வியாபித்து எதுவில் வியாபியாமலிருப்பது.

உபாத்யாயன் — வேதத்தையும், யாகாதிமந்திரங்களையும் கொஞ்சம் சம்பளம் வாங்கிக்கொண்டு சொல்விப்பவன். மநு-அத் 1.

உபாயம் — 1. அரசர்கள் பகைமேற் செல்கையில் செய்யும் மனோவ்யாபாரம். இது (ச) வகைப்படும். சாமம், பேதம், தானம், தண்டம். இவற்றிக்கு முறையே சமாதானம், பிரித்துக்கோடல், பொருள்தால், போரிடுதல் என்பன பொருள். இவற்றுள், சாமம், பரஸ்பரோபகாரம், சக்ருதம், குணங்களைப் புகழ்தல், சுற்றத்தினருதலைத் தெரிவித்தல், நானுன்னைச் சேர்ந்தவனென்று நல் வார்த்தை கூறல் என ஐவகைப்படும். பேதம் ஒருவர்க்கொருவர் ஆகவிடாமற் கெடுப்பது, பரஸ்பர சங்கர்ஷணத்தை உண்டு செய்தல், ஸந்தர்ஜனம் என மூவகைப்படும். தானம் தன் பொருள் முழுதுமீகை, எங்கேனும் பொருள் வாங்கிக்கொண்ட பக்ஷத்தில் அதற்கு அநுகூலனாகக் கழித்தல், அபூர்வங்களாகிய வஸ்துக்களைத் தருதல், இவன் பொருளைக் கொள் அது உன் பொருளென ஒருவன் பொருளில் தானே பிரவர்த்திக்கச் செய்தல், ருணப்ரமோசனம் என ஐவகைப்படும். தண்டம் வதம், அர்த்தஹரணம், பரிக்லேசம் என மூவகைப்படும். பின்னும் சந்தீ கோசப்ரதான ஹேதுகம், தண்டப்ரதானஹேதுகம், பூமிப்ரதானஹேதுகம், எனவும், விக்ரஹம், பிரகாச யுத்தம் கூடயுத்தம், பார்ஷணியுத்தம், எனவும், ஆயனம், த்வைதம், ஆச்ரயம் எனவும் படும். தண்டம் விக்ரஹயானம், ஸந்தானயானம், சம்பூயயாணம், பாஸங்கயானம், உபேக்ஷயயானம் என ஐவகைப்படும். இவற்றுள், விக்ரஹயானம், சத்ருவைக் கேவலமாக வுபசம் ஹரிக்கவேண்டுமென்று போகை, சந்தானயானம், சத்ருவைத் தன்வசஞ்செய்துகொண்டு தன தூர்க்காதிகளைக் கிரகிக்கச் செல்கை. சம்பூயயானம், தன்னால் சத்துரு செயிக்கக் கூடாதவனு யிருக்கையில் தனக்குச் சமமான அரசர்களைக் கூட்டிக்கொண்டு படையெடுத்தல். பாஸங்கயானம், ஒரு திசையில் போகவேண்டியிருக்க வேறொரு திசையில் படையெடுத்துச் செல்கை. உபேக்ஷயயானம், பகைவனை யான் வெல்லேன். என்னை அவன் வெல்லான் எனும் புத்தியால் தேசகாலாதிகளைப் பாராமல் படையெடுத்தல்.

2. இந்த உபாயம் பின்னும் நட்புபற்றியசாமம், நட்புபற்றியதானம், நட்புபற்றியபேதம், நட்புபற்றியதண்டம் எனவும், பகைமைபற்றியசாமம், பகைமைபற்றிய

தானம், பகைமைபற்றியபேதம், பகைமைபற்றியதண்டம் என எண்வகைப்படும். அவை எனக்கு நின்னையொத்த நண்பன் வேறிலை என்பது நட்புப்பற்றியசாமம், என் வாழ்க்கைக்குரிய எல்லாப் பொருளும் நின்னுடையவே என்பது நட்புப்பற்றியதானம், ஒரு நண்பன்பால் பிற நண்பர்களின் குணத்தை ஒருவன் பாராட்டிப் பேசின் அது கேட்கும் நண்பனது மனதை வேறுபடுத்துமாதலின் அது நட்புப்பற்றியபேதம், நீ இப்படிப்பட்டவனாயின் நான் உன்னோடு நட்புக்கொள்ளேன் என்பது நட்புப்பற்றியதண்டம், ஒருவன் தன்பகைவனை நோக்கி நீயும் நானும் ஒருவர்க்கொருவர் கேடுசெய்ய எண்ணலாகாது துணை செய்பவராதல் வேண்டு மெனல் பகைமைபற்றியசாமம், ஒருவன் தனக்குரிய பகைவர் பலருள்ளும் வலிமையுள்ள பகைவருக்கு ஆண்டுதோறும் அரசிறை கொடுத்து மகிழ்வித்தல் பகைமைபற்றியதானம், பகைவாது பொருள் முதலிய கருவிகளுக்குக் குறைவு செய்தலும், அந்தப் பகைவரினுஞ் சிறந்த வலியுள்ளாரைச் சார்ந்திருத்தலும், அப் பகைவரிற் சூழ்ந்தாரை வலியுடையராகச் செய்தலும் பகைமைபற்றியபேதம், பகைவரைக் கள்வரால் துன்புறுத்தலும், அவரது பொருள் தானியமுதலியவைகளைக் கெடுத்தலும், அவரிடம் தீயொழுக்கங்கண்டு அவரினும் சிறந்த வலியுளாரால் அச்சுறுத்தலும், போர்நேரிட்டவிடத்துச் சுத்தவீரரால் அச்சுறுவித்தலும் பகைபற்றியதண்டமாம். தண்டத்தின் வகைகள் — கடுஞ்சொற்கூறி விலக்கல், மானக்கேடு செய்தல், உணவில்லாது வைத்தல், தளையிட்டுச் சிறைப்படுத்தல், அடித்தல், பொருள் கவர்தல், நகரத்தினின்று வெளிப்படுத்தல், உடலிலென்றும் மாறா அடையாளமிடல், மாறுபடத் தலைமழித்தல், கழுதைமீதேற்றி ஊர்திரிவித்தல், கை, கால் முதலிய உறுப்புக் குறைத்தல், முதலியவாம்.

உபாலி — புத்தனுக்குச் சீடன்.

உபேந்திரர் — விஷ்ணுவி னவதாரமாகக் கச்யப பிரசாபதியின் தவத்தால் அதிதி வயிற்றிற் பிறந்தவர். தெய்வலோகத்தில் இந்திரனுக்குத் துணையாயிருப்பவர்.

உபேந்திராசிரியர் — சிநேந்திரமாலை செய்த சைநர். இவர்க்குச் சைநமாமுனிவர் என்னும் பெயர்.

உப்பணன் — வசிட்டருக்கு ஊர்சையிட முதித்த குமரன்.

உப்பு — 1. உவர்மண்ணிலுண்டானது. இது மண்ணில் உவராக இந்திரனுடைய பிரமகத்தியைத் தேவர்கள் பிரித்ததனால் தேவர்களுக்கு அவிஸ் உப்பில்லாமல் சமைக்கப்படுகிறது. (பார-சாந்.)

2. இது, கறியுப்பு, பதார்த்தவகைகளில் சேர்ப்பது, இது கடல்நீரைக் கடற்கரையோரத்திலுள்ள இடங்களில் நீரைப் பாத்திபோல் கட்டிப் பலமுறை உப்பு நீரை இறைத்து இறைத்து உலர்த்தினல் அவற்றில் உப்பு எழும். இதுவே கறியுப்பு. இந்த நீரைக் காய்ச்சினும், உவர்மண்ணைக் காய்ச்சினும் உப்புண்டாம். கல்லுப்பு பூமியிலிருந்து வெட்டி யெடுப்பது, இவ்வுப்புகள் பலவகை. அமுரியுப்பு, இந்துப்பு, கந்தக உப்பு, கரி உப்பு, பொட்டிலுப்பு, வெடியுப்பு, இவற்றின் நிறங்களும் குணங்களும் வேறு.

3. விஷ்ணுலோகத்தில் உண்டானது. இதைத் தானஞ் செய்பவன் மிகவும் விசேஷபதம் பெறுவன். இதனை மரணகாலத்தில் தானஞ்செய்யின் யமபயமில்லை. (கருடபுராணம்).

உப்புரவர் — இவர்கள் சகரர் பூமியைத் தோண்டிய காலத்தில் பூமியைத்தோண்டி உதவி செய்தவர் என்பர். இவர்கள் உப்பு அளத்தில் வேலை செய்வதால் இப்பெயர் அடைந்தனர் என ஊகிக்கப்படுகிறது.

உப்பூரிகுடிகிழார் — உருத்திரசன்மனார்க்குத் தந்தை.

உப்பூர் — உருத்திரசன் மனருடைய ஊர். இதில் இராமராற் பூசிக்கப்பட்ட விநாயகராலய மொன்றுண்டு. இவ்வூர் பாம்பக்குடிக்கு ஈசானத்திலுள்ளது. (திருவிளை.)

உப்பை — ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்து ஊற்றுக்காட்டிலமர்ந்தவள். இவள் பிருகு பத்தினி திரிமூர்த்திகளைச் சனனமெடுக்கச் செய்ததால் அவர்க ளிவளைச் சனனஞ் செய்யச் சொன்னபடி பூமியி லவதரித்து வண்ணர் வளர்க்க மாரியம்மையாயினள். (திருக்குறள் வள்ளுவர் சரிதை.)

உமட்டூர் கிழார்மகனர் பரங்கொற்றனர் — இவர் கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர் இவர் தந்தையார் உமட்டூர் கிழார் என்பவர். வேளான் குடியினர். இவர் ஆய் என்பானது கானத்தின் வளத்தைப் பாடினர். (அகம் - சகூ.)

**உமாபதி**—சிவன்.

**உமாபதிசிவாசாரியர்**—இவர்சோழநாட்டில் திருப்புலியூரில் சைவவேதியர் குலத்தில் அவதரித்து வேதசிவாகமங்களை ஓதியுணர்ந்து மூவாயிரநாட்களுக்கு ஒருநாளில் நடராஜன் பூசைபுரிந்து சிவிகையூர்ந்து செல்வோர், திருக்கடந்தை மறைஞான சம்பந்தர் ஆண்டு மதுகர விருத்தி செய்வாரை நோக்காது செல்லுகையில் பட்ட கட்டையிற் பகற்குருடன் போகிறான் என அவர் கூறக்கேட்டு, அவரது திருவடி பணிந்திருக்கையில் ஒருநாள் இவரது பரிபாகமறிய மறைஞானசம்பந்தர் நெய்வார் தெருவில் சென்று அக்காருகர் பாவிற்கு இடும் கஞ்சியினைக் கையேற்றுண்கையில் உமாபதியாரும் அக்கையினின்றும் ஒழுகிய கூழையுண்டு உடன் வதிந்தனர். மறைஞானசம்பந்தர் இவரது பரிபாகமறிந்து சிவஞான போதத்தை உபதேசித்தனர். இவ்வகை இருக்கையில் இவரைத் தில்லை மூவாயிரவர் ஆசாரபிரஷ்டனென்று விலக்கக் கண்டு அரசனால் கொற்றவன் குடியில் ஓர் மடங்கொண்டு அதில் தாம் நிட்டை புரிந்திருக்கையில், தமக்கு நடராஜன் பூஜை முறைவர அக்காலத்து உமாபதியார் பூசிக்கச் செல்ல அத்தில்லை மூவாயிரவர் விலக்க உமாபதியார் மீண்டும் மடமடைந்து மானதத்தால் பூசித்திருந்தனர். அடுத்த அந்தணர் திருக்கோயிலடைந்து திருக்கதவம் நீக்கிப் பூசைப்பெட்டகத்தை நோக்கப் பெட்டகம் காணாதவராய்த் திகைத்து வருந்துகையில் நாம் உமாபதிப்பெட்டகத்தில் இருக்கின்றோமென அசரீரியால் கூறக்கேட்டு அந்தணரனைவரும் உமாபதியாரைப் பணிந்து அழைத்துவந்து பூசை புரிவித்தனர். இவ்வகை இவர் கொற்றவன் குடியில் எழுந்தருளி யிருக்கையில் பூர்வஞ்செய்த பாபவசத்தால் வேதியன் ஒருவன் புலையனாய்ப் பெற்றான் எனும் பெயருடன் வளர்ந்து ஒரு புலைச்சியை மணந்து தன்பிறப்பில் அருவருப்படைந்து பூருவ புண்ணியத்தால் சுற்றத்தைவிட்டுத் தன்னூரைவிட்டு நீங்கித் தில்லையடைந்து கட்டைவெட்டித் திருச்சிற்றம்பல முடையார் திருமடைப்பள்ளிக்கு வேதியர்வழியாகக் கொடுத்து வருகையில் பரிபாகமடையச் சிவபெருமான் பெற்றான் சாம்பான் கனவிடைத்தோன்றி உமாபதிசிவாசாரியருக்குக் கொடுக்கும்படி திருமுகப் பாசுரம் "அடியார்க் கெளியன் சிற்றம்பலவன்கொற்றங், குடியார்க்கெழுதிய கைச்சீட்டுப், படியின்மிசைப்—பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து, முத்திகொடுக்க முறை" என எழுதிய திருமுகங்கண்டு சிரமேற்றாங்கி அதனைப் பத்திரப்படுத்திக் கொற்றவன் குடிவந்து அங்குச் சிலநாள் மடத்திற்கு விறகு வெட்டித் தரும் திருப்பணி செய்து வருநாட்களில் ஒருநாள், மழையால் பெற்றான் சாம்பான் வரத் தாமதித்ததால் போஜனவேளை தாமதிக்க உமாபதியார் காரணங் கேட்க அந்தணர்கள் மடைப்பள்ளிக்கு நாடோறும் ஒருவர் விறகு தந்துவருவர்; அவர் இன்றைக்கு வாராததனால் தாமதித்தது என்றனர். இதனைக் கேட்ட உமாபதியார் நாளை அவர் வரின் நம்மிடைக்கூறுக என்றனர். அவ்வாறே பெற்றான் சாம்பான் மறுநாள் இரண்டுநாள் விறகும் கொண்டுவரக் கண்டோர் உமாபதியாரிடங் கூற, உமாபதியார் பெற்றானை அழைத்து நீ யார் எனப், பெற்றான், இறைவன் தந்த திருமுகத்தை வைத்துத் தொழலும் அத்திருமுகத்தை வேதியர் உமாபதியார்க்குத் தர அதனை நோக்கிச் சிரத்தில் வைத்துத் திருநயனங்களில் ஒற்றி அரனாணையை யெண்ணியப் பெற்றான் சாம்பானுக்குச் சத்தியோநிருவாணதீக்ஷையால் முத்தியளித்தனர். இவர் சிதம்பரத்தில் துவசாரோகணம் தடைபட்டிருக்கக் கொடிக்கவி அருளிச்செய்து அதை ஏற்றினர். இவர், பௌஷ்கர வியாக்யானம், கோயிற்புராணம், திருத்தொண்டர்புராணசாரம், திருமுறைகண்டபுராணம், சேக்கிழார்நாயனார் புராணம், திருப்பதிகக்கோவை, சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம், சிவபுண்ணியத்தெளிவு முதலிய அருளிச் செய்தனர் இவர் காலம் சாலிவாகனசகம் (கஉஉஅ) என்பர்.

**உமாமகேசன்** — பஞ்சகிருத்தியத்தின்பொருட்டு உமையோடு பொருந்திய சிவாவசரம்.

**உமாமகேசுரவிரதம்** — சித்திரை அல்லது மார்கழியில் பூர்வபக்ஷத்தில் அஷ்டமி சதுர்த்தசி, பௌர்ணமிகளில் தொடங்கி மண்டபமமைத்து அதில் உமாமகேசுவரரைத் தாபித்து விதிப்படி பூசைசெய்து பிராமண

தம்பதிகளை உமாமகேசுரராகப் பாவித்து அவர்களுக்கு வேண்டியகொடுத்துப் போஜனமளித்து உபசரிப்பது.

உமாறுபுலவன் — சீதக்காதியின் மந்திரியாகிய அப்துல் காசிம் என்பவரால் சன்மானிக்கப்பட்டு மகம்மதுநபியைப்பற்றிச் சீராபுராணம் பாடிய புலவன்.

உமிழ்தலு மலசல மோசனம் செய்தலுமாகா இடங்கள் — புல் முளைத்துள்ள இடம், பயிர் விளைகின்ற இடம், பசுச் சாணமுள்ள இடம், சுடுகாடு, பலர் நடமாடுமிடம், தீர்த்தம், கோயில், நிழலுள்ள இடம், பசுமந்தை நிற்குமிடம், சாம்பல் முதலிய இடங்களாம்.

உமேசன் — உமாமகேசனைக் காண்க.

உமை — 1. சத்திக்கு ஒரு பெயர். மேனையின் புத்ரி, பித்ருவம்சம் காண்க.

2. மகம் என்னும் சுகாதசருக்ரன் தேவி.

3. சத்தியாதனனைக் காண்க.

உம்பர்க்காட்டிளங்கண்ணனார் — கடைச் சங்க மருவிய புலவர்.

உயர்வு நவிற்சியணி — அஃதாவது ஒரு பொருளானது தன் சொல்லாற் சொல்லப் படாமற் கேட்போரை மகிழ்விப்பதும்; இஃதஃதன்றென்று தெரிந்து தன்னிச்சையாலாமென்று கொள்ளப்படுவதுமாகிய ஆரோப நிச்சயத்திற்கு விஷயமாகுதலாம். இதனை வடநூலார் அதிசயோக்தியலங்காரமென்பர்.

உயிச்சன் — திருதராட்டிரன், தன் குமாருள் ஐவர், நான்காநாள் யுத்தத்தில் இறக்கக் கேட்டு விசனப்படும்போது திருதராட்டிரனைத் தேற்றிய நண்பன்.

உயிரல் பொருட்குணம் — அறிவு மயமாகிய உயிர் ஒன்றும் நீங்க மற்ற எல்லாப் பொருட்குணங்களாம்.

உயிரளபெடை — பாட்டில் ஒசை குறைபின் அவ்வோசையை நிறைக்க நெட்டெழுத்தேழிலொன்று அளவில் நீளுதல்.

உயிரின்தொழிற்குணம் — துய்த்தல், துஞ்சல், தொழுதல், அணிதல், உய்த்தல் முதலிய. (நன்.)

உயிருண்ணிப்பூண்டுகள் — 1. இவ்வகைப் பூண்டுகளும் செடிகளும் அமெரிக்கா தேசத்தில் மிகுதியாக இருக்கின்றன. இவற்றுள் சிலவற்றில் பூச்சிகள் தாமே போய்ச் சிக்கிக் கொள்வனவும், சில தாமே பூச்சிகளைத் தாவிப் பிடிப்பனவும். சில தமது பசையில் பற்றிக்கொள்ளப் பிடித்துக் கொள்வனவாகவும் இருக்கின்றன. மத்ய அமெரிக்காவில் வாழைப்பூவின் புறஇதழ் போன்று அகன்று ஓரத்தில் முட்கள் பெற்றும் இடையில் மினு மினுப்படைந்த கூரிய முட்கள் பெற்றுமுள்ள இலைகளைப் பெற்ற ஒருவகைப் பூண்டிருக்கிறது. இதனிடையிலுள்ள மினு மினுப்பைக் கண்டு பூச்சிகளதனை அடைந்தவுடன் இலைகள் அப்பூச்சுகளை மூடிக்கொள்ள ஒருவகை திரவம் அதிலுண்டாகிப் பூச்சியைக் கரைத்துத் தின்கிறது. மற்றொருவகைச் செடி அமெரிக்காவில் உண்டு. அதன் இலைகள் கணையுள்ளனவாயும் அகன்று அழுத்தமாகவும் இருக்கின்றன. இது, சுண்டெலி ஓணான் போன்ற பிராணிகள் தன்னை நெருங்கிவரி னவற்றைத் தாவிப் பிடித்து இலைக்குள் வைத்துச் சுருட்டிக்கொண்டு மாமிச முழுதும் உறிஞ்சியபின் விரிந்து விடுகிறது.

2. வீனஸ்பிளைட்ராப் (Venus Flytrap) இப்பெயருள்ள மற்றொரு செடி அமெரிக்கா நாட்டிலுண்டு. இதனிலைகள் நீண்டு (உ) மடல்களாகப் பிரிந்து இருக்கின்றன. மடல்களி னுள்ளிடத்தில் நுண்ணிய முட்கள் நிறைந்திருக்கின்றன. பூச்சிகள் விரிந்துள்ள இலைகளில் பட்டவுடன் இலைகள் குவிந்து பூச்சிகளை வெளிப்படுத்தாது கொன்று அடிப்பாகத்திற் செலுத்தி அதிலுள்ள திரவத்தால் கரைத்து உறிஞ்சி விடுகிறது.

3. சாரசினியா (Sarracenia) இது அமெரிக்காவிலுள்ள ஒரு செடி, இதன் இலைகள், உட்புறத்தில் குடைவுள்ளவாயும் மேற்புறம் குடத்தின் கழுத்துப்போல் குறுகி நுனிவிரிந்து மிருக்கும். இவ்விலையினுட்புறம் ஒருவகை மணம் உண்டு அந்த மணம் பூச்சுகளை யுள்ளிழுக்க அவை சென்று மீண்டும் வெளி வருதற்கியலாது சாகின்றன அவற்றை அச்செடிகள் உணவாகக் கொள்ளுகின்றன.

4. டார்லிங்டோனியா (Darlingtonia) இது, ஒருவகை உயிருண்ணிப் பூண்டு. அமெரிக்காவிலுள்ளது. இதனிலைகள் நீண்டு குழல்போல் நுனியில் குவிந்து மூடிக்கொண்டிருக்கிறது. இவ்விலையின் மேற்பக்கம் கண்ணாடிபோலவும், அடிப்பாகம் சிறு துவாரம் பெற்றும் இருக்கிறது. அத்துவாரவழியில் தேன் போன்ற

திரவம் கசிந்துகொண்டிருக்கிறது. அதைக் குடிக்கச் சென்ற சிறு பூச்சிகள் மீண்டும், வெளிவர முடியாதிறக்க அவற்றை ஆகாரமாகக் கொள்ளுகிறது.

5. நிபன்தீஸ் (Nepanthes) இது பூச்சிகளைப் பிடித்துண்ணும் செடி. இது கிழக்கு இந்தியத் தீவிலுள்ளது. இதன் இலைகள் இரண்டு பாகமாகப் பிரிந்து இருக்கின்றன. இலைகளின் முனையில் சம்பிபோல் ஒரு கொடி நீண்டு அதன் முனையில் குடம்போல் ஒரு உறுப்பைப்பெற்று அதன் வாயைமூட இலைபோல் ஒரு மூடி பெற்றிருக்கிறது. குடத்தின் தலையிலுள்ள இலையினடியில் தேன்போன்ற திரவம் திரவிக்கிறது. அதை உண்ண பூச்சிகள் உட்சென்றவுடன் இலைபோன்ற மூடி வெளிவரவிடாது மூடிக்கொள்கிறது. விழுந்த பூச்சிகள் அதன் திரவத்தில் வீழ்ந்திறக்க பூண்டு அவற்றைக் கரைத்து உணவாகக் கொள்கிறது.

6. சன்ட்யூ (Sundew) இது, அமெரிக்காவிலுள்ள ஒருவகைச் செடி. இதன் இலைகள், நீண்ட காம்புகளைப் பெற்று முனையில் திரட்சி யடைந்திருக்கின்றன. இலைகளின் உட்புறம் குழிந்தும் வெளிப்புறம் கவிந்து மிருக்கிறது. இலைகளின் வெளிப்புறத்தில்முட்கள் நிறைந்துள்ளன. அம்முட்களில் ஒருவகைப் பசை உண்டு. அச்செடி தன்னருகில் பூச்சிப் புழுக்கள் உலாவுதல், பறத்தலை அறிந்து கொள்கிறது. உடனே அதன் இலைகள் பேயாடுவதுபோல் ஆடத் தொடங்கிப் பூச்சிகளைத் தாவிப்பிடித்துக் குழிந்த உட்புறஞ்செலுத்திச் சுருட்டிக்கொண்டு தன்னிடம் உள்ள திரவப்பசையினால் கொன்று கரையச் செய்து உணவாக்கிக்கொண்டு முன்போல் விரிகிறது. இதுபோல் தண்ணீரில் ஒருவகைச் செடி மீன்களைப் பிடித்துத் தின்கிறதாம்.

7. பிளாடர் ஒர்ட் (Pladder Wort) இது ஆஸ்திரேலியாவிலுள்ள ஒருவகை உயிருண்ணிப்பூண்டு. இது, நீர் தேங்கியுள்ள இடங்களில் மிகுதியு மிருக்கிறது. இதன் இலைகள் இளம்பசுமை கூடிய மங்கல் நிறமானது. இலையின் மேற்புறம் மெல்லிய தொளையுடன் ஜவ்வுபோன்ற உறுப்பால் மூடப்பட்டிருக்கிறது. அத்தொளை வழியில் சிறு முட்கள் உட்புறம் கவிந்திருக்கிறது. அத்தொளையின் மூடி நீரின் அசைவால் திறத்தலும் மூடலும் பெறுகிறது. அம்மூடியினுள் புகும் பூச்சி புழுக்கள் மீண்டும் வரவிடாமல் மூடிக்கொள்ளப் பிராணிகள் உள்ளடங்கி அதிலுள்ள திரவத்தால் கரையச் செடி அவற்றை உணவாகக் கொள்கிறது.

உயிரெழுத்துக்கள் — இவை தமிழ்ப் பாஷைக்கு முதலெழுத்தின் வகை. இவை மெய்யெழுத்திற்கு உயிர்போலிருத்தலின் இப்பெயர் பெற்றன. இவை தனித்தியங்கும் எழுத்துக்கள். அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ, ஆகப்பன்னிரண்டு. (நன்)

உயிர் — ஆன்மாவின் ஒற்றுமைப்பட்டு காலமுடிவு வரையினின்று காலத்திறுதியில் பூததேக நீங்கிச் சூக்ஷ்மசரீரத்துடன் ஆன்மாவைப் பின்பற்றிச் செல்லும் அருவுருவப்பொருள். அது உருவமாய் பௌதிக தேகத்தால் காணப்படுதலின் உருவும், இன்னவுருவென அறியப்படா திருத்தலின் அருவுமாம். இது புருடனிடத்து ஆறறிவுடனும், விலங்குகளிடத்து ஐயறிவுடனும், வண்டு, ஞெண்டு முதலியவற்றில் நான்கறிவுடனும் சிதல் எறும்பாதியில் மூவறிவுடனும், நந்து, அட்டை முதலாதியில் ஈரறிவுடனும், புல், மரம் முதலியவற்றில் ஓரறிவுடனும் காணப்படும்.

உயிர்க்குணம் — அறிவு, அருள், ஆசை, அச்சம், மானம், நிறை, பொறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மையல், நினைவு, வெறுப்பு, உவப்பு, இரக்கம், நாண், வெகுளி, துணிவு அழுக்காறு, அன்பு, எளிமை, எய்த்தல், துன்பமின்பம், இளமை, மூப்பு, இகல், வென்றி, பொச்சாப்பு, ஊக்கம், மறம், மதம், மறவிமுதலிய.

உயிர்மெய் எழுத்துக்கள் — உயிரும் மெய்யும் கூடிப் பிறக்கும் எழுத்து உயிர்மெய் எழுத்தாம். உயிர்மெய் எழுத்துகள் இருநூற்றுப் பதினாறு.

உயிர்வேதனை — (கஉ) அனல், சீதம், அசனி, புனல், வாதம், ஆயுதம், விஷம், மருந்து, பசி, தாகம், பிணி, முனிவருமை.

உய்த்தலில்பொருண்மை — இது வைதருபச் செய்யுணெறியி லொன்று. கவி தன்னாற் கருதப்பட்ட பொருளை விளங்க விரிக்குஞ் சொல்லைச் செய்யுளுள்ளே யுடைத்தாய்ப் பிறிது மொழிகூட்டி யுரைக்கும் பெற்றியின்றி வாத்தொடுப்பது. (தண்டி)

உய்த்துணர்வணி — அஃதாவது ஒரு காரியம் முற்றுப் பெறுதற் கிஃதிவ்வாறுமெனி

னென ஊகித்தலாம். இதனை வடநூலார் சம்பாவனாலங்கார மென்பர்.

உய்யக்கொண்டார்—1. நாதமுனிகளுக்குப் பின்வந்த வைஷ்ணவாசாரியர். இவர் சயத்சேனாம்சமாய்க் கலி (௩கூ௨எ) இல் பராபவஞு சித்திரைமீ புதன்கிழமையில் அவதரித்தனர்.

2. புண்டரீகாக்ஷரைக் காண்க.

உய்யவந்ததேவநாயனார்—1. இவர் உத்தர பூமியி லிருந்து தக்ஷணயாத்திரையாகச் சென்று காவிரிக்கரையி லெழுந்தருளி யிருக்கையில் திருவியலூர் ஆளுடைய தேவநாயனார் இவரைக் கண்டு பணிந்து ஞானோபதேசம் பெற்றனர். இவர், மாணாக்கர் வேண்டுகோளுக் கிரங்கித் திருவுந்தியார் என்னும் சைவசித்தாந்த சாத்திரம் திருவாய் மலர்ந்தருளினர். இவர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனாருக்குப் பரமாசிரியர். இவர் காலம் சாலிவாகன சகம், ௧0௭0.

2. இவர் திருக்கடவூர். திருவியலூர் ஆளுடைய தேவநாயனார்க்கு மாணாக்கர். இவர் ஸ்ரீ சிதம்பரத்தில் எழுந்தருளி யிருக்கையில் தம்மையடுத்த மாணாக்கர் பொருட்டு ஒரு சாத்திரஞ் செய்து நடேசர் சந்நிதியில் இட, அவ்விடம் கருங்கற்படியில் சிலையாற்செய்த யானை அதை எடுத்து நடேசரிடம் இட்டது. ஆதலின் இவர் அருளிச்செய்த சாத்திரத்திற்குத் திருக்களிற்றுப்படியார் எனப் பெயரிட்டனர். இவர் காலம் சாலிவாகனசகம் ௧௧00 என்பர்.

உரகபுரி — தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள கரைதுறைபட்டணம். இதுவே நாகப்பட்டணம். அர்ச்சுனனால் ஜயிக்கப்பட்டது.

Nagapatam, a seap-ort town in the District of Tanjore. It was once the capital of Pandya.

உரல் — கல்லாலும் மரத்தாலும் பொருள்களை நசுக்கவும் சுத்தஞ் செய்யவு மமைத்த குழிந்த உரு. பொருளை நசுக்கும் கருவி உலக்கை.

யுரானஸ் — (Uranus) இது ஒரு நவீன கிரகம். இது சூரியனுக்கு ஏழாவது வட்டத்தில் உள்ளது. இது (1781) இல், S. W. ஹர்சல் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதாம். இது, (178) கோடியே (10) லக்ஷம் மைல் தூரத்திற்கப்பாலிருந்து சூரியனைச் சுற்றி வருகிறதாம். இது, (30,686) சுமார் (84) வருஷகாலத்தில் சூரியனை ஒருமுறை சுற்றி வருகிறது. இதன் குறுக்களவு (31,900) மைல். இதற்கு (4) உபக்கிரகங்களிருக்கின்றன என்பர். இதனை அடுத்த வட்டத்தில் நெப்டியூன் கிரகம் இருக்கிறதென்பர்.

உரிசிராசுவன்—சேநசித்தின் குமரன்.

உரிசை—தேவசன்மன் தேவி. இந்திரன் இவளைக்கண்டு மோகித்து இருடியுருக்கொண்டு வர விபுலனால் தப்பினவன். ஆகாயத்தில் போகும் அப்சரசின் மாலையைக் கண்டு புருஷனிடங் கூறி மாணாக்கனால் பெற்றுக்கொண்டவள்.

உரிச்சொல் — பலவகைப்பட்ட பண்புகளையுங்கூறும் பெயராய் ஒரு குணத்தையும், பல குணத்தையுந் தழுவிப் பெயர்வினைகளை நீங்காவாய்ப் பொருட்குரிமை பூண்டு நடப்பன.

உரிச்சொனிகண்டு—இது காங்கேய ரியற்றியது. உரிச்சொற்களைத் திரட்டிக் கூறிய நூல்.

உரிமைக்காரர் — இவர் தப்பட்டையடிப்பவர். இவர்கள் தோட்டிகள். பறைச்சாதியாரில் சேர்ந்தவர்கள். மதுரை முதலிய இடங்களில் வசிப்போர்.

உரு—ஒரு அசுரன், துற்கனுக்குத் தந்தை.

உருகன்—கிருஷ்ணன் குமரன்.

உருகாயன்—திரேதாயுகத்தில் விஷ்ணுவின் பெயர்.

உருக்காதேவி—(சங்.) அரசர்மீளியின் பாரி.

உருக்கிரமர்—1. காச்யபருக்கு அதிதியிடமுதித்த குமரர். இவர் விஷ்ணுவின் திருவிக்ரமாவதாரம். பாரி கீர்த்தி, குமரன் சௌபகன்.

2. துவாதசாதித்தரில் ஒருவன்.

உருக்கிரமன் — விஷ்ணுவி னவதாரங்களில் ஒன்று. தந்தை நாபிப்பிரசாபதி, தாய் மேரு.

உருக்குமணி—இருக்குமணியைக் காண்க.

உருக்குமகேசீ—பீஷ்மகன் குமரன். இருக்மணியுடன் பிறந்தவன்.

உருக்குமதான்—பீஷ்மகன் குமரன். இருக்மணியுடன் பிறந்தவன்.

உருக்குமநேத்ரன் — பீஷ்மகன் குமரன். இருக்குமணியுடன் பிறந்தவன்.

உருக்குமபாகு—பீஷ்மகன் குமரன். இருக்மணியுடன் பிறந்தவன்.

உருக்குமன்—சாருமதிக்குத் தந்தை.

உருக்குமி — பீஷ்மகன் குமரன். இருக்குமணியுடன் பிறந்தான், கம்சனுக்கு நண்பன். இவன் இருக்குமணியைச் சிசுபாலனுக்கென வைத்திருந்தனன். இதனைக் கண்ணன் அறிந்து இருக்குமணியைக் கவர்ந்து உருக்குமியைத் தேர்க்காலில் கட்டித் துவாரகைக்குக் கொண்டுபோக, இவன் இருக்குமணியை மீட்காமலும் கண்ணனைச் சங்கரிக்காமலும் மீளேன் என்று போஜகடமென ஒரு பட்டணம் நிருமித்ததிலிருந்தவன். குமரி உருக்மவதி, இவன் குமரி உருக்மவதி கல்யாணத்திற்கு வந்திருந்த கலிங்கன் இவனைப் பலராமருடன் சொக்கட்டானாட ஏவ இவன் அவருடன் சொக்கட்டானாடித் தோற்றுத்தான்செயித்ததாகத் தன்னை உயர்த்தி அவரை இகழ்ந்ததனால் பலராமரால் கொல்லப் பட்டவன். அக்காலத்தில் கலிங்கனுக்கும் பற்களுதிர்ந்தன.

உருக்கேம்பீரன் — இந்திரசாவர்ணி மநுப் புத்ரன்.

உருக்மவதி—உருக்மியின் குமரி, பிரத்தியும்நன்பாரி.

உருக்மாங்கதன்—இருக்குமாங்கதனைக் காண்க. இவன் வீமன் குமரன். இவன் வேட்டைக்குச் சென்று தாகத்தால் கவிமுனிவர் ஆச்சிரமம் போய்த் தாகத்திற்கு நீர் கேட்க, அவர் பத்தினியாகிய முகுந்தை இவனைக் கண்டு காதல் கொண்டழைக்க அரசன் மறுத்தமையால் முகுந்தை யென்னுமிருடி பத்தினி, அரசனுக்கு வெண்குட்டரோக முண்டாகச் சபிக்க அரசன் நகரஞ் செல்லாது காட்டிலிருந்து நாரதமுனிவருபதேசத்தால் சிந்தாமணிதீர்த்த முதலிய ஆடிப் புனிதமாயினன்.

உருக்ஷயன் — (பு) மகாவீர்யன் குமரன். இவன் குமரர் திரையாருணி, புஷ்கராருணி கவி, இந்த வம்சத்தவர் வேதியராயினர்.

உருசங்கு—(ருசங்கு.) உசங்கைக் காண்க.

உருசி—1. பிரமாக்களில் ஒருவன். ஸ்ரீ யஞ்ஞமூர்த்தியாகிய விஷ்ணுவைக் குமாராகப் பெற்றவன். தேவி, ஆகுனாதி அல்லது ஆகுதி. குமரி தக்ஷிணை, குமரன் சுயக்யன்
2. இத்மவாகன் தேவி.

உருசிகன்—(ய) உசநசு குமரன், இவன் குமரர் புருசித், ருக்மன், ருக்மேசி, பிருது, சாமகன். தருமன் குமரன் என்பர்.

உருசிப்பிரசாபதி—இவன் தன் தேசமுதலியவற்றை விட்டுக் கல்யாண மில்லாதிருக்கையில் பித்ருக்கள் தோன்றி என் நீ கல்யாணஞ் செய்து கொள்ளவில்லை என்றனர். உருசி, தனக்கு இல்லறத்திலுள்ள வெறுப்பைக் கூறப் பித்ருக்கள் நீ மணங்கொண்டு இல்லறம்நடத்தாவிட்டால் எங்களுக்கு நரகம் உண்டாகுமென அரசன், நான் கிழவனாய் விட்டபடியால் எனக்கு யார் பெண் கொடுப்பாரென்று பிரமனையெண்ணித் தவமியற்ற அப்பிரமன் தரிசனந் தந்து, நீ நல்ல புத்ரனைப் பெற்றுப் பிரசாபதியாக என்று வரந்தந்து மறைந்தனன். பின்பு மச்சடி நதியிலிருந்து பிரமலோசையெனும் ஒரு அப்சரசு வந்து அரசனைப் பார்த்து எனக்கு வருணபுத்ரனாகிய புஷ்கரன் தேசசால் மாலினி எனும் பெண்ணிருக்கின்றனள். அவளை நீர் மணந்து ஒரு புத்ரனைப் பெறுக என்றனள். அரசன் அவ்வகை செய்து ரோச்சியனென்னும் புத்ரனைப் பெற்றுப் பிரசாபதியாயினன். தவத்தால் இவன் சித்தம் ருசி பெற்றதால் இப்பெயர் பெற்றனன்.

உருசு—வசுதேவருக்குத் தேவகியிடமுதித்த குமரன்.

உருசுகன்—(சந்.) தேவாபிகுமரன். மனைவி தேவை.

உருச்ரவன்—சதச்ரவன் குமரன்.

உருட்சூதன்—(சூ.) பிரகத்திரதன் குமரன்.

உருண்டகன்—சிவகணத்தவரில் ஒருவன்.

உருத்தன்—கத்ரு குமரன், நாகன்.

உருத்திரகோடி — இது வேதாசலமென்னும் தலத்திலுள்ள தீர்த்தமும், தலமும் இதில் அநேக ருத்ரர் ஸ்நானஞ்செய்து சித்தியடைந்தனர். (திருக்கழுக்குன்றபுராணம்).

உருத்திரகோடிதீர்த்தம் — பாண்டவர்கள் வனவாசத்தில் ஸ்நானம் செய்த ஒரு தீர்த்தம் (பா. வன.)

உருத்திரங்கண்ணனார் — இவர் சங்கப்புலவருள் ஒருவர். இவரைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்பர். பத்துப்பாட்டில் தொண்டைமா னிளந்திரையன் பொருட்டுப் பெரும்பாணாறு பாடியவர். பெரும்பாணாறு, இளந்திரையன் நாட்டின் வளத்தையும், அவன் கொடையையும் புகழ்வது, பட்டினப்பாலை, கரிகால்வளவன் நாட்டினையும் ஆற்றினையும் கொடையையும் புகழ்வது.

**உருத்திரசன்மர்**—1. மதுரை உப்பூரிக் குடிக்கிழார் மகனார்.

2. சிவபூசையால் குருடு நீங்கிய அந்தணர்.

**உருத்திரசாவர்ணி** — பன்னிரண்டாம்மன்வந்தரத்து மனு.

**உருத்திரசித்தமகருஷி** — உருத்திரர் உடலிற் பிறந்த ருஷிசிரேட்டர்.

**உருத்திரசுவாமி**—ஒரு வேதியன். இவன், பத்தினி அதிதிக்கு அன்னமிடாததால் கோபித்து, அவளைக் கொன்று கிணற்றிவிட்டு நீங்கப் பிரமகத்தியாற் பிடியுண்டு இருபத்தைந்து வருடம் துன்பமடைந்து பிறகு வடவனத்தில் முத்தித் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து புனிதனானவன். (திருவாலங்காட்டுப் புராணம்).

**உருத்திரசேநன்**—குபேரன் குமரன்.

**உருத்திரதத்தன்**—சச்சந்தன் மந்திரி.

**உருத்திரதீர்த்தம்** — ஒரு தீர்த்தம். இது கங்கைக் கரையிலுள்ளது.

**உருத்திரபசுபதிநாயனார்** — சோழநாட்டுத் திருத்தலையூரில் பிராமணகுலத்தில் சிவபக்தியிற் சிறந்த பசுபதி யென்பவர் ஒருவர் இருந்தார். அவர் தாமரை மடுவில் அகோராத்ரம் கழுத்தளவு ஜலத்தில் சிரமேற்குவித்த கையராய் ஸ்ரீ ருத்ரமந்திரஞ் செபித்திருந்து பரமசிவன் திருவடி யடைந்தனர். ஆதலா லிப்பெயரடைந்தனர். (பெரியபுராணம்).

**உருத்திரபர்வதம்**—சாநவிநதிக் கருகிலுள்ள மலை.

**உருத்திரப்ரயாகை**—மந்தாகினிக்கும் அளகநந்தைக்கும் இடையிலுள்ள க்ஷேத்ரம்.

**உருத்திரமன்யமுனிவர்** — இரேவண சித்தர் என்பவர் சோழராஜன் புத்ரி முதலிய மங்கையரை மணந்து இருக்கையில் ஒரு தடாக மெடுக்க உன்னி அத்தொழிலை உடனிருந்தியற்ற மேற்படி மங்கையர்களுக்குக் கட்டளையிட்டார். அம்மங்கையர் அவ்வாறு இயற்றுகையில் சோரன் புதல்வி கருக்கொண் டிருத்தலில் முடியாதென்றனன். சித்தர் என் கட்டளை மறுத்ததால் என் கருவைத் தந்து நின் தந்தைபாற் செல்கவென, அரசகுமரி கருவை எவ்வாறு தருவதெனச் சித்தர் அவள் வயிற்றை நகத்தாற் கீறிக் கருவை யெடுத்து இச்சிசுவைப்போற்றுக எனப் பூதேவிபால் அளித்தனர். அவள் பூமியைப் பிளந்து வந்து சிசுவை எடுத்துச்சென்று வளர்த்தனள். இவர் தாய்க் கருவிலிருந்து உக்கிரகோபத்தாற் கவரப்பட்டுப் பூதேவியால் வளர்க்கப்பட்டமையின் இப் பெயர் பெற்றனர். (வீரசிங்காதன புராணம்.)

**உருத்திரமுனிவர்** — திருமூலர் மாணாக்கரில் ஒருவர்.

**உருத்திரர்** — 1. பிரமன் வேண்டுகோளால் சிவமூர்த்தியா லதிட்டிக்கப்பட்டுப் பிரமனெற்றியில் தோன்றிச் சிருட்டி செய்த உருத்திரர் பதினொருவர். இவர்கள் உலகபாலகராயினர். இந்த உருத்திரர் ஒவ்வொருவரும் கோடி உருத்திரரைப் படைத்தனர். இவர்களைப் பிரமன் கண்டு வினைக்கீடாகப் படையாமல் முடியாச் சிருட்டி செய்தல் கூடாதென வேண்ட, நின்று சிவசாரூபந்தாங்கித் தேவர் கூட்டமானவர்கள். இவர்களில் திக்குப்பாலகர் உருத்திரர்கள். இந்திரதிக்கில் கபாலீசன், அசன், புத்தன், வச்சிரதேகன், பிரமத்தனன், விபூதி, இவ்வியன், சாத்தா, பிணகி, திரிசோதியன். அக்நிதிக்கில் உருத்திரன், உதாசநன், பிங்கலன், சாதகன், அயன், சுவலன், தகனன், வெப்புரு, பிரமாந்தகன், க்ஷயாந்தகன். இயமதிக்கில் யாமியன், மிருத்யு, அரன், தாதா, விதாதா, கத்தரு, காலன், தன்மன், சங்யோத்தா, வியோகிருதன். நிருதிதிக்கில் நிருதி, மாரணன், அரந்தா, குரூரதிருட்டி, பயாந்தகன், ஊர்த்வகாயன், விரூபாக்ஷன், தூமிரு, உலோகிதன், தெங்கிருட்டினன். வருணதிக்கில் பலன், அதிபலன், மகாபலன், பாசத்தன், சுவேதா, செயபத்திரன், தீர்க்கவாகு, செலாந்தகன், வடவாமுகன், தீமான். வாயுதிக்கில் சீக்கிரன், லகு, வாயுவேகன், தீக்ஷணன், சூக்குமன், க்ஷயாந்தகன், பஞ்சாந்தகன், பஞ்சசிகன், கபத்தி, மேகவாகனன். குபேரதிக்கில் நிதீசன், ரூபவான், தன்யன், சௌமியன், சௌமியதேகன், பிரமத்தனன், சுப்பிரகடன், பிரகாசன், லக்குமிவான், சோமேசன். ஈசானதிக்கில் வியாத்தியாதீபன், ஞானபுகன், சர்வன், வேதபாரகன், மாத்ருவிருத்தன், பிங்கலாக்ஷன், பூதபாலன், பலிப்பிரியன், சர்வவித்யாதிபன், தாதா. அண்டகடாக வோட்டுக்குக் கீழ் விஷ்ணுதிக்கில் அநந்தன், பாலகன், வீரன், பாதாளாதிபதி, விபு, இடபத்துவசன், உக்ரன், சுப்பிரன், லோகிதன், சர்வன். அண்டகடாகத்தின் மேல் பிரமதிக்கில் சம்பு, விபு, கணாத்யக்ஷன், திரிய

க்ஷன், திரீதேசகவாதகன், சன்வாகன், விவாகன், நபன், லீபசு, விலக்ஷணன் என்பவர்களாம்.

2. அக்நிக்கு அதிதேவர். இவர் வெண்ணிறத்துடன் கரங்களில் வியாக்யான மூத்ரை, அக்நி, ஞானமூத்ரை, சூலம், அரவப்பூணூல் கொண்டிருப்பர்.

3. பதினொருவர் மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசாநன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன்.

உருத்திரவாசம்—காசிக்கு ஒரு பெயர்.

உருத்திரன்—1. தேயுபூதத்தை அதிட்டித்துக் காரணமாயையெனும் உபாதானத்திருந்து மாயை முதல் பிருதுவி முடிவாக நெருங்கின (௩௧) தத்துவத்திலும் பொருந்த அதோவியாத்தியாக வியாபித்திருப்பவன். (சதா.)

2. இவர் சங்கமருவிய தமிழ்ப் புலவர்களில் ஒருவர். குறுந்தொகையில் "புறவுப்புறத்தன்னபுன்காலுகா" எனப் பாலையைப் பாடியவர். (குறு-உஎச.)

3. கனகவிசயர்க்குத் துணையாயின ஓர் அரசன். (சிலப்பதிகாரம்.)

உருத்திராகாரன் — சண்முக சேநாவீரருள் ஒருவன்.

உருத்திராசுவன் — அகம்யாதியின் குமரன். இவனுக்குக் கிருதாசி என்பவளிடம் பத்துக் குமரர் பிறந்தனர். அவர்களில் மூத்தவன் இருசேயு.

உருத்திராக்ஷம் — இது இமய மலையைச் சார்ந்த நாடுகளிலுண்டாம் விருக்ஷத்தின் பழத்திலுள்ள வித்து. இது, வைதீகரால் கொண்டாடப்பட்டது. இதனைச் சைவர் கேசாதிதேக பரியந்தம் தரிக்கின்றனர். இது ஆணவாதி, மனக் குற்றங்களையும் வாதாதி முத்தோஷங்களையும் போக்கும். இது திரிபுர சங்காரத்தின் பொருட்டு எழுந்தருளிய ருத்ரமூர்த்தியின் கோபக் கண்ணில் உண்டான ஒரு வித்தினின்று முளைத்த விருட்சத்தின் மணி. உருத்திரன் கண்ணிற் பிறந்ததால் உருத்திராக்ஷம் எனப் பெயர் பெற்றது. இதனைச் சிவாகமத்திற் கூறிய முறைப்படி சிறமுதவிய தலங்களில் தரிப்பவர் சகல பாபங்களினின்று நீங்குவர். இம்மணி தரித்து முத்தி பெற்றோர் சரிதைகளை உபதேசகாண்டம் சூதசம்மிதை முதலிய நூல்களிற் காண்க. இதில் வெண்ணிற முள்ளன வேதியர்சாதி யெனவும், செந்நிறமுள்ளன க்ஷத்திரிய சாதியெனவும், பொன்னிறமுள்ளன வைசியர்க்குரிய எனவும், கருநிறத்தன சூத்திரர்க் குரியவெனவும் கூறும். இவற்றில் ஒன்றுமுதல் (௧௩) முகமளவும் உண்டு. அவற்றின் அதிதேவதைகளாவார். (௧, ௨,) சிவன், ௩. அக்நி, ௪. பிரமன், ௫. காலாக்நி, ௬. கந்தன், ௭. ஆதிசேஷன், ௮. கணபதி, ௯. வைரவன், ௧௦. விஷ்ணு, ௧௧. ஏகாதசருத்ரர், ௧௨. துவாதசாதித்தர், ௧௩. குமாரக்கடவுள். இவற்றில், சிரத்தில் ௧. மாலையாக (௩௬), கழுத்தில் (௩௨) மார்பில் (௧௦௮) மணிக்கட்டுகளில் (௧௨) காதுகளில் (௬) தரித்தல் வேண்டும்

உருத்ரருத்ரிகள்—1. இவர்கள், சுத்தவித்யா தத்வத்தில் வாம, சேஷ்ட, ருத்ர, கால, கலவிகரண, பலவிகரண, பலப்பிரமதந, சர்வ பூததமந, மனோன்மந, திரிகுணி, பிரம்மவேதாளி, தாணுமதி, அம்பிகை, ரூபிணி, சுவாலை, நந்தினி, வித்யாபதி, புவனங்களில், ரத்தாங்கச்சவி யுள்ளவர்களாய், சூலகபால பாணிகளாய், தம்மூர்த்தித்யான நமோச்சாரண மாத்திரத்தில் சர்வசக்தி ப்ரதரா யிருப்பர். அவர்களாவார்.

2. உருத்திரர் ஸ்ரீகண்டர், அநந்தர், சூக்ஷ்மர், திரிமூர்த்தி, அமரேசர், அரபீஜர், பாரபூதி, திதீசர், தாணுகர், அரசேங்கிடேசர், பவுரீகர், சத்யோசாதர், அநுக்ரஹர், ஈச்வரர், அக்ரூரர், மஹாசேநர், குரோதசர், சண்டேசர், பஞ்சாந்தகர், சிவோத்தமர், ஏகருத்ரர், கூர்மர், ஏகநேத்ரர், சதுராநனர், அஜேசர், சரு, சோமேச்வரர் லாங்குலி, தாருகர், அர்த்தநாரீசர், உமாகாந்தர், ஆஷாடி, டிண்டி, அத்ரி, மீனர், மேஷர், லோகிதர், சஹிஸ்தர், கலண்டர், ததுவிலண்டர், மஹாதாளர், வர்லி, புஜங்கேசர், பினாகேசர், கஷ்டசர், பகர், சுவேதர், ப்ருகு, லகுலி, சிவர், சம்வர்த்தர். உருத்ரிகள் பூர்ணோதரி, வீரசேநி, சால்மலி, லோலாக்ஷி, வர்த்துளாக்ஷி, தீர்க்கநாசிகை, தீர்க்கமுகி, தீர்க்கசிம்சு, குண்டோதரி, அர்த்தகேசி, விகிர்தமுகி ஜ்வாலாமுகி, உல்காமுகி, ஸ்ரீமுகி, வித்யாமுகி, சாஸ்வதி, மாகாளி, சர்வசித்தி, சமன்மிதி, கௌரி, திரிலோக்யை. வித்யை, மந்தாசத்தி, ஆத்மசத்தி, பூதமா, தேவாம்போதி, திராவிணி, நாகரீகேசரி, மஞ்சரிரூபிணி, விரை

சேசாரோதரி, பூதாதனி, பத்ரகாளி, யோகினி, சங்கினி, கர்கினி, காளராத்ரி, மூர்த்தன்யகபர்த்தினி, வாசன்மையை, சயை, சுமுகை, டஸ்வர்யை, ரேவதி, மாதவி, வாருணி, சக்ஷாவதாணி, சதாசைலக்ஷ்மி, பிநாகி, வியாபினி, மாயாநனி, விதை.

உருபுமயக்கம் — ஒரு வேற்றுமையுருபு நின்று வேறொரு வேற்றுமைப் பொருளைத் தருவது. (நன்).

உருப்பசி — ஊர்வசியைக் காண்க. (சிலப்.)

உருப்புட்ரோச்சான்பிள்ளை — நாதமுனிகளை ஆச்சரயித்த வைஷ்ணவாசாரியர். (குருபரம்பரை.)

உருமண்ணுவா—1. இவன் பலவகைப் பெருமையும் வாய்ந்த உயர்குடியிற் பிறந்தவன். உதயணனுடைய மந்திரிகள் நால்வருள் ஒருவனும். உயிர்த்தோழர்களுள்ளும் ஒருவனும்ஆவன். வயந்தகனுடன்சேர்த்தே பெரும்பாலும் வழங்கப்படுவோன். யூகிக்கு அடுத்தபடி யெண்ணும் பெருமை வாய்ந்தவன். சேனைகளைப் போரில் நடத்துவதில் மிக்க ஆற்றலுள்ளவன். எந்தச்சமயத்திலும் மனநடுக்கம் கொள்ளாதவன். மிக்க புகழினன், நட்பு, ஊக்கம், வீரம், பகைவர்க் கஞ்சாமை, காலம், இடம், முதலியவற்றை நனகு ஆராய்ந்தே ஒவ்வொன்றையும் செய்யத் துணிதல், நன்றியறிவு முதலியவை இவன்பாலுள்ள விசேட குணங்கள். வாசவதத்தையை வலிந்து கொண்டு வந்த உதயணனை மிக உபசாரத்துடன் வரவேற்று அழைத்துச்சென்று சயந்திநகரில் அவனை அவனுக்கு யாதொரு கவலையு மில்லாதபடி பாதுகாத்து மகிழ்வித்து வந்தோன். அவளைப் பிரிந்து வருந்திய அவனுக்கு அடிசில் உடை முதலியவற்றைக் கொடுக்கும்படி தோழர்களால் நியமிக்கப்பெற்ற உண்மையன்பினன். இராசகிரிய நகரத்தில் உதயணன் மறைந்திருந்த பொழுது தானும்மறைந்து அவனைப் பாதுகாத்து வந்தவர்களில் இவனுமொருவன். உதயணனுடைய வாழ்வைக்கருதித் தன்னுடைய உயிருக்குச் சிறிதும் இரங்கா போரில் அவனுக்கு முன்சென்று பகைவராற் சிறைபடுத்தப்பட்டோன். கோசம்பி நகரத்தைப் பெற்றபின்பு தன் பிரிவாற்றுமல் வருந்தி "இருமணமெய்திய வின்பமெல்லா முருமண்ணுவாவினை யுற்றதற்பின்னை" என உதயணனாற் கூறப்பெற்ற உத்தமசீலன். மறைந்திருந்த யூகியின் கருத்தைத் தானறிந்து கொள்ளுதற்கும், அவனுக்குத் தெரிவித்தற்குமாகச் சாதகனென்னும் ஒரன்பனை இடையே வைத்துக்கொண்டு சில முக்கியமான காரியங்களை முடித்தவன். மிகவும் சிக்கலான வழக்கைத் தீர்த்தலில் வல்லவன். உதயணன் விருப்பத்தின்படி பதுமாபதியின் தோழியாகிய இராசனை யென்பவளை மணஞ் செய்துகொண்டோன். பல பரிவாரங்களினிடையே அவன் தன் கையினல் அலங்கரித்து அளித்த ஏறுதி மோதிரமும் சேனுபதிப் பட்டமும், பெற்றதன்றிச் சயந்தி இலாவாணக மென்னும் பெரிய நகரங்களையும் அவற்றைச் சூழ்ந்த இடங்களையும் மிக்க வருவாயையுடைய பல ஊர்களையும், சதுரங்கப்படைகளையும், பெற்றவன். துறவறம் பூண்டு தவம்செய்து கொண்டிருந்த தன் தந்தைக்கு யாதொரு துன்பமும் நேராதபடி வேண்டியவற்றை அளித்து வழிபாடு செய்து ஒழுகியவன். கருவுற்ற வாசவதத்தையுடன் விமானமேறி ஆகாய வழியேசென்ற உதயணனேடுகூடசென்றவர்களில் இவனும் ஒருவன். இவனுடைய புதல்வன் பூதியென்பான் (பெ. கதை.)

2. ஜமதக்கினியின் ஜேஷ்ட புத்திரன். இவன் சகோதரர் சுஷேணன், வசு, விஸ்வாவசு, பரசிராமன் முதலியவர்கள்.(பார.)

உருமண்ணுவாவின்தந்தை — இவன் துறவு பூண்டு இலாவாணகத்திற்கும், இராசகிரிய நகர்க்கும், இடையே உள்ளதும், சேதி நாட்டைச் சார்ந்ததுமான வனமொன்றிலுள்ள ஆச்ரமத்திற் பல முனிவர்களுடன் தவம் செய்துகொண் டிருந்தவன். தாம் தீயில் வெந்ததாகப் புலப்படுத்தி வேற்றுருவங் கொண்டு யூகியுடன் போந்த வாசவத்தையும், சாங்கியத் தாயையும் சிலநாள் பாதுகாத்துச் சண்பை நகரத்தி லிருக்கும்படி அவர்களை அனுப்பியவன். உருமண்ணுவாவின் குணவிசேடங்களுக்கும் அவனேற்றத்திற்கும், இவனது நல்லொழுக்கமே காரணம். சயந்திநகர முதலியவற்றை உருமண்ணுவாவிற்குச் சீவிதமாகக் கொடுத்த உதயணன் "உன்னுடைய அருமைத் தந்தைக்கு வழிபாடு செய்து கொண்டு அங்கிருந்து யாம் வேண்டிய பொழுது வந்து செல்க" என்று சொன்னமையால் இவன்பால் அவனுக்குள்ள அன்பு வெளியாகிறது. இவனது இயற்பெயர் தெரியவில்லை. (பெருங்கதை.)

உருமிளை — யமன் பாரி.

உருமை—சுக்ரீவன் தேவி. வாலியால் சிறிது நாள் போஷிக்கப்பட்டவள். (இரா.)

உருரு — 1. இவன் ஒரு அசுரன், இவன் கடலிலிருக்கும் பட்டணத்தை யாள்பவன். இவன் கடலினின்று வெளிவந்து தேவர்களை வருத்த நீலாசலத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த ரௌத்ரி தேவியைத் தேவர்வேண்ட தேவி சிரித்தனள். அங்கையிலிருந்து பல ரௌத்திரிகளுண்டாயினர். இவர்களுடன் சாமுண்டி, காளராத்ரிகள் தோன்றினர். இவர்களை ஏவி அசுரனைச் சங்கரிப்பித்தனள். (வராக புரா.)

2. ஒரு இருடி.

3. பிருகுவின் பத்தினி புலோமைக்கு சவனர் பிறந்தார். அவருக்குச் சர்யாதி என்னும் அரசன் குமரி சுகன்யை பாரியையாயினள். அவளுக்குப் பிரமதி என்பவர் பிறந்தார். அப்பிரமதி பிரதாபியை மணந்து உருருவைப் பெற்றனள். அந்த உருரு பிரமத்வரயை மணந்தனர். இவர் பிரமத்வரையை மணக்குமுன் அவளிடங் கொண்ட மோகத்தால் அவளைக் காணச் செல்லுகையில் அவள் பாம்பு கடித்து இறக்கக்கண்டு தாம் சாகத்துணிந்து ஒருவாறு தேறித் தாம் இருந்த ஆற்றை அடைந்து ஸ்நாநாதிகள் முடித்து நான் சூரியபூசை நித்ய கர்மாதிகள் விடாமற் செய்திருந்தேனாயின் என் மனைவி உயிர் பெறக் கடவுள் எனக், காலதூதன்ஒருவன் எதிர்வந்து உன் ஆயுளிற் பாதி தரின், அவள் உயிர் பெறுவாள் என அங்ஙனம் இசைந்து விசுவாவசுவுடன் காலதூதன் யமபுரஞ் சென்று மீண்டு உயிர்தரப்பெற்று மணம் புணர்ந்தவன். இவன் தன் மனைவியைக் கொன்ற பாம்புகளின் பகைதீரக் கண்ட இடங்கள்தோறும் பாம்புகளைக் கொன்றுவருகையில் டுண்டுபன் என்ற பாம்பைக் கொலைசெய்யச் செல்லுகையில் அப்பாம்பு தன் வரலாறு கூறக்கேட்டுச் சர்ப்பங்களைக் கொலை செய்வதை விட்டு நீங்கி இருந்தனன்.

4. ஒரு அசுரன். இவன் மகாபலவான். தாக்ஷாயணியை மனைவியாகப் பெற எண்ணித் தவம்புரிந்து பிரமதேவர் வந்து அது கூடாத காரியமெனக் கேளாது, மீண்டும் சிவபெருமானை யெண்ணித் தவமியற்றுகையில் தாக்ஷாயணி கோரவுருக் கொண்டு சங்கரிக்க இறந்தவன். தாக்ஷாயணி மீண்டும் சிவபெருமானை யடைந்தனள்.

உருவகவணி — அஃதாவது உபமேயத்திலுபமானத்தை ஒற்றுமையினாலாவது அதன் செய்கையினாலாவது ஆரோபித்தலாம். இதனை வடநூலார் ரூபகாலங்காரமென்பர்.

உருவசி — ஒரு தெய்வதாசி. புரூரவனைக் காண்க. இவளுக்கு ஊர்வசி, உருப்பசி எனவும் பெயர்.

உருவர்க்கன் — வசுதேவருக்குப் புத்ரன்.

உருவலகன் — வசுவதேவருக்கு இளையிடமுதித்த குமரன்.

உருளைக்கிழங்கு—1. இது முதலில் அமெரிக்கா தேசத்திலிருந்து மற்ற தேசங்களுக்குக் கொண்டுபோகப்பட்டது. இக்கிழங்கில், சிகப்பு, வெள்ளை, பூந்திக்கிழங்கு, கிட்னிக் கிழங்கெனப் பலவகை உண்டு. இக் கிழங்குகள் செடிகளின் அடிப்பாகவேரில் தனித்தனி பெருத்துக் காணப்படுகின்றன. இவை உண்டாம் நாட்டிற் சிலர் இதனையே ஆகாரமாகக் கொண்டிருக்கின்றனர். இது வாய்க்கு இனிமையும் வன்மையுந் தருவது.

2. மாமிச பக்ஷணிகளாகிய அசுருடன் நெடுநாள் போரிட்ட தேவர்கள், தன்வந்திரி பகவானை மாம்சத்தையொத்த ஆற்றலுள்ள பொருள் என்னவெனக் கேட்கப் பகவான் இக்கிழங்கினைகூறத் தேவர்களுண்டு பகை வென்றனர் எனத் தேரையர் கூறுவர்.

உருபம்—கட்புலனால் கிரகிக்கப்படுவது,ஜாதியுடையது, விசேஷகுணம் பிரதிவி முதலிய மூன்றனுள் இருப்பது.

உருபப்பிரமர்--உலகம் முப்பத்தொன்றனுள் பன்னிரண்டாவதாகிய, பிரம்ம காயிக லோக முதலிய பதினாறிலு மிருக்கும் உரூப பிரம்மகணங்கள். இவர்கள் பதினாறு வகையினர். (மணிமேகலை).

உருபாசுவன்—கிருதாசுவனுக்கு ஒருபெயர்.

உருபாவதாரம்—ஒரு நூற்பெயர். அமுதசாகரர் இதைத் தாமியற்றிய யாப்பிற்கு முதனினைப்புக் கட்டளைக் கலித்துறைக்குக் காட்டாகக் கொண்டனர்.

உருரவன் — சநகன் குமரன். மனைவிக்கு ஆகாயவாணியா லாயுள் கொடுப்பித்துப் பாம்புகடித் திறந்தவளை உயிர்ப்பித்தவன். இவனைப் பிரமதிக்குக் கிருதாசியிடம் பிறந்தவன் என்பர். இவன் பாம்புகளைக்

கொல்லத் தொடங்குகையில் டூண்டுப மென்னும் பாம்புருப்பெற்ற சகஸ்திரபாத முனிவர் நீக்கினர். குமரன் சுநகன். உரு ருவைக் காண்க.

உரை, கச — அவை, க. பாடவுரை, உ. கருத்துரை, ங. சொல்வகையுரை, ச. பதவுரை, டு. தொகுத்துரை, சு. உதா ரணவுரை, எ. வினவுரை, அ. விடையுரை, கூ. விசேடவுரை, க0. விரியுரை, கக. அதி காரவுரை, கஉ. துணிவுரை, கங. பய னுரை, கச. ஆசிரிய வசனவுரை என்பன வாம். இவையன்றிக் காண்டிகையுரை யெனவும் விருத்தியுரை யெனவும் இர ண்டுள. அவற்றுள் காண்டிகையுரையா வது—கருத்து, பதவுரை, உதாரணம், வினு, விடை ஆகிய ஐந்துங் கூடியதாம். விருத்தியுரையாவது இக்காண்டிகை உரை யுடன் மேற்கூறிய பதினன்குவகை உரை களையும் பொருந்தி ஆண்டைக் கின்றி யமையாத யாவற்றையும் விளங்கும்படி யாகத் தன்னுரையானும், பிறநூலானும், செய்யுளின் உண்மைப்பொருளை விளக் குவதாம்.

உரை—(சத்தப்பிரமாணம்) ஆகமம், ஆபத வாக்ய ப்ரமாணம்.

உரைகேட்டு நயத்தல்—துன்பத்தோடு தங் கிய சூழ்ந்த தொடியினையுடைய தோளி, உயர்ந்தமலை நாடன்றன் வார்த்தையைக் கேட்டு விரும்பியது. (பு-வெ. பெருந் திணை.)

உரையன்—இவர் சங்கமருவிய தமிழ்ப் புல வருள் ஒருவர் "செப்பினஞ் செலினே" எனும் பாலைப்பாடியவர். (குறு. 207.)

உரோகி — இது ஒருநதி Afghanistan. It was also called Roha.

உரோகிணம்—வாலகில்லியர் தவஞ் செய்து கொண்டிருந்த கசகச்ச பலவிருக்ஷம். அல ம்ப தீர்த்தக்கரையி லுள்ளது. இதில் கரு டன் கச்சபத்தையும் யானையையும் உணவு கொள்ள இதன்மீதிருக்க, கிளை முரிதல் கண்டு அம்மரத்தினையு முடன்கொண்டு வாலகில்லியருடன் நிஷ்புருஷ மலையில் இறங்கி உணவருந்தி அமுதங்கொள்ளச் சென்றனன். (பார.)

உரோகிணி—1. சுரதையின் பெண். காசி பர்பௌத்ரி. மான்களைப் பெற்றாள். (பார)

2. வசுதேவர் மனைவியரி லொருத்தி. இவள் வயிற்றில் தேவகி வயிற்றுதித்த பலராமர் மாறிப் பிறந்தனர்.—(பாக.)

3. தக்ஷன் பெண்களிலொருத்தி. சந்தி ரன் தேவி. நக்ஷத்திரங்களில் ஒன்றாயிருக் கிறவள். (பார.)

உரோகிதம்—இது ஒருதேசம். Rshtak, 42 Miles North West of Delhi.

உரோகிதன் — (சூ.) அரிச்சந்திரன் குமரன். இவன் புருஷமேதத்திற்குப் பயந்து ஆறு வருஷம் தீர்த்தயாத்திரை செய்து அசி கிரதனிடத்தில் சுனச்சேபனை யாகத்திற் குக் கிரயமாகக் கொண்டவன். தந்தை விச்வாமித்திரர் வஞ்சனையால் நகர்நீங்கிய காலத்து உடன்சென்று துன்பமடைந்து பாம்பு கடித்திறநது மீண்டுந் தேவர்களாற் பிழைத்து நகரடைந்தவன்.

உரோகிதாசர்—இவர் தோல்துன்னும் சக்கி லியர் குலத்துள் பிறந்து பரமோபகாரி யாய் அரிபக்தியுடையராய் விடியற்கால த்தி லெழுந்து ஸ்நாநமுதலியவை முடித்து தோலினால் ஆசன முதலிய அமைத்துத் துளசிவன மடைந்து சாளக்கிராமமாகிய திருமால்வடிவை வந்தனை செய்துவந்த னர். இதனை அவ்விடம் வந்தவேதியன் கண்டு தோலின்மேல் சாளக்கிராமத்தை வைத்துப் பூசித்தல் சுத்தமுடையதோ வென்ன தாசர் எக்காலத்தும் எப்பொருளி னும் நிறைந்திருக்குந் திருமாலைத் தியானி க்கும் மனம் தோலல்லவா? துதிக்கின்ற நான் தோலல்லவா? பூசிக்குங் தோலல்லவா! என்ன, கேட்ட,

உபவீதம் புனையும் வேதியர்களே புரிய அருகர் நீ இவ்வாறு பூசை செய் யாதே என வேதியனுரைப்ப ரோகிதாசர் என்னிடத்தும் உபவீத மிருக்கின்றது. நீ அறி என்று தன் மார்பைப் பிளந்து விள ங்குகின்ற நூலை வெளியாக விடுக்க வேதி யன் கண்டு மனத்தூய்மை யுடையோர் யாதுசெய்யினும் அடுக்குமெனத் துதித் துப் போயினன். ரோகிதாசர் திருமா லருளால் துன்பமில்லாது எழுந்து பெரு மாளை வாழ்த்தினர்.

உரோசநன்—1 யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷணை யிடமுதித்த குமாரன்.

2. இரண்டாம் மன் வந்தரத்தி லிந்திரன்.

உரோசமானன்—அச்வக்ரீவனம்சம், பாரத வீரன். கரூரதேசத் தரசன்.

உரோசனை—வசுதேவன் பாரி. குமரர் அஸ் தன், ஏமாங்கதன் முதலியோர்.

உரோசஸ்—விபாவசு என்னும் வசுவிற்கு உஷையிடமுதித்த குமரன்.

உரோச்சியன்—உருசியைக் காண்க

உரோடோகத்துக் கந்தரத்தனர் — இவர் கந்தரத்தன் என்னும் இயற்பெயருடையவர். உரோடோகம் — ஊர். இவ்வூர்ப் பெயர் ஒரோடோகமெனவும், ஒரோடகமெனவும், உரோடகமெனவும் ஏடுகளிற் பலபடியாகப் பிறழ்ந்து காணப்படுகிறது. இப்பொழுது இவ்வூர் ஓரகடமென்று திரிந்து வழங்குகிறது. காஞ்சிபுரம் தாலுக்காவிலுள்ளது. இவர் குறிஞ்சித்திணையையும் பாலைத்திணையையும புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் நOசு-ம் பாடலொன்றும், குறுந்தொகையிலொன்றும், அகத்தில் மூன்றுமாக (ரு) பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (நற்றி.)

உரோதனன்—அநபாவுகன் குமரன். இவன் குமரன் தேவாதிதி.

உரோமகருஷணர் — 1. உக்கிரசிரவசுவின் தந்தை அதாவது சூதபுராணிகர்க்குத் தந்தை.

2. சௌநகர்க்குத் தந்தை.

உரோம்கமதம் — இவர்கள் கிரீக்மதத்தை அனுசரித்தவர்கள். இவர்களுக்கு ஜூனஸ் என்பவன் சிருட்டிகர்த்தா. இந்தத் தேவன் ஜனிகூலம் என்னும் பர்வதத்தில் இருப்பன். இவனால் வருஷம் ஆரம்பமாகிறது. ஜனுவரி மாதத்தில் இவனை ஆராதனஞ் செய்வார்கள். இவர்களுக்குச் ஜுபிடர் பிரதான தேவன். இவன் ஒலிம்பஸ் மலையிலிருந்து மோக்ஷங்கொடுப்பன். இடிகளை உண்டாக்குவன். இவனுக்கு விக்டர் முதலிய அநேக நாமங்களுண்டு. இவன் இடியை உண்டாக்குபவனாதலால், இடி விழுந்து சாபவன் மோக்ஷமடைவன் என்பர். இவர்கள் ஜூனோச் சுபதேவதையாகவும், மினர்வாவை ஞானதேவதையாகவும் பூஜிப்பர், இவளுக்கு அதினு என்றும் பெயர். இவர்களுக்கு இந்துக்களைப்போல் எல்லாத் தேவதைகளுமுண்டு, உற்சவாதிகள் செய்வர், பலியிடுவர். சாஸ்திரப்பிரகாரம் நடந்துகொள்வர். கன்னியர்களை ஜீவபரியந்தம தேவ கைங்கர்யங்களைச் செய்யும்படி விடுவர். ரோமகர்களில் தத்வஞ்ஞானியான செனிகா, தேவன் ஒருவனே என்பன். எபிக்டிடன் தேவர்களில் ஜூபிடர் சிரேஷ்டனென்றும், ஆரூலியஸ், ஆண்டோனின்ஸ் என்பவர்கள் பிரபஞ்ச முழுதும் தேவனுடைய உபாதியேயென்றுங் கூறுவர்.

உரோமசன்மர்—ஒரு இருடி, தெய்வலோகத்தில் அருச்சுனன் செய்த வீரத்தைத் தருமன் முதலியோருக்குத் தெரிவிக்க இந்திரனு லனுப்பப்பட்டவர். தருமன் வனத்தி லிருக்கையில் அவனுக்கு நளன்கதை உரைத்தவர். (பார).

உரோமசன்மன் — ஒரு பூனை, பலிதனென்னும் எலியைக் காண்க. (பார.)

உரோமசன் — 1. சிவகணத்தலைவரில் ஒருவன்.

2. பிரமனுடன் முனிவர் வாதிட்ட காலத்தில் அவர்களை வாதில் வெல்லப்பிரமதேவர் தமது தலையின்நரைமயிரில்இவரைச் சிருட்டித்தனர். (திரு ஆமாத்தூர்புராணம்)

3. திருக்கண்ணமங்கையில் பெருமாளாவிஷ்டசித்தி யடைந்த இருடி.

உரோமதத்தன் — ஒரு வேடன், வழிபறித்துத் திரிந்து ஒரு வேதியனது நட்பால், சிதம்பரத் தலத்திற்கு ஐந்து நாழிகைவழி தூரத்தில் நின்று கோபுரதரிசனஞ் செய்தும், செய்வாரைப் போற்றியும் முத்தி பெற்றவன். (சிதம்பர புராணம்.)

உரோமபதன் — 1. அங்கதேசத் தரசன். தர்மரதன் குமரன். இவன் தசரதன் குமரியாகிய சாந்தையைச் சுவீகாரமாகக் கொண்டவன். இவன் குமரன் சதுரங்கன். பிராமணரைப் பகைத்து இவனுடு மழையிலாது வறப்பக் கலைக்கோட்டு முனிவரிடம் தாசிகளை அனுப்பி அவரை வருவிக்க மழை பெய்ததுகண்டு களித்தவன். தசரதர் வேண்டக் கலைக்கோட்டு முனிவரைப் புத்ரகாமேஷ்டிக்கு அனுப்பியவன். (இரா).

2. விதர்ப்பன் குமரன். இவன் குமரன் புரு.

உரோமமுனி — இவர் புசுண்டமாமுனிவர் குமரர். இவர் செய்த நூலைச் சட்டைமுனி கிழிக்காதபடி புசுண்டர் சடையிலொளித்து வைத்து அகத்தியருக்குக் காட்ட அவர் நெடுநாள் பொறுத்து மீண்டுங் கொடுத்தனர். இவர்க்கு உடம்பெல்லாம் மயிர். ஒரு பிரமனிறந்தால் ஒரு மயிர் உதிரும். அப்படி மூன்றரைக்கோடி பிரமாக்களிறந்தால் ஆயுள் முடிவு. இவரிறக்கின் அட்டகோண ருஷிக்கு ஒரு கோணம் நிமிருமாம்.

உரௌகிதம்—கௌரவசேனைக்குப் பாசறை செய்த இடம்.

உரோளத்திராச்வன் — அகம்யாதி புத்ரன். இவனுக்குக் கிருதாசியிடம் (கo) குமாரர்கள் பிறந்தனர். அவர்களுள் இருசேயு மூத்தவன்.

உரோளத்ரி — இவள் சாயங்காலத்தில், கருநெய்தற் புஷ்பம்போற் காந்தியுள்ளவளாய்ச் சற்றேதிரும்பின யௌவனமுடையளாய், சதுர்ப்புஜம், முக்கண், சடைமுடி, பூணுநூல், சந்திரசூடம் உள்ளவளாய்ச் சூலம், ஜபமாலைவலக்கரத்தும், அபயமும், சத்தி ஆயுதமும் இடக்கரத்திற் பெற்று இடபவாகனத்தில் பதுமாசனியாய்த் தியானிக்கப்படுஞ் சிவசத்தி.

உர்பனன்—ஒரு அரசன். இவன் திருச்சேர்ந்த மங்கலத்தில் சிவபூசைசெய்து பேறுபெற்றவன்.

உர்மிளை—யமன் பாரி.

உலகசாரங்கமாமுனி—பெரிய கோயிலென்னும் திருவரங்கத்தில் எழுந்தருளியிருந்த பாகவதர். இவர் பெருமாளுத்தரவால் திருப்பாணாழ்வாரைத் தோளில் தூக்கி வந்து பெருமாள்முன் விட்டவர். சம்பாதி இறகுதிர்ந்து வந்தபோது ஆதரித்தனர்.

உலகசிருட்டி — இவ்வுலகம் ஆதியில் ஆத்மாவாக இருந்தது. சராசரமாகிய அனைத்தும் அதை ஒழிந்து வேறில்லை. கடவுள் உலகத்தைச் சிருட்டிப்பேன் என்று நினைத்து ஜலம், வெளிச்சம், ஜீவர்கள் இவைகளைச் சிருட்டித்தார். இவ்வித ஜலத்திலிருந்து பிண்டமான ஒரு வஸ்துவை உண்டாக்கினர். கடவுள் அதை நோக்கிப் பார்த்தார். அது முட்டையைப் போல் வாய்திறந்தது. அந்த வாயில் இருந்து வாக்கு உண்டாயிற்று. அந்த வாக்கில் இருந்து அக்கினி உண்டாயிற்று. நாசிகள் பரவின. அவற்றிலிருந்து மூச்சு உண்டாயிற்று. மூச்சிலிருந்து வாயு உண்டாயிற்று. கண்கள் திறந்தன. கண்களிலிருந்து நோக்கம் பிறந்தன. அந்தக் கண்ணோக்கில் இருந்து சூரியன் பிறந்தான். காதுகள் விரிந்தன. காதுகளில் இருந்து கேள்விகள் பிறந்தன. அதிலிருந்து மண்டலங்கள் பிறந்தன. சருமம் விரிந்தன. சருமத்திலிருந்து உரோமம் உண்டாயிற்று. அதிலிருந்து பூண்டுகளும், விருக்ஷங்களும் உண்டாயின. மார்பு திறக்கப்பட்டது. மார்பிலிருந்து மனது பிறந்தது. மனத்திலிருந்து சந்திரன் உண்டாயினன். தொப்புள் வெடித்தது. அத்தொப்புளில் இருந்து விழுங்குகை பிறந்தது. அதிலிருந்து மரணம் பிறந்தது. பிறப்பிக்கிற அவயவம் வெடித்தது. அதிலிருந்து உற்பீஜம் பிறந்தது. அதில் இருந்து அதன் மூலமாகிய ஜலங்கள் பிறந்தன. இவ்வண்ணமாகத் தேவர்கள் உண்டாக்கப்பட்டு இந்த விரிந்த சாகரத்தில் விழுந்தார்கள். கடவுளிடத்து அவர்கள் பசிதாகத்தோடு வந்தார்கள். அவரை அவர்கள் இவ்வண்ணமாகக் கேட்டுக்கொண்டார்கள். எங்களுக்கு ஒரு சிறிய உருவத்தைக் கொடும். அதில் நாங்கள் அடங்கி ஆகாரம் புசிப்போம் என்றூர்கள். அவர் அவர்களுக்கு ஒரு பசுரூபத்தைத் தந்தார். அவர்கள் அது எங்களுக்குப் போதாது என்றூர்கள். அவர் அவர்களுக்கு ஒரு அசுவரூபத்தைக் காட்டினர். அவர்கள் அதுவும் தங்களுக்குப் போதாது என்றூர்கள். அவர் அவர்களுக்கு மனிதவடிவைக் காட்டினர். அவர்கள் நன்றூய்ச் செய்தீர். ஆ! ஆ! அதிசயமென்று கூவிச் சொன்னூர்கள். ஆகையால் மனிதன் மாத்திரமே நல்ல வடிவமாகவே செய்யப்பட்டான் என்று சொல்லுகிறது. இருக்கு வேதம். யஜுர் வேதத்தில் இந்த உலகம் ஆதியில் ஜலமாக இருந்தது. அதில் சிருட்டிகர்த்தா வாயுவாகி அசைந்து ஆடிக்கொண்டிருந்தார். அவர் இந்தப் பூமியை வராக உருக்கொண்டு தாங்கிக் கொண்டிருந்தார். பின் பிரபஞ்ச சிற்பியாகிய விச்வகர்மனுகி இந்தப் பூமியை உருப்படுத்தினர். அது பிருதுவி ஆயிற்று. சிருட்டிகர்த்தா பூமியைக் குறித்து ஆழ்ந்த சிந்தையாய்த் தியானித்துப் பார்த்துத் தேவர்களையும், உருத்திரர்களையும், ஆதித்தர்களையும் சிருட்டித்தார். அந்தத் தேவர்கள் சிருட்டி கர்த்தாவை நோக்கி ஜீவகோடிகளை நாங்கள் எவ்வாறு சிருட்டிப்போம் என்றனர். தியானத்தால் சிருட்டிக்க என்று வேதாக்கினியைக் கொடுத்துத் தேவபக்தியை முடியுங்கள் என்றூர். அதைக்கொண்டு அவர்கள் தபசுகளைச் செய்தனர் என்று கூறப்பட்டு இருக்கிறது. கடவுள் தம்முடைய தேகத்தில் பிரஜைகளைச் சிருட்டிக்கவிரும்பி முதலில் தியான மாத்திரத்தினலே ஜலத்தைச் சிருட்டித்து அதில் பீஜத்தை விட்டார். அது ஒருபொன் அண்டம் ஆயிற்று. அதில் தாமே பிரவேசித்துப் பிரம[illegible]ர். அம்முட்டையில் தாம் பிர

மாணத்தின்படி ஒரு வருஷகாலம் இருந்து அதனை இரண்டு பங்காக்கி ஒரு பங்கினால் சுவர்க்கத்தையும், மற்றொன்றால் பூமியையும் சிருட்டித்தார் பின் தத்துவங்களைச் சிருட்டித்தார். பின் தேவர் கூட்டங்களையும், சராசரங்களையும், யாகத்தையும், தமது முகம், கை, தொடை, பாதம் முதலிய உறுப்புக்களினின்று பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர்களையும், தமது தேகத்தை இரு பிரிவாக்கி, ஒன்றை ஆணாகவும், மற்றொன்றைப் பெண்ணாகவும் செய்து, புணர்ந்து விராட் என்னும் புருஷனையும் சிருட்டித்தார். அப்புருஷனே நான். அப்புருஷனில் இருந்து பத்துப் பிரஜாபதிகள் தோன்றினர். அப்பிரஜாபதிகளிடமிருந்து பலவித சிருட்டிகள் உண்டாயின எனவுங் கூறப்பட்டிருக்கிறது. வேதபுருஷன் முகத்தில் வேதியனும், தோளில் க்ஷத்திரியனும், தொடையில் வைசியனும், பாதத்தில் சூத்திரனும் பிறந்தனர் எனவும் காசிபராலும் தக்ஷப்பிரஜாபதி முதலியவரால் பிராணிகள் முதலிய உற்பத்தியெனவும் கூறும். சிவபுராணங்களில் சிவசத்தி சங்கற்பத்தால் உலகமுற்பத்தி யெனவும். விஷ்ணுபுராணங்களில் விஷ்ணுமூர்த்தி பிரமனைப் படைத்து உலகோற்பத்தி செய்வித்தனர் எனவும், பலபடித்தாகப் புராணங்கள் கூறும். பிரமன் உலகமனைத்தையும் சிருட்டித்து அவற்றைக் காக்கும்படி சிலபூதரைச் சிருட்டி செய்து நீங்கள் இவற்றைக் காக்க என அவர்களுட் சிலர் பசியுடன் யக்ஷாம் என்றார். மற்றவர் ரக்ஷாம் என்றனர். அக்காரணத்தால் யக்ஷராகவும் மற்றவர் ராக்ஷஸராகவும் ஆயினர் எனவும் மற்ற ஜாதிகள் உயர்குலத்தவர், இழிகுலத்தவரையும் இழிகுலத்தவர்உயர்குலத்தவரையும்கலந்ததால் உண்டாயின என்றும் புராணதிகள் கூறும்.

உலகத்திலுள்ள எழுவகை அற்புதங்கள் — (1) வட அமெரிகாவில் நயகரா நீர்வீழ்ச்சி, (2) இத்தாலியாநகரத்துச்சாய்ந்தகோபுரம், (3) மத்யதரைக்கடலை யடுத்த ரோட்ஸ் தீவின் துறைமுகத்வாரத்திலுள்ள பிரமாண்டபூதவுருவம், (4) எகிப்த்துத் தேசத்திலுள்ள கற்கோபுரங்கள், (5) ஆக்ரா நகரத்திலுள்ள தாஜ்மாலென்னும் கல்லறைவாசல், (6) இங்கிலாந்தில் சக்கரவர்த்தி யிடமுள்ள கோஹினூர் எனும் பெருத்தவயிரக்கல், 7) சீனதேசத்துப் பெருமதில்.

உலகத்திலுள்ள ஜனங்களின் உருநிற முதலிய ஆப்பிரிகர் — இவர்கள் நீக்ரோஜாதியார் எனப்படுவோர் நிறம் கறுப்பு, சப்பை மூக்கு, உதடு தடிப்பு, மயிர்சுருட்டை. தென் அமெரிகர் இவர்கள் செந்நிறம், நீண்டகன்னம், நீண்டமயிர் உடையர். மலேயர்- பழுப்புநிறம், முரட்டுமயிர் முகம் தட்டை, குறுகிய தலை, உறுதியான தேகம் உடையார். சீனர், ஜபானியர், திபேத், மங்கோலியர் மஞ்சள்நிறம், கீழ்நோக்கிய பார்வை, தட்டை முகம், குறுகிய தலை, முரட்டு மயிர் ஐரோப்பாகண்டத்தவர் - வெண்ணிறம், அழகிய முகம், பொன்னிறமயிர், பொன்னிறக்கண்களுடையவர்கள். ஆசியா கண்டத்தின்தென்பாகத்திலுள்ளவர்கள் பொன்னிறம் மங்கலான கருமை அழகிய முகம், சமப்பார்வை, கறுத்த நீண்ட மயிர் உடையவர்கள். (பூகோளம்)

உலகத்தில் வசிக்கும் ஜீவராசிகளின் வகை- சிங்கம், புலி, கழுதைப்புலி, வேங்கைப் புலி, காடி, வெண்காடி, கருங்காடி, யானை, நீர்யானை (அல்லது) டாபிர், கல்லானை, வெள்ளையானை, ஒட்டகம், ஒட்டகக்குதிரை (அல்லது) கிராப்பி, ஒட்டைச்சிவிங்கி, குதிரை, வரிக்குதிரை, எருமை, காட்டெருமை (அல்லது) பைசன், ஓநாய், செந்நாய், மான், கலைமான், புள்ளிமான், கஸ்தூரிமான், சிறுத்தை, குரங்கு, மனிதக்குரங்கு, நாய்க் குரங்கு, குட்டைவால் குரங்கு, கொறில்லா, உராங் உடாங், சிம்பன்னி, கிப்பன், நாய், நீர்நாய், மரநாய், மோப்பம் அறியும் நாய், வீரநாய், நரிவேட்டை நாய், முயல்வேட்டை நாய், கௌதாரியைப் பிடிக்கும் நாய், எலியைக் கொல்லும் நாய், ஆட்டுநாய், நரி, குள்ளநரி, பசு, எருது, முயல், பூனை, புனுகு பூனை, காட்டுப்பூனை, ஆடு, வெள்ளாடு, செம்மறியாடு, பள்ளையாடு, பன்றி, முட்பன்றி, காங்கரு, தேவாங்கு, மயில், குயில், கருங்குயில், வரிக்குயில், ஆந்தை, நெருப்புக் கோழி, கோழி, சேவல், பட்டுப்பூச்சி, கறைப்பான் பூச்சி, மூட்டுப் பூச்சி, தெள்ளுபூச்சி, சிலந்திப் பூச்சி, எலி, சுண்டெலி, வெள்ளை எலி, பெருச்சாளி, காகம், பருந்து, கழுகு, புறா, அண்டங்காக்கை, வானம்பாடி, மாமிசம் தின்னும் பறவை, மீன்குத்திப் பறவை, மரங்குத்திப்பறவை, தட்டைமூக்குப் பறவை, கொட்டையை உடைத்துத் தின்னுப

பறவை, விதைகளைத் தின்னும் பறவை, ரீங்காரப் பறவை, தையற்பறவை, தூக்கணங்குருவி, தச்சன்குருவி, சிட்டுக்குருவி, ஊர்க்குருவி, பச்சைக்கிளி, மைனு தேன் சிட்டு, கனேரிப்பறவை, வாத்து, குள்ள வாத்து, பெருவாத்து, அன்னம், நாரை, நீர்க்கோழி, கொக்கு, உள்ளான், அணில், வெள்ளணில், பறக்கும் அணில், பெருஞ் செவ்வணில், சிறுநரை அணில், கொசுகு, ஈ, தேனீ, காடை, கௌதாரி, தரிஞ்சல், வௌவால், தேள், பாம்பு, நண்டுத்தெறுக்கால், நல்லபாம்பு, சாரைப்பாம்பு, மலைப்பாம்பு, நீர்நாகம், பல்லி, ஒணுன், அரணை, பூரான், செய்யான், மின்னல்பூச்சி, குளவி, எறும்பு, பேன், செல், மீன், முதலை, திமிங்கலம், நத்தை, ஆமை, நண்டு, தவளை, கயல்மீன், கடற்பஞ்சு, கடல் நத்தை, அட்டை, சுறுமீன், நாய்ச்சுறு, கொம்பன் சுறு, வாளஞ்சுறு, வெள்ளைச்சுறு, நெற்றிலி, கெண்டை, ஈசல் முதலிய.

உலகநாதன் — இவன் உலகநீதியென்னும் நீதிநூல் செய்தவன்.

உலகநீதி — இது நீதிகளைத் திரட்டி எளிய நடையிற் செய்யப்பெற்றதொரு நூல். உலகநாத ரென்பவரால் இயற்றப் பெற்றது. இவர் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் மனத்தை நோக்கி முருகக்கடவுளை வழிபடுவாயாக வென்று கூறியிருக்கிறுர்.

உலகந்தாதி—இந்நூல் பாண்டிநாட்டிலுள்ள பாபநாசத்திற் கோயில் கொண்டெழுந்தருளிய உலகம்மைமீது விக்கிரம சிங்கபுரம் நமச்சிவாய கவிராயரியற்றியது.

உலகப்பெருமாள் நங்கை — உய்யக்கொண்டார் திருவடி சம்பந்தி.

உலகம் — 1. (க) சுவர்க்கம், மத்தியம், பாதாளம், பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், ஜனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம், இவை மேலுலகங்களாம். கீழ் உலகங்களாவன: அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன. (கச)

2. நாமிருக்கும் இவ்வுலகம் பெருங்கடலால் சூழப்பட்ட உருண்டைவடிவம். அக்கடல் பலவகையாக நாற்புறங்களிலும் வெவ்வேறு பெயர்பெற்றிருக்கிறது. அக்கடலில் பல பிராணிகள் வசிக்கின்றன. அவற்றின் பெயர் முதலிய பெரும்பாலும் விளங்கா. அவை அக்கடலினடியில் உள்ள பிராணிகள், வெளிச்சமென்ப தறியா. அவை எக்காலத்தும் இருளில் வாழ்வன. சிலவற்றிற்குக் கண்களும் காதுகளுமில்லை. அவற்றிற்குப் பகலுமிரவுமில்லை. சூரியனில்லை, சந்திரனில்லை. சத்தங் கேட்பதில்லை. தம்மைத்தவிர வேறு பிராணிகளை அறியா. நமக்கும் கடலில்வாழ் பிராணிகளுக்கும் எவ்வளவு வேறுபாடுகள் இருக்கின்றன. பூமியிலோ மேற்கூறியவற்றிற்கு மாருக இருக்கின்றன. இருதுக்கள் மாறுபடுகின்றன. நம் கண்ணுல் பார்க்கக் கூடியவைபோகப் பார்க்கமுடியாத அதிசயங்கள் பல உள. அவற்றில் முக்யமானது சூரியன். சூரியனில்லாமல் ஒரு பிராணியும் உலகத்து வாழாது. அச்சூரியனை நாம் நாடோறும் பார்த்திருந்தும் அந்த நெருப்புக்கோள மின்னதென நாம் அறியோம். சந்திரனையும், நக்ஷத்திரங்களையும் அறியோம். நாம் உயரப்பறந்தும் அவற்றை அறியோம். நாம் இருக்கும் உலகமும் அப்படிப்பட்ட தென்பதே. அது அகண்ட ஆகாயத்தில் மிதந்துகொண்டிருக்கிறது. மற்றக் கிரகங்களைப் பற்றித் தனித்தனி காண்க. இது பல பூபாகங்களாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. அவை, ஆசியா, ஐரோப்பா, அமெரிகா, ஆபிரிகா, ஆஸ்திரேலியா.

உலகவழக்கு நவிற்சியணி — அஃதாவது உலகவழக்கச் சொல்லைத் தழுவிக்கொண்டு சொல்லுதலாம். இதனை வடநூலார் லோகோக்தியலங்கார மென்பர்.

உலகவறவி — இது காவிரிப்பூம்பட்டினத்துச் சக்ரவாளக்கோட்டத்துள்ள சம்பாபதி கோயிலின் முன்புள்ளது. இது பலரும் வந்து தங்குதற்குரிய தருமசாலை. (மணிமேகலை).

உலகாயதமதம்—இவன் நிரீசுவரவாதி. இத்தூலதேகத்தில் எதனுல் பல விவகாரங்கள் உண்டாகின்றன? எது நீங்கினுல் விவகாரங்கள் நீங்குகின்றனவோ அதற்குக் காரணமானதே ஆத்மா என்பன். அவ்வாத்மா ஸ்தூல சரீரத்திற்குப் பின் ஜீவித்தல் மாணமடைதல் இரண்டும் சரீராதீனம், இந்திரியமே ஆத்மா என்பன். உலகம் பாக்கு, வெற்றிலை, சுண்ணும்பு இவை கலந்த காலத்துண்டாஞ் சிவப்புப்போலவும், விறகைக்கடைந்த காலத்தி லுண்டான நெருப்புப்போலவும் உண்டாம். கடவுள், கன்மம், ஆத்மா என்பன இல்லையென்பன். இதை விட்டுப் புறமதங்களில்

சேர்ந்து பந்தித்திருப்பதே பந்தம். உலக இன்பங்களை அனுபவித்திருப்பதே முத்தி யென்பன். இது வியாழபகவான் இந்திரன்பொருட்டுக் கற்பித்த மதம், (தத்வ நிஜாநுபோகசாரம்).

**உலகேசன்** — ஒரு விரிஞ்சன்.

**உலூண்டாக்ஷன்** — சுகுணபாண்டியனைக் காண்க.

**உலுபதகன்** — கிருஷ்ணனை அம்பினால் கொன்ற வேடன்.

**உலுபதன்** — புரஞ்சயனுக்கு நண்பன்.

**உலும்பினிவனம்**—கோசல தேசத்திலுள்ள கபிலவாஸ்துவில் கௌதமபுத்தர் அவதரித்த இடம். இது, இக்காலத்து உலம்பிதி யென வழங்குகிறது.

**உலூகநாதன்** — துரியோதனனுடன் பிறந்தவன்.

**உலூகன்**—1. சகுனிக்குச் சிரேட்ட புத்ரன். பாண்டவரிடம் துரியோதனனேவலால் தூது சென்றவன். சகாதேவனால் இறந்தான்.

2. பாஞ்சாலனுக்குக் குரு. இவர்க்கு அசரீரி வசியம்.

**உலூபி**—அருச்சுநன் தேவி. கௌரவியன் எனும் நாகன் மகள். குமரன் அரவான் அல்லது இராவான், அல்லது இளாவந்தன்.

**உலே**—கொல்லன் இரும்பு முதலிய காய்ச்சத் திருத்தியிட்டமைத்த நெருப்பிருக்கை.

**உலோகசாரங்கமுனி** — ஓர் இருடி. அவர் சம்பாதி இறத்தலை இராமதூதரால் இறகு வளருமெனத் தேற்றித் தடுத்தவர்.

**உலோகசாக்ஷி** — ஒருமுகம், இரண்டு கைகளுள்ளவராய், அஞ்சலியத்தராய் வெண்ணிறத்தராய் வெண்பட்டாடை காஷாய வஸ்திரந் தரித்தவராயிருக்குஞ் சூரிய மூர்த்தி.

**உலோகபாலகர்**—உலகத்திற்குத் துன்பம் வராமற் காக்குந்தேவர். இவர்கள் இரண்யரோமன், கேதுமந்தன், சுதன்வா, சங்கபாலன் முதலியவர்கள்.

**உலோகப்ரகாசர்** — கறுப்புநிறம், ஐந்து முகம், பத்துக்கைகள், இரண்டு கைகளில் இரண்டு கமலங்கள், சூலம், அங்குசம், தண்டம், சபமாலை, கமண்டலம், வல இடக்கைகளில் அம்பும், வில்லும், சின்முத்திரையுடையவராய் நீலரத்னாபரணங்கள், நீலவஸ்திராபரணமுடையரா யிருக்குஞ் சூரியமூர்த்தி. (அ-பத்ததி).

**உலோகமாபாலன்**—சீவகனுக்குஆசிரியன், பதுமைக்குச் சகோதரன். (சீ-சிந்தாமணி.)

**உலோகம்**—(இ) பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவற்றுடன் வெண்கலம், தரா சேர்ந்து வழாகக் கூறுவர்.

**உலோகலிங்கம் எண்வகை** — சுவர்ணலிங்கம், வெள்ளிலிங்கம், தாமிரலிங்கம், வெண்கலலிங்கம், துத்தநாகலிங்கம், ஈயலிங்கம், அரக்குலிங்கம், இரும்புலிங்கம், என்பன. இவற்றிற்குப் பலன் முதலிருந்து குறையும். (சைவபூஷணம்)

**உலோகாசார்யர்** — நம்பிள்ளைக்குக் கந்தாடைதோழப்பரா லிடப்பட்ட பெயர். (குரு - ரை.)

**உலோகாந்தகன்**—சிவகணத்தலைவரில் ஒருவன்.

**உலோகாலோகம்**—சக்கரவாளகிரி, இதன் உட்பாகம் சூரியன் ஒளி பெற்றும், புறப்பாகம் அது இன்றியு மிருக்கும். இதனை லோகம் அலோகம் எனப்பிரித்து மனிதர் வசித்தற்கும் வசிக்காமைக்கும் வசதி உள்ளதும் அல்லாததற்கும் பெயரெனக் கொள்க.

**உலோகிதன்** — காச்மீரதேசத்து தரசன்.

**உலோகிதாசுவன்**—அரிச்சந்திரன் குமரன், இவனுக்கு லோகிதாசுவன் எனவும்பெயர்.

**உலோகிதாக்ஷன்**—1. ஜனமேஜயன் சர்பயாகத்தில் இருந்த ஸ்தபதி (பா-ஆதி).

2. குமரக்கடவுளின் கணநாதரில் ஒருவன் (பா. சல்)

**உலோகிதார்ணன்** — பிரியவிரதனுக்குப் பேரன். கிருதபரஷ்டன் குமரன்.

**உலோச்சனார்**—இவர் நெய்தனிலத்தைமிகச் சிறப்பாக அமைத்துப்பாட வல்லவர்; சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைப்பாடி இருத்தலானே அவன் காலத்தவரென்று தெரிகிறது. புறம் ௩௭௭. நற்றிணை ௧௬௧-ம் பாட்டிலும் அகத்திலும் பெரியனென்னும் வள்ளலையும் அவனது பொறையாற்றையுஞ் சிறப்பித்துக் கூறியுள்ளார். நற் ௩௮-ல் கடற்கரையின்க ணுளதாகிய "காண்டவாயில்" என்னும் ஊர் இவராற் கூறப்பட்டுள்ளது. அதனைக் காண்டவாயில் எனவும் அழுங்கலூர்என்றும் பாராட்டிக்கூறியிருத்தலானே இவர் அவ்வூரிலிருந்தவர் போலுமென்று கருதவுமாம். கடலிலுள்ள பலவகை மீன்களையும் உவமை முதலாயவற்றோடு தெளிவாகக் கூறுதலால் இவர் பரதவர் மரபினர்

போலும். மற்றும் நற்-எசஅ-ல் மருதத்து நிகழவேண்டிய பரத்தையிற் பிரிவினையும் நற் கசஅ-ல் பாலையில் நிகழவேண்டிய உடன் போக்கினையும் எனைப்பாடல்களில் குறிஞ்சியில் நிகழ்தற் பாலவாகிய களவொழுக்கம் அனைத்தினையும் நெய்தலில் நிகழ்ந்தன வாகவே வைத்துப்பாடிய ஆற்றல் வியக்கத்தக்கதாகும். நற் உஎஅ-ல் புன்னைக்காயில் நெய்யெடுக்கும் வழக்கையும் நற் ௩௩௧-லும் அகத்திலும் மகளிர் உப்புக்குவட்டின் மேலேறி மீன்பிடி படகுகளையெண்ணும் வழக்கையும்கூறியுள்ளார். இக்காலத்துத் திமிங்கலத்தின்மீது எறியீட்டிவீசிப் பிடிக்கின்றவழக்கம் பண்டைகாலத்து முளதென்று அகத்தில் இவர் பாடலால் அறியப்படுகிறது. இவர் இத்துணை பாடலுளும் பெரும்பாலும் களவொழுக்கத்தையேபாராட்டிப் பாடுதலால் களவியல் பாடுதலில் சிறந்தவரென்று கொள்ளக்கிடக்கின்றது. நற் ௬சஅ-ம் பாட்டாகிய குறிஞ்சித்திணைச் செய்யுள் இவர் பாடியதாக எழுதியிருப்பது ஒரு கால் ஏடெழுதினோர் தவறாயிருக்கலாம். அஃது இவர் பாடியதன்று. மற்றும் தலைவன் பகற்குறிவந்து மீள்வான் இன்றிங்கிருந்து விருந்துண்டு செல்கவென்றுகூறும் தோழி கூற்றில் அவனுடைய குதிரைக்கும் ஆகாரமமைத்துக் கொடுக்குஞ் சிறப்பை உ௫அ-வினும் அகத்திலும் விரித்துக்கூறுகின்றார். எனைநிலத்தினும் நெய்தனிலமே எந்நாளும் உருவாய் மிக்குளதென்று இவர் கூறும் (நற் ௩௩௧) பாடல் கல்வி யறிவில்லாதாரையும் இனிது மகிழ்விக்கும். இரவுக்குறி நேர்கின்ற தோழி கூறுமுகத்தானே நெய்தனிலத்தூர் தமர் ஒருவரையொருவர் அறியாதபடி மக்கள் நெருக்கமிக்குடையதென்று (நற்) ௩௩௧-ல் சிறப்பிக்கிறார். கொல்லைப்படப்பைகள்கண்டல் மரங்களை வேலியாகயுடையன வென்று பல இடங்களிற் கூறுகிறார். கண்டல் மரத்தின்கழி (கொம்பு) களே இக்காலத்திலே தோணி தள்ளுபவர்க்குப பற்றுக்கோடாயுள்ளன. அவை கண்டற்கழியென்றே வழங்கப்படுகின்றன. விரிப்பிற் பெருகுமாதலின் இம்மட்டோடு நிறுத்தலாயிற்று. இவர் பாடியனவாக நற்றிணையில் (20) பாடல்களும், குறுந்தொகையில் (௪) ம், அகத்தில் (அ) ம், புறத்தில் மூன்றுமாக (௩௰) பாடல்கள் உள. (நீற்).

**உலோபன்** — டம்பமாயைகளின் குமரன்-(இது உருவகம்) வாசிட்டம்.

**உலோபாமுத்திரை** — விதர்ப்பதேசத்தரசன் பெண், அகத்தியர் பாரி. இவள் அகத்தியரை நோக்கி நாம் இவ்வுலகத் திருப்புழி இடம், பொருள் முதலிய வேண்டுமெனக் கணவரைக் கேட்க முனிவர், வில்வலனிடஞ் சென்று பொன் பெற்றுத்தரப் பலவகையாகிய இன்பங்களை அனுபவித்தவள்.

**உலோமசன்** — ஒரு ரிஷி. பாண்டவர்கள் வனத்திலிருந்த காலத்து வந்தவர். இவர் அவர்களுக்குத் தருமோபதேசம்செய்தவர்.

**உலோமபாதன்** — உரோமபாதனுக்கு ஒரு பெயர்.

**உலோலன்** — தாமசமனுவைக் காண்க.

**உலோலார்த்தன்** — ஒரு சூரியன். காசியடைவேன் என்று ஆசைகொண்டுசென்றதால் இப் பெயர் பெற்றவன். (காசிகாண்டம்).

**உலோலை** — மது என்னும் அரசனுக்குத் தாய். (லோலை).

**உலோஹிதகல்பம்** — ஒரு கல்பத்துச் சிவமூர்த்தி லோஹிதநிறமாய்த் தோன்றினராதலால் அப்பெயரடைந்தது. இக்கற்பத்தில் லோஹிதாக்ஷி தோன்றினள். (லிங்க-புராணம்.)

**உலௌகிதீர்த்தியம்** — இது ஒருநதம். A portion of the river Brahmaputra north of Pragjyotishapura.

**உலௌஹித்யம்** — உதய பர்வதத்திற்கு அருகிலுள்ள கடல்-(பார.)

**உல்காமுகன்** — வாநரசேனாபதி.

**உல்பகரோகம்** — பிரசவித்து மறுருதுவடைந்த ஸ்திரி கருக்கொண்டபின் முன் பிறந்திருக்கிற குழந்தைக்குத் தன் பாலைத் தரின் சிசு, மயக்கம், மார்புவலி, இருமல், இரைப்பு, வாந்தி, சுரம் முதலிய கொள்ளுதல். (ஜீவ)

**உல்முகன்** — 1. சக்ஷுர்மனுவிற்கும் நட்வலைக்கும் பிறந்தவன். பாரியை புஷ்கரிணி. பிள்ளைகள் அங்கன், ஆங்கீரசன், கயன், கத்ரு, க்யாதி, சுமனஸ், பாரி, பிரீதகேசியெனவுங் கூறுவர்.

2. ஒரு யாதவவீரன்.

**உவகைக்கலுழ்ச்சி** — வாளால் வாய்ப்புபெற்ற விழுப்புண் மிக்க உடம்புடைய கணவனைக் கண்டு மனைவி மகிழ்ந்து கண்ணீர் வீழ்த்தது (பு.வெ.)

**உவசம்பனி** — இவன் சனுரு முனிவன் குமரன். இவன் பாம்பு கடித்திறந்தனன். எறும்பொன்று மற்றொரு இறந்தவுடலைச் சுமந்து சென்று சுவர்க்கத் துவாரத்தில் வைத்தது. உடனே யிறந்த எறும்பு உயிர் பெற்றது. இவன் தந்தை அவ்வெறும்பைக் கண்டு தன் குமரன் உடலினையும் அவ்வாறு சுவர்க்கத் துவாரத்திலிட்டு உயிர் வரக்கண்டு களித்தனன். உயிர் கொண்ட குமரன் தானுயிர் பெற்ற இடத்தில் ஒரு பிடிமண் எடுக்க அங்குச் சிவலிங்கமொன்று தோன்றிற்று. அதை **அவிழத்தம்** என்பர். (காசிகாண்டம்.)

**உவமையணி** — அஃதாவது இரண்டு பொருள்களுக்கு ஒப்புமையை விளங்கச் சொல்லுதலாம் இதனை வடநூலார் உபமாலங்கார மென்பர்

**உவர்மண்** — இந்த உவர்ப்பானமண் இந்தியாவில் பலதிசைகளிலுமுண்டு. இது மிருதியும் இலவணசாரம் கொண்டிருக்கின்றது. செம்மெழுகுச் சாயத்தின் சேர்மானங்களிற் சேர்க்கப்படுகிறது. வஸ்திரம் வெளுப்பதற்கும், சாயம் போடுவதற்கும் உபயோகப்படுகிறது மல்லாமல் இதனால் சீசாக்களும் சவுக்காரமும் செய்யப்படுகின்றன.

**உவவனம்** — காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்த ஒரு நந்தனவனம். புத்த பீடிகையுள்ள பளிக்கறையுள்ளது. மணிமேகலை மலர்கொய்யச் சென்றுள் எனக்கேட்டு உதயகுமாரன் அவளைக் கவர்ந்து செல்ல முதலில் முயன்றவிடம். இது மணிமேகலைக்கு மணிமேகலா தெய்வம் காக்ஷி கொடுத்து அவளைப் பளிக்கறையில் மறைத்த இடம். (மணிமேகலை.)

**உவப்பு**—(6)ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், குற்சை, இவற்றின் பொருள், சிரிப்பு, ஆசை, வெறுப்பு, சோர்வு, அச்சம், அருவருப்புமாம்.

**உவாக்கண்ணுர் புல்லங்கீரன்**—கடைச்சங்கமருவிய புலவர்.

**உவிநரன்** — அரம்யாசுவன் குமரன்.

**உழபுலவஞ்சி** — பொருந்தாதாருடைய நல்ல தேசத்தை மிக்க நெருப்பைக் கொளுத்தியது. (பு. வெ)

**உழவுகருவிகள்** — கலப்பை, அடிப்படை, மேழி, ஏர்க்கால், நுகத்தடி, கார், காரின் ஆணிகள், ஏர்க்காலின்புள், பரம்புச்சட்டம் பலுமரம், கொருகலப்பை, கட்டைபாறை, எருதுகள், பூட்டாங்கயிறு, மண்வெட்டி, குந்தாலி, கோடாலி, களைகொட்டு, கருக்கு அரிவாள், பிக்காசு, வெட்டுக்கத்தி, முன்வாள், துறட்டுக்கோல், தாற்றுக்கோல், இறைகூடை, கைஏற்றம், ஆள் ஏற்றம், முதலியன.

**உழிஞை** — தம்முடிமேலே உழிஞை மாலையையணிந்து பகைவர் கொடியசையும் நிறைந்த குறும்பினைக்கைப்பற்ற நினைந்தது. (பு. வெ).

**உழுதுவித்திடுதல்** — பகைவருடைய பல அரணும் கழுதையாகிய ஏரிட்டுழுது கவடியுடன் குடைவேலை விதைத்தது (பு. வெ).

**உழுந்தினைம் புல்லன்**—கடைச்சங்க மருவிய புலவரில் ஒருவர். இவர் தினைப் புலத்தைப் பாடியதாலிப் பெயர்பெற்றனர் போலும். குறுந்தொகையில் குறிஞ்சி பாடியவர் குறு-333

**உளதிலன்**—அசுவதராசுவன் சந்ததியானுனருடி.

**உளமாந்தைரோகம்** — இது க்ஷயரோகபேதம், அக்னிமந்த முள்ளபோது புசித்தலாலும், இரவில் விழித்தலாலும், மிக்க புலாலுண்ணலாலும், அதிசையோகத்தாலும், பகலுறங்கலாலும் உண்டாவது. இது வாத, பித்த, சிலேஷ்ம திரிதோஷத்தால் நான்கு வகைப்படும்.

**உளுவண்டு**—இது வண்டினத்தில் சிறியது இதன் வாயில் துதிக்கைபோல் ஒரு அங்கம் உண்டு. அது ஊசிபோலடிபருத்தும் நுனி சிறுத்தும் உள்ளது. இதனுல் இது தானிய முதலியவற்றைத் துளைத்து முட்டையிடும். இது புத்தகத்தை யூடுருவித் துளைக்கும்.

**உள்ளப்புணர்ச்சி**—இது களவிற் புணர்ச்சியின் வகை தலைமகன் பெருமையு முரனுமுடையன், தலைமகள் அச்சம், மடம் நாணுடையராதலின் முதலில் உள்ளப் புணர்ச்சியுண்டாவது.

**உள்ளமுடையான்**—உள்முடைய கவியால் செய்யப்பட்ட சோதிடநூல்.

**உள்ளான்**—இது,சிறு கொக்குப்போல் காலும் அலகும் நீண்டுதலை சிறிய பறவை. இது நெல் வயல்களில் தான்யங்களைப் பொறுக்கித் தின்னும், இது, தன்னினத்துடன் கூடி வாழ்வது. வெண்மை கலந்த கறுப்பு நிறமுடையது. வேட்டைக்காரர் இதனை ஆகாரத்தின் பொருட்டு வலையிலகப் படுத்தியும் சுட்டும்கொல்வர்.

**உள்ளுறையுவமம்** — புலவன்தான் புலப்படக் கூறுகின்ற உவமத்தானே புலப்படக்கூறாத உவமிக்கப்படும் பொருள் ஒத்து முடிவதாக உள்ளத்தே கருதி உள்ளுறுத்துக் கூறுவது. (தொல்.) இது ஆராய்ந்தறியும் பகுதியினை யுடைத்தாய்ப் புள்ளொடும், விலங்கொடும் பிறவற்றோடும் தோன்றுவது. (அகம்.)

**உறந்தை** — 1. உறையூர், சோழராஜாக்களின் இராஜதானி. (சிலப்பதிகாரம்.)
2. ஒரு நகரம். (சூளா.)

**உறழ்ச்சியணி** — அஃதாவது சமானமாகிய வலியையுடைய இரண்டு பக்ஷங்களைக் காட்டி விகற்பித்தலாம். இதனை வடநூலார் விகற்பா லங்கார மென்பர்.

**உறி**—பொருள்களின் காப்பின் பொருட்டுக் கயிற்றால் பின்னப்பட்ட சிக்கம்.

**உறித்தாபஸன்** — ஒரு சைந திருடன். பொய்த்தவ வொழுக்கத்தால் திருடித் தாசியுடன்கூடித் தண்டனை அடைந்தவன்.

**உறுப்பா**—இஃது ஒருவிதமான மரம். மலையாள தேசத்தில் வளருகிற சிம்புசிராயுள்ள மரமாக இருக்கின்றது. இது கப்பல் செய்யத் தேக்கு மரத்துக்குப் பதிலாக உபயோகிக்கப்படுகிறது.

**உறுப்பு** — (கீதஉறுப்பு) ச - அவை உக்ரம், துருவை, ஆபோகம், பிரகலை என்பன.

**உறுவை** — ஆதியும் பகவனும் காவிரிப்பூம் பட்டினத்தி லொரு மண்டபத்திலிருந்த போது பிறந்து கள்விற்போர் எடுத்து வளர்க்க வளர்ந்து காளியானவள். (திருவள்ளுவர் சரிதை.)

**உறையூர்** — இது சோழர்களுடைய பழைய நகரம். இஃது உறந்தையென்றும் கோழியென்றும் வழங்கப்படும். பழைய உறையூர், திருச்சிராப்பள்ளிஜில்லாவில் பாண்டமங்கலத்தில் இருபதடிக்குக் கீழ் இருக்கிறது. மண்மாரியால்முழுகியது.(புற-நா)

**உறையூர் இளம்பொன்வாணிகனார்** — ஒரு தமிழ்ப்புலவர். இவர் வணிகராயிருக்கலாம். (264) (புற-நா.)

**உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்** — இவர் ஊர் சோழநாட்டு உறையூரை யடுத்த வணிச்சேரிபோலும், முடமோசியார் என இவர்க்கு உறுப்பால் வந்த பெயராக இருக்கலாம். இவர் பிறப்பாலந்தணரென்பதை மரபியலில் (74) ஆம் சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் கூறியதாலறியலாம். இவரால் பாடப்பட்டோர் சோழன் முடித் தலைக்கோப் பெருநற்கிள்ளி, ஆய். புறநானூற்றில், 13, 127, 128, 129, 130, 131, 132, 133, 134, 135, 241, 374, 375, செய்யுட்களைப் பாடினர். இவர் ஆயை, முன்னுள்ளுவோனைப் பின்னுள்ளினேனே எனப்பாடினர்.

**உறையூர்க்கதவாய்ச் சாத்தனார்**—கதுவாய் முரிந்தவாய், இவ்வடைமொழி எக்காரணம்பற்றிக் கொடுக்கப்பட்டதோ தெரியவில்லை. இவர் மருதத்திணையிற் பயிற்சியுடையவர். இவர் பாடலில் தலைவி ஊடிய வழித்தலைவன் கூறுவது வியப்புடையதாகும். இவர் பாடியது நற் - கூஎ0-ம் பாட்டு. (நற்றிணை.)

**உறையூர்ச் சல்லியன் குமாரன்** — இவர் உறையூரிலிருந்த சல்லியர் என்பவரின் குமாரராக இருக்கலாம் கடைச்சங்க மருவியபுலவர்களுள் ஒருவர் இவர் குறுந்தொகையுள் மருதக்கவி பாடியவர். (குறு-309.)

**உறையூர்ச் சிறுகந்தன்** — இவர் உறையூரிலிருந்தவர். கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் சிறுகந்தனெனப்படுதலில் இவர்க்குமுன் ஒருவர் கந்தரென இருந்திருக்கலாம். குறு 257.

**உறையூர்நாய்ச்சியார்** — சோழன் பெண், பெரிய பெருமாளை மணந்தவள்.

**உறையூர்ப்பலாகாயனார்** — உறையூரிடத்தவர். இவர் பெயர் உறையூர்பாராயனார் என்று மற்றொரு பிரதியில் காணப்படுகிறது. இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர் குறு-374.

**உறையூர் மருத்துவன் தாமோதரனார்** — இவர், மருத்துவராயிருத்தல் வேண்டும். சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனையும், பிட்டங் கொற்றனையும் பாடிய தமிழ்ப்புலவர். (புற - நா.) (அக - நா.)

**உறையூர் முடவனார்** — ஐயூர் முடவனாரைக் காண்க.

**உறையூர் முதுகண்ணன் சாத்தனார்** — சோழன் நலங்கிள்ளியைப் பாடிய தமிழ்ப் புலவர். (புற - நா.)

**உறையூர் முதுகூத்தனார்** — சோழநாட்டிலிருந்த தமிழ்ப்புலவர். இவர்க்கு முதுகூற்றனார் எனவும் பெயர். (அக-நா.) (புற-நா).

**உறையூர் முதுகோற்றன்** — இவர் கடைச்சங்க மருவிய தமிழ்ப்புலவர்களில் ஒருவர். இவர் ஊர் உறையூர். இவர் பெயர் கொற்றன் என்பது இவரது பெருமைநோக்கி

முதுகொற்றன் என்பர் போலும். (குறு 221 - 340.)

**உற்கசம்** — தவுமியரைப் பாண்டவர் புரோகிதராகக் கொண்ட புண்யதீர்த்தம்.

**உற்கம்**—ஆதித்தியன் நின்ற நாளுக்குப் பத்தாம்நாள் உற்கமாம். இதில் சுபகாரியங்கள் செய்யக்கூடாது. (விதானமாலை)

**உற்கோரன்** — சூரபன்மன் தூதன்.

**உற்சாகன்** — மித்திரனுக்கு இரேவதியிடம் உதித்த குமரன்.

**உற்சவதி** — பிராண னென்னும் வசுவின் தேவி, குமரன் சகன் முதலிய மூவர்.

**உற்சவம்** — இது தேவாலயங்களில் உண்டாம் நித்ய நைமித்திகக் குறைவுகளைத் தீர்க்கும்படியும் எல்லார்க்கும் நன்மையுண்டாம் பொருட்டும் செய்யப்படுவது. இது சாகல்யம், பாவனம், சாந்தம், மாங்கல்யம் என நான்கு வகைப்படும். துவசாரோகணமுதல், தீர்த்தவாரிவரையில் உற்சவம் செய்வித்தல் சாகல்யம் எனப்படும். துவசாரோகணம், செய்விக்காமல் தீர்த்தவாரிவரையில் உற்சவம் செய்வித்தால் பாவனம் எனப்படும். துவசாரோகணமும் காலை உற்சவமும் இல்லாமல் இரவில் உற்சவமாத்திரம் நடப்பித்தல் சாந்தம் எனப்படும். காலையில் மாத்திரம் உற்சவம் நடப்பித்தல் மாங்கல்யம் எனப்படும். முற்கூறிய சாகல்யம் ஒன்பது வகைப்படும். அவை: சவுரம், சாந்திரம், சாவித்திரம், கௌமாரம், தைவீகம், பவுநம், பௌதிகம், கணம், சைவம் எனப்படும். இவற்றிற்கு நாட்கள் முறையே இருபத்தேழு, பதினேழு, பதினைந்து, பதின்மூன்று, ஒன்பது, எழு, ஐந்து, மூன்று, ஒன்ரும். இவ்வுற்சவம், துவஜாரோகணஞ் செய்து பலியிட்டு நடத்துதல் ஒன்று. அவை இரண்டும் இன்றி நடத்துதல் ஒன்று. துவசாரோகணம் செய்தலாவது, கொடித்தம்பம், பதிப்பொருள், படம், பசு, வளைகயிறு, பாசம் என்னும் திரிபதார்த்த உண்மை தெரிவித்தலாம். (ஆகமம்.)

**உற்படர்** — ஒரு வீரசைவ தேசிகர், இவ ரிறந்தபின் இவர், சோமவ்வை யென்கிற பாணிச்சியைச் சேர்ந்தனரென்று அரசன் முன் வேதியர் குறைகூற அரசன் அவரது பெருமையை வேதியர்க்குத் தெரிவிக்க மறுநாள் சபை கூட்டினன். அந்தச் சபைக்கு அருகிலிருந்த ஓர் ஆலமரத்தில் பேரொலியொன்று உண்டாயிற்று. அரசன் அதை நீயாரென்ன நான் ஒரு பூதம், என்னுடன் சேர்ந்த எழுநூறு பூதங்கள் பன்னிரண்டு வருடமாக உற்படர் மூலமாய்க் கைலையடையக் காத்திருந்தனர். அவர்கள் உற்படர் உடம்பிலுண்டான புகையால் கைலையடைந்தனர். நான் பசியா லிங்கிலாது அயலூருக்குப் போயிருந்ததால் கைலை அடையவில்லை. இப்போது நீ அவர் எலும்பைப் புகைத்தால் கைலை அடைவேனென அவ்வகையே அரசன் நீ பூதம், சிவகிரி சேர்தற்கு அடையாள மென்ன வென்ன அதுதானிருந்த ஆலைப்பிடுங்கிக் காட்ட அரசன் தன் சுற்றத்துடன் வந்து உற்படர் எலும்பைப் புகைக்கப் பூதமும் அரசனும் சுற்றத்தவரும் கைலையடைந்தனர்.

**உற்பலன்** — 1. சத்தியைக் காண்க.

2. விஷ்ணுபக்தனும் படனும்.

**உற்பலாங்கி** — இவள் ஒரு பார்ப்பினி. துங்கபத்ரை நதிக்கரையிலிருந்த கோபால வேதியன் குமரி. இவள் தந்தை இவளை இருபது வேதியர்க்குத் தனித்தனிபாணிக்கிரகணஞ் செய்யநிச்சயித்துத் தானஞ் செய்யுமுன் கணவர் இறக்கக்கண்டு இருக்கையில் தந்தையும் இறந்தனன். இவள் திருப்பூவணஞ்சென்று மணிகர்ணிகையில் ஸ்நானஞ்செய்து காலமுனிவரைக் கண்டுவணங்குகையில் அவர் இவளது செய்தி அறிந்து நீ கௌரிவிரதம் அநுட்டித்து உத்யாபனஞ் செய்யாததால் இவ்விடுக்கண் வந்தது, இத்தீர்த்தபலத்தால் பாவம் நீங்கினை. இனிக் கௌரி பூசனைசெய்து உத்யாபனஞ் செய்க என இவள் அவ்வாறு செய்து தீர்க்க சுமங்கலி ஆயினவள்.

**உற்பலாவதி** — தாமசமனுவைக் காண்க.

**உற்பலாக்ஷிபீடம்**-சத்திபீடங்களிலொன்று.

**உற்பலை** — அஷ்டசத்திகளில் ஒருத்தி.

**உற்பவன்** — துருவனுக்கு இளையிடமுதித்த குமரன்.

**உற்பாதம்** — மழையின்றி யிடித்தாலும், கார்வான மின்றி வெண்மழையாகப் பெய்யினும், குறைக்காற்றடிக்கினும், பூமிஆகாய மதிரினும், எரிகொள்ளி வீழினும், கிரகங்களைப் பரிவேடிக்கினும், பல இடங்களில் ஓரி யிரையிலும்,காரணமின்றிப் பூமியில் பிரசித்தமான மரங்கள் சாயினும், முரிந்து விழினும், திக்குகள் எரிந்து புகைந்து கிடப்பினும். உற்பாதங்களாம். இவை

உண்டான நாள் தொடங்கி (எ) நாட்கள் அளவும் சுபகன்மங்கள் தவிரப்படும். (விதானமாலை)

**உற்பூதவுரு** — தோற்றிய உருவமுடைமை.

**உன்மத்தன்** — 1. சண்முக சேகாவீரன்.
2. மால்யவந்தன் குமரன்.

**உன்மனி**—நிராதாரத்தால் தியானிக்கப்படும் சத்தி.

**உன்மாதரோகம்** — வாதாதிமூன்றும் தம் வழி தப்பி நடக்கையில் மனத்தில் ஒருவித மதம் பிறக்கும். அதுவே உன்மாதமாம். அது, வாத, பித்த, சிலேஷ்ம, திரிதோஷ, வியாத்தியோன்மாத, விஷோன்மாதமென அறுவகையாம். அவை, முலைப்பால், செங்கரும்பின் ரஸம், முந்திரிப்பழம், கோரைக்கிழங்கு, அதிமதூரம் முதலியவற்றால் வசமாம்.

**உன்முகன்** — உல்முகனைக் காண்க.

**உன்னதி**—தக்ஷனுக்குப் பிரசூதியிட முதித்த குமரி. இயமன் தேவி.

**உன்னநிலை** — கிட்டுதற்கரிய நன்மையினையும் கட்டுங்கழலினையுமுடைய வேந்தனை நிமித்தம் பார்க்குமரத்தொடு கூட்டி மிகு புகழைச் சொல்லியது (பு. வெ. பொதுவியற்).

**உஷா**—1. விபாவசு எனனும வசுவின்தேவி. குமரர் வியுஷ்டி, ரோசஸ், ஆதபன்.
2. சூரியன் பாரி.

**உஷாபதி** — அநிருத்தன்.

**உஷை** — பாணுசுரன் பெண். இவள் அநிருத்தனைக் கனவில் அணைந்து விழிக்கக் காணாது விசனப்பட்டுத் தனது குறையைத் தோழியாகிய சித்திரலேகையிடங் கூறி அவள் அரசர் உருவங்களை எழுதிக்காட்ட இன்னானென்று தெரிவித்து அவனை வேண்டினள். சித்திரலேகை அதி மாயாவியாதலால் அநிருத்தன் தூங்கிக் கொண் டிருக்கையில் அவனைக் கட்டிலோடு தூக்கிவந்து அவளிடம்விட இன்ப மனுபவித் திருக்கையில் தகப்பனால் களவறிப்பட்டுச் சிறையிலிருந்து கண்ணனால் விடுவிக்கப்பட்டவள். (பாகவதம்).

**உஷ்ணமானி** — (Thermometer) இது பொருள்களின் உஷ்ண நிலைமையை அளக்கும் ஒரு கருவி. இதில் உஷ்ணத்தைத் தெரிவிக்கும் அளவுகள் கணக்கிட்டிருக்கும். அதனால் உஷ்ணத்தின் ஏற்றக்குறைகளைத் தெரிந்து கொள்ளலாம். இது பலவகைபபடும், வைத்தியர்கள் தேக உஷ்ணத்தை அறிந்துகொள்ள உபயோகிப்பது பஷிரேக்ஷீட்உஷ்ணமானி, இதை கிளினிகல் உஷ்ணமானி யெனவும் கூறுவர். அதி உயர்வு, தாழ்வாகிய உஷ்ணத்தைத் தெரிவிக்கும் உஷ்ணமானி Maximum and Minimum Thermometer என்பர்.

## ஊ

**ஊஊ**—இவன் தேவலருஷியின் சாபத்தால் முதலை யுருப்பெற்று, கஜேந்திரனைப் பிடித்துக்கொண்ட ஒருகாந்தருவன். (பாகவதம்)

**ஊக்கா** — இது, பெரும்பாலும், மகம்மதியரும் சிறுபான்மை மற்றவர்களும் பனைவெல்லத்துடன் கலந்திடித்த புகையிலை லேகியத்தை வைத்துப் புகை பிடிக்கும் குழல்.

**ஊங்கனூர்** — சேரநாட்டின் கடற்கரையூர். இந்நகரத்தின் கடலில் வஞ்சவுருக் கொண்டு முளைத்து நின்ற கடப்பமரத்தைச் சேரன் வெட்டினன். (சிலப்பதிகாரம்).

**ஊங்காரப்பறவை** — இவ்வினத்தில் பல வகை உண்டு. இவை 500-இனத்திற்கு மேலுண்டு. இதில் சிறியவை 2-அங்குலம், பெரிது 8½-அங்குலம். இவற்றின் சிறகுகள் அழகுள்ளவை. சில அழகான பெரிய வால்களைப் பெற்றுள்ளன. இவற்றின் அலகு நீண்டு நா உருண்டு மலரினுள்ளிருக்கும் தேன்மகரந்தங்களை இழுக்கக் கூடியனவையா யிருக்கின்றன. இவற்றின் வகை 1-லோபார்நிஸ் ஒர் நாடஸ் - மத்ய அமெரிக பறவை, 2-லாம்ப்ரோலயீமாராமி - மெக்ஸிகோ, 3-ட்ரைமன் காந்தா - பிரேஸில், 4-ஸ்டிகரநூரா அண்டர் ஆடி-கொளம்பியா 5-கிரைஸோலாம் பிஸ் மாஸ்கீடோஸ்-நியூகிரனடா, 6 - லைனுலஸ்பியாகார்கோ வெனிஸூலா, 7-ஹெறலியோ டிரிக்ஸ்பரோடி-மத்ய அமெரிகா, 8 - ஸிலாடோ போரஸ்ரூபஸ்-யுனைடட்ஸ்டேட்ஸ் அமரிகா, 9 - ஸாபோஸ் பார்கனூரா - பெரு, பொலீவியா, 10 - டொபாஸாபெல்லா - கியானு, 11-ஹெலியோமாஸ்டாஸ்போலிட்மஸ் - ஜமைகா, 13 - ஹெலியாங்கிலஸ் ஸ்டோரிபியானஸ். ஈக்வடார். இந்தப் பிரதேசங்களில் இந்தப் பறவைகள் வசிக்கின்றன.

ஊசிகன்—(ய) கிருதி புத்ரன்.

ஊசிக்காந்தம் — இது சிறிய காந்த ஊசி. இதனைத் தன்னிலையில் விடின் வடக்குத் தெற்குகளைத் தெரிவிக்கும். இது கப்பலோட்டிகளுக்கு உதவி.

ஊசிமுறி—இடைக்காடரால் செய்யப்பட்ட செய்யுள்.

ஊடலுவணைகிழ்தல் — செறிந்த இருளையுடைய மாலைக்காலத்துத் தளங்காநின்ற துயரநெருக்க ஒள்ளிய தொடியாற் சிறந்த தோளினையுடையாள் வழக்காட்டிடத்துக் குழைந்தது (பு. வெ பெருந்திணை.)

ஊட்டியார் — கடைச்சங்க மருவிய தமிழ்ப் புலவர். இவர் பாடலுள் வழங்கிய 'ஊட்டி' என்பதே இவர்க்குப் பெயராயினமை காண்க. (அக-நு.)

ஊண்பித்தை—இவர், கற்றமிழறிந்த நங்கையரில் ஒருவராயிருக்கலாம். குறுந்தொகையில் "உள்ளார் கொல்லோதோழி" எனப்பாலையைப் பாடியவர். ஊன்பித்தை யெனவுங் கூறுவர். (குறு·232.)

ஊதீலர்—அசுவதராசுவன் புத்திரர்.

ஊமத்தை—இது ஒரு மயக்கத்தை உண்டாக்கும் செடி. இது, வெள்ளூமத்தை, கருவூமத்தை, அடுக்கூமத்தை, பேயூமத்தை, மருளூமத்தை, பொன்னூமத்தை யெனப் பலவகைப்படும்.

ஊரணை—சித்திராதன் தேவி.

ஊராளி — மதுரை திருநெல்வேலியிலுள்ள உழவரில் ஒருவகையார். இவர்கள் அம்பலக்காரர், முத்திரியரில் ஒருவகையாராகலாம்: இவர்கள் தங்களை முத்து ராஜாவின் சந்ததியார் என்பர். (தர்ஸ்டன்.)

ஊரின்கட் டோன்றிய காமப் பகுதி — ஒழியாத அன்பினையுடைய ஆடவரும் மகளிரும் அழகுபொருந்தக் கூடும்பதியைச் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)

ஊர்கோலை — கல்கின செலவையுடைய பரியைமுடுக்கி வில்லினையுடைய வீரர் முழங்கெரிபரப்ப அரணினை அழித்தது. (பு-வெ.)

ஊர்க்குருவி—இது தான்யம் பூச்சி முதலிய தின்னும் பறவைகளில் ஒன்று. இது வீட்டினிறப்பில் முட்டையிட்டுக் குஞ்சுபொரிப்பது; கபில நிறமுள்ள சிறு பக்ஷி. இது கிராம வாசியாதலா லிப்பெயர் பெற்றது.

ஊர்சயோனி—விஸ்வாமித்திரன் புத்திரன்.

ஊர்சி — தக்ஷன் பெண், வசிட்டன் தேவி. இவளுக்குச் சித்திரகேதுமுதல் எழுகுமார்.

ஊர்ச்சசீவதி—பிரியவதன் பெண். தேவயானிக்குத் தாய், சுக்கிரன் பாரி.

ஊர்சீசல்வதி—ஊர்ச்சசுவதிக்கு ஒரு பெயர்.

ஊர்ச்சன்—வச்சிரன் குமரன்.

ஊர்ச்சிதன் — கார்த்தவீரியன் குமரன் சூரனென்று பெயர்.

ஊர்ச்செரு — பகைவராற் புகுதற்கரிய காவற்காட்டோடு அகழ்சிதையாதபடி பூசல் செய்த மதிப்பினைச் சொல்லியது. (பு.வெ.)

ஊர்ச்சை — ஊர்சிக்கு ஒரு பெயர்.

ஊர்த்தகசன் — புலியுருக்கொண்டு பாலவிநாயகரைச் சூழ்ந்த சிறுவரை வருத்தி விநாயகராற் கொலையுண்ட அசுரன். (விநாயகபுராணம்)

ஊர்த்தகேது—(சூ.) சனத்துவசன் குமரன்.

ஊர்த்ததாண்டவம்—சிவமூர்த்தியின் நடனபேதம். சப்ததாண்டவம் காண்க.

ஊர்த்தபாகு—ஐந்தாம் மன்வந்தரத்து ருஷி

ஊர்த்தயன்—உருத்திரருக்கு வேள்விசெய்ய நியமிக்கப்பட்ட ருஷி.

ஊர்த்தரேதஸ்—ஏகாதச ருத்தருள் ஒருவன் தேவி இளை.

ஊர்த்வ, அதோ திரியமுகராசி — ஆதித்தன் விட்ட இராசி ஊர்த்வமுகம், நிற்கப்பட்ட ராசி அதோமுகம், பற்றப்பட்ட ராசி திரயோமுகமென்றும் பெயர்பெறும்.

ஊர்நாயு—ஒரு காந்தர்வன், பாரியை மேனகை.

ஊர்மிளை—சநகன் பெண். இலக்குமணன் தேவி. இலக்குமணர் தன் தமயனுடன் அரண்யவாச நீங்கி நகர்வருமளவும் பிற வியாபார மின்றி உறங்கியே இருந்தவள். (இராமாயணம்).

ஊர்வசன்—சுஜியின் குமரன்.

ஊர்வசி—1. இவள் தெய்வதாஸி, நாராயணர் பதரியில் தவஞ்செய்கையில் அவர்கள் தவத்தைக் கெடுக்க அநேக தேவதாஸிகளை இந்திரன் அனுப்பினன். இதனால் நாராயணர் கலங்காது இருந்து தம் தொடையாகிய ஊருவில் ஊர்வசிமுதல் அநேக தாசிகளைப் பிறப்பித்தனர். இவர்களைக் கண்டு அப்பெண்கள் மயங்கி ஊர்வசி முதலியவரைத் தங்களுக்கு நாயகிகளாகக் கொண்டு தெய்வலோக மடைந்தனர்.

2. ஒருமுறை இவள், தெய்வலோகத்திற்குக் காலகேயாது வதைநிமித்தஞ் சென்ற அருச்சுனனைக் கண்டு தன்னைச் சேர வேண்டுகையில் அவன் மறுத்ததால் அவனைப் பேடியாகச் சபித்தனள்.

3. இவள் சதாநந்தருஷியை மயக்கினள்.

4. இவள் ரைப்பிய முனிவரைத் தேவ ரேவலால் மயக்கச்சென்று அவரால் விகார வடிவமடைந்தனள்.

5. விசுவாமித்திரர் வேள்வி யழிக்கச் சென்று கல்லாய்ச் சுவேதமுனிவராற் சாப நீங்கியவள்.

6 மித்திரனால் புதனுக்குப் பாரியாகச் சபிக்கப்பட்டவள். வசிட்டரைக் காண்க.

7. இவள், மித்திரனு லழைக்கப்பட்டு அவனிடஞ் செல்லுகையில் வருணனிவளை அழைக்க இவள் மித்திர னழைத்ததை உரைத்துச் செல்வதன்முன் மித்திரன் தன் தேஜசைக் குடத்திலடக்க அகத்தியனும், பிறகு வருணனிடஞ் செல்ல முந்திவராது பிந்தி வந்தனையென்று மறுத்துத் தன் தேசஸைக் குடத்திலடக்க வசிட்டனும் பிறந்தனர். உருப்பசியெனவுங் கூறுவர்.

8. இவள் அகத்தியர் சாபத்தால் மாணிடமகளாய் மாதவியாயினள்.

9. இவள் சயந்தனை விரும்பிய காரணத்தால் அகத்தியரால் காஞ்சியில் கணிகை மகளாகவும், சயந்தன் விந்தமலைக்கண் மூங்கிலுமாகச் சாபம் பெற்றனர்.

ஊர்வன்— ஓர் இருடி, இவர் தவஞ்செய்கையில் இருடிகளிவரிடம் வந்து ஒரு புத்ரனைப் படைக்க என்ன, இவர் ஒரு தர்ப்பைத்துண்டைக் கையிலெடுத்துத் தன் ஊருவை அக்கியிலிட்டுக் கடைந்தனர். அதிலிருந்து அக்நிப் பிழம்புடன் ஒரு புத்ரன் பிறந்தனன், இருடிகளும் தேவர்களும் அவனைக் குதிரை முகத்துடன் கடலிலிருந்து நீரை ஆகாரமாய்க் கொள்ளக் கட்டளை யிட்டனர். இது வடவை யன்று.

ஊர்ணநாமன் — திருதாராஷ்டர புத்திரன்.

ஊர்ணை — இவள் மரீசிருஷியின் பத்னி. இவள் சுவாயம்பு மன்வந்தரத்தில் மரீசியுடன் கூடி ஆறு புத்ரர்களைப் பெற்றனள். இவ்வறுவரும் பிரமன் தன் புத்ரியோடு சங்கமித்ததைக் கண்டு நகைத்ததால் பிரமன் கோபங்கொண்டு நீங்களறுவரும் அசுர யோனியிற் பிறக்கக் கடவீர்களென்று சபிக்க, அவ்வாறே காலநேமிக்குப் புத்ராராகவும் பின் இரண்யகசிபுக்குப் புத்ராராயும் பிறந்து சாந்தசித்தராய்ப் பிரமனை யெண்ணித் தவஞ்செய்து பிரமன் பிரத்யக்ஷமாக எங்களுக்குத் தேவ மானுஷ்ய மிருகாதிகளால் மரணமின்றி இருக்க என வரம்பெற்றனர். இவர்களிவ்வாறு வரம்பெற்ற செய்தியை இரண்யகசிபு அறிந்து அவர்களை நோக்கி நீங்கள் என்னை அலக்ஷியஞ்செய்து பிரமனை யெண்ணித் தவஞ்செய்து வரம் பெற்றமையால் நீங்கள் என்னிடமிருக்கின் கொலைபுரிவேன். நீவிர் பிழைத்திருக்க வேண்டின் பாதலஞ் சேர்ந்து உறங்கியிருந்து பின் தேவகி கர்ப்பத்தில் வருடந்தோறும் ஒவ்வொருவராகப் பிறந்து காலநேமியாகிய உங்கள் பிதா கம்சனாகப் பிறந்து உங்களை ஒவ்வொருவராகக் கொல்ல இறக்கக் கடவீர்கள் என்று சாபமடைந்தனர். (தே - பா).

ஊழ்வாதிமதம்— இவன் கடவுளாலும் வேதத்தாலும், யோகத்தாலும், வேதாந்த சித்தாந்தங்களாலும், பஞ்சயெக்யங்களாலும், சோடச தானங்களாலும் சிவ விஷ்ணு பூஜைகளாலும் நந்தவனம் தண்ணீர்ப்பந்தல், குளம், ஏரி, தீர்த்தயாத்திரை, தேசாந்தர யாத்திரைகளால் என்னபயன். சிவன் கன்மத்தைக்கொண்டு எல்லாக்காரியங்களையும் நடத்தலால் கன்மமே தெய்வம் என்பன். இதம், அகிதம், சுகம், துக்கம், தரித்திரம், சம்பத்து எல்லாவற்றிற்கும் காரணம் கன்மம் ஆகையால் கன்மமே பிரமம் என்பன். (தத்துவ நிஜாநு.)

ஊளையிடுங் குரங்கு— இது, தென் அமெரிகா வனாந்தரத்திலுள்ள குரங்கினம். இது பெருங்கூச்சலிடுவது. குறுகிய மயிரடர்ந்த முகமும் நீண்டு மயிரடர்ந்த வாலும் உள்ளது.

ஊறு —(அ) வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்மை, சீர்மை சருச்சரை, இவை தொடப்படும் பொருட்கு எண் குணங்களாம்.

ஊறுகாய்—இவை, புளிப்புள்ள, மா, எலுமிச்சை, கிச்சிலி, நாரத்தை, கொடிமாதுளை மரிமாங்காய், கடுக்காய், நெல்லி, இஞ்சி முதலிய காய்களைப் பதமாக உப்பிட்டு ஊறவிட்டு ஊறியபின் உணவிற்குப் பயன்படுத்துவது. இதிற்சிலவற்றைத் தித்திப்பிட்டும் சம்பாரமிட்டுங் கொள்வர்.

ஊறுபாடு — (சு) எரிதல், குத்தல், வெட்டல், எய்தல்.

ஊற்றுக்காடமர்ந்தவள் — இரேணுகை, உப்பையைக் காண்க.

ஊற்றுமலைமருதப்பன் — நன்னூற்கு உரையியற்றச் சங்கர நமச்சிவாயப் புலவரை வேண்டிய பிரபு.

ஊன் — பல பிராணிகளின் இறைச்சிகள், இவை பல நாட்டார் பெரிதும் சிறிது மாகிய மிருகம் பக்ஷி மீன்முதலியவற்றைக் கொன்று அவற்றின் ஆகாதவைகளை ஒதுக்கி வேண்டினவற்றைப் பாகஞ் செய்தும் செய்யாதும் உண்பது.

ஊன்பொதிபசுங் குடையார் — "வழிபடு வோரை வல்லறிதியே" எனுஞ்செய்யுளில் "மகளிர் மலைத்தலல்லது மள்ளர்மலைத்தல் போகிய" எனக்கூறிச் சோழன் நெய்தலங் கானல் இளஞ்சேட்சென்னி (சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கான லிளஞ் சேட்சென்னி)யையும்சோழன்செருப்பாழி யெறிந்தஇளஞ்சேட் சென்னியையும் பாடியவர். (புற. நா.)கo, உoங, ருஎo, ருஎஅ.

ஊன்றுகோல் — மூங்கில் பிரம்பு முதலிய பொருள்களால் வயோதிகராலும் மற்றவராலும் மேடுபள்ளங்களையும் பிராணிகளையு மறிந்து நடக்கவும், வன்மை, திடம்தரவும் கைக்கொள்ளும் தண்டம்.

ஊஷ்மபர் — ஆவியையுண்டு வாழுங் தேவ கணங்கள். (பார-சபா).

ஊஹூ—ஒரு காந்தர்வன். அவன் சிவபூஜையால் சர்வசித்தி யடைந்தவன். (சிவாஹ.)

## எ

எக்ஞகோபன் — ஒரு இராவண வீரன்.

எக்ஞசீலன் — துச்சீலனைக் காண்க.

எக்ஞசூத்திரம் — வேதியன் தனக்கு மேல் பாகமாய் மூன்றுதாஞ் சுற்றின சூத்திரத் திற்கு எக்ய சூத்திரமென்று பெயர். கிரந்தியோடு சேர்த்த சூத்திரமானது உத்தமம். கிரந்தியானது பிரணவத்திற்குச் சமானம். எக்ய சூத்திரம் கழுத்துமுதல் நாபிவரையில் நீண்டிருக்கின் உத்தமமாம். ருக், எஜுர் சாம வேதிகள் நாபிவரையில் எக்ய சூத்திரம் தரித்தல் வேண்டும். அதற்குக் கீழ்ப்பட்டால் ஆயுள் க்ஷீணமாகும். மற்றவற்றிற்கு உபவீதம் காண்க.

எக்ஞதத்தர் — சண்டேசருக்குப் பிதா, சண்டேசரைக் காண்க.

எக்ஞபாகு — பிரியவிரதனுக்குப் பெரிகிஷ் மதியிட முதித்த குமாரன்.

எக்ஞமூர்த்தி — ருசிப் பிரசாபதிக்குக் குமார், தேவி ஆகுனுதி.

எக்ஞன் — உத்தமனென்னும் மனுவின் புத்ரன்

எக்யசருமன் — இவன் அங்கதேசத்து வேதியன். இவன் குமரன் தருமசருமன். இந்தத் தருமசருமன் தருப்பை முதலிய சேகரிக்க வனஞ்சென்று அவ்விடம் தவஞ் செய்துகொண்டிருந்த வைகானச முனிவர் குமாராகிய மாலுதான முனிவர்மீது கல், மண் முதலியவற்றை விட்டெறிய அவர் தருமசருமனைப் பாறையாகச் சபித்தனர். இச்சாப விளைவறிந்த எக்யசருமன் தன் குமரனாகிய பாறையைத் தலைமீது சுமந்து பவானிகூடற் றீர்த்தத்தில் இட்டுச்சாபம் நீக்கினன்.

எக்ஸிமோ — இவர்கள் வடசமுத்திரத் தீவுகளில் வசிக்கும் ஜாதியார். பாகம் செய்யாத மாமிச பக்ஷணிகள். இவர்கள் தங்களுக்கு உணவு கிடையாதபக்ஷத்தில் நாய்களையுந் தின்னுவர் என்பர்.

எங்களாழ்வான் — விஜயாம்சரான இவர் கலி ௪உ0எ-க்கு மேல் விபவஹ ஆனிமீ திங்கட்கிழமை திருவெள்ளறையி லவதரித்தவர். திருக்குருகைப்பிரான் பிள்ளானிடம் பாஷ்யம் சேவித்தவர். திருவெள்ளறைச் சோழியர். நடாதூரம்மாளைச்சு வீகரித்துப் பாஷ்யமுதலிய சொல்லிவைத் தவர். (குருபரம்பரை).

எசகு — சசிபிந்தின் குமரன்.

எச்சசன்மர் — 1. அகத்தியரைக் கல்வி வேண்டி அவராற் றவத்திற்கு அனுப்பப் பட்டவர்.

2. ஒரு வேதியன், பொருளாசையாற் தானம்வாங்கி மறுபிறப்பில் அரக்கனாய்க் காஞ்சிபுரிக்கருகில் ஒரு ஆலில் இருக்கட் பீமசன்மன் குமரன் சோமசன்மன், காஞ்சிபுரியில் தீர்த்தமாடி வருவோரைக் கண்டு அத்தீர்த்தப் பெருமைகளைக் கேட்க, அவ்வழிப்போக்கர் கூறிய பெருமைகளை ஆலிலிருந்தபடி கேட்டு அரக்கவுரு நீங்கியவன்.

எச்சதத்தன்—எஞ்ஞதத்தருக்கு ஒருபெயர். சண்டேசருக்குப் பிதா.

எச்சதேவன் — சுமதியைக் காணக.

எச்சம்—சொல்லேயாயினும் ஒரு குறிப்பேயாயினும் கூடிப் பொருண் முடித்தல் வேண்டிநிற்கும்பெயர்வினைக்குறைகளாம்.

எச்சம்—(அ) குறள், கூன், ஊமை, செவிடு குருடு, முடம், உறுப்புமயக்கம், உறுப்பில் பிண்டம்.

**எச்சம்பத்து** — பெயரெச்சம், வினையெச்சம், உம்மையெச்சம், சொல்லெச்சம், பிரிநிலையெச்சம், எனவெச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறையெச்சம், இசையெச்சம், குறிப்பெச்சம் என்பனவாம்.

**எச்சன்** — 1. தக்கன் சிவனை நீக்கி யாகஞ்செய்யத் துணிகையில் யாகஞ்செய்விக்க குருவாயிருந்தவன்.

2. இவன் சுசீந்திரத்தில் வக்கிரபர்வதச் சார்பில் கள்ளி நிழலில் ஞானகீதை ஒதித் தவம்புரிந்த வேதியன். அந்தக் கீதையைக் கேட்ட கள்ளி (கஉ) நாட்களில் உலர்ந்து சுசீந்திரத்தில் பானுசேகரன் குமரியாய்க் கலாவதியெனும் பெயருடன் எச்சனை மணந்து வாழ்ந்தனள். (சுசீந்திர புராணம்.

**எச்சான்** — உடையவர் திருவடி சம்பந்தி. கீழ்த்திசையி லிருந்தவர். உடையவரைக் கண்டு பணிந்து விருந்து செய்வித்தவர். இப்பெயர்கொண்ட ஒருவர்க்கு உடையவர் திருவேங்கடஞ் செல்கையில் அம்மாள் வீட்டில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குத் திருப்பரியட்டம் திருத்திச் சமர்ப்பிக்கும் கைங்கர்யம் நியமித்தனர். எண்ணாயிரத் தெச்சானென்று ஒருவர் இருந்ததாகத் தெரிகிறது.

**எச்சிலுடன் காணத்தகாதவை** — புலையன், சந்திரன், சூரியன், நாய், எரிநக்ஷத்திரம். (ஆசாரக்கோவை.)

**எச்சிலுடன் தீண்டத்தகாதவை** — சு. பார்ப்பார், நெருப்பு, தேவதைகள், உச்சந்தலை.

**எஞ்ஞதத்தன்** — ஒருவணிகன். அவிநாசித்தலத்துக்கோயில் தாசியைக்கண்டு மோகித்து அங்கிருந்த வசிட்டரிடம் அத்தல புராணங்கேட்டு நடித்திருந்த தாசிமீது ஆவலாகி விரைவில் உணவுண்டு அன்னமடைத்து இறந்து முத்தியடைந்தவன். (அவிநாசித்தலபுராணம்).

**எடுத்துக்காட்டுவமையணி** — அஃதாவது பிம்பப்பிரதிபிம்பபாவத்தைக் காட்டுதலாம். பிம்பப் பிரதிபிம்ப பாவமாவது, சுபாவத்திலே பின்னங்களா யிருந்தாலு மொன்றற்கொன்றுண்டாகிய ஒப்புவமையினால் அபின்னங்களாகியஉபமானோபமேயங்களுடைய தருமங்களை இரண்டு வாக்கியங்களிலே தனித்தனி சொல்லுதலாம். இதனை வடநூலார் திருஷ்டாந்தாலங்கார மென்பர்.

**எட்டி** — செட்டிகளின் பட்டத்துள் ஒன்று.

**எட்டிகுமரன்** — காவிரிப்பூம் பட்டினத்து வணிகன். அரசனாற்கொடுக்கப்பட்ட எட்டிப்பட்டம் பெற்றோன். மணிமேகலை உவவனஞ் சென்றதை உதயகுமாரனுக்குத் தெரிவித்தவன். (மணிமேகலை).

**எட்டிப்பூ** — வணிகர்க்கு எட்டிப்பட்டத்தின் பொருட்டுத் தரப்பட்டபொற்பூ.

**எட்டியல்** — அழுக்காறிலாமை, அவாவின்மை, தூய்மை, ஒழுக்கம், குடிப்பிறப்பு, வாய்மை, நற்புலமை, நடுவுநிலைமை. (வீரசோழியம்.)

**எட்டுத்தொகை** — நற்றிணை சOO, குறுந்தொகை சOO, ஐங்குறு கOO, பதிற்றுப்பத்து, பரிபாடல் எO, கலித்தொகை கடுO, அகநானூறு, புறநானூறு முதலிய எட்டுச் சேர்ந்த தமிழ்நூல்.

**எட்டுவகைப்பொருள்கோள்** — ஆற்று நீர், மொழிமாற்று, நிரைநிரை, விற்பூண், தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டுகூட்டு. அடிமறிமாற்று. (நன்.)

**எட்டுவிதபாவங்களாவன** — தர்மம், ஞானம், வைராக்கி[illegible] ஐசுவர்யம் இந்தப்புத்தியின் குணங்கள் [illegible]ம் சாத்விக பாவங்கள்; அதர்மம், அஞ்ஞானம், அனைசுவர்யம், இவை தாமசபாவங்கள். அவைராக்கியம், ராஜஸபாவம் இவை புத்தியில் வாசனாருபமாயிருக்கும்.

**எட்டெட்டந்தாதி** — இது காஞ்சிபுரம் காமாக்ஷியம்மை விஷயமானது. வகைக்கு எவ்வெட்டுப் பாடலாக எட்டுவகையான பாடல்களமைந்த (சுச) செய்யுட்களால் அந்தாதியாகப் பாடப்பெற்றுள்ளது. சில பாவும், சில பாவினமுமாக இருக்கின்றன. அன்றியும் முதலில் விநாயக வணக்கமாக ஒருபாடலும், ஈற்றில் நூற்பயனாக ஒருபாடலு முள்ளன.

**எண்** — இது இரண்டுவகை. அவை கணிதமும், காரணமும், கணிதம், பதினாறு வரிகருமமும், ஆறு கலாசவருணமும், இரண்டு பிரகரணசாதியும், முதருப்பையும், ஐங்நுப்பையும், பரிகருமமும், மிச்ரகமும் என்பனவாம். இவற்றை அவினந்தமாலை, அரசசட்டம், வருத்தமானமுதலியவற்றிற் காண்க. (யாப்பு வி.)

**எண்கிரிகள்** — சைனர்களுடைய மலைகள். (திரு)

**எண்டிசையோநிகள்** — கொடி, புகை, சிங்கம், நாய், இடபம், கழுதை, காகம். (பிங்.)

**எண்ணெய் ஊற்றுக்கள்** — ஆசியா கண்டத்தின் மத்யபாகத்திலுள்ள காஸ்பியன் கடலையடுத்த பாகு நகரையடுத்த பிரதேசங்களில் பல மண்ணெண்ணெய் ஊற்று

கள் இருக்கின்றன. அமெரிகா கண்டத்திலுள்ள காலிபோர்னியாநாட்டுச் சந்தாபார்பாராவை யடுத்துள்ள கடலில் பல எண்ணெய்க் கிணறுகளிருக்கின்றன. பர்மாவின் தென்கீழ்ப்பாகத்திலுள்ள பாட்டான் எனும் பிரதேசத்து மலையடிவாரத்தில் ஒரு எண்ணெய் ஊற்று இருக்கிறது.

எண்ணெய்வகை—எண்ணெயென்பது பலவித தைலசத்துள்ள வித்துக்களைச் செக்கிலிட்டு ஆட்ட உண்டாம் திரவம். அவை, நல்லெண்ணெய், ஆமணக் கெண்ணெய், கடலை யெண்ணெய்; பனையெண்ணெய், புங்க எண்ணெய், வாதுமை, இருப்பை, வேம்பு, தெங்குசணல், முதலியவற்றிலுண்டாம் எண்ணெய்கள்.

எண்பேராயம் — காணத்தியல்வர், கருமாதிகாரர், கனகச்சுற்றம் கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், இவுளிமறவர்.

எண்பேரெச்சம் — குருடு, வடிவில்லாத தசைத்திரள், கூன், குறள், ஊமை, செவிடு, மணைபோல் பிறப்பது, விலங்கின் வடிவினது, மருளும் முடமுங்கூறுப.

எதாகான்—சுபாலன் புத்ரன். இவன் புத்ரன் வபுத்திரத்தன்.

எதி—நைட்டிகப் பிரமசரிய மநுட்டித்த பிரமபுத்திரராகிய இருடி.

எதியுதக்கரன்—ஒரு அசுரன். திதிபுத்ரன்.

எதிரொலி—ஆகாயத்தை இடமாகக்கொண்ட ஒலி, திசைமுழுதும் பரவிச் செல்கையில் அதற்கெதிரிடமான திடப்பொருள்களால் தடையடையின் அப்புறஞ் செல்வதற்கிலாது மீண்டும் அவ்வொலி திரும்புவதாம். ஓசையுண்டான இடத்திலிருந்து (224) அடிகளுக்கு மேற்பட்ட தூரமாயின் அவ்வொலி நன்ருக விளங்கும், அல்லாவிடின் குழப்பமுறும். இவ்வாறு சில கட்டடங்களில் எதிரொலி, 30, 17, 12, முறை கேட்கப்படுகிறதாம். எதிரொலி மாறிச் செல்லுமிடம், கற்கட்டடங்களாகிய பெரிய வாராவதிகளின் தூண்களின் ஓரமாகிய சுவர் இடத்தில் இருவர் எதிராக நின்றுகொண்டு இருவருக்கிடையில் ஒருவரை நிறுத்தி நின்ற இருவரும் சுவர்ப்புறமாகப் பேசுவாராயின் இவ்விருவரும் பேசினசொற்கள் மத்தியிலிருப்பவரிடத் துக் கேட்பதில்லை. இவ்வேறுபாடு வாராவதியின் வளைவால் ஏற்படுவதாம்.

எதிர்நிலையணி—அஃதாவது உவமானத்திற்குக் குறைவுதோன்றச் சொல்லுதலாம். இது உவமையணிக்கு எதிரியதாய் நிற்றலின் அப் பெயர்த்து. இதனை வடநூலார் பிரதீபாலங்கார மென்பர்.

எதிர்நூல்—தன் கொள்கையை நாட்டி அயலான் கொள்கையை மறுப்பது. (யாப்பருங்-உரை.)

எதிர்மறையணி--அஃதாவது, ஒழிப்பணிக்கு வேருகியும், கேட்போரை மகிழ்விப்பதாகியு மிருக்கின்ற மறுப்பைச் சொல்லுதலாம். இதனைவட நூலார் ஆக்ஷேபாலங்காரமென்பர்.

எது—1. ஒருவகை மிலேச்சசாதியார்.

2. யயாதிக்குத் தேவயானியிட முதித்த குமரன்.

எந்திராசுரன் — தேவர்களை வருத்திச் சிவபிரான் நெற்றிவிழியா லெரிந்தவன்.

எமிநான்—திவிமீடன் குமரன், இவன் குமரன் கிருதுமான்.

எம்பார்—கோவிந்தப் பெருமாளைக்காண்க. (குருபரம்பரை.)

எம்பெருமானுர் — 1. ஆதிசேஷாம்சரான இவர் கலி (௩௧௧௮)க்கு மேல் பிங்களஷு சித்திரைமீ வெள்ளிக்கிழமை ஸ்ரீபெரும்பூதூரில் அரீதகோத்தரத்தவராகிய ஆசூரி கேசவப்பெருமாளுக்கும் பூமி பிராட்டியென்னும் அவர் மனைவிக்கும் திருஅவதரித்துப் பெரிய திருமலைநம்பியால் இராமாநுசன் என்று பெயரிடப்பட்டு யாதவப்பிரகாசரிடத்தில் பூர்வபக்ஷம் வாசித்து யாதவப்பிரகாசர் சொன்ன "கபியாஸாக்ஷனென்னும்" தொடர்க்குப் பொருள் வேறு கூறி மறுத்ததனுல் அவர் இவரிடம் பொருமைகொண்டு இவரைக் கொலைசெய்ய எண்ணிக் கங்காயாத்திரை செய்ய ஆரம்பித்து இராமாநுஜரை உடனழைத்துச் சென்றனர். ஒருநாள் ஒரு காட்டின்வழிச் செல்லுகையில் சௌசத்திற்காக இளையாழ்வார் தனித்து நிற்பதையறிந்த கோவிந்தபட்டர், யாதவப்பிரகாசர் எண்ணத்தை அறிவித்து அகலப்போ மென்றனர். இளையாழ்வார் அவ்வழிவிட்டு ஒரு மாத்தடியில் நின்று பார்க்கப் பேரருளாளரும், பெருந்தேவித் தாயாரும், வேடனும், வில்லிச்சியுமாய் எதிரில் தரிசனந் தந்தனர். எம்பெருமானுர் அவர்களை நீங்களெங்குப் போகிறவர்களென்ன? அவர்கள் நாங்கள் ஸ்ரீகாஞ்சி செல்கிறோமெனநானும் உம்மைத் துணைகொண்டு

வருகிறேனெனத் தொடர்ந்து செல்லுகையில் வில்லிச்சி தாகத்திற்குச் சலம் வேண்டுமென்று கேட்க ஆழ்வார் கிணற்றிலிறங்கி நீர்கொண்டுவரத் தம்பதிகளிருவரும் உண்டு இதோ புண்ணியகோடி விமானங் காணும் என்று அருளிச்செய்து அந்தர்த்தானமாயினர். ஆழ்வார் காஞ்சிநகரஞ் சேர்ந்திருக்கையில் தீர்த்தயாத்திரை முடித்து வந்த யாதவப்பிரகாசர் இளையாழ்வாரைக் கண்டு எவ்வகைவந்து சேர்ந்தீரென, நடந்த செய்தியைக் கூறக்கேட்டு ஆச்சரிய மடைந்தனர். இவ்வகை இருக்கையில் காஞ்சிநகராசன்பிள்ளையைப் பிரமராக்ஷஸ் பிடித்துக்கொண்டு வருத்த அரசன் அதை ஓட்ட யாதவப்பிரகாசரை அழைத்தனன். அப்பேய் அவரை நோக்கி உம்மால் என்னை ஓட்டலாகாது. உம்மிடம் கற்கும் இளையாழ்வான் போகக் கட்டளையிடில் நீங்குவேனென்றது. யாதவப்பிரகாசர் இதை ஆழ்வாருக்குக் கூற அதை ஓட்டினர். மற்றொருநாள் யாதவப்பிரகாசர் ஒரு சுருதிக்குப் பொருள் அத்வைதபுறங்கூற ஆழ்வார் அதை மறுத்து விசிட்டாத்வைதங் கூற யாதவப்பிரகாசர் இதைக்கேட்டு இனி என்னிடம் வரவேண்டா மென்றனர். ஆழ்வார் இதைத் தாயிடம் கூறத் தாய் பேருளாளனுக்குக் கைங்கர்யஞ் செய்திருக்க என்றபடி கைங்கர்யம் செய்திருந்தனர். ஆளவந்தார் நியமனத்தால் பெரியநம்பி இளையபெருமாளை அழைத்துவரக் காஞ்சிக்கு வந்து ஆளவந்தார் அருளிய சுலோகத்தைச்சொல்லிக்கொண்டிருந்தனர். இளையபெருமா ளிதைக்கேட்டு இவை யாரருளியதெனப் பெரிய நம்பிகள், ஆளவந்தாரருளிச்செய்தவையெனக் கேட்டுக் களிப்புற்று அவரைக் காணவேண்டு மென்னும் அவாவால் பெரிய நபிகளுடன் திருவரங்கமெழுந்தருளினர். ஆழ்வார் செல்லுமுன் ஆளவந்தார் திருநாட்டுக்கன்று எழுந்தருளிய செய்திகேட்டுச் சோகித்துத் திருக்கரம்பன் துறையிலே நின்ற பெருங்கூட்டத்துள் புகுந்து ஆபாதமத்தகம் அவரது சரமவிக்ரகத்தைச் சேவித்து மூன்று விரற்கள் முடங்கி இருந்தமை கண்டு ஆழ்வார், இதற்குமுன் இப்படி உண்டோ என, இருந்தவர்கள் இல்லையெனக் கருத்தறிந்து ஆங்கிருந்தமுதலிகளை வினவி அவர்கள் வியாஸபராசர்களிடத்திலே உபகாரஸ் மிருதியும், நம்மாழ்வாரிடத்தில் பிரேமாதிசயமும், விசிட்டாத்வைதமாக வியாக்யான சூத்திரத்தில் வியாக்யான வாஞ்சையும் உண்டு என்ன, பெருமாள் தலைக்கட்டின் இந்த விழவு மூன்றையுந் தீர்க்கின்றேன் என அவை நிமிரக்கண்டு சேவித்துப் பெரிய பெருமாளைச் சேவியாது ஸ்ரீ காஞ்சிக்கு எழுந்தருளினர். இவரைத் திருக்கச்சி நம்பிகள் காணவர இளையாழ்வார் அவர்க்கு ஆசனமிட்டுத் தண்டன் சமர்ப்பிக்க நிற்கையில் நம்பி, நாதமுனிகள் செய்திகூறித் தடைசெய்ய இளையாழ்வார் தமக்குள்ள ஐயத்தைப் பெருமாளுக்கு விண்ணப்பித்துச் சொல்ல என்று நம்பிக்கு வழிவிட்டு அவர் சொல்லக்கேட்டுப் பெரியநம்பியை ஆசாரியராகக் கொள்ளும்படி புறப்பட்டு மதுராந்தகத்தில் ஏரிகாத்த பெருமாள் சந்நிதியில் பெரிய நம்பியைத் தரிசித்துப் பெருமாள் நியமனத்தைக் கூறி ஏரிகாத்த பெருமாள் சந்நிதி மகிழமரத்தடியில் பஞ்சசமஸ்காரம் பெற்றுப் பெரிய நம்பிகளுடன் காஞ்சிக்கு எழுந்தருளி யிருந்தனர். ஒருநாள் எண்ணெயிடுவான் பசியாயிருக்கக் கண்டு தமது மனைவியை யபூபம் சாதிக்கக் கட்டளையிட்டனர். அவள் மறுத்தது கண்டு தாமே சென்று இருக்கப்பார்த்து எடுத்துத் தந்தனர். சிலநாள் பொறுத்து ஸ்ரீபெரும்பூதூருக்குப் போயிருக்கையில் இவரது மனைவியார் பெரிய நம்பிகளின் மனைவியாருடன் சண்டையிட்டனள். இதை அறிந்த பெரியநம்பிகள் சம்சாரத்துடன் திருவரங்கஞ் சென்றனர். இளையாழ்வார் ஸ்ரீபெரும்பூதூரிலிருந்து காஞ்சிக்கு எழுந்தருளிப் பெரியநம்பிகள் திருவரங்கஞ் சென்றதறிந்து மனைவியை நோக்கி நீ முன்பு திருக்கச்சி நம்பிகள் எழுந்தருளியிருந்த மனையைச் சுத்திசெய்து நீயும் தீர்த்தமாடினை, எண்ணெயிடுவானுக்கு அபூபம் கொடுக்கச் சொன்ன காலத்திலில்லையென்றனை, ஆசார்ய பத்தினியுடன் ஒரு தோண்டி விஷயமாகப் பகைத்தாய், ஆதலால் பிறந்தகம் போக என நியமித்துத் தாமே பெருமாள் சந்நிதியில் துரியாச்சிரமம் பெற்றுப் பெருமாள் அருளிய நம்ராமாநுஜ னெனவும், யதிராஜ னெனவும் பெயர் பெற்றிருந்தனர். பின் யாதவப்பிரகாசருக்குத் திரிதண்டகாஷாய மளித்துக் கோவிந்த சீயரெனப் பெயரிட்டு அவரையருடன் திருவரங்க மெழுந்தருளிப் பெருமாளைச் சேவிக்கையில் பெருமாளும் நம்

முடையவன், என்று திருநாமம் அருளப்பெற்று, பெரிய திருமலைநம்பியால் கோவிந்தபட்டரை ஸ்ரீ வைணவராக்கித் திருவரங்கப்பெருமாளரையர் கட்டளைப்படி அவரிடத்தில் திருவாய்மொழி ஓதி ஆளவந்தார் அருளிச் செயலுக்கு வியாக்யானஞ் செய்து லக்ஷ்மண முனியெனப்பெயர்பெற்றுத் திருக்கோட்டியூர் நம்பியிடம் (கச) முறைபோய்க் கடையில் அவர் ஒருவர்க்கும் சொல்லவேண்டாமென்று அருளிய திருமந்திரார்த்தத்தையும், சரமசுலோகத்தையுங் கேட்டுணர்ந்து மறுநாள் அதை உலகறியக் கூறினர். பெரிய நம்பிகள் இது அடுக்குமோ என ஆசாரியர் சொல்லைத் தடுத்ததாலுண்டான நரகம் என்னொருவனுக்கானால் இந்த மந்திரார்த்தத்தைக் கேட்ட அநேக ஆத்மாக்கள் மோக்ஷமடைக என்று கூறி அவரால் எம்பெருமானார் எனும் நாமம்பெற்றுத் திருமாலையாண்டானிடத்தில் திருவாய்மொழி கேட்டுணர்ந்து விரோதத்தால் புருஷன் சொற்படிகேட்டு விஷங்கலந்த அன்னமிட்ட வநிதை தண்டனிட்டதால் விஷங்கலந்ததென அறிந்து அதைத் திருக்காவேரியில் கரைத்துவிட்டு ஒரு மாதம் அன்னமின்றி உபவாசமிருந்தனர். பின் திருக்கோட்டியூர் நம்பியின் சொற்படி கிடாம்பியாச்சானால் மாதுகரங் கொண்டு யஞ்ஞமூர்த்தியுடன் வாதிட்டு வென்று அவரைஸ்ரீ வைணவராக்கி அருளாளப் பெருமாள் எம்பெருமானார் என்னும் பெயரிட்டுக் கொங்குப் பிராட்டிக்குத் திருவடி நிலைகளைப் பிரசாதித்துப் பாஷ்யம் அருளி, நித்யமென்கிற கிரந்தஞ்செய்து திருக்குறுங்குடி நம்பிக்குப் பஞ்சசமஸ்காரஞ்செய்து ஸ்ரீவைஷ்ணவநம்பி யென்று பெயருமிட்டுச் சந்நிதியில் பெருமாளைச் சேவிக்கையில் தாமிட்ட சின்னமிருக்கக் கண்டு சரணாகதி கத்யத்தால் க்ஷாமணஞ்செய்து திருவேங்கட யாத்திரை செய்து பருத்திக் கொல்லையம்மாள் திருமாளிகையில் அமுதுண்டு தீர்த்தப் பிரசாதம் சாதித்துத் திருமலைசென்று திருவேங்கட முடையானைச் சேவித்துப் பெரிய திருமலை நம்பியிடம் ஸ்ரீமத் ராமாயண வ்யாக்யானம் கேட்டுணர்ந்து கோவிந்தப் பெருமாளைப் பெற்று, எண்ணாயிரத்தெச்சான்திரு மாளிகையி லமுதுண்டு காச்மீரஞ் சென்று அங்கிருந்த அத்வைதிகளுடன் வாதஞ்செய்து வென்று பதரி நாராயணனைச் சேவித்துத், திரும்பிச் சரஸ்வதிபீடஞ் சென்று சரஸ்வதியா லெதிர்கொள்ளப்பட்டு ஸ்ரீ பாஷ்யமென நூலுக்கும் ஸ்ரீபாஷ்யகாரரெனத் தமக்கும் பெயரிடப்பெற்றுச் சைவர் தமதென வாதிட்ட திருமலையைத் திருவாழிசங்கு டமருகஞ் சூலஞ்செய்துவைத்து எதைத் தரிக்கின்றனரோ அந்தமதத்தவர் வணங்குங் கடவுளாகுக என்று முத்திரையிட்டு நீக்கிச் சங்கு சக்ரம்தரித்த திருமாலாகத் தரிசித்து வைணவத்தலமாக்கி நீங்கினர். பின் தென்னாட்டில் பல திவ்யதேசங்களைத் தரிசித்தனர். இப்பால் பிள்ளானை ஞானபுத்ரனைச் சுவீகரித்துத் திருக்குருகைப்பிரான் என ஆழ்வார் திருநாமமிட்டுச் சோழராசன் வரவிட்டகாலத்துக் கூரத்தாழ்வானுக்குத் திரிதண்ட காஷாயமளித்துத் தாம் வெள்ளையுடுத்து மேனாட்டுக்கெழுந்தருளி வழியில் நல்லான் திருவடி சம்பந்திகளான வேடராலுபசரிக்கப் பெற்று வடுகநம்பிக்குச் சாளக்கிராமத்தில் தரிசனார்த்தங்களைப் பிரசாதித்து விடல தேவராயன் குமரியைப் பிடித்திருந்த பிசாசத்தைத் தொண்டனூர் நம்பி சொற்படியோட்டி அவ்வரசனையும் வைணவனாக்கி அவனுக்கு விஷ்ணுவர்த்தநாயன் எனப் பெயர்தந்து சமணரை வாதில் வென்று அவர்களைக் கற்காணத்திலிடாது தடுத்து யதுகிரியில் நெடுநாள் மறைந்திருந்த பெருமாளைச் சுவப்பனத்தின்படி கண்டு வெளிப்படுத்தித் திருநாராயணபுரமென்று அவ்வூருக்கும் திருநாராயணப் பெருமாளென்று பெருமாளுக்கும் திருநாமமிட்டுத் தேவராசபட்டரால் புரோக்ஷணஞ் செய்வித்து உற்சவ போத்திற்குப் பெருமாள் நியமனப்படி டில்லி அரசனிடமிருந்த இராமப்பிரியரைப் பாக்ஷாவிடஞ் சென்று கேட்க, அவன் நீர் வருவித்துக் கொள்ளுமென்றனன். உடையவர் பெருமாளை வருகவருக என்று தியானிக்கப் பெருமாள் பாக்ஷாவின் புத்திரியை நீக்கி வந்து மடியிலேற என் செல்வப்பிள்ளையோவென பெருமாளுடன் அரசன் உத்தரவு பெற்று நெடுந்தூரம் வந்தனர். உறக்கத்தினின்றும் விழித்த அரசன் புத்ரி அருகிருந்த இராமப்பிரியரைக் காணாது திகைத்துப் பெருமாள் வேண்டுமென்று தந்தையிடங் கூறினள். தந்தை ஏவலாளரைத் துரத்தி அழைத்துவரச் சொல்ல உடையவர் வழிவிட்டுமாறிப் பெருமா

ளுடன் பஞ்சமர் குடிசையில் ஒளித்திருந்து திருநாராயணபுரம் வந்து பெருமாளைப் பிரதிட்டித்து ஆபத்திலுதவிய பஞ்சமர்க்குத் தலத்தில் மரியாதை செய்வித்து அவ்வூரில் வசிப்போர் இவரது பிரிவாற்றாது வேண்டத் தம்மைப்போல் விக்ரகஞ்செய்வித்துத் தந்து திருவேங்கடஞ்சென்று அடியில் தில்லைகோவிந்தராசப் பெருயாள், ஆழ்வார்முதலியவரைப்பிரதிட்டிப்பித்துத் திருவரங்க மெழுந்தருளி (௭௪) திருவாழி திருச்சங்கம் பிரதிட்டித்து (௭௪) திருநாமங்களுக்குக் கொடுத்து அவர்களுக்கு அழகிய சிங்கரைத் திருவாராதனமாகக் கற்பித்து ஆசார்யர்களாக்கிக் கூரத்தாழ்வானுக்கு ஸ்ரீ பாததீர்த்த மருளிக் கோயிலுக்குப் பலவித கைங்கர்ய பரர்களை நியமித்துத் திருமேனியில், பெருமாளைப் பிரார்த்தித்து நோய் சாத்தியருள, பிள்ளான் வேண்டுகோளின்படி தம்முடைய விக்ரகஞ் செய்வித்து அதைத் தாம் ஆலிங்கனஞ் செய்து விக்ரகத்தைத் திருவரங்கத்திலும், ஸ்ரீ பெரும்பூதூரிலும், திருநாராயணபுரத்திலும், பிரதிட்டை செய்வித்துத் தமது திருவாராதனப் பெருமாளைப் பிள்ளானுக்குப் பிரசாதித்துப் பிள்ளான் மடியில் திருமுடியும் கிடாம்பியாச்சான் மடியில் திருவடியுமாய்த் திருநாட்டிற் கெழுந்தருளினர். இவர்க்கு எம்பெருமானார், இராமாநுசன், இளையாழ்வார், பாஷ்யகாரர், உடையவர் என்று திருநாமங்கள். இவர் அருளிச்செய்த நூல்கள் ஸ்ரீ பாஷ்யம், வேதாந்ததீபம், வேதாந்தசாரம், வேதார்த்தசங்கிரகம், கீதாபாஷ்யம். இவர் பிங்கள௵ பங்குனி௴ சனிவாரம் தசமி திருவாதிரை நக்ஷத்திரத்தில் பரமபத மெழுந்தருளினர். இவர் அறுபது வயதிருந்ததாகத் தெரிகிறது. (குருபரம்பரை).

2. உடையவர் எம்பாருக்கு முதலில் இட்ட பெயர்

எம்பெருமானாரப்பன் — நாயினாராசாரியர் திருவடி சம்பந்தி.

எயில்—திண்டிவனந் தாலூகாவிலுள்ள ஓர் ஊர். பழைய பாடல்களி லுள்ளது. (புற)

எயிறனையழித்தல்—தெளிவுடைத்தான கட்டுங்கழலோன் அழகிய மதிலின்கட் கேட்டினைச் சொல்லியது. (பு. வெ)

எயிற்பாசி — முனையும் செற்றத்தினையுடையார் காவற் குறும்புவலிகெட ஏணிமேல் ஏறியது. (பு. வெ.)

எயிற்போர்—கூரிய ஆயுதத்தாலே குறும்பினைக் காக்கும் மதிலிடத்துப் போர்வீரர் மாறுபாட்டைச் சிறப்பித்தது. (பு. வெ.)

எயிற்றியனார் — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் குறுந்தொகையில் "மடந்தைதமூரான்முறுவலாகிய எயிற்றை உள்ளிக்காண்பன்" எனக்கூறினமையின் எயிற்றியனார் என்பர்போலும். குறு-286.

எயினந்தைமகனிளங்கீரனார் — கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர் இளங்கீரனார் காண்க. (அக-று.)

எயினந்தையார்—எயின் தந்தை எயினந்தை, எயினனைத் தந்தையாக உடையவரென்பது; அன்றி இவர்பாடலில் "எயின் மன்னன்போல" என்றிருத்தலால் இவ்வருந் தொடர் மொழிபற்றி இப்பெயர் கொடுக்கப்பட்டதோ தெரியவில்லை. இவர் இளங்கீரனாரின் தந்தையாராவர்; பாலைத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்; தலைவன் மகிழ்ச்சியும் தலைவி துயரமும் தோழி கூறுவதாக இவர்கூறியது ஆராயற்பாலது. இவர்பாடியது நற் ௪௯-ம் செய்யுள். (நற்.)

எரிமலைகள் — பூமிக்குக்கீழ் உள்ள தீ, உள்ளிருக்கும் மண்ணை உருக்கி மலைப்புழை வழியாக மேல்வீசுவது. தென் அமெரிகா கண்டத்தின் மேல்கரையில் உள்ள கொடபாக்ஸி எனும் எரிமலை இது, (7) ஆனை பளுவுள்ள மலைக் கல்லை (9) மைல் உயரம் ஆகாயத்தி லெறிந்ததாம். இவ் வெரிமலைகள் கடல்களிலுண்டாயின் கடல் கொந்தளிப்படைகிறது. இவை பெரும்பாலும் கடற்கரை சார்ந்தே உண்டாகின்றன. அமெரிகாவில் கொடபாக்ஸி, சிம்பரோசா, ஓரிசாபா, போபோகாடிபிடல், கீழிந்திய தீவில் சில, ஐஸ்லாண்டில் எக்லா, இடாலியில் வெசுவியஸ், எட்னு, ஸ்டராம்பொலி, இவற்றுள் சில எரிந்து அவிந்துபோனவை ஆக (772) எரிமலைகள் உள எனக் கூறுகின்றனர்.

எரிமுகன்—சூரபதுமனுக்குக் குமரன்.

எருக்காட்டூர்த்தாயங்கண்ணனார் — "இவர் வளங்கெழு முசிறியார்ப் பெழவளைஇ யருசமங்கடந்து படிமம் வவ்விய நெடுநல் யானையடுபோர்ச்செழியன்" எனச்சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளியின்வெற்றியைப் பாடியவர். (புற-று.) (அக-நா.)

எருச்சலூர்மலாடனார்—ஒரு தமிழ்ப்புலவர்,

எருநாடர்—ஒருவிதமான மலைநாட்டுச் சாதியார். இவர்கள் பாம்பைக்கொன்று அதில் தைலமிறக்கிக் குஷ்டரோய்க்கும் கொடுப்பர். இவர்கள் ஊருக்குள் வரக்கூடாது. இவர்கள் வில்லம்புகொண்டு குரங்குகளை எய்து தின்பர்.

எருமை—இது பசுவைப்போன்ற உருவுள்ளது, இதன் உடல் கறுப்பு. அகலமாய் நீண்டகொம்புகளுள்ளது. பசுவைக்காட்டிலும் அதிகமாகத் தடித்த பால் கறக்கும். சேற்றில் புரளப்பிரியமுள்ளமூர்க்கப் பிராணி, இதன்தோலும், கொம்பும், பலவித சாமான்கள் செய்ய உதம். இதன் பாலில் வெண்ணெயெடுத்து நெய்யாக்குகிறார்கள். காட்டெருமை மிகவும் கொடிய மிருகம்.

எருமைமறம்—வேரும் பச்சினத்தைக் கடாவி முதுகிட்ட தன் சேனைக்குப் பின்னே நின்றது. (பு. வெ.)

எருமையூரான் — ஒரு அரசன், நெடுமானஞ்சியால் வெல்லப்பட்டவன்.

எருமைவெளியனுர் — "மாவாராதே மாவாராதே, யெல்லார் மாவும் வந்தன" எனக் குதிரைமறம் பாடிய ஒரு தமிழ்ப் புலவர். கடைச்சங்கத்தவர். (அக-று.) (புற-நா.)

எருமைவெளியனுர் மகனுர்கடலனுர்-கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவர் பெயர் கடலனுர் என்பதால் இவர் நெய்தனிலத்தவர் போலும். இவரது ஊர்ப் பெயர் எருமை வெளியென்பது போலும். இவர் அரவு தன் மாணிக்கத்தை உமிழ்ந்து வைத்து அவ்வொளியில் இரைதேடுதலை "இருங்களிறட்ட பெருஞ்சின வுழுவை, நாமநல்லராக் கதிர்பட வுமிழ்ந்த, மேய் மணி விளக்கிற்புலர வீர்க்கும், வாணடந் தன்ன வழக்கருங் கவலை" அகம் (எஉ) ஆவது செய்யுளில் கூறியிருக்கின்றனர்.

எலி—இது வீடுகளிலும் வயல்களிலும் உலாவும் பிராணி. இதற்கு முகம் சற்றுக் கூர்மையாகவும், மீசைகள் நீண்டும், கண்களிருட்டில்நன்ருய்ப் பார்க்கக்கூடியனாகவும் கால்கள் குறுகியும், வால் நீண்டும் இருக்கும். இது தந்திரமாகப் பொருள்களைத் திருடும். கூர்மையான பற்களால் பூமியைத் தோண்டியும் கதவுகளைப் பற்களால் அறுத்தும் திருடவல்லது. இதற்குப் பூனை, நாய்,பாம்புமுதலியசத்ரு. இவ்வெலிகளில் பலவகை உண்டு வரப்பெலி, வீங்கெலி, இழுப்பெலி, சிலாலஜ எலி, சபள எலி, புண்டரஎலி, ஹரிதஎலி, சிகுரஎலி, அசித எலி, கஷாயதந்தஎலி, குனகஎலி, கோகில எலி, கபிலஎலி, கிருஷ்ணஎலி, ரசாலஎலி, குறுங்காலன் நச்செலி, கத்திரிமணியன், செம்மூக்கன், வரளி, குறட்டை, கருங்காலன், தலையன், விடவெலி, செங்கண்ணன், புள்ளக்காடன், சுண்டெலி. என்பன இவற்றின்குணங்களைஜீவரக்ஷாமிர்தங் காண்க.

எலிபேதம் — அருணம், சபலம், சுவேதம், கபோதம், உந்துரு, நச்செலி,பலினி,சுசுந்தரி, செந்தலைமுட்டி, செவ்வெலி, தூங்கெலி, உலைப்பெலி, புடையெலி, இரைப்பெலி, முதலிய.

எலியோகிராப்-(Heliograph)இது,நேருக்கு நேராக இரண்டு வட்டக் கண்ணுடிகளையுடைய சுழற் கருவி. யுத்தகாலங்களில் சூரிய ஒளியாலும் வேறு ஒளியாலும் கண்ணுடியால் செய்தியை அறிந்துகொள்வது.

எலியோமிடர் — ஒரு தூரதிருஷ்டிக்குழல். இது, ஆகாயத்திலுள்ள கிரகங்களின் சமீப அளவைத் தெரிவிப்பது.

எல்லப்பநாவலர் — இவர்க்குச் சைவ எல்லப்பநாவலர் எனவும் பெயர். இவர் பிறந்தது தாழைநகர். இவரைச் சிலர் யாழ்ப்பாணத்தவர் என்பர். பிள்ளைப்பெருமாளையங்கார்காலத்தி லிவரிருந்ததாகப் பலர் கூறுகிறபடியால் இவர்காலம் திருமலைராய னரசாட்சிகாலம் என்று தோன்றுகிறது. இவர் செய்த நூல்கள் அருணசல புராணம், திருவிரிஞ்சைப்புராணம், செவ்வந்திபுராணம், தீர்த்தகிரி புராணம், திருச்செங்காட்டங்குடி புராணம், திருவெண்காட்டுப் புராணம், அருணையந்தாதி, அருணைக் கலம்பகம், சௌந்தரியலகரியுரை முதலியன. இவரூர் சோழநாட்டதாகிய திருவெண்காட்டிற் கருகிலுள்ள இராதாநல்லூர் என்பர். சிலர் இவர் தருமபுர ஆதீனத்தை யடுத்து இலக்கிய இலக்கணங்களைக் கற்ற சைவ வேளாளர் என்பர்.

எல்லன் — தொண்டைநாட்டுக் குன்றையூரிலிருந்து யாசகருக்கு வேண்டிய கொடுத்துவரும் நாட்களில் ஒருவன் வந்து உடற்றசை கேட்க அதனை அரிந்து கொடுத்து புகழ் பெற்றபிரபு. "ஆலங்கே யங்கே யரும் பறவை யாற்றயிலும், மாலங்கே யங்கே மலர்மடந்தை — கோலஞ்சேர், செங்கே தகை மணக்குஞ் செங்குன்றை யூரனெங்கே, அங்கே யிரவலரெல்லாம்."

**எல்லையம்மன்** — இவள் மாரி வேறுபாடு. இவளை எல்லையிலிருத்தலால் எல்லையம்மன் எனவும், வீதியிலிருப்பதால் தெருவீதியம்மன் எனவும், சந்தியிலிருப்பதால் சந்தியம்மன் எனவும், சோலையிலிருப்பதால் சோலையம்மன் எனவும், பனையடியிலிருப்பதால் கருக்காத்தாள் எனவும், வேப்படியிலிருப்பதால் வேம்படியம்மை எனவும், ஆலடியிலிருப்பதால் ஆலையமர்ந்தாள் எனவும், எட்டிமரத்தடியிலிருப்பதால் எட்டியம்மன் எனவும் கூறுவர்.

**எவனேச்வரன்** — பயனைக் காண்க.

**எவுன்** — கலிங்கதேசத் தரசன்.

**எழினி** — மத்தியைக் காண்க.

**எழினி அதியமான்**—கடையெழுவள்ளல்களிலொருவன். இவனை எழிலி யென்பர். குதிரைமலை இவனுடையது. (புற. நா).

**எழுஉப்பன்றீநாகன்குமரனார்**—கடைச்சங்கமருவிய புலவர். எழும்பன்றி எனவுங் கூறுவர். (அக. நா.)

**எழுகடல்**— ஒரு தடாகம்; காஞ்சன மாலைக்காக வருவித்த எழு கடல்களும் தன்பால் வந்து அடங்கப் பெற்றமையின், இஃது இப் பெயர் பெற்றது; இதன் நிருதி மூலையில் மிகப் பழையதாகக் காஞ்சன மாலை கோயிலொன்று இருக்கின்றது. (திருவிளையாடல்.)

**எழுகடற்றெரு** — மதுரையிலுள்ள எழுகடலென்னும் தடாகத்தின் வடகரையிலுள்ளது. (திருவி).

**எழுகூற்றிருக்கை**—சித்திரக்கவியிலொன்று. இது, எழறையாக்கி முறையாகக் குறுமக்கண் முன்னின்றும் புக்கும் போந்தும், விளையாடும் பெற்றியான் வழுவாமை ஒன்று முதலாக எழிறுதியாக முறையானே பாடுவது. (யாப்பு - வி.)

**எழுத்தாளன்** —(1) படைவீரர் எவ்வளவினர் அவர்கள் பெற்ற வேதனம் எவ்வளவு அவர்களுள் பழையராய் வலியிழந்தவர் யாவர் வேற்றிடங்களில் சென்றிருப்பவர் யாவர் எனக் கணக்கிட்டறிபவன் (சுக் நீ.)

(2) நூறு காலாட்களுக்குத் தலைவன். (சுக் - நீ.)

(3) கணக்கின் திறமை, நாடு, மொழி இவற்றின் வேறுபாடறிதல், ஐயந் தோன்றாது மறை பொருளின்றி விளக்கமாக எழுதுமுறைமை யுடையவன். (சுக்-நீ.)

**எழுத்து** — 1. இது சூக்ஷமம், ஸ்தூலம் என இருவகைப்படும். இவற்றை விவகரிக்குமிடத்து ஈசுவர சத்தியினது முதல் க்ஷோபத்தால் த்வனிரூபமான நாதம் உண்டாகிறது. அதுதான் அபரநாதம் எனப்படும். இரண்டாவது க்ஷோபத்தால் சங்கல்பரூபமான விந்து உண்டாகின்றது. அதுதான் அபரவிந்து. மூன்றாவது க்ஷோபத்தால் வர்ணரூபமான அக்ஷரம் உண்டாகிறது. இந்த நாதவிந்து வர்ணங்கள் பரவிந்துவினது முதற்காரியங்கள். இவ்விடத்துக் காரியவிந்துவினது ஸ்தூலாவஸ்தையானது மிக ஸ்தூலமாகும்போது வைகரியென்றும், கொஞ்சம் ஸ்தூலமாகும்போது மத்திமையென்றும்இருவகையாம். சூக்கும அவஸ்தையானது மிக சூக்குமமாகும்போது சூக்ஷமை என்றும், கொஞ்சம் சூக்ஷமையாகும்போது பைசந்தி என்றும் கூறப்படும். மேற்கூறிய பைசந்தி உச்சியிற் றோன்றும் வாயுவால் மார்பு, கழுத்து, தலை, நாவினடி, நா, பல், மூக்கு, உதடு இவ்விடங்களில் தடையுறும்போது எழுத்துக்களாகத் திரண்டு உதானவாயு மேலெழும்போது வெளியில்வந்து பிறர் காதிற்குப் புலப்படும்படி உச்சரிக்கப்பட்டுக் கடாதி பதார்த்தங்களைச் சொல்லும்போது வாக்கானது வர்ணம் என்றும் வைகரீவாக்கு என்றும் சொல்லப்படும். அவ்வைகரி தனக்கு முன்னிருக்கும் மத்திமை வாக்கினும் அதிக ஸ்தூலமாகும். புத்தியால் மாத்திரம் அறியப்பட்டும் உள்ளடங்கிய உச்சரிப்பாயும், பிறர் காதிற் கேளாமலும் எழுத்துமுறை யுள்ளதாயும் இருக்கும் வாக்கானது காரியவிந்துவினது முதலவஸ்தையாகச் சூக்கும வாக்கினது விகாரமான பைசந்தி எனப்படும். ஒரு விசேஷமுமின்றி அர்த்தசுவரூபத்தை மாத்திரம் பிரகாசித்துக்கொண்டு உள்ளோர் சோதியாய் நெடுநாள் நிலைப்பதாகிய வாக்கு நாதமென்னும் பெயருள்ள சூக்குமைவாக்கு எனப்படும். இது (சி - சா.)

2. "எழுத்தென்றது கட்புலனாகா வுருவும் கட்புலனாகிய வடிவும் உடையதாய் வேறுவேறுவகுத்துக்கொண்டு தன்னையே உணர்த்தியும், சொற்கு இயைந்து நிற்கும் ஓசை. அது செறிப்பச் சேறலானும், செறிப்ப வருதலானும், இடையெறியப் படுதலானும், இன்பதுன்பத்தை ஆக்கலானும், அருவும் உருவுங் கூடிப்பிறத்தலானும், உந்திமுதலாகத் தோன்றி எண்வகை நிலத்தும் பிறந்து, கட்புலனாந்தன்மை

யின்றிச் செவிக்கட் சென்றுறூஉம் ஊறுடைமையானும், விசும்பிற் பிறந்து இயங்குவதோர் தன்மையுடைமையானும், காற்றின் குணமாயதோர் உருவாம். வன்மை, மென்மை, இடைமை கோடலான் உருவேயாயிற்று. இதனைக் காற்றின்குணம் என்பது தொல்காப்பியர் கருத்தென்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர். இதனை விசும்பின் குணம் என்பாரும் உளர். உருவுருவாகி எனவும், உட்பெறு புள்ளியுருவாகும்மே எனவும் காட்சிப் பொருட்கும் சிறுபான்மைவரும் வடிவாவது கட்புலனாகியே நிற்கும். அது வட்டம் சதுரம் முதலிய முப்பத்து இரண்டினுள் ஒன்றை உணர்த்தும். மனத்தான் உணரும் நுண்ணறிவு இல்லோரும், உணர்தற்கு எழுத்துக்கட்கு வேறு வேறு வடிவங்காட்டி எழுதப்பட்டு நடத்தலின் கட்புலனாகிய வரிவடிவும் உடையவாயின. தன்மையும் வடிவும் ஆசிரியர் தொல்காப்பியர் கூறிலர். வடிவு கூறுமிடத்து மெய்க்கே பெரும்பான்மை வடிவு கூறுவர். ஓசை உணர்வார்க்குக் கருவியாகிய வரிவடிவும் சிறப்பிலா எழுத்தாகக் கொள்க. இவ்வெழுத்தெனப்பட்ட ஓசையை அருவென்பர். அறியாதார்" அதனை உருவென்றேகோடும். அதனை உருவென்பதற்குச் "செறிப்பச் சேறலானும்" என்பதனாற் கொள்க. அருவேயாயின் ஈண்டுக் கூறியவை யின்மையுணர்க. இவ்வெழுத்துக்களின் உருவிற்கு வடிவு கூறாது ஒழிந்தார். அது முப்பத்திரண்டு வடிவினுள் இன்ன எழுத்திற்கு இன்ன வடிவெனப் பிறர்க்கு உணர்த்துதற்கு அரிதென்பது கருதி. அவ்வடிவு ஆராயுமிடத்துப் பெற்ற பெற்ற வடிவே தமக்கு வடிவாம். குழலகத்திற் கூறில் குழல்வடிவும், குடத்தகத்திற் கூறில் குடவடிவும், வெள்ளிடையாற்கூறில் எல்லாத் திசையும், நீர்த்தரங்கமும்போல வருவதாம். மெய்க்கு வடிவாவது உருவு திரிந்து மேலுங் கீழும் விலங்கு பெற்றுங், கோடு பெற்றும் புள்ளி பெற்றும், புள்ளியும் கோடும் உடன் பெற்றும், உயிர்த்தலாம். கி, கீ முதலியன மேல்விலங்கு பெற்றன. கு, கூ முதலிய கீழ்விலங்கு பெற்றன. கா, ஙா முதலிய புள்ளி பெற்றன. அருகேபெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதுவர். மகரமும் இரண்டு புள்ளியுள் உட்பெறு புள்ளியை வளைத்து எழுதினர். கொ ஙொ கோ ஙோ முதலிய புள்ளியுங் கோடும் உடன்பெற்றன. இவை தொல்காப்பியத்து ஆசிரியர் நச்சினார்க்கினியராற் கூறப்பட்டன. இவற்றின் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதலீறிடைநிலை, போலி, பதம், புணர்ப்பு முதலியவற்றை அவ்விலக்கணஞ் சொன்ன தொல்காப்பிய முதலிய இலக்கண நூல்களுட் காண்க. உயிர்க்கு ஆன்றோர் காட்டிய வடிவே வடிவாம்.

2. (தொகை, வகை, விரி). 1. சிறப்பெழுத்து, 2. உறுப்பெழுத் தென்னுந் தொகையானும்; 1. ஒற்று, 2. உயிர், 3. உயிர் மெய்யென்னும் வகையானும்; 1. உயிரும், 2. மெய்யும், 3. உயிர்மெய்யும், 4. குறிலும், 5. நெடிலும், 6. அனபெடையும், 7. வன்மையும், 8. மென்மையும், 9. இடைமையும், 10. குற்றியலிகரமும், 11. குற்றியலுகரமும், 12. ஆயுதமும், 13. ஐகாரக் குறுக்கமும், 14. ஔகாரக் குறுக்கமும், 15. மகரக்குறுக்கமுமென்னும் விரியானும் பலவாம். (யா-வி)

3. மற்றும் இராசியெழுத்து, நாளெழுத்து, தோபமுதலிய நால்வகையெழுத்து, சாதி முதலிய தன்மையெழுத்து, உச்சாடன முதலிய உக்கிரவெழுத்து, சித்திராரூட முதலிய முத்திறவெழுத்து, பாகியல் முதலிய நால்வகை யெழுத்து, புத்தேள் முதலிய நாற்கதியெழுத்து, தாது முதலிய வொளியெழுத்து, மாகமடைய முதலிய சங்கேதவெழுத்து, கலி முதலிய சங்கேதவெழுத்து, பார்ப்பான் வழக்காகிய பதின்மூன்றெழுத்தும் பிறவுமாம். (யாப்பு - வி)

**எழுத்துப்போலி**—சொற்களின் முதலிடைகடைகளில் ஒரெழுத்திற்குப் பிரதியாக மற்றோரெழுத்து வரப் பொருள் மாறாதிருப்பது. (நன்)

**எழுத்துவருத்தனம்**—இது சித்திர கவிவகையுள் ஒன்று. இது ஒரெழுத்து முதலாக ஒன்று தலைச்சிறந்து ஏறிய எழுத்துக்களான் முறையே பொருள்தரப் பாடுவது.

**எழுநூற்றுமங்கலம்** — ஓரூர்; ஆளுடைய நாயகர், எழுநூறு நரிகளைக் குதிரைகளாகச் செய்த இடமாம். இது மதுரையில் ஆளுடையார் கோயிலுக்குத் தெற்கே உ-நாழிகைவழிதூரத்திலுள்ளது. (திருவிளை)

**எழுபதுபரிபாடல்**—கடைச்சங்கமருவிய நூல்.

**ஏழுவகைத்தானியங்கள்** — இவை யாகங்களுக் குதவினவை. நெல், கொள், எள், உழுந்து, துவரை, கடுகு, பயறு.

**ஏழுவகைமதம்** — உடன்படல், மறுத்தல், பிறர்மதமேற்கொண்டு களைதல், தானொரு பொருளை யெடுத்து காட்டியதனை வருமிடந்தோறு நிறுத்தல், இருவர் ஒன்றற் கொன்று விரோதமாகக்கொண்ட இரண்டனுள் ஒன்றனிடத்துத் துணிதல், பிறர் நூலிலுள்ள குற்றங் காட்டல், பிறர்மதத்திற்கு உடம்படானுகித் தன்மதங்கொளல். (நன் - பா.)

**எவிதின்முடிபணி** — அஃதாவது ஒருவன் செய்யத்தொடங்கிய காரியம் மற்றொரு காரண வுதவியா லெளிதின் முடிதலாம். இதனை வடநூலார் சமாதி யலங்காரமென்பர்.

**எள்**—இது ஒரு சிறு செடி. இதன் வித்தில் எண்ணெயெடுப்பர். விஷ்ணுவின் வியர்வையில் உண்டானது, ஆகையால் மிகத் தூய்மையானது. இதனைக் கண்டால் அசுரரும் பூதப்பிரேத பைசாசர் முதலியோரும் வெருண்டு ஓடுவர். இந்த எள் கறுப்பும் வெண்மையுமென இருவகைத்து. எந்த நிறமுள்ள எள்ளையேனும் தானங்களோடு சேர்த்துக் கொடுப்பின் அதிக பயனுள்ளதாகும். சிரார்த்தத்தில் கறுப்பு எள்ளைச் சேர்த்தால் பிதுர்தேவர்கள் அதிகக் களிப்படைவர். (கருடபுராணம்)

**எறிச்சலூர்** — இது சோணாட்டுள்ள' ஊர்களுள் ஒன்று. (புறநானூறு)

**எறிச்சலூர்மலாடனார்**—இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். இவரூர் எரிச்சலூர் போலும். (திருவள்ளுவமாலை)

**எறிபத்தநாயனர்**—பரமசிவனிடத்தும், அடியவர்களிடத்தும் அன்புள்ள சிவனடியவர். இவர், திருக்கருவூரில் பரமசிவத்திற்குப் பூமாலை தொடுத்துச் சாத்தும் சிவகாமியாண்டார் ஒருநாள் சுவாமிக்குப்புட்பங்கொண்டுவர, சோழராஜன் யானை, மகா நவமிக்கு முன்னுள் ஸ்நானத்திற்குப் போய் வருகையில் சிவகாமியாண்டா ரிடத்திருந்த பூக்குடலையைப்பறித்தெறிந்தது. சிவகாமியாண்டார் சுவாமியிடத்து முறையிடுதலைக் கேட்டு எறிபத்தநாயனர் அவ்விடம் வந்து யானையையும் யானைப்பாகரையும் கொன்றனர். இதனையறிந்த சோழராஜன் சிவனடியார் குற்றஞ்செய்யாரென உணர்ந்து அவ்விடஞ்சென்று இக்குற்றம் யான் செய்ததால் என்னைச் சேதிக்க என்று உடைவாளை எறிபத்தரிடந் தந்தனன். எறிபத்தநாயனர், அந்த உடைவாளினுல் தம் கழுத்தினை அரியத் தொடங்குகையில் அரசன் அவர் கையைப் பற்றிக்கொண்டனன். அப்போது பரமசிவம், அசரீரியாய் "யாமே உங்களன்பினைத் தெரிவிக்கச் செய்தோம்" என்று யானையையும் பாகரையும் பிழைப்பித்து இவர்களுக்குத் திருவடி தந்தருளினர். (பெரிய புராணம்.)

**எறும்பி அப்பர்**—தேசிகர் சாதித்தவைமாறுனவை என்று அண்ணனுடன் வாதிட்ட மணவாள மாமுனிகளின் காலக்ஷேபபரர். அஷ்டதிக்கஜங்களாகக்கொண்டவர்களில் ஒருவர். இவர் செய்த நூல் விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்.

**எறும்பு** — இது வண்டினத்தைச் சேர்ந்த முதுகெலும்பில்லாப் பிராணி. இதற்கும் சிலநாட்களில் இறக்கை முளைப்பதுண்டு. இதற்குப் பல கண்கள் உண்டென்பர். இது தன் பரிசவுறுப்பால் பொருள்களை அறியும். உருசியை உணரும் உறுப்பும் உண்டு. இதிற் பலவகையான எறும்புகளுண்டு. சிற்றெறும்பு, பேரெறும்பு, கட்டெறும்பு, செங்காலெறும்பு, பேய்க்காலெறும்பு, முயிற்றெறும்பு முதல் பல. இவற்றின் முயற்சி பல. விசித்திரமாகக் காரியங்களைச் செய்யும் பிராணி.

**எஜநயன்**—பரமேஷ்டியின் புத்ரன்.

**எஜு**—ஒரு வேதியன், இவன் யாகத்தின் பொருட்டுப் பசுவின் வயிற்றில் கன்றிருக்கக் கண்டு அசரீரியால் கோவத்தி செய்தவனென அறிவிக்கப்பட்டுப் பெண்ணை நதியில் மூழ்கி நீக்கிக்கொண்டவன்.

# ஏ

**ஏகசக்ரநகரம்** — இது, அரக்குமாளிகையினின்று தப்பிப் பிராமணவேடம் பூண்ட பாண்டவர் வசித்த நகரம். இதில் இருக்கையில் வீமன் பகாசுரனைக் கொன்றனன். திரௌபதியின் திருமணம் நடந்தது. தற்காலம் அவ்விடம், ஏரா என்கிற பட்டணம் இருக்கிறது.

**ஏகசக்ரன்**—தநு புத்திரர்களில் ஒருவன்.

**ஏகசத்தீ ஆசாரி** — ஏகசந்தியெனும் நூல் செய்தவன்.

**ஏகசந்தீ**—சகதேவன் குமரன். சராசந்தன் பேரன்.

**ஏகதந்தன்** — விநாயகமூர்த்தி. கசமுகாசுரனைக் கொல்லத் தந்தங்களில் ஒன்றை விட்டெறிந்தமையால் அது தொடங்கி விநாயகருக்கு இப்பெய ருண்டாயிற்று.

**ஏகதர், துவிதர், திரிதர்**—இவர்கள் பிரமபுத்ரர். இவர்களில் திரிதருடைய சாபத்தால் முதலிருவரும் ராமாவதாரத்தில் குரங்குகளாயினர். (பார-சாந்)

**ஏகதன்**—கௌதமன் புத்ரன்.

**ஏகதன்**—பிரமன் குமாரர்களில் ஒருவன்.

**ஏகநாதசுவாமி**—பைடனபுரியில் வேதியர் குலத்தில் பிறந்து இளமையிலே ஜனார்த்தன சுவாமியின் அடிமையாகி அவர்க்குச் சிச்ருஷை செய்துவரும் நாட்களில் ஆசிரியர் மகிழ்ந்து இவர்க்குத் தமதாசிரியராகிய தத்தாத்திரேயரைச் சேவித்து வைக்க எண்ணி அவ்வாறு செய்து இவரை அவரது இருப்பிடஞ் செல்ல விடுத்தனர். ஏகநாதர் அவ்விடஞ்சென்று ஆசாரியர் உபதேசத்தை மறவாமல் ராமாயணம் பிராக்ருதபாஷையிற் பாடத்தொடங்கி இராமமூர்த்தி இவரை எழுப்பி இவர்க்கு எழுத மசிக்கூடும் இலேகினியும் வைத்து மறைதலைக் கண்டு ராமகதை எழுதி வருகையில் அயல்வீட்டான் இவரையணுகி உபதேசம் வேண்ட அவன் அருகனல்லாமை தெரிந்து அவனை விலக்கிச் சுலீப பர்வதமடைந்து நாகமிவர்க்கு நிழல்செய்ய யோகத்திருக்கையில், கண்ணனருள் பெற்று ஆசாரியர் சொற்படி தமதூரடைந்திருக்கையில் பெருமாள் ஏவலாளராக இவரிடம் வந்து ஏவல் செய்து வருகையில் தாசரின் பிதுர்த்தினம் வந்தது. அந் நாளில் பிதுர்க்களுக்குச் சமைக்கப்பட்ட அன்னத்தை வேறு சிலர்க்கு அமுது செய்வித்ததால் வேதியர் சிரார்த்தத்திற்கு வாராது நின்றனர். அக்காலத்து ஏவலாளரா யிருந்த பெருமாள் பிதுர் தேவதைகளை அழைத்து அன்னம் படைப்பித்து வேற்றோர்க்கிட்ட அன்னத்தால் ஒருவ னடைந்திருந்த குஷ்ட வியாதியைப் போக்கி யிருந்தனர். இது நிற்கத் தவத்தினர் ஒருவர் துவாரகை சென்று பெருமாளைக் கோயிலில் காணாது பைடனபுரியில் இருப்பதறிந்து ஏகநாதரிடம் வந்தனர். இதனைப் பெருமாளுணர்ந்து மறைய ஏகநாதர் பெருமாள் நமக்கு ஏவலாளராக இருந்தனர் என மிகவும் விசனமுற்றுத் துதித்திருந்தவர்.

**ஏகநேத்ரர்** — அஷ்ட வித்யேச்வாரில் ஒருவர்.

**ஏகபாதத்ரிமூர்த்தம்**—தாம் ஒருவரே சிருட்டிதிதியின் பொருட்டுப் பிரம விஷ்ணுக்களைத் தம்மிடந் தோற்றுவித்த சிவமூர்த்தியின் திருக்கோலத் தொன்று.

**ஏகபாதமூர்த்தம்** — சிருஷ்டிக்கு முன்னும் சர்வசங்காரத்துக்குப் பின்னும் தனித்து நிற்கும் சிவமூர்த்தி, இவர்க்கு ஒரேபாதம்.

**ஏகபாதர்**—கேரளதேச வனவாசிகள். (பாரசபா.)

**ஏகபாதன்**—அட்டவக்ரனுக்குத் தந்தை.

**ஏகம்பர்**—காஞ்சியில் எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்தியின் திருநாமம்.

**ஏகம்பவாண முதலியார்** — இவர் மகதநாடெனப்படும் நடு நாட்டிலுள்ள ஆற்றூருக்குரியவர். இவர் குலோத்துங்க சோழன் காலத்திருந்த வாணபூபதி யென்னும் வேளாளரின் குமரர். இவர் பிறந்த ஒரு வருடத்தில் தாயிறந்தனள். பிறகு இவர் தந்தை தமக்கு மரணம் வருதலறிந்து தம்மிடமிருந்த ஏகன், சாம்பன் என்னும் பண்ணையாளை அழைத்துத் தம்மிடமிருந்த செல்வ முதலியவைகளை ஒப்புவித்து மரணம் அடைந்தனர். இவ்வகை முதலியார் இறந்த பிறகு ஏகன், முதலியார் குமாரனை முதலியாரின் குலத்துக்கேற்றவரிடம் ஒப்புவித்துப் பாதுகாத்து வந்தனன். அந்தப் பிள்ளைக்கு ஐந்தாம் வயது வந்தபோது ஏகன், கம்பநாடரிடம் பிள்ளையை ஒப்புவித்துக் கம்பர் அவாவின் அளவு பொருள்கொடுத்துக் கல்வியில் வல்லவர் ஆக்கினன். குமரன் கல்வி முதலியகற்றுப் பதினாறுவயது அடைந்ததும் வாணமுதலியார் தன்னிடம் ஒப்புவித்துச் சென்ற நிலம், தனம் முதலிய எல்லாவற்றையும் குமரனிடம் ஒப்புவித்துப் பூமியில் சேமித்துவைத்த நிதியை மாத்திரங் கூறாது இருந்தனன். பின் ஏகன், அவர் குலத்துக்கேற்ப ஒரு நற்குல மாதை அறிந்து விவாகம் முடித்தனன். இக்குமரனும் அவனைத் தந்தைபோலெண்ணி அவன் பெயர் முன்னும் தனக்குக் கல்வி போதித்த கம்பர்பெயர் இரண்டாவதும் தன் தந்தைபெயர் மூன்றாவதுமாக வைத்து ஏகம்பவாண பூபதியென்னும் பெயர்தரித்து வாழும் நாட்களில் ஏகன்,

சேமித்திருக்கும் நிதியைத் தெரிவிக்கும்
பொருட்டு ஏகம்பவாணரை அழைத்துப்
பொருளிருக்கு மிடத்தைக் கூறினன்.
ஏகம்பவாணர் பொருளை எடுக்கும்படி யத்
தனிக்கையில் பூதம் ஒன்று தோன்றி,
நான் இதுவரையில் இந்நிதியைக் காத்து
வந்தமையால் எனக்கு, ஒரு தந்தைக்கு
ஓரே குமாரனாகிய ஒருவனைப் பலிதரல்
வேண்டும் என்றது. அதனைக் கேட்ட
முதலியார் அப்படிப்பட்ட செல்வம்வேண்
டாது ஏகனிடம் நடந்ததைக் கூறினர்.
ஏகன் இச்செய்தியை அறிந்து தான், ஏகம்
பவாணருக்குத்தெரியாமல், தானே அந்தப்
பூதமிருந்த இடத்திற் சென்று தன்னைக்
கொலைசெய்து கொண்டனன். அந்நிதிக்
குக் காவலரியிருந்த பூதம் ஏகம்பவாண
ரிடத்துவந்து என் பலியைப் பெற்றுக்
கொண்டேன். இனி உம் செல்வத்தை
எடுத்துக்கொள்ளும், என்னையும் உம்
ஏவலாளாகக் கொண்டிரும் என்றது. இத
னைக்கேட்ட ஏகம்பவாணர் திடுக்கிட்டுச்
சென்று கண்டு ஏகன் இறந்ததைப்பற்றி
மனம்வருந்தி அவனுக்குவேண்டிய கரு
மாதிகளைத் தாமே முடித்துப் பொருள்
பெற்று இருந்தனர். இவ்வகை இருந்த
காலத்துத் தமிழ்நாட்டு வேந்தராகிய மூவ
ரும் ஏகம்பவாண முதலியாரைக் காண
வந்தனர். அக்காலத்தில் முதலியார் எங்கு
என்று கேட்க வீட்டிலுள்ளார், முதலியார்
கழனிக்குப் போயினர் என்றனர். இத
னைக்கேட்ட மூன்று அரசரும் முதலியார்
நாற்றுமுடி பிடுங்கப் போயினரோ என்று
இறுமாப்புடன் கூறியது அறிந்து இவர்
தேவி "சேனை தழையாக்கிச் செங்குருதி
நீர்தேக்கி, ஆனை மிதித்தவருஞ்சேற்றின்-
மான, பாவேந்தர் வேந்தன் பறித்துநட்டா
னேகம்பன், மூவேந்தர்தங்கண்முடி."
என்ற செய்யுளைக் கூறி அவமதித்தனள்.
இச்செய்தி அறிந்த வாணபூபதி தம்மிடந்
தங்கியுள்ள பூதத்தை ஏவித் தமிழ்நாட்டு
மூவேந்தரைச் சிறைசெய்யக் கூறப்,பூதம்
சேரன், சோழன் இருவரையும் சிறையிட்
டுப் பாண்டியனை வேப்பமாலை தரித்து
இருத்தல்பற்றி அஞ்சி அவனிடத்தில்
போகாது நின்றது. இதனைப் பூதத்தா
லறிந்த வாணபூபதி, கம்பரது தாதிகளைப்
பாண்டியனிடம் அனுப்பி அவனைப்பாடி
அவனிடம் இருக்கும் வேப்பமாலையை
வாங்கிவர ஏவினர். அந்தப்படி தாதிகள்
சென்று "தென்னவாமீனவாசீவிலி மாறு
மதுரை, மன்னவா பாண்டிவரராமா —
துன்னுஞ், சுரும்புக்குத்தாரளித்த துய்ய
தமிழ்நாடா, கரும்புக்கு வேம்பிலேகண்."
"மாப்பைந்தார்க் கல்லமுத்து வண்ணத்தா
ர்க் கல்லவஞ்சி, வேப்பந்தார்க்காசைகொ
ண்டுவிட்டாளே—பூப்பைந்தார், சேர்ந்திரு
க்குநெல்வேலிச் சீவிலிமாறு தமிழ்ழ், ஆய்ந்
திருக்கும்வீரமாறு." "வேம்பாகிலுமினிய
சொல்லுக்குநீபுனைந்த, வேம்பாகிலுமுத
வவேண்டாமோ — மீன்பாயும், வேலை
யிலே வேலைவைத்தமீனவாநின் புயத்து,
மாலையிலே மாலைவைத் தாண்மான்."
என்று அரசனைப் பாட அவன்மாலையைத்
தரத் தாமதிக்கக்கண்ட தாதி "இலகுபுக
ழானை யேகம்பவாணன், அலகைவரும்
வருமென்றஞ்சி — உலகறிய, வானவர்
கோன்சென்னிமிசை வண்கைவளை யெறி
ந்த, மீன்வர்கோன் கைவிடான்வேம்பு."
என்றதைக்கேட்டு நாணி மாலையைத் தந்த
னன். அவன் தந்த வேப்பமாலையினைப்
பெற்று நீங்கப் பூதம் பாண்டியனைத்
தூக்கி ஏகம்பவாணரிடம் சேர்த்தது. பின்
முதலியார் பாண்டி நாட்டைப் பாணனுக்
குப் பரிசாக அளிக்கப் பாண்டியன்
மனைவி மாங்கல்யபிக்ஷை கேட்டனள்.
முதலியார் பாணனுக்கு நான் கொடுத்த
பாண்டி நாட்டை அவனுக்குக் கோடிப்
பொன் கொடுத்துப் பெறுக என்று பாண்
டியனுக்குப் பல பரிசு அளித்து அவ
னிருப்பிடத்திற்கு அனுப்பினர். ஒருநாள்
முதலியார் கம்பரைக்காணப் பாதிராத்திரி
யிற் சென்று கதவைத் தட்ட கம்பர் யார்
என முதலியார் கம்பரடியான் எனக் கம்
பர் வெளிவந்து முதலியாரைப் பார்த்து
"பாண்டியனைப் பேர்மாற்றிப் பாணர்க்
கரசளித்த, வாண்டகையென் றுன்னை
யறியேனோ — மூண்டெழுந்த, கார்மாற்
றுஞ்செங்கை கடகரிவாணுவுனது, பேர்
மாற்றுவதரிதோ பேசு." எனுஞ் செய்யு
ளைக்கூறி வீட்டினுள் அழைத்துச்சென்று
உபசரித்து இருவரும் உறையூர் சென்று
"தேருளைப் புரவிவாரணத்தொகுதி திறை
கொணர்ந்து வருமன்னநின், தேசமேது
னது நாமமேது புகல்செங்கையாழ் தட
வுபாணகேள், வாருமொத்த குடி நீருநா
மும்க தேவனுறை நகர் காவலன், வாண
பூபதி மகிழ்ந்தளிக்க வெகு வரிசை
பெற்றுவரு புலவன்யான், நீருமிப்பரிசு

பெற்று மீளவரலாகுமேகும் அவன்முன் றில்வாய், நித்திலச் சிகரமாட மாளிகை நெருங்கு கோபுரமருங்கெலாம், ஆரும் நிற்கும் உயிர்வேம்பு நிற்கும் வளர்பனையும் நிற்கு மதனருகிலே, அரசு நிற்கு மாசைச் சுமந்த சில அத்தி நிற்கும் அடையாளமே" என்பது முதலாகிய செய்யுட்களைப் பாடிக் களித்திருந்தனர். இவரைப் பற்றி இன் னும் சிலகவிகள் உண்டு. அவை "பாணன் மதுரைப் பதியாள வைத்தபிரான், வாணர் புகழவருமேகம்ப — வாணன், கரும்போ தகமேநின் கால்பணிவேன் மீண்டு, வரும் போ தகமேவரின் ...(எ-ம்). "என்சிவிகை என்பரியீதென்கரியீ தென்பரே — என் கவனம், மாவேந்தன் வாணன் வரிசைப் பரிசுபெற்ற, பாவேந்தரை வேந்தர் பார்த்து... (எ-ம்.) "சேற்றுக் கமலவயல் தென்னுறை வாணனையான், சோற்றுக் கரிசிதரச் சொன்னக்கால் — வேற்றுக் களிக்குமாவைத் தந்தான் கற்றவர்க்கு,' செம்பொன், அளிக்குமாறெவ்வாறவன் முதலியன. இவர் காலத்திருந்த பாண் டியன் சீவலமாறன் எனும் ஸ்ரீ வல்லப தேவன் எனும் அதிவீரராமபாண்டியன் அதிவீராம பாண்டியர் (கி. பி. 1564) இற்றைக்கு (360 - ஆ) களுக்கு முன் னிருந்தவர். அக்காலத்துத் தமிழ் நாட் டரசர் வலிகுன்றி விஜயநகரத்தரசர் கீழ்த் தங்கி வாழ்ந்தனர். இவர் விஜயநகரத் தரசருக்குப் பிரதிநிதியாக இருக்கலாம். "அலங்கலணி மார்பனுறையர் கோன் வாணன், விலங்கு கொடுவருகவென்முன் இலங்கிழையீர் சேரற்கோ சோழற்கோ தென்பாண்டி நாடாளும் வீரற்கோயார்க் கோவிலங்கு" என்பன வற்ருலறிக.

**ஏகம்பவாணருலா** — காஞ்சி ஏகம்பர்மீது இரட்டையராற் பாடப்பட்டது. தமிழ் உலாப் பிரபந்தம்.

**ஏகம்பவாணன்மனைவி** — இவள் தமிழ் நாட்டு மூன்றரசரையும் மதிக்காது அவம தித்தவள். ஏகம்பவாணரைக் காண்க.

**ஏகயம்** — நருமதைக்கு அருகிலுள்ள நாடு, கார்த்த வீரியார்ச்சுனன் ஆண்டது.

**ஏகயன்** — 1. சத்ருசித் குமரன். இவன் குமரன் தருமன்.

2. அத்திரியைக் கொல்லவந்து துரு வாசரால் சாம்பலானவன்.

**ஏகருத்ரர்**—அஷ்டவித்யேச்வரரில் ஒருவர்.

**ஏகலவன்** — ஒருவேடன், துரோணர் வில் வித்தை சீடர்களுக்குக் கற்பிப்பதை அறி ந்து அவரிடத்துச் சென்று அவரை வில் வித்தை கற்றுக் கொடுக்கும்படி கேட்க அவர் மறுத்தனர். பிறகு வேடன் துரோ ணரைப்போ லுருச்செய்து அவ்வுருவத் தைக் குருவாகக்கொண்டு வில்வித்தை முழுமையுங் கற்றுக் குருதக்ஷிணை கொடுக் கத் துரோணர் முன்புசென்று கேட்க அவர் இவனுக்கு அந்த வித்தைகள் பலி யாதிருக்க வேண்டி இடதுகைப் பெரு விரல்தனைக் கேட்டனர். அவ்வகையே வேடன் கொடுத்துப் பாரதயுத்தத்திற்கு முந்திக் கிருஷ்ணனால் கொலை செய்யப் பட்டனன்.

**ஏகலவன்**—ஹிரண்யதனுவன் புத்ரன் வே டன்.

**ஏகலன்**—வசுதேவன் தம்பியாகிய தேவச்ர வஸுவிற்குக் குமரன், நிஷாதர்களால் கொல்லப்பட்டவன்.

**ஏகலைவன்**—ஏகலவனுக்கு ஒரு பெயர்.

**ஏகவீரன்**—இவன் லக்ஷமிதேவி பெண் குதி ரையாய்த் தவஞ்செய்கையில் ஆண் குதி ரை வடிவாய்ப் புணர்ந்த விஷ்ணுவிற்குப் பிறந்து சம்பகனென்கிற காந்தருவனாலும் அவன் தேவி மதனலசை யென்பவளா லும் இந்திர வுலகங்கொண்டு போகப்பட்டு இந்திரன் கட்டளையால் இருந்த இடத்தில் விடப்பட்டு யயாதி யென்னும் துர்வசுவின் குமரனால் எடுத்து வளர்க்கப்பட்டவன். இவன் சலக்கிரீடையில் காலகேதுவால் வஞ்சித்தெடுத்துச் சென்ற ஏகாவலியின் அழகு முதலியவற்றை அவள் தோழி யசோவதியாலுணர்ந்து அத்தோழியிடம் தேவி மந்திரம்பெற்றுப் பாதாளஞ்சென்று காலகேதுவைச் செயித்து ஏகாவலியைச் சிறையினின்று மீட்டு அவன் தந்தை யிடம் விட்டு அவன் அவளை மணஞ்செய் விக்க மணங்கொண்டு தன் மனைவியாகிய ஏகாவலியுடன் யசோவதியையும் அழைத் துக்கொண்டு தன் நாடடைந்து சுகமாக வாழ்ந்து கிருதவீர்ய னென்னும் புத்திர னைப் பெற்றனன். இக் கிருதவீர்யன் குமரன் கார்த்தவீரியன். இவனுக்கு ஐஹ யன் எனவும் பெயர். (தேவி - பா.)

**ஏகன்**—(சங்.) இரேயன் குமரன்.

**ஏகன்சாம்பன்** — வாணமுதலியாரின் பண் ணையாள். (ஏகம்பவாணரைக் காண்க.)

**ஏகாதசருத்திரர்** — 1. அஜைகபாத், அஹிர்புத்நியர், பிநாகி, ருதர், பித்ருரூபர், திரியம்பகர், மஹேச்வரர், விருஷாகபி, சம்புஹவனர், ஈஸ்வரர். (பார-அது.)

2. பிரமன் சிருட்டி முடியாமை கண்டழுது உயிர் நீங்கிய காலத்து அவன் உயிர் பதினொரு கூறாய்த் தேவவுருப் பெற்றது. அதுவே பிரமனுக்குப் பதில் சிருஷ்டி புரிந்தது. (இலிங்கபுராணம்.)

**ஏகாதசி**—இது வித்தியாதரப் பெண்ணொருத்தி இலக்ஷுமியைப் பூசித்துப்பெற்ற பூமாலையை அடைந்த துருவாசர், இந்திரனுக்குக் கொடுக்க இந்திரன் தான் ஏறிவந்த யானைமீது வைக்க, யானை யெடுத்துத் தேய்த்து விட்டதால் கோபித்து இந்திரன் செல்வம் கடலில்விழச் சபித்தனர். இதனை மீண்டும் பெற ஏகாதசியில் தேவர் கடல்கடைந்து துவாதசியில் இலக்ஷுமியின் அனுக்கிரகம் அடைந்து விஷ்ணுவைப் பூசித்த நாள்.

**ஏகாநங்கை**—யசோதையின் மகள். தந்தை நந்தகோபன்.

**ஏகாநந்தி**—யசோதையின் புத்ரி.

**ஏகாநேகை** — ஆங்கிரஸபுத்ரி, இவளுக்குக் குகு என்றும் பெயர்.

**ஏகாந்தராமையர்**—அப்பாலூரிலிருந்த சிவனடியார். இவர் சிவயோகத்தி லிருந்து நாடோறும் திருக்கைலையில் சிவமூர்த்தியையும் சிவனடியவரையும் தரிசித்து வசவாது பெருமை வினவி அவருட னன்பு பூண்டு இருந்தவர். ஒரு வாதில் அரசன் காணத் தம் தலையரிந்து சிவத்தியானஞ் செயச் செய்தனர்.

**ஏகாம்பரபீடம்**—சத்திபீடங்களில் ஒன்று.

**ஏகார்க்களம்**—கீழ்மேலாக ஒருரேகை கீறி அதில் தெற்கு வடக்காக (13) ரேகைகள் கீறில் இவை இரண்டு பக்கங்களும் உச்சியுமாக இருபத்தேழாம். இதில் விட்கம்பம் ஆதியாகக் கழித்த ஒன்பது யோகங்களுக்குச் சொல்லுகிற நாளையுச்சியில் வைத்துத்தொடங்கி, ஆதித்தனியன்ற நாளளவும் வலமாக எண்ணிக் குறிசெய்து, பின்பும் உச்சியிலே தொடங்கிச் சந்திரனின்ற நாளளவும் வரவெண்ணினுல், இருவர் நாட்களும் ஒரு கயிற்றிலே இருக்குமாகில் இந்த யோகமுற்ற நாள் மிகுதியும் சுபகன்மங்களுக்காகாவாம். தோஷமான யோகங்களுக்கு உச்சியிலே வைக்குநாள், அதிகண்டத்திற் கனுஷம், வைதிருதிக்குச் சித்திரை, வச்சிரத்திற்குப் பூசம், சூலத்திற்கு மிருகசீரிடம், விட்கம்பத்திற்கு அசுவநி, வியதிபாதத்திற்கு ஆயிலியம், கண்டத்திற்கு மூலம், பரிகத்திற்கு மகம், வியாகாதத்திற்குப் புனர்பூசம். இவற்றைவைத்துச் சந்திராதித்தர் நின்ற நாளளவும் தனித்தனியே எண்ணிக் காண்க. இவையே யேகார்க்களமாம். (சோதிடம்.)

**ஏகாலி**—(ஈரங்கொல்லி) வண்ணான். இவனுக்கு வேஷ்டிகளை வெளுத்தல் தொழில்.

**ஏகாவலி**—இரப்பியன் எனும் அரசன், புத்ரகாமேஷ்டி செய்ய, அதிற் பிறந்து வளர்ந்து நீர் விளையாடத் தாமரைப் பொய்கைக்கு வந்து காலகேது எனும் அரக்கனாற் பிடிபட்டுப் பாதாளத்திருந்து தோழியாகிய யசோவதியின் முயற்சியால் ஏகவீரனென்னும் அரசனால் சிறைநீங்கி அவனை மணந்து கிருதவீர்யனைப் பெற்றவள்.

**ஏகாக்ஷிபிங்களன்** — குபேரன், இவன் உமையைத் தன்கண்ணால் கபடமாய்க்கண்டமையால் ஒருகண்ஒளி மழுங்கிப் பிர[illegible]ள நிறம் பெற்றவன்.

**ஏசாநந்தி**—பூதநந்தனோடு பிறந்தவன், [illegible]ங் கலைதேசத்தரசன்.

**ஏணி** — இரண்டு மூங்கில்களுக் கிடை[illegible] மரக்குச்சுகளால் படிகள்போல் இ[illegible]றப் பட்டு உயர்ந்த இடங்களிலேற உபயோகிப்பது இது, கண்ணேணி, நூலேணி எனப் பலவகை.

**ஏணிநிலை** — இட்ட வீரக் கழலினையுடைய கொடுவினையாளர் செறிந்து செறியாதார் மண்ணின் ஏவறைகளையுடைய மதிலிலே ஏணியைச் சார்த்தியது. (பு. வெ.)

**ஏதி**—சிருஷ்டியில் பிரமனால் சிருஷ்டிக்கப்பட்ட அரக்கன். இவன் தேவி காலபகினியெனும் மாயை. இவன் தம்பி தபசியாயினன். இவன் ராக்ஷஸ வம்சத்திற்கு மூலபுருஷன். குமரன் வித்யுத்கேசன் அல்லது மின்னுக்கேசன்.

**ஏது** — இது மூன்று வகை. இயல்பேது, காரியவேது, அநுபலத்தி ஏது என்பன. (ஏது என்பது தர்மத்திற்குப் பரியாயப் பெயர்.) தருமத்தாற் றருமியை அறிவிப்பது இயல்பேது, காரியமாயிருந்து காரணத்தை அறிவிப்பது காரியவேது. அபாவத்தைச் சாதிக்கும் ஏது அநுபலத்தியேது. (தருக்கம்.)

**ஏது அணி** — யாதானும் ஒரு பொருட்டிற மிதனினிது நிகழ்ந்ததென்று காரணம விதந்து சொல்வது. இது, காரகம், ஞாபகம் என இருவகைப்படும். பின் வரும் பொருள் முதலியவற்றுடன் காரகத்தைக் கூட்டிப் பொருட்காரக ஏது முதலியவாகக் கூறுப. ஞாபக ஏதுவாவது சொல்லிய ஆறுகாரணமன்றிப் பிறகாரணத்தால் வருவது. பொருள், கருமம், கருவி தூர காரியம், ஒருங்குடன் தோற்றம், காரியமுந்துறு காரணநிலை, யுத்தம், அயுத்தம், அபாவம் என்பனவும் இதில் அடங்கும். (தண்டி.)

**ஏதுப்போலி** — (௩) அவை, அசித்தன், விருத்தன், அநைகாந்திகன் என்பன. அசித்தனுவது நிச்சயிக்கப்படாத பக்ஷவிருத்தியை யுடையது. விருத்தன் பக்ஷத்திலும் விபக்ஷத்திலு முடைத்தாயிருக்கை, அநைகாந்திகம் பக்ஷத்திரயத்திலும் விருத்தியிருத்தல். (சிவ - சித்.)

**ஏதுவாந்தரம்**—வாதி சொன்ன சாத்யந்தரமாயிருக்கிற ஏது முதலியவற்றைப் பிரதிவாதியானவன் தூஷிக்கையில் அவன் பின்னையுமொரு விசேஷத்தோடேகூடத் தான் முன் சொன்ன ஏதுவைத் திடப்படுத்திச் சொல்லுகை. (சிவ - சித்.)

**ஏமகண்டன்** — சோமகாந்தனைக் காண்க.

**ஏமகூடம்**—அஷ்டகுலாசலங்களி லொன்று, மேருவின் தெற்கு இமயத்திற்கப்பால், ௯000 யோசனையில் உள்ள பருவதம். இது விஞ்சையர் வாழிடம்.

**ஏமசந்திரன்** — விசாலன் குமரன் சுசந்திரன்.

**ஏமசீதளமகாராஜன்** — உக்கிரசீதள மகாராசாவின் குமரன். இவன் காஞ்சியில் அரசாண்டு சைநனுய்ப் புத்தரை இலங்கைக்கு ஒட்டினவன்.

**ஏமதத்தன்**—ஓர் பாரதவீரன்.

**ஏமநாதன்**—பாணபத்திரரைக் காண்க.

**ஏமநாபன்**—ஒரு பருவதராசன்.

**ஏமமகாருஷி**—ஓர் இருடி. கும்பகோணத்தில் தவமியற்றிச் சித்திபெற்றவர். இவர்க்கு ஏமருஷி யெனவும் பெயர்.

**ஏமமாபுரம்**—தடமித்தன் பட்டணம்.

**ஏமரதன்**—(சூ.) க்ஷேமாலி குமரன்.

**ஏமவர்ணன்**—ஓர் அரசன், தேவிகாந்திப் பிரபை, வருணன் குமரி. சுவீக்ஷித்தின் மாமன்.

**ஏமவேநுமை** — மன்னர் குடைகள் தம்மில் தலைமயங்கிய வாட்போருள் தானெறிந்த வேல்,பொருகளிற்றின் மத்தகத்துக் குளிப்பத் தோள்வலியால் வென்றி கொண்டது. (பு. வெ.)

**ஏமன்**—1. கத்ரு குமரன்.
2. சயத்திரன் குமரன்.

**ஏமாங்கதம்** — 1. ஒரு நகரம்.
2. சீவகனுடு. (சூளா.)

**ஏமாங்கதன்**—1. பாக்லிக தேசத்தரசனுகிய சலன் குமரன். இவன் புத்திரகாமேஷ்டியாற் பிறந்தவன். இவன் தந்தை இவனுக்கு நாமகரணஞ் செய்ய எண்ணுகையில் சிந்து தேசாதிபதியா லனுப்பப்பட்டடொன் தோள்வளை வந்தது அதனுல் இருந்தவர் இவனுக்கு ஏமாங்கதன் என்று பெயரிட்டனர். இவன் வளர்ந்து பருவமடைந்து காட்டின் வளங்களைக் காண எண்ணித் தன் மந்திரி குமரனுகிய மதி விசாலன் உடன் புறப்பட்டுக் காட்டில் தங்கியிருக்கையில் வனசரரால் காளிக்குப் பலியிடப் பிடிபட்டு அவ்விடம் பாதாளகந்தர் ஆலயங்கண்டு கந்தமூர்த்தியைத் தரிசித்து அவர் கருணையால் தாங்கள் முன் பிறப்பில் அசுரர் என்று உணர்ந்து சர்வ ஆயுதங்களும் பெற்று நீங்கிக் கொல்ல வந்த யானை, புலி முதலிய கூட்டங்களை ஆயுதத்தாற் கொன்று ஒட்டி அப்பால் இமபாசலத்தின் சாரலில் சென்று தன் தந்தையா லோட்டப்பட்ட ராஜ குடும்பத்தவர் அரசனுக்குப் பயந்து வசிக்கும் பரிதாபத்தைக் கண்டு நீங்கி அம்மலையுச்சியில் சென்று அங்கிருந்த குகைக்குள் இளைப்பாறியுறங்கி அவ்விடமிருந்த இராஜகுமரிகளால் உபசரிக்கப் பெற்று அவர்கள் காசுமீரத்து அரசன் பெண்கள் தம் தந்தையால் துறப்புண்டவர் என்றறிந்து நீங்கித் தன்னுட்டில் தன் தந்தையுடன் போரிட்டு வெனறவரைச் செயித்துத் தான் காட்டில் கண்ட காக்ஷிகளைத் தந்தையிடங் கூறித் தான் மலையிற் கண்ட இரண்டு பெண்களையும் மந்திரியும் தானும் மணந்து அரசு ஏற்று ஆண்டிருந்தவன்.

2. புழுகு பூனையாக இருந்து அருணுசலப் பிரதக்ஷிணத்தால் அரசனுகப் பிறந்து முத்தி அடைந்தவன்.

3. வசுதேவன் குமரன்.

4. சித்திரகூடராசன் குமரன். (சூளா.)

ஏமாங்கன் — சயிந்தவநகராண்டவன். இவன் புத்திரப்பேறு இல்லாமல் தன் மனைவியுடன் தவஞ்செய்து பானுவென்னும் குமரனைப் பெற்றவன்.

ஏமை — ஒரு தெய்வமாது. இவள் பிலத்து மயனால் நிருமித்த நகரத்திருந்தவள். இவளிருந்த இடத்தில் ஒரு தெய்வமாது இருந்து சீதையைத் தேடச்சென்ற வானரர்களால் காணப்பட்டனள்.

ஏயர்குலம் — இது மிருகாவதியின் தந்தை குலம். இக்குலத்தோர்க்கும், தன் குலத்தோர்க்கும் பரம்பரை வைரம் இருந்தமையாலேதான், இக்குலத்திற்கு உரியவனாக வந்த உதயணனிடம் விரோதமுற்று அவனுடைய இராசதானியாகிய கோசம்பி நகரத்தைப் பாஞ்சாலராசன் கைப்பற்றி அரசாளுவானாயினன். (பெரு-கதை.)

ஏயர்கோன் கலிக்காமநாயனார்--மானக்கஞ்சாரருக்கு மருகர். இவர் சோணாட்டில் பெருங்கலம் என்னும் க்ஷேத்திரத்தில் வேளாளர் மரபில் ஏயர்கோன்குடியில் திருவவதரித்துத் திருப்புன்கூர் சிவமூர்த்திக்குப் பத்திசெய்து கொண்டிருக்கும் நாட்களில், சுந்தரமூர்த்திநாயனார், சிவமூர்த்தியைத் தூது அனுப்பினர் என்று கேட்டு அதுமுதல் அவரிடத்தில் வெறுப்புற்று இருந்தனர். இதனைச் சுந்தரமூர்த்திகள் கேட்டுத் தாம் செய்தது தீங்கென்றுணர்ந்து சிவபெருமானிடம் முறையிடச் சிவமூர்த்தி இருவரையும் நண்பு செய்விக்க எண்ணி ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்குச் சூலைதந்தனர். இவ்வகை சூலைகொண்டவர் சிவமூர்த்தியை நோய்நீங்கப் பிரார்த்திக்கச் சிவபெருமான் தரிசனந்தந்து இச்சூலை சுந்தரனால் நீங்குமென்று மறைந்தனர். பிறகு சிவமூர்த்தி சுந்தரரிடஞ் சென்று நீ சென்று ஏயர்கோன் சூலையைத் தீர்க்க என, சுந்தரர் களிப்புற்று வந்தனர். இவர் வரவைக் கேட்ட ஏயர்கோன் அவரைக் காண மனமில்லாது என்னைப் பற்றிய சூலையை வயிற்றினோடுங் கிழிக்கிறேன் என்று உடைவாளினால் வயிற்றைக் கிழித்துக்கொண்டனர். சூலையும் வயிற்றுடன் நீங்கிற்று. சுந்தரர் வரவை ஏயர்கோன் மனைவியார்கேட்டு எதிர்கொண்டு அழைத்துவரச் செய்து ஆசன முதலியன இட்டனர். சுந்தரர் நாயனாரைக் கண்டு அளவளாவ இல்லையே என்றுவருந்த அருகு இருந்தவர் நாயனாருக்கு உடம்பிற்கு ஒன்றுமில்லை நித்திரைசெய்கிறார் என்ன, அவரைக் காணவேண்டும் என்று அவர் இருக்கும் அறையிற்சென்று அவர்கையில் சுரிகையுடன் குடல்சரிந்து இறந்து இருப்பதையறிந்து இது நம்மால் நடந்த தீங்கு என்றுணர்ந்து நானுமிவருடன் செல்கின்றேன் என்று அவர்கையில் இருந்த உடைவாளை வாங்கினர். பரமசிவன் அருளால் ஏயர்கோன் உயிர்பெற்றவராகிச் சுந்தரர் கைவாளைப் பற்றலும், சுந்தரர் சாஷ்டாங்கமாகப் பணிந்து இருவரும் நண்பினராய்த் திருப்புன்கூர்ச் சிவமூர்த்தியை வணங்கி யிருந்தனர். பிறகு சுந்தரமூர்த்திகள் திருவாரூருக்கு எழுந்தருள ஏயர்கோனும் எழுந்தருளி வீதிவிடங்கரைச் சேவித்துத் திரும்பித் திருத்தொண்டு செய்து சிவபதமடைந்தனர். (பெ-பு.)

ஏரண்டமாமுனி — கனகசோழனைக் காண்க. விசிரவசுவிற்கு இல்லறங்கூறி மனைவியுடன் இருக்கச் செய்தவர். (திரு ஆச்சாபுர தலபுராணம்).

ஏரம்பம் — ஒரு மலை. கபிலநதியில் உற்பத்தியாகிறது.

ஏரம்பவிநாயகர் — பிரமன்பூசித்த விநாயகர்.

ஏரம்பன் — ஒரு வேதியன் திருக்காஞ்சியில் சிவாராராதனம் செய்துபேறு பெற்றவன். (பதும புராணம்.)

ஏரி — என்பது நாற்பக்கங்களிலும் பெருங்கரைகளையாயினும்,மலைகளையாயினும் காப்பாகக்கொண்ட பெரிய நீர் நிலை. இது சிறிதாயின் தடாகம்.

ஏலக்காய் — இச் செடி, மலையாளம், திருவனந்தபுரம் முதலிய ஜில்லாக்களில் காட்டுப் பயிராக இருக்கிறது. இது மிளகாய்ச் செடியைப் போல் சிறு செடியாக இருக்கிறது. இச்செடியில் காய்கள் கொத்துக் கொத்தாகப் பிடிக்கின்றன. அக்காய்களைப் பதமறிந்து பறித்து உலர்த்துகின்றனர். இது மணப்பொருள்களில் ஒன்று.

ஏலாதி — பதினெண்கீழ்க் கணக்குள் ஒன்றாகிய நீதிநூல். இத் தமிழாசிரியர் மகனாரும் மாக்காயனார் மாணாக்கரும் ஆகிய கணிமேதாவியாரால் இயற்றப் பட்டது.

ஏலாபுத்திரன் — கத்ரு குமரன், நாகன்.

ஏலேலசிங்கர் — இவர் திருவள்ளுவர் காலத்திருந்த கப்பல் வர்த்தகர். நாயனார் இவரிடம் நூல்கொண்டு நெய்தற்றொழில்செய்து வருவர். இவ்வகை வருநாட்களில் நாயனார் ஒருநாள் ஏலேலசிங்கர் சிவபூசை

வேளையில் சென்று வர்த்தகர் என்ன செய்கிறானென அவ்விடமிருந்தவர்கள் சிவபூசை செய்கிறார் என்றனர். இதைக் கேட்ட நாயனார், இங்குச் செய்கிறாரோ குப்பத்தில் செய்கிறாரோ என்றுகூற ஏலேல சிங்கர் சிவபூசைவிட்டு நாயனாரைச் சரணாகதியடைந்து அவர் சொற்படி நடந்து வெள்ளத்தை நீந்தியும், மரத்தினின்று குதித்தும், ஊறுபடாமல் நாயனாரிடம் ஞானோபதேசம் பெற்றுக் கப்பல் கரைதட்ட அதை ஆசாரியர் ஏலையா என்று இழுக்கச் சொல்லி இழுத்தும், கருப்புக்காலத்து நெல் விற்றுவந்த பொருளை உருக்கித் தம் பெயர் வெட்டிக் கடலிவிட்டு அதை மீண்டும் மீன்வயிற்று இருந்து பெற்றும், பின்னும் சிலவற்றை ஆசாரியாநுக்கிரகத்தால் அடைந்து ஆசாரியர் சொற்படி நாயனாருடலைப் புறத்திலெறிந்து அந்த இடத்தில் கோயில்கட்டி மகிழ்ந்தவர். இவர் குமரர் அழகாநந்தர். இவரைப் பற்றி "ஏலேல சிங்கன் பொருள் எழுகடல்போனாலுந் திரும்பும்" எனப் பழமொழிவழங்கி வருகிறது.

ஏலை — மதுமானைக் காண்க.

ஏவல் — இது முன்னிற்பானை ஏவும் கட்டளைப்பொருள் தரும் முற்றுவினை. இது முன்னிலை யிடத்தது. (நன்.)

ஏழகநிலை — ஏழகத்தகரினை மேல்கொண்டு செலுத்தினும் இத்தன்மையானென்று அவனுடைய குற்றமில்லாத மனவெழுச்சியோடு மிகுதியைச் சொல்லியது. உயருங் கீர்த்தியையுடைய ஞாலத்தின் இளமையைப் பாராதே அரசன் பூமி காவல்பூண்டு நிற்பினும் ஏழக நிலையேயாம். (பு. வெ. பொதுவியல்.)

ஏழாந்துக்கம் — அல்லது எட்டுச் செய்தல். இது இறந்தவீட்டில் இறந்தவர் பொருட்டு ஏழாநாள் அல்லது எட்டாநாள் செய்யுந் துக்கச் சடங்கு. (உலக-வ.)

ஏழூர்கள் — மேகத்துக்குப் பிணைகொடுத்த உபகாரியினுடைய ஊர்கள்; இவை சுனவேள்வி நாட்டிலுள்ளவைகள்; இவற்றுளொன்று நாமுனூரென்பது. (திருவிளை.)

ஏழூர்நாட்டார் — இவர்கள் துளுவரில் ஒரு வகுப்பார் என்பர். இவர்கள் சாயம் போடல் முதலிய வேலை செய்கிறார்கள்.

ஏளாச்சாரியர் — திருவள்ளுவரைச் சைநர் இப் பெயருள்ள தம்மதத்தவர் குந்தகுந்தாசிரியர் என்பர். இவர் குறள், சித்தாகம் செய்தவர்.

ஏறண்முல்லை — எதிரின்றியே யொழியச் சினமிகும் மேன்மே லேறுநின்ற ஆண்மைத் தன்மையினையுடைய குடியொழுக்கத்தினை உயர்த்துச்சொல்லியது. (பு-வெ)

ஏறுகோள் — முல்லை நிலக் குடிகளிடம் பெண்பிறக்கின் பெற்றார்தம் தொழுவில் அன்று பிறந்த சேங்கன்றுகளைத் தம் மூட்டியாகவிட்டு வளர்த்து அவ்வாறு வளர்ந்த எற்றைத் தழுவினானுக்குப் பெண்ணைக் கொடுத்தல் மரபு. இதனை அவ்வாறு கூறுப.

ஏறுதிருவுடையார் — நாதமுனிகளை ஆச்ரயித்த ஸ்ரீவைணவர்.

ஏறுமாநாட்டு நல்லியக்கோடன் — ஒய்மா நல்லியக்கோடனுக்கு ஒரு பெயர். ஒவியர் குடியில் பிறந்தவன். இவன் தன் பகைவருடன் சண்டையிடுகையில் பகைவருக்கஞ்சி வேலனைத் தியானிக்க அவர், அவ்விடமிருந்த பூவை வேலாக எறியக் கட்டளையிட அவ்வகைசெய்து வெற்றி பெற்றவன். இவன் ஆண்ட ஊர், வேலூர். இக் காரணத்தாற் பெற்ற பெயர். எழு வள்ளல்களிற் சிறந்த கொடையாளி, இவனைப் பாடினோர் நல்லூர் நத்தத்தனாரும் புறத்திணை நன்னாகனாருமாம்.

ஏறைக்கோன் — சேரன் படைத்தலைவன். இவன் காந்தட்பூமாலையை அணிவோன். குறவருக்குத் தலைவன். குறமகளிளவெயினியாற் பாடப்பெற்றவன். (புற - நா.)

ஏற்றம் — இது, கிணற்றின் ஒரு பக்கமாகக் கற்கால் நட்டு மடல்களிரண்டைக் கற்கால்களுடன் அணைத்து மேல் துலாப்பூட்டின் தராசுபோல் நிற்கும். அதில் நீளமூங்கிலை வடத்தால்கட்டி முக்காணியில் சால்பூட்டிக் கிணற்றிலிருந்து ஒருவன் நீரை மொள்ள மேலிருந்து ஒருவர் அல்லது இரண்டுபேர் மிதிக்க நீர் எற்றும் யந்திரம். இறைகூடை, கையேற்றம், கவலை, ஜலசூத்ரயந்திரம். முதலியவும் உண்டு.

ஏனாதி — 1. இது சாணார்க்கும், அம்பட்டர்க்கும், மந்திரியர்க்கும் பட்டப்பெயர். இது ஒரு வடக்கிலுள்ள ஒருவகைத் தாழ்ந்த சாதிக்கும் பெயர். (தர்ஸ்டன்.)

2. தமிழ்நாட்டு அரசர்களால் சூட்டப்பட்ட சேநாபதிப் பட்டம்.

ஏனாதிகள் — இவர்கள் ஒருவகை தாழ்ந்த ஜாதியார். இவர்களிற் சிலர் மீன் பிடிப்பவர் படகோட்டிகள், இவர்களில் செஞ்சு என்பதும் ஒரு ஜாதி. இவர்கள் நெல்லூர் ஜில்லா வாசிகள்; இவர்களில் ரெட்டி ஏனா

திகள், அடவி ஏனாதிகள், மஞ்சி ஏனாதிகள் எனப் பிரிவுண்டு. இவர்களில் சிலர் தவளை தின்பர். சோம்பேறி ஏனாதிகள் எச்சில் உண்பவர். இவர்கள் தெலுங்கு பேசுவர்.

ஏனாதிதிருக்கள்ளி — கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனாரால் பாடப்பெற்றவன். கொடையும் வீரமும் உடையன். (புற - நா.)

ஏனாதிநாதநாயனார்—சிவபக்தி, சிவனடியவரிடத்து அன்பு, உள்ளவர். எயினனூரில் ஈழக்குலச்சான்றார் குலத்தில் பிறந்து அரசருக்கு வாட்படை பயிற்றி,வரும் பொருட்களைச் சிவனடியவர்களை உபசரித்துச் செலவு இட்டு வருநாட்களில், அதிசூரனென்பவனொருவன் இவரிடம் பகைகொண்டு சண்டைசெய்து வெல்லுதலரிது, வஞ்சனையால் வெல்லவேண்டுமென எண்ணிச் சண்டைசெய்யப் புறப்பட்டு நெற்றியில் விபூதிதரித்து அதைக் கையிலுள்ள பலகை (ஓர் ஆயுதம்) யால் மறைத்து நாயனாருடன் சண்டைக்குச் சமீபித்து நின்றவுடன் விபூதியைக் காட்ட நாயனார் அஞ்சிச் சிவனடியரென்று செயலற்று நிற்கக் கண்டு அதிசூரன் தன் எண்ணப்படி முடித்தனன். இவ்வாறு நாயனார் சிவபதமடைந்தனர். (பெரிய புராணம்.)

ஏஷணை — ௩. அர்த்தவேஷணை, புத்திரவேஷணை, உலகவேஷணை. அர்த்தவேஷணை, பொருள்தேட ஆசைப்படல். புத்திர வேடணை, புத்திரனுண்டாக ஆசைப்படல். உலகவேடணை, உலக விஷயங்களைத் தேட ஆசைப்படல்.

# ஐ

ஐக்கக்கொடி — இதனை யூனியன்ஜாக் என்பர். (Union Jack) யூனியன் என்பதின் பொருள் ஐக்கம். அதாவது ஒன்று சேர்ந்தது என்பது. இது, ஆங்கில அரசாட்சியாரது கொடி. இக்கொடி மூன்று சிலுவைகள் சேர்ந்தது. அச் சிலுவைகள் சத்திரிபால் ஒன்றின் குறுக்காக ஒன்று சேர்ப்பட்டவை. இதில் முதற் சிலுவை செண்ட் சார்ஜ் சிலுவை. இது ஆங்கிலருக்குரியது. இரண்டாவது செண்ட் ஆண்ட்ரு சிலுவை. இது ஸ்காத்லாண்டரைச் சேர்ந்தது. மூன்றாவது செண்ட் ப்ராட்ரிக் சிலுவை இது அயர்லாண்டிற்குரியது. இத் தீவுகள் தனித்தனி ஆளப்பட்டு வந்த காலத்தில் இவை தனித்தனி இக் கொடிகளைப் பெற்றிருந்தன. இத் தீவுகள் ஆங்கில அரசாட்சிக்கு ஐக்கப்பட்ட காலத்து ஐக்கக்குறி காட்ட அம் மூன்றின் சிலுவைக் கொடிகளை ஒன்றாகச் சேர்த்து ஐக்கக் கொடியாக்கினர்.

ஐக்கவாதி — சிவன், பதி; மாயை, கன்மம் எனப் பாசமிரண்டு; இருவினைக்குத் தகுந்தபடி கன்மம் புசிக்கையில் இருவினையொப்புவந்து சத்திநிபாதம் வந்த அவசரத்தில் சிவன் ஆசாரியனாய் எழுந்தருளி உபதேசித்து ஆன்மாவைத் தன்னிடம ஒடுக்குவன் என்பன். (தத்வநிசானுபோக சாரம்.)

ஐங்குரவர் வணக்கம்—அரசன், உவாத்தியாயன், தாய், தந்தை, தமயன். இவர்களைத் தேவரைப்போலத் தொழல் வேண்டும். (ஆசாரக்கோவை.)

ஐங்குறுநூறு—அகத்தின் பகுதியைப் பகுதிபொருளாகக் கொண்டுவரும் (௫00) அகவல் கொண்டநூல். இதில் ஒவ்வொரு நூறும் முறையே ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் முதலியவர்களாலும், இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பாரதம் பாடிய பெருந்தேவனாராலும் பாடப்பட்டன. இத்தொகை தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார். இது இடைச்சங்கத்தவர் கையாண்ட நூல்.

ஐச்வர்யம்—(அ) இராஜாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

ஐஞ்சந்திவிநாயகர் — தேவர் வேண்டுகோளால் தேவருலகில் அமர்ந்த கணபதி.

ஐதரேயன்—1. வினயன் குமரன். எட்டெழுத்தைக் கடைப்பிடித்து வேதமோதாக் குறையால் தந்தை, இவன் தாயையும் இவனையும் காட்டில் துறத்தினன். இவ்விருவரும் இருடிகள் வசிக்கும் இடம் நோக்கிச் செல்ல அங்கிருந்தவர்க்கு நாஎழாமல் போயிற்று. இவன் எட்டெழுத்தைக் குறித்து அநுக்கிரகம் பெற்றுப்பின் வேதமுணர்ந்து பாமபதம் அடைந்தவன்.

2. ஒரு ருஷி, ஜநமேஜயனுக்குப் பட்டாபிஷேகம் நடத்தினவன்.

ஐதிகம் — உலகத்தார் இந்த மரத்தில் பேய் உண்டெனில் தானும் அஃதுண்டென்று கோடல், அன்றி யுண்டோ இல்லையோ வென ஐப்படா தொழிதல்.

ஐந்தவர்—இந்த என்னும் வேதியன் தவஞ் செய்து பெற்ற ஐந்து புத்திரர்.

ஐந்திணைக்குரிய கருப்பொருள்—புணர்தல், பிரிதல், இருத்தல், ஊடல், இரங்கல், இவற்றினிமித்தம் எனப் பத்து வகை. (அகம்)

ஐந்திணைக்குரிய கைகோள் இரண்டு — களவு, கற்பு.

ஐந்திணையெழுபது — மூவாதியர் இயற்றியது. அகப்பொருளைத்திணைக்கும் பதினான்கு பதினான்காகப் பாடிய எழுபது வெண்பாக்களை யுடையது.

ஐந்திணையைம்பது — மாறன் பொறையனார் இயற்றியது. ஒவ்வோர் அகப்பொருட்டிணைக்கும் பப்பத்தாகப் பாடிய ஐம்பது வெண்பாக்களை யுடையது.

ஐந்திரம்—சிவனது கீழ்த்திசை முகம். (பார. அநு. அத் - 206.

ஐமவதி — விஸ்வாமித்திரன் தேவி.

ஐமினி—சாட்சுசமனுவைக் காண்க.

ஐம்படைத்தாலி — இது காத்தற் கடவுளாகிய திருமாலின் பஞ்சாயுத வடிவமாகப் பிள்ளைகட்கு ஐந்தாமாதத்தில் கட்டப்படும் அணிகலன்.

ஐம்புலநுகர்ச்சியி னிறப்பன—சுவையாலிறப்பன மீன். நாற்றத்தால் வண்டு, பரிசத்தால் யானை, ஓசையால் அசுணம். ஒளியால் விட்டில்.

ஐம்பெருங்குழு — அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர்.

ஐயங்கார் — வடகலை வைஷ்ணவப் பிராமணர்களுக்கும சிலபட்டு நூற்காரர்களுக்கும் பட்டப் பெயர்.

ஐயடிகள்நாயனார் — இவருக்கு ஐயடிகள் காடவர்கோன் நாயனார் எனவும் பெயர். இவர், திருக்காஞ்சியில் பல்லவர் குலத்தில் திரு அவதரித்துப் பரமசிவனிடத்தில் அன்புபூண்டு அரசாட்சி துக்கத்திற்கேது என்று புத்திரனுக் களித்துச் சிவத்தல யாத்திரை சென்று திருவெண்பா பாடித் துதித்து முத்தியடைந்தவர். இவர் அருளிய பிரபந்தங்கள் க்ஷேத்திரத் திருவெண்பா முதலியன. (பெரிய புராணம்).

ஐயம் — ஒரு பொருளை மாறுபட்ட பல பொருள்களாக உணர்தல்.

ஐயர் — க்ஷத்திரியர். சர்யாதி புத்திரர்.

ஐயவணி — அஃதாவது ஒப்புமையினாலே ஒருபொருளைக் கண்டிதுவோ அதுவோ வெனச் சந்தேகித்தலாம். இதனை வடநூலார் சந்தேகாலங்காரம் என்பர்.

ஐயனாரிதனார் — தொல்காப்பியர் முதலிய பன்னிரு புலவர் இயற்றிய பன்னிரு படலத்திற்கு வழிநூலாகப் புறப்பொருள் வெண்பாமாலை யியற்றிய நூலாசிரியர். இவர் சேரர்பரம்பரையைச் சேர்ந்தவர். (புறப்பொருள் வெண்பா).

ஐயனார்—அரிகர புத்திரர். இவருக்கு ஆயுதம் வளை, செண்டு. வாகனம் குதிரை, யானை. ஒரு சோழன் இவரை வணங்கிச் செண்டு பெற்று மேருவிலிருந்த செல்வம் பெற்றனன். அரி, அரர், கூடப்பிறந்ததால் இப்பெயர் இவர் பூண்டார்.

ஐயாதிச்சிறுவெண்டேரையார் —இவரைச் சிறுவெண்டேரையா ரெனவும் கூறுவர். "இருங்கடலுடுத்த" எனப் பெருங்காஞ்சி பாடியவர். (புறத்திணை - ௩௬௩.)

ஐயூர்முடவனார் — முடவனென்பது வடிவு பற்றிய பெயர். இவர் முடவர். இவரதியற் பெயர் தெரிய வில்லை. ஐயூர் — பாண்டி நாட்டகத்ததோரூர். இவர் பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சிய மாறன் வழுதியின் ஆற்றலைச் சிறப்பித்து அரச வாகை பாடியவர். (புறம் - ௫௧.) சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனால் ஆதரிக்கப்பட்டு வந்தவர். இவர் நடக்க இயலாமையின் ஓர் ஊர்தி (வாகனம்) வேண்டித் தாமான் தோன்றிக் கோனிடஞ் சென்று பரிசில்வேண்ட அவன் இவருக்கு உணவளித்தலும் அதனை விரும்பாயத் தாம் வந்த செய்தி தெரிவிப்ப அவ்வண்ணமே யானையும் அதற்கு வேண்டுவ பிறவும் நல்கப்பெறறு மீண்டனர். புறம்-௩௯௯. கிள்ளிவளவன் இறந்ததறிந்து பெரிதும் புலம்பி வருந்தினர். புறம்-௨௨௮. அதியன் எழினிபோரிற் பட்டதைப் பாராட்டிக் கூறியுள்ளார். அகம் - ௨௧௬. இவர் நற். ௩௩௪ - ல் கூறிய உள்ளுறை யாவரும் வியக்கத்தக்கது. இவர் குறிஞ்சியைப் புனைந்து பாடியுள்ளார்; முகம்புகு கிளவி பாடியவருள் இவருமொருவர். இவர் பாடி

யனவாக நற்றிணையில் இரண்டு. உ0௬, ௩௩௯ பாடல்களும், குறுந்தொகையில் மூன்றும் அகத்தில் ஒன்றும், புறத்தில் நாலுமாகப் பத்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (நற்றிணை.)

ஐயூர்மூலங்கிழார்—கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதியைப் "புலவரை யிறந்த" என பாடிய தமிழ்ப்புலவர். (உக) (புற - நா.)

ஐயை—மாதரி மகள். கண்ணகியிடம் பற்றால் சோறுடு சென்று கண்ணகியின் கோயிலடைந்தவள். (சிலப்பதிகாரம்).

ஐராணி—இந்திரன் மனைவி.

ஐராத்மவாதம் — அஹிம்சை, சத்தியம், அஸ்தேயம், பிரமசரியம், சங்கிரகம், இவற்றை ஐந்து சிலம் என்பர். பௌத்தர். (சிவ - சித்.)

ஐராபதம் — இது சிங்கச்சுவண மென்னும் உயர்ந்த பொன் பிறத்தற்கு இடமாகிய மலை. (பெருங் கதை.)

ஐராபதி — இவள் பதுமாபதியின் செவிலித்தாயின் மகளும், அவள் உயிர்த்தோழியுமாக வுள்ளவள் கூனிய உருவமுடையளாதல் பற்றிக் கூன்மகள் கூனியெனவும் இவள் வழங்கப்படுவள், "பாகனையொழித்துக் கூன்மகள் கோல்கொள" என்றதனல் இவள் அவளுக்கு வயஞ்செலுத்துபவ ளென்றும் தெரிகிறது. இராசகிரியத்தில் காமன் கோட்டத்தயலில் பதுமாபதியைக் கண்டு மயங்கி வினவிய உதயணனுக்கு அவள் வரலாறுகள் யாவற்றையும்சொல்லி அவனுக்கும் அவளுக்கும், தான் இடையே நின்று இருவர் கருத்தையும் முற்றுவித்தவள். கூர்த்தமதியினள் எந்தக் காரியத்தையும், மந்தணமாக முடிக்கும் ஆற்றல் வாய்ந்தவள். பந்தடித்தலில் மிக வல்லமையுடையவள். இப்பெயர் அயிராவதி யெனவும் வழங்கும். (பெருங் கதை.)

ஐராவசு—ஒரு காந்தருவன். இவன் தேவ குருசாபத்தால் யானையுருப் பெற்றுக் கதிர்காமம்வலரைப் பூசித்து நல்லுருப் பெற்றவன்.

ஐராவணம் — இது அயிரம் கொம்புகளையுடையது. கைலாசத்தில் உள்ள வெள்ளை யானை.

ஐராவதகணேசர் — ஆனையூருணிக்கரையில் ஐராவதத்தாற் பூசிக்கப் பெற்ற விநாயகர். மதுரைத் திருப்பணிமாலையில் "ஆங்கதன் பின்" என்னும் பாடலைக் காண்க. (திருவிளை.)

ஐராவததீர்த்தம் — ஐராவதத்தால் உண்டாக்கப் பெற்றது; யானை யூருணியென வும் கணபதி யேக்தலெனவும் வழங்கும். மதுரைக்கு மேற்கே யுள்ளது. (திரு. விளை.)

ஐராவத நல்லூர் — இஃது ஐராவதம் உண்டாக்கிய ஊர். மதுரைக்குக் கிழக்கே உள்ளது. (திரு. விளை.)

ஐராவதம்—இந்திரனுடைய வெள்ளையானை, இது பாற்கடலில் தோன்றியது. நான்கு கொம்புடையது. இந்திரன் சூரனுக்குப் பயந்து ஒளித்தபோது அவன் பட்டணத்தில் வந்த பானுகோபனுடன் யுத்தஞ் செய்த சயந்தனைத் தாங்கிச் சயந்தன் மூர்ச்சிக்கக் கண்டு பானுகோபன் உடலிற்றாக்கிக் கொம்புகள் முரிந்து திருவெண்காட்டில் சிவபூசையால் வளரப்பெற்றது. இந்திரன் கந்தமூர்த்தியுடன் யுத்தஞ் செய்து தோற்கக்கண்டு கந்தமூர்த்தியைத் தாங்கத் தவஞ்செய்து தாங்கப்பெற்றது. ஒருமுறை துருவாசர் சாபத்தால் காட்டானையாயிற்று. அட்டதிக்கஜங்களி லொன்றாய்க் கீழ்த்திசையி லிருப்பது.

ஐராவதன் — ஒரு நாகன், உதங்கர் கொண்டு வந்த நாககுண்டலத்தைக் கொண்டு போனவன்.

ஐராவதி — இமயத்தின் தென் சாரலிற்றோன்றி வங்காளாக்குடாவில் கலக்கிற நதி.

ஐராவதேசுவரர் — ஐராவததீர்த்தக் கரையில் ஐராவதத்தாற் பூசிக்கப்பெற்ற சிவபெருமான். (திரு. விளை.)

ஐரோப்பாகண்டம் — இது, எல்லாக் கண்டங்களிலும் சிறியது. இது குணகோளார்த்தத்திற் வடமேற்குப் பாகத்திலிருக்கின்றது. இது, வடக்கில் உத்தரமகா சமுத்திரம், கிழக்கில் யூரல்மலை, காஸ்பியனகடல், தெற்கில் காக்ஸஸ்மலை, கருங்கடல், மத்யதரைக்கடல், மேற்கில் அட்லாண்டிக் மகாசமுத்திரம். ஐரோப்பிய தேசங்கள் இங்கிலாண்டு, ஸ்காட்லண்ட், அயர்லண்ட், நார்வே, ஸ்வீடன், பிரானஸ் ஜெர்மனி, ரஷ்யா, இடலி, ஆஸ்திரியா ஹங்கரி, ஸ்விட்ஸெர்லண்ட், ஸ்பெயின், போர்சுகல், ஆலண்டு, பெலுஜியம், டென்மார்க், நார்வே, ஸ்வீடன், ரோமானியா, கிரீஸ், ஐரோப்பிய துர்க்கி, ஸெர்

வியா, பல்கேரியா, மாண்டிசீக்ரோ என்பன.

ஐலவிலன்—இலவிலன் மகன்.

ஐலன் — புரூரவஸுக்குப் பெயர்.

ஐவகைத் தெய்வமணிகள் — சிந்தாமணி, சூளாமணி, சியமந்தகமணி, சூடாமணி, கௌஸ்துவமணி.

ஐவகைப்பண்டம்—நிலம், களம், காலேயம், மெய்ப்பொருள், மெய்ப்பண்டம். (வீரசோழியம்.)

ஐவகை வேள்வி — பிரமவேள்வி, வேதமோதுவித்தல், பிதுர்வேள்வி, தருப்பணஞ் செய்தல். தேவவேள்வி - வேட்டல் பூதவேள்வி - பலியிடுதல். மானுடவேள்வி - விருந்தோம்பல். (காத்யாயனர்.)

ஐவகை ஸ்நானம்—ஆக்னேயம், வாருணம், பிராம்மணம், வாயவ்யம், திவ்யம் என்பன. விபூதி பூசிக்கொள்ளுதல் ஆக்னேயம், ஜலத்தில் முழுகுதல் வாருணம், மந்திர நீரால் ஜலத்தில் முழுகுதல் பிரம்மஸ்நானம், பசுவின் காலிற்றூளென்றும் தூளி படப் போதல் வாயவ்யம், வெயிலுடன் கலந்தமழை நீரால் முழுகுதல் திவ்யம் எனப்படும். (பாரதம்.)

ஐனன்—உலோபத்தால் நஷ்டமடைந்தவன்.

ஐக்ஷ்வாகி — சந்திரவம்சத்துப் புமன்யுபுத்ரனாகிய சுகோத்ரன் தேவி. இவள் புத்ரர் அசமீடன் முதலியோர்.

ஐஹயர்—இவர்கள் கார்த்தவீரியார்ச்சுநனுக்குப் பின்வந்த அரசர். இவர்கள் வறுமையால் துன்பமடைந்து தம் முன்னோரிடந் தானம் வாங்கிய பிருகுவம்சத்து வேதியரிடம் தனமுள்ளதாகத் தெரிந்து இயற்கையான வட்டிக்கு அதிகந் தருவதாக வாக்களித்தும், அவர்கள் தங்கள் செல்வங்களைப் பூமியிற் புதைத்து இவர்க்குத் தனந் தருவதற்கு லோபமடைந்து காட்டில் வசிப்பதுணர்ந்து ஹைஹயர் பூமியைத் தோண்டிப்பார்க்கத் தனங்கண்டு அவ்வம்சத்தவர் கபடர்களென்று எண்ணி அப்பிராமண வம்சத்தை நிர்மூலஞ் செய்யத் தொடங்கினர். இவர்கள் பிராமண ஸ்திரீகளைக் கொல்ல யத்தனித்துத் தேடிச் செல்கையில் இந்தப் பிராமணஸ்திரீகளில் ஒருத்தி தொடையில் பிருகு முனிவர் தோன்றி இவர்களின் கண்ணைப்போக்க ஹைஹயர்கள் முனிவரைத் தோத்திரஞ் செய்து கண் பெற்றவர்கள். (தே - பா.)

# ஒ

ஒக்கூர்மாசாத்தனார்—ஒரு தமிழ்ப் புலவர். இவருக்கு எககூர்மாசாத்தனார் எனவும் பெயர். (புற-நா.) (அக-நா.)

ஒச்கூர்மா சாத்தியார் — ஒரு தமிழ்க்கவி. கடைச்சங்க மருவியவர். இவர் பெண்பாலர் போலும். (அக நூ) (புற-நா.)

ஒட்டகச்சிவிங்கி — ஒட்டகக்குதிரை, கிராபி இது ஒட்டகத்தைப்போல் கழுத்தும் காலும் நீண்டும், சிவிங்கியைப்போல் தேகத்தில் புள்ளியுமுடையது ஆதலால் இப்பெயர் பெற்றது. இது கழுத்து நீண்டும், கண் பருத்தும், தோல்புள்ளி பெற்றும், நாக்கு ஒருமுழம் நீண்டும், மேலுதடு நீண்டும், தோல் மஞ்சளும் கறுப்புங்கலந்த புள்ளிபெற்றும், காற்குளம்புக ளிருபிளவாய் அகன்றுமிருக்கும். மிரட்சியுள்ளது. முள்ளடர்ந்த இலைகளில் விருப்பமுள்ளது. சாதுவானது. சிங்கத்தை யொத்த மிருகங்களும் இதன் உதைக் கஞ்சும். இது ஓடத்தொடங்கின் வேகமுள்ள குதிரையும் இதன் வேகத்தைப் பிடிக்காது. இது முள்ளுள்ள காடுகளில் வசிப்பதால் இதை வேட்டையாடுதல் கடினம். இதன் தசை ருசியுள்ளதாலும் தோல் அழகாகவும் கனமாகவு மிருத்தலாலிதை வேட்டையாடுகிறார்கள்.

ஒட்டகம் — 1. பாலைவனக்கப்பல் இது, கழுத்தும் காலும் நீண்டும், வால் குறுகியும், முதுகு நிமிர்ந்தும் உள்ளது. நிறம் பழுப்பு, கொம்பில்லை; குளம்பு மணலில் புதையாதபடி விரிந்திருக்கும். வயிறு பலநாட்களுக்கு வேண்டிய தண்ணீரை நிரப்பி வைத்துக்கொள்ளும் அளவினது. அரேபிய ஒட்டகங்களுக்கு ஒரு திமிலும், மத்திய ஆசிய ஒட்டகத்திற்கு இரண்டு திமில்களும் உண்டு. சுமையை இதற்கு அளவாகப் போடவேண்டும். அளவிற் கதிகமாயின் எழுந்திராது. பொறுமையுள்ளது. இரை கிடைக்காவிடில் தன் கொழுப்பைத் திமிலினின்று கிரகித்துத் தின்னும். இது பாலை வனங்களில் நீரின்றி யாத்திரை செய்யும். நீருள்ள இடங்களை மோப்பத்தாலறியும். ஆகாரம் கசப்பு, முள்

ஞன்ன, இலைகள்; அரேபியா, மத்யஆசியா,
சீனா, திபெத் முதலிய இடங்களில்
அகப்படும். இதில் நாளொன்றுக்கு (௯0)
யோசனை விழுக்காடு சுமைதாங்கிச் செல்
வதும் (௬) தால உயரமுள்ள வலியவுடம்
பினை யுடையதும் நல்ல முகத்தினையுடை
யதும் உத்தமமானது.

2. சோம்பலுள்ள ஒட்டகம் ஒன்று
இரைதேடச் சோம்பிப் பிரமனை நோக்கித்
தவம் செய்து நீண்ட கழுத்தைப்பெற்று
இருந்த இடத்திலிருந்தே ஆகாரந்தேடி
மழைக்கஞ்சிக் குகையில் கழுத்தைப் புகு
த்தி நரியால் இறந்தது. (பார-சாந்தி.)

ஒட்டக்கூத்தர்—1. இவர், செங்குந்தர் மரபிற்
பிறந்து கூத்தர் எனும் பெயருடன் வளர்
ந்து கல்விபயின்று புதுவைச்சணிருந்த
சடையன் தந்தையாகிய சங்கரனுக்கு உத
வித் தொழில் புரிந்து வந்தனர். இவரை
அவ்விடம் வதிந்த காங்கேய முதலியார்
எனும் உபகாரி ஆதரித்துப் போற்றிக்
கல்வி வல்லவராக்கிக் கவுடப்புலவன், கவி
ராக்ஷஸன் எனப் பெயரிட்டனர். அந்
நன்றி பாராட்டிக்கூத்தர் இவர்மேல் நாலா
யிரக்கோவை யென ஓர் பிரபந்தம் பாடி
னர். அக்கோவை சொன்னோக்கம், பொரு
ளோக்க முடையது. இவர் கவி வல்லவ
ராயின பின் புவிச்சக்ரவர்த்திகளாகிய
விக்ரமசோழன் முதலிய மூவர்க்கும் சிற
ந்த கவிச்சக்கரவர்த்தியாக விளங்கியவர்.
விக்கிரமசோழனிறக்கவும் இவனது குமர
னாகிய குமாரகுலோத்துங்கனுக்குப் பல
வாற்றானுஞ் சிறந்த பெருந்துணையாய்ச்
சிறந்து தம் சொல்வழியே அவனை இயக்
கிய பெருமை யுடையவர். அவனுக்குப்
பின்னும் அவன் மகனாகிய இராஜராஜ
சோழனாலும் சிறப்புப் பெற்றவர், இவர்
விக்ரமசோழனிடம் முதல்முதல் சென்ற
போது அவன், இவர் பாடிய அரும்
பைத் தொள்ளாயிரத்து ஓர் கவியைத்
தனக்கு ஒட்டப் பாடச் சொன்னதாகவும்
அவ்வாறே உலாப்பாடியபோதும் அவ்
வுலாவிற் கண்ணியை இணைத்து ஒரு
வெண்பாவாக ஒட்டப்படச் சொன்னான்.
அவ்வாறே யிவர் பாடியதால் இவர்க்கு
ஒட்டக்கூத்தர் எனப் பெயர் உண்டாயி
ற்று. கூத்தர் ஒட்டிப்பாடிய விக்ரமசோ
ழன் உலா "கையுமலரடியுங் கண்ணுங்
கனிவாயுஞ் செய்ய கரியதிருமாலே —
வைய, மளந்தாயகளங்கா வாலிலைமேற்
பள்ளி, வளர்ந்தாய் தளர்ந்தாளென்மான்"
அரும்பைத் தொள்ளாயிரத்து ஒட்டப்
பாடியகவி. "நடித்தது நச்சரவுச்சி மதி
லிலங்கை, பிடித்தது வென்ற விருபது
தோள் பதினெண்பகலே முடித்தது பார
தம் வீரப்புலிவைப்ப மூரிச் செண்டால்,
அடித்தது பொற்கிரி விக்ரமசோழ வகளங்
கனே," இவரைச் செங்குந்தர் தங்கள்மீது
ஒரு பிரபந்தம்பாடக் கேட்கக் கூத்தர்
நான் அந்தப்படிப் பாடின் குலப் புகழா
மென எண்ணிச் சும்மா இருந்தனர்.
அச்செங்குந்தர் இவர் குலாபிமான மற்ற
வர் என்று கோபித்து இவரைக் கொல்
வதற்கு ஒருப்பட்டனர். அதனை அறிந்த
கூத்தர், புவனையென்னு மூரிலிருந்த தன்
பாலன்புள்ளசோமன் என்பவனிடம்
ஓடி அடைக்கலம்புக்கனர் "அடையென்
பார் தள்ளென் பாரன் பொன்றிலாமற்,
புடையென்பார் தங்கடைக்கே போகேங்
— கொடை யென்றான், முந்துஞ் சோமா
புவனை முன்னவனே நின் கடைக்கீழ்,
வந்துஞ் சோமாதலான் மற்று." சோமன்
புலவரைக் காக்கவேண்டித் தன்னொரு
மகனைப் பேழையு ளடைத்துத் தன் வீட்
டைச் சூழ்ந்துகொண் டிருந்த பழிகாரர்
பால் காட்டி இதன்கணுள்ள கூத்தனை
நீங்கள் விரும்பியவாறு செய்ம்மின் எனப்,
பழிகாரர் பேழையெடுத்துச் சென்று
தனித்த இடத்திற் கொண்டுபோய்ப் பார்க்
கக் கூத்தரைக் காணாது அதில் சோமன்
புதல்வனைக் கண்டு சோமனது வண்மை
யைவியந்து அவன் மகனைச் சோமனிடம்
விட்டனர். சோமன் செங்குந்தரை நோக்கி
உங்கள் வீரத்தை இப்போது காட்டுவீரா
யின் புலவர் உங்களைப் பாடாதிரார்
என்ன அவர்க ளதற்குடன்பட்டுத் தம்
தலைகளை முன்பே அறுத்துவிடக் கூத்தர்
அவைகளைச் சோழன் அரண்மனைக்கு
முன்னிட்டு, அரசன் காண அவற்றை ஆச
னம்போலடுக்கியிடக் கட்டளையிட்டு அச்
சிரச் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து
பதுமாசனமிட்டுச் சரஸ்வதியைத் தியா
னித்துக் கடைசியில் "கலைவாணி நீ
யுலகிலிருப்பதுவும் கல்வியுணர் கவிவல்
லோரைத், தலையாகக் காப்பது வுமவர் நா
வில்வாழ்வதுவும் சத்தியமேயன்றோ, சிலை
வாணனாவிருந்தாயிரம் புயங்கடு ணிந்து
முயர்சிவ னுற்றான், தலையாவி கொடுத்
திடும் செங்குந் தருயிர் பெற்றிட நீதயை

செய்வாயே" என்ற செய்யுளைப் பாடி
அற்றதலைகளைச் சரஸ்வதியின்கிருபையால்
ஒட்டச்செய்து இறந்தவர்களை எழுப்பி
னர். ஆதலால் சோழன் இவருக்குக் கூத்த
ரென்னும் பெயருடன் அடைமொழி
புணர்த்தி ஒட்டக்கூத்த ரெனவும், இவர்
மரபினர்க்குச் சிரச்சிம்மாசனாதிபதிகள்
எனவும் சிறப்பும் விருதுங் கொடுத்தனன்
என்ப. இவர் தங்கள் மரபினர் விஷய
மாகப் பாடிய பிரபந்தம் ஈட்டி யெழுபது
எனப்படும். இவர் பின்னும் தம்மரபினரை
"நிலைதந்தா ருலகினுக்கு மியாவருக்கு
மானமதை நிலைக்கத் தந்தார், கலைதந்
தார் வணிகருக்குஞ் சீவனஞ் செய்திட
வென்றேகையிற் றந்தார், விலைதந்தார்
தமிழினுக்குச் செங்குந்த ரெண்கவிக்கே
விலையாகத் தந், தலைதந்தார் எனக்கு
மொட்டக் கூத்தனென்னப் பெயரினையும்
தாம் தந்தாரே" எனப் புகழ்ந்து பாடி
னர். இவரையும் கம்பரையும், சோழன்
இராமாயணம் பாட ஏவ, இவர் பாடி
முடித்துக் கம்பர் இயற்றிய செய்யுளைக்
கேட்டுக் கம்பர் செய்யுளின் முன் என்
செய்யுள் ஏதாமெனக் கிழித்தெறிகை
யில் கம்பர் உத்தரகாண்டத்தை மாத்
திரம் கிழியாது வாங்கிக்கொண்டனர்.
சோழன் வரிசை யளித்து விடுத்த
போது கூத்தர் கூறிய வதுப்பு "இடுக்
கட் புண்படு நிரப்புக் கொண்டுழன் றிரக்
கச்சென்றவின் றெனக்குச் சிங்களந் திடுக்
குற்றஞ் சும் வெஞ்சினத்துச்செம்பியன்
றிருக்கைப்பங்கயஞ் சிறக்கத்தந்தன, படுக்
கக்கம்பளம் பரக்கக்குங் குமம்பதிக்கக்
கங்கணம் பரிக்கக் குஞ்சரம், கடுக்கக்
குண்டலங் கவிக்கச்சங்கிணங் கவிக்குப் பஞ்
சரங்க விக்குத் தொங்கலே" இந்த விருது
கள் யாருக் கேன்றபோது கூத்தர் பாடி
யது "பத்துக்கொண் டனதிக்கும் பதறிப்
போய் முடியப், பைம்பொற்றூரகைசிந்
தப் பகிரண்டத் திடையே, மத்துக்கொண்
டமுதத்தைக் கடையாழித் திருமால், வடி
வாகிப் புவிகைக்கொண் டருண்மாறு
பாறு, முத்துப்பந் தரினிற்குங் குருளைக்
குஞ் சினவேன், முருகற்கும் பொதியக்
கோ முனிவற்கும் பதுமக், கொத்தர்க்
குஞ் சடிலக்கொந் தளருக்கு மல்லாற்,
கூழைத்தண்டமிழர்க்கேன் கொடியுங்கா
ளமுமே." இப்புலவர் சோழன்பாற் றமக்
குண்டாகிய செல்வாக்கினால் புன்கவிகளைத்
தலை யறுப்பித்து வந்தனர். அவர்களைத்
தலை யறுத்தபோது சோனும், பாண்டிய
னும் பாவமென் றேலைவரவிட இராஜா
வேட்டவந்தபோது பாடியது "அன்றை
யினு பின்றைக்க கன்றதோ வல்லாது,
குன்றெடுத்து நீ திருத்திக்கொண்டாயோ
— வென்று, மடைந்தாரைக்காக்கும
ளங்கா நீயு, நடந்தாயோ நாலைந்தடி."
கவிகளையறுத்தபோது புலவரெல்லாம்
வேதளப் பாடியது "பாட்டுத் தொடுக்
கும் புலவோர்க்குக் கூத்தன் பயப்படல்
பேட், தாட்டுக் கடற்புவியஞ் சலன்றோ
வறுத்துக் கிடந்த, சூட்டுக்கதிர் கணிலத்
தடங்காமற் றெருகுத்து மள்ளர், மேட்டுக்
குவாவிடும் பொன்னி நன்னாடுடை வேற்
கண்டனே." கவிஞரை வெட்டவேண்டா
மென்று நேற்றன்றவான முதலியார்
பாடியது "கோக்கண்டு மன்னர் குரை
கடற் புக்கிலர் கோகனகப், பூக்கண்டு
கொட்டியும் பூவாதொழிந்தில பூவில்விண்
ணோர், காக்கண்ட செங்கைக்கவிச் சக்ர
வர்த்திநின் கட்டுரையாம், பாக்கண்
டொளிப்பர்களோ தமிழ் பாடிய பாவ
லரே." தேவி யூடலாய்க் கதவடைத்த
போது பாடியது "காத்துஞ் சிரத்துங்
களிக்குங் களிற்றுடைக் கண்டன் வந்தா,
னிரத்துங் கபாடமினித் திறப்பாய் பண்டி
வனணங்கே, யுரத்துஞ் சிரத்துங் கபாடந்
திறந்திட்ட தண்டிலங்கா, புரத்துங் கபாட
புரத்துங் கல்யாண புரத்தினுமே". கண்
டன் துலாபுருடதானம் பண்ணியபோது
கூத்தர் பாடியது. "தொழுகின்ற மன்
னர் சொரிந்திட்ட செம்பொற்றுலாத்
திடைவண், டுழுகின்ற தார்க்கண்டனேறிய
ஞான்றினு வாமதி போய், விழுகின்ற
தொக்கு மொருதட்டுக் காலையில் வேலை
யில்வந், தெழுகின்ற ஞாயிறொத்தான் குல
தீப னெதிர்த்தட்டிலே." ஆனை நிகளம்
விடுத்தபோது கூத்தர் பாடியது "இன்
னங் கலிங்கத்திகல் வேந்தருண்டென்றோ,
தென்னன் றமிழ்நாட்டைச் சீறியோ —
சென்னி, யகளங்காவுன்றன யிராவதத்
தின், நிகளங் கால்விட்ட நினைவு." கண்
டன் சென்று வெளியிற் குதிரை யேறிய
போது கூத்தர் பாடியது. "கண்டன்
பவனிக் கவனப்பரி நெருக்கான், மண்டு
ளங்காதேயிருந்தவா — கொண்டிருந்த
பாம்புரவி தாயல்ல பாருவி தாயல்ல,
வாம்புரவி தாயவகை." ஒட்டக்

கூத்தர் பாதி சோழன் பாதி பாடியது. "ஆடுங் கடைமணி நாவசையாம லகில மெல்லா, நீடுங்குடையிற் றரித்த பிரானென் றுநித்தநவம், பாடுங் கவிப்பெருமா னொட்டக்கூத்தன் பதாம்புயத்தைச். சூடுங் குலோத்துங்க சோழனென்றே யென்னைச் சொல்லுவரே." இராஜா கைகோடுத்த போது கூத்தர் பாடியது "கொலையைத் தடவிய வைவேலரக்கர்குல மடியச், சிலையைத் தடவிய கையேயிது சகதண்டத் துள்ள, மலையைத் தடவிய விந்தத்தடவி மலைந்த வொன்னார் தலையைத் தடவி நடக்குங் கொல்யானைச் சயதுங்கனே." மடையனைத் தண்டஞ் செய்ததை விலக்கக் கூத்தர் பாடியது "மீனகம்பற்றிய வேலையு மண்ணையும் வெற்படங்கப், போனகம் பற்றியமாலலையோ பொருந்தாவரசர், கானகம்பற்றக் கனவரைபற்றக் கவன்கள்பற்ற, வானகம்பற்ற வடிவேல்விடுத்த வாதுங்கனே." கூத்தர் மாணுக்கன் பாடிய அந்தாதிச் சழத்தி "மாவுறங்கின புள்ளுறங்கின வண்டுறங்கின தண்டலைக், காவுறங்கினவின்ன மென்மகள் கண்ணுறங்கிலன் கைடணைக், கோவுறங்கு கடைத்தலைக்குல தீபவள்ளைகுதட்டநின், றூவுறங்குபுகார் சஞ்சலவஞ்ச லென்ன வடுக்குமே." இராசாவுக்கு வேளையேதென்று கேட்ட சோமனுக்குக் கூத்தர் சொல்லியது. "தன்னுடைய தேவியர்க்குத் தார்வளவன் றானுரைப்ப, துன்னுடைய சீர்த்தி யுயர்நலமே—துன்னுபுகழ்ச்-சோமாதிரிபுவனத் தோன்றவே நின்புகழை, யாமா ருரைக்க வினி." அரியைப் பாடவேண்டு மென்ற போது கூத்தர் பாடியது. "ஆரேயெனு மொன்று சொல்லத் தொடங்கினு மவ்விடத்துன், பேரே வருமென்ன பேறபெற் றேன் பெரு நான்மறையின், வேரே மிதிலையின் மின்னுட னேவெய்ய கானடந்த, காரே கடல்சொளுந் தச்சிலை வாங்கிய காகுத்தனே." இவர் சோழனுக்குப் பெண் வேண்டிப் பாண்டியன் சமஸ்தானத்திற்குச் சென்றபோது சோழனைப் புகழ வேண்டிப் பாடிய செய்யுள் "கோரத்துக் கொப்போகன வட்டமம்மானே, கூறுவதுங்காவிரிக்குவையையோ வம்மானே, ஆருக்கு வேம்புநிக ராகுமோவம்மானே, ஆதித்தனுக்கு நிகரம்புலியோவம்மானே, வீரர்க்குள் வீரனொரு மீனவனோவம்மானே, வெற்றிப்புலிக் கொடிக்குமீன்கொடியோ வம்மானே, ஊருக்குறந்தை நிகர் கொற்கையோவம்மானே, ஒக்குமோசோணாட்டைப் பாண்டிநாடம்மானே." இவர் சோழனைப் புகழவேண்டி "வென்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான், என்றுமுதுகிற்கிடான்கவசம்—துன்றும்" எனக் கூறிச் சற்று நிதானிக்கையில் பாதி புகழேந்தி முடித்தனர். இது நிற்க, ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண்ணைக்கேட்டுத் தீர்மானித்தனர். சோழன், மணத்தின் பொருட்டுத் தன்னாட்டைக் காக்க ஒட்டக்கூத்தரை வைத்துவிட்டு மதுரைக்குச் சென்றனன். மண முடித்த பின்னர் தன் குமரிக்குச் சீதனப்பொருளாகப் புகழேந்திப்புலவரையும் மற்றுமுள்ள பலபொருள்களையுமனுப்ப ஒட்டக்கூத்தர், புகழேந்தி தன்னைப் பாண்டியன் சமத்தானத்தி லவமதித்ததனிமித்தம் புகழேந்தியைச் சிறையிட்டனர். கல்யாணம் முடிந்தபின் தன்னூருக்கு வந்த சோழன், ஒருநாள் கூத்தருடன் பவனி வருகையில் புகழேந்தி மேன்மாடத்திருந்து பார்க்கச் சோழன் ஒட்டக்கூத்தரை நோக்கி இப் புலவர் சிறந்தவரன்றே வென்னக், கூத்தர் "மானிற்குமோ வந்தவாளரிவேங்கை முன்வற்றிச் செத்த, கானிற்குமோ வவ்வெரியுந்தழன் முன்கனை கடலின், மீனிற்குமோ வந்த வெங்கட்சுறவமுன் வீசுபனி, தானிற்குமோவக்கதிரோனுதயத்திற்றூர்மன்னனே" என்றனர். இவர் தம் வினவுக்கு விடைதாராதவர்களைச் சிறையிலிட்டு நவராத்திரியில் பலியிடுவது வழக்கம். அவ் வழக்கப்படி இவர் நவராத்திரி பூசையில் இராஜன் சமுகத்துப் புலவர்களை வரவிடச் சிறையிலடை பட்டுப் புகழேந்தியால் வல்லவனுய குயவன் வந்து இறுமாந்துநிற்க அவனைக் கண்ட கூத்தர் "மோனைமுத்தமிழ் மும்மதமும்பொழியானைமுன் வந்தெதிர்த்தவனாரடா" என்றனர். இதைக் கேட்ட குயவன் "கூனையுங் குடமுங் குண்டுசட்டியும், பானையுஞ் செய்யு மங்குசப்பையல் யான்" என்றனன். இதைக் கேட்டயர்ந்த கூத்தர், மற்றொருவனை அழைப்பிக்கப் பொட்டைக்கண் அம்பட்டன் வந்தனன். அவனைக் கண்டு "விண்பட்டகொக்கு வல்லூறு கண்டென்ன விலவிலக்கப், புண்பட்ட நெஞ்சொடு மிங்கு நின்றாய் பொட்டையாய் புகலாய்" என்றனர். இதைக் கேட்ட அம்பட்டன் "கண் பொட்டையா

யினும் அம்பட்டன் யான் கவிவாணர்
முன்னே, பண்பட்ட செந்தமிழ் நீயுந்திடுக்
கிடப் பாடுவனே" என்றனன். இதைக்
கேட்டு மற்றவனை வருவிக்கக் **கம்மாளன்**
வந்தனன். அவனை நீ யார்? என வசன
மாய்க் கேட்க அவன் "செல்வன் புதல்
வன் திருவேங்கடவன் சகத்குருவாங்,
கொல்லன் கவியைக் குறைசொன்ன
பேரைக் குறடுகொண்டு, பல்லைப் பிடுங்
கிப் பருந்தாட்டமாட்டிப் பகைவர் முன்
னே, அல்லும்பகலும் அடிப்பேன் கவி
யிருப்பாணிகொண்டே" என்றனன்.
இதனைக் கேட்டஞ்சி வேறொருவனை வரு
விக்கத் **தச்சன்** வந்தனன். அவனை நீ
யார்? என்ன, அவன் "சொன்ன சந்தக்
கவி யாவருஞ் சொல்லுவர் சொற்சுவை
சேர், இன்ன சந்தக்கவி யாதென்றபோதி
லெதிர்த்தவரை, வன்னசந்தங் கெடவா
யைக் கிழித்திந்த வாய்ச்சியினால், கன்ன
சந்தங்களிற் கவியாப்பைக் கடாவுவனே."
என இதைக் கேட்டு மற்றொருவனை வரு
விக்க, **வண்ணான்** வந்து நின்றனன்.
அவனை நீ யாரடாவென்று செருக்குடன்
கேட்க, அவன் "சேலேய் விழிமடவாரிற்
செங்கா லன்னஞ் சேர்பழனப், பாலேய்
மணவயிற் கூத்தநின் போலியர் பாப்புனை
ந்த, நூலேய் துகளறத் தூய்தாக்கு
நோன்மை நுவல்வதல்லால், மேலேய்
தமிழ்ப் புலவோரென்னை யென்ன விளம்
புவதே" என்றனன். இதில் ஒட்டக்கூத்
தர் கைக்கோளரும் தான் வண்ணானுமாத
லால் "பாப்புனைந்த நூலேய்து களற
வென்பதில், பாவோட்டி நெய்த வஸ்திரத்
திலுள்ள மாசு நீங்க" எனக் கூறியதால்
இவன் தம் ஜாதியையும் கூறினான். ஆத
லால் யாவரினுந் தீயன் என்று இருக்கை
யில் புகழேந்தியின் மாணாக்கனாகிய
**வேளாளன்** இவனை இம்மட்டிலே விடு
தல் தகுதியன்றென்று கருதி, நீர் சோழ
ராஜன்மேற் பாடிய அண்டத்துப் பரணி
யென்னும் நூலில், இவ் வண்டத்தையே
நகரமாகவும், சக்கரவாளகிரியையே மதி
லாகவும், அதற்குட் புறத்திலுள்ள கடல்
களையே அகழாகவும், பூமி நடுவிலுள்ள
மகமேருவையே கோட்டைக் கொடிக்
கம்பமாகவும், உருவகப்படுத்தி வருணித்
திருக்கிறீரே அகழ் மதிலின்புறத்திலன்
றோ இருக்கவேண்டும். அகத்திலிருப்பதா
கக் கூறியது குற்றமன்றோ? பெரும்புறக்
கடலையே அகழெனக்கூற மறந்தீர்போ
லும். கவிச் சக்கரவர்த்தியாகிய கம்ப
நாடர், அயோத்தியா நகரவருணனையில்,
நேமிமால்வரைமதி லாகநீள்புறப், பாம
மாகடல் கிடங்காகப்பன்மணி, வாமமாளி
கைமலையாக மன்னற்குப், பூமியு மயோத்
திமா நகரம்போலுமே" என்ற செய்யு
ளைப் பார்த்ததும், கேட்டதும் இல்லையோ
என்றான். அந்தமட்டிலே அக்நிதேவனு
க்கு அபிடேகஞ் செய்தாற்போல ஒட்டக்
கூத்தர் முகங்கருகி வாளா இருந்தனர்;
அவரைப் பிடித்திருந்த அகங்கார துட்டப்
பேயோ விட்டுத் தொலைந்தது. நமக்குச்
சம்பவித்த மானக்கேடெல்லாம் புகழேந்தி
யால் சம்பவித்ததென்று உணர்ந்து மற்றக்
கவிஞரை வரவழைத்து அவர்கட்குத் தக்க
பரிசு அரசனைக்கொண்டு கொடுப்பித்து,
அவர்கள் யாவரையும் தங்கள் இருப்பிடஞ்
சேரும்படி செலவு கொடுத்தனர். புக
ழேந்தியைச் சிறையினின்றுவிடாத செய்
திகள் யாவும் தோழிகளா லுணர்ந்த சோ
ழன்மனைவி அரசனிடம் ஊடல்கொண்டு
சோழன், பள்ளியறைக்கு வருகையில்
கதவடைக்கக் கண்ட சோழன், ஊடல்
தணிக்கப் பல இனியமொழிகள் கூறியும்
திறவாததால் சோழன், தங்கள் மனைவி
யர்க்கு ஊடல் நிகழுங்காலத்துப் புலவர்
களைக்கொண்டு தணிக்கும் வழக்கம்போல்
ஒட்டக்கூத்தரை அனுப்பினன். கூத்தர்
**பள்ளியறைக்கண் சென்று** "நானேயினி
யுன்னை வேண்டுவதில்லை நளினமலர்த்,
தேனே கபாடந் திறந்துவிடாய் செம்
பொன்மாரி பொழி, வானேறனைய விரவி
குலாதிபன் வாசல் வந்தால், தானே திற
க்கு நின்கைம்மலராகிய தாமரையே"
எனக் கூறக்கேட்ட சோழன்மனைவி, "ஒட்
டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்
பாள்என மற்றொரு தாழ்ப்பாளிட்டனள்."
கூத்தர் ஔவையார், கம்பர் புகழேந்தி
இருவர்களையும்கண்டு கால் மடக்குதற்கும்
தம்மைக்கண்டு கால்மடக்காதிருப்பதற்கும்
காரணம் சோழனைக்கொண்டு கேட்பிக்க,
ஔவையார் அவர்கள் கவிவன்மைக்கும்
நுண்ணறிவிற்குமென்று அறிவித்து அவற்
றைத் தெரிவிப்பான் வேண்டிப் புகழேந்
தியும் கூத்தருமிருக்கும் சவைக்கண், தம
துகையால் சில **சமிக்ஞை**களைக் காட்டி
யவற்றிற் கிணங்க வெண்பா பாடுக என
இருவரையுங் கூறக் கூத்தர் "இவ்வள

கண்ணிஞ ளிவ்வளவு சிற்றிடையாள், இவ்வளவே போலுமிள முலையாள்—இவ்வளவு, நைந்தவுடலாணல மேவுமன்மதன் கை, ஐந்து கணையால் வாடுவாள்" என்ன அக்கருத்துத் தமதல்லாததைத்தெரிவித்து மீண்டும் **திங்களின் பெயரில்** ஒரு கவி, பொருள் வேற்றுமையாய் **மும்முறை வரப் பாடுக** எனக் கூத்தரும் "வெள்ளத்தடங் காச்சினவாளை வேலிக்கமுகின் மீதேறித், துள்ளிமுகிலைக் கிழித்து மழைத்துளியோடிறங்குஞ் சோணாடா, கள்ளக் குறும்பர் குலமறுத்த கண்டா அண்டர் கோபாலா, பிள்ளை மதிகண்டெம்பேதை பெரியமதியுமிழந்தாளே" என்றனர். இதனைக் கேட்ட ஔவையார் "ஒட்டா ஒருமதிகெட்டார்" என்று அரசனுக்கு அவ்விருவரின் வன்மை தெரிவித்தனள். பின்னொரு நாள் சோழன் தனது சமஸ்தான வித்வான்களிருவரையும் அழைத்துக் கொண்டு **திருநெய்த்தான மென்னுஞ்** சிவத்தலஞ் சென்று சேவித்து அவர்க ளிருவரையும் பாடக்கூற, ஒட்டக்கூத்தர் "விக்காவுக்காவித்தாவிப்போய் விட்டானட்டார் சுட்டேர் புக்கார், இக்காயத்தாசைப் பாடுற்றேயிற் றேடிப்போய் வைப்பீர் நிற்பீர், அக்காடப்பேய் தொக்காடச் சூழப்பாடத்திவெப் பாடப்பூண், நெக்காடக்கானத் தாடப்போ நெய்த்தானத் தானைச்சேவித்தே" என்றனர். மற்றொருநாள் **திருக்குறுங்குடிப்** பெருமாளைப் பாடக்கூறக் கூத்தர் "திக்குகளெட்டுக்கயந்துக்கமுற்றுத் திடுக்கிட்டலற, மைக்கடற்குட் சரந்தைக்க விட்டோற் கிடமாமதுர, இக்கு முற்றிக்கணுச் சற்று விட்டுத் தெரித்திட்ட முத்தைக், கொக்குமொக்கிக் கக்கிவிக்குமச் சோலைக் குறுங்குடியே" இவர் புகழேந்தி நளவெண்பா பாடிச் சோழன் சமஸ்த்தானத் தரங்கேற்றுகையில் "மல்லிகையே வெண்சங்கா வண்டூத" எனுஞ் செய்யுளில் சங்கூதுவோன் ஊதுங்கால் சங்கினடிப்புறத்தூதுவானேயன்றி மேற்புறத்தூதுதல்வழக்கன்றெனவும் "செப்பிளங் கொங்கை மீர் திங்கட் சுடர்பட்டுக் கொப்புளங்கொண்ட குளிர்வானை" எனும் வெண்பாவில் திங்களின் சுடர் பட்டுக் கொப்புளங்கொண்ட குளிர்வான் என்றது சரியே ஆயினும் அக்கொப்புளத்திலிருந்து சீயாவது சிலைநீராவது வடிதலுண்டோ என வினவி அவர் கூறிய விடையா லமைந்து, ஒருநாள் புகழேந்தியின் கல்வித்திறத்தை வியந்து இராப் போஜனத்திற்குச் செல்லாமலிருக்கையில் மனைவியார் காலநீட்டித்த தறிந்து போஜனத்திற் கழைக்க, வாராமை கண்டு சீனிகலந்த பால்கொண்டு வருவல் எனக், கூத்தர், நீ பாலில் புகழேந்தியின் வெண்பாவைப் பிழிந்து தரினும் வேண்டேன் என்றனர். இதனைக் கேட்டு ஆங்குவந்து ஒளித்திருந்த புகழேந்தியார்,பொருக்கென வெளிப்படத் தம்பாற் பகைவிட்டுச் சிநேகம் பாராட்டக் கண்டு இருவரும் களித்திருந்தனர். இவ்வாறு சோழனிடத்து வளம்பெற வாழ்கையில் ஒருநாள் குடந்தை வீரசிங்காதன மடத்தில் வாழ்ந்த தவசிகள் பலரில் ஒருவர் முத்தமிழ் விரகராகிய ஆளுடைய பிள்ளையார் தேவாரத்தையோதிப் பலியேற்பவர், திருவீழிமிழலையீசர் திருப்பதிகத்தை ஓதிக்கொண்டு பலியேற்கு மொருதினம், அத்திருப்பதிகத்தி லுள்ளதாகிய "கல்லானிழற்கீழாயிடர்காவா யெனவானோ, ரெல்லாமொரு தேராய யன்மறை பூட்டி நின்றுய்ப்ப, வல்வாயெரி காற்றீர்க் கரிகோல் வாசுகி நாண்கல், வில்லாலெயி லெய்தானிடம் வீழிம்மிழலைய்யே." என்னுந் தேவாரத்தைச் சொல்லிக்கொண்டே ஒட்டக்கூத்தரது மனைவாயிலில் நிற்க, அப்புலவர் பலவும் அறிந்தவராயினும், அத்தேவாரப் பொருளைப் பலகாற் சிந்தித்தும் விளங்காமையின் மயங்கி, அச் சிவயோகியாரை "இத் தேவாரத்தின் பொருள் கூறுக" என்று கேட்டனர். அவ்யோகியார் சினந்து, 'இதன் பொருள் யானறிந்திலேன். நீ அறிந்துரைப்பினும், அத் தேவாரத்தின் ஒரு மொழியேனும் பொருள் நிரம்புமோ' என்றனர். இது கேட்ட புலவர், விருப்பமிகும் இன்னிசையோடு பாடுதலால் நிச்சயித்தற் கரிதாயிற்று; ஆதலின் அதன் பொருள் யாது என்று கேட்டவழி, அவர் அதன் பொருளை மொழியாது வசைமொழிந்தனரென்று பெருங்கோபங் கொண்டு அச் சிவயோகியாரைப் புலவர் கசையைக் கொண்டு அடிக்க, அவரும் மடிந்து வீழ்ந்தார். மாறுபட்ட மனத்துடன் பெருஞ்சினங்கொண்ட ஒட்டக்கூத்தர், அழிவற்ற சிவ்னடியார்க்கு இவ்வாறு அழிவியற்றித் தம் மனையடைய அச்சிவயோகியார் வசிக்கும் மடத்திலுள்ள சங்கமர்கள் இச்செய்தி கேட்டலும் பெரிதொலித் தெழுந்து

ஆசிரியரை இறைஞ்சி அநுமதி பெற்று வில், வாள், அம்பு முதலிய ஆயுதங்களை ஏந்தியவராகி அப்புலவர்மனையை அடைந்தனர். இவர்கள் வருவதை முன்னரே அறிந்த புலவர், அரசனையடைந்து நடந்ததனைத்தும் அறிவிக்க, ஒருபசுங் கன்றின் பொருட்டுத் தன் புதல்வனைத் தேர்க்காலிலிடறிய சோழன் குலத்துதித்த இராஜராஜன்கேட்டு, பெரிதும் மயங்கிக் கலங்கி; இப்பெரும் பழிக்கு என்ன செய்வதென்று நடுங்கி நிற்க, அத்தருணத்தே, ஆங்குப் புலவரிருப்பதை அறிந்த சங்கமர்கள் அரசன் திருமுன்பெய்தி நடந்ததை முறையிட்டார்கள். அம் முறைப்பாடு கேட்ட மன்னன் "சிவபெருமானுக்குரிய வடிவம் குரு, இலிங்கம், சங்கமம் என மூன்றாகுமென்று வேதாகமங்கள் இயம்பாநின்றன. இவ் வொட்டக்கூத்தர் இவற்றை யெல்லாம் அறிந்தும், தம்மனையிற் பலிக்கெய்தி யாதொரு குற்றமுமிலராய் நின்ற சிவயோகியரைக் கொன்று நம்பாலடைந்தனர். இதற்கு யாது புரிவம் என்று வருந்தி அச்சங்கமரை நோக்கி "அடிகளே! இச்சங்கமக் கொலைக்குச் சிவாகமங்களில் விதித்த பரிகாரம் யானே புரிகின்றேன்" என்று பணிந்தனன். சங்கமர், அக்கூத்தனை ஒறுத்தற் குரியேம்; ஆதலால் அவனைக் கொண்டாலன்றி மீளேம் என்று உறுதியாக நிற்க, அரசன் புலவரை வேறோரிடத்திற் சேமித்து வைத்து, புதல்வனை மந்திரியால் அழைப்பித்து, "எனக்கு நேர்ந்த குறையை மாற்றுவாயாக" எனத் தன் மகனை வேண்ட, அவனும் "பிதா மாதாக்கள் இயம்பியது யாதாயினும் அது தவமென்று கொள்வதே மைந்தர் கடமை; சூரிய குலத்தவருள் தந்தை, ஆசிரியர் இவர் சொற்களைக் கடக்கும் கொடியோரை இப்பூமி தாங்காது. நரகமே தன்பாற்கொள்ளும். மனைவி, புத்திரர் செல்வ முதலியவை அருமையல்ல; கீர்த்தியொன்று அரியது. உடலம் நிலையன்றென்பதை அறிந்தும் அதைப் பொருளாக எண்ணி, உமது உரையைக் கடப்பவனல்லேன். என்னை உமது இஷ்டப்படியே செய்க" என்றனன். இவற்றைக் கேட்ட மன்னவன் மகிழ்ந்து மகனை மூடுபல்லக்கில் ஏற்றித் திரையிடுவித்துக் கொண்டு அவையை யடைந்து சங்கமரை நோக்கி, "சங்கமக் கொலைபுரிந்த இவனை நீர் நோக்குவதுந் தகுதியன்றாதலால், ஓர் மறைவிடத்தில் வைத்துக் கொல்க" எனக் கூறி விடுத்தான். அரசன் சொல்லை மதித்து அச் சிவிகையுடன் ஓரிடத்தைச் சேர்ந்தபோது, அச்சங்கமருட் சிலர் 'இவன் ஒட்டக்கூத்தன் தானா? என்று முகத்தைப் பார்த்துத் தெரிந்துகொண்டு பின் கொல்லவேண்டும். செய்யுங் கருமத்தைத் தெளிந்து கொள்ளாமலே செய்யின், அது மனத் துன்பத்துக்கு ஏதுவாகும்' என்ன, இது கேட்ட அனைவரும் அவ்வாறே பார்க்க விசைந்து சிவிகைத்திரையை நீக்குதலும் அரசனுடைய குமாரன் அதிலிருத்தல் கண்டு கவலைகூர்ந்து, அவனை அணைத்துக் கொண்டு எல்லாரும் அழுதொலிக்க, அக்குமாரன் "நீவிர் எண்ணியதை என்பாற் செய்க" என்றனன். அப் பெரியரோ, "குழந்தாய்! பாதகமெவற்றினும் கொடிய சங்கமக்கொலை புரிந்தவன் ஒட்டக்கூத்தனாயிருக்க, அவனை விடுவித்து இளவரசுக்குரிய நின்னைக் கொல்லும்படி, நின் பிதா வஞ்சகம் செய்தான்" என்னலும், புதல்வன் "யானும் என் தந்தையும் உடன்பட்டு இவ்விதச் செயல் புரிதலின் நீர் விரும்பி எங்களுடன்பாட்டின்படி புரிவது நீதியாம்" என்றனன். இது கேட்டலும், அப் புதல்வனது அரும்பெருஞ் செய்கையை வியந்து கூறி அவனுடன் திரும்பி அரசனிடஞ்சென்று "அண்ணலே! உன் அரும்பெறற்புதல்வனைக்கொன்று கொலைஞனாகிய கூத்தனைக்காக்க வெண்ணியது நீதியா; நீதிப்படி புலவரை எம்பாற் றருக" என்று உறுதியாக நின்றனர். இம்மொழிகேட்டுக் கலங்கிய வேந்தனது செயலறவு நோக்கிய ஒட்டக்கூத்தர், வேறொரு சூழ்ச்சியை உள்ளத்திலுன்னி 'அரசே என்னை, இவ்வடியர்பால் ஈக அடைக்கலம் புக்கயானே இவர்க்கீக என வேண்டும்போது நீர் தருதலால் உமக்கு வருங்குறையாது' என்றவளவில் அரசன், 'இதனால் வித்துவாபிமானம் இலனாயினேன்; இனி உங்கள் சித்தம்' என்று கூறினன். உடனே புலவரைக் கொண்டு அச்சிவனடியார் சென்றனர்; சூரியன் மேற்றிசை யடைந்தான். அக்காலத்தே, புலவரும் அக் கூட்டத்தவரை வணங்கி, "யான் முக்காலமும் சிவபூசை செய்யும் நியமமுடையேன்; இன்று அந்தியதி தவறிற்று; அது தவறாவண்ணம் விடைநல்க"

என்று கேட்டுக்கொள்ள, அப் பெரியோ
ரனைவரும் அன்புடன் "அதுபுரிக" என்
றனர். புலவர் அங்குள்ள அரிசொலாா்
நதியடைந்து நீ ரா டி வெண்ணீறுங்
கண்டிகையுமணிந்து ஐந்தெழுத்தைச் சிந்
தித்துச் சிவபெருமானைப் பூசித்து 'என்
மனக்கவலையகல அருள்புரிக' எனப் பிரா
ர்த்தித்து, பின்பு அருகிலிருந்த மூளைச்
சாளம்மை என் னு ங் காளிகோயிலை
அடைந்து யாவரும் விலகியிருக்குந் தரு
ணம் பார்த்து அக்கோயிற் கதவடைத்துத்
தாழிட்டுக் கொண்டனர். இஃதறிந்த
சிவனடியார்கள் பெருங் கோபங்கொண்டு
புலவரை எவ்வாருவது கொல்ல நினை
புங்கால், அவருட்சிலர், புலவர் ஆலயத்து
ளிருப்பதால் விடிந்தபின் வெளிபடுத்திக்
கோறலே விழுமிதென்று சொல்ல, அத
ற்குடம்பட்டு அன்றிரவெல்லாங் காவல்
பூண்டிருந்தனர். உள்ளேயிருந்த புலவர்
'இவ் வாபத்தை அகற்றி யருள்வாய்'
என்று அக் காளிகாதேவியைப் பிரார்த்
தித்தவழி தேவி அவர் முன்பு தோன்றி,
"அருந்தவர்க்கு அநாதித் தெய்வமாக
விளங்கும் வீரபத்திரக் கடவுளே உம்குல
தெய்வம் என்றெண்ணி, அப்பெருமான்
பேரில் ஓர் பிரபந்தமியற்றுக" என்ற
னள். அது கேட்ட புலவர், தேவியே!
யானியற்றும் பிரபந்தத்தை, நீயே எழு
தத் திருவுளம் வைத்தால் விரைவின்
முடித்து விடலாம் என்னலும் தேவியும்
சம்மதித்து, புலவர் சொல்லச் சொல்ல
எழுதி வருவாளாயினள். இங்ஙனம் எழு
தும்போது தேவியின் ஒருகையி லேந்திய
தீபம் சிறிது சலனமடைய, அத்தருணம்,
புலவர் வீரரசம்பாடும் நிலைமையி லிருந்த
தினுல் அக்குண முடையராய், 'கைத்தீபம்
அசைவதென்' என று அத்தேவியின் கன்
னத்திலேதங் கரத்தாலடித்து, பின் சாந்த
ரசம் ஒதுங்கால் தாம்செய்த தவறுதெளி
ந்து உடனடுங்க, தேவியும், பரிவுடன்
'இச்செயல் நின்போத மின்றி நிகழ்ந்த
தாகலின் அதுபற்றிக்கவலற்க' என்றருளி
னள். இவ்வாறு, வீரபத்திரக்கடவுள்
வெற்றியை நாறசீரடிப் பாடல்களால்,
'பரணி, என்னும் பிரபந்தமாகப் பாடி
முடித்தலும் சூரியனும் இருளகல உதய
மாயினன். காத்திருந்த சிவசரணரும் புல
வரை வெளியேறும்படி அழைத்தனர்.
அதற்குப் புலவர் இஃது'என்று ஓர் துவா
ரத்தின் வழியே பாணியை நீட்ட, அதனை
வாங்கி வாசித்து, இவ்வாறு நம்கடவுள்
சரித்திரத்தை முடித்தது வியப்பு எனக்
கூறி அதனைப் பாராட்டி, கோபந்தணி
ந்து குதுகலித்தவராய்த் தங்கைக் கத்தி
யைத் துவாரத்தின் வழியே நல்கி 'உம
திஷ்டப்படி செய்வீராக' என்று கூறி
னர். அதைக்கேட்ட புலவர் யான்செய்த
கொலைகாரணமாக என்னைக் கொல்லத்
துணிந்த நீர் இங்ஙனமிசைத்தல் என்?
எனவினவ, அச்சிவசரணர், 'நம்கடவுள்
தக்கன் யாகத்தை அழித்த சரிதத்தை
நீர் இனிது பாடி முடித்தமையால், உம்
மால் இன்னும் பல பிரபந்தங்கள் பாடிக்
கொள்ளலாம் என்பதுட்கொண்டுஇக்கைக்
கத்தி யீந்தோம்' என்னலும், புலவர்வெளி
வந்து வணங்கினர். அவ்வருந்தவர், முன்
பொருவன் கொணர்ந்ததொரு புஸ்தகம்
மெய்ப்பொருளுயனாது இறுதிக் கேது
வாயிற்று; நீர்வரைந்த இந்நூல் தானுங்
கொலைதவிர்தற்கு ஏதுவாயிற்று' என
வியந்து புலவரைப் பலவாறு புகழ்ந்து,
அப்புலவர் பிரார்த்தனைப்படி அவர் தீவி
னைக்குப் பரிகாரமும் இயற்றியருள் புரிந்
தார்கள். பின்னர், புலவர், கங்கை வீரேசர்
சந்நதியில் தக்கயாகப் பரணியை அரங்
கேற்றி, அப்போது தாம் அடிமைப்பட்ட
சங்கமக் குரவராற் பலவரிசைகள் அளிக்
கப் பெற்றனராய்த் திரும்பி அரசனவை
யை யடைந்தனர். அரச னெதிர்கொண்டு
வந்து 'புலவரே! கொலைப்போர் வழக்கு
எவ்வாருயிற்று' என்று வினவினன். புல
வர்"ஆழாக்கு எண்ணெயோடொழிந்தது"
என வியப்பிற்கூறி, பரணிபாடியது முத
லிய செய்திகளை அறிவித்தலும், அரசனு
வந்து அவையோர் மகிழ ஒட்டக்கூத்தரை
வியந்து புகழ்ந்து வரிசை பலவளித்து
விடுக்க, புலவர் தம்மனையினெய்தி அந்
தணர் வறியவராதியர்க்குத் தானதரும
மளித்து முன்போலச் சுற்றத்துடன் சுக
மாகக் களித்துவாழ்ந்து மரணமடைந்தனர்.
இவரது மரணச்செய்தியறிந்த ஔவையார்
இவரது பிரிவாற்ருதவராய் "நூற்றெண்
பதின்காதநூங்கு நறுந்தமிழி, னேற்ற
மினியென்ற யியலுமோ — போற்று,
புவிராசர் யாரும் புகழு மொட்டக்கூத்தக்,
கவிராசன் காட்சியிலாக்கால்." எனக்
கிலேசித்து நீங்கினர். இக் கதைகளுள்
புகழேந்தி சம்பந்தமுள்ள கதைகள் தமிழ்

நாவலர் சரிதையிற் கூறப்பட வில்லை. தொண்டைநாட்டுப்பிரதிகளில்கண்டவை. இவர் செய்த நூல்கள் இராமாயணம் உத்தரகாண்டம், ஈட்டியெழுபது எழுப்பெழுபது, அண்டத்துப்பரணி, குலோத்துங்க சோழன்உலா, குலோத்துங்கன்கோவை, தக்கயாகப்பரணி முதலிய.

2. "செங்கான் மடவன்னம் படர்தீயாமென வெருவி, சிறையின் பெடை மறையக்கொடு திரியத்திரள் கமுகின், பைங்காய் மரகதமீது படர்ந்தேறி நறுந்தண், பாளைக்கிடைப்பவளக் கொடிபடர் காவிரி நாடா, தங்காதலியருமைந் தருமுடனுகை வணங்கித், தலைகா வெமதுடல்கா வெமதுயிர் காவகளங்கா, கொங்கா மனதுங்கா வெனமதரே சர்வணங்கும், கொல்யானை யபங்காவிவள் குழலோசை பொருளே." இரண்டாமடி அம்பிகாபதி பாடியது. "எகாவடமென்னிரு கொங்கையின்மேல் ஆகாவடமான தறிந்திலையே, தியாகா பரணு திசையானைகளின், பாகாபரராச பயங்கரனே." இச் செய்யுட்களும் ஒட்டக்கூத்தர் பாடியதாகத் தெரிகிறது. இது எந்தச் சமயத்தில் பாடியதோ தெரியவில்லை.

**ஒட்டணி**—தன்னுற் கருதப்பட்ட பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்தற்குத் தக்க பிறிதொன்றனைச் சொல்லுதல். இது அடைமொழியால் வேறு பலபெயர் பெறும். (தண்டி)

**ஒட்டர்**—இவர்கள் முதலில் ஒட்டராம் (ஒரிஸாநாட்டி) லிருந்து குடியேறினவர்கள். இவர்கள் கபடமற்ற ஜனங்கள் ஆண்களும் பெண்களும் வேலைசெய்து ஜீவனம் செய்வர். இவர்கள் தொழில், வீடுகட்டுதலில் கடைக்கால் தோண்டல் கிணறெடுத்தல் குளம் தோண்டல் முதலிய. இவர்கள் தங்களுக்குக் கிடைத்த கூலியினல் உழைப்பின் சிரமம் நீங்க லாகிரி வஸ்துக்களைப் பானஞ் செய்வர். இவர்கள் பன்றி முதலிய மாமிசபக்ஷணிகள். இவர்களில் பெண்கள் ஒரு புருஷனை நீக்கிவிட்டு வேறொருவனை மணக்கலாம். இவர்கள் பாஷை வடுகு. (தர்ஸ்டன்)

**ஒட்டியமுனி**—ஒட்டிய நூல் இயற்றியவன். இது மந்திரசாத்திரம்.

**ஒட்டிரவாகனன்**—ஒரு ராஜரிஷி. அம்பையின் தாயுடன் பிறந்தவன்.

**ஒத்நாயணமகாராஜன்**—இவன் சில்பி எனும் நாட்டரசன் சைநன், பிறரைக் கருணையுடன் காப்பவன். இவனை சோதிக்க மணிசூடனென்பான் தொழுநோயுடன் வர அவனது அழுகிய திருவடி தீர்த்தங்கொண்டு நற்கதி பெற்றவன்.

**ஒத்தாழிசைக்கலிப்பா** — இது, ஒத்தாழ்ந்திசைத்தலின் ஒத்தாழிசை. இது, வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா, நேரிசையொத்தாழிசைக் கலிப்பா என மூன்று வகைப்படும்.

**ஒப்பிலாமணிப்புலவர்**—இவர் தொண்டைநாட்டார். இவர்மகா கொடையாளியாகிய குமணனைப் பாடிச்சென்று அவனில்லாமையால் அமணனை நோக்க அவன் என் தமயன் சிரத்தினைக் கொண்டுவந்துகொடுக்கின் வேண்டியது தருவேன் எனக்கேட்டுக் காட்டிற்சென்று தன் தம்பிக்கு அரசைக் கொடுத்து வேடனைப்போல் காட்டிற் காலங்கழித்துவரும் குமணனைச் சிலஅடையாளங்களாலறிந்து அவனைநோக்கி "மாங்தையிலேவாழும் மகுடத்தியாகி யுனக், கேந்துதழும்போவிரண்டுளதே—வேந்தர், முடித்தழும்புன் காலிலே முத்தமிழோர்க் கீயும், படித்தழும் புன்கையிலே பார்." எனுஞ் செய்யுளைப்பாடி இரப்போர்க்குக் கொடுத்துத் தழும்பேறிய கையாலும், தோளிலுள்ள விற்றழும்பாலும், குமணன் என்றறிந்து "ஆடெரிபடர்ந்த கோடுயர் அடுப்பில், ஆம்பிபூப்பத்தேம்பசி யுழல, இல்லி தூர்ந்தனள் பொல்லாவறு முலை, சுவைதொறும் சுவைதொறும்பால் காணுமல், குழவி தாய்முகநோக்க, மனைவியென்முகநோக்க யாமும், நின்முகம்நோக்கி வந்தனம் குமணு" என்ற செய்யுளைப் பாடினர். இவன் வள்ளல் ஆதலினுல் என் தம்பி விரும்பியது என் தலை. நீர், நான் அரசுசெய்கையில் வரவில்லை இப்போது வந்தீரெனுங் கருத்துடன் "அந்த நாள் வந்திலை யருங்கவிப் புலவோய், இந்த நாள் வந்துநீ நொந்தெனை யடைந்தாய், தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்த தன், விலைதனை மீட்டுன் வறுமை நோய்களையே." என்று கூறித் தன் தம்பி தன்தலை ஆயிரம்பொன் விலை பெற்றதாக மதித்ததைப்பற்றி "வெம்புங் காலை வெதும்பி விழுஞ்சிரம், செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தான், உம்பர்

நாடுமுலகினுந் தேடினும், எம்பிபோல் எமக்கியாவருரியரே" என்று உடைவாளை எடுக்கப் புலவர்தடுத்து "ஆறுபெருக்கற்ற ருந்திடர்தான் பட்டாலும், ஊறலமையா தோ வுலகாற்றத் — தேற, வறியையே யானுலுமென் வறுமை மாற்றச், சிறியை யோசீர்க்கு முணுசெப்பு." என்று ஒரு சிற்பியையடுத்து அவனுக்குத் தன்னெண்ணம் தெரிவித்துக் குமணனது வெட்டிய சிரத்தைப்போலச் செய்வித்துக்கொண்டுபோய் அமணராசன்முன் காட்டினர். அமணன் தமயன் சிரத்தைக் கண்டு துக்கமடைந்து புலவரைக் கொல்ல எண்ணுகையில் புலவர் தமயனை உயிருடன் கொண்டுவரின் இராச்சிய முதவிய அவருக்கே தருவனென்று அவன் உறுதி செய்தபின் அரசனைக் கண்டு தம்பியின் எண்ணம் தெரிவித்து அழைத்து வந்து அரசு கொடுப்பித்துப் பரிசுபெற்றுச் சென்றவர். இவர் மற்றுஞ் சில பிரபுக்களைப் பாடினதாகப் பல செய்யுட்கள் காணப்படுகின்றன. அவை "இடுவோர் சிறிது விரப்போர் பெரிது, கெடுவாய் நமனே கெடுவாய் — படுபாவி, கூவத்து நாரணனைக் கொன்றாயே கற்பகப்பூங்கா வெட்டலாமோ கரிக்கு" "மையூருங் கண்ணர் மயங்கப் பொரு கரும்பு, கையூருங் காமாவுன் கண்ணணை—செய்யூர், வளவனையினன் பிரிந்த வாறுனக்குச் சொன்ன, வுளவனையினனென்றுரை." எனக் கூவத்து நாரணனையும், வளவனயினனையும், பல இனிய கவிகளையும் பாடின செந்நாப்புலவர்.

**ஒப்பில்போலி**—தன்னை ஒத்தவீரன் இலன் (நான்சிங்கம்) எனும் சொல் போல்வது.

**ஒப்புமைக்கூட்டவணி**--அஃதாவது வர்ணியங்களாகிய பல பொருள்களை யாயினும் அவர்ணியங்களாகிய பல பல பொருள்களையாயினும் பொதுவாகிய ஒரு தருமத்தின் முடித்தலாம். இதனை வடநூலார் துல்லிய யோகிதாலங் காரமென்பர்.

**ஒருசார்பகற்குறி** — அதாவது ஒரு கூற்றுப் பகற்குறி, யாதெனில் தலைவன் மற்றைநாள் தன் வேட்கை மிகுதியால் பகற்குறியிடத்து வந்துநிற்க. தலைவியைப் பாங்கி குறியிடத்துச் செலுத்தாது மறுத்துக் கூறத்தலைவன் வருந்திப்போதலான் இது பகற்குறியாகாது ஒருசார் பகற்குறி யெனப்பட்டது. இது. இரங்கல், வன்புரை, இற்செறிப் பெனும் வகையினையும், கிழவோன் பிரிந்துழி கிழத்திமாலையம் பொழுது கண்டிரங்கல், பாங்கி புலம்பல், தலைவனீடத் தலைவி வருந்தல், தலைவியைப் பாங்கிகழறல், தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல், பாங்கியொடு பகர்தல், பாங்கியச் சுறுத்தல், நீங்கற் கருமைதலைவி நினைந்திரங்கல், தலைவிக்கவன் வரல்பாங்கி சாற்றல், சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுதல், முன்னிலைப் புறமொழி மொழிந்தறிவுறுத்தல், முன்னின்றுணர்த்தல், முன்னின்றுணர்த்தியோம் படைசாற்றல், கிழவோன் தஞ்சம்பெறாது நெஞ்சோடு கிளத்தல் எனும் விரியினையு முடையது.

**ஒருசிறைப்பெயரியனர்** — இவர் நாஞ்சில் வள்ளுவனைப் பாடிப் பரிசில் பெற்றவர். (புறம்-கஙௐ) முல்லையையுங் குறிஞ்சியையும் புனைந்து பாடியுள்ளார். தலைமகனைத் தேர்ப்பாகன் தேற்றுவதாக இவர் கூறியது இன்பந்தரற்பாலது. இவர் பாடியனவாக நற்றிணையில் கஉஎ-ம் பாடலொன்றும், குறுந்தொகையி லொன்றும், புறத்திலொன்றுமாக (ங) பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (நற்).

**ஒருதனிநிலை**—போரினைச் செய்யும் சேனையிடத்து வெள்ளம் தள்ளாதபடி கல்லாற் கட்டினகரையே போலப்பெரும்படையை ஒரு வீரன் தடுத்த நிலையைச் சொல்லியது. (பு. வெ.)

**ஒருபுலவன்** — வண்டியூர்க் கெழுந்தருளப் பண்ணுகின்ற மண்டபத்திற் கூறியது. "அடும்போதுஞ் சொல்லில்லை யென்று மடுஞ்சோ, றிடும்போதுஞ் சொல்லில்லை யென்றும் — குடும்பமெனும், பேய்க்கொளித்துப் போகின்றேன் பேறை யூராதிபனே, தாய்க் கொளித்த சூலுண்டோ தான்." இதைக் கேட்டு வேம்பத்தூர் வேதியப் பிள்ளைகள் கூறியது. "ஒன்றுமறியோமும் மாணையப்பரே, சென்று தொழில்புரியுஞ் சீபதியார் — கன்றக், கயிற்றினற் கட்டிக் கதவுபடத் தெற்றி இயற்றினலென் செய்வோம்யாம்." இந்தப் பாடல்களைப்பற்றிய கதையொன்றுந் தெரியவில்லை. தமி-நா சரி.

**ஒரு பொருட்பாட்டு** — சித்திரக் கவியிலொன்று-ஒன்றனையே வருணித்துப் பாடுவது.

**ஒருபொருட்பன்மொழி** — ஒரே பொருளைத் தருகின்ற பல சொற்கள் சிறந்து நிற்றல். (நன்.)

**ஒருவழித்தணத்தல்** — இது கூறிய பாங்கியுடன் வரைதற்கு உடன்பட்ட தலைவன், தன் ஊருக்கு ஒருவழிப்போய் வருகின்றேன் எனப் போதல். இது செலவறிவுறுத்தல், செலவுடன் படாமை, செலவுடன் படுத்தல், செலவுடன் படுதல், சென்றுழிக் கலங்கல், தேற்றியாற்றுவித்தல், வந்துழி நேர்ந்துரை, எனும் (எ) வகையினையும், தன் பதிக்ககற்சி தலைவன் சாற்றல், பாங்கிவிலக்கல், தலைவனீங்கல், வேண்டல், பாங்கி விடுதல், பாங்கி தலைவிக்கவன் செலவுணர்த்தல், தலைவிநெஞ்சொடு புலத்தல், சென்றோனீடலிற் காமமிக்க கழிபடர் கிளவி, தலைவியைப் பாங்கியாற்றுவித்தல், தலைவன் வந்தமை பாங்கியுணர்த்தல், பாங்கி தலைவனொடு நொந்து வினுதல், தலைவன் பாங்கியொடு நொந்து வினுதல், தலைவியை யாற்றுவித்திருந்த வருமை கூறல் எனும் விரியினை யுடைத்தாம் (அகம்.)

**ஒருஉத்தனார்**—ஒரு தமிழ்ப்புலவர். 'கோடடங் கண்ணியுங் கொடுந்திரை யாடையும், வேட்டது சொல்லி வேந்தனைத் தொழுதலும் ஒத்தன்று'எனப் பாடியவர். (புற-நா.)

**ஒல்லையூர்கிழான்** — பெருஞ்சாத்தனுக்குத் தந்தை.

**ஒல்லையூர்கிழான்மகன் பெருஞ்சாத்தன்** — குடவாயில் நல்லாதனாரற் பாடல்பெற்றவன். வீரர், பாணர் முதலியவருக்கு உதவி புரிந்தவன். இவன் பெயர் சாத்தனெனவும் வழங்கும் வேளாளன். (புற-நா.)

**ஒல்லையூர் தந்தபூத பாண்டியன்** — இவன் கவிவல்ல பாண்டியன். இவனுக்குப் பூதபாண்டியனெனவும் பெயருண்டு. இவன் சிநேகர் மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதனழிசி, இயக்கன் முதலியவர்கள். இவன் மனைவி இவனுடன் தீயிற் பாய்ந்தாள். "மடங்கலிற் சினைஇமடங்காவுள்ளத், தடங்காத்தானை வேந்தருடங்கியைந், தென்னொடு பொருத்து மென்ப" என வஞ்சினக்காஞ்சி பாடினவள். (புற-நா.) (அக-நா.)

**ஒழித்துக்காட்டணி**—அஃதாவது ஒரு பொருளை ஓரிடத்தில்லையென வொழித்து மற்றோரிடத் துண்டென்று நியமித்தலாம். இதனை வடநூலார் பரிசங்கியாலங்காரமென்பர்.

**ஒழிபு**—(மீட்சிமொழி அல்லது பாரிசேஷம்) அது கீழைச்சேரி தோற்ற தென்றால் மேலைச்சேரி வென்றதெனச் சொல்லாமலுணர்தல். பாரிசேஷம்-கூட்டிக்கழித்தல்.

**ஒழிப்பணி**—அஃதாவது ஒரு தருமத்தையாரோபித்தற் பொருட்டொரு தருமத்தை மறுத்தலாம். இதனை வடநூலார் அபநுதியலங்கார மென்பர்.

**ஒழிவிலொடுக்கம்** — இது கண்ணுடைய வள்ளலார் இயற்றிய வைதிக சைவநூல். இது சரியைக்கழற்றி, கிரியைக்கழற்றி, யோகக்கழற்றி, துறவு, வாதனைமாண்டார் தன்மை, நிலையியல்பு முதலியவற்றை விளங்க விளக்கும். இந் நூலுக்குத் திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் உரையியற்றினர்.

**ஒழுகிசை**—இது வைதருப்ப செய்யுணெறியுளொன்று. இது வெறுக்கத் தகுமின்னிசையின்றி வரத்தொடுப்பது. (தண்டி).

**ஒழுக்கம்**—நல்ல வேதியரைத் தம் குரவர் போல் எண்ணல், குரவரை நமஸ்கரித்தல், கண்டவுடன் எழுந்திருத்தல், துறவிகளைக் காத்தல், பழி பாவங்களுக்கஞ்சல், குரவர் முன்புகழாமை, பார்ப்பார், தவசி, சுமையுடையார், நோயாளர், பாலியர், பசுக்கள், பெண்டிர் இவர்களுக்கு வழிவிலகிச் செல்லல் முதலிய.

**ஒளி**—நாடக வகையில் ஒன்று. அது, சந்திநிருதையும், அநிருதையும், சந்தியா நிருதையு மெனமூன்று. அது, உள்ளோன் தலைவனாக உள்பொருளும், மிகப் பொருளும், இலப் பொருளும், இரவுப் பொருளுமென்றும், இல்லோன் தலைமகனாக இல்பொருளென்றும் ஐந்து வகைப்படும். (வீரசோ.)

**ஒள்வாளமலை**—உரம் பொருந்திய தோளினையுடைய வாள்வீரர் ஆர்க்கும் வீரக்கழலினையுடையானுடன் ஆடியது. (பு. வெ.)

**ஒளிநூல்வல்லோன்**—சங்கிதை, ஓரை கணிதம் மூன்றினையுமறிந்து முக்காலமும் அறியுந்திறம் வாய்ந்தவன். (சோதிடன்.) (சுக்-நீ.)

**ஒற்றர்** — பகைவர், குடிமக்கள் வினைசெய்வோர் இவர்களின் செய்திகளைத் திறமையாக அறிந்து உணர்ந்தவைகளை மறைவில் அரசனுக்கு அறிவிப்போர். (சுக்-நீ.)

**ஒற்றளபெடை**—பாட்டில் ஓசை குறையின், ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், ஃ தம்மோசையின் மிக்கு ஒலிப்பது. (நன்.)

**ஒற்றுப்பெயர்த்தல்** — இது சித்திரக்கவியிலொன்று. இது ஒரு மொழியைப் பாட்டி

னிறுதியில் வைத்துப் பிறிதொருபொருள் தரப்படுவது. (யாப்பு-வி.)

**ஒற்றைமணிமாலையணி** — அஃதாவது பின் பின்னாக வருவனவற்றிற்கு முன் முன்னாக வருவனவற்றை விசேஷியங்களாக வே னும் விசேஷணங்களாகவேனுஞ் சொல் லுதலாம். இதனை வடநூலார் ஏகாவளி யலங்கார மென்பர்.

**ஒன்பது வாசல்** — தேகத்திலுள்ள நவத் துவாரங்கள்.

**ஒன்றற்கொன்று தவியணி** — அஃதாவது, ஒன்றற்கொன்று உபகரித்தலைச் சொல்லு தலாம். இதனை வடநூலார் அந்நியோந் நியாலங்கார மென்பர்.

**ஒன்றினையொன்று பற்றுதல்** — இது குற் றங்களில் ஒன்று. இதனை அன்னியோன் னியாச்சிரயம், இதரேதராச்சிரயம் என்பர் வடநூலார்.

**ஒன்றேழிபொதுச் சொல்** — ஒரு தொடரி லுள்ள பொதுமொழி ஒரு பாலைப் பி ரித்து ஒரு பாலை உணர்த்துவது.

**ஒன்னுநுழவர்** — ஓரம்போகியாருக்கு ஒரு பெயர். இவர்க்கு ஒரேருழவர் எனவும் பெயருண்டு.

## ஓ

**ஓகருதாசர்** — ஒரு பாகவதர். இவர் பாகவ தர்க்கு அன்னம் படைத்து வருநாட்களில் பெருமாள் இவரது அன்பு சோதிக்க வீட் டில் தாசர் இல்லாத போதும் தான்ய முதலிய இலாதபோதுமடைந்து தாச ரது மனைவியரை அன்னங் கேட்கத் தாசர் மனைவி, தம்மிடமிருந்த பொன்னைக் கடை யில் மாற்றி வேண்டியது கொண்டு விருந் தானவர்க்குப் பசிபோக்க, விருந்தானவர் இன்று முதல் உன் வீட்டு அடுக்கல்தோ றும் எல்லாப் பொருள்களும் நிறைக வென்று அவற்றைத் தொட்டுப் போயி னர். கணவர்வரத் தேவியார் நடந்தவை கூற, இதைச் சோதிக்கக் கணவனர் வந்த விருந்தினர்க்கு ஒன்றுமிலாத அடுக்கலில் கையிடப் பல பொன்கள் அகப்பட அவை கொண்டு விருந்தளித் தனுப்பித் தம் முன் பெருமாள் தரிசனங்கொடாமைக்கு விசன முறப் பெருமாள் தரிசனந்தரக் களித் திருந்தவர்.

**ஓகவதி** — வசுவின் குமரி.

**ஓகவான்** — 1. வசுவின் குமரன்.

**ஓங்காரேசன்** — காசியில் உள்ள சிவப்பிர திட்டை.

**ஓசை** — (தொகை, வகை, விரி.) வண்ணங் கள். i. செப்பல், ii. அகவல், iii. துள் ளல், iv. தூங்கல் v. கொஞ்சல் யென் னும் தொகையானும்; 1-பாஅவண்ணம், 2-தாஅவண்ணம், 3-வல்லிசைவண்ணம், 4-மெல்லிசைவண்ணம், 5-இயைபுவன் ணம், 6-அளபெடைவண்ணம், 7-நெடுஞ் சீர்வண்ணம், 8-குறுஞ்சீர்வண்ணம், 9-சித் திரவண்ணம், 10-நலிபுவண்ணம், 11-அகப்பாட்டுவண்ணம், 12-புறப்பாட்டு வண்ணம், 13-ஒழுகுவண்ணம், 14-ஒரூஉ வண்ணம், 15-எண்ணுவண்ணம், 16-அகைப்புவண்ணம், 17-தூங்கல்வண்ணம், 18-ஏந்தல்வண்ணம், 19-உருட்டுவண் ணம், 20-முடுகுவண்ணமோடு ஆங்கவை யென்ப அறிந்திசினோரே என்னும் வகை யானும், குறிலகவற் றூங்கிசைவண்ணம் முதலாகிய வண்ணம் நூறு என்னும் விரி யானும் அறிக.

**வண்ணம் நூறு** — 1-தூங்கிசைவண் ணம், 2-ஏந்திசைவண்ணம், 3-அடுக்கிசை வண்ணம், 4-பிரிந்திசைவண்ணம், 5-மயங் கிசைவண்ணம் என்னும் இவ்வைந்தினை முதல்வைத்து, 6-அகவல்வண்ணம், 7-ஒழுகிசைவண்ணம், 8-வல்லிசைவண் ணம், 9-மெல்லிசைவண்ணம் என்னும் இந்நான்கினையும், இடைவைத்து குறில் வண்ணம், நெடில்வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசைவண்ணம், இடை யிசைவண்ணம் என்னும் இவ்வைந்தினை யுங் கடைவைத்துக் கூட்டி யுறழ நூறு வண்ணமும் பிறக்கும்.

**அவற்றின் விரிவாவன** — 1-குறிலக வற் றூங்கிசைவண்ணம், நெடிலகவற் றூங்கிசைவண்ணம், வலியகவற் றூங்கி சைவண்ணம், மெலியகவற் றூங்கிசை வண்ணம், இடையகவற் றூங்கிசைவண் ணம் (எ-ம்.) குறிலொழுகற் றூங்கிசை வண்ணம், நெடிலொழுகற் றூங்கிசை வண்ணம், வலியொழுகற் றூங்கிசைவண் ணம், மெலியொழுகற் றூங்கிசைவண்ண ம், இடையொழுகற் றூங்கிசைவண்ணம்

(எ-ம்.) குறில்வல்லிசைத் தூங்கிசைவண்ணம், நெடில்வல்லிசைத் தூங்கிசைவண்ணம், வலிவல்லிசைத் தூங்கிசைவண்ணம், மெலிவல்லிசைத் தூங்கிசைவண்ணம், இடைவல்லிசைத் தூங்கிசைவண்ணம்(எ-ம்.) குறில்மெல்லிசைத் தூங்கிசைவண்ணம், நெடில்மெல்லிசைத் தூங்கிசைவண்ணம், வலிமெல்லிசைத் தூங்கிசைவண்ணம், மெலிமெல்லிசைத் தூங்கிசைவண்ணம், இடைமெல்லிசைத் தூங்கிசைவண்ணம் (எ-ம்.) தூங்கிசைவண்ணம் (உo) குறிலகவ லேந்திசைவண்ணம், நெடிலகவ லேந்திசைவண்ணம், வலியகவ லேந்திசைவண்ணம், மெலியகவ லேந்திசைவண்ணம், இடையகவ லேந்திசைவண்ணம் (எ-ம்.) குறிலொழுக லேந்திசைவண்ணம், நெடிலொழுக லேந்திசைவண்ணம், வலியொழுக லேந்திசைவண்ணம், மெலியொழுக லேந்திசைவண்ணம், இடையொழுக லேந்திசைவண்ணம் (எ-ம்.) குறில்வல்லிசை யேந்திசைவண்ணம், நெடில்வல்லிசை யேந்திசைவண்ணம், வலிவல்லிசை யேந்திசைவண்ணம், மெலிவல்லிசை யேந்திசைவண்ணம், இடைவல்லிசை யேந்திசைவண்ணம் (எ-ம்.) குறில்மெல்லிசை யேந்திசைவண்ணம், நெடின்மெல்லிசை யேந்திசைவண்ணம், வலிமெல்லிசை யேந்திசைவண்ணம், மெலிமெல்லிசை யேந்திசைவண்ணம், இடைமெல்லிசை யேந்திசைவண்ணம், (எ-ம்.) ஏந்திசைவண்ணம், (உo) குறிலகவ லடுக்கிசைவண்ணம், நெடிலகவ லடுக்கிசைவண்ணம், வலியகவலடுக்கிசைவண்ணம், மெலியகவ லடுக்கிசைவண்ணம், இடையகவ லடுக்கிசைவண்ணம், (எ-ம்.) குறிலொழுக லடுக்கிசைவண்ணம், நெடிலொழுக லடுக்கிசைவண்ணம், வலியொழுக லடுக்கிசைவண்ணம், மெலியொழுக லடுக்கிசைவண்ணம், இடையொழுக லடுக்கிசைவண்ணம் (எ-ம்.) குறில்வல்லிசை யடுக்கிசைவண்ணம், நெடில்வல்லிசை யடுக்கிசைவண்ணம், வலிவல்லிசை யடுக்கிசைவண்ணம், மெலிவல்லிசை யடுக்கிசைவண்ணம், இடைவல்லிசை யடுக்கிசைவண்ணம் (எ-ம்.) குறின்மெல்லிசையடுக்கிசைவண்ணம், நெடின்மெல்லிசை யடுக்கிசைவண்ணம், வலிமெல்லிசை யடுக்கிசைவண்ணம், மெலிமெல்லிசை யடுக்கிசைவண்ணம், இடைமெல்லிசை யடுக்கிசைவண்ணம், (எ-ம்.) அடுக்கிசைவண்ணம், (உo) குறிலகவற் பிரிந்திசைவண்ணம், நெடிலகவற் பிரிந்திசைவண்ணம், வலியகவற் பிரிந்திசைவண்ணம், மெலியகவற் பிரிந்திசைவண்ணம், இடையகவற் பிரிந்திசைவண்ணம் (எ-ம்.) குறிலொழுகற் பிரிந்திசைவண்ணம், நெடிலொழுகற் பிரிந்திசைவண்ணம், வலியொழுகற் பிரிந்திசைவண்ணம், மெலியொழுகற் பிரிந்திசைவண்ணம், இடையொழுகற் பிரிந்திசைவண்ணம் (எ-ம்.) குறில்வல்லிசைப் பிரிந்திசைவண்ணம், நெடில்வல்லிசைப் பிரிந்திசைவண்ணம், வலிவல்லிசைப் பிரிந்திசைவண்ணம், மெலிவல்லிசைப் பிரிந்திசைவண்ணம், இடைவல்லிசைப் பிரிந்திசைவண்ணம் (எ-ம்.) குறின்மெல்லிசைப் பிரிந்திசைவண்ணம், நெடின்மெல்லிசைப் பிரிந்திசைவண்ணம், வலிமெல்லிசைப் பிரிந்திசைவண்ணம், மெலிமெல்லிசைப் பிரிந்திசைவண்ணம், இடைமெல்லிசைப் பிரிந்திசைவண்ணம்(எ-ம்.)பிரிந்திசைவண்ணம்(உo)குறிலகவன் மயங்கிசைவண்ணம், நெடிலகவன் மயங்கிசைவண்ணம், வலியகவன் மயங்கிசைவண்ணம், மெலியகவன் மயங்கிசைவண்ணம், இடையகவன் மயங்கிசைவண்ணம் (எ-ம்.) குறிலொழுகன் மயங்கிசைவண்ணம், நெடிலொழுகன் மயங்கிசைவண்ணம், வலியொழுகன் மயங்கிசைவண்ணம், மெலியொழுகன் மயங்கிசைவண்ணம், இடையொழுகன் மயங்கிசைவண்ணம் (எ-ம்.) குறில்வல்லிசை மயங்கிசைவண்ணம், நெடில் வல்லிசை மயங்கிசைவண்ணம், வலிவல்லிசை மயங்கிசைவண்ணம், மெலிவல்லிசை மயங்கிசைவண்ணம், இடைவல்லிசை மயங்கிசைவண்ணம் (எ-ம்.) குறில்மெல்லிசை மயங்கிசைவண்ணம், நெடில்மெல்லிசை மயங்கிசைவண்ணம், வலிமெல்லிசை மயங்கிசைவண்ணம், மெலிமெல்லிசை மயங்கிசைவண்ணம், இடைமெல்லிசை மயங்கிசைவண்ணம் (எ-ம்.) மயங்கிசைவண்ணம் (உo) ஆக வண்ணங்கள் நூறு.

**ஓசைக்குற்றம்** — அறுத்திசைப்பு, வெறுத்திசைப்பு, அகன்றிசைப்பு என்பன. (யாப்பு-வி.)

**ஓச்சன்** — (அல்லது உவச்சன்) பிராமணன் சூத்திர கன்னிகையைப் புணரப் பிறந்தவன். இவனுக்குக் காளியைப் பூசிப்பதும்

சிவாலயத்தில் மத்தள முழக்குவதுந் தொழில். (அருணகிரிப் புராணம்.)

ஓச்சர் அல்லது உவச்சர் — இவர்கள் காளியம்மை, மாரி, தர்மராஜாகோவில் முதலிய இடங்களில் பூசை செய்வோர். இவர்களில் பெரும்பாலார் சைவர். சிலர் வைணவர். இவர்களிற் சிலர் பூணூல் தரிப்பர்.. இவர்கள் உடுக்கை, சிலம்புகொண்டு காலையில் ஓசையிட்டு மாரியை விழிக்கச் செய்வதால் ஓச்சர் எனப்பட்டனர். இவர்கள் வடநாட்டில் ஐந்து வகுப்பினராக இருக்கின்றனர். மாராயன், பாண்டி, கந்தப்பன், பல்லவராயன், புலவன். இவர்கள் அர்ச்சகர், தேவர், பாரசைவர், முதலியார், வல்லபராயர், பூசாலி, புலவர் என்று பட்டம் பெறுவர். (தர்ஸ்டன்)

ஓட் — இது, ஒரு தானியம். முக்யமாய் இதைக் குதிரைகளுக்கு ஆகாரமாக உபயோகிக்கின்றனர். இதன் மாவினைச் சில நாட்டார் ஆகாரமாக உபயோகிக்கின்றனர். இது பெரும்பாலும் குளிர்ந்த மலைநாடுகளில் விளைகிறது. இது ஸ்காத்லாண்ட், ஆஸ்திரேலியா, வடமத்ய ஆசியா, வட அமெரிக்காவில் விளைகிறது.

ஓணன் — வாணாசுரனது படைத்தலைவன். இவன் காஞ்சிபுரியில் சிவமூர்த்தியைப் பூசித்துப் பேறு பெற்றவன். இவன் பூசித்த திருத்தலமே ஓணகாந்தன்தளி.

ஓணான் — இது வீட்டிலுள்ள பல்லியை ஒருவாறொத்து வால் நீண்டும், தேகம் நீண்டும் மெலிந்தும் இருக்கும். இது பூச்சிபுழுக்களைத் தின்னும். மரங்களில் தொத்தியேறும். இவ்வினத்தில் சில முதுகில் முள் பெற்றும் இருக்கும். மலையோணான் கறுத்தும் தலை சிவந்து மிருக்கும். பல நிறமுள்ளவை உண்டு. இவற்றில் பச்சை ஓணான் அதிக விஷமுள்ளது. இது பல நிறம் பெறும். இது மணலில் முட்டையிட்டு மூடும். அம் முட்டைகள் சூரிய வெப்பத்தால் பொரியும். இதற்கு ஓக்தி யெனப் பெயர் உண்டு.

ஓதாதன்—க்ஷத்ரியன், சூர்யவம்சம் ஓதவதன் புத்ரன். இவன் குமரன் கிருகன். (பாரஅநு.)

ஓதலாந்தை — ஐங்குறுநூற்றில் பாலைத் திணை பாடிய புலவர். (ஐங்குறு நூறு.)

ஓதவான் — சூர்யவம்சசத்தரசன், பிரதீகன் புத்ரன். இவன் குமரன் ஓதாதன். புத்ரி ஓதவதி. (பார.)

ஓதற்பிரிவு — தலைவன் கல்விகாரணமாகப் பிரிதல். இது, கல்விக்குப் பிரிவைத் தலைமகனால் உணர்ந்த தோழி தலைமகட்குணர்த்தல், தலைமகள் கார்ப்பருவங்கண்டு புலம்பல், தலைமகளைப் பாங்கி யாற்றுவித்தல் முதலிய.

ஓதா — ஓமஞ் செய்கிறவன்.

ஓத்து — ஒரு சாதியான மணிகளை வரிசையாகப் பதித்ததுபோல ஒரு சாதியான பொருள்களை ஒருவழிப்படச் சொல்வதாம்.

ஓநாய் — இதற்குக் கோணாய் எனவும் பெயர். இது பெரும்பாலும் குளிர்ந்த தேசங்களில் வசிக்கும் ஆகையால் உடம்பில் மயிர் அடர்ந்திருக்கும். இக் கொடிய மிருகங் கூட்டமாகச் சென்று காட்டுக் குதிரை, கழுதை முதலியவற்றைக் கொன்று தின்னும். சமயம் வாய்த்தால் மனிதரையும் கொல்லும். இது தனித்தே வசிக்கும். தன்னை விரோதிகள் தூரத்தின் காற்றிற் கெதிர்முகமாகவோடித் தப்பித்துக் கொள்ளும்.

ஓமதிரவியங்கள் — அவ்யம் இது ஹோமம் செய்யப்படும் திரவியம். இது கிருதம், கிருதாகிருதம், அகிருதம் என மூன்று வகை. அன்னம், நெற்பொரி, வறுத்தமா முதலிய அவிசுகிருதம், கிருதம் பக்குவஞ் செய்யப்பட்டது. அரிசி முதலிய கிருதாகிருதம், நெல்முதலிய அகிருதம். ஓமதிரவியங்களில் யவம் சிறந்தது. வீரிஹி எனும் நெல்லும் சிறந்ததே. இவையிரண்டுங் கிடையாவிடின் தயிர், பாலால் ஓமஞ்செய்க. அவை கிடைக்காவிடிற் கஞ்சியினாலாயினும் நீரினாலாயினும்செய்க. ஓமத்திற்குக் கூறிய திரவியம் கிடையாவிடின் அதனையொத்த மற்றொன்றால் செய்க. (காத்யாயனர்.) ஓமதிரவியம்—(கஅ) விறகு, நெய், பால், தயிர், துவரை, பொரி, கடுகு, சமித்து, பயறு, பணிகாரம், வெல்லம், பொரிமா, தேன், குழைச்செந்நெல், உளுந்து, சம்பாநெல், எள், சருவாகிய அமுது முதலிய. (சைவபூஷணம்.)

ஓமநல்லூர் அநந்தபத்மநாபப் பிள்ளை — இவர் திருநெல்வேலிக்கு அருகிலுள்ள ஓமநல்லூர் வேளாண் மரபினர். இவரைக் குடியிறை பணத்திற்காகச் சிறைவைத்திருக்கையில் ஓர் கவிஞர் இவரிருக்குமிடஞ்சென்று "குலைவைக்குஞ் செந்நெல் வயனல்லூர்ச் சங்கரமூர்த்தி குமார மன்னர், தலைவைக்கும் கிள்ளாக்கைய நந்தபத்

மநாபாவென் தன்மை கேளாய், விலைவை க்கும் கடையரிசிவாங்கி யுண்ணமுடியாது என் வீட்டி லிப்போது, உலைவைக்கச் சொல்லிவந்தே னெற்கொடுத்தால் அரிசி குத்தி உண்ணலாமே" எனக் கூறக்கேட்டு அவர் வேண்டியது அளிக்கக் கவிமன்னர் "எந்தக் காலமும் அநந்தபத்மநாபன் சுக மாக இருக்க வேண்டும், வந்த காலவன் தனக்கே மகத்தான பெருஞ் செல்வம் வர வும் வேண்டும், பந்தக்கால் போலுயர்ந்து பருத்திருக்கு மடையர்தமைப் பாடி யொ ன்று, தந்தக்கா லென்னதரா திருந்தக்கா லென்ன சொல்லுந் தமிழ்ச் சொல்வீரே" எனக் கூறினர்.

ஓமன் — குருசத்திரன் குமரன். இவன் குமரன் சுதபசு.

ஓமாலிகை — (௩௨) அவை "இலவங்கம் பச்சிலை கச்சோலமேலம், குலவிய நாக ணங்கோட்டம், நிலவிய, நாகமதாவரிசி தக்கோலநன்னாரி, வேகமில் வெண்கோ ட்ட மேவுசீர், போகாத, கஸ்தூரி வேரி விலா மிச்சங்கண்டில் வெண்ணெய், ஒத்த கடு நெல்லியுயர் தான்றி, துத்தமொடு, வண்ணக்கச் சோலமரேணுகம் காஞ்சியுட, னெண்ணும் சயிலேக மின்புழுகு, கண் ணுநறும், புன்னைநறுந்தாது புலியுகிர் பூஞ் சரளம், பின்னுதமாலம் பெருங்குளம், பன் னும், பதுமுக நுண்ணேலம் பைங்கொடு வேரி, கதிர்நகையா யோமாலிகை."

ஓம்படை — இன்ன காரியத்தைச் செய்யு மது தன்மையெனச் சொல்லி வேந்தன் முன்னே நின்று புலமை மிக்கவன் அடுத் துச் சொல்லியது. (பு-வெ-பாடாண்.)

ஓய்மானல்லியக்கோடன் — நன்னுகால் பாடப்பெற்றவன். இவன் மாவிலங்கை ஆண்ட சிற்றரசன். இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனர் பாடிய சிறுபாணாறு இவன் பொருட்டுச் செய்யப் பட்டது. இவனை எறுமாநாட்டு நல்லியக் கோடன் எனவுங் கூறுவர். இவனுக்கு ஆமூர், எயிற் பட்டினம், வேலூர் முதலிய இருந்தன. இவனைப் பாடிய புலவர் புறத்திணை நன் னுகனர். (புற - நா).

ஓய்மானல்லியாதன் — புறத்திணை நன்னு கரால் பாடப் பெற்றவன். இவன் கொடையாளி. (புற - நா.)

ஓய்மான்வில்லியாதன் — நன்னுகரால் பா டப்பெற்றான், இவன் இலங்கையென்னும் ஊர்க்குத் தலைவன். ஒய்மாநல்லியக்கோ டன் சந்ததியான். (புற-நா.)

ஓரம்போகியார் — ஏடெழுதுவோர் பிழை யால் ஏடுகளில் இவர் பெயர் ஓரம் போதியா ரெனவும், ஓரேர்போகியாரென வும், ஒன்னுருழவரெனவும், கரம்போகியா ரெனவும், தரம்போகியாரெனவுங் காணப் படுகிறது. மருதத் திணையை விரித்து அந்நிலத்துள்ள கருப்பொருள்களைத் திணைக்கேற்ற பொருள்களாகக்கொண்டு உள்ளுறையுவமம், இறைச்சி முதலாய வற்றையமைத்துப் பலவகை சத்துவமும் புலப்படக்காட்டிய பரத்தையிற் பிரிவு முதல் எல்லாவற்றையும் தெளிவாகக் கூறும் ஆற்றலுடையவர்; இவர் பாடிய வற்றுட் புறமொன்றொழித்து ஏனைப்பாட லனைத்தும் மருதத்திணையே. இவரால் பாடப்பெற்றோர் ஆதன், அவனி, இருப் பையூர் விராஅன், பாண்டியன், சோழர், மத்தி முதலாயினோர். இத்தகைய மாதரே காதலர்பாற் புலத்தற்கு உரியரென்று தோழிகூற்றாக இவர் கூறியது அருமை வாய்ந்தது. அகம் - ௩௧௬; இதிற்கூறிய உள்ளுறை பாராட்டற்பாலது. புணர்ச் சியின்பங்கூறத் தலைவியைப் புகழ்வது மகி ழ்ச்சிதாற்பாலது. குறு - ௭௦; இவர் பாடி யனவாக நற்றிணையில் இரண்டு ௨௦, ௩௬௦- பாடல்களும், குறுந்தொகையில் ௪-ம், ஐங் குறுநூற்றில் முதல் ௧௦௦ - ம், அகத்தில் ௨ - ம், புறத்தில் ஒன்றுமாக ௧௦௯-பாடல் கள் கிடைத்திருக்கின்றன. இவர் பாடிய "வெள்ளி விழுத்தொடி" என்ற அகம், ௨௮௬-ம் பாடலை யெடுத்து உடன்பாடாக நக்கீரனர் குறிப்புரை களவியல் - ௧௮, கூறியதும், அதனை நச்சினர்க்கினியர் "பெரியோரொழுக்கம் பெரிதெனக்கிள ந்து பெறுதகையில்லாப் பிழைப்பினும்" தொல். பொருள் - ௧௫௦; என்றதன்கீழ் நக்கீரனர் கூற்றுக்கெதிர் மறையாகக் குறி ப்புரை கூறியதும் ஆராயத்தக்கது. (நற்.)

ஓரி—இவன் கடையெழுவள்ளல்களி லொரு வன். வல்வில்லோரி யெனவும், ஆதனோரி யெனவும் கூறப்படுவான். கொல்லிமலை யையும், அதனைச் சூழ்ந்த நாட்டினையும் அரசாண்டிருந்தவன் "ஓரி பல் பழப் பல வின் பயங்கெழுகொல்லி" அகம் ௨௦௮. "வல்வில்லோரி கொல்லிக் குடவரை" குறு-௧௦௦ இரவலர்க்கு வரையாது கொடுக் கும் வண்மையன். இவன் கொல்.

மலையை ஆண்டுவருநாளிற் அதிகமானெடு மானஞ்சி சென்று திருக்கோவலூரை முற்றுகையிட்டு வென்று கைப்பற்றிக் கொண்டான். அதனை ஆண்டிருந்த மலையமான் திருமுடிக்காரி அஞ்சியோடு போரில் எதிர்நிற்கலாற்றாது தோற்றோடிச் சேரமான் பெருஞ்சேரலிரும் பொறையிடம் அடைக்கலம் புகுந்தான். அச்சேரமான் கொல்லி மலையைத் தான்பெறவேண்டு மென்றும் குறிப்புடையானாதலை அறிந்த காரிபடையொடு சென்று கொல்லி மலையில் ஓரியுடனே போர்புரிந்து ஓரியைக்கொன்று தான் மிக்க ஆரவாரத்தோடு ஓரியினதுநகரினுட்புகுந்தான். அங்ஙனம்புகுதலும் ஊர்முழுதும் ஒவ்வென்னும் ஒலியுண்டாயிற்று. "ஓரிக்கொன்ற வொருபெருந்திருவிற், காரிபுக்க நேரார் புலம் போற் கல்லென்றூரே" நற் - ௩௨0. பின்பு அக் கொல்லிமலை முதலியவற்றைச் சேரலனுக்கே கொடுத்து விட்டனன். "முள்ளூர், மன்னன் கழறொடிக்காரி செல்லநல் லிசை நிறுத்த வல்வில்லோரிக் கொன்று சேரலற் கீத்த, செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" அகம் - ௨0௯. இவ்வோரியை நற்றிணையில் ௬-ம் பாடலிலும், ௨௬௫-ம் பாடலிலும் சிறப்பித்தவர், பரணர்; ௩௨0 - ல் சிறப்பித்தவர் கபிலர். இவன் கூத்தாடுவோர்க்கு வேண்டிய பொருள் கொடுத்துக் காரிப்புரவியைச்செயித்த ஓரியென்னுங் குதிரையையுடையான். கழைத்தின் யானையாரால் பாடப்பெற்றவன்.

ஓரிற்பிச்சையார் — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் தாம் பாடிய குறுந்தொகைச் செய்யுளில் "ஓரிற் பிச்சையார மாந்தி எனக் கூறியிருத்தலால் இவர்க்கு இப்பெயர் வந்தது போலும். குறு - ௨௭௭.

ஓரெழுத்தினத்தா லுயர்ந்தபாட்டு — இது சித்திரக்கவியிலொன்று, இது, ஓரெழுத்தினாலும், ஒருசார் இனத்தினாலும் பாடுவது (யாப்பு—வி)

ஓரேருழவர் — ஒன்னாருழவர்க் கொருபெயர் (புற - நா)

ஓரை—ஓரையாவது மணி, நாளொன்றுக்கு (௨௪) ஓரையாம் ஓராதிபர் எழுவர்.

ஓரோட்டத்துக் கந்தரத்தனார் — கடைச்சங்க மருவிய புலவர். (அக-று.) (குறு-தொ.)

ஓஷதிகள் — இவை நான்குவகை. அவை- மரம், செடி, கொடி, புல், இவற்றில் எண்வகைப்பொருள்கள் - வேர், பட்டை, ரசம், இலை, புட்பம், பழம், விதை இவைகள் ஒவ்வொன்றும் அறுவகைருசிபெற்று வெவ்வேறு தொழில்களைச் செய்யும்.

ஓவியச்சேநன் — சித்திரசேநன் என்னுங் கந்தருவன். கந்திற்பாவையி லதிட்டித்திருக்கும் துவதிகனென்னுந் தெய்வத்தின் நண்பன் (மணிமேகலை)

ஓவியநூல் — இந்நூலின் வரலாறு தெரியவில்லை. சிற்பநூலா யிருக்கலாம்.

## ஔ

ஔசனஸதீர்த்தம் — ஸரஸ்வதி நதிக்கண் உள்ள தீர்த்த கட்டம்.

ஔசிஜன் — ருஷி, கக்ஷிவானெனும் பெயருள்ள உசிக்குமாரன் (பார.)

ஔதும்பரம் — ஒரு தேசம் Cutch, its ancient Capital was Koteswara.

ஔதும்பரன் — யமதூதரில் ஒருவன்.

ஔத்தமர்ணிகம் — வட்டியோடு தருவதாகப் பேசிப் பெற்றுக்கொண்ட பொருள் (சுக் - நீ)

ஔபநிதிகம்—நலமேலோர்களால் நம்பிஅடைக்கலமாக வைக்கப்பட்ட பொருள். (சுக்-நீ)

ஔரவர் — பிருகுவம்சத்து ஸ்திரீயின் தொடையிற் பிறந்த ருஷி. (தேவி-பாகவதம்.)

ஔர்வி—ச்யவனபுத்ரன், தாய், மனுகன்யை.

ஔர்வன் — பிருகுவம்சத்தவன். இவன் கோபத்தீயினால் உலகங்களை அழித்து மீண்டும் வடவையால் அணைத்து விடுவான். இவன் புத்திரன் ரிசீகன் தன்னிடம் வந்த தனுர் வேதத்தைக் குசிககுலமழியும்படி ஜமதக்னியிடம் கொடுத்தான். (பார - அநுசா.)

ஔவையார் —1. இவர் சோழநாட்டில்உறையூரில் பகவன் அல்லது ஞாளிதத்தன் என்பவனுக்கும் ஆதிக்கும் பிறந்தவர். இவருடன் பிறந்தார் "கபிலரதிகமான் கார்க்குறவர் பாவை, முகிலனைய கூந்தன் முறுவை— நிகரிலா, வள்ளுவரவ்வை வயலூற்றுக் காட்டிலுப்பை, யெண்ணிலெழுவரிவர்." தாய் இவளைவிட்டு எவ்வாறு நீங்குவது என்று கவலையடைகையில் அவளை நோக்கி "இட்டமுடன் என்றலையிலின்னபடியென்றெழுதி, விட்டசிவனுஞ் செத்து

விட்டானே — முட்டமுட்ட, பஞ்சமே யானாலும் பாரமவனுக் கன்னாய், நெஞ் சமே யஞ்சாதே நீ" என்ற செய்யுளைப் பாடிப் பாணன் வீட்டிலும் புல்வேளூர், அதியமானூர், திருக்கோவலூரினும், வளர்ந்து வந்தனர். பாணன், இவருக்கு வயதுவந்தது ஆதலின் மணஞ்செய்ய ஒரு மணமகனை நிச்சயித்து அவனிடம் தன் குலாசாரப்படி சேலைமுதலியன பெற்றுத் தன் குமரியை உடுத்திக்கொண்டு வரும் படி கட்டளையிடப் பெண் சேலையை உடுத் திக்கொண்டு கிழவுருத் தாங்கி வந்தனர். மணமகன், எனக்கிந்தக் கிழவிவேண்டாம் என நீங்கினான். பெண்ணும் அன்றுமுதல் மணமிலாது ஔவையெனப் பெயர்பெற் றுக் காலங்கழித்துச் சிலம்பியிட்ட கூழா லச் சிலம்பிமீது பொய்யாமொழிப்புலவர் பாடாது விட்ட "தண்ணீரும் காவிரியே தார்வேந்தன் சோழனே, மண்ணாவதுஞ் சோழ மண்டலமே—பெண்ணாவாள், அம் பொற்சிலம்பி யரவிந்தத் தாளணியும்,செம் பொற்சிலம்பே சிலம்பு" எனப் பாடி முடித்துக் கூழுக்குப்பாடியெனப் பெயர் பெற்று ஒரு சுடுகாட்டுச் சாவடியில் வந்து தங்கியிருந்தனர். அவ்விடம் அளகாபுரத்து அரசன் குமரியாகிய ஏலங்குழலி முதற் சாமத்தில் ஆவேசமாகத் தம்மிடம் வந்து பயமுறுத்த அந்த ஆவேசத்தின் தன் மையை அறிந்து "வெண்பாவிருகாலிற் கல்லானை வெள்ளோலை, கண் பார்க்கக் கையாலெழுதானைப் — பெண் பாவி, பெற்றாளே பெற்றாள் பிறர்நகைக்கப் பெற்றாளே, எற்றோமற் றெற்றோமற் றெற்று" என்றும், மற்றுமவ்வாவேசம் இரண்டாம் சாமத்தும் வர "எண்ணாயிரத் தாண்டு நீரிற்கிடந்தாலும், உண்ணீரம் பற் றாக் கிடையேபோல் — வண்ணமுலைப், பொற்றொடி மாதர் புணர்முலைமேற்சாரா ரை, எற்றோ மற்றெற்றோ மற்றெற்று." என்றும், பின்னும் மூன்றாம் சாமத்தும் வர அதை நோக்கி "வானமுளதான் மழை யுளதான் மண்ணுலகில், தானமுளதால் தயையுளதால் — ஆனபொழு தெய்த்தோ மிளைத்தோ மென்றேமாந்திருப்போரை, எற்றோ மற்றெற்றோ மற்றெற்று." என் றும், பின்னும் நான்காம் சாமத்துவந்து பயமுறுத்த அதைக்கண்டு "கருங்குளவிச் சூறைத்தூறீச் சங்கனிபோல, விருந்தினர்க் கொன்றீயாதான்வாழ்க்கை - அரும்பகலே, இச்சித்திருந்தபொருள் தாயத்தார் கொள் வாரே, எற்றோ மற்றெற்றோ மற்றெற்று" என்றும் பாடிப் பிறப்பினைத் தெரிவித்து அவளைத் தமிழறியும் பெருமாளாகவும், அவளைவிரும்பி உயிரிழந்த அரசகுமரனை விறகு தலையனாகவும் பிறக்க அருள் புரிந்து நடுநாட்டின் வழிச் சென்றனர். அந் நாட்டின் பெருங்கணவாய் ஊரின் வழிப் போகையில் பெருமழையில் நனைந்து உத றல்கொண்டு ஒருவீட்டில் நுழைய அவ்வி டம் இவரைக் கண்ட அங்கவை, சங்கவை என்னுமிரண்டு பெண்களும் தீமூட்டமிட் டுக் குளிர்நீக்கி நெய்யொடு கலந்த இலைக் கறி யன்னமிட அவர்களிட்டவுணவுண்டு களித்து "வெய்தாய் நறுவிதாய் வேண்ட் ாவுந் தின்பதாய், நெய்தானளாவி நிறை யிட்டுப்.—பொய்யே, யடகென்று சொல் லிய முதத்தையிட்டாள், கடகஞ் செறி யாதோ கைக்கு." எனப்பாடி அவ்விரு வரையும் தெய்வீக ராசனுக்குக் கல்யா ணஞ் செய்விக்க அரசனைக் கேட்கையில் அரசன் தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்து செய்விக்கின் செய்து கொள்கிறேன் என ஔவை அந்த மூவாசருக்கும் ஓலையெழுத விநாயகரைத் தியானித்து "ஒரு கையிரு மருப்பு மும்மதத்து நால்வாய்க், கரியுரி வைக் கங்காளன் செம்மல்—கரி முகவன், கண்ணுலவோலை கடிதெழுதவாரானேல், தன்னுண்மை தீர்ப்பேன் சபித்து" எனப் பாடி விநாயகரெழுத "புகார் மன்னன் பொன்னிப்புனலுடன் சோழன், தகா தென்று தானங்கிருந்து — நகாதே, கடி தின்வருக கடிக்கோவலூர்க்கு, விடியப் பதினெட்டாநாள்" எனவும் "வையைத்து றைவன் மதுராபுரித் தென்னன், செய்யத் தகாதென்று தேம்பாதே — தையலர்க்கு, வேண்டுவன கொண்டு விடியவீ ரொன்பா னாள், ஈண்டு வருகவிசைந்து" எனவும், "சேரலர்கோன் சேரன் செழும்பூந்திருக் கோவல், ஊரளவுந் தான் வருகவுட்காதே, பாரிமகள்—அங்கவையைக் கொள்ளவர சன் மனமிசைந்தான், சங்கியாதே வருகத் தான்" எனக் கடிமண ஓலைவிட்டு வரு வித்தனர். அரசர் மூவரும் வந்து ஔவை யைநோக்கிச் செய்தியறிந்து எதிரிலிருந்த பனந்துண்டந்தளிர்த்துப் பழுக்குமாயி. இப்பெண்களைத் தெய்வீகராசனுக்குமணப் பிக்கலாம் என, அவ்வாறே ஔவை பனந் துண்டை நோக்கி "திங்கட்குடையுடை

சேரனும் சோழனும் பாண்டியனும், மங்
கைக் கறுகிட வந்து நின்றூர் மணப்பந்
தரிலே, சங்கொக்கவெண் குருத்தீன்று
பச்சோலை சலசலத்து, கொங்கிற்குறத்தி
குவி மூலைபோலக் குரும்பை விட்டு, நுங்
குக்கண் முற்றி யடிக்கண் கறுத்து நுனி
சிவந்து, பங்குக்கு மூன்றுபழந் தரவேண்
டும் பனந்துண்டமே" என அது பழுத்
துக் கனி தந்தது. அரசர் மூவரும் களித்து
மணஞ் செய்துகொள்ளலாம் என, ஔவை
யார் தெய்வீக ராசனுக்கு இரண்டு பெண்
களையும் மணஞ்செய்வித்து அக்கல்யாணத்
திற்கு வந்தவர் களிப்புடன் பொன்
பெறும்படி வருணனை நோக்கி "கருணை
யா லிந்தக்கடலுலகங் காக்கும், வருணனே
மாமலையன் கோவல்—திருமணத்து, மூன்
மாரி பெய்யும் முதுவாரியை மாற்றிப்,
பொன் மாரியாகப் பொழி" எனப் பாடி
னர். அதனால் பொன்மாரி பொழியக்
களித்துக் கலியாணத்திற்கு வந்தவர்கள்
ஆடை பெறும்படி அவ்விடமிருந்த பருத்
திச் செடிகளை நோக்கி "பொன்மாரி
பெய்யுமூர் பூம்பருத்தி யாடையாம், அன்
னுன் வயலரிசி ஆகுமூர் — எந்நாளும்,
தேங்கு புகழேபடைத்த சேதிமா நாட
தனில், ஓங்குந் திருக்கோவலூர்." என
ஔவை வேண்டியவர் வேண்டியபடி
ஆடைகளையும் வயல்கள் அரிசியையும்
தாக்கண்டு களித்தனர். பின்னும் அங்
கிருந்தவர்க்குத் தாகம் தணியும்படிக்கு
அவ்விடம் செல்லும் பெண்ணை நதியை
நோக்கி "முத்தெறியும் பெண்ணை முது
நீரதுதவிர்த்துத், தத்திய நெய் பால்
தலைப்பெய்து—குத்திச், செருமலைதெய்
வீகன் திருக்கோவலூர்க்கு, வருமளவிற்
கொண்டோடிவா." என அது பால், தயிர்,
வெண்ணெயாகப் பிரிந்துவரக் கண்டு களி
த்து "ஆயன்பதியி லரன்பதிவந்துற்றளக
மாயனுதங் கருவியானலுங்—தூயமணிக்
குன்றுபோல் வீறுகுவி முலையார் தம்
முடனீ, ரின்று போமிலென்று மிரும்."
என அரசரை வாழ்த்தி நீங்கினர். இவர்
பசியால் ஒரு சழசாரியை அன்னங்
கேட்க, அவன் பெண்டாட்டி கோபித்த
படியால் "இருந்து முகந்திருத்தி யீரொடு
பேன்வாங்கி, விருந்து வந்ததென்று விள
ம்ப-வருந்திமிக, ஆடினள் பாடினள் ஆடிப்
பழமுறத்தாற், சாடினளோடினன்றுன்.
எனவும் "காணக்கண் கூசுதே கையெடுக்க
நாணுதே, மாணெக்க வாய்திறக்க மாட்
டாதே—வீணுக்கென், என்பெலாம் பற்றி
யெரிகின்றதையையோ, அன்பிலானிட்ட
வமுது." எனப்பாடித் தம்மை வணங்கிய
அச்சமுசாரியின் இல்வாழ்க்கையை இகழ்
ந்து "சண்டாளி சூர்ப்பநகை தாடகை
யைப் போல்வடிவு, கொண்டாளைப் பெண்
டென்று கொண்டாயே, — தொண்டா,
செருப்படி தான் செல்லாவுன் செல்வ
மென்ன செல்வம், நெருப்பிலே வீழ்த்திடு
தனேர்." எ-ம். "பத்தாவுக் கேற்ற பதி
விரதை யுண்டானால், எத்தாலுங் கூடி
யிருக்கலாஞ் — சற்றேனு, ஏறுமாறாக
விருப்பளேயாமாயிற், கூறாமற் சந்நியாசங்
கொள்." எ-ம். "ஏசியிடலினிடாமையே
நன்றெறிகிரிற், பேசுமனையாளிற் பேய்
நன்று — நேசமிலா, வங்கணத்தி னன்று
வலிய பகைவாழ் வில்லாச், சங்கடத்திற்
சாதலே நன்று" எனக்கூறி நீங்கி ஒரு
காட்டின்வழிச் சென்றனர். அக்காட்டில்
இவரிடம் கவிபெறக் கந்தமூர்த்தி
மாடோட்டும் பையனைப்போல் வேடங்
கொண்டு ஒரு நாவல் மரத்தின் மீது பழந்
தின்றுகொண்டிருந்தனர். ஔவையார்
கோடைவெயிற்குச் சகிக்காது அம்மர நிழ
லிற் சென்று மீதிருக்கும் பையனை நோக்
கித் தாகந்தணியும்படி ஒரு பழம் போ
டப்பா எனப் பையன் "கிழவி" சுட்ட
பழம் வேண்டுமோ சுடாதபழம் வேண்
டுமோ எனக் கிழவி சுட்டபழமே வேண்
டும் எனப் பையல் சில அளிந்த கனிகளை
உதிர்த்திட்டனன். அவை மணலில் விழு
ந்து அழுந்தி மணல் பழத்தில் ஒட்டிக்
கொள்ள, ஔவை அம்மணல் நீங்கும்படி
பழத்தை ஊதினர். கந்தமூர்த்தியாகிய
பையல் இவரைப் பரிகசிக்கும்படி எடி
கிழவி அதிகமாய்ச்சுடுகிறதோ ஆற்றியுண்
எனக் கிழவி வெட்கிப் பையலுக்குத்
தோற்றதற்காக "கருங்காலிக் கட்டைக்கு
நாணக்கோடாலி, இருங்கதலித் தண்டுக்கு
நாணும் — பெருங்கானில், காரெருமை
மேய்க்கின்ற காளைக்கு நான்றோற்றது, தீரி
ரவுந்துஞ்சாதென்கண்" என்றனர். உட
னே கந்தமூர்த்தி தரிசனந்தந்து அரியது,
பெரியது, இனியது, கொடியது கேட்க
"அரியது கேட்கின் தனி நெடுவேலோய்,
மக்கள் யாக்கையிற் பிறத்தலுமரிதே, மக்
கள் யாக்கையிற் பிறந்தகாலையு, மூங்கை
யுஞ் செவிடுங் கூனுங் குருடும், பேடு

நீக்கிப் பிறத்தலரிது, பேடுநீக்கிப் பிறந்த
காலையும், ஞானமுங்கல்வியு நயத்தலரிது,
ஞானமுங்கல்வியு நயந்த காலையும்,
தானமுந் தவமுந் தரித்தலரிது, தானமுந்
தவமுந் தரித்தார்க்கல்லது, வானவர் நாடு
வழி திறவாதே" "பெரியது கேட்கின்
எரிதவழ்வேலோய், பெரிது பெரிது புவ
னம் பெரிது, புவனமோ நான்முகன்
படைப்பு, நான்முகன் கரியமாலுந்தி வந்
தோன், கரியமாலோ வலைகடற்றுயின்
ரோன், அலைகடலோ குறுமுனி கையி
லடக்கம், குறுமுனியோ கலசத்திற் பிறந்
தோன், கலசமோ புவியிற்சிறுமண், புவி
யோ வரவினுக்கொரு தலைப்பாரம், அர
வோ உமையவள் சிறுவிரலின் மோதிரம்,
உமையோ விறைவர்பாகத் தொடுக்கம்,
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்
கம், தொண்டர்தம் பெருமை சொல்லவும்
பெரிதே" "இனியது கேட்கிற் றனிநெடு
வேலோய், இனிது இனிது ஏகாந்தமி
னிது, அதனினுமினிது ஆதியைத்தொழு
தல், அதனினுமினிது அறிவினர்ச்சேர்
தல், அதனினுமினிது அறிவுள்ளாரைக்,
கனவினு நனவினுங்காண்பது தானே."
"கொடியது கேட்கின் நெடிய வெவ்வே
லோய், கொடிதுகொடிதுவறுமைகொடிது
அதனினுங் கொடிது இளமையில்வறுமை,
அதனினுங்கொடிது ஆற்றொணுக் கொடு
நோய், அதினுங்கொடிது அன்பிலாப்
பெண்டிர், அதனினுங்கொடிது இன்புற
வவர்கையி லுண்பதுதானே" எனப்பாடித்
தனிமையாகப் பாண்டிநாடடைந்தனர். பா
ண்டியன், சங்கத்தாரைச்சோதிக்க ஓர்நாள்
தன் வாயிலில் ஐந்து பொற்கிழிகள்கட்டி
மூன்றுகிழிகள் சங்கிலியிறப்பாடுகளனவும்,
ஒருகிழிக்குநிறைநில்லாதகவிபாடுகளனவும்
மற்றொன்றுக்கு நாலுகோடிகவிபாடுக என
வுங்கூற, அவர்கள் அஞ்சுகையில் அவ்வழி
வந்த ஔவையார் "ஆர்த்தசபை நூற்றொ
ருவராயிரத்தொன்றாம் புலவர், வார்த்தை
பதினாயிரத் தொருவர்—பூத்தமலர்த், தண்
டாமரைத்திருவே தாதாகோடிக்கொருவர்,
உண்டாயினுண்டென்றது." "தண்டாமலீ
வதுதாளாண்மைதண்டி, யடுத்தக்காலீவது
வண்மை யடுத்தடுத்துப், பின் சென்றாலீ
வது காற்கூலி பின் சென்றும், பொய்த்தா
னிவனென்று போமேலவன்குடி, யெச்ச
மிறுமேவிறு." "வழக்குடையார் நிற்ப
வரும் பொருள் கைவாங்கி, வழக்கை வழக்
கழிவு சொல்லின்—வழக்குடையார், சுற்ற
முந் தாமுந்துடைத் தெழுகண்ணீராலேழ்,
சுற்றமிறுமேவிறு." "சென்றுழு துண்
பதற்குச் செய்வதரிதென்று, மன்றுழு
துண்பான் மனைவாழ்க்கை—முன்றிலிற்,
றுச்சிவிருந்து துடைத்தெழுகண்ணீராலே,
யெச்சமிறுமேவிறு" "உள்ளவழக்கிருக்க
ஆரார் பொதுவிருக்கத், தள்ளிவழக்கத
னைத் தான்பேசி—எள்ளளவும், கைக்கூலி
தான் வாங்குங் காலறுவான்றன் கிளையு,
மெச்ச மிறுமேவிறு." என்று செய்யுள்
கூறி மூன்று கிழிகளையற்று வீழ்த்தி,
"வையகமெல்லாம் வயலாய் வானோர்,
தெய்வமா முகடுசேரியாகக், காணமு முத்
துமணியுங் கலந்தொரு, கோடானு கோடி
கொடுப்பினு மொருநா, ளொருபொழுதொ
ருவனூ ணொழிதல் பார்க்கு, நேர் நிறை
நில்லாதென்னுமென் மனனே' நேர் நிறை
நில்லாதென்னு மனனே" என ஒரு நிறை
நில்லாத அகவலும், "மதியாதார் முற்ற
மதித்தொருகாற்சென்று, மிதியாமை
கோடியுறும், உண்ணீருண்ணீ ரென்றூட்
டாதார்தம் மனையி, லுண்ணாமை கோடியு
றும், கோடி கொடுத்துங்குடிப் பிறந்தார்
தம்மோடு, கூடுவதே கோடியுறும்,
கோடானுகோடி கொடுப்பினுந் தன்னுடை
நாக்கோடாமை கோடியுறும்." எனப்பா
டிப் பாண்டியன் மகிழவிருந்து பின்சோழ
நாடடைந்து சோழன் பல சமயங்களில்
கம்பரை வியந்தபோது மாறாக "விரகரிரு
வர் புகழ்ந்திடவே வேண்டும், விரனிறைய
மோதிரங்கள் வேண்டும் — அரையதனிற்
பஞ்சேனும் பட்டேனும் வேண்டுமவர்கவி
தை, நஞ்சேனும் வேம்பேனு நன்று" என
வும் "வான்குருவி யின்கூடு வல்லரக்குத்
தொல்கரையான், தேன்சிலம்பி யாவர்க்
குஞ் செய்யரிதால்—யாம்பெரிதும், வல்
லோமே யென்று வலிமைசொல வேண்
டாங்காண், எல்லார்க்கு மொவ்வொன்றெ
ளிது." எ-ம். "சித்திரமுங் கைப்பழக்கஞ்
செந்தமிழுநாப்பழக்கம், வைத்ததொருகல்
விமனப்பழக்க—நித்த, நடையு நடைப்பழ
க்க நட்புந்தயையுங், கொடையும் பிறவிக்
குணம்." எ-ம். "கற்றதுகைம்மணளவுகல்
லாது லகளவென், றுற்றகலை மடந்தை
யோதுகிறாள்—மெத்த, வெறும் பந்தயங்
கூறவேண்டாம் புலவீர், எறும்புந்தன் கை
யாலெண்சாண்." எனப்பாடி நீங்கிப்
புல்வேளூர்ப்பூதன் தனக்கிட்ட அன்னத

தால் அவன் கிணற்று நீர்தானே பெருகிப்
பாயச்செய்து அவன்மீது "வரகரிசிச்
சோறும் வழுதுணங்காய் வாட்டும், மூரமு
ரெனவே புளித்த மோரும்—பரிவுடனே,
புல்வேளூர்ப் பூதன்புகழ்ந்து பரிந்திட்
டசோ, றெல்லாவுலகும் பெறும்."
என்று புகழ்ந்து "கோரைக்கால் ஆள்
வான் கோடையையிழிந்து" "கரியாய்
ப்பரியாகிக் காரெருமைதானாய், எருதாய்
முழப் புடவையாகித் — திரிதிரியாய்த்,
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்து
காலோய்ந்ததே. கோரைக்காலாள் வான்
கொடை." என நிந்தித்து, "காலையி
லொன்றுவர்கடும் பகலில் ஒன்றுவர்,
மாலையி லொன்றுவர் மனிதரெல்லாம் —
சாலவே, மூல்லானைப் போல முகமும் அக
மும் மலர்ந்த, நல்லானைக் கண்டறியோம்
நாம்."என மூல்லானைப் புகழ்ந்து பாடினர்.
இவர் பந்தன் என்பான்மேல் பந்தனந்தாதி
யும் நவமணி மாலையும் பாடிக் கருநெல்லிக்
கனியும் உடுக்க இளமைதரும், தெய்வீக
வஸ்திரமும் பெற்றனர். இவ்வாறு அன்றி
யும் அதியமா னெடுமானஞ்சி அமுதமாகிய
நெல்லிக் கனிதந்ததாகவும் கூறுவர். இவ
ரால் பாடப்பெற்றவர்கள் தொண்டை
மான், அதிகமான் மகன்பொகுட்டெழினி,
நாஞ்சில்வள்ளுவன், சேரமான் மாவெண்
கோ, பாண்டியன் கானப் பேர்தந்த உக்கி
ரப் பெருவழுதி, சோழன் இராசசூயம்
வேட்டபெரு நறகிள்ளி முதலியவர். தமிழ்
நாட்டு மூவேந்தரும் ஆதொண்டைச் சக்க
ரவர்த்தியும் இருந்தபோது எந்நாடு சிறந்
தது எனக் கேட்க அதற்கு "வேழமு
டைத்து மலை நாடுமேதக்க, சோழவளநாடு
சோறுடைத்து — பூழியர்கோன், றென்
னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்
றொண்டை, நன்னாடு சான்றோருடைத்து."
"வஞ்சி வெளியகுருகெல்லாம்பஞ்சவன்ற,
னான்மாடக் கூடலிற் கல்வலிது, சோழனு
றந்தைக் கரும்பினிது தொண்டைமான்,
கச்சியுட்காக்கை கரிது." எனவும பாடிய
வர். குலோத்துங்க சோழன் கலியாணத்
திற்குச் சென்று "வரப்புயர" எனப்
புகழ்ந்து வாழ்த்தச் சோழன அதன் கருத்த
றியாது ஒட்டக்கூத்தரை நோக்க அவர்
அஃதறிந்து "வரப்புயர நீருயரும், நீருயர
நெல்லுயரும், நெல்லுயரக் குடியுயரும்,
குடியுயரக் கோலுயரும். கோலுயரக்
கோனுயர்வான்" என்றனர். பின்னும் பற்

பல சமயங்களில் தனித்தனிப் பாடல்கள்
பாடியவர். ஔவையார் திருக்கோவலூரில்
மழையால் நனைந்துவந்தபோது அங்கவை,
சங்கவை என்பார் தமக்கு ஈரம் புலர்த்தத்
தந்த ஒரு நீலச் சிற்றாடைப் பொருட்டுப்
"பாரிபறித்த பறியும் பழயனூர்க், காரி
கொடுத்தகளை கொட்டும் — சேரமான்,
வாராயென வழைத்தவாய் மையுமிம்
மூன்று, நீலச் சிற்றாடைக்குநேர்." எனப்
பாடினர். பாரிபாற் பரிசில் பெறச்
சென்றபோது இவன் இவரைப்பிரிய மன
மிலாது நீட்டித்தல் காரணமாகத் தாம
திக்க ஔவைபோதலைக் குறிப்பிக்கப் பாரி
பெரும்பொருள்கொடுத்து அனுப்பி அவர்க்
குப் பின்னர் சிலரை ஏவி அவர் கொண்டு
செல்லும் பொருளைக் கவரச்செய்ய அவர்
கள் அங்ஙனஞ் செய்ய ஔவை மீண்டு
பாரியிடம் வந்து நடந்ததைக் கூற மூக்த்
தால் வருந்தி அகத்தான் மகிழ்ந்து ஔவை
யாரைத் தமதிடம் வைத்திருந்து அவர்
மீளுங்காலத்து வேண்டிய தந்தனுப்பினன்.
இவர் பழையனூரில் காரிபாற் சென்றிருக்
கையில் இவர் வேற்றூர்க்குப் போக விரும்
பிக் கழனியில் வேலை செய்து கொண்டி
ருந்த காரியாரை விடைகேட்கையில் அவர்
இவரைப் பிரிய மனமிலாது அவர் தம்கை
யில் பெற்றிருந்த களைக்கோலை இவர் கை
யிற்கொடுத்துத்தாம்களையெடுத்தஇடத்தை
அளக்கச் செய்தனர். அவ்வாறு அளக்க
பொழுதுபோகச் சில நாள் தங்கியிருந்து
நீங்கினர். ஒருநாள் சேரன், அரண்மனை
யில் பலருடன் விருந்துண்ணுகையில் புதி
யோன்வர அவனுக்கு விருந்தளிக்க வேறி
டங் காணாது மற்றவர்களை எழுப்புதற்
கும் மனங்கொளாது சேரன் தன்னன்பின
ராகிய ஔவையாரை வருகவெனவழைக்க
உடனுண்டவர் எனவுங் கூறுவர். தகடூர்
சென்று ஆண்டிருந்த அதிகமானெடுமா
னஞ்சிப் பரிசினீட்டித்தனனாக அவனை
முனிந்து செல்லத் துணிகையில் அவன்
தன்னிடமிருந்த நெல்விக்கனியைத்தரப்
பெற்று அவனை "பூங்கமல வாவிசூழ்புல்
வேளூர்ப் பூதனையும், ஆங்குவரு பாற்
பெண்ணை யாற்றினையும் — ஈங்கு, மறப்
பித்தாய் வாளதிகா வன்கூற்றை நாவை,
யறுப்பித்தாயாமலகந்தந்து." என்று அவ
னைப் பாடினர், இவர் அதிகமான் பொருட்
டுத் தொண்டமானிடந் தூது சென்றார்.
காரிக்கு ஆடுவாங்கிக் கொடுக்க வேண்டி

வாதவன், வத்தவன், யாதவன் எனும் மூவரிடஞ் சென்று கேட்க அவர்கள் கொடாமையால் வஞ்சிநகர் புகுந்து ஆண்டிருந்த சேரன்பால், "வாதவர்கோன் பின்னை யென்றான் வத்தவர் கோனுளை யென்றான், யாதவர்கோன் யாதொன்று மில்லை யென்றான் — ஆதலால், வாதவர்கோன் பின்னையினும் வத்தவர் கோனுளையினும், யாதவர் கோனில்லையினிது" என்று தம் செய்திகூறி அவனிடம் பொன் ஆடுபெற்று "சிரப்பார் மணிமுடிச் சேரமான் றன்னைச், சுரப்பாடு கேட்கவே பொன்னுடொன் றீந்தான், இரப்பவ ரென்பெறினுங் கொள்வர், கொடுப்பவர் தாமறிவர் தங்கொடையின் சீர்" எனப்பாடிக் காரியிடம் ஆடு அனுப்புவித்து அவ்விடஞ் சிறக்க விருந்து நீங்கினர். இவர் **சேரன் மாளிகையிற் சிறக்க** இருந்து அவனை நீங்கினர் என்பது "சிறுகீரை வெவ்வடகுஞ் சேதாவினெய்யு, மறுப்படாத் தண்ட யிருமாந்தி — வெறுத்தேனை, வஞ்சிக்குங் கொற்கைக்கு மன்னவனேற்பித்தானே, கஞ்சிக்கும் புற்கைக் குங்கை" எனும் பாடலைப் பாடினதால் தெரிகிறது. இவர் **எழிற்குன்றம்போய்** ஆண்டுள்ள அரசன் நன்னனைப் பாட அவனிவரது பெருமை உணராமையால் "இருடீர் மணிவிளக்கத்தெழிலார் கோவே, குருடேயுமன்று நின்குற்றம் — மருடீர்ந்த, பாட்டு முரையும் பயிலாதன விரண், டோட்டைச் செவியுமுள." எனுஞ் செய்யுளால் முனிந்து பசியால் வழிச்செல்லுகையில் ஒருநாள் ஒருவன் மனைசென்று அன்னங் கேட்க அவன் **அன்னமில்லையென்ன** அவன் மனைவி உபசரிக்க அவனை முனிந்து, 'அற்றதலையி னருகிற் றலையதனைப், பற்றித் திருகிப் பறியேனோ — வற்றன், மரமனையானுக் கிம்மனையாளை யீந்த, பிரமனை யான் காணப்பெறின்" என்று பாடி. ஒரு **துறவன் வளர்த்த பலாவைப்** பகைவர் வெட்ட அவன் வருந்தக் கண்டு "கூரியவாளாற் குறைபட்ட கூன்பலா, ஓரிலையாய்க் கொம்பா யுயர் மரமாய்ச் — சீரிய, வண்டுபோற் கொட்டை வளர்காயாய்ப் பின் பழமாய்ப், பண்டுபோ னிற்கப் பணி" என அதனைத் தளிர்ப்பிக்க அதற்குக் குறத்திகள் மகிழ்ந்து **நாழித்தினை** கொடுக்க அதனை அன்பாலேற்றுச் சோழனிடஞ் சென்று அவனிவ்விரவில் எங்கிருந்து வருகிறீரென்ன "காணெந்தேனெந்தேன் கடுகிவழிநடந்தேன், யான் வந்ததூர மெளிதன்று — கூனன், கருந்தேனுக் கண்ணுந்த காவிரிசூழ்நாடா, விருந்தேனுக் கெங்கே யிடம்." எனப் பாடிப் பரிசில் பெறுகையில் "கூழைப் பலாத் தழைக்கப் பாடிக் குறச்சிறார், மூழக்குழக் குத் தினைதந்தார்—சோழகே, ளுப்புக்கும் பாடிப் புளிக்கு மொருகவிதை, யொப்பித் து நிற்குமுளம்." என்று, பாடி யிருந்தனர். ஒருநாள் இவர்சோழனைப் பாடுகையில்சோழன்சற்றுக்கவனிக்காது ஒருநூற்சிலையைக் கவனிக்க இவர் "நூற்றுப்பத்தாயிரம்பொன் பெறினு நூற்சீல, நாற்றிங்கடன்னிற் கிழிந்துபோ — மாற்றலரை, வென்றப் புறங்கண்டபோர் வேலகளங்கா, வென்றுங் கிழியாதென் பாட்டு" என்று பாடினர். இவர் அக்காலத்திருந்த இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி யென்பவனையும், சேரமான் வெண்கோவையும், பாண்டியன் உக்ரப்பெரு வழுதியையும் ஒருங்கு வாழ்த்திப் பாடினர். இவர் திருக்குடந்தை சென்று அங்கிருந்த **உலோபி** ஒருவனையும், மற்றொரு விதரணியையுங் கண்டு "திருத்தங்கிதன் வாழை தேம்ப முத்து நிற்கும், மருத்தன் திருக்குடந்தை வாழை—குருத்து, மிலையுமில பூவுமில காயுமில யென்று, முலகில் வருவிருந் தோடுண்டு." எனப்பாடி, அம்பர்கிழானருவந்தையைப் பாடிப் பாண்டிநாடடைந்து **உக்கிரப் பெருவழுதியையும்** அவனிடமிருந்த தமிழ்ப் புலவரையுஞ் சிறப்பித்து "நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ், வில்லந்தொறு மூன்றெரியுடைத்து—நல்லரவப், பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின், நாட்டுடைத்து நல்ல தமிழ்" எனப் பாடினர். பின் இவர் ஒரூர்க்குச் செல்லுகையில் பசியால் வருந்துதலைக்கண்ட அசதியெனும் இடையன் புற்கைக் கஞ்சியிட வுண்டு அவன்மீது "அற்றாரைத் தாங்கியவை வேலசதி யணிவரைமேல், முற்று முகிழ் முலை யெவ்வாறு சென்றனள் முத்தமிழ் நூல், கற்றார் பிரிவுங் கல்லாதா ரிணக்கமும் கைப்பொருளொன், றற்றா ரிளமையும்போலே கொதிக்கு மருஞ்சுரமே." என்று **அசதிக்கோவை** பாடினர். இவர் ஒருகாற் றம்மைச் சில **புல்லறிவோர்** தம்மைப் பாட வருத்துகையில் இவர் "மூவர்கோவையு மூவிளங்கோவையும்,

பாடியவென்றவன் பனுவலா னெம்மையும், பாடுகவென்றனிர் நும்மை யிங்ஙனம் பாடுகென்யானே, களிறுபடு செங்களங் கண்ணிற்காணீர், வெளிறுபடுநல்யாழ் விரும்பிக்கேளீர், புலவர்வாய்ச்சொற் புலம்பலுக்கிரங்கீர், இலவுவாய்ச்சிய ரிளமுலைபுல்லீர், ரவிச்சுவையல்லது தமிழ்ச் சுவை தெருளீர், ருடைஇருண்ணீர் கொடைஇர் கொள்ளீர், ஒவ்வாக்கானத் துய்ர்மரம் பழுத்த, துவ்வாக்கனியெனத் தோன்றிய நீரே" எனப் பாடி யகற்றினர். ஓர்காலத்துக் குலோத்துங்க சோழன் கவிகளைப் பராமுகமாகக்கொள்ளுதலைக்கேட்டு இவர் ஓர்நாள் காவிரிக்குத் தெற்கின்கணுள்ள குடிவளத்தை விசாரிக்கப் புலவருடன் போகையில் ஆண்டு ஔவை, அரசனைக் கண்டு ஒரு காலையும், கவிகளைக்கண்டு மற்றொரு காலையும் உடலையும் வளைத்தல் கண்டு அரசன் ஏறிட்டுப் பார்க்க அது நோக்கி ஔவை "காவலர்க்கோர் கான்மடங்கும் கற்றோர் தமக்கிருகால், கேவலர்க்கோ வங்கமெலாங் கேட்டியால்—மேவலர்க்குச், சீரேறு போல்வாய் செழுங்காவிரிநாடா, வேறேறப் பார்த்துநிற்பதென்" எனுஞ் செய்யுள் பாடக்கேட்டு அரசன் கற்றோரிடம் அன்புகொண்டு நீங்கினன். சிலர் ஔவையை **எது இனிதென**க்கேட்க "எருமிரண்டுளதா யில்லத்தே வித்துளதாய், நீரருகே சேர்ந்த நிலமுமாய் —ஊருக்குச், சென்று வரவணித்தாய்ச் செய்வாருஞ் சொற்கேட்டால், என்று முழவேயினிது" என்றனர். தேவர் கூறிய **புருஷார்த்தங்களைச் சுருக்கிக் கூறக் கேட்டுக்கொண்ட பொழுது** "ஈதலறந் தீவினைவிட் டீட்டல்பொரு ளெஞ்ஞான்றும், காதலிருவர் கருத்தொத்—தாதரவு, பட்டதே யின்பம் பரனைநினைந் திம்மூன்றும், விட்டதே பேரின்ப வீடு" என்றும் மற்றொருபோது **காட்சி முதலிய பற்றி வினவியபோது** "ஒன்றாகக் காண்பதே காட்சி புலனைந்தும், வென்றான்றன் வீரமே வீரம்—என்றாலும், சாகாமற் கற்பதே கல்விதனைப பிறர், ஏவாமலுண்பதே யூண்" என்றும், பின்னும் இவர் **லோபி யொருவனை நோக்கி** "பாடல் பெறானே பலர்நச்ச வாழானே, நாடறிய நன்மணங்களுடானே—சேட, னிவன்வாழும் வாழ்க்கை யிருங்கடல்சூழ் பாரில், கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண்" என்றும். "சுற்றும் கருங்குளவிச் சூரைத்தூ ராரியப்பேய், எற்றுஞ்சுடுகா டிடிகரையின் — புற்றில், வளர்ந்தமடற் பனைக்குள்வைத்ததேனொக்கும், தளர்ந்தோர்க் கொன்றீயார் தனம்" என்றும் கூறினர். அரசன் **யாரை மந்திரியாகக் கொள்ளலா**மென்ன "நூலெனிலோ கோல்சாயு நுந்தமரேல் வெஞ்சமராங், கோலெனிலோ வாங்கே குடிசாயும்-நாலாவான், மந்திரியுமாவான் வழிக்குத் துணையாவான், அந்த வரசே யரசு" என்றும், இவர் **பாண்டியன் கலியாணத்து விருந்துண்டபோது** "வண்டமிழைத் தேர்ந்தவழுதி கலியாணத், துண்ட பெருக்க முரைக்கக்கேளண்டி, நெருக்குண்டேன் றள்ளுண்டே னீள்பசியினாலே, சுருக்குண்டேன் சோறுண்டிலேன்" என்றும், **சோமன் கொடையைப் புகழ்ந்து** — "நிழலருமை வெய்யிலிலே நின்றறிமினீசன், கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச், சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை, புல்லரிடத்தே யறிமின் போய்" என்றும், இவர் அதிகமானை இழையணி பொலிந்த எனும் அகவலாற் சிறப்பித்தும் பாடினர். இவர் **கூழக்குப் பாடினர்** என்பதை "காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி, ஆசுக்குக் காளமுகி லாவானே — தேசுபெறு, மூழுக்குக் கூத்தனுவக்கப் புகழேந்தி, கூழுக்கிங் கவ்வையெனக் கூறு" என்பதால் அறிக.

2. இவர் பாணர் மரபினர். இவர் இளமையில் விறலியாக ஆடல் பாடல் முதலியவற்றில் தேர்ந்து விளங்கினர். இவர் ஒருகாலத்து அதிகமானெடுமானஞ்சியிடம்

பரிசில் பெறச் சென்று அவன் நீட்டித்த லாற் சினந்து மீற அதனை யறிந்த அஞ்சி பரிசில் தரப் பெற்று மீண்டனர். இவர் அவனாற் கொடுக்கப்பட்ட கருநெல்லிக் கனியை உண்டு நெடுங்காலஞ் சீவித்தனர். அஞ்சியுடன் பெருஞ்சேர விரும்பொறை போரிடவந்தபோது அஞ்சியைப் புகழ்ந்து பாடினர். அஞ்சி கோவலூரை வென்ற பொழுது அவனைப் புகழ்ந்து பாடினர். இவர் அஞ்சியின் மகன் பொருட்டெழினி யையும் புகழ்ந்து பாடியுள்ளார். அதிக மான் இவரைத் தொண்டமானிடம் தூதாக அனுப்பியபோது அவன் தனது ஆயுத சாலையை இவர்க்குக்காட்ட இவர் அக் காலத்தும் அதிகனைப் புகழ்ந்து பாடினர். அஞ்சியிறக்கத் துக்கித்துப் பாடினர். இவர் ஒரு காலத்துக் கொண்கானாட்டதிபனும் எழில்மலைத் தலைவனுமாகிய நன்னனைப் பாட அவன் அதனைப் பாராட்டாதிருக்கக் கண்டு வசைபாடி மீண்டனர். வெள்ளி வீதியார் தம் கணவனைத் தேடிச் சென்ற தைச் சிறப்பித்துப் பாடினர். மூவேந்த ரும் பாரியின் மலையை முற்றுகை செய்த தைப் பாடிப் பாரியிறக்க அவனது கன் னிய ரிருவரையும் கபிலர், விச்சிக்கோ, இருங்கோவேள் முதலியோரிடம் சென்று மணங்கொளக்கூற அவர்கள் மறுக்கக் கன் னியரை மலையமான் தெய்வீகனுக்குமணம் புரிவித்தவர். இவர், அஞ்சி, பொகுட் டெழினி, பாரி, பாண்டியன் உக்கிரப்பெரு வழுதி, சேரமான், மாவெண்கோ, சோழன் இராசசூயம் வேட்டபெரு நற்கிள்ளி, கிள் ளிவளவன், தொண்டைமான், முடியன், கொண்கானத்து நன்னன் என்பவர்களைப் பாடினர். இவர் பாடிய பாடல்கள் நற் - எ, குறு - கூரு, அக - ச, புற - ஙங, திரு வள்ளுவமாலை - க, ஆக-கூ0.

3. பொய்யா மொழியார் பாதி பாட ஒளவையார் பாதிபாடியது. வெண்பா — பத்தும்பிற் பாதி யுடையா னிரண்டம்பிற், கொத்தம்பி யென்பார் கொளப்புக்குச் — சுத்தப், பசும்பொனாவல்குற் பாவையர்க்கு தோற்று, விசும்பிவட வைத்தேகினன் வில்'' அரிசிகேட்க யானை கொடுத்த நாஞ் சில் வள்ளுவனைப் பாடிய அகவல். "தட வுசினைப் பலவினுஞ்சிற் பொருநன், மட வன்மன்ற செந்நாப்புலவீர், வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த, அடகின் கண்ணுறையாக யாஞ்சில, அரிசி வேண் டினே மாகத்தான்பிற, வரிசை யறிதலிற் றன்னுந்தூக்கி, இருங்கடறுவளைஇய குன் றத்தன்னதோர், பெருங்களிறு நல்கியோ னே யின்ன, தேற்றா வீகையு முண்டு கொல், போற்றாரம்ம பெரியோர் தங்கட னே'' புறம்-140. ஒருவனைப்பாட அவன் ஒன்றுமிலை யென்றபோது பாடியது. கல் லாத வொருவனைநான் கற்றாயென்றேன், காடேறித் திரிவானை நாடாவென்றேன், பொல்லாதவொருவனை நான் நல்லாயென் றேன், போர்முகத்துக் கோழையை யான் புலியே யென்றேன், மல்லாரும் புயமென் றேன் றேம்பற்றோளை; வழங்காதகையனை நான் வள்ளலென்றேன், இல்லாது சொன் னேனுக் கில்லையென்றான், யானுமென் றன் குற்றத்தா லேகின்றேனே.'' (எ-ம்.) ஒருவனைப்பாடி யவனிகழ்ச்சி சொல்ல அப்போது பாடியது. "எம்மிகழாதவர் தம்மிகழாரே, எம்மிகழ்வோரே தம்மிகழ் வோரே, எம்புகழிகழ்வோர் தம்புகழிகழ் வோர், பாரியோரி நள்ளியெழினி, ஆ அய்ப்பேகன் பெருந்தோண் மலையனென், றெழுவரு ளொருவனு மல்லேயதனல், நின்னை நோவதெவனே யுறுவட் டாற் றுக் குறைக்கட்டிபோல, நீயுமுளையே நின்னன்றோர்க்கே, யானுமுளனே யெம் பாலோர்க்கே, குருகினும் வெளியோய் தேத்துப், பருகுபாலன்னவென் சொல்லு குத்தனே.'' என்று பாடியவர். இவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் திருக் கைலைக்குச் செல்ல விரும்பி விநாயகரை விரைந்து பூசிக்க விநாயகர் ஒளவையை நோக்கி அவர்கட்கு முன்னே சேர்ப்பிக்கி றேன் சாவதானமாய்ப் பூசிக்க என அவ்

வகையே "சீதக் களபம்" என்னும் விநாயகரகவல் பாடித் துதிசெய்து சுந்தரமூர்த்தி நாயனருக்குமுன் திருக்கைலையில் விநாயகர் தும்பிக்கையால் எடுத்துவிடச் சென்றனர். அவர்கள் எவ்வகை யெங்களுக்குமுன் வந்தீர்கள் என் "மதுரமொழி நல்லுமையாள் சிறுவன் மலரடியைப், முதிரநினைய வல்லார்க் கரிதோ முகில்போன் முழங்கி, அதிர வருகின்ற யானையும் தேருமதன்பின் சென்ற, குதிரையும் காதங் கிழவியும் காதங் குலமன்னனே" எனக் கூறிச் சிவதரிசனம் செய்திருந்தனர். இவர் செய்த நூல்கள் :— விநாயகர் அகவல், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி, அசதிக்கோவை, நான்மணிக்கோவை, அருந்தமிழ்மாலை, தரிசனப்பத்து, பந்தனந்தாதி, நான்மணிமாலை, ஞானக்குறள், தனிப்பாட்டுகள் முதலியன. இவர் கடைச்சங்கத்தார் காலத்திலும் குலோத்துங்கசோழன் காலததிலும் இருந்ததாகத் தெரிகிறதால் நீண்டஆயுளுள்ளவராகத் தெரியவருகிறது. இவர் நெல்லிக்கனியுண்ட சிறப்பும் யோகப் பழக்கமும் பெற்ற தெய்வீகமுள்ளவா ஆதலால் நெடுநாள் இருந்திருக்கலாம். ஔவையார் கோயில் ஒன்று தஞ்சை ஜில்லாவில் வளவனாற்றின் கீழ்க்கரையில் திருவிடும்பாவனம் என்ற ஊருக்குக் கீழ்த்திசையில் துளசியார்பட்டி யென்ற வூரிலுள்ளது. அதில் ஔவையார் வடிவு விருத்தவடிவாய்த் தனஞ்சரிந்து முகந்திரைந்துகாணப்படுகிறது. அதனுடன் ஓரிளம் பெண்ணுருக்கொண்ட விக்ரகம் ஒன்றுளது, அதனை உப்பை என்கிறார்கள். கோவிலுக்கு வடமேற்கில் அரை மைல் தூரத்தில் கொல்லன்திடல் என்று ஒன்று இருக்கிறது. அதன்கண் ஒரு ஆலமரமும், ஒரு மேடையும் உள்ளன. ஒரு முறை மழையானனைந்த ஔவையை ஊரார் ஆதரிக்காது அங்கிருந்த கொல்லன் தன் உலையின் நெருப்பால் குளிர்போக்கி அன்னமளித் தாதரித்தான் என்பர். அப்போது வெள்ளங்கொண்டு ஊரெல்லாம் பரவியபோது " வள்ளையுங் கொள்ளையாகிவளவனும் போனகிக், கொல்லன்றிட ரொழியக் கொள்ளாய் பெருங்கடலே." என்ன அக்கொல்லனிருந்த திடர்நீங்க மற்றவை அழிந்தன என்பர்.

உ

கடவுள் துணை

# அபிதான சிந்தாமணி

## க

**ககந்தன்** — காந்தனென்னும் அரசனுடைய காவற்கணிகை புதல்வன். பரசுராமருக்குத் தோன்ருது ஒளித்து அவர் கட்டளைப்படி காவிரிப் பூம்பட்டினத்தை அரசாண்டவன். தன்புதல்வ ரிருவருள் இளையோன் பார்ப்பினி மருதியையும், மூத்தோன் வணிகமாதாகிய விசாகையையும் விரும்பித் தீங்குசெய்ய முயன்ருரென்பதைக் கேள்வியுற்று அவர்களை வாளாற் றடிந்தவன். இவனாற் காக்கப்பட்டமையின் காவிரிப்பூம்பட்டினம் காகந்தியெனப் பெயர்பெற்றது. (மணிமேகலை).

**ககபதி** — கருடனுக்கு ஒரு பெயர்.

**ககழுகன்** — சகத்திரபாதனுடன் வாசித்தவன். இவன் சகத்திரபாதனைச் சபித்தவன்.

**ககனமூர்த்தி** — பாரதவீரனுகப் பிறந்தவன்.

**ககுத்சதன்**—(சூர்) வ. சசரதன்புத்ரன் இக்ஷுவாகுவின் பௌத்ரன். இவன் குமரன் அநேநன். (பார.)

**ககுத்து** — இக்ஷ்வாகு பேரனுகும், விகுக்ஷியின் புத்ரன். இவனைக் குக்ஷிபுத்ரன் என்றுங் கூறுவர். இவன் தேவர் வேண்டுகோளால் அசுரருடன் யுத்தஞ் செய்துவருகையில் இந்திரன் இடபமாய்த் தன் ககுத்தில் தாங்கினன். அக்காரணத்தான் ககுத்தனென்று பெயர் பெற்றவன். இவனுக்குப் புரஞ்சயன் என்றும் பெயர். (அயோத்யாமான்மியம்).

**ககுத்தன்** — இருபத்தைந்தாவது புத்தன்.

**ககுத்மி** — அனுவம்சத்து ரைவதன புதல்வன். இவன் தன் குமரியாகிய ரேவதிக்கு மணமகனைத் தேடும்படி பிரமன் சபைக்குச் சென்று ஆங்கு நடந்த அதிசயங்களைக் கண்டு சற்று நிதானித்துப் பிரமனைச் சேவித்துத் தான் வந்த வரலாற்றினைக் கூறினன். பிரமன் இவனை நோக்கி நீ பூமியினின்று இவ்விடம் வந்த காலமுதல் இதுவரையில் இருபத்தேழு யுகங்கள் மாறின. ஆகையால் நீ சென்று ஆதிசேடனது அவதாரமாய்ப் பலராமரென்று பிறந்திருக்கும் கிருஷ்ணன் தமயனுக்கு ரேவதியைத் திருமணஞ் செய்க என்று விடைதந்தனுப்பினன்.

**ககுபு** — தக்ஷன் பெண். குமரன் சங்கடன்.

**ககுபை** — ஒட்டிரதேச பர்வதம்.

**ககுப்தேவி** — தக்ஷன் பெண்.

**ககுவன்** — (யது.) கம்சன் தம்பி.

**ககேந்திரன்** — கருடன்.

**ககோலன்**—உத்தாலகருடைய மாணுக்கன். தேவி சுஜாதை.

**ககோளர்** — ஒரு இருஷி.

**ககோளவிவரணம்** — சூரியமண்டல விஷ்கம்பம் (9000) யோசனை. அதன் வலயம் (2700) யோசனை சந்திரமண்டலம் சூரியமண்டலத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாம். பூமி (50) கோடி யோசனை விஸ்தீரணமுடையது. இந்தப் பூமி மத்தியில் இருக்கும் ஜம்புத்வீபத்தில் உள்ள இளாவிருத வருஷத்தில் மேருமலை இருக்கின்றது. இந்த மேருவுக்குக் கிழக்கில் மானசபர்வதத்தில் இந்திரபட்டணமும், தக்ஷண மானசபர்வதத்தில் யமபட்டண

மும், மேற்கில் வருணபட்டணமும் இருக்கின்றன. இப்பட்டணங்களில் உலகரக்ஷணத்தின் பொருட்டு இந்திராதிகள் வசிப்பர். இப்பட்டணங்களுக்கு ஊர்த்துவத்தில் சூரியன் சஞ்சரிப்பன். சூரியனுக்குத் தக்ஷணாயனத்தில் சீக்கிரகதி உண்டு. சூரியன் மத்தியானத்தில் இந்திர பட்டணத்தில் இருக்குங்கால், யமபட்டணத்தில் உதயம், வருண பட்டணத்தில் அர்த்த ராத்திரி, சோமபட்டணத்தில் அஸ்தமனம். மத்தியானத்தில் யமபட்டணத்தில் இருக்குங்கால் வருணபட்டணத்தில் உதயம், சோமபட்டணத்தில் அர்த்த ராத்திரி, இந்திரபட்டணத்தில் அஸ்தமனம். மத்தியானம் வருண பட்டணத்தி லிருக்கையில் சோமபட்டணத்தில் உதயம், இந்திரபட்டணத்தில் அர்த்த ராத்திரி, யமபட்டணத்தில் அஸ்தமனம், மத்யானம் சோமபட்டணத்தில் இருக்கையில் இந்திர பட்டணத்தில் உதயம், யமபட்டணத்தில் அர்த்தராத்திரி, வருணபட்டணத்தில் அஸ்தமனம். தக்ஷணாயனத்தில் சூரியனுடன் நக்ஷத்திரங்களும் சஞ்சரிக்கும். மத்தியானத்தில் அவன் கிரணத்தால் தபிக்கப்பட்டுச் சாயங்காலத்தில் அவனுடைய கிரணத்தால் சாந்தமாக அஸ்தமிக்கும். பின்னும் சூரியன் ஆகாயமத்தியில் இருக்கும்போது பூமியில் 30-முகூர்த்தகாலம் சஞ்சரிப்பன். ஊர்த்த பாகத்தில் சஞ்சரிக்கும்போது வெவ்வேறு கதிகளுண்டு. தக்ஷணதிசையில் இருக்கும் சூரியன் நாடோறும் (90145000) ஆயிரம் யோசனைகள் சஞ்சரித்துக்கொண்டு அத்திசையில் இருந்து மீண்டு (30121000) ஆயிரம் யோசனைகள் உள்ள தூரத்தில் இருக்கும் வடதிசைக்குப் பிரவேசிப்பன். இந்தத்தக்ஷண உத்தரதிசைகளுக்கு மத்திய பிரதேசம் விஷ்வமண்டலம் எனப்படும். அந்தச் சமயத்தில் கோமேதக தீபத்திற்கு வடபாகத்தில் சஞ்சரிக்கும் தக்ஷண உத்தர திசைகளுக்கு இடையிலிருக்கும் மண்டலங்களுக்கு ஜரத்துருவ ஐராவத வைஷ்வாநர ஸ்தாநங்கள் அடையாளங்கள் என்று எண்ணவேண்டும். அஜவீதிக்குத் தக்ஷணத்தில் நாகவீதி உண்டு. இந்த இரண்டும் ஆஷாடவீதிக்குக் காரணமாய் இருக்கின்றன. அசுவனி, பரணி, கிருத்திகை, மிருகசீரி ஷார்த்தம் இந்த (4) நக்ஷத்திரங்களும் நாகவீதி என்பர். புனர்பூசம், பூசம் ஆயிலியம் இந்த மூன்று நக்ஷத்திரங்களும் ஐராவதவீதி என்பர். இந்த வீதி உத்தரமார்க்கம் என்று சொல்லப்படும். பூர்வோத்திர பங்குனிகள் இரண்டும் ஆர்ஷவீதி. பூர்வபாத்திரம், உத்தரா பாத்திரமென்னும் இரண்டும் கோவீதி. சிரவண, தனிஷ்ட, சதபிக்ஷம் இம்மூன்றும் ஜாத்துருவவீதி. இம்மூன்று வீதிகளும் மத்தியமார்க்கம் எனப்படும். அஸ்தம், சித்திரை, சுவாதி இம்மூன்றும் நாகவீதி. விசாகம், ஜேஷ்டம், அனுஷம் இம்மூன்றும் மிருகவீதி, மூலம், பூராடம், உத்ராடம் இம்மூன்றும் வைஸ்வாநரவீதி. இந்த வீதிகள் மூன்றும் தக்ஷணமார்க்கம் எனப்படும். தக்ஷண உத்தர மார்க்கங்களுக்கு இடை (100321) யோசனைகள் விசாலம் உண்டு. உத்தராயனத்தில் சூரியன் மண்டலமத்தியனாய்ச் சஞ்சரிக்கும்போது தக்ஷணாயனத்தில் முன்சொன்ன வீதிகளுக்கு வெளியில் திரிவன். தக்ஷண திசையில் சஞ்சரிக்கும்போது சூரியமண்டலம் (10058) யோசனைகள் உள்ள விசாலமுள்ளதாய் இருக்கும். சூரியசந்திரர்கள் குலாலசக்கிரம்போல் திரிவர். தக்ஷணாயனத்தில் சீக்கிரகதி யாகையால் பகல் (12) முகூர்த்தம் இருக்கும். உத்தராயனத்தில் பகல் (18) முகூர்த்தகாலம் சஞ்சரிப்பன். இரவுபகல் (3) முகூர்த்தகாலத்திற்குள் மண்டலமாய்த் திரிகின்ற லோகாலோக பருவதத்திற்கு வடக்கு அக்கினி மார்க்கத்திற்கு வெளியில் இருக்கிற புஷ்கரதேசங்களுக்குத் தக்ஷணவீதியில் இருக்கும் சூரியகாந்தி வியாபிக்கும். அந்தத் தேசங்களுக்கு ஒருபாகத்தில் (10,000) யோசனையுள்ள உயரங்கொண்ட லோகாலோகபர்வதம் இருக்கின்றது. அதற்குக் கீழ்பாகத்தில் சூரியசந்திர நக்ஷத்திர தாராகணங்கள் திரிவர். இது காணப்பட்டது. கோசராகோசரமானதே லோகாலோக பர்வதம். இதனைச் சூரியன் சேருவதே சந்தியாகாலம் எனப்படும். துருவன், மிருத்பிண்டம் போல உத்தரமத்திய தக்ஷண பிரதேசங்களில் இருந்து, ஆகாசத்தில் (14) நக்ஷத்திரங்களில் சிஞ்சுமார சக்கிரத்தில் சூரியசந்திரர்களை வாதக்கயிற்றால் திருப்பி, தானும் திரிந்துகொண்டிருப்பன். மேகமண்டலம் மேகங்கள் வாயுவை ஆசரித்து ஜலத்தைத் தரும். அவை பூமிக்குமேல் காததூரத்தி லிருந்து சதா வருஷித்துக் கொண்டிருக்கும். பூர்

வம் இந்திரன் மலைகளின் சிறகறுத்த தும் அவற்றிலிருந்து வெளிப்பட்ட புட்கலாவர்த்தம் என்னும் மேகம் வாயு ஆதாரமாய்க் கற்ப அந்தத்தில் வருஷிக்கும். பிரமன் அவதரித்த காலத்தில் பிரம்மாண்டம் பிளந்து அதில் உற்பத்தியான சகலங்கள் மேகம் ஆயின. இந்த மேகங்கள் தூமங்களால் விருத்தியாம். இது மழை காலத்தில் மழையும் பனிக் காலத்தில் பனியும் பெய்யும். ஆகாசகங்கையைத் திக்கஜங்கள் துதிக்கையால் மொண்டு பூமியில் விடுதலால் அது பனிப் போல் பெய்யும். இமயமலைக்குத் தென் பாகத்தில் இருக்கிற ஏமகூட பர்வதத்தில் பூர்த்து என்னும் பட்டணம் உண்டு. அதில் பெய்யும் பனியும் இமயத்தில் பெய்யும் பனியுமே இவ்விடத்திற்கும் வரும். மழை, பனி, வெயில், பகல், இரவு, சந்தி, சுபாசுபபலன் இவை எல்லாம் துருவனால் உண்டாம். சூரியன் துருவன் கட்டளையால் சகல ஜீவப்பிராணுதாரமான நீரைத் தருவன். **சந்திரமண்டலம்** சூரியவீதிக்கு மேற்பாகத்தில் இருக்கும். சந்திரனுக்கு மேல் நக்ஷத்திரங்கள் சஞ்சரிக்கும். சந்திரன் ரதத்திற்கு (10) குதிரைகள். அக்குதிரைகளின் பெயர் அஜ, சத, மக, விருக்ஷ, வாஜி, நர, அஸ்ம, சப்ததாது, ஹம்ச, வாம, மிருகமென்பன. சந்திரன் தேவர்களாலும் பிதுர்க்களாலும் சுற்றப்பட்டிருப்பன். சூரியனுடைய சுஷும்ந அநுகிரணத்தால் சுக்கிலபக்ஷத்தில் வளர்ந்து பூர்ணிமையில் சம்பூர்ணமாய்ப் பிரகாசிப்பான். கிருஷ்ணபக்ஷ துவிதியைமுதல் சதுர்த்தசி வரையில் தேவர்களும், அமாவாசையில் பிதுர்க்களும் சந்திரகிரணத்தைப் பானம் செய்வர். **அங்காரகன்** ரதத்திற்கு அக்கினியிற் பிறந்த செந்நிறமுள்ள (அ) குதிரைகள் உண்டு. **புதன்** ரதம் வாயுரதத்திற்கு எதிராக நடக்கும். அந்த ரதத்திற்கு வாயுவேகமும் பசுநிறமுள்ள (அ) குதிரைகளும் உண்டு. **பிரகஸ்பதி** ரதத்திற்கு வெண்ணிறமுள்ள (அ) குதிரைகள் உண்டு. வருஷத்திற்கு ஒரு தடவை ஒரு ராசியில் மெதுவாகச் செல்வன். **சுக்கிரனுக்குச்** செந்நிறமுள்ள (அ) குதிரைகள் உண்டு. **சநி** கறுப்பு நிறமுள்ள (அ) குதிரைகள் கட்டின இரும்பு ரதத்தில் மெதுவாகச் செல்வன். **இராகு** கறுப்புக் குதிரைகள்கட்டினரதத்திலேறிப் பருவகாலங்களில் சூரிய சந்திரர்களுக்கு மேல் நடப்பன். **கேது** புகைவர்ணமுள்ள (அ) குதிரைகள்கட்டிய ரதத்தில் ஏறிச் சஞ்சரிப்பன். (தத்வநி.)

**கக்கீவன்**—தீர்க்கதமன் மகன். இவன் உதங்கர் சொற்படி அகத்திய தீர்த்தத்தில் முழுகி அதிலெழுந்த யானைமீதேறிச் சென்று சுவநயன் குமரியை மணந்தவன்.

**கக்துவன்**—உக்ரசேநன் குமரன்.

**கக்துவான்**—(கக்கிருமல்) பாலின் தோஷத்தாலும், ஜல தோஷத்தாலும் வாயு அதிகரித்து மார்பிலுள்ள சிலேஷ்மத்தை ஒவ்வொருவேளை இளக்குந்தருணத்தில், அடுக்கிருமல், திணறல், விழி பிதுங்குவதுபோலுதல், இளைப்பு, ஆயாசம், குடித்த பாலைக் கக்குதல்முதலிய உண்டாம். இது மூன்று மாதம் குழந்தைகளை வதைக்கும். (ஜீவ.)

**கக்கைபர்**—ஒரு வீரசைவ தேசிகர். இவர் முன், ஒரு புராணிகன் விஷ்ணுவிற்குப் பரத்வங் கூறி வாயிற் புழுச்சொரிந்தனன். (பசவபுராணம்).

**கங்கணன்**—(யது.) நிம்ரோசியின் தம்பி.

**கங்கணி**—பசமாநன் குமரன்.

**கங்கபதி**—உக்ரசேநன் குமரி.

**கங்கபாடி** — மைசூர் ஜில்லாவின் கீழ்பாகத்திலுள்ள நாடு.

**கங்கம்மாள்**—ஒரு தீர்த்ததேவதை. இவள் வடநாட்டவரால் பசுக்கள், மனிதர் முதலியவர்க்கு நோய்முதலிய வராவகை ஆராதிக்கப்பட்டவள். இவளை ஆராதிக்கும் ஆண்மக்கள் பெண்வேடம் பூண்டு கிராம பிச்சை ஏற்று அப்பிச்சையால் வந்த தானியாதிகளைத் தேவதைக்கு நிவேதிப்பர்.

**கங்கன்** — 1. கங்கிசனைக் காண்க.

2. சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரன். வசுதேவன் தம்பி.

3. யமன்.

4. ஓர் இருடி. இவன் பாரி பிரமலோசை. பெண் மரீஷை.

5. ஒரு பக்ஷியாசன்.

6. அஞ்ஞாதவாசத்தில் தருமன் வைத்துக்கொண்ட பெயர்.

7. பிரமலோனுபன் குமரன் தரும பக்ஷிகளைக் காண்க.

**கங்கா** — 1. கங்கையைக் காண்க.

2. உக்ரசேநன் குமரி.

**கங்காதபன்** — பகீரதன் கங்கையைப் பூமிக்குக் கொண்டுவருகையில் உதித்த ஆதபனுக்குப் பெயர். (காசிகாண்டம்.)

**கங்காதரமூர்த்தி** — பார்வதிபிராட்டி சிவமூர்த்தியின் கண்களை விளையாட்டாக மூடிய காலத்தில் அவளது நகத்திற்பிறந்த கங்கையைத் தரித்த சிவன் திருவுரு.

**கங்காத்வாரம்**—1. அரித்வாரம் இமயமலையிலுள்ளது. இதன் வழியாகக் கங்கை பூமியில் வருகிறது. Hardwar this is also Called Mayapuri.

2. கௌதமியைக் காண்க.

**கங்காமகாத்மியம்** — இது பூமிக்கு மத்தியில் செல்வதால் பூமியைச் சுத்தப்படுத்துவது. ஆயிரம் சாந்திராயண விரதஞ்செய்த பலன் இதனிடமுள்ள ஜலத்தைப் பானஞ் செய்வதற்கு உண்டாம். ஒரு மாதம் கங்காதீரத்தில் ஒருவன் வசிப்பனேல் அவன் சர்வயஞ்ஞபலத்தையும் அடைவன். இதில் எவ்வளவு காலம் ஒருவனுடைய அஸ்திவிழுந்து கிடக்கிறதோ அவ்வளவு காலம் அவன் சுவர்க்கத்தில் இருப்பன். இதிலுள்ள மண் சோகம் முதலியவற்றை நீக்கும். இதைத் தரிசனஞ் செய்வதாலும், பரிசிப்பதாலும், பானஞ் செய்வதாலும் எல்லாப் பாபங்களும் நீங்கும்.

**கங்காம்பை**—ஸ்ரீ பலதேவர் பெண். இவளுடுத்திருந்த சேலையின் உயர்வைப் பரத்தையின் தோழி யொருத்தி தன் தலைவியிடங் கூற அப்பரத்தை விடசங்கமரை யேவி அதை வாங்கித் தரும்படி யாசித்தனள். அவ்வகை கங்காம்பை கணவன் சொற்படி கொடுக்கையில் ஆடை வளரக்கண்டு துணித்துத் தந்தவள். (பிரபுலி.)

**கங்காளகேது**—மலயகந்தனியைக் காண்க.

**கங்காளமூர்த்தி** — வாமனமூர்த்தி செருக்கடைந்த காலத்தில் அவர் முதுகின் முழுவெலும்பாகிய கங்காளத்தை வீணாதண்டமாகக் கொண்டுவந்த சிவன் திருவுரு.

**கங்காவிசர்ச்சனமூர்த்தி** — பகீரதன் வெகுநாள் பிதுர்க்கள் நற்கதியடையத் தவஞ்செய்தனன். அதனால் களிப்படைந்த சிவமூர்த்தி தரிசநந்தந்து தமது சடையிலிருந்த கங்கையில் ஒருதுளி பூமியில் விட்டனர். அக்காலத்து இப்பெயரால் தேவாதியர் துதித்த சிவமூர்த்தம்.

**கங்கிசன்** — உக்கிரசேநன்.

**கங்குல் வெள்ளத்தார் (பெண் பாலர்)** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களிலொருவராக இருக்கலாம்: இவர் தம் செய்யுளில் "கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே" எனக்கூறி யிருத்தலி னிவர்க்கு இப்பெயர் வந்ததுபோலும். (குறு-௩௮௭.)

**கங்கை** — 1. புண்ணிய நதியுருவானவள். இவள் வெண்ணிற முடையவள், வலது கையில் கருநெய்தல், இடதுகையில் பூர்ணகும்பம், முதலைவாகனம். இமயவேந்தன் குமரி.

2. அக்கினியால் வகிக்கப்பட்ட சிவவீரியத்தைச் சரவணத்தில் வைத்தவள்.

3. சுவர்க்கத்தில் மந்தாகினியெனவும், பூமியில கங்கையெனவும், பாதாளத்தில் போகவதி யெனவும் பெயர்பெற்றவள்.

4. இவள், உலகத்திலுள்ள மூன்றரைக் கோடி தீர்த்தபலனும் தரவல்லவள்.

5. இதில் ஒரு வேதியனது எலும்பு விழுந்ததனால் அவன் முத்தி பெற்றனன் என்பர்.

6. சூரியவம்சத்துப் பிறந்த பகீரதச்சக்கரவர்த்தி தன்பாட்டன் முதலியவரின் சரிதங்களைக் கேட்கையில் பிதுர்க்கள் அநேகர் கபிலர் கோபத்திற்பட்டுச் சாம்பராய் நரகவேதனைப்படுதல் அறிந்து அதை நீக்க அநேக ஆண்டுகள் பிரமன், கங்கை, சிவமூர்த்தி முதலியயோரை எண்ணித் தவம் புரிந்து சிவமூர்த்தியால் கங்கையின் எழுதுளிகளைப் பூமியில் வரப்பெற்றனன். அந்தக்கங்கை கலாதிநி, பவாநி, நளினி என மூன்றுபிரிவுகளாய்க் கிழக்கினும், சுசக்ஷு சீதை, சிந்து என மேற்கினும், அளகந்தை யெனப் பகீரதன் பின்னும் வந்தனள். இவள் பகீரதனுக்குப் பின் வருமிடத்துச் சந்நு முனியின் ஆச்சிரமவழி வருதலை யறிந்த முனிவர் கோபித்து அதனை ஆசமனஞ் செய்தனர். அதனால் கங்கை மறைந்தது கண்டு பகீரதன் தன் குறைகூறக் கேட்டு அவர் காதின்வழி வெளிவிடச் சாநவி யெனப் பெயரடைந்து சகரர் எலும்பில் விழுந்துஅவர்களுக்குநற்கதிதந்தவள்.

7. பார்வதிதேவி விளையாட்டாகச் சிவமூர்த்தியின் கண்களை மூட அக்கரத்தின் வழிப் பெருகிய நீர் வெள்ளங்கொள்ள அதைச் சிவமூர்த்தி தரித்தனர் எனவும், விஷ்ணு திரிவிக்கிரம அவதாரங்கொண்டு மூவுல களந்தபோது திருவடி சுவர்க்கமடைய அண்டமுடைந்து ஆகாயகங்கை கால்வழியொழுகியதா லுண்டானது என்வும், அத்திருவடி சத்தியவுலகு சென்றபோது பிரமன் தன் தந்தையின் திருவடி

யெனத் தம் கமண்டலுநீரால் அபிஷேகிக்க அது நதியாயிற்றெனவுங் கூறுவர்.

8. இவள் பிரமன்சபைக்கு வந்தபோது உண்டான சாபத்தால் சந்தனுவின் தேவியாய்ப் பீஷ்மரைப் பெற்றனள் என்பர்.

9. இவள் சிவமூர்த்தியை மணக்க விரும்பியதைப் பார்வதிபிராட்டி குறிப்பாலுணர்ந்து இரேணு என்பவனுக்கு மகளாய்ப் பிறக்கச் சாபமும் அமங்கலமும் பெற்றுத் தவத்தால் மங்கலமடைந்தவள்.

10. பீஷ்மனை ஈமத்திடை வைத்த காலத்தில் வந்து அழுது கண்ணனால் தைரியமடைந்தவள்.

11. சூரபன்மன் வேள்வியை அவிக்கப் பூமிக்குச் சிவமூர்த்தியால் வருவிக்கப்பட்டவள்.

12. துன்முகன் வேண்டக் குமரியாகப் பிறந்தவள்.

13. அநசூயை, இருடிகைள்யக் காண்க.

2. விஷ்ணுவிற்குப் பாரியாய்க் கோலோகத்தில் இராதை கோபிக்க விஷ்ணுவின் கட்டை விரலில் தோன்றிப் பின் பிரமன் தன் கமண்டலத்தில் சிறிது கொண்டு தம் உலகமடைந்து நாரதர் வாக்கால் இவளைப் பிரமதேவர் மணந்தனர். (தேவி - பாக.) சரஸ்வதியைக் காண்க.

**கசகசாச்சேடி** — இது, ஒரு செடிவகையில் சேர்ந்தது. இச் செடி, ஈஜிப்ட், துருக்கி, பெர்ஷியா, பல்கேரியா, சைனு, இந்தியா முதலிய தேசங்களில் பயிரிடப்படுகிறது. இச் செடி 5, 6, அடிகள் வளர்வதற்குள் இலைகள் உதிரத் தொடங்குகின்றன. இதன்மீது தாமரை அரும்பையொத்த மலர்கள் உண்டாகின்றன. அவற்றினிதழ்கள் உதிர்ந்தவுடன் அதனிடையில் உள்ள காய் மாதுளங்காய்போல் பருக்கத் தொடங்குகிறது. காய்முதிரத் தொடங்குகையில் காலமறிந்து ஒன்று, இரண்டிடங்களில் சிறு கத்தியால் கீறி விடுகின்றனர். அதினின்று மஞ்சள் நிறமுள்ள பால்வடிகிறது. அப்பாலில் காற்றுப்பட அது உலர்ந்து மஞ்சள் நிறங்கொண்ட பசைப்பொருளாகிறது. அதைச் சுரண்டி உலரவைத்தால் கருநிறமாக மாறுகிறது. இதுவே அபினி எனும் மயக்கப் பொருள். இதன் காயில் உண்டாகும் விதைகளே கசகசா விதைகள். இதன் காயைப் போஸ்தக்காயென வைத்தியர் உபயோகிக்கின்றனர்.

**கசகர்ணர்** — விநாயகருக்கு ஒரு பெயர்.

**கசபதர்** — ஒரு மகருஷி. இவர் குமரர் மதுமான்.

**கசபுத்திரன்** — பாரதவீரரில் ஒருவன். குரோதவசை புத்ரனுகிய கணனம்சம்.

**கசமுகர்** — ஒருகாலம் சிவமூர்த்தியும் பிராட்டியும் நந்தநவனத்துச் சித்ரமண்டபத்தில் எழுதியிருந்த ஆண்யானை பெண்யானைகளைப் பார்க்க அவற்றினின்றும் கசமுகர் தோன்றினர். கசமுகாசுரன் செய்த துன்பத்தினைத் தேவர் இவரிடம் முறையிட அவன் அத்திரசத்திரங்களால் இறவாதது கண்டு தமது வலப்புறக்கொம்பை ஒடித்து அவன்மீது எறிய அது அசுரன் மார்பைப் பிளந்து கணபதியின் திருக்கரம் அமர்ந்தது. பின் கசமுகன் பெருச்சாளி யுருக்கொண்டு ஓட அவனை வாகனமாகக் கொண்டனர். கஜாச்யர் எனவும் பெயர்.

**கசமுகாசுரன்** — அசுரேந்திரன் எனும் அசுரன் தேவரை வருத்த ஒரு வலியுள்ளவன் வேண்டும் எனச் சுக்கிரனைக் கேட்டனன். சுக்கிரன் அசுரேந்திரன் சொற்படி வசிட்ட முனிவர் மரபில் மரகதமுனிவர் என்பவர் தவம்புரிகின்றனர். அம்முனிவரை உம் மரபில் ஒரு பெண் புணரில் அவ்விருவருக்கும் உதிக்கும் புதல்வன் மிகுந்த வலியுள்ளவனுவான் என்றனர். அதைக் கேட்ட அசுரன் விபுதை யென்பவளை அனுப்ப அவள் சென்று அவர் தவத்திற்கு அஞ்சி அவர்க்கருகில் அம்முனிவர் தனக்கு நாயகராக வேண்டும் எனத் தவஞ்செய்தனள். இருவருக்கும் தவங்கூடுங் காலமாதலின் முனிவர் விழித்துத் தமக்குமுன் இரண்டு யானைகள் கலவிசெய்யக்கண்டு காமக்குறிப்புடன் நின்றனர். இதனை அருகில் தவஞ்செய்து கொண்டிருந்த விபுதை கண்டு எதிர்வர முனிவர் இவளைப் பெண்யானையாக்கித் தாம் ஆண்யானையாகிப் புணர்ந்தனர். உடனே யானைமுகத்துடன் இவன் தோன்றினன். பிறகு சிவமூர்த்தியை எண்ணித் தவம்புரிந்து பல வரங்கள் பெற்று அரசாண்டு தேவரை வருத்திக் கசமுகராகிய விநாயகரால் கொம்பை எவிச் சங்கரிக்கப்பட்டு மாண்டு பெருச்சாளியாய் விநாயகருக்கு வாகனமாயினன். இவன் ஆண்ட பட்டணம் மதங்கபுரம். இவனுக்குமுன் தேவர் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போட்டுக் கொள்ளும் வழக்கை இவன் விநாயகருக்குச் செய்ய வரம் பெற்

றனன். இவன் இறந்த இடம் செங்காடு எனப்படும்.

**கசரன்** — ஒருவசு, இருடிகள் எதனுல் யாகஞ் செய்ய வேண்டுமென இந்திரன் முன் கேட்க இவன் பசு இம்சையாலும், கந்த மூலாதிகளாலும் செய்யலாம் என்றனன். இருடிகளுக்கு உயிர்க்கொலை விருப்பமில்லாமையால் இவனைப் பாதாளத்தில் விழத் தள்ளினர்.

**கசன்** — 1. தேவகுருவாகிய வியாழன் குமரன். தேவர் அசுரரைப் பலமுறை கொல்லவும் அவர்கள் உயிர்கொண்டு தம்மை வருத்துதல் சுக்ரனது மிருதசஞ்சீவிநி மந்திரபலமென்று ஆலோசித்து அம்மந்திரத்தைச் சுக்ரனிடமிருந்து கற்றுவர இவனை அனுப்பினர். இவன் வந்து சுக்ரனுக்குப் பணிவிடை செய்திருக்கையில் சுக்ரன் பெண்ணுகிய தேவயானி இவனிடத்து ஆசைகொண்டு ஆதரித்து வந்தனள் இவன் மந்திரத்தின் பொருட்டு வந்தது அறிந்து அசுரர் இவனைக் கொலைபுரிய யத்தனித்து ஒருநாள் ஓமதேனுவை மேய்த்திருக்கையில் கொன்றனர். கசன் மீளாமையால் தேவயானி தன் தந்தையிடங் கூறிப் பிழைப்பித்தனள். மற்றொருநாள் அசுரர் இவனை வனத்தில்கொன்று நீருக்கி அச்சாம்பலைக் கள்ளிற்கலந்து சுக்ரனுக்கு உண்பித்தனர். அப்போதும் தேவயானி துன்பமுடையவளாய்த் தந்தையை வேண்டினள். சுக்ரன், கசன் தன் வயிற்றிலிருப்பதை யோகத்தா லுணர்ந்து கள்ளல்லவா இக்காரியஞ் செய்ததென்று, இனி வேதியர் கள்ளருந்தல் ஆகாதென விதித்து வயிற்றிலுள்ளானை நோக்கி மிருதசஞ்சீவிநியால் வெளிவரின் என்னை உயிர்ப்பிக்க என ஆணைகூறி அவனை வெளிவிட்டனன். அவ்வகை வெளிவந்த கசன் சுக்ரனை உயிர்ப்பித்துச் சிலநாளிருந்து தெய்வலோகஞ் செல்கையில் தெய்வயானி, தன்னை மணக்கவேண்டக் கசன் மறுத்தமையால் தெய்வயானி கோபித்து உனக்கு மந்திரம் பலியாதிருக்க எனச் சபித்தனள். கசன் எனக்குப் பலியாதிருப்பினும் என்னிடங் கொண்டாரிடத்துப் பலிக்க என்று தேவயானியாயை நோக்கி நீ காரணமின்றிச் சபித்ததால் உன்னை வேதியன் மணக்காதிருக்க என்று நீங்கினன். இவளை யயாதி மணந்தனன்.

2. ஓர் அரக்கன்.

3. ஒரு வானரவீரன்.

**கசாநநர்** — 1. ஒரு விஷ்ணுபடர். இவரைச் சேனை முதலியார், விஷ்வக்சேநர் என்பர்.

2. விநாயகருக் கொருபெயர்.

**கசாந்திகமூர்த்தி** — ஐராவதம் பானுகோபனுடன் யுத்தஞ்செய்யக் கொம்பொடிந்து சிவத்தியானஞ் செய்தகாலத்து அருள் செய்த சிவன் திருவுரு.

**கசாரியல்லது கஜயுக்தமூர்த்தி** — கசாசுரன் தேவர்களை வருத்திச் சிவமூர்த்திக் கெதிரில் செருக்குடன் வந்து சிவமூர்த்தியை எடுத்து விழுங்க அவன் உடலுள்ளிருந்து உக்கிரவடிவாய்ப் புறப்பட்டு மத்தகத்தில் திருவிரலூன்றித் தோலையுரித்துப் போர்த்த சிவன் திருவுரு. இதனுல் இவர்க்குக் கிருத்திவாசன், யானையுரித்தோன் எனப் பெயர்.

**கசேந்திரன்** — இந்திரத்துய்ம்மன் எனும் பாண்டியன் சபைக்கு அகத்தியர்வர அவன் யோகதிருஷ்டியால் அறிந்தும் கவனியாதிருந்தனன்- அதனு லகத்தியர் நீ மத்த யானையாக எனச் சபித்தனர். இவ்வரச யானை காட்டில் வசிக்கையில் ஒரு நாள் தானிருக்கும் திரிகூடாசலமென்னும் மலையிலிருந்து இறங்கி நீர் விருப்பால் அருகிருந்த தடாகத்திற்குச் சென்று நீரருந்துகையில் அதில் சாபத்தால் முதலையாகி வந்திருக்கும் ஊகு என்னும் காந்தருவனுல் பிடிபட்டு அது இழுக்கவும் தான் இழுக்கவும் அதனுடன் போரிட்டுக் கடைசியில் தன்வசமற்று மூலமே என்று முறையிட்டது. அது கேட்ட விஷ்ணுமூர்த்தி சக்கரத்தை ஏவி முதலையைச் சேதித்து யானையைக் காத்தனர். (பாகவதம்).

**கசேரு**—நரகாசுரன் மனைவி. துவட்டாவின் குமரி.

**கசேருமான்** — கண்ணுல செயிக்கப்பட்ட யவனராசன்.

**கச்சபாலையர்**—காஞ்சிபுரத்திலிருந்த தமிழ் வித்வான். (தனிப்பாடற்றிரட்டு).

**கச்சயம்** — துச்சயன் இராசதானி, அங்க நாட்டி லுள்ளது. (மணிமேகலை).

**கச்சருமன்** — ஒரு தானவன் விப்பிரசித்தி குமரன்.

**கச்சன்** — காசிராஜன். சுடியரசன் இவன் மரபில் தோன்றியவன்.

**கச்சி**—காஞ்சிக்கு ஒரு பெயர். (சிலப்.)

**கச்சிக்காவலன்**—திருமலைராயன் சமத்தான வித்வான்களி லொருவன்.

**கச்சிப்பேட்டு இளந்தச்சனுர்** — தச்சனுரென்றதனல் இவர் கம்மாளரென்று தெரிகிறது. கச்சிப்பேடு ஒரூர். காஞ்சிபுரத்தைச் சார்ந்தது. இவர் முல்லைத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியது நற். உகூகூ-ம் பாட்டு.

**கச்சிப்பேட்டுக் காஞ்சிக்கொற்றன்**—இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவரைக் கச்சிப்பேட்டாரெனலால் தொண்டைநாட்டவராக இருத்தல்கூடும். குறு. உகரு, உகசு.

**கச்சிப்பேட்டு நன்னுகையார்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவராக இருக்கலாம். நாகனுரென்னு துநாகையெனலால் தமிழறி நங்கையரில் ஒருத்தியென ஊகிக்க இடமுண்டு. தொண்டைநாட்டவர் போலும். குறு. கூ0, களஉ, க௮0, ககூஉ, ககள, உ௮எ.

**கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனுர்** — இவர் முற்கூறிய இளந்தச்சனுரின் முதியோரென்பது தோன்ற பெருந்தச்சனுர் எனப்பட்டார். இவர் குறிஞ்சித் திணையைப் பாடும் வன்மையுடையார். இளந்தச்சனுர் முல்லையைப் பாடியுள்ளார். மதியுடன் படுக்குந் தலைமகன் நீவிர் யாவிரென வினயதாக இவர் கூறியது சிறப்புடையதாகும். நற். உகரு, இவர் பாடிய பாட்டு இரண்டு நற். கசச.

**கச்சியப்பசிவாசாரியர்**—இவர் காஞ்சிபுரத்திலுள்ள குமரகோட்டத்து அர்ச்சகருள் ஒருவர். ஆதிசைவர் குலத்தில் அவதரித்தவர். தந்தையின் பெயர் காளத்தியப்பசிவாசாரியர். இவர் உரிய பருவத்தில் உபநயனம் செய்விக்கப்பெற்று, அந்தணர்க்குரிய அருமறைகளை அத்தியயனம் செய்து, வடமொழி, தென்மொழியென்ற இரு பாஷைகளையும் எழுத்தெண்ணிப் படித்துக் கல்வி, அறிவு, ஒழுக்கங்களிற் சிறப்படைந்து விளங்கினர். அப்புறம் சைவசமயத்துக்கு இன்றியமையாததாகிய சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாண தீக்ஷை யென்ற மூன்று தீக்ஷைகளையும் முறையே பெற்று ஆசாரியாபிஷேகம் அடைந்து ஆறுமுகக்கடவுளை ஆகமவிதிப்படி அன்புடன் பூஜைசெய்து வந்தார். ஒரு சமயத்தில் முருகக்கடவுள் இவரது கனவிற்றேன்றி, "அன்பனே நமது சரித்திரத்தை "கந்தபுராணம்" எனப் பெயரிட்டுத் தமிழில் பெருங்காப்பியமாகப் பாடுக" என்று கட்டளையிட்டுத் "திகடசக்கரச் செம்முகமைந்துளான்" என்று அடியெடுத்துத் தந்து மறைந்தருளினரென்றும், ஆசாரியர் அன்றுமுதல் தினமும் முயன்று, சில மாதங்களில் இந்தப் புராணத்தைப் பாடி முடித்தனரென்றும் கூறுவர். இஃது அரங்கேற்றிய இடம் குமரக்கோட்டம். இன்னும் திகழ் + தசம் = திகடசம் எனப் புணர்தற்கு முருகக்கடவுள் புலவர் வேடம் பூண்டுவந்து வீரசோழியம் என்னும் புத்தகத்திலிருந்து விதியைக் காட்டி மறைந்தனரென்றும் விளம்புவர். இவர் காலம் சாலிவாகன சகவருஷம் (700-க்கு மேல்).

**கச்சியப்ப முதலியார்**—இவர் வல்லைமாநகர் காளத்தி முதலியார் குமாரர். ஒரு புலவன் இவர் கவி சொன்னபோது பராமுகமாக விருக்கப்புலவன் இவரைச்செருப்புக்காலா லுதைக்க இவர் புலவனை உபசரித்தனர். புலவன் பாடிய பாட்டு "மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிசு, கண்படுமோ வெப்போதுங் கற்றவர்க்குப்—பண்புடனே, மெச்சியப்பாலுங்கொடுக்கும் வீறுவல்லை காளத்திக், கச்சியப்பனை யுதைத்தகால்." இதனை "வில்லைச் செருப்பிட்ட எனும் தொண்டைமண்டல சதகத்தாலும் அறிக. (தமிழ்நாவலர் சரிதை.)

**கச்சியப்பமுனிவர்** — இற்றைக்கு நூற்றெண்பது வருடங்களுக்குமுன் அபிஷேகத்தார் மரபில் திருத்தணிகை க்ஷேத்திரத்தி லவதரித்துத் திருக்கைலாயு பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்துப்பின் வேலப்ப தேசிகரிடஞ் சைவசந்நியாசம் பெற்று மேற்படி ஆதீனத்துச் சிவஞான யோகிகளிடம் கல்வி பயின்று, விநாயக புராணம், காஞ்சிபுராணம் இரண்டாங் காண்டம், தணிகைபுராணம், திருஆனைக்காபுராணம், பூவாளூர்புராணம், பேரூர் புராணம், ஆனந்த ருத்திரேசர் விவண்டு விடுதூது, தணிகையாற்றுப்படை, கச்சி ஆனந்தருத்திரேசர் பதிற்றுப்பத்தந்தாதி, சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ், திருத்தணிகை பதிற்றுப்பத்தந்தாதி, பஞ்சாக்ஷர அந்தாதி முதலிய தலங்களின் புராணங்களை இயற்றிப் புகழ்பெற்றவர். இவர் சென்னை நகரிலிருந்தகாலத்து வடமொழியிலுள்ள **விநாயகப் புராணத்தினைத்** தென்மொழியிற் பாரகாவியமாக இயற்றி அந்நகரிலுள்ள **பிரசன்னவிநாயகர்** சன்

னதியி லரங்கேற்றினர். இங்ஙனம அநேக நூல்களை இயற்றியருளிய முனிவர்பெருமான். காஞ்சிபுரத்திலுள்ள திருவாவடுதுறை மடத்தில் வெகு வருஷ காலம் எழுந்தருளியிருந்து அநேக நன்மாணாக்கர்களுக்குக் கல்விபயிற்றிச் சிவத்தியானத்தி லெழுந்தருளி யிருந்து சாலிவாகனசகம் (கஎகஉ) க்குச் சரியான சாதாரணவருடம் சித்திரை மாதம் 11௳ புனர்பூச நக்ஷத்திரத்திற் பரிபூரணதசை யடைந்தனர்.

**கச்சிராயன்**—ஒரு புலவன், இவன் கண்டிய தேவனைப் பாடியது. "குப்பாய மிட்டுக் குறுக்கே கவசமிட்டுக், கைப்பாச மிட்டு வருக் கண்டியதே வாவுனது, தொப்பாரத்தின் கீழ் மயிர்." தொப்பாரம் - போர் வீரர் முடி. (தமிழ்நாவலர் சரிதை.)

**கச்யபர்**—அங்கனெனும் அரசன் பூமியைப் பிராம்மணருக்குத் தக்ஷிணையாகக் கொடுக்கப் பூமிதேவி வருந்திச் சத்யவுலகஞ்சென்றனள். உடனே கச்யபர் யோகபலத்தால் பூமியை முப்பதிணாயிரம் வருஷம் தாங்கினர். பின் பூதேவி கச்யபரிடம் பெண்ணாகிக் காச்யபி எனும் பெயர் பெற்றாள். (பா. அநுசா.)

**கச்யபர்** — காசிபரைக் காண்க.

**கச்யபன்**—பரிசஷித்து சாபநிவர்த்தி செய்ய வந்த விடகாரியாகிய வேதியன். கார்க்கோடகனால் வேண்டிய பொருள் தரப் பெற்று மீண்டவன்.

**கஞசக்கருவி** — தாளம், திருச்சின்னம், பூரி, எக்காளை, கௌரிகாளை, நபுரி, பாங்கா, பேய்த்தாரை, துத்தாரி, கோணக்கொம்பு முதலிய.

**கஞ்சமணி** — ஒரு விஷ்ணு பக்தன்.

**கஞ்சமலையமுனிவர்** — திருமூலர் மாணாக்கரில் ஒருவர்.

**கஞ்சிடபுரம்** — பெருங்கரையென்னு மூர்; கரிக்குருவி பூர்வஜன்ம புண்ணியத்தால் ஒரு மரத்தின்மீதிருந்து தனக்குப் பறவைகளா லுண்டாகும் துன்பத்தையும் அதனை மாற்றுதற்குரிய வழியையும் நினைத்துக் கொண்டிருந்த இடமாம். (திருவிளை புரா.)

**கஞ்சனூர் ஆழ்வார்** — இவர் ஒரு பாகவதர். இவர் இல்லறம் வழுவாது நடத்தினதால் தமக்கு இருபக்கத்திலும் இருந்த பதினான்கு வீடுகளுடன் பரமபதம்பெற்றவர்.

**கஞ்சன்** — 1. பிரமன், ஒரு கற்பத்தில் விஷ்ணுமூர்த்தியின் நாபிகமலத்திற் பிறந்ததினால் உண்டான பெயர்.

2. கம்சனைக் காண்க.

**கஞ்சா** — இது, ஒருவகை மயக்கந்தரும் பூண்டு. இது பலவகைப் பிளவுபட்ட இலைகளுள்ளதாய் 7, 8 அடிகள் உயர்ந்து வளருகிறது. இது பூத்து முற்றுகையில் இதனிலைகளைக் காம்புகளுடன் பறித்துப் பதப்படுத்துகின்றனர். இது மயக்கந்தரும் மூலிகை. இதனை யுண்டவர் போதை மிகுந்து பிதற்றுவர்.

**கஞ்சிகளுக்கு உபயோகமான பொருள்கள்**

1. **ஆரோருட் கிழங்கு**—(Arrow Root) இது தென் அமெரிகா நாட்டுப் பொருள். இதன் மா இச் செடியினடி வேரினால் செய்யப்படுகிறது. இவ்வேரினை நன்றாகச் சுத்தம் செய்து தண்ணீர் விட்டரைக்கின் பால்போல் வெண்மையாகிறது. அது உலரின் மாவாகிறது. இதன்வேர் அம்புபோல் காணப்படுதலின் இப் பெயரிடப்பட்டது.

2. **டாப்யோகா** — (Tapioca) இது அமெரிகாதேசத்து மாண்டியோக் அல்லது கஸாவா (Mandioc or Cassava plant) இது டர்னிப் கிழங்குபோல் உருவுள்ளது. இது ஒரு விதத்தில் ஆகாரமாயினும் இது விஷமுள்ள சத்தென இதன் வித்தை அம்பிற் தோய்த் தெய்வர்.

3. **சேகோ** — (Sago). இது கிழக்கு இந்திய தீவிலுண்டாம் பனை போன்ற மரத்தின் சோற்றியிலிருந்து செயப்படுகிறது. இது சிங்கப்பூரில் செய்யப்படுகிறது. ஜர்மனியில் உருளைக் கிழங்கிலும் இவ்விதமாகச் செய்யப்படுகிற தென்பர்.

4. **வெரமிசீல்லி, மாகரோணி** — என்பன கோதுமை மாவின் தடித்த கஞ்சியை அச்சில் ஊற்றியழுத்த உண்டாம் இருப்பை உலர்த்த உலர்ந்த பண்டம். இவை, இடலிதேசத்தவர் பிரியபோஜனம்.

**கடகபுரி** — கசபதி ராஜாக்களின் இராஜதானி.

**கடகன்**—ஓர் அசுரன். இந்திரனுடன் போர் செய்து தோற்றவன்.

**கடகாரன்** — சூத்திரப் பெண் வணிகனைக் கூடிப் பெற்ற பிள்ளை.

**கடந்தைவாணிப மகருஷி கோத்ரன்**—சிவமூர்த்தி திரிபுரதகனஞ் செய்த காலத்தில் விநாயகபூசைக்கு வேண்டிய கொடுத்து அருள் பெற்றவன்.

**கடம்** — ஒரு தேசம். அருச்சுனனால் இராஜசூயகாலத்தில் ஜெயிக்கப்பட்டது. **Katwa in the District of Burdwan.**

**கடம்பர்** — தமிழ் நாட்டுப் பழங்குடிகள். இப்பெயர் இப்பழங்குடியினர்க்கு இன்ன காரணத்தால் வந்ததென்று துணியக் கூட வில்லை. முருகவேட்குரிய கடம்பை வளர்த்து வந்தமையாற் "கடம்பர்" எனப் பெயர் பெற்றனர் போலும்.

**கடம்பனூர்ச்சாண்டிலியன்**—இவர் கடைச் சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவர் ஊர் கடம்பனூர். இவர் சாண்டிலிய குடியினராதலின் வேதியராக இருத்தல் கூடும். குறு - ௩௦௭.

**கடலுண்மாய்ந்த இளம் பெருவழுதி**—ஒரு பாண்டியன். (புற. நா).

**கடல்**—(எ) உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு கொண்ட நீர் நிலை.

**கடல்** — இது உலகைச் சூழ்ந்த நீர்ப்பரப்பு. இது பெரும்பாலும் உப்புநீர் கொண்டது. அவ்வாறிருப் பதற்குப் பல காரணங்கள் கூறுவர். உலகம் முதலில் அக்னிகோளமாக இருந்தது. அது வரவரக் குளிர்ந்து பூமியாக அதிலுள்ள உப்புச் சேர்ந்த பொருள் கரைந்து கலப்புற்றதெனவும், மலை மரம் பூமிகளுடன் இயற்கையில் சேர்ந்துள்ள உப்புகள் நெடுங்காலமாக ஆற்றினால் கொண்டு சேர்க்கப் படுதலாலும் என்பர். இதில் அலைகள், பூமியின் உருட்சியாலும் சந்திர சூரியர்களின் இயக்கத்தாலும் உண்டாகின்றன என்பர். இதின் ஏற்றவற்றங்கள் 6 - மணிக்கு ஒருமுறை யுண்டாம். இவ்வாறு உண்டாதற்குக் காரணம், சந்திரசூரியர்களின் ஆகர்ஷண சக்தியாம். அமாவாசை, பௌர்ணமி தினங்களில் சூரிய சந்திரரிருவருஞ் சேர்ந்து பூமியையும் ஜலத்தையும் இழுப்பதால் அதிகப் பெருக்கு உண்டாகிறது. பௌர்ணமியில் சந்திரன் பூமிக்குச் சமீபத்திலிருந்து சூரியனைக் காட்டிலும் $2\frac{1}{2}$-மடங்கு அதிகம் இழுப்பதால் கொந்தளிப்பு அதிகப்படுகிறது. அதாவது சூரியன் 2-மடங்கு இருந்தால் சந்திரன் 5-மடங்கிருக்கிறது. இது உப்பாயிருத்தற்குப் பூமியில் ஒரு வகை உப்பிருக்கிறது என்பர். இது, கப்பல் போக்கு வரவிற்கும் இரத்தினோற்பத்திக்கும், பலவித சலசரங்களின் பிறப்பிற்கும் இடமானது.

**கடல்நுரை**.—(Cuttle Fish). இது ஒரு பிராணி. இது, $1\frac{1}{2}$ அடி நீளம், இதற்கு மேற்பக்கமாக நீண்ட கம்பிபோல் பத்து உறுப்புக்கள் உள. வாய் குழல்போல் ஒவ்வொரு கைகளிலும் உண்டு. இது ஆகாரத்தைக் கம்பிபோன்ற உறுப்பால் பற்றி உறிஞ்சுகிறது. இதன் கண்கள் பெரியன. ஆசனம் மேல் பாகத்தில் இருக்கிறது. இது, தன்னை விரோதிகளிடமிருந்து காத்துக்கொள்ள ஆசனத்தினருகில் இருண்டமை போன்ற திரவப் பொருளைப் பெற்றிருக்கிறது. விரோதிகளைக் கண்டபோது அதனைப் பீச்சி வெருட்டுகிறது.

**கடல்படுமீவளம்**—"ஒர்க் கோலைசங்கம் ஒளி பவளம் வெண்முத்தம் நீர்ப்படு முத்தினோடைந்து."

**கடல்யானை** — இது யானைபோல் நீண்ட துதிக்கையை யுடையது. இந்துமகாசமுத்திரத்தில் உள்ளது. (Elephant Seal)

**கடவுண்மாட்டுக் கடவுட்பெண்டிர் நயந்த பக்கம்**—இமையாத கண்ணினையும் ஒளி விடும் ஆபரணத்தினையு முடைய தெய்வ மகளிர் ஆராத அன்புடைய கடவுளரை விரும்பியது. (பு. வெ. பாடாண்.)

**கடவுண்மாட்டு மானிடப்பெண்டிர் நயந்த பக்கம்**—மூன்று திருநயனத்தை யுடையானது புல்லுதலை விரும்பின மானிட மகளிர் கூறுபாட்டைச் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)

**கடவுண்மாமுனிவர்**--கச்சியப்பமுனிவர் காலத்திருந்தவர். இவர்தேகத்திற் பிணிகொண்டிருத்தலைக் கண்ட கச்சியப்ப முனிவர் இவரைத் திருவாதவூர்ப்புராணம் பாடச் செய்ய அதனைப் பாடி முடிக்கையில் ரோக நிவர்த்தி பெற்றவர். (திருவாதவூர்ப் புராணம்).

**கடவுளான்மநுஷிகோத்திரன்** — மகாராஜன் கையில் காளம்பெற்று மிக்க கீர்த்திபெற்ற வணிகன்.

**கடவுள்வாழ்த்து**—பூமியைக் காத்தல் கருதிய வீரக்கழல் வேந்தன் கை கூப்பும் அரி அயன் அரனென்னும் மூவருளொருவனை உயர்த்துச் சொல்லியது. (பு. வெ. பாடா)

**கடற்கன்னியர்** — கடலிலிருக்கும் தேவதைகள். இவர்கள் கடலோடிகளால் வணங்கப்படுவோர்.

**கடற்குதிரை** — இது, கடலில் வாழும் ஒரு வகைப் புழு. ஏறக்குறைய 7, 8 அங்குல நீளமுள்ளது. இப்புழுவின் தலை மாத்திரம் எல்லா விதத்திலும் குதிரையை ஒத்திருக்கிறது. உடல் கவசம் போன்ற செதிளால் மூடப்பட்டிருக்கிறது. வாய்குழல் போலி

ருக்கிறது. மீன்கள் போல் செவுள்களும் உண்டு. இது, தன் நீண்ட வாலால் கடற் பூண்டுகளைப் பற்றி நிமிர்ந்து நிற்கிறது. இது, தன் முட்டைகளைத் தன்னிடமிருக்கும் பைகளில் வைத்துக் காக்கின்றது. இதனை நாடாமீன் (Tape Fish) என்பர். இது நாடாபோன்று இரண்டு விரல் அகல முள்ளது.

**கடற்சிலந்தி** — இது, கடலிலுள்ள சிலந்தி இவற்றுள் பல பேதமுண்டு. இது எந்தக் கடற் பிராணிக்கும் அஞ்சுவதில்லை. மனிதர்களையும் தன் கைகளால் வலித்துக் கொள்ளும் வன்மையுள்ள சிலந்திகள் பல பஸிபிக் முதலிய மகா சமுத்திரங்களில் இருக்கின்றன என்பர்.

**கடற்பசு** — (Dugong) இது, ஒரு சிறிய திமிங்கிலம்போல்வது; எட்டுமுதல் பன்னிரண்டடி நீளமுள்ளது. கடற்பூண்டுகளைத் தின்று ஜீவிப்பது. இது, தன் குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்க்கும். இது, செங்கடல் ஆஸ்திரேலியா கடல்களில் இருக்கிறது.

**கடற்பஞ்சு** — இது ஒரு பூச்சியின் எலும்புக் கூடு. இதற்குக் கடற்பாசி, கடற்காளான் எனவும் பெயர். இந்தப் பூச்சி, மயிர்போன்ற தன்வாய்களால் ஜலத்திலிருந்து தான் சீரணித்துக்கொள்ளக் கூடிய கனப்பொருள்களைச் சேகரித்துத் தன்னுடலாகிய கடற்பஞ்சியைச் செய்கிறது. கடற்பஞ்சியிலுள்ள சிறு துவாரங்களெல்லாம் இப்பூச்சியின் வாய்களே. இப்பூச்சி கடலினடிப் பாகத்தில் பாறைகளில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. இதை எடுப்போர் கடலில் முழுகிக் கழுத்தில் கட்டிக்கொண்டுள்ள கூடையில் வாரி வருவர். இது உயிருடனிருக்கையில் மாமிசபாகம் வழுவழுப்பாயிருக்கும். இது தொளைப்பொருளாதலால் ஜலத்தை உறிஞ்சுகிறது. (Sponge.)

**கடற்பாம்புகள்** — கடலில் பல வகையான பாம்புகள் பல நிறமாகக் கடலில் நீந்தத் தக்க தட்டையான உடல்களைப் பெற்றிருக்கின்றன. அவற்றுள் பல (100) அடிகளுக்கு அதிகமான நீளமுள்ளனவாகவும், தக்க கனமுள்ளனவாகவும் இருக்கின்றன.

**கடன்** — சூடாலையைக் காண்க.

**கடன்கோடல்** — கொடுக்கல் வாங்கலின் தருமம். இது, ஈடின்றிக் கொடுத்தலும், முதற் பொருளுக்கும் வட்டிக்கும் தகுதியான ஈட்டின்மேற் கொடுத்தலுமாம். அக் கடனுனது பிணையையும், சாக்ஷியினையுமுடைத்தாய்ப் பத்திரத்தில் எழுதப் பட்டதாகவும் இருத்தல் வேண்டும். அவ் வீடு துய்ப்பீடு, காப்பீடு, காலவரையீடு, காலவரையிலீடும் என நான்கு வகைப் படும். **துய்ப்பீடு** - அனுபோகிக்கத் தக்கது. **காப்பீடாவது** - பாசன முதலானவற்றில் வைத்துக் காக்கத்தக்கது. **காலவரையீடாவது** - இன்ன காலத்தில் மீட்கப்படும் எனக் காலவரைகூறி வைப்பது. **காலவரையீடாவது** - மீட்டுக்கொள்ளுமளவும் உன்னிடம் இருக்கத்தக்கது என வைத்த பொருளாம்.

**கடிகாசதகம் அம்மாள்** — இவர் வேதாந்த தேசிகர் காலத்திலிருந்த பண்டிதர். ஸ்ரீ வைஷ்ணவர் பிரமதந்திர சுதந்திரஜீயர் திருவடிகளில் ஆச்ரயித்தவர். நடாதூர் பெரியம்மாளுக்குப் பௌத்திரர். சுதரிசனுசாரியருக்குப் புத்ரர். இவருக்குப் பல வித்துவான்கள் கொடுத்த நூறு சமுசைகளை ஒரு கடிகையில் முடித்துக்கொடுத்ததால் இப்பெயர் வந்தது.

**கடிகாரம்**—இது விநாடி, நாழிகை 24 மணி நேரம் முதலியவைகளைத் தெரிவிக்கும் நாழிகை அளவிடுங் கருவி. இது உருவில் பலவகைப்படும். இதில் ஒன்று முதல் பன்னிரண் டளவைகளுண்டு. இதில் சிறிதும் பெரிதுமாக இரண்டு முட்களுண்டு. சிறிது மணி காட்டும்; பெரிது விநாடி, நிமிடம் தெரிவிக்கும்.

**கடிகை**—செங்கல்பட்டு ஜில்லா ஷை தாலூகா பொய்யாமொழி மங்கலத்தில் இருந்த ஒரு தமிழ்ச்சங்கம். (திருகச்சூர் சா-ம்.)

**கடிகைமுத்துப்புலவர்** — திருநெல்வேலி ஜில்லா எட்டையபுரத்து வேங்கடேசுர எட்ட பூபதியின் சமத்தான வித்துவானுயிருந்து அந்தச் சிற்றரசன்மீது பல சாதுரியக் கவிகள்செய்தவர். கடிகையென்னும் தமிழ்ச் சங்கம் களத்தூர் கோட்டத்திருந்ததாகப்புலப்படுகிறது. இவர் அங்குக்கற்றவராயின் காலம் மாறுபடும். சமயம், சைவம், காலம். இற்றைக்கு இருநூறு வருடங்களுக்குமுன் என்பர். இவர் செய்தது காமரச மஞ்சரி, சமுத்திரவிலாசம். இது சிலேடையாய் இருபொருள்பட நிற்கும்.

**கடியநன்னியார்** — ஒரு தமிழ்ப் புலவர். கைக்கிளைச் சூத்திரம் செய்தவர். (யாப்பருங்கல விருத்தி) இவரைக் கடியநன்னியாரெனவுங் கூறுவர்.

**கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன்**—ஒரு சேரன், இவன் தன்னைப் பாடிய பாணர்க்கு உம்பர்காட்டு வருவரையையும் தன் மகன் குட்டுவன் சேரனையும் பரிசிலாகத் தந்தவன்.

**கடாசுரன்** — ஒட்டக உருக்கொண்டு விநாயகரைக் கொலை செய்யவந்து அவரால் இறந்தவன்.

**கடியநெடுவேட்டுவன்** — பெருந்தலைச் சாத்தனாரால் பாடப்பட்டவன். கோடை யென்னும் மலையாளி வேடர் தலைவன். கொடையாளி, தன்னைச் சார்ந்தார்க்கு உதவிசெய்து பகைவரை அழிப்பவன். (புறநா - 205.)

**கடியலூர் உருத்திரங்கண்ணனார்** — கரிகாற் சோழன்மீது பட்டினப்பாலைப் பாடிப் பரிசு பெற்றவர். (அக-நா.) (குறு-தொ.)

**கடுகம்**—(க) சுக்கு, திப்பிலி, மிளகு,இவை திரிகடுகம்.

**கடுகு** — சம்பாரப் பொருள்களில் ஒன்று. காரமும் தைலசத்தும் உள்ளபொருள். இது, குளிர்காலத்துப் பயிராம் பூண்டு. இது இந்தியாவில் கிருஷ்ணாநதிக் கிடையில் உள்ள தீவுகளில் பயிரிடப்படுகிறது. இதன் வித்து சிவந்த நிறமுடையது. இதில் வெள்ளைக் கடுகு, சிறுகடுகு, செங்கடுகு என வேறுபாடுண்டு.

**கடுகுபெருந்தேவன்** — கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவர்க்குப் பெருந்தேவன் என்பது பெயராகலாம். பாரதம் பாடிய பெருந்தேவனார் முதலியவரின் வேற்றுமை தோன்ற கடுகு என அடை புணர்த்தனர்போலும். (குறு-உ௫௫.)

**கடுக்காய்** — இந்திரன் அமிர்தபானஞ் செய்கையில் வாயினின்று துளித்த அமிர்தபிந்துக்களிலிருந்து உண்டான வீருக்ஷம். இது விசயன், அரோகிணி, பிரிதிவி, அமிர்தம், சிவந்தி, திரிவிருத்தி, அபயன், கருங்கடுக்காய், செங்கடுக்காய், வரிக்கடுக்காய், பால்கடுக்காய் எனப் பலவகைப் பட்டுப் பல நற்குணங்களைத் தரும்.

**கடுங்கோன்**—தலைச்சங்க மிருத்திய பாண்டியர்களில் இறுதியானவன்.

**கடுந்தொண்டைக்காவினர்** — கடைச்சங்க மருவிய புலவர். இவர் பாடிய "பல்லிதழ்" எனும் பாலைச் செய்யுளில் இவர் காட்டுத் தலைவனை நாட்டுத் தலைவன் பெயராற் கூறினாரென்பர் நச்சர். (அக - நா.)

**கடுந்தோட் கரவீரன்**—இவர் குறுந்தொகையில் ஆண் குரங்கு இறந்ததெனப் பெண் தானும் இறந்தது. அத்தகைய குறிஞ்சித் தலைவ, நீ களவொழுக்கம் கொண்டனை யெனப் பாடியவர். (குறு - கூக.)

**கடுவனிளமள்ளனார்** — இவரே அகத்தில் மதுரைத் தமிழ்க்கூத்தன் கடுவனிள மள்ளனார் எனவும், கடுவன் மள்ளனாரெனவும் கூறப்படுவர். இவர் இயற்பெயர் மள்ளன். கடுவன் இளவெயினனார் எனப் பரிபாடலில் ஒருவர் பெயர் காணப்படுதலால் கடுவன் என அடைபுணர்த்தினர். கடுவன் என்பது ஒரூரின் பெயர் போலும். அக்காலத்துத் தமிழியற்பாடிக் கூத்தாடும் தொழிலுடைமையாலே தமிழ்க்கூத்தனெனவும், மதுரையில் வந்து தங்கியதனால் மதுரை தமிழ்க் கூத்தன் கடுவனிள மள்ளனெனப்பட்டாரெனவும் கொள்க. பாண்டியன்மாறன்வழுதியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் நற்- கடுo. இராமபிரான் தென் கடற்கரையகத்துக் கடலடைக்க வேண்டிச் சூழ்ச்சிசெய்த கதையொன்றனை யமைத்துக் காட்டுகிறார். அகம் எo. முல்லை, குறிஞ்சி, மருத முதலிய திணைகளைச் சிறப்பித்துப் பாடியவர். இவர் பாடியனவாக நற்றிணையில் கடுo - வது பாடலொன்றும் குறுந்தொகையி லொன்றும் அகத்தில் இரண்டுமாக நான்கு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**கடுவனிளவெயினனார்** — இவர் பரிபாடலில் மூன்று பாடல்களில் திருமாலையும் முருகக் கடவுளையும் புகழ்ந்திருக்கின்றனர். இவர் பெயரை நோக்குமிடத்து இவர் குறிஞ்சி நிலத்தவர் எனத் தோற்றுகிறது. (பரிபாடல்.)

**கடுவெளிச்சித்தர்** — ஒரு சித்தர். இவர் தம் ஆன்மாநுபவத்தைப் பிறருமறிந்து அவ்வழி நடந்து சீர்பெறப் பிரபஞ்சத்தைச் சுத்த வெளியென்று கண்டு இப் பெயர் அடைந்தவர்போற் றெரிகிறது. இவர் செய்தநூல் கடுவெளிச்சித்தர் பாடல்.

**கடைச்சங்கம்**—உத்தரமாமதுரையிலாண்ட முடத்திருமாறன் நாடு (கஉ) வருடம் வற்கடமாயிற்று, பின்பு மழை பெய்தது. அதற்குப் பிறகு தம்மிடமிருந்து சென்ற புலவரை ஒன்று சேர்த்துச் சங்கமிருத்தினன். அக்காலத்துச் சங்கமிருந்து தடிப்பூராயந்தார், சிறுமேதாவியார், சேந்தம் பூதனார், அறிவுடையானார், பெருங்குன்

ணர்க்கிழார், இளந்திருமாறன், மதுரையா சிரியர் நல்லந்துவனர், மருதனிளநாகனர், நக்கீரனர் முதலிய (சக) பெயர். இவரை யுள்ளிட்டு (சசக) புலவர்கள் பாடினர். இவர்கள் பாடிய நூல்கள் நெடுந்தொகை-ச00, குறுந்தொகை-ச00, நற்றிணை-ச00, ஐங்குறு - க00, பதிற்றுப்பத்து, நூற் றைம்பது கவி, எழுபது பரிபாடல், கூத் து, வரி, பேரிசை, சிற்றிசை முதலியன. சங்கமிருத்தியவர் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி யீருக (சக) பெயர். இச் சங்கம் (கஅகூ0) வருஷமிருந்தது. இதில் மூவர் பாண்டியர்கள் பாடினர்கள்.

**கடைப்படுதானம்** — (எ) ஆர்வம், புகழ், அச்சம், கைம்மாறு, காரணம், கண்ணேட் டம், கடைப்பாடுபெற்றிச் செய்வது.

**கடையம்** — வாணசுரன் வடக்கு வாயிலில் உள்ள வயலில் நின்று இந்திராணி ஆடிய கூத்து.

**கடையர்** — பரவர் குலத்தைச் சேர்ந்த ஒரு ஜாதி. இவர்கள் சுண்ணும்புக் கிளிஞ்சல் சுடல்முத்துக் குளித்தல் முதலிய தொ ழில் செய்து வாழ்வர். இப்பெயர் தென் ஞட்டில் இராமேச்சுர முதலிய இடங் களில் வழங்கி வருகிறது.

**கடோர்க்கசன்** — இடும்பிக்கு வீமனிடம் பிறந்தவன். ஆகாயவாணியால் பெயரி டப் பெற்றவன். விபீஷணரிடஞ் சென்று கப்பம் வாங்கினவன். மகாமாயாவி, கர்ண ஞல் பதினலாம் போரில் கொல்லப்பட் டான். இவன் குமரன் அஞ்சனவர்மன். (பாரதம்.)

**கடோற்காதித்தன்**—இந்திரனது வெள்ளைக் குதிரைக்கு மறுவென்ற கத்துரு, குமரரை நோக்கிக் குதிரைக்குக் கறுப்பாக்குக என, அவர்கள் மறுத்ததனல் நீங்கள் கருடனு க்கு இரையாகுக என்று சபித்துத் தெய்வ வுலகஞ் சென்றனள். செல்லுகையில் சூரியன் அதிவெப்பங் கொண்டதால் கடோற்கமெனச் சூரியனுக்கு இப் பெயர் வந்தது. (காசி.)

**கட்கதரன்** — பிரகத்பாநுவின் குமரன். இவன் குமரன் சுபாலன்.

**கட்காஞ்சீ**—மதுமிகும் கமழு மாலையோன் தறுகணளர்க்கு மதுவைக் கொடுத்தது. (பு. வெ.)

**கட்சீவதன்**—இவன் தவத்தால் ஞானியான வன். (வீரசிங்.)

**கட்சீவான்** — சண்டகோசிகர் தந்தை.

**கட்டளைக்கலித்துறை**—முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாது நிற்பக் கடை யொரு சீர்விளங்காயாகிவரும் ஐஞ்சீரடி நான்கு கொண்டுவருவது.

**கட்டளைக்கலிப்பா** — முதலில் மாச்சீர்பெ ற்று, நான்குசீரான் வருவது அரையடியாக வும், அது இரட்டிகொண்ட தோரடியாக வும். அவ்வடி நான்கு கொண்டுவருவது.

**கட்டாபர்சா** — இது ரப்பர் மரத்தைப்போ ன்ற மரத்தின் பால். இந்த மரம் மலேயா நாட்டில் வளர்கிறது. கட்டாபிசின், பர்சா என்பது மரம். இதன்பாலை ரப்பர் சேக ரிப்பதுபோல எடுப்பர், இது காற்று பட்டவுடன் கறுத்துப்போகிறது. இதனை வெந்நீரிலிட்டு அழுக்கு நீக்குவர்.

**கட்டியங்காரன்** — சச்சந்தனுக்கு மந்திரி.

**கட்டில்**—நித்திரை செய்தற்கு நான்கு கால் களமைத்துப் பலகையால் யாக்கப்பட்ட பீடம். இதன்மீது அணைகள் கொட்டை கள் பரப்பி யுறங்குவர்.

**கட்டுநெல்லூர்** — பாண்டியன் மேகங்களைப பிடித்துக் கட்டிய இடம். இஃது இருஞ் சிறைக்குச் சமீபமானது. (திருவிளையா டல்.)

**கட்டுப்பிடித்தல்** — அறிவில்லாப் பெண்க ளைக் கிழவிகளில் சிலர் மய்க்கி மெழுகிக் கோலமிட்டுச் சாணியில் நீர் நிறைந்த சொம்பை யழுத்தித் தூபதீப ஆராதனதி கள்செய்வித்துக் குறைகேட்கும்தொழில்.

**கட்வாங்கன்** — (சூ.) விச்வகன் குமரன். தீர்க்கபாகுவின் தந்தை. இவன் ஒரு கால த்துத் தேவாசுரயுத்தத்தில் தேவர்களுக்கு உதவி புரிந்தனன். தேவர் களித்து உன க்கு என்ன வேண்டுமென அரசன் என க்கு ஆயுள் தருக என்று கேட்டனன். தேவர் உனக்கு இன்னம் ஒருமுகூர்த்தமே யென்ன இவன் உண்மைப்பொருளை நாடி முத்தி யடைந்தனன். (பாகவதம்.)

**கணக்கதிகாரம்** — சில அரிய கணிதசூத்தி ரங்களை விளக்கும் நூல் காரியால் செய் யப்பட்டது.

**கணக்கர்** — பிராமணனுக்கும் அரச கன்னி கைக்கும் பிறந்தவர்கள். இவர்கள் தொழி ல் இராசசபையில் கணக்கெழுதி வாசிப் பது. இவர்கள் தென் ஆற்காடு வட ஆற்காடு செங்கல்பட்டு ஜில்லாக்களில் கிராமக் கணக்கெழுதும் தொழில் மேற் கொண்டவர்கள். இவர்கள் சீர்கணக்கர், சரட்டுக்கணக்கர், கைகாட்டி, சோழியர்

என நால்வகையர். இவர்கள் தங்களை க்ஷத்ரியர் என்பர். பூணூல் தரிப்பர். சிலர் மாம்சபக்ஷணஞ் செய்யார். பெரும்பாலார் சைவர். சிலர் வைணவரா யிருக்கலாம். சில குசவரும் கணக்கு வகையில் சேர்ந்தவர் என்பர். குசக்கணக்கு. (தர்ஸ்டன்) (அருணகிரி புராணம்.)

**கணக்காயனர்**—தமிழரிச்சுவடிக்குத் தமிழ் கணக்கென்றும் நெடுங் கணக்கென்றும் பெயருண்டு. ஆயம்கூட்டம்; கூட்டமாகப் பிள்ளைகளைச் சேர்த்துவைத்துத் தமிழ்க் கணக்கைப் பயிற்றுவித்தலால் உபாத்தியர் கணக்காயரெனப்பட்டார். அங்ஙனமே இவரும் பிள்ளைகளுக்கு உபாத்தியாயரா யிருந்தமையிற் கணக்காயனர் எனப்பட்டார். குறுந்தொகை. ௩௦௪-ம் பாட்டிற் கீழ்க்கணக்காயன் தத்தன் என்றெழுதியிருத்தலால் இவரது இயற்பெயர் தத்தனென்பதே. கூரை கணக்காயனென்று அகத்தில் காணப்படுகிறது. மதுரை யென்பதில் மகரம் செல்லரித்துவிட எஞ்சியது உரையென்பது பொருள் பயவாமையால் துரையைக் கூறை என்று திருத்தியெழுதியிருக்கலாம். இங்ஙனம்வெடெழுதுவோரால் மதுரை என்பது கூரை யென்ருயிற்று. இவர் நக்கீரனுர்க்குத் தந்தையாரென்னும் பதவிவாய்ந்தவர். குறிஞ்சி, நெய்தல் வளங்களைச் சிறப்பித்துப்பாடியுள்ளார், வேங்கடமலையையும், பாண்டியாது கொற்கையின் முத்துகளையும் புகழ்ந்து கூறியுள்ளார். அகம் உஎ. பாண்டியரது பொதியில் மலையும் சேரமானது கொல்லி மலையும் சோழரது காவிரியும் இவராற் பாராட்டப்பட்டுள்ளன. அகம் ௩௩௮ எறியீட்டிவீசித் திமிங்கிலத்தைப் பிடிப்பது இவர் பாடலில் கூறபட்டுள்ளது. குறு-௩௦௪. இவர் பாடியனவாக நற்றிணையில் உ௩-ம் பாடலொன்றும், குறுந்தொகையி லொன்றும் அகத்தில் மூன்றும் புறத்தி லொன்றுமாக ஆறுபாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**கணங்கள் (௧அ)** — அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், யக்ஷர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாசவாசிகள், போகபூமியர்.

**கணதாசுவாமிகள்** — சைநதீர்த்தங்காரருள் ஒருவர்.

**கணதார்** — அருகசமயத்து வித்வான்களில் ஒருவர், நிகண்டாசிரியர்.

**கணநாதநாயனர்** — சீர்காழியில் பிராமண குலத்துதித்துச் சிவநேச முன்னவராய்ச் சிவத்தொண்டு புரிவோருக்கு உதவிசெய்து திருஞானசம்பந்தமூர்த்திகளை ஆராதித்துத் திருக்கைலை யடைந்தவர். (பெ-புரா.)

**கணபங்கம் நால்வகை**—1. கெட்டெளத்தித்தல், 2. கெட்டுக்ஷயித்தல், கெட்டொத்து நிற்றல், கெட்டுக்கெட்டே போதல். (பௌத்தம்).

**கணபதி** — செந்தாமரைக் கமலத்தில் பதுமாசனராய், நான்கு திருக்கரங்களிலும் யானைக் கொம்பு, பாசம், அங்குசம், மாம்பழம் உடையவர். பிரதமமகா சிருட்டியில் சிவமூர்த்தியின் திருக்கண்டத்து உதித்தவர். தேவர் முதலியவர்க்குத் தலைவராக முடிசூட்டப் பட்டவர். அகத்தியாது கமண்டலத்தி லிருந்த காவிரியை இந்திரன் வேண்டுகோளால் காகவுருக்கொண்டு சாய்த்து அகத்தியர் காணப் பிரமசாரியாய் நீங்க முனிவர் கோபித்துப் பற்றவெண்ணுகையில் அகப்படாது நீங்கித் தமது உருவை வெளிப்படுத்தி அவருக்கு முன்னையபோல் அவரது கமண்டலத்தில் நீர் அளித்துக் கடாக்ஷித்தவர். குமாரக்கடவுள் பொருட்டு வள்ளிநாயகியை அச்சுறுத்த யானை வடிவுகொண்டு சென்றவர். இவரது உற்பத்தி கஜமுகரைக் காண்க. இவர் சிந்தாமணி விநாயகர், கபில விநாயகர், சுமுகர், விக்னராசர், மல்லாலர், மயூரேசர் என்னும் பல பெயருற்றவர். இவரை இந்திரன், விஷ்ணு, பிரமன், தக்கன், வீமன், உமை, கர்த்தமன், கனன், சந்திராங்கதன், மன்மதன், ஆதிசேடன், புருசுண்டி அங்காரகன், சந்திரன், க்ஷிப்பிரப் பிரசாதன், கிருத வீரியன், சூரசேனன், பரசுராமன், இராவணன், அகத்தியன், காசிபன் முதலியவர் பூசித்து இட்டசித்தி பெற்றனர். இவரால் கொல்லப்பட்ட அசுரர் சரித்திரங்களைத் தனித்தனி காண்க. சிவமூர்த்தி திரிபுரம் எரிக்கத்தொடங்கிய காலத்தில் இவரைத் துதிக்காததால் அச்சு முரிந்ததெனவும் இவரைத் தேவர் பூசித்த பிறகு இரதம் செம்மையுற்று நின்றதெனவும் புராணங்கள் கூறும். இவரே பிரபஞ்ச கர்த்தா எனவும் இவரது இச்சாகிரியா சத்திகள் சித்திபுத்திகள் எனவும் காணபத்தியமதம் கூறும்.

**கணபதிதானம்** — நூறு கழஞ்சுபொன்னில் கணபதியின் திருவுருவிதிப்படி செய்வித்து

வித்தியேசுரர், திக்குபபாலகர் இவர்களுக்கு நடுவில் சிவலிங்கம் தாபித்துப் பூசித்து எட்டுக் குண்டமியற்றி அக்கினி காரியஞ் செய்து எழுவர் பிராமணஸ்திரீகளை யவர்கள் புருடருடன் பூசித்து ஆடையணி முதலியன கொடுத்துப் பிராமணர்க்குத் தானஞ் செய்வதாம்.

**கணபதிதாசன்** — நெஞ்சறி விளக்கம் செய்தவன் ஐக்கவாதி.

**கணம்புல்லநாயனர்** — இருக்குவேளூரில் திருவவதரித்துச் சிவாலயத்துள் தீபத்திருப்பணி செய்துவரு நாட்களில் செல்வங் குறைந்தமையினல் சிதம்பரஞ் சென்று புலீச்சரத்தில் எஞ்சிய பொருண் முதலியவைகளை விற்றுத் தீபத்திருப்பணிசெய்து வருகையில் பொருள் முட்டுப் பட்டது. அதனல் கணம்புல்லரிந்து விற்றுத் திருப்பணி செய்து வந்தனர். ஒருநாள் அந்தப் புல்லும் விலையாகாமை கண்டு அந்தப் புல்லையே தீபமாக எரித்து அது போதாமையினல் தமது சிகையை எரிக்கச் சிவமூர்த்தி கருணைகூர்ந்து முத்திதரப் பெற்றவர். (பெரிய புராணம்.)

**கணம்** — (அ) நிலம், தீ, நீர், மதி, இயமானன், சூரியன், வாயு, ஆகாயம். இவற்றுள் முன்னைய நான்கு நன்று. பின்னைய நான்கும் கலகம். நிரை நிரை நிரை நிலக்கணம், நேர்நிரை நிரை நீர்க்கணம், நிரை நேர் நேர் மதிக்கணம், நேர் நேர் நேர் உயிர்க்கணம், நேர் நிரை நேர் ரவிக்கணம், நிரை நேர் நிரை தீக்கணம், நேர் நேர் நிரை வளிக்கணம், நிரை நிரை நேர் வெளிக்கணம்.

**கணவாய்** — இரண்டு மலைகள் இணைந்திருக்கும் பாகத்தில் மனிதர் போக்குவரவு செய்யப்பாதைகள்வற்பட்டு இருப்பதும் உண்டு. அந்தப் பாதைக்குக் கணவாய் என்று பெயர். (பூகோளம்).

**கணரோகம்**—இது பிள்ளைகளுக்குஉண்டாம் ரோகங்களி லொன்று. தாயால் கெடுதியடைந்த முலைப்பாலால் உண்டாம் ரோகம் இது, மார்பில் வீக்கம், உட்சுரம், சுடுகை, வறண்டமலம் உண்டாக்கும். இந்தக் கணம், சூலிகணம், முக்குகணம், ஆமகணம், தேரைக்கணம், மகாகணம், சுழிகணம், வறள்கணம் என (அ) வகை.

**கணன்** — அபிசித் என்பவனும் அவன் பாரி குணவதியும் தவஞ்செய்து புத்திரப்பேறு பெற வரம்பெற்று மீளுகையில் அவ்விடந் தவஞ் செய்துகொண்டிருந்த பிரமதேவருக்குக் காமநினைவு உண்டாகிச் சரச்வதியுடன் கூடவருகையில் அவள் அஞ்சி நீங்கினள். அவ்வீரியம் ஜலத்தில் வீழ்ந்தது. இதனைத் தாகத்தால் வருந்திச் செல்லும் முற்கூறிய தம்பதிகள் குடிக்க அதனல் கணன் பிறந்தனன். இக் கணன், ஒருநாள் வேட்டைக்குச் சென்று இளைப்படைந்து கபிலமுனிவ ராச்சிரமம் வந்தனன். முனிவர் தாம் பெற்றிருந்த சிந்தாமணியின் வலிமையால் இவனுக்கும் இவன் சேனைகளுக்கும் உணவளித்தனர். இச்சிந்தாமணியின் பெருமையை அறிந்த அரசன் வலிதில் அதைக் கவர்ந்து செல்ல முனிவர் விநாயகரிடம் முறையிட்டனர். விநாயகர் முனிவருக்கு அபயந் தந்தனர். தனக்கு விநாயகரால் கேடுவருதல் உணர்ந்து அரசன் முனிவரைக் கொலை செய்ய வர விநாயகர் கணனைக் கொன்று முனிவர் வேண்ட அந்த மணியைத் தாமே அணிந்து **சிந்தாமணி விநாயகரெனப்** பெயர் அமைந்தவர். இவர்க்குக் கபிலர் எனவும், சுமுகர் எனவும் பெயர்.

2. காசிபருக்கு முனி என்பவளிடத்துப் பிறந்த குமரன்.

**கணாதர்** — தர்க்கசாஸ்திரம் இயற்றிய ஓர் இருடி. இவர்க்குக் கணாதரர் எனவும் பெயர். இவர் வைசேடிக மதாசாரியர். நொய்யைப் புசித்ததா லிவர்க்கு இப்பெயர் வந்தது.

**கணாதிபர்** — ஒரு காலத்திற் பார்வதியார் தனித்திருக்கையில் சிவமூர்த்தி துவார பாலகர் தடுக்கவும் அந்தப்புரஞ் சென்றதால் பார்வதியார் தம்முடையவனு யொரு காவல்நிருமிக்க எண்ணித் தமதுடம்பின் அழுக்கைத் திரட்டிச் சிவமூர்த்தியைத் தியானித்து யானை முகத்துடன் பிரணவாகாரமாய் ஒரு புத்ரனைச் சிருட்டித்துக் கையில் ஓர் தண்டங்கொடுத்துத் துவாரத்தி லிருத்தினர். இவர் தேவாதியரை வெற்றிபெற்றுப் பின் சிவபெருமானல் கணாதிபத்யமும் எல்லாத் தேவர்களுக்கு முதலில் பூசிக்கும் பெருமையும் பெற்றனர். சிவபெருமான், கணபதிக்கும் குமாரக்கடவுளுக்கும் திருமணமுடிக்க வேண்டி உங்களிருவரில் எவன் பூப்பிரதக்ஷணம் முதலில் வருவானே அவனுக்கு முதலில் மணவினையெனக், கந்தமூர்த்தி பூப்பிரதக்ஷணத்தின் பொருட்டு முன்சென்றனர்.

கணபதியோ ஸ்நானமுடித்துத் தாய்தந்தைய ரிருவரையும் ஏழுமுறை வலம்வந்து முன்னின்று உங்களையன்றி வேறு உலகங் கண்டிலேனென்றனர். இதனால் களிப்படைந்த தாய்தந்தையர் கணபதிக்குச் சித்தி, புத்திகளை மணஞ்செய்விக்க அவர்களிடம் லாபன், லக்ஷன் எனும் இரண்டு குமாரர்களைக் கணபதி பெற்றனர். (சிவமகாபுராணம்).

**கணிகண்ணன்** — இவரது தந்தையார் திருமழிசை ஆழ்வாருக்குப் பால் கொடுத்து மிகுந்த சேஷத்தைத் தமது மனைவியாருக்குக் கொடுத்ததால் பிறந்தவர். இவர்க்குக் கணிகிருஷ்ணர் எனவும் பெயர். இவரை அரசன் நாட்டைவிட்டு அகலச் சொன்னதால் இவர் ஆழ்வாருக்குத் தெரிவிக்க ஆழ்வார் பெருமாளுக்கு "கணிகண்ணன் போயகன்றான் காமருபூங்கச்சி, மணிவண்ணா நீ யிங்கிராதே - துணிவுடனே, செந்நாப் புலவனிதோ செல்லுகின்றேன் நீயுமுன்றன், பைந்நாகப்பாய் சுருட்டிக்கொள்" எனக் கூறினர். அதனால் பெருமாள் காஞ்சி விட்டகன்றனர். இவரது மற்றச் சரித்திரங்களைத் திருமழிசை யாழ்வாரைக் காண்க.

**கணிகன்**—திருதராட்டிரனுக்குத் தர்ப்புத்தி போதித்த மந்திரி பிராம்மணன். இவனுக்கு வேறு பெயர் குலிங்கன்.

**கணிகிருஷ்ணன்** — கணிகண்ணனுக்கு ஒரு பெயர்.

**கணிச்சி** — அதிகாயன் யுத்தத்தில் இலக்ஷ்மணரால் கொல்லப்பட்ட அரக்கன்.

**கணிதவகை** — இது ஆரிய சூத்திரத்தில் அஞ்சனம், புவனதீபம், கணிதரத்நம் முதலிய கணக்கு அடைவுகளைக் கொண்டு விளங்கும். தமிழில் ஏரம்பம், கிளராலயம், அதிசாகரம், கலம்பகம், திரிபுவன திலகம், கணிதரத்நம் முதலிய நூல்களிலுங்கூறப்படும். அக்கணிதம் எண், பொன், மண், நெல் முதலியவற்றை அளக்கு முறையும், நுட்பமும், பலவகைக் கணிதமுங் கூறும். அதில் **எண்ணறிதலாவது** இம்மி (௰௧) கொண்டது கீழ்முந்திரை. கீழ்முந்திரை (௩௨௦) கொண்டது மேல்முந்திரை. மேல்முந்திரை (௩௨௦) கொண்டது ஒன்று. பின்னும் முந்திரை (௨) கொண்டது அரைக்காணி. அரைக்காணி (௨) கொண்டது காணி. காணி (௪) கொண்டது (ப). (ப)—(௫) கொண்டது (வ). (வ)—(௪) கொண்டது (௧) **நுட்பமறிதல்.** சின்னம் பத்துக்கொண்டது நுண்மை - முந்திரை. நுண்மை - முந்திரை மூன்று கொண்டது இம்மி - முந்திரை. இம்மி - முந்திரை பத்தரைகொண்டது கீழ் - முந்திரை. கீழ் - முந்திரை ௩௨௦ கொண்டது மேல் - முந்திரை. மேல் - முந்திரை ௩௨௦ கொண்டது (௧). **கழஞ்சு வருமாறு** தனி, நெல் எடை, வீசம் எனக் கொண்டு, வீசம் (௨) கொண்டது பிறவு. பிறவு (௨) கொண்டது குன்றி. குன்றி (௨) கொண்டது மஞ்சாடி. மஞ்சாடி (௫) கொண்டது கால் கழஞ்சு. கால்கழஞ்சு நான்கு கொண்டது ஒரு கழஞ்சு. **எடை அறிதல்,** கழஞ்சு (௨) கொண்டது கைசா. கைசா (௪) கொண்டது பலம். பலம் ௱) கொண்டது நிறை. நிறை (௨) கொண்டது துலாம். துலாம் (௩௨) கொண்டது பாரம். **வைக்கோல் நிறை அறிதல்**—கல்லே யிருதூணி நெற்பாரம் ஒரு வைக்கோற்கட்டு, கல்லே தூணி உப்பின்பாரம் ஒரு புற்கட்டு என்றும் கூறுப. **நாழிகை வட்டில் அறிதல்** - வன்செம்பு பத்துப் பலமாகிய செம்பு வட்டிற்கொட்டும் இடத்து, மட்டு (௬) விரல், விட்டம் (௧௨) விரல், இப்படி கொட்டின வட்டிலுக்குத் துவாரம்விடுகிறதற்கு (௩௬) மாப்பொன்னாலே நான்கு விரலளவு ஊசி செய்து அந்த ஊசியால் துவாரம் இட்டு, அந்தத் துவார வழியால் நீர் புகுந்து வட்டிலை முழுகச்செயின் ஒரு நாழிகையாம். **பூப்பிரமாணம் அறிதல்** - அணு (௮) கொண்டது கதிரெழுதுகள். கதிரெழுதுகள் (௮) கொண்டது பஞ்சிற்றுகள். பஞ்சிற்றுகள் (௮) கொண்டது மயிர்முனை. மயிர்முனை (௮) கொண்டது நுண்மணல். நுண்மணல் (௮) கொண்டது சிறுகடுகு. சிறுகடுகு (௮) கொண்டது எள்ளு. எள்ளு (௮) கொண்டது நெல். நெல் (௮) கொண்டது விரல். விரல் (௧௨) கொண்டது சாண். சாண் (௨) கொண்டது முழம். முழம் (௧௨) கொண்டது சிறுகோல். சிறுகோல் (௪) கொண்டது கோல். கோல் (௫௬) கொண்டது கூப்பிடு. கூப்பிடு (௪) கொண்டது காதம். காதம் (௪) கொண்டது யோசனை. யோசனை (௱௫ இரு) கொண்டது ஆதித்தன் இயக்க மண்டலம். அதை இரட்டிக்கச்சந்திரமண்டலம். அதை இரட்டிக்கநக்ஷத்திரமண்டலம்எனஉணர்க. **கடலளவறிதல்** - லவண சமுத்திரம் இதன்

குறவட்டம் லக்ஷம் யோசனை. இது சம்புத்தீவினைச் சூழும். இதற்கு அப்பால் கருப்பஞ் சாற்றுக்கடல். இது இரண்டு லக்ஷம் யோசனை. இது சான்மலித் தீவினைச் சூழ்ந்திருக்கும். இதற்கப்பால் மது சமுத்திரம். இது நான்குலக்ஷம் யோசனை. இது பிலக்ஷத்தீவினைச் சூழ்ந்திருக்கும். இதற்கு அப்பால் நெய்க்கடல். இது எட்டுலக்ஷம்யோசனை. இது கிரௌஞ்சத் தீவினைச் சூழ்ந்திருக்கும். இதற்கு அப்பால் தயிர்க்கடல். இதுபதினறு லக்ஷம் யோசனை. இது குசத்தீவினைச் சூழ்ந்திருக்கும். அதற்கு அப்பால் பாற்கடல். இது முப்பத்திரண்டு லக்ஷம் யோசனை. இது சாகத்தீவினைச் சூழ்ந்திருக்கும். இதற்கு அப்பால் சுத்தஜலம். இது அறுபத்துநான்குலக்ஷம் யோசனை. இது புட்கரத்தீவினைச் சூழ்ந்திருக்கும். இதற்கு அப்பால் சக்கிரவாளகிரி. **நெல்லளவறிதல்**-செவிடு (௫) கொண்டது ஆழாக்கு. ஆழாக்கு (௨) கொண்டது உழக்கு. உழக்கு (௪) கொண்டது நாழி. நாழி (௮) கொண்டது குறுணி. குறுணி (௪) கொண்டது தூணி. தூணி (௩) கொண்டது கலம். பாண்டிநாட்டிலும், மற்றைய நாடுகளிலும் இந்நெல்லளவை வேறுபடும். **நாழிகை அறிதல்** — கண்ணிமை இரண்டு கொண்டது கைந்நொடி. கைந்நொடி இரண்டு கொண்டது மாத்திரை. மாத்திரை இரண்டு கொண்டது குரு. குரு இரண்டு கொண்டது உயிர். உயிர் ஆறு கொண்டது க்ஷணிகம். க்ஷணிகம் (௧௨) கொண்டது விநாடி. விநாடி (௬0) கொண்டது நாழிகை. நாழிகை (௭½) கொண்டது ஜாமம். ஜாமம் (௪) கொண்டது பொழுது. பொழுது (௧) கொண்டது நாள். நாள் (௩0) கொண்டது மாதம், மாதம் (௰௨) கொண்டது வருடம். இனி வருட அளவை இத்துணை கொண்டது யுகம் என்பது முதலியவற்றை யுகபரிமாணத்தில் அறிக. இனி **தொகை அறிதலாவது**—ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், லக்ஷம், பத்துலக்ஷம், கோடி இவை ஒன்றிற்கு ஒன்று பதின்மடங்கு மேற்பட்டவை. இக்கோடி (௰௱ ௲ ௰) கொண்டது மகாகோடி. அது அவ்வளவு கொண்டது சங்கம். அவ்வகைக் கணக்கு ஒவ்வொன்றிற்கும் கொள்க. மகாசங்கம், விந்தம், மகாவிந்தம், சமுத்திரம், மகாசமுத்திரம், வெள்ளம், மகாவெள்ளம், பிரளயம், மகாப்பிரளயம், யோசனை, மகாயோசனை, கற்பம், மகாகற்பம், விகற்பம், மகாவிகற்பம், மாகம், மகாமாகம், தன்மனை, மகாதன்மனை, அற்புதம், மகாஅற்புதம், உற்பலம், மகா உற்பலம், வேணு, மகாவேணு, சலஞ்சலம், மகாசலஞ்சலம், மந்தாரை, மகாமந்தாரை, மேரு, மகாமேரு, வலம்புரி மகாவலம்புரி எனத் தொகை கொள்வர். **மணியளவறிதல்** பச்சைரதி 1-க்கு வராகன் எடைவீசம். கோடி 1-க்கு கெம்பு 20. முத்து 1-க்குப் பணவெடை முக்காலேயரைக் கால். பவழம் கழஞ்சு 1-க்கு பணவெடை ௰. ரவை மஞ்சாடி 1-க்கு பணவெடை முக்காலே யரைக்கால். பாக்கு ஆயிரங்கொண்டது கலசம். பாக்கு (௨௰௲) கொண்டது அம்மணம். பாக்கு (௱௲) கொண்டது அலகு என்பர். இக்கணிதம், பீஜகணிதம், க்ஷேத்திரகணிதம், அங்ககணிதம் என மூவகைப்பட்டுப் பல பேதங்களாக ஆன்றோராற் கூறப்பட்டு இருக்கின்றது. பின்னும் இக்கணிதம் சங்கலிதம், விபகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம். கனம், கனமூலம் என எண்வகைப்பட்டு வழங்கும். சங்கலிதம், கூட்டல், விபகலிதம், கழித்தல், குணனம், பெருக்கல், பாகாரம், பங்கிடல், வர்க்கம் சமமாகிய இரண்டு எண்ணின் பெருக்கம். கனம் சமமாகிய மூவெண்ணின் பெருக்கம். கனமூலம் அக்கனத் தொகுதியின் நின்றதன் மூலமாகிய ஒரு மூலை அறிதல்.

**கணிதனார் சீறியாழ்வான்** — எழுபத்தி ஞன்கு சிங்காசனாதிபதிகளில் ஒருவராகிய வைணவாசிரியர். (குருபரம்பரை).

**கணிபுன்குன்றனூர்** — நற்றிணை ஏடுகள் பலவற்றிலும் கணிபுன் குன்றனூ ரென்றே இருத்தலின் அவ்வாறே எழுதப்பட்டது. புறநாற்றிற் கணியன் பூங்குன்றன் என்றிருக்கின்றது. அது சிறப்பாகக் காணப்படுகிறது. பூங்குன்றம் என்னும் ஊரிலுள்ள கணியன் என பொருள்படும். கணியன் சோதிடம் சொல்வோன். இவர் வாக்குயாங்கும் பொது நோக்காயுள்ளது. பாலையைப் பாடியுள்ளார் மாந்தரியல்பும், அரசரியல்பும், உலகத்தியல்பும் இத்தன்மையவென்று தலைவிகூற்றாகக் கூறிய து ஆராயத்தக்கது நற்-௨௨௬. இவர்பாடியனவாக நற்றிணைப் பாடலொன்றும் புறத்தி

லொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**கணிமேதாவியார்** — இவர் இன்ன மரபின ரென்பதும், இன்ன நாட்டின ரென்பதும், இன்ன சமயத்தா ரென்பதும் துணியப் படாவாயினும் ஏலாதி கடைச்சங்க மருவிய நூலென விளங்குகின்றமையால் இவர் காலம் கடைச்சங்கத்தார் காலம் என ஒருவாறு துணியலாம். 'கடைச்சங்கத்துள் ஒருவராகிய கணிமேதாவியார்' என்னலாகதோ எனின் கடைச்சங்கத்துள் ஒருவர் சிறுமேதாவியா ரென்னும் பெயருடையாரே அன்றிக் கணிமேதாவியா ரென்னும் பெயருடையா ரல்லராகலான் கொள்ளலாகா தென்க. இவர் கணிதம் சோதிடங்களில் வல்லவராயிருத்தல் கூடும்.

**கணிவன்முல்லை** — நிச்சயித்துப் பலவுமறியும் பழைய கேள்வி ஞானத்தினையுடைய சோதிட நூல் வல்லவனது கீர்த்தியைச் சொல்லியது. (பு - வெ).

**கணேசதுண்டம்** — சிந்தூரனைக் காண்க.

**கணேசநாதர்** — இவர் சாரசே உச்சயனி என்னும் கிராமவாசியாகிய சூத்திரர். இவர் விரக்தராய்க் காட்டிற் சஞ்சரித்து வருகையில் சிவாஜியெனும் அரசன் ஒருவனிவரைவீட்டிற்குஅழைத்துவந்து மஞ்சத்தின்மீது படுக்கச்செய்யத் தாசர் மஞ்சத்தில் கற்களைப் பரப்பி அதின்மீது துயில்கொண்டு தம்மை யடுத்தவரை நல்வழிப்படுத்தினர். இவ்வாறிருக்கையில் இவரை யடுத்தோர் பலர் பித்தர்போல் குணமாறுதலைக் கண்டு இவரை நோக்கி இம்மர முதலியவைகளுக்கு உபதேசிக்கஎன அவ்வாறு செய்து பிரசாதந்தர அவை அப்பிரசாதத்தை உட்கொண்டன. பின் நால் வருணத்தவரும் இவரைக் காணச்செல்ல ஆங்குத் தாசர் அரிகீர்த்தனஞ் செய்து அனைவரையும் தாளம்போடக் கூறுகையில் பிராமணர் சிலர் மறுக்கநோக்கி அனைவரையும் தாளம்போட வேண்டாமென மறுத்து ஆண்டிருந்த கற்களை நோக்கி தாளமிடக் கட்டளையிட்டனர். அவை அவ்வாறு செய்யக்கண்டு வேதியர் வியந்து அரிபஜனை செய்து இருந்தனர்.

**கணேசன்** — கணபதியைக் காண்க.

**கண்டகசேதநன்** — ஓர் உலுத்தவணிகன். திருவிழாவிற் கடைவைத்து விற்றுப் புண்ணியமடைந்து சிவபதம் பெற்றவன்.

**கண்டகட்டு** — இது ஒரு சொல்லணி. இது பசுக் கொண்டுபோது என்று சொல்லப் போயினன். சென்றுகண்டு மீண்டுவந்து அவையுள்ளாயின வென்னிற் போதாவாயின வென்ற விழ்ப்பது. (யாப்பு - வி).

**கண்டகத்தூணம்** — ஆதித்தனின்ற நாள் முதல், மூல மிறுதியாக எண்ணிவந்த தொகையை மூல முதலாகக் கழித்தால் உற்ற நாள் கண்டக மெனப்படும். செவ்வாய் நின்றநாள் முதல் மூல மிறுதியாக எண்ணிக்கொண்ட தொகையை மூல முதலாகக் கழித்தால் உற்றநாள் தூணம் எனப்படும். இவ்விரண்டு தொகைகளையும் கூட்டி மூல முதலாகக் கழித்தால் உற்றநாள் கண்டகத்தூணம் எனப்படும். இந்நாட்களில் மங்கல காரியங்கள் செய்யலாகா. (விதான மாலை.)

**கண்டகபிராந்தநது** — கண்டாந்த மென்னு முகூர்த்தத்தில் இருப்பவன்.

**கண்டகம்** — 1. செவ்வாய் நின்ற நாளுக்கு, எழாம்நாள், பதினன்காம் நாள், பதினாறும் நாள் இருபத்தைந்தாம் நாள் இவை அநல் நக்ஷத்திரமாம். புதனின்ற நாளுக்கு (கஅ) ஆம் நாள் (உச) ஆம் நாள் உக்கிர நக்ஷத்திரமாம். குருநின்ற நாளுக்கு (எ) ஆம் நாள், (கூ) ஆம் நாள் வெப்பு நக்ஷத்திரமாம். சுக்ரன் நின்ற நாளுக்கு (கo) ஆம நாள் நாச நக்ஷத்திரமாம். இராகு நின்ற நாளுக்கு (கு) ஆம் நாள் (கக) ஆம் நாள், (கங) ஆம் நாள் விஷ நக்ஷத்திரமாம். சனி நின்ற நாளுக்கு (கூ) ஆம் நாள், (கo) ஆம் நாள், (2υ) ஆம் நாள் மோக நக்ஷத்திரமாம். மேற்கூறிய அநலம், உக்ரம், வெப்பம், நாசம், விஷம், மோகம். என்ற யோகநாட்களைக் கண்டகம் என்பர். இவற்றில் சுப காரியங்கள் தவிரப்படும். மேற்கூறிய நாட்களில் வியாதி காணின் அசாத்யம். ஆயினும் மேற்கூறிய நாட்கள் ஆட்சியில் உச்சத்தில் நிற்றல், ஒரு சுபக்கோள் பார்த்தல், வர்க்கோத்தமத்தில் நிற்றல், குரு உதயமாதல், பூரண சந்திரோதயமாதல், தத்தம் வாரமாதலுண்டாகில் இந்தத் தோஷங்க ளில்லையாம். (விதான மாலை).

2. புத்தன் குதிரை.

**கண்டகர்ணன்**--கைலாயவாயிற் காப்போன்.

**கண்டகலை** — ஒரு அப்ஸரஸ்திரி முதலையாகச் சபிக்கப்பெற்று அநுமானல் சாபம் நீங்கினவள்.

**கண்டகன்** — குரோதகீர்த்தியின் குமரன்.

**கண்டகீ** — 1. மகததேசத்திலுள்ள ஒருநதி. மோகினி யுருக்கொண்ட திருமாலுடன் சிவமூர்த்தி புணர்ந்தபோதுண்டாகிய நதி. இதில் பாணலிங்கங்களும், சாளக்கிராமங் களும் உண்டாம். இதற்குக் கண்டிகை யெனவும் பெயர்.

2. ஒருதாசி. இவள் திருச்சாளக் கிரா மத்தில் பெருமாள் அருள்பெற்றவள்.

**கண்டகோபாலன்** — இவன் ஒரு சோழ அரசன். இவனுக்குக் கண்டன் எனவும் பெயர். இவன் சற்றேறக்குறைய அறு நூறு வருஷங்களுக்குமுன் அரசாண்ட வன். வரந்தருவார் எனும் புலவர் இவன் காலத்திருந்தவர் என்பர்.

**கண்டங்கள்** — . பூமியின் பெரிய பிரிவுகள். இவை ஆசியாகண்டம், ஐரோபாகண்டம், உத்தரதக்ஷிண அமெரிகா கண்டம், ஆபி ரிகா கண்டம் ஆஸ்திரேலியா கண்டம் என (5) பிரிவுகள்.

**கண்டங்கள்** — 1 அதாவது - நான்கா மிராசி யும், நான்காமிராசிக்கு நான்காமிராசியும், நான்காமிராசி நான்காமிராசிக்கு நான் காமிராசியும், நான்காமிராசி நான்காம்ராசி நான்காம் ராசிக்கு நான்காமிராசியுமாம். இவை முறையே, நான்காமிராசி, எழாம் ராசி, பத்தாம் இராசி, உதயராசி என்பன வாம். இவற்றில் உதயராசியை உதயகண் டம்-எ-ம், நான்காமிராசியைக் கீழ்நீர்க்கண் டம், எ-ம், எழாமிராசியைப் பாட்டுக்கண் டம், எ-ம், பத்தாம் இராசியை உச்சிக்கண் டம் என்ப. இவற்றை லக்னகேந்தரம், சதுர்த்தகேந்தரம், சப்தமகேந்திரம், தச மகோதிரம் என்ப.

**கண்டாந்தம்** — நக்ஷத்திரம் காண்க.

**கண்டபோண்டபக்ஷி** — இது ஒரு பேரு ருக் கொண்ட பக்ஷியெனக் கதைகளில் கூறியிருக்கின்றனர். நம்ப இடமில்லை.

**கண்டமாலை ரோகம்** — வாதபித்த சிலேஷ் மங்கள் மேதாதாதுவை அநுசரிப்பதால் மாமிசதாது விர்த்தியினாலும் கழுத்தின் நர ம்புகளிலும், கண்களிலும் அரைகளிலும் தேகநிறத்தைப்பெற்றுக்கெட்டியாக மினு மினுத்து நெல்லிக்காய்,சிறு கத்திரிக்காய்ப் பிரமாணமாகக் கட்டிகளுண்டாம். இதில் சில உடைந்தாலும் சில ஆறு. இது கண் டத்தைச் சுற்றி வருதலால் கண்டமாலை யென்பர். அரையில் வரின் அரையாப்பு என்பர்.

**கண்டம்** — (௯) கீழ்விதேகம், மேல்விதே கம், வடவிதேகம், தென்விதேகம், வடரே பதம், தென்ரேபதம், வடபாதம், தென் பாதம், மத்தியகாண்டம்.

**கண்டராதித்தியசோழர்**—இராசராச தேவ ருக்கு ஐந்தாம்பாட்டர் என்பர். இவரே கண்டராதித்தர். சிவமூர்த்தியைப் பாடி முத்தியடைந்தவர். இவர் பாசுரங்கள் ஒன் பதாம் திருமுறையிற் சேர்க்கப்பட்டன. இவர் பராந்தகச் சோழனது இரண்டாங் குமாரர். இவர் காவிரியின் வடகரையில் தம் பெயரால் ஓர் ஊர் அமைத்தவர். இவர் மனைவி உடையபிராட்டியார் செம் பியன் மாதேவியார் என்பவர். இவர், தம் திருப்பதிகத்துள் "கோழிவேந்தன் நஞ்சையர்கோன்கலந்த"எனவும், "தென் னுடமீழமுங் கொண்டதிறற் செங்கோற் சோழன்" எனவுங் கூறுதலில் தம்முன் னோர் பெருமை கூறியிருத்தலில் சோழ வரசர் என்பது பெறப்பட்டது. கி. பி. 905. Epigraphia Indica Vol - VII.

**கண்டரீகன்** — கௌசிகனைக் காண்க.

**கண்டன்**—சூரபத்மனுக்குப்படைத்தலைவன்.

**கண்டாகர்ணன்** — 1. சிவகணத் தலைவன்.

2. குபேரன் எவலாளிகளி லொருவன். பைசாச வுருக்கொண்டவன். இவன் தன் னிடமிருந்த சூலத்தால் மனிதரை வதைத் துச் சிவனுக்கு நிவேதனஞ்செய்து உண்டு சிவமூர்த்தியை முத்தி வேண்ட அவர் விஷ்ணுவைக் கேளென அப்படியே விஷ் ணுவைத் துதித்து அவரால் உபதேசிக்கப் பெற்றுத் தானேயன்றித் தன் தம்பியும் முத்திபெற வரம்பெற்றவன்.

**கண்டிகை** — சிவகேசவர்கள் ஆண் பெண் உருக்கொண்டு விளையாடிய காலத்தில் உடம்பி லுண்டான வியர்வையால் உண் டான நதி. இதில் சாளக்கிராம முண்டாம்.

**கண்டியதேவன்** — இவன் கச்சிராயரைப் பாட அதைக்கேட்டு கச்சிராயர் சரக்கரைத் தியாகங் கொடுக்கப் பலி தூக்கவந்த நீலகங் கனைப் பாடியது. 'அலைவளைத்த திருப்பாற் கடலிலை,யாடராவினணையிலை பச்சையால், இலைவளைத்தமணி மண்டபமில்லை, யிங்கு நீ வந்த வாறேதியம்புவாய், கொலைவளை த்த விலங்கே சன்மாமலர்க், கொத்துமா முடி பத்துக்குமற்றொரு, சிலைவளைத்தகா நீலகங்கனே, திங்கள் வெண்குடை சிற்றம் பலவனே.' இதைக் கேட்டு அவன்

குதிரை கொடுவேந்தேனென்று குதிரை கொடுத்தான். தமி-நா-சரி.

**கண்டியூர் வண்ணத்தி** — இவள் பொய்யா மொழிப் புலவர்க்கு ஆடைவெளுத்துக் கொடுத்து "தூசு துரசாக்குவார் பாவை சுடர்த் தொடிக்கை, ஆசிலாக் கண்டியூரா ரணங்கு—வாசமலர்க், கண்ணங்கை கொங் கை முகங்காலுங்கடிக்கமலம், கண்ணங்கை கொங்கை முகம் கால்." எனும் கவி பெற்றவள்.

**கண்டீரக்கோபெருநற்கிள்ளி** — வன்பரண ரால் பாடப்பெற்றவன். இவனே பெரு நள்ளி யெனப்படுவான். வன்பரணர்க் காண்க.

**கண்டீரக்கோப் பெருநள்ளி** — இளங்கண் டீரக்கோவின் தமயன். இவன் கடை யெழுவள்ளல்களி லொருவன். தோட்டி யென்னும் மலை நாட்டவன். "கரவாது நட்டோருவப்ப நடைப்பரிகார, முட்டாது கொடுத்த முனைவிளங்கு தடக்கைத், துளி மழை பொழியும் வளி துஞ்சு நெடுங் கோட்டு, நளிமலை நாடனள்ளியும்" எனச் சிறுபாணாற்றிலும் இவனைப் புகழ்ந்து கூறினர். இவனைக் கண்டீரக்கோ எனவும், நற்கிள்ளி யெனவுங் கூறுவர். (புற-நா).

**கண்டு** — அக்ரோதனன் தேவி.

**கண்டு கண்சிவத்தல்**—பெரிய மலைபோன்ற அகலத்தினை யுடையவனது ஒள்ளிய தொத்தினையுடைய கமழுமாலையை முனி வுடனே கலங்கித் தலைவி கோபித்தது. (பு-வெ-பொது).

**கண்டு கைசோர்தல்** — மலர் நிறைந்த குழ லினையும் பொற்றொடியினையு முடைய தலைவி தன் அன்பு கை கடப்பத் தோழி கண்டு தன்னுடைய ஒழுக்கம் தளர்ந்தது. (பு-வெ-பெருந்திணை).

**கண்டுணராமை**—இது போலிகளுள் ஒன்று. இது, சிலவற்றைக் கண்டு அதன் பெய ரறியா திருத்தல். பாண்டி உரை.

**கண்டுமகருஷி** — ஒரு இருஷி. ஒருமுறை யிவர் கடுந்தவஞ் செய்துவந்தனர். இவர் தவத்தைக் கெடுக்க இந்திரன்பிரமலோசை யெனுங் காந்தருவப் பெண்ணை அனுப் பினன். அவள் சென்று அந்த இருடியை வசப்படுத்தி அவற்கு ஒருகருவுந் தாங்கி னள். சில நாளைக்குப் பிறகு இது இந்திர னது மாயையென்று முனிவர் கடுங்கோபங் கொள்ளப் பிரமலோசை, அவருக்குத் தாங்கிய கருவை யுதறினள். அதை வாயு ஒன்றாகத் திரட்டினன். அது பெண்ணுருக் கொண்டு மாரிஷையென்னும் பெயருடன் விளங்கிற்று. (பிரமபுராணம்.)

**கண்டுவன்** — காவலருஷியின் மாணாக்கன். இவன் காவலருஷியின் பெண்ணை மண ந்து அட்டகோண மகருஷியைப் பெற்ற னன்.

**கண்ணகனர்** — இவர் இயற்பெயர் நாகன் கண்ணனுடைய மகனாதலிற் கண்ணகனர் என்றும் சொல்லப்படுவர். சில ஏடுகளில் கண்ணகனர் என்று பிழைபட எழுதியிருந் தமையால் இருந்தபடியே பதிப்பிக்கப்பட் டது. இவர் கோப்பெருஞ் சோழன், பிசிராந் தையார் முதலானோர் காலத்தவர். புறம் (உகஅ) பரிபாடல் உக-ஞ் செய்யுளுக்கு இசைவகுத்தவரிவரே. பாலைத்திணையைப் புனைந்து பாடியுள்ளார். காதலன் பிரி தலைத் தவிர்க்குமாறு தலைவி ஆராய்வதாக இவர் கூறியது ஆராயத்தக்கது. நற். எக. இவர் பாடியனவாக மேற்காட்டிய பாட லொன்றும் புறத்திலொன்றுமாக இரண்டு பாடல்கள்கிடைத்திருக்கின்றன. இவர், தம் நண்பர் இறந்ததறியாது உயிர் துறந்தவர்.

**கண்ணகாரன் கொற்றனர்**—இவரது இயற் பெயர் கொற்றனர். கண்ணகாரன் என் பது விளங்கவில்லை. இவர் பாலையைப் புனை ந்து பாடியுள்ளார். இவர் பாடிய மனை மருட்சி யாவரையும் மருட்டா நிற்கும். இவர் பாடியது நற். கசகூம் பாட்டு.

**கண்ணகி** — 1. பத்தினிக்கடவுள், மங்கல மடந்தை, திருமாபத்தினி, வீரபத்தினி யென்பன இவளுடைய பரியாய நாமங்கள். கோவலன் மனைவி. கோவலனைக் காண்க. (சிலப்பதிகாரம்.)

2. வையாவிக் கோப்பெரும்பேகனுக் குரியவள். இவள் ஒருகாலத்து இவனாற் றுறக்கப்பட்டுக் கபிலர், பரணர், அரிசில் கிழார் முதலியவரை நோக்கி அரசனைப் பாடி அவனுடன் சேர்த்துவிக்க வேண் டியவள். (புற-நா.)

**கண்ணங்கூத்தனர்** — கடைச் சங்கத்தவர் காலத்திருந்த புலவர். கார்நாற்பது இயற் றியவர்.

**கண்ணங்கொற்றனர்** — இவர் இயற்பெயர் கொற்றனர். இது கண்ணனென்னுந் தந்தை பெயரோடு சேர்ந்து கண்ணங் கொற்றனா ரென்றாயிற்று. இவர் குறிஞ் சியைப் புனைந்துபாடியுள்ளார். தலைவன் இரவுக்குறி வருகின்றதன் அருமையும்

தலைவி அவன்பால் வைத்துள்ள அன்பும் தோழி கூற்ருக விளங்கக் கூறுகின்ருர். இவர் பாடியது நற். கஙஈம் பாட்டு.

**கண்ணசன்மன்** — ஒரு பாகவதன் விஷ்ணுமூர்த்தி தன்னில் ஆவேசமாயிருக்க வேண்டியவன்.

**கண்ணப்பநாயனர்** — பொத்தப்பிநாட்டில் உடுப்பூரில் வேடர்களுக்கு அரசனயிருந்த நாகனுக்கும் அவன் மனைவி தத்தையென்பவளுக்கும் பிறந்து திண்ணன் என்னும் பெயருடன் வளர்ந்தனர். இவர் ஒருநாள் தமது நண்பர் காடன் நாணன் இருவருடன்கூடி வேட்டைக்குச் சென்று ஒரு பன்றியைத் தொடர்ந்து கொன்று இளைப்படைந்து தாகத்திற்கு நீர் கேட்டனர். அந்த நண்பர் அருகில் பொன்முகரி இருக்கின்றது எனத், திண்ணர் அவ்விடஞ்செல்வோமென்று பன்றியுடன் ஆற்றங்கரையை யணைந்து அருகு இருந்த சீகாளத்தித் திருமலையைக்கண்டு காடனை நோக்கி நீ பன்றியைப் பதப்படுத்து எனக் கட்டளையிட்டுத் தாமும் நாணனும் அம்மலைமீது சென்றனர். திண்ணனர் அம்மலைமீது எழுந்தருளியிருக்கிற சீகாளத்தியப்பரைத் தரிசித்து நெருப்பைக் கண்ட மெழுகு பாவைபோல் மனமுருகிவிட்டுப் பிரியாது தன் சொற்கேட்கும் குழந்தைக் குருகும் தாய்போல் சுவாமியுடன் கொஞ்சிக் குலாவி அருகிருந்த நாணனை நோக்கி இந்தத் தேவர்க்கு எதோ புட்பம் சாத்தி யிருக்கிறதே என்ன என்றனர். நாணன் சில நாட்களுக்கு முன் நானும் உன் தந்தையும் இம்மலைக்கு வந்தோம்; அந்தக் காலத்தில் ஒரு வேதியர் இவரை நீராட்டிப் புட்பஞ் சூட்டித் தாம் வைத்திருந்த உணவை ஊட்டக் கண்டேன் என்றனன். திண்ணர் இதனைக் கேட்டு இந்தக் குடுமித்தேவர்க்கு அது பிரியம்போலும், ஆயின் நான் அந்தப்படி செய்வே னென்று கடைப்பிடித்து மலையினின்று இழிந்து காடனிருக்குமிடத்தில் அவன் பதப்படுத்தியிருந்த பன்றியிறைச்சியைத் தாம் சுவைத்து உருசியுள்ளவைகளைத் தேக்குத் தொன்னையிற் கொண்டு பொன் முகரியின் ஜலத்தை வாயிற்பெற்றுப் பூக்களைப் பறித்துத் தமது சிரத்தில் வைத்துக் கொண்டு தமது குடுமித் தேவர் மலைக்குத் திரும்பினர். இவரது செய்கை யறிந்த நண்பர்கள் திண்ணரை வலிந் தழைத்துந் திரும்பாதது கண்டு தந்தை தாயர்க்கு அறிவிக்கச் சென்றனர். திண்ணர் சிவமூர்த்திமீது முன்னிருந்தவைகளை நீக்கி வாயிற்கொண்ட நீரை அபிடேகஞ் செய்து தலையிலிருந்த பூக்களைச்சூட்டி யிறைச்சி முதலிய வுணவுகளை யுண்பித்து வந்தனர். முன் சென்ற நண்பரா லறிவிக்கப்பட்ட தந்தை தாயார் இவரிடம் வந்து அழைக்க இவர் மறுத்தது கண்டு சென்றனர். இது நிற்க அக்காளத்தி நாதருக்கு நாடோறும் பூசை புரிந்துவரும் சிவகோசரியார் சன்னிதானத்தை வந்துகண்டு வருந்திச்சுத்திசெய்து அவ்விடமிருக்கும் மாம்சாதிகளைப் போக்கிச் சம்புரோக்ஷணுதிகள் செய்து தமது தவச்சாலை செல்ல மறுநாளு மிவ்வகையிருந்ததுகண்டு சுவாமிகள் சந்நிதானத்து முறையிட்டனர். சிவமூர்த்தி, இவர் கனவிற் றேன்றி இவரது தன்மை முழுதுங் கூறி இவரது செயல்களை உமக்கு அறிவிக்கிறேன். நீர் பூசைமுதலிய முடிந்தபின் நமக்குப்பின் ஒன்றியிருக்க என்று மறைந்தனர். வேதியர் விழித்து அபசாரப்பட்டோமென்று மனம் வருந்தி மறுநாள் தமது பூசைமுதலிய முடித்துச் சிவாஞ்ஞைப்படி மறைவில் பார்த்திருந்தனர். திண்ணர் சிவமூர்த்திக்கு வேண்டிய உணவுகளைச் சேகரித்துப் பூசைக்குத் திரும்பினர். சிவமூர்த்தி இவரது அன்பினைச் சிவகோசரியார்க்கு அறிவிக்க எண்ணித் தமது வலக்கண்ணில் உதிரஞ்சிந்த விட்டனர். திண்ணர் சிவமூர்த்தியின் கண்ணைக் கண்டு யாவரோ பகைஞர் இத்தீங்கு செய்தனர் என்று மனங்கலங்கி அவர்களைத் தண்டிக்க அங்கு மிங்குந் தேடி யாரையுங்காணது பலமூலிகை முதலியவற்றையும் கண்ணிற் பிழியவும் அது நிற்காதிருக்கக் கண்டு ஊனுக்கூனிடல் வேண்டுமென எண்ணித் தமது கண்ணை அம்பினுற் றேண்டி அப்பினர். உடனே உதிரப்போக்கு நின்றதுகண்டு ஆனந்தக் கூத்தாடினர். சிவமூர்த்தி, மீண்டு மிடது கண்ணில் இரத்தஞ் சோரவிட., திண்ணர் சலியாத்வராய் நான் மருந்து கண்டுகொண்டேன் எனக் களிப்புடன் இரத்தம்வரும் கண் தமக்குத் தெரியும்படி தமது செருப்புக் காலைக் கண்ணினருகு ஊன்றிக்கொண்டு தமது கண்ணைத் தோண்டுகையில் சிவமூர்த்தி அன்பிற்குக் களித்து "நில்லு கண்ணப்ப நில்லு

கண்ணப்ப, என்னன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப." என்று திருவாய் மலர்ந்து தமது திருக்கரத்தாற் பற்றிக் கொண்டு தமக்கு வலப்புறமிருக்கும் பிறவாப்பே றளித்தனர். இவர் ஆறுநாட்களில் முத்தியடைந்தவர். சிவமூர்த்தி வழங்கிய கண்ணப்பன் என்ற திருநாமமே இவருக்கு வழங்கியது. இதற்கு முன்சன்மத்தில் இவரை அர்ச்சுனன் என்பர். (பெரிய புராணம்.)

**கண்ணப்பமுதலியார்**--திருவெண்ணெய் நல்லூர்ச் சடைப்யபமுதலியாரின் சகோதரர்.

**கண்ணம்புல்லனார்**—கருவூர் கண்ணம்புல்லனார் என்பவர் இவரே. இவரது ஊர் கருவூர், கண்ணன் தந்தைபெயர். புல்லன் இயற்பெயர். நெய்தற்றிணையும், பாலைத்திணையும் பாடியுள்ளார். புணர்ந்துடன் போகக்கண்ட செவிலி சுரத்திடை மறவர் நிறை கொணர்ந்துய்ப்பதும் அங்கு அவர் முழங்கும் முழக்கமும் கேட்டு என்பேதை யாங்ஙனம் வைகுமோவென்று புலம்புவதாக விரித்துக்கூறி யுள்ளார். அகம் ௬௩. இவர் பாடியனவாக நற்றிணையில் ௧௫௯ ஆம் பாடலொன்றும் அகத்திலொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**கண்ணவாணிபமகருஷிகோத்ரன்**— வேளாளன் பிள்ளைக்காகத் தன் குமரனைப் பாண்டியன் சபையில் வாளால் எறிந்து கீர்த்தி பெற்றவன்.

**கண்ணன்** — கிருஷ்ணனைக் காண்க.

**கண்ணான்**—இவர் கடைச்சங்க மருவிய புலவர்களிலொருவர். (குறு - ௨௪௪.)

**கண்ணன்சேந்தனார்**—சாத்தந்தையார் குமரர். திணைமொழியைம்பது இயற்றியவர்.

**கண்ணாடி** — சிகிமுகிக்கல்லின் பொடியை ஒருவிதச்செடியின் சாம்பலுடன் சேர்த்து உருக்கினால் கண்ணாடி ஆகிறது. சாதாரணமான வெள்ளைக்கண்ணாடி வெள்ளை மணலும் உவர்மண்ணும் சுண்ணாம்பும் சேர்த்துப் பெருந்தீயிட்டு உருக்கினால் உண்டாகிறது. கறுப்பு புட்டிகள், ஆற்றுப்பருமணலும் சவர்க்காரமும் சேர்த்துச் செய்யப்படுகின்றன. கண்ணாடிகளுக்குப் பளபளப்பு உண்டாதற்கு வங்கபஸ்பம் சேர்ப்பார்கள். வெவ்வேறு வர்ணக்கண்ணாடிகள் செய்தற்கு அவற்றிற்கு வேண்டிய உலோக பஸ்பங்களைச் சேர்ப்பார்கள். இதைப் பல உருவமாகப் பல கருவிகளைக் கொண்டு செய்வர்.

**கண்ணுடையவள்ளலார்** — திருஞான சம்பந்த சுவாமிகள் திருவருள் பெற்றவர். இவர் செய்த நூல் ஒழிவிலொடுக்கம், மாயாப் பிரலாபம். (ஒழிவிலொடுக்கம்.)

**கண்ணுவர்**—1 அப்பிரதிரதன்குமரர். இவர் குமரர் மேதாதி. விசுவாமித்திரர் மேனகையிடம் உதித்த குமரியாகிய சகுந்தலையை வளர்த்தவர். இவர் தவத்திலிருக்கையில் இவரைப் புற்றுமூடி இவர்மீது ஒரு மூங்கில் முளைத்தது. இதைப் பிரமன் மூன்று விற்களாக்கி முறையே காண்டீபம் என்பதைத் தான் வைத்துக் கொண்டு, மற்றொன்றுக்குப் பினாகமெனப் பெயரிட்டுச் சிவமூர்த்திக்கும், சார்ங்கமெனப் பெயரிட்டு மூன்றாவதனை விஷ்ணுமூர்த்திக்குங் கொடுத்தனர். இவர் பனங்காட்டூரில் சிவமூர்த்திக்குப் பனம்பழம் நிவேதித்தனர். இவர் மகாவிஷ்ணுவை மானிடரா யவதரிக்கவும் மகாலக்ஷ்மியை மானாக அவதரிக்கவும் சாபம்தர இவர்களுள் விஷ்ணு சிவமுனிவராகவும் இலக்குமி மானாகவும் பிறந்தனர். (தணிகைப் புராணம்). ஒருமுறை துச்சயனுக்குப் பரத்தையைப் புணர்ந்த தோஷம் நீங்க வேள்வி செய்வித்தவர். இவர் குமாரர் போதாயனர்.

2. மகத தேசாதிபதியாகிய தேவபூதியின் மந்திரி. இவன் தன் அரசனைக் கொன்று இராச்சிய மடைந்தனன். இவனுக்கு வாசுதேவன் எனவும் பெயர். இவன் குமரன் பூமித்திரன்.

**கண்படை நிலை** — உயரிய தேரான் மிக்க பகைவர் சேனைபொடி படச்செல்லும் கடுந்தேரினையுடைய வேந்தனது துயிலைமிகுத்தது. வென்று பூமியைக் கைக்கொண்ட சினமன்னன் உறக்கத்தை மிகுத்தது. (பு-வெ-பாடாண்).

**கண்வராச்ரமம்** — லக்ஷ்மணபுரிக் கருகிலுள்ள காடு, Bignour in Lucknow, West of Ayo-dhya.

**கதகரும் பாத்வாசரும்**—இவர்கள் ஒருவருக்கொருவர் தம் மனைவியரை மாற்றிக்கொண்டவர்கள். (வைத்தியநாததீக்ஷிதீயம்.)

**கதப்பிள்ளைச்சாத்தனார்**—இவர் கருவூர்கதப்பிள்ளைச் சாத்தனாரெனவும் கதப்பிள்ளையெனவும், கருவூர் கதப்பிள்ளை யெனவும் பலவாறாகக் கூறப்படுவார். இவர் இயற்பெயர் சாத்தனாரென்பதே. சேரமான் சேனாதிபதி பிட்டங்கொற்றனைப் பரிசில்

வேண்டி இயன்மொழி பாடியவர். புறம் ௩அ௦, பெரும்பாலும் பாலைத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் மாலைக் காலத்தை அழகாகப்புனைந்து கூறியிருக்கிறார். நற்-௩௬௯ தலைவனைப் பிரிந்ததனுல் இவ்வூர்த்தோற்றம் இனிதாகக் காணப்படவில்லை யென்றதலைவி கூற்று வியப்புடையது. இவர் பாடியனவாக நற்றிணையில் மேற்காட்டிய இரண்டு பாடல்களும், குறுந்தொகையில் மூன்றும், அகத்தில் ஒன்றும், புறத்தில் இரண்டுமாக எட்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**கதம்பமகருஷி**—சோணுட்டுத் திருக்கரம்பனூரில் விஷ்ணுவை எண்ணித் தவம்புரிந்து அருள்பெற்றவர். இவர் நாகபட்டணத்தில் சிவபூசைசெய்து பேறடைந்தவர் எனவும் புராணம் கூறும்.

**கதம்பன்** — கனகமாலையின் சகோதாருள் ஒருவன்.

**கதயன்** — ஓர் இருடி.

**கதவு**—வீட்டிற்குக்காப்பாக அமைக்கப்பட்ட ஓடும் பலகை. இது வாசற்கால் மூலையில் சேர்க்கப்பட்டுத் திறக்கவும் மூடவுமமைந்தது. இதில் சிறியது புதவு. இது தாழெனும் உறுப்பைக்கொண்டது.

**கதன்**—(யது.) வசுதேவனுக்குப் புத்திரன். அருச்சுனனுக்குச் 'சுபத்திரையின் அழகு முதலியவற்றை வருணித்தவன்.

**கதாசுரன்**—ஒரு அசுரன் தேவர்களை வருத்தத் தேவர்கள் விஷ்ணுவிடம் முறையிட விஷ்ணு இவனைச் சங்கரித்தனர். இவனுடலி னெலும்பினுல் விச்வகர்மன் விஷ்ணுவிற்குக் கதாயுதஞ் செய்து கொடுத்தனன். இவன் ஆதிகதாசுரன்.

**கதி** — 1. கர்த்தமப் பிரசாபதியின் குமரி. புலகருஷியின் தேவி. குமரர் கர்மசேடன், வரியான், சிகிஷ்ணு.

2. (ச) தேவகதி, மக்கட்கதி, நரககதி, விலங்கின்கதி.

**கதிரவன்**—1. சூரியனுக் கொருபெயர்.

2. சண்முக சேநாவீரரில் ஒருவன், துன்முகனுடன் சண்டைசெய்தவன்.

**கதை** — விஷ்ணுவின் பஞ்சாயுதங்களில் ஒன்று. கயாசுரன், கதாசுரனைக் காண்க.

**கதையங்கண்ணனூர்**—ஒரு தமிழ்ப்புலவர். "பனிபழுநிய பல்யாமத்து" எனுஞ் செய்யுளில் தனக்குப் பரிசிலீந்தவனைப் புகழ்ந்து பாடியுள்ளார். (புறநானூறு).

**கத்தி**—1. இது ஆயுதங்களில் முதலில் உண்டானது. பிரமன் அசுரரைக் காக்கவேண்டி உலகசிருட்டி தொடக்கத்தில் யாகஞ்செய்தனர். அதில் கோரவுருவத்துடன் ஒரு பூதம் தோன்றியது. அதைக் கண்ட முனிவர் அஞ்சினர். பிரமதேவர் அதற்குக் கத்தியென்று பெயரிட்டினர். அது ஒரு கூரான கழியாயிற்று. அதை ருத்திரரிடம் கொடுக்க அவர் பகைவரை அடக்கி விஷ்ணுவிடம் கொடுக்க விஷ்ணுவிடமிருந்த அது பலதேவரிடம் வந்து கடையில் திக்குப்பாலகர் வழியாக மனுவிற்கும் அவன் வம்சத்தவருக்கும் வந்து பலவகையாயிற்று. கத்தியின் பேதமே பலவகை ஆயுதங்கள். (பார-சாந்.)

2. தக்ஷன் பெண். தருமன் மனைவி.

**கத்திரிகிரகணதோஷம்** — பாப க்ரகங்கள் வக்ரித்த ராசிக்கு (2-ம்;) ராசியும், (கஉ)ம், ராசியும் உற்றநாள், கத்திரியென்று பெயராம். இந்நாளிற் சுபகன் மங்கள் தவிரப்படும். சருவகிரகணம் பற்றினநாள் (கூ) மாதத்திற் காகாது. முக்கூறு நான்கு மாதம், அரைக்கூறு (ந) மாதம், காற்கூறு (உ) மாதம், இப்படி தவிரப்படும். இவ்வகைக் கூறப்பட்ட நாட்களில் வேருெரு ராசியில் கிரகணமுண்டாகினும், இராகு, கேதுக்கள் வேறு ராசியில் போகினும் அவ்வளவும் தோஷமாம். இராகு கேதுக்களினுதயமும் இப்படியே தவிரப்படும். (விதானமாலை.)

**கத்திரிப்பிரவேசம்**—சூரியன் மேஷராசியில் அக்னிநக்ஷத்திரத்தில் பிரவேசிக்கும் நாள்.

**கத்துரு**—1. காசிபர் மனைவி. 104 பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் பெற்றவள். நாகங்களுக்குத் தாய். உச்சைச்ரவம் என்னும் வெள்ளைக்குதிரைக்கு மறுவுண்டெனச் சாதித்து நாகருளொருவனைத் தன்னெண்ணப்படி வாலில் மறுவாகத் தோன்றச்செய்து தமக்கையாகிய சுபருடனை அல்லது விநதையை அடிமை கொண்டவள். சநமேசயன் யாகத்திற் பிள்ளைகளைச் சாகச் சபித்தவள்.

2. உன்முகன் குமரன். தாய் நட்வலை.

**கந்தகம்**—பாஷாணவகையில் சேர்ந்த அசல் சரக்கு, இது, சிவப்பு கந்தகம், கோழித்தலை கந்தகம், சுரைக்காய் கந்தகம், நெல்லிக்காய் கந்தகம், நீலகந்தகம், வாணகந்தகம், துல்லியகந்தகம் எனப் பல பேதப்படும்.

**கந்தக்கண்ணன்** — இவர் கடைச்சங்கத்துப் புலவர்களில் ஒருவர். இவர் பெயர் கண்ணன் என்பது கண்ணனென மற்றொருவ ரிருத்தலினிவரைக் கந்தக் கண்ணனென் ருர் போலும். (குறு-கச.)

**கந்தசஷ்டிவிரதம்** — இது ஐப்பசிமாசம் சுக்லபக்ஷ பிரதமைமுதல் சஷ்டிவரையில் கலசத்தில் கந்தமூர்த்தியை யாவாகனஞ் செய்து பூசித்துச் சலபானஞ்செய்து ஆரும் நாள் கந்தமூர்த்திக்குப் பூசை முதலிய முடித்து அதிதிகளுடன் பாரணைசெய் வது. இதைத் தேவர் சூரபன்மன் முத லியவர் இறக்க அநுட்டித்தனர். இது கந்தமூர்த்தி யுற்பத்தியின் பொருட்டுச் சிவமூர்த்தியிடம் பிரதமையிற் பிறந்த பொறிகள் துவிதியையில் கௌரிகற்பத் திருந்து திருதியையில் அக்கியிடங் கொ டுக்க அவன் வகித்துச் சதுர்த்தியில் கங்கை யிட மிருந்து பஞ்சமியில் கிருத்திகை முத லியவர் பாலூட்ட ஆறுமுகமும் பன்னி ரண்டு கையும் பெற்று வளர்ந்த நாள்.

**கந்தசாமிப்புலவர்**—இவர் பாண்டிநாட்டுத் திருப்பூவணத்துச் சைவர். இவர் செய்த நூல்கள் திருப்பூவண புராணம், திருப் பூவணவுலா, திரு ஆப்பனூர் புராண முத லிய. இவர் காலம் சற்றேறக்குறைய நூறு வருஷங்களுக்கு மேலிருக்கலாம்.

**கந்தபுராணச் சுருக்கம்** — குமாரக்கடவுள் கதை. இதில் தெய்வயானை, வள்ளிநாய்ச் சியார் திருமணம், சூராதிகளுற்பத்தி, ஒடுக்க முதலிய கூறப்பட்டு இருக்கிறது. இதனை யியற்றியவர் சம்பந்தசரணலயர்.

**கந்தபுராணம்**—காந்தபுராணத்தைக் காண்க.

**கந்தப்பையர்** — இவர் தொண்டைமண்ட லத்தில் திருத்தணிகையிலிருந்த வீரசை வர், திருவாவடுதுறை கச்சியப்ப முனிவர் க்கு மாணவர். திருத்தணிகை விசாகப் பெருமாளையர் சரவணப் பெருமாளையர் இருவருக்கும் தந்தையார். தமிழ் வல்ல வர். தணிகைக் கலம்பகம், தணிகையுலா, தணிகையந்தாதி, தணிகைப்பிள்ளைத் தமிழ் முதலிய இயற்றியவர். காலம் இற் றைக்கு நூறு வருஷங்களுக்குமுன் இருக் கலாம்.

**கந்தமாதனம்** — 1. அஷ்டகுலாசலங்களில் ஒன்று. இருஷிக ளிருக்கை. வீரவாகு தேவர் வீரமாயேந்திரபுரியைத் தாவ நின்ற மலை, காண்டவான தேசத்திலுள்ள ஒரு மலை.

A part of the Rudra - Himalya. The range of Gandbamadana commences at a short distance to the north east of Badarikashrama.

2. பதரிகாச்சிரம சமீபத்திலுள்ள ஒரு பர்வதம்.

3. ஒரு வித்தியாதர நகரம். (சூளா.)

**கந்தமாதனன்**—1. ஒரு வானரன். குபே ரனுற் பிறந்தவன். சுக்ரீவன் சேனையிற் சேர்ந்தவன்.

2. (யது.) அக்குரூரன் தம்பி.

3. சுவபலருக்குக் காந்தினியிடத் துதி த்த குமரன்.

4. இராமராவண யுத்தத்திலிறந்தவன். இராமர் அயோத்திக்குப் புறப்படுகையில் இவனில்லா திருந்தமையால் அநுமனை ஏவிச் சத்தியவுலகினின்று கொண்டுவரப் பட்டவன்.

**கந்தமூர்த்தி**—ஒருமுகம், நான்குபுஜம், சத்தி, கோழிக்கொடி, வரதம், அபயம் உடையவ ராய்ப் பொன்னிறமுள்ளவராய் இருக்கும் குமாரக் கடவுளுக்கு ஒரு பெயர். இவரது மற்ற சரித்திரங்களைக் குமாரக்கடவுளைக் காண்க.

**கந்தம்** — மூக்கா லறியப்படுவது. விசேஷ குணம், பிருதிவியில் மாத்திரமிருப்பது, இது அநித்யம். இது நறுநாற்றம், தீநாற் றம் என இருவகைத்து.

**கந்தரத்தனர்**—இவர் உரோடோகத்துக் கந் தரத்தனரின் வேறல்லர் என்று எண்ணப் படுகின்றது.

**கந்தரன்**—1. சம்பாதி வம்சத்தவனுகும் கங் கன் தம்பி.

2. பிரமலோலுபன் குமரன். தரும பக்ஷிகளைக் காண்க.

**கந்தருவநகரம்**—யமபுரியின் வழியிலுள்ள பட்டணம். ஆன்மா, நான்காம் மாசிக பிண்டம் புசிக்கும் இடம்.

**கந்தருவம்**—ஒரு வித்தியாதர நகரம்.

**கந்தர்ப்பன்**—மன்மதன்.

**கந்தவதி**—1. பரிமளகந்திக்கு ஒரு பெயர்.

2. வாயுதேவன் பட்டணம்.

**கந்தவெற்பு**—தேவர் குமாரக்கடவுளைப் பூசி த்த மலை.

**கந்தழகி**—கார்த்தவீரியன் தேவியரு ளொ ருத்தி.

**கந்தழி** — 1. வண்டினையுடைய மாலையாற் சிறந்த நீலமணிபோன்ற மேனியையுடை யான். வீரசோவென்னும் அரணத்தை

அழித்த வீரத்தைச் சொல்லியது. இவ்வரணைத் திருமால் அழித்தனர் எனச் சிலப்பதிகாரம் கூறும். (பு. வெ.)

2. வளைந்த நிகிரியை யுடையவன். சோவென்னும் அரணத்தினை அழித்த கெடாத தன்மையினையுடைய வெற்றியைச் சிறப்பித்தது. (பு. வெ. பாடாண்.)

**கநதன்**—1. குமாரக் கடவுள்.

2. கூபனைக் காண்க.

**கந்தாசூரன்**—கந்தமூர்த்தியிடம் மாயைசெய்திறந்தவன்.

**கந்தாடை ஆழ்வான்**—உடையவர் திருவடி சம்பந்தி பட்டவர்க்கம்.

**கந்தாடைதோழப்பர்** — கந்தாடையாண்டான் குமாரர்.

**கந்தாடையண்ணன்**—நயினராசாரியர் திருவடி சம்பந்தி.

**கந்தாடையப்பன்** — நயினராசாரியர் திருவடி சம்பந்தி.

**கந்தாடையாண்டான்** எழுபத்துநான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். பிரமதந்தர சுதந்தர ஜீயர் திருவடி சம்பந்தி. முதலியாண்டான் குமாரர். (குருபரம்பரை.)

**கந்தாடையார்** — வாதூலகோத்திர முற்பட்டதாதலால் அதை முன்னிட்ட அரீத கோத்திர முதலிய அறுவகைக் கோத்திரத்தார்க்கும் கந்தாடையார் என்கிற பேர். இந்த அறுவகைக் கோத்திரத்தில் சேர்ந்தார் முதலியாண்டான், முடும்பைநம்பி, முடும்பையம்மாள், நடாதூரார், ஆசூரிப் பெருமாள், கிடாம்பிப்பெருமாள், குமாண்டூர் இளையவல்லி ஆச்சான், வங்கிபுரத்து நம்பி முதலியவரும் இவர்கள் சந்ததியாரும். இவர்கள் ஒருவருக்கொருவர் சம்பந்தஞ் செய்யவேண்டுமென்று மணவாளமாமுனிகள் கட்டுப்பாடு.

**கந்தாடையெம்பார** — வேதாந்ததேசிகர் திருவடியில் ஆச்ரயித்த ஆசாரியர்.

**கந்தாடைலக்ஷ்மணாசாரியார்**—இவர் ஒரு ஆசாரிய புருஷரில் சேர்ந்தவர். இவர் தேசிகர் காலக்ஷேபம் செய்கையில் அவ்வழி சென்றனர். இவரது சிஷ்யர் தமது ஆசாரியருக்குத் தேசிகர் மரியாதைசெய்யவில்லையென்று தேசிகரது காலைப் பிடித்திழுத் தவமதித்தனர். இதனைத் தேசிகர் பொறுத்திருந்தனர். மாணாக்கர் செய்தது ஆசாரியரை அடையுமென்றபடி சில நாளில் லக்ஷ்மணாசாரியருக்கு உடம்பில் சோபாரோக முண்டாயிற்று. இதன் காரணமறிந்து தேசிகரைச் சரணமடைந்து அவரது திருவடிதீர்த்தம் பெற்றுண்டு ரோக நிவர்த்திபெற்று அத்தீர்த்த விசேஷத்தால் ஒரு புத்திரனையும் பெற்று அக்குமாரனுக்குத் தீர்த்தப்பிள்ளையெனப் பெயரிட்டுக் களித்தவர்.

**கந்தியார்**—ஓர் தமிழ் நூலாசிரியர். இவர் முன்னோர் செய்யுட்களில் தம் பாடல்களை நுழைத்தவர்.

**கந்திரி**--அக்குரூரன் தாய். நாயகன் சுவல்பன்.

**கந்திருவர்**—கச்யபருக்குப் பிராதையிட முதித்த ஒரு தேவ வகுப்பினர்.

**கந்திருவை**—காசியபர் பவுத்திரி சுரதையின் பெண், குதிரைகளைப் பெற்றவள்.

**கந்திற்பாவை**—சக்கரவாளக் கோட்டத்தில் சம்பாதி கோயிலின் கிழக்கில் உள்ள தூணில் மயனால் நிருமிக்கப்பட்ட ஒரு பிரதிமை; துவதிகனென்னுந் தேவவடிவமாக வுள்ளது. இது எல்லாராலும் பூசித்து வழிபாடு செய்யப்படுமாதலின் இதை அதிட்டித்துநின்ற துவதிகன் கேட்போர்க்கு அதன் வாயிலாக முக்காலச் செய்தியையுங் கூறுவான். (மணிமேகலை.)

**கந்துகேச்சுரம்** — காசியில் இரண்டியக்கர் சண்டையிடக் கண்ட சிவமூர்த்தி பந்தாலெறிய அது அவர்களைச் செயித்துச் சிவலிங்கமா யமர்ந்தது.

**கநதுக்கடன்**—சீவகனை வளர்த்த வணிகன். சீவகன் புதல்வருள் ஒருவன்.

**கந்துக்கன்னிய மகநுஷ்கோத்திரன்**—வணிகன் மூவரசர் முன்னிலையில் பஞ்சகாவியத்துள் ஒன்றாகிய சிந்தாமணி கொண்டவன். வைசியபுராணம்.

**கபந்தன்**—1. இவன் தநு என்னும் காந்தருவன். தூலசிரசு இருடியிடஞ்சென்று கோரரூபமாய் அவரை ஆசியஞ்செய்தமையால் அவர் கோபித்து நீ இவ்வுருவுடன் அரக்கனாகியிருக்க எனச்சபித்தனர். பின் ஒருகாலத்து இந்திரன் இவனை வச்சிரத்தாலடிக்கஇவனது தலை வயிற்றிலமிழ்ந்தது. ஆதலால் வயிற்றில் தலையுடையானாயினன். இவன் ஒருயோசனை நிகளமுள்ள கைகளையுடையவனாய்த் தண்டகாரண்யத்தில் வசித்திருந்து அரண்யவாசிகளாகிய இராமலக்ஷ்மணர்கள் சீதாபிராட்டியாரைத் தேடுமவசரத்தில் அவர்களைத் தன் கையகப்படுத்தி வாயிடங் கொண்டுபோகையில் அவர்களால் வெட்டுண்டு தன்னுரு வடைந்தவன்.

2. பாணுசுரன் மந்திரியாகிய கும்பாண்டனுக்கு ஒரு பெயர்.

3. சுமந்து மாணக்கன் இருடி.

4. ஷண்முகசேநாவீரன்.

**கபர்த்தி** — ஒரு கணநாதர்.

**கபர்த்தீசன்** — காசியில் எழுந்தருளி யிருக்கும் சிவமூர்த்தி. இவரெழுந்தருளிய தலத்தில் புலியாலிறந்தமான் சாரூபமடைந்தது.

**கபலை**—(கபலை) பெருஞ்சாலில் யானைத் துதிக்கைபோல் கிணற்றினீரைக் கொண்டுவர அமைத்த நீர்ச்சால். இது இரண்டு தூண்களுக்கிடையில் கம்பியிடையமைத்த சக்கரத்தின் வழியாக இரண்டெருதுகளா விழுக்கப்பட்டது.

**கபாடபுரம்**—பாண்டிநாட்டில் இடைச்சங்கமிருந்து கடல் கொள்ளப்பட்ட நகர்.

**கபாலகேது**—கங்காளகேதுவின் குமாரன், இவன் அரக்கன்.

**கபாலகௌதமருஷி**—இவர், ஜகந்நாதத்தில் இறந்த பிள்ளையைப் பெருமாள்முன் கொண்டுபோய்ப் பெருமாளைப் பிரார்த்திக்கப் பிள்ளை எழுந்தமைகண்டு சிவேதமாதவப் பெருமாள் பிரதிஷ்டை செய்தவர். (பிரம புராணம்.)

**கபாலப்பள்ளி**—இஃது உஞ்சைநகரத்தின் புறத்தே காளவனத்தி லுள்ளதோர் ஆச்சிரமம். இது தீர்த்தயாத்திரைக்குச் செல்பவர்கள் தங்குவதற்கு உரிய இடமாக இருந்தது. (பெரு - கதை.)

**கபாலாபரணன்** — ஓர் அரக்கன். இவன் மந்திரி, சவபட்சன் இவ்விருவரும் இந்திரனுடன் யுத்தஞ்செய்து இறந்தனர். இதற்கு முன்பிறப்பில் திரிவக்ரன் என்னும் அரக்கன் தனக்குப் புத்திரப்பேறு இல்லாமையால் அவ்விடந் தவஞ் செய்துகொண்டிருந்த சுசிமுனிவரிடம் தன் தேவியைப் புணர அனுப்பினன். அப்படியே அவள் புணரத் தூர்மேதன் பிறந்தனன். (திருச்செங்கோட்டு-புரா.)

**கபாலமூர்த்தி** — பிரமன் சிவமூர்த்தியைப் போலத் தானும் ஐந்து சிரமுடையவனென்று செருக்கடைந்தகாலத்தில் அவன் நடுச்சிரத்தைக் கிள்ளிப் பலியேற்ற சிவவுருவம்.

**கபாலமோசனம்** — 1. ஒருதலம். மகோதரனது கபாலம் ஒரு இருடியின் காலிற்பட்டு விடாது துன்பஞ்செய்ய அவ்விருடி இவ்விடம் வந்தபோது விட்டதால் இப்பெயர் பெற்றதென்பர்.

2. மகோதரரைக் காண்க.

**கபாலம்**—யாகத்தின்பொருட்டு விதிப்படி மண்ணால் ஓடுசெய் தமைப்பது.

**கபாலரோகம்**—மண்டையில் உண்டாகும் ரோகம். இது முத்தோஷங்களினால் மண்டையில் சிறு கொப்புளங்களையும், புண்களையும் உண்டாக்குவது. இது 9 வகைப்படும்: 1. உபசீரிஷரோகம், 2. மூர்த்தபிடகரோகம், 3. சிரோற்புதரோகம், 4. சிரோவித்திரதிரோகம், 5. அரும்ஷிகைரோகம், 6. தாருணரோகம், 7. இந்திரலுத்தரோகம், 8. கலதிரோகம், 9. பலிதரோகலக்ஷணம், ஆகக் கபாலரோகம் 9.

**கபாலி** — 1. சிவமூர்த்திக்கு ஒருபெயர்.

2. ஒரு சிவகணத்தவன்.

3. சண்முகசேநாவீரருள் ஒருவன்.

**கபி**—யக்ஞமூர்த்திக்குத் தக்ஷிணையிட முதித்த குமரன்.

**கபிஞ்சலன்**—புண்டரிகனது தோழன்.

**கபிஞ்சலாதர்**—சண்டாளியிடம் பிறந்தவர்.

**கபிலபுரம்**—கலிங்கநாட்டிலுள்ள ஒரு நகரம். (சிலப்பதிகாரம்.)

**கபிலர்**—A. கர்த்தமப் பிரசாபதிக்குத் தேவபூதியிடம் உதித்த விஷ்ணுவின் அம்சம். இவர் தாய்க்குத் தத்துவ முபதேசித்தவர். இவர் தாயின் அநுமதிபெற்று வடதிசையணுகிச் சமுத்திர ராசனால் கொடுக்கப்பட்ட இடத்தில் யோகம் பூண்டிருந்தனர். இவர் பாதாளத்துத் தவஞ் செய்திருக்கையில் இந்திரன் சகரரை வஞ்சித்துக் குதிரையை இவருக்குப் பின் கட்டினன். அசுவமேதக் குதிரையைத் தேடிச்சென்ற சகரர், குதிரை யிவர்க்குப் பின்னிருக்கக் கண்டு கபிலரிடம் சந்தேகித்து அவரை வருத்தினர். அதனால் கபிலர் கோபித்து விழித்தனர். அந்தக் கோபாக்கினியால் சகரர் நீறாயினர். கணனைக் காண்க. இந்திரன் இவரிடம் வர அவனுக் குணவளித்துச் சிந்தாமணி பெற்றவர். சாங்கியயோகம் இருடிகளுக் குபதேசித்தவர். இவருடனிராவணன் சண்டைக்குவந்து இவரது திருமேனியின் சுவாலையால் ஒளிமழுங்கிச் சோகித்து இலங்கைக்குச் சென்றனன்.

B. தநுகுமாரர்களில் ஒருவர்.

C. வள்ளுவருடன் பிறந்தவர். இவர் பிறந்தபோது தாய் விட்டுப் பிரிய வருந்துகையில் "கண்ணுழையாக் காட்டிற் கருங்கற் றவளைக்கும், உண்ணும்படி யறிந்தூட்டுமவர்-நண்ணும், நமக்கும் படியளப்

ப்பார் நாரியோர்பாகர், தமக்குத் தொழி லென்ன தான்" என்றுக் கவிகூறினர். இக்கவி கேட்டுத் தாய் பிரிந்தபின் ஒரு வேதியன் வீட்டில் வளர்ந்து உபநயன காலத்தில் மற்ற வேதியர் இவன் வேதியன் அன்றென்று மறுக்க அவருடன் கன்மத்தாற் சாதியன்றிச் சன்மத்தால் இல்லையென்று வாதிட்டு நீங்கித் தம்பெயரால் கபிலரகவல் பாடித் தவஞ்செய்தவர். (திருவள்ளுவமாலை.)

D. இவர், பொய்யடிமையில்லாத புலவர் கூட்டத்துள் ஒருவர். இவர் அருளிய நூல்கள் மூத்தநாயனர் இரட்டைமணிமாலை, சிவபெருமான் இரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி. (பதினோராந்திருமுறை.)

E. ஓர் இருடி. இவர் விநாயக பூசை செய்து விநாயகர் பிரசன்னமாகத் தன்னிடமிருந்து கவர்ந்த மணியை மீண்டும் பெறும்பொருட்டுக் கவர்ந்த அவனைச் சங்கரிக்க வரம் பெற்றவர். (பார்க்கவ புராணம்.)

F. இவர் பாண்டிநாட்டிலே திருவாதவூரில் அந்தணர்மரபிலே பிறந்து வளர்ந்து உரிய பருவத்திலே கல்வி கற்பிக்கப்பெற்றுத் தமிழில் ஒப்பாரும், மிக்காருமில்லாத பயிற்சியுடையராய்க் கடைச்சங்க புலவரிலொருவராகிப் பரணர், இடைக்காடர், ஔவையார் முதலாயினேரிடத்துப் பெருகிய நட்பை யுடையாராய் விளங்குவாராயினர். இவர், முன்பொருகால் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனைப்பாடி அவனை மகிழ்விக்கச் செய்தனர். இவருடைய கையை அவன் பற்றி நம்முடைய கைகள் மிக மெல்லியவா யிருக்கின்றனவெனலும் அவனை நோக்கி நீ போரில் பகைவரை வெல்ல அமைந்ததனல் நின் கைகள் வலியவாகும், நின்னை பாடுவர் உண்டு வருந்தும் செயலல்லது வேறு தொழில் செய்தறியாராதலால் அவர்களின் கைகளெல்லாம் மெல்லியவே யென்று பாடி யுவப்பித்தார். புறம் - 14. பின்பு கடையெழுவள்ளலி லொருவராகிய வேள்பாரியை உயிர்த்தோழமை கொண்டு அவனது அவைக்களத்துப் புலவராக வீற்றிருந்தருளினர். அக்காலத்துப் பாரியைப் பாடிய பாடல்கள் கருதுவோருள்ளத்தை மகிழ்விக்கும் தன்மையன புறம் - 105. அங்ஙனம் இருக்கும் நாளில் இடையே திருக்கோவலூரையடைந்து முள்ளூரின்கணுள்ள மலையமான் திருமுடிக்காரியைச் சிறப்பித்துப் பலபடியாகப் புகழ்ந்துபாடி அவன் பரிசில் கொடுக்கப் பெற்று மீண்டனர். புறம் - 121. பின்பு ஒருக்கால் வையாவிக் கோப்பெரும் பேகனிடம் சென்று அவனால் துறக்கப்பட்ட கண்ணகி காரணமாக அவனைப்பாடி மீண்டு பாரியிடத்திருந்தார். புறம் - 143. இருக்கும்பொழுது பெரும்பாலும் பாரியினது பறம்புமலையில் பழகினவராதலாற் குறிஞ்சி திணைப்பாடுதலிற் சிறந்தவராயினர். ஆரிய அரசன் யாழ்பிரமதத்தனுக்குத் தமிழின் சிறப்பு அறிவுறுத்தற்குப் பத்துப்பாட்டு ளொன்றாகிய குறிஞ்சிப்பாட்டுப் பாடியருளினர். அதனையறிந்த அவன் தமிழ் பயின்று சங்கத்தாரோடு பாடும் திறமை யடைந்தனன். அவன் பாடியது குறு - 184 ம் செய்யுள். இவர் இன்னாநாற்பது என்னும் நீதிநூல் பாடிச் சங்கத்தில் வெளியிட்டருளினர். இது பதினெண்கீழ்க் கணக்கினுள் ஒன்று. இவரடுத்திருந்த வேள்பாரி கொடையாலெய்திய புகழ் இத் தமிழ்நாடெங்கும் பரவலானே அதனைக் கேள்வியுற்ற மூவேந்தரும் பொறாமைகொண்டு படையெடுத்துவந்து பாரியின் பறம்புமலையை முற்றுகைசெய்தார்கள். அதுகண்ட கபிலர் அவர்களிடம் சென்று பாரியின் புகழனைத்தையும் கூறினர். அவ்வள்ளலுக்கு 300-கிராமங்களிருந்தன; அவற்றையெல்லாம் பரிசிலர் பெற்றுக்கொண்டனர். இப்பொழுது அவனது பறம்புமலை யொன்றே யுள்ளது; நீங்களும் பாடிச் சென்றால் அதனைப் பெறலாமென்று அஞ்சாது கூறினர். புறம்-110. கைப்பற்றியவுடன் பாரியின் புதல்வியர் இருவரையும் இவர் அழைத்துக்கொண்டு பறம்புமலையை நோக்கிப் பலவாறு புலம்பினர். புறம் - 113 முதல் 120 வரை. அதனை விடுத்தகன்று விச்சிக்கோன் என்னும் சிற்றரசனிடம் சென்று இப் பெண்களை மணஞ் செய்துகொள் என்றனர் புறம் - 200. அவன் உடன்படாமை கண்டு, புலிகடிமாலென்னும் இருங்கோவேளிடம் போய் இம் மகளிரை மணம் புரிந்துகொள்ளென்று கேட்ப, புறம் - 201. அவனும் மறுத்தானாக, அதுகண்டு அவனை வெறுத்து புறம் - 202. மீண்டும் அவர்களைப் பார்ப்

பாரின் பாதுகாவலில் வைத்துப் பின்னர் சேரலன் செல்வக் கடுங்கோ வாழியாதன் பாரிபோன்ற நற்குணமுடையவனென்பதறிந்து அவனிடஞ் சென்று பதிற்றுப்பத்தில், ஏழாம்பத்துப்பாடி அவனைப் புகழ்ந்து கூறி அவன் அளவிறந்த பரிசில் கொடுக்கப்பெற்று மீண்டனர். (பதிற்று ஏழாம்பதிகம்.) மீண்டும் பாரியைப் பிரிந்ததனாலாய துன்பம் மிகுந்து தாமும் உயிர்விடத் துணிந்து அவனோடென்னை விதி கூட்டுவதாகவென்று புறம் - 236 கூறி வடக்குமுகமாக இருந்து இந்திரியங்களை ஒடுக்கி ஆகாராதி வேண்டாது உயிர்துறந்தருளினார். இவர் குறிஞ்சித்திணையில் வல்லவராதலின் அதற்குரிய கொல்லிமலை, பறம்புமலை, முள்ளூர்மலை, முள்ளூர்க்கானம் இவற்றையெல்லாம் பாராட்டிக் கூறியுள்ளார். "வாய்மொழிக் கபிலன்" (அகம்-75) என்று நக்கீரராலும், "நல்லிசைக் கபிலன்" (பதிற்று 85) என்று, பெருங்குன்றூர் கிழாராலும், 'வெறுத்தகேள்வி விளங்குபுகழ்க் கபிலன்" (புறம்-53) என்று பொருந்தில் இளங்கீரனாராலும், "புலனழுக்கற்ற வந்தணாளன்" (புறம் - 126) "பொய்யாநாவிற் கபிலன்" (புறம் - 174) என்று மாறோக்கத்து நப்பசலையாராலும் சிறப்பித்துப் பாடப்பட்டவர். மூவேந்தரால் முற்றிய பாரி கபிலரது சூழ்ச்சியால் கிள்ளைகளை விடுத்துக் கதிர் கொணர்ந்து உண்டிருந்தமையை நக்கீரர் சிறப்பித்துக் கூறுநிற்பர் அகம் - 78. ஒளவையாரும் அச் செயலைப் பெரிதும் பாராட்டாநிற்பர் அகம் - 303.

இவர் மலைக்கு மாயோனை உவமை கூறினதன்றி "நாடாதுநட்டலின்" என்ற குறளின் கருத்தை அமைத்துள்ளார் நற் - 32. வேட்டுவன்பெறும் உணவுப்பொருளை விளக்குகிறார் நற்-56. சகுனசிறப்புக் கூறுநிற்பர் நற் - 65. புலவியுணர்த்தலின்பத்தைப் பெரிதும் பாராட்டிக் கூறுகின்றார் நற் - 217. முருகவேளைக் கூறியுள்ளார் நற்-225. பாரியின்பறம்பு மலையைப் பாராட்டிக் கூறியிருக்கிறார் நற்-253. முள்ளூர் மன்னன் காரி குதிரைமேற்சென்று இரவில் நிரை கவர்ந்துவருவதைச் சிறப்பிக்கிறார் நற் - 291. கொல்லிமலையில் ஓரியைக் கொன்று அவனது நகரிற் காரி சென்றமையும் ஆங்குள்ளார் பெரும் பூசலிட்டமையுங் கூறுகிறார் நற் - 320. குறமகள் பலவின் சுளையை மந்திக்கு விருந்தாகக் கொடுக்கு மலைநாடனென வருணிக்கிறார் நற் 353. யாவரும் வியக்கத்தக்க உள்ளுறையே கூறியுள்ளார் நற் - 373. இவர் பாடிய கிள்ளைவிடு தூது மிக்க இனிமையுடையது நற் - 376. தலைவியைச் சிறுகொம்பாகவும், அவள் கொண்ட காமத்தை அதனிடத்துத் தூங்கும்பெரும் பழமாகவும் கூறுவர். குறு-18. இயற்கைப் புணர்ச்சிக்கட் குருகிருந்தது சாக்ஷியாகவெனத் தலைமகன் கூற்றாகக் கூறுவர் நற் - 25. இவர் குறு - 38ம் செய்யுளிற் கூறிய உள்ளுறையைத் திருக்கோவையாரி லெடுத்தாண்டமையறிக. (திருக்கோவை 276) ஓரியின் கொல்லிமலையிலுள்ள பாவையைச் சிறப்பித்துக் கூறுவர் குறு - 100. இவர் மலையமான் திருமுடிக்காரியையும் குறு - 118, 312. நள்ளியையும் 81 - ம் 238. சிறப்பித்துக் கூறுநிற்பர். தலைமகன் மலையை நோக்கியவுடன் பசலைதீர்ந்ததெனத்தலைவி கூறியதாக இவர்பாடியது வியக்கத்தக்கது. குறு - 247. இவர் பாடியனவாக நற்றிணையில் பத்தொன்பது (13, 32, 59, 65, 77, 217, 222, 225, 253, 267, 291, 309, 320, 336, 353, 359, 368, 373, 376) பாடல்களும், குறுந்தொகையில் இருபத்தொன்பதும், ஐங்குறுநூற்றில் குறிஞ்சிபாட்டு நூறும், பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்துச் செய்யுள்பத்தும், அகத்தில் பதினாறும், புறத்தில் இருபத்தெட்டும் (நெட்டிலை யிருப்பை) என்ற தனிச்செய்யுளொன்றும், திருவள்ளுவமாலையிலொன்றுமாக 204-செய்யுட்களும், இன்னாநாற்பதில் நாற்பது செய்யுட்களும், குறிஞ்சிப்பாட்டுப் பத்துப் பாட்டில் ஒன்றுமாக 246-பாடல்கள் கிடைத்திருக்கின்றன. கபிலர் செய்த வேறு பிரபந்தங்கள் சில பதினொராந் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளன.

"நீதியார் மதூகநீழல் நெட்டிலை யிருப்பை யென்றோர், காதல்கூர் கவிதை பாடும் கபிலனார் பிறந்த மூதூர்." என ஒரு செய்யுள் காணப்படுகிறது.

G. ஒரு தமிழ்ப் புலவர். இவர் பிறந்தபோது பாடியது. "நெட்டிலை யிருப்பை வட்டவான்பூ, வாடாதாயிற், பீடுடைப்பிடியின் கோடேய்க்கும்மே, வாடிலோ, நைந்தலைப்பரதர் மனைதொறு முணங்கும், செந்தலை யிறவின் சீரேய்க்கும்மே." (தமிழ் நாவலர் சரிதை).

**கபிலபுரம்** — கலிங்கநாட்டிலுள்ள ஒரு நகரம். (சிலப்பதிகாரம்.)

**கபிலவிநாயகர்** — கபிலரால் சிந்தாமணி பொருட்டுப் பூசிக்கப்பட்டவர். கணனைக் காண்க. இவர்க்குச் சுமுகரெனவும் பெயர். (பார்க்கவ புராணம்.)

**கபிலன்**—1. ஒரு வேதியன். இவன் அயலான் பசுவைத் திருடினன். அவர்கள் அறிந்து தொடர ஒரு சிவவேதியன் வீட்டிற் கட்டிச் சொந்தக்காரன் கேட்க அப் பசுவிருக்கும் இடத்தைக் காட்டினன். அவர்கள் அன்னையபாலைக் கறந்து சிவ புண்ணியஞ் செய்தமையால் அப் புண்ணிய மிவனை யடைய முத்திபெற்றவன்.

2. சீலவிருத்தனைக் காண்க.

3. சுகர் புத்ரன்.

**கபிலாசுரம்**—காசியிலுள்ள ஒரு தலம்.

**கபிலாச்சிரமம்**—இது கங்கைகடலுடன் கூடுமிடத்திற் கருகிலுள்ள சகாத்தீவி லிருப்பதென்பர். பாதாளத்திலு முள்ளதென்பர்.

**கபிலாசுவன்** — குவலயாசுவனுக்குக் குமரன். இவனது குமரன் திருடாசுவன். இவனுக்குத் துந்துமார னெனவும் பெயர்.

**கபிலை**—1. தெய்வப்பசு, ஒருமுறை அக்கினிக்குத் தன்னுடலில் இடங்கொடுத்து தேவர்களால் புண்ணியப்பேறு பெற்றது. இது திருப்பாற்கடலிற் பிறந்து நந்திமாதேவரை விரும்பியிருக்கும். இது ஐவகைப்படும்—அவை நந்தை, சுபத்திரை, சுரபி, சுசீலை, சுமனை யெனப்படும். அவற்றுள் நந்தை கபிலநிறம், சுபத்திரை கருமைநிறம், சுரபி அழகிய வெண்மைநிறம், சுசீலை புகைநிறம், சுமனை தாமிரநிறம். இவை தேவபூசை முதலியவற்றிற் குதவியாய்ப் பால், தயிர், நெய், கோமயம், கோசலம், கோரோசனை முதலியவற்றைத் தரும். இப்பசுக்களின் தேகத்தில் தேவர் விரும்பி வாழ்வார். இவற்றின் கொம்புகளினடியில் பிரமவிஷ்ணுக்களும், கொம்புகளின் நுனியில் தீர்த்தங்க ளனைத்தும் தங்கும். சிரத்திற் சிவமூர்த்தியும், நடுநெற்றியிற் சத்தியும், மூக்கின் நுனியில் கந்தமூர்த்தியும், மூக்குக்குள் இந்திரனும், கன்னங்களி னடுவில் அச்சுவினி தேவர்களும், இரண்டு கண்களில் சூரியசந்திரரும், தந்தத்தில் வாயுவும், நாவில் வருணனும், நெஞ்சிற் சரசுவதியும், மணிகளில் இயமனும் இயக்கரும், உதட்டில் சந்தியா தேவதைகளும், முசுப்பில் அருக்கத்தேவரும், மார்பில் சாத்தியரும், நான்கு கால்களில் வாயுவும், முழங்காலிலும், குளம்புநுனியிலும் மருத்துவரும், குளம்பின்மேல் அரம்பையரும், முதுகில் உருத்திரரும், சந்துகளில் அட்டவசுக்களும், யோனியிற் சத்தமாதர்களும், அபானத்திற் றிருமகளும், அடிவாலில் நாகாதியரும், வாலின் ரோமத்தில் ஆதித்தரும், கோசலத்தில் ஆகாயகங்கையும், கோமயத்தில் யமுனையும், உரோமங்களில் மாதவரும், வயிற்றிற் பூமிதேவியும், தனத்தில் எல்லாச் சமுத்திரங்களும்; வயிறு, இதயம், முகம் இம் மூன்றினும் காருகபத்திய முதலிய முத்தீக்களும் பொருந்தும். இவற்றைப் புல்லுற்ற இடத்தில் மேய்த்துப் பூசிப்போர் நற்கதி யடைவர். இவற்றை முருக்கின் கொம்பினால் ஒற்றி அதற்காக நியமித்த கோட்டத்தில் அடைத்தல் வேண்டும். அடிக்கின் நரகம் அடைவர். சுமித்திர இருடிக்குப் புண்ணிய உலகந் தந்தவை. ஒரிருடியின் முதுகில் முளைத்த மூங்கிலைப் பேர்த்தகாலத்தில் அந்த இருடி நோய் பொருது சீ மூதேவியெனக் கூறினர். ஆதலால் அன்றுமுதல் பசுக்களின் முகத்தில் மூதேவி வாசம் என்பர். இப்பசு ஒருமுறை புலியிட மகப்பட்டுத் தன் கன்றுக்குப் பாலூட்டிவரவேண்டிப் புலியிடஞ் சென்றது. புலி இதனைப் புசியாமல்விடக் கண்ட தேவர் இரண்டு மிருகங்களுக்கும் நற்கதி தந்தனர். (கோகுலசதகம்.) பிரமதேவர் இதனைப் பூமியிலுள்ள புண்ய தீர்த்தங்களிலிருந்தும், புண்ய க்ஷேத்ரங்களிலிருந்தும், எல்லா உலகங்களிலுமுள்ள பரிசுத்தமானவைகளும் அழகுள்ளவைகளுமான பதார்த்தங்களில் இருந்தும் தேஜஸை யெடுத்து நூனங்களைத் தாண்டுவிப்பதாகவே படைத்தார். இவை 10 வகை. 1. சுவர்ணபிங்களை, 2. கௌரபிங்களை, 3. ரக்தபிங்காக்ஷி, 4. கள்பிங்களை, 5. பப்புருவர்ணை, 6. ச்வேதபிங்களை, 7. ரங்கபிங்காக்ஷி, 8. குரபிங்களை, 9. பாடலை, 10. புச்சபிங்களை. இவை முறையே 1. பொன்னிறமுள்ளது, 2. வெளுப்பும் மஞ்சளுங் கலந்த நிறமுள்ளது, 3. சிவப்பும் பொன்னிறமுள்ள கண்களுள்ளது, 4. பொன்னிறமுள்ள கழுத்துள்ளது, 5. கீரியினம்போன்ற நிறமுள்ளது, 6. வெண்மையும் பொன்னிறமும் கலந்தது, 7. காந்தியுள்ளது பொன்

னிறமான கண்களுள்ளது, 8. பொன்னிறமான குளம்புள்ளது, 9. பாதிரிப்பூநிறமுள்ளது, 10. பொன்னிறமான வால் உள்ளது. (பார - அச்.)

2. ஒரு நதி நர்மதைக்குத் தெற்கிலுள்ளது. இது விழும் தலமுதலியவும் சுவர்க்கமடையும்.

3. புண்டரீகமென்னுந் திக்கானையின் பெண்.

4. மகதநாட்டிலுள்ள ஓர் நகரம். கபில முனிவர் தவஞ்செய்த இடம். கபிலவாஸ்துவும் இதுவே. இது புத்தர் அவதாரஸ்தலம். (மணிமேகலை.)

5. கலிங்கநாட்டரசன் பட்டணம். குமரன் எனும் அரசனுண்டது. (மணிமேகலை)

**கபிலைகண்ணியபுண்ணியநிலை** — தலைமையாற் சிறந்த நான்கு வேதத்தினையுமுடைய அந்தணர்க்குக் கொடுக்கக் கருதிய பசுவினது முறைமையைச் சொல்லியது. (பு. வெ. பாடாண் )

**கபீர்தாசர்** — கங்கையில் கிளிஞ்சிலொன்று மிதந்துவர அதனை ஒரு துருக்கர் எடுத்துப் பிளந்தனர். அதில் குழந்தை யிருக்கக் கண்டு அதனை மனைவியிடங் கொடுக்க அவளுக்குப் பால் சுரக்கக்கண்டு அவள் அப் பிள்ளையை வளர்த்துக் **கபீர்** எனப் பெயரிட்டுமணமுஞ் செய்வித்தனள். கபீர்தாசர் இராமநாமம் மறவாமல் உள்ளத் துறவுடையராய்த் தம் நெய்தற்றொழில் செய்யாதிருத்தலைத் தாயுணர்ந்து உறுத்த, தாசர் நெய்தற்றொழில் மேற்கொண்டு நெய்து நெய்ததைத் தாயிடங்கொடுக்க அவள் கடைவீதியில் விற்றுவருகவெனச், சென்றவர் பெருமாளைத் தியானித்துத் தம்மை மறந்திருக்க வாங்குவோர் இது அதிக விலைபெறுமென அகலப் பொழுது போயினதுணர்ந்து இதை வாங்குவார் காணாது அன்னை கோபிப்பாளென வருந்தி ஒரு பாழ்வீட்டை யடையப் பெருமாள் ஒரு விருத்த வேதியரைப்போல் வந்து நான் குளிரால் வருந்துகிறேன் எனக்கு ஒரு போர்வை தருக என இரக்கத், தாம் விற்க வந்ததில் ஒருபகுதி கிழித் தளித்திருக்கையில் மீண்டும் பெருமாள் ஒரு பக்கிரி வேஷங் கொண்டடைந்து போர்வையைக் கேட்க அதனையும் அளித்தனர். பின் பெருமாள் கபீர் தாயினிடஞ் சென்று நீ விற்றுவரச் சொன்ன ஆடையை விற்கவில்லை அவன் தானஞ்செய்து விட்டனனென்னத் தாய் கோபித்து அவன் வரின் தண்டிப்பே னென்னப் பெருமாள் அவனுன்னிடம் அடையான். என்னைப் பின்பற்றின் அவனிருக்குமிடந் தெரிவிப்பேனெனத் தாய் அவ்வகைப் பின்வரத் தாசர் இருந்த வீட்டைக் காட்டிப் பெருமாள் வெளியில் இருந்தனர். தாய் தாசரையடைந்து ஏடா நான் விற்கக் கூறிய கூறையெங்கெனக் கபீர் சும்மா விருக்கக் கண்டு அன்னை கோபிக்க வெளியிலிருந்த பெருமாள் அவ்வகைக் கேட்கின் கூறுன்புடைக்கவேண்டு மெனத் தன் கையிலிருந்த கோலைநீட்ட அன்னை அதனைக்கொண்டடிக்கத் தாசர்மீதடித்த அடி பெருமாளுக்கு முதுகிடைப்பட்டது கண்டு பெருமாள்பட்ட அடிகளைக் காட்டி நிறுத்தக் கேட்க விடாததுகண்டு ஜானகியுடனெதிரில் நிற்கத் தாசர் திருவடியைப் பற்றி விடாதிருக்கத் தாயும் உன்னால் பெருமாளைக் கண்டேனென்று பிள்ளையை யணைத்து வீட்டிற்கு அழைத்துச் சென்றனள். கபீர் இவ்வகை இல்லறம் நடத்துகையில் மனைவியிடம் ஒரு புத்திரர் பிறக்க அவருக்குக் **கமால்தாசர்** எனப் பெயரிட்டு வளர்த்து வருகையில் அவர் வயதடைந்து துவாரகையைத் தரிசிக்க வேண்டுமெனத் தந்தையைக் கேட்கத் தந்தை அவ்வாறு விடைதரச் சென்று பெருமாளைத் தரிசித்து நான்கு மாதங்களிருந்து நீங்கிச் சித்திரகூட மடைய அவ்விடம் விட்டுணு தாசர் எதிரடைந்து தமது வீட்டிற் கழைத்துச் சென்று அமுது செய்விக்கக் கமால்தாசர் அன்றிரவு அவ்விடம் பஜனைசெய்ய ஆனந்தங்கொண்டு ஒரு மாணிக்கந்தரக் கமால்தாசர் இது நாம் வேண்டோம் நமக்கு மணியுங் கல்லு மொன்றேயென மறுக்கக் கேட்டு அவரறியாவகை வஸ்திரத்திலதை முடித்தனர். பின் கமால் தம் பதியடையத் தந்தை முன்தானையில் மணியிருக்கக்கண்டு நீ ஸ்ரீ அரிநாமசங் கீர்த்தனையை விற்றுப் பிழைப்பவனென விசனமுற்றழக் கமால் கண்டு அஞ்சி விஷ்ணுதாசரிடம் விரைந்து சென்று மாணிக்கத்தைத் தந்து தமது தந்தைபாலடைந்து தாம் யாத்திரைசெய்த செய்திகூறி மகிழ்ந்தனர். பின்னொருநாள் அஸ்தமிக்கும் வேளையில் மூவர், இவர்கள் வீட்டுக்கு அதிதிகளாக வரக் கபீர் இவர்களுக்கு அன்னமிடவேண்டி மனைவிக்குக் கூற மனைவி யொன்றுமிலாமையாலும்

கொடுப்பாரிலாமையாலும் திருடிக்கொண்
டுவரக் கூறக் கபீரும் கமாலும் ஒருகடைக்
குள் கன்னம் வைக்கக் கமால் உள்புகுந்து
வேண்டிய தானியத்தைக் களவாடித் தொ
ளைவழி புகுந்து வருகையில் சொந்தக்கா
ரன் காலைப் பிடித்துக்கொள்ளக் கமால்
தானியத்தைத் தந்தையிடங் கொடுத்து
என்காலை உடையவன் பிடித்துக்கொண்
டமையால் என் தலையைக் கொண்டுபோக
வென்னக் கபீர் அவ்வகைத் தலையைவெட்டி
யெடுத்துக்கொண்டு வீடுபோய்ச் சேர்ந்து
நடந்ததை மனைவிக்குக் கூறினர். மனைவி
குமரற்கு விசனமடைந்து அதிதிகளுக்கு
அன்னமருத்தினள். விடிந்தபின் அதிதிகள்
மூவரும் ஸ்நானத்திற்குச் சென்றனர். செ
ட்டி விடிந்தபின் அரசனுக் கறிவிக்க அர
சன் சவத்தைக் கழுவேற்றக் கட்டளையிட்
டனன். அரசன் கட்டளைப்படி சவத்தைக்
கழுவேற்றுகையில் கபீர் மனைவியுடனும்,
நீராடிச் சென்றுண்டு வந்த மூவருடனும்
கழுவேற்றுதலைக் காணச் சென்றனர்.
சவமிம்மூன்று அதிதிகளைக் கண்டு அஞ்
சலிசெய்ய அதிதிகள் மூவரும் சவம் எங்
களைக்கண்டு வணங்குவ தென்னெனக் கபீ
ரைக்கேட்கக் கபீர் இறந்தவன் பாகவதனா
யிருக்கக் கூடும் அத்தகையரைக் கண்டஞ்
சலிக்கின்றானென இவனார் என்னக் கபீர்
நடந்தவைகூற அதிதிகள் தாயை நோக்
கித் தலையைக் கொண்டுவரக் கட்டளையிட
அவளவ்வகை கொண்டுவர அவர்களத்
தலையை முண்டத்தில் பொருத்தித் தலை
மேல் தண்டத்தை வைத்து உயிர் பெறுக
வெனக் கமால் உயிர்பெற்று அதிதிகளை
வணங்கித் தாயுடன் வீட்டை யடைந்த
னன். மற்றொருநாள் கடைத்தெருவின்
வழியாகப் பஜனைசெய்து கொண்டு வரு
கையில் மாவரைத்துக் கொண்டிருந்த
ஒருத்தி அழுது கொண்டிருக்கப் பாகவதர்
கண்டு ஏனழுகின்றனையென அவள் இந்த
யந்திரத்தில் அரைபடும் அரிசியைப்போல்
பிறவியெனுந் திகிரியாலுயிர் அரைபடு
கின்றதென அழுகிறேனெனக் கேட்டு
மகிழ்ந்து வீடடைந்து ஆசாரியரால் ஞான
மடைய வேண்டுமென்னு மெண்ணமடைந்
தவராய் இராமாநந்தர் என்பவரையடை
ந்து தமக்கு உபதேசிக்க வேண்டத் துருக்
கர் சாதியராகிய உமக்கு நாம் உபதேசிக்
கோமென மறுக்கத் தாசர் மீண்டு திரி
கரண சுத்தமடைந்து உம்மிட மடைந்த
எனக்கு உபதேசிக்க வேண்டுமென வே
ண்ட மீண்டும் மறுத்தமை யெண்ணி எவ்
வகையினும் இவர் திருவடி முடிமேல்
படப் பெறுவேனென்று இராமாநந்தர்
கங்கையாடச் செல்லும் வழியில் குழி
யொன்று தோண்டி அக்குழியில் உடல்
அனைத்தும் புதையத் தலையை மேல்வைத்
துக் கொண்டிருந்தனர். இராமாநந்தர் கங்
கையாட விடியற் காலையிற் செல்லும்
போது இவரது அடி தாசரது முடியிற்
பட்டது. உடனே ராமாநந்தர் எவர்தலை
யோ என்காலிற் பட்டதென வருந்தி
இராமா என்றனர். உடனே தாசர் குரு
வே உமது திருவடிகள் என் தலையிற்படப்
பெற்றேன். இராம நாமமும் பெற்றே
னெனக் களிப்படைந்து துதித்தனர். பின்
தாசர் இராமாநந்தர் சீடனெனக் கீர்த்தனை
கள் பாடிவருகையில் இராமாநந்தர் இவன்
குணத்தை யறிவோமெனத் தமது பாது
கையா விரதத்தங்காணத் தாசரது தலையி
லடித்து நாமுனக் குபதேசிக்காம விருந்
தும் என் நம் சீடனெனப் பேசுகின்றா
யெனத் தாசர் தேவர்தாள் என் முடியிற்
பட்டதுண்டு, தேவர் இராமநாமம் கூறிய
துண்டு, எல்லாருங்காண இப்போது மிதி
யடியா லென்றலையில் அறைந்ததுண்
டென வணங்க இராமாநந்தர் இவரது
அன்பிற்குக் களித்துச் சிரத்தில் கரம்
வைத்து அவரது காதில் கிருஷ்ணநாம
த்தை உபதேசித்து மனையடைந்தனர்.
தாசரும் தமதிருக்கை சேர்ந்தனர். இவ்
வகை இருக்கையில் இவரிடம் பொறாமை
கொண்ட சிலர் குமரனைக் கொன்றான்
பாகவதவேடம் பூண்டு நடிக்கின்றான் இவ
னது வன்மையறிவோமெனப் பல பாக
வதர்க்கும் சமாராதனையெனக் கடிதம்
எழுதி நாள் குறிப்பிட்டுக் கபீர்தாசர் எழு
தியதாகத் தெரிவித்தனர். பாகவதர்
அனைவரும் ஒருங்கு ஒருநாளில் வரத்
தாசர் பேரானந்தங் கொண்டவராய் வண
ங்கியிருக்கையில் பெருமாள், வந்தவர்க்கு
விருந்தளிக்காவிடின் தீமையாமென
எண்ணி ஒவ்வொரு பாகவதரிடமும்
ஒவ்வொரு கபீராக இருந்து விருந்துமுத
லிய உபசாரங்க ளியற்றிவருகையில் தீய
வர்கள்கண்டு அஞ்சி உமது செய்தி அறி
யாதுசெய்த குற்றத்தைப் பொறுக்கவென
வேண்டிச் சென்றனர். பின் தாசர் சேது
யாத்திரை செய்யவெண்ணி வந்து அவ்

விடமடைந்த இரண்டுவேதியர்க்கு உபதேசிக்க அவ்வூர் வேதியர் பலரும் அவ்வேதியரைத் துருக்கனிடம் உபதேசம் பெற்றவனென்று அவன் பெண்ணுக்குப் புருடனும் மகனுக்கு மனைவியும் தரக்கூடாதெனக் கட்டுபாடுசெய்ய இருவரும் காசியடைந்து கபீரைவணங்கி நடந்தது கூறக் கபீர் பெண்ணைக் குமரனுக்கு மணக்கவென அவ்வகைசெய்ய் உடன்பட்டுச் செல்லுகையில் ஊரார் ஒன்றுசேர்ந்து இதேது அனியாயமென்று மகனுக்கு ஒருபெண்ணையும் பெண்ணுக்கொரு மணமகனையுமளித்து உறவாடினர். சில நாள் தரித்துக் காசிக்குப் பதினாயிரம் வைணவர்கள் வந்து அன்னமிடுவாருளரோ வென்று கேட்கச் சிலர் கபீர்தாசர் மனையகத்தைக் காட்டத் தாசரிப்பதினாயிரவரை வணங்க அவர்கள் அன்னமுண்டோவெனத்தாசர் வேதியரை இருக்கச்செய்து துளசி தாசனென்னும் வணிகனிடஞ் சென்று பதினாயிரம் பாகவதருக்கு அன்னமளிக்கின் உனக்கு நலனுண்டாகுமென அவ்வணிகன் உன்மனைவியை இன்றிரவு என்னிடம் வரச்செய்யின் அவ்வகை புரிவேனெனத் தாசர் உடன்பட வணிகன் பதினாயிரம் பெயருக்குரிய சாமான்களை அளித்தனன். பாகவதருண்டுசென்றனர். தாசர் நடந்தவைகளை மனைவிக்குக்கூறி வணிகனிடம் மனைவியாரை அனுப்ப வணிகன் மகிழ்ந்திருக்கையில் பெருமாள் ஊரதிகாரிபோல் உருக்கொண்டு வணிகனையடைந்து மருட்டி என் தங்கையாகிய கற்புடையாளை எண்ணினையென மருட்ட அவன் நடுங்கித் தாசர் மனைவியாரின் காலில் பணிய ஊரதிகாரியாகிய பெருமாள், துணையாக வந்து அம்மையாரை வீட்டில் விட்டு மறைந்தனர். தாசர் மனைவியாரைக் கண்டு என் சொற்கடந்து ஏன் வந்தனையெனப் பத்தினியார் நடந்தவை கூறத் தாசர் ஊரதிகாரியிடஞ் சென்று கேட்க அதிகாரி நான் ஒன்றுமறியே னென்னத் தாசரிது இராமகாரியமென வணிகனிடஞ் சென்று பெருமாளை ஊரதிகாரி யெனக் கண்டு வருந்தினாய் என, உமதருளால் இராமனைத் தரிசித்தேனென அரிநாமங்கூறத் தாசரும் மனைசென்று மகிழ்ந்திருந்தனர்.

**கபீர்மதம்**—இவன் காசிபட்டணத்தில் கிறிஸ்துபிறந்த (கசூ) வது சகத்தில் ஒரு பார்ப்பன விதவைக்குப் பிறந்தவன். தாயூர் நிந்தனைக்குப் பயந்து இவனைக் காட்டில் விட்டுவிட்டனள். வழியிற் செல்லும் நூறுமகம்மது எனுந் துருக்கன் ஒருவன் இக் குழந்தையை எடுத்துக் கபீர் என்று பெயரிட்டு வளர்த்தனன். இவன் மதாபிலாஷையுள்ளவனாய் ராமாநந்தரிடஞ் சென்று தனக்கு உபதேசிக்க வேண்ட அவர் நீ துருக்கன் என்று மறுக்கக் கண்டு விசனமுற்று ஒருநாள் கங்காதீரத்தில் உறங்குகையில் இராமாநந்தர் உஷக்காலத்தில் ஸ்நானத்திற்கு வருவோர் அறியாது மிதித்து ராம, ராம, மனுஷனை மிதித்தேன் என வருந்தக் கபீர் எழுந்து வணங்கக்கண்டு அவனுக்குத் தன் மதம் போதித்தனர். இவன் மதத்தில் ஆசாரமில்லை. ஆனந்தமதத்தில் ஆசாரமுண்டு. மதக்கொள்கை ஒவ்வொருவனும் மற்றவனைத் தன்னையொப்பப் பாவிக்கவேண்டும், பிராணிகளிடம் அன்புபாராட்ட வேண்டும், கடவுளைப் பக்தி விச்வாசத்துடன் தியானிக்கவேண்டும். இவன் மாகரு கிராமத்தில் பரமபதம் அடைய, துருக்கரும் இந்துக்களும் தேகத்தைத் தமதென்று வாதிட அசரீரியாய்க் கபீரை மறைத்த வஸ்திரத்தை நீக்கிக் காண்க என்று ஒரு ஒலி உண்டாகக் கேட்டு அவ்வாறு பார்க்கத் தேகமில்லாது புஷ்பராசி கண்டு இருவரும் அப்புஷ்பங்களைப் பங்குசெய்து துருக்கர் கோரியும் இந்துக்கள் மடமும் கட்டுவித்தனர். (சகலார்த்த சங்கிரகம்.)

**கபோதலோமன்** — விலோமதநயனுக்குக் குமரன்.

**கபோதரோமன்**—சிபியின் புத்ரன். (பார.)

**கபோதவன்**—கத்துரு குமரன், நாகன்.

**கபோதன்**—கருடபுத்ரன். (பாரதம்.)

**கப்பி**—இது மரத்தாலும் இரும்பினாலும் இரண்டு பக்கங்களைத் தனக்கு ஆதாரமாகக்கொண்ட நடுவில் ஆணிபொருந்திய சக்கரம். பூமியிலுள்ள கனப் பொருளை உயரக் கொண்டுசெல்ல உதவுவது.

**கப்பிஞ்சிநாடு** — இது பாண்டிவளநாட்டிலுள்ள சிறு நாடுகளுள் ஒன்று. பண்டைக்காலத்தில் ஒரு பாண்டியன் சோழனொருவனைக் கொன்று களவேள்வி செய்தற்கு இடமாகவிருந்ததுபற்றி இது இப்பெயர் பெற்றது. காட்டுநாடெனவும் கூறப்படும். இந்நாடு, மூவரையன் வண்ணத்திற் கூறப்பட்டுள்ளது; மதுரைக்கு கிழக்கேயுள்ள வீரசோழ னென்னுமூர்

இதன்கண்ணதென்று தெரிகின்றது. (திருவிளை.)

**கமகன்** — வல்லநூலறிவினானும் மதியினது பெருமையாலும், கல்லாத நூல்களையும், கற்றோர் வியப்பத்தந்துரைக்கும் புலவன். (வீரசோ.)

**கமடாசுரன்**—விநாயகரது பிள்ளைப்பருவத்தில் ஆமையுருக்கொண்டு கொல்லும்படி வந்து அவரா லிறந்தவன்.

**கமலக்கன்னி** — இடும்பிக்கு ஒரு பெயர். வீமன் தேவிகளில் ஒருத்தி.

**கமலபாலிகை** — இடிம்பை.

**கமலமாலதை** — கமலமாலினி. ஒரு வித்தியாதர அரம்பை.

**கமலமுனி**—இவர் போகர் மாணக்கருள் ஒருவராம். இவர் பிறப்பாற் கம்மாளர் என்பர். இவர் சித்தருள் ஒருவர். இவர் செய்த நூல் (கமலமுனி (௩௦0) எனும் வைத்திய நூல், இரேகைசாத்திரம்.

**கமலநயநபட்டர்**—தெய்வத்துக்கரசு நம்பிகளின் மருமகன். பெரியபிராட்டிக்குப் புருஷன், இவரிடம் கோவிந்தபட்டர் உதித்தார்.

**கமலலோசனை**—இவள் கீகடதேசத்துச் சித்திரரதன் குமரி. முற்பிறப்பில் ஸ்ரீசைல அர்ச்சகர் குமரியாய் அவர்க்குச் சிவார்ச்சனை நிமித்தம் உதவிபுரிந்ததால் மறுபிறப்பில் சிவத்யானத்துடன் பிறந்தவள். சித்திரரதனைக் காண்க. (சிவரஹ.)

**கமலவதி** — கோச்செங்கட் சோழனுக்குத் தாய். இவள் தான் பிரசவவேதனைப் படுகையில் நிமித்திகர் இக்குமரன் இன்னும் ஒருநாழிகை பொறுத்துப் பிறக்கின் உலக முழுதும் செங்கோல் செலுத்துவன் எனக் கூறக்கேட்டு அந்நாழிகை வருமளவும் தன் கால்களைத் தூக்கி மேலே கட்டி வைக்கச்செய்து அந்த நாழிகைவரப் பிள்ளையைப் பெற்று என் **கோச்செங்கண்** ணனோ என்று குழந்தையை யழைத்து உயிர் நீங்கினவள்.

**கமலாகார்** — இவர் பண்டரிபுரத்திருந்த அரிதாசர். இவர் தம் பத்தினியுடன் பாகவதரைப் பணிந்து அரிபத மறவாதிருக்கும் நாட்களில் ஒருநாள் நாமதேவர், ஞானதேவர், கபீர்தாசர் முதலியோர் அரிபஜனை செய்யக்கேட்டுத் தம் புத்திரருடன் சென்று அவர்களை விருந்திற் கழைக்க அவர்கள் உடன்பட்டனர். தாசர் வீடடைந்து தம் மனைவியாரிடம் நாமதாசர் முதலியோர் விருந்தாகுஞ் செய்திகூற மனைவியார் பல பதார்த்தங்களுடன் அன்னஞ் சமைத்து வருகையில் தீப்பற்றுமையால் குமரனைப் புறக்கடையி லிருக்கும் எரிமுட்டைகளைக் கொண்டுவரக் கூறினர். குமரன் அங்ஙனம் எரிமூட்டைகளைச் சேர்க்கையில் ஒரு பாம்பு தீண்டி இறந்தனன். இதனை யறிந்த தாய்தந்தைய ரிருவரும் இதனைச் சாதுக்கள் அறியின் உணவு கொள்ளாரென்று தொட்டிலிற் கிடத்தி விருந்தாக வந்த சாதுக்களை எதிர்கொண்டுபசரித்து அன்னம் பரிமாறி உண்ணக் கூறினர். நாமதேவர் உண்ணத் தொடங்கிப் பெருமாளைத் தியானிக்கப் பெருமாள் தரிசனங் கொடாதிருக்க நோக்கி ஈண்டு ஏதோ அதிசயம் உளதெனக்கண்டு உமது குமரன் எம்மோடே னுண்டாலன்றி உணவுகொள்ளோமென்றனர். தாய் தந்தையர் அவன் தொட்டிற்கணுறங்குவான் உதவான் எனவுங் கேளாது, எழுப்ப என்றனர். பின் தந்தையார் உறக்கம் தெளிந்திலன் என, நாமதேவர் கையிற் றாளங்கொண்டு கண்ணனைக் குழந்தையை எழுப்பவேண்டக் கண்ணன் தரிசனந்தந்து பிள்ளையை எழுப்பினர். பிள்ளை எழுந்திருக்கத் தாய் தந்தையர் களித்து நடந்தவை கூறினர். பாகவதர்கள் களித்து அமுதுண்டு சென்றனர்.

**கமலாசுரன்**—இவன் தேவரை வருத்த மல்லாலர் எனுந் திருநாமத்துடன் எழுந்தருளிய விநாயகமூர்த்தி யாகத்தில் மயிலுண்டாக்கி அதனை வாகனமாகக்கொண்டு இவனைச் சங்கரித்தனர்.

**கமலாக்ஷன்**—தாரகாசுரனுக்குப் புதல்வன். திரிபுராதியர் மூவரில் ஒருவன்.

**கமலினி** — திருக்கைலையில் பார்வதியாருக்குப் பூத்தொடுத்துச் சாத்தும் தோழியருள் ஒருத்தி. சுந்தரமூர்த்தி சுவாமிகளிடத்து ஆசைகொண்டு திருவாரூரில் பரவைநாய்ச்சியாராக உருத்திரகணிகையர் குலத்திலவதரித்தவள்.

**கமலை**—1. விமலையின் றாய்.

2. குந்துதீர்த்தங்கரின் றாய்.

3. இலக்ஷ்மிதேவிக்கு ஒரு பெயர்.

**கமலைபீடம்** — சத்தி பீடங்களி லொன்று.

**கமனப்புயங்கன்**—சுவேதவதியின்கணவன்.

**கமனியவன்** — போகர் இரசமெடுக்கச் சென்றகாலத்துத் தடுத்த சிவகிங்கரன். (போகர்.)

**கழுசை**—உக்கிர்சேநன் குமரி.

**கமை**—1. புலகன் தேவி.

2. தக்ஷன் பெண். கிருதுவின் தேவி.

3. யமன் தெவி. இவளில்லாவிடத்துச் சனங்கள் உன்மத்தரா யிருப்பர்.

**கம்சவதி** — உக்கிரசேனனுக் கிரண்டாம் பெண். தேவச்சிரவசுவின் றேவி.

**கம்சன்**—யதுவம்சத்துப் போசகுலத்தவனாகிய உக்கிரசேனனுக்குக் குமரன். இவன் முற்பிறப்பில் காலநேமி யென்னும் அசுரன். கிருஷ்ணனுக்கு நல்லம்மான். இவன் தன் தங்கையாகிய தேவகியை வசுதேவர்க்குப் பாணிக்கிரகணஞ் செய்வித்து ஒருநாள் விநோதமாய் அவர்களைத் தேரின் மேல் எற்றிக்கொண்டு தான் அந்த இரதத்தை ஓட்டிக்கொண்டு சென்றனன். தெய்வகதியாய் அசரீரி உன் தங்கை வயிற்றிற் பிறக்கும் எட்டாவது சிசு உன்னைக் கொல்லும் என்றது. உடனே தேரை நிறுத்தித் தன் தங்கையைக் கொலைசெய்யப் போகையில் வசுதேவர் தடுக்க நின்று அத்தம்பதிக ளிருவரையும் விலங்கிட்டுச் சென்றான். பின் அவர்க்குப் பிறந்த சிசுக்கள் அனைத்தையும் வதைத்து எட்டாவது கருவை எதிர்பார்க்கையில் கண்ணன் தான் நந்தகோபன் மனைவியிடம் மாறி அவ்விடமிருந்த மாயாதேவியைத் தேவகியிட மிடுவித்தனன். கம்சன் அம் மாயாதேவியை வதைக்க ஆகாயத்தில் எறிகையில் அவள் என்னைக் கொல்ல உன்னாலாமோ உன்னை வதைப்பவன் நந்தகோபன் வீட்டில் வளருகிறான் எனக் கேட்டுத் தன் நண்பராகிய பிரலம்பன், மகாசுரன், சாணூரன், திருணவர்த்தன், அகாசுரன், முஷ்டிகன், அரிஷ்டன், துவிதன், பூதனை, கேசி, தேனுகாசுரன், பாணாசுரன், நாகாசுரன் முதலியவரை யேவவும் முடியாது கடைசியில் கண்ணனால் மஞ்சத்தினின்று இழுத்துத் தள்ளப்பட்டுக் கொலையுண்டவன்.

**கம்சை** — உக்கிரசேனன் பெரிய பெண். தேவபாகன் பாரி.

**கம்பர்**—இவர் சோழமண்டலத்தில் குலோத்துங்கசோழன் அரசாண்டிருக்கையில் திருவழுந்தூரில் இருந்த ஒரு ஓச்சன் குமரர் என்பர். இவர் இங்கு வளர்ந்து காளிவரப் பிரசாதியாய்க் கம்பநாடனென்று பலராலும் அழைக்கப்பட்டுத் தீவிர புத்திமானா யிருந்தனர். **கம்பர் தெய்வ வாத்தினாற் கவிகூறியநாளிற் பாடிய வெண்பா** "மோட்டெருமை வாவிபுக முட்டுவரால் கன்றென்று, வீட்டளவும் பால்சொரியும் வெண்ணெயே—நாட்டி, லடையாநெடுங் கதவு மஞ்சலென்றசொல்லு, முடையான் சராராமனூர்." இவரது புத்திவன்மையை அக்காலத்திலிருந்த திருவெண்ணெய்நல்லூர்ச் சடையப்ப முதலியார் என்னும் பிரபு கேள்வியுற்று இவரையும் இவர் தாயையும் வருவித்து ஆதரித்துக் கல்வி கற்பித்துவருகையில் கம்பர் எவருமமெச்சும் கவிச்சக்ரவர்த்தி யாயினர். **இவர் திருவழுந் தூரினர்** என்பதை "கம்பன் பிறந்தவூர் காவிரி தங்குமூர் கும்பமுனி சாபங் குலைந்தவூர்—செம்பதுமத், தாதகத்து நான்முகனுந் தாதையுந் தேடிக் காணாவோதகத்தார் வாழுமழுந்தூர்" (தமிழ்நாவலர் சரிதை.) "நாரணன் விளையாட்டெல்லா நாரத முனிவன் சொல்ல, வாரணக்கவிதை செய்தானறிந்து வான்மீகி யென்பான், சீரணி சோழநாட்டுத் திருவழுந் தூருவச்சன், காரணி கொடையான் கம்பன் றமிழினாற் கவிதை செய்தான்" என்ப. பின் இவரது கவிவன்மையறிந்தசோழன் முதலியாரிட மிருந்து வருவித்து ஆதரித்துவருகையில் தாதன் எனும் வணிகனாகிய ஒரு கவிக்கு வரிசை முதலியதரக் கம்பர் அவனுக்குச் செய்யும் வரிசை எங்களை அவமதித்த தாகுமென்று சோழனிடம் கூறத் தாதன் இவர் பாடிய மும்மணிக்கோவைக்குக் குற்றங் கூறினன் என்பர். **தாதன் பாடிய வசை** "கைம்மணிச்சீரன்றிச் சீரறியாக் கம்பநாடன் சொன்ன, மும்மணிக்கோவை முதற்சீர் பிழை முனைவாளெயிற்றுப்,' பைம்மணித் துத்திக் கனமணிப் பாந்தட்படம் பிதுங்கச், செம்மணிக்கண் பிதுங்கப் பதம்போர்த்த சயதுங்கனே." **கம்பர், தாதன் வரிசை பெறப்பொறாது** அவனை விருதுகாளம் பிடிக்கப் பாடியது "கூளம் பிடித்தெள்ளின் கோதுவைப் பானங் குலக்கவிக்கு, காளம்பிடித்திடிற் சின்னம்படு மன்னர்காதலிமார், வேளம்பிடித்த கண் வெள்ளம் பிடிக்க வெம்பேய்க் கிளம்பேய், தாளம் பிடிக்கத் தனிவேல் பிடித்த சயதுங்கனே" (தமிழ் நாவலர்சரிதை). இவர் தொண்டை நாட்டுக் கூவத்துவழி வருகையில் அவ்விடமுள்ளார் தம்மைப் பாட விரும்புகையில் அவர் தமக்கு வசைமொழிந்ததாக

அடிமைகளைப் பாடுவதில்லையென மறுக்க அவர்கள் விடாது சென்று சிவிகை முதலிய தாங்கிச் சென்றபோது "ஓங்கிய செந்தமிழ்த் தாதற் கடிமை யவ்வூரதனு, ளோங்கவி சொல்வது மில்லையென்றே கம்ப நாடன் சொல்ல, ஆங்கவனேறுஞ் சிவிகை சுமந்து மடப்பையிட்டுந், தாங்கவி கொண்டதுங் கூவந்தியாக சமுத்திரமே." என்றனர். காவிரிப் பெருக்கடங்கப் பாடியது "கன்னியழிந்தனள் கங்கை திறம்பினள், பொன்னிகரை யழிந்து போனளென் — றிந்நீ, ருரை கிடக்கலாமோ வுலகுடைய தாயே, கரை கடக்கலாகாது காண்." இதனைச் சோழன் கேள்வியுற்றுக் கவிச் சக்கரவர்த்தி எனப் பெயரளித்துக், கம்பரைத் தன் சமஸ்தான வித்துவான்களில் ஒருவர் ஆக்கினன். சடையப்ப முதலியார் கம்பரால் இராமாயணம் பாடுவிக்கும் ஆவல்கொண்டு கம்பரிடங்கூறக் கம்பர் காலதாமதம் செய்வது கண்டு அரசனிடம் தம் கருத்தை அறிவித்தனர். அரசன் தம் சமஸ்தான வித்துவான்களில் ஒருவராகிய ஒட்டக்கூத்தரையும் இவரையும் இராமாயணம் பாடும்படிக் கட்டளை யிட்டனன். ஒட்டக்கூத்தர் கடல்காண் படலம்வரையில் பாடவும் கம்பர் ஒரு கவியும் பாடாதிருந்ததைப் பிறராலறிந்த அரசன் இருவரையும் அழைத்து இராமாயணம் எவ்வளவு தூரம் ஆயிற்றெனக், கூத்தர் கடல்காண் படலம்வரை என்றார். கம்பரை வினவக் கம்பர், கூத்தரினும் அதிகங் கூற வேண்டும் என்னும் எண்ணத்தால் திருவணைப் படலம் வரையும் ஆயிற்றென்றார். இதனைக் கேட்ட அரசன் ஆயின் அப்படலத்தில் ஒரு செய்யுளைப் பிரசங்கியும் என்றனன். கம்பர், இசைந்து அங்கிமிஷத்தில் "குமுதனிட்ட குலவரை கூத்தரின், திமிதமிட்டுத் திரையுந் திரைக்கடற், றுமிதமூர் புகவானவர் துள்ளினர், அமுதமின்னுமெழு மெனுமாசையால்" என்கிற செய்யுளைப் பாடிப் பிரசங்கிக்கையில் கூத்தர் துமி என்னுஞ் சொல் செய்யுட் பிரயோகங்களில் இன்று என்றுஆக்ஷேபிக்கக் கம்பர் அது உலகவழக்கெனச் சமர்த்தித்துச் சரசுவதியி னருளால் இடைப் பெண்கள் பேசப் பிரத்தியக்ஷத்தில் காட்டிச் சமர்த்தித்து இராமாயணம் பாடத் தொடங்கித் தொண்டை நாட்டை யடைந்தனர். இவர் வல்லியை விழைந்தது, ஒரு காற் றொண்டை நாட்டில் திருவொற்றியூரில் இருந்த சதுராநநபண்டிதன் மடத்திலிருந்த வல்லியெனப் பெயர்பெற்ற தாசியை விரும்பிப் பலநாள் அவளுடன் அங்கே மகிழ்ந்து அவளைக் கண்டு "இல்லென்பார் தாமவரை யாமவர்தம் பேரறியோம், பல்லென்று செவ்வாம்பல் முல்லையையும் பாரித்துக், கொல்லென்று காமனையுங் கண்காட்டிக் கோபுரக்கீழ், நில்லென்று போனரென் னெஞ்சைவிட்டுப் போகாரே" (எ ம்.) "நடக்கிலன்னமா நிற்கினல் வஞ்சியாங், கிடக்கிலோவியப்பாவை கிடந்ததாங், தடக்கையான் சதுராநநபண்டிதன், மடத்துளா ளென்மனத் துறைவல்லியே" என்று கூறி அவளுடனிருந்து அவளுக்கு எருமைகள் வாங்கிவரப் புழற்கோட்டம்புக்குக் காளிம்பன் எனும் ஆநிரை மேய்ப்பான் ஒருவனைக்கண்டு 'புக்கு விடை தழுவிக் கோடுழுத புண்ணெல்லாந், திக்கிலுயர் காளிம்பன் றென்புழன் மா—னக்கணமே, தோள்வேது கொண்டிலனேற் சுங்கரப் பெற்றோன்றனுக்கு, வாழ்வேது கண்டிலமே மற்று' எனப் பாட அவன் ஆயிரம் ஈன்ற எருமைகள் தாப்பெற்று அவளுக்கு அணிபலவியற்றித் தருதற்கு மயிலையிலிருந்த திருவாலி என்பாளைக் கண்டு "அண்ணல் திருவாலி யணிமயிலை யத்தனையும், வெண்ணிலவின் சோதி விரித்ததே — நண்ணும், தடந்துப் புவிற்பாணந்தன் முகத்தேகொண்டு, நடந்துப்புவிற்பாணகை" எனப்பாடி அவளுக்கு நகை முதலிய உதவி அவளைப் பிரியலாற்றாது சோணாட்டிற்கு அவளையும் உடன்கொண்டு சென்றனர். அக்காலத்து வல்லியிருந்த வீட்டை மழையான்னையாமல் சடையவள்ளல் நெற்கதிரான் மறைத்தனர். இதனை "பொதுமாதர் வீட்டைப் புகழ்பெற வேநெற், கதிரானே வேய்ந் தருளுங் கங்கைப் — பதி நேர், வருவெண்ணை நாடன் வருநா வலர்க்குத், தருவானவன் சடையன்றான்" என்பதாலறிக. இவர் இவளுடன் பல நாள் தங்கி இவள் பிரிந்த காலத்துக் குரும்பை என்பவளைக் கூடியிருந்தபோது வல்லிபோல் களிப்பிக்கவல்லளன் றென்னுங் கருத்தால் "சொல்லியைச் சொல்லி னமுதான செல்லியைச்சொற்கரும்பு, வில்லியைமோகவிடாய்தவிர்ப்பாளை விழியம்பினாற், கொல்லியைக் கொல்லியம்பாவை யொப்பாளைக்

குளிரொற்றியூர், வல்லியைப் புல்விய கைக்கோவிவள் வந்து வாய்த்ததுவே" என்று அவளுடனுமிருந்து பின்பு **களந்தைப் பதியில் ஒருத்தியை** விரும்பி அவளுடனுமிருந்தனராம். இதனை "வில்லிகளந்தைமின்னை விண்ணவர்தங் கோமானை, வல்லிநெடுஞ் சேடனையும் வாணனையும்—புல்லியுறப், பார்க்கும்போதும் மதரம்பற்றும்போதும் தனத்தைச் சேர்க்கும்போதும் நினைப்பஞ்சென்று." எனும் தமிழ் நாவலர் சரிதையாலறிக. காவிரி எச்சிற்படப் பாடியது "மெய்கழுவிவந்து விருந்துண்டு மீளுமவர், கைகழுவ நீர்போதுங் காவிரியே — பொய்கழுவும், போர்வேள் சடையன் புதுவையான்றன் புகழை, யார் போற்ற வல்லாரறிந்து" தாதனைப் பாடியது. தாதா வென்றாலும் தருவென்று சொன்னாலும், தாதா வென்றாலும் தருவனோதாராதான், தாதா வென்றாலுந் தருவென்று சொன்னாலும், தாதா வென்றாலும், தருவனந்தாதனே." அதிகாரியை வெட்டுவிக்கக் கூறியது "சென்னிவிளைகழனி செஞ்சிவாழ் சோழாண்டே மன்னு புகழொற்றியூர் மட்பக்க நாய்ச்சியார், தம்மை வரவிட்ட பூழலோ பூழல். இவர் இராமாயணம் ஒற்றியூரி லிருந்தபோதும், வெண்ணைநல்லூரிலுமிருந்து பாடினர் என்பதை "தொடை நிரம்பியதோ மறுமாக்கதை சடையன் வெண்ணெய் நல்லூர் வயிற்றந்ததே" என்பதாலும் பின்வருஞ் செய்யுளாலு மறிக. இவர் இரவில் தம் மாணக்கர் எழுதப் பாடுகையில் திருவொற்றியூர்க் **காளியைத் தீவட்டிப் பிடிக்கச் செய்தனர்** என்பதை "ஒற்றியூர் காக்கவுறைகின்ற காளியே, வெற்றியூர்க் காகுத்தன் மெய்ச்சரிதை — பற்றியே, நந்தாதெழுதுதற்கு நல்லிரவின் மாணக்கர், பிந்தாமற்பந்தம் பிடி" என்பதாலறிக. கம்பர் சடைய வள்ளலது பெருநன்றி பாராட்டி அவரை இராமாயணத்துப் பலவிடங்களிற் புகழ்ந்துளார் அதனைப் பாயிரம் "நடையினின்றுயர்" எனுஞ் செய்யுளினும், பாலகாண்டம் வேள்விப்படலம் "விண்ணவர் போயபின்றை" எனுஞ் செய்யுளினும், அகலிகைப் படலம். "அரமடந்தையர் கற்பக நவநிதி" என்பதாலும், மிதிலை காண்படலம் "வண்ணமாலைகை பரப்பி" என்பதினுனும், சேதுபாதனப் படலம் "மஞ்சொனத்திகழ் தருமலையை" என்பதினும், நாகபாசப் படலம் "வாசங்கலந்த மரைநான்" என்பதனுலும், மருந்துமலைப் படலம் "வள்ளி நாட்டிய பொன்" என்பதனுலும், திருவபிடேகப்படலம் "அரியணை யநுமன்றாங்க என்பதனுலும், விடைகொடுத்த படலம் "மறையவர்வாழி" என்பதனுலும் கூறியவற்றா லறிக. இவர், நாளொன்றுக்கு எழுநூறு செய்யுட்களாகப் பாடி முடித்தனர். இதை யறிந்த ஒட்டக்கூத்தர், இவர்க்குச் சரசுவதியின் அருள் பூரணமாக இருக்கிறது, இவர் செய்யுளின் முன் நம் செய்யுள் எதாமெனத் தாம்பாடியதைக் கிழித்தெறிவதைக் காரியவசமாய் ஒட்டக்கூத்தர் வீட்டிற்குச் சென்ற கம்பர் கண்டு கிழிந்தவை போக உத்தரகாண்டத்தை வாங்கித் தாம் பாடிய இராமாயணத்துடன் சேர்த்தனர். இதனை யரங்கேற்றப் பலரிடஞ் சென்று ஸ்ரீரங்கம்போய் அங்குள்ள வித்துவான்களைக் கையொப்பங் கேட்டு அவர்கள் தில்லையில் தீக்ஷிதர்கள் கையெழுத்து இருக்கின் எங்கட்குத் தடையில்லையெனச் சிதம்பரஞ்சென்று பலநாள் காத்திருந்தும் அவர்கள் கூடாமையாற் கடவுளைத் துதிக்கத் தெய்வகதியால் **பாம்பு கடித்துக் குழந்தை போன் றிறந்தது.** அதன் பொருட்டு அனைவருங் கூடினர். அப்போது கம்பர் சென்று "ஆழியான் பள்ளியணையே அவன் கடைந்த ஆழிவரையின் மணித்தாம்பே-யூழியான், பூணேபுரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற, நாணேயகல நட" என்றும் "மங்கையொரு பங்கர்மணி மார்பிலாரமே, பொங்குங்கடல் கடைந்த பொற்கயிறே—திங்களையும், சீறியதன்மேலுருந் தெய்வத்திருநாணே, எறியபாம்பே யிறங்கு" என்றும் "பாரைச் சுமந்த படவரவே பங்கயக் கண், வீரன் கிடந்துறங்கு மெல்லணையே—ஈரமதிச், செஞ்சடையான் பூணுந் திருவாபரணமே, நஞ்சுடையாய் தூரநட" என்றும், தமது இராமாயணத்தில் நாகபாசபடலத்தில் சில செய்யுட்களையு மெடுத்துக்கூறிக் குழந்தையை எழுப்பினர். இதைக் கண்ட தில்லைமூவாயிரவர் கம்பர் மனதின்படி கையொப்ப மிட்டனர். அவ்விடம் நீங்கிக் கம்பர் தஞ்சை அஞ்சனுக்ஷி, மாவண்டூர்க்கருமான், அம்பிகாபதி முதலியவர் கையொப்பம் பெற்றுத் திருவரங்கஞ் சென்று பெருமாள் "நஞ் சட

கோபனைப் பாடினையோ என" கட்ட
ளைப்படிச் சடகோபரந்தாதி பாடித் துதி
த்து ஸ்ரீ அரங்கத்தார் கேட்டுக் கொண்ட
படி இரணியவதைப்படலம் பிரசங்கித்து
மோட்டழகிய சிங்கரைச் சிரிக்கக்காட்டிக்
குலோத்துங்கசோழன் சபையில் பரிசு
பெற்று இருந்தனர். ஒருநாள் அரசன்
தனக்கு எல்லாரும் அடிமையென்னக் கம்
பர் அரசனைத் தமக்கு அடிமையென்ற
தால் அரசன் பொன்னி எனும் தாசியைக்
கொண்டு கம்பரிடத்தி லவளுக் கடிமை
என் றெழுதிவாங்க ஏவினன். அவள் அங்
தப்படி செய்து கம்பர் கையொப்பமிட்ட
"தாசி பொன்னிக்குக் கம்பன் அடிமை"
யென்னும் சீட்டை அரசனுக்குத் தர அர
சன் கம்பருக்குக் காட்ட அரசனை நோக்கி
விரும்பியதைக் கொடுக்கும் சீதேவிக்குக்
கம்பர் அடிமையெனச் சமர்த்திக்கக் கண்டு
அரசன் "போற்றினும் போற்றுவர் பொ
ருள் கொடாவிடின், தூற்றினும் தூற்று
வர்சொன்ன சொற்களை, மாற்றினும் மாற்
றுவர் வன்கணாளர்கள், கூற்றினும் பாவ
லர் கொடியராவரே" என்று மனம் வேறு
பட்டுப் பெருஞ்செல்வத்தினும் பெருங்
கொடையினும் புலவரெல்லாம் ஒழுங்கு
பாராட்டுந் திறமையினும் சோழனாற் பெரி
தும் அழுக்காறு கொள்ளப்பட்ட வெண்
ணைச் சடையனையே மிகுதியும் மதித்துப்
பாடுதலையு மனத்தில் கொண்டு கோபிக்க
இவர் சோழனை நீங்கி " மன்னவனு
நீயோ வளநாடு முன்னதோ, உன்னையறிந்
தோதமிழை ஓதினேன்—என்னை, விரைந்
தேற்றுக் கொள்ளாத வேந்துண்டோவுண்
டோ, குரங்கேற்றுக்கொள்ளாத கொம்பு"
எ ம். "காதம் மிருபத்துநான் கொழியக்
காசினியை, ஓதக்கடல்கொண் டொளித்
ததோ — மேதினியில், கொல்லி மலைத்
தேன் சொரியும்கொற்றவா நீமுனிந்தால்,
இல்லையோ வெங்கட்கிடம்" என்று அங்
நாட்டை நீங்கித் தனித்து வேலி என்
பவளிடஞ் சென்று அவள் கட்டுவிக்கும்
சுவர் எவர் கட்டினுமிடிதல் கண்டு தான்
அச்சுவரைக்கட்டுவதாக உடன்பட்டு "மற்
கொண்டதிண் புயத்தான் மாநகர்விட்டி
ங்குவந்து, சொற்கொண்டபாவின் சுவை
யறிவா ரீங்கில்லையே, விற்கொண்ட வாணு
தலாள் வேலிதருங் கூலி, நெற்கொண்டு
போமளவும் நில்லாய் நெடுஞ்சுவரே" என
ப்பாடி அவள் தந்த நெல்லைப்பெற்று நீங்
கிப் பசியால்வருந்திச் செட்டி, வாணியன்,
பார்ப்பான் முதலியவர், வீடுகளில் சென்று
பசிக்கு ஏதேனும் கேட்க அவர்கள் மறுத்
தது கண்டு "செட்டிமக்கள் வாசல் வழிச்
செல்லோமே செக்காரப், பொட்டி மக்கள்
வாசல்வழிப் போகோமே - முட்டிபுகும்,
பார்ப்பாரகத்தை யெட்டிப் பாரோமே
யெந்நாளுங், காப்பாரே காராளர்காண்"
என்று கூறி வயலிலுழும் வேளாளனிட்ட
கூழுண்டு "மேழிபிடிக்குங்கை வேல்வேந்
தர் நோக்குங்கை, ஆழிதரித்தே யருளு
ங்கை—சூழ்வினையை, நீக்குங்கை என்று
நிலைக்குங்கை நீடுழி, காக்குங்கை காரா
ளர்கை" எனப் பாடினர். இவர் பாடின
தால் வேளாளனுக்குப் புதையலகப்பட
வேளாளன் கம்பரை யுபசரித்துப் பொன்
கொடுக்கப் போக மறுத்துத் துண்டங்கள்
நாலுபெற்றுப் பாண்டி நாடுபோய் அந்தச்
சமஸ்தான வித்துவான்கள் கம்பராமாய
ணம் பிரசங்கிக்க இவர் வியக்கத்தக்க இடங்
களில் வியக்கா திருந்தனர். இதனைப்
பாண்டியன் கண்டு நீர்வியக்கத்தக்க இடங்
களில் வியக்காததற்குக் காரணம் என்
னென்றனன். புலவர் கம்பரது அபிப்பி
ராயம் சரிவரவில்லை யென்று கூறினர்.
பாண்டியன் புலவரை நோக்கி நீர் யாரெ
னப் புலவர் நான் கம்பர் கற்றுச் சொல்லி
யென்றனர். ஆயின் உமக்குப் பிரசங்க
வன்மை யுண்டோவென உண்டென விசை
ந்து பிரசங்கித்தனர். இவர் பிரசங்கிக்கக்
கேட்டு அரசன் களித்தனன். அரச னிவ
ரிடத்தில் அன்பு கொண்டிருத்தலை யறிந்த
அந்தச் சமஸ்தான வித்துவான்கள் அம்
பட்டன் ஒருவனுக்கு வேண்டிய பொருள்
கொடுத்துக் கம்பரைத் தம்மவரெனக்கூறச்
செய்தனர். கம்பர் சற்றேனும் அஞ்சாது
சரசுவதியின் திருவடிப் பொற்சிலம்பில்
ஒன்று வாங்கிப் பாண்டியனுக்குக் காட்டி
இப்படிப்பட்ட சிலம்பு ஒன்று என் தாயாதி
யாகிய இவனுக்கும் எங்கள் முன்னோர்
கொடுத்துப் போயினர். அதை அவன்
தரின் இரண்டுசிலம்பும் அரசபத்தினிக்கு
ஆகும் வருவிக்க எனப் பாண்டியன் அம்
பட்டனைக்கேட்க அது அம்பட்டனில்லை
யென்றனன். கம்பர் இவன் இளமைமுதல்
மகாகபடன் நன்றாயடித்துக் கேளுங்களெ
னப் பாண்டியன் அம்முறை செய்விக்க
அம்பட்டன் நடந்ததையொளியாது அரச
னிடங் கூறினன். சமஸ்தானத்து வித்து

வான்களைத் தண்டிக்க யத்தனிக்கையில் கம்பர் அப்புலவர்களின் உயிரைக்காத்துப் பாண்டியனுக்குச் சரசுவதி தரிசனங்காட்டிச் சிலம்பினைச் சிலம்பிலாத திருவடிக்கு நேராகநீட்டி அச்சிலம்பைத் திருவடியில் சேர்த்திச் சரசுவதியந்தாதி பாடித்துதித்தனர். பாண்டியன் கம்பரது மகிமையுணர்ந்து வரலாறு கேட்கத் தாம் கம்பன் என்றுந் தாம்வந்த வரலாறுங் கூறியிருந்தனர். இதனையறிந்த பாண்டியன் இவரை உபசரித்து எதிர்கொண்டு தேவியுந் தானுமாகப் பல்லக்குச் சுமந்து வரிசை தந்தனன். **பாண்டியன் பல்லக்குச் சுமந்தபோது** கம்பர் பாடியது. "உமையவளு நீயுமொருங் கொப்பே யொப்பி, லுமையவளுக் கங்குண்டோரூன - மூமையவடன், பாகந் தோய்ந் தாண்டான் பலிக்குழன் ரூன் பாண்டியனுன், ஞகந்தோய்ந் தாண்டானரசு" என்றனர். இவ்வாறிருக்கச் சோழன் தன் சமஸ்தானம் கம்பரில்லாததால் அழகற்றிருத்தல் கண்டு கம்பரைக் கூட்டிவரச் சோழன் அனுப்பிய இணையாரமார் பனைப் பாண்டியன் இவன் யார் எனக் கம்பர் கூறிய விடை "என்னுடைய தம்பி சரராமனுக் கிளையான், கன்னன் மதயானைக் கம்பன் மகன் — துன்னு, பணையார் நீர்வேலிப் பழனஞ்சூழ் சோணுட் டிணையாரமார்பனிவன்." என்று கூறிச்சென்று சமஸ்தானத் திருந்தனர். கம்பர் சில நாளிருந்து ஆங்கு வாணபூபதிக்குக் கல்வி கற்பித்து அவர்மீது பல சமயங்களில் "வாணன் பெயரெழுதாமார் புண்டோமாகதர் கோன், வாணன் புகழுரையாவாயுண்டோ -வாணன், கொடிதாங்கி நில்லாதகொம்புண்டோ உண்டோ, அடிதாங்கி நில்லாவரசு" என்றும் "சேற்றுக்கமலவயற்றென்னுறை வாணனையான், சோற்றுக் கரிசிதரச்சொன்னக் கால்—வேற்றுக், களிக்குமாவைத் தந்தான் கற்றவர்க்குச் செம்பொன், அளிக்குமாறெவ் வாறவன்" என்றும் "தேருளைப்புரவி" என்றும் "வாணன் புகழ்க்கெல்லைவாழ்த்து வோர்நாவெல்லை, வாணன் புகழ்க்கெல்லை மண்ணெல்லை — வாணன் படைக்கெல்லை திக்கெல்லைபைந் தமிழ்தேர் வாணன், கொடைக்கெல்லை யேற்பவர் தங்கோள்" என்று பாடிச் சில நாளிருந்து சோழன் அம்பிகாபதியைக் கொலைசெய்ததால் "மட்டுப்படாக் கொங் கைமானுர் கலவிமயக்கத்திலே, கட்டுப்பட் டாயென்ன காதல்பெற்ருய் மதன் கையம்பினல், பட்டுப்பட்டாயினுந் தேறுவையே என்று பார்த்திருந்தேன், வெட்டுப் பட்டாய்மகனே தலை நாளின் விதிப்படியே" என்று துக்கத்துட னிருந்தனர். இவருக்குக் காவிரியெனப் பெயருள்ள ஒரு குமரியிருந்தனள். அவளைச் சோழன் மகன் விரும்ப அவள் கற்புக்கெடுவதினும் உயிர் நீங்கல் நன்றெனக் கம்புக்குதிரில் மூழ்கித் தற்கொலை புரிந்து கொண்டனள். இதனுலிவர் சோழனைவெறுத்து அரசன் குமாரனை யானைதுரத்த அவன்பயந்து கம்பர் வீட்டில் நுழையக்கண்டு காட்டானைக்குப் பயந்தால் கவியானை விடுமோ எனக்கையிலிருந்த எழுத்தாணியால் அரச குமாரனைப் பழிக்குப் பழிவாங்கித் தம்மகனையும் மகளையும் இழந்த துயரம் ஆற்ருதவராய்ச் சோழனையும் சோணுட்டையும் வெறுத்து அக்காலத்துச்சோழனினும் அமைச்சுநாடு அரண்பொருள் படைநட்பு என்னும் அங்கங்களால் பெரிதும் மேம்பட்ட ஓரங்கல் நாட்டுப் பிரதாபருத்ரன் என்னும் வேந்தனிடஞ் செல்லற்கு நினைந்து நென்மலி (நெல்வேலி எனவுஞ் செல்லுவர்) என்னும் ஊர்க்குப்போய் அங்குள்ள தச்சனொருவனைப் பாட அவன் ஆயிரக்கல நெல்லுக் கொடுக்கப்பெற்றனர். இதற்கு மேற்கோள் :— "நெற்பயிர் விளைகழனி நென்மலி வாழ்தச்சன், கற்படு திண்டோளன் கங்கண கணகணவன், விற்புரை திருநுதலாண் மின்மினு மினுமினுவை,சொற்படி வேலை செய்வாடுந்துமி துருதுருவை." இதுக்குத் தியாகம் ஆயிரக்கல நெல்லு. (தமிழ் நாவலர் சரிதை). அதனைத் தம் குடும்ப சீவனத்திற்கு இட்டுவைத்துத் தாம் தொண்டைநாடு போயினர். இவர் சோழனைக் கோபித்தபோதே இவர் அவர் பாலெய்திய பேருரிமையெல்லாம் இழந்து வறியராய்ப் போயினராவர். இவர் தொண்டைநாடு போம்போது ஒரு வேளாளன் களத்திற் குறுணிநெல் வாங்கி அவனைப் பாடினர் என அறியப்படுதலானும் இவர் வறுமை யுணரப்படும். இவர் தொண்டை நாட்டிலுள்ள ஓர் ஏழைமனைக்குட் புக்கபோது அவன் நல்லுணவில்லாமல் மாவையே நீரிற்கரைத்து அதனை இவர் திருமுன்புவைத்து இவரைநோக்கி யானும் என்னுரிமையும் நமக்கேயடிமை யென்று கூறி அதனை யமுது செய்தருளுமாறு

வேண்ட அச்சில்லுணவை அவனதன்பு
டைமைக்கு மகிழ்ந்து பருகிப்போய் அந்
நாட்டுள்ள சான்றோர்பிறரைப் பாடி அவர்
களாற் பசுநிரையும் எருமைக்கூட்டமும்
ஆடையாபரணங்களும் பிறவரிசைகளும்
அளிக்கப்பெற்று ஆங்குப் பல ஊரார்களைத்
தமக்கடியராக்கி வாழ்ந்திருந்தனர். சின்
னாட் கழித்தபின் அந்நாட்டினின்று மிக்க
சிறப்புடன் புறப்பட்டு நெடுந்தூரங்கடந்து
சென்று ஓரங்கல் புக்கு ஆண்டுள்ள அருங்
கலை விநோதனன பிரதாபருத்திரனது
அறிவுடைப்பேரவைக்க ணெய்தித் தமது
கல்விமாட்சியால் அவ்வேந்தனையும் அவ
னது நல்லவையையும் தம் வயப்படுத்தி
அவ்வரசனால் நன்று போற்றப்பட்டு இனி
தொழுகுவாராயினர். இவர் அவ்வேந்தன்
பால் நாளும் தம் இராமாயணத்துள்ள
அலங்கார நயங்களை அமிழ்தெனப் பொழி
ந்து அவனைத் தமது பெரிய கல்விவலையிற்
பிணித்துக்கொண்டு தமக்குச் சோழனாலி
யற்றப்பட்ட கொடுந்துன்ப மெல்லாம்
எடுத்தோதி அவ்வேந்தற்குச் சோழன்பாற்
பெருஞ்சின மூளச்செய்து தமதளவிற்
பேராற்றலைச் சோழனுணருமாறு அவ்வு
ருத்திரனைத் தமதடைப்பை கட்டிக்கொ
ண்டு தம்முடன் சோணாடுபோத வேண்டி
னர். இங்ஙனம சோழனிற் பெரியனாகிய
வேந்தனொருவனை இவர் தமக் கடைப்பை
கட்டிவர வேண்டியதற்குக் காரணமாக
வேறோர் கதை கூறுதலுமுண்டு. ஒரு
நாள் சோழன் கம்பருடன் தன்னுயர் மனை
யின் மேனிலையிற் சென்று தன் பெருநக
ரையும் அதனைச் சூழ்ந்த பெருநாட்டையுங்
கண்டு மகிழ்ந்து கம்பரைநோக்கி இவை
யெல்லாம் எமக் கடங்கியனவே யென்று
தருக்கினனுக்குக் கம்பர் இவையெல்லாம்
தமக் கடங்கினவேயாம்; இவ்வாறு சிற
ந்த நீவிர் எனக்கடங்கினீர் என்று சோழ
னது அரசவலியினும் தமது கல்விவலி
யையே மேம்படுத் தேத்தி நின்றார். இது
கேட்டுப் பொறாது சோழன் கம்பரை
முனிந்தனனெனவும், அது கண்டு கம்பர்
அரசவலியினும் கல்விவலி சிறந்ததாதலை
நுமக்குணர்த்துவல் என்று சோழற் குரை
த்து அவனினுஞ் சிறந்த வேந்தனிடம்
போய் அவனைத் தம் வயப்படுத்தி அவனை
அடைப்பைகட்டிவர வேண்டினரெனவும்
கூறுவர். பிரதாபருத்திரன் கம்பரது கல்
வித் திறத்திற்கு அடிமைப்பட்டவனாகி
அவர் வேண்டியவாறே புரிதற் குடன்
பட்டு அவருக்கு முடியுடையரசருக்கொத்த
பெரிய வரிசையெல்லாஞ் செய்து பலருங்
காணத் தானும் அவருக்கடைப்பை கட்டிக்
கொண்டுபோந்து அவரைச் சோணாட்டே
முன்னரினும் சிறக்க வீற்றிருக்க வைத்
துத் தன்னூர்க்கு மீண்டனன். **கம்பர்
பிரதாப ருத்திரனிடத்துப் போய் அவன்
அடைப்பைகட்டிவரப் பாடிய வெண்பா**
"அவனி முழுதுண்டு மயிரா வதத்தன்,
பவனி தொழுவார் படுத்தும் — புவனி,
புருத்திரா உன்னுடைய வோரங்க னாட்
டிற், குருத்திரா வாழைக்குழாம்" (தமிழ்
நாவலர் சரிதை.) கம்பர் மிக்க சிறப்புடன்
சோணாடெய்தி வாழ்கின்றபோது சோ
ழன் அவருடைய பேராற்றலுக்கு அஞ்சி
வஞ்சமாக இவர் பாற்பெரு நண்பினன்
போல ஒழுகத் தலைப்பட்டான். கம்பரும்
தம்முடைய பெருவலி சோழற்கு நன்
குணர்த்தப்பட்டதாதலின் இனி அவனாற்
றமக்கொரு தீங்கும் இழைத்த லாகாதென்
று அவனது நண்பினை நம்பி ஒழுகுவாரா
யினர். இவ்வாறொழுகுகின்ற காலத்துச்
சோழன் தன்னிலும் பெரு வலியுடைய
ஓரங்கலுருத்திரனைத் தமக்கு அடைப்பை
கட்டிவரப் புரிந்த கம்பர், ஒருகால் தன்
மேல் அவனைப் படையெடுத்து வரவும்
புரிவரோ என்று ஐயமே மிகுத்து இவ
ரைப் பிறரறியாமற் கொன்றுவிடுதலே நல
மென்றுகருதி ஒருநாள் தன்னரண்மனைக்கு
அவர் வரும்போ தறிந்து அவர் வரும்
வாயிலிற் கூட்டி லடைக்கப்பட்டதோர்
புலியைத் திறந்து விட்டிருந்தனன். அப்
போது கம்பர் அவ்வழியேவரப் புலி கண்
சிவந்து வான்முறுக்கி வெகுண்டெழுந்து
அவரைக் கொல்ல நெருங்கிற்று. அது
கண்டு கம்பர் தம்மைக் கொல்லவந்த புலி
யினுயிருண்ணுமாறு **கம்பர்மேலே சோ
ழன் புலியைக் கொல்லவிட்ட போது
பாடியது** "வெங்கண் சிவந்து வெடிவான்
முறுக்கி வெகுண்டெழுந்தென், னங்கம்
பிளக்க வரும்புலி யேயன் றிரணியனைப்,
பங்கம் படப்பட வள்ளுகி ராலுரம் பற்றி
யுண்ட, சிங்கமிருப்பது காண்கெடு வா
யென்றன் சிந்தையுள்ளே" (தமிழ் நாவ
லர் சரிதை) என்னும் பாடலைப்பாடி நர
சிங்கப் பெருமானைத் தியானித்து நின்றார்;
அவ்வளவிற் புலி யுயிர்மாய்ந்து வீழ்ந்தது.
இதனைக் கண்ணுற்று ஒளித்து நின்ற

சோழன் இவரைக் கொல்லவந்த புலியும் உயிர்மாய்ந்ததற்கு நொந்து தன் கையி லிருந்த வில்லில் அம்பினைக்கோத்து இவர் திருமார்பு குறித்து விடுக்க அது கல்வியிற் பெரியாரது அறிவு வீற்றிருந்த செறி வுடை நெஞ்சிற்பட் டுருவிப் போயிற்று. அந்நிலையே அறிவொருவடிவாந் திருவுருத் தளர்வார் இவை யெல்லாம் சோழன் செய்த வஞ்சமென்று குறித்துணர்ந்து அம்புபோந்த வழியே நோக்கி அவனைக் கண்டு, **சோழனெய்தபோது கம்பர் பா டியது** "வில்லம்பு சொல்லம்பு மேதகவே யானும், வில்லம்பிற் சொல்லம்பு வீறு டைத்து—வில்லம்பு, பட்டுருவிற் றென் னையென் பாட்டம்பு நின்குலத்தைச், சுட் டெரிக்கு மென்றே துணி" (தமிழ் நாவ லர் சரிதை) என்னும் பாடலைக் கூறிச் சபித்துவிட்டுத் தம்மா ருயிர்த்துணைவனுன சடையவள்ளலது அரியபெரிய நன்றியை யே நினைந்து நினைந்து நெடி துருகி, **கம்பர் மரணகாலத்தில் பாடிய கவி** "ஆன்பாலுந் தேனு மரம்பைமுதன் முக்க னியுந், தேன்பாய வுண்டு தெவிட்டிமனந் - தீம்பாய், மறக்குமோ வெண்ணெ வருச டையா கம்ப, னிறக்கும்போ தேனுமினி" (தமிழ் நாவலர் சரிதை) என்னுஞ் செய்யு ளால் அன்புபாராட்டி இக்கொடிய வுலக த்தை நீத்து அந்தமிலின் பத் தழிவில் வீடெய்தினர். கம்பர் இறந்ததுகேட்டுச் சோழனவைக்குரிய புலவர் பெருமக்க ளெல்லாம், **கம்பர் பேரிலே பாடிய கையறம்** "இன்றோநங் கம்பனிறந்தநா ளிப்புவியி, லின்றோநம் புன்கவிகட் கேற் றநா—ளின்றோதான், பூமடந்தை வாழப் புவிமடந்தை வீற்றிருப்ப,நாமடந்தை நூல் வாங்கு நாள்" (தமிழ் நாவலர் சரிதை) எனப்பாடி யிரங்குவா ராயினர். தமிழ் நாவலர் சரிதைக்கண் **கம்பனைக் கொன்ற னென்று பழிகூறிய பாண்டியனிடத்திற் சோழன் விட்டபுலவன் முடிசூட்டு மங்க லநாட் பாடிய வசை.** "பாண்டியரிற் பாண்டியரிற் பாழான பாண்டியரி, லீண்டி ரென விட்ட வெழுத்தல்ல — பூண்டதி ருப், போகவென்றும் வேற்றூர் புகுத வென்று நீயிவண் விட், டேகவென்றும் விட்ட வெழுத்து." இதுகேட்டு நன்று கவே பொருள்கூறிப் பரிசில் கொடுக்க மறுத்தான் ; நீ வந்த காரியம் வேண்டிற் சோழன்பாற் போகென்றான் எனத் தலைக் குறிப்பும், கீழ்க்குறிப்பும்பெற்ற ஒருசெய் யுள் காணப்படுகின்றது. இதனுற் சோ ழன் கம்பரைக் கொன்ற கொடும்பழி எங் கும் பரவியதென்றும் பாண்டியன் தன் னைப் பழித்துரைத்ததற்கு வெட்கி அவ னைப் பழித்துப் பாடுதற்காக அவனதுமுடி சூட்டு மங்கலநாளிற் சோழன்றன் புல வனை விடுத்து வசைபாடச் செய்தனனெ னவும், போந்த சோழநாட்டுப் புலவன் தான்பாடிய வசைப்பாட்டிற்கு நன்றாகவே பொருள் கூறினுன் எனவும், அது கேட்டுப் பாண்டியன் அவனுக்குப் பரிசில் நல்கி னுன் எனவும், புலவன் பழிகூறவந்தா னன்றிப் பரிசில்பெற வந்தானில்லை யாத லால் மறுத்தான் எனவும், பாண்டியன் அதுகேட்டு நீபழிகூற வந்தனையாயின் அதற்கென்பாற் காரியமில்லை கம்பரைக் கொன்ற கொடும்பழியையுடைய சோழன் பாலே அது கூறற்குச்செல்க என்றுகூறி அப்புலவனைச் செலவிடுத்தனன் எனவும் அறியப்படும். கம்பர் இறந்தபின்னர் சோணுடு ஓரங்கற் கணபதி யரசர்களாற் படையெடுத்து வெல்லப்பட்டுச் சோழரது பெருமை யெல்லாம் போய் அவ்வரசர் வமிசமும் அருகித்தொலையத் தலைப்பட்ட தாகும். கம்பரை அம்பாலெய்து கொன் றவன் விக்கிரமனுக்குப் பின்னுண்ட. குலோத்துங்கனுக்குப் பின் னரசெய்திய இராசராசன் என்பவனுவன். இவர் செய்த வேறு நூல்கள்: சரசுவதியந்தாதி, ஏரெழு பது, திருக்கைவழக்கம், சடகோபரந்தாதி, மும்மணிக் கோவை. கம்பர் காலம் முதற் பிரதாபருத்ரன் காலமாகிய கி. பி. 1162 இந்த பதினொராம் நூற்றாண்டில் இராஜ ராஜனரசாட்சி. சிலர். கி.பி. 1155 என்பர்.

**கம்பராமாயணம்** — இது கம்பநாடராலியற் றப்பட்ட இராமகதை. இவர் பாலகாண் டம், அயோத்தியாகாண்டம், ஆரண்ய காண்டம்,கிட்கிந்தாகாண்டம், சுந்தரகாண் டம், யுத்தகாண்டம் முதலிய ஆறு காண் டங்களே யியற்றினர். இதற்கு இராமாவ தாரமென்றும் ஒரு பெயர்.

**கம்பலம்** — இது ஒன்பது சாதிகளுக்குப் பெயர். தோட்டி, அண்ணப்பன், கப்பலி யன், சக்கிலியன், முதலியோர் இவர்கள் கம்பளி விரித்து அதன்மீது தாங்களிருத்த லால் பெற்ற பெயர்.

**கம்பளசெட்டி**—கப்பல்யாத்திரை செய்யும் ஒருவணிகன். பீலிவலையென்பவள் தான்

பெற்ற பிள்ளையை நெடுமுடிக்கிள்ளியிடம் சேர்ப்பிக்கும்படி இவனிடத்துத் தந்தனள். (மணிமேகலை).

**கம்பளபர்க்கி**—(யது.) அந்தகன் குமரன். இவனுக்குக் கம்பளபர்விஷன் எனவும் பெயர்.

**கம்பளன்** — 1. பாதாளவாசியாகிய ஒரு நாகன்.

2. குவலயாசுவனுக்கும் அசுவதரன் என்னும் நாகராசனுக்கும் நண்பன்.

**கம்பளாசுவன்**—ஒரு நாகன்.

**கம்பளை** — ஒரு நதி; இது இலங்கைத்தீவிற் சமனொளி மலையிலிருந்து உண்டாவது. (திருவிளை.)

**கம்பாநதி**—காஞ்சியிலுள்ள ஒரு தீர்த்தம். இது பார்வதியாரின் சிவபூஜை நிலையினை அறியும்படி சிவமூர்த்தியால் வருவிக்கப் பட்டது.

**கம்பீரன்**—இரபசன் குமரன்.

**கம்பு** — இது, ஒருவகைத் தானியம், இது பெரும்பாலும் ஜர்மனி ருஷியா தேசங்களில் விளைவிக்கப்படுகிறது. இது, குடியானவர்களுக்கு எளிய ஆகாரமானது. இது எங்கும் விளைவது. இங்கிலாந்தில் இது, ஆடு மாடுகளுக்குதவிய ஆகாரமாம், இதன் தட்டையால் வீடு மூடுகிறார்கள்.

**கம்மர்**—தெலுங்கு நாட்டு உழவர். இவர்கள், கம்மர், காபு, ரெட்டி, வெலமர், தெலகர் எனப்படுவர். இவர்கள் முதலில் அரசர்க்குப் போர்ச் சேவகராயிருந்து பின் உழவராயினர். இவர்களின் பெண்மக்கள் அரக்கரால் துன்புற்று லக்ஷ்மியைப் பிரார்த்திக்க அவள் ஒரு கம்மல் கொடுக்க அவர்கள் 100-வருடம் அதை ஆராதிக்க அதிலிருந்து பலவீரர் தோன்றி அரக்கரை அழித்தனர் ஆதலால் இவர்களுக்கு இப்பெயர் வந்தது என்பர். அரசனது கம்மல் எதிரி கைப்பட்டுக் காணாதபோது போர் செய்து காத்தவர் கம்மர். போர்க்காற்றாது வெளிப் பட்டவர் வெலமர். இவர்கள் கோத்திரம் செட்டிபூலா, குருநொல்லு, குலகாலு, உப்பாலா, செருகு, ஒல்லோட்லா, எனமல்ல என்பர். (தர்ஸ்டன்.)

**கம்மாளர்** — இவர்கள் கம்மத் தொழில்களை மேற்கொண்டிருத்தலால் இப்பெயர் கொண்டனர். அன்றிக் கண்ணை ஆளுகிறவர் எனும் பொருளில் கண்ணாளர் எனவும் பெயர் பெற்றிருத்தல் கூடும். இவர்கள் தட்டார், கன்னார், தச்சர், கல்தச்சர், கருமார், எனப் பட்டுப் பொன், இரும்பு, பித்தளை, கருங்கல்முதலிய இந்த வேலைகளைச் செய்தலால் பஞ்சாளத்தார் எனப்படுவர். இவர்கள் தங்களை விஸ்வகுல, ஜநகர், அஹீமர், ஜநார்த்தனர், உபேந்திரர் முதலிய கோத்திரத்தர் என்ப. இவர்களிற் சிலர் தங்களை விச்வப்ராமணர் என்பர். இவர்கள் பிராமணர்போல் வேடம் பூண்டிருப்பர்.

**கம்மாளர் கருவிகள்**—வாள், கத்திரி, உளி, இழைப்புளி, சிறு இழைப்புளி, கொட்டாப்புளி, இடுக்கி, குறடு, சம்மட்டி, துருத்தி, சுத்தி, அறம், தொளைப்பணம், தொளைப்பணக்கோல், கடைச்சல் சக்கரம், பணை, குறடு, கம்பாஸ், உலைக்களம், அளவுகோல், வெட்ரம்பு, முதலிய.

**கம்மாறுவெற்றிலை** — வெற்றிலையில் ஒரு பகுப்பு. இவ்வெற்றிலையால் சலதோஷம், சிரோபாரம், சந்நி, மாந்தாக்கினி, சுரக்கின்னரோகம், வயிற்றுவலி, உப்பிசம் இவை ஒழியும்.

**கம்மியன்** — இலைவாணியன் பரத்தியைக் கூடினதனாற் பிறந்தவன். (அருணகிரி புராணம்).

**கயத்தூர் கிழான்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் ஊர்கயத்தூர் என்பதுபோலும் பிறப்பால்வேளாண் குடியினராக இருக்கலாம். (குறு-கூஉ.)

**கயமனூர்**—ஒரு தமிழ்ப் புலவர் கடைச்சங்க மருவியவர். இவர் பாலைத்திணையில் உடன் போக்கையும் அதனை யடுத்த செவிலி புலம்பல் நற்றாய் புலம்பல், மணமருட்சி கண்டோரிரக்கம் முதலாய புலம்பல்களையும் பலவாறாகச் சிறப்பித்துப் பாடவல்லவர். அங்ஙனம் பாடிய பாடல்களனைத்தும் கேட்போரின் கன்மனத்தையும் கரைக்கும் தன்மையன. அகத்திலன்றிப் புறத்திலும், புலம்பற்றுறையாகிய முதுபாலையைப் பாடியுள்ளார் (புறம்-உருச) (முதுபாலைகாவலனிறப்ப மனையோர் புலம்பல்) ஆகவே இவர் இருதிணையிலும் புலம்பல் பாடவல்லவராய் விளங்குகிறார் அகம் கஎகு - ல் அன்னியும், திதியனும் பொருததனைக்கூறுதலால் அவ்விருவர் காலத்துக்கும் பிற்பட்டவராவார். கழங்குக்குறிபார்க்கும் நெறியை வெகுதெளிவாகக் கூறியவர் இவரே அகம்-கசுரு அழிந்த பாலையை வளமுடையதாக்கிக்கூறும்இவரது ஆற்றல் மிகநன்று. அகம்-உ௰சு உடன் போக்கின் கண் அறத்தோடு நின்று போக்கினை மறுத்து அஞ்சு

வித்ததாகப் புதியநெறி காட்டி எழுதியவர் இவரே; நற்-௧௨. இதனைப் பெரிதும் பாராட்டி இந்நெறியே நக்கீரனாரும் உரை கூறிபோயினாரென்றால் அவர் பாடலின் சிறப்பு இவ்வளவின தென்றளவிடற் பாலதோ? இறையனாரகப்பொருள் ௨௩ம் சூத்திரவுரை. புண் + தாள் = புட்டாள் எனப் புதுவிதிவகுத்தவரில் இவருமொருவர் நற்-௨௭௬ தலைமகன் தலைமகளாகிய இருவருடைய தாயர்களும் ஒருவரையொருவர் கடிந்து கூறும் வழக்கு இந்நாள் போலப் பண்டுமுள தென்பது இவர் பாடலாலறியலாம் நற் ௨௯௩. முன்னாளில் காலாற் பந்துருட்டும் வழக்குளதென்பது நற் ௩௨௪ ம் பாடலால் விளங்கும். இன்னும் நன்றாக ஆராயுங்கால் இவர் உலக வழக்கமுற்றும் தெளிவாக அறிந்தவரென்று தோன்றுகின்றது. இவர் பாடியனவாக நற்றிணையில் ஆறு (௧௨, ௧௯௮, ௨௭௬, ௨௯௩, ௩0௫, ௩௨௪,) பாடல்களும், குறுந்தொகையில் நாலும் அகத்தில் பன்னிரண்டும், புறத்தில் ஒன்றுமாக இருபத்து மூன்றுபாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**கயமுகாசுரன்**—கசமுகாசுரனைக் காண்க.

**கயவாகு**—1. இலங்காபுரி யரசன். இவன் தன் நகரத்தில் பத்தினியாகிய கண்ணகிக்குக் கோயில்கட்டி விழாச் செய்வித்தவன். (சிலப்பதிகாரம்).

2. இவன் ஸ்ரீ சங்கபோதியெனும் பெயருடன் புத்தனாய் இலங்கையாளுகையில் பாசுபதர் சிவபூசைக்கு மலரெடுத்துச்சென்றனர். அம்மலரைப் புத்தர் எறிந்ததினால் புத்தரைப் பாசுபதர்கடலிற் றள்ளினர். இதனை உணர்ந்த புத்த அரசன் சிவனைப் புத்தனாக்குகிறேன் என்று புறப்பட இரண்டு கண்ணுங்கெட்டன. அரசன் மயங்கி வேண்டச் சிவமூர்த்தி வேதியர் போல் வந்து விபூதிபிரசாதிக்க அரசன் சிவசிவ என்று நெற்றியிலுங் கண்ணிலுந் தரித்துக் கொள்ள ஒருகண் தெரிந்தது. பின் அரசன் திரிகோணமலை சென்று தீர்த்தத்தில் ஸ்நாநஞ்செய்ய இரண்டு கண்களும் ஒளி பெற்றன. (தக்ஷிண கைலாச தலபுராணம்)

3. இவன் சிங்களத்தரசன். இவன் ஒருநாள் இரவு நகர்சோதனைக்கு வருகையில் கிழவி ஒருத்தி பல நாட்களுக்குமுன் கரிகாற் சோழன் அந்நகரத்துக் குடிகளைச் சிறையாகக்கொண்டு சென்றதை யெண்ணிப் பெருங்குரற்பாய்ச்சி யழக்கேட்டு சோழநாட்டின்மீது படைகொண்டு சென்று ஆங்கிருந்த ஈழநாட்டுக் குடிகளை மீட்டுச் சென்றனன் (மகாவம்சம்.)

இவன் இப்பெயர் கொண்டவர்களில் ஒருவன் இற்றைக்கு 1750 - வருஷங்களுக்கு முன்னிருந்தவன். கி. பி. 113-முதல் 135. முதற் கயவாகின் காலம் கி. பி. 179, 201 என்பர். இப் பெயர் கொண்டவர் வேறு சிலரும் இலங்கை யாண்டனர்.

**கயன்**—A. உன்முகனுக்கு நட்வலையிடமுதித்த குமரன்.

B. அதூர்த்தரஜன் குமரன். இவன் பல யாகங்களியற்றி இராசவிருடியானவன்.

C. பிரியவிருதவம்சத்தரசன். அநேகம் அசுவமேதமியற்றி இந்திர உலகத்துச் சுகித்திருந்தவன்.

D. சுத்தியமன் குமரன்.

E. ஒரு அரசன். இவன் அக்கிநிப் பிரசாதத்தினால் போக விருப்பமில்லாது கங்கைக் கரையில் யாகசாலையுண்டாக்கி அவ்விடத்தில் தன்பெயரால் ஆலவிருக்ஷங்களையுண்டாக்கித் தீர்த்தமும் எடுப்பித்தவன்.

F. பிரகஸ்பதியின் குமரன்.

**கயா**—ஒரு தீர்த்தம் காசியிலுள்ளது. இதில் பிதுர்க்களை யெண்ணிச் சிரார்த்தாதிகள் செய்யின் வேறு சிரார்த்தம் செய்யவேண்டியதில்லை. இதன் கரையிலுள்ள அக்ஷய வடமென்னும் ஆலமரத்தடியில் சிரார்த்தஞ் செய்வர். இதற்கருகில் புத்தகயையென்று ஒன்றுண்டு அங்குப் புத்தனிருந்தனன் என்பர்.

**கயாகரர்** — கயாகரமெனு நிகண்டுசெய்த ஆசிரியர். இவர் இராமேச்வரத்தில் இருந்தவரென்றும் குலத்தால் வேதியர் என்பதுந் தெரிகிறது. இவர் இராமநாதர்மீது கோவையொன்று பாடினதாகத் தெரிகிறது.

**கயாசுரன்**-A. இவன் மகிடாசுரன் புதல்வன். இவன் பிரமனையெண்ணித் தவம்புரிந்தனன். பிரமதேவர் தரிசனந்தர அவரை நோக்கிச் சகலரையும் வெல்லப்பெருவாங்கைக் கேட்டனன். பிரமதேவர், நீ தேவர் முதலிய திரிலோகத்தவரையும் வெற்றி பெறுக, ஆயின் சிவமூர்த்தியிடஞ் செல்லாதொழிக என வரந்தந்து மறைந்தனர். அசுரன் வரத்தின்வலியால் தேவர் முதலியோரை வருத்திவந்தனன். ஒருமுறை தேவரைவருத்தத் தேவர்சிவமூர்த்தியிடம் அடைக்கலம் புகுந்தனர். அத்தேவரைப்

பின்றெடர்ந்து அசுரனும் சிவசந்நிதிமுன் சென்றனன். சிவமூர்த்தி உக்கிரத்திருவுருவுடன்றேன்றி அசுரனது மத்தகத்தில் திருவடியூன்றித் தோலையுரித்து உடுத்தனர். இவன் சிவமூர்த்தியை யெடுத்து விழுங்கச்சிவமூர்த்தி அவனுடலினின்றுவெளிப்பட்டு அவன்தோலை யுரித்து உடுத்தனர் எனவும் புராணம். இவனைக் காசியில் சிவமூர்த்திசூலத்தாற்குத்தி உலர்த்தித்தோலை யுரித்தனர் எனவும் புராணம் கூறும்.

B. ஒரு அசுரன், இவன் பலநாள் பெருந்தவஞ்செய்தனன். இவன் தவாக்னியால் பொறுக்காத தேவர்விஷ்ணுவிடம் குறைகூறினர். விஷ்ணு இவனிடம் வந்து என்னவரம் வேண்டும் என்ன இவன் எல்லாத் தீர்த்தங்களினும் உயர்வாம் தீர்த்தமாதல் வேண்டும் என்ன விஷ்ணு அங்ஙனம் ஆகுக என்று வரந்தந்து பிரமனை அவனிடம் ஏவி உடலின்மீது தவஞ்செய்ய உடம்பைக் கேட்கக் கூறினர். அவ்வகைப் பிரமன் அசுரனிடம்வந்து உடம்பைக் கேட்க அசுரன் அவ்வாறு தந்தனன். பிரமன் அவனுடலிற் றேவர்களை நிறுத்தி யாகத்தை நிறைவேற்றுகையில் பூர்ணுகுதியில் அசுரன் உடல்நெறித்தனன். இதனுல் விஷ்ணு தர்மதேவதையை அழைத்து அவனுடலில் தேவர்கள்எல்லாரும்வசித்தலால் நீ சிலையுருவாக அவனுடலில் இருக்க என்றனர். பின் தருமதேவதை தருமவிரதை யென்கிற பெண்ணுருக் கொண்டு தவஞ்செய்ய மரீசி அவளை மணந்தனர். ஒருநாள் மரீசி உறங்குகையில் தருமவிரதையைக் கால்பிடிக்கக் கட்டளையிட்டனர். அவ்வகை செய்துகொண் டிருக்கையில் பிரமதேவர் வர இவள் அப்பணி விட்டு அதிதியாக வந்த பிரமதேவரை உபசரித்தனள். இதனுல் மரீசிகோபித்து நீ சிலையாக எனச் சபிக்கத் தருமவிரதை நீ வீணுக என்னைச் சபித்தனையாதலால் நீயும் சங்கரன் சாபமேற்கவென்று சிலையுருத் தாங்கித் தீயிற் குளித்துத் தவஞ் செய்திருக்கையில் திருமால் முதலிய தேவர்கள் வந்து உனக்கு என்ன வரம்வேண்டும் என்ன இவள் எனக்கு இச்சாபம் நீங்கவேண்டும் என்றனள். விஷ்ணுவாதியர் உனக்கு அவராற் கொடுக்கப்பட்ட சாபம் நீக்கமுடியாது ஆதலால் நீ தர்மதேவ சிலையுருவாக இருக்கின் எல்லாத் தேவர்களும் உன்மீது வசிப்பர் என்று அச் சிலையைக் கயன் உடம்பிலிருந்த நடுவெலும்பை நீக்கிப் பதித்தனர். அதுவே கயாபிண்ட சிரார்த்தமிடுஞ் சிலை. இவன் உடம்பின் நடு எலும்பினுல் விச்வகர்மன் விஷ்ணுவிற்குக் கதாயுதஞ்செய்து கொடுத்தனன். (ஆக்னேய புராணம்.)

**கயை** — கயாவைக் காண்க.

**காசரா** — ஒரு இருடி பாஸ்கரர் குமரியிடம் இருக்கு வேதம் ஓதியவர்.

**காஞ்சன்** — குதோவரியின் குமரன்.

**கரடி** — இது காட்டு மிருகங்களில் ஒன்று. இது சற்றேறக்குறைய நான்கு அடி உயரமும், எட்டு அடி நீளமும் உள்ளது. தேகம் கனத்து மயிரடர்ந்தது. கரடி, மாம்சம், சாகம் இவ்விரண்டாலும் ஜீவிக்கும். இது மரம் ஏறித் தேன் கூண்டுகளைத் தின்னும். செல்லுப் புற்றில் வாய் வைத் துறிஞ்சும். இதற்கு முகம் நீண்டு இருப்பதால் பன்றி யினத்தைச் சேர்ந்ததாகக் கூறலாம். ஆனுல், பன்றியைப் போல் பிளந்த குளம்புகள் இல்லை. இதன் கால்களில் நகங்கள் உண்டு. இதைப் பழக்கினுல் மனிதர்க்கு வசப்படும். இது தன்னை யெதிர்த்த பிராணிகளுடன் மனிதனைப்போல் பின்னங் கால்களால் நின்று யுத்தஞ் செய்து கொல்லும். இதில் கருங்கரடி, பழுப்புக்கரடி, வெண்கரடி, என மூவகையுண்டு. வெண்கரடி வடகடலையடுத்த இடங்களில் வசிக்கும்.

**கரணம்**—1. சாதகதமம். ஒரு காரியத்திற்கு உதவியாக நிற்பதுமாம். (தரு)

2. ஒவ்வொரு திதியையும், இருசமபாகங்களாகப் பிரித்தலால் ஏற்படும் ஒவ்வொரு பாகத்திற்குப் பெயர்.

**கரதோயம்** — 1. வங்கநாட்டிற் பிரவகிக்கும் நதி. இது இமாசலகுமரியின் விவாகத்தில் சிவமூர்த்தியின் கரத்திலிருந்து உற்பத்தியானது.

2. வங்காளத்திற்கும் காமரூபத்திற்கும் இடையிலுள்ள ஒரு நதி.

A sacred river which flows through the Districts of Rungpur and Dinagpur. It formed the boundary between the kingdoms of Bengal and Kamarupa.

**கரந்தமன்--A.** யயாதியின் நான்காம்பேரன். இவன் அரசாண்டகாலத்துச் சத்துருக்கள் இவன் இராச்சியத்தை முற்றுகை செய்தனர். அரசன்றன் மூக்கின் தொளைகள் இரண்டையும் மூடிக்கொண் டிருந்த

னன். இவன் மூச்சிடம் அநேக சேனைகள் பிறந்து சத்துருக்களை நாசமாக்கினர். இவன் குமரன் அவீக்ஷித்து.

B. (சு.) பலினன் குமரன் பொருண் முழுதும் தானத்திற் செலவிட்டு வறுமைக் காலத்துப் பகைவராற் றுரப்புண்டு காட்டிற்சென்று முனிவர் அருளால் குபேரனை நோக்கித் தவமியற்றிப் பெருஞ்செல்வமடைந்து செங்கோல் செலுத்தி ஆங்கிரசரால் முத்தியடைந்தவன். இவன் குமரன் ஆவிதீக்ஷன்.

C. துர்வசு பேரன்.

D. சகாதேவனுடன் யுத்தஞ் செய்த அரசன்.

E. திருசானு குமரன். இவன் குமரன் மருத்தன்.

F. (சு.) கனியின் புத்திரருள் ஒருவன்.

**கரணம்** (ச) — மனம், புத்தி, சித்தம், அகங்காரம், (கக). பவ, பாலவ, கவுலவ, தைதுலை, கரசை, வநசை, பத்திரவா, சகுனி, சதுர்ப்பாதை, நாகவா, கிமிந்துக்கினம்.

**கரந்துரைப்பாட்டு**—இது சித்திரக் கவியிலொன்று. ஒரு செய்யுட் பிறிதொரு செய்யுட் சொற்புகாது எழுத்துப் பொறுக்கிக் கொள்ளலாம்படி பாடுவது.

**கரந்துவையை** — குரோதன் பாரி.

**கரந்தை** — மாறுபட்டெழுந்தார் மாற்சரியங் கெடக் கைப்பற்றின நிரையை மீட்டது. (பு. வெ).

**கரந்தையரவம்** — பசுநிரையைக் கைப்பற்றினமை கேட்டுச் செய்யாநின்ற காரியந் தவிரக் கடுகினராகித் திரளுங் கூறுபாட்டைச் சொல்லியது. (பு. வெ)

**கரபாசனன்** — சூரியவம்சத் தரசன். இவன் யோகியானன்.

**கரம்** — இது இடுமருந்து. பெண்கள் புருஷர்களையும், புருஷர்கள் ஸ்திரீகளையும், தொழிலாளிகள் யஜமான்களையும் வசமாக்கும் பொருட்டு அன்னபான தாம்பூலாதிகளில், பற்பல பிராணிகளின் கபால பஸ்மம், அற்பவீர்யவிஷம், மலமூத்ர ஔஷதம், ஒஷதிகளால் செய்யப்பட்டு இடுவதாகிய மருந்து. இவை யுண்டோரைப் பல துன்பங்கள் செய்யும்.

**கரம்பி** — சகுனி குமரன்.

**கரவீரன்** — கத்துருதநயன் நாகன்.

**கரவுவெளிப்படுப்பணி** — ஒருவரது மறைத்த செய்கையைத் தான் அறிந்த கருத்தோடு கூடியதன் செய்கையால் வெளிப்படுத்தல். இதனைப் பிகிதாலங்காரம் என்பர்.

**கரன்** — 1. விசிரவசுமுனிவருக்கு இராகையல்லது புஷ்போத்கடையிடம் பிறந்தவன். இவன் சூர்ப்பநகையின் ஏவலால் ஆரணியத்தில் இராமலக்குமணரை எதிர்த்து இறந்தவன். இவன் சகோதரன் தூடணன், திரிசிரன் முதலியோர்.

2. கழுதைமுகமுள்ள ஒரு அசுரன். பாலிநதியில் ஸ்நாநஞ்செய்து திருவிரிஞ்சையில் சிவபூசைசெய்து முத்தியடைந்தவன்.

**கராளஜநகன்** — ஜநகவம்சத்தரசன். வசிஷ்டருடன் சம்வாதம் செய்தவன்.

**கரான்னம்** — ஒரு தீர்த்தம்.

**கரிகாலன்** — 1. சோழர் மரபில் கரிகாலன் எனப் பெயர் அடைந்தவர்கள் வேறு சிலரும் இருந்தனர். அவர்களுள் முதல்வன், பொருநாற்றுப் படை, பட்டினப் பாலைக்குத் தலைவனாகிய **கரிகாலன் I.** இவனே முதற் கரிகாலன். இவனுக்குத் **திருமாவளவன்** எனவும் பெயர். தஞ்சையில் இராஜ ராஜேச்சுரம் எடுத்த இராஜராஜ சோழனுக்கு மூத்தவனும், இளமையிலேயே வீரபாண்டியனுடன் போரிட்ட ஆதித்தன் II. இவன் இரண்டாங் **கரிகாலன் II.** வீரசோழிய மென்னும் இலக்கணத்தைச் செய்வித்தவனாகிய இராஜகேசரிவர்மன் வீர ராசேந்திரன் I. **மூன்றாங் கரிகாலன் III.** கலிங்கத்துப் பரணி கொண்டவனும், பெரிய புராணம் பாடுவித்தவனுமாகிய முதலாங் குலோத்துங்கனை நான்காம் **கரிகாலன் IV.** என்பர். இந்தக் கரிகாலச் சோழர்களில் திருமாவளவன் எனும் முதலாம் கரிகாலனைப் பற்றிய வரலாறுவது. சோழர்க்கு இராஜதானியாயிருந்தவைகளில்தொன்மையானது உறையூர். இவ்வுறை யூரையாண்ட சோழர்களில் **இளஞ்சேட் சென்னி** யென்பான் ஒரு சோழன், இவன் **அழுந்தூர் வேள்மகளை** மணந்திருக்கையில் இவள் கருப்பமுற்று ஒரு ஆண்குழந்தை பெற்றாள். சிலநாளில் இளஞ்சேட் சென்னியாகிய தந்தையிறக்கக் கரிகாற் பெருவளத்தான் அரசிற்குரியனாயினும் ஊரார் கலகத்தால் தன்னகரத்தைவிட்டு வேறு நாடுகளுக்கலைந்து திரிந்தனன். குழப்பம் தவிர்ந்தபின் அரசிலாக்குறையால் அமைச்சராதியர் அரசயானையை யலங்கரித்துவிட அது கருவூரில்

ஒளிந்திருந்த கரிகாலனைத் தலைமிசை கொண்டுவந்தது. இதைக்கண்ட ஞாதிகள் பொருமையால் கரிகாலனைச் சிறையிலடைத்து வைத்தனர். இவனிருந்த சிறைச் சாலையைச் சிலர் தீயிட்டனர். இதற்கு அஞ்சாத திருமாவளவன், சிறையிலிருந்து தீயிற் குதித்து வெளிவந்து தன்மாமன் **இரும்பிடர்த் தலையன்** உதவி பெற்றுப் பகைவரை யடக்கிச் செங்கோல் செலுத்தினன். இவன் பகைவர்கொளுத்திய தீயைக் கடந்து வெளிவந்த காலத்து இவன் கால்கள் கரிந்தமைபற்றி இவன் **கரிகாலன்** எனப்பட்டனன். இவனரசுரிமையெய்திச் சீர்காழி தாலூகா) **நாங்கூர்வேள் மகளை** மணம்புணர்ந்தனன். இவனுக்குச் **சேட்சென்னி நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான்**, என மூன்று ஆண்மக்களும், **ஆதிமந்தியார்** என ஒரு பெண்மகவும் பிறந்தனர். இவன் **வெண்ணி** எனும் இடத்தில் பகைவராகிய குறுநில மன்னரையும் இருபெரு வேந்தரையும் வென்றான். இவன் வெற்றியைப் பொருத ஒன்பது வேந்தர் ஒருங்குகூடி வாகையெனு மிடத்தில் போரிட்டுப் பின்னிட்டனர். இவன் **அருவாநாட்டின்மீது** படைகொண்டு சென்று ஆண்டிருந்த குறும் பரசரையோட்டி அந்நாட்டை(24) கோட்டங்களாக வகுத்து வேளாளரைக் குடியேற்றினன். இவன் அருவா நாட்டிலிருந்த காமக்கோட்டத் திருப்பணிசெய்து வழிபடக் களித்த சாத்தனார் இவற்குச் செண்டு எனும் ஆயுதத்தை உதவினர். இச்செண்டே இமயவரையைத் திரித்த காலையில் உதவிய செண்டாம். பின் வடநாடு சென்று வடுகரை வென்று, பின் அருவா நாட்டின் வடக்காகிய மலையமா நாட்டையடைந்து அதற்கு இராஜதானியாகிய திருக்கோவலூரை யாண்ட **மலையமான்** நண்பனாதலின் அவனை விட்டுப் பன்றி நாடு (நாகப்பட்டினம்) அடைந்து ஆங்கிருந்த எயினர், நாகர், ஒளியர் என்பவரை வென்று பாண்டிநாடு சென்று பாண்டியனையடக்கிச் சேரர் நாடாகிய, பூழி, குடம், குட்டம், வேணாடு, கற்கா எனும் நாடுகளுக்குத் தலைநகராகிய வஞ்சியை யாண்டிருந்த குடவரை அடக்கிப் பொதுவர் எனும் முல்லை நிலத்தலைவரையும், **இருங்கோவேள்** முதலிய ஐம்பெருவேளிரையும் வென்று, அடங்காது வடவரை செல்ல இமயம் இவன் செலவைத் தடுத்ததால் சினந்து சாத்தன்கொடுத்த செண்டால் அதனைத் திரித்துப் புலிக்கொடியை அதன்மீ தெழுதி மீண்டனன். மீளுகையில் வச்சிரநாட்டரசன் (பண்டில் கண்ட்) இவனுக்கு முத்துப்பந்தர் தர அதனைக் கைக்கொண்டு, ஆங்குநீங்கி மகதநாடடைந்து அந்நாட்டரசன் போரிட்டு முடியாது பட்டி மண்டபந்தரப் பெற்று, அவந்தியரசன் வாயிற்றோரணந்தரப் பெற்று மீண்டு, இலங்கை மேற்சென்று முதற்கயவாகுக்கு முன்னரசனாகிய சிங்கள மன்னவனை வென்று ஆங்கிருந்த பன்னீராயிரம் குடிகளைச் சிறைகொண்டு தன்னாடடைந்தனன். இவ்வரசன் காலத்துச் சோணாட்டரசர் ஆட்சி இமயம் முதல் சிங்களம் வரையில் பரவியிருந்ததென அறியலாம். இவன் தன் கீழ்வாழ்வார் மகிழவும் வேற்று நாட்டார் தம்நாட்டில்வந்து வாணிகம் நடாத்தவும் செய்தவன். இவன் தன்னாடு வளம்பெருகக் காவிரிக்கு அணை கட்டுவித்தான். காவிரி அணை கட்டுவதற்குச் சற்றுத் தடைசெய்திருந்த வடநாட்டுப் பிரதாபருத்திரன் கண்ணைக் குத்தினன் என்பர். இவன் காவிரியால் நாட்டை வளமுறச் செய்து தன்னாட்டை வாணிபத்தாலும் வளமுறச் செயவெண்ணித் தன் இராசதானியைக் காவிரிப்பூம்பட்டினத்திற்கு மாற்றினன். இக்காவிரிப்பூம்பட்டினம் முன்னர் **காகந்தன்** எனும் வேந்தனால் ஆளப்பட்டமையின் இதற்குக் **காகந்தி**யென்று ஒரு பெயர். வங்காளத்தின் தலைநகராகிய சம்பாபதியினின்று வந்து இங்குக் குடியேறிய தமிழர் தமது பழம்பதியின் பெயர் மறவாதிருக்க இதற்குச் **சம்பாபதி** யெனப் பெயரிட்டனர். இதற்குப் புகார் எனவும் ஒரு பெயர். இது காவிரி கடலுடன் கலக்கு முகத்வாரத்திலுள்ளது. இதனுள் மரக்கலங்கள் தடையின்றி வந்து தங்குவதற்கு முற்காலத்து இடமிருந்தது. இதில் பிறநாட்டு வர்த்தகர் வந்து தங்கி வாணிகம் செய்தனர். ஆதலால் சோணாடு வாணிபத்தில் மிகுந்தது. இவன் காலத்துக் கல்வியும் மேம்பட்டிருந்தது. இவன் தன் மாமனார் இரும்பிடர்த்தலையாரெனும் புலவரைத் துணைகொண்டு இருந்தனன். இவன் புலவர்களை ஆதரித்துப் பரிசளித்து அவர் சொல்வழி ஒழுகினன். இவன் காலத்து மதுரையில் தமிழ்ச்சங்கமிருந்த தாகையால் அதிலிருந்த புலவர்களிற் பெரும்பாலாராகிய பரணர், நக்கீரர்,

மாமூலர், உருத்திரங் கண்ணனார், முடத்தாமக் கண்ணியார், கருங்குழலாதனார், கழாத்தலையார் முதலிய நல்லிசைப் புலவர்களுக்கு வேண்டிய கொடுத்து உபசரித்தமையின் அவர்கள் இவனைத் தாமியற்றிய நூல்களில் புகழ்ந்தனர். இவன், தன்னையும் புகாரையும் புகழ்ந்து பாடிய உருத்திரங் கண்ணனார்க்குப் பதினாயிரம் பொன் பரிசளித்துப் பட்டினப்பாலை கொண்டனன். இவன் காலத்து இவன் குமரி ஆதிமந்தியார் எனும் பெண்கவியுடன் வேறு பெண் கவிகளு மிருந்தனர். இவன் அரசில் பல சமயங்கள் பரவியிருக்கினும் இவன் சைவ சமயத்தைத் தழுவினவன் என்பது கச்சி நகரில் ஏகம்பர் திருப்பணியாலும் திருஞானசம்பந்த நாயனார் இவனைப் புகழ்ந்திருத்தலாலும், பல வேள்விகளை முடித்தலானும், அறியலாம். இவன் காவிரியின் கரைகண்டு நாட்டிற்குப் பெருவளத்தை யுண்டாக்கினதால் இவனுக்குப் **பெருவளத்தான்** என ஒரு பெயர். பின்னும் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கண்டு வாணிகத்துறையை வளம்படுத்தமையின் **திருமாவளவன்** எனவும் கூறப்படுவன். இவன் காலம் சிலர் செங்குட்டுவன் காலமாகிய கி.பி. 119-ம் நூற்றாண்டென்பர். இவன் செங்குட்டுவனுக்கு முன் நான்காவதான சேரமான் பெருஞ்சேரலாதனுடன் பொருது புறங்கண்டதனாலும், இவன் சிங்களத்திலிருந்து சிறைகொண்டு வந்த ஈழநாட்டுக் குடிகளை ஒரு நூற்றாண்டிற்குப்பின் சோழருடன் பொருது கயவாகு மீட்டமையானும், திருமாவளவன் புண்ணியதிசை முகம்போகிய வந்நாள்.' எனவும், "கரிகால்வளவன் நீங்கிய நாள்" "கரிகால்வளவன் தண்பதங் கொள்ளும் தலைநாட் போல" எனவும் கூறியவாற்றானும் இவன் செங்குட்டுவன் காலத்திற்கு ஒரு நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்தவன். அதாவது முத னூற்றாண்டின் இடையில் இருந்தவனாக எண்ணப்படுகிறான். (கரிகாலன் சரிதை.)

2. இவன் பராந்தகச் சோழன் குமரன். பராந்தகச் சோழன் சாரமாமுனிவர், செவ்வந்தீசர் பொருட்டு நாகலோகத்திலிருந்து கொண்டு வந்து வைத்த நந்தவன புஷ்பங்களை நாடோறும் இவன் ஏவலாளர் கொண்டு வந்து இவன் மனைவியிடத்துக் கொடுக்க அவள் அதனைச் சூடவும், அரசன் மனைவியிடம் வைத்த விருப்பத்தால் முனிவர் கூறியுங் கேட்காதிருந்தனன். முனிவர் அரசனது செருக்கறிந்து சிவமூர்த்தியிடம் முறையிடச் சிவமூர்த்தி இன்னும் சில நாட்களில் இவ்வுறையூர் மண்மாரி பெய்தழியும் அஞ்சவேண்டாம் என்றனர். அவ்வாறே சில நாள் பொறுத்து மண்மாரி தொடங்கிப் பெய்து கொண்டு வருகையில் அரசனும் கர்ப்பிணியாகிய தன் மனைவியும் உயிர் பிழைக்க ஒரு குதிரைமீதேறி ஊரெல்லையைக் கடக்கத் தொடங்குமளவில் மண்மாரி விடாது பற்றக்கண்டு விரைந்து குதிரையை விட்டனன். இடையிலிருந்த ஆற்றைக் கடக்குமுன் அரசனை மண்மாரி தொடர்ந்து முழுகச் செய்தது. மனைவி ஆற்றிலகப்பட்டு வெள்ளத்தின் வழிசென்று செருக்குவார் பாளயத்தி லொதுக்குண்டு அங்கிருந்த முனிவரால் ஆதரிக்கப் பெற்றனள். பின்பு சிலநாள் பொறுத்து அரசி ஒரு ஆண்குழந்தை பெற்றனள். அரசிழந்த உறையூரார் சிவாக்கினைப்படி பட்டத்துயானையை அலங்கரித்துவிட அந்தயானை செருக்குவார் பாளயஞ் சென்று விளையாடிக் கொண்டிருந்த உறையூர்ச்சோழன் புத்திரனைத் தூக்க அப்பிள்ளை யானைக்கு அசையா திருந்தனன். அங்கிருந்த முனிவர் அரசியை நோக்கி நீர் ஒரு கரிக்கோட்டால் அப்பிள்ளையின் காலில் ஒருகோடு கிழியும் என்றனர். அவ்வகை தாய் புரிய யானை எளிதாகப் பிள்ளையைத் தூக்கிச் சிரத்தின்மேல் வைத்துச் சிங்காதனத்தி லிருத்தியது. அதுமுதல் இவன் கரிகாற்சோழன் எனப்பட்டனன். இவன் காவிரிக்கரையில் பல சிவப்பிரதிட்டை செய்தனன். அவைக்கணிருந்த முதியோர் பலர் இவன் இளையன் ஆதலின், தம்முள் மாறுயினார் முறை சொல்லானென்று எண்ணிய எண்ணமறிந்து, தான் முதியரைப்போல் நரைமுடிகொண்டு கொலுவிருந்து முடிவு கூறினன் என்ப. இவன் மீது முடத்தாமக் கண்ணியார் பொருநாற்றுப் படைபாடிப் பரிசுபெற்றனர். இப்பெயர் கொண்ட வேறொரு சோழன் இருந்திருக்கலாம்; அவருள் ஒருவன் பட்டினப்பாலை கொண்டவன். மற்றவன் வீரபாண்டியருடன் போரிட்டவன். இவன் தஞ்சைக்கோயில் எடுப்பித்த இராசராச சோழனுடைய தமயன். இவன் பிறக்குங் காலை

யில் நல்லநாள் வருமளவுந் தாய் தலைகீழாக இருந்து அந்நாள் வந்தபின் குமரனைப் பெற்றாள் என்பர். இக்கதை கோச்செங்கட் சோழநாயனார் கதையிலும் கூறப்பட் டிருக்கிறது. இவன் இளஞ்சேட்சென்னியின் புதல்வனென்றும் கூறுவர். இவன் சேரன், பாண்டியன் இருவரையும் வெண்ணில் என்ற ஊரில் தாக்கி வென்றனன். கருங்குழலாதனாரால் பாடப்பெற்றவன். இவன் வடநாடு புக்கு வச்சிரம், மகதம், அவந்தி எனும் தேயத்தரசர்களை வென்று அவர்பால் முத்துப்பந்தர், வித்யா மண்டபம், வாயிற்றோரணமும் பெற்றான் என்பர்.

3. இவன் பாரி கஞ்சனங்கி இவனுக்கு ஆசாரியர் கஞ்சனூர் ஆழ்வார் என்கிற அரதத்தர், இவனுக்குக் கருங்குட்டம் வர நருமதை சென்று ஸ்நாநஞ் செய்து பாணலிங்கம் கொண்டுவந்து காஞ்சிபுரத்திலிருந்த சிற்பியின் பன்னிரண்டுவயசு குமரன் சொற்படி ஆலயம் முதலானவை கட்டி முடிப்பித்து இருந்தனன். ஒருநாள் அரசன் கனவில் சிவமூர்த்தி சென்று அரசனே உன் தருமத்தில் கிழவிகொடுத்த நிழலில் இருக்கின்றேன் என அரசன் திடுக்கென்று விழித்து விடிந்தபின் சிற்பிகளை அழைப்பித்து நடந்தவைகளை விசாரித்தனன். சிற்பிகள் அரசனை நோக்கி ஒரு கிழவி எங்கட்கு வேண்டிய காலத்தில் அன்னம், தாகஜலம், தாம்பூலம் கொடுத்துபசரித்தனள். அவளை நாங்கள் உனக்கு என்ன வேண்டுமென்று கேட்டோம். அவள் என் வீட்டில் ஒரு கருங்கல் இருக்கிறது. அதனை அரசன் திருப்பணியுடன் சேர்த்துக்கொள்ள வேண்டிய தென்று வேண்டினள். நாங்கள் அதைப் பார்த்ததில் அது அந்தராளத்திற்கு வேறு துண்டுகள் வேண்டாது ஒரே பரப்பாக இருக்குமென எங்கட்குத் தீர்மானமாதலால் அதை யந்தராளத்தில் மூடினோம் எனக்கேட்டு அரசன் விசனமடைந்து சிவசன்னிதியில் ஆகாரமில்லா திருக்கச் சிவமூர்த்தி அரசன் கனவில் தோன்றி அதைக் கிழவியிடத்தில் தானமாக வாங்கிக்கொள்ளென்று திருவாய் மலர்ந்து அந்தர்த்தானமாயினர். அரசன் கிழவியைத் தானங் கேட்கக் கிழவி தன் பெயரால் ஒரு சிவாலயங் கட்டுவித்தால் அவ்வகையே செய்வேன் என் அரசன் உடன்பட்டு ஒரு சிவாலயம் அவள் பெயராற் கட்டுவித்து தான் கட்டிய ஆலயத்தில் மூடிய பாவுகல்லிற்காகக் கிழவியிடத்துத் தானம்வாங்கித் தொண்ணூறு வருஷம் ஆண்டு தன் குமரன் பீமசோழனுக்குப் பட்டங்கட்டி நற்கதி யடைந்தவன். இப்பெயர் கொண்டான் ஒருவன் சாத்தனிடஞ் சென்டு பெற்று அச்செண்டினால் மேருவைத் திரித்து மீண்டுமதனை முன்னிருந்தபடி நிறுத்தி அதனிடைப் புலிக்கொடி பொறித்துத் தன் வெற்றி வடநாட்டிற் செல்ல ஆண்டானென்பர்.

**கரிக்குருவி**—இது கருநிறமுள்ள பக்ஷி. வயல்களில் வெட்டுக்கிளி முதலியவற்றைத் தின்று ஜீவிப்பது. இது எருது ஆடுகள் மேயுமிடத்து அவற்றின் மீதேறி அவை மேய்கையிலிடம் விட்டுப் பெயரும் பூச்சி முதலியவற்றைத் தின்பது. இதற்கு வலியன் எனவும் பெயர் கூறுவர். இதன் வால் இருபிளவாகத் தோன்றும்.

**கரிநாள்**—வருந்தேதிகள். சித்திரை ௬, கரு, வைகாசி, எ, க௬, கஎ, ஆனி, க, ௬, ஆடி, உ, க௦, 20, ஆவணி, உ, ௯, உஅ, புரட்டாசி-க௬, உ௯, ஐப்பசி-௬, உ௦, கார்த்திகை முதற் சோமவாரமும், க, க௦, கஎ, மார்கழி-௬, ௯, கக, தை-க, உ, ௩, கக, கஎ, மாசி-கரு, க௬, கஎ, பங்குனி-௬, கரு, க௯. இவற்றில் சுபகாரியங்கள் விலக்கப்படும்.

**கரிவாயு** — நிலக்கரியிலுண்டாம் வாயு நிலத்தைவிட்டு மேல் தோன்றியவுடன் உஷ்ணத்தால் தீப்பெற்று எரிகிறது. இதனால் தீபம் எண்ணெயில்லாம லெரிவது கண்டுபிடிக்கப்பட்டது.

**கரீசன்** — சிவகணத் தலைவரில் ஒருவன்.

**கருக்கன்** — 1. யதுகுலப் புரோகிதன். பலராமகிருஷ்ணருக்குப் பெயரிட வசுதேவனால் அனுப்பப்பட்டவன்.

2. சிங்குத் தந்தை (புமன்யன்) பூருவம்சத்தவனாகிய உருமன்யன் குமரன்.

**கருக்குப்பட்டயர்** — இவர் சாணாரில் ஒரு வகையார். இவர்கள் கருக்கு மட்டையர் எனவும் படுவர். (தர்ஸ்டன்.)

**கருங்கிரந்தி** — குழந்தைகளுக் குண்டாகும் வியாதி. தேகக்கறுப்பு, சுரம், பாலுண்ணாமை, விழித்து விழித்துப் பார்த்தல், மேல்மூச்சு, மாறுகுணம், அலறல், இருமல், குரல்கம்மல், வயிற்றில் வேதனை முதலிய குணங்களைத் தருவது. (ஜீவ.)

**கருங்குழலாதனார்** — கரிகாற் பெருவளத்தானைப் பாடியவர். (புற. நா)

**கருங்கை** — இருவகைத்து, அது கொன்றுவாழ் தொழிலினும், வன்பணித் தொழிலினும், கன்றிய தொழிற்கையாம்.

**கருசகன்**—வைவச்சுவத மனுவின் குமரன்.

**கருசம்** — கரூசம் காண்க.

**கருடத்துவசன்**—1. திருமால்.

2. துரியோதனன் தம்பி.

**கருடபஞ்சமி** — இது சுமங்கலிகள் அனுஷ்டிக்கும் விரதம். இது கருடனை நோக்கி ஆவணிமீ சுக்கிலபக்ஷப் பஞ்சமியில் அனுஷ்டிப்பது. ஒரு அரசன்குமரர் எழுவரும் பாம்பினாற் கடியுண்டிறக்க அப்பிள்ளைகளின் தங்கை இவ்விரதம் அனுஷ்டித்துப் பாம்பின் புற்றையும் பூசித்து அப்புற்றின் மண்ணைச் சலத்திற்கரைத்து இறந்த தமயன்மாரின் உடல்மேல் தெறித்து உயிர்ப்பித்தனள்.

**கருடர்**—ஒரு தேவ வகுப்பினர்.

**கருடன்** — செம்பருந்து ஆகாயத்தில் பறந்து இரைதேடும் மாம்சபக்ஷணி. செந்நிறமான ஒன்றரை அடி நீளமுள்ள இறக்கையையும் வளைந்த அலகும் இரையைக் கவ்வும் நகங்களுமுள்ளது. இதற்குத் தலைமுதல் பாதம்வரை வெண்ணிறம் மேற்புறம் செம்மை.

**கருடன்**—1. காசிபருக்கு விநதையிடம் பிறந்தவன். இந்திரன் செய்த வேள்விக்கு வாலகில்யர் வர அருகிருந்த பசுவின் குளம்படியி லிருந்த பள்ளநீர் அந்த வாலகில்யரை அமிழ்த்திற்று. இதைக் கண்ட இந்திரன் சிரித்தனன். வாலகில்லியர் இந்திரனது கருவம் பங்கமடையும்படி ஒருவன் உண்டாகவென்று வேள்வி செய்து அவி சொரிந்தனர். இதனால் கருடன் காசிபரிடம் பிறந்து பசியால் வருந்தியபோது தாய் சொற்படி வடகிழக்குச் சமுத்திரத்திருந்த வேடர்களை விழுங்கி வேடனுயிருந்த பிராமணனையும் அவன் மனைவியையும் நீக்கிச் சுக்கிரன் அல்லது பிரபாவசு எனும் பெயர்கொண்ட ஆமையையும் சுப்பிர தீபகன் அல்லது நதிபன் எனும் பெயர்கொண்ட யானையையும் பூமியில் வையாது இமயமலையில் வைத்துண்டவன்.

வைகர்ணமெனும் திருமால் ஆலயத்தில் தன்னினும்மிக்கவலியுற்றபலகருடர்களைக் கண்டு கர்வபங்க மடைந்தனன். (பார-சாங்)

2. இவன் தாயின் அடிமை நீக்கத் தெய்வவுலகஞ் சென்று அமுத கலசத்தைக் கிரகிக்கையில் இந்திரன் கோபித்து வச்சிரமெறிந்தனன். அதைக் கண்ட கருடன் வச்சிரத்திற்கு மரியாதையாக ஓரிறகு கொடுத்தனன். இதனால் இந்திரன் களித்து நட்புக்கொள்ளக் கருடன் இந்திரனை நோக்கிச் சிறியதாயின் சொற்படி இதனைக் கொண்டுபோய் நாகருக்குக் கொடுக்கின்றேன், நீ கவர்ந்துகொள் என்றனன். இதனால் இந்திரன் இவனுக்குப் பாம்புகளைத் தின்னும் வரம் அளித்தனன்.

3. இவன் அமுதுடன் தருப்பையைப் பூமியில் கொண்டுவந்து பதித்தனன். அதனால் தருப்பை சுத்தமாயிற்று.

4. இவன் வலாசுரன் என்னும் அசுரனுடலைத் தின்று நகைத்து உமிழக் கருடோற்காரமென்னும் மரகத ரத்ன முண்டாயிற்று. இந்த அசுரனது எலும்புகள் வைரமாயின.

5. இவனது வலிமைகண்டு திருமால் கேட்டுக்கொள்ள வாகனமும், கொடியும் ஆனவன்.

6. ஒருமுறை காளியன் என்னும் நாகன் ரமணகத் தீவுள்ளாரை வருத்த அவர்களுக்கு அபயந்தந்து அக்காளியனை யமுனைமடுவில் ஓடும்படி செய்தவன்.

7. சௌபரி இருடியால் யமுனையையடுத்த தடாகத்திலுள்ள மீன்களைப் புசிக்கின் உயிர் இழக்கச் சாபம் பெற்றவன்.

8 கண்ணன் புத்திரப் பேறதின் பொருட்டு உபமன்னியுவிடம் சிவதீக்ஷை பெற்றுத் தவஞ் செய்கையில் துவாரகையை அவுணர் வளைக்க அவர்களைக் கொன்று கோட்டையைக் காத்தவன்.

9. இராவண வதத்தில் இந்திரசித்துடன் போர்செய்த இலக்குமணர் நாகபாசத்தால் கட்டுண்ட காலத்து யுத்தகளத்தில் வந்து நாகபாசத்தைப் போக்கி இராமமூர்த்தியைத் துதித்துச் சென்றவன்.

10. பாற்கடல் கடைந்த காலத்து விஷ்ணுமூர்த்தியின் ஏவலால் மந்தரமலையை யேந்தினவன்.

11. ஸ்ரீவைகுண்டத்திலிருந்து கிரீடாசலங் கொண்டுவந்து பதித்துத் திருமாலை எழுந்தருளுவித்தவன். இதுவே திருவேங்கடமலை.

12. பாதாளத்திருந்த உபரிசரவசுவைப் பூமியில் இருத்தி அரச தந்தவன்.

13. தக்ஷயாகத்தில் சிவகணங்களுடன் போர்செய்ய வீரபத்திரரால் விடுக்கப்பட்ட அநேகங் கருடராற் பங்கப்பட்டு விஷ்ணுவைத் தள்ளிவிட்டுப் புறமுதுகிட்டுச் சென்றவன். (கூர்மபுராணம்).

14. திருக்கைலையில் கருவத்துடன் சென்று அவ்விடத்திருந்த நந்திமாதேவரின் உச்வாச நிச்வாசங்களில் அகப்பட்டு மயங்கித் துதித்தவன். (திருக்கழுக்குன்றப்புராணம்). இவனுக்குப் புள்ளரசு, ககபதி, நாகாரி, பெரியதிருவடி, கருத்மந்தன் எனவும் பெயருண்டு.

15. வாலவிருத்தையென்பவள்யோகம் புரிகையில் அவளுக்கு இடையூறு விளைத்து இருசிறகுமற்றுவிழச் சாபமேற்றுப் பின் சிவபூசையால் வளரப்பெற்றவன். (திருவாரூர்ப் புராணம்).

16. ஒருகாலத்துத் திருப்பாற் கடலின் மத்தியிலுள்ள சுவேதத்தீவிலிருந்து பாற்கட்டிகளைக் கொணர்ந்து தன் பிடரிச்சட்டையினால் எங்குஞ் சிதற அவை சுவேத மிருத்திகை ஆயின. இம் மிருத்திகையே ஊர்த்வபுண்டரம் தரித்தற்குரியது.

**கருடாங்கதன்**-கிருதமாதனத்தரசன். (சூளா.)

**கருடாந்திகழர்த்தி**—நந்திமா தேவரின் உச்வாச நிச்வாசங்களில் அகப்பட்ட கருடனைக் காத்த சிவமூர்த்தியின் திருவுருவம்.

**கருணாகரக்கவிராயர்** — இவர் திருவாவடுதுறையாதினத்திலிருந்த கவிவல்லர். திருவேரத்தூர்ப் புராணம், திருச்சுழியல் புராணம், மருதூர்ப் புராணம், முதலிய பாடியவர். சாலிவாகன சகாப்தம் 1755. இவரூர் பல்லவபுரம். வேளாளர்.

**கருணாகரத் தொண்டமான்** — இவன் வண்டைநகரத் தரசன். இவனுக்கு நந்தித்தொண்டமான் என்றும் பெயர். இவன்மீது சயங்கொண்டான் என்னும் கவி கலிங்கத்துப் பரணிபாடினர். இவன் ஆயிரம் யானைகளை வென்றவன். சோழன்படைத் தலைவன் எனவுங் கூறுவர்.

**கருணபரி பூரணர்** — ஒரு சிவகணநாதர். தருவித்தன் எனும் வேதியன் செய்த மகாபாதகத்தைச் சிவமூர்த்தியால் போக்குவித்தவர்.

**கருணிகாரவனம்** — மேருவிற்குச் சமீபத்திலுள்ள ஓர் வனம்.

**கருணிகை**—1. ஆனகன்தேவி.

2. ஓர் கந்தருவ மாது.

**கருணைப்பிரகாசர்** — காஞ்சிகுமார சுவாமி தேசிகரது குமாரர் துறைமங்கலம் சிவப்பிரகாசதேசிகருக்குச் சகோதரர். இவர் தருமபுர ஆதினத்து வெள்ளியம்பலவாண சுவாமிகளிடத்து இலக்கண இலக்கியங் கற்று வீரசைவதீக்ஷை முதலியன பெற்று இஷ்டலிங்கவகவல், சீகாளத்திப் புராணம் முதலிய இயற்றி 18-வது வயதில் சிவலிங்க ஐக்கியமாயினர்.

**கருணையர்**—சிவப்பிரகாச சுவாமிகளின் பரம்பரையிற் சேர்ந்தவர்.

**கருணையாநந்தசுவாமிகள்** — இவர் திருமூலர் மரபினர் குருநாதசதகம் பாடியவர்.

**கருதன்** — விதர்ப்பன் குமாரன்.

**கருத்தணி** — தெய்வம், ஆசாரியன், மாணாக்கன், புத்ரன் முதலானோரிடம் உண்டாம் பற்றினைத் தெரிவிப்பது இதனை ப்ரேயோலங்காரம் என்பர். (குவல.)

**கருத்தமப் பிரசாபதி** — புலத்தியன் குமாரன்தவமேற்கொண்டான். இவன் குமாரன் அங்கன்.

**கருத்தமாசுரன்** — காருட வித்தைக்காரன் போல் தோன்றி விநாயகரை விழுங்கி உமிழாதிருக்க விநாயகர் உமாதேவியின் முகத்தில் தோன்றி அவனைக் கொன்றனர்.

**கருத்துடையடைகொளியணி** — அபிப்பிராயத்தோடு கூடிய விசேஷியத்தைக் கூறுதல். இதனைப் பரிகராங்குராலங்காரம் என்ப. (குவல.)

**கருத்துடையடையணி** — இது, அபிப்பிராயத்தோடு கூடிய விசேஷணத்தைக் கூறுதல். இதனைப் பரிகாராலங்காரம் என்பர். (குவல.)

**கருத்மந்தன்**—கருடனுக் கொருபெயர்.

**கருத்ருசாதாக்யம்** — பிரதிட்டை யெனும் பெயரையுடைய ஞானசத்தி கருத்தாவிற்குக் குணமாதலாலும் ஞானசத்தியில் தோன்றுதலால் கர்த்திருவெனும் பெயருடைத்தாய்ச் சுத்தமாதலால் படிக ப்ரகாசமான திவ்யலிங்கமாய் உச்சியில் நான்கு திருமுகங்களும் (12) நேத்திரங்களும் பெற்று வலக்கரங்களில் சூலம், மழு, வாள், அபயமும், இடக்கரங்களில், சர்ப்பம், பாசம், மணி, வரதம், எனுமாயுதங்களைக் கொண்டிருக்கும். (சிவவுரு.)

**கருநாகம்** — இது கிருஷ்ண சர்ப்பமெனப் பெயருற்ற கரும்பாம்பு. **சிறுநாகம்** — இதனைப் பூநாகம், புல்நாகம் எனக் கூறுவர். இது மகா விஷமுள்ளது. தாழம்

பூவினுள் வசிப்பது ஈர்க்குப்போல் உடலைப்பெற்று தருப்பை அகலம் படத்துடனிருப்பது. (ஜீவ.)

**கருநாடகம்** — சென்னைராஜதானியிலுள்ள மைசூர் தென் கன்னடத்தைச் சேர்ந்த தேசம். தமிழ் தெலுங்கு நாடுகளுக்கு மேற்கிலுள்ள நாடு.

The Province of Mysore and the District of South Kanara in the Madras Presidency, and the Districts of North Kanara, Belgaum and Dharwar in the Bombay Presidency.

**கருநாடகர்**—மராஷ்டிர தேசத்திருந்து தமிழ் நாட்டிற் குடிபுகுந்த பிராமணர்.

**கருமசன்மன்**--இவன் ஒருவேதியன். பாவத்தொழிலால் வதிந்து பழிமேற்கொண்டு சிலவேதியரை நிந்தித்து உலகாயதம்பேசிக் காமியாய் இறந்து வேடனாய்ப் பிறந்து அரசனது பசுக்களைக் கவர்ந்து செல்லுகையில் நடக்க இயலாத பசுவை ஒட்டிச் செல்லமுடியாது சேவகர் வராமுன் சிவாலயத்துள் அந்த நொண்டிப்பசுவைச் செலுத்தித் தான் மற்றவைகளை ஒட்டித் தன்னிருக்கை சென்றனன். இதுநிற்க முன் நடவாமையால் கோயிலில் செலுத்திய பசு பரிசாரகர் ஊட்டிய உணவின் பலத்தால் வலிகொண்டு கன்றீன அப்பாலைச் சிவமூர்த்திக்கு ஆட்டினர். அப்புண்ணியத்தால் வேடன் நல்லறிவுகூடிச் சிவபணி மேற்கொண்டு முத்திபெற்றனன்.

**கருமபூமி இயல்**—கருமபூமியாவது உழவு, தொழில், வரைவு, வாணிகம், விச்சை, சிற்பம் முதலிய அறுவகைத்தொழிற் பாகுபாட்டினை உடையது.

**கருமாபாயி**—ஜகந்நாதத்திலிருந்த ஒரு பார்ப்பனி. இவள் கர்ப்பிணியா யிருக்கையில் கணவனிறந்தனன். இவளுக்கு ஒரு குமரன் பிறந்து மணஞ் செய்துகொண்டு பேரன்பிறக்க அக்குமரனும் இறந்தனன். சிலநாள் தரித்துப் போனு மிறந்தனன். இதனால் துக்கமுடையவளா யிருக்கையில் பாகவதர் சிலர் சாதுசேவையின் மகிமைகளை அவளுக்குத் தெரிவித்து ஒரு கிருஷ்ண விக்கிரகத்தைக் கொடுத்து ஆராதிக்கவெனக் கூறிச் சென்றனர். அவ்வாறே இவள் கண்ணனிடத்துப் புத்திரப் பிரீதியை வைத்து ஆராதித்து வருகையில் ஆராதனைக்குக் காலதாமசமாதல் கண்டு பகவான் பிரசன்னனாய்ப் பக்திபாவனைக்குக் கர்ம நிபந்தனங் கிடையாதென்று அதிக அன்புடன் இவள் அளித்த அன்னத்தை உண்டனன். இதைக் கண்ட பாகவதர் கர்மாபாயியை வியந்தனர்.

**கருமான்** — இரும்பு வேலைசெய்யும் கம்மாளன்.

**கருமான்ஆயுதங்கள்**—பட்டடை, சம்மட்டி, உலையாணிக் கோல், பெருங்குறடு, சிறுகுறடு, சுட்டுக்கோல்.

**கருமேந்திரியம்**—(டு) வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்.

**கரும்பனூர்க்கிழான்** — நன்னுகனரால் புகழ்ந்து பாடப்பட்ட வேளாண் பிரபு. வேங்கடத் தருகிலாண்டவன். (புற. நா.)

**கரும்பன்** — தொண்டைநாட்டு வேளாண் பிரபு. தான் பயிரிட்ட கரும்புகள் முற்றியதறிந்து அதனை யுண்ணும்படி பலரை வேண்டியழைத்து உண்ணச்செய்யச் சிலர் மறுத்ததால் அவர்க்குக் கூலி கொடுத்து உண்பித்தவன். இவனைப்பற்றியே "கரும்பு தின்னவுங் கூலியுண்டா" என்னும் பழமொழி வழங்கி வருகிறது.

**கரும்பிள்ளைப் பூதனர்**—இவர் பரிபாடலில் பத்தாவது பாடலைப்பாடிய புலவர். இவரது வரலாறு ஒன்றுந் தெரியவில்லை. இவர்க்கு இப்பெயர் உருவத்தால் வந்த பெயராக இருக்கலாம் போலும். (பரிபாடல்).

**கரும்பு** — 1. இது, புல்லினத்தைச் சேர்ந்த பயிர்; இனிப்புள்ளது. முற்றிய கரும்பைக் கணுவுள்ளனவாகத் தறித்துத் துண்டுகளைச் சாய்த்து நட்டு நீர்பாய்ச்ச வேண்டும். அதிலிருந்து பல முளைகள் தோன்றிப் பயிராகும். இவை, இந்தியா, சீனு முதலிய இடங்களிலும், அமெரிக்கா கண்டத்திலும், வெஸ்டிண்டீஸ் தீவுகளிலும் உண்டாம். இதனால் சர்க்கரை செய்யப்படுகிறது. இக்கரும்பு வகையில் செங்கரும்பு, வெண்கரும்பு, நாணற் கரும்பு, பேய்க் கரும்பு, உண்டு. பேய்க் கரும்பு சடைபோன்று உள்ளீட்டில் சாரமற்றது. மற்றவையில் சாரம் உண்டு.

2. இதில் சந்திரன் பிறந்தனன். (பார- அச்-வைஷ்ணவ தர்ம பர்வம்.)

**கரும்புரட்டன்**—பனைமரம் ஏறும் சானனுக்குப் பெயர்.

**கருவுளமைப்பு**—(கூ) பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு.

**கருவூர்** — இது சேசருடைய இராசதானி. இதற்கு வஞ்சியென்றும் பெயருண்டு.

**கருவூர் ஓதஞானி**—கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். கொங்கு நாட்டுக் கருவூரினர். தலைவியினுறுப்பை "மருந்தெனின் மருந்தே வைப்பெனின் வைப்பே" எனப் புகழ்ந்தவர். (குறு - எக, உஉஎ.)

**கருவூர்கிழார்** — வேளாளர். கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் ஊர் கொங்குநாட்டுக் கருவூராக இருக்கலாம். பிறப்பால் வேளாண் குடியினராகலாம். (குறு - 170.)

**கருவூர்க்கோசனார்**—இவர் பாலைத்திணையிற் பயின்றவர். தமது பாடலில் சோம்பலாய்ச் செயலற்றிருப்பவர்க்குக் கீர்த்தியும், இன்பமும் கொடைத் தன்மையுமாகிய இவையில்லை யாகுமென்று தெளிவாக கூறியுள்ளார். இவர் பாடியது நற் உகசு-ம் பாட்டு.

**கருவூரேறிய வொள்வாட் கோப்பெருஞ்சேரலிரும்பொறை**—நரிவெரூ உத்தலையார்க்கு உடம்புதந்து புகழடைந்தவன்

**கருவூர்க்கண்ணம்புல்லனார்** — இவர், தலைமகள் புணர்ந்துடன் செல்லச் செவிலி தன் மகளுக்குக் கூறியதாகப் பாலையினது அச்சங் கூறியவர். (அகம் - 63.)

**கருவூர்க்கண்ணன்பாளனார்** — கடைச் சங்க மருவிய புலவர். இரந்து பின்னின்ற தலைமகள் சூட்டிய மலரைத் தலைவி புகழ்ந்து கூறியது முதலிய பாடியவர். (அகம்-180, 263.)

**கருவூர்க்கதப்பிள்ளை**—நாஞ்சில்வள்ளுவனை இயன்மொழி வாழ்த்துப் பாடிய புலவன். (புற. நா.) (குறு. தொ.)

**கருவூர்க்கந்தப்பிள்ளைசாத்தனார்** — பிட்டங்கொற்றனை "வையகவரைப் பிற்றமிழகங் கேட்பப், பொய்யாச் செந்நா நெளிய வேத்தி, பாடுப்வெம்ப பரிசிலர் நாளும், ஈயாமன்னர் நாண, வீயாது பரந்தநின் வசையில் வான்புகழே." என இயன்மொழி வாழ்த்துப் பாடிய புலவர். (புற-று. அக-று.) (குறு-தொ.)

**கருவூர்க்கலிங்கத்தார்** — கடைச்சங்க மருவிய புலவர். பாலைத்திணை பாடினவர். 183 (அக-று.)

**கருவூர்ச்சேரமான்சாத்தன்** — இவர் கொங்குநாட்டுக் கருவூரினர் போலும். பிறப்பால் சேரர் குடியினராக இருக்கலாம். இவர் பெயர் சாத்தன். (குறு - உசு அ.)

**கருவூர்த்தேவர்**—இவர் கருவூரில் பிராமண குலத்திலுதித்து ஞானநூலாராய்ந்து சைவசமயத்தைக் கடைப் பிடித்துச் சிவயோக சித்தியடைந்து சாதிகுலம் நீத்துச் சிவத்தலயாத்திரைசெய்து திருவிசைப்பா பதிகம் பாடிவந்தனர். (அவற்றுள், கோயில், திருக்களந்தை ஆதித்தேச்சுரம், திருக்கீழ்க் கோட்டூர், மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோளேச்சுரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை ராஜராஜேச்சுரம், திருவிடைமருதூர் இப்பதிகங்களே இப்போதுள்ளவை.) இவரிடம் அருவருப்படைந்த வேதியர் சிலர், இவர் மது மாம்ச பக்ஷணியென்று அருவருக்க அந்த வேதியர்க் கறிவூட்டத் தேவர் அகாலத்தில் மழை வருஷிக்கச் செய்வித்தும், ஆற்றில் வெள்ளம் பெருகச் செய்வித்தும் பூட்டியிருந்த கோயில் திருக்கதவம் திறக்கச் செய்வித்தும், தமக்குப் பூதங்கள் குடைபிடித்து வரச்செய்தும், பல அற்புதங்களைக் காட்டினர். இவர் பல தலங்களை வணங்கிக் கஜேந்திரமோக்ஷ மெனுந் தலமடைந்து அவ்விடமிருந்த முன்றீசரை அழைக்க அவர் தரிசனந்தந்து என்ன வேண்டுமென்றனர். தேவர், கள் வேண்டுமென்றனர். முன்றீசர், காளிக்குக் கட்டளையிடக் காளி மதுக்குடமளித்தனள். பின்னுந் தேவர், காளியை மீன் வேண்டுமென்னக் காளி கோட்டவாசிகளைக் கேட்க அவர்கள் தேடியும் மீன் அகப்படாமை கண்டு தேவர் அங்கிருந்த வன்னிமரத்தை நோக்கினர். அம்மரம் மீன்மாரி வருஷித்தது. அவ்விடம் விட்டு ஒரு விஷ்ணுவாலயத்தை யடைந்து பெருமாளையழைக்க அவர் வாராமையால் கோயில் பூசையிலா திருக்கச் சபித்துத் திருக்குற்றால மடைந்து சிவதரிசனஞ் செய்து திருவிசைப்பா பாடிப் பொதிகையி லெழுந்தருளி யிருந்தனர். இவர் அவ்விட மிருக்கையில் நெல்வேலியப்பர் சந்நிதானத்து முன்னின்று நிவேதன காலமென்றறியாமல் "நெல்லையப்பா," என்று மூன்று முறையழைக்க மறுமொழி பெறாததனால் கடவுள் இங்கு இல்லையென்று நீங்க ஆலயத்தில் எருக்கு முதலிய முளைத்தன. நெல்லையப்பர், தேவரை மானூரில் சந்தித்துத் தரிசனந்தந்து அடிக்கொரு பொன் கொடுத்து நெல்வேலிக் கழைத்துவந்து காட்சி தந்தனர். அதனால் முன்முளைத்த எருக்கு முதலிய தகாத பூண்டுகள் ஒழிந்தன. இவரை அநாசாரமுள்ளவர் என்ற

மாஞர் வேதியர்க்கு அவ்வூரில் வீடில்லா மற்போகச் சாபமளித்தனர். இவர் அவ்விடமிருந்த காலையில் தஞ்சாவூர் அரசன் செய்த சிவப்பிரதிட்டையில் அஷ்டபந்தனம் பலமுறை இளகிப்பந்தனம் ஆகாமற் போயிற்று. இதனல் அரசன்வருந்த அசரீரி கருவூர்த்தேவர் வரின் பந்தனமாம் என்றது. இதனை உருமறைந்தவ்விடம் வந்திருந்த போகநாதர் காக்கையின் கழுத்தில் சீட்டெழுதி யனுப்பித் தேவரை வருவித்தனர். அங்கிருந்தார் தேவரை வேண்டத் தேவர் அங்கிருந்தார் சம்மத மேற்கொண்டு கோயிலுக்குள் சென்று சிவலிங்கத்தை அஷ்டபந்தனஞ் செய்தனர்; அங்கிருந்து திருவரங்கஞ் சென்றனர். அவ்விடமிருந்த தாசி, இவரது தேகப்பொலிவைக் கண்டு தன் கருத்தை அறிவிக்க அதற்கிசைந்து அவளிட மிரண்டுநாளிருந்து நீங்கிப் பெருமாளைத் தரிசித்து அவர் தந்த இரத்தினப் பதக்கத்தைத் தாசிக்குத் தந்துநீங்கத் தொடங்கினர். அந்தத் தாசி பிரிவாற்ருது வருந்தியது கண்டு நீ எப்பொழுது நினைக்கினும் வருவேன் என்று தலயாத்திரை செய்தனர். தாசி இவர் தந்த பதக்கத்தைப் பூண்டு வெளிவரக் கோயிற்ருனிகர் இவளை இந்தப் பதக்கம் ஏதென்ன இது எனக்கு ஒரு வேதியராற் கொடுக்கப்பட்ட தென்றனள். கோவிலதிகாரிகள் இவள் வீட்டைக் காவலிடத் தாசி தேவரை நினைத்தனள். தேவர் வந்தனர். அதிகாரிகள் இப்பதக்கம் ஏதென்னத் தேவர் பெருமாளை அழைக்கப் பெருமாள் அனைவருங் காண ஆகாயவீதியில் தரிசனந் தந்து நாமே கொடுத்தோமென்று திருவாய் மலர்ந்து அந்தர்த்தானமாயினர். அவ்வற்புதங் கண்டார் அஞ்சி அபராதக்ஷமை வேண்ட அநுக்கிரகித்துக் கருவூரடைந்தனர். அவ்விடமிருந்த வேதியரிற் சிலர் அரசனிடம் இவர் அநாசாரமுற்றவர் என்று குறைகூறி அரசனைத் தேவர் வீட்டைச் சோதிக்க ஏவினர். அந்தப்படி அரசன் உடன்பட்டுத் தேவரிருக்கை சென்று சோதிக்க எவ்விடத்தும் வைதிகப்பொருள்களே நிறைந்திருக்கக் கண்டு அஞ்சிநிற்கத் தேவர் அரசனைநோக்கிக் குறைகூறிய வேதியர் வீடுகளைச் சோதிக்க ஏவினர். அந்தப்படி அரசன் அந்த வேதியர்களின் வீடுகளைச் சோதிக்கையில் மதுமாமிச முதலிய அநாசாரப் பொருள்களைக் கண்டுவெறுத்து வேதியர்களை ஊரைவிட்டு ஓட்டினன். நீங்கிய வேதியர் ஒருங்குகூடிக் கருவூர்த்தேவருக்குத் துன்பஞ்செய்யத் தொடங்குகையில் தேவர் பயந்தவர்போல் திரு ஆனிலைக் கோயிலையடைந்து சிவமூர்த்தியைத் தழுவிக்கொள்ளச் சிவமூர்த்தி இவரைத் தம்மில் ஒடுக்கினர். இவர் போக ரிஷியின் மாணுக்கருள் ஒருவர். இவரைக் கருவூரார் என்றுங் கூறுவர். இவர் செய்தநூல் திருவிசைப்பா, பலவைத்திய நூல்கள்.

**கருவூர்** — சோர்க்கு இராசதானி. பின்சோழரு மரசாண்ட இடம்.

**கருவூர் நன்மார்பனிருங்க ஞெல்லையாயன் சேங்கண்ணனுர்** — கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர்.

**கருவூர் நன்மார்பன்** — கடைச்சங்க மருவிய புலவரில் ஒருவர். இவரியற் பெயர் நன்மார்பன் உறுப்பால் வந்த பெயர். ஊர் கருவூர். (அக - உளஎ.)

**கருவூர் பவுத்திரன்**—இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர் கொங்குநாட்டுக் கருவூரினர். இவர் முல்லையை நோக்கி நீக்குதல் தகுமோ எனப் பாடியது இனிமையுடையது. (குறு - கசுஉ.)

**கருவூர்ப் பூதஞ்சாத்தனர்**—கடைச்சங்க மருவிய புலவர். (அக - ௫0.)

**கருவூர்ப் பெருஞ்சதுக்கப் பூதநாதனர்** — இவர் கோப்பெருஞ்சோழன் துறவு பூண்டு வடக்கிருக்கக் கண்டு மனமுருகி, "உள்ளாற்றுக்கவலை" எனப் பாடியவர். (புற. நானூறு - உகக.)

**கருஷம்** — ஒருநாடு.

**கருஷன்** — வைவசுவதமனுவின் புத்திரன். இவனிடமிருந்து காருஷர் என்னும் அரசர் பிறந்தனர்.

**கருசம்** — 1. கருச ஞண்டதேசம்.

2. தந்தவக்ரஞண்ட தேசம். பேஹார் நாட்டிலுள்ள ஷஹாபாத் டிஸ்ரிக்டிலுள்ளது.

3. இந்திரன், விருத்திரனைக் கொன்ற பிரமஹத்தியால் பீடிக்கப்பட்டுப் பசிபொறுக்க முடியாமல் இந்தத் தேசத்திலுள்ள புண்யதீர்த்தமாடிப் பசியைப் போக்கினன் இந்திரனது பசியை நீக்கியதால் இத்தேசத்திற்குக் கருசம்எனப் பெயர் வந்தது. (இரா-பால-காண்டம்.)

The eastern portion of the District of Shahbad, in the province of Behar.

**கருசன்**—வைவச்சுதமனுவின் குமாரர்களில் ஒருவன். இக்ஷுவாகுவின் தம்பி.

**கருர்**—கொச்சிநாட்டிற் பெரியாற்றங்கரையிலுள்ள ஊர்.

**கரேசன்** — செவ்வாயின் புத்திரன்.

**கரையார்** — கடற்கரையி லிருந்து வாழ்வோர். கடலில் மீன்பிடிக்குந் தொழில் மேற் கொண்டவர்.

**கரையேறவிட்டநல்லூர்** — இது நடுநாட்டிலுள்ள ஒரு சிவத்தலம். மாணிக்கவாசக சுவாமிகள் இத்தலத்தருகே வருகையில் கெடிலம் பெருகி வழிதடுத்ததால் சிவமூர்த்தி சித்தரா யெழுந்தருளி வழிவிடக் கட்டளையிட்ட தலம்.

**கர்க்கர்**—1. ஆதிசேஷனிடம் தவஞ்செய்து நிமித்தசாஸ்திரத்தையும், சோதிடசாஸ்திரத்தையும் பெற்றவர்.

2. சிவபூஜாபலத்தால் சகல கலைகளையும் அடைந்தவர். (சிவ-புரா.)

3. இவர் தருமருக்குத் தாம் சிவபூசையால் அறுபத்தினுலு கலைகளையும் ஆயிரம் புத்திரர்களையும் புத்திரர்களுக்கும் தமக்கும் பத்துலக்ஷ வருஷ ஆயுளையும் பெற்றதாகக் கூறியவர். பார-அநு-ம்.

**கர்க்காசாரியர்** — ஒரு கணித சித்தாந்த பண்டிதர். இவர் சற்றேறக்குறைய 2000-வருஷங்களுக்கு முன்னிருந்தவர்.

**கர்க்கோடன்** — கார்க்கோடனைக் காண்க.

**கர்ணகை** — 1. ஒரு காந்தருவப் பெண்.

2. ஆநகன் தேவி.

3. கோவலன் மனைவி.

**கர்ணரோகம்** — இது பீனசம், நீர்விளையாடல், தினவினல் காதைக்குடைந்து சொரிதல் ஆகிய இவைகளாற் பிறந்து அதிகரிக்கின்ற திரிதோஷங்களினல் செவி நரம்புகளில் வியாபித்து அந்த மார்க்கத்தில் வேதனையைச் செய்வது. இதனல் காதிற்குள் ஐந்துவித சூல ரோகமும் சங்கிர சாதியாகிய (20, ரோகங்களும் உண்டாகும். அவை வாதகர்ணசூலை, பித்தகர்ணசூலை, சிலேஷ்மகர்ண சூலை, திரிதோஷகர்ண சூலை, ரத்தகர்ணசூலை என ஐந்துவகைப் படும். சங்கிர சாதியாக ரோகங்கள் (20) 1. கர்ணநாத ரோகம், 2. பாதிரிய ரோகம், 3. பிரதிநாக ரோகம், 4. கர்ணகண்டு ரோகம், 5. கர்ணசோபை ரோகம், 6. கர்ண பூதி ரோகம், 7. கர்ணவித்திரதி ரோகம், 8. கர்ணாசோற்புத ரோகம், 9. கர்ணற்புத ரோகம், 10. கர்ணகிருமி ரோகம், 11. கர்ணகூசிகா ரோகம், 12. கர்ணபிப் பலி ரோகம், 13. கர்ணபிதாரிகா ரோகம், 14. கர்ணபாலசோஷ ரோகம், 15. கர்ண தந்திரிகா ரோகம், 16. கர்ணபரிபோடக ரோகம், 17. கர்ணேற்பாத ரோகம், 18. கர்ணேன்மந்த ரோகம், 19. துக்கவர்த்தன ரோகம், 20. கர்ணலகிய ரோகம்.

**கர்ணன்** —1. (கன்னன்) குந்திதேவி கன்னிகையாயிருக்கையில் இவள் தந்தை அவ்விடம் வந்திருந்த துருவாச முனிவர்க்கு உபசரிக்கக் கட்டளையிட்டனன். அந்தப்படி உபசரிக்க அந்த முனிவர் களிப்புற்று உபதேசித்த மந்திர உபதேசத்தைப் பெற்றிருந்தனள். ஒருநாள் தனது இருக்கையின் மேலிடத்தில் உலாவுகையில் இம் மந்திரபலத்தை அறிவோமென்று அதை உச்சரித்தனள். அந்த மந்திரதேவதையாகிய சூரியன் எதிர்தோன்றி மந்திரத்தின் செய்லைக் கூறினன். இதைக்கேட்ட குந்தி நான் கன்னிகையெனச் சூரியன் அவளுக்குத் தக்க பருவமளித்துக் கூடினன். அதனல் இப்புத்திரன் கவசகுண்டலதாரியாய்ப் பிறந்தனன். தாய் உடனே இக் குழந்தையை ஊரின் அபவாதத்திற் கஞ்சித் தன் முன்றனையில் சிறிது கிழித்துத் தன்னிடமிருந்த பெட்டியிலிட்டுக் குழந்தையை அதில் வளர்த்தி அருகிருந்த ஆற்றில் விட்டனள். அக்குழந்தை பொதிந்த பேழை ஆற்றுநீர்வழியே அத்தினபுரத்தினருகில் வந்தது. அந்த வேளையில் சூதகுலத்தவனகிய அதிரதனெனும் சாரதியும் அவன் பாரியும் நீராடவந்து ஆற்றோரமாய் வரும் பெட்டியைக் கண்டெடுத்துப் பார்க்கையில் உள்ளே அதிகப் பிரகாசமாய்க் குழந்தை யிருக்கக்கண்டு நமக்குக் கடவுள் அனுக்கிரகத்தால் இக் குழந்தை கிடைத்ததென்று வளர்த்துக்கொண்டனர். இவனுக்குப் பெயர் ஆகாயவாணியாலிடப் பட்டது. இவன் வளர்ந்து வில்வித்தை கற்கும்படி துரோணரை யடுத்து வேண்டுகையில் அவர் மறுத்தது கண்டு பரசுராமரிடஞ் சென்று தன்னைப் பிராமணனெனக் கூறி வில்வித்தை கற்றனன். இவன் வில் **காலபிருட்டம்** எனப்படும். இவனைக் கச்சைக்கொடியினன் என்பர். இவன் குமரனைச் சூரியகேது எனவும் விருஷசேனன் எனவுங் கூறுவர். இவன் தேவி காஞ்சனமாலை. இவன் சங்கம் பாராபரம். இவன் இடையெழு வள்ளல்களில் ஒரு

வன். ஒருமுறை பரசுராமர் இவன் தொடையில் தலைவைத்துறங்க இந்திரன் வண்டாக இவன் தொடையைத் தொளைத்தனன். அவ்வாறு உதிரம் பெருகத் தொளைத்தும் கன்னன் ஆசாரியருக்கு நித்திராபங்கம் நேரிடுமென அசையாதிருந்தனன். ஆசாரியர் எழுந்து எங்கும் உதிர வெள்ள மிருத்தலைக் கண்டு வரலாறு கேட்டு நீ க்ஷத்திரியன் என்னை வஞ்சித்ததால் சமயத்தில் இந்த வித்தை உதவாதிருக்கவெனச் சபித்தனர். இவன் ஒரு காலத்து ஒரு முனிவனுடைய பசுங்கன்றிவன் தேர்ச்சக்கரத்திற் பட்டிறந்ததால் முனிவனால் யுத்தத்தில் தேராழுந்தச் சாபமடைந்தவன். இவன் துரோணர் தனக்கு வில்வித்தை கற்பித்துக் கொடாததால் அவரது மாணுக்கரில் வல்லவனாகிய அருச்சனனிடம் பகைகொண்டிருத்தலைத் துரியோதனன் கண்டு இவனைச் சிநேகனாகக்கொண்டு அங்கதேசாதிபதியுமாக்கினன். இவன் அரசாண்டு அருச்சுனனிடம் உள்ளில் பகை பூண்டு துரியோதனன் பாண்டவருடன் யுத்தஞ் செய்த காலையில் பாண்டவர் சேனையுடன் மாறுகொண்டு அருச்சுனனைப் பகைத்து அவனைக் கொல்லவந்து சரணடைந்த நாகாத்திரத்தைப் பெற்றுக், குந்தி தன் புத்திரன் என்றறிவிக்க அறிந்துகொண்டும் அவள் வேண்டிய வரப்படி அந்த நாகாத்திரத்தை ஒருமுறைக்குமேல் அருச்சனன்மீது எய்யாதிருக்க வரந்தந்து குந்திதேவியிடம் தானிறந்தபின் தன்னை இன்னானென்று அறிவிக்கும்படி வரம் வேண்டிப் பாரதத்தில் பாண்டவர் சேனையுடன் பதினான்கா நாள் இரவிலும் பகலிலும் பதினாறு நாளிலும் யுத்தஞ் செய்து அருச்சுனன் பொருட்டு இந்திரன் பிராமண வுருக்கொண்டு வந்து கவசகுண்டலம் யாசிக்கத் தந்தவன். இவன் பதினேழாம்நாள் தளர்ந்திருக்க அருச்சுனன் பாணம் ஏவ இவனது தருமம் தருமனைப்போல் எதிர்தோன்றி அருச்சுனனைத் தடைசெய்தது. அதனை உணர்ந்த கண்ணன் வேதிய உருவமாய்வந்து தருமத்தை யாசிக்க அவர்க்கு அதனைத் தரநீரில்லாமையால் தன்னுடலில் பொத்திக்கொண்டிருந்த அம்பின் வழி ஒழுகிய உதிரத்தால் தாரை வார்த்து அருச்சுனன் கைப்பாணத்தா லிறந்து நற்பதமடைந்தவன். இவனிதற்கு முன்சன்மத்தில் ஆயிரக்கவசனென்னும் அரக்கன். ஆயிரக்கவசனைக் காண்க. இவன் குழந்தையாக விளையாடிக்கொண் டிருக்கையில் சத்த இருடிகளும் சூரிய புத்திரன் என்று காணவந்து குழந்தைகளை வழக்கமாய்க் கைதட்டி அழைத்தல்போல் அழைத்து வருக என்று கைநீட்டினர் எனவும், அதனைக் குழந்தையாயிருந்த கன்னன் ஏதோ நம்மை விரும்பிக் கேட்கின்றனர் என்று எண்ணித் தனது உச்சியில் தரித்திருந்த நெற்றிச் சுட்டியைப் பிடுங்கித்தர வந்தனன் எனவும் அக்காலத்துச் சத்த இருடிகளும் இவனது வள்ளன்மையைக் கண்டு மகாத்தியாகியாக என வாழ்த்தினர் எனவுங் கூறுவர். தீர்க்கதமனைக் காண்க.

2. சுக்கிர குமரன் அசுரபுரோகிதன்.

**கர்த்தமப்பிரசாபதி**—பிரமன் நிழலில் பிறந்தவன். இவன் தேவி தேவஹூதி. குமரன் கபிலன். இவனிடம் அநேகம் பெண்கள் பிறந்தனர். வேதத்தில் ஸ்புடமாய்ச் சாயாவாசகாமாயுள்ளது கர்த்தமம், அதனால் ஜனித்ததால் இப்பெயர்பெற்றனன்.

**கர்த்தமன்**—சௌபரி முனிவரால் நன்மையடைந்த அரசன்.

**கர்த்திரியோகம்**—லக்கினத்திற்கு முன்பின் பாபிகள் நிற்கில் கர்த்திரி யோகமாம்.

**கர்நாடகம்**—தமிழ், தெலுங்கு, தேசங்களுக்கிடையிலுள்ள நாடு.

**கர்பந்தரிக்கும் நாள் பேதம்**— கர்பந்தரிக்கும் நாள் பேதத்தாலே பிறக்கும் பிள்ளைகள் குணமும் தேகபலமும் பலவிதங்களாம். அமாவாசையில் கருத்தரிக்கின் கறுப்பாய் நான்கு, ஆறுவிரல் உள்ளதாய்ப் பிறக்கும். தூரப்பிரயாணம் போனவன் அன்றிரவு கூடின் பிறந்தவனால் சம்பத்து நாசமாம், பிள்ளை மிடியனாம். தூரத்திலிருந்து வந்த பெண்ணை அன்றிரவு கூடின் பிறந்தவன் அறிவிலாதவனாவன். புணர்ந்தவுடன் முழுகில் சற்புத்திரனாம். புணர்ந்து முழுகாத நாள் பிள்ளை ஆகாதாம். அமாவாசை பிரதமைநாளிற் கூடில் பொய்யனாவன். அமாவாசை கழிந்த மூன்றாநாள் கூடிப் பிறந்த பிள்ளை அற்பாயுளாம். பௌரணையிற் கூடிப் பிறந்த பிள்ளை ஆனை வடிவாம். பௌரணை கழிந்த பிரதமையிற் கூடிப்பிறந்த பிள்ளை குமரகண்ட வலியனாம். பிறை பிறந்த பிரதமை, நடுவில் பதினைந்தாநாள் கூடிப் பிறந்தால் பித்தன், கருங்குட்டன்,

வெண்குட்டன், முயலக வலியுளானும். புணர்ச்சிகாலத்தில் பேசாததைப் பேசின் பேடாம். பெண் நிர்வாணமாய்ப் புணரின் மிடியனும். மனைவி அல்லாத வேறொருத்தியை எண்ணிப் புணரின் ஆறுவிரல் நாலுவிரலாம். பிறைகண்ட ௨, ௫, ௮, ௰ இந்த நாட்களில் எந்த மாதத்திலும் புணரக்கூடாது. வெள்ளிநாள் பகல் மூன்றாம் சாமத்திற் கூடிப் பிறந்த பிள்ளை மாறுகண்ணும். பெண் சூதகமான மூன்றாநாள் கூடிப் பிறந்த பிள்ளை கள்ளனும். நாலாநாள் பாவியாய் மூடனாய்த் தன் வயிறு வளர்க்கிறது அருமையாம். ஐந்தாநாள் புலவனும். ஆறாநாள் விரதகேடனும். ஏழாநாள் தயாபரனும். எட்டாநாள் தரித்திரனும். ஒன்பதாநாள் குபேரனும். பத்தாநாள் காமியாம். பதினோராநாள் பிணியனும். பன்னிரண்டாநாள் பண்டிதனும். பதின்மூன்றாநாள் விவேகியாம். பதினாலாநாள் போகியாம். பதினைந்தாநாள் அரசனும். பதினாறாநாள் யோகியாம். பதினேழாநாள் முதலிய நாட்களில் கருத்தரியாதாம். ஒருநாளின் முதற் சாமத்திற் பிறக்கின் பாவியாம். பின் அந்தச் சாமத்திற்கு உள்ளாக ஜனிக்கின் கோபியாவன். இரண்டாம் சாமம் மத்தியானத்திற் பிறந்தவன் சமதமாதி குணங்கள் உடையவனாவன். மூன்றாஞ் சாமத்திற் பாதகனும். நாலாஞ் சாமத்தில் அஸ்தமன சமயத்தில் பிறந்த பிள்ளை ஹீநியாவன். இராத்திரி காலம் முதற் சாமத்திற் பிறந்த பிள்ளை அதமனாவன். இரண்டாஞ் சாமத்திற் பிறந்தவன், சமதமாதிகுணம் உள்ளவனாவன். மூன்றாஞ் சாமத்திற் பிறந்தவன் தீயோனாவன். நான்காம் சாமத்திற் பிறந்தவன் யோகியாவன்.

**கர்ப்பமுகத்தினங்கம்** (௧௨) — இது நாடக விகற்பம். அபூதாரணம், மார்க்கம், உருவம், உதாயிருதி, கிரமம், சங்கிரகம், அநுமானம், தோடகம், அதிபலம், உதேகம், சம்பிரமம், ஆவேகம், என்பன.

**கர்ப்பமுசமாவது** — கலத்திற் கருவுதிரண்டோங்கிக்குடை போகியவாறுபோல நலந்தரும் பொருளைத் திரளச் சொல்வது (வீரசோ.)

**கர்ப்பலக்ஷணம்** — 1. அழிகர்ப்பம் உருவமில்லாத இளங்கருவாய் இருக்கையில் விலா, அடிவயிறு, மேல்வயிறு, பிட்டம், எனுமிடங்களில் வேதனை, மார்புவலி, முகவெளுப்பு, நாபியின்கீழ் உபத்திரவம் உண்டாயின், கருப்பம் கரைந்து விழும்.

2. **உபவிஷ்டகர்ப்பம்** — பெண்களுக்குக் கருத்தரித்து விருத்தி யடைகையில் மாதம் மாதம் சோணிதம் வெளிப்படும். ஆயினும் சிசுவுக்குக் கெடுதியிராது சிசு சுவஸ்திருக்கும். வயிறு பருக்காது. இதனைத் தங்குபிண்டம், சுப்திபிண்டம் என்பர்.

3. **லீனக்கியகர்ப்பம்** — இது உபவிஷ்ட கர்ப்பம்போ லிருந்தாலும் அசைவு இல்லாமல் ௨-வருஷத்திற்குமேல் பிரயாசத்துடன் சிசுபிறக்கும்.

4. **கர்ப்பம்மரித்தல்** — ஸ்திரீகளுக்கு மலமூத்ரபந்தம்,' தேகக்கறுப்பு, அதிதுர்க்கந்தம், தலை முகம் வீக்கம் நெட்டுயிர்ப்புக் காணில் வயிற்றில் மரித்ததென அறிதல் வேண்டும்.

**கர்ப்பூரத்தைலமரம்** — இவ்வகையில் பலவித மரங்கள் கடற்கரை யடுத்த பிரதேசங்களில் வளருகின்றன. இவ்வித மரத்தில் நடுப்பாகத்தைச் சீவினால் அதிலிருந்து மஞ்சள் நிறமுள்ள பால் வடிகிறது. அந்தப் பாலை வாலையிலிட்டுக் காய்ச்சினால் மர எண்ணெய் ஆவியாகப் பரிணமித்து வேறு பாத்திரத்தில் தங்குகிறது. இதுவே தைலம். வாலையினடியில் தங்கிய பாலின் சேஷம் குங்கிலியம்.

**கர்ப்பூரம்**—1. இது ஜபான் தேசத்திலுண்டாம் தேவதாரு மரத்தின் பட்டை முதலியவற்றை ஆலையிலிட்டுக் காய்ச்சுவதாலுண்டாவதும் ஆவியினாலுண்டாகும் பரிணமப் பொருள். இதனை ஜர்மானியர் சில சரக்குகளைச் சேர்த்துச் செய்கின்றனராம்.

2. இது, மலைச்சரக்கு, கலை அடைவு சரக்கு, மார்பு, இளமார்பு, ஆரூர்க்கால், கையொட்டுக்கால், மார்ப்பற்று, வராசான், குமடெறிவான், உருக்குருக்கு. வானேசு, சூடன், சீனச்சூடன் முதலிய வகைய.

**கர்மசேடன்**—புலகருக்குக் கதியிட முதித்தவன்.

**கர்மந்தன்**—ஒரு இருடி.

**கர்மம்** — 1. சத்தியமாகிய ஆன்மஞானமும், அசத்தியமாகிய மாயாகாரியமும் கூடினவிடத்துண்டான தாகையால் புண்யபாப ஸ்வரூபமாகிப் பிரளயகாலத்தில் சமஸ்காராவஸ்தையாய் மாயையிலே யிருந்து சிருஷ்டி காலத்தில் ஆன்மாக்களுக்குத் தனுவாதிகளுக்குக்காரணமாவதாம். மனோ

வாக்குக் காய வியாபாரமாகிய காரியகர்மத்திற்கு மூலகாரணமாகையால் இதற்குக் **காராணமல** மெனவும் பெயர். செய்த கிரியை நசிக்கச் சூக்ஷமித் திருப்பதாகையால் **அதிர்ஷ்ட** மெனவும் பெயர் பெறும். இது, ஆதியாத்மிகம், ஆதிதெய்வீகம், ஆதி பௌதிகம் எனும் தாபத்திரயத்திற்கும் எதுவாம். இது சாரீர, மானஸாதிகர்மங்களுக்கு எது. இது தொன்று தொட்டு வருதலால் பிரவாகாநாதி. இது, தூலம், சூக்ஷமம், அதிசூக்ஷம்மாய் வருவது. (சிவஞான.)

2. (கசஅ) அவை காதிகர்மம், அகாதி கர்மம் என்பன. **காதிகர்மம்**—சங அவை ஞானவரணியம் - ரு, தர்சனவரணியம் கூ, மோகநீயம் - உஅ, ஆயுஷ்யம் - ங, அந்தராயம் - ரு, நாமகர்மம் கங. இவற்றைத் தனித்தனி காண்க. மற்றவை அகாதிகர்மம் அவை-அரு ஆக-கசஅ. (சி-பரபக்ஷம்.)

**கர்மஜசையோகம்** — எந்தச் சையோகத்தின் உற்பத்தியில் தொழில் அசமவாயி காரணமாக இருக்கிறதோ அது. (தரு)

**கர்மியன்**—காந்தாரன் புதல்வன்.

**கர்லியு** — பிர்டிவ்ஷ் தீவிலுள்ள மூக்குநீண்ட பறவை. இது பூச்சுகளைத் தின்று ஜீவிப்பது. பூமியில் முட்டையிட்டும் நீர்க்கரை ஓரங்களில் வசிக்கும் என்பர்.

**கர்வடம்** — வங்க தேசத்தருகிலுள்ள தேசம். இதற்கரசன் தாம்ரலிப்தன். (பார).

**கலகன்** — இவன் ஒரு அரக்கன். தருமகுத்தன் எனும் வேதியனைக் கண்டு நல்லறிவு பெற்று அவனிடம் தனது பூர்வஜன்ம வரலாறு கூறி நலமடைந்தவன். தருமதத்தனைக் காண்க.

**கலககண்டகி**—காலகௌசிகனுக்குப் பாரி.

**கலகை** — ஆன்மாக்களுக்குக் கலகத்தை விளைவிக்கும் ஓர் தேவதை.

**கலங்கரைவிளக்கம்** — கப்பல் யாத்திரை செய்த பண்டையோர்க்குக் கரைதெரியும் வகை கடற்கரையிற் கட்டப்பட்ட ஒளித் தம்பம்.

**கலசயோனி** — அகத்தியர், வசிட்டர்கள். கலசத்தி லுதித்ததனாற் பெற்ற பெயர்.

**கலப்பை** — இது, உழவர் நிலத்தைப பண்படுத்த உபயோகிக்கும் கருவி. இது நிலத்திலுள்ள உறுதியாகிய மண்ணினைக் கீழ் மேலாகக் கலப்பது. இது அடிப்படை, மேழி, ஏர்க்கால், நுகத்தடி, கார், முதலிய பெற்று இரண்டு எருதுகளால் உழப்படுவது. இது, நாட்டுக்கலப்பை. பிறநாட்டு இரும்புக்கலப்பையும் உண்டு. அது கனத்தது ஆதலால் இந்நாட்டார் அதைக் கொள்ளார். பூமியைப் பண்படுத்த பரம்பு, புல் முதலிய எடுக்கப்பலுமரம், விதை விதைக்கொருகலப்பை, களையெடுக்கக்களைகொட்டு முதலிய உபயோகிப்பர்.

**கலப்பைநாள்** — உத்திர மூன்று முரோகணி மூலம், அத்தமி ரேவதியாமிருபூசம், ரித்தையு வாவிலரிஷ மீன்கற்கீ, நத்துச் சுரு மிதுனங் கலப்பைக்கே.

**கலம்கோட்டி** — குசவன்.

**கலவிகரணர்**—கலவிகரணி சத்திக்குப் பதி, ஆகாசரூபர். இவர்க்குப் பீமர் எனவும் பெயர்.

**கலவிகரணி** — ஆகாசரூபசத்தி. இவட்கு ஈசர் கலவிகரணர் அல்லது பீமர்.

**கலவையணி** — இது, பாலும் நீரும்சேர்ந்தாற்போல விளங்காத பேதத்தையுடைய பல வணிகளது கலப்பாம். இதனை வடநூலார், சங்கராலங்காரமென்பர். அது, **உறுப்புறுப்பிக் கலவையணி, நிகர்நிலைமைக் கலவையணி, ஐயக் கலவையணி, ஒரு தொடர்ப் பொருட்கலவையணி** என நான்கு வகைப்படும். இவற்றினியல்பைக் குவலயானந்தம் காண்க.

**கலாகோ** — (Gologo) இது ஒருவகை எலி போன்ற பிராணி காதும், வாலும் நீண்டது. இதில் பெரிது ஒரு பூனையினளவிருக்கும். ஆபிரிகா தேசத்தது.

**கலாசத்தி உரு** — 1. **நிவர்த்திகலாசத்தி,** பொன்னிறமாய் நான்கு முகம், நான்கு கைகளில் ஜபமாலை, வஜ்ரம், அபயம், கமலம் உடையவளாயிருப்பள்.

2. **பிரதிஷ்டாகலாசத்தி** — படிகநிறமாய் இரண்டு முகம், நான்கு கைகளில் பாசம், அபயம், ஜபமாலை, கமலம் இவற்றை யுடையவளா யிருப்பள்.

3. **வித்யாகலாசத்தி** — இவள் கறுத்த நிறம், பிரகாசத்தோடு கூடிய நான்கு முகம், நான்கு கைகள், சத்தி, அபயம், ஜபமாலை, கமலம் உடையவளாய் மகா பலிஷ்டையா யிருப்பள்.

4. **சாந்திகலாசத்தி** — சுத்த ஸ்படிக நிறம், ஐந்து முகம், நான்கு கைகளில் த்வஜம், அபயம், ஜபமாலை, தாமரைகளையும், உபவீதத்தையும் உடை வளா யிருப்பள்.

5. **சாந்தியதீதகலாசத்தி** — ஸ்படிக நிறம், ஐந்து முகம், நான்குகைகள், பாசம்,

அபயம், ஜபமாலை, கமலம் இவற்றை யுடையளா யிருப்பள்.

**கலாபுவனங்கள்**—1. **சாந்தியதீதகலையில்** அநாசிருதை, அநாதை, அநந்தை, வியோம ரூபிணி, வியாபினி, ஊர்த்த வகை, மோசிகை, ரோசிகை, தீபிகை, இந்திகை, சாந்திய தீதைசாந்தி, வித்தை, பிரதிஷ்டை, நிவர்த்தி ஆக - கரு - புவனங்கள்.

2. **சாந்திகலையில்**—சதாசிவன், சிகண்டி, சிரீகண்டன், திரிமூர்த்தி, எகருத்ரன், எகநேத்ரன், சிவோத்தமன், சூக்குமன், அநந்தன், மனோன்மனி, சர்வபூததமனி, பலப்பிரமதனீ, பலவிகரணீ, கலவிகரணி, காளி, ரௌத்ரீ, ஜியேஷ்டை, வாமை ஆக-கஅ புவனங்கள்.

3. **வித்யாகலையில்**—அங்குஷ்டமாத்ர, ஈசான, எகேக்ஷண, எகபிங்கள, உத்பவ, பவ, வாமதேவ, மகாத்தியுசி, சிகேத, எகவீர, பஞ்சாந்தக, சூர, பிங்க, ஜியோதி, ஸம்வர்த்த, குரோத, எகசிவ, அநந்த, அஜ, உமாபதி, பிரசண்ட, எகவீர, ஈசான, பவேச, உக்ர, பீம, வாம, ஆக-உஎ. புவனங்கள்.

4. **பிரதிஷ்டாகலையில்** — ஸ்ரீகண்ட, ஔம, கௌமார, வைஷ்ணவ, பிராம்ம, பைரவ, கிருத, அகிருத, பிராஜேச, சௌமிய, ஐந்திர, காந்தருவ, யாக்ஷ, ராக்ஷஸ, பைசாச, ஸ்தலேச்வர, ஸ்தூலேச்வர, சங்குகர்ண, காலாஞ்சர, மண்டலேச்வர, மாகோட, துவிரண்ட, சகலண்ட, சதாணு, சுவர்ணாக்ஷ, பத்திரகர்ண, கோகர்ண, மஹாலய, அவிமுக்த, ருத்ரகோடி, வஸ்திரபாத, பீமேச்வர, மஹேந்திர, அட்ட்ஹாஸ, விமலேச, நகல, நாகல, குருக்ஷேத்ர, கயா, பைரவ, கேதார, மஹாகாள, மத்யமேச, ஆம்ராதக, ஜலபேச, ஸ்ரீசைல, ஹரிச்சந்திர, லகுளீச, பாரபூதி, டிண்டி, முண்டி, ஆஷாட, புஷ்கர, நைமிச, பிரபாச, அமரேச, ஆக ருசு.

5. **நிவர்த்திகலையில்**—பத்திரகாளி, வீரபத்திர, திரிலோசன, விப்சு, நப, விவாஹ, சம்வாஹ, திரிதசேச, திரியக்ஷ, கணத்யக்ஷ, விபு. சம்பு, தமஷ்ட்ரீ, வஜ்ர, பணீந்திர, உதும்பரேச, கிரசன, மாருதாசன, குரோதன, அநந்த, விருஷதர, விருஷ, பலிப்பிரிய, பூதபால, ஜியேஷ்ட, சர்வ, சுரேச, வேதபார்க, ஞானபுக்கு, சர்வஞ்ஞ. ஈச, வித்யாதிப, பிரகாமத, பிரசாதக, சிரீத்ருக்கு, ரத்னதிருக்கு, லக்ஷ்மீத்ருக், ஜடாதர, சௌமியதேஹ, தங்கிய, ரூபவான், நிதீச, மேகவாஹன, கபர்த்தி, பஞ்சசிக, பஞ்சாந்தக, க்ஷயாந்தக, தீக்ஷண, சூக்ஷ்ம, வாயுவேக, லகு, சீக்ர, சுநாத, மேகநாத, ஜலாந்தக, தீர்க்கபாகு, ஜயபத்திர, ச்வேத, மஹாபல, பாசஹஸ்த, அதிபல, பல, தமஷ்ட்ரீ. லோஹித, தூம்ரக, விரூபாக்ஷ, ஊர்த்வசேப, பயாநக, குரூரதிருஷ்டி, ஹந்த்ரு, மாரண, நிருதி, தர்மபதி, தர்ம, வியோக்தரு, சம்யோக்துரு, விதாத்ரு, ஹாமிருத்யு, யாமிய, க்ஷயாந்தக, பஸ்மாந்தக, பப்ரு, தஹன, ஜ்வலன, ஹாகாதக, பிங்கள, சுதாசன, அக்னிருத்ர, திரதசாதிப, பிநாகி, சாஸ்த்ரு, அவ்யய, விபூதி, பிரமரத்ன, வஜ்ரதேக, புத்த, அஜ, கபாலீச, ரௌத்ர, வைஷ்ணவ, பிராம்ம, ஹாடக, கூஷ்மாண்ட, காலாக்னி. ஆகபுவனங்கள்-கoஅ. ஆக ஐந்துகலைகளிலும் கூடிய புவனங்கள்-உஉசு. (சித் - சாராவளி)

**கலாதரர்**—விநாயக அம்சங்களில் ஒன்று.

**கலாதினி**—கங்கையின் பிரிவு.

**கலாபம்**—பாதகண்டத்திலுள்ள ஒரு கிராமம். இதில் மறைந்திருக்கும் சூரிய சந்திர வமிசத்தரசர்கள் கற்கியின் எவலால் கலியந்தத்தில் அரசாளப் போகின்றவர்.

**கலாவதி**—1. இவளும் பிரபாவதியும் இரத்தினவலியின் தோழியர். இவர்கள் ஒரு சன்மத்தில் குரங்குகளாய் ஒருவனது பலாப்பழத்தைத் திருடிக் குரங்காட்டியிடம் அகப்பட்டுக் காசிக்ஷேத்திரத்தி லிறந்ததால் மறுசன்மத்தில் சராயணனுக்குப் புதல்வியாய்க் கௌதமை பவாநியெனப் பிறந்து நாசயனனை மணந்தனர். அவன் காட்டிலிறந்ததால் இவர்கள் நோன்பிழைத் திறந்து மறுசன்மத்தில் இரத்தினவலியின் தோழியராய் இரத்தினசூடனை மணந்தனர். (காசிகாண்டம்.)

2. பாரன் என்னும் முனிபுத்திரி தந்தை யிறக்கப் பார்வதியாரால் நவநிதி வசமாகும மந்திரம் பெற்று அதனைச் சுவாரோதிசனுக்குக் கொடுத்து அவனை மணந்தனள்.

3. சுவாமியையும் இரத்தினவலியையும் காண்க.

4. எச்சனைக் காண்க.

5. காசிதேசத்தரசன் பெண்; பாண்டியனை மணந்து அவன் தன்னைத் தீண்ட வருகையில் நீ சிவதீக்ஷை பெற்றவன் அல்லன் என விலக அரசன் அவளை வலு

விற் ருட அவளிடம் சகிக்கக்கூடாத வெம்மை யிருந்தது பற்றி அஞ்சிச் சிவ தீக்ஷை பெற்று மனைவியிடங் கூடிச் சுகித்திருந்தவன் (உபதேச காண்டம்.)

**கலி** — 1. ஒரு தானவன் இந்திரனை யுத்தத்தில் பின்னிடச் செய்தவன்.

2. கபாடபுரத்திருந்த இடைச் சங்கத்துப் புலவரியற்றிய நூல்.

**கலிகணநாதர்** — இவர் தம்நாடு வீரசைவர் நாடாக முயன்று, எல்லாரையும் வீரசைவ ராக்கிவந்தனர். அவ்வகை செய்து வருகையில் சிவமூர்த்தி ருத்திர வடிவுடன் இவரிடந் தோன்றி மந்திரி முதலியோர் செய்யும் தீமை புகன்றனர். அரசன் இவரை நோக்கி நீவிர் வீரசைவராயின் உம்மிடம் அவர் வைத்த தீர்வை முதலியவற்றையும் மாற்றுகிறேன் என்றனர். சிவமூர்த்தி இசையாதது கண்டு அரசன் வாளெடுக்கச் சிவமூர்த்தி தமது திருவுருக் காட்டினர். அவ்வகை காட்டியும் அரசன் சம்மதிக்காது சிவலிங்கஞ் சிவமூர்த்திக்குந் தரித்தனன்.

**கலிகாலன்** — சோழநாடு விட்டுக் காஞ்சி நாடடைந்து காட்டை நாடாக்கினவன். இவன் பூர்வம் இந்திரன். இவன் காஞ்சிப் பதியிலிருந்த பூதத்தைக் கருப்பதானவதி யென்னும் காளியருளால் வாள்பெற்று எதிர்க்க அந்தப் பூதம் ஆயிரம் மனுஷரை வருஷத்திற்குப் பலிகேட்க உடன்பட்டு அரசாண்டவன்.

**கலிக்கம்பநாயனர்** — திருப்பெண்ணாடக க்ஷேத்திரத்தில் வைசியகுலத்திற் றிருவவதரித்துச் சிவனடியார் திருவடிகளை மனைவியார் நீர்வார்க்கத் தாம் சுத்திசெய்து பூசித்து அமுதுபடைத்து வருங்காலையில், ஒருநாள் தம்மிடம் வேலைசெய்து கொண்டிருந்து நீங்கிய ஒருவன் சிவனடியார் வேடங்கொண்டுவர, நாயனர் அவனுக்கும் பூசைசெய்யக் கால்களைப் பற்றினர். பத்தினியார் இவன் நம்மிடம் வேலை செய்திருந்தவனென்று நீர் விடாமல் தாமதித்தது கண்டு, பத்தினியாரின் கையைத் தறித்து அடியாரைப் பூசித்து அமுது படைத்துச் சில நாட்களுக்குப் பிறகு முத்தி பெற்றவர்.

**கலிக்காவதாரி கல்கி)** — விண்டுவின் தசாவதாரங்களில் ஒன்று. கலியுகமுடிவில் சம்பளமென்னும் கிராமத்தில் விஷ்ணு எச்சன் கிருகத்தில் குதிரைமுகமாக அவதரித்து அதர்மங்களைப் போக்கித் தருமத்தை நிறுத்துவர். இவர் ஏறுங் குதிரை தேவதத்தம் சம்பளமென்னும் சிம்மளத்தீவில் விஷ்ணுயச்சன் பாரியையான சுமதியின் கருப்பத்தில் நான்கு சகோதாருடன் பிறப்பர். இலக்குமியும் அத்தீவில் பிருகத்ரதன் பாரியான கௌதமியின் உதரத்தில் வைசாகசுக்கில துவாதசியில் பிறப்பள். இவர் சகோதரர் கலி, பிராக்கியவன், சுமந்திரர். கல்கி பரசுராமரிடத்தில் வேதங்களையும் தநுர்வித்தையையும் கற்றுணர்ந்தவர். சிவபெருமானை யெண்ணித் தவஞ்செய்து குதிரையையும், எல்லாமறிந்த கிளியையும், வாளையும் பெற்றவர். கல்கி பத்மாவதியைச் சிம்மளத்தில் மணம்புரிந்து ஜயன் விஜயன் எனும் இரண்டு புத்திரரைப் பெற்றூர். இவர் திக்குவிசயஞ் செய்யத் தொடங்கி முதலில் கீடபுரத்தையடைந்து பௌத்தராசாவாகிய ஸ்ரீதேவன் பட்டணத்தைமுற்றுகைசெய்யஸ்ரீதேவன் எதிர்த்துப் பின்னடைகையில்ஜினதேவன் எதிர்த்துக்கல்கியை மூர்ச்சையாக்கக்கல்கி மூர்ச்சை தெளிந்தெழுந்து யாவரையுங் கொன்று மிகுந்துநின்ற ஜினதேவனை யழைத்து அவன் சௌரியத்தை நிந்தித்துக் கால்களைக் கிழித்தெறிந்தார் பிறகு சுத்தோதனன் முதலியவர்களை யெதிர்த்து அவர்களை வதைத்துப் பட்டணத்துக்குள் சென்று மிலேச்சர்களைக் கொல்லுகையில் மிலேச்சஸ்திரீகள் எதிர்க்க அவர்கள்மேல் பாணத்தைவிட அவர்கள் ஞானமடைந்து கல்கியை ஸ்தோத்திரஞ் செய்து பகவானைச் சரணடைந்தார்கள். பிறகு கல்கி அங்கு விசனத்தில் மூழ்கியிருக்கும் இருடிக்கூட்டங்களைக் கண்டு அவர்கள் குதோதரியைச் சம்மாரஞ்செய்யக் கேட்டுக்கொண்டபடி இமய மலைக்குத் திரும்புகையில் இடையிலிருக்கும் க்ஷீரநதியைக் கடக்க அஞ்சிய சேனைகளுக்கு இருடிகளால் அவற்றின் வரலாற்றைத் தெரிவித்துக் குதோதரியை யடைந்து அவள் மூச்சால் வயிற்றினுட்புகுந்து அவளைக் கொல்ல அவள் குமாரன் கரஞ்சன் யுத்தத்திற்குவந்து கொல்லப்பட்டான். கல்கி கலாபகிராமத்தில் தவம்புரிந்திருந்த சூரியவம்சத்தரசனாகிய மருவைக் கண்டார். அக்கிராமத்திலே சந்திரவம்சத் தரசனாகிய தேவாபியைக் கண்டார். கல்கி மேற்சொன்ன இருவரையும் வரலாறு வினவி, விசாகயூபன்

கன்னிகையை மருவிற்கும், ருசிராசுவின் கன்னிகையைத்தேவாபிக்கும் மணஞ்செய்விக்கக் கட்டளையிட்டு அவ் விருவர்க்கும் அயோத்தி, அஸ்தினபுரியை ஆளும்படியாகக்கட்டளையிட்டுத் தாம் மதுரைப்பட்டணத்தை யடைய நிற்கையில் ஒரு சன்னியாசியைக்கண்டு நீர் யார் என்று வினவினர். அவர் தாம் மஸ்கரி அல்லது கிருதயுகம் என்றுகூறி மன்வந்தர லக்ஷணத்தைக் கல்கிக்குக்கூறக் கல்கி கிருதயுகம் ஆரம்பித்துவிட்டதென்று நிச்சுவிசயத்திற்கு ஆரம்பித்தார்; கோகன், விகோகன் என்பவர்கள் கல்கியை எதிர்த்து ஒன்ருகக் கொல்லப்பட்டார்கள். பிறகு கல்கியானவர் சசித்துவசனுடன் நட்புக்கொண்டு அவன் தேவியாகிய சுசாந்தையால் ஸ்தோத்தரிக்கப்பட்டு அவன் குமரி ரமாவை மணந்து காஞ்சனபுரியை யடைந்து விஷகன்னிகையின் சாபத்தை நீக்கிச் சம்பளமடைந்து அதை அரசாட்சிபுரிந்து பாசுராமரைச் சேவித்துத் நிச்சுவிசய தரிசனங்களைக் கூறினர். பின் இவருக்கு மேகபலனென்றும் வலாகன் என்றும் இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். இவ்வாறிருக்கையில் பத்மாவதியைவிட்டு ஓர் குகையுள்புகப் பத்மாவதி தன் கணவனை அநேக நாள் காணுமல் கல்கியைப்போல் ஒரு படம் எழுதிப் பூசித்துவருகையில் கல்கி பத்மாவதியைக் காணுமல் தேடிக்கண்டு தழுவினர். பிறகு தேவர்கள் வேண்டக் கல்கிபகவான் தன் குமாரர்களுக்குப் பட்டாபிஷேகஞ்செய்து வைகுண்ட மடைந்தனர் தேவிமாராகிய பத்மாவதி, சாமாவதி இருவரும் தீப்புகுந்தனர். (கல்கி புராணம்).

**கலிங்கசேனை** — இவள் கோசம்பி நகரியுள்ள தலைக்கோற் பட்டம்பெற்ற இரண்டாயிரத் தைந்நூறு கணிகைமார்களுள் ஒருத்தி; குற்ற மற்ற கற்புடையவள். இவள் மதன மஞ்சிகையின் தாய். (பெ. கதை).

**கலிங்கம்** — 1. ஒருதேயம், வசு குமரர் ஆண்டது. ஒட்டிரதேசத்திற்குத் தெற்கின்கணுள்ளது. இதில் சிங்கபுர மென்றும், கபிலையென்றும் இரண்டு நகரங்க ளிருந்தன. (மணிமேகலை).

2. இது பரதகண்டத்தின் ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்று.

3. கலிங்கம்-வேங்கை நாட்டுக்கு வடக்கே உள்ள நாடு. இது ஒரிஸ்ஸாவின் ஒரு பாகமும், ராஜமகேந்திரமும், விசாகப்பட்டணமும் சேர்ந்த நாடு. இந்நாட்டை ஆண்டோர், சுருதாயு, சக்கரதேவன், சத்தியன் கேதுமான். பீமனுல் கொல்லப்பட்டார்.

The country lying on the South of the Vaitarini river in Orissa, and north of the Krishna river in the Districts of Rajahmundry, Vizagapatam, and Ganjam and a portion of Orissa.

**கலிங்கத்தாசன்** — இவன் யூகியுடன் போர் செய்தபொழுது இவனது யானைக்கொம்பு குத்திய புண்ணுலாகிய தழும்பு அவன் மார்பில் அடையாளமாக இருந்ததென்றும் உச்சைனியில் மாறுவேடம் பூண்ட காலத்தில் தன்னைப் பிறர் அறிந்துகொள்ளாதபடி அவன் அதனை மறைத்துக்கொண்டிருந்தனனென்றுந் தெரிகிறது. (பெ-க).

**கலிங்கத்துப்பரணி** — கருணாகரத்தொண்டமான்மீது செயங்கொண்டாரால் பாடப்பட்டது. ஆனையாயிரம் அமரிடை வென்ற அரசனதுவெற்றியைக்குறித்துப்பாடியது.

**கலிங்கலை** — பூதநந்தன் அரசாண்ட தேசம்.

**கலிங்கன்** — 1. கலிங்கநாட்டரசன்.

2. உருக்குமிக்குத் தோழன். பலராமரால் பல்லுடைக்கப் பெற்றவன். பாரத முதனுள் யுத்தத்தில் யாகசேநனுடன் போர்செய்தவன்.

3. திரௌபதையின் சுயம்வரத்தை நாடி வந்த அரசன்.

4. சந்திர வம்சத்தரசன். யயாதி புத்ரனுகிய அநுவம்சத்திற் பிறந்த பலிராஜனுடைய பார்யைக்குத் தீர்க்கதமருதேயினுல் பிறந்தவன். இவனுடன் பிறந்தார், அங்கன், வங்கன், புண்டரன், சுமனன். (பார) ஆதிபர்வம்.

5. அங்கதேசத்துச் சூத்திரன், செல்வச் செருக்கால் ஒரு விரகியைப் பழித்துத் துன்பம் அனுபவித்து உரோமச முனிவர் அருட்பார்வையால் நலம் அடைந்தவன்.

**கலித்தாழிசை** — இரண்டு முதலிய பல அடிகளா லீற்றடிமிக்கு எனையடிதம்முளள வொத்து நிற்பத்தனித்தேனும் ஒருபொருண் மேல் மூன்றடுக்கியேனும் வருவது. யாப்பு-இ).

**கலித்துறை** — ஐஞ்சீரடிநான்கினைக்கொண்டு வருவது.

**கலித்தொகை** — இது எட்டுத் தொகையுள் ஆறாவது. நூற்றைம்பது கலிப்பாக்களை யுடையது. இதற்கு நச்சினார்க்கினியர் உரைகூறி யிருக்கின்றனர்.

**கலிநீதிநாயனார்** — இவர் தொண்டைநாட்டில் திருவொற்றியூரில் செக்கார் மரபில் திருவவதரித்து ஆலயத்திலுள்ளும் புறம்பும் தீபத்திருப்பணி செய்துவருகையில் செல்வங் குறையக் கூலிக்கு எண்ணெய் விற்றும் கூலிச்செக்கோட்டியும் திருப்பணிவிடாது நடத்திவந்தனர். இவ்வகை நடத்துகையில் கூலியும் அகப்படாமல் மனம் வருந்தித் தமது திருப்பணியின் முட்டுப்பாட்டை யெண்ணி மனைவியாரை விற்க யாருங்கொள்வாரிலாது திரும்பி ஆலயத்துட்சென்று அகலில் திரிமுதலிய இட்டுத் தமது கழுத்தரிந்தமை கண்டு சிவமூர்த்தி கையைப் பிடித்துத் தடுத்து முத்தியளிக்கப் பெற்றவர். (பெ. புராணம்).

**கலிபுருஷன் அல்லது கலி**—இவன் பாவத்தை யுடம்பாகப் பெற்று வலதுகையால் கள்ளினையும் இடக்கையால் ஆண்குறியினையும் பிடித்துக்கொண்டு புறம்பே பார்க்கின்ற கண்களையும் பேய் முகத்தையும் பெற்றிருக்கும் தெய்வம். **கலியுற்பத்தியாவது** துவாபரயுகம் முடிந்தபின் பிரமன் தன் பின்பாகத்தில் கோரமாயும் கறுத்ததாயு மிருக்கிற பாபத்தைச் சிருட்டித்தார். அதற்கு அதர்மம் என்றும் பெயர். அந்த அதர்மத்திற்குப் பொய் மனைவியும், டம்பம் பிள்ளையும், மாயையுடன் பிறந்தாளுமாம். மாயையின் வயிற்றில் இம்சையென்கிற பெண்ணும், உலோபம் என்கிற பிள்ளையும் பிறந்தனர். உலோபமும் இம்சையும் கல்யாணஞ் செய்துகொண்டு குரோதம் என்கிற பிள்ளையைப் பெற்றனர். அந்தக் குரோதம் இம்சை யென்கிற பெண்ணின் வயிற்றில் கலியை யுண்டுபண்ணிற்று. **கலியினிலக்கணமாவது**, இடதுகையில் தன் ஆண்குறியும், அஞ்சனம்போன்ற சரீரமும், நீண்ட வயிறும், பயங்கரமான முகமும், எப்பொழுதும் அசைந்துகொண் டிருக்கிற நாவும், துர்க்கந்தமான சரீரமும், சூதாடல், ஸ்திரீசம்போகம், கட்குடித்தல் முதலான தீயநடைக்கு இருக்கையாகிய ரூபத்தையுடையது. இக் கலிபுருடன் தன் உடன்பிறந்தாள் வயிற்றில் பயம் என்கிற பிள்ளையையும், மிருத்தியு என்கிற பிள்ளையையும் உண்டுபண்ணினன். மேற்சொன்ன பயமும் மிருத்தியும் மணந்து, நரகம் என்னும் பிள்ளையை உண்டு பண்ணினார்கள். நரகம், யாதனை யென்கிற பெண்ணை மணந்து அளவிறந்த புத்திரர்களைப் பெற்றது. இவ்வகை கலியின் குலத்தில் நன்னடை யொழிந்து தீமையே பரவின. கலியின் நடக்கையாவது, **கலியின் முதற்பாதத்தில்** அக்காலத்திற்குண்டான ஆசாரமொழிந்து சஞ்சலபுத்தி, ஸ்த்ரீகளிடத் தாசை, பெருமைக் காசாரம் பாராட்டல், துற்நடை தந்தைதாய்க்கொலை, வேதவொழுக்கங்களைக் கடத்தல், சூத்திரசகவாசம், குதர்க்கவாதம், தர்மவிக்கிரயம், வேதவிக்ரயம், எண்ணெய், மாமிசம் விற்றல், ஜாதிபேதமின்மை, இடம்பமடாதிபத்யம், பதினாறு வயதிற்குள் பிள்ளைபெறல், மனைவியின் சொற்கேட்டல், பிதர்வின் குலத்தவரைத் தூஷித்தல் உண்டாம். மேலும் குலஸ்த்ரீகள் வேசைகளைப் போலவும், வேசைகள் குலஸ்த்ரீகளைப் போலவும் இருப்பர். வானத்தில் உற்பாதங்களுண்டாம். பூமியிற் பலனைத்தரும் ஜனங்கள் இராசாக்களாற் பீடிக்கப்படுவர். பிராமணர்கள் மந்திர சூன்யர்களாயும் அன்னம் விற்பவர்களுமாவர். தம் குலபாஷையை யிழந்து ஈனபாஷையில் விருப்பமும் ஈனசகவாசமும் உள்ளவராவர். **கலியின் இரண்டாம் பாதத்தில்** சிவ விஷ்ணுவாதிகளின் கலை குறைந்து சிறுதேவதைகள் சக்தியுள்ளவையாய் விளங்கும். **மூன்றாம் பாதத்தில்** சிவ விஷ்ணுக்களின் பெயர் மறைந்து ஜாதிபேதமில்லை யென்கிறதைப் பற்றிப் போர் உண்டாகும். **நான்காம் பாதத்தில்** ஜனங்கள் எல்லாம் ஒரேவிதமாகவும் ஓரடி யுள்ளவர்களாய மிருப்பார்கள். தர்மம் மறைந்து அதர்மம் விளங்கிக் குடியர்கள் நிறைந்து ஒருவருக்கொருவர் தம்மையே பக்ஷிப்பர். கலிகாமகலையை மணந்து பிருகத்கீர்த்தி, பிருகத்பாகு என்னும் இரண்டு புத்திரர்களைப் பெற்றனன்.

**கலிப்பகையார்** — திலகவதியாரை மணக்கவிருந்து அரசனேவலால் யுத்தத்தி லிறந்த வேளாண்குடியினர்.

**கலிப்பா** — வெண்சீர் மிகப் பெற்று மாச்சீரும் விளங்கனிச் சீரும் பெறாது பிறசீர்களுஞ் சிறுபான்மை கலந்து கலித்தளையும் அயற்றளையுந் தழுவித் தரவு, தாழிசை அராகம், அம்போதரங்கம், தனிச்சொ-

சுரிதகம் எனும் ஆறுறுப்பினுள் எற்பன கொண்டு நாற்சீரடியால் வருவது. இது ஒத்தாழிசைக் கலி, வெண்கலி, கொச்சகக் கலி என (௩) வகை.

**கலியநாயனார்**—இவர் பஞ்சாக்ஷரஜபம் செய்துகொண் டிருப்பவர். இவர் தம்மூர்விட்டுக் காட்டின்வழிச் செல்லுகையில் தனித்திருந்த சிவலிங்கத்தைக்கண்டு ஐய, தனித்திருக்கின்றீரே திரிபுராதிகள் முதலிய பல பகைவர் உமக்கிருக்கின்றன ராதலின் வேற்றிடம் தேவரீரைக் கொண்டு செல்வேனெனச் சிவலிங்கத்தைத் தூக்கி முடியாத காரியமென்று எண்ணித் தமது செல்வ முதலியவைகளை யெடுத்து வந்து சிவாலய முதலியன கட்டுவித்துத் தம் நண்பருடன் சகலாயுதமுந் தாங்கிக் காவல் புரிந்திருந்து நண்பர்கள் பொருட்குறைவால் வராதிருந்த காலத்துத் தாம் தீவட்டியெரித்தும் எண்ணெய்வாங்கச் சக்தியற்ற காலத்து விறகெரித்தும் அதுவுங் கூடாக் காலத்துத் தலைமயிரை எரித்து ஒளியுண்டாக்கியுங் கலங்கா மனமுற்றவராய்த் துதிக்கும் கலியர் முன்பு சிவமூர்த்தி தரிசனந்தந்து என்ன வேண்டுமென நாயனார் இவ்விடம் தேவரீர் தனித்திராது கைலையடைய வேண்டுமென்றனர். சிவபெருமான் வேண்டுகோட்படி திருக்கோயிலுடன் புஷ்பகத்தில் நாயனாரோடு தாம் திருக்கைலைக்கு எழுந்தருளினர்.

**கலியன்** — திருமங்கையாழ்வாரைப் பெருமாள் அழைத்த பெயர்.

**கலியாணசோழன்** — இவன் காலகாலசோழனுக்குக் குமரன். இவன் தேவி பாண்டியன் புத்திரிகல்யாணி. இவன அநேக திருப்பணிகள்செய்து மண்ணியாறு என ஒரு ஆறுண்டாக்கிச் சிதம்பரத்தில் கோபுரமும் ஆயிரக்கால் மண்டபமும் கட்டி அறுபத்தேழுவருஷம் அரசாண்டு தன் மகன் பத்திரசோழனைப் பெற்றுச் சிவபதமடைந்தனன்.

**கலியாணிகை**—ஒரு வித்தியாதர அரம்பை.

**கலியில் இராஜ்யபரிபாலனம் செய்யும் மிலேச்ச சாதியர்** — ஆதமர், சிவேதர், அநூஹர், கீனசர், மஹல்லர், விரதர், ஹநூகர், மதாசசிலர், ஹோமகர், நூயூகர், ஸிமர், சாமர், பாவர். **பாஷைகள்** — ஸீமம், ஹாமம், யாகூதம், சும்ரமாசூஜம், மாதி, யூனனி, இலீசம், தாலீசம், மஹாராஷ்டரி, யாவனி, குருண்டம் முதலிய (பவிஷ்-புரா.)

**கலியுகம்** — துவாபர யுகத்திற்குப் பிற்பட்டது. இது கிருஷ்ணன், பாண்டவர்கள் இவர்கள் அரசாட்சியின் முதலும் இறுதியுமானது. இதற்கு வருஷம் நான்கு லக்ஷத்து முப்பத்தீராயிரம். இதில் ஜனங்கள் பொய், கொலை, களவு, காமங்கள்முதலிய மாபாதகஞ் செய்து தெய்வம், குரு, தாய், தந்தை முதலியவரை யிகழ்ந்து பசி முதலிய பீடைகளால் வருந்துவர். இதில் தருமம் இராது.

**கலிவிருத்தம்** — நாற்சீரடி நான்கினைக்கொண்டு வருவது.

**கலிவெண்பா** — வெண்டளை தழுவி யீற்றடி முச்சீரான் முடிவது.

**கலிவைரி** — நம்பிள்ளைக்கு ஒரு பெயர்.

**கலுவம்** — மருந்தரைக்கும் குழியம்மி. இவற்றில் கருமை, செம்மை கற்களாலானவை உத்தமம், வெள்ளைக் கல்லாலான கல்வம் சிறப்பில்லை.

**கலுழவேகன்**—காந்தருவதத்தைக்குப் பிதா வெள்ளிமலையிலுள்ளவித்தியாதர அரசன்.

**கலை** — 1. கர்த்தமப் பிரசாபதியின் பெண். மரூசிமகருஷியின் தேவி.

2. சந்திர கலை.

3. கலை (௧௬) கன்மேந்திரி யமைந்து, ஞானேந்திரியமைந்து, மனம், அகங்காரம், புத்தி, வித்தை, வாக்கு, சத்தி.

4. ஐந்து. நிவர்த்திகலை, பிரதிட்டானகலை, வித்யாகலை, சாந்திகலை, சாந்தியாதீத கலை.

5. கலை—தந்திரகலை, மந்திரகலை, உபதேசகலை என மூன்று. **தந்திரகலை** — கடவுளா லருளிச் செய்யப்பட்ட ஆகமங்கள். **மந்திரகலை** — எந்தத் தேவதையை உபாசிக்கிறானோ அத்தேவதைக்கு உரிய நியாசம், இருடி, சந்தசு, தேவதையை யுணர்ந்தாராதித்தல். உபதேசகலை--ஆசாரியனிடம், பதி, பசு, பாச லக்ஷணங்களை உள்ளபடி அறிவது. (சிவ-சித்.)

**கலைக்கோட்டுமுனிவர்** — இருசிக சிருங்கரைக் காண்க. இவர் தந்தையார் ஸ்நானத்திற்குச் சென்று அரம்பையைக் கண்டு மோகித்து வீரியத்தைக் கங்கையில்விட அச்சலத்தை மானொன்று குடிக்க அதன் வயிற்றில் இம்முனிவர் பிறந்தனர். இவர்க்குத் தலையில் ஒரு கொம்புண்டு.

**கலைக்கேத்தபிரமையர்**—இவர் முன்குடுமியும் கையில் கலைக்கொம்பும் ஒற்றைக் காலில் சதங்கையும் நீல ஆடையும் பெற்றுப் பிச்சையேற்றுச் சிவனடியவர்க்குப் படைத்துவருநாளில் சிவனடியவர் ஒருவர் வறுமைநீங்கக் கின்னரப்பிரமையரிடஞ் செல்லவிருக்கையில் அவரை இவர் சிவமூர்த்தியிடம் பொன்பெற்று அவர் உணவளிக்கின்றனர், நாமுமக்கு வேண்டிய பொருள் அளிக்கின்றோமென்று தடுத்துத் தாம் வைத்திருந்த கலைக்கொம்பைத் தட்டினர். அக்கலைக்கொம்பு அவ்வடியவர் வேண்டியவளவு பொன்சொரிந்தது. அடியவர் அப்பொன்னைத் தூக்கமாட்டாது வசவரிடம் ஆள்பெற்றுத் தூக்கிச் செல்லக் கண்டவர்.

**கலைக்ஞானபாதன்**—சந்திரன் குமாரன்.

**கலைஞானம்** (சுச) — அக்கர இலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாஸ்திரம், சோதிடசாஸ்திரம், தருமசாஸ்திரம், யோகசாஸ்திரம், மந்திரசாஸ்திரம், சகுனசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், உருவசாஸ்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தபிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அத்திரபரீக்ஷை, கனகபரீக்ஷை, இரதபரீக்ஷை, கஜபரீக்ஷை, அசுவபரீக்ஷை, இரத்தினபரீக்ஷை, பூபரீக்ஷை, சங்கிராம இலக்கணம், மல்லயுத்தம், ஆகருஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், மதனசாஸ்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தர்வவாதம், பைபீலவாதம், கௌத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிச்யம், இந்திரஜாலம், மகேந்திரஜாலம், அக்கினித்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுத்தம்பம், திட்டித்தம்பம், வாக்குத்தம்பம், சுக்கிலத்தம்பம், கன்னத்தம்பம், கட்கத்தம்பம், அவத்தைப் பிரயோகம் முதலியன.

**கலைநியமம்**—தென் மதுரையிலுள்ள சிந்தாதேவியின் கோயில் கலாரூபமாகிய சிந்தாதேவிக்கு இடமாதல்பற்றி இப்பெயர் பெற்றது. (மணிமேகலை).

**கலைமான்** — ரேண்டியர் என்பது இது மானினத்தைச் சேர்ந்த மிருகம். இது மட்டக்குதிரையளவு உயரமுள்ளது. இது உத்தரமகா சமுத்திரத்தை அடுத்த பிரதேசங்களில் வசிப்பது. தேகமெங்கும் நீண்டு தடித்துப் பழுப்பு நிறமான மயிர்களைப் பெற்றிருக்கும். இது தலை பருத்தும கழுத்து நீண்டு மிருக்கும். இது கோடைகாலத்தில் புல்லையும், மாரியில் பாசி முதலியவற்றையும் தின்னும். இதை இலேசிற் பழக்கி ஸ்லெட்ஜ் எனும் வண்டியிற் கட்டிப் பழக்குவார்கள். இது மணிக்கு அநேகமைல் செல்லும். இதன் தோலும்கொம்பும்பலவிதத்தில் உதவுகின்றன.

**கல்கட்டிகள்** — இருளரில் ஒருவகையர். இவர்கள் கழுத்தில் லிங்கம்போல் கல்லைக் கட்டிக்கொண்டிருப்பர்.

**கல்கி** — இவர் கலியுக அந்தத்தில் யசஸ் எனும் பிராமணனுக்கு நாராயணனம்சமாகப் பிறந்து நீண்ட வாளினால் உயர்ந்த குதிரைமீதேறி (3) இராத்திரிக்குள் மிலேச்சர் அனைவரையும் வெட்டிக் குவிக்கப் போகிறவர். (தே-பா).

**கல்நார்**—இது, கல்லின் வகைகளில் ஒன்று. இது, நார்போல் கிழிக்கவும், கயிறு திரிக்கவும் துணி நெய்யவும் உதவுகிறதாம். இக் கல்நார் வட அமெரிக்காவின் கனடா நாட்டி லகப்படும். ஸ்காத்லாந்து தீபத்தில் அகப்படும் கல்நார் காகிதம் செய்யவும், தோல்போலுரித்துப் பலவேலைகள் செய்விக்கவும் உதவுகிறதென்பர்.

**கல்நெட்டி**—(மலைநெட்டி) சில இடங்களில் ஒருவகைக் கல், நீரிலிட்டால் சடைபோல் மிதக்கின்றது, அதனை மலைநெட்டி யென்பர். இவை மேனாடுகளில் உண்டு என்பர்.

**கல்பவருஷன்** — வசுதேவருக்கு உபதேவியிட முதித்தவன்.

**கல்பன்** — துருவன் குமாரன்.

**கல்பார்க்கம்**—துருக்கர் அரசாண்ட பரத கண்டத்திலுள்ள தேசம்.

**கல்பொருசிறுநுரையார்** — இவர் கடைச்சங்க மருவியவராக இருக்கலாம். "இவர் தம் செய்யுளில் "எங்காதலர்" எனக் கூறியிருத்தலால் பெண்பாலாராக இருத்தல் கூடும். இவர் பெயர் இன்னதென அறியக்கூடவில்லை இவர் தம் செய்யுளில் "கல்பொரு சிறு நுரை" எனக் கூறியிருத்தலால் இவர்க்கு அப்பெயரே பெயராயமைந்தது. குறு உகூ.

**கல்மாஷபாதன், (கன்மாடபாதன்)**-இவன் மித்திரசகன் என்னும் சூரியவம்சத் தரசன். மனைவி மதயந்தி. இவன் ஒருநாள் வேட்டைக்குச் சென்று புலியுருக்கொ

ண்டு மிருகங்களைத் தின்றுகொண்டிருந்த ஒரு அரக்கனைக் கொன்றனன். அவன் தம்பி தப்பியோடிச் சென்று இவ்வரச னிடம் வைரங்கொண்டு சமயல் செய்யும் மடையனுருக்கொண்டு அரசனது சமயற் சாலையிலமர்ந்து காலம் பார்த்திருந்தனன். ஒருநாள் வசிட்டமுனிவர் இவனிடம் விருந்தாகவர அரக்கன் இது தருணமென்று ஒரு மனிதனைக் கொன்று உணவளித்த னன். இதனை முனிவர் அறிந்துகோபித்து அரசனைநோக்கி விருந்தாக வந்த எனக்கு நரமாமிச வுணவளித்தனை யாதலால் நீ அரக்கனாக எனச் சாபமிட்டனர். இவ் வகைச் சாபமேற்ற அரசன் நான் ஒரு குற்றமும் செய்யாதிருக்க என்னைச் சபித் தமையால் நானும் சாபமிடுவேனென்று கையில் நீரெடுக்க அருகிருந்த மனைவி, இந்தச் சூரிய வம்சத்தில் இதுவரையில் யாருங் குருவைச் சபித்தார் இல்லையெனத் தடுத்தனள். அந்நீரை அரசன் கால்மீது ஊற்றிக்கொள்ளக் கால்கறுத்து மூங்கில் போலாயிற்று. அதனாற் கல்மாடபாத னென்று பெயர்பெற்றனன். ('கல்மாஷம் மூங்கில்') இவன் அரக்கன் ஆனவுடன் வசிட்டன் புத்திரனாகிய சத்தி முனிவனை விழுங்கினன். இவனுக் கிச்சாபம் பன் னிரண்டு வருட மிருந்தது. இடையில் ஒரு வேதியன் தன் மனைவியுடன் காட் டின்வழிச் செல்லுகையி லந்தவேதியனை விழுங்கினன். வேதியன் மனைவி நீ என் நாயகனை விழுங்கியதால் நீ சாப நீங்கி உன்மனைவியைப் புணரச் செல்லுகையில் உயிரிழக்கவென்று சபித்து உடனே அநு மரண மடைந்தனள். அரசன் சாபநீங்கி மனைவியால் சாபமுணர்ந்து கோகன்ன யாத்திரை செய்து வசிட்டராற் புத்தி ரோற்பத்தி செய்துகொண்டனன். இவன் ஒரு ரிஷிக்கு அன்னமிட அதில் ஒரு மயிர் இருக்கக்கண்டு இருடியால் நாடோ றும் ஒரு மனிதனைப் புசிக்கச் சாபமடைந் தவன். தன் மனைவி யணிந்திருந்த இரத் தின குண்டலத்தைக் குருகாணிக்கையா கக் கொடுத்து உதங்கரைத் தின்னவந்து அவர் சாந்த வார்த்தையால் பொறுத்து அவரால் சாபநீக்க மடைந்தனன். இவன் அரக்கனாக இருந்தபோது இவனுக்கு உதி ரன் எனப் பெயர். இவன் தந்தை சுதரி சனன் என்பவன் குமரன். இவனுக்கு வீரசகன் எனவும் பெயர். (பாகவதம்.)

கல்மாஷன், கல்மாடன்—கத்துரு தநயன்.

கல்யாணதலம் — அம்பட்டர் குலம். இவர் கள் சுப காரியங்களுக்கு வாத்யம் முதலிய செய்தலால் பெற்ற பெயர்.

கல்யாணசுந்தரர் — பார்வதிபிராட்டியைத் திருமணஞ்செய்த சிவமூர்த்தி திருவுரு.

கல்யாணதீர்த்தம்—திருநாராயணபுர தீர்த் தங்களில் ஒன்று.

கல்யாணம் (௫) — சொர்காவதானம், மந்த் ராபிஷேகம், மகாப்பிரஸ்தானம், தேவ லோகப்பத்தி, பரிநிர்வாணம்.

கல்யாணன் — வல்லாளனைக் காண்க.

கல்லடிசித்தர் — இவர்கள் ஒருவகை குறச் சாதியார். இவர்கள் கையில் கல்முதலிய வைத்துக்கொண்டு தங்களைத் தாமே யெறிந்து கொண்டு கத்தியால் தம்மை அரிந்து கொண்டதுபோல் உதிரங்காட்டி யும் வாதிட்டுப் பிச்சை வாங்குவோர்.

கல்லணை —ஒரு நதி. இது இலங்கைத்தீவிற் சமனொளி மலையிலிருந்து உண்டாவது.

கல்லவல் — இது சொல்லணியி லொன்று. இது நாடறிசொற்பொருள் பயப்பப் பிழை யாமைவாசகஞ் செய்வது.

கல்லன் மூப்பர் — இவர்கள் மலைநாட்டுக் கம்மாளரில் ஒரு வகையார். இவர்களுக் குப் புரோகிதர் அம்பட்டர்.

கல்லாசாரி — கருங்கல்லில் வேலை செய் யும் கம்மாளன். இவனே கல் தச்சன்.

கல்லாடம் — இது அகப்பொருளிலக்கண அமைதியாய்த் திருக்கோவையாரின் கிள விகளின் அருமைகளை விளக்கி அகவற் பாக்களா லியற்றப்பட்ட நூல். கல்லாடர் செய்தது. செய்தோனாற் பேர் பெற்றது.

கல்லாடர் — இவர் பொய்யடிமையில்லாத புலவரில்ஒருவர், கடைச்சங்கத்தவர். இவர் செய்தநூல் கல்லாடம். திருக்கண்ணப்ப தேவர் திருமறம். தொல்காப்பிய உரை. இவர் அம்பர் கிழானருவந்தை பொறை யாற்றுக்கிழான், தலையாலங்கானத்துச் செ ருவென்ற பாண்டியன் முதலிய மூவரைப் பாடியவர். இவர் செய்த கல்லாடத்தைச் சிறப்பித்து, இவ் வெண்பா "கல்லாடர் செய்பவனுவற் கல்லாடநூறுநூல், வல் லார் சங்கத்தில் வந்தருளிச் — சொல்லா யும், மாமதுரையீசர் மனமுவந்து கேட்டு முடி, தாமசைத்தார் நூறுதரம்" கூறப்படு கிறது. இதன் அருமை நோக்கிக் கல்லா டம் கற்றவனுடன் மல்லாடாதே" என்பர். (கல்லாடம்.)

**கல்லானை** — இதனைக் காண்டாமிருகமென்பர் இது ஆசியா, ஆப்பிரிகாகண்டவாசி. இது சற்று யானையைப்போல் வயிறு பருத்தும் கால்கள் குறுகியு மிருக்கிறது. உடல் துப்பாக்கிக் குண்டிற்கு மஞ்சாததும், கறுத்த நிறமுடையதும், தடித்த தோலை யுடையதும், மூக்கிலிருந்து 3-அடிகள் நீண்ட ஒரு கொம்பையும் பெற்றது, இது கொம்பின் வலிமையால் புலியைக் குத்தி யெறியும். இது 7, 8-அடி உயரமும், 10-அடி அகலமும் இருக்கும். ஆகாரம் இலை தழை. இதற்குச் சேற்றில் புரள இஷ்டம், ஒருவர்க்கும் தீங்கு செய்யாது. கோபம் வந்தால் அபாயம். ஆப்ரிகாகண்டத்துக் கல்யானைகளுக்கு இரண்டு கொம்புகள் உண்டு. இதை ரைனோஸரஸ் என்பர்.

**கல்லுளிச் சித்தர்** — இவர் ஒரு சித்தர். இவரைக் கல்லடிச் சித்தர் என்றுங் கூறுவர். இவரைப் பற்றிக் கல்லுளிச் சித்தன் போனவழி காடுமேடெல்லாம் தவிடுபொடி (கல்லுகளெல்லாம் தவிடுபொடி.) (என்றும் உண்டு.) இவருக்கு மலைமுதலியவும் இவர் வழியைத் தடுக்காது இவருக்கு இடங் கொடுத்து விலகி நிற்குமெனத் தெரிகிறது.

**கல்லூற்று** — இது தன்னிடம் நனைந்த பொருள்களைக் கல்லாக மாற்றும் நீரூற்று. இவ்வகை நீரூற்றுள் ஒன்று. இங்கிலாந்திலுள்ள யார்க்கஷயர் மாகாணத்திலுள்ள நாரெஸ்பரோ எனும் நகரத்திலுள்ள குன்றிலிருந்து அங்குள்ள கிணற்றில் விழுகிறது. அந் நீர் தன்னால் நனைக்கப்பட்ட பொருளைக் கல்லாக மாற்றி விடுகிறதாம். இன்னும் இந்தியாவிலுள்ள இமயமலைச் சாரலில் சிலாநதி என ஒன்று இருக்கிறதாம் அதன் ஜலம் அவ்வாறு செய்கின்றதென்பர்.

**கல்லையர்** — இவர் வீரசைவர், இவர் ஒரு ஊரிலிருந்த காலத்தில் அவ்வூர் ஆலயத்தில் இருந்த பாம்பு அனைவரையுங் கடிக்க இறந்தவர்களை எழுப்பினர். இவர் மடத்திலிருந்து சமையல் செய்பவள், தீர்த்தக் கரைக்குச் செல்ல அங்கு வந்திருந்த பிராமணன் அந்தச் சமயற்காரியின் குடத்தைத் தொட்டனன். அதனால் சமையலசெய்பவள், தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து சலம் கொண்டு சென்றனள். இதனைக் கண்ட வேதியர் கோபித்துக் கல்லையரிடங் கூறக் கல்லையர் வேதியர்கள் வேதமறிந்தவர்கள் எனின் சிவனடியவரினும் சிறந்தவர் அல்லரோ வென்று தம்மிடமிருந்த நாயை அழைத்து வேதம் ஓதுவிக்க, அந்நாய் வேதமோதக் கேட்டு வேதியர்கள் அஞ்சி வணங்கினர். (பச - பு.)

**கல்வகை** — இது மண்ணின் வேறுபாடு ஆயினும், இவ்வகையில் பல மண் என்னுந் தலைப்பில் கூறினேன். இதில் சில கடவுளின் சிருட்டி விசேடத்தைத் தெரிவிக்கின்றன. இந்தியாவின் மேற்கரையிலுள்ள பாலகாட்டையடுத்த மான்ஹலூர் எனும் இடத்தில் ஒருவித கற்களுண்டாகின்றன. அவற்றை வஸ்திரத்திற் சுற்றி நெருப்பிலிடில் அவ்வஸ்திரம் தீப்பற்றுதல் இல்லையாம்.

**கல்ஹணர்** — ஒரு கணித சித்தாந்த பண்டிதர். சற்றேறக்குறைய 800 - வருஷங்களுக்கு முன்னிருந்தவர். இவரியற்றிய நூல் இராஜதரங்கணி.

**கவசமந்திரதேவதை** — வண்டினிறமாய் பத்மாசனராய், முக்கண், வரதம், அபயம், சத்தி, சூலம், சர்வாபரண பூஷிதராயிருப்பர்.

**கவசர்** — ஒரு இருடி. ஆசாரியர்க்குப் பதினான்குகோடி பொன்கொடுக்க வெண்ணி இரகுவிடம் பெற்று அளித்தவர்.

**கவசி** — திருதராட்டிரன் குமரன்.

**கவதக்னி** — சஞ்சயனுக்குத் தந்தை.

**கவந்தம்** — யுத்தகாலத்துத் தலையற்றவிடத்தும் முண்டம் தானே ஆடல். இதனை அட்டை ஆடல் என்பர். (நச்சர்.)

**கவந்தன்** — கபந்தனைக் காண்க.

**கவயன்** — ஒரு வானரசேநாபதி.

**கவயாக்ஷன்** — ஒரு வானரவீரன்.

**கவரைகள்** — இவர்கள் கௌரவவம்சத்தவரென்றும், கௌரியின் வம்சத்தவரென்றும் கூறிநிற்கும் தெலுங்கர். இவர்களிற் பலர் கலப்பு ஜாதியராக இருக்கின்றனர். கௌரவரைக் காண்க.

**கவலன்** — காதியைக் காண்க.

**கவலை** — கபலை காண்க.

**கவஷன்** — துருவுக்குத் தந்தை.

**கவாக்ஷன்** — சுக்கிரீவசேனபதி. வானரன்.

**கவி** — 1. சுக்கிரன்.

2. சுக்கிரனுக்குத் தந்தை.

3. இக்ஷ்வாகுவின் தம்பி. வைவச்சுதனுக்குக் கடைசி குமரன்.

4. ருக்ஷயன் குமரன். இவன் வம்சத்தவர் பிராமணராயினர்.

5. பிரிய விரதனுக்குப் பிருஹஷ்மதியிட முதித்த குமரன். இவன் ஊர்த்துவரேதஸ்.

6. இடபனுக்குச் சயந்தியிட முதித்த குமரன்.

7. ஒரு இருடி. இவன்தேவி முகுந்தை.

8. கௌசிகனைக் காண்க.

9. ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். இவற்றில் பொருள், அடி, பா, அணி முதலிய கொடுத்து மற்றொருவன் பாடும் என்றவுடன் பாடுவோன் ஆசுகவியாம். சொல்லினிமை, பொருளினிமை, தொடை, தொடை விகற்பம், செறிய உருவகம் முதலிய அலங்காரத்துடன் இன்னோசைத்தாய் அமுதமுறப் பாடுவோன் மதுரகவியாம. மாலைமாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம், எழுகூற்றிருக்கை, காதைக்கரப்பு, கரந்துரைப்பாட்டு, தூசங்கொளல், வாவனாற்று கூடசதுக்கம், கோமூத்திரி, ஒரெழுத்துப்பா, வல்லினப்பா, மெல்லினப்பா, இடையினப்பா, சித்திரக்கா, விசித்திரக்கா, வித்தாரக்கா, விகற்பநடை, வினாவுத்தரம், சருப்பதோ பத்திரம், எழுத்துவருத்தனை, நாகபந்தம், முரசபந்தம், நிரோட்டகம், சித்து, ஒரு பொருட்பாட்டு, பலபொருட்பாட்டு, மாத்திரைப் பெருக்கம், மாத்திரைச் சுருக்கம், எழுத்துப் பெருக்கம், எழுத்துச்சுருக்கம் இவை முதலிய தெரிந்து பாடுவோன் சித்திரக்கவியாம். மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மறம், கலிவெண்பா, தசாங்கம், மடல் ஊர்தல், கிரீடை, இயல், இசை, கூத்து, பாசண்டத்துறை இவை முதலிய விரித்துப் பாடுவோன் வித்தாரக்கவியாம்.

**கவி அரங்கேற்றிய பாட்டுடைத் தலைவன் செய்யும் வழிபாடு** — பலவகை அலங்காரங்களானும் எழுத்து, சொல், பொருள், யாப்பு முதலிய குற்றம் நீங்கப் பாடும் புலவனும், அவைக்களத் துள்ளாரும், அரசனும் வியக்கும்படி பாடும் புலவனும், இயலிசை நாடகம் எனும் முத்தமிழ் வல்லவனும், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் எனும் பாக்களைப் பாடுகின்றவனும், உயர் குடியிற் பிறந்து மேம்பட்டவனும், எல்லா வுறுப்புக்களும் குறைவின்றி நிறைந்து நல்லொழுக்கமுடையானும், முப்பது வயதிற்கு மேற்பட்டு எழுபது வயதுள்ளவனாகிய கவிஞனொருவன், தன்மேற் பாடுங் கவிதையை யாவருமறியக் கொள்ளுங்கால், அவைக்களத்தில் தோரணத்தைக் கட்டித் துவசத்தை நாட்டி மங்கலமுரசியம்ப அந்தணரொருபால் வாழ்த்தி இவ்வாறு மேன்மைமிக்க கோலத்தோடு விரித்த அழகிய ஆடையில் பல தானியங்களாலமைந்த முளைப்பாலிகையுடன் தீபமும், பூரணகலசமும் நிறைந்த மேற்கட்டியையுடைய பந்தலின்கீழ் உறவினர், நெருக்கானும்,பெண்கள்பாடும், பல்லாண்டானும் நிறைந்த தன்செல்வமுள்ள கோயிலின் நடுவில் தான் வெள்ளாடையுடுத்து வெண் பூச்சூடி, தன்னைப் பாடிய புலவனைத் தனதாசனத்திருத்தித் தானருகிருந்து மங்கலமமைந்த செய்யுளை மகிழுறக் கேட்டு பொன்னும் பணியும் பொருந்த அளித்து அவன்செல்ல அவன்பின் எழடியின் சென்று அவன்நிற்க வெனக் கூறத்தானிற்றல் கவிபெறுவோன் கடமையாம்.

**கவி ஆண்டான்** — ஒரு கவிஞன், இவன் ஓர் சத்திரத்தில் உண்டபோது கூறியது. "வாயெரியக் கையெரிய வயிறெரியச் சட்டிவைத்து வறுத்துக் கொட்டிக், காயெரியக் கடினமுட னரைவயிற்றிற் கன்னமிட்ட கடினக்காரி, தாயெரிய மகளெரியச் சேஷியெனு மொட்டை முண்டை தலைமேற்பற்றித், தீயெரியக் கண்டக்காலெனதுடைய வயிற்றெரிச்சற் றீருந் தானே."

**கவிக்களஞ்சியம்** — ஒரு தமிழ்க்கவி. இவர், புதுப்பாகை யூரினனாகிய கறுப்பன் புதல்வர். வேதாளக்கதையினை 864-விருத்தங்களில் பாடினவர்.

**கவிசாகரப்பெருந்தேவனார்** — கடைச்சங்கத்து வித்துவான்களில் ஒருவர். (திருவள்ளுவமாலை).

**கவிசாதன்** — நகுஷனுக்கு நண்பனாகிய முனிவன். பரீக்ஷித்துக் கார்க்கோடகனை விறக்கச் சாபமளித்தவன்.

**கவிப்பர்**-செட்டிகளில் ஒருசாதிப்பகுப்பார்.

**கவிப்பு** — ஒரு காரியங் கேட்க வந்தவன் உற்ற திசையையறிந்து அந்தந்தத் திக்கிற் கடைத்த ஆரூட இராசி முதலாக ஆதித்தன் சரிக்கிற வீதியளவு மெண்ணின் தொகையை உதயராசி முதலாகக் கழித்துக் கொண்டு உற்றராசி, கவிப்பாம். இப்படி உதயத்தாற் சென்றகாலமும், ஆரூடத்தால் நிகழ்காலமும், கவிப்பால் வருங்

காலமும் சொல்லப்படும். சொல்லுமிடத்து இம் மூன்று இராசியினும் கேந்திரதிரிகோணங்களினும் சுபக்கிரகங்கள் நிற்றல் நோக்கல் செய்யின் அந்த ராசி வகையால் காலங்கள் நன்றெனவும் தீக்கோணிற்கில் தீதெனவும் கூறுவர்.

**கவிப்பெருமாள்** — திருவள்ளுவர் திருக்குறளுக்கு உரையிட்ட ஆசிரியர்கள் பதின்மரில் ஒருவர்.

**கவிராஜகேசரி திருமேனிரத்தின கவிராயர்**— மாறனலங்காரத்திற்கு உரையாசிரியர். திருக்குறளுக்கு நுண்பொருண்மாலையியற்றியவர்.

**கவிராஜ பண்டாரம்** — இவர் செங்கோட்டையிலிருந்த புலவர். இவரைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை.

**கவிராஜபண்டிதர்** — இவர் விரையூரிலிருந்த ஒரு தமிழ்ப்புலவர். சங்கராசாரியர் அருளிச்செய்த சௌந்தயலகரி, ஆனந்தலகரி என்னுங் கிரந்தங்களைத் தமிழில் விருத்தச் செய்யுளாக மொழி பெயர்த்தவர்.

**கவுசிகம்** — ஒரு தீர்த்தம்.

**கவுண்டர்** — பள்ளிகளுக்கும், சில இடங்களில் வேளாளர்க்கும் பட்டப் பெயராய் இருக்கிறது.

**கவுதாரி** — இது பெட்டைக் கோழியைப் போல் உயரமும் கபிலநிறமும் உள்ள பறவை, வரிகளமைந்த கபில நிறமுள்ளது. இது காடுகளில் பூச்சு, புழுக்களைத் தின்னும். வயல்களில் உதிர்ந்த தான்யங்களைத் தின்று ஜீவிக்கும். இதனைக் கூண்டில் வளர்த்துச் சண்டைக்குப் பழக்குவார்கள்.

**கவுந்தி** — சைனதவமுதியோள் கண்ணகிக்கு வழித்துணை சென்றவள் (சிலப்பதிகாரம்)

**கவுரவதீர்த்தம்** — இந்திரப்பிரத்தத்து வழியிலிருக்கும் ஆறு.

**கவுரவியன்** — கத்ருவின் குமரன் நாகன்.

**கவுளயாமளமதம்** — நவநாதசித்தர்களாலாகிய சாத்திரப்படி சத்தியைப் பூசித்து உச்சாடனம், மோகனம், தம்பனம், மாரணம், ஆகருஷணம், வித்வேஷணம் முதலிய ஆறனையும் பெற்றுச் சத்தியைத் தியானித்துச் சத்திபதமடைவது. (தத்துவ)

**கவேரக்கன்னி** — காவிரி. (மணிமேகலை)

**கவேரன்** — ஓர் இருடி புத்திரனில்லாது பிரமனை யெண்ணித் தவஞ்செய்கையில் பிரமன் தரிசனந்தந்து ஒரு புத்திரியைத் தந்தனர். அவளே காவிரிநதி யுருவமானவள். (காவிரித்தலபுராணம்).

**கவேரவனம்**—கவேரன் தவஞ்செய்தவனம், இது காவிரிப்பூம்பட்டினத்திற் கருகிலுள்ளது. (மணிமேகலை).

**கவைமகன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் தாம் பாடிய நெய்தற் கவியில் "கவைமக னஞ்சுண்டாங்கு" எனப்பாடி யிருத்தலினிவர்க்கு இப்பெயர் வந்ததுபோலும். குறு-௩௨௪.

**கழறிற்றறிவார்நாயனர்**—இவரே சேரமானபெருமாணுயனர். இவர் சேரநாட்டில் மகோதை நகரத்தில் சேரராசாவின் புத்திரராயவதரித்துச் சிவபணிவிடையில் அன்புடையவராய்த் திருவஞ்சைக்களத்தில் திருத்தொண்டு செய்துகொண் டிருந்து தந்தை இறந்தபின் மந்திரிகள் வேண்டஎன் சிவத்தொண்டு வழுவாதிருக்குமாயின் இந்த அரசாளுந்தொழிலை எற்பேனென்று சிவசந்நிதானத்திற் சென்று முறையிட்டனர். சிவபெருமான் எவரும் எப்பொருளும் வசனிப்பதறியும் உணர்ச்சி உதவப்பெற்று முடிசூடி யானைமீது பவனிவருகையில் வண்ணான் ஒருவன் றன்றலையிற் ருங்கிய உழமண், மழையால் கரையத் தேகமெங்கும் வெண்ணிறமாய் விபூதி பூசுண்டவன்போற் காணப்பட்டனன். பவனிவரும் நாயனர் எதிர்சென்று பணிய, வண்ணான் அடியேன் வண்ணான் என்றனன். நாயனர் எனக்குச் சிவவேடத்தை நினைப்பூட்டினீர் என்று வணங்கி மீண்டும் அரசுசெலுத்தி வந்தனர். இவ்வகை யரசுசெலுத்திக்கொண்டு பூசாகாலத்தில் நடராஜமூர்த்தியின் சிலம்போசை கேட்டுப் பரமானந்தமடைந்து வருங்கால் சிவபெருமானல் விடுக்கப்பட்ட திருமுகப் பாசுரத்துடன் எழுந்தருளிய பாணபத்திரரை எதிர்கொண்டு பூசித்து அவர்க்குவேண்டிய அளித்து அனுப்பினர். ஒருநாள் நாயனர் சிவபூசை செய்கையில் நாடோறுங் காதிற்படுஞ் சிலம்போசை தாழ்ந்தது. நாயனர் தமதுவாளை நாட்டி அதன்மேல் பாய எண்ணுகையில் பரமசிவஞ் சிலம்போசையருளி நாயனரை நோக்கி வன்றொண்டன் பதிகமோதியதைக் கேட்டு விருப்புற்றிருந்தனன் என்றனர். நாயனர் சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சிதம்பரஞ்சென்று தரிசித்துப் பொன்வண்ணத் தந்தாதி

பாடித் துதித்துத் திருவாரூர் சென்று சிவமூர்த்தியைத் திருவாரூர் மும்மணிக்கோவை பாடித் துதித்துச் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் ஒரு பரிகலத் துண்டு அவருடன் பல தலங்களுக்குஞ் சென்று சேவித்துச் சுவாமிகளை அழைத்துக்கொண்டு திருவஞ்சைக்கள மெழுந்தருளிச் சிவதரிசனத்திற்கு அழைத்துச் சென்று தரிசனஞ் செய்வித்துச் சுவாமிகளுக்கு விருந்துசெய்வித்து வைத்திருந்தனர். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவாரூர்ப் புற்றிடங் கொண்டாரிடம் நினைவுண்டாகிப் பிரிய அவர்க்கு வேண்டிய பொன் முதலிய அளித்து வழிவிட்டுத் திரும்பினர். இவ்வகை நீங்கிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாரூரிற் சிவபெருமானைத் தரிசித்திருக்க ஒருநாள் திருவஞ்சைக்களம் சேவிக்க எண்ணமுதித்து அவ்விடம் எழுந்தருளிச் சுவாமிகளைத் தரிசித்துச் சிவபெருமான் கட்டளையால் திருக்கைலைக்குச் சிவகணங்கள் எதிர்கொள்ளச் சேரமானிடம் நினைவுடன் சென்றனர். சுவாமிகள் நீங்குதலைத் திருமஞ்சனங் கொண்டிருந்த சேரமான் பெருமாணயனர் யோகத்தாலறிந்து உடனே குதிரை மீதேறிக்கொண்டு அதன் காதில் பஞ்சாக்ஷர முபதேசித்து ஆகாயவழியிற் சென்று ஸ்ரீநந்திதேவராற் றடைபட்டு நின்று திருஆதியுலா ஓதிச் சிவானுக்கிரகத்தால் கணநாதராய் வீற்றிருந்தவர். இவர் அருளிச்செய்த திருவுலாச் சாத்தாவால் பூமியில் வெளிவந்தது. இவரைச் செங்கோற் பொறையன் புத்திரர் எனவும் சங்கரநாதசேரன் புத்திரன் எனவுங் கூறுவர்.

**கழற்சிங்கநாயனர்**—இவர், பல்லவகுலத்தில் திருவவதரித்துச் சிவனருளால் அரசாட்சி செய்துகொண்டு பல தலங்களையும் தரிசித்துக்கொண்டு வருகையில் திருவாரூரிற் புற்றிடங் கொண்டார் சந்நிதியில் தாமும் மனைவியாரும் தரிசித்துப் பிரதக்ஷிணஞ் செய்கையில் மனைவியார் பூமண்டபத்தின கீழ் விழுந்த ஒரு மலரை யெடுத்து மோக்கக்கண்ட சத்திநாயனர் தமது சுரிகையால் அரசபத்தினியின் மூக்கை யரிந்தனர். இதனைக்கண்ட கழற்சிங்க நாயனர் இப்படிப்பட்ட தீமைசெய்தாளுக்கு அது போதாது என்று பூஎடுத்த கையினையும் துணித்து நெடுங்காலத்திற்குப் பின் சிவபதமடைந்தவர். (பெ புராணம்.)

**கழனிலை** — கொல்லு மாறுபாட்டைப் பெருகும் வீரர்படும்பூசலிற்கடிய மூரணையுடைய வீரன் கழலைப்புனைந்தது. (பு. வெ. பொதுவியல்.)

**கழாத்தலையார்**—இவர் சேரமான் குடக்கோ நெடுஞ் சேரலாதனும் சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளியும் பொருது வீழ்ந்ததுகண்டு மனம் வருந்திப் பாடினர். இருங்கோ வேளின் முன்னோரில் ஒருவன் இவரை இகழ்ந்ததால் அவனது அரையம் என்னும் நகரம் பாழ்பட்டது. இவரால் பாடப்பட்டோன் சேரமான் பெருஞ்சேரலாதன் ஒரு தமிழ்ப்புலவன். (புற-நா).

**கழாரம்பர்**—அகத்தியர்மாணுக்கருள் ஒருவர்.

**கழார்க் கீரனெயிற்றியார்** — இவர் எயிற்றியென்னும் இயற்பெயருடையார். கீரன் என்பவரின் மனைவியார். பெண்பால் புலமையார். சோழனாட்டு மாயூரத்தின் கீழ்பாலுள்ள கழார் என்னு மூரினர். "வெல்போர்ச் சோழர்கழாஅர்க்கொள்ளும், (நற்-உஅக.) வேட்டுவமரபினர். இவர்கணவன் கீரனுரென்பவர் சோழற்குப் படைத்துணையாகச்சென்று போர்முகத்து வெற்றிதரும் தன்மையார். "காய்சின வேந்தன் பாசறை நீடி நங்நோயறியா வறனிலாளர். (அகம்-உகூச) ஆயினும் பிரிந்தால் காமநோயால் காதலி வருந்துவளென்பதுபற்றி பெரும்பாலும் காதலியைவிட்டுப் பிரிபவரல்லர். "கோடைத்திங்களும் பனிப்போள்" (நற்-௩௧௨) இங்ஙனம் பூவும் மணமும்போல பிரியாதுறையுநாளில்ஒருகால் போருக்குச் செல்லவேண்டினமையால் கீரனர் போர் பெரிதாயிற்றே வாடைக்காலத்தும் வருதற்கியலாவாறு அங்கு வைகவேண்டியதாகுமேயென்று பலவாறு கவன்ருர். அவர் வருந்துவது கண்ட எயிற்றியார் யான் பொறுத்திருக்கிறேன் நீவிர்குறித்த பருவத்து வருவீராகவென்று காதலனைத் தேற்றி விடுத்து அவர் வருந்தியதைத் தொகுத்து வினைவயிற் செலுந்தலைமகன் நெஞ்சைநோக்கி வருந்தியதாகப் பாடி வைத்தனர். (நற்-௩௧௨) பின்னர் பெரும் போர் நடந்ததனுல் குறித்த பருவத்து வாராமல் கீரனர் பாசறையில் நின்றுவிடலும் எயிற்றியார், மழை பெய்கின்ற நடுயாமத்தின் குளிரின் கடுமைதாங்க வியலாது கண்ணுறக்கங் கொள்ளாது நம்மைக் கருதாத காதலர் அன்பிலரெனத்

தோழியை நோக்கி வருந்துவாராயினர். (நற் - உஅக) வருந்தும்போது கண்ணீர் வடிய அதனை "காதலர்ப் பிரிந்தகையறு மகளிர் நீர்வார் கண்ணின் கருவிளைமலர" எனத் தாமே குறிப்பித்துள்ளார். (அகம் - உகூச) அங்ஙனம் கண்ணீர் வடிதலும் எம்மை வாடைக்காலத்துப் பிரிந்தவரைக் கருதி அழுதலால் எமது கண்கள் வெட்கமுடையன அல்லனவென்று வெறுத்துக் கூறியும் (குறு - நடு) என்னெஞ்சு அவரைக்கருதிப் புண்பட்டதனால் அது வருந்த வேண்டுவதாயிருப்ப யாதொரு தொடர்புமிலாத என் கணவன் உறங்கிலனென்றும் (குறு-உகூக) மழை முதலாயின அவர் நாட்டிலில்லையோ இருந்தால் வந்திருப்பரேயென்றும் (குறு-நடு0) வாடையை நோக்கி நீயெனக்கே வந்தனையோ. இவ்வண்ணமே என் காதலரிருக்குமிடத்திற் சென்றால் அவர் என்னை நினைத்தாகிலுமிருப்பரென்றும் (அகம் - கசுந) துணையுடையோரை நோக்கி வாடைவந்துவிட்டதனால் "எப்பொருள் பெறினும் பிரியன்மினோவெனச்செப்புவாளியர்." துணையிலேனாதலின் கூறுவாருமில்லை. பல்லிலே தீப்பிறக்க அடியுண்டு வருந்துவேனோவென்றும்(அகம்-உகஎ)நெற்றியில் பசலைகொண்டு யான்வருந்த இவள் நம்மால் அளிக்கத்தக்காளென்று கருதாதவர் இனி நினைக்கவே மாட்டாரோ? நினைத்தும் பெரிய வினையிடைப் பட்டமையின் மறந்துளாரோ? (அகம்-உநடு) தோழீ என் தனிமையில் இவ்வாடை வீசலானே இனிப்பொறேன் என்று பலவாறு புலம்பிவைகினார். (அகம்-உகூச) இவ்வாறு வருந்திவைகிய நாளில் போர்முனையிற் சென்ற கீரனார் மீண்டுவந்தனர். அவர் வருகிறாரென்பதை முன்னமே ஏவலிளையாலறிந்த எயிற்றியார் பெருமகிழ் வெய்திக் காதலர் வரும்போது தேர்ப்பாகற்குக் கூறுவதாக அவருள்ளக் கிடையையும் தம்முடைய நிலையையும் சேரத்தொகுத்துப் பாடினார். (அகம்-உநச) பின்னர்வந்த காதலனோடு மகிழ்ந்துறைவராயினார். இவர் பாடல்களைப் பிற்காலத்துச் சான்றோர் துறைப்பாற்படுத்தித் தொகைநூலிற் கோத்தாரென்றும் கொள்க. இவர் [illegible]யனவாக நற்றிணையில் இரண்டு (உஅக, நகஉ)பாடல்களும் குறுந்தொகையில் மூன்றும் அகத்தில் ஐந்துமாகப் பத்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (நற்றிணை.)

**கழுதுகள்** — 1. இவை உலகமெங்குமுள்ள பறவைகள். இவ்வினத்தில் வெள்ளை நிறக் கழுகு, சாம்பல் நிறக் கழுகு என இரு வகையுண்டு. வெண்ணிறக் கழுகுகளின் மூக்கு மஞ்சள்நிறம். இவ்வினத்தில் வேறு சில தலையிலும் கழுத்திலும் மயிரில்லாதவை. அவற்றைக்கூளிகள் என்பர். அவை மலைகளில் வசிக்கின்றன. இவை எல்லாப் பிராணிகளையும் பிணங்களையுந் தின்னும். இவை உறுதியான கண்களுள்ளவை. தூரத்திலுள்ள பொருள்களையும் பார்க்கத் தக்கவை, இவை ஆகாயத்தில் உயரப்பறந்து பூமியில் இரையிருக்கும் இடமறிந்து இறங்கும். இது பக்ஷிகளை யடக்கியாளும் வன்மையுள்ளது. இது நீண்ட சிறகையும் சிறிய தலையையும் வலிய கால்களையும் வளைந்த அலகினையுமுடையது. இதுவெகு கூர்மையாகப் பார்க்கும் கண்களை யுடையது. இது சூரியனை நன்றாய்ப் பார்க்கும். இது தனித்தும் பெடையுடனும் வாழும். இது சிறு கோழி, ஆட்டுக்குட்டி முதலியவற்றைத் தூக்கிச் செல்லும்.

**மலைக்கழுது** — இது கழுகினத்தினும் பருந்தினத்தினும் சேர்ந்தது. இது, மலைகளில் வசிக்கிறது. இவ்வினம் 2-அடிமுதல் 3½-அடிகள் உயரம் உண்டு. இதற்குக் கழுத்தில் மயிரில்லை. கழுத்தினடிப்பாகத்தில் மயிர்க் கொத்துக் கொத்தாயிருக்கிறது. இது, குளிரின் பொருட்டு மயிரில்லாத கழுத்தை இரக்கையில் சுருட்டிக் கொள்ளுகிறது. இதன் மூக்கும் நகமும் உறுதியான தோலுள்ள பிராணிகளின் சருமத்தையும் பிளக்கவல்லவை. இவ்வினத்தில் பெரிய உருவுள்ளவை ஐரோப்பா மலைகளிலுண்டு. அவை குழந்தைகளையும் தூக்கிச் செல்லும் என்பர். இவ்வினத்தில் தென் அமெரிகாவின் ஆண்டிஸ் மலைப்பிரதேசத்திலுள்ளவை உலகத்திலுள்ள எல்லாக் கழுகுகளிலும் பெரியவை. இதற்குத் தலையில் கொண்டையும், கழுத்தில் தாடியுமுண்டு. இவை தனித்து வசிப்பவை.

**பாம்புண்ணிக்கழுது** — இது, ஆபிரிகா கண்டத்தின் மேற்கரைவாசி, இதற்கு, உடல், தலை, கழுத்து கழுகை ஒத்திருக்கின்றன. கால்கள் நீண்டவை. இப்பறவை பூச்சி புழுக்களைத் தின்பதினும் பாம்புகளைப் பிடித்துத் தின்பதில் அதிக விருப்ப

முள்ளது. இது பாம்புகளைப் பிடிக்கையில் இதன் சிறகை விரித்துக்காட்டும். அச்சிறகை பாம்பு கவ்வுகையிலிது அதன் கழுத்தைப் பிடித்துக் கொன்று தின்னும். இதன்தலையில் நீண்டசுருண்டகொண்டை உண்டு. இக்கழுகுரு ஈஜிப்ட், ரோம், ஆஸ்திரியா, ஜர்மனி, ரஷ்யா, யுனெடட் ஸ்டேட்ஸ், மெக்விகோ நாட்டுக் கொடிகளில் அடையாளமாக இருக்கிறது. இவ்வினத்தில் பதினுன்கு வகைக்கு மேலுண்டு, இவற்றில் வெள்ளை வால்களையுடைய கடற்கழுகு, ஆசியக்கழுகு, பொன்னிறச் சிறகுள்ள கழுகு, இறகுகளில் புள்ளிகளைப் பெற்ற கழுகுகள் உண்டு. இவ்வுருவங்களை அரசர் தங்களுக்கு அடையாளங்களாகப் பெற்றிருக்கின்றனர்.

**கழுகுநாட்டுக் கம்மாளர்** — ஒருவகை நாட்டுக் கம்மாளர்.

**கழுதை** — இது குதிரையினத்தைச் சேர்ந்த சாகபக்ஷணி. இது நான்கு அடிகள் உயரமும் ஐந்தடிநீளமும் உள்ளசெந்து. சாம்பல் நிறமும், நீண்ட காதும், குறுகிய பிடரிமயிருங் கொண்டது. பார்வைக்கு விகாரமாயிருப்பினும் சுத்தமான மிருகம், இதற்கு உதைக்குந்தன்மை யுண்டு. பெருங்குரலுடன் கத்தும். இது குனிந்து கவனித்து நடப்பதால் சுமந்து செல்கையில் கால்களிடறும். இது, இந்தியாவில் வண்ணனுக்கும் குறவர் முதலியவர்க்கும் உபயோகமாகிறது. ஐரோப்பா கண்ட முதலிய சில இடங்களில் வண்டியில் பூட்டி உபயோகிக்கிறார்கள்.

**கழுதைப் புலி** — இது உருவத்திலும் நிறத்திலும் கழுதையைப் போலவும், புலியைப்போல் உடலில் கரிய கோடுகளையும் பெற்றிருப்பதால் இதற்கு இப்பெயரிடப் பட்டது. இதற்கு முன்காலினும் பின் கால்கள் குறுகியவை. இது கூனன் நடப்பது போல் நடக்கும். நேரே நடவாமல் சுழன்று சுழன்று நடந்துபோம். இது நேரேயோடி இரைதேட முடியாததலால் இது சிங்க முதலிய பெரிய மிருகங்களுக்குப் பின்சென்று அவை தின்று மிகுந்தவற்றைத் தின்று திருப்தியடையும். இதற்குப் பற்கள் உறுதியாதலால் எலும்புகளையும் நொறுக்கித் தின்னும். இது கூச்சலிடுவது மனிதர் பெருஞ்சிரிப்புச் செய்வதுபோல் தோன்றும். இதனல் மயங்கி மனிதர் அவ்விடஞ்சென்றால் இதற்கிரையாவர்.

**கழுமரம்** — முள்போல் கூரிதாய் இரும்பினாலும், மரத்தினாலும் செய்யப்பட்டுப் பூமியில் பதித்த மரம். இதில் குற்றஞ் செய்தார் ஆசனவழியாய்க் குத்தப்படுவர்.

**கழுமலம்** — சீர்காழி.

**கழுவர்படை வீடு** — பாண்டி நாட்டிலுள்ள ஓர் ஊர். இது சமணர்கள் ஏறிய (அ000) சமுமரங்களின் வரிசை முடிந்த கீழைக் கோடியாகிய இடத்திலுள்ளது; திருப்பூவணத்தின் பக்கத்தது ; இக்காலத்துக் கழுவேறுமடை, கழுவேறு கடையென வழங்கும் ; கழுக்களின் வரிசை முடிந்தமேலைக்கோடியில் மேலைக்காலென ஒருருள்ளது. (திருவிளை.)

**கழைக்கூத்தாடி**—தொம்பரவனைக் காண்க.

**கழைக்கூத்தி** — கூத்தாடினவளைக் காண்க.

**கழைத்தின்யானையார்** — வல்வில் ஓரியைப் பாடிய தமிழ்ப் புலவர். (புற-நா.)

**களங்காய்க் கண்ணிநார் முடிச் சேரல்** — இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு வேளாவிக்கோமானுன, பதுமன் குமரியிடம் பிறந்த குமரன். இவன் முடிசூடுஞ் சமயத்தில் முடியையும் கண்ணியையும் பகைவர் கவர்ந்ததால் அவற்றிற்குப் பதிலாகக் களங்காயால் கண்ணியும் நாரால் முடியுஞ் சமைத்துப் புனைந்தனர். ஆதலால் இவனுக்கு இப்பெயர் வந்தது. இவனுக்குப் பகைவன் கடம்பின் பெருவாயிற்குரிய நன்னன். இவனை மேற்றிசையிலுள்ள வாகைப் பெருந்துறையில் வென்று இவனது வாகையினை வெட்டித் தானிழந்த நாட்டை இவன் மீண்டு மடைந்தான் என்பர் கல்லாடனர். இவனைக் காப்பியாற்றுக் காப்பியனர் பாடி அவனுட்டிற் பாகம் பெற்றார். இவன் (உரு) ஆண்டு அரசாண்டான்.

**களத்தூர்க்கிழார்**—கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவர் வேளாளரா யிருக்கலாம் (திருவள்ளுவ மாலை.)

**களப்பாளன்** — 1. இவர் ஆமூரில் ஆமூர் முதலி எனப் பெயர்பெற்று வாழ்ந்தவர். இவர் காலத்திலவரைக் காளமேகப்புலவர் "உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்றவொருகோடி, வெள்ளங் காலந்திரிந் துவிட்டோமே—உள்ளபடி, ஆமூர் முதலியமரர்கோ னிங்கிருக்கப், போமூறறியாமற் போய்" என்னும் பாதிவெண்பாப் பாடி முடிப்பதன் முன் பரிசளித்தவர்.

2. நெற்குன்றூர் வேளாண் குலத்துதித்தவர். இவர் செல்வத்தானும் கல்வியானும் மேம்பட்டவர் திருப்புகலூர் அந்தாதி பாடியவர். இவருக்கு நெற்குன்றைவாணர் எனவும் பெயர்.

**களரியாவிரை** — முதற்சங்க மருவிய நூல். இது இன்னபொருளமைந்ததென்று தோன்றவில்லை, நூலிறந்தது.

**களவழிநாற்பது** — பொய்கையார் இயற்றியது. போர்செய்து தோல்வியடைந்த கணைக்கா லிரும்பொறையைப் பற்றிப் போய்ச் சோழன் செங்கணுன் சிறையிலிட்டபோது பொய்கையார் களம்பாடி வீடுகொண்டார். இந்நூலின் பொருள், மேற்படி போர்க்கள வர்ணனை அங்கங்கே காட்டியிருக்கும் உவமைகள் நிரம்ப அழகானவை.

**களவழிவாழ்த்து** — சிவந்த போர்க்களரியிடத்து வளவிய செல்வத்தை ஆடற் பாட்டினைவல்ல யாழ்ப்பாணர் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)

**களவிற்பிரிவு** — ஒருவழித்தணத்தல், வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிவென இருவகைத்து. ஒருவழித் தணத்தற்குப் பருவமின்று. பின்னதற் கிரண்டுமாதம். முன்னது ஒரூரினும் நாட்டினும் பிரிவு. பின்னது காட்டிடை யிட்டும் நாட்டிடை யிட்டும் பிரிதல். (அகம்.)

**களவு** — இது, பிறர்க்குரித் தென்று இருமுதுகுரவராற் கொடை யெதிர்ந்த தலைவியை அவர் கொடுப்பக் கொள்ளாது இருவருங் கரந்தவுள்ளதோடெதிர்ப்பட்டுப் புணர்வது. இது, பிறர்க்குரிய பொருளை மறையிற் கொள்ளும் களவன்று. இது, வேதத்தை மறையென்பது போல்வது.

**களவு கைக்கோளைத்துக்கூற்றிற் குரியார்**- தலைவன், தலைவி, பார்ப்பான், பாகன், பாங்கி, செவிலி, அறுவருமாம்.

**களவேனுங்கைகோளின்புணர்ச்சிவகை** — இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என நான்கு.

**களவேள்வி** — 1. கொல்லும் வலியினையுடைய பேய், வயிரூர உண்ணப் பரந்த வலியினை யுடையான் களவேள்வி வேட்டது. (பு-வெ.)

2. உழவன் உழவு செய்தலில் செடிகளைக் கல்லுவதாலும், நிலத்தைப் பிளப்பதாலும், எறும்புகள், புழுக்களைக் கொல்லுதல் முதலிய கொலைகளாலும் வரும் பாபங்களைக் களத்தில் நெல்லைத் தூற்றிச் சுத்தஞ் செய்தபின் அவ்விடத்தில் வரும் ஏழைகளுக்கு நெல்லிற் சிறிது தானஞ்செய்து போக்குவது. (பாரா-மி.)

**களாசுரன்** — பிரமனிடம் மிக்க வரம்பெற்றுத் தேவரை வருத்திச் சிவபெருமானுற் கொலையுண்ட வசுரன்.

**களாவதி** — 1. பரு என்னும் இருடிக்குப் புஞ்சிகத்தலை என்னும் அப்சரப் பெண்ணிடத்துப் பிறந்தவள். பார்வதிதேவியாரிடம் பத்மினி மந்திரம் பெற்று ஸ்வரோசியை மணந்தவள்.

2. திரமிளன் தேவி, இவளுக்குப் புத்ரசந்தான மில்லாமையால் கணவன் சொற்படி காசிபர் தவஞ்செய்யும் வனஞ்சென்று புத்திரன்வேண்ட அவர் மறுத்தது கண்டு இவள் மனஞ்சோர்ந்து நிற்கையில் அவ்வழிசென்ற மேனகையைக் கண்டு இருடிக்கு வீர்யகலிதம் உண்டாயிற்று. அதனைக் களாவதிகண்டு புசிக்கக் கருப்பமடைந்து புருஷனையடைந்து நடந்தவை கூறியுபபர்க்கணனைப் பெற்முள். (பிரம்மகைவர்த்தம்.)

**களிங்கன்** — அசுரன், பலியின் மனைவியிடம் தீர்க்கதபசு முனிவரா லுதித்த குமரன். இவன் பெயரால் கலிங்கதேச முண்டாயிற்று.

**களிம்பு**—தாமிரம், பித்தளை முதலிய பாத்திரங்களில் புளிப்புள்ள பொருள்களால் நீலங்கலந்த பசுமையாக உண்டாம் பொருள்; விஷமுள்ளது.

**களிற்றுடனிலை** — ஒளியையுடைய வேல் படுதலான் வீழ்ந்த யானையின் கீழ்ப்பட்டது. (பு-வெ.)

**களை** — கர்த்தமப்பிரசாபதியின்பெண், மரீசிருஷியின்தேவி. கச்யபமுனிவனுக்குதாய்.

**கள்** — 1. உலக சிருட்டியில் எல்லாரும் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வில்லாமல் இருந்தனர். பிரமன் யாகாதி காரியங்கள் நடக்கும் பொருட்டுக் கள்ளைப் பானஞ் செய்யக் கூறினர். அதனையுண்டார் பலர் மயங்கிப் பாவத்திற்குள்ளாய்ப் பாவிகளாயினர்.

2. ஆருகன், பலராமர், கிருஷ்ணன் இவர்கள் தங்கள் குலமாகிய விருஷ்ணி குலத்தினரும், அந்தக குலத்தினரும் இனி கள்ளைக் குடிக்கக் கூடாதெனக் கட்டளையிட்டார்கள். (பாரா-அச்.)

3. இது தென்னை முதலிய மரத்தின் பாளைகளிலிருந்தும், வேர் கிளைகளிலிருந்தும் ஒழுகும் நீர். தென்னங்கள், பனங்கள், ஈச்சங்கள், அத்திக்கள், வேப்பங்கள் முதலிய.

**கள்ளம்பாளனர்** — இவரைக் கண்ணம்பாளனர் எனவுங் கூறுவர். அகத்தில் கருவூர் கண்ணம்பாளனரென் றிருத்தலால் இவர் ஊர் கருவூர் போலும். (அகம்-கஅ0) இவர் சேரமான்கோக் கோதையையும், அவனது வஞ்சியையும் புகழ்ந்திருக்கிருர். (அகம்-உகரு) இவர் பாடியன நற்றிணையில் கசஅ - வது பாடல் ஒன்றும் அகத்தில் ரு - ம் ஆக, ‧சு - பாடல்களிருக்கின்றன.

**கள்ளர்**—1. ஒருவகைச் சாதியார். இவர்களுக்கு இப்பெயர் தொழிலால் வந்ததாம். இவர்கள் தலைவன் அம்பலக்காரன். இவன் சொற்படியே மற்றவர் நடக்கவேண்டியது. இவர்கள் மேலூர், வெள்ளாலூர், சேற்றுக்குடி, கீழ்நாடு முதலிய இடத்திலுள்ளவர்கள். (தர்ஸ்டன்.)

2. சாணர்களில் ஒருவகையார். (தர்ஸ்.)

**கள்ளால் கேட்டவர்கள்** — சுக்ரன், சுக்ரீவன், யாதவர்கள்.

**கள்ளிகள்**—இவை பாலுள்ள தாவர வகைகள். இவை பலவகை ஔஷதங்களுக்குபயோகமானவை. இவற்றிற் சில காழ்கொள்வனவு முண்டு. இச்சாதியில் திருகுகள்ளி, சதுரக்கள்ளி, கொடிக்கள்ளி, இலைக்கள்ளி, மான்செவிக்கள்ளி, எருக்கு, கற்ருழை, சப்பாத்து, பிரண்டை முதலிய இவ்வினத்தைச் சேர்ந்தவை.

**கள்ளிக்குடிப்பூதம் புல்லனர்** — இவரது இயற்பெயர் புல்லனர். பூதன் குடிப்பெயரா யிருக்கலாம். ஊர் கள்ளிக்குடி இவர் பாலைத்திணையையே பாடியுள்ளார். இவர்பாடினவை நற்றிணையில் ருருரு-ஆம் பாடலும், குறுந்தொகையில் ஒன்றுமாம்.

**கள்ளிலாத்திரையனர்**—ஆதனுங்கனைப் பாடிய தமிழ்ப்புலவர். (புற-நா.) (குறு-தொ.)

**கள்ளுக்குருவி** — (கல்லுக்குருவி) இந்தக் குருவிக்குக் கால்கள் நீளம், சாம்பல் வர்ணம். இது தரையிலும். மணலிலும் முட்டையிடும்.

**கள்ளூறுங்கிணறு**—இந்தியாவின் மத்யமாகாணத்தில் காண்ட்வா நகரத்திலுள்ள ஒரு பள்ளிவாசலிலுள்ள கிணற்றில் பால்போல் வெண்மையான ஒருவித நீர் சுரக்கின்றது. அதை உண்டால் கள்போல் மயக்கத்தைத் தருகிறதென்கின்றனர்.

**கறிமா**—இது சமயலுக்குதவும் கறிவகைகள் மணம்பெறச் செய்யும் சம்பாரத்தூள். இது வறுத்த பச்சரிசிமா, மிளகுத்தூள், கறிவேப்பிலைப்பொடி, மஞ்சள்தூள், சீரகம், வெந்தயம், கடலைமா, முதலிய சேர்த்துச் செய்யும் தூள்.

**கறிவகை**—பொரிக்கறி குழைக்கறி, பொரியல், வால் புளிக்கறி, தித்திப்புக்கறி, நெய்க்கறி, தயிர்க்கறி, எலிமிச்சம் பழரசக்கறி, தேங்காய்க்கறி, எண்ணெய்க்காய்க்கறி, பருப்புக்கறி, பஜ்ஜி, சட்னி, தொகையல், பச்சடி முதலிய.

**கறுப்பண்ணன்** — இவன் மலையாளத்திருந்து அழகர்மலையில் எழுந்தருளிய பெருமாளின் திருவாபரணங்களைத் திருடவந்த பதினெட்டுக் கள்ளரிற் பெரியவன். இந்தக் கள்ளரைப் பெருமாள் தனித்தனி ஒவ்வொரு படிக்குப் பலியிட்டுக் கடைசியவனுகிய கறுப்பன் என்பவனைக் கொல்லாது சந்நிதியைக் காக்கக் கட்டளையிட்டார். அதனுல் இவனைப் பதினெட்டாம் படிக் கறுப்பன் என்பர்.

**கறுப்பழகி** — காத்தவராயன் தேவியரிலொருத்தி.

**கறுப்பன்**---இவன் தொண்டைநாட்டு மாவைநகர் வேளாளப்பிரபு. இவன் தந்தை கஸ்தூரி. இவனே தொண்டைமண்டல சதகம் பாடுவித்தவன். இவனைச் சொக்கநாதப் புலவர், "சீர்கறுத்த முகிற்கரத்தான் கஸ்தூரிபூபனருள் சேயாவென்றும், ஓர்கறுப்பு மில்லாத தொண்டைவள நாட்டிருக்கு முசிதவேளே, யார்கறுப்ப னென்றுசொல்லியழைத்தாலு நாமுன்னை யன்பினுலே, பேர்கறுப்ப னிறஞ்சிவப்பன் கீர்த்தியிஞல் வெளுப்பனெனப் பேசுவோமே." "பிள்ளைவயதினிற் கல்விகற்ருேம்பின்பு, பெரியநா வாகனமும் பெற்ருேம் பூமி, உள்ளளவுங் கீர்த்திநிலை நிறுத்திக்கொண்டோம், ஒரு குறையு மில்லையினி யுரைப்பக்கேண்மோ, தெள்ளிவகுசிதம்பரத்தைத் தரிசித்தோம்பின், சேற்கருங்கட்டளவநகைத் தெய்வயானை, வள்ளிபுணர் சிவப்பனையுந் துதித்தோமெங்கள், மாவைவளர்கறுப்பவனை வாழ்த்தினுேமே." "எல்லப்ப னம்மையப்பன்றரு திருவேங்கடராம னெழிற்சீராமன், வல்லக்கொண்டமனுடனே மாதை வேங்கடேசனைப்

போல் வரிசைதந்தான், செல்லத் தம்பிய ருடனே மாவையில்வாழ் கறுப்பண்ணன் றெருவீதிக்கே, பல்லக்குத் தான்சுமந் தானது நமக்கோராயிரம் பொன் பரிசு தானே" எனப் புகழ்ந்து பாடியிருக்கின் றனர்.

**கறைக்கண்டன்** — பாற்கடற் கடைகையில் எழுந்த விஷமுண்டு அந்த விஷம் கண் டத்திற் செல்கையிற் அதனை நோக்கிய பிராட்டியின் அருட்கணோக்கால் கண்ட மட்டில் நிற்க அழகு பெற்றிருக்கும் சிவ மூர்த்திக்குப் பெயர்.

**கறைமிடற்றண்ணல்** — கறைக் கண்டனைக் காண்க, சிவன்.

**கறையான்** — இதைச் செல் என்பர். இது வெள்ளையெறும்பை யொத்தது. இதில் வளர்ந்த பெருஞ்சாதி செல் இரக்கையுண் டானால் ஈசல் என்பர். இது தான் பற்றிய பொருள்களை அரித்துவிடும்.

**கற்கடி** — 1. ஒரு அரக்கி, இவள்பிரமனை யெண்ணித் தவமியற்றப் பிரமன் பிரத்தி யக்ஷமாகி உனக்கு வேண்டிய வரம்கேள் என்னக் கற்கடி பிரமனை நோக்கி எனது உதராக்கினி தணியும்படி ஆன்மாக்களின் உயிரைப் புசிக்கும்படி வரம் அருள்க என் றனள். அந்தப்படியே பிரமன் நீ உலக த்தில் தெய்வசிந்தையிலாது அகிருத்தி யஞ் செய்வோரைப் புசிக்க விடேசியாக என்று வரம் அளித்தனன். வரமடைந்த கற்கடி அவ்விடம் அரசு செய்துகொண்டி ருந்த வேடராஜனையணுகி அவனைச் சில வினக்கள் வினவி அந்த வினக்களுக்கு அவன் நேர்விடை தந்ததனல் அவனை நட்புக்கொண்டு அவன் கட்டளைப்படி தீமைபுரிபவரை அங்குப் பலிகொண்டு இமகிரியிலிருப்பவள். இவளுக்கு விடேசி யெனவும் பெயர். (ஞானவாசிட்டம்).

2. காமரூப தேசத்திருந்த கற்கடன் புதல்வி, தாய், புஷ்கவி. இவள் முதலில் விராதனுக்குத் தேவி. விராதன் இராமரா லிறக்கப் பின் கும்பகர்ணனை மணந்து பீம னென்பவனைப் பெற்றவள். (சிவமகா-பு.)

**கற்கான்** — கத்ரு குமரன் நாகன்.

**கற்களிகை** — கோமுகனுக்குப் பாரி.

**கற்கள்** — கருங்கல், சுக்கான் பாறை, கரும் பாறை, சுண்ணும்புப் பாறை, துறுகல், சந் தனப்பாறை, வெள்ளைக்கல், செங்கல், பச் சைநிறக்கல், பலவகை கொடியோடிய கல், கூழாங்கல் முதலிய.

**கற்கன்** — ஒரு முனிவன். இரைவதமுனி யைக் காண்க.

**கற்காசாரி** — யாதவ புரோகிதன். இவன் கிருஷ்ணமூர்த்திக்கு நாமகரணுதி சடங் குகள் செய்தவன். இவனை இவன் மைத் துனனும் யாதவரும் நபுஞ்சகனென்று பரி கசித்ததினல் இவன் கோபித்து உங்கள் குலத்தை நாசஞ்செய்ய ஒரு புத்திரனைப் பெறுகிறேனென்று சிவமூர்த்தியை யெ ண்ணித் தவம்புரிந்து அவரது அனுக்கிர கம்பெற்று மீளுகையில் யவனதேசத்தர சன் அக்கருவைத் தன் பத்தினிவயிற்றுப் பதிக்கும்படி வேண்டினன். கற்காசாரி யன் அந்தக் கருவை அந்தப்படி பதிக்கக் காலயவனன் பிறந்தனன்.

**கற்காண்டல்** — அமையாத வெற்றியை யுடைய பூசலிற் பட்டோற்குக் காட்டில் நீண்டவிடத்துக் கல்லைக்கண்டது. (பு. வெ. பொதுவி.)

**கற்காநாடு** — கொச்சிக்குக் கிழக்கிலுள்ளமலை நாடு பழனிமுதலிய நாடு.

**கற்கி** — கலிக்காவதாரியைக் காண்க.

**கற்கோணிலை** — பூமிமயங்கப் பறையொ லிப்பச் சுவர்க்கத்திலே பொருந்தினவ னுக்குக் கல்லினைக்கொண்டது. (பு. வெ. பொதுவியன்.)

**கற்கதம்** — அயோத்தியின் மேற்றிசையி லுள்ள நதி.

**கற்பகக் கோடிதானம்** — குறைந்தது ஐந்து பலத்தில் இரண்டு கற்பகக்கொடிகள் செய்வித்துப் பத்துப்பலம் பொன்னுற் கின்னரமிதுனம் இருத்தி வேதிகையில் கொடியைவைத்துப் பிராமி அநந்தசத்தி யைப் பூசித்துப் பிராமணர்க்கு அன்னதா னம் செய்வித்துக் கொடியைப் பிராமண ர்க்குத் தானஞ் செய்வது.

**கற்பகத்தருதானம்** — பொன்னுற்செய்த எட் டுச்சாகைகளையுடைய கற்பகத்தருவினடி யில் சிவலிங்கப் பிரதிட்டைசெய்து அதை ச்சுற்றிப் பிரமன் முதலிய தேவரையும் தாபித்துத் தருவைச் சிவாலயத்திற் கேனும் வேதியர்க்கேனும் தானஞ் செய் வது.

**கற்பகவிருக்ஷம்** — ஐந்தருக்களில் ஒன்று. தேவர்கள் பாற்கடல் கடைந்தகாலத்தில் தோன்றியது. இது விருக்ஷவுருப்போன் றது, எட்டுக் கிளைகளையுடையது. இதில் படருங்கொடி காமவல்லி, இது விரும்பி னதைத் தரும் வலியுள்ளது.

**கற்பக்னன்** — சர்ப்பங்களை வயிற்றிலிருந்து விழச் செய்யுந்தேவன்.

**கற்பங்கள்** — (காலம் காண்க.) 1. பவகற்பம். 2. புவகற்பம். 3. ஸ்தபகற்பம். 4. பவகற்பம். 5. ரம்பகற்பம். 6. ருதுகற்பம். 7. கிரதுகற்பம். 8. அக்னிகற்பம். 9 அவ்வாஹனகற்பம். 10. சாவித்ரிகற்பம். 11. புவகற்பம். 12. உசிககற்பம். 13. குசிககற்பம். எழுதிய 13-கற்பத்திற்கும் கதை கூறப்பட வில்லை. 14. கந்தர்வகற்பம் — காந்தார மென்னும் ஸ்வரம் பிறந்த கற்பமாதலால் அப்பெயர் பெற்றது. 15. ருஷப கற்பம். லோக மனோஹரமாகிய ருஷபஸ்வரம் தோன்றிய கற்பம். 16. ஷட்ஜகல்பம் — இது, சிசிரன், வசந்தன், நிதாகன், வருஷன், சரதன், ஏமந்தன், என்போர் அறுவர், சத்யோஜாத மூர்த்தியினருளால் பிரமன் மானஸபுத்ரராகப் பிறந்ததாலிப் பெயர் பெற்றது. 17. மார்ஜாலிகற்பம் — இதில் ர்ஜாலீயம் எனும் கர்மம் செய்யப்பட்டால் பெற்ற பெயர். 18. மத்யமகற்பம் [illegible]ஸ்வரம் உற்பன்னமான கற்பம். [illegible]. வைராஜக கற்பம் — இதில் பிரமன் புத்ரனாகிய வைராஜன் தோன்றினனாதலால் இதற்கு அப்பெயர் வந்தது இவன் குமரன் ததீசி. 20. நிஷாத கற்பம் — இது, பிரமன் குமரன் நிஷாதன் பிறந்து தவமியற்ற இவன் பசியால் துன்புறுகையில் பிரமன் நிஷாத என்று அழைத்தனன் ஆதலால் இக்கற்பம் இப் பெயர் அடைந்தது, இவனாலுண்டான ஸ்வரம் நிஷாதம் எனப்பட்டது. 21. பஞ்சம கற்பம் — இதில், பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன், எனும் ஐவர் பிரமனுக்கு மானஸ புத்திரர்களாகப் பிறந்தனர். இவர்கள் மகேச்வாரால் ஸ்வராதிக ளடைந்து பஞ்சமஸ்வர தேவர்களாயினர். 22. மேகவாஹன கற்பம் — இதில் விஷ்ணு மேகவுருவாய்ச் சிவபிரானை ஆயிரம் வருஷம் தாங்கினர். அப்பாரத்தின் தாங்கலாலுண்டான பெருமூச்சால் காலன் உண்டானன். 23. சிந்த கற்பம் — இக் கற்பத்தில் பிரமனுக்குச் சிந்தன் எனும் குமரன் தோன்றினனாதலால் இது சிந்த கற்பம் எனப்பட்டது. 24. ஆகுதிகற்பம் — பிரஜா சிருட்டியின் பொருட்டுப் பிரமன் ஆகுதி தேவியைச் சிருட்டித்த கற்பம். 25. விஞ்ஞாதிகற்பம் — பிரஜா சிருட்டியின் பொருட்டு விஞ்ஞாதி தேவியினிடம் இருவரைச் சிருட்டித்ததால் இது விஞ்ஞாதி கற்பமெனப்பட்டது. 26. மனகற்பம் — இதில் சங்கரீ தேவியைப் பிரமன் சிருட்டித்துப் பிரஜைகளைச் சிருட்டித்தான். 27. பாவகல்பம் — இக் கல்பத்தில் பிரமன் பிரஜைகளைச் சிருட்டிக்க எண்ணி ஈச்வரனைத்தியானிக்க அக்னிமண்டலம் சூழ்ந்தஜ்யோதி மண்டலம் சூர்யமண்டலம் யோகம் மந்திரங்களுண்டாயின. எக்காலம் இவை தரிசனமாயினவோ அக்காலம் **தரிசனம்** எனப்பட்டது. எந்தக் காரணத்தால் மனம் பூரணமாயிற்றோ ஆகையால் அது **பூரணை** ஆயிற்று. 28. புரஹத்கல்பம் — இக் கல்பத்தில் பிரமன் அதிக யோகத்தால் பிரஜைகளைச் சிருட்டிக்க எண்ணினதால் இப்பெயருண்டாயிற்று. 29. சிவேதலோகிதகல்பம் — ஒரு கற்பத்தில் பிரமன் சத்யோஜாத மூர்த்தியைத் தியானித்துப் பிரஜைகளைச், சிருட்டிக்க எண்ணுகையில் அவர்க்குமுன் சிவமூர்த்தி சிவேதலோஹித மூர்த்தியாய்த் தரிசனம் தந்து சிவேதருஷிகளாகிய சுநந்தர், நந்தகர், விஸ்வநந்தர், நந்தர் என்கிறவர்களைத் தந்து மறைந்தனர். ஆதலால் இப் பெயரடைந்தது. 30. ரக்தகல்பம் — இதில் பிரமதேவர் பிரஜா சிருட்டிநிமித்தம் சிவயோகத்திருக்க அவர்க்குமுன் ரக்தவர்ண அங்கவுபாங்களுடன் வாமதேவர் தோன்றி அட்டஹாஸம் செய்ய விரஜர், விபாகு, விசோகர், விச்வபாவனர் தோன்றினர். இவர்கள் ரக்த உருவராயிருந்தனர். ஆதலால் அப்பெயர் அடைந்தது. 31. பீதகல்பம் — இதில் பிரஜா சிருட்டியின் பொருட்டுப் பிரமதேவர் சிவத்யானம் செய்ய அந்த யோகத்தில் பொன் வண்ணமான அங்க உபாங்கங்களுடன் சிவபிரான் தோன்றி நான்குமுகம், நாற்கரம், நான்குதோள்கள் கொண்ட ருத்ராணியைத் தம் முகத்தில் தோற்றுவித்தனர். அவ்வீச்வரி தன்னிடம், மதி, ஸ்மிருதி, புத்திகளைத் தோற்றுவித்தனள். மீண்டு பிரமன் புத்ர காமத்தால் ரூத்ராணியை வேண்ட அவள் காயத்ரி, ரௌத்ரி யென்பவர்களைத் தோற்றுவித்தனள். 32. விதகல்பம் — இக் கல்பத்தில் வருஷ சகத்திரங்களாக ஜலமக்ன மடைந்த உலக சிருட்டியின் பொருட்டுப் பிரமதேவர் புத்ரன் வேண்டி

மகாதேவனைத்யானிக்க அவர் தியானத்தில் கிருஷ்ணவர்ணத்துடன் கூடிய அங்கவுபாங்கங்களுடன் சிவபிரான் தோன்றி அட்டஹாஸம்செய்ய அவரது பார்ச்வங்களிலிருந்து கிருஷ்ணன், கிருஷ்ணும் பரோஷ்ணிஷன், கிருஷ்ணஸ்யன், கிருஷ்ணவாஸஸன் நால்வர் தோன்றி யோகபரர்களாய்ச் சிருட்டியாதிகளைச் செய்தனர். 33. விச்வரூபகல்பம் — இப் பிரளயத்திற்கப்பால் பிரமன் பிரஜா சிருட்டியின் பொருட்டுச் சிவத்யானம் செய்ய விச்வமால்யாம் பரதாத்துடன் ஸரஸ்வதி தோன்றினள். பின்னும் ஈசானரை த்யானிக்க அவர் தரிசனந்தர இவ்வகை நான்குமுகங்கள், சதுர்பாதங்கள், நான்கு சிருங்கங்கள், நான்கு தந்தங்கள், நான்கு ஸ்தனங்கள், நான்கு கரங்கள், நான்கு கண்களுடன் கூடியவள் யார் என்றனர். இவள் உன்னில் பிறந்த பிரகிருதிதேவி என்று அட்டஹாஸம் செய்ய அவரது பார்ச்வத்தில் ஜடி, முண்டி, சிகண்டி, அர்த்தமுண்டி என்போர் தோன்றி யோகபரராயினர். 35. சிவேத லோஹிதகற்பம் — இந்தக் கற்பத்தில் சிவமூர்த்தி சிவேத அங்கஉபாங்கங்களுடன் ச்வேத லோகிதராய் சத்யோசாதர் தரசனம் தந்தனர். ஆதலால் காயத்ரி சிவேதரூபிணி ஆயினள். 35. வாமதேவ கற்பம் — சிவேத லோகிதருடைய வாமபாகத்தில் ஒரு காலத்தில் உருத்திரமூர்த்தி தோன்றின காரணத்தால் இப்பெயரடைந்தது. 36. கிருஷ்ண கல்பம் — இந்தக் கல்பத்தில் சிவமூர்த்தி கோரபராக்ரமத் திருவுருக் கொண்டதனுல் அகோரமூர்த்தியெனப் பெயரடைந்தனர். இவர் சாந்தமூர்த்தி கோரமற்றவரென்பது பொருள். ஆக ஒருவாறு கற்பலக்ஷணம் வாயு புராணத்தி லுள்ளவிதம் சுருக்கிக் கூறப்பட்டது. பின்னும் பத்மாங்கித கல்பம், வாராஹகல்பம் இந்த ஒவ்வொரு கற்பத்திலும் விஷ்ணு பல பெயர்களுடன் வியாஸ உருக்கொண்டு அவதரித்தனர்.

**ற்பாசுரன்** — விநாயகரதுபிள்ளைப் பருவத்தில் குதிரையுருக்கொண்டு வஞ்சிக்க வந்தவன். இக்குதிரையை வாகனமாக விநாயகர் ஏறித் திரிலோகத்தினும் சஞ்சரித்துக் கொன்றனர்.

**கற்பனுகௌரவம்**—ஒரு வஸ்துவினுலேயே ஒருகாரியம் சித்திப்பதாயிருக்க அதற்குப் பல வஸ்துக்களை ஏதுவாகக்கூறல்.

**கற்பன்** — (சங்.)-மங்யு குமரன்.

**கற்பிற்கூற்றிற்குரியார்** — நற்ருய், கண்டோர், பாணன், கூத்தர், விறலி, பாத்தையர், அறிவர், தலைவன், தலைவி, பார்ப்பான், பாகன், பாங்கி, செவிலி, ஆகப்பதின் மூவருமாம். (அகம்.)

**கற்பு** — 1. என்பது கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்று எனவும், அவனை இன்னவாறே வழிபடுக எனவும், இருமுது குரவர் கற்பித்தலானும், அந்தணர் திறத்தும் சான்ருேர் தேத்தும், ஐயர் பாங்கினும் அமரர்ச்சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன் கற்பித்தலானும் கற்பாயிற்று. தலைவனும் களவின்கண் ஒரையு நாளும் தீதென்று அதனைத் துறந்தொழுகினுற் போல ஒழுகாது, ஒத்தினும் கரணத்தினும் யாத்த சிறப்பிலக்கணங்களைக் கற்பித்துக் கொண்டு துறவறத்திற் செல்லுந்துணையும் இல்லறம் நிகழ்த்துதலிற் கற்பாயிற்று. (நச்சர்)

2. இது களவின் வழிவந்த கற்பு, களவின் வழிவாராக் கற்பென இருவகைத்து முன்னது. தலைமகளது சுற்றத்தாரார் பெறப்படாதது. (அகம்.)

3. கற்பென்பது, கணவனினும் தெய்வம் வேறில்லையென வெண்ணிக் கலங்காது அவனை வழிபடுவது. இவ்வகை வழிபட்டார் அருந்ததி, உலோபாமுத்திரை, மேனை, சுநீதி, சாவித்ரி, அநசூயை முதலியோர். கற்புடைய மங்கையர் நாடோறுந் தமது இஷ்டதெய்வத்தையும் கணவரையுந்தொழுது எழுந்து காலைக்கடன்கள் முடித்து இஷ்டதெய்வத்தைத் தொழுது அலகால் வீடு முதலியவைகளைப் பிராணிகளுக்கு இம்சையில்லாமல் பெருக்கிப் புதியநீரில் பசுவின் சாணத்தைக் கரைத்து மெழுகிட்டு உலர்ந்தபின் கோலமுதலியவற்றையிட்டு வீட்டுவேலைகளை முடித்துக் கணவனுக்கு ஆகாராதிகள் உண்பிக்கும் முயற்சியில் மடைப்பள்ளி சேர்ந்து அன்னஞ் சமைத்துக் கணவனுக்கிட்டு அவன் உண்டபின் உண்பர். பின் அவனுக்கு இதமான தொழில்களைச் செய்து முடித்து அவனுறங்கியபின் உறங்கி எழுமுன் எழுவர். கணவன்முன் அழகிய அணி முதலிய அணிவரேயன்றி அவன் வேற்றூர்க்கு நீங்கியகாலத்து அணியார். கோபத்துடன் பேசுகையில் எதிர்பேசார். கோபித்து எதைச் சொல்லினும் குணமாகக்

கொள்வர். தன்நாயகன் பெயர்கூறின் நாயகனுக்கு ஆயுள்குன்று மெனப்பெயர்கூறார். நாயகன் தன்னணிகளைச் சக்களத்தி முதலியவர்க்குக் கொடுக்கினும் மனக்கிலேசமடையார். தங்கள் வீட்டைவிட்டுச் செல்லார். அவ்வாறு செல்லுமாதர் முகங் காணினுங் கோபிப்பர். புருஷன் இதைச் செய்க எனின் செய்து முடித்தேன் என்பர். திருவிழாக்காணல், விரதங்களனுட்டித்தல், சுத்தநதியாடல், தேவரைத் தொழல் ஆகிய இக்காரியங்களைக் கணவரேவலின்றிச் செய்யார். வயதுமுதிர்ந்தவருடனன்றித் தனியே எங்குஞ்சேரார். புருஷன் இருந்தபின் அன்றித் தாம் உட்காரார். புருஷன் வைத்தசேடத்தை அமிர்தம்போ லுண்பர். தம் நாயகன்சொற்படி துறந்தார், தென்புலத்தார், தெய்வம், விருந்து, சுற்றம், பசு முதலியவர்க்குப் பகுத்துண்பர். நாயகன் விரும்பியவற்றைக் குறிப்பறிந்து செய்வர். நாயகனை அலர் தூற்றும்பெண்கள் முகத்தையும் நோக்கார். இல்லறத்திற்கு வேண்டுவன செய்வர். தகாத காரியங்களைச் செய்து விருதாவாக அழியார். காதலர் ஆயுள் பெருகவேண்டி மஞ்சள் பூசுவர். கணவன் அழகிலானாயினும், நோய்கொண்டவனாயினும், கிழவனாயினும், பழுதுகூறாது கூடியிருப்பர். நாயகன் இறப்பின் தாமிறப்பர். அவன் நோய்கொண்ட காலத்துத் துன்பமுறுவர். அவன் களிப்புடனிருக்கையில் களித்திருப்பர். நாயகன் காலலம்புநீரைக் கங்கையாக நினைப்பார். கற்புடையார் பூத்த மூன்றுநாளும் கணவனைப் பாரார், பேசார். நீராடியபின் நாயகனை நோக்குவர். தாம் பூத்து நீராடுநாட்களில் நாயகன் தம்மூரில் இல்லாவிடில் நாயகனை மனதில் நினைத்துச் சூரியனைக்கண்டு துதிப்பார். மாமன் மாமியார் அருகிருக்கில் பரிகாசமுதலிய சேட்டை புரியார். தாம் உண்ணுங்காலத்துக் கணவனழைத்திடில் உண்பது அமுதமேனும் விடுத்துச் செல்வர். தந்தை, தாயர், தம்குமரர் முதலியோரினும் கணவரிடம் அதிக அன்புடன் நடப்பார். உரலினும், அம்மியினும், உலக்கையினும், வாசற்படியினும், முறத்தினும் இலக்குமி நீங்குவள் என உட்காரார். நாயகனைப் பணியாது தெய்வம்பணிவோர் நரகமடைவர். நாயகன் பழியைப் பிறரிடங் கூறுபவரும், அவனுடன் எதிர்த்துப் பேசுபவரும் நரியாகவும், பெட்டை நாயாகவும் பிறப்பர். நாயகன்கோபித்து வசைகூறுங் காலத்து எதிர்வசைகூறுவோர் புலியாகப் பிறப்பர். சக்களத்தியைக் கோபிப்பவர் கோட்டானாகப் பிறப்பர். தன்னாயக னல்லாதான் எழில் கண்டுகளிப்பவர் பைசாசமாவர். நாயகன் பசித்திருக்க உண்பவர் பன்றியாகப் பிறப்பர். நாயகனிறந்த காலத்து உடனிறப்பவர் அசுவமேதபலனடைவர். நாயகன் பாபியாயினும் அவனிறந்தகாலத்துத் தீக்குளிப்பவர் அந்நாயகனை நரகத்தினின்று மீட்பர். நாயகனுடன் மரண மடைந்த கற்புடையார் தங்கள் தேகத்தில் உரோமவரிசைகள் எவ்வளவு உண்டோ அவ்வளவு காலம் கணவனுடன் சுவர்க்கத் துறைவர். கற்புடைய மங்கையர் தாங்கள் பிறந்த குலத்தையும் புகுந்த குலத்தையும் சுவர்க்கத்திற் சேர்ப்பர். இவ்வகை ஒழுக்கமுள்ள கற்புடையார்கள் கால்வைத்த இடங்கள் பரிசுத்த தலங்களாம். இவர்கள் நீராடுதலால் நதிமுதலிய புண்ணியமடையும். பொன்மாளிகையாயினும் கற்புடையாள் வசிப்பதில்லையேல் அது பேய்வாழ்க்கையாம். வாயு, சூரியன், சந்திரன், அக்நி முதலிய கற்புடையாளைத் தொடுங்காலத்து மனம் நடுங்குவர். கணவரிறந்தபின் மங்கலமிழந்த பெண்கள் தங்கள் கூந்தலை முடிப்பின் காலதூதர் கணவனைப் பாசத்தாற் பிணித்து இழுப்பர். கணவனையிழந்த மங்கையர் பகலில் ஒருபோதுண்டு தாம்பூலம், படுக்கைவெறுத்துப் பூமியிற்படுத்து விரதங்களை யநுட்டித்துத் தேவதார்ச்சனை செய்து கந்தமூலாதிகளைப் புசித்து உடம்புவிட்ட பின் புருஷலோக மடைந்து கணவனைச் சேர்ந்து சுகித்திருப்பர்.

கற்புமுல்லை — பொன் போலிலங்கு சுணங்கினையும் பொலிந்த கண்ணினையுமுடைய மடந்தை நன்மையறியும் கொழுநனுடைய நன்மையைப் பெருகச்சொல்லியது. (பு. வெ. பொது.)

1. பொருந்துதலமைந்த கொழுநன் நீங்கத் தன்னிடத்துக் காவலைச்சொல்லினும் முற்பட்ட துறையேயாம். (பு. வெ. பொது.)

2. செல்வம்பெருகும் அழகிய மாளிகையிலே சேர்ந்த கணவன்றன் பெரிய செல்வத்தை வாழ்த்தினும் முற்பட்ட துறையேயாம். (பு. வெ. பொது.)

**கற்பூர ஆக்கம்**—இது, சீனு, ஜபான் தேசங்களி லுண்டாகும் லாரல் மரத்தின்பால். இம் மரம் முதிர்ந்தவுட னிதனை வெட்டித் துண்டுகளாக்கி அவற்றை வளைந்த கழுத்துள்ள இருப்புப் பாத்திரத்திலிட்டுச் சல்லடைக் கண்கள்போன்ற துவாரங்களையுடைய பலகையால் அதைமூடி அப்பலகைமீது பெரியவாணு உருவமைந்த மட்பாத்திரத்தைக் கவிழ்த்து விடுகின்றனர். பின் வாணலுக்கும் பலகைக்கும் இடையிலுள்ள உள்ளிடத்தை மலார், புல் முதலியவற்ருல் மூடி இருப்புப்பாத்திரத்தை உஷ்ணப்படுத்தின் உள்ளிருக்கும் லாரல் துண்டிலிருந்து கற்பூரமானது ஆவியாய்க் கிளம்பி உஷ்ணமற்ற மலார்புல் முதலியவற்றில் உறைந்துபோகிறது. இது முதமுதலில் அழுக்குடன் மஞ்சணிறமாக இருக்கிறது. இதனை மீண்டும் சுத்தப்படுத்த வெள்ளை நிறமான கற்பூரமாகிறது.

**கற்பூரசெட்டி** — கற்பூரம் விற்கும் ஒரு வகைச்செட்டி வகுப்பார்.

**கற்பூரபாண்டியன்** — குங்கும பாண்டியனுக்குக் குமரன்.

**கற்பொடுபுணர்ந்த கௌவை**--இது உடன் போக்கின் வகையுள் ஒன்று என்பது, தலைவி தலைவன துடைமையாய்க் கற்பொடு கூடியவதனை அயலார், விராயஞ்சேரியர் பலருமறிதல். அது, செவிலி புலம்பல், நற்ருய் புலம்பல், கவர்மனை மருட்சி, கண்டோரிரக்கம், செவிலிபின் தேடிச்சேறல் என ஐந்துவகை. இது, செவிலிபாங்கியை வினுதல், செவிலி தேற்றுவார்க் கெதிரழிந்து மொழிதல், செவிலிதன்னறி வின்மை, தன்னைநொந்துரைத்தல், செவிலிதெய்வம் வாழ்த்தல், செவிலிநற்ருய்க் கறத்தொடுநிற்றல், நற்ருய் பாங்கி தன்னொடு புலம்பல், அது கேட்ட பாங்கியழுங்கல் கண்டு நற்ருய் புலம்பல், நற்ருய் பாங்கியர் தம்மொடு புலம்பல், நற்ருயயலார் தம்மொடு புலம்பல், நற்ருய் தலைமகள் பயிலிடந் தம்மொடு புலம்பல், நிமித்தம் போற்றல், சுரந்தணிவித்தல், தன்மகள் மென்மைத் தன்மைக்கிரங்கல், இளமைத் தன்மைக்குளமெலிந்திரங்கல், அச்சத்தன்மைக் கச்சமுற்றிரங்கல், கண்டோரிரக்கம், செவிலியாற்ருத் தாயைத்தேற்றல், ஆற்றிடைமுக்கோற் பகவரைவினுதல், மிக்கோரேதுக்காட்டல், செவிலி யெயிற்றியொடு புலம்பல், செவிலிகுரவொடு புலம்பல், சுவடு கண்டிரங்கல், செவிலி கலந்துடன் வருவோர்க்கண்டு கேட்டல், அவர் புலம்பல்தேற்றல், செவிலி புதல்வியைக் கணுதுகவலை கூர்தல் என்பனவிரி. (அகம்)

**கற்போட்டம்** — (கர்ப்போட்டம்) இது, ஓர் மழைக் குறி. ஆனி மாதத்திற்குக் கர்ப்போட்டம் நாள் - $1\frac{1}{2}$, ஆடிமாதம் முதல் கார்த்திகை மாதம்வரை மாதம் ஒன்றுக்கு நாட்கள் - $2\frac{1}{4}$, ஆக மாதம் 5 - க்கு, நாட்கள் - $11\frac{1}{4}$, மார்கழி மாதத்திற்கு நாள்-1, தை மாதமுதல் வைகாசிவரை மாதம் 5 - க்கு மாதம் 1 - க்கு நாழிகை 12, ஆக நாள்-1, ஆக கர்ப்போட்ட நாட்கள் - $13\frac{3}{4}$. இவை பூராட நக்ஷத்திரத்தில் சூரியன் வரும் நாட்களாம். "பானுதனுவிற் பதின் மூன்றேமுக்கான் மேல், ஆனிக்குக் கர்ப்போட்டமறுகாலாம்—மானேகேள், நண்டு முதற்றேளளவு நாலரைநான்மாகாணி, கொண்டதனுவுக் கொன்றேகூறு" கர்ப்போட்ட காலங்களில் வானத்தில் இந்திரவில், மேகம், பரிவேடம், என்பவற்றுள் ஒன்ருயினும் இருப்பின் அவ்வவ்மாதங்களில் மழையுண்டு. அதிகமழை பெய்தால் அற்பமழை. ஒன்றுமிலாதிருக்கின் மழையில்லை.

**கற்றேர் நவிற்சியணி**—மிகுதிக்குக் காரணமாகாததை அதற்குக் காரணமாகக்கூறுதல். இதனைப் பிரௌடோக்திய லங்காரம் என்பர்.

**கனககாமன்**—அசுவகண்டன் படைவீரரில் ஒருவன்.

**கனகசபாபதி சிவாசாரியர்** — சுவாமிநாத தேசிகர், சுப்பிரமணிய தீக்ஷிதர் முதலிய தமிழாசிரியர்க்கு வடநூல் கற்பித்தவர்.

**கனகசபாபதி பிள்ளை** — தாயுமான சுவாமிகள் குமாரர்.

**கனகசபை** — சிதம்பரம்.

**கனகசித்திரன்** — அச்சுவபுரத்தரசன் குமாரன். (சூளா.)

**கனகசித்திரை** — அச்சுவகண்டன் தேவி. (சூளா.)

**கனகசேனன்** — தசரதர் புத்திரராகிய இராமர் சந்ததியில் வந்த ஐம்பத்தாருவது அரசன். இவன் கி. பி. (145) வருஷத்தில் தெற்கே சுராஷ்டர தீபகற்பத்தை நோக்கிவந்து அங்கே அரசாண்டு கொண்டிருந்த பிரமர வம்சத்தரசனுகிய இராஜபுத்திரனைத் தோற்கடித்து அவனுக்குரிய

ஷீரநகரம் எனும் பட்டணத்தைத் தனக்குரிமையாக்கிக்கொண்டு அரசாண்டான். கடைசியில் இவனுக்கு இராஜதானி வல்லவிபுரம்.

**கனகசோழன்** — இவன் ஜெயசோழன் குமாரன். இவன் தேவி செண்பகாங்கி. இவன் காலத்தில் காவிரி திருவலஞ்சுழியிலிருந்த விநாயகரை வலஞ்செய்து பாதாளத்தில் மறைந்தது. இதனால் ஜனங்கள் முறையிட்டது கண்டு அரசன் விசனமுற அசரீரி அரசனே நீயும் உன் மனைவியுமாயினும் அல்லது ஒரு இருடியாயினும் அந்தப் பிலத்துள் புகுந்தால் காவிரி திரும்புவள் என்றது. அரசன் அவ்வகையே தன் மனைவியுடன் பிலத்துள்ளே போகத் துணிந்தபோது அரசனைப் பிரியாத மந்திரிகள் திருக் கோடீச்சுரத்தில் ஏரண்டருஷி தவஞ்செய்கிறார் அவருடைய கட்டளைபெற்றுப் போகலாம் என, அரசன் அவ்வாறிசைந்து அவரை மனைவியுடன் பணிந்தனன். இருடி அரசனைத் தீர்க்காயுள் உள்ளவனாகவும் பணிந்த மனைவியைத் தீர்க்கசுமங்கிலியாகவுமிருக்க வாழ்த்தினர். பிறகு மந்திரிகள் நடந்தவைகூற இருடிகேட்டு அரசனுக்குத் ததீசியின் சரித்திரங்கூறிப் புகழடைய வேண்டுமெனப் பிலத்துள் புகுந்தனர். உடனே காவிரி வெள்ளங்கொண்டு ஊரில் பிரவேசித்தது. பிறகு அரசன் இருடி சொற்படி அவர் புகுந்த பிலத்தில் முளைத்த ஏரண்டலிங்கத்திற்கும் அவர் தபஞ்செய்த இடத்தில் பிரதிட்டித்த சிவலிங்கத்திற்கும் ஆலயத் திருப்பணிகள் செய்வித்து எழுபது வருஷம் ஆண்டு தன்மகன் சுந்தரசோழனுக்குப் பட்டாபிஷேகம்செய்து சிவபதம் பெற்றனன்.

**கனகத்துவசன்** — திருதராட்டிரன் குமரன்.

**கனகபதாகை** — சுரமஞ்சரியின் தோழி.

**கனகபல்லவம்** — ஒரு வித்தியாதர நகரம். (சூளா.)

**கனகமாலினி**—சூர்யவம்சத்துக் குசன்குமரி. இவள் பிறக்கையில் கழுத்திற் கனகமாலையுடன் றேன்றியதாலிவளுக்கு இப்பெயர் வந்தது. இவள் யதுசேகரன் என்பவனை மணந்தாள்.

**கனகமாலை**—சீவகன் மனைவியரில் ஒருத்தி. இவளுக்குச் சகோதரர் விசயன், கதம்பன், கனகன், அசலகீர்த்தி, சேனன்.

**கனகம்** — ஒரு தீர்த்தம்.

**கனகலம்** — A Small village two miles to the east of Hardwar. அரித்வாரத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு தீர்த்தமும், நகரமும்.

**கனகவிசயர்** — ஆரியமன்னர் செங்குட்டுவனால் வெல்லப்பட்டவர். பாலகுமாரன் எனும் அரசன் புதல்வர். கண்ணகியின் உருச்செயச் சிலைகொண்டு வருதற்கு இமயஞ்சென்ற சேரன் செங்குட்டுவனால் வெல்லப்பட்டு அவன் கட்டளைப்படி இமயச் சிலையைத் தலையிற் சுமந்தவர். (மணிமேகலை.) (சிலப்பதிகாரம்.)

**கனகன்** — 1. துரியோதனன் ஏவலால் அரக்குமாளிகை யியற்றிய சிற்பி.

2. ஷண்முக சேநாவீரன்.

3. கனகமாலையின் சகோதரன்.

**கனகாயு** — திருதராட்டிரன் குமாரர்களில் ஒருவன்.

**கனடாமதம்** — நியுபௌண்ட்லண்ட், கனடாதேசத்தவர் ஆதியில் சூரியனை ஆராதித்துக் கொண்டிருந்தனர். பிறகு இவர்களிற் சிலர் நான்கு தேவர்களை ஆராதித்திருந்தனர். அதாவது (1) மாதா (2) பிதா (3) புத்திரன் (4) சூரியன். இவர்கள் நால்வரும் ஒரே தேவனென்று நினைத்திருந்தனர். ஓல்கான்ஸ் ஒகி என்னும் தேவன் சிருஷ்டிக் கடவுள். இவன் ஆதியில் பூமியைப் பாணத்தால் பிளந்து ஸ்திரீ புருஷர்களை உற்பத்திசெய்கையில் அவர்களால் ஜனங்கள் பலரும் உற்பத்தியாயினர் என்பன். பின்னும் நன்மை தீமைசெய்யும் தேவதைகள் பலருளர். இவர்களில் ஸ்திரீகள் சூரியனை மாத்திரம் தியானிப்பர். யுத்தவீரர்கள் சாயங்காலத்தில் நடனமாடித்தேவப்பிரீதி செய்வார்கள். இவர்களில் ஒரு புருஷன் பல ஸ்திரீகளை விவாகஞ் செய்து கொள்ளலாம். இவர்கள் இறந்தவர்களின் எலும்பை எடுத்துப் பலநாள் பூஜித்துக்கொண்டு வருவர். நதி கடக்கச் சமயம் நேர்ந்தகாலத்து அதற்குப் பூஜை முதலியன செய்து கடந்து செல்வர்.

**கனலாசுரன்** — விநாயகரைப் பாலப்பருவத்தில் கொல்லவந்து அவரா லிறந்தவன்.

**கனன்முகன்**—சிவபூதகணத்தவரில்ஒருவன்.

**கனுசி** — ஒரு இருடி.

**கனுநிலை** — கனவுகளின் பலாபலன்களைப் பற்றித் தேவகுருவாகிய வியாழனால் கூறப்பட்டது. இக்கனவு சிலர்க்கு அதிபித்த ரோகத்தாலும் தேக அஜீர்ண பலஹீன

முதலியவற்றுலும் நேருதல் உண்டு. அவை பலியா. ஆயினும் சில பலிக்கும். பலித்தமை பிரத்தியக்ஷத்தானும், பெரியோர் அனுபவத்தினுனும் கண்டிருக்கிறுமாதலால் அதனைப் பொய்யெனல் தகாது. இக்கனு "படைத்த முதற்சாமத்தொராண்டிற் பலிக்கும் பகரிரண்டாய்க், கிடைத்தபிற்சாமத்திற் றிங்க ளெட்டாவதிற் கிட்டுமென்ப, ரிடைப்பட்ட சாமத்து மூன்றினிற் றிங்களுண் மூன்றென்பாரற், கடைப்பட்ட ஜாமத்து நாட்பத்திலே பலன்கைப் பெற்றதே." இது கனுநூல். இக்கனு முதற் சாமத்தாயின் வருஷம் ஒன்றிலும், இரண்டாஞ் சாமமாயின் எட்டு மாதத்திலும், மூன்றுஞ்சாமத்து ச, ௩ மாதங்களிலும், நான்காஞ் சாமத்து ஒருமாதம் அல்லது பத்து நாட்களிலும் பலிக்கும். சூர்யோதயத்தில் ஆயின் அன்றைக்கே பலிக்கினும் பலிக்கும். **பூமிசம்பந்தமான கனு** — தனக்குப் பிறர் பூதானஞ் செய்ததாகக் கண்டால் மணம் நடக்கும். கல்யாணம் நடந்தவன் அவ்வாறு காணின் பெண்வழியாய்ச் செல்வம் உண்டாம். தன்னிலத்திற்கு எல்லையிலாதிருக்க கண்டால் சந்தோஷமும் தனலாபமும் ஆம். கரும்பூமி (க-ல்.) கஷ்டம் உண்டாம். பூமிநடுங்க (க-ல்.) கார்யபங்கம். பூமி கம்பிக்க (க-ல்.) ஜாதிக்குக் கெடுதி. தன்காற் கீழ்பூமி அசையக் (க-ல்.) வியாஜ்யாபஜயம், திரவிய நஷ்டம். மலையசைய (க-ல்.) ஒரு பெரியவன் இறப்பன். தானறிந்த தேசம் பூமியதிர்ச்சியால் கெட (க-ல்.) அந்தத் தேசம் க்ஷாமத்தால் கெடும். தன் நிலம் செம்மையாய் விளைய (க-ல்.) நிறைசெல்வமுண்டு. தன் தோட்டத்தில் காய்கறிகள் நிறைந்த பாத்திகள் (க-ல்.) ஆபத்து. தன் தோட்டத்தில் கிணறு, . பூஞ்செடிகள், பழங்கள் காணின் நன்னடையுள்ள பெண்டிரும் புத்திரரும் உளராவர். பயிர்முளையாது அழுந்த (க-ல்.) துக்கம், நஷ்டம். பசும்பயிர் நிறைந்த பயிர் நடுவில் நடக்க (க-ல்.) விருத்தி. பசும்பயிர் சுமை (க-ல்.) நன்று. உலர்ந்த சுமை (க-ல்.) தீமை. வயலில் கொங்கிருக்க (க-ல்.) கஷ்டத்தால் சுகம். தான் ஏருழ (க-ல்.) கௌரவம். விரிந்த வீதியில் நடக்க (க-ல்.) சுகஜீவனம். இடுக்குவழியில் நடக்க (க-ல்.) கஷ்டம். குகையில் தனித்து நடக்க (க-ல்.) தீது. குகையில் நண்பனை (க-ல்.) விரோதம். குகையில் கொடிய பிராணிகளை (க-ல்.) புத்ரருடன் விரோதம். குகையிலிருந்து வெயிலில் வர (க-ல்.) ஆபத்து நீங்கும். தான் குழியில் விழ (க-ல்.) ஆபத்து. தேசபடம் (க-ல்) பிரயாணம் உண்டாம். சுடுகாட்டைக் காணின் அபிவிருத்தி. வீடு மெழுகிட்டிருக்க (க-ல்.) திருடர்பயம், வீடுகட்ட (க-ல்.) கார்யசித்தி. வீடு தனதென்று எண்ணின் தனலாபம். வனத்தில் வேட்டையாட (க-ல்.) போகம். வீடுகளுக்கிடையில் உலாவ (க-ல்.) தூரதேச ப்ரயாணம். காட்டில் திரிய (க-ல்.) கஷ்டம். சத்திரத்திடையி லிருக்க (க-ல்.) தரித்திரம், கார்யக்கெடுதி. சிறைச்சாலையிலிருக்க நேரும். ரோகிகள் இவ்வாறு (க-ல்.) நீங்காரோகிகளாவர். சுவர், மேடை, உயர்ந்த இடம், வீடு இவற்றின்மேல் ஏற (க-ல்.) உத்யோக விருத்தி. பிறர் ஏறக்காணின் சந்தோஷ செய்திவரும். ஷை தாண்ட (க-ல்.) ஆபத்து நீங்கும். அவைகளின் மீதிருந்து விழக்காணின் உத்யோகம் குறையும். விழுந்தவரை எடுக்க (க-ல்) பரோபகாரசித்தி. மாத்திலேறக் (க-ல்.) விருதுண்டாம். படியிலா மலைமீதேற (க-ல்.) ஆபத்துண்டாம். கஷ்டமாய் மலைமீது சேர (க-ல்.) ஆபத்துவந்து கெட்டு லாபம் உண்டாம். சருக்கிவீழின் க்ஷீணதசை. மேலே சேரு முன் விழிக்கின் விசனம். **உதகசம்பந்தம்** — கடற்கரையில் நிற்கையில் தன்னை அலைகள் வந்து சுற்றக்காணின் துன்ப முண்டாம். கடலைக் கடந்துபோக (க-ல்.) உத்யோகலாபம். கப்பல் ஏறினதுபோல் காணின் பிரயாணம். தடாகம், நதி, ஏற, (க-ல்.) எண்ணிய காரியமுடியும். தண்ணீர் அழுக்காயிருக்கக் காணின் எண்ணின முடியா, நோயுண்டாம். கால்களை யலம்பினதாக (க-ல்.) துன்பம். குடித்ததாக (க-ல்.) எண்ணிய கார்யம் முடியாது. நீரைக் கொப்புளித் துமிந்ததாக (க - ல்.) ஆபத்துகள் நீங்கும். தடாகத் தருகிலிருந்துகொண்டு தாமரையிலையில் போஜனஞ்செய்ய (க-ல்.) ராஜ்யபாலனம். வெள்ளத்தை நிதானித்துக்காண (க-ல்.) எண்ணுமலே தனங்கிடைக்கும். நீர்மேல் மிதந்து கொண்டு போவதுபோல் (க-ல்.) சுகஜீவனம். தெப்பல், படகு முதலியவற்றின்மீது போக (க - ல்.) எண்ணிய கார்யமுடியும். நீர் சேறுங் கலங்கலுமாக இருக்கக்(க-ல்.) நோ

யுண்டாம். நீரிலுலாவுகையில் காலில் பாசி
கள் சுற்ற(க-ல்.)தனங்கிடைக்கும். ஒருநதி
தன்வீட்டிற்குமுன்பிரவகிக்கக்காணில்உத்
யோகம், உலகபூஜ்யதை யுண்டாம். மழை
பெய்யக்காணின் தேசத்திற்கு ஆபத்து.
வெள்ளம்வந் துலர்ந்துபோகக் (க - ல்.)
துன்பம் நீங்கும். நீர் பயிர்களுக்குப் பாய
(க-ல்.) தனலாபம். நன்னீருள்ள கிணற்
றை (க-ல் ) தனலாபம். அக்கிணற்றுநீர்
வெளியேறிப் போகக் கண்டால் தனநஷ்
டம், மரணம், வைதவ்யம். தான் கிணறு
தோண்ட (க-ல்.) தனலாபம். அன்னிய
ருக்குத் தான் தோண்டக் (க-ல்.) அடிமை
யாவன். ஸ்நானஞ்செய்ய (க-ல்.) நோய்.
ஸ்நானஞ் செய்யும் நீர் வெப்பமுளதாகக்
(க-ல்.) பந்துக்களில் வெம்மைக்குத் தக்க
அவ்வளவு வலிவுநோய் பலக்கும். முழுக்
காட உடையவிழ்த்து மீண்டும் உடுக்க
(க-ல்.) தம்மவர்க்குக் கோபம் உண்டாய்
அடங்கும். வெந்நீர் உண்டதாக (க-ல்.)
பகைவரால் கஷ்டம் உண்டாம். குளிர்ந்த
நீருண்ணக் (க-ல்.) நலம். ஒருவர் நீர்பரு
கப் பாத்திரத்துடன் தரக் (க-ல்.) சந்தான
விருத்தி. உண்ணும் பாத்திரம் விழுந்து
போக (க-ல்.) நண்பர்க்குக் கெடுதி. நீரைப்
பை முதலியவற்றில் எடுத்துக்கொண்டு
போக (க-ல்.) ஆபத்து, நம்பினவர் கேடு
செய்வர். தண்ணீரில் வீடு, சுவர் முதலிய
வைக்க (க-ல்.) துன்பம் நெருங்கியதாம்.
நீரை யுண்டதுபோல் (க-ல்.) கஷ்டம்.
வீடுமுழுதும் நீர் தெளித்திருக்க (க-ல்.)
நஷ்டப்பிராப்தி. **அக்னிசம்பந்தம்** நெருப்
பைக் (க - ல்.) நலம். பெரும்பான்மை
நெருப்பினைக் கனவில் காண்போர் கோபி
கள், ரோகிகள். புகையிலா நெருப்பைக்
(க-ல்.) நோய் நீங்கும் அரோகிகள் க-ல்)
தனலாபம். பந்து தரிசனம். புகையுடனும்
புகையின்றியு மிருக்கும் பெருநெருப்பை
(க-ல்.) விரோதம், துக்கசமாச்சாரம். கரி
களையும், உமி, சாம்பர் முதலிய (க-ல்.)
வறுமை. இவ்வாறு போகி (க-ல்.) ரோக
நிவாரணம். தான் கப்பலிலிருக்க நெடுந்
தூரத்தில் தீபமிருப்பதாக (க-ல்.) கஷ்ட
மில்லாமல் தன்காலம் ஒழியும். தீபம்
முதலிய நன்ருய் எரிய (க-ல்.) நலம்,
எல்லா பலன்களும் உண்டாம். தீபம்
முதலிய மயங்கி யெரியக் (க-ல்.) ரோகம்
வந்து நீங்கும். தான் தீபத்தையாயினும்
தீவட்டியையாயினும் பிடித்திருக்க (க-ல்.)
ஆபத்துநீங்கிப் பந்து சிநேக பூஜ்யதை
யுண்டாம். மற்ருருவன் பிடித்திருக்க
(க-ல்.) தனக்குத் தீமைசெய்பவன் கெடு
வன். அது மங்கி யெரியக் (க-ல்.) தனக்
குத் தீமைபலக்கும். தீபத்தையாயினும்
வேறு ஒளியையாயினும் மிகப் பிரகாசிப்
பிக்க (க-ல்.) வம்சபிரதிஷ்டை, புகழுள்ள
புத்ரஜநநம். ஒரு தீபத்தைத் தாண்ட
அது பலமுறை குளிரக் (க-ல்.) மிக்க
துன்பம், புத்திரசோபம். ஒரு சபையில்
தான் தீபத்துடன் செல்ல (க-ல்.) பிர
திஷ்டை. வீடு புகைமுதலிய இன்றி
யெரிய (க-ல்.) பெருலாபம். புகை முத
லியவற்றுடன் எரிய (க - ல்.) தீமை.
மடைப்பள்ளி யெரிய (க-ல்) சமைக்கிற
வர்க்கு நோய். மேற்கூரை எரிய (க-ல்)
கள்ளர்பயம், சிநேகர் மரணம். தெரு
வாசற்படி, கதவு முதலிய எரிய (க-ல்.)
தனக்கேனும், தன் தலைவனுக்கேனும்
கெடுதி. வீட்டில் தலைவாயிற் தாழ்ப்பாள்
எரியக் (க-ல்) பந்துக்களில் புருஷர் மாள்
வர். உள்வாயில் எரியக் (க-ல்.) பெண்கள்
மாள்வர். உத்யோகசாலை, பந்தல் முதலிய
வற்றின் தம்பங்கள் தீப்பற்றக் (க-ல்.)
தன் புத்திரர் பிரபலமடைவர். அவை
யெரிந்துவிடக் (க-ல்.) அவர்கள் தீயவ
ராய்க் கெடுவர். தனக்கானவரின் வேட்டி
எரியக்காணின் அவர்க்கு ரோகமுண்டாம்.
தன் மஞ்சத்தின் பரப்பு எரியக்காணின்
ரோகம் உண்டாம். தன்னுடம்பு எரிய
(க-ல்.) நோய். தன்விரல்கள் எரிய (க-ல்.)
தான்செய்யுங் காரியங்கள் கெடுதி. தான்ய
ராசியில் தீப்பற்றக் (க-ல்.) அதிவிருஷ்டி
அநாவிருஷ்டியால் நஷ்டம். அவை யெரி
கையில் தான்யங்கள் தீப்பற்ருது தப்பக்
(க-ல் ) புஷ்கலமுண்டாம். நாடு முழுதும்
எரியக்கண்டால் க்ஷாமம் அல்லதுவிஷூசி
முதலிய பிராப்தி. **வாயுசம்பந்தம்** நன்
மணம் ஆக்ராணிக்க (க-ல்.) எண்ணியவை
முடியும். காற்றில்லாது மழை பெய்ய
(க ல் ) செம்மையாகப் பயிர்விளையும். கன்
மழை, பெருமழை, காற்றுமழை, புசல்
முதலிய (க-ல்.) தேசக்ஷோபம், பந்து
நாசம், ரோகம். காற்றின்சுழல், வாயுயந்
திரமுதலிய (க-ல்.) கஷ்டமடைந்து ஒழி
யும். தான் காற்ருடி விடக் (க ல்.)
அதிர்ஷ்டம் உண்டாம். **ஆகாசசம்பந்தம்**
வானம் மேகமில்லாது நிர்மலமாயிருக்க
(க-ல்.) கார்யலாபம். வானம் மேகத்துட

னும், கருமையாகவும் (க-ல்.) ஆபத்து. ஆகாயம் கருமையாகத்தோற்றி ஆங்காங்குச் சிறியவெண்மேகங்கள் காணப்படின் தனக்கு ஆபத்துவந்து ஒழியும். ஆகாயம் ஆங்காங்குச் செவ்வானமிட்டிருக்க (க-ல்.) ரோகோற்பத்தி, நஷ்டம் கல்யாணம், விரும்பினோர் இவ்வாறு காணின் மணம் பெறுவர். மின்னலால் கண்கள்தெறித்துப் போனதுபோலவும், இடி இடித்ததுபோலவும், இடிவிழுந்ததால் தனக்கேனும் பிறர்க்கேனும் அபாயம் நேரிட்டதுபோலவுங் (க-ல்.) ஆபத்து உண்டாம். இருளில் வழி தெரியாது மின்னலால் வழியறியாது முள் முதலியவற்றால் துன்பமுண்டாய்த் தப்பினது போலவும், இடிதன்மீது விழ வந்து தப்பினதுபோலவுங் (க-ல்.) ஆபத்து ஒழியும். இடி தன்தலைக்குத் தப்பி அருகில்விழக் (க-ல்.) தூரதேசப்பிரயாணம். பாட்டைசாரி இவ்வகை (க-ல்.) வழியில் அவனுக்குக் கெடுதிநேரும். மழையில்லாமல் இடிமின்னல் (க-ல்.) வர்த்தகம் பலிக்கும், சுபம். **சூர்யன்** உதயமாய் மேல் எழக் (க-ல்.) கார்யசித்தி. ஆகாயநடுவில் சூரியனிருக்க (க-ல்.) கார்யசித்தி. சூர்யாஸ்தமனம் (க-ல்.) ஆபத்து நஷ்டம், பெண்களாயின் பெண்மகப்பெறுவர். சூரியனை மேகம்மறைக்க (க-ல்.) கெடுதிவரவு. தம் வீட்டின்மீது சூர்யன்வரவு (க-ல்.) வீடுதீப்பற்றும். சூர்யகிரணம் பட (க-ல்.) ரோகம். தன்வழி முழுதும் வெயில் எரிக்க (க-ல்.) திரவிய லாபம். சூர்யனைக் கிரகணம்பிடிக்க (க-ல்.) தீமை, பந்து மரணம். ஸ்திரீகள் காணின் நலமிலாப் புத்திரப் பேறுண்டாம். குற்றவாளி தன்னைச் சூரியகிரணம் மூடப்பட்டதாகக் (க-ல்.) விடுதலையடைவன். **சந்திரன்** பால்போல் பிரகாசிக்க (க-ல்.) அநுகூலம், தனசம்ருத்தியுண்டு. சந்திரனைக் கிரகணம், மப்புமறைத்ததுபோல் (க-ல்.) வீட்டுப்பெண்களில் ஒருவர்க்கு ரோகம் உண்டாம், திருடர்பயம். பாட்டைசாரி இவ்வாறு (க-ல்.) ஆபத்து உண்டாம். சந்திரன் மனிதமுகம்போல் பிரகாசித்திருக்க (க-ல்.) புத்ரோத்பத்தி, தனலாபம். பூர்ண சந்திரனைக் (க-ல்.) சந்தான பிராப்தி. ஒருவன் தலைமுழுதும் சந்திரன் பிரகாசிக்க (க-ல்.) கீர்த்தி. **நக்ஷத்ரங்கள்** செம்மையாய்ப் பிரகாசிக்க (க-ல்.) விருத்தி. மேகத்தால் மறைந்து ஒன்றன்பின் ஒன்று

கக் (க-ல்.) மிகுந்த கஷ்டமுண்டாம். வானத்தில் நக்ஷத்ரங்கள் உண்டோ இல்லையோ எனக் (க-ல்) தரித்திரம், ரோகம் உண்டாம். குற்றவாளிகள் (க-ல்.) பயமொழியும், நக்ஷத்ரங்கள் வீட்டின்மீது விழ (க-ல்.) வீடு தீப்பற்றும், ரோகமுண்டாம், வீட்டைவிட்டாயினும் நீங்குவர். ஒரு வீட்டில் நக்ஷத்ரம் பிரகாசிக்க (க-ல்.) அவ்வீட்டாருக்குத் தீமை. தூமகேதுக்களைக் (க-ல்.) ஆபத்து, க்ஷாமம், நோய். **இந்திரதனசு** கிழக்கில் (க-ல்.) தரித்திரர்களுக்கு நலம், செல்வர்க்குத் தீங்கு. மேற்கில், (க-ல்.) செல்வர்க்கு நலம், தரித்திரர்க்குத் தீங்கு. தம் தலைக்குமீது போட்டிருக்க (க-ல்.) தரித்திரர்க்குத் தனலாபம், செல்வர்க்குத் தரித்திரம் உண்டாம். **மனுஷ்யசம்பந்தம்** கனவில் பிராமணனைக் காணில் ரோகம். மடியுள்ள பிராமணனை அல்லது புரோகிதனைக் (க-ல்.) அக்னி பயம், க்ஷத்திரியனைக் (க-ல்.) க்ஷேமம், கோமுட்டியைக் (க-ல்.) இலாபம். சூத்திரனைக் (க-ல்.) சௌக்கியம். துருக்கனைக் (க-ல்.) பயம், பறையனைக் (க-ல்.) துக்கம். சங்கராசாதியரைக் (க-ல்.) கஷ்டம். தேசபாலகரை (வெள்ளைக்காரரைக்) (க-ல்.) க்ஷேமம். பிணத்தைக் (க-ல்.) விருந்து, போகம், பொருட்பேறு. மாந்திரிகனை (க-ல்.) மோசம். தாய் தந்தையர், குரு, பெரியோர்களைக் (க-ல்.) அபிவிர்த்தி. ஆண்மகன் குழந்தைகளைக் (க-ல்.) மேன்மை; பெண்மகள் அவ்வாறு காணின் ரோகம். தேவமாதர்களைக் (க-ல்.) தனநஷ்டம், கன்னிகை அவ்வாறு காணின் விவாகம். ஸ்திரீகள் அவ்வாறு காணின் சம்பத்து. பெண்போல் தலை வளர்த்தவனை ஆண்மகன் (க-ல்.) பெண்களால் மோசமடைவன். மொட்டைத் தலைச்சியைக் காணில் க்ஷாமம், ரோகம் உண்டாம். மொட்டைத் தலையனைக் (க-ல்.) செல்வமுண்டாம், தேசம் சுபிக்ஷமாயிருக்கும். அழுக்கடைந்த பிள்ளைகளைக் (க-ல்.) சிநேகரால் வஞ்சகம். பிள்ளைப்பேறு (க-ல்.) சுகஜீவனம். பிள்ளைகளின் மரணத்தைக் (க-ல்.) ஆபத்து. சுடுகாட்டைக் (க-ல்.) விரைவில் விவாகம், அன்றிப் பந்து மித்திரர்களின் இறப்பு, பந்துக்கள் சிறை அல்லது தாய் சம்பந்தமான பொருள் தன்னையடையும். சிநேகன் இறந்ததாகக் (க-ல்.) சந்தோஷவார்த்தை

கல்யாணத்தைக் (க-ல்.) சாவார்த்தை தனக்கு நோயாயினும்வரும். கலியாணத்திற்குத் தான் உதவிசெய்ததுபோல் (க-ல்.) ஜெயம். சுபவர்த்தமானம். சுவர்க்கத்தையேனும், சுவர்க்கத்திலிருப்பதாகவும் (க-ல்.) கௌரவமும் தனமும் உண்டாம். பகைவரைக்கண்டு பேசினதாகவும் சண்டையிட்டதாகவும் (க-ல்.) துன்பம். சத்துருக்களின் வேண்டுகோள் (க-ல்.) ஜெயம். இஷ்ட தேவதைகளையாயினும் இறந்த பெரியோரையாயினும் (க-ல்.) காரியசித்தி தனலாபம். இறந்தவருடன் பேசினதாகக் (க-ல்.) கீர்த்தி. பிசாசத்தைக் (க-ல்.) காரியபங்கம். கீழ்ஜாதியில் பிறந்ததாகக் (க-ல்.) லாபம். குருடாகக் (க-ல்.) மோசம், பெண்சாதி விபசாரியாவாள். தான்செவிடாகக் (க-ல்.) தன்னைப் பிறர் மோசஞ்செய்வர். தன்னைப் பித்தனாகவும் பித்தனிடத்திலிருப்பதாகவும் (க-ல்.) சம்பத்து. தன்னைப் பிசுனனாகவும் அப்படிப்பட்டவர்கள் கூட்டுறவு உள்ளவனாகவும் (க-ல்.) தீமை. தன்னைத் தூக்குவதாகக் (க-ல்.) காரியசித்தி. கால் முரிந்ததாகக் கண்டால் எண்ணிய காரியமுடியாது. பொய்க்கால் கட்டிக்கொண்டு நடப்பதாகக் (க-ல்.) ரோகம். தன்னைத் திகம்பரனாகக் கண்டால் தரித்திரம் அபகீர்த்தி. தன்கைகள் முன்னிலும் அதிக பருமனுள்ளவைகளாகக் (க-ல்.) உத்தியோக லாபம். கைகள் ஒடிந்ததாகவும் எரிந்ததாகவும் (க-ல்.) ஏழையாவான். பெண்கள் இவ்வாறு காணில் புருஷனாயினும் பிள்ளையாயினு மிறப்பன். வலது கையால் வேலைசெய்வதாக (க-ல்.) அதிர்ஷ்டம். கைநிறைய மயிர்நிறைந்திருப்பதாகக் (க-ல்.) கஷ்டமாயினும் காவலாயினும் உண்டாகும். தனக்குக் கொம்புகள் முளைத்ததாகக் (க-ல்.) தனலாபம் உத்தியோகலாபம். பிறருக்கு அவ்வாறிருக்கக் (க-ல்.) அவர் நோயிலிருப்பர். தன்தலை பெரிதாயும் உயர்வாயும் இருக்கக் (க-ல்.) பிரசித்தி. ரோகிகன் (க-ல்) நோய். பிறர் தன்தலையை உடைத்ததாகக் (க-ல்.) பெண்சாதிக்காயினும் பிள்ளைக்காயினுங் கண்டம். மிருகபக்ஷிகளின் தலையைத் தான் உடைத்ததாகக் (க-ல்.) கீர்த்தி. சிங்கம் புலி முதலியவைகளின் தலை தனக்கிருப்பதாகக் (க-ல்.) ஜயம். குதிரை, கழுதை, நாய் முதலியவற்றின் தலை தனக்குள்ளதாகக் (க-ல்.) அடிமை. தலைமுழுகக் (க-ல்.) ஆபத்து நிவர்த்தி. தன் மூக்கில் இரத்தம்வடியக் (க-ல்) நஷ்டம். கர்ப்பங்கரைந்ததாகக் (க-ல்.) கஷ்டம்விலகும். முகம்வாடியிருந்ததாகக் (க-ல்.) திரவியலாபம். பற்கள் ஆடுவதாகக் (க-ல்) பந்துமரணம். வாந்தி அல்லது பேதியானதாகக் (க-ல்.) தரித்திரர்களுக்குத் தனமும் தனவான்களுக்குத் தரித்திரமும் உண்டாம். சிங்காரவனத்தில் வேட்டையாடுவதாக (க-ல்) சௌக்கியம். சமுத்திர யாத்திரை (க-ல்.) தனலாபம். சிரித்ததாகக் (க-ல்) துக்கம். தவஞ்செய்ததாகக் (க-ல்) லோகோபகாரம். ஒருவன்மேல் கோபித்ததாகக் (க-ல்.) அவன் சிநேகிதனாவன். தன்னைப் பிறர் அடித்ததாகக் (க-ல்.) சிநேகம். கத்தியால் அடிக்கக் (க-ல்.) ஆபத்து. சிநேகனிடத்திருந்து விடை பெற்றுக்கொள்வதாகக் (க-ல்.) துர் அதிர்ஷ்டம் வியாதி. தன்காலைப் பிறர் மிதிப்பதாகக் (க-ல்.) இச்சகத்தால் பொருள் நாசம். கிழவியைக் கல்யாணஞ்செய்ததாகக் (க-ல்.) தனலாபம். எதையோகண்டு பயந்ததாகக் (க-ல்.) காரியசித்தி. கூவுகிறதாகக் (க-ல்.) துக்கம். அழுகிறதாகக் (க-ல்.) அபிவிர்த்தி. சண்டையிடுவதாகக் (க-ல்.) காரியசித்தி. முத்தமிடுவதாகக் (க-ல்.) மோசம். எண்ணெய் தேய்த்துக்கொள்ளுவதாகக் (க-ல்.) ரோகம், திரவியநஷ்டம். அம்மைவார்த்ததாகக் (க-ல்.) தனப்பிராப்தி. கொரட்டையிட்டு உறங்குவதாகக் (க-ல்.) சுகஜீவனம். தான் ஏகிறுவதாகக் (க-ல்.) காரியபங்கம், தன் வீதியில் ஒருவரிறப்பர். தானிறந்ததாகக் (க-ல்.) நலம். பந்துக்களிறந்ததாகக் (க-ல்.) பீடைநிவர்த்தி. அவர்களைத் தான் கொன்றதாகக் (க-ல்.) தன்னால் உபகாரத்தையடைவர். தன்னை அவர்கள் கொன்றதாகக் (க-ல்.) தனலாபம். தான் மீண்டும் கலியாணஞ் செய்துகொண்டதாய்க் (க-ல்) ரோகம். மற்றவர்கள் (க-ல்.) சுபம். ஒரு பெண்ணைத் தான் அபகரித்துக் கொண்டு போவதாய்க் (க-ல்.) கேட்டின் வரவு. தான். சிறையிலிருப்பதாகக் (க-ல்.) அதிகாரவிர்த்தி. **ஜந்து சம்பந்தம்**—எறும்புகள் சாரையிட்டு ஓடுவதாகக் (க-ல்.) பிரயாணம், சந்தான விர்த்தி, சுகஜீவனம், வியாபாரவிர்த்தி. எறும்புகள் அங்குமிங்கும் ஓடுவதாகக் (க-ல்.) முயற்சி கெடும். ரோகிகள் எறும்புகளைக் (க-ல்.) நோய்

நீங்காது. கொசுகு, ஈ முதலியவும் இரக்கையுற்ற புழுக்களையும் (க-ல்.) ரோகமில்லாதவர்களுக்கு ரோகமுண்டாம். ரோகிகள் (க-ல்.) நோய் நீங்கும். தன்னை ஈக்கள் மொய்க்கக் (க-ல்.) பகைவர் மிகுவர், பாரியை விபசாரியாவள். தேனீக்கடித்ததாகக் (க-ல்.) ஒழுக்கங் கெடும். தன் வீட்டில் தேன் கூண்டு கட்டியதாகக் (க-ல்.) நலம். மூட்டைப் பூச்சியைக் (க-ல்.) சத்துருவால் உத்தியோகக் கெடுதி. பாம்பு, தேள், சிலந்தி போவதாகக் (க-ல்.) ஜயம். தன் வீட்டில் பிரவேசிக்கக் (க-ல்.) விரோதம். அவைகளைக் கட்டியிருக்கக் (க-ல்.) நோய். மீன், தவளை முதலிய ஜலசரங்களைக் (க-ல்.) நலம். ஆமையைக் (க-ல்.) தனலாபம், கஷ்டம் உண்டாம். முயலைக் (க-ல்.) பந்து தரிசனம், சந்தானம் கெடும். பூனையைக் (க-ல்.) கெடுதி, அபநிந்தை யுண்டாம். அது தன்வீட்டில் உலாவக் (க-ல்.) தம்பொருளைத் திருடுவர். எலிகளைக் (க-ல்.) தீமை. வீட்டில் எலி வளை தோண்டக் (க-ல்.) திரவிய நஷ்டம். நாய் தன்னிடம் வரக் (க-ல்.) நண்பர் வரவு. தன்னைக் கண்டு குலைப்பதாகக் கண்டாலும் கடிப்பதாகக் கண்டாலும் விரோதம். நரியைக் (க-ல்.) தீமை. குரங்கைக் (க-ல்.) கலகம். ஆடுகளைக் (க-ல்.) தனசமிருத்தி அல்பாயுளுள்ள பிள்ளைகளுண்டாம். அவைகளையேறக் (க-ல்.) மரணசமீபம். பசுக்கள் மேயக் (க-ல்.) நன்மை. மந்தையை ஒட்டிக்கொண்டுபோகக் (க-ல்.) தீமை. பசு தன்னைத் துரத்தக் (க-ல்.) ஸ்திரீயினால் அபகீர்த்தியுண்டாம். பால் கறக்கக் (க-ல்.) நோய் வரவு. வெள்ளைப் பசுவைக் (க-ல்.) நலம். தன்னை எருது துரத்தக் (க-ல்.) தீமை. எருது இடிக்க, மிதிக்கக் (க-ல்.) தன் அதிகாரங் கெடும். குதிரையைக் (க-ல்.) பந்து தரிசனம், யாத்திரை. அதன்மேலிருந்து வீழ்ந்ததாகக் (க-ல்.) ஆபத்து. சவாரி செய்வதாகக் (க-ல்.) சுகஜீவனம். கழுதையைக் (க-ல்.) தன் தீமையொழியும். தன்னைத் துரத்துவதாகக் (க-ல்.) பகைவரால் கெடுதிவந்து நீங்கும். அதன்மேல் ஏறுவதாகக் (க-ல்) மரணசூசகம். ஒட்டகையைக் (க-ல்.) பிரயாசையால் ஆரோக்கியமும், நலமும் உண்டாம். யானையைக் (க-ல்.) காரியசித்தி, பிரதிஷ்டை. சிங்கம், புலி முதலிய கொடிய மிருகங்களைக்கண்டாலும், கடித்ததாகக்கண்டாலும் விரோதங்களுண்டாகும். **பக்ஷிசம்பந்தம்** — பக்ஷிகள் பறக்குங்கால் (க-ல்.) தனமுளான் தரித்திரத்தையும், தனமிலான் தனத்தையு மடைவன். அவை கூண்டினின்று பறப்பதாகக் கண்டாலும், பிடித்ததாகக்கண்டாலும் சம்பத்துண்டாம். பக்ஷிகளின் கூண்டும், அதில் குஞ்சுகளும், முட்டைகளும் தனக்கு அகப்படக் (க-ல்.) சுபம். பறவாக் குஞ்சுகளுள்ள கூண்டு அகப்பட்டதாகக் (க-ல்) வழக்கு நேர்ந்து அபஜெயமாம். அநேக முட்டைகளைக் (க-ல்.) திரவியப்பிராப்தி. முட்டைகளைத் தான் தின்பதாகக் (க-ல்.) தரித்திரம். காக்கை பறக்கவும் கூவவும் (க-ல்.) தீமை. தலைமீது பறக்கக் (க-ல்.) ஆயுள்க்ஷீணம். சிட்டுகள், கொக்குகள் முதலியவற்றைக் (க-ல்.) நலம். அவை ஒன்றினொடொன்று சண்டையிடக் (க-ல்.) கஷ்டம். பறக்கக் (க-ல்.) நலம். புறாக்களைக் (க-ல்.) நலம். புருஷன் பெண்சாதியாலும், பெண்சாதி புருஷனாலும் திக்கமடைவர். பந்துக்களைக் (க-ல்.)வியாபாரலாபம். மயில்களைக் (க-ல்.) நன்மையுண்டாம். கழுகைக் (க-ல்.) சோரபயம். கருடனைக் (க-ல்.) காரியசித்தி. ஆந்தை, கோட்டான் (க-ல்.) தனஹானி ரோகம், சிறையுண்டாம். **ஆகாரசம்பந்தம்** — பசிதீர்ந்ததாகக் (க-ல்.) திருப்தி. தான் போஜனஞ் செய்வதாகக் (க-ல்.) குடும்ப கலகம். பந்துக்களுடன் உண்டதாகக் (க-ல்.) விவாகம். தான் தண்ணீர் உண்டதாகக் (க-ல்.) அபிவிர்த்தி. கள்ளு, சாராயம், இரத்த மிவை உண்டதாகக் (க-ல்.) திரவியலாபம். போஜனத்தைக் (க-ல்.) காரியசித்தி. தான் சமைப்பதாகக் (க-ல்.) அடிமையுண்டாம். கூழ்தின்னக் (க-ல்.) சந்தானவிர்த்தி. வெண்ணெயைக் (க-ல்.) உத்தியோகலாபம். பாயசங் (க-ல்.) லாபம். பால், பாற்பாண்டம், தயிர் (க-ல்.) நன்மை. காய்கறிகளைக் (க-ல்.) கீர்த்தி, தனலாபம், நலமுண்டாம். இலைக்கறி முதலிய தின்றால் நோய். பெல்லம் தேன் முதலிய தித்திப்புவகைகளைத் தின்றால் தரித்திரம். வேப்பங்காய் முதலிய கசப்புக்காய்களைத் தின்றால் தீமையுண்டாம். காரமுள்ள காய்கள் முதலிய தின்றால் இரகசியம் வெளிப்படும். புளியைக் (க-ல்.) பந்துதரிசனம். உப்பு தயிர் முதலியவைகளைக் (க-ல்.) தீமை. கோதுமை, நெல், சோள

முதலியவைகளைக் (க-ல்.) தனலாபம் அம்மையுண்டாம். மருந்துகளைக் (க-ல்.) ரோகமில்லாதவர் ரோகமடைவர், ரோகமுள்ளவர் ரோகம் நீங்குவர். தாம்பூலங் (க-ல்.) தனலாபம். தாம்பூலம் போட்டுக் கொண்டால் விரோதம். **இதாசம்பந்தம்** கடைவீதியைக் (க-ல்.) நலம். அக்கடைக்குக் குதிரையேறி போகக் (க-ல்.) தீமை. கோவிலைக் (க-ல்.) கலகம். கோவிலில் தேவனைப் பூஜிக்கக் (க-ல்.) வியாஜ்ஜியம். பஜனையாயினும், நாடகமாயினும் (க-ல்.) சுகஜீவனம். புட்பங்கள் அல்லது அவைகளைச் சூடிக்கொள்ளக் காணினும் திருவிழா சந்தோஷம், விவாகமுண்டாம். கையில் வைத்திருந்த பூவாடக் (க-ல்.) தீமை. பழத்தோடுகூடிய மரங் (க-ல்.) திரவியலாபம், சந்தானவிர்த்தி. காயுள்ளமரம் (க-ல்.) காரியஹானி. முத்து ரத்னங்களைக் (க-ல்) நலம். அவை கையினின்று நீங்கக் (க-ல்.) தீமை. பொன்னுணயத்தைக் (க-ல்.) சுபம். வெள்ளியைக் (க-ல்.) எண்ணின காரியங்கெடும். ஈயத்தைக் (க-ல்.) விவாதம். இரும்பைக் (க-ல்.) தரித்திரம். பையாயினும் மூட்டையாயினுங் (க-ல்.) சௌக்கியமும், சந்தானவிர்த்தியு முண்டாம். எழுதின காகிதத்தைக் (க-ல்.) கஷ்டம். சாயங்காலமானதாகக் (க-ல்.) தீமை. கண்ணுடியைக்(க-ல்.) தரித்திரர்க்குப் பாக்கியமும், செல்வர்க்குத் தரித்திரமும் உண்டாம். பாதரக்ஷைகள் புதிதாகக் தரிக்கக் (க-ல்.) சம்போகம். மலத்தை மிதித்ததாகவும், பூசிக்கொண்டதாகவுங் (க-ல்.) தனலாபம். கண்டதாகக் (க-ல்.) போனபொருள் மீளும். தான் குப்பைமீது நிற்கக் (க-ல்.) கார்ய, புத்ர, தனவிர்த்தி. சதுரங்கமாடக் கண்டாலும் யுத்தம் சூதுமுதலிய ஆடக்கண்டாலும் தீமை. சங்கீதம் தான் பாடக் (க-ல்.) துக்கம். பிறர்பாடக் (க-ல்.) காரியசித்தி. வீணை பிடீல் முதலிய வாசிக்கக் கேட்டால் சுபம் நடக்கும். மணியடிக்கக்கேட்டால் சுபவர்த்தமானம்.

**கணுநூல்**—கணுப்பயனை அறிவிக்கவந்தநூல். இது கணபுரத்தேவன் கட்டுரைப்படி பொன்னவனு லியற்றப்பட்டது.

**கனி** — கனித்திரனைக் காண்க.

**கனித்திரன்** — 1. பிரசை அல்லது க்ஷுபன் குமாரன், விவிம்சனுக்குப் பாட்டன். இவன் தம்பியரில் சவுரியென்பவனிவனைக்கொல்ல ஒரு புரோகிதரால் அபிசாரயாகஞ் செய்வித்து அதிற் பூதத்தையுண்டாக்கி இவன்மீது எவ அப்பூதம் புண்ணியசொரூபியாகிய இவனைக் கொல்ல அஞ்சி மீண்டு அனுப்பின புரோகிதரையும் தம்பியரையும் மாய்த்தது. தம்பியரிறந்த வகையறியாது வசிட்டரா லுணர்ந்து தன்னாலன்றோ இறக்க நேரிட்டதென்று இராச்சியத்தை வெறுத்துத் தன் குமரன் சுபனுக் கரசளித்து வனத்துக் கேகினன். இவனுக்குக் கனியெனவும் பெயர்.

2. கனித்ரன் வம்சத்தவனான விவிம்சன் குமரன். இவன் புத்திரப்பேற்றினை விரும்பிக் கௌமதிக்கரையில் இந்திரனை நோக்கித் தவஞ்செய்து பலாசுரன், கரந்தமன்எனுங் குமரரைப்பெற்றனன். இவன் புத்திரரில்லாமையால் யாகஞ்செய்யவெண்ணிக்காட்டில் யாகப்பசுவின் பொருட்டு வேட்டைக்குச் சென்றனன். பசுக்கள் இவனைக்கண்டு ஓட, ஆடொன்று துணிவுட னெதிரில் வந்து அரசனே யென்னை யாகப்பசுவாகக்கொள் என, அரசன் ஆச்சரியமடைந்து மிருகத்தை நோக்கி மிருகங்கள் மனிதரைக் காணின் அஞ்சி ஓடும். நீ அஞ்சாது என்னிடம் வந்ததற்குக் காரணம் என்னென்றனன். ஆடுநான் உனக்குப் புத்திரனில்லாததறிந்து யாகப் பசுவாய் உபயோகப்படின் உனக்கும் புத்திரன் உண்டாவான் எனக்கும் நற்கதியுண்டாம் என்கையில் மற்றொரு மிருகம் அரசனைநோக்கி அரசனே அதனை யாகப்பசுவாகக்கொள்ளற்க. என்னைக்கொள்க என்று வந்தது. அரசனிரண்டாவது மிருகத்தைநோக்கி அதனினும் உனக்கு என்னஉயர்வென்றான். இரண்டாவது ஆடு அரசனே முதலாட்டிற்குப் புத்திரரில்லை எனக்குப் பெண்சாதியும் புத்திரரும் பலருளர் அவர்கள் உதயத்தில் மேய்ச்சலுக்குப் போய்த் திரும்புமளவும் அவர்க்குப் பிறரால் துன்பம் நேருமோ என்னமோ என்கிற கவலையதிகம் ஆதலால் உமக்கு யாகப்பசுவாய் அத்துன்பத்திருந்து நீங்கிச் சுவர்க்கம் அடைவேன் என்றது. அதை அரசன் கேட்டு அவற்றைப் பசுவாகக் கொள்ளாமல் கோமதி நதியில் இந்திரனையெண்ணித் தவஞ்செய்து பலாசுவனைப் பெற்றனன்.

**கனிநேத்திரன்**--இக்ஷ்வாகு வம்சத்தவனான விவிம்சன்புத்திரன். இவன்புத்திரன்சுவர்சஸ்,

**கனிவகைகள்—பிரேட்புருட் (Bread fruit)** இது தென்கடற் தீவுகளில் உண்டாம் ஒருவித மாக்கனி. இம் மரம் அகன்ற இலைகளைப் பெற்று 20-அடிகளுக்குமேல் வளருகிறது. இதன் காய்கள் பலாக்காய்களின் மேற்புறத்தில் முள்கள்உள்ளனவாய் உட்புறத்தில் பலாச்சுளைகள்போல் கொட்டைகளுடன் இருக்கின்றன. அத்தீவிலுள்ளார் இதை ஆகாரமாக் கொள்கின்றனர். **பனை** — (Banana) இது, ஒருவகையான வாழை இனத்தைச் சேர்ந்த மரம். உஷ்ணதேச விளை பொருள். வாழைக் குலைபோன்று பல காய்களைப் பெற்றுத் தொங்குவது. இதை ஆகாரமாக் கொள்கின்றனர். **அன்னுசிப்பழம்** — (Pineapples) இது, பெர்மூடா தீவுகளிலிருந்து கொண்டுவரப் பட்டதாகக் கூறுகின்றனர். இது இந்தியாவில் பல இடங்களிலும் தற்காலம் உண்டு. இது, கற்றாழைபோல் மடல் கொண்ட புல்லின் வகையைச் சேர்ந்தது. பழம், செடிக்கு நடுவிலும் பக்கங்களிலும் உண்டாம். இதன் பழத்தின்மேல் பாகம் உறுதியான செதிள்கள் போலும் புறணியால் மூடப்பட்டுக் கலசம் போலுள்ளது. மதுரம் வாய்ந்தது. **கிச்சிலி** — இது, ஆசியாகண்டத்தில் விளையும் செடிவகைகளில் ஒன்று. உறுதியான செடி. பலவகைப் பிரிவு கொண்ட சுளைகளையும் வித்துக்களையும் உடையது. புளிப்பும், மதுரமும் உடையது. **எலிமிச்சை**— இது, ஆசியாகண்டத்து விளைபொருள்களிலொன்று. மிக்க புளிப்புள்ளது. இச்செடி, பத்தடிக் குட்பட்டே யிருக்கும். இலை ஒருவித காரமான நெடியுடன் கூடியது. இதிலிருந்து ஒருவித உப்பு எடுக்கப்படுகிறது. இந்தியாவில் ஊறுகாயாக உபயோகிக்கின்றனர். **திராக்ஷை** — ஒருவித கொடிப் பயிர். இது, ஸ்பெயின், போர்சுகல், சிசலி, ஜெர்மனி, துர்க்கி, சிரியா, ஐயோனியன் தீவுகள், பிரான்ஸ், இந்தியா முதலிய இடங்களில் பயிரிடப்படுகிறது. இது கொத்துக் கொத்தாகக் காய்களைப் பெற்றுப் பழுக்கும். இது புளிப்பும், இனிப்புமுள்ள பழங்களைத் தரும். இதில் ஒயின் எனும் சாராயமும், பிராந்தியும் காய்ச்சுகின்றனர். இது, தேனில் பதஞ் செய்யப்பட்டு ஏற்றுமதியாகிறது. **அத்தி** — இது உஷ்ணதேசப் பொருள். இதன் பூத் தோற்றுமுன் பிஞ்சுடன் வரும், பழம் பல விதைகளுடையது. இது துர்க்கிகிரீஸ் முதலிய இடங்களிலிருந்து தேனில் பதஞ் செய்யப்பட்டு ஏற்றுமதியாகிறது. **பேரீந்து** — இது வட ஆபிரிகா, அரேபியாவிலுண்டாம் ஈச்சமரத்தின் பழம். இது பாகில் பதஞ் செய்யப்பட்டு ஏற்றுமதியாகிறது. அது அந்நாட்டு வழைகளுக்கும் குதிரைகளுக்கும் ஆகாரமாகிறது. **பீச்** — (Peach) ஒருவித கோவைப்பழம் போன்ற மதுரமான பழவகை. இதில் பல ஜாதி உண்டு. இது பாரசீக தேசத்து விளைபொருள்களிலொன்று. இவையன்றி ஆபில், பேரிக்காய், ஸ்டராபெர்ரி, கூஸ்பெர்ரி முதலிய பழங்களும் உண்டு. மற்றவை ஆசியா கண்ட தேசங்களிலுண்டாம். அவை, மா, பலா, வாழை, பெருங்கிச்சிலி, நாரத்தை, பலவகை கிச்சிலி, கொய்யா, மாதுளை, தமரத்தை மெலாம்பழம், வெள்ளரிப்பழம், பிச்சைப் பழம், நாவல், சம்புநாவல், வெண்ணுவல், சிற்றீசன், களா, காரை, கொடிமுந்திரி, கொட்டைமுந்திரிப் பழம், பனம்பழம், பாலைப்பழம், சாதிநாரத்தை, கொளிஞ்சிநாரத்தம்பழம், கொம்மட்டி சீதா, நாரத்தம்பழம் முதலியவை.

**கனேரிப்பறவை** — இது, அமெரிக்கா கண்டத்துக் கனேரித்தீவிலுள்ள பொன்னிறப் பறவை. இது இந்து தேசத்துக் கிளி, நாகணப் புட்களினும் நன்ருகப் பாடி நடிக்கவல்லது.

**கன்மசாதாக்யம்**—நிவர்த்தி எனும் பெயரையுடைய தொழிலாதலால் இந்தக் கிரியா சத்தியிலே தோற்றுதலால் நாதமயம் எனும் ஞானலிங்கமும், பேதமற்ற விந்துமயமான கிரியாபீடமும் ஏறுமற் குறையாமல் கூடிப் பஞ்சகிருத்ய மெனும் தொழிலைச் செய்வதாகிய சிவமூர்த்தம். இவர் சத்யோசாத முகத்தால் பிரமாவையும், வாமதேவ முகத்தால் விஷ்ணுவையும், அகோரமுகத்தால் உருத்திரரையும், தத்புருட முகத்தால் மகேசுரரையும், ஈசான முகத்தால் சதாசிவரையும் அதிட்டித்து நிற்பர். (சதா.)

**கன்மம்** — இது, சத்தியமாகிய ஆன்மஞானமும், அசத்யமாகிய மாயாகாரியமும் கூடினவிடத்தில் உண்டானதாதலால் புண்ணியபாப ஸ்வரூபமாய்ப் பிரளயகாலத்தில் ஸமஸ்காரா வஸ்தையாய் மாயையிலேயிருந்து சிருஷ்டிகாலத்தில் ஆன்மாக்களுக்குத்

தனுவாதிகளை யுண்டாக்குதற்கு ஏதுவாய், புண்யபாவங்கள் பொருந்துதற்கு ஏதுவாய் நல்வினை தீவினை செய்யுமிடத்து உடனாய் நிற்பதாய், அநாதியே மும்மலங்களின் ஒன்றாய், மனோவாக்குக் காய வியாபாரமாகிய காரிய கர்மத்திற்கு மூலகாரணமாய் காரணமலம் எனப்பட்டுச் செய்த கன்மம் நசிக்கத் தான் நசிக்காது சூக்ஷ்மித்திருத்தலால் அதிர்ஷ்டம் எனப்பட்டு அசுத்த மாயா போகங்களாகிய ஆதியாத்மிகம் ஆதிபௌதிகம், ஆதிதெய்விகமெனும் தாபத்ரய காரணமாய்ப் பிரவாகாநாதியாய், வருவதாம். இது, சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம், அதிசூக்ஷ்மம், சூக்ஷ்மம், தூலமெனப் பலதிறப்படும். இதன் விரிவைச் சிவாகமங்களுட் காண்க. (சித்தா.)

**கன்முறைபழிச்சல்** — நிழல்விடும் அழகிய மணிப்பூணினையும் வீரக்கழலையு முடைய போர் விருப்பத்தோனுடைய கல்லினை ஏத்தியது. (பு. வெ. பொதுவியற்.)

**கன்யாதீர்த்தம்** — வாயுவால் சபிக்கப்பெற்ற குசநாபன் புத்திரியைப் பிருகத்தன் அச்சாபத்தைநீக்கி, மணஞ் செய்துகொண்டிருந்த இடம்.

**கன்யாகுமரி** — பரசுராமர் மலையாளக்ஷேத்திரம் உண்டுபண்ணும்பொழுது அவர் சிவசத்தியைத் தாபித்துப் பூசித்தனர். அந்தச் சத்தி சிவமூர்த்தியைத் திருமணஞ் செய்துகொள்ளத் தவம் புரிந்தனள். அவர் சத்தியை மணந்துகொள்ளாதலால் என்றுங் கன்னியாகவே எழுந்தருளி யிருக்குந்தலம். Cape, Comorin.

**கன்யை** — விதர்ப்பன் பாரி. இவளைச் சியாமகன் கலியாணஞ்செய்ய அழைத்து வந்து தன் பிள்ளைக்குக் கல்யாணஞ் செய்வித்தான்.

**கன்றாப்பூர்** — சுதாவல்லி யெனும் வித்யாதரப் பெண் கைலையில் சிவமூர்த்தியின் சந்நிதானத்தில் நடித்துச் சிவபிரானுக்குக் களிப்புண்டாக்கினள். இவள் உமையுருவங் கொண்டதால் உமை சினந்து மண்ணுலகில் பிறக்க எனச் சபித்தனள். அவ்வாறே இவள் கமலவல்லியெனப் பிறந்து சிவபூசை கடைப்பிடித்து வருகையில் இவள் கணவன் இவள் சிவபூசை செய்தலைப் பொறாது சிவலிங்கத்தைக் கிணற்றில் எறிந்தனன். அவன் அவ்வகை செய்தும் அவள் சிவபூசை கடைப்பிடித்து ஒரு கட்டுத் தறியைச் சிவலிங்கமெனப் பாவித்துப் பூசிக்க அதை அவன் மண்வெட்டியால் எறிந்தனன். அங்கு உதிரங்கண்டு அவன் இறக்க இவளுமிறந்தனள். அந்த ஆப்பு சிவலிங்கமாயிற்று. (வீரசிங் பு.)

**கன்னடுதல்** — வீரன் நாமத்தைக் கல்லிலே யெழுதி அழகுபெறக் கல்லை நட்டது. (பு. வெ. பொதுவியற்.)

**கன்னபிரமையர்** — ஒரு வீரசைவ அடியவர், இவர் சிவனடியார் அல்லாதார் வீட்டில் கன்னமிட்டு வந்த பொருளால் சிவனடியவர்க்கு நிவேதனஞ் செய்து முத்தி பெற்றவர்.

**கன்னம்பாளனார்** — இவர் பெயர் கண்ணம் பாளனாரெனவும் பிரதி பேதமுண்டு. அகத்தில் கருவூர்க் கண்ணம்பாளனா ரென்றிருத்தலால் இவர் ஊர் கருவூர். 'கனப்பான்' என்று ஊர் இருத்தல் போலக் 'கன்னம்பாள்' என்பதும் ஊராக இருக்கலாம். அகத்தில் கருவூர்க் கண்ணம்புல்லனாரென் ஒருவர் பெயர் காணப்படுகின்றது. இவர்கள் இருவரும் பாடிய வெல்லாம் பாலைத்திணையா யிருத்தலானே இருவரும் ஒருவரே யெனவும் ஏடெழுதுவோர் மிகையால் பெயர் பேதப்பட்ட தெனவும் ஊகிக்கலாம். கருவூர் சேரனாட்டகத்துள்ளது. இவர் கூறிய குறைநயப்பு நண்ணுணர்வினோரை இனிது மகிழ்விக்கும்; அகம்-கஅ0. இவர் சேரமான் கோக் கோதையையும் அவனது வஞ்சிமூதுரையும் பாராட்டிக் கூறியுள்ளார்; அகம்-உகரு. இவர் பாடியனவாக நற்றிணையில் கசஅ-ம் பாடலொன்றும் அகத்தில் மூன்றுமாக நான்கு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**கன்னரதேவன்** — இவன் ஒரு சோழ அரசன். இவன் உத்தேசம் 971 - கி. பி. இல் இறந்தான். இவனிறந்த பிறகு கொட்டி தேவனும், கக்கராஜனும் அரசாண்டனர். பின்னால், கண்டராதித்தன் சில நாள் அரசாண்டான். அரிஞ்சயன் சில நாள் அரசாண்டான். பராந்தகன் II இவன் அரிஞ்சயன் குமரன். இவனுக்குச் சுந்தரசோழன் என ஒரு பெயர். இவன் வீரபாண்டியனுடன் சேவூரில் யுத்தம் புரிந்து இறந்ததாகவும் கூறப்படுகிறது. இவன் மனைவி வானவன்மாதேவி. இவள் கணவனுடன் சககமனம் செய்தாள். இவனுக்குப் பொன் மாளிகைத் துஞ்சிய தேவன் என ஒருபெயர் எண்டு. இவனுக்

குப் பிறகு கண்டராதித்தன் குமரன் **மதுராந்தகன்.** பட்டமடைந்தான்.

**கன்னர்**—செங்குட்டுவனுக்கு நட்பினாகிய ஆரியவரசர் (சிலப்).

**கன்னி**—1. ஒரு தீர்த்தம்.

2. சம்பாதி எனும் துர்க்கை காந்தனெனும் அரசனைப் பரசுராமனிடம் யுத்தத்திற்குப் போகாதிருக்கும்படிக் கட்டளையிட்டவள். (மணிமேகலை.)

**கன்னிகா** — ஒரு மாயாதேவி.

**கன்னிகாபரமேச்வரி**—கோமட்டிகள் குலத்தில் குசுமசேர்ஷ்டி யென்பவர் ஒருவரிருந்தனர். இவர் பாரியைக் குசுமாம்பிகை இவர்கள் புத்திரர்கள் வேண்டிப் புத்ரகாமேஷ்டி செய்தனர். இவர்களுக்கு ஒரு புத்ரனும் ஒரு புத்ரியும் பிறந்தனர். புத்ரனுக்கு விரூபாக்ஷன் என்றும், பெண்ணுக்கு வாசவாம்பிகை அல்லது வாசவகன்னிகை அல்லது கன்னிகாபரமேச்வரியென்றும், பெயரிட்டு வளர்த்து வந்தனர். கன்னிகை அழகில் தன்னை யொப்பவரின்றி யிருந்தனள். இவ்வாறிருக்கையில் இராஜ மகேந்திரத்தரசனாகிய விஜயார்க்கன் குமரன் விஷ்ணுவர்த்தனன்தான் இராஜ்யங்களைச் சுற்றி வருகையில் குசும செட்டியால் நடத்தப்பட்ட இவ்விடம் வந்தனன். செட்டி அரசனை எதிர்கொண்டு மர்யாதை நடத்தினன். அரசன் பவனி வருகையில் பட்டணத்துப் பெண்கள் அரசனுக்கு ஆர்த்தி செய்தனர். அவர்களில் கன்னிகையும் ஒருத்தி. அரசகுமரன் இவளைக் கண்டு மணக்கவிரும்பித் தந்தையைக்கேட்டனன். தந்தை மறுக்கக்கண்டுபயமுறுத்தியதால்தந்திரமாய்ப் பின்னிரண்மோதம் பொறுத்து மணஞ் செய்வதாகக் கூறியனுப்பிவிட்டு (18) பட்டணவாசிகளாகிய செட்டிகளை வருவித்து யோசிக்கப் பலரும் பலவிதமாகக் கூறக்கேட்டுத் தங்களாசாரியராகிய பாஸ்கராசாரியரிடம்கூற அவர் உங்கள் குலத்தைக் காக்கவேண்டில் தீப்புகுதலே நலம் என, அவ்வாறே பெரும்பான்மையோர் தீப்புகுதல் சம்மதியாது ஒடினர். ஒழிந்த (102) கோத்திரவர் தீப்புகச் சம்மதித்து ஏழுவயதுள்ள குசுமாம்பியைக் கேட்க அச்சிறுமியும் சம்மதித்தனள். அவ்வாறே (103) தீக்குழிகள் நாகரேச்வர சுவாமி சந்நிதியில் அமைக்கப் பட்டன. ஜாதித்தலைவன் வீரகங்கணம் புனைந்து மனைவியுடன் தீக்குழிக் கருகிற்சென்று தங்கள் சந்ததியார்க்கு நலங்கூறி வசவாம்பிகையைத் தீப்புகக்கூற அவள் தன்னுடன் தீப்புகத் துணிந்த கோத்திரங்களை வாழ்த்தித் தீப்புகுந்தனள். அவள் தீப்புகுதுகையில் விஷ்ணுவர்த்தனன் இவ்வெல்லையில் வருவனேல் அவன் தலைவெடிக்கக்கடவதெனச் சாபமும் இட்டனள். பிறகு (102) கோத்திரத்தவரும் தீக்குழி வீழ்ந்து சுவர்க்கம் புக்கனர். இச்செய்தி கேட்ட விஷ்ணுவர்த்தனன் யானையினின்று வீழ்ந்து தலையுடைந்து இறந்தனன். இவனுடல் இவன் குமரன் இராஜநரேந்திரனால் தகிக்கப்பட்டது. இராஜராஜ நரேந்திரன் கோமட்டிகளைச் சமாதானஞ் செய்து குசுமசேர்ட்டியின் குமரன் விருபாக்ஷனையூருக்குத் தலைவனுக்கி வாசவாம்பிகை (கன்னிகாபரமேச்வரி) க்குக் கோயில் கட்டுவித்துச் சிலாப்பிரதிஷ்டை செய்வித்தான்.

**கன்னிகாப்பு** — காஞ்சிபுரத்திற்குப் பெயர். காளியால் காக்கப்பட்டதனால் இப்பெயர் பெற்றது.

**கன்னிகையர்**—(ரு). அகலிகை, திரௌபதி, சீதை, தாரை, மந்தோதரி.

**கன்னிகைகளின் வயது** — பன்னிரண்டு வயதுள்ள கன்னிகை — கௌரி, ஒன்பது வயதுள்ள கன்னிகை ரோஹிணி, பத்து வயதுள்ளவள் கன்னிகை, பத்து வயதிற்குமேற்பட்டவள் ரஜஸ்வலை. (பரா-மா).

**கன்னிக்குடிப்பூதம் புல்லனூர்** — இவரது இயற்பெயர் புல்லன். பூதன் தந்தை பெயர்போலும். ஊர் கன்னிக்குடி. இப்பெயர்கொண்ட ஊர் பல நாடுகளிற் பலவிருத்தலால் இவர் ஊர் இன்னதென்றறியக் கூடாதாயினும் இவர் பாலைத்திணையையே சிறப்பித்துப் பாடி யிருத்தலால் இவர் நீர் நாட்டினர் அல்லரென்று மட்டும் தெரிகின்றது. இவர் பாடியனவாக நற்றிணையில் ௩௩௩-ஆம் பாடலொன்றும், குறுந்தொகையி லொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. இவரைக் கன்ளிக்குடிப்பூதம் புல்லனூரென ஊகிக்கலாம்.

**கன்னிடையர்** — இவர்கள் கன்னடதேசத்திருந்து வந்தவர்கள். இவர்கள் தற்காலம் பல தொழில்களை மேற்கொண் டிருக்கின்றனர். இவர்களிற் சிலர் ஆடு மாடுகள் வைத்து வளர்த்துத் தயிர்விற்றுச் சீவனஞ் செய்கின்றனர்.

**கன்னியாகுப்ஜம்**—தற்காலம்கனோஜ் என்று வழங்கப்படுவது. கங்காதீரத்திலுள்ள பட்டணம். Kanouj is on the junction of the river Ganges and the Kali-nadi or Ikshumati, in Rohilkhand:—

**கன்னீர்ப்படுத்தல்**—1. சுரும்பு குழுமாலைபக் கத்திலே அசைந்துவரப் பார்த்துக் கைக் கொண்ட கல்லினைப் புனலிலே யிட்டது (பு வெ. பாடால்).

2. உயர்ந்த கல்லினைச் செலுத்தி நிரைத்தலை அவ்விடத்துக் கருதினும் முன்பு சொன்னதுறையே யாம் (பு. வெ. பொதுவியல்).

**கஜச்சாயை** — புரட்டாசி மாதத்தில் எந்த வாரத்திலேனும் மகநக்ஷத்ரமும், திரயோதசியும் கூடிவருவது. இது ஒரு புண்ய காலம்.

**கஷாயம்** — இலைகள் வேர், மருந்து வகைகள் ஊறிய செந்நிறத்தகுடி நீர்.

**கஸ்தூரி**—இமயாதிமலைகளி னிடத்துச் சஞ்சரிக்கும் மான்வயிற்றிலுண்டாம் மணப் பொருள். இதனைச் சந்நிபாதாதிரோகங்களுக்கு மருததுவர் உபயோகிப்பர்.

**கக்ஷசேனன்** — 1. யமன் சபையிலுள்ள க்ஷத்திரியன்.

2. யுதிஷ்டிரசபையிலிருந்த க்ஷத்ரியன்.

3. ஒரு ராஜருஷி.

**கக்ஷம்** — ஒரு தேசம். (கச.).

**கக்ஷிவதன்**—சுவநயனிடம் தானம் வாங்கிய ருஷி.

**கக்ஷீவான்** — ஒரு ருஷி உசிகன் குமரன். ஔசிஜன் (பார).

**கக்ஷு** — சேதிபுத்ரன். இவன் ருக்வேதத்திற் புகழ்ந்துகூறப்பட்ட கொடையாளி.

## கா

**காகங்கரைதல்**—பகல் அ முகூர்த்தங்களில் க-மூ லாபம், உ-மூ சேதம், ங-மூ வரவு, ச-மூ தனம், ரு-மூ மழை, சா-மூ யுத்தம், எ-மூ மரணம், அ-மூ அச்சம். (கிழக்கு) ஆலஸ்யம், (தெ-கி) மரணம், (தெ) தனலாபம், (தெ-மே) சந்தோஷம், (மே) கலகம், (வ-மே) அபயம், (வட) விருந்து, (வ-கி) பொல்லாங்கு. தனக்கு முன்னும், படுக்கைவிட் டெழுகையினும் கத்தினல் நினைத்துச் செல்லுங் காரியஞ் செயம்.

**காகசங்கன்**—பிராமணியின் குமரன். சந்தியாகாலத்தில் போகிப்பவரைக் கூடிச் சந்தோஷத்தைப் போக்குபவன்.

**காகதத்தன்** — 1. சோமதத்தன் குமரன். இவன் குமரன் சுமதி.

2. இராமபிரான்.

**காகதுண்டகன்** — இவன் இராசகிரிய நகரின் புறத்ததாகிய சோலை யொன்றிலுள்ள ஒரு பெரியவன். தோற்றப் பொலிவையுடையவன். வாசவதத்தை இறந்து விட்டாளே யென்று கவலைக்கடலில் அழுந்திச் செயலற்றிருந்த உதயணனை எப்படியேனுங் காப்பாற்றவேண்டுமென்று தனியே வந்திருந்த மந்திரியருடைய வேண்டுகோளின்படி அவனை நோக்கி "இனி இரண்டு மாதம் நான் சொல்லுகிறபடி விரதத்தோடிருப்பாயாயின் வாசவதத்தையைப் பழைய வடிவத்தோடே பார்க்கலாம்" என்று சொல்லி, அவ்விரத வொழுக்கத்தையும் தெரிவித்து அவன் கவலையை மாற்றியவன். (பெ - கதை.)

**காகந்தன்** — காவிரிப்பூம் பட்டினத்தை முதலில் ஆண்டிருந்த அரசன்.

**காகந்தி** — காவிரிப்பூம்பட்டினம் காகந்தனுலாளப்பட்டதா லிப்பெயர் பெற்றது. (மணிமேகலை).

**காகபர்ணன்** — சுகநாகன் குமரன். இவன் குமரன் க்ஷேமவர்ணன்.

**காகபாதன்** — ஒரு சிவகணத்தவன்.

**காகமுனி**—கண்ணனுக்கு உபநயனஞ்செய்தவர்.

**காகமுனிவர்**—திருமணநல்லூரில் சிவமூர்த்தியைத் தரிசிக்கத் தலையால் நடந்து தவமிருந்து திருஞானசம்பந்த சுவாமிகள் திருமணத்து முத்திபெற்றவர். (ஆச்சாபுரபுராணம்).

**காகம்**—இது கருநிறமான உருவமும் நீண்டு வலுத்த அலகும் உடைய பறவை. இதில் மணிக்காக்கை, அண்டங்காக்கை என இரு வகை யுண்டு. இது ஊரில் வசித்து அவ்வூரில் சிந்திய உணவாதிகளை அருந்தும். இது ஊரில் நாற்றமாய் அழுகிய மாம்ச ஜாதிகளையும் மற்றவைகளையுந் தின்பதால் இதனை ஊர்த் தோட்டி யென்பர். இது பறவைகளில் தந்திர முள்ளது. பிள்ளைகளை ஏமாற்றி உண்பதோடும் பிள்ளைகள் வைத்துள்ள தின்பண்டங்களையுங் கவர்ந்து செல்லும். இதனிடத்தில் சில நற்குணங்களும் உண்டு. காலை யெழுதல்,

காணுமல் புணர்தல், மாலை குளித்தல், மனைக்கேகல், உற்ருரோடுண்ணல், உறவோம்பல் முதலிய. இவ்வினத்தில் வெள்ளைக்காக்கை என்பதுமுண்டு. அவை இங்கு அருமை. இவ் வினத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த இடங்களில் ஒருவகை காக்கை உண்டு. அவை சாம்பல்நிறங்கொண்டவை. அவற்றின் இறகுகளிலும் வயிற்றிலும் வெண்மை கலந்திருக்கிறது. அதன் வால் நீளம். இதனை **மக்பீ, பைக்கா, கித்தா** எனப் பெயரிட்டு முறையே ஆங்கிலர், இத்தாலியர், கிரீஸ் ஜாதியார் அழைப்பர். இது இந்திய காக்கையின் தொழிலைச் செய்கிறது. இக் காக்கை பறவைகளின் கூடுகளிலுள்ள முட்டைகளைத் திருடிக் குடித்து விடுதலால் மற்றப் பறவைகள் இதனை விரோதிக்கும். இதுபோல் அமெரிக்கா நாட்டில் ஒருவகை காக்கையுண்டு. அதனைக் **காரியான்** என்பர். இவை ஐந்திரம், வாருணம், வாயவ்யம், யாம்யம் என நான்கு வகை. இவற்றிற்குப் பலியிட்டோர் யமதண்டனையினின்று நீங்குவர். காணப்படாத பிதுரர் வாயசரூபமடைந்து கிரகத்தனை ஆச்ரயித்தலின் பலியிட வேண்டும்.

**கள்ளிக்காக்கை**—இது, உடல் சிவந்த கறுப்பு நிறம் ஆதலால் இதனைச் செம்போத்து என்பர். இதன் கண்கள் மிக்க சிவந்த நிறங்கொண்டவை. இது; பூச்சிகளையும் மற்றவற்றையும் தின்னும். இதன் மூக்கு காக்கைபோல் நீண்டதன்று.

**நீர்க்காக்கை** — இது, நீரிலுள்ள மீன்களைப் பிடித்துத் தின்பது. இது காக்கையின் உருவில் சிறிது வேறுபாடுடையது. இதன் அலகு நீண்டிருக்கிறது. பாதம் நீந்துவதற்கான தோற்பாதம். நிறம் கருமை. நீரில் நீந்தும் வன்மையுடையது. இதனை ஜைனர் ஜபானியர் பிடித்து மீனை பிடித்துத் தம்மிடங் கொடுக்கப் பழக்கியிருக்கின்றனர். அவ்வாறே அவை மீன்களைப் பிடித்து யஜமானரிடத்தில் கொடுக்கின்றன.

**கத்திரிமூக்குக் காக்கை** — இது, நீர்க்காக்கை யினத்தைச் சேர்ந்தது. இது அமெரிக்கா கடற்கரையில் வசித்துக் கடல் மீனை வேட்டையாடுவது. இதனை (சிசர்ஸ்பில்பர்ட்) என்பர். இதன் அடிமூக்கு பருத்து அகன்று நீண்டதாயும், மேல் மூக்குக் கத்திரிக்கோல்போ லிருப்பதால் இப்பெயரிட்டனர். இதன் மூக்கு செந்நிறம். மூக்கின் முனை சிறிது கருமை. பாதம் நீரில் நீந்தத்தக்க தோலடியுடையது. இதன் குரல் கேட்க விருப்பமற்ற ஒலிதரும்.

**கோட்சக்கர் காக்கை** — இது இந்து தேசத்துக் காக்கை உருவம் போன்றது. இது இராப் பறவையினத்தைச் சேர்ந்தது. இது காலை மாலைகளில் சத்தமிடும். இதன் அலகு பறவைகளின் அலகுபோலாது தசை உதடுபோல் இருக்கிறது. இதன் மூக்கு முகத்தின் முன்புறத்தில் ஆந்தையின் மூக்குப்போல் வளைந்து கூர்மையாயிருக்கிறது. இதன் மீசைமயிர் கீழ்வாய் பக்கம் மடிந்து பூச்சிகளைப் பிடிக்க உதவுகிறது.

**இரப் எனும் காக்கை** — (Ruff) இது ஐரோப்பிய காக்கை. இதனிறகுகள் மேகநிறமானவை. இதன் மூக்கு நீளம். கால்கள் நீண்டவை. இதன் கழுத்தில் வெண்மையான இறகுகள் பிடரிமயிர்போல் வளர்ந்துள்ளன. அவற்றை இது வேண்டிய போது விரித்துக் குவித்துக் கொள்ளும். இதன் பேட்டிற்குப் பிடரியி லிவ்வகை இறகுகள் கிடையா. இது மீன்களைப் பிடித் தருந்தும். இவ்வினத்தில் கடற்காக்கையும் உண்டு. அதை முன்பே எடுத்தெழுதினேம்.

**மாட்டுப்புழு எடுக்கும் காக்கை** — இது ஆபிரிக்கா கண்டத்திலுள்ளது. அக்கண்டத்து மாடுகளுக்கு உண்டாம் புழுக்களைத் தனது முனை வளைந்த அலகினல் கொத்தி அப் புண்ணிலுள்ள புழுக்களைத் தின்பது. இது நம் நாட்டுக் காக்கையின் உருவில் சற்றுச் சிறிது.

**காகனர்**—நான்மணிக்கடிகை இயற்றிய புலவர். இவர் கடைச்சங்கத்தார் காலத்தவர்.

**காகாசுரன்**—இவன் இந்திரகுமாரன். இராமமூர்த்தி சிதாபிராட்டியுட னிருக்கையில் அபசாரப்பட்டு ஒரு கண்ணிழந்தவன்.

**காகி** — தாம்ரையின் புத்திரி, உலூகன்தாய்.

**காக்காய்க்குறவர்** — இவர்கள் காக்காய்களுக்குச் சோற்றில் கள்ளிப்பால் கறந்து விசிறிக் காக்கைகளை மயக்கச்செய்து பிடித்துத் தின்போர். இவர்களிற் சிலர் காவிட்டியான், மணிப்பறையன், மேலூத்தான், சாத்தப்பறையன் எனப் பகுக்கப்படுவர்.

**காகை** — 1. ஆலமரத்தைக் காண்க.

2. தருமன் பெண். இவளுக்குக் காக்கைகள் பிறந்தன.

**காக்கைபாடினியம்**—காக்கைபாடினியரால் செய்யப்பட்ட இலக்கணநூல். இது பிற்காலத் திறந்துபோய் ஆங்காங்குச் சிற்சில அரிய சூத்திரங்களே வழங்கிவருகின்றன.

**காக்கைபாடினியார்** — அகத்தியர் மாணாக்கர் பன்னிருவருள் ஒருவர். இவர் சிறுகாக்கைபாடினியம் எனும் இலக்கணநூல் செய்தவர்.

**காக்கைபாடினியார் நச்செள்ளையார்** — ஒரு தமிழ்ப் புலவர். இவர் பதிற்றுப்பத்தில் ஆரும் பத்துப்பாடி நாடு கோட்பாடு சேரலாதனிடம் ஒன்பது காப்பொன்னும் நூறுயிரம் காணமும் பெற்றவர். இவர் கடைச்சங்கத்தார் காலத்தவராக இருக்கலாம். (பதிற்றுப்பத்து) (குறுந்).

**காங்கேரு**—இது ஆஸ்திரேலியா நாட்டமிருகம். இதன் முன்னங்காலிரண்டும் குட்டை. பெட்டைக் காங்கேருக்கு அடிவயிற்றில் பைபோன்ற ஒரு உறுப்புண்டு. அதில் அது தன் குட்டிகளை வைத்துக்கொண்டு காக்கிறது. குந்தி, குந்தி நடப்பது. காடுகளிலும், வயல்களிலும், மரங்களிலும் அணில்போல் சஞ்சரிக்கும். இது வருடத்திற் கொருமுறை குட்டி போடுகிறது. காங்கேருவின் குட்டி, ஈனும்போது மாம்ச பிண்டம்போல் உருவமின்றி யிருக்கிறது. இப் பிண்டத்தைத் தாய் தன்னிடமுள்ள பையி லடக்கிக்கொள்ளுகிறது. அக் குட்டி அப் பையிலிருந்தே பாலுண்டு அவயவங்களைப் பெற்றுத் தேகத்தில் மயிர் முளைத்த பின் வெளிப்படுகிறது.

**காங்கேயர்** — இவர் தொண்டைமண்டலத்துச் செங்குந்தர் மரபிற் பிறந்த தமிழ்ப் புலவர். உரிச்சொல் நிகண் டியற்றியவர்.

**காங்கேயன்** — 1. இவர் புதுவையிலிருந்த ஒரு பிரபு. ஒட்டக்கூத்தரை ஆதரித்து அவர்க்குக் கவுடப்புலவன், கவிராக்ஷதன் எனும் பட்டமளித்து அவரால் நாலாயிரக் கோவை யெனும் பாடல் பெற்றவர்.

2. குமாரக் கடவுள். கங்கை வளர்த்ததனுற் பெற்ற பெயர்.

3. வீஷ்மன் கங்காபுத்திரன். பீஷ்மனைக் காண்க. பிரபாசன் எனும் எட்டாம் வசுவின் அம்சமாயுதித்தவன்.

4. ஒரு சித்திரன்.

**காங்கோஅங்கோலாமதம்** — காங்கோதேசத்தவர் தங்கள் ரசனைத் தேவனென்று எண்ணித் துதிப்பர். அவ்வரசனைச் சாம்பர் எனவும் பிங்தோ என்றும் பெயரிட்டழைப்பர். ஆயினும் அவ்வரசனும் குடிகளும், மாகிஸ்ஸோ, சிகாகி, எனுமிரண்டு விக்ரகங்களைப் பூஜிப்பர். கங்காகம்பேரி எனுந் தேவதை சகல சுபங்களையுந் தருவதென்று அவளை ஆராதிப்பர். மாடாம்போ மாகாணத்தில் மிராம்ப எனும் பயங்கர விக்ரகமுண்டு. அதனைச் செயத்தை விரும்பியவர் ஆராதிப்பார். சிலர் புலி, பாம்பு, ஆடு, பசு முதலியவற்றை ஆராதிப்பர். படைப்புக்கடவுளர் அநேகம் உண்டு. அவர்க்குத் துயுஸ்கதா என்று பெயர். இவர்களின் குருக்கண்மார் கங்கா எனப்படுவர், இக்குருமார் பிணியாளரைக் காணச் செல்லுகையில் வியாதிநீங்கும் நிமித்தம் இஷ்டதேவதைகளின் விக்ரகமொன்று பிணியாளருக்குக் கொடுப்பர். அங்கோலீயருக்குப் படைப்புக் கடவுளர் பலர் உண்டு. அவர்களுக்கு ஜம்பன், பரண்யோ என்று பெயர். இவர்கள் மாகிச்சோ எனும் பலதேவதைகளை ஆராதிப்பர். திருவிழாக்காலங்களில் கிம்பாஎனும் மதசம்பந்த நிருத்தம் செய்வர். பின்னும் சிதோம்பி எனும் மகாத்மாக்களையும், நிகாம்போ எனும் குருக்கண்மாரையும், நிகோனி எனும் வைத்திய தேவதைகளையும், இவ்வாறே குஷ்டு, செவிடு முதலியவைகளைப் போக்கும் தேவர்களையும் ஆராதிப்பர். இவ்விடத்தி லிருக்கும் காகாசியர் ஸ்விஸாங்கோ எனும் தேவதையை விக்கிரகமாகச்செய்து பூஜிப்பர்.

**காசரோகம்** — இது முதலில் கண்டத்தில் நமைச்சல், அரோசகம், இருமல், அவயவங்கள் நறுக்கித்துவைத்தன போலுதல், கண்கள் மின்மினிப் பறப்பதுபோலுதல், முதுகு, மார்பு, விலாமுதலிய இடங்களில் நோய், வெண்கலத்தொனிபோல் தொண்டையில்சத்தம், வாயில்கோழையுண்டாதல் முதலியவற்றைப் பூர்வரூபமாகப் பெறும். இது வாதகாசம், பித்தகாசம், சிலேஷ்மகாசம், ரத்தகாசம், க்ஷயகாசம்எனப் பேதப்படும். இவை ஒன்றினும் ஒன்று அதிபலம் உடையன. இவற்றிற் குடனே மருந்து செய்யாவிடின் மரணந் தரும். (ஜீவ)

**காசன்** — சுகோத்தின் குமாரன்.

**காசி**—1. இது சத்தமோக்ஷஸ்தானங்களில் ஒன்று. இது கங்காதீரத்தி லிருந்து தன்னிற்பிரகாசிக்குந் தன்மையுள்ளது. இதில் சிவமூர்த்தி அடியவர் நியானித்தபடி காட்சிதந்து சித்தியளிப்பர். இத்தலம் சர்வ

சங்காரகாலத்தில் சிவமூர்த்தியின் சூலத் தலையி லிருந்து அழிவடையாதது. இத்த லத்தில் உயிர்நீங்கும் ஆத்மாக்களுக்குப் பார்வதி பிராட்டியார் சிரமபரிகாரஞ் செய் யச் சிவமூர்த்தி தாரகமந்திர முபதேசித்து முத்தியீவர். இத்தலத்தில் சயிகடவியன், இயக்கர், சம்வர்த்தனன்முதலியவர்பூசித்த சிவலிங்கங்களும் கோபூசித்த கோப்பிய ரேசம், கபிலாகாரமும், இன்னும் இருஷ பத்துவசலிங்கம், பத்திரதோயதீர்த்தம், இரணியகற்பேசம், சுவலினேச்சுரம், பர லிங்கம், கந்துகேச்சுரம், சயிலேச்சுரம், சங்கமேச்சுரம், சுத்திமேசம், சுக்கிரேசம், சம்புகேசுரம், மல்லிகார்ச்சுனம், ஈசானம், கணேச்சுரம், அகிலேச்சுரம், இராமேச்சு ரம், கதம்பேச முதலிய தலங்களுமுண்டு. இந்த மகாத்தலத்தில் ஐந்து குரோசம் சிவ லிங்கங்கள் இருத்தலால் ஆநந்தகானம் என வும், இறந்த உயிரையளித்தலாலும், வேதி யன் எடுத்த பிடிமணலில் தோன்றிய சிவ லிங்கமிருத்தலாலும், அவிமுத்தம் என வும், ஆன்மாக்கட்குச் சிவானந்த மளித்த லால் ஆனந்தகானம் எனவும், சர்வசங்கார காலத்தில் பூதங்கள் ஒடுங்குமிடம் ஆதலால் மாமயானம் எனவும், சிவமூர்த்தி சோதி யுருவாய் எழுந்தருளியிருத்தலாலும் முத்தி மாதுக்கு இருப்பாதலாலும், காசி எனவும் உயிர்க்குத் தருமம் அளித்தலால் தரும வனம் எனவும், பெயர் பெறும். இக்காசி பெண்ணுருவம் பெற்றுச் சிவமூர்த்தியை வணங்கித் தன்னை வணங்கினவர், முத்தி யடைய வரம் பெற்றனள்.

2. காசிபன் குமரன். இவன் குமரன் விஷ்ட்ரன்.

**காசிகாண்டம்** — காசி மகாத்மியம் கூறிய நூல். இது அதிவீர ராமபாண்டியனுல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது.

**காசிபர்** — A. மரீசி அல்லது அரிசி ருஷி யின் குமரர். தாய், கலை. இவர் தக்ஷப் பிரசாபதியின் குமரிகள் பதின்மூவரை மணந்தனர். அவர்களாவார்: — அதிதி, திதி, தநு, அநாயு அல்லது காலை, பிரதை அல்லது ஆயு, முனி, சுரசை அல்லது சிங்கிகை, இளை, குரோதவசை, தாமிரை, சுரபி, விநதை, கத்ரு. இவர்களுள் அதிதி யிடம் ஆதித்தியரையும், திதியிடம் தைத் தியரையும், தநுவிடம் தானவரையும், அநாயுவிடம் சித்தரையும், பிராதையிடம் காந்தருவரையும், முனியிடம் அப்சரசுக் களையும், சுரசையிடத்து யக்ஷரையும் இரா க்கதரையும், இளையிடத்து விருக்ஷம் கொடி பூண்டுகளையும், குரோதவசையிடம் புலி சிங்கமுதலிய மிருகங்களையும், தாமரை யிடம் குதிரை கழுதை பக்ஷி முதலியவற் றையும், சுரபியிடம் பசுக்கூட்டங்களையும், விநதையிடம் அருணனையும் கருடனையும், கத்ருவிடம் நாகரையும் பெற்றனர். இவர்களன்றி வைசியாநரர் குமரிகளிருவ ரில் காலையிடத்துக் காலகேயரையும், புலோமையிடத்துப் புலோமரையும் பெற் றனர். இவர், பின்னும் பர்வதன் எனத் தேவருஷியையும், விபாண்டகன் என் னும் பிரமருஷியையும் பெற்றனர். இவர் பரசுராமர் செய்த அச்சுவமேதயாகத்தில் பூமியைத் தானமாகப் பெற்றவர். இத ணுல் பூமிக்குக் காசினி என ஒரு பெயர் உண்டாயிற்று. இவர்க்கு அதிதியிடம் உபேந்திரரும் பிறந்தனர் என்பர். இவர் மாயையால் மயங்கிச் சூரபன்மன் முதலிய வரையும், ஊர்வசியைப் புணர்ந்து வசிட் டரையும் பெற்ருர் என்பர்.

B. வசுதேவனுக்குப் புரோகிதன். குந்தி பாண்டவர்களைப் பெற்ற காலத்துப் பொன்னணி கொண்டு செலுத்தினவன். பாரிசாதாபஹரணத்தில் இந்திரனுக்கும் கண்ணனுக்கும் சமாதானங் கூறியவன்.

C. ஒரு இருடி. உரோமகருஷணருக் கும் சுகருக்கும் மாணுக்கர்.

D. தாட்சபனைக் காண்க.

E. பரீக்ஷித்தைப் பாம்பு கடிக்கப் போ கிறதென்று கேள்விப்பட்டு அதை நீக்கிப் பரிகாரஞ் செய்து பொருள் பெறவந்த வேதியன், இவனைத் தக்ஷகன் வழியில் சந்தித்து ஒரு மாத்தினைக் கவ்வித் தனது விஷமூட்டி அது எரியக்காட்டி இதனை மீண்டுந் தளிர்க்கச் செய்வையேல் நீ அர சனை எழுப்புவாய் எனச் சொல்லினன். வேதியன், தனது மந்திரசக்தியால் விஷத் தினை மரத்திலிருந்து இறக்கி மீண்டும் மரத்தினைத் தளிர்க்கச் செய்தனன். இத ணுல் தக்ஷகன் திடுக்கிட்டு வேதியனுக்கு வேண்டிய பொருளளித்து அரசனிடஞ் செல்லாமல் அனுப்ப வீடுசேர்ந்தவன்.

**காசிபன்கீரனர்**—இவரது இயற்பெயர்கீரன் கடைச்சங்கத்திலே தலைமை பெற்றிருந்த நக்கீரரின் வேறென்பது தெரிய ஏனைக் கீரர்களெல்லாம் ஒவ்வொரசை மொழி கொடுக்கப்பட்டமையின் இவரும் அவ்

வாறே காசிபன் கீரனாரெனப்பட்டார். காசிபனென்றதனால் இவர் காசிபகோத்திரத்தினராகிய அந்தண ரென்றறியப்படும். இவர் முல்லைத் திணையைப்பாடி யுள்ளார். வம்பமாரி யென்று தலைவி கருதியாற்றுமாறு தோழி மருட்டி மழையை நோக்கிக் கூறுவதாக இவர் பாடியது மிக்க நயமுடையதாகும். இவர் பாடியது நற். உ௩௪-ம் பாட்டு.

**காசியரசன்** — 1. பதுமாபதியின் தந்தை; உதயையோடை யென்பவளுடைய கணவன் மிக்க சேனையையுடையவன் (பெ. கதை.)

2. நீலகேசி என்பவளுடைய தந்தை.

**காசியன்**—A. சுகோத்திரன் குமரன். இவன் குமரன் காசி.

B. சனசித்தின் குமரன்.

C. ஆயுவின் பௌத்திரன்.

**காசிரகசியம்** — காசியின் சிறப்புங் கூறிய நூல். இது தமிழில் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை யவர்களா லியற்றப்பட்டது.

**காசிலி** — ஒரு இருடி மேற்குச் சமுத்திரக் கரையில் தவஞ்செய்து கொண்டிருந்தவர். பிரசேதசுகட்கு ஞான உபதேசஞ் செய்தவர்.

**காசுக்காரர்** — செட்டிவகைகளில் ஒன்று.

**காச்மீரம்**—பரதகண்டத்தின் வடக்கிலுள்ள ஓர் தேசம்.

**காச்யபர்** — காசிபரைக் காண்க.

**காச்யபன்** — காசம் எனும் நாணற்பூப் போல் வெளுத்திருப்பவன்.

**காச்யபி** — கச்யபரைக் காண்க.

**காஞ்சனமாலை** — 1. கர்ணன் தேவி.

2. சூரசேநன் பெண். மலயத்துவசன் தேவி. இவள் பூர்வத்தில் விச்சுவாவதி எனுங் காந்தருவ மாது. பார்வதிபிராட்டியைப் புத்திரியாகப் பெறத் தவஞ் செய்தவள். விச்சுவாவதியைக் காண்க. இவளிடம் புத்திரியாகப் பிறந்த பிராட்டியின் திருநாமம் தடாதகை.

3. பாண்டியன் புத்திரியில் ஒருத்தி, தெய்வீக அரசனைக் காண்க.

4. இவள் வாசவதத்தையின் உயிர்ப்பாங்கி. அவளுடைய கண்மணி போன்றவள் பேரழகினள் சுவைபயக்கும் இனிய மொழியினள் தலைவியின் குறிப்பறிந்து நடப்பவள். வாசவதத்தையின் கருத்தை இவள் போல் அறிந்து நடப்பவர்கள் இல்லை. அவளுக்கு மனக்கலக்கம் நேரும் போதெல்லாம் தக்க பரிகார மொழிகளைச் சுருக்கமாக மெல்ல கூறித் தெருட்டுபவள். அவள்பால் உண்மை அன்புடையவள். அவள் வீடு தீக்கிரையாயிற்றென்று கேட்டபொழுது அவள் இறந்து விட்டாளென்றெண்ணி, கனங்குழை மடவோய்! பொன்னே! திருவே! அன்னே! அறிவாய்! நங்காய்! நல்லாய்! என்று இவள் புலம்பியதால் விளங்கும். அவளுடைய இன்பகாலத்தும், துன்பகாலத்தும் பிரியாதவள். இவள் பந்து விளையாட்டில் மிகப் பயிற்சி யுள்ளவள். இவள் பெயர் காஞ்சனை, கஞ்சனமாலை யெனவும் வழங்கும். (பெருங் கதை.)

**காஞ்சனமாலை கோயில்** — இது எழுகடற் றீர்த்தத்தின் தென்மேற்கில் உள்ளது; மிகப் பழமையானது. இதில் ஜலகண்டேசுவரரென்று திருநாமமுள்ள சிவபெருமானும் அவரைத் தரிசித்த வண்ணமாக அமைந்த காஞ்சனமாலையின் வடிவமும் உண்டு. (திருவிளை-புரா.)

**காஞ்சனபுரம்** — காயசண்டிகையின் கணவனிருக்கை வித்யாதர நகரம். இது விஞ்சைமா நகரெனவும் வழங்கப்படும். (மணிமேகலை.)

**காஞ்சனன்** — 1. காயசண்டிகையின் கணவன். காயசண்டிகையின் உருக்கொண்ட மணிமேகலைபால் வந்த உதயகுமாரனை வாளால் வீசிக்கொன்றவன். (மணிமேகலை.)

2. பூரூரவா புத்ரனாகிய அமவசு பவுத்திரன்.

3. பீமன் குமரன்.

**காஞ்சனை** — ஒரு தெய்வகன்னிகை பார்வதியாருக்குத் தோழியாகத் தவஞ்செய்து மானாகி விந்தமலையிற்பிறந்து வள்ளிநாய்ச்சியாரைப் பெற்றவள். (திருச்செந்தூர்ப் புராணம்.)

**காஞ்சி** — 1. சத்தமுத்தி புரியிலொன்று. இதில் சுவர்ணகாஞ்சி விருக்ஷம் கிளைகள் பொன்மயமாகவும், இலைகள் மரகதங்களாகவும், கனிகள் நவமணிகளாகவும் ஓங்கி மகருஷிகளால் காணப்பட்ட தடாகத்தருகிலிருந்ததால் இப் பெயர் பெற்றது. இப் பட்டணத்தைப் பிரளயசித் எனவும், சிவபுரம் என்றும், விண்டுபுரம் என்றும், திரிமூர்த்தி வாசம் என்றும், பிரமபுரம் என்றும், காமபீடம் என்றும், தபோவனம் என்றும், ஜகச்சாரம், சகலசித்தி என்றும், கன்னிகாப்பு என்றும், தொண்டைபுரம்

என்றும், தண்டகபுரம் என்றும், காமபீடம் என்றும், புராணங்கள் கூறும். இதில் சிவத்தலம், கச்சபாலயம், ஏகம்பம், கச்சிமயானம், காரோணம், மாகாளம், பச்சிமாலயம், அநேகதங்காபதம், பணாதரம், பணீச்சுரம், வராகம், சுரகரீச்சுரம், இராமம், வீராட்டம், வேதநூபுரம், உருத்திரம், வச்சிரநகரம், பிரமம், திருமாற்பேறு, மறைசை, திருமேற்றளி, இந்திராலயம், மணீசம், நான்முகம், சங்காம், பரசிராமம், ஓத்தூர், அநேகபேசம் முதலிய இருக்கின்றன. இதிலுள்ள விஷ்ணுத்தலங்கள் புண்ணியகோடிவிமானம் அல்லது அத்திகிரி, அட்டபுயம், திருவெஃகா, ஊரகம், நீரகம், திருத்தண்கா, திருவேளுக்கை பாடகம், நிலாத்திங்கட்டுண்டம், காரகம், கார்வனம், கள்வனூர், பரமேசவிண்ணகாம், பவளவண்ணம் முதலியன. இதிலுள்ள தீர்த்தங்கள் அநந்தம், அக்நி, பௌரந்தரம், குசம், வாமனம், மங்களம், சிவகங்கை, சர்வதீர்த்தம், பாண்டவம், சுரகரம், கருடம், பஞ்சம், பம்பை, ஏமாம்போசம், குண்டம், சந்திரம், சித்தி, காயாரோகணம், கஜேந்திரம், சடாயு, சரச்வதி, இருத்தாபநாசனி, பிரமம், வசிட்டம் முதலியன. பின்னும் விளக்கம் ஒன்று, இடம் இரண்டு, தெற்றிகள் மூன்று, அரண்கள் நான்கு, தருக்கள் ஐந்து, புட்களாறு, நதிகள் ஏழு, பொதுக்கள் எட்டு, பொய்கைகள் ஒன்பது, சிலைகள் பத்து, மன்றம் பதினொன்று உண்டு. இதன் விரிவைப் புராணங்களுட் காண்க. இதில் ஜைனராலயமும் உண்டு. இது, சிலநாள் சோழராஜாக்களுக்கும் பல்லவர்க்கும் இராசதானியா யிருந்தது. இது, சத்திபீடங்களுள் ஒன்று. இது, காமகோடிபீடம் எனப்படும். இது, சைவசமயாசாரியர்கள் ஆழ்வாராதிகளால் பாடப்பெற்றது.

2. ஒரு நகரம், இதில் முக்காலத்தையுமறிவிக்கும் கந்திற்பாவைத் தெய்வமும், துணையிளங்கிள்ளி யென்பவனாற் கட்டப்பட்டுள்ள புத்தாலயம் ஒன்றும், தருமதவனம் என்று பெயருள்ள ஒரு வனமும் இருந்தன. மணிமேகலை அறவணவடிகள்பால் அறங்கேட்டுப் பலநாள் தங்கிமரித்த இடமும் இதுவே. (மணிமேகலை.)

Conjeevaram, in Chengleput District in the Madras Presidency It was the Captial of Chola Kings.

3. வெவ்விய சினத்தையுடைய வேற்றுமன்னன் வந்துவிட அரசன் காஞ்சி யென்னும் பூவை மலைந்து காவலிடத்தைக் காக்க நினைந்தது. (பு. வெ.)

**காஞ்சிசோமயாசியார்** — எழுபத்துநான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர் (குருபாம்.)

**காஞ்சிநதி** — மேலைச் சிதம்பரம் அல்லது பேரூரிலுள்ள நதி.

**காஞ்சீபுரம் சபாபதி முதலியார்** — இவர் சென்னை பச்சையப்பன் கலாசாலையில் தமிழ்ப்புலமை நடத்திய மகா வித்வான். சென்னையில் வசித்தவர் சைவர் பெரியபுராணம் திருவிளையாடல் மற்றுஞ் சில தல புராணங்களுக்கு உரையியற்றியுரையாசிரிய ரெனப் பெயர் பெற்றவர். இற்றைக்குச் சற்றேறக்குறைய எழுபது வருஷங்களுக்கு முன்னிருந்தவர், தமிழில் அருணசலசதகம் முதலிய இயற்றினவர்.

**காஞ்சிபுராணம்** — இது காஞ்சிமகாத்மியம் சொன்ன தமிழ்நூல். இது இரண்டுகாண்டங்க ளுடையது. இதன் முதற்காண்டம் திருவாவடுதுறை சிவஞானமுனிவராலும், இரண்டாங் காண்டம் சிவஞானமுனிவர் மாணாக்கர் கச்சியப்பமுனிவராலும் இயற்றப்பட்டது. இது நாலாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தொரு செய்யுட்களுடையது.

**காஞ்சிப் புலவனார்** — மாங்குடி மருதனாரென்பவர் தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனை நிலையாமை அறிவுறுத்தவேண்டி மதுரைக் காஞ்சிபாடியதனால் மதுரைக் காஞ்சிபுலவரென்றும், காஞ்சிப் புலவரெனவுங் கூறப் பெறுவாராயினர். மாங்குடிகிழாரென்ப வருமிவரே இவர் வேளாண் மரபினர். மேற்கூறிய நெடுஞ்செழியனது அவைக்களத்துப் புலவராய் அவனைப்பாடி மகிழ்வித்து வைகுவாராயினர். புறம்-உச. ஒரு காலத்துச் சேரனுஞ் சோழனும் மதுரையை முற்றியபோது இளைஞனாகிய நெடுஞ்செழியன் வஞ்சினங் கூறுவான் "ஓங்கிய சிறப்பினுயர்ந்த கேள்வி, மாங்குடி மருதன்றலைவனாக "(புறம்-எஉ) என்று இவரைப் பாராட்டிக் கூறினனெனின் இவருடைய மேன்மையும், கல்வி கேள்விகளினுயர்வும் நம்மனோரானளவிடப்படுங் கொல்லோ? இவர் பாடிய மதுரைக் காஞ்சியைப் படிப்பவர்க்கு இவரது ஆற்றல் விளங்கும். பின்பொரு பொழுதுவாட்டாற் றெழினியாதனைப் பரிசில் வேண்டிப்பாடி

அவனால் ஆதரிக்கப் பெற்று மீண்டு மதுரையை அடைந்து வைகுவா ராயினர். புறம்-நஉசு. இவர் எல்லாத்திணைகளையும் புனைந்து பாட வல்லவர். நெடுஞ்செழியன் போரிலே உள்ளஞ் செலுத்தி அவ்வழியே யொழுகுவானை நன்னெறிப்படுத் திமறுமைக்காயவேள்வி முதலியவை செய்யப்பண்ணினவர் இவரே. புறம்-உசு. கடற்கரையில் மகளிர் விளையாட்டயர்வதனை விளங்கக்கூறி யுள்ளார். நற்-கஉஅ. இவர் பாடியனவாக மதுரைக் காஞ்சியகவ லொன்றும், நற்றிணையில் கஉஅ - பாட லொன்றும், குறுந்தொகையி லொன்றும் அகத்திலொன்றும், புறத்திலாறும், திருவள்ளுவமாலையி லொன்றுமாகப் பதினொரு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. தஞ்சாவூர் ஜில்லா திருத்துறைப் பூண்டித் தாலுக்காவில் மாங்குடி மருதவனமென இரண்டு ஊர்கள் ஒன்றை ஒன்று அடுத்துள்ளன. அவற்றுள் முன்னது இவரூரும் பின்னது இவரால் நாட்டப்பட்டதும் போலும். (நற்றிணை.)

**காஞ்சியேதிர்வு** — எதிரூன்றுஞ் சேனைமேல் விடுதலைப்பொருத வேற்றுெழிலை வல்ல வீரனுடைய வெற்றியை மிகுத்துச் சொல்லியது. (பு. வெ).

**காடர்** — 1. ஆனைமலைக்கண் வசிக்கும் ஒரு வகைகாட்டுச் சாதியர். இவர்களுக்கு வேட்டையாடுதல். தொழில் அவற்றுள் யானை வேட்டைமுக்யம்.

2. கொச்சி சமஸ்தானத் தருகிலுள்ள குன்றுகளில் வசிக்குஞ் சாதியார்.

**காடவர்கோன்** — காஞ்சியாண்ட அரசர்வம்சத்தவரைச் சேர்ந்தவர். இவர் காஞ்சியில் சிவாலயஞ் செய்வித்து அதற்குக்கும்பாபிஷேகஞ் செய்விக்க எண்ணி நாள்வைத்தனர். சிவமூர்த்தி இவரிடந் தரிசனந் தந்து அரசனே நீ வைத்தநாளில் பூசலார் நாயனர்செய்யும் கும்பாபிடேகத்திற்குப் போகிறோம்; நீ வேறுநாள் வைத்துக் கொள்க என்று திருவாய்மலர அரசர் பூசலாரைத் தேடி அவரைத் தரிசித்து இன்பமடைந்தனர்.

**காடவன்** — இவன் சைந அரசத் தலைவன். திருநாவுக்கரசு சுவாமிகள் காலத்துச் சைவனுய்ப் பாடலிபுரத்திலிருந்த சைநாலயத்தையிடித்துக் குணதரீச்சுரங் கட்டுவித்தவன்.

**காடுகாள்** — இவளுக்குக் காடுகிழாள் எனவும் பேர் இவள் ஒருசத்தி. மோடி காரிதாய், கொற்றி, பாரி, சூரி, வடுகி, மூதணங்கு எனவும் பேர்.

**காடுகிழாள்** — இவள் வநத்தில் சஞ்சரிக்கும் வநதேவதை.

**காடுபடுவளன்** — அரக்கு, தினை, தேன், கருந்தினை, நாவி, மயிற்பீலி முதலியன.

**காடுவாழ்த்து**—பலர்க்கும் இசைக்கும் பெரிதாக ஒலிக்கும் சாப்பறை அனுகரண சத்தமுடைத்தாகக் கறங்கும் சுடுகாட்டை வாழ்த்தியது. (பு. வெ. பொதுவியல்.)

**காடுவெட்டியசோழன்** — காஞ்சிநாடாண்ட சோழர்களில் ஒருவன். இவன் சிவபக்திமான். குலபூஷணபாண்டியன் காலத்தில் மதுரையைச் சேவிக்க எண்ணிப் பாண்டியனுக்காகப் பயந்து இருந்தனன். இவன் கனவில் சிவமூர்த்தி சித்தராய்த் தோன்றி யிப்போதே சென்று தரிசிக்க என அரசன் சேனைமுதலிய இன்றிப் புறப்பட்டு மதுரையடைந்து வையை வெள்ளங்கொண்டதறிந்து துக்கமடைந்தனன். அக்காலையில் சிவமூர்த்தி சித்தராய் எழுந்தருளி வெள்ளத்தை விலகச் செய்து காவல் கடக்கக் கொண்டுசென்று பொற்றாமரையில் முழுகுவித்துத் தம்மையும் பிராட்டியாரையும் தரிசனஞ் செய்வித்து வழித்துணைசென்று வையைநதி கடந்து விட்டு நெற்றியில் திருநீறிட்டு அனுப்பினர். சோழன் பயமின்றி நாடுபோய்ச் சேர்ந்தனன். வழித்துணை சென்ற சிவமூர்த்தி கோயிலடைந்து விடையி லச்சினையிட்டு மறைந்தனர். பொழுதுவிடிய, திருக்கோயிற் காவலாளர் மீனமுத்திரையிலாது இடபமுத்திரையிருப்பதைப் பாண்டியனுக்கறிவித்தனர். பாண்டியன் எந்தவகை ஆராய்ந்தும் உண்மை அறியாது விசனத்துட னிருக்கையில் சிவமூர்த்தி கனவிற்றோன்றி நடந்ததை அறிவிக்கக் களித்துச்சோழனுடன் நட்புக் கொண்டனன். இவனது மற்ற சரித்திரங்களை இராசேந்திர பாண்டியனைக் காண்க. இவனுக்கு வாதராசபணிகொண்ட சோழன் எனவும் பெயர்.

**காடை** — இது கபிலநிறமான வரிகளமைந்த பக்ஷி. இது கூட்டம் கூட்டமாகக் காடுகளில் வசிப்பது. இதற்குக் கழுத்தும் மூக்கும் குட்டை கால்கள் குறுகிக் கூர்மையற்றவை. பூமியைக் கிளறி தான்யமும் பூச்சுகளையும் தின்னும் இனத்திற் சேர்

தது. இதனை மனிதர்கள் வளர்த்து போருக்கு விடுவர். இது அதிக கோபத்துடன் சண்டையிடும். பூமியைத்தோண்டி முட்டையிடும். இவ்வினத்தில் வயல்களில் மேயும் அரிக்காடையும் உண்டு. இது உருவத்திற் கவுதாரியிற் சிறியது.

**காட்சிவான்** — சிபி பாரியையின் தோழிமார்களில் தீர்க்கதமசால் பிறந்த புத்திரன்.

**காட்டக்கோட்டையர்** — இவர் வீரசைவர், பிறப்பாலிடையர். ஆட்டின் சாணத்தால் வேதிகையும் சிவலிங்கமும் அமைத்துப் பசு, ஆடு முதலியவற்றின் பாலைக் கறந்து சிவமூர்த்திக்கு அபிஷேகித்துக் காட்டிலுள்ள மலர்களால் அருச்சித்து வந்தனர். இவர் இவ்வகை செய்துவருகையில் ஒரு நாள் இவர் தந்தை பசுக்கள் பால்குறையக் கண்டு உண்மை யறியும் பொருட்டு ஒளித்திருந்து குமாரர் செய்யுஞ் செய்கை யறிந்து கோபத்துடன் சென்று சிவலிங்கத்தைக் காலாலிடறினர். குமரர் கோடரியால் தந்தையென்றும் பாராமல் இடறிய கால்களை வெட்டச் சிவமூர்த்தி தரிசனந்தந்து குமரரைத் திருக்கைலைக்கு அழைத்துச் சென்றனர். (பசவ-புரா.)

**காட்டாசான்** — இவர்கள் கூடைகட்டிகள், ஊஞ்சல் சுடுவோர். இவர்கள் திருநெல்வேலி ஜில்லா முதலிய இடங்களிலுள்ளவர்கள்.

**காட்டுநாடு** — களவேள்விநாடு. (திருவிளை.)

**காட்டுப்பூனை** — இது சிறுத்தைப் புலிக்கும் பூனைக்கும் நடுத்தரமான உருவுடையது. கறுத்தநிறமும் கொடுமையான பார்வையுங் கொண்டது. பகலில் புதர்களில் பதுங்கி யிருந்து இரவில் இரைதேடப் புறப்படுவது. இது பறவை, கோழி, முயல், வாத்து முதலிய பக்ஷிகளை வேட்டையாடித் தின்னும். கிராமத்திலும், கிராமத்தையடுத்த காடுகளிலும் வசிக்கும். இதுவும் சிங்கம் புலியினங்களைச் சேர்ந்தது.

**காட்டுமோட்டி**—குருவிக்காரனுக்குப் பெயர்.

**காட்டூர்க்கிழார்மகனார்கண்ணனார்**—கடைச்சங்க மருவிய புலவர். வேங்கடநெடுவரை வென்வேற்றிரையனை, "நன்னுதல் பசப்பவு" மெனப் பாடியவர். இவர் பெயர் கண்ணனார். இவர் தந்தை பெயர் காட்டூர்கிழார். இவரது ஊர் காட்டூர்போலும். (அகநானூறு.)

**காட்டேரி** — இது ஒரு க்ஷுத்ரதேவதை. காட்டில் வசித்துக் கொண்டிருந்த இந்துக்கள் தம்மேல் அத்தீச்சார்ந்து தம்மை அழிக்காதவண்ணம் வனதேவதையை வழிபட்டனர். அதனைக் காட்டேரி யென்பர்.

**காட்டெருமை**—(பைஸன்) இது பார்வைக்கு விகாரமான ஜந்து. இதன் முதுகிற் கொழுப்படர்ந்த திமிலொன்று உண்டு. தேக முழுதும் மயிரடர்ந்து தொங்கும். இது குனிந்ததலையும் குறுகிய கண்களும் உடையது. இது அமெரிக்கா கண்டத்துச் சமவெளிகளிலுள்ள புல் பூண்டுகளைத் தின்று ஜீவிக்கும். இவ்வினம் நீரில்லாவிடத்திலும் தண்ணீர் குடியாமல் வசிக்கும். இவை பல நாட்களுக்கு வேண்டிய நீரைத் தம் வயிற்றில் கொண்டிருக்குமாம். இவை யெங்கும் நீரினைக்கண்டாலும் அதில் வீழ்ந்து புரளும். இவற்றினுடலின்மாமிசம் ருசியுள்ளனவாதலால் வேட்டைக்காரர் இவை கூட்டமாக இருக்குமிடஞ் சென்று சத்தமிடாமல் பலவற்றை மடக்கி வேட்டையாடுகிறார்கள். இவை அற்ப சத்தம் கேட்கினும் அஞ்சி ஓட்டம்பிடிக்கும். இவை சாகபக்ஷணி. அமெரிக்கா கண்டவாசிகள்.

**காணிஷ்கன்** — இந்தியாவின் வடமேற்கு மாகாணத்தை யரசாண்ட ஒரு புத்த அரசன். இவன் அசோகனைப்போல் புத்த மதத்தை எங்கும் பரவச் செய்து கீர்த்தியடைந்தவன்.

**காணுவர்** — யாக்ஞவல்கியரின் மாணாக்கர்.

**காண்டவபிரஸ்தம்** — பாண்டவர்கள் அரசாண்ட அஸ்தினபுரத்துட் பிரதேசம். திரௌபதியின் மணத்திற்குப் பிறகு பாண்டவர் வசித்த இடம். (பார-சபா.)

**காண்டவம்**—யமுனை யாற்றங்கரையில் கிருஷ்ணார்ச்சுனர்களா லழிக்கப்பட்டு அக்கினிக்கு இரையாகத் தரப்பட்ட இந்திரவனம்.

**காண்டிகையுரை** — செய்யுளின் கருத்து, பதப்பொருள், உதாரணம், வினவுதல், விடைகூறல், முதலியவற்றால் செய்யுளினுட் பொருளைத் தோற்றுவிப்பது. (நன்-பா.)

**காண்டிக்யன்** — (சூ.) மிதத்துவசன் புத்திரன். சனகன் பேரன். இவன் தன் ஞாதியாகிய கேசித்துவசனோடு விரோதித்துக் காட்டிற்சென்று தவமேற்கொண்டவன்.

**காண்டிநேவியன் மதம்** — இந்த மதத்தில் முக்கியதேவதைகளுக்கு எட்டாஸ், சாகாஸ் என்றுபெயர். எட்டாசென்றால் கிழவியென்றுபொருள். இம்மதசிருட்டிக் கிரமம். அபிஸ் என்கிறபிண்டம் தெற்கு

வடக்கு உலகங்களாக விருந்தது. அதன் மேல் வெனமென்னும் மழைபெய்யத் தென்றலால் அந்தப்பிண்டம் கரைந்தது. அவ்வாறு கரைந்ததினின்றும் இமிர் என்னும் அரக்கன்பிறக்க அந்த அரக்கனால் துஷ்டர்கள் உண்டாயினர். அந்தத் துஷ்டர்களால் மாண்டன் என்னும் பசுபிறந்து அந்தப் பசுவினால் போர், வேண்டின், விலா முதலிய தேவதைகள் உண்டாயினர். இமிர் என்னும் ராக்ஷசனைப் போர்முதலிய தேவதைகள் கொல்ல, அவன் தேகத்திலிருந்து ஆகாசமும் பூமியும் உண்டாயின. வொடின் என்னும் தேவன் சிருட்டிகர்த்தாவாகிய உலகபிதா. ஆஸ்சா என்னும் மாத்தடியி விருப்பன். இவனுக்கும் பூமியே பாரியை, தார் என்பவன் குமாரன். இவன் அபாரசக்தி யுள்ளவன். பால்டர் என்பவ னிரண்டாவது குமாரன், மோக்ஷ விசாரணை செய்பவன். டைர் என்பவன் யுத்தத்தில் சமர்த்தன். இவனுக்கு ஒரே கையுளது. அந்தியகாலத்தில் அநேகருடன் யுத்தஞ் செய்கையில் பால்டர் இறக்க அவனுக்காக உலகம் துக்கிக்கும். பிறகு தார் என்பவன் ராக்ஷசர்களுடனும் முஷ்கார்ட் என்னும் பாம்புடனும் சண்டை செய்து இறக்க உலகங்களெல்லாம் எரிந்துபோம். பிறகு புதிய உலகம் உண்டாம். விடார், வாலி என்னும் இரண்டு தேவதைகள் தோற்றுவர். இந்த மதத்தில் ஒவ்வொரு வருஷத்தில் உற்சவத்தில் பலியிடுவர். தங்களைத் தாங்கள் குத்திக்கொண்டு சாதல் நலம் என்பர்.

**காண்டவம்** — 1. இது அருச்சுனன் வில். முதலில் பிரமனிடமிருந்து பிறகு இந்திரனிடம் அறுபத்து நான்கு வருடமிருந்து பின் வருணனிடம் 100 - வருடமிருந்து வருணன் அக்கினிக்குக் கொடுக்க அக்கினியால் காண்டவ வனத்தை எரித்த அருச்சுனனுக்குக் கொடுக்கப்பட்டது. இது இவனிடம் 65 - வருடம் இருந்ததாம்.

2. பிரமன் வில். கண்ணுவரைக் காண்க.

**காண்டோபகரணம்** — காண்டருஷியைத் திருப்தி செய்தல். மந்திரத்தால் ஓமமுதலிய செய்து சுவர்ண முதலியவற்றால் செய்த பிக்ஷா பாத்திரத்தில் பவதி பிக்ஷாந்தேகி யெனக் கூறிப் பிக்ஷை யெடுத்தல்.

**காண்வாயன்** — கண்ணுவன் மரபினனாகிய மேதாதிதி ரிஷிக்குப் பெயர்.

**காதம்பரி** — ஒரு காந்தருவ கன்னிகை; இவளை உச்சயனிநகரத் தரசனாகிய சந்திராபீடன் மணம் புரிந்தான். காதம்பரி இவள் கதைகூறிய நூலுமாம். இது பாணகவியால் வடமொழியில் செய்யப்பட்டது.

**காதலர்** (ட) — புருஷன், தோழன், மகன்.

**காதலிற்களித்தல்** — மேகம் பொருந்தின மலைநாடனுடைய மார்பிடத்தே மேவி நீங்குதலறியாத அன்பினால் மகிழ்ந்தது. (பு. வெ. பெருந்திணை.)

**காதற்பரத்தையர்** — யாவரையும் விரும்பாத வியல்பினன் மிக்க சேரிப்பரத்தையருடைய மகளிராய்த் தம் மன்பின் தலைமகனுடன் கூடுவோர். (அகம்.)

**காதாமுனி**—விறகுகட்டிற் பிறந்தவர் என்பர்.

**காதி** — 1. குசநாபன் குமரன், விச்வாமித்ரன் தந்தை. இவன் யாகத்திற் பிறந்தவன் இவனை யிராவணன்யாகத்திற்செயித்தான்.

2. (ச) குசாம்பன் குமரன்.

3. ஒரு வேதியன் இவன் விஷ்ணுவை யெண்ணித் தவஞ் செய்து மாயையைக் காண வரம்வேண்டி யொருகுளத்தில் மூழ்கித் தானிறந்துபோனது போலவும் தன்னைக் கொளுத்திச் சாம்பலாய் மறுபிறவி புலையனாய் ஒருத்தியை மணந்து பல புத்திரரைப் பெற்றுப் புத்திரரும் மனைவியும் நரைவந்திறக்கத் தானிறவாது கீரநாட்டில் தனித்துச் செல்லும்போது அந்த நாட்டுப் பட்டத்துயானை அந்த நாட்டரசனிறக்க இவனை அரசனாக்கிற்று. இவன் கவலன் எனும் பெயருடன் அரசாண்டு ஒரு நாள் தன் வேடம் நீங்கித் தனித்து உலாவுகையில் நாய்க்கெரிப்போ னொருவன் கண்டு இவன் தம்மவன் என்று வார்த்தையாடினன். அரண்மனை வாசிகள் இவனிடம் அருவையடைந்து இவனை விட்டு நீங்கி யூராருடன் தீக்குளித் திறந்தனர். நாய்க்கெரிப்போனிது நம்மால் வந்ததென்று தீக்குளிக்கையில் உடல் சுருக்குண்ணக் காதியுடல் சலத்தில் பதைபதைக்க விழித்தனன். இவை நடந்த காலம் இரண்டு முகூர்த்தம். மீண்டும் காதி சலத்திலிருந்து எழுந்து வெளிவந்து தன்னூர் நோக்கி வருகையில் வழியில் ஒரு வேதியனைக் கண்டு நீ யார் என நெருப்பில் குளித்த ஊரிலிருந்து கங்கை யாத்திரை வந்தேனெனக் காதி கேட்டு வியப்படைந்து நடந்தவைகளைக் கண்டு வியந்தனன். (ஞானவாசிட்டம்.)

**காதியாயன்** — கதயன் சந்ததியானுகிய இருடி, இவனுக்குத் தபந்தீ எனவும்பெயர்.

**காதீனன்** — விச்வாமித்ரன் தந்தை, இவன் தந்தை கூஷிகன்.

**காதுகுத்திக்குறவர்** — இவர்கள் காடுகளில் ஜனங்களுக்குக் காதுகுத்திப் பிழைப்போர்.

**காதைக்கரப்பு** — சித்திரக் கவியிலொன்று. இது ஒரு பாட்டினுள் மற்றொரு பாட்டிற்கு எழுத்துக்களுளவாய்ச் சொற்புகாமே பாடுவது.

**காத்தவராயர்** — வண்ணர் இவர்கள் இத் தேவரைக் குலமுதல்வராகக் கொண்டவர்கள். (தர்ஸ்டன்.)

**காத்தவராயன்** — 1. பாரவதிபிராட்டியார் சிவமூர்த்தி உலகமெங்கும் ரக்ஷிப்பவர் என்பதில் சங்கைகொண்டு ஒரு எறும்பைப் பிடித்துப் பாணியில் அடைத்து வைத்தனர். மறுநாள் அதனை நோக்க அது ஒரு சிறு அரிசியை வாயில் கொண்டிருக்கக் கண்டு தாம் செய்த காரியத்தைச் சிவமூர்த்தியிடம் அறிவித்தனர். சிவமூர்த்தி பிராட்டியை நோக்கி அந்த எறும்பைத் துன்பஞ் செய்ததற்கு நீ ஒரு நந்தவனம் வைத்து அந்தப் பாபத்தைப் போக்குக என்றனர். பிராட்டி அவ்வகை ஒரு நந்தவனம் வைத்து அதைக் காவல் செய்ய ஒருவனைச் சிவமூர்த்தியிடம் பெற்று அவனுக்குக் காத்தான் எனப் பெயரிட்டனர். இவன் மலையாளஞ் சென்று தொட்டியத்துச் சின்ஞன் என்று சொல்லப்படும் மந்திரவாதியைச் செயித்துத் தனக்கு மந்திரியாக்கி ஆரியமாலை முதலிய பல பெண்களை மணந்தான் என்பர். இவன் தேவிமார் வண்ணாரவல்லி, கந்தழகி, கறுப்பழகி முதலியவர். இது வளையாபதி என்னும் இலக்கிய கதையை யொத்திருக்கிறது என்பர். (காத்தவராயன் கதை.)

2. இவன் முத்தம்மையெனும் தேவதையின் மகன். இவனுக்கு நாரதர் மூன்று மாதர்களின் சௌந்தர்யங்களைக் கூறி மணம்புரியக் கூற இவன் அவ்வாறே வங்கணச் சின்ஞன் எனும் சேவகனுடன் சென்று ஆரியதேசத்துக் கன்னிமாடத்திருந்த ஆரியமாலையிடம் குனிவடிவு, குறத்தி வடிவுமுதலிய கொண்டு சென்றும், காவிரிப்பூம் பட்டினத்துக் கன்னிமாடத்திருந்த உகந்தாயியிடம் நூல் வியாபாரம் செய்யும் கிழச்செட்டியாய்ச் சென்றும், செம்பு குமாரன் வனத்திருந்த கறுப்பாயியிடம் பாம்புபிடாரன் வடிவுகொண்டு சென்றும், பல ஆச்சர்யமான செய்கைகளைச் செய்து அவர்களை மணம்புரிந்தான் என்பர். (காத்தவராய நாடகம்.)

**காத்தியாயனர்**—1. யக்ஞவல்கியருக்கு ஒரு பெயர்.

2. பாணினி சூத்திரத்திற்கு வியாக்கியானஞ் செய்தவாருசி.

**காத்தியாயனி**—1. காத்யாயனர் தவத்தால் பிறந்த பார்வதி தேவிக்கு ஒரு பெயர்.

2. யஞ்ஞவல்கியருக்குத் தேவி.

**காந்தக்கல்** — இது இரும்பையொத்த ஒருவித லோகம். இதனை யிரும்பிற்குமுன் னீட்டினுல் அதனை யிழுக்கும் சக்தியுள்ளது. இதில் திசையறி கருவிகள் செய்து கப்பலோட்டிகள் திசையறிந்து கப்பலைச் செலுத்துவர். இது எத்திசை திருப்பினும் வடதிசையையே காட்டும். இது, அரக்குக் காந்தம், உருளைக்காந்தம் ஊசிக்காந்தம், கற்காந்தம், எனப் பலவகைப்படும்.

**காந்தபுராணம்** — இது மகாபுராணங்கள் பதினெட்டனுள் ஒன்று. இது லக்ஷம் கிரந்தமுடையது. இது தத்புருஷ கற்பத்தில் நடந்த சம்பவங்களையும் கந்தமூர்த்தி தோற்றம் சூராதிகள் ஒடுக்கம் முதலியவற்றை விரித்துக்கூறும். இதிற் சங்கர சங்கிதையைக் கச்சியப்பசிவாசாரியர் தமிழில் மொழிப் பெயர்த்தனர்.

**காந்தமதீர்த்தம்** — தென்கடற்கரையிலுள்ள தீர்த்தம்.

**காந்தம்**—இதுவைதருப்பச் செய்யுணெறியிலொன்று. இது ஒன்றனை உயர்த்துப் புகழுமிடத்து உலகநடை யிறவாமல் உயர்த்துப் புகழல். (தண்டி.)

**காந்தருப்பம்** — கந்தமூர்த்தி எழுந்தருளியிருக்கும் மலைகளில் ஒன்று, இதில் ஒரு ஆண்டு பாண்டுபுத்திரர் தவமியற்றினர்.

**காந்தருவதத்தை** — ஜீவகன் மனைவியரிலொருத்தி.

**காந்தருவநகரம்** — யமபுரிக்குச் செல்லும். வழியிலுள்ள பட்டணம்.

**காந்தருவம்** — ஓர் மலை.

**காந்தருவலோகம்**—இது குய்யகர் உலகத்தின் மேலுள்ளது. இதை விரதம் பூண்டோரும் யாழில் வல்லவராய்த் தேவரைப் பாடியவரும் அடைவர்.

**காந்தருவர்** — பிரமனது நீலவுருக்கொண்ட தேகத்திற் பிறந்தவர் தேவவகுப்பினர்.

**காந்தள்** — கரிய கடலிடத்துச் சூரபன்மாவைக் கொன்றவனுடைய காந்தட்பூவின் மிகுதியைச் சொல்லியது. (பு. வெ.)

**காந்தன்**—1. சிவகணத் தலைவரில் ஒருவன்.

2. வாணாசுரன் படைத்தலைவரில் ஒரு அரசன். காஞ்சியில் சிவபூஜைசெய்து முத்தியடைந்தவன்.

3. ஒரு சோழன், இவன் பொருட்டு அகத்தியர் கமண்டலத்திருந்த காவிரியைப் பெருகச் செய்தனர். பாசிராமர் போருக்கஞ்சி வேறிடத்திருந்தவன். இவனுக்குக் காந்தமன் எனவும் பெயர்.

4. சித்திரதன்வனைக் காண்க.

**காந்தாரகன்** — இவன் பாஞ்சால அரசனுடைய பெரும்படைத் தலைவர்களில் ஒருவன்; இவன் பிங்கலகடகாரற் போரிற் கொல்லப்பட்டனன். (பெரு. கதை).

**காந்தாரநாடு** — இதில் இரத்தினபுரமென்று ஒரு நகரமுண்டு சிறந்த குதிரைகள் பிறக்குந் தேயத்துள் இஃது ஒன்று. (பெரு. கதை).

**The Country of Gandhara lies along the Kabul river between the Kunar and the Indus. Its Capital was purushapura now Called Peshawar.**

**காந்தாரம்** — சிந்துநதிக் கருகிலுள்ள ஒரு தேசம். (மணிமேகலை).

**காந்தாரன்**—1. ஆரத்தன் குமான். இவன் புத்திரன் தருமன்.

2. யயாதி குமரன்.

**காந்தாரி** — காந்தாரதேசத் தாசனாகிய சுபலன் அல்லது சுவேதமகராசன் குமரி. வசுமதி தேவதை அம்சத்தாற் பிறந்தவள். திருதராட்டிரன் தேவி, துரியோதனன் தாய். இவள் தன் கணவன் அந்தகன் என்று கேள்வியுற்றதும் பிறரைப் பாரேன் என்று கண்ணைப் பொற்றகட்டினுல் மூடிக்கொண்ட கற்புடையாள். குந்தியிடம் பொருமையடைந்து வயிற்றில் கல்லாலிடித்துக்கொண்டு வியாசருளால் துரியோதனன் முதலிய நூற்றுவரைப் பெற்றவள். படுகளம் காணவந்த காலத்துக் கிருஷ்ணனை நோக்கி என் வமிசத்தையழித்ததால் உன் வமிசமும் அழிக எனச் சபித்தவள்.

**காந்தி**—1. ஏமவன்மன் தேவி. குமரர் சிங்கவன்மன், சுவன்மன், தேவவன்மன்.

2. பலராமர் தேவியரில் ஒருத்தி.

**காந்திமதி** —1. சோமசேகர பாண்டியன் பெண், உக்கிரகுமார பாண்டியன் தேவி.

2. பவனவேகன் மனைவி. (சூளா).

3. துவட்டாவின் குமரி.

4 மஞ்சுளனைக் காண்க.

**காந்தினி**—1. சுவல்பகன் தேவி. அக்ரூரன் றாய்.

2. சுவர்க்கன் றேவி.

**காபச்யன்** — இவன் பாரியாத்ர கிரியில் வசித்த வேடன் திருட்டுத்தனத்தால் தாய் தந்தையரையும் பெரியோர்களையும் காத்து சித்தி பெற்றவன். (பார-சாந்.)

**காபாலன்** — விஷ்ணுபடரில் ஒருவன்.

**காபாலி** — 1. சிவமூர்த்தியின் திருநாமங்களில் ஒன்று.

2. ஏகாதசருத்திருள் ஒருவர்.

**காபாலிகமதம்** — இந்தமதம், மாயாதத்துவ ருத்திரர்கள் மதம். இம்மதத்தவர் ஆன்மா நித்திய வியாபக சைதன்னியன் என்பர். கர்த்திருத்துவமான சமுசார பாவத்தை விட்டு ஞப்திமாத்ரமா யிருப்பதே மோக்ஷம் என்பர். (தத்துவநிஜாநுபோகசாரம்).

**காபிரியமதம்** — இவர்கள் சாதாரணமாய்க் காப்பிரியர் எனப்படுவோர். இவர்களின் படைப்புக்கடவுளுக்குக் குவினியாடிக் வோசா என்றுபெயர். இவர்கள் பல விக்ரகங்களைச்செய்து அநேக தேவாலயங்களில் வைத்துப் பூசிப்பர். சிலர் சூரியன், சந்திரன், சிலர் ஆகாசம், சிலர் நக்ஷத்ரங்கள் முதலியவற்றைப் பூசிப்பர். இவர்கள் மேபக் எனும் ஒருவிதமான புழு சுபங்களைத் தெரிவிப்பதென்று நினைத்து அதைக் காப்பாற்றுவர், ஆடு, மாடுகளைத் தேவர்களுக்குப் பலியிடுவர். இவர்களின் குருக்கண்மார் ஸ்பின் என்று பெயர் பெறுவர். குருக்கண்மார் வயதிலும் ஞானத்திலும் உயர்ந்தவராயிருப்பர். குருக்கண்மார் தங்களிஷ்டத்திற்கும் சத்திக்கும் தக்க அநேக பெண்களை மணந்து கொள்வர். விபசாரிகளைச் சிரச்சேதஞ் செய்வர். விதவைகள் மறுமணங்கொள்கையில் தங்கள்விரலின் நுனிகளை வெட்டிக்கொள்வர்.

**காபிலகாலயூபம்** — சிற்ப நூலில் ஒன்று.

**காபிலம்**--கபிலரால் ஏற்படுத்தப்பட்டமதம். இது யோகத்தில் மோக்ஷம் என்னும்.

**காம்பில்யன்** — பாஞ்சாலதேசத் தாசனாகிய பரமாசுவன் குமான்.

**காபுரம்** — ஒரு பட்டணம். (சூளா).

**காப்பவ்யன்** — ஒரு வேடராசன் குடிகளுக்கு நற்புத்தி போதித்து நல்வழியடைந்தவன்.

**காப்பிச்செடி** — இது வளர்ந்தால் 20-அடி வளரும். இதை 5, 6-அடிகளுக்குமேல்வளரவிடுவதில்லை. இதன் புஷ்பம் பார்வைக்கு மல்லிகைபோல் காணப்படும். ஒவ்வொரு பூவிலும் ஒவ்வொரு காயுண்டாகும். செடிகள் 2, 3-வருஷம் வளர்ந்தபின் காய்க்கத் தொடங்கும். கொட்டை, ஒருபுறம் உருட்சியாயும், மறுபுறம் பிளப்புள்ளதாகவுமிருக்கும். செடிகளைக் குலுக்கின் பழம் உதிரும். உதிர்ந்த பழங்களை யுருளைகளால் உருட்டி மேல்தோல் போக்கிக் கொட்டை யெடுப்பார்கள். கொட்டையை வருத்துக் கஷாயஞ் செய்வார்கள். இவை, உஷ்ணதேசங்களில் பயிராகும். அரேபியாவில் முதலில் பயிரிடப்பட்டன. இப்போது இந்தியாவில், நீலகிரி, சேர்வராயன்மலை, பழனி மலைச்சாரல், மைசூர், சிலோன் முதலிய பல இடங்களில் பயிரிடப்படுகின்றன.

**காப்பியக்குடி**—1. இது ஒரு குடிப் பெயர். இக் குடிப் பெயர் முற்காலத்தே யிருந்ததென்பதற்குக் காப்பியத் தொல்குடிகவின் பெற வளர்ந்து என்பதால் இது ஓர் குடிப் பெயரென அறியலாம். இக் குடியிற் பிறந்தார், வெள்ளூர் காப்பியனார் பல்காப்பியனார், முதலியோர். இது ஓர் ஊரின் பெயர் என்பர்.

2. சோழநாட்டிலுள்ள ஒரூர், சீர்காழிக் கருகிலுள்ளது. தேவந்தியின் கணவனாகிய சாத்த னிவ்வூரில் வளர்ந்தவன். (சிலப்பதிகாரம்.)

**காப்பியஞ்சேந்தனார்** — இவரது இயற் பெயர் சேந்தனென்பதே ஏதேனும் காப்பியஞ் செய்ததனால் இவ்வடைமொழி கொடுக்கப் பெற்றாரோ அன்றேல் காப்பியம் என்பது இவருடைய ஊர்தானோ தெரியவில்லை. காப்பியன் மகனாகிய சேந்தனாரென்றும் கொள்ளலாம். இவர் பாலைத் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். தலைமகன் வருவதற்குரிய பல்லி சொல்லுதல் முதலாய நிமித்தங்கள் பலவற்றைச் சேர விரித்துக் கூறியுள்ளார். இவர் பாடியது நற். உசகூ-ம் பாட்டு.

**காப்பியம்**—பெருங்காப்பியத்திற்குக் கூறிய அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கனுள் ஒன்றும் பலவுங் குறைந்து வருவது. இருவகைக் காப்பியங்களும் ஒருவகைச் செய்யுளானும் பலவகைச் செய்யுளானும் உரைவிரவியும், பாஷைவிரவியும் வரும். (தண்டி.)

**காப்பியாற்றுக் காப்பியனார்** — களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைப் பாடிப் பரிசில் பெற்றவர். (பதிற்றுப்பத்து).

**காப்புக்குரியகடவுள்**—காப்பாக நான்முகத் துரைக்கப்படுங் கடவுள் திருமால். அத் திருமால் திருமகளைப் புணர்ந்தவனாதலாலும் கிரீடமும், கடகமும், மலர்மாலையும், குண்டலமும், உபவீதமும், கௌத்துவாபரணமுமாகிய இவற்றை யணியும் இறைவனாதலாலும், படைப்புக் கடவுளாகிய பிரமன் தாதை ஆதலாலும் நான்முகத்துக் கூறுதற் குரியவனுமென்று கூறுவர். எல்லா இடையூறுகளை நீக்கும் கடவுளாதலின் விநாயகரையும் காப்புக் கடவுள் என்பர்.

**காப்புநாண்** — அதாவது ரக்ஷாபந்தனம், அல்லது பிரதி ஸரபந்தனம், கங்கணம். இது உற்சவம், பிரதிஷ்டை, அஷ்டபந்தனக்ரியை, தீக்ஷை, புரோக்ஷணகார்யம், ஸ்நபனகார்யங்கள், அந்யமான மங்கள கார்யங்களிலும், மேற்கூறிய பந்தனங் கட்டப்படும். இக் கங்கணம் மந்திரபூர்வகமாய்த் திக்காதிகளையும் வேறு தேவர்களையும் பூசித்துத் தூபதீபங்கொடுத்துப் புருஷர்களுக்குத் தக்ஷிணஹஸ்தத்திலும், ஸ்திரிகளுக்கு வாமஹஸ்தத்திலும் கட்டுவது. (ஸ்ரீ - காரணம்.)

**காமகலை** — ஒரு தாசி. இவள் காசிசென்று கங்காஸ்நானஞ் செய்து தம் நாட்டரசன் வீரசேனனுக்குக் காசிமான்மியங்கூறி முத்தியடைந்தவள். (காசிரகசியம்).

**காமக்கணிப் பசலையார்**—இவர் மதுரைக் காமக்கணி நப்பசலையா ரெனவுங் கூறப்படுவர். பெயர்க்காரணத்தாற் பெண்பாலாரென்பது தெளிவு; காமக்கணி காமாக்ஷி என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு சங்கத்தார் வடசொற்களை அவற்றிற்கு நேராகிய தமிழ்மொழியாலே கூறுதல் வழக்காக வுடையவர்கள் நக்கீரனார் திருமுருகாற்றுப் படையுள் ஜம்புநதியிற் பிறந்தமையால் ஜாம்புநதமெனப் பெயர் பெற்ற தங்கத்தினை அப்பெயராற்கூறாது "நாவலொடு பெயரிய பொலம்" என்றார். இதனை நோக்கியறிக (மகளிர்க்குண்டாகும் பசலையைப் பாராட்டிப் பாடினமையின் இவர் பசலையாரெனப் பட்டார்போ

னும்: அத்தகைய பாடல் இவர்பாடியது கிடைத்திலது) இவர் பாலைமுல்லை வளங்களைச் சிறப்பித்துப்பாடியுள்ளார். தலைவர்காள் நிலையில்லாத பொருள் காரணமாக நுங்காதலியரைக் கைவிடா திருங்கோளென்று குயில்கூவா நிற்கும் என்று இளவேனிலை வருணிக்கிருர் நற்-உசஙு. இவர்பாடியனவாக மேற்காட்டிய பாடலொன்றும், அகத்திலொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**காமக்கிழத்தியர்** — இவர் பலர்க்கு முரியரன்றி யொருவர்க்கே யுரிமைபூண்டுவரும் குலப்பரத்தையர் மகளிராய்க் காமங்காரணமாகத் தலைமகனல் வரைந்து கொள்ளப்பட்டவர்கள். (அகம்.)

**காமக்கிழவமகருஷி கோதான்**—திருக்காஞ்சியில் உமையம்மை தவஞ்செய்த காலத்து வேண்டிய உதவி அருள்பெற்றவன். இவன் வணிகன்.

**காமஞ்சேர் குளத்தார்** — இவர் கடைச்சங்க காலத்தவர். இவர் தலைவரைப் பிரிந்த தலைவிவருந்துதலின் ஆற்ருமை கூறுதலின் இவர் பெண் பாலாரா யிருத்தல் கூடுமெனஎண்ணப்படுகிறது. இவரது நாடு முதலிய தெரியவில்லை. "நோமென்னெஞ்சே நோமென்னெஞ்சே" யென பிரிவிடையாற்றுந் தோழிக்குத் தலைவி கூறுவதாகக் குறுந்தொகையில் பாடியுள்ளார். (குறு-ச.)

**காமதகனமூர்த்தி** — மன்மதனை எரித்த திருவுரு.

**காமதேநு** — அமிர்த மதனகாலத்துப் பிறந்தபசு. இதை இருடிகள்விரும்பிக்கொண்டனர். இது வேண்டியவற்றைக் கொடுக்கும் வலியுள்ளது.

**காமதை** — ஒரு அரசன் தேவி. இவள் துர்ப்புத்தி என்பவனைக் களவிற் புணர்ந்து நீங்கி வசுமதி என்பவனைப் புணர்ந்து ஒரு குமரனைப்பெற்று வசுமதி யிறக்க மீண்டும் துர்ப்புத்தியைப் புணர்ந்து கப்பலேறிச் சென்று கப்பல் கவிழ்ந்திறந்தனள். காமதை பெற்ற குமரனை வசுமதியின் தேவி வளர்த்துச் சங்கரன் எனப் பெயரிட்டழைத்த புண்ணியத்தால் நற்கதி யடைந்தனள்.

**காமத்தாலுண்டான பத்துத் துக்கங்கள்**— வேட்டையாடல், சூதாடல், பகலிற்றூங்கல், வம்பளத்தல், பெண்ணாசையுள்ளவனுதல், குடித்தல், பாட்டு, கூத்து, வாத்யம் இவைகளில் விருப்பு, வீணை அலைச்சல், ஆக பத்து.

**காமந்தகன்** — ஒரு ரிஷி. அரிட்டநாமன் என்னும் அரசனுடன் தர்மசம்வாதம் செய்தவன். (பார-சாந்.)

**காமந்தன்** — சோமகாந்தனைக் காண்க.

**காமபாலன்** — பலராமன்.

**காமபீடம்** — மோக்ஷ முதலியவற்றை எண்ணித் தவமியற்றுவோர்க்கு இஷ்டசித்தியருளுவதா லிப்பெயர் பெற்ற காஞ்சிமாநகரம்.

**காமயோனி மண்டலம்** — சத்தி பீடங்களிலொன்று.

**காமரதன்** — சைலரதன் குமரன். இவன் குமரன் மகாரதன்.

**காமரூபம்** — ஆரியாவர்த்தத்திற்குத் தென் கிழக்கிலிருக்கும் தேசம்.

**காமலக்ஷணம்**—இது, பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி முதலிய சாதிப் பெண்களின் குணமறிந்து உத்தமனுகிய புருஷன் புணர்வது. கூடுமிடத்து லதாவேஷ்டிதம் (கொடி போலச் சுற்றித் தழுவல்.) விருக்ஷாதிருடாலிங்கனம் (மரத்தைப் போல் ஏறித்தழுவுதல்.) திலதண்டுலா லிங்கனம் (எள்ளும் அரிசியும் போலக் கலந்து தழுவல்.) க்ஷீர நீராலிங்கனம் (பாலு நீரும் போல ஒன்றுபடத் தழுவல்.) ஊருப்பிரகூடாலிங்கனம் (தொடையால் நெருக்கித் தழுவல்.) சகனுேப சிலேஷாலிங்கனம், (சேரத் தழுவல்.) ஸ்தனுலிங்கனம் (கொங்கைகள் அழுந்தத் தழுவல்.) லலாடிகாலிங்கனம் (நெற்றி பொருந்தத் தழுவல்.) ஆக எட்டு வித ஆலிங்கனங்களையும், கண், கபோலம், தனம், நெற்றி, கைம்மூலம், நிதம்பம் வாயினிதழ், உந்தி என்னும் எட்டுவித இடங்களின் சும்பனங்களையும், நகக்குறிகளையும், தந்தக்குறிகளையும், சங்கோசம், பக்கத்தம், பிரசுரிதம், முஷ்டி என்னும் தாடனங்களையும், உத்தானிதம், திரியக்கு, ஆசிதகம், ஸ்திதம், ஆன்மிதம் முதலிய கரணங்களால் கிராமியம், நாகரம், உற்புல்லிதம், சிரும்பிதம், இந்திராணிகம், உத்தானசம்புடம், பாற்சம்புடம், ஊருபீடிதம், வேஷ்டிதம், பாடவம், உற்புக்கினம், பணிபாஷம், உரபூஷணம், மத்திநிபீடிதம், மதனசிரும்பிதம், ஊருத்துவநிபீடிதம், வேணுவிதாரிகம், சூலசிதம், கர்க்கடம், பிரேங்கா, பத்மாசனம், அர்த்தபத்மாசனம், சமயனம், கூர்மம், பரிவர்த்த

னம், அதிபீடிதம், கடிபீடிதம், சமுற்கம், விபரிவர்த்தனம், யுக்மபதகரணம், விதர்ச்சிதம், மர்க்கடம், சாநுகூர்ப்பரம், அரிவிக்கிரமம், துவிதலம், அவலம்பிதம், பசுகரணம், வியாக்கிரமம், சித்திரம், சங்காடகம் முதலிய (௫0) வகைப்பட்ட கரணங்களையும் நடத்தி யின்புற்று, இல்லறத்துணைவியுடன் சுவர்க்கமடைவது.

**காமக்கண்ணி** — காமாக்ஷி.

**காமந்தகன்**—ஒரு ருஷி ஆங்கரிஷ்டனுககுத் தர்மம் உபதேசித்தவன். (பா-சாந்தி.)

**காமன்** — 1. தருமனுக்குச் சிரத்தையிடம் உதித்த குமரன். பாரி ரதி.

2. பிரசாபதியின் படை வீரரில் ஒருவன். (சூளா.) விஷ்ணுவின் குமரன்.

**காமன் கோட்டம்** — மன்மதனுடைய கோயில் இராசகிரியத்தின் புறநகரத்திலுள்ளதொரு சோலையில் இவ்வாலயம்இருந்தது. இதில் தலைவன் தலைவிகள் இருத்தற்குரிய மணவறை முதலியன இருந்தன. இராசகிரியத்தில் இத்தெய்வத்திற்கு விழவு நடந்த தென்றும் அதன் காலவரை எழுநாளென்றும் நகரத்தார் இத்தெய்வத்தைத் தரிசித்தற்கு இங்கே வருவதுண்டென்றுந் தெரிகின்றது. கண்டோர்க்கு இன்பமளிக்குந் தோட்ட முதலியன இக்கோட்டத்தைச்சூழ்ந்திருந்தன. உதயணன் பதுமாவதியை முதலிற் கண்டு களித்தது இக்கோட்டத்தின் வாயிலிலேதான். தம்முடைய எண்ணம் பலிக்க வேண்டுமென்று தலைவன் தலைவிகள் தனித்தனி இதிலிருந்து தானஞ் செய்வதுண்டு. (பெ-கதை.)

**காமாட்டி**—தச்சன், மண்ணுற் சுவர் வைப்போன், கொல்லன்.

**காமாரி** — தாரகாசுரனல் வருந்திய தேவர் யோகத்திருந்த சிவமூர்த்தியிடம் மன்மதனை ஏவினர். மன்மதன் சிவமூர்த்திமீது காமத்தை யுண்டாக்கும் பாணத்தை ஏவினன். அதனல் சிவமூர்த்திகோபித்து நெற்றிக்கண்ணை விழிக்க மன்மதன் எரிந்தனன். பின்பு இரதிதேவி வேண்டச் சிவமூர்த்தி அவளுக்கு உருவாயும் மற்றவர்க்கு அருவாயும் இருக்க அருள் புரிந்தனர். இந்த மன்மதனை யெரித்த திருவுருவே காமாரி யெனப்படும்.

**காமாலைரோகம்** — இது நரம்புகளை அநுசரித்த பித்தம் ரத்தமாமிசத்தைத் தகிக்க உண்டாவது. பாண்டுரோக முதிர்ச்சியில் பித்த வஸ்துக்களைப் புசிப்பதாலும் புணர்ச்சியாலும் உண்டாவது. இது, ஊதுகாமாலை, வறட்காமாலை, வாதகாமாலை, பித்தகாமாலை, சிலேஷ்மகாமாலை, வாதசிலேஷ்மகாமாலை, பித்தசிலேஷ்மகாமாலை, திரிதோஷகாமாலை, மஞ்சட்காமாலை, அழகுகாமாலை, செங்கமலக்காமாலை, கும்பகாமாலை, குன்மகாமாலை, எனப் பதின்மூன்று விதம். இது நரைச்சீரகக் கண்டு, கீழ்க்காய் நெல்லித் தயிலம் முதலிய கொடுக்கக் குணமாம்.

**காமாளர்** — பதினேராம் மன்வந்தரத்துத் தேவர்.

**காமாக்ஷி** — சத்தி பீடங்களில் ஒன்ருகிய திருக்காஞ்சியில் எழுந்தருளிய சிவசத்தி. இவள் திரிமூர்த்திகளையும் மூன்று நேத்திரங்களில் பெற்றவள் என்பது சத்தி மகாத்மியம்.

**காமாக்ஷிவிளக்கு** — கல்யாண முதலிய சுப நாட்களில் கஜலக்ஷ்மி காமாக்ஷி யமைத்த விளக்கு.

**காமாந்தகன்** — சிவன்.

**காமிகம்** — சிவாகமத்துள் ஒன்று. ஆகமம் காண்க.

**காமியகம்**—காண்டவ பிரஸ்தத்திற்கு மேற்கே மறுதன்வசு யென்னப்பட்ட புண்ணியவனம்.

**காமியவனம்** — பாண்டவர் அரணியவாசத் திற்றங்கிய இடம்.

**காமியாகனம்** — இது சற்புத்திரர் செல்வம் முதலியவற்றை விரும்பி நல்லோர்க்கு உதவுதல்.

**காமினிகள்** — ஒருவகைப் பாதாளகன்னியர் சுபலன்முகத் துதித்தவர். சகல சாதியிலும் விபசாரம் செய்பவர்.

**காமுகன்** — பிரசாபதியின் படைவீரர்களுள் ஒருவன்.

**காமேச்வரன், காமேச்வரி** — மணித்வீபத்தில் சிந்தாமணி மண்டபத்தில் சக்ராலயத்தில் வீற்றிருக்கும் சிவசத்தியர்.

**காம்பன்** — ஒரு வாநரசேனபதி.

**காம்பிலி**—துருபதனது ராசதானி. பஞ்சால தேசத்தின் ஒரு பாகம்.

**காம்பில்லியம்**—தட்சணபாஞ்சலத்திலுள்ள ஒரு நகரம். அரசன் துருபதன்.

**காம்பில்யன்** — அரம்மியாச்வன் குமரன்.

**காம்போசம்**—பரதகண்டத்திற்குக் கிழக்கிலிருக்கும் தேசம். இத்தேசாதிபதி அருச்சுநனிடம் சண்டைசெய் திறந்தான்.

**காம்போஜம்** — நிஷதபர்வத்திற்குத் தெற்கில் உள்ள தேசம். அஸ்வஸ்தானம் குதிரைகளிருக்குமிடம். இதற்கு அரசன் சுதட்சணன் (Afghanistan) The name has been derived from Aswasthan, the place of horses.

**காம்போதிராசன்** — பாரதயுத்தத்தில் சிகடனுடன் யுத்தஞ்செய்தவன்.

**காம்போதியார்**—இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர் (குறு-ங.அசு.)

**காயங்கரை**—ஒரு நதி, இதன் கரையில் பிரமதருமன் எனும் புத்தமுனி தவஞ் செய்து கொண்டிருந்தனன். அத்திபதி யெனும் அரசன் அவந்திக்குச் செல்லும் பொழுது இதன் கரையில் தங்கினன். (மணிமேகலை).

**காயசண்டிகை**—வித்தியாதரமங்கை, காஞ்சனன் தேவி. இவள் தன் கணவனுடன் பொதியமலையின் வளங்காணச் சென்று அங்கு விருச்சிகரெனும் முனிவர்பொருட்டுப் பன்னிரண்டு வருஷத்திற்கொரு முறை பழுத்து அவர் பசியைப் பன்னிரண்டு வருடம்வரையிற் போக்கவல்ல நாவற்கனியைக் காலாற் சிதைத்து அந்த இருடி தந்த சாபத்தால் யானைத்தீயென்னும் பசிநோயால் வருந்தி மணிமேகலை தந்த உணவால் பசிநீங்கித் தன்னகரஞ்செல்லுகையில் விந்தமலை காக்கும் விந்தாகடிகையா விழுக்கப்புட்டு அவள் வயிற்றிலடங்கியவள். (மணிமேகலை).

**காயத்திரி**—1. காலை மத்தியானம் மாலை முதலிய காலங்களில் சைவ வைணவ ஸ்மார்த்தர்களால் அந்த அந்தச் சந்தியா ரூபங்களாகத் தியானிக்கப்பட்ட தேவதா மந்திர சுவரூபம். (பிரமன் தேவியரில் ஒருத்தி).

2. ஒருமுறை பிரமன் வேள்விபுரியத் தொடங்குகையில் சரஸ்வதி வரத் தாமதித்தனள். அந்தக் காலத்தில் முனிவரும் தேவரும் ஒரு பசுவை நிருமித்து அப்பசுவின் வயிற்றிலிருந்து அவ்விடமிருந்த இடைப் பெண்ணை வருவித்து அவளுக்குக் காயத்திரி என்ற பெயரிட்டுப் பிரமனுக்கு யாக தேவி யாக்கினர்.

**காயத்ரிபீடம்**—சத்திபீடங்களி லொன்று.

**காயலான்**—காயல்பட்டணத்துமகம்மதியன்

**காயா ரோகணம்**—இது சிவமூர்த்தி சர்வசங்காரகாலத்தில் பிரமவிஷ்ணுருத்ராதி சமஸ்த தேவமானுஷாதி சராசரங்களைத் தம்மில் ஒடுக்கின தானங்களாம். (காஞ்சி-பு.)

**காயை** — தக்ஷன் பெண், தருமன் தேவி.

**காய்சினவழுதி**—முதற்சங்கமிருத்திய பாண்டியன். இவனை உக்கிரபாண்டியன் என்பர்.

**காய்தான்ய வகை** — துவரை, உளுந்து, கடலை, மொச்சை, வெண்மொச்சை, காராமணி, கருங்காராமணி,பனிப்பயறு, பச்சைப்பயறு, தட்டைப்பயறு, வெண்பயறு கரும்பயறு, கொள்ளு, எள்ளு, பட்டாணி முதலிய (பதார்)

**கார உப்புக்கள்**—வெங்காரம், சீனக்காரம், சௌகாரம், அப்பளகாரம் நவாக்ஷாரம், யவாக்ஷாரம், சத்திக்ஷாரம், தும்பக்ஷாரம், உமிலிக்ஷாரம் முதலிய.

**காரகர்** — ஓர் இருடி. காஞ்சியில் திருமாலருள் பெற்றவர்.

**காரகர்கள்** — சூரியன் - பிதுர்க்காரகன், சந்திரன்-மாதுர்க்காரகன், செவ்வாய் - சகோதரகாரகன், புதன் - வித்தியாகாரகன், குரு - புத்திரகாரகன், சுக்ரன் - களத்திரகாரகன், சநி - ஆயுஷ்காரகன், இராகு - ஞானகாரகன், கேது - மாரககாரகன்.

**காரசாரப் பிறப்பு**—(10) சூடன், சீனம், பூநீறு, வளையலுப்பு, பச்சைகர்ப்பூரம், கல்லுப்பு, கறியுப்பு, பொன்னம்பர், மீனம்பர், கடல் நுரை முதலிய. (போகர்.)

**காரணமாலையணி** — அஃதாவது பின்பின்னாக வருவனவற்றிற்கு முன்முன்னாக வருவனவற்றைக் காரணங்களாகவேனுங் காரியங்களாக வேனுஞ் சொல்லுதல் இதனை வடநூலார் காரணமாலா என்பர். (குவல)

**காரணவாராய்ச்சியணி**—அஃதாவது குறைவில்லாத காரண மிருந்துங் காரியம் பிறவாமையைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் விசேஷோக்தி யலங்காரமென்பர்.

**காரணம்** — பிறிதொன்றற்காகாமல் நியதமாய்க் காரியத்திற்கு முன்னிற்பது.

**காரணர்** — ஓர் இருடி.

**காரண்டன்** — தெய்வீக அரசனைக் காண்க. புரையூர் மலையாண்டவன்.

**காரபசனம்**—ஒரு தீர்த்தம் ஸரஸ்வதிநதி தீரத்துள்ளது.

**காரபிமதம்**—இத்தேசத்தவர்கள், நல்ல ஆவியும், தீய ஆவியும் இருக்கின்ற தெனவும், நல்ல ஆவியைச் செமின்எனவும், தீயஆவியை மாபோய என்றும் கூறுவர். ஒவ்வொருவரிடத்தும் தீய ஆவியிருக்கிற தென்றும், லூகோ எனும் ஆதிமனுவு

னல் எல்லாச் சீவர்களும் உண்டாயினர் எனவும், அந்த லூகோ சுவர்க்கமடைந்தனன் எனவும், சுவர்க்கம் சிருட்டிக்கப் பட்டதன் றெனவும் கூறுவர். பின்னும் சிமென எனும் ஆவியைத் தேவர்களில் உயர்ந்தவனென்று எண்ணிப் பெரிய விக்ரகம் செய்து பூசிப்பர். மாபோயி எனுந் தேவதை துஷ்டதேவதை யாகையால் சிறு விக்ரகமாகச் செய்து பூசிப்பர். இவர்களின் குருக்கண்மார் போயல் எனப்படுவர். குருமார் ரொட்டியும் நீருமுண்டு சிறு குடிசைகளில் வசிப்பர். இவர்கள், ஒவ்வொரு தேகத்திலும் அநேக ஆத்மாக்கள் இருக்கின்றன என்றும், அந்த ஆத்மாக்கள் செய்த புண்ணிய பாபங்களைத் தாமே மறு பிறவியில் அனுபவிப்பர் என்றும் கூறுவர்.

**காரளன்** — 1. சூரபத்மன் படைத்தலைவரில் ஒருவன்.

2. இவன் காட்டெருமை யுருக்கொண்ட விகாரனுடன் கூடித் தான் காட்டுப் பன்றி யுருக்கொண்டு விநாயகரிடம் வந்து இறந்தவன்.

**காராக்கிருகக்குகை** — திருப்பரங்குன்றத்தி லுள்ள குகைகளுள் ஒன்று; இது நக்கீரரைப் பூதம் சிறைவைத்த இடமாம். (திருவிளை)

**காரி**—1. இவர் திருக்குருகூரிலிருந்த வேளாளர். இவர்க்குக் காரிமுதலியார் என்று பேர். இவர் நம்மாழ்வாருக்குத் தந்தையார். இவர் தேவி உடையநங்கை; இவர் தந்தை போர்க்காரியார்.

2. இவன் மலையமான் திருமுடிக் காரி எனவும் கூறப்படுவன். மலையமானாகிய திருக்கோவலூர்பக்கத்தைஅரசாண்டவன். கடையெழுவள்ளல்களி லொருவன். சேர சோழ பாண்டியர்களுக்குப் படைத்துணை யாயிருப்பவன். புலவர்க்குப் பலவாகப் பரிசுகொடுத்து ஆதரிப்பவன். புலவர்க்குத் தேர்கொடுத்தலானே தேர்வண்மலையனெனப்படுபவன் (நற்-௧00) முள்ளூர்மலையை யுடைமையின் "முள்ளூர் மன்னன் கழறொடிக்காரி" எனவுங் கூறப்படுவன். கபிலராலும், பரணராலும், மறோக்கத்து நப்பசலையாராலும் பாடப்பெற்றவன். விற்போரால் வென்று நிரை கவர்பவன் "பல்லா நெடுநிரைவில்லியினொய்யும், தேர்வண்மலையான்" (நற்-௧00) "மாயிருமுள்ளூர் மன்னன்மாவூர்ந், தெல்லித்தரீஇ இயவினநிரைப், பல்லான்கிழவரின்" (நற்-௨௯௧) இவன் அரசாளுநாளில் ஆரியர் பெரும் படையோடு வடக்கிலிருந்து தமிழ்நாடு புகுந்து திருக்கோவலூரை முற்றினர். அதுகண்ட காரி அஞ்சாது எதிர்த்துப் போர்செய்ய அவர் ஆற்றாராய்ப் பின்வாங்கி ஓடலாயினர் "ஆரியர் துவன்றிய பேரிசைமுள்ளூர்ப், பலருடன் கழித்த வொள்வாண்மலையன, தொருவேற்கோடியாங்கு" (நற்-௧௭0) இவ்வாறு இவன் வெற்றிமேன்மேலெய்தக்கண்ட தகடூர் அதிகமானெடுமானஞ்சி படையொடு வந்து கோவலூரை முற்றிக் காரியைத் தோற்கச் செய்து ஓட்டிவிட்டு இவனது நாட்டினைக் கைப்பற்றிக் கொண்டான். தோற்றோடிய காரிபெருஞ் சேரலிரும் பொறையை யடைந்து அவன் கருத்துப்படி கொல்லிமலையை யாண்ட வல்வில் லோரியைப் போரிலே கொன்று அவ்வோரியினது நாட்டைச் சேரலனுக்குக் கொடுத்துவிட்டு அவனை அஞ்சிமேற் படை யெடுக்குமாறு செய்வித்தான். சேரன் தகடூரை முற்றி அஞ்சியைக்கொன்று போக்கி அவன் கைப்பற்றியிருந்த கோவலூர் நாட்டைக் காரியிடம் கொடுத்தனன். அவன் அதனைப்பெற்று முன்போல ஆண்டிருந்தனன். நற்றிணையில் இக்காரியைப் பாடியவர், கபிலரும் பரணரும் ௧00, ௧௭0, ௨௯௧, ௩௨0.

2. இவர் பழயனூரிலிருந்த ஒருவள்ளல். இவர் தாம் வறுமையடைந்த காலத்துத் தம்மிடம் வந்த ஔவையாரை உபசரித்துத் தமக்கிருந்த அன்னத்தை ஔவையாருக்கிட்டுத் தமக்குச் சீவனாதாரமாயிருந்த களைகட்டையும் ஔவையார்க்குத் தந்தவர். ஔவையார் "பாரிபரித்த பரியும் பழையனூர், காரிகொடுத்த களைகட்டும்—சேரமான், வாராயென வழைத்த வாய்மையு மிம்மூன்றும், நீல்ச் சிற்றுடைக்கு நேர்" எனப் பாடப்பெற்றவர்.

3. ஒரு வள்ளல் பிறப்பால் இடையர் என்பர். மலைநாட்டுத் திருக்கோவலூரையும், முள்ளூர் மலையையுமுடையார். (கோகுல சதகம்).

**காரிகிழார்**—பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடியவர். வேளாளர். இவருக்குக் கானட்டனர் எனவும் பெயர். (புற-நா.)

**காரிகை**—அமுதசாகரர் இயற்றிய யாப்பிலக்கணம். இது நாற்பத்தினன்கு கட்ட

ளைக் கலித்துறைகொண்டு உறுப்பு, செய்யுள், ஒழிபு என்னும் மூன்று இயல்களால் ஆனது.

**காரிக்கண்ணனூர்**—இவர் கடைச்சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனூர் என்பாரும் இவரே. இவர் வணிகர் மரபினர். "கழைமாய் காவிரி கடன்மண்டு பெருந்துறை" எனத் தம்மூரைச் சிறப்பித்தலின் இவர் அக் காவிரிப்பூம் பட்டினத்தார் என்றே கூறலாம். இவர் பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறனது வெற்றியைச் சிறப்பித்துக் கூறினர். (புற-இ௫) ஒருகால் சேரலன் சேநாபதி பிட்டங்கொற்றனிடஞ் சென்று அவனைப் புகழ்ந்து பரிசு பெற்றனர். (புற-கசுசு) சோழன் பெருந்திருமாவளவனும், பாண்டியன் பெருவழுதியும் ஒருசேர இருந்தாரை உடனிலையா வாழ்த்தினர். (புற-இ௫) ஆஅய் அண்டிரனைப் பாராட்டிக் கூறினர். (நற்-உகஎ) பிரிந்த காதலனைக் கருதி வருந்தினுயு மில்லையேயென்று தலைவியைத் தோழி கடிந்து கூறுவதாக உரை மாறுபடப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் (௧) குறுந்தொகையில் (௧) அகத்தில் (உ) புறத்தில் (௫) வள்ளுவர் மாலையில் (௧) ஆக பாடல்கள் (௰) உள.

**காரிநாயனூர்**—திருக்கடவூரில் வேதியர்குலத்திற் பிறந்து தமிழில் நூல்கள் செய்து தமிழ் நாட்டரசர்களுக்கு அதை விளக்கிப் பொருள்பெற்றுச் சிவாலயத் திருப்பணிகள் செய்து சிவநேசமுள்ளவராய் முத்தி பெற்றவர் (பெ-புராணம்.)

**காரியசமை** — வாதியாற் கூறப்பட்ட ஏதுவிற்கு அந்நிய காரியத்தினுற் சம்பவித்தலைக் கூறல்.

**காரியத்தன்மை** — பிறிதொன்றற் காகாது நியதமாய்ப் பின் நிற்பதன் தன்மை.

**காரியாசான்** - மாக்காயனுர் மாணக்கர். சிறுபஞ்சமூலம் இயற்றியவர். இவர் காப்புச் செய்யுளால் சைநர் எனத் தெரிகிறது.

**காரியார்**—1. இவர் பாண்டிநாட்டில் கொற்கையெனும் பதியில் புத்தன் என்பவனுக்குப் புத்திரராய்ப் பிறந்து புராரி நாயனர் வேண்டுகோளால் கணக்கதிகாரம் இயற்றினவர்.

2. அநபாயச் சோழன் காலத்திலிருந்த ஒருவர்.

**காரியாறு**—1. ஒரு நதி (மணிமேகலை) நெடுங்கிள்ளி யென்னும் சோழ னிறந்த இடம்.

**காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி**—சோழ பரம்பரையைச் சேர்ந்தவன். கோவூர் கிழாரால் பாடப்பெற்றவன். இவனிருந்தது உறையூர். சோழன் நலங்கிள்ளிக்குப் பகைவன். இவன் பெயர் நெடுங்கிள்ளி எனவும் வழங்கும் (புற-நா.)

**காரியார், நாரியார்**—மதுரையில் பாண்டியனிடம் பரிசுபெற நினைத்துவந்த தமிழ்ப் புலவர்கள் இருவர். இவர்களிருவரும் தம் நாடுவிட்டு மதுரைக் கடுத்துவந்த காட்டில் வழிதடுமாறுகையில் சொக்கேசர் ஓர் இடையர்போல்வந்து இவர்களைத் தம்மைப்பாட இரந்து, அவர்கள் கூறிய பாடல்களைக்கேட்டு, பாண்டியர் புகழ் அரியதென வழிகாட்டி மறையப் புலவர்கள் கடவுளென்றறிந்து சன்னதியடைந்து சொக்கரைப் பாடிக் களித்தனர். இச் சிவாவசரத்தைச் சுந்தரக்கோனென்பர் இடையர்.

**காரிரத்னகவிராயர்**—இவர் திருநெல்வேலி ஜில்லா ஆழ்வார் திருநகரியை யடுத்த பேறையூரில் சற்றேறக்குறைய (300) வருடங்களுக்கு முன்னிருந்த வைணவர். மாறனலங்காரவுரை, பரிமேலழகர் நுண்பொருண்மாலை முதலிய செய்தவர்.

**காரீரியாயஜனம்** — மழையை விரும்பினவர்கள் செய்யும் காமிய இஷ்டி. (பரா-மா).

**காருகபத்யம்**—இது ஒரு அக்னி. கிருஹங்களுக்குப் பதியாயிருப்பது, இது பிரம்மா வாகிறது. இது அவரிடத்தில் உண்டானது. இது ப்ருத்வி, பிருத்வி வட்டமாதலால் இது வட்டவடிவுள்ளது.

**காருட்புராணம்** — இது ஆறுயிரம் கிரந்தமுள்ளது. உலகசிருட்டி, விரதவிவரணம், சமாச்ரயணம், சோதிடம், இரத்தினபரீக்ஷை, ஔஷதசிகிச்சை, சாமுத்திரிகாலக்ஷணம், புண்யக்ஷேத்திரம் முதலியவற்றைப்பற்றி விவரிக்கும்.

**காருண்யபாண்டியன்** — கற்பூரபாண்டியனுக்குக் குமரன்.

**காருபயம்** — ஒரு பட்டணம், இதை ஒரு கொடுங்கோலரசன் ஆண்டிருந்தனன். இதை இவனிடமிருந்து இலக்ஷ்மணர் நீக்கித் தம் புத்திருக் களித்தனர்.

**காருவாரன்** — நிஷாதனுக்கு விதேகஜாதி ஸ்திரீயிடம் பிறந்தவன். இவனுக்குத் தோல்வேலை (மநு.)

**காருஷர்**—கருஷனிட மிருந்துதித்த சந்ததியார்.

**காநூரவம்சம்**—சூரியகுலத் தரசனுகிய கரூரனுலுண்டான வம்சத்தவர். இவர் பிறகு வேதியர் ஆயினர்.

**காநுடகூடன்**—ஒரு சிவகணத் தலைவன்.

**காரைக்காட்டுவேளாளர்**—இவர்கள் உடையார் பாளயம் தாலூகாவில் உள்ள பிரிவினர். இவர்கள் வேளாளரில் அதிகமாகக் கலந்தவராகக் காணப்படவில்லை. இவர்கள் காரைக்காடு எனும் இடத்திலிருந்து வந்தவர்கள் என்பர். . (தர்ஸ்டன்)

**காரைக்காலம்மையார்** — காரைக்காலில் வைசியர் குலத்தில் தனதத்தன் என்பவர் ஒருவர் இருந்தனர். அவர்க்குப் புனிதவதியார் எனும் ஒரு குமரி இருந்தனர். இந்தப் புனிதவதியாரை நி தி ப தி செட்டியாரின் குமரர் பரமதத்தருக்குத் தனதத்த செட்டியார் மணஞ்செய்வித்து மருமகனையும் குமரியையும் தமக்குப் புத்திரரில்லாமையால் தம் வீட்டிலேயே நிறுத்திக்கொண்டனர். இவ்வகை பரமதத்தன் சிவனடியவர் பத்தியிற்சிறந்த புனிதவதியாருடன் இல்லற நடாத்துகையில் ஒருநாள் அவரிடம் வந்த வர்த்தகருட் சிலர் இரண்டு மாங்கனிகள் கொண்டுவந்து உதவினர். அவற்றைப் பரமதத்தர் வீட்டுக்கனுப்பினர். புனிதவதியார் அப்பழங்க ளிரண்டையும் வாங்கிப் பத்திரப்படுத்துகையில் சிவனடியவர் ஒருவர் நல்விருந்தாயினர். அடியவரைக் கண்ட புனிதவதியார்எதிர்கொண்டழைத்துபசரித்து அவர் பசியுடனிருந்தமை கண்டு அன்புடன் அன்னம் பரிமாறஅந்த வேளையில் கறியமுது சித்தமாகாமையால் கணவர் அனுப்பிவைத்த மாங்கனிக ளிரண்டில் ஒன்றைச் சிவனடியவருக்கிட்டுபசரித் தனுப்பினர். கணவர் தம் காரிய முடித்து அன்னம் புசிக்கையில் தாம் அனுப்பின மாங்கனிகளில் ஒன்று கேட்டனர். புனிதவதியார் ஒருபழம் கொண்டுவந்து பரிமாற உண்டு அதிக உருசியாயிருந்தமையால் மற்றொன்றையும் கேட்டனர். புனிதவதியார் உடல்நடுங்கித் தாம் எடுத்து வருவதாகத் திரும்பிச் சிவமூர்த்தியிடம் தமது குறைகூறி யாசிக்கத் திருவருளால் மாங்கனியொன்று கையில்வந்தது. அதனைக் கணவருக்களிக்க அவருண்டு இது அமிழ்தினு மினிது, நானனுப்பியதன்று ; இதன் வரலாறு கூறுக எனப் புனிதவதியார் நடந்தவைகளை வெளிப்படுத்தினர். செட்டியார் கேட்டு வியப்புடன் ஆயின் மற்றொரு கனி வருவிக்க வென்றனர். புனிதவதியார் சிவத்தியானஞ்செய்ய மற்றொரு கனிதோன்றி மறைந்தது. செட்டியார் இந்த அற்புதச் செய்கைகளைக் கண்டு இவள் தெய்வமாதென அஞ்சி விட்டு விலகஎண்ணி வர்த்தகத்திற்குச் செல்ல எண்ணுவார்போல் வேற்றூருக்குச் சென்று பாண்டிநாட்டில் ஒரு பெண்ணைமணந்து ஒரு புத்திரியைப் பெற்று அப்புத்திரிக்குப் புனிதவதியெனப் பெயரிட்டு வாழ்ந்துவந்தனர். இவ்வகையிருக்கப் புனிதவதியாரின் சுற்றத்தவர் பரமதத்தர் பாண்டிநாட்டி லிருப்பதைக் கேள்வியுற்றுப் புனிதவதியாரை அழைத்துச் சென்றனர். புனிதவதியாரின் வரவறிந்த பரமதத்தர் எதிர்சென்று பணிந்தனர். சுற்றத்தவர் யாதென வினவப் பரமதத்தர் இவரிடம் தெய்வச்செயல் கண்டேன் ஆகையால் நான் வணங்குந் தெய்வமெனக் கொண்டேன், நீங்களும் வணங்குங்கள் என்றனர். இதைக் கேட்ட மனைவியராகிய புனிதவதியார் சிவமூர்த்தியையெண்ணித் தியானித்துக் கணவன்பொருட்டுத் தாங்கிய இந்த உருநீக்கிப் பேயுரு அருள்க எனப் பெற்றுப் பல பிரபந்தங்கள் பாடித் திருக்கைலைக்குத் தலையாற்சென்று தரிசிக்கச் சிவமூர்த்தி 'அம்மே வா' என அழைக்கத் தரிசித்துநின்றனர். சிவமூர்த்தி வேண்டியவை என்ன என அம்மையார் சிவமூர்த்தியை நோக்கிப் பிரியா அன்பும் திருநடன தரிசனமும் அத்திருவடிக் கீழ் என்றும் இருக்கும் சிவானந்தவாழ்வும் வேண்டிப் பெற்றுச் சிவாக்ஞைப்படி திருவாலங்காட்டிற் சென்று நடனதரிசனங் கண்டு சிவப்பேறு பெற்றவர். சிவபெருமான் அம்மையே என அழைத்த காரணத்தால் காரைக்கால் அம்மையார் எனத் திருநாமம் பெற்றனர். இவர் அருளிச்செய்த நூல்கள் : அற்புதத்திருவந்தாதி,திருவிரட்டைமணிமாலை, மூத்த திருப்பதிகம் முதலியன. (பெ. புராணம்).

**கார்காத்தவேளாளர்** — உக்கிரகுமார பாண்டியன் மேகங்களை விலங்கிட்டபோது இந்திரன் மழைபெய்விக்கிறேன், அவற்றை விடுவிக்க என வேண்டினன். பாண்டியன் அவன் சொல்லில் நம்பிக்கையிலா[illegible] விடுவிக்காதிருக்க வேளாளர் இந்திர

னுக்குப் பிணையாய் மேகங்களை விடுவித்த னர். ஆதலால் இப்பெயர் அடைந்தனர்.

**கார்கி**—பாஷ்களர் குமரியிடம் இருக்குவேத மோதிய ஒருமுனிவர்.

**கார்க்கியர்** — ஜலத்திற் பிறந்தவர்.

**கார்க்கேயன்** — சிநி குமரன்.

**கார்க்கவன்**—ஒரு வணிகன், இவன் வயிண வன் என்னும் ஒருவனுடன் கூடிப் பல வணிகரைக் கொன்று ஒரு ஆலயத்துத் தீப தரிசனஞ்செய்ய வயிணவனுடன் முத்தி பெற்றவன்.

**கார்க்கன்**—ஓர் இருடி தொண்டைநாட்டில் திருக்காரகத்திற் றிருமால் அருள்பெற்ற வன்.

**கார்க்கியமுனிவர்** — 1. யுதாசித் என்னும் அரசனது புரோகிதர், சித்திரகேதுவைப் பார்க்க.

2. யஞ்ஞவல்கியரோடு வாது செய்த வன்.

**கார்க்குமரம்**—இந்த மரம், சீதளப் பிரதேசத் தில் உண்டாவது. இது (15) அடி உயரம் உள்ளது. இதைச்சுற்றிய பட்டை பொருக் குப் பொருக்காய் உறுதியா யிருக்கும். மரத்தின் அடிப்பாகத்தைக் கீழும் மேலும் கத்தியால் கீறிவிடக் கீறப்பட்ட பாகம் நாளடைவில் கீழ் விழும். பட்டைகளைத் தண்ணீரில் ஊறவிட்டுத் தட்டையாகப் பதிய வைப்பார்கள். பிறகு அவற்றை உலரவைத்து அவற்றிலுள்ள சிறு துவா ரங்கள் அடைய நெருப்பில் வாட்டிப் பக்குவப் படுத்துவார்கள். இவ்வாறு பக்கு வப்பட்டவற்றை வேண்டியபடி உருமாற் றுவார்கள்.

**கார்க்கேயன்**—அஜாதசத்ருவிடம்ஞானோப தேசம்பெற்ற ஆசிரியன்.

**கார்க்கேயர்**—இவர் ஒரிருடி. இவர் அகத் தியர், வியாசர் முதலியோர் காலத்திருந்த வர். கிருஷ்ணன் யாகஞ்செய்தபோது ருத்துவிக்காக இருந்தவர்.

**கார்க்கோடகன்** — கத்துருவின் புத்திரன், அஷ்டமா நாகங்களி லொருவன், வாசுகி யின் உடன்பிறந்தான். இவன் சிவமூர்த் தியின் திருவிரலில் மோதிரமாயிருப்பவன் அறியாது விஷத்தை விரலில் கக்கியதால் கைலைநீங்கி வடாரண்யமடைந்து நடன தரிசனங் கண்டு முத்திபெற்றவன்.

**கார்க்கோலம்**—ஒரு சிவத்தலம். இது கோ தாவிரிக்கரையி லிருப்பது

**கார்த்தபருஷி**—ஓர் இருடி. இவர் பிறப் பைக் கழுதையிடங் கூறுவர்.

**கார்த்தவீரியன்**—1. சூரியகுலத்து ஹேஹ யநாட்டுக் கிருதவீரியனுக்கும் சுகந்தைக் கும் பிறந்தவன். இவன் பிறந்த காலத் திவனுக்குக் காலில்லாதிருக்க இவன் பன் னிரண்டு வயதுக்குமேல் தத்திராத்திரேய ரிடம் உபதேசம் பெற்று ஆயிரம் கை களும் இரண்டு கால்களும் பெற்றனன். (மச்சியபுராணம்). சம்ராட்பட்ட மடைந் தவன். ஒருமுறை மகாபல சாலியாகிய இராவண னிவனிடம் யுத்தஞ்செய்யக் கருதி இவனிருந்த இடஞ் சென்றனன். அவ்விடம் அரசனைக் காணாது அருகிருந்த ஆற்றங்கரையில் சிவபூசை செய்திருந் தனன். அவ்வாற்றின் மற்றொரு பாகத் தில் கார்த்தவீரியன் தன் தேவியருடன் சலக்கிரீடை செய்து தனது ஆயிரம் கை களாற் கட்டியிருந்த நீரைவிட்டனன். அந் நீர் இராவணனது சிவபூசாதிரவிய முழு தையு மடித்துச் சென்றது. இதனால் இரா வணன் கோபித்து வரலாறுணர்ந்து கார் த்தவீரியனிடம் யுத்தஞ்செய்யச் சென்று தோற்று அவனால் பிடிக்கப்பட்டுச் சிறை யிலிருந்தனன். பின்பு புலத்தியர் கார்த்த வீரியனை வேண்டி இராவணனை விடுவித் தனர். இவன் சமதக்கினி முனிவரிட மிருந்த ஓமதேனுவைக் கவர்ந்ததனால் பாசிராமர் இவனிடம் கோபித்திவனைக் கொன்றனர். இந்த வைரத்தினால் கார்த்த வீரியன் குமரர் பரசிராமரில்லாத காலத் துச் சமதக்கினி முனிவரைக் கொலைபுரிந் தனர். பரசிராமர் வரவறிந்த சமதக்னி யின் றேவியார் இருபத்தொரு முறை மார்பிலறைந்து கொண்டனர். அதனால் பரசிராமர் இவன் வமிசமாகிய சூரிய குலத்தை இருபத்தொரு தலைமுறை கரு வறுத்தனர். அக்காலத்தில் பரசிராமர் கைக்குத் தப்பிய கார்த்தவீரியர் குமரர் சயத்துவசன், வீரசேனன், விருஷணன, மதுசூரன் அல்லது ஊர்ச்சிதன். கார்த்த வீரியனாண்ட பட்டணம் மாகிஷ்மதி. இவ னுக்குப் புத்திரர் பதினாயிரவர். இவன் 85,000 வருஷம் அட்டசித்திகளும் பெற்று அரசளித்தனன். சமுத்திர ராசனாலின் ஞன் தன்னுடன் யுத்தஞ்செய்யத் தகுந் தவனென்றறிந்து பரசிராமராலிறந்தவன். தேவர் வேண்டத் திருப்பாற்கடல் கடைந் தவன். பார்க்கவரைக் கோபமூட்டி ஆயி

ரம் கையும் வேதியனுலருபடச் சாபம் பெற்றவன். இவனுக்கு அருச்சுனன் என்றும் பெயர். கிருதவீரியன் குமாரனுகை யால் இப்பெயரடைந்தவன். (பாகவதம்).

2. திருஷதர் எனும் ருஷியால் அக்நி தேவனை அஸ்திரமாகப் பெற்றுப் பலவாறாக ருஷியாச்சிரமங்களைக் கெடுத்து வருகையில் ஆபஸ்தம்ப முனிவரிருக்கை யடைந்து துன்புறுத்த அவர் இவனைப் பரசிராமராற் சிரமொழியச் சாபமளித்தனர். (சிவமகாபுராணம்).

**கார்த்திகேயன்**—கிருத்திகைமுதல் அறுவரால் வளர்க்கப்பட்ட குமாரக்கடவுளுக்கொரு பெயர்.

**கார்த்திகை**—1. வார்த்திகன் என்னும் அந்தணனுக்கு மனைவி. தக்ஷிணாமூர்த்தி என்னும் வேதியனுக்குத் தாய். (சிலப்பதிகாரம்).

2. நக்ஷத்திரபதமடைந்த தக்ஷன்பெண்கள். இவர்கள் கந்தமூர்த்திக்குப் பாலூட்டி விரதபல மடைந்தவர்கள். கிருத்திகையைக் காண்க.

**கார்த்திகைவிரதம்** — கந்தவிரதங்களி லொன்று. பரணியிற் சுத்தனுய்ப் புராணாதிகள் கேட்டு மறுநாள் விதிப்படி கந்தபூசை முடித்து விரதமிருத்தல். இதை அரிச்சந்திரன், அந்திமான், சந்திமான், அனுஷ்டித்துச் சித்தியடைந்தனர்.

**கார்நாற்பது**—மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றியது. கார்காலத்து வருவேனென்று வினைமேல் சென்ற தலைவன் வாராமையின் தலைவி பிரிவாற்ருமல் வருந்துவதைக் கூறும் நாற்பது வெண்பாக்களையுடையது.

**கார்ப்பாயணி** — கெற்கன் குமரன். இவனிடமிருந்து பிரமவம்ச முதித்தது.

**கார்வளங்கோண்டமண்டலம்** — பாண்டிநாட்டிலுள்ள மண்டலங்களுள் ஒன்று; இது தன் பாற்கப்பிஞ்சி யென்னும் சிறுநாட்டையுடையது; பரம்பக் குடிக்கு வடக்கேயுள்ளதான மழைக்குப் பிணை கொடுத்த மங்கல நாடென்பது இதுவே யென்று சொல்லுகின்றனர். (திருவிளை.)

**கார்முல்லை**—பெறற்கரிய வலியினையுடைய பாசறையினின்றும் தலைவர் வருவதற்கு முன்னே கரியகடலை முகந்துகொண்டு மேகம் வந்தது. (பு. வெ. பொது.)

**கார்யபாவாக்யம்** — செய்யவேண்டியதைக் கூறும் வாக்யம். தரு.

**காலகேது**—இவன் பாதாளத்திலுள்ள அசுரன். இவன் ஏகாவலியென்பவள் ஜலக்கிரீடைசெய்கையில் அவளைத் தூக்கிச் செல்ல ஹை ஹயன் அல்லது ஏகவீரனால் கொல்லப்பட்டவன்.

**காலக்கடவுள்** — காலத்தைச் செய்பவன். இவனுக்குச் சந்தி, ராத்ரி, தினம் என்னு மூவரும் தேவியர். இவன் குமரிகள் மிருத்யு, ஜரை. இவ்விருவரும் பிரஜ்வரன் தேவியர்.

**காலகன்** — சிவகணத் தலைவரில் ஒருவன்.

**காலகன்னிகை**—ஒரு கன்னிகை பூருவைச் சபித்துப் பயனை மணந்தவள்.

**காலகார்முகன்** — சுமாலியின் புத்திரன்.

**காலகாலன்** — யமனையுதைத்த சிவமூர்த்தி.

**காலகாலசோழன்** — இவன் சுந்தரசோழன் மகன். இவன்தேவி கோளதேசத்தரசன் பெண்ணுகிய குணவதி, இவன் பல சிவாலயங்களைத் தரிசித்து வரும்போது தாளவனமென்னும் சிவத்தலத்தில் முன்னொருகாலத்தில் ஒரு சிவவேதியச் சிறுவன் சிவபூசை செய்ய முயன்றனன். அக்காலத்துச் சிவலிங்கமூர்த்தியின் திருவுரு எட்டாது சிறுவன் சிவமூர்த்தியை வேண்டினன். அதனுல் சிவமூர்த்தி தமது ஒங்கிய திருவுருவை வணக்கிக் காட்டினர். வேதியச் சிறுவன் தனது பூசைமுடித்துச்சென்றனன். அதுமுதல் சிவமூர்த்தி வளைந்தேயிருந்தனர். இந்தச் சோழன் இத்தலத்திற் றரிசனத்திற்கு வந்து தரிசிக்கையில் சிவமூர்த்தி வளைந்திருக்கக்கண்டு நிமிர்த்தித் தரிசனஞ்செய்ய வெண்ணித் தன் சேநாபலத்தினுல் பலவகை முயன்றும் அந்த முயற்சிமுழுதும் பயனற்றவையாயின. பின்பு சோழன் தனது வாளினைக் கயிற்றின் இருபுறத்திலுங் கட்டி வாளைக் கழுத்தினும் கயிற்றைச் சிவலிங்கமூர்த்திக்குமாகப் பூட்டியிழுக்க வாளிறுகிக் கழுத்தின் முக்காற்பங்கை யறுத்தது. எழுத்து உதிரத்துடன் பூமியில்விழுந் தருணத்தில் சிவமூர்த்தி இரத்தத்தை நிறுத்தி அறுந்த கழுத்தை முன்போல் நிலைபெறச் செய்து தாம் அரசன்காண நிமிர்ந்து தரிசனந்தந்தனர். பின்பு சோழன் எழுபதுவருடமரசாண்டு பல திருப்பணிகள் முடிப்பித்துத் தன்மகன் கலியாணசோழனுக்குப் பட்டமளித்து நற்கதியடைந்தனன். இவனே குருதிகோடுத்த சோழன் என்பர்.

காலகூடம் — பாரதயுத்தத்தில் சேனைகள் தங்கிய இடம்.

காலகேயர் — இவர்கள் கச்யபருக்குக் கலை யென்பவளிடத்துப் பிறந்தவர் எனவும் புலோமருக்குத் திதி என்பவளிடத்துப் பிறந்தவர் எனவுங்கூறுவர். இவர்கள் அசுரர், பொன்னிறமுள்ளவர், மகாபலசாலிகள். இந்திரனைப் பலமுறை வெற்றி கொண்டவர்கள். இவர்கள் கடலில் ஒளித்திருந்து தேவரை வருத்தினர். தேவர் வேண்டுகோளால் அகத்தியர் கடலையுண்ண அருச்சுனன் இவர்களைக் கொன்றனன்.

காலகவிருக்ஷியர் — ஒரு இருடி ஆமாத்ய பரீக்ஷையைக் கோசலாதிபதிக்குக் கூறியவர். (பார-சாந்தி.)

காலகை—அசுரஸ்திரி புத்திரர் காலகேயர்.

காலகௌசிகன்—காசியிலிருந்த ஒரு வேதியன். இவன் விசுவாமித்திரனால் ஏவப்பெற்றுச் சந்திரமதியை விலைக்குக் கொண்டவன். இவனுக்குக் காளகண்டன் எனவும் பெயர்.

காலகௌக்ஷன் — கோசல நாட்டதிபனாகிய கேமதரியின் அமைச்சன்.

காலசக்ரம் — சக்கரத்தேராகிய ஒரு வட்டத்தைக்கீறி இதனடுவே கீழ்மேல் (உ) ரேகையும், தென்வடபால் (உ) ரேகையும், மூலைகளில் ஒவ்வோர் ரேகைகளுமாகக் கீறில், (கஉ) கதிராய் (உக) சக்கரமாம். இதில்நேர்கிழக்குநேர்தெற்குநேர்மேற்கு, நேர்வடக்கு இவற்றில் நிற்கும் இராசிகளாவன. இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம், இதற்குவலத்து ராசிகளாவன, மேடம், கர்க்கடகம், துலாம், மகரம் என்ற (ச) ராசிகளாம். இவற்றிற்கு நாற்கோணத்து இராசிகளாவன, மிதுனம், கன்னி, தனு, மீனம், இப்படிக் கீறி நிறுத்தினது கால சக்கிரமாம்.

காலசங்கன் — இலக்ஷ்மணரால் அதிகாயன் யுத்தத்தில் கொலைசெய்யப்பட்ட அரக்கன்.

காலசர்ப்பி—ஒரு தீர்த்தம்.

காலசுவி—விரோசனன்புத்ரன். விளாமரமாக இருந்து கிருஷ்ண பலராமரால் மாண்டவன்.

காலசிக்வன் — துன்மார்க்கருடைய நாவிலிருந்து துன்பஞ் செய்பவன்.

காலசித்தன்—சூரபத்மனுக்கு மந்திரி.

காலஞ்சரம் — மேதாவி தீர்த்தத்திற்கு அருகிலுள்ள பர்வதம்.

காலஞானி — சௌமியனைக் காண்க.

காலதடன்—ஜனமேஜயன் சர்ப்பயாகத்தில் இருந்த ஒரு வேதியன்.

காலதூஷன் — சௌரிநகரத் தரசன்.

காலத்துவசம்—ஆதித்தியனின்ற நாளுக்கு இருபத்தோராம் நாள் காலத்து வசமாம். இதில் சுபகாரியங்கள் செய்யலாகாது.

காலநரன் — சபாநரன் குமரன். இவன் குமரன் சிரஞ்சயன்.

காலநாபன்—இரணியாக்ஷன் மகனாகிய தாரகன்.

காலநேமி — 1. இராவணனுக்கு நல்லம்மான்.

2. ஒருஅசுரன், இவனுக்கு நூறு சிரம், நூறுகரம். விஷ்ணுவிடம் யுத்தஞ்செய்து, அவர்மீது சூலாயுதமேவி அவரது சக்கரத்தாலிறந்தவன். இதற்குப் பின் பிறவி கம்சன்.

3. பிருந்தை யென்பவளுக்குத் தந்தை. சலந்தரனுக்கு மாமன்.

4. சஞ்சீவியின் பொருட்டு உத்தரதிசை சென்ற அநுமனால் வதைக்கப்பட்ட ஓர் அசுரன். இவன் கபடவேடமாய்த் தவஞ்செய்தவன்.

காலபாசன் — சண்முகசேநாவீரன்.

காலபைரவர் — பைரவரைக் காண்க.

காளமுகர் — மனிதருக்கும் ராக்ஷஸருக்கும் பிறந்த சாதியர் (பார - சபா.)

காலமுனி — உருத்திராம்சமாய் இராமமூர்த்தியைத் தம்மடிச் சோதிக்கெழுந்தருள நினைப்பூட்டிய முனிபுங்கவர்.

காலம்—1. திக்கின் வேறான பரத்வா பரத்வத்தால் அநுமேயம், சங்கியை, பரிமாணம், பிரதக்துவம், சையோகம், விபாகம், எனும் ஐந்து குணங்களுடையது. (தரு).

2. (ங) இறப்பு, எதிர்வு, நிகழ்வு.

3. கண்ணிமை (உ) கொண்டது கைந்நொடி. கைந்நொடி (உ) கொண்டது மாத்திரை. மாத்திரை (உ) கொண்டது குரு. குரு (உ)கொண்டது உயிர். உயிர் (க)கொண்டது க்ஷணிகம். க்ஷணிகம் (கஉ) கொண்டது விநாடி. விநாடி (சுo) கொண்டது நாழிகை. நாழிகை (எழரை) கொண்டது சாமம். சாமம் (ச) கொண்டது பொழுது. பொழுது (உ) கொண்டது நாள். நாள் (ஙo) கொண்டது மாதம். மாதம் (கஉ) கொண்டது வருஷம். வருஷம் பதினேழுலக்ஷத்து இருபத்தெண்ணாயிரம் கொண்டது கிருதயுகம். அந்த வரு

ஷம் பன்னிரண்டுலக்ஷத்துத் தொண்ணூற்றாறாயிரம் கொண்டது திரேதாயுகம். எட்டுலக்ஷத்து அறுபத்து நாலாயிரம் கொண்டது துவாபரயுகம். நாலுலக்ஷத்து முப்பத்திரண்டாயிரம் கொண்டது கலியுகம். இந்நான்கு யுகமும் கூடியவருஷம் நாற்பத்துமூன்று லக்ஷத்து இருபதினாயிரம். இது சதுர்யுகம், இதுவே மகாயுகம். இந்த மகாயுகம் பதினெட்டுச் சென்றால் ஒரு மனுவுக்கு ராச்சியம். இந்த மனுவுக்கு ராச்சியம் எழுபத்துநான்கு சென்றால் இந்திரனுக்கு ராச்சியம். இந்த இந்திரனுக்கு ராச்சியம் இருநூற்றெழுபது சென்றால் பிரமனுக்கு ஒருநாள். இந்தநாள் முப்பது சென்றால் ஒருமாதம். மாதம் பன்னிரண்டு சென்றால் ஒரு வருஷம். இந்த வருஷம் நூறு சென்றால் பிரமனுக்கு ஆயுள் முடிவு. இப்படி மூந்நூற்றறுபது வருஷம் சென்றால் ஆதிப் பிரமனுக்குப் பிரளயகாலம். இந்தப் பிரளயம் நூறுசென்றால் ஒரு விஷ்ணுகற்பம். இந்த விஷ்ணுகற்பம் நூறுசென்றால் உரோமச மகருஷிக்கு ஒரு உரோமம் உதிரும். இந்த உரோமச மகருஷிக்குப் பத்துக்கோடி சென்றால் மீனசமகருஷிக்கு உடம்பில் ஒரு செதிள் உதிரும். இந்த மீனசமகருஷிக்கு ஒரு கோடிசென்றால் பாரத்துவாச மகருஷிக்கு ஒரு நிமிஷம். இந்தப் பாரத்துவாச மகருஷிக்கு முப்பதுகோடி சென்றால் சத்தி தலைமயிர் அவிழ்த்துமுடிக்கும் நேரமாம். இந்தப்படி எழுநூற்றெண்பது கோடிசத்திகள் கூந்தலவிழ்த்து முடித்தால் மகா சத்திக்கு ஒரு நிமிஷமாம். (தற்காலம் நடப்பது துவிதீய பரார்த்தம் 8-வது சுவேதவராக கற்பம் 22-வது வைவச்சுத மங்வந்தரம். (கணக்கதிகாரம்).

3. இது நிமிஷம் பதினைந்து கொண்டது காட்டை. அக்காட்டை முப்பது கொண்டது கலை. கலை முப்பதுகொண்டது முகூர்த்தம். முகூர்த்தம் முப்பது கொண்டது மனிதர்க்கு அகோராத்திரம். அந்த அகோராத்திரம் பதினைந்துகொண்டது பக்ஷம். பக்ஷம் (உ) கொண்டது மாதம். மாதம் பன்னிரண்டு கொண்டது வருடம். ஒருமாதம் தென்புலத்தாராகிய பிதுர்க்களுக்கு ஒருநாள். இந்தநாள் முப்பது கொண்டது மாதம். மாதம் பன்னிரண்டுகொண்டது வருஷம். இந்த வருடம் பத்துகொண்டது சத்த இருடிகளுக்கு ஒரு வருடம். இருடிகள் வருடம் பத்து கொண்டது துருவனுக்கு ஒரு வருடம்.

**காலயவநன்**—ஒருமுறை சாளுவன் கார்க்கியனைப் பேடியென்றனன். இதைக் கேட்ட ஆயர் நகைத்தனர். இதனால் கார்க்கியன் அவமதிப்படைந்து ஆயரைக் கொல்ல ஒரு புத்திரனை வேண்டித் தவம்புரிந்து காலயவனனைப் பெற்றனன். இவன் ஒரு அசுரன். கிருஷ்ணனிடத்தும் கோபாலரிடத்தும் பகைகொண்டு வடமதுரையை அழிக்கவந்தனன். இதையறிந்த கண்ணன் கடலில் பட்டணம் நிருமித்துச் சனங்களை அங்கப் பட்டணத்தி லிருத்தித் தாம் அவனுக்குமுன் தனித்துத் தோன்றினர். காலயவநன் கண்ணனைத் தொடரக் கண்ணன் பயந்தவர்போல் ஓட்டங்காட்டி, யான் உறங்கிவிழிக்கையில் முன்னே பார்த்தவன் சாம்பராக என்று வரம்கொண்டு ஒரு குகையில் நெடுநாளா யுறங்கும் முசுகுந்தனிருக்குங் குகையில் போய் மறைந்தனர். பின்தொடர்ந்த காலயவநன் அக்குகைக் குட்புகுந்து தன்னை யறியாதுறங்கும் முசுகுந்தனைக் கண்ணனென்று அடித்தனன். முசுகுந்தன் விழித்துப்பார்க்கக் காலயவநன் சாம்பராயினன்.

**காலநுபி**—அபிநந்தநன் இந்திரபட்டமடையச் செய்த யாகத்தை இந்திரன் ஏவலால் சிதைத்த அரக்கன்.

**காலவன்**—A. விச்வாமித்ரன் சீடர்களிலொருவன். இவன் வேதமுதலிய கற்றுவல்லவனாய்க் குருதக்ஷிணைக்காக ஆசாரியரை வினவினன். ஆசாரியர் உடன்முழுதும் வெண்ணிறமாய் ஒருகாது நீலமாயுள்ள குதிரைகள் எண்ணூறு வேண்டுமென்ன மாணக்கன் எங்குந்தேடிக் கிடைக்காது யயாதியை யடைந்து அக்குதிரைகளைப் பெற்றுக் குருதக்ஷிணையாகக் கொடுத்துக் களித்தனன். குவலயாச்வனுக்கு வேண்டிய அத்திரங் கொடுத்தவன்.

B. கேமதரிசியின் தந்தையிடமிருந்த மந்திரி.

C. காசிபகோத்திரத்து முனிவர். தேவத்துதிக்குத் தீர்த்தமகிமை உபதேசித்தவர். உற்பலாங்கியைக் காண்க.

D. குந்தலபூபாலனுக்குக் காலவரையறை கூறியவர். இவர் வீரபாண்டியனால் கையறுப் புண்டனர்.

E. ஓர் இருடி. சுதேவியின் முன்பிறப்பு வினவிக் களிப்படைந்து அவளுக்

குச் சிவபூசா மான்மியங் கூறியவர். இருதுத்துவசனைக் காண்க.

F. ஓர் இருடி. தன் குமரிகள் (௩௬0) பெயரையும் திருமாலுக்குத் தினம் ஒவ்வொருவராகத் திருமணஞ் செய்வித்து நித்யகல்யாணர் எனத் திருமாலைத் துதித்தவர். துத்தமன்எனுங் காந்தருவனை விஷ்ணுசக்காத்தால் கொன்றவர். இவரை ஒரு அரக்கன் விழுங்கவர அவனையும் விஷ்ணுசக்கரத்தால் கொலைசெய்வித்தவர். சுதரிசனனைக் காண்க.

G. இவர் திருவேங்கடத்தில் திருமாலை நாள்தோறும் தவருது தரிசிக்கும் நியமம் பூண்டவர். ஒருநாள் திருவேங்கடத்திற்கு வருகையில் உபயகாவிரிக் கருகில் எருக்குவனத்தில் பூர்வம் துந்திவன் என்னும் காந்தருவன் புராண தூஷணையால் அரக்கனுய் இவரைப் பிடித்துக்கொள்ள இருடி நரசிங்கமந்திரம் செபித்து அவன்மீது மந்திரநீர் தெளித்தனர்; அரக்கன் தன் உரு அடைந்தனன். முனிவர் நியமம்கெட்டதால் தீப்புக எண்ணுகையில் நரசிங்கமூர்த்தி தரிசனந் தந்து முத்தியளித்தனர், இவர்க்கு (௭0) மாணாக்கர்.

H. ஒரு வேதியச்சிறுவன் இவன் தந்தை, வறுமையால் வீட்டில் அதிதிகள் வரின் வேதியரில்லை யெனக் கூறும்படி தனது மனைவிக்குக்கூறித் தான் வீட்டிலுறங்குகையில் அதிதியொருவர்வர மனைவி தன் புருஷரில்லையென, யோகத்தாலுணர்ந்த வேதியர் இல்லாமற் போகவென, அவ்வாறே புருடனிறந்தனன். இதனைக் குருவாகிய விச்வாமித்ராரிடமிருந்து நீங்கி அங்குவந்த புதல்வனாகிய காலவன் நடந்ததறிந்து சாம்பவி யாகமியற்றித் தந்தையை உயிர்ப்பித்தனன். (சிவமகா புராணம்).

**காலவர்** — இவர் குருகுலவாசம் முடிந்தபின் தந்தையைக் காணுது வருந்தி வீட்டிற் சென்று தாயைத்தேற்றிச் சிவபூசை செய்து தந்தையையும் சகல சித்தியையும் அடைந்தனர்.

**காலவயிரவர்** — யமனைத் தண்டித்த வைரவக்கோலமாகிய சிவாவசரம்.

**காலவாதி மதம்** — பஞ்சமூர்த்திகள் முதல் எறும்புவரையில் உள்ள ஜீவராசிகளும் காலத்தில் இறந்து மீண்டும் பிறந்து வரச்செய்தலாலும் இத்தனை ஆயுள் சென்றதென்று ஆயுளைக் கூறுதலாலும், காலத்திற்கு மூப்பு, இளமை இல்லாமையாலும், எல்லாம் தன்னில் அழியத் தான் அழியாதிருத்தலாலும் காலமே கடவுள் என்பன். இவனுக்கு மோக்ஷம் காலங்கடந்த கடவுளை அடைவது என்பதாம். (தத்துவ.)

**காலவிருஷர்** — இவர் ஒரு மகருஷி. இவர் பறவையிடம் ஹிரண்ய ஹஸ்தரெனும் ருஷியைப் பெற்றுர். (பார-அது.)

**காலவேகம்** — ஒரு யானை. (மணிமேகலை).

**காலவேகன்** — சிவகணத்தவரில் ஒருவன்.

**காலவோரை** — 1. காலம் இரண்டரை நாழிகையாகக் கொண்டு, புதன் கிழமைக்கு அதற்கு (௫) ஆம் கிழமை உதயகாலத்திலே இரண்டரை நாழிகை ஆதித்தனுடன், பின்னதற்கு (௬) ஆம், கிழமையுடைய வெள்ளி இரண்டரை நாழிகை இப்படி அடைவே அருக்கன், வெள்ளி, புதன், இந்து, சநி, குரு, செவ்வாய் என்று எண்ணிக்கொள்ளப்படும். இதில் பாபக்கோளினுடைய நாழிகை சுபகன்மங்களுக்குத் தவிரப்படும். சுபக்கோளினுடைய நாழிகைகொள்ளப்படும். (விதான)

2. நாள் ஒன்றுக்கு ஓரை ௨௪. ஓரை ஒன்றுக்கு நாழிகை ௨½. மணி ஒன்று ஒரு ஓரை. ஞாயிற்றுக்கிழமையில் ௧-வது சூரியவோரை, ௨-வது சுக்ரவோரை, ௩-வது புதவோரை, ௪-வது சந்திரவோரை, ௫-வது சநிவோரை, ௬-வது குருவோரை, ௭-வது அங்காரகவோரை.

திங்கட்கிழமையில் முதலாவது சந்திரவோரை, ௨-வது சநிவோரை, ௩-வது குருவோரை, ௪-வது அங்காரகவோரை, ௫-வது சூரியவோரை, ௬-வது சுக்ரவோரை, ௭-வது புதவோரை. இந்தப்படி மற்றக் கிழமைகளுக்கும் அந்தந்த வாரவோரை முதலாகப் பார்த்துக்கொள்ளவும். இவற்றுள் சூரியவோரையும் சநிவோரையும் ஆகா.

**காலெறிகடிகையார்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவராக இருக்கலாம். இவர் தாம் பாடிய குறுந்தொகையில் "காலறிகடிகை கண்ணயின் றன்ன" எனக்கூறியிருத்தலினிவர்க்கு இப்பெயர் வந்தது. (குறு-௨௬௭).

**காலமற்றநாள்** — நக்ஷத்ரம் காண்க.

**காலனுக்கு வழக்குரைத்த சோழன்** — கிள்ளிவளவனைக் காண்க.

**காலனைவென்றசோழன்** — சோழர் சரிதையில் சாருருவைக் காண்க.

**காலன்** — A. துருவன் குமரன்.

B. ஏகாதசருத்திரருள் ஒருவன். தேவி இளாவதி.

C. இலக்குமணரால் அதிகாயன் யுத்தத்தில் கொல்லப்பட்ட அரக்கன்.

D. சிவகணத்தவரில் ஒருவன்.

E. யமனிடமுள்ள மந்திரியரில் ஒருவன். விபுலன் பொருட்டுச் சிவமூர்த்தியின் சூலத்தாற் குத்துண்டவன்.

F. சூரியபுத்திரன்.

காலாக்னிருத்திரர்—அநந்தருடைய மூர்த்திபேதம் பிரளயகாலத்தில் உலகங்களைச் சங்கரிக்கும் உருத்திரமூர்த்தி. இவர் பிருதிவியெனும் பிரமாண்டத்தை அதிட்டித்திருப்பர்.

காலாக்னிமுனிவர்—திருமூலர் மாணாக்கரில் ஒருவர்.

காலாஞ்சரம் — ஒரு தீர்த்தம். இதில் சுவேதன் சிவபூஜை செய்தனன்.

காலாததீர்த்தம் — ஒரு தீர்த்தம்.

காலாத்யயாபதிட்டம்— பக்ஷத்தில் வேறு பிரமாணத்தால் நிச்சயிக்கப்பட்ட சாத்திய இன்மையேது வின்பாதிதம்.

காலாநலன் — அணுபேரன்.

காலாநாதன் — சங்கராசாரியர் காலத்தவனாகிய ஒருவாதி.

காலாந்தகமூர்த்தி—மார்க்கண்டன் பொருட்டும் விபுலன் பொருட்டும் காலனைத் தண்டித்த சிவமூர்த்தியின் திருவுரு.

காலாந்தகன்—1. சிவகணத்தவரில்ஒருவன்.
2. இராவணசேநாபதி.

காலி—வீமராசன் பாரி. குமரன் சர்வகேதன்.

காலுதயராசி — மேஷம், ருஷபம், கடகம், தனுசு, மகரம்.

காலை — காசிபர் மனைவி. புத்திரர் விநாசன், குரோதன் முதலிய ஐம்பதின்மர். வைசுவாநரன் என்னும் தானவன் பெண்.

காலைவிழிப்பின் குணம் — புத்திதெளிவு, இரத்தத்தூய்மை, பைத்தியகுண நீக்கம், வாதாதி முத்தோஷங்கள் நிலைகடவாது தம் நிலைகளில் நிற்கும்.

காலைவிழித்தவுடன்பார்க்கத்தக்கபொருள்கள் — தாமரைமலர், தங்கம், தீபம், கண்ணாடி, சூரியன், புகையிலாநெருப்பு, செஞ்சந்தனம், கடல், வயல், சிவலிங்கம், முகில்சூழ்ந்தமலை, கன்றையுடைய பசு, தம் வலதுகை, மனைவி, மிருதங்கம், இவற்றைக்காணின் நலம்.

கால்தி — (கழற்றி) ஜாதிக்கடங்காப பறைச்சாதி. (தர்ஸ்டன்.)

காவசேயன் — ஒரு ருஷி யசுர்வேதி.

காவடேயர் — ஒரு முனிவர் கந்தமூர்த்தியிடம் விசேஷ தருமங்கேட்டு முத்திபெற்றவர். (சூதசம்மிதை).

காவட்டனார்—அந்துவஞ்சேரலைப் பாடிய புலவர். இவர்க்குக் கானட்டனார் எனவும் பெயர். (அகநானூறு, புறநானூறு).

காவண நல்லூர் — (காவனூர்). இது மதுரைக்கு வடக்கே ஒரு காதத்திலுள்ளது. தாகம் தீரும் பொருட்டுக் குள முதலிய வற்றிலுள்ள ஜலத்தையுண்ட குண்டோதரன், மனிதர்களுடைய ஜலகஷ்டத்தைத் தீர்க்கும்பொருட்டுச் சிவபெருமான் கட்டளைப்படி உண்டாக்கிய நீர்நிலைகளுள், பந்தர் சூழ்ந்த நீர் நிலையையுடைய ஊர். (திருவிளையாடல்).

காவலன்—ஒரிருடி. கண்வருஷிக்கு மாமன். அஷ்டகோணருஷிக்கு மாதாமகன்.

காவற் பிரிவு — இது நாடு காத்தற்குப் பிரியும் பிரிவு. இது, தோழி தலைவன் காவற்பிரிவுணர்த்தல், தலைமகள் கூதிர்ப்பருவங் கண்டு வருந்தல், தோழியாற்று வித்தல் முதலிய உட்பிரிவுகளை யுடையது.

காவற்பெண்டு — ஒரு பெண் கவி. கேட்டார்க்குப் போர்க்குச் சென்ற தம் மகனது இருப்பைக் கூறுவாள். என் மகன் யாண்டுளனோஅறியேன் "புலிசேர்ந்து போகிய கல்லளைபோல வீன்ற வயிறோ விதுவே" என விடை கூறினவள்.

காவன்மரம் — தமிழ்நாடாண்ட அரசர்பலர் தம்மரசு நிலையிட்ட தலைநகர்க்கண் தம் வீரத்திற் கறிகுறியாய்த் தம்மாலும் தம் வீரராலும் காக்கப்பட்ட மரம்.

காவன் முல்லை — ஊருந்திரை ஆரவாரிக்கும் குளிர்ந்த கடலை வேலியாகவுடைய ஞாலத்து மணநாறு மாலையினையுடைய வேந்தன் பாதுகாத்தலைச் சிறப்பித்தது. (பு. வெ.)

2. பொருந்தினபடி அந்நியர் சொல்லினும் முற்பட்டதுறைக்கு உரிமையுடைத்து. (பு. வெ.)

காவன்முல்லைப்பூதனார் — இவரது இயற்பெயர் பூதனென்பதே. காவன் முல்லை புறத்திணைக்கட்பட்ட ஒரு துறை. புறப்பொருள் வெண்பாமாலை வாகைப்படலத் துட்கண்டு கொள்க. அத்துறையைப் பாடினமையின் காவன்முல்லைப் பூதனாரெனப் பட்டார். இவர் பாலைத்திணையைப் பலவாறு புனைந்து பாடியுள்ளார், காதலன்

சென்ற சுரநெறிகொடிய தென்று வருந்திய தலைவியை அந்நெறி மழைபெய்து நலனுடையதா யிராகின்றதென்று தோழி ஆற்றுவிப்பதாக இவர்கூறியது இன்சுவையதாகும். (நற்-உளச.) இவர் பாடியனவாக நற்றிணையில் உளச-ம். பாடலொன்றும், குறுந்தொகையிலொன்றும், அகத்திலைந்துமாக எழுபாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**காவாடி** — காவடிதூக்கிச் செல்லும் ஒரு வகைச் சாதியார்.

**காவாரிமதருஷிகோத்திரான்** — தாமோதரன்றன் சோழன் வளஞ்சியனுக்காகக் காஞ்சிபுரத்தில் கலிக்கியமர்ந்தாள் சன்னிதியில் தலையரிந்துகொண்டு கீர்த்திபெற்றவன்.

**காவிதிப்பட்டம்** — பாண்டிநாட்டு உழுவித்துண்ணும் வேளாளர்க்கு அரசனால் கொடுக்கப்பட்ட பட்டம்.

**காவியன்** — சுக்கிரன் குமாரன்.

**காவிரி** — 1. இவள் பிரமன் மனததிருந்து கவேரனுக்குப் புத்திரியாய் நதியுருவடைந்தவள். இவள், சையமலை (ஸஹ்யபர்வதம், விற்பிறந்து துகினத்திற்கும் சேதுவிற்குமிடையில் ஒன்பதினாயிரம் யோசனை விரிவாய்ச் சையசம்பவை கவேரகன்னியெனப் பெயர்பெற்றனள். இவள் அகத்தியரை மணந்தனள். அகத்தியர் வரத்தால் எல்லாத் தீர்த்தங்களும் வணங்கும் வரம் அடைந்து அகண்டகாவிரி யெனப் பெயர்பெற்று உலகத்தார் பாபங்களைப் போக்குபவள். அகத்தியர் கமண்டலத்திருந்த இவளை இந்திரன் வேண்டுகோளால் விநாயகர் காகவுருக்கொண்டு உருட்ட. நதியுருவாய்ப் பிரவகித்தனள். தொல்காப்பியரைக்காண்க. இவளே லோபாமுத்திரை. இதில் அரிச்சந்திரன், அருச்சுநன், சசீலை, ஒருபன்றி, மண்டூகம், முதலை முதலியோர் ஸ்நானஞ்செய்து நற்கதிபெற்றனர். கன்னி, காவிரிப்பாவை, நீர்ப்பாவை, சோழர் குலக்கொடி, தமிழ்ப்பாவை யெனவும் பெயர் வழங்கும். (காவிரித்தல புராணம்).

2, கம்பநாடர் குமரி இவளிடம் சோழன் மகன் காதல்கொள்ள இவள் கற்புக் கெடுவதினும் சாதல் நலமெனவெண்ணிக் கம்புக்குதிரில் மூழ்கித் தற்கொலை புரிந்து கொண்டனள்.

**காவிரி அணைகட்டியசோழன்** — சசிசேகரச் சோழனைக் காண்க.

**காவிரிகரைகண்டசோழன்** — இந்தச் சோழன் தன் சிற்றரசருக்குக் காவிரியைப் பகுத்துக் கொடுத்துக் கரைகட்டும்படி சொல்ல எல்லாரும் உடன்பட்டுக் கட்டி முடித்தனர். அவர்களுள் பிரதாபருத்ரன் என்போன் மூன்றுகண்ணுள்ளான் கட்டாது கட்டளைமறுத்திருந்தனன். சோழன் காவிரியின் அணைகளைப் பார்க்கையில் ஒரு பங்கு குறைவாயிருந்ததைக் கண்டு இது யாவர் பங்கு என்றனன். ஏவலாளர் பிரதாபருத்ரன் பங்கென்று அவன் உரு எழுதிய படத்தையுங் காட்டினர். சோழன் சிவமூர்த்திக்கும் மூன்றுகண் இவனுக்கும் மூன்றுகண்ணோ என்று தன்னிடமிருந்த வேலினால் ஒரு கண்ணைக் குத்திவிட உடனேபிரதாபருத்ரனுக்குக் கண்மறைந்தது. பிரதாபருத்ரன் அணைகட்டி முடித்துச் சோழனை வேண்டிக் கொண்டனன்.

**காவிரிப்புனல் கொணர்ந்த சோழன்** — சித்திரதன்வனைக் காண்க.

**காவிரிப்பூம் பட்டினம்** — இது சோழநாட்டில் காவிரிகடலுடன் கலக்கும் சங்கமுகத்திலிருப்பது. இது துறைமுகப்பட்டினம். இது காவிரியாற்றின் சங்கமுகத்தில்உள்ள பட்டினமாதலால் இதற்கு இப்பெயர் வந்தது. இதைச் சோழர்களுக்குமுன் காகந்தன் எனும் அரசன் ஒருவன் ஆண்டிருந்தனன். அதனாலிதற்குக் காகந்தியென்று ஒரு பெயர். வங்காளத்தின் தலைநகராகிய சம்பாபதியினின்று வந்து குடியேறிய தமிழர் தங்கள் பழம்பதி மறவாதிருத்தற் பொருட்டு இதற்கும் அப் பெயரிட்டனராதலா லிதற்குச் சம்பாபதியென ஒரு பெயருண்டு. இதற்குப் புகார் என் ஒரு பெயரும் உண்டு. பெரிப்ளஸ் எனும் யாத்ரிகனும், டாலமிஎனும் யாத்ரிகனும் முறையே கமாரம், க்பேரிஸ் என்று கூறியதுஇந்நகரத்தையே. இந்தநதி கடலுடன் சங்கமமாகும் முகத்வாரம் தற்காலம் பல கிளைகளாகப் பிரிந்திருப்பது போல் பண்டு பிரிந்திராமல் மரக்கலங்கள்வர நீடாழமாக இருந்தது பற்றிப்புற நாட்டு மரக்கலங்கள் வந்து தங்க வசதியாயிருந்தது. இவ்வாறு இருத்தலையெண்ணிக் கரிகாற்பெருவளத்தான்; தன்னுடு நிலவளம் பெற்றதேயன்றி வாணிச்யவளம் பெறவெண்ணித் தன்னிராஜதானியாகிய உறையூரைவிட்டு இந்நகரத்தை ராஜதானியாக்கிக்கொண்டான். இவன் இப் பட்டினத்தை இரு பிரிவின

வாகப் பிரித்துக் கடலை யடுத்த பாகத்தை மருவூர்ப்பாக்கம் என்வும், இதற்கு மேல் பாகத்தைப் பட்டினப்பாக்க மெனவும் பெயரிட்டு இடையிலுள்ள இடைவெளியைச் சந்தை கூடுமிட மாக்கினன். இவற்றில் பட்டினப்பாக்கத்தில் அரசவீதியும், ஆவணவீதியும், கொடித்தேர் வீதியும், மற்ற மறையவர், உழவர், வணிகர், மகதச்சிற்பர், மாரடக்கொல்லர், யவனத் தச்சர் முதலியோரும் இருந்தனர். பின்னையும், அன்னசாலைகள், வேள்விச்சாலைகள், கலைக்கழகங்கள், சந்திரகுண்டம், சூரியகுண்டம் யந்திரவாவிகளு மிருந்தன. மருவூர்ப்பாக்கத்தே கலங்கரைவிளக்கம் துறைமுகத்தருகிலும், ஆயத்துறைகள், புறநாட்டு வர்த்தகர் தங்குவதற் கிடமும் இருந்தன. இப் பட்டணத்தின் மற்றைச் செய்திகளைச் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் காண்க. சோழர்களுடைய பழைய இராஜதானி; இதில் இந்திரநியமனமாகிய எழாங்கங்களுள்ள புத்தாலய மொன்றுண்டு.

**காவிரிப்பூம் பட்டினத்துக் கண்ணன்** — கடைச்சங்கமருவிய புலவன்.

**காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனர்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். சிவபெருமான் திருப்பெயர் பெற்றவர். இவர் சோழநாட்டுக் காவிரிப்பூம்பட்டினத்தவர். (குறு-கூசஉ)

**காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனார்** — காரிக்கண்ணனாரைக் காண்க.

**காவிரிப்பூம் பட்டினத்துச் செங்கண்ணனார்** — அகம் உகஎ-ல் 'வணிகராகிச்சென்று' என்று கூறியதனால் இவரை வணிகர் மரபினரென்று கொள்கின்றாம். இவர் அவியனென்னும் கொடையாளியையும், அவனது மலையையுஞ் சிறப்பித்துப் பாடியுள்ளார் (அகம் உஎக) வாகைப்பூவை மயிலின் குடுமிக்கு உவமை கூறியுள்ளார். (குறு கூசஎ) பெரும்பாலும் பாலைத்திணையைப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் கூஅகூ-ம் பாட லொன்றும், குறுந்தொகையி லொன்றும், அகத்தி லிரண்டுமாக நான்கு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**காவிரிப்பூம்பட்டனத்துச் சேந்தன்கண்ணனார்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவர் ஊர் சோழநாட்டுக் காவிரிப்பூம் பட்டினம். கண்ணப்பெயருடையார் வேறிருத்தலி னிவர் சேந்தன் கண்ணன் எனப் பட்டனர் போலும். (குறு-கூசஎ).

**காவிரிவாயில்** — காவிரிக் கரையில் திருமுகத்துறை கழிகின்றவாயில். காவிரிப்பூம் பட்டினத்துள்ளது (மணிமேகலை)

**காவுதியன்** — அம்பட்டனுக்கு மலைநாட்டில் வழங்கும் பெயர்.

**காளகண்டன்** — 1. கழுத்தில் விஷக்கறை யமைத்த சிவமூர்த்திக்கு ஒருபெயர்.

2. காசியிலிருந்த ஒருவேதியன். விச்வாமித்ரனால் ஏவப்பெற்றுச் சந்திரமதியை விலைக்குக்கொண்டவன்.

3. ஒருவேதியன் விட்டுணுசர்மியின் குமரன். தன் தந்தை வேதமோதக்கூறியதால் கோபித்துத் தந்தையைக்கொன்று பிரமகத்திபெற்று வசிட்டரால் நீங்கப் பெற்றவன்.

**காளகவி** — விரோசநன் குமரன். பலிசகோதரன், கிருஷ்ணனைக் கொல்லும்படி விளாமரமாக ஆயச்சிறுவருக்கு நோயுண்டாக்கி வந்ததைச் சங்கர்ணனலறிந்த கிருஷ்ண பலராமர் விளையாட்டாய் அம்மரத்தினை நிர்மூலப்படுத்தினர்.

**காளகை** — அதிதியின் பெண், கணவன் புலோமை. புலோமையைக் காண்க.

**காளத்திமுதலியார்** — இவர் பிறந்தது திருநின்றவூர். இவர் மகா கொடையாளி, இவரது கொடையினைப் புகழ்ந்து மதுரகவிராயர், "நீளத் திரிந்துழன்றாய் நீங்கா நிழல்போல, நாளைக் கிருப்பாயோ நல்குரவே-காளத்தி, நின்றைக்குச் சென்றக் காலீயெங்கே நானெங்கே, என்றைக்குக் காண்பே னினி" என்று கவிபாடிப் பரிசு பெற்றனர். இவர்மீது பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் "பொரடக் கயம்பிடியென்றான் மதனுமிப் பூவையுமா, தார்ச்சக முஞ்சற் றறிந்திலளே மலர்த் தாள்வணங்கா, முரடக் கவுடக்கெடிமன்னர் வெற்றி முடிபிடுங்குங், கரடக் களிற்றண்ணலே வல்லைமாநகர் காளத்தியே" என்றுபாடிப் பரிசுபெற்றனர். இவர்மீது படிக்காசுப் புலவர் "பெற்றா ளொருபிள்ளை யென் மனையாட்டியப் பிள்ளைக்குப்பால், பற்றாது கஞ்சிகுடிக்குந் தரமல்ல பாலிரக்கச், சிற்றாளுமில்லையிவ வெலலா வருத்தமுந் தீர வொரு, கற்றா தரவல்லை யோவல்லை மாநகர் காளத்தியே" எனவும், "வழிமேல் விழிவைத்து வாடாம லென்மனை யாளு

மற்றோர், பழியாமற் பிள்ளையும் பாலென் றழாமற் பசிரெனுஞ்சொல், மொழியாம லென்னை வரவிட்ட பாவி மூசித்துச் சதை, கழியாம லாவளித் தாய்வல்லமா நகர் காளத்தியே" எனவும் பாடிப் பசு நிறை பரிசுபெற்றனர். இவரிருப்பு வல்ல மெனவுங் கூறும்.

**காளநாபன்** — இரண்யாக்ஷன் குமரன்.

**காளபிருட்டம்** — கர்நன் வில்.

**காளபைரவன்** — பைரவமூர்த்திக்கு ஒரு பெயர்.

**காளைகழுனி** — ஓர் இருடி. துரியோதனன் சொல்லால் மாரணயாகஞ்செய்து பூதத் தினை யுண்டாக்கிப் பாண்டவர்மீது ஏவி னன். அப்பூதம், கிருஷ்ணன் மாய்கை யால் நச்சுப்பொய்கையின் நீருண்டு மூர்ச் சைகொண்டிருந்த பாண்டு புத்திரரைக் கண்டு இறந்தவர்மே லேவினன் எனக் கோபித்துஅனுப்பினவனையே கொன்றது.

**காளமேகப்புலவர்**—இவர் திருக்குடந்தை வைணவவேதியர். பெயர் வரதர். ஸ்ரீரங் கத்துப் பெருமான் சந்நதியில் பரிசாரகரா யிருந்து திருவானைக்காவில் சிவாலயத் தொண்டுசெய்யும் தாசி மோகனாங்கியிடம் அன்புவைத்திருந்தனர். இவ்வகை ஒழுகி வருநாட்களில், மார்கழிமாதத்தில் திரு வெம்பாவை சுவாமிசந்நதியில் பாடும் முறை மோகனாங்கிக்கு வந்தது. மோக னாங்கி, தன்னோடொத்த தாசிகளுடனிரு ந்து திருவாசகத்திற் றிருவெம்பாவையில் "உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கல மென், றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தா, லெங்கள் பெருமா னுனக் கொன்றுரைப் போங்கே, ளெங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க, எங்கையுனக் கல்லா தெப்பணியுஞ் செய் யற்க, கங்குல்பக லெங்கண் மற்றொன் றுங் காணற்க, இங்கிப் பரிசே யெமக் கெங்கோனல் குதியேல், எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்" என்ற திருப்பாசுரம் கூறியவுடன், உட னிருந்த தாசிகள் கேட்டு நகைக்க மோகனாங்கி வெட்கித் தலை குனிந்தனள். அன்றிரவு வைணவ வேதியர் மோக னாங்கி வீட்டிற்கு வருதலறிந்து தாசி, கதவடைத்தனள். பிராமணர், நெடுநேரம் வேண்டியும் திறவாதிருத்தலை நோக்கி இனித் திறவாதிருக்கின் என்னுயிரை விடுவேன் என்றனர். தாசி, இதேது பழிநேரும்போல் தோற்றுகிற தென்று கதவைத்திறந்து வைணவவேதியரை நோ க்கி நான் உமக்கு வேண்டிய பக்ஷத்தில் சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு வருக என் றனள். வேதியர் உடன்பட்டுச் சிவதீக்ஷை பெற்றுச் சம்புகேசுரத்தில் பரிசாரகரா யினர். அக்காலத்தில் சம்புகேசுரத்தில் ஒரு வேதியன், அகிலாண்ட ஈச்வரியை வித்தையின் பொருட்டு உபாசித்துவந்த னன். ஒருநாள் மோகனாங்கியின் நண்ப ராகிய பரிசாரகர் மோகனாங்கியை நோக்கி அர்த்தசாம பூசையின் குடமுறை கழிந்த வுடன் தம்மை உடனழைத்துப் போகக் கூறித் தாம் ஒருமண்டபத்தில் உறங்கினர். தாசி, அர்த்தசாமத்தில் குடமுறைகழிந்த தும் வேதியரைத் தேடிக்காணாது தனி த்து வீடுசேர்ந்தனள். கோயில் தாணிகர் முதலியோர் திருக்கோயில் தாளிட்டு வீடு சேர்ந்தனர். பரிசாரகர் விழித்துக் கோயில் திருக்காப்பிட்டிருப்பதறிந்து மீண்டும் மண்டபத்தின் ஒரு புறத்தி லுறங்கினர். முதலில் வித்தைவிரும்பி உபாசிப்பவ னுக்கு அநுக்கிரகிக்க அம்மை எழுந்தருளி அவன்முன் தரிசனந்தந்து வாயைத்திறக்க என, உபாசகன் தாமதித்து அருவருத் தமையால் மீண்டு மண்டபத்திலுறங்கும் பரிசாரகரிடத்திற் சென்று வாய்திறக்கக் கட்டளையிட்டனர். பரிசாரகர் ஆகூழால் வாய்திறந்தனர். அம்மை வித்தைக்குரிய பீஜாக்ஷரத்தை அவன் வாயிற்பதித்து இன்றுமுத லுனக்குக் காளமேக மெனப் பெயருண்டாக என மறைந்தனர். காள மேகர் கனாக்கண்டவர்போல் விழித்து எதி ரில் யாரையும் காணாது தரிசனந்தந்தவள் உலககாரணியாகிய அகிலாண்ட ஈச்வரி யென்றறிந்து வாயாரத் துதித்துத் திருவா னைக் காவுலாப்பாடி மகிழ்ந்து அதுமுதல் பல தலங்களுஞ் சென்று தரிசித்துப் பல தனிப்பாடல்களைப் பாடினர். காளமேகர், திருவாரூர் சென்று சுவாமி தரிசனஞ் செய்கையில் தியாகராசமூர்த்திக்கு வயிரப் பதக்கம் தரித்திருக்க, அவ்விடமிருந்தவர் அப்பதக்க மறவும் பொருந்தவும் பாடுக என உடன்பட்டு, "அன்னவயல் சூழ்ந் திருக்கு மாரூரா நெஞ்சத்தில், இன்னம் வயிர மிருப்பதா — முன்னமொரு, தொ ண்டன் மகனைக்கொன்றுஞ் சோழன்மக னைக்கொன்றுஞ், சண்டன் மகனைக்கொன் றுந்தான்" எனப்பாடி அது அறக்கண்டு

மீண்டும் பொருத்துவித்துத் தம்மை மதியாத சம்பந்தாண்டான்மீது வசைபாடித் தமக்குக் கண்ட வியாதியை வைதீசுரர் கோயில் மண்ணையுண்டு நீங்கக்கண்டு "மண்டலத்தி னுளும் வயித்தியராய்த் தாமிருந்தும், கண்டவினை தீர்க்கின்றார் கண்டிரோ—தொண்டர், விருந்தைப்பார்த் துண்டருளும் வேளூரென் னுதர், மருந்தைப்பார்த் தாற்சுத்த மண்" எனத் துதித்து விகடராமன் எனும் ஆயக்காரன் குதிரையைக் கண்டு "முன்னே கடிவான மூன்றுபேர் தொட்டிழுக்கப், பின்னே யிருந்திரண்டு பேர்தள்ள — எந்நேரம், வேதம்போம் வாயான் விகடராமன்குதிரை, மாதம்போம் காத வழி" யெனப் பரிகசித்து, வேங்கட்டன் குதிரையை "ஆறும் பதினாறு மாமூரில் வேங்கட்ட, னேறும் பரிமாவே யேற்றமா— வேறுமா, வெந்தமா சும்மா வெறுமா களிக்கின்ற, வந்தமா சந்தமா மா" எனப் புகழ்ந்து, நாகப்பட்டினஞ்சென்று காத்தான் சத்திரத்திருந்த வேதியன் உபசரிக்காமை கண்டு, "கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்றன் சத்திரத்தில், அத்தமிக்கும்போதி லரிசிவரும்—குத்தி, உலையிலிட வூரடங்கு மோரகப்பை யன்னம், இலையிலிட வெள்ளி யெழும்" என வசைபாட, அதைச் சத்திர முதல்வன் கேட்டுப் பணிய அதனையே புகழ்ச்சியாய்ச் சமர்த்தித்து, அவ்விடம் ஒரு தாசி பாடியதைக் கேட்டுத் தனக்கு விருப்பமிலாமல் "வாழ்த்த திருநாகை வாழ்கின்ற தேவடியாள், பாழ்த்த குரலெடுத்துப் பாடினாள் — நேற்றுக், கழுதைகெட்ட வண்ணான் கண்டேன் கண்டேனென்று, பழுதையெடுத் தோடி வந்தான் பார்" என்று பழித்து, எட்டிக் குளமென்னும் கிராமாதிபதியாகிய ஒரு பிரபு, புலவர்க்குக் கொடுக்கும் பரிசிலைக் குட்டிசெட்டி என்பவன் மறுத்துத் தனக்குப் பாகந்தராமையால் அப்புலவர்களுக்கு விரைவில் பரிசளிக்காமல் துன்பமுறுத்துவதைப் புலவர்க ளிவரிடங்கூறி முறையிடக் காளமேகர் "எட்டிக்குளத்தி லிருந்து சாக்குவிற்குங், குட்டிசெட்டி தன்மகளைக் கொண்டுபோய் — நொட்டுதற்கே, ஆயிரம்யானை யறுநூறு கூன்பகடு, பாயும் பகடைம்பத் தைந்து" என்று வசைபாட அவன் குமரியை அம்மிருகங்கள் துன்புறுத்தச் செட்டி பயந்து புலவர்க்கு

வேண்டிய பொருளளிக்கப் புலவர் அநுக்கிரகித்து நீங்கிக், கொண்டத்தூரிற் விருந்துண்டு, அவ்விடம் சமைத்துவைத்த பூசுணைக்காய்க் கறியையும் விருந்திட்ட அம்மையாரையும் "கண்டக்காற் கிட்டுங் கயிலாயங் கைக்கொண்டுட், கொண்டக்கான் மோட்சங் கொடுக்குமே—கொண்டத்தூர், தண்டைக்காலம்மை சமைத்துவைத்த பூசுணைக்காய், அண்டர்க்கா மீசருக்குமாம்." எனப் புகழ்ந்து நீங்கித் தண்டாங்கூரடைந்து பண்டங்கொள்ள, அவ்விடமிருந்தார் குறைவாக விற்கக்கண்டு அவர்களை "தண்டாங்கூர் மாசநங்காள் சற்குணர்நீ ரென்றிருந்தேன், பண்டங் குறையவிற்ற பாவிகாள்—பெண்டுகளைத், தேடியுண்ண விட்டீர் தெருக்கள் தெருக்கள் தொறும், ஆடிமுதலானி வரைக்கும்" எனப் பழித்து, ஆமூர் சென்று "உள்ளங்கால் வெள்ளெலும்பு தோன்ற வொருகோடி, வெள்ளங் காலந்திரிந்து விட்டோமே — உள்ளபடி, ஆமூர்முதலி யமரர்கோ னிங்கிருக்கப், போமூ ரறியாமற் போய்" என புகழ்ந்து பாடி அமராவதி குருக்கள் வீட்டில் விருந்துண்டு அவனை "ஆனை குதிரைதரு" எனப் புகழ்ந்து, கயிற்றாறு செல்லுகையில் பெருமாள் கருட உற்சவங் கொண்டுவர அதைப் பார்த்திருக்கையில் அதிகாரிகள் இவரையும் ஆளாகக் கொண்டனர். புலவர் அதிகோம் சுமந்தமையால் மனம்நொந்து "பாளைமணங் கமழுகின்ற கயிற்றாற்றுப் பெருமானே பழிகாரா கேள், வேளை யென்னு விவ்வேளை பதினாறு நாழிகைக்கு மேலாயிற்றென், தோளை முரித்ததுமன்றி நம்பியானையுங் கூடச் சுமக்கச்செய்தாய், நாளையினி யார்சுமப்பா ரெங்காளு முன்கோயி லுசந்தானே" என வசைபாடித், திருப்பனந்தா ளடைந்து க்ஷாமகாலமாதலால் "விண்ணீரும் வற்றிப் புவிநீரும் வற்றி விரும்பியுணத், தண்ணீரும்வற்றிப் புலவோர் தவிக்கின்ற காலத்திலே, உண்ணீருண்ணீரென் றுபசாரஞ்சொல்லி யுபசரித்துத், தண்ணீருஞ் சோறுந் தருவான் திருப்பனந் தாட்பட்டனே" என்று பட்டனைப் புகழ்ந்து நீங்கித் தமது தாசி திருமலைராயன் பட்டணத்திருந்து முத்துக் கொண்டு வரும்படி சொன்னபடி திருமலைராயன் பட்டின மடைந்து வீதியிலிருக்கையில் அந்த அரசன் சமத்தானத்து அறுபத்திநாலு தண்டிகைப் புலவர்களில்

தலைவனாகிய அதிமதுரக்கவிராயன் தண்
டிகையில்வரக் கட்டியங்கூறுவோர் "அதி
மதுரக் கவிராயர் வருகிறார்" என்று எச்ச
ரித்து வந்தனர். அதைக் கேட்ட காளமே
கர் அவனை "அதிமதுரமென்றே யகில
மறியத், துதிமதுரமா யெடுத்துச் சொல்
லும்—புதுமையென்ன, காட்டுச் சரக்கு
லகிற் காரமில்லாச் சரக்குக், கூட்டுச்சரக்
குதனைக் கூறு" அதிமதுரமென்னும் குன்
றிவேர் எனப் பரிகசித்தனர். இதனைக்
கேட்ட கவிராயன் அரசசபை சேர்ந்து
ஒருதூதனை விடுத்து அவன் யார் அறி
ந்துவருக என்று அனுப்பினன். தூதன்
சென்று கேட்கக் காளமேகர் உத்தரமாக
"தூதைந்து நாழிகையிலாறு நாழிகை
தனிற் சொற்சந்தமாலை சொல்லத், துகளி
லாவந் தாதியேழு நாழிகைதனிற் றொகை
பட விரித்துரைக்கப், பாதஞ்செய் மடல்
கோவை பத்து நாழிகைத்தனிற் பரணி
யொருநாண்முழுதுமே, பாரகாவியமெலா
மோரிருதினத்திலே பகரக்கொடிக் கட்டி
னேன், சீதஞ்செயுந்திங் கண்மரபினனீடு
புகழ் செய்ய திருமலைராயன்முன், சீறுமா
றுகவே தாறுமாறுகள்சொல் திருட்டுக்
கவிப்புலவரைக், காதங்கறுத்துச் செருப்
பிட்டடித்துக் கதுப்பிற்புடைத்து வெற்
றிக், கல்லணையினொடு கொடிய கடிவாள
மீட்டேறு கவிகாள மேகநானே" என்ற
கவி பாடி யனுப்பக் கவிராயன் அஞ்சி
இவன்மகாகவி இவனை அரசனலடக்கவே
ண்டுமென எண்ணி அரசனுக்கறிவித்துக்
கட்டளைப்படிச் சேவகரை விடுத்தனன்.
சேவகர் சென்று அரசன் கட்டளையைப்
புலவர்க்குத் தெரிவிக்கப் புலவர் இது
தருணமென்று அரசனைக் காண்பதாத
லால் ஒரு எலுமிச்சம்பழங்கொண்டு சமஸ்
தானஞ் சேர்ந்தனர். புலவரது வரவறிந்த
சமத்தான வித்வான்கள் அறுபத்து நால்
வரும் பொறாமையால் புலவர்க்கு இடமி
லாது நெருங்கியிருந்தனர். காளமேகர்
புலவரது மனமுணர்ந்து அரசனை ஆசீர்
வதித்து அகிலாண்ட ஈச்வரியை மனதி
லெண்ணி அரசன் முன்பு பழத்தை நீட்
டினர். அரசன் அப்பழத்தை வாங்கவேண்
டிய தருமத்தினால் புலவர் சற்று ஒதுங்கக்
காளமேகர் அரசனை நெருங்கி அதைக்
கொடுத்தும் அரசன் இருக்க இடந்தந்து
உபசரிக்காமையால் இருந்த இடத்தில்
அகிலாண்டஈஸ்வரியை யெண்ணிச் சரஸ்
வதிமாலை (௩௦) வெண்பாவிற் பாடி
முடித்தனர். உடனே அரசனிருந்த ஆச
னம்வளர்ந்து இடந்தந்தது. அதில் காளமே
கர் அரசனுடனிருந்து அருகிருந்தவரை
நீங்களாரென்றனர் ; அவர்கள் கவிராய
ரென அவர்களைப் பரிகசித்து "வாலெங்
கே நீண்டவயிறெங்கே முன்னிரண்டு, கா
லெங்கே யுட்குழிந்த கண்ணெங்கே —
சாலப், புவிராயர்போற்றும் புலவீர்காணீ
விர், கவிராயரென்றிருந்தக் கால்" என்ற
னர். இதைக்கேட்ட அதிமதுரக்கவி நீர்
காளமேகமென்றீரே அது பொழியுமோ
வெனக் கேட்கையில் புலவர் "கழியுந்
தியகட லுப்பென்று நன்னூற் கடலின்
மொண்டு, வழியும்பொதிய வரையினிற்
கால்வைத்து வன்கவிதை, மொழியும் புல
வர்மனத்தே யிடித்து முழங்கிமின்னப்,
பொழியும்படிக்குக் கவிகாளமேகம் புறப்
பட்டதே" என்ன இதைக்கேட்ட அதி
மதுரக்கவி "மூச்சுவிடுமுன்னே முந்நூறு
நானூறும் ஆச்சென்றாலைந்நூறு மாகாதோ
— பேச்சென்ன, வெள்ளைக் கவிகாளமேக
மேயுன்னுடைய, கள்ளக்கவிக் கடையைக்
கட்டு" என்னக்கேட்ட காளமேகன் "இம்
மென்னு முன்னேயெழுநூறு மெண்ணூ
றும், அம்மென்றாலாயிரம் பாட்டாகாதா -
சும்மா, இருந்தாலிருப்பே னெழுந்தேனே
யாயிற், பெருங்காளமேகம் பிளாய்" என்
றனர். இவரை அதிமதுரக்கவி நீர் என்ன
பாடுவீர் எனக் காளமேகர் நான்யமகண்
டம் பாடுவேனென அதிமதுரக்கவி யம
கண்டம் அறியாதவனாதலால் யமகண்ட
லக்ஷணங் கேட்டு அந்தப்படி யிருத்தினன்.
காளமேகர் அதிலிருந்து புலவர் பலர்
கொடுத்த சமுத்திகளைப்பாடி வென்று அர
சன் வாளைச் "செற்றலரை வென்ற திரு
மலைராயன்கரத்தில், வெற்றிபுரியும்
வாளே வீரவாள் — மற்றைய வாள், போ
வாள் வருவாள் புகுவாள் புறப்படுவாள்,
ஆவா ளிவாளவா ளாம்" எனவும், "வீம
னென வலிமிகுத்த திருமலைராயன்கீர்த்தி
வெள்ளம் பொங்கத், தாமரையி னயனோ
டிச் சத்திய லோகம் புகுந்தான் சங்க
பாணி, பூமிதொட்டு வானமட்டும் வளர்
ந்துநின்றான் சிவன்கயிலைப் பொருப்பி
லேறிச், சோமனையுந் தலைக்கணிந்து வட
வரைத்தண் டாலாழஞ் சோதித்தானே"
என்று புகழ்ந்தனர். திருமலை ராயன்
சபையில் சங்கை குடத்திலடங்கப் பாடுகை

என்றபோது "விண்ணுக் கடங்காமல்
வெற்புக் கடங்காமல், மண்ணுக் கடங்
காமல் வந்தாலும் — பெண்ணை, இடத்தி
லேவைத்த விறைவர் சடாம, குடத்திலே
கங்கையடங் கும்" எ-ர். இவர் திருமலை
ராயனைப்புகழ்ந்தது "இந்திரன் கலையா
யென்மருங் கிருந்தா னக்கினி யுதிரம்
விட் டகலான், யமனெனைக் கருதா னர
னெனக் கருதி நிருதிவந் தென்னையென்
செய்வான், அந்தமாம் வருண னிருகண்
விட் டகலான் அகத்தினின் மக்களும் யா
னும், அநிலம தாகு மமுதினைக் கொள்
வோம் யாரெதி ரெமக்குளா ருலகிற், சந்
தத மிந்த வரிசையைப் பெற்றுத் தரித்
திர ராஜனை வணங்கித், தலைசெயும்மமை
நிலைசெய்சற் கீர்த்திச் சாளுவ கோப்பைய
னுதவும், மந்தரப் புயத்தான் றிருமலை
ராயன் மகிழ்வொடு விலையிலா வன்னேன்,
வாக்கினற் குபேர னுக்கின னவனே
மாசிலீ சானபூ பதியே" எ-ம்., அரசன்
குதிரையேறியபோது பாடியது "கோக்
குதிரை நின்குதிரை கோவல் மதரா
வொன்னர், மாக்குதிரை யெல்லாம் மனைக்
குதிரை--தூக்குதிரைத், துங்கக்கரைக் குதி
ரை சொக்கன் குதிரைசது, ரங்கக்குதிரை
களேயாம்." எ-ம். திருஆரூரில் அதிமது
ரக்கவிராயனுடனே வந்து கோயிலிலே
ஒருகவி பாடுக என்றபோது பாடியது,
"சேலை யுடையழகா தேவாகண் டார்களு
நீர், மாலையழகா மணிமார்பா — வேலை,
அடங்கார் புரமெரித்த யாரூரா வீதி,
விடங்காபிரியா விடை." எ-ம், இவ்வகைப்
பலவெற்றியடைந்தும் அரசனும் புலவ
ரும் சம்மானிக்காததினல் "கோளரிருக்கு
மூர் கோள்கரவு கற்றவூர், காளைகளாய்
நின்று கதறுமூர் — நாளையே, விண்மாரி
யற்று வெளுத்துமிகக் கறுத்து, மண்மாரி
பெய்க விந்தவான்" என்று வசைபாடித்
திருமலைராயன் பட்டணத்தைத் திரும்பிப்
பாராமல்செல்லப் பட்டணம் மண்மாரி
யால் நிறைந்தது. இவர் திருமலைராயன்
பட்டணம்நீங்கித் தலயாத்திரை செய்யப்
புறப்பட்டுத் திருச் செங்காடு சென்று
"காலனையும்" என்ற கவிபாடித் துதித்து,
காஞ்சி சென்று கருடோற்சவம் சேவிக்
கையில் "பெருமாளும் நல்ல பெருமாள்"
எனத்துதித்துத், திருவொற்றியூரில் தியா
கரைத் தரிசிக்கையில் "எட்டொருமா"
எனத்துதித்து, குமரகோட்டத்தில் "அப்
பா குமரக் கோட்டக்கீரை" எனப்பாடி
திருக்கச்சபேசத்தில் "முக்காலுக் கேகா
முன்" எனத்துதித்து, சிதம்பரஞ்சென்று
"நச்சரவம் பூண்டதில்லை" எ-ம்., "தாண்
டியொருத்தி" எ-ம்.,"கொங்குலவுந் தென்
றில்லை" எ-ம்., "நாட்டுக்கு ளாட்டுக்கு"
எ-ம்., "பொன்னஞ் சடையறுகம் புல்
லுக்கு" எ-ம்., "ஞானசபை கனகசபை"
எ-ம்., மாட்டுக் கோன்றங்கை" எ-ம்.,
துதித்துக் கழுக்குன்றில் "சொற்பெரிய"
எனத்துதித்துத் திருமுட்டஞ் சென்று
"தெருமுட்டப் பாளை" எ-ம்., முட்டத்துப்
பன்றி" எ-ம்., துதித்துத், திருஆலங்
குடிசென்று "ஆலங்குடி யானை" எனத்
துதித்து, மாயூரமடைந்து "வள்ளலெனும்
பெரிய" எனப்பாடி, வைதீசுரன் கோயில்
சென்று "தீத்தானுன் கண்ணிலே" எனப்
பாடித், திருவாரூரில் "ஒரு மாடுமில்லா
மல்" எ-ம்., "ஆடாரோ பின்னை" எ-ம்.,
"பாரூறிய" எ-ம்., பாடி, திருவண்ணு
மலைசென்று தரிசிக்கையில்" சட்டியிலே
பாதி" எனத்துதித்து, மதுரை சென்று
"ஆடல் புரிந்தான்" எ-ம்., "கண்டீரோ
பெண்காள்"எ-ம்.,"நல்லதொருபுதுமை"
எ-ம்., பாடி, திருவிடை மருதூர்சென்று
"கண்ண னிடுங்கறி" எனப் பாடித் திருத்
துருத்தி சென்று "காலையிலும்" எனப்
பாடி, விநாயகர் பெருச்சாளி வாகனத்து
வரத் தரிசிக்கையில் "மூப்பான்மழுவும்"
எனத்துதித்துக், கந்தசஷ்டி தரிசிக்கையில்
"அப்பனிரந்துண்ணி"எனத்துதித்து,ஒரு
தலத்தில் இடபவாகன சேவை கண்டு
துதிக்கையில் "வாணியன் பாடிட" எனப்
பாடித் திருச்செங்காடு சென்று ஒருநாள்
துயிலுகையில் காற்று வீசாமையால் தொந்
தரை யடைந்து "அம்பேந்து கையான
வன் பதியி லம்மாவைக், கொம்பேந்தி
தந்தைபணி கொண்டதோ — அன்பா,
லரிந்த மகவை யழையென்று சொல்லி,
இருந்தவன்றன் செங்காட்டிலே" என்று
ஸ்ரீரங்கஞ்சென்று விநாயகரைத் தரிசிக்
கையில் "தந்தை பிறந்திறவாத் தன்மை
யினற்றன் மாமன், வந்து பிறந்திறக்கும்
வண்மையினல் — முன்றொருநாள், வீணி
க்கு வேளையெரித்தான் மகன் மாமன்,
காணிக்குவந்திருந்தான் காண்" என்று
துதித்துப் பாகவதரிட்ட சமுத்திக்கு
"தடக்கட விற்பள்ளி கொள்வோ மதனை
நற் சங்கரனர், அடற் புலிக்குட்டிக் களித்

 காளமேகப்புலவர்

தனராமது கேட்டு நெஞ்சில், நடுக்கம் வந்துற்றது கை காலெழாநளி னத்தியென்னை, யிடுக்கடி பாயைச் சுருட்டடி யேகடியம்பலத்தே" எ-ம்., சைவர்களுக்கும் வைணவர்களுக்குஞ் சண்டையானபோது "சீரங்கத் தாருந் திருவானைக் காவாரும், போரங்கமாகப் பொருவதேன் — ஓரங்கள், வேண்டாமி தென்ன விபரந் தெரியாதோ, ஆண்டானுந் தார் தனுமானால்" எனக்கூறி, ஞானவரோதயன் மதுரைக்குச் சென்றபொழுது "முதிரத் தமிழ்தெரிநின்பாடல் தன்னை முறையறிந்தே, யெதிரொக்கக் கோப்பதற்கேழெழு பேரில்லையின்றமிழின், பதிரைத் தெரிந்தறிகோவில்லை யேறப் பலகையில்லை, மதுரைக்கு நீசென்ற தெவ்வாறு ஞானவரோ தயனே" எ-ம்., சவையப்ப நாய்க்கனைப் பாடியகவி "சொருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா சோற்றுப், பொருக்குலர்ந்த வாயா புலையா — திருக்குடந்தை, நாயா நரியாவுன்றாய் முகமும் சேய்வடிவும், தாயார் தான் தண்டிலளோ தான்" எ-ம்., திருக்கண்ண மங்கையாரை யிகழ்ந்துபாடியது "தருக்குலவு கண்ணமங்கைத் தானத்தா ரெல்லாரும், திருக்குளத்து மீனொழியத் தின்னார் — குருக்கொடுக்கு, நம்பிமா ரென்றிருந்தோ நாட்டிலழி கூத்தி, தம்பிமா ராயிருந்தார் தாம்" எ-ம்., கண்ணபுரத்துத் தீத்தாளைப் பாடியது "கந்த மலரயனார் கன்னிமடவார்க்கெல்லாம், அந்த விள நீரைமுலை யாக்கினார் — சுந்தரஞ்சேர், தோற்றமுள தீத்தாட்குத் தோப்பை முலை யாக்கினார், எற்றமிதில் யார்தானியம்பு" குடவாசல் விண்ணாளைப் பாடியது "செக்கோ மருங்குல் சிறுபயறோ தனம் சிக்களகம், வைக்கோல் கழிக்கற்றையோ குழியோ விழி வாவிதொறும், கொக்கேறி மேய்குடவாசல்விண் ணாள்வரைக் கோம்பியன்னீர், எக்கோ படைத்து நீரே நெருப்பி லெரிந்தவரே" புலிக்குட்டிச் சிங்கனைப் பாடியது "போன. போனவிடந் தொறும்தலைப் போடெழப் பிறர் குட்டவே, புண்படைத்த மனத்தனாகிய பொட்டிபுத்திர னத்திரன், மானகீனன் லச்சைகேடன் ஒழுக்க மற்ற புழுக்கையன், மாண்பனாம்புலிக் குட்டிசிங்கன் வரைக்குளேறி யிறங்குவீர், பேனுமீரு மெடுக்கவோசடை பின்னி வேடபெண்ணெய் வார்க்கவோ, பிரியிழுக் கரி யெழுதவோவொரு பீறுதுண்ட முடித்தவோ, கானகந்தனில் வைக்கவோவிரு கால்விலங்கிடு விக்கவோ, காற்கரங்கொடு சாடவோவொரு காரியந்தனை யேவுமே" முச்சங்கம், திருவிளையாடல், மதுரைச் சொக்கன்வரக் கவிசொல்லியது "நூலா நாலாயிரநா னூற்றுநாற் பத்தொன்பான், பாலானா னூற்றுநாற் பத்தொன்பான் — மேலாநாற், பத்தொன்பான் சங்கமறு பத்துநா லாடலுக்குங், கத்தன் மதுரையிற் சொக்கன்." குமாரசரஸ்வதி ஒட்டியனைச் செயித்தபோது பாடியது "கலிங்க மிழந்துநதிக் கைச்சங்கந் தோற்று, மெலிந்து கடகங்கவிழ விட்டாள் — மலிந்தமலர், பொன்னிட்ட மானகிட்ண பூபாலா வுன்றனக்கு. பின்னட்ட வொட்டியென் பொற் பொன்" அபிராமன் நாலுபாஷை வல்லவரோ என்னப்பாடியது "கூத்தாடி லஞ்சக் கொடுக்கா வொரேபொட்டி, சோத்தெட்டாவை வேசித் தொண்டனே — ஆத்தான, அந்த விழுப்புர முமபிநக ருங்கெடுக்க, வந்தகுலா மாவபிரா மா." திருவாரூர்க் கொடியிறக்காமற் றகையப் பாடியது "மருவு புகழ்க்கிருஷ்ண மகராய ராணை, அரியார் வடமலையானாணை — திருவாரூர், பாகங் குடியிருப்பாள் பாகர் திருவாணை, தியாகா கொடியிறக்காதே" மாவலிவாணனைப் பாடியது. "சொக்கன் மதுரையிற் றொண்டற்குமுன்ன விழ்த்த, பொய்க்குதிரை சண்டைக்குப் போமதோ — மிக்க, காசரானவந்தக் கரும்புறத்தார்க் கெல்லாம், அரசான மாவலிவாணா." தெண்டிக்கு (வரதன்) காளமேகன் விடுத்த சீட்டுக்கவி. "நள்ளாற்றுத் தெண்டிக்கு நல்வரதன் சீட்டுமயல், விள்ளாமலெத்தனை நாள் வெம்புவேன் — கள்ள, மதனப் பயலொருவன் வந்து பொருஞ்சண்டைக், குதவக்கடுகிவரவும்." தெண்டி நள்ளாற்றினின்று திருக்குடந்தைக்கு வந்தபோது கூறியது. "தேறலமிர்தந் தெவிட்டிடினுஞ் செங்கனிவாய், ஊறலமிர்தமுவட்டாதே — வீறுமதன், தன்னாணை நள்ளாளர் தம்மாணையும் மாணை, என்னாணை தெண்டியாரே." வேளாளன் வீட்டிலிருந்து இல்லையென்று சொன்னபோது பாடியது. "பாலலகையன்று பரிந்தளித்த கோத்திரத்துக், காலமெனவந்த வடைக்கலவன் — சூலந், திருக்கையிலே யேந்துஞ்சிவனறிய வேளான், இருக்கையிலே சாகுபடியானான்." நாகை

பட்டினத்துப் பெற்ருன்செட்டி அடைப்பு வீதம் பாடச்சொன்னபோது பாடியது. "முற்ருத காஞ்சியினும் முல்லேயினும் பாலேயினும், கற்ருன் பின்சென்ற கருணே மால்-பெற்ருன்சேர், ஆலேப்பதித்தார்அள கத்தியார்க்கயனுர்வேலேப்பதித்தார்விழி." காளமேகர், திருவாரூர்சென்று இரட்டையர்பாடிமுடிக்காது மதிலில் எழுதியிருந்த "நாணென்ரு னஞ்சிருக்கு நற்சாபம் கற்சாபம், பாணந்தான் மண்டின்ற பாணமே —தாணுவே, சீராரூர்மே வுஞ்சிவனே நீ ரெப்படியோ, நேரார்புரமெரித்த நேர்" என்ற வெண்பாவில் விடுபட்டிருந்த "பாணந்தான் மண்தின்றபாணமே" என்றதை முடித்துச் சிலநாட்களுக்குப் பிறகு சிவபதமடைந்தனர். இவர் இறந்த அன்று இரட்டையர்கள்வந்து தாங்கள் பாடிய கவி முடிந்திருப்பதைநோக்கி இது காளமேகன் கவியென்றறிந்து சுடுகாட்டிற் சிதையில் வேகையில் சென்று கண்டு "ஆசு கவியா லகில உலகெங்கும், வீசு புகழ்க்காள மேகமே—பூசுரா, விண்கொண்ட செந்தணலாய் வேகின்ற தையையோ, மண்தின்ற பாணமென்ற வாய்" என்றுபாடி விசனமடைந்தனர் என்பர். இது அதிமதுரக்கவிராயன் பாடிய கையறம் என்பர். இதிலுள்ள முதனிலேக் கவிகள்முழுதும் தனிப்பாடற்றிரட்டிற் காண்க. காளமேகர்காலம், திருமலேராயன் காலம், திருமலேராயன் விஜயநகரத்தரசரின் பிரதிநிதியாகத் தென்னுட்டை (கி. பி. 1455-1468) வரை ஆண்டவன் இவ்வரசன் காலத்து கவிஞர் இருந்ததாக இவரது செய்யுட்களால் காணபபடுகிறது. இதைநோக்க இவர் இன்றைக்கு (450) வருஷங்களுக்கு முன்னிருந்தவராகத் தெரிகிறது. திருமலேராயன் சாசனம் ஒன்று திருவானேக்கா ஜம்புகேசுவரர் ஆலயத்திற்குக கோபராஜன் குமாரனை ஆளுவதிருமலேராயன் ஒரு திருவாபரணமளித்ததைத் தெரிவிக்கிறது. இவர் செய்த நூல்கள், திருவானேக்காவுலா, சித்திரமடல், பரபபிரமவிளக்க முதலிய.

**களராத்திரி**—சத்தியின் தூதி. இவள் தூது சென்றபோது அசுரர் பிடிக்கவர அவர்களேக் கண்ணுலெரித்துக் கௌசிகியிடம் மீண்டவள். இவள் கோரரூபிணியா யிருந்தபடியால் இப்பெயர் அடைந்தனள். சத்தியினம்சம்.

**காளவனம்** — இப்பெயரை யுடையவனம் இரண்டு.

1. உஞ்சைநகரின் புறத்தேயுள்ளதொன்று இதுமகா காளவனமென்று வேறு நூல்களில் கூறப்படும். (பெ. கதை.)

2 உதயணன் பால்மிக்க அன்புடைய வணுகிய இலாமயனென்பவனிருந்தவனம் (பெ. கதை.)

**காளன்**—1. வீரபத்திரர்க் கொருபெயர்.

2. சண்முக சேனாவீரன்.

3. சிவமூர்த்தியணிந்த நாகங்களிலொன்று. இந்தநாகன், காம இச்சைகொண்டதால் அபசாரப்பட்டுச் சிவமூர்த்தியின் கட்டளேப்படி பூமியில்வந்து திருக்காளத்தியில் சிவபூசை செய்து கொண்டிருந்தனன். அத்தியெனும் கணநாதன் யானேயாக இதற்குமுன் அவ்விடம் பூசைசெய்து கொண்டிருந்தனன். இவன் அவனுடன் பூசையின்பொருட்டுப் போரிட்டு இறந்து முத்தியடைந்தவன்.

**காளாஞ்சனம்**—ஒரு தீர்த்தம்.

**காளாத்திரி** — பஞ்சபூதத்தலத்தி லொன்று வாயுலிங்கக்ஷேத்ரம்.

**காளாமுகன்**—மகாவிரதி மதத்துடன் ஒத்தவன். இவனுக்குப் பெத்தமுத்தி இரண்டும் ஒன்று. சிறிது ஆகமபேதம் உண்டு. இவனுக்குச் சிவன் படிகநிறமும், புத்ர தீபமணியுந் தரித்த மூர்த்தியாய் அருள் செய்வர் என்பன். இது சைவபேத உட்சமயத்தொன்று. உருத்திர கற்பிதம். (தத்துவநிஜாநு)

**காளான்** — இது, ஓர்வகை பூண்டுபோல் பூமியிலுண்டாம் தாவரவகையிற் சேர்ந்தது. இது ஓர்வகை துர்நாற்றமும் உள்ளது. இதனே அழுக்கால் தோன்றியதென்பர். இவ்வகையிற்பல நிறங்கொண்டவை உண்டு. இது பொருள்களினழிவில் உண்டாகும் மிருதுவான தாவரம். இதில் குடைக்காளான் முதலிய பலவகை உண்டு சிலர் இதனே உணவுப்பொருளில் ஒன்ருக உபயோகிக்கின்றனர். இவ்வகையில் விஷமுள்ளதும் உண்டென்பர்.

**காளி** — 1. தாருகாசூரனுல் துன்பமடைந்த தேவர், பெண்களுருக்கொண்டு சிவமூர்த்தியையடைந்து தமதுகுறை கூறினர். பெண்ணுலன்றி வேறு எவராலுமிறவாத தாருகனே வெல்லச் சிவமூர்த்தி சத்திக்குக் கட்டளேயிட்டனர். அக்காலேயில் தேவியின் ஒருகலே சிவமூர்த்தியின் விஷக்

கறை படிந்து கனற்கண்ணிற் பிறந்து வெளிப்பட்டது. அவ்வுரு காளமாகிய விஷக்கறை படிந்து வந்ததால் காளிஎனப் பெயரடைந்தது. இவ்வகை பிறந்த காளி தனது கோபாக்னியால் தாருகனை நீருக்கினள். இவளிடம் பிறந்த கோபத்தீ, குழந்தை யுருக்கொண்டழுதது. இதனை நோக்கிய காளி குழந்தைக்குப் பாலூட்டினள். சிவமூர்த்தி, குழந்தையையும் பாலையும் தம்மிலொடுக்கினர். ஒடுங்கிய சிவமூர்த்தியிடமிருந்து எட்டுருக்கொண்டு வைரவமூர்த்தி தோன்றினர்.

2. மகிடாசுரன் செய்த துன்பத்தைத் தேவர் சிவமூர்த்தியிடம் கூறினர். அக்காலத்துச் சிவமூர்த்திக்குக் கோபமுண்டாயிற்று. அக்கோபம் பெண்ணுருவாய்த் திரண்டது; அதுவே காளியுரு என்பர். இவள் இரத்தபீசன் எனும் அசுரனை ஒரு துளியிரத்தம் கீழ்விழாது ஆகாயம் மேல் வாயாகவும் பூமி அடிவாயாகவும் அங்காந்து உண்டு மாய்த்தனள். சிவமூர்த்தியிடம் நிருத்தவாதஞ் செய்து தோல்வியடைந்தவள். தக்ஷயாக அதத்தின் பொருட்டு இறைவியின் கோபத்தீயிற் பிறந்தவ ளென்றுங் கூறுவர். காளனென்னும் வீரபத்திரனை மணந்தவள். இவளுடன் பகைகொண்ட அசுரர், பாம்பு, தேள் முதலிய விஷ ஜெந்துக்களை விட்டுக் கடிக்க ஏவ இவள் அவை துன்பஞ் செய்யாமல் மரக்கால்கொண்டு ஆடினள். ஆதலால் இவள் கூத்து மரக்கால் எனப்படும். இவளுக்கு ஊர்தி,சிங்கம்,கொடி,அலகை,படை,சூலம்

3. சத்தமாதாக்களில் ஒருத்தி.

4. வாயுருபமான சத்தி, இவட்கீசர் காலர் அல்லது ஈசானர்.

5. வேதவியாசன் தாய். சத்தியவதிக்கு ஒரு பெயர்.

**காளிகூடம்** — ஒரு பட்டணம்.

**காளிங்கர்** — திருவள்ளுவர் குறளுக் குரையியற்றிய ஆசிரியர்களில் ஒருவர்.

**காளிங்கன்** — காளியனைக் காண்க.

**காளிதாசன்** — காளிதேவியின் உபாசனுபலத்தால் கவியானவன். வடநூல் வல்லவன். இவனைப் போஜன் சமத்தான வித்வான் என்பர். பின்னும் இப்பெயர் கொண்ட மற்றொருகவி விக்ரமார்க்கன் சமஸ்தானத்திலு மிருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. இவர்களது சரித்திரங்களை வடநூலிற் காண்க.

**காளிதேவர்** — ஒரு வீரசைவ அடியவர். இவரிடம் சில வேதியர் வந்து தாம் பிறப்பாலுயர்ந்தோர் வேதமோத எமக்கே அதிகார முண்டென்றனர். இதைக் கேட்ட அடியவர், தம்மிடமிருந்த நாயை வேதமோதுவிக்க, வேதியர் வெட்கிச் சென்றனர்.

**காளிந்தி** — 1. யமுனை நதியிலுள்ள மடு. இதில் உமை வலம்புரிச் சங்கினுருவாய்த் தவம்புரிந்தனள். இம்மடுவில் சௌபரியின் சாபத்தால் கருடன் வராததினால் காளியன் எனும் நாகன் சேர்ந்து வாழ்ந்தனன்.

2. சூரியன் புத்ரி, யமுனாதீரத்தில் கண்ணனை மணக்கத் தவஞ் செய்து அவரை மணந்தவள். இவள் குமரர் சோமகன் முதலியோர்.

3. சுமதியின் பாரி.

கிருஷ்ணன் தேவியரில் ஒருத்தி.

5. திடன் பாரி.

**காளிபீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று.

**காளிமுத்து** — இவள் ஒருதாசி, கவிபாட வல்லவள். இவள் மயிலைக்குழந்தை முதலியாரையும், பள்ளிக்கொண்டான் எனும் பாதவனையும் பாடிப் பரிசு பெற்றவள். "நெல்லைச்சொன் னுபரணத்தை" என்ற செய்யுளும், "வள்ளிகொண்டான் மயிலேறிக்கொண்டான் மதிபோலு மலை, வெள்ளிக்கொண்டான் விடையேறிக்கொண்டான் விண்ணவர்க்கமுதம், துள்ளிக்கொண்டான் புள்ளிலேறிக்கொண்டான் சுபசோபனஞ்சேர், பள்ளிக்கொண்டான் புகழேறிக்கொண்டானென்று பார்க்கவென்றே" என்ற செய்யுளும் இவள் பாடியன. (தனிப்பாடற்றிரட்டு.)

**காளிம்பன்** — தொண்டை நாட்டில் திருவேங்கடத் தருகிலிருந்த பிரபு. இவர் வித்வான்களை யாதரித்துக் கவிமாலை பெற்றவர். "விடஞ்சூழ ரவினிடைநுடங்கமிடவாள்வீசி விரையார்வேங், கடஞ்சூழ் நாடன் காளிம்பன் கதிர்வேல் பாடுமாதங்கி வடஞ்சேர் கொங்கைமலை தாந்தாம் வடிக்கணீலமலர் தாந்தாம், தடந்தோளிரண்டும் வேய்தாந்தாமென்னுந் தன்கைத் தண்ணுமையே" எனும் செய்யுள் இவர்மீது பாடப்பட்டது.

**காளியண்ணாப்புலவர்** — இவர் திருச்செங்கோடென்னும் சிவத்தலத்திற் கருகிலுள்ள மண்டகப் பாளியெனும் ஊரிலிருந்த

கருணீகர். மதுரைத் திருஞானசம்பந்த ஆதீனத்தில் தீக்ஷை பெற்றவர். திருப்பூந்துறை புராணம் பாடிய புலவர். திருச்செங்கோட்டுச் சிற்றம்பலக் கவிராயரின் மாணவகர்.

**காளியன்** — ஒரு நாகன், கத்ரு குமரன். இவன் கருடனுக்கஞ்சி, சௌபரி ருஷியால் கருடன் வராதிருக்க வரம் அடைந்த யமுனை மடுவிலிருந்து கிருஷ்ணனால் கடலுக்குத் தூரத்தப்பட்டு ரமணகத்தீவடைந்து தான் பெற்ற கண்ணனடிச் சுவட்டால் கருட பயமற் றிருந்தவன். இவனுக்கு அத்தீவிலுள்ளார் பூசை முதலிய இடப் பெற்றிருந்தவன்.

**காளேச்வரம்** — கோதாவிரிக்கரையிலுள்ள சிவக்ஷேத்ரம்.

**காற்றறிவிக்கும்கருவி** — (Wather cock.) இது காற்று வீசுகிற திசையை அறிவிக்கும் கருவி.

**காற்றாடி** — பிள்ளைகள் சதுரமாகவும் பல விதமாகவும் மூங்கிற்குச்சுகளைக் கட்டிக் கடிதத்தால் மூடிச் சூத்திரமிட்டுக்காற்றில் பறக்கவிடும் கதவிப்படம். இதில் பல வகை உண்டு.

**காற்று** — 1. பஞ்சபூதங்களி லொன்று. அதிபல முள்ளது. இது, கொண்டல், கோடை, வாடை, தென்றல் என பல வகைப்படும். இது, கண்ணால் காணப்படும் பொருளன்றாயினும் ஸ்பரிசத்தால் உணரும் பொருள். இது உஷ்ணத்தினால் இலேசையும், குளிர்ச்சியால் கனத்தையும் அடையும். இது தானடைந்த பொருள்களின் மணமுதலியவற்றை விரைந்து செலுத்தும் வேகமுடையது எக்காலத்தும் சலித்துத் திரட்டுவது.

**காற்றுக்குறி** — புதனுடன், சுக்ரன், சந்திரன், செவ்வாய் கூடி உதிக்கச் சநி (எ) ஆம் இடத்து நிற்பினும் சுக்ரனும், புதனும், இராகுவும் ஒரு சரராசியில் உதிப்ப அல்லாதார் சரராசியிலாதல் சராம் சத்திலேயாதல் நிற்பினும் பெருங் காற்றடிக்கும்.

**கானங்கோழி** — இது சிறு கோழியைப் போலுள்ள தாயினும் அலகு நீண்டு கழுத்து வெளுத்துள்ள பறவை. காட்டில் வசித்தலால் இப்பெய ரடைந்தது.

**கானட்டனூர்** — காவட்டனூரைக் காண்க. காரிக்கிழார்க்கு ஒரு பெயர்.

**கானப்பேரெயில் கடந்த உக்கிரப் பெருவழுதி** — இவன் சேரமான் மாவெண்கோ, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி முதலியவர்க்கு நண்பன். கடைச்சங்கமிருத்திய பாண்டியர்களுள் ஒருவன். இவன் முன்பாகத் திருக்குறள் அரங்கேற்றப்பட்டது. அகநானூறு தொகுப்பித்தோன் இவனே, இவனைப் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி எனவும் கூறுவர். வேங்கைமார்பன் என்பவனை வென்றவன் இவன் என்பர். கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி எனவும் இவனைக் கூறுவர். ஐயூர் மூலங்கிழாரால் பாடப் பட்டவன். (புறநானூறு.)

**கானப்பேர்** — 1. இது சிறந்த பேரரண்; பல சிற்றரண்களை யுடையது; இதின் தலைவன் வேங்கைமார்பன். இஃது இக்காலத்துக் காளையார் கோயிலென்று வழங்கப்படுகின்றது; கானப் பெயர் என்றுங் கூறுவர். (புற. நா.)

2. பாண்டி நாட்டில் பாடல் பெற்ற சிவத்தலங்களுள் ஒன்று. இது ஈழநாட்டுப் பராக்கிரம பாகு என்பவனுடைய சேனாதிபதிகைப்பட் டிருந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

**கானல்நீர்** — இது உஷ்ணமான கோடை காலத்தில் பெரு வெளிகளில் ஆவி, உஷ்ணத்தால் மாறுதலடைந்து வாயுவுடன் கலக்குமாயின் குளம் ஏரி முதலியவற்றில் நிறைந்த நீர் தளும்புவதுபோல் காணப்படுவது. நீர் நிறைந்த குளங்களின் கரையிலுள்ள மரங்கள் அந்நீரில் தலை கீழாகப் பிரதிபலித்துத் தோன்றுவதுபோல் இக் கானல் நீரிலும் அருகிலுள்ள மரங்கள் முதலிய பிரதிபலித்துத் தோன்றும். சில வேளைகளில் இந்தப் பிரதிபலனக் காட்சி ஆகாயத்திலும் காண்பதுண்டு. அது ஆகாயத்திலுள்ள வாயுவுடன் ஜலவாயு அதிகமாகச் சேர்ந்திருக்கையில் உஷ்ணத்தால் அந்த வாயுகானல் நீராக மாறிவிடுகிறது அதில் பூமியிலுள்ள பட்டணங்கள், மலைகள் மரங்கள் நீர் நிலைகள் பிரதிபலித்துத் தோன்றுகின்றன. இவை பெரிய பாலைவனங்களி லுண்டாகின்றன. இத் தோற்றங்கள் வெகு தூரத்திலுள்ள பொருள்களையும் பிரதிபலித்துக் காட்டுகின்றன.

**கானவிந்து**—மானசோத்ர பர்வதத்திலுள்ள கூகை. இது பூர்வத்தில் புவனேசன் என்னும் அரசன். இந்தப் புவனேசன், அரிமித்திரன் என்போன் தன் புகழைப் பாட

வில்லையென்று கோபித்து அவன் செல்வத்தைக் கவர்ந்து யமபுரிசென்று யமனால் கூகையாகி உடம்பையே யொருமன்வந்தரம் தின்னும் கதியடைந்து, பரமபதமடைந்த அரிமித்திரனிடஞ் சென்று யாழ்கற்று அதைக் காந்தருவருக்கும், நாரதருக்கும் பயிற்றி மறுசன்மத்தில் கருடனாயினன்.

**கானன்** — கிருதாந்தனைக் காண்க.

**கானினன்** — அக்நிவேசனுக்கு ஒரு பெயர். இவன் இருடியாயினன்.

**கானோபாத்ரை** — இவள் மங்களவேடு என்னும் இராமத்திலிருந்த அழகுமிகுந்ததாசி. இவள் மிக்க அழகுள்ளவளாதலால் பூமியிலுள்ள மனிதர் ஒருவரும் தான் விரும்பத்தக்கவரல்லர் என்று ஆசை யொழித்துப் பண்டரிபுரத்துப் பெருமாள் விஷயத்தி லீடுபட்டு ஆண்டுச் சென்றனள். அவ்விடத்தில் பெருமாளைப் பஜனை செய்து வருகையில் ஒருவன் அரசனிடஞ் சென்று இவளது அழகு முதலியவைகளைக்கூற அரசன் இவளைத் தனது சமுகத்திற்கு வரும்படி கட்டளையிட்டனன். அவ்வகையே ஒற்றர் இவளை வந்து அழைக்கத் தாசி பயந்தவளாய்க் கண்ணனிடஞ் சென்று உன்னை நம்பியவென்னை யரசனிடங் காட்டிக் கொடுக்கலாமோ வென்னப் பெருமாள் அர்ச்சகர் முதலியோர் காணும்படி தரிசனந்தந்து அவளதுயிரைத் தம் தொடையி லடக்கினர். அர்ச்சகர் கண்டு வியந்து அவளுடலைக் கோபுரவாயிற் புறத்தி லடக்கஞ்செய்தனர். அவ்வுடல் உடனே ஒரு விருக்ஷமாயிற்று. கோயிலினுள் புகுந்தவள் வாராமை கண்டதூதர் அர்ச்சகரைக் கேட்க அர்ச்சகர் நடந்ததைக் கூறினர். தூதர் அரசனிடங்கூற, அரசன் அர்ச்சகரை வருவித்தனன். அர்ச்சகர் அரசனிடஞ்சென்று அக்ஷதைமுதலிய கந்தங்கள் அரசனுக்குத்தர அதிலொரு உரோமம் இருந்தது. இது என்ன எனப் பெருமாளுக்கிருந்தது ஒன்று தவறிவந்தது போலு மென்றனர். அரசன் அத்தாசி யெவ்வகையாயினள் என அர்ச்சகர் நடந்தது கூறினர். அரசன் உண்மையறிவான் வேண்டிப் பெருமாளைத் தரிசிக்கச்செல்ல அருச்சகர் பெருமாளைநோக்கி நாங்கள் அறியாது செய்த பிழைபொறுத்து அரசன் காணச் சிகை காட்டவேண்டு மென்று வேண்டினர். அரசன் பெருமாளைத் தரிசிக்கையில் சிகையையும், தாசியினது உருவத்தைப் தொடையினுங் கண்டு ஆனந்தமடைந்து தன்னூர் புகுதனன்.

**கான்பியூகஸ்மதம்** — சீனதேசத்தில், லூ எனும் நகரம் ஒன்று உண்டு. அவ்விடத்தில் கிறிஸ்துபிறக்க (551) ளுக்கு முன் கான்பியூகஸ் எனும் மதஸ்தாபகன் பிறந்தான். கன்பியூஷியஸ் என்று இவனைக் கூறுவர். இவனது மூன்றாம் வயதில் தந்தை யிறந்தனன். இவன் (15)-வது வயதில் கல்விகற்றான். (19)-வது வருஷத்தில் பரிணயமடைந்தான். (50) வருஷம் அரசனிடம் மந்திரியாயிருந்தான். பிறகு ஜீவதசையில் உண்மை அறிந்து கடவுளின் மகிமைகளை யுபதேசிக்கத் தொடங்கினான். இவனுக்கு (300.) சீடர்கள் சேர்ந்தனர்; இவன் பலநூல்கள் செய்தான். இவன் (57)-வது வயதில் மரணமடைந்தான். இவனுக்குப் பிறகு இவன் சீடரில் முதல்வரானோர் லன்தியூ தாபிலித் யுல்கு கான்பியூகஸ் என்பவர்கள். கான்பியூகஸ் தர்மாசனத்தை யடைந்தனன். இம்மதத்தவர்க்கு (1660) கோயில்களுண்டு. ஒவ்வொரு வருஷத்திலும் இரண்டுமுறை திருவிழா நடத்துவர். இவர்கள் தங்கள் தேவர்களுக்குப் பலிகொடுப்பது வழக்கம். இம்மதத்தில் கடவுள் ஒருவரே; இக் கடவுளை யடைதலே மனித ஜன்மத்திற்குச் சிரேட்டத் தன்மை. ஆகாசம், பூமி, மனுஷஜன்மம் இவை மூன்றுங் கூடினது ஒரு தத்வம். இம்மூன்றில் மனுஷஜன்மம் விசேடம். சம்பன்னர்களையும், பெரிய மனுஷரையும் மற்றவர்கள் சேவிக்க வேண்டும். மனுஷப்பிறவிக்குத் தாய் தந்தையர் காரணமாதலின் அவர்களைவணங்க வேண்டும். தாய்தந்தையர் வார்த்தைகளைக் கடக்கக் கூடாது. தாய்தந்தையர் இறக்கின் மூன்று வருஷம் வரையில் துக்கம் கொண்டாடுவர். பிறகு, மாத்ருபிதாமஹாலயம் என்று ஒரு இடங்கட்டி நாடோறும் அவர்களைத் துதித்துவருவர். சிறுமிகள் விருத்தஸ்திரீகளைப் பூஜிப்பர். ஜாதிபேதம் இல்லை. அனைவரையும் சகோதரர்போல் எண்ண வேண்டும். சந்ததியுள்ளோருக்கு ஜன்மம் இல்லை. எல்லாரும் நீதி, தயை முதலிய சுகுணங்களுடன் கூடியிருத்தல் வேண்டும்.

**காஷ்டிலை** — இவள் மாகபூசத்தில் ஸ்நான விரதங்கள் நோற்று நல்லுலகடைந்தவள். (பிருகன்னாரதீய புராணம்.)

**காஷ்டை**—காச்யபர் தேவி, தக்ஷன் குமரி, இவளிடம் ஒரு குளம்புள்ள பிராணிகள் பிறந்தன.

**காக்ஷிவந்தன்** — கண்ட கௌசிகருஷிக்குத் தந்தை. ஜராசந்தனுக்குப் புத்திர சந்ததி கொடுத்தவன்.

**காக்ஷீவன்** — கௌதமருஷி யௌசீநரியெனும் சூத்ரப்பெண்ணிடம் பெற்ற குமரன். இவர் கிரிவிரஜத்திலிருந்தவர். (பார-சபா.)

## கி

**கிகடன்** — 1. இருஷபனுக்குச் சயந்தியிடமுதித்த குமரன்.

2. சங்கடன் குமரன். இவன் துர்க்காபிமான தேவதைகளைப் பெற்றவன்.

**கிடங்கல்காவிதிகீரங்கண்ணனர்** — இவரது இயற்பெயர் கண்ணனரென்பதே, கீரன் தந்தையின் பெயர்போலும் காவிதிபட்டம் பெற்றமையின் உழுவித்துண்ணும் வேளாண்மரபினராவார். கிடங்கில் என்பது நடுநாட்டகத்துள்ள திண்டிவனம்; இஃது ஒய்மா (எறுமா) நாட்டு நல்லியக்கோடனாட்சியுட் பட்டிருந்தது "கிளைமலர்ப் படப்பைக் கிடங்கிற்கோமான்" சிறுபாணாற்றுப் படை - கசுO. மற்று மிவ்வூர் "கிடங்கிற்கிடங்கிற் கிடந்தகயலைத் தடங் கட்டடங்கட் டளிரியலார் கொல்லார் — கிடங்கில்,வளையாற்பொலிந்தகை வையெயிற்றுச் செவ்வா, யிளையாடன்கண் ணொக்கும் என்று." எனப் பொய்கையாழ்வாராற் சிறப்பித்துப் பாடப்பெற்றது. இக்கீரங் கண்ணனர் நெய்தல், குறிஞ்சி, முதலாய வளங்களைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் பிரிந்தாரை யொறுக்கு மாலைக்காலத்தியல்பும், இரவுறு துயாமும் விளங்கப் பாடியுள்ளார். நற் - உகஅ. இவர் பாடியனவாக நற்றிணையில் உகஅ-ம் பாடலொன்றும், குறுந்தொகையிலொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (நற்றிணை.)

**கிடங்கன்பெருமாள்முதலியார்**—இவர் தமிழ்நாட்டு அரசன் சம்ஸ்தானத்திலமர்ந்திருந்தவர். இவரை அரசன் (நஉ) அறம் வளர்ப்பவர் யாவர் என்று வினவினன். இதற்கு உத்தரவாக முதலியார் வேளாளரே என்றனர். அரசன், அரசர்கள் அல்லவோ என முதலியார் சும்மாவிருந்தனர். இதனல் அரசன் உட்பகைகொண்டு கிடங்கன் பெருமாள் முதலியாரைக் கொலைபுரியக் கட்டளையிட்டனன். ஒரு முறை இந்த அரசன் குமரனைப் பகைவர் துரத்திவந்தனர். அந்த இராசகுமாரன் கிடங்கன் பெருமாள் வீட்டி லடைக்கலம் புகுந்தனன். கிடங்கன் பெருமாளின் குமரன் தன்குமரனை யரசகுமரனெனக் காட்டி யரசகுமாரனைக் காத்தனன். இதனைக் குமரனல் அறிந்த அரசன். தந்தையைக் கொன்ற பகை பாராட்டாமல் தருணத்தில் காத்ததையெண்ணி வேளாளரே (நஉ) அறம் வளர்ப்பவர் என்று சிறப்புச் செய்தனன்.

**கிடங்கில்காவிதிபெருங்கொற்றனர்**—கொற்றன் எனப் பலரிருத்தலின் அவர்களின் வேறென்பது தெரிய இவர் பெருங்கொற்றனர் எனப்பட்டார். இவர் முல்லைத் திணையைப் பாடியுள்ளார். இவர் பாடியது நற். நசுச-ம் பாட்டு.

**கிடங்கிற்குலபதிளக்கண்ணன்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர் இவர் பெயர் கண்ணராக இருக்கலா மற்றையடைமொழிகள் இவரது ஊரை குறிக்கும் மொழிகளாம். (குறுந்-உடுஉ.)

**கிடாம்பி அப்பா**—நயினராசாரியர் திருவடி சம்பந்தி.

**கிடாம்பி அப்புள்ளரர்** — சுப்பிர திஷ்டாம்சாரன இவர் கலி (சநஉக) க்குமேல் விக்ரமஞு சித்திரைமீ வெள்ளிக்கிழமை காஞ்சியி லவதரித்தவர். உடையவர் திருவடி சம்பந்தி. நடாதூர் அம்மாள் திருவடிகளில் ஆச்ரயித்தவர்.

**கிடாம்பி ஆச்சான்** — சண்டாம்சரான இவர் கலி (சOடுஅ) க்குமேல் ஏவிளம்பிஞு சித்திரைமீ வெள்ளிக்கிழமை ஸ்ரீரங்கத்தில் அவதரித்தவர். பெரியதிருமலை நம்பிக்கு மருமகன், பெண்சாதியுடன் பிறந்தான் குமரன். இவர்குமரர் இராமானுசப் பிள்ளான், இவர் திருக்கோட்டியூர் நம்பி நியமனத்தால் உடையவர்க்கு மடைப் பள்ளி கைங்கர்யஞ் செய்தவர். எழுபத்தினலு சிம்மாசனதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை)

**கிடாம்பி இராமானுசப் பிள்ளான்** — சர்வநேத்ராம்சரான இவர் கலி (சஉOக) க்கு மேல் சர்வதாரிஞு ஐப்பசிமீ திங்கட்கிழமை ஸ்ரீகாஞ்சியி லவதரித்தவர். ஸ்ரீரங்கராஜர்.

**கிடாம்பித் திருமலைநயினர்**—கிடாம்பி யாச்சான் மருகர்.

**கிடாம்பி நயினர்** — மணவாள மாமுனிகளுக்கு ஆசாரியர், கிடாம்பி ஆச்சான் வம்சத்தவர். பிரமதந்திர சுதந்திரசியர் திருவடி சம்பந்தி.

**கிடாம்பிப் பிள்ளை** — தேசிகர் திருவடி சம்பந்தி.

**கிடாம்பிப் பெருமாள்**—எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை)

**கிடாம்பி ஸ்ரீரங்கராசர்** — குமுதாக்ஷாம்சரான இவர் கலி (௪௨௬௪) க்குமேல் சுபானுஞூ பங்குனிமீ திங்கட்கிழமை திருக்காஞ்சியி லவதரித்தவர்.

**கிட்கிந்தை** — 1. ஒரு சிறு கிராமம். துங்கபத்திராவின் வடகரையிலுள்ளது.

2. சுக்ரீவனுண்ட இராச்யம். இது மைசூருக்கு வடக்கிலிருக்கிற தென்பார். A Small Village on the northern bank of the river Thungabhadra, near Humpi in the District of Bellary, Madras Presidency.

**கிணறுகள்** — உலகத்திலுள்ள தேசங்களில் சில கிணறுகளில் இருவகை நீர் ஊறுகிறது. அமெரிக்கா நாட்டு பிட்ஸ்பெர்க் எனும் பிரதேசத்திற்குச் சற்றுத் தூரத்தில் உள்ள கிணற்றில் கீழ்நீர் உஷ்ணம் மேல்நீர் குளிர்ந்தது. ஷை நாட்டு நியூபர்லிங்கடனில் உள்ள ஒரு கிணற்றில் அடியிலுள்ள ஜலம் உப்பு, மேலுள்ள ஜலம் நல்லஜலம். ஷை நாட்டுபார்டோ எனும் ஊரில் ஒரு கிணறுண்டு. அக் கிணற்றினுள் பிள்ளைக் கிணறொன்றிருக்கிறது. அப்பிள்ளைக் கிணற்றுநீர் கந்தகநீர் வெளிக்கிணற்றில் நல்லநீர். கள்ளூறுங் கிணறு காண்க.

**கிணைநிலை** — 1. மருத நிலத்திற் கழனியிடத்து வேளாளனைத் தெளிந்த கிணைகொட்டுமவன் நல்ல கீர்த்தியைச் சொல்லியது. (பு - வெ.)

2. செல்வம் பெருகும் பரந்தமாளிகையிடத்து அழகிய கிணைகொட்டு மவனது நன்மையைச் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)

**கிந்தவர்** — ஒரு இருடி.

**கிம்புருடன்**—1. புலகர்குமாரரில் ஒருவன்.

2. ஆக்னியித்ரனுக்குப் பூர்வசித்தியிடத்து உதித்தகுமான். தேவி அப்ரதி.

**கிம்புருஷம்** — இமயமலைக்கு வடபாகத்திலுள்ள தேசம்.

**கிம்புருஷர்** — பிரமன் பிரதிபிம்பத்தி லுதித்தவர், மனுஷமுகத்தையும், குதிரையினுருவத்தையும், பெற்ற தேவவகுப்பினர்.

**கிம்மீரன்**—ஒரு அசுரன் பீமனால் கொல்லப்பட்ட பகாசுரன் தம்பி. இவன் பாண்டுபுத்ரர் அரண்யவாசத்தில், திரௌபதியைக் கவரவந்து வீமனால் கொல்லப்பட்டனன். இவனுக்குக் கிம்மீரணன் எனவும் பெயர்.

**கியவர்க்கர்** — சூரியனிடம் காசிமகாத்மியம் கேட்டவர்.

**கியாதி** — 1. கர்த்தமர் பெண், பிருகுருஷியின் தேவி, தக்ஷன் பெண் எனவுங் கூறுவர். குமரர் தாதா, விதாதா, விஷ்ணுவுக்கஞ்சிய அசுரருக்கு இடங்கொடுத்துத் திருமாலால் உயிர்நீங்கி மீண்டும் சுக்ரனால் உயிர்பெற்றவள்.

2. தாபசன் எனும் மனுப்புத்ரன்.

3. உல்முகன் குமரன்.

**கியாது** — ஜம்பனுடைய பெண், இரண்யகசிபின் தேவி. பிரகலாதன் தாய். ஒருகாலத்து இந்திரன் இரண்யகசிபில்லாக் காலம் பார்த்து இவளைச் சிறையெடுக்கையில் நாரதர் விடுவித்தனர். இவள் நாரதரிடம் உபதேசம் பெற்றுத் தன் புருடன் தவம் நீங்குமளவும் நாரதாச்சிரமத்தில் இருந்து பின்பு புருடனிடஞ் சேர்ந்தவள்.

**கியானதேவர்** — கங்கைக்கரையில் ஆப்காவெனுமூரில் கருணிகர்மரபில் கோவிந்த பண்டிதர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் தேவி நிருபாய். இவ்விருவருக்கும் விடோபாவெனும் ஓர் குமரன் பிறந்தான். இவ்விடோபாவென்பார் தீர்த்தயாத்திரை செய்து அளகாபதியை யடைந்திருக்கையில் சித்தோபண்டிதர் அவரைக்கண்டு நீவிர் யாரெனவினவத் தம்பெயர்கூற அப்பண்டிதர் தமது வீட்டிற்கு அழைத்துச்சென்று விருந்து செய்வித்தனர். அன்றிரவு பெருமாள் பண்டிதர்கனவில் உமது பெண்ணை விடோபாவிற்குக் கொடுக்கஎன அவ்வாறு மணம்புரிந்து பண்டரிசென்று பெருமாளை வணங்கி மீண்டுந் தம்மூர் சென்றார். இவ்வாறிருக்கையில் தாய்தந்தையர் மரணமடைய மாமனார் வீடுசென்று மனைவியிடம் தாம் சந்நியாசம் பெறவேண்டு மென்று விடைகேட்க அவள் மறுக்கக் கேட்டுக் கங்காதீர்த்தமாடி வருகிறேனென்று காசிசென்று ஸ்ரீபாதரால் சந்நியாசம் பெற்றிருந்தனர். இதைக்கேட்ட மனைவி அரச

மாஞ் சுற்றிவருகையில் சந்நியாசம் தந்த ஸ்ரீ பாதர் அவ்விடம் பிரதக்ஷணஞ் செய்யும் விடோபாவின் மனைவியைப் பார்த்து உனக்கு நான்கு புத்திரர்களுண்டாகுகவென அவள் சிரிக்கக் கண்டு காரணம் வினவத் தன்கணவன் சந்நியாசமடைந்த காரணங்கூறினள். பின் ஸ்ரீபாதர் அவளுடன், காசி சென்று விடோபாவைக் கண்டு மனைவியுடனிருக்கச் செய்தனர். விடோபா மனைவியுடன் தனித்த ஓர் காட்டிற் சென்று ஓர் குடிலில் வசித்தனர். அவருக்கு மூன்று குமாரர்களும் ஒரு குமரியும் பிறந்தார்கள். அவர்களில் மூத்தோன் பெயர் நிவர்த்தி. இரண்டாம் குமரன் பெயர் கியான்தேவன். மூன்றாங் குமரன் சோபானன். குமரி பெயர் முத்தாயி. இவர்கள் பருவமடையத் தாய் உபநயனச்சடங்குகள் செய்யவேண்டுமென்று கூற வேதியர்கள் மறுக்கச் சிலர் செய்யலாமென்றும் சிலர் செய்யக் கூடாதென்றும் கூறிக்கொண்டிருக்கையில் ஒருவரெழுந்து இவர்கள் கியானதேவர் முதலிய பெயர்கள் வகித்திருப்பதினால் உபநயனஞ் செய்யலாமென, மற்றொருவர் எழுந்து கடாவிற்கு ஞானனென்று பெயரிருக்கின் பயனென்னையென, கியானதேவர் கேட்டு இவர்கூறியது சரியே அதற்குற்றது எனக்குமாம் என்றனர். ஆயின் எதிரில் நின்ற ஒரு கடாவைத் தடியால் அடிக்க அது ஞானதேவர் முதுகில் தடித்தது. இதனைக் கண்ட வேதியர் உன்னைப்போல இந்தக் கடா வேதங்கூறுமோ வென்ன ஞானதேவர் அதின் தலையில் கைவைத்து வேதங்கூறுக என்ன அக்கடா நான்கு வேதங்களையுங் கூறியது. பின் வேதியர்கள் இவரைப் புகழ்ந்து நீங்கினர். அவ்வேதியர்களுள் ஒருவர்வீட்டில் நால்வரும் அத்தியயனஞ்செய்துகொண்டிருக்கையில் அவ்வேதியன் தந்தைக்குத் திதிவர அவன் ஏனையவேதியர்களை யழைக்க நீ சந்நியாசியின் குமாரர்களைக் கூட்டிக்கொண்டிருப்பதினால் நாங்கள் உன் வீட்டிற்கு வரோமென மறுத்தனர். இதனை ஞானதேவர் கேட்டுப் பிதுரர்களே வந்து புசிப்பார்கள், நீவிர் வேண்டிய காரியங்களைச் செய்கவென அவ்வாறே அவ்வேதியர் செய்து அன்னம் படைக்கையில் பிதுரர்கள் வாராமைகண்டு வேதியன்கேட்க ஞானதேவர் அக்ஷதையெடுத்து இலையில் இறைக்க பிதுரர்கள்வந்து அன்னமுண்டனர். இதனைச் சாளரவழியாகக்கண்ட ஏனையவேதியர்கள் இவர்கள் மனிதரல்லர், தேவர்களே என்றும் இவர்களை வீணே இகழ்ந்தோமென்றும் மனமழுங்கினார்கள். பின்பு நால்வரும் தாங்களிருந்த வேதியனைவிட்டு நீங்கித் தம்மூரடைய எல்லோரும் எதிர்கொண்டனர். அவர்களில் ஒருவனாகிய விசோபன் இவர்களோடு கூடுதல் அடாதெனக் குறைகூறினான். ஒருநாள் நிவர்த்தி என்பவர் தங்கையை நோக்கி எனக்கு அப்பம் செய்து தருதி என்றனர். முத்தாயி அம்மை மாமுதலிய செய்து பாண்டமின்மையால் பாண்டங்கொள்ளக் குயவன் வீட்டிற்குச் செல்லுகையில் விசோபன் கண்டு குயவனைப் பாண்டம் கொடாதிருக்கக் கட்டளையிட்டனன். இதனால் முத்தாயி விசனமடைந்திருக்கையில் நிவர்த்தி காரணங்கேட்க அவள் நடந்ததைக்கூற அது அவனது சுவபாவம் நீ விசனப்படவேண்டாம், என் முதுகில் சுடுவாயென்று முதுகைக் காட்டினர், அவ்வகையே அவள் முதுகில் அப்பஞ்சுட்டு அண்ணனுடன் புசித்தனள். இதைக் கண்ட விசோபன் நடுங்கித் தண்டஞ் சமர்ப்பித்து அவர் உண்ணு மெச்சிலையுண்டு அருள் பெற்றனன். இவ்வாறிருக்கையில்நாமதேவர் எதிரில்வர அவரைக்கண்டு வணங்கி உம்மோடுதீர்த்தங்களாடவேண்டி வந்தேனென்ன அது பெருமாள் கட்டளையின்றிக் கூடாதென்று நாமதேவர் கூற, ஞானதேவர் பெருமாளைக் கேட்கப் பெருமாள் விடைதர இருவரும் பெருமாள் வழிகாட்ட நீங்குகையில் பெருமாள் காலில் புழுதி படியத் திரும்பக்கண்ட மலர்மகள், பெருமாளுடைய திருமுகம் வேறுபட்டதற்குக் காரணங்கேட்கப் பெருமான் நாமதேவர் நீங்கிய காரணத்தால் விசனமடைகின்றேனென்று சோர்ந்திருந்தனர். பின்பு நாமதேவர் பெருமாளை நீங்காமல் நீங்கி ஞானதேவருடன் பலதீர்த்தங்களில் படிந்து அத்தினபுரியை யடைந்தனர். அவ்வூராளும் அவிந்தனென்னுமரசன் இவரைக் கண்டு செத்த பசுவை யுயிர்ப்பிப்பாயானால் நீ ஹரிபக்தன் அன்றேல் உன்னைக் கொல்வேன் என்றனன். நீ அதனை எத்தனை நாளில் பிழைப்பிப்பாய் எனத் தேவர் நான்குநாள் செல்லும் என்றனர். இந்த நான்கு நாளும் நாமதேவர்

பெருமாளைத் தொழுது பசுவை உயிர்ப்பித்தார். பின்பு அரசன் நாமதேவரைப் பணிந்து சென்றனன். பின் நாமதேவர் காசியடைந்து கபீரர் வீட்டில் நடுராத்திரியில் செல்லக் கபீரர் மனைவி வந்தபாகவதருக்கு உணவளித்தல் வேண்டிக் கடைத்தெருவில் செல்லக் கடைகளில்லாமையால் ஓர் வணிகன் வீடடைந்து உணவுப்பொருள்கள் கேட்க அவன் என் எண்ணப்படி நிற்பையேல் பொருள்கள் தருவேனென்றுகூற அவ்வாறேயிசைந்து பொருள்களை விருந்தினருக்கு உபசரிக்க அனுப்பிக் கபீரரிடம் நடந்தவைகூற அவர் தம் மனைவியாரை யழைத்துக்கொண்டு வணிகனை யடைந்தனர். வணிகன் கண்டு ஞானோதயமாய் நான் பல பிறவிகளில் செய்த பாவத்தால் இவ்வகைச் சிந்தித்தேன். என் தீமைகளைப் பொறுக்கவென வேண்டிக் கபீரரிடத்தில் விட்டு என்னை அநுக்கிரகிக்க வேண்டுமென அவ்வாறு கருணை செய்தனர். அவ்விடமிருந்து ஞானதேவரும் நாமதேவரும் பல தலங்களுந் தரிசித்து மார்வாட தேசஞ்சென்று தாகத்தாலே ஓர் கிணற்றின் கரையடைந்து அவ்விடத்தில் கிணற்றில் இறங்க வழிதெரியாமல் திகைத்து நிற்கையில் நாமதேவர் பெருமாளைத் துதிக்கக் கிணற்றுநீர் மேல்வந்து ஒழுகிற்று. இருவரும் உண்டு தாகம் தணிந்தனர். பின் இருவரும் நாகேசுரமடைந்து ஹரிபஜனை செய்கையில் அங்கிருந்த வேதியர் நீங்கள் சூத்திரர்கள் நீவீர் அகன்றுபோமென்று கோபிக்க இவ்விருவரும் ஹரிபஜனை செய்ய நாகேசர் இவர்பக்கந் திரும்பினர். இதனால் வேதியரெல்லாம் வியப்புற்று நாமதேவரை வணங்கிப் பொறுத்தருளவேண்டு மென்றனர். பின்னர் பண்டரிபுரமடைந்து திருமாலை வணங்கத் திருமால் அவருக்குத் தளபமணிந்து கண்ணீர்மாற்றி மலர்மகளிடத்து நாமன் விரதபூர்த்திக்கு வேதியர்க்கு விருந்தளிக்க வெனக் கட்டளையிட்டுப் பெருமாளும் பின்சென்று சந்திரபாகை தீர்த்தக் கரையிலிருந்த வேதியரைநோக்கி நாமன் செய்யும் விருந்திற்கு வருகவென வழைத்து அவருக்கு முந்திக் கோயிலையடையத் திருமகள் அஷ்டசித்திகளைக் கொண்டு வேண்டியவைகளைச் செய்ய நாமரும் மங்களஸ்நானஞ்செய்து மந்திரமோதி விருந்தளித்து விரத முடித்தனர். பின்பு அந்த வேதியர்கள் காணச் சூத்திரனாக வந்த பெருமாளுடன் உண்ண, வேதியர்கள் கோபித்துச் சந்திரபாகைதீர்த்த ஸ்நானஞ் செய்து தக்ஷிணை கொடுக்கவென அவ்வாறு செய்துகோயிலடையத் திருமால் மீண்டும் அந்த வேதியருக்கு விருந்தளித்து அவர்களில் சிலருக்குத் தம் கையால் அமுதூட்ட எச்சில் முதலிய தம்மேல் தெறிக்க அவ்வேதியர்கள் அருவருத்தனர். அதனால் திருமால் தன் உண்மை உருகாட்டினர். பின் கியானதேவர் பெருமாளை வணங்கப் பெருமாள் நீ இந்த வேதியர்களுக் கெல்லாம் உபதேசஞ்செய்க எனக் கட்டளையிட்டனர். பின்பு ஒருநாள் ஞானதேவர் பெருமாளைநோக்கி எனக்குச்சமாதி வேண்டுமெனக் கேட்கப்பெருமாள் பாகவதர்களையெல்லாம் வரவழைத்து ஞானதேவர்க்குக் கார்த்திகை மாதம் கிருஷ்ணபக்ஷத்தில் திருவோணநக்ஷத்திரத்தில் இந்திராயணிக் கரையில் இயலளிந்தி என்னுமூரில் சித்தேச்வரன் கோயிற்கருகில் சமாதி தந்தனர். பின்பு நாமதேவரும் ஞானதேவர் பிரிவாற்றாமையால் ஆறுமாதமிருந்து நீங்கினர். பின் நிவர்த்தி தேவருக்குத் திரியம்பகத்திலும் சோபானுதேவருக்கு ஒரு வருஷத்திற்குப் பின்னும் சமாதி தந்தனர்.

**கிரகங்கள்** — சூரியன், சந்திரன், அங்காரகன், புதன், குரு, சுக்ரன், சநி, இராகு, கேதுக்களாம். இவர்களின் முறையே புத்திரர், லிங்கம், நிறம், வடிவம், சாதி, பாஷை, குணம், (சரம், ஸ்திரம், உபயம்) முப்பிணி, திக்கு, லோகம், ரத்தினம், தானியம், புஷ்பம், சமித்து, சுவை, வாகனம், முதலிய வருமாறு: **சூரியன்**— காலன், ஆண், செகப்பு, சமனர், க்ஷத்திரியர், சமஸ்கிருதம், குரூரர், ஸ்திரம், தாமதன், பித்தம், நடு, தம்பாக்கு, மாணிக்கம், கோதுமை, செந்தாமரை, எருக்கு, கார்ப்பு, தேர். **சந்திரன்** — கலைஞானபாதன், பெண், வெள்ளை, குறுமை, வைசியன், தமிழ், சௌமியர், சரம், சத்வம், சிலேத்மம், தென்கிழக்கு, ஈயம், முத்து, நெல், வெள்ளல்லி, முருக்கு, தித்திப்பு, விமானம். **செவ்வாய்** — கரேசன், ஆண், செகப்பு, குறியர், க்ஷத்திரியர், மந்திரம், குரூரர், சரம், பித்தம், தெற்கு, செம்பு, பவளம், துவரை, செண்பகம், கருங்காலி, துவர்ப்பு, அன்னம். **புதன்** — அர்த்தபிரகரணன், அலி, பச்சை, நெடுமை,

வைசியர், சோதிஷம், சௌமியர், உபயம், தாமதம், வாதம், வடகிழக்கு,பித்தளை, பச்சை, பச்சைப்பயறு, வெண்காந்தள், நாயுருவி, உப்பு, குதிரை. வியாழன் — யமகண்டன், பெண், மஞ்சள், நெடுமை, பிராமணன், சமஸ்கிருதம், சௌமியன், உபயம், சத்வம், வாதம், வடக்கு, பொன், புட்பராகம், கடலை, முல்லை, அரசு, தித்திப்பு, யானை. சுக்கிரன் — விஷகடிகன், பெண், வெள்ளை, சமனர், பிராமணன், சமஸ்கிருதம், சௌமியன், இராசதம், சிலேத்மம், கிழக்கு, வெள்ளி, வைரம், மொச்சை, வெண்டாமரை, அத்தி, தித்திப்பு, கருடன். சனி — குளிகன், அலி, கறுப்பு, குறியர், சூத்திரன், அன்னியபாஷை, குரூரர், உபயம், தாமதம், வாதம், மேற்கு, இரும்பு, நீலம், எள், கருங்குவளை, வன்னி, கசப்பு,காகம். இராகு— அமுதகடிகன், அலி, கறுப்பு, நெடுமை, சங்கரசாதி, அன்னியபாஷை, குரூரர், சரம், தாமதன், பித்தம், தென்மேற்கு கருங்கல், கோமேதகம், உழுந்து, மந்தாரை, அறுகு, புளிப்பு, ஆடு. கேது — அவமிருது, அலி, செகப்பு, நெடுமை, சங்கரசாதி, அன்னியபாஷை, குரூரர், சரம், பித்தம், வடமேற்கு, துறுகல், வைடூரியம், கொள், செவ்வல்லி, தருப்பை, புளிப்பு, சிங்கம். கிரககேந்திர சதுட்டயம் — (ச) லக்னகேந்திரம், சதுர்த்தகேந்திரம், சப்தமகேந்திரம், தசமகேந்திரம். கிரக நட்பு — சூரியனுக்கு - குருவும்; சந்திரனுக்கு - புதனும் குருவும்; செவ்வாய்க்கு - புதனும் சுக்கிரனும்; புதனுக்கு - சந்திரனும், செவ்வாயும், குருவும், சுக்கிரனும், சனியும்; குருவுக்கு-சூரியனும், சந்திரனும், புதனும், சுக்கிரனும்; சுக்கிரனுக்கு-செவ்வாயும், புதனும், குருவும், சனியும்; சனிக்கு-புதனும், குருவும், சுக்கிரனும், நட்பாம். கிரகபலக்குறை சதுட்டயம்--(ச) மூன்றுமிடம், ஆறுமிடம், எட்டாமிடம், பன்னிரண்டாமிடம், இவற்றைத் திருதிய சஷ்டாஷ்டக மென்பர். கிரகபல சதுட்டயம் — (ச) தனஸ்தானம், இலாபஸ்தானம், கேந்திரஸ்தானம், திரிகோணஸ்தானம். கிரகப்பகை—சூரியனுக்கு - குரு நீங்கிய கிரகங்களும், சந்திரனுக்குப்-புதன், குரு, நீங்கிய கிரகங்களும், செவ்வாய்க்கு-புதன், சுக்கிரன், ஒழிந்த கிரகங்களும், புதனுக்கு - சூரியனும், குருவுக்கு - செவ்வாயும், சந்திரனுக்கு - சூரியனும், சந்திரனும், சனிக்கு - சூரியனும், சந்திரனும், செவ்வாயும் பகைவராம்.

சுபக்கிரகங்கள் — பூரணசந்திரன், குரு, முழுச்சுபர்; சுக்ரன் - முக்காற்சுபன் புதன் - அரைச்சுபன்; குறைந்தசந்திரன் ; காற்சுபன்; சந்திரன் அமாவாசையில் புதனுடன் கூடியிருக்கின் முக்காற் சுபன்; பாவியரோடு கூடிய புதன் காற்சுபன்; புதன் சுபரோடுசேர்ந்தால் சுபன். பாபக்கிரகங்கள் - சனி, இராகு, கேது-முழுப்பாபிகள்; செவ்வாய் - முக்காற்பாவி; சூரியன் - அரைப்பாவி; பாம்புகளோடுகூடிய புதனும் சந்திரனும் காற்பாவி; இராகுவுடன் கூடிய குரு முழுப்பாவி ; புதன் பாவிகளோடு சேர்ந்தால் பாவி.

கிரகங்கள் ஒவ்வொரு இராசிகளில் சஞ்சரிக்கும் காலம்—சூரியன் மாதம் 1, சந்திரன் $2\frac{1}{4}$ நாள், செவ் $1\frac{1}{2}$ மாதம், புதன் 1 மாதம், வியாழன் 1 வருஷம், சுக்ரன் 1 மாதம், சனி $2\frac{1}{2}$ வருஷம், இராகு $1\frac{1}{2}$ வருஷம், கேது $1\frac{1}{2}$ வருஷம்.

கிரகபலம் — ஆதித்யனும் சந்திரனும் உத்தராயணகாலத்துப் பலவான்கள். அல்லாதவர்கள் ஒருவருடன் ஒருவர்கூடி நிற்பினும், வக்ரித்திருப்பினும் பலவான்கள். உதித்து நிற்பினும், யுத்தஞ்செய்யினும், உத்தரகதியாயினும் பலவான்களாம். சுபக்ரகங்கள் பூர்வபக்ஷத்துப் பலவான்கள். திவாநிசிக்ரகபலம்-சந்திரனும், சனியும், செவ்வாயும் இரவு பலமுடையர். புதன் இரவும் பகலும் பலமுடையன். ஆதித்யனும் வியாழனும் சுக்ரனும் பகல் வலியுடையர். கிரகங்கள் எல்லாம் தத்தம் கிழமையினும், தத்தம் ஆண்டினும், தத்தம் மாதத்தினும் பலமுடையர். சனியிற் செவ்வாய் பலவான். இவ் விருவரினும் புதன் பலவான். இம் மூவரினும் பிரகஸ்பதி பலவான். இந் நால்வரினும் சுக்ரன் பலவான். இவ் வைவரினுஞ் சந்திரன் பலவான். இவ் வறுவரினும் ஆதித்தன் பலவான். இவ்வெழுவரினும் இராகு கேதுக்கள் பலவான்கள். (விதானமாலை)

கிரகநாடி—குரு,புதன்,சனி-வாதநாடி; சூரியன், செவ்வாய், இராகு, கேது - பித்தநாடி; சுக்ரன், சந்திரன் - சிலேத்மநாடி.

கிரகபாதம் — சூரியன், செவ்வாய், சனி-நான்கு பாதம்; புதன், குரு, சுக்ரன்-

இரண்டுபாதம்; சந்திரன், இராகு, கேது - விசேஷபாதம்.

**கிரகப்பார்வை**-கிரகங்களின் பார்வையையறியுமிடத்து அவன்நின்ற ராசிமுதல் ௩, ௧௦-ம் கால்நோக்கு; ௫, ௯-ம் அரைநோக்கு; ௪, ௮-ம் முக்கால்நோக்கு; ஏழும் தானின்ற இராசியும் முழுநோக்கு. இவற்றிற் கால்நோக்கில் சனி வலிது. அரைநோக்கில் பிரகஸ்பதி வலியன். முக்கால்நோக்கில் செவ்வாய் வலியன். முழுநோக்கில் இவையல்லாத கிரகங்கள் வலியர். குரு-௫, ௭, ௯, ஐயும், சனி-௩, ௭, ௧௦, ஐயும், செவ்-௪, ௭, ௮, ஐயும், குளிக-௭, ௧௨, ஐயும் மற்றவை ௭, ஐயும் பார்ப்பர். (விதானமாலை.)

**கிரகமறைவுத்தானங்கள்** — சூரியன், செவ்வாய், சனி, இராகு, கேது இவர்கள் இலக்கினத்திற்கு 8-வது 12-வது வீட்டிலிருந்தால் மறைவு. சந்திரன், புதன், குரு, 3-வது, 6-வது, 8-வது, 12-வது வீட்டில் இருந்தால் மறைவு.

**கிரகங்களின் நட்பாட்சியுச்சமுதலிய**-மேடச்செவ்வாய், இடபசுக்ரன், மிதனபுதன், கர்க்கடகசந்திரன், சிங்காதித்யன், கன்னிபுதன், துலாசுக்ரன், விரிச்சிகசெவ்வாய், தனுவியாழன், மகரச்சனி, கும்பச்சனி, மீனவியாழன் எனக் கோட்களுக்கு ஆட்சியானவாறு காண்க. இவற்றின் **நவாம்சமாவது** - மேடத்திற்கும் சிங்கத்திற்கும் தனுவிற்கும் மேடமுதலொன்பது. இடபத்திற்கும் கன்னிக்கும் மகரத்திற்கும் மகரமுதலொன்பது. மிதுனத்திற்கும் துலாத்திற்கும் கும்பத்திற்கும் துலாமுதலொன்பது. கர்க்கடகத்திற்கும் விருச்சிகத்திற்கும் மீனத்திற்கும் கர்க்கடகமுதலொன்பதும் நவாம்சமாம். **உச்சமதியுச்சம் நீசம் அதிநீசம்** - ஆதித்தனுக்கு மேடமுச்சம், இதிற் ௧௦-ம் பாகமதியுச்சம். சந்திரனுக்கு இடபமுச்சம், இதில் ௩-ம் பாகமதியுச்சம். செவ்வாய்க்கு மகரமுச்சம், இதில் ௨௮-ம் பாகமதியுச்சம். புதனுக்கு கன்னியுச்சம், இதில் ௧௫-ம் பாகமதியுச்சம். வியாழனுக்கு கர்க்கடகமுச்சம், இதில் ௧௫-ம் பாகமதியுச்சம். சுக்ரனுக்கு மீனமுச்சம், இதில் ௨௭-ம் பாகமதியுச்சம். சனிக்குத் துலாமுச்சம், இதில் ௨௦-ம் பாகமதியுச்சம் என அறிக. சொன்ன அடைவே உச்சத்திற்கு ௭-ஆம் இராசி நீசம் என்றும், அதிற் சொன்ன பாகை அதிநீசமென்றும் அறியப்படும். (விதானமாலை)

**கிரகங்களுக்கு நட்பான வீடுகள்** — சூரி-தனுசு, மீனம். சந்-மிதுனம், கன்னி, தனுசு, மீனம். செவ் - ருஷபம், மிதுனம், கன்னி, துலாம். புத - மேஷம், ரிஷபம், கடகம், துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம். குரு - ரிஷபம், மிதுனம், சிங்கம், கன்னி, துலாம், கும்பம். சுக் - மேஷம், மிதுனம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம். சனி - ரிஷபம், மிதுனம், கன்னி, தனுசு, மீனம். இரா - மேஷம், சிங்கம், கன்னி. கேது - துலாம், கும்பம். குளி - துலாம், கும்பம். **கிரகப்பகை வீடுகள்** — சூரி - ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், கும்பம். சந் - மேஷம், சிங்கம், துலாம், மகரம், கும்பம். செவ் - சிங்கம், தனுசு, கும்பம், மீனம். புத - சிங்கம். குரு - மேஷம், விருச்சிகம். சுக் - கடகம், சிங்கம். சனி-கடகம், சிங்கம், விருச்சிகம். இராகு - துலாம், கும்பம், மீனம். கேதுக்கும், குளிகனுக்கும் - மேஷம், சிங்கம், கன்னி, தனுசு.

**கிரகசன்** — ஒரு காபாலி மதத்தவன், சங்கராசாரியரை யெதிர்த்தவன்.

**கிரகணம்** — எல்லாம் கிரகங்களும் பூமியின் கோளாக்ருதிகளாக இருக்கின்றன. அவற்றுள் சூரியவொளியால் மற்றக் கிரகங்களும், பூமியும், பிரகாசத்தோடே கூடி இருக்கின்றன. அவ்வொளி கிரக பூமிகளின் ஒருபுறத்தைப் பிரகாசப்படுத்தும்போது, அவற்றின் மறுபக்கம் இருளாகின்றது. இவ்விருளுக்கு நேரே அகப்பட்ட கிரகங்களும் இவ்விருளால் தடுக்கப்பட்ட கிரகங்களும் நக்ஷத்திரங்களும் காணப்படா. அவைதாம், சூரியசந்திர அங்காரகனுதியாய ஐந்து கிரகங்களின் கிரகணங்கள். இவற்றுள் **சூரிய கிரகணமாவது** - சந்திரன் தன்னுடைய உபரிபாகத்தில் சஞ்சரித்துவரும் ஆதித்தனுக்கு நேராகவருங் காலத்தில் ஆதித்தனுடைய ஒளி சந்திரனுடைய மேற்பாகத்தைப் பிரகாசப்படுத்துகிறது. நாம் காணுகிற மறுபுறத்திற்குச் சூரியனுடையஒளி இல்லாதபடியால் இருளாகிறது. இவ்வகை இருள் வடிவாகத் தோற்றும் சந்திரபிம்பம், சூரியபிம்பத்தினுடைய நேர் விலகிப்போகிற வரையில் சூரியனை மறைத்து நாம் காணு

மற் செய்கிறது. அதுதான சூரியகிரகணம் என்னப்படும். சூரியனும் சந்திரனும் நேராக வருவது அமாவாசையின் முடிவிலானதால் அது சந்திராநுஷ்டானப்படி மாசாந்தம் என்று சொல்லப்படும். இதனைத்தவிர வேறெந்தத் திதிகளிலுஞ் சூரியகிரகணம் வரமாட்டாது. இவ்வாறே **சந்திர கிரகணமாவது** - சந்திரன் சூரியனுக்கு ஆறு இராசி தாண்டி நேராகப் பிரிந்து வருகிறபோது சந்திரனுடைய மேற்புறம் இருளாகவும் நாம் காணும் மறுபுறம் பிரகாசமாகவும் வரும். அந்தச் சமயத்தில் சூரியனுடைய ஒளி பூமியின் மறுபுறத்தில் இல்லாதபடியால் பெரியதாகிய பூச்சாயை உண்டாகும். அப்போது சந்திரன் பூச்சாயைக்கு நேராக அதிலே மறைந்து வெளியில் வருகிற வரையில் சந்திரனை நாம் காணமாட்டோம். அது தான் **சந்திரகிரகணம்**. இவ்வகை சூரியனுக்கு ஆறுராசி பிரிந்து பூச்சாயைக்கு நேராகச் சந்திரன் வருவது பூரணையின் முடிவிலானதால் அதற்குச் சந்திராநுஷ்டானப்படி பக்ஷாந்தம் என்று கூறப்படும். இதனைத் தவிர வேறெந்தத் திதிகளிலும் சந்திரகிரகணம் உண்டாகமாட்டாது. இவ்வாறே அங்காரகாதி நக்ஷத்திர கிரகணங்களை நிச்சயித்தல் வேண்டும். அன்றி ஒன்றுக்கொன்று நேரே தடுத்துவரும்போதும் கிரகணம் நிச்சயிக்கலாம். இதனாலே சந்திரன் பூச்சாயையிலே பிரவேசித்து மறைந்து தன் கிரகணத்தை உண்டுபண்ணிக் கொள்ளுகிறான் என்றும், உபரிபாகத்தில்வரும் சூரியனை மறைத்துச் சூரியகிரகணத்தை உண்டுபண்ணுகிறான் என்றும், அது நிச்சயமாகவும் யுக்தியாகவும் இருக்கையில் நம் புராணங்கள் இராகு கேதுக்கள் சந்திரசூரியரை மறைப்பதாக விரோதங் கூறியிருப்பது என்னையோ வெனில் சமாதானம் கூறுவாம். செவ்வாய் முதலிய ஐந்து கிரகங்களுக்குள் ஒவ்வொன்றிற்கும் அதிர்ஷ்டங்களாக இரண்டு பாதக் கிரகங்கள் உண்டு. அதுபோலவே சந்திரனுக்கும் இரண்டு பாதக்கிரகங்கள் உண்டு- அவற்றின் பூர்வபாதன் இராகு என்றும், இரண்டாவது பாதன் கேது என்றும் சொல்லப்படும், முதல் பாதன் இருந்த எழாவதுபாதத்தில் இரண்டாவதுபாதன் இருப்பன். இந்தப் பாதக் கிரகங்களுடைய பிரவிர்த்தி என்னவெனில், நேரே கிழக்குமேற்காக இருபபது கடிகாமண்டலம். அதிலிருந்து இருபத்திநாலு பாகைக்குத் தெற்கும் வடக்கும் பிரிந்திருக்கிறது. அபக்கிரம மண்டலம் அதில் சூரியன் ஸ்திரமாய்ச் சஞ்சரித்து வருவதால் அதற்குச் சூரியமார்க்கம் என்று பெயர் கூறப்படும். அச் சூரிய மார்க்கத்தில் தத்தம் கிரகமார்க்கங்களை இரண்டு சந்தியில் பொருத்திவைக்கவும், இரண்டு சந்தியில் பிரித்துவைக்கவும் செய்கிறது. எவ்வகையெனின்? செவ்வாயின் பூர்வபாதன் செவ்வாயின் மார்க்கத்தை ஆதித்தமார்க்கத்துடன் ருஷபம் பத்தாவது பாகையிலும், இரண்டாவது பாதன் விருச்சிகம் பத்தாவது பாகையிலும், பொருத்தி வைக்கிறார்கள். சிங்கம் பத்தாவது பாகையில் ஒன்றரைப்பாகைக்கு வடக்கும், கும்பம் பத்தாவதுபாகையில் ஒன்றரைப்பாகைக்குத் தெற்கும், பிரித்துவைக்கிறார்கள். புதனுடைய் பூர்வபாதன் புதபாதத்தை ஆதித்தமார்க்கத்துடன் மேஷம் இருபதாவது பாகையிலும், இரண்டாவதுபாதன் துலை இருபதாவது பாகையிலும், பொருத்தி வைக்கிறார்கள். கடகம் இருபதாவதுபாகையில் இரண்டு பாகைக்கு வடக்கும், மகரம் இருபதாவது பாகையில் இரண்டுபாகைக்குத் தெற்கும் பிரித்து வைக்கிறார்கள். குருவினுடைய பூர்வபாதன் குருவினுடைய மார்க்கத்தை ஆதித்திய மார்க்கத்துடன் மிதுனம் இருபதாவதுபாகையிலும், இரண்டாவதுபாதன் தனுசு இருபதாவது பாகையிலும் பொருத்தி வைக்கிறார்கள். கன்னி இருபதாவது பாகையில் ஒரு பாகைக்கு வடக்கும், மீனம் இருபதாவது பாகையில் ஒரு பாகைக்குத் தெற்கும் பிரித்துவைக்கிறார்கள். சுக்கிரனுடைய பூர்வபாதன் சுக்கிர மார்க்கத்தை ஆதித்தமார்க்கத்துடன் இருஷபாந்தத்திலும், இரண்டாவதுபாதன் விருச்சிகாந்தத்திலும் பொருத்தி வைக்கிறார்கள். சிங்காந்தத்தில் இரண்டு பாகைக்கு வடக்கும், கும்பாந்தத்தில் இரண்டு பாகைக்குத் தெற்கும் பிரித்து வைக்கிறார்கள். சனியினுடைய பூர்வபாதன் சனி மார்க்கத்தை ஆதித்திய மார்க்கத்துடன் கடகம் பத்தாவது பாகையிலும், இரண்டாவதுபாதன் மகரம் பத்தாவது பாகையிலும் பொருத்தி வைக்கிறார்கள். துலை பத்தாவது பாகையில் இரண்டு பாகைக்கு

வடக்கும், மேஷம் பத்தாவதுபாகையில் இரண்டுபாகைக்குத் தெற்கும் பிரித்து வைக்கிறார்கள். இவர்களுடைய பாதக் கிரகங்களுக்குக் கதி வெகுகாலம் ஆகிற போது ஒருகலை பேதம் வருவதால் அவர்களுடைய மார்க்கத்திற்கு அதிகபேதம் வரமாட்டாதென்பது விசாரித்து அறியலாம். சந்திரனுடைய பாதக்கிரகங்களாகிய இராகு கேதுக்கள் இருக்கிற இடங்களில் சந்திரமார்க்கத்தை ஆதித்தமார்க்கத்துடன் பொருத்துகிறார்கள். முதற்பாதனாகிய இராகு இருக்கிற நான்காம் இராசியில் நாலரைப்பாகைக்கு வடக்கும், இரண்டாம்பாதனாகிய கேது இருக்கிற நான்காம் இராசியில் நாலரைப்பாகைக்குத் தெற்கும் பிரித்துவைக்கிறார்கள். இந்தப் பாதக்கிரகங்களுக்குக் கதி இருக்கிறபடியாலே சந்திரமார்க்கம் ஸ்திரம் இல்லாமல் எப்போதும் சஞ்சரித்து வருகிறது. இந்தப்படி சூரியமார்க்கத்திலிருந்து தெற்கும் வடக்கும் பிரித்து வைக்கப்பட்டதற்கு விக்ஷேபம் என்றும், சந்திர அங்காரகாதிகள் சஞ்சரித்துவருகிற மார்க்கத்திற்கு விக்ஷேபமண்டலமென்றும், பெயர் சொல்லப்படும். இவ்வாறு சந்திரமார்க்கம் சூரியமார்க்கத்துடனே பொருந்தி யிருக்கிற மாதத்திலும், அதற்கு முன்பின்னிருக்கிற மாதங்களிலுமாக வருஷத்தில் மூன்றுக்குக் குறைவும் எழுக்கு அதிகமும் வாராமல் சந்திரசூரிய கிரகணங்கள் உண்டாம். மற்ற மாதங்களில் மார்க்கத்தினுடைய வித்தாரதினாலே ரவி சந்திரபூச்சாயா பிம்பங்கள் ஒன்றுக்கொன்று ஸ்பரிசஞ் செய்வதற்கு நேரிடாமல் கிரகணங்கள் உண்டாகமாட்டா. இராகு கேதுக்களுக்குத் தினமொன்றுக்கு ஏகதேசம் மூன்று கலையும் பதினொரு விகலையுமாகிய வக்கிரகதி உண்டு. இந்த வக்கிரகதிப்படி கோள சக்கிரத்தில் அப்பிரதக்ஷிணமாகச் சஞ்சரித்து ஏகதேசம் பத்தொன்பது வருஷம் முடியும்போது எவ்விடத்திலிருந்து சஞ்சரிப்பதற்குத் தொடங்கினரோ அவ்விடத்தில் தாமேவந்து சேருவர். இவ்வாறு இராகு கேதுக்களுடைய மார்க்கத்தைப் பொருத்திவைத்துச் சூரிய சந்திரர்களுடைய கிரகணத்தை உண்டு பண்ணவும், மார்க்கத்தை விஸ்தாரமாக்கிக் கிரகணம் இல்லாமலிருக்கும்படியும் செய்துவருவதால், நம்முடைய புராணிகர்கள் இராகுகேதுக்களை, மறைப்பதற்கு ஏதுவாகக்கூறும். திருஷ்டாந்தம் என்னவெனில், ஒரு சிற்பிசெய்த பிரதிமையைக் கண்டோர், சிலர் அதனைச் செய்தான் சிற்பி என்றும், மற்றும் சிலர் அவனது ஆயுதம் எனவும் கூறுவதுபோல நமது புராணிகர்கள் கர்த்தாக்களாகிய இராகு கேதுக்களை ஏதுவாகக் கூறி இருக்கின்றனர். ஆனதால் இது மாறன்றாம். (கிரகணதர்ப்பணம்.)

**கிரகணசூலம்**—சந்திரகிரகணமும் சூரியகிரகணமும் கிரகத்தாத்தமயமாகில் முன்னே ௩ நாட்கள் தோஷமாம். கிரகத்தோதயமாகில் பின்னே ௩-நாட்கள் தோஷமாம். முழுக்கிரகணமாகில் முன் ௭-நாட்களும், பின் ௭-நாட்களும் தோஷமாம். அரைக்கிரகணமாகில் முன்னே ௩-நாட்களும், பின்னே ௩-நாட்களும் தோஷமாம், பக்ஷக்கிரகணமாகில் இடையிலுள்ள நாட்களெல்லாங் கழிக்கப்படும். (விதான.)

**கிரகணபலன்** — பூராடம், ஆயில்யம், திருவாதிரை, மூலம், சதயம், உத்திராடம், இரேவதி இவை வருணமண்டல நாட்களாம். கார்த்திகை, விசாகம், பூசம், பூரட்டாதி, மகம், பூரம், பரணி இவை அக்னி மண்டல நாட்களாம். உரோகணி, அனுஷம், அவிட்டம், கேட்டை, திருவோணம், உத்திரட்டாதி இவை பூமண்டலமான நாட்களாம். அசுவனி, மிருகசீரிஷம், புனர்பூசம், அத்தம், சித்திரை, சோதி, உத்திரம் வாயுமண்டல நாட்களாம். வருணமண்டலநாளில் கிரகணமுற்றால் நலம். பூமண்டலம், மத்திமம், வாயுமண்டலத்தாயின் வாயுபீடை. அக்னிமண்டலமாயின் யுத்தம், துர்பிக்ஷமாம்.

**கிரகணபுண்யகாலம்**—இராகு கேதுக்கள் இருவரும், தேவர்கள் அமுதம் புசித்த காலையில் தாங்களும் தேவவுருக்கொண்டு உடனிருப்பதைச் சூரியசந்திரர்கள் திருமாலுக்குச் சமிக்கையாகக் காட்டினர். இதனையறிந்தவிஷ்ணுமூர்த்தி அவர்களைக் கொலைபுரிந்தனர். அசுர ரிருவரும் அமுதம் புசித்த அளவும் தேகம் பெற்றுத் தங்களைக் காட்டிக்கொடுத்த சூரியசந்திரர்களை மறைத்துவரும் காலம். இக்காலத்தில் பிதுர்க்களையெண்ணித் தருப்பணாதிகாரியங்களியற்றின் நற்கதி அடைவர்.

**கிரகணிரோகம்** — அதிசாரரோகத்தில் திரிதோஷ விகற்பத்தால், சுபாவமாகவும்,

சிதங்கலந்ததாகவும், செரித்ததாகவும் செரியாதாகவும், பலவிதமாகவும், பேதியுண்டாம். இது வாதம், பித்தம், சிலேஷ்மம், திரிதோஷ கிரகணி யெனப் பலவிதமாம். பின்னும், உஷ்ணவாயுகிரகணி, மூலவாயு கிரகணி, குன்மகிரகணி, கருப்பகிரகணி, ஒட்டுக்கிரகணி, சங்கரகிரகணி யெனவும் பல இவை வில்வாதி லேக்யம், மதகஜ கண்டீரவ மாத்திரை முதலியவற்றால் வசமாம். (ஜீவ.)

**கிரசனன்** — தேவாசுர யுத்தத்தில் விஷ்ணுமூர்த்தியால் கொலைசெய்யப்பட்டஅசுரன்.

**கிரசனசுரன்** — யமனுடன் யுத்தம் புரிந்து யமனை வென்றவன். (மச்சபுராணம்.)

**கிரணை** — பஞ்சநதத்தைக் காண்க.

**கிரது** — ஜன்மாந்தரத்திலும் இப்போதும், கிரது சமூகத்தை ஆதரித்தவனாதலால் இப்பெயர் பெற்றவன்.

**கிரதுஸ்தலி** — ஒரு அப்ஜரஸ்திரீ.

**கிரந்தி** — நரம்புகளின் முடிச்சுகளில் உண்டாம் இரணம். அவை வாதகிரந்தி, பித்த கிரந்தி, சிலேஷ்மகிரந்தி, ரத்தகிரந்தி, மாமிசகிரந்தி, மேதோகிரந்தி, அஸ்திகிரந்தி, நரம்பின்கிரந்தி சோணிதாற்புதகிரந்தி, சாத்யாசாத்ய அற்புதகிரந்தியென்பன.

**கிரமன்** — வத்சந்திரன் குமரன்.

**கிரவுஞ்சம்** — கிரவுஞ்சத் தீவிலுள்ள ஒரு மலை, இது குமாரக்கடவுள் வேலால் பிளக்கப்பட்டது. கிரவுஞ்சனைக் காண்க.

**கிரவுஞ்சன்** — சிங்கமுகாசுரன் பட்டணத்திலிருந்த ஒரு அரக்கன். இவன், தென்னாட்டை நோக்கி வரும் அகத்தியமுனிவரை மலையுருக்கொண்டு எதிர்நின்று தன் மலையுருவத்தில் பல வழிகளைக்காட்டிக் காட்டுத்தீ, சூறவளி முதலியவைகளைக் கொண்டு மயக்கினன். இதனை ஞான நோக்காலறிந்த முனிவர் அதிகோபங் கொண்டு தமது கரத்திலிருந்த யோகதண்டத்தால் அந்த மலையைப் பல குகைகளாகக் குத்தி இம் மலையுருவாகவே யிருந்து குமாரக்கடவுள் வேலால் பிளவடையச் சாபமளித்தனர். மலை யுருவடைந்த கிரவுஞ்சன், வீரவாகு தேவரை மயக்கவோடிய தாருகனுக் கிடங்கொடுத்து அவனைத் தொடர்ந்த வீரவாகுதேவருள்ளிட்ட எண்மரைத் தன்மயக்கத்தினுட்படுத்திக் குகையிலிருத்திவிட்டுக் குமாரக் கடவுளுடன் போரிட்டு வேலாயுதத்தாற் பிளவுண்டனன்.

**கிரன்** — பிரமன் தேகத்திலிருந்த இருடி.

**கிராதமூர்த்தி** — அருச்சுனன் முதலிய சிவனடியவர்பொருட்டுச் சிவமூர்த்தி கொண்ட சிவவடிவாம்.

**கிராதம்** — வங்காளத்தைச் சேர்ந்த தேசம். Hill Tippera, Comilla in Bengal.

**கிராதன்** — வேடன் வடாரண்ய மென்னுந் திரு ஆலங்காட்டு முத்திதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து முத்தியடைந்தவன்.

**கிராமணி** — 1. ஒரு அரக்கன், சுகேசனுக்கு மாமன்.

2. தேவவதியின் தந்தையாகிய காந்தருவன்.

3. சாணார்க்கு ஒரு பெயர்.

**கிராமதேவதை** — கிராமத்தைத் தீயபிணி முதலியவராது காக்கும் தேவதை. இரேணுகை.

**கிராமத்தலைவன்** — கள்வராலும், தீயொழுக்கமுள்ள அதிகாரிகளாலும் துன்பம் விளையாதபடிகுடிகளைத் தந்தைதாய்போல் காப்பவன். (சுக் - நீ.)

**கிராமம் முதலியவற்றின் உருவம்** — (கஉ) வகைப்படும். அவை தண்டிகம், ஸ்வஸ்திகம், ப்ரஸ்தரம், ப்ரகீர்ணகம், சம்பத்காம், பராகம், பத்மகம், ஸ்ரீப்ரதிஷ்டிதம், ஸ்ரீவத்ஸம், வைதிகம், நந்தியாவர்த்தம், கும்பகம் என்பன.

**கிராமலக்ஷணம்** — பிராமணர்களால் அநுபவிக்கத்தக்க இடம் **அக்ரஹாரம்**. அந்தணராலு மற்றவராலும் அநுபவிக்கத்தக்கது **கிராமம்**. கிராமாதிபதி எவ்விடத்தில் தன் எவலாளிகளுடன் இருக்கின்றரோ அது **குடிகம்** அல்லது **ஏகபோகம்**. கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் ஜனங்களாலும், பலஜாதியாராலும், தேவாலயங்களாலும் சூழப்பட்ட இடம் **நகரம்**. புரத்தில் வசிக்கிற வேதியர்க்கும், அந்தப் புரவாசிகளான பிராமணர்க் குளவாசமானதும், பட்டணத்திற்கு ஆவரணமானதும், வைசியர்களால் சூழப்பட்டதும் **கர்வடம்** எனப்படும். கொடுக்கல் வாங்கலுடன் கூடியதும், கடற்கரையடுத்ததும், தேசாந்தரத்தவரால் நிறைந்ததும், அநேக ஜாதிகளுடன் கூடியதுமானது **பட்டினம்**. செல்வமுள்ள சிற்றரசர்களுக்கு யாது இடமோ அது **சிபிரம்**. யானை குதிரைகளுடன் கூடிய இடம் **சேநாஸ்தானம்**. இராஜக்ரஹம், பல ஜாதியர், ரகஸ்யப்ரதேச முதலியவற்றுடன் கூடியது சேநா

முகம். அதிதிகள், துறவிகளுக்கிருப்பிட மாய் அன்னம், தீர்த்தங்களுடன் கூடியது மடம். வெகு சேனைகளுடன்கூடி யவ்வா றிருப்பது வித்யாஸ்தானம். இராஜக்ர ஹத்தோடு கூடியது இராஜதானி. கிராம முதலியவற்றிற்கு அருகானது குப்சர் அல்லது சேரிகை. கிராம முதலியவற் றிற்குச் சேணியர் இருப்பிடம் நகரி. (ஸ்ரீ-காமிகம்.)

**கிரிகை** — உபரிசரவசுவின் தேவி.

**கிரீசனன்** — ஒரு அசுரன் தன் நண்பராகிய சம்பன் நிமிமுதலியோருடன் திருமாலு டன் போரிட வந்து பல பாணங்களை யெய்து கடைசியில் அவர் சக்ராயுதத் தால் மாண்டவன். (மச்ச-புரா.)

**கிரிசா** — கிரிகைபெற்ற புதல்வி, சத்யவதி.

**கிரிசாகவன்** — (சூ.) பெரிகிணசுவன் குமரன்.

**கிரிசாசுவன்** — 1. தக்ஷன் மருகன், பாரி அர்ச்சிசு.

2. கிரிசாசுவனுக்கு அர்ச்சிசு இடம் பிறந்த குமரன்.

**கிரிசுவா** — தக்ஷன் மருகன்.

**கிரிதரலால்**—இவர் பிருந்தாவனத்திலிருந்த பாகவதர். இவர் அரிநாமசங் கீர்த்தனஞ் செய்து வருகையில் சில பாகவதர் ஒரு நாள் இவரைக் கண்ணன்சந்நிதியில் பஜனை செய்யக் கூற அவ்வாறு பஜனை செய்தற் குத் தக்க உடையிலாமையால் கண்ணனை யுடைவேண்ட ஆகாயத்தி லிருந்து நல்லு டைகள் விழுந்தன இதைக்கண்ட பாக வதர்கள் அன்பரைப் புகழ்ந்தனர். பின்பு தாசர் கண்ணனது சரித்திரம் நடத்தினர். ஓர் நாள் த்வாதசநாமம் தரித்த பைராகி யின் பாததீர்த்தங் கொள்ளக் கண்டோர் இவரைநோக்கி நீர் பிணத்தைக் கழுவிய நீருண்டீர் ஆதலால் வேதமோத அருகரல் லீர் என்றிகழக் கேட்டு அப் பிணத்தைப் பிழைப்பிக்கக் கண்ணனை வேண்டிப் பிழைப்பித்தனர். கண்டோரிவரிடத்தன்பு பூண்டு பணிந்தனர்.

**கிரிதேயு**—(சந்.) ரௌத்திராசுவன் குமரன்.

**கிரிபத்திரை** — அனுமித்திரன் தேவி, சாக்ஷுஷ சமனுவின் தாய். சாக்ஷுஷ மனுவைக் காண்க.

**கிரியா** — நவசத்திகளி லொருத்தி.

**கிரியாசக்தி** — இது ஞானசத்தியில் ஆயிரத் தொருகூறாய்ப் பஞ்சகிருத்யத்தை நடத் துஞ் சிவசக்தி. (சதா.)

**கிரியை** — 1. விதாதாவென்னும் ஆதித்தன்.

2. கோலாகலன் என்னும் மலைக்கும், சுத்தமதியெனும் நதிக்கும் பிறந்த பெண்.

3. தருமன் எனும் மனுவின் பாரி, தக்கன் பெண்.

4. கர்த்தமர் குமரி, கிருதமகருஷியின் தேவி. குமரர், வாலகில்லியர்.

5. தக்ஷனுக்குப் பிரசூதியிடம் உதித்த குமரி, இமயன் தேவி

6. உத்யோகன் தேவி, இவளிலலாத இடம் செயலற்றிருக்கும்.

**கிரிவிரசம்** — மகததேசத்தின் இராஜதானி. இது வைஹாரம், வராகம், ருஷபம், சைத் யகம், எனும் (ஙி) மலைகளால் சூழ்ந்தது. பரதன் தாயைப்பெற்ற பாட்டனரசு. பின்பு சராசந்தன் இதை ஆண்டனன். இப் பெயரால் மற்றொரு பட்டணமுண்டு அது கேகயதேசத்து ராஜதானி. முதலிற் கூறி யது குசிகன் நான்காம் புத்திரன் கட்டி னது. இவ் விடத்தில் கௌதமருஷி யௌசீநரியெனும் சூத்ரப் பெண்ணிடம் காக்ஷீவன் எனும் குமரனைப் பெற்றார். (பார-சபா)

Rajgir in Behar, the ancient Capital of Magadha.

**கிரிஷேயு**—(சந்.) ரௌத்திராசுவன் குமரன்.

**கிரீடி** — அருச்சுநன் பெயர்கள் பத்துள் ஒன்று.

**கிருகதேவதை**—1. இந்துதேசத்து இந்துக் கள் வீட்டில் கொண்டாடப்பட்ட தெய் வம். சிலர் சிவமூர்த்தி முதலிய திருவுருப் பேதங்களையும், வைணவர் விஷ்ணுபேதங் களையும், மற்றவர்களிற் சிலர் கும்பம் வேம்பு, புடைவை முதலிய வைத்துக் கொண்டும் பூசிப்பர்.

2. கிராமத்தில் நோயணுகாது காக்குங் மாரி.

3. குடியிருக்கும் மனையில் தேவதை இருந்து குடும்பத்தைக் காக்க வேண்டு மெனக் குடும்பிகள் பூசிக்கும் தெய்வம். (உல-வ.)

**கிருகத்தரின் கிருத்யா கிருத்யங்கள்**—இவை இல்லறத்துணைவியுடன் கூடிய கிரகத்தன் ஒழுகவேண்டிய ஒழுக்கங்களாம். பிழைப் பிற்காக விகடமும் குற்சித வார்த்தையும் பேசக்கூடாது. தனக்குக் கிடைத்த மட் டில் திருப்தி அடையவேண்டியது. அவ னவன் ஜாதிக்குக் கூறிய நித்யகருமங்களை மறவாமாற் செய்தல் வேண்டும். பாட்

டுப் பாடுதல் கூத்தாடுதல்முதலிய விருத்த கருமங்களைச் செய்யக் கூடாது. சப்தாதி விஷயங்களிலும் அதிகமாய் மனதைச் செலுத்தக்கூடாது. தன் மனைவியாயினும் சாஸ்திர விரோதமாய்க் காமசேஷ்டைகளைச் செய்தல் கூடாது. வயது, யாகாதி காரியம், பொருள், குலம் இவற்றிற்குத் தக வாக்கு வேஷம் புத்திகளை வகிக்க வேண்டியது. சாஸ்திராப்பியாசஞ் செய்ய வேண்டியது. பஞ்சமகா எக்யங்களை நடத்தவேண்டியது. காலைமாலைகளில் அக்கினிஹோத்திரஞ் செய்ய வேண்டியது. அமாவாசையில் தருசேஷ்டியும், பௌர்ணிமையில் பௌர்ணமாசேஷ்டியும்செய்ய வேண்டியது. கார்த்திகைமாதத்தில்ஆக்கிரயணேஷ்டியும், இருதுவின் முடிவில் சாதூர்மாசேஷ்டியும், உத்தராயண தக்ஷிணாயனங்களில் பசுவதேஷ்டியும், வசந்தகாலத்தில் அக்நிஷ்டோமமும் செய்யவேண்டியது. புதிதாய்விளைந்தநெல்லை ஆக்ரயணேஷ்டி செய்யாமல் தான் புசிக்கக் கூடாது. தன் வீட்டிற்குவந்த அதிதியை ஆசனம் போசனம் சயனம் தண்ணீர் கிழங்கு பழம் முதலியவற்றால் பூசிக்கவேண்டியது. அதிதியைப் பூசிக்குங்காலத்தில் மதவிரோதிகள் குயுக்திகூறுவோர், மோசக் கருத்துள்ளவர்கள் வரின் அவர்களுடன் வார்த்தையாடவே கூடாது. வேதம் புராணம் ஸ்மிருதி அறிந்தவர்களைப் பூசிக்கவேண்டியது. பிரமசாரி சந்நியாசிகளைப் பூசித்துத் தனக்கு உபயோகமான விருக்ஷாதிகளை நீரால் திருப்தி செய்விக்கவேண்டியது. கிரகஸ்தன் அன்ன வஸ்திரங்களுக்குக் கஷ்டப்படின் அரசனிடத்தாயினும், தன்னிடம் யஞ்ஞம் செய்துகொண்டவன் இடத்திலாயினும், தன் மாணாக்கனிடத்திலாயினும், பொருள் தேடிக்கொள்ளலாம். ஆஸ்தி இருக்கையில் கிழிந்தும் அழுக்குள்ளதுமான உடைதரிக்கலாகாது. மயிர், நகம், மீசை, தாடி இவைகளை விதிப்படி க்ஷௌரஞ்செய்து உள்ளும் புறம்பும் சுத்தனாய் அழுக்கில்லாத உடைதரித்துத் தேக ஆரோக்கியத்தின் பொருட்டு ஔஷதசேவனமும் செய்ய வேண்டியது. மூங்கிற்றண்டம், தீர்த்த கமண்டலம், யக்யோபவீதம், தருப்பை, பவித்ரம், சுவர்னகுண்டலம் இவற்றை யெப்போதும் தரிக்க வேண்டியது. சூரியனை உதிக்கும் போழ்தும், உச்சியில் இருக்கும் போழ்தும், அஸ்தமிக்கும் போழ்தும், கிரகணகாலத்திலும், பார்க்கக் கூடாது. கன்று கட்டிய கயிற்றைத் தாண்டக் கூடாது. மழை பெய்யும்போழ்து ஓடக்கூடாது. ஜலத்தில் தன்னுருவைப் பார்க்கக் கூடாது. செல்லுமார்க்கத்தில், மண்மேடு, பசு, தெய்வம், பிராமணன், நெய்க்குடம், தேன்குடம், நாற்சந்தி, அரசுமுதலிய புண்ணிய விருக்ஷங்கள் எதிர்ப்படின் வலமாகச் செல்லக்கடவன். மாதவிடாயான மனைவியுடன் பேசவும் கூடாது. அவளுடன் படுக்கவுங் கூடாது. அந்த ருதுவானவளை மூன்றுநாளைக்குப் பிறகு புணரவேண்டும். தன்மனைவியுடன் ஒரு பாத்திரத்தில் புசிக்கக் கூடாது. அவள் சாப்பிடும்போதும், கொட்டாவி விடும்போதும், இருமும்போதும், தன்னிஷ்டப்படி உட்கார்ந்திருக்கும் பொழுதும், கண்களுக்கு மைதீற்றிக்கொள்ளும்போதும், எண்ணெய் தேய்த்துக் கொள்ளும்போதும், மேல் வஸ்திரம் இல்லாதிருக்கும்போதும், பிரசவிக்கும்போதும், கணவன் பார்க்கக்கூடாது. கிரகஸ்தன் ஒரு வஸ்திரத்துடன் அன்னத்தைப் புசிக்கக் கூடாது. வஸ்திரம் இல்லாமல் ஸ்நானஞ் செய்யக்கூடாது. மல மூத்திராதிகளைச் சாம்பலிலும், மாட்டுத் தொழுவத்திலும், மார்க்கத்திலும், உழுத நிலம், ஜலம், யாகசாலை, மலை, பாழ்ங்கோயில், புற்று, ஜந்துக்கள் வசிக்கும் நிலவெடிப்புக்கள், ஆற்றங்கரை, மலையுச்சி, வாயு, அக்கினி, பிராமணர், சூரியன், பசு இவைகளைப் பார்த்துக் கொண்டும், நடந்துகொண்டும், விடக்கூடாது. தான் மலமூத்திரம் நிவர்த்திக்கும் இடத்தை உதவாத புல், செத்தை முதலியவற்றால் மறைத்து அங்கவஸ்திரத்தைத் தலையில் சுற்றிக்கொண்டு பகலிலும், இருசந்தியிலும், வடக்கு முகமாகவும், இரவில் தென்முகமாகவும், இருந்து இருமலம் கழிக்கவேண்டியது. நெருப்பை வாயினால் ஊதக்கூடாது. புணர்ச்சிக்காலம் அன்றி மற்றைக் காலத்தில் மாதர்களை நிர்வாணமாகப் பார்க்கக்கூடாது. அசுத்த வஸ்துவை நெருப்பில் போடக்கூடாது. கால்களை நெருப்பில் காய்ச்சக்கூடாது. தான் உயரத்தில் படுத்துக்கொண்டு கீழே நெருப்பை வைத்துக்கொள்ளக்கூடாது. அக்கினியைக் கால்புறம்வைக்கக் கூடாது. அதைத் தாண்டவும் கூடாது. எவருக்கும் பிரா

ணுபாயம் வரும் காரியத்தைச் செய்தல் கூடாது. சந்தியாகாலத்தில் சாப்பிடவும், வழிநடக்கவும், தூங்கவும் கூடாது. பூமியைக் குச்சிமுதலியவற்றால் காரணமின்றிக் கிறவுங்கூடாது. தலையில் சூட்டிய மலரைத் தானேவாங்கி எறியக்கூடாது. ஜலத்தில், மூத்திரம், மலம், கோழை, எச்சில்பட்ட வஸ்து, இரத்தம், விஷம் இவைகளைப் போடக்கூடாது. குடியிலா வீட்டில் தான் தனித்துத் தங்கக் கூடாது. வேதம், பொருள் முதலியவற்றினுல் உயர்ந்தவன் தூங்கும்பொழுது அவனை எழுப்பக்கூடாது. தன்னை அழையாத காரியத்திற்குப் போகக்கூடாது. பசு, நீருண்ணுகையிலும், கன்றுக்குப் பாலூட்டும்போதும், தடுக்கலாகாது. மற்றொருவருக்கும் காண்பிக்கக்கூடாது. ஆகாயத்தில் இந்திர தனுவைக் கண்டால் அதை ஒருவருக்கும் காட்டக்கூடாது. தருமம் அறிந்தவர்கள் இல்லாதகிராமம், வியாதிக்கு இடமான கிராமம் இவைகளில் வசிக்கக் கூடாது. தான் தனியாய் வழிநடக்கக்கூடாது. மலையில் அதிகநேரம் வசிக்கக்கூடாது. பிண்ணுக்குமுதலிய சாரமில்லா வஸ்துக்களைச் சாப்பிடக் கூடாது. இராப் பகல்களில் அன்னத்தை அதிகமாகப் புசிக்கக்கூடாது. வயிற்றின் அரைப் பகுதியை அன்னத்தாலும் காற்பங்கை ஜலத்தினுலும் நிரப்பிக் காற்பங்கை வாயு சஞ்சரிக்க விடவேண்டும். உதயாஸ்தமன காலத்தில் புசிக்கக் கூடாது. மத்யான்னம் புசிப்பு அதிகமானுல் இரவில் புசிக்கக் கூடாது. தண்ணீரை இரண்டு கையால் அள்ளிக் குடிக்கக்கூடாது. பக்ஷணங்களை மடியில் வைத்துக்கொண்டு சாப்பிடலாகாது. சாஸ்திர விரோதமாய்ப் பாடவும் மத்தளம், தாளம், கொட்டவுங் கூடாது. கையினுல் புஜத்தைத் தட்டவும், பல்லை மூடிக்கொண்டு இருமவும், கொழுப்பினுல், கழுதைபோல் கத்தவுங்கூடாது. வெண்கலப் பாத்திரத்தால் கால் கழுவல் ஆகாது. பின்னமான மண்பாத்திரத்திலும், மனதிற்கு ருசிக்காத பாத்திரத்திலும் புசிக்கக் கூடாது. அன்னியன் அனுபவித்தபாதுகை, பாதரக்ஷை, வஸ்திரம், எக்யோபவீதம், புஷ்பம், மாலை, கமண்டலம் இவைகளைத் தான் தரிக்கலாகாது. பழக்கப்படாதவைகளாயும், பசி, பிணி இவைகளால் பீடிக்கப்பட்டதாயும், பின்னமான கொம்பு, கண், குளம்பு, வால் இவைகளையுடைய எருதுகள் பூண்டவண்டியில் ஏறக்கூடாது. சாமத்துக்கு உட்பட்ட இளவெயில், பிணப்புகை, பின்னமான ஆசனம் இவைகளை நீக்கவேண்டியது. நகம் மயிர் இவைகளைத் தாமாகச் சேதிக்கக்கூடாது. நகத்தைப் பல்லினுற் கடித்து இழுக்கக் கூடாது. காரணமின்றி மண்கட்டியை உடைக்கவும், நகத்தால் ரணத்தைக் கிள்ளவும் கூடாது. எக்காரியத்திலும் பிடிவாதத்துடன் கக்ஷி சொல்லக்கூடாது. குடுமிக்கு வெளியில் பூவைச் சுற்றிக் கொள்ளக்கூடாது. எருதின்மேலேறிக்கொண்டு போகக்கூடாது. வீடு, ஊர் இவைகள் சாத்தியிருக்கையில் வேறு வழியாய்ப் போகக்கூடாது. இரவில் மரத்தினடியில் போகக் கூடாது. சொக்கட்டான் முதலிய விளையாடக் கூடாது. தன் பாதக்குறடு பாதரக்ஷை முதலியவற்றைத் தன் கையில் எடுத்துப் போகக்கூடாது. படுக்கையிலிருந்தும், இடக்கையில் அன்னத்தை வைத்துக்கொண்டும் ஆசனத்தின் மீது இலைபோட்டுக் கொண்டும் புசிக்கலாகாது. எள்ளு சம்பந்தப்பட்ட எல்லாப் பதார்த்தங்களையும் இரவில் நீக்கவேண்டியது. கௌபீனம் இல்லாமல் படுக்கலாகாது. சாப்பிட்ட கையை அலம்பாமல் வெளியில் போகக்கூடாது. கால்கழுவிய ஈரம் உலருமுன் அன்னம் புசிக்கவேண்டும். கால்ஈரம் உலர்ந்தபின் படுக்கை சேரவேண்டியது. கண்ணுக்குத் தெரியாத புதரில் பிரவேசிக்கக் கூடாது. மல மூத்ரங்களைப் பார்க்கக் கூடாது. ஆற்றைக் கையால்நீந்தித் தாண்டக்கூடாது. ஆயுளை விரும்பினேன் மயிர், சாம்பல், எலும்பு, ஓட்டாஞ்சல்லி, மண்டையோடு, பஞ்சு, உமி இவைகளில் அறிந்து நிற்கவும் கூடாது. பதிதர், சண்டாளர், புழுக்கையர், மூர்க்கர் பொருளால் செருக்கடைந்தோர், வண்ணன் முதலிய தாழ்ந்த ஜாதியருடன் ஒரு மரநிழலிற்கூட வசித்தல் கூடாது. இரண்டு கைகளையும் சேர்த்துத் தலையைச் சொரியலாகாது. சாப்பிட்டுக் கைகால் சுத்திசெய்யாமல் இடது கையால் தலையைத் தொடக் கூடாது. நோயில்லாது இருக்கும்போது தலை நீக்கி ஸ்நானஞ் செய்யக் கூடாது. கோபத்தினுல் ஒருவன் தலைமயிரைப் பிடித்து இழுக்கவும், தலையில் அடிக்கவுங் கூடாது. ஒரே தினத்தில் ஸ்நானஞ்செய்து பின் அப்யங்க

னம் செய்யக்கூடாது. க்ஷத்ரியனல்லாத அரசன், கசாய்க்காரன், திலகாதகன், கள்ளுக் கடைக்காரன், வேசைத் தொழில் செய்பவள் இவர்களிடம் தானம் வாங்கக் கூடாது. இரவில் நான்காம் சாமத்தில் விழித்துக்கொண்டு தருமார்த்தத்தைப் பெறுமார்க்கத்தை ஆலோசிக்க வேண்டியது. பின் நித்யகர்மாதிகளைச் செய்ய வேண்டியது. தன் மனைவி ருதுஸ்நானம் செய்திருந்தாலும் அமாவாசை, சதுர்த்தசி, அஷ்டமி, பௌர்ணமி இந்த நாட்களில் புணரக்கூடாது. புசித்தபின் காரணமின்றி வேடிக்கையால் ஸ்நானஞ் செய்தல் கூடாது. நோயாளி தலைமுழுகக் கூடாது. பிறப்பு இறப்புக் கிரகண காலமன்றிப் பாதிராத்திரியில் ஸ்நானஞ்செய்யலாகாது. ஜலத்தின் குணந்தெரியாத குளம் முதலியவற்றில் ஸ்நானஞ்செய்யக் கூடாது. தெய்வபிம்பங்கள், மாதா, பிதா, அரசன், விரதானுஷ்டான முள்ளவன், ஆசாரியன், யாகத்தில் தீக்ஷை பெற்றவன் இவர்களுடைய நிழலை மிதிக்கக்கூடாது. நடுப்பகலிலும், அர்த்தராத்திரியிலும், இருசந்தியிலும், நாற்சந்தியிலும் நிற்கக்கூடாது. அறைப்புஸ்நானம் செய்த ஜலம், மூத்திரம், மலம், உதிரம், கோழை, உமிழ்ந்த தாம்பூலம், வாந்தி யெடுக்கப்பட்டவை இவைகளில் நிற்கக்கூடாது. சத்துரு, அவனுக்கு நண்பன், அதர்மம் உள்ளவன், திருடன், பிறன் மனைவி இவர்களுடன் சிநேகிக்கக் கூடாது. பிறன் மனைவியைப் புணரின் ஆயுள்குன்றும். சாமளவும் பொருள்தேட முயலவேண்டும். சத்தியமாகப் பார்த்ததைச் சொல்ல வேண்டியது. அமங்கலமாயிருப்பினும் முதலில் மங்கலமென்றே அமங்கலத்தைத் தெரிவிக்க வேண்டியது. தனித்தும் ஜாமத்திலும் இன்னான் என்று அறியாதவனுடனும் வழிநடக்கக் கூடாது. குரூபிகள், கல்வியறிவிலார், கிழவர், ஈனசாதியார், தரித்திரர்முதலியவர்களை அவர்கள் தோஷங்களைச் சொல்லிப் பரிகசிக்கக் கூடாது. புசித்தகையைச் சுத்தி செய்யாமல் பசு, பிராமணன், அக்கினி இவர்களை இடதுகையால் தீண்டக்கூடாது. அசுத்தனாகச் சூரிய சந்திர நக்ஷத்திரர்களைப்பார்க்கக் கூடாது. தனக்குத் தினவு முதலியன இல்லாதபோது இந்திரியங்களையும் மயிரையும், இரகஸ்ய ஸ்தானங்களையும் தொடக்கூடாது. தனது அக்னிக் கிரகத்திற்குத் தூரமாகவே மலமூத்ரம், பாதப்பிரக்ஷாளணம், எச்சில் போடுதல்செய்ய வேண்டும். மலநிவர்த்தி, பல்விளக்குதல், ஸ்நானஞ் செய்தல், எண்ணெயிட்டுக் கொள்ளுதல், தேவபூசை முதலிய வற்றைப் பகல் பதினைந்து நாழிகைக்கு முன்பே செய்ய வேண்டும். அமாவாசை பௌர்ணமி முதலிய புண்ணிய தினங்களில் தேவதா தரிசனஞ் செய்தல்வேண்டும். மாதா பிதா குரு பெரியோர் தம் வீட்டுக்கு வரின் எதிர்கொண்டு அழைத்து ஆசனத்திருத்தித் தாம் கூப்பியகரத்துடன் நின்று உபசரித்துப் போகையில் பின்சென்று உபசரிக்க வேண்டியது. தேவதூஷணம் தீக்ஷணம் முதலிய விடவேண்டியது. ஒருவனை அடிக்கிறேன் என்று தடி முதலிய தூக்கவும் அதனால் அடிக்கவுங் கூடாது. புத்திரன் மனைவி முதலியோர் தீமை செய்யின் அவர்களைப் பிரம்பு முதலியவற்றால் தண்டிக்க வேண்டும். (ஸ்மிருதி.)

**கிருகத்தில் வைக்கத்தகாத விருக்ஷங்கள்** — அகத்தி, அலரி, நந்தியாவட்டம், முருக்கு, எருக்கு, பருத்தி கருங்காலி, ஆல், புளி, கல்லால். "பருத்தியகத்திபனை யெட்டி நாவல், எருக்கு முருக்கிலவை யெட்டும்— பெருக்கமுடன், இல்லருகி னின்றக்கா லிந்திரனே யானாலும், செல்லப் போய் நிற்பான் திரு."

**கிருகபதி** — ஒரு அக்னி, இவன் தேவாவிஸ்ஸை சுமந்துகொண்டு தேவர்க்குக் கொடுப்பவன். இவன் தேவர்க்கு ஏவல்செய்யப் பயந்து கடலில் ஒளிந்தனன். அக்கடலின் மீன்கள் இவனைத் தேடிய தேவர்க்கு இவனது இருப்பைக் கூறின. அதனால் இந்த அக்னி கோபித்து அந்த மீன்களைச் சனங்களுக் காகாரமாகச் சபித்தனன்.

**கிருகஸ்தன்** — பிரமசரிய முடித்த பிரமசாரி ஆசாரியர் கட்டளைபெற்றுக் கிருகமடைந்து தந்தையின் அநுமதிபெற்று வருணத்திற்குத் தக்க கன்னிகையை மணக்க வேண்டியது. அக்கன்னிகை, தன் தாயின் ஏழு தலைமுறைக் குட்பட்டவளாயும், தன் தகப்பன் கோத்திரத்திற் பிறவாதவளாயும் இருத்தல் வேண்டும், மணமகன், புருஷப்பிரசை இல்லாமல் பெண்களையே பெறும் குலம், தேகத்தில் நீண்ட மயிருள்ளவன் குலம், வேதமோதாதவன் குலம், மூலரோகம், க்ஷயரோகம், பெருவியாதி,

வெண்குஷ்டம், குஷ்டம், அக்னிபுஷ்டி இன்மையுள்ள குலங்களை நீக்கவேண்டி யது. செம்பட்ட மயிருள்ளவள், அதிக உயரம் உள்ளவள், தீராப் பிணியுள்ளவள், மயிரில்லாதவள், உடம்பெல்லாம் மயிருள் ளவள், குரூரமாகப் பேசுகிறவள், செங் கண்ணி, நக்ஷத்திரம், நதி, ஈனசாதி, மலை, பக்ஷி, பாம்பு, வேலைக்காரி, பயங்கர மான பெயருள்ளவர்களை மணத்தலாகாது. அழகுள்ளவளாயும், நல்ல பேருள்ளவளா யும், அன்னம், யானை யிவற்றை யொத்த நடை, மெல்லிய சரீரம், மயிர், பல், சிறு குரல் உள்ளவர்களை மணக்கவேண்டும். மணந்து பிரமயஞ்யம் முதலிய ஐந்து யஞ் யங்களை (யந்திரம், முறம், அம்மி, துடைப் பம், உரல், உலக்கை, தண்ணீர்க்குடம் முதலியவற்றை யுபயோகித்துக் கொள்வ தால் உண்டான பாவங்களை நீக்குயக்ஞம்) செய்து தென்புலத்தார், தெய்வம், விரு ந்து, ஒக்கல், தாய், தந்தை, தான் என்ப வர்களைக் காத்துத், தன்னை நீங்கிய மற்ற மூன்று ஆச்ரமத்தாரையும் ஆதரித்து, மிகுந்த அன்ன முதலிய பக்ஷணங்களைத் தான் தன் மனைவி மக்களுடன் உண்டு செய்தக்கசெய்துசுகித்திருப்பவனும் (மநு)

**கிருசன்**—ஒரு இருடி. சிருங்கி, தன் தந்தை யின் கழுத்தில் செத்த பாம்பைச் சுற்றிய வன் யாரென்று தேடியபோது இக்குற் றஞ் செய்தவன் பரீக்ஷித்தென்று தெரி வித்தவன்.

**கிருச்சடதன்** — 1. சுகோத்ரன் குமரன். (சுநகன்).

2. முகுந்தையைக் காண்க.

**கிருச்சிரம்**—இத்தனை காலம்வரையி லின்ன வுணவை யிவ்வளவு இந்த முறையாலே கொண்டு அவ்வளவிலே பிராணனைத் தரிக்கச்செய்து பசியைப் பொறுத்தல். இதில் சாந்தாபனம், சாந்திவியனம், பிர ஜாபத்திய பாரகம், தப்தம் முதலிய விர தங்கள் சேர்ந்தவை.

**கிருச்சிராகரம்** — கலிங்கநாட்டிலுள்ள ஒரு தீர்த்தம்.

**கிருதகர்மா** — தனகன் குமரன்.

**கிருதகன்** — வசுதேவருக்குப் பத்திரையிட முதித்த குமரன்.

**கிருதகிருத்யன்** — விரக்தனுயிருந்த திரிகர்த் தன் குமரன்.

**கிருதகோடி** — அளவைநூல் செய்த முனி வன். (மணிமேகலை)

**கிருதகோசகம்** — விதர்ப்ப தேசத்திலுள்ள ஒரு பட்டணம்.

In Berar, once the Capital of Vidarbha.

**கிருதசமகன்** — ஒரு இருடி. இருக்வேதத் தின் இரண்டாவது காண்டத்தின் கீதங் களுக் கதிகாரி.

**கிருதசன்மதன்** — சுநகன் தந்தை, சுகோத் ரன் புத்ரன், க்ஷாத்ரவிருத்தன் பேரன்.

**கிருததன்வா**—கிருஷ்ணனால் வெல்லப்பட்ட அரசன்.

**கிருதத்துதி**—சித்திரகேதுவின் தேவி, அங்க நாட்டரசன் பெண்.

**கிருதத்துவசன்** — 1. (சு.) தர்மத்துவசனுக் குக் குமரன்.

2. கேசித்துவசனுக்குத் தந்தை.

**கிருதபவன்** — இன்பங் காரணமாக, வேண் டிய பொருள் தன்னிடம் இலாது அகத்தி யர்க்குத் தெரிவித்துக் குறை வேண்டிய அரசன்.

**கிருதமாதனம்**—ஒரு வித்யாதர நகரம்.

**கிருதமாலா** — 1. ஒரு நதி, இதில் மச்சாவ தாரமூர்த்தி யுற்பவித்தனர்.

2. மலயமலையிலுள்ள ஒரு நதி.

**கிருதயுகத் தெய்வம்** — கையிற் செபமாலை கொண்டு, ஞானமயமான உருவத்துடன் பக்தி வைராக்யமென்னும் கவசம்பூண்டு ஈச்வரத் தியானத்துடன் இருக்கும்.

**கிருதயுகம்** — சதுர்யுகத்தொன்று. இதற்கு வருஷம் பதினேழுலக்ஷத்து இருபத் தெண்ணாயிரம். யுகத்தைக் காண்க. இது முதல் யுகம்.

**கிருதயாதன்** — மகாதிருதி புத்ரன்.

**கிருதர்** — பிரமன் குமரர், தேவி கிரியை.

**கிருதவன்மன்** — 1. அச்வபதி அம்சம், பாரத முதனாள் யுத்தத்தில் கேகயனுடன் போர் புரிந்தவன். சாத்தகியுடனும் போர்செய் திறந்தவன்.

2. இருதயன் குமரன், இவன், சியமந் தகமணியின் பொருட்டுச் சததன்வனிடம் சத்ராசித்தைக் கொலைபுரியத் தூண்டின வன்.

3. தேவமீடனுக்குத் தம்பி, இவன் பாசறை யுத்தத்தில் இளம்பஞ்ச பாண்ட வர்களைக் கொன்ற அச்வத்தாமனுக்கு உதவிபுரிந்தவன்.

**கிருதவீரியன்** — தனகன் குமரன், தேவி சுகந்தை. இவன், இதற்கு முன்பிறப்பில் சாம்பன் எனும் அரசனாய் வறுமையால்

மாபாதகஞ்செய்து மறுபிறப்பில் இப்பெயர்கொண்ட அரசனைப் புத்திரப்பேறிலாது தவத்தால் கைகாலில்லாமல் கார்த்தவீரியனைப் பெற்றனன். இவன் அநேக யாகஞ் செய்தவன். இவன் புத்திரர் பிருகு முனிவர் குமாரர்களைக் கொன்றனர்.

**கிருதவுஜஸ்** — கிருதவீரியன் தம்பி.

**கிருதவேந்தன்** — பாரதவீரருள் ஒருவன்.

**கிருதன்**—1. இரண்யநாபனுக்கு மாணாக்கன்.

2. தருமன் குமரன், இவன் குமரன் துர்மதன்.

3. விதர்ப்பன் குமரன், இவனது குமரன் குந்தி.

4. வசுதேவருக்கு ரோகணியிடம் பிறந்த குமரன்.

5. கம்பீரன் குமரன்.

6. சயன் குமரன், இவன் குமரன் அரியஸ்வன்.

7. பதினைன்காம்நாள் பாரதப்போரில் சாத்தகியிடம் போர் புரிந்தவன்.

**கிருதக்ஷணன்** — விதேகராசனுக்கு ஒரு பெயர்.

**கிருதாக்னி** — தனகன் குமரன், கிருதவீரியன் தம்பி.

**கிருதாசி** — 1. குசநாபன் தேவி.

2. (சங்.) ரௌத்திராசுவன் பாரி, கிருதேயு முதலிய (௧0) பிள்ளைகளைப் பெற்றவள். இவள் ஒரு அப்சரசு.

3. ஒரு தெய்வ கணிகை, இவள் வாசு இருடியின் தவச்சாலைக்கு இந்திரனால் ஏவப்பட்டுச் சென்று அவரை மயக்க எண்ணுகையில் மகருஷி சினந்து நீசவுருக்கொளச் சபிக்கப்பட்டவள்.

**கிருதாச்வன்** — பர்ஹிணச்வன் முதற்புத்திரன், ரூபாச்வன், கிருசாச்வன் என்றும் இவனுக்குப் பெயர் உண்டு. குமரன் யுவனாச்வன.

**கிருதாந்தன்**—ஒரு அசுரன். இவன், காளன் என்பவனுடன் கூடி ஆளியுருக்கொண்டு பாலகணபதிக்கு முன்வர இவர்களைத் துதிக்கையைப் பிடித்து இழுத்து விநாயகர் கொன்றனர்.

**கிருதி** — 1. பிரமன் உடலில் உதித்த ஒரு இருடி.

2. (கூ.) திருதியின் குமரன், இவன் சிதேந்திரியன்.

3. சந்நதிமான் குமரன், இரண்யநாபனிடத்தில் யோகங்கற்றவன். இவன் குமரன் உக்ராயுதன்.

4. சுகோத்ரன் குமரன், இவன் குமரன் உபரிசரவசு.

5. புரு குமரன், இவன்குமரன் உசீகன்.

6. சவநன் குமரன்.

7. விபு குமரன்.

8. பகுளாச்வன் குமரன்.

9. யமன் தேவி. தாமோர்ணை மார்க்கண்டர் தேவி. குருத்தி குபேரன் தேவி. கௌரி வருணன் தேவி. சுவர்ச்சலை சூரியன் தேவி.

**கிருதிமந்தன்** — யவீநரன் குமரன்.

**கிருதிவந்தன்** — வசுதேவருக்குத் தேவகியிடத் துதித்த குமரன்.

**கிருது** — 1. உன்முகனுக்குப் பிரீதகேசியிடம் உதித்த குமரன்.

2 தக்ஷன் மருமகன், இவனுக்குச் சந்நதியிடம் வாலகில்லியர் பிறந்தனர்.

3. ஓர் வேதியன், இவன் ஒழுக்கம் குன்றி ஒருவன் சிவபூசைக்கு எடுத்துச் செல்லும் புட்பத்தைப் பறித்தணிகையில் அது பூமியில் விழச் சிவார்ப்பணமென்று எண்ணி நற்கதியடைந்தவன்.

**கிருதுமான்** — எமிநரன் குமரன் இவன் குமரன் சத்தியதிருதி

**கிருதோசா** — தனகன் குமரன்.

**கிருதௌசஸ்** — கிருதவீர்யன் தம்பி.

**கிருத்தி** — 1. அணுகன் பாரி, சுகன் குமரி.

2. குசிகனுக்குப் பீவரியிடம் பிறந்தவள்.

**கிருத்திகை** — 1. சப்த இருடிகளில் வசிட்டரொழிந்த மற்ற அறுவரின் தேவிமார். அக்னி யொருகால் சத்த இருடிகளின் தேவியரை மோகித்தனன். இதை யறிந்த அக்னியின் தேவியாகிய சுவாகை ஒருவேளை அவர்களால் தன்னாயகனுக்குச் சாபம் நேரிடக் கூடுமெனப் பயந்து அருந்ததி நீங்கிய அறுவரைப்போ லுருக்கொண்டு அக்னியைக் கூடினள். இதை யறிந்த ஆறு இருடிகளும், தம் தேவிமார் குற்றப்பட்டனர் என்று தமது தேவியரை விலக்கினர். இருடி பத்தினிகள் உண்மை கூறவும் இருடிகள் தேறாராயினர். இதனாலறுவரும் தனிக்கூட்டமாக நக்ஷத்ரபதமடைந்தனர். இவர்களறுவரும் குமாரக் கடவுளுக்கு முலைப்பாலூட்டி விரதபலமடைந்தனர்.

2. அக்னி யென்னும் வசுவின் தேவி, குமரன் ஸ்கந்தன், விசாகன்.

**கிருத்திரகூடம்** — மகததேசத்தின் இராஜதானியாகிய இராஜகிருக நகரத்தின் அருகேயுள்ள மலை. கௌதமபுத்தர் இதன்மீதிருந்து தருமோபதேசஞ் செய்த மலை இது பாதபங்கயமலை யெனப் பெயர் பெறும்.

**கிருத்திரமவிஷம்** — நாபி முதலிய விஷப்பூண்டுகளையாவது, பாம்பு முதலிய செந்துக்களின் விஷங்களையாவது மற்றொரு வஸ்துவில் கலந்து கொடுப்பது.

**கிருத்ராசன்** — சோணாட்டுப் புள்ளம்பூதங்குடியில் தவமியற்றி விஷ்ணு மூர்த்தியின் அருள் பெற்றவன்.

**கிருத்திராசுரன்** — ஒரு அசுரன், விநாயகமூர்த்தியின் பாலப்பருவத்தில் கழுகுருக்கொண்டு அவரைத் தூக்கிச்சென்று அவரால் கழுத்திறுக்குண் டிறந்தவன்.

**கிருத்திவாசன்** — காசியிலெழுந்தருளிய சிவமூர்த்தி. கயாசுரன் முதலியோர் தோலைப் போர்த்ததனால் பெற்றபெயர்.

**கிருத்ஸமதர்** — 1. இவர் இந்திரன் செய்த சத்ரயாகத்தில் ரந்திரமென்னும் சாமத்தை தவறாக வுச்சரித்ததால் யாகத்தில் இருந்த சாக்ஷுசமனுவின் புத்திரரான வசிஷ்டரென்பவர் இவரைச் சலமில்லாக் காட்டில் பதினோராயிரத் தெண்ணூறு வருஷம் மிருகமாக இருக்கவெனச் சபிக்கப்பட்டுச் சிவபூசையால் சிவபஞ்சாக்ஷரஞ் சபித்துச் சிவபெருமானால் மிருகமுகமுடைய கணநாதனாய் லம்போதரர் கணத்தை யடைந்து சாபநீங்கப் பெற்றவர். (பா-அநுசா-ம.) (சிவபுராணம்.)

**கிருபன்** — 1. இவன் கௌதமர் வம்சத்தில், ஏகாதசருத்ரர் அம்சத்தில் பிறந்தவன். சதாநந்தருக்கும் அரம்பைக்கும் பிறந்தவன் என்றும், சாத்துவந்த மகருஷி புத்ரன் என்றும், சிரத்துவான் குமரன் என்றுங் கூறுவர். இவன் தங்கை கிருபி. இவர்களிருவரையும் வேட்டைக்கு வந்த சந்தநுமகாராசன் எடுத்து வளர்த்தனன். தாய் சத்யத்திருதி. மருத்கணம்சம் என்ப.

2. பாணாரன் நண்பன்.

**கிருபாவதி** — நபாகனைக் காண்க.

**கிருபி** — சதாநந்தர் பெண், சந்தனுவால் வளர்க்கப் பட்டவள், கிருபன் தங்கை. துரோணர் மனைவி. இவளது கர்ப்பினைச் சோதிக்கருத்ரமூர்த்தி தவசியுருக்கொண்டு வந்து நிருவாணபிக்ஷை கேட்டு வீரியத்தை வெளிப்படுத்தினர். அதனை அன்னத்துடன் பெட்டைக் குதிரையிடம் வைத்தனர். அக்குதிரையின் வயிற்றைப் பிளந்துகொண்டு குதிரை முகத்துடன் அசுவத்தாமா பிறந்தான். சிரத்துவான் குமரியென்ப. தாய் சத்யதிருதி.

**கிருபிஷ்டன்** — பிரியவிரதனுக்குப் பெரிஹஷ்மதியிட முதித்த குமரன்.

**கிருமி** — உசீநரன் நான்காம் புத்ரன்.

**கிருமிகண்டசோழன்**—ஒரு சோழன், இவன் விஷ்ணுவிற்குப் பரத்வங் கூறிய கூரத்தாழ்வார் கண்ணைப் பிடுங்கினவன் என்பர் சைவர். இந்தச்சோழனைப் பார்க்கக்கூடாதென்று கூரத்தாழ்வாரே யிவன்மீது கண்ணைப்பிடுங்கி எறிய இவனுக்குக் கிருமி ரோகம் உண்டாயிற்று ; அதனால் கிருமி கண்டசோழன் என்று வைணவர்கூறுவர்.

**கிருமிரோகம்** — தேகத்தின்மேல் அழுக்குகள் சேர்ந்த இடம், தேகத்திற்குள் சிலேஷ்மஸ்தானம், ரத்தஸ்தானம், மலஸ்தானம் இவ்விடங்களில் உ௦-வித பூச்சிகள் உண்டாம். இவற்றில் சரீரத்தின்மேல் தலைப்பேன், சீலைப்பேன், மலத்தில் சில கிருமிகள் உண்டாம். இவற்றால் குஷ்டம் பிறக்கும், சேஷ்மத்தால் ஆமாசயத்தி லுண்டாம். (எ) கிருமிகள் பெரும்பூநாகக் கிருமி, நீர்ப்பாம்புக் கிருமி, நெல்முளைக் கிருமி, சங்நீளக் கிருமி, அணுக் கிருமி, வெண்கிருமி, செங்கிருமி. உதிரங்கூடிய நரம்புஸ்தானத்தில் (சு) கிருமிகள் அவை அணுக்கிருமி, வட்டக்கிருமி, மிகுசூக்ஷ்மக் கிருமி, காலில்லாக்கிருமி, செங்கிருமி, தோன்றாக்கிருமி என்பன. மலத்தில் உண்டாம் கிருமிகள் (ரு) ககேருகம், மகேருகம், சவுரசம், சலூனம், லேலிகம் என்பன. இவ்விரோகம் முருக்கம்விதை கற்கம், பாகற்குடிநீர், வாய்விளங்கக் குடிநீர், வேப்பம் நெய் முதலியவற்றால் வசமாம்.

**கிருமிலாபுரம்** — கிருமியால் நிருமிக்கப் பட்ட பட்டணம்.

**கிருஷ்ணசயந்தி** — ஆவணி மாதத்தில் கிருஷ்ணபக்ஷ ரோகணி நக்ஷத்ரம் கூடிய சுபதினத்தில் கிருஷ்ணமூர்த்தியின் திரு அவதாரத்தை யெண்ணிக் குழந்தைகளுக்குரிய பலகாராதிகள் செய்து நிவேதித்து விரதமிருப்பது.

**கிருஷ்ணசர்மா** — சுகுணன் குமரன். வேதியன் ஒருவன், தன் மனைவியைவிட்டுத் தீர்த்த யாத்திரைசெய்ய எண்ணி மனைவியை இந்த அரசனிடம் தான் வருமள

வும் காக்கும்படி ஒப்புவித்துச் சென்றனன். அரசன், இந்தப் பார்ப்பினிக்கும் அவள் குழந்தைக்கும் ஆறுமாதத்திய ஆகாரம் வைத்து வீட்டை முத்திரையிட்டு மறைந்தனன். யாத்திரை சென்ற வேதியன் சிலநாள் பொறுத்துத் திரும்பி மனைவியை யொப்புவிக்கக் கேட்க அரசன் நினைவுதோன்றி வீட்டைத் திறந்து பார்க்கையில் பார்ப்பினியும் குழந்தையும் இறந்திருக்கக் கண்டு திருவேங்கடஞ் சென்று திருமால் அநுகிரகத்தால் இருவரையும் உயிர்ப்பித்தவன். (திருவேங்கடத்தல - புராணம்.)

**கிருஷ்ணதுவபாயனன்** — வியாசன்.

**கிருஷ்ணதேவராயர்** — தொண்டைமண்டலத்துச் சிற்றரசர், இவர் சபையில் விகடர் வேளாண்மகளிரைப்போல் நடித்தமையால் வேளாளர் கோபித்து இவரை மாய்த்தனர். இவர்மீது ஞானப்பிரகாச சுவாமிகள் கலம்பகஞ்செய்தனர். இவர்க்கு மந்திரி அம்பி அறம்வளர்த்தான் முதலியார். இவர், காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதருக்குக்கோபுரமுதலிய திருப்பணிகள் செய்துவைத்தனர். இவர் காலம் சாலிவாகன சகம் (கசஙஈ). இவரைச் சந்திரகிரி ராசா என்பர்.

**கிருஷ்ணமிச்ரர்** — ஒரு அத்வைத பிராமணர் தேசிகருடன் வாதிட்டுத் தோற்றவர்.

**கிருஷ்ணராயன்**—இவன் விஜயநகரம் ஆண்டவன், இவன் பிரபுடதேவராசாவிலிருந்து கசு-வது அரசன்.

**கிருஷ்ணராஜன்** — 1. இவன் இரண்டாம் விக்ரமாதித்தனுக்கு நேசன். சூடாமணி நிகண்டில் புகழப்பட்டவன்.

2. செஞ்சியை யாண்ட அரசன்.

**கிருஷ்ணர்** — சுகர் புத்ரர்.

**கிருஷ்ணவேணி** — ஒரு தீர்த்தம்.

**கிருஷ்ணன்**—1. ஆவணிமீ கிருஷ்ணபக்ஷம், அஷ்டமிதிதி, உரோகணி நக்ஷத்திரத்தில் வசுதேவருக்குத் தேவகிவயிற்றில் திருவவதரித்தவர். இவர் தமது பஞ்சாயுதத்துடன் தரிசனங்காட்டி அவ்விருகுரவரின் முற்பிறப் புணர்த்தித் தம்மை நந்தகோபர் மனைவியிடம்விடக் கட்டளையிட்டு அந்த ஆயர்பாடியில் வளர்ந்து வந்தனர். இவர் குழந்தைப் பருவத்தில், பூதனை, சகடாசுரன், திருணவர்த்தன் முதலியவர்களைக் கொன்று, கர்க்கியமுனிவரால்நாமகரணஞ் செயப்பெற்று. கோபிகைகளின், நவநீதம் உண்டு, தெருவில் மற்றக் குழந்தைகள் போல் மண் தின்றதைக்கண்ட தாய் பயமுறுத்த அவளுக்கு இல்லையென்று தமது வாயைத் திறந்து தம்மிலடங்கிய அண்டங்க ளனைத்தையுங் காட்டினவர். இவர் வீடுவிட்டுத் தவழ்ந்துபோதலைத் தடுக்கத் தாய் தாம்பினால் இடுப்பில்கட்ட அத்தாம்புகள் தமது இடுப்பிற்குப் பற்றாமைகாட்டிப் பிறகு அவள் உரலில் தாம்பினால் கட்டத் தவழ்ந்து மருதமரமாயிருந்த நளகூபரமணிக்கிரீவர்களுக்கு நற்கதிதந்து, நாவற்பழக்காரிக்கு அரிசியிட்டு மாணிக்கமாக்கி, கன்றுரு வடைந்துவந்த வற்சாசுரனை விளாமரத்தில் மோதிக்கொன்று, கொக்குருவடைந்த பகாசுரனை வாய் பிளந்து, மலைப்பாம் புருக்கொண்ட அகாசுரன் வாயுட்புகுந்து கொன்று, பிரமன் மாயையால் மறைத்த குமரர்களுக்கும் கன்றுகளுக்கும் அந்தந்த வுருக்கொண்டு அந்தந்த வீட்டிலிருந்து, யமுனை நதியிலிருந்த களிங்கமடுவின் சலத்தை யுண்டிறந்த கோபாலரையுயிர்ப்பித்துத் தாம், அந்தமடுவிற் குதித்து அவனுடன் தொந்தயுத்தஞ் செய்து கர்வ பங்கப்படுத்தி ஆயர்குறை முடித்து, காளியனென்னும் மடுக்கரையில் வந்திருந்தவர்களைச் சூழ்ந்து தகிக்க வந்த காட்டுத்தீயை விழுங்கிப் பின்னொரு முறை காட்டுத்தீக்குப் பயந்த கோபாலருக்கு அபயந்தந்து அவர்களைக் கண்ணை மூடச்செய்து தாமே அதனை விழுங்கி, அந்த ஆரண்யத்தை நீங்கிப் பாண்டீரம் என்னும் ஆலடிவந்து கோபாலரை யிந்திரனுக்கு யாகாதி கிர்த்தியங்கள் செய்யாதிருக்கும்படி தடை செய்து, அதனால் கோபித்து இந்திரன் பெய்வித்த மழையைக் கோவர்த்தனத்தைக் குடையாகத் தூக்கித் தடுத்துக் காத்து, காமதேனுவாலும் இந்திரனாலும் கோவிந்த பட்டாபிஷேக மடைந்து, வருணப்பிரத்தியனால் கவரப்பட்ட நந்தகோபரை அவ்வுலகஞ் சென்று மீட்டுத் தந்து, தமது உலகை நந்தகோபருக்கும் கோபாலருக்கும் மடுவில் காட்டி, அம்பிகைபூசைக்குச் சென்ற நந்தகோபரை விழுங்கிய பாம்பைக் காலாலுந்தி நந்தகோபரை மீட்டவர். பின்னும் கோபிகைகளைக் கவர்ந்த சங்கசூடனைக் கொன்று சிரோமணியைப் பலராமருக்குக் கொடுத்து மகிழ்ந்தவர். இடபவுருக் கொண்ட அரிஷ்டனைக் கொம்பைப் பிடு

ங்கியும், குதிரையுருக்கொண்ட கேசியை
யும், வியோமாசுரனையும் கழுத்தை யிறு
க்கி மாய்த்தவர். அக்குரூரருக்கு யமுனை
யில் திவ்யதரிசனந் தந்து கம்சன் வீட்டு
வண்ணானைக்கொன்று, சேணியனாலாடை
யலங்காரம் பெற்று, சுதர்மாவென்னும்
மாலைக்காரனிடம் பூமாலைசூடி, சந்தனங்
கொண்டுபோம் திரிவக்ரையின்கூனை நிமி
ர்த்தி யவளிடஞ் சந்தனமணியப்பெற்று,
கம்சன் ஆயுதசாலையிற் சென்று அவன்
வில்லை முரித்து, கம்சனது பட்டத்து
யானையாகிய குவலயாபீடத்தைக் கொம்
பை யொடித்துப் பாகனையும் யானையை
யும் கொன்று, மல்லயுத்தத்திற்கு வந்த
சாணூரனை வதைத்து, சுபலனையும் தோச
லனையுங்காலால்மோதி யுயிர்போக்கியவர்.
இந்த வெற்றிகளைப் பொறாத கம்சன்,
கண்ணனது தந்தையர் முதலியோரைச்
சிறைசெய்யக் கட்டளையிடக் கண்ணன்,
திடீரென்று கம்சன்மீது பாய்ந்து அவ
னுடன் யுத்தஞ்செய்து உயிர்போக்கி, வசு
தேவ, தேவகிகளுக்குத் தாம் குமரர் எனத்
தெரிவித்து, உக்ரசேன மகாராஜனுக்குப்
பட்டமளித்து இந்திரனிடமுள்ள சுதர்மை
யென்னுஞ் சபையை யவற்குக் கொடு
த்து, சாந்தீபனி யிடத்துக் கல்விகற்று
அந்த ஆசிரியருக்குக் குருதக்ஷிணையாகப்
பிரயாக தீர்த்தத்துச்சென்றிருந்த குமரனை
வருணனாலறிந்து பஞ்சசனைக் கடலில்
சென்று வதைத்து அவனுடலினாகிய
பாஞ்சசன்னியத்தைக் கைக்கொண்டு யம
புரஞ் சென்று ஆசாரியபுத்திரனை மீட்டுக்
கொடுத்தவர். திரிவக்ரையாகிய சைரந்
திரியின் வீடணைந்திருந்து உத்தவரை
அத்தினபுரிக்கு ஏவிச்சராசந்தன் சேனை
யைப் பதினேழுமுறை சின்னஞ்செய்து,
மேற்கடலில் விச்வகர்மனால் நிருமிக்கப்
பட்ட பட்டணத்திற் குடிபோய்க் காலய
வனனுக்கு ஓட்டங்காட்டி முசுகுந்தன்
உறங்கும் குகையில் ஒளித்து முசுகுந்த
னால் அவனைக் கொலைசெய்வித்து, சரா
சந்தனுக்குப் பயந்தவர்போல் நடித்துக்
கோமந்தபருவதத்தில் ஒளித்தனர். சரா
சந்தன் மலையைக் கொளுத்த கண்ணன்
ஆகாயவழியாய் வந்து அவன் சேனைகளை
யதமாக்கி, **உருக்மணி** தேவியை உருக்மி
அவமானப்பட இரதத்தி லேற்றிக்கொண்
டு துவாரகைக்கு வந்தனர். அது கண்ட
உருக்மி பொறாமல் போர்க்குவர அவ
னைப் பிடித்துத் தேர்க்காலில் கட்டி உருக்
மணி வேண்டக் கொல்லாது விட்டவர்.
சத்திராசித்தின் சியமந்தகமணியை யுக்
கிரசேனனுக்குக் கேட்க அவன் கொடா
திருந்தனன். அம்மணி சிலநாள் பொறுத்
துக் காணாமற் போயிற்று. கண்ணன்,
அபவாத நிவர்த்தியின் பொருட்டுச் சாம்
பவானிடஞ் சென்று யுத்தஞ்செய்து மணி
யைப்பெற்று அவன் பெண் **சாம்பவதி**
**யை** மணந்து, சததன்வாவைக் கொலை
புரிந்து சியமந்தகமணியைக் கவர்ந்த அக்
குரூரனைச் சபையில் வருவித்து மணி
யைக் காட்டி யபவாதந்தீர்த்துக்கொண்டு,
**காளிந்தியையும்**, விந்தானுவிந்தர் தங்கை
யாகிய **மித்திரவிந்தையையும்**, மணந்து,
எழு விடைகளை யெழுருக்கொண்டு கீழே
தள்ளிச் **சத்தியவதியையும்**, **பத்திரையை**
யும், மத்திரதேசாதிபதியின் குமரியாகிய
**லக்ஷ்மணையையும்** நாகாசுரன் பட்டணத்
திருந்து கொணர்ந்த (கசு,000) பெண்க
ளையும் சத்தி அல்லது **நப்பின்னையையும்**
மணந்தவர். லீலாமாத்திரமாய் இருக்கு
மணியைச் சாதிகுலமில்லாதவனை மணந்
தனை யென்றுசொல்லி மூர்ச்சிக்கச் செய்
தவர். முராசுரனையும், அவன் குமரனை
யும், நரகாசுரனையுங் கொன்று அவன் பத்
துப் பெண்களை மணந்தவர். பகதத்த
னுக்கு அபயந் தந்து அவன் பட்டணத்
துள் சென்று ஆங்குச் சிறையிருந்த பதி
னொரு ஆயிரத்து அறுநூறு இராசகன்
னிகைகளை மணந்து, ஒவ்வொருவரிடத்
தும் தனித்தனி கலந்து களிப்புடனிருந்
தவர். தேவேந்திரன் மணிகூடபர்வதத்
தையும், வருணன் வெண்குடையையும்
மீண்டும் பிரசாதித்து அதிதிக்குக் குண்
டலமளித்து, பாரிசாத விருக்ஷத்தைச் சத்
தியபாமை பொருட்டுத் துவாரகையில்
நாட்டி, தமது தேவியர் ஒவ்வொருவருக்
கும் பத்துக் குமரர்களைத் தந்து, பிரத்தி
யும்நனுக்கு மணமுடித்து, அநிருத்தன்
பொருட்டு வாணாசுரனைக் கர்வபங்கஞ்
செய்து, அவன் குமரியாகிய உஷையை
யவன் கொடுக்க அநிருத்தனுக்கு மணஞ்
செய்வித்துக் கிணற்றில் ஓணானாயிருந்த
நிருகராசன் சாபத்தைத் தீர்த்து, வாசுதே
வனுக்குத் துணையாய்வந்த பௌண்டர
கனையும், சுதக்ஷணனையும் அவன் விட்ட
பூதத்தினையும் சக்கரத்தால் மாய்த்து, சாம்
பனுக்கு மணமுடித்து நாரதருக்கு வியாபக

மறிவித்துச் சாளுவனை மாய்த்துக் குசேலரென்னும் ஏழை வேதியருக்குப் பெருஞ்செல்வமளித்து, தேவகி கருவிலுதித்த அறுவரையும் தேவகிக்குக் காட்டி அவர்க்குத் திவ்யதேக மளித்து வியூக வைகுண்டத்திலிருந்த பிராமணக் குழந்தைகளை யருச்சுந சகிதராய்ச் சென்று மீட்டுப் பிராமணர்க் களித்துச் சராசந்தனைப் பீமனால் கொல்வித்து அரசர்சிறைவிடுத்துக்காண்டவவனத்தைஅக்கினிக்குஇரையாக்குவித்து தருமராஜனால் இராஜசூய முடிப்பித்துச் சிசுபாலனை வதைத்துப் பாண்டவர்க்குத் துணையாய்த் திரௌபதிக்குப் புடவை வளரச்செய்து மானங்காத்து, திரௌபதியாடிய சூதாட்டத்தில் அவள் வெல்லும்படிக் கருணைபுரிந்து, அருச்சுனனுக்குத் தேரோட்ட இசைந்து கீதை உபதேசித்து, துரியோதனனிடம் தூதுசென்று விதுரன்மனையில் விருந்துண்டு துரியோதனன் செய்வித்தவஞ்சச் சிங்காதனத்தின் மீதிருந்து அச்சிங்காசனத்தின் கீழிருந்த அரக்கர் முதலியவர்களை விச்வரூபங்கொண்டு கொலைபுரிந்து, குந்தியைக் கன்னனிடம் ஏவி நாகாத்திரம் ஒருமுறைக்குமேலெய்யாமல் கேட்பித்து, இந்திரனையவனிடமேவிக் கவசகுண்டலங் கேட்பித்து, பாரதப்போரில் தமது சக்கரத்தால் சூரியனைமறைத்துப் பகதத்தன் அருச்சுனன்மீதுவிட்ட வேலைத்தாங்கி, தருமன் அசுவத்தாமா அதாகுஞ்சர மென்கையில் சங்கம்பூரித்து, மற்றும் பல உதவிகளைப் பாண்டவர்க்குப் புரிந்து, உத்தரைகர்ப்பத்திருந்த பரிச்சித்தினைக்காத்து, உதங்கருக்கு விச்வரூபதரிசனங் காட்டி, வேதங்களுக்குப் பரத்வநிர்ணயங்கூறி யைய மறுத்தவர். ஒருநாள் சாம்பவதி எனக்குப் புத்திரப்பேறின்றி யிருத்தல் கூடாதெனயாசிக்கக் கண்ணன் உபமன்யு முனிவரையடைந்து சிவதீக்ஷைபெற்றுச் சிவதரிசனஞ் செய்து புத்திரப்பேறு அடைந்தவர். சிவேதன், வெகுலாசுவன் இவர்களிடம் இரண்டு உருவமாய் ஒரேகாலத்து விருந்துண்டவர். பின்னும் இவரது சரிதம் பாரதசம்பந்தப்பட்டவை பலவுள. அவற்றை விரிவஞ்சிவிடுத்தோம், பாரதமுதலிய கதைகளிற் கண்டுகொள்க. இவரது தேர்ப்பாகன் தாருகன். இவரது தேர்க்குதிரைகள், சைனியம், சுக்கிரீவம், மேகபுஷ்பம், வலாகம். இவர்க்குத்தேவியர் பதினாயிரத்து நூற்றெண்மர். இவர் குமாரர்கள் பிரத்தியும்நர், அநிருத்தர், தீபதிமான், பானுதேவர், சாம்பர், மித்திரர், விருகத்பாநு, பாநுவிந்தர், உருகர், அருணர், புஷ்கரர், தேவபாகு, சுருததேவர், சுநந்தனர், சித்திபாகி, வருதகர், மது, விநிக்குரோதனர்; இவர்க்குத் திரிவக்ரையிடம் யுபசுலோகர் பிறந்தனர். இவர் புத்திரப்பேறு வேண்டி ருக்மணியுடன் தவஞ்செய்கையில் இவர் வாயினின்று தவாக்நிதோன்றி அசுரன் ஒருவனைக்கொன்றது. இவர் கம்சனைக் கொல்லுமுன் வேட்டைக்குவந்த அவனுடன் நண்பாய் அவன் இவரைக் கிருஷ்ணன் என்பவன் யார் என்றுகேட்ட கேள்விகளுக்குத் தன்னைப் பிறன்போல் கூறி அவனைவஞ்சித்து அவனுடன் இரவு முழுதும் ஒரேயிடத்தி லிருந்தவர். இவ்வகை சிலநாளிருந்து பிராமண சாபத்தால் நேரிட்ட யுத்தத்தில் யாதவர் மடியத் தாம் தனித்து அருச்சுனனுக்கு ஆள் விடுத்து ஒரு ஆலடியில் யோகநித்திரை புரிந்தனர். பூர்வம் துருவாசர் சாபப்படி சரன் என்கிற வேடன் பக்ஷியொன்றை எய்த அம்பு திருவடியில்பட அவ்வழி தேவர் எதிர்கொள்ளப் பரமபதமடைந்தவர். உபமன்யு முனிவரால் சிவபூசை யெழுந்தருளச்செய்துகொண்டு வடுககிரியில் ஏழுமாதம் தீக்ஷைவகித்துச் சிவபூசை செய்கையில் சிவபெருமான் எழுந்தருளிப் பல வரங்களளித்து வில்வேச்வரரென ஆண்டெழுந்தருளியிருக்கின்றனர். இவர் சிவமூர்த்தியிடம் பலவரம் பெற்றனர். (சிவமகாபுராணம்.) இவர் கோலோகத்தில் ராதையுடன் கூடியிருக்கையில் விரஜை, கங்கை கிருஷ்ணனைக் கண்டு மோகிக்க ராதை கோபித்தது கண்டு கங்கை மறைந்தனள். அதனால் உலகமெங்கும் நீரிலாது மறையப் பிரமன் முதலியோர் கண்ணனை வேண்ட கிருஷ்ணன் கங்கை வெளிப்படின் இராதை யவளை வாயிலிட்டு உமியக் காத்திருக்கின்றாளாதலால் இராதைக்குச் சமாதானங் கூறுங்களென்னப் பிரமன் முதலியோர் இராதையைத் துதித்தனர். பின் கிருஷ்ணனது கட்டைவிரலிலிருந்து கங்கை வெளி வந்தனள். அக் கங்கையிலிருந்து பிரமன் தன் கமண்டலத்துச் சிறிது வைத்துக் கொண்டனன். இவர் சோபை எனும் கோபியுடன் ரமிக்கையில் இராதை கோபிக்க அவள் சந்திரமண்டல

மடைந்து காந்தியாய் மறைந்தாள். பிரமையுடன் இருக்கையிலும் அவ்வாறு கோபிக்க அவள் தேஜோரூபமாய் சூரியனிட மறைந்தாள். சாந்தி யெனும் கோபிகையுட னிருக்கையில் கோபிக்க அவள் கிருஷ்ணனிடமே மறைந்தாள். க்ஷமையைக் கோபிக்க அவள் பூமியில் மறைந்து பொறுமை யடைந்தாள். (தேவி - பா.) இவர் புத்திரனை வேண்டித் தவஞ்செய்ய இவர் முகத்தில் ஒரு ஜ்வாலை தோன்றிற்று. அச்சுவாலையால் புல் பூண்டு மலை முதலிய கரிந்தன. மீண்டுங் குளிர்ந்து நோக்க அவை தளிர்த்தன முதலிற்றோன்றிய தீ பிரமனிடஞ் செல்லப் பிரமன் அத்தீயினைக் குழந்தை உருவாக மீண்டும் கண்ணனிடம் அனுப்பினன். இந்தத் தபாக்னி சம்பராசுரனைக் கொல்லக் கிருஷ்ணனிடம் உண்டான அனங்கனெனும் மன்மதன். (பார - அநு.)

2. அவிர்த்தானனுக்கு அவிர்த்தானியிடமுதித்த குமரன்.

3. பெலிபகனுக்குத் தம்பி, இவன் குமரன் ஸ்ரீ சாதகர்னன்.

4. திருவேங்கடத்தில் கிருஷ்ண தீர்த்தத்தில் முழுகி இஷ்டசித்தி பெற்றவன்.

5. குசிகனுக்குப் பீவரியிடம் உதித்தவன். பித்ருக்களைக் காண்க.

6. வேதவியாசமுனிவன்.

7. அர்ச்சுனன்.

**கிருஷ்ணஸாரம்** — கறுப்புப் புள்ளிகளையுடையிற் கொண்ட மான். இது உலவுமிடம் புண்ணிய பூமியென்று ஸ்மிருதி கூறும். (ஆரீதஸ்மிருதி.)

**கிருஷ்ணை** — 1. ஒரு மாயாதேவி.

2. திரௌபதிக்கு ஒரு பெயர்.

**கிருஷ்ணாங்கனை** — நைருதன் ராஜதானி.

**கிருஷ்ணாசுரன்** — ஒரு அசுரன், இவன் பக்ஷியுருக்கொண்டு விநாயகமூர்த்திக்கு முன் வஞ்சனைசெய்து அவராலிறந்தவன்.

**கிருஷ்ணானந்தன்** — வேடல் அப்பையிடம் கல்விகற்று மணவாளமா முனிகளுடன் வாதிடவந்து வேடலப்பை அநுமதியால் வாதிடாமல் திரும்பின ஏகதண்ட சந்நியாசி.

**கிருஷ்ணி** — ஒரு நதி.

**கிருஷ்ணை** — 1. ஒரு நதி.
2. திரௌபதி.

**கிருஹன்** — மனிதர் காதிலிருந்து கலகம் விளைக்குந்தேவதை.

**கிரேணு** — இவள் ஒரு சிவபக்தியுடையாள், புத்திரபேறுவேண்டித் தவஞ்செய்து கங்கையைக் குழந்தையாக எடுத்தனள். அக்கங்கை, வயிரமலையரசன் வளர்க்க வளர்ந்து சிவமூர்த்தியை மணந்தனள்.

**கிரோதன்** — சித்திராதன் கஞ்சுகி.

**கிரௌஞ்சம்** — 1. ஒரு பட்டணம், யமபுரியின் வழியிலுள்ளது. இவ்விடம் உடல்நீங்கிய ஆத்மா சேர ஆறுமாதஞ் செல்லும். இந்த இடத்திலிருந்து ஆருமாசிக பிண்டத்தை ஆத்மாபுசித்து யமபுரிக்குச் செல்வன்.

2. கிரவுஞ்சனைக் காண்க.

**கிரௌஞ்சன்** — ஒரு காந்தருவன், சௌபரி முனிவரின் தேவியாகிய மனோமயை தனித்திருக்கையில் அவளைக் கைப்பிடித்தனன். கண்ட முனிவர் இவனைப் பெருச்சாளியாகச் சபித்தனர். காந்தருவன் வேண்ட மீண்டும் கணபதிக்கு வாகனமாக அருள்புரிந்தனர்.

**கீர்த்திகை** — கிருத்திகையைக் காண்க.

**கிலன்** — அந்தகாசுரனுக்கு ஒரு பெயர், இவன் சிங்கவுருக்கொண்டவன்.

**கிலாதன்** — இரண்யகசிபின் குமரன், தேவி தெமனி, குமரர் வாதாபி, இல்வலன். பிரகலாதனுக்குத் தம்பி. இவனுக்கு அநுக்கிலாதன் எனவும் பெயர்.

**கிலிஞ்சன்** — விராதனைக் காண்க.

**கிழங்குவகைகள்** — இவை மரஞ்செடி, கொடிகளில் வேரிலுண்டாகும் சதைபற்றுள்ள மூலங்கள். காராக்கருணை, கரிகருணை, சேமைக்கிழங்கு, காட்டுகரணை, சேனைக்கரணை, பனங்கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, மெருகன்கிழங்கு, பேதிக்கிழங்கு, அமுக்கிராக்கிழங்கு, பூமிசர்க்கரைக்கிழங்கு, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, பெருவள்ளிக்கிழங்கு, வெற்றிலைவள்ளிக்கிழங்கு, முள்ளங்கிக்கிழங்கு, இஞ்சிக்கிழங்கு, பிரப்பங்கிழங்கு, கோவைக்கிழங்கு, சீந்திற்கிழங்கு, கருடன்கிழங்கு, கூகைக்கிழங்கு, புளிநாளைக்கிழங்கு, மாவள்ளிக்கிழங்கு, தாமரைக்கிழங்கு, அல்லிக்கிழங்கு, கொட்டி, சிட்டி, பெருவள்ளி, சிறுவள்ளி முதலிய.

**கிழமை பிறந்தநாள்** — (ஞாயிறு)பரணியும், (திங்) சித்திரையும், (செவ்) உத்திராடமும், (புத) அவிட்டமும், (வியா) கேட்டையும், (வெள்) பூராடமும், (சநி) ரேவதியும் வருவன.

**கிழார்** — வேளாளர்க்குப் பட்டப்பெயர்.

**கிழார்க்கீரனெயிற்றியார்**—கடைச்சங்க மருவிய புலவர்.

**கிழியறுத்தல்** — மதுரையில் கிழியிற் பொதிந்த பொருளின் தொங்கலை கல்விவன்மையா லறுத்தல். இத் திருவிழா ஆவணித் திருவிழாவில் நாலாம் திருநாளில் நடைபெறும்; இதற்கு மேலை மாசி வீதியிலுள்ள நக்கீரர்கோயில் அல்லது சங்கத்தார் கோயிலிலிருந்து இரண்டு விக்கிரகங்கள் எழுந்தருளுவதுண்டு. அவற்றைக் கபில, பரணர் வடிவங்களென்று சொல்லுகின்றனர். (திருவிளை.)

**கிளட்டன்** — (Glutton) ஒருவித கிரீப்பிள்ளையினம் வடஅமெரிகா, ஐரோபா இந்திய கீரிகளைப்போன்றது. தான் பிடிக்கும் பிராணிகளை விழுங்கும் தன்மையது. எலிகளின் வளைகளைக் கல்லிப்பிடித்துத் தின்னும்.

**கிளி**—இது சிவவீர்யத்தைத் தாங்காது ஒளித்த அக்கினியைத் தேவர்களுக்கு வன்னிமரத்தில்அக்கினியினிருப்பைத்தெரிவித்து அக்னியால் புரண்ட நாக்குறச்சாபம் பெற்றுத் தேவர்களால் மீண்டும் பேச அநுக்ரகம் பெற்றது.

**கிளிகள்** — இவ் வினத்தில் பலவகைகள் உண்டு. இவை சாகபக்ஷணிகள். இவ்வினத்தில், பச்சைக்கிளி, வெள்ளைக்கிளி, கருங்கிளி, நீலக்கிளி, பஞ்சவர்ணக்கிளிகள் உண்டு. இக்கிளிகளுக்கு அலகுகள் மற்றப் பறவைகளுக் கிருப்பனபோ வில்லாமல் உறுதியான கொட்டைகளையும் பிளக்கத்தக்கனவாய் முனைவளைந்து இருக்கின்றன.

1. **பச்சைக்கிளி**—இவ்வினத்தில் பலவகை அலகுள்ளவை யுண்டு. இது, இந்திய நாட்டில் உள்ளது. இதனிறம் பச்சை. இவ்வினத்தில் ஆண்பறவைக்கு கழுத்தில் செந்நிறமான வளைந்த கோடுண்டு. இதன் மூக்குக் கொவ்வைக் கனிபோன்ற செந்நிறம் கொண்டது. இதன் நாக்கு வட்டமாயிருத்தலால் மனிதர் கற்பிக்கும் சொற்களை யினிதாய்ப்பேசும். இவ்வினத்தில் பெருங் காக்கை அளவுள்ள கிளிகளுண்டு.

2. **வெள்ளைக்கிளி** — இது சீனு, ஆஸ்திரேலியா முதலிய நாடுகளிலிருக்கின்றது. இதனைக் **காக்கத்துவான்** என்பர். இவ் வினத்தில் கொண்டையுள்ளனவும் இல்லனவும் உண்டு. இதன் மூக்குக் கருமை. இவ்வினத்தில் மற்றொரு வகைக்கு அலகு வெண்மை. இதன் சிறகுகள் வெளிறிய ஊதாநிறம். இவ்வினப்பறவைகளுக்கு நாக்குத் தடித்திருத்தலால் இவை நன்றாய்ப் பேசுகின்றன.

3. **பஞ்சவர்ணக்கிளி** — தென்அமெரிகா காட்டிலிருக்கிறது. இதன் உடல் வெள்ளை, நீலம், செகப்பு, மஞ்சள், பசுமை கலந்தது. இப் பறவையின் வால் நீளம்.

4. **நீலக்கிளி** — தென் அமெரிகாவின் தென்பாகத்தில் உள்ளது. இதன் முதுகு பக்கம்நீலம் வயிறுமஞ்சள், கண்ணைச்சுற்றிலும் கருங்கோடுகளமைந்த வெண்ணிறம், உச்சி சுத்தகறுப்பு. இவ்வினத்தில் **நீலபஞ்சவர்ணக் கிளி**யென ஒன்றுண்டு. அதன் உடல் நீலநிறம் மிகுதியாயும், உச்சந்தலை சிவப்பாயும், மூக்குக்கறுப்பாயும்பிடரியும், வாலும் பசுமையாயும், கண்டம் நல்லகறுப்பாயும் முதுகு நீலமாயும், வயிறு மஞ்சளாயும் இருக்கும். இவ்வினத்தில் மற்றொருவகைக்கு மூக்கு மிகவும் வளைந்திருக்கிறது. இவ்வினத்தில் ஆண்டீஸ் மலைத்தொடரில் ஒருவகையான கிளிக்குவாலில் அதிகமான இறகுகள் உண்டு. அவ்விறகுகளில் வெண்மையும் கறுப்பும் கலந்த கீற்றுக்கள் உண்டு. முதுகு செந்நிறம், வயிறு மஞ்சள் இதனை **செம்பஞ்சவர்ணக்கிளி** யென்பர். இதில் மற்றொரு இனம் குறுகிய வாலுள்ளதாய்ப் பருத்தவுடல் கொண்டு நற்பசுமை நிறமாய் உயர்ந்த இடங்களில் கூடுகட்டி வாழ்கின்றன. மற்றொருவகை ஐரோபா முதல் ஆசியாவின் சில பாகம்வரை யிருக்கிறது. இக்கிளியின் முதுகு இந்திரநீலம், வயிறு கறுப்புள்ள மஞ்சள், இக்கிளியின் மூக்கு மற்றக் கிளிகளின் மூக்குப்போலில்லாமல் மேலலகும் கீழலகும் குறுக்கே மாறி யிருக்கின்றன. அதனால் இதனைக் **குறுக்கு மூக்குக்கிளி** யென்பர். இதன் அலகு செந்நிறம். இது, சாகபக்ஷணி.

**கிளிஞ்சல்** — இது முதுகெலும்பில்லாப் பிராணிவகையைச் சேர்ந்தது. இப்பிராணி இலையொத்து, அகன்ற இரண்டு மேலோட்டால் தன்னைக் காத்துக்கொள்ளும். இது, நகருகையில் கூரான பக்கமாய் மெல்ல நகருகிறது. இது குளங்குட்டை, கழி, கடல் முதலியவற்றில் வசிக்கிறது. இதன் ஓட்டைச் சுட்டுச் சுண்ணம்பாக்குகின்றனர்.

இறந்தான். இவனை ஆடுதுறைமாசாத்தனார் பாடினர். (மணிமேகலை.)

**கிளிப்டோடன்**—(Glyptodon) இது, தென் அமெரிகாவிலிருக்கும் பிராணி. ஆமைபோல்முதுகில் செதிளும், வாலும் கழுத்தும் நீண்டும் இரண்டு கால்களையும் உடையது. தலை எலும்புபோன்ற பொருளால் மூடப்பட்டது.

**கிளிவிருத்தம்** — இது திருஞானசம்பந்தர் காலத்து வழங்கிவந்த புத்தநூல். (திருஞா-திருமுறை.)

**கிளைநதிகள்** — பெரிய ஆற்றிலிருந்து சில சிற்றாறுகள் பிரிந்து செல்வது. அவைகளுக்குக் கிளைநதிகள் என்று பெயர். (பூகோளம்.)

**கிள்ளி**—சோழன்பெயர். இக் கிள்ளிப்பெயர் முதல்வன் கரிகால்வளவன் குமரன், நெடுமுடிக்கிள்ளி. இவனுக்குப் பிறகு காஞ்சிநகராண்டவன் கழற்கிள்ளியின் பின்னோனை இளங்கிள்ளி, ஷை நெடுமுடிக்கிள்ளியே,வடிவேற்கிள்ளி,வெல்வேற்கிள்ளி, மாவண்கிள்ளிஎனப் பலபெயர் பெறுவன்.

**கிள்ளிமங்கலங்கிழார் மகனார் சேரகோவனார்** — இவர் இயற்பெயர் கோவனென்பதே. சேரஎன்னும் அடைமொழி பற்பலர் பெற்றிருக்கிறார்கள். இன்னகாரணத்தால் இவ்வடைமொழி கொடுக்கபடுவதென்பதும் இன்ன பொருளதென்பதும் விளங்கவில்லை இவர் வேளாளர். கிள்ளிமங்கலம் பாண்டி நாட்டகத்தோரூர். கிள்ளிமங்கலங்கிழார் எனஒருவர் குறுந்தொகையிற் கூறப்படுகிறார். அவர்க்கு இச்சேரகோவனார் புதல்வராவர் போலும். இவர் குறிஞ்சித் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். தலைவிபடுங் காமத்துயரையறிந்த தோழி நாம் காவல் கடந்து நாணமுதலாயின வொழித்துக் காதலனது ஊர் வினவிச் செல்லுவோமோ வென்று கூறுவது வியக்கத்தக்கது. இவர் பாடியது. நற்-நசுரு-ம் பாட்டு. (நற்றிணை.)

**கிள்ளிமங்கலங்கிழார்** — (வேளாளர்) இவர் கடைச்சங்கமருவிய புலவர். இவர் ஊர் கிள்ளிமங்கலம் போலும், இவர் பிறப்பால் வேளாளராக இருக்கலாம். (குறு-எசு, கக0, கஙஉ, கஅக.)

**கிள்ளிவளவன்** — இவன் புகாராண்ட சோழர்களில் ஒருவன். இவன் கரிகாற்சோழன் மகனாக இருக்கலாமென எண்ணப்படுகிறது. இவன் சகோதரன் நலங்கிள்ளி இவர்களுடன் நெடுங்கிள்ளி காரியாற்றங் கரையில் நடந்த போரில்

**கிறிஸ்து** — இவர் ஏரோதுராஜாவின் நாட்களில் யூதேயாவிலுள்ள பெத்லகேமில் யோசேப்பின் மனைவியாகிய மரியாளிடம் பிறந்து, இயேசு, அல்லது இம்மானுவேல் என்று பெயரடைந்து, ஏரோதுவிற்குப் பயப்பட்டுத் தேவதூதன் சொல்லால் எகிப்துக்குக் கொண்டு போகப்பட்டுப் பின் தேவகட்டளையால் இஸ்ரவேல் தேசத்திற்கு வந்து நாஸரத்தூரில் வாசஞ்செய்து யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெற்றுப் பிசாசினால் சோதிக்க ஆவியானவரால் வனாந்திரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு இரண்டு மூன்று முறை சோதிக்கப்பட்டவர். இவர் யோவான், காவலில் வைக்கப் பட்டதைக் கேட்டு நாசரத்தை விட்டுக் கப்பர்நகூமிலே வாசஞ்செய்தனர். பேதுரு, அந்திரேயா, யாக்கோபு, யோவான் என்னுஞ் செம்படவர்களைக் கடற்கரையிற்கண்டு தம்முடன் அழைத்துக் கொண்டு சென்றார். ஒருமுறை மலையிலிருந்து இறங்கினபோது குஷ்டரோகியொருவனைச் சொஸ்தப்படுத்தினார். கப்பர்நகூமிலே பிரவேசித்தபோது நூற்றுக்கதிபதி யொருவன் திமிர்வாதக்காரனான தன் அடிமை யொருவனைச் சொஸ்தப்படுத்த வேண்ட அவனைச் சொஸ்தபபடுத்தினார். பேதுருவின் மாமிக்குச் சுரத்தைக் குணப்படுத்தினார். ஒருமுறை படவில் ஏறினபோது பெருங்காற்றில் கடல் மும்முறமாயிருக்கச் சீடர்கள் வேண்டுகோளின்படி அதையடக்கினர். கெர்கெசேனர் நாட்டில் பிசாசுபிடித்திருந்த இரண்டுபேர் பிரேதக் கல்லறைகளி லிருந்து வர அவர்களைப் பன்றிக்கூட்டத்தில் போகக் கட்டளையிட்டனர். இவர், ஒருவன் தன் மகன் மரித்திருந்ததைக்கூறி யுயிர்ப்பிக்கவேண்ட அவனை யுயிர்ப்பித்தனர். அப்போது ஒரு பெரும்பாடுள்ள ஸ்திரீயையும் சொஸ்தப்படுத்தினர். குருடர் இரண்டுபேர் கண்வேண்டக் கண்கொடுத்தனர். பிசாசுபிடித்த ஊமையனைப் பிசாசு நீக்கிப் பேசுவித்தனர். இயேசு வனாந்தரத்திலிருந்தபோது திரளான ஜனங்கள் கூடிவந்தார்கள். பொழுதுபோனபடியினால் சீஷர்கள் அவர்களுக்கு ஆகாரமில்லையென்று தங்களிடத்திலிருந்த இரண்டு மீன்களையும் ஐந்து அப்பங்களையும் ுசு

வினிடங்கொடுக்க இவர் வானத்தையண்
ணாந்துபார்த்து ஆசீர்வதித்து எல்லாருக்
குங் கொடுக்கக் கட்டளையிட்டார். இவை
5,000 பெயர் உண்டபின் பன்னிரண்டு
கூடைகள் மிகுந்துநின்றன. இவர் சீடர்
களை அனுப்பிவிட்டுத்தனியே மலையின்
மீதேறி ஜபமுடித்துக் கடலில் நடந்து
நடுக்கடலில் படவிற்செல்லும் சீடரை
யடைந்தார். தீருசீதோன் பட்டணத்தில்
கானானியஸ்திரீயின் வேண்டுகோளின்படி
அவள் மகளின் பிசாசை ஓட்டி அவ்விடம்
விட்டுப் புறப்பட்டுக் கலிலேயாக் கடலரு
கேவந்து தம்மிடத்துக் கூடியிருந்த ஜனங்
களின் பசிக்கிரங்கி அப்போது சீடரிடத்தி
லிருந்த ஏழு அப்பங்களையும் சிலமீன்களை
யும் எடுத்துத் தோத்தாஞ்செய்து எல்லா
ருக்குங் கொடுத்தனர். அவற்றில் ஏழுகூ
டைகள் மிகுந்து நின்றன. ஒருமுறை பே
துரு, யாக்கோபு, யோவான் முதலிய
வரைக் கூட்டிக்கொண்டு ஒரு மலையின்
மீதேறி முகம் சூரியனைப் போலவும் வஸ்
திரம் வெளிச்சத்தைப் போலவும் பிரகா
சிக்க மாறுரூபமானார். இவர் கூடார விஷ
யமாய்ப் பேதுருவிடத்தில் பேசும்போது
மேகத்திலிருந்து ஒரு சப்தம் "இவன் என்
குமாரன், இவனுக்குச் செவிகொடுங்கள்'
என்று உண்டாயிற்று. சீடரால் தீர்க்கமுடி
யாத சந்திரரோகியின் ரோகத்தைத் தீர்த்
தனர். ஏசு, கலிலேயாவில் தம் சீடரை
நோக்கித்தாம் மனிதர் கைகளில் தம்மை
ஒப்புக் கொடுப்பதாகவும், அவர்கள் தம்
மைக்கொலை செய்வதாகவும், மூன்றாம்நா
ளில் உயிர்த்தெழுவதாகவுங் கூறினார். கப்
பர்நகூமில் வந்தபோது வரிப்பணங்கேட்ட
வனுக்குப் பேதுருவை நோக்கி நீ கடலுக்
குப்போய்த் தூண்டில் போட்டு முதலில்
அகப்படுகிற மீனின் வாயைத் திறந்துபார்
அதில் வெள்ளிப்பணம் கிடைக்கும் அதை
எனக்காகவும் உனக்காகவும் செலுத்து
என்றனர். யூதேயாவின் எல்லைகளில்வந்த
ஜனங்களைச் சொஸ்தப்படுத்தினார். எரி
கோவாவிலிருந்த இரண்டு குருடர்களுக்
குக் கண் கொடுத்தார். ஒலிவமலைக்கு
அருகான பெத்பகேவிற்கு வந்தபோது
சீடரைநோக்கி எதிரிலுள்ள கிராமத்தில்
காணப்படும் கழுதையையும் அதன் குட்டி
யையுங் கொண்டுவரக் கூறி அதன்மேல்
ஏறினார். பெத்தானியாவிலிருந்து காலை
யில் வருகையில் பசியுண்டாயிற்று. அவ்
வழியிலுள்ள காயில்லாத அத்திமரத்தைப்
பார்த்து ஒருக்காலும் உன்னிடத்தில் பழ
மில்லாதிருக்கக்கடவது என்று சபிக்க
அது பட்டுப்போயிற்று. இவரது அபோஸ்
தலர்களில் முந்தினவன் பேதுரு, மற்ற
வர்கள் அந்திரேயா. ஜபதேயுவின்
குமாரன் யாக்கோபு, யோவான், பிலிப்
பு, பர்த்தலோமியு, தோமா, மத்தேயு
அல்பேயுவின் குமாரன் யாக்கோபு, லப்
பேயு, சீமோன், யூதாஸ்காரியோத்.
இவர் ஒலிவாமலைக்குப் புறப்பட்டுப்போன
போது இந்தராத்திரியில்நீங்கள் எல்லாரும்
என்னிமித்தம் இடர் அடைவீர்கள் யானு
யிர்த் தெழுந்தபின் உங்களுக்கு முன்கலி
லேயாவிற்குப் போவேனென்றார். பேது
ருவைநோக்கி என்னிமித்தம் "நீ மூன்று
முறைமறுதலிப்பாய்" என்றார். இவர்கெத்
செமனெயிடத்திற்கு வந்து தம்முடைய
பிதாவைநோக்கி இந்தப்பாத்திரம் என்னை
விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்
யும் என்று மூன்றுமுறை பிரார்த்தித்தார்.
இவர் தம்முடைய சீடர்களை நித்திரை
செய்யச்சொல்வி உடனே என்னைக் காட்
டிக்கொடுக்கிறவன் இதோவந்தான் எழுந்
திருங்கள் போவோமென்றார். இப்படிப்
பேசிக்கொண்டிருக்கையில் பட்டயங்க
ளையும் தடிகளையும் பிடித்துக்கொண்டு
அநேகர் கூடிவந்தார்கள்; அவர்களுடன்
நான் எவனை முத்தஞ்செய்வேனோ அவ
னைப் பிடித்துக்கொள்ளுங்களென்று அ
டையாளஞ் சொல்லியிருந்த யூதாஸ்காரி
யோத் என்பவன் "ரபிவாழ்க" என்று
முத்தங்கொடுக்க ஏசுவை அவர்கள் பிடித்
துக்கொண்டார்கள். ஏசுவைப்பிடித்தவர்
கள் பிரதான ஆசாரியனான காய்பாவினி
டத்திற்கு இவரைக் கொண்டுபோக இர
ண்டு பொய்ச்சாக்ஷிகள் இவன் தேவால
யத்தையிடித்து மூன்றுநாட்களில் என்
னால் கட்டவுங்கூடுமென்று சொன்னான்
என்றார்கள். என்ன இவ்வாறு சொல்லுகி
றார்கள்என்று அவன்கேட்க ஏசு, பேசா
மலிருந்தார். பிரதான ஆசாரியன் நீ தேவ
குமாரனோவென்றுகேட்க 'ஆம்' என்றார்.
அதனால்கோபித்துச் சபையில் உள்ளாரை
நோக்கி உங்களுக்கு என்னதோன்றுகிற
தென்று கேட்க இவன் மரணத்திற்கு
உள்ளானவனென்று கூறச் சிலர் முகத்
தில் துப்பியும் குட்டியும் கன்னத்திலறைந்
தும் உம்மை அறைந்தவன் யார் என்று

பரிகசித்தார்கள். அங்குள்ளவர்கள் அங்கி
ருந்த பேதுருவை நீயும் இவனுடன் சேர்ந்
தவனல்லவா என்று கேட்க 'அல்ல'
வென்று மூன்றுதரம் மறுதலித்தான்.
பின் பிரதான ஆசாரியரும் ஜனத்தின்
மூப்பரும் அவரைக் கட்டிக்கொண்டு
போய்த் தேசாதிபதியாகிய பொந்தியு
பிலாத்தினிடத்து ஒப்புக்கொடுத்தார்கள்.
அப்போது இவரைக் காட்டிக்கொடுத்த
யூதாஸ் ஏசு மரணக்கினைக்குள்ளாக்கப்
பட்டதைக்கேட்டுத் தான் பரிதானமாகப்
பெற்ற முப்பது வெள்ளிக்காசை அவர்
களிடத்தில் எறிந்து போட்டு நான்று
கொண்டு செத்தான். தேசாதிபதியின்
போர்ச்சேவகர்கள் ஏசுவிற்குச் சிவப்பான
அங்கியை உடுத்தி முள்முடியைப் பின்னி
அவர் சிரசின்மேல்வைத்து அவர் வலது
கையில் ஒரு கோலைக்கொடுத்து அவர்
முன்பாக முழங்கால் படியிட்டு யூத
ருடைய ராஜாவே வாழ்கவென்று பரிகா
சஞ்செய்து அவர்மேல்துப்பிக் கோலால்
சிரசின்மேல் அடித்தார்கள். பின் அவரு
டைய சொந்த உடையைக் கொடுத்து
சீமோன் எனும் ஒருவனை அவருடைய
சிலுவையைச் சுமக்கும்படி பலாத்காரஞ்
செய்து கொல்கொதாவென்னு மிடத்
திற்குக் கொண்டுவந்து கசப்புக் கலந்த
காடியை அவருக்குக் கொடுத்தார்கள்.
அதை அவர் குடிக்க மனமில்லாதவரா
யிருந்தார். அவரைச் சிலுவையிலறைந்து
அவர் உடையைச் சீட்டுப்போட்டுப் பங்
கிட்டுக் கொண்டார்கள். இவர் சிரசிற்கு
மேலாக 'இவன் யூதருடைய ராஜாவாகிய
ஏசுவென் றெழுதி வைத்தார்கள்' தேவ
குமாரனே இறங்கிவாவென்று பரிகாசஞ்
செய்தார்கள். இவருடன் சிலுவையிலறை
யப்பட்ட இரண்டு கள்ளரும் இவரை நிந்
தித்தார்கள். ஆறும்மணி முதல் ஒன்ப
தாம்மணி வரையிலும் பூமி அந்தகாரமா
யிற்று. ஒன்பதாம்மணி நேரத்தில் ஏசு
மிகுந்த சத்தமிட்டு "என் தேவனே என்
தேவனே என்னைக் கைவிட்டீர்" என்று
கூப்பிட்டார்; அப்போது ஒருவன் கடற்
காளானைக் காடியில்தோய்த்துக் குடிக்கக்
கொடுத்தான். சிலர் பொறு பொறு எலியா
இரக்ஷிக்க வருவானே பார்ப்போம் என்றார்
கள். ஏசு மறுபடியும் மகாசப்தமாய்க் கூப்
பிட்டு ஆவியைத் துறந்தனர். அப்போது
தேவாலயத்தின் திரைச்சீலைமேல் தொ
டங்கிக் கீழ்வரையிலும் இரண்டாகக் கிழிந்
தது; பூமி அதிர்ந்தது; மலைகள் பிளந்
தன; கல்லறைகள் திறந்தன; நித்திரை
யடைந்திருந்த அநேக பரிசுத்தவான்க
ளுடைய தேகங்களும் எழுந்திருந்தன.
இவர் மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்து கலி
லேயாவில் பதினொரு சீடர்களுக்கும்
காணப்பட்டார். அவர்கள் இவரைப் பணி
ந்து கொண்டார்கள். பின்பு இவர் சீடர்
களை நோக்கி நீங்கள் சகலரையும் சீடர்க
ளாக்கி அவர்களுக்குப் பிதா, குமாரன்,
பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞான
ஸ்நானங் கொடுத்து உங்களுக் குபதேசி
த்த யாவற்றையும் அவர்களுக்கு உபதேசி
யுங்கள் "நான் உலகமுடியும் பரியந்தம்
உங்களுடனே இருக்கிறேன்" என்றார்.
(லூகா.)

**கிறிஸ்துமதம்** — இம்மதம் உலகம் ஆறு
தினத்தில் படைக்கப்பட்ட தென்றும்
ஆதியில் கடவுள் முதல்நாள் வெளிச்சத்
தையும், இரண்டாம்நாள் காற்றையும்,
மேகங்களையும்; மூன்றாம்நாள் பூமியையும்
சமுத்திரத்தையும் பயிர்களையும், நான்காம்
நாள் சூரியசந்திர நக்ஷத்திரங்களையும், ஐந்
தாம்நாள் மீன்களையும் பக்ஷிகளையும், ஆறாம்
நாள் மிருகங்களையும் மனிதர்களையும்
சிருட்டித்து, ஏழாவதுநாளான ஞாயிற்றுக்
கிழமை ஓய்ந்திருந்தார். தேவன் மனித
ரைச் சிருட்டிப்பதற்கு முன், முதல் மனி
தனாய் ஆதாமைச் சிருட்டித்து ஆதாமி
னுடைய இடது பாகத்தினின்றும் ஒரு
எலும்பைக் கிரகித்து ஏவாளைச் சிருட்டித்
தார். இந்த இருவரும் ஏடேன் பட்டணத்
தின் நந்தவனத்தி லிருக்கையில் சாத்தா
னால் கடவுளின் கட்டளையை மீறித்தின்
னக்கூடாததென்ற பழத்தைத் தின்று
பாவத்தை யடைந்தார்கள். பிறகு அந்த
இருவருக்கும் கெயின், ஏபேல் என்னு
மிரண்டு குமாரர்கள் பிறந்தனர். கெயின்
துன்மார்க்கனா யிருந்தான். ஏபேல் மூத்
தோனைக் கொன்றான் அப்போது தேவன்
ஏபேலைநோக்கி உன் தமயன் எங்கே
யென்ன ஏபேல் நான் அறியேன் போ
வென்றான். பின்பு தேவன் ஆதாம் ஏவா
ளிடத்தில் நேத் என்னும் குமாரனை
அனுக்கிரகித்தனர். அந்த நேத்திற்கு
அநேகர் பிறந்தனர். அனைவரும் துன்
மார்க்கர்களாக விருந்தனர். அவர்களில்
நோவா என்பவன் நற்குணமுள்ளவன்.

அதன் பிறகு ஆதாம், ஏவா, சேத் என்னுமனைவரும் இறந்தனர். அப்போது தேவன் நோவாவைநோக்கி நீ யொரு ஓடம் நிருமித்துக்கொண்டு அதில் எல்லாப் பொருள்களையும் கிருமி கீடாதிகளையும் அதில் ஏற்றிக்கொள்ளுக என அவன் தன் பாரியையுடனும் மூன்று குமாரர்களுடனும் மூன்று மருமகர்களுடனும் படவேறினன். அதுமுதல் நாற்பது நாளிரவும் பகலும் பெருமழை பெய்ததால் பிரளயங்கொண்டு ஓடத்தி லிருந்தவர்கள் தவிர மற்றனைவரும் மாய்ந்தனர். பிரளயங் குறைந்தபிறகு ஓடத்திலுள்ள பொருள்களால் உலகம் வியாபித்தது. இது கிறிஸ்துமத சிருட்டிக்கிரமம். இந்த மதத்திற்கு ஆதிபுருஷன், ஆப்ரகாம். அந்தச் சந்ததியானை யோசேப்பிற்கு மரியாள் என்னும் தேவியினிடத்தில் பரிசுத்த ஆவியால் கிறிஸ்து பிறந்தனர் என்பர். இவரது சரிதையைக் கிறிஸ்துவைக் காண்க.

**கிறிஸ்துமதசித்தாந்தம்** — இறந்தவர்களின் ஆத்மா கல்லறையிலிருக்குமென்றும் நியாயத் தீர்ப்புக்காலத்தில் உயிர்த்தெழுவர்கள் என்றும் இம்மதத்தில் ஞானஸ்நானமே தீக்ஷை. கிறிஸ்து பரலோகஞ் செல்லுமுன், அபோஸ்தலர்களுடன் கூடி ஞானபோஜனஞ் செய்துகொண் டிருந்தனர். கிறிஸ்து பரமண்டலத்திற்குப் போனபோது தன் மாமிசத்தை அப்பமாகவும் தன் உதிரத்தைத் திராக்ஷரசமாகவும் உண்பீராக என்றனர். ஆதலால் தேவாலயங்களில் அந்தத் தினத்தில் அப்பமும் திராக்ஷரசமும் பெற்றுக்கொள்வர். இவற்றைப் பெறுவோர் பரிசுத்தர். 17-வது சகாப்தம் வரையில் கிறிஸ்துமத கலகம் நடந்துகொண்டிருந்தது. முதலில்ரோமன் காதலிக் என்னும் மதத்தவரும் பிறகு புரோடஸ்டன்ட் என்னும் மதத்தவரும் போராடிக்கொண் டிருந்தனர். அதன் பிறகு பலபேதமாகக் கிறிஸ்துமதம் வியாபித்தது. தற்காலத்தில் கிறிஸ்துமத சங்கங்கள் 250 உண்டு. அவற்றில் முக்கியமானவை சில கூறுவோம் :—

1. **கிரீக்மிஷன்**—இவர்கள் போப்பைத் தங்களுக்கு அத்தியக்ஷனாக ஒப்புக்கொள்ளார், அப்பமும் திராக்ஷரசமும் கிறிஸ்துவின் மாமிசமும் ரசமும் அன்றென்றும், வேதபுத்தகத்தைத் தங்கள் தங்கள் பாஷைகளில் எழுதிப் படிப்பிக்கலா மென்றும், பாவநிவாரணம் விற்கத்தக்கதன்றெனவும், பரிசுத்த ஆவி குமாரனிடத்தில் இல்லை என்றும், அவனுடைய தந்தையிடத்திலிருக்கின்றதென்றும், குருக்கள் செய்து கொள்ளும் விவாகத்தைக் கெடுதல் செய்தல் கூடாதென்றுங் கூறுவர்.

2. **ரோமன்மிஷன்** — இச்சங்கத்தவர்க்குப் பிரதானகுரு போப் என்பவர். இந்தப் போப்பினுடைய கட்டளையால் எல்லா காரியங்களும் நடத்தல்வேண்டும். ரோமன் மதத்தவர்க்கும் மற்றவர்களுக்கும் உள்ள பேதங்கள் (1) அன்னிய பாஷையிலுள்ள வேதபுத்தகத்தை வாசிக்கக் கூடாது; குருவின் உத்திரவு பெற்று அன்னிய பாஷையிலுள்ள வேதபுத்தகத்தை வாசிக்கலாம். (2) அன்னியபாஷையால் தேவாராதனம் செய்விக்கலாம். (3) இறந்தவர்களைப் பற்றி விஞ்ஞாபனஞ் செய்யவேண்டியது. (4) குருவினிடத்தில் செய்த பாவத்தை அறிவிக்க வேண்டியது. (5) குருக்கள் விவாகஞ் செய்து கொள்ளக் கூடாது. (6) லௌகிக விஷயங்களில்குருக்கள் பிரவேசிக்கக்கூடும். (7) போப் வாக்கியத்தைத் தேவவாக்கியத்திற்குச் சமானமாக நினைக்கவேண்டும். மரியாள் முதலிய சகலபக்தர்களும் பூஜிக்கத் தக்கவர்கள். மேமாதத்தில்உபவாசஞ் செய்யவேண்டும்.

3. **லூதர்மிஷன்** — இவர்களுக்கு வேதம் பிரமாணநூல் விசுவாசத்தால் மனுஷர் நீதிமான்கள் ஆவர். ரோமன் சங்கத்தவர் தங்கள் குற்றங்களை நீக்கவேண்டும். பெரியோர்களது கட்டளையின்படி காரியங்களைச் செய்யவேண்டும். இந்த லூதர் என்பவன் 1583ஆ நவம்பர்மீ ஜெர்மனியைச் சார்ந்த ஓர்கிராமத்தில் பிறந்து சீக்கிரத்தில் வித்வானாய்ப் பெரும்பதவியடைந்திருக்கையில் 1517-வது வருஷத்தில் போப்புகள் ஜனங்களின் பாவங்களை விலைக்கு வாங்கிக் கொள்ளுகிறார்கள் என்று கேள்வியுற்று அதைக் கண்டித்து அதுவரையில் எவர்களாலும் வெளியிடாத பைபிலை வெளியிட்டனன். அப்போது லூதரைத் தண்டித்தற்குப் போப் ஜெர்மனி சக்கரவர்த்தியைத் தூண்டினன். இவன் எல்லாவற்றிற்கும் தப்பித்துக்கொண்டு பின் கல்யாணஞ் செய்துகொண்டு சிலவருஷம் சென்றபிறகு இறந்தனன்.

4. **புரோடஸ்டன்ட்மிஷன்**—இவர்கள் கி. பி. 1529-வது வருஷத்தில் லூதர்

கூறியபத்ததியை அனுசரித்து நடக்கின்றவர்கள். முதலில் இவர்கள் ஆர்மீனிய மதத்தை அனுசரித்து இருந்தார்கள். இப்போது ரோமன் காதலிக் மதத்தவர் தவிர மற்றையவரும் மிகுதியாய் லூதரின் பத்ததியைச் சேர்ந்தவர்கள்.

5. **மோரேனியன்** — இவர்களும் சற்றேறக்குறைய லூதரின் அபிப்பிராயத்தை அனுசரித்து நடப்பவர்கள். முதலில் இவர்கள், ஒருவர் காலை ஒருவர் அலம்புவார்கள். இவர்கள் மற்றவர்களைக் கிறிஸ்தவர்களாக்குவது விசேஷமென் றெண்ணியிருப்பவர்.

6. **பாப்டிஸ்ட்மிஷன்**--இவர்கள் தேவனிடத்து அதிக விஸ்வாசமுள்ளவருக்கு மாத்திரம் ஞானஸ்நான முண்டென்பர் மற்றவர்களுக்குக்கிடையாதென்பர். மற்றவிஷயங்கள் சுயேச்சாசங்கங்களின் கட்டளைப்படி யிருக்கும். பின்னும் இச்சங்கத்தில் அநாபாப்டிஸ்டி, ஸேவந்த்டேபாப்டிஸ்ட், பேர்டிகுலர் அன்ட் ஜெனரல் பாப்டிஸ்ட், பிடோபாப்டிஸ்ட் முதலிய பேதங்களுண்டு

7. **வேஸ்லியன்சங்கம்**—வெஸ்லியன் என்னும் ஒருஞானியினுடைய போதனையினல் பிரவர்த்தித்தது. பின்னும் இவர்கள் ஆர்மீனியன் சங்கத்தவர்கள் போதனையை ஒத்துக்கொள்வார்கள். ஜான் வெஸ்லி, சார்லஸ் வெஸ்லி, என்னுமிரண்டு சகோதரர்கள் அமரிக்காவில் மதவிஷயமாகப் பிரசங்கஞ்செய்து பின்பு ஐரோப்பாவிலும் பிரசங்கஞ்செய்து பல சீடர்கள் ஏற்படுத்திக்கொண்டு இச்சங்கம் நிருமித்தனர்.

8. **வோயிட்பீல்டிஸ்ட்மிஷன்**—இச்சபையில் சேர்ந்தவர்கள் ஏசுவைப்போலப் பரிசுத்தமான விசுவாசமும் சத்தியமுள்ளவராயு மிருப்பர். இவர்கள் பெரும்பாலும் ஆர்மீனியன் பத்ததியை அனுசரித்திருப்பவர்கள்.

9. **கால்வனிஸ்ட்மிஷன்** — இவர்கள் 16-வது நூற்றாண்டிலிருந்த ஜான் கால்வன் என்பவனுடைய பத்ததியை அனுசரித்தவர்கள். இவர்கள் ஆதியில் தேவன் உலகங்களைச் சிருட்டித்தபோதே மனிதர்கள் நடந்துகொள்ள வேண்டியனவற்றை நியமித்திருக்கிறார் என்பர். இவர்கள் ரோமன் மதத்தினரைக் கண்டித்துக்கொண்டிருப்பர்.

10. **ஆன்டிநோமியன் சங்கம்**—இவர்கள் சித்தாந்தப்படி விஸ்வாசத்தால் மோக்ஷம் உண்டாம் என்பர். சத்காரியங்களாலும் துஷ்காரியங்களாலும் சாதக பாதகங்களில்லையென்றுங் கூறுவர்.

11. **பிரஸ்பிடேரியன்சங்கம்** — இவர்கள் சபைமுதலான காரியங்களைப் பெரியவர்களால் நடப்பிக்கவேண்டுமென்று கூறுகிறார்கள்.

12. **யூனிடேரியன்சங்கம்** — இது நாலாவது சகாப்தத்தில் ஹாரிஸ் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. தெய்வீக சுபாவத்தில் மூன்றுவகையான புருஷர் இலர். ஏசுகிறிஸ்துவின் ஆத்மா ஆதியிலிருந்தது பற்றி ஏசுவை பூஜிக்கக்கூடாது. அவன் பாவமே அவன் மரணத்துக்குத்தண்டனை ஒவ்வொருவரும் தம் புண்ணிய பாவங்களுக்குத் தக்கபலனை அனுபவிப்பார்.

13. **சோஷீனியன் யூனிடேரியன் சங்கம்**—ஏசுகிறிஸ்து யோஸேப்பிற்கும் மேரிக்கும் நியாயமாய்ப் பிறந்தவன். பரிசுத்த ஆத்மாவென்பது தேவனல்லன் பூர்வத்தில் பாவங்கிடையாது. அவரவர்கள் தங்கள் நடக்கைக்குத் தக்கபலனை யடைவர் என்பர்.

14. **லண்டன்சங்கம்** — இந்தச் சங்கம் 1795 - வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இது இங்கிலாண்டிலுள்ள ரோமன்மிஷனைச் சற்றேறக்குறைய அனுசரித்திருக்கும்.

15, **ஸ்காட்சங்கம்** — இவர்களுடைய அனுஷ்டானம் புரோடஸ்டான் டாரை அனுசரித்திருக்கும் ?

16. **இங்கிலீஷ் எபிஸ் கோபல் சங்கம்** — இந்தச் சங்கத்தில் உபதேசிக்கும் டியகன்ஸ் (Deacons) என்னும் உதவி போதகர்களும் பிரீஸ்ட் என்னும் குருக்களும் பிஷப்புக்களென்னும் மதாசாரியர்களும் இருக்கின்றனர்.

17. **குவாகர்சங்கம்**—இதில் போதகர்கள் முழங்கால்ஊன்றித் தியானிக்கையில் மற்றவர்கள் நின்றுகொண்டு தியானிப்பர். இவர்கள் ஜலத்தால் செய்யும் ஞானஸ்நானத்தைப் பிரயோஜனமற்ற தென்பர். பொய் முதலிய துர்க்குணங்களை விடல் வேண்டுமென்றும் சுவிசேஷங்களை விற்க வாங்கக்கூடா தென்றும் உபதேசிக்கிறதற்கு ஸ்திரீகளும் புருஷர்களும் தக்கவர்களென்றுங் கூறுவர்.

18. சுவீடன் பர்கீயன் சங்கம்-1288-வருஷம் பிறந்த இம்மானுவல் பத்ததியை அனுசரித்தவர்கள். இவர்கள் பிதா, புத்திரன், ஆத்மா இந்த மூவரையும் ஒன்றாக்கிப் புருஷாகாரமாகத் தியானிப்பர். இவர்கள் விஸ்வாசமுள்ளவரா யிருக்கவேண்டுமென்றும் ஒவ்வொருவனும் பாவநீக்கமடைய சுதந்தரன் என்றும் தூலதேகம் நீங்கச் சூக்ஷ்மதேகம் கடவுளை யடையுமென்றுங் கூறுவர்.

19. பிரீமேசன் சங்கம் — இது பலநாளாக உள்ளதென்று கூறுவர். இம்மதத்தவர்க்குப் பைபிலால் பிரயோஜனங் கிடையாது. ஒரேதெய்வத்தை நம்பினவர்கள். இவர்கள் சகோதரவாஞ்சையை விர்த்திசெய்து இந்த உலகத்தைச் சுவர்க்க உலகமாக எண்ணியவர்கள். இம்மதத்தில் அநேக ரகசியங்களும் அடையாளங்களும் உண்டு. இம்மதத்தில் சேராதவர்களுக்கு அதைத் தெரிவிக்கார்கள். ஆங்கிலேய கனவான்களில் அநேகர் இம்மதத்தைச் சேர்ந்தவர்கள். பெரிய பட்டணங்களில் எல்லாம் இச்சபை உண்டு. ஜாதிபேதங் கிடையாது. இந்தச் சங்கத்தில் சேர்ந்தவர்களுக்கு ஆபத்துக் காலத்தில் ரக்ஷக முண்டு. இந்துக்களில் அநேகர் இம்மதத்தின் கொள்கைகளை அனுசரிக்கிறார்கள்.

**கிறீக்மதம்** — இது நெடுங்காலமாய் வியாபித்துள்ளது. இம் மதத்தவர்க்கு ஆதிதேவதைகளென்றும், கவிகளின் தேவதைகளென்றும், தத்வக்ஞான தேவதைகளென்றும் மூவகைத் தேவர்களுண்டு. இவர்களில் முதலாகிய ஆதிதேவதை ஜூஸ் என்னப்படும். இந்த ஜூஸ் லோகங்களையெல்லாம் கட்டி ஈர்த்தவனென்றும் முக்கியமானவனென்றும் கூறுவர். இவனுடைய இடம் ஒலிம்பஸ் என்னும் மலைச்சிகரம். பின்னும் அநேக தேவர்களுளர். இந்தத் தேவர்களில் யூரன்திஸ் என்னும் தேவதைகள் முதலாகவும் தீதான்ஸ் இரண்டாவதாகவுங் கூறுவர். ஆதியில் கூட்டமான பூதங்களே கயா என்னும் பூதேவியாயிற்று. அதிலிருந்து டார்ட்டாரஸ் எனும் இருள்தேவதை யுண்டாயிற்று. பின்பு இரோஸ் என்னும் பிரியதேவதையும் இதர் என்னும் தினதேவதையும் உண்டாயினர். இவர்களால் யூரானேஸ் என்னும் மோக்ஷலோக முண்டாயிற்று. பிறகு கயாதேவதையும யூரானஸ் தேவதையும் சங்கமித்துச் சமுத்திரங்களேயும் வேறுசில தேவதைகளேயும் உண்டாக்கினர். கவிகளின் தேவதை கிரேக்கர் கவிசிரேஷ்டராகையால் அவர்களுள் இசைட், ஓமர், அச்சிலஸ், சொபாசிலஸ், யுரிபிடீஸ் இவர்கள் புருஷர்களேயும் ஸ்திரிகளேயும் கிருமிகீடாதிகளேயும் தேவதைகளாகப் பாவித்துப்புகழ்ந்தனர். இவர்கள் டியுஜியூஸ் இடிக்குத் தேவதையாகவும் நெப்டியூன் சமுத்திரதேவனாகவும், அபாலோ சூரியனாகவும், ஆர்டிமிஸ் சந்திரனாகவும் பாவித்து விக்கிரக ஆராதனஞ் செய்வர். **தத்வக்ஞான தேவதைகள்**—கி. பி. 600-வது வருஷம் இருந்த தேல்ஸ் என்பவன் ஜலமே தேவதையென்றும், அனக்ஸிமன்ஸ் வாயுவே தேவனென்றும், ஹெரிகிலிட்ஸ் என்பவன் அக்கியே தேவனென்றும், பிதகோரஸ் தேவன் ஒருவனே யென்றும், பார்மென்டீஸ் பிரசித்தமான எண்ணமே தேவனென்றும், இம்பிடோகிலிஸ் என்பவன் ஜீவாத்மாக்கள் பரமாத்மாக்கள் வேறென்றும், கார்கியஸ், அப்டிரேட், பிதகோரஸ் பிராடிகஸ், கிரிடியஸ் முதலியவர் தேவனில்லை யென்றும், சாடாயீகல் என்பவன் பரமாத்மாவே பிரபஞ்சமாயினனென்றும், பிரேடோ என்பவன் ஜிவாத்மாக்கள், பரமாத்மாக்கள் வேறென்றும், அரிஸ்டாடல் கடவுள் ஒருவனாயினும் அவன் ஆவியுருவாயிருக்கிறா னென்றுங் கூறுவர். கிரேகர் ஆசாரம் இந்துக்களைப்போல் இருக்கிறது. தேவர்களுக்குப் பலியிடுகிறார்கள்.

**கினியாமதம்** — இத்தேசத்தவர்கள் ஆசாரம், நாகரிகம், கல்விகள் இல்லாதவர். அவ்வாறிருப்பினும் தெய்வபக்தியுள்ளவர்கள். இவர்கள் பெட்சி எனும் தேவதைகள் இருக்கின்றனர் எனவும், அத்தேவன் தம் மைப்போல் கருநிறம் உள்ளவன் எனவும், கெடுதி அதிகஞ் செய்வன் எனவும், எண்ணியிருப்பர். இவர்கள் இடிவிழுந்த இடம் பயங்கர ஸ்தலமென்று எண்ணி அவ்விடம் விக்ரகங்களைத்தாபித்துப் பூசித்துக்கோயில் கட்டுவர். இவர்கள் குருவிற்கு மாசௌகி என்று பெயர். இவர்களின் துஷ்டதேவதை கருநாய்போல் அவதரித்துத் தீமைசெய்யு மென்று எண்ணியிருக்கின்றனர். மங்களவாரம் இவர்களுக்கு விசேஷதினம் அந்நாளில் அந்தத் தேவதைகளுக்கு நரபலியும், ஆட்டின்பலியும் இடுவர். இச்சாதி

யாரில் இறந்தவர்களைப் பெண்களே கொண்டுபோய் அடக்கஞ்செய்வர்.

**கின்னரகீதம்** — ஒரு வித்யாதர நகரம்.

**கின்னரப்பிரமையர்** —இவர் பெருஞ்செல்வமுள்ளாராய்ச் சிவனடியவர்க்கு நாடோறுமிட்டுவரும் அன்னத்தால் வறுமையடைந்தும் சிவபெருமான் சந்நிதானத்து நித்தியம் பாடிவரும் கின்னரிமுடிவில் சிவமூர்த்தி யளித்த பொன்னைக்கொண்டு அடியவர்களை ஊட்டிவருங்கால் வசவதேவர் மடத்தில் சென்றிருந்து ஆங்கிருக்குஞ் சிவாலயத்திற் சிவதரிசனஞ்செய்து மீண்டனர். அக்காலையில் தூர்த்தனொருவன் ஆடொன்றினைப் பிடிக்கத் துரத்தினன். அந்த ஆடு சிவாலயத்துட் புகுந்தது. அந்த ஆட்டினைக் கண்ட பிரமையர் அதனைப் பிடிக்கவொட்டாமல் தடுத்து அதன் விலையை அவன் சொற்படி கொடுத்தும் அவனுக்குரிய தாசி அந்த ஆட்டினையே கேட்டனள். காமுகன் மீட்டும் வந்துபிடிக்கப் பிரமையர் கோபித்து அவன் சிரத்தைச் சேதித்தனர். அரசன் ஆலயத்துட் சென்று உண்மையறிய விரும்புகையில் சிவமூர்த்தி பிரமையர்மீது குற்றமில்லையெனச் சாக்ஷிகூறப் பெற்றுச் சிலநாட்களுக்குப் பிறகு முத்திபெற்றவர்.

**கின்னரர்** — பிரமன் பிரதிபிம்பத்திற் பிறந்தவர். மானிடவுருவத்தையும் குதிரை முகத்தினையும் பெற்ற தேவவகுப்பினர்.

**கின்னரன்** — புலகன் புத்ரன்.

**கின்னரையர்** — வசவர்க்குப் பிரியாநண்பர். இவர் தேகவியோகமடைந்த காலத்து வசவதேவரும் அவரைப்பிரிய மனமில்லாதவராய் உயிரொன்றியிருக்க, மடிவால மாச்சையர் வந்து மூர்ச்சை தெளிவித்துக் கின்னரையரையும் உயிர்ப்பித்தனர்.

## கீ

**கீசகர்** — விராடன் மைத்துனர் நூற்றுவர். வீமனால் கொல்லப்பட்டவர்கள். சுதக்ஷணை தேவியின் சகோதரர், இவர்கள் நூற்று நால்வர். இவர்களில் மூத்தவன் கீசகன். இவர்கள் பூர்வசன்மத்தில் காலகேயரென்னுங் காந்தருவர் பாணனை முதலாகவுடைய நூற்றுநால்வர்.

**கீசகன்** —சுதக்ஷணையின் சகோதரருள் மூத்தவன். பாணனென்னுங் காந்தருவனம்சம். இவனைப் பாண்டுபுத்ரனாகிய வீமன் காந்தருவாமிச மென்னும் வியாசங்கொண்டு, திரௌபதியை மோகித்த காரணத்தால் பெண்வேஷந் தரித்துச் சென்று யாருமறியாமல் கொன்றனன். இவனுக்குச் சிங்கபலன் எனவும் பெயர்.

**கீடபேதங்கள்** — கீடம் (கஅ) ஒணன் (சு) தவளை (அ) காட்டு ஈ, (கூ) வீட்டுப்பல்லி, (கு) காட்டு மசகம்,(ச) மக்ஷிகா,(கூ)மணிப்பிபீலிகா, (கூ) சிலந்தி, (உஅ.)

**கீடபேதம்** —(கீடம்-புழு) இந்தக் கீடங்கள் பலவகையாயினும் வாயுகீடம், அக்னிகீடம், சோமகீடம், சங்கீரணகீடம் என (ச) வகையாகப்பிரித்து அவற்றை (கூஎ) ஆகவிரிப்பர். வாயுகீடவிரி. குன்னசம், தண்டிகேரம், சிருங்கிசரம், குருந்தகம், உச்சிலிங்கம், அபிலாபம், சுவேதகம், மயூரகம், அபிசாரு, உலூகம், விருத்தம், சாரிபம், வைதளம், சராலம், கூர்மம், பருஷம், சித்திரசீரிஷம், துவிராசிகம், என்பன. இவை (கஅ) அக்னிகீடம். இவை (உச) கௌண்டின்யம், கண்டபவம், லாதரி, பத்திரவிருக்ஷிகம், சீநாதுகம், பிரம்மணிகம், விடபப்பிரமணம், பாகியகி, பிச்சிலம், கும்பி,வர்ச்சகீடம்,அருமேதகம், டுண்டுபம், பதமகீடம், மகரம், சதபாதி, பஞ்சாவம், பாந்தமச்சம், சூக்ஷ்மதுண்டம், அதிகர்த்தபி, கீடக்கிரமம், சராஷி, சீதபி, சிலேஷ்மகம் என்பனவாம். சோமகீடம். (கங) பேதம், விஸ்வம்பரம், பஞ்சசுக்லம், பஞ்சமக்குரோதம், சௌண்டிகம், சையகம், துலாகம், படம், கிடிகை, சடி, சூசிமுகம், கிருஷ்ணகோதம், அதப்பரம், காஷாயவாசி யென்பனவாம். சங்கீரணகீடம். இவை (கஉ) வகை. துங்கீநசம், கலகஸ்தம், பகம், பாஹடகம், கோஷ்டகாகி, கிருமிகரம், மண்டலபுஷ்பகம், காளகரபம், சாஷபகம், மத்குளி, சம்பளி, அக்னிகீடம், என்பனவாம்.

**கீதமாபுரம்** — ஒரு வித்யாதர நகரம்.

**கீரங்கீரனர்** —கீரனுடைய மகனுகிய கீரனர். ,இவர்நெய்தலைப் புனைந்து பாடியுள்ளார் தலைவன் தேர்மணிக்குரல் பலருங்கேட்கும்படி வருதலால் நின்னைவரைய வருகிறுனென்று தோழிகூறுவது இனிமை தாராநிற்கும் இவர் பாடியது. (நற்-எஅ.)

**கீரந்தையார்** —கடைச்சங்கப் புலவருள் ஒருவர். பரிபாடலில் இரண்டாம் பாடல் பாடியவர். திருவள்ளுவமாலையில் "தப்பா

முதற்பாவால்" எனும் செய்யுள் கூறிய வரும் இவரே. (பரிபாடல்.)

**கீரவிகோற்றனார்** — நக்கீரருக்குக் குமரர்.

**கீரன்** — நக்கீரருக் கொருபெயர்.

**கீரி** — இது பாண்டுபுத்ரராகிய தருமர் யாகஞ் செய்த காலத்து யாகத்தில் வந்து இவர் செய்தயாகம் அதிதிக்குத் தன் பங்கையும் மனைவி, குமரன், மருமகள் முதலியோர் பங்காகிய மாவை, பசிக்குதவிய வேதியன் தந்த மாபட்டு என்மேனி பொன்னாயது ஆகையால் இது அந்தத் தானத்திற் கொவ்வாதென்று இகழ்ந்தது. இது ஜமதக்னியைச் சோதிக்கக்கீரி யுருக்கொண்டு வந்த கோபம். இது தருமர் யாகத்தை நிந்தித்து தன்னுருமாறியது. இது தருமருக்குப் பன்னிரண்டுவருடம் யாகஞ்செய்ய விரும்பிய அகஸ்தியர், பசு இம்சைசெய்யாது யாகஞ் செய்ய இந்திரன் கோபிக்க அவனை வெறுத்து மானஸயாகஞ் செய்யத்தொடங்க இந்திரன் மழை பெய்வித்தான் என்பதையுங் கூறியது. (பார-அச்.)

**கீரீடாப் பிரம்வாதிமதம்** — பிரமத்தின் முக்குணத்தில் மும்மூர்த்திகளுண்டாய் முத்தொழிலியற்றச் சகத்துண்டாய் ஆத்மாக்கள் சநநமரணப்பட்டுக் குருவால் உபதேசிக்கப்பட்ட உறுதிகொண்டு அங்கிலேயில் நின்று மோக்ஷமடைவது.

**கீரிப்பிள்ளை** — இது ஆசியா கண்டத்து தக்ஷிணபாகத்தில் சஞ்சரிக்கும்பிராணி. இது பெருச்சாளியைப்போல் நீண்ட மூக்குடன் நீண்ட தேகத்தையும் குறுகிய கால்களையும் பெற்று உடம்பெங்கும் மயிரடரப்பெற்றிருக்கும். இது பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். பாம்புகள் அகப்பட்டால் கழுத்தில் பாய்ந்து கொன்றுவிடும். இதை வீட்டில் வளர்த்துப் பழக்கலாம். இது தண்ணீரில் மூச்சுப்பிடித்து நீந்தும். இது கிராமங்களில் கோழிகளைக் கொள்ளைகொள்ளும். இரவில் அதிக சுறுசுறுப்பாய் இரைதேடும். இது சுவர்மரங்கள் மீது வேகமாக ஏறும். உறங்குகையில் தலையையும் வாலையும் வயிற்றில் சேர்த்துக் கொள்ளும். இது கோழி, பக்ஷிகள், சிறு பிராணிகள், எலி, மூஞ்சூறு, பாம்பு, பல்லி முதலியவற்றை ஆகாரமாகக்கொள்கிறது. இது எலியினத்தில் ஒருவகை. இது குட்டிகளுக்குப் பால்கொடுக்கும் பிராணி. இதற்குப் பால்தரும் உறுப்பு மார்பிலிருக்கிறது. இது இரைதேடச் செல்லுகையில் குட்டிகளை முதுகிற் றாங்கிச்செல்லும். தென் அமெரிகா பிரேஸில் நாட்டில் ஒருவகைக் கீரிகளுக்கு உடலில் முள்ளம் பன்றி போன்ற கூரியமுட்களும் வாழைப்பூ போன்ற தட்டையான வாலுமிருக்கின்றன. இந்தியாவின் மேற்கரை மலைநாட்டில் மரம் ஏறத்தக்க ஒருவகைக் கீரிகளிருக்கின்றன. அவைமரம் ஏறிப்பதுங்கி பறவைகளைப் பிடித்தருந்தும்.

பூனைக்கீரி — இது பூனையினத்தைப்போல் கால்களும் உடலும் காதும்வாலும்பெற்று அதன் நகம்போல் நீட்டவும் குறுக்கவும் பெற்ற நகங்களையும் பெற்றுள்ளது. முகம் கீரிக்குள்ளதுபோல் நீண்டு மீசை கொண்டிருக்கும்.

**கீரைவகை** — கீரைத்தண்டுக்கீரை, வள்ளைக்கீரை, பருப்புக்கீரை, வங்காரவள்ளைக்கீரை, கொடிவயலைக்கீரை, சிறுபசலைக்கீரை, பாற்சொரிக்கீரை, சாணக்கிக்கீரை, துயிலிக்கீரை, பண்ணைக்கீரை, பாட்டைகீரை, முளைக்கீரை, முள்ளிக்கீரை, புளிச்சிறுகீரை, சிறுகீரை, கலவைக்கீரை, மணலிக்கீரை, நீர் ஆரைக்கீரை, புளியாரைக்கீரை, கோழிக்கீரை, புளிப்புக்கீரை, பிண்ணாக்குக்கீரை, முக்குளிக்கீரை, வெந்தயக்கீரை, கொத்துமல்லிக்கீரை, காசினிக்கீரை, குப்பைமேனி, முன்னை, நல்வேளை, சிறுகீரை, மணத்தக்காளி, முருங்கை, அகத்திக்கீரை, பொன்னாங்கண்ணி முதலியன.

**கீர்த்தி** — 1. தருமன் எனும் மனுவின் தேவி, தக்ஷன் பெண்.

2. பிரமபுத்ரன் தவத்தால் கீர்த்திபெற்றவ னாதலால் பெற்றபெயர்.

3. உருக்கிரமன் எனும் ஆதித்தன் தேவி

4. சுகர்மன் தேவி, இவளில்லாத இடம் புகழ்கிடையாது.

**கீர்த்திகேது** — சிவபூசையால் நற்கதி பெற்ற சைவன்.

**கீர்த்திதரன்** — (சு.) பிராணிந்தகன் குமரன்.

**கீர்த்திபூதரம்** — ஒருமலை.

**கீர்த்திபூஷணபாண்டியன்** — அதுலகீர்த்தி பாண்டியனுக்குக் குமரன். இவன் காலத்தில் மதுரைமாநகர் கடல்கொண்டது. இது ஒரு பிரளயம். இவனுக்குப்பின் வங்கிய சேகரபாண்டியன் அரசாண்டான்.

**கீர்த்திமதி** — சுகன் குமரி, அணுகன் தேவி.

**கீர்த்திமாலினி** — சந்திராங்கதன் மகள்.

**கீர்த்திமான்** — வசுதேவருக்குத் தேவகியிட முதித்த குமரன்.

**கீர்த்திரதன்** — பிரதிரதன் குமரன். மிதிலை நாட்டரசன்.

**கீர்த்திராதன்**—1. (சூ.) மகாகிருதி குமரன். 2. மகாபர்க்கன் குமரனாகிய மிதிலை நாட்டரசன்.

**கீர்த்திவர்த்தனசோழன்**—இவன் பாரிசூரிய சேகர பாண்டியன் குமரியாகிய கமலினி. இவன் தன்னாட்டில் குமாரசுவாமிக்கு ஆலயம் புதுக்கி நீதிதவறாது (எஎ)வூ அரசாட்சிசெய்து கீர்த்திமான் என்கிற நதியுண்டாக்கித் தன் குமரன் ஜயசோழனுக்கு அரசளித்து முத்தியடைந்தவன்.

**கீர்வாணம்** — ஒரு பாஷை. பாசிராமரால் நிருமிக்கப்பட்டது.

**கீலகன்** — கிரிபுரத்தரசன். இவன் குமரர் சிவாலயத்தை இடித்து நாகமடைந்தனர்.

**கீழாலவத்தை** — ஆன்மா கருவிகளுடன் கூடி மேனின்று மூலாதாரம் வரையில் படும் வேறுபாடு. **சாக்கிரம்** - ஆன்மா, ஞானேந்திரியம் ரு, கன்மேந்திரியம் ரு, தன்மாத்திரை ரு, வசனாதி ரு, வாயு க0, புருடன் க, அந்தக் கரணம் ச, ஆகிய ௩ரு கருவிகளுடன்லலாடத்தானத்தில்நிற்ப **சொப்பனம்** - முன்சொன்ன கருவிகளில் ஞானேந்திரியம், கன்மேந்திரியம் நீங்கலாக மற்ற உரு - கருவிகளுடன் ஆன்மா கண்டத்தானத்தில் நிற்பது. **சுழுத்தி** - ஆன்மா, புருடன் க, சித்தம் க, பிராண வாயு க, ஆக ௩ - கருவிகளுடன் இருதயத்தானத்தில் நிற்கு நிலை. **துரியம்** - ஆன்மா, பிராணவாயுவும் புருடனுமாகிய இரண்டு கருவிகளுடன் நாபித்தானத்து நிற்குநிலை. **துரியாதீதம்** - ஆன்மா புருடனோடு மூலாதாரத்து நின்றநிலை. (சித்தா.)

**கீழையகத்தாழ்வான்** — நாதமுனிகளிடத்துப் பிரபந்தத்தைக் கானத்துடன் கேட்ட ஸ்ரீ வைஷ்ணவர்.

**கீழையூர் சடகோபாதாசர்** — இவர் அரிசமயதீபம் என்னும் நூலாசிரியர். தொண்டநாட்டினின்று தென்னாட்டுக்குச் சென்ற வல்லை-காளத்தியப்பமுதலியார் மரபிலுதித்தவரெனவும், இற்றைக்கு இருநூற்றைம்பது வருஷங்களுக்குமுன் நாகப்பட்டினம் தாலுக்கா கீழையூரில் சடகோபராமாநுஜ முதலியரென்னும் திருநாமத்துடன் பிரபலமாக வாழ்ந்தவரெனவும் இவரது குமாரர் பத்தாவி முதலியாரவர்களது பெண்சந்ததியார் இப்போது அவ்வூரிலிருக்கின்றனரெனவும், தாயாதிகள் சிலர் வேறிடத்திலுள்ளாரெனவும் தெரிகின்றது. மற்று மிவரது சரித்திரத்தையும் இவரியற்றிய வேறு நூல்களையும் பற்றி ஒன்றுந் தெரிந்திலது. (அரிசமயதீபம்.)

## கு

**குகமுனிவர்** — ஓர் இருடி. இவர் யாகத்தில் தெய்வீக அரசன் எனப் பர்வதராசன் பிறந்தனன்.

**குகர்த்தமன்** — ஒரு அரசன் இவன் பாபத்தால் பிரேத ஜன்மம் எடுத்துத் திரிந்து புண்யதீர்த்த ஸ்நானத்தால் ஜன்மம் நீக்கமடைந்து சுவர்க்கமடைந்தவன். (பதும புராணம்).

**குகலோதியர்** — சூர்யவம்சத்துக் குகனது சந்ததியார். குகனைக் காண்க.

**குகவேளாளர்** — இவர்கள் செம்படவர்கள். இவர்கள் குகன் இராமர்க்குப் படகோட்டினவன் அவன் வம்சத்திற் பிறந்தவர்கள் என்பர். மறவரும் இந்தக் குகன் வம்சத்தவர் எனத் தங்களைக் கூறிக்கொள்வர். (தர்ஸ்டன்)

**குகன்**—1. இவன் சூரியவம்சத்து லவன் சந்ததியான் இவர்களது சந்ததியாரின் இராஜதானி வல்லவிபுரம். கி. பி. 524-இல் இப்பட்டணம் சித்தியர்களால் பிடிக்கப்பட்டபின் இவன் தாய் தன் தாய் நகரம் சென்று திரும்புகையில் தம் நகரம் சித்தியர்களால் பிடிக்கப்பட்டதென் றறிந்து ஒரு குகையில் ஒளித்தனள். அங்கே இவன் பிறந்ததனால் இவனுக்கு இப்பெயர் வந்தது. இவள் தன் குழந்தையை ஒரு பார்ப்பினியிடம் ஒப்புவித்துத் தீக்குளித்தனள். பார்ப்பினி இவனைப் பிள்ளைபோல் வளர்த்தனள். இவன் சந்ததியார் குகலோதியர் எனப் பட்டனர். இவன் பில் எனும் மலையாளிகளைச் சேர்ந்து தன் சௌரியத்தைத் தெரிவித்து அவர்களால் மலைநாட்டரசனானன். இந்நாட்டில் இவன் சந்ததியார் (250) வருஷம் ஆண்டனர். இவர்களில் ஒன்பதாவது அரசனான நாகதீதன் மலைநாட்டாருடன் போரிட்டு மாண்டான் நாகதீதன் குமரன் பப்பா.

2. தன்சேனைகளைக் காத்துக்கொள்ளும் குமாரக்கடவுளுக் கொருபெயர்.

3. சிருங்கிபேரநாட்டு அரசனாகிய வேடன். பாத்துவாசர் ஆச்சிரமத்திற்கு விருந்தான இராமமூர்த்தியிடம் நட்புக் கொண்டவன், நற்குண நல்லொழுக்கம் பூண்டவன். கங்கையில் ஓடம் விடுந் தொழில் மேற்கொண்டோன்.

4. குருத்ருஹனைக் காண்க.

**துகு**—1. ஆங்கிரச ருஷிக்குச் சிரத்தையிட முதித்த குமரி.

2. தாதா என்னும் ஆதித்தன் பாரி; குமரன் சாயம்.

3. பிரமன் தேவியருள் ஒருத்தி.

4 வைசுவதேவபலிகொள்ளும்தேவதை.

**துகுரர்** — யதுகுல பேதம், கம்சன் பகைவர்.

**துகுரன்** — (யாதவன்) அந்தகன் குமரன். இவன் குமரன் விருக்ஷணி.

**துகைகள்** — இவை மலைகளிலுள்ள உள் ளறைகளும், குடைவுகளுமாம். இவை இந்தியாவில் பல இடங்களில் பல மலை களில் உண்டு. இவை அதிக நீட்சியும் விசாலமும் உள்ளவை அல்ல. பஸிபிக் மகா சமுத்திரத்திலுள்ள பீஜிதீவை யடுத்து உங்காவா என்னும் தீவிருக்கிறது. அங்குள்ள மலையில் ஒரு குகையிருக்கிறது. இக்குகையினுள்ளிடம் (60) அடி உயரம், அகலம் 20 அடிமுதல் 30 அடிகள் அதிக நீளமுள்ளது. இக் குகைக்குட் செல்லும் வாயில் கடலுக்குள் (7) அடிக்குக் கீழ் இருக்கிறது. குகையின் உயரம் சமுத்திர மட்டத்திற்கு அதிகம். இதுவே குகை களில் பெரிதென்பர். ஆஸ்திரேலியா கண்டத்தின் சிட்னி பட்டத்திற்கு (30) மைல் தூரத்தில் பல சுண்ணாம்புக் குகைகள் பல வியப்பைத் தருவனவாக வளர்ந்து வருகின்றன என்பர். சாக்கடல் (Dead sea) எனும் கடலுக்கு வடகோடியிலுள்ள ஒரு குன்று கல்லுப்புப்பாறைகளாலானது. அதற்கு ஜெபல் உஸ்டம் என்று பெயர். அதில் பல கல்லுப்புக் குகைகள் உண்டு.

**துகை நமச்சிவாய மூர்த்திகள்**—இவர் திருவண்ணாமலையில் ஒரு குகையில் நிஷ்டை செய்துகொண்டிருந்த சித்தர். இவர் குகையிலிருந்ததால் இப்பெயர் பெற்றனர். இவர் அம்மலையில் தூங்கும் உஞ்ச லிட்டு அதில் சயனித்து நிஷ்டைபுரிந்து வந்தனர். இவரது மாணாக்கர் குருநமசிவாயர். இவர் செய்த நூல் அருணகிரியந்தாதி. இவரது மற்றச் சரிதங்களைக் குருநமசிவாயரைக் காண்க. இவர் சைவர்.

**துகைமறைஞான சம்பந்த நாயனர்** — இவர் சிதம்பரத்திலிருந்த சைவ ஆசாரியர். தமிழில் அருணகிரிபுராணம் பாடியவர்.

**துக்கீடமண்டபம்**—காசியிலுள்ள முத்திமண்டபம். மாகந்தனைக் காண்க.

**துக்குடர்** — புண்டலீகரைக் காண்க.

**துக்குடன்** — சூத்ரனுக்கு நிஷாதஸ்திரீயிடம் பிறந்தவன். (மநு.)

**துக்யகர்** — (குய்யகர்) குபேரன் சபையைச் சுமப்போர்.

**துங்கிலியக்கலயநாயனர்** — திருக்கடவூரில் வேதியர் குலத்தில் பிறந்த கலயர் என்பவர் ஒருவர் இருந்தனர். இவர் திருவீரட்டானேச்சுரருக்குத் தினந்தோறும் குங்கிலியக்கலயப்புகை யிட்டுவரு நாட்களுள் இவர்க்குத் தெய்வச்செயலால்வறுமையுண்டாயிற்று. ஒருநாள் இவரது மனைவியார் வறுமையால் தமது சுற்றத்தவர் வருந்துதலைக் கண்டு தமது மாங்கல்யத்தைக் கணவரிடந் தந்து அரிசி முதலிய வாங்கிவர அனுப்பினர். நாயனர் தெருவிற் செல்கையில் எதிரில் ஒரு வணிகர் குங்கிலியப்பொதி கொண்டுவருதலைக் கண்டு மனங்களித்து அந்த மாங்கல்யத்தைத் தந்து அம் மூட்டையைப் பெற்றுத் திருக்கோயில் பண்டாரத்திலிருத்தித் தாமும் வீடு சேராமல் அவ்விடமிருந்தனர். எல்லாம் வல்ல சிவமூர்த்தி நாயனரது வீடுமுழுதும் நெல்லும் பொன்னுமாகக் குவிப்பித்து நாயனரது மனைவியர்க்குத் தெரிவித்து நாயனரிடஞ் சென்று நீ வீடுசென்று பாலன்ன மருந்துக என்று திருவாய்மலர்ந்து மறைந்தனர். நாயனர் கட்டளையை மறுத்தற்கஞ்சி வீடுசென்று பொன் முதலியவற்றைக் கண்டு மனைவியரை வினவிச் சிவனடியவருடன் அமுதருந்தி யிருக்குநாட்களுள் திருப்பனந்தாளில் சிவலிங்கஞ் சாய்ந்திருக்க அரசன் மூர்த்தியை நிமிர்த்துச் சேவிக்கவெண்ணி ஆனை முதலிய கட்டி யிழுத்தும் நிமிராததுகண்டு, நாயனர் கேள்வியுற்றுச் சென்று தமது கழுத்திற் கயிறு பூண்டிழுக்கச் சிவலிங்கம் நிமிரக் கண்டு களித்துஅவ்விடஞ் சிலநாள் தங்கித் திருக்கடவூர் சென்று திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளையும் திருநாவுக்கரசு சுவாமிகளையும் கண்டு திருவமுது செய்வித்துச் சிலநாட்களுக்குப் பிறகு முத்தி யடைந்தவர். இவர் காலம் திருஞானசம்பந்தர், அப்பர்சுவாமிகள் காலம். (பெ-பு.)

துங்கிலியம் — தேவதாருமரத்தின் பாலைச் சலத்துடன் கலந்து கழுத்து வளைந்த பாத்திரத்திலிட்டுக் காய்ச்சும்போது வெளிக்கிளம்பும் நீராவியைக் குளிரவைத்தால் டை பிசினும் ஆவியாகிக் குளிரவைத்த நீரில் மிதக்கும். இவ்வாறு மிதப்பதைச் சேர்த்தெடுத்தால் அது கர்பூரத்தைலமெனும் டர்பன்டைன் ஆகும். தாமிர பாத்திரத்தின் அடியில் தங்கும் வண்டல் துங்கிலியம்.

துங்கிலியன் — கள்ளர்களுக்குப் பட்டம்.

துங்மதபாண்டியன் — வாகுவலயபாண்டியனுக்குக் குமரன்.

துங்குமப்பூ — இது ஒரு பூண்டின் மகரந்தம். இதற்கு (காரிகஸ்) என்று (Crocus) ஆசியா மைனரில் பெயர். இது ஆசியா மைனரிலுள்ள காரிகஸ் எனுமிடத்திலிருந்து மற்ற இடங்களுக்குச் சென்றதென்பர். இது இப்போது எங்கும் பயிரிடப்பட்டு வருகிறதாயினும் இந்தியாவில் காஷ்மீர் எனும் மலைநாட்டினதே சிறந்ததென எண்ணுகின்றனர். இதன் புட்ப கோசங்களை அக்டோபர், நவம்பர் மாதங்களில் பறித்து உலர்த்தித் தண்ணீரில் அலம்ப இதழ்கள் மிதந்துபோய்க் கோசங்கள் அடியில் தங்குகின்றன; அவைகளைப் பக்குவப்படுத்தி விற்கின்றனர்.

துங்குமம் — இது தேவிக்குரிய காப்பு, இதனைக் குங்குமப்பூ, உயர்ந்த பச்சைக்கற்பூரம் முதலியவற்றுடன் சேர்த்துத் தேவிக்குப் பனிநீரில் இழைத்திடும்படி ஸ்ரீகாரணுகமம் கூறும். இதற்குப் பிரதியாகத் தற்காலத்தில் மஞ்சட்பொடியுடன் வேறெதையோ சேர்த்துக் குங்குமம் எனச் செய்துகொள்ளுகின்றனர். தேவிக்குரிய மங்கலப்பொருளாதலின் மங்கலம்பெற மங்கையர் அணிவர்.

துசஅத்தர்—ஓர் இருடி. விஷ்ணுவையெண்ணித் தவஞ்செய்து முத்திபெற்றவர்.

துசகன் — காதி தந்தை.

துசத்தலம் — 1. சராசந்தன் மதுரையைத் தீக்கிரையிட்டபின் கிருஷ்ணன் ஆண்டது. ஸ்ரவததுர்க்கத்திலுள்ள பட்டணம்.

2. Dwaraka, the capital of the Krisna's kingdom in Guzerat.

குசத்தலி — இரேவதன் என்னும் சூர்யவம்சத் தரசனுண்ட தேசம்.

குசத்துவசன் — 1. சநகன் தம்பி, தசரதன் மைத்துனன், பரதசத்துருக்நருக்கு மாமன்.

2. வேதவதிக்குத் தந்தை, இவர் முனிவர். இவர் வேதமோதிக் கொண்டிருக்கையில் இவர் நாவில் வேதவதி பிறந்து இமயமலையில் விஷ்ணுமூர்த்தி தனக்கு நாயகனுகத் தவமியற்றினள். இவர் ஒரு அரக்கனு லிறந்தனர்.

குசத்துவயஹாரிணி — ருதுஹாரிணியின் குமரி, காலந்தவறி மணப்பவளுடைய இரண்டு ஸ்தனங்களையுங் கெடுப்பவள்.

குசநாபன் — 1. (ச) குசகன் குமரன்.

2. காதியின் தந்தை. இவனுக்கு நூறு பெண்களிவர்களை வாயுவிரும்ப, அவர்கள் இணங்காமையால் வாயு கோபித்து முதுகுகளை முரித்தனன். இவர்களைத் தந்தை சூளிருஷிக்குக்கொடுத்தனன். அந்த ருஷி தொட்டதும் இப்பெண்கள் கூனிமிர்ந்து அழகுபெற்றனர். (இராமாயணம்.)

குசப்லவனம் — இது திதி இந்திரனை வெல்ல புத்ரன் வேண்டித் தவஞ்செய்த இடம். இங்கு இந்திரன் அவள் கருவைச் சேதித்தான். (இரா-பால.)

குசம்பன் — 1. தாரகயுத்தத்தில் வருணனால் கொல்லப்பட்ட அசுரன்.

2. துவட்டாவால் நிருமிக்கப் பட்ட உலக்கை கொண்டு உலகத்தை வருத்தி வத்சந்திரனுல் கொல்லப்பட்ட ஒரு அரக்கன்.

குசலவதி — கோசலத்திலுள்ள பட்டணம், குசன் ஆண்டது.

குசலன் — கற்கைநாட்டு வேதியன், இவன் தெய்வமில்லையென வாதித்துச் சாகுங்கால் யமபடர்பற்றத் திரிகூடம் நினைந்து குற்றாலம் என உயிர்விட்டு யமபடரினீங்கித் தேவர் பூமாரிபெய்து பொழியும் மணத்தால் புட்பகந்தன் எனப் பெயரடைந்து முத்திபெற்றவன்.

குசலாசுரன் — இவன் சிந்தாசுரன் ஏவலால் கேமாசுரனிடங் கூடிப் பெருச்சாளியுருக்கொண்டு தமக்குள் சண்டையிட்டுக் குழந்தையுருக்கொண்ட விநாயகர்மீது விழுந்தனன். விநாயகர் பூனை யுருக்கொண்டு இவர்களைக் கொன்றனர்.

குசவர் — மண்ணுல் பாத்திரங்கள் செய்து சூளைபோட்டுப் பிழைப்பவர். இவர்களுக்கு உடையார் பட்டம், இவர்களிற் பெரும்பாலோர் வீரசைவர். இவர்களிற் சிலர் பூணூல் தரிப்பர். இவர்களின் ஆயுதங்கள், மண் பாத்திரம் செய்வதற்குச் சக்கரம், தண்டம் முதலிய. இவர்களிற் சிலர்பிடாரி

கோவில்களில் பூஜாரிகளாக இருக்கின்றனர். இவர்கள் கிராமங்களில் கல்யாணத்திற்குச் சால், குடம், கரகம், முதலிய கொடுத்துப் பரிசு பெறுவர். இவர்கள் எலும்பு முதலிய பிசகின் வைத்தியம் செய்வர். (தர்ஸ்டன்.)

**குசவன் ஆயுதங்கள்** — மண், செம்மண், திரில், கவருகோல், பிடிதுணி, அறுகுச்சு, தட்டுப்பலகை, வலைச்சல், பத்தை,முள்ளு, மட்பகை, திரைசல், கரைமணிக்காய், தட்டுக்கல், இடிமம், (கூர்.)

**குசன்** — 1. சுகோத்ரன் குமரன், இவன் குமரன் பிரீதி.

2. (ச) அசகன் குமரன்.

3. செவ்வாய்க் கிரகம்.

4. இராமருடைய புத்திரன். குழந்தைப் பருவத்தில் வான்மீகியால் இரக்ஷையின் பொருட்டுக் குசையால் தடவப்பெற்றதால் இப்பெய ரடைந்தனன். இவனும் தம்பியும் வால்மீகர் பாடிய இராமாயணத்தை இராமமூர்த்தி செய்த அச்வமேதத்திலரங்கேற்றித் தம்மை யறிவித்தனர். இவன் ஆண்ட பட்டணம் குசாவதி. அயோத்தி பெண்ணுருக்கொண்டு வேண்ட அயோத்தியை ஆண்டவன். சரயுவில் கங்கணம் விழ அதனை ஒரு நாகம் கவ்வியது. அதனல் கோபித்து அம்பெடுத்தனன். அதைக்கொண்ட நாககன்னிகை அதனைக் கொடுக்க அந் நாககன்னிகையையும் மணந்தவன்.

5. விதர்ப்பன் குமரன்.

6. சுத்தவிரதன் இரண்டாவது குமரன்.

7. காதி தந்தை, சிலநாள் சௌநகருக்கு உபசாரஞ் செய்துவருகையில் அவர் நாற்பத்திரண்டு நாள் தூங்கினர். குசன் அவர்க் குபசரித்தது கண்டு மனமகிழ்ந்து இவன் குலத்தில் ஒரு ருஷி பிறக்கும்படி வரந்தரப்பெற்றவன்.

8. பிரமபுத்ரன், குசநாபனுக்குப் புத்திரர் பிறக்க வரந்தந்து உடலுடன் சுவர்க்கமடைந்தவன்.

**குசஹாரிணி**—ருதுஹாரிணியின் குமரி. கல்யாணத்தில் நாந்திசிரார்த்தத்தால் பிதர்க்களைப் பூசிக்காதவளின் ஒரு ஸ்தனத்தைப் போக்குபவள்.

**குசாக்ரன்** — குருவம்சத்துப் பிருகத்ரதன் குமரன், சராசந்தன் சகோதரன்.

**குசாசுவன்** — சகதேவன் குமரன், இவன் குமரன் சோமதத்தன்.

**குசாபன்** — உபரிசரவசு குமரன்.

**குசாம்பன்** — குசன் குமரன், இவன் குமரன் காதி. (இரா.)

**குசாவதி** — குசனுண்ட நகரம். இது கோசலத்தின் வடக்கிலுள்ளது.

**குசாவர்த்தம்** — கௌதமரைப் பகைத்து வேதியர் அப்பாபம்தீரத் தருப்பையால் பவித்திரமணிந்துகொண்டு ஸ்நானஞ் செய்த கோதாவரிதீரம்.

**குசாவிரதன்**—இருஷபனுக்குச் சயந்தியிடத் துதித்த குமரன்.

**குசிகன்** — புரூரவன் குமரனாகிய அமவசு குலத்தவன், விச்வாமித்திரனுக்கு மூதாதை. பலகாச்வன் குமரன்.

**குசிராத்தீ**—இது கூர்ச்சரம், ஆநர்த்ததேசம் எனப்படும். இத்தேசவாசிகள் குசராத்தியர் எனப்படுவர்.

**குசீலவன்** — மைத்திரேயனுக்குத் தந்தை.

**குசுமபுரம்** — பாடலீபுரத்திற் கொரு பெயர்.

**குசுமேஷு** — மன்மதனுக் கொருபெயர்.

**குசுமை** — இவள் சுதன்மன் எனும் வேதியனுக்கு இளைய மனைவி இவளைச் சுதன்மனுக்கு அவனது மூத்த மனைவியாகிய சுதேகை என்பவள் தனக்குப் புத்திரப்பேறில்லாமையால் மணஞ் செய்வித்தனள். இவளிடத்துச் சுப்பிரியன் எனும் குமரன் பிறந்தான். இதனல் வேதியன் களிப்படைந்து சிவபூசை கைவிடாதிருக்கையில் சுதேகை பொறாமை மனதிடம் வைத்து வந்தனள். பின் தாய்தந்தையரிருவரும் சுப்பிரியனுக்கு மணமுடித்து மகனையும் மருமகளையும் அருகில் வைத்துக்கொண்டு களிப்புறக்கண்ட சுதேகை எவ்வகையேனும் சுப்பிரியனைக் கொன்று பகைமுடிப்பேனென்று சுப்பிரியனும் அவன் தேவியும் உறங்குகையில் சுப்பிரியனைத் துண்டித்துக் குசுமையும் அவள் கணவனும் பார்த்திபபூசை செய்து சிவலிங்கங்களைவிடும் குளத்திலெறிந்து ஒன்றும் அறியாதவள்போல இருந்தனள். இதனையறிந்த குசுமை மனந்தளராது வழக்கம்போல் சிவபூசை முடித்துச் சிவலிங்கத்தைவிடுங் குளத்தருகிற் சென்று மீள்கையில் இறந்து குளத்திலழுந்திய மகன் தாயைநோக்கி நானும் வருகிறேனெனக் கேட்டுச் சிவமூர்த்தியைத் துதிக்கையில் சிவமூர்த்தி தரிசனந்தந்து யாது வேண்டுமென இக்குளமே கோயிலாக்

கொண்டருள்க என அவ்வாறே கூச்மேச் வரமாக அமர்ந்தனர். (சிவமகாபுராணம்).

குகும்பன் — உபரிசரவசுவின் குமரன்.

குகும்பா — இது, ஒருவகைச் செடி. இதன் விதைகள் வண்டை விதைகள்போ லிருக்கும். இவ்விதைகளிலிருந்து எண்ணெய் உண்டாக்கிப் பலகாரங்கள் செய்கின்றனர்.

குசேலர் — கண்ணனுடன் வாசித்த வேதிய நண்பர். இவர் வறுமையடைந்திருந்த காலத்து மனைவியார் இவரை நோக்கி உமக்கு நண்பராகிய கண்ணபிரானிடஞ் சென்று உமது தரித்திரத்தைக் கூறிப் பொருள்பெற்றுவருக என்றனள். இதனைக்கேட்ட குசேலர் ஆயின் நண்பரிடஞ் சென்றால் ஏதேனுங் கையுறையாகக்கொண்டுபோக வேண்டுமென்றனர். மனைவி கொஞ்சம் அவல் பலகாரஞ்செய்துதரக் கொண்டு சென்று கண்ணனைக் கண்டனர். கண்ட கண்ணன், யோகக்ஷேமங்களை விசாரித்து அருகிருந்த மூட்டையிலிருந்த அவலில் ஒருபிடி எடுத்து வாயில் விட்டு உண்டனர். மறுபிடி உண்ண எடுக்கையில் அருகிருந்த தேவியார் விலக்க உண்ணாது நின்று குசேலருக்கு ஒன்றுங் கொடாது அனுப்பக் குசேலர் துக்கத்துடனீங்கி வீடுவந்து தமது பெருஞ்செல்வத்தினைக் கண்டு களித்தவர்.

குச்சகர் — கடகமென்னும் பட்டணத்திலிருந்த முனிவர். இவர் குமரன் கௌச்சிகன் அல்லது மிருகண்டு. இவர் தம் குமருக்குப் பெண்கொள்ள உசத்தியரிடஞ்சென்றனர். அந்த வுசத்தியர் பெண் விருத்தை, காட்டானைக்குப் பயந்து மடுவில் விழுந்திறந்தனள். அவளை உயிர்ப்பிக்கக் குச்சகர் தடாகக்கரையில் தவமியற்றுகையில் ஒரு காட்டானை இவரைத் தூக்கிக் கொண்டு காட்டுள் சென்றது. முனிவர் யானையின் வரலாறு வினவ யானை அறிவு தோன்றித் தான் தவதத்தன் என்பவன், தருமத்தைவிட்டு இரசவாதஞ்செய்த பாதகத்தால் மத்தயானை யானேன் என முனிவர் தமது தபோபலத்தில் சிறிது அந்த யானையுருக்கொண்டவனுக் களித்தனர். உடனே தனதத்தன் யானையுரு நீங்கித் தேவவுருக்கொண்டு சென்றனன். முனிவர் மீண்டும் யமனையெண்ணித் தவமியற்றி விருத்தையை யமனருளா லுயிர்ப்பித்து தமது குமாருக்கு மணஞ்செய்வித்துத் தாம் தவத்திற்குச் சென்றனர்.

குச்சரக்குடிகை — சம்பாபதியின் கோயில். (மணிமேகலை.)

குச்சரன் — ஓர் இருடி, திரேதாயுகத்தில் சிவபூசையால் முத்திபெற்றவன்.

குச்சன் — 1. ஒரு வேதியன் புத்திரப்பேறு வேண்டி விரதம் அநுஷ்டித்து மாக ஸ்நானஞ் செய்து இஷ்டசித்தி யடைந்தவன். (பதுமம்.)

2. இருக்குவேதம் கரு - வது அத்தியாயத்தில் புகழ்ந்து சொல்லப்பட்டவன். இவன் கிணற்றில் தள்ளப்பட்டு இருக்கோதி மாண்டதாக இருக்குவேதங் கூறும்.

3. சாக்ஷுசமனுவிற்கு நடவலையிடத் துதித்த குமரன்.

4. அங்கிரசன் சந்ததியரின்.

குஞ்சம்பூர்இராமாநுசாசாரியர் — வேதாந்த தேசிகரின் திருவடி சம்பந்தி.

குஞ்சரன் — 1. அநுமானுக்குப் பாட்டனும், அஞ்சனாதேவியின் தந்தையுமாகிய வானரன்.

2. கத்ருவின் குமரன், நாகன்.

குஞ்சிகாரர் — சேலம் ஜில்லாவிலுள்ள உழுது பயிரிடும் சாதியார். (தர்ஸ்டன்).

குடக்கோஇளஞ்சேரலிரும்பொறை — ஒரு சேரன், பெருங்குன்றூர்க்கிழாரால் பாடப்பெற்றவன்.

குடபன் — ஓர் இருடி.

குடபுலவியனார் — பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடிய தமிழ்ப்புலவர். (புற - நா.)

குடமலை — காவிரிபிறத்தற்கு இடமாயுள்ள மலை. (சிலப்பதிகாரம்.)

குடமூருட்டி — சோழநாட்டு உறையூரிலுள்ள ஒருநதி.

குடமூக்கிற்பகவர் — இவர் யாப்பருங் கலக்காரிகை யுரையிற் கூறப்பட்ட தொல்லாசிரியர்களில் ஒருவர். கும்பகோணத்தவர் போலும்.

குடம் — 1. கொச்சிநாடு.

2. அநிருத்தனை வாணன் சிறையிட்ட காலத்தில் அவ்வாணசுரன் பட்டணத்தில் கண்ணன் லோகத்தாலும், மண்ணாலுஞ் செய்த குடங்கொண்டாடிய கூத்து.

குடல்விருத்திரோகம் — வாயு அதிகரித்தெழுந்து அதோமுக மார்க்கமாக அண்டங்களுக்குள் சஞ்சரித்து அவ்விடங்களில் வீக்கத்தையும் சூலையையும் பிறப்பித்து நாபியின் வழியாய் ஆண் குறியைச்சேர்ந்து அதிலுள்ள நரம்புகளுக்கும் அண்

டத்திலுள்ள நரம்புகளுக்கும் உபத்திரவத்தை யுண்டாக்கும். இது, வாத, பித்த, சிலேஷ்ம, ரத்த, மேதோ, மூத்திர விருத்திகளெனப் பேதப்படும். இவைகளுக்கு சிற்றண்டமெழுகு, பேரண்டச்சுன்னம், அபிரகபஸ்மம் முதலியவைகள் நலந்தரும்.

**குடவாயில்நல்லாதனர்** — பெருஞ்சாத்தனைப் பாடிய தமிழ்ப்புலவர். (புற - நா.)

**குடவாயிற்கீரத்தனர்**—கீரத்தனரெனப் படுபவரும் இவரே. குடவாயில் சோழநாட்டின் கண்ணதாகிய தஞ்சாவூர் ஜில்லா நன்னிலந்தாலுக்காவைச் சார்ந்ததொரு பெரியவூர் இவர் தம்மூரைத் "தண்குடவாயிலன்னோள்" (அகம் ௪௪) 'கொற்றச் சோழர் குடந்தைவைத்த (அகம் ௯௦) "தேர்வண்சோழர் குடந்தைவாயில் எனச் சிறப்பித்துக் கூறுநிற்பர். இதனுள் குடவாயிலென்பதனைக் குடந்தையென மேலையோர் திரித்தனரென்பர் நச்சினார்க்கினியர். தொல். பொருள். ௩௮௮ உரை. இவர் முன்பொரு காலத்துச் சோழனொருவன் சேர நாட்டகத்துச்சென்று கழுமலமென்னும்நகரைமுற்றித்தன்சேனாபதிபழையன் என்பானைப் பகைப் புலத்தவர்சேநாபதி கணையனென்பான் கொல்லக்கண்டுபொருது அவனையும் அவ்வூரையும் கைப்பற்றிய கதையைக்கூறுகின்றவர் அப்போரில்வந்த மற்றுமுள்ள சேனாபதிகளையும் பிறசிற்றரசர்களையும் எடுத்துக்கூறிச் செல்லுகின்றார். அகம்-௪௪. சோழரது திரவியசாலை குடவாயிலின்கணுளதென்று குறிப்பிக்கிறார். அகம்-௯௦. [திரவியசாலை மிக்கபோர் வீரராற் காக்கப்பட்டுள்ளதெனவும் காவன் மிக்குடைமையின் சிறைச்சாலையும், குடவாயிலின் கட்டப்பட்டுள்ள தெனவுங் கொண்டு சோழன் செங்கணான் சேரன் கணைக்காலிரும் பொறையைபபற்றிக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிட்டானென்று களவழியிலும் புறத்துங்கூறி யிருப்பதை ஆய்ந்துகொள்க.] நன்னனது எழில் மலை இவராற் பாடப்பட்டுள்ளது அகம் ௩௪௫. சோழநாட்டிலுள்ள அன்னியுந் திதியனும், போர்செய்யத் தொடங்குகையில் இடையில் சமர்தானஞ் செய்யச் சென்ற நாகபட்டினந் தாலுக்கா வைப்பூரிலுள்ள எவ்வியென்பவனைச் சிறப்பித்துக் கூறுகிறார். அகம் ௩௯௯ உறையூரும், காவிரியும், இவராற் பாராட்டப்பட்டுள்ளன. அகம்-௩௮௫. இவர் பெரும்பாலும் பாலைத்திணையையும், சிறுபான்மை மற்றைத் திணைகளையும் புனைந்து பாடியுள்ளார். மருதநிலத்துப் பள்ளர் பொலிதூற்றிய கூளம், உப்புப்பாத்தியிற் படிதலின் நுளையர்போந்து மற்போர் புரியக்கண்ட முதியோர் இருவரையும் கைபிணிவிடுத்து நுளையர்க்குக் குடக்கள்கொடுத்து விடுத்தார் என்று திணைமயக்கங்கூறி மகிழ்விக்கிறார். அகம் ௩௯௯. வினைவயிற்சென்று மீண்டுவந்த தலைமகனைக்கண்ட காதலி தான் முற்றுப்பெறாத கோலத்தோடு ஓடிவந்து முயங்குவதாகக் கூறியாவர்க்குஞ் சுவையமிழ் தூட்டுகிறார். நற்-௪௨. இவர் பாடிய பாங்கி பேதமை யூட்டற்றுறை ஆராயத்தக்கது. நற் ௭௩௯. இவர் பாடியனவாக நற்றிணையில் நாலு (௨௭, ௪௨, ௨௧௨, ௩௭௧.) பாடல்களும், குறுந்தொகையில் மூன்றும், அகத்தில் பத்துமாகப் பதினேழு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**குடாசுரன்** — ஒரு அசுரன். இவன் தேவரை வருத்தத் தேவர் வெள்ளிமலையி லடைக்கலம் புகுந்தனர். சிவமூர்த்தி பிராட்டியின் குறிப்புணர்ந்து போர்க்கனுப்பினர். பிராட்டி போர்புரிகையில் சிவமூர்த்தி பிரத்தியக்ஷமாகப் பிராட்டி பூசை செய்தனள். சிவமூர்த்தி தரிசனந் தந்து சூலத்தாற் கொன்று இவனை யுயிர்போக்கினர்.

**குடாரன்** — கத்ருதநயன்.

**குடிசைக்காரி**—குச்சுக்காரி தாசிகள். (தர்.)

**குடிதாங்கிமுதலியார்** — 1. இவர் பொன் விளைந்த களத்தூரி விருந்தவர். இவர், இரப்போருக்கு இல்லையென்னாது கொடுத்து வந்தமையால் இவர் கழனி ஒருகால் பொன்கதிர்விட அவைகளைப் பிராமணர் முதலிய பலர்க்கும் தானஞ்செய்து புகழ் படைத்தவர். "வெறும்புற் கையுமரிதாய்க் கிள்ளைசோரவென் வீடுகெட்டேன், எறும் புக்கோராற்பதமில்லை கண்டாயென்னிருங் கலியின், குறும்பைத்துரத்துங் குடிதாங்கியைச்சென்று கூடியபின், தெறும்புற் கொள்யானை கவளங்கொள்ளாமை தெவிட்டியதே." இச்செய்யுளில் பாதிகேட்டுப் பரிசில் கொடுத்தபின் புலவர்பாதி பாடினார் என்பர். (தமி. நா. சரி.)

**குடிநிலை**—மண்செறிந்த பூமியிடத்துப் பழமையும் தறுகண்மையு முட்கொண்டு பிறரறியும் குடியின் வரலாற்றினைச் சொல்லியது. (பு. வெ.)

**குடிமகன்**—அம்பட்டன். (தர்ஷ்டன்)

**குடிமிகுந்தயவன்** — பிரமன் சிகையில் பிறந்தவனும். இவர்களுள் முதல்வன் அமிர்தகண்டன். குயவர் முதல்வன்.

**குடுகுடுப்பைக்காரர்** — இவர்கள் ஒருவித மகாராஷ்டகசாதியார் இவர்கள் கூட்டம் கூட்டமாகத்திரியும் நாடோடிகள். இவர்கள், கிராமங்களிலும் பட்டணங்களிலும் எதிர்கால நிகழ்ச்சி கூறுவதாய்ச் சிற்றுடுக்கை கையிற்கொண்டு குடுகுடுவென்று தட்டிக்கொண்டு அம்பா பலுக்குகிறுனென விடியற்காலத்தில் கூறிக்கொண்டு விடிந்தபின் அரிசி காசு பழந்துணிகள் கைக்கொண்டு கள்ளுக்கு மாறிப்பிழைக்கும் சாதியார். (தர்ஸ்டன்)

**குடுமி**—இது ஒரு உழவர்ஜாதி இவர்கள் கொங்கண பிராமணருடன் வந்தவர்கள், கொச்சி முதலிய இடங்களில் வேலை செய்து பிழைக்கின்றனர். இப்பெயர் கொண்ட வேட்டைக்காரர் சிலர் விஷவைத்தியம் செய்து பிழைக்கின்றனர்.

**குடுமிகளைந்த புகழ்சாற்றுநிலை** — நீண்ட அரணினையழித்து நிரைத்த மாலையினையுடைய வேந்தன் குடுமிகளைந்த மிகுதியைச் சொல்லியது. (பு. வெ. பாடா.)

**குடும்பாண்டி** — 1. வைசியனுக்குப் பிராமணஸ்திரீயிடம் பிறந்தவன். இவனுக்கு மணியடித்துக்கொண்டு பிக்ஷையெடுப்பது தொழில்.

2. மைத்திரேயனைக் காண்க.

**குடை**—1. கோடையில் வெயிலைத் தணிக்கவும் மழை தடுக்கவும் குடைவாய் அமைந்தது. இது நடுக்கம்பியில் பல பிரம்புகளாலும் மூங்கில்களாலும் தொடுக்கப்பட்டுத் துணியாலும் பட்டாலுமாகிய போர்வையுடையது அன்றித் தாழங்குடை சம்பங்குடை, பனங்குடை முதலியவுமிவ்வகையிலுண்டு.

2. செங்குடை, பீலிக்குடை, பீலிக்குஞ்சக்குடை, பஞ்சவர்ணக்குடை எனப் பல வகைப்படும். சிவனுக்கு (க) விஷ்ணுவிற்கு (உ) சினனுக்கு (ங.)

3. அசுரர் அறுமுகனுடன் போர்க்காற்றுது படைக்கலத்தை யெறிந்து விட்டு விசனத்துட னிருக்கையில் தன்குடையை ஒருமுக எழுனியாகச் சாய்த்துக் குமரனுடிய கூத்து.

**குடைச்செலவு** — பழங்குடிக் கொடுவினையாளர் முன்னே சூழ்ந்துபோக அழலும் நெருப்புப்போன்ற வேலினையுடையவுன் குடையைப் புறவீடுவிடுத்தது.

**குடைநாட்கோள்** — செருத்துக் கூடாதாருடைய அரணைக்கொள்ள நினைந்து வெற்றிமன்னவன் குடையைப் புறவீடு விட்டது. (பு. வெ.)

**குடைநிலை**—தன்மேலிட்ட மாலையிலே வண்டுகளொலிப்ப மிக்க அறிவினையுடையோர் கீர்த்தியைச் சொல்லக் கத்தரிகையால் மட்டஞ்செய்த மாலையினையுடைய வேந்தன் குடையைப் புறவீடுவிட்டது.(பு.வெ.)

**குடைப்பறவை** — (Umbrella Bird) இப்பறவை காக்கைபோன்ற வுருவுள்ளது. இதுதென் அமெரிகா அமேசான்நதி தீரத்திலுள்ளது. இதன் தலைமீது வளர்ந்துள்ள கொண்டையிறகு குடைபோன்று விரிக்கக்கூடியதாயிருக்கிறது. இதன் கழுத்தில் அலைதாடிபோன்று இறகுகள் அடுக்கிட்டதுபோல் வளர்ந்திருக்கின்றன. இது பூச்சி புழுக்களைத்தின்று சீவிக்கிறது.

**குடைமங்கலம்**—நான்கு திக்கும் கீர்த்திமிசவீற்றிருந்த அரசன் குடையைப் புகழ்ந்தது. (பு. வெ. பாடாண்)

**குடைமுல்லை**—பூசலைத்தடுத்த மிக்க உரத்தாலுயர்ந்த தோளினையுடைய மட்டஞ்செய்த மலையான் குடையைப் புகழ்ந்தது. (பு. வெ.)

**குட்டநாடு**—கொடுந்தமிழ் நாடுகளுள் ஒன்று கோட்டயத்திற்கும் கொல்லத்திற்குமிடையில் பாலையாற்றுல் பல ஏரிகளும், தீவுகளு முடையதாகியுள்ளது. திருவாங்கூரைச் சார்ந்த ஆலப்புழை யென்ப.

**குட்டவ்வை** — இவள் உடம்பில் வெண்குட்டத்துடன் வீரசைவ வேடத்தளாய் ஒரு அக்ராகாரத்தின் வழி நடக்கையில் அவ்விடத்திருந்த வேதியர், அசுத்தையாகிய நீயெங்கள் தெருவழி வரலாமோவெனக் குட்டவ்வை வெகுண்டு நீங்கள் பாண்டுரோகிகளாகவெனச் சபித்துச் சௌராட்டசோமையரிடஞ் சென்று சிவாநுக்கிரகத்தால் குட்டநோய் நீங்கிப் பிராமணருக்குத் தன்னைக் காட்டினவள்.

**குட்டுவன்**—இவன் சேரர் மரபினன். குட்டநாட்டை யாண்டமையின் சேரமரபினர் குட்டுவரெனப்பட்டார். குட்டநாடு மலைநாட்டின் ஒருபகுதி. கடைச்சங்கநிலையிட்ட முடத்திருமாறனுற் புகழ்ந்துபாடப் பெற்றவன். இவன் இற்றைக்கு உ௲00 - வருஷத்தின் முற்பட்டவனுகவேண்டும். இவனைப்பாடியவர் முற்கூறிய முடத்திருமாறனுர். (நற்-௧0௫.)

**குட்டுவன் கண்ணன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவராக இருத்தல்கூடும். இவர்பெயர் கண்ணனாக இருக்கலாம். இவர் சோர் குடியினராதலின் குட்டுவன் கண்ணன் எனப்பட்டனர். குறு. கஎக.

**குட்டுவன்கீரனர்** — ஆய் என்னும் வள்ளலைப்பாடிய புலவர். (புற - நா.)

**குட்டுவன்சோல்** — ஒரு சேரன்.

**குணகன்** — (சூ.) சூத்ரகன் குமாரன்.

**குணகாங்கியம்** — கருநாடகச் சந்தமும், மகடூஉ முன்னிலையுமாகச் சொன்னநூல்.

**குணகேசி** — மாதலி புத்திரி. இவளுடன் பிறந்தான் கோமுகன் தாய் சுதர்மா.

**குணசாகரர்** — யாப்பருங்கல நூலாசிரியர், காரிகைக்கு உரையாசிரியர், இவர் சைந சந்நியாசி. இவர் காலம் சாலிவாகன சகம் 300-க்குமேல் இருக்கலாம் என்பர்.

**குணசாலினி** — தனபதிக்குத் தேவி.

**குணசீலன்** — சாந்திகன்குமரன் கண்ணபிரானால் முதலைவாயினின்று வருவிக்கப்பட்டவன்.

**குணசேநன்** — அச் சுவக்கிரீவன் சேனாவீரரில் ஒருவன்.

**குணநாற்பது** — ஒரு பழைய நூல் சங்கமருவியதா யிருக்கலாம். தொல் - நச்சர் உரை.

**குணநிதி**—1. கோசல தேசத்துக் கிரிநாதன் புத்திரனாகிய வேதியன். இவன் குருபத்தினியைப் புணர்ந்து குருவையும், தாய் தந்தையரையும் கொன்றனன். இவனை யூரார் காட்டிற்றுரத்தினர். இவன் வழிபறித் துண்டிறக்கையில் யமபடர் பற்ற வருகையில் சிவகணங்கள் இவனிவ்வனத்தில் உருத்திராக்ஷ காற்றுப்போக்கிலிருந்த தால் சிவகணத்தவனாயினன். நீங்கள் விடுக என உருத்ரவுல கடைவித்தனர். (தேவி-பா.)

2. வேள்விதத்தன் குமரன். குபேரனைக் காண்க.

3. கோளகனைக் காண்க.

**குணநூல்** — இது நாடகத் தமிழ் நூல்.

**குணபத்திரன்** — வீரை மண்டல புருடன் மாணக்கனா யிருக்கலாம்.

**குணபரன்**—பல்லவர்களில் ஒருவன். சோழ நாட்டை யாண்டு திரிசிராபபள்ளி மலைமேல் சிவாலயம் புதுப்பித்தவன். இவனுக்குப் புருஷோத்தமன், சத்துருமல்லன், சத்தியசந்தன் எனவும் பெயர்.

**குணமாலை**—சீவகன் மனைவியரில் ஒருத்தி.

**குணம்**—1. குணத்தன்மை சாமான்ய முடையது. ஒரு திரவியத்தைப் பற்றியுள்ளது. இது, ரூபம், ரஸம், கந்தம், பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்தவம், சையோகம், விபாகம், பரத்வம், அபரத்வம், குருத்வம், திரவத்வம், சிநேகம், சத்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்னம், தருமம், அதருமம, சமஸ்காரம் என (உச) ஆம்.

2. ஆடூஉக்குணம் (ச) அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி. மகடூஉக்குணம் (ச) அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு.

3. ௩. சத்துவம், இராசதம், தாமதம். இவற்றுள் சத்துவம் ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறி அடக்கல் முதலியவாம். இராசதம் மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வி முதலியவாம். தாமதம் பெருண்டி, நெடுந்துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்கவழு வஞ்சம், மறதி, பொய், கோபம், காமம் கொலை முதலியவாம்.

**குணவதி**—அபிசித் எனும் தமிழ்நாட்டரசன் தேவி. பிரமன் சரஸ்வதியிடம் காமவசப்பட்டு வெளிப்பட்ட வீரியம் ஆற்று ஜலத்தில்விழ, தாகத்தால் ஆற்றில் நீருண்ணப் புக அதன் வழிவந்த வீரியத்தையுண்டு கருக்கொண்டு கணன் எனும் குமரனைப் பெற்றவள். (பார்க்கவ புராணம்.)

**குணவதிபாயி** — மாதவசிங்கென்னும் அரசன் தேவி. இவள் தன் தோழியரில் ஒருத்தி எக்காலமும் வாய் மொருமொருத்தலைக் கவனித்து நோக்கி நீ எக்காலமும் வாய் மொருமொருத்தற்குக் காரணம் கூறுக என, அவள் இம்மை மறுமைப் பயன் தரும் அரிபதத்தினைப் பஜனை செய்திருப்பதேயன்றி வேறன்று என்றனள். குணவதி ஆயின் அம்மந்திரத்தினை எனக் குபதேசிக்க என அவள் அவ்வாறுபதேசித்தனள். குணவதி மந்திரத்தினைவிடாது செபித்துப் பேய்கொண்டார்போ லிருத்தலைக் கண்ட அரசன் இவளுக்கு யாரோ ஒரு பாகவதனிவ்வாறு உபதேசித்துக் கெடுத்தனன் என்று இவளைக் கோபத்துடன் கடுகடுக்கக் குணவதி கண்ணை மூடிக்கொண்டு அரசனைக் காணாது அரியைத் தியானிக்கப் பெருமாள தரிசனந்தந்து அஞ்சாதையென அருளி

மறைந்தனர். உடனே குணவதி களித்துக் கணவனையடைய அரசன் அன்றுமுதல் பாகவதர் அரண்மனைக்கண் வாராதிருக்கக் கட்டளையிட்டனன். பின்பு ஒருநாள் அரசன் தன்னிரண்டு குமாருடன் வேட்டைக்குச் சென்றனன். குணவதி பாகவதரையழைத் துபசரித்து வேண்டியதரக்கண்ட மந்திரி அரசனுக் கறிவிக்க அரசன் மனைவியைக் கொலைசெய்ய இருவரை ஏவ அவர்கள் கொலைசெய்ய அவளையணுக அவளிடமிருந்து ஒரு புலி தோன்றிக் கொலைசெய்ய வந்தவர்களைக் கொலைசெய்தது. இதனை யறிந்த அரசன் மனைவியிடம் அச்சங்கொண்டு வீட்டிற்குத் திரும்பினன். வரும்வழியில் நதி ஒன்று வெள்ளங்கொண்டு குறுக்கிட அரசனும் குமார்களும் படகேறி நட்டாற்றில் வருகையில் படகு சுழலிலகப்பட்டுச் சுழன்று மூழ்கத் தொடங்குகையில் அரசன் செயலற்றுத் தன் மனைவியை நினைக்கப் படகு திடீரெனக் கரைக்கண் வந்து சேர்ந்தது. அரசன் மனைவியை யன்றுமுதல் பெருமாள் காரியத்தி லிருக்கச்செய்து தானும் அவ்வாறிருந்தனன்.

**குணவாதம்** — அங்கியப் பிரமாணத்திற்கு விருத்தமாய் அமைக்கப்பட்ட பொருளைக் குணவாயிலாகத் துதிக்கும் வாக்யம்.

**குணவாயில்**—வஞ்சிநகர்க்குக் கிழக்கிலுள்ள ஊர். இளங்கோவடிகள் துறவுபூண்டு இவ்வூரிலிருந்தார். (சிலப்பதிகாரம்.)

**குணவீரபண்டிதர்** — இவர் தொண்டை நாட்டில் சிங்களப்பேட்டைக் கருகிலுள்ள களந்தை அல்லது கழுந்தையிற் பிறந்தவர். சமயத்தால் ஜைநர், இவர் வாமநாதபுரம் என்னும் தென்மயிலையிலமர்ந்த நேமிநாத சுவாமிகள் பெயரால் நேமிநாதமென்னும் இலக்கணஞ் செய்தனர். வெண்பா பாட்டியலும் இவர் செய்தது. இவ் வெண்பா பாட்டியல் வச்சணந்தி முனிவராகிய இவரது ஆசிரியர் பெயரால் செய்யப்பட்டது. இவர் திரிபுவன தேவனென்னும் அரசன் காலத்தவர். (நேமிநாதம்.)

**குணாட்யன்** — ருத்ரசாபத்தால் பூமியிற் பிறந்த மால்யவந்தன்.

**குணநிதிபாண்டியன்** — இவன் சரிதையைச் சுந்தரபாண்டியனைக் காண்க.

**குணி** — 1. செயன் குமாரன்.
2. யுகந்தரன் தந்தை.

**குணிகார்க்கியர்** — கார்க்கிய குலத்திலுதித்தவர். இவர் ஒரு குமரியைப் பெற்று இறந்தனர். இவள் கௌமார பிரம்மசாரிணியாய்த் தவம்புரிந்தனள். இவள் தவத்தினால் இளைத்துமேல் உலகத்தை யடைய எண்ணுகையில் நாரதர் குமாரி ஸமஸ்காரமில்லாத உனக்கு யோகங்கள் எப்படிக் கிடைக்குமென இவள் தன்னை மணப்பாருக்குத் தன் தவத்திற் பாதிகொடுப்பதாகச் சொல்லக் காலவருடைய புத்ரரான சிருங்கவான் இவளைநோக்கி ஒரு நாளே உன் கையைப் பிடிப்பேன் என அவ்வாறிசைந்து மணந்து அழகுள்ளா ளாயன்றிருந்து மறுநாள் தவத்திற் பாதிகொடுத்துத் தானீங்க இருடியுமவளை நீங்கித்தரியாது நல்லுலக மடைந்தனன். (பார-சல்லி.)

**குண்டகன்** — 1. சிவகணத்தவரில் ஒருவன்.
2. அயலான் மனைவியைப் புணரப் பிறந்தவனுக்கும், பார்ப்பினி, வேறு பிராமணனுக்குப் பெற்றபிள்ளைக்கும் பெயர்.

**குண்டசன்** — திருதராட்டிரன் குமரன்.

**குண்டதாரன்**—ஒரு மேகதேவன், ஒரு பொருளாசை கொண்ட வேதியன் பொருட்டு மாணிபத்ரனுடன் வாதிட்டிரந்து தர்மஞானமருள வேண்டினவன். (பார-சாந்.)

**குண்டத்தில் அக்னியிலக்ஷணம் அறுவகை**—விரியால் (50) அவை வர்ணம், சப்தம், கந்தம், சுவாலை, தூமம், ஈரணம் என்பன. வர்ணம் (11) சப்தம் (5) கந்தம் (13) சுவாலை (5) தூமம் (4) ஈரணமாகிய கதிபேதம் (12) வகை ஆக (50) வகை. (சைவ - பூஷணம்.)

**குண்டபேதி** — திரிதராட்டிரன் குமரன்.

**குண்டம்** — இது யாகாதி கிருத்தியங்களுக்கு உபயோகமாகப் பலவிதமாகத் திக்குகளுக்குத் தக்கபடி வேதாகமங்களில் கூறப்படுவது. இது நாற்கோணகுண்டம், யோனிகுண்டம், அர்த்தசந்திரகுண்டம், திரிகோண குண்டம், விருத்த குண்டம், ஷடச்ர குண்டம், பத்ம குண்டம், அஷ்டகோணகுண்டம் எனப் பலவிதப்படும். இக்குண்டங்களின் உருவம் வருணதேவ மந்திரங்களுக்குக் குடத்தினுருவம், வாயுதேவமந்திரங்களுக்கு த்வஜ உருவம், மகேந்திர மந்திரங்களுக்கு வஜ்ராயுதம்போன்ற வுரு. ஆக்னேயங்களுக்கு அக்நியின் எழு சிகையைப்போலும், மத்திம உத்தம வீர்யதேவதைகளுக்கு நாற்கோணம், அற்பவீர்யதேவதைகளுக்கு முக்கோணம், ஸ்திரீரூப

முள்ள தேவதைகளுக்கு யோனி குண்டம், ருத்ரதேவதாம்சங்களுக்கு அர்த்த சந்திர குண்டம், சாந்த தேவதைகளுக்கு வட்டகுண்டம், திரிமூர்த்திகளுக்கு ஐங்கோணம், கின்னரர்களுக்கு ஐங்கோணம், வித்யா, வித்யேச்வரர்களுக்குப் பதுமகுண்டம், ஸ்தம்பனத்திற்கு நாற்கோணம், தாபனத்திற்கு யோனிவடிவம், மாரணத்திற்கு அர்த்தசந்திரவடிவம் அல்லது பதினறுகோணம். சாந்திக்கு வட்டமாகிய குண்டம், உச்சாடனத்தில் அறுகோணம், புஷ்டிக்குப் பத்மகுண்டம், முத்திக்கு எண்கோணமும் ஆகும். இவற்றின் மேகலை, கண்டம், கோமுகம், செய்வகை முதலியவற்றைக் காமிகாதி ஆகமங்களில் பரக்கக் காண்க.

**குண்டலகேசி** — 1. இவள் ஒரு வைசிய கன்னிகை. இவள் மாளிகையில் விளையாடுகையில் ஒரு வணிகபுத்ரன் காளன் என்பானை யிவள் மணந்திருக்கையில் ஒரு நாள் பரிகாஸத்தால் கணவனை நீ கள்வன் என்னக் காளன் கோபங்கொண்டு ஒருநாள் ஒரு வியாஜங்காரணமாகத் தனிக்கொண்டு பர்வதத்திலேறி நீ என்னைக் கள்வனென்றமையி னுன்னைக்கொல்லத்துணிவேனென அவளும் அவனை முன் கொல்லவெண்ணி நான் சாவேனுகி லும்மை வலங்கொண்டு சாவேன் என வலங்கொள்வாள் போன்று கணவனைப் பர்வதத்திருந்து விழத்தள்ளினள். அவனும் இறக்க இவளும் கணவனைப் பிரிந்த துக்கத்தால் பல்லோரும் இயங்குதற்குரிய கோட்டை வாயிலில் நாவல் நட்டு அவரியங்காமை விலக்கி ஆங்குத் தன்னுடன் வாதிப்பாரைப் பெற்றபோது அதனைக்களைந் தெறிந்து வாதம் புரிந்து பரசமயங்களை வென்று காலமாயினள். இக்குண்டலகேசிக்குப் பௌத்த மத உபதேசஞ்செய்தவன், உஞ்சைமாநகரத்திருந்த அருக்கசந்திரன்.

2. இஃது தமிழிற்சிறந்த ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இதில் கூறப்படுவன புத்தவாதம். இஃது இப்பெயர் பெற்ற வணிககுலமகளிரின் வரலாறு கூறி அவள் பல சமயங்களை வென்று புத்தமதத்தை நிறுத்தினதைத் தெரிவிக்கும். இது ஒருபௌத்த பேய்க்கும் சைநப் பேய்க்கும் நடந்த வாதத்தைப் பற்றிக் கூறும் வாதநூல்.

**குண்டலபுரம்** — ஒரு வித்யாதர நகரம்.

**குண்டலபோகி** — துரியோதனன் தம்பி.

**குண்டலபோசன்** — துரியோதனன் தம்பி, பதிநான்காம்நாள் பீமனுல் இறந்தவன்.

**குண்டலன்** — ஒரு காந்தருவன், திருவேங்கடத்தில் மனைவியருடன் விளையாடி அரங்கதாசன் பிறப்பிற்குக் காரணமானவன்.

**குண்டலாதன்** — துரியோதனன் தம்பி.

**குண்டலி** — மந்திரங்களுக் குற்பத்திஸ்தானமாய்ச் சிவனது பரிக்கிரகரூபையான கிரியாசத்தி.

**குண்டலை**—1. விந்தியவந்தன் பெண், இவள் நினைத்தவிடங்களில் சரிக்கத்தக்க சக்தியுள்ளவள். இவள் கணவன் சம்பனுல் கொல்லப்பட்டான்.

2 மதாலசையின் நண்பி, தீர்த்தயாத்திரைபொருட்டு வருகையில் இருதுத்துவசனுல் பாதாளகேது என்னு மரக்கன் அடிபட்டு ஓடிவருதல் கண்டு சிறைபட்டிருந்த மதாலசைக்குச் சுபசெய்திகூற அரசன் காணும்படி பிலவழி புகுந்து அரக்கனது மாளிகையிற் சிறையிருந்த மதாலசையை யடைந்தவள்.

**குண்டவிதுண்டர்** — இவர்கள் பாபஞ்செய்த வேதியர்கள். இவர்கள் நரகலோகஞ் சென்று அவ்விடத்திலிருந்தே சிவபூசை செய்து நரக நீக்கமடைந்தவர்கள். (பதும புராணம்.)

**குண்டன்**—1. கத்ரு குமரன், நாகன்.

2. திருதராட்டிரன் குமரன்.

3. ஒரு சிவகணத்தவன்.

4. யானையுருக்கொண்டு மகோற்கடர் முன் வந்திறந்த அசுரன்.

**குண்டினபுரம்** — விதர்ப தேசத்து இராஜதானி. The ancient captal of vidarbna.

**குண்டுகட்பாலியாதனர்** — இவர் ஆதன் என்னுமியிற் பெயருடையவர். பாலி இவரது ஊர். ஆழ்ந்த கண்ணுடைமையிற் குண்டுக ணென்றும் அடைமொழி கொடுக்கப்பட்டார் போலும். இவர் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனைப் பாடிப் பரிசில் பெற்றவர். புறம்-௩௮௭. குறிஞ்சியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். முகம் புகு கிளவி பாடியவருள் இவருமொருவர். இவர் பாடியனவாக நற்றிணையில் உ௨0-ம் பாடலொன்றும், புறத்தி லொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. (புற - நா.)

**குண்டூர்க்கூற்றம்**—சோநாட்டின் ஒருபகுதி.

**குண்டை**—சுப்பிரர்தேவி,குமரர்வைகுண்டர்.

**குண்டையூர்க்கிழவர்**—ஒரு வேளாளர், இவர் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு நாடோறும் நெல்கொடுக்குந் திருப்பணியேற்று நடத்திவந்தனர். இடையில் க்ஷாமகாலம் வர நெல்கொடுக்குந் திருப்பணி முட்டுப்படுதல் எண்ணி விசனமடையச் சிவமூர்த்தி குபேரனுக்குக் குண்டையூர்க்கிழவர்க்கு நெல்தரக் கட்டளையிட்டனர். குண்டையூர்க்கிழவர் தமது வீடெங்கும் நெல்நிறைந்திருக்கக் கண்டு களித்து இந்த அற்புதத்தினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கறிவித்துச் சிவாநுக்கிரகத்தால் திருவாரூர்முழுதும் நெல் தந்தவர்.

**குண்டோதரன்**—1. கத்ருகுமாரனாகியநாகன்.

2, திருதராட்டிரன் குமரன்.

3. இவன், சிவமூர்த்திக்குக் குடைபிடிப்பவன். மதுரையில் திருவவதரித்த தடாதகை பிராட்டியாரின் திருமணத்தில் அம்மையார் தேவராதியர்க்கு விருந்திட்டு அளவிலாது மிகுந்த அன்னங்களைப் புசிக்க யாருங் கிடைக்கவில்லையென்று சோமசுந்தரபாண்டியராகிய சிவமூர்த்தியிடம் குறிப்பித்தனள். சிவமூர்த்தி லீலைகாரணமாக அருகிருந்த குண்டோதரன் வயிற்றில் ஊழித்தீயை யிருத்தி இந்தக் குடையாளுக்கு அன்னமிடுக என்றனர். அம்மையார், இவனென்ன சாப்பிடப் போகிறுனென்று அன்னமிடக் கட்டளையிட அன்னமிடுவோர் இருந்த எல்லா அன்னங்களையும், வேறு பாகமாகாத பொருள்களையுமிடப் பசி நீங்காது வருந்திப் பசிதணியச் சிவமூர்த்தியை வேண்டி அன்னக்குழியும் தாகநீங்க வையையாற்றையும்பெற்றுப் பசியும்தாகமும் நீங்கியவன்.

**குன்னுவர்** — தாராபுரம், காங்கேயம் பழனிமலை முதலிய இடங்களில் பயிரிடும் குடிமக்கள். இவர்கள் தங்களை வேளாளர் என்பர். இவர்கள் கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள குன்னூரிலிருந்து குடியேறினவராதலால் இப்பெயர் பெற்றனர். இவர்கள் கிராமாதிபதி மன்றூடி இவர்கள் பெரிய குன்னுவர் சிறியகுன்னுவர் என இருவகை.

**குதம்பைச்சித்தர்** — இவர் ஒரு சித்தர். இவர் பெண்களைப் பேய்களென எண்ணி உண்மையுணர்ந்து நன்மை யடைந்தவர். இவர் செய்தநூல் குதம்பைச் சித்தர்பாடல்.

**குதரன்**—1. குரோதகீர்த்தியின் குமரன்.

2. கத்ரு குமரன், நாகன்.

**குதன்**—சுபாரிசுவம் என்னும் மலையிலுள்ள அரசன்.

**குதிரை**—இது, கழுத்தும், காலும் நீண்டுள்ள பிராணி முதுகெலும்புள்ள பிராணி வர்க்கத்தைச் சேர்ந்தது. இதற்குப்பிடரியில் மயிர் உண்டு. தவடைகள் விசாலமாயும் பருத்தும் இருக்கும். காதுகள் நீண்டவை பிளவாத குளம்புள்ள பாதமுள்ளது. தலையில் கொம்புகள் கிடையா மேல் வாயிலும் கீழ்வாயிலும் பற்கள் உண்டு முன்பற்களாலும் பின்னரைக்கும் பற்களாலும் இரை தின்னும் மூக்கினல் மூச்சுவிடுமாதலால் ஓடுகையில் இளைக்காது. உதடுகள் தோலுந்தசையுமாக இருத்தலால் புல்லைப் பொருக்கித்தின்னும். இது அறிவும் சுருசுருப்புமுள்ளது. கருத்தறிந்து நடப்பது. இதன்வகை மட்டக்குதிரை, நாட்டுத்தட்டு ஆஸ்திரியகுதிரை, அரபிக்குதிரை, முதலியன. இதனினம் கோவேறு கழுதை, கழுதை, வரிக்குதிரை, பின்னவை பளுவையிழுப்பதற்கும், வண்டி யிழுப்பதற்கும், வயலில் உழுதற்கும் உதவும். இக்குதிரையினத்தில் பலவகை உண்டு. அவை பல தேசங்களில் பலவிதமாக இருக்கின்றன. இந்தியாவில் பெரிய குதிரை, மட்டக் குதிரை, நாட்டுத்தட்டு முதலிய. மற்ற நாடுகளில் த்ரோப்ரேட், போலோபோனி, ஷெட்லண்ட்போனி, க்ஹ்டஸ்டேல், யார்க்ஷயர் கோச்குதிரை, ஸப்லாக்பஞ்ச், ஷயர்குதிரை, காப், அரபிகுதிரை, வெலிஷ்போனி, டார்ட் மூர்போனி, கிளீவ்லாண்ட்பே, பெர்சீரன், ஹாக்னி, அமெரிகன்ட்ராடர், ஹண்டர், பெருபோனி, ஆஸ்திரியகுதிரை, முதலிய.

**குதிரைத்தறியனூர்** — குதிரைத் தறியென்பது ஒரூர்போலும் விஷயம் விளங்கவில்லை. இவர்பாலைத் திணையைப்பாராட்டிப் பாடியுள்ளார் இவர்பாடியது. நற்-உசுசு-ம் பாட்டு.

**குதிரைமலை** — இது தென் கன்னடத்திலுள்ள குதிரைமூக்கு மலை. (புற. நா.)

**குதிரைமறம்** — எய்யுந்தொழில் மாட்சிமைப்பட்ட பெரிய மதிலிடத்துப்பாயும் குதிரையது பகுதியைச் சொல்லியது. (பு. வெ.)

2. எறியும் வேற்படை யுடையான்றன் மாறுபாட்டினைச் செய்யும்பொருட் செறிந்த கலையினையுடைய குதிரையின் திறப்பாட்டைச் சொல்லியது. (பு. வெ.)

**நதிரையின் சுழிகள்** — (அச்வ ல க்ஷ ணங் காண்க.) பிரமரம் இடமுகம், வலமுகம் எனும் வேறுபாட்டையுடையது. பூரணநந்தம் நெற்றியில் இரண்டு சுழிகளும், மூன்ருவதாகத் தலையிலொரு சுழியும் விளங்கப்பெற்றது · இது சிறந்தது. சூரியன் முதுகெலும்பில் ஒரு சுழியுடையது. இது உடையானுக்கு மிக்க குதிரைகளைச் சேர்க்கும். சருவநாமம் இரண்டு கபோலங்களிலும் ஒற்றைச்சுழியுடையது இது கேடுதரும். சீவம் வலப்பக்கத்துக் கபோலத்தில் மாத்திரம் ஒருசுழி அமைந்தது. இதுபெரு நலந்தரும். இந்திராக்ஷம் செவியினடியில் இரட்டைச் சுழிகளுடையது. இது உடையானை வளர்க்கும்.

**துதோதரி** — கும்பகர்ணனது புத்திரனாகிய நிகும்பன் பெண்ணும் காலசஞ்சனுடைய பாரியாளும் விகஞ்சனுடைய தாயுமானவள் இவள் இமயமலையில் சிரத்தைவைத்தும் நிஷதமலையில் கால்நீட்டியும் சயனித்தவள். விகஞ்சனுக்குப் பால் ஊட்டியதால் அப்பால் சிதறி க்ஷீரநதியாயிற்று. மற்றொரு குமாரன் கரஞ்சன். இவள் கல்கியால் கொல்லப்பட்டாள். இவள் ஓர் அரக்கி. (கல்கி-புராணம்).

**குத்தன்** — யமனிடமுள்ள கணக்கன்.

**குத்புமினர்** — இது (கி. பி. 1206 - 1290) டில்லியையாண்ட அடிமை யரசர்களில் ஒருவனாகிய குட்புடீன் என்பவனால் டில்லியில் கட்டிய ஒருஸ்தம்பம். இது (250) அடிகள் உயரமுள்ளது.

**குநி** — சிதத்துவசன் குமாரன்.

**குந்தமர்** — ஒரு முனிவர். இவர் தம் மனைவியுடன் மானுருக்கொண்டு விளையாடிக் கொண்டிருக்கையில் பாண்டு மானெனநினைத்து எய்யப் பாண்டுவிற்குத் தன் மனைவியரைச் சேராதிருக்கச் சாபமளித்துயிர் விட்டவர்.

**குந்தயம்** — குந்தி பிறந்த தேசம். An ancient townof Malwa, the birth place of Kunte.

**குந்தலம்**—வடநாட்டில் பல்லாரிக்கணுள்ள நாடு. The ancient name of the Province in which Kuruko-de is situated. A portion of the Bellary District in the Madras Presideney.

**குந்தலன்**—ஒரு அரசன் காலவனிடம் கால அளவு வினவினவன்.

**குந்தளை**—ஒரு தெய்வமாது. விசுவசேனரைக் காண்க.

**குந்தி**—1 இவள் சித்தி அம்சம், குந்திபோசனுக்கு அபிமான புத்ரி. தேவமீடனுக்கு மாரிஷையிடம் பிறந்தவள். இவள் இளமையில் தந்தையாகிய சூரனை லேவப்பெற்றுத் துருவாசமுனிவர்க்குப் பணிவிடை செய்து அவர் அநுக்கிரகத்தால் ஆறுமந்திரங்கள் உபதேசிக்கப் பெற்று ஒரு நாள் தனித்து மாளிகையிலிருக்கையில் சூரிய மந்திரத்தை உச்சரித்துச் சோதிக்கச், சூரியன் இவளுக்குமுன் தரிசனந்தந்து அம் மந்திரபலத்தைத் கூறினன். குந்தி தான் கன்னியென, அவளுக்குத் தக்க பருவமளித்து அவளுடன் கூடினன் உடனே கவசகுண்டலத்துடன் குமாரன் ஒருவன் பிறக்க அக்குழந்தையை ஒரு பெட்டியிற் கிடத்தித் தனது முன்தானையில் ஒரு பாகத்தை அதிலிட்டு அருகிருந்த ஆற்றில்விட்டவள். இவனே பின்பு கன்னன் எனப்பட்டனன். கிருஷ்ணனுக்கு நல்லத்தை. பாண்டுவை மணந்து அவன் கட்டளைப்படி மந்திரபலத்தால் யமன் முதலியவர்க்குத் தருமனாதியரைப் பெற்றவள். கண்ணனேவலால் கன்னனிடஞ் சென்று தன்னைத் தாயெனச் சேலையுடுததித்தெரிவித்து நாகாஸ்திரம் அருச்சுநன்மீது ஒரு முறைக்குமேல் எய்யாமல் வேண்டி, கன்னன் வேண்டியபடி இறந்தபின் பாலூட்ட வரம் தந்து மீண்டு பாரதமுடிவில் அவ்வாறு செய்து பாரதயுத்தத்தில் இறந்தவர்க்குப் பாண்டவர் திலதர்ப்பணஞ் செய்கையில் முதலில் கர்ணனுக்குச் செய்யச் சொன்னவள்.

2. குந்தி போஜனுக்கு ஒருபெயர்.

3. குந்திபோஜ வம்சத்தில்காம்பியென்பவன்.

4. சசிபிந்து குலத்தவனாகிய கிருதிவின் குமாரன், விதர்ப்பன் பேரன்.

5. தர்மநேத்ரன் குமாரன், எ ஹ ய ன் பேரன்.

6. ஒரு தேசம்.

7. நேத்திரன் குமரன். இவன் குமரன் சோஹஞ்சி.

8. கிருதன் குமரன், இவன் குமரன் விருஷ்ணி.

9. சகுனி குமரன், இவன் குமரன் தேவாரதி.

**குந்திபுரி** — தற்காலத்தில் குவாலியர் என்று சொல்லப்படும் பட்டணம், மத்திய இந்தியாவிற்கு முக்யபட்டணம்.

**குந்திபோசன்** — யாதவ அரசன். பாரத முதனாள் யுத்தத்து அசுவத்தாமனுடன் போர் புரிந்தவன், குந்தியை வளர்த்தவன்.

**குந்தியர்கள்** — யாதவபேதம்.

**குந்துதீர்த்தங்கர்**-பதினேழாவது சைநதீர்த்தங்கரர், சூரசேந மகாராஜா குமரர். தாய் ஸ்ரீ காந்தை, சுவர்ணவர்ணம், 35-வில் உன்னதம். வைகாசிமீ பூர்வபக்ஷ பிரதமை கிர்த்திகை சநநம். 95,000வரு ஆயுஷ்யம், சுயம்பு முதல் கணதரர் (35) பெயர்.

**குபன்** — 1. கிருதயுகத்தில் ஜனங்களுக்கு அரசனில்லாததால் பிரமனால் திக்குப் பாலக அம்சமாய்ச் சிருட்டிக்கப்பட்டவன்; ததீசியை வச்சிரத்தாலெறிந்து அவரால் முடிமே லுதையுண்டவன். (காஞ்சி புராணம்). இவன் சரிதையை ததீசியைக் காண்க. இவன்தேவி மாலினி. (சு.) சையாதி குமரன் என்ப.

2. இவன் தருமமாய் அரசாண்டு வீரனென்பவனைப் பெற்றனன், அந்த வீரன் விதர்ப்பராசன் குமரியாகிய நந்தினியிடம் விவிம்சனைப் பெற்றான்.

**குபாதும்பார்** — இவர் மார்வாடதேசத்துக் குயவர், அரிபக்திமிகுந்தவர். இவர்நாடோறும் ஒவ்வொரு பாண்டஞ்செய்து முப்பது நாட்களுக்கும் முப்பது பாண்டஞ் செய்து சூளையிடையிட்டு வெந்தபின் விற்றுப் பாகவதர்க்கு அன்னமளித்து வருவர். ஓர்நாள் பெருமாள் இவரிடத் திருநூறு சாதுக்களுடன் விருந்தாகவரக் கும்பார் எதிர்சென்று உபசரித்துக் கையில் பொருளிலாமையால் ஒருவணிகனையடைந்து பொருள்கேட்க அவன் நீர் ஏழையாதலால் பொருள்தர வல்லீரல்லீர் ஆதலால் ஓர் கிணறு தோண்டித் தருவதாக வாக்களிப்பீரேல் தருவன்என அவ்வாறே யுடன்பட்டுப் பொருள்பெற்றுப் பாகவதர்க்கு அன்னமளித்தனர். பின் சொல்லியபடி கிணறெடுக்கச் சென்று நீரூற்றுந் தருணத்தில் மண்ணிடியக்கும்பார் பூமிக்குளகப்பட்டுக் கொண்டனர். கும்பா ரிறந்தனரென் றனைவருஞ் சென்றனர். மனைவியும் வீடு சேர்ந்தனள். பின் ஒருவருடம் பொறுத்து அவ்வழியிற் செல்லும் பாட்டைசாரிகள் ஆங்கு இரவில் தாளமிருதங்க வோசைகேட்டு அரசனுக் கறிவிக்க அரசன் பூமியைத் தோண்டக் கட்டளையிட்டனன். ஆண்டுப் பஞ்சாயுதங்களுடன் பெருமாள் முன்பு கும்பார்பஜனை செய்திருக்கக்கண்டு பெருமானை யாண்டிருந் தெடுத்துப் பிரதிட்டைசெய்து கும்பார்க்கு மடமொன்று சமைத்து இனிதிருக்கச் செய்தனன்.

**குபாண்டன்** — பாணுசுரனுடைய மந்திரி. இவன் குமரி சித்ரலேகை.

**குபேரன்**-1. விசிரவஸுமுனிவர்க்கு இளிபிலையிடமுதித்தவன். இதுபதுமகற்பத்தில்.

2. இவன், வராககற்பத்தில் காம்பிலி நாட்டிலிருந்த வேள்விதத்தனுக்குக் குணநிதியெனப் பிறந்து தந்தைதேடிய பொருள்களைச் சூதிலும் வேசைகள் பொருட்டும் செலவு செய்தனன் இவனது நடக்கைகளைத் தாய், மகனிடம் வைத்த அன்பால் கணவனுக்குத் தெரிவிக்காதிருந்தனள். இதனை யறிந்த தந்தை, தாயையும் குமரனையும் நீக்கி வேறு மணஞ்செய்து கொள்ளக் குணநிதி, பசியாற்றாது சிவராத்திரியில் சிவதரிசனஞ் செய்வாருடன் சிவசந்நிதானத்திற் சென்று சிவதர்சனஞ்செய்து பரிசாரகர் உறங்கும்வேளையில் சிவத்திரவியங் கவர எண்ணி விளக்கைத் தூண்டித் திரவியம் எடுத்துக்கொண்டு திரும்புகையில் இவன் கால் ஆங்கு உறங்கி இருந்தவர்மேல்பட அவர்கள் எழுந்து இவனைக் கொலைசெய்தனர். கொலையுண்டோனை யமபடர் பிடிக்கச் சிவகணங்கள் விலக்கிச் சிவராத்திரியில் சிவதர்சனஞ் செய்ததாலும், திருவிளக்குத் தூண்டிய புண்ணியத்தாலும் கலிங்கநாட்டில் அருந்தமன் புதல்வனாகிய தமன் என்பவனாகப் பிறப்பித்தனர். இந்தத் தமன், தவம்புரியச் சிவபெருமாள் என்னவேண்டுமென்ன உம்மைக்காணக் கண் வேண்டுமென்றனன். அவ்வகை யருள அருகிருந்த பிராட்டியைக் கண்டு ஒளியால் கண் மறைவுபெற்று மீண்டும் துதித்துப் பொற்கண்ணனாகவும், அளகைக்கு அரசனாகவும், அரனுக்குத் தோழனாகவும் பெற்றவன். இவன் விஞ்சையர் கின்னரர்க்கு அரசன். வடதிசைக்கிறைவன். (காசிகாண்டம்).

3. தன்னை வெருட்டிய சுக்கிரன் கர்வபங்கப்படச் சிவமூர்த்தியை வேண்டிக் கொண்டவன். பாத்மகற்பத்தில் தந்தை சொல்லால் இலங்கையை யிராவணனுக்குக் கொடுத்து அளகையாண்டவன்.

4. இராவணனுக்கு நான் தவத்தால் சிவனுக்குத் தோழனானேன் நீ தேவரை வருத்தாதை யெனத் தூதுவனிடத்துச் சொல்லி யனுப்பித் தூதுவர் கொலை யுண்ண வருந்தினவன்.

5. தனக்குக் கப்பங்கட்டிய இயக்கன் ஒருநாள் தன் மனைவியிடம் அந்த முடிப் பைக் கொடுக்கக் குபேரன் கோபித்து ஒரு வருஷம் மனைவியை நீங்கியிருக்கச் சாபமிட்டவன்.

6. அட்டவக்ரனுக்கு உபசாரஞ்செய்து பலநாள் விருந்தளித்தவன்.

7. இலக்குமிதேவிக்கு வை ச ய ந் த ங் கொடுத்தவன். இவன் தேவி சித்ரரேகை ; வாகனம் குதிரை, கிளி, நரன் ; ஆயுதம் கட்கம் ; மாலை சிரக்கதார், பூந்தோட்டம் சைத்திரரதம். இவன் புத்ரன் நளகூபரன். விமானம் புஷ்பகம்.

**குபேரதத்தன்** — சுரமஞ்சரியின் பிதா.

**குபேரதுங்கம்** — ஒரு தீர்த்தம்.

**குபேரமித்திரன்** — குணமாலையின் தந்தை.

**குப்சாதேவி** — திரிவக்ரையைக் காண்க. இவளுக்குக் குப்சை எனவும் பெயர்.

**குப்பித்தைலம்** — வாயகன்ற பெரிய பாத் திரத்தில் மணல் நிரப்பி அதினடியில் ஒரு த்வாரமிட்டுப் பாத்திரநடுவில் மருந்திட்ட புட்டியைத் தலைகீழாகத்திணித்து அடியில் புட்டியின் கழுத்திற்கு நேராகப் பாத்திரம் வைத்துப் புட்டியின் கழுத்தில் கம்பிநுழை த்துப் பாத்திரத்தைத் தொடவைத்து மேலெரிக்கின் புட்டியின் வாயில் தைலம் சொட்டும்.

**குப்பைக்கோழியார்** — இவர்தாம் பாடிய குறுந்தொகையில் குப்பைக் கோழியின் தனிப்போரினைத் தலைவியுள்ள நோய்க்கு உவமித்த பெருஞ் சிறப்புப்பற்றிப் பாடி னூர்க்கும் அதுவே பெயராக வழங்கினர் போலும். இவர் பெண்பாலாராக இருக்க லாம். (குறுந்தொகை.)

**குமட்டூர்கண்ணனார்**—இவர் தலைச்சங்கசாளி விருந்த புலவர்களிலொருவர். பாண்டவர் காலத்திருந்த முதல் வள்ளலாகிய அக்குரு ரனை - "போர் தலை மிகுத்த ஈரைம்பதின் மரொடு, துப்புத்துறை போகியதுணி வுடையாண்மை, யக்குரனனை யகைவண் மையையே." எனப் பாடி இருக்கின்றனர். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைப் பாடி உம்பற்காட்டு ஐஞ்நூறூர் பிரமதாயம் பெற்று (௬௰அ) யாண்டு தென்னாட்டுள் வருவதிற் பாகம் பெற்றவர். (பதிற்றுப் பத்து.)

**குமணன்** — 1. இளங்குமணன் சகோதரன் தன் தம்பியால் நாடுகோள்ளப்பட்டுக் காடு பற்றியிருந்தபொழுது பெருந்தலைச் சாத் தனாரிரப்பத் தன்தலைக்கு வாளைக்கொடுத் தவன். இதுபோன்ற ஒருகதை ஒப்பிலா மணிப்புலவர்காலத்துங்கூறுவர். (புற-நா.)

2 இவன் கடையெழு வள்ளல்களின் பிற்காலத்தில் இருந்தவன். இவன் மிக்க கொடையாளி, முதிரம் என்னும் மலைக் குத் தலைவன். இவனைப் பாடிய புலவர்கள் பெருஞ்சித்திரனர் பெருந்தலைச்சாத்தனர்.

**குமதி**--ஒரு அரக்கி, இவளை இந்திரன் கொலை புரிந்தனன்.

**குமரகுருதாச சுவாமிகள்** — இவர் யாழ்ப் பாணத்தவர் ; இராமேச்வரத்தை அடுத்த பாம்பனிலிருந்த துறவி ; சைவசாத்திரம் வல்லவர். இவர் நாலாயிரப்பிரபந்த விசா ரம் சைவசமய சரபம் எனும் நூலியற் றியவர். இவரைப் பாம்பன் சுவாமிகள் என்பர்.

**குமரகுருபரர்** — இவர் பாண்டிநாட்டில் ஸ்ரீ வைகுண்ட மென்னும் கைலாசபுரத்தில் வேளாளர் குலத்தில் ஏறக்குறைய (௩அ0) வருஷங்களுக்குமுன் சண்முக சிகாமணி கவிராயருக்கும் சிவகாமசுந்தரி யம்மைக் கும் நெடுநாள் புத்திரப்பேறிலாதிருந்து பல விரதங்கள் நோற்ற பலத்தால் பிறந் தவர். இப்பிள்ளை ஐந்து வயதாகியும் பேசாமையால் ஊமையென நிச்சயித்துத் தாய் தந்தையர் இருவரும் திருச்செந்தூர் சென்று வதனாரம்பமென்னும் ஸ்நான கட்டத்தில் ஸ்நானஞ் செய்து குறித்த நாளில் பிள்ளை பேசாவிட்டால் உயிர் போக்க நிச்சயித்தநாளில் முருகக்கடவுள், அர்ச்சகர் வடிவத்துடன் பிள்ளைக்குமுன் எழுந்தருளி நாவில் சடாக்ஷரம் எழுதித் தரிசனத்திற்கு வரும்படி கட்டளையிட்டு மறைந்தனர். பிள்ளையெழுந்து அம்மே, அப்பா என, தாய்தந்தையரை எழுப்பித் தரிசனஞ் செய்து கந்தர் கலிவெண்பா பாடினர். இவர் மதுரைமா நகர்க்குப் போக விரும்பிச் சென்று அவ்விடத்தில் மீனாக்ஷியம்மைப் பிள்ளைத்தமிழ்பாடி அக் காலத்திருந்த அரசராகிய திருமலைநாயகர் வேண்டுகோளின்படி தம்பியாகிய குமார கவி வாசிக்க நாளொன்றுக்கு ஒவ்வொரு பருவமாகப் பிரசங்கித்து வருகையில் வரு

கைப் பருவத்தில் மீனாக்ஷியே குழந்தையுருக்கொண்டு வந்து கேட்டு ஆனந்திக்கப் பிரசங்கித்து முடித்தனர். இவர் திருமலைநாயகர் வேண்டுகோளால் மீனாக்ஷியம்மைக் குறம் மீனாக்ஷியம்மை யிரட்டைமணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறிவிளக்கம் முதலிய பாடி முடித்துத் தருமபுர ஆதீனத்து ஸ்ரீ மாசிலாமணி தேசிகரை ஆசிரியராகப் பெற்று ஞானமடைந்து அவர் கட்டளைப்படி காசியாத்திரை செய்து சாஸ்வதி யநுக்கிரகத்தால் இந்துஸ்தானி பாஷை கற்று டில்லிபாக்ஷாவைக் காணச் சிங்கத்தில் ஏறிச்சென்று அவன் முன் பிரசங்கித்துச் சைவ சமயத்தைப் பொய்யென்ற துருக்கர்முன் பழுக்கக்காய்ச்சிய மழுவேந்தி மெய்ப்பித்துப் பாக்ஷாவிடம் இடம் பெற்று மடங் கட்டி, மீண்டும் தருமபுரம் அடைந்து ஆசாரியரைத் தரிசித்து அவர் உத்தரப்படி காசியிலிருந்து திருவடியிற் கலந்தனர். இவர் செய்த நூல்கள் கந்தர் கலிவெண்பா, மீனாக்ஷியம்மன் பிள்ளைத்தமிழ், கைலைக் கலம்பகம், மீ னா க்ஷி ய ம் மை க் குறம், மீனாக்ஷியம்மை யிரட்டை மணிமாலை, மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை, பண்டாரமும்மணிக்கோவை, காசிக்கலம்பகம், சகலகலாவல்லிமாலை முதலியன.

**குமரவேள்** — குமாரக்கடவுள், இவர் முதற் சங்கத்தில் ஒருவரா யிருந்தனர்.

**குமரன்** — 1. கலிங்கநாட்டுக் கபிலைநகரத்தரசன். (மணிமேகலை) (சிலப்பதிகாரம்.)

2. குமாரக்கடவுள்.

**குமரி** — வள்ளிநாய்ச்சியார் முதற்பிறப்பிற் பெற்றபெயர்.

**குமரிக்கோடு** — பரதகண்டத்தின் தெற்கின் கணுள்ள மலை. (சிலப்பதிகாரம்.)

**குமரியாறு** — 1. பரத கண்டத்தின் தெற்கிலுள்ள ஆறு. இது கடல் கொள்ளப்பட்டது. இதன் கரையில் புஷ்பஹாவலி எனுந் தெய்வம் எழுந்தருளி யிருக்கும். இது கடல் கொள்ளப்பட்டகாலத்து ஏழ்தெங்கநாடும், ஏழ்பனை நாடு முதலிய (சக) நாடுகள் அழிந்தன. (மணிமேகலை).

2. இந்தியாவின் தென்பாகத்திலிருந்து 2300 - வருஷங்களுக்குமுன் கடல்கொள்ளப்பட்டது. இது சந்திரகுப்த தூதராய் அக்காலத்து இந்தியாவிற்கு வந்த மெகஸ்தனீஸ் எழுதிய குறிப்பாலறியலாம்.

"Megasthenes says that the island (Ceylon) was separated from the main land (India) by a river." Dutts civilisation in Ancient India. Paat-1, Page-219. இதனால் இந்தியாவின் தென் பாகத்தில் குமரியாறு இருந்த தென்றறிக.

**குமாண்டூர் அப்பை** — தேசிகர் திருவடிகளில் ஆச்ரயித்தவர்.

**குமாண்டூர் ஆச்சான்**—நயினாராசாரியர் திருவடி சம்பந்தி.

**குமாண்டூர் ஆச்சான்பிள்ளையப்பை**—பிரமதந்திரசியரின் திருவடி சம்பந்தி.

**குமாண்டூர் பிள்ளை**—எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர், தேசிகரை யாச்ரயித்தவர் என்பர். (குருபாம்பரை).

**குமாரதுலோதுங்கன்**—சங்கர ராஜசோழன் குமரன்.

**குமாரக்கடவுள்** — 1. சிவமூர்த்தி யோகத்தெழுந்தருளியிருக்கையில் தேவர்வேண்டுகோளால் நெற்றி நேத்திரத்திருந்து ஆறு தீப்பொறிகள் சிதறின. அவற்றை அக்கி சிவமூர்த்தியின் கட்டளையாற் கங்கையில் விட்டனன். கங்கை வெப்பஞ் சகிக்காது சாவணத்தில் வைத்தனள். அந்த இடத்திலிந்த ஆறு பொறிகளும் ஆறுருக்களாய்க் கிருத்திகை முதலறுவர் பாலூட்ட வளர்ந்து உமாதேவியார் எடுக்க ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களுமாய் ஒருருவாய் எழுந்தருளி யிருந்தவர். இவருடைய ஆறு திருமுகங்களும், முற்றறிவு, அளவிலின்பம், வரம்பிலாற்றலுடைமை, தன்வய முடைமை, பேரரு ளுடைமை, இயற்கையறிவு என்னும் ஆறு குணங்களாம். திருமேனி அருளுரு, இவரது ஆயுதம், தோமரம், கொடி, வாள், குலிசம், அம்பு, அங்குசம், மணி, தாமரை, தண்டம், வில், மழு, வேல் இவை பன்னிரண்டு காத்திலுள்ளன. வேல் தவிரப் பதினொரு ஆயுதங்களும் பதினொரு உருத்திரர். வேல் மூன்று சத்திகளின் உரு. இது நாததத்துவம், வாகனம் மயில், இது விந்துதத்வம், இரண்டு நாய்ச்சிமாரும் சிற்சத்தி, பாாசத்தியர். இவர்க்குச் சேவற்கொடி. இதனை ஆண்டலைக் கொடியென்ப, தலை ஆண்தலையென்றும் மற்றது சேவலுருவின தென்றுங் கூறு

வர். இவர் இந்திரனிடம் தம் வலிமை
யைத் தெரிவித்து அவனுக்கு விச்வரூப
தரிசனந்தந்து இந்திரனாற் செய்விக்கப்
பட்ட மகாமண்டபத் தெழுந்தருளி அபி
ஷேகங்கொண்டு தேவசேநாபதி பட்ட
மடைந்து கயிலையி லெழுந்தருளி யிருந்
தனர். நாரதர்செய்த வேள்வியில் பிறந்த
வெள்ளாடு உலகத்தைத் துன்பப்படுத்த
தேவர் வேண்டுகோளால் அதை வீரவாகு
தேவரை ஏவிப் பிடித்துவரச் செய்து
அதனை வாகனமாகக் கொண்டு கயிலையில்
வீற்றிருக்கும் நாட்களில், ஒருநாள் சிவ
மூர்த்தியைச் சேவித்துச் செல்லும் தேவர்
கூட்டங்களில் ஒருவனாகிய பிரமதேவன்,
கந்தமூர்த்தியைப் பணியாது போகக்கண்டு
பிரமனை யழைத்து நீர் என்ன தொழில்
செய்வதென்று வினவினர். பிரமன் நான்
வேதங்களை யுணர்ந்து சிருட்டி முதலிய
தொழில்க ளியற்றி வருபவன் என்று
இறுமாந்துகூற, கந்தமூர்த்தி வேதத்தின்
ஆதியாகிய பிரணவத்திற்குப் பொருள்
வினவ அதற்கு விடைகூற அறியாது
மயங்கினன். அதனால் கந்தமூர்த்தி பிர
மனைச் சிரத்திற் குட்டிக் கந்தமாதனத்திற்
சிறையிட்டனர். சிவபிரான் பிரமனை
விடும்படி கட்டளையிடச் சிறைநீக்கிச் சிவ
மூர்த்தி பிரணவத்திற்குப் பொருள்கேட்க
விடையீந்து விஷ்ணுமூர்த்தியின் குமரிக
ளாகிய சுந்தரி, அமுதவல்லி யென்பவர்
க்கு நீங்கள் இந்திரனிடத்தும் சிவமுனிவ
ரிடத்தும் பிறந்திருங்கள் நாமுங்களை மண
க்கின்றனமெனத் திருவாய்மலர்ந்து திருக்
கைலையில் எழுந்தருளி யிருந்தனர். தே
வர் வேண்டுகோளால் கந்தமூர்த்தி சிவ
மூர்த்தியின் கட்டளையேற்று அசுருடன்
யுத்தத்திற்கு யத்தனஞ் செய்து வீரவாகு
தேவரை ஏவ, அவர் தாரகாசுரனுடன்
யுத்தஞ்செய்ய ஆற்றாது மூர்ச்சித்ததறி
ந்து அத்தாரகனை வேலாயுதத்தாற் கொலை
புரிந்து மாயைசெய்த மலையுருக்கொண்ட
கிரவுஞ்சனைப் பிளந்து நவவீரரை மூர்ச்
சை தெளிவித்து எழுப்பிப் பகைவர் இல்
லாமையால் மண்ணியாற்றங்கரை வந்து
சேர்ந்து அங்கிருந்து திருச்சேஞ்ஞலூ
ரடைந்து சிவபூசை முடித்துப் பாசுபதம்
பெற்று அங்குத் தவஞ்செய்திருந்த பராச
புத்திருக்கு அநுக்கிரகஞ் செய்து திருச்
செந்திலில் எழுந்தருளியிருந்து சயந்தன்
கனவிடைத் தோன்றித் தேற்றினவர்.

வீரவாகுதேவர் முதலியோர் பானுகோ
பன் ஏவிய மோகனாஸ்திரத்தால் மயங்கி
யிருந்தகாலத்துத் திருவுளத்தறிந்து மோக
னாஸ்திரப் பிரயோகஞ் செய்து போக்
கினவர். இரண்டாநாள் சூரபதுமனுடன்
போரிட்டு அவனேவிய தேவாஸ்திரங்
களின் வலியடக்கி அவனைப் பின்னிடச்
செய்து சிங்கமுகாசுரன், வீரவாகு முத
லியவரைக் கட்டிக் கடலில் இட அவர்க
ளைத் திவ்யாஸ்திரப் பிரயோகத்தால் மீட்
டும், சிங்கமுகாசுரன் விழுங்கிய பூதரை
அவன் முதுகில் தொளையிட்டு வெளிப்
படுத்தியும், வெட்டவெட்டத் தளிர்க்கும்
ஆயிரம் சிரங்களையும் இரண்டாயிரம் கரங்
களையும் பலமுறை வெட்டி, கடைசியி
னுங் கரித்துத் தளிர்க்காமலடக்கி, வேலா
யுதத்தால் அவனது உயிரைப் போக்கின
வர். சூரபதுமனுடன் யுத்தஞ்செய்து அவ
னைப் பதாதியாக்க, அவன் மாயையின்
போதனையால் இந்திரஜாலத் தேரைக்
கொண்டு சஞ்சீவியா லுயிர்ப்பித்த பானு
கோபன், சிங்கமுகன், தருமகோபன் முத
லிய சேனாவீரராகிய இராக்கதருடன் யுத்
தஞ் செய்யப் பாசுபதத்தால் மீளக்கொ
ன்று, சூரன்கொண்ட மாயாவுருக்களனைத்
தையும் தக்க ஆயுதவகையால் கண்டித்து
அவன் கொண்ட மாமரவுருவை வேலா
யுதத்தா லிருபிளவாக்க அவன்கொண்ட
வரபலத்தால் மீண்டும் நல்லுருவுடன் வர
அவனை வேலால் இருபிளவாக்கினர். அப்
பிளவுகொண்ட உரு மயிலும் சேவலுமாக
அந்த மயிலை வாகனமாகக் கொண்டும்
கோழியைக் கொடியாகப் பிடித்தும் புவ
னங்களனைத்தும் நடுங்கவலம்வந்துதேவர்க்
கருள்புரிந்து தேவர் சிறைநீக்கி அவுண
ராலிறந்த பூதகணத்தை யெழுப்பி வருண
னால் மயேந்திர முதலிய அவுணர் புரங்
களை அழிப்பித்துத் திருச்செந்திலில் எழுந்
தருளிச் சிவபூசை செய்து அவ்விட
மிருந்து திருபபரங்குன்றடைந்து பராச
முனிவர் குமரர் அறுவருக்கும் யோகம்
அருளிச்செய்து தேவேந்திர குமரியாகிய
தெய்வயானையை மணந்து விண்ணகர்
குடியேற்றித் திருப்பரங்குன்றமர்ந்து நார
தரால் வள்ளிநாய்ச்சியாரது அழகு முத
லியவற்றைக் கேள்விப்பட்டு வேடுருக்
கொண்டு அவளுடன் வார்த்தையாடிக்
கொண் டிருக்கையில் வேடர் வர வேங்
கைமரமாய் நின்று அவர்கள் சென்ற

பிறகு பழையபடி வேடராயிருந்து பின்னும் அவர்கள் வர விருத்த சந்நியாசியாய் அவர்களை ஆசீர்வதித்தனர். வேடர் இந்தச் சந்நியாசி நமது வள்ளிநாய்ச்சியாருக்குக் காவலாளியாவர் என்று காவலிடக் காவலிருந்து தாகம்வேண்ட வள்ளிநாய்ச்சியாருடன் சென்று சுனையிலிருக்கையில் விநாயகரை நினைக்க விநாயகமூர்த்தி யானையுருக்கொண்டு வந்தனர். யானையைக்கண்ட வள்ளிநாய்ச்சியார் பயந்து விருத்தரைத் தழுவக் குமாரக் கடவுள் தமது உண்மையுருக்காட்டிக் களிப்பித்து வள்ளியை மணந்து சென்றனர். வேடர், வள்ளிநாய்ச்சியாரைக் காணுதவராய்த் தேடிச்சென்று கண்டு கோபித்துக் கந்தமூர்த்தியுடன் போர்செய்து மாண்டனர். வள்ளிநாய்ச்சியார் வேண்டுகோளால் கந்தமூர்த்தி வேடரை உயிர்ப்பித்துத் தணிகையில் எழுந்தருளி யிருந்தனர். ஒரு காலத்தில் பகீரதன்பொருட்டு வேலையேவிக் கோரனைக் கொல்வித்தவர். வீரவாகு தேவருக்கு ஞானோபதேசஞ் செய்து விச்வரூபதர்சனந் தந்தவர்.

2. குழந்தையா யிருக்கையில், சிவன், பார்வதி, கங்கை, அக்னியிவர்கள் ஓரிடத்தில் ஒருங்கிருந்து நால்வரும் தங்களில் எவரிடத்தில் குமாரக்கடவுள் வருவானென எண்ணினர். இவர்களது எண்ணமறிந்த குமாரக்கடவுள் தம்மை ஸ்கந்தர் சாகர், விசாகர், நைகமேயர் என நான்காகச் செய்துகொண்டு நால்வரிடஞ் சென்றனர். (பார-சல்லி.)

**குமாரக்கடவுள் வாகனம்** — ஆடு, யானை, மயில், ஆயுதம், - வேல், கொடி-சேவல், தேவிமார் - தெய்வயானி, வல்லிநாயகி மாலை - நீபம், சகோதரர்-வீரவாகு முதலியோர்.

**குமாரசரஸ்வதி** — இவர் ஒரு புலவர், இவர் விஜய நகரத்தரசராகிய கிருஷ்ணதேவராயர் காலத்தவராக இருக்கலாம். அவரை இப்புலவர் புகழ்ந்திருக்கிறூர். "கலிங்கமிழந்து நதிக்கைச் சங்கந்தோற்று, மெலிந்து கடகந்நழுவ வி்ட்டாள்—மலிந்த மலர்ப்,பொன்னிட்டமானகிட்ணபூபாலாவுன்றனக்குப், பின்னிட்ட வொட்டியன் பொற்பெண்" இவரை யபிராமன் என்போன் நாலு பாஷையிலும் பாடுவிரோ வென்ன பாடியது. "கூத்தாடிலஞ்சகொடுக்காஅரோபேட்டிச்,சோத்தாட்டாவைவேசித்தொண்டனே—ஆத்தான அந்த விழுப்புரமும் அம்பி நகருங்கெடுக்க, வந்தகுலாமாவபிராமா." (த-நா. ச.)

**குமாரதாரிகை** — திருவேங்கடத்திலுள்ள தீர்த்தம்.

**குமாரதேவர்** —இவர் கன்னட தேசத்தரசர், சிலநாள் அரசுசெய்து துறவுபூண்டு பேறையூர்ச் சாந்தலிங்கசுவாமிகளை யாசிரியராகக்கொண்டு அடிமைபூண்டு ஆசாரியர் சொற்படி விருத்தாசலத்தி லிருந்து சடாமுனிக்குச் சாபம்போக்கிப் பெரிய நாயகியம்மை பாலுண்பிக்க வுண்டு சாளிக்குத் திருவடி தீக்ஷையும், குஷ்டரோகிக்கு ரோகநிவர்த்தியும் புத்திரப்பே றில்லாதார்க்குப் புத்திரப்பேறும் அளித்து ஒரு அரசடியில் வசித்துத் திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளுக்கும், ரெட்டிச்சிதம்பர சுவாமிகளுக்கும் அருள்புரிந்து பரிபூரணமடைந்தனர். இவர் செய்தநூல் மகாராசா துறவு முதல் (௰௬) சாத்திரங்கள்.

**குமாரபிரமசாரி** — பூப்பிரதக்ஷணஞ்செய்யச் சென்ற குமாரக்கடவுள் வருதற்குமுன் விநாயகர் திருமணமுடியக் கண்ட குமாரக் கடவுள் கோபித்துக் கைலைநீங்கிக் கிரவுஞ்சகிரி சென்று தங்கினதால் வந்தபெயர். (சிவமகாபுராணம்.)

**குமாரமலைமருந்தர்**—1. பச்சைகந்த தேசிகராதீனத்தவர். திருத்தினைநகர்ப்புராணம் பாடியவர்.

2. துறையூ ராதீனத்தவர் திரிசூலகிரி புராணம் பாடியவர்.

**குமாரவனம்** — இவ்வனம், பார்வதிதேவியாரின் ஏகாந்தவனம். இதில் கட்டளையின்றிப் புருஷர் செல்லொண்ணுது. அங்ஙனஞ் செல்வரேல் பெண்ணுகக் கடவர் என்ற சிவாஞ்ஞை கொண்டது. இதில் இளன் அல்லது சுத்துய்மனன் சென்று இளையாயினுன்.

**குமாரன்** — 1. அக்நியென்னும் வசுவின்புத்திரன்.

2. கந்தமூர்த்தி.

**குமாரபுரி** — திருச்சேஞ்ஞலூர், இது குமாரக்கடவுள் தாருகனுடன் யுத்தஞ்செய்து தங்கிய இடம்.

**குமாரீ**—ருக்ஷபர்வதத்திற் பிறக்கும் ஒருநதி.

**குமாலன்** — பிரகலாதனைக் காண்க.

**குமிழிஞாழார்நப்பசலையார்** — இவர் ஒரு பெண்கவி. கடைச்சங்கத்தார் காலத்தவர். இவர் பெயர் விளங்கவில்லை. பசலை யென்

பது கணவனை நீங்கிய அரிவையர்க்குண்டாம் ஒளிவேறுபாடு. ந - இடைச்சொல் இவர் ஊர் குமிழிஞாழாராக இருக்கலாம். இவர் மருேக்கத்து நப்பசலேயாரின் வேறு போலும். (அகம் - கசு௦.)

**குமு** — விஷ்ணுதிக்பாலகன்.

**குமுணன்**-ஒப்பிலாமணிப் புலவரைக் காண்க.

**குமுதம்** — 1. நிருதி திக்கிலிருக்கும் பெண் யானை.

2. ஒரு பர்வதம்.

**குமுதர்** — சேனைமுதலியார் கணதிபதியரில் ஒருவர். இவரே, மதுரகவியாழ்வாராகத் திருவவதரித்தவர்.

**குமுதவதி** — 1. விமரிசனைக் காண்க.

2. குசன், கங்கையில் நீர் விளையாடிய காலத்து அவனது கங்கணம் கங்கையில் விழ அதனைக் கவ்வி அவரிடம் ஆசை கொண்டு மணந்த நாககன்னிகை.

3. விந்தியபர்வதத்துற்பத்தியாகும் நதி.

**குமுதவல்லி** — திருமங்கையாழ்வாருக்கு மனைவி. இவள் ஆம்பலோடையிற் பிறந்து ஸ்ரீவைஷ்ணவ வைசியனுல் வளர்க்கப்பட்டுச் சக்கிராங்கிதமில்லாத திருமங்கைமன்னனைச் சக்கிராங்கிதராக்குவித்துத் திருமணஞ் செய்துகொண்டவள்.

**குமுதன்** — 1. இரண்யரோமன் அல்லது இரண்யரேதஸுக்குக் குமரன்.

2. விஷ்ணுபடன்.

3 ஒரு இருடி. பத்தியன் மாணுக்கன்.

4. ஒரு வாநரவீரன்.

5. ஒரு அரக்கன்.

6. சிவகணத்தலைவரில் ஒருவன்.

7. சண்முகசேநாவீரன்.

8. ஒரு நாகன்.

9. ஒரு அரசன் சதுர்த்தசிவிரத மநுஷ்டித்துச் சுவர்க்க மடைந்தவன்.

**குமுதா** — ஒரு மாயாதேவி.

**குமுதாக்ஷன்** — 1. விஷ்ணுபடன்.

2. ஒரு வாநரவீரன்.

**குமுதை** — மஞ்சுளையைக் காண்க.

**குமுர்தா** — தக்ஷன் பெண், தருமன் தேவி.

**கும்பகர்ணன்** — விசிரவசுவிற்குக் கேகசியிட முதித்த குமரன், இராவணன் தம்பி. இவன் பிரமனையெண்ணித் தவம் புரிகையில் தேவர், பிரமனைநோக்கி, வரங்கொடாதிருக்கவும் சரஸ்வதியைத் துதித்து அவன் நாவிலிருந்து தூங்க வரங்கேட்கவுஞ் செய்தனர். இவன் அப்படியே கேட்டு ஐராவதத்துடன் இந்திரனையும் அட்டதிக்கசங்களையும் பின்னிடச் செய்தவன். இவன் உறங்குகையில் இவனை எழுப்புந் தூதர் ஆயுதமுதலிய கொண்டு அடித்து எழுப்புவர். இராவணன், ஸ்ரீ ராமமூர்த்தியிடம் யுத்தந் தொடங்குகையில் சீதையை விட்டுவிடின் நாம் பிழைக்கலாமென இராவணனுக்கு வெகுவாய்ப் புத்தி போதித்து அவன் கோபிக்க இராமமூர்த்தியிடம் யுத்தத்திற்கு வந்தவன். விபீஷணன், இராமமூர்த்தியிடம் அடைக்கலம்புகுந்த செய்தி கேட்டு விபீஷணருக்கு நீதி கூறி அவரை இராமரிடமே அனுப்பினவன். வசந்தனென்னும் வாநரனைக் கசக்கிச் சந்தனமிட்டவன். நீலனைச் சோர்ந்துவிழச் செய்து அங்கதனை ஒருகுத்தில் மூர்ச்சையாக்கி அனுமனெறிந்த மலையாலடிப்பட்டுச் சளையாதவன். மல்லயுத்தத்தில் இளைத்த சுக்ரீவனைத் தூக்கிக்கொண்டு இலங்கை நோக்கிச் செல்லுகையில் அவன் கடித்ததனுல் காதையு மூக்கையு மிழந்தவன். அதியுக்ரமாய்ச் சண்டைசெய்து இராமபாணத்தால் தனித்தனி கைகள் கால்களறப்புண்டு இராமமூர்த்தியைத் தன் தம்பியைக் காக்கவும் தன்தலை கருங்கடல் மத்தியில் விழவும் வேண்டிக்கொண்டு இறந்தவன். சிவமூர்த்தியிடம் பெற்ற சூலமும், கவசமும் உடையான். இவனுக்குச் சிங்கக்கொடி, இவன் பூருவம் விஷ்ணுமூர்த்தியால் மடிந்த மது என்பவன்.

**கும்பகமகாராசா** — மல்லிநாத தீர்த்தங்கரின் தந்தை. தேவி, பிரசாவதி. சுவர்ண வர்ணம். (௩௦) வில் உன்னதம்.

**கும்பகன்**—விதேகபுரியிலிருந்த ஒரு இடையன். இவன் வீட்டில் தாரகயுத்தத்திலிறந்த காலநேமிபுத்ரர் எழுவரும் இடபங்களாய்ப் பிறந்ததாகவும் அவைகளைக் கண்ணன் தழுவிக் கொலைபுரிந்து அவன் புத்திரியை மணந்ததாகவும் கூறுவர். கும்பாண்டனுக்கும் இக்கதை யுண்டு.

**கும்பம்** — இருபது துரோணம் கொண்டது. (மது.)

**கும்பன்** — 1. பிரகலாதன் குமரன், இரண்யன் பேரன்.

2. இராவணனுக்கு நண்பன், சித்தர்களைச் சிறையிட்டவன். சுக்ரீவனுற் கொல்லப்பட்டவன்.

3. தத்தாத்திரயன் குமரன்.

4. சண்முகசேநாவீரன்.

5. வாநரவீரன்.

6. கும்பகர்ணன் குமரன்.

7. ஒரு அரசன். இவன் பொருட்டுத் ததீசி முனிவர் விஷ்ணுவுடன் மாறுகொண்டு அவர் சக்ரத்தை மயக்கினர்.

8. இவன் ஆருணியாசனுக்குக் கண்மணி போன்றவனும், திண்ணிய அறிவையுடைய வனுமாகிய ஒரு வீரன். பாஞ்சால ராசன் இறந்த பின்பு கோசம்பி நகரத்தே இவன் கொல்லப்பட்டான். (பெ. கதை.)

**தும்பஸ்தாபனம்** — இது ஈச்வரதேகமாகும் பொருட்டுக் கும்பத்தின் வஸ்திராதிகளைத் தேகத்தின் சர்மாதிகளாக நிரூபித்திருக்கிறது. எவ்வகையெனின் கும்பத்தின் மீதிட்ட தேங்காய் சிரமாகவும், மாவிலைகள் சிகையாகவும், கும்பத்தில் போர்த்த வஸ்திரமானது தேகத்தைப் போர்த்திருக்கும் தோலாகவும், கும்பம் சிவக்க மேலே பூசிய மண்ணானது செவ்விய உதிரமாகவும், குடத்தின் மண் மாம்சமாகவும், கும்பத்தில் நிறைந்த தண்ணீர் மேதையாகவும், தற்பகூர்ச்சம் எலும்பாகவும், கும்பத்தின் நாற்புறமுஞ் சுற்றப்பட்ட நூல் நரம்பாகவும், கும்பத்தினுள் இட்ட பொன் முதலிய இரத்தினங்கள் சுக்லமாகவும், நியாஸஞ் செய்யப்பட்ட மந்திரம் உயிராகவும், கும்பத்தடியில் படிப்படியாக இடப்பட்ட நவதான்யங்கள் கும்பமூர்த்தியாகிய ஈச்வரனுக்கு ஆசனமாகவும், ஆகமங்களில் கூறப்பட்டிருக்கிறது. மாரியம்மை பொருட்டுச் சிங்காரிக்கும் கரகமும் இத்தன்மைத்தாம் ஆயினும். அதில் வேம்பை மாரிக் குரிமையாகக்கொண்டு கலசம் ஸ்தாபிப்பர். (சி-சாரா.)

**தும்பாண்டன்** — 1. பாணுசுரன் மந்திரிகளில் ஒருவன். இவனுக்குக் கபந்தன் என்றொரு பெயருண்டு.

2. யசோதைக்குத் தம்பி, நக்னசித்தின் பசுக்களைக் காக்கிறவன், இவனிடம் ஏழு விடைகளிருந்தன. அவற்றைக் கண்ணன் சத்தியவதிபொருட்டு அடக்கினர். இவன் குமரி உஷையின் தோழியாகிய சித்திரரேகை.

**தும்பானு**—ஒரு அரக்கன், இராவணனுடன் சேர்ந்தவன்

**தும்பி** — சுபார்சுவன் குமரன்.

**தும்பிநசி** — 1. சுமாலியின் பெண், கரதூஷணன் தாய். இவளை இராவணனில்லாத காலத்து மது என்னும் அரக்கன் சிறையெடுத்தனன். இராவணன் இச் செய்தியைக் கேள்வியுற்றுக் கோபித்து யுத்தத்திற்குச் செல்ல இவள் இராவணனை அவனுடன் யுத்தஞ் செய்யாதிருக்க வேண்டியவள்.

2. அங்காரவருணன் தேவி.

**தும்போதான்** — சிவகணத்தவன், சிவமூர்த்தியிட பாருடாருகையில் முதுகில் திருவடிவைத்தேற இடங்கொடுத்து நிற்பவன்.

**தும்மிடி சட்டி வேளாளர்**—வட ஆர்க்காட்டு மானுயல் எனும் புத்தகத்தில் இவர்கள் வேளாளரின் மரணப் பிரயோஜனங்களில் நெருப்புச் சட்டிக்கொண்டுடன்செல்வோர் எனக் கூறப்பட்டிருகிறது. அல்லது இப் பெயர் அவர்களுக்குத் தங்கள் நெருப்புச் சட்டி (கும்பிடி சட்டி)யைத் தாங்களே எடுப்பவர் எனவுமாம். (தர்ஸ்டன்.)

**துயக்கோண்டான்** — நக்கீரரைக் காண்க.

**துயவன்**—வைசிய பெண்கள் கரவில் பார்ப்பானைக் கூடிப்பெற்ற குமரன். (அருணகிரிபுராணம்.)

**துயிலாலுவம்** — இமயமலைக் கருகிலுள்ள சிவத்தலம். (சிலப்பதிகாரம்.)

**துயிலுவர்** — இடக்கை முதலிய வாச்சியம் வாசிப்போர்.

**துயில்** — காக்கையினுருப்போன்ற பறவை. இதில் கருங்குயில் வரிக்குயில் என இருவகை. இது இனிய ஓசையுடைய பக்ஷி. இது முதுகுநீண்டு நீலநிறமாகவும், வாலுமிறகும் சுற்றிக் கூடிய கருநிறமாகவும், மூக்கு நீண்டும் உள்ள பக்ஷி. இது வசந்த காலத்தில் இனிய குரலுடன் கூகூ எனக் கூவும். இதற்குக் கூடுகட்டத் தெரியாததலால் காக்கையில்லாச் சமயத்தில் காக்கையின் கூண்டில் முட்டையிட்டுப் போய் விடும். காக்கையே இதன் முட்டையைப் பொரித்துக் குஞ்சைக் காக்கும். பூச்சி பழங்களைத் தின்னும். தன் குஞ்சுகளுக்குப் பருவம் வந்தபின் குரல் காட்டி அழைத்துச் செல்லும்.

**துய்யகர்** — வித்யாதர உலகத்துள்ளதெய்வ வகுப்பினர். குபேரன் நிதிக்குக் காவலர்.

**துய்யகர் உலகு** — தாம் சம்பாதித்த பொருளைப் பிறர்க்குதவிப் புண்ணியம்பெறுமல் தாமே அனுபவித்திறந்தவரும், பிறர்க்குத் துன்பம் தாராதவரும் பெறும் உலகம்.

**துய்யரோகம்** — இது ஆண்குறியி லுண்டாம் ரோகம். இது வெகு புருஷ சஞ்சாரத்தாலும், இருதுி மேகங்களாலும், உண்டான ரோகமுள்ள பெண்களைப்

புணர்தலால் உண்டாம் ரோகம். இது (உ௩) வகை. வாத, பித்த, சிலேஷ்ம, திரிதோஷ, ரத்த உபஸ்தம்பங்கள், அரிசோரோகம், சரஷபிகாரோகம், அவமந்த ரோகம், கும்பிகாரோகம், அலசிரோகம், உத்தபாரோகம், பீடகரோகம், புஷ்கரிகா ரோகம், சம்வியூடரோகம், மிருதிதவிரண ரோகம், அஷ்பீலிகாரோகம், அவிபாடித ரோகம், நிருத்தமணி ரோகம், கிரதித ரோகம், பரிசஆனிரோகம், சதபோனக ரோகம், தொக்குப்பாகரோகம், மாம்சபாக ரோகம், ரத்தாற்புதரோகம், மாம்சாற்புத ரோகம், வித்திரதிரோகம், திலகாலக ரோகம் முதலியவாம்.

குரங்கன் — ஒரு நாகன்.

குரங்கு — இது, மனிதனையொத்த பிராணி. இதற்கு மனிதர்க்குள்ள விரல்களைப்போல் நான்கு கைகளிலும் கால்களிலும் ஐந்து பலமான விரல்களுண்டு. அக் கைகளே யன்றி வாலும் கைபோல் உதவுகிறது. குரங்கின் தேகமுழுதும் மயிரடர்ந்திருக்கிறது. இது நிற்கும்போது மனிதனைப் போல் நிற்கும். இது உஷ்ணப்ரதேசங்களில் மரம் அடர்ந்த காடுகளில் வசிக்கும். கந்தமூல பதார்த்தங்களையும் பூச்சிகளையுந் தின்று ஜீவிக்கும். இவை பலவகைப்படும். **சாதாரண குரங்கு, வாலில்லாக் குரங்கு, குட்டைவாற்குரங்கு, கருங்குரங்கு.** குரங்குகளுக்கு மனிதனைப்போல் நடிக்கத் தெரியும். சில குரங்குகளுக்குக் கன்னத்தில் பை யுண்டு. அதில் ஆகாரத்தை அடைத்து வைத்துக்கொண்டு மெல்ல மெல்ல எடுத்துத் தின்னும். **சாதாரண குரங்கு** இது, எளிதாய்ப் பழக்கக்கூடியது. இது குட்டையாய் நீண்ட வாலுள்ளது. கிராமங்களை யடுத்த தோட்டங்களிலும், மெத்தை, வீடு, கோபுரங்கள், விருக்ஷங்களிலும் வசிக்கும். பிடித்த பிடியை விடாது தாண்டவல்லது. இது நோக்கியே குரங்குப் பிடியென்பர். மேற்கூறிய வாலில்லாக் குரங்கும் குட்டைவாற் குரங்கும் மனிதக் குரங்கின் வகையிற் சேர்ந்தவை. மனிதக் குரங்கின் ஜாதியில், கொறில்லா, உராங் ஊட்டாங் என்பவை சேர்ந்தவை. **கொறில்லா** இது அதிக பலமும், எந்த மிருகத்திற்கும் அஞ்சாததீரமும் உடையது. உருவிலும் பலத்திலும் மனிதனில் தாழ்ந்ததன்று. உடம்பு மயிரால் மூடப்பட்டு, முகம் கறுப்பாயிருக்கும். கைகள் முழங்கால் வரையில் நீண்டிருக்கும். இவை தடிகொண்டு மனிதனைப்போல் சண்டை செய்யும். தமக்கு மரங்களின்மேல் கிளைகளால் வீடு கட்டிக் கொள்ளும். இவைகளைப் பிடித்துச் சாதுவாக்கி மனிதரைப்போல் வேலைசெய்யப் பழக்குகிறார்கள். ஆகாரம் காய் கனி கிழங்கு முதலிய. இவை ஆப்ரிகாகண்டத்து வனவாசிகள். **உராங் ஊட்டாங்** இது மனிதக்குரங்கு வகையில் ஒன்று. இதனை காட்டுமனிதன் என்பர். சற்றேறக்குறைய ஐந்தடி உயர மிருக்கும். தோள்களுக் கிடையில் தலை தொங்கும். நேராய் நிற்க முடியாது, நடக்கையில் கையை முஷ்டியாக்கி யூன்றி நடக்கும், மரத்தின்மேல் அதிவேகமாய்ச் செல்லும். இந்த மனிதக் குரங்குவகை இரண்டும் தனித்தனி வசிக்குமேயன்றிச் சாதாரணக் குரங்குபோல் இனத்துடன் வசியா. இவை இந்தியாவின் தென் கீழ்ப்பாகத்துள்ள போர்னியோ சுமத்ராவில் உள.

**நாய்க்குரங்குகள்** — இவையே வாலில்லாக்குரங்குகள். இவற்றிற்குப்பாபூன்என்றுபெயர். இவை பார்வைக்கு விகாரமானவை, மூக்குச்சிவப்பு, கதுப்புநீலம், இவை கூட்டம் கூட்டமாய்ச் சஞ்சரிக்கும். தங்களில் இரண்டு மூன்று குரங்குகளைக் காவலுக்கு வைத்துவிட்டு இராக்காலங்களில் பழத்தோட்டங்களில் சென்று திரியும். இவை மூர்க்க சாதியாதலால் மனிதர் அதிக பயப்படுவார்கள். இவை ஆப்பிரிகா வாசிகள். **கருங்குரங்கு**--வாலுள்ள குரங்கு வகையில் சேர்ந்தது. உருவத்தில் கறுப்பு நிறமுள்ளது. சாதாரண குரங்குக்கு உள்ள இலக்கணங்களெல்லாம் இதற்கும் உண்டு. **முசு**-இது குரங்கினத்தைச்சேர்ந்தபிராணி. இது உடல் நீண்டும் வால் நீண்டும் இருப்பது குரங்கைப்போலவே கைகால்களமையப்பெற்றது. முகம் சற்றுக் கறுத்திருக்கும். தலையில் தொப்பி போட்டதுபோல் சிறு மயிர்த்தொகை ஒரு சிறிது உயர்ந்திருக்கும். இதனைக் கொண்டை முசு என்பர். இது இந்திய மலைவாசி.

**குரண்டதேவர்** — இருநூற்றைம்பது பிரமாயுசுகண்ட ஒரு கொக்கு. சாஸ்வதி தீரத்தில் தவமியற்றியது.

**குரவர்** — (ரு) அரசன், உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன்.

**குரவிநம்பி** — எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

குரவை — ஒருவகைக் கூத்தின் விகற்பம். இது எழுவர் மங்கையர் கைகோத் தாடு வதாம்.

குரற்கம்மல்ரோகம் — குரல்வளை யீரம் வறண்டு சுஷ்கித்துக் குரல் முட் செருகி னதுபோல் நோதல் நடுக்கலானத்வனி, கம்மியத்வனி. குறுகுறுசத்தம், முதலிய உண்டாம். இது வாதபித்தம், சிலேஷ்ம குரற் கம்மல், திரிதோஷகுரற் கம்மல், க்ஷயகுரற்கம்மல், மேதோகுரற் கம்மல், என ஆறுவகை. இந்த ரோகம் ஏலாதிச் சூரணம், ஜயரஸபஸ்மம், அரக்குத்தயிலம் முதலியவற்றால் வசமாம். (ஜீவா.)

குராசோ—இது தென் அமெரிக்காவிலுள்ள பறவையினங்களில் சேர்ந்தது. இது ஒரு வான்கோழி யளவினது என்பர். இது, குராசோதீவில்வாசியாகையால் இப்பெயர் பெற்றது.

குரு — (சங்.) அசமீடன் குமரனாகிய ருக்ஷன் பேரன், சம்வருணன் குமரன், சமந்த பஞ் சகத்தரசன். இவன் குருவாகிய வியாழன் அநுக்கிரகத்தாற் பிறந்ததால் இப்பெயர் அடைந்தனன் எனவும், சூர்ய குலத்தரச ருக்குக் குருவாகிய வசிட்டர் சூரியனிடஞ் சென்று தபதியைச் சம்வருணனுக்குக் கொடுக்கச் செய்து பிறந்த குமரனாகை யால் இவனுக்கு இப்பெய ரிடப்பட்ட தெனவுங் கூறுவர். இவன்வழி இந்த வம் சம் பரவினதாகையால் குருவம்சம் என வும் இவனுண்டதா லந்நாடு குருநாடென வும் பட்டது. குமரர் சந்து, பரீக்ஷித்து, சுதன்னிசு, நிஷதன்.

2. சங்கிருதி குமரன்.

3. அக்கியித்ரனுக்குப் பூர்வசித்தியிட முதித்த குமரன். தேவி நாரி.

4. இது, சூரியனைச் சுற்றியோடும் கிர கத்தில் ஒன்று. எல்லாக் கிரகங்களினும் பெரிது. இது, அவ்வளவு பெரிதாயினும் நமக்கு அதிக தூரத்தில் இருப்பதால் பிர காசமுள்ள ஒரு நக்ஷத்திரம்போல் காணப் படுகிறது. இது, சூரியனை ஒருமுறை சுற்றிவர (12) வருஷமாகிறபடியால் ஒரு ராசியை ஒருவருஷகாலவரையில் கடந்து செல்லுகிறது. இதற்கு, 4, 5, உபகிர கங்களுண்டு. இதனைப் பிரகஸ்பதி, குரு, என்று கூறுவர்.

5 கர்ப்பாதான முதலிய கிரியைகளைச் செய்வித்து ஜீவனோபாயத்தைக் கற்பிப் பவன். (மநு-அத்-1.)

குருகு — இதுமுதல், இடைச்சங்கங்களிலிரு ந்த நூல், இதற்கு முதுகுருகு வெனவும் பெயர்.

குருகுலம் — இது சைந நூல்களிற் கூறப் படும் ஐவகைக் குலத்துள் ஒன்று. உக்கிர குலமென்னும் பெயரைக் காண்க. இதிற் பிறந்ததுபற்றியே சதானிகன் குருகுலத் தரசனெனவும், உதயணன் குருகுலக்குரு சில், குருலத்திறையெனவுங் கூறப்படு வன். (பெ. கதை).

குருகைக்காவலப்பன்—நாதமுனிகளை யாச்ர யித்த ஸ்ரீவைஷ்ணவர், நாதமுனிகள் சொற் படி ஆளவந்தாருக்கு யோகரகஸ்யங்களை உபதேசிக்க இருந்தவர்.

குருக்கள் — இப்பட்டம் தென்னாட்டு ஆதி சைவமூர்த்திகளுக் குள்ளது. சிவாசாரியர் களையும் குருக்கள் என்பர்.

குருசத்திரன் —திதிட்சு குமரன், இவன் குமரன் ஓமன்.

குருசாங்கலம்—பாஞ்சாலத்திற்குத் தெற்கி லுள்ள தேசம். A forest country situated in the north west of Hastinapura, the capital of the Kurus north east of Delhi, now, entirely diluviated by the Ganges.

குருசித் — மிதிலையரசனாகிய அம்சகன் குமரன்.

குருசுக்ர அத்தமனம் — ஆதித்யனுடன் பிர கஸ்பதியும், சுக்ரனும்கூடில் இவர்கள் அத் தமனகாலத்தில்சுபகன்மங்கள் நீக்கப்படும். சுக்ரன் கிழக்கே அஸ்தமித்தால் விருத்த சுக்ரன் என்று (ஏ) நாட்களும், உதிக்கு மிடத்து வாலசுக்ரன் என்று (அ) நாளும், மேற்கே அத்தமிக்கையில் விருத்த சுக்ரன் என்று (ரு) நாட்களும், இவ்விடத் துதிக்கு மிடத்து வாலசுக்ரனென்று (௩) நாட் களும் கழிக்கப்படும். பிரகஸ்பதி அத்த மனத்திற்கு (கரு) நாட்களும், உதயத் திற்கு (ரு) நாட்களும் கழிக்கப்படும்.

குருதத்தை — ஸ்ரீதத்தன் தாய்

குருதாமன் -- துஷ்யந்தன் குமரன்.

குருதிக்கண்ணன் — இரத்தக் கண்ணனைக் காண்க

குருதேசம் — அஸ்தினபுரத்தினடு.

குருத்ருஹன் —இவன் ஒருவேடன் சிவராத்ரி யென்று அறியாதவன். தன் தாய் தந்தை யர் பசியால் வருந்த ஏதேனும் ஆகாரம் சம்பாதிக்கும்பொருட்டு வில்லு மம்புமா கப் புறப்பட்டு வனமடைந்து மிருகாதி

களைத் தேடுகையில் பொழுது போய்விட்டது. அதனாலருகிருந்த குளத்தில் நீர் பருகித் தன் பாத்திரத்தில் சிறிது சலமும் கொண்டு தன்னை, நீருண்ண வரும் மிருகங்கள் காணாவகை கரையிலிருந்த வில்வமரத்தின் மீது ஏறிக்கொண்டிருந்தான். முதல் சாமத்தில் ஒரு பெண்மான் நீருண்ண வந்தது. கண்ட வேடன் அம்பினை யெடுத்து வில்லிற் பூட்டுகையில் ஒரு வில்வதளமும் கமண்டலத்து நீரும் மரத்தடியிலிருந்த சிவக்குறி மீது சிந்தியது. இவ்வேடனது குணத்வனி கேட்ட மான், நடுங்கிவேடனிடம்வந்து தன் குட்டிகளைச் சக்களத்தியிடை விட்டு வருகிறேனென உறுதிவாக்களிக்க வேடன் நம்பி விடுத்தனன். இதுநிற்க, இரண்டாஞ்சாமத்து முன்சென்ற மானினைத்தேடி அதற்கிளைய பெண்மான் வந்தது. அதனைக் கண்ட வேடன் வில்லினாணேற்றிக் குணத்தொனி செய்கையில் தன்னிடமிருந்த ஜலத்தில் சிறிதும் வில்வபத்திரமும் அடியிலிருந்த சிவலிங்கத்தின்மீது விழுந்தது. இக்குணத்தொனிகேட்ட மான் தானும் அவ்வாறு மீண்டு வருவதாய்ச் சொல்லிச் சென்றது. மூன்றாஞ்சாமத்து அவ்விருமான்களைக் காணாத ஆண்மான் அவ்விடம்வந்தது. வேடன் வில்லினைக் குணத்தொனி செய்கையில் நீருமலருஞ் சிந்தியது. அம்மானும் தன்னிரு மனைவியரிடங் கூறிவருகிறேனென்று விடைபெற்று மீண்டுமூன்றும் சத்தியந்தவறாமல் வேடனிடம் திரும்பின. இவற்றைக் கண்ட வேடன் களிப்புற்றவனாய்த் தன் வில்லை மீண்டும் குணத்தொனிசெய்ய அவன் கமண்டலத்திலுள்ள நீரிற் சிலவும் மரத்திலிருந்த வில்வமுஞ் சிந்தின. இதனால் வேடன் அச்சிவராத்திரியில் நான்குஜாமங்களிலும் தூக்கமில்லாதவனாய்ச் சிவபூசை செய்தவனானன். அச்சிவ பூசாபலத்தால் ஞானமுள்ளவனாய் அம்மான்களின் சத்தியத்தினையும் தான் உயிர்வதைசெய்துண்ணும் பாவத்தினையுமெண்ணி வருந்துகையில் சிவபெருமான் தரிசனந்தந்து அவனுக்குக் குகன்எனப் பெயர் அளித்து இராஜசெல்வம் அநுக்ரகித்து இராமன் வனம் வருந்துணையிருந்து அவனை உபசரித்து முத்திபெற அநுக்ரகித்து மறைந்தனர். மான்கள் சிவதரிசனத்தால் ஸ்வர்க்கபத மடைந்தன.

**குருநமசிவாயர்** — குகை நமசிவாயருக்கு மாணாக்கர். இவர் ஆசாரியரிடத்து அன்புள்ளராய் நிஷ்டையிலிருக்கையில் ஒருநாள் நகைக்க ஆசாரியர் அப்பா என் நகைத்தாயெனத் திருவாரூரில் சுவாமிசந்நதியில் நடனமாடிக் கொண்டிருந்த தாசி, கால்வழுக்கி மல்லாந்துவிழ அனைவருஞ் சிரித்தனர் யானும் சிரித்தேன் என்றனர். மற்றொருநாள் கையைத் தேய்க்க என் அப்படிச்செய்தனை யெனச் சிதம்பரத்திற் றிரைபற்ற அத்திரையை யெல்லாரும் தேய்த்தனர். அடியேனுந் தேய்த்தேன் என்றனர். மற்றொருநாள் ஆசாரியர் வாந்திசெய்து இதை மிதியாத இடத்தில் வைக்க என, அதை உட்கொண்டனர். ஆசாரியார் மிதியா இடத்தில் வைத்தனையா என ஆமெனக் கூறியதறிந்து மாணாக்கரின் பரிபாகத்தன்மை நோக்கி வேறுபடுத்த எண்ணி மாணாக்கரை அழைத்து ஒரு தறியில் இரண்டு யானைகள் கூடா. ஆதலால் நீ, சிதம்பரம், ஞானத்தலம் அவ்விடம் செல்க என்றனர். மாணாக்கர் பிரிவஞ்ச ஆசாரியர் அஞ்சவேண்டாம் நீ அவ்விடஞ் சென்று நடராசமூர்த்தி என்னைப்போல் தரிசனங் கொடுத்தா லிரு என்ன, உடன்பட்டுச் சென்று பசி வந்தபோது "அத்திமுத லெறும்பீறான வுயிரனைத்திற்கும், சித்தமகிழ்ந்தளிக்கும் தேசிகா — மெத்தப், பசிக்குதையா பாவியேன் பாழ்வயிற்றைப்பற்றி, எரிக்குதையா காரோணரே." எனக்கூற, பிராட்டி அன்னமளிக்க உண்டு ஸ்ரீசிதம்பரஞ் சென்று நடராசமூர்த்தி ஆசாரிய திருக்கோலம் பிரசாதிக்கத் தரிசித்துச் சுவாமிக்கு அநேக திருப்பணிகள் நடப்பித்துப் பொற்சிலம்பு செய்வித்துத் திருவடிக்குச் சமர்ப்பித்துத் திருநடனதரிசனந் தரிசித்துச் சபாபதிக்குப் பிக்ஷையிட்டுத் தாம் சபாபதியிடம் பொற்காசு பெற்றுப் பல பிருதுகளுடனிருந்து ஈச்வர௵ வைகாசி மாதத்தில் திருப்பெருந்துறையில் சிவலிங்கத்தடைந்தனர். இவர் செய்த நூல்கள் பரமரகசியமாலை, சிதம்பர வெண்பா, அண்ணாமலை வெண்பா முதலியன. இவர் காலம் 300௵க்கு மேலிருக்கலாம்.

**குருநாடு** — அத்தினபுரம். குரு ஆண்டதாவிப்பெயர் பெற்றது. குருவைக் காண்க.

**குருபரம்பரை**—1. இது வைஷ்ணவ ஆழ்வாராதிகள், ஆசாரியர்கள் பரம்பரைக...

கூறியநூல். இது தென்கலை வடகலையவர்களால் இருவிதமாகக் கூறப்பட்டிருக்கிறது.

2. வைணவாசிரியர்களது குருபரம்பரைகளைக் கூறியசெய்யுட்களாலாகியநூல். இதை முதலில் செய்யுளிலியற்றியவர் கீழையூர்ச் சடகோபராமாநுஜமுதலியாரெனும் சடகோபதாசர், இரண்டாவது குருபரம்பரை அழகிய நம்பியென்பவரால் இயற்றப்பட்டது. மூன்றாவது குருபரம்பரை புராணம், ஊறை விஜயராகவன் என்பவராலியற்றப்பட்டது. நான்காவது பரமயோகி விலாசம் இயற்றினர் பெயர் விளங்கவில்லை. ஐந்தாவது இராமாநுஜசரிதை இந் நூலியற்றியவர் பாகை சீதாராமதாசர் என்பவர். இது (கஉகரு) செய்யுட்களால் முடிந்தது.

**குருபாததாசர்** — புல்வயலில் எழுந்தருளியிருக்கும் குமாரசுவாமிகளின் மீது குமரேச சதகம் பாடிய புலவர்.

**குருமூர்த்தம்** — ஸ்ரீமன் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு உபதேசிக்க எழுந்தருளிய சிவமூர்த்தியின் ஆசாரிய திருக்கோலம்.

**குருவசு** — (ய) மது குமரன்.

**குருவிக்காரர்** — இவர்கள் குருவி பிடிக்கும் ஒருவகை மாராஷ்டக ஜாதியார். இவர்களிற் சிலர் காடுகளில் கட்டை வெட்டியும் தோட்டம் காவல் காத்தும் வலைவைத்துக் குருவிகள் பிடித்தும் நரிபிடித்தும் ஜீவனம் செய்வர். பெண்கள் நரிப்பல், மயிலெண்ணெய், கீரைமணி, ஊசி முதலிய விற்றுச் சீவனஞ் செய்வர். (தர்ஸ்டன்.)

**குருவிருந்ததுறை** — இவ்வூர் மதுரைக்கு (க0) நாழிகைவழி தூரத்திலிருக்கிறது. குருவித் துறையென இக்காலத்து வழங்கும். பன்றிக் குட்டிகளாக வந்தோர் பழம்பிறப்பிற் பிறந்தவூர். (திருவிளை.)

**குருவைநம்பி** — ஒரு குயவர், இவர் தம் தொழில் தொடங்குகையில் மண்ணைப் புட்பமாகச் செய்து திருவேங்கடத்தானை அருச்சித்துவருவர். இவ்வாறு இவர் பூசித்து வரும் புட்பத்தை ஒருநாள் அருச்சகர் அரசனுக்கு யாரோ ஒரு அன்பர் பூசித்து வருகிறார், அம்மலர் எடுக்க மாளாதிருக்கின்றது என்று அறிவிக்க, அரசன் அந்த ரகசியத்தை யறிந்து நம்பியைக் காண வந்து வணங்க, நம்பி நம்மை இன்றைக்குப் பெருமாள் காட்டிக் கொடுத்தனர் என்று கையிலிருந்த தண்டத்தால் தம் தலையை யெறிந்து கொண்டிறந்தனர். அரசன் இது நம்மால் விளைந்ததென்று அவ்வாறு உயிர்போக்கிக் கொள்ளத் துணிகையில் பெருமாள் தரிசனந்தந்து இருவருக்கும் பரமபதமளித்தனர்.

**குருக்ஷேத்ரம்** — பரதகண்டத்தில் சரஸ்வதி யாற்றின்கணுள்ள தலம், தேவர் யாகமுதலிய செய்து பிரசித்தியடைந்த இடம். இதில் பாண்டவர் யுத்தஞ்செய்தனர். முற்காலத்தில் இந்த க்ஷேத்திரமானது நெடுங்காலமாகக் குருவெனும் அரசனால் உழப்பட்டது. இவரை இந்திரன் பலமுறை உழுதற்குக் காரணங்கேட்க, குரு, தவமுதலிய இல்லாமலே இதில் வசிப்போர் சுவர்க்கமடையப் போகிறார்கள். அதன் பொருட்டுச் செய்கிறேன் என இவனை வஞ்சிக்க வேண்டி இந்திரன் நீ ஏன் வருந்துகிறாய் இந்த க்ஷேத்ரத்தில் எவர் ஆகாராதிகளில்லாமல் தவத்தை மேற்கொள்வாரோ அவர்களும் யுத்தத்தில் கொல்லப்பட்டவரும் மிருகங்களும் சுவர்க்கம் பெறுக என்று வரந்தந்து நீங்கினன். இது தரந்துகை, ரந்துகை, ராமஹ்ரதம், மசக்ருததீர்த்தம் இவைகளுக்கிடையி லிருக்கின்றது. பிரமதேவருக்கு உத்தரவேதி எனப்படுகிறது. இது சமந்தபஞ்சக மெனப்படும்.

A tract between the rivers Saraswathi and Dhrishadvati and it was named Brahmavarta in the Period of Swayambhuva Manu and it is about 70 miles in length and 30 miles in width. It is also a Railway Station 100 miles north of Delhi in the District of Karnal.

**குருங்கன்** — ஒரு அரசன், இருக்குவேதத்திற் புகழ்ந்து கூறப்பட்ட கொடையாளி.

**குரூரபுரி** — யமபுரியிலுள்ள பட்டணம், இதைக் குரூரனென்னும் அரசன் காப்பன். இறந்த ஆன்மா இப்பட்டணத்தில் ஐந்தாமாசிக பிண்டத்தையுண்டுசெல்வன்.

**குரூராசுரன்** — இவன் பூனையுருக்கொண்டு விநாயகரைக் கொலைசெய்யச் சிந்தாசுரன் ஏவலால் வந்தனன். விநாயகர் இவனை வேதங்களை நாயுருவாக்கிக் கடிக்கச்செய்து மாய்த்தனர்.

**குரோதகீர்த்தி** — பாரதவீரரில் ஒருவன். சுபாரன் அம்சம், இவனுக்கு நந்தகன்,

கண்டகன், வேஷன், சித்திராதகேஷன், சுவீர்யபாகு, மகாவீர்யன், குதரன், சித்திராதன், நீலன், வீரதாமன், தந்தவக்தான், துர்சயன், சநமேசயன், ஏகல்வயன் முதலிய குமரர்கள் பிறந்தனர்.

**குரோதம்** — ஒரு தேவதை, சமதக்நி முனிவர் பிதுர்க்களுக்கு வைத்த பாலைக் கவிழ்த்து மறைந்தது.

**குரோதவசர்கள்** — ஒருவித அரக்கர்கள். இவர்கள் அசுத்தமானவர்களது யாகம், பிரதிஷ்டை முதலிய புண்யபலனை அபகரிப்பவர்.

**குரோதவசை** — கச்யபன் தேவி, தக்ஷன் பெண். இவளிடம் சர்ப்பங்கள் பிறந்தன.

**குரோதன்** — 1. காலைக்குக் காசிபரிடம் பிறந்தவன்.

2. (சந்.) நயுதன் குமரன், பாரி கரந்துவை.

3. கந்தமூர்த்தியாலிறந்த ஓர் அசுரன்.

4. கௌசிகனைக் காண்க.

**குரோஷ்டு** — 1. யது குமரன். விருசினவந்தன் தந்தை.

2. ஒரு வேதியன் மார்க்கண்டரிடம் தருமமறிந்தவன்.

**குலசேகராழ்வார்** — கௌஸ்துவாம்சரான இவர் கலி இருபத்தெட்டாவதான பராபவஹ மாசிமீ சுக்கில துவாதசி வெள்ளிக்கிழமை புனர்வசு நக்ஷத்திரங் கூடிய சுபதினத்தில் திருவஞ்சைக் களம் என்னும் கொல்லிநகரத்தில் திடவிரதனென்கிற அரசருக்குப் புத்திராரா யவதரித்து ஓதியுணர்ந்து ஸ்ரீமத் இராமாயண காலக்ஷேபங் கேட்டு வருகையில் இருடிகள் பெருமாளைச் சரணகதி செய்யுந் தருணத்தில் பெருமாள் உயிரைத் துறக்கினும் செய்த பிரதிக்ஞை துறவேனென்பதைக் கேட்டு, இராக்கதர் கச,000 பெயர்கள், பெருமாள் ஒருவர், நான் துணை செல்வேனெனப் படையுட னெழுவன் என்று எழுதல்கண்ட ஸ்ரீவைணவர், சத்துருவை வென்று முனிவர்க்குச் சுகத்தைத் தந்த தன் நாயகனைப் பிராட்டி ஆலிங்கனஞ் செய்தாள் என்றதைப் பிரசங்கிக்க ஆழ்வார் திரும்பினர். இவைகளைக் கண்டிருந்த மந்திரியர் இந்த ஸ்ரீ வைணவரால் அரசனுக்குச் சித்தப்பிரமையுண்டாயிற்றென அவர்களை விலக்க எண்ணித் திருவாராதனப் பெருமாளுடைய திருவாபரணத்தை மறைத்து ஸ்ரீ வைணவரைச் சுட்ட அரசன் ஸ்ரீ வைணவர் எடுக்கவில்லையெனப் பாம்பின் குடத்தில் கைவைக்கப் பாம்பு கையை முத்தமிட்டதைக்கண்டு அமைச்சர் திருவாபரணங் கொடுத்துப் பொறுத்துக்கொள்ள வேண்டினர். பின்பு ஆழ்வார் தம்குமாருக்குப் பட்டந்தரித்து ஸ்ரீரங்கம், ஸ்ரீகாஞ்சி, திருமலை முதலிய திவ்யதேசயாத்திரை செய்து, முகுந்தமாலை, பெருமாள் திருமொழி முதலிய பிரபந்தங்க ளருளிச்செய்து மன்னனார் கோவிலில் பெருமாளைத் தரிசித்து நிற்கையில் பெருமாள் நியமனப்படி திருநாட்டுக்கெழுந்தருளினர். இவர் (உகு) திருநக்ஷத்திரம் எழுந்தருளி யிருந்தனர். (குருபரம்பரை.)

**குலசேகரபாண்டியன்** — 1. மதுரையை ஆண்ட பாண்டியரில் ஒருவன். அம்பிகைமாலைசெய்தவன்.

2. இவன் மற்றொரு பாண்டியன். இவன் வேட்டைக்குச் செல்ல யானையொன்று புதரை வலமாகச் சென்றது கண்டு அதை வெட்ட அவ்விடம் சிவலிங்கமூர்த்தி வெண்மையான திருமேனியுடன் எழுந்தருளியிருக்கத் தரிசித்துத் திருப்பணி செய்தவன். இவரே பால்வண்ணநாதர்.

3. மணவூராண்ட பாண்டியன். இவன் அரசாட்சியில் தனஞ்சயன் எனும் வணிகன், வர்த்தகஞ்செய்து திரும்புகையில் கடம்பவனத்தில் பொழுது போயிற்று. அப்போது அவ்வநத்தில் எழுந்தருளியிருந்த சிவலிங்கமூர்த்தியைத் தேவர் பூசிக்கக் கண்டு தான் அந்த இராமுழுதும் ஒளிந்து தரிசித்து விடிந்தபின் தேவரைக் காணாது சிவமூர்த்தியைக் கண்டு தரிசித்து இந்த அற்புதத்தை அரசனிடங் கூறினன். அரசன், இடமறிந்து சிவமூர்த்தியைத் தரிசித்துக் காடுநீக்கி நாடாக்குவிக்க எண்ணுகையில் சிவமூர்த்தி சித்தராய்எழுந்தருளி, இன்னபடி திருப்பணி முடிக்க எனக் கட்டளையிட்டு மறைந்தனர். அரசன் அக்கட்டளைப்படி நகரம் நிருமித்தனன். இவனுண்டது மணவூர். (திருவிளை.)

4. வங்கிய குலசேகர பாண்டியன் குமரன். இவன் திருநெல்வேலி யாண்டவன். இவன் குமரன் குலேசபாண்டியன்.

**குலசேகரபாண்டியன் வடிவம்** — பொற்றாமரையில் பாண்டியன் படித்துறையின் மேல்பாற் றூணிலுள்ள வடிவம்.

**குலசேகரர்** — சாத்தாத வகுப்பின் வகை.

**குலசேகரவாதுங்கராமபாண்டியன்**—வாயு சம்மிதையைத் தமிழிற்செய்த ஒரு பாண்டியன்.

**குலசேகரன்** — 1. மேலைச்சிதம்பரம் தரிசித்துக் குட்டநோய் தீர்ந்த ஒருவன்.

2. இலிங்கபுராணமியற்றிய பாண்டியர்.

**குலச்சிறைநாயனூர்**—பாண்டிநாட்டில் மணமேற்குடியில் திருவவதரித்துச் சிவபக்தி, சிவனடியவர் பக்தியுடையராய் நெடுமாறன் எனும் பாண்டியற்கு முதன்மந்திரித்தொழில் மேற்கொண் டிருந்து மங்கையர்க்கரசியார் செய்த சிவத்தொண்டிற்குத் துணையானவர். திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகளை மதுரைக் கெழுந்தருளச் செய்வித்தவர். வஞ்சம் புரிந்து வாதிட்ட சமணரைக் கழுவிலேற்றியவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளால் புகழ்ந்து பாடப்பெற்றவர். (பெ. புராணம்).

**குலச்சூடாமணிபாண்டியன்** — சோமசூடாமணி பாண்டியனுக்குக் குமரன்.

**குலத்துவச பாண்டியன்** — பாண்டீச்சுர பாண்டியனுக்குக் குமரன்.

**குலபதி** — இமயமலைச்சாரலில் தவம்செய்து கொண்டிருந்த ஒரு ரிஷி.

**குலபதிநாயனூர்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர் (திருவள்ளுவமாலை).

**குலபூஷண பாண்டியன்** — அநந்தகுண பாண்டியனது குமரன். இவன் காலத்து நடந்த திருவிளையாடலைச் சவுந்தர சாமந்தனைக் காண்க. பின்னும் இவன் சிவபிரானிடம் அன்பாய்ப் பிராமணரை வெறுக்க, நாட்டில் வேதவொழுக்கம் குறைந்தது. அதனால் வேள்வி குறைந்தது, வேள்வி குறைய மழை குறைந்தது, அதனால் நாடு வறுமை யடைந்தது. பாண்டியன் சிவமூர்த்தியை வேண்டச் சிவமூர்த்தி சித்தராய்க் கனவில் தரிசனந் தந்து நீ வேதியரை வெறுத்தாய் அதனால் வேள்வி குறைந்தது மழையும் நீங்கிற்று. அவ்வகை செய்யாமல் வேதியரைக் களிப்பித்து வேள்வி செய்விக்க என்று உலவாக் கிழி அருளி இதில் நீ எடுக்குந்தோறும் பொருள் குறைவுபடாது என்று திருவாய்மலர்ந்து மறைந்தனர். அரசன் விழித்து எதிரில் பொற்கிழி கண்டு பூசித்து வேதியரை மகிழ்விக்க மழைபெய்து நாடு செழித்தது. இவன் காலத்தில சொககர் வளையல் விற்று, அட்டமாசித்தி உபதேசித்து, சோழன் பொருட்டு விடையிலச்சினையிட்டனர். இந்தப் பாண்டியன் குமரன் இராஜேந்திரபாண்டியன்.

**குலமாதர்செய்யத்தகாதன**—குலமாதர் பிறபுருஷரின் தேகத்தழகை வியந்து நோக்கலும், தம்முடையழகை கண்ணடியில் வியந்து நோக்கலும், தலைமயிரைக் கோதுதலும், கைந்நொடித்தலும் கூடா.

**குலமாரி** — குடும்பத்தில் அமங்கலியா யிறந்தவர்களை வெள்ளைச் சீலையும் தின்பண்டங்களும் வைத்துப் பூசிக்கப் பூசையேற்கும் கிருகதேவதை.

**குலவர்த்தன சோழன்** — தந்துவர்த்தன சோழன் குமரன்.

**குலாலன்** — இவன் அம்புசமுனியை முதலாகக் கொண்ட சந்ததியான்.

**குலிங்கன்** — துர்யோதனன் மந்திரி. கணிகன் என்று வேறுபெயர் கொண்டவன்.

**குலிசன்**—1. அதிகாயன் யுத்தத்தில் இலக்ஷ்மணரால் கொலைசெய்யப்பட்ட அரக்கன்.

2. கேகயநாட்டரசன். ஒருநாள் இவனிடத்துத் துருவாசமுனிவர் விரததினத்துப் பாரணைசெய்ய வருவதாகக் கூறினர். அரசன் வேண்டிய உணவாதிகளுடன் இறைச்சியும் சமைத்து அருத்தினன். முனிவர் உண்டபின் விரத தினத்து ஊனருத்தினமையால் நீ புலியுருக்கொண்டு காட்டில் ஊனுண்டு அலைந்து நந்தினியெனும் தெய்வப்பசுவின் இனத்தால் சாபம் நீங்குக என்று போயினர். புலியுருக்கொண்ட அரசன் காட்டில் உலாவுகையில் ஒருநாள் நந்தினி எனும் பசுவினைக்கண்டு பற்றப்போகையில் அப் பசு நான் என் இளங்கன்றினுக்குப் பால் ஊட்டிச் சிவபூசை முடித்து வருவேன் என விடைபெற்றுச் சென்று அவ்வகை முடித்து வரக்கண்ட புலிக்கு நல்லறிவு தோன்றிப் பசுவினுக்குத் தன் சாபவரலாறுகூறப் பசு சிவபூசை செய்ய ஏவ அவ்வகை செய்து நல்லுருப் பெற்றவன்.

**குலேசபாண்டியன்** — 1. பூப சூடாமணி பாண்டியனுக்குக் குமரன். இவன் கற்று வல்லவனாய்ச் சங்கம் வளர்ப்ப தறிந்து இடைக்காடர் இவனைக்கண்டு கவி கூறினர். பாண்டியன் தமிழறிந்தும் பொருமையால் மகிழாது உபசரிக்காததால் இடைக்காடர் சொக்கரிடம் தன்னைப் பாண்டியன் அவமதித்ததை முறையிட்டனர். சொக்கர் அன்றிரவு சங்கப்புலவ

ருடன் மதுரையைவிட்டு வைகைக்குத் தென்புறத்திற் கோயில் கொண்டனர். விடிந்து கோயில் பள்ளி யுணர்த்துவோர் திருக்கோயில் திறக்கச் சிவலிங்கமூர்த்தியும் சங்கப் புலவரும் திருக்கோயிலில் இல்லாமைகண்டு அரசனுக்கறிவித்தனர். அரசன் நடுங்கிக் கோயிலுக்குவந்து பார்க்கையில் சிலர் வைகைக்குத் தெற்கில் சிவமூர்த்தியும் சங்கப்புலவரும் எழுந்தருளியிருக்கும் ஆலயம் புதிதாக இருக்கின்றதெனக் கூறக்கேட்டு அவ்விடம் பாதசாரியாய்ச் சென்று தரிசித்துத் துதித்து அடியேன் என்ன குறை செய்தேனென்று வினவினன். கடவுள் ஆகாயவாக்காக அரசனே நீ இடைக்காடனுக்கு இழைத்த குற்றம் நம்மைச் செய்தது போலாயிற்று. ஆதலால் இவ்விடம் வர நேர்ந்ததென அரசன் இடைக்காடரைச் சிங்காதனத்தில் உட்காருவித்து வெண்பட்டு முதலிய உதவிப் பணிவுடன் வேண்டிய உபகரித்து அனுப்பச் சுவாமியும் சங்கப் புலவரும் தமிழ் நாட்டு மதுரைக்கு எழுந்தருளினர். இந்தப் பாண்டியன் குமரன் அரிமருத்தன பாண்டியன்.

2. குலசேகர பாண்டியனுக்குக் குமரன். இவன் அரசு செய்கையில் அதிவீரனென்னும் வேடன் சேனைசேர்த்து இவனுடன் யுத்தத்திற்கு வரப் பாண்டியன் சிவமூர்த்தியிடம் முறையிட்டனன். சிவமூர்த்தி சிவபடர்களை யேவிப் பாண்டியனுக்கு வெற்றி தந்தருளினர்.

**குலோத்துங்கசோழமகாராசா** — இவரே திருநீற்றுச் சோழமகாராசா என்பர். இவர் சிதம்பரத்தில் அநேக திருப்பணிகள் நடத்தினர். இப்பெயர்கொண்ட மற்றொரு சோழன் கம்பர் ஒட்டக்கூத்தர் புகழேந்தியார் காலத்திருந்து அவர்களை ஆதரித்தனன் என்பர்.

**குலோத்துங்கபாண்டியன்** — இராசசேகர பாண்டியனுக்குக் குமரன், இவன் தேவி மாணிக்கமாலை, இவனரசில் ஒரு வேதியன் மனைவியுடன் மாமனூர் வீட்டிலிருந்து மதுரைக்கு அருகில் வருகையில் தாகத்தால் மனைவிவருந்தித் தாகத்திற்கு நீர் கேட்டனள். வேதியன் மனைவியை ஒரு ஆலடியிற் படுக்கவைத்து நீர்தேடிச் சென்றனன். தெய்வச்செயலாய் எக்காலத்திலோ மரத்தில்தைத்திருந்த அம்பு காற்றினால் அசைந்து படுத்திருந்த பார்ப்பினி மார்பில் உருவி உயிரைப்போக்கிற்று. பிராமணன் நீர் கொண்டுவந்து படுத்திருந்த தேவிமார்பில் அம்புருவி இறந்திருக்கக் கண்டு அழுது யாவர்கொன்றார் என நாற்புறமும் தேடிப்பார்த்தனன். ஒரு வேடன், அந்த ஆலமரத்திற்கருகில் பக்ஷி கூட்டங்களைத் தேடிக் கொண்டு வந்து வில்லுங்கையுமாக நிழலுக்கொதுங்கினன். வேதியன் வேடனை வில்லுங் கையுமாகக் கண்டு என் மனைவியை நீயே கொன்றனை அரசனானை நீ போகக்கூடாதென வேடன் அஞ்சி வேதியனுடன் வந்தனன். வேதியனிறந்த மனைவியுடன் அரசனிடம் வந்து முறையிடப் பாண்டியன் நடுங்கிப் பிரேத சமஸ்காரஞ் செய்வித்து வேதியனுக்கு விடைதந்து வேடனை நன்மையாகவும் பயமுறுத்தியும் கேட்டுக் கொலைக்குறி அவனிடஞ் சிறிது மில்லாமையால் ஒன்றுந் தோன்றாமல் சோமசுந்தரக் கடவுளிடம் உண்மையறிவிக்க வேண்டினன். சிவமூர்த்தி அசரீரியாய் வாணியத்தெருவில் நடக்கும் கலியாணத்தில் வேதியனுடன் சென்று அறிக என்றனர். அரசன்கேட்டுப் பிராமணனுடன் மாறுவேடங்கொண்டு இருவரும், கலியாணவீட்டின் ஒரு புறத்திருந்தனர். அன்றைக்கு அந்த மணமகனுக்கு ஆயுள்முடிவு ஆதலால் அங்குவந்த யமபடர், பேசும் வார்த்தைகள் சிவாநுக்கிரகத்தால் இவர்களுக்குக் கேட்டன. அதாவது காலதூதன், உடம்பில் வியாதியில்லாதஇவனை நாம்எப்படிக் கொல்வதென்று மற்றவனைக் கேட்க வேறொருவன், அன்று ஆலிலையில் என்றைக்கோ தைத்திருந்த அம்பைப் பார்ப்பினியின் மார்பில் உருவச்செய்து உயிர் நீக்கியதுபோல், இந்த வாத்தியவோசையால் புறத்திற் கட்டியிருக்கும் பசுவினை மருட்டிப்பாயச் செய்து நீக்குவோம் என்றனன். பாண்டியனும் வேதியனும் இதனுண்மை காண்போமெனச் சற்றுப் பொறுக்க அவ்வகையே நடந்தது. பாண்டியனும் வேதியனும் முன்னினும் அதிக விசனமடைந்து நீங்கினர். பாண்டியன் வேதியனுக்கு மறுமணஞ் செய்வித்து வேடனுக்கு வேண்டிய பொருள் அளித்தனன். இவனுக்கு (௫0,000) குமரர். இவர்களுள் மூத்தவன் அநந்தகுணபாண்டியன். இவன்காலத்தில் அங்கம் வெட்டின திருவிளையாடல்நடந்தது. சித்தனைக் காண்க.

குலோத்துங்கன் — 1. இவன் இராஜேந்திர சோழப் பெயரான். இவன் தாய்முறையில் சோழன். தந்தை வழியில் சாளுக்யன். இவன் சோழச் சக்ரவர்த்தியாகிய இராஜ ராஜனுக்குப் பேரன் இராஜேந்திர சோழனுடைய மாப்பிள்ளை. இவனுக்கு அநபாயன், அபயன், கரிகாலன், ஜயதரன் எனும் பெயர்களும் உண்டு. பெரிய புராணத்தில் "ஆயசீரனபாயன்" என்றதும் "செங்கியபயன் குலோத்துங்க சோழன் தில்லைத் திருவெல்லை, பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறென்றும் புவி காக்கும், மன்னர் பெருமான் அநபாயன் வருந்தொன் மரபின் முடிசூட்டும், தன்மை நிலவு பதியைந்தினென்ருய் விளங்குந்தகைத் தவ்வூர்" எனத் தண்டியலங்காரத்தும் புகழ்ந்தது. இவனே கலிங்கத்துப் பரணியில் அபயனென முழுதும், சிற்சில இடங்களில் கரிகாலன் எனவும், ஜயதரனெனவும் கூறப்படுகிருன். இவன் மாமன் மகள் மதுராந்தகி அல்லது தீனசிந்தாமணி இவளுடன், எழிசை வல்லவி, தியாகவல்லவியென வேறு மனைவியரும் இருந்தனர். இவனுக்கு மக்கள் எழுவர் இவனுக்கு அம்மங்கையெனும்ஒருபெண்ணும்,குந்தவ்வை (iii) ஒரு சகோதரியு மிருந்தனர். இவன் வெங்கிநாட்டைத் தன் சிற்றப்பன் விஜயாதித்தனிடமிருந்து பிடுங்கித் தன் இரண்டாங் குமரன் இராஜராஜனைப் பிரதிநிதியாக்கினுன். சில நாளில் அந்நாட்டிற்கு வீரசோழன் அரசனுனன். இவன் பின் சக்கரகோட்டத்தில் தாராதேசத் தரசனை வென்றும், குந்தள அரசனுகிய விக்ரமாதித்தனை வென்று ஜயசிங்களிடமிருந்து வனவாசியைப் பிடித்தான். இரண்டாமுறை விக்ரமாதித்தனைத் துரத்திக் கல்யாணபுரம்கைக்கொண்டு பின் பாண்டிநாட்டைத் தாக்கித் தன் வசப்படுத்தினுன். மலையாளத்துக் குடமலை நாட்டை வென்ருன்; யுத்தங்கள் தணிந்திருக்கையில் கலிங்கத் தரசனுகிய சோடகங்கன் கப்பங்கட்டவில்லையெனத் தன் சேநாபதி கருணுகரத் தொண்டமானை அனுப்பி வென்று கலிங்கத்தைத் தன்னுட்டுடன் சேர்த்துக் கொண்டான். இவன் தன் (14)வது ஆண்டில் **திரிபுவன சக்ரவர்த்தி** யெனப் பட்டம் பெற்ருன். இவன் சுங்கந் தவிர்த்ததால் **சுங்கந்தவிர்ந்த சோழன்** என்பர். பல சிவ விஷ்ணு ஆலயங்களையும் ஜயினகோட்டங்களையும் புதுப்பித்தான். சிதம்பரம் பொன் மேய்ந்தான் இதனுலிவனுக்குப் **பேரம்பலம் பொன் வேய்ந்த சோழன்** என ஒருபெயர். இவன் கல்விமான்களிடத்தில் அன்பு வாய்ந்தவன். சேக்கிழார் பெரியபுராணம் பாடியது இவன் காலம், இராமாநுஜர் காலமும் இதுவே. இவனுக்குப் பயந்தே இராமாநுசர்போசளராச்சியத்தில் தொண்டனூரில் ஒளித்தார். இவன் நாகப்பட்டினம்ஜைன இராஜ ராஜப்பெரும் பள்ளிக்கு மான்யம்விட்டான் இவனுக்குத் **திருநீற்றுச் சோழன்** என ஒருபெயர் இவன் பெயரால் திருநீற்றுச் சோழநல்லூர் என ஓர் ஊர் தென்னுட்டிலுளது. இவன் 49-வருஷம் ஆண்டான். (1070-1118) ஆகிறது. இவனுக்குப் பின் விக்ரம சோழன் பட்ட மடைந்தான். **குலோத்துங்கன்** (iii) இராஜாதி ராஜனுக்குப் பின் பட்டத்திற்கு வந்தான். இவனுக்கு **வீர ராஜேந்திரன், திரிபுவன வீரதேவன்** எனவும் பெயர் உண்டு. இவன் வீரபாண்டியனுடன் போர் புரிந்து துணைவந்த சிங்களவரை வென்று விக்ரம பாண்டியனுக்குத் துணையாகிப் பாண்டிநாட்டை விக்ரம பாண்டியனுக்குக் கொடுத்தான்.

2. இவனுக்குச் சென்னியெனவும், அநபாயன் எனவும், செங்நி அநபாயன் குலோத்துங்கனெனவும் பெயருண்டு. இவன் விக்ரமசோழன் குமரன். இவன் குமரன் இராச ராசசோழன். இவன் காலத்தவரே ஒட்டக்கூத்தர். இவனைக் கம்பர் பல இடங்களிலும் புகழ்ந்துள்ளார். ஏரெழுபதில் "முடியுடைய மன்னவரின் மூவுலகும் படைத்துடைய, கொடியுடைய மன்னவரிற் குலவுமுதற் பெயருடையான், இடியுடைய வொலிகெழு நீரொழுபத் தொன்பது நாட்டுக், குடியுடையான் சென்னி பிற ரென்னுடையார் கூறீரே." இராமாயணம் "புவிபுகழ் செங்நி போரமலன் ருேள்புகழ், கவிகடம் மனையெனக் கனக ராசியும், சவியுடைத்தூசு மென்சாந்து மாலையுமவிரிழைக்குப்பையுமளவிலாதது" மருத்து மலைப்படலத்து "வன்னிநாட்டிய பொன்மௌலிவானவன்மலரின்மேலான், கன்னிநாட்டிருவைச் சேர்ந்த கண்ணனுமாளுங்காணிச்,சென்னிநாட்டெரியல் வீன்றியாகமாவிநோதன்றெய்வப்,பொன்னிநாட்டுவமைவைப் பைப்புலன் கொளநோக்கிப் போனுன்" எனக்கூறியவாற்ரு

சென்னி யென்பது இவனுக்குப் பெயர். இவனை ஒட்டக்கூத்தரும் "ஆழிப்பெரு மாள பயனநபாயன், சூழிக்கடா யானைத் தோன்றுதலும், எனவும் "பெருமான நபா யன் பேரிய மூன்றுந், தருமாரவாரந்தழ ங்க" எனக்கூறிய வாற்றால் அநபாயன் என ஒரு பெயரிவனுக்குண்டு.

3. இவன் கவிகூறுதலினும் வன்மை யுள்ளவன். ஒட்டக்கூத்தரிடம் கல்வி பயி ன்றவன். இவன் சிவபக்திமான், தில்லைப் பேரம்பலம் பொன்னுற் குயிற்றினவன், திருக்காமக் கோட்டம் திருப்பணி முற் றும் புரிந்தவன். "தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறு தெய்வத், தொல்லைக் குறு ம்பு தொகுத் தெடுத்து" என்பதால், இவ ன்தில்லை நகர்க்கண் திருமன்றின் முன்றி லில் சிறு தெய்வமாகிய பெரும்பகையை அடியோடு பெயர்த்தெடுத்துக் கடலில் மூழ்குவித்தான் எனத் தெரிகிறது. இத னைத் தக்கயாகப் பரணியிலும் "முன்றிற் கிடந்த கருங்கடல் போய் முன்னைக்கடல் புகப்பின்னைத் தில்லை, மன்றுக்கிடங்கண்ட கொண்டல் பெற்ற மரகதமேருவை வாழ் த்தினவே" என்பதால் இவன் தில்லையி லிருந்த பள்ளிகொண்ட கோவிந்தராஜப் பெருமாளை மீண்டும் கருங்கடலில் பள்ளி கொள்ள அனுப்பினவன் எனத்தெரித லால் இவன் அப்பெருமாள் கோயிலைக் கடற்கரையிற் சேர்ப்பித்தவன்.

**குலோத்துங்கன்**--இவன் காவடகிராமத்தில் இருந்தவன். தேவி கோமளை. இவனிடம் சிவமூர்த்தி நடு ராத்திரியில் விருத்த ராய்ச் சென்று அன்னம்வேண்ட அந்தத் தம்பதிகள் களித்து அன்னமிட்டனர். அதனுல் சிவமூர்த்தி குபேரனிடத்து அர சாட்சிபட்டமும் முடியும் தரிக்கும்படி கட் டளையிட்டனர். அப்படியே குபேரன் குலோத்துங்கபட்டந்தரித்து இருக்கையில் தனது அரண்மனையில் பெருஞ்செல்வங் கண்டு தன் வசப்பட்டிருந்த காட்டைச் சேனைகூட்டி நாடாக்கினன். அக்காலத்தி லவ்விடமிருந்த தஞ்சாசூரனுடன் போரி ட்டு வென்று தஞ்சையை அரசாட்சியாக் கித் தன் மகன் தேவசோழனுக்குப் பட் டங்கட்டிச் சிவபதமடைந்தனன். இவன் பலசிவாலய விஷ்ணு ஆலயத்திருப்பணி கள் செய்வித்தனன்.

**துல்லியன்** — பவுஷ்பஞ்சி மாணுக்கன்.

**துல்லூகபட்டர்** — மனுஸ்மிருதிக்கு வியாக் யானஞ்செய்த ஸமஸ்கிருத கவி.

**குவலயாசுவன்** — 1. (சூ) பிருகதச்சுவன் குமரன், ரோகிதாச்வன் குமரன் என்றுங் கூறுவர். இவன் தேவர்களை வருத்திக் கொண்டிருந்த துந்துஎன்னும் அசுரனைக் கொன்றதால் துந்துமாரன் எனவும் பெ யர் பெறுவன். உதங்கருக்குப் பிரீதியான வன். உதங்கரால் தன் சந்ததிக்குப் பிரா மணவிசுவாசம் உண்டாகவரம்பெற்றவன். இவனுக்கு (2,100) பிள்ளைகள். இவர்க ளில் திடாசுவன், பத்திராசுவன், கபிலா சுவன் தவிர மற்றவர் அசுரன்முகாக் கினியா லழிந்தனர். (பாகவதம்.)(பிரம-பு.)

2. தியுமானுக் கொருபெயர்.

3. திவோதாசன் குமான், இவனுக்குக் காலவமுனி அநுக்கிரகத்தால் குவலயாச் வமென்னுங் குதிரை கிடைக்க அதனுல் இவன் அந்த ருஷியின் தவத்திற் கிடை யூறிழைத்துவந்த பாதாளகேதுவை வெ ன்று பாதாளத்தில் அவனுல் சிறைபட்டி ருந்த மதாலசை என்பவளை மணம்புரிந் தனன். இவனுக்கு ருதுத்துவசன் என் றும் பெயர். இருதுத்துவசனைக் காண்க.

4. காச்யவம்சத்தவன். வச்சன்குமான்.

**குவலயாநந்தம்** — ஒரு அலங்கார இலக்க ணம். இது தமிழ் ஆரியம்எனும் இரண்டு பாஷையிலும் இருக்கின்றது.

**குவலயாபீடம்** — கம்சன் பட்டத்து யானை. கிருஷ்ணன்மீது பாகனு லேவப்பட்டுக் கொம்பிழந்தது.

**குவானுகோ**—ஒருவித கடம்பைச்சாதியைச் சேர்ந்த மிருகம். கூட்டமாக வசிப்பது. 4-அடி உயரம் அமெரிகாவில் உள்ளது. இவை தங்களில் எதாவதொன்று மரண மடையின் ஒன்றுகூடும் என்பர்.

**குழந்தைமுதலியார்** — இவர் திருக்குற்றால வாசி தமிழ்க் கவி; வீரராகவர் பிள்ளைத் தமிழியற்றியவர்.

**குழல்** — இது மூங்கில், சந்தனம், வெண் கலம், செங்காலி, கருங்காலி முதலியவற் றுல் செய்யப்படும். இவற்றுள் மூங்கிலில் செய்வது உத்தமம், வெண்கலம் மத்தி மம், ஏனைய அதமம். மூங்கில் பொழுது செய்யும், வெண்கலம் வலிது, மரம் எப் பொழுதும் ஒத்துநிற்கும். இவற்றுல் குழல் செய்யுமிடத்து உயர்ந்த, ஒத்த நில த்துப்பெருக வளர்ந்து நான்குகாற்று மயங் கின் நாதமில்லை. ஆதலால் மயங்காநிலத்

தின்கண் இளமையும் நெடும்பிராயமும் இன்றி ஒரு புருடாயுசு புக்க மரத்தைவெட்டி ஒரு புருடாகாரமாகச் செய்து அதனை நிழலிலே ஆறவிட்டுத் திருகுதல், பிளத்தல், போழ்ந்துபடுதல் செய்கை அறிந்து ஓராண்டு சென்றபின் இலக்கணப்படி குழல்செய்யப்படும். இதன்பிண்டி இலக்கணம், நீளம் இருபதுவிரல், சுற்றளவு நாலரைவிரல், இது தொளைவிடும் இடத்து நெல் அரிசியில் ஓர் பாதி மரனிறுத்திக் கடைந்து வெண்கலத்தால் அணைசுபண்ணி இடமுகத்தை அடைத்து வலமுகம் வெளியாக விடப்படும். தொளை அளவிலக்கணம், அளவு இருபதுவிரல். இதிலே தூபமுகத்தின் இரண்டுநீக்கி முதல்வாய் விட்டு இம்முதல்வாய்க்கு எழங்குலம்விட்டு வளைவாயினும் இரண்டுநீக்கி நடுவினின்ற ஒன்பது விரலினும் எட்டுத்தொளையிடப்படும். இவற்றுள் ஒன்றுமுத்திரை என்று கழித்து, மிகுந்துநின்ற எழினும் எழுவிரல்வைத்து ஊதப்படும். தொளைகளின் இடப்பரப்பு ஒருவிரல் அகலம். எழுவிரல்களாவன: இடக்கையிற் பெருவிரலும், சிறுவிரலும் நீக்கி மற்றைமூன்றுவிரலும், வலக்கையில் பெருவிரல் ஒழிந்த நான்கு விரலுமாக எழுவிரல் என்க. இவ்வெழு தொளையில் இசை பிறக்குமாறு எழுத்தால் பிறக்கும் எழுத்து ச-ரி-க-ம-ப-த-நி என்பன. இவ்வேழ் எழுத்தினையும் மாத்திரைப்படுத்தித் தொழில்செய்ய இவற்றுள் எழிசை பிறக்கும். எழிசையாவன:— சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவம், நிடாதம் என்பன. இவற்றுள் பண்கள் பிறக்கும்.

**குழவிக்கட்டோன்றியகாமப்பகுதி** — குழவிப்பதத்தராகிய மைந்தரது நலத்தை விரும்பின காமப்பகுதி நிறைந்த மங்கையரது தன்மையைச் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)

**குழற்றத்தன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். இவர் பெயர் தத்தன் என இருக்கலாம். குழல் என்பது அடைமொழி. (குறு-உசஉ.)

**குழித்தைலம்** — அடியில் துவாரமிட்ட குடுவையில் மருந்தை நிரப்பிப் பூமியில் பள்ளமிட்டு அடியில் ஒரு பாத்திரமமைத்து குடுவையைப் பாத்திரத்தின்மேல் வைத்து பூமியில்வைத்த குடுவையைச்சூழ வறட்டியடுக்கித் தீயிட் டெரிப்பது.

**குளகச்செய்யுள்** — இது பல பாட்டாய் ஒரு வினைகொண்டு முடிவது.

**குளக்கோட்டன்** — வராமனைக் காண்க.

**குளத்துடைய மகருஷிகோத்ரன்** — தமிழ்நாட்டு மூன்று வேந்தரும் முடியில் சூட இந்திரன், சந்திரன், சூரியன் மூவரிடத்தும் பவளம், முத்து, மாணிக்கம்பெற்று அரசர்க்குக் கொடுத்துக் கீர்த்தி பெற்றவன். இவன் வைசியன்.

**குளத்துழான்** — சோழனால் குடியேற்றப்பட்ட நாற்பத்தெண்ணாயிரவரில் ஒருவேளாண் வகுப்பிற் சேர்ந்தவன்.

**குளப்பாக்கிழான்** — சோழனால் குடியேற்றப்பட்ட நாற்பத்தெண்ணாயிரவரில் ஒருகுடி. வேளாண் வகுப்பு.

**குளம்பனூர்** — குளம்பு என்னு மூரினராதலிற் குளம்பனாரெனப்பட்டார். இஃது ஊர் பற்றிவந்த பெயர். இவர் குறிஞ்சித்திணையைப் பாடியுள்ளார் இவர் பாடியது. நற்-(உஅஅ) ம் பாட்டு.

**குளம்பாதாயனார்** — ஒரு தமிழ்ப்புலவர். (புற-நா.)

**குளவி** — இது முதுகெலும்பில்லாப் பிராணி வகையைச் சேர்ந்தது. பறக்கு மினம் இதற்குப் பற்களும் துதிக்கையு முண்டு. இது துதிக்கையால் ஆகாரத்தை உறிஞ்சியுண்ணும் புழுக்களைப் பிடித்தும் தின்னும். இது, முதலில் புழு வுருவாயிருந்துபின் இறகு பெற்றுப் பறப்பது. கொட்டுந்தன்மையது. இவ்வினத்தில் பலவகையுண்டு.

**குளிகன்**—1. ஒரு நாகன், பாதாளவாசி. அஷ்டமாநாகங்களி லொன்று.

2. சநியின் குமரன்.

**குளிகன்** — விஷ்ணுமாகாத்மியங் கேட்டு நற்பதமடைந்தவன். (பிரகன்னாரதீயபுரா.)

**குளிகாதிதோஷம்** — பகலளவை (அ) சாமமாக்கி, அற்றை வாரமுதலாக சநிக்கிழமை வரையாக எண்ணிக் கண்டசாமங்களில் சனிக்கிழமை கண்ட சாமம் **குளிகனும்**. அற்றைவாரமுதல் எண்ணிக்கண்ட சாமங்களிலே வியாழக்கிழமை கிடந்த சாமம் எமகண்டம். இந்தத் தோஷங்களில் வாராதிபன் வலிபெற்றுநிற்பினும் தன்னுடைய ஆட்சிராசி யுதிப்பினும் உதயலக்னத்தில் நிற்பினும் தோஷமில்லை.

**குளிந்தம்** — 1. சரஸ்வதி தீரத்திலுள்ள தேசம். The District of Snaharunpur, North of Delhi.

2. சரஸ்வதிதீரத்திலுள்ள ஒரு தேசம்.

**குளிந்தன்** — ஒரு அரசன்.

**குள்ளநரி** — இது நாயினினத்தைச் சேர்ந்த பிராணி. இது நரியைப்போல உருவம் பெற்றுக் குறுகியிருத்தலால் இப்பெயரடைந்தது. இதற்கு இரவில் கண் நன்றாகத் தெரியும். இது பகலில் மரப்பொந்து குழிகளில் பதுங்கியிருந்து இரவிலிரை தேடப் புறப்படும். எதையுந் தின்னும். இரை அகப்படா விட்டால் பழங்களைத் தின்னும். கிராமங்களில் கோழி வாத்து முதலியவைகளைத் திருடும். தனக்கு விரோதியாகிய நாய் முதலிய பின்றொடரின் தன் வாற்புறத்துள்ள வொருவகைத் தைலத்தை விசிறியோட்டித் தான் விரைவில் பதுங்கிவிடும்.

**குறமகள்இளவெயினி** — இவர் ஒரு பெண் கவியாக இருக்கலாம். குறச்சாதி. ஏறைக் கோனைப் பாடியவர். (புற-நா.)

**குறவர்கள்** — இவர்கள் இந்துதேச முழுதும் வசிக்கும் ஒருவகைக் கள்ளசாதியார். இவர்கள் பாஷை தமிழ் தெலுங்கு கலந்தது. இவர்கள் பலவித தொழில் செய்வர். இவர்கள் சாத்துபடி குறவர், காவடிக் குறவர், மாண்பாடிக் குறவர், செருப்புக் குத்திக் குறவர், உப்புக் குறவர், கறிவேப்பிலைக் குறவர், புளிக் குறவர், டப்பி குறவர், கஞ்சு குறவர், பூசலவாடு, உட்ளவாடு, காதுகுழிக் குறவர், கூடைகட்டிக் குறவர், வள்ளியம்மைக் கூட்டம், வாலாஜாக் குறவர், உய்யாலு குறவர், சோலைக் குறவர், தோகைமலைக் குறவர், கள்ளக் குறவர், கூத்தாடிக் குறவர் முதலிய பலவகை. இவர்கள் தெய்வம், கொல்லாபுரியம்மை, பெருமலை சுவாமி, போலாரம்மை. இவர்களிலாண்கள் திருடுதல் சிறு தொழில் செய்தல். பெண்கள் குறி சொல்லல், கறிவேப்பிலை விற்றல் கிராமங்களில் கூடை முதலிய கட்டுதல் இவர்கள் சரிதம் பல. (தர்ஸ்டன்.)

**குறள்** — திருவள்ளுவரியற்றிய வுலகமறிந்த நீதிநூலாகிய தமிழ்மறை. திருக்குறள் காண்க.

**குறள்வெண்பா** — இரண்டடியாய் ஒரு விகற்பத்தா லேனும் இரு விகற்பத்தா லேனும் வருவது,

**குறள்வெண்பாவிற்கினம்** — குறள்வெண்டாழிசை, குறள்வெண் செந்துறை என (2) வகை. குறள்வெண் செந்துறை விழுமியபொருளும் ஒழுகிய ஓசையுமுடைத்தாய் எனைத்துச்சீரானும் அளவொத்த இரண்டடியான்வருவது. குறட்டாழிசை, நாற்சீரான்மிக்க பலசீரான் வருமடியிரண்டாய் ஈற்றடிகுறைந்து வருவனவும், விழுமியபொருளும் ஒழுகிய வோசையுமின்றிக் குறள்வெண் செந்துறையின் சிதைந்துவருவனவும், வேற்றுத்தளை விரவிய குறள் வெண்பாவுமாம். (யாப்பு - இல.)

**குறிசொல்வான்** — தென்னாட்டு அகமுடையார் கள்ளர், மறவர்வகையிற் சேர்ந்தவரிற் சிலர்பெரிய முண்டாசு தலையிற் சுற்றியும், வெள்ளிகட்டிய பிரம்பு கையிற் கொண்டும் மிதியடியிட்டும் சில பாட்டுகளைப் பாடஞ்செய்துகொண்டு பெண்களுக்கும், புருஷர்களுக்கும் நிகழ்கால எதிர்கால செய்தி கூறுவார்போல் நடித்துப் பொருள் கொள்ளும் கபடிகள்.

**குறிஞ்சிக்கருப்பொருள்**—தெய்வம் குமாரக் கடவுள், உயர்ந்தோர் பொருப்பன், குறத்தி, தாழ்ந்தோர், கானவர், புள், கிளி மயில், விலங்கு, சிங்கம், புலி, ஊர், சிறுகுடி, நீர்-அருவி, சுனை, பூ-காந்தள், வேங்கை, மரம்-சந்தனம், தேக்கு, உணா-மூங்கிலரிசி, தினை, பறை - தொண்டகம், யாழ்-குறிஞ்சியாழ், பண்-குறிஞ்சி, தொழில் வெறியாடல், தினைகாத்தல், கிழங்ககழ்தல் முதலிய.

**குறிஞ்சிநிலம்**—மலைசார்ந்தநிலம். இது சிலேஷ்மவீடு. இதில் வசிப்போர்க்குச் சிலேஷ்மம் அதிகரிக்கும். இதில் உண்டாம் ஓஷதிகள் வன்மைகொண்டிருக்கும். வயிற்றில் ஆமைக்கட்டி, சுரம், வல்லைக்கட்டியும் உண்டாம்.

**குறிஞ்சிப்பாட்டு**--இது ஆரிய அரசன் பிரகத்தனைத் தமிழ் அறிவுறுத்தற்குக் கபிலர் பாடியது. இது மலைவளங்களையும் இல்லறத்தையும் விளக்கும். இதனைப் பெருங்குறிஞ்சி யென்பர்.

**குறிதன்** — (சூ.) விசயன் குமரன்.

**குறிநிலையணி**—அஃதாவது புகழ்பொருளையுணர்த்துஞ் சொற்களாற் குறித்தறிதற்குத் தகுதியாகிய பொருளைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் முத்திராலங்காரமென்பர்.

**குறிப்புநவிற்சியணி**—அஃதாவது ஒருபொருளைக் குறித்துச்சொல்ல வேண்டியதை மற்றொருபொருளைக் குறித்துச் சொல்லுதலாம். இதனை வடநூலார் கூடோக்தியலங்காரமென்பர்.

**குறிப்புமொழிகள்** — குறிப்பாகப் பொருளுணர நிற்கும்மொழிகள் அவை ஒன்றொழி பொதுச்சொல்,விகாரம்,தகுதி, ஆகுபெயர் அன்மொழித்தொகை, முதற்குறிப்பு, தொகைக் குறிப்பு, வினைக்குறிப்பு, பிறவுமாம்.

**குறிப்புவினை** — பொருளிடங் காலஞ்சினை குணந் தொழில்களி னடியாகத்தோன்றி வினைமுதலை மாத்திரம் தெரிவித்து நிற்பது. (நன்.)

**குறியிறையார்** — இவர் கடைச்சங்க காலத்துப்பெண் கவியாக இருத்தல்கூடும். இவர் தாம் பாடிய குறுந்தொகையில் "குறியிறைப்புதல்வர்" எனக்கூறி யிருத்தலால் இவர்க்கு இப்பெயர் வந்ததுபோலும். (குறு-௩௯௪.)

**குறுங்கலி** — நறுநாற்றங் கமழும் பெரிய குழலினையுடைய மடவாரை விரும்ப விகற்பித்த காதலைக் கெடச்சொல்லியது. (பு. வெ. பெருந்திணை.)

**குறுங்கீரன்**—இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவர்பெயர் கீரனாக இருக்கலாம். இவர் உருவத்தால் குறியராக இருந்திருக்கலாம். ஆதலினிவ்ரை இப்பெயரிட்டு அழைத்தனர் போலும். (குறு-௩௮௨.)

**குறுங்குடிமருதனார்** — கடைச்சங்க மருவிய புலவர். (அக-று.) (குறு-தொ.)

**குறுங்கோழியூர்கிழார்** — யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையைப் பாடிய தமிழ்ப் புலவர். இவர் ஊர் குறுங்கோழி போலும், வேளாண் குடியினர். (புற நா.)

**குறுந்தொகை-சா**—இது எட்டுத்தொகையுளிரண்டாவது, இது அகப்பொருளை விளக்கும். இதனை முடித்தான் பூரிக்கோ. இதனைப் பாடியவர் திப்புத்தோளார் முதல் அம்மூவனார் இறுதியானார். இதற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் என்ப. இது கடைச்சங்க மருவியது.

**குறும்பர்**—பல்லவ அரசர்களின் சந்ததியார் இவர்கள் கோங்கர், சோழர், சாளுக்கியரால் தங்களிடங்களிலிருந்து துறத்தப்பட்டு மலைகாடு முதலிய இடங்களில் ஒளிந்து பலவித தொழில்செய்து பிழைக்கின்றவர். சிலர் வர்த்தகம் செய்கின்றனர். குறும்பர் நாடு மலைநாட்டில் ஒரு பிரிவு. இவர்களிற் சிலர் கன்னடம் பேசுவர். (தர்ஸ்டன்.)

**குறுவஞ்சி**--மண்டி எதிர்ந்த வீரத்தையுடைய மன்னர்க்குத் திறையைக்கொடுத்து நாடுடைய அரசன் குடிக்குத்தண்ணளி பண்ணிக்காத்தது. (பு. வெ.)

2. விட்டிருக்கும் பாசறையினது கூறுபாட்டைச் சொல்லினும் முற்பட்ட குறுவஞ்சிக்கு உரிமையுடைத்து. (பு.வெ.)

**குறுவழுதியார்**—கடைச்சங்கமருவிய புலவர். (அகம்.)

**குறையவை** — இது கட்டளையைக் கடந்து நிறைவிலாச் சொல்லையும் பொருளையுந் தன்னகத்தடக்கிக் கூறுவது.

**குற்றங்கள்** — சொற்குற்றம், வாக்யகுற்றம், வாக்கியப்பொருட் குற்றம் என மூன்றாக வகுப்பர். இவற்றில் சொற்குற்றம் மாத்திரம் இங்குக் கூறுகிறேன். மற்றையவை இவ்விடம் எழுதின் விரியுமாதலின் பெயர் மாத்திரமே கூறுவன். **சொற்குற்றங்கள்** (௧௬) அவை ௧. அசாது, ௨. அப்ரயுக்தம், ௩. கஷ்டம், ௪. அநர்த்தகம், ௫. அந்நியார்த்தம், ௬. அபுட்டார்த்தம், ௭. அசமர்த்தம், ௮. அப்பிரதீதம், ௯. கிலிட்டம், ௧௦. கூடார்த்தம், ௧௧. நேயார்த்தம், ௧௨. சந்திக்தம், ௧௩. விருத்தம், ௧௪. அப்பிரயோசகம், ௧௫. தேசியம், ௧௬. கிராமியம் என்பன. இவற்றுள் ௧. **அசாது** - இலக்கண நூல்களுக்கு விரோதமாக வருஞ் சொற் பிரயோகம் யாதோ அது, ௨. **அப்பிரயுக்தம்** - கற்றோரால் முன்னம் ஓரிடத்தும் பிரயோகிக்கப்படாத சொற்பிரயோகம், ௩. **கஷ்டம்** - கேட்போர் காதுகளுக்கு இனிமைதராத சொற் பிரயோகம், ௪. **அநர்த்தகம்** - அடிகளை நிறப்புதற் பொருட்டு வருந்திச் சேர்க்கப்படும் சொற்பிரயோகம், ௫. **அந்நியார்த்தம்** - கருதிய பொருளைத்தரும் ஆற்றல் கெட்டதுவாகி வேறும் பொருள் பயப்பது, ௬. **அபுட்டார்த்தம்** - ஒரு சிறிய சொல்லால் சொல்லத்தக்க பொருளை விளக்குதற்குச் சொல்லப்படும் வெகுசொற் பிரயோகம், ௭. **அசமர்த்தம்** - கருதிய பொருளை விளக்குதற்குரிய பொருத்தமில்லாத சொற்பிரயோகம், ௮. **அப்பிரதீதம்** - அங்கியசாத்திரம் கொண்டன்றி வேறெவ்வழியானும் அறியப்படாத சொற் பிரயோகம், ௯. **கிலிட்டம்** - பல சொற்களின் பொருள் கண்டு ஒழிந்தபின் கருதிய பொருள்பயக்கும் சொற்பிரயோகம், ௧௦. **கூடார்த்தம்**- கருதிய பொருட்குப் பிரசித்தமான வழக்

நமில்லாத சொற்பிரயோகம், கக. நேயா ர்த்தம் - வேறென்றிலுங் காணப்படாத தாய்ப்பாடுவோ ஞற்ருனே கற்பிக்கப் பட்ட பொருளுடைய சொற்பிரயோகம். கஉ. சந்தித்தம் - இதுவோ அதுவோ எனும் ஐயத்திற்கிடஞன பொருளுடைய சொற்பிரயோகம், கங. விபர்தம் - கருதிய பொருட்கு மறுதலைப் பொருளும் பயக்கும் சொற்பிரயோகம், கச - அப்பிரயோசகம் - கருதிய பொருட்குப் பயன் படாத அடைசொற் பிரயோகம் உடையது, கரு. தேசியம் - வேற்றுநாட்டுச் சொற்பிரயோகம். (திசைச்சொல்.) கசு. கிராமியம் - கேட்போர்க்கு அருவருப்பினை யுண்டாக்கும் அசப்பியம், அமங்கலம், நிந்தை, முதலிய பொருளமைந்த சொற்பிரயோகம். வாக்யதுற்றங்கள்-கசு. அவை க. சப்தஹீனம் (அபசப்தம்) உ, கிரமபிரஷ்டம், ங. விசந்தி (சந்திவழு). ச. புனருத்தி (கூறியது கூறல்), ரு. வியாகீர்ணம், சு. சங்கீர்ணம், எ. அபதம், அ. கர்ப்பிதம், கூ. பின்னலிங்கம் (பால்வழு, க0. பின்னவசனம் (எண்வழூ), கக. நியூனேபமை, கஉ. அதிகோபமை, கங; பக்னச்சந்தம் (சந்தவழு), கச. பக்னயதி (யதிவழு), கரு. அசரீரம், கசு. அரீதிமத்து (இரீதி யில்லாதது). வாக்கியப் பொருட் குற்றம் - கசு. க. அபார்த்தம், உ. வியர்த்தம், ங. ஏகார்த்தம், ச. சமுசயம், ரு. அபக்கிரமம், சு. கின்னம், எ. அதிமாத்ரம், அ. பருஷம், கூ. விரசம், க0. ஈனேபமம், கக. அதிகோபமம், கஉ. அசதிருக்ஷோபமம், கங. அப்பிரசித்தோபமம், கச. நிரலங்காரம், கரு. அச்சிலீலம், கசு. விருத்தம் முதலிய.

**குற்றம்** — (ங) காமம், வெகுளி, மயக்கம். (ரு) கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, கூன்கிடை, நட்டுவிழல். (அ) ஞானவரணியம், தரிசனவாணியம், வேதநீயம், மோகநீயம், ஆயு, நாமம், கோத்திரம், அந்தராயம். ரு. அவிச்சை, அகங்காரம், அவா, ஆசை, வெகுளி.

**குற்றிசை** — அழகிய மாலை மார்பைப் பொருந்திய அரிவையர்க்கு அற்றறுதிப்பட்டு நடவாது அறத்தைக்கண் மறுத்தது. (பு. வெ. பெருந்திணை.)

**குற்றியலுகரம்** — உகரம் தொடர்மொழியிறுதியில் ஓசை குறைவது. குற்றிய லிகரமு மிவ்விலக்கணத்தது; மற்ற குறுக்கங்களு மிவ்வாறே. (நன்).

**குற்றுழிஞை** — 1. சொல்லுதற்கரிய பரிசையினையுடைய சேனைத்தலைவர் ஆடுதலுடனே நொச்சியாருடைய அரணினைக் குறுகினும் முன்பு சொன்ன துறையேயாம். (பு. வெ.)

2. பகைவாரணுகிய அழிவில்லாததன் மேல் தான் ஒருவனுமேயாகி மாறுபாட்டினைப் பெருக்கியது. சங்க முழங்கக் கொம்பு குறிப்பக் காவற், காட்டைக் கடந்து புகுமதுவும், முன்னஞ் சொன்ன துறையேயாம். (பு. வெ.)

**குற்றெழுத்துக்கள்** — உயிரெழுத்துக்களில் மாத்திரை குறைந்த ஓசையுடைய அ, இ, உ, எ, ஒ ஆகிய ஐந்துமாம். (நன்.)

**குனு** — (Gunu) கடம்பை போன்ற காட்டு மிருகம். இது பைஸன்போல் உருவுடையது. இதன் கொம்புகள் நீண்டு வளைந்து மேலெழுந்திருக்கும். கழுத்தில் பிடரிமயிருண்டு. 4-அடி உயரம்-ஆபிரிகாதேசவாசி.

**குன்மம்** — இது திரிதோஷங்களால் ஏப்பம், மலபந்தம், துர்ப்பலம், குடலிரைச்சல், உப்பிசம், வயிற்றுவலி, அசீரணம், அசதி, இவைகளைத் தனக்குப் பூர்வரூபமாகப் பெற்றிருக்தும். இது வாத, பித்த, சிலேஷ்ம, பித்தசிலேஷ்ம, திரிதோஷ, ரத்த குன்மம் எனப்பலவகை. இவையன்றி ரத்தவாத பித்தகுன்மம், அசாத்யகுன்மம், பாயுருகுன்மம், எரிகுன்மம், சர்த்தி குன்மம், வலிகுன்மம் என வேறும் உள இவை, நவாக்ஷாரக் குழம்பு, கலிங்காதிலேகியம் முதலியவற்ருல் வசமாம். (ஜீவ.)

**குன்றத்தூர்** — சேக்கிழார் பிறந்த கிராமம், தொண்டைநாட்டின் கணுள்ளது.

**குன்றத்தூர்முதலியார்**—சேக்கிழார் தந்தை. இவரைச் சோழன் உலகப் பொருள்களுள் எது பெரிதென்று கேட்க, இவர் விடைதரமயங்கிச் சோர்ந்திருந்தது கண்டு குமாராகிய சேக்கிழார் அறிந்து தந்தைக்கு "காலத்திஞற் செய்தநன்றி சிறிதெனினும், ஞாலத்தின்மாணப்பெரிது" எனும் திருக்குறளை யெழுதித்தந்தனர். முதலியார் அதனை வேந்தனுக்குக் காட்டினர். சோழன் அதிககளிப்படைந்து சேக்கிழாரைத் தனது சமத்தான வித்வானுக்கினன். மற்ற சரிதங்களைச் சேக்கிழார்சரிதையிற் காண்க.

**குன்றம்பூதனார்** — இவர் கடைச்சங்கத்தவர் காலத்துப் புலவர். இவர் பரிபாடலில் பாண்டிநாட்டு முருகவேள் குன்றமாகிய திருப்பரங்குன்றத்தை மிக வருணித்திருத்தலின் இவர்க்கு இப்பெயர் வந்திருக்கலா மெனத் தோன்றுகிறது.

**குன்றியனார்** — இவரது பெயர்க் காரணம் விளங்கவில்லை. குறுந்தொகையில் மேலைக் கடற்கரைத் தொண்டியைச் சிறப்பித்திருக்கிற படியால் இவர் சேரநாட்டவர் என்று தோன்றுகிறது. குறு·உ௩அ. இவர் களவு கற்பாகிய இருவகை ஒழுக்கத்தையும் நெய்தற்றிணையி லமைத்துப் பாடியுள்ளார். மாலைப்பொழுதை அழகாக வருணிக்கிறார். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு (கக௭, உ௩௬) பாடலும், குறுந்தொகையில் ஆறும், அகத்தில் இரண்டுமாகப் பத்துப் பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**குன்று** — மலை சிறியதாக இருந்தால் அதற்குக் குன்று என்று பெயர் (பூகோளம்).

**குன்றூர்க்கிழார்மகனார்**—நெடுவேளாதனைப் பாடியவர். (புற-நா.)

**குன்றூர்க் கிழார்மகனார் கண்ணத்தனார்** — இவர் வேளாளர் மரபினர். குன்றூர் என்று பல வூருளவாதலின் இவரூர் இன்னதென்றறிய இயலாது. இவர் குறிஞ்சித்திணையைப் பாடியுள்ளார். இவர் பாடியது நற். ௩௩௨ ஆம் பாட்டு.

**குன்றையெல்லப்பன்** — குன்றத்தூரிலே புலவருக்குக் கொடுத்தபிரபு. இவர்மீது பலபுலவர் "ஆலெங்கேயங் கேயரும் பறவை யாற்றுயிலு, மாலெங்கேயங்கே மலர்மடந்தை, — சோலைதொறும், செங் கேதகை மணக்குஞ்செங்குன்றை யூரனெங்கே, யங்கேயிரவலரெல்லாம்" எ-ம் "தலையிந்தாவெனுமைந்தா தாலோதாலேலோ, தண்குன்றைப் பதியெல்லாதாலோ தாலேலேலோ', எ-ம் பாடிப் பரிசுபெற்றனர். இவர் வேளாளர்.

**குஜாதிபஞ்சகிரகங்கள்**—குஜன், புதன், குரு, சுக்ரன், சநி.

**குஷிதன்** — பவுஷ்பஞ்சி மாணாக்கன்.

**குஷ்டரோகம்** — (குறை நோய், பெருவியாதி,) தேக மினுமினுப்பு, தடித்தசருமம், தொட்ட இடம் தினவு, வியர்வு, நோ, எரிச்சல், ரோமச்சிலிர்ப்பு, சிறுகாயமும் ரணமாதல், கறுத்தரத்தம் வடிதல், கண்ட வறட்சி, அதிநித்திரை, முதலியவற்றைத் தனக்குருவமாகக் கொள்ளும். இது வாத பித்த சிலேஷ்மத்தால், கபால குஷ்டம், ஔதும்பர குஷ்டம், மண்டல குஷ்டம், விசர்ச்சிகா குஷ்டம், ருசியஜிம்மிக குஷ்டம், சரும குஷ்டம், ஏககுஷ்டம், கிடிப குஷ்டம், சித்ம குஷ்டம், அலச குஷ்டம், விபாதிகா குஷ்டம், தத்துரு குஷ்டம், சதாரு குஷ்டம், புண்டரீக குஷ்டம், விஸ்போட குஷ்டம், பாமாகுஷ்டம், சர்மதல குஷ்டம், காகுசகுஷ்டம், பிளக்கும் கர்ண குஷ்டம், கிருஷ்ண குஷ்டம், அபரிச குஷ்டமுமுண்டு. ஜீவ.

**குக்ஷி** — (சூ.) இக்ஷ்வாகு குமாரன், இவன்குமரன் விகுக்ஷி.

**குக்ஷிமான்** — குந்தளதேசத்துப் பருவதம்.

## கூ

**கூகை**—இது ஆந்தையினினத்தில் பெரிது. இது பகலெல்லாந் தூங்கியிரவில் இரை தேடப்புறப்படும். இது கபில நிறமுள்ளது, தலைஅகன்று கண்உருண்ட பறவை. இது மரங்களிலிருந்து கூஎன மனிதனைப் போல் கூச்சலிடுவதால் கூகை எனப்பட்டது. தவளை எலி உணவு.

**கூகைக்கோழியார்**—இவர் பாடலுள் வழங்கிய கூகையும் கோழியுமே இணைந்து இவர்க்குப் பெயராயினமை காண்க. இவர் ஊர் வாகை. இவர் பரணருக்கு முற்பட்ட புலவர். (குறுந்தொகை.)

**கூகைதோஷம்** — அமாவாஸ்யை முடிவிலும் பிரதமை முடிதலிலும் த்யாஜ்யம் வரும் காலம்.

**கூசுமாண்டர்**—ஒரு இருடி, மண்டபனைக் காண்க.

**கூச்சம்** — நாடக விகற்பத்தொன்று. இது, தலைவரிரு வரையிடையிட்டுப் பேசப்பட்டு வாரத்தோடிருக்கும்.

**கூச்மாண்டம்** — இது பெருபீஜ முள்ளது. இதனைப் பிரமதேவர்படைத்தனர். பிதுர்ப் பிரீதிக்காக விஷ்ணுவின் பொருட்டுத் தரப்பட்டது. இந்தக் கூச்மாண்டத்தைக் கந்தபுட்பாதி அக்ஷதைகளும் பஞ்சரத்னங்களுடனும் பசுவெண்ணெய் தக்ஷிணையுடனும் பிராமணருக்கு நிவேதிக்க வேண்டியது. இவ்வாறுசெய்யின் பிதுர்க்கள் பிரீதி அடைகின்றனர்.

**கூச்மாண்டன்** — 1. ஒரு அசுரன். இவன் தேவர்களைத் துன்பஞ்செய்துகொண்டிருக்

ததினால் இவனை விஷ்ணுமூர்த்தி கொலை செய்தனர். இவன் உடலின் உரோமத்தில் கூஸ்மாண்டம் என்னும் கல்யாண பூசுணைக்கொடி உண்டாயிற்று. இதனைப் பிதிர்பிரீதியின் பொருட்டுத் தானஞ் செய்யின் விசேட பலனுண்டாகும்.

2. பசுவைப் பிடித்துக்கொண்டு அதனிடம் இறைச்சி வேண்டியவசுரன்.

**கூடசதுக்கம்** — சித்திரக் கவியிலொன்று. இது நான் காமடிக்கு எழுத்து, முதல் மூன்றடியுள்ளும் பெருக்கிக் கொள்ளப் பாடுவது. (யாப்பு-வி).

**கூடலசங்கமர்** — மாதாம்பைக்கு எதிரில் தோன்றி வசவருக்குச் சிவநிவேதனத்தையே உண்பிக்க எனப்பணித்து மறைந்த சிவாவசரம்.

**கூடலூர்க்கிழார்** — முதுமொழிக்காஞ்சி பாடிய தமிழாசிரியர். கோச்சேரமான், யானைக்கட்சேய், மாந்தாஞ்சேரலிரும்பொறையைப் பாடியவர். இவர்க்குப் புலத்துறைமுற்றிய கூடலூர்க்கிழார் எனவும் மதுரைக்கூடலூர்க்கிழார் எனவும் பெயர். கடைச்சங்கத்தார் காலம். (புற-நா) (குறு-தொ.)

**கூடலூர்ப்பல்கண்ணனார்** — இவர்நீர் நாட்டின் கணுள்ள கூடலூரினராக வேண்டும். மருதத்திணையிற் பாணனை மறுத்துக்கூறுந் துறையையே சிறப்பித்துப் பாடியுள்ளார் இவர் பாடியபாட்டு இரண்டு. நற் - உ00 நஅ0.

**கூடல்கிழான்** — சோழனால் குடியேற்றப்பட்ட நாற்பத்தெண்ணாயிரவரில் ஒருகுடி. வேளாண்மரபு.

**கூடற்கிழார்**—குன்றத்தூரிலிருந்தவேளாண் குலத்தினவர்.

**கூடன்**-1. ஒரு அசுரன், நராந்தகன் ஏவலால் காசிப்பட்டணஞ்சென்று அரசன் வேண்டுகோளால் அவனது அரண்மனை செல்லும் மகோற்கடரது வரவைப் பாறையுருக்கொண்டு வாயிற்படியி விருந்து தடுத்தனன். இதனையறிந்த மகோற்கடராகிய விநாயகமூர்த்தி அநேகந் தேங்காய்கள் கொண்டுவரக் கட்டளையிட்டு அவைகளில் அஸ்திர ஆவாகனஞ்செய்து அந்தப்பாறையுருக்கொண்ட அசுரன்மீது உடைக்கக் கட்டளையிட்டனர். அரசனும் ஏவலாளரும் அந்தப்படி செய்ய அசுரன் சகிக்காது எழுந்து மகோற்கடர் பாசத்தா விறந்தனன்.

2. இவன் ஒருஅசுரன், பாலவிநாயகரை வஞ்சிக்க ஒரு தடாகமுண்டாக்கி அதில் விஷங்கலந்து ஆகாயத்திருந்து பார்த்துக் கொண்டிருந்தனன். சில இருடிகுமரர்கள் இந்த நச்சுத்தடாகத்தின் நீரைப் பருகி மாய்ந்தனர். இதனைக்கண்ட பாலவிநாயகமூர்த்தி இதை அமுதப்பார்வையால் பார்க்கத் தடாகம் நஞ்சுநீங்கி இருடி குமரரும் உயிர் பெற்றனர். விநாயகர் அசுரனை அக்கி நேத்திரத்தால் எரித்துக் கொன்றனர்.

3. கம்சனால் மல்லயுத்தத்திற்கு ஏவப்பட்டுப் பலராமரால் மாய்ந்த அசுரன்.

**கூடாமையணி** — அஃதாவது ஒரு காரியம் பிறத்தலையருமை யுடைத்தாகச் சொல்லுதலாம். இதனை வடநூலார் அசம்பவாலங்கார மென்பர்.

**கூடை** — இது பொருள்களைத் தாங்கிச் செல்ல மூங்கில், பிரம்பு, ஈச்சன் கசங்கு, தென்னை பனை முதலிய நரம்புகளால் குழிந்தாழ முடைத்தாய்ச் செய்யப்பட்டது. இது பிட்டுக்கூடை, தட்டுக்கூடை, முதலிய பலவகை.

**கூடைகட்டி** — இவர்கள் வந்நியர் அல்லது பள்ளிகளில் ஒருவகையார். குறவர்களிற் சிலர் இந்த வேலைசெய்வர் அவர்களும் மேற்கூறிய பெயர் பெறுவர்.

**கூடைதட்டிப்பறம்பு** — இது திருப்பரங்குன்றத்திற்கு வடக்கே பூதங்கண்ட குளத்திற்குத் தென்கிழக்கேயுள்ளது ; குளத்தை வெட்டிய பூதம்மண் கூடையைத் தட்டுதற்கு இடமாக இருந்தமையின் ; இது இப்பெயர் பெற்றது. (திருவிளையாடல்.)

**கூட்டத்துக்குழைதல்** — இட்ட மாலையினையுடைய அகலத்தை நீங்குதல் பொறாத பரித்த தழையாற் சிறந்த அல்குலினையுடையாள் புணர்ச்சியிடத்து நெகிழ்ந்தது. (பு. வெ. பெருந்திணை.)

**கூட்டவணி** — பகையில் லாமையால் ஒரு காலத்திற் கூடத்தக்க பொருள்களுக்குக் கூட்டத்தைச் சொல்லுதல். இதனைச் சமுச்சயாலங்காரம் என்பர்.

**கூதிர்ப்பாசறை** — கூற்றை யொத்தவனுடைய அகன்ற பாசறையிடத்துக் கூதிர்க்காலத்துமேகம் உறையைக் கொடுப்பப் பிரிவாற்றாமை மென் மேன்மிகவும் கூரிய எஃகினை யுடையான் கருணையை ஒழிந்தது. (பு-வெ.)

**கூத்தநூல்**—நாடகத தமிழ்நூல். இந்நூலாசிரியர் மதிவாணர் என்பவர்.

**கூத்தராற்றுப்படை** — தலைவனைக் கண்டு துதித்து மீண்ட இரப்பாளர் கூத்தாடுமவரை வழியிலே செலுத்தியது. (பு-வெ. பாடாண்).

**கூத்தர்** — எண் வகைச்சுவையும், மனத்தின் கட்பட்ட குறிப்புகளும் புறத்துப் போந்து புலப்பட ஆடுவார். அது விறலாதலின் அவ்விறல்பட ஆடுவாளைவிறலி யென்ப.

**கூத்தனூர்அப்பன்** — கிருஷ்ண தேவராயர் காலத்திருந்த ஒரு தமிழ்க்கவி. தத்வப்ரகாசரைக் காண்க.

**கூத்தாடினவள்** — இவள் ஒரு கூத்தி, பாண்டியனிடங் கூத்தாடுகையில் அவன் தன் மனைவியை நோக்கியிருந்து தன்னைக் கவனிக்காமல் இருந்தது பற்றிப் பறவைவிடு தூதாக "மாகுன் றனைய பொற்றோளான் வழுதிமன் வாழ் கரும்பின், பாகொன்று சொல்லியைப் பார்த்தெனைப் பார்த்திலன் பையப்பையப் போகின்ற புள்ளினங் காள் புழற்கோட டம் புகுவதுண்டேல், சாகின்றனளென்று சொல்லீரன்றைச் சடையனுக்கே" எனப் பாடினள்.

**கூத்து** — 1. அகக்கூத்து, புறக்கூத்து என இருவகைப்படும். கந்தமுதலாகப் பிரபந்த மீறாக இருபத்தெட்டு உருக்களும அகத்திற்கும், தேவபாணிமுதல் அரங்கொழிச் செய்யுள் ஈறாகக்கொண்ட செந்துறை விகற்பங்களும் கொண்ட பாட்டுடையன வாய்க் கூத்தின் விகற்பத்திற்கேற்ற வாச்சியங்களாகிய கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கங்களைப் பெற்றனவாய் அவ்வங்கங்களுக்குரிய ஆடல்களாகிய கீற்று, கடிசரி முதலிய தேசிக்குரிய கால்களும், சுற்றுதல் முதலிய வடுகிற்குரிய கால்களும் உடற்றூக்கு முதலிய உடலவர்த்தனையும், அகக்கூத்திற்கும், பெருநடை, சாரியை, பிரமரி முதலிய புறக்கூத்திற்குரிய ஆடல்களையும் பெற்று இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன் சொல், இறுதி, மந்தம், உச்சங்கொண்ட பாடல்களைப் பெற்று, பலவகைத் தாளத்துடன் கண்டாரை மகிழ்விப்பது. தேசி முதலியவற்றைத் தனித்தனி காண்க. கூத்து, பாவராக தாள வகைகொண்டு பதத்தால் பாட்டிற்கு இயைய நடிப்பதாம். அக்கூத்துச் சாந்திக்கூத்தும், விநோதக்கூத்தும் என இருவகைப்படும். அவற்றுள் **சாந்திக்கூத்தாவது**, தலைவன் அவிநயம் எந்திநின்று ஆடியதாம். அது நான்குவகைத்து. அவை சொக்கம், மெய், அவிநயம், நாடகம் எனப்படும். நாயகன் சாந்தமாக ஆடிய கூத்தாதலால் சாந்திக் கூத்து எனப்படும்.. **சொக்கம்** என்பது சுத்த நிருத்தம். அது நூற்றெட்டுக் கரணமுடையது. **மெய்க்கூத்தாவது**, (மெய்த் தொழிற் கூத்தாதலின் மெய்க்கூத்து எனப்படும்.) அது தேசி, வடுகு, சிங்களம் என மூவகைப்படும். **அவிநயக்கூத்தாவது** நிருத்தக்கை தழுவாது பாட்டினது பொருளுக்குத்தகக் கை காட்டி வல்லபஞ் செய்யும் பலவகைக்கூத்து. **நாடகக்கூத்தாவது** கதை தழுவிவருங்கூத்து. **விநோதக்கூத்தென்பது** கொடித்தேர் வேந்தரும், குறுநிலமன்னரும் முதலாக உடையோர் பகைவென்று இருந்த இடத்தில் விநோதங்காணுங்கூத்து என்பதாம். அது குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணம் நோக்கு, தோற்பாவை என்ப. **குரவை** என்பது காமமும் வென்றியும் பொருளாகக் குரவைச் செய்யுள் பாட்டாக எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும், கைபிணைந்து ஆடுவது. **கலிநடம்** என்பது கழாய்க்கூத்து. **குடக்கூத்து** என்பது மாயோன் ஆடல். **கரணமாவது** படிந்த ஆடல். **நோக்கு** என்பது பாரமும், நுண்மையும், மாயமும் முதலாயினவற்றை உடையது. **தோற்பாவை** என்பது, தோலால் பாவைசெய்து ஆட்டுவிப்பது. இவற்றுடன் நகைத்திறச் சுவையாகிய **வசைக்கூத்து** அல்லது விதூடக் கூத்து சேர்த்து எழெனவுங் கூறுவர். இவ்வெழுவகைக் கூத்தும் இழிஞர் ஆடலாம் என்ப. பின்னும் **வென்றிக்கூத்து**, **விநோதக்கூத்து**, **வசைக்கூத்து** என மூவகைப்படுத்தியும், கூறுவர். வென்றிக் கூத்து மாற்றான் ஒடுக்கத்தையும், மன்னன் உயர்ச்சியினையுங் கூறுவதாம். விநோதக்கூத்து மேற்கூறிய இலக்கணத்தது. வசைக்கூத்துப் பலவகை உருவங்களையும் பழித்துக்காட்ட வல்லவன் ஆடுதலாம். பின்னும் "வாசிகை வைத்து மணித்தோடணியணிந்து, மூசியசுண்ண முகத்தெழுதி — தேசுடனே, யேந்துசுடர் வாள் பிடித்திட் டீசனுக்குங் காளிக்குஞ், சாந்திக்கூத்தாடத் தகும்" என்பதனல் ஒரு வகைச் சாந்திக்கூத்தும் உண்டு. துணங்

கைக்கூத்து "முடக்கிய இருகை பழுப் புடை ஒற்றித், துடக்கிய நடையதுணங்கையாகும்." இதனைச் சிங்கி எனவுங் கூறுவர்.

2. சிவனுடல், பாண்டரங்கம், காபாலம், கொடுகொட்டி, பதினொருருத்திர ராடல் கொட்டி, குரவை, குடம், குடை, வெறி, மல், பேடு, பாவை, கடையம், பாண்டரங்கம், மரக்கால். மாயோனுடல் குடம், திருமகளாடல் பாவை, முருகனுடல் குடை, துடி, காமனுடல் பேடு, அயிராணி ஆடல் கடையம், துர்கை ஆடல் மரக்கால், சத்தமாத ராடல் துடி, கைகோத்தாடல் குரவை, முடக்கிய இருகை பழுப்புடை யொற்றியாடல் துணங்கை, வேலனுடல் வெறி, ஒற்றறுத்தல் வட்டணை, கைகுவித்துக் கொட்டல் கொம்மை, குந்திநிற்றல் குஞ்சிதம், கைகூப்பி மெய்கொட்டி நிற்றல்-குடங்கம்.

3. பாரதிவிருத்தி, விலக்கியற் கூத்து, கானகக்கூத்து, கழாய்க்கூத்து.

**கூபக்கண்ணன்** — வாணனுக்கு நண்பன்

**கூபன்** — இவன் கந்தன் என்பவனுடன் கூடிக் கிணறும் தவளையுமாயிருந்து விநாயகரை யழுத்தி அவராலிறந்த அசுரன்.

**கூரதுலோத்தமதாசர்** — பிள்ளை லோகாசாரியர் திருவடி சம்பந்தி.

**கூர்ச்சம்** — யாகாதிகளுக்கு உபயோகிக்கும் தருப்பை. இது, 36, 25, 15, 9, 7, 5,3 தருப்பைகளைக் கொண்டு நுனி (4) அங்குலம், முடி (2) அங்குலம், நீளம், (18) அங்குலம், அடியிலுள்ள நாளம் (12) அங்குலமாக முடிப்பது. (சைவ-பூ.)

**கூர்ச்சரம்** — மேலைச் சமுத்திரத் தருகிலுள்ள நாடு.

**கூரத்தாண்டாள்** — கூரத்தாழ்வான் தேவி, பெருமாள் அனுப்பின பிரசாதம் உண்டு இரண்டு குமாரரைப் பெற்றவள்.

**கூரத்தாழ்வார்** — இவரது அவதாரத்தலம் கூரம், பிதா இராமசோமயாசி, உடையவர் திருவடியை யாச்ரயித்தவர். இவர் உஞ்சவிருத்தி செய்துவரும் நாட்களில் ஒருநாள் உஞ்சவிருத்திக்குச் செல்லாம விருக்க, கோயிலில் பெருமாள் அமுது கொள்ளத் திருச்சின்னம் பரிமாறினர். பிராட்டி பெருமாளை நோக்கி ஆழ்வான் பட்டினியிருக்க, தேவர் அமுது கொள்ளலாமோ எனப் பெருமாள் உணவுதரப் பெற்றவர். இவர் குமரர் பராசரபட்டர். இவர்க்கு ஸ்ரீவச்சசின்னமிச்ரர் எனவும், நடையாடு பதஞ்சலி, எ-ம், யதீந்திர சரணன் எ-ம் பெயர். இவர் சோழனால் கண்ணிழந்து திருவரங்கத்திலிருந்து பெருமாளைப் பிரார்த்தித்து உடையவர் ஸ்ரீபாத தீர்த்தம் பெற்றுத் திருநாட்டுக் கெழுந்தருளினர். இவர் உடையவர்க்குக் கோசபண்டார உக்ராணமட ஸமாத்யக்ஷ பாரபத்தியத்திற்கும், ஸ்ரீபாஷ்யத்திற்கு உசாத்துணையாயுமிருப்பர். (குருபரம்பரை.)

**கூரயாநன்** — ஒரு அரசன், இவன் புத்ரன் பகஸ்தமனன். இவன் இருக்குவேதத்தில் புகழப்பட்ட கொடையாளி.

**கூறைக்கணக்காயனூர்** — கடைச்சங்கமருவிய புலவர். (அகநானூறு).

**கூர்மசம்மாரமூர்த்தி** — கூர்மாவதாரங்கொண்ட விஷ்ணுவின் பெருமிதமடக்கி அந்த ஆமையுருவின் ஓட்டினைப் பேர்த்து மார்பணியாக்கொண்ட சிவமூர்த்தியின் திருவுரு.

**கூர்மதாசர்** — பிரதட்டான நகரில் கால்களில்லாமல் பிறந்து ஹரிநாமஸ்மரணைமிகுந்தவராய்ப் பண்டரிபுர விஷ்ணுவைத் தரிசனஞ்செய்யவெண்ணிப் பண்டரி புரத்திற்கு ஏகும் பாகவதரைக்கேட்கக் காலிலாத நீ எங்ஙனமடைவாய், எங்களால் அடையமுடியாத பண்டிரியையென, கூர்மதாசர் கேட்டு அதிக விசனத்துடன் மெல்ல நகர்ந்து இளைப்பினல் ஓர் அநுமான் கோவிலடைந்து விசனமுறுகையில் பெருமாள் ஓர் வேதியராக வந்து நான் பண்டரிக்குப் போகிறேன், நீ வருகவென வழைத்து மெல்லச் சென்று அன்னமுதலிய இட்டுப் பண்டரிபுரத்திற்குச் சமீபமடைந்து இது பண்டரிபுரஞ்செல்லும் வழியெனக் காட்டி மறைந்தனர். தாசரும் ஒரு இடத்தில் தங்கினர். பின்பு தாசர் நான்கு மாதம் தவழ்ந்து வருளையை யடைந்து நாளை ஏகாதசியாகையால் பண்டரி யென்றடைவ தென்று வருந்திப் பண்டரிபுரஞ்செல்லும் பாகவதர்களைநோக்கித் தான் பெருமாளைக் காணவேண்டியதைக் கூறி அனுப்பினர். சென்ற பாகவதர்கள் தாசர் கூறியதைப் பெருமாளுக்குக் கூறினர். பெருமாள் தாசருக்குத் தரிசனந் தரவேண்டி நாமதேவர், கியானதேவர் முதலியவர்களையழைத்துக்கொண்டு அவ்விருவரையும் நான்தாகம் ஆற்றி வரும்வரையில் இவ்விடத்திரு

மென்று ஒரு கிளைவழியை யடைந்து சாமந்தியாமேளதாசர் யோகத்திருந்த வரை யெழுப்ப அவர் பெருமாளைக்கண்டு நமஸ்கரித்தனர். பெருமாள் அவரைநோக்கி யிரண்டு திருடர் என்னைத் தொடர்ந்து வருகின்றனர். யானிவ்விடம் வந்தேன் என்னை மறைத்துக்கொள்ளென யோகியும் தனது மார்பைத்திறந்து உட்புகச் செய்து கொடியாலே தன்னைச் சுற்றினர். பின் நாமதேவரும், ஞானதேவரும்பெருமாள் எவ்விடம் போயினரென்று அவர் போன காலடியைப் பின்தொடர்ந்து சாமந்தியாமேளரிடம்போய் இங்குவந்த பெருமாளைக் கண்டதுண்டோ வென்று கேட்டனர். மௌனி யொன்றுங் கூறாமையால் ஞானதேவர் அழத்தொடங்குகையில் பெருமாள் நாம் இவர் மார்பிலிருந்து எவ்வகை வருவதென ஏனையதாசர்கள் கேட்கும்படி கூறத் தாசர்கள் அதிக துன்பத்துடன் வருந்தப் பெருமாள் மௌனியரைநோக்கி 'எம்மை' காட்டுகவென மௌனி, பெருமாள் என்னிடத்திலிருக்கின்றார் வருந்தவேண்டாமென்று தாம் கட்டியிருந்த கொடிகளை அவிழ்க்கப் பெருமாள் வந்தனர். பின்பு பெருமாளும் நாமதேவரும் ஞானதேவரும் கூர்மதாசரையடைந்து தரிசனந் தந்து என்ன வரம் வேண்டுமென்ன நீர் இவ்விடத்தில் எக்காலத்தும்விரும்பியிருக்க என வரங்கேட்க அவ்விடத்திலெழுந்தருளி யிருந்தனர்.

**கூர்மதேவர்** — மூந்நூற்றறுபத்தொரு பிரமாக்களைக்கண்ட ஒரு ஆமை, இந்திரத்துய்ம்மன் அரசாட்சியிலிருந்தது.

**கூர்மபுராணம்** — இது (கூ,000) கிரந்தத்தால் கூர்ம வுருக்கொண்ட விஷ்ணுமூர்த்தியால் இந்திரத்துய்ம்மனுக்கும், மற்ற இருடிகளுக்கும் புருஷார்த்தங்களைச் சொல்லிய மகாபுராணம்.

**கூர்மமூர்த்தி** — திருப்பாற் கடல்கடைகையில் மந்தரமசைய அது அசையாதிருக்கும்பொருட்டுத் தேவர் வேண்டுகோளால் கூர்மவுருக்கொண்டு தாங்கிய விஷ்ணுவின் திரு அவதாரம். (பாகவதம்).

**கூர்மாண்டதேவர்** — இவர், வியோம ரூபருடைய மூர்த்தி ரூபபேதமாய் இருபத்தெட்டுக்கோடி நரகாதி பரையதிட்டித்து எழுந்தருளி யிருப்பவர்.

**கூர்மாநந்தர்** — யோகசாத்திரஞ்செய்த ஒரு யோகி.

**கூலம்** — எண்வகைத்து, அவை நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, ராகி முதலிய.

**கூலவாணிகன் சாத்தனர்** — மணிமேகலை நூலாசிரியர். இளங்கோவடிகள் காலத்தவர். சீத்தலைச் சாத்தனரைக்காண்க. இளங்கோ அடிகட்கும் அவர் தமயன் செங்குட்டுவனுக்கும் நண்பர். இவர் மதுரைக் கூலவாணிகன் சாத்தனர் எனவுங் கூறப்படுவர். இவரை நன்னூற்புலவன், தண்டமிழாசான் கூலவாணிகன் சாத்தன் என்பர் (மணிமேகலை).

**கூவத்துநாரணன்**-இவர் கூவத்தில் புலவர்க்கும் மற்றவர்க்கும் கைசலியாதுகொடுத்து வந்த வேளாண்பிரபு. இவரிருக்கும் கூவத்தைத் தியாக சமுத்திரமென்று பாடி அச் சமுத்திரத்தில் தாண்டிவிட்டதாகப் பாடிய புலவர்க்கு இவர் பொன்மீன் செய்து அதில் பொருத்தியளித்தனர், "மட்டாருஞ் செங்கழுநீர் மணிமார்பரை வாழ்த்துமந்தக், கிட்டாத யாசகர் கிட்டி வந்தாலதைக் கேட்டு முன்னுட், பட்டோலை வாசித்த வரவர்க்குள்ள பரிசிலெல்லாம், தட்டானளிப்பதுங் கூவந்தியாக சமுத்திரமே" எனப்பாடினர். இவர் இறந்தபின் ஒரு புலவர் "இடுவார் சிலருமிடாதார் பலரும், வடுவிலாவையத் திருக்கப்-படுபாவி, கூவத்துநாரணனைக் கொன்றுயே கற்பகப்பூங், காவெட்டலாமோ கரிக்கு" எனப் பாடினர்.

**கூவநூலோர்** — கீழ் நீர்க்குரிய சாத்திரமுணர்ந்து கிணறு, குளம் முதலிய நிருமிப்போர்.

**கூவன்மைந்தன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் பெயர் மைந்தன் என இருக்கலாம். இவர் தாம் பாடிய குறுந்தொகைச் செய்யுளில் "கூவற்குராலான்"எனக்கூறியது நோக்கியிவரை இவ்வா றழைத்தனர்போலும் (குறுங் - உஉச.)

**கூழங்கைத்தம்பிரான்** — இவர் தொண்டை மண்டலத்துக் காஞ்சியிலிருந்த வேளாளர். சைவசமயத்தவர். இற்றைக்கு நூற்று முப்பது வருடங்களுக்கு முன்னிருந்தவர். இலக்கிய இலக்கணங்களில் வல்லவர். இவர் சில தனிப்பாடல்களும், சித்திவிநாயகர் இரட்டைமணிமாலை முதலிய இயற்றியவர். இவர்க்குக் கைகூழை ஆதலால் இப்பெயர் வந்தது.

**கூழாண்டார்** — திருவாலங்காட்டி லெழுந்தருளியிருக்கும் தாண்டவமூர்த்திக்கு நெல்முதலியஅளித்துத் தமக்குக் கூழே போதுமென்று இருந்து முத்திபெற்ற அடியவர்.

**கூழிக்கோற்றன்** — கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் பெயர் கொற்றராக இருக்கலாம். கூழி இவரது ஊர் போலும். (குறு. உஎசு.)

**கூழைக்கடா** — (The Palican) இது நாரையினத்தது. இது உடல் பருத்து, கழுத்தும் காலும் குறுகித் தடித்திருக்கும்; இதன் மூக்குத் தடித்துக் குறுகிச் சிவந்தது; இது தோலடிப்பாதம் பெற்று இரண்டடிகள் உயர்ந்திருக்கும். இவை கூட்டமாக நீரில் இறங்கி மீன்களைக் கரைபக்கம் ஒதுக்கித்துள்ளும் மீன்களைக் கொத்தித் தின்னும். இவ்வினத்தில் ஒருவகைப் பறவைகளுக்குத் தோற்பை ஒன்று கீழ்வாயில் தொங்குகிறது. இதன் நிறம் வெள்ளை. இதன் மேல்வாயின் மூக்கின் முனை சற்று வளைந்தது. இதனால், இது பிடிக்கும் மீன்களைத் தனக்குள்ள தோற்பையிலடக்கிக் கொண்டு சாவதானமாகத் தின்னும்.

**கூற்றங்குமாரனார்** — இவர் இயற்பெயர் குமரனென்பது, கூற்றன் தந்தை பெயர். கூற்றனுடைய குமரனார் கூற்றங்குமரனாரென்றாயிற்று. (தொல். எழுத்து-கூடுo) இவர் முகம்புகு கிளவி பாடியவரில் ஒருவர். குறிஞ்சித்திணையைப் பாடியுள்ளார். இவர் பாடியது நற். உசச‌ம் பாட்டு.

**கூற்றுவநாயனார்** — இவர் குறுநில மன்னர் குலத்தில் திருவவதரித்துக் களந்தையில் அரசுபுரிந்து மறுதேசத்தரசர்களைவென்று தாம் மகுடஞ் சூட்டிக்கொள்ளத் தில்லைவாழந்தணர்களை வேண்ட வேதியர் மறுத்தனர். அரசர் ஸ்ரீநடராசமூர்த்தியின் திருவடிகளே தமக்கு மகுடமாக வென்று துயில் கொள்ளக் கனவில் சிவமூர்த்தி திருவடி சூட்டப்பெற்று அரசாட்சியிலிருந்து சிவபதமடைந்தவர். (பெ-புரா.)

**கூனி** — கைகேசிக்குத் தோழி, இராமமூர்த்தியைப் பட்டம்பெருது தடுத்துக் காட்டிற்கு ஏவக் கைகசியைத் தூண்டினவள்.

2. சண்பகமாலை.

3. மாதவி தோழி, இவளுக்கு வசந்தமாலை யெனவும் பெயர். (சிலப்பதிகாரம்.)

**கூன்** — வெண்பா முதலிய செய்யுட்களின் முதலடியின் ஒரோவிடத்துப் பொருள்பட்த் தனித்து நிற்பது. (யாப்பு-இல.)

**கூன்பாண்டியன்** — சத்துருசாதன பாண்டியனுக்குக் குமரன், இவன் சரித்திரத்தைத் திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரத்தைக் காண்க.

**கூஷிகன்** — காதினன் தந்தை, விச்வாமித்ரனுக்குப் பாட்டன்

## கே

**கேங்கபட்டர்** — பாண்டு புத்திரராகிய தருமர் மச்ச நாட்டில் கரந்துறைந்தபோது வைத்துக்கொண்ட பெயர் என்பர்.

**கேசகோழகன்** — ஒரு வாநரவீரன்.

**கேசனீடாயு** — விஷ்ணுபக்தர், சத்சங்கத்தால் நற்பத மடைந்தவர்.

**கேசரழகன்** — வீரமாயேந்திரத்தை ஆகாய வழியாய்க் காக்கும் ஆயிரம் யானைமுகமுடையான், இவன்வீரவாகுதேவர் மயேந்திரபுரி செல்வத்தைத் தடுத்து இறந்தவன்.

**கேண்டபோண்டபக்ஷி** — பக்ஷிகளில் பெரிய உருவமுடையது. இவ்விதப் பறவைகள் முற்காலத் திருந்திருக்கலாம். தற்காலபூமி சோதனையில் கண்டு பிடித்தன என்று நூதன ஆராய்ச்சியார் கூறுகின்றனர். தற்கால நூதன ஆராய்ச்சியில் (டைனோர்நிஸ்) (The Dinornus) எனும் கோழியின் எலும்புக்கூடு 14-அடி உயரம். ஜெயின்ட் பறவை (The Giant Bird) இது அமெரிக்காவில் பூமியிலிருந்து வெட்டியெடுத்த எலும்புக்கூடு. இஃது எருமை முதலியவைகளையும் எதிர்க்கத்தக்கப் பறவையாம். மற்றும் டாஸார்னிஸ், காஸ்டார்நீஸ் முதலிய பல பெரிய பறவைகளிருந்தன என்பர். டிராகன் இன்னும் 40-அடி உயரமும் 100-அடிக்கு மேற்பட்ட நீளமும் உள்ள மிருகமும் இருந்ததாகக் கூறுகின்றனர்.

**கேம்பீரன்** — (ச) இரபசன் குமரன், இவன் குமரன் சக்கிரகன்.

**கேம்ஸ்பர்க்**—இது ஆப்ரிகாவின் தென்மேற்குக்காடுகளில் வசிக்கும் கறுப்புமான் இதன் உயரம் 4-அடிகள், உடம்பு பிங்கள நிறம் இதன் கொம்பு 45-அங்குல நீளம். சிங்கத்தைக் கொம்பா லெதிர்த்து வெருட்டும்.

**கேருதமான்** — விஷ்ணுபக்தனும் படனும் என்பர்.

**கேர்க்கர்கள்**—ஒன்பதாம் மன்வந்தரத்துத் தேவர்கள்.

கேற்கன்—வன்னி குமரன், இவன் குமரன் பானுவுரன்.

கேற்பன் — காற்பாயணிக்குத் தந்தை, மன்யுகுமரன்.

## சே

கேகசீ — விசிரவசுவின் தேவிகளில் ஒருத்தி, குமரர் இராவணன் முதலியோர்.

கேகடன்—சங்கடன் குமரன். இவனுக்குத் தூர்க்காபிமான தேவதைகள் பிறந்தனர்.

கேகயத்தரசன் — இவன் கேகயதேசத்தை யாண்டவன். சகல பிராணிகள் பேசும் பாஷை யறிந்தவன். இவன் ஒருமுறை தன் மனைவியுடன் பஞ்சணையில் காலைநீட்டிக்கொண் டிருக்கையில் எறும்பொழுங்கில் ஒன்று அரசனது காலைக்கடப்பது அருமையாகத் தோன்றியதால் கோபித்தது. இதனைக் கேட்ட அரசன் நகைத்தனன். அருகிருந்த மனைவி நீர் நகைத்ததற்குக் காரணங்கூற வேண்டுமென்றனள். அரசன் அவ் விரகசியத்தைக் கூறின் என் னுயிர் நீங்கு மென்றனன். அரசி அதற்கும் அஞ்சாது கேட்டதனால் அரசன் இவளை நீக்கி யிருந்தனன். இவன் கைகேசிக்குத் தந்தை.

கேகயம் — சிபிச்சக்கரவர்த்தியின் குமரனாகிய கேகயன் ஆண்டதால் இந்நாட்டிற்கு இப்பெய ருண்டாயிற்று. இந் நாட்டின் இராசதானி கிரிவிரசம்.

The Country between Beas and the Sutleg.

கேகயன் — 1. சிபியின் குமரன்.

2. சூதகுலத்தரசன், மனைவி ராசகன்னிகை. இவனது இரண்டாவது மனைவி மாளவி. இவன் பாரத முதனாள்யுத்தத்தில் கிருதபன்மனுடன் போரிட்டவன்.

3. அசுபதியின் தந்தை.

4. இவன் ரக்ஷஸால் பீடிக்கப்பட்டுத் தருமசாத்திரோப தேசத்தால் விடுபட்டவன்.

கேசகம்பளன் — நரிவயிற்றிற பிறந்த முனி. (மணிமேகலை.)

கேசரீ — 1. ஒரு வாநரன். பிரபாசதீரத்தில் உபத்திரவஞ் செய்துகொண் டிருந்த ஒரு யானையைக் கொன்றதால் இப்பெயர் பெற்றனன். இவன்தேவி அஞ்சனாதேவி; குமரன் அநுமான்.

2. அஞ்சனையின் தந்தை.

கேசரியோகம் — யோகவகைகளி லொன்று. இதில் பரியங்கியோகம், அமுரிதாரணை சந்திரயோகம் எனப் பலவுண்டு.

கேசவதாசர் — இவர் ஜீஜாபுரத்தில் அரிபஜனை செய்துகொண்டிருக்கையில் இவரது சீடர் ஒருவர் பகவதாராதனையின் பொருட்டு இரவில் ஒரு செட்டியின் கடை சென்று சுக்கும் சர்க்கரையும் கேட்டனர். செட்டி தூக்கத்தின்மிகுதியால் சுக்கென்று நாபிக்கிழங்கைத் தர மாணுக்கர் கொண்டு வந்து ஆசாரியரிடங் கொடுக்க, தாசர் அதனைப் பகவானுக்கு நிவேதித்து அனைவர்க்கும் பகிர்ந்து கொடுத்தனர். பகவானருளால் அந்தநாபி எவர்களையுங் கெடுக்கவில்லை. இதனை யுணராத தாசர் விடிந்து பூசை முதலிய முடித்துப் பெருமாளைச் சேவிக்கையில் பெருமாள் திருமேனி கறுத்திருத்தலை நோக்கிக் கவலுகையில் செட்டி தானறியாது செய்த தீமையை யெண்ணி இவரைத் தேடிச் சென்று நடந்தவைகூறி மன்னிக்க வேண்டினன். தாசர் பெருமாளைப் புகழ்ந்து துதித்தனர்.

கேசவனார் — இவர் கடைச்சங்கத்துப் புலவர் காலத்தவர். இவர் பரிபாடலில் (14) ஆம் பாடலைப் பாடியவர். இவரைப் பற்றிய வரலாறு தெரியவில்லை. (பரிபாடல்.)

கேசவன்—சிவநிந்தையால் நாயாய்ப் பிறந்த வேதியன். (திருப்பெருந்துறை. புரா.)

கேசவாதபன் — சூரியன், கேசவன் சொல்லக் கேட்டுக் காசியில் சிவப்பிரதிட்டை செய்து பூசித்து இப்பெயர் பெற்றவன். (காசிகாண்டம்.)

கேசவார்த்தம் — விஷ்ணு தவம்புரிந்து சிவமூர்த்தியின் திருமேனியிற் கலந்த திருவுரு.

கேசன்—ஒரு வாநரன், தபனனை மாய்த்தவன்.

கேசி—1. கம்சனுக்கு நண்பனாகிய அசுரன். இவன் கம்சன் ஏவலால் குதிரையுருக் கொண்டு கோகுலமடைந்து பிராணிகளையும் கோபாலரையும் வருத்திக் கண்ணனிருந்த இடமடையக் கண்ணன் தமது கரத்தை வாயில் நுழைத்து வளரச்செய்ய வயிறு பிளந் திறந்தவன்.

2. பத்திரையின் பெண்.

3. தேவசேனையைத் தூக்கிச் சென்ற அரக்கன். இவன் இந்திரனால் விடுபட்டனன். இவனை விநாயகர் கொன்றனர் என்பர்.

4. ஓர் அசுரன், இவன் பிரமன் வரத்தால் தேவர்களை உபத்திரவஞ் செய்து விஷ்ணுமூர்த்தியால் மாண்டவன்.

5. இரண்யபுரமாண்ட அசுரன், இவன் மனைவியிடம் வல்லபைசத்தி பிறந்தனள். கணபதி இவளை வெளிப்படுத்தி மணந்தனர். (காஞ்சிபுராணம்.)

**கேசித்துவசன்** — (சூ.) கிருதத்துவசன் குமரன். இவன் வேதாந்தியாயினன்.

**கேசினி** — 1. சகரன் பாரி.

2. தமயந்தியின் தோழி.

3. ஒரு ராஜகன்னிகை. இவள் சுயவம்வரத்தின் பொருட்டு, பிரம்மக்ஷத்திரியர் விவாதம் செய்தனர்.

4. ஓர் அப்சரஸ்திரீ.

5. அஜமீடன் பாரியை.

**கேடிலியப்பப் பிள்ளை** — தாயுமானுர் என்னும் சந்நியாசி சுவாமிகளுக்குத் தந்தையார்.

**கேதன்** — வசுதேவருக்கு ரோகணியிடம் பிறந்த குமரன். இவனைத் தேவரக்ஷிதி குமரன் எனவுங் கூறுவர்.

**கேதனன்** — ஒரு ஆந்திர கவி.

**கேதாரகௌரிவிரதம்**—ஆச்வயுசபகுள (ஐப்பசி கிருஷ்ணபக்ஷம்) சதுர்த்தசியில், நல்ல புருஷனையும், சம்பத்தையும் விரும்புவோர் பார்வதி பிராட்டியை யெண்ணிச் செய்யும் விரதம். இதை முதலில் பார்வதி பிராட்டியே அநுட்டித்துக் காட்டினள்.

**கேதாரதீர்த்தம்** — கங்கை முதல் தமசாநதி வரையில் செல்லும் புண்ணிய தீர்த்தம்.

A Sacred stream Called Koliganga has its rise here. It is about 146 miles Morth of Hardwar and is very near to Badarinath.

**கேதாரம்** — 1. ஒரு தலமும் தீர்த்தமும். இதில் உமாதேவியார் சிவமூர்த்தியைப் போற்றிப் பக்தர்செய்யும் வழிபாடு தமக்கு வேண்டினள். இது இமயத்திற் கருகிலுள்ளது.

2. பனியின் அதிதேவதை சிவபூசை செய்து பாபம் நீங்கிய தலம். (வீரசிங்காதன புராணம்.)

**கேது** — 1. தாமசன் என்னும் மனுவின் புத்ரன்.

2. சண்முக சேநாவீரன்.

3. விப்பிரசித்திக்குச் சிம்மிகையிடத்துப் பிறந்த அசுரன். இவன் தவத்தால் கிரகபதம் பெற்றுன், அக்நிக்கு விகேசியிடம் பிறந்தான் எனவுங் கூறுவர். இராகுவைக் காண்க. ஆறு குதிரைகள் பூட்டிய தேருடையான்.

**கேதுக்கள்** — பிரமபுத்திரர்களும், கிரகபாவத்தை யடைந்தவர்களும், பிரமத்தை யடைந்தவர்களும், யௌவநமுடையவர்களும், சமதக்னி கோத்திருமான தேவர்கள்.

**கேதுமதீ** — நருமதையின் பெண். சுமாலியின் பாரி.

**கேதுமந்தன்**—1. சுருதாயு குமரன். களிங்கதேசாதிபன்.

2. தன்வந்தரியின் குமரன்; கேதுரதனுக்குத் தந்தை.

3. அம்பரீஷன் குமரன்.

**கேதுமாலன்**—1. ஆக்னியீத்ரனுக்குப் பூர்வசித்தியிடத் துதித்த குமரன் பாரி, தேவியென்பவள்.

2. கலிங்கராசன் குமரன எனபா.

**கேதுமாலம்** — நவவருஷத்து ஒன்று.

**கேதுமாலி** — சண்முக சேநாவீரன்.

**கேதுமான்** — 1. தன்வந்திரியின் குமரன், இவன் குமரன் பீமரதன்.

2. அம்பரீஷன் குமரன்.

3. தனு புத்திரனாகிய அசுரன்.

4. ஏகலைவன் புத்திரன், வேடன்.

**கேதுரதன்**—பகீரதனுக்குத் தந்தை. கேதுமந்தன் குமரன்.

**கேதுவன்மன்** — திரிகர்த்த தேசாதிபதியின் குமரன். இவன் பாண்டுபுத்திரரின் அசுவமேதக் குதிரையைக் கட்டித் தோற்றவன்.

**கேந்திரம்**—1. இது, (உதயம்) முதலாமிடம், ஏழாமிடம், நாலாமிடம், பத்தாமிடம். கேந்திரபலம் சுபக்கோளாயினும், பாபக்கோளாயினும், உச்சத்தானத்தும், மித்திரத்தானத்தும், ஆட்சித்தானத்தும் நிற்பாரில் வலியர். புதனும் குருவும் உதயத்து வலியர். சந்திரனும் சுக்ரனும் (சு) ஆம் இடத்து வலியர். சநி இராகு கேதுக்கள் (எ) ஆம் இடத்து வலியர். பாபக்கோள்கள் அமரபக்ஷத்து வலியர். (விதானமாலை)

2. லக்னகேந்திரம், சதுர்த்தகேந்திரம், தசமகேந்திரம், சப்தமகேந்திரம். இவை முறையே உதயம், நீர்க்கீழ் உச்சம், அஸ்தமனம் எனும் இடங்களைப்பெற்று கால், அரை, பூரணசுப, பாவமிச்ரம பலங்களைத் தரும்.

**கேபர்கேய்லி**—இது ஒரு அழகான கோழி. இது, குளிர்ந்த பிரதேசமாகிய நார்வே

ஸ்வீடன் முதலிய தேசங்களின் காடுகளில் வசிக்கிறது. இந்தப் பறவையின் சிறகுகள், கருமையும் பசுமையுங் கலந்து பளபளப்பா யிருக்கின்றன. இதன் வால் வட்டமாய் விசிறிபோல் விரிக்கக்கூடியது. இது நாட்டுக் கோழியை எல்லாவகையிலும் ஒத்திருக்கிறது. மூக்குக் கிளியின் மூக்குப்போல் முன் வளைந்திருக்கிறது. இது, பழங்கள், மலர்கள், அரும்புகள், இலைகளைத் தின்று சீவித்து மரங்களில் வசிக்கிறது. இது கனத்தில் 6 முதல் 14 பவுண்ட்எடை யுள்ளது. இப் பறவை பூமியில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிறது. இதன் சேவல் பல பெட்டைகளை விரும்பிச் செல்லும். இந்தச் சேவல் போர்க்குண முடையதாதலால் இதற்குக் குதிகாலுக்குமேல் கூரிய முள் உண்டு.

கேமசரி — சிவகன் மனைவியருள் ஒருத்தி.

கேமதரிசி — (சூ) இவன் கோசலதேசாதிபதி, விதேகராசனால் நாடிழந்து பிறகு காலயவனராற் பெற்றவன். இவன் அநீதி செலுத்திய மந்திரியுடன் சேர்ந்து கொடுமைசெய்து பின்பு காவன் என்பவரால் திருந்தினன்.

கேமதர்மா — (சூ.) புண்டரீகன் குமரன். (க்ஷேமதர்மா கேமதன்வா.) இவன் குமரன் தேவாநீகன்.

கேமதூர்த்தி—காசிராசன், பாரதயுத்தத்தில் பதினைருநாள் வீமனால் மாண்டான்.

கேமசருமன் — பரத்வாச கோத்திரத்துச் சண்டதருமன் குமரன். இவன் இளமைப் பருவத்து வேசி வலைப்பட்டு ஒருநாள் தாகங் கேட்க அவள் கள்ளுண்ணக் கொடுக்க, அறியாது உண்டு தீதென அறிந்து பிராயச்சித்தங் கேட்க வேதியர் வெண்ணெயைக் கொதிக்கக் காய்ச்சி வாயில் விடுகவெனக், கேட்ட தந்தை மைந்தனை இழப்ப வருந்தியிருக்கையில் சங்கமுனிவர் அவ்வழி வந்து திருவாரூர் தேவதீர்த்தத்தில் முழுகச்செய்யப் பாபம் நீங்கினவன்.

கேமாபுரம் — சுபத்திராஊர்

கேமாசுரன் — குசலாசுரனைக் காண்க.

கேமன் — 1. உன்முகனுக்குப் பிரீதகேசியிடத் துதித்த குமரன்.

2. நந்தன் குமரன், தாய் பிரதுபுத்ரை. இவன் விஷ்ணுவினம்சம், தேவி சயந்தி, குமரர் சித்திராதன், மிருகணுதி அவரோதன்.

கேயூரகன் — காதம்பரியின் யாழ் சுமப்பவன் தாளிகையினுடன் வந்தவன்.

கேரளம் — மலையாளத்தின் தென்னாடு.

The Malabar Coast. It Comprises Malabar, Travancore, and Kanara.

கேரளன் — துஷ்யந்தன் தம்பியாகிய திஷ்யந்தன் பௌத்திரன், ஆச்ரிதன் குமரன்.

கேவலன் — (சூ.) நரன் குமரன்.

கேவலவியதிரேகி — அனலில்லாவிடத்துப் புகையில்லை மடுப்போல என்கை. (சிவசித்தி.)

கேவலாந்வயி — பிரதிக்ஞை, எது, திருஷ்டாந்தத்துடன் கூடிய அந்வய வியாப்தி. புகையினாலே நெருப்புண்டு பாகசாலைபோல் என்பது.

கேவலாவத்தை—சர்வசங்காரகாலத்து ஆன்மாக்கள் சுத்தமாயாகாரணத்தி லொடுங்கிச் சிருட்டிகால மளவும் ஆணவமலத்தால் மறைப்புண்டு கலையாதி தத்துவங்களுடன் கூடாமல் யாதொரு நினைவுமின்றி யிருப்பது. இது கண் இருளிலே தன் ஒளி கெடாமல் விழித்திருத்தல்போலும். (சித்தா.)

கேள்வி — (ச) அறம, பொருள், இன்பம், வீடு

## கை

கை — அஃதாவது தனது எண்ணத்தினையும் மற்றவரது எண்ணத்தினையும் கரத்தால் தெரிவிப்பதாம். அது இரண்டு வகைப்படும். இணையாவினைக்கை, இணைக்கையென. இவற்றை ஒற்றைக்கை, இரட்டைக்கை யெனவுங் கூறுவர். இவற்றுடன் ஆண்கை, பெண்கை, அலிக்கை, பொதுக்கை யென நான்கினையுங் கூட்டி ஆறெனவுங் கூறுவர். அவற்றுள் இணையாவினைக்கை (௩௩) அவை (க) பதாகை, (உ) திரிபதாகை, (௩) கத்திரிகை, (ச) தூபம், (ரு) அராளம், (சு) இளம்பிறை, (எ) சுகதுண்டம், (அ) முட்டி, (கூ) கடகம், (௰) சூசி, (கக) கமலகோசிகம், (கஉ) காங்கூலம், (க௩) பித்தம், (கச) விற்பிடி, (கரு) குடங்கை, (கசு) அலாபத்திரம், (கஎ) பிரமரம், (கஅ) தாம்பிரகுடம், (ககூ) பசாசம், (உ௦) முகுளம், (உக) பிண்.. (உஉ) தெரிநிலை, (உ௩) மெய்ந்நிலை, (உச) மண்டலம், (உரு) உன்னம், (உசு) சதுரம்,

(உஎ) மான்றலை, (உஅ) சங்கு, (உகூ) வண்டு, (௩0) இலதை, (௩க) கபோதம், (௩உ) மகாமுகம், (௩௩) வலம்புரி என்பனவாம். இணைக்கை பதினைந்து வகைப்படும். அவை (க) அஞ்சலி, (உ) புட்பாஞ்சலி, (௩) பதுமாஞ்சலி, (ச) கபோதம், (ரு) கற்கடம், (சு) சுவத்திகம், (எ) கடகாவருத்தம், (அ) நிடதம், (கூ) தோரம், (௰) உற்சங்கம், (கக) புட்புடம், (கஉ) மகரம், (க௩) சயந்தம், (கச) அபயவத்தம், (கரு) வருத்தமானம் என்பனவாம். இவற்றைப் பாதத்திற் கூறினாம், ஆண்டுக் காண்க.

**கைகசன்** — இவன், சூரியனிடம் என் கண்ணிற்குமுன் போர்புரிய நிற்போர் எரிந்து போக வேண்டும் என வரம் பெற்றுத் தேவியின் சைந்யத்துடன் யுத்தஞ்செய்ய வந்து சைநியங்களைக் கண்ணெளியால் தகித்தனன். இவனைத் தேவியினேவலால் திரஸ்கரிணி தேவி தமோ மாயையால் ஒளிமங்கச்செய்து இவனையும் இவன் சேநாதிபதிகளாகிய வலாகன் முதலிய எழுவரையும் வதைத்தனள். (தே-பா.)

**கைகசி** — சுமாலியின் குமரி மாலியவான் சொல்லால் விச்சிரவாவை மணந்து இராவணன் முதலியவரைப் பெற்றவள்.

**கைகாட்டி** — ஒருவகைக் கணக்கர் சாதி. இவர்களில் மருமகள், தன் மாமியாருடன் நேராகப் பேசாது கை சமிக்ஞையால் பேசுவாள்.

**கைகேசி** — தசரதன் தேவி, பரதன் தாய். சம்பரன் யுத்தத்தில் தசரதனுக்குச் சாரதியாயிருந்து இரண்டு வரம் வாங்கினவள். கூனியாகிய மந்தரைகூறிய சூழ்ச்சியால் இராமமூர்த்தியைக் காட்டிற்கு அனுப்பினவள். இவட்குக் கைகேயி யெனவும் பெயர். இவள் தவளாங்கமுனிவரிடத்தில் பெற்ற வரத்தால் தசரதனுடன் மாயைபுரிந்தெதிர்த்த அசுரரைவென்று இரண்டு வரம் வேண்டினவள் என்பர்.

**கைகேயி** — 1. கைகேசிக்கு ஒரு பெயர்.

2. விராடன் தேவியாகிய சுதேஷ்ணை.

**கைகை** — ஓர் கற்பினி, சாந்திலையிடத்துக் கற்பினிலை கேட்டறிந்தவள்.

**கைக்கிளை** — 1. கோடாத அன்பினையும் நுடங்குந்தன்மையினையு முடையவள் தலைவனுடைய வளவியமாலையை ஆசைப்பட்ட கூறுபாட்டைச் சொல்லியது. (பு-வெ-பாடாண்.)

2. இது, காமநுகர்தற் கமைந்த தலைமகளிடத்துண்டாம் குறிப்பினைத் தானறியுமளவும் தலைமகனவளைச் சார்ந்து நின்று பின் வசமாம் நெஞ்சொடு கூறல்.

3. தலைவியைக் கண்ட தலைமகன் சிற்றுறவு கொள்ளுதல். இது காட்சி, ஐயம், துணிவு குறிப்பறிதல் என நால்வகைத்து, இது முதனாள் நிகழ்ச்சி.

**கைக்கோளர்** — 1. பருத்திநூலாலும் பட்டு நூலாலும் சீலைகள் நெய்யும் வகுப்பினர். இவர்கள் குமாரக் கடவுளுக்குக் குந்தம் பிடித்துச் சேவகரானதால் செங்குந்தரெனவும் படுவர். இவர்கள் சோழியர், ராத்தர், சிறுதாலி, பெருந்தாலி, சீர்ப்பாடம், சேவகாவிர்த்தியென வகுக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களிற் பெரும்பாலார் சைவர். மாகாட்டான் இவர்களுக்குப் பெரிய அதிகாரி. (தர்ஸ்டன்.)

2. (சாலியர்) வைசியன் அரசகன்னிகையைப் புணரப் பிறந்தவன். துணிநெய்வோன். அல்லது வைசியன் சூத்திரகன்னிகையைப் புணரப் பிறந்தவன். (அருணகிரிபுராணம்.)

**கைக்கோளர் கருவிகள்** — பன்னே, அச்சு, பில்லு, நாடா, தூத்துக்கோல், ஊணி, தடைமரம், பாவு.

**கைசிகி** — காமவிகற்ப மூபாங்கமாவது (வீரசோ.)

**கைடவன்** — விஷ்ணுவின் காதின் வழிப் பிறந்து விட்டுணு சிட்டுணுவால் சங்கரிக்கப்பட்டவன். இவன் பிறகு அதிகாயனாகப் பிறந்தனன். மதுவைக் காண்க. விஷ்ணுவின் மூச்சில் பிறந்தவன் என்றுங் கூறுவர். இவன் மதுவுடன் கூடிப் பிரமனை வருத்தப் பிரமன் விஷ்ணுவை யடைய விஷ்ணு இவர்களைநோக்கி யென்ன வரம் வேண்டுமென்ன இவன் திருமாலை நோக்கி உமக்கு வேண்டும் வரம் விரும்புக என விஷ்ணு என்னால் நீவிர் இறக்கவெனக் கேட்டு அங்ஙனம் பெற்று அவனைக் கொலைசெய்ய மாண்டவர்.

**கைத்தொழில்** — (ரு) எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்.

**கையங்கண்ணனார்** — கடைச்சங்கமருவிய புலவர்.

**கையடர்** — ஓர் பழைய தமிழாசிரியர். இவர் செய்த நூல் இறந்தது.

**கையறுநிலை** — 1. தொழில் அழகு பெற்ற வீரக் கழலினையுடைய வேந்தன் துஞ்சினனாக அணைந்தோர் இறந்தமையைச் சொல்லி ஒழுக்கந் தளர்ந்தது. (பு. வெ. பொதுவியல்.

2. இறந்தோன்றன்னுடைய நாமத்தை அன்புற்றுச்சொல்லினும் முன்பு சொன்ன துறையென்று சொல்லுவர். அறிவுடையோர். (பு. வெ. பொதுவியற்.)

3. அஞ்சத்தகும் வாட்பூசலிலே பட்டோனைப் பார்த்து யாழ்ப்பாணர் அவன் பட்ட படியைச் சொல்லியது. (பு. வெ.)

**கையனார்** — தமிழாசிரியரில் ஒருவர். இவர் யாப்பிலக்கண நூலாசிரியர். அமுதசாகரர் செய்த காரிகையுரையில் இவர் செய்த யாப்பியற் சூத்திரம் ஆங்காங்கு உதாரணமாகக் காட்டியிருக்கிறது.

**கைலாசவாசி** — சிவமூர்த்தி.

**கைலாசன்** — இவன் கைலாச மலையுருவாய்ச் சிவபிரானைத் தாங்கி நிற்பவன். இவன் சிவபிரானால் மானதமாகச் சிருட்டிக்கப் பட்டவன். இவன் சிவபிரானின் அருள் வேண்டிப் பத்துயுகங்கள் தவமியற்றச் சிவமூர்த்தி தரிசனந்தந்து கிரீந்திர சக்ரவர்த்தித்வம் அளித்துக் காணாதிபத்தியமும் தமக்கு இருப்பிடமாம் தன்மையும் அருள்புரிந்தனர். இதனால் கைலாசன் நாம் சிவபெருமானைத் தாங்கப்பெற்றோம் எல்லாச் சிவலிங்க மூர்த்தங்களையும் நாம் தாங்கப் பெற்றோம் ஆதலால் நாமேவன்மையுடையேம் என்று சற்று இறுமாப்புற்று இருந்தனன். இதனை உணர்ந்த சிவமூர்த்தி தேவர்கள் செருக்கடைந்த காலத்து அவர்களின் செருக்கடக்கி ஆட்கொள்பவராதலால் கைலாசனை அவ்வாறு செய்ய எண்ணிச் சிவபூசாதுரந்தரனும், தன் சரீரத்தை வெட்டிச் சிவனுக்கு ஹோமஞ் செய்தவனும், தன் தலைகளை மலர் மாலையாகத் தொடுத்துச் சிவலிங்கத்திற் கணிந்து பூசித்து இஷ்ட சித்திகளைப் பெற்றவனாகிய இராவணன் கைலையைக் கையாற் பெயர்க்க முயன்றான். இதனையறிந்த சிவமூர்த்தி சிறிது விரலால் அழுத்தினர். கைலாயத்தினடியில் அவனது கைகளகப்பட்டு நசுங்கக் கிலேச மடைந்து சாமவேதத்தை (1000) வருடம் தோத்திரஞ் செய்தான். பின் சிவபிரான் அவனை அனுக்கிரகித்தனர். அந்நசுக்கலால் கைலாயன் கர்வமும் பங்கமாயிற்று. (சிவரகசியம்.)

**கைலாசாதிபர்வதவிவரம்** — இமவத்பர்வதத்தின் பிருஷ்டபாகத்தில் கைலாசம் உள்ளது. அதில் அநேக குய்யகரோடு குபேரன் வசிப்பன். அதிலுள்ள தடாகத்திலிருந்து மந்தாகினி என்னும் நதம் உற்பத்தியாகிறது. அதின் வழியில் சந்தனவனமும், சுவேலபர்வதத்திற்கு எதிராய், சந்திரபிரபை என்கின்ற பர்வதங்களும் உண்டு. அதற்குச் சமீபத்தில் அச்சோதை என்னும் தடாகம்; அதிலிருந்து அச்சோதை என்னும் நதி பிறக்கும். அதன் கரையில் சைத்திரரதவநம் இருக்கின்றது. சந்திரப்பிரபை என்கிற பர்வதத்தில் யக்ஷசேநாபதியாகிய மாணிபத்திரன் வசிப்பன். சபலபர்வதத்திற்கு எதிரிலே சூரியபிரபை என்கிற வனம் உண்டு. அதில் லோகிதம் என்கின்ற தடாகம் இருக்கின்றது. அதிலிருந்து லௌகித்தியநதி உண்டாகிறது. அதன்தீரத்தில் தேவாரணியம் இருக்கின்றது. அதில் மாணிதரன் என்னும் யக்ஷன் இயக்கர்கள் உடன் வசிக்கின்றனன். கைலாசத்திற்கு மேற்கில் குருத்மந்தம் என்கின்ற பர்வதம் உண்டு, அது சிவஸ்தானம். அவ்விடத்தினுள்ள சரோவரத்தில் பெருகிய நதியே சாயூநதி எனப்படும். அதின்கரையில் வய்பிராஞ்சம் என்னும் வனம் உண்டு. அது குபேரானுச்சரமாகும் பிரகேதியின் குமாரனும் பிரம்மதானன் வாசஸ்தானம் ஆம். அதற்கப்பால் அருணம், முஞ்சவந்தம் எனும் பர்வதங்கள் உள. அது சிவஸ்தானம். அவ்விடத்திலுள்ள சைலோத்த தடாகத்தில் இருந்து பெருகியது சைலோநதி எனப்படும். கைலாசத்திற்கு வடக்குக் கௌர பர்வதம் உண்டு. அதில் காஞ்சனவாலுகம் என்கிற புஷ்கரணி இருக்கின்றது. அது அபிந்து சரோவரம் எனப்படும். இவ்விடத்தில் பகீரதன் அநேககாலந் தவஞ்செய்தனன். இவ்விடத்தில் கங்கை சோமபாகத்தில் பிறந்து சப்தவாகினியாய்ப் பிரவாகித்தனள். அக்கங்கை ஆகாச முதலியவற்றைச் சுத்தமாக்கிப் பூமியில்வர யோகமாயையினால் கட்டப்பட்டதனால் கோபித்துச் சிவனை நிக்கிரகித்துப் பாதாளத்திற்குப் போக இருந்த சமயத்தில் சிவமூர்த்தி பிரமன் கூறியதை எண்ணிவிட அக்கங்கை ஏழுவிதமாய்ப் பிரவாகித்து நளினி, அலாதனி, பிலாவனி எனும் மூன்று வெள்ளங்கள் கிழக்கிலும், சீத, சட்சு, சிந்து எனும் மூன்று பிரவாகங்

கள் மேற்கிலும், மற்றொன்று பகீரதன் பின் தெற்கிலும் பிரவாகித்தனள். இக்கங்கையில் அநேக உபநதிகள் பிறந்தன. வஸ்வோகசாரம் என்னும் நதிதீரத்தில் சுரபிவனம் உண்டு. அதில் குபேரன் நண்பனாகிய இரண்யசிருங்கன் பிரம்மராக்ஷசர்களோடு கூடிவசிப்பன். ஏமகூடபர்வதத்தில் உண்டாம் சர்ப்பசரசில் இருந்து சரஸ்வதிநதியும், நிஷதபர்வதத்தில் விஷ்ணுபதத்திலிருந்து சரசிநதியும் பிறந்தன. அவற்றிலிருந்து உண்டான நதிகள் காந்தாரி, குலயு எனப்படும். மேருவின் பக்கத்தில் சந்திரப்பிரபை என்கிற தடாகம் உண்டு. அதிலிருந்து பிறந்த நதி ஜாம்புநதி எனப்படும். பின்னும் அவ்விடத்தில் புண்டரீகபயோதம் என்கிற தடாகம் உண்டு அதில் மேகங்கள் உண்டாம். இமயபர்வதத்திற்கு வடக்கில் மானசமடு உளது. அதிலிருந்து அமிர்தகாந்தை உண்டாயிற்று. பின்னும் குருதேசத்தில் வைஜயம் என்கிற (கஉ) மடுக்கள் உள. அவற்றில் சாந்தி, சந்தியை என்கிற இரண்டுநதிகள் உண்டாகும். கிம்புருஷம் முதலான (அ) வருஷங்களில் மழை பொழியாது. அவ்விடத்திலுள்ள நதிகளிலேயே அவர்கள் திருப்தி அடைவர். ருஷப, மைநாக, பாலக, வச்சிர, சந்திரகாந்த, துரோண, சக்கிர, சுமந்து, உதிசர, நாரத, ஜீமூத, திராவண முதலிய பர்வதங்கள் நான்கு திக்கிலும் கடலில் மூழ்கி யிருக்கின்றன. வச்சிரமைநாக பர்வதங்களுக்கு இடையில் சம்வர்த்தகம் எனப்படும் அச்நிபர்வதம் உண்டு. அது ஜலங்களை எல்லாம் பானஞ்செய்து கொண்டிருக்கும். (புராணம்). தேவர்களுக்கு இருப்பிடம் மேரு. இது கீழே பதினாறு கிளையாயும் மேலே முப்பத்திரண்டு வகையாயும் பிரிந்துள்ளது. இது மகாகைலாசத்தின் எதிரில் ஒரு சிறு அணுவை யொப்பது கைலாயம் அடிமுதல் சிகரமீறாக லக்ஷம் யோசனை யுயரம் உள்ளது. அதினுள் ஏழு குலாசலங்களும் நூறுப்ராகார கோபுரங்களும் உள்ளன. ப்ராகாரத்திற் கிடையில் சமுத்திரங்களோடு கூடிய ஏழு தீவுகளிருக்கின்றன. அது கோடியோசனையுள்ள ஓர் ரசிதபர்வதமாய் ஜொலிப்பதாய்ப் பதினன்கு லோகங்களும் சொடுமுடிகளில் அடங்கப் பெற்றதா யுள்ளது. இம் மகாபர்வதத்திற்குக் ருமுகம், பாரியாத்திரம், மைனாகம் இவைகள் கிழக்கிலிருக்கின்றன. தர்த்தரம், மலயம், விந்தம் இவைகள் மேற்கிலிருக்கின்றன. உதயம், அஸ்தம், முஞ்சமாகிய இவைகள் வடக்கிலுள்ளன. நீலம், தக்ஷண கைலாசம், இமவான் இம்மூன்றும் தெற்கிலிருக்கின்றன. அகழிபோன்ற ஏழு கடல்களினிடையில் ஏழு தீவுகளும் ஏழு பர்வதங்களு மிருக்கின்றன. அங்குத் தேவாதிகள் வசிக்கின்றனர். பாற்கடலின் கரையாகிய த்வீபத்தில் திரிமூர்த்திகளும் வசிக்கின்றனர். அப்பால் சுத்தோதக சமுத்திரத்திலுள்ள த்வீபத்தில் பிரமதகணங்கள் வசிக்கின்றனர். அதற்கு அப்பால் ரத்னமய ப்ராகாரம் பதினாயிரம் யோசனை. அந்தப் பத்மராக ரத்னமலை ஒன்றிருக்கிறது. அப்பால் சந்திரகாந்த மணிமதில் விளங்குகின்றது. அது, 5,000 யோசனை. அப்பால் வச்சிரபர்வதம்10,000 யோசனை. அதற்கு வெளியில் இந்திரநீல மதில் 50 யோசனை. அப்பால் இந்திரநீல பர்வதம் 10,000 யோசனை. அதற்கு வெளியில் மரகதமதில். அப்பால் பவளமலை 20,000 யோசனை. அப்பால் கோமேதகமதில் 30,000 யோசனை. அங்குக் குருவிந்த மணிமலை 15,000 யோசனை. அதற்கப்பால் புட்பராகப்ராகாரம் 40,000 யோசனை. அப்பால் முத்துமலை. அப்பால் வைடூர்ய ப்ராகாரம் அதற்கப்பால் நவரத்னமலை. அதில் அற்புதமான மண்டபமுளது. அது பல நவரத்ன கோபுரங்களால் விளங்குவது அதில் பல சிவபிரதிஷ்டைகள் அமைந்துள. அம்மண்டபத்தினிடையிலுள்ள கர்பகிருகத்தில் தேவர்களால் பூசிக்கப்பட்ட மகாலிங்கம் ஒன்று விளங்குகின்றது. அம்மலையின்சார் ஓர் புறத்தில் பரமேச்வரனது திரு உருவம் போல் பஞ்சவத்திரேச்வர லிங்கமொன்று விளங்குகின்றது. அந்த லிங்கத்தின் ஐந்து முகங்களினின்றும் ஐந்து கங்கைகள் பிரவகித்து அமுதசமுத்திரம் போய்ச் சேருகின்றன. அவை, கிழக்கில் ரத்னகங்கையென்றும் மேற்கில் தேவகங்கை யென்றும் வடக்கில் கைலாசகங்கை யென்றும் தெற்கில் உக்கிரகங்கையென்றும் நடுவில் பிரமகங்கை யென்றும் பெயரினவாய்ப் பிரவகிக்கும். அக் கங்கையின் கரையில் விளங்கும் மண்டபத்தில் ரத்னமயமாய் நிருமிக்கப்பட்ட சிம்மாதனத்தில் நந்தி முதலிய கணங்கள் சேவிக்கத் தேவியுடன்

சிவமூர்த்தி எழுந்தருளியிருப்பர். மேற்சொன்ன ஸ்ரீ கைலாசத்தின் மலைப்பிராகாரங்களின் மத்தியில் கணங்களுக்கு வாசஸ்தலமுளது. அதில் கிழக்குத்துவார நீலரத்னகோபுரம் 9-லக்ஷம் பிரமாணமுடையது. அங்கு நந்தீச்வர ஆலயம் விளங்கும். அங்குள்ள நந்தீச்வரம் என்னும் சிவலிங்கத்தை அவர் பூசித்துக்கொண்டிருக்கின்றனர். அந்தக் கிழக்குப்பிராகாரத்தில் நிடதம் என்றும் மெகூடம் என்றும் பெயரிய இரண்டு பர்வதங்களிருக்கின்றன. ஆக்னேயதிக்கில் ஐந்து லக்ஷம் பிரமாணமுடைய ஒரு கோபுரமுண்டு. அங்குள்ள சுகேசேச்வரர் என்னும் சிவபெருமானைச் சுகேசன் என்னும் கணநாதன் பூசித்துக் கொண்டிருக்கிறான். தெற்கில் நீலமென்றும் மந்தாரமென்றும் இரண்டு பர்வதங்களிருக்கின்றன. அங்குள்ள பத்து லக்ஷம் பிரமாணமுள்ள கோபுரத்தில் சண்டேச லிங்கத்தை வணங்கிக்கொண்டு சண்டேசர் இருக்கின்றனர். நிருதிதிக்கில் 5-லக்ஷம் பிரமாணமுள்ள கோபுரத்தில் பாணலிங்கத்தைப் பூசித்துக் கொண்டு பாணனிருக்கின்றனன். மேற்குப் பிராகாரத்தில் அஸ்தாத்திரி பாரியாத்ரமென்னும் இரண்டு பர்வதங்களிருக்கின்றன. அங்கு 10-லக்ஷ பரிமாணமுள்ள கோபுரத்தில் பிருங்கீச்வரரை வணங்கிக்கொண்டு பிருங்கி முனிவர் வீற்றிருக்கின்றனர். வாயுபாகத்தில் ஐந்துலக்ஷம் பரிமாணமுள்ள கோபுரத்தில் ருடீச்வரரை வணங்கிக்கொண்டு ருடீ என்பவன் இருக்கின்றான். வடக்குப் பிராகாரத்தில் துந்துபி, மந்தரம், ரைவதம், என்னும் மூன்று கிரிகளிருக்கின்றன. அங்குப் பத்துலக்ஷம் யோசனையுள்ள கோபுரத்தில் காலருத்திரரை வணங்கிக்கொண்டு காலாக்கினி ருத்திரர் வீற்றிருக்கின்றார். ஈசானபாகத்தில் ஐந்து லக்ஷம் யோசனையுள்ள கோபுரத்தில் வீரபத்திரேச்வரமென்னும் மூர்த்தியை வணங்கிக்கொண்டு நீலருத்திரர் இருக்கின்றனர். மகேசாலயத்திற்குக் கீழ்த்திசையில் க்ஷீரசமுத்திரமாகிய அகழியோடு கூடிய கோட்டை யொன்றுளது. அங்குத் தத்புருஷலிங்கத்தைப் பூசித்துக்கொண்டு தத்புருஷர் வீற்றிருக்கின்றனர். தென்திசையில் உவர்க்கடல் அகழியுடன் கூடிய இருப்புக் கோட்டையில் அநேகப் பிரமத கணங்களுடன் அகோரேச்வரலிங்கத்தைப் பூசித்துக்கொண்டு அகோரமூர்த்தி வீற்றிருக்கின்றனர். தயிர்க்கடலாகிய அகழியால் சூழப்பட்ட புட்பராக மணிமயக் கோட்டையில் சத்தியோஜாதலிங்கத்தைப் பூசித்துக்கொண்டு சத்தியோஜாதர் வீற்றிருக்கின்றார். வடக்குத் திசையில் நெய்க்கடலாகிய அகழியால் சூழப்பெற்ற கோமேதகமணிக் கோட்டையில் அமைக்கப்பட்ட கோபுரத்தில் வாமதேவ லிங்கத்தைப் பூசித்துக்கொண்டு வாமதேவர் வீற்றிருக்கின்றனர். உச்சியில் வச்சிரமணியாலாகிய கோபுரத்தில் ஈசானேச்வரரைப் பூசித்துக்கொண்டு ஈசானர் வீற்றிருப்பர். (சிவரகஸ்யம்)

கைவல்யம் -- ஒரு அத்வைத நூல். இது நன்னிலம் நாராயணதேசிகர் மாணுக்கர் தாண்டவராய சுவாமிகளால் இயற்றப்பட்டது.

...கவி — இஃது இறகிலாப்பறவை. இது நியுசிலண்ட் தேசத்தது. இதனுடலில் எலி முதலியவற்றிற் குள்ளதுபோல் மயிர் முளைத்திருக்கிறது. இதன் மூக்குப் பருத்து நீண்டிருக்கிறது. நிலப் புழுக்களை அலகினுல் தோண்டித் தின்கிறது. இது புதர்களில் ஒளிந்து இரவில் இரைதேடப் புறப்படுகிறது. இதுநெருப்பைக்கண்டால் அஞ்சும். இது ஒருவித சத்தமிடும். அச்சத்தம்போன்று வேடர் சத்தமிட்டு வெளிவாத் தீவர்த்திகளைக் காட்டிப்பிடிப்பர்.

## கோ

கோக்கினம் — இப் பறவை உஷ்ணப்ரதேசத்தைச் சேர்ந்தது. இது கழுத்து நீண்டு வால் குறுகிய பக்ஷி. கால்களும் மூக்கும் நீளம். இதன் வால் குட்டையாதலால் பறக்கையில் உடனே திரும்புதல்கூடாது. கழுத்தை உதவியாகக் கொண்டு திரும்பும். இது நிறத்தால் பெரும்பாலும் வெண்மை. இவ்வினத்தில் பலவகை வேறுபாடுள்ளவை யுண்டு இவ்வினத்தில் 6-முதல் 10-அடி உயரமும் உண்டு. இப் பறவை நீர்வாழ் சிறுபிராணிகளைப் பிடித்தருந்த நீரில் அசையாது நிற்கையில் தன் அருகில்வரும் இரைக்கமைந்த மீன்களைப் பிடித்தருந்தும்.

வாத்துமூக்குக்கொக்கு — இது, ஆசியா, ஐரோப்பா முதலிய நாடுகளிலுண்டு. இத

னிறம் வெண்மை. இவ்வின ஆண்பறவைக்குத் தலையில் கொண்டை யுண்டு. இதன் முதுகு மேகநிறம். தலையில் வெண்மையும், கருமையுமான கோடுகள் உண்டு. இது 2-அடி உயரம், மூக்கு வாத்தின் மூக்கைப்போல் தட்டையாய் அடிசிறுத்து முனை அகன்று வட்டமாயிருக்கும். இதன் மேல் மூக்கின்முனை கீழ்நோக்கி வளைந்திருக்கிறது. இது சதுப்பு நிலங்களிலுள்ள புழுப்பூச்சிகளைப் பிடித்துத் தின்னும்.

செம்மூக்குக் கொக்கு — இது மேற்கூறிய வாத்துமூக்குக் கொக்கினினம். இதன் மூக்கும் கால்களும் செவந்திருக்கின்றன. மூக்குத் தட்டை, சிறகுகள் வெண்மை.

நீலக்கொக்கு—இது கொக்கினத்தைச் சேர்ந்தது. இதனிறம் நீலம், இதன் தலையில் மயிலுக் கிருப்பதுபோல் கொண்டையுண்டு.

விசித்திரக் கொக்கு—இது இங்கிலாந்தின் வடபாகத்திலுள்ள ஏரி குளங்களின் அருகில் கூட்டம் கூட்டமாயுண்டு. இதன் கழுத்தின் பக்கத்தில் சிங்கத்திற்கிருக்கும் பிடரிமயிர்போல் இறகுகள் கழுத்தைச் சுற்றிலும் மலர்ந்திருக்கின்றன. நெற்றியின்மீதும் விரிந்த சிறகுகள் உண்டு. இதன் முதுகு மேகநிறம். வயிறு வெண்மை. இதன் கால் விரல்கள் தடித்து நீண்டு குறுகிய நகங்கள் பெற்றிருக்கின்றன. இது கூடுகட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இது உரத்த சத்தமிட்டுப் பேட்டின்முன் ஆடும். பொதுவாகக் கொக்கினங்களில் சில கூட்டமாய்க் கூடியே வாழ்கின்றன.

**கோக்கிதேவர்** — வீரசைவ அடியவர்களில் ஒருவர். இவர் நந்தவனம் வைத்திருக்க அல்லமர் இவரிடம் வந்து அந்த நந்தவனத்தின் ஒருபுறம் தோண்டக் கட்டளையிட்டு அதில் ஒரு யோகி இருத்தலைக் காட்ட அவரைப் பணிந்து தீக்ஷைபெற்றவர்.

**கோக்கோகர்** — ஒரு இருடி, வைணதத்தன் சொற்படி மதனநூ லியற்றியவர்.

**கோக்கோகம்**—கொக்கோகர் செய்த மதனநூல், இதனைத் தமிழில் அதிவீரராமபாண்டியன் செய்யுளாகச் செய்தனனென்பர்.

**கொங்கணர்** — இவர் ஒருசித்தர். போகரிஷியின் மாணாக்கர் என்பர், இவர் பளிக்கிச் சாதியார். இவர் வீரட்டகாசமூர்த்தியின் சிரத்தில் தமது குளிகையை வைக்க அச்சிவலிங்கமூர்த்தம் அக்குளிகையை நீருக்காது மறைத்ததால் அச்சிவமூர்த்தியைப்பூசித்துக் குளிகைபெற்றவர். இவர் போகர்விரும்பிய பெண் அகப்படாது வருந்திப் பிரதிமையைப் பெண்ணாக்கி ஆசிரியரிடம் கொண்டுசென்றவர். இவர் திருமழிசையாழ்வாரிடஞ் சென்று ரஸக்குளிகையொன்று கொடுத்து இதுகாணி கோடியைப் பேதிப்பதென்று கூற ஆழ்வார் தம்தேகத்து அழுக்கையுருட்டி இது காணி கோடியாக்கும் என்று கொடுத்தனர். சித்தரிதனைப் பரீக்ஷித்தறிந்து களிப்புற்று ஆழ்வாரிடம் நட்புக் கொண்டனர். இவர் கோயம்புத்தூருக் கருகிலிருந்ததாகக் கூறுவர். இவர்காலம் திருவள்ளுவர் காலமாக இருக்கலாம். இவர் தவத்திலிருக்கையில் கொக்கொன்று இவர்மீது எச்சமிட அதை இவர்பார்க்க அது எரிந்து சாம்பராயிற்று. கொங்கணர் தவம்விட்டு நீங்கித் திருவள்ளுவரிருக்குமிடத்தில் பிக்ஷைக்கு வந்தனர். திருவள்ளுவர் தமது தேவியாருக்குக் கட்டளையிட அவள் வருதற்கு முன்சித்தர் கோபித்து நோக்க அந்தக்கற்புடையாள் "கொக்கென்றெண்ணினையோ கொங்கணவா" எனச்சித்தர் இவள் மகா பதிவிரதையென்று வெட்கிச் சென்றவர். இவர் சில வைத்தியநூல்கள் செய்திருக்கின்றனர். அவை கொங்கணர் கடைக்காண்டம், ஞானம் ா, குளிகை, திரிகாண்டம் முதலியன. அகத்தியர் மாணாக்கர் என்பர். இவரதுநாடு கொங்குநாடாயிருக்கலாம். இவர் வடக்கிலிருந்து தெற்கில் வந்து தஞ்சாவூரில் தம் பெயரால் சிவலிங்கம்தாபித்துப் பூசித்து முத்திபெற்றனர் என்ப.

**கோங்கணித்தாதன்** — சக்கரம் பெறும்படி விநாயகருக்குமுன் கோணங்கிக் கூத்தாடிய விடுவசேநன்.

**கோங்கணிவர்மன்**—கொங்கு நாட்டவரைச் சயங்கொண்டு நாட்டிற்குக் கொங்குநாடெனப் பெயரிட்டவன்.

**கோங்கர்**—கொங்குமண்டலத்தரசர். (சிலப்பதிகாரம்.)

**கோங்கன்** — கொங்குநாட்டுக் குடிமையாளன். இப்பெயர், தமிழ்நாட்டு மக்களாகிய தொழிலாளர் முதலியவர்க்கும் இழிவு நோக்கி வழங்கி வருகிறது. "நீ யெவனடா கொங்கானு?" என்பர்.

**கோங்காணியர்** — கோங்காணத்திலிருந்து வந்து குடியேறினவர்கள். இவர்களில் பிராமணர் கடை முதலிய வைத்து ஜிவிப்பவர்கள். இவர்களில் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர் உண்டு. இவர்களில் கௌட பிராமண வகுப்பில் சாரச்வதபிரிவைச் சேர்ந்தவர்கள் திராவிட பிராமணர். கொங்காணி சூத்திரர் குடிமிக்காரர் எனப்படுவர். (தர்ஸ்டன்.)

**கோங்கிலாச்சான்** — எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர், வைணவாசாரியார். (குருபரம்பரை.)

**கோங்கிளங்கோசர்** — இவர்கள் குடகுநாட்டை ஆண்டவர்கள்.

**கோங்கு** — கொங்குமண்டிலம். (சிலப்பதிகாரம்.)

**கோங்குப்பிராட்டி** — இந்தம்மாள், உடையவர் சந்யசித்துக்கொண்டு ஒருவீட்டில் மதுகரித்துக்கொண் டிருக்கையில் அவரால் ஆத்மஸம்ரக்ஷணம் பண்ணப்பட்டவள். இவள், சோழனுக்குப் பயந்து சென்ற உடையவர் சீடர்களுக்கு அன்னமளித்தவள்.

**கோங்குவேளிர்** — இவர் கொங்குநாட்டு வேளாளரில் ஒருவராகிய சிற்றரசர். இவர் பெருங் கொடையாளி. இவரது ஊர் கொங்குநாட்டினதாகிய விஜயமங்கலம். அடியார்க்கு நல்லார் இவர் செய்த உதயணன் கதையாகிய கொங்குவேண் மாக் கதையைப் பாராட்டி யிருத்தலால் இது அவர் காலத்திற்கு முற்பட்டதாகும். இவர் பிறந்தவூர் கொங்குநாட்டினதாகிய மங்கை யென்பது. பேராசிரியரும் தம் உரையில் இவர் நூலை யெடுத்தாளுதலால் இவர் செய்த நூல் பேராசிரியர்க்கும் முற்பட்ட நூலாம். இவர் சமணசமயத்தவராக இருக்கலாம். இவர் தம் நூலில் பல இடங்களில் சைநக் கொள்கைகளை யெடுத்தாளுதலால் இவர் சைநரே. (உதயணன் கதை.)

**கோசுகு** — இது ஒருவகைப் புழு. அழுக்கடைந்த இடங்களி லுண்டாகிப் பின் இறக்கை முளைக்கக் கொசுக்களாய் மாறுகிறது. இது தனது ஊசிபோன்ற உறுப்பால் உதிரத்தை உறிஞ்சிக் குடிக்கும். பகலெல்லாம் ஒளிந்திருந்து இரவில் வெளிவந்து கடிக்கும். இது முதுகெலும் பில்லாப் பிராணி. இதற் கெட்டுப்பற்கள் உண்டு.

**கொச்சகக்கலிப்பா** — பாவினத்தொன்று, இது தரவு கொச்சகக்கலிப்பா, தரவிணைக் கொச்சகக்கலிப்பா, சிஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா என ஐந்து வகைப்படும். (யாப்பு - இ.)

**கொச்சை** — சீர்காழிக்கோர் நாமம், கொச்சைமுனியைக் காண்க.

**கொச்சைமுனி**—பராசர், இவர் சத்த இருடிகளை இல்லறத்தவர் என்று இகழ, இவரை அவர்கள் நீ மச்சகந்தியைப் புணர்ந்து நாற்றமோடிருக்க எனச் சபித்தனர். சாபமேற்ற முனிவர் நாற்றநீங்கி நன்மணம் பெறச் சீர்காழியிற் பூசித்தனர். இதனால் கொச்சையென்று அத்தலத்திற்கும் பெயராயிற்று.

**கொடிகள்** — 1. அதாவது அவ்வவர்களுக்குரிய விருதுகளைத் தெரிவிப்பது. சிவபிரானுக்கு விடைக்கொடி. கந்தமூர்த்திக்கு சேவற்கொடி. பார்வதியார்க்குச் சிங்கக்கொடி. வேதியர்க்கு வேதக்கொடி. ஐயனருக்குக் கோழிக்கொடி. காளிக்கு அலகைக்கொடி. யோகினிக்குப் பேய்க்கொடி. விஷ்ணுவிற்குக் கருடக்கொடி. பலபத்திரனுக்குப் பனைக்கொடி. காமனுக்கு மீனக்கொடி. பிரமனுக்கு வேதக்கொடி. இந்திரனுக்கு இடிக்கொடி. அக்கினிக்கு மேஷக்கொடி. யமனுக்கு மகிஷக்கொடி. நிருதிக்கு நரக்கொடி. வருணனுக்கு முதலைக்கொடி. வாயுவிற்குக் கலைமான் கொடி. குபேரனுக்கு அச்வக்கொடி, மேஷக்கொடி. வைரவனுக்கு ஞாளிக்கொடி. மூதேவிக்குக் காக்கைக்கொடி, அருகன்கொடிகள், காட்சி, ஞானம், சீலம். இராவணனுக்கு வீணைக்கொடி. வீட்டுமனுக்குப் பனைக்கொடி. அசுவத்தாமனுக்குச் சிங்கக்கொடி. கிருபனுக்கு ருஷபக்கொடி. சல்லியனுக்கு யானைக்கொடி. விடசேநனுக்கு மயிற்கொடி. துரோணாசாரிக்கு வேதக்கொடி. தருமனுக்கு முரசக்கொடி. துரியோதனனுக்கு நாகக்கொடி. கன்னனுக்குக் கச்சைக்கொடி. வீமனுக்குச் சிங்கக்கொடி. அருச்சுநனுக்கு அநுமக்கொடி. சோனுக்குப் பனைவிற்கொடிகள். பாண்டியனுக்கு மீனக்கொடி. சோழனுக்குப் புலிக்கொடி. வேளாளருக்கு வெள்ளைக்கொடி, மேழிக்கொடி, அம்சக்கொடி, அநுமக்கொடி, மயிற்கொடி. கன்னிடையருக்குப் பசவ சங்காரக்கொடி,

பஞ்சவர்ணக்கொடி. வடுகு வேளாளருக்கு அம்சக்கொடி. இரெட்டிகளுக்குக் கலப்பைக்கொடி. கம்மவாருக்கு ருஷபக்கொடி கொந்தளவருக்குச் சகோர பக்ஷிக்கொடி. நத்தமான்களுக்கு யாளிக்கொடி. மலையமான்களுக்கு அரிதாளக்கொடி. இடையருக்குச் சக்கரக்கொடி. வடுகிடையருக்குச் சங்குக்கொடி. பத்மசாலியருக்கு ஆண்புலிக்கொடி. பட்டுச்சாலியருக்கு இருதலைப்பக்ஷிக்கொடி. வடுகுசேணியருக்குப் பெண்புலிக்கொடி. சேன்றவர்க்கு முதலைக்கொடி. பட்டுநூற்காரருக்குப் பட்டுக்கொடி. சேடருக்குக் கூர்வாள்கொடி, கொழிஞ்சிக்கொடி. செக்கு வாணியருக்குக் கருடக்கொடி. இலைவாணியருக்குக் குயிற்கொடி. ஒண்டியெருது வாணியருக்குப் பஞ்சவர்ணக்கிளிக்கொடி, சணப்பருக்குச் சவுரிக்கொடி. முச்சியருக்கு மகரமீன்கொடி. காஞ்சியருக்குப் பொதிக்கொடி. செட்டிகளுக்குக் கருடக்கொடி. கைக்கோளருக்குச் சிங்கம், மான், கரடி, மயில் முதலிய கொடிகள். கம்மாளருக்குக் கிளிக்கொடி, கழுகுக்கொடி. வன்னியருக்கு அக்கினிக்கொடி, சேவற்கொடி, சிலைக்கொடி, மாலக்கொடி, கழுகுக்கொடி, போத்துக்கொடி, நரிக்கொடி பள்ளருக்கு அலவங்கொடி. வேதகாரர்களுக்குச் கிச்சிலிக்கொடி, கத்திக்கொடி. நரிசோகிகளுக்கு நாய்க்கொடி. குசவர்க்குங் குசக்கணக்கர்க்குந் தாளவிருஷபக்கொடி. மேளகாரருக்கு டமாரக்கொடி. நட்டுவர்க்குத் தாளக்கொடி. தாசிகளுக்கு மன்மதக்கொடி சாணாருக்குச் சிங்கக்கொடி. குறவருக்குக் கழுதைக்கொடி. சுக்காசெட்டி, லம்பாடிகளுக்குச் சித்திரக்கொடி. வேட்டைக்காரருக்குக் கவுண்டுக்கொடி பட்டணவருக்கு ஆமைக்கொடி. கரையாருக்கு மச்சக்கொடி. ஒட்டருக்கு மண்வெட்டிக்கொடி. உப்புரவருக்குப் பன்றிக்கொடி. போயிகளுக்குப் பல்லக்குக்கொடி. பணிசெய்வாருக்குத் தாரைக்கொடி. வண்ணார்க்கு வெள்ளையானைக் கொடி. நாவிதர்க்குப் புருஷாமிருகக்கொடி. தொம்பவருக்குக் கெடைக்கொடி. மாரியம்மைக்காரருக்கு உடுக்கைக்கொடி. பூசாரிக்குச் சிலம்புக்கொடி. எனாதிகளுக்கு முயற்கொடி. அரிப்புக்காரர்களுக்குத் தாமரைக்கொடி. வடுகு பண்டாரங்களுக்குச் சூலக்கொடி. வஞ்சூராருக்கு முத்துக்கோவைக்கொடி. குடுகுடுப்பைக்காரருக்குச் சத்திக்கொடி. இருளருக்குச் சில்வாக்கோற்கொடி. வெளிக்கருமானுக்குத்துருத்தி, சம்மட்டிக்கொடி. வெளிக்கற்றச்சருக்கு உளிக்கொடி. கப்பல் தச்சருக்கு வாச்சிக்கொடி. கப்பல் வடுகருக்குக் கப்பற்கொடி. பவுனியர்க்கு டமரகக்கொடி. பண்டருக்குக் கத்திக்கொடி. பஞ்சமர்க்கும் வள்ளுவர்க்கும் மாவட்டியற்கும் வெள்ளைக்கொடி. மகம்மதியருக்குப் பிறையுடுக்கொடி. மேனாட்டாருக்குப் பலவகைக் கொடிகள்.

2. தாவரவகையைச் சேர்ந்த படர் கொடிகள். இவ்வகையில்பலவகைக் கொடிகள் உண்டு. கட்டுக்கொடி, இது நீரை தயிர்போல் கட்டிவிடுகிறது. புல்லுருவி, இது தரையில் வேர் பரவாமல் மரத்திலேயே பயிராய்த் தான் சேர்ந்த மரத்தைப் பாழாக்குவது. வெற்றிலைக்கொடி, இது காரமுள்ளதாய் இந்தியாவில் பலரால் உபயோகிக்கப்பட்டு வருவது. இவ்வகையில் வெற்றிலைவள்ளி, மிளகு, திப்பிலி சேர்ந்தவை. காஞ்சொறி, இதன் கொடியில் சுணையுள்ள முட்களுண்டு. இவை உடம்பில் படின் தினவுண்டாம். புதினாவைக்கோலை வெல்லத் தண்ணீரில் நனைத்துப் பாத்தியிவிட்டு மேல்மண் தூவி தண்ணீர் நனைத்தால் முளைப்பது. கருடன் கிழங்குக்கொடி, இது நீர் வேண்டாது அந்தரத்தில் நெடுநாள் தளிர்ப்பது. மற்றும் பல விநோதக் கொடிகளுண்டு. அவை அப்பைக்கோவை, அம்மான்பச்சரிசி, அவரை, ஆதொண்டை, இலைக்கொடி, உப்பிலாங்கொடி, ஊசிமல்லிகை, கற்கோவை, காசனுக்கண்ணி, கர்ப்பூரவள்ளி, கருங்கோவை, கழற்கொடி, களிப்பிரண்டை, காக்கட்டான், காணும்வாழை, கொடிவேலி, கொட்டைப்பாசி, கொத்தான், கொல்லங்கோவை, கோழிஅவரை, சத்திக்கொடி, சிறுஅம்மான்பச்சரிசி, சிறுகட்டுக்கொடி, சிறுகுறிஞ்சான்கொடி, சிறுபுள்ளடி, சிவப்பு அம்மான்பச்சரிசி, சீந்திற்கொடி, சுரைக்கொடி, செங்கோவை, செப்புநெருஞ்சல், தீம்பிரண்டை, தொட்டாற்சுருங்கி, நற்பாகல், நறுந்தாளி, நஞ்சுமுரித்தான், நரளை, நிர்ப்பயற்றன், நன்னாரி, நன்மல்லி, நன்னெருஞ்சல், நாய்ப்பாகல், நீர்மேனெருப்பு, பவளக்குன்றிகொடி, பம்பந்தராய், பாகல், பிரம்மியவழுக்கை, பிரண்டை, பீர்க்கு, புடல்,

புளிப்பிரண்டை, புனற்றண்டு, பூசினைக் கொடி, பெருங்கட்டுக்கொடி, பேய்ப்புடல், பேய்பாற்சொரி, பொடுதலை, பொற்றலைக்கையான்தகரை, பொன்னுங்காணி, பொன்முசுட்டை, மிளகாணை, மிளகுக் கொடி, மிதிபாகல் மிரியார்கூந்தல், முடக் கறுத்தான், முசுமுசுக்கை, முல்லை, முசுட்டை, மூக்குறட்டை, மூசுமல்லிகை, யானை நெருஞ்சில், வல்லாரை, வரிக்கோவை, வனமல்லிகை, விஷ்ணுகிராந்தி, வெண் குன்றி, வெள்ளைச்சாறடை முதலிய பல.

கோடிக்கம்பம் — இது முதலில் உபரிசரவசுவிற்கு இந்திரனால் கொடுக்கப்பட்டது. இக் கம்பத்தின்பொருட்டு உபரிசரவசு மார்கழிமாதம் சுக்லபக்ஷத்து இந்திரபூசையாக உற்சவம் செய்தனன். அதுமுதல் எல்லா அரசர்களும் அவ்வாறு பூசை செய்து வந்தனர். இக் கம்பம் 32 சாண் உள்ளது. இதனால் இந்திரனும் மற்றத் தேவர்களும் பூசிக்கப்படுகின்றனர்.

கோடிஞாழன்மாணிபூதனர் — கடைச்சங்கத்துப்புலவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை)

கோடிநிலை — அரி அயன் அரனென்னும் மூவர் கொடியுள்ளும் ஒன்றேடுவமித்துப் பலரும் பொருந்துதல்வரும் வேந்தனுடைய கொடியைப் புகழ்ந்தது. (பு. வெ. பாடாண்.)

கோடிப்பூ — மல்லிக்கைபூ, முல்லைப்பூ, வெட்சிப்பூ, தூதுளம்பூ, வெங்காயப்பூ, சாதிப்பூ முதலிய.

கோடிமங்கலத்துவாதுளி நற்சேந்தனர் — கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். இவர் ஊர் கொடிமங்கலம்போலும். இதனைக் கோடிமங்கலம் என்பர். வாதுல கோத்திரத்து அந்தணராக இருத்தல் கூடும். (அகம்)

கோடியூர்கிழார்மகனர் நெய்தற்றத்தனர் — இவர் கடைச்சங்கமருவிய புலவரில் ஒருவர். இவரியற்பெயர் தத்தர். இவர் நெய்தனிலத்தவர் போலும். தந்தையார் கொடியூர்கிழார். வேளாளர். (அக. உ௬௩.)

கோடுகோட்டி — சிவகிருத்தத் தொன்று. இது திரிபுரம் தீப்பட்டு எரியக்கண்ட சிவமூர்த்தி யாடியது.

கோடுங்கோளூர் — 1. கழறிற்றறிவார்நாயனுருடைய இராசதானி. (திருவிளையா.)

2. சேரநாட்டிலுள்ளதோர் ஊர். இக் காலத்துக் கொடுங்கலூரென்று வழங்கப்படுகின்றது. (சிலப்பதிகாரம்.)

கொடுந்தமிழ்நாடுபன்னிரண்டு — பொங்கா நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்ட நாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சீத நாடு, பூழிநாடு, மலையமாநாடு, அருவா நாடு, அருவாவடதலைநாடு என்பன. "தென்பாண்டிகுட்டம்குடம் கற்காவேண் பூழி, பன்றியரு வாவதன் வடக்கு — நன்றாய, சீதமலாடு புனனாடு செந்தமிழ்சேர், ஏதமில் பன்னிருநாட் டெண்."

கோடும்பாவி — பறையரைக் காண்க. (தர்.)

கோடும்பை — இது பாண்டிநாட்டுள்ள நாடு. (சிலப்பதிகாரம்.)

கோடை — திரண்ட பசுநிரை யொன்றும் தப்பாமே தம்மை வேண்டினவர்களுக்குப் பிரியப்பட்டுக் கொடுத்தது. (பு. வெ.)

கோடைமாட்சி — சம்விதத்தம் - கடவுளர், வேள்வி, பசுக்காத்தல் முதலியவற்றிற்குக் கொடுக்கப்படும் பொருள். பாரிதோஷிகம் - வந்தியர், மாகதர், வல்லர், ஆடல் பாடல்களுக்குக் கொடுக்கப்படும்பொருள். சிரீதத்தம் - புகழைக் கருதியும், பயனைக் கருதியும் கொடுக்கப்படும் பொருள். இலஜ்ஜாதத்தம் - நண்பர், சம்பந்திகள், உறவினர் ஆகிய இவர்களிடத்தும் விவாக முதலிய காரியங்களிலும் மகிழ்ச்சியுண்டாம்படி கொடுக்கப்படும் உபகாரப் பொருள். பயதத்தம் - அரசனுக்கும், வலியவர்க்கும், காரியக்கேடு விளைப்போர்க்கும், அச்சம் காரணமாகக் கொடுக்கப்படுவது. பாபதத்தம் - மக்களுக்குத் துன்பம் உண்டாக்கும் விலங்குகளுக்கும், சூது முதலியவற்றால் விழந்த பொருளும், கள்வரால் கவரப்பட்ட பொருளுமாம். (சுக்-நீதி.)

கோடைவஞ்சி — உச்சமாகவும் மந்தமாகவும் அதன்மேற் சமமாகவும் இசையை அளந்து பாடின அறிஞர்க்குப் பரிசிலைக் கொடுத்தது. (பு. வெ.)

கோட்டம்பலவனர் — இவர் கொட்டம்பலம் என்னும் ஊரினர். இவர் பாடலில் "குறக்குறுமாக்கள் தாளங்கொட்டும்" என்னும் தொடரிற் கொட்டுமென்னுஞ் சொற்சிறப்பானே கொட்டம்பலவன் எனப்பட்டாரெனினுமாம். எனின் சேரமான் கொட்டம்பலத்துத் துஞ்சியமாக்கோதை என அகத்திலும், புறத்திலும் வருதலின் கொட்டம்பலமென வோரூருண்டு எனவும் அதனால் கொட்டம்பலவனரென்பது ஊர் பற்றி வந்த பெயரெனவு மறிக. கழைக் கூத்தி கயிற்றில் நடக்கின்ற வழக்கு

அக்காலத்தும் உண்டென்று இவர் பாடலான் அறியப்படுகிறது. இவர் குறிஞ்சித் திணையைப் பாடியுள்ளார். தலைமகன் தன்னெஞ்சம் கொடிச்சிகைப்பட்டு விட்டதெனவும், அவள் விட்டாலன்றிப் பிறரால் விடுத்தற் கரியதெனவும், கூறுவதாகப் பல படப் புனைந்து கூறியுள்ளார். இவர் பாடியது நற். கூ௫-ம் பாட்டு.

**கொட்டரி** — பாணாசுரன் தாய், கிருஷ்ணனுடன் யுத்தஞ்செய்த தன் குமரன் இறக்குந்தருணத்தில் நிர்வாணமாய் மத்தியிலிருந்து யுத்தத்தைத் தடுத்தவள்.

**கொட்டாரச்சோமேசம்** — வாச்சையரைக் காண்க.

**கொட்டாவி** — இது முதலில் இந்திரனை விழுங்கிய விருத்திரன் வாயில் ஒட்டிக்கொண்டிருந்தது. இந்திரன் வெளிப்படும்படி தேவர் விருத்திரன்மேல் ஏவிய ஜிரும்பி காஸ்திரத்தால் அவன் வாயைத் திறக்கச்செய்த அங்க சேஷ்டை. இது நீச்சநனம், இது தவஞ்செய் காலத்திலும், அநுஷ்டானம், ஜபம், ஈச்வராராதனை செய்யும் காலத்திலும் உதவாது. (தே-பாகவதம்).

**கொட்டைமுந்திரி**—ஒருவகை தென்னிந்திய விருக்ஷம். இதன் இலையைத் தைத்து உண்கலமாக உபயோகிப்பர். இது தன் பழத்தினடியில் கொட்டைகொண்ட மரம். இதன் பழத்தின் ரஸத்தில் ஒருவகை மயக்கமுண்டு. கொட்டையினுள் உள்ள வித்தினைப் பலகாராதிகளுக்கு உபயோகப்படுத்துவர்.

**கொண்கானம்** — இது ஒரு மலை. (புற-நா.)

**கொண்கானங்கிழான்** — கொண்கானத் தரசன், மோசிகீரனாற் பாடப்பெற்றவன். (புற-நா).

**கொண்டகம்புகுதல்** — அன்புமிகக் கொழுநனைக்கண்டு மாலையாற் கட்டி அகத்திலே கொண்டுபுக்கது. பு. வெ. பெருந்திணை.)

**கொண்டாழி** — சோழனை உட்கொண்டு ஆழ்த்தியதோ ரோடை. (திரு.)

**கொண்டுகூட்டுப்பொருள்கோள்** — செய்யுளடி பலவினும் தொடுக்கப்பட்ட சொற்களைப் பொருளுக்குத் தக்கபடிக் கூட்டுவது. (நன்னூல்.)

**கொண்டைகட்டிகள்**—1. வேளாளருள் ஒரு வகை வகுப்பினர். இவர்கள் குடுமிக்குப் பிரதியாகச் சிகையைக் கொண்டைபோற் கட்டியிருந்ததாற் பெற்றபெயர். இவர்கள் குறும்பரசருடனிருந்த பழக்கத்தா லவ்வாறு கொண்டைபெற் றிருந்தார்கள் என்பர். அன்றியும் நாவிதன் தங்கள் சிகையைத் தொடாது கொண்டை கட்டிக்கொண்டிருந்தவராதலின் இப் பெயர் அடைந்தனர் என்பர்.

2. இவர்கள் வேளாளரில் உயர்ந்தாரென்று தங்களில் மதிப்பு. இவர்கள் நவாபு அரசாட்சியில் உயர்ந்த உத்யோகத்தில் இருந்தனர் என்பர். இவர்கள் தங்கள் சிகையை மேல் முடிந்திருந்ததால் இப்பெயரடைந்தனர். இவர்களில் பெரும்பாலார் சைவர். ஆசாரமுள்ளவர்கள். இவர்களில், மேல்நாடு, கீழ்நாடு, தக்ஷிணத்தார் தொண்டைமண்டலத்தார் எனப் பிரிவுகள் உண்டு.

**கொண்டைலாத்திக்குருவி** — இது மீன்குத்திக் குருவியினத்தைச் சேர்ந்தது. இதன் தலையில் அழகிய கொண்டைஒன்று உண்டு. அந்தக் கொண்டையை அது களிப்படைந்திருக்கையில் விரித்தும் குவித்தும் விளையாடும். இது செம்மை கலந்த மஞ்சணிறமுள்ளது. இதன் தோகையினும் இறக்கையினும் வெண்மையான வரிகள் இருக்கின்றன. இது மரங்களிலும் பூமியிலும் பூச்சிப் புழுக்களைத் தோண்டியுண்ண இதன் மூக்கு நீண்டிருக்கிறது. இப்பறவையினம் கோடைகாலத்தில் வெகு தூரம் யாத்திரை செய்து மழைக்காலத்தில் திரும்புகிறது.

**கொத்தப்பியர்** — பரதகண்டமாண்ட பூர்வ அரசசாதியர்.

**கொத்துமல்லி**—(உருளரிசி) இது சம்பாரங்களில் சேர்க்கப்படும் பொருள். இது களிப்பும் கரிசலுமான நிலத்தில் பயிராவது. உஷ்ணத்தைத் தணிக்கும் பொருள். இதன் இலை மணமுள்ளதாதலால் கறி முதலிய பதார்த்தவகையில் சேர்த்துண்பர்.

**கொந்தகக்குலம்** — மதுரைக்கு அக்கினி மூலையில், ச நாழிகை வழித்தூரத்திற் கொந்தகையென்று ஒரூருண்டு: அதிற் கொந்தக வேளாளரென்று ஒரு வகுப்பினருளர். (திருவிளையாடல்.)

**கொந்தகை**—கொந்தகக்குலம் காண்க. (திருவிளை.)

**கோப்பரகேசரிவன்மர்** — ஒரு சோழ அரசர், இவர் மதுரை ஈழம் முதலிய நாடுகளைச்செயித்தவர். இவர் ஆதித்தசோழரது குமரர். இவருக்குப் பாராந்தகன், வீரநாரா

ணன் என்று வேறுபெயர்களுண்டு. இவர் மனைவி கோக்கிழார் என்பவள். இவள் கேரளதேசத்து அரசன் புதல்வி. இவர்க்கு இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன் என மூன்றுகுமரர்.

கொப்பிலிங்கம் — கோட் கூச்சவ்வையைக் காண்க.

கொம்பரக்த — இது ஒருவித அரக்கில் சேர்க்கையான பொருள். சாயம் போடுவதற்கும் மருந்திற்கும் உதவி. இவ்வினத்தில் பலவுண்டு அவற்றில் அவலரக்கு, இதனைத் தட்டார் பெரும்பாலும் உபயோகிக்கின்றனர். செவ்வரக்கு முண்டு.

கொம்புகொண்ட பறவை — (பாலமீடா) இது தென்அமெரிக்கா நாட்டில் பிரேசில், கயானு முதலிய பிரதேசங்களில் வசிப்பது. இது மயிலையொத்த வுருக்கொண்டது. இதன் கழுத்தில் சிறகுகளில்லை, இதன் சிறகுகள் நீலங்கலந்த பொன்னிறமுள்ளவை, இதன் அலகு நீண்டு மூனை வளைந்தது, இதன் நெற்றியில் அழுத்தமான கொம்பொன்று முளைத்திருக்கிறது. இக் கொம்பு ஆண் பறவைக்கே யுண்டு. இது அந்நாட்டிலுள்ள சதுப்பு நிலங்களில் வசித்துப் பூச்சி, தான்யம், நீர்ப்பூண்டுகளை யுணவாக் கொள்ளும். இது கோடை காலத்தில் புதர்களில் மெத்தென்ற சருகு சேர்த்து வருஷத்திற் கொருமுறை முட்டையிட்டு அவயங்காத்துக் குஞ்சு பொரிக்கும்.

கொம்புள்ள ஒருவித பறவை — (Horned Screamer) ஒருவித பறவை. பெரிய வாத்துப் போன்றது. தலையில் கொம்பு போன்ற வூறுப்புக்கொண்டது. கறுப்பும் வெண்மையுங் கலந்த இறகுகளை யுடையது. தென் அமெரிக்காவி லுள்ளது.

கொம்புள்ள தேரை—இது ஆறு அங்குலம் நீளமும், பெரிய வாயும், கண்ணிற்கு நேராகப் பெரிய கொம்புபோ லுறுப்பும் உள்ளது. இது தவளைகளைப் பிடித்துத் தின்பது. தென் அமெரிக்காவிலுள்ளது.

கொம்புள்ள விரியன் பாம்பு — இது வட அமெரிக்காவிலுள்ள மணலுள்ள இடங்களில் உடல்முழுதும் மணலில் மறைத்துத் தலை, கொம்பு, கண்களை வெளியில் காட்டிக்கொண்டிருப்பது. 30 அங்குல நீளமுள்ளது, அதிக விஷமுள்ள பிராணி.

கொம்புள்ள மூக்குப் பறவை — இது சென்னை இராஜதானியைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சிமலைக் காடுகளிலிருக்கிறது. இதன் உடல் 1½ அடிகள் நீளம், ¾ அடி கனம். இதன் இறக்கைகள் பெரியவை, இதன் மூக்கு 10 அங்குலம் நீளமுள்ளதாய்ப் பருத்திருக்கிறது. இந்த மூக்கின் மேலிடத்தில் மூக்கையொத்த ஒரு உறுப்பு மேல்நோக்கி வளர்ந்திருக்கிறது. இவ்வினத்தில் ஒற்றைக் கொம்புள்ளதும், இரட்டைக் கொம்புள்ளதும் உண்டு. இதன் மூக்குச் செவந்த நிறம். இது கரிய சாம்பல் நிறமானது. இதன் கால்களி னகங்கள் கூர்மையாய் வளைந்தவை. இது உரத்துக் கத்தும் ஒலி 1 மைல் கேட்கும். இது மரப் பொந்துகளில் கூடுகட்டி முட்டையிட்டு அவயங் காக்கும். இது, அவயங்காக்கும் பெட்டை இருக்கும் கூட்டை மண்ணாலடைத்து ஒரு தொளையிட்டு அத் தொளையின்வழி பேட்டிற்கு இரை தரும். முட்டை பொரிந்தபின் குஞ்சுகளுக்கும் தொளைவழி இரை தரும்.

கொய்யடிநாரை — இது நீர்வாழ் பறவையினத்தின் வகையது. இது பிளந்த அடிகளை யுடையது. இது கால்கள் நீண்டும் அலகும் கழுத்தும் நீரிலுள்ள மீன்களைப் பிடிக்கும் வகை நீண்டும் உள்ளது. இவ்வினத்தில் பெருநாரை, கருநாரை, வெண்ணாரை, குருட்டு நாரை முதலியவுண்டு இவற்றில் சில நீரில் நிற்கையில் ஒற்றைக் காலால் நிற்கும்.

கொல்லர் — கம்மாளர்.

கொல்லனழிசி — (கம்மியர்போலும்) இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் பெயர் அழிசியாக இருக்கலாம். இவர்க்குச் சோழர் குடியினராகிய அழிசியின் வேறுபடுக்கக் கொல்லன் அழிசி என ஜாதிப்பெயரடை இட்டனர் போலும். கு-று உஎ, கஙஅ, கசகூ, உசO.

கொல்லிக்கண்ணன் — சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவர் பெயர் கண்ணராக இருக்கலாம். இவர் கொல்லிமலை நாட்டைச் சேர்ந்தவர்போலும். குறு-ருச.

கொல்லி — ஒரு மலை (சிலப்பதிகாரம்).

கொல்லிக்காவல்தாசர் — பிள்ளை லோகாசாரியர் திருவடி சம்பந்தி. இவர்க்குக் கோட்டாரழகிய மணவாளதாசர் என்றும் பெயர்.

கொல்லிப்பாவை — இது கொல்லிமலையின் மேல்பாற் செய்து வைக்கப்பட்ட

பெண் வடிவமாகிய பிரதிமை. கொல்லிமலை தவஞ்செய்வோர்க்கும் தனித்துறைவோர்க்கும் தகுதியான இடம். தேன் பழமுதலாய உணவுப் பொருள்கள் மிகுதியாகக் கிடைக்குமாதலால் இனிதினிருக்கக்கூடும். இதனை எண்ணியே தேவரும், முனிவரரும் அங்குவைகுவாராயினர். இவர்கள் தங்கியிருப்பது கண்ட இராக்கதரும், அசுரரும், அங்குவந்து கூடுவோராயினர். இவ்வாறு இராக்கதாதியர் வந்து நெருங்கவே முனிவர்கள் தவத்துக்கு ஊறு நேர்வதாயிற்று. அப்பொழுது தேவரும் முனிவரும் தனியிருந்து ஆராய்ந்து அப்பகைவர் மனத்தை அடக்கவல்லரல்லராதலின் அவர்கள் வருநெறியிற் கண்டு மயங்கி உயிர்விடும்வண்ணம் அழகமைந்த பெண் வடிவஞ்செய்து வைப்பதாக நிச்சயித்து விச்சுவகன்மாவுக்குக் கூற அவனும் அம்மலையின் மேல்பால் அசுராதியர் வருநெறியிற் கல்லாற்பாவை யொன்றமைத்து உள்ளே பலவகையான சக்தியை ஊட்டி நிலை நிறுத்தினன். இப்பாவை இயங்குந்தன்மை யுடையது. இராக்கதாதியர் வாடை பட்டவுடன் நகைக்குந் திறனுடையது. கண்டவாது உள்ளத்தையும், விழியையும் கவர்ந்து அவர்க்குப் பெருங்காம வேட்கையை யுறுவித்து இறுதியிற் கொல்லத்தக்க மோகினி வடிவமுடையது. இப்பாவையை நோக்கினோர் அஃது இயங்குவதையும், நகைப்பதையுங் கண்டு மடந்தை போலுமென்று மயங்கிக் காமநோய்கொண்டு கிடந்து மடிவரென்பதாம். இது நகைத்துயிர் வாங்குமென்பது "திரிபுரத்தைச் - செற்றவனுங் கொல்லிச் செழும் பாவையு நகைக்கக், கற்றதெல்லா மிந்த நகை கண்டேயோ என்பதனாலறிக. இப்பாவை காற்று, இடி, மழை முதலியவற்றால் கெடாதென்பதை நற். கஅடு, உ0க-ம் செய்யுளாலறிக.

2. இப்பாவை, தேவதைகளால் காக்கப்படுவதென்பதும், காற்று, மழை, இடி, பூகம்பம் முதலிய இடையூறுகளாலும் தனது உருக்கெடாமல் என்றும் தன்னியல்பு கெடாதிருப்பது. இதனை "கொல்லித், தெய்வங், காக்குந்தீது தீர்நெடுங் கோட், டயவெள்ளருவிக் குடவரை யகத்துக், கால்பொருதிடிப்பினும் கதழுறை கடுகினும், உருமுடன் றெறியினும் ஊறு பல தோன்றினும், பெருநிலங்கிளரினும் திருநலவுருவின், மாயாவியற்கைப்பாவை. (நற்றிணை) என்பதாலறிக. இப்பாவை கண்டார் மனதைக் கவருந் தன்மையுடையது என்பதைத் தமிழ்நூற் புலவர்கள் பல இடங்களில் எடுத்தாளுதல் காண்க.

3. இது கொல்லியெனும் பெயர்கொண்ட மலையின்கணுள்ள ஒரு பெண்பாற் பிரதிமை. இம்மலை வல்வில் ஓரியென்னும் சிற்றரசனுக் குரியது. இப்பாவை கண்டார் உள்ளமும், விழியையும் கவர்ந்து பெருங்காம வேட்கையுறுவித்து இறுதியிற் கொல்லத்தக்கதாகத் தெய்வத்தாலேயமைக்கப்பட்ட ஒரு மோகினிப்படிமை. இது தெய்வநிர்மாண மென்ப. இது திருமகள்முன் ஒருகாலத்துப் போர்க்கெழுந்த அவுணர் மோகித்து விழும்படி இவ்வுருக்கொண்டு ஆடியதென்பர்.

கொல்லிமழவன் — ஒரு சிற்றரசன் திருஞானசம்பந்தர் காலத்தவன். திருஞானசம்பந்தரைக் காண்க.

கொல்லைக்காரர்—தெலுங்கநாட்டுத் தோட்டிகள்.

கொள்ளந்தை மகருஷிகோத்ரன் — சோழராசன் விற்பிடி வேண்டுமென்று கேட்கக் கருடனைப் பாதலத்திற் கழைத்துச் சென்று ஆதிசேடனிடம் விற்பிடி மணி வாங்கிக்கொடுத்து இரவெழுமாதித்தன் எனப் பெயர்பெற்ற வைசியன்.

கொள்ளம்பக்கனார் — இவர் இயற்பெயர் பக்கனென்பது, கொள்ளம்—ஒரூர். குறிஞ்சித்திணையைப் பாடியுள்ளார் உடம்பு வேறுபட்டமைப்பற்றி நற்றாய் வினவியதற்குக் காதலனோடு கூட்ட முண்மையை வினவியதாகக் கொண்டு வரை நாடனை அறிந்திலேன் கண்டதுமில்லை அவனோடு சுனையாடினதுமில்லையே யென்று கூறி விட்டனையே, இனி என்னாகி முடியுமோ என்று தோழி கூற்றாக இவர் பாடியது வியக்கத்தக்கது. நற். கசஎ-ம் பாட்டு.

கோறகர் — இவர்கள் ஒரு தாழ்ந்த வகுப்பினர். இவர்கள் தென்கன்னட வாசிகள் குடிசைகளில் காட்டில் வசிப்போர் இவர்கள் கூடைமுற முதலிய கட்டிப் பிழைப்போர். உண்ட எச்சில் உண்போர் சிலர் உழவர்களுக்கு அடிமைசெய்து வாழ்வர்.

கோற்கை—பாண்டிநாட்டுப் பழைய இராசதானி. இதற்குக் காததூரத்திற்கு அப்பால் சாலி ஆபுத்திரனைப்பெற்றாள்.(மணி)

கோற்றங் கொற்றனர் — இவர் மாற்றூர் கிழார்மகனர் கொற்றம் கொற்றனரென அகத்திற் கூறப்படுவர், வேளாண் மரபினர். மாற்றூர் பலவுளவாதலின் இவரூர் இன்ன இடத்ததென்றறியக் கூடவில்லை. இவர் குறிஞ்சியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். காவிரியின் வடபாலுள்ள சிறுகுடியென்னும் ஊரினையும் அதனை ஆட்சிபுரிந்த பண்ணனென்பவனையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். (அகம் ருச) இவர் பாடியனவாக நற்றிணையில் உடுகூ-ம் பாடல் ஒன்றும் அகத்தி லொன்றுமாக இரண்டு பாடல்கள் இருக்கின்றன.

கோற்றவஞ்சி — உலகத்துள்ளா ரெல்லாருந் தொழவாளாலே வெட்டினனெனச் சொல்லிப் பண்ணினவீரக் கழலினையுடைய அரசனது நன்மையைப் பெருகச் சொல்லியது (பு. வெ).

கோற்றவள்ளை — அரசன் கீர்த்தியைச் சொல்லிப் பகைவர் தேசம் கெடுவதற்கு வருந்தியது. (பு. வெ.)

கோற்றவுழிஞை — பகைவர்தங்காவல் பதியைக் கைக்கொள்வான் வேண்டிச் சேனையோடு கைவளர்ந்து சென்றது. (பு வெ).

கோற்றவைநிலை — 1. நீண்ட தோளினையுடையவன் வெற்றிபெறுவானாக வெனச் சொல்லி நல்ல பொருள்களால் நிறம்பிய பாத்திரத்தை வெற்றியாக வெடுத்து அரசனுடைய பகைவரை முதுகுபுறங் காணும் துர்காதேவி நிலைமையைச் சொல்லியது. (பு. வெ.)

2. விளக்கத்தினின்றும் ஒழியாத வெற்றியான்மிக்க ஆயுதத்தை உடையோளது இரக்கத்தினின்றும் ஒழியாத கருணையைச் சொல்லியது. (பு. வெ).

3. வலியினையுடைய வீரர் செய்யும் தொழிலைச் சொல்லுதலும் முடிவில்லாத அறிவினை யுடையோர் அத்துறையென்று சொல்லுவர். (பு. வெ).

கோற்றனர் — செல்லூர் கொற்றனர் எனவும், செல்லூர் கிழார் மகனர் பெரும்பூதங் கொற்றனர் எனவும் கூறப்படுவர் இவரே. செல்லூர் சோழநாட்டுக் கீழைக்கடலருகிலுள்ளது. பரசுராமமுனிவர் பெருவேள்வி செய்தவூரிதுவே. இக்கொற்றனர் பெரும்பூதனர் என்பவரின் புதல்வர். வணிகர் மரபினர் இவர் மருதம், நெய்தல், பாலை இவைகளைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். தலைமகளைப் பரத்தையர் பலர்கூடிக் கைகளைப் பற்றியீர்த்தலும், அவரிடைப்பட்டு மயங்கும் அவனது நிலைமையை விளங்கக் கூறியுள்ளார். இவர் பாடியனவாக நற். ௩௦ ம் பாடலொன்றும், குறுந்தொகையிலொன்றும் அகத்தில் ஒன்றுமாக மூன்று பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

கோற்றன் கருவிகள் — அடிக்கோல், மட்டப்பலகை, நீர்மட்டப்பலகை, மணியாசலக்கட்டை, கொல்லர்பெரிது, அச்சக்கொல்லர், கட்டப்பாறை, மண்வெட்டி, சேறு, சுண்ணம்பு, மணல், தண்ணீர். இவர்கள் கல் அடுக்கலை பாட்டு நாட்டென்பர். அவற்றிற் கிடையில் வைக்கும் சிறுபொடி கடைக்கால் என்பர். இரண்டு கற்களுக்குமிடையிலுள்ள இடத்தை இசைப்பு என்பர்.

கோன்றைவேந்தன் — ஔவை அருளிச்செய்த நீதிநூல். சிவபெருமான்.

கோன்றை — ஒருவகை மணமுள்ள மலர் கொண்ட மரம். இது, சரக்கொன்றை, சிறுகொன்றை, புலிநகக் கொன்றை, பெருங்கொன்றை, மந்தாரக் கொன்றை, மயிற்கொன்றை, செம்மயிற் கொன்றை, பொன்மயிற் கொன்றை, முட்கொன்றை, கருங்கொன்றையெனப் பலவகைப்படும்.

## கோ

கோகம்பளன் — நரிவயிற்றில் பிறந்த ஒரு முனிவன். அசிதகேசகம்பளர் என ஒரு பெயர் பௌத்த நூல்களிற் காணப்படுகிறது.

கோகருணர் — இவர்கள் இரண்டு வேதியர்கள். இவர்களில் ஒருவனை யமன் பற்றிவரச் செல்ல யமபடர் யமன் கொண்டுவரச் சொன்னவனை விட்டு வேறொருவனைக் கொண்டு சென்றனர். இதனால் யமன் இவனை மீட்டும் செல்லுக என வேதியன் நான்படுந் துயரம் அதிகம். யான் மீண்டும் செல்லேனென யமன் இவனுக்கு வேண்டிய செல்வமளித்து அவன் வேண்டியபடி நரகங்களையெல்லாம் காட்டியனுப்பி மற்றவனைக் கொண்டுவரக் கட்டளையிட அவன் செல்லுகையில் அவனையும் நான் கூறிய காலம் தவறியதாகையால் இவனையும் விட்டுவிடுங்கோ ளென்றனன். இவ் விருவரும் புண்ணியதீர்த்த ஸ்நானஞ்செய்து புனிதமடைந்தனர். (திருவாரூர்ப்புராண ம்)

கோகர்ணசிதலம் — ஒரு விரதம், இதை அநுஷ்டித்தவர்களுக்குப் பக்ஷபாதங் கூறிய பாவம் நீங்கும்

கோகர்ணம் — 1. கோகர்ணதேசத்திலிருக்கும் சிவக்ஷேத்ரம். இதில் திருக்கைலையிலிருந்து சிவலிங்கம்பெற்று இலங்கை நோக்கிச் செல்லும் இராவணன், தேவர் வஞ்சனையால் சிவலிங்கத்தைப் பிரமசாரிய வருக்கொண்டு வந்த விநாயகரிடங் கொடுத்து நீரின்பொருட்டு நீங்க விநாயகர் சிவலிங்கத்தைப் பூமியில் எழுந்தருளச் செய்தனர். இராவணன் தன் காரிய முடித்துவந்து சிவலிங்கத்தைப் பேர்க்க அது பசுவின் காதுபோல் குழைந்தது; ஆதலால் இப்பெயர் பெற்றது. இது கோவதேசத்திலிருப்பது

2. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு என்னும் நாற்றிசையிலும் முப்பதுகோலளவு அளக்கப்பட்ட பூமி. காளையுடனும் கன்றுகளுடனும் கூடின நூறு கோக்கள் சுகமாகத் தங்குமிடம். இவ்வளவு பூமிதானம் செய்தவன் புண்யலோக மடைவான். (பார - அச்.)

கோகலன் — ஜனமேஜயன் சர்ப்பயாகத்தில் இருந்த ஒரு ரிஷி.

கோகன்விகோகன்—பிரமனிடத்தில் வரம் பெற்ற இரண்டரசர்கள். கலியின் முடிவில் கல்கியினுடன் யுதஞ்செய்யக், கல்கியால் தனித்தனியாய்க் கொல்லப்படாதவர்களாய்க் கலியின் குதிரை சேனை முதலியவைகளை அதப்படுத்தப் பிரமனால் இவ்விருவரையும் ஒன்ருகக் கொல்லவேண்டும் என்று கூறக்கேட்டுக் கல்கியினுல் ஒன்ருகக் கொல்லப்பட்டவர்கள். (கல்கி - பு)

கோகன்னம்—ஒரு தீர்த்தம். ஒரு பட்டணம். A town in the Province of North Kanara, 30 miles from Goa.

கோகன்னன் — 1. கத்ரு குமரன், நாகன். 2 சிவகணத்தலைவரில் ஒருவன்.

கோகல்லியா — சாகல்லியர் மாணாக்கர்.

கோகழி — உமை ஒரு கற்பத்தில் திருமாலை சான்றாக வைத்துக் கவுரிதேவியைப் பிராட்டியின் பெருமிதங்கண்ட சிவபிரான், நீ கோ உருவாக எனச் சபித்தனர். [illegible] கோக்கிச் [illegible] இத்தலத்தில் [illegible] முதலிய உண்டாகின்றனவோ அத்தலத்தில் இந்தக் கோவுரு [illegible] அம்மையாரே கோவுருக் கொண்டு பல தலங்களையும் பூசித்து வருகையில் இத்தலத்தில் அவ்வுரு கழிந்ததால் தலம் இப்பெயர் பெற்றது. (வீரசிங் - பு.)

கோகாதேவி—ஜீவஇம்சை பாபமென விஷ்ணுவால் உபதேசிக்கப்பட்டவள். (வராக புராணம்.)

கோகிலாதேவி — பாஞ்சாலன் மனைவி.

கோகினி — சத்தியவதி, கோகினியாற்றில் மீன்வயிற் றுதித்ததால் வந்தபெயர்.

கோகுலம் — யமுனை நதி தீரத்திலுள்ள இடைச்சேரி, கிருஷ்ணன் பிறந்த இடம்.

கோகோ — இது ஒரு மரம், இது 10 அடி முதல் 30 அடி வரை வளரும். இலைகள் பசுமையாய்ப் பளபளப்பாயிருக்கும், பூக்கள் சிறியவை. இது அடிமரத்திலும் கிளைகளிலும் கொத்துக் கொத்தாய்ப் பூத்து நீண்டு அகன்ற காய்கள்விடும். காய் முதிரப் பழமாகும், மேல்தோல் தடித்திருக்கும், காய்க்குள் பலஅறைகள் உண்டு, அவ்வறைகளில் விதைகள் 30, 40 உண்டு. இவ் விதைகளை யெடுத்து 2, 3 நாள் ஈரமான இடத்தில் புதைத்துப் பிறகு வெயிலில் காயவைத்து வறுத்துச் சிறு துண்டுகளாக நறுக்கி யுபயோகிப்பார்கள்.

கோக்குளமுற்றனுர் — இஃது ஊர்பற்றி வந்த பெயர். குளமுற்றம் என்பது ஒரூர். குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் எனப் புறப்பாட்டின்கண் வருதலானும் இவ்வூருண்மை தெளிக. இவர், கோவென்னும் உரிமைபெற்ற உழுவித் துண்ணும் வேளாண் மரபினர்; நெய்தலையும், முல்லையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். தலைமகன் இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த இடமும் அவனுடன் தலைவி கடலாடியதுறையும் முதலியவற்றை நினைந்து தலைமகள் புலம்புவதாக இவர் சுவைபடப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் கூ-ம் பாடலொன்றும், குறுந்தொகையில் ஒன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

கோங்கணம்—கேரளத்திற்கு வடக்கிலுள்ள தேசம்.

கோங்கன் — சேரனைக் காண்க.

கோங்குவேளாளர்—இவர்கள் கோங்குநாட்டிலிருந்து வந்து தென்னுட்டில் பரவியவர்கள். இவர்கள் வேளாளர் எனப்பட்டனரேயன்றி வேளாண்டன்மை சிறிதுமிலாத சிறு தொழிலாளர். இவர்கள் ஆசாரங்கள் நடையுடைபாவனை வேறு.

விதவாவிவாகம், இளையான் மூத்தாளை மணத்தல், கணவனுக்கு வயது வருந்துணையும் மணப்பெண் மாமனுடனிருத்தல் முதலிய ஆசார விரோதங்கொண்ட வகுப்பு. (தர்ஸ்டன்.)

கோசத்ரயாகம் — இது வருஷபர்யந்தம் செய்யத்தகுந்த யாகம். இதனைப் பசுக்கள் தங்களுக்குக் கொம்பு முளையாதிருக்க இந்த யாகத்தைச்செய்ய 10 மாதங் கழிந்த பின் கொம்புகளைப் பெற்றன. (பாரதம்.)

கோசம்பி—(கௌசாம்பிநகரம்) இஃது ஆதியிற் குசாம்பனென்னும் அரசனாலுண்டாக்கப்பட்டதென்பர்; இது வத்தநாட்டின் தலைநகர். யமுனை யாற்றைத் தன்பாலுடையது. உதயணனுடைய இராசதானி. அகழியாலும், கொடிகள் கட்டிய பல பல உறுப்புக்களையுடைய அழியாத மதிலாலும், பலதேசத்தார் வந்து குழுமிய பெருமுழக்கத்தையுடைய கடைவீதிகளாலும், பல குடிகள் நெருங்கிய தெருக்களாலும், பலவகைச் செல்வத்தாலும் விளங்குவது. உதயணனுடைய அநேக நகரங்களுள் முதன்மையானது. இதன்புறத்தே மதுகாம்பீரவனமென்ற ஒரு வனமும், புறகாட்டி விருந்துவந்த புதிய மன்னர்கள் தங்கி இன்ப நுகர்தற்கு ஒரு பூங்காவும் இருந்தன. இதிலிருந்து அரசாட்சி செய்து கொண்டிருந்த உதயணன் சிறைப்பட்டு உஞ்சைநகர்க்குச் சென்றபொழுது பகைவனாகிய பாஞ்சால தேசத்தனாற் கைக்கொள்ளப்பட்டது. அப்பால் அவனைக் கொன்ற உதயணனால் ஆளப்பட்டது. வாசவதத்தையை உதயணன் மணஞ்செய்துகொண்ட பின்பு உஞ்சை நகரத்தாரும் இந் நகரத்தாரும் மனக்கலப்புடையாராய்த் தானியங்களையும், நாணயங்களையும் வேறுபாடின்றி வழங்குவாராயினர். (பெ-கதை.)

கோசர் — ஒருவகைச் சாதியர். இவர்கள் தஙகள் நாட்டில் கண்ணகிக்குத் திருவிழாச் செய்தவர்கள். (சிலப்பதிகாரம்.)

கோசலம் — கங்காதீரத்துள்ள தேசம், இதன் தலைநகரம் அயோத்தி.

கோசலவளநாடு—இந்நாடு செல்வத்திலும், புகழிலும் சிறந்தது. இதிலுள்ளவர்கள் நடுவுநிலைமையிலும், பாத்திரமறிந்து கொடுத்தலிலும் சிறந்தவர்கள். இந்நாட்டுச் சித்திர வேலைக்காரர் மிகப் புகழ் பெற்றவர். (பெ - கதை.)

Ajodhya in Oudh. This was divided into two provinces by the river Saraju, uttra, and Dakshina Kosala.

கோசலத்தரசன் — இவனது இயற்பெயர் தெரியவில்லை. இவன் பிரச்சோதனனுடைய சகலன். ஒருபொழுது பாஞ்சால வேந்தன் படையெடுத்து வந்து இவனை வென்று அவன் மகள் வாசவதத்தையும், அவளுடைய ஆயத்தாரையும் கவர்ந்து சென்று தன்னுடைய தேவிமார்களுக்குப் பணிப்பெண்களாக நியமித்தனன். அவனை வென்ற உதயணன் அம் மகளிரைத் தன் தேவியர்க்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு வாசவதத்தை யென்பவளை இவன் மகளென் றறிந்தபின் மணஞ்செய்து கொண்டான் (பெ - கதை.)

கோசம் — (௫) அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம். இவற்றுள் உடல் அன்னமயகோசம். கருமேந்திரியமும், பிராணனும், பிராணமயகோசம். கருமேந்திரியமும், மனமும் மனோமயகோசம். ஞானேந்திரியமும், புத்தியும் விஞ்ஞானமயகோசம், அவித்தை ஆனந்தமயகோசம்.

கோசம்பி—கௌசாம்பி நகரம். (மணிமே.)

கோசாயி—இவன் ஜாதியற்றவன். இவன் ஸ்தலந்தோறும் சென்று பிக்ஷையெடுத்துச் சீவிப்பவன். இவர்களிற் சிலர் உடம்பெல்லாம் சாம்பற்பூசிச் சடைவளர்த்துத் துளசிக்கட்டையணி தரித்துத் திரிவர்.

கோசாரவேதை — சந்திரலக்கினத்துக்குச் சூரியன் ௫-லும், சந்திரன் ௮-லும், செவ்வாய் ௭-லும், புதன் ௪-லும், குரு ௩-லும், சுக்கிரன் ௯-லும், சனி ௧-லும், ராகு ௬-லும இருந்தால், கோசாரத்தில் நல்ல பலனைக் கொடுக்கமாட்டார்கள். இதுவும் சந்திரலக்கினத்துக்கு ௧௧, ௩, ௰, ௯-ல் சூரியனிருக்க முறையே ௫, ௯, ௪, ௧௨-ல் கிரகமில்லாதிருந்தால் தானிருந்த ராசிப் பலனைக் கொடுப்பான. ௧, ௩, ௯, ௭, ௧0, ௧௧-ல் சந்திரனிருக்க முறையே ௫, ௯, ௧௨, ௨, ௪ ௮-ல் கிரகமில்லாமலிருந்தால் தானிருந்த ராசிப் பலனைக்கொடுப்பான். ௩, ௯, ௧௧-ல, செவ்வாய், சனி, ராகு இருக்க முறையே ௫, ௧, ௧௨-ல் கிரகமில்லாதிருந்தால் தானிருந்த ராசிப் பலனைக் கொடுப்பான். ௨, ௪, ௯, ௮, ௧0, ௧௧-ல் புதனிருக்க முறையே ௫, ௩, ௧, ௧, ௮, ௧௨-ல் கிரகமில்லாதிருந்தால் தானிரு

ந்தராசிப் பலனைக் கொடுப்பான். கக, க, எ, ஙி, உ-ல் குருவிருக்க முறையே அ, க0, ௩, ச, கஉ-ல் கிரகமில்லாமலிருந்தால் தானிருந்தராசிப் பலனைக் கொடுப்பான். கக, கஉ, உ, அ, க, ச, ௩, ஙி, கூ-ல் சுக்கிரனிருக்க முறையே ௩, சு, எ, ஙி, அ, க0, க, கூ, கக-ல் கிரகமில்லாமலிருந்தால் தானிருந்தார்சிப் பலனைக் கொடுப்பான்.

கோசிகன்—1. ஒருவேதியன் வேதவொழுக்கந்தவறிப் புலைச்சியை மணந்து களவொழுக்கத்தால் பிடிபட்டிறந்து யமபடரால் பிடிப்பட்டுத் தாய்தந்தையர் இவனுக்கிட்ட சம்புப்பெயரால் முத்தியடைந்தவன்.

2. இவன் கோசம்பி நகரத்திருந்த ஒரு நிமித்திகன். வருங்காலச் செய்திகளை அறிந்து சொல்லுதலில் மிக்க ஆற்றல் வாய்ந்தவன். இதுபற்றியே நன்மதிப்புற்றுச் சேனைக்கணிமகனென்றும் பட்டமும் பெற்றவன். யமுனையில் வீழ்த்துவதற்குக் கொண்டுபோகப்பட்ட சாங்கியத்தாயைக் காப்பாற்ற நினைந்த உதயணன் வினவியபொழுது அவளுடைய வருங்காலச் செய்தியை நன்குகூறியவன். (பெ - கதை)

கோசுருங்கம்—நிஷாதபூமிக்கு அருகிலுள்ள பர்வதம்.

கோச்சடை — கோச்சடிலவருமரால் அந்தணர்களுக்குத் தானம் செய்யப்பெற்ற ஊர். (பயகராமாலையுரை.)

கோச்சிங்கப்பல்லவன்—சுந்தரமூர்த்திசுவாமிகள்காலத்து அரசாண்ட பல்லவன்.

கோச்செங்கட்சோழன் — சிலம்பி ஒன்று திருஆனைக்காவில் சிவமூர்த்திக்கு நூலால் பந்தலிழைத்துப் பூசித்து வருகையில், யானையொன்று தானும் பூசிக்க எண்ணி அப்பந்தலைச் சிதைக்கச் சிலம்பிக் கோபித்து யானையின் துதிக்கையிற் புக யானை துதிக்கையை நிலத்தில் அறையச் சிலம்பியுடன் யானையுமிறந்தது. சிவாஞ்ஞையால் சிலம்பி சுபதேவன் என்னும் சோழன் மனைவியாகிய கமலவதி வயிற்றில் கோச்செங்கண்ணனென உதித்துப் பூர்வசன்மமுணர்ந்து திருஆனைக்காவில் திருமதிலின் திருப்பணி செய்கையில் ஒரு மதில் ஒழிய மற்றவை செய்க என ஆகாயவாணி கூறக் கேட்டு அரசனிருக்கச் சிவமூர்த்தி ஒரு நாள் சித்தர் உருக்கொண்டு தோன்றி விபூதி கூலியாகக் கொடுத்துத் திருமதிலை முடிப்பித்து அம் மதிலின்மீதேறி மதிலைப்பூமியிலழுந்தித் திருநீற்றுமதிலெனப் பெயரிட்டுச் சென்றனர். அரசன் சிவப்பணி செய்வித்துச் சிவபதம் அடைந்தனன். (பெரியபுராணம்.)

கோச்சேங்குட்டுவன் — ஒரு சேரன், இவனைப் பரணர் பாடி உம்பற்காட்டுவாரியையும் அவன் மகன் குட்டுவன் சேரலையும் பரிசில் பெற்றனர்.

கோச்சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை — கொல்லிமலைக்குத் தலைவன், விளங்கிலென்னுமூர்க்குப் பகைவரால் வந்த துன்பந் தீர்த்தவன், கடற்கரையிலுள்ள தொண்டியென்னு நகராளி, கபிலருக்கு நண்பன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் கட்டுண்டு விடுபட்டவன். சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியுடன் போர்செய்தவன். கூடலூர் கிழாரால் பாடல்பெற்றவன். இவனைச் சேரன் மாந்தரஞ் சேரலிரும்பொறை யெனவும், யானைக்கட் சேய்மாந்தரஞ்சேரலிரும்பொறை யெனவுங் கூறுவர். ஐங்குறுநூறு தொகுப்பித்தோ னிவனே. (புற-நா.)

கோடகழகாசுரன் — தேவரை வருத்திக்கொண்டிருந்த அசுரன் இவனைச் சிவமூர்த்தி சூலத்தாற் கொன்றனர்.

கோடகாசுரன் — இவன் குதிரைமுகங்கொண்ட அசுரன், இவன் தேவர்களைத் துன்புறுத்திய காரணத்தால் தேவர்கள் சிவபிரானைப் பிரார்த்திக்க விநாயகமூர்த்தி சிவபிரான் ஏவலா லிவனைக் கொன்றனர். (திருவோத்தூர் புராணம்)

கோடபதி—இஃது உதயணனுடைய யாழ். யாழ்வகையில் பேரியாழின்பாற்படும். பிரமசுந்தரரென்னும் முனிவரால் உதயணனுக்கு யாழ்வித்தையுடன் கொடுக்கப்பட்டது, தெய்வத்தன்மை வாய்ந்தது, மிக்க அழகையுடையது, அவன் இதைக் கற்பிக்கும்பொழுதுதான் வாசவதத்தையின் அன்பைப் பெற்றான். அவ்விருவருக்கும் இதன்பாலுள்ள அன்பு மிக அதிகம். (பெ - கதை)

கோடர் — இவர்கள் இருளர் எனுஞ் சாதிப் பகுப்பு. தோடரும் இவர்கள் வகுப்பைச் சேர்ந்தவர். இவர்கள் நீலகிரி மலைவாசிகள். முதலில் மைசூருக்கடுத்த கொல்லிமலையில் வசித்தனர். பசுக்கொலை செய்பவராதலால் இப்பெயர் இவர்களுக்கு வந்த தென்பர். கோடகிரி, தொடநாடு முதலிய இடங்களிலுள்ள குடிசைகளில் வசிக்கின்

றனர். பாவைஷ தமிழ் கன்னடங் லந்தது,
அழகிய மாமிசமாயினும் புசிப்பர். (தர்ஸ்.)
கோடாகன் — நாகன்.
கோடிகாசியன்—பாண்டவர் அரண்யவாசத்
தில் ஆச்சிரமத்தில் தனித்திருந்த திரௌ
பதியைக் கண்டு மோகித்த சைந்தவனால்
அதுப்பப்பட்ட ஒரு இராசகுமரன்.
கோடிசிலை—சுரமைநாட்டிலுள்ள ஒரு மலை.
கோடிதீர்த்தம்—1. பண்டில்கண்டில் உள்ள
ஒரு தீர்த்தம்.
2. கோகரணத்தில் உள்ள ஒருதீர்த்தம்.
A tank situated in Kalingar in the
District of Bundelkand 2. A sacred
tank in Gokarna 3. In Muttra.
கோடிமங்கலத்து வாதுளிநற்சேந்தனர் —
இவர் கடைச்சங்கமருவிய புலவர்களுள்
ஒருவர். இவரியற்பெயர் நற்சேந்தனர்.
வாதுலகோத்திரமாக இருக்கலாம், வேதி
யர்போலும், ஊர் கோடிமங்கலம். (அக.
கஎகூ, உகூஉ.)
கோடை—இது கடிய நெடுவேட்டுவன் மலை
(புற-நா.)
கோடைப்பாடியபெரும்பூதனர் — ஒரு தமி
ழ்ப் புலவர். (புற-நா.)
கோட்கூச்சவ்வை—சிவதேவசரணர் குமரி,
இவள் தந்தையார் சிவதிருப்பணி பொரு
ட்டு வேற்றூர்க்குப் போக எண்ணித்
தமது குமாரியை அவர் நாடோறுஞ் செய்
யும் பால்நிவேதனத்தைச் சிவமூர்த்திக்கு
நிவேதிக்கப் பணித்தனர். ஔவை பாலை
நாடோறும் கறந்து குழந்தையை யுண்
பிக்குமாறு உண்பிக்கச் சிவமூர்த்தி யுண்
ணுதிருத்தல்கண்டு அழுதனள். சிவமூர்
த்தி இரங்கி அமுதுண்டனர். இவ்வகை
நாடோறும் உண்பித்து வருகையில் வேற்
றூர்க்குச்சென்ற தந்தையார்வர ஔவை
வெறும் பாத்திரத்துடன் வருதல் கண்டு
பால் எங்கென, ஔவையார சிவமூர்த்தி
யமுதுசெய்தனர் என, வியப்புற்று மறு
நாள் பாலைக்கறந்து அனுப்பி யொளித்து
நோக்கினர். ஔவை வேண்டச் சிவ
மூர்த்தி சற்றுத தாமதித்திருத்தல் கண்டு
குமரி வஞ்சம் செய்தனள் எனத் தந்தை
யடிக்க வருதல்கண்டு சிவமூர்த்தி அந்தப்
பாலை அமுதுசெய்து ஔவையை மாபி
லணைத்தனர். இந்த லிங்கத்திற்குக்
கொப்பிலிங்கமெனப் பெயர்.
கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் —
கடைசசங்கமருவிய புலவன். (அக-மூ.)

கோட்டழகியமணவாளதாசர் — கொல்லிக்
காவல்தாசருக்கு ஒரு பெயர்.
கோட்டான் — 1. இது ஆந்தை இனத்திற்
பெரிது. இது மரக்கொம்புகளில் தங்கி
வாழ்தலால் இப்பெயர் பெற்றது. இதன்
காலடிவரையில் இறகுகள் மூடிக்கொண்
டிருக்கின்றன. இதன் கண்கள் பெரிய
வை. இராக்காலங்களில் இதன் கண்
ணொளிகண்ட பிராணிகள் திகைத்துநிற்க
அவற்றை இரையாக்கொள்ளும். இவ்
வினத்திற்குக் கண்ணொளி மயங்கும் கால
த்தில் அவை விரும்பியபோது ஒருவகை
ஒளி மார்பிலுண்டாகிறதாம். அவ்வொளி
யாலவை யிரைதேடுகிற தென்பர். இவை
பூச்சி புழுக்களைத் தின்று சீவிக்கும்.
2. ஆலமரத்தைக் காண்க.
கோட்டியூர் நல்லந்தையார—இது நல்லன்
தந்தை நல்லந்தையாரென முடியும்.
(தொல். எழுத்து கூசஅ-ல்) 'துவர' என்
றதனல் முடிக்க. பாண்டிநாட்டகத்ததா
கிய திருக்கோட்டியூர் என்பது இதுவே.
இவர் நெய்தற்றிணையைச் சிறப்பித்துப்
பாடியுள்ளார். இவர் பாடியது நற்றிணை
உகக-ம் பாட்டு.
கோட்டுப்பூ — குங்குமப்பூ, கொன்றைப்பூ,
மைக்கொன்றைப்பூ, சண்பகப்பூ, பாதிரிப்
பூ, மந்தாரப்பூ, புன்னைப்பூ, மகிழம்பூ, பன்
னீர்ப்பூ,குருக்கத்திப்பூ,செந்தாழம்பூ, முரு
ங்கைபபூ, அகத்திபபூ, செவ்வகத்திப்பூ,
வேப்பம்பூ, மாதுளம்பூ, புளியம்பூ, இலுப்
பைப்பூ, வாகைப்பூ, தென்னம்பூ, பனம்பூ,
வாழைப்பூ, ஆவாரம்பூ,சுருஞ்செம்பைப்பூ,
செம்பரத்தம்பூ, அலரிபபூ, செம்பருத்
திப்பூ, நந்தியாவட்டப்பூ, அகத்திப்பூ, செவ்
வந்திப்பூ, தும்பைப்பூ, வேளைப்பூ, சிற்ற
மரைபபூ, வளாபபூ. முதலிய (பதா.)
கோட்டைவேளாளர் — இவர்கள் திருநெல்
வேலி ஜில்லா ஸ்ரீவைகுண்டத்திலுள்ள
மண்கோட்டை வாசிகள். இவர்கள் தங்
களில் ஒருவருக்கொருவர் சம்பந்தஞ்செய்
வர். பெண்களைப் பிறர்காணவிடார். மற்ற
வேளாளருடன் இவர்களுக்குக் கலப்பி
ல்லை. இவர்கள் வைகைக்கரையிலிருந்து
வந்தவர்கள், இவர்களிருக்கும் இடத்திற்கு
அந்நியன் போகக்கூடாது. ஒருவயதிற்கு
மேற்பட்ட பெண் கோட்டையைவிட்டுப்
போகக்கூடாது கல்யாணமானபின் மண
மகனும் சுற்றத்தவரும் தவிர மற்றவர்கள்
பெண்களைக் கண்ணினும் காணமுடியாது.

இவர்கள் தலைவன் கோட்டைப் பிள்ளை. (தர்ஸ்டன்.)

கோட்டை—1. (அரண்) இது மலையுங்காடும் நீருமல்லாத அகநாட்டுச்செய்த அருமதில். இது வஞ்சனைபலவும்வாய்த்துத், தோட்டி முள் முதலியன பதித்த காவற்காடு புறம் சூழ்ந்து யவனர் இயற்றிய பல பொறிகளும், ஏனைய பொறிகளும், பதணமும், மெய்ப்புழை ஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்து எழுவுஞ்சீப்பும் முதலியவற்றால் வழுவின்றமைந்த வாயிற்கோபுரமும், பிற எந்திரங்களும் பொருந்த இயற்றப்பட்டது. (தொல்கா) மலையரணும் நிலஅரணும் சென்று சூழ்ந்து நேர்தலில்லா ஆரத்தர் அமைந்தனவும் இடத்தியற்றிய மதில் போல வடிச்சிலம்பின் அரணமைந்தனவும், மீதிருந்து கணைசொரியுமிடமும், பிறயந்திரங்களும் அமைந்தனவும், அன்றிக் காட்டரணும் நீரரணும் அவ்வாறே வேண்டுவன அமைந்தனவாம்.

2. தன்னையும், தன்பொருள் முதலியவற்றையும் காத்துக்கொள்ளும் அரசன், பன்னிரண்டு முழமுள்ள கற்கோட்டையையாவது, மிகுந்த ஆழமுள்ள ஜலக் கோட்டையையாவது, ஒரு யோசனை விசாலம் உள்ளதாய்ப் பிராணிகளால் சஞ்சரிக்கப்படும் வனக்கோட்டையையாவது சதுரங்கபலக் கோட்டையை யாவது, மலைக் கோட்டையையாவது, சுற்றிலும் நீரற்ற பூமிக் கோட்டையையாவது ஏற்படுத்தி அதனுள் வாள்முதலியஆயுதங்கள், மிக்க பொருள், தானியங்கள், குதிரை, யானை, பிராமணர், யந்திரம் அறிந்தவன், புல், வைக்கோல், தண்ணீர் முதலியவைகளை அமைத்தல்வேண்டும். இவ்வகை அரணுள்ள கோட்டைமீது நிற்கின்ற ஒரு வில்லாளி தன்னை எதிர்க்கவந்த நூறு சத்துருக்களோடும், போரிடவல்லவன் ஆவனதலால் அரசன் அரணைக் கட்டல் வேண்டும்.

கோட்புலிநாயனர்—சோழநாட்டு நாட்டியத்தான் குடிவேளாளர். சோழனிடத்தில் சேனபதியாயிருந்து தமக்குவரும் வருவாயெல்லாம் சிவாலயங்களுக்குச் சம்பா நெல்வாங்கிக் கூடுகட்டிவைத்து அரசனேவலால் பகைவர்மீது யுத்தத்திற்குச் செல்லுகையில் சுற்றத்தாரை யழைத்து நெற்கூட்டைக் காட்டித் தொடாதிருக்கச் சிவாஞ்ஞையிட்டு யுத்தஞ்செய்து வெற்றிகொண்டு திரும்பினர். இவ்வகை இவர்செல்லவும் பஞ்சம்வந்தது. சுற்றத்தார் நாயனர் திரும்புமுன் நாம் கூட்டில் நெல்லைச் சேர்த்து விடுவோமென்ற எண்ணத்தால் கட்டளைகடந்து நெல்லெடுத்துப் பஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டனர். இவற்றை யறிந்த நாயனர் திரும்பி யெதிர்கொண்ட சுற்றத்தவர்க்குப் பரிசு தருகிறேனென்று வீட்டில் வருவித்துக் கோட்புலி யெனுஞ் சேவகனை வாயிற்காவலாக்கி அனைவரையும் கொலைபுரிந்தனர். கடைசியில் ஒரு சிசு நிற்க அதனையும் கொல்ல எடுக்கையில் காவலாளி இது குற்றமற்றது கொலைசெய்யலாகாதென இது அந்த அன்னமுண்டதனலாகிய பாலுண்டது எனக் கொலை புரிந்தனர். சிவமூர்த்தி அன்பின் உறுதிக்குத் தரிசனந்தந்து முத்தி அளித்தனர். (பெ - புராணம்.)

கோட்புலியார் — சிங்கடிவனப்பகை யென்னும் தம் மிரண்டு பெண்களைச் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு அடிமையாகக் கொடுத்த சிவனடியவர். கோட்புலிநாயனரிவரின் வேருதல் வேண்டுமென நினைக்கின்றேன். அவர் சரித்திரத்தில் சுந்தரமூர்த்திகளைக் குறித்துச் சொல்லாததினலும் திருத்தொண்டத்தொகையில் துதித்திருத்தலானும் என்க.

கோணங்கி — 1. தேவாங்கசாதியில் ஒரு வகை.

2. விஷ்ணுமூர்த்தி சிவனையெண்ணித் தவமியற்றிச் சக்கரம்பெற்று அச் சக்கரத்தைத்திருவடியல் வைத்துவணங்குகையில் தலைமாலையிலொன்று அச்சக்கரத்தைக் கவ்விக்கொண்டு இவர் இழுக்கவும் அது தரவில்லை. பின் விஷ்ணு சிவபெருமானிடம் கூறச் சிவபெருமான் அதற்கு நகைவரச் செய்தால் சக்கரம் கீழ்விழுமென அவ்வாறே கோணங்கிக் கூத்தாடிய உருவம். (காஞ்சிபுரா.)

கோணுதித்தியன் — ஒரு சூரியன். (பிரம புராணம்.)

கோண்மா நெடுங்கோட்டனர் -- இவரைப் பற்றி யாதும் விளங்கவில்லை. இவர் மருதத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பரத்தையிற் பிரிந்த தலைமகன் தனக்குப் புதல்வன் பிறந்தானென்பதறிந்து பகலில் வரவெள்கி இரவிற் கள்வன்போல வந்தானென்று வியக்குமாறு கூறுநிற்பர்; இவர் பாடியது, நற். ௪0-ம் பாட்டு.

கோதகி — ஒரு நதி.

கோதண்டக்கோன் — இவனொரு இடைச் சிறுவன். ஒரு நகரத்திருந்த மதிலில் ஏறி அவ்விடமிருந்த கல்லை அசைக்க அவ்விடம் புதையலிருக்கக் கண்டு அந்நிலத்தவரிடத்தில் புதையலைச் சேர்த்தவன்.

கோதமன் — இவர் வாக்கு நேத்ரம் இருள் முதலியவற்றைத் தமது நேத்திரத்தால் அடக்கினதால் இப்பெயர் பெற்றனர்.

கோதமனூர் — இவர் தலைச்சங்கத்திலிருந்து தமிழ் ஆராய்ந்த புலவருள் ஒருவர். இவர் பாரதகாலத்தவர். பாரதகாலத்துத் தரும புத்திரனை "அறவோன் மகனே" எனத் தமிழ்ப்பாடலால் பாடிவிளித்தவர். இப்பாடல் புறநானூற்றில் ங௬௬-ஆம் செய்யுளாகச் சிதைந்துள்ளது. பதிற்றுப்பத்தில் மூன்றும்பத்தாகிய பாலையைப் பாடினவராதல் வேண்டும். பாலையைப் பாடியதால் பாலைக் கோதமனூர் எனப் பெயர் கூறப்பட்டது போலும். பதிற்றுப்பத்தில் இவராற் புகழப்பட்டவன் பல்யானைச் செங்கெழுகுட்டுவன். இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு இளையான். இவ்விருவரும் உதியஞ்சேரலின் குமரர்கள். உதியஞ்சேரல் பாண்டவர் சேனைக்குப் பாரதப்போரில் உணவளித்தவன் ஆதலாலவர்களும் கோதமனூரும் சமகாலத்தவராதலின் முதலிற் கூறிய கோதமனூரே பாலைக்கௌதமனூரெனக் கூறல் வழுவாகாது. பாலைக் கௌதமனூர் பல்யானைச் செங்கெழுகுட்டுவனைப் பாடிச் சுவர்க்கம்பெற்றார். இதனை "நான்மறையாளன் செய்யுட்கொண்டு மேனிலையுலகம் விடுத்தோனாயினும்" எனச் சிலப்பதிகாரம் கூறும்.

கோதமை — ஒரு பார்ப்பினி, சார்ங்கலன் என்பவனுடைய தாய் (மணிமேகலை)

கோதாவிரி — 1. ஒருநதி மேற்குத்தொடர்ச்சிமலை யென்னும் அத்தகிரியில் தோன்றிச் சமுத்திர சங்கமமாகிறது.

2. நந்தகோபன் மனைவி.

3. இவள் ஒரு வேதியன் குமரி, இவள் உத்யானவனத்தில் உலாவித் திரிகையில் அச்வநிதேவ குமரன் இவளை வலுவிற் புணர இவளிடம் ஒரு புத்ரன் பிறந்தனன். இப் பிள்ளையை யெடுத்துக்கொண்டு இவள் வீடுசெல்ல இவளை வளர்த்தோர் இவளைக் காட்டிற் ககற்றினர். இதனால் இவள் காடுசென்று தவம்புரிந்து கோதாவிரிநதி யுருவடைந்தனள். இக்குமரன் வைத்தியன் ஆயினன். (பிரம்ம கைவர்த்தம்.)

கோதுமை — இது எல்லாத் தானியங்களிலும் விலையுயர்ந்தது. இதன் மாவினால் அப்பங்கள் செய்யப்படுகின்றன. வடமேல்நாடுகளுக்கு இதுவே முக்ய ஆகாரம். இதன் தவிட்டினால் ரொட்டிகள் செய்யப்படுகின்றன. இது பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரியா, தென்ரஷ்யா, பிரிடிஷ்தீவுகள், ஆஸ்திரேலியா, யுனைடெட்ஸ்டேட்ஸ், கனடா, ஈஜிப்ட், வடஆப்ரிகா முதலிய பிரதேசங்களில் விளைகிறது. இதன் தவிட்டினை ஆடுமாடுகளுக்கு ஆகாரமாகப் பயன்படுத்துகின்றனர்.

கோதை — ஆண்டாளைக்காண்க.

கோதைமலை — கோதைமுனிவர் தவஞ்செய்த மலை.

கோதைமுனிவர் — திருச்செங்கோட்டில் தவஞ் செய்து சித்திபெற்ற முனிவர். இவர் தவஞ்செய்த மலை கோதைமலை.

கோத்திரவான் — கிருஷ்ண மூர்த்திக்கு இலக்குமணையிடமுதித்த குமரன். இவன் தம்பியர் ஒன்பதின்மர்.

கோத்ரம்—1. இது இருடிகளைத் தம் சந்ததிக்கு முதல்வராகக்கொண்ட பிரிவு. அது ஒரு ரிஷிமுதல் இரண்டு மூன்று முதலியவரையும் முதலாகவுடையது.

2. உச்சயர்கோத்ரம், நீச்சயர்கோத்ரம்.

கோபஞ்சகம் — இந்திரத்யும்மன் கோதானஞ் செய்த நீர், மடுவாய் நின்றநிலை.

கோபணாரயர்—தேசிகர் காலத்துத் துருக்கர் திருவரங்கத்தில் தொந்தரைசெய்யப் பெருமாளைச் செஞ்சியில் எழுந்தருளச் செய்வித்துத் துருக்கருடன் சண்டைசெய்து வென்று பெருமாளைத் திருவரங்கத்தில் பிரதிட்டித்தவர்.

கோபத்தாலான (அ) துக்கங்கள்—கோள், துணிவு, துரோகம், பொறாமை, பிறர் குணத்தைச் சகியாமை, ஒருவன் பொருளை அபகரித்தல், காரணமின்றி அடித்தல், திட்டுதல் ஆக அ. (மநு.)

கோபதி — 1. வருணன் சேவகன், கிருஷ்ணனால் செயிக்கப்பட்டவன்.

2. ஒரு அக்நி.

கோபருவதம் — நந்திதேவராலும், சத்தியாலும் பூசிக்கப்பட்ட தலம், விருத்தாசலத் தருகிலுள்ளது.

கோபராஷ்டிரம் — கொங்கணத்திற்குத் தெற்கிலுள்ள தேசம்.

கோபாலன் — ஒரு பாரதவீரன்.

கோபாலகன்—இவன் பிரச்சோதனன் பட்டடத்துத் தேவிமாருள் ஒருத்தியின் புதல்வன். வாசவதத்தையினுடைய சகோதானல்லன் உதயணனுடைய விரோதிகளாகிய இருபதின்மரை இவன் வென்றவன். (பெ-கதை.)

கோபாலகிருஷ்ணதாசன் — எம்பிரான் சதகம்பாடிய புலவன், இடையன்.

கோபாநன் — துர்வசு பேரன்.

கோபிகைகள்—1. இவர்கள் திருமாலை மணக்க எண்ணிய இயக்கியர் பதினாருயிரத்தொருநூற்றுவர். தாருகவனத்து ருஷிகள் மோகினி யுருக்கொண்ட விஷ்ணுவுடன் ரமிக்கத் திருமாலின் அனுக்கிரகத்தால் இவ்வுருக் கொண்டனர் என்பர். பூர்வம் கிருஷ்ணன் பதினாருயிரம் கோபிகைகளுடன் ஜலக்கிரீடை செய்யும்போது அவ்விடம் அதி சௌந்தர்ய முள்ளவனும் கிருஷ்ணமூர்த்தியின் குமாரனுமாகிய சாம்பன் வந்தனன். இந்தக் கோபிகைகள் அவனைக் கண்டு மனம் சலித்ததைக் கிருஷ்ணனறிந்து நீங்கள் என்முன் வேறொருவனை நினைத்ததுபற்றிக் கள்ளரிடம் அகப்படுக என்று சாபந்தந்தனன். பிறகு அவர்கள் வேண்டக்கண்ணன் அருள்சுரந்து தாலப்பியமுனிவர் அநுக்கிரகத்தால் மீள்வீர் என்று சொல்லினன். அவ்வாறே யாதவவம்ச அழிவின் கடைசியில் அருச்சுநன் இவர்களை யழைத்துக் கொண்டு போகையில் கள்ளர் பலர் வந்து அருச்சுனனைவென்று அந்தப் பெண்களைத் தம் வசமாக்கினர். இவ்வகை யிருக்கையில் ஒருநாள் தாலப்பியமுனிவர் கோபிகைகளிடஞ் சென்றனர். கோபிகைகள் தங்களுக்குக் கிருஷ்ணன் கூறிய சாபமும் தங்களுக்கு நேரிட்ட ஆபத்தினையும் அவர்க்குக் கூறித் தங்களைக் காக்க வேண்டினர். முனிவர் அந்தப் பெண்களை நோக்கி நீங்கள் பூர்வசன்மத்தில் அப்சரசுக்கள், ஒருநாள் நாரதமுனிவர் நீங்கள் விளையாடும் இடம் வந்தனர். அவர்க்கு நீங்கள் மரியாதை செய்யாமல் எங்களுக்கு நாராயணன் நாயகன் ஆவானே என, நாரதன் நீங்கள் பூமியிற் பிறந்து கண்ணனாகிய நாராயணன் தேவியர் ஆவீர் ஆயினும் எனக்கு மரியாதை செய்யாததனால் கள்ளரிடம் அகப்படுவீர் என்று சபித்தனர். ஆதலால் இது உங்களுக்கு நீங்க அனந்தசயனவிரதம் நோற்க எனக்கூறிச் சென்றனர். கோபிகைகள் அவ்வாறு நோற்று வீடுபெற்றனர்

2. இவர்கள் சுருதி கோபிகைகள் எனவும், ருஷி கோபிகைகள் எனவும், மைதிலகோபிகைகள் எனவும், கௌசல கோபிகைகள் எனவும், அயோத்யா கோபிகைகள் எனவும் பலவகையராவர். இவர்களுள் சுருதி கோபிகைகள் பாத்மகற்பத்தில் வேத இருக்குக்கள் பாற்கடலடைந்து விஷ்ணுவைத் துதிக்க அவர் பிரத்தியக்ஷமாய் என்ன வேண்டுமென்ன உமது உண்மை உருவைத் தரிசிக்கவேண்டுமென்றனர். அவர்களின் வேண்டுகோளின்படி விஷ்ணுமூர்த்தி ராதையுடனும் கோபிகைகளுடன் ஜகன் மோகனஸ்வரூபமாய்த் தரிசனம் தந்தனர் இதைக்கண்ட சுருதிகள் நாங்களும் இவ்வின்பத்தை அநுபவிக்க விரும்புகிறேமென்ன அவ்வகை யுடன்பட்டு நீங்கள் சுவேதவராக கற்பத்தில் துவாரகையில் பிறப்பீர், அவ்விடம் நாம் உமக்கு இவ்வாநந்தம் தருகிறேமென்றபடி துவாரகையில் பிறந்து கண்ணனுடன் விளையாடினவர்கள். இச்சுருதி கோபிகைகளிடம் கண்ணன் ஒருநாள் தாமதித்துவர வன் தாமதப்பட்டீர் என எமதாசிரியராகிய துருவாசரைக் காணச் சென்றதால் காலதாமதம் ஆயிற்று என, நாங்களும் அவரைத் தரிசிக்க விரும்புகிறே மெனக் கண்ணன் சொற்படி அவரிடம் அடைகையில் யமுனை பெருகக்கண்டு தியங்கி நின்று கண்ணன் சொற்படி நித்ய பிரமசாரி வழிவிடச் சொன்னான் என்று யமுனையிடங் கூறி யாற்றைக்கடந்து சென்று துருவாசரைத் தரிசித்தனர். இருடி கோபிகைகள் இராமன் வனமேகியகாலத்து அவ்விடமிருந்த இருடிகளுக்கு மானசராகிய விஷ்ணுமூர்த்தம் மனதில் மறைய அவர்கள் திடுக்கிட்டு எதிரில் இராமனைத் தரிசித்துத் துதிக்க இராமன் என்ன வேண்டும் என்னச் சீதையைப்போல உமக்குத் தேவியராக வேண்டுமென்ன அவ்வாறாகுக என வரந்தந்தனர். அவ்வாறே வங்கதேசத்து இருந்த மங்களன் என்னும் இடையனுக்கிருந்த (௫,000) தேவியர்க்குப் பல குமரிகளாய்ப் பிறந்தனர். இவர்கள் பிறந்தவுடன் தந்தைக்குச் செல்வஞ்

குறையச் சயன் என்னும் அரசன் இவனிடம் வருதல்கண்டு கூறி அச்சயனால் இவர்களை நந்தனிடம் அனுப்ப இவர்கள் கண்ணன் மேய்க்கும் மாடுகளின் சாணமெடுத்துக் காளிந்தி யுபாசனையால் ஒருநாள் கண்ணன் தங்களைக் கூடக்களித்தனர். மைதில கோபிகைகள் இராமன் சீதையை மணங்கொள்ளச் செல்லுகையில் அவ்விடமிருந்த பெண்கள் மோகித்து இராமனுக்குக் கூற இராமன் துவாபரயுகத்தில் உம்மைக் கூடுவேன் என்றனர். அவ்வாறே இவர்கள் நவநந்தனர் ஒன்பதின்மர் வீட்டிலும் பிறந்து யமுனைக் கரையில் காத்தியாயினிவிரதம் அநுட்டித்து வந்தனர். அக்காலையில் கண்ணன் பிரசன்னராய் இவர்கள் சேலையையெடுத்து மறைத்தனர். கௌசல கோபிகைகள் இராமன் கோசலதேசத்தின் வழிச் செல்லுகையில் தம்மை மனதில் நினைந்து மோகித்த பெண்களுக்குத் தாமும் மனத்தால் கிருஷ்ணவதாரத்தில் கூடுகிறேனென்று வரந்தந்தனர்; அவ்வாறே இவர்கள் உபநந்தனர் வீட்டில் பிறந்து கிருஷ்ணனை மனதில் நினைத்திருந்தனர். இவர்களது தாய் தந்தையர்கள் இவர்களுக்கு இடையரை மணம் புணர்த்தினராயினும் இவர்கள் கண்ணனை மனதில் நினைந்தவராய் அவனைக் கலந்து விளையாடி வந்தனர். கண்ணன் செய்த சர்வலீலைகளும் இவர்களிடத்திலேயாம். அயோத்யாகோபிகைகள் இராமன் சீதையை மணந்து வரக்கண்ட அயோத்திநாட்டுப் பெண்கள் இராமனைக்கண்டு மோகிக்க அவர்க்கிசைந்து கிருஷ்ணவதாரத்தில் உம்மைக் கூடுகிறேன் என அசரீரியால் சொல்லிந்தனர். அவ்வாறே இவர்கள் சிந்துதேசத்தில் சம்பகாநகரத்தில் விமலன் எனும் அரசனுக்குப் பெண்களாகப் பிறந்து கண்ணனுடன் கிரீடித்தனர். சோபாகோபிகை — கோலோகத்திலிருந்து சந்திரனுக்குச் சோபையைத் தரச்சென்றவள். பிரபாகோபிகை — கோலோகத்திலிருந்து சூரியனுக்குப் பிரபையைத்தரச் சூர்யனிடஞ் சென்றவள். சாந்தீகோபிகை--கிருஷ்ணன் சரீரத்தில் லீனமானவள். க்ஷமாகோபிகை — கோலோகம்விட்டுப் பூமியடைந்தவள். இந்நால்வகைக் கோபியரும் கிருஷ்ணன் சக்திகள். (பிரம்மகைவர்த்தம்).

கோபிசந்தராஜன் — உத்தரகண்டத்தில் கௌடபங்கால் என்னும் ராஜ்யத்திலுள்ள காஞ்சனபுரிக்கு அரசனாகிய திரிலோசந்து என்பவன் ஒருவன் இருந்தான். அவன் பாரி மைனாவதி. அவன் தவத்தால்பிறந்த குமரன் கோபிசந்தன். இந்தக் கோபிசந்தன் தந்தைக்குப் பிறகு பட்டமேற்று அரசாளுங்காலத்தில் ஆயிரத்து இருநூறு மனைவிகளை விவாகஞ்செய்தும் ஆயிரத்து அறுநூறு போகமாதர்களை வைத்துக்கொண்டும் விஷயானந்தத்தை அனுபவித்துவந்தான். இவன் தாயாகிய மைனாவதி ஒருநாள் புருஷன்நீங்கிய துக்கத்தினால் மேன்மாடத்திற் சென்று நான் குதிசையும் பார்க்கும்போது ஜாலந்திரா என்னும் மகாயோகி தீக்ஷாதக் காட்டில் சென்று விறகுகளைப்பொறுக்கிக் கட்டித் தலையின்மேல் வைத்து வழிநோக்கி வருகையில் இவரது தேகநிழல் பூமியில் படாதிருத்தலாலும் விறகுச்சுமை தலைக்குமேல் முழத்திலிருத்தலாலும் மைனாவதி கண்டு இவர் மானிடரல்லர் என்று மானமுதலியவைகளை விட்டு அவரிருக்கும் மடத்திற்சென்று அவரை வணங்கி உபதேசம் பெற்று மீண்டும் மனையடைந்து சுவானுபவத்தி லிருந்தனள். கோபிசந்தராசன் ஒருநாள் தன் முதல்மனைவியிடம் வர அவள் இவனுக்கு உபசாரமுதலிய செய்து உன் தாயை ஒரு சந்நியாசி தன் வசமாக்கிக்கொண்டான். அவள் இடைவிடாது அவனிடம் போவது நமக்குப் பழிப்பல்லவோ என்றதைக் கேட்டு அதை அறிவோமென்று மந்திரியையழைத்து அந்த யோகியை இரவிற்குத் தன்னிடம் அழைத்துவரக் கட்டளையிட்டனன். அவ்வாறே மந்திரி சென்று யோகியை வணங்கி அரசன் கட்டளையைக் கூற யோகியர் அவ்வாறு வந்தனர். அரசன் எதிர்கொண் டழைத்து உபசரித்து யோகி துயில்கையில் கிணற்றிலிட்டு மூடச்செய்தனன். யோகியர் கிணற்றுநீரின்மேல் தியானத்திலிருந்தனர். இவரது சீடர் பலருள் உயர்ந்தவராகிய கானேபா என்போர் தம்மோடொத்த எழுநூற்றுவருடன் எங்குந் தேடாநின்றனர். மைனாவதி தனது ஆசிரியரைக் காணாதவளாய் மிக வருந்தியிருக்கும் நாள்களில் ஓர்நாள் தனது புதல்வன் சந்தன முதலிய வாசனைத்திரவியங்களை அணிந்து உலாவிக்

கொண்டிருந்தலேக் கண்டு இவ்வகைக் களிப்புடன் இருக்குமிவன் யமன்கையில் பட்டு மாள்வனே என்னும் வருத்தத்தால் மேல்மாளிகையினின்றும் அழும் கண்ணீரானது இவன்மேல் துளிப்ப இந்நீர் யார் தெளித்தாரென்று மேலே பார்க்க அது தனது தாயின் கண்ணீரென்றறிந்து இவளை யழுதற்குக் காரணமென்னவென்று கேட்க உன் தந்தை முதலிய முன்னோர் உன்னைப்போலவே போகங்களை அனுபவித்து யமன்கையிற்பட்டு மாண்டனர். அவ்வாறே நீயும் யமன் கைப்பட்டு மாள்வாயென்று வருந்தி அழுகின்றேன் என்றனள். அதைக்கேட்ட அரசன் அவ்வாறு வருந்தாவகை முத்திதா வல்லவர் யாவரென மைனாவதி சாலந்திரர் என, அரசன்கேட்டு ஒன்றுங்கூறாது வீட்டில் வந்துண்டு மனைவி சொற்கேட்டுக் கோபத்தால் யோகியரைக் கிணற்றிலிடச் செய்தேனே யென்று வருந்தி யிருந்தனன். முன் ஆசாரியனைத் தேடச்சென்ற கானேபா பலதேசங்களிலும் தேடிப் பரதேசமடைந்து மச்சேந்திரரைத் தேடிவந்து கோரக்கர் இருப்பிடமடைந்து மகிழ்வுடனிருக்கையில் கோரக்கர் இவரைப் பார்த்துக் கோபிசந்தன் உன் குருநாதனைக் கிணற்றிடைத் தள்ளிப் பன்னிரண்டு வருடமாயிற்று ; அதை நோக்காமல் உலகமெல்லாம் தேடுகின்றாய் அதனாற் பயனென்ன என்று கூறினர். இதனையறிந்த கானேபா மைனாவதிக்கு ஆசிரியனிருப்பிடங்கூறி அனுப்பித் தானும் பின் சென்றனர். கானேபா தம்மூர் அடைந்தசெய்தியை மைனாவதி மகனுக் கறிவித்து அவரைச் சரண்புகும்படி உடனழைத்துச் சென்றனள். அரசன் கானேபாவைச் சரணடையக் கானேபா நீ யாரென அரசன் கோபிசந்தன் என்றனன். இதைக்கேட்ட கானேபா மிக்க கோபமுடையவராய்க் கள்ளை அமுதென்பதுபோல இப்பெயர் உனக் காரிட்டார் ஆசானைக் கிணற்றில் தள்ளியபாவி சந்திரசூரிய ருள்ளளவும் நரகத்தைத் தருகின்றகாரியத்தைச் செய்தாய்எனக் கோபிசந்தன் நடுங்கிப் பிழைபொறுக்க வேண்டினன். அச்சமயத்தில் மைனாவதி தன் பிள்ளையைப் பிடித்துக் கானேபாவிடத்தில் கொடுத்து அபயங் கேட்டனள். பின் கோபிசந்தன் கானேபாவைப் பூசித்து உபசரிக்கக் கானேபா ஆசானை எந்தக் கிணற்றில் தள்ளினாயென அரசன் கிணற்றைக் காட்டிப் பயந்து நிற்கப் பயப்படாதே வெள்ளியினாலும் பொன்னினாலும் உன் வடிவத்தையொத்த உருவைச் செய்விக்க என உரைக்க அரசன் அப்படியே செய்வித்துக் கிணற்றருகில்வந்து மேலிருந்தவைகளை எடுப்பித்தான். அங்குச் சாலந்திரர் சந்திரன்போல் விளங்கியிருந்தனர். சீடர்கள் கண்டுகளிக்கக் கானேபா கிணற்றருகில் சென்று அரசன் என்னால் அபயம் பெற்றனன். நீர் அவனுக்குச் சாபம் கொடுப்பீரேல் அச்சாபம் அவன் உருவைப்போல் செய்திருக்கும் பிரதிமைகளைச் சார்தல்வேண்டும் என வரம் வேண்டினன். பின் கானேபா கிணற்றருகில் பிரதிமைகளை நிறுத்தி ஜாலந்திரரை நல்வரவு கூறுகவென அவ்வாறே அரசன்கூற யோகியர் நீ யாரென அரசன் கோபிசந்தன் என்றனன். ஜாலந்திரர் நீ சாம்பராகவெனச் சபித்தனர். இச்சாபத்தால் அப்பிரதிமைகள் சாம்பராய் அரசன் துன்பமிலா திருந்தனன். பின் அரசன் வேண்டக் கிணற்றிலிருந்தோர் நீ யாரென நான் மைனாவதி மைந்தனென ஜாலந்திரர் க்ஷேமமாயிருக்க வென்றனர். பின் யோகியரை வெளியே வரச்செய்ய மைனாவதி பாதபூசை செய்தனள். கோபிசந்தனும் யோகியரை வணங்கி உம்முடைய சாம்பிரதாயம் எனக்கு அருள்கவென யோகியர் அவ்வாறாகுக வென்றனர். பின் அரசன் ராஜ்யந் துறந்து தாய்பாலடைந்து அவளை வணங்கத் தாய் மகனை வாழ்த்தி உன் குலமீடேறும் கொள்கை கொண்டனை; இதுமுதல் பலதலங்களும் யாத்திரைசெய்து பனிரண்டு வருடத்திற் கொருமுறை என்னை யடைகவென்றனள். அரசன் பலதேசங்களும் யாத்திரைசெய்து தன் தங்கை இருப்பிடமடைந்து தவக்கோலத்துடன் அவ்விடம் பிக்ஷைசெய்து வருகையில் தங்கையின் தோழி அரசனது வடிவத்தைக் கண்டு ஐயுற்றவளாய்த் தமது நாயகிக்குக் கூறினள். தங்கைகண்டு வருந்தினாளாய் நிற்க அவளைத் தேற்றிப் பனிரண்டாண்டு கழிந்தபின் தாயைச்சேவித்து அவளிட்ட பாற்சோறுண்டு நீங்கினன்.

கோபிதாரத்துவசன் — இவனிடம் அகத்தியர் முதலிய முனிவர்வர அரசன் இவர்களை மரியாதை செய்யாததினால் அக்கூட்-

டத்தவருள் ஒருவராகிய பிரமிட்டன் என்பவரால் குட்டநோய்கொள்ளச் சபிக்கப்பட்டவன்.

கோபி பாலைவனம் — இது மத்ய ஆசியாவில் உள்ள ஒரு பெரிய பாலைவனம். இதன் நடுவில் ஷாமு என்னும் மணல் வெளி உண்டு. அதனை மணற்கடல் என்பர். இதனீளம் 1200 மைல், அகலம் 250 மைல். இன்னும் இந்தியா அமெரிக்கா முதலிய இடங்களில் மலைச்சரிவுகளையும் நதிகளையுஞ் சார்ந்து பல வெளிகளிருக்கின்றன.

கோபிரதாரம் — ஒரு புண்ணிய க்ஷேத்திரம். A place of pilgrimage on the bank of the Saraju at Fyzabad.

கோபிலகோப்பிராய மகாமுனி — இவர் இராசமன்னார்கோயிலில் திருமால் அருள் பெற்றவர்.

கோபிலமகாமுனி — ஒரு இருடி, இவாது பாரி, விசித்திரகன் என்னும் காந்தருவனை ஆயிரம் வருஷம் மீனாக இருக்கச் சபித்தனள்.

கோபிலர் — சத்தியவிரதனைக் காண்க.

கோப்பிராமணன் — சுரபியினிடம் ஆதியில் பிறந்த பிராமணன். (பார-அநு)

கோப்பியரோக்கம் — காசியில் பசுவினால் பூசிக்கப்பட்ட க்ஷேத்ரம்.

கோப்பெருஞ்சோழன் — ஒரு சோழன், இவன்காலத்துப் பிசிராந்தையார், கண்ணகனார் முதலிய புலவர்கள் இருந்தனர். இவன் தன்னுடுதுறந்து வடக்கிருந்ததுகண்டு இரங்கிக் கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனாரிவனைப் பாடினர். இவனது நண்பர் பொத்தியார், இவர் இச்சோழனது பிரிவு ஆற்ருது நடுகல்கண்டு இடங்கேட்டு உயிர் நீத்தனர். இவன் தன்னிரண்டு குமாருடன் பகைகொள்ளப் புல்லாற்றூர்எயிற்றியனார் இவனைச் சமாதானஞ்செய்து பகைநீக்கினர். (புற - நா.) (குறு - தொ.)

கோப்பெருந்தேவி — நெடுஞ்செழியன் மனைவி. தன் கணவன், கண்ணகையிட்ட வழக்கிற்கு இழுக்கி யுயிர்விட்டதறிந்து வுயிர் விட்ட கற்புடையாள். (சிலப்பதிகாரம்.)

கோமடத்தசினியாழ்வான் — எழுபத்திணுலு சிம்மாசனுதிபதிகளில் ஒருவர். உடையவர்க்குத் திருக்கைச்செம்பும் ஸ்ரீ பாதாக்ஷயும் தாங்குபவர். (குருபரம்பரை.)

கோமடத்துத் திருவிண்ணகரப்பன் — உய்யக்கொண்டார் திருவடிசம்பந்தி.

கோமட்டிகள் — இவர்கள் சென்னை ராஜதானியிலுள்ள பல பாகங்களில் பரவிய வர்த்தக சாதியர். இந்தக் கோமட்டியென்னுஞ் சொற்கீரணம் பலவிதமாக கூறுகின்றனர். கோமதி - நரிபோல் தந்திரம் வாய்ந்தவர் எனவும், பசுக்களைக் காத்தலினுல் வந்த பெயர் எனவும், பசுப்போன்ற அறிவினர் எனவும், இவர்கள் விஷ்ணுவை நோக்கித் தவஞ்செய்ய அவர் இவர்களுக்குத் தம் உலகம் தந்தனர். இவர்களில்லாததால் பூமி துன்பமடைய விஷ்ணு பூலோகம் செல்லக் கூறினர். இவர்கள் அதை மறுத்தனர். விஷ்ணு சிவனிடமிவர்கள் செய்திகூறச் சிவன் ஒரு பசுக்கொணர்ந்து அதின் காதின்வழிச் செல்கவென அவ்வாறே யிவர்கள்சென்று அதின் வயிற்றில் பெரிய பட்டணுதிகளைக் கண்டு களித்து அவ்விடத்தில் வசிக்க வேண்டினர். அவ்வாறிருக்கையில் பெருந்தீ தோன்றி யிவர்களைப் பயப்படுத்தியது. இவர்கள் பழையிடமே போகச் சிவபெருமானை வேண்ட இவர்கள் பூமியிலே யிருப்பதாக வாக்களித்துப் பசுவின் வயிற்றிலிருந்து நீங்கினர். ஆதலால் இவர்களுக்குக் கோமட்டிகள் என்று பெயர் எனவும், இவர்கள் சுற்றத்தவரின் முன்னேர் பசுத்தொழுவத்திருக்கையில் கருப்பிணியாகிய தங்கள் வம்சத்தவர்களைப் பசு முட்டியதால் கோமட்டி எனவும், கோமட்டிகள் கோதாவரி நதியாகிய கோமதியாற்றை யடுத்த பூமியில் வசித்தவர்களானதால் கோமட்டிகள் எனவும் கூறுவர். இவர்கள் கவரவர் கலிங்கர் என்றும் இரண்டு பிரிவினராகப் பிரிக்கப்பட் டிருக்கின்றனர். இவர்கள் தங்கள் குலத்திற் பிறந்த கன்னிகையின் கற்பின் கௌரவத்தைக் காத்ததால் கவரவர் எனப்பட்டனர். பின்னும் இவர்கள் கௌரியை வணங்குவோராதலால் கவரவர் என்பர். இவர்கள் பெனுகொண்டா, வேகிகாடு, திரைவர்ணிகர், லிங்கதாரிகள் எனப் பல பிரிவினர். இவர்களின் குலதேவதை கன்னிகாதேவி, அவள் தீப்பாய்ந்தபோது மானத்திற்கஞ்சித் தீப்புகுந்தவர் வேகிகள்; பெதிரி ஒடினவர்கள் பெதிரிகள் எனப்படுவர். கெவேரர் மாம்சபக்ஷணிகள் அல்லர், மற்றவர் மாம்சபக்ஷணிகரும் ஆவர். இவர்கள் கோத்திரங்கள் பலவகைப்பட்டிருக்கும். இவர்கள் பதினெட்டுப் பட்டணங்களில் நிலைத்தவர்கள்.

அப் பட்டணங்களுக்கு முதன்மையானது கோதாவரி ஜில்லாவிலுள்ள பெனுகொண்டா, இதில் நாகரீசுவரர் எனும் சிவாலயமும், ஜனார்த்தன சுவாமியெனும் விஷ்ணுவாலயமும் இருக்கிறது.

கோமதி — 1. இமயத்திற் பிறந்து கங்கையிற் கலக்கும் நதி.

2. சிவசுவாமியின் குமரன், இவன் குமரன் புரிமான்.

கோமளை — குலோத்துங்கனைக் காண்க.

கோமந்தபருவதம் — துவாரகைக்கு அருகிலுள்ள ஒரு மலை. கிருஷ்ண பலராமரிதன்மீதிருக்கையில் சராசந்தனிதனுள் அவ்விருவரும் இருக்கின்றாரென்றெண்ணித் தீயிடப்பட்டது.

An Isolated mountain on the northernside of the westernghats.

கோமணாண்டி—ஆண்டிவேடம் பூண்டு கோமணத்துடன் திரிவோன்.

கோமலுழான்மகருஷிகோத்ரன் — வணிக கோத்திர முதல்வன், குதிரை வியாபாரஞ் செய்பவன். குதிரைக்காகச் சன்னபுரம் பன்னிரண்டு வருஷத்திற்குமுன் பணங்கொடுத்துக் குத்தகைவாங்கிப் புல் பயிரிட்டவன்.

கோமாயி — இவள் விருத்த வேதியமாது, இவள் பண்டரிபுரத்துப் பெருமாளைத் தரிசிக்க எண்ணிச் செல்லுகையில் வழியில் நதியினைக் கடக்கமாட்டாது கையில் காசு முதலிய இலாமையால் கவன்று இருக்கையில் பெருமாள் படவுவோட்டுபவனைப் போல் முன்னின்று நான் கூலியிலாது அக்கரை சேர்ப்பிக்கிறேனென்று இந்த அம்மையாரைத் தோளிலேற்றிக்கொண்டு அக்கரை சேர்த்தனர். தோள்விட்டிறங்கிய கோமாயி படகாளுக்குக் காலில் நீர்படாமைகண்டு கேட்க நாம் இங்குத் தோணியோட்டுபவன் அல்லன், பிறப்பெனும் கடல்கடத்தும் தோணியோட்டுபவன் என்றனர். பின் அம்மை தம்மிடமிருந்த மாவைத்தர நாம் எவரிடத்தும் வாங்குதல் இல்லை. இதனைத் துவாதசியில் வேதியர்க்குத் தானஞ்செய்க என்று மறைந்தனர். அம்மை அவ்வாறே பண்டரிபுரஞ் சென்று துவாதசியில் வேதியரைநோக்கி மாவைப் பெறும்வகைகூற எவரும் ஏற்காததுகண்டு வருந்துகையில் பெருமான் மலர்மகளுடன் விருத்தராய் வந்தனர். இவர்களைக் கண்டு களித்த அம்மை மாவைத்தர அவற்றை அடையாக்கித் தருகவெனக் கேட்டுண்டு களித்து மறைந்தனர்.

கோமான் — சித்தூரையாண்ட சூரியவம்சத்து ராஜபுத்ர அரசன். மீவார்தேசத்து புராதன காவியமாகிய கோமான்ரஸா என்னும் காவியத்தால் புகழப்பட்டவன். சித்தூர் இரண்டாமுறை ஹாரூன் ஆல்ரஷீத்தின் குமாரனான மாமூன் என்பவனின் சேனைகளால் தாக்கப்பட்டபொழுது அவர்களைப் பின்னிடையச்செய்து சேனாதிபதிகளைச் சிறையிட்டவன். இவனுக்குப் பின் பதினாறுவது சந்ததியில் அரசாண்ட சமரசிங்கு என்பவன் ஆட்சியில் சித்தூர் சீர்குலைந்து மகம்மதியருக் குட்பட்டது.

கோமுகன் — 1. கற்கனிகை கணவன், குமரர் ரிதுதாமன், சயன்.

2. ஒரு தமிழ்க்கவி.

3. இவன் இடவகனுடைய மகன்.

கோமுகி — மணிப்பல்லவத்துள்ள பொய்கை. (மணிமேகலை.)

கோமுனி—விஷ்ணுவி னவதாரமாய் மேலைச் சிதம்பரத்தில் சிவநடனந் தரிசித்தவர்.

கோமூத்திரி—இது சித்திரக்கவியிலொன்று. இது இரண்டுவரியாக வெழுதி மேலுங் கீழும் ஒன்று இடையிட்டு வாசிக்கினும் அதுவேயாவது. (யாப்பு-வி.)

கோயிலண்ணர் — பிள்ளை லோகாசாரியர் திருவடி சம்பந்தி.

கோயிலாழ்வான் — எழுபத்தினாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

கோயிற்புராணம் — சிதம்பரமான்மியம் கூறும் நூல். கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியரா லருளிச் செய்யப்பட்டது.

கோரக்கர் — 1. இவர் ஒரு சித்தர், மச்சேந்திரர் மாணாக்கர், காயகற்பஞ் செய்துகொண்டு அல்லமதேவர்முன் தமது வல்லமையைக் காட்ட அல்லமர் அவர் கரத்து வாளொன்றுகொடுத்துத் தமது தேகத்தை வெட்டும்படி கூறினர். தேவர் வெட்டியபோது தேகம் ஊறுபடாது வாள் மழுங்கியது. பின் அல்லமர் அந்த வாளை கோரக்கரிடம் கொடுத்துத் தம்மை வெட்டக் கூறினர். அவ்வாறு சித்தர்செய்ய வாள் தேகத்திற்குள் புகுந்து வெளிப்படவும் தேகஞ் சலனமில்லாமல் இருந்தது. இதனைக் கண்டு சித்தர் தேவருக்கு அடிமைப்பட்டனர்.

2. இவர் கஞ்சாவை முதல் சரக்காகக் கொண்டமையின் அதற்குக் கோரக்கர்

மூலி எனப் பெயர். இவர்செய்த வைத்தியநூல் கோரக்கர் வைப்பு. மச்சேந்திரரைக் காண்க.

3. உமை அன்னமிட அதை உண்ண எண்ணிய தத்தாத்திரியரோடு மாறுகொண்டு பலவுருவாய்ச் சண்டைசெய்யத் தத்தாத்திரியர் மீன்குத்தியாய்த் தொடர இவர் மீனாய்த் தீர்த்தத்திலொளித்தனர். அதற்கு மச்சதீர்த்தமென்று பெயர். பழனிக் கருகிலுள்ளது. (பழனி-பு.)

கோரல்—ஆட்டிற்கும் மானிற்கும் ஒப்பான மிருகம். ஆட்டைப்போல் குறுகிய கொம்பினையுடையது. இரண்டடி உயரம் உள்ளது. இமயமலைகளில் உள்ளது. (Goral.)

கோரன் — 1. வீரமாயேந்திரத்தின் காவலாளி.

2. ஒரு அசுரன், பகீரதனை வென்று காட்டிற்றுரத்தினவன். இவன் கந்தமூர்த்தியின் வேலால் கொல்லப்பட்டான்.

3 சுநந்தன் குமரன், இவன் குமரன் வடகன்.

4. ஆங்கிரச புத்திரன்.

கோராகும்பார் — தோடோகியெனுமூரில் மனைவியுடன் இவர் வாழ்ந்துகொண்டு வருநாளில் எக்காலத்தும் பெருமாளை இடைவிடாது தியானித்து வருவர். ஒருநாள் மனைவியார் தன் குழந்தையைவிட்டுத் தண்ணீர் கொண்டுவரச் செல்ல, நகர்ந்துகொண்டுவந்த குழந்தையை அறியாமல் மண்மிதித்திருந்த கோராகும்பார் மிதித்துக் கொன்றனர். நீர் கொண்டுவந்த மனைவி குழந்தையைக் காணாமல் தேடி மிதிக்கும் மண்ணுடன் குழந்தை யிருக்கக் கண்டு கணவனை யிவ்விடம்விட்டு எங்கேயேனும் அகலுகவெனக் கடுஞ்சொல்கூறக் கோராகும்பார் தடியெடுத் தடிக்கப்போக மனைவி பெருமாளாணை யென்னைத்தீண்டேல் என அவ்வகைநின்றனர். மறுநாள் மனைவி ஜலங்கொண்டு கோராகும்பார் அடிகளை விளக்கச் செல்லக் கோராகும்பார் நேற்றுக்கூறிய ஆணையால் என்னைத் தொடக்கூடாதென மனைவி புத்திரன் வேண்டிப் புருஷனுக்கு மற்றோர் மணஞ்செய்ய இசைந்து தனக்குப் பின்னவளை மணம்புணர்க்கக் கோராகும்பார் அவளையுந் தீண்டாதவராகி யிருக்கத் தங்கை உனக்கு நேர்ந்தது எனக்கும் நேர்ந்ததென இருவரு மாலோசித்துக் கோராகும்பார் தூங்கும்போது இருவரும் இரண்டு பக்கத்திற் சென்று துயின்றனர். கோராகும்பார் தூக்கத்தால் தம் கைகளிரண்டினையும் இரண்டு மனைவியர்பேரிலுமிட்டுத் தூங்கி விழித்துத் தம் கை மனைவியர்மீதிருக்கக்கண்டு தமது இரண்டு கரங்களையும் வெட்டிக் கொண்டனர். மனைவியரிருவரும் பெருமாளைநோக்கித் துதித்து அழுதல்கண்ட கோராகும்பார் அவர்களைத் தேற்றி ஆடிமாதம் ஏகாதசியில் பாண்டுரங்கனைத் தரிசிக்கப் பண்டரியை அடைந்தனர். அங்குப் பெருமாளைவணங்கிப் பஜனைசெய்வதற்குக் கையிலாமல் வருந்தியிருத்தலைக் கண்ட பெருமாள் கைகள்வளர அனுக்கிரகித்தனர். அதனால் தேவியர்கள் களிப்புற்றுப் பிள்ளைவேண்ட முன்பு இறந்த பிள்ளையுந் தவழ்ந்துவரப் பெருமாள் தரிசனந்தந்து இன்றுமுத லுன் மனைவியருடன் களித்திருக்கவெனக் கட்டளையிட்டனர். பின் கோராகும்பார் பாகவதர்களுக்கு விருந்துசெய்ய அனைவரையும் வருவித்துப் போஜனம் அருத்திய பின்னர், ஞானதேவர் இருக்கிற பாண்டங்களுட் சுட்டதும் சுடாததும் அறியவேண்டுமென்னக் கோராகும்பார் தம் கையிலிருந்த தண்டத்தால் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு அடி அடித்துக்கொண்டுவந்து நாமதேவர் சிரத்திலும் ஒருஅடி அடிக்கநாமதேவர் தாங்காதவராய்க் கையால் மறிக்கக் கண்டு இது பச்சைப்பாண்டமென அனைவரும் பரிகசித்தனர். இதனால் நாமதேவர் துன்பமடைந்து பெருமாளிடஞ் சென்று கூறப் பெருமாளும் நீ ஆசாரியனிடத்து உபதேசம் பெறாததால் இவ்வாறு நேர்ந்தது. இனி நீ பெறுக என்னத் தாங்களே ஆசாரியனிருக்குமிடம் தெரிவிக்க வேண்டுமெனப் பெருமாள் நாகைநாதர் வாழ் கோவிலில் விசோபாகேசர் என்பவரிடத்தில் உபதேசம் பெறுகவென்ன நாமதேவரும் அவரிடத்தில்செல்ல விசோபாகேசர் செருப்புக்காலினை இலிங்கத்தின்மீது வைத்து உறங்க நாமதேவர் கண்டு நடுங்கி அடாத காரியத்தைக்கண்ட எனக்கு உடல் நடுங்குகின்றதெனக் கூற விசோபா யான் அறியாது தவறிக் கால்விழுந்தது என்னுடல் அதிக சோர்வடைந்தது. மற்றோரிடத்தில் கால்வைக்க வரவில்லை பாகவதரே இந்தக்காலை மற்றோரிடத்தில் தூக்கி வைப்பீரேல் உபகாரமாகுமென்று சொல்ல நாமதேவரும் வேறு இடத்தில் தூக்கி

வைக்க அவ்விடத்திலும் சிவலிங்கமிருக்கக் கண்டார். இன்னும் பலமுறை அவ்வாறுசெய்ய அவ்விடங்களிலும் சிவலிங்கமிருக்கக்கண்டு அந்தப் பாதத்தைத் தன்னுடைய தேகத்தில்வைத்துக்கொள்ள அதுவுமிலிங்கமாக விளங்கியது. பின் விசோபா நெடுநேரம் என் பதத்தைத் தாங்கினாய் எனக்குத் துன்பமா யிருக்கின்றது. என்காலை வெற்றிடத்தில் விடுகவென்ன நாமதேவரும் எங்கும் சிவமயமாகத் தோன்றுகின்றதால் எவ்விடம் வைப்பேனென விசோபா எழுந்து தம்கரத்தை நாமதேவர் சிரத்தில்வைத்துக் காதில் ஞானோபதேசஞ் செய்தனர். பின் நாமதேவர் மனதில் அரவணைச் செல்வனைக் கண்டு களிப்படைந்து ஓர்நாள் பாகவதருக்கு நடுவிலிருக்கையில் ஞானதேவர் இந்த நாமதேவரைச் சுடாதபாண்டம் என்று சொல்வீர்களோவென்ன இனி யடாது என்று அவர் திருவடியில் வீழ்ந்து பணிந்தனர்.

கோராசுரன் — 1. கொக்குருக் கொண்டு கணேசரை விழுங்கவந்து அவராலிறந்த அசுரன்.

2. ஒருஅசுரன் தேவரை யிடுக்கண்படுத்திச் சிவமூர்த்தியால் கொல்லப்பட்டவன்.

கோரான் — ஒருவகைத் தேவசாதியார்.

கோரை — இது நீர்ப்பூண்டு வகைகளில் சேர்ந்தபுல்வினம். இது, ஆட்டாங்கோரை, ஈருள்ளிக்கோரை, ஓமற்கோரை, நச்சற்கோரை, கஞ்சாங்கோரை, கல்லங்கோரை, களாப்பூக்கோரை, கன்னிக்கோரை, சிற்றுட்டாங்கோரை, கிளைக்கோரை, குத்துககோரை, குளம்படிக்கோரை, கொட்டிக்கோரை, சம்பங்கோரை, சம்புக்கோரை, சீப்பங்கோரை, சீரகக்கோரை, ஈருள்ளிக்கோரை, சுனைக்கோரை, தண்டாமரைக்கோரை, தந்தக்கோரை, தாட்கோரை, திரட்கோரை, நெட்டிக்கோரை, நெறிக்கோரை, பசுக்கோரை, பனைக்கோரை, பாய்க்கோரை, பிரப்பங்கோரை, புற்கோரை, பூங்கோரை, பெட்டிக்கோரை, மட்டைக்கோரை, மயிற்கோரை, முடிக்கோரை, முதலைக்கோரை, மூக்கொற்றிக்கோரை, வரிக்கோரை, வரட்கோரை யெனப் பல.

கோரோசனம் — 1. இது, பசுவின் வயிற்றிலுண்டாம் பொருள். இதனைச் சீதளாதிரோகங்களுக்கும் மற்றுமுள்ள ரோகங்களுக்கும் உபயோகிக்கின்றனர்.

கோலம் — இது தேவபிதுர்க்கள் விஷயமாய் நாடோறும் அரிசிமாவால் வீட்டின் முற்றத்தில் பலவகை யந்திரவுருக்களால் போடப்படுவதாம். இது யந்திர வடிவாய்ப் பல தேவமந்திர எழுத்துக்கள் அடைக்க இடமுள்ளதாயும் எண்கோணம், அறுகோணம், முக்கோண வடிவங்களாகவும் இடப்படுவது. இவ் யந்திர வுருவத்தால் கிருகத்தில் வரக்கூடாத தீய தேவதைகள் வாராவாம். இவ் யந்திர வுருவமைந்த கோலங்களைப் பிதுர்க்கள் கண்டு அஞ்சி வீட்டுள் புகார். ஆதலால் அமாவாஸ்யை, பிதுர் மாதுர்க்களுடைய சிரார்த்ததினங்களில் கிருகஸ்தர் இடார். மற்ற சுபதினங்களில் தீய தேவதைகளினின்று காத்துக்கொள்ளும் வகை வீட்டினுள்ளும் புறம்பும் இடுவர்.

கோலா — இது, ஆஸ்திரியா நாட்டிலுள்ள ஒருவகை சிறு மிருகம். இது, உருவத்தில் குச்சுநாயைப் போன்றும், கரடியைப் போல் மயிரடர்ந்தும் காதுகள் வளைந்தும் உள்ளது. பற்களில்லை, தளிர்களைத்தின்று மரங்களிலேயே வசிப்பது. இதற்கு வயிற்றில் பையுண்டு. அப்பையில் குட்டிகளை வைத்து வளர்க்கிறது. மரமேற அறியாத பெரிய குட்டிகளை முதுகிற்தாங்கி மரத்தில் தாவும். தாய் குட்டிகளைத் தரையில் விட்டு அவை விளையாடக்கண்டு களிக்கும், இது, தன் குட்டிகளுக்குத் தீங்குநேரும் போது தன்னுயிரையும் விடும்.

கோலாகலம் — 1. வசுவினால் தள்ளப்பட்ட சேதிநாட்டு மலை.

2. மத்திய இந்தியாவில் பண்டில்கண்டிலிருந்து மால்வாவைப் பிரிக்கும் ஒரு மலை.

கோலாகலன் — 1 இமவந்தன் புத்ரன், மைநாகன் தம்பி.

2 இவன் தாயைப் புணர்ந்த மகாபாவி, இவன் நோயால் வருந்தி அபுத்திபூர்வகமாய் வேதாரண்யஞ் சென்று முத்தியடைந்தவன். இவன் பிறப்பால் சூத்திரன். (வேதாரண்ய - புராணம்).

கோலாசுரன் — ஒரு அசுரன் பராசத்தியாரற் கொல்லப்பட்டவன். (சிவரகசியம்).

கோலியர் — தஞ்சாவூர், மதுரை முதலிய இடங்களிலுள்ள நெய்வோர். இவர்கள் தாழ்ந்த சாதியர்.

கோவத்தன் — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களிலொருவர். இவர் ஊர்பெயர்

தெரியவில்லை. குறு-சங், கூடை, கோவ தத்தன் எனவுங் கூறப்படுவர்.

கோவதை — இது நான்குவகை, ரோதம், பந்தனம், யோக்த்ரம், பாதம். இவற்றுள் ரோதம் கொட்டகை, வீடு, துர்க்கம், மேடு பள்ளமான இடம், ஏரி, கடல், குட்டை, முதலிய இடங்களில் சாதல், பந்தனம், கழுத்தின் கயிறு, தாம்பு, முதலிய பல கயிறுகளால் பந்திக்கப்பட்டிறத்தல், யோக்த்ரம் வண்டியில் கட்டுதல், ஏரில் கட்டுதல், பிணையிடுதல் முதலியவற்றால் மரணமுண்டாதல், பாதம் வேண்டுமென்றும், தெரியாமலும், எண்ணியும், எண்ணாமலும் கோபத்தினால் தடியாலடித்து இறவாதிருக்கினும் பாதமாம். (பார-சி.)

கோவர்த்தனம் — வடமதுரைக் கருகிலுள்ள மலை. இந்திரன் கிருஷ்ணமூர்த்திமிடம் மாறுகொண்டு பசுக்களை வருத்த விடாமழை பெய்விக்கக் கண்ணன் இதனைத் தூக்கிக் குடையாய்ப்பிடித்து அப்பசுக்களைக் காத்த மலை.

கோவலன் — 1. மாசாத்துவான் என்னும் வணிகன் குமரன். இவன் கண்ணகியை மணந்து இல்லற நடத்திவருகையில் மாதவி என்னும் வேசி வசப்பட்டு நாள் கழித்து அவள்பாடிய வரிப்பாட்டால் மனம் வேறு பட்டுப் பொருளெலாந் தோற்று மீண்டு கண்ணகியுடன் கூடி வர்த்தகத்தின் பொருட்டு மதுரையடைந்து மனைவியின் காற்சிலம்பை விற்கத் தட்டான் ஒருவனிடம் காட்டினன். அத்தட்டான் அரசியின் பொற்சிலம்பை யிவன களவு செய்தனன் என்று நிந்தைகூறி அரசனிடம் ஒப்புவிக்க அரசன் குற்றவாளியோ அன்றோவென நிதானிக்காது மரண தண்டனை விதித்தனன். இச்செய்தியை அறிந்த கண்ணகி, கோவலனிடம் வந்து அவனுடலைத் தழுவி யுயிர்ப்பித்துச் செய்தியறிந்து அரசசபை புகுந்து கோவலன் தந்தது தன் காற்சிலம்பென்று அரசனுக் கறிவித்தனள். அரசன் அஞ்சி இறக்கக் கண்ணகி தனது கொங்கையைத் திருகி மதுரைமீதெறிந்து எரித்து மலைமீதேறித் தன் கணவனை அடைந்தனள். இவன் முற்பிறப்பில் பரதனென்னும் வணிகன். பரதனைக் காண்க. (சிலப்பதிகாரம்.)

2. மணிமேகலையின் தந்தை. (மணிமே.)

3. இ கோவலனுக்கு ஒன்பது தலைமுறை முன்னோன், ஆயயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கு நண்பன்: அவ்வேந்தனுக்குச் சாரணர் கூறிய தருமங் கேட்டுத் தான் தேடிய பொருள்களையும் தன் முன்னோர் தேடிய பொருள்களையும் ஏழுநாளில் தானஞ் செய்துவிட்டுத் தவமேற் கொண்டவன், வஞ்சி நகரத்தில் புத்தருக்குச் சயித்தியாலயங் கட்டுவித்தவன். (மணிமேகலை).

கோவலூர் — இது அதியமான் நெடுமான் அஞ்சியால் ஒருகாலத்து எறியப்பட்டது இதுகோவல் எனவும் வழங்கும். (புற-நா.)

கோவனூர் — கடைச்சங்கமருவிய புலவர். (அகநானூறு).

கோவிந்தபட்டர் — 1. கமலநயன பட்டருக்கு மழலை மங்கலத்தில் குரோதனவரு தைமீ சோமவார பௌர்ணமியில் பிறந்து பெரிய திருமலைநம்பியால் நாமகரணம் செய்யப்பெற்று எம்பெருமானருடன் வாசித்து யாதவப்பிரகாசருடன் கங்காயாத்திரை செய்கையில் யாதவப்பிரகாசர் எண்ணத்தை இளையாழ்வாருக் கறிவித்து விலக்கித் தாம் கங்கைசென்று தீர்த்தமாடுகையில் யாதவப்பிரகாசர் செய்த மோகத்தால் லிங்கதாரியாய் உள்ளங்கை கொணர்ந்த நாயனார் எனப் பெயர்பெற்று மழலைமங்கலத்தில் சிவப்பிரதிட்டை செய்து இருக்கையில் திருக்காளத்தியி லுள்ளவர் வந்து தமது ஊருக்கு அழைத்துப்போக அவ்விடஞ் சென்றிருந்து பெரிய திருமலைநம்பிகளால் மீண்டும் ஸ்ரீவைணவரானவர்.

2. மாகாளரைக் காண்க.

கோவிந்தப் பெருமாள் — பெரியதிருமலை நம்பிக்குக் குமரர், பெரியதிருமலை நம்பியால் உடையவருக்குக் கொடுக்கப்பட்டு உடையவரால் எம்பார் எனத் திருநாமம் பெற்ற திரிதண்டசந்யாசி.

கோவிந்தசீயர் — யாதவப் பிரகாசரைக் காண்க.

கோவிந்தன் — 1. விசயைக்குச் சகோதரன்.

2. கிருஷ்ணனுக்கு ஒரு பெயர்.

கோவிந்தபகவத்பாதாசாரியர் — இவர் சுகமுனிவர் மாணாக்கராகிய கௌடபாதமந்திரபட்டாரகர் மாணாக்கர்.

கோவிந்தாசாரியர் — ஸ்ரீ சங்கராசாரியர் மாணாக்கர், கௌடபாதருக்கும் மாணாக்கர்.

கோவிந்தை — நந்தக்கோன் புதல்வி, பதுமுகன் மனைவி.

கோவியர் — கோட்டைகளைக் காண்க.

**கோவிலார்** — கோவில் வேலை செய்வோர் இவர்கள் பள்ளிகள் கோவில்வேலை செய்வோர் இவர்கள் பூணூல்தரித்துத் தாங்கள் நியமித்த கோவிலில் தாங்களே அர்ச்சகராக இருப்பவர். கோவில் அடியார். எனவும் கூறப்படுவர். பெண்கள் கோவில் அம்மாமார் எனப்படுவர்.

**கோவிஜய நிருபதுங்கவர்மன்** — இவன் காஞ்சிபுரமாண்ட பல்லவர்களில் ஒருவன் இவன் தன்குமாரியை ஆதித்தசோழன் மணந்தான். இவனுக்குப் பிறகு பல்லவநாடு சோழர்க்குட்பட்டது.

**கோவுலகம்** —1. தேவாசுரர் கடல் கடைந்த காலத்துத் திருப்பாற் கடற்கண் ஐந்து பசுக்கள் பிறந்தன அவை நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பனவாம். இவை முறையே கபிலம், கிருஷ்ணம், வெண்மை, புகை, செம்மை நிறமுள்ளன. இவை சர்வ லோகங்களுக்கும், உதவியானவை. தேவாபிஷேகத்தின் பொருட்டு ஆனவை. இவற்றில் கோமயம், கோரோசனம், கோமூத்திரம், பால், தயிர், வெண்ணெய் உண்டாம். இவை ஆறும் பரிசுத்தமானவையும்; சர்வசித்தியையும் தரத்தக்கனவுமாம். இக்கோக்களும் யக்ஞங்களுக்குப் பயன்படத்தக்கவைகளாம். இப்பசுக்களிடத்தில் தேவர்கள் வசிக்கின்றனர். இதன் கோமயத்தில் சிவப்பிரியமாயிருக்கிற வில்வவிருக்ஷம் உற்பத்தியாயிற்று. அதில் பத்மாசநியாகிய இலக்ஷ்மி வசிக்கிறாள். ஆகையால் தேவர்கள் அனைவரும் கோவினிடம் வசிக்கின்றனர். இவற்றுள் வெண்ணிறமுடையவை பிராமணஜாதியாகவும், செந்நிறம் உடையன க்ஷத்திரிய ஜாதியாகவும், பொன்னிறமுடையவை வைசிய ஜாதியாகவும், கருநிறமுள்ளவை சூத்திரஜாதியாகவும் எண்ணப்படும். இக்கோலோகம் அண்டகோளத்துக்கு அருகில் இருக்கிறது. கோவைப் பூசித்தோரும் பூசிப்போரும், இவ்வுலகம் அடைவர். இவ்வுலகம் கோடிசூரியப்பிரகாசம் உள்ளதாய்ச் சுத்த வெண்மையுடையது. தேவயாகத்தில் உயிர் நீங்கிய பசுக்களும் இவ்வுலகம் அடையும். கபிலைப்பசு என்பது காதுங் கண்ணும் மடியும் மூக்கும் கறுப்பாய் இருப்பது. இதைப் போற்றுவோரும் உயர்கதி அடைவர். இதன் பாலைச் சாப்பிடாமல் தேவதார்ப்பணஞ் செய்யவேண்டும். இப்பசு தேவர் அவிசுமக்க அஞ்சிய அக்கினிக்கு இடந்தந்ததால் இதற்குப் பெருமை வந்தது. தேவர்களும் இதனால் எல்லாப்பொருள்களும் பவித்திரம் அடையும் வரத்தையுந் தந்தனர். கபிலையைக் காண்க.

2. சிவலோகத்தின் ஒருபுறத்தில் இந்த லோகம் இருக்கும். இதில் நந்தை, சுபத்திரை, சுரபி, சுசீலை, சுமனை முதலிய பசுக்கள் நந்திமாதேவரை மருவிச் சிவமூர்த்திக்குப் பால், தயிர், நெய், கோமயம், கோசலம், கோரோசனை முதலிய ஆறு திவ்யப் பொருள்களை யுதவியிருக்கும் இவ்விடத்தில் இப்பசுக்களாதிகளைக் கண்ணன் மேய்த்திருப்பர் என்பர். (சிவதர்மோத்ரம்).

**கோவூர்கிழார்** — 1. இஃது ஊர்பற்றி வந்த பெயர். இவர் வேளாண்மரபினர். சோழன் நலங்கிள்ளியையும், குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனையும்பாடி (புறம் ௩௧, ௩௨, ௩௩, ௪௧) அவர்களால் ஆதரிக்கப்பட்டு வருகிறநாளில் நலங்கிள்ளி என்பான் ஆவூரை முற்றுகைசெய்ய அக்காலத்து உள்ளே அடைந்திருந்த சோழன் நெடுங்கிள்ளியை அதனைத் திறந்து போர் செய்யவரும் வண்ணம் பாடினர். புறம் ௪௪. அந்நெடுங்கிள்ளி அதனைத்திறந்து நலங்கிள்ளிபால் விட்டுச்சென்று உறையூரையடைந்து அங்குவைகினன். அவ்வூரைக் கைப்பற்றிய நலங்கிள்ளி அதனைத் திறந்து நலங்கிள்ளி பால்விட்டுச் சென்று உறையூரை முற்றுகைசெய்தான். (புறம் ௪௫) அந்நாளில் நலங்கிள்ளியிடத்திருந்து உறையூரினுட்புகுந்த இளந்தத்தனை ஒற்று வந்தானென்று நெடுங்கிள்ளி கொல்லப் புகுந்தபொழுது அவனைக் கொல்லாதபடி தடுத்துப்பாடி உய்யக்கொண்டார். (புறம் ௪௭) பின்பு பகை முற்றுவண்ணம் முற்கூறிய சோழரிருவரையும் சமாதானப்படுத்தி போரைவிலக்கி நெடுங்கிள்ளியையும் பலவாறு புகழ்ந்துபாடி அப்பால் கிள்ளிவளவன்பால் வந்தனர். அம்மன்னன் யாதோவொரு காரணத்தால் மலையமான் மக்களை யானையின் காலில்வைத்து இடரும்படி கட்டளையிடக்கண்டு அவனைப்பாடி அம்மக்களை உய்வித்தார் புறம் ௪௬. முற்கூறிய அரசர்களைப்பாடிய பாடல்கள் மிக்க சுவை பயப்பன. இவர் நற்றிணையிற்கூறிய உள்ளுறை வியப்புடையது. இவர் குறிஞ்சித் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இவர் பாடியனவாக நற்றிணையில் நகசுநம் பாடலொன்றும், குறுந்தொகையிலொன்றும், புறத்தில் பதினைந்துமாகப் பதினேழுபாடல்கள் இவடத்திருக்கின்றன.

கோவேங்கைப் பெருங்கதவன் — இவர் கடைச்சங்க காலத்தவர். கோவென்று கூறப்படுதலால் அரசரும், இவர் வேங்கைப்பூ கதத்துடன் கல்லிற்ருக் குதலைப் பாடினதால், கோவேங்கைப் பெருங்கதவன் எனப்பட்டனர்போலும். குறு-கஙச.

கோவேறு கழுதை—1. இது உயரத்திலும் நீளத்திலும் குதிரைபோலவும், உருவத்தில் கழுதைபோலவுமுள்ள சாகபக்ஷணி இதற்குக் காதுகள் மிகநீண்டிருக்கும். பல விதமான நிறமுடையது குதிரையைப் போல் ஒற்றைக் குளம்புள்ளது. ஆகாரம் புல்கோதுமை, கடலை முதலிய. குதிரையைப்போல் முன்பற்களால் கடித்துத்தின்னும் அசைபோடாது. முரட்டுச் சுவபாவமுள்ளது. பெரிய பாரங்களைச் சுமக்கவும் இழுக்கவும் வல்லது. இது இந்தியா முதலிய பல இடங்களில் உண்டு.

2. ஒரு பிராமணன் இதன் குட்டியையடிக்கக் குட்டி தாயிடங்கூறத்தாய் கிடக்கிறன் புலையன் பிராமணனுல் தெரியும் என இதைப் பிராணிகளின் பாஷையறிந்த அந்தவேதியன் கேட்டுக் கழுதையை நெருங்கிக் கேட்கக் கழுதை அது உன் தாய்செய்த தீமையெனக் கூறக்கேட்டு நான் பிராமணனுகிறேன் என்று அகோர தவம் செய்து தேவதையானுன்.

கோவை — என்பது மணிச்சரம், அவை மேகலை, காஞ்சி, கலாபம், பருமம், விரிசிகை என ஐவகைப்படும். மேகலை எண் கோவையும், காஞ்சி எழுகோவையும், கலாபம் பதினறுகோவையும், பருமம் பதினெட்டுக்கோவையும், விரிசிகை முப்பத்திரண்டுகோவையும் உடையதாம்.

கோழிகள் — இவை, பறவை இனத்தில் உடல்பருத்தும் தலைசிறுத்தும், கழுத்தும் கால்களும் குறுகியும் பலவகை நிறங்கொண்டும் இருப்பவை. இவ்வினச் சேவலுக்குக் கொண்டைசிவப்பு அலகு உறுதி. இவ்வகையில் (6) அங்குல உயரமுதல் (3) அடிகள் உயர்ந்த வகையுமுண்டு.

தங்கக்கோழி, இது சீனதேசத்தது. இது, புரு அளவுள்ளது, இதன் கொண்டை மஞ்சள், கழுத்து மஞ்சள் கலந்த செம்மை, இதன் கழுத்தின் பக்கம் வரியான கருங்கோடுகளுண்டு. இதன் இறக்கைகள் செந்நிறம். வால் மூன்று வகை நிறங்கள் கொண்டவை.

மயிற்கோழி இது, பர்மா முதலிய நாடுகளிலிருக்கிறது இது, மயில்போ லழகுடையதா யிருக்கிறது. இது, கோழிபோன்ற வுருவமும், மயில்போன்ற வாலும் உடையது. இதன் இறக்கைகள் பசுமையும் நீலமும் கலந்தவை. இதில் மற்றொருவகை ஆர்கஸ்கோழி இது கருமை கலந்த செந்நிறம். வேறொருவகை லாபோபர்கோழி, இதற்குத் தலையும், முதுகும் மஞ்சள், கழுத்தும்வயிறும் நீலம், இறக்கையும் வாலும் இருண்ட செந்நிறம். இதன் இறகுகள் வெண்மைக் கோடுகளையும் கரியபுள்ளிகளையும் பெற்றவை. இது வருஷத்தில் 140 முட்டைகளிடுகின்றன. ஐரோப்பாவிலுள்ள கோழிகள் வருஷத்தில் 160 முட்டைகளும், அமெரிக்கா தேசத்து நல்ல கோழிகள் வருஷத்தில் 200, 300 வரையில் முட்டைகளிடுகின்றன என்பர். பெட்டைக்கோழி தன் முட்டைகளின்மீது அவயங்காந்துக் குஞ்சுகளைப் பருந்து முதலிய கொடிய பறவைகள் கவர்ந்து செல்லாமல் சிறகில் வைத்துக் காக்கும். சேவல் விடியற்காலையில் கூவிச் சூர்யோதயம் தெரிவிக்கும், சில கோழிகள் சாமந்தோறும் கூச்சலிடும், அதனைச் சாமக்கோழி யென்பர். இக்கோழியினத்தில் பலவகை அழகான கோழிகளுண்டு. ஜபான் தேசத்திலுள்ள ஒரு வகைக் கோழிக்குத் தோகை 15 அடிகள் நீளம்; அமெரிக்காவனத்தில் சில நாட்களுக்குமுன் நீலமுட்டையிடும் கோழி கண்டு பிடிக்கப்பட்டதாம்; அதற்கு வால் இல்லை; அதற்குப்பதிலாக செவிகளுக்குப் பக்கத்தில் சிறகடர்ந்த தசைப்படை ஒன்றிருக்கிறதென்பர். கோழிகளை அமெரிகா நாட்டார் அதிகமாகப் போஷித்து வளர்க்கின்றனர். அங்குள்ள கண்காட்சிசாலையில் பஞ்சவர்ணக்கோழி ஒன்று கொண்டுவரப்பட்டதென்பர். இவர்கள் பெட்டைக்கோழிகளை முட்டைமீதிருக்க விடாமலே முட்டைக்கு யந்திரமூலமாக உஷ்ணம் உண்டாக்கிக் குஞ்சுபொரிக்கச் செய்கின்றனர். இவ் வழக்கத்தை ஈஜிப்ட் தேசத்தவர் முதலில் கண்டு பிடித்தனர்.

காட்டுக்கோழி, இது காட்டில் வசிக்கும் அழகானகோழி. இது நாட்டுக்கோழி

யைப்போன்று இருப்பினும் பறந்து வேகமாய்ச் செல்லும் குணமுடையது. இதன் வாற் சிறகுகள் பலநிறமாய் அழகாயிருக்கும். இதன் சிறகுகள்பொருட்டு இதனை வலையிட்டுப் பிடிப்பர்.

பிளாக்குரோஸ், இது கோணையுள்ள சிறகுபெற்ற கோழி. இது ஸ்காட்லண்ட் தேசத்தது; இது நம்நாட்டுக் கோழியைப் போன்று சற்று உயர்ந்தது; நீலமும் கறுப்பும் கலந்த நிறமுடையது; இதன் வாலின் முனை வெளிப்புறம் வளைந்து சுருண்டிருக்கிறது; இவை பல ஒன்றுகூடி வசந்த காலத்தில் தோகையை விரித்துச் சத்தமிட்டு ஆடுகின்றன. இவை யிரவில் மரங்களி லுறங்குகின்றன.

ஜிங்கோழி (The Guinea fowl) இது ஆபிரிக்கா நாட்டிலிருந்து பல தேசங்களுக்குப் பரவியது. இதன் உடல் பெரிது. தலை சிறிது. இதன் தலை வெளுத்திருக்கிறது. உடல் நீலங்கலந்த மேகநிறமுள்ளதாய்ப் புள்ளி பெற்றிருக்கும். இதன் சிறகுகள் அதிதூரம் பறக்கத்தக்கவையல்ல. ஆயினும் விரோதிகளினின்று தப்பித்துக் கொள்ளும்படி பறக்கக்கூடியவை. இவை இரையின் பொருட்டுச் சதுப்பு நிலங்களில் நெடுந்தூரம் செல்லும். இது, கோழி போல் காலை ஆயுதமாகக் கொள்ளாமல் வாயால் கௌவிச் சண்டையிடும். இது காடுகளிலுள்ள புதர்களில் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும். இதன் முட்டை சிவந்த மஞ்சள் நிறமாய்க் கரும்புள்ளிகளைப் பெற்றிருக்கும். இது பல முட்டைகளிடும்.

ரீகா, எனும் மலர்ந்தவாலுள்ள கோழி (The Rhea) இவை, தென் அமெரிக்காவின் மத்தியிலுள்ள காடுகளிலுள்ளவை. இவை சாம்பல் நிறமுள்ளவை. இவற்றின் உரு, தீக்கோழி போல்வது. முருக்குள்ள இதன் சிறகுகள் மலர்போல் அழகுள்ளவை. இவை பறவா வேகமாய் ஓடும். இவை காட்டிலுள்ள புற்களையும் பழங்களையுந்தின்று ஜீவிக்கும். இவை கோடை காலத்தில் மிருதுவான புற்களைக் கோலி முட்டையிட்டு அவற்றைப் பகலில் வெயிலிலிருத்தி இரவில் அவயங்காத்துக் குஞ்சு பொரிக்கும்,

வான்கோழி, இவை எல்லாக் கண்டங்களிலும் இருக்கின்றன. இவை நாட்டுக் கோழியினும் உருவத்தில் பெரியவை. இவை கறுப்பும் வெண்மையும் சேர்ந்த நிறங்கொண்டவை; இவற்றின் தலை சிறியது; கழுத்துங் காலும் நீளமானவை; கழுத்தில் மயிரில்லை; இவற்றிற்கு மூக்கின் மேல்பாகத்தில் நீண்ட தசைத் தொங்கலுண்டு. இதன் கழுத்தை யிறுக்கி மூக்கைத் தொங்குதசையால் மறைத்துக்கொண்டு குறுகிய கரிய இறகை விரித்துப் பேடை காண ஆடும். இது வருடத்திற்கொருமுறை 8, 10 முட்டைகளிட்டுக் குஞ்சு பொரிக்கும். இவ்வினத்தில் ஆஸ்திரியாநாட்டில் ஒருவகை உண்டு. அவற்றிற்கு டேலிகோலி என்றுபெயர். இதன் கழுத்தில் சிறு முட்டைகளைப்போல் தசை உருண்டு மாலைபோல் தொங்குமென்பர். நியூசிலாண்டு, ஆஸ்திரேலியா காடுகளில் ஒருவித வான்கோழி உண்டு அதனை மேக்போடஸ் என்பர். அவற்றிற்குக் கழுத்தில் ரோமம் இல்லை; முகத்திலும் தசை தொங்கும்; புல் முதலியன உணவு; இவை புற்களைப் போர்போல் குவித்து அவற்றினடுவில் 2 அடி ஆழத்தில் முட்டை யிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

ரே, எனும் அமெரிகன் கோழி. இது இக் கண்டத்தில் பிரேசில், கயானு நாடுகளின் சதுப்புநிலவாசி. இதன் கழுத்தில் குறுமயிருண்டு; இதுவும் பறவாது; இது தரையிலும் தண்ணீரிலும் உலாவும்; புல், பூண்டு, தானியம், மீன், பூச்சி முதலிய உணவு. பெட்டைகள் சூரிய வெப்பம் படாத இடத்தில் முட்டையிட்டுச், சூரிய வெப்பத்தில் பொரிந்தபின் குஞ்சுகளுக்கு இரைதேடி யுண்பிக்கும்.

காசோவாரி, இதுவும் வான் கோழியினத்தைச் சேர்ந்த பறவை. ஆஸ்திரேலியா, நியுகினியா முதலிய நாட்டிலுள்ளது. இதில் 8 வகைப்பேத முள்ளவை உண்டு. இது 5 அடி உயரம், உடல் பருத்தும், கழுத்துச்சிறுத்தும்இருக்கும். இதன் உடம்பில் சிறகுகளுக்குப்பதிலாகக் கருமயிருண்டு. ஆண் பறவையின் சிரத்தில் உறுதியான தசைக்கொம்புண்டு. இதன் கழுத்தின் முன் பாகத்தில் தோல் வளர்ந்து தாடிபோல் தொங்குகிறது. இறக்கைகளின் கடையில் முட்பன்றியின் முட்கள் போன்ற முட்களுண்டு. இது காலாலும் முட்களாலும் விரோதிகளை விலக்கும். இது சாகபக்ஷணி. இது, புதர்களில் பசுமையான முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்

கும். இவ்வினத்தில் மற்ருென்று ஏழ என்பர். இது, 6 7 அடிகள் உயரம். இதன் உடல் பருத்து அழகிய சிறகால் மூடப் பட்டிருக்கிறது. இவை, கூட்டமாக வரும். இவைகளும் பூமியில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

நிலக்கோழி (Sand Grouse) இது, கோழியினத்தில் விசித்ரவுருவ முள்ளது. இது பூர்வம் மத்ய ஆசியாவிலிருந்து ஐரோப்பாவில் பரவியது. இது, பல நிறங் கொண்ட சிறகுகள் கொண்டது. இதன் கால்கள் முழுதும் மயிரடர்ந்திருக்கிறது. சிறகுகள் நீண்டு கடையில் முட்கொண் டிருக்கும். இது, நிலத்தைக் கிளறிப் பூச்சுப் புழுக்களைத் தின்னும் இது, தன்னிறத்தை விரோதிகளிடம் வேறுபடுத்துகிறதாம். இது, புதர்களில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

இவ்வினத்தில் பலவகை இருக்கினும் சிலவற்றின் பெயர்மாத்திரம்கூறுகிறேன். அவை ஆங்கிலப் பெயர்களாம். 1. ஹவுடன்ஸ், 2. ஸாலமன் பெவிரொலெஸ், 3-பப் ஆர்பிங்டன், 4. டார்க்டார் கிங்க்ஸ், 5. வில்வர் கிரேடார்கிங்ஹென், 6. வில்வர் டக்விங்யா கோஹாமாகாக், 7. வில்வர் காம்பைன்ஸ், 8. பிரவுன் லெக்ஹாரன்ஸ், 9. கோல்டன் வீபிரைட் லேஸ்ட்காக் 10. ஸ்பாங்கில்ட் ஓல்ட் இங்கிலிஷ் கேம், 11. மாடான் லாங்க்ஷான்ஸ். 12. வ்யான்டாட்ஸ் பிளாக்காக், 13. ஹாம்பர்க் ப்ளாக்காக் அண்ட்பென் வில்ட்ஹென், 14. அன்கோனுஸ், 15. வ்யான்டாட்ஸ் வில்வர் லேஸ்ட்காக் அண்டகோல்டன் லேஸ்ட்ஹென், 16. பார்டிரிட்ஜ் கொசின்ஸ், 17. ஆண்டலூஷியன்ஸ், 18. லெக்ஹாரன்ஸ் ஓயிட்காக் அண்ட்பப்ஹென், 19. பாலிஷ்வில்வர் ஸ்பாங்கில்ட், 20. டக்விங்கேம்காக், 21. பாரெட் பிளெமத்ராக்ஸ் அண்ட் ஓயிட்ராக்ஹென், 22. ரோட் அயலண்ட்ரெட்ஸ், 23. இண்டியன் கேம் பவுல்ஸ், 24. ஸ்பெகில்ட் ஸஸ்ஸெக்ஸ், 25. ஹாம்பர்க்ஸ் வில்வர் ஸ்பாங்கில்ட் காக், 26. பிளாக் மைனுர்காஸ், 27. ஸ்பானிஷ் பவுல்ஸ், 28. பிளாக்ரெட் பான்டாம்கேம், 29. லயிட்பிரம்மாஸ், 30. டார்க் பிரம்மாஸ், 31. வில்கீஸ், 32. ஆர்பிங்டன்ஸ் பினாக்காக் அண்ட ஜூபிளிஹென் மற்றும்பல. இந்தியாவில் சாதாரணகோழி சண்டைக்கோழி, காட்டுக்கோழி, குறுங்கோழி, கானுங்கோழி, சம்பங்கோழி, வான்கோழி, முதலியவுண்டு.

கோழி — உறையூர்க்கொரு பெயர், அரசர் சூளாமணிச் சோழனைக் காண்க. இதிலிருந்த ஒரு கோழி யானையைப் போரில் வென்றமையால் இதற்கு இப்பெயர் வந்தது. (சிலப்பதிகா.)

கோழிவேந்தன்—அரசர் சூளாமணி சோழனைக் காண்க.

கோளகன் — 1. கைம்மையாகிய பார்ப்பினி சோரவேதியனைக் கூடிப்பெற்ற குமரன்.

2. சாகல்யன் மாணுக்கன்.

3. காசுமீர தேசத்து வேதியன், இவன் குமரி குணநிதி, இவளைத் தந்தை கபிச்ச முனிவருக்கு மணம்புரிவித்தான். கபிச்ச முனிவர் விஷந்தீண்டி இறக்க மனைவி தேவி உபாசனையால் சுவர்க்கம் பெற்றனள்.

கோளியூர்கிழார்மகனுர் செழியனுர்—இவர் வேளாண்மரபினர் ஏனைய வெளிப்படை, இவர் பிறயாதுஞ் செய்ததாக இதுவரையில் தெரியவில்லை, இவர் குறிஞ்சித் திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர்பாடியது. நற். ௩௮௩-ம் பாட்டு.

கோள்கள் இராசிகளில் நிற்கும் நிலை — ஜன்மராசிமுதல் கஉ ராசிகளிலும் (சூரியனிருக்குங்காலத்தில்) முறையே ஸ்தான மாறுதல், தனம், ஸம்பத்து, மானஹானி, விசாரம், சத்ருநாசம், பிரயாணம், தேகஜாட்யம், துவேஷம், தர்ம்மானுஷ்டானம், தனலாபம், தனஹானி இவைகளும்; (சந்திரனிற்கில்) நல்லபோஜனம், திரவியநாசம், தனலாபம், வயிற்றுநோய், காரியக்கேடு, தனலாபம், ஸ்திரீலாபம், மரணம், பயம், சவுக்கியம், தனம்விரயம் முறையே இவைகளும்; (குஜனிற்கில்)சத்துருபயம், தனநாசம், லாபம், சத்துருபயம், விரயம் லாபம், துக்கம், மரணம், தேகாபிமானம், தேகசுத்தி, பூலாபம், வியாதியால் நஷ்டம் இவைகளும்; (புதனிற்கில்) பந்தனம், லாபம், ஸம்பத்து, புத்திவிருத்தி, சவுக்கியம், தைரியம், அபிமானம், தனம், ரோகம், புத்திரலாபம், லாபம்விரயம் இவைகளும்; (குருநிற்கில்) பயம், மேன்மை, ரோகம், விரயம், சுகம், சுத்தி, சம்பத்துஹானி, தனம், இடம்மாறுதல், ஸ்தானப்பிராப்தி, பீடை இவைகளும்; (சுக்கிரனிற்கில்) சந்தோஷம், தனம், சுகம், தனம், சந்தோஷம், சத்துருபயம், சுத்தி, திரவ்யலாபம்,

வஸ்திரலாபம், ரோகம், லாபம், தனம் இவைகளும்; (சனிநிற்கில்) பயம், தன ஹானி, மனதிற்பீடை, லாபம், விரயம், துக்கம், லாபம், தேகபீடை, விரயம், மனோவ்யாதி, திரவியலாபம், திரவ்யநாசம் இவைகளும்; (ராகுகேதுக்கள் நிற்கில்) குஜன் நிற்கும் பலமு முண்டாகும்.

கோனடு—சோழநாட்டின் உள்நாட்டுள் ஒன்று (புற. நா.)

கோனாட்டு எறிச்சிலூர் மாடலன் மதுரைக் குமரனார்—ஒரு புலவர், இவராற் பாடப் பட்டோர் சேரமான் குட்டுவன் கோதை முதலியோர். (புற. நா.)

கோனார்—இடையரில் ஒருவகையர்.

கோனேரியப்ப முதலியார்—ஸ்காந்த மகா புராணத்தில் உபதேசகாண்டத்தைத் தமி ழாக்கிய புலவர். தொண்டமண்டலத்திலே காஞ்சிமாநகரின் கண்ணே ஏறக்குறைய ஆயிரத்தொருநூறு வருடங்களுக்கு முன் னே செங்குந்தர் மரபில் அவதரித்தவர்.

கோஷன் — இவன் சூர்யவம்சத்தரசன். இவன் விரல்களில் புழுச்சொரிந்து கொண்டிருந்தது. இவன் ஒருநாள் அயோத் திக்கருகிலுள்ள சூர்யதீர்த்தத்தில் நீராடிப் புழுநீங்கிச் சுத்தமடைந்தனன்.

கோஷமணி — பாண்டு புத்திரனாகிய நகுல ராசன் சங்கம்.

## கௌ

கௌண்டிவ்யர் — ஐந்தாவது புத்தர்.

கௌசலன் — அம்சத்துவசன் குமரன், இவன் கன்னிகாரவனத்தில் வேட்டைக் குச்சென்று அவ்விடம் ஒரு பொன்மானைக் கண்டு பின்றொடர்ந்து அது மறைய அவ் விடம் அற்புதமுள்ள இடமென்று எண் ணிச் சிவபூசை செய்தவன். (பழனித் தல-பு.)

கௌசலை—1. ஸ்ரீ ராமன் தாய், தசரதன் தேவி, தீயில்விழ வலம்வந்த பரதனுக்கு நீதிகூறித் தடுத்தவள்.

2. பூருவின் தேவி, கேகயராசன் புத்ரி.

3. வீமராசன் புதல்வி, கணவன் சந்திர வம்சத்தவனான சுகோத்ரன். குமரன் அஸ் திரன்.

4. அரசர் மீளியின் பாரி.

கௌசல்யன் — தக்ஷணகோசலத்தின் அர சன்.

கௌசவி — தாவபதாராஜன் மனைவி. இவ ளுக்குச் சவுத்தாரமணியென்றும் பெயர்.

கௌசாம்பி — குசாம்பன் கட்டின பட்டி னம்.

கௌசிகம் — உபபுராணத் தொன்று.

கௌசிகர்வரலாறு — தமக்கையும் தங்கையு மாகிய இருவரும் ஒருத்தி இருடிக்கும் மற்றொருத்தி அரசனுக்கும் வாழ்க்கைப் பட்டனர். இவ்விருவரும் புத்திரப்பேறு வேண்டி ருஷியைக் கேட்க ருஷி அவ் விருவர்க்கும் இரண்டு மரங்களைக் காட்டி ருதுஸ்நானமாயினபின் நீங்கள் நான் காட் டிய மரங்களை உங்களுக்குக் காட்டிய வகைக் கட்டி யணைவீராயின் புத்திரப்பே றுண்டாமென்றனர். அவ்வகையே யிரு வரும் ஸ்நானஞ்செய்து ருஷி கூறியவகை செய்யப்போகையில் மறதியால் ருஷி பத் தினி அரசன்தேவிக்குக் கூறிய மரத்தி னையும், அரசன்தேவி ருஷிபத்தினிக்குக் கூறிய மரத்தினையும் தழுவினர். இதனால் முறை பிறழ்ந்து புத்திரர் பிறந்து அரசன் வேதியனாகவும், வேதியன் அரசனாகவும் ஆயினர்.

கௌசிகன்—1. காதிராசன் புத்ரன், இவன் தாய், உடன்பிறந்தாள்கணவனாகிய பிருகு முனிவர் கட்டளை கடந்து முருக்கமரத் தைத் தழுவப் பிறந்தவன். பிறப்பா லரா சனும் செயலால் இருடியும் ஆயினன். இவன் வேட்டைக்குவந்து வசிட்ட காம தேனுவைக் கவர்ந்து வசிட்டருடன் மாறு கொண்டு தவமேற்கொண்டு இராசருஷி யாய் விச்வாமித்ரன் ஆனவன். திருடர், வர்த்தகன் வீட்டிற் பொருள்திருடிச் சேவ கர் துரத்த இவர் வீட்டில் அடைக்கலம் புகுந்தனர். அத்திருடரைக் காவலர்க்குக் காட்டினதால் நரகமடைந்தனர். க்ஷாம காலத்தில் பசியால் புலையன்வீட்டில் மாமி சம் புசித்தவர். வசிட்டர் குமாரராகிய சத்திமுதல் நூற்றுவரை உதிரனென்னு மரக்கனால் கொலைசெய்வித்தவர். அரிச் சந்திரன், வசிட்டரைக் காண்க.

2. நாராயணகவசத்தால் சித்திபெற்று யோகத்தா லுடல்விட்ட ஒரு வேதியன். ஒருகாலத்துச் சித்திராதன் எனுங் காந் தருவன், இரதாரூடனாய் இவனுடல் கிட ந்த வழியாய்ச் செல்லக் காந்தருவன் தலை கீழாய் விழுந்தனன், இதைக்கண்ட வால கில்லியர் காந்தருவனை நோக்கிக் கௌசி கன் உடலெலும்புகளைக் கங்கையில்விடின்

செம்மையடைவாய் என்றனர். அவ்வாறே காந்தருவன்செய்து மீண்டனன். (பாகவத.)

3. சராசந்தன் மந்திரி.

4. பௌண்டரகன் மித்திரன்.

5. ஒரு வேதியன், வசிட்டர் மாணாக்கன், இவன்மீது ஒரு கொக்கு எச்சமிட அதனைக் கோபித்து எரித்து நாம் தவத்தினுயர்ந்தோமென்று இறுமாப்படைந்து ஒரு பதிவிரதையால் பங்கமடைந்தவன். தருமவியாதனிடம் தருமங் கேட்டவன்.

6. ஒரு பிராமணன், காயத்திரி சபத்தால் மேன்மையடைந்து தன் சமபலனை யிக்ஷவாகுவிற்குத் தானஞ்செய்து பிரமபதமடைந்தவன்.

7. சிவகணத்தவன்.

8. ஒரு ஏழை வேதியன், விஷ்ணுமூர்த்தியிடத் தன்புள்ளானாய்த் திருமாலைப் பாடி வீதியிலிரந்துண்டு தன் மாணாக்கரெழுவருக்கு அதைப் பயிற்றிப் பதுமாக்ஷனிடமிருந்தான். இவனைக் கலிங்கராசன் தன் புகழைப்பாடக் கட்டளையிடக் கௌசிகன் திருமாலையன்றிப் பாடோமென, அரசன், தன் கொலுவிலிருந்தாரைப் பாடக் கட்டளையிடப் பாடினதைக் கேட்டுக் கௌசிகனும் அவன் மாணாக்கரும் இனி அரசன் நம்மையும் பாடப் பணிப்பன் என்று நாவை யரிந்துகொண்டு மாய்ந்து மாணாக்கருடன் பரமபத மடைந்தவன்.

9. வசுதேவன் குமரன்.

10. ஒரு வேதியன், சண்டாளசாங்கத்தால் பாவியாய் விஷ்ணுபூசையால் முத்திபெற்றவன்.

11. விண்டுமித்ரனைக் காண்க.

12. சண்பைநகரத்து வேதியன் மாதவிக்கு நண்பனாய்க் கோவலனுக்கு அவள் ஓலையைக் கொடுத்தவன். சுமதியின் தந்தை. (சிலப்பதிகாரம்.) (மணிமேகலை.)

13. பிரதிஷ்டானபுரத்து வேதியன், இவன் குட்டநோய்கொண்டு தன் மனைவியின் கற்பைச் சோதிக்க நான் ஒரு தாசியிடம் ஆசைப்பட்டேன் அவளிடம் கொண்டுபோய்விடுக என்றனன். கணவன் சொற்படி கற்புடையாள் கணவனை யிருளில் தூக்கிச் செல்லுகையில் மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த மாண்டவ்யர்மீது பட்டு வருத்தமுண்டாக்கினள். வருந்திய மாண்டவ்யர் இவள் பொழுதுவிடிய மங்கலமிழக்க என்று சபித்தனர். இதைக் கேட்ட கற்பினி பொழுது விடியாதிருக்க என்றனள். அந்தப்படி பொழுது விடியாததுகண்டு தேவர் முதலியோர் அறிந்து அநசூயையிடம் சென்று இத் துன்பத்தைத்தீர்க்கவேண்ட அநசூயைக் கௌசிகர் தேவியிடஞ்சென்று வேண்டிப் பொழுது விடியச்செய்து தன் கற்பின் பலத்தால் கௌசிகனை நோய்தீர்ந்து எழச்செய்து தேவரிடம் திரிமூர்த்திகளும் புத்திரராகப் பிறக்க வரம்பெற்றனள்.

14. ஒரு வேதியன், இவனுக்குக் கச்ருபன், குரோதன், மிதுநன், கவி, வாக்துஷ்டு, பித்ருவர்த்தி எனப் புத்திரரிருந்தனர். இந்தக் குமரர் தம் தந்தை யிறந்தபிறகு கற்கரிடம் கல்விகற்று க்ஷாமத்தால் வருந்தித் தமது ஆசாரியர் ஓமதேனுவை மேய்க்கையில் பசியினால் அதை யறுத்துத் தின்ன நிச்சயித்தனர். அவர்களுள் பித்ருவர்த்தி, சகோதரரைப் பார்த்து நீங்கள் பசுவைக்கொல்லத் துணிந்தது தகர்த காரியமாயினும் அதனைச் சிரார்த்த காரியத்திற்கு உபயோகிக்கின் நன்றென அவ்வாறே அவர்கள் சம்மதிக்கக் கடைசியவனான பித்ருவர்த்தி யாககர்த்தாவாய் முதலிருதமயரை விச்வதேவத்தானத்தினும், மற்ற மூவரை பித்ருஸ்தானத்திலும், மற்றவனை அதிதியாகவும் இருத்திப் பிதுர் திருப்திக்காகச் சிரார்த்தஞ் செய்தனன். பின் சிறுவர், ஆசாரியரிடம் சென்று பசுவினைப் புலியடித்ததென்று கூறி, மறுபிறப்பில் கோஅத்திசெய்த பாபத்தால் தாழ்ந்தசாதியிற் கோமாம்சத்தைச் சிராத்தத்திற்கு உபயோகித்ததால் ஞானத்துடன் பிறந்தனர். மற்றொரு சன்மத்தில் இவர்கள், காளாஞ்சனமென்னு மிடத்தில் மான்களாய்ப் பிறந்து சிவமூர்த்திக்கு எதிரில் சஞ்சரித்ததால் சக்கிரவாகப் புட்களாய் மானசமடுவை யடைந்தனர். ஒரு நாள் பாஞ்சால தேசாதிபதியாகிய விப்ராசனைக் கடைசிபக்ஷி பார்த்துத் தான் அரசனாயிருக்க நினைக்க மற்ற இரண்டு பக்ஷிகள் மந்திரிகளாயிருக்க எண்ணினர். மற்றவர் நிஷ்காமிகளாயிருந்தனர். பிறகு கடைசிகுமரன் பிரமதத்தன் எனும் பெயருடன் விப்ராசனுக்குக் குமாரனாய்ப் பிறந்து சமஸ்த பிராணிகளின் பாஷைகளை யறியும் சக்திமானா யிருந்தனன். மற்ற இருவரும் விப்ராசன் மந்திரிகளுக்குக் கண்டரீகன், சுவாலன்எனுங் குமாராய்ப் பிறந்தனர். மற்றவர் நிஷ்காமிகளா யிருந்த

தால் வேதியர்களாயினர். அந்தப் பிரமதத்தன், வயதடைந்து அரசேற்றுத் தாங்கள் முன்கொன்ற யாகப்பசு தேவலன் குமரி சந்நிதியாகப் பிறந்திருந்ததை மணந்தனன். ஒருநாள் உத்தியானவநஞ்சென்று ஆண் பெண்ணாகிய இரண்டு எறும்புகள் தங்களில் வாதாடியதை நோக்கப் பெண்ணெறும்பு ஆணிடத்தில் கோபிக்க ஆண் என்ன கோபம் என்று வேண்ட நேற்றுப் பக்ஷணம் வேறொருத்திக்குக் கொடுத்தனை யென்றது. ஆண், காலில்விழுந்து என்னை மன்னிக்கவேண்டுமெனப் பெண் ஆகா! புருஷரை நம்பலாகாது சமயத்திற்குத் தக்கபடி நடப்பர் எனக் கூறக்கேட்டு அரசன் நகைத்தனன். அரசனைநோக்கி அவன் தேவி, நகைத்ததற்குக் காரணம் வினவ ஒன்றுங் கூறாது விரதமிருந்தனன். இப்படி இருக்க மற்ற சகோதரர் பிரமதத்தன் பட்டணத்தில் ஒரு ஏழை வேதியனுக்குக் குமரராய்ப் பிறந்து கிழவனாகிய தந்தையைத் தனித்துவிட்டுத் தவத்திற்குச் செல்லுகையில் தந்தை கிழத்தன்மையில் என்னைவிட்டு நீங்குகிறீர்களே என்று கூறக் கேட்டு ஒரு சீட்டில் தங்கள் பூர்வநிலை எழுதி இதை அரசனுக்குக் காட்டுக என்று சென்றனர். வேதியன், சீட்டினை அரசனுக்குக் காட்ட அரசன், அதிலுள்ள பொருளறிந்து மூர்ச்சித்துத் தெளிந்து வேதியனது மற்றொரு குமரனாகிய விஷ்வக்சேநனுக்குப் பட்டமளித்துத் தவத்திற்குத் தனது மந்திரியருடன் சென்று தனது பழைய சகோதரருடன்கூடி ஐந்தாவது சன்மத்தில் சகோதரருடன் முத்திபெற்றனன். (மச்சபுராணம்.)

15. ஒரு வேதியன், இவன் கங்காயாத்திரை செல்லுகையில் பேய்கள் சந்தித்து எமது பிறப்பொழிக்க என வேண்ட அவற்றின்பொருட்டுக் கங்கையிலும் மணிகன்னிகையிலும் தீர்த்தமாடிப் பிறப்பொழித்தவன். (வேதாரண்யபுராணம்.)

கௌசிகி — ஓர் நதி, சத்தியவதியைக் காண்க. இதில் பாண்டுபுத்திரர், தீர்த்தயாத்திரை செய்கையில் உரோமசமுனிவர் ஏவுதலால் ஸ்நானஞ்செய்து பவித்ரமடைந்தனர். இராமமூர்த்தி மிதிலைக்குச் செல்லுகையில் தாண்டப் பெற்றது. மகா பரிசுத்தமுள்ளது.

The river Kusi is a large tributary of the ganges from the north.

கௌசிகிதேவி—கௌரியின் உடலிற் பிறந்து சும்பநிசும்பரையும், சண்டமுண்டரையும் கொன்றவள்.

கௌசிகிபீடம் — சத்தி பீடங்களில் ஒன்று.

கௌசிகை — காதி குமரி, விச்வாமித்ருக்குத் தமக்கை, கௌமதி நதியானவள். இருசிகரைக் காண்க.

கௌச்சிகர்—குச்சகமுனிவர் புத்திரர், விஷ்ணுவையெண்ணித் தவம்புரிந்தவர். இவர் விருத்தை யென்பவளை மணந்து மிருகண்டு என்பவனைப் பெற்றார்.

கௌடம்—(இ) சுத்தகௌடம், காளகுப்சம், சாரசுவதம், உற்கலம், மைதுலை.

கௌடநெறி — வைதருப்பநெறிக்கு மாறாக வருவதாகிய செய்யுணெறி.

கௌடபாதாசார்யன்—சுகருஷிக்குச்சீடன்.

கௌடபாதர் — வேதாந்தியாகிய ஒரு ஆசிரியர். சுகருக்கு மாணக்கர் என்பர். இவர் மாணக்கர் கோவிந்தபகவத் பாதாசிரியர். இவர் உத்தரகீதைக்குப் பாஷ்யம் எழுதினவர்.

கௌடபுரி — வங்கதேசத்திலுள்ள ஒரு பட்டணம். இதில் சந்நுமகருஷி ஆச்சிரமம் இருந்தது. இது தற்காலம் வங்காளநாட்டைச் சேர்ந்தது.

கௌடர்கோன் — வடநாட்டரசன். இவன் பௌத்தன், இவன் திருநெல்வேலியில் வந்து கோயிலுக்குட்சென்று மண்டபத்திருந்த கற்சிலையாகிய நந்தியுருவத்தைக் கண்டு இது புல் தின்னுமோ என்று கேட்டு அங்கிருந்தவரைப் புல்லும் நீரும் வைக்கக் கூறினன். அங்கிருந்தோர் அவ்வகை செய்ய அரசன் இப்புல்லைத் தின்று நீரை யுண்ணின் உங்கள் தெய்வம் மெய்த்தெய்வம் என்றனன். அந்தப்படி நந்தி புல் தின்று நீர் அருந்தியது. பின்னும் அங்கிருந்த மூங்கிலைக் கண்டு இது வேறு புஷ்பம் புஷ்பிக்குமோ என்ன அது தாமரை முதலிய பல புஷ்பங்களைத் தந்தது. பின் கொன்றை விருக்ஷத்தை நோக்கி இது வில்வமரமோ என அது அவ்வகையாகக் கண்டு சைவன் ஆனவன்.

கௌணம்—எப்பதம் எப்பொருளை லக்ஷணை விருத்தியினா லுணர்த்துகின்றதோ அது.

கௌணியர் — 1. கடைச்சங்கப் புலவருள் ஒருவர்.

2. ஒரு கோத்திர வேதியர். இக்கோத்திரத்தில் திருஞானசம்பந்தமூர்த்திகள் அவதாரம்.

**கௌணியன் விண்ணந்தாயன்** — ஆவூர் மூலங்கிழாரால் பாடப்பெற்றவன்.

**கௌண்டின்யர்**—ஒரு முனிவர், பாரி சீலை. இவ்விருவரும் அநந்தபத்பநாப விரதம் அனுட்டித்துச் சித்தியடைந்தனர். இவர் தேவி ஆசிரியை எனவுங் கூறுவர்.

**கௌண்டின்ஸியன்** — திரவிய ஆசையால் தன் பாரியை நீக்கினவன். (பிரகன்னாரதீய புரா.)

**கௌண்டினியம்**—ஒரு பட்டணம், விதர்ப்ப நாட்டிலுள்ளது. தற்கால மிந்தநாட்டை பீடார் என்பர்.

**கௌண்டேசூரகவி** — லோக சூடாமணி செய்த சைநகவி.

**கௌதமர்** — A. 1. தீர்க்கதம முனிவர்க்குக் குமரர், மனைவி அகலிகை, குமார் சதாநந்தர், கிருபாசாரியனுக்குப் பாட்டன். மனைவி இந்திரனால் விபசாரதோஷ மடைந்ததுபற்றிக் கல்லாகச் சபித்து அவள் வேண்ட இராமமூர்த்தியின் திருவடித்துகளால் முன்னுருப்பெற்றுத் தம்மையடைய அருள்புரிந்த தவச்சிரேட்டர்.

2. கர்னனுக்கும் அருச்சுநனுக்கும் நேர்ந்த யுத்தத்தைத் தடுத்தவர்.

3. இவர் தாயிலா யானைக்குட்டியை வளர்த்து அதனை இந்திரன் திருதராட்டிரவுருக்கொண்டு யாசிக்கக் கொடுத்துத் தானுஞ் சென்றவர்

4. ஒருகாலத்தில் பன்னிரண்டுவருடம் மழைவறப்ப் முனிவர்கள் இவரிடத்து வந்தனர். முனிவர், அவர்களுக்குக் காமதேனுவைக் கொண்டு உணவளித்தனர். உலகம் மழைபெய்து தளிர்ப்பத் தங்கள் இருப்பிடமெண்ணிச்செல்லு முனிவர்கள், தாமே மாயையால் பசுவினைக் கொன்று கௌதமர்மேல் பழிசுமர்த்தி, கோஅத்தி செய்தவனிடம் இருத்தலாகாதென நீங்கக் கௌதமரறிந்து இப்பழி செய்தார் மண்ணிட்டு நரகத்திலழுந்துகவெனச் சபித்தனர்.

5. தம்மை வஞ்சகத்தால் நீங்கச்செய்து தம்முருக்கொண்டு தமது தேவியின் கற்பினைக் கெடுத்த இந்திரனைத் தேகமெங்கும் பெண்குறி யடையவும், பீஜமறவும் சபித்துத் தேவரும் அவனும்வேண்ட அவனுக்குத் தன் தேகமுழுதும் பெண்கள் குறிபோல் தோற்றவும் மற்றவர்க்குக் கண்களாகத் தோன்றவும் அருள்புரிந்தவர்.

6. தேவர் பாற்கடல் கடைகையில் பிறந்த அகலிகைபொருட்டுத் தேவர் பலரும் ஆசைப்பட்டனர். விஷ்ணுமூர்த்தி தேவரையும் மற்றவர்களையும் நோக்கி இந்தப் பாற்கடலில் யாவர் மூழ்கி நெடுநாள் பொறுத்து வருகின்றனரோ அவர்க்கு இவள் உரியவள் என்றனர். அந்தப்படி தேவர் பலரும் கடலுள் மூழ்கிச் சிலநாட்களுள் வெளிவந்தனர்; கௌதமர் கடலுட்சென்று நெடுங்காலம் பொறுத்து வெளிவந்ததால் அகலிகையை இவர்க்கு அளித்தனர்

7. இவர் முயலிடம் பிறந்தவர் என்பர். இவர் ஆச்ரமம் மிதிலைக்குப்போம் வழியிலுள்ளது.

8. ஒருகாலத்துப் பன்னீராண்டு பஞ்சம்வர இருடிகள் இவரையடைய இருடிகள்பொருட்டு அவர் ஒரு பிடி நெல்லை விதைத்து அனுட்டானஞ்செய்து முடித்து வருவதன்முன் அது விளைந்து பலன்றர அதனால் இருடிகளை யாதரித்து வந்தனர். நாடு மழையால் வளம்பெற்றபின் இருடிகளைத் தம்மிருக்கை யேகக் கட்டளையிட அவர்கள் கௌதமரையும் உடனழைத்தனர். இருடி மறுத்ததனால் இருடிகள் கௌதமர் பயிரைமேய ஒரு மாயப்பசுவை நியமித்து விட்டனர். அதனைக் கண்ட கௌதமர் ஒரு தருப்பையை யேவிப் பசுவைக் கொன்றனர். அதனால் இருடிகள் கோவத்தி செய்தானென்று சாந்திராயண விரத மனுட்டிக்கச் செய்தன. இதைக் கௌதமபசு நியாயமென. [illegible] ம்வழங்கும்.

9. ஒருகாலத்து க்ஷாமம்வர ஆற்றுத கௌதமர் வருணனை வேண்டித் தீர்த்தம் பெற்றுத் தம் பத்தினியுடன் வாழ்ந்து வந்தனர். இதனையறிந்த இருடிகளும் இருடிபத்தினியரும் அவ்விடம்வந்து வசிக்கையில் அகலிகைத் தீர்த்தத்தைக் கலக்கும் இருடிபத்தினிகளைக் கடிய இதனையறிந்த இருடிகள் கௌதமரை யிடம்விட்டுப் பெயர்க்க எண்ணிக் கணபதியைப் பசுவாக வரச்செய்து கௌதமரது கோதுமைப்பயிரை மேயச்செய்தனர். இதனைக் கண்ட கௌதமர் ஒரு புல்கொண்டு அதனை யோட்டப் பசு வீழ்ந்திறந்தது. இதனால் அவ்விடமிருந்த இருடிகள் கௌதமரைக் கோஅத்தி செய்தவன் என்று நிந்தித்ததுணர்ந்து கௌதமர் அவ்விடம்விட்டு நீங்கிச் சிவபூசை செய்து கங்காதரிசனஞ் செய்து அக்கங்கையைத் தமதிருக்கையிலிருக்க வேண்டிக் கொண்டனர். (சிவ

மகாபுராணம்). இது கௌதமி எனவும் படும்.

10. தாம் தம் மனைவிக்குச் சாபங் கொடுத்துத் தவமழிந்து இருத்தலையெண்ணி விசனமடைந்து சிவனையெண்ணித் தவமியற்றிக் கோதாவிரியைப் பெற்றுத் திரியம்பகத்தில் அன்னதாதாவா யிருக்கையில் பல முனிவர்கள் இவரிடம் வந்து பசிதீர்ந்திருந்தனர். இவ்வகையிருக்கப் பெருமழை பெய்து பன்னிரண்டு வருஷ க்ஷாமமொழிந்து அந்தணர்கள் தங்கள் ஊர்க்குச் செல்ல விடைகேட்க இவர் அவர்களை யிங்கிருந்து சிவதரிசனஞ் செய்துகொண்டு என் அன்னத்தைக் கைக்கொண்டு என்னைப் புனிதனுக்கலாமென அவ்வாறிருந்து மீண்டுங் கேட்கையில் இத் தனுர்மாதத்தில் ஒருவேதியர்க்கு அன்னமிடின் அதிக பலனெனக் கூறியிருத்தலால் இம்மாதம் இவ்விடமிருந்து செல்க எனப் பிராமணர் தங்கள் நிலவளங்கள் முதலியவற்றை யெண்ணிக் கவலுகையில் சிலர் தங்கள் மந்திரவலியால் பசுவொன்று சிருட்டிசெய்து கௌதமர் வயலில் மேயவிட அது பயிரில் நிற்கக்கண்ட கௌதமர் ஒரு புல் கொண்டெறிய அது நீங்காததுகண்டு ஓர் நார் எடுத்து அதட்ட அப்பசு அந்த நாரின் அடியால் பூமியில் வீழ்ந்து மாய்ந்தது. இதனைக்கண்ட வேதியர் கௌதமர் கோஅத்தி செய்தனர்; இனி அவர் அன்னத்தை உண்ணலாகாதென அவதூறு கூறுதலை ஞானநோக்கத்தால் வேதியர் தீச்செய லென்றறிந்து இனி நீங்கள் சிவப்பிரியர் அல்லாதவர்களாய் மண்பூசுவோர் ஆக எனச் சபித்தனர். (சிவாகஸ்யம்.)

B. சாக்யனுக்கு ஒரு பெயர்.

C. கணாதனுக்கு ஒரு பெயர்.

D. இவர் தாசியினிடம் வத்சப்ரியர், ஸ்தூலாச்மி, அக்ஷணியெனும் புத்திரர்களைப் பெற்றனர். (பார - அநு.)

கௌதமன் — 1. இவரது ஆச்சிரமத்திற்கு விநாயகர் ஜயன் என்பவனைப் பசுவுருவாக ஏவி உயிர்விடச் செய்தனர். இதனை அறிந்த கௌதமர், கோக்கொலை நீங்க விநாயகராஞ்ஞையால் கங்கையாத்திரை சென்றனர். இவர் நீராடின காரணத்தால் கங்கை கௌதமியெனப் பட்டனள. (பிரமபுரா.)

2. ஒரு வேதியன் ஒழுக்கம்கெட்டு வேடச் சேரியிற் சென்று புலால் புசித்து அவ்விடம் நீங்கிச்சென்று பொருள்பெற ஒரு காட்டில் ராஜதர்மனெனும் நாடிசங்கப்பெயர்பெற்ற கொக்கால் உபசரிக்கப்பெற்று அந்தக் கொக்கால் விரூபாக்ஷன் எனுந் தன் நண்பனிடம் ஏவப்பெற்றுப் பெரும்பொருள்பெற்று வழிக்கு உணவின் பொருட்டு உபகரித்த கொக்கைக் கொன்று போகையில் நாடி சங்கன் தன்னிடம் வராமையால் விரூபாக்ஷன் கொக்கைக் கொன்றுனென அறிந்து அவனைப் பிடித்துவந்து கொக்குடன் தகனஞ் செய்கையில் இந்திரன் ஏவலால் காமதேனு பால்பொழிய நாடிசங்கன் உயிர்பெற்று எழுந்தது. கௌதமனும் பால் தெறித்ததால் உயிர்பெற்றெழுந்து வேடச்சேரி யடைந்தான். ராஜதர்மன் எனும் பக்ஷி விரூபாக்ஷனை யடைந்தது. இந்த ராஜதர்மன் எனும் நாடிசங்கன் பிரமனால் கொக்குருவாகச் சாபம் பெற்றவன். (பார - சாந்தி.)

3. (1) ஒரு பிராமணன் ; (2) மித்திர துரோகம் செய்தவன் ; (3) திருதராஷ்டரனுடன் விவாதம் செய்தவன்; (4) கோதம கோத்திரத்தில் உதித்த சிரகாரியன் தந்தை.

கௌதம புத்தன் — ஒரு புத்தன்.

கௌதமி — 1. அசுவத்தாமன் தாய், துரோணர் மனைவிக்கு ஒரு பெயர், கிருபி எனவுங் கூறுவர். கௌதமனைக் காண்க.

2. கோதாவிரி நதிக்கு ஒரு பெயர்.

3. இது கௌதமர் வேண்டுகோளால் வந்த கங்கை. இது பிரமகிரியிலிருக்கும் அத்திமரத்தின் வேரிலிருந்துண்டானது. இது தோன்றிய இடம் கங்காத்வாரம் எனப்படும். (சிவமகாபுராணம்.)

4. ஒரு பிராம்மண கிழவி தன் மகன் பாம்பு கடித்திறக்க அருச்சுநன் எனும் வேடன் அப் பாம்பைப் பிடித்துவந்து அதனைக் கொல்லக்கூற அவனுக்குப் பாம்பினிடம் குற்றமிலாமை தெரிவிக்கவும் அவன் பிடித்த பிடியாகக் கொல்லக் கூறப் பாம்பு மனிதவார்த்தையால் தன் மீது குற்றமிலாமை தெரிவிக்கக் கேளாததால் யமனும் காலக்கடவுளும் கர்மம் காரணமென்று கூறக்கேட்டுப் பாம்பை விட்டனன். (பார - அநு.)

5. கௌசல்யையிடம் சூர்யவிரத மாகாத்மியங் கேட்டு நோற்று நன்மையடைந்தவள். (பவிஷ் - புரா.)

கௌத்துவம் — திருப்பாற்கடலில் தோன்றிய மணி. இதனை விஷ்ணுமூர்த்தி மார்பணியாகக் கொண்டனர்.

கௌதமை — கலாவதியைக் காண்க.

கௌமதி — கௌசிகை அல்லது இரிசிகரை காண்க.

கௌமாரி — சத்தமாதாக்களுள் ஒருத்தி. மயில் வாகனத்தை எறினவளாய்ச் சிவப்பு வஸ்திரம் அணிந்தவளாய்ச் சூலம், வேல் முதலிய ஆயுதமேந்தி யிருப்பவள்.

கௌராமுகன்—1. சமீகன் சீடன். பரிச்சித்தின் பொருட்டு நாகம் வாராமல் வெளியில் காத்திருந்தவன்.

2. சாம்பனுக்குச் சந்திரபாக தீர்த்தமகிமைகூறிச் சூர்யபூஜை செய்வித்த புரோகிதன். (பவிஷ் - புரா.)

3. ஒரு அரசன் இவன் விஷ்ணுவையெண்ணித் தவமியற்றிச் சர்வசித்தியடைந்தவன். இவன் தவமியற்றிய இடம் கௌமிஷாரண்யம்.

கௌரவதி — இந்திரப்பிரத்தித்திற் கருகிலுள்ள ஒரு நதி.

கௌரவர் — 1. குருவம்சத்தவராகிய சந்திர குலத்தரசர்.

2. கௌரி சிவமூர்த்தியை யெண்ணித் தவமியற்றியகாலத்து அவள் திருக்கரத்தில் வளையிலிட்டதால் இப்பெயரடைந்த ஒருவகைச் சாதியர். இவர்கள் தற்காலம் கவரைகள் எனப்படுவர். இவரை வளையற்கார கவரைகள் என்பர்.

கௌரவன் — சுகர் புத்திரன்.

கௌரவாம்பாள் — விஷ்ணுவை ஆராதித்து இஷ்டசித்தி பெற்றவள்.

கௌரவியன் — ஓர் நாகராஜன், ஐராவதன் என்னும் நாகன் வம்சத்தவன். இவன் பெண் உலூபி மருமகன் அருச்சுநன்.

கௌரவி — உதிஷ்டிரான் தேவி, குமரன் தேவகன்.

கௌரான்—குசிகனுக்குப் பீவரியிடம் பிறந்தவன்.

கௌரி—1. சிவமூர்த்தி லீலையாய்ப் பிராட்டியைக் காளியெனக், கோபித்து அந்த உருநீக்கி வெள்ளிய மேனிகொண்ட பார்வதியார் திருவுரு. பார்வதிபிராட்டி விட்டவுரு கௌசிகிதேவி ஆயிற்று.

2. விரூபாக்ஷன் எனும் வேதியனுக்குச் சுபவிரதை யெனுந் தேவியிடம் பிறந்தவள். தனது ஐந்தாம்வயதில் பிறவிப்பிணி நீங்கத் தந்தையைக்கேட்டு அவன் உபதேசித்த கௌரிமந்திரத்தைச் செபித்து வருகையில் பெண்ணுக்கு மணப்பருவம் வருதலறிந்து தகுந்த கணவன் விரைவில் காணாமல் பிக்ஷைக்குவந்த கொடிய வைஷ்ணவ வேதியனுக்குத் தாராதத்தம் செய்தனன். கௌரி அவனுடன் சென்று மாமி மாமன்மார் வைணவராதலால் அவர்கள்செய்ததீங்கைப் பொறுத்திருந்தனள். ஒருநாள் எல்லாரும் அயலூரில் நடக்கும் கலியாணத்திற்குச் சாமான் முதலியவைகளை வீட்டில்வைத்துப் பூட்டிட்டுக் கௌரியைத் தனியேவிட்டுச் சென்றனர். கௌரி தனியிருந்து நான் எனதுதாய்வீடுவிட்டு வந்தநாள்முத லிதுவரையில் ஒரு சிவனடியவரைக் காணேன் என்று கவலையடைந்திருந்தனள். சிவமூர்த்தி ஒரு திருவிளையாடல் கருதி விருத்தராய்த் தோன்றி அன்னம் வேண்டினர். கௌரி, மாமன்முதலியோர் கதவுகளைப்பூட்டிட்டு அயலூர்க்குப் போயிருத்தலை அறிவித்தனள். விருத்தர் அம்மே நீர், பூட்டில் கைவைக்குமுன் கதவுதிறக்கும், விரைவில் பசிதீர்க்க என்றனர் கௌரி அவ்வாறு செய்து விரைவில் அன்னம் படைத்தனள். சிவனடியவர் அதனையுண்டு விருத்தப்பருவம் நீங்கிக் குமாராயினர். கௌரி கண்டு நடுங்கி யொருபுடை யொதுங்கிநிற்கையில் மாமி மாமன்மார் வருதலறிந்து குமார் குழந்தையாய் அழுதனர். மாமி மாமன்மார் எதுகுழந்தை யெனத் தேவதத்தனும் மனைவியு மீண்டுவந்து சற்றுப் பார்த்திருக்கச்சொல்லிச் சென்றனர் என மாமன்முதலியோர் நீ சிவனுக் கன்புடையை யெங்களுக் காகாய் என்று குழந்தையுடன் வீட்டைவிட்டுநீக்கக் கௌரி வெளிவந்து கௌரிமந்திரத்தைத் தியானிக்கச் சிவமூர்த்தி இடபாரூடராய்த் தரிசனந்தந்து கௌரியை அருகிருத்தித் திருக்கைலைக்கு எழுந்தருளினர்.

3. வருணன் தேவி.

4. ஒரு நதி. A tributary of the Kabul river.

5. மகாசுவேதையின் தாய்.

கௌரிகன்—இவன் ஒரு ராஜருஷி. சுபாகு எனும் அரசனுக்குப் பாகுதையெனும் நதியிடம் பிறந்தவன் (பார-அநுசா.)

கௌரிகாந்தசார்வ பௌமபட்டர் — ஆநந்தலகரிக்கு வியாக்கியானஞ் செய்த ஒரு வேதியர்,

கௌரிசிகரம் — இமயமலையில் பார்வதிபிராட்டியார் சிவமூர்த்தியையெண்ணித் தவஞ்செய்த சிகரம்.

கௌரி பஞ்சாங்கம் — நாள் க-க்கு முகூர்த்தம் (அ) முகூர்த்தம் க க்கு நாழிகை (3¾) நன்மையான வேளையில் யாதொரு காரியஞ் செய்ய நன்று.

நாயிறு. பகல் - உத்யோகம், லாபம், விஷம், அமுதம், சுபம், தனம், அமிருதம், ரோகம். இரவு - தனம், சுகம், சோரம், விஷம், கலகம், அமுதம், லாபம், ரோகம்.

திங்கள் பகல் - அமுதம், விஷம், உத்யோகம், லாபம், கோரம், சுகம், ஆதாயம், தனம். இரவு - ரோகம், லாபம், உத்யோகம், தனம், ரோகம், அமுதம், விஷம், சோரம்.

செவ்வாய் பகல் - ரோகம், உத்யோகம், சோரம், லாபம், அமுதம், உத்யோகம், விஷம், தனம் இரவு - சோரம், உத்யோகம், விஷம், லாபம், சோரம், தனம், சுகம், அமுதம்.

புதன். பகல் - விஷம், அமுதம், சுகம், உத்யோகம், சோரம், லாபம், தனம், அமிருதம் இரவு - லாபம், ரோகம், விஷம், உத்யோகம், சுகம், அமுதம், தனம், லாபம்.

வியாழம். பகல் - உத்யோகம், விஷம், சோரம், லாபம், அமுதம், ரோகம், கலகம், சோரம். இரவு - சுகம், ரோகம், கலகம், லாபம், உத்யோகம், சோரம், தனம், உத்யோகம்.

வெள்ளி. பகல் - ரோகம், சோரம், அமுதம், விஷம், லாபம், சுகம், தனம், அமுதம். இரவு - அமுதம், சோரம், விஷம், லாபம், சுகம், தனம், உத்யோகம், ரோகம்.

சனி. பகல் - விஷம், அமுதம், ரோகம், உத்யோகம், சுகம், லாபம், தனம், லாபம். இரவு - விஷம், உத்யோகம், சுகம், அமுதம், கலகம், ரோகம், அமுதம், லாபம்.

கௌரீலீலாசமன்விதம் — சிருட்டியாதிகளில் ஆத்மாக்கள் களிப்புறத் தாம் கௌரியுடன் கூடியிருந்த சிவமூர்த்தியின் திருவுரு.

கௌரீவரப்பிரதம் — கௌரிக்கு வரமளிக்கத் தோன்றிய சிவமூர்த்தியின் திருவுரு.

கௌர்ச்சன் — குர்ச்சகோத்திரத்து வேதியன். இவன் மகாபாபியாய்ப் பரஸ்திரீகமனத்தால் தூராசாரனாயிருந்து உயிர்நீங்கி யமவாதனை யடைதலை நாரதர்கண்டு குமரனாகிய சுகுர்ச்சனுக்குக் கூறிச் சித்திரா நதியில் மாசிமாதத்தில் ஸ்நானஞ்செய்த பலனில் ஒரு சிறிது தந்தைபொருட்டு ஸ்நானஞ்செய்யக்கூற அவன் அவ்வகை செய்து தந்தையை நரகத்தினின்றும் நீக்கினன்.

கௌன்மிகன் — 1. யாமங்காப்போர் தம் செயலின் விழிப்புடையாரா யிருத்தலை அறிபவன்.

2. (கூ0) காலாட்களுக்குத் தலைவன். (சுக்ரநீதி.)

கௌஷ்டபர்வதம் — இமயமலைக்கருகிலுள்ள மலை.

கௌஸ் — பித்ருக்களைக் காண்க.

கௌவ்யம் — (இ) கோசலம், கோமயம், பால், தயிர், நெய் இவற்றுடன் கோரோசனம் சேர, ஷட் கௌவ்யம்.

கௌஷீகதி — இருக்குவே தசாகையின் பெயர்.

## ச

சககமனம் — உயிரிழந்த கணவனுடன் தன்னுயிரைவிட நிச்சயித்துத்தீப்புகுதல். மாசுமூடியபொன்னை அக்கினி அம்மாசைமாத்திரம்போக்கிப் பொன்னைக் கெடுக்காமைபோல், கொழுநனோடு உயிர்விடும் புண்ணியவதியின் மேனியைமாத்திரம் அவ்வக்கினி தகிப்பானேயன்றி அவளைச்சிறிதும் வருத்தான். அனைவரையுந் துறந்து கணவனே தெய்வமென்றும் அவனைப் பிரிந்து வாழ அடுக்காதென்றுமெண்ணிப் புருஷனுடன் உயிர்விடும் உத்தமியை ஒப்பானவர் உலகத்தில் யாருளர். சககமனம் செய்த புண்ணியவதி மூன்றரைக்கோடி தேவவருஷம் மகிழ்நனோடு சுவர்க்க போகத்தை அனுபவித்துப் பின்பு தானும் கணவனும் வெவ்வேறு யோக்யரின் குலத்தில் சனித்து மீண்டும் ஒருவரை ஒருவர் மணந்து இன்பந் துய்த்து யோக மகிமையால் மேன்மையுற்று நற்கதி அடைவர். (கருடபுராணம்.)

சகசன்யா — ஒரு அப்சரசு.

சகச்சாரம் — (காஞ்சி.) பரத கண்டத்தில் உள்ள தலங்களில் சிறந்தது.

சகச்ரசித் — ராஜரிஷி, கேகய ராஜனாகிய சுதருபனுக்குப் பாட்டன்.

சகச்ரபாதன் — உடுண்டுபனைக் காண்க.

சகச்வான் — அம்பரீஷன் புதல்வன்.

சகடதோஷம் — குரு நின்ற ராசிக்கு (கூ)-இல், (அ)-இல், (கஉ)-இல் சந்திரன் நிற்கப்பட்ட இராசியின் நாள் சகடதோஷமாம். இந்த நாட்களில் சுபகன்மங்கள் செய்யக்கூடாதாயினும், சந்திரனும் குருவும் சுபாங்கிசத்தில் நிற்றல் ஒரு சுபகோள் சந்திரனைப் பார்த்தல், சந்திரன் ஆட்சி யச்சத்தினிற்றல் சுபக்கோளுடனிற்றல் செய்யின் ஷை தோஷமில்லை. (விதான

சகடவூகம் — கௌரவர் பொருட்டுத் துரோணசாரியரால் யுத்தத்தில் செய்த அணிவகுப்பு இதற்குப் பத்மவியூகம் என்று ஒரு பெயர்.

சகடாசாரி — சாகடாயனம் என்னும் வடநூல் இயற்றிய புலவன்.

சகடாசூரன் — கம்சன் ஏவலால் கிருஷ்ணமூர்த்தி தொட்டிலில் இருக்கையில் பாண்டிலின் உருவாய்வந்து வஞ்சனை இயற்றக் கண்ணன் குழந்தைகள் காலால் இயற்கையாய் உதைப்பதுபோல் உதைக்க அவ்வுதை பட்டு மாய்ந்த அசுரன்.

சகதேவத்தண்டநாதர்—வசவர்காலத்திருந்த சங்கமர். இவர் வசவரை மகேசுரபூசைக்கு அழைக்க வசவர் இவர் பலிகளைப் புசித்தல் உணர்ந்து அவரால் வெறுக்கப்பட்டவர்.

சகதேவமல்லன் — ஒரு விஷ்ணு பக்தன். சங்கரதாசர் நெற்றிக் கண்ணால் நரசிங்க விக்கிரகம் இழந்தவன்.

சகதேவன் — 1. பாண்டு புத்திரன். மாத்திராதேவிக்குக் குந்திதேவி உபதேசித்த அச்சுவனி தேவ மந்திரத்தால் பிறந்தவன். இவன் தேவி விசையை, இவளிடத்துச் சுகோத்ரன் பிறந்தனன். இவனது மற்ற குமரன் சுதகர்மா. இவன் பாண்டவர் நால்வருக்கும் முன் இறந்தனன். ஏனெனில் தன்னினும் சாத்திரத்தில் மிகுந்தார் இல்லை யெனச் செருக்குக் கொண்டதாலென்க.

2. (பிர.) சாரசந்தன் குமரன். இவன் குமரன் சோமாபி அல்லது சோமகன் அல்லது மார்ச்சாரி.

3. (சூ.) தாம்பிராக்ஷன் குமரன்.

4. (ச.) அரியசுவனன் குமரன். இவன் குமரன் பீமன்.

5. சுதாசனன் குமரன். இவன் குமரன் சோமகன்.

6. சிரஞ்சயன் குமரன். இவன் குமரன் குசாசுவன்.

7. (சூ.) தேவ சேனாதிபதியாகிய பானுவின் குமரன்.

8. ஒரு அசுரன் சம்பகாசுரன் புதல்வன். சகதேவனாகிய பாண்டு புத்ரனால் செயிக்கப்பட்டவன். (பார - சபா.)

சகதேவி — வசுதேவன் பாரி. குமார் புரவி, சுரதன் முதலியோர். தேவகன் பெண்.

சகத்திரகோதானம் — (கOக) கழஞ்சு பொன்னால் (க,000) பசுவும் கன்றும் காற்குளம்பு வெள்ளியிற் செய்வித்து (ரு) கழஞ்சுபொன் தக்ஷிணையுடன் (க,000) வேதியர்க்குச் சிவபூசை செய்து அளிப்பது.

சகத்திரசித்து — 1 ஒரு யாதவ வீரன். பஜமானன் குமரன்.

2. (பிர.) யதுகுமரன், இவன் குமரன் சத்ருஜித்.

சகத்திரபாதன் — ஒரு ரிஷி.

சகத்திரசோதி — விவஸ்வதன் புத்திரன்.

சகத்திரதாரை — அயோத்தியிலுள்ள தீர்த்தம். இது இராமகோபத்திற்கு அஞ்சி இராம கங்கையாகிய சரயுவில் மூழ்கி எழுந்த இலக்குமணரது பண்டைய உருவமாகிய ஆயிரம் முகத்தில் தோன்றியது.

சகத்திரதேவன் — பாரத வீரரில் ஒருவன். இவன் பாண்டியனுடன் பாரத யுத்தத்தில் எதிர்த்தவன்.

சகத்திரபாதன் — ஓர் இருடி: இவன் விளையாட்டாகத் தன் நண்பனாகிய ககமுகன் மீது செய்த பாம்பைவிட அவன் பயந்து நீ பாம்பாக எனச் சபித்தனன். இவன் இச்சாபத்தால் சிலநாள் பாம்பாக இருந்து இருருவால் சாபம் நீங்கினன். இருருவைக் காண்க.

சகத்திராநீகன் — 1. சதாநீகன் குமரன். இவன் குமரன் ஆஸ்வமேதகன்.

2. மார்க்கண்டரிடம் புராணங் கேட்ட மாணாக்கன்.

3. விராமனைக் காண்க.

சகநந்தனன் — ஒரு சாரணன்.

சகநாள்—பிரமன் புத்ரி.

சகந்நாதம்—ஒரு விஷ்ணு ஸ்தலம். கண்ணன் அரசாகிய துவாரகை கடல்கொண்டகாலத்து வெந்துகொண்டிருந்த கண்ணன் தேகம் வெள்ளத்தில் ஒதுங்கிய தலம். இந்தத் தேகத்தைத் தாருவில் பொதிந்து பூசித்துவரும் தலம், இத்தலத்தில் எழுந்தருளிய மூர்த்திகள் தாரு மூர்த்தியாகிய திருமால், பலபத்திரர், சுபத்திராதேவி, யோககாசிம்மர், அ. சிவ

மூர்த்தங்கள், அ. சக்திகள் பலதீர்த்தங் கள்.

சகந்நாதபாண்டியன் — அரிமர்த்தனபாண் டியன் குமரன்.

சகந்தரை—ஒரு தேசம்.

சகந்திரதேவன்—ஒரு அரசன்.

சகமார்க்கம் — இது புலனெடுக்கி உச்வாஸ நிஸ்வாஸங்களை யடக்கி, ஆருதாரங்களி னிலையுணர்ந்து நாபித்தானத்துக் குண்டலி சத்தியுருவாகிய அமுதத்தையுருகச்செய்து மற்றை யாதார பதுமங்களை யதனைக்கொ ண்டு பேதித்து மேற்சென்று விந்துதான த்து வழியிறங்கி அமுதத்தை யுடலில் நிறையச்செய்து சோதி ஸ்வரூபமாகிய சிவத்தைத் தியானித்திருத்தலாம்.

சகமித்திரர்—இவர் பரளி எனுமூரில் வேதி யர்குலத்திற் பிறந்து தானியம் யாசித்து வாழ்ந்துவருநாளில் அவ்வூரிலுள்ளோர் இவரது மகிமையறிந்து சிலர் வந்தனை செய்தனர். இவரிடத்தில் பகைகொண்ட வேறு சிலர் இவரிடம் வாதிட்டு ஒருநா ளிவருறங்குகையில் வீட்டைக்கொளுத்தி னர். இதையறிந்த சகமித்திரர் பெரு மாளை நோக்கி நீயே காக்கவேண்டுமெ ன்று துதித்தனர். பெருமாள் சக்கரத்தை யேவிச் சகமித்திரர்க்குத் தீயினுல் தீங்கில் லாமல் காத்தனர். அண்டை அயலிலுள் ளார் சகமித்திரன் குடும்பமாய்ந்ததெனக் கூக்குர விட்டபொழுது விடிந்து தீயுந் தணிந்தது. சகமித்திரர் குடும்பம் தீயால் வருந்தாதிருத்தலைக்கண்டு வியப்படைந்து பலரும் அவருக்கு உதவிபுரிய அவர் தடுக்கவும் உதவிசெய்து வருநாளில் அந் நாட்டுத் தலைவனுன வைத்தியநாதனென் பான் உதவிசெய்வோரைத் தடுத்து இவர் வீட்டிலுள்ள பொருள்களைக் காண்போ மென வீட்டில் புகுந்து நீர் சகத்திற்கெல் லாம் மித்திரரோ உமக்குப் பகைவரில ரோ உமக்கும் இச்சகத்தில் பகையில்லை யெனில் என் பெண் கலியாணத்திற்கு தேவபூசை செய்ய ஒரு புலிவேண்டும் கொணர்ந்து தருகவெனக் கூறினன். அவ்வாறே சகமித்திரர் காட்டுள்சென்று பெருமாளைப் புலியாகவரத் துதித்தனர். அவ்வாறே பெருமாள் புலியுருக்கொண்டு வரத் தமதுஉத்தரியத்தைப் புலியின்கழுத் திற்கட்டித் தமது ஊர்க்கு அழைத்துச் சென்றனர். இதைக்கண்ட ஊரிலுள் ளோர்அஞ்சிக் கதவுகளை அடைத்து மாங் கள்மீதேறிச் சகமித்திரரை இவ்வாறு செய்தல் கூடுமோவென ஊர் அதிகாரிக் குக் காட்டவந்தன னென்றனர். இச்செய் தியையறிந்த ஊரதிகாரியும் கதவடை த்தனன். சகமித்திரர் புலியைநோக்கிக் கதவைத் திறந்துகொண் டுள்புகவென அவ்வாறுள்புகுந்து வாசலில் போய் நின்று அவ்வதிகாரியைநோக்கி இஷ் டனே புலிகொணர்ந்தேனென்று அழை க்கப் பெண்டுபிள்ளைகள் கண்டு பயந்து ஊராளியைப்பார்த்து நீ கிழவன் நீ போக லாம் என அவன் பயந்து ஒளித்துக்கொ ண்டு நான் தெரியாதுசெய்ததைப் பொறு த்துக்கொள்கவென வேண்டச் சகமித்தி ரர் புலியைக்கொண்டு ஊரின் புறத்திற் போயினர். பெருமாளும் தமது உருக் காட்டிச் சகமித்திரரை வாழ்த்திப் போயி னர்.

சகரன் — 1. (சூ) பாகுகன் குமரன். இவன் தன் தாயின் கருப்பத்தில் இருக்கையில் சக்களத்திகள் நஞ்சூட்ட இறவாது அவுரவ ரிஷியரால் காக்கப்பட்டவன். இவன் பாரி கள் கேசினி, சுமதி. இவர்களுக்குப் புத் திரர் இல்லாமையால் அரசன் சாம்பமூர்த் தியை எண்ணித் தவம் புரிந்து சுமதியிடம் அறுபதினுயிரம் குமாரரையும், கேசினியி டம் ஒரு புத்திரனையும் பெற்றனன். புத் திரப்பெற்றுல் களிப்படைந்த அரசன் அசுவமேதம் செய்யத் தொடங்கிக் குதிரை யைப் பூவலம்வர விடுத்தனன். இவனிடம் பகைகொண்ட இந்திரன் அசுவமேதக் குதி ரையைப் பாதாளத்தில் தவஞ்செய்யும் கபி லருக்குப் பின்புறங் கட்டி மறைந்தனன். குதிரைக்குப் பின்வந்த சகரர் குதிரையை எங்குந் தேடிக் காணுது பாதாளத்தில் தேடிச் சென்று அங்குத் தவஞ்செய்து கொண்டிருந்த கபிலருக்குப் பின் கண்டு கபிலர்மீது கோபித்து வருத்த அவரது கோபத்தீயால் மாய்ந்தனர். பின் சகரன் பேரனுகிய அம்சுமான் முனிவரை வேண் டிக் குதிரையைத் தரப்பெற்று யாகமமுடி த்து அவுரவரால் நற்கதி அடைந்தவன். அசிதன் குமரன் என்றுங் கூறுவர். இவன் சரித்திரத்தில் சிலவற்றை அசிதனைக் காண்க. இவன் கங்கை பெருகக் காரண புருஷனு யிருந்தவன். இவன் குமரன் அசமஞ்சன். இவன் குமரனுல் அம்சுமா னைப் பெற்றுக்கொண்டு குமரனைக் காட் டிற்கு அனுப்பினன்.

2. காச்யபருக்கு அதிதியிடம் உதித்த குமரன். இவன் துவாதசாதித்தரில் ஒருவன். தேவி பிரசினி.

3. முதல் வள்ளல்களில் ஒருவன்.

சகரர் — சகரனுக்கு இரண்டாவது மனைவியிடம் பிறந்த புத்திரர் அறுபதினாயிரவர். பூமியைக் கல்லிக் கபிலரைக் கோபித்து அவர் கோபத்தீயால் இறந்து பகீரதனால் நற்கதி பெற்றவர்கள். (பாகவதம்)

சகலசித்தி — (காஞ்சி.) சகல சித்தியையும் அளித்தலில் இப் பெயர் பெற்றது.

சகலதோஷாபவாதம்—சந்திரன் உச்சத்தானத்திலிருந்து நோக்கினும், சுபக்கிரகங்களுடனிருந்து உதிப்பினும் சுபாம்சகேதனனை சந்திரனைச் சுக்கிர பிரகஸ்பதிகள் நோக்கினும் இவனுக்குக் கேந்திரத்தில் சுபக் கிரகங்கள் நிற்பினும், ஆதித்யன் மத்யானத்து (அ)-ஆம் முகூர்த்தமாகிய அபிசித்து முகூர்த்தமாயினும் தோஷங்களெல்லாம் நீங்கும். (விதான.)

சகலர் — 1. மலம், மாயை, கன்மம் மூன்றுடன் கூடிய ஆன்மாக்கள்.

2. இவர்கள் ஆணவம், கன்மம், மாயையெனும் மூன்று மலங்களை யுடையவர்கள். இவர்களுக்குக் காரண சரீரம், புரியஷ்டக சரீரம், தூலசரீரம் என மூவகைச் சரீரங்களுண்டு. அசுத்த மாயையில் அநந்ததேவ நாயனாரால் கலக்குண்ட காரணசரீரமாகிய பரசரீரம் ஒன்று, இதனை ஆனந்தமய கோசம் என்பர். வித்யாதத்வங்களாகிய பஞ்சகஞ்சுகமெனும் சரீரம்ஒன்று, இதனை விஞ்ஞானமய கோசம் என்பர். பஞ்சகஞ்சுகத்திலொன்றாகிய கலையிற்றோன்றிய அவயத்த வியத்தரூபமாகிய குணசரீரமெனும் சரீரம் ஒன்று, இதனை மனோமய கோசம் என்பர். மனம், புத்தி, அகங்காரம், தன்மாத்ரை யைந்துங்கூடிய சூக்ஷ்ம சரீரமாகிய புரியஷ்டக சரீரம ஒன்று, இதனைப பிராணமய கோசம் என்பர் மற்றையது தூலசரீரம இதனை அன்னமய கோசம் என்பர்.

சகலாவத்தை — சிருட்டி தொடங்கிச் சர்வசங்கார காலமளவும், ஆன்மாக்கள், தத்துமுப்பத்தாறுடன் கூடி எண்பத்து நாலுலக்ஷ யிரம் யோனி பேதங்களில் பிறந்திறந்து உழல்வது இது, இரவிலிருளிலழுந்திக் கிடந்தகண், விளக்கினால் இருள் நீங்கிப் பல பொருள்களைக் காணுதல்போலும்.

சகளேசமாதிராசையர்—இவர் ஒரு அரசர். சிவபூசா துறந்தார். இவர் மல்லிராசையரைக் காணவிரும்பி இராஜ்ய முதலிய துறந்து அவரிடம் போயினர். இவரது வரவுகண்ட மல்லிராஜர் ஒரு பேருருக் கொண்டுநிற்க அவ்வுருக்கண்டு தொழுது எழுந்திருக்காமல் நின்றவரை மல்லிராஜர் தூக்கி அணைத்து அவர்க்குக் கிருபை செய்து அல்லமரிடம்போகப் பணிக்கச் சகளேசமாதிராசையர் பிரிய மனம் இல்லாமல் வணங்கினர். அரசன்வணங்கி எழுமுன் கல்யாணபுரத்தில் இருக்கக்கண்டு இருவரும் அளவளாவிக் களிப்புடன் இருந்தனர்.

சகன்—1. திருதராட்டிரன் குமாருள் ஒருவன்.

2. பஸ்மாசுரன் தந்தை.

3. புராணன் என்னும் வசுவின் குமரன். தாய் உற்சவதி.

சகஜசையோகம் — சையோகமுடையதின உற்பத்தியுடன் உண்டாவது.

சகாதேவன்—சகதேவனைக் காண்க.

சகாரா — (பாலைவனம்) இது உலகத்துள்ள மணல் வெளிகளில் பெரிது. இது ஆபிரிகாவிலுள்ளது. இதனை மணற்கடல் என்பர். இதில் காற்றினால் மணல்கள் மேலெழுந்து அலைபோல் மூடும். இதிலுண்டாகும் மணலின் சுழற்சி மேகத்தை யளாவும். இதில் யாத்திரை செய்வது அபாயத்தை உண்டாக்குமாம். சில இடங்களில் கடலில் தீவுகளிருப்பதுபோல் சில நீருள்ள இடங்களுண்டு. அங்குப் பிரயாணிகள் தங்குவர்.

சகியம்—ஒரு பர்வதம். இது தென்னாட்டில் அற்புதமுள்ள தீர்த்தங்களுடன் கூடியது.

சகுண்டலன்—திருதராட்டிரன் குமரன்.

சகுந்தமுனிவர்—சயந்தனைக் காண்க.

சகுந்தலை — விச்வாமித்திரன் தவத்தினைக் கெடுக்க இந்திரனால் ஏவப்பெற்ற மேனகை என்னுந் தேவரம்பையிடம் பிறந்த குமரி இவள் சகுந்தலைப் பக்ஷிகளால் காக்கப்பட்டுக் கண்ணுவ மகருஷியால் எடுத்து வளர்க்கப்பட்டனள். வேட்டைக்கு வந்த துஷ்யந்தமகாராஜன் கண்வராச்சிரமம் அடைந்து இவளை மணந்துசெல்லப் பரதன் இவளிடம பிறந்தனன் இவள் சகுந்தலைப் பக்ஷிகளால் காக்கப்பட்டது பற்றி இப்பெயர் அடைந்தனள்.

சகுனம் — நன்மை தீமைகளை முன்னறிவிக்கும் அறிகுறிகள். வித்வான்கள், பத்னிகளோடும் புத்ரர்களோடுங்கூடின பிராமணர்கள், பலிஷ்டர், ஆபரணம் பூண்டமாதர், நல்ல புத்ரரை யுடையவள், விசேஷமாகச் சந்தோஷமுள்ளவள். ரூபமுள்ளவள், கருப்பிணி, கன்னிகை, விளையாடுகிற குழந்தைகள், விசேஷமான பக்ஷ்யம், போஜ்யம், பானம், மாம்சம், தீபம், சந்தனம், மாலை முதலிய கந்தத்ரவ்யம் நெய், தயிர், மத்ஸ்யவிசேஷம், பூரணகும்பம், தண்ணீர் நிறைந்த குடம், சங்கு, கோரோசனம் கண்ணாடி, த்வஜம், கடுகு, பால் இன்னும் சிறந்த பொருள்களின் தர்சனம் சுபமாம். இடப்பாக சகுனம்—பிரயாணத்திலும் எல்லாச் சுபகார்யத்திலும், மூஞ்சூறு, குள்ளநரி, பல்லி, பிங்களவர்ணமான பன்றி, குயில் இவையாவும் இடப்பக்கத்தில் நன்மையைத் தரும். சிரேஷ்ட சகுனங்கள-சீக்ரஞ் செல்வதாயும், சமீபத்திலுள்ளவைகளாயும், தூரத்திலிருந்தும் மிகவுயரம் தூரப்போகக் கூடுமானவையாயும் செல்வமுள்ளோர் வீடுகள், இராஜமாளிகை, தேவாலயம், சுபஸ்தலம், ரம்யமான இடங்களை யடைந்திருக்கிறவையாயுள்ள பறவைகள் சிரேஷ்டம். மதுரமான ரஸம், பால், பழம், புஷ்பம் இவற்றுள் ஏதேனு முள்ளதாகிய மரங்களில் உள்ள பக்ஷிகள் மிகச்சிறந்தன. அவசகுனங்கள — கிராமத்தில் காட்டுப்பசு, காட்டில் கிராமப்பசு, பகலிற்பெட்டையுடன் சஞ்சரிக்கிற சக்ரவாகம் முதலிய பக்ஷிகள் இரவிற்கூடாது. இரவிற் சஞ்சரிக்கிற கோட்டான் முதலிய பகலிற் கூடாது. யாவராலும் பிரார்த்திக்கப்படுகிற பிராணிகள் இரட்டையாய் வருமாயின் நலம். அண்டங்காக்கைகள் இஷ்டபலத்தைத் தரும். நதியைத் தாண்டினவையாயும், மெய்ம் மறந்திருப்பவையாயுமிருக்கிற பக்ஷிகள் கூடா. தும்மல் எவ்விடத்தும் ஆஷ்டமாகமாட்டாது. பசுவின் தும்மல் மரணத்தைக் கொடுக்கும். சோகத்தைக் காட்டுஞ் சகுனம் — வெல்லம், எலும்பு, கறுப்புத்தான்யம், பருத்தி, நெருப்புண்டாம் பொருள், விறகு, சக்கிலி, விரிந்த தலையர், சண்டை, பசி, இளைப்புள்ளார், மொட்டைத்தலை, அழுக்கு வஸ்திர முடுத்தவன், விகாரமானவன், நாஸ்திகன், பௌத்தன், குரற்பாய்ச்சி அழுதல், கண்ணீர்விடுதல், கலகம், பன்றி, எருமை, ஒட்டகம் இவற்றைப் பார்த்தல், தீமையாம். மேற்கூறிய சகுனங்களில் நலமுள்ளவை எதிர்ப்படின் காரியங்களைச் செய்க. பிரதிகூலமாயின் அவற்றை விடுக. புத்திமான் சகுனத்தை மும்முறை பார்த்தும் நலமாகாவிடின் அக் கருமத்தை விடுக. (ஸ்ரீகாமிகம்.)

சகுனி — 1. திருதராட்டிரன் காந்தாரியை மணந்து அத்தினபுரஞ்செல்கையில் உடன் சென்ற இவனுடன் சேர்ந்த தம்பியர் (௱) மரையும் இவனையும் திருதராட்டிரன் இவர்களால் நமக்கு ஒருகாலத்துத் தீமைவரும் என்று அஞ்சி யிவர்களைச் சிறையிட்டு ஆங்கிருந்த புதரின்வழிச் சிலர்க்கு ஆகவேண்டிய வுணவளித்துச் சாக எதிர்நோக்குகையில், அவர்களெல்லோரும் ஒருமனப்பட்டு இந்தப் பற்றாத ஆகாரத்தை ஒருவர் உண்டு பிழைத்துப் பழிக்குப் பழி வாங்குக என்றபடி சகுனி யுண்டு பிழைத்துப் பாரத யுத்தத்தில் துரியோதனாதிகளைக் கொல்வித்தான். துவாபரயுக புருஷன் அம்சமாய்க் காந்தார தேசாதிபதியாகிய சுபலன் அல்லது சௌபலனுக்குக் குமரன். துரியோதனனுக்கு நல்லம்மான். இவன் துரியோதனனது மனதை வேறுபடுத்திப் பாண்டவர்களைச் சூதாடத் தூண்டுவித்துத் தருமபுத்திருடன் சூதாடி நாடு முதலியவைகளைக் கவர்ந்து காட்டுக்கு அனுப்ப ஏவுவித்தவன். நகுலனால் பதினெட்டாநாள் இறந்தனன்.

2. இரண்யாக்ஷன் குமரன்.

3 யதுவம்சத்துத் தசரதன் குமரன்.

4. சிவேதன் கடைசி குமரன். இவன் குமரன் குந்தி.

5. விருகாசுரன் தந்தை.

6. ஒரு தேவதை. காகம் முதலிய பக்ஷிகளில் கலந்து நன்மை தீமை அறிவிப்பவள் இவள் இடேகை, காகம் முதலியவற்றைப் பெற்றாள்

சகுனிகௌசிகன் — ஆருணி யரசனைச் சார்ந்த ஒரு வீரன் எண்ணியதை முடிக்குந் திண்டிறல் வாய்ந்தவன் மிக்க நூற்கேள்வியை யுடையவன். அவனால் அனுப்பப்பட்டு மூன்று வீரர்களுடன் ஒன்றாகச் சென்று உதயணனுடைய வீரரால் கொல்லப்பட்டோன். (பெ. கதை)

சகோத்திரன்—பகீரதன் புதல்வன்.

சகோரம்—1. ஒரு மலை.
2. ஒரு பக்ஷி
சக்கமாதேவி—ஒரு க்ஷுத்ரதேவதை.
சக்கரம் — இது சித்திரக்கவியிலொன்று. இது நடுவில் ஓரெழுத்து நிற்கச் சூட்டின் மேல் எழுத்துக்கள் நிற்கப் பாடுவது. இது, நான்காரைச் சக்கரம், ஆறாரைச் சக்கரம், எட்டாரைச்-சக்கரம். பூமி சக்கரம், ஆகாய சக்கிரம், பூமியாகாய சக்கிரம், வட்ட சக்கிரம் புருட சக்கிரம், சதுர சக்கிரம், கூர்ம சக்கிரம், மந்தா சக்கிரம், காட சக்கிரம், சநிபுருட சக்கிரம், சலாப சக்கிரம், சக்கிர சக்கிரம், அரவு சக்கிர முதலிய. (தண்டி. யாப்பு - வி.)
சக்கிரவாளக்கோட்டம் — இது காவிரிப் பூம்பட்டினத்தின் புறத்தேயுள்ள மயானத்தின் பக்கலுள்ளது. இதில் முனிவர் பலரிருந்து தவஞ்செய்தனர். சம்பாபதி கோயில் கந்திற்பாவை, உலகவறவியெனும் இம்மூன்றும் இதைச் சார்ந்துள்ளன. புத்ரசோபத்தால் வருந்திய கோதமையின் துன்பத்தைப் போக்குதற்காக இவ்வுலகத்துள்ள எல்லாத் தேவர்களையும் சம்பாபதி வருவித்துக் காட்டியவிடத்து அக்காட்சியை யெக்காலத்தும் யாவரும்காணும் வண்ணம் மயனால் நிருமிக்கப் பட்டது,
சக்கிரவாகப்புள் — இது, உருண்டை வடிவாயுள்ள பறவை. இதனைத் தமிழ்க் கவிகள் தனத்திற்குவமை கூறுவர். இப் பறவை இக் காலத்தில்லை. இது தன் துணையாகிய பேட்டினை விட்டுப் பிரிந்த காலத்தில் கூவும் இயல்பினதாதலாலும் வட்டமான உருவுடையதாதலாலும் இதனை இப் பெயரால் அழைப்பர். (அமரம்)
சக்கிரவாளம் — ஒரு வித்தியாதர நகரம். (சூளா.)
சக்கிலியன் — 1. தோட்டி ஜாதி. செருப்புத் தைத்தல் வேலை. (தாஸ்.)
2 தெலுங்கு நாட்டுப் பறையன்.
சக்கிலி—இவர்கள் கஞ்சம்ஜில்லாவில் தோல் தைப்பவர்கள். இவர்கள் தமிழ் நாட்டில் வந்து அப் பெயரே பெற்று அந்த வேலை செய்துகொண்டிருக்கின்றனர்.
சக்கிரியன் — உப்புரவரில் ஒருவகையர் இவர்கள் சக்கரை செய்வோர்.
சக்குபாயி—இவள் கண்ணனிடம் உள்ளன்புடையமாது. இவள் கொடுமையாளராகிய மாமன் மாமிமார் கைப்பட்டு வருந்துகையில் ஒருநாள் அண்டைவீட்டுக்காரி உனக்குத் தாய்தந்தைய ரில்லையோவென இவள் எனக்குத் தாய்தந்தையர் பண்டரிபுரத்தில்வாழும் பெருமாளும் பிராட்டியுமேஎன்று துன்பஞ் சகித்திருந்தனள். ஒருநாள் அயல்வீட்டுப் பெண்களுடன் தண்ணீர்க்குச் சென்று அவ்விடம் அரிபஜனைசெய்துகொண் டிருந்தவர்களுடன் கேட்டு ஆனந்தமடைந் திருக்கையில் கணவனிடத் தயல்வீட்டார் கூறினர். இதனைக்கேட்ட கணவன் நீர்க்கரைசென்று சக்குபாயியை மயிரைப்பிடித் திழுத்துவந்து தூணிற் கட்டியடித்து ஆகாரமிலாதிருத்தினன். இவ்வகை வருத்தவும் சக்குபாயி பண்டரிபுரத்துப் பெருமாளையும் பிராட்டியையும் தரிசிக்கும் ஆவல் விடாது பெருமாளைவருந்தப் பெருமாள் இவளைப்போ லுருக்கொண்டுவந்து அவள் பண்டரிக்குச் சென்று பெருமாளைத் தரிசித்து மீளுமளவும் தான் கட்டிவிருப்பதாக வுடன்பட்டுச் சக்குபாயியை யவிழ்த்துவிட்டுத் தான்அக் கட்டிலிருந்தனர். பின் கணவன் இரக்கப்பட்டுக் கட்டிலிருந்தசக்குபாயியை யவிழ்த்து விடுத்து வீட்டுக் காரியம் பார்க்கச் சொல்லச் சக்குபாயியாகிய பெருமாள், அன்ன முதலிய சமைத்து மாமன் மாமி புருஷன் முதலியோர்க் களித்துப் புருஷனுக்குப் படுக்கையிட்டு அவன் விரும்பியவாறு சுகமளித்திருந்தனர். முன்கட்டினின்று விடுபட்ட சக்குபாயி பண்டரிசென்று பெருமாளைச் சேவிக்கையில் பதத்தி லுயிர் நீங்க அவளையெடுத்து ஊரார் தகனஞ்செய்தனர். இதனைக்கண்ட வேதியன் இவளது மாமி மாமன்மாரிடம்வந்து கூறுமுன் பிராட்டி பெருமாளைப் பிரிந்திருக்கச் சகியாதவளாய் இவளெலும்பிருந்த இடத்தணுகி இவளைப் பெண்ணுக்கிப் புருஷனிடத் தனுப்ப இவள் நீர்க்கரையணுகச் சக்குபாயியாகநடித்த பெருமாளிவளையணுகி க்ஷேமம்விசாரித்துத் தண்ணீர்க் குடத்தைச் சக்குபாயியிடங் கொடுத்தனர். சக்குபாயி வருடந்தோறும் இவ்வாறு எனக்கு அருள்செய்ய வேண்டுமெனப் பெருமாள் அவ்வாறு அருள்செய்து போயினர். பண்டரிபுரத்து இவளிறந்து சாம்பரான செய்தி கண்டவன் இவ்விடம் வீடுவந்து சக்குபாயி யிருக்கக்கண்டு வியப்படைந்து புருடனிடங்கூறப் புருடன்

நடந்தவைகேட்டு இவளிடத்தன்பு மச்சமுங்கொண்டு வருடந்தோறுங் குடும்பத்துடன் பண்டரி சேவித்து இருந்தவள்.

சக்தி — இது மூன்று வகை. இவை அரசனுக்கு யுத்த காலத்தில் இருக்கவேண்டியவை. 1. உத்சாகசக்தி, 2 பிரபுசக்தி, 3. மந்திரசக்தி. இவற்றுள் உத்சாகசக்தியாவது மனோவேகம், பிரபுசக்தியாவது தன முதலியன, மந்திர சக்தியாவது ஆலோசனை. (பார - ஆச்ரமவாச.)

சக்துபிரஸ்தன் — அதிதி பூசையால் யமனைக் களிப்புறச் செய்து குடும்பத்துடன் பிரமலோகம் அடைந்த குருக்ஷேத்திர வாசியாகிய பிராமணன்.

சக்ரகன் — செம்பீரன் குமரன். இவனிடத்துப் பிராமணவம்சம் உதித்தது.

சக்ரசமோரதைத்தியன் — திரணாவர்த்தன்.

சக்ரதானசுவரூபம் — விஷ்ணுமூர்த்திக்குச் சக்கரம் அருள் செய்ய எழுந்தருளிய சிவ சுவரூபம்.

சக்ரதீர்த்தம் — பலராமர் தீர்த்த யாத்திரையில் ஸ்நானஞ் செய்த தீர்த்தம். இதற்கு பிரமத்வரம் எனவும் பெயர் இது வியர்வு நீராலானதா லிப்பெயரடைந்தது. இது சாம்பூநத நிறமுடையது

சக்ரதேவன் — வடகலிங்கதேசாதிபதி, பாரதத்தில் யுத்தத்திற்கு வந்தவன். சுருதாயுவின் குமரன்.

சக்ரநாகம்—அளகைக்கு அருகிலுள்ள மலை.

சக்ரபாணியார் — அறந்தாங்கியார் குமார். இவர் குமார் அச்யுதர். இவர் நம்மாழ்வாருக்கு ஐந்தாம் பாட்டனார்.

சக்ரபாணி — ஒரு அரசன். தேவி உக்ரை. இவர்கள் புத்திரர் இல்லாமல் சூரியவிரதம் இருந்து சிந்து என்பவனைப் பெற்றனர்.

சக்ரவர்த்திகள் — இவர்கள் அறுவர். அரிச்சந்திரன், நளன், புருகுச்சன், புரூரவன், சகரன், கார்த்தவீரியார்ச்சுனன்.

சக்ரவாளம் — 1. பெரும்புறக்கடலை வளைந்திருக்கும் மலை.

2. ஒரு வித்யாதர நகரம்.

சக்ரன் — 1. வசிட்டருக்கு ஊற்சைபிடம் உதித்த குமரன்.

2. மருத்துவரில் ஒருவன்.

3. இந்திரன்.

சக்ராங்கன் — மகதநாட்டு வேதியன், இவன் குமரன் திருதராட்டிரன்

சங்கன்னன் — இவன் இதற்கு முன் சன்மத்தில் வேதியனாயிருந்து பல தீமைகள் செய்ததால் வேடனாகிச் சிவத்தல யாத்திரை செய்வாருடன் சிவவேடம் பூண்டு சென்று அவிநாசித்தலத்தில் நடராஜமூர்த்தியின் திருவடியில் தரித்திருந்த சிலம்பைத் திருடக் காலம் பார்த்திருந்து கிட்டாமையால் அத் திருவடியை யெண்ணி மரணமடைந்து முக்தி பெற்றவன். (அவநாசித் தலபுராணம்)

சங்கசரன் — கத்ரு குமரன், நாகன்.

சங்கசூடன் — 1. குபேரனுடைய தோழனாகிய குய்யகன். இவன் கிருஷ்ணமூர்த்தியிடம் கிரீடித்துக்கொண்டு இருந்த கோபிகாசனங்களைக் கவர்ந்து செல்லுகையில் கிருஷ்ணனால் கொல்லப்பட்டுச் சிரோமணியை இழந்தவன்.

2. காசியில் வீரேசலிங்க பூசை செய்து சித்தி யடைந்தாரில் ஒருவன்.

3. பாதாளவாசியாகிய நாகன்.

4. தருமக்கவசன் புத்திரியாகிய இலக்ஷ்மியை மணந்தவன்.

5. இவன் வைகுண்டத்திலிருந்த சுதாமன் எனும் கோபாலன், இவன் சாபத்தால் சங்கசூடன் எனும் அசுரனாகப் பிறந்து துலசியை மணந்து சுரரைவருத்தத் தேவர் வேண்டுகோளால் விஷ்ணு இவன் கழுத்தி லணிந்திருந்த கவசத்தை யாசித்து வாங்கச் சிவமூர்த்தி யிவனைக் கொன்றனர். இவனிறந்த பின்னர் இவன் தேவியிடத்தில் கபடமாக விஷ்ணு வீர்யதானஞ்செய்தனர். பின் சிவபெருமான் அச்சங்கசூடன் எலும்பு முதலியவற்றைச் சூலத்தால் கடலிலிட்டனர். அவை சங்கு கூட்டங்களாயின, சங்கசூடன் கோலோகத்தில் பாரிஷதனால் அடைந்தனன். (பிரம்மகைவர்த்தம்).

6. முன்பிறப்பில் கோலோகத்திருந்த சுதர்மனிவன் இராதையின் சாபத்தால் பிறந்து ருத்ரரால் கொல்லப்பட்டு மீண்டும் கோலோக மடைந்தனன். இவனது யுத்தத்தில் விஷ்ணு விருத்த வேதியராய் இவன் கவசத்தை யாசித்துப் பிணிவனுருக்கொண்டு இவன் மனைவியைப் புணர்ந்து மறைந்தனர். (தேவி - பா.)

சங்கடன் — ககுபு என்னுந் தக்ஷன் பெண்ணுக்குக் குமரன். தந்தை தருமன்.

சங்கடசதுர்த்தசி — இது சங்கடங்களைப் போக்குவதால் இப்பெயர் பெற்றது.

இதனை மாசிமாதம், அபரபக்ஷ செவ்வாய்க் கிழமையில் அநுஷ்டிப்பர். இது விநாயகர்க்கு உரிய விரதம். இதை அநுஷ்டித்தவன் அங்காரகன்.

சங்கணன் — (சூ.) வச்சிரநாபன் குமரன்.

சங்கதருமன் — சுதமதிக்கும் அவள் தந்தைக்கும் தருமஉபதேசஞ் செய்த ஒரு பௌத்த முனி. (மணிமேகலை)

சங்கதன் — தேசாதனன் குமரன். இவன் குமரன் சாவிலூகன்.

சங்கதாவளன் — அத்திரிக்கு அநசூயையிடம் பிறந்தோன்.

சங்கதாசுவன் — பர்கிஞாசுவனுக்கு ஒரு பெயர்.

சங்கத்தார் — பாண்டிநாட்டின் தலைநகராகிய மதுரையில் தமிழ்ச்சங்கத்திலிருந்த புலவர்கள். பாண்டியன் வற்கடகாலத்து நம்மை விட்டுப் பிரிந்த நம்மைத் தாங்கினோர் யாவர் என "காலைஞாயிறு...இடர் கெடுத்தனனே" எனப் பாடித் தந்தவர்கள்.

சங்கத்தார்களுடைய திருவுருவங்கள் — பொற்றாமரையின் வடகரை மண்டபத்திலுள்ள தூணப்பத்திகளிலும், ஸ்வாமிகோயிலுள் வாயு மூலையிலுள்ள ஆலயத்திலும் சங்கத்தார்களுடைய திருவுருவங்கள் அமைக்கப்பெற்றுள்ளன. (திருவிளையாடல்)

சங்கத்தார் கோயில் — இது சோமசுந்தரக் கடவுளுடைய, திருக்கோயிலுள் பெரிய பிராகாரத்தில் வாயு மூலையிலுள்ளது. இதில் முருகக்கடவுள், அகத்தியமுனிவர், சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மர் ஆகிய இவர்களுடைய திருவுருவங்கள் முதலியன வுள்ளன. (திருவிளையாடல்.)

சங்கநகன் — கத்ரு குமரன். நாகன்.

சங்கநிதி — சங்கின் வடிவினதாகிய நிதி இது குபேரனிடம் உளது. கேட்டதைத் தரும் வலியுளது.

சங்கபாலன் — 1. சூரபன்மனுக்கு மந்திரி.
2. உலகபாலகரில் ஒருவன்.
3. கத்ரு குமரன், நாகன்.
4. சண்முக சேநாவீரன்.

சங்கமாசுவரன் — காசியில் பிரமன் தாபித்துப் பூசித்த சிவமூர்த்தி.

சங்கம் — 1. சங்கசூடனைக்காண்க. இச்சங்கங்கள் சுரார்சிதங்களுக்குப் பரிசுத்தமானவை. தேவதைகளுக்கு மிக்க பிரீதியுள்ளவை. இச்சங்க தீர்த்தம் கங்காதீர்த்தத்திற்குச் சமம். எவ்விடத்தில் சங்கத்வனியுண்டாம், அவ்விடம் லக்ஷுமி வசிப்பள். எவன் சங்கதீர்த்தத்தால் ஸ்நானஞ் செய்கிறானோ அவன் சர்வதீர்த்தத்திலும் ஸ்நானஞ் செய்தவனாகிறான். பிரம்மகைவர்த்தம்.)
2. முதலிடை கடைச் சங்கங்களைக் காண்க.
3. கோபாலவிருத்தர் ஸ்நானஞ்செய்து பரிசுத்தம் அடைந்த தீர்த்தம்.

சங்கமன் — 1. சௌரிநகரத்து அரசன்.
2. நீலிக்குக் கணவன், ஒரு செட்டி. (மணி.)

சங்கமங்கை — சாக்கிய நாயனார் முத்தி அடைந்த தலம்.

சங்கயாப்புடையார் — சங்கயாப்பென்னும் யாப்பிலக்கண நூலாசிரியர். இவர் பெயர் இவ்வாறே யாப்பருங்கலவுரையில் வழங்கப்பட்டது.

சங்கம் — சமயமாகீர்த்தியைக் காண்க.

சங்கமர் — இவர்கள் சிவலிங்கம் கட்டிகளில் ஒருவகை பிக்ஷுகள். இவர்கள் இருவகையினராகப் பிரிக்கப்படுவர். பட்டாதிகாரர்கள், சரமூர்த்திகள் இவர்களில் நிலையான இடமுடையார் சிலர். சிலர் ஊரூராய்ச் சென்று பிரசங்கஞ் செய்து ஜீவிப்போர் சிலர். (தர்ஸ்டன்)

சங்கமராசசோழன் — சோழ அரசர்களில் ஒருவன். இவன் குமரர், நல்லமன், குமாரமகீதரன், சங்கரன் என மூவர்.

சங்காமுதலியார் — இவர் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து ஒட்டக்கூத்தரை முதலில் ஆதரித்த பிரபு. வெண்ணைச் சடையப்ப முதலியாருக்குத் தந்தையார். கி. பி. 11-ஆம் நூற்றாண்டு.

சங்கமன்னர் — தருசகனோடு போர் செய்தற்குவந்த எலிச்செவியரசன்முதலியோர். இவர்கள் இராசகிரிய நகரத்தின் பக்கத்தே உதயணனால் தோல்வியுற்றுச் சென்றார்கள். பின்பு உதயணன் தன்னோடு போர் செய்வதற்கு வந்த காலத்தில் துணையாக இருத்தற் பொருட்டு ஆருணி யாசனால் அழைக்கப்பட்டனர். (பெ. கதை).

சங்கமித்ரை — அசோகன் குமரி அசோகன் சொற்படி புத்த சமயத்தைப் பரவச் செய்வதற்குத் தேச யாத்திரை செய்தவள்.

சங்காகவி — போஜராஜனிடம் இருந்த வடநூற் புலவன்,

சங்கரன் — 1. சிவமூர்த்தியின் திருநாமங்களில் ஒன்று.
2. ஏகாதசருத்ரருள் ஒருவன்.

**சங்கரசித்தன்** — கிருஷ்ணனுக்குப் பத்திரையிடம்பிறந்த குமரன்.

**சங்கரதாசையர்** — இவர் ஓர்சிவனடியவர். இவர் சிவனடியவரது கிழிந்த உடைகளைப் பொத்தித் தருவதே விரதமாகக் கொண்டவர். சிவமூர்த்தி தரிசனந்தா நெற்றிக் கண்பெற்றுக் கர்வித்த தேவர்முதலியோரை எரித்துவரும் நாட்களில் சகதேவமல்லன்எனும் பாகவதன் எமது நாராயணனை இவர் எரிக்கவல்லரோ என்று இறுமாப்புடன் கூறினன். சங்கரதாசையர் தமது நெற்றிக்கண்ணால் அவன் பூசித்துவந்த நரசிங்கவிக்கிரகத்தை நோக்க அது நீறுயிற்று. இவரைச் சேடதாசையர்தரிசித்து இவர் மடத்தில் நெல்முதலிய இல்லாமை நோக்கி ஒரு வேலையாளிடம் நெற்கொடுத்து அனுப்பினர். சங்கரதாசையர் அந்தநெல்லை ஒரு பிடியாகப் பிடித்தனர். இதனால் ஒரு சிவனடியவர்க்குப் பட்டாடை நெல் முதலிய கொடுத்துப்பெற்ற செல்வங்கள் போகக்கண்டு, மீண்டும் சங்கரதாசரிடத்துத் தாம் கூலியாளிடத்து அனுப்பிய குற்றத்திற்குப் பொறைவேண்டினர்.

**சங்கரநமச்சிவாயர்** — இவர் திருவாவடுதுறை மடத்தவர், இலக்கணக் கொத்து இயற்றிய சுவாமிநாததேசிகருக்கு மாணாக்கர். நன்னூலுக்கு விருத்தியுரை செய்தவர். ஊற்றுமலை மருதப்பனுக்கு நண்பர்.

**சங்கரபாண்டியன்** — சாகல முனிவனைக் கொன்ற பிரமகத்தியால் தனுக்கோடியில் ஸ்நானஞ்செய்து புனிதம் அடைந்தவன்.

**சங்கரவரசன்** — துவாரவதி யென்னும் நகரத்திற்குத் தலைவன். பல அரசர்களை வென்று அடிப்படுத்தியவன். தருசகனோடு போர் செய்வதற்கு வந்த அரசர்களுள் ஒருவன். (உ. ப. கதை)

**சங்கரன்** — ஒரு பிரபு, புதுவையி லிருந்தவர். இவரிடம் ஒட்டக்கூத்தர் உபகாரம் பெற்றிருந்தனர். இவர் புதுவைச் சடையன் என்பவனுக்குத் தந்தை.

**சங்கராசாரிய சுவாமிகள்** — கேரளநாட்டில் சிவகுரு என்பவருக்கு ஆர்யாம்பாளிடம் கலி. (3058) க்குச் சரியான விக்ரமசகம் (கச)-வது ஈசுவரவருஷ வைகாசிமீ அவதரித்தவர். இவரது குழந்தைப் பருவத்தில் நாகம் ஒன்று இவரைச் சுற்றி விளையாடிப் பலருங்காண விபூதி ருத்திராக்ஷமாயிற்று. இவரிடம் இருந்த சிவசின்ன முதலியவற்றைக் கண்ட தந்தை முதலியோர் இவர்க்குச் சங்கரர் என நாமகரணஞ் செய்தனர். இவர் குழந்தைப் பருவத்தில் பூசுணைக்காயிலிருந்து வெளிவந்தும், சிவநின் மால்யம் தம்மீது இருக்கக் காட்டியும், சுழல் காற்றில் ஆகாயத்தில் மறைந்தும் எட்டுக் குழந்தைகளுருவாய்ப் பின் ஒரு குழந்தையாயும், பாடலேசுரர் திருத் தேர் விழாக்கொள்ள அவ்விடம் விக்ரகமூர்த்தி மறையத் தாமே குழந்தையாய் அங்கிருந்தும் பல அற்புதங்களைப் புரிந்துவந்தனர். இவர், தந்தை யிறக்க அவரைச் சிதைமேலிட்டு ஒரு தருப்பையைக் கிள்ளி மேலிட அது நன்மணம் வீசக் கண்டு தந்தைக்குக் கரும முடித்தனர். ஒரு நாள் அயாசிததீக்ஷிதர் மனையில் பிக்ஷை கேட்கையில் அந்த வீட்டு அம்மணி ஒரு நெல்லிக்கனி தந்து வருந்திநிற்க இவர் ஸ்ரீதேவி மந்திரத்தால் அதைப் பொன் கனியாக்கித் தந்தனர். தாயின்பொருட்டு ஒரு நதி வருவித்தனர். சத்தியவந்தன் எனும் அரசனுக்குப் புத்திரப்பேறு அருளித் தாயின் கட்டளைப்படி சந்நியாசம் பெற்றுத் தன் காலைக்கவ்விய சுக்கிராகியென்னும் முதலையுருக்கொண்ட காந்தருவனுக்கு நாரதரால் நேர்ந்த சாபத்தைப் போக்கி, கிருஷ்ணாலயம் தாபித்துக் கோவிந்த யோகியரிடம் தீக்ஷைபெற்று வேதியர் பொருட்டு வெள்ளத்தைக் கமண்டலத்துள் அடக்கி ஆசிரியர் வெயிலில் வரக்கண்டு கையிலிருந்த தண்டத்தை ஆகாயத்திலெறிந்து பற்றுவாரின்றி நிழல்செய்து வரச்செய்து சந்தானுசிரியனுக்கு அருள்செய்து காசிசென்று விச்வநாதரைத் தரிசித்து ஆசிரியர் சொற்படி வியாசரைக் காணப் பதரிகாச்சிரமஞ் சென்று வியாசரைக் காணாது நாராயணாச்சிரமஞ்சென்று நாராயணமுனிவரைக் கண்டு பல மதங்களைக் கண்டித்து வியாசரைத் தரிசித்து அவரால் ஆயுள்பெற்று வியாக்கியான சிம்மாசனாதீசுரன், ஷடுத்தரிசனஸ்தாபனாசாரியன், பூமண்டலாசிரியன், சர்வதந்த்ர சுவதந்தரன் எனப்பட்டுப் பட்டபாதர் வேக்காடு தீர்த்து விச்வரூபர் இடத்து விருந்தாய்ச் சென்று அவரை வாதில் வென்று அநுக்கிரகித்து உபயபாரதியாருடன் வாதிட்டு அவர் சிற்றின்ப விஷயமாய் வினவிய வினாக்களுக்கு ஒரு மாத தவணையில் விடை கூறுகிறேனென நீங்கித் தமது மாணாக்கருடன் காட்டிற்

சென்று குகையிற் றங்கித் தம் முடம்பை மாணுக்கர்வச மொப்புவித்து வேட்டைக்குவந்த அமரகன் தேகத்தில் புகுந்து அரசாண்டு காமகலை பயின்று அநுபவித்து இருந்தனர். இவர் அரசராக இருக்கையில் நாடு மிக்க வளங்கொண்டிருத்தலைக் குறிப்பாலுணர்ந்த மந்திரியர், இவர் ஓர் மகா புருடர் என்று எண்ணித் தம் ஏவலாளர்க்கு எங்கேனும் உயிர் ஒழிந்த உடல் காணப்படின் அதனை யுடனே தகனஞ் செய்க எனக் கட்டளை பிறப்பித்தனர். இது நிற்க, முன் ஆசிரியர் சொற்படி தேகத்தைக் காத்திருந்த மாணுக்கர் ஆசிரியர் கூறிய தவணையில் வராதது கண்டு தாம் ஆசிரியர் தேகத்தை ஒரு மலையில் இட்டுத் தாம் இசைப்புலவர் வேடம் பூண்டு ஆசிரியரிடஞ் சென்று தத்வமசி வாக்கியத்தைப் பாடினர். இதனை யறிந்த சங்கரர் அரசன் தேகத்தை விட்டுத் தமது தேகத்தில் செல்ல முயன்றனர். முன் மந்திரியர் கட்டளை பெற்ற ஏவலாளர் இறந்த உடலினைத் தேடுகையில் மலைமீது சங்கராது உடலினைக் கண்டு எடுத்துத் தீமூட்டிச் சென்றனர். சங்கரர் எரிந்து கொண்டிருந்த வுடலிற் புகுந்து சுவாலா நரசிங்கத் தோத்திரஞ் செய்ய அத் தீத் தணிந்தது. பின் காரவலம்ப மென்னுந் துதிசெய்யத் திருமால் ஸ்ரீதேவியுடன் காட்சி தந்து கைகொடுத்துத் தூக்கிவிட்டனர். பின்னர் சங்கரர் ஆகாய வழியாய்த் தமது மாணுக்கருடன் மண்டன பண்டிதர் மனைக்கண் சென்றனர். அப்போது உபயபாரதியார் அங்கு வந்து விழுந்த அமரகநூலைக் கண்டு சங்கரருக்கு வெற்றி யருளினர் பின் சங்கரர் உபயபாரதியாரை ஞானசாரஸ்வத மென்னும் துதியால் தோத்திரித்து நீங்கினர். பின் ஒருகால் தம் தலையை யாசித்த கபாலி மதத்தனுக்கு அத் தலை கொடுக்கத் துணிந்து சந்தனுசாரியாரால் காக்கப்பட்டு, கொல்லூரில் இறந்த வேதியன் மகனை யெழுப்பி ஸ்ரீமூகாம்பாள் தோத்திரமியற்றி ஸ்ரீவல்லிபுரத்தில் பிக்ஷை செய்துகொண் டிருக்கையில ஆண்டிருந்த பிரபாகரபட்டர் தமது ஒரே குழந்தை வாயுங் கேள்வியும் இல்லாமைகண்டு இவர் முன் விட்டனர். சங்கரர் அப் பிள்ளையை நீயார் என அது செய்யுட்களால் பிரமவுண்மை கூறியது. சங்கரர் அப் பிள்ளைக்குத் தீக்ஷைசெய்து அவ்விடம் விட்டு நீங்கிச் சிருங்ககிரிக்குச் சென்று ஒரு மடம் தாபித்து அவ்விடம் தம்மை வந்து அடைந்த ஆனந்தகிரி யென்னும் மாணுக்கருக்கு அருள்புரிந்து தாய்க்கடன்முடித்துத் திக்குவிஜயஞ் செய்துவருகையில் வந்தெதிர்த்த காபாலியாகிய கிரகசனை வென்று, மந்திரசித்திபெற்ற அபிநவகுத்தன் மூலநோய் ஏவ அவனை மாணுக்கரால் வெல்வித்துப் பிரமராக்கதனுக்குப் பிரமசக்தி போக்கிச் சர்வஞ்ஞபீடமேறி வென்று ஸ்ரீகேதாரஞ் சென்று பதரிகாச்சிரமம், துவாரகை, சகந்நாதம் முதலிய இடங்களில் மடம் தாபித்து ஆனந்தகிரி பதுமபாதர், அத்தாமலகர் முதலியோர்க்கு அபிடேகஞ் செய்து குருத்வம் நியமித்துத் தாம் தேவர் புகழச் சமாதியில் இருந்து திருக்கைலை யடைந்தனர். இவர் செய்த நூல்கள் :— கல்யாணவிருஷ்டிஸ்தவம், காருண்யபூர்ணஸ்தவம், மகாபகாஸ்தவம், சந்நியாசோத்தாரம், நிரீதிஸ்தவம், கங்காஷ்டகம், மனிஷாபஞ்சகம், சிவாத்மபூர்ணுநுபவம், தோத்ரமஞ்சரி, பிர்மசூத்ரவியாக்யானம், பஞ்சருத்ரோபநிடதவியாக்யானம், நரசிங்கதாபனிவியாக்யானம், கௌஷீதகிபிராம்மணவியாக்யானம், ஸ்ரீருத்ராத்யாயவியாக்யானம், பகவத்கீதாபாஷ்யவியாக்யானம், சநற்சுதாதீயவியாக்யானம், விஷ்ணுசகஸ்திரநாமபாஷ்யவியாக்யானம், ஆத்மபோதம், கலாரோகணம், தத்வாலோகம், அபரோக்ஷாநுபூதி, அத்வைதசகஸ்திரம், உபதேசசகஸ்திரம், யுக்திசுலோகாஷ்டசதி, வாகீச்வரிஸ்தவம், அமரசம். ஆதிசங்கராசாரியர்விஜயாலயசோழன் காலத்தவர்என்பது, வி-கனகசபைபிள்ளையவர்களின் கருத்து.830-850.

சங்கருஷி — ஒரு முனிவன். இவன் ருஷிகளுக்குச் சூர்யனைப் பூசிக்கும் விதியையும் அவனது அர்ச்சனு விசேஷங்களும் கூறியவன். (விஷ - புரா.)

சங்கருஷணன் — 1. வசுதேவருக்குத் தேவகியிடம் உதித்த குமரன். சனகருக்குத் தத்துவம் உபதேசித்தவன். (பலராமருக்கொரு பெயர்.)

2. விஷ்ணுவின் வியூகங்களில் சம்மாரத்தைச் செய்வது.

சங்கர்கள் — பரதகண்டம் ஆண்ட பூர்வ அரசர்களில் ஓர் வகுப்பினர்.

சங்கல்பன் — 1. பிரமன் புத்திரன்.

2. தருமனுக்குச் சங்கல்பையிடம் உதித்த குமரன்.

சங்கல்பை—தக்ஷன் பெண், தருமன் தேவி.

சங்கவதி — தேவசிரவசுவின் பாரி, குமரர் சுவிரன், இட்சுமான்.

சங்கவநணனென்னும் நாகரியர் — தந்து மாறனைப் பாடிய புலவர் (புற - நா.)

சங்கவெண்மலை — சுதஞ்சணன் மலை.

சங்கவ்வை, அங்கவ்வை — ஔவைக்கு இலைக்கறியிட்டு "வெய்தாய் நறுவிதாய் வேண்டளவுந் தின்பதாய்" எனுங் கவி பெற்ற பெண்மணிகள்.

சங்கறுப்போர் — சங்கினல் கைவளைசெய்யும் ஜாதியார்.

சங்கன் — 1. தநுபுத்திரன். பாரதவீரரில் ஒருவனாகப் பிறந்தோன்.

2. விராடனுக்குச் சுரதையிடம் பிறந்த குமரன்.

3. பாதாளவாசியாகிய நாகன்.

4. சூரபன்மன் படைத்தலைவரில் ஒருவன்.

5. ஒரு வானரத்தலைவன்.

6. கம்சன் தம்பி.

7. சூரியவம்சத்து அரசர்களில் ஒருவன் இவன் விஷ்ணுபூசாபலத்தால் இழந்த நாட்டை அடைந்து திருவேங்கடத்தில் பெருமாளுக்கு விமான கைங்கர்யஞ் செய்தவன்.

8. சேதுவில் தன்பெயரால் தீர்த்தங் கண்ட இருடி.

9. ஜநமேஜயன் குமரன்.

10. கர்ணன் குமரன்.

11. இராவணன் சேனைவீரரில்ஒருவன். பனசன் என்னும் வானரசேனாதிபதியால் தோரால் அறையுண்டு இறந்தவன்.

12. ஒரு முனிவன். இவன் தன் தமயனில்லாக்காலத்துத் தமயன் வைத்த உணவையருந்தித் தமயனால் கையறுப்புண்டு புண்ணியதீர்த்த ஸ்நானத்தால் கைவளரப் பெற்றவன்.

சங்கரதி — (சங்.) சையாதி குமரன், இவன் குமரன் ரௌத்திராசுவன்.

சங்காசுரன் — ஒரு கற்பத்தில் வேதங்களை அபகரித்து விஷ்ணுவால் கொலையுண்ட அசுரன். (பாத்மபுராணம்.)

சங்கியாதி — சுகுமாரன் குமரன்.

சங்ஞை — சூரியன் தேவி. விச்வகர்மன் பெண். இவள் சூரியனது வெப்பத்தைப் பொறுக்காமல் தன் சாயையில் ஒருத்தியை நியமித்து வைத்துவிட்டுத் தந்தையிடஞ்செல்லத் தந்தை மறுத்தது கண்டு இவள் பெட்டைக்குதிரை உருக்கொண்டு தவத்திற்குச் சென்றனள். பின்பு சூரியன் தனது தேவியைக் காணாது மாமனாரிடம்வந்து இருக்குமிடம் அறிந்து ஆண்குதிரை யுருவாய் அவளைத் தொடர்ந்தனன் இந்தக் குதிரையின் மூக்கின் தொளையின்வழி ஒழுகிய ரேதசில் அஸ்வநிதேவர் பிறந்தனர். இவட்குச் சஞ்ஞாதேவி எனவும் பெயர்.

சங்கிரதி —1. சுமாலியின் குமரன், அரக்கன்.

2. (சங்.) நரன்குமரன். இவன் குமரர் குரு, ரந்திதேவன்.

சங்கிரமணம் — 1. சூர்யன் ஒரு ராசியைக் கடந்து அடுத்த ராசிக்குள் பிரவேசிக்கும் க்ஷணத்திற்குப் பெயர். இது மேஷஸங்கிரமணம், கடகஸங்கிராந்தி, மகரஸங்கிராந்தி, இதைச் சங்கிராந்தி யெனவும் கூறுவர்.

2. சூரியன் மேஷ, கடக, துலா, தனுஸு, இராசிகளில் பிரவேசிக்கும் புண்யகாலம்.

சங்கிரன் — இவன் ஒரு தருக்கசாத்திரம் வல்ல வேதியன். தருக்கத்தால் யாவுஞ் சூனியம் எனக் கண்டு மோக்ஷநூல் ஓதாமல் நரகம்அடைந்து ஒரு முனிவரால் நரகத்தினின்று நீங்கியவன். (சூதசம்மிதை.)

சங்கிராந்தவாதசைவன் — அவிகாரியாகிய ஆன்மசந்நிதானத்தில் அசத்தாகிய கருவிகளே சத்தாகிய சிவத்தைத் தெரிவிக்கும் என்பன். ஆன்மசந்நிதானத்தில் உயிர் சேட்டிக்கும். ஆணவம்நீங்கச் சத்திநிபாதம் உண்டாகும். உண்டாகக் கர்த்தாவின் அருள்உண்டாகும். விறகில் தீயுண்டாய் எரிந்துசெல்லக் கடைசியில் விறகு அக்கினியானது போல் ஆன்மா தன்னிலை கெட்டு அருளுருவாய் ஒன்றுபட்டு முத்தி அடையும் என்பன்.

சங்கிராந்தி—1. சூரியன் தனுராசியில் சஞ்சரிக்குங்காலம். இது தேவர்க்கு விடியற்காலம். மகாசங்கிராமேசக்தி எனும் சத்தி தக்ஷிணாயன ஆறுமாதத்தில் மனிதரை மூதேவியுருவாயும், பசுக்களைப் புலியுருவாயும், வருத்திவந்தபடியால் அத்துன்பம் ஈசுவரானுக்கிரகத்தால் நீங்கினதால் தைமீ முதல்தேதி ஜனங்கள் அக்காலத்து விளைந்த புதுப்பொருள்களால் சூரியனை ஆராதித்தனர். சங்கிராந்தி பசுக்களைப் புலியுருவாய் அருந்தியிருந்தபடியால் அப்பசுக்களையோட்டி அ...

புலியுருக்கொண்ட சத்தியை ஒட்டினான். இதை மாட்டுப்பொங்கல் என்று வழங்குவர். (சிவாகமம்).

2. இவ்வாறன்றி இந்திரன் மழை வருஷிப்பிப்பவன் ஆதலால் அவன் செய்த நன்மைபொருட்டுத் தைமீ முதலில் அறுத்த முதற்பயிரை மழைக்கடவுளாகிய இந்திரனுக்கு ஆராதித்துவந்தனர் எனவும், அது கிருஷ்ணமூர்த்தி அவதரித்த பின் அவர் அதை நாராயணனுக்குப் படைக்கக் கட்டளையிட்டனர் எனவும், அதனால் இந்திரன் கோபித்துப்பெரு மழை பெய்விக்கக் குடிகள் நிலைகுலைந்து மாடுகன்றுகள் இழந்து தடுமாறக் கண்ணன் கோவர்த்தனம் எடுத்துக் குடிகளைக் காத்தனர் எனவும், அதனால் இந்திரன் வெட்கி வேண்டச் சங்கிராந்திக்கு முன்னாள் அவன்பெயரால் பண்டிகைசெய்வித்தனர். அது போகிபண்டிகை எனவும், மறுநாள் சங்கிராந்திபண்டிகை எனவும், மறுநாள் மழையால்வருந்திய மாடு கன்றுகளைத் தளையவிழ்த்துவிட்டுக் களித்தமையால் மாட்டுப்பொங்கல் என்றும், மறுநாள் ஒருவரை ஒருவர்சென்று மழையால் உண்டாகிய சுகாசுகங்களை விசாரித்ததால் காண்பொங்கல் என்றுங் கூறுவர். இந்த மழையால் இடிந்தவீடுகளைப் பழுதுபார்த்துச் சுத்தப்படுத்தின ராதலால் அவ்வழக்கப்படி இப்போதும் வீடுவாயில்களைச் சுத்தப்படுத்துகிறார்கள். அந்தக் காலத்தில் சிலர் வீடுகளை மலைமண்ணால்மெழுகிச்சுத்தஞ்செய்தனர் ஆதலால் இப்போது செம்மணிடுதல். அம்மலை யடிவாரத்தில் குடிபுகுந்தோர் சிலர் சமைக்க அடுப்புத் தோண்டியும், வறட்டிமூட்டியும், பனையோலையிலும் தீமூட்டினராதலால், இப்போதும் அவ்வகை செய்துவருகின்றனர்.

சங்கிராமசித் — 1. துரியோதனனுக்குத் தம்பி.

2. யாதவவீரருள் ஒருவன்.

சங்கிருதம் — பிராகிருதபாஷை.

சங்கிருதி — 1. (சங்.) செயசேநன் குமரன். இவன் குமரன் தர்மா.

2. நரன் குமரன். குமரர் குரு, இரந்திதேவன்.

3. ஒரு இருடி.

சங்கர்ஷணன் — ஒரு சிவகணத்தலைவன்.

சங்கலியார் — இவர் பார்வதிபிராட்டியார் கைலாசத்தில் திருப்பணிசெய்திருக்கண்டிருந்த தோழியர். இவர் ஆலாலசுந்தரரைக்கண்டு சித்தசலனப்பட்டுப், பார்வதிபிராட்டியார் கட்டளைப்படி திருவொற்றியூருக்கு அருகிலுள்ள ஞாயிறு என்னுந்தலத்தில் ஞாயிறுகிழவர்க்குப் புத்திரியாக அவதரித்துச் சுந்தரமூர்த்திசுவாமிகளை மணந்தவர். இவரை மணஞ்செய்ய விரும்பி ஒருவன் சிலரை விடுத்து மாய்ந்தனன். இவரது மற்ற சரிதங்களை ஸ்ரீசுந்தரமூர்த்திகளைக் காண்க.

சங்கினிதீர்த்தம் — ஒரு தீர்த்தம்.

சங்கீரணவணி — அலங்கார நூலிற் கூறிய அலங்காரங்களிற் பல பொருந்தவுரைப்பது. (தண்டி.)

சங்குகள் — 1. இவை நத்தைகளைப்போல இரண்டு மூடிகளைக்கொள்ளாமல் ஒரே ஓடுள்ளனவாக இருப்பன. இவற்றில் சிறியது கடுகினளவும், பெரியது ஒரு அடிக்கு மேலும் இருக்கின்றன. சங்குகள் முட்டையிடும்போது முட்டைகளை அடுக்காக்கி அதற்குக் காப்பாக ஒரு கூட்டைக் கட்டுகிறது. அதில் அச்சங்குப் பூச்சிகள் வளர்ந்து தாமே கூட்டைவிட்டு வெளிவருகின்றன. இவ்வினத்தில் பலவகை உண்டு, இவை நன்னீரிலும் பிறப்பதுண்டு, இவ்வகையில் பலகறை, இராவணன்விழி, சொறிசங்கு, பல்பப்பூச்சி எனப் பலவகை உண்டு.

சங்கு - இது கடலிலும் ஏரி, ஆறு, குளங்களிலுள்ள பிராணி, முதுகெலும்பில்லாதவை. இது நத்தையைப்போல் உருவமுடையது, இதில் பலவகைச் சங்குகள் உண்டு, இவற்றில் வலம்புரிச்சங்கே விசேஷம். இதன் ஓட்டை மாம்சத்தைப் போக்கிப் பானபாத்திரமாகவும், ஊதுகருவியாகவும் உபயோகிப்பர். இப்பி 1000 சூழ்ந்தது இடம்புரிச்சங்கு, இடம்புரி 1000 சூழ்ந்தது வலம்புரி. வலம்புரி 1000 சூழ்ந்தது பாஞ்சசன்யம்.

1. ஒரு யாதவவீரன்.

2. ஒரு அசுரன். திதி புத்திரன்.

3. உக்கிரசேநன் குமரன்.

4. விஷ்ணுவின் சங்கு பாஞ்சசன்யம். தருமராஜனுக்கு அநந்தவிஜயம், தனஞ்சயனுக்கு தேவதத்தம், [illegible] பௌண்டரம், [illegible] சுகோஷம், சகதேவனுக்கு புஷ்பகம்.

சங்குகன்னன் — 1. [illegible]

2. ஒரு [illegible]

3. காசிக்ஷேத்திரத்தில் பிசாசமோசன வாவியிடைத் தவஞ்செய்த வேதியன். இவன் தவஞ் செய்கையில் ஓர் பிசாசு தோன்றித் தான் முற்பிறப்பில் மனைவியைவிட்டு அயல்மாதரைப் புணர்ந்து தருமத்தில் பொருளைச் செலவிடாததால் இவ்வுருப் பெற்றனன் என வேண்டிற்று. வேதியன் பிசாசினைப் பிசாச மோசன தீர்த்தத்தில் முழுகக் கட்டளையிட்டனன். பிசாசம் அவ்வகைசெய்து நல்லுருப் பெற்றது. இதனால் வேதியனாகிய சங்குகன்னனும் சிவபிரானைப் பணிந்து முத்தி பெற்றனன்.

4. அவிநாசியப்பர் திருவடியினுள்ள பொற்சிலம்பைக் கவாத் திருவடியை நோக்கி இருந்த புண்ணியத்தால் முத்தி அடைந்தவன்

5. ஒரு முனிவர் தந்துவர்த்தன சோழனுக்குப் புத்திரப்பேறருள் செய்தவர். (பவாநிகூடற்புராணம்.)

சங்கோசன்—ஒரு புலையன், இவன் அரசன் அரண்மனையில் திருடினதால் கொலைக்களத்தில் கொலைசெய்வோர் கொல்லுகையில் சிவத்யானஞ்செய்தனன். வான் மலர் மாலையாய்க் கழுத்தில் விழ நற்பதமடைந்தவன். (பவானிகூடற்புராணம்).

சங்கோடன்—குபேரனுக்குச் சேனாபதி.

சங்சிரசு—தநு புத்திரரில் ஒருவன்.

சசபதர்—ஒரு மகருஷி, இவர் பாண்டிநாட்டில் பாண்டரம் என்னுமலையில் தவஞ்செய்துவந்தனர். இவரது தவத்தினைக் கெடுக்க இந்திரன் ஹேமை என்னும் அப்ஜரஸ்திரியை விட அவள் இவர்க்குமுன் கானஞ்செய்து இவரைக்கூடி மதுமானைப் பெற்றாள். (திருவல்லிக்கேணி புராணம்.)

சசபிந்து — 1. (சூ) விந்துமதிக்குத் தந்தை. மாந்தாதாவின் மாமன்.

2. இளன் குமரன்.

3. ராஜரிஷி விருஷ்ணி வம்சத்தவனாகிய சித்திரரதன் புத்திரன். இவனுக்கு 10,000 தேவியர். ஒவ்வொரு தேவிகளிடத்தும் 1000 பிள்ளைகள். புத்திரி விந்துமதி. மாந்தாதாவின் பாரியை. (பார. து.)

சசாங்கன் — முயற்கறையை மத்தியிலுடைய சந்திரற்கு ஓர் பெயர்.

சசாதன் — சூரியவம்சத்து இக்ஷுவாகு புத்திரனாகிய விகுட்சிக்கு ஒரு பெயர். இவன் புத்திரன் ககுஸ்தன். (பா. வி.)

சசி — 1. இந்திராணிக்கு ஒரு பெயர்.

2. பிரசாபதியின் இளையராணி. (சூளா)

சசிசேகரச்சோழன் — தேவசோழன் குமரன். இவன் செண்பகவல்லியை மணந்து (70) வருஷம் அரசாண்டு வருகையில் குணவல்லி என்னும் பெண்ணைப் பெற்றுப் பாண்டியற்குக் கொடுத்தவன். ஒருமுறை காவிரியில் வெள்ளம்வர அதனால் குடிகள் துன்பம் அடைந்ததுகண்டு அரசன் (40) நாள் சிவத்தியானஞ்செய்யச் சுவாமி கனவில்தோன்றிநாம் அளவாகச் சலத்தை அனுப்புகிறோம், நீ அணைகட்டி அதனைக் கொள்ளிடத்துத் திருப்பிக்கொள் என்றனர். அந்தப்படியே காவிரியும் கனவில் தோன்றித் தன்னில் அணைகட்டும்படி சொல்லச் சோழன் ஸ்ரீரங்கத்திற்குக் கிழக்கே பஞ்சலோகம் வார்த்து அணை கட்டினன் ஆதலால் இவனுக்குக் காவிரி அணைகட்டியசோழன் என்றும் பெயர். இவன் குமரன் சிவலிங்கசோழன்.

சசித்துவஜன் — பல்லாடதேசத்து அரசன். இவன் குமரன் சூரியகேது. உடன்பிறந்தான் பிரகத்கேது. இவன் பரமபாகவதன். கல்கியுடன் யுத்தஞ்செய்ய வந்து கல்கியால் கொண்டாடப் பெற்றவன். இவன்தேவி சுசாந்தையால், கல்கி ஸ்தோத்திரஞ் செய்யப்பட்டார். இவன் குமரி ரமா. இவள் கல்கியை மணம்புரிந்தாள். இவன் தன் குமரியைக் கல்கிக்கு மணஞ்செய்விக்கவந்த புண்ணியமாவது பூர்வ சன்மத்தில் இவனும் இவன் பாரியும் கழுகாக இருந்தவர்கள். ஒருநாள் இவர்களை ஒரு வேடன் வலையில் அகப்படுத்தி வெட்டிக் கண்டகிநதிதீரத்தில் சமைத்தான். அந்நதிக்கரையை அடைந்த புண்ணியத்தினாலே விஷ்ணுபதம் அடைந்து நூறுயுகங்கள் வசித்துப் பின் பிரமலோகத்து ஐந்நூறுயுகங்கள் வசித்துப் பின் பூமியில் வசிக்கவேண்டும் என்னும் ஆசையினால் இவ்விடத்தில் அரசராய்க் கல்கியாகிய நாராயணமூர்த்தியைக் கண்டார்கள். இவன் பூர்வசன்மத்தில் சத்திராசித். இவன் குமரி பூர்வசன்மத்தில் சத்தியபாமை. இவர்கள் சத்திராசித் பெற்ற சியமந்தக மணியையும் சத்தியபாமையையும் சததன்வா கேட்கக் கொடாததினால் சததன்வா ஆனவன் முற்பிறப்பாகிய சத்திராசித்தைக் கொல்லச் சத்திராசித் சசித்துவசனாகப் பிறந்தான். அவன் குமரி சத்தியபாமையும் அத்தேகத்தை நீங்கிச் சசித்துவ

ஜன் குமரியாகிய ரமாவாகப் பிறந்து கல்கியை மணந்தாள். (கல்கிபுராணம்)

சசிபிந்து — சித்திரரதன் குமரன். இவன் மகாபோகி, மகாயோகி, பிறரால் ஜெயிக்கப்படாதவன். இவனுக்குப் பதினாயிரம் மனைவியர். இவன் மனைவியர் ஒவ்வொருவருக்கும் இலக்ஷம் குமரர் பிறந்தனர். இவர்களில் சிரேட்டர், பிருதுசிரவசு, பிருதி கிருதி, பிருது, எசசு. (பாகவதம்).

சசிமுகன்—சண்முகசேநாவீரன்.

சசிவர்ணன் — 1. பாகளக்யன் குமரன். இவன் காமஇச்சையால் பொருள்களை வேசையர்களுக்குச் செலவிட்டுப் புலைச்சியைப் புணர்ந்து ரோகியாய்த் துன்பப்படுகையில் இவன் தந்தை தேவபத்தன் என்னும் இருடியிடம் தன்குமரன் நிலை கூற அவர் கோபருவதத்தில் மகரந்தபாரா யணர் என்னுஞ் சிவயோகியிடஞ் செல்லின் நீங்கும் எனக்கேட்டுக் குமரனுடன் சென்று அவர் அநுக்கிரகத்தால் நோய் தீரப் பெற்றவன்.

2. விருத்தாசலத்தில் சாந்தசீலனுக்கும் விரதசீலை என்பவளுக்கும் பிறந்தகுமரன். இவன் பிறக்கும்பொழுது வெண்குஷ்டரோகம் இருந்தபடியால் இவனுக்கு இப்பெயர் வந்தது இந்தநோய் இவனுக்குத் தத்துவராயசுவாமிகள் தீக்ஷைசெய்தபின் நீங்கிற்று. இவன் செய்தனூல் சசிவர்ணபோதம்.

3. சோழதேசத்தில் சூரியபுரத்தில் இருந்த வேதியன். இவன் குமரன் நீலவர்ணன்.

சசிவர்ணபோதம்—சசிவர்ணனால் செய்யப்பட்ட விஞ்ஞானன்மநூல்.

சசுவதி — அங்கிரசன்புத்ரி, அசங்கன் மனைவி.

சசிவன் — போர்க்குரிய படை யியல்பு அனைத்தையு மறிந்தவன். (சுக் - நீ)

சச்சந்தன்—சீவகன் பிதா. சீவகன் புதல்வருள் ஒருவன்.

சச்யகன் — பயிர்களுடன் கூடித் தீமை விளைவிப்பவன். ஒரு தெய்வம்.

சஞ்சந்தகர்—இவர்கள் திரிகர்த்த தேசாதிபதிகளாகிய சுசர்மன், சத்யாதன், சத்யநேசன், சத்யகர்மன், சத்தியவர்மன் முதலியவர். இவர்களுடன் அருச்சுனன் சண்டைசெய்கையில், கௌரவர் அபிமன்னனைக் கொன்றனர். இவர்க்குப் பதினாலாயிரம் வெண்கல ரதக்காரர் உண்டு.

சஞ்சயநந்தன் — வீதசோக நகரத்தரசனாகிய வைசயந்தன் குமரன், இவன் தந்தையுடன் சினதீக்ஷை வகித்துப் பீமாரண்யத்தில் தியானித்திருக்கையில் வித்துத்தந்தனென்னும் வித்யாதரனது விமானம் இவனிருந்த இடத்திற் செல்லாமையால் வெகுண்டு இவனைத் தூக்கி விமானத்தில் வைத்துக்கொண்டு சென்று குமுதவி, சுவர்ணவதி, அரிவதி, கஜவதி, சண்டவேகை யெனும் நதிக் கப்பால் தன் விமானம் செல்லாதது கண்டு முனிவனைத் துன்புறுத்தி யவ்விடம் தள்ளிச் சென்றனன். மீண்டும் வித்யாதரன் பல தீயரைக் கூட்டிவந்து உபத்ரவிக்க தேவர்களிவரிடம் பூஜார்த்தமாக வந்தடைந்தனர். வித்யாதரன் வெகுதூரம் போய் வீழ்ந்தனன். சஞ்சய முனிவன் அகாதி கர்மங்களைக் கெடுத்துலகுச்சி யடைந்தனன். (மேருமந்தரம்.)

சஞ்சயன்—1. கவதக்னி புத்திரன். பாண்டவ புரோகிதன்.

2. திருதராட்டிரனுக்குப் பாரதவிருத்தாந்தங்களைக் கூறிய சூதபுத்திரன்.

3. க்ஷத்ரவிருத்தன் பேரன்.

4. பிரீதி குமரன். இவன் குமரன் சயன்.

5. செங்குட்டுவன் தூதரில் தலைவன். (சிலப்பதிகாரம்)

6. திருதாராஷ்டிரன் தேர்ப் பாகன். இவனுக்குக் கவல்கணன் என்றும் ஒரு பெயர்.

சஞ்சலாசுரன்—ஒரு அசுரன். விநாயகமூர்த்தியிடம் பந்தாடவந்து அவரால் இறந்தவன்.

சஞ்சிதம் — பழைய வரவு இது (௩) வகை. பிறர்க்குரியதெனத் துணியப்பட்ட ஔபநிதிகம், இன்னார்க்குரியதெனத் துணியப்பட்ட யாசிதம், தனக்குரியதெனத் துணியப்பட்ட ஔத்தமர்ணிகம் என்பன. தனித்தனி காண்க. (சுக் . நீ.)

சஞ்சிதகன்மம் — இது, அநாதி முதல் சநனங்கள்தோறும் ஆர்ச்சித்த வினை புசித்துக் குறைபட்டது. இது ஆறத் துவாக்களிலும் கட்டுப்பட்டிருந்து ஆன்மா மறு சநனமெடுக்கையில் தொடர்வது.

சஞ்சீவிபர்வதம் — இஃது இலங்காபுரிக்கு வடக்கு (௧,000) யோசனையில் இமயம், அதற்கப்புறத்தில் அவ்வளவு யோசனைக்கு அப்பால் ஹேமகூடம். அந்த ஹேமகூடத்திற்கு (௧,000) யோசனைக்கு அப்பால்

நிடதம். அந்த நிடதமலைக்கு (கூ,000)யோசனைக்கு அப்பால் நீலம் என்னும் மலை. இதற்கு (௯,000) யோசனைக்கு அப்பால் சஞ்சீவிபர்வதம். இதில் சந்தானகரிணி, சல்லியகரிணி, சமன்யகரிணி, மிர்தசஞ்சீவினி எனும் மூலிகைகள் இருக்கும். இவை அநேக தேவராலுங்கூரிய சக்கரத்தாலும்காக்கப்படும். இது இரண்டுமுறை இராம இராவணயுத்தத்தில் அனுமனாற் கொண்டுவரப்பட்டது. ஒருபிரதியில் ஏமகூடத்திற்கு அப்பால் அவ்வளவு யோசனையில் நிடதம்எனவும், அதற்கப்பால் அவ்வளவு யோசனையில் மேருஎனவும், அதற்கப்பால் அவ்வளவு யோசனையில் நீலம் எனவும், அதற்கப்பால் சஞ்சீவிபர்வதம். எனவும் கூறியிருக்கிறது. மேருவிற்கு வடக்கு உத்தரகுரு.

சஞ்ஞக்கினன் —(சங்.) இவன் ஒரு சன்மத்தில் புருவாகிச் சிவதரிசனஞ்செய்து மறுசன்மத்தில் அரசனானவன்.

சஞ்ஞாதேவி—விச்வகர்மாவின் குமரி சூரியன் தேவி, சங்கியைக் காண்க.

சடகோபர்—நம்மாழ்வாரைக் காண்க.

சடகோபாசாரியார் — நடாதூர் அம்மாளை ஆச்ரயித்தவர். முகுந்த தேவராசாவின் சமஸ்தான வித்வான்களை அம்மாளின் சொற்படி வென்றவர். இவர் ஆசாரியர் சொற்படி மேனாட்டிற் சுவமதம்தாபிப்பதாய்ச் செல்லுகையில் அகோபிலஞ் சென்று பெருமாளைச் சேவித்து நீங்கித் திருநாராயணபுரத்தில் இருக்கையில் தம்மைப் பெருமாள் சந்நியவசித்துக்கொண்டு அகோபிலம்வந்து தரிசிக்கக் கட்டளையிட்டதாகச் சுவப்பனங்கண்டு ஆசாரியசந்நிதியில் விண்ணப்பித்து அதியாச்சிரமம் அடைந்து வண்சடகோப ஜீயர் என்ற திருநாமம்பெற்று அகோபிலத்து ஒரு மடங் கட்டுவித்து ஆசாரியரால் எழுந்தருளியிருந்தனர். இது அகோபிலமடத்து ஆதிவண் சடகோபசுவாமியின் சரிதை.

சடகோபக்கோற்றி — மணவாளமாமுனிகளின் ஆதிசேட வுருவத்தைக் கதவின் புரையில் கண்டு திடுக்கிட்டவள்.

சடகோபதாசர் — இவர் தமிழில் வைணவ குரு பரம்பரையைச் செய்யுளாகப் பாடியவர். இவர், தொண்டை நாட்டினின்று தென்னாடு சென்ற காளத்தி முதலியாரின் சந்ததியார் எனவும், இற்றைக்கு (௬00) வருஷங்களுக்குமுன் நாகப்பட்டினம் தாலுகா கீழையூரில் சடகோப ராமாநுஜ முதலியாரென்று பிரபலமாக வாழ்ந்தவர் எனவும் கூறுவர். இது செய்யுளாசிரியற்றிய முதற் குருபரம்பரை இரண்டாவது குருபரம்பரை, மூன்றாவது குருபரம்பரை முதலிய உண்டு. குருபரம்பரை காண்க.

சடசீதி — ஆதித்தன் சரராசியினின்றால் (எ) ஆம் பாகமும், ஸ்திரராசியினின்றால் (கூ) ஆம் பாகமும், உபயராசியினின்றால் (க) ஆம் பாகமும் சடசீதி யெனும் தோஷமாம். இதில் சுபகன்மங்கள் செய்யக்கூடாது. (விதானமாலை).

சடங்கவிமறையோர் — சுந்தரமூர்த்திசுவாமிகளின் மாமனர். இவர் இருக்கை புத்தூர்.

சடங்கவிமறையோர்பெண் — சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கென நியமிக்கப்பட்டுத் திருமணநாளில் தடையுண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகளையே தியானித்துத் திருக்கைலை அடைந்தவள்.

சடச்சு — (பிர) அநுபுத்திரன்.

சடபாதர் — பரதனைக் காண்க.

சடாம் — நிஷதத்திற்கும் நீலத்திற்கும் நடுவிலிருக்கும் மலை.

சடன் — ஒரு யாதவவீரன்.

சடாசியன் — சிவகணத்தவரில் ஒருவன்.

சடாசுரன் —1. பாண்டவர் தீர்த்தயாத்திரையி லிருக்கையில் பிராமணவடிவுகொண்டு துரோபதையைத் தூக்கிக்கொண்டு சென்றுவீமனாற் கொல்லப்பட்ட அரக்கன்.

2. பகாசுரன் தந்தை.

சடாயு—1. அருணனுக்குச் சேநியிடம் பிறந்த குமரர், தாயைச் சேநியெனவுங் கூறுவர். இவர் சகோதரன் சம்பாதி தசரதர்நிலைகேட்டுத் தோழமை யறிவித்து இராமரிடம் புத்திரவாஞ்சை வைத்தவர். இராவணன் சீதாபிராட்டியை யெடுத்துச் செல்கையில் அவனைத் தடுத்து அவனுடன் போரிட்டு அவன் வச்சிரத்தால் வலிகுன்றி இராமபிரான் தம்மைக் காணும் வரையில் உயிர்தாங்கி இராமமூர்த்திக்கு இராவணன் செயல்கூறி உயிர்நீங்கி இராமமூர்த்தியால் நற்கதியடைந்தவர். இவரது மற்றச் சரிதைகளைச் சம்பாதியைக் காண்க. 50,000 வருடம் உயிருடனிருந்தனர். தசரதனைக் காண்க.

2 திரேதாயுகத்தில் கழுகுருக்கொண்டு வேதகிரியில் பூசித்தவன்.

சடி — இரதநூபுரத் தாசன். அருக்கக் கீர்த்திக்குஞ் சயம்பிரபைக்குந் தந்தை.

சடிலன்—கௌதம வம்சத்தவனாகிய இருடி. இவர் பெண் எழுவரை மணந்தனள் குமரி சடிலை.

சடிலை—சடிலன் பெண். இவள் எழுவரை மணந்தனள்.

சடையனாயனார் — சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் தந்தையார். மனைவியார் இசை ஞானியார் (பெ. புராணம்)

சடையப்பமுதலியார் — திருவெண்ணெய் நல்லூரில் கம்பரை யாதரித்த வேளாண் பிரபு. இவரைக் கம்பர் தாம் பாடிய இராமாயணத்தில் புகழ்ந்து பாடினர். இவர்க்குத்தந்தையார் சங்கரமுதலியார். இவர்க்குத்திரிகர்த்தன், சராமன்எனவும்பெயர். இவர் சகோதரர் இணையார மார்பர். இவர் விக்ரமன், குலோத்துங்கன் முதலிய சோழன்காலத்தவர். இவர் தமிழ்ப புலவரை யாதரித்த வண்மையாளர்.

சடையநாதவள்ளல் — இவர் தொண்டை நாட்டுப் புழற்கோட்டத்து இருந்த வேளாண்குடிப்பிறப்பினர். பாண்டியன் சபையில் கழைக்கூத்தின் வகுப்பாகிய விச்சுளி வித்தையாடிய கழைக்கூத்தியை அரசன் விரும்புவான் என்று அறிந்த அரசபத்தினி, கழைக்கூத்தி ஒருதரம் செய்யவல்ல விச்சுளி வித்தையை அரசன் காணுதபடி தன்னிடம் கவனிக்கச் செய்கையில் கூத்தி அவ்வித்தை செய்து முடித்தனள். அரசன் அவ்வித்தையைப் பாராத்தால் மீண்டும் அதனைச் செய்ய வேவினன். கூத்தி அதன் அருமைக்கும் அரசன் ஆணைக்கும் பயந்து ஆகாயத்திற் பறந்துபோம் பறவைகளை நோக்கி "மாகுன்றனைய" என்று கவி கூறி இவர்க்குச் செய்தி அனுப்பினள். இவர் மகாத்தியாகியாய் இருக்கலாம். கூத்தாடினவளைக் காண்க. சூலிமுதுகிற் சோறிட்டமை காண்க.

சட்சு — சாட்சுசமனுவின் தந்தை.

சட்டிப்புலையன் — இவனுக்குக் கொலைத் தொழில். இவன் அகிம்சாவிரத மநுஷ்டித்த புலையன். இவன் பூர்ணமாசியில் கொல்வதில்லையென விரதம் பூண்டிருக்கையில் அரசன் கள்ளரிருவரை அந்நாளில் கொலைசெய்யக் கட்டளையிட மறுத்தமையால் இவனையும் மற்ற மூவரையும் முதலைக் கிரையாக நீரிலமிழ்த்த முதலைகள் மூவரைக் கொன்று இவனை நீக்க நன்மை பெற்றவன்.

சட்டைநாதர் — விஷ்ணுமூர்த்தியின் செருக்கை அடக்க எடுத்த சரபத் திருவுருவிற்குப் பிறகு விஷ்ணுமூர்த்திக்குத் தரிசனந் தந்த திருவுரு

சட்டைநாதவள்ளலார் — இவர் சீர்காழியில் இருந்து வாதுளாகமத்தின் ஞானபாகத்தைச் சதாசிவரூபம் எனத்திரட்டியசைவர்.

சட்டைமுனி — இவர் அகத்தியர் காலத்து இருந்த வைத்தியர். உரோம ருஷியுடன் மாறுகொண்டவர். இவர் பிறப்பால் சேணியர் என்பர். இவர் செய்த நூல்கள் சட்டை முனி ஞானம் 200, சட்டை முனி ௧௨௦௦, திரிகாண்டம், சாக்குவைப்பு, நவரத்தினவைப்பு, இவரைப் போகருக்கு மாணுக்கர் என்றுங் கூறுவர்.

சட்வர்க்கம் — உதிக்கின்ற ராசியையுடையவனும், இதனை (௨) கூருகவுண்பவனும், இதனை (௩) கூருகவுண்பானும், இதனை (௧௨) கூருகவுண்பானும், இதனை (௩௦) கூருகவுண்பானும் சட்வர்க்காதிபராவர். ஒற்றித்தாசியி ஞழிகையை (௨) கூறிட்டால் முதற்கூறு ஆதித்யன். (௨) ஆம் கூறு சந்திரன் இரட்டித்த இராசியை (௨) கூறிட்டால் முதற்கூறு சந்திரன், இரண்டாங்கூறு ஆதித்யன் இதுவோரை. உதயராசியை (௩) கூறிட்டால் முதற்கூறு உதயராசியை யுடையவனது; இரண்டாங்கூறு (௯) ஆம் ராசியை யுடையவனது; மூன்ருங்கூறு (௧) ஆம் ராசியை யுடையவனது; இது திரேக்காணம். உதயராசியை (௧௨) கூறிட்டால் அந்த ராசியை யுடையவன் முதலாக அடைவே துவாதசாங்க மறியப்படும். திரிம்சாங்கம் ஒற்றித்தராசியை (௩௦) கூறிட்டால் முதல் (௯) கூறு செவ்வாயுண்ணும், பின்பு (௮) க்கூறு வியாழனுண்ணும், பின்பு (௭) கூறு புதனுண்ணும்; பின்பு (௯) கூறு சுக்கிரனுண்ணும், இதனைக் கோட்கூறு என்பர். இரட்டித்த இராசியை (௩௦) கூறிட்டால் எதிரேருக முதற் சுக்ரனுக்கு (௯) கூறும், புதனுக்கு (௭) கூறும், வியாழனுக்கு (௮) கூறும், சனிக்கு (௯) கூறும், செவ்வாய்க்கு (௯) கூறும், இலக்ன சட்வர்க்கமாம். இக் கோட்கூற்றில் கர்க்கடகத்தும், விருச்சிகத்தும், மீனத்தும் கடையிலுற்ற கூறு மிக்கதோஷங்களைப்பண்ணுமென்க(விதா)

சணப்பர் — இவர்கள் நெய்யும் சாதியரில் ஒரு வகையர். இவர்கள் சணப்ப நாரால் கோணி முதலிய நெய்வோர். இவர்கள் சளுப்ப செட்டிகள் எனப்படுவர். இவர் களிற் சிலர் தம்மைச் தேசாயிகள் என்பர். இவர்கள் தம்மை (24) கோத்திரத்தவரெ ன்றும் சிலர் தொண்ட மகாரிஷி கோத்தி ரத்தவரென்றும் கூறுவர். (தர்ஸ்டன்)

சணல் — இஃது ஒருவகை நாருள்ள செடி, இதற்குச் சணம்புநார்ச்செடி யெனப் பெயர். நன்ருய் வளர்ந்த செடி யைத் தண்ணீரில் ஊறவிட்டெடுத்து அதைச் சீவினுல் நார் உண்டாம். அத னைச் சிறு இழைகளாக்கித் துணிநெய்வர்; கயிறு திரிப்பர்; ஒருவித எண்ணெய் இதன் விதையிலிருந்து செய்கிருர்கள்; மேனுட்டிலும், இந்தியாவிலும் இது பயி ரிடப்படுகிறது.

சண்டகன்—சூரபதுமன் படைத்தலைவன்.

சண்டகாதினி—சத்தியால் வக்ராசுரன் முத லியோரை வதைக்கச் சிருட்டிக்கப்பட்ட துர்க்கை.

சண்டகௌசிகர் — கட்சீவான் குமரர். பிர சத்தனுக்கு மாம்பழம் அளித்துச் சராசந் தன் எனும் புத்திரனைப்பெறச் செய்தவர்.

சண்டதபர்—ஒரு முனிவர், மந்தகேதுவைக் காண்க.

சண்டதருமன் — 1. ஒரு வேதியன் நீசப் பெண்ணைப் புணர்ந்து கள்ளருந்திச் சாண்டில்ய முனிவராற் பிராயச்சித்தம் அடைந்து செம்மை பெற்றவன்.

2. ஒரு வேதியன், இவன் குமரன் தரு மபுஞ்சன்.

சண்டதாண்டவமூர்த்தி—காளியுடன் ஊர்த்வ தாண்டவம் நடித்த சிவன் திருவுரு.

சண்டதேவன்—1. மதங்கனைக் காண்க.

2. சூத்திரப்பெண்ணுடன் கூடிப்பிராம ணன்பெற்ற குமரன். இவன் இப்பிறப்பு நீங்கி வேதியனுக இந்திரனை எண்ணித் தவம் இயற்றினன். அதனை அடையாது இந்திரனுல் பெண்கள் வணங்கத்தக்க தெய்வவுரு அடைந்தவன்.

சண்டபார்க்கவன் — சியவனவம்ச ரிஷி. ஜனமேஜயன் சர்ப்பயாகத்தில் உடனிரு ந்து நடத்தியவன்.

சண்டமார்க்கன்—சுக்கிராசாரியன் குமரன். பிரகலாதனனுக்கு வித்யாகுரு.

சண்டமுண்டர் — சும்ப நிசும்பருக்குச் சகோ தராகிய அரக்கர். பார்வதிதேவியாரின் அழகுகண்டு அருகில் வந்து காளியாற் கொல்லப்பட்டவர்கள்.

சண்டவிக்கிரமன்—1. வத்சந்திரன் குமரன்.

2. திரிகர்த்தராசன் குமரன். பாண்டவ ரது அச்வமேதக் குதிரையைக் கட்டி அருச் சுநனுல் அடியுண்டவன்.

சண்டவேகன் — ஒரு காந்தருவன். முந் நூற்று அறுபது காந்தருவருக்கு அதிபதி. புரஞ்சயன் பட்டணத்தை எதிர்த்தவன்.

சண்டவேகை — மாயாவிஞ்சைத் தெய்வம்.

சண்டன் — 1. சுக்கிரன் குமரன்.

2. சிவகணத்தவரில் ஒருவன்.

3. ஒரு விஷ்ணுபடன்.

4. சண்முக சேனுவீரன்.

5. சிங்கவீரனுல் உதையுண்ட அரக்கன்.

6. வேதாசலத்தில் கிருதயுகத்தில் கழு குருக்கொண்டு பூசித்தவன்.

7. ஒரு அசுரன் சத்தியால் கொல்லப் பட்டவன்.

8. ஒரு வேடன். இவன் காட்டில் சிவ லிங்கம் ஒன்றைக்கண்டு அதனிடம் அன்பு கொண்டு அவ்விடம் வேட்டைக்கு வந்த சிங்ககேது அரசனைக்கண்டு இச் சிவலிங் கத்தை எப்படிப் பூசிப்பதென்று வினவி னன். அரசன் பரிகாசமாய் நீ சலத்தினைச் சிவலிங்கத்தின்மீது ஊற்றி, சுடலையின் வெந்த சாம்பலை அதன்மேற் பூசி, பூக்க ளைச் சூட்டி அன்னத்தை நிவேதித்துத் தூபதீபங் காட்டுக என்று கூறிச் சென்ற னன். வேடன் இதனை உறுதியாகக் கொண்டு நடத்திவரும்நாட்களுள் ஒருநாள் சுடலையின்நீறு அகப்படாமல் பூசை தடை பட்டுக் கவலையுடன் இருந்தனன். இதனை அவனது கற்புடைய மனைவியறிந்து கண வனை நோக்கி நமது குடிசையைக் கொளு த்தினுல் நான் அதில் விழுந்து மாய்கி றேன். அந்த நீற்றினை எடுத்துப் பூசை முடியும் என, வேடன் அப்படியே உடன் பட்டுச் செய்து பூசைமுடிவில் வழக்கப் படி நிர்மாலியம் கொண்டுபோகத் தனது மனைவி உயிர்பெற்று வந்ததையும், குடி சை பழமைபோல் இருந்ததையுங் கண்டு சிவனருளெனச் சிவகணங்கள் எதிர்கொள் ளக் கைலை அடைந்தவன். (பிரமோத்தர காண்டம்.)

9. வத்சந்திரன் குமரன்.

10. அலம்புசை சத்தியின் வாகனமா கிய காகம்.

11. பலியைக் காண்க.

12. ஒரு காலபடன்.

13. சும்ப நிசும்பாசுரரின் சேனாபதிக ளில் ஒருவன். கௌசிகிதேவியால் கொல் லப்பட்டவன். இதனால் தேவிக்குச் சண் டமர்த்தனித் திருநாமம். (தேவி - பா.)

சண்டாமிருகன் — யமதூதரில் ஒருவன்.

சண்டாளன் — சூத்திரன் பிராமணப்பெண் ணைக் கூடிப்பெற்ற குமரன். சூத்திரற்கு முதல் மூன்றுவருணப் பெண்களிடம் பிறந்தவனும் ஆவன். (மநு)

சண்டி—1. சண்முகசேனைவீரருள் ஒருவன்.

2. பசுசகன் மனைவி.

சண்டிகை—1. ஒரு மாயாதேவி அம்சம்.

2. சத்தியைக் காண்க. பார்வதிதேவி யின் கணத்தவருள் ஒருத்தி. தாருணனைக் கொன்றவள்.

சண்டேசர் — கர்க்ககுலத்தில் கணபத்திரன் எனும் அந்தணன் மாலியவான் எனும் பர்வதத்தில் தன் மனைவி சுசீலையுடன் இல்லறம் வழுவாது நடத்துகையில் அமித்திரன் எனும் விதர்ப்பநாட்டரசன் அவ் விடம் வந்து அந்தணனைத் தான் செய்யும் அசுவமேதயாகத்திற்கு ஹோதாவாயிருக்க வேண்டி அழைத்து அவ்யாகபூர்த்தியில் அநேக பசுக்களையும் பொருள்களையுங் கொடுத்தனன். இவ்வந்தணன் தன் குமரர் சண்டர்வசம் அப்பசுக்களை மேய்த்துவரச் செய்தனன். இவர் அப் பசுக்களை மேய்த்துவருகையில் அப்பசுக்கள் அதிகமாய்ப் பால் கொடுத்தன. அவற்றைக் கண்ட சண்டர் இவை நம்மிறைவனுக்குப் பயனி லாது போதற்கோ நாம் இந்தப் பசுக்களை மேய்ப்பதென்று சுரைக் குடுக்கைகளில் அப்பால் முழுதும் கறந்து அவ்வனத்தி லுள்ள சிவப்பிரதிட்டைகளுக்கும் தமது ஆத்மார்த்த மூர்த்திக்கும் அபிஷேகித்து வருவர். இவ்வாறு வருகையில் பால் குறையக்கண்ட தந்தை மகனைக் கேட்கக் கன்றுகளின் முதிர்வில் பால் குறைந்த தென, நம்பாமல் அவருடன் பசுக்களை மேய்க்கும் பிள்ளைகளைக் கேட்டு உண்மை யறிந்து அதனைக் காணுமாறு ஒரு மரத்தி லேறியிருந்து இவர் மணலால் சிவலிங்க மமைத்துப் பாலை அச் சிவலிங்கத்திற்கு அபிஷேகிக்கக்கண்டு கடுங்கோபங் கொண் டுவந்து அச் சிவலிங்கத்தினையும் அதற்கு நிவேதனமாக வைத்திருந்த பலாதிகளையும் காலாலிடறக் கண்டு இவர் அதிகோபாக் ராந்தராய் உம்மை இகழ்ந்தவன் மகா பாபி யென இடறிய காலைத் தருப்பைகொய்ய வைத்திருந்த கோடரியால் சேதித்தனர். உடனே சிவபெருமான் சண்டருக்குத் தரி சனந்தந்து அவர் தந்தைக்குப் பிராட்டி யாரால் உடைந்த கால்களைத் தருவித்து இவரை முதுகைத் தடவி நீ இன்றுமுதல் சண்டிகேசனெனும் பெயரடைக. நாம் உனக்கு எமது பொற்கோயிலும், மணி முடியும் மாலையும் எமது நிவேதனமும் தந்தோம், இனி நீ தொண்டர் நாயகனாக வும், எம்மைப் பணிவோர் உன்னைப் பணிந்து எமது தரிசன பலன் பெறுக என்று அநுக்கிரகிக்கச் சாருபமும் பெற்ற வர் (சிவரஹஸ்யம்.)

சண்டேசாநுக்கிரகமூர்த்தி—சண்டேசுரநாய னரைக் காண்க

சண்டேசர் — இவர், சர்ப்பபூஷணம், நீல கண்டம், சடைமுடி சந்திரசூடம், திரிநேத் ரம், நான்குமுகம்,எட்டுப்புஜம் ருத்ராக்ஷம், சூலம், எழுத்தாணி, கமண்டலம், பிநாகம், பாணம், வச்ரம், வரதம், அபயம்முதலிய உடையராய் வீராசனங் கொண்டு எழுந் தருளியிருப்பர். இவர்க்குக் கிருதயுகத்தில் எட்டுப்புஜம், திரேதாயுகத்தில் ஆறுபுஜம், துவாபரயுகத்தில் நான்குபுஜம், கலியுகத் தில் இரண்டுபுஜம். இவர் சாமளவர்ணத் துடன் கூடிய சண்டிகா தேவியுடன் கூடி யிருப்பர். இவர்க்குக் காமிகாகமத்தில் தனியே ஆலயமுதலிய உற்சவாதிகள் கூறப்பட்டிருக்கிறது. வாகனம் ரிஷபம். சிம்மள தேசத்தில் இவரது ஆலயபிர திஷ்டை யெனக்கூறப்படுகிறது. இவர் உருத்ரகோபத்தி லுதித்தவர்; மைந்நிற முடையவராய்; பயங்கரமுடையவராய்ச் சூலம், உளி முதலிய ஆயுதங்களுடைய வராய்; ருத்ரசம்பந்தம் உள்ளவராய்; நான் குபுஜங்களையும், நான்கு முகங்களையுமுடை யவராய்; அக்னி ஜ்வாலாமுகராய்ப் பன் னிரண்டு கண்களையுடையவராய்; சடை முடியிற் பிறைச் சந்திரனைத் தரித்தவ ராய்; சர்ப்பகங்கணமுடையவராய்; நாக யஞ்ஞோபவீதராய் வெண்டாமரை ஆச னத்தில் வீற்றிருப்பர். (சைவபூஷணம்.)

சண்டேசுர நாயனார்—திருச்சேய்ஞலூரில் காசிபகோத்திரதில் எச்சதத்தனுக்கும் அவன் மனைவி பவித்திரைக்கும் விசார சருமர் எனத் திருவவதரித்து வேதம் முத லியவுணர்ந்து சிவபக்தியுடையரா யிருந் தனர். இவர் இடையன் ஒருவன், பசு

ஒன்று அவனைப் பாய அப்பசுவினைக் கோலால் அடிக்கக்கண்டு அப்பசுக்களின் தன்மைகளை அவனுக்குப் போதித்து அவனை இனிப் பசு மேய்க்காதிருக்கக் கட்டளை தந்து அவ்வூரார் அனுமதிபெற்றுத் தாமே அப்பசுக்களை மேய்த்து முன்னிலும் அதிகமாய்ச் சீராட்டி வந்தனர். இதனுற் பசுக்கள் கன்றுகளையும் நினையாமல் விசாரசருமரைவிட்டு நீங்காது அன்புள்ளனவாய்த் தாமே பால்சொரியத் தலைப்பட்டன. இதனை நோக்கிய விசாரசருமர் இப்பாலைச் சிவ மூர்த்தியின் பொருட்டாகத் தக்கவையாக நினைத்தனர். நினைக்கச் சிவார்ச்சனையில் பேராவலுண்டாய் மண்ணியாற்றங் கரையருகு இருந்த திருவாத்திமரத்தடியில் மணலால் சிவலிங்கந் தாபித்து மதில்முதலிய மணலால் அமைத்து வேண்டிய கருவிகளை மானசமாய் நிருமித்துக் கொண்டு நல்ல பூக்களைப் பறித்துத் தீண்டச் சுரந்த பாலைக் குடங்களிற் கறந்து சிவபூசைசெய்து வருவார் ஆயினர். இந்தப்படி நடத்திவந்தும் பசுக்குரியவர்களுக்குப் பால் குறைவின்றி யிருந்தது. இதைக் கண்ட ஒருவன் விசாரசருமன் பாலைக் கறந்து மணலில் ஊற்றி விளையாடுகிருன் என்று ஊரில் கூறினன். ஊரார் எச்சதத்தனிடம் குறைகூறினர். தந்தையாகிய எச்சதத்தன் இதன் உண்மை அறியவேண்டி அருகிருந்த குராமரத்தின்மீதேறி ஒளிந்து கண்டு சொன்னது உண்மையென்று சிவபூசையிலிருந்த குமரரைக் கோலாற் புடைத்தனன். குமரர் எழுந்திராமைகண்டு அருகிருந்த பாற்குடங்களைக் காலால் இடறினன். இந்தச் சிவாபராதத்தால் கோபங்கொண்ட குமரர், அருகிருந்த கோலை எடுக்க மழுவாயிற்று. அதனுல் தந்தையின் உதைத்த காலை வெட்டி முன்போற் சிவபூசையில் இருந்தனர். சிவமூர்த்தி பிராட்டியுடன் விசாரசருமர்முன் தரிசனம்தந்து அவர் உடம்பைப் பரிசித்து உமக்குத் தொண்டர்க்கு நாயகமாம் பரிசு தந்தோம் எனத் தாம் அணிந்த கொன்றைமாலைசூட்டி நாம் ஏற்ற அமுது, மாலை, பரிவட்டம், உமக்கே கிடைக்க என அநுக்கிரகித்துச் சண்டேசுரபதம் அளித்து மறைநதனர். எச்சதத்தர் சண்டேசுரமூர்த்தியால் தண்டிக்கப்பட்டமையால் சிவபதம் பெற்றனர். சண்டேசுரநாயனர்க்கு அநுக்கிரகஞ்செய்ய எழுந்த சிவமூர்த்தம் சண்டேசாநுக்கிரக மூர்த்தம் எனப்படும். இவர்க்குச் சண்டீசர், சண்டி, விசாரசருமர் எனவும் பெயர். (பெரியபுராணம்).

**சண்பகமாலை** — விசையையின் தோழியாகிய கூனி.

**சண்பகவடிவி** — கரிகாலச்சோழன் ஆலத்திப்பெண்ணுகிய மாகதவடிவியின் குமரி. இவளுக்குத் தமிழறியும் பெருமாள் எனப் பெயர்.

**சண்பை**—1. சீர்காழிக்கு ஒரு பெயர். துருவாசருஷி சாபத்தால் கருக்கொண்ட ஆண்மகன் வயிற்றில் பிறந்த இருப்புலக்கை அராவப்பட்டுக் கடலில் இட அது கடற்கரையில் ஒதுங்கிச் சண்பைப்புற்கள் ஆயிற்று. அப்புற்களால் கடற்கரைக்கு வந்த கோபாலர் ருஷியின் சாபத்தால் ஒருவரை யொருவர் மோதியிறந்தனர். அத்தோஷம் ருஷியை அடைந்ததால் அந்த ருஷி இந்தத் தலத்தில் பூசித்துப் பாதகத்தைப் போக்கிக்கொண்டனர்.

2. ஒரு நகரம் கடலோரத்துள்ளது. (மணிமேகலை)

**சண்பைநகர்** — இஃது அங்கநாட்டிலுள்ளதொரு பெரியநகரம். எல்லா வளத்திலும் மிகச் சிறந்து விளங்குவது. உக்கிர குலத்தரசனுகிய விசையவரனென்பவனுற் பாதுகாக்கப்பட்டு வந்தது. இந்த நகரத்தில் மித்திரகாமனென்னும் ஒரு வணிகர் பெருமான்வீட்டில் யூகியும், வாசவதத்தை, காஞ்சனமாலை, சாங்கியத்தா யென்னும் மூவரும் தம்மைப் பிறரறியாதபடி வேற்று வடிவங்கொண்டு அவனுற் பாதுகாக்கப்பட்டுத் தங்கியிருந்தனர். (பெ. கதை.)

**சண்முகன்**—ஆறுமுகத்துடன் கூடிய குமரக்கடவுளுக்கு ஒரு திருநாமம்.

**சதகண்டராவணன்** — இவனுக்கு விதர இராவணன் எனவும் பெயர். இவன் இராவணன், இராமராலிறந்த செய்தியைச் சுகசாரணராற் கேள்வியுற்று இராமருடன் யுத்தஞ்செய்ய எண்ணித் தூதனுப்பினன். தூதர் சொல்லக்கேட்ட இராமபிரான் சீதையிடங் கூறச் சீதாபிராட்டி இராமமூர்த்தியைச் சாரதியா யிருக்க வேண்டிப் புஷ்பகத்திலேறிப் பாற்கடலினருகு கோட்டை கட்டிக்கொண்டு வசித்திருந்த இவனுடன் யுத்தத்திற்குச் சென்று அனுமனைத் தூதாக ஏவ அரக்கனது கோட்டையின் காவலாளி அநுமனைப் பட்டணத்திற்குள் விடாது மறுக்க அந்

தத் திரிகண்டனை மாய்த்துச் சதகண்டனிடஞ் சென்று சீதை யுத்தத்திற்குவந்த செய்திகூறச் சதகண்டன் ஏவலால் அரக்கர் அநுமனைப் பற்றவர அநுமன் அவர்களைக் கொன்று மீண்டு பாசறை சேர்ந்தனன். பின் சதகண்டன் முன்பு மகாபலவானை யுத்தத்திற்கு அனுப்பினன். இவன் சீதாபிராட்டியிடம் இரண்டுநாள் யுத்தஞ்செய்து இறந்தனன். மூன்றாம் நாள் மகாமாயன் (இவனுக்கு (60) தலைகள் (120) கைகள்) யுத்தத்திற்குவந்து யுத்தஞ்செய்து ஒருசிர மிரண்டுகைகளுடன் தப்பி யுத்தஞ்செய்யாமல் ஓடிப் பிழைத்தனன். நான்காநாள் (30) தலைகொண்ட அக்நிக்கண்ணனும், ஐந்தாநாள் யமகண்டன், பஞ்சகண்டன், ஆறுநாள் நிஷ்கண்டன், ஏழாநாள் நிசாசரன் முதலியோர் யுத்தத்திற்குவந்து சிரமும் கரமும் இழந்து மாய்ந்தனர். எட்டாநாள் சதகண்டன் யுத்தத்திற்குவந்து சீதை செய்யும் யுத்தங்கண்டு ஆயுதமெடாமல் மீண்டு, ஒன்பதாநாள் யுத்தத்திற்குவந்து மாண்டனன். பத்தாம்நாள் மகாமாயன் சீதையைச் சரணடையச் சீதை அவனுக்கு இராச்சிய பட்டாபிஷேகம் அநுமனால் செய்வித்தனள். (இது கற்பனைகதை.)

சதகண்டன்—பஞ்சமுக அநுமனால் வதைக்கப்பட்ட மாயாபுரத்தலைவன் அரக்கன்.

சதகும்பம்—பொன்விளையும் மலை.

சதகோடி—வச்சிராயுதம்.

சதசந்திரன் — க்ஷத்திரியன். காந்தார ராஜபுத்திரன், பீமசேனனால் கொல்லப்பட்டவன். (பா - துரோ.)

சதசித் — 1. விரசனுக்கு விஷ்டபதாவிடம் பிறந்த குமரன்.

2. சகஸ்தரசித்தின் குமரன், இவன் குமரர் மகாஹயன், வேணுஹயன், ஏஹயன்.

3. ரசன் குமரன். இவனுக்கு விஷவக்சோதி முதலிய நூறு குமரர்.

4. யதுவம்சத்துப் பசமானன் குமரன்.

5. சதவிந்துவின் குமரன்.

சதசிருங்கம் — பாண்டுராசன் மானாயிருந்த இருடியால் சாபமேற்ற இடம். இது மலை. இவ்விடம் பாண்டு தன் இரண்டு தேவிமாருடன் தவஞ்செய்தனன். ஈண்டிருக்கையில் குந்திக்கு மந்திரபலசித்தி.

சதசிருங்கன் — ஒரு அரக்கன்.

சதசீருஷை — வாசுகியின் தேவி.

சதசுவன் — யமன் சபையில் இருக்கின்ற ஒரு க்ஷத்திரியன்.

சதசேநன் — (யா.) உக்கிரசேநன் குமரன்.

சதச்சித்திரம்—விஷ்ணுமூர்த்தி எழுந்தருளியிருக்கும் கேடயம்.

சதசீவன் — சமரன் குமரன்.

சததன்வா — இருதி குமரன் தேவமீடன் சகோதரன். இவன் சத்தியபாமையைத் தனக்குக் கொடாமையால் சத்ராசித்தைக் கொன்றனன். சத்திராஜித் இரவில் உறங்குகையில், அக்குரூரன் கிருதவர்மன் ஏவலால் அவனைக் கொன்று மணிகவர்ந்து கண்ணனுக்குப் பயந்து மணியை அக்குரூரர் இடத்தில் கொடுத்துவிட்டு விதர்ப்பதேசம்போய்க் கண்ணனால் இறந்தவன்.

சதத்துய்ம்நன் — (கு.) பாநு குமரன்.

சதத்துவசன் — ஊர்வசன் புத்திரன்.

சதத்ரு — இமயமலைக்கு மேற்பால் தோன்றிச் சிந்துவிற் கலக்கும் நதி. வசிட்டர் தம் புத்திரர்கள் இறந்த காரணத்தால், இதில் உயிர்விடத் துணிந்ததன்பொருட்டு இது பத்துக் கிளைகளாகப் பிரிந்தது. இதற்கு யமவதி என்றும் ஒரு பெயர். (பாரதம்.)

சதத்ருதி—1. பிராசீன பர்கிக்குத் தேவி, பிரசேதனுக்குத் தாய், சமுத்திரன் பெண்.

2. ஒரு சிவயோகி, இவனுக்கு அன்னமிட்டபலத்தால் பாண்டிநாட்டில் திருநெல்வேலியிலுள்ளார்பலர் நற்கதியடைந்தனர்.

சதநாவன் — சண்முகசேனவீரன்.

சதபதர்—சுக்லயசுர் வேதம் ஓதுகிறவர்கள்.

சதபர்வை — சுக்கிரன் தேவி.

சதமகன் — 1. இந்திரன் நூறு யாகங்கள் செய்ததால் பெற்ற பெயர்.

2. ஒரு தைத்தியன், சிவபெருமானையெண்ணித் தவமியற்றி ஆயிரம் நகரங்களை அடைந்தவன். (சிவபுராணம்.)

சதமகிடபக்ஷணி — ஒரு அரக்கி. இவள் நாடோறும் நூறு எருமைகளைப் பக்ஷிப்பவள். இவள் இந்திராணிபோல் உருக்கொண்டு விநாயகர் அவதரித்திருக்கும் இடத்தில் வந்து அங்கு எழுந்தருளியிருக்கும் பார்வதிதேவியாரிடம் நான் அசுரருக்கு அஞ்சி அடைக்கலம் அடைந்தேன் காக்க எனப் பிராட்டியார் அடைக்கலந் தந்தனர். அரக்கி அவ்விடம் குழந்தையுருக்கொண்டிருந்த விநாயகமூர்த்தியை ஆகாயமார்க்கத்தில் தூக்கிச் சென்றனள். இவள் கரத்தை விநாயகமூர்த்தி பிடித்து பூமியிற்றள்ளிக் கொன்றனர்.

சதமன்யு — சிவகணத்தவரில் ஒருவன்.

சதமுகன் — வீரவாகுதேவர் சூரபதுமனிடம் தூதாகவந்து திரும்புகையில் அவரைக் கட்டி வரும்படி அசுரனால் ஏவப்பட்டு வந்து அவரால் இறந்த அசுரன்.

சதம்பகன் — ஆலயன் குமரன். இவன் குமரன் புருஷமேரு.

சதயஇதன் — உபரிசரன் வம்சத்து அரசன்.

சதயாமன் — கேகயவம்சத்து ஒரு ராஜருஷி.

சதயூபர் — கேகயதேசாதிபனுடன் சேர்ந்த ருஷி. திருதராட்டிரன் தவத்திற்கு ஏகிய போது இவர் வகத்தில்வந்து தவஞ்செய்தனன். இவர் ஆச்சிரமம் கங்கைக்கரையில் உள்ளது.

சதயூமன் — இவன் தன் நந்தனவனத்தில் கள்ளவுருக்கொண்டுவந்த விஷ்ணுமூர்த்தியைத் துரத்த விஷ்ணுமூர்த்தி அவனுக்குக் காட்சி கொடுத்தனர்.

சதருப்வதி — பிரமசிருட்டியைக் காண்க.

சதருபை — சுவாயம்புமனுவின் பாரி. குமரர் பிரியவிரதன், உத்தானபாதன். பெண் தேவகூதி, பிரசூதி, பிரமன்புத்திரி. மேற்படி மனுவின் புத்திரி எனவுங் கூறுவர்.

சதலேயு—(சங்.) ரௌத்திராசுவன் குமரன்.

சதவலி—வானரத்தலைவன். சுக்கிரீவன் சேனாதிபதி.

சதவிந்து — 1. சதசித்தின் தந்தை. சதயூபர்வனத்துத் தவஞ்செய்து சுவர்க்கம் அடைந்தவன்.

2. ஒரு நிமித்திகன் சடியசரன் புரோகிதன்.

சதன் — திருதராஷ்டிர புத்திரர்களில் ஒருவன்.

சதாகாந்தை — பாரியாத்திர மலையிலிருந்து பிரவகிக்கும் நதி.

சதாசிவதத்வபுவனவாசிகள் — அணுசதாசிவர்கள் இவர்கள் (கO) பிரணவர், சாதாக்யர், தீர்த்தர், காரணர், சுசிவர், ஈசர், சூக்குமர், காலர், தேசேசர், அம்பு.

சதாசிவதத்வம்—தூலலய அவத்தையாகிய சத்தி தத்வத்தினின்று பொதுவகையாற் சங்கற்பித்த முதல்வன், பின்போக அவத்தையினின்று தனது ஞானசத்தியால் சிறப்புவகையானேக்கிக் கிரியாசத்தியாற் சிறப்புவகையாற் சங்கற்பித்தவழி காரியங்களைத் தோற்றுவித்தற்கு உன்முகியாய் நின்ற சுத்த மாயையின் மூன்றாம்விருத்தி சதாசிவம் எனப் பெயர்பெற்ற சிவனுலதிட்டிக்கப்படுவது. இதனைப் போகதத்வம், உத்யுத்ததத்வம், சகளநிட்களதத்வம் என்ப. (சிவ - போ.)

சதாசிவப்பிரம்மயோகீந்திரர்—இவர் கரூர் பட்டினத்தில் சற்றேறக்குறைய (150) வருஷங்களுக்குமுன் வசித்தவர். பிறப்பால் வேதியர். காவிரிதீர்த்தத்தின் கணுள்ள திருவிசைநல்லூரில் கல்விபயின்றவர். இவருடன் கல்விபயின்ற சகபாடிகளினும் இவர் நுண்ணறிவினராய் விளங்கினர். இவருடன் கல்விபயின்றோர் மகாபாஷ்யம் கோபாலகிருஷ்ண சாஸ்திரியார் முதலாயினோர். இவர் கல்வி பயின்று வருகையில் தமது பாரியை பருவமடைந்தனள், இதனால் இவரது தாயார் அந்நாளை மங்கல நாளாக விசேடங்கொண்டாடப் பலவித உணவுகளைச் சமைத்தனள். அன்று யோகீந்திரர் வழக்கம்போல் உணவு கொள்ளச் சென்று நடப்பதுணர்ந்து காலந்தவறி உணவுகிட்டுமென வெண்ணி இச் சம்சார துக்கத் தொடக்கத்திலேயே உணவுகிட்டாத்துக்கம் தொடங்குமாயின் இதனைமேற்கொள்ளின் வெகுதுக்கமாமென வெண்ணி அது முளைக்கும்போதே கெடுக்கவெண்ணிப் பரிபாகமுடையராய்ப் பரமசிவேந்திர சரஸ்வதி யென்னு மாசாரியரை யடைந்து ஞானோபதேசம் பெற்றனர். இவர்தம்குருவினிடம் ஞானோபதேசத்திற்கு வருபவரை பற்பலவினாக்கள் வினவி அவமதித்து வருவதையுணர்ந்த ஆசாரியர் உன்வாயெப்போதடங்கு மென அன்றுமுதல் மௌனம் சாதித்து நிஷ்டை கூடிப்பித்தர் போல் சர்வசங்கப் பரித்தியாகஞ் செய்து சமபுத்தியுடையராய் வீதிகளில் கிடக்கும் எச்சிலுண்டு திரிவாராயினர். இவரைக் கண்டோர் யாவரும் பித்தரென்று பரிகசிப்ப உலாவி வந்தனர். இவர் தம்மூர் விட்டுப் பரதேசசஞ்சாரியாய் ஆண்டுள்ள காடுகளில் ஒருவருக்கும் புலப்படாது நிஷ்டையிலிருப்பர். ஒருமுறை காவிரிநதியில் மணல் திடரில் நிட்டை புரிகையில் காவிரி வெள்ளங்கொண்டு இவரைமூழ்த்த இவர் மணலில் புதைந்திருந்தனர். கரையினின்றோர் யோகியார் மூழ்கினதைக்கண்டு வருந்திச் சென்றனர். மூன்றுமாதங்கள் கழிந்தபின் அரசனாணையால் மணலை யகற்ற வேலையாட்கள் புகுந்து நதியில்வெட்டுகையில் ஒருவன்வெட்டிய மண்வெட்டி தடைபட்ட துணர்ந்து மண்வெட்டியைப் பார்க்க அதில் இரத்தக்கறை யிருந்தது

கண்டு மெல்ல அவ்விடமிருந்த மணலையொதுக்க யோகியர் நிஷ்டை கூடியிருக்கக் கண்டு வெளிப்படுத்தினர். இவர் கருரையடுத்துள்ள கிராமவழி நள்ளிருளில் செல்லுகையில் நெற்போர்ப் படுப்போர் காவலிருந்த இடம் வழியறியாது சென்று இடறிவிழுந்தனர். காவற்காரர் இவரைக் கள்ளரென்று தடிகொண்டெறியக் கை தூக்க, அக்கைகள் விழுந்து அவர்களின் தலைவன் வருமளவும் தம்பிக்க வேலையாட்களஞ்சிப்பணியத் தம்பித்தல் நீக்கிச்சென்றனர். ஒருகால் இராஜ அதிகாரிகளுக்கு விறகிற்காக ஆட்கள் போதாமல் இவரையும் அதிகாரிகள் ஒரு ஆளாகக்கொண்டு சுமைதூக்கிச் செல்ல ஏவயோகீந்திரரும் அவ்வாறு தூக்கிச்சென்று அந்த ஆட்களிட்ட விறகு சுமைகளின்மேல் இவர் சுமையையிட அக்கட்டைகள் முழுதும்தீப் பற்றியெரிந்தன. இவரைக்கண்ட பிள்ளைகள் இவரைப் பித்தரென்று பரிகசிக்க இவர் தமக்குக் கிடைத்த பொருள்களை அவர்க்குப் பகுத்தளித்துவருவர். இவரை அப்பிள்ளைகள் மிக்க தூரமாகிய மதுரையில் நடக்கும் ரிஷபவாகன உற்சவங்காண அழைக்க இவர் அப்பிள்ளைகளைத் தமது முதுகின்மேல் ஏற்றிக்கொண்டு ஒருகணம் கண்ணை மூடிக்கொள்ளக் கட்டளையிட்டு மறுகணத்தில் திருவிழா தரிசனஞ்செய்வித்து அச்சிறுவர்க்கு வேண்டிய சிற்றுண்டிகளும் வாங்கித்தந்து விடியுமுன் வீட்டில் சேர்த்தனர். பிள்ளைகள் தந்தையர் முதலியோர்க்கு அற்புதச் செய்கையறிவித்துச் சிற்றுண்டிகளையும் காட்டினர். இவர், சிவராத்ரி முதலிய புண்ய காலங்களில் காசிமுதலிய பலக்ஷேத்ரங்களில் தரிசனஞ்செய்யக்கண்ட பலரிவரையொரேகாலத்தில் வெவ்வேறு தலங்களிலும் கண்டதாகக் கூறுவர். தம்மைப் பின்தொடர்ந்த பிரம்மசாரிக்கும் ஒரு கணத்தில் கண்ணை மூடிக்கொள்ளக் கட்டளையிட்டு ஸ்ரீரங்கத்தில் பெருமாளைத் தரிசனஞ்செய்வித்து மறைந்தனர். பிரம்மசாரி யோகியரைக் காணாதுநீரூருக்குவந்து நிஷ்டைகூடியிருக்கக் கண்டனர். யோகிந்திரர் இவரிடத்துக் கருணை கூர்ந்து இவருக்கு வித்யாபலமுண்டாக அருள்புரிந்தனர். மற்றொருகால் இவர் நிர்வாணியாய்ச் சஞ்சரிக்கையில் தேவியருடன் வந்திருந்த மகம்மதிய தலைவனவரிருந்த வழிசெல்ல மகம்மதியன் இவரைச் சினந்து ஒருகையைவெட்டினன். இவர் அதனையறியாது செல்ல மகம்மதியனிவரைப் பெரியரென்றெண்ணிப் பின்றொடர நெடுநாட்களுக்குப்பின் இவனைக்கண்ட யோகியர் பின்பற்றிய காரணம்வினவ நடந்தது அறிவித்துப் பிழைபொறுக்க வேண்ட மற்றொருகரத்தால் அக்கையைத் தடவ அக்கை வளர்ந்தது. மகம்மதியன் அருள்பெற்று நீங்கினன். இவர் சிவதர்சனஞ்செய்யப்புகுந்து மந்திரார்ச்சனை செய்கையில் அந்தரத்திருந்து ஒவ்வோர் மலர்வீழ்வதுண்டு. இவர் 1738,ஆம், வருஷத்தில் புதுக்கோட்டைத் திருவரங்குளத்தைச் சார்ந்தகாட்டில் திரிந்து கொண்டிருக்கையில் புதுக்கோட்டைத் தொண்டைமான் அதிக விரக்தியுள்ளவராகையில் இவரை (8) வருடம் பின்றொடர இவர் அவர்க்கு மணலில் சில உபதேச மொழிகளையெழுதி மற்றவைகளைத் தமது சகபாடியாகிய கோபாலகிருஷ்ண சாஸ்திரியாரிடம் அறியக் கட்டளையிட்டனர். இவர் மிதுனரவி ஜேஷ்ட சுத்ததசமியில் பரிபூரண மடைவதாகவும் அன்று காசியிலிருந்து ஒருவேதியன் பாணலிங்கம் கொண்டுவர அவனை இவர்தாமேயிறங்கிய சமாதிக்குழிக்கருகில் பிரதிஷ்டை செய்தனர் எனவும்கூறுப. இவர் ஒரே காலத்தில் மூன்றிடங்களில் சமாதியாயினர் என்பர். ஆயினும் நீரூரிலுள்ள சமாதி பிரசித்திபெற்றது. இவர் குருபூசை புதுக்கோட்டைத் தொண்டைமான் அரசர்களால் செய்யப்பட்டு வருகிறது. இவர் செய்த நூல்கள், பிரம்ம சூத்ரவிருத்தி, த்வாதசோப நிஷத்தீபிகை, சித்தாந்தகல்பாவளி, அத்வைதரஸ மஞ்சரிமுதலிய.

சதாசிவன் — 1 சிவமூர்த்தி. ஈசானம், தத்புருஷம், வாமம், அகோரம், சத்யோசாதம் முதலிய திருமுகங்களுடன் இருந்து தேவருஷிகளுக்கு வேதாதி சிவாகமங்களை அருளிச்செய்த அவசரம். இதில் ஈசானம் மேனோக்கியது படிகநிறம், தத்புருஷம் கிழக்கில் உள்ளதாய்ப் பொன்னிறம் வாய்ந்தது. அகோரம் தெற்குக் கருநிறம். வாமம் வடக்குக் குங்குமநிறம் அல்லது செந்நிறம். சத்தியோசாதம் மேற்கு அதிவெள்ளைநிறம். இவர் மேற்கூறிய முகங்களைப் பெற்றவராய் வலது கைகளில் கத்தி, சுரிகை, சூலம், கட்வாங்கம், பத்மம்; இடதுகைகளில் டமருகம், பீஜ

பூரகம், நாகம், ஜபமாலை, நீலோத்பலம்; சில (ஆகமங்களில்) வலதுகைகளில் சூலம், கோடரி, வாள், வஜ்ராயுதம், அக்நி; இடதுகைகளில் அபயம், பாசம், மணி, சர்ப்பம், அங்குசம் கொண்டிருப்பர். இவ்வாறன்றி வலப்புறத்தில் அனுக்ரகம், அபயம், தண்டாயுதம், சத்தி, சூலம். இடப்புறத்தில், டமருகம், சர்ப்பம், ஜபமாலை, கருநெய்தல், மாதுளம்பழம் கொண்டிருப்பர். இவர்க்கு (௧0) கரங்கள், பத்துத் திசைகள், சூலம், முக்குணவடிவம், கோடரி, சத்தி, வாள், பராக்ரமம், வஜ்ரம், பிளக்ககூடாத்தன்மை. அக்நி. சங்காரசக்தியாய் மகாமாயையின் மேலிருக்கிற பதார்த்தங்களை விளக்குவதும், பாசங்களைப் பஸ்மீகரிப்பதுமாம். நாகம், யாவும்நியமிப்பது, பாசம், ஆணவாதி மூப்பாசங்கள், மணியினோசை மந்திரரூபத்தை யறிவிப்பது. அபயம் சமஸ்தலோகங்களையும் காக்குஞ்சத்தி. அங்குசம் எது அடையத்தக்கதோ அதனையுணர்த்துவது இவர் சாதாக்யர் எனவும் படுவர்.

2. இவர் ஆகாயத்தை யதிட்டித்து அநுக்ரக நிமித்தமாக விந்துவெனும் உபாதானத்திலிருந்து மாயை முதல் பிருதிவியீறாக அடைவே நிலைபெற்றுள்ள சுத்ததத்துவங்களைத் தமதாக்ஞையால் நடாத்தி சுத்தவித்தை, மகேசுரம், சாதாக்யம், சத்தி, சிவம், விந்து, நாதம், எனும் ஐந்து தத்வத்தினும் சுவதந்தரமாகச் சமவியாப்தியாய் வியாபித்து மோக்ஷத்தை யேதுவாக்கி நிற்பவர்.

சதாநந்தர்—பிரமன் பேரர். கௌதமருக்கு அகலியை இடம் உதித்தவர். இவரது தவத்தைக் கெடுக்க இந்திரன் ஊர்வசியை ஏவினன். இருடி அவளைக் கண்டமாத்திரத்தில் வீரியம்விட அவ்வீரியம் தருப்பையில் விழுந்தது. அவ்வீரியத்திற்குத் தம்மிடம் இருந்த வில்லம்புகளைக் காவலாக்கிச் செல்ல அந்த வீரியத்துளிகள் இரண்டும் கிருபாசாரி, கிருபி என ஆணும் பெண்ணும் ஆயின. இவர் இராமர் மிதிலைக்குச் சென்றகாலத்து மிதிலையில் இராமமூர்த்தியைக் கண்டு விச்வாமித்திரர் புகழை அவர்க்குக் கூறியவர். இராமன் புகழை ஜனகருக்கு அறிவித்தவர். இவர் குமரர் சத்தியத்திருதி இவர் கைலைக்குச் செல்கையில் பாண்டுராசன் உடன்வரவேண்ட அவனுக்குப் புத்திரர் இல்லாதவர்க்குக் கைலாயம் இல்லை எனத் திரும்பப் பட்டினத்திற்கு அனுப்பினவர்.

சதாநிருத்தன்—ஆன்மாக்கள் பஞ்சாவஸ்தை அடைதற்கும் அவர்கள் நற்கதி அடைதற்கும் தாம் மூலகாரணர் என்பதை அறிவிக்கவும் தமதசைவு உலகத்தின் அசைவு என்பதை அறிவிக்கவும பஞ்சகிருத்திய நடனஞ்செய்யும் சிவன் திருவுரு.

சதாநீகன்—1. நகுலன் குமரன், தாய் திரௌபதி, சகாதேவன் குமரன் என்பர்.

2. சநமேஜயன் குமரன். தாய் வபுஷ்டை. யக்யவல்கியரிடத்து வேதமும் கிருபாசாரியரிடம் சர்வசாஸ்திரமும் சௌநகரிடத்து ஆத்மஞானமும் அடைந்தவன். குமரன் சகஸ்ராநீகன்.

3. விராடனுக்குச் சுரதையிடம் பிறந்த குமரன். விராடன் சகோதரன் என்பர்.

4. சுதர்சனன் குமரன், இவன் குமரன் உதயன்.

5. விதூமனைக் காண்க.

6. ஜம்புத்தீவிலிருந்த ஒரு அரசன், இவனிறந்த பிறகு இவன் குமரன் தானமுதலிய செய்யாததால் வேதியரொழுக்கங்குன்ற மழை வறண்டது. இவன் குமரன் தானஞ்செய்த என்தந்தை எவ்வுலகில் எவ்வாறிருக்கிறானென்று வேதியர்களை வினவ அவர்கள் விடைகூற அறியாது பார்க்கவமுனிவரையடைந்து அரசன் கூறியதைக் கூறினர். இதையுணர்ந்த சூரியன் வேதியரிடஞ்சென்று நீங்கள் சந்திவந்தனை மறந்தீராயினும் ஒரு நல்ல முனிவனைப் பணிந்தவரின் அத்தீங்கு நீங்குமென, அவர்கள் பார்க்கவமுனிவரையடைந்து மழை வறண்டதைக் கூறித் தானஞ்செய்த சதாநீகன் எவ்வகை இருக்கிறான் என்று வேதியரைக் கேட்ட வினாவிற்கு விடையளிக்க யமபுரஞ்சென்றனர்.

7. குருகுலத்தில் பிறந்த அரசன், இவன் உதயணன் தந்தை, இவன் மனைவி மிருகாபதி. (பெருங்கதை.)

சதாநீரை—1. கரதோயம். பாரியாத்ரமலையிலிருந்து பிரவகிக்கும் நதி.

The river Karatoya in Oudh which flows through the districts of Rungpur and Dinajpur.

சதாபிஷேகம் — ஆதித்யகதியால் வந்த ஆண்டைந்துக்கும் சந்திரோதயம் (௪௨) பிறையுதிக்கும் (௮0) சௌரஆண்டும் (௮) மாதமுஞ் சென்றவன் ஆயிரம் பிறைகண்

டவன். அவன் புண்ணியவுலகமடைய அவனுடைய ஜன்மமாதம் ஜன்மநக்ஷத்திரத்தில் சதாபிஷேகம் பண்ணுவர்.

சதாமாயை—தருமாகரனைக் காண்க.

சதாயு—1. புரூரவனுக்கு ஒருபெயர். இவற்குச் சிராயு எனவும் பெயர். மகாரதரில் ஒருவன்.

2. சதாயுவின் தம்பி.

சதாக்ஷி—1. சத்தியைக் காண்க.

2 இவள் தேவர் வேண்டுகோளால் தோன்றிய சத்தி. இரண்யாக்ஷன் வம்சத்தில் குரு எனும் அசுரனுக்குத் தர்க்கன் எனும் அசுரன் தேவர்களுக்கு வேதத்தால் எல்லா சம்பத்துகளும் உண்டாயின. ஆதலால் வேதநாசஞ் செய்யவேண்டுமென வெண்ணிப் பிரமனை நோக்கித் தவமியற்றி எல்லாவேதங்களும் தனக்குவர வரம் பெற்றனன். ஆதலால் வேதங்க ளிவன் வசமாகத் தேவர்கள் வேதவொழுக்கமாகிய வேள்வி முதலிய மறந்து போயினர். அதனால் மழை ஒழிந்தது. தர்க்கன் தேவர்களை வருத்தினன், இவனாலும் க்ஷாமத்தாலும் கவலை யடைந்த தேவர்கள் சத்தியை வேண்டச் சத்தி யிவர்களுக்குமுன் அநேக பழங்களையுடைய ஒரு பூங்கொடியையும் வில்லையும் தாங்கி, அநேக கண்கள் அநேக கரங்களுள்ளவளாய்த் தரிசனந்தந்து தனது ஒன்பது கரங்களிலிருந்து நீர்த்தாரைகளைப் பொழிந்து, பழங்களின் விதைகளாலும் ரஸங்களாலும் க்ஷாமத்தைப் போக்கினள். இதைக்கண்ட அசுரன் யுத்தத்திற்கு வரத் தேவி தன் திருமேனியிலிருந்து காளி, தாரணி, பாலா, திரிபுரை, பைரவி, ரமை, பகலை, மாதங்கி, திரிபுரசுந்தரி, காமா, துலஜா, ஜம்பனி, மோஹினி, சின்னமஸ்தனி, குஹ்யை முதலியவரைப் படைத்து அவனது சேனைமீதேவி தான் அசுரனைக் கொலை புரிந்து க்ஷேமமுண்டாக்கினள். அதுமுதல் தேவிச்குச் சாகம்பரி,சதாக்ஷி திருநாமம் உண்டாயிற்று. (தேவி - பா.)

ந்—1. தக்ஷன்பெண், இவளே தாக்ஷாயணி உமையின் திருவவதாரம். தக்ஷன் சிவமூர்த்தியை வெறுத்துச் செய்யும் வேள்வியைக் காணப்புகுந்து தந்தை உபசரிக்காததால் கோபித்துச் சிவமூர்த்தி இல்லாத இந்த வேள்விச்சாலை இடுகாடாக எனச் சபித்துத் தாமும் தாக்ஷாயணி என்னும் பெயர்கொண்ட தேகத்தை விட்டனள்.

2. ஆங்கீரசன் தேவி. இவள் அதர்வ ஆங்கிரசுமுதலிய வேதத்தவரைப் பெற்றனள்.

3. சத்தியாதனனைக் காண்க.

4 இவள் ஒரு சிவசத்தி, இவள் சிவமூர்த்தியின் யோகாக்னியால் தகிக்கப்பட்டனள். சிவமூர்த்தி, விரகமேலிட்டவராய்க் காளிந்தி நதியில்மூழ்க அது வெப்பத்தால் கறுத்தது. (தே-பா)

சதிகல் — (மாஸ்திகல்) கணவருடனிறந்த வீரபத்னிகளுக்கு நடுகல். இது மஹாஸதிகல் என்பது மாஸ்திகல் என மருவியது.

சதிகோத்திரன் — பிரியவிரதன் குமரன். புட்கரத்தீவின் அரசன்.

சதுக்கப்பூதம் — பாவிகளைப் புடைத்துண்ணும் பூதம். இது சந்திகளிலிருப்பது. (மணிமேகலை.)

சதுமுகன்—பாராசருஷியின் குமரன்.

சதுரங்கன்—(பிர.) உரோமபதன் குமரன், இவன் குமரன் பிருதுலாக்ஷன்.

சதுரானனபண்டிதர் — இவர் தொண்டைநாட்டிலுள்ள திருவொற்றியூரில் பதின்மூன்றும் நூற்றாண்டிலிருந்த பண்டிதர். இவர் மடத்திலிருந்த வல்லியைக் கம்பர் விழைந்தனர் எனக் கம்பர் சரிதம் கூறும்.

சதுராக்ஷரி — சாதானியரில் ஒருவகைச் சாதி. (தர்ஸ்டன்.)

சதுர்த்திசந்திர தரிசன தோஷம் — இது விநாயகர் உருவத்தைக்கண்டு பரிகசித்த சந்திரனுக்கு விகாரவுருவரச்சபித்த விநாயகரைச் சந்திரன் பூசிக்க அவர் சந்திரனுக்கு அருள்செய்து யாவர் உன்னைச் சுக்ல சதுர்த்தியில் காண்கிறார்களோ அவர்கள் வீண் அபவாதம் அடையவும், அவர்கள் ஆவணிமாதத்தில் சுக்லசதுர்த்தியில் தம்மைப் பூசிக்கின் அவ்வபவாதம் நீங்கவும் அருள் செய்தனர் இத்தோஷத்தால் கிருஷ்ணமூர்த்தி சியமந்தகமணியின் பொருட்டு அபவாததோஷம் அடைந்து விநாயக பூசையால் நீங்கினர் என்பர்.

சதுர்விததானங்கள் — அபயம், ஆகாரம், சாஸ்திரம், ஔஷதம் என்பன.

சதுர்வியூகர் — மகேசுரனுக்கு ஒரு பெயர். நிவர்த்தியாதிகலை புணர்கையால் என்பர்.

சதுர்வத்திரன்—சிவகணத்தவரில் ஒருவன்.

சதுர்வேதி — ஒருவேதியன், சிரார்த்தத்தில் பூசுரர்க்கு அன்னமிட இவனையறியாது அவ்வன்னத்தில் பாம்புவிஷநங் கக்கிற்று. அதனையுண்ட வேதியர் அனைவருமிறந்த

னா. இவனும் அரசன் தூதுவாலழிந்த னன். (யாதவகிரி மகாத்மியம்).

சதேந்திரர்கள் — நூறு இந்திரர்கள், பவ ணேந்திரர் (சஉ), வியந்திரேந்திரர் (௩உ), கற்பேந்திரர் (உஉ), சந்திரன், சூரியன், நரேந்திரன், மிருகேந்திரன். இவர்களுக் குத்தலைவன் அகமிந்திரன். (சைநவழக்கு.)

சதை—வாமதேவன் என்னும் ஏகாதசருத் திரன் தேவி.

சத்த இருடிகள்—அத்திரி, ஆங்கிரசன், கிருது, புலகன், மரீசி, புலத்தியன், வசிட் டன் முதலியவர், இவ்வகையுங் கூறுவர். அத்திரி, வசிட்டர், சமதக்கினி, கௌசி கன், பாரத்துவாசன், கௌதமன், காசி பன் முதலியவர். ஒருமுறை பசியால் பிணத்தைத் தின்னத் தொடங்க அரசன் தடைசெய்ய அவன் நாட்டில் நிற்காமல் அவன் அளித்த பொருளையும் வாங்காமற் செல்ல அரசன் கோபித்து ஒரு பூதத்தை ஏவ அதைச் சுநசரால் கொல்வித்தனர். ஒருமுறை பசியினால் தாமரைக்கொடி பிடுங்கிவைக்க மூட்டையை மீண்டும் காணாமல் சுநச்சகருக்குமுன் சபதஞ்செய் தவர்கள்.

சத்தகுலபர்வதம் — மகேந்திரம், கந்தமாத னம், மலயம், சக்யம், சக்திமந்தம், விந்தி யம், பாரியாத்ரம்.

சத்தகோணருஷி--எழுகோணமுள்ள இருடி.

சத்தசமுத்திரம்—உப்பு, கருப்பஞ்சாறு, கள், பால், தயிர், நெய், நீர்.

சத்தசாகரதானம்—குறைந்தது எழுபலம் பொன்தகட்டில் எழுகுழிகள் செய்வித்து ஒவ்வொரு குழிகளிலும் உப்பு, நெய், பால், தயிர், கன்னல், மது, நீர் இவைகளை நிறைப்பி முறையே உப்பு முதலியவை களில் பிரமன், மால், மகேசன், சூரியன், சத்தி, இந்திரன், திரு, மலைமகள் முதலிய வர்களைத் தாபித்து, எழு குண்டத்திலும் எழுசாதி மணிகள் இட்டு எருதின்மேதா ளில் என்பாட்பிப் பூசித்து வேதியர்க்கூட் டித் தானஞ் செய்வது.

சத்தசாரசுவம் — ஒரு தீர்த்தம். இதில் மங் கணசித்தன் சிவபூசைசெய்து சித்தி அடை ந்தனன். இதில் கோடியுருக்கொண்டு சிவ மூர்த்தி அமர்ந்ததால் இதை உருத்திர கோடி எனவுங் கூறுவர்.

சத்தத்வீபங்கள்—சம்பு, பிலக்ஷம், குசை, கிர வுஞ்சம், சாகம், சால்மலி, புஷ்கரம்.

சத்ததந்து — இவன் தக்கனைப்போல் ஒரு வேள்விசெய்ய அதில் தேவர் அவிகொள ளச் சென்றனர். ஆதலால் சிவமூர்த்தி கோபித்து ஆகாசம் தேராகவும், பூமி ய வண்டிலாகவும், வாயு குதிரையாகவும், அக்கினியை வில்லாகவும், சந்திரனை நாணாகவும், சலத்தை அம்பாகவுங்கொண்டு கந்தமூர்த்தி தேர்நடத்த தேவரை ஓட்டி யாகத்தை அழித்தனர். (சிவ - பாரா).

சத்தநு—இருதிகன் குமரன்.

சத்தநுவன்—சோமசருமன் குமரன். இவன் குமரன் பிரகத்தூர்த்தன்.

சத்தபிரமவாதிமதம்—இந்த மதத்தவன் சத் தந்தானே சகசிவபரமாய் நிற்கும் எனவும், இது சுத்தமாயையுடன் கலந்து சகசிவ பரம் ஆனதென்றும், சத்தமே உறுதிப் பொருள் எனக்கொண்டு அதில் லயிப் பதே முத்தி எனவுங் கூறுவன்.

சத்தமாதாக்கள்—பிராமி, மகேசுவரி, கௌ மாரி, நாராயணி, வாராகி, இந்திராணி, காளி முதலியவர். இவர்களுள் பிராமி— சதுர்ப்புஜம், விசாலாக்ஷம், ஒளிக்கும் பொன்மேனி, வரதம், அபயம், கமண்ட லம், அக்ஷமாலிகை, அம்சத்வஜம், ஜடா மகுடம்,பத்மாஸனம் உள்ளவளாய் அன்ன வாகன மூர்ந்திருப்பவளாய்ப் பிரம்மரூபி ணியாயிருப்பவள். மகேச்வரி—வெள்ளை நிறம், திரிநேத்ரம், சூலம், அபயம், வர தம், அக்ஷமாலை, விருஷபத்வஜம், ஜடா மகுடம், உரகபூஷணம் உள்ளவளாய் விரு ஷபவாகனமூர்ந்திருப்பவள். கௌமாரி—கௌமார வுரு வத்தைக்கொண்ட கன்னிகையாய், இர த்னமகுட மணிந்தவளாய், அங்குசம், வேல், அபயம், வரதம், செம்பட்டாடை, ஆரகேயூரபூஷணம் குங்குமநிறங்கொண்டு மகாவீர்யமுள்ளவளாய் மயில்துவஜம்மயில் வாகன மூர்ந்திருப்பவள். நாராயணி — பத்மபத்ர விசாலாக்ஷியாய், சியாமள வர்ண முள்ளவளாய், மகாபலங் கொண்டவளா ய்ச் சங்கு, சக்ரம், அபயம், வரதமாகிய நான்கு கரங்களைக் கொண்டவளாய்க் கரு டத்வஜம்கொண்டு கருடவாகனம் ஊர்ந்தி ருப்பவள். வாராகி—இவள் கறுப்புப்பட் டாடை யுடையவளாய், வராகமுகம், சவ சம்பத்கரியாய், பவித்ராலங்கிருதமாச மாா பினை யுடையவளாய், பாதங்களில் புர மணிந்தவளாய்க் கலப்பை, முசலம், வா தம், அபயம்கொண்டு கறுப்புஅணி அணிந்

திருப்பன். இந்திராணி — வஜ்ரபாணியாய், இரண்டு கண்கள், அழகுள்ள வஸ்திர மணிந்தவளாய், வரதம், அபயம், சக்திகொண்டு கஜத்வஜமுள்ளவளாய் யானைவாகன மூர்ந்திருப்பள். காளி — இவள், திரிநேத்ரம், சூலம், கட்கம், அம்பு, சக்கரம் ஒருபுறத்திலும்; பாசம், பலகை, சார்ங்கம், சங்கம், மற்றக் கரங்களிலும்கொண்டு அஷ்டபுஜ முள்ளவ்ளாய்ச் சடாமகுடம், சர்வபூஷணலங்கிருதையாய், மகிஷவாகன மூர்ந்திருப்பள்.

சத்தபூதி — தருசகனுடைய அன்பன். பாட்டகமென்னு மூருக்குத் தலைவன். மறைந்திருந்த யூகி முதலியவர்களைக் காணச்சென்ற உருமண்ணுவாவுக்கு உதவிபுரிந்தவன். (பெருங்கதை.)

சத்தவர்க்கம் — எழுவகை மருந்துகள் அவை - நெல்லிக்காய், வெட்டிவேர், குருவேர், சடாமாஞ்சி, ஏலம், இலவங்கபத்திரி, திராட்சம் என்பன.

சத்தவுலகம் — பூலோகம், புவர்லோகம், சுவர்க்கலோகம், மகாலோகம், ஜனலோகம், தபோலோகம், சத்தியலோகம். இவை மேலுலகம், ஏழு. இவையன்றி அதலம், விதலம், சுதலம், தலாதலம், ரஸாதலம், மகாதலம், பாதாளம் எனக்கீழ் உலகம் ஏழ் உண்டு.

சத்தி—1. இவர் சிவத்தோடு அபின்னையாய் இருப்பதால் பராசத்தி யெனப்படுவர். இவர் காரியோன்முகியானபோது தமது சத்தியில் ஆயிரத்தொருகூருக ஆதிசத்தியையும், அந்த ஆதிசத்தியில் ஆயிரத்தொரு கூற்றில் இச்சாசத்தியையும் அவ்விச்சாசத்தியில் ஆயிரத்தொரு கூற்றில் ஞானசத்தியையும், அந்த ஞானசத்தியில் ஆயிரத்தொருகூறு கிரியாசத்தியையும் தோற்றுவிப்பர். இச்சத்தி அளவிடப்படாத ஆன்மாக்களை மீன்றும் வளர்த்தும் மலபரிபாகத்தில் சிவ மூர்த்தியின் திருவடியாகிய பேரின்பத்தை யடையச் செய்தலால் உலகமாதா என்னப்படுவர். இவரது சில திருவிளையாடல்களைச் சிறிது கூறுவோம். இவரது தோழியர் அநிந்திதை, கமலினி முதலியவர்கள்.

2. தம்மிடத்துக் குமாரக்கடவுள திருஅவதரிக்கத் தடைசெய்த தேவர்களுக்குப் புத்திரர் இலாது நீங்கச் சாபமளித்தவர்.

3. கந்தமூர்த்தியின் திரு அவதாரத்தில் தீப்பொறி கண்டுபயந்த பிராட்டியின் காற்சிலம்பினின்று நவமணிகள்சிதற அதனைப் பிராட்டி நோக்க அவை ஒன்பது பெண்களாயின. அப்பெண்களைச் சிவமூர்த்தி நோக்க அவர்கள் கருக்கொண்டனர். அப்பெண்களைப் பிராட்டிகண்டு கோபித்துக் கொண்ட கருவுயிர்க்காதிருக்கச் சபித்தனர். அப்பெண்கள் இச்சாபங்கேட்டு உடல்புழுங்க அப்புழுக்கத்தில் லக்ஷம் வீரருதித்தனர். பின் ஒன்பது பெண்களும் பிராட்டியின் ஏவல்புரிந்து அவர் அருளால் நவவீரர்களைப் பெற்றனர்.

4. இவர் சிவமூர்த்தியுடன் சரவனத்திற் சென்று குமாரக்கடவுளை யெடுத்துப் பாலூட்டினர். அப்பால் பெருகிச் சரவனத்திற்பாய அம்மடுவில் சாபத்தால் மீனுருக்கொண்டிருந்த பராசருஷி புத்திரர் சாபம் நீங்கினர்.

5. சிவமூர்த்தியின் இரண்டு கண்களையும் விளையாட்டாக மூடிய காரணத்தால் தேவர் முதலியவர்க்கு உலகமிருண்டு நித்தியகருமம் தேவதாபூசை குறைந்தது. அப்பாவம் நீங்கச் சிவபூசை செய்தவர்.

6. தம்மிடம் துர்க்கையைத் தோற்றுவித்துத் துர்க்கனென்னும் அரக்கனைக் கொலைசெய்வித்தவர்.

7. தாமிருக்கும் வனத்தில் காந்தருவர் முதலியோர் வருதல்பற்றி யிவ்வனமடைபவர் பெண்ணுகவெனச் சபித்தவர். இதனல் பெண்ணுனர், இளன், இருக்ஷவிரசன் என்னும் வானரன்.

8 ஒரு கற்பத்தில் தோழியருடன் பந்தாட அவ்விடம் விருளன், உற்பலனென்கிற அசுரர் சிவகணத்தவர்போல் வரக்கண்டு சிவமூர்த்தியின்கட்டளைப்படி கையிலிருந்த பந்தால் மோதிக்கொன்றவர். அப்பந்து ஒரு சிவலிங்கமாயிற்று, அதுவே கந்துகேசம். காசியில் ஒரு பிரதிஷ்டை.

9 துராசாரன் என்னுமசுரனைக் கொலைசெய்ய ஐந்து திருமுகங்களும் பத்துத் திருக்கரங்களுடனு மிருந்து வக்ரதுண்டரைப்படைத்தவர்

10. சண்டசாமுண்டர், இரத்த பீசன் முதலியவரைத் தம்தேசத்தில் காளியையுண்டாக்கிக் கொல்வித்தவர்.

11. ஒருமுறை சிவகணங்களும், சிவமூர்த்தியும் வேறெனவுணர்ந்து சிவகணங்களுக்கு அமுதுபடைக்கத் தொடங்கி ஒருவனுக்கு அமுதளிக்க அவன் பசியால் எல்

லாவற்றையும் உண்ணக்கண்டு வியப்படைந்தவர்.

12. பண்டாசுரனைப் படைத்துத் தேவர் வேண்டலால் கொலைபுரிவித்தவர்.

13. புலிமுகனுக்கும் மகிடனுக்கும் அஞ்சிய பிரமவிஷ்ணுக்கள் பொருட்டு அவ்வசுரரைக் கொலைபுரிந்தவர்.

14. இறைவன்திரிநேத்திரங்களால்கருநிறமடைந்து சிவபூசைசெய்து அந்நிறம் நீங்கினவர்.

15. விக்கிரமாசுரன் தலையறுத்து அத்தலையை ஆசனமாகக் கொண்டவர்.

16. ஒரு கற்பத்தில் விளையாட்டாக நீலியெனச் சிவமூர்த்தி அழைக்கச் சகியாது அவ்வுடல்விட்டுக் கௌரியாகத் தவஞ்செய்து வெண்ணிற மடைந்தவர். அவ்விட்டவுடல் கௌசிகிதேவியாயிற்று. அக்கௌசிகிதேவி சும்ப, நிசும்பரைக் கொன்றனள். (தேவி-பா).

17. சிவமூர்த்தி, சத்தியைப் புகழ்ந்ததால் சத்திக்குப் பெருமித முண்டாயிற்று. அப்பெருமித மடங்கச் சிவமூர்த்தி தமது சத்தியை யொடுக்கினர். அதனால் உலகம் ஒடுங்கியது. மீண்டும் முனிவர்கள் வேண்டத் தமதுசத்தியை விரித்தனர். இதனால் சத்திக்குப் பாபம்விளைய அதுநீங்க வல்லபை சத்தியாய்த் திரு அவதரித்தவள்.

18. பிருங்கிமுனிவர் தம்மை வணங்காததால் தம்மையும் ஒப்பவணங்க வேண்டுமென்று கேதாரத்தில் விரதம் புரிந்து அவ்வரம் பெற்றவர். இதுவே கேதார கௌரிவிரதம்.

19. சிவமூர்த்தி ஞானோபதேசஞ் செய்கையில் பராமுகமாய்க் கேட்டனர். அதனால் சிவமூர்த்தி வலையர்மகளாகச் சபித்தனர். அச்சாபவிளைவால் பூமியில் பாண்டிநாட்டில் தண்டுறைபபாக்கமென்னுமூரில் புன்னையடியில் குழந்தையுருவா யிருந்தனர். இவரைப்பரதன்வளர்த்தனன். பிராட்டியைத் திருமணங்கொள்ளத் திருவுள்ளத்தெண்ணியசிவமூர்த்திசாபத்தால் அந்நாட்டின் கடலில் நந்திமாதேவரைச் சுறுவாக விருக்கக் கட்டளையிட்டனர். அவ்வாறே நந்திமாதேவர் அக்கடலில் சுறுவாக விருந்து கடலோடிகளைத் துன்பஞ் செய்திருக்கையில் வலைஞர்க்கரசன், எவன் இச்சுறுவைப் பிடித்து எங்கள் துன்பத்தை நீக்குகிறனோ அவன் என் குமாரிக்கு நாயகனுமென எண்ணியிருந்தனன். இக்குறிப்புணர்ந்த சிவமூர்த்தி வலைஞராய்ச்சென்று வலைவீசி நந்திமாதேவராகிய சுறுவைப் பிடித்துப் பிராட்டியைத் திருமணம் செய்தருளினர்.

20. இவர் பிருதிவியாதிபூதங்களில் ஈசானி, பூரணி, வாமை, சேஷ்டை, ரவுத்ரி முதலியவர்களா யிருப்பவர்.

21. வீரகனைக் கல்லாகச் சபித்தனர்.

22. அடிதானவனைச் சபிக்கவந்த கோபம் சிங்கவுருவத்துடன் இவர் பக்கத்தில் தங்கியது.

23. கிருதயுகத்தில் புட்பகாசை யென்னுந் திருநாமத்துடன் சிவபூசைசெய்து பிரியாவரம் பெற்றவர்.

24. மூகாசுரன் முதலிய பல அசுரரை வதைத்தவர்.

25. ஒரு கற்பத்தில் திருவிரலின்வழி கங்கையைப் பிறப்பித்தவர். அக்கங்கை உலகத்தில் பிரவகித்ததறிந்து சிவமூர்த்தி தமது சடையிலணிந்தனர்.

26. கங்கை இரேணுவின் குமரியாம்படி சபித்தவர்.

27. வைவச்சுத மன்வந்தரத்தில் (உஅ) வது யுகத்தில் நந்தனென்னும் இடையன் வீட்டில் மாயாதேவியாக வந்தவதரித்தவர்.

28. விப்ரசித்தியின் குமரர் முதலிய அரக்கரை வதைக்க ரக்ததந்தி என்று அவதரித்து அவர்களை வதைத்தவர்.

29. ஒரு கற்பத்தில் (௧௦௦) வருஷம் மழையிலாது உலகமும் இருடிகளும் வருந்தினர். அவ்விருடிகளுக்குக் கருணைசெய்யச் சதாக்ஷியென்னுந் திருநாமம் பெற்றிருந்தனர். இவர் திருமேனியில் அப்போது அநேக சாகாமூலங்கள் இருடிகளின் சாத்தல்பொருட்டு உண்டாயின. ஆதலால் இவருக்கும் சாகம்பரியெனத் திருநாமம் உண்டாயிற்று.

30. தண்டியென்னு அசுரனைச் சங்கரிக்கப் பீமை என்னும் சத்தியாகத் திருவவதரித்தவர்.

31. சண்டனென்னு அசுரனைச் சங்கரித்ததால் சண்டிகையென்னுந் திருநாமம் பெற்றவர்.

32. மரத்தைநோக்கிச் சந்திரவதியை நிருமித்தவர்.

33. சத்தியவிரத னென்கிறவன் பன்றியின் ஓசைகேட்டு ஹூவென்று அதட்ட

அது பீஜமந்தரமாதலால் அவனுக் கருள் செய்தவர்.

34. சுதர்சன னென்னும் அரசனுக்கு இழந்த ராஜ்யாதிபத்யத்தைத் தருவித்துக் கொடுத்துச் சகல இஷ்டசித்திகளை யளித்தவர்.

35. சுசீலனென்கிற வணிகனுக்கு வறுமைநீக்கி யருள்புரிந்தவர்.

36. சகேதுவென்னு மசுரனுக்கு அருள் புரிந்தவர்.

37. நிசும்பனைத் தேவர் பொருட்டுக் கொன்றவர்.

38. தூம்பரனைக் காளியைக் கொண்டு பஸ்மமாக்கியவர்.

39. சண்டமுண்டர்களைக் காளியினுற் கொல்வித்து அவளுக்குச் சாமுண்டை யென்று பெயரிட்டவர்.

40. இவர் ரக்தபீஜனைச் சங்கரிக்கையில் அவன் உடலினின்று விழும் உதிரத்தில் பல அசுரர் தோன்றினமை கண்டு காளியினுல் அவன் உடலின் உதிர பிந்து பூமியில் விழாதபடி யுண்ணச்செய்து அவனையுங் கொன்று அவன் உதிரத்தைக் காளியால் பானஞ்செய்யச் செய்தவர்.

41. சும்பனைக் காளியினுல் கொல்வித்தவர்.

42. இவர், சர்வசங்கார காலத்துப் பஞ்ச சத்திகளையும் பிரேதங்களாகக் கொண்டு அவர்களாகிய தெப்பத்தில் எழுந்தருளியிருப்பர். அவர் பஞ்சப் பிரேதபரா சத்தி யெனப்படுவர்.

43. இவர் கிருதயுகத்தில் சுரதனுல் பூசிக்கப்பட்டனர். திரேதாயுகத்தில் இராமனுல் இராவணவதத்தில் பூசிக்கப்பட்டனர். தைத்தியரை வதைக்கத் தக்ஷன் குமரியாயினர். பின் இமயன் குமரியாயினர். (பிரம்மகைவர்த்தம்).

44. துர்க்கை—துர்க்கன் எனும் தைத்தியனைக் கொன்றவளும், மகாவிக்கினத்தையும், பவபந்தத்தினையும், கர்மத்தினையும், சோகத்தினையும், துக்க, நரக, யமதண்டத்தினையும், ஜன்ம, பய ரோகங்களையும் போக்குபவ ளாதலால் பெற்றபெயர். நாராயணி—கீர்த்தியாலும், குணத்தாலும் ரூபத்தாலும், தேஜஸாலும், நாராயணனை யொத்தவள். ஈசானி — சர்வசித்தியைத் தருபவள். சிவை—அநந்தகல்யாண குணமுடையவள். சதீ—சத்புத்தி யதிஷ்டான தேவதையாதலாலிப்பெயர். பகவதி—பகவானைப்போல் நித்யமானவள், சித்தியாதிகளைத் தருபவள். நித்யை—அழியாதவள். சத்யை—எல்லாமழிய இவள் தனித்திருப்பவளாதலால் பெற்றபெயர். சர்வாணி—எல்லா சராசரங்களையும் மோக்ஷத்தையும், சன்ம மிருத்யு ஜராதிகளையடையச் செய்பவள். சர்வமங்கலை — மோக்ஷத்தையும், களிப்பினையும் சம்பத்தினையும், கல்யாணத்தையும் தருபவள். அம்பை — உலகத்தை யீன்றதாய் என்னும் பொருளது உலகத்தவரால் பூசிக்கப்பெற்றவள். வைஷ்ணவி—விஷ்ணு ரூபிணியாகையால் வந்த பெயர். கௌரி — பொன்னிறத்தினை யுடையவள் எனவும், பரபிரம்ம ச்வரூபமுடையாள், நிர்மலமானவள் எனப் பொருள்பெறும். குருவாகிய சிவமூர்த்தியின் தேவியாதலால் இப்பெயர் பெறுவள். பார்வதி—பர்வசப்தம் உத்சவபேதத்தினையும், திதி சப்தம் திதி பேதத்தினையும், கல்பத்தினையும் தெரிவிக்கும் ஆதலால் இவற்றிற்கு அதிதேவதை யெனப்படுவள். பர்வதன் புத்ரியெனவும், பர்வதங்களுக் கதிதேவதையெனவும் பொருள்பெறும். சநாதனி—சர்வத்ர சர்வகாலங்களிலும் வித்யமானை யாதலால் இப்பெயர் பூண்டனள். சக்தி—இவள், தேவர்கள் தனக்குச்செய்த கிரீடாபங்கத்தின் பொருட்டு அவர்களை வீர்யநாசமடையச் சபித்துப் பின் கருணை செய்தவள். (பிரம்மகைவர்த்தம்).

45. இவளது ஸ்வரூபம் ஞானம். இவள் சத்தி எனப்படுவள். இச்சத்தியை யுபசாரத்தால் பெண்பாலாகக் கூறுவர். சிவத்திற்கும் சத்திக்கும் பேதமின்று. பசுக்களாகிய ஆன்மாக்களிடம் வைத்த கருணையால் ஐந்தொழில் செய்விக்க வியாபரிக்கையில் ஐவகைப்பட்டுப் பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, யெனப் பலவகைப்படுவள்.

46. இவள் இமவான் வேண்டுகோளால் கேதாரம் செல்கையில் தன் அம்சத்தால் மனோன்மனியைச் சிருட்டித்தனள்.

47. ஒரு கற்பத்தில் தேவர்கள் அசுரர்களை வென்று கர்வித்திருக்கையில் அவர்களது கர்வத்தையடக்க யக்ஷியுருவாகித் தோன்ற தேவர்கள் யக்ஷியிடம் அக்னியை யனுப்பச் சக்தி ஒரு துரும்பை அக்னியெதிரிலிட்டு இதனைக் கொளுத்து என அக்னிவலி வற்றுத்திரும்பினன். பின் தேவர்கள் வாயுவை யனுப்ப அவனும் வலிவற்

றுத்திரும்பினன் பிறகு இந்திரன் தூரத்தச் செல்ல இந்திரன் வலியற்றனன். பின்பு தேவிம்மறைய அசரீரியால் கர்வபங்கத்தை யடக்கத் தோன்றியவள் சத்தியென்றுணர்ந்து தேவியைத் துதித்தனர். (தே-பா.)

48. தக்ஷயாகத்தின் பொருட்டுத் தான் செல்லாமல் தன்னைப் போலுருக்கொண்ட ஒருத்தியை நிருமித்துத் தக்ஷயாகத்திற்கனுப்பினள்.

49. சத்தி, சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி. என காரியத்தால் வேறு பெயர் பெறுவர்.

50. (௩அ) இவள் சசினி, அங்கதை, இஷ்டை, மரீசி, சுவாலினி, அவ்யக்தை, சாந்தை, வித்யை, பிரதிஷ்டை, நிவர்த்தி, தமசு, மோகை, க்ஷயை, நிஷ்டை, மிருத்யு, மாயை, பயை, ஜரை, ரஜசு, ரக்ஷை, ரத்யை, பால்யை, காம்யை, சம்யமன்யை, க்ரியை, புத்யை, கார்யை, தாத்ரி, ப்ராமான்யை, மோஹினி, பவை, சித்தி, வ்ருத்தி, த்வித்யை, லக்ஷ்மி, மேதா, காந்தி, ஸ்வதை, த்ருத்யை. எனவுங் கூறப்படுவள்.

51. வாமை - பிரதிவி உருவம். ஜேஷ்டை - ஜலமயமானசத்தி. ரௌத்ரி - அக்னியாகாரை. காளி - வாயுரூப சத்தி கலவிகரிணி - சந்திர ரூபை. பலப்பிரமதனி-சூர்ய ரூபை. சர்வபூததமனி-ஆன்மரூபி. மனோன்மனி சிவ ரூபை. இன்னும் இவரது சரிதை பலவுள, அவை மாபுராணங்களில் மறைந்து கிடக்கின்றன. அவற்றைவல்லார் பால் கேட்டறிக.

சந்தி — A. வசிட்ட புத்திரர் இவர் முதலாக நூற்றுவர் இவர்களைத் திரிசங்கு தன்னை உடலுடன் சுவர்க்கம் அனுப்பக்கேட்க இவர்கள் மறுத்தனர். திரிசங்கு விச்வாமித்திரரை யடைந்து அவ்வாறு கூற அவர் ருஷிகளை யாகத்திற்கழைக்க இவர்கள் மறுத்ததனால் விச்வாமித்திரனால் (700) ஜன்மம் பிணந்தின்னிகளாகச் சபிக்கப் பட்டவர்கள். (இரா-பால.) இவர்க்குத்தாய் அருந்ததி, இவர் சுதர்சனனால் கொலையுண்டவர். இவரை உதிரன் என்னும் அரக்கன் விச்வாமித்திரன் ஏவலால் கொன்றான் எனவுங் கூறுவர். பராசருக்குத் தந்தை, மனைவி அச்சந்தை. இவர் அரக்கவுருக்கொண்ட கல்மாஷபாதனால் இறந்தனர். இவர் புலைச்சியைச் சேர்ந்து பராசரைப்பெற்றார்.

B. பிரசூதியின் பெண்.

C. பிராசீநன் தேவி.

சத்திதத்வம் — சூக்ஷ்மலய அவத்தையினின்ற முதல்வனது கிரியாசத்தி வெளிப்பட்டுப் பொதுமையிற் சங்கற்பித்த வழி சுத்தமாயை காரியப்படுவதாய் நின்ற இரண்டாம் விருத்தி சத்தியென்றோதப்படும் சிவனாலதிட்டிக்கப் படுந்தத்வம். இதனைத் தூலலயதத்வம், தூலநிட்களதத்வம், விந்து தத்வம் எனவும் கூறுவர். (சிவ-போ).

சத்திநாதனார் — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். குறுந்தொகையுள் குறிஞ்சியைப் பாடியுள்ளார் குறு-௧௧௧.

சத்திநாயனார் — சோழநாட்டில் வரிஞ்சையூரில் வேளாளர் குலத்தில் அவதரித்து சிவனடியவர்களை நிந்தைசெய்யும் அவர்கள் நாவினைத் தண்டாயத்தால் இழுத்து சுரிகையால் எறிந்து சிறப்புடன் இருந்து முத்தி அடைந்தவர். (பெ-புராணம்.)

சத்திநிபாதம் —சிவசத்தி ஆன்மாவிடம் பதிதல். அது பதியுண்டென அறிதல்,பதியை யடைதற்கு வழியறிதல், பிரபஞ்சத்தை நீங்கிநிற்றல், முற்றத்துறத்தல் முதலிய. அது நான்கு வகை, மந்தம், மந்ததரம், தீவிரம், தீவிரதரம். திவிரதரசத்திநிபாதத்தில் தேகம் விழும். தீவிரமாகில் உடனே மூர்ச்சைவரும். மந்தமாகில் சரீரம் நடுங்கும். மந்ததரமாகில் மயிர்க்கூச்ச லுண்டாம். இவை சிவதீக்ஷா அறிகுறி.

சத்திநிபாத அறிகுறிகள் — சிவசரித்திரங் கேட்கையில் மெய் புளகித்தல், கண்களில் நீர் அரும்பல், வாய்குழறல், சிவனடியவர் தரிசனத்தாற்கூச்சமகன்று வணங்கல், அன்புடைமை, விபூதிருத்ராக்ஷம், முதலிய சிவசின்னங்களிடத் தன்பருமை முதலியவுடைமை. (சைவ-நெறி).

சத்திநேத்திரன் — அத்திரி குமரன். தாய் அநசூயை.

சத்திபீடம் — தக்கன் சிவபெருமானை வெறுக்க அவ்விடம் தக்ஷன்வேண்டு கோளாலவதரித்திருந்த சதிதேவியாகிய சத்தி, தன் திருமேனியை நெருப்பிலிட்டு இமாசலத்திலவ தரித்தனள். ருத்ரமூர்த்தி அவள் திருமேனி சிந்கலா ரூபமுள்ளதாதலால் அதனைத்தாம் தாங்கி நிற்கையில் திருமால் லோகோஜ் ஜீவனத்தின் பொருட்டதனை வேண்டிச் சத்திபீடங்களாகப் பல இடங்களில் தாபித்தனர். சத்திபீடங்கள் காண்க. (தேவி-பாக).

சத்திபீடங்கள் — 108, காசியில் கவுரிமுக நிவாசினியாய் (1) விசாலாக்ஷிபீடம், நைமிசாரண்யத்தில் (2) லிங்கதாரணிபீடம், பிரயாகையில் (3) லலிதாபீடம், கந்தமாதனத்தில் (4) காமுகீபீடம், மானதசிரசில் (5) குமுதாபீடம், இதற்குத் தென்திசையில் (6) விச்வகாமாபகவதீபீடம், வடதிசையில் (7) விச்வகாம ப்ரபூரிணீபீடம், கோமந்தத்தில் (8) கோமதீபீடம், (9) மந்தரபருவதத்தில் காமசாரிணிபீடம், (10) சைத்ரரதத்தில் மகோத்கடைபீடம், (11) அத்தினபுரத்தில் ஜயந்தீபீடம், (12) கன்யாகுப்ஜத்தில் கௌரிபீடம், (13) மலையாசலத்தில் ரம்பாபீடம், (14) ஏகாம்பரத்தில் கீர்த்திமதிபீடம், (15) விச் வத் தில் வேச்வரீபீடம், (16) புஷ்கரத்தில் புருஹூதைபீடம், (17) கேதாரத்தில் சன்மார்க்கதாயினிபீடம், (18) இமயத்தின் பின் மந்தைபீடம், (19) கோகர்ணத்தில் பத்ரகர்ணிகாபீடம், (20) பவா னி யி ல் ஸ்தாணேச்வரீபீடம், (21) பில்வபத்ரிகையில் பில்வகைபீடம், (22) ஸ்ரீசைலத்தில் மாதவிபீடம், (23) பத்திரையில் பத்திரேச்வரிபீடம், (24) வராகசைலத்தில் ஜயாபீடம், (25) கமலாலயத்தில் கமலைபீடம், (26) ருத்ரகோடியில் ருத்ராணிபீடம், (27) காலஞ்சரத்தில் காளிபீடம், (28) சாளக்ராமத்தில் மஹாதேவிபீடம், (29) சிவலிங்கத்தில் ஜலப்பிரியைபீடம், (30) மஹாலிங்கத்தில் கபிலைபீடம், (31) மாகோட்டையில் மகுடேச்வரிபீடம், (32) மாயாபுரியில் குமாரீபீடம் (33) சந்தானத்தில் லலிதாம்பிகாபீடம், (34) கயையில், மங்களாம்பிகைபீடம், (35) புருஷோத்தமத்தில் விமலாபீடம், (36) சகஸ்திராக்ஷத்தில் உத்பலாக்ஷீபீடம், (37) இரண்யாக்ஷத்தில் மகோத்பலாபீடம், (38) புண்டரவர்த்தனத்தில் பாடலீபீடம், (39) (40) சுபாருசுவத்தில் நாராயணீபீடம், (41) திரிகூடபர்வதத்தில் ருத்ரசுந்தரீபீடம், (42) விபுலத்தில் விபுலாதேவிபீடம், (43) மலையாசலத்தில் கல்யாணிபீடம், (44) சஹ்யபர்வதத்தில் ஏகவீராபீடம், (45) அரிச்சந்திரத்தில் சந்திரிகாபீடம், (46) ராமதீர்த்தத்தில் ரமணபீடம், (47) யமுனாதீர்த்தத்தில் மிருகாவதிபீடம், (48) கோடிதீர்த்தத்தில் கோடவீபீடம், (49) மாதவவனத்தில் சுகந்தரபீடம், (50) கோதாவிரியில் திரிசந்திபீடம், (51) கங்காத்வாரத்தில் ரதிப்ரியாபீடம், (52) சிவகுண்டத்தில் சுபாநந்தைபீடம், (53) தேவிகாதடத்தில் நந்தினீபீடம், (54) துவாரகையில் ருக்மணீபீடம், (55) பிருந்தாவனத்தில் ராதாபீடம் (56) மதுரையில் தேவகீபீடம், (57) பாதாளத்தில் பரமேச்வரீபீடம், (58) சித்ரகூடத்தில் சீதாபீடம், (59) விந்தியத்தில் விந்தியாதிவாசநீபீடம், (60) கரவீரத்தில் மகாலக்ஷ்மீபீடம், (61) விநாயக க்ஷேத்திரத்தில் உமாதேவிபீடம், (62) வைத்தியநாதத்தில் ஆரோக்யாபீடம், (63) மஹாகாளத்தில் மஹேச்வரிபீடம், (64) உஷ்ணதீர்த்தத்தில் அபயாம்பிகைபீடம், (65) விந்தியபர்வதத்தில் நிதம்பைபீடம், (66) மாண்டவியத்தில் மாண்டவிபீடம், (67) மயேஸ்வரிபுரத்தில் சுவாஹாதேவிபீடம், (68) சகலண்டத்தில் பிரசண்டைபீடம், (69) அமரகண்டத்தில் சண்டிகைபீடம், (70) சோமேஸ்வரத்தில் வராரோகை பீ ட ம், (71) பிரபாசத்தில் புஷ்காரவதிபீடம், (72) சரஸ்வதிநதி த டத்தில் தேவமாதைபீடம், (73) மஹாலயத்தில் மகாபாகைபீடம், (74) பயோஷ்ணியத்தில் பிங்களேஸ்வரிபீடம், (75) கிருதசௌக்கியத்தில் சிம்மிகைபீடம், (76) கார்த்திகையில் அதிசாங்கரிபீடம், (77) உற்பலாவர்த்தத்தில் லோலாதேவிபீடம், (78) சோணசங்கமத்தில் சபத்திரைபீடம், (79) சித்தவனத்தில் லக்ஷ்மிபீடம், (80) பரதாச்ரமத்தில் அனங்கைபீடம், (81) ஜாலந்தரத்தில் விஸ்வமுகிபீடம், (82) கிஷ்கிந்த பர்வதத்தில் தாரைபீடம், (83) தேவதாருவனத்தில் புஷ்டிர்மேதாபீடம், (84) காச்மீர மண்டலத்தில் பீமாதேவிபீடம், (85) ஹிமாத்ரியில் துஷ்டி விச்வேச்வரிபீடம் (86) கபாலமோசனத்தில் சுத்திபீடம், (87) காயாரோகணத்தில் மதாதேவிபீடம், (88) சங்கோத்தரத்தில் தராபீடம், (89) பிண்டாரக க்ஷேத்திரத்தில் திருதிபீடம், (90) சந்திரபகாநதியில் காளதேவிபீடம், (91) அச்சோதயத்தில் சிவதாரணிபீடம், (92) வேணுநதியில் அமுர்தைபீடம், (93) பதரியில் உரசிபீடம், (94) உத்தரகிரியில் அவுஷதைபீடம், (95) குசத்தீபத்தில் குசோதகைபீடம், (96) ஹேமகூடத்தில் மன்மதைபீடம், (97) குமுதத்தில் சத்தியவாதினிபீடம், (98) அஸ்வத்தில் வந்தனிபீடம், (99) குபேராலயத்தில் நிதிபீடம், (100) வேதமுகத்தில் காயத்திரிபீடம்,

(101) சிவசந்நிதியில் பார்வதிபீடம், (102) தேவலோகத்தில் இந்திராணிபீடம், (103) பிரமன்முகத்தில் சரஸ்வதிபீடம், (104) சூரியபிம்பத்தில் பிரபைபீடம், (105) சப்தமாதாக்களில் வைஷ்ணவ தேவிபீடம், (106) பதிவிரதைகளில் அருந்ததிபீடம், (107) அழகான ஸ்திரீகளில் திலோத்தமை பீடம், (108) சர்வசரீரிகளுடைய சித்தத்தில் சக்தி பீடம், பிரஹ்மகலை என்றும்தேவி பெயர் பெற்று விளங்குகின்றாள்.

சத்திமுத்தப்புலவர்—சத்திமுத்தம் என்னும் ஊரிற் பிறந்தவர். இவர் வறுமையால் தளர்ந்து தம்மூர்விட்டு அயலூர் சென்று ஒரு குட்டிச்சுவரண்டைக் குளிருக்கு ஒதுங்கியிருக்கையில் நாரை ஒன்றுமீது பறக்கக்கண்டு அதைத் தூதாக "நாராய் நாராய் செங்கால் நாராய், பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன, பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய், நீயு நின் மனைவியும் தென்றிசைக் குமரியாடி, வடதிசைக்கு எகுவீராயின், எம்மூர்ச் சத்திமுத்த வாவியுட்டங்கி, நனைசுவர்க் கூரைகனை குரற்பல்லி, பாடு பார்த்திருக்குமென் மனைவியைக் கண்டு, எங்கோன் மாறன் வழுதி கூடலில், ஆடையின்றி வாடையின் மெலிந்து, கையதுகொண்டு மெய்யது பொத்திக், காலதுகொண்டு மேலே தழீஇப், பேழையுள் இருக்கும் பாம்பென வுயிர்க்கும், ஏழையாளனைக் கண்டனம் எனுமே" என்னுஞ் செய்யுளைக் கூறினர். அச்சமயத்தில் நகரிசோதனைக்குவந்த அரசன் இச்செய்யுளைக் கேட்டிருந்து தான் நாரையின் மூக்கிற்குப் பல வித்துவான்களிடத்தும் நூல்களிடத்தும் உவமை காணாது தேடிக்கொண்டிருந்த பனங்கிழங்கின் உவமைகேட்டுக் களிப்புற்றுத் தன் உத்தரியத்தை அவர்மீது எறிந்து சேவகரைவிட்டு வருவித்து வேண்டிய உபகரித்தனன். பிறகு இவர் களத்தூர் குடிதாங்கி முதலியாராலும் ஆதரிக்கப்பட்டனர் என்பது "வெறும்புற்கையும் அரிதாங்கிள்ளை சோறும் என்வீட்டில் வரும், எறும்புக்கும் ஆர்பதமில்லை முன்னாள் என்னிருங் கவியாம், குறும்பைத் தவிர்த்த குடிதாங்கியைச் சென்று கூடியபின், தெறும்புற் கொல் யானை கவளம் கொள்ளாமற் றெவிட்டியதே" எனும் இச்செய்யுளால் தெரிகிறது. இச்செய்யுளைப்புறநானூற்றிலுள்ள "அன்னச்சேவல் எனும் (67)-ம் கவியுடன் ஒப்பிடுக.

சத்திய இதன்—புஷ்பவான் குமரன், இவன் குமரன் குரு

சத்தியகர்மா—1. (பிர.)செயத்திரதன் தேவி
2. அங்கதேசாதிபதியாகிய திருடவிருதன் தந்தை

சத்தியகன் — 1. விருஷ்ணி வம்சத்தவன். சிநி குமரன். இவன் குமரன் யயுதானன்.
2. சாத்தகியின் தந்தை.

சத்தியகாமன் — ஜாவாலன் புத்ரன். சிவியன் சந்ததியான்.

சத்தியகாயன் — இவன் தருசகன் மந்தரிகளுள் ஒருவன். ஆருணியரசனேடு போர் செய்தற்கு உதயணன் புறப்பட்ட காலத்தில் அவனுக்குத்துணையாகத் தருசகனல் அனுப்பபட்ட வீரர்களில் ஒருவன். அப்போரில் இவன் இறந்ததுபற்றி இவன் மக்களுக்கு உதயணன் சிவிதங்களளித்து மிக மேம்படுத்தினன். (பெ-க.)

சத்தியகாளர் — நாலாம் மன்வந்தரத்துத் தேவர்கள்.

சத்தியகீர்த்தி — அரிச்சந்திரனுக்கு மந்திரி. மகா உறுதியுள்ளவன், அரசனுக்குத் துன்பம் நேர்ந்தகாலத்து அத்துன்பத்தை உடன் அனுபவித்தவன்.

சத்தியகேது—1. விபுவின் தந்தை. சுகேதுவின் பேரன்.
2. தர்மகேதுவின் குமரன். இவன்குமரன் திஷ்டகேது.

சத்தியகோஷன் — சைநன் ஒரு மந்திரி இவனிடம் ஒரு செட்டிதான் ஆர்ஜித்தரத்தினங்களை நம்பிவைத்து மீண்டுங்கேட்க இல்லையென்ன இராஜமகிஷியின் தந்திரத்தால் களவு வெளிப்படத் தண்டனை அடைந்தவன்.

சத்தியசந்தன்—1. இவன் வைஷ்ணவவேதியன். விஷ்ணுவாலயப் பிரதிஷ்டை செய்து விஷ்ணுமூர்த்தியை மோக்ஷம் கேட்க அவர் சிவமூர்த்தியால் அன்றி என்னலாகாது எனச் சிவமூர்த்தியைப் பணிந்து முத்தி அடைந்தவன். (சூதசம்மிதை.)
2. சிவதரிசனத்தால் குலைநோய் தீர்ந்த அரசன்.

சத்தியசயநன்—பூலுசன் சந்ததியான்.

சத்தியசகசு — சுதர்மாவாகிய விஷ்ணுவின் அம்சாவதாரத்தைப் பெற்றவர்க்குத் தந்தை.

சத்தியசித்—1. மூன்றுமன் வந்தரத்து இந்திரன்.

2. கங்கன்குமரன்.

3. (பிர.) சுநிதன்குமரன். இவன்குமரன் விசுவசித்.

4. துருபதன் தமயன்.

சத்தியசிரவன் — இருக்வேதியாகிய இருடி.

சத்தியசிரவசு—(சூ.) விதிகோத்திரன் குமரன்.

சத்தியசேநன்—1. கர்ணன் குமரன்.

2. தருமன் என்னும் அரசனுக்குச் சூனிருதையிடத்து அவதரித்த விஷ்ணுவினம்சம்.

சத்தியசேனை — திருதராஷ்டிரன் பாரியை (பா. ஆதி.)

சத்தியஞானதரிசனிகள்—பரஞ்சோதி முனிவர்க்குச் சிவஞானபோதம் உபதேசித்த இருடி புங்கவர்.

சத்தியதர்மா — தர்மசாவர்ணி மநுப்புத்திரன்.

சத்தியதிருதி—1. சதாநந்தர் குமரர். இவர் குமரர் சிரத்துவான். இவர் ஊர்வசியைக் கண்டு வீரியம்விட அது ஒரு புத்திரனும் புத்திரியும் ஆயிற்று. அதனைச் சந்தனு கிருபையால் வளர்த்துக் கிருபன், கிருபி எனப் பெயரிட்டனன்.

2. கிருதமான் குமரன். இவன் குமரன் திருடநேமி.

சத்தியதேவன்—1. கலிங்க தேசாதிபதி பீமனால் கொல்லப்பட்டவன்.

2. திரிகர்த்ததேசாதிபதி அர்ச்சுனனால் கொல்லப்பட்டவன்.

சத்தியபாமை—சத்திராஜித்தின் குமரி, கண்ணன் பாரி. சததன்வா தன் தந்தையைக் கொன்றதுபற்றிக் கண்ணனிடம் குறைகூறிக் கொலைசெய்வித்தவள். இந்திராணி அவமதித்ததைப்பற்றிப் பாரிசாதவிருக்ஷத்தைக் கண்ணனைக்கொண்டு பூமிக்கு வருவித்தவள். இவள் குமரர் பானு முதலிய பதின்மர். சாருதேஷ்ணன் தாய். நரகாசுரனுடன் கண்ணன் யுத்தத்திற்குச் செல்கையில் உடன்சென்றவள். அதிதியால் என்றும் மூப்படையா வரம்பெற்றவள்.

சத்தியபுரம்—இந்த நகரத்திலிருந்த மாந்தர்கள் எல்லாரும் ஒரேகாலத்துக் கரு அடைந்தனர்.

சத்தியப்பிரதன் — (சூ.) ஏமரதன் குமரன்.

சத்யநுதி — சத்தியதிருதிக்கு ஒருபெயர்.

சத்தியலோகம் — கைலாசத்திற்குச் சொன்னலோக அடுக்கின்படி சத்திய உலகமிருக்கும். அந்தச் சத்தியலோகம் பதினறுகோடி யோசனை உயரத்தைப் பொருந்தும், அதின் நடுவில் பிரமதேவர் எழுந்தருளியிருப்பர். இதில் கிழக்கே இந்திரநீலநிறம்போன்ற வடிவுடைய இருக்குவேதமிருக்கும். வடக்கே படிகநிறத்தையுடைய எசுர்வேதமிருக்கும் மேற்கே பதுமராக நிறம்போன்ற சாமவேதமிருக்கும். தெற்கே கருநிறம்போன்ற அதர்வணவேதமிருக்கும். பின்னும் இதிஹாசம், புராணம், மீமாம்சைமுதலிய சாத்திரங்களும், சாவித்திரியு மிருப்பர்.

சத்யதிவகன் — பாரத்துவாசர் சந்ததியான்.

சத்தியவதி — 1. திரிசங்கின் பாரி.

2. வியாசன் தாய்.

3. நக்னசித்தின் குமரி. எழுவிடைகளைக் கர்வபங்கஞ்செய்து கண்ணன் இவளை மணந்தனர்.

4. காதிராஜன் குமரி. இரிசிகர் இவளை யாசித்து மணந்தனர். இவளே கௌசிகிநதியாயினள். இவள் குமரர் சமதக்கினி

5 பரிமளகந்திக்கு ஒரு பெயர். இவள் ஓடம்விடுகையில் பாராசர் இவளைக் கூடி வியாசரைப் பெற்றனர். இவளுக்குச் சந்தனுவால் சித்திராங்கதன், விசித்திரவீரியன் பிறந்தனர்.

சத்தியவந்தன்—1. சாக்ஷசமனுவிற்கு நட்வலையிடத்துதித்த குமரன்

2. மத்திர தேசாதிபதியாகிய தியுமத்சேநன் குமரன். இவற்குச் சித்திராசுவன் எனவும் பெயர். சாவித்திரியின் கணவன்.

3. சங்கராசாரியர் காலத்து அவரால் புத்திரப்பேறு பெற்ற அரசன்.

சத்தியவதி--அகஸ்தியர்தேவிஇவளுக்குலோபாமுத்திரை எனவும்ஒருபெயர். (பா-ஆதி.)

2. மச்சகந்திக்கு ஒரு பெயர்.

சத்தியவான் — 1. சாவித்திரியின் கணவன்.

2. சாளுவராசன் குமரன்.

3. துர்யோதனன் சேனுதிபதி.

4. சாளுவ தேசாதிபதியாகிய தியமத்சேனன் புத்திரன் தேவி சாவித்திரி.

சத்தியவிதன் — (சூ.) உபரிசரவசுவின் வம்சத்தாசன்.

சத்தியவிரதம்—திருக்காஞ்சியிலுள்ள தலங்களில் ஒன்று. இதற்கு இந்திரபுரம் என்று ஒரு பெயர் உண்டு. புதன் பூசித்துக் கிரகநிலை பெற்றது.

**சத்தியவிரதன்**—1. வைவச்சுதமனு. மச்சாவதாரமூர்த்தியைக் காண்க. இவன் விஷ்ணு பக்தியால் ஒரு பிரளயத்தில் தவறி மறு பிரளயத்தில் மனுஆனவன். இவன் திராவிட தேசாதிபதி.

2. இரண்யரோமன் அல்லது இரணியரேதஸுக்குக் குமரன்.

3. திரிசங்கினுக்கு ஒருபெயர்.

4. பாழ்ங்கிணற்றி விருந்த பிதர்க்களை துலாகாவேரிதீர்த்தமாடி அதினின்று நீக்கின ஒருவன்.

5. திரிபந்தனன் குமரன்.

6. துரியோதனன் சபையிலிருந்த சூதாடவல்லவன்.

7. கோசல தேசத்தில் தேவதத்தன் என்பான் ஒரு வேதியன் புத்திரனில்லாது நெடுநாள் இருந்தனன். இவன் புத்திரகாமேஷ்டி செய்யும்வகை கோபிலருஷியை யுத்காதாவாக இருத்தி யாகஞ் செய்கையில் ருஷி அடிக்கடி சுவாசத்தை விட்டுச் சுரபங்கமாகச் சாமகானஞ் செய்து வந்தனர். அதைக்கண்ட தேவதத்தன் இவ்வாறு சுரபங்கமாகச் செய்தல் கூடாதெனக் கோபிக்க முனிவர் நீ என்னைக் கோபித்தனை ஆதலால் உன் புத்திரன் மூடனும் ஊமையும் ஆக எனச்சபித்தனர். பின் வேதியன்வேண்டக் கருணைகூர்ந்து சிலநாள் மூடனாயிருந்து பின் மகாவித்வான் ஆவன் என அநுக்கிரகித்துப் போயினர். பின் ரோகணி என்னும் அவன் மனைவி ஒரு புத்திரனைப் பெற்றனள். அவனுக்கு உதத்தியன் எனப்பெயரிட்டு வளர்த்துவந்தனர். இவனுக்கு எட்டாவது வயதில் உபநயனாதிகளைச்செய்து வேதாத்தியானஞ் செய்விக்கையில் ஓரெழுத்தேனும் வாயில் நுழைபாமை கண்டு தாய்தந்தையர் மிகவும் வருந்திப் பன்னிரண்டுவயது வரையில் கல்விவர முயன்றும் ஒரு எழுத்தும் வாராதது கண்டு மனம் வெறுத்துவிட்டு வெட்கத்தால் பிள்ளையை வீட்டின்வெளியில் போகாதபடி கட்டளையிட்டனர். இவ்வகையாகிய சிறுவன், ஓர்நாள் தன்னைப் பலரும் அவமதித்தலை எண்ணி வீட்டைவிட்டு அகன்று கங்காதீரம் அடைந்து ஓர் ஆச்சிரமம் அமைத்துப் பொய்சொல்லுதல் இல்லை என விரதம் பூண்டு பதினான்கு வருடம் வனத்தில் காலங் கழித்துவந்தான். இவ்வாறு இருக்கையில் ஓர்நாள் ஒருவேடனால் அடிபட்டு ஒரு பன்றி இவன் காணச் சமீபிக்க இவன் ஊமையாகையால் புண்ணியவசத்தால் தேவிமந்திரமாகிய "ஹ்ரு, ஹ்ரு" என்று கூச்சலிட்டனன். பின் வேடன் வந்து சுவாமி நீர் சத்திய விரதராகையால் பன்றி சென்ற இடம் கூறுக என இவன் பன்றியிருக்கும் இடம் தெரிவிப்போமாயின் கொலைசெய்த பழிநேரும், சொல்லாது இருப்போம் எனின் பொய் கூறினவனாகிறோம். இவ்வித தர்மசங்கடத்திற்கு என் செய்வதென எண்ணி அப்பன்றியிருக்குந் திக்கைநோக்கி ஊமையாகையால் முன் சொல்லியபடிஹ்ரு ஹ்ரு என்றனன். இவை தேவீபீஜ மந்திரமாகையால் தேவி தரிசனந்தந்து வித்தையை அநுக்ரஹஞ் செய்துபோயினள். பின்பிவன் மகாபண்டிதனானான். (தே-பா.)

8. சூர்யவம்சத்து அருணன் குமரன். இவன் தந்தைசொற் கேளாது யதேச்சையாய்த் திரிகையில் ஒரு நாள் ஓர் வேதியன் கல்யாணத்திற் சென்று மணமகளை யபகரித்துச் சென்றனன். இதனை வேதியர் அரசனிடம் கூறத் தந்தையாகிய அரசனிவனைச் சக்கிலிகாரியம் செய்தனையாதலால் நாட்டைவிட்ட கன்று சக்கிலியரிடம் செல்கவென அவ்வகை சக்கிலியருடன் கூடிப் பக்ஷிகளைக்கொன்று ஜீவித்து வருகையில் (12) வருடம் க்ஷாமமுண்டாயிற்று. அந்நாட்டிலிருந்த விச்வாமித்ரரிஷி மனைவியையும் மக்களையும் விட்டுத் தவத்திற்குச் சென்றனர். பசியால் வருந்திய மக்களையுடைய அவர் மனைவி ஒரு பிள்ளையை விற்றேனும் பசிபோக்குவோமென ஒருவன் கழுத்தில் தருப்பைக் கயிற்றால் கட்டியவனையீர்த்துச் செல்லுகையில் சத்தியவிரதன் கண்டு யீர்த்துச் செல்லுங் காரணமுணர்ந்து இதுமுதல் நான் உமது வீட்டிற்கருகிருக்கும் மரத்தில் ஆகாரம் வைக்கிறேன் அதனை உமது பிள்ளைகளுக்குக் கொடுத்திருமென்று அவ்வாறு செய்து வருகையில் ஒரு நாளாகாரம் அகப்படாமையால் வருந்தி வசிட்டர் ஆச்சிரம வழி வருகையில் வசிஷ்ட தேனுவைக்கண்டு இது வசிட்டரது. நாம் அறிவிலாது செய்த காரியத்தைத் தந்தைக்குக் கூறித் தடுக்காதவனது என்று அதனைக் கொன்று தானும் அருந்தி விச்வாமித்ரன் தேவிக்கும் கொடுத்தனன். இதனால் வெகுண்ட வசிட்டர், அடாபிராமண பத்

ணியை அபகரித்ததுடன் கோவதையும் செய்தாயாதலால் பசுவைப்போல் உனக்கு மூன்று கொம்புண்டாய் திரிசங்கு எனப் பெயரடைந்து பிசாசுபோலலைக எனச் சாபமிட்டனர். விச்வாமித்ர பத்னியால் கழுத்தில் தருப்பைக் கயிற்றால் கட்டப்பட்டவன் களபந்தன். (தேவி-பா.)

சத்தியவிரதை — திருதராஷ்டிரன் பாரியை. சௌமியனைக் காண்க.

சத்தியன் — 1. ஒரு இருடி.

2. அவிர்த்தானனுக்கு அவிர்த்தானியிடம் பிறந்த குமரன்.

சத்தியாள் — மூன்றும் மன்வந்தரத்துத் தேவர்கள்.

சத்தியாதன் — பௌமாதன் குமரன்.

சத்தியாதனன் — விதர்ப்பதேசாதிபதி. இவன் பகையரசனாகிய துன்மருஷணனால் கொலையுண்டுபோக, சதி எனும் கர்ப்பிணியாகிய மனைவி காட்டிற்சென்று கருவுயிர்த்து நீர் அருந்துகையில் முதலைவாயிலகப்பட்டு இறந்தனள். இறந்த சதியின் குமரனை உமைஎன்னும் ஓர் பார்ப்பினி தன் குமரன் சுசீலனோடு தருமகுத்தன் எனப் பெயரிட்டு வளர்க்கையில் முனிவர் ஒருவர் இக்குமரனுடைய பிதா முற்பிறப்பில் பாண்டி நாட்டரசன். சனிப் பிரதோஷத்தில் சிவபூசைவிட்டுச் சோழனை வெட்டியபடியால் இப்போது பகைவரால் கொல்லப்பட்டு இறந்தான். இவன் மனைவி சக்களத்திக்கு விஷம் அருத்தியபடியால் முதலைவாய்ப்பட்டு இறந்தனள். ஆதலால் இப்பிள்ளை வறுமை அடைகிறான். உன்குமரன் சுசீலன் முற்பிறப்பில் யார்கொடுத்தாலும் வாங்கிக்கொண்டு பிறர்க்கு உதவாதலால் தரித்திரனாயிருக்கின்றான். ஆதலால் இந்த இருவரும் பிரதோஷவிரதம் செய்வரேல் செல்வம் உள்ளார் ஆவர்என்று தீக்ஷை செய்து சென்றனர். குமரர் இருவரும் பிரதோஷவிரதம் இருக்கையில் சுசீலன் பொற்கிரள் அமைந்தகுடம் பூமியிற்பெற்று வறுமை நீங்கினன். தருமகுத்தன் திரமிடன் என்னும் காந்தருவனுக்குத் தாரணியிடம் உதித்த அஞ்சுமதியை மணந்து காந்தருவாசன் துணையால் தன்னரசை அடைந்து சுகம் அடைந்தனன். (பிரமோத்தரகாண்டம்).

த்தியேயு — (சங்.) ரௌத்திராசுவன்குமரன்.

த்தியை — மன்யுவின் தேவி.

சத்தியோசாதமூர்த்தி — வெண்ணிறம், வெள்ளைமாலை, வெள்ளைவஸ்திரம், பால்வடிவம், புன்னகை, அபயம், வரதம் உடையவராயிருப்பர்.

சத்தியோசாதம் — சிவமூர்த்தியின் திருமுகத்து ஒன்று. சிவேதலோகித கற்பத்துப் பிரமா யோகத்து இருந்து சிவபெருமானை நினைத்தலும் அவன் முன்பு இப்பெயர்கொண்டு குழந்தை யுருவாய்த் தோன்றினர். பிரமன் திகைத்து வணங்க அழல் உருக்கொண்டு இறைவன் நிற்க. அத்திருவுருவினின்றும் நான்கு இருடிகள் தோன்றினர். சுநந்தர், நந்தனர், விச்வநந்தர், உபநந்தனர். இவர்களுடன் சிவேத முனிவருதித்தனர். (இலிங்க-புரா).

சத்திரதருமன் — புரூரவன் குமரனாகிய க்ஷத்திரவிருத்த வம்சத்தவன்.

சத்திரத்தலைவன் — மன்னுயிரனைத்தையுந் தன்னுயிர்போல் எண்ணல், அவாவின்மை, விருந்தோம்பல், கொடைக்குணம் ஆகிய இவைகளை யுடையவன். (சுக்-நீ.)

சத்திரபக்ஷன் — சுவல்பருக்குக் காந்தினியிடம் உதித்த குமரன்.

சத்திரவிருத்தன் — பூரூரவன் இரண்டாம் புத்திரன். நகுஷன் தம்பி.

சத்ராஜித் — சூர்யபூஜையால் சகல ஐஸ்வர்யமடைந்த அரசன். (பவிஷ்யபுரா.)

சத்திரயாகம் — இதில் அனைவரும் தீக்ஷை செய்துகொண்டு யாகத்தை நடத்தலாம் என விதியிருப்பினும் அனைவரும் யஜமான தீக்ஷை செய்து கொள்ளலாகாது. தலைவன் தொழிலிதி லதிகமாதலால், தலைவனுக்கு ஒருக்கால் தொழிலதிகமாயின் இருத்துவிக்குகள் செய்யக்கூடும் இருத்துவிக்குகளுக்குத் தொழிலதிகமாயின் அதனைத் தலைவனுஞ் செய்யலாம்.

சத்திராசிதன் — நிம்மனர் குமரன்.

சத்திராசித் — துவாரகைக்கு அரசன். சத்தியபாமையின் தந்தை. சூரியனிடத்தில் அன்பினால் சியமந்தகமணி பெற்றவன். இம்மணியைக் கண்ணன் எடுத்தான் என அபவாதங்கூறி அந்த அபவாத நிவர்த்தியின் பொருட்டுத் தன் குமரியைக் கொடுத்துச் சமாதானஞ் செய்துகொண்டவன். இவன் சியமந்தகமணியைச் சீதனமாகக் கொடுக்கக் கண்ணன் மறுத்தனர். சததன்வா தனக்குச் சத்தியபாமையைத் தாராமையால் தூங்குகையில் இவனைக் கொன்றனன்.

**சத்திரியர்** — இவர்கள் உலகபாலகநிமித்தம் ஒவ்வொரு கற்பங்களில் திரிமூர்த்திகளின் தோள்களில் பிறந்தவர் என்று புராணங் கூறும். சூரியவம்ச சந்திர வம்சங்களைக் காண்க.

**சத்துப்பிறத்தன்** — ஒரு முனிவன் க்ஷாம காலத்துத் தனக்குக் கிடைத்த அரிசி மாவை அதிதியாகிய தருமத்திற்குப் பாகித்துக்கொடுக்க அத்தருமதேவதை சோதிக்கும்படி அந்த மா பசிநீக்கவில்லை எனப் பெண்சாதி, பிள்ளை, மருமகள் முதலியோர் பங்குகளையும் பாகித்து அளித்துச் சத்தியலோகம் அடைந்தவன்.

**சத்துவசன்** — (சு). சிரத்துவசன் குமரன்.

**சத்துவிசு** — சூரியகிரணத் தொன்று.

**சத்துருக்காதி**—சத்துருக்நன்குமரன். இவன் நகரம் வைதிசம்.

**சத்துருக்நன்** — 1. சுவபலருக்குக் காந்தியிடம் உதித்த குமரன்.

2. அக்ரூரன் தம்பி.

3. தேவச்சிரமன் குமரன். ஏகலவ்யன் சகோதரன்.

4. தசரதனுக்குச் சுமித்திரையிடம் பிறந்த குமரன். சநகன் புத்திரியாகிய சதகீர்த்தியை மணந்தவன். இவன் குமரர் சத்துருகாதி, சுபாகு. இவன் வடமதுரையில் உருத்திரமூர்த்தியிடம் சூலம்பெற்றுத் தேவர்முதலியோரை வருத்திக்கொண்டிருந்த இலவணாசுரனோடு போர்செய்து வெற்றிபெற்றனன்.

**சத்துருசயன்**—துரியோதனன் தம்பி.

**சத்துருசாதன பாண்டியன்** — புருஷோத்தமபாண்டியன் குமரன்.

**சத்துருசித்**—1. தியுமானுக்கு ஒருபெயர்.

2. (பிர.) சகஸ்ரசித்குமரன். இவன் குமரர் மகாஹயன், வேணுஹயன், ஹேஹயன்.

3. பிரதர்த்தனுக்கு ஒருபெயர்.

4. ஒரு அரசன். இவன் அசுவதரனால் உபசரிக்கப்பட்டவன். இவன் குமரன் இருத்துவசன் அல்லது குவலாயாசுவன்.

5. மகிஷாசுரனுக்குப்பின் அவன் பட்டணத்தையாண்ட சூர்யவம்சத்தரசன்.

**சத்துருஞ்சய பாண்டியன்** — உக்கிரசேநபாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் வீமத்தேர் மன்னன்.

**சத்ருஞ்சயன்** — 1. துருபதன் குமரன்.

2. அர்ச்சுனனால் கொல்லப்பட்டவன்.

3. அபிமன்யுவால் ஜயிக்கப்பட்டவன்.

4. திருதராஷ்டிர புத்திரன்.

**சத்ருந்தபனன்** — சௌவீரதேசத் தரசன். இவனுக்கும் பாரத்வாஜருக்கும் ஆபத்தர்ம சம்வாதம் நடந்தது. (பார - சாந்.)

**சத்துருப்ரதாபன்** — புண்ணியபுஞ்சனைக் காண்க.

**சத்துருமர்த்தனன்** — இருதத்துவசன் குமரன்.

**சத்துருமித்திரன்** — துரியோதனன் தம்பி.

**சத்ருபசத்தி** — சுத்ததமஸ்சக்தி. (நாஞ.)

**சத்துரோபதேசன்**—நசகன் தம்பி.

**சநகன்**—1. விதேகராசன், மிதிலைநாட்டரசன். இராஜருஷி, சீதையை வளர்த்தவன். வீரபத்திரர் தக்ஷயாகத்தில் இவன் வம்சத்தவரிடம்வைத்த வில்லைச் சீதையின் பொருட்டு இராமமூர்த்தியை வளைக்கச் செய்தவன். இவன் நரகஞ்சென்று அவ்விடம் இருந்த பாபிகளைக்கண்டு ஹரஹர முழக்கஞ்செய்து அவர்களை நரகத்தினின்றும் நீக்கினன். தந்தை அச்வரோமன், சுகருக்கு ஞானம் உபதேசித்த மகா ஞானி. இவனிடத்து விநாயகர் பிக்ஷைக்குச் செல்ல அரசன் வீட்டிலிருந்த பொருளனைத்தும் படைத்தும் போதாமலிருந்ததால் சநகன் தன்னைத் தெய்வமாக மதித்ததை நீக்கி அவமதிப்படைந்தனன். விநாயகர் அவனின்நீங்கித் திரசிரன் என்னும் வேதியனிடஞ் சென்று பிக்ஷை ஏற்று அவன் மனைவியாகிய விரோசனையிட்ட அறுகைத் தின்று பசிதீர்ந்து அவர்களது வறுமைபோக்கி அரசன் வழிபட அவனுக்கு ஞானோபதேசஞ் செய்து காட்சி தந்து மறைந்தனர். சநகர் எப்போதும் இளமை நீங்காதவர்.

2. சௌநகர் குமரன். தாய் சுகன்னி, இவன் குமரன் உரூரவன்.

3. பிரமன் புத்திரருள் ஒருவன், விஷ்ணுவின் அம்சம். சங்கருஷணர் இடம் தத்துவம் உபதேசிக்கப் பெற்றவன்.

4. நிமியைக் காண்க.

5. (சநதேவன்) இவனது நிலையைத் தெரிவிக்க பரமாதமா வெறிகொண்ட வேதியராய்ச் சென்று வேதியரைத் துன்பப்படுத்த, வேதியர் அரசனிடம் முறையிட, அரசன் என்னாட்டிலிருந்து வெளியேறுக வென்றனன். உடனே அரசன் ஞானமடைந்து எனக்கு இந்நாட்டில் இருப்பிட மில்லையென, வேதியர் ஊரைக் கொளுத்த, அரசனதைப்பற்றிச் சலிப்படைந்திலன். (பார - சாந்தி.)

சநகாக்ஷயன் — சநகன் சந்ததியானுகிய ஒரு இருடி.

சநச்சுசாதன் — பிரமன் புத்திரன், விஷ்ணுவினம்சம்.

சநஸ்தானம் — கோதாவரி உற்பத்தியாய் வரும் இடத்தில் உள்ளது. அரங்காபாத் என்னும் இடத்தருகில் இருக்கலாம். இது தண்டகவனத்தில் சனங்கள் குடிபுகுந்த பின் உண்டாய பெயர். தண்டகாரண்யத்தில் இராமன் வசித்திருந்த பஞ்சவடிக்கு அருகிருப்பது. இதில் இராவணது மூல பலத்தில் ஒரு பகுதியிருந்தது. அதற்குத் தலைவன் கரன் இக்ஷவாகுவின் குமாரரில் ஒருவனுகிய தண்டகன் அநீதியாய் நடந்திருந்ததால் அவனைப் பட்டணத்திலிருந்து தந்தை துரத்தினன் பின் அவன் இராக்கதருடன் கூடிச் சுக்ரனுக்குச் சீடனுய் விந்திய மலைக்கருகில் மதுமந்தம் என்னும் பட்டணம் நிருமித்து அதில் வசித்து வருகையில் ஒருநாள் சுக்ரனது ஆச்ரமம் சென்று அங்கு விளையாடிக் கொண்டிருந்த அவன் குமரியாகிய அரசையை வலிவிற் புணர்ந்து கெடுத்தனன். இதனைச் சுக்ரன் அறிந்து இவனிருந்த இடத்தில் மண்மாரிபெய்திவனிறக்க எனச் சபித்தனன். தண்டனும் அவன் குடும்பமும் மண்மாரியாலழிந்தனர் நகரம் காடுபட்டுத் தண்டகாரணியம் ஆயிற்று.

Aurangabad This was formerly a jungle inhabited by Rakashasas.

சநதை — மேருதேவியின் பெண். இரண்மயன் பாரி.

சநத்குமாரர் — பிரமன் புத்திரர், விஷ்ணுவின் அம்சம். இவர் சதச்சிருங்க மலையில் யோகத்து இருககையில் சிவமூர்த்தி இடபாரூடராய்த் தரிசனந்தரச் சும்மா இருந்ததால் நந்திதேவரால் ஒட்டகமாய்ச் சபிக்கப்பட்டுச் சிவபூசையால் நிவர்த்தி பெற்றவர். பிறகு நந்திதேவரிடம் உண்மை அறிந்தவர். இவர் சந்நியாசாச்சிரமி, நெடுநாளைக்குமுன் ரேன்றி அதுமுதல் குமரனுக இருத்தலின் இப்பெயரிவர்க்கு வந்தது. (சிவமகாபுராணம்.)

சநத்குமாரம்—உபபுராணத் தொன்று.

சநத்குமாரசங்கிதை—சநத்குமாரரால்கூறிய சங்கிதை.

சநத்துவசன்—(சு.) சுசி குமாரன்.

சநநாதசோழன்—அரசர் சூளாமணிச்சோழனுக்குத் தந்தை.

சநநாதன்—சிவகணத்தவரில் ஒருவன்.

சநந்தனர்—பிரமன் புத்திரர். விஷ்ணுவினம்சம், சநகருக்குச் சகோதரர். இவர் யோகத்தால் ஆனந்தப்பட்ட வராதலின் இப்பெயரடைந்தனர்.

சநந்தன்—ஒருவேதியன, இவன் கண்ணில்லாத தாய் தந்தையரைவிட்டுத் தவமேற்கொண்டு ஊர்வசியால் தவமிழந்து அவளைப்புணர்ந்து குட்டநோய்கொண்டு பிநுகினி நதியில் மூழ்கிச் சுத்தமடைந்தவன். (பெண்ணைநதி புராணம்.)

சநந்தை — 1. பூருவின் குமரனுகிய ஜனமேஜயன் தேவி. புத்திரர்கள், பிராசினவான் முதலியோர்.

2. பரதன் தேவி. (பா. ஆதி)

சநமேசயன் — 1. பரிச்சித்தின் குமரன். தாய் மாத்திரை, தேவி வபுஷ்டை உதங்கரால் தக்ஷகனைக் கொல்லச் சர்ப்பயாகஞ் செய்ய ஏவப்பெற்று வியாழன் வேண்ட நிறுத்தினவன். யாகத்தில் வேதியன் விழப் பிரமஹத்தி தொடரப் பெற்றவன். வியாசர் கட்டளையால் பாரதங்கேட்டுப் பிரமகத்தி நீங்கினவன். சுவர்ணவர்ணுகரன் புதல்வியை மணந்தவன்.

2. குரோதகீர்த்தியின் குமரன்.

3. புரஞ்சயன் குமரன்.

4. பூரு குமரன்.

5. விதுமனைக் காண்க.

6. (சு.) சோமதத்தன் குமரன்.

7. (பிர.) சிரஞ்சயன் குமரன். இவன் குமரன் மஹாசாலன்.

சநன் — சரகாக்ஷயன் சந்ததியானுகிய ஒரு இருடி.

சநாசித்து — யதுவம்சத்து ஏகயன் பௌத்திரனுகிய குந்தி புத்திரன். இவனுக்குச் சோபஞ்சி எனவும் பெயர்.

சநாதரன்—சண்முகசேநாவீரன்.

சநாதனன்—ஒருவேதியன். இவன் குமரன் சிகி. இவன் அரசன் மனைவிமீது ஆசை வைத்ததால் தந்தை இவனைவிட்டு நீங்கிக் காசி அடைந்து கங்கை ஆடி முத்திபெற்றனன். (காசிரகசியம்).

சநார்த்தனன்—ஸ்ரீராம பட்டாபிஷேகத்திற்குத் தேவர்கள் எல்லாரும் போய்விட பிரமன் தன் யாகத்திற்குச் சமைத்த அன்ன பானுதிகளைப் புசிக்க யாரும் இல்லையே என வருந்துகையில் விஷ்ணு ஒரு பாலவுருக்கொண்டு வந்து அவை அனைத்தையும் புசித்துப் பிரமனுக்குக் காட்சிதந்த

திருவுருவம். திருமால், சநர் எனும் அசுரரை வதைத்தால் பெற்ற பெயர். (அமரம்).

சநி — சூரியன் துவட்டாவின் குமரியாகிய சஞ்ஞிகையை மணக்க அச்சஞ்ஞிகை சூரியனது வெப்பம் பொறாமல் தனது சாயையில் ஒரு பெண்ணை நிருமித்து வைத்து நீங்கினள். அந்தப் பெண்ணிடம் சூரியனுக்குச் சாவர்ணிமநு, சனி, பத்திரை எனும் பெண் பிறந்தனர். இவனுக்குச் சநீச்வரன் எனவும் பெயர். இவன் ரேவதியிற் பிறந்தவன். இவனது தேர் இரும்பாலானது. அதில் நீல ஆடை புனைந்த எட்டுக் குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். மந்த நடையும் குரோதமும் உடையவன். தக்ஷயாகத்தில் வீரபத்திரரால் கண் இழந்தனன். இவன் முடவன், இவனது வாகனம் காக்கை. இவன் அலிகிரகத்துடன் சேர்ந்தவன். நிறம் கறுப்பு உருவத்தாற் சிறியன். மேற்குத்திக்கை இடமாகக் கொண்டவன். இவன் தவத்தால் கிரகபதம் பெற்றான். இவன் நண்பர் புதன், குரு, சுக்கிரன். இவன் பகைவர் சூரியன், சந்திரன், செவ்வாய். இவன் குமரன் குளிகன். இவனுக்கு மந்தன், பிணிமுகன், சவுரி, முதுமகன், முடவன் எனவும் பெயர். இவனை அத்திரிக்கு அநசூயை இடம் பிறந்தவன் என்றும் கூறும் சில புராணம். அவன் வேறொருவனாக இருக்கலாம். நளனை வெகு துன்பப்படுத்திப் புட்கரனோடு சேர்ந்து பகை பாராட்டி அவன் உறுதி கண்டு அஞ்சி வேண்டினவன். பிரகஸ்பதிக்கு மேல் இரண்டு யோசனை தூரத்தில் உள்ளவன். இவன் தன் மாற்றாந்தாயைத் தனக்கு உபசரிக்க இல்லை என்று உதைக்க அவள் சபித்ததனால் முடவனாய் நொண்டியானவன். (காசிகாண்டம்.) (வேறு.)

சநிக்கிரகம் — இது, நவக்கிரகங்களில் ஒன்று. இதற்கு இரும்புத்தேர் என்று சொல்வதுண்டு. அதற் கேற்றபடி யிந்தக் கிரகத்தைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால் இதைச் சுற்றி ஒரு தட்டையான வளையம் காணப்படுகிறது. இது, ஒரு ராசியைக் கடக்க 2½ வருஷமாகிறது. இது, சூரியனுக்கு ஆறாவது வட்டத்தி லிருக்கிறது. இது 10 மணி, 14 நிமிஷம், 24 விநாடிகளில் தன்னைத் தான் ஒருதரம் சுற்றிக்கொண்டு, 29½ வருஷத்தில் சூரியனை ஒருமுறை சுற்றிவருகிறது. இது சூரியனுக்கு 88 கோடியே, 60 லக்ஷம் மைல் தூரத்திற் கப்பாலிருந்து சூரியனைச் சுற்றி வருகிறது. இதன் குறுக்களவு 75,000 மைல் என்பர். இக் கிரகத்தைச் சுற்றிலும் பலநிறங்கொண்ட சோதிவட்டங்கள் மூன்று காணப்படுகின்றனவாம். இதற்கு ஒன்பது உபக்கிரகங்களுண்டு அவற்றை 9 சந்திரர்கள் போன்றவை யென்பர்.

சநிப்பிரதோஷம் — சுக்கிலபக்ஷத் திரியோதசியாவது கிருஷ்ணபக்ஷத் திரயோதசியாவது உதயாதி உதயாந்தம் அறுபது நாழிகை இருப்பது உத்தமம். இதில் குறைந்துவருவது மத்திம அதமங்களில் அடங்கும். இதில் தேவர் முதலியோர் திருப்பாற்கடல் கடைந்தகாலத்தில் அதிற் பிறந்த விஷத்திற்கு அஞ்சிச் சிவமூர்த்தியை அடைக்கலமாகத் தேவர்பொருட்டுச் சிவமூர்த்தி ஆலபோசனஞ்செய்து தேவருஷிகளுக்கு அநுக்கிரகித்த காலம். இது சனிவாரத்துடன் கூடிவருதல் விசேஷம் என்று புராணங்கள் கூறும். இதில் சிவமூர்த்தியை எண்ணி விரதமிருப்போர் இஷ்டசித்தி அடைவர்.

சநிப்பிரபாவன் — இராவண சேநாபதி.

சநியூர் — திருமுனைப்பாடி நாட்டிலுள்ள ஊர், பாரதம்பாடிய வில்லிபுத்தூரார் பிறந்த ஊர். ஆட்கொண்டான் என்னும் வள்ளல் இவ்வூரார்.

சநுவன் — (சூ.) மிட்டுவான் குமரன்.

சந்தகன் — புத்தனுக்குச் சாரதி.

சந்ததி — தக்ஷன் பெண், தாய் பிரசூதி, புருஷன் கிருது.

சந்தநன் — (சூ.) துருவசந்தி குமரன்.

சந்தநத்தார் — சிறுத்தொண்ட நாயனார்வீட்டுத் தாதியர்.

சந்தநவதி — சூரகேதுவின் மகள், சுஸ்தன் பாரி.

சந்தநு — இவன் பூர்வம் வருணன். பிரமன் சபையிலிருக்கையில் அச்சபைக்கு வந்த கங்கையைக்கண்டு மோகித்துப் பிரமன் சாபத்தால் சந்திரவம்சத்துப் பிரதீபனுக்குக் குமரனாய்ப் பிறந்தனன். இவன் பகீரதியைமணந்து பீஷ்மனைப் பெற்றான். இவன் மச்சகந்தி எனும்யோசனை கந்தியை மணந்து விசித்திரவீரியன், சித்திராங்கதனைப் பெற்றனன். இவனுக்கு மஹாபிஷக் எனவும்பெயர். இவன் விருத்தரைத்

தொட்டால் அவர்கள் யுவாக்களாவார். இவன் இராச்சியத்தில் 12வரு மழையில்லாதிருக்க முனிவர் அரசனை நோக்கி நீ தமயன் அரசினைக் கொண்டதால் இவ்வகையாயிற்று என்றனர். அரசன் உடனே அரசினைவிட எண்ணுகையில் தமயன் பாஷண்டனாயினன். வருணன் மழை பொழிவித்தனன். இவன் அரசில் க்ஷாமமாய் இருந்ததால் விச்வாமித்திரன் யாகம் செய்து அக்கினிக்கு நாயூனை அவிகொடுத்தனன். (பாரதம்).

சந்தம் — 1. நாலெழுத்து முதலாக இருபத்தாறெழுத்தளவும் உயர்ந்த இருபத்து மூன்றடியானும் வந்து தம்முளொத்தும், குருவும், லகுவும் ஒத்தும்வந்தன அளவியற் சந்தம். ஒவ்வாது வருவன அளவழிச் சந்தம், தலையாகுசந்தம், இடையாகுசந்தம், கடையாகுசந்தம் சிலர் கூறுப. (யாப்பு-வி).

2. இது எழுத்து வகையால் இருபத்தாறு பேதமாம். அவை, உத்தம், அதியுத்தம், மத்திமம், நிலை, நன்னிலை, காயத்திரி, உண்டி, அனுட்டிப்பு, பகுதி, பந்தி, வனப்பு, சயதி, அதிசயதி, சக்குவரி, அதிசக்குவரி, ஆடி, அதியாடி, திருதி, அதிதிருதி, கிருதி, பிரகிருதி, ஆகிருதி, விக்ருதி, சங்கிருதி, அபிகிருதி, உற்கிருதி என்பனவாம். இதன் விரிவை வீரசோழியத்திற் காண்க.

சந்தர்த்தனர் — பத்திரையின் தமயன்மார்.

சந்தனுசாரியார் — இவர், விமலர் எனும் வேதியர்க்குக் குமரர், இவர்க்குப் பதுமபாதாசாரியர் எனவும் பெயர். இவர் விஷ்ணுவினம்சம் என்பர்.

சந்தனை — அங்கநாட்டின்வழி பாயும் ஒருநதி.

சந்தன் — 1. புருஷதன் சகோதரன்.

2. சுகோத்திரன் குமரன்.

3. பாரதவீரருள் ஒருவன்.

4. ஒரு வித்யாதரன் தேவேந்திரனாற் குயிலாகச் சபிக்கப்பட்டுச் சிவபூசையால் சாபநீங்கினவன்.

5. சோமகன் குமரன்.

சந்தாசனன் — சுதகிருதி இடத்துத் திருஷ்டகேதுவிற்குப் பிறந்த குமரன்.

சந்தாத்தன் — பத்திரை தமயன்.

சந்தானம் — 4, தீபசந்தானம், வாயுசந்தானம், தாராசந்தானம், பிபீலிகாசந்தானம்.

சந்தானலோகம் — இராமமூர்த்தியுடன் சென்றார் அடையப் பிரமனால் சிருஷ்டிக்கப்பட்ட உலகம்.

சந்தானன் — சிவகணத்தவரில் ஒருவன்.

சந்திமான் — 1. கந்தவிரதம் அநுட்டித்து முத்திபெற்றவன்.

2. இடையெழுவள்ளல்களில் ஒருவன். இவன் ஒரு வேடன், கிருத்திகாவிரதம் அநுட்டித்து இப்பதம் அடைந்தான்.

சந்தி — 1. (சூ.) பிரசுசருகன் குமரன்.

2. இது நாடக உறுப்பினுள் ஒன்று. இது சந்தியும், சந்தியங்கமும் என இருவகைத்து. அவற்றுள் சந்தி ஐந்துவகைப்படும். அவை: முகம், பகிர்முகம், கர்ப்பமுகம், வைரிமுகம், நிருவாணமுகம், சந்தியங்கம் அறுபத்திநான்கு இதனைச் சந்தியங்கத்திற் காண்க. (வீரசோ.)

சந்திமுதலிய அறுவகைக்குணங்கள் அவை — சந்தி, விக்ரகம், யானம், ஆதனம், சமாச்ரயம், துவைதீபாவம். வன்மையுள்ள பகைவன் தன்னிடம் நட்புகொள்வது சந்தி, எந்தச் செயலால் பகைவன் துன்புறுத்தப்பட்டுத் தன்வசமாகின்றானோ அது விக்கிரகம், தன் விருப்பம் முடிதற்பொருட்டுப் பகைவரை அழித்தற்குச் செல்லுதல் யானம், தற்காப்பும் பகைவர்க்குக் கேடுண்டாம்வண்ண மிருத்தல் ஆதனம், ஆற்றல் இல்லாதவன் எவராற் காக்கப்பட்டு வன்மையுடைய னாகின்றானோ அவரைப்பற்றி ஒழுகல் சமாச்ரயம், தன் படைகளைக் கூட்டம் கூட்டமாகப் பிரித்துவைத்தல் துவைதீபாவம். (சுக்ரநீதி.)

சந்தியங்கம் — நாடகவுறுப்பாகிய சந்தியினுட்பிரிவு. இது அறுபத்திநான்கு பிரிவினையுடையது. அவற்றுள், உவகேபம், பரிகரம், பரிசியாயம், விலோவணம், யுக்தி பிராத்தி, சமாதானம், விதானம், பரிபாவனை, உச்சிரம், உற்பேதம், காரணபேதம் எனமுகத்தில் அங்கம் பன்னிரண்டு. இது உடம்பு புத்தினின்று முளைத்தாற்போல கூத்தின்முகத்தில் பொருள்தோன்றுவது. பகிர்முகத்தில் அங்கம் பதின்மூன்று, கர்ப்பமுகத்திலங்கம் பன்னிரண்டு வைரிமுகத்தினங்கம் பதின்மூன்று, நிருவாண முகத்தினங்கம் பதினான்கு இவற்றைத் தனித்தனி காண்க. (வீர. சோ.)

சந்தித்த ஆச்ரயன் — இது திருஷ்டாந்தாபாசம், இவன் சர்வஞ்ஞனல்லன், எதனால் எனின்? வெகுவக்தாவா யிருத்தலால் ஜனிக்கப்போகிற தேவதத்தனைப்போல என்கிற திருஷ்டாந்தமா யிருக்கிற தேவ

தத்தன் ஜநிக்கிறதிலே பிரமாணமில்லாத படியால் (சிவ - சித்.)

சந்தித்த சாதனம் — இவன் சர்வஞ்ஞன். எதனால் எனின், இராகத்வேஷாதிகளுடன் கூடினவனாதலால் தெருவிற்போகிற புருடனைப்போல, இந்த எதுவிற்குத் திருஷ்டாந்தமாயிருக்கிற தெருவிற் புருஷனிச்சித சாதனனாகையாலும் சாத்யமாயிருக்கிற இந்தப் புருஷனிடத்தில் அச்சர்வஞ்ஞ லக்ஷணமுண்டோ இல்லையோ என்று சங்கையுறுதலால் இது திருஷ்டாந்தாபாசம். (சிவ - சித்.)

சந்தித்தசாத்யம் — இவன்மகா ராஜாவாகப் போகிறான், சோமவம் சொற்பவனாதலால் இராஜ்யபாரத்திற்குக் கர்த்தனான இராஜ புத்ரனைப்போல, இந்த எது இவன் இராஜ்யாதிபதியாகப் போகிறானென்கிற சாத்யத்துடன் வியாப்திக்குந்திருஷ்டாந்த நிச்சயித்த இராஜ்யபாரத்தை யுடையவனாகையால் என்க. (சிவ - சித்.)

சந்தித்தோபயன் — இவன் சுவர்க்க மடையப் போகிறான் முன் சநநத்திற் றேடப்பட்டிருக்கிற சத்கன்மபலத்தை யுடையவனாகையினால், தேவதத்தனைப்போல, இந்தத் திருஷ்டாந்தத்திலே எதுவாகிற முன் பார்ஜித்த சுத்தகன்மத்வமும், சாத்யமாயிருக்கிற சுவர்க்காதித்வமும் சந்தித்தம் ஆகையால் என்பர். (சிவ-சித்.)

சந்தித்த சாத்யாவியாவிருத்தன் — எவன் மகத்தான இராஜ்யம் பண்ணவில்லை அவன் சோமவம்சோற்பவனுமல்ல, வேறொரு ராஜ புருஷனைப்போல என்கிற திருஷ்டாந்தத்திலே திருஷ்டாந்தமான இராஜபுத்திரனிடத்தில் சாத்யாவியாவிருத்யம் உண்டாய்ச் சந்தேக முண்டாதலால் என்க. (சிவ-சித்)

சந்தித்த சாதனவியா விருத்தன் — எவன் சர்வஞ்ஞன் அவன் இராகத்வேஷ மில்லாதவன் சகல சாஸ்திரஞ்ஞனைப்போல என்கிற திருஷ்டாந்தத்தில் உள்ள சகல சாஸ்திரஞ்ஞனுக்கு இராகாதிகளில்லாததினால் பிரமாணமில்லாமையால்என்க. (சிவ-சித்).

சந்தித்த விசேஷஞ்சித்தன் — கபிலர் இப்பொழுது இச்சாதியுடனே கூடினவர். தத்வஞானமில்லாத புருடராகையினால் இந்த எதுவிலுமிதற்கு முன்சொன்ன எதுவிலும் புருடதத்வத்திற்கு விசேஷியமாயும், விசேஷணமாயுமிருக்கிற தத்வஞானமில்லாமையென்கிற எது, இப்பொழுதுண்டாகாதே யிருக்கிற தத்வஞானத்தை யுடையவ ரென்கிறதும், எப்பொழுதும் தத்துவஞான மில்லாதவரென்கிறதும் சந்தேகமாயிருக்கிறதால் இரண்டாலும் பெற்ற பெயர். (சிவ - சித்.)

சந்தித்தவிசேஷியாசித்தன் — கபிலர் இப்பொழுது இராகத்வேஷாதிகளுடன் கூடியவர். புருஷதத்வத்துடன் கூடிய தத்வஞானம் இல்லாத புருஷர் ஆகையினால் என்பது. (சிவ-சித்.)

சந்தியாநிருத்தம் — தேவர் முனிவர்பொருட்டுச் சந்தியாகாலத்து நிருத்தஞ் செய்த சிவமூர்த்தியின் தாண்டவகோலம்.

சந்தியாவலி — ஒரு ராஜகுமாரன் தேவி, இவள் சொற்படி இவள் கணவன் தன் குமாரன் தலையைக் கண்டித்து மாகவிரத அநுஷ்டானபலத்தால் பாபநீங்கி நல்லுலக மடைந்தான். (பிரகன்னாரதிய புரா.)

சந்தியை — 1. சாலகடங்கடைக்குத் தாய். 2. பிரமன் தேவி.

சந்திரகாசன் — அருச்சுநன்காலத்துத் தக்ஷணத்தில் அரசாண்ட ஓர் அரசன்.

சந்திரகாந்தக்கல் — சந்திரோதயத்தில் நீர் கால்வது.

சந்திரகாந்தம் — காருபதத்தில் இலக்குமணரால் நிருமிக்கப்பட்ட பட்டணம்.

சந்திரகாந்தன் — மனோஜயன் குமரன்.

சந்திரகாந்தை — வேதராசி என்பவனுக்குத் தேவி, இவள் மகா பதிவிரதையாயினும் இவள் அடுத்த வீட்டிலிருந்த வித்யாவதி என்னும் விபசாரியின் சொல்லால் கெட்டு இந்திரத்துய்ம்மன் என்னும் அரசனால் நாட்டைவிட் டகற்றப்பெற்றுக் காவிரி தீரத்தில்வசித்து மறுபிறப்பில் தேக எரிச்சல் நோயடைந்து காவிரியில் ஸ்நானஞ் செய்து நலமடைந்தவள்.

சந்திரகிரி — தெலுங்க இராஜதானி.

சந்திரகுப்தன் — 1. ஒரு அரசன், மௌரியன். பிராமணனால் பட்டம் அடைந்தவன். இவன் குமரன் வாரிதாரன், மகத தேசாதிபதி என்பர். தாய் முறை, நந்தர்களுக்குப் பின் ஆண்டவன் கலி (2,720)ல் ஆண்டான் என்பர். இவன் மகா பத்மநந்தன் எனும் அரசனைவென்று பட்டமடைந்தான். இவனுக்குச் சாணக்கியர் எனும் ஒரு மந்திரியிருந்தார். சந்திரகுப்தன் செலியூகசை யெதிர்த்து வென்றான் இவன் தாய் முரா ஆதலால் இவன் வம்சத்தவர் மௌரியர் எனப்பட்டனர். இந்த வம்சம் சுங்க

வம்சத்தவனுகிய புஷ்யமித்திரனுல் முடி வெய்தியது (கி மு) 184.

2 சந்திரவதியைக் காண்க.

சந்திரகேது — (சூ.) லக்ஷுமண குமரன். இராமமூர்த்தியின் சொற்படி காருகபதம் அரசாண்டவன்.

சந்திரசர்மா—விக்கிரமார்க்கனுக்குத் தந்தை. இவன் நான்கு வருணத்தில் நான்குபுத்திரி களை மணந்து பிராமணப் பெண்ணிடம் வாருசியையும், க்ஷத்திரியப் பெண்ணி டம் விக்கிரமார்க்கனையும், வைசியப்பெண் ணிடம் பட்டியையும், சூத்திரப் பெண் ணிடம் பார்த்துஹரியையும் பெற்றுன். இவர்கள் விக்கிரமார்க்கனுக்கு மந்திரிகள் ஆயினர்.

சந்திரன்சுவர்க்கி — ஒரு சிற்றரசன். இவ ஞண்டது உறையூரைச்சார்ந்த மள்ளுவ நாட்டிலுள்ள முரணைநகர். இவன் புகழேந் தியை ஆதரித்து நளவெண்பா பாடுவித் தவன்.

சந்திரசேகரர் — சந்திரன் தக்ஷனுல் உடல் தேயச் சாபம் அடைந்து சிவமூர்த்தியிடம் அபயம் புகுந்தகாலத்து அவனுக்கு அப யம்தந்து திருமுடியில் அணிந்த திருக் கோலம்.

சந்திரசேகர கவிராஜ பண்டிதர் — இவர் சென்னையிலிருந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவர். இலக்கண இலக்கிய நூல்களில் வல்லவர் நன்னூல் விருத்தியுரை முதலிய பல இலக்கண நூல்களைப் பரிசோதித்தச் சியற்றியவர்.

சந்திரசேகரவாணர் — இவர் தொண்டை நாட்டுச் சேறை என்னும் ஊரிலிருந்த வேளாளர். இவர் சோழனை எதிர்கொள் ளாததால் சோழன் கோபித்து வேளாளர் செருக் கடைந்தனர் என்று சிறையிட முதலியார் அரசனைச் சிறையிட்டுப் பாண் டியனை அரசாக்கினர்.

சந்திரசேனன் — 1. கலிங்கநாட்டு அரசன், இவன் ஒரு வேதியன்தேவாலய ஆபர ணத்தை உதவ அதனைப்பூண்டு மீண்டும் கேட்கக் கொடாததினுல் குட்டவியாதி யால் நரகடைந்தவன்.

2. கவுண்டின்ய தேசத்து அரசன. தேவி சுலபை.

3. உச்சயனிபுரத்து அரசன். சிவபக்தி மான், இவன் பத்திக்காக இவனுடன் நட்புக்கொள்ள வேண்டிச் சுணாதன் ஒரு வன் பருத்த மாணிக்கம் ஒன்று கொடுத் தனன். அதைப் பகையரசர் கவர்ந்து செல்லப் படையெடுத்தனர். இவ்வர சன் உச்சயனிமாகாளருக்குப் பூசை செய்கையில் ஒரு இடைப் பெண்ணும் அவள் குமரனும் சுவாமிதரிசனஞ்செய்து சென்றனர். அந்த இடைக்குமரன் சிவ பூசைசெய்ய எண்ணித் தனக்கு அரச னைப்போல் மணிமுதலிய இல்லாமையால் கல்லைச் சிவலிங்கமாகப் பாவித்துப் பூசை செய்தனன். தாய் மகன்பசிக்குச் சகியாதவளாய்க் குமரன் விளையாட்டில் இருக்கிறுன் என எண்ணிச் சிவபாவனை செய்து வைத்திருந்த கல்லினை எடுத்து எறிந்தனள். குமரன் இதனுல் மூர்ச்சை அடைந்தனன். தாய் நடுங்கி மூர்ச்சை தெளிவித்தனள்- குமரன் எழுந்து பார்க் கையில் தானிருந்த குடிசை முழுதும் இரத்தினமயமாய் இருந்தது. இதனை அந்தத் தேசத்தின்மீது படை எடுத்து வந்த பகையரசர் கண்டு அரசன் சிவபத்தி மான், இவனுடன் எதிர்த்தல் கூடா தெனத் திரும்பினர்.

சந்திரசைலம் — மிதிலையின் வழியிலுள்ள பர்வதம்.

சந்திரதத்தன் — சாதுவனை நர்கர்மலையிலிரு ந்து காவிரிப்பூம் பட்டினத்திற்குக் கப்பல் எற்றிவந்த வணிகன்.

சந்திரதனயன் — கன்னுேசிநாட்டரசன். அரிச்சந்திரன் மனைவியாகிய சந்திரமதி யின் தந்தை.

சந்திரதிருஷ்டி — ஞாயிற்றுக்கிழமை முதல் அன்றைய வரையிற் சென்றகிழமையை மூன்றிற் பெருக்கிவந்த தொகையை அச் வநிமுதலாகக்கழித்து நின்ற நக்ஷத்திரத் தில் கூ-நக்ஷத்திரம் சந்திரனுக்கு ஒரு கண் பார்வையுடைய நாட்கள் என்றும், அத ற்குமேல் (கஉ) நக்ஷத்திரம் இருகண்பார் வையுடைய நாட்கள் என்றும், அதற்கு மேல் ஆறுநக்ஷத்திரம் குருட்டு நாட்களெ ன்று அறிவதாம். அபரபக்ஷத்து ஏகாதசி முதல் ரு-திதிகளும் பூர்வபக்ஷத்துப் பிர தமை முதல் (ச) திதிகளும் குருட்டுத் திதி களாம். பூர்வபக்ஷத்துப் பஞ்சமி முதல் (ரு) திதிகளும், சதுர்த்தசியும், பூர்ணை யும், அபரபக்ஷத்துப் பிரதமையும், அஷ் டமி முதல் (ரு) திதிகளும் ஒருகண் உள் ளவைகளாம். துதியைமுதல் (சு) திதிக ளும், பூர்வபக்ஷத்து அஷ்டமிமுதல் ஆறு திதிகளும் இரண்டுகண் உள்ளவைக

ளாம். சந்திரனுக்கு ஒரு கண்ணிருந்தாலும் உத்தமம். சூரியனுக்கு ஒருகண்ணிருந்தாலும் ஆகாது. இரண்டு கண்களில்லாத நாட்களில் செய்யுந்தொழில்கள் பாழாம். ஆதலால் இரண்டுகண்கள் உள்ள நாட்களில் சுபகாரியங்கள் செய்க.

சந்திரதத்தன்—சாதுவனை நாகர் மலையிலிருந்து காவிரிப்பூம்பட்டினத்திற்குக் கப்பல் ஏற்றிவந்த வணிகன். (மணிமேகலை.)

சந்திரதரிசனபலன்—சந்திரமான வகையால் பங்குனி, சித்திரை, மாதங்களில் பிறை தெற்குயரும், மாசிவைகாசியில் ஒத்துநிற்கும், அல்லாத மாதங்களில் வடக்குயரும், இவ்வகை ஒழிந்து விபரீதமாய்வரின் தேசத்திற்குத் தீமையுண்டாம். அசுவினி முதல் (௫) நாட்களில் பூர்வபக்ஷ பிரதமை வரில் அடைவே தானியவிலை ஏற்றமும் சமமும் குறைவுமாம். (விதானமாலை.)

சந்திரபலன் — ஜன்மராசி முதல் சந்திரனிருக்கிற ராசிவரைக்கும் - எண்ணின தொகையில் க-வது தேக சவுக்கியம்-உ-தனஹானி ௩ - திரவியலாபம்- ௪ - ரோக பயம் ௫-கார்ய விகல்பம்-௬ - சத்துருநாசனம் ௭-சவுக்கியவிருத்தி-௮ - ரோகவிருத்தி ௯- கார்யதாமசம் - ௧௦ - உத்தியோக விருத்தி-௧௧-இஷ்டார்த்தசித்தி- ௧௨ - தனவிரயம் சிலர் சுக்கிலபக்ஷத்தில் - உ-௫-௯-உத்தமமென்றும் - கிருஷ்ண பக்ஷத்தில் ௪-௮-௧௨-உத்தம மென்பார்கள்.

சந்திரபாகை — சிந்துநதியின் உபநதி.

சந்திரபிரபர் — சைநதீர்த்தங்கருள் எட்டாவது தீர்த்தங்கரர், இவராண்டது சந்திராபநகரம். இக்ஷுவாகு வம்சத்தவர். தந்தை மகாசேநன், தாய் லக்ஷ்மணை, இவர் கிருதயுகத்தில் தைமீ கிருஷ்ணபக்ஷம் ஏகாதசி அனுஷத்திற் பிறந்தவர். உன்னதம் (௧௫௦) வில் வெண்ணிறம். ஆயுஷ்யம் பத்துலக்ஷம். இவர் புத்திரன் வரசந்திரன், கணதரர், தத்தர் முதலிய தொண்ணூற்று மூவர்.

சந்திரபீடன் — உச்சையனி நகரத்தரசன், தாராபீடன் என்பவனுக்குக் குமரன்.

சந்திராபீடன்—காதம்பரியின் கணவன்.

சந்திரபீசன்—விசயன் குமரன், இவன் குமரன், சுலோமதி.

சந்திரமதி—மதிதயன் மகள். அரிச்சந்திரன் தேவி. பதிவிரதாசிரோமணி இவள் பிறந்தபோழ்தே மாங்கல்யம் இவளுடன் பிறந்ததாகக் கூறுவர். இவள் தன் கணவன் விசுவாமித்திரன் செய்வித்த துன்பத்தால் நாடிழந்தகாலத்தும் புருஷனை விடாது பின்பற்றிக் கணவன்பொருட்டுக் காசி வேதியனிடம் அடிமைபட்டுத் தானொரு புறம்புருஷனொருபுறம் இருந்துபுத்திரனை யிழந்து துன்பம் அடைந்து கடைசியில் சுடலையில் புருஷனைக்கண்டு துயரமடைந்து காசியரசன் குமான்பொருட்டு இறக்கத்துணிந்து இருக்கையில் தேவர்கள் காட்சிதரக் கணவனை அடைந்தவள்.

சந்திரமாசாதி — பூர்வபக்ஷத்துப் பிரதமை முதல் அமாவாசையிறுதியாகவந்தது சாந்திரமாதம், சூரியன், மேஷமுதலான இராசிகளில் சங்கிராந்தி சௌரமாதம். அசுவினி முதல் இரேவதி யந்தம் நட்சத்ர மாதம். (௩௦) நாள் ஒரு மாதமாக வந்தது சாவணமாதம். அது சனனமரணாதிகளில் அறியப்படும். இந்த வகையில் (௧௨) மாதங்கொண்டது அவ்வருஷமாம். வியாழன் நின்றராசி உதயமுதலாக வுதயாந்தமென்று பெயராம். சாந்திரமானம் ஆண்டிற்கு (௪) மாதம் (௨௯) திவசமும், (௪) மாதம் (௩௦) திவசமாய் வந்தபடியால் (௩௫௪) நாட்களென்றும், சௌரமானம், ஆண்டிற்கு இடபாதி ஐந்து மாதமும் நாள் அதிகப் பட்டபடியால் (௩௬௫வ) நாட்களென்றும், நக்ஷத்ரமானம் ஆண்டிற்கு நக்ஷத்திரம் (௨௭) ஆகையால் (௩௨௪) நாட்களென்றும், சாவணமானம் ஆண்டிற்கு மாதம் (௩௦) நாளாகையால் (௩௬௦) நாட்களென்றும் கூறுவர். (விதானமாலை)

சந்திரவதி—1. பார்வதிபிராட்டி ஒருமரத்தை நோக்கிப் பெண்வேண்டும் என அது ஒரு பெண்ணைத்தந்தது. அப்பெண் பூஞ்சோலைக்குச் செல்ல அவ்விடம் மணிசூடன் என்னுங்காந்தருவன்அப்பெண்ணைக்கண்டு மோகித்ததனுல் பூமியில் சந்திரகுத்தனுக்குப் பிள்ளையாகப் பிறந்தான். (பூவாளூர்ப் புராணம்).

2. மஞ்சுளனைக காண்க.

சந்திரரேகை—ஒரு அப்சரசு.

சந்திரலோகம்—பிதுர்க்கள் வசிக்கும் சுவர்க்கலோகத்திடம்.

சந்திரவாகை—ஒருநதி.

சந்திரவக்கிரன்-சந்திரகேதுவிற்குஒருபெயர்.

சந்திரவாணன்—தஞ்சாவூர் ஆண்ட அரையர்களில் ஒருவன். இவன் பெயரால் பொய்யாமொழிப்புலவர் தஞ்சைவாணன் கோவை செய்தனர்.

சந்திரன் — இது, சூரியனைநோக்க ஒரு உபக்கிரகம். இது, பூமியை (27) லக்ஷத்து (38) ஆயிரத்து, (800) மைல் தூரத்திற் கப்பாலிருந்து பூமியைச்சுற்றி வருகிறது. இதன் சுற்றளவு (6.800) மைல் எனவும், குறுக்களவு சுமார் (2162) மைல் எனவும் கூறுகின்றனர். இது, பூகோளவட்ட அளவில் எண்பதில் ஒருபாகம் எனக்கணிக்கின்றனர். இது, சூரியனுடைய ஒளியின் பிரதிபலத்தால் பிரகாசத்தை யடைகிறது. இது, (27) நாட்கள், (8) மணி அளவையில் தன்னைத்தான் ஒருதரஞ்சுற்றி வருகிறது. இதுபூமியை (29 நாட்கள் (12) மணிகள், (44) விநாடிகளில் பூமியை ஒருமுறை சுற்றிவருகிறது. இவ்வாறு இது பூமியைச்சுற்றி வருதலால் சுக்லகிருஷ்ண பக்ஷங்களும், மாதங்களும் எற்படுகின்றன. சந்திரன் பூமி, சூரியன் இம்மூன்று கிரகங்களும் ஒருநேர் பாகையிலமைகையில் நமக்குப் பூரணசந்திரநிலை தோன்றுகிறது. இது, பூமிக்குப்பின் புறமாகும்போது சந்திரவுதயமும் ஒளியும்முறையே குறைந்து (15) ஆவது தினத்தில் பூமி, சந்திரன் சூரியன் என்ற ஒருநேர் பாகையிலமைகையில் சந்திரன், பூமிக்கும் சூரியனுக்கும் இடையில் நிற்றலால் இரவில் காணப்படுவதில்லை. அத்தினமே அமாவாசை அதுபோலவே பூரணசந்திர நிலையாகிய பௌர்ணமியும் உண்டாகிறது. சந்திரன் பூமியை ஒருமுறைசுற்றி வருங்கதி ஒருமாதம் எனப்படுகிறது. சந்திரன் பூமியைப்போல் உருண்டையான கோளம், இதற்கு வொளியெல்லாம் சூரியனிடத்திருந்து வருகிறது. இது பூமியினும் சிறிது. (50) சந்திரர்கள் ஒன்றாகச் சேர்ந்தால் ஒரு பூமியாகும். சூரியனைவிட நமக்குச் சமீபத்திலிருக்கிறது. பூமிக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம் (240,000) மைல். இது, பூமியைச் சுற்றியோடுமகிரகம், பூமி சூரியனைச் சுற்றியும், சந்திரன் பூமியைச் சுற்றியும் ஓடுவதால், சில சமயங்களில் சந்திரன் நமக்கும் சூரியனுக்கு மிடையில் வரும்படி நேரிடும். இது உருண்டையான வஸ்துவல்லவா இது பூமிக்கும் சூரியனுக்கும் நடுவில் வருகையில் அதன்மீது வெளிச்சம் படாத பாகந்தான் நமக்கு எதிரில் காணப்படுகிறது அத்தெரியாத நாள் அமாவாஸை (அ - இல்லை, மா - சந்திரன், வஸ் - இருக்கிறது) (சந்திரனில்லாத நாள்) அந்த இடத்திலிருந்து தன் வீதியாறு முந்திய இடத்திற்கு நேர் எதிரிலிருக்கும் இடத்திற்கு வரும்போது சூர்யனுக்கும் சந்திரனுக்கும் நடுவில் பூமிவருகிறது அப்போது சந்திரனது வெளிச்சமான பாகம் முழுதும் நமக்குத் தெரிகிறது. அது பௌர்ணமி இது தேய்வதும் வளர்வது மில்லை சூர்ய வெளிச்சம் குறைவாய்படுவது தேய்பிறை சூர்யவெளிச்சம் அதிகம் படுவது வளர்பிறை, சந்திரன் பூமியைச் சுற்றிவர (29½) நாட்கள் ஆகின்றன. இது பூமி தன்னைத்தான் சுற்றும்போது சந்திரன் தன் ஸ்தானத்தை விட்டு (12) டிகிரிநகருகிறது ஆதலால் இதன் உதயம் பிற்படுகிறது.

சந்திரன் — A 1. இவன் விஷ்ணுமூர்த்தியின் திருமார்பில் பிறந்தவன் என்றும், திருப்பாற்கடல் கடைகையில் பிறந்தவன் என்றும், அத்திரிக்கு அநசூயையிடம் பிறந்தவன் என்றுங் கூறுவர். அத்திரி தவம்புரிய அவன் வீரியம் மேலெழுந்து கண்வழி ஒழுகிற்று. அதைப்பிரமன் திரட்டி விமானத்திலிட அது உயிர்பெற்றது. அதனைச் சோமன் என்றனர். இதில் சிந்தியதுளிகள் பயிர்களாயின. இச்சோமன் சிவமூர்த்தியை எண்ணித் தவம்புரிந்து கிரகபதமும் அந்தணர், பயிர் முதலியவைகளுக்குத் தலைமையும், சிவமூர்த்திக்குக் கண்ணாகவும், அணியாகவும் வரம்பெற்றனன் (காசிகாண்டம்).

2. தக்ஷன்பெண்கள் இருபத்தெழுவரை மணந்து அவர்களிடத்து ஒருமித்து ஆசை வைக்காது கார்த்திகை உரோகணி யிவர்களிடம் மாத்திரம் அன்பு வைத்ததால் மற்றைப் பெண்கள் தந்தையிடம் குறைகூறத் தக்ஷன் நாடோறும் ஒவ்வொருகலை தேயவும் க்ஷயரோகமும் அடையச் சாபம் தந்தனன். சந்திரன் சாபம் அடைந்து சிவமூர்த்தியால் கலைகள் வளரவும் நோய் நீங்கவும் அனுக்கிரகம் அடைந்தவன். தக்ஷயாகத்தில் வீரபத்திரரால் தேய்வுண்டு அநுக்கிரகம் பெற்றவன்.

3. சிவசன்னிதானத்து நாரதர் கொணர்ந்து கொடுத்த கனியைப் பிரமன் கந்தமூர்த்திக்குக் கொடுக்க வேண்டுமெனக் கணபதி அவரைக் கோபிக்கையில் சந்திரன் விநாயகரைக்கண்டு நகைத்ததால் விநாயகரால் ஒளியிழக்கவும், சண்டாளத்வமும் பெற்று. மீண்டும் அவரால் அச்

சாபம் வருஷத்து ஒருநாளில் அடைய வரம் பெற்றவன். அது ஆவணியீ பூர்வ பக்ஷ சதுர்த்திராம். இக்காலத்தில் சந்திரனைக் கண்டோர் சண்டாளத்வமடைவர். ஆகையால் அதுநீங்கக் கணபதியைப் பூசிப்போர் இஷ்டசித்தி பெறுவர்.

4. இச்சந்திரன் ஒஷதிகளுக்கு இறைவனாய் அநேக இராசசூயஞ் செய்த கர்ம பலத்தினால் பிரகஸ்பதியின் தேவியாகிய தாரையைப் புணர்ந்தனன். இந்தக் காரணத்தால் தேவாசுரயுத்தம் உண்டாயிற்று. அவ்யுத்தத்தில் பிரமன் தாரையைப் பிரகஸ்பதிக்குக் கொடுத்தனன். தாரையிடம் இவனுக்குப் புதன் பிறந்தனன்.

5. திருப்பாற்கடல் கடைகையில் மத்தானவன்.

6. (௧௨,௦௦௦) யோசனை விஸ்தாரம் உள்ள மண்டலத்தை யுடையவன். இவன் கலையை, முதற் பதினைந்துநாள் தேவர் அருந்துவர். மற்றவற்றைத் தென்புலத்தார் அருந்துவர். இவன் தேர்க்குச்சக்கரம் (௩) குருந்தமலர் நிறமுள்ள குதிரைகள் (௧௦) சூரியனது சுசுமுனை என்னும் கதிரால் ஒளி பெறுவன்.

7. இராகு கேதுக்களின் வஞ்ச வுருவத்தை மோஹினி உருக்கொண்ட திருமாலுக்குக் காட்டினமையால் அவரால் பகைமைபெற்று விழுங்கப்பெற்றவன்.

8. தருமனுக்குச் சார்த்திகையில் உதித்தவன் என்றுங் கூறுவர்.

9. இவன் அத்திரியிடம் பிறந்த போது இவனுடன் பிறந்தார் தத்தாத்திரேயன், துருவாசன்.

10. இவனைச் சிவமூர்த்தியின் அஷ்டமூர்த்தங்களில் ஒன்றாக் கூறுவர். இவனுக்குக் கலைஞானபாதன் என்று ஒரு குமரன் உண்டு. நாருணமும், வெண்ணிறமும் தென்கிழக்கும் இடமாகவுடையவன்.

B. (சூ.) விசுவகோதன் குமரன்.

C. இவர் கொல்லாபுரியிலிருந்து நந்திக்கலம்பகம் சேட்டிறந்த நந்தித்தொண்டமான் சகோதரருக்கு முடி சூட்டி அவ்வரசனால் "நேற்றும் இன்று மிகுந்தது காதல்" என்னுஞ் செய்யுள் பெற்றவர்.

சந்திராங்கதன் — 1. பத்ராயுவின் தந்தை.

2. இந்திரசேநன் குமரன். சீமந்தினியைக் காண்க.

3. மாளவ தேசாதிபதி, மனைவி இந்துமதி, இவன் வேட்டைக்குச் சென்று ஒரு அரக்கிக்குப் பயந்து மடுவில் விழ அவ்விடம் இருந்த நாககன்னியர் இவன் மீது காதல் கொண்டனர். அரசன் அதற்கு இணங்காது நாகலோகத் திருந்தனன். இவன் மனைவி தடாகத்தில் கணவன் விழுந்து இறந்தான் என அமங்கலையாயிருக்க நாரதமுனிவர் இவளுக்குக் கணவன் உயிருடன் இருப்பது அறிவித்து விநாயகவிரதமிருக்கச் சந்திராங்கதன் தன்னகரமடைந்தனன்.

சந்திராசாரி — காச்மீரதேசத்து ஓர் வடநூற் புலவன்.

சந்திராசுவன் — தண்டாசுவனைக் காண்க.

சந்திராட்டமம் — ஒருவன் பிறந்தநாள் முதலாக மூவொன்பதிருபத்தேழாக்கி இதில் முதல் ஒன்பதில் (௩, ௫, ௭) நாட்கள் பொருந்தா. இவை யல்லாத நாட்கள் பொருந்தும். இரண்டாம் ஒன்பதிலும், (௩, ௫, ௭) நாட்கள் பொருந்தா. இவற்றில் (௩) ஆம் நாளின் முதற்காலும், (௫) ஆம் நாளின் கடைக்காலும், (௭) நாளின் (௩) ஆம் காலும் ஒழித்து மற்றவை பொருந்தும். பின் இரண்டாம் ஒன்பதின் சந்திராட்டமமான (௨௨) நாட்களும், மூன்றாம் ஒன்பதின் (௮௮)-ம் கால் கிடந்தவை நாசிகளும் பொருந்தாது பிறந்த நாளுக்கு முதனாளாகிய (௨௭) நாளும் பொருந்தாது. இதில் சந்திரன் சுபனானால் தோஷமில்லை. (விதான)

சந்திராபம் — தினபதி நகர்.

சந்திரோதயம் — சுதஞ்னன் நகரம்.

சந்தேகாசித்தன் — தான் கூறுகிற தை ஐயமாய் நிற்கவும் அப்பொருளைச் சாதித்தல். அதாவது, ஆவியோ, பனியோ தோன்றுகின்றதென ஐயமுற்றவிடத்து, அது புகையென் றறுதியிட்டு, அவ்விடத்துநெருப்புண்டெனக்கூறுதல். (சிவ-சித்)

சந்தை — சந்தோஷிக்கச் செய்யுந்தேவதை.

சந்தோபாபக்தர் — சூத்திர வருணத்தினராய்ச்சிவாஜி அரசனிடத்தில் சேநாதிபராயிருந்தவர். ஒருநாள் துக்காராம் இயற்றிய கீர்த்தனைகளைக்கேட்டு வைராக்ய மடைந்து தமது உத்யோகத்தையும் மனைவியையும் விட்டுப் பீமநதிக்கரையடைந்து அவ்விடத்தில் இருக்கையில் மனைவி சகல பூஷணங்களை யணிந்து இவரிடம் வருகையில் அவளையும் வைராக்யமடையச்செய்து தாம் பிக்ஷைபுரிந்து பண்டரி யாத்திரை மனைவியுடன் செல்கையில் வழியில் ஆறு

வெள்ளங்கொண்டு யாத்திரை செய்பவர்களைத் தடுக்க அவர்களையும் நடப்பித்துத் தாமும் பண்டரியடைந்து கண்ணனைத் தரிசித்தவர்.

சந்தோவிசிதி—வேதாங்கநூல்.

சந்தோஷன் — யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷிணையிடம் உதித்த குமரன்.

சந்நதமந்நன்—(கிருதிதந்தி) சுமதிகுமரன்.

சந்நதி—சிந்துவின் தேவி.

சந்நதிமான்—சுமதி புத்திரன்.

சந்நதேயு — சந்திரவம்சத்து பூரு புத்திரனாகிய ரௌதராஸ்வனுக்கு சித்திரகேசியிடம் பிறந்த புத்திரன்.

சந்நிதம்—ஓர் தீர்த்தம்.

சந்நிதி—1. அலர்க்கன் குமரன், இவன் குமரன் சுநிதன்.

2. வாலகில்லியர்க்குத் தாய், கிருதுக்குத் தேவி.

3. தக்ஷன் பெண், புலத்தியன் தேவி.

சந்நியாசம்—இது இல்லறம் நீங்கித் தனிமையாய்க் கடவுளைத் தியானிக்கும் ஆச்சிரமம். இது நான்குவிதம். இதை மேற்கொண்டார். குடீசகன், பகூதகன், அம்சன், பரம அம்சன் எனப்படுவர். குடீசகன், சந்நியாசஞ் செய்துகொண்டு சிகை எஞ்ஞோபவீதம், திரிதண்டம், காவிவஸ்திரம், கமண்டலம், திரிபுண்டரம், தேவதார்ச்சனை முதலியவற்றுடன், இருந்து தன் வீட்டிலேனும், அயல்வீட்டிலேனும் அன்னம் ஏற்று உண்பவன். பகூதகன் காவிவஸ்திரம், திரிதண்டம், கமண்டலம், மான்தோல், குடை, யோகபட்டம், கோவணம், பாதுகை, செபமணி, மண்தொடு கருவி, திரிபுண்டரம், உபவீதம், சிகை, தேவதார்ச்சனை தாங்கித் தன் வீடு ஒழிந்து எழுவீட்டில் அன்னம் ஏற்று உண்பவன். அம்சன் கமண்டலம், கந்தை, கோவணம், பலிபாத்திரம், வேணுதண்டம், முண்டனம், திரிபுண்டரம், பரதேசசஞ்சாரம், ஒரு ஊரில் ஒருநாள் அன்றி இராமை, தேவதாபூசை, சாஸ்திரவிசாரம், எண்கவளம் புசித்தல் முதலிய உள்ளவன். பரம அம்சன் - மயிர்க்கயிறு, கமண்டலம், மான்றோல், மண்டொடுகருவி, யோகபட்டம், கந்தை, குடை, பாதுகை, தண்டம், உபவீதமின்மை, முண்டனம், நித்தியகருமம் இன்மை, ஈசுவரத்தியானம் உடையவன். இவன் சமாதியில் அரசமரம் அல்லது ஏதாவது பிரதிஷ்டை செய்விக்கவேண்டும்.

சந்நிவேசன்—பூஷாவிற்கு ரசனையிடம் உதித்த குமரன்.

சந்நியாசிப்புரட்டர் — இவர்கள் திருப்பதி திருத்தணி முதலிய இடங்களிலுள்ள குடும்பிகளும், சாதிவிட்டோடிப் போனவர்களும் ஒரு கூட்டமாய்ப் பெண்களையும் புருஷர்களையும் ஏமாற்றி வஸ்திரகளை வாங்கி பல வர்ணங்களாகக் கட்டிக்கொண்டும் பல குளிசங்களைக் கோத்துத் தலையில் கட்டிக்கொண்டு, தோள்களில் வளையமிட்டும் தடியில் ஒருபையைக் கோத்துத் தோளில் தூக்கிக்கொண்டும் வீடுகளில் நுழைந்து கைபார்ப்பதும் குளிசமெழுதித் தருவதுமான பகற் புரட்டர்.

சந்நியாசிரோகம் — வாதபித்த, சிலேஷ்மங்கள் பிராணஸ்தானங்களை யடைந்து திரிகரணங்களை அடக்கி மூர்ச்சை யொழித்து மனிதனைக் கீழ்தள்ளும், இது சாத்தியா சாத்தியம். (ஜீவா.)

சந்நு—1. ஒரு இருடி சுகோத்திரன் குமரர். பகீரதன் தன் மூதாதைகளுக்கு நற்கதிதர வேண்டிச் சிவமூர்த்தியை எண்ணிப் பல நாள் தவம்புரிந்து பெற்றுக்கொண்டுவரும் கங்கை, இந்த முனிவர் ஆச்சிரமத்தின் வழிவர முனிவர் கோபித்துக் கங்கையைப் பானம் செய்தனர். அரசன் திரும்பிப் பார்க்கக் கங்கை, மறைந்தது கண்டு முனிவரிடம் தனது குறைகூறி வேண்ட முனிவர், அதனைக் காதின்வழிவிட்டனர். இதனால் கங்கைக்குச் சாநவி என்று ஒருபெயர் உண்டாயிற்று. சந்திரவம்சத்து ஒதுரகன் குமரன் எனவுங்கூறுவர், இவன் ருஷியாயினன்.

2. குருவின் மூன்றும் புத்திரன்.

சந்நுதன்—திரிதசீருஷி புத்திரன். அகத்தியர் பேரன்.

சந்மதிமுனி—பவணந்தி முனிவர்க்குத்தந்தை இவர் தொண்டைமண்டலத்துச் சைநர். இவர் இருந்தது சநகாபுரம்.

சபணன்—1. பௌத்தன்.

2. சைநன்.

சபதம் — என்பது பிரமாணம், அது திவ்ய பிரமாணம், சபதம் என (உ) வகை. திவ்யம் - துலாம், அக்கினி, சலம், விடம், கோடம், தண்டுலம், தத்தமாடம், பால், தருமசம் என) (கூ) இவற்றை பிரமாணத்திற் கூறினும். சபதம், சத்தியம் புண்ணிய முதலிய கெடும் என்பதும், வாகனம், ஆயுதம், பசு, விதை, பொன், தெய்வத்

தின் திருவடி, தந்தையின் பாதம், மைத்தன் தலை, மனைவியின் தலை முதலியவற்றைத் தொடுதலும், தடாகாதி பிரதிஷ்டையாலுண்டான புண்ணியங் கெடுமென வுறுதிகூறல். (பிரகஸ்பதி).

சபந்தன்—இக்ஷ்வாகுவம்சத்து யுவநாசுவன் குமரன், பிரகுதச்வன் தந்தை.

சபரன்—சேதிபதேசாதிபதி, சிசுபாலன் குமரன். அஸ்வமேதத்தில் அருச்சுநனுடன் சிநேகஞ்செய்துகொண்டவன்.

சபரி — மதங்காச்சிரமத்தில் இராமமூர்த்தியைக்கண்டு சேவித்துச் சுக்கிரீவன் இருக்கைகூறி முத்தி அடைந்தபெண்.

சபலன்—பிங்களனைக் காண்க.

சபலாசுரன்—இவன் அசுரன். சாபவுருக்கொண்டு விநாயகரைக் கொல்லவர விநாயகர் இவனைக் காலைப்பிடித்து அடித்துக் கொன்றனர்.

சபளம் — யமமார்க்கத்தைத் தடைசெய்யும் நாய் சியாமத்திற்குத் துணையானது.

சபளாசுவரர் — தக்ஷன் குமரர். இவர்கள் ஆயிரவர். நாரதர் உபதேசத்தால் ஞானம் அடைந்தவர்.

சபளாஸ்வர் — சந்திரவம்சத்து அரசர், அவீட்சின் புத்திரர். (பா-ஆதி).

சபக்ஷம் — உபமானத்திற் கொத்த இடம். அதாவது, இப்பர்வதம் நெருப்புடையது புகையுடைத்தாகையால் பாகசாலைபோல என்பது. (சிவ-சித).

சபாநரன் — (பிர) அநுபுத்திரன். இவன் புத்திரன் காலநரன்.

சபாநலன் — யயாதி பௌத்திரன். அநுவின் குமரன்.

சபாபதிப்பிரியன் — சோதேசாதிபதி சிதம்பர தரிசனத்திற்கு வந்தவன்.

சபாபதி நாவலர் — இவர் யாழ்ப்பாணம் கோப்பாய் எனும் இடத்தவர் சைவ வேளாளர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் வல்லவர். திருவாவடுதுறையாதீன வித்வானு யிருந்தவர். இவர் தமிழில் சிதம்பர சபாநாதபுராணம், ஏசுமதசங்கற்ப நிராகரணம், பாரதராமாயண தாற்பர்ய சங்கிரகம், சிவகர்ணாமிர்தமொழிபெயர்ப்பு, திராவிட பிரகாசிகை முதலிய இயற்றியவர்.

சபாலி — ஆரீதரின் தந்தை; வைசம்பாயனனது வரலாற்றை முனிகுமாரர்கட்குக் கூறியவர்,

சபிண்டர்கள் — தான் முதலாக ஐந்தாம் பாட்டன் வரையிலுமுள்ள ஏழு தலைமுறைக்குட்பட்ட பங்காளிகள்.

சபு—உக்கிரசேநன் குமரன்.

சபேசீவரம்—நைமிச வனத்திலுள்ள திவ்வியக்ஷேத்திரம்.

சபை—1. இது சிவமூர்த்தி தேவர்கள்பொருட்டும் இருடிகள்பொருட்டும் திருநடனஞ் செய்த இடங்களாம். அவை சிதம்பரம் கனகசபை, மதுரை இரசிதசபை, திருநெல்வேலி தாம்பிரசபை, திருக்காஞ்சி ஆகாசசபை, திருக்குற்றாலம் சித்திரசபை, வேதாரணியம் வேதசபை, சுசீந்திரம் தேவசபை, திருவாலங்காடு இரத்தின சபை.

2. அறிவுள்ளார் பலர்கூடி விவாகார நிச்சயஞ் செய்யுமிடம். அது, அப்பிரதிட்டிதை, பிரதிட்டிதை, முத்திரிதை, சத்திரிதை என நான்குவகைப்படும். இவற்றுள் அப்பிரதிட்டிதை நிலையிலாவது சஞ்சரிக்கும் ஆரணியர் முதலியோர் கூடுவது. பிரதிட்டிதை உபயவாதிகள் முதலான பத்திடத்துச் சபையாம். முத்திரிதை - பிராட்டு விவாகன் இருக்கின்ற சபையாம். சாத்திரிதை அரசனிருக்கும் சபை. சபை பிணங்கத்தினர். அரசன், (சிரம்) பிராட்டு விவாகன் (முகம்) சபாசதர்கள் (தோள்) ஸ்மிருதி (கை) கணகலேகர் (கணைக் கால்கள்) பிரமாணங்களான பொன், நெருப்பு, நீர் (கண்கள்) சாத்தியபாலன் (பாதம்). (விவகாரசங்கிரகம்).

சப்தகிரந்தி — மஹத், அகங்காரம், சத்தம், பரிசம், ரஸம், ரூபம், கந்தம் ஆக - எ.

சப்தசாரஸ்வதம் — ஒரு புண்யக்ஷேத்ரம், இதில் சப்தருஷிகள் யாகஞ்செய்ய அதில் சரஸ்வதி முதலிய தீர்த்தங்கள், சம்பிரபை, கனகாக்ஷி, விசாலை, சுரந்தவை, அமோகமாலை, சுவேணி, விமலோதகை, முதலியவராக உருக்கொண்டு பணிசெய்து சித்திபெற்றனர், இது ஒரு தீர்த்தம். இதின் சப்தாங்கமாவன:—1. சுப்பிரபை, 2. காஞ்சனாக்ஷி, 3. விசாலை, 4 மனோரமை, 5. ஓகவதி, 6. சுரேணு, 7. விமலோதகை என்பன.

சப்தசிருங்கபீடம்—சத்திபீடங்களுள் ஒன்று

சப்ததருப்பை — குசம், காசம், தூர்வை, விரீஹி, மஞ்சம்புல், விச்வாமித்ரம், யவை.

சப்ததாண்டவம் — 1. ஆனந்ததாண்டவம், 2. சந்தியாதாண்டவம், 3. கௌரிதாண்ட

வம், 4. திரிபுரதாண்டவம், 5. காளிதாண்டவம், 6. முனிவர்பொருட்டு நடித்ததாண்டவம், 7. சம்ஹாரதாண்டவம். (ஸ்ரீ - காரணம்)

சப்ததீவுகள்—சம்பு, பிலக்ஷம், குசம், கிரௌஞ்சம், சாகம், சான்மலி, புஷ்கரம்.

சப்தநரகங்கள் — அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி, யென்பன.

சப்தநாகங்கள் — தர்மன், காமன், காலன், வசு, வாசுகி, அநந்தன், கபிலன்.

சப்தபதி — கல்யாணத்தின் முந்திய நாளில் நடத்தும் சடங்கு. இது மணப்பெண்ணின் கையைக் கணவன் பிடித்துக் கொண்டு இருவருமாக விவாக்னியை யெழுமுறை வலம்வந்து நீ யென்னுடன் (எ) அடிகள் நடந்து வந்தமையால் நாம் இருவரும் தோழர்களானோம் எனும் கருத்துள்ள மந்திரத்தைக் கூறுவது. (தைத்திரீயம்).

சப்தபுரி — அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை.

சப்தமேகங்கள் — சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்பன. இவைமுறையேமணி, நீர், பொன், பூ, மண், கல், தீ, இவற்றைப்பொழியும்.

சப்தருஷிமண்டலம் — சனி உலகத்திற்கு மேல் பதினொருலக்ஷம் யோசனை பிரமாணத்திலுள்ள எழுருஷிகளுள்ள உலகம்.

வானம் நிர்மலமாய் இருக்கும் இராக்காலத்தில், வடக்கு நோக்கிப் பார்த்தால் நக்ஷத்திரகூட்டம் ஒன்று காணப்படும். அக்கூட்டத்திற்குச் சப்தரிஷி மண்டலம் என்று பெயர். இதில் (7) நட்சத்திரங்கள் அடங்கியவை. இந்த நட்சத்திரகூட்டம், இரவின் ஆரம்பத்தில் வடகிழக்கில் உதித்து வடமேற்கில் மறைகின்றது. இந்த (7) நட்சத்திரங்களைத் தாண்டி மையத்திலிருப்பது துருவ நட்சத்திரம்.

சப்தருஷிகள் இவர்கள் துபேரனுக்கு ஆசிரியர்கள் — அத்ரி, வசிட்டர், கச்யபர், கௌதமர், பரத்வாசர், விச்வாமித்ரர், ஜமதக்னி. (பார-அநுசா).

சப்தரோமா—திருவல்லிக்கேணியில் பெருமாள் அருள் பெற்றவர்.

சப்தவிடங்கத்தலம்—1. திருவாரூர், 2. திருநாகைக்காரோணம், 3. திருநள்ளாறு, 4. திருமறைக்காடு, 5. திருக்காருயல், 6. திருவாய்மூர், 7. திருக்குவளை.

சப்யம்—கிருஷ்ணன் குதிரைகளில் ஒன்று.

சபர்சயஞ்ஞம் — ஸ்பர்சயஞ்ஞம், இது சம்பாதித்த யாகப்பொருள்களைச் செலவு செய்யாமலே அதைத் தொடுவதினாலேயே திருப்தி யடைவிக்கும் யாகம்.

சமகிலாதன் — இரணியகசிபின் குமரன், தேவி மதி, குமரன் பஞ்சசேநன்.

சமங்கர் — ஒரு ருஷி இவர் நாரதருக்குத் துக்க முதலிய தொடராதிருத்தற்கு வழி கூறியவர். (பார-சாந்).

சமங்கன் — ஒரு ரிஷி. அஷ்டவக்கிர முனிவன் கோணல் நீங்கிப் பெற்ற பெயர். இவன் சமங்கை என்ற நதியில் ஸ்நானம் செய்ததால் இவன் கோணல்நீங்கப் பெற்றனன். (பார-வன).

சமசௌரப்பன் — ஜனமேஜயன் சர்பயாகத்திலிருந்த ரிஷிகளில் ஒருவர்.

சமடன்—1. தருமனுடன் தீர்த்தயாத்திரை செய்த இருடி.

2. கயாசிரன் என்னும் பெயருள்ள பிராமணன்.

சமன் — அகன் என்னும் பெயருடைய வசு புத்திரன் உடன்பிறந்தார் ஜோதி, சாந்தன், முனிச்சன் முதலியோர்.

சமணமுனிவர்—1. பவணந்தி முனிவர்மாணாக்கர், நன்னூற்குச் சிறப்புப்பாயிரம் இயற்றியவர்.

2. சைநரில் ஒரு சாதியார்.

சமதகன் — சிவகணத்தலைவரில் ஒருவன்.

சமதக்கினி—ஜ - ஜனிப்பது, ஜமத் பக்ஷிப்பது, யஜ - யாகஞ் செய்வது, ஜானே - அறிவது, ஜிஜாஹி - இந்திரியங்களைச் செயிப்பது, ஜிஜாயிஷி - சிஷ்யர்களின் ஞானங்களை யுண்டாக்குவது. ஜஜாமத் - தேவர்களும் அக்னியும் ஆவிர்ப்பவிக்கும் இவ்வுலகத்தில் உண்டாயிருப்பவன். இவர் அம்புபயில்கையில் ரேணுகையும் அம்புகளை யெடுத்துக்கொடுக்க முனிவர் சூரியன் மீது அம்புவிட நிற்கையில் சூரியன் பிராமண உருக்கொண்டு தோன்றிக் குடையும் செருப்புங் கொடுத்தான். (பார-அநுசா). இருசிகருக்கு காதியின் குமரியாகிய சத்தியவதியிடம் பிறந்த குமரர். இரேணுகையை மணந்தவர். குமரர் உருமதி, உத்சாகன், விச்வாவசு, பரசிராமர் முதலிய நால்வர். இவருக்குப்பிதா பிருகுமுனிவர் எனவும் கூறுவர். ஒருமுறை பிதர்க்களுக்குப் பால் கறந்து வைத்தனர். அதைக் குரோதம் சாய்த்தது. அதைக்கண்ட முனி

வர்கோபித்தனர். குரோதம் மன்னிக்க வேண்ட விடுத்தனர். பிதுர்க்கள் முனிவரைநோக்கி எம்மை அலக்ஷியஞ்செய்து எங்களுக்குவைத்த பாலைக்கவிழ்த்த குரோதத்தைச் சபிக்காததினால் நீ நகுலம் ஆக எனச் சபித்தனர். முனிவர் இந்த உருவத்துடன் தருமராசனது. அசுவமேத யாகத்திற்குச் சென்று நான் சத்துப்பிரத்தன் அன்னதானஞ் செய்ததைக் கண்டதால் ஒருபாதிதேகம் பொன்னிற மடைந்தேன். மற்றப்பாதி பொன்னிறம் பெறலாம் என இவ்விடம் வந்தனன் ஆகவில்லை. இந்த யாகம் அதனினும் பலன் இலது என்று சொல்லிப் போயினர். இவர் மீண்டும் தருமர்செய்த யாகத்தைப் புகழ்ந்ததால் பிதுர்க்கள் சொற்படி பழைய உருக்கொண்டனர். ஒருமுறை தன்னுடன் பாணத்தை எடுத்துத் தந்த ரேணுகையின் கால்களைச்சுடும் சூரியனது வெப்பத்தைக் கோபித்தனர். இவர் அங்கதேசாதிபதியாகிய சித்ரசேனனைவிரும்பிய கற்பினிலை கடந்த தாயைக் கொலை செய்துவரும்படி தமது புத்திரர் நால்வர்க்குக் கட்டளையிடப் பரசிராமர் ஒழிந்த மூவரும் மறுக்க அவர்களை வேடராகச்சபித்தனர். பரசிராமர் வேண்டுகோளால் மனைவியை உயிர்ப்பித்துக் கிராமதேவதையாயிருக்க வரம் அளித்தவர். இவர் ஆச்சிரமத்தில் கார்த்தவீரியன் வேட்டைக்குச் சென்று தங்கினன். முனிவர் அரசனுக்குக் காமதேனுவால் வேண்டிய உபசரிக்க அரசன் காமதேனுவிடம் இச்சை கொண்டு வலுவிற் கவரப் பரசிராமர் அரசன் சேனையையும் அவன் குமரரையும் கொன்றனர். கார்த்தவீரியனைக் கொன்ற பாபம் நீங்கப் பரசிராமர் தீர்த்த யாத்திரை சென்றகாலத்துக் கார்த்தவீரியன் குமரருட் சிலர் சமதக்கினி முனிவரைக் கொலைபுரிந்தனர். இதனால் பரசிராமர் அந்தச் சூரியவம்சத்தைக் கருவறுத்தனர்.

மதிருஷ்டி தோஷமும் அபவாதமும் — விடியற்காலத்தில் சுக்ரன் கிழக்கேஉதிக்க, அந்தக் காலத்தில் குரு மேற்கே அஸ்தமிக்கச் சம்திருஷ்டி தோஷமுண்டாம். அக்காலத்துச் சுபகருமங்கள் தவிரப்படும். இருவரில் ஒருவர் வேறொரு கிரகத்துடன் கூடி நிற்பினும், இருவருக்கு நடுப்பட்ட இராசிகளில் சுபக்கிரகங்கள் நிற்பினும் சமதிருஷ்டியென்கிற தோஷம் இல்லை. சுக்ரன் மேற்கே நிற்க வியாழனிவனுக்கு (எ)-ஆம். இடத்துக் கிழக்கே நிற்பினும் சமதிருஷ்டி தோஷமாகாது. (விதான).

சமநப்த்திராசாரியர் — நியாயசாஸ்திர நூலாசிரியர்.

சமநிலை — இதுவை தருப்ப செய்யுணெறியிலொன்று. மூவினந்தம் முன்விரவத் தொடுப்பது (தண்டி).

சமந்தகமணி — ஒருமணி. இது சத்ராசித்திற்குச் சூரியனால் கொடுக்கப்பட்டது.

சமந்தகூடம் — இலங்கையிலுள்ள ஒருமலை. இதைச் சமனொளியென்பர் புத்தர். (மணிமேகலை.)

சமந்தபஞ்சகம் — திரேதா த்வாபரயுக சந்திகளில் பரசுராமன் க்ஷத்ரியருடன் (உக) முறை போரிட்டு அவர்களது உதிரத்தால் (ரு) தடாகங்களாக்கி அவர்களுதிரத்தால் பிதுர்தர்ப்பணம் செய்த இடம். இது பிற்காலத்து பாண்டவர்கள். (கஅ) நாள் போரிட்டதால் குருக்ஷேத்திரம் எனப் பெயர் பெற்றது. (பார-வன.)

சமந்தம் — இலங்கைத் தீவிலுள்ளமலை. புத்தபாதக்குறியுள்ளமலை. இது புத்தபாத பீடிகைகளில் ஒன்று சமனொளி யென்பர்.

சமந்தன் — வசுதேவருக்குத் தேவகியிடம் பிறந்த குமரன்.

சம்மோகனம் — ஒரு அஸ்திரம் அர்ச்சுனனால் விடப்பட்டது யாவரையும் மயங்கச் செய்யும்.

சமயதிவாகரவாமனமுனிவர் — நீலகேசித் தெருட்டின் உரையாசிரியர், ஜைனர்.

சமயம் — (சு) வைரவம், வாமம், காளாமுகம், மாவிர்தம், பாசுபதம், சைவம். இவற்றையும் உலகாயதம், புத்தம், சமணம், மீமாம்சை, பாஞ்சராத்ரம், பாட்டாசாரியம். முதலிய.

சமயாத்யுஷிதகாலம் — கிழக்கு வெள்ளென வெளுக்க நக்ஷத்ரமண்டலம் மறைந்து சூரியன் கண்ணிற்குத் தோன்றுதவரையிலுள்ள காலம். (பரா-மா).

சமரகோலாகலபாண்டியன் — விக்கிரமகஞ்சுகபாண்டியனுக்குக் குமான். இவன் கும்ரான் அதுலவிக்கிரமன்.

சமாதன் — மச்சிய தேசாதிபதியாகிய விராடன் உடன்பிறந்தான்.

சமாத்தம் — விரதங்களில் ஒன்று.

சமனொளிமலை — இது இலங்கைத் தீவிலுள்ளது. (திரு).

சமரன்—1. சூரியவம்சத்து அரசன், இவன்
யோகியாயினன்.

2. நீபன்குமரன். இவன்குமரர் பாரன்,
சுபாரன், சதச்வன். இவன் காம்பிலிநாட்
டரசனுயினுன்.

சமரை—விபீஷ்ணன் தேவி. சைலூஷன்
எனும் காந்தருவன் பெண், சீதாபிராட்டி
அசோகவனத்தில் இருக்கையில், தேறு
தல்கூறி ஆதரித்தவள். பெண் திரிசடை

சமர்த்தராமதாசர் — குருஜாம்பம் என்னும்
ஊரில் சூரியாஜிபண்டிதர் தம் மனைவி
ரேணு என்பவளுடன் புத்திரப் பேறு
வேண்டிச் சூரியனை யுபாசிக்க அத்தே
வன் தரிசனம்தந்து இரண்டுமகவனக்
குண்டாம். முன்னவன் என் னமிசத்தாற்
பிறப்பன் என அருளி மறைந்தனன்.
பின்பு சிலநாள் தரித்து இருமக்கள் தனி
த்தனி பிறக்க முன்னவனுக்கு கங்கா
தான் என்றும், மற்றவனுக்கு நாரண
னென்றும், பெயரிட்டுவளர்க்கையில் பின்
னவனுக்கு ஒருவாலுமிருந்தது கண்டு
அநுமனம்சமெனக் களித்திருந்தனர்.
பின்னவன், வீடுதங்காதலைந்து ராமநாமங்
கூறிக்கொண்டு ஒரு அரசடியிலிருக்கை
யில் ராமமூர்த்தி தரிசனந்தந்து ராமதா
சன் எனப்பெயரிட்டு மறைந்தனர். இவர்
ஒரு நாள் தம்மிச்சையாய் விளையாட
லைக்கண்ட தாய் இவ்வகை யாடல் தக்க
தன்று சமுசாரத்திற்கு வேண்டிய செய்க
என, ஒருகுடியானவன் நெற்பொதி
யைத் தூக்கிவந்து தாய்முன் வைத்து
எடுத்துக்கொள்க என்றனர். இவர்செய்த
தீமைகண்ட பொருட்குரியான் வந்து
என் பொதியெங, உனதாயின் எடுத்துச்
செல்க என, அவன் எடுக்கமுடியாதது
கண்டு வியந்து சென்றனன், இவரது
செய்கைகண்ட தாய்தந்தையர் கல்யா
ணஞ்செய்ய எண்ணி, பெண்ணிற்கும் பிள்
ளைக்குமிடையில் திரையிட்டு மந்திரஞ்
சொல்வதில் சாவதான மென்றடிக்கடி
சொல்லக்கேட்டுப் புரோகிதர் இவரை
அதற்குப்பொருள் என்னென்றனர்.
புரோகிதர் உனக்குப் பாசபந்தமிடக்கூறு
மந்திரமென உடனே மணப்பந்தரைவிட்டு
காடடைநது மறைந்து அநுமனை எண்
ணித் தவமியற்றி யநுமனால் ராமனருள்
பெற்று ஊரடைந்து பிக்ஷைசெய்து கான
டைந்திருக்கையில் சிவாஜி எனும் அரசன்
வேட்டைக்குவந்து இவரைத் தூரத்திற்
கண்டு இவரிடம் புலி கரடியாதிகள் நெரு
ங்கி யிருக்கக்கண்டு அணுக அஞ்சி வீட
டைந்து இவரருள்பெற எண்ணி உதயத்
தில் காட்டின்வழி வருகையில் ஒருவன்
கையில் கவிஎழுதிய இலைகொண்டு நதி
யில் விடவருகையில் அக்கவிகளி னருமை
கண்டு ஆனந்தங்கொண்டு எவலரால் நதி
யில்விட்ட ஏடுகளை வருவித்தெழுதித் தாச
ரைக்கண்டு அருள் பெற்றிருந்தனன். இவ்
வகை தாசரிருக்கையில் ஒருநாள் மாவலி
நகரடைந்து சிறுவருடன் கல்லெறிந்து
விளையாடி மூர்ச்சித்தவர்போலாக அவர்கள்
இவரை மண்ணில் புதைத்து ஏகினர்.
அரசன் ஆசாரியரைக்காண வனமெலாந்
தேடி மாவுலிநகரில் புதைந்திருந்தமை
கேட்டு வருதலைக்கண்ட ஊரார் அப்பிணத்
தைக் கொளுத்திவிட எண்ணித் தோண்டு
கையில் பேரோசையிட்டு எழுவதைக்
கண்டு ஓடினர். பின்னர் அரசன் ஆசாரி
யரைக்கண் டடிவணங்கி விடைபெற்ற
கன்றனன். பின் தன்னையடைந்த தத்து
என்னும் அம்பட்டனுக் கனுக்கிரகித்து
அவனுடன் சோளக்கொல்லையில் தானி
யத்தைப் பறித்துண்கையில் அடிபட்டு
அரசனையணுகுகையில் அரசன் ஆசாரி
யருக்குள்ள காயத்தின் வரலாறு தெரிந்
தாலன்றி யுயிர்வாழேனென்று தத்தனைக்
கேட்க அவன் கூறக்கேட்டுக் கொல்லைக்
குரியானைக் கட்டிக்கொண்டுவரக் கட்டளை
யிடக் கேட்ட தாசர் கொல்லைக் குரியவ
னுக்கு அரசனிடம் வெகுமதி தரச்செ
ய்து, அந்நிலத்திற்குத் திறைநீக்கி யனுப்
பித் தாம் காடடைந்து திரியம்பக மெய்
தித் தம்மாலிறந்த பக்ஷிக்கு மீண்டு முயிர்
தந்து, தம்மூரடைந்து தாய்தந்தையரை
வணங்கிக் காடடைந்து ஒருவனீர் உப
தேசித்த மந்திரம் வேண்டேனென்ன
அவன் வாயில் நீர்பெய்துமிழச் செய்ய
அது அக்கரவடிவாய் பாறைமீ திருக்கக்
கண்டு, பெருமாள் அழைத்துச்செல்லப்
பண்டரிபுரஞ்சென்று சேவித்து, டில்லி
பாதுஷாவின் மந்திரிவிட்ட பாணத்தைக்
கையிற்பிடித்து அக்காபாயிக் கருள்செய்து,
அம்பாஜியின் பேதமையகற்றி கிணற்றின்
மீதிருந்த கிளையை வெட்டியதில் வீழ்ந்து
மறைந்தானொருவனை வேறோரிடத்துக்
கிணற்றிலழைத்து, ஒரு காட்டில்சென்று
தாகத்தால் வருந்தியவர்க்கு ஒரு நதியை
வருவித்துத் தந்து, வேட்டையாடிக்

கொன்றபறவைகளை மீண்டும் உயிர்பெறச் செய்து, வேணுபாயிக்கருள்செய்து அவளுக்குத் தாய் தந்தையர் விஷங்கொடுத்துக் கொல்ல அவளை மீண்டும் எழுப்பிப் பயிணுபாயிக் கருள்புரிந்து, ஒரு கிராமத்திலிருந்த பெருமாளைக் கொண்டுவந்து மற்றோர் கிராமத்தில் பிரதிட்டித்து, பதினொரு ஊரில் அநுமப்பிரதிட்டை செய்வித்து அப்பதினொரிடத்தும் ஒருவரேயிருந்து பூசித்து, ஒளரங்கபாத்திற் கதிபனிவரைத் துருக்கராக்க எண்ணிப் பிடித்துச் சென்றகாலத்து அநுமனால் அவனையலைறவித்து நீங்கிக் கேசவசுவாமி யனுப்பிய தூதனுக்கு ஒரு நாளமுது கொடுத்து அவன் பல நாள் கடந்து செல்லுமளவும் அதையுதவச்செய்து கிருஷ்ணாஜி எனும் நாவிதராகிய பக்தரது திருநக்ஷத்திற்கு உணவு கொள்ளமறுத்த வேதியர்க்கு ராமதர்சனங் காட்டியவர்களை உணவுகொள்ளச் செய்து துகாராமுடனிருந்து பஜனைசெய்து பாடல் பெற்ற காளியால் கடிக்கன் அணியப் பெற்று ஒரு வர்த்தகனது கப்பல் மூழ்குந் தருணத்து இவரையெண்ண அக்கப்பலைக் காத்து ஒளரங்கஜீபு சேனைகளை அநுமனைக் கொண்டோட்டுவித்துச்சிவாஜி பரமபதமடைய அவன் குமரனைக்கொண்டு வேண்டியகிரியைகளைச் செய்வித்துத் தம் ஆதீனத்தில் தம் தயன் குமரரையிருத்திப் பரமபதமடைந்தவர்.

**சமவர்ணன்** — 1. விவசுவன் புத்திரியாகிய தபதியின் புருஷன்.

2. ரிக்ஷன் குமரன். இவன்தேவி தபசி, இவன் குமரன் குரு.

**சமவர்த்தனர்** — ஆங்கீரசருஷியின் புத்திரர். கங்காதீரத்தில் பித்தர்போல் உலகம் அறியாமல் இருந்தவர். இவர் மருத்துவின் வேண்டலால் யாகத்தை முடித்து இருக்கையில் இந்திரன் பொறாமை கொண்டு வச்சிரமேவ அதைத் தடுத்தனர்.

**சமவாயம்** — நீக்கமின்றி யிருப்பனவற்றின் சம்பந்தம் சமவாயம் சுரோத்திரத்திற்கும் சத்தத்திற்குமுள்ள சம்பந்தம்.

**சமவாயிகாரணம்** — எதன்கண் ஒற்றித்துக் காரியந்தோன்றும் அது சமவாயிகாரணம். இது ஒற்றுமைச் சம்பந்தம்.

**சமவேத சமவாயம்** — சோத்திரத்திற்கும் சத்தத்தின் தன்மைக்குமுள்ள சம்பந்தம். (சிவ-சித்.)

**சமற்காரன்** — ஒரு அரசன், இவன் வேட்டைமேற்சென்று கன்றுக்குப் பாலூட்டியிருந்த மானின்மீது அம்பேவி வெண்குட்டநோய் அடையச் சாபம்பெற்றுப் புண்ணியதீர்த்தயாடி அதனைப் போக்கிக் கொண்டவன். இவனுக்கு அம்பை, விருத்தையர் என இரண்டு குமாரியருளர்.

**சமனை** — சோடசகலைகளில் ஒன்றாகிய சத்தியின் கலை.

**சமனொளி** — இலங்கையினுள்ள ஒருமலை. இதில் புத்தபீடிகை இருக்கிறது (மணி).

**சமன்** — 1. தருமன் என்னும் மனுவின் புத்திரன். மனைவி அட்டாப்தி, சம்பிரீதி. தாய் சிரத்தை, சகோதரர் காமன், அரிஷன்.

2. திருதராட்டிரன் குமரன்.

**சமஸ்காரம்** — ஆவாஹனம், ஸ்தாபனம், சாந்நித்யம், நிரோதனம், அவகுண்டனம், தேனுமுத்ரைகாட்டல், பாததீர்த்தம் சமர்ப்பித்தல், ஆசமனம் சமர்ப்பித்தல், அர்க்கியதீர்த்தம் சமர்ப்பித்தல், புஷ்பஞ் சமர்ப்பித்தல் (ஆ-௬௦.)

**சமஸ்கிருதம்** — இது ஆரியபாஷை, இப்பாஷை சுத்தப்படுத்தப் பட்டதெனும் பொருளது. இது அநாதிபாஷை, எல்லா பாஷைகளுக்கும் முதற் பாஷையாகவுள்ளது இதில் வேத, ஆகம, புராண, ஸ்மிருதி, முதலியவையிருக்கின்றன இதற்கு முதல்வர் சிவபெருமான் இவர் வாயிலாக வேதபுராண இலக்கணங்கள் வெளிவந்தன. வெகு இனியபாஷை

**சமாதுவயம்** — ஆடு, கோழி, கடா, மல்லர், முதலியவற்றிற்குப் பந்தயம் வைத்து ஆடும் வெளிப்படைத்திருடு. (மநு.)

**சமாதி** — 1. ஒருவணிகன். சுரதன் என்னும் அரசனுக்கு நண்பன். மேதஸ் முனிவரிடத்தில் தேவிமந்திரம் பெற்று உபாசித்து அஞ்ஞானம் நீங்கினவன். (தேவி-பாகவதம்.)

2. வைதருப்ப செய்யுணெறியிலொன்று. இது, முக்கியப்பொருளின் வினையை, ஒப்புடைப் பொருண்மேற்றந்து புணர்த்துரைப்பது

3. இந்திரியமடக்கி ஒருவழியிருத்தல். இது ஐந்துவகை. தத்வலயசமாதி, சவிகற்பசமாதி, நிருவிகற்பசமாதி, சஞ்சாரசமாதி, ஆரூடசமாதி, மவுனசமாதி.

**சமாதியணி** — ஒருவன் செய்யத்தொடங்கிய காரியம் மற்றொரு காரணவுதவியால் எளி

தின்முடிவது. இதனை யெளிதின் முடி பணியென்பர் தமிழ் நூலார். (குவல.)

சமாநன் — 1. சண்முகசேனாவீரன்.

2. சிவகணத்தவரில் ஒருவன்.

சமாயிதவணி — முன்புதன்னால் முயலப் பட்ட கருமப்பயன் அத்தொழிலாலன்றிப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாகக் கூறிமுடிப் பது. (தண்டி.)

சமாவநுத்தன் — குருவினுஞ்ஞையால் பிரம சரியம் நீங்கிக் கிரகத்தனானவன்.

சமாவர்த்தனம் — பிரமசாரி விரதத்தைப் பூர்த்திசெய்தல். சித்திரை யொழிந்த மற்ற மாதங்களில் மாணாக்கனுக்குக் கிரியைக ளைச் செய்து பிரமசரிய விரதங்களை நீக் கிச் சர்வாங்கமும் க்ஷௌரஞ் செய்வித்துக் குண்டல முதலியவற்றால் அலங்கரிப் பித்துக் கண்ணாடி முதலியவற்றைப் பார் த்து வடக்கு முகமாகச் செல்லுகையில் பந்துக்களால் இல்லறம் வகிக்கும்பொருட் டுப் பிரார்த்தித்தல். (சை-பூ) பிதாவிடத் தினின்றாவது ஆசாரியனிடத்தி விருந் தாவது விதிப்படி வேதம் ஓதி முடித்தவ னை புத்திரனை அல்லது மாணாக்கனைப் பிதா அல்லது ஆசாரியன் புஷ்பசந்தனாதி களால் அலங்கரித்து உயர்ந்த ஆசனத்தில் உட்காருவித்துக் கோதானவிரதஞ் செய் வித்துப் பஞ்சாமிருதத்தினா லுபசரிப்பது. (மநு).

சமி — 1. உசிநான் குமரன்.

2. அவுரவர் குமரி, மந்தாரன் தேவி. மந்தார முனிவரைக் காண்க.

சமிகருப்பர் — அவுரவருக்கு ஒரு பெயர். இவர் சூக்கும உருக்கொண்டு சமிகருப் பத்தில் தங்கினதால் இப்பெயர் பெற்ற னர்.

சமிகருஷி — பைரவருஷியைக் காண்க.

சமிஞ்ஞை — சூரியன் தேவி.

சமிதாதானம் — பிரமசாரி வனத்தில் பரி சுத்தமான இடத்திற்குப்போய் விதிப்படி பலாசமுதலிய விறகு கொண்டுவந்து உலர் த்தி அக்னியில் ஓமஞ்செய்தல். (மநு.)

சமித்திரன் — (சூ.) பிரமிதி குமரன்.

சமித்து — எருக்கு, பலாசு, கருங்காலி, நாயு ருவி, அரசு, அத்தி, வன்னி, அறுகு, தர்ப்பை முதலிய.

சமீகுழன்வர் — சிருங்கி முனிவருக்குத் தந்தை. பரிச்சித்தால் செத்த பாம்பைச் சூட்டப்பெற்றவர். இவன் சீடன் கௌர முகன். (ஆதி.)

சமீகன் — 1. போஜவம்சத்து அரசருள் ஒரு வன்.

2. சுதாமினி கணவர். குமரர் சுமித்தி ரன், அருச்சுநன், பாணன்.

சமீசி — 1 காந்தருவப் பெண், நாரீதீர்த்தம் காண்க.

2. வந்தையைக் காண்க

சமுகன் — நாகன்.

சமுக்கை — விவசுவான் பாரி, விச்வகர்மன் பெண்.

சமுத்திரகன்னிகை — அகத்தியர் தேவி என் பர்.

சமுத்ரகுப்தன்—பாடலிபுரத்தில் இரண்டாவ தாகத்தோன்றிய சந்திரகுப்தன் குமரன். இவன் குமரன் சந்திரகுப்த விக்ரமாதித் தன். இவர்கள் குப்தவம்சத்தவர் எனக் கூறி யிருக்கிறார்கள் சாசனக்காரர். இவன் சேரவேந்தனான மாந்தரனை வென்றவன் எனப்படுகிறான். (கி. பி.) 375, வரை ஆட்சிபுரிந்தான். இவன்பேரன் குமார குப்தன் (கி பி.) (413 455.)

சமுத்திரசேநன் — பாரதவீரரில் ஒருவன். காலபுத்ரர் அம்சம்

சமுத்திரவிசயமகாராசன் — நேமிநாத சுவாமிகளுக்குத் தந்தை. தேவி சிவதேவி சைநர்

சமுத்திரவிலாசம் — இது கடிகைமுத்துப் புலவரால் சிலேஷையாகச் செய்யப்பட்ட நூல் இதற்குக் கழிக்கரைப் புலம்பல் எனவும் பெயர்.

சமுத்திரஸ்நானம் — இது புண்ணிய காலங் களில் புண்ணிய நதிபதியாகிய கடலில் ஸ்நானஞ்செய்வது. (உல-வ.)

சமுத்ரஜித்—சோழர் சரிதை காண்க.

சமுத்திரம் — இதுநதியை நோக்கி நீ வெள் ளங்கொண்டு பெருமரங்களையும் மலைகளை யும் புரட்டி வருகின்றாய் சிறுநீர் நொச்சி யைப்பிடுங்க உனக்கு வலியில்லாமைக்குக் காரணங்கூறுகவென எதுபகைக்குத் தலை வணங்குகிறதோ அது துன்பத்திருந்து நீங் குதலுமன்றி யென்னாலும் வெல்லமுடி யாததாம் என்றது. (பார-சாந்.)

சமுத்திரன் — சகரனுக்கு ஒருபெயர்.

சம்சத்தகர்—பிரதிஞ்ஞை செய்து யுத்தத்தி னின்று நீங்காதவர்.

சம்சப்தகர்—சத்தியவிரதன், சத்தியசேநன், சத்தியகர்மன், சத்தியவர்மன், முதலானோர்.

சம்சயசமை —சாதாரண தருமத்தைக் காட் டிச் சம்சயத்தை யுண்டுபண்ணுவது. (தரு

சம்சன் — இருஷபனுக்குச் சயந்தியிடம் உதித்த குமரன்.

சம்சிலேஷசக்தி — ஒரேவிதமான பதார்த்தத்திற் சிறு அணுக்களை யொன்றோடொன்று நெருங்கியொட்டி யிருக்கச்செய்யும் சக்தி. (Cohesion.)

சம்சுருதன்—மிதிலைநாட்டரசருள் ஒருவன்.

சம்பகன் — 1. சர்மணவதிக் கரையிலுள்ள ஒரு பட்டணத்து அரசன்.

2. ஒரு அசுரன்.

சம்பகை — ஒரு அப்சரசு மாண்டவியரால் சாபம் பெற்றவள்.

சம்பங்கோழி—இது, ஒரு நீர்வாழ்பறவை, இது கருநிறமுடைய தாய்க் கால்கள் நீண்டு தோலடிப்பாத முடையதாய்க் கழுத்து நீண்டு தலை சிறுத்துமுள்ளது. இது நீரில் முழுகி நெடுநேரம் உள்ளிருந்து ஆகாரத்தைத் தேடித்திரிந்து பின்னெழுந்து மூச்சுவிடும். இதற்குமீன் நீர்வாழ்ப்பூச்சிகள் உணவு கரையோரங்களிலுள்ள மரவாசி.

சம்பத்ஷஷ்டி — சுமங்கலிகள் புரட்டாசிமீ கிருஷ்ணபக்ஷம் ஷஷ்டியில் சம்பத்தை யெண்ணிப் பிரார்த்திருப்பது.

சம்பத்தி--ஈசானன்தேவி, இவளில்லாவிடம் வறுமை கொண்டிருக்கும்.

சம்பந்தசரணலயர் — 1. தருமபுரமடத்துப் பண்டாரசந்நிதிகளில் ஒருவர். கந்தபுராணச் சுருக்கம் செய்தவர்.

2 திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளுக்கு அம்மான். இவர் போதிமங்கைக்குச் செல்லும் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைத் தடுத்த புத்தநந்தி தலையில் இடி விழும்படிச்செய்து மீண்டும் பிள்ளையாருடன் வாதுக்குவந்த சாரிப்புத்தனை வாதில் வென்றவர். திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திருமுறை எழுதியவர்.

3. இவர் தருமபுரவாதீனத்துத் துறவு பூண்ட அடியவர். ஞானப்பிரகாச சுவாமிகளது மாணாக்கர். இவர் மைசூருக்குத் தேசயாத்திரையாகச் சென்றிருக்கையில் அரசரைக் காணச்செல்ல அரசர் இவரது கறுப்புநிறநோக்கி இவரை அண்டங்காக்கை போல்கின்றீர் எனச் சுவாமிகள், நீர் அண்டங் காக்கையால் அண்டங் காக்கை நீரேயென சமர்த்தித்தவர். இதனால் அரசன்களிப்புற்று இரத்தினங்கள் பரிசளிக்கக் குருவுக்கென்றும், இரண்டாமுறை அளிக்கச் சிவனுக்கென்றும், மூன்றுமுறை யளிக்க அடியவர்க்கென்றும் பெற்றவர். இவர் அரசர் வேண்டுகோளின்படிக்குக் கந்தபுராணச் சுருக்கம் பாடிமுடித்துத் திருச்செந்தூரில் அரசன் முன்பாக அரங்கேற்றினர்.

சம்பந்தமுனிவர் — திருவாரூர்ப் புராணம் பாடியவர்.

சம்பந்தமூர்த்தி சுவாமிகள் — திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைக் காண்க.

சம்பந்தம் — இது சிவாகமம் வந்தமுறை இது. அறுவகைப்படும் பரசம்பந்தம், சதாசிவர்க்கும் அணுசதாசிவர்க்கும், மஹாசம்பந்தம், அநந்த தேவர்க்கும் ஸ்ரீகண்டருக்கும், அந்தராளம் ஸ்ரீகண்டருக்கும் தேவர்க்கும், திவ்யம் தேவர்க்கும் இருடிகளுக்கும், திவ்யாதிவ்யம் இருடிகளுக்கும் மனிதர்களுக்கும், அதிவ்யம் குருக்களுக்கும் சீடனுக்கும் உள்ளனவாம்.

சம்பந்தாண்டான் — இவன் திருவண்ணாமலை தேவஸ்தான குருக்களும், வித்துவானும் ஆனவன். இவன் கர்வத்தால் தான் க்ஷௌரஞ் செய்துகொள்ளும் செயலைப் பாடலாகக் காளமேகரைப் பாடச் சொல்ல அவர் "மன்னுதிருவண்ணாமலைச்சம்பந்தாண்டாற்கு, பன்னுதலைச்சவரம் பண்ணுவதேன் — மின்னின், இளைத்த இடை மாதரிவன் குடுமிபற்றி, வளைத்திழுத்துக்குட் டாமலுக்கு" எனப்பாடல் பெற்றவன். இப்பெயர்கொண்ட பௌத்தன் ஒருவன் அருணகிரியார்காலத்துத் திருவண்ணாமலையில் இருந்ததாகவும், கூறுகின்றனர். அருணகிரியாரைக்காண்க. இச்செய்யு ளிரட்டையர் பாடியதாகவும் கூறுவர்.

சம்பட்டை — சுபலராஜனுடைய மகள், திருதராஷ்டிரன் பாரியையில் ஒருத்தி. (பா. ஆதி.)

சம்பரன் — 1. ஒரு அசுரன். இவன் இந்திரனுடன் யுத்தஞ் செய்யத் தன்னிடமிருந்த தர்மவியாளகடர் என்பவர்களை அனுப்ப அவர்கள் யுத்தத்திற்குச் சென்று மீண்டனர். பின் வீமபாசகர் என்பவர்களை அனுப்ப அவர்கள் தேவரைத் துரத்தி மீண்டனர். சம்பாசுரனைக் காண்க.

2 திதி புத்திரனாகிய அசுரன், இந்திரனால் கொல்லப்பட்டவன் என்றும், மன்மதனால் கொல்லப்பட்டவன் என்றும் கூறியிருக்கிறது.

3. யமதூதரில் ஒருவன்.

4. இவன், ஒருவேதியன் ஒழுக்கத்தால் மறுபிறப்பில் சிபிச்சக்ரவர்த்தியாயினன் (திருமுட்டபுராணம்).

5. ஒரு அசுரன் வைஜயந்தம் எனும் பட்டணத்தை யாண்டவன் திமியென்கிற மீனைக் கொடியாக்கொண்டவன் மகாமாயாவிதேவர்களைத் துன்பஞ் செய்தவன் இவனை யிந்திரன் வேண்டுகோளால் கைகேயிசாரத்யம் செய்யத் தசரதர் வென்றார் (இரா).

சம்பாரி — மன்மதன், பிரத்துய்மனனைக் காண்க.

சம்பாஜன்—இரட்டைப் புலவர்களை விகடகவிபாட ஏவியவன். "எறிக்கும் புகழ்க்கச்சி" என்னுஞ்செய்யுள் இவன்பொருட்டுப் பாடப்பட்டது.

சம்பவதீர்த்தங்கரர் — இவர் குருநாட்டில் அத்தினபுரத்தில் அரசுசெய்து கொண்டிருந்த இக்ஷ்வாகுவம்சத்துத் த்ருடராசருக்கு, அவர் மனைவி சுஷேஷணை யிடம் கிருதயுகத்தில் கார்த்திகைமீ பௌர்ணமி திதி, மிருகசீருஷ நக்ஷத்திரத்தில் பிறந்தவர். இவர் உன்னதம் (400) வில், சுவர்ண வர்ணம், ஆயுஷ்யம், (௬0) லக்ஷம் பூர்வம்.

சம்யக்ஞானம்—ஜீவ, அஜீவ, புண்ய, பாவ, ஆஸ்வர, பந்த, ஸம்வர, நிர்ஜர, மோக்ஷங்களென்னும் நவபதார்த்த ஸ்வரூபங்களையுணர்தல் இவற்றின் தன்மைகளைத் தெளிதலே சம்யக்தரிசனம், அதனைத்தரித்தலே சம்யக்சாரித்திரம். (மேருமந்தரம்.)

சம்பளகிராமம் — கல்கியாகிய விஷ்ணுமூர்த்தி அவதாரம் செய்யப்போகும் இடம். (பார-வன).

சம்பவாச்வன் — பரிகிணைச்வனுக்கு ஒரு பெயர்.

சம்பன்—1. (சூ.) அரிதன் குமரன். இவனுண்டது சம்பாபுரி. சுதேவன் தந்தை.

2. பிருதலாக்ஷன் குமரன்.

3. இந்திரனாற்கொல்லப்பட்டஅசுரன்.

சம்பாசுரன்—கம்சனுக்கு நண்பன். கிருஷ்ணன் குமரனாகிய பிரத்துய்மனனைக் கடலிலெறிந்து அவனால் கொல்லப்பட்டவன். பிரத்துய்மனனைக் காண்க.

சம்பாதி—1. அருணன் புத்திரன். சடாயு தமயன். இவன் தன் தம்பியுடன்கூடித் தம் தந்தையைக் காணச்செல்லுகையில் சூரியன் கோபித்ததால் உஷ்ணம் பொறுக்காமல் சடாயு வருந்த அவனைக்காக்க இவன் அவனுக்குமேல் பறந்து சிறகை விரித்ததால் இறகு தீந்து மயேந்திரமலையில் விழுந்தனன். இதையறிந்த முனிவர், இவனுக்கு இராமதூதர் உன்னெதிரில் இராமஸ்மரணை செய்யின் இறகு வளருமென அவ்வகை வளரப்பெற்றவன். சடாயு இறந்த செய்தியை அனுமனால் கேள்வியுற்று விசனம் அடைந்தவன். தான் இறகு தீந்ததைநோக்கி இறக்க எண்ணுகையில் லோகசாரங்கமுனிவரால் தேறியவன். அநுமன் முதலிய வானரர்க்குச் சீதையை எடுத்துச்சென்ற இராவணன் செய்திகூறினவன். தாய்சேதி அல்லதுசேநி.

சம்பாதித்தன் — 1. சூரியன், தனக்குற்ற குட்டநோயைச் சம்புவைப் பூசித்துத் தீர்த்துக்கொண்டவன்

2. திரேதாயுகத்தில் சமூகாசலத்தில் பூசித்துப் பேறடைந்த முனிவர்.

3. வானரவீரன்.

4. விபீஷணன் மந்திரிகளில் ஒருவன்.

சம்பாதிவனம் — சம்பாதி சிறகு கரிந்து விழுந்த வனம். காவிரிப்பூம்பட்டினத்து அருகிலுள்ளது (மணிமேகலை).

சம்பாநகரம்—அங்கதேசத்து இராஜதானி. (It was the ancient Capital of Anga.)

சம்பாபதி—1. சம்புத்தீவின் அதிதேவதை; சம்புமரத்தின் கீழிருந்து நோற்றமையின் இப்பெயர் பெற்றனள். கோதமைக்குச் சக்ரவாளத்தோற்றம் காட்டிப் புத்ரசோகம் போக்கினவள். இவளுடைய கோயில் குச்சரக்குடிகை யெனப்படும். இவளிருந்த பட்டணம் சம்பாபதி அதுவே காவிரிப்பூம்பட்டினம் (மணிமேகலை).

2. இது வங்காள நாட்டின் பழைய இராஜதானி இப்பெயரைத் தமிழர்தாம் தென்னாட்டிற் குடியேறினபின் காவிரிப்பூம் பட்டினத்திற் கிட்டனர்.

சம்பாபுரி—சம்பனுண்ட பட்டணம்.

சம்பாரி—இந்திரன்.

சம்பிரமன்—அரிகேசனைக் காண்க.

சம்பிராட்—சித்திராதனுக்கு ஊறணையிடம் உதித்தகுமரன்,தேவிஉத்கலை,குமரன்மரீசி

சம்பிராமசம்பவம் — ஒரு தீர்த்தம்.

சம்பிரீதி — சமன் தேவி.

சம்பிரன் — சிவபிரானால் அரிகேசனுக்குக் கொடுக்கப்பட்ட அடிமைகளில் ஒருவன.

சம்பு—1. சிவமூர்த்தியின் திருநாமங்களில் ஒன்று.

2. இமயபர்வதத்தில் உற்பத்தியாகும் தீர்த்தம்.

3. அம்பரீஷன் குமரன்.

சம்புகன்—இராமர் அரசாட்சியில் சைவல கிரியிலிருந்த ஒரு மாத்தில் தலைகீழாய்த் தேகத்துடன் சுவர்க்கம் அடையத் தவம் புரிந்த சூத்திரன். இது மரபு வழுப்பற்றி இராமமூர்த்தி இவனைக் கொலைபுரியச் சுவர்க்கமடைந்தவன். இவனுக்குச் சம்பு வன் எனவும் பெயர்.

சம்புதத்தன் — துவாபரயுகத்தில் கழுகுருக் கொண்டு வேதகிரியில் பூசித்த இருடி.

சம்புகுமாரன்—வித்யுசன் குமரன். இவன் தாய் சூர்ப்பநகை.

சம்புகேசன் — நரியுருக்கொண்ட அசுரன். இவன் காசியில் சிவலிங்கம் தாபித்துப் பூசித்து இஷ்டசித்தி அடைந்தனன்.

சம்புகேசுரம்—1. ஒரு சிவஸ்தலம். திருச் சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ளது. இது பஞ்சபூதத் தலங்களில் அப்புத்தலம். சம்பு முனிவரைக் காண்க.

2. சம்புகேசனால் காசியில் தாபிக்கப் பட்ட இலிங்கமூர்த்தி.

சம்புதாசர்—இவர் ஒரு குடியானவர், அரி பக்தி விடாதவராய்த் தம் இல்லிடையிருந்து இல்லற நடத்திவருநாட்களில் இவர் உழுத எருதிரண்டையும் கள்ளரிரவில் அவிழ்த்துச் செல்லப் பெருமாள், தாசர் விடியின் துன்புறுவார் என்றறிந்து விடியுமுன் அவற்றைப் பழைய இடத்தில் கொணர்ந்து கட்டிவிடுவர். இவ்வாறு மீண்டுமீண்டும் செய்ததுகண்ட கள்ளர், பெருமாளது பக்தரென அறிந்து அவரிடம் வந்து தாங்கள் செய்த தீமைகளைக்கூறி யபராதக்ஷமை வேண்டத்தாசர் பெருமாள் தமக்காக ஏவல்செய்ததை யெண்ணி வருந்தப் பெருமாள் தரிசனந்தந்து கருணை செய்யப் பெற்றவர்.

சம்புத்தீவு—1. நான்கு மகாதீவினுள் ஒன்று இது நாவலந்தீவெனவும் வழங்கப்படும். (மணிமேகலை.)

2. கலியுகத்தில் வேதகிரியில் கழுகு உருக்கொண்டு பூசித்த இருடி.

3. குசிகனுக்குப் பௌரியிடம் பிறந்த குமரன்.

4. பத்தாம்மன்வந்தரத்து இந்திரன்.

சம்புபத்தர் — ஒரு இருடி.

சம்புபாதாசிருதர் — மாணிக்கவாசக சுவாமிகளுக்குப் பிதா. இவர் மனைவியார் சிவ ஞானவதியார்.

சம்புமாலி — பிரகத்தன் குமரன். இராவணன் கட்டளையால் அநுமனைப் பிடிக்க வந்து அவனால் இறந்த அரக்கன்.

சம்புமுனிவர் — இவர் காவிரிக்கரையில் தவம் செய்கையில் ஒரு சம்புபலம் விழுந்தது: அதை முனிவர் சிவமூர்த்திக்கு நிவேதித்தனர். சிவமூர்த்தி அமுதுசெய்த அந்தப் பழக்கொட்டையை முனிவர் உண்ண முனிவர் வயிற்றில் சம்புவிருக்ஷம் உண்டாயிற்று. முனிவர் அந்த மாத்தடியில் சிவமூர்த்தியை எழுந்தருளியிருக்க வேண்டினர். ஆதலால் சம்புகேசுரம் உண்டாயிற்று.

சம்புவன் - சம்புகனைக் காண்க.

சம்பூதி—1 வைராசன் தேவி.

2. மருசியின் தேவி, தக்ஷன் பெண், தாய், பிரசூதி.

3. (பிர.) செயத்திரன் தேவி.

4 சுமனசுக்குப் பெயர்.

5. திரிதன்வனுக்கு ஒரு பெயர்.

சம்பை —ஒரு நகரம். சம்பனுண்டாக்கியது.

சம்மியமனி—யமபுரியைக் காண்க.

சம்மியன் — அக்நி, இவன் வியாழனுக்குச் சத்தியையிடம் பிறந்தவன். இவன் யாகங்களில் முதல் அவிர்ப்பாகத்தில் ஆஜ்யம் கொள்வோன்.

சம்மேளிநகைவன் — இவன் பதிபசுபாசம் அநாதி என்பன். சிவன் அநாதிமுத்தன். பசுஅநாதி எனவும் சிவபூசையால் பாசம் நீங்க முத்தி எனவுங் கூறுவன் (தத்துவ நிஜாநு)

சம்யாசர்—செல்வம் துன்பத்திற்குக் காரணமெனக்கூறிய ருஷி. (பார-சாந்.)

சம்யாதி—1. நகுஷன் குமரன்.

2. சர்யாதிக்கு ஒருபெயர். தேவி வாராங்கி.

சம்யுக்தை — கன்னோசி அரசனாகிய ஜயச்சந்திரன் புதல்வி. பிருதுவி அரசனைக் காண்க.

சம்யூ—பிருகஸ்பதியின் புத்திரர்கள் (௬)ல் ஒருவன் பாரியை சத்தியவதி. புத்திரன் பரதன். (பா-வன.)

சம்ராட் — இராசசூயயாகஞ்செய்து சாம்பிராஜ்ய பட்டாபிஷேகம் அடைந்த அரசன்.

சம்வச்சரம் — அயன, ருது, மாத, வார அவயவங்களுடன் கூடிய அவயவி சம்வச்சரம் எனப்படும். அது பன்னிரண்டு மாதங்களுடன் கூடியது. இவ்வருஷம்

சாந்தரமானம் ஸௌரமானம், சாவனம் என மூவிதப்படும். இதில் சாந்திரமான வருஷம், சித்திரைமாத சுக்ல பிரதமை முதல் பங்குனிமாதப் பௌர்ணமிவரையில் கணிப்பதாம் சௌரம் சித்திரைமுதல் பங்குனி கடைசி வரையில் கணிப்பது. சாவனம் - முந்நூற்று முப்பத்தாறு நாட்கள் கொண்டது.

சம்வத்தன் — ஒரு அசுரன், இவன் தன் மனைவியுடன் மானுருக்கொண்டு புணர்ந்திருக்கையில் சூரியவம்சத்துச் சவுதாசன் என்பவன் பேட்டையெய்ய இவன் தப்பித்துக்கொண்டு ஓடிப் பழிக்குப்பழிவாங்க வசிட்டரைப்போல் உருத்தாங்கி நரமாமிசமிடக் கேட்டு மறைய அரசன் உண்மையாகிய வசிட்டர் வர அவருக்கு நரமாமிசமிட்டுச் சாபம்பெறச் செய்தவன் (வேதாரண்யபுராணம்)

சம்வர்ணன் — 1. அஜமீடன் குமாருள் ஒருவன். இவன் சூரியன் மகளாகிய தபதியை மணந்து குருவைப் பெற்றவன்.

2. இருக்ஷன் புத்திரன்.

சம்வர்ணே — தபதியின் புருஷன். சூரியனுக்கு மருகன்.

சம்வர்த்தகன் — நாகன்.

சம்வர்த்தனர் — 1. ஆங்கிரஸபுத்திரர்இவரால் யாகஞ்செய்விக்க மருத்து இவரை யெவ்வகைக் காண்பதென, நாரதர் நீ காசிதேசத்து வாசலிலிருந்து ஒரு பிணத்தை வாயில் வைத்திருயார் பிணத்தைக்கண்டு திரும்புகிறாரோ அவரைச் சம்வர்த்தனர் என்று அறிந்துகொள் என்றும் அவர் என்னைக் கேட்டால் நான் நெருப்பில் வீழ்ந்து மரித்தார் என்றுகூறுக என்றனர். அவ்வகை அரசன்புரிந்து இவரைப் பின்தொடர்ந்து ஓராலடியிற்பணிய இவர் அரசன்மீது எச்சில் முதலிய உமிழ்ந்தும நீங்காமைகண்டு அரசனை உண்மை கூறக்கேட்டு யாகத்திற்குடம்பட்டவர். (பார-அச்வ.)

2. ஒரு அரசன். இவன் பாரி உபதிஷ்டா. இவன் தன்தேவியுடன் தவம்புரிந்து பேறுபெற்றவன்.

3. காசிதரிசித்து முத்திபெற்ற ஒரு யாத்திரிகன்.

சம்வர்த்தன் — 1 ஒரு வேதியன், இவன் குமரன் கன்மாடன். இக்கன்மாடன் தவத்தால் வயிற்றுவலி நீங்கினன். (பாண்டிக்கொடிமுடி புராணம்.)

2. வியாழனுக்குச் சகோதரன்.

சம்ஸ்தம்பினி — ஒரு மந்திரம் இது சம்வர்த்தனரால் இந்திரன் வச்ராயுதம் ஸ்தம்பிக்கச்செய்த மந்திரம். (பார-அச்)

சயகுமாரன் — அத்தினபுரத்து அரசனுகிய சைநன். பரிமித பரிக்ரஹவிரத அநுஷ்டானத்தை மணிசூடன் எனும் தேவன் சோதிக்கப் பெண்ணுருக் கொண்டுவந்து என்னை அணையாவிடின் இறப்பேன் என உடன்படானுயினன். தேவன் மகிழ்ந்து பாற்கடனீரால்அபிஷேகிக்கப்பெற்றவன்.

சயகீசவ்யர் — ஒரு இருடி இவர்தம் மாணுக்கன் புரிந்ததீமையால் அவனைக் காசியை விட்டுநீக்க, ஒரு காட்டில் தவம்புரிந்தனன். இக்காட்டில் காசியிலிருந்து பொதிகைநோக்கிவரும் அகத்தியர் காசிகாசி என்று கூறிவருஞ்சத்தம் தவஞ்செய்வோன் காதில்விழுந்தது. அதனுல் இவன் முத்தி அடைந்தனன் (காசிரகசியம்).

சயங்கோண்டார் — கலிங்கத்துப் பரணி பாடியபுலவர். இவர் சோழவளநாட்டில் நன்னிலத்தை யடுத்த தீபங்குடியில் பிறந்தவர் இவர் சைனர் என்பர். இவரை அபயன் என்னுஞ் சோழன் நுமதூர் யாது என்றபோது இவர், "செய்யும் வினையுமிருளுண்பதுவுந் தேனுநறவு மூனுங்களவும், பொய்யுங்கொலையு மறவுந்தவிரப் பொய் தீரற நூல் செய்தார் தமதூர், கையு முகமு மிதழும் விழியுங் காலுநிறமும் போலுங்கமலங், கொய்யுமடவார் விழி வாயதரங்கோபங் கமழுந்தீபங் குடியே" என்பதால் இவர் ஊர் தீபங்குடி என அறிந்தான். இது, திண்டிவனத்திற் கருகிலுள்ளவூர். இவர் பரணியிற் சிவமூர்த்தியைத் துதித்திருக்கிறபடியால் சைவர் என்பர். இதனை "புயல்வண்ணன் புனல் வார்க்க" எனுஞ் செய்யுளில் "மலைமகளைப் புணர்ந்தவனை" என்பதால் அறிக. இவர் காலம் (800) வருஷங்களிருக்கலாம். இவர் பாடியவை கலிங்கத்துப்பரணி தீபங்குடி பத்து. (கலிங்கத்துப்பரணி).

சயசிம்மன் — கோளத்தாசன் [இவர்மன் அல்லது குலசேகர சங்கிராமதீரன் (1188) இல் பிறந்து (33) வயதில் மணந்து சிங்காசனமடைந்து வீரபாண்டியனை வென்று. (சகம் 1234) இல், பாண்டிய சிங்காசனமெறினன். (S, I, I.)

சயசூரன் — திருதராட்டிரன்.

சயசேநன் — 1. மலயத்துவசன் குமரன்.

2. பவகிரிபுரத்து அரசன். (சூளா).

**சயச்சந்திரன்** — கன்னோசி நாட்டரசன்.
பிருதுவிராஜனைக் காண்க.

**சயதுங்கன்**—கலிங்கநாட்டரசன், மரீசி ஆச்
சிரமம் அடைந்து அவர் சிவபூசைக்கு
வைத்திருந்த மரங்களிலிருந்த பழங்களைக்
கவர்ந்து அவரால் செல்வமும் கையும்
இழந்து மீண்டும் அவ்விரண்டை-யும் அவ
ராற்பெற்றவன்.

**சயதேவர்**—இவர் வியாசாது அவதாரமாய்
ஜகந்நாதத்திற் கருகில் பில்வவூரில் பிறந்து
தாமே சகலகலைகளையுங்கற்றுக் கோவிந்த
கீதமாய் இதிகாசாதிகளைச்செய்து அனை
வரையும் அழைத்து இந்நூல்ஜயதேவர்
செய்தநூலை யொக்குமாதலினனை வரு
மிதனையோதுக என்னலும் அவர்களனை
வரும் அரசனுடன்கூடிப் பெருமாள்
கோவிலைச் சேர்ந்து இன்றிரவு திருமால்
முன்னிருவர் நூலையும் வைப்போம், பெரு
மாளுக் குவப்புற்றது எதிரிலிருக்க மற்
றது புறத்ததாக வென்று அந்நூல்களி
ரண்டையும் பெருமாளுக் கெதிரிலிட்டுக்
கதவை முத்திரையிட்டு வந்துமறு நாளு
தயத்தில் ஜயதேவர் செய்தநூலொன்று
மெதிரிலிருக்க மற்ற நூல் புறம்பாயது
கண்டு அரசன்வருந்தி நீ நிஷ்பக்ஷபா
தியாக நான்செய்த நூலைப் புறத்திட்டு
ஜயதேவர்செய்த நூலை யுவந்தனையாத
லால் என்னுயிரோடு என் செருக்கினை
யொழிப்பனென்று கூறத் திருமால் திரு
மகளுடன் தரிசனந்தந்து வருந்தேலெ
ன்றுகூறி அரசன்செய்த சுலோகத்திற்
சிலதைக் குற்றநீக்கிச் சயதேவர் நூலி
லெழுதினரிதனால் அரசன் விசனந்தீர்ந்
திருந்தனன். இதுநிற்க ஜகந்நாதத்திலொரு
வேதியனிடத்தில் பதுமாவதி யென்று
பெண்பிறந்து வளர்ந்துவருகையில் அனை
வரும்வந்து அவள் தந்தையைப் பெண்
ணைக் கேட்க அவள் தந்தை இவளைச் சக
நாதனுக்கே கொடுப்பதொழிந்து வேறு
யாவர்க்கும் கொடுக்கேனென் றிருக்கை
கையில் திருமால் இவன் கனவிற்
றோன்றி யெனையெண்ணேல் ஜயதேவ
னுக்கு உன்குமரியை மணஞ்செய்கவென,
விழித்துக் கட்டளைப்படி திருமணமுடித்
தனன். இவ்விருவரும் மனையறம் நிகழ்
த்துநாட்களில் வணிகனொருவ னிவரை
யடுத்து இவர்க்குப் பணிசெய்து ஒருநாள்
தமது வீட்டிற்கழைக்க ஜயதேவர் சம்ம
தித்து அவனில்லமேகி யொருமாதமிரு
ந்துநாம் ஜகந்நாதம் போகவேண்டுமென்று
கூற வணிகன் இவர் தக்ஷிணைபெறாரெ
ன்று தேரிற்பொன் முதலிய இட்டுவைத்
துச்குருபத்தினிக்கு ஆடைமுதலியபணி
களளித்து வழிவிட ஆள்கூட்டித் தே
ரேற்றி யனுப்பினன். வந்த ஆள் சிறிது
தூரம்வந்து விடைபெற்றுப்போகச் சய
தேவரும் பத்தினியாரும் செல்கையில்
கள்ளர்வந்து மறிக்க, ஜயதேவர் நீங்கள்
விரும்பியது தேரிலிருக்கின்ற தெனத்
தேரைவிட்டிழிந்து காலானடந்து செல்
கையில் இவர் வணிகனுக்குச் செய்தி
யறிவிக்கவும், கூடுமென வெண்ணிய கள்
ளர் இவரது கைகால்களைத் தறித்துப்
புதரிலிட்டுச் சென்றனர். ஜயதேவர் புதரி
லிருந்து நாராயணபஜனைசெய்து தேகத்
தை மதிக்காது ஞானானந்தத் திருக்கையில்
கிரவுஞ்ச வேந்தன் வேட்டைக்கு வந்து
இருள்சூழ ஆண்டுத் தங்கினன். அக்காட்
டில் இருளில் சோதிமயமாகயிவர் பிர
காசித்ததறிந்து நெருங்கி யிவரைப் பல்ல
க்கிலிட்டுப் பதிக்குச் சென்று இவரைச்
சிங்காசனத்திருத்தி யன்னடிக்கு வேல்
செய்யுமாறு அருளல் வேண்டுமென்றலும்
ஜயதேவர் பாகவதரை வணங்குக என்ன
அரசன் அவரை நானறிந்து வணங்க அறி
குறி யென்னென ஜயதேவர் பாகவத
ரின் அடையாளங்களைத் தெரிவிக்க அரச
னவ்வாறு பாகவதரை வணங்கிவருநாட்
களில், முன்னர் ஜயதேவரைக் கால் கை
யறுத்த கள்வர் பாகவதவேடம்பூண்டு அர
சன் பாகவதர்க்குத் தானமளிக்குமிடம்
புகுந்து சிங்காதனத்தக் கால் கை யறுப்
புண்டு ஞானபாவனை செய்திருக்கும் ஜய
தேவரைக் கண்டு திடுக்கிட்டுநிற்க ஜய
தேவர் அவர்களை யழைத்துத் தேற்றி
யிவர்களுக்கு வேண்டியவை கொடுக்கவெ
ன்ன ஏவலாளர் அரசர்க்குக் கூற அவ்
வாறே வேண்டியபளித் திருக்கச்செய்த
னன். இவ்வாறிவர்களிருக்கையில் மனம்
பொருதவர்களாய் நாங்கள் எம்பதிக்கு
செல்லவேண்டுமென அவர்களுக்கு வேண்
டுவதந்து உடன்சென்று என்னிடமிருக்க
வென வஞ்சகர் இருதேர்நிறைந்தபொருள்
வேண்டுமென அரசன் அவ்வகை யீந்து
தேரேற்றியனுப்ப இவர்கள் ஜயதேவரி
டஞ்சென்று விடைபெற்றுச் செல்கை
யில் இரதம் ஓட்டுவோர் அத்திருடரை
நோக்கி எங்களரசன் பதியில்வந்த அநே

கரில் ஜயதேவ ருங்களுக்கு அதிகமாய் மரியாதையுடன் கொடுக்கச்செய்ததென்னென்று வினவத் திருடர் கூறுவார். துஷ்டகருமாவெனு மரசன் நண்பரிவர், இவர் அரசன்பொருளை மிகுதியும் செலவிட்டு அரசனுக்கு நஷ்டத்தை விளைத்ததால் அரசன் கோபித்து இவரைச் சிரச்சேதஞ் செய்யும்படி கட்டளையிட நாங்களவ்வரசன் கட்டளைப்படி செய்யக் காட்டிற்கொண்டுவந்து கால் கைகளைமாத்திரம் போக்கிப் புதரிலிட்டுத் தவசிகளாய் அரசனைநோக்காது இப்போதுங்கள் நாடு சேர்ந்தோம், ஜயதேவர் எங்களுக்கு இவ்வாறு சம்மானஞ்செய்தனர் என்றனர். இந்தப் பொய்வார்த்தையைப் பொறாமற் பூமிவெடிக்கத் திருடர் இரதத்துடனதில் ஆழ்ந்திறந்தனர். இரதம்விட்டோர் அயவிற்குதித்துப் பிழைத்துத் தம்பதிபுகுந்து ஜயதேவர்க்கு நடந்ததைக்கூற ஜயதேவர் திருமாலைநோக்கித் துதித்துக் கஜேந்திரனுக்குப் பகையாகிய முதலைக்கும், உன் பகையாகிய கஞ்சனுக்கும் சொர்க்கமளித்தீர் என் பகைவர்க்கும் வானுலகளிக்கப் போகாதோ வென விசனமுறுகையில் பெருமாள் தரிசனந்தந்து ஜயதேவரைத் தழுவிக்கொள்ள ஜயதேவர்க்குக் கைகால்கள் வளர்ந்தன. கள்வரிருவரும் விமானமேறிப் பொன்னுலகடைந்தனர். பெருமாள் உன்னன்பிற்குக் களித்தனனெனக் கூறி மறைந்தனர். அரசன் ஜெயதேவரையணுகிக் கைகால் வளர்ந்ததைச் சொல்லவேண்டுமென ஜயதேவர் உள்ளபடி கூறக்கேட்டு ஜயதேவரையென்றுந் தம்பதியிலிருக்கவேண்டிப் பத்மாவதிக்குச் சிவிகையனுப்பி வருவித்துத் தன் தேவியைப் பணிசெய்திருக்கும்படி கட்டளையிட்டிருக்கையில் ஒருநாள் தூதனொருவன் அரசியினுடன் பிறந்தான் சுஜரணன் என்பவன் இறந்தான் என அரசன்தேவியும் சுஜரணன் தேவிமுதலோர் விசனப்படச் சுஜரணன்தேவி, உடன் கட்டையேறத் துணிகையில் பொன்னாசனத்திருந்த பதுமாவதியை யரசிநோக்கிக் கூறப் பதுமாவதி எந்தப் பிறவியிலும் கணவனுடனே யிறத்தல்வேண்டும். தாமதித் திவ்வாறிருத்தல் கூடாது இவள் தாமதித்திருத்தற்குக் காரணமென்னெனக்குக் கூறுகவென அரசன்தேவி சுஜரணன்தேவியை யனுப்பிவிட்டுப் பதுமாவதிகூறியதை யறிவோமென்று மந்திரியைநோக்கி நீ யரசனுடன், ஜயதேவர் வேட்டைக்குச்சென்று புலிகொல்ல இறந்தனரென்று பத்மாவதி முன் கூறுகவென அவ்வாறு மந்திரி விளையாட்டாகக் கூறக்கேட்ட பத்மாவதி, யிது மெய்யோவென அரசியைக்கேட்க அவ்வாறாமென்னப் பத்மாவதியுடனே யுயிர்விட்டனள். அரசி திடுக்கிட்டு விளையாட்டு வினையாய் முடிந்ததேயென அரசன்முன் அடுத்ததுகூற மனைவியைக் கொல்வோமெனிற் பெண்கொலையாகுமென வெண்ணி யிது தன்னால் விளைந்ததென அஞ்சி ஜயதேவர்முன் நடந்ததைக் கூறித் தன்னுயிர் நீத்தற்குத் தீக்குழியும் வருத்தனன். அதையுணர்ந்த ஜயதேவர் அது உன்னால் நடந்ததன்றெனத்தன் மனைவியிடம்போய் முன் தாம்பாடிய அஷ்டபதி முதலியவைகளைப்பாடத் திருமால் தரிசனந்தந்து பத்மாவதியையெழச் செய்ய அன்பர்கள் தரிசித்து ஆனந்தங்கொண்டனர்.

சயத்சேநர் — 1. ஒரு விஷ்ணுபடர்.

2. நகுலன் அஞ்ஞாதவாசத்தில் வைத்துக்கொண்ட பெயர்.

3. சார்வபௌமன் குமரன்.

சயத்திரதன் — 1. பிரதிட்சு குமரன்.

2. புருகன்மகஸ் குமரன்.

3. சயித்திரனுக்கு மாமன்.

4. விசுவசித்தின் தந்தை.

5. திதிக்ஷுவின் குமரன்.

6. சிந்துதேசாதிபதி இவனே சயிந்தவன், இவன் சிவப்பிரசாதி. அபிமன்யுவைக் கொல்லக் காரணமாய் இருந்தவன். தேவி துச்சளை, இவனுக்குப் பன்றிக்கொடி. தந்தை விருத்தக்ஷத்திரனைக் காண்க. பாண்டவர் காமியவனத்திலிருக்கையில் திரௌபதியைக்கண்டு மயல்கொண்டு வீமார்ச்சுநரால் அவமானப்பட்டவன். இவன் சிவமூர்த்தியை எண்ணித் தவம் இயற்றி அருச்சுநன் ஒழிந்த நால்வரை ஒரு நாளில் ஜயிக்க வரம்பெற்றுப் பாரதயுத்தத்தில் (௧௩) நாள் பதுமயூகம் வளைத்து அருச்சுநன் ஒழிந்தவர்களைச் செயித்தவன்.

சயத்பலன் — சகதேவன் அஞ்ஞாதவாசத்தில் வைத்துக்கொண்ட மறைபெயர்.

சயத்வசன் — 1. தாளசங்கனுக்குத் தந்தை, கார்த்தவீரியனுக்குக் குமரன்.

2. சந்திரவம்சத்து அரசருள் ஒருவன். விஷ்ணுபக்தன். இவனுக்கு விசுவாமித்தி

ரர் ஒருயாகம் செய்வித்தனர். விதேகன் என்னும் அசுரனைக் கொன்றவன்.

**சயந்தபுரம்** — நிமி நிருமித்த பட்டணம். கௌதமாச்சிரமத்திற்கு அடுத்தது.

**சயந்தம்**—1. ஒரு பட்டணம்.

2. ஒரு நாடகத் தமிழ்நூல்.

**சயந்தன்**—1. இந்திரன் குமரன். தாய் சசி. இவன் சூரபன்மன் சேனைக்குப் பயந்து குயிலாய் ஒடிய தந்தையைக்காணாது வருந்தி நாரதரால் தேறினவன். பானுகோபனுடன் யுத்தஞ்செய்து ஆற்றாது களைத்து அயிராவதத்தின்மீது விழுந்து எழுந்து அவனால் சிறையிலடைபட்டவன். சிறையிலிருக்கையில் குமாரக்கடவுளைக் கனவிற்கண்டு தேறினவன். உருப்பசியைக் கண்டு மோகித்ததால் அகத்தியால் சபிக்கப்பட்டவன். பாரிஜாதாபஹரணத்தில் பிரத்தியும்நனுடன் யுத்தஞ்செய்தவன். தேவர் இராவணனுடன் யுத்தஞ்செய்கையில் இந்திரசித் இவனைக்கட்ட யத்தனித்தது கண்டு பௌலோமன் இவனைத் தூக்கிக் கடலில் ஒளிக்க அவ்விடம் இருந்தவன். இவன் காக்கையுருக்கொண்டு சீதாபிராட்டி விஷயத்தில் அபசாரப்பட்டு இராமமூர்த்தியால் ஒருகண் இழந்தான் என்பர். உருப்பசியை மோகித்த காரணத்தால் விந்தமலைக்கண் மூங்கிலாக அகத்தியரால் சபிக்கப்பட்டவன்.

2. விசுவாவசுவின் குமரன். இவன் மனைவியருடன் நிருவாணமாய்ச் சலக்கிரீடைசெய்கையில் வசிட்டமுனிவர் அவ்வழிவரக்கண்டு பெண்கள் தங்கள் உடைகளை உடுத்திக்கொள்ள இவன் நிர்வாணியாய் மதியாதிருந்தபடியால் அரக்கனாகச் சபிக்கப்பட்டு வனத்தில் உலாவுகையில் சகுந்தமுனிவரை விழுங்கச்சென்று அவரால் கொலைசெய்யப்பட்டு அரக்க உருமாறிப் பழைய உருக்கொண்டனன்.

3. விச்வாமித்திரர் குமாருள் ஒருவன்.

4. விஷ்ணுபடன்.

5. சுக்கிரன் என்னும் ஆதித்தனுக்குப் பௌலோமியிடம் உதித்த குமரன்.

6. தருமனுக்கு மருத்துவதியிடம் பிறந்த குமரன்.

7. தருமன் மறைபெயர்.

**சயந்தி** — 1. அஷ்டசத்திகளில் ஒருத்தி. கிருஷ்ணனுக்கு முன் தேவகியிடம் அவதரித்துக் கம்சனுக்குக் கண்ணன் பிறப்புணர்த்தி மறைந்தவள்.

2. இவள் இந்திரன் குமரி, தேவரை வெல்ல மிருத்துஞ் செயமந்திரசித்தியின் பொருட்டும் பலவரத்தின்பொருட்டுந் தவமேற்கொண்ட சுக்ரனைத் தந்தைசொற்படி தனக்கு நாயகனாகவரிக்க எண்ணிச் சுக்ரன் தவச்சாலைசென்று பணிசெய்து அவன் தவநீங்கியபின் அவற்குத் தன் மனநிலையறிவித்து யாருக்குங் காணப்படாமல் பத்துவருஷம் அச்சுக்ரனிடம் ரமித்திருந்தவள்.

3. சத்தியால் வக்ராசுரன் முதலியோரைக் கொல்ல நிருமிக்கப்பட்ட துர்க்கை.

**சயமதி**—பவணமாதேவன் மனைவி.

4. பார்வதியாருக்குத் தோழியார் (சிவரகசியம்.)

5. உதயணனுடைய ஆட்சிக்குட் பட்டதொரு பெரிய நகரம், இதனை உருமண்ணுவா பாதுகாத்து வந்தனன். உதயணனுக்கும், வாசவதத்தைக்கும் இந்நகரத்தே தான் விவாகம் நடைபெற்றது. இதுமருதநிலவளத்தாற் சிறந்தது. இதன் பக்கத்தே மிக அழகி தானமலையொன்றுண்டு. இந்நகரில் வாசவதத்தையோடு உதயணன் பலநாள் கவலையின்றி வாழ்ந்திருந்தனன். இந்நகரமும் வேறு சில இடங்களும் உருமண்ணுவாவுக்கு உதயணனாற் சீவிதமாகஅளிக்கப்பட்டன. (பெ-கதை)

**சயமர்த்தனி** — சத்தியால் வக்ராசுரன் முதலியோரைச் சங்கரிக்கச் சிருஷ்டிக்கப்பட்ட துர்க்கை.

**சயமல்லராஜர்** — இவர் மேடமென்னும் ஊர்க் கரசர். இவர் அரிபதம் மறவாது அரசாட்சி செய்துவருநாட்களில் பகைகொண்ட தம்பி சேனைசேர்த்து இவர் பூசைசெய்யுஞ் சமயத்தில் சண்டைக்கு வந்தனன். இதை யறிந்தமந்திரி எதிர்த்துச் சண்டையிட்டுத் தன்னாலியலாது திரும்புகையில் எதிரிகளின் வன்மை யறிந்த தாய் கண்டு பூசையிலிருக்கும் குமரற்குக் கூற அரசன் பெருமாளிருக்கிறாரென்று தான் பூசையிலிருக்கப் பெருமாள் ஓர் குதிரையிலேறிச்சென்று பகைவரை வென்று அரசன் தம்பியைப் பிடித்துக்கட்டி மந்திரிவசம் ஒப்புவித்து மறைந்தனர். அரசன் பூசைமுடிந்ததும் மந்திரி நடந்தவற்றைக்கூற அரசன் பெருமாள் தன் பொருட்டு யுத்தஞ்செய்ததற்கு விசனமடைந்து தோத்திரஞ்செய்து என் தம்பிக்குத் தரிசனந்தந்தீர் எனக்கு இல்லையெனத் திக்

கித்தனர். பெருமாள் தரிசனந்தந்து மறைந்தனர். பின் அரசன் தம்பியை விடுவிக்கத் தம்பி தானறியாது இயற்றிய பிழை பொறுக்கவேண்டி ஒருமித்துவாழ்ந்தனன்.

சயமாகீர்த்தி — முடத்திருமாறன், இவன் முதற்சங்ககாலத்துக் கவியரங்கேறிய எழுவர் பாண்டியருள் ஒருவனும், தொல்காப்பியஞ் செய்வித்தோனுமாகிய நிலந்தரு திருவிற்பாண்டியன். இவன் காலத்தே பாண்டிநாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் யாற்றிற்கும், குமரியென்னும் யாற்றிற்கும், இடையே எழுநூற்றுக்காவதம்யாறும் இவற்றின் கண்ணவாகிய எழ்தெங்கநாடும், எழ்மதுரைநாடும், எழ்முன்பாலைநாடும், எழ்பின்பாலைநாடும், எழ்குன்றநாடும், எழ்குணகரைநாடும், எழ்குறும்பனைநாடுமென்னும் இந்நாற்பத்தொன்பது நாடும், குமரி, கொல்ல முதலிய பன்மலைநாடும், காடும், நதியும், பதியும் தடநீர்க்குமரி, வடபெருங்கோட்டின் காறும் கடல்கொண்டொழிந்தது இதற்கு "வடிவேலெறிந்த" என்னும் சிலப்பதிகாரமும், இறையனாகப் பொருளுரையும், இளம்பூரண அடிகள் முகவுரையும் மேற்கோள்களாம்.

சயமாஞ்சயன் — திவோதானன் குமரன்.

சயமுனி — (சயமினி) வியாசர் மாணாக்கர், சாமவேதி, வேதபாதஸ்தவம் செய்தவர். மார்க்கண்டேயர் ஏவலால் தருமபக்ஷிகளிடம் சந்தேகம் கேட்டவர். இவர் ஒரு பாரதமுஞ் செய்தனர்.

சயம்பிரபை — 1. சடியாசன் புத்திரி. திவட்டன் தேவி.

சயம்பூல் — வடமலையில் அரசு புரிந்துபின் துறவினால் அதிக மேன்மைபெற்றவன் (சூளா.)

சயாராமை — சுக்கிரீவ மகாராஜாவின் தேவி. புஷ்பதந்த தீர்த்தங்கரின் தாய் (சைநி.)

சயர் — கல்பாதியில் சிருட்டிக்கப்பட்ட (கஉ) தேவருஷிகள் இவர்கள் ஒவ்வொரு மன்வந்தரத்திலும் தேவர்களாய்ப் பிறப்பர்.

சயவந்தபக்தர் — இவர் ஒருவணிகர். ராம உபாசகராய்த் தமக்குள்ள பொருள்களெல்லாவற்றையும் பாகவதர்க்கு அளித்து அரிபஜனை செய்துவருநாளில் இவரது ஐந்து புத்திரரும் செல்வத்தை வீணாகச்செலவிடுகின்றனர் என்று வெறுப்பால் அரசனிடங் கூற அரசன் இவரையழைத்து விசாரிக்கையில் பக்தர், பொருள், புதல்வர், தேகம் நிலையல்ல என்று கூறுதலும் அரசன் இவருக்குப் பைத்தியம் பிடித்ததெனப் புத்திரர்களைநோக்கி இவரைக் கொலைசெய்தல் சம்மதமோவென்னப் புத்திரர்கள் இவரைப் பொதியாகக்கட்டிக் கடலிலிடுக என்றனர். அவ்வாறே அரசன் கற்களிடைகட்டிக் கடலிலெறிய இவர் நீரில் மூழ்குமுன் பெருமாள் ஆமைவடிவாகி இவரை முதுகில்தாங்க அரசன் கண்டு பயந்து பெருமாளுக்கு அடிமைபூண்ட இவர் விஷயத்தில் அபகாரஞ் செய்தேனென்று கடலினின்று கரையேற்றி உபசரிக்க மைந்தர்களும் பிழைபொறுக்கவேண்ட அவர்களுக்கு அருள்புரிந்து பிள்ளைகள் ஏவல்செய்யப் பஜனைசெய்திருந்தவர்.

சயவர்மா — ஸ்ரீ தாராச குமாரர். இருஷப தீர்த்தங்கரரின் முதற்பிறப்பு. (சை.)

சய, விசய, சயந்த, சயசேந, சயத்பலர் — பாண்டுபுத்திரர் அஞ்ஞாதவாசத்தில் சமிக்ஞையாக வைத்துக்கொண்ட பெயர்கள்.

சயவிஜயர் — 1. இவர்கள் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்த துவாரபாலகர், சநகர்முதலிய ருஷிகள் திருமாலின் சந்நிதானத்தை விரும்பிச்செல்ல அவர்களது வரவைத்தடுத்து இரணியகசிபு, இரணியாக்ஷனாகச் சாபம் அடைந்தனர். இவர்கள் விஷ்ணுமூர்த்தியின் கட்டளையால் மூன்றுபிறவிகளடைந்து அவரால் சங்கரிக்கப்பட்டு மீண்டும் பரமபதம் அடைந்தவர்கள். இவர்களதுமுதற்பிறப்பு இரணியகசிபு, இரணியாக்ஷன், இரண்டாவது இராவண கும்பகர்ணன், மூன்றாவது சிசுபால, தந்தவக்கிரன் இவர்கள் துவாரகையில் இலக்ஷ்மியின் வரவைத்தடுத்து இச்சாபம் அடைந்தனர் எனவுங் கூறுவர்.

2. பஞ்ச சேநாபதிகள். துரியோதனனால் அனுப்பப்பட்டவர்.

சயனித்துந்திசையறிதல் — கிழக்குச் சிரசுவைத்துப்படுத்தால் ஐஸ்வரியம், தெற்கு ஆயுள், தனவிருத்தி, மேற்குப்பிரபலவிருத்தி, வடக்குவியாதி, மிருத்தியுமாகும். தானிருக்குமிடம் தெற்கும், மாமியார் வீட்டிற்குக் கிழக்கும், யாத்திரைக்கு மேற்கும் சிரசுவைத்துப்படுத்தல் சுபம்.

சயனம் — இது இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர், அன்னத்தூவி இவற்றாற் செய்யப்பட்ட ஐவகை அணைகளாம். இவைகளுள் இலவம்பஞ்சு மெத்தையா

லுட்சூடுநீங்கும். வெண்பஞ்சு, செம்பஞ்சு மெத்தைகள் இரத்தவிருத்தி செய்யும். தூவிகள் உடற்கினிமை. தாழம்பாயிற் சயனிக்கின் தலைசுழற்றல், பாண்டு, பித்ததோஷம், நீராமைக்கட்டி, வெகுமூத்திரம் விலகும். கோரைப்பாய் அக்கினிமந்தம், சுரதோஷ மிவைகளை நீக்கும். பிரப்பம்பாய் மூலரோகத்தை யுண்டாக்கும். பேரிச்சம்பாய் வாதகுன்மம், சோபை நீக்கும். உஷ்ணுதிக்க முண்டாக்கும். பனையோலைப்பாய் அதி உஷ்ணத்தையும், வாதநிக்ரகத்தையுமுண்டாக்கும். சயனிக்கையில் இடதுகையிற் சயனித்து இரண்டு கால்களையு நீட்டிக்கொண்டு நித்திரைசெய்யின் பஞ்சேந்திரிய வயர்வு சரீரவருத்தம் நீங்கும் மனத்திற் குற்சாகமும் ஆயுள் விருத்தியையுந் தரும். கிழக்கில் தலையை வைத்துக்கொண்டு சயனிக்கின் பொருள் சேரும். தெற்கு ஆயுள்விருத்தி. மேற்குப் பிரபலமுங் கீர்த்தியு முண்டாம். வடக்குப் பலவித நோய்களைத்தரும். சயனிக்கையில்நிர்வாணமாயும் கௌபீனமின்றியும் சயனிக்கலாகாது. முக்காடிட்டு நித்திரை செய்யில் இரண்டு நேத்திரங்களுக்கும் புஜங்களுக்கும் வன்மை யுண்டாகும். அன்றிக் குளிர், பனி, வெயில், தூசு, மேகம் இவற்றாலுறுங் குற்றங்களுமணுகா. தலையணை கழுத்திற்குந் தோளிற்குமுள்ள வுயரவளவாய் இலவு முதலிய மெல்லிய பஞ்சுகளாற் செய்தது சிரசிலும் வேண்டிய விடங்களினும் வைத்துச் சயனிக்கின் பாதாதி கேசபர்யந்தமுள்ள நரம்புகள் பிசகா. சிரசைப்பற்றிய ஆவர்த்த நோய் முதலிய நீங்கும். மனத்திற்கு ஆரோக்ய முண்டாம். இராநித்திரை பங்கமாயின் சித்தமயக்கமும் தெளிவின்மையும் ஐம்புலச் சோர்வும் சுட்கமும், பயமும் அக்நி மந்தமுமுண்டாம். அன்றியு நோய்கள் கவ்வும். பகல் நித்திரை ஊருத்தம்ப முதலிய (கஅ) வாதரோகங்களை யுண்டாக்கும்.

சயனக்கிரமம் — வடதிசையிலும், இருமூலைகள்கூடும் கோணதிசையிலும் தலைவையாது கைகூப்பித் தெய்வந்தொழுது உடம்பின் மேல் போர்வை ஒன்றுபோர்த்துச் சயனித்தல்வேண்டும். (ஆசாரக்கோவை.)

சயன் — 1. வியாசர் மாணுக்கரில் ஒருவன்.
2. சாத்தகி குமரன்.
3. வசுதேவன் பின்னவனுகிய ஆனகன் குமரன்.
4. சுசுருதன் குமரன்.
5. தருமன் அஞ்ஞாதவாசத்தில் வைத்துக்கொண்ட பெயர்.
6. துரியோதனன் சபையிலிருந்தவன், சூதில் வல்லவன்.
7. வச்சிரன் குமரன்.
8. சயன் விஷ்ணுபக்தன் அல்லது படன்.
9. (சூ) சுபாஷணன் பேரன், சிரதன் குமரன்.
10. (ச.) புரூரவசுவிற்கு உருவசியிடம் உதித்த குமரன், இவன் குமரன் மிதன்.
11. (ச.) சஞ்சயன் குமரன், இவன் குமரன் கிருதன்.
12. ஷண்முக சேநாவீரன்.
13. கோமுகனுக்குக் கற்கனிகையிடம் பிறந்த குமரன்.
14. மன்னியு குமரன்.
15. திருதாராட்டிரன் குமரன்.
16. ஓர் அரசன், கோபிகைகளைக் காண்க.

சயிகம் — ஒரு பர்வதம், காவிரிக்கு அருகிலுள்ளது.

சயிகடவ்வியன் — காசியைத் தரிசித்து முத்திபெற்றவன்.

சயித்தகம் — சிற்பநூலில் ஒன்று.

சயித்திரதன் — 1. சிவகணத்தவரில் ஒருவன்.
2. காசியில் வீரேசலிங்கத்தைப் பூசித்து இஷ்டசித்தி அடைந்தவன்.

சயிந்தவன் — 1. சயத்திரதனுக்கு ஒரு பெயர். துரியோதனன் தங்கை துர்ப்பலையை மணந்தவன். இவன் தந்தை விருத்தக்ஷத்திரன், வனவாசத்தில் தனித்திருந்த திரௌபதியைக் கவர்ந்துசென்று பாண்டவர்களால் தடுக்கப்பட்டு ஓடிப் பாரதயுத்தத்தில் அருச்சுநனாற் கொலையுண்டவன்.
2. சகுனியின் இரண்டாம் குமரன்.
3. சயந்தனுக்கு ஒருபெயர்.

சயிந்தவாயினர் — சுநகர் மாணுக்கர்.

சயிப்யை — சாமகன் தேவி, சப்யை தாய் இவள் தன் புருஷன் பரஸ்திரீகளைப் புணராது தடுத்திருந்தவள்.

சயிலேச்சுரன் — காசியிலமைக்கப்பட்ட சிவலிங்கப் பிரதிட்டையுள் ஒன்று. இமயத்தால் பூசிக்கப்பட்டது.

சயுக்தவன் — ஒரு முனிவன். இவன் பிறவி முடவன். இவன் வண்டியில் ஏறிக் காட்டின்வழிச் செல்லுகையில் ஒருபாலை வனத்

திருந்த பாழ்ங்கிணற்றில் இருந்துவந்த "கா" என்னும் ஓசைகேட்டு அது தம் பிதாரின் ஓசை என அறிந்து அவர்கள் சொற்படி தனது தவவலியால் கங்கை, யமுனே, கயை என்னும் மூன்றுநதிகளும் தன்னிடம்வர அதில் ஆடிப்புனிதம் அடைந்து பிதுரரைச் சுவர்க்கமடைவித்தவன். இவனுக்கு ரயுக்குவன் எனவும் பெயர்.

சயூடணன் — சாமைக்குத் தந்தை.

சயை — 1. அஷ்டசத்திகளில் ஒருத்தி.

2. பார்வதியாரின் தோழியரில் ஒருத்தி. இவள் ஒருகால் பார்வதியாரை இல்லறம் எத்தகையது என வினவ நீ பூமியிற்பிறந்து அதனை அறிந்துகொள்ளென அங்ஙனமே இவள் பூமியிற்பிறந்து வளரும் நாட்களில் தேவராதமுனிவன் கற்பினையுடைய பெண்ணினைக்கண்டு தான் மணங்கொள்ள நினைத்து இந்தச் சயையை இராக்கத வுருவங்கொண்டு எடுத்துச்சென்று கலவிக்குரிய செயல்செயத் தொடங்கினன். சயை இதனைக்கண்டு நடுங்கி நான் இதுவரை கற்பினையுடையளாய் இருக்கின் இந்த அரக்கனிடம் பட்டுக் கற்பழியாது கல்லாக எனத் தருமதேவதையை வேண்டினள். இவள் எண்ணப்படி கல்லுருக்கொள்ள முனிவன் தன் தபோபலத்தால் உருமாற்றி மணம் புணர்ந்தனன். இதனுல்சயை இல்லறதருமம் அறிந்து சங்கை நீங்கினள்.

3 சயை, சுப்ரபை இவர்கள் தக்ஷன் குமரியர் இவர்கள் அஸ்திரசஸ்திரங்களைப பிரசவித்தனர். (இரா.)

4. திதிகாண்க.

சரகர்—ஒரு வடமொழி வைத்தியநூலாசிரியர். இவர் செய்தநூல் சரகம்.

சரகாள் — வைசம்பாயனர் மாணக்கர்கள், ஆசிரியர்க்குற்ற பிரமகத்தியைத் தாங்கள் ஏற்றதால் இப்பெயர் பூண்டனர்.

சரதுன்மன் — ஒரு வாநரசேநாதிபதி.

சரக்கிரகம் — கிரகம் காண்க.

சரணங்கரர் — மூன்ருவது புத்தர்.

சரணம்— ச) அருகசரணம், சித்தசரணம், சாதுசரணம், தன்மசரணம்.

சரதல்பம்—பீஷ்மன், பொருட்டு, அர்ச்சுனனுல் நிருமிக்கப்பட்ட அம்புமயமான படுக்கை. (பா - ஆதி.)

சரத்துவந்தன் — ஒரு இருடி. கிருபாசாரியின் தந்தை. சதாநந்தருஷியின் குமரன்.

சரந்திரம், உபயம், வர்க்கோத்தமம் — மேடமுதல் மீனுந்தமாகப் பன்னிரண்டு இராசியும் சரந்திரமுபயமென்றெண்ணுப மேடமுதல் அடைவே ஆண்பெண் என்றும், குரூரராசி, சௌமியராசி யென்றும் மடைவே மாறிமாறி யெண்ணப்படும். சரராசியின் முற்கூறும் ஸ்திரராசியின் நடுக்கூறும், உபயராசியின் கடைக்கூறும் வர்க்கோத்தமம் எனவழங்குவர். (விதான.)

சரத்துவான்—விந்தியாஸ்வன்என்னும் பெயருள்ள பாஞ்சால அரசன் புத்திரியாகிய அகலிகையின் நாயகனுன கௌதமன் வம்சத்தில் பிறந்த சத்தியதிருதன் என்பவன் புத்திரன். இவன் புத்திரர்கள் கிருபி, கிருபாசாரியர். இவன் தபசு செய்கையில் ஜாலவதி என்னும் அப்சரசைக்கண்டு வீரியம் வெளிப்படக் கிருபியும், கிருபாசாரியரும் பிறந்தனர். (பா - ஆதி.)

சரத்வான்—இவர்க்கு நாணல் தண்டிலிருந்து கிருபாசாரியும் கிருபியும் பிறந்தனர். (பார - அநு.)

சாபங்கர் — ஒரு ருஷி, இவர் தவத்தைப் புகழ்ந்து இந்திரன் சத்தியவுலகம் வந்து அழைக்க மறுத்து இராமமூர்த்தியின் வரவைக்கண்டு சேவித்து மோக்ஷம் விரும்பி மனைவியுடன் அக்கினிப்பிரவேசமானவர்.

சரபங்காச்ரமம் — தண்டகாரண்யத்தில் கோதாவிரி தீர்த்தத்திலுள்ள ஆச்ரமம். (பார - வன.)

சரபமூர்த்தி — இரணியகசிபைக் கொன்ற நரசிங்கமூர்த்திதருக்கி அட்டகாசம் செய்யக்கண்ட பிரமன் சிவமூர்த்தியைத் துதிக்கச் சிவமூர்த்தி சரபவுருக்கொண்டு நரசிங்கத்தின் தோலை உரித்து உடுத்த எண்கால் இருதலைப் பக்ஷி யுரு.

சரபம் — இது பக்ஷிகளுக்கெல்லாம் அரசாகவும் சிங்கத்தையுங் கொல்லத்தக்க மிருகபக்ஷியுரு. இதற்கிரண்டு சிங்கமுகங்களும் இரண்டு பக்ஷமாகிய இறகுகளும், (2) சிங்கத்தினுடலுடன் எட்டுக் கால்களுடன் கூடிய பறவை யுரு. (காஞ்சி - புரா.)

சரபன் — 1. சுக்கிரீவன் சேனுதிபதி.

2. சூரபதுமன் மந்திரி.

3. ஒருவானரவீரன்.

4. சேதி தேசாதிபதியாகிய சுபாலனுடைய புத்ரன். இவன் தருமராது அச்வமேதக் குதிரை யிவனுட்டையடைந்தபோது மரியாதைசெய்து அனுப்பினவன். (பார - அச்வ.)

5. இவன் ஒருவைசியன் புத்திரப்பேறு இலாதுவருந்தித் தேவருஷியை அடைந்து வேண்ட அவரது உபதேசத்தால் புத்திரப் பேறு அடைந்துகளித்தவன். (பதும புரா)

சரபோஜீ — தஞ்சாவூரில் அரசுசெய்த மகாராட்டிர அரசன். இவன் காலத்தில் பல கல்விகளும், தேவாலயத்திருப்பணிகளும் அபிவிருத்தியாயின, இவன் காலம் (400வரு) இருக்கலாம்.

சரமா — விபீஷணன் தேவியரில் ஒருத்தி. சைலூஷன் என்னும் காந்தருவன் புத்திரி. இவள் புத்திரி திரிசடை. இவளே சீதைக்கு நற்செய்தி கூறிவந்தவள்.

சரமாவதி — கல்கியின் தேவி.

சரமை — காசிபர் தேவி. தக்ஷன்குமரி. ஜலஜந்துக்களைப் பெற்றவள்.

2. இவளது புத்திரரைத் தைத்தியர் கவர இந்திரன் அவர்களிடமிருந்து மீட்டுக் கொடுத்தனன். (பிரம - புரா.)

சரயு—அயோத்தியிலுள்ள நதி. இதுபூர்வத்தில் பிரமன் விஷ்ணுமூர்த்தியை எண்ணித்தவமியற்ற விஷ்ணுமூர்த்திதோன்றி ஆனந்தத்தால் புதல்வனைத்தழுவ அவ்விஷ்ணுமூர்த்தியின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகிற்று. அதைப் பிரமன் காத்திரில் ஏற்று மானஸஸரஸில் விடுத்தனன். இக்ஷுவாகு தான் அரசுசெய்கையில் தன் னாட்டில் ஒருநதி பெருகின் நன்றென்று வசிட்டரைக்கேட்க முனிவர் சத்திய உலகஞ் சென்று நடந்ததைக்கூறி அவர் தரப் பெற்றுப் பூமியில் இருத்தினர். இச்சரயு பெண்ணுருக்கொண்டு இத்தீர்த்தக் கரையில் வந்த இராமபிரானையும் தசரதரையுங் கண்டு பேசினள். இந்நதி வசிட்டரால் வந்தமையின் வசிட்டை எனவும், இராமரைக்கண்டு பேசினமையின் இராமகங்கைஎனவும் பெயர்பெறும். (இரா.)

2. இது மானஸசரசில் பிறந்ததால் சரயு எனப் பெயர்பெற்றது. The river Go-gra. The town of Ayo-dhya is Situated on this river.

சராசி — இராசிகாண்க.

சராமழதலியார் — வெண்ணை நலலூர்ச் சடையப்பமுதலியார் சகோதரர். அன்றி அவருக்கே ஒரு பெயர் என்ப. இவரது சகோதரரை இணையாரமார்பன் எனபர்.

சரலோமா — தரசூரன் குமரன்.

சரவணதேசிகர் — 1. தேவிகாலோத்திரம், வீட்டுநெறி யுண்மைபாடிய ஆசிரியர்.

2. இவர் காஞ்சிபுரம் உபசுப்ரமண்யர் கோத்திரத்தவர் முத்தி முடிவெனும் நூலாசிரியர்.

சரவணபவன் — குமாரக் கடவுள்.

சரவணப்பெருமாளையர் — இவர் திருத்தணிகை கந்தப்பையர் குமாரர். இராமநுஜ கவிராயரிடத்தில் தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றபுலவர் சென்னையில் பல நூல்களைப் பிரசுரஞ்செய்தவர்.

சரவணப்பெருமாள் கவிராயர் — இவர் தென்னாட்டிலிருந்த கவிஞரில் ஒருவர், இவர் மலையாளஞ்சென்று இராஜாவைக் கண்டபோது கூறியது "இலைநாட்டும் வேற்காத்துச் சேதுபதி தரிசநத்துக் கேழு நாளோர், மலைநாட்டு ராசன்வந்து காத்திருந்தவாசல் வித்துவான் யான்கண்டாய், கலைநாட்டிற் பெண்ணெனவே செய்தசரணசநகன்கன்னிக்காகச், சிலைநாட்டிவளைத்த புயவீர கோளராம செயசிங்கேறே" என்றனர். இக்கவியைக் கேட்டவுடன் சேதுபதி தரிசனத்திற்கு மலைநாட்டரசரிற் காத்திருந்தவர் யார்? என இராஜாவினவச் சேதுபதியென்பது வருணனுக்கும் பெயராம். ஆதலால் அவனைக் காண்பதற்கு மல்லை நாட்டுகின்ற இராமனுனவன் தருப்பாசனத்தில் எழுநாட்கள் காத்திருக்கவில்லையா? எனக்கூறச் சேதுபதி மகிழ்நது பரிசுதரப்பெற்றவர்.

சரவணப்பொய்கை—இது திருப்பரங்குன்றத்திலுள்ளதோர் தீர்த்தம். (திரு.)

சரவணப்பெருமாள் கவிராயர் — இவர் பாண்டிநாட்டு முதுகுளத்தூரிலிருந்தவர். சைவவேளாளர் கவிபாடுவதில் வல்லவர். இவர் இராமநாதபுரம், சோமசுந்தரம் பிள்ளையவர்கள் மாணவகர், முத்துராமலிங்க சேதுபதி யவர்கள் சமஸ்தான வித்துவானாக இருந்தவர். இவர் சற்றேறக்குறைய நூறுவருஷங்களுக்கு முன்னிருந்தவராகலாம்.

சரவணமுத்துப்புலவர் — இவர் யாழ்ப்பாணத்து நல்லூர் வேளாண்குலத்துச்சைவர். இவர் சற்றேறக்குறைய ஐம்பதுவருடங்களுக்குமுன்னிருந்தவர். சேநாதிராயமுதலியாருக்கு மாணவர். வேதாந்த சயஞ்சோதி, ஆத்மபோத ப்ரகாசிகை நூலாசிரியர்.

சரவணி — வேலை குமரி, பிராசீனருக்குத் தேவி.

சரவரி — தோஷன் என்னும் வசுவிற்குத் தேவி, குமான் சிஞ்சுமாரன்.

சாவர்ணி—ஒரு அரசன். நாரதரால் உபதேசிக்கப்பெற்றன்.

சரவனம் — இமயத்துள்ள ஒரு பொய்கை. தருப்பைக்காடு. இதில் கந்தமூர்த்தி வளர்ந்தனர். (மணிமேகலை.)

சரன் — 1. விவசுவானுக்குச் சாயாதேவியிடம் உதித்த குமரன்.

2. கிருஷ்ணன் மீது அம்பெறிந்த வேடன் இவன் மிருகங்களைத் தேடிவருகையில் யோகநித்திரையிலிருந்த கிருஷ்ணரை மிருகமெனக்கண்டு அம்பெறிய அந்த அம்பு கண்ணன் திருவடியில் பட வேடன் அருகில் வந்து கண்டு அஞ்சி வணங்கி நற்கதியடைந்தவன்.

சரஸ்வதிநதி — குருக்ஷேத்திரத்துள்ள ஒரு நதி. இவள் பெண்ணுரு அடைந்து மதிவாணனைமணந்து திடனைப்பெற்றுள்.

சரஸ்வதி — A. 1. பிரமனுல் சிருட்டிக்கப்பட்டு அவனுல்மணக்கப்பட்டவள். வித்யாதிஷ்டான தேவதை. இவள் வெண்ணிறமாய், வெள்ளைவஸ்திரம், கைகளில் ஜபமாலை, புத்தகம், வீணை, எழுத்தாணி தரித்து எழுந்தருளி யிருப்பள் எ-ம்., இவளுக்கு ஒருகரத்தில் ஜபமணி, மற்றென்றில் புத்தகம், இருகரங்களில் வீணை எ-ம்., இவட்குப் பிரமவித்தை முகம், நான்குவேதமும் கரங்கள், எண்ணும் எழுத்தும் கண்கள், சங்கீதசாகித்தியம்தனங்கள், ஸ்மிருதி வயிறு, புராண இதிகாசங்கள் பாதங்கள், ஓங்காரம் யாழ் எனவுங்கூறுப.

2. தக்ஷயாகத்தில் காளியால் மூக்கறுப்புண்டு மீண்டும்பெற்றவள்.

3. இவள் தன்னைச் சிருட்டித்துத் தன்னுடன்கூடப் பிரமன் வருகையில் பிரமனுக்குஅஞ்சிப் பெண்மான் உருக்கொண்டு ஓடினள். பிரமன் ஆண்மான் உருக்கொண்டு தொடர்ந்து சிவமூர்த்தியால் தடையடையக் கண்டு சிவமூர்த்தியை வேண்டிப் பிரமனைக் கணவனுகப் பெற்றவள்.

4. பிரமன் தன்னைநீக்கி யாகஞ்செய்ததால் நதியுருவாய் யாகத்தை அழிக்கவந்தவள்.

5. ஒருகாலத்து அகத்தியரிடம் பிறந்தவள்.

6. பிரமன் காயத்திரி, சாவித்திரி சரஸ்வதி மூவருடன்கூடிக் கங்காஸ்நானத்திற்குப்போகச்சரஸ்வதி ஆகாயவழியில் பாடிக்கொண்டிருந்த வித்யாதர ஸ்திரீயின் இசையில் மனம் வைத்திருந்தனள். சரஸ்வதி ஒழிந்த இருவரும் தம் நாயகருடன் கங்கையடைந்து ஸ்நானஞ் செய்தனர். சரஸ்வதி சற்றுத் தாமதித்துப் பிரமதேவனிடஞ் சென்று தான் வருமுன் ஸ்நானஞ் செய்ததுபற்றிக் கோபித்தனள். பிரமன் குற்றம் உன்மீது இருக்கஎன்மீது பயனிலாது கோபித்தலால் (சுஅ) அக்ஷரவடிவாகிய நீ உலகத்தில் நாற்பத்தெட்டுப் புலவர் உருவாகத் தோன்றிச் சிவமூர்த்தியைப் பணிந்து அவர் தந்த சங்கப்பலகையில் இருந்து வருக எனச்சாபம் ஏற்றவள்.

7. ஒருயாகத்தில் இவள் வரத் தாமதித்ததால் பிரமன் இடைக்குலக் கன்னிகையைத் தாரமாகப் பெற்றதால் இவளால் தேவர் சபிக்கப்பட்டனர் என்ப.

8. இவளும் இலக்குமியும் மாறுகொண்டு தங்களில் உயர்ந்தார் யாரென்று பிரமனைக் கேட்கப் பிரமன் இலக்ஷ்மிதேவி என்ன மாறுகொண்டு நதியுருவாயினள்.

9. பிரமன் யாகஞ்செய்ய அந்த யாக கலசத்துள் தோன்றியவள், புலத்தியரை அரக்கனுகச் சபித்தவள். சாத்காலத்தில் பூசிக்கப்படுதலால் சார்தை எனவும் பெயர்.

10. இவள் பிரமனுல் சிருட்டிக்கப்பட்டு அவரால் மோகிப்பக் கண்டு, அந்தமோக வார்த்தை யுரைத்த முகத்தை நோக்கி நீ யிவ்வாறு தூஷித்துக் கொண்டிருந்ததால் ஒரு காலத்தில் சிவபெருமானையும் அவ்வாறு தூஷித்து அவரால் சிரம் அறுபடக்கடவையெனச் சபித்தனள். (சிவமகா புராணம்.)

11. இவளும் கங்கை, லக்ஷ்மி முதலியவர்களும் விஷ்ணுபத்னிகள் ஒருகால் விஷ்ணு கங்கையிடம் அதிக ஆசைகொண்டு அவளுடன் நகைமுகமா யிருத்தலைக் கண்ட சரஸ்வதி, பொருமைகொண்டு லக்ஷ்மியைநோக்க லக்ஷ்மி கங்கைக்குச் சார்பா யிருத்தலைக்கண்டு இவள் லக்ஷ்மியை செடியாகவும் நதியாகவும் போகச்சபித்தாள். கங்கை சரஸ்வதியை நதியுருவமாகவெனச் சபித்தாள். பின் ஸரஸ்வதி கங்கையைநோக்கி நீயும் நதியுருவமாய் உலகத்தவரது பாபத்தைச் சுமக்க என்றனள். லக்ஷ்மியிதனுல் தர்மத்வஜருக்கு குமரியாகித் துளசியாகவும் பத்மாவதியெனும் நதியாகவும் பிறந்தனள். கங்கையும் சரஸ்வதியும் நதிகளாகப் பிரவகித்தனர் லக்ஷ்மி சங்கசூடனை மணந்தனள். கங்கை சந்தனுவை மணந்தனள். சரஸ்வதி பிரம

பத்தினி ஆயினள். சாஸ்வதி பாரதவருஷத்தில் நதியாக வந்தபடியால் பாரதி, பிரமனுக்குப் பத்தினியாதலால் பிராம்மி, வாக்குகளுக்குத் தேவியாதலால் வாணி, அக்னியைப்போல் பாவத்தைக் கொளுத்தி யாவருங்காண மஞ்சணிறம் பெற்றிருத்தலின் சாஸ்வதியென அழைக்கப்படுகின்றனள். இந்த (3) தேவியரும் பூலோகத்தில் கலி (5000) வருஷஞ்சென்றபின் தங்கள் பதமடைவர். (தேவி - பா.)

B. ஒருநதி It rises in the hils of Sirmur. It disappears at vinasana-tirtha after taking a Westerly course from Thaneshwar.

ஸரஸ்வதிநதி இது ருஷிகளின் யாகத்தின் பொருட்டு, சுப்ரபை, காஞ்சனாக்ஷி, விசாலை, மனோரமை, ஓகவதி, சுரேணு, விமலோதகையென பிரவகித்தது.

C. சாரஸ்வதனை காண்க.

D. வேதகுய்யர் பாரி.

E. பிரமதத்தன் பாரி.

சராசந்தன் — இவன் விப்பிரசித்தி அம்சம். மகததேசாதிபதியாகிய பிருகத்ரதன் குமரன். உபரிசரவசுவின் பேரன், இவன்பட்டணம் கிரிவிரசம், குமரன் சகதேவன், இவன் தந்தை நெடுநாள் புத்திரர் இல்லாமல் காட்டிற்சென்று அவ்விடம் தவத்திலிருந்த சண்டகௌசிக முனிவரை அடுத்து அவர்க்கு வேண்டிய பணிகளைச் செய்துவரும் நாட்களில் முனிவர் இவன் கருத்தறிந்து மாங்கனி ஒன்று தந்து அதை உன் மனைவியின் ருதுகாலத்தில் தருக என்று கட்டளையிட்டு அனுப்பினர். அரசன் அதனைப் பெற்று மனைவிக்கு அதின் மகிமைகளைக்கூறி யவள் வசம் கொடுத்தனன். மனைவி தானே புசித்தல் கூடாது எனத் தன் சக்களத்திக்கும் புத்திரன் உண்டாக எண்ணி அப்பழத்திற் பாதி அரிந்து தானருந்தி மற்றதை அவளுக்கு அளித்தனள். இருவரும் கருக்கொண்டு பத்தாம் மாதத்தில் ஒவ்வொரு பாதி உருக்களை ஈன்றனர். ஏககாலத்தில் பிறந்த அந்த இருபிளவுகளை அரசன் ஊரின்புறத்தில் எறியக் கட்டளையிட்டனன். அப்படியே தோழியர் செய்தனர். அந்த ஊர் காக்கும் அரக்கி, சரை என்பவள் ஆகாரத்தின் பொருட்டுத் திரிந்து வருகையில் அவ்விடம் இருந்த இரண்டு துண்டங்களை எடுத்துச் சந்தி செய்தனள். உடனே இவ்விரு பிளவுகளும் ஒன்று பட்டு ஒரு குழந்தையுருவாய் அதிபாரமாய் அழத்தொடங்கியது. இதைச் சரையாலறிந்த அரசன் எடுத்துச் சென்று சரையால் சந்திக்கப்பட்டவன் ஆதலால் சராசந்தன் எனப் பெயரிடப்பட்டு வளர்ந்தவன். இவன் தன் மருமானாகிய கம்சனைக்கிருஷ்ணன் கொன்றான் என்று பதினெண்முறை கண்ணனுடன் சண்டைசெய்து வெற்றி பெற்றனன். ஒருமுறை கதாயுதத்தைச்சுழற்றி எறிந்து கிருஷ்ணனது பாதிநாட்டைக் கைக்கொண்டவன். இவன் குமரியர் அஸ்தி, பிராப்தை. இவன் மற்றொருமுறை, இராமகிருஷ்ணருடன் யுத்தத்திற்குவர அவர்கள் ஓட்டங்காட்டிக் கோமந்தபருவதத்தில் ஒளித்தனர். சராசந்தன் தேடிக்காணாது, மலையைக் கொளுத்தினன். இருவரும் இவனையறியாது வெளிவர, வெட்கிச் சேனையிழந்து சென்றனர். இவனிடம் கண்ணன், வீமன், அருச்சுநன் மூவரும் வேதியர் உருக்கொண்டுசென்று யுத்தபிக்ஷை யாசித்தனர். சராசந்தன் அதற்கு இசைந்து வீமனுடன் மல்லயுத்தஞ் செய்கையில் கண்ணன் புல்லைப் பிளந்து வீமனறிய இருபுறம் எறிய அந்தச் சமிக்ஞையால் காலைக்கிழித்து இருபுறம் எறிந்து வீமன் கொன்றனன். (பாகவதம்) (வேறு.)

சராசரங்கள் — அசையும் பொருளசையாப் பொருள்களடங்கிய வுலகம். இதிலுள்ள உயர்திணை அஃறிணைப்பொருள்களைப்பற்றிக் கூறப்புகின் மனிதர்முதல் கண்ணிற் கெட்டாச்சிறிய பிராணிவரை அளவிடக் கூடாதவை பலவகையுள. அவற்றின் உரு, நிறம், குணம், தொழில் உணவுமுதலிய ஒவ்வொரு வகையிலும் வேறுபடுகின்றன. ஊர்வனவற்றில் புழு ஒன்றைப்பற்றிக் கூறத்தொடங்கின் அவ்வகையில் அளவிடப்படாத சாதிகள் உண்டு. அவ்வாறே பறவை மிருகாதிகள், நீர்வாழ்வன பலவகைப்படுகின்றன. மரம், செடி, பூண்டு வகைகளிலும் அவ்வாறே ஒவ்வொன்றும் உருவத்தாலும் நிறத்தாலும், குணத்தாலும் வேறுபடுகின்றன. பெயரறியாப் பூச்சிகளும் புழுக்களும் பக்ஷிகளும் பிராணிகளும், பெயரறியாப் பூண்டுகளும் செடிகளும் விருக்ஷங்களும் அளவிறந்தன இறைவனால் சிருட்டிக்கப்பட்டு அவனது அளவிலாற்றலுடைமையை அறிவித்து.

நிற்கின்றன. இவற்றின் தன்மை, உணவு, தொழில் முதலிய வெடுத்துக்கூற அவன் மானிடச்சட்டை சாத்திவந்து அறிவித்தாலன்றிக் கூடாதகாரியம் ஆதலின் அறிவுடையோர் எழுதிய அளவுகளிகொள்வர் என்று எண்ணுகிறேன்.

சராசன்மன் — ஒரு அரசன். இவனை நாக கன்னிகை ஒருத்தி மணந்தனன்.

சராயணன் — கலாவதியைக் காண்க.

சராவதி — இது ஒருநதி. குஜராத்திலுள்ளது. இதன் கரையில் தர்ப்பைகள் முளைத் திருத்தலால் வந்தபெயர். (பா - பீஷ்.)

The river Sabarmati in Guzerat. Ahmedabad stands on the river Sarawati appears to be the corruption of the river Saraswathi in Fyzabad (Oudh.)

சாரி — ஒருவாநரசேனாபதி.

சரிதாரி — சாரங்கபக்ஷியான மந்தபாலமுனிவர்க்குத் தந்தை.

சரிகை — பொன், வெள்ளி, முதலிய லோகங்களை மெல்லிய கம்பிபோலிழைத்து வேட்டிபுடவை முதலியவற்றில் நூலுடன் நெய்வது.

சரிதை — ஒரு பெண்பக்ஷி, இது பக்ஷியுருக்கொண்ட மந்தபாலமுனிவரைச் சேர்ந்து சாரங்கர்எனும் குஞ்சுகள் நான்கைப் பெற்றது.

சரியைமுதலியசாதனங்கள் — ௪. முதல்வனுடைய திருவுரு நோக்கிச் செய்யும் வழிபாடு. சரியையாவது சரியை, கிரியை, யோகம், ஞானம். இது, சரியையிற் சரியை, சரியையிற்கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என நால் வகைப்படும். அவற்றுள் சரியையிற் சரியையாவது திருக்கோயிலில் அலகிடல், மெழுகல், மாலைதொடுத்தல் முதலிய, சரியையிற் கிரியை - ஐயைந்து மூர்த்திகள் விநாயகக் கடவுள் முதலிய ஆவரண மூர்த்திகளில் ஒரு மூர்த்தியைப் பூசித்தல். சரியையில் யோகம் நெஞ்சில் உருத்திரக் கடவுளைத் தியானித்தல், சரியையில் ஞானம், தியான பாவனையினுறைப்பான் ஞானானுபவவுணர்வுநிகழ்தல். கிரியையாவது புறத்தொழில் அகத்தொழின் மாத்திரையானே முதல்வனது அருவுருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. இது கிரியையிற்சரியை சிவபூசைக்கு வேண்டப்படும் ஜபகாரணங்களெல்லாஞ்செய்துகொள்ளல், கிரியையிற் கிரியை - சிவாகமத்தில் விதித்தவாறே ஐவகைச்சுத்தி முன்னாகச் சிவலிங்க வடிவிற் செய்யும் பூசனை. கிரியையில் யோகம் - மனத்தில் பூசை, ஓமம், த்யானம், மூன்றற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகம். கிரியையில் ஞானம் - அந்தர்யாக வுறைப்பின் கண்ணிகழும் பலவுணர்வு. யோகமாவது கரணங்களைச் சிவார்ப்பணஞ்செய்து ஆருதாரங்களில் அகத்தொழிலால் தியானித்தல். யோகத்திற் சரியை- இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்பன. - யோகத்திற்கிரியை பிரத்யாகாரம், தாரணை. யோகத்தில் யோகம் - தியானம். யோகத்தில் ஞானம் - சமாதி கூடியிருத்தல். ஞானமாவது - கேட்டல் சிந்தித்தல் முதலிய. ஞானத்திற் சரியை - திரிபதார்த்த உண்மையைக் கேட்குதல், ஞானத்திற் கிரியை கேட்டதைச் சிந்தித்தல். ஞானத்தில் யோகம் - சிந்தித்ததைத் தெளிதல், ஞானத்தில் ஞானம் - நிஷ்டை கூடியிருத்தல்.

சரு — இது வருத்த அரிசியினால் உப்பின்றிச் சமைத்த அன்னம்.

சருச்சான் — சுகுண பாண்டியனுக்குச் சேனாபதி.

சருச்சன் — ஒரு யக்ஷன் சுந்தன் எனும் யக்ஷனுக்குத் தந்தை. (இரா - பா).

சருட்டுனு — புலகருஷிக்கு க்ஷமையிடம் உதித்தகுமரன்.

சருப்பசத்ரு — சர்ப்பங்களுக்குச் செந்நாய், இருதலைமணியன், மயில் கோழி, எருதின் குளம்பு, மின்னல், இடி, கீரிப்பிள்ளை, காடி, பன்றி, செம்போத்து, கருடன், முதலை, ஆந்தை, கூகை, மான், புதுவெள்ளம், புகைமூடிய அனல், மனிதன்.

சருப்பதோபத்திரம் — இது சித்திரக் கவியிலொன்று. எட்டெழுத்தானியன்ற நான்கு வரியாகிய செய்யுள், அது மாலைமாற்றும், சுழிகுளமுமாய் ஒருங்குவரச் சொல்வது.

சருமகீலரோகம் — வியானவாயு சிலேஷ்மத்தை யுள்ளிழுத்துக்கொண்டு குதஸ்தான சருமத்தில் முளைகளை உண்டாக்குவது. இது வாதபித்த, சிலேஷ்ம கீலமென மூன்றுவகை. இது, ரஸபஸ்மம், கந்தகச் சூரணம், முதலியவற்றால் வசமாம். (ஜீவ).

சருமணநதி — அந்திதேவன் யாகத்தில் இறந்த பசுக்களின் உதிரத்தாலாகிய நதி.

சருவசித்து — சேதிநாட்டரசன். இவன் தன் குமரர் நூற்றுவரும் தீமைசெய்து ஒழுக அவர்களை அரக்கன் கையில் ஒப்புவித்த னன். அரக்கன் அவர்களைப் பூமியில் எறிந்து கொன்று ஆகாயத்தில் எறிந்தனன். அந்தப் புதல்வர் உடலம் புண்ணிய பூமியில் விழுந்ததால் நூற்றுவரும் முத்திபெற்றனர்.

சருவாத்தகன் — சிவகணத்தவரில் ஒருவன்.

சருவாவசு — சூரியகிரணத்து ஒன்று.

சருபா — பூதாவின்பாரி. இவளுக்குச் சுரபி எனவும் பெயர். கோடி உருத்திரரைப் பெற்றவள்.

சரோருகம் — இதனை அசுணமா என்பர். இது ஆகாயவாசி பூமியில்வருவதில்லை. காற்றையும், மழைநீரையும் புசித்துச்சீவிப்பது.

சரை—1. ஒரு பெண்தேவதை. சராசந்தன் உடலைப் புணர்த்தவள். பிரமனால் கிருகதேவதையாக நிருமிக்கப்பட்டவள்.

2. யமன்பெண், புருச்சக்கரவர்த்திக்குத் தேவி.

சர்க்கரைப் பால்வடியுமரம் — இது, வட அமெரிகாதேசத்தும் கனடாநாட்டுப் பிரதேசத்திலுமுள்ளது. (Maple tree) இது, (10, 15) அடிகள் உயரம் வளருகிறது. பட்டைகனதியுள்ளது. இம்மரத்தின் அடிப்பாகத்தைத் தொளைசெய்து குழாய் வைத்துப் பால்வடிக்கின்றனர். இதன் பால் கரும்பின் சாறுபோல் இனிப்புள்ளதாக இருக்கிறது. இப்பாலால் இந்நாட்டார் சர்க்கரை காய்ச்சுகின்றனர்.

சர்க்கரை — கரும்பு, புல்லினத்தைச்சேர்ந்த பயிர். இதில் செங்கரும்பு, வெண்கரும்பு, நாணற்கரும்பு எனப்பலவகையுண்டு. இவற்றில் நூற்றுக்கணக்கான பேதம் உண்டு. இவ்வகைக் கரும்புகள் பத்தடியுயரமுள்ளனவாக வளருகின்றன. இவ்வகைக் கரும்புகளைத் துண்டுகளாகவெட்டி ஆலைகளிலிட்டுச் சாற்றையெடுத்துக் காய்ச்சினால் சாறு இறுகும். இதைக் காய்ச்சும்போது இதிலுள்ள அழுக்கைப்போக்கச் சுண்ணாம்புத் தண்ணீரையாவது, உப்புத் தண்ணீரையாவது கலக்கவேண்டும். இறுகிய சாற்றை அகன்ற பாத்திரங்களில் சேர்க்க அவைவெல்லக் கட்டிகளாம். அக்கட்டிகளை மீண்டும் காய்ச்சினால் சர்க்கரையாம். இது, பழுப்புச்சர்க்கரை. பழுப்புச் சர்க்கரையை வெந்நீரில் கலக்கிச் சுண்ணாம்பு ஜலத்தையும் சேர்த்துப்பல மடிப்புள்ள வஸ்திரத்தினால் வடிகட்டின் அதிலுள்ள அழுக்கெல்லாம் நீங்கும். ஆயினும் சற்று மங்கலாகவே காணப்படும். அம்மங்கல் நீங்க எலும்புகளை மேல்மூடியுள்ள இரும்பு பாத்திரத்தில்போட்டுக் கரியாக்கிப்பொடித்து அதைமங்கல் சர்க்கரைகரைத்த நீருடன்கலந்து காய்ச்ச மிகுந்த அழுக்குகள் எலும்பில்பதிந்து சர்க்கரை சுத்த வெண்மையாம். இது வெள்ளைச்சர்க்கரை. இந்த வெள்ளைச்சர்க்கரையைக் காய்ச்சி ஊற்றினால் கற்கண்டாம். பின்னும் வெல்லங்களும் சர்க்கரைகளும் பனை, தென்னை, பலவகைத் தித்திப்புப் பழங்களினின்றும், பீட்ரூட் முதலிய சில கிழங்குகளினின்றும் எடுக்கப்படுகின்றன.

சர்ச்சரன் — இரணியாக்ஷன் குமரன்.

சர்ப்பசத்திரம் — சர்ப்பயாகம் காண்க.

சர்ப்பமாலி — ஒரு இருடி.

சர்ப்பயாகம்—இதுபாம்புகள் சாம்படிசெய்யும் யாகம். இந்தயாகத்தை ஜநமேசயன் செய்தனன்.

சர்ப்பவனாசீகம் — நாகபஞ்சமி காண்க.

சர்ப்பவகை — பாம்புகளைக் காண்க.

சர்மணவதி — 1. விந்தியமலையிற் பிறந்து உத்தாவாகினியாய் யமுனையிற்கலக்கும் நதி. நந்திதேவனால் கொலைசெய்யப்பட்ட மிருகங்களின் உதிரத்தா லுண்டானது.

2. தக்ஷண பாஞ்சலத்திலுள்ள நதி. (The river Chambal.)

சர்மவான் — சகுனியின் உடன்பிறந்தவன்.

சர்மி — ஒரு பிராமணன் யமனால்தான பூசிக்கவேண்டித் தூதனால் அழைத்துவரவெப் பட்டவன். (பார - அநு.)

சர்மிஷ்டை — ருஷபவர்மன் குமரி, யயாதியின் இரண்டாந்தேவி.

சர்யன் — நரிஷ்யந்தன் வம்சத்து அரசன்.

சர்யாதி — 1. வைவச்சுத மனுபுத்திரரில் ஒருவன். இக்ஷ்வாகின் உடன்பிறந்தவன் இவன்குமரர் உத்தானபர்ஹி, பூரிசேநன், ஆநர்த்தன், குமரி சுகன்னி.

2. பிராசீனவதன் புத்திரன், தாய் ஆஸ்மாகி, பாரியை திரிசங்கி, புத்திரன் அகம்யாதி.

சர்வகாமன்—(சூ.) இருதுபர்ணன் குமரன், இவன் குமரன் சுதாசன்.

சர்வகேதன் — வீமசேநனுக்குக் காலியிடம் உதித்த குமரன்.

சர்வக்யசிங்கப்பநாயக்கன் — தேசிகரை ஆசிரியித்தவன்.

சர்வக்யபட்டர் — பட்டரால் வெல்லப்பட்ட வித்வான்.

சர்வசித்தாக்கியன் — ஆசாரம் இல்லாமல் தானம் வாங்கிப் பாபியாய்த் திருவேங்கடத்துக் கோணதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து புனிதனானோன்.

சர்வதமனன் — சகுந்தலையின் புத்திரன் பரதனுக்கு ஒருபெயர்.

சர்வதேசஸ் — வியுஷ்டிக்குப் புஷ்கரணியிடத்து உதித்த குமரன். பாரி ஆகுதி. குமரன் சாக்ஷுசமநு.

சர்வதேவன் — வீமன் குமரன்.

சர்வதோபத்திரம் — கௌரவர்களால் வெற்படுத்திய வியூகம்.

சர்வதோமுகி — சிவசூரியத் தானத்து அமரும் சத்தி, இவளுக்கு நான்கு கரம்.

சர்வநேத்திரர் — ஒரு விஷ்ணுபடர்.

சர்வபூததமனி — ஆன்மாவின் புண்ணிய பாவங்களை யடக்கும் சத்தி. இதற்குத் தேவர் யஜமானர் அல்லது சர்வபூததமனர்.

சர்வபூதாசுரன் — இவன் பிரமதேவனது பாதாதிகேசபரியந்தம் பாய்ந்து வருத்தினன். தேவர் வேண்டச் சிவமூர்த்தி இவனை விழுங்கினர்.

சர்வபூமன் — வேதகுய்யருக்குச் சாஸ்வதியிடம் அவதரித்த விஷ்ணுவினம்சம்.

சர்வபூமபாண்டியன் — ஒரு பாண்டியன் புகழேந்தியார்காலத் திருந்தவன்.

சர்வர்த்தி — வச்சரன் தேவி, புஷ்பார்ணன் தாய்.

சர்வர் — பிரதிவி பூதத்திற்கு அதிதேவதையாகிய சிவாஷ்டமூர்த்தத்து ஒன்று.

சர்வவேதஸ் — விச்வஜித் யாகஞ்செய்துமுடித்த அந்தணன்.

சர்வன் — ஒரு மகாராஷ்டிர அரசன், இவனுக்கு அமோகவருஷன் என்றுபெயர். இவன் ஆதிபுராணத்தைச் செய்த ஜிநசேநனை ஆதரித்தவன்.

சர்வஜித் — இராஜசூய யாகத்தில், தர்வி, ஹோமம், அந்தர்யாகஞ்செய்து அவப்ருதமாகிய அபிஷேகத்தை யடைந்தவன். (பார - சபா - 13 - அத்.)

சர்வாணிபீடம் — சத்தி பீடத்தொன்று.

சர்வார்த்தசித்தி அகமிந்திரதேவர் — ருஷபதீர்த்தங்கரின் பத்தாவது பிறவி.

சலங்கள் — நாட்டில் விளையுந் தீங்குகள். இவை (௫0) வகை. ௧. தெரு, வழிக்குக் கேடுவிளைத்தல் (௨) பிறரைப்பழித்துரைத்தல், (௩) மதிற்சுவரேறிக்கடத்தல், (௪) தண்ணீர்ப்பந்தல் அழித்தல், (௫) இல்லத்தை அழித்தல், (௬) மண் முதலியவற்றால் அகழியைத் தூர்த்தல், (௭) அரசனது தவறுதலை வெளிப்படுத்தல், (௯, ௧0, ௧௧) ஒருவனது கட்டளையின்றி அவனது இல்லம், உவளகம், பொருட்சாலை, அடுக்களை முதலியவற்றிற் புகுதல், (௧௨) ஒருவன் உண்ணும்போது பார்த்தல், (௧௩, ௧௪, ௧௫, ௧௬) இடம் நோக்காது விரும்பியவாறு மல, மூத்ரம், எச்சில், அபானவாயு கழித்தல் (௧௭) அரசன்முன் வீராசனமிட்டிருத்தல், (௧௮) அரசன் எதிர்முகத்தைத் தடைப்படுத்தல், (௧௯) அரசனுக்குரிய வேடத்தினுஞ் சிறந்த வேடந்தரித்தல், (௨0) ஒருவனில்லத்தில் தடுக்கப்பட்டும் மீறிப்புகுதல், (௨௧, ௨௨) பிறர் இல்லத்தின்கண் கன்னவழியாற்புகுதல், சமயமல்லாக் காலத்திற்புகுதல், (௨௩, ௨௪, ௨௫) பிறர்படுக்கை, இருக்கை, பாதுகைகளில் அவர்கள் கட்டளையின்றி படுத்தல், இருத்தல், பாதங்களாற்றீண்டல், (௨௬) அரசன் படுக்கையிற்சயனித்துக் கொண்டிருக்கையில் அருகில் நிற்றல், (௨௭) அரசன் பகைவர்க்குப் பணிசெய்தல், (௨௮) பிறனாற் றரப்படாத இருக்கையைத் தானே பற்றிக்கொண்டு அதன்கண் இருத்தல், (௨௯, ௩0, ௩௧) பிறர் ஆடைகளையும், அணிகலன்களையும், பொன்களையும் அவர் அநுமதியின்றி உபயோகித்தல், (௩௨) ஒருவன் கையிலுள்ள தாம்பூலத்தை தானே வலிந்து பற்றிக்கொண்டு உபயோகித்தல், (௩௩) பேசுக, எனப்பிறர் வேண்டாதிருக்க அதிகமாகப் பேசுதல், (௩௪) தன் அரசனைப் பழித்துரைத்தல், (௩௫) அரசனுக்கெதிரில் ஒற்றை ஆடையுடன் செல்லல், (௩௬) எண்ணெய் பூசியவுடலனாய்ச்செல்லல், (௩௭) தலைமயிரை விரித்துக்கொண்டு செல்லல், (௩௮) உடல்முழுதையு மறைத்துச்செல்லல், (௩௯) சித்திரம் வரைந்த உடலோடு செல்லல், (௪0) பூமாலை அணிந்து செல்லல், (௪௧) உடுத்த ஆடை அலையச்சேறல், (௪௨) தலையை ஆடை முதலியவற்றால் மறைத்துச்சேறல், (௪௩) பிறர் பாற்குற்றங்காண விரும்பல், (௪௪) சூது, கள், காமம் முதலியவற்றில் விருப்பம், (௪௫) அரசற்கெதிரில் ஆடையின்றிச் செல்லல், (௪௬, ௪௭, ௪௮

அரசனது மூக்கு, கண், செவி முதலிய வற்றை உற்றுநோக்கல், (சக) பற்குடைதல், (௰) செவி, மூக்குகளை அரசன்முன் குடைதல் முதலியன. (சுக் - நீ.)

**சலநாள்** — நக்ஷத்ரம் காண்க.

**சலசந்தன்** — பதினான்காம்நாள் பாரதப் போரில் சாத்தகியுடன் யுத்தஞ்செய்து மாண்டவன்.

**சலசந்தி** — 1 திருதராட்டிரன் குமான்.

2. ஒரு சிறு ஜலபாகம், இரண்டு ஜல பாகங்களைச் சேர்த்து, இரண்டு பூபாகங் களைப் பிரிக்கும் அதற்கு ஜலசந்தி என்று பெயர். (பூகோளம்)

**சலசரம்** — நீர்வாழ்வன: இவற்றுள் மச்சம் விஷ்ணுவிற் குதவியது. நந்திதேவரும் இவ்வுருக் கொண்டனர். ஆமை, இவ்வுரு திருமால் உருக்கொள்ள உதவியது, கருடனைக் காண்க. முதலை, கஜேந்திரனைக் கவ்வியவுருவம். சங்கு, திருமாலுக்கு ஒராயுதமாம். அபிஷேகஞ் செய்யவும் உதவும். தவளை அக்கியால் சாபமேற்றதுமாம். காமதேனு திருப்பாற்கடலில் பிறந்து தேவர்களுக் குபகரிப்பது, வசிட்டரிடத்தும் இப்பெயர்கொண்ட ஒரு பசு உண்டு. இருதத்துவசனைக் காண்க. உச்சைச்சிரவம் திருப்பாற்கடலிற் றோன்றி இந்திரனிடமிருக்கும் குதிரை.

**சலசூத்திரம்** — (Water Pump) இது கிணற்றிலுள்ள ஜலத்தை மேலுக்குக்கொண்டு வரும் யந்திரம்.

**சலதரை** — பாண்டுபுத்திரனாகிய வீமன் மனைவியரில் ஒருத்தி, குமரன் சுகுணன்

**சலநிதி** — சீவகன் தோழர் ஐஞ்ஞூற்றுவரில் ஒருவன்.

**சலந்தன்** — திருதராட்டிரன் குமான்.

**சலந்தான்** — 1 ஒரு தவளை, பன்னிரண்டு வருஷம் மழையில்லாத க்ஷாமகாலத்தில் அலரியடியிற்றங்கி இருந்து அம்மரத்தடியிலிருந்த சிவமூர்த்திமீது மலரை உகுத்த புண்ணியத்தால் அரசனாகித் தேவர்களை வருத்தி விஷ்ணுவால் வெல்லப்பட்டது. (திருப்பூவண புராணம்.)

2. இவன் ருத்ரனைப் போலுருக்கொண்டு பார்வதியாரிடம் சென்றனன். பார்வதிதேவி இவனது கபடவேஷத்தைத் தோழியராலறிந்து மறைந்தனள். இவன் ருத்ரமூர்த்தியிடம் யுத்தஞ் செய்கையில் பார்வதியாரைப்போல் மாயையால் மாயா பார்வதி யமைத்து எதிரில் கொலைசெய்து அஞ்சாமை கண்டு சிவமூர்த்தியால் மாண்டவன். (பாத்மம்.)

**சலந்தரவதமூர்த்தி** — சலந்தரனை வதைக்க எடுத்த சிவமூர்த்தியின் வடிவம்.

**சலந்தராசுரன்** — தேவேந்திரன் இறுமாப்புடன் கைலையடைகையில் சிவமூர்த்தி பூதவடிவாய் எதிரில் தோன்றினர். இந்திரன் பூதத்தின்மீது தனது வச்சிரத்தை எறியப்பூதவுருக்கொண்ட சிவமூர்த்தி உக்கிரவுருவுடன் கோபங் கொண்டவர்போல் சீற்றங் காட்டினர். இந்திரன் பொறுக்க வேண்டினமையால் சிவமூர்த்தி அக்கோபத்தைக் கடலில் விடுத்தனர். அது ஒரு குழந்தையுருவாய் வளருகையில் பிரமதேவர் கையில் எடுக்க அவர் தாடியைப் பிடித்து வருத்தியது. அதனாலும் சலத்தால் தாங்கப் பெற்றதனாலும், இக்குழந்தைக்குச் சலந்தரன் எனப் பெயர் இட்டனர். இவன் வளர்ந்து பிரமனை எண்ணித் தவஞ்செய்து பல வரங்களைப் பெற்றுத் தேவர் முதலியோரை வருத்திப் பலரையும் வெற்றிகொண்டு சிவமூர்த்தியிடம் போர்க்குச் சென்றனன். சிவமூர்த்தி ஒரு கிழவேதியராய் எதிர்தோன்றி ஆசிர்வதித்து எங்குச் செல்கிறாய் என, அவன் கைலைக்கு யுத்தஞ்செய்யப் போகிறேன் எனக் கூறினன். ஆயின் நான் கிழிக்கும் இவ்வளவு பூமியைப்பேர்த்து எடுக்க எனக் கூறிப் பூமியில் வட்டமாகக் கிழித்தனர். சலந்தரன் அதனைப் பேர்த்துத் தலையில் இட அதுவே சக்கரமாக இவன் உடலைக் கிழித்தது. அதனால் இறந்தவன். இவன் தேவி பிருந்தை (ஆதித்ய புராண)

**சலந்திரன்** — ஒரு இருடி. இவன் காமவிகாரத்தால் கடலில் விழுந்த ஒரு பெண்ணைக் கடலில் உடன்விழுந்து தேட இவர்களுடன் இந்திரனும் உடன்விழுந்து தேடினன்.

**சலபதை** — ஒரு காந்தருவப் பெண்.

**சலபாகங்கள்** — மகாசமுத்திரம் பூமியைச் சூழ்ந்துள்ள பெரிய சலபாகம். கடல் அதில் சிறிய ஜலபாகம். ஜலசந்தி பெரிய ஜலபாகங்களை யொன்று சேர்க்கும் சிறிய ஜலபாகம். வளைகுடா ஏறத்தாழ பூமியாற் சூழப்பட்டுக் குறுகியுள்ள ஜலபாகம். விரிகுடா விரிந்த முகத்தை யுடையதாய்ப் பூமிக்குள் சென்றிருக்கும் சமுத்திரப்பாப்பு. (பூகோளம்.)

**சலபுண்டன்** — கத்ருகுமான், நாகன்.

**சலபோசன்** — விருத்தேசநன் குமரன். இவன் குமரன் சுரோசனன். தசரதருக்கு இராமரைப் பிரிந்து உயிரிழக்கச் சாபங் கொடுத்தவன்.

**சலப்பிரமாணம்** — இது, நியாயசபையில் ஜலத்தில் பிரமாணஞ் செய்யுமுறை, வாதி பிரதிவாதிகளிருவரும் நாபி அவ்வளவு ஆழத்திலுள்ள ஜலத்தில் மூழ்கிநின்று வருணனை உண்மைகூறத் துதித்து முழுகுகையில் கரையிலுள்ள வீரன் அம்பாலெறிய அதனைப் பிடித்துக்கொண்டு பிரதிவாதியை முழுகினவனாகக் காணின் சுத்தனாக எண்ணுவது. (யாஞ்ஞவல்கியம்.)

**சலம்** — அக்னியின் வடிவமும் பூமிக்குக் காரணமானதும், அமிர்தத்திற்கு உற்பத்திஸ்தானமும் ஆனது. (பார - அச்.)

**சலர்க்காரமுனி** — இவன் பிரமசாரியாய் நெடுநாள் இருந்ததால் பிதுர்க்கள் தலைகீழாக மரத்தில் தொங்குதல் அறிந்து கத்ருகுமரியாகிய தன் பெயருடன் ஒத்தசலர்க்காரையை மணந்து யமன் கட்டளைப்படி மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த இருபத்தொரு பிதுர்க்களைத் தொங்குதலினின்றும் நீக்கினன். இவன் குமரன் அத்திகன். இவன்தன் மனைவிதொடையில் தூங்க மனைவி சந்தியாகாலம் கடத்தல் கண்டு எழுப்பினள். அதனால் மனைவியை நீங்கினவன்.

**சலர்க்காரை** — 1. நாககன்னிகை, கத்ருவின் குமரி, வாசுகியின் தங்கை.

2. ஒருபொருள் கருதிக் கூறியதற்கு வேறுபொருள் கற்பித்துக்கொண்டு பழித்தல். (தருக்).

**சலவாதி** — வேற்றூருக்குச் செய்திகொண்டு செல்லும் பறையன்.

**சலன்** — 1. சோமதத்தன் குமரன்.

2. சூரியகுலத் தரசனாகிய பரீக்ஷித்தின் குமரன். தாய் சுசோபை. இவன் ஒருநாள் வேட்டைக்குச் சென்று நெடுநேரம் வேட்டையாடத் தனது குதிரைகள் இளைத்தன. இவன் ஒரு மானைக்கண்டு துரத்தத் தன் குதிரை வலியற்றதாய் இருந்ததால் வாமதேவருஷியைக்கண்டு குதிரையை இரவலாகக் கொண்டு அதனைமீண்டும் கொடாமல் இருந்தனன். முனிவர் குதிரையைக் கேட்க அரசன்மறுத்து அருகிருந்தவரை ஏவி முனிவரை வருத்தக்கூறினன். அவர்கள் அவ்வகைசெய்யத் தொடங்குகையில் முனிவர் கோபித்தனர். அக்கோபத்தில் அநேக அரக்கர்தோன்றி அரசனையும்அவன் வீரர்களையும் மாய்த்து மறைந்தனர்.

3. க்ஷத்திரியன் சந்திரவம்சம், குருபுத்திரனாகிய ஜகுநுவம் சத்தவனாகிய பாகலிக புத்திரனாகிய சோமதத்தன் புத்திரன். இவனுடைய சகோதரர்கள் பூரி, பூரிசரவன்.

**சலாங்குகாரன்** — செம்படவன், முத்துக் குளிப்போர் வகை.

**சலாசந்தன்** — துரியோதனன் தம்பி. நாலாநாள்யுத்தத்தில் வீமனால் இறந்தவன்.

**சலாசுரன்** — வீமாசுரனைக் காண்க.

**சலி** — சுவபலருக்குக் காந்தியிடத் துதித்த குமரன்.

**சலேயு** — (சந்.) ரௌத்திராசுவன் குமரன்.

**சல்யகன்** — கத்ருகுமரன், நாகன்.

**சல்லன்** — விராத்திய க்ஷத்திரியனுக்கு அவ்வித க்ஷத்திரியஸ்திரியினிடத்தில் பிறந்தவன். இவனுக்கு மல்லன், நிச்சுவிநடன், கர்ணன், கசன், திரவிடன் என அந்தந்தத் தேசங்களில் ஒரு பெயர்.

**சல்லாபம்** — நாடக உறுப்பினுள் ஒன்று. இது, ஒரு பொருண்மேற் பேசுவார் தலைமக்களிருவராய் ஓரங்கமாய் நிருபனைச் சந்தியொன்றுது நின்றசந்தி நான்குடைத்தாவது. (வீர - சோ.)

**சல்லி** — ஒரு யாதவவீரன்.

**சல்லியங்குமரனார்** — இவர் உறையூர் சல்லியங்குமரனாரெனவுங் கூறப்படுவர். கூற்றங்குமரனார்க்குக் கூறியவிதியே இங்குங் கொள்க. இவர் பாடலில் சோழநாட்டு அரிசிலாற்றையும் அதனருகிலுள்ள அம்பல் என்னும் ஊரையும், கிள்ளி வளவனையும், சிறப்பித்துக் கூறியுள்ளார். இதனால் கிள்ளிவளவன் காலத்தவராவார் போலும். பாலையையு மருதத்தையும் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ௪௪௧-ம் பாடலொன்றும், குறுந்தொகையி லொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**சல்லியபாண்டியன்** — திருத்தண்காலூரில் தவஞ்செய்து திருமால் அருள்பெற்றவன்.

**சல்லியமுனி** — சல்லிய நூலியற்றியவர். இது மந்திரசாத்திரம்.

**சல்லியம்** — ஒரு சிற்பசாஸ்திரம்.

**சல்லியம்** — ௧௬. தலைமண்டை, எலும்பு, செங்கல், ஓடு, விறகு, விக்ரகம், சாம்பல், கரி, பிணம், தானியம், பொன், கல் தேரை, விலங்கின் கொம்பு, செத்த நாய்,

சாடி, இவை மனையில் புதைந்திருப்பன. இவற்றை யறிந்துகூறல் சல்லிய இலக்கணம்.

சல்லியன் — 1. மத்திரதேசாதிபதி, பிரகலாதனன் அம்சம். நகுலசகாதேவருக்கு நல்லம்மான். இவன் பாண்டவர்க்குத் துணை வருதல் எண்ணித் துரியோதனன் வழியில் தண்ணீர்ப்பந்தல் வைத்துப் படைத்துணை கேட்க அதற்கு இசைந்தவன். இவனுக்கு யானைக்கொடி கர்ணனுக்குத் தேர்ச்சாரதியானவன் பதினெட்டாநாள் யுத்தத்தில் தருமனால் கொல்லப் பட்டான்

2 சோமதத்தன் மூன்றாங் குமரன்.

3. விப்ரசித்தியின் குமரன்.

சவலை — இது செய்யுட்களில் முதலடி, இடையடி, கடையடிகள் குறைந்து வருவதாம். (வீர சோ.)

சவலைக்காரர் — செம்படவரில் ஒரு வகையினர். (சவலைத்தடி படகு தள்ளும் துடுப்பு.) இவர்கள் பள்ளிகளுக்கு நெருங்கியவர். இவர்களிற் சிலர் உழுவோர் சிலர் நாகசுரக்காரர் இவர்களில் உழுந்தொழிலாளன் படையாச்சி பட்டமும், நாகசுரக்காரன் அண்ணாவிபட்டமும் பெறுவன். இவர்கள் மறவரையும் ஒத்தவர்கள் என்பர். (தாஸ்டன்.)

சவதா — (ஸ்வதா.) பிரமனால் மானஸிகமாகச் சிருட்டிக்கப்பட்டுப் பிதுரர்களுக்குக் கொடுக்கப்பட்டவள்.

சவதாநாச்சையர் — இவர் மனைவி பெண் கரு உயிர்க்கையில் இவர்தாரணஞ் செய்ய வர மற்றொரு ஆண்மகவுவர அவளைப் பார்க்கலாகாதென அகநறியவர்.

சவநருஷி — 1. இவர் பிருகுருஷியின் புத்ரர். இவர் தீர்த்தயாத்திரை சென்று ரேவா நதியைத் தாண்டுகையில் ஒருபாம்பு இவரைக் கவ்விப் பாதாளமடைந்தது. இருடி நாராயணரைத் துதித்ததால் விஷம்வக நீங்ினராய்ப் பாதாளவாசிகளால் பூசிக கப்பட்டு அவ்விடமிருந்தனர். இவர் பாதாளத்தில் பிரகலாதனுக்குத் தீர்த்த மகிமை கூறப் பிரகலாதனிவர் சொற் கொண்டு பூமியில் தீர்த்தயாத்திரை செய்தனன்.

2. வசிட்டருக்கு ஊர்ச்சையிடம் உதித்தவர். இந்திரனைப் பூதங் கொல்லாது காத்தவர். அவுரவர் எனவும் பெயர். பிருகுவினைப் பதுமனிடம் தருமங் கேட்க ஏவினவர்.

3. இவரை ஒரு வேடஸ்திரி புற்றில் கண்டு அரசனிடம்விட அரசன் இவர்க்குக் கண் மறைந்தமைகண்டு அச்வனி தேவரால் வைத்யஞ் செய்வித்தனன். சில காலம் பொறுத்து இவர் அவ்வேடப் பெண்ணை மணந்துகொண்டனர். (சிவமகா புராணம்).

சவநன் — 1. பிராமணனுக்குச் சூத்திரப் பெண்ணிடம் பிறந்தவன். இவனை நிடாதன் எனவுங் கூறுவர்.

2 பிரிய விரதனுக்குப் பெரிஹஷ்மதியிடத்து உதித்த குமரன் இவன் ஊர்த்வரேதஸ்.

சவபக்ஷன் — கபாலபாணனைக் காண்க.

சவரர்புளிஞ்சர் — வேடச்சாதியருள் ஒரு வகையினர். பிரச்சேதனுடைய நாட்டிற்கும் சயந்தி நகரத்திற்கும் இடையேயுள்ள குறிஞ்சி நிலத்துச் சிற்றூர்களில் வாழ்ந்தவர்கள் வழிப்பறித் துண்பவர்கள். பிடி விழுந்தபின்பு வாசவதத்தையோடு நடந்துவந்து உதயணன் ஓரிடத்தில் நின்றபொழுது அவ்விருவரையுஞ் சூழ்ந்து வருத்தத்தொடங்கி, முதலில் உதயணனாலும், பின்புவந்த இடவகன் சேனைவீரர்களாலும், தோல்வியுற்று ஓடிச்சென்றனர். இவர்கள் உதயணன் நாட்டுக்குடிகளாக இருந்தும் அறியாமையினாலே அவனை இங்ஙனம் செய்தனர். (பெ-கதை)

சவரன் — ஒரு இருடி, சமிந்தவாயினர் மாணாக்கர்.

சவரி — சபரிக்கு ஒரு பெயர்.

சவன் — விவசுவானுக்குச் சாயாதேவியிடம் உதித்த குமரன்.

சவன்னன் — இராஜஸ்திரிக்குப் பிராமணனால் பிறந்த குமரன்.

சவஸ்தி — வாயுவின் தேவி. இவளில்லாவிடத்து ஆதான பிராதானங்களில்லை.

சவிதா — 1. காசிபருக்கு அதிதியிடம் உதித்த குமரன். இவன் துவாதசாதித்தரில் ஒருவன். தேவி பிரசநி.

2 தருமியைக் காண்க.

சவித்து — அச்வநிதேவர்க்குத் தந்தை என்பர். இவர் மனைவி துவஷ்டரை.

சவுதம் — விரதங்களில் ஒன்று.

சவுதாசன் — (சூ.) சுதாசன் குமரன். இவனுக்கு மித்திரசகன், கல்மாஷபாதன் எனவும் பெயர். இவன் புத்திரப்பேறில்லாமல் வசிட்டரால் புத்திரோற்பத்தி செய்துகொண்டான். சம்வத்தனைக் காண்க.

சவுநகம் — ஒரு நதி.

சவுந்தரசாமந்தன் — குலபூஷண பாண்டியனுக்குச் சேனுபதி. இவன் சிவபத்தி யுடையனாய் அரசன் சொற்படி வாழுநாட்களில் சேதிராயன் என்னும் வேடன் அரசனை எதிர்க்கவர அரசன் சேனுபதியை நோக்கிப் பொக்கிஷந்திறந்து பொன்னெடுத்துச் சேனை கூட்டுக என்றனன். அரசன் சொற்படி எடுத்த பொருளைச் சேனுபதி சிவதிருப்பணிப் பொருட்டுச் செலவிட்டனன். இதனை மற்றவரால் அறிந்த பாண்டியன் சேனுபதியை நோக்கி நாளை யுதயத்தில் சேனைகள் வரவேண்டு மெனப் பயமுறுத்தினன். சாமந்தர் சொக்கலிங்கமூர்த்தியை வேண்டச் சிவமூர்த்தி அசரீரியாய் அஞ்சாதிருக்க, நாளை விடியுமுன் சேனைகள் வருமெனக் கூறிப் பூதகணங்களைச் சேனுவீரர்களாக்கி அரசன் மகிழ உடன்கொண்டு வந்தனர். அரசன் சேனுவீரர்களைக் கண்டு இவர்கள் எததேசத்தவர்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கையில் சேதிராயனுகிய பகைவன் புலியடிக்க இறந்தான் என்று செய்தி வரக்கேட்டு அச்சேனைகள் செல்லும் இடம் செலுத்துக என உடனே சேனைகள் மறையக் கண்டு பாண்டியன் கடவுளை வணங்கிச் சேனுபதியை வியந்து பணிந்தனன்.

சவுபரி — வேதமித்திரர் மாணுக்கர். இவர் தேவி மனோமயை. இவர் ஒருமுறை கிரௌஞ்சனைப் பெருச்சாளியாகச் சபித்தவர். இந்த மகருஷி காளிங்கன் சேர்ந்திருந்த மடுவிலுள்ள சலசரங்களைக் கருடன் நாடோறும் புசித்து வருகையில் ஒருநாள் இவர் அம்மடுக்கரைக்கு வந்து அவ்விடம் இருக்கும் பிராணிகளை இம்சிக்கும் கருடனைக்கண்டு இரங்கி இனி இந்த மடுவிற்கு வாராதிருக்க எனப் பணித்தனர். முனிவர் கூறியதை அறியாத கருடன் மீண்டும்வர முனிவர் கோபித்து இனி இங்கு வரின் உயிரிழக்க எனச் சபித்தனர். இவர் ஒருகாலத்து யமுனைநதிக்குத் தீர்த்தமாடச் சென்று அந்நதிக்கரையில் நிற்கையில் மீன் இரட்டைகள் தமது பல குஞ்சுகளையும் இடையில்விட்டுத் தாம் அவைகளுக்குக் காவலாய் இருபக்கத்திலும் இருந்து பாதுகாத்து விளையாடுதலைக் கண்டு தாமும் அவ்வகை இருக்க எண்ணி மாந்தாதாவின் நூறு குமரிகளை மணந்து அப்பெண்கள் களிக்க இன்பந்தந்து இருக்கையில் மாமன் மாமிமார்கள் இந்த ருஷிக்கு நமது குமரிகளைக் கொடுத்தோமே எனச் சிறிதுநாள் பொறுத்துவந்து அப்பெண்களைக் காணவர, முனிவர் ஒவ்வொரு பெண்களிடத்தும் ஒவ்வொருவராகத் தனித்தனி இருத்தல்கண்டு களித்துச் சென்றனர். பிறகு முனிவர் இல்லறத்தில் வெறுப்புற்றுத் தவமே கைக்கொண்டனர். (பாகவதம்).

சவுரி — 1. நிருதி புத்திரி, தாருகன் தேவி.
2. தாருகாசுரன் மனைவி.

சவையப்பநாயகன் - காளமேகரால் "சுருக்கவிழ்ந்த" என்னும் வசை பாடப்பெற்றவன்.

சவ்வருணன் — அரசர் மீளிகுமரன். சூரிய புத்திரியாகியதபதியை வசிட்டரால் மணந்தவன். சந்திரவம்சத்து அரசனுயினும் வசிட்டரைக் குருவாக்கொண்டவன்.

சவ்வாதுபுலவன் — இவன் இருந்தது தொண்டைநாடு. ஆநந்தரங்கபூபதி மேலும் சோலையப்ப முதலியார்மீதும் பாடிப் பரிசு பெற்றவன். (தனிப்பாடற்றிரட்டு).

சவ்வியன் — அங்கீரசன் சந்ததியின் இருடி.

சவ்வீரம் — இது ரஸவகைக் கட்டுச்சரக்கு பாஷாண வகையைச் சேர்ந்தது. இதனை மருந்தாக உபயோகிப்பதில் அதிக கவனம்வேண்டும். தேகத்தின் மேற்பட்டால் புண்ணும் உண்டாம் கொல்லும்.

சவ்வீரவைப்பு — வைத்திய நூலிற்கூறிய எடைப்படி கந்தகம், இரஸம், உப்பு இம்மூன்று சரக்குகளையும் ஒன்றுகச்சேர்த்து, இரஸத்தினளவு மீண்டும்வருத்த உப்பு சேர்த்தரைத்து அரைத்த மருந்துகளுடன் இடைப்படி துருசு, படிகாரம், பொட்டிலுப்பு, பூநீறு, அன்னபேதி, நவச்சாரம், முதலியவைகளையும் குழியம்மியி லிட்டரைத்து மேற்கூறிய மருந்துகளுடன் சேர்த்துக் குப்பியில்டைத்து சீலை மண் செய்து வாலுகாயந்திரத்தில் கழுத்தளவு மறைத்து மேல்மூடி யெரிக்கு முறைப்படியெரித்து ஆறியபின் குப்பியின் கவசம் நீக்கிப்பார்க்கக் குப்பியின் வாயில் சவ்வீரக்கட்டி காணப்படும்.

சவ்வீரன் — இரகுகுணனைக் காண்க.

சளுக்கியர் — 1. சளுக்கர், சாளுக்கியர் எனப்பட்டவர்கள் ஆரிதபஞ்சசிகர் எனும் முனிவர் தமது யாககுண்டத்தில் அவிசிடும்போது அவரது தீர்த்த பாத்திரத்திருந்து ஓர் அரசன் தோன்றினன் சுளுகம எனும்

அப்பாத்திரத்திலிருந்து தோன்றினவனாதலினவன் வம்சத்தார் சளுக்கியர் எனப்பட்டனர். பம்பாய் கஜடியர் (339 பக்கம்.)

சற்குணன் — ஒரு அரசன். சிவபூசைசெய்து முத்தியடைந்தவன்.

சற்சான் — காந்தருவராசன், இவன் குமரன் சுகேது.

சற்பம் — இதுசாதன மிரண்டுடையதாய் வெல்ல வேண்டுமென்னும் இச்சையுடையான் கதை. (தருக்கம்.)

சற்பி — ருஷபத்துவசன் என்னும் ஏகாதசருத்திரன் தேவி.

சற்புத்திரன் — ஓர் வணிகன். இவன் கதிர்காமத்திற்குச் செல்லுகையில் ஓர் யானை வழியில் வந்து இவனைப் பிடித்தது. இவன் கதிர்காமா என்னக் கந்தமூர்த்தி வேட உருவுடன் தோன்றி யானையைக் கொன்று வணிகனை விடுத்தனர்.

சன்மிஷ்டை — விருஷபர்வாவின் குமரி. இவள் சுக்கிரன் பெண்ணாகிய தேவயானையுடன் நீராடி அவள் சேலையை யறியாது உடுத்தினள். அதனால் அவள் கோபிக்க அவளைக் கிணற்றில் தள்ளினள். இதனால் சுக்கிரன் கோபித்து அரசனுக்கு அறிவிக்க அரசன் தன் பெண்ணினைத் தேவயானையாகிய சுக்கிரன் பெண்ணுக்கு அடிமையாக்கினன். அடிமையாகிய சன்மிஷ்டை தேவயானையறியாது அவள் கணவனைக் கூடித் துற்கிரன், அநு, பூரு என மூன்றுகுமாரரைப் பெற்றாள். இவள் தந்தை விடபன்மன் எனவுங் கூறுவர். (பாகவதம்).

சனசித்து — விசுவசித்து குமரன்.

சனமித்திரன் — அரசன் புத்தபீடிகையைத் தரிசித்தற்கு மணிபல்லவம் சென்றபொழுது நாகபுரத்தைப் பாதுகாத்தவன். புண்ணியராசனுடைய மந்திரி. (மணிமேகலை).

சனபாயி — இவள் பண்டரிபுரத்து வந்த யாத்திரைக் காரரின் கன்னிகை. இக்கன்னிகை, ஆண்டுதரிசனார்த்தமாக வந்த தாய் தந்தையர்களை நோக்கி நான் இப்பண்டரிபுரம்விட்டு வருவதில்லை யென மறுத்து இருக்கையில் நாமதேவரிவளைக் கண்டு தனித்திருக்கின்றாய் உன் தாய் தந்தையாரென எனக்குத் தந்தை, பாண்டுரங்கன், தாய் ருக்குமாயி யென்ன இவளைத் தமது வீட்டிற்கு அழைத்துச் சென்று வளர்த்துவருகையில் கண்டவர் நீயாரென நான் நாமதேவர் வீட்டடிமை என்பாள். இவ்வகையிருக்கையில் ஒருநாள் காற்று மழையால் நாமதேவரிருந்த வீடு இடியப் பெருமாள் அதைச் சக்கரத்தால் காத்தலைக் கண்டு இந்த இரவில் இவ்விட மென்ன செய்கின்றாய் என்று கேட்கப் பெருமாள் உனது குடிசை யழிந்தது. அதனைக் காக்காவிட்டால் உனது தாயாகிய ருக்குமாயி என்னை நிந்திப்பாளாதலால் என்று பேசிக்கொண்டிருக்கையில் குணாயியும் வந்து பணிந்தனள். மூவரும் வீட்டினுள் புக ஜனபாயி வந்து எதிர்கொண்டு வணங்கினள். நாமதேவர் பெருமாளை வணங்கி விருந்துண்டு செல்கவெனப் பெருமாளிசைந்து கோவிந்தன், விட்டலன், நாராணன், மகாதேவன் ஆகிய பிள்ளைகளும் நாமரும் குணாயியும் மனைவியும் ஒரு கலத்தில் உண்ண ஜனபாயி கண்டு விமலனே என்னைவிட்டு உண்பது உனக்கு அழகாமோ எனப் பெருமாள் நாமரை நோக்கி இவ்வமுது எனக்கு நன்கில்லையென்று எழுந்திருக்க ராஜாயியும் உடனெழுந்தனள். இதனால் நாமதேவர் சனபாயி உண்ணாததால் வந்ததென்று எண்ணப் பின்பு குணாயி, சனபாயியை அழைத்து இவர்கள் உண்ட எச்சிலைக் கொடுத்தாள். சனபாயியும் இது தேவாமிர்தமெனக் கைக்கொண்டாள். சனபாயி இதைக்கொண்டு பெருமாளை நோக்கி எனது வீட்டிற்கு உண்ண வருக என்றழைக்கப் பெருமாள் அவளை நோக்கி அம்மையே நீ உடனுண்ணாததினால் நான் உணவுண்டிலேன் எனக்கு மிகவும் பசிக்கின்றதெனச் சனபாயி அவர்கள் கொடுத்த எச்சிலிருக்கின்றது. அது உமக்குத் தகுமாவென்ன அதுவே வேண்டுமென்னப் பெருமாள் அவளுடன் உண்டு அவ்விடத்திலேயே சயனித்தனர். பின்பு குணாயி விழித்து நடந்த செய்தியைத் தனது புதல்வனுக்கு உரைத்தனள். நாமதேவர் அவரது இயற்கையென்ன, பெருமாள் சனபாயியின் மாவரைக்கும் திரிகையைத் துடைத்து உன்வரவினை எதிர்பார்த்திருக்கிறேனெனச் சனபாயி விழியாமை கண்டு அவளை எடுத்து உட்காருவித்து அவர் கரத்தால் தலைமயிரைச் சிக்கறத் திருத்தி ஒரு கூடையில் அரிசி கொண்டு வந்து நான் மாவை யரைக்கின்றேன் நீ பாடு என்னலும் இவள் பாடக்கேட்டுப் பெருமாள் பரவசரா யிருக்கையில் குணாயி சனபாயிபால் வந்து உன்னிடத்தில மா

வரைக்க அரிசி யேதென்று பிரம்பெடுத் தடிக்க அது பெருமாள் முடிமேல் படுத லும் நான் விடோபாஜஞபாயியின் அன் பால் யான் இங்குவந்து மாவரைக்கின் றேன் என்னை யடியாதே என்ன, குஞபி, சஞபாயி பெருமாளைத் தன் வசப்படுத்திக் கொண்டாள் என்று வருந்துகையில் பெரு மாள் அரைத்தமாவை வாரிக் கூடையில் நிரப்பி மீண்டும் துயில, சஞபாயி விடியற் காலத்தில் எழுந்து பெருமாளை யெழுப் பிக் கோயிலுக்குப் போகாமலிருப்பின் ஊர் கலகமாகுமென்னப் பெருமாள் விடிந் ததோ என்னவெழுந்து நித்திரை மயக்கத் தால் பீதாம்பரத்தையும் பதக்கத்தையும் விட்டுவிட்டுச் சஞபாயியின் கந்தையை உடுத்திக்கொண்டு கோயிலுள் சென்றனர். விடிந்தபின் அர்ச்சகர் கோயிலைத் திறக்கப் பெருமாள் கந்தை உடுத்தி யிருத்தலைக் கண்டு இக்கந்தை சஞபாயியின் கந்தை போல் தெரிகின்றதென்று நாமதேவர் வீடுசென்று நோக்க அவ்வீடு புதிதா யிருத்தலைப்பார்த்து உட்சென்று சஞபாயி யைக்கண்டு பெருமாளின் பீதாம்பரத்தை நோக்கிப் பதக்க மெங்கென்ன அவள் கிடையாதென்ன அவள் துகிலைச் சோதிக் கப்பதக்கம் கிடைத்தது இவள் சுவாமி துரோகி என்று இவளைக் கழுவேற்றக் கொண்டு செல்லுகையில் இவள்பெருமா ளைத் துதிக்கக் கழுமரம் நீருயது. பின் சஞபாயிவீட்டில்வந்து முன்புபோல் பெரு மாளைப் பாடத்தொடங்கவும் அவளிடத் தன்புள்ள பெருமாள் அவள் பாடும் செய் யுட்களை எழுதிவந்தனர். ஒருநாள் ஞான தேவர் பெருமாளைத் தரிசிக்கவரப் பெரு மாள் தனித்தெழுதுதல் கண்டு ஞானதே வர் என்ன எழுதுகின்றீர் என ஜஞபாயி யின் செய்யுட்களை எழுதுகிறேனெனக் கேட்டு வியந்தனர். பின் ஞானதேவர் நாமதேவரைக் காணப் பெருமாளுடன் வந்து நாமதேவரைநோக்கிச் சஞபாயியை யழைக்க வெனச் சாணமிதித்துக்கொண் டிருந்த ஜஞபாயிவர ஞானதேவர் நாமரை நோக்கி ஜனபாயியின் பாட்டைப் பெரு மாள் எழுதக் கண்டேன் என்னப் பெரு மாள் அவள் பாடுங்கவியில் மிக்க அன் புள்ளனாதலால் எழுதினேன். இதனைப் படிப்போர் கேட்போரிடமும் அவ்வகை அன்புளேன் என்றார். பின் ஞானதேவர் நாமதேவர் முன்பிறப்பில் பிரகலாதனன பின் அங்கதன் பிறகு உத்தவராய் இப் போது பெருமாளுக்கன் பராயினர்; உங்க ளில் ஞானதேவர் பாட்டைச் சச்சிதானந்த ரும், நிவர்த்திபாட்டினைச் சோபானதேவ ரும், முக்தாயியின் பாட்டை ஞானதேவ ரும், பரமவானந்தர் பாடலை விசோபா கேசர், கூர்மதாசர் கவியை, சுதேவர், நாம தேவர் ஜஞபாயி இவர்கள் செய்யுள்களை யானும் எழுதுக எனக் கட்டளைதந்து பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினர்.

சஹ்ரு — உவசம்பநிக்குத் தந்தை.

சன்னதேயு — (சங்) ரௌத்திராசுவன் கும ரன்.

சன்மசயன் — (சங்.) பூருவின் குமரன், இவன் குமரன் பிரசன்னுவான்.

சன்மிஷ்டை — சன்மிஷ்டையைக் காண்க.

சஜ்ஜனகசாருகர் — இவர் ஓர் ஊன்விற்பவர், பெருமாளிடத்துள்ளன் பாய்ச் சாளக்கிரா மத்தை நிறைகல்லாய் வைத்துப் பூசித் திருக்கையில் கண்டவேதியர் ஒருவர் இவ ரையணுகி உனக்கு இது தகாது நீ ஊன் விற்போன் என அவரிற்பிரித்து அதைக் கொண்டு தாம் அன்று வேண்டிய சிறப் புடன் பூசித்தனர். அன்றிரவு பெருமாள் அந்தணர் கனவிற்றோன்றி என்னைக் கசாருகரிடம் சேர்க்காவிடில் உன்னையும் உன் குடும்பத்தினையும் வருத்துவேனென வேதியர் பயந்து கசாருவிடத்தில் சாளக் கிராமத்தைச் சேர்த்தனர். சாளக்கிரா மததை நீங்கிய கசாருகர் பெருமாளை நீங்கி யதுமுதல் அன்னபானாதிகளிலரா யிருந்து சாளக்கிராமம் வந்தபின் பூசித்துத் தீர்த்த பானஞ் செய்து உணவாதிகளருந்தினர். இவர் ஜகந்நாதயாத்திரை செய்ய வெண் ணிச் சாளக்கிராமத்தையு முடன்கொண்டு ஓர் கிராமத்தில் தங்க அங்கிருந்த ஒருத்தி யிவரிடம் காமவிருப்புள்ளவளாய் விருந் திட்டு இரவிற்புணர அழைக்கக் கசாருகர் கணவனிருக்கையில் அயலவரைப் புணர் தல் அடுக்காதெனக் கேட்ட விபசாரி கண வனைக் கொன்று அவன் றலையைக் கசாரு கரிடம் காட்டி உம் பொருட்டுக் கண வனைக் கொன்றேன் என்னைப் புணர்க அன்றேல் உன்மீது பழிசுமத்துவேன் என்றனள். கசாருகர் அப்போதும் மறுக்க விபசாரி என் கணவனைக் கொன்று என் னைப் புணர அழைத்தான் எனக் கூக்குர லிடக் கண்டோர் அரசனிடப் விட அரசன் இவர் முகக்குறியால் கொலைசெயாதவ

ரொன்தஞ்சிப் பிரத்யக்ஷமாகத் தலையிருத்த லால் அவள் கையில் சரிகைதந்து கசாருகர் கரத்தைத் துண்டிக்கச் செய்தனன். கை நீங்கிய கசாருகர் ஜகந்நாதஞ் சென்று பெருமாளைச் சேவிக்கச் செல்கையில் பெருமாள் என் தாசன் வருகின்றா னவனை எதிர்கொண்டு சிவிகையில் சந்நிதிக்குக் கொண்டு வருக எனக் கட்டளையிட அருச்சகர்கள் அவ்வாறே எதிர்சென் றழைக்கக் கசாருகர் நான் ஒரு தீங்குசெய்யாதிருந்தும் என் கைக்குறைத்ததற்குக் காரணமென்ன எனப் பெருமாளைநோக்கி வருந்தப் பெருமாள் தரிசனந்தந்து நீ முன்பிறப்பில் வேதியன், கங்கைக்கரையில் தியானத்திருந்த காலத்துக் கசாருகன் ஒருவன் அவனைக் காணாது ஓடிவந்த பசுவினைக் கொலை செய்யவேண்டி யாண்டிருந்த வுன்னை யிவ்வழி பசுவந்ததைக் கண்டனையோவென நீபேசாது கையாற் காட்டினையாதலால் கைகுறைபட்டனை கசாருகனைப் பிறந்தனையென்று தாசருக் குணர்த்தி கைவளர அநுக்ரகித்தனர். இவருக்குச் சஜாணகசாயி யெனவும் பெயர்.

சனர் — ஒருவகை அசுரர், இவர்கள் சமுத்ரமத்தியிலிருந்து தேவர்களை வருத்தினர். இவர்களை விஷ்ணு கொலைசெய்தனர். அதனால் விஷ்ணுவிற்கு ஜனார்த்தனர் என ஒரு பெயர்.

சன்மதா — பிள்ளைபெற்ற வீட்டிலுள்ள ஒரு தேவதை, பிள்ளைபிறந்தபின் ஷஷ்டி பூசை என்னும் கர்மத்தில் பூசிக்கப்பட்டவள். மிதாக்ஷரம் 'ஸூதிகாவாஸ நிலயா ஜன்மா நாமதேவதா."

சன்மார்க்கம் — வேத, புராண கலைஞான சமயசாத்திரங்களுணர்ந்து பூர்வபக்ஷஞ் சித்தாந்தமுணர்ந்து பதி, பசு, பாசமாகிய ஞானத்தில் ஞாதரு, ஞான, ஞேயங்கள் பொருந்தா வண்ணம் பதிப்பொருளுடனிரண்டறக் கலந்திருத்தல்.

சஷ்டிதேவி — 1. இவள் பிரகிருதி தேவியின் ஆறுவது அம்சமானவள். இவளேஸ்கந்த மூர்த்தியின் பிராண ப்ரியையான தேவசேனை இவள், சுவாயம்பு மனுவிற்குப்பிள்ளை நெடுநாளிலாதிருக்க அவன் மனைவிமாலினி (12) வருடம் கழித்து உயிரிழந்த ஒரு பிள்ளையைப் பெற்றாள். அரசன் பிள்ளையை மயானத்தில் வைத்து அழுகையில் இந்தத்தேவி தரிசனந்தந்து நான்பிரமன் மானசபுத்திரி, தேவாசுர யுத்தத்தில் தேவர்களுக்குச் சேனாதிபதியாயிருந்ததால் தேவசேனையென எனக்குப் பெயர் என்று குழந்தையை யெடுக்கக் குழந்தை யுயிர்பெற்றுச் சிரித்தது. இவள் குழந்தையுடன் ஆகாயத்தில் செல்ல அரசன்வேண்டியதால் பிள்ளையைத்தந்து இவனுக்குச் சுவிரதன் எனப்பெயரிடுக இவன் தீர்க்காயுளுட னிருப்பா னெனக்கூறி மறைந்தனள் (தேவி - பா.)

2. இவள் பிரகிருதியின் ஆறுவது அம்சமாகத் தோன்றியவள். இவள் சிசுக்களைக் காப்பவளும், சிசுக்கள்பொருட்டுப் பூசிக்கப்படுபவளும், பிரசவக்ருகத்தில் (சு)வது நாளிலும் (உக) ஆம் தினத்திலும் பூசிக்கப்பட்ட சம்பத்ஸ்வரூபிணி. (தேவி - பா)

சக்ஷுநதி — கங்கையிற் கலக்கும் நதி

சக்ஷுர்மநு — சர்வதேசஸ் குமரன்.

சக்ஷுவு—யயாதிபோன். அநுவின்குமரன்.

## சா

சாகசரிகன் — ஆயிரம் காலாட்களுக்குத் தலைவன். (சுக் - நீ.)

சாகடாயனர் — இருக்குத் தந்திரஞ்செய்த முனிவர்.

சாகம்பரி — 1. சத்தியைக் காண்க.

2. சதாக்ஷியைக் காண்க.

சாகரதுலம் — உப்புரவர், பூமியைத் தோண்டினவர்கள்.

சாகரதத்தன் — விமலைக்குப் பிதா.

சாகரன் — ஸ்ரீதத்தனுக்குப் பிதா.

சாகர் – சிந்துநதிக்கு மேற்கிலுள்ள தேசத்தார்.

சாகலம் — மத்திரதேசத்து இராஜதானி. The Captial of Madra Desa. இது சந்திரபாகை, இராவதி இரண்டுக்கும் இடையிலுள்ளது. (பா - சபா.)

சாகலன் — 1. சங்கரபாண்டியன் மிருகத்தின் மேலேவிய அம்புபட்டிறந்த இருடி, இவன் குமரன் சாங்கலன். (சேது - பு.)

2. சாவித்திரியின் தந்தையும் மாலதியின் கணவனுமாகிய அரசன்.

சாகல்யமல்லன் — நயினாராசாரியர் மேல் பூதத்தையேவின மந்திரவாதி.

சாகல்யர் —1. மாண்டுகேயர் புத்திரர். திருதராட்டிரன் தவத்திற்குச் சென்றபோது துக்கத்தைநீக்கித் தருமம் உபதேசித்தவர்.

2. சௌபரியின் குமரன். இவன்தான்

கற்ற வேதத்தைத் தன் மாணக்கருக்கு உபதேசித்தனன். இவன் மாணக்கர் வாச்சியன், மௌதக்லியன், சாலியன், கோமுகன், சிசிரன்.

3. ஒன்பதினுயிரம் வருஷம் சிவனையெண்ணித்தவமியற்றிப் பெருங்கல்விமானனவன். இவன் வம்சத்திற் சாவர்ணியென்னுஞ்சூத்ரகாரர்பிறந்தனர். (சிவ-பு.)

சாகலாசனர் — கடைச்சங்கம் மருவிய புலவர். அகநானூற்றில் "இருங்கழி" எனு நெய்தலைப் பாடியவர்.

சாகா — பிந்துமான் தேவி.

சாகேதம் — அயோத்தியாநகரம்.

சாக்கியன் — (சூ.) சிஞ்சயன் குமரன்.

சாக்கியநாயனர் — சங்கமங்கை என்னுங் கிராமத்தில் பௌத்தர்குலத்துத் திருவவதரித்துச் சாஸ்திரவிசாரணை செய்யப்புகுந்து தமது சமயம் பொய்யென அறிந்து அக்குலத்தை நீங்காமல் புறத்தில் தம்மைச் சேர்ந்தவர்கள் களிக்க அகத்தில் தாம் களிப்புடன் சிவலிங்கத் திருவுருவத்தை வெளிப்படையிற் கண்டுகல்லினை மலராக எண்ணி எறிந்துவந்தனர். இவ்வகை நாடோறுஞ் செய்துவருகையில் ஒருநாள் மறந்து போசனஞ்செய்ய உட்கார நினைவு தோன்றி ஓடிச்சென்று கல்லொன்றை எடுத்து எறிகையில் சிவமூர்த்தி இடபாரூடராய்க் காட்சிதந்துமுத்தி அளித்தனர். (பெ. புராணம்.)

சாக்கியமுனி — இக்ஷுவாகு வம்சத்தவன். இவன் தந்தை கோதமன், அவனது சந்ததியான் ஆகையால் இவனைக் கௌதமசாக்கியன் என்பர். இவன் தேவி கோபி, குமரன் ரகுலன். மிகுதிசரிதம் புத்தனைக் காண்க. கிறீஸ்து சகம் 600 வருஷங்களுக்கு முன் இவனிருந்ததாகத் தெரிகிறது. இவனது ஏழாவது சந்ததியான் சுமித்ரன். இவனைப் புத்தமதத் தாபகன் புத்தன் என்பர்.

சாக்கையன்—பறையூரிலிருந்த அந்தணன். (சிலப்பதிகாரம்.)

சாக்கையர் — செங்குட்டுவன் காலத்திருந்த கூத்தாடும் வகுப்பினர்.

சாக்ரன் — பிருகத்ரதன் குமரன், இவன் குமரன் விருஷபன்.

சாங்கதேவர் — பிரமனது ஒரு பகலில் முதல் யாமத்தில் பதினன்கு இந்திரர்கள் பிறந்து கர்மவசத்தால் சிறையடைந்தனர். அவர்களுள் ஒருவர் சாங்கர். இவர் நாரதரை நோக்கி என் பாசம் எவ்வாறு நீங்குமெனக் கேட்க நீ பண்டரியடைந்து பிறக்கின் நற்கதியடைவாயென்று ஞானேபதேசஞ் செய்துபோயினர். அவ்வாறே இவர் ஒரு கிழப்பிராமணருக்குப் புதல்வராய்ப் பிறக்கத் தாய் தந்தையர்கள் உபநயனதிகளை முடித்தனர். இவர் சகலகலா வல்லவராய் அஷ்டாங்கயோகங்களை அனுஷ்டித்து மூப்படையாமல் ஆயிரத்து நானூறு வருடம் உலகத்தில் சஞ்சரித்துவந்தனர். இவருக்குச்சீடர் ஆயிரத்துநானூற்றுவர். இவ்வகை சஞ்சரித்து வருநாட்களில் அசரீரி "உன் ஆண்மையை யடக்கும் தத்துவஞானி அளகாபுரியில் வந்திருக்கின்றனன் போய்க் காண்" என்றது. அவரைக் காணும்படி சாங்கதேவர் ஓர் கடிதம் எழுதத்துணிந்து அக்கடிதத்தை ஆசீர்வதித்து எழுதின் தான் தேசிகனுய் அவ்விடத்தில் செல்லுதல் தகாதென்றும் தேவரீர் என்று எழுதின் அவர் மூத்தோராவர் என்றுஎண்ணி ஒரு வெறுங்கடிதத்தை மாணக்கனிடத்தில் கொடுத்து அளகாபுரிக்கு அனுப்பினர். இதைச்சீடன் வான்வழிச்சென்று விடுக்கத் தேவர்வாங்கி விரித்துப்பார்த்து இது சாங்கர் கொடுத்ததல்லவா என்றனர். அதில் ஒன்றும் எழுதாமைகண்டு அவர் சாங்கருக்கு ஆயிரத்துநானூறு வருடமும் வெறுமையாய்ச் சென்றதுபோலும் என்பதை இக்கடிதம் குறிப்பிக்கின்றது. இதில் இளையது மூத்தது என்பதைக்குறிக்காதது, சுத்த சைதன்யம் எங்கும் பெரியது சிறியது அடையாமலிருப்பதை அறியாமைபோலும் என்று எழுதி அத் தூதனிடம் கொடுத்தனுப்பினர். இதைக்கண்ட சாங்கதேவர் அவரைக் காணவேண்டுமென்னும் விருப்பால் ஓர் புலியின்மேல் ஏறிச் சென்றனர். இவர் வரவறிந்த ஞானதேவர் ஓர் சுவர் மேலேறி அதை நடக்கச்செய்து அவரை எதிர்கொண்டனர். இதைக்கண்ட சாங்கதேவர் இவர் தேசிக மூர்த்தியென்று நமஸ்கரித்தனர். அவர் சாங்கரை வாழ்த்தி ஞானேபதேசஞ் செய்தனர். பின் சாங்கதேவர் பண்டரிசென்று சந்திரபாகைத் தீர்த்த தீரத்தில் தவநிலையி லிருக்கையில் பெருமாள் நடுராத்திரியில் வந்து இவரைக் கையைப்பிடித்து ஆற்றினுள் சென்றனர். அவ்வாற்றினுள் ரத்தினமணி மண்டபத்தில் சிங்காதனத்தில் பூதேவி சீதேவி

நீளாதேவியருடன் இருந்த பெருமாளை வணங்கினர். பெருமாள் உமக்கு என்ன வரம் வேண்டுமெனச் சாங்கதேவர் உன் திருவடியில் அன்பு வேண்டுமென்றனர். பின்பு கோதாவரிக்கரையிலுள்ள புண்ணியத்தம்ப மென்னுமூரில் ஓர் மடங்கட்டுவித்துச்சாளக்கிராமம் பிரதிட்டை செய்து பூசித்துவருநாளில் சங்கரன் என்னும் ஒரு வேதியன் இறக்க அவன் மனைவியும் தாயும் அவ்வேதியனுடைய எலும்பைக்காசிக்கு எடுத்துப்போவோர் இவர் மடத்திற்குள்சென்று சாங்கதேவரைப் பணியச் சாங்கதேவர் இறந்தோன் மனைவியைப் சுமங்கலியென் றெண்ணிப் புத்திருண்டாகுக எனவாழ்த்தினர். இதைக்கேட்ட பிள்ளையின் தாய் மருமகளின் நிலைமை கூறி எவ்வகைப் புத்திரனுண்டாவன் என்றனள். சாங்கதேவர் என்சொல் பொய்க்காது ஆயினும் உன்குலம் விளங்கும்படி வொருபுத்திரன் பிறப்பான்; உன் குமரனது எலும்பைவிடும் தீர்த்தத்தை அவளை உண்ணச்செய்யுங்கள் என்றனர். அவ்வாறு அவள் செய்யக் கருஉண்டாய்ப் புத்திரன் பிறந்தனன். அவனுக்கு உபநயனஞ்செய்ய வேதியரை யழைக்க அவர்கள் வாரோம் என்று மறுத்தனர். ஆதலால் சாங்கதேவர் அவர்களை நோக்கி இவன் பெருமாள் அருளால் பிறந்தவனாதலால் அங்ஙனம் கூற வேண்டாமென்ன, வேதியர்கள் ஆயினிங்குப் பெருமாள்வரக் கடவரோவென்னச் சாங்கதேவர் ஆம் என்றனர். பின்பு வேதியர் பெருமாளும்இங்குவந்தனரோவென்று கோயிலிற்சென்று காணப் பெருமாள் காணாராயினர். பின்வேதியர் காணும்படி பெருமாள் தரிசனந் தந்தனர். வேதியர்கள் ஆனந்தமடைந்து அவ்வேதியச் சிறுவனுக்குச் சடங்கை முடித்தனர். பின் சாங்கதேவர் துவாரகைக்குச் செல்ல எண்ணி வழியில் தன்னையடைந்த யாதவ பண்டிதருடன் செல்லுகையில் அப்பண்டிதரின் மனைவியாகிய கர்ப்பிணி பிரம்மாரணியத்தில் வயாக்கொண்டு துன்பமடைகையில் என் கணவரும் சாங்கருக்குப் பின்சென்றனர். என்னைக் காப்பவர் சாங்கரேயன்றி வேறுயாவலரயுங் காணேனென்று அழுதனள். அக்காலையில் பெருமாள் ஒரு பெண்ணுருக் கொண்டுவர அவளைநோக்கி நீயாரம்மா வென்றனள். அதற்குப் பெருமாளாகிய பெண், என்பெயர் கிருஷ்ணபாய் சாங்கதேவர் அனுப்ப யானிவ்விடம் வந்தேனென்று தாம் நியமித்த புதவூரிலுள்ள மனையில் அழைத்துச்சென்றனள். அதில் அவளை அழைத்துச்சென்று மகப்பெறுவித்து ஒருமாதவரையில் அவளுக்கும் குழந்தைக்கும் வேண்டியவைகளைச் செய்துவந்தனர். இது நிற்க, முன் துவாரகைக்குச் சென்ற சாங்கதேவர் துவாரகைக்குச்சென்று கண்ணனை மனத்தால்தரிசிக்க அங்குக் காணதிருத்தலைக் கண்டு ஞானநோக்காலாராய அவர் தம்முடைய ஏவலால் யாதவ பண்டிதர் மனைவிக்கு ஏவல் செய்வதாக எண்ணி அவ்விடம்வந்து அங்கு வீட்டில் குப்பைகளைப் பெருக்கிக்கொண்டிருந்த கிருஷ்ணபாயைக் காண அவள் சாங்கதேவரை நமஸ்கரித்தனள். கண்ணனென்றறியாத சாங்கதேவரும் உட்சென்று யாதவ பண்டிதர் மனைவியைக்கண்டு உனக்குத் துணையாக வந்தவள் எங்கேயென அதோ குப்பை கூட்டுபவளே யாகுமென்றனள். சாங்கதேவர் வெளிவந்து கிருஷ்ணபாயை நோக்கக் காணமல் வருந்தினர். பின் யாதவபண்டிதர் மனைவி, பிள்ளையைச் சாங்கர் பாதத்தில்பெய்து தங்கள் கட்டளையால் கிருஷ்ணபாய் வந்து உபசரித்ததைச் சொல்லக், கண்ணனே உன் புண்ணியத்தால் உபசரித்தான் என்று கூறித்தாயையும் பிள்ளையையும் அழைத்துக்கொண்டு துவாரகைசென்று கண்ணனைத் தெரிசிப்பித்து யாதவபண்டிதரிடம் மனைவியையும் பிள்ளையையும் ஒப்புவித்தனர். பின் பெருமாள் கட்டளையால் பேதரி நகரம்செல்ல வழியில் ஜங்கமனாகும் மல்லிகார்ச்சுனன் தன்னுடைய மந்திரபலத்தால் ஆதனம் ஒன்று சிருட்டித்து அதில் வந்தவர்களை யிருத்தி அவர்கள் தலைகீழாக வீழ்ந்தபின் அவர்களைச் சிரித்து அவமானஞ்செய்து வருவன். இவன் சாங்கதேவரது பெருமையைப் பொறாதவனாய் அவர் பெயரை ஒரு நாய்க்கிட் டழைத்துவந்தனன். இவன் செயலறிந்த சாங்கதேவர் இவனை யடக்கும்விதம் மடத்திற்புகமல்லிகார்ச்சுனன் ஆசனத்தில் உட்காருக வெனச் சாங்கதேவர் ஆசனத்தைநோக்க அது சாம்பராயிற்று. இதனால் பயந்தவனான ஜங்கமன் நாயினை அவர் பெயரையிட்டு அழைக்கவேண்டுமேயென்று சிறையிட்டுச்சாங்கதேவர் திருவடியில் விழுந்து ஜங்கமர்களுக்குச் சமாராதனைசெய்ய ஜங்கமர்கள்

அன்னமுண்ணத் தொடங்குகையில் லிங்கங்களுக்கு அமிசைசெய்ய வெடுக்க அச்சிவலிங்கங்களைக் காணுமல் இப்பிழை சாங்கதேவரை வணங்காததால் நேர்ந்ததென்று பற்பல உபசாரஞ்செய்து எங்கள் பிழைபொறுத்து நாங்களணிந்த சிவலிங்கம் வரவென்னச் சாங்கதேவர் நீங்கள் வளர்க்கும்நாயைப் பட்டினியாய்ச் சிறைவைத்திருப்பதால் அது விழுங்கிற்று என்றனர். ஜங்கமர் நாய் இவ்வகைச் செய்யுமோ என்னச் சாங்கர் நாயை வருவித்து நாயே லிங்கங்களைக் கக்கெனக்கூற நாய் ஐந்நூறு லிங்கங்களைக் கக்கிற்று பின் சாங்கதேவர் அவர்களுக்கு அருள் புரிந்திருக்கையில் அரிபத்தராகிய ஒரு வேதியர் வந்து இவ்வூராசனுகிய துருக்கன் மிகுதுஷ்டன் அரிகீர்த்தனஞ் செய்யின் அவர்களைக் கடிவான் நீர் இவ்விடம் வந்திருக்கிற செய்தியறியின்வந்து வருத்துவன், அவன்மனைவி பாம்பு கடித்து இறந்ததால் இன்று வரவில்லை என்றனர். இதைக்கேட்ட சாங்கதேவர் மனைவியைப் பிழைப்பித்துத் தருவேன் இதை அரசனுக்கு அறிவிக்கவென வேதியர் அரசற்குக் கூற அரசன் அவரை வரச்சொன்னதைச் சாங்கருக்குக் கூறச் சாங்கர் திருமால் நாமத்தை ஸ்மரணை செய்துகொண்டு அரசனிட்ட ஆசனத்திலிருக்க அரசன் என்தேவி யிறந்து நான்குநாள்களாயின, பற்பல முயன்றும் பயனடைந்திலன் என்னலும் சாங்கதேவர் துளசிதளத்தைப் பிணத்தின்மேல் இடுகவென்று அவன் கையில் துளசிதர அரசன் பிணத்தின் மேலிட அவள் உயிர்பெற்றெழுந்தனள். அரசன் அவளுடன்பேச அவள் பேசாதிருத்தல் கண்டு சாங்கதேவரிடங்கூறச் சாங்கதேவர் மீண்டுமவளிடஞ்சென்று என்செய்ய வேண்டுமென்று கேளென்ன அவள் யானும் நீயும் என்னைப் பிழைப்பித்தோரைச் சரணுகதியடைந்து அவர் சொன்ன வண்ணம் செய்ய வேண்டுமென்ன அவ்வகை செய்வேனென்று யுடன்பட்டுச் சாங்கதேவரைப் பணியச் சாங்கதேவர் இந்த ஊரில் தேவாலயங்கள் வேதியர் பசுக்கள் துன்படையாமல் பாகவதரை வணங்கி அரசாளுகவென்ன நன்றெனு அவ்வாறு கேட்டு அரசாண்டு வந்தனன். பின்பு சாங்கதேவர் பண்டரியடைந்து பெருமாளுத்தரவின்படி பிள்ளைகளை வருவித்துச் சாம்பிரதாயம் வழாமலிருக்கச் செய்து ஆனிமாதம் சுத்த சப்தமியில் அரசடியில் சமாதியாயினர்.

சாங்கரிபீடம்—சத்திபீடத் தொன்று.

சாங்கர் — ஒரு இருடி.

சாங்கலன் — சாகலன் குமரன்.

சாங்காசயபுரி — குசத்துவசன் பட்டணம்

சாங்கியத்தாய் — இவளது இயற்பெயர் தெரியவில்லை. கோசம்பி நகரத்திற் பார்ப்பன குலத்திற்பிறந்தவள். இவளை மணந்த கணவன், இளமையில் நீங்கியதுபற்றி இவளுக்கு ஒழுக்கத்தவறு ஒருபொழுது உண்டாயது; அது தெரிந்த அதிகாரிகளுடைய கட்டளையால், யமுனை யாற்றில் இவளை வீழ்த்திடுவதற்குச் சிலர்கொண்டு செல்வத்தைக் கண்ட உதயணன், இரங்கி விடுவித்துத் தீர்த்தயாத்திரை செய்யும்படி அனுப்பினன். அப்பால் இவள் கங்கையாடி இமயமலையிற் சென்று இரண்டுவருடம் அங்கேதங்கி ஆண்டுள்ள பெரியோரால் சமயவிகற்பகங்களை யறிந்து கன்னியாகுமரியில் நீராடுவதற்கு யாத்திரையாளரோடு அங்கிருந்து புறப்பட்டு உஞ்சை நகருக்கு வந்தபொழுது இவளுடைய கல்வி, அறிவு, முதலியவற்றை யறிந்த பிரச்சோதன் தன்பட்டத்துத் தேவியாகிய ஸ்ரீமதிக்கு நீதிகள் முதலியவற்றைச் சொல்லும்படி இவளை நியமித்தனன். இவள் அதனைச்செய்து வருகையில் ஒரு பிராயத்தினளாக விருந்த வாசவதத்தை இவளிடத்து அன்புவைத்ததை யறிந்த பட்டத்துத் தேவி அவளுக்குச் செவிலித்தாயா யிருக்கும்படிவேண்ட இவள் அங்ஙனமே இருந்து வந்தனள். சாங்கிய சமயத்தை மேற் கொண்டமையாலும் வாசவதத்தைக்குச் செவிலித்தாயாக இருந்தமையாலும், சாங்கியத்தாயென்றும் இவள் வழங்கப்படுவாள். வாசவதத்தை பால் இவளுக்கிருந்த அன்பிற்கு எல்லையில்லை. தன்னுடையஉயிரைக்காப்பாற்றியதுபற்றி உதயணன் பால் இவளுக்கு மிக்க அன்புண்டு. வாசவதத்தையும், உதயணனையும், அவனைச் சார்ந்தவர்களையும் காப்பாற்றுதற்கு அவ்வப்பொழுது தன்னுடைய வருத்தத்தை பாராட்டாமல் இவள் செய்து வந்த முயற்சிகள் பல, தாயைக்காட்டிலும் அன்பு வைத்து உதயணன் இவளை ஆதரித்துவந்தான். தாயெனவும், செவிலியெனவும், சாங்கிய முதுமகளெனவும் இவள் வழங்கப்படுவள். (பெ - கதை.)

**சாங்கியமதம்** — இம்மதாசாரியர் கிறிஸ்து பிறக்குமுன் (எ) அல்லது (அ) சகாத்தத்தில் ஸ்வாயம்பு மனுவின் புத்திரியாகிய தேவஹூதியின் கர்ப்பத்தில் புஷ்கரக்ஷேத்திரத்தில் விஷ்ணு அம்சமாகப் பிறந்தவர். இவர் கபிலநிறத்துடன் பிறந்தது பற்றி இவர்க்குக் கபிலர் எனப் பெயரிட்டனர். மதசித்தாந்தம் சாங்கியம் என்றால் தத்வங்களைச் சங்கியைசெய்து கூறப்படுவது. இந்தமதத்தில் கடவுள் அங்கீகரிக்கப்படவில்லை. ஸ்வதந்தரமான பிரகிருதியே ஜகத்திற்குக் காரணம். புருஷனுடைய போகமோக்ஷ நிமித்தம் பிரகிருதியே பிரவர்த்திக்கிறது. புருஷன் பிரவர்த்திக்கிறதில்லை பிரகிருதியினுடைய விஷயரூப பரிணமத்தால் புருஷனுக்குப் போகம் உண்டாகின்றது. புத்திதவாராவிவேகரூப பிரகிருதியின் பரிணமத்தால் மோக்ஷம் உண்டாகின்றது. புருஷன் அசங்கனுகையால் அவனிடம் போகமோக்ஷங்கள் உண்டாதல் இல்லை. ஆயினும், ஞான, சுக, துக்க, ராக, த்வேஷாதிகள் புத்தியின் பரிணமங்கள் ஆகின்றன. இப்புத்திக்கு ஆத்மவிவேகம் இருக்கின்றது. ஆகையால் ஆத்மாவில் பந்தமோக்ஷங்கள் ஆரோபிக்கப்பட்டிருக்கின்றனவேயன்றிப் பரமார்த்தத்தில் இல்லை. அவிவேகத்தால் சித்திக்கும்போகத்தின் பொருட்டு ஆத்மாகர்த்தாவென்று கூறப்படுவன், பரமார்த்தத்தில் ஆத்மா போக்தாவல்லன். புத்தியே போக்தா. புத்தி ஆத்மாவிற்குப் பின்னம். இந்த ஞானம் விவேகம் என்னப்படும். இதன் அபாவம் அவிவேகம் என்னப்படும். சுகதுக்காதிகள் புத்தியின் பரிணமங்கள் ஆகையால் புத்தியினுடைய தர்மங்களாகின்றன. ஆத்மா அநேகமென்று கூறப்படும். சாங்கிய சூத்ரங்களுக்குச் சரபஸ்வாமி பாஷியகாரர் ஈச்வரகிருஷ்ணர் காரிகை செய்தனர். கௌடபாதாசாரியர். காரிகைக்குப் பாஷ்யம் செய்தனர். இது நிரீசுவரசாங்கியம், சேச்வரசாங்கியமென்று இருவகை. நிரீசுவரசாங்கியம் கபிலரால் செய்யப்பட்டது. சேச்வரசாங்கியம் பதஞ்சலிமுனிவரால் இயற்றப்பட்டது. சேச்வரசாங்கியம், பதார்த்தங்கள் பதி, பசு, பிரகிருதி என்று மூன்று எனவும், பதிபிரகிருதியால் சலிப்பவன் அல்லன். ஆத்மாயோகம தரித்து மோக்ஷம் அடையவேண்டும். புமானுகிய புருடன் அறியாமை யுற்றபோது பிரபஞ்ச மெல்லாம் தானெனவிரிந்து நிற்பன். விவேக ஞானம் எய்தியபோது அவை எல்லாம் பிரகிருதிக்கே அன்றித் தனக்கு இல்லை என்றும் சொல்வன். இவன் சுகதுக்கங்கள் பிரகிருதிக்கே தனக்கில்லை என நீங்கி ஆசிரியர் உபதேசித்த நிஷ்டைவழி இருந்து லயிப்பதே முத்தி என்பன். (தத்துவநிஜா)

**சாங்கியமுனி** — இவன் பல மாணாக்கர்களுடன் தீர்த்தயாத்திரை செய்துகொண்டிருந்த ஒரு பண்டிதன். பலசமயக் கொள்கைகளை நன்கறிந்தவன் தவவொழுக்கமுடையவன். சாங்கியத்தாய்க்குப்பல சமயக்கொள்கைகளைப் புகட்டி அவளை நல்வழிப் படுத்தியவன். (பெ - கதை)

**சாங்க்யாக்கியர்** — இருக்வேதியாகிய இருடி.

**சாங்கியாயனர்** — பராசருக்கும் பிரகஸ்பதிக்கும் தத்துவம் உபதேசித்தவர்.

**சாசிலி** — துலாதரன் மாணக்கர், இவர் ஒரு ருஷி இவர் தவத்தில் உயர்வடைந்து கடற்கரையில் சடைவளர்த்து இருக்கையில் இவரது சடையைக் குருவிகள் இடமாக்கொண்டு கூடுகட்டி வசித்தன. அக்குருவிகள் கூடுகட்டி குஞ்சுகள் பெரிதாமளவாக அசையாதிருந்தனர். இவர் தவத்தால் தம்மின் அதிகமில்லை யென்றிறுமாக்க ஆகாயத்தில் கங்கைக் கரையில் துலாதாரனிருக்கின்றானெனக் கேட்டு அவனைக் காணக் கருவத்துடன் செல்ல அத்துலாதாரனிவரைக் கண்டவுடன் இவர் காரியங்களைக்கூற அவனை நோக்கி உனக்கு இந்த ஞானம் எவ்வாறு வந்ததென அவன் தர்மங்கூறக் கேட்டவர். (பார - சாங்.)

**சாச்வதன்** — பிருது குமான், இவனுக்கு விஸ்வக்ன், விஸ்வகத்தன் எனவும் பெயர்.

**சாச்வதீ** — (சாஸ்வதி). இலவன் ஆண்ட நகரம்.

**சாஞ்சீவி** — யஞ்ஞவற்கியருடைய ஐந்தாவது சந்ததியான்.

**சாணக்யன்** — சந்திரகுப்தனுக்கு மந்திரி. இவன் இராஜநீதியைப்பற்றி ஒரு கிரந்தஞ் செய்திருக்கின்றான், அதற்குச் சாணக்ய தந்திரம் என்று பெயர்.

**சாணன்** — வசுதேவன் குமான், தாய்ரோகலரி.

**சாணூர்** — இவர்கள் தமிழ் நாட்டில் தென்னை பனை முதலிய மரங்களின்மேலறிக் கள்ளிறக்கிக் கள்விற்கும் சாதியார். இவர்கள் (1899) இல் தாங்கள் மறற இந்துக்களி

னும் உயர்ந்தார் என்றும் தங்களை மதுரை திருநெல்வேலி முதலிய தலங்களில் தரிசிக்க விடவேண்டுமென்றும் வாதிட்டுத் தோல்வி பெற்றனர். இவர்கள் ஸ்த்ரீகள் சில காலத்திற்குமுன் தாழ்ந்த பள்ளர் பரவர் மார் மூடாதிருப்பது போலிருந்தனரென்றும், 1859-இல் ஸர்சார்லஸ் டிரிவிலியன் இவர்கள் மார்மேல் துணி தரிக்கலாமென்று உத்தரவளித்தனர் என்றும் கூறப்படுகிறது. இவர்கள் செம்படவர்கள் மாரை மூடுவதுபோல் உடைதரிக்கலாமேயன்றி உயர்ந்த ஜாதிப்பெண்கள் தரிப்பதுபோல் தரிக்கலாகாதென்று திருவாங்கூர் மகாராஜா கட்டளை. 1858-இல் இவர்கள் தாங்கள் க்ஷத்ரியர்கள் என்று வெளியிட்டனர். இவர்களிப்பொழுதும் பூணூல் தரிக்கவும் பல்லக்கேறவும் தங்கள் கல்யாணத்தில் பிரயத்தனப்படுகின்றனர். தென்னாட்டாரதற் கிடந்தந்திலர். இவர்கள் தங்களைச் சேரசோழ பாண்டிய வம்சத்தவரென்று கூறிக்கொள்வர். இவர்கள் தாங்கள் ஏற்படுத்திய கலாசாலைகளுக்கு க்ஷத்ரிய பாடசாலையெனப் பெயரிட்டிருக்கின்றனர். இவர்கள் நாங்கள் இந்தப் பூமியையாண்ட ராஜவம்ச சந்ததியார் சாணாரகாசு எங்களால் நிருமிக்கப்பட்டதென்பர். அதில் தென்னைமரம் போட்டிருப்பதே அதற்குச் சாக்ஷியென்பர் அது தவறு. அதில் சிலுவைக்குறி உள்ளதென்பர் சில ஐரோப்பியர். இவர்களின் வம்சத்தைக் கடைசியாகச் சென்ஸஸ் சூபரின்டெண்ட் தீர்மானித்தது, இவர்களுக்குச் சாணார், நாடார், கிராமணிகள் என்பன சாதாரணபட்டம், சாணான் என்னும் பெயர் தமிழ் நூல்களில் எங்கும் காணப்படவில்லை. இராஜ ராஜசோழன் காலத்து இவர்கள் இழுவர் எனப்பட்டனர் (A. D. 984-1013) 10, 11, ஆவது நூற்றாண்டின் பிங்கலந்தை முதலிய நிகண்டுகளில் கள்விற்போர், பழையர், துவசர், படுவர் என்று கூறியிருக்கிறது. 16-வது நூற்றாண்டின் நிகண்டாகிய சூடாமணியில்சுண்டிகர் என்று மற்றொரு பெயர் சேர்ந்திருக்கிறது. சாணார் சொல்வதாவது, இந்தப் பதம் சான்றார் என்னும் சொல்லின் மருஉ என்பர். அவ்வாறு சாணார் சான்றார் என எப்போதும் அழைக்கப்படவில்லை. எந்தத் தமிழ் நூல்களிலும் காணப்படவில்லை. நாடான், கிராமணியும் நாட்டிலுள்ளவன் எனப்பொருள்படும். அதாவது நகரத்திற்கும் கிராமத்திற்கும் அப்புறத்தில் குடியிருப்பவன் (South Indian Inscription Vol II Part 1.) இவர்கள் அச்சொற்களுக்குக் கிராமத்தை யாண்டவர்கள் எனப்பொருள் கொள்ளினும் எந்த க்ஷத்ரியனுமிந்தப் பெயராலாண்டதாகக் காணப்படவில்லை. இவர்கள் க்ஷத்ரியராகப்பெற்றால் தென்னிந்திய சிற்றரசரெல்லாரும் க்ஷத்ரியராகக்கூடும் (1891) ஸென்ஸஸ் ஸூபிரெண்டெண்ட் கூறுவதாவது சாணார் பள்ளருக்கும் பறையருக்கும் சற்று உயர்ந்தவர்கள் என்பர். இவர்கள் தீண்டாச் சாதியாக எண்ணப்பட்டவர்கள். இவர்களில் பலர் க்ஷத்ரியரென்று சாதி அட்டவணையில் கூறியிருக்கின்றனர் அது நகைக்கத் தக்கதாம். என்னெனின் திராவிட க்ஷத்ரியர்கிடையாதாதலின். இவர்கள் ஒரு காலத்தும் போர்ச்சேவகம் செய்ததில்லை. சாணான் என்னும்பதம்சாறு என்னும்சொல்லினின்று முண்டாயிற்றாம் பொருள், கள். சில அறிவுள்ள மிசியோனெரிகள் அப்பதம் சாண்நார், நீளத்தில் சாண் அளவுள்ள கயிற்றைத் தளையாக்கொண்டு மரம் ஏறுபவர்என்னும்பொருளது, என்பர். மலபார் நாட்டுக் கள்ளிறக்குவோர், ஒருவருக்கொருவர் தங்களைச் சேணீர் என்று அழைப்பர் இதுசாணார் என்பதின் திரிபு. இவர்களின் ஜாதியைப்பற்றி (1996) இல் காமுடிகோவில் வழக்கிலும் சென்னை ஐகோர்ட் அபீலிலும இவர்கள் மேற்கூறிய பள்ளர், பறையர் சக்கிலியர்க்குச் சற்று உயர்ந்தவர்கள். இவர்கள் சுத்தமில்லாதவர்கள் இந்துக்களின் கோவில்களில் புகத் தகாதவர்கள் என்று கூறப்பட்டது. இவர்கள் மரம் ஏறுகையில் உபயோகிக்கும் பொருள்கள் காற்றளை, வடம், பாளைப்பெட்டி, பாளைத்தடி, பாளைஅரிவாள், சாணைமண், கள்பெட்டி. இவர்களில் ஐந்து வகைச் சாணார்கள் உண்டு. கருக்குப் பட்டையார், (கருக்குமட்டையார்) கள்ளர், இவர்களும் இச்சாதியைச் சேர்ந்தவராயினும் இவர்களுக்கு ஊழியம் செய்வோர் நாட்டாடி இப்பெயர்கொண்ட ஊரிலுள்ளார் கொடிக்கால் கொடிபிடித்து யுத்தஞ் செய்பவர், மேல்நாட்டார் என்பவர் திருவாங்கூரைச் சேர்ந்தவர்கள், இவர்களில் தொள்ளைக்காதர் என்று ஒரு வகுப்பு உண்டு இவர்கள் சாணாருக்குக் கீழானவர்

கள், இவர்களில் சிலர் பாண்டியன் என்னும் பட்டம் வகித்திருக்கின்றனர். கோயம்புத்தூரில் சிலர் செட்டி மூப்பன் நாடான் என்னும் பட்டங்கள் வைத்திருக்கின்றனர். தஞ்சாவூர் மான்யல் என்னும் புத்தகத்தில் தென்னையேறுஞ்சாணன், பனை யேறுஞ்சாணன், ஈச்சமர மேறுஞ்சாணன் என்று மூன்று பிரிவுகள் கூறப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கு ஏனாதிபட்டம். சைவ ஏனாதி நாயனாரால் வந்ததுபோலும். (தர்ஸ்டன்.)

ாணூரன் — கம்சனுக்குத் துணைவனான அசுரன். இவன் கம்சன் ஏவலால் கிருஷ்ணனுடன் மல்லயுத்தஞ்செய்து பூமியில் மோதப்பட்டு இறந்தவன்.

ாணைக்கல் — இது சுறசுறப்பாய் வட்டமாகவும்நீளமாகவும் உள்ளகல். இது, வெட்டுங்கருவி அறுக்குங்கருவிமுதலியவற்றைக் கூரியவாகச் செய்வது.

ாண்டியன் — காந்தார நாட்டிலுள்ள இரத்தின புரத்திருந்த ஓரந்தணன். இது படைத்துக் கோட்பெயர். அந்தண வடிவமுற்று மாணுக்கனென்னும் பெயர்கொண்டு இராசகிரியி லிருந்தபொழுது உதயணன் இவன் மகனென்று தன்னைக் கூறிக்கொண்டான். (பெ - கதை.)

ாண்டிலி — 1. பிரசாபதியின் மனைவி, குமரன் அக்கினி.

2. காலவருஷி குருதக்ஷிணைக்காகக் குதிரைக்குப் போம்போது ருக்ஷபருவதத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த பார்ப்பினி.

3. அக்நிதேவன் குமாரி, இவளைக் கருடன் கண்டு மோகித்து எவ்வகையேனும் தேவலோகங்கொண்டு செல்லவேண்டுமென முயல்கையில் இவளறிந்து சிறகிழக்கச் சபித்தனள். இதனால் வருந்திய கருடன் பிரார்த்திக்க மீண்டும் அவை பொன்னிறத்துடன் வளரச் செய்தவள். (சிவமகாபுராணம்).

4. இவள் புருஷபக்தியினாலும் நல்லொழுக்கத்தாலும் உயர்கதி யடைந்தேன் எனச் சுமனைக்கு இல்லறதருமம் கூறிய கற்பிநி. (பார - அநுசா.)

ாண்டில்யர் — இவர் காசியபருக்கு அக்கினியிற் பிறந்தவர். (பார - அநு)

ாண்டில்யன் — 1. ஒரு இருடி. இவனால் சாண்டில்யஸ்மிருதி செய்யப்பட்டது.

2. காசியிலிருந்த ஒரு வேதியன். சந்திரகுப்தனுக்கு ராஜ்யம் வருமாறு செய்தவன்.

3. இவன் பிரமனை விரும்பி வாசுதேவனைப் பாஞ்சராத்ர ஆகமத்தின் வழி ஒழுகிநாகமடைந்தான். (வாசிட்டலைங்கம்.)

4. மரீசி புத்திரனாகிய காசியபனுடைய வம்சத்தில் பிறந்த ரிஷி. இந்த வம்சத்தில் ஒரு காலத்தில் வைஸ்வாநர அக்னி உற்பத்தியாயினன். இந்தக் கோத்திரத்தில் பிறந்தவர்கள் சாண்டில்லிய கோத்திரத்தார் எனப்படுவர். (பா - சாந்.)

சாண்டில்யமுனிவர் — தான்யமாலியை முதலையாகச் சபித்து அநுமனால் சாப நீங்குமென்றவர். தான்ய மாலியைக் காண்க.

சாதகம் — மேகநீர் உண்டு ஆகாயத்தில் உலாவும் பக்ஷி.

சாதகப்புள் — இதனைக் கிரவுஞ்சப்பக்ஷி அல்லது சாரங்கபக்ஷியென்பது இதனை வான்கோழி யெனவட நூலார் கூறுவர்.

சாதகருமம் — பிள்ளை பிறந்தவுடனே பிதா வடக்குத் திசையிற் சென்று ஸ்நாநம் பண்ணி, எள், நெல், பொன் வஸ்திரம், பசு, பூமி இவைகளில் இயன்ற தான தருமங்கள் செய்து சுபக்கிரக முதயமாகத் தன் பந்துக்களுடனே புத்திர தரிசனஞ்செய்து, பிள்ளை பிறந்த பதினொரு தினத்துக்குள்ளே, சுபவாரங்களிலே, அச்வினி, ரோகிணி, புநர்பூசம், பூசம், உத்தரம், அத்தம், அனுஷம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், இந்த நக்ஷத்திரங்களிலே இருத்தை, அமாவாசை பூரணை, ஒழிந்த திதிகளில், விருஷபம், மிதுனம், கர்க்கடகம், கன்னி, துலாம், தனு, மீனம், இவ்விராசிகளில் சுபகிரக முதயமாக ஜாதகருமஞ்செய்வது.

சாதகவிகலன் — மனது அநித்யம் மூர்த்தமாகையினால் என்கிற தெவிற்குக் கன்மம் போல என்கிற திருஷ்டாந்தம், மூர்த்தத்வம் என்கிற சாதனமில்லையாதல்.

சாதகர்ணன் — புரிமான் குமான், இவன் குமரன் சிவஸ்கந்தன்.

சாதகன் — இவனுடைய ஊர் கோசம்பி நகரம். சாதியிற் குயவன். உதயணன் சிறைப்பட்டுச் சென்றபொழுது அதபொருமல் வேறு வடிவங்கொண்டு தானும் உடன்சென்று உஞ்சை நகரின் பக்கத்திலுள்ளதோரூரில் ஒரு வீட்டிலிருந்து உதயணனுக்கு வேண்டிய அனுகூலங்களைப் பிறரறியாமற் செய்து வந்தவன் மறைந்திருந்த யூகிக்கு உயிர் நட்பளர்களாய் அவ

னுடனிருந்த வீரர் பதின்மருள் ஒருவ னாகவு மிருந்தவன். இராச விசுவாசத்திற் சிறந்தவன். வாசவதத்தையைப் பிடிமீ தேற்றி உதயணன் புறப்பட்ட பின்பு சாங் கியத்தாய் இவன் வீட்டிலே யிருந்துதான் யூகியைச் சந்தித்துப் பேசினள்; யூகிக்கும், உருமண்ணுவாவுக்கும் இடையே நின்று பிறரறியாமல் ஒருவர் கூறுவனவற்றை மற்றொருவரிடஞ் சொல்லிக் காரியங்களை நிறைவேற்றியவன்; ஆருணியைக்கொன்று வெற்றி யடைந்த பின்பு உதயணனால் இலாவாணக நகரத்தில் பெருங்குயமென் னும் பட்டத்தையும் சீவிதமாக இரண்டூர் களையும் இவன் பெற்றான். (பெ. கதை).

சாதவகை — கடலைமாச் சேர்ந்த சர்தம், எள்ளோரை, வெள்ளரிவிரை மாச்சேர்ந்த சாதம், புளியோரை, ததியோதனம், சர்க் கரைப் பொங்கல், எலிமிச்சம் பழம் சேர் ந்த சாதம், கிச்சிலிரஸசாதம், வாதுமைப் பருப்புச் சேர்ந்த சாதம், மிளகுப் பொங் கல், கத்திரிக்காய் சேர்ந்த சாதம், தேங் காய்ப்பால் பொங்கல், வாழை, பலா, மாம் பழங்கள் சேர்ந்த பொங்கல், கடலை, சிறு பயறு, உளுந்து, கொள்ளு தனித்தனி சேர்ந்த பொங்கல், கிச்சடி, பலவு முதலிய என்பனவும் உண்டு.

சாதர்மியசமை — சமான தர்மத்தினலே ஸ்தாபிதமான ஏதுவைத் தூஷிக்கும் உத் தரம். (பொது இயல்பு.) தரு.

சாதவர் — யதுகுலபேதம்.

சாதவதன் — விஷ்ணுபக்தன் அல்லது படன்.

சாதவாகனன் — 1. சாதவாகனம் என்னும் நூல் செய்வித்தவன்.

2 சாத்தன்.

சாதவேதன் — அக்கினி.

சாதனம் —(ச) நித்யா நித்யவஸ்து விவேகம், இகபரபுத்ரார்த்த பலபோகவிராகம், சமா திசட்கசம்பத்தி. முமூக்ஷுத்வம்.

சாதனவியா விருத்தன் — ஏது சாத்தியங் களுக்கு யாதொன்று அநித்யமல்ல அது மூர்த்தமுமல்ல பரமாணுவைப்போல என் கிற திருஷ்டாந்தத்தாலே சாதகமாயிருக் கிற மூர்த்தத்வம் வியா விர்த்தமாகாமல் அதிலே யிருத்தல். (சிவ - சித்)

சாதஹாரிணி — ருதுஹாரிணியின் குமரி. சாக்ஷுசமனுவைக் காண்க. இவள் பிள்ளை பெற்றசூதிகாகிருகத்தில் இருந்துகொண்டு பிறந்த குழந்தைக்கு நீர் நெருப்பு முதலிய வற்றால் அபாயத்தை விளைப்பவள். ஒரு தேவதை.

சாதாக்ய முதலிய தன்மை — பராக்குப் பரமானது சிவசாதாக்யம், பரையுடன்கூடி யுத்யோகிப்பது அமூர்த்திசாதாக்யம், சூக்ஷ மமாகிய இச்சாஞானக்ரியைகளுக் கப்பாற் பட்டது மூர்த்திசாதாக்யம், சூக்ஷ்மமான இச்சையில் தூலமான ஞானக்கிரியைகள் பொருந்தி ஞானபாவகமாயுள்ளது கர்த்ரு சாதாக்யம், தூலமான பிந்துநாதங்கள் கூடி யுள்ளது கருமசாதாக்யம் (சதா).

சாதாக்யம் — இது, அவிகாரமான நிட்கள சிவத்தில் (சீவன் முத்தர், சாதகர், ஞானி கள் முதலியோர் பொருட்டுத் த்யான அள விற்கேற்ப) சத்தி விகற்பமான கலைகளா லே த்யானமூர்த்தியாக நிறம்புவது (சதா).

சாதாதபன் — ஒரு முனிவன்.

சாதாரணலக்ஷணம் — அந்நியத்தைத் தவிர் ந்துதன்சாதிக்கொத்தஇலக்கணம். (பொது லக்ஷணம்).

சாதாரன் — கீசகநாட்டரசன், இவன் காமா தூனாய் மனைவியுடன் இருக்கையில் வசிட்டர் இவர் மனையில் காத்திருக்கவும் அறியாது தூங்கி விழித்தெழுந்து வணங்கி னன். வசிட்டர் நீ காமச்செருக்கால் மதியாமையால் நீ வேடனாகவும், உன்னாட் டில் உள்ளவர் நீங்க உன்னுடு காடாகவும் எனச் சாபம் பெற்றவன்.

சாதி — 1. (ச) ஆந்திரம், கன்னடம், துரா விடம், மகாராட்டிரம்.

2. தனக்கு விரோதமான விடைகூறு தல். இது சாதர்மியசமை, வைதருமிய சமை, உத்கருஷ்ணசமை, அபகருஷண சமை, வருணியசமை, அவருணியசமை, விகற்பசமை, சாத்தியசமை, பிராப்தி சமை, அப்பிராப்திசமை, பிரசங்கசமை, பிரதி திருஷ்டாந்தசமை, அநுற்பத்தி சமை, சம்சயசமை, பிரகரண சமை, அவேதுசமை, அர்த்தாபத்தி சமை, அவி சேஷ சமை, உபபத்தி சமை, உபலப்தி சமை, அநுபலப்தி சமை, நித்யசமை, அநித்யசமை, காரியசமை, என இருபது வகை.

3. நித்தமாய் அநேக திரவியகுண கர் மங்களிலுள்ள ஒருதர்மம். ஜாதி (சாமான் யம்) எனப்படும்.

சாதியாவது — வீரம், கூச்சம், அர்ப்பாயம், பேய்க்காரம், வியோகம், பாணம், சல்லா

பம், வீழினி, உத்தாரமடங்கம், பிராசனம் என்பன. இது நாடகவகைபள் ஒன்று. (வீர - சோ.)

**சாதிக்காய்** — இது மணமுள்ளதும், மயக்கத்தைத் தாத்தக்க பொருளுமாம். இது, நிலவளமுள்ள நீலகிரி, கொச்சி திருவாங்கூர் முதலிய இடங்களில் பயிரிடப்படுகிறது. இச்செடிகளி னிலைகள் கிச்சிலி இலைகள்போல் பளபளப் புள்ளனவாயிருக்கும். இதன்பழம் திரட்சியாய்க் கனத்த தோலுடனிருக்கும். உள்ளிருக்கும் வித்தின்மீது கவசமிட்டதுபோலச் செந்நிறமான மெல்லிய மீந்தோல் வித்தை மூடிக்கொண்டிருக்கும். இதுவே ஜாதிபத்திரி. வாசனைப் பொருள்களில் ஒன்று. இவ் வித்தை எடுத்துச் சுண்ணும்பும், உப்பும் கலந்த நீரிலிட்டுச் சற்றூற எடுத்துக் காயவைத்துப் பத்திரப்படுத்தினல் பூச்சுப்பிடியாது.

**சாதிபிள்ளைகள்** — இவர்கள் வேளாண் முதலிய ஜாதியாருக்கு ஏவல்செய்து அவ்வவர் ஜாதியின் உயர்வைத் தெரிவிப்போர் வேளாண் மக்களுக்குப் பணிசெய்வோர். கோமட்டிகளுக்கு மைலாரி, பேரிசெட்டிகளுக்கு வீரமுஷ்டி. பள்ளிகளுக்கு நோக்கர், முதலியோர்.

**சாதிலிங்கம்** — இது ஒருவகைக் கட்டுச் சரக்கு. வைத்தியநூலில் கூறிய எடைப் படி கந்தகத்தையும் ரஸத்தையும் ஒன்ருய்க் கலந்து அவையிரண்டும் கறுப்புத் தூளாந் துணையும் குழியம்மியிலரைத்து அதனுடன் மீண்டும் எடைப்படி கந்தகமும் வெள்ளீயப் பொடியும், பொட்டிலுப்பும் சேர்த்து அரைத்துக் குப்பியிலடைத்துச் சீலை மண்செய்து குழியடுப்பில் வாயகன்ற மட்பாத்திரத்தில் மணல் நிரப்பிக் குப்பியைக் கழுத்தளவு மணலால் மூடியளவு கூறியநேரம் எரித்து ஆறியபின் குப்பியைத்திறக்க அதின் கழுத்தில் லிங்கக் கட்டி காணப்படும்.

**சாதுகர்ணன்** — (சூ). அக்கினி வேசனுக்கு ஒரு பெயர். இவன் இருடியாயினன்.

**சாதுகாரணர்** — சாகல்யர் மாணக்கர்.

**சாதுசக்கிரன்** — ஆகாயகமனம் அறிந்த ஒரு முனி. மணிமேகலைமுற்பிறப்பில் இவனை ஒருபொழு துண்பித்த புண்ணியத்தால் நன்னெறிப்பட்டனள். (மணிமேகலை.)

**சாதுவன்**—ஆதிரையின் கணவன். நாகர்க்கு நீதிகூறி நல்வழிப்படுத்தினவன் (மணி).

**சாதேயன்** — தருமன் வேதிகையைப் புணர்ந்ததனல் பெற்றபெயர்.

**சாதேவன்** — துரியோதனனுக்குத் தம்பி.

**சாத்தகி** — 1. பாரதவீரரில் ஒருவன் சத்தியகன் குமரன், மருத்துவர் அம்சம். இவனுக்கு யுயுதானன் எனவும் பெயர்.

2. கண்ணனுக்குத் தம்பி. அருச்சுனனிடம் தனுர்வித்தைகற்றவன். பாரிஜாதாபஹரணத்தில் பிரவானுடன் யுத்தஞ் செய்தவன். பூரிச்சிரவனல் கீழேதள்ளப்பட்டு அருச்சுனனல் தப்பினவன். கிருதவன்மனைக் கொன்றவன்.

3. ஒரு அரசன் இவன் மனைவியரில் ஒருத்தி நாரீரத்னம் இவள் ஒரு சிவபூசா விருப்பினராகிய அரசரைக் கண்டு மோகித்துத்தான் அவரிடம் தன் கணவனைக் கொன்றுவிட்டு உம்மை மணக்கிறேன் எனச் சிவவிருப்பினராகிய அரசர் யாக்கையி னிழிவையும் சிவபூசா விசேடத்தையுங்கூறி மறுத்து நற்கதி யடைந்தனர். சிவ - ரக.)

**சாத்தந்தையார்** — சாத்தன்தந்தை சாத்தந்தை என்ருயிற்று. (தொல் எழுத்து நசஎ) இவர் முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனைப போரிற்கொன்ற சோழன் தித்தன்மகன் போர்வைக் கோப்பெரு நற்கிள்ளியின் வீரச்செயலைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் புறம் அ0. இவர்மகன் கண்ணஞ்சேந்தனரே பதினெண் கீழ்க்கணக்கிலொன்ருகய திணைமொழியைம்பது பாடியவர். இச்சாத்தந்தையார் பாலைத் திணையைப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் உகு-ம் பாடலொன்றும் புறத்தில் நாலுமாக ஐந்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**சாத்தந்தைமகருஷிகோத்திரன்** — பொற்கடாரம் உரைமாற்றுக்கூறிப் புகழ்பெற்ற வணிகன்.

**சாத்தராயணர்** — பிரகத்பானு என்னும் விஷ்ணுவின் தந்தை.

**சாத்தன்** — 1. ஐயனர்க்கு ஒருபெயர்.

2. மகாசாத்திரனென்று பெயர்பெற்ற வணிகன். கோவலன் காலத்தவன்.

3. மணிமேகலை நூலாசிரியர். இவரைச் சீத்தலைச்சாத்தனர், மதுரைக்கூலவாணிகன் சாத்தனர் எனவுங் கூறுவர். சிலப்பதிகாரம் உடனிருந்து கேட்டவர்.

4. ஒல்லையூர்க்கிழவன் மகன் பெருஞ்சாத்தனுக்கு ஒருபெயர்.

5 மகாசாத்திரன் என்னும் ஒரு சாஸ்திரி.

**சாத்தனர்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர். (குறுந்தொ)

**சாத்தானியர்** — இவர்கள் பெருமாள் கோவிலில் வேலை செய்யும் ஒருவகை வைணவவடுசர். இவர்கள் பிராமணர்கள்போல் பூணூல் சாத்தாதனுல் சாத்தாதவர்கள் என்னும் பெயர்பெற்றனர். இவர்கள் சூத்ரர் இவர்கள் தங்களைச் சைதன்யன் என்னும் குருவின் வழிவந்தவர்கள் என்பர் அது தவறு. இவர்கள் தொழில் பூதொடுத்தல், திருமண் ஸ்ரீ சூர்ணம் செய்தல். இவர்களுக்குப் பட்டம் ஐயர் இவர்களின் பிரிவு ஏகாக்ஷரி, சதுராக்ஷரி, அஷ்டாக்ஷரி, குலசேகரம். இவர்கள் தென்கலை வைஷ்ணவ பிராமணரின் நடையுடை ஆசாரத்தைப் பெற்றவர். இவர்கள் தங்களுக்குத் தாங்களே புரோகிதம் செய்து கொள்வர். பின்னும் இவர்கள் பிரபன்ன வைஷ்ணவர்களென்றும் நம்பிகள் என்றும் வேங்கடபுர வைஷ்ணவர் என்றும் கூறப்படுவர். இவர்கள் தலையில் சிகை, பூணநூல், பின்கச்சம் சாத்தக்கூடாதென்று இராமாநுசர் கட்டளை பெற்றவர்கள் இவர்களின் பெண்கள் பிராமணப் பெண்களை நடையுடைகளில் ஒப்பர். இவர்கள் குரு, பாவாஸ்து.

**சாத்திரம்** — (ந) சாங்கியம், பாதஞ்சலியம், வேதாந்தம். (சு) வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாம்சை உத்தரமீமாம்சை.

**சாத்தியர்**—ஒருவகை தேவவகுப்பினர், சாத்யை குமரர். இவர்கள் பன்னிருவர் என்பர்.

**சாத்தியகணம்** — தருமனுக்குச் சாத்தியாவிடம் உதித்த குமரர்.

**சாத்தியசமை** — திருஷ்டாந்தத்தைப் பக்ஷத்திற் கொத்ததாகக் கூறுவது.

**சாத்தியபாலன்** — சான்றினர், சபையினர், உபயவாதியர், இவர்களை அழைத்தலும சாத்தியப் பொருளைக் காத்தலும் செய்பவன். (விவகார சங்கிரகம்.)

**சாத்யசூரலக்ஷணம்** — சுரரோகிக்குக் கண், பார்வை, சரீரம், பஞ்சேந்திரியம் இயற்கையாகக் காணினும், மனம் சாந்தமாயிளைக்கா திருக்கினும், உள்ளங்கை உள்ளங்கால்கள் சூடபிறந்து சிறிது தாகமுண்டாகி நாவில் நீர் ஊறினுலும, இரவில் அயர்ந்த நித்திரை யிருக்கினும், சரீரம் இலேசாயிருக்கினும், தேடிக்காணுத மருந்து எளிதில் கிடைப்பினும் ரோகம் சாத்யமாம். ஜீவ.)

**சாத்யவிகலன்** —இது திருஷ்டாந்தா பாசத்தென்று. மனம் அநித்யம் மூர்த்தமாகையால் என்கிற ஏதுவில், பரமாணுவைப் போல் என்கிற திருட்டாந்தம், அநித்யத்வம் என்கிற சாத்திய மிலலாதபடியால் என்க

**சாத்யவியா விருத்தன்** — ஏது சாத்யங்களுக்குக் கன்மவத் என்கிற திருஷ்டாந்தத்தால் இப்படிக் கொத்தவியதிரேகத்தினுல் சாத்யமாயிருக்கிற அநித்யத்வம் வியாவிருத மாகாமலிருக்கை. (சிவ - சித்.)

**சாத்தியை** — தருமப்பிரசாபதியின் தேவி, தக்ஷன் பெண், குமரர் சாத்தியர்.

**சாத்துதன்** — யதுகுலத்தரசனுகிய வசுதேவன் வம்சத்து அரசன்.

**சாத்துவதன்** — 1. அங்கிசு குமரன், இவன் குமரர் பசமானன், பிசி, திவ்யன், விருக்ஷணி, தேவாவிரதன், அந்தகன், மகாபோசன்.

2. விதர்ப்பன் குமாரனுகிய கிருதவம்சத்தவன்.

3 விஷ்ணு பரிசாரகன்.

**சாத்துவதி** — 1. சுருதச்சிரவை என்பவள்.

2. தமகோஷன் தேவி. சிசுபாலனுக்குத்தாய். கண்ணனைநோக்கித் தன்குமரன் செய்த நூறு பிழைபொறுக்க வரங் கேட்டவள்.

3. நாடக விகற்பத்தொன்று இது தலைமக்களில் அறப்பொருள் உபாங்கமாவது (வீர - சோ.)

**சாத்தேயம்** — ஒரு மதம், இதை வாமமதம் என்பர். இது சத்தியே பரதேவதையாகக் கூறும்.

**சாத்வீகராஜன்** — ஜகந்நாத க்ஷேத்திரத்தில் நாடோறும் ஆலயதரிசனத்திற்கு வந்து பகவத்பிரசாதத்தைக் கைக்கொண்டுசெல்லும் நாட்களில் ஒருநாள் அரசன் மகாதுவாரத்தில் உட்கார்ந்துகொண்டு காலப்போக்குக் காரணமாகச் சொக்கட்டான் ஆடிக்கொண்டு பாய்ச்சிகைகள் வீசி அதின் வயப்பட்டுப்பகவத் பிரசாதம் வாங்கிக் கொள்ள இடக்கையை நீட்டுகையில் அர்ச்சகன் கொடாதிருத்தல் கண்டு மந்திரியை நோக்கி ஒருபேய் எனக்கு முன் கையை நீட்டித்தொந்தரை செய்கின்றது ரீசாளரத்

திடை வந்திருந்து அக்கையைத் துணிக்கவென்ன அவ்வாறு மந்திரி வந்திருக்கையில், அரசன் கைநீட்ட, மந்திரி அரசன் கையைத்துண்டித்தனன். அரசன் துடிக்கக்கண்ட மந்திரி, பரிதபித்தலை, அரசன் கண்டு, தேற்றித் தன் கரத்தைப் பல்லக்கில்வைத்துப் பெருமாள் சந்நிதியில் அனுப்பினன். அங்கிருந்த பாகவதர்கள் அக்கைமேல் ஜயஜயவென்று கந்தப்பொடிகளிறைக்கக் கை மருக்கொழுந்தாயிற்று. அதனைப் பெருமாளின்றிருவடியில் சாத்தி அரசனுக்குப் பிரசாதம் அனுப்பினர். அதனை அரசன் ஏற்கக் கைநீட்டு கையில் குறைந்தகையும் வளரப்பெற்றவன்.

சாநந்தன் — கௌசிகன் மருமகன்.

சாநவி — கங்கைக்கு ஒருபெயர். சந்நுவைக் காண்க.

சாநன் — பூத்திரன் பேரன், ஒரு இருடி.

சாந்தகவிராயர் — இவர் பிறசையிற் பிறந்த கவிராயர். இரங்கேசவெண்பா இயற்றியவர்.

சாந்தபனம் — ஒருவிரதம், இது மூன்று நாள் பகல் போஜனம் மாத்திரஞ் செய்து பின் மூன்றுநாள் இராப்போஜனம் மாத்திரம் செய்து மூன்று நாள் கேட்காமல் கிடைத்த பொருளை யுண்டு, மூன்று நாள் அன்ன மின்றி உபவாசமிருத்தல்.

சாந்தபன கிருச்சரம் — கோமயம், கோமூத்ரம், பால், தயிர், நெய், தருப்பை ஜலம் இந்த ஆறினையும் ஆறுநாட்கள் புசித்தலும் ஒருநாள் உபவாச மில்லாமையுமாம்.

சாந்தமகாருஷி தக்கர்எனும் முனி புத்திரர். தந்துஎனும் இராஜகுமாரனால் இறந்த முனிவரை எழுப்பினவர்.

சாந்தலிங்கக்கவிராயர் — சோழநாட்டில் தண்டலைச்சேரியிற் பிறந்தவர். தண்டலையார்சதகம் பாடியவர் இதற்குப் பழமொழி விளக்க மெனவும் பெயர்.

சாந்தலிங்கசுவாமிகள் — 1. இவர் பேறையூர். காளத்திதேவா மாணாக்கர். குமாரதேவருக்கு ஆசிரியர் வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார், கொலைமறுத்தல் இயற்றியவர். இவர் செய்த நூல்களுக்குச சிதம்பர சுவாமிகள் உரை செய்தனர். சாலிவாகனசகாப்தம் (கசு00) இல் இருந்தவர்.

2. இவர் தொண்டைநாட்டுத் திருமழிசையூரினர். இவர்செய்தநூல் - வீரர்கமம.

சாந்தனிகம் — பிரமபதத்திற்கு மேலதாய்ப் பரமபதம்போல் மீண்டும் வருதலில்லாப் பதவி.

சாந்தன் — 1. சண்முகசேனைவீரன்.

2. அகன் என்னும பெயருள்ள வசு புத்திரன். (பா - ஆதி.)

சாந்தர் — சுதாபா முனிவரைக் காண்க.

சாந்தாசுரன் — ஒரு அசுரன். இவன் இந்திராதிகளை வருத்தத் தேவர் சிவமூர்த்தியை வேண்டினர். சிவமூர்த்தி இவனையுதைக்க அதனு லிறந்தவன்.

சாந்தி — 1. கர்த்தமபிரசாபதியின் பெண். அதர்வணருஷியின் பாரி.

2. யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷணையிடம் உதித்த குமரன்.

3. அஜமீடனுக்குப் பேரன்.

4. வசுதேவனுக்குத் தேவி, குமரர் பிரசியமன், பிரசிரதன்.

5. தக்ஷனுக்குப் பிரசூதியிடம் உதித்த குமரி, யமன் தேவி.

6. நீளன் குமரன். இவன் குமரன் சுசாந்தி.

7. சிவாகமங்களில் கூறிய கலைகளில் ஒன்று, இதில் (கஅ) சுத்தபுவனம் உள என்பர்.

8. பூதியின் மாணாக்கன். பௌத்திய மன்வந்தரத்தைக் காண்க.

சாந்திகலை — இதில் உள்ள புவனங்கள் சுத்த வித்தையில் வாமை, சேட்டை இரௌத்திரி, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சருவபூததமனி, மனோன்மனி, என்னும் நவசத்திகள் புவனம் ஒன்பது ஈசுரதத்துவத்தில் அநந்தன், சூக்குமன், சிவோத்தமன், ஏகநேத்திரன், ஏகருத்திரன், திரிமூர்த்தி, சிகண்டன், சிகண்டி என்னும் அட்டவித்தியேசுரர் புவனம் எட்டு சதாசிவதத்துவத்திற் சதாசிவபுவனம் ஒன்று ஆகத்தத்துவம் மூன்றினும் அடங்கியபுவனம் பதினெட்டு

சாந்திகன் — இவன் ஒரு வேதியச்சிறுவன், இளமைமுதல் ருத்திராக்ஷம் அணிந்திருந்தனன். இவன் தந்தை சுபுத்தன். இவனை ஒரு அரசனுக்கு விற்றனன் அவ்வரசன் இவனைக் காளிக்குப பலியிடச் செலலுகையில்காளி இவனதுருத்திராக்ஷ கோலம கண்டு அஞ்சி அரசனை கோபித்து இவனுக்கு அவன் பெண்ணைக் கலியாணஞ் செய்து வைக்கக் கட்டளையிடப் பெற்றவன்.

**சாந்திதீர்த்தங்கரர்** — இவர் ஜைநசுவாமி. குருசாங்கல தேசத்தில் அத்தினபுரத்தில் குருவம்சத்திற் பிறந்தவர், தந்தை விசுவசேனர், தாய் அயிராதேவி. இவர் பிறந்தநாள் கிருதயுகம் ஆனிமீ கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தி, பரணி. இவர் உன்னதம் (சு0) வில் சுவர்ணவர்ணம், ஆயுஷ்யம் நூறாயிர வருஷம், புத்திரன் நாராயணன் இவர் திரிசஷ்டி சலாகாபுருஷரில் ஒருவர். சக்கிரவர்த்தியாய் அரசாண்டவர். இவர்க்குக் கணதரர்சக்ராயுதர்முதல் முப்பத்தறுவர். இவர் பதினாறாவது தீர்த்தங்கரர்.

**சாந்திதேவா** — தேவகன் குமரி.

**சாந்திரமானம்** — சந்திரனை முதலாகக் கொண்டு கணிக்கும் கணிதம்.

**சாந்திரவர்க்கன்** — ஒரு இருடி. அதர்வண வேதி.

**சாந்திரநன்** — நிருகுத்துக் குமரன். இவன் ஆத்மஞானியாயினன்.

**சாந்திராயணவிரதம்** — இவ்விரதத்தை யநுஷ்டிக்கத் தொடங்கினவன், கிருஷ்ண பக்ஷத்தில் க்ஷெளரஞ் செய்துகொண்டு வெள்ளை வஸ்திரமுடுத்து முஞ்சத்தாற் செய்த அரைஞாண் அணிந்து பலாசதண்டமெடுத்துக்கொண்டு பிரமசரியவிரதமநுட்டிக்கவேண்டும். சுக்லபக்ஷ பிரதமையில் முந்தி உபவாசித்துச் சுத்தமான இடத்தில் அக்னியை வைக்கச்செய்து ஆகாரம், ஆஜ்யபாகம், பிரணவம், வ்யாஹ்ருதி, வாருணம் என்னும் பஞ்சஹோமங்களையும் செய்து பின்சத்யம், விஷ்ணு, பிரம்மருஷி, பிரம்மா, விச்வதேவர், பிரஜாபதி என்று ஆறுஹோமம் செய்து பின் பிராயசித்தஹோமம் செய்யவேண்டும். பின் சாந்திசெய்து அக்னிகார்யம் முடித்து அக்னிஸோமனை நமஸ்கரித்து விபூதியணிந்து சுத்ததீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அநுஷ்டானமுடித்துக் கைகளைத் தூக்கிக் கொண்டு சூர்யனைப் பார்க்கவேண்டும். பின்னிருகைகளையும் குவித்து நின்று பிரதக்ஷணம் செய்யவேண்டும். பின்ருத்ர, விஷ்ணு, பிரம சூக்தங்களில் ஒன்றையாவது வேறெந்த சூக்தத்தையாவது, 100, 1000, தரமாயினும் செபிக்கவேண்டும். மத்யானத்தில், பொன், வெள்ளி, தாமிரம் மண், அத்திப்பலகை முதலியவற்றால் செய்த பாத்திரங்கொண்டு ஏழு பிராமணர் வீடுகளில் மௌனமாகப் பிக்ஷை கொண்டு கிடைத்த அன்னத்தை ஏழுருண்டைகள் செய்து (1) சூரியன் (2) பிரமன், (3) அக்னி, (4) சோமன், (5) வருணன், (6) விச்வே தேவர்களுக்குக் கொடுத்து மிகுந்ததை மூன்று விரல்களால் சந்திரன் நாடோறும் வளர்தல் தேய்தல் போல் உருண்டைகளையும் வளர்தல் சுருங்கல் செய்து உண்ணலாம். இதை அநுஷ்டித்தால் பாவநீங்கும். (பார - அச்.)

**சாந்திலை** — தெய்வ நாட்டுக் கற்பினிகைகைக்குக் கற்பினிலை கூறியவள்.

**சாந்திபனி** — அவந்திதேசத்துப் பிராமணர் இவரிடத்துப் பலராம கிருஷ்ணர்கள் வித்தியாப்யாசஞ் செய்தனர். இவர் பலராம கிருஷ்ணர்களைப் பிரபாசதீர்த்தத்து முதலையால் இறந்த குமரனை உயிர்ப்பித்துக் கொடுக்கக்கேட்டுப் பெற்றவர்.

**சாந்தியதீதை** — சிவாகமங்களுட் கூறியகலைகளில் ஒன்று இதில் இந்திகை, தீபிகை, இரோசிகை, மோசிகை, ஊர்த்வகாமினி, வியாபினி, வியோமருபை, அநந்தை, அநாதை, அநாசிருதை என (கூ0) சுத்த புவனங்கள் உண்டு.

**சாந்துப்புலவர்** — இவர் பாண்டி நாட்டு திருப்புனவாயிலுக் கணித்தான சிறுகம்பையூர் வாசிசைவவேளாண்மரபினர். யூபகிரிக்கோவை பாடியவர்.

**சாந்துவகை** — (ச) பீதம், கலவை, வட்டிகை, புல்.

**சாந்தோக்யம்** — ஒரு உபநிஷத்து.

**சாந்தோக்யர்** — சாமவேதிகளாகிய வேதியர்.

**சாந்தை** — 1. தக்ஷன்பெண், தருமன்தேவி.

2. தசரதன் குமரி. உரோமபதன் ஸ்வீகார புத்திரி. இவள் இருசிகசிங்கரை மணந்தனள்.

**சாபம்** — இது பெரியோரை அவமதித்தல் முதலியவற்றால் உண்டாகும் கோபத்தின் பயன். இச்சாபம் கிருதயுகத்தில் அக்கணத்திலும், திரேதாயுகத்தில் பத்துநாளிலும், துவாபரயுகத்தில் ஒரு திங்கள் அளவினும், கலியுகத்தில் ஒருவருட அளவினும் பலிக்கும்.

**சாபத்தி** — சுபஸ்தன் நிருமித்த சௌடதேசத்துப் பட்டணம்.

**சாபாலி** — 1. ஒரு இருடி. பத்திரியன் மாணாக்கன்.

2. இராமமூர்த்தி அரசிலிருந்த ஒரு நாஸ்திகன்.

**சாப்பிடத்தகாதபொருள்கள்** — முள்ளங்கி, முருங்கை, வெங்காயம், காளான், அசத்த

கிலத்திலுண்டான பதார்த்தங்கள், உள்ளிப்பூண்டு, சீப்பால், அதன் தயிர், தேவதைகளைக் குறியாது, சமைத்த சித்திரான்னம், பலகாராதிகள். யாககாரியம் ஒழிந்து கொலை செய்யப்பட்ட ஜெந்துக்களின் மாமிசம், கன்றுபோட்டுப் பத்து நாளாகாத பசு, ஆடு, எருமை, புணரும் பருவமுள்ள பசு, இவற்றின்பால், செம்மறியாடு, கன்றுசெத்த பசு, சினைப்பசு இவைகளின் பால், புளித்தபால், புளித்த வெண்ணெய், ஜலசம்பந்தத்தால் புளித்த பழம் (கிழங்கு, ஊறுகாய்கள், அரிசி, மாமிசம்) இவைகளைச் சாப்பிடுகிற பக்ஷி, ஊர்ப்புரு, ஊர்க்குருவி, நீர்க்காக்கை, அன்னம், சக்கிரவாகம், ஊர்க்கோழி, கொக்கு, நாரை, ஊர்ப்பன்றி, சராசப்பக்ஷி, சகலவித மீன்கள், இவைகளை நீக்கவேண்டியது. குயபலுடன் சஞ்சரிக்கிற மீனும், சிங்கமுக மீனும், முள்ளுள்ள மீனும், ஆபத்துக் காலத்தில் சாபபிடலாம். சாப்பிடலாம் என விதித்த பக்ஷி, மிருகங்களில் ஐந்து நகம் உள்ளவைகளை நீக்கவேண்டியது. ரக்ஷிக்க ஆவச்யகமான பிராணிகளைத் தன் மாதா பிதா யக்ஞம் இவர்கள் பொருட்டு உபயோகித்துக்கொள்ளலாம்.

சாமகன் — ருசகன் குமரன் இவன் பாரி சயிப்யை இவன் பகைவருடன போரா புரிந்து பகைவன் குமரியைக்கொண்டு வரக்கண்ட இவன் தேவி, இவள் யார் என்றனள். மனைவிக்குப் பயந்த அரசன இவள் உன் மருமகள் என்றனன். அரசி இன்னும் குமரன் இலாதிருகக மருமகள் என்றது என்னென்ன அரசன் இனி உன் வயிற்றிற் பிறக்கும் புத்திரனுக்கு என்றனன் இதைச்கேட்ட பிதுரர் புத்திரப் பேறு அளித்து அப்பெண்ணை மணக்கச் செய்வித்தனர். இவன் குமரன் விதர்ப்பன. (பாகவதம்.)

சாமதக்கினி — பரசிராமன்.

சாமந்தர் — மலையாளத்திலுள்ள சாதியாரில் ஒருவகை, இவர்கள் தாமூரி ராஜவம்சத்தவர் எனவும், பரசுராமருக்குப் பயந்து காட்டில் வசித்திருந்து சேரமான் காலத்து வந்து குடியேறினவர்கள் எனவும், மந்திரமிலாது பிராமணர் செய்யும் எல்லாக் கிரியைகளையும் செய்பவர்கள் எனவும் கூறுவர். (தர்ஸடன்.)

சாமந்தன் — 1. சவுந்தரசாமந்தனைக் காண்க.

2. நூறு சிற்றூர்களுக்கதிபன் அல்லது ஓர் அரசன் கீழ்வேதனம் பெற்று இறைப்பொருளைக் குடிகளிடம் தண்டி யரசனுக்கு அளிப்பவன். (சுக் - நீ.)

சாமந்தநாராயணந் தொண்டைமான் — தஞ்சாவூரில் சாமந்தநாராயண விண்ணகர் நியமித்தவன்.

சாமவதி — சீமந்தினியைக் காண்க.

சாமவான் — சீமந்தினியைக் காண்க.

சாமவேதம் — இது ஆயிரம் சாகைகளுடையது. இதற்குள்ள உபநிடதங்கள் கேனம், சாந்தோக்யம், ஆருணி, மைத்திராயணி, மைத்திரேயி, வச்சிரசூசிகை, யோகசூடாமணி, வாசுதேவம், மகத்து, சந்நியாசம், அவ்வியக்தம் குண்டிகை, சாவித்திரி, உருத்திராக்கசாபாலம், தரிசனம், சாபாலம் எனப் பதினாறும். இது மூன்றாம் வேதம்.

சாமன் — காமன் தம்பி.

சாமான்யங்காட்சி — சமுதாயமாயறிவது, அதாவது, சமவாய குணத்தோடு கூடித் தூலகன்மங்களை யறிகை. (சிவ - சித)

சாமி — (ஜாமி) தக்ஷன் பெண், தருமன் தேவி, குமரன் சுவர்க்கன்.

சாமித்திரன் — இவன், சக்கிரவாகுவின் பெண் தரித்திருந்த முத்தொடு கலந்த உருத்திராக்ஷமாலையைத் தானியமென்று கவர்ந்துசென்ற காகம் மணியைத் தானியம் அலாமைகண்டு நழுவவிட்டது. அம் மணிமாலை இவன் கழுத்தில் விழுந்ததால் அதைப் புனைந்து திமைநீங்கி முத்திபெற்றவன்.

சாமிநாத ஐயர் — இவர் கும்பகோணம் உத்தமதான புரத்திருந்தவேதியர், திரிசிரபுரம் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளையவர்களிடம் தமிழ் நூல்கள் கற்றவர். இலக்கிய இலக்கணங்களில் வல்லவர் இவரதுதவியாற் பலர் தமிழிலக்கிய வல்லவர்களாயினர். இவர் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, புறப்பொருள் வெண்பாமாலை, பரிபாடல், கொங்குவேள் மாக்கதை முதலிய தமிழிலக்கியங்களைப் பரிசோதித்துதவிய பேருதவியாளர். கும்பகோண கலாசாலையிலும், சென்னை சர்வகலாசாலையிலும் தமிழ்ப் புலமை நடாத்தியவர்.

சாமிநாததேசிகர் — சங்கரநமச்சிவாயப் புலவர்க்கு ஆசிரியர். இலக்கணக்கொத்து இயற்றியவர்.

**சாமிநாதன்** — குமாரக்கடவுள்; பிரமனைப் பிரணவப்பொருள் வினவிய காலத்தில் அவன் கூறாததால் அவனைச் சிறையிட்டனர். இதனை அறிந்த சிவமூர்த்தி குமாரக்கடவுளை அதற்குப் பொருள் கேட்க அக்காலத்தில் குமாரக்கடவுள் சிவமூர்த்தியை மாணாக்கர்போல் இருக்கச்செய்து தாம் அதற்குப் பொருள் அருளிச்செய்த குமரக்கடவுள் திருவுரு.

**சாமிப்புலி** — சம்மட்டிமக்கள் இவ்விருவரும் கள்ளர் சாதியின் பகுப்பு.

**சாமுண்டை** — சத்தகன்னியரிற் றலைவி. சாமுண்டனைக் கொன்றதால் இப்பெயர் பெற்றனள். இவள் நீளநாக்கு, நீளமயிர், நீண்டமூக்கு வளைந்த கோரப்பற்கள் தலைமாலை, மாம்சம் நிறைந்த கபாலம் சூலம் உடையவளாய் இருப்பள். இப்பெயர் அம்பிகையா லிவளுக்கு இடப்பட்டது. இவள் சத்தியினம்சம்.

**சாமூர்த்தம்** — யாதொரு மூர்த்தத்திற்கு (ரு) ஆம் இடத்திற் சநியும் (எ) ஆம் இடத்தில் சுக்ரனும், (க0) இடத்தில் புதனும், (கூ) ஆம் இடத்தில் செவ்வாயும், (சு, அ,) ஆம் இடங்களில் வியாழனும் (கஉ) ஆம் இடத்தில் ஆதித்தனும், இராகுவும், (சு, அ) ஆம் இடங்களில் சந்திரனும், இவற்றில் ஒருவர் இப்படி நிற்கில் மிருத்து முகூர்த்தமாம். (விதானமாலை.)

**சாமை** — சயூடணனுக்குக் குமரி, விபீடணன் தேவி.

**சாம்பனத்தம்** — சைனர்களுடைய ஏடுகள் நெருப்பல் வெந்த இடமாம (திருவிளையாடல்.

**சாம்பமூர்த்தி** — உமையுடன் கூடிய சிவமூர்த்தி

**சாம்பவதி** — சாம்பவான் அல்லது சாம்பவந்தன குமரி. கிருஷ்ணனை மணந்தவள். இவளுக்குச் சாமபன் முதலிய நூறு குமரர் பிறந்தனர் இவள் சிவபூசையால் சாமபனைப் பெற்றாள்.

**சாம்பவந்தன்** — பிரமபுத்திரனாகிய கரடி வேந்தன. வாமனர் மாவலியிடத்தில் மண் கொண்ட காலத்துப் பறையறைந்து மேரு இடறக் கால் தளர்ந்தவன். இராமராவண யுத்தத்தில் பிரம்மாஸ்திரத்தால் அனைவரும் மூர்ச்சித்தபோது அனுமனுக்குச் சஞ்சீவியின் இருக்கைகூறி அது வந்த பிறகு பழைய இடத்திற்குப்போக நியமித்தவன். அமிர்தமதன காலத்து இருந்தவன். சிரஞ்சீவிகளில் ஒருவன். சியமந்தகமணியின் பொருட்டுக் கண்ணனிடத்தில் (28) நாள் யுத்தஞ்செய்து சலித்து விஷ்ணுமூர்த்தி யென்று அறிந்து மணியையும் தனது புத்திரியாகிய சாம்பவதியையும் அவர்க்குக் கொடுத்தவன். இவற்குச் சாம்பவான், சாம்பவந்தன் எனவும் பெயர். குமரி சாம்பவதி. இவன் பூர்வத்தில் பிரமபுத்திரன், வாமனர் மண்ணளந்த காலத்துத் திருவடி பிரமலோகம் அடைய அவ்விடம் பூசித்தபோது பெருமாள் உனக்கு என்னவரம் வேண்டுமென்ன உமது சக்கரத்தால் மரணம் வேண்டுமென அவ்வாறே கிருஷ்ணவதாரத்தில் செய்கிறேம் என்று ஒருமணிபொருட்டுச் சக்கரத்தாற் கொல்ல இறந்தவன். (கல்கிபுராணம்).

**சாம்பவான்** — சாம்பவந்தனைக் காண்க.

**சாம்பன்** — 1. சாம்பவதி குமரன். கிருஷ்ணனால் தவஞ்செய்து பெறப்பட்டவன். இவற்கு ஒன்பதின்மர் தம்பியர். இவன் துரியோதனன் குமரியாகிய இலக்குமணையை மணந்தவன். ஒருநாள் இவனை யாதவர்கள் கர்ப்பிணிவேஷம் போட்டுப் பிறக்கிறது ஆணோ, பெண்ணோ எனக் கண்வர் முதலிய ருஷிகளைக்கேட்க முனிவர்கள் இவள் வயிற்றில் உலக்கை ஒன்று பிறந்து உங்கள் குலத்தை நாசஞ்செய்யும் எனப புகன்றனர். அந்தப்படி இருப்புத்தூண் பெற்றவன். கண்ணன், கோபிகைகளுடன்கூடிச் சலக்கிரீடை செய்கையில் அவ்விடம் சாம்பன் அறியாது சென்றனன். அப்பெண்கள் சாமபன் அழகைக் கண்டு சித்தசலனப்பட்டனர். இதனை யறிந்த கண்ணன் சாம்பனைக் குட்ட நோய் கொள்ளச் சாபம் அளித்தனன் சிவாநுக்கிரகத்தால் கிருஷ்ணமூர்த் திக்குப் புத்திரனாகப பிறந்தவன. இவன் பிரளயகால சூரியன், இருடிகளின் சாபத்தால் மனுஷனாகப் பிறந்தவன். (சிவமகாபுராணம்).

2. (ச.) குசன் குமரன்.

3. வானரசேனைத் தலைவன்.

4. துத்திரடன் குமரன். இவன் அரசனாயினும் பஞ்சமகாபாதகஞ்செய்து தனக்குபபதில் தன் மந்திரியை நியமித்தனன். அம்மந்திரியும் குடிகளை வருத்தினன். இருவரும் விதாபபநாட்டில் வேடராகப் பிறந்து விநாயகபூசையால் முத்தி ...

5. கிருஷ்ண சாபத்தால் குஷ்டநோய் பெற்றுச் சூர்யபூசையால் விமோசன மடைந்தான். (பவிஷ் - புரா.)

6. தென்னாட்டுப் பறையர்க்கு ஒரு பட்டம்

**சாம்பாசுரன்** — ஒரு அசுரன் இவன் பிரத்தியும்நன் தனக்கு விரோதி என எண்ணிச் சிசுவாயிருக்கையில் கடலில் தூக்கி வந்து இட்டனன் அச்சிசுவை மீன் விழுங்கிற்று. அம்மீனை வலைஞன் பிடித்தனன். அந்த மீனைச் சேதிக்க அதன் வயிற்றில் குழந்தை யிருந்தது. அதைச் சாம்பாசுரன் மனையிலிருக்கும் மாயாவதி வளர்க்க அவனுக் சூரன் கொலையுண்டனன்.

**சாம்பாதித்தன்** — சாம்பன், நாரதனை வணங்காததால் வயிரங்கொண்டு கண்ணனை நோக்கிப் பெண்கள் கூடியிருக்குந் தருணத்தில் அழகுள்ளான் குமரனையினும் சித்தசலனம் உண்டாம். ஆதலால் இப்போது இவ்விடம் சாம்பன் வந்ததினால் இப்பெண்களது முகம் வேர்க்கின்றது; எனக் கண்ணன் சாம்பனைக் கோபித்துக் குட்டநோய் அடைக என்ச் சபித்தனன். அவ்வகை சாம்பன் குட்டநோய் அடைந்து காசியில் சூரியபூசைசெய்து சாபம் நீங்கப் பெற்றான். சாம்பன் தொழுததால் சாம்பாதித்தன் எனச் சூரியன் கூறப்பட்டனன். (காசிகாண்டம்).

**சாம்பான்** — இடையரிலும், பறையரிலு ஒருவகை வகுப்பு.

**சாம்பிராணி** — இது, பார்னியோ, ஜாவா, சுமத்ரா, ஸயாம் முதலிய இடங்களிலுண்டாம் ஒருவகை மரத்தின்பால். இதை இந்துக்கள் தங்கள் தேவதைகளுககு ஆராதனை மணப்பொருளாகக் கொள்கின்றனர்.

**சாம்யமனி** — பாகலிக புத்திரன். சோமதத்தனுக்கு ஒரு பெயர்.

**சாயக்காரர்** — சாயத்தொழில் செய்யும் சாதியார்.

**சாயநாசாரியார்** — சாமவேதத்தில் தாந்திய மென்னும் பிராம்மணத்திற்கு வியாக்கியானஞ் செய்தவர். மாதவாசாரியர் சகோதரர்.

**சாயம்** — 1. பிரபாவின் குமரன்.

2. ஆவுரி, நுணா, மஞ்சள், அரக்கு முதலியவற்றைப் பதப்படுத்திச் சாயம் ஊட்டுவது

**சாயவகைகள்** — இவை மரப்பட்டைகள் வேர்கள், மஞ்சள் அவுரிச்செடி முதலியவைகளிலிருந்து செய்யப்படுகின்றன. கருமை வெள்ளை, செம்மை, பசுமை, நீலம், மஞ்சள், இவை ஒன்றுடன் ஒன்று ஏற்றக் குறைவாகச் சேர்த்துக் கூட்டினால் பலவேறு வர்ணங்களாம்.

**சாயலன்** — காவிரிப்பூம் பட்டினத்திருந்த ஒரு வணிகன். எட்டிப்பட்டம் பெற்றான். (சிலப்பதிகாரம்)

**சாயன்** — 1. தாதைக்குக் குருவிடம் பிறந்த குமரன்.

2. ஆருணியரசனுடைய பெரும்படைத் தலைவர்களுள் ஒருவன். (பெ - கதை.)

**சாயாசுரன்** பாலகணபதியின் சாயையைப் பற்றி வருத்தவந்து விநாயகரது உறுத்த பார்வையால் இறந்தவன்.

**சாயாதேவி** — 1. சூரியன் தேவி, சஞ்ஞாதேவியைக் காண்க.

2 இவள் இராமருக்குச் சீதைக்குப் பிரதியாகச் சீதையின் உருவமாக அக்னியால் கொடுக்கப்பட்டவள். இராவணவத முடிவில் உண்மையான சீதை வந்தபின் என்கதி யென்னவென இராமரைக் கேட்க நீபுட்காரத் தீவுசென்று தவம்புரிந்து சுவர்க்கலக்ஷ்மியாய்ப் பின்நீண்ட காலம்சென்று யஞ்ஞகுண்டத்திற் பிறந்து துவாபரயுகத்தில் திரௌபதியாய்ப் பாண்டவர்க்குத் தேவியாக என அவ்வாறானவள். (தே பா.)

**சாயாபுருஷதரிசனம்** — பகலிற் சூரியனையாவது, இரவிற் சந்திரனையாவது தனக்குப் பின்புறமாக்கி மந்திர செபத்தாற் தனது சாயையைப் பூமியிற்பார்த்துச் சிறிதுநேரத்தில் அவ்வகையே ஆகாயத்திற் பார்க்க அவ்வுரு ஆகாயத்தில் தோற்றும். இவ்வுரு சிரமில்லாது தோன்றின் ஆறுமாதத்தில் இறப்பான்

**சாயும்படை தாங்கி** — கள்ளர் சாதியில் ஒரு வகை யார்.

**சாயை** — கணவன் இந்திரிய ரூபமாகத்தன் மனையாளை யடைந்து கருப்பமாகச் சனித்துப்பின் அவளிடத்தினின்று பிள்ளையாகப் பிறக்கிறபடியால் அக்கருத்தாங்கிய மனைவி சாயை எனப்படுவாள். (மநு.)

**சாரகுமாரன்** — அநாகுலனைக் காண்க.

**சாரங்கதரன்** — இவன், இராஜமகேந்திரபுரத்தரசனாகிய இராஜ நரேந்திரனுக்கு ரத்னாங்கியிடம் பிறந்த குமரன். இவன் தன் நண்பனுடன் புறாவிட்டு விளையாடுகையில் புறா ஒன்று சிற்றன்னை வீட்டில் புக இவனது அழகைக் கண்ட இராஜ

நரேந்திரனுக்கு இளைய மனைவி சித்திராங்கி சாரங்கதரனை விரும்பிப் பலாத்காரம் செய்தும் இவன் உடன்படாததால் இவள் தன்னைப் பலாத்காரமாக இழுத்தான் எனப் புருஷனிடம் கூறினள். இராஜ நரேந்திரனிவனைக் காட்டில் கைகால்களைச் சேதிக்கச் செய்தனன். சாரங்கதரன் ஒரு சித்தர் அருளால் கைகால்கள் வளரப்பெற்று அரசனாயினன்.

**சாரங்கரவன்** — ஜனமேஜயனுக்குச் சர்ப்பயாகம் செய்வித்தருஷி. (பா - ஆதி)

**சாரங்கி** — மந்தபால முனிவனால் மணந்துகொள்ளப்பட்ட தாழ்ந்த சாதிப்பெண் இவள் பக்ஷியுருக்கொண்டவளாக இருக்கலாம். மந்தபாலனைக் காண்க. (மநு.)

**சாரங்கன்** — ஒரு வேதியன். இவன், பார்வதியாரின் தோழியர்களைப் புத்திரிகளாகப் பெற்றவன் ஆக்கன்னியர் யானிடராகப் பிறந்த சாபத்தைப் பேரூரில் சிவபூசைசெய்து நீக்கிக்கொண்டனர்.

**சாரசன்** — 1 திருசராட்டிரன் குமரன்.

2. இராவணனுக்கு மந்தரி.

**சாரதாண்டாயினி** — இவன் கேகய தேசத்தரசன். இவன் சுருதசேனை யென்பவளை மணந்து இருக்கையில் புத்ரரில்லாமையால் கணவன்சொற்படி ஒரு வேதியனைக் கூடித் தூர்ஜயன் முதலிய (௩) மஹாரதர்களைப் பெற்றுக்கொண்டனள். இந்தச் சுருதசேனை குந்தியின் சகோதரி.

**சாரதாபீடம்** — சத்திபீடங்களில் ஒன்று.

**சாரத்துவதன்** — கிருபாசாரியருக்கு ஒரு பெயர். (பா - ஆதி.)

**சாரத்துவதி**—1. துரோணசாரியர் பாரியை. கிருபிக்கு ஒருபெயர்.

2 ஒரு அப்ஸரசு.

**சாரச்வதம்**—1. ஒரு வடநூல் இலக்கணம்.

2. சரஸ்வதி தீரத்துள்ள தேசம்.

3. சாரஸ்வதரைக் காண்க.

**சாரச்வதர்**—1. ததீசிமுனிவர் ஒரு காலத்து ஸரஸ்வதிநதி தீரத்தில் ஸ்நானத்திற்குச் செல்ல இந்திரன் இவருடைய தவத்திற்கஞ்சி அலம்புசையை யனுப்பருஷி இவளைக்கண்டனர். வீரியம் சரஸ்வதி நதியில் வீழ்ந்தது. அதைச் சரஸ்வதி கருத்தாங்கி இவரைப்பெற்று ருஷியிடங் காட்டிப் பெயரிடப்பட்டு வளர்த்தனள். இவர் வேதத்தில் வல்லராய் வளர்ந்து வந்தனர். இவ்வகை யிருக்கையில் பன்னிரண்டு வருடம் க்ஷாமம் உண்டாக இருடிகள் இடம்விட்டுப் பெயரத்தொடங்கினர். சாரஸ்வதரும் அவ்வாறு செல்லத்தொடங்குகையில் சரஸ்வதி நீ செல்லற்க நான் உனக்கு வேண்டிய மீனாகாரத்தைத் தருகிறேன் என்று நிறுத்தினள். க்ஷாமம் கழிந்து ருஷிகள் வேதந்தெரியாது மயங்குகையில் அவர்கள் இவரை ஆசாரியராகப்பெற்று வேதமுணர்ந்தனர். ததீசிதவஞ்செய்த தீர்த்தம் சாரஸ்வதம். இதில் பலராமர் தீர்த்த யாத்திரையில் ஸ்நானஞ்செய்தார். (பார - சல்)

2. அட்டகோண இருடியைக் காண்க.

**சாரணன்** — 1. இராவண தூதன் வானரசேனை, கடற்கரையி லிறங்கியிருக்கும் செய்தியறிந்து இராவணனுக்கு அறிவித்தவன்.

2. யதுகுலத்து அரசரில் ஒருவன் வசுதேவருக்கு ரோகணியி ம் பிறந்தவன்.

3. யதுவம்சத்துக் கிருஷ்ணனுடன் பிறந்தவன். (பா - ஆதி.)

**சாரணர்** — தேவசாதியார்.

**சாரணை** — சிவபூசையால் முத்திபெற்றவள்.

**சாரதா** — ஒரு மாயாதேவி.

**சாரதை** — வேதவிரதன் பெண். இவளைப் பதுமநாபன் என்னும் விருத்த வேதியன் அரசவலிமையால் மணந்து சுகம்பெறாது இறக்க, இவளும் இறந்து மறுபிறப்பில் ஒரு வேதியனை மணந்து சுகம்பெறாது அமங்கலையாயினள். இவ்வகை இவள் அமங்கலையா யிருக்கையில் ஒரு வேதியன் பிக்ஷைக்கு வந்தனன். அவனைச் சாரதை உபசரிக்க வேதியன், நீ சுமங்கலியாய்ப் புத்திரபாக்கியத்துடன் இருக்க என்று ஆசிர்வதித்தனன். இதைச் சாரதைகேட்டுத் தான் கைம்மை என்று கூறினள். வேதியன் என்வாக்கில் வந்ததாயினும் நீ உமாமகேச்வரவிரதம் அனுட்டிக்க என்று கூறி அவ்விரதத்தை அனுட்டிக்கச் செய்வித்தனர். அதனால் உமாதேவியார் தரிசனமாக வேதியன் சாரதையின் செய்தியை அறிவித்தனன். பிராட்டியார் இவள் இதற்குமுன் பாண்டிநாட்டில் ஒரு வேதியனுக்கு உள்ள இரண்டாவது மனைவி, பெயர் பதுமினி. இவள் தன்னுடைய மூத்தஸ்திரீகத்திக்குச் சுகம் தராது இவளே அனுபவித்ததால் மூத்தவள் சுகம் பெறாது இறந்தாள். ஆதலால் இப்பிறப்பில் மணந்தும் கணவன் இறந்தனன். இவள் இனிப் பாண்டிநாட்டில் இவன் கணவனைக் கனவிற் புணர்ந்து ஒரு புத்தி

ரனைப்பெற்று ஒன்று சேர்வள் என்று மறைந்தனர். அந்தப்படி கனவில் கணவனைப் புணர்ந்து புத்திரனைப் பெற்றுக் கோகர்ணத்தில் கணவனைக் கண்டு சுகமுடன் இருந்தனள். (பிரமோத்தரகாண்டம்).

சாரமாமுனி — சோமசன்மன் குமரர். உறையூரில் செவ்வந்தீசரைப் பூசிக்கப் பாதாளஞ்சென்று செவ்வந்திக்கொடி கொண்டு வந்து பதித்து அது வளர்ந்து பூத்தபின் மலரெடுத்துப் பூசித்து அம்மலரை வலிதிற்பெற்ற அரசன் பட்டணத்தை அழிக்கச் சிவமூர்த்தியை வேண்டினவர்.

சாரமேயன் — 1. சுவபலருக்குக் காந்தியிடத்து உதித்த குமரன்.

2. அக்குரூரன் தம்பி.

சாரம் — சிவசூரிய பீடம்.

சாரன் — 1. இராவண தூதன், குரங்குருக் கொண்டு வானரசேனைக்குள் புகுந்து விபீஷணரால் கட்டுண்டவன்.

2. சண்முகசேனாவீரன்.

3 செந்நிறங் கொண்ட சிங்கவுருவாய் அனந்தரிடத்திருக்கும் தூதன்.

சாராயம் — அரிசி, வேலம்பட்டை திராக்ஷை முதலிய பலவகைப் பொருள்களைக் காய்ச்சும் வாலையினின்று வடிக்கப்படும் திரவப்பொருள். மயக்கி அறிவைக்குலைப்பது.

சாராயமட்டயந்திரம் — ஒரு சிறு கண்ணாடிக்குழலை ஒருதுளி குறையச் சாராயத்தை நிரப்பிக் குழலினிரு மருங்கையுமூடிவிட்டால் அதில் ஒருகுமிழியுண்டாம். இந்தக் குமிழிநிலை, பூமி, மரம் முதலியவற்றின் பரப்பைச் சமமாக அறிவிக்கும்.

சாரிசிருட்டன் — சாரங்கபக்ஷியாயிருந்த மந்தபாலமுனிவருக்கு இரண்டாங் குமாரனான பக்ஷி.

சாரிப்புத்தன் — ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகளுடன் வாதிடவந்து சம்பந்தசரணாலயாரால் தோல்விபெற்றுச் சைவனான புத்தன்.

சாரியை — இது எழுத்துக்களையும் பதங்களையும் சார்ந்து பொருளின்றி வரும் எழுத்தும் சொல்லுமாம்.

சாரீரம் — இறைவன் ஆணையால் கர்மாநுகுணமாகத் தந்தை விந்து வாகனமாக மாதாவின் கருவழிப்பட்ட ஆன்மா, பத்து மாதமும் நிறைந்து பூமியில் மனித உருக்கொண்டு பிறப்பன். அப்பிறந்த சரீரத்தின் அங்க விபாகாதிகளைச் சுருக்கிக் கூறுவது. சரீரத்தில் சிரம், கரம், கால், அந்தராதி முதலிய அங்கங்கள் சிறந்தன. அந்தராதி என்பது முன்னர்க்கூறிய சிரம், கரம், கால், ஒழிந்த உறுப்புக்கள். இவற்றுள் கண், இருதயம் முதலிய பிரத்தியங்கங்களாம். இவ்வுறுப்புக்கள் பஞ்சபூதகாரியமாய் நிற்கும். இச்சரீரத்தில் உள்ள இரத்தம், மாமிசம், மச்சை, குதம் முதலிய மாத்ருஜங்களும், தேகத்தில் ஸ்திரமாய் உள்ள சுக்லம், பெருநரம்பு, சிறுநரம்பு, எலும்பு, மயிர் முதலிய பித்ருஜங்களும், சித்தேந்திரியம் முதலிய ஆத்மஜங்களும் ஆம். இத்தேகத்திற்கு ஆயுளும், ஆரோக்கியமும், ஊக்கமும், ஒளியும், பலமும், ஸாத்மயஜங்களாம். தோற்றமும், நிலையும், வளர்ச்சியும், அசைவின்மையும், ராஜஸங்களாம். இத்தேகத்தில் எழுவகைத் தொக்குகள் உண்டு. அவை உண்ட அன்னத்தால் உண்டாம் உதிரத்தால் உண்டாவன அவற்றில் 1. பாவஸினி — ஒரு நெல்லின் பதினெட்டில் ஒரு பங்கு கனம் உள்ளது. 2. லோஹினி—ஒரு நெல்லின் 16 ல் ஒரு பங்கு கனம் உள்ளது. 3. ஸ்வேதா — ஒரு நெல்லின் 12-ல் ஒருபங்கு கனம் உள்ளது. 4. தாம்ரா — ஒரு நெல்லின் 8-ல் ஒருபங்கு கனம் உள்ளது. 5. வேதினி—ஒரு நெல்லின் 5-ல் ஒருபங்கு கனம் உள்ளது. 6. ரோஹிணி — ஒரு நெல்லின் கனம் உள்ளது. 7. மாம்ஸதவி- இது இரண்டு நெல்லின் கனம் உள்ளது. பின்னும் கலா என்னும் கிலேதம் ஒன்றுண்டு. அது ரஸாதிதாதுக்களின் அந்தங்களில் இருந்து தாதுக்களின் உஷ்ணத்தால் பாகப்பட்டு மரவயிரம்போல் சத்ததாதுக்களால் ஒவ்வொரு கலையை அடைந்து எழுவகைக் கலையைப் பெறும். இந்தக் கிலேதத்திற்கு, இரத்தத்திற்கு ஆதாரமான ரக்தாசயம், கபத்திற்கு ஆதாரமான கபாசயம் பக்குவாஹார ஸ்தானம் என்னும் ஆமாசயம், பித்தத்திற்கு ஆதாரமான பித்தாசயம், பக்குவாஹார ஸ்தானமான பக்குவாசயம், வாயுவிற்கு ஆதாரமான வாயுவாசயம், மூத்திரத்திற்கு இருப்பிடமான மூத்திராசயம் என எழுவகை ஆசயங்கள் ஆதாரங்களாம். ஸ்திரீகளுக்குக் கர்ப்பாசயம் ஒன்று அதிகப்படும். இது பித்த, பக்குவாசயங்களுக்கு இடையில் இருக்கும். மேற்கூறிய சப்தாசயங்களை

சார்ந்து கோஷ்டங்கள் என்னும் அறைகள் உண்டு. அவை மார்புக்குள் தாமரை வடிவாய் இருக்கும். இருதயம் அல்லது இரத்தாசயம், செந்நிற ஈரல் என்னும் க்லோமம். நுரைஈரல் எனும் புத்புஸம் வயிற்றின் வலப்பக்கத்தில் உள்ள கறுத்த மாம்ஸ பிண்டமாகிய யக்ருது, மார்பின் இடது பாகத்தில் உள்ள ப்சுமையான மாம்ஸ பிண்டமாகிய பலீகம், (குடல் சுருட்டு) மலஸ்தானமாகிய உந்துகம், பக்கங்களில் நெல்லிக்காய் அளவு சிறிது நீண்டிருக்கும் மாம்ஸ விசேஷமாகிய விருக்கம், தொப்புளாகிய நாபி, நெஞ்சின் இடது பக்கத்தில் இருக்கும் மாம்ஸ விசேஷமாகிய டிம்பம், குடலாகிய ஆந்திரம், மூத்திரப் பையாகிய வஸ்தி முதலிய. பின்னும் சரீரத்தில் பதினறு ஜாலங்களும், பதினறு கண்டாரங்களும் உள). (ஜாலங்கள் வலைபோன்ற உறுப்புக்கள்). அச்சாலங்கள் மணிக்கட்டுகளில் நன்னன்கும், காற்பரடுகளில் நன்னன்குகளுமாம். அவை நரம்புகளினாலும், சிறுநரம்புகளினாலும், எலும்பு, மாமிசங்களினாலும், கட்டுண்டு இருக்கின்றன. கண்டரங்கள் கைகளில் இரண்டு இரண்டும், கழுத்தில் நான்கும், கால்களில் இரண்டு இரண்டும், பிருஷ்டத்தில் நான்கும் ஆகப் பதினறும். கூர்ச்சங்கள் (சு) (சிகார நரம்புகள்) அவை கைகளில் இரண்டும், கால்களில் இரண்டும், கழுத்தில் ஒன்றும், குறியில் ஒன்றுமாம். ஸீவனிகள் — (எ) (இழை ஒட்டினதை ஒத்த நரம்புகள்) அவை குறியில் ஒன்றும் நாவில் ஒன்றும், சிரசில் ஐந்துமாம். தசைப்பெரு நரம்புகளாகிய மாம்ஸாஜ்ஜுக்கள் (ச) அவை முதுகெலும்பின் உள்ளும் புறம்புமாகிய இரு பக்கங்களிலும் இரண்டு இரண்டாக நான்காய்ப் பிருஷ்டபாகத்திலுள்ள மாமிசத்தைத் தாங்கிக்கொண்டு இருப்பன. அஸ்தி சங்காதங்கள் — (கச) (எலும்புக் கூடுகள்) அவை குல்பங்களில் ஒவ்வொன்றும், ஜாநுக்களில் (தொடைகளில்) ஒவ்வொன்றும், வங்க்ஷணங்களில் (தொடைச்சந்திகளில்) ஒவ்வொன்றும், திரிக[illegible]ல் (முதுகெலும்பின் கீழ்ப்பாகம்) ஒன்றும, சிரசில் ஒன்றும், சக்ஷங்களில் ஒவ்வொன்றும், கூர்ப்பரங்களில் (முழங்கை) ஒவ்வொன்றும், ஆகப் பதினன்காம். ஸிமந்தங்கள் — (ம்) (சந்திர வலயம் ஒத்த நரம்புகள்) சிரசில் ஐந்து, சிரம் நீங்கிய குல்பாதிகளில் ஒவ்வொன்றுமாகப் பதினெட்டாம். எலும்புகள் தந்தாகங்களோடு கூடி (கூகூய) அவை கால்களிலும் கைகளிலும் (கசo) மத்திய சரீரத்தில் (கஉo) ஊர்த்வாங்கத்தில் (ஈ) ஆக (நகூo) ஆம். அவற்றின் விரிவருமாறு: கால் நகங்கள், (ங) விரல் ஒன்றிற்கு மும்மூன்ருக ஐந்து விரல்களிலும் உள்ள அங்குல்யாஸ்தி-(யரு), சலாகாஸ்தி-(ங), சலாகாபிரதிபந்தாஸ்தி-(க), கூர்ச்சாஸ்தி-(உ), குல்பாஸ்தி-(உ), ஜங்காஸ்தி-(உ), பார்ஷ்ணி (க), ஜாநுபலகாஸ்தி (க), ஊருவஸ்தி-(க), ஆக (நரு) ஆக இரண்டு கால்களிலும் உள்ள அஸ்திகள்-(எo) கை ஒன்றுக்கு ஐந்துவிரல்களிலும் உள்ள நகங்கள் (ங) விரல் ஒன்றுக்கு மும்மூன்று வீதம் ஐந்து விரல்களிலும் உள்ள அங்குல்யாஸ்தி-(கரு), சலாகாஸ்தி-(ங), சலாகாபிரதிபந்தாஸ்தி-(க), கூர்ச்சாஸ்தி-(உ), மணிபந்தாஸ்தி-(உ), பிரகோஷ்டாஸ்தி-(உ), கூர்ப்பராஸ்தி-(க), பாகுப்ருஷ்டம் (க), ஹஸ்தமூலம்-(க), ஆக (நரு) வீதம் இரண்டு கைகளிலும் உள்ள அஸ்திகள் (எo) ஆக இருகை கால்களிலுள்ள அஸ்திகள் (கசo) மத்திய சரீரத்தில் பார்ஸ்வாஸ்தி-(உச) தாலகாஸ்தி-(உச), அர்ப்புதாஸ்தி-(உச) ப்ருஷ்டாஸ்தி-(நo), உரஸஸ்தி-(அ) திரிகாஸ்தி-(க), பாகாஸ்தி-(க), அக்ஷகாஸ்தி-(உ), அம்சாஸ்தி-(உ), அம்ஸபலகாஸ்தி-(உ), நிதம்பாஸ்தி-(உ), ஆக (கஉo), அஸ்திகள் உள. ஊர்த்வாங்கத்தில் கண்டாஸ்தி-(உ), கர்ணஸ்தி-(உ), சங்காஸ்தி-(உ), தால்வஸ்தி-(க), ஜத்ருவஸ்தி-(க) க்ரீவாஸ்தி-(கந), கண்டநாளாஸ்தி (ச) ஹநுபந்தாஸ்தி-(உ), தந்தம் உலூகலாஸ்தி-(நஉ), க்ராணஸ்தி-சிரஸஸ்தி-(சு) ஆக (ஈ) அஸ்திகள் உளவாம். ஸ்நாவங்கள் தொள்ளாயிரம் (நரம்புகள்) அவை கைகளில் (நoo) கால்களில், (நoo) மத்திய சரீரத்தில், (உநo) ஊர்த்வாங்கத்தில் (எo) ஆக (கூoo). பேசிகள் - (மாம்சபிண்டங்கள்) புருஷர்களுக்குரியனவாகிய பேசிகள்-(ருoo), அவைகளில் கால்களில் (உoo) கைகளில் (உoo) மத்ய சரீரத்தில் (சுo) ஊர்த்வாங்கத்தில் - (சo) ஆக (ருoo) ஸ்திரீகளுக்கு உரிய பேசிகள் (ருஉo) அவை முன் கூறியதுடன் யோனி, ஸ்தனங்களில் உள்ள பேசிகள் (உo) கூட்டிக்கொள்க. மூலசிராக்கள்-(ம) (அதாவது பிரதான நரம்புகள்). இவை மார்பை இட

மாகக் கொண்டு ஆகார ஸ்வரூபமான ஓஜசை சரீரம் முழுவதும் பரவச் செய்கின்றன. இவைகளின் அடி பருமனுக வும், நுனி நேர்மையாகவும் இருக்கும். இவை இலைகளின் நரம்பு பலபடப்பிரிந்து இருப்பதுபோல் எழுநூறு ஆகப் பிரிந்திருக்கும். அவை கைகளில் (உ௦௦) கால்களில் (உ௦௦) மத்தியசரீரத்தில் (கங௬) ஊர்த்வாங்கத்தில் (க௬ச). சாகைகள்தோறும் ஜாலந்தரம் என்னும் பெயரை உடைய ஒரு சிராவும், அதனுள் (ங) சிராக்களும் உள்ளன. சுரோணி பாகசிராக்கள்-(கடிபாகம்) (ஙஉ) அவற்றுள் வங்ஷணங்களில் உள்ளன (ச) கடீகத்தில் உள்ளன (உ) தருணத்தில் உள்ளன (உ) பார்ஸ்வ சிராக்கள் - (பக்கம்) பக்கத்திற்குப் பதினாக இரண்டு பக்கங்களுக்கும் (ஙஉ) பிருஷ்டபாக சிராக்கள் - (உச) (பிருஷ்ட பாகம் - முதுகு). ஜடாசிராக்கள் (வயிறு) (உச) அவற்றுள் நான்கு குறியின் மேல் பாகத்தில் ரோமாவளியின் இருபக்கங்களிலும் இருக்கின்றன. உரஸ்விராக்கள் — (மார்பு)-(ச௦) அவை ஸ்தனரோகிதங்களில் இரண்டிரண்டும், ஸ்தனமூலங்களில்இரண்டிரண்டும், ஹிருதயத்தில் இரண்டும், அவஸ்தம்பங்களில் ஒவ்வொன்றும், அவாலாபங்களில் ஒவ்வொன்றும், ஆகப் பதினன்காம். கிரீவசிராக்கள் (கழுத்து) - (உச) அவற்றுள் நீலா (உ) மன்னியா-(உ) க்ருகாடிகா-(உ) விதுரா-(உ) மாத்ருகா-(அ)ஆக (கசு). ஹநுசிராக்கள் - (யசு) (ஹநு - கபோலம்). ஜிஹ்வசிராக்கள்-(கசு) நாசிகாசிராக்கள்-(உச) நயனசிராக்கள் - (ருசு) லலாடசிராக்கள்-(சு௦) க்ர்ணசிராக்கள்(கசு) மூர்த்தசிராக்கள்-(யஉ). ரத்தவாகினிகள்-(௭௦௦). இவற்றுள் வாதரத்தத்தை வகித்துக்கொண்டு இருப்பன (களரு). கபாரத்தத்தைவகித்துக்கொண்டுஇருப்பன (களரு) பித்தாத்தத்தை வகித்துக்கொண்டிருப்பன (களரு). சுத்த ரத்தத்தை வகித்துக்கொண்டு இருப்பன (களரு). தமநிகள் - (உச) அவை சக்காத்தின் குடத்தை இலைகள் சூழ்ந்திருப்பதுபோல நாபியைச் சூழ்ந்து இருக்கும். (தமநிகள் மகாநாடிகள் (சுரோதஸ்ஸுக்கள்-(க) நாசித்துவாரம் - (உ) கர்ணத்வாரம்-(உ) நேத்ரத்வாரம் (உ) குதத்துவாரம்-(க) முகம்-(க) மேஹனத்துவாரம் - (க) ஸ்திரீகளுக்கு விசேஷமாய்ச் சுரோதஸ்ஸுக்கள்-(ங). அவை ஸ்தனத்துவாரம்-(உ). ரத்தமார்க்கம் ஒன்றுமாம. (சுரோதஸ் சளி முதலியவற்றை வெளிப்படுத்தும்வழி, அந்தச் சுரோதஸ்ஸுக்கள்-(கங) உடலுக்குள்ளிருக்கும் துவாரங்கள். தேகத்தில் உள்ள மச்சாதி தாதுக்களின் அளவு. மச்சை ஒரு அஞ்சலிப்பிரமாணம். மேதஸ்-இரண்டு அஞ்சலிப் பிரமாணம். வசை மூன்றஞ்சலிப் பிரமாணம். மூத்திரம்-நான்கு அஞ்சலிப் பிரமாணம். பித்தம்-ஐந்து அஞ்சலிப் பிரமாணம். கபம்-ஆறு அஞ்சலிப் பிரமாணம். மலம்-எழஞ்சலிப் பிரமாணம். ரத்தம்-எட்டஞ்சலிப் பிரமாணம். ரஸம்-ஒன்பதஞ்சலிப் பிரமாணம். ஜலம் பத்து அஞ்சலிப் பிரமாணம். (அஞ்சலி இரண்டு சேரங்கை கொண்டது). புருஷர்களுக்குத் தத்தங் கைகளால் ஓஜஸ் தலை மூளை, சுக்லம் ஆகிய இவைகள் ஒவ்வொரு பிரஸ்ருதப் பிரமாணமும் ஸ்திரீகளுக்குத் தத்தம் கைகளால் முலைப்பால் இரண்டு அஞ்சலிப்பிரமாணமும், ரஜஸு நான்கு அஞ்சலிப் பிரமாணமுமாக இருக்கும் எனக் கூறப்பட்டிருக்கிறது. (பிரஸ்ருதம்-சேரங்கை கொண்டது).

சாரு — (சங்.) மனசுயு புத்திரன். இவன் குமரன் சுத்திய

சாருகருமன் — தமனைக் காண்க.

சாருகன் — மதுராநகரத்து அரசன். சிவதீக்ஷைபெற்ற ஒரு கன்னிகையை மணந்து அவளைக் காமத்தால் அதீக்ஷிதனுகிய இவன் தழுவச் செல்லுகையில் அக்கன்னிகை நீர் அதீக்ஷிதர் தீக்ஷைபெற்று என்னைத் தழுவுக என அரசன் கேளாது தழுவச்செல்லுகையில் நெருப்பைத் தழுவியதுபோல் சுவாலையுண்டாக அரசன் பயந்து மனைவியைத் தீக்ஷை செய்யக் கேட்க மனைவி கர்க்கமுனிவரால் தீக்ஷை செய்விக்க அரசன் அவளுடன் கூடிக் களித்தனன்.

சாருகாசனி — 1. ஒரு மாயாதேவி.

2. வீமன் மனைவி, உருக்குமாங்கதன் தாய்.

சாருசித்திரன் — திருதராட்டின் குமரன்.

சாருதேக்ஷ்ணன் — சாருதேஷணன், சத்தியபாமைக்குக் குமரன்.

சாருமதி — உருக்குமன்குமரி. பிரத்தியும்நனை மணந்தவள். இவள் குமரன் அநிருத்தன்.

சாருவாகன் — சார்வாகமதம் தாபித்தவன்.

சாருஷ்ணி — வருணன் என்னும் ஆதித்தன் தேவி.

சார்ங்ககர் — இவர்கள் காண்டவவனம் தீப்பற்றி எரிகையில் உயிர்தப்பின பக்ஷிகள். மந்தபாலமுனிவர் வேண்டுகோளால் இவர்களை அக்நி தகிக்காமல் விட்டனன். தந்தை சாங்ககர், எனப் பக்ஷியுருக் கொண்ட மந்தபாலமுனிவர். தாய்சரிதை.

சார்ங்கதரர் — பாதசாஸ்திரஞ் செய்த ஒரு வடநூற் புலவர்.

சார்ங்கம் — விஷ்ணுமூர்த்தியின் வில். கண்ணுவரைக் காண்க,

சார்ங்கலன் — கோதமையின் புதல்வன். பேய்மகள் மயானத்து ஆடியது கண்டு உயிரிழந்தவன். (மணிமேகலை)

சார்த்தூலகன் — பிரசாபதி படைவீரரில் ஒருவன். (சூளா.)

சார்த்தூலன் — 1. இராமரின் சேனுபலத்தை அறியும்படி இராவணனால் அனுப்பப்பட்டதூதன்.

2. யமதூதன்.

3. புலிமுகம் உள்ள ஒரு அசுரன். இவன் அண்டங்கள் எல்லாம் தூளாகப் பாய்ந்து அதஞ் செய்யச் சிவமூர்த்தி தேவர் வேண்டுகோளால் வாளால் எறிந்து கொலை செய்தனர்.

4. ஒரு இருடி.

சார்த்தூல அரன் — புலி முகமுள்ள அசுரனைக் கொன்று அவன் தோலையுரித்து உடுத்த சிவன் திருவுரு.

சார்த்தூலகன் — பிரசாபதி படைவீரரில் ஒருவன்.

சார்த்தூலி — காசிபர் புத்திரி. சிங்கங்களையும் புலிகளையும் பெற்றவள்.

சார்பு — 12. பேதைமை, செய்கை, உணர்வே, அருவுரு, வாயிலுறல், நுகர்வு, வேட்கை, பற்று, பவம், தோற்றம், வினைப்பயன். (மணிமேகலை)

சார்புநூல் — முதனூல்வழி நூலெனு மிருதிறத்து நூல்களுக்கும் பொருண் முடிபு ஒரு சிறிதொத்து ஒழிந்தன வொவ்வாத நூல்.

சார்பெழுத்துக்கள் — உயிர்மெய் யெழுத்துக்களைச் சார்ந்துவரும் எழுத்துக்கள் இவை (10) உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம்.

சார்வபூமன் — 1. (ச.) ஜயாதி குமரன். தாரி சுநந்தை.

2. விரோதன் குமரன். இவன் குமரன் செயசெயநன்.

3. விதூரதன் குமரன். இவனுக்குச் சார்வபௌமன் என்வும் பெயர்.

சார்வபௌமம்—வடதிசைப் பெண்யானை.

சார்வபௌமன் — சார்வ பூமனைக்காண்க.

சார்வாகமதம் — இம்மதத்தாபகனுகிய சார்வாகன் அவந்திதேசத்தில் சங்கோத்தார க்ஷேத்திரத்தில் உதிஷ்டிரசகம் (௬௬௧) இல் பிறந்து இதேசகம் (எ௨ள) இல் இறந்தான். இப்பெயர் கொண்ட அரக்கன் ஒருவன் மதவிஷயமாய்த் தர்மராஜனுடன் பேசி வதைக்கப்பட்டான் என்று பாரதம் சாந்திபர்வத்திற் கூறப்பட்டிருக்கிறது. மதசித்தாந்தம், இது நாஸ்திகமதம். கடவுளுக்கு மோக்ஷாதிகாரமில்லை எனவும், உலகத்திலுள்ள வரையில் சுகமாய்ச் சீவிக்க வேண்டும் எனவும் மரணமே மோக்ஷம் எ-ம், வேறு பிறப்பில்லை எ-ம்., பரலோக சுகமில்லை எ-ம்., ஆகாசம் நீங்கலாகத் தத்வம் நான்கு எ-ம்., இந்த நான்கு தத்வசமுதாயமே தேகம் எ-ம்., இவற்ருலாகிய இந்திரிய சமுதாயமே ஆத்மா எ-ம், இவ்விந்திரிய நாசமே மரணம் எ-ம். கூறும். இம்மதத்தவர்க்குப் பிரகஸ்பதி சூத்ரம் பிரமாணம். பிரமாணம் பிரத்யக்ஷமே தவிர வேறு பிரமாணம் கிடையாதென்பர். இவர்களுக்கு இம்மையில் அரிவையருடனும் மற்றச்சுகங்களுடனும் கூடியிருத்தலே சுகம். ஆனந்தானுபவம் இல்லாத வியாதிமுதலிய கிலேசங்களே நகரம்.

சார்வாகன் — துரியோதனனுக்கு நட்பினனாகிய அசுரன். தருமராசனுக்குப் பட்டந் தரிக்கையில் இருடியுருக்கொண்டு ஆண்டுச் சென்று தீமைசெய்யக் கருதிய போது இருடிகளால் சாம்பராக்கப்பட்டவன்.

சாலகன் — நாகன் கத்ருதனயன்.

சாலகடங்கடர் — சாலகடங்கடையின் புத்திரர், அசுரர்.

சாலகடங்கடை — சுகேசன் தாய், வித்யுத்கேசன் பாரி.

சாலக்காயினி — வேததரிசன் மாணுக்கன். இருடி.

சாலங்காயினன் — இவன சிவபூசையால் பேறடைந்தவன்.

சாலகிராமம் — இது ஒரு க்ஷேத்திரம் A place near the source of the river Gandaki.

சாலங்காயனன் — விஸ்வாமித்திரன் புத்திரன்.

சாலங்காயன் — இவன் பிரச்சோதனனுடைய பதினாருயிர மந்திரிகளுள் முதல் மந்திரி. யாராலும் தணிக்கமுடியாத அரசன் கோபம் இவனுடைய சொற்களால் தணியும். பேரமைச்சனென்றும் வழங்கப்படுவான். அவன் கட்டளைப்படி மாய யானையைக் காட்டி உதயணனை வஞ்சித்துப்பிடித்துக்கொணர்ந்து உஞ்சை நகரின் சிறை செய்வித்தவன். தருக்கநூல் முதலியவற்றில் மிக்க தேர்ச்சியை யுடையவன் வாசவதத்தையை உதயணன்பிடிமீதேற்றித் தன்னகர் சென்ருனென்றது கேட்டுக் கடுஞ்சினங்கொண்டு அவனைப் பிடித்து வரும்படி சேனைகளை அனுப்பத் தொடங்கிய பிரச்சோதனனை நோக்கிச் சில நியாயங்களை இவன் சொன்னமையால் அவன் அச்செயலை நிறுத்தினன். யூகியைத் தன்னருகழைத்த பிரச்சோதனனுடைய விருப்பத்தின்படி யூகியோடு நூல்களில் வாதஞ்செய்து தோல்வியுற்றவன். தன்தங்கை ஆப்பியை யென்பவளை அரசன் வேண்டுகோளால் யூகிக்கு மணஞ்செய்வித்தான். (பெ. கதை.)

சாலபோதகன் — நாகராசன், உத்தமனைக் காண்க.

சாலவதி — ஒரு தெய்வப்பெண். இவளைக் கண்டு ரததரிஷி என்பவன் வீரியம்விட கிருபன் கிருபி என்பவர் பிறந்தனர்.

சாலி — 1. ஒரு இருடி. இவர் தொண்டநாட்டுத் திருவல்லிக்கேணியில் அழகிய சிங்கர் அருள்பெற்றவர்.

2. ஆபுத்திரன் தாயாகிய பார்ப்பினி. அபஞ்சிகன் மனைவி. (மணிமேகலை.)

சாலிகோத்திரமுனி—அச்வசாத்திரஞ் செய்த இருடி, சாமவேதி. இடும்பன் வனத்திற்கு அடுத்தவனத்திலுள்ள இருடி. பாண்டவரிடத்தில் சிலநாள் இருந்து பல தருமங் கேட்டனர்.

சாலிகோத்திரன்—கபிலரிஷியின் புத்திரன்.

சாலிசூகன் — ஒரு மவுரிய அரசன் (கி. பி. 204) ஆண்டவன்.

சாலிகை — ஒரு கவசம். துரோணரால் துரியோதனனுக்குக் கொடுக்கப்பட்டது.

சாலியர் — 1. சாகல்லியர் மாணக்கர்.

2. வடநாட்டு நெசவுத் தொழிலாளர். இவர்கள் தங்களைச் சேனாபதிகள் என்பர். இவர்கள் பட்டுச்சாலியர் பத்மசாலியர் என இருவகையர். இவர்களில் பட்டுச்சாலியர் பூணூல் தரிப்பர். மற்றவர் தரியார் இவர்கள் ஒருவருக்கொருவர் கலப்புக் கிடையாது. பட்டுச்சாலியர் மாம்சபக்ஷணம் ஒழிந்தவர். மற்றவர் மதுமாம்சாதிகளுண்பர். (தர்ஸ்ட்டன்.)

சாலிலூகன் — சங்கதன் குமரன். இவன் குமரன் சோமசருமன்.

சாலிவாகனன் — பைடணபுரியில் சுலோசனன் என்னும் வேதியன் இருந்தான். அவனுக்குச் சுமித்திரை என்னும் கன்னிகை இருந்தாள். இவள் தன் கலியாணத்திற்கு முன் பருவத்தை யடைந்து பாருமறியாமல் நாகராசனல் கருவடைந்தனள். இதையறிந்து சுற்றத்தவர் வெறுக்க, குமரி தன்னிடம் களவிற் புணர்ந்துவரும் நாகராசனிடங் கூறி முறையிட்டனள். இதைக்கேட்ட நாகராசன் நான் மனிதனல்ல ஆதிசேடன் என்னுல் உனக்குப் பெயர்பெற்ற புத்திரன் பிறப்பன். அஞ்சாதே உனக்கும் உன் தந்தைக்கும் அபாயம் நேரிடுங்காலத்தில் என்னை நினைக்க எனக்கூறி நீங்கினன். இதைக்குமரி தந்தைக்குக்கூற தந்தை தெய்வச்செயலை யாரால் தடுக்கமுடியும். வந்ததை யெல்லாம் அனுபவித்தே நீக்கவேண்டும் என்று இருந்தனன். இந்தக் குமரி கலியாணத்திற்குமுன் கருவடைந்த செய்தியைச் சுற்றத்தவர் கேட்டு அரசனுக்கு அறிவித்து ஊரைவிட்டு அவள் தந்தையுடன் அகற்றினர். தந்தையுடன் ஊரைவிட்டு நீங்கின சுமித்திரை அந்நாட்டுக்கு அருகிலுள்ள குயவன் ஒருவன் வீட்டில் குடிபுகுந்து சுபமுகூர்த்தத்தில் சாலிவாகனனைப் பெற்ருள். சாலிவாகனன் இளமைப் பருவத்தில் தன்னேடொத்த சிறு வருடன்கூடி விளையாடுகையில் தான் அரசனுகவும் மற்றச்சிறுவர்களை மந்திரி முதலிய அரசகாரியக்காரராகவும் எண்பித்து விளையாடிவருவன். இவ்வகை சாலிவாகனன் இருக்கையில் வேதியன் ஒருவன் அவ்வழிவரச் சாலிவாகனன் அவனைநோக்கி ஐயரே நம் இராச்சியத்திற்கு யோகம் எப்படியிருக்கிறது என, வேதியன் யோகமாகவே இருக்கிறது என்றனன். அதனுல் களித்த சாலிவாகனன் வேதியனுக்கு ஒரு சாலைத்தர அது பொன்னுயிற்று. இதனுல் இவன் சுவர்ணதானஞ் செய்பவன் எனப் பெயருண்டாயிற்று. அரசன் இவனைக்காண

ஆவல்கொண்டு இவனை அழைப்பிக்க இவன் அரசனிடம் போதல்மறுத்து இருந்தான். சாலிவாகனன் அங்கிருக்கும் குயவரிடம் யுத்தத்திற்கு வேண்டிய இரதம், கஜம், துரகம், பதாதி முதலிய மண்ணால் செய்வித்து இருந்தனன். இவ்வகையிருக்கையில் புரந்தரபுரத்து இருந்த தனஞ்சயன் என்னும் வணிகன் தனது மரண திசையில் தன் நான்குபிள்ளைகளை அழைத்து இந்தக்கட்டில் அடியில் உங்களுக்கு வேண்டியபொருள்களைப் பாகித்து வைத்திருக்கிறேன் நான் இறந்த பிறகு நான் பாகித்து இருக்கிறபடி எடுத்துக்கொள்ளுங்கள் என்று மரணமடைந்தான். தந்தை இறந்தபிறகு புத்திரர் தகனக்கிரியை முடித்து மஞ்சத்து அடியைச் சோதித்துப் பார்க்கையில் ஒரு கும்பல் மண், ஒருகுவை உமி, ஒருகூட்டம் கரி, ஒருகுவை எலும்பு இருக்கக்கண்டு இவைகளைப் பங்கிட்டுக்கொள்ளும்விதம் தோன்றாமல் அரச அதிகாரிகளிடத்தும் அரசனிடத்துங் கூறி நியாயந் தோன்றாமல் திரும்பிச் சாலிவாகனனிருக்கும் குசப்பாளயவழியாய் வருகையில் சாலிவாகனன் இவர்கள் வழக்கை விசாரித்து இவைகள் நியாயமாகவே விளங்குகின்றன. உங்கள் தந்தை மேற்சொன்ன பொருள்களை மூத்த கனிஷ்டக் கிரமமாகப் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் இவ்வகை செய்தனர். அதாவது மண்ணைவைத்தது, மூத்தவனாகையால் பூமி முதலிய அவனைச் சேரவேண்டும் எனவும், இரண்டாமவனுக்கு உமிவைத்ததனால் அவன் தனதானியங்களைப் பெறவும், மூன்றாமவனுக்குக் கரியைக்கொடுத்ததால் அவன் பொன், வெள்ளி முதலிய நகைகளைப் பெறுக எனவும், நான்காமவனுக்கு எலும்பைக் கொடுத்ததால் பசு முதலியவைகளைப் பெறுக எனவும் பகுத்து வைத்தனன் எனத் தீர்மானித்தனன். இதைக் கேட்ட அந்த வழக்கினர் இது நியாயத் தீர்ப்பென்று களித்துப் போயினர். இத் தீர்ப்பையும் அவன் அஞ்சாநிலையையுங் கேள்விப்பட்ட விக்கிரமார்க்கன் இவன் நம் நாட்டில் இருக்கின் நமது புகழ்தலை எடுக்காது என்று எண்ணி இவனை ஊரைவிட்டு ஓட்டச் சேனைகளுடன் சாலிவாகனனிடம் யுத்தத்திற்கு வந்தனன். சாலிவாகனன் தான் முன் மண்ணாற்செய்து வைத்திருந்த சதுரங்கபலத்தை நாகராசன் அருளால் உயிர்ப்பித்து அரசனை நருமதை நதிக்கு வடக்கில் ஓட்டினன். அக் காலமுதல் நருமதா நதிக்கு வடக்கிலுள்ளார் விக்கிரமார்க்கசகத்தையும், அந் நதிக்குத் தெற்கிலுள்ளார் சாலிவாகன சகத்தையும் கைக்கொண்டு வருகின்றனர். இவன் பெயரால் சாலிவாகனசகம் வழங்கி வருகிறது. இவன் பிறகு மகாகவியாய் அலங்காரம், வைத்தியம், அஸ்வ பரீக்ஷை முதலிய சாத்திரங்கள் செய்து அரசளித்து வந்தனன்.

சாலினி — வேட்டுவமகளாகிய தேவராட்டி. (சிலப்பதிகாரம்)

சாலீசுகன் — சூரியவம்சத்து அரசர்களில் ஒருவன். மூன்று முலைகொண்ட நாக கன்னிகையை மணந்தவன்.

சாலுண்டன் — கத்ரு குமரன், நாகன்.

சாலுவை — என்பது, ஆட்டுரோமம், பட்டு முதலியவற்றால் அழகாக நெய்து உடுக்கும் உடை விசேஷம்.

சாலேந்திரன் — ஒரு அரக்கன். அளகைக் காவலாளி. வீமனுடன் பொருது இறந்தவன்.

சால்மலி — 1. ஒரு தீவு.
2. அவிக்ஷித்தின் புத்திரன்.
3. ஒரு விருக்ஷம்.

சால்புமுல்லை — ஆகாசத்தைக் கிட்டும் வரையையொத்த சான்றோர் தம்முடைய அமைதியைச் சொல்லியது. (பு. வெ.)

சால்வேயன் — நிதந்து என்னும் இராசருஷியின் குமரன்.

சாவகம் — 1. ஆபுத்திரன் நாடு. இதன் இராசதானி நாகபுரம். இதில் தவளமலையென்று ஒருமலையுண்டு. (மணிமேகலை)
2. பதினெண் பாஷைகளில் ஒன்று.

சாவணன் — (சூ.) உபகுப்தன் குமரன்.

சாவரி — ஒரு பிராகிருத பாஷை.

சாவர்ணி — ஒரு இருடி. உரோம கருஷணருக்கும், சுகருக்கும் மாணாக்கர்.

சாவர்ணிமனு — சூரியனுக்கும் சாயாதேவிக்கும் பிறந்தவன். முன் சுவாரோசி மன்வந்தரத்தில் சயித்திரவம்சத்திற் பிறந்து சுரதன் என்னும் அரசனாக இருந்து பகைவரால் அபகரிக்கப்பட்டுக் காட்டில் வந்து மேதஸ் என்னும் முனிவநத்தில் சென்று சமாதி என்னும் வணிகனுடன் நண்பு கொண்டு மேதஸ்முனிவர், தேவி மந்திரம் உபதேசிக்க அதை அநுட்டித்துத் தேவி பிரத்தியக்ஷமாகத் துதித்து நின்றனன்

தேவி அரசனைநோக்கி நீ உன் இராச்சியத்தைப் பெற்றுப் பிறகு சூரியபுத்திரனாய் மனுவாக என வரம்தந்து மறைந்தனள். அதனால் மனுவானவன்.

சாவர்ணே — சூரியன் தேவியரில் ஒருத்தி.

சாவஸ்தி — சாவஸ்தன் ஆண்டநகர்.

சாவாமதம் — இவர்கள் சூர்ய சந்திரர்களையும், பிசாசுகளையும் ஆராதிப்பர். சிருட்டிகர்த்தாவே றென்றுங் கூறுவர்.

சாவஸ்தன் —(சூ) யுவநாசுவனுக்குக் குமரன்.

சாவாலன் — சத்தியகாமனுக்குத் தந்தை.

சாவித்திரி — 1. பிரமன் தேவியரில் ஒருத்தி. இவளைப் பிரமன் புணர்ந்து நான்குவேதங்களையும், மற்றைச் சாத்திரங்கள், பாதம், சதுர்யுகங்களையும் பெறுவித்தான். இவள் நூறு திவ்யவருஷம் கருத்தாங்கி யிருந்தனள். (பிரமகைவர்த்த புராணம்).

2. ஒருகாலத்து நாரதர் காண ஒரு தடாகத்தில் தோன்றித் தன்னிடம் புருஷவுருவமாக வேதங்களைத் தோற்றுவித்தனள். (பார-சாந்.)

3. பஞ்சகன்னியரில் ஒருத்தி. அஸ்வபதி அரசனுக்கும் மாளவி என்பவளுக்கும் பிறந்து தியுமத்சேநன் குமரனாகிய சத்தியவந்தனை மணந்தவள். இவள் தன் மணத்திற்கு முன்பே சத்தியவந்தன் குணத்தாலும், அழகாலும், மற்றவைகளாலும் மிகுந்தவன் என்று எண்ணி அவனை மணக்க இருக்கையில் தியுமத்சேநன் பகைவரால் நாட்டையிழந்து காட்டையடைந்து முனிவிருத்தி அடைந்திருந்தனன். சாவித்திரி அக்குமரன் காட்டில் இருக்கையிலும், அவனையே மணக்கத் துணிவுகொண்டு மணந்தனள். மணந்த மறுவருடத்தில் தன்னாயகன் மாணம் அடைவன் என்று நாரதரால் அறிந்து கௌரிவிரதம் அநுட்டித்து வருகையில் புருஷனுக்கு மாணம் நெருங்குதல் அறிந்து எதிர்நோக்கி இருந்தனள். மரணம் நேரத் தன் பதிவிரதா பலத்தால் யமனை எதிர்ந்து அவனிடந் தன் மாமன் முதலியவர்க்குக் கண்ணும் இராச்சியமும் பெற வரம்பெற்றுப், பின்னும் யோசித்து அதிதூரம் சென்ற யமனை மறித்துத் தன்னாயகன் உயிர்கேட்கக் காலன் அது ஒழிந்த மற்றதுகேள் எனப் புத்திரர் இல்லாத தன்தந்தைக்கு நூறுபுத்திரர் பெற வரம்பெற்றுப், பின்னும் சற்று நிதானித்துக் கணவன் இல்லாவாழ்க்கை வாழ்க்கை யன்றென மதித்து யமபுரத்து அருகிற்சென்ற யமனைத் தன் பதிவிரதாபலத்தால் நிறுத்தித் தானும் அதிவிரைவாய்ச் சென்று தன் கணவன் உயிர்ப்பிச்சை கேட்க, யமன் பார்த்து இவள் நமது நகரத்திற்கு வருவளேல் நரகத்தில் இருப்போர் அனைவரும் நரகத்திலிருந்து நீங்குவர் என்று எண்ணி அவள் வேண்டியபடி புருஷனை யுயிர்ப்பித்துத் தரப்பெற்று சுகம் அடைந்தவள்.

4 வேதருக்கில் ஒன்று.

சாவித்திரிவிரதம் — ஆனிமாதத்தில் பூரணையில் சுமங்கலிகளால் வைதவ்வியம் நீங்கும்படி அனுஷ்டிக்கும் விரதம்.

சாவித்திரன் — 1. ஒருவசு தேவாசுரயுத்தத்தில் சுமாலியைக் கொன்றவன். தக்ஷயாகத்தில் வீரபத்திரரால் சிகையும் உதடும் அறுக்கப்பெற்றவன். (பூவாளூர்ப் - பு.)

2 தீர்த்தயாத்திரை சென்று விரிஞ்சிபுரத்தில் கைலை மான்மியம் பிரசங்கங் கேட்டுக் கைலை அடைந்தவன்.

சாளக்ராமம் — 1. ஒரு நதி. இது இமயமலைக்கு அருகிலிருக்கிறது. இதில் சிவ விஷ்ணு உருக்கள் அமைந்த சாளக்கிராமங்கள் பிறக்கின்றன. இது கண்டகி நதியாயிருக்கலாம். கண்டகியைக் காண்க.

2. ஒருவிஷ்ணு ஸ்தலம்.

3. இதன் பிறப்பைத் துலசியைக் காண்க. இது, கண்டகி நதியில் துலசியென்னும் சங்கருடன் தேவியால் சபிக்கப்பட்ட விஷ்ணுவின் உருக்கொண்டது. இவற்றின் வேறுபாடுகளாவன: ஒருத்வாரத்தில் நான்கு சக்கரங்கொண்டு வநமாலை பூண்டது லக்ஷ்மீநாராயண நாமங் கொண்டது. அவ்வாறு வநமாலை நீங்கியது லக்ஷ்மீ சநார்த்தனம். இவ்வாறே ரகுநாதம், ததிவாமனம், ஸ்ரீதரம், தாமோதரம், ரணராமம், ராஜராஜேச்வரம், அநந்தம், மதுசூதனம், சுதர்சனம், கதாதரம், ஹயக்ரீவம், நரஸிம்மம், லக்ஷ்மீநரசிம்மம், வாசுதேவம், பிரத்யும்நம், சங்கர்ஷணம், அநிருத்தம் என்னும் பெயருள்ள இவைகளை வேறுபாட்டினால் கண்டறிக. எவ்விடத்தில் சாளக்ராம சிலையிருக்குமோ ஆண்டு ஹரிசாந்நித்யமாய் வசிப்பர். அவ்விடம் சகல தேவதைகளும் வசிப்பர். எல்லாச் சம்பத்துகளும் உண்டாம். இவைகளைக் குற்றங்களறிந்து நீக்கிக் குணமுள்ளவைகளைப் பூசைக்குக் கொள்க. குற்றமுள்ளவை தீமைபயக்கும். சாளக்கிரா

மார்ச்சனையால் சகல பாபங்களினின்று நீங்கி வைகுண்டமடைவான். இவற்றின் விரிவைப் பிரம்மகைவர்த்த புராணம் பிரகிருதிகண்டம் இருபத்தொராவது அத்யாயத்திற் காண்க.

4. கண்டகி நதியில் துளசியின் சாபத்தால் மலையுருக்கொண்ட விஷ்ணுவாகிய கற்களைக் கோரப் பற்களுள்ள கீடங்கள் தொளைப்பதாலுண்டாம்விஷ்ணுவின்உருக்கள். இவை குக்குண்டரம்போல் ஒரு த்வாரத்தில் (4) சக்கிரமும், வநமாலையும், ரதாகாரமும், நீர்கொண்ட மேகநிறமுமாய் உள்ளது லக்ஷ்மி நாராயணம், வனமாலையின்றி மற்றவற்றைப் பெற்றது லக்ஷ்மி ஜநார்த்தனம், (2) துவாரங்களுள் (4) சக்ரங்களும், ரதாகாரமாகவும் உள்ளது ரகுநாதம், இரண்டு சக்ரமாத்ரமுள்ளது, வாமனம் வனமாலையுடன் (2) சக்ரமுள்ளது, ஸ்ரீதரம், விருத்தாகாரமாகவும் (2) சக்ரமாத்ரமுள்ளது தாமோதரம்,, மிகப் பெரிது மிகச் சிறிதுமாகாமல் (7) சக்ரமும் சரத்பூஷணத்துடன் கூடியது ராஜ ராஜேஸ்வரம், விருத்தாகாரமாய், (2) சக்கிரத்தோடும் அம்பருத்தூணியும், பாண அடியுமுள்ளது ரணராமம் (14) சக்கிரங்களுடன் கூடியது ஆதிசேஷம், சக்ராகாரமாய் (2) சக்ரங்களுடன் கூடியது மதுசூதனம், (1) சக்கிரமுள்ளது சுதர்சனம், மறைபட்ட சக்ரமாய்த் தோன்றுவது கதாதரம், (2) சக்கிரங்களுடன் ஹயக்ரீவவுருவாய்க் காணப்படுவது ஹயக்ரீவம், (2) சக்ரங்களும் திறந்தவாயும், பயங்கர வுருவுமுள்ளது நாரசிங்கம், (2) சக்ரங்களும் பெரியவாயும் வனமாலையுமுள்ளது லக்ஷ்மி நரசிங்கம், த்வாரமுகத்தில் இரண்டு சக்கிரமும் சமாகாரமாயுள்ளது வாசுதேவம், சூக்ஷ்மமான சக்ரமும், ஒரு ரந்திரத்துள் பலரந்திரங்களுள்ளது பிரத்யும்னம், த்வாரமத்தியில் (2) சக்ரங்களும், புருஷ்டபாகம் பருத்துமுள்ளது சங்கர்ஷணம், விருத்தாகாரமாயும் செம்பட்டு நிறமுள்ளது அநிருத்தம், பொதுவில் சாளக்கிராம பூசை யெல்லா சம்பத்துக்களையும் கொடுக்கும். இது பின்னமாயிருந்தால் தீமை தரும். (தேவி-பா.)

சாளன் — தபங்கரைக்காத்துவிஜயன் எனப் பெயரடைந்த அரசன்.

சாளுவம் — ஒரு தேசம்.

சாளுவன் — 1. பீஷ்மரிடம் அம்பைக்காகப் போரிட்டுத் தோற்றவன்.

2. சிசுபாலனுக்குத் தம்பி. உருக்மணி விவாகத்தில் கிருஷ்ணனை வழிமடக்கிப் பலராமரால் அபசயம் அடைந்து பின் சிவமூர்த்தியை எண்ணித் தவமியற்றிப் பலம் அடைந்து பிரத்தியும் நனுடன் யுத்தஞ் செய்து பின் கண்ணனுடன் யுத்தஞ்செய்கையில் இறந்தவன். இவன் அசுராம்சம்.

3. விருகன் புத்திரன்.

சாளுக்கியர் — 1. இவர்கள் ஆரீதபஞ்சசிகர் என்னும் முனிவர் தமது யாககுண்டத்தில் அவிசிடும்போழ்து அவரது தீர்த்தபாத்திரத்திருந்து ஒருவன் பிறந்தனன். அவன் சளுகமென்னும் அப்பாத்திரத்திருந்து பிறந்தமைபற்றி அவனுக்குச் சளுகன் அல்லது சாளுக்கியன் எனப் பெயர்வந்தது. அவன் வழித்தோன்றினவர். சளுக்கியர்.

2. இவர்கள் பொம்பாய் இராஜதானியில் படாமி என்பதைத் தலை நகராகக் கொண்டவர்கள். இவர்கள் (A. D.) எழாவது நூற்றுண்டில் தமிழ் நாடடைந்து தமிழ் நாட்டரசரைவென்று இடங்கொண்டனர் இவர்களுக்குத் தலைவன் புளுகேசி. II. பின் இந்தச் சாளுக்கியர் தாங்கள் கலகப்பட்டு மேற்குச் சாளுக்கியர் எனவும் கிழக்குச் சாளுக்கியர் எனவும் இராஜ்யத்தை வகுத்துக்கொண்டனர். இந்தக் கிழக்குச் சாளுக்கியருக்கு இராஜதானி வெங்கி இது எல்லூருக் கருகிலுள்ளது. மேற்குச்சாளுக்ய அரசன் விக்ரமாதித்யன் II. (733-47) இவன் நந்திவர்மன், பல்லவமல்லன் என்னும் பல்லவனைச் செயித்தான்.

சானகாட்டன் — தருமகுத்தனைப் பித்தனுகச் சபித்த இருடி.

சானச்சுருதி — இரக்குவன் அருளால் அறிவு பெற்றவன்.

சானவி — சந்து மகருஷியின் காதின்வழி பிறந்த நதி சந்நுவைக் காண்க.

சான்மலி — சப்ததீவுகளில் ஒன்று.

சான்றன் — சூத்திரன் அரசகன்னிகையைப் புணரப் பிறந்தவன். இவன் கள்விற்று ஊர்ப்புறத்து வாழ்பவன். (அருணகிரி புராணம்.)

சான்றினர் — அயலானுடைய காரியத்தை யெதிரே பார்த்தலினுலேனும் கேட்டலினுலேனும் உண்டானவைகூறுவோர்.

சான்றுகாதவர் — சுரோத்ரியன். திருடன், தானே பேசுவோன், சொன்னிலைமையற்றவன், பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நி

யாசி, சாஸ்திராவிருத்தன், அரசசேவகர், ஜினத்தன், கொடியன், நிந்திதன், கோட்சொல்லி, சிற்பியர், கூத்தர், புகழ்வோன், கல்விற்போன், சிற்றுண்டி வியாபாரி, வட்டி வாங்குவோன், ஆசாரஈனன், புறங்கூறுவோன், நிலையில்லாதவன் முதலியோர். (விவகார சங்கிரகம்.)

சாஸ்திரி — இது ஸ்மார்த்த பிராமணர்களுள் சிலர்க்கு உரியபட்டப்பெயர். இவர்கள் வைதீகாசாரர்கள். இப்பட்டம் சிலபாம்பே ஜனங்களுக்கும் தேவாங்க ஜாதியிற் சிலர்க்கும் வழங்கி வருகிறது. (தர்ஸ்டன்.)

சாக்ஷுக — மன்வந்தரங்களில் ஒன்று.

சாக்ஷி — கூறத்தக்கார், கண்ணால் விஷயத்தைக் கண்டோர், தவசி, தானசீலர், நற்குலத்தவர், சத்யவாதிகள், தர்மப்பிரதானிகள், குடிலமில்லார், பிள்ளைகளைப் பெற்றோர், தனவந்தர், சிரௌதஸ்மார்த்த கிரியையுடையார், வர்ணாச்ரமங்கடவாதவர் (ட) சாக்ஷிக்குரியர், சாக்ஷிகூற அருகரல்லாதவர் பெண்கள், சிறுவர், கிழத்தனமுடையார், சூதாடுவோர், குடியர், தெய்வாவேசி, பாதகன், ரங்காவதாரி, பாஷண்டி, கூத்தாடி, சாஸ்திர பிரமாணமில்லாதவன், தப்புப்பத்ரம்நிருமிப்போன், குரூபி, பதிதன், நண்பன், பொருளால் சம்பந்தமுள்ளவன், ஞாதி, பகைஞன், திருடன், குரூரன், குலபிரஷ்டன் முதலியோர். (யஞ்ஞவல்கியம்.)

சாக்ஷுசன் — (சூ.) சமித்திரன் குமரன்.

சாக்ஷுசர் — பதினன்காம் மன்வந்தரத்துத் தேவர்.

சாக்ஷுசமநு — ஆரும்மனு, இந்த மன்வந்தரத்து இறுதியில் விஷ்ணு மச்சாவதாரஞ் செய்தனர். இவனோடு ஒரு கற்பம்முடிந்து எழாமன்வந்தரம் உண்டாயிற்று. அநமித்திரன் என்று ஒரு அரசன் இருந்தனன். அவனுக்குக் கிரிபத்திரை என்று ஒருமனைவி இருந்தனள். இவர்கள் இருவருக்கும் இராசலக்ஷணமுள்ள ஒருகுமரன் மகா ஞானியாய்ப் பிறந்து புருண்டறையில் இருக்கையில் கிரிபத்திரையாகிய தாய் குமரனிடம் அன்பால் பலமுறை அணைத்து முத்தமிட்டனள். இதனைக் குழந்தைகண்டு கலுக்கென நகைத்தது. தாய் திடுக்கிட்டுக் குழந்தையை என் நகைத்தனை என்றனள். குழந்தை தாயைப் பார்த்து அம்மே என்னை மிதிக்கப் பூனை ஒன்று காத்திருக்கிறது. அதுவன்றித் துச்சக சந்ததியில் பிறந்தவளாகிய சாதஹாரிணி என்னைத் தூக்கிச்செல்லக் காலம் பார்த்திருக்கின்றனள். இப்படி யிருக்கையில் என்னை முத்தம் இடுக்கின்றனை யென்று சிரித்தேன், எனத் தாய் பயந்து புருண்டறைவிட்டு வெளியில் வந்தனன். ஜாதஹாரிணி குழந்தையைத் தூக்கிச் சென்று விக்கிராந்தன் என்னும் அரசன் தேவி ஐமினி பிரசவித்திருக்கும் படுக்கையில் போட்டுவிட்டு அங்கிருந்த குழந்தையைப் போதன் என்னும் வேதியன் தேவி பிரசவித்த இடத்தில் வைத்து அந்த வேதியன் குழந்தையைத் தின்றுவிட்டனள். பிறகு விக்கிராந்தன் தன் குழந்தையை வளர்த்து ஆனந்தன் எனப் பெயரிட்டு உபநயனகாலத்தில் குருவால் உபநயனஞ் செய்விக்கத் தொடங்கினன். குரு ஆனந்தனைப்பார்த்துத் தாயை வணங்கக் கட்டளையிடக் குமரன் நான் எந்தத் தாயை வணங்குவேன், இவள் என்னை வளர்த்த தாயாகிய ஐமினியாம் என்றனன். வேதியன் குமரனை நோக்கி நீ யார்? உன் தாய்யார் எனச்சிறுவன் இந்தஐமினி விசாலக்கிராமத்தில் வளரும் சைத்திரதனக்குத் தாய். எனக்குத் தாய் அல்லவ். என் தாய் அனமித்திரன் தேவியாகும் கிரிபத்திரை என்று கூறித் தவத்திற்குச் செல்லத் தந்தை வேதியனிடம் வளர்ந்த தன் குமரனை வருவித்து அரசளித்தனன். தவத்திற்குச் சென்ற ஆனந்தன் பிரமனை எண்ணித் தவம்புரியப் பிரமன் பிரத்தியக்ஷமாய் என்னவேண்டும் என்ன ஆநந்தன் ஆத்மசுத்தி வேண்டும் என்றனன். பிரமன் அரசகுமாரனை நோக்கி நீ முன்சன்மத்தில் என் சக்ஷுவாகிய கண்ணிலிருந்து பிறந்தமையாலும், உன்னால் மன்வந்தரம் உண்டாக இருப்பதாலும், சாக்ஷுசமநு என்னும் பெயருடன் அரசாண்டு முத்தியடைக என, அரசன் உக்கிரன் என்னும் அரசன் குமரி நட்வலையை மணந்து அரசாண்டு, புருவன், குச்சன், திருடன், துய்ம்நன், சத்தியவந்தன், ரீதன், விருதன், அக்நிஷ்டோமன், அதிராத்திரன், ப்ரத்யும்நன், சிபி, உன்முகன் முதலிய குமரரைப் பெற்று முத்தி அடைந்தனன். இவனைச் சர்வதேசலின் குமரன் தாய் ஆகுதி எனவுங் கூறுவர். விச்வகர்மன் குமரன் எனவும், சக்ஷு என்பவன் குமரன் எனவுங் கூறுவர்.

சி

சிகண்டி — 1. அஷ்ட வித்யேசுவரரில் ஒருவர்.

2. அகத்தியர் மாணுக்கர்கள் பன்னிருவருள் ஒருவர். இவர் சாரகுமாரன் பொருட்டு இசைநுணுக்கம் என்னும் இசைத்தமிழ் நூல் செய்தவர்.

3. இவள் இதற்கு முன்சன்மத்தில் காசிராசன் புத்திரியாகவிருந்து வீஷ்மனைக் கொல்லக் காளியிடம் வரம்பெற்று யாகசேனனிடம் பிறந்து தூலகர்ணனுல் ஆணுகிப் பீஷ்மரைக் கொன்றவள்.

4. அந்தர்த்தானன் தேவி.

சிகண்டினி — விகிதாசுவன் முதற்பாரி.

சிகன் — கத்ருகுமரன், நாகன்.

சிகாமந்திரதேவதை — சிந்தூரவர்ணமாய், பத்மாசனம், முக்கண், வரதம், அபயம், சத்தி, சூலம், சர்வாபரணபூஷிதரா யிருப்பர்.

சிகி — இருபத்து மூன்ருவது புத்தன்.

சிகிச்சைகளின்வகை — மாத்திரை, உருக்குமாத்திரை, செந்தூரம், பஸ்மம், ரஸாயனம், பதங்கம், லேகியம், சூரணம், வடகம், எண்ணெய், முழுக்குத்தைலம், குடிநீர், கஷாயம், வேது, ஒத்தடம், சுயமக்னி, முதலிய.

சிகித்துவசன் — துவாபரயுகத்தில் மாளவதேசம் ஆண்டவன். இவன் தேவி சூடாலே.

சிகிரர் — சாகல்லியர் மாணுக்கர்.

சிகிஷ்ணு — புலகருக்குக் கதியிடம் உதித்த குமரன்.

சிசூரன் — ஆரியகன் புத்திரனுகிய சர்ப்பம். சுமுகனுக்குப் பிதா.

சிக்கமாதையர் — ஒரு சிவனடியார். இவர் விதிப்படி சிவபூசைசெய்து யோகத்திருந்து தேகவியோகம் அடைய இவர் மனைவியார் சிவபூசையிடத்தை வெட்டிக் குழிபறித்து அவரைச் சமாதி செய்விக்க யத்தனிக்கையில் இவர் புத்திரர் வாலலிங்கையர், சிறுவர் ஆதலால் ஆசாரியராகிய மாதிராசையரிடஞ் சென்று தமது பிதா எழுந்திருக்க இல்லை என்றும், அதற்காகத் தன் தாயார் செய்கிற காரியத்தையுங் கூறினர். ஆசாரியர் வந்து கண்டு சிவத்தியானஞ் செய்து ஒரு பாடலை யருளிச்செய்யச் சிக்கமாதையர் எழுந்து சிவபூசை செய்தனர்.

சிக்கிரன் — (சு.) அக்கினிவான் குமரன்.

சிக்கிலிகர் — சாணை பிடிப்பவர்கள் இவர்கள் கிராமங்கள் பட்டணங்களில் திரிந்து அரிவாள்மணைகத்தி முதலியவை சாணை பிடிப்பவர்கள்.

சிங்ககேது — 1. சண்டனைக் காண்க.

2. கனகபல்லவராசன் குமான் (சூளா.)

சிங்கச்சுவணம் — ஆபரணங்கள் செய்தற்குரிய உயர்ந்த ஒருவகைப்பொன். இஃது ஐராபதமென்னும் மலையிற் பிறப்பது (பெ - கதை.)

சிங்கசேநன் — பாஞ்சாலராசன்.

சிங்கடி — சோட்புலியார் குமரி. சுந்தாமூர்த்திகளால் தமக்குப் பெண்ணுகப் பாடப்பட்டவள்.

சிங்கத்துவசன் —மாகிஷ்மதி அரசன். பரத்துவாசன் சாபத்தால் கழுதையாய்க் காவிரிஸ்நானஞ் செய்து நீங்கினவன். (காவிரித்தல புராணம்).

சிங்கபலன் — கீசகனுக்கு ஒரு பெயர்.

சிங்கபாண்டியன் — இராசேந்திர பாண்டியனுக்கு ஒரு பெயர்.

சிங்கபுரம் — கலிங்கநாட்டிலுள்ள ஒரு நகரம். இஃது அரிபுரமெனவும் வழங்கும். இதற்கரசன் வசு. (சிலப்பதிகாரம்.)

சிங்கப்பிரான்—ஒரு வேதியர். இவர் திருக்கால், கோயிலாகிய ஸ்ரீரங்கத்திற்கு உண்டான உபத்திரவத்தை நீக்கிக் கைங்கரியத்தால் திருமணத்தூணம்பி எனப் பெயர் பெற்றவர்.

சிங்கமுகாசுரன்—மாயை யென்னும் அரக்கி காசிபரைச் சிங்கவுருக்கொண்டு இரண்டாம் சாமத்திற் புணரப் பிறந்த சிங்கமுகமுள்ள அசுரன். இவனுக்கு ஆயிரம் சிரம். பட்டணம் ஆசுரம். தேவி விபுதை, குமரன் அதிசூரன். இவன் தழற்கண்ணன், சுமாலி, தண்டி இவர்களுடனும்; கடைசியில் வீரவாகுவுடனும் போராடி வில் முதலிய இழந்து தன் தாய் கொடுத்த பாசத்தைவிட்டுத் தேவாதியரையும் வீரவாகுவையும் கட்டிக் கடலில் இட்டுப் பாலசுப்பிரமணியருடன் போரிட வந்து பூதப்படைகள் அனைத்தையும் கோரரூபங்கொண்டு விழுங்கிக் குமரக்கடவுளால் பலமுறை வெட்டுண்ட சிரம் கிளைக்கக், குமாரக்கடவுள் உங்கரிப்பால் கிளைத்தல் ஒழிந்து ஒரு சிரம் இரண்டு காங்கள்பெற்று அடங்கிக் கடைசியில் வேலாயுதத்தால் உயிரிழந்தவன்.

**சிங்கம்** — இது மிருகராஜன், இதனை வேறு மிருகங்கள் வெல்லா, இது, (௪, ௫) அடி உயரமும் (௮, ௯) அடிகள் நீளமும் உள்ளது. வால் (௪) அடி நீளம், கபிலவர்ணம், முன்பின் கால்கள் வலுத்துக்கூரிய நகங்கள்கொண்டு பூனையைப்போல் கோபங்கொள்கையில் நீட்டவும் மற்றக் காலங்களில் மறைக்கவும் கூடியவை. முகத்திலுள்ள மீசையின் மயிர்களால் தனக்கு நேரிடும் தடைகளையுணர்ந்து விலகும். ஆண் சிங்கத்திற்குப் பிடரியில் அடர்ந்து நீண்டமயிர் உண்டு. இதற்கு இரவில் நன்ருகக் கண்தெரியும். இது இரையின் பொருட்டுச் செய்யும் கர்ச்சனையைக் கேட்ட பிராணிகள் பயந்தோட அவைகளை வேட்டையாடிக் கொல்லும். இது யானையையும் எதிர்க்கும் ஆற்றல் உள்ளது. பெண் சிங்கத்திற்குப் பிடரி மயிரில்லை. இது வருஷத்தில் (௩, ௪) குட்டிகள் போடும். இது பசியால் வருந்திய போது பிராணிகளைக் கொல்லுமேயொழிய மற்றக் காலங்களில் கொல்லாது. அற்ப பிராணிகள் தன்னை யெதிர்த்தால் அவைகளைப் பொருட்படுத்தாத கம்பீரமுள்ளது. இதுநன்றி மறவாமிருகம். இதுவட இந்தியா, ஆப்ரிகா, அரேபியா, பாரசீகம், முதலிய தேசங்களினடர்ந்த காடுகளில் உண்டு. செத்த பிராணியைத் தின்னுது, ஒரு குதிரையின் முதுகை ஒரு அறையில் ஒடிக்கும். ஒரு பாய்ச்சலில் (௧௫) அடிகள் பாயும், இதன் தலை உடம்பிற் கேற்றதாக இராமல் பருத்தது. நாக்கு அறமபோல் சொரசொரத்தது. இடை சிறுத்தும், மார்பு அகன்றுமிருக்கும். முன் கால்களில் (௫) விரல்களும், பின் கால்களில் (௪) விரல்களும் உண்டு. உள்ளங்காலிலுள்ள தசையால் சத்தமின்றிப் பிராணிகளைப் பிடிக்கும். நெருப்புக்கு அஞ்சும். புலி, சிறுத்தை, பூனை, புனுகுபூனை, இந்த இனத்தைச் சேர்ந்தவை.

**சிங்கவருமன்** — சூரியவம்சத்து அரசனொருவனுக்குச் சிங்கநிறமுள்ள குமான் பிறக்க அவனுக்குச் சிங்கவருமன் எனப் பெயரிட்டனர். இவன் தில்லையில் (சிதம்பரம்) வியாக்கிரபாத இருடி அநுக்கிரகத்தால் சிவகங்கையில் மூழ்கி உடம்பு பொன்னிறம் அடைந்து இரணியவன்மன் எனப் பெயர் அடைந்து அரசாண்டு தில்லையில் சிவதிருப்பணி செய்து முத்தி அடைந்தனன். இவன் தம்பியர் வேதவன்மன், சுமதி. (கோயிற்புராணம்.)

**சிங்கவன்மன்** — 1. ஒரு அரசன், இவன் வேட்டைக்குச் சென்று ஒரு கரடியைத் துரத்திச் செல்ல அது பிருகு முனிவரை அடைக்கலம் அடைந்தது. அரசனை முனிவர் அதைக் கொல்லாது விடுக்கவெனக் கூறவும் அரசன் கொன்றமையால் முனிவரால் புலியாகச் சபிக்கப்பட்டுத் தீர்த்த ஸ்நானத்தால் குணமடைந்தவன்.

2. காந்தியின் குமரன்.

**சிங்களம்** — 1. இலங்கையென்னும் தீவு, இது பூர்வம் குபேரனுக்குத் தம் தந்தையரால் கொடுக்கப்பட்டுப் பின் இராவணனால் கொள்ளப்பட்டுப் பின் தமிழ்நாட்டரசர், மகததேசத்தவர்களால் ஆளப்பட்ட பூர்வ இலங்கையில் ஒரு சிறுகூறு. மற்றவை கடல் கொள்ளப்பட்டன.

2. சிங்களதேசத்தவரால் பேசப்பட்ட பாஷை, இது சமஸ்கிருத கலப்புள்ளது.

**சிங்களமதம்** — இவர்கள், முன்பு கடவுள் ஒருவன் உண்டு அவனுக்கு அநேக சகாயர்களுளர் என்று, முதற் கடவுளரையும் துணைக் கடவுளரையும் ஆராதித்துக்கொண்டுவந்தனர். பின்னும் ஜாகா என்னும் பிசாசதேவதையையும்ஆராதித்துக்கொண்டிருக்கின்றனர். மற்றுஞ் சிலர் நவக்கிரகங்களை ஆராதித்துக் கொண்டிருக்கின்றனர். தற்காலம் பெரும்பாலோர் புத்த மதத்தை அநுசரித்து வருகின்றனர்.

**சிங்கன்** — 1. ஷண்முக சேனுவீரன். இலக்கவீரரில் தலைவன், அநலியைக் கொன்றவன், சண்டனை யுதைத்துக் கொன்று வியாக்கிரமுகனுடன் போரிட்டுத் தசமுகனைக் கொன்றவன்.

2. கனகவிசயர்க்குத் துணையான அரசன். (சிலப்பதிகாரம்.)

3. சிந்துசேநனைக் காண்க.

**சிங்காசனம்** — சிங்கத்தினுருவாக, அரசனிருக்கச் செய்த பீடம்.

**சிங்கிகை** — (சிம்மிகை) தக்ஷன் பெண், காசிபர் பாரி, குமரன் இராகு. விப்பிரசித்தின் பாரி எனவுங் கூறுவர்.

**சிங்கையாரியசக்ரவர்த்தி** — மதுரையிலிருந்துபோய்ச் சிங்களமாண்ட பாண்டிநாட்டரசன், இவன் சந்ததியில் ஒருவன் செகராஜசேகரன் என்போன், தக்ஷண கைலாச புராணம் பாடினன்.

**சிங்கோதரபவன்** — புருவன்மனைக் காண்க

சிசிரன் —1. சோமன் என்னும் வசு குமரன்.

2. சாகல்யன் மாணாக்கனாகிய இருடி.

சிசுநந்தி — கலிங்கலைதேசத்து அரசன், பூத நந்தனொடு பிறந்தவன்.

சிசுநாகன் — மகததேசாதிபதி.

சிசுபாயனனார் — உரோமஹர்ஷணருக்கும் சுகருக்கும் மாணாக்கர்.

சிசுபாலன்—1. சேதிநாட்டு அரசன். கிருஷ்ணனுக்கு அத்தைப்பிள்ளை. ருக்மணியின் விவாகத்தில் கிருஷ்ணனால் செயிக்கப்பட்டவன். இவன் இரணியகசிபு அம்சம். இவன் தாய் சாத்துவதி. தந்தை தமகோஷன், இவன் பிறந்தகாலத்தில் அவனுக்குற்ற மூன்று கண்களாலும் நான்கு கரங்களாலும் தாய் கண்டு கலங்கினள். அசரீரி, எவனால் இவன் சாகப்போகிறானோ அவன் மடியில் இக்குழந்தையை வைக்கில் இவனுக்குள்ள அதிகக் கண்களும், கைகளும் மறையும் என்றது. அவ்வகையே கண்ணன் மடியிலிருத்த அக்கண்ணும் கையும் மறையக்கண்டு தாய் கண்ணனைநோக்கி என் குமரன் செய்யும் நூறு குற்றங்களைப் பொறுத்தல் வேண்டும் என வரம் பெற்றனள். வசுதேவனது அச்வமேதக் குதிரையைக் கட்டினவன். புருவென்பவன் மனைவியைக் கொள்ளை கொண்டவன். கிருஷ்ணனது அம்மான் பாரியைத் தந்தவக்கிரனுக்காகச் சிறை பிடித்தவன். விசாலன் பெண்களைக் கவர்ந்தவன். இவன் கிருதயுகத்தில் இரணியகசிபாயிருந்து நரசிங்க உருக்கொண்ட விஷ்ணு மூர்த்தியால் கொல்லப்பட்டுத் திரேதாயுகத்தில் இராவணனாய் இராம மூர்த்தியால் கொல்லப்பட்டு இப்பிறப்பில் பாண்டவரது இராசசூயயாகத்தில் கிருஷ்ண மூர்த்தியுடன் வலுவில் வாதிட்டுக் கிருஷ்ணனாற் கொல்லப்பட்டவன். இவன் பூர்வம் ஸ்ரீ வைகுண்டத்திலிருந்த துவாரபாலகன். துருவாசரால் இவ்வகையாகச் சபிக்கப்பட்டனன். இவர்களை இலக்ஷ்மிதேவி, வேறு சில முனிவர்கள், இவ்வகைச் சபித்தனர் எனச் சிவபுராணம் கூறும்.

2. சௌவீரதேசம் போகும் யாதவன் பார்யையை யபகரித்தவன். இவன் கருசனிமித்தம் மாறுவேஷம் தாங்கி நல்லமமான் குமரியாகிய வைசாலினியை யபகரித்தவன்.

3. தமகோஷனுக்குச் சிதசிரசு இடம் பிறந்தவன்.

4. இடை எழுவள்ளல்களில் ஒருவன்.

சிசுமா — ஒருமுனிவர். தருமர் இராசசூயத்தில் உத்காதாவாக இருந்தவர்.

சிசோதயர் — இரகுபதியைக் காண்க.

சிச்சிலி — இது பலநிறமாக உள்ள பக்ஷி. இதற்கு அலகு நீண்டிருக்கும். இது ஏரி, ஆறு முதலிய நீர்நிலைகளில் உயரப் பறந்து மீன்கள் மேய்வதைக் கண்டு திடீரென நீரில் குதித்து மீன்களைப் பிடித்துத் தின்பது இதனை மீன்குத்திப்பறவை என்பர்.

சிஞ்சயன் — ஒரு அரசன், சுவர்ணஷ்டீ தந்தை நாரத உபதேசத்தால் இறந்த பிள்ளையை மீட்டவன்.

சிஞ்சுமாரம் — இது காலசக்கிரம். கடவுளின் சர்வதேவமயமான உருவம். இது முதலையின் உருப்போன்றது என்பர். இதனைத் துருவன், இந்திரன், வருணன், கச்யபன் முதலியோர் நாடோறும் வலம் வருவர். இதன் வாலில் பிரசாபதியும் அக்கினியும், வால் மூலத்தில் தாதாவிதாதாவும், கடிதலத்தில் சத்த இருடிகளும், முன் வாயில் அகத்தியரும், யமனும், முகத்தில் அங்காரகனும், குய்யத்தில் சனியும், பீசத்தில் பிரகஸ்பதியும், பக்கத்தில் சூரியனும், நாபியில் சுக்கிரனும், நெஞ்சில் சந்திரனும், தனங்களில் அஸ்வநி தேவர்களும், பிராணபானங்களில் புதனும், ரோமங்களில் நக்ஷத்திரங்களும், சர்வாங்கங்களிலும் சனி கேதுக்களும், வசிப்பர் என்பர்.

சிஞ்சுமாரன் — 1. ஒரு அரசன், துருவனுக்கு மாமன்.

2. தோஷன் என்னும் வசுவிற்குச் ச[illegible] வரியிடம் உதித்த விஷ்ணுவின் அம்ச விசேஷம்.

சிட்டுணு — கைடவனைக் கொலைசெய்விக்க விஷ்ணுமூர்த்தியால்சிருட்டிக்கப்பட்டவன்.

சிநசத்ரு — ஒரு க்ஷத்திரியன் அவிட்சித்தின் புத்திரன்.

சிதசிரசு — (சிரதசவா) தமகோஷனை மணந்தவள், இவள்குமரன் சிசுபாலன், இவன் தாய் சாத்துவதி.

சிதத்துவசன் — அசன் குமரன், குனிக்குத் தந்தை.

சிதப்பிரபன் — அவிர்த்தானனுக்கு அவிர்த்தானியிடத்து உதித்த குமரன்.

சிதம்பரம் — இது சோணாட்டிலுள்ள சிவத்தலங்களில் முதன்மைபெற்றது. இது

உபநிஷத்து ஆதிகளில்தகர ஆகாசத்தலம் எனப் புகழ்ந்து கூறப்பட்ட மகிமையுள்ள ஆகாச பூதத்தலம். இதில் சிவமூர்த்தி பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலிய மகருஷிகளுக்கு ஆனந்தத்தாண்டவ தரிசனம் அருளினர். இதில் புலீச்சுரதீர்த்தம், குய்ய தீர்த்தம், புலிமடு, வியாக்கிரபாதம், அநந்தம், பிரமம், நாகேசரி, சிவப்பிரியை, திருப்பாற்கடல், பரமானந்தகூபம் முதலிய தீர்த்தங்கள் அமரும். இதில் துன்மதன், துச்சகன், துற்றெரிசனன் முதலிய பலரும் முத்திபெற்றனர். இதன்பெருமையைச் சிதம்பரபுராணம், கோயிற்புராணம், திருப்புலியூர்ப்புராணம், சபாநாதபுராணம் முதலிய பல புராணங்களிற் கண்டுணர்க.

சிதம்பரசுவாமிகள் — இவர் மதுரையிலிருந்த இலக்கண வித்துவான். இவர்க்கு சிதம்பரம்பிள்ளை எனவும் பெயர். இவர் பிக்ஷைசெய்து நிஷ்டை கூடியிருந்த குமாரதேவரை ஆணவலக்ஷணம் என்ன என்று இறுமாப்புடன்வினவ, அவர் இவர் இறுமாப்பைக்குறித்து இப்படித்தான் இருக்குமெனத் தந்தவிடையால் அடங்கி அடிமை பூண்டு குமாரதேவரிடம் ஞானோபதேசம் பெற்றுச் சிவாநுபூதிச் செல்வராய் எழுந்தருளி யிருக்கையில் மீனாக்ஷி கட்டளைப்படி திருப்போரூர் வந்து பல திருப்பணிகள் செய்து சமாதி யடைந்தனர். இவர் செய்த நூல்கள் தமது பரமாசாரியர் செய்த வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார், கொலைமறுத்தல் முதலிய நூல்கட்கு உரை, திருப்போரூர் முருகன் பிள்ளைத்தமிழ், போரூர் முருகன் சந்நிமுறை முதலியன.

சிதம்பரச்செய்யுட் கோவை — செய்யுளிலக்கணத்திற்கு இலக்கியமாய்க் குமாரகுருபர சுவாமிகளால் இயற்றபபட்டது.

சிதம்பரபுராணம் — இது பரஞ்சோதிமுனிவர் இயற்றியது. சிதம்பர மான்மியம் கூறும்.

சிதம்பரம் பிள்ளை — 1. இவர் கோயம்புத்தூர்ஜில்லா பொள்ளாச்சி தாலூகா ஊற்றுக்குழி சமஸ்தான வித்வான். இவர் ஜநநபூமி திருநெல்வேலி, தந்தையார் சங்கரமூர்த்திப்பிள்ளை. இவர் உசிதசூடாமணி என்னும் ஒரு நிகண்டு இயற்றியவர். அந் ண்டு பெரும்பாலும் தொகைப்பொருள் களை விளக்கிக் கூறுவது.

2 இவர் சேலத்திருந்த ஒரு தமிழ்க்கவி. தமிழில் கைலாசநாதர் சதகமென்னும் நீதிநூலியற்றியவர். சோசியத்தில் வல்லவரெனத் தெரிகிறது, இவர் வீரசைவர், தந்தை விசுவலிங்கையர். இவர்க்குச் சிதம்பரவாணர் எனவும் பெயர்.

சிதவதி — உசினரன் புத்திரி. இவள் காரணமாக ஒரு காந்தர்வன் வசிட்டர்வனத்தில் சாபம் பெற்றனன்.

சித்தகணம் — காசிபருக்கு அநுசையிடம் பிறந்த குமாரர்கள். பிரமனால் மானசமாய்ப் படைக்கப்பட்டவர் என்றுங் கூறுவர்.

சித்தத்தைச் சிவன்பால் வைத்தார் — சிவமூர்த்தியிடம் மனம்வைத்து முத்தியடைந்த தொகையடியவர். (பெ - புராணம்.)

சித்தபதம் — தேவஹூதி தங்கித் தவஞ்செய்த இடம்.

சித்தப்பூமி — க்ஷிப்தம்-சஞ்சலமான நிலை. மூடம் - ஒன்றுமறியா நிலை. விக்ஷிப்தம் - சொற்பகாலம் சஞ்சலமில்லாமலும், வெகுகாலம் சஞ்சலத்துடனிருக்கும்நிலை, ஏகாக்ரம் - ஒரே வஸ்துவை அவலம்பித்திருத்தல். நிருத்தம் - விருத்திசூன்யமான நிலை

சித்தபரவாக்யம் — சித்தித்த அர்த்தத்தைக் கூறும் வாக்யம்.

சித்தராமதேவர் — சொன்னலாபுரத்தில் சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்து இதுவன்றி வேறு (அ0,000) சிவப்பிரதிட்டைகளையும் செய்வித்துக் கைலைசென்று சிவதரிசனஞ்செய்துதம்மைக்கேட்டுக்கொண்ட முனிவர்க்கு நந்திமாதேவரே வசவரென ஐயமறுத்தவர்.

சித்தராமையர் — சொன்னலாபுரத்து வீரசைவர், வசவர் காலத்தவர். இவர் மாணாக்கர்கள் குளம் எடுக்கையில் அல்லமர் அவ்விடம்வந்து சித்தராமையரை நிந்தித்தனர். இதைக்கேட்ட சித்தராமையர் நெற்றிக்கண்ணைக் காட்டி எரிக்க ஆரம்பிக்கையில் அத்தீ அல்லமரை வருத்தாது அவ்வூரை எரித்தது. இதைக்கண்ட சித்தராமையர் இவர் என்னை யாளவந்த சிவமூர்த்தி என்று பணிந்து அவரிடம் ஞானம் அடைந்தவர்.

சித்தர் — ஒன்பதின்மர்—1. சத்தியநாதர், 2. சதோகநாதர், 3. ஆதிநாதர், 4. அநாதிநாதர், 5. வெகுளிநாதர், 6. மதங்கநாதர், 7. மச்சேந்திரநாதர், 8. கடேந்திரநாதர், 9. கோரக்கநாதர்.

2, பதினெண்மர் — 1. அகத்தியர், 2. போகர், 3. கோரக்கர், 4. கைலாசநாதர், 5. சட்டைமுனி, 6. திருமூலர், 7. நந்தி, 8. கூன்கண்ணர், 9. கொங்கணர், 10. மச்சமுனி, 11. வாசமுனி, 12. கூர்மமுனி, 13. கமலமுனி, 14. இடைக்காடர், 15. புண்ணாக்கீசர், 16. சுந்தரானந்தர், 17. உரோமருஷி, 18. பிரமமுனி. இவர்களன்றித் தன்வந்திரி, புலஸ்தியர், புசுண்டர், கருவூரார், இராமதேவர், தேரையர், கபிலர் முதலியரும் கூறுவர்.

சித்தவர்மமுனி — தாமசமனுவைக் காண்க.

சித்தவாசம் — ஒரு தீர்த்தம்.

சித்தன் — இவன் ஒரு சிலம்பவித்தை வல்லவன். பாண்டிநாடாகிய மதுரையில் இருந்தவன். இவன் ஒரு ஆசிரியனிடம் சிலம்பவித்தைகற்று அந்த ஆசிரியன் வருவாயினைத் தன்வசமாக்கி ஆசிரியன் கிழத்தனம் அடைந்தது அறிந்து அவனைக் கொல்ல வழிபார்த்தும், அவன் மனைவியைப் பலமுறை தன்வசமாக்க எண்ணி அவள் உடன்படாமையால் வலுவிற்கைப்பற்றத் துணிந்தனன். கற்புடையளாகிய ஆசிரியன் மனைவி, பயந்து வீட்டிற் புகுந்து சொக்கலிங்கமூர்த்தியை எண்ணிக்கவலை அடைந்திருந்தனள். சொக்கலிங்கமூர்த்தி ஆசிரியனைப்போல் சித்தனிடம் சென்று சித்தா கிழவனுகிய நானும் நீயும் பலமறிவோம் நாளை வாவென இடங்குறித்து யுத்தத்திற்கு அழைத்தனர். சித்தன் உடன்பட்டு வந்து வாட்போரிட்டு மாய்ந்தனன். இதனைக் கிழ ஆசிரியன் கேட்டுக் கடவுளைத் துதித்து வணங்கினன்.

சித்தாச்சிரமம் — நைமிசத்து அருகிலுள்ள வனம். இது விச்வாமித்திரர் ஆச்சிரமம். இதில் வாமனுவதாரத்திற்கு முன் விஷ்ணு தவம்புரிந்தனர். ஆதலின் இதில் தவம் முதலியசெய்யின் சர்வசித்திகள் உண்டாம். இது, தாடகையிருந்த வனத்திற்குச் சற்று தூரத்திலுள்ளது.

சித்தாந்தகௌமதி — பாணினி முனிவர் செய்த வடநூலிலக்கண விரியுரை.

சித்தாந்தசாத்திரம் — (கச) திருவுந்தியார், திருகளிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபாவிருபது, உண்மை நெறிவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினுவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைவிளக்கம், சங்கற்ப நிராகரணம்.

சித்தாந்தசிகாமணி — சிவப்பிரகாசர் செய்த வீரசைவ சித்தாந்தநூல்.

சித்தார்த்தாதேவி — அபிநந்தனர்க்குத் தாய், சுயம்வரான் தேவி

சித்தார்த்தமகாராசா — சைநர். வர்த்தமான தீர்த்தங்காருக்குத் தந்தை, தேவி பிரியகாரணி.

சித்தி — 1. விநாயகசத்தி. விநாயகரேவலால் கணனிடம் யுத்தத்திற்குச் சென்றவள் தருமதத்தனிடம் பிறந்தவள்.

2. பகன் தேவி.

3. (அ) அணுமா, மஹிமா, கரிமா, இலகுமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்வம், வசித்வம். ஆன்மாவைப்போலாதல் அணுமா. மசத்துவமாதல் மகிமா. தன்னுடல் கண்டிப்பின்ருய்க் கண்டிப்புள்ளவற்றை உருவ வல்லவனுதல் கரிமா. இலகுத்தமாதலே லகுமா. வேண்டுவன அடைதலே பிராப்தி. நிறையுளனுதலே பிரகாமியம். ஆட்சியுளனுதலே ஈசத்வம். எல்லாம் தன் வசமாக்க வல்லனுதலே வசித்வம்.

சித்திபாகி — கண்ணன் குமரன்.

சித்திபுரம் — சீதரராஜன் நகரம். (மணிமே)

சித்திரகர் — பிரசனி குமரர்.

சித்திரகன் — 1. திருதராட்டிரான் குமரன்.

2. விருஷ்ணிவம்சத்துப் பிறந்த யாதவன்.

சித்திரகாண்டன் — திருதராட்டிரான் குமரன்.

சித்திரகாரன் — சிற்ப விதிப்படி சித்திரம் எழுதுவோன்.

சித்திரகீர்த்தி — திருதராட்டிரான் குமரன்.

சித்திரகுத்தன் — 1. சிரவணரால் ஆத்மாக்கள் செய்யும் புண்ணியபாவங்களை யுணர்ந்து யமனுக்கு அறிக்கையிடுவோன். இவனிருக்கும் பட்டணம் (20) காதவழி விஸ்தாரமுள்ளது.

2. விட்கம்பம் என்னும்குசபுரத்துவணிகன் குமரன். இவன் களவில் பசுக்களைத் திருடிக்கொண்டு வருகையில் வழியில் பசுவொன்று நடவாமற்போக அதைவிட்டு நீங்கினன். அப்பசு கோவிலுக்கு உபயோகப்பட்டதனுல் புண்ணியம் அடைந்தவன்.

சித்திரகூடம் — 1. சிதம்பரத்திற்கு ஒரு பெயர். இது வைஷ்ணவர் இட்டிருக்கிற பெயர். இதிலுள்ள பெருமாள் எழுந்தருளியிருக்கும் திருப்பதியை இப்பெயரிட்டு அழைப்பர்.

2. ஒரு மலை, இதில் வால்மீக முனிவர் ஆச்சிரமம் இருந்தது. இராமமூர்த்தி ஆரண்யவாசத்தில் சில நாள் இங்கு வசித்தனர். இப்போது பண்டில்கண்ட் எனப்படும். இது சிருங்கிபேரபுரத்திற்குத் தென் மேற்கிலுள்ளது.

3. பிராயாகை க்ஷேத்திரத்திற்குச் சமீபத்திலுள்ள பர்வதம். இங்கு மந்தாகினி நதி பெருகுகிறது. (A hill in Bundelkhand.)

4. ஒரு வித்தியாதர நகரம். (சூளாமணி)

சித்திரகேது — 1. பாரதவீரருள் ஒருவன், துருபதன் குமரன்.

2. வசிட்டருக்கு ஊர்சையிடம் உதித்த குமரன்.

3. தேவபாகனுக்கு முசையிடம் பிறந்த குமரர்

4. சூரசேனதேசத்து அரசனாகியவித்யாதரன். இவனுக்குக் கோடிபெண்கள் தேவியர். இவன் முதற்றேவி கிருதத்துதி. இவளிடத்து ஒருபுத்திரன் பிறந்தனன். இதனைப் பொறாமைகொண்ட மற்றத்தேவியர், சிசுவிற்கு நஞ்சூட்டிக் கொன்றனர். இதனால் துக்கமடைந்த அரசன் ஆங்கிரச நாரத ருஷிகள் உபதேசித்த ஞானத்தால் குமரனுக்கும் தனக்கும் பற்றின்மை அறிந்து தவத்திற்குச் சென்றான். இவன் ஒருமுறை சாம்பமூர்த்தியைக் கைலையில் தரிசித்துத் தேவர்களும் தேவியருடன் கூடி இருக்கின்றனர் எனப் பரிகசித்து உமாதேவியாரால் விருத்திரன் என்னும் அசுரனாகச் சபிக்கப்பட்டனன். (பாகவதம்).

5. சவ்வீரதேசத்து அரசன், இவன் புத்திரனில்லாது வருந்தக் கார்க்கியமுனிவர் இவனைநோக்கி நீ சிவராத்திரி விரதமிழந்ததால் இவ்விதமடைந்தனை ஆதலால் புண்ணியத்தல யாத்திரை செய்யெனக் கூற அவ்வகைசெய்து புத்திரப்பேறடைந்தவன்.

சித்திரக்கவி — மாலை மாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம், எழுகூற்றிருக்கை, காதைக்கரப்பு, கரந்துரைப்பாட்டு, தூசங்கொளல், வாவனாற்றி, கூடசதுக்கம், கோமூத்திரி, ஒரெழுத்தினத்தா லுயர்ந்த பாட்டு, பாதமயக்கு, பாவின் புணர்ப்பு, ஒற்றுப்பெயர்த்தல், ஒரு பொருட்பாட்டு, சித்திரக்கா, விசித்திரக்கா, விகற்பநடை, வினாவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்துவருத்தனம், அக்கரச்சுதகம், நாகபந்தம் முதலிய.

சித்திரக்கா — நான்கு கூடினவெல்லாம் பத்தாகவும், மூன்று கூடினவெல்லாம் பதினைந்தாகவும் பிறவாற்றானும் வழுவாது பாடுவது. (யாப்பு - வி.)

சித்திரசாநகன்—துரியோதனனுக்குத் தம்பி. திருதராட்டின் குமரன்.

சித்ரசிகண்டிகள் — இவர்கள் விசித்ரமான மயிற்றோகை யுடையவர்கள். இவர்கள் எழுமுனிவர்கள், பாஞ்சராத்ர ஆகமத்தை மேருமலையிலிருந்து செய்தவர் மரீசி, அத்ரி, அங்கிரஸ், புலத்தியர், புலகர், கிரது, வசிட்டர்.

சித்திரசேநன் — 1. சராசந்தனுக்கு மந்திரி. சூதில் வல்லவன்.

2. இந்திரலோகத்திலுள்ள ஒரு தூதுவன். அருச்சுநன் நிவாதகவ சருடன் போரிடச் சென்ற காலத்துத் தூதாக இருந்தவன்.

3. தேவசாவர்ணி மனுப்புத்திரன்.

4. நரிஷ்யந்தன் குமரன்.

5. திருதராட்டிரன் குமரன். (14) ஆம் நாட்போரில் வீமனால் இறந்தவன்.

6. ஷண்முகசேநாவீரருள் ஒருவன்.

7. வபுத்திரத்தன் குமரன், இவன் குமரன் வீமன்.

8. கர்ணன் குமரன்.

9. பாண்டுபுத்திரர் அரண்யவாசத்தில் நதிக்கரையில் சத்தியஸ்கந்தயாகஞ் செய்கையில் துரியோதனன் தங்கள் செல்வத்தைப் பாண்டவர்களுக்குக் காட்டும்படி பாண்டவர்கட்கு எதிரில் கூடாரம் இட்டிருந்தனன். சித்திரசேநன் என்னும் காந்தருவன் அவ்விடம் வந்து தன் தூதரை விடுத்து அந்த இடத்தைவிட்டு நீங்கவெனன். தூதர் சென்று இது எம் அரசனுக்கு விளையாட்டிடம் நீங்குக எனத் துரியோதனன் மறுத்தனன். இதனால் சித்திரசேநன் துரியோதனனுடன் யுத்தஞ்செய்து துரியோதனன் மனைவியரையும் துரியோதனனையும் கட்டிச் சென்றனன். துரியோதனன் மனைவியர் பரிதபிக்கக் கண்ட தருமர் பீமார்ச்சுன நகுல சகாதேவரை விடுத்துச் சித்திரசேநன் கையினின்றும் விடுவித்தனர்.

10. தெய்வீக அரசனுக்குச் சேரன் குமரியாகிய பத்மாவதியிடம் பிறந்தவன்.

இவன் வழியில் மலையமான் வம்சம் உண்டாயிற்று.

11. திராவிட தேசத்தரசரில் ஒருவன் இவன் பாசண்டர் கூற்றேபற்றி வைதிக ஒழுக்கம் கைவிட்டுப் பாசுபத ஒழுக்கம் மேற்கொண்டு நரகத்தில் வீழ்ந்தான். (பாத்மபுராணம்.)

சித்திரசேநபாண்டியன்—சித்திரவர்ம பாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் சித்திரவிக்கிரமன்.

சித்திரசரன் — திருதராட்டிரன் குமரன்.

சித்திரநான் — 1. திருதராட்டிரன் குமரன்.

2. சோபனபுரத்து அரசன்.

3. போதனபுரத்திலிருந்த சிற்பி.

6. ஸ்ரீ நிலைராசகுமாரன் (சுளா.)

சித்திரதன்வன் — சோழர் சரித்திரம் காண்க.

சித்திரத்துவசபாண்டியன்—சித்திர பூஷண பாண்டியனுக்குக் குமான். இவன் குமரன் சித்திரவருமன்.

சித்திரத்துவசன்—திருதராட்டிரன் குமரன்.

சித்திரதேவன்—துரியோதனனுக்குத் தம்பி, திருதராட்டிரன் புத்திரன்.

சித்திரநதி — ஒரு தீர்த்தம்.

சித்திரபலை — 1. ருக்ஷபர்வதத்திலுள்ள நதி.

2. ஒட்டர தேசத்திலுள்ள ஒரு நதி A river in Orissa.

சித்திரபாகு — திருதராட்டிரன் குமரன்.

சித்திரபாணன் — திருதராட்டிரன் குமரன்.

சித்திரபானு — திருதராட்டிரன் குமரன்.

சித்திரபூடண பாண்டியன் — சித்திரவிரத பாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் சித்திரத்துவசன்.

சித்திரமாடத்துத்துஞ்சியநன்மாறன் — வெற்றிவேற்செழியனைக் காண்க.

சித்திரமுகன் — 1. இவன் ஒரு வணிகனுயிருந்து பின் பிராமணனானவன். இவன் புத்திரி அத்ருஸ்யந்தி. சத்திரிஷியின் பாரியை. (பாரதம் - அநு.)

2. வசிஷ்டருக்குப் பிறந்த வைசியன், இவன் அவரது அநுக்ரகத்தால்பிராமணன் ஆனான். (பார - அச்.)

சித்திரம் — சிற்பநூலுள் ஒன்று.

சித்திரயோதி — திருதராட்டிரன் குமரன்.

சித்திரரதன் — 1. ஸ்ரீநிலை ராசகுமாரன்.

2. தர்மரதன் குமரன்.

3. திரிசங்கு குமரன், இவன் குமரன் சசிபிந்து.

4. தீவிரதன் குமரன்.

5. திருதராட்டிர புத்திரன்.

6. ஒரு காந்தருவன், கௌசிகன் உடல் கிடந்தவழி ரதத்திற் சென்று தலைகீழாக விழுந்து வாலகில்லியர் சொற்படி அவன் எலும்புகளைக் கங்கையில் விட்டுச் செம்மை அடைந்தவன்.

7. சுபார்சுவகன் குமரன்.

8. ஒரு காந்தருவன், இவன் மாறுவேடங் கொண்டு பாஞ்சால மடையும் அருச்சுநனுடன் யுத்தஞ் செய்து அவன் வன்மை கண்டு அவனுக்குப் பொருள்களை வன்மையாய்ப் பார்க்கும் சாக்ஷுஷி என்னும் வித்தையைக் கொடுத்து அவனிடமிருந்து அக்நிசிராஸ்திரம் பெற்றவன்.

9. ஒரு அரசன் இவன் பெருஞ்செல்வமுள்ளவனாய் அரசர்கள் பலரும் தன்னை வணங்க அரசாண்டு வருகையில் மறுபிறவியிலு மிவ்வாறு இருக்க எண்ணி வசிட்டரை அடைந்து என் முன்பிறவியின் வரலாறு என்னென்று கேட்டனன். வசிட்டர் சற்று ஆலோசித்து அரசனே நீ முற்பிறவியில் தாழ்ந்த குலத்திற் றோன்றி க்ஷாமகாலத்துக் கட்டை வெட்டிச் சீவித்து வருகையில் ஒருநாள் விறகு விலையாகாமல் அவ்விடம் யாகஞ் செய்துகொண்டிருந்த யாகசாலையில் கட்டையைப் போட்டுவிட்டு அந்தணருக்குச் சீதநிவாரணஞ் செய்து பின் அங்கிருந்த வைசியன் தானஞ் செய்யக் கண்டு நாம் இவ்வாறு தானஞ் செய்யப் பொருள் பெறவில்லையேயென்று எண்ணிய புண்ணியத்தா லிப்பலனடைந்தனை யிப்போது பூதானஞ் செய்க என ஏவப்பட்டவன். (சிவமஹாபுராணம்.)

10. இவன் ஒரு காந்தருவன், தீமைகளியற்றி நாரத ருபதேசத்தால் விஷ்ணுவை யெண்ணித் தவமியற்றி, மறு பிறவியில் பிரகலாதனாகப் பிறந்தவன். (திருமுட்ட புராணம்.)

11. கீகடதேசத் தரசன், இவன் சிவபூசாதுரந்தரன். இவனுக்குக் கமலலோசனையென்னும் ஒருகுமரி பிறக்கும்போது கண் திறவாது பிறந்தனள். இது கண் திறக்க அரசன் தேவ வைத்தியரை யழைத்துக் காட்டினன். பின் சிவசந்நிதானத் தெதிரில் கொண்டுசெல்லக் குழந்தை மஹாதேவத்வனியுடன் கண்திறந்து சிவபூசை செய்யக் கண்டு அங்கு வந்திருந்த தேவ வைத்தியரு மிந்திரன் வாசுகியும் வியப்படைந்து சென்றனர். (சிவரஹஸ்யம்.)

12. சோழர் சரிதை காண்க.

13. முனியென்பவனது குமாரன் காதம்பரியின் தந்தை.

14. ஒரு க்ஷத்திரியன். நர்மாதா நதியில் மனைவியுடன் கிரீடித்திருந்தபொழுது ஜலத்தின்பொருட்டு வந்த இரேணுகையால் காணப்பட்டவன்.

15. மார்த்திகாவதனைக் காண்க.

சித்ராதன் — இவன் ஒருகாந்தருவன் அமராவதிக்கருகிலுள்ள வனத்தில் வசித்திருந்தவன். இவன்வசித்தபடியால் அவ்வனத்திற்குச் சைத்ரரதம் எனும்பெயர் உண்டாயிற்று. இவன்விமானத்தில் ஏறிக்கொண்டு பூசஞ்சாரம் வருகையில் கைலாயமலையையடைய ஆங்குப்பாகம் பிரியா அர்த்த நாரிபாகனாகிய சிவமூர்த்தியைக் கண்டு எல்லாரும் வணங்கும் பரமனிவ்வாறு உமையோடு பிரியாதிருத்தல் பொருந்துமோ வென்று பரிகசிக்கக் கேட்டபிராட்டி சினந்து தேவருஷிகளா லறியப்படாத வுண்மைப்பொருளைப் பற்றிப்பரிகஸித்ததால் நீ அசுர யோனியில் விருத்திராசுரனாகப் பிறக்க எனச் சபிக்கப்பட்டனன். இவனது மற்றசரிதங்களை விருத்திராசுரனைக்காண்க.

சித்திரரதை — அக்குரூரன் தேவி.

சித்திரரேகை — 1. குபேரன் தேவி.

2. சித்திரலேகைக்கு ஒரு பெயர்.

சித்திரலேகை—1. கபந்தன் பெண். பாணசுரன் பெண்ணாகிய உஷையின் உயிர்ப்பாங்கி, உஷை கனாக்கண்டு கனவில்கண்ட புருஷனைத் தோழிக்குத் தெரிவிக்க அவள் அனிருத்தன் என்று அறிந்து அவன் உறங்குகையில் அவனைக் கட்டிலுடன் உஷையிடங் கொண்டுவந்து காட்டிய அதிமாயாவி.

2. கும்பாண்டன் குமரி, தன் வன்மையால் பார்வதியார் கோலங்கொண்டு சிவபெருமானிடஞ் சென்று பின்பு நிஜவுருவங்கொண்டவள். (சிவமகாபுராணம்).

சித்திரவருமன் — சீமந்தினியைக் காண்க.

சித்திரவர்மபாண்டியன் — சித்திரத்துவசபாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் சித்திரசேநன்.

சித்திரவன்மன்—1. பாரதவீரருள் ஒருவன். விரூபாக்ஷனம்சம்.

2. திருவாரூரில் ஆடகேசுரலிங்கம் தாபித்துப் பூசித்த முனிவன்.

சித்திரவன்மதரன் — திருதராட்டிரன் குமரன்.

சித்திரவன்மா — திருதராட்டிரன் குமரன்.

சித்திரவாகன் — 1. பாண்டிநாட்டி லிருந்த மணலூர்புரத்து அரசன். சித்திராங்கதைக்குத் தந்தை இவனுக்கு மலையத்துவசன் என்றும், வீரன் என்றும் வேறு பெயர்கள் உண்டு.

சித்திரவாகு — திருதராட்டிரன் குமரன்.

சித்திரவிக்கிரமபாண்டியன் — சித்திரசேநபாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் இராசமார்த்தாண்டன்.

சித்திரவிசித்திரன் — திருதராட்டிரனுக்குக் குமரன்.

சித்திரவிரதபாண்டியன் — சுகுணபாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் சித்திரபூடணன்.

சித்திரவீரன் — சகுனிக்குக் குமரன்.

சித்திரவீரியன் — சந்தனு குமரன். இவனே விசித்திரவீரியன்.

சித்திரவுத்தமன்—திருதராட்டிரன் குமரன்.

சித்திரன் — 1. திருதராட்டிரன் குமரன்.

2. யமனிடம் உள்ள கணக்கன்.

3. கனகவிசயர்க்குத் துணையான அரசன்.

4. ஒரு காந்தருவன். தன்னிடம் வந்த நாரதமுனிவரை எதிர்கொண்டு உபசரிக்காமையால் அவர் சாபமிட முதலையுருக்கொண்டு ஒரு தடாகத்திலிருந்து சிலகாலம் பொறுத்துத் தடாகத்தில் நீராடவந்த மகோற்கடரை விழுங்கப் பிடித்து அவரால் சாபம்நீங்கி நல்லுலகடைந்தவன்.

5. ஒரு அரசன், இவனைப்பற்றி இருக்குவேதத்திற் புகழ்ந்திருக்கிறது.

6. கனகவிசயர்க்குத் துணையாயினவோரரசன். (சிலப்பதிகாரம்).

சித்திராக்கன் — திருதராட்டிரன் குமரன்.

சித்திராங்கதன் — 1. ஒரு காந்தருவன், சந்தனு புத்திரனாகிய சித்திராங்கதனைத் தன் பெயர் கொண்டிருக்கிறான் எனக் கொன்றவன்.

2. பாண்டி நாட்டரசன். சித்தராங்கதைக்குத் தந்தை.

3. சந்தனுக்குப் பரிமளகந்தியிடம் உதித்த குமரன். இவன் சித்திராங்கதன் என்னும் கந்தருவனால் கொலை யுண்டவன்.

4. திருதராட்டிரன் குமரரில் ஒருவன்.

5. ஒரு காந்தருவன் கங்கைக்கரையில் பூங்காவனம் செய்துகொண்டு அதிலிருந்தவன், பாண்டவர் திரௌபதையின் சுயம்வரத்திற்குச் செல்லுகையில் அவன்

சோலையைத் தாண்டிச் சென்றனர். அதனால் காந்தருவன் யுத்தத்திற்குவர அவனைப் பாண்டவர் அக்கியஸ்திரத்தால் வருத்திக் காந்தருவப்புரவி பெற்றனர்.

6. இவன் எவிச்செவி யரசனுடைய தம்பி. தருசகனுக்குப் பகைவன். மகத நாட்டில் நடந்த போரில் பிடித்து உதயணனால் சிறையில் வைக்கப்பட்டுச் சிலநாள் சென்றபின் தருசகனால் விடுவிக்கப்பட்டோன்.

7. தசார்ணவதேசத் தரசன், அச்வமேதக் குதிரைக்குப் பின்சென்ற அருச்சுநனை யெதிர்த்தவன். (பார - அச்வ.

சித்திராங்கதை — பாண்டிநாட்டு அரசனாகிய சித்திராங்கதன் (சித்திரவாகன்) குமரி. இவள் குமரன் பப்புருவாகன். இவள் தனுர்வித்தையில் வல்லவளாய்ப் பெண்ணரசு புரிந்திருக்கையில் தீர்த்தயாத்திரை பொருட்டு வந்த அருச்சுநன் இவளை மணந்தனன். இவளே அல்லி அரசி.

சித்திராங்கனை—1. விப்பிரவாகுவின் குமரி.

2. சௌமியனைக் காண்க.

சித்திராங்கி — 1. இராஜராஜ நரேந்திரன் காமினி. இவள் கொடியவள் ஆகையால் வழக்கத்தில் சித்திராங்கி என்பர். காமலீலையில் இவளை வென்றவர் இல்லை.

2. சாரங்கதரனைக் காண்க.

சித்திராசுவன் — திருதராட்டிரன் குமரன்.

சித்திராதன் — 1. குரோதகீர்த்தி குமரன்.

2. கேகயன் குமரன், தாய் சயந்தி, பாரி ஊர்ணை, குமரன் சம்பிராட்.

3. உகதன் குமரன், இவன் குமரன் சீதரன்.

4. பிரியவிரதன் பேரன், மேதாதியின் குமரன்.

சித்திராதேவி — குபேரன் பாரியை.

சித்திராத்தகீஷன் — குரோத கீர்த்தியின் குமரன்.

சித்திராபதி — மாதவிக்கு நற்றாய். மணிமேகலையை உதயகுமாரனுடன் கூட்டமுயன்றவள். (மணிமேகலை)

சித்திராயுதன் — 1. திருதராட்டிரன் புத்திரன்.

2. சிங்கபுரத்து அரசன், அருச்சுநனால் கொல்லப்பட்டவன்.

3. ஒரு காந்தருவன்.

சித்திரான்னவகை — இவை அன்னத்தில் வாய்க்கினிய பொருள்களைப் புணர்த்திச் செய்வன. பாற்பொங்கல், பருப்புப்பொங்கல், சருக்கரைப்பொங்கல், மிளகோரை, புளியோரை, கடுகோரை, எள்ளோரை, உழுந்தோரை, ததியோதனம், வெங்கிபாத், பலவகைக் காய்கள்சேர்ந்த சோறு, கிச்சடி, பழரசம்சேர்ந்த அன்ன முதலிய.

சித்திரைமாசப்பிறப்பு — சித்திரை மாதப்பிறப்பு ஞாயிற்றுக்கிழமையாகில் அற்பமழை, திங்களாகில் - வெள்ளங்காணும், செவ் - கலகமுண்டு, புத - காற்றதிகம், வியா - சுபமுண்டு, வெள்-பெருமழை, சநி-மழையில்லை, பின்னும், சஷ்டி, அஷ்டமி, உவா, இருத்தை ஆகா. மூன்று உத்திரங்கள் அஸ்தம்,திருவோணம், அவிட்டம்,ரேவதி, மிருகசிரம், மூலம், உத்தமம். சோதி, சித்திரை, ரோகணி, சதயம், புனர்ப்பூசம், பூசம், மகம், அசுவநி, அனுடம், இவை மத்திமம். மற்றவை ஆகா.

சித்திரோபலை — இருக்ஷபர்வதத்தில் பிரவகிக்கும் ஒருநதி.

சித்துருபன் — சோமகாந்தனைக் காண்க.

சித்நபசத்தி — சுத்த ரஜசுக்குப் பெயர். (நாஞ.)

சித்தை — அஷ்டசத்திகளில் ஒருத்தி.

சிநசேனசாரியர் — விஜயாலய சோழன் காலத்தில் மாகாராட்டிர மன்னனாயிருந்த அமோகவருஷனுடைய நண்புபெற்றுமகாபுராணத்தின் முதற்பாகமாகிய ஆதிபுராணத்தையியற்றிய சைநகவிஞர்.

சிநி — 1. சாத்தகியின் பாட்டன்.

2. விரோதன் புத்திரனாகிய சூரன் குமரன்.

3. யாதவவம்சத்து அநமித்திரன் குமரன்.

4. யுதாசித்தின் குமரன்.

5. கார்ககன் தந்தை.

6. சநாதனன் என்னும் வேதியனுக்குக் குமரன்.

7. அநமித்திரன் குமரன் (விருஷ்ணி வம்சத்தவன்.) இவன் குமரன் சத்தியகன். இவன் குமரன் யுயுதானன், (அல்லது) சாத்தகி சோமதத்தனால் கொல்லப்பட்டான்.

சிநீவாலி — ஆங்கிரசருஷிக்குச் சிரத்தையிடம் உதித்த குமரி. தாதா எனும் ஆதித்தன் தேவி, குமரன் தரிசம்.

சிநேந்திரர்—(சைநர்) சிநேந்திரமாலை செய்த தமிழாசிரியர்.

சிநேந்திரபத்தர் — இவர் கட்டிவைத்த சிநாலயத்திருந்த மாணிக்க தீபத்தைத் திருடர்

நால்வரில் கீர்த்திதரர் என்பவர் திருடிச் செல்வது கண்டு காவலாளி பிடித்துச் சிநேந்திரபத்தரிட மறிவிக்கப் பத்தர் க்ஷம ணன் திருடினன் எனும் அபவாதம் நீங்க நானே அதனைக் கொண்டுவரக் கூறி னேன் என்று விடுவித்தனர். பின் கீர்த்தி தரர் யமதாரிடம் உபதேசம் பெற்றுக் கீர்த்தி பெற்றனராம். (சிநேந்திரபத்தர் கதை.)

சிநேந்திரமாலை — சைநாசிரியராகிய சிநேந் திரர் இயற்றிய சோதிடநூல்.

சிந்தன் — சண்முகசேநாவீரன்.

சிந்தாதேவி — சரஸ்வதிதேவி, இவளுக்குத் தென்மதுரையிலிருக்கும் ஆலயத்திற்குக் கலாநிலயம் என்று பெயர். ஆபுத்திரனுக்கு அமுதசுரபியை யளித்தவள். இவளைச் சிந் தாவிளக்கென்றும் கூறுவர். (மணிமே)

சிந்தாமணி — 1. பாற்கடலிற் பிறந்த பொ ருள்களுள் ஒன்று. இது இந்திரன் இட மிருந்து நினைத்ததைத் தரவல்லது.

2. திருத்தக்கதேவர் இயற்றிய சீவகன் என்னும் இராசகுமரன் கதை இது, (கூகசடு) செய்யுட்கள் கொண்டது.

சிந்தாமணி விநாயகர் — இவர் சிந்தாமணி யைத் தரித்த காரணத்தால் சிந்தாமணி விநாயகர். எனப்பட்டனர். கணனைக் காண்க. கணன் கபிலமுனிவரிடமிருந்த சிந்தாமணியைக் கவர, கபிலர் விநாயகரை யெண்ணி யாகமியற்ற, அதில் சித்திபுத்தி களுடன் சிங்கவாகனத்தெழுந்தருளிய விநா யகர். இவர்க்குக் கபிலவிநாயகர், சுமுகர் எனவும் பெயர். (பார்க்கவபுராணம்.)

சிந்தியல்வெண்பா — மூன்றடியாய் நேரிசை வெண்பாப்போல் வருவதுநேரிசைச் சிந்தி யல் வெண்பா, இன்னிசை வெண்பாப் போல் வருவது இன்னிசைச் சிந்தியல் வெண்பா. (யாப்பு - இ.)

சிந்து — 1. ஒரு இருடி.

2. கங்கையின் பிரிவு, மேற்கடலில் பாய்வது. இதன் துறையில் சமதக்கினி முனிவர் புத்திரராகிய இராமர் சிவமூர்த் தியை எண்ணித் தவமியற்றிப் பரசுபெற் றுப் பரசிராமர் எனப் பெயரடைந்தனர். The river Indus.

3. காசிபன் குலத்துதித்தவன். இவன் சிவமூர்த்தியை யெண்ணித் தவமியற்றி அடைவே யுயர்ந்து பிரமாவாகி அபிந்தவர் எனும் பெயருடன் உலகசிருட்டி செய்த வன். (ஞானவாசிட்டம்.)

4. சக்கிரபாணியின் புதல்வன். இவன் உற்கை என்பவளை மணந்து தேவ இருடி யரைவருத்தி விநாயகர் தன்னைக் கொல்ல அவதரித்ததை அறிந்து பல அசுரரை ஏவி முடிவில் விநாயகரால் மாய்ந்தவன். (விநாயக புராணம்).

5. ஒரு தேசம், சரமைநாட்டைச் சேர் ந்தது. (சூளா.)

6. சௌவீரதேசத்துக்கு அருகிலுள்ள தேசம். The Country between The Indus and the Jhelum..

7. இப்பெயருள்ள நதிகள் இரண்டு, ஒன்று இமயத்திலும், மற்றொன்று மேரு விலுந் தோன்றும். (பெருங்கதை.)

சிந்துசேநன் — இவன் திருமாலிடம் சக்க ரம் பெற்று உருத்திராக்ஷமணிந்த சிங்க னுடன் சண்டைசெய்யச் சிங்கன் உருத்தி ராக்ஷம் அணிந்ததால் செயித்தது கண்டு பின்னிடைந்தவன்.

சிந்துதீபன் — 1. (சூ.) நாபாகன் குமரன், இவன் குமரன் அயுதாயு.

2. ஒரு இருடி. தேவசன்மா, வேதநா தன் முதலியவர்க்கு நேர்ந்த நரி, நாய்களின் பிறப்பொழியச் சேதுஸ்நானஞ் செய்ய ஏவினவன்.

3. அம்பரீஷன் புத்ரன், இவன் ருக் வேதத்தில் ஜலத்தைப்பற்றி ஒரு கீதஞ் செய்திருக்கிறன்.

சிந்துதேசாதிபதி — விருத்தக்ஷத்திரனைக் காண்க. இவன் சயித்திரதனுக்குத் தந்தை. சிமந்தபஞ்சகத்தில் தன் குமரன் சிரத்தை வெட்டினேன் இறக்கத் தவஞ் செய்திரு ந்து அருச்சுநன் எய்த அம்பினால் இறந்த தன் குமரன் சிரத்தைத் தன் கரத்தில் கண்டு தலைபிளந்து இறந்தவன்.

சிந்துதேசமாக்கள் — இவர்கள் பலபாஷை களை யறிந்தவர்களா யிருந்ததுடன் அரசர் களின் மெய்க்காப்பாளர்களாகவு மிருந்த வீரர். (பெருங்கதை)

சிந்துத்வீபன் — 1. ஒரு இருடி ஆபோஹிஷ் டமெனு மந்திரத்திற்குருஷி

2. ஒருஅசுரன், வேத்ராசுரனைக்காண்க.

சிந்துமுனிவர் — ஒரு இருடி. மணிபத்திரன் என்னும் காந்தருவனை மீனுகச் சபித்தவர்.

சிந்துமேதன் — தண்டனைக் காண்க.

சிந்துரதன் — பிரகத்ரதன் குமரன், இவன் குமரன சைலரதன்.

சிந்துரன் — 1. நராந்தகன் ஏவலால் விகண் டனுடன் கூடிக் காசிப்புரோகிதன் கும

ரர்போல் மகோத்கடரைத் தழுவவந்து மகோத்கடரால் நழுவுண் டிறந்தவன்.

2. பிரமன் கொட்டாவிவிட அதினின் றும் தோன்றிப் பிரமனல் எவரைத் தழு வினும் அவர் இறக்கும் வலிபெற்றுத் தந்தையாகிய பிரமனைத் தழுவச் சென்ற னன். அவர் அஞ்சிச் சிவமூர்த்தியிடம் அடைக்கலம்புக நீங்கித் தேவரை வருத் தித் திரிகையில் பார்வதியார் வயிற்றில் வளரும் சிசு உன்னைக் கொல்லும் என அசரீரி சொல்லக் கேட்டுப் பார்வதியார் வயிற்றில் வளர்ந்த விநாயகமூர்த்தியின் சிரத்தைக் காற்றுருக்கொண்டு சேதித்துச் சிரத்தை நருமதையில் இட்டனன். அது கணேச குண்டமாயிற்று. அக்குண்டத்தி லிருந்து ஒரு நதியுண்டாய் அது சோணை நதி ஆயிற்று. பின்பு விநாயகர் திருவவ தரிக்கச் சிந்துரன் யுத்தத்திற்கு வந்தனன். விநாயகர் சிந்துரனைக் கசக்கித் திலகமாக் கொண்டனர்.

சிபி — 1. (சூ.) உசீநரன் குமாரன் எனவும், சாக்ஷுசமனுவிற்கு நட்வலையிடம் உதித்த வன் என்றுங் கூறுவர். இரண்டுமுறை யாய்ப் பிறப்புக்கூறி யிருத்தலால் இவன் சூரியவம்சம், சந்திரவம்சம் என்று துணி யக்கூடவில்லை. ஆயினும் கவிச் சக்கர வர்த்தியாகிய கம்பர் இராமாயணத்தில் "புறவொன்றின் பொருட்டாகத் துலை புக்க பெருந்தகை தன்புகழிற்பூத்த அற னென்று திருமனத்தான்" எனத் தசரத னைப் புகழ்ந்து கூறியிருத்தலால் இவன் சூரியகுலத்து அரசனேயாம். இவன் உசீ நரன் குமான் எனின் சந்திரகுலத்து அர சனயிருத்தல் வேண்டும். இப்பெயர்கொ ண்ட ஒருவன் சந்திரகுலத்தில் இருக்கின் றனன். இவன் வனத்தி விருக்கையில் தேவர் இவனது தவத்தைச் சோதிக்க இந்திரன் வேடனாகவும், அக்கிதேவன் புருவாகவும், உருவடைந்து அரசன் காண வேடன், புருவைத் துரத்தி அரசனுக்கு நேராகவரப் புரு அரசனிடம் அபயமடைந் தது. அரசன் வேடனை நோக்கி வேறு இறைச்சி தருகிறேன். இதை ஒழிக என வேடன் உடன்படாது இதனைத் தராது மறுக்கின் அப்புருவின் நிறையுள்ள உன் னுடம்பின் இறைச்சி தருக என, அரசன் மகிழ்ந்து அந்தப்படி ஒரு துலையிட்டு அதில் புருவைநிறுத்தித் தன்னுடலின் இறைச்சி முழுதும் அறுத்திட்டனன். இடுந்தோறும் புறவு இட்ட தட்டுத்தாழ்ந்தேவர உடம் பில் வேறு மாமிசம் இல்லாமையால் அர சன் தானே துலையில் ஏறத்தேவரிருவருங் களித்து அரசனுக்குத் தரிசனந்தந்து உட லிற் றசை வளரச்செய்து சுவர்க்கம் அளித் தனர். இவ்வாறன்றி யமனும், அக்கினி யும், வல்லூறும் புருவுமாக அடைந்தனர் எனவும சிலபுராணங் கூறும்.

2. (பிர.) உசீநரன் குமரன். இவன் குமார்விருஷதர்ப்பன், சுவிரன், மத்திரன், கேகயன். இவன் பூமியைப் பாய்போல் சுருட்டின வீரன், தன் ரதத்தின் சப்தத் தால் பூமி நடுங்கும்படி செய்தான். காட் டிலிருந்த தன் பசுக்களை யெல்லாம் தான மாக ஈந்தான். இவன் தன் குமரன் உயி ரைப் பிராம்மணனுக்குக் கொடுத்துச் சுவர் க்கமடைந்தான்.

சிப்ஸகன் — இலம்போதகன் குமரன், இவன் குமரன் மேகசுவாதி.

சிப்பிகள் — இவை, ஒருவகைப் பூச்சிகளின் மேலோடுகளாம். அவற்றை நத்தைகள் என்றும் கிளிஞ்சற் பூச்சிகளென்றும் கூறு வர். இவை கடலிலும் நன்னீரிலும் வசிக் கும். இவற்றில் ஒரே ஓடுள்ளன நத்தை யினமெனவும், இரண்டோடுள்ளன சிப்பி இனமெனவும் கூறுவர். இச் சிப்பிகள் சிறியன கடுகளவு முதல் 4 அடி அளவு பெரியனவுமுண்டு. இச் சிப்பிகள் காலாந் தரத்தில் பூமியில் பதிந்து சுண்ணும்பாக மாறுகின்றன. சிலவற்றின் ஓடுகளை நீற் றிச் சுண்ணும்பாக்குகிறார்கள். இவ்வகை யில் நாவாய்க் கிளிஞ்சலென ஒருவகை அவை கடலின் அடிப்பாகத் திருப்பது தாம் எண்ணிய இடம் போகவேண்டின் தசைப் பரப்புள்ள தோலடிப் பாதத்தை மேல் நீட்டி விரித்துக்கொண்டு கப்பலைப் போல் வேகமாய்ச் செல்லுகின்றன.

சிப்பிவகை — நீர்ப்பீச்சி நீந்தும் சிப்பி. இது, ஐரோப்பிய கடல் வாசி. இது வரிக்கி ளிஞ்சல் இனத்தது இதனை ஆர்கோனட் (Argonaut) என்பர். இது (3) முதல் (6) அங்குல அளவுள்ளது. இது உருண்டை வடிவாய் ஒரு நீர்ப்பீச்சும் தூம்பைப் பெற் றிருக்கிறது. இது நீரில் வேகமாய்ச் செல் லுகையில் தூம்பின் வழியாய் நீரைப் பீச் சிக்கொண்டு அதிவேகமாய்ச் செல்கிறது.

சிமந்தபஞ்சகம் — பரசிராமர் இராசவம்சத் தைக் கருவழித்த காலத்து ஏற்படுத்திய இடம். இதில் ஐந்து மடுக்களிருக்கின்றன.

இதில் அந்த அரசாது உதிரத்தால் பிதுர் தர்ப்பணஞ் செய்தனர். இதில் கண்ணன் கிரகண புண்ணியகாலத்துத் தீர்த்தம் ஆடினராம். பாண்டவர் குருமக்களுடன் போரிட்ட இடம் இதுவே.

சிமிருதிஹாரிகை — பிராணிகளின் மனதை அபகரிக்கும் தேவதை.

சிம்மக்னமூர்த்தி — நாசிங்கமூர்த்தி இரணியகசிபுவை வதைத்தகாலத்து வெறியால் மற்றவர்மேல் பாய்ந்தனர். அக்காலத்துத் தேவர் சிவமூர்த்தியை வேண்டச் சிவமூர்த்தி எட்டுக்கால் உள்ளதும், பக்ஷியும் மிருகமுமான தோற்றம் உள்ளதும் இரண்டு சிரமுமாகிய உருக்கொண்டு சிங்கத்தின் தோலை யுரித்து உடுத்தனர் என்பர். இந்தச் சரபத்தைக் கொல்ல விஷ்ணு நாராயணப் பக்ஷியாக வந்தனர் என்பர் வைணவர்.

சிம்மசந்திரன் — இவன் முன் ஜன்மத்தில் புத்தமித்ரன் எனும் வணிகன் சத்யகோஷனால் வஞ்சிக்கப்பட்டு வரதர்மமுனிவ ருபதேசத்தால் மறுஜன்மத்தில் ராமதத்தையிடம் சிம்மசேநனாகப் பிறந்து பூரணசந்திர முனிவருபதேசத்தால் துறவுபூண்டு லோகாக்ர மடைந்தனன். சத்யகோஷன் தான்செய்த பாபத்தால் பாம்பாகப் பிறந்து சிம்மசேனனைக் கடித்துக் கருடதண்டன் மந்திரவலியால் அக்னியில் வீழ்ந்திறந்து அசனிகோஷமெனும் யானையாகப்பிறந்து நரகமுற்றனன். (மேருமந்தரம்) பாதமித்திரனைக் காண்க.

சிம்மபலன் — கீசகன்.

சிம்மாத்திரி — ஒரு விஷ்ணு ஸ்தலம். இதில் எழுந்தருளிய விஷ்ணுமூர்த்திக்கு அப்பன் என்று பெயர்.

சிம்மாநனர் — ஒரு விஷ்ணுபடர்.

சிம்மிகை — 1. சிங்கிகை.

2. ஒரு அரக்கி, நிழலால் இழுப்பவள். இவள் அநுமன் இலங்கைக்குப் போகையில் நிழலால்தடுக்க அநுமன் இவள் வயிற்றுள் புகுந்து உடலைக் கிழித்து வெளிப்பட இறந்தவள்.

3. தக்ஷப்பிரஜாபதியின் மகள். கசியபன் பாரியை. புத்திரர்கள் ராகு, சுசந்திரன், சந்திரஹர்த்தா, சந்திரகிரணமர்த்தனன் என நால்வர்.

சிம்புள் — இது எட்டுக்காலுள்ள பக்ஷி. இவ்வுருவம் சிவபெருமானால் நரசிங்கவுருக்கொண் விஷ்ணுமூர்த்தியின் மயக்கம் போக்க எடுத்த உரு என்பர் சைவர். இப்பெயர் நிகண்டில் கூறப்பட்டிருக்கிறது. தற்காலம் இப்பறவை இல்லை.

சியமந்தகம் — ஒருவித மணி. இது நாடோறும் (அ) பாரம் பொன் கொடுக்கத்தக்கது. வியாதிகளைப் போக்கத்தக்கது. சூரியனால் சத்ராசித்துக்குக் கொடுத்தது. இதை ஒருமுறை சத்ராசித்தின் தம்பியாகிய பிரசேநன் தரித்து வேட்டைக்குச் சென்று சிங்கத்தால் கொல்லப்பட்டான். இதற்கு முன் கண்ணன் இம்மணியை உக்கிரசேநனுக்குக் கேட்டிருந்தனன். காட்டிற்சென்றதம்பி வாராததையுணர்ந்து முன் கண்ணன் உக்கிரசேநனுக்குக் கேட்டிருந்ததால் பிரசேநனைக் கொன்று கண்ணனே மணியைக் கவர்ந்தான் என்ற ஒரு அபவாதம் கண்ணனுக்கு உண்டாயிற்று. இதை நீக்கிக் கொள்ளக் கண்ணன் சாம்பவந்தன் இடஞ் சென்று யுத்தஞ்செய்து, அவனிடம் இருந்ததைப் பெற்றுச் சத்திராசித்தற்கு மணியைக் கொடுத்தனன். இதனால் சாம்பவந்தன் தன் குமரியாகிய சாம்பவதியைக் கண்ணனுக்குக் கொடுத்தனன். இம்மணியை மீண்டும் சததன்வாசத்ராசித்தைக் கொன்று கவர்ந்ததால் கண்ணன் சததன்வாவைக்கொன்று மணியை மீட்டனர்.

சியவனமுனிவர் — 1. பிருகு முனிவர்க்குப் புலோமையிடம் பிறந்தவர், இவருக்குச் சையாதியின் குமரி சுகன்னி என்ற மற்றொரு தேவி யிருந்ததாகத் தெரிகிறது. சுகன்னியைக்காண்க. சுகன்னியால் மணத்திற்கு முன்பு கண் குத்துண்டவர். ஒருமுறை அஸ்வினிதேவர் சுகன்னியின் கற்பினிலையறியவேண்டி இவரது ஆச்சிரமம் அடைந்தனர். வந்த தேவர்களைச் சியவனர் வணங்கி அவர்கள் தம்மனைவியைக் கேட்டபடி இசைந்து அஸ்வினிதேவருருக்கொண்டு அவர்களுடன் நீருள் மூழ்கிநிற்க மூவரும் சியவன ருஷிகளாய் இருக்கக் கண்ட சுகன்னி, தேவரை வேண்டத் தேவர் கணவரைக்காட்ட அறிந்து கூடினள். அதனால் அச்வினி தேவர்கள் களித்து இருடிக்கு இளமை தரப்பெற்றவர், (பாகவதம்). இவர் சையாதியஞ்ஞத்தில் அஸ்விநி தேவர்க்குச் சோமபானம் அளிக்க இந்திரன் கோபித்து வச்சிரம் ஓச்ச அவனுக்குச் கைதம்பிக்கச் செய்தவர். (விநாயகப் புராணம்). இவர்க்கு மனுகுமரியிடம் ஔரவனும், சுகன்னியிடம் பிரமதி

யும் பிறந்தனர். ஔரவனுக்கு ருசிகனும், ருசிகனுக்குச் சமதக்கினியும், சமதக்கினிக்குப் பரசிராமனும் பிறந்தனர். மற்றொரு குமாரனாகிய பிரமதிக்கு ருரு என்பானும், ருருக்குச் சநகனும் பிறந்தனர். இவர் பிரமன் குமரன் அல்லர். சத்துருக்னனுக்கு மதுவின்செய்தி கூறியவர்.

2. மித்திராயுவின் குமரர்.

2. சுகோத்திரன் குமரர்.

**சியவனர்** — 1. இவர் இந்திரனை நோக்கி நீ அச்வினி தேவர்களுடன் சோமபானஞ் செய்கவென, இந்திரன் அச்வினிதேவர்கள் இழிந்தவர்கள் அவர்களுடன் பானஞ் செய்யமாட்டேன் என, சியவனர் அவ்வகை செய்யாவிடின் துன்புறுவாயெனவும் மறுத்தனன். ருஷி ஒரு யாகஞ் செய்து உன்னை யுண்பிபபேன் என்று ஒரு யாகஞ் செய்தனர். அதில் மதனன் எனும் அசுரன் ஆகாயம் மேல்வாயும், பூமி கீழ்வாயுமாக தோன்றினன். இந்திரன் முதலியோர் அவன் வாயில் பட்டனர். தேவர்கள் இந்திரனுடன் ஆலோசித்து அச்வினி தேவர்களுடன் சோமபானஞ் செய்து கோபத்தி னீங்கினர். இதில் மதனனை முனிவர் மதுவினும், சூதாட்டத்தினும், ஸ்திரீகளிடத்தினும் பிரித்துவிட்டனர். இதனல் மனிதர் கெடுகின்றனர். பின் சியவனர் தேவர்கள் மதனன் வாயிற் பட்டபோது ருஷி சுவர்க்கத்தைக் கபர்களால் கவர்ந்தனர். தேவர்கள் கபர்களைச் சுவர்க்கத்தைக் கேட்க அவர்கள் கொடாததினல் பிராமணர்களைச் சரணமடைந்தனர். பிராமணர்கள் யாகாக்கினியால் கபர்களை யழித்துத் தேவர்களுக்குச்சுவர்க்கத்தை யளித்தனர். (பார - அநுசா.)

2. ஒரு ருஷி. இவர்குசிகவம்சத்தைக் கெடுப்பதாகக் குசிகனிடஞ் சென்று அவனிடம் நான் உறங்கப்போகிறேன் என்னைக் கால்பிடித்தல் முதலிய வுபசாரங்களால் நான் எழுந்துணையு முபசரிக்கவென்று தூங்கியெழுந்து, மீண்டும் தம்பதிகளாகிய குசிகனும் தேவியு முபசரிக்க நெடுங்காலந் தூங்கியெழுந்து இருவரையுந் தேரிழுக்கக் கூறி அவ்வாறு இழுக்கையில் சவுக்கா லிருவரையு மடித்து ஒட்டியும் அவர்களிருவரும் மனந் தளராததுகண்டு களித்து அவ்வாறு தாம்செய்தவை தெய்வலோகத்தில் நடந்த ரகசியம், அதைக் கொண்டு உங்களைத் துன்பப்படுத்தினேன் உங்கள் பணியால் களிப்புற்றேன் இனி சமதக்னியிடம் பிறக்கும் குமாரனல் உலகமழியும் எனக் கூறினவன். இவன் பிருகு வம்சத்தவன். (பார - அநுசா.)

**சியாமகன்** — 1. சூரனுக்கு மாரிஷையிடம் உதித்த குமரன்.

2. இருசிகன் குமரன், விதர்ப்பனுக்கு தந்தை.

3. வசுதேவன் தம்பி.

**சியாமரச்மி**—ஒரு இருடி. கபிலர் மாணக்கர்.

**சியாமம்**—1. யமுனைநதிக்கரைக்கண் உள்ள ஒரு அரசவிருக்ஷம்.

2. யமமார்க்கத்தைத் தடுக்கும் நாய், இதற்குப் பலியிடல் வேண்டும். இதன் துணை சபளம்.

**சியாமளை** — யமனுக்குத் தேவி.

**சியூமரச்மி** — ஒரு ருஷி. பசுவைக் கொல்லாமல் யாகஞ் செய்யவேண்டுமென்று கபிலர் வாதிட்டகாலத்தில் பசுவின் வயிற்றினிற் புகுந்து அவரிடம் வாதிட்டவர். (பார - சாந்)

**சியேனி** — அருணன் தேவி. குமரர் சம்பாதி, சடாயு.

**சியேஷ்டை**—1. பிரமன் புத்திரி, வருணன் தேவி, குமரன் அதர்மன். இவள் பாற்கடலில் பிறந்தவள் எனவுங் கூறுவர். இவளே மூதேவியாம்.

2. ஜலத்திற்கு அதாரமாய் ஸ்திதியாதாரூபையான சத்தி. இதற்குத் தேவர் சியேஷ்டர் அல்லது பவர்.

**சியோதிஷ்மந்தன்** — சுவாயம்பு மநுவின் குமரன்.

**சிரகாரி**—கௌதம புத்ரர்களில் ஒருவர் நெடுங்காலம் காரியத்தை ஆலோசித்துச் செய்பவர். பிதா இவரது தாயாகிய அகலியைக் கொலை செய்யும்படி யேவிய காலத்துத் தாம் பிதாவினல் தாயைக் கொலைசெய்ய ஏவிய செய்கை தர்மத்தின்படி தவறுடைத்தாகும் பிதாவின் கட்டளையை மறுத்தலும் தவருகும் இத் தரும சங்கடத்திற்கென் செய்வதென இரங்குகையில் கௌதமர் மனைவியைக் கொலை செய்வதைப் பற்றித் துக்கித்துக் குமாரரைக் கேட்டுக் கொல்லாமை தெளிந்து தம்மை அவர் நீசிரகாரியாகவென வாழ்த்தப் பெற்றவர். (பார-சாந்.)

**சிரசு** — திதிபுத்திரனாகிய அசுரன்.

**சிரஞ்சயன்** — 1. உத்தமன் எனும் மநுபுத்திரன்.

2. இரணஞ்சயன் குமரன்.

3. அரம்மியாசுவன் குமரன்.

4. தூம்ராசுவன் குமரன், இவன் குமரன் சகதேவன்.

5. (பிரா.) காலநரன் குமரன், இவன் குமரன் சநமேசயன்.

6. சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்தவன்.

சிரஞ்சீவியர் — (எ) அசுவத்தாமன், மாபலி, வியாசன், அநுமான், வீபீஷணன், கிருபாசாரியன், பரசிராமன்.

சிரதகீர்த்தி — சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரி. இவள் திருஷ்டகேதுவை மணந்தவள்.

சிரதசவா — சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரி.

சிரதன் — 1. ஒன்பதாம் மன்வந்தரத்து மநு.

2. (சூ.) சுபாஷணன் குமரன்.

3. (பிர.) தர்மநேத்திரன் குமரன், இவன் குமரன் திடசேநன்.

சிரததேவா — சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரி. இவள் விரததர்மாவை மணந்தனள்.

சிரத்தாவதி — வருணன் இராஜதானி.

சிரத்துவசன் — (சூ.) இரஸ்வரோமன் குமரன். இவன் யக்யநிமித்தமாகப் பூமியை யுழுதகாலத்து அக்கலப்பை அடியில் சீதை பிறக்க எடுத்தவன்.

சிரத்துவான் — இவன் சத்தியதிருதி குமரன். இவன் உருவசியைக் கண்டு கலிதமான வீரியத்தை நாணலில்விட அதினின்றும் கிருபனும் கிருபியும் பிறந்தனர்.

சிரத்தை — 1. தருமன் எனும் மனுவின் தேவி.

2. தக்ஷனுக்குப் பிரசூதியிடம் உதித்தவள், யமன் தேவி.

3. வைவச்சுதன் பாரி, இவள் தனக்குப் பத்துக்குமார் பிறவாததற்கு முன் ஒரு பெண் வேண்டி வசிட்டரால் ஓமஞ்செய்வித்து இளையைப் பெற்றாள்.

4. கர்த்தமப் பிரசாபதியின் குமரி. ஆங்கிரசர் தேவி. இவள் புத்திரர் சிநிவாலி, குகு, ராகா, அநுமதி, உசகத்தியர், பிரகஸ்பதி.

சிரபுரம்—சீர்காழி என்னும் சிவக்ஷேத்திரத்திற்கு ஒரு பெயர். இராகு கேதுகளன் அமிர்தமதனத்தில் இழந்த சிரம்பெற ஈண்டுத் தவஞ்செய்து தலைகள் அடைந்ததால் இப்பெயர் பெற்றது.

சிரப்பதி — இலவன் ஆண்ட பட்டணம்.

சிரமந்திரதெய்வம் — பொன்னிறமாய், பத்மாசனராய், முக்கண், சதுர்ப்புஜம், சத்தி, சூலம், வரதம், அபயம் உடையவராய்ச் சர்வாபரண பூஷிதரா யிருப்பர்.

சிரம்பன் — பிரமன் கொட்டாவிவிட அதில் தோன்றியவன் இவன் பத்துச்சிரம் வாய்ந்தவன் இவன் சிந்தூரன் எனப் பிரமனுற் பெயரிடப்பட்டு அவனால் எல்லா வாமும் பெற்று விநாயகரால் இறந்தவன். சிந்தூரனைக் காண்க. (பார்க்கவ புரா).

சிரம்பை — தூமாக்ஷன் தேவி. இவள் தனது கணவனை மகோற்கடர் கொன்ற பழி தீர்க்கக் காசிப்புரோகிதன் சுற்றத்தவள் போல் உருக்கொண்டு விஷத்தைக் கலந்து பரிமளத்தைலமென்று மகோற்கடர் மீது பூசி அவ்விஷம் தனக்கே ஏறமாய்ந்தவள்.

சிரரோகம்—(தலையில் உண்டாகும் ரோகம்) இது புகை, வெயில், பனி, நித்திய சையோகம், அதிநித்திரை, நித்திரை பங்கம், ஜலத்தில் நனைதல், கீழ்க்காற்று, மிகுந்த ஜலபானம், ஓயாத அழுகை, மத்தியபானம், உஷ்ணமான வாசனைகளை முகருதல், வெகுவார்த்தை, இவற்றால் முத்தோஷங்களும் அதிகரித்து உண்டாவது. இது (10) வகைப்படும். 1. சிரஸ்தாபரோகம், 2. பித்த சிரஸ்தாபரோகம், 3. சிலேஷ்ம சிரஸ்தாபரோகம், 4. திரிதோஷ சிரஸ்தாப ரோகம், 5. ரத்த சிரஸ்தாப ரோகம், 6. அர்த்தபேத ரோகம், 7. கிருமிசிரோ ரோகம், 8. சிரகம்பரோகம, 9 சங்கரோகம், 10. சூரியாவர்த்த ரோகம் ஆகச் சிரரோகம், (ய) ம் முற்றியது.

சிரவணர் — இவர்கள் பன்னிருவர். யமனுக்கு ஆன்மாக்கள் செய்யும் புண்ணிய பாபங்களை யறிக்கை செய்வோர், சையமினி வாசிகள். யமன் பிரமனைப் பிராணிகள் செய்யும் புண்ணிய பாவங்களைத் தானறிய வேண்டப் பிரமன் தருப்பையை யெடுத்து எறிந்தனர். அதிலிருந்து பன்னிரண்டு பெயர் தோன்றி உலகத்தவர் செய்யும் புண்ணியபாபங்களை அறிந்து, யமனுக்கு அறிவித்து வருபவர்.

சிரவணன் — முராசுரன் குமரன். கண்ணனுடன் சண்டையிட்டு மாய்ந்தவன்.

சிரவணத்துவாதசி — (திருவோணம்) சிரவணநக்ஷத்திரத்துடன் கூடிய துவாதசி.

இதில் விஷ்ணுமூர்த்தி வாமன அவதாரம் எடுத்ததால் விரதம் இருப்பர்.

சிராத்தம்—இது பிதுர்க்களை எண்ணி, யவர்கள் களிப்புறச் செய்யும் கருமம். இது சுபத்திற் செய்யின் அப்யுதயம் என்றும், நாந்தி என்றும், அசுபத்தில் செய்யின் நக்லே, ஏகோதிஷ்டம், சோடசசபிண்டீகரணங்கள் என இப்பெயர்கள் பெறும். இது புண்ணிய க்ஷேத்திரங்களில் செய்யப்படின் மிக்க பலன்தரும். அமாவாஸ்யை, சங்கிரமணம், மகாலயபக்ஷம், வியதிபாதயோகம், யுகாதி, மாசப்பிரவேசம், கிரகணபுண்ணியகாலம் இவைகளில் செய்யின் பிதுரர் களிப்படைவர்.

சிராத்ததேவன் — விவசுவானுக்குச் சமுக்ஞையிடம் உதித்த குமரன். இவன் விவசுவான் குமாரனைகயால் வைவச்சுதமனு வாயினன்.

சிராந்தையார் — கடைச்சங்கம் மருவிய புலவர். (அகநானூறு.)

சிராயு — பூரூரவன் குமரன.

சிராவணம்—ஆவணிமாதத்துத் திருவோணநக்ஷத்திரத்து அனுட்டிக்கும் ஒரு வைதிககாரியம்

சிராவணன் — தசரதனல் யானையென்று ஐயுற்று அம்பெய்யப்பட்டு இறந்த இருடிச் சிறுவன்.

சிராவத்ஸ்ன் — சூரியவம்சத்து க்ஷத்திரியன். யுவனாஸ்வன் புத்திரன். (பா. வன).

சிராவிதம் — இலவன் இராசதானி என்பர்.

சிரீகண்டம் — பொதிகைக்கு ஒரு பெயர்.

சிரீகண்டர் — சிவாம்சத்து ஒரு அவசரம், பிரகிருதி புவனத்திற்கு அதிபர்.

சிரீகருணர் — (கணக்கர் போலும்) துர்வாசர் சாபத்தால் பிரமனும் சரஸ்வதியும் மானிட வுருக்கொண்டு வெவ்வேறிடங்களிற் பிறந்து ஆத்திரேய வேதியர் சுபகுணமாலை எனப் பெயர்பெற்று இருவரு மணமடைந்து (சுச) பிள்ளைகளைப் பெற அப்பிள்ளைகள் ஞானமுனிவரது வேண்டு கோளால் இலக்குமியின் கருணையை அடைந்தபடியால் ஸ்ரீகருணர் எனப் பட்டனர். (சிரீகருணர் சரித்திரம்).

சிரீகிருஷ்ணபாதர் — வடக்குத் திருவீதிப் பிள்ளைக்கு ஒரு பெயர். பெரியவாச்சான் பிள்ளைக்கு ஒரு பெயர்.

சிரீசங்கபோதி — கயவாகுவைக் காண்க.

சிரீசேநன் — அசுவகண்டன் சேனவீரருள் ஒருவன்.

சிரீசைலம் — ஒரு சிவக்ஷேத்திரம் தெலுங்க நாட்டிலுள்ளது.

சிரீதேவி — 1. இலக்ஷிமிபிராட்டி.

2. வசுதேவன் தேவியரில் ஒருத்தி.

சிரீநிலை — ஒரு வித்தியாதர நகரம்.

சிரீநிவாசாசாரியர் — புண்டரீகாக்ஷர் குமரர். தேசிகர் திருவடி சம்பந்தி.

சிரீபர்வதம் — சிரிசைலத்திற்கு ஒரு பெயர். இது மல்லிகா அர்ச்சுனம் என்று பெயர் பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்று.(பா.வன)

சிரீபாஷியகாரர் — இராமாநுஜர் எனும் எம்பெருமானார்க்குச் சரஸ்வதி இட்ட பெயர்.

சிரீபாலன் — 1. திருநிலையகத்து அரசன்.

2. பிரசாபதி அரசன் தம்பி.

சிரீமதி — அம்பரீஷன் குமரி. இவளை விரும்பிப் பருவதருஷியும், நாரதனும், அம்பரீஷனைக் கேட்டனர். அரசன் நீங்கள் இருவர் கேட்பதால் கன்னிகை யாருக்கு மாலை சூட்டுகின்றனளோ அவர்கள் கொள்க என்றனன். இவ்வகை இருக்க நாரதர் பருவதன் அறியாது விஷ்ணுவைநோக்கிப் பருவதனுக்குக் குரங்குமுகம்வர வரம்பெற்றனர். அவ்வகைப் பருவதனும் நாரதன் அறியாது விஷ்ணுவைநோக்கி நாரதனுக்குக் குரங்குமுகம்வரவும் வரம்பெற்றனர். இவ்வகை வரம்பெற்ற இருவரும் மணமண்டபத்தில் வந்தனர். சிரீமதி இவ்விருவரையுங் கண்டு இவ்விருவருக்கும் நடுவில் அழகுள்ள புருடனாய் நின்ற விஷ்ணுமூர்த்தியை மாலையிட்டவள்.

சிரீமான் — தத்திரேயபுத்திரனாகிய நிமிரிஷியின் புத்திரன் (பா-அநு).

சிரீரங்கநாராயணஜீயர் — உடையவரது திருவடி சம்பந்தி.

சிரீரங்கராஜர் — இராமானுஜப்பிள்ளானுக்குக் குமாரர்.

சிரீரங்கம் — காவிரி கொள்ளடத்து இடையிலிருக்கும் தீவு. அயோத்தியிலிருந்து இலங்கைக்குச் செல்லும் விபீஷணர் பிரிவாற்றாது தாம் பூசிக்கும்படி கொண்டு சென்ற அரங்கநாதனைத் தேவர் வஞ்சனையாலும், பெருமாள் விருப்பினாலும் விபீஷணர் எழுந்தருளச்செய்து பூசித்ததலம்.

சிரீராமநவமி — இது சித்திரைமீ சுக்கிலபக்ஷ நவமிகூடிய சுபதினம். இதில் விஷ்ணுமூர்த்தி திரு அயோத்தியில் ஸ்ரீராமராகத் திரு அவதரித்தனர். ஆதலின் விரதநாளாம்.

**சிரீராமப்பிள்ளை** — பட்டருக்குத் தம்பியார்.

**சிரீராமமிச்ரர்** — மணக்கால் நம்பிக்கு ஒரு பெயர்.

**சிரீவச்ச சின்னமிசிரர்**—கூரத்தாழ்வாருக்கு ஒரு பெயர்

**சிரீவைஷ்ணவநம்பி** — திருக்குறுங்குடி நம்பிக்கு ஒரு பெயர்.

**சிருகால வாசுதேவன்**—வடமதுராபுரிக்குச் சமீபத்திலிருந்த கரவீரபுரத்து அரசன். இவனைக் கிருஷ்ணமூர்த்தி கொன்று இவன் குமாரனுக்கு முடி அளித்தனர். (பார - சாந்.)

**சிருங்கர்** — மகததேசத்து அரசர்.

**சிருங்ககிரி** — இது மைசூர் நாட்டிலுள்ள ஒரு மலைநாடு. இதில் சங்கராசாரியரால் தாபிக்கப்பட்ட மடாலயம் இருக்கிறது, சாரதாபீடம் என்பர்.

**சிருங்கவரன்** — குணிகார்க்கியரைக் காண்க.

**சிருங்காரநிலை** — பகைவர் சீர்த்திபண்ணக் கிடந்தானை முல்லையரும்பன்ன பல்லினார் தழுவதலை மேவியது. (பு - வெ.)

**சிருங்கிமுனிவர்** — சமீகமுனிவர்க்குக் குமாரர். பரிச்சித்தைப் பாம்பு கடித்து இறக்கச் சபித்தவர். இவர் தந்தையைப் பைரவருஷி என்றுங் கூறுவர்.

**சிருங்கி** — மான்வயிற்றிற் பிறந்த முனி. (மணிமேகலை)

**சிருங்கிபோம்** — 1. கங்கைக் கரையிலிருக்கும் குகன் என்னும் வேடன் பட்டணம்.

2. Ref. (T. E) fort amil Sriugaur on the river Ganges, 18 miles north west of Allahabad.

**சிருஞ்சயன்**—1. பர்ம்மியாசுவன் (சைப்யன்) தேவி கைகேயி, புத்ரி சுகுமாரி (பார - துரோண.) இவன் குமரன் நாரதானுக்கிரகத்தால் பொன்னுகவே மூத்திர மலங்களைப் போக்கத்தக்க புத்திரனைப் பெற்றுச் சுவர்ணஷ்டீவி என்று பெயரிட்டு வளர்க்கையில் இவன் வயிற்றில் பொன்னிருக்குமெனக் கள்ளர் குமரனைப் பிடித்துக் கொல்லச் சிருஞ்சயன் நாரதர் அனுக்கிரகத்தால் மீண்டும உயிர்ப்பித்தனன். இவன் குமரனுக்குச் சுவர்ணடீ எனவும் பெயர்

2. காலாநலனுக்குக் குமரன்.

3. வசுதேவனுக்குத் தம்பி.

4. பர்வதன் சுவர்ணஷ்டிவியைக் காண்க. இவன் சைப்யவிஜன் குமரன் இவன் சரிதை அம்பரீஷன் சரிதையையொத்திருக்கிறது. (பார - துரோ.)

**சிருட்டி** — இது பரதகண்டத்தில் ஆஸ்திக மதத்தவராகிய ஆரியர்கள் கூறியபடி பலவிதம். அவற்றுள் சைவர், தத்துவாதீதனாகிய பரமசிவத்தைக் கலந்த சத்திமாயையை க்ஷோபிக்க அம் மாயையினின்றும் சகத் உண்டாம் என்பர். வைஷ்ணவர் உலகம் கடல்கொண்ட காலத்துத் தனித்துநின்ற நாராயணன் ஆலிலையில் யோகநித்திரை புரிய அவர் நாபியில் பிரமன் உதித்து உலகாதிகளைச் சிருட்டிப்பன் என்பர். ஸ்மார்த்தர், பிரமம் பொன்மயமான அண்டம் ஒன்று ஆக்கி அதில் பிரவேசிக்க அவ்வண்டத்து இருந்து பிரமன் தோன்றி உலகசிருட்டி புரிவன் என்பர்.

**சிருததேவா** — சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரி. விருததர்மா மனைவி. இவளிடத்தில் ஒரு அசுரன் ருஷியினால் சபிக்கப்பட்டவனாய்த் தந்தவக்கிரன் எனப் பிறந்தனன்.

**சிரேணிமந்தன்** — குமாரதேசாதிபதி.

**சிரேணிமான்** — குளிந்தநகரத்து அரசன்.

**சிரேயாம்ச தீர்த்தங்கர்** — பதினோராவது சைநதீர்த்தங்கரர். இவர் கிருதயுகத்தில் சிம்மபுரத்தில் இக்ஷுவாகு வம்சத்தில் விஷ்ணுமகாராசாவிற்கு நந்தையிடம் பங்குனிமாதம், கிருஷ்ணபக்ஷம், தசமி, திருவோணநக்ஷத்திரத்திற் பிறந்தவர். இவரது உன்னதம் (அ0) வில், சுவர்ண வர்ணம், ஆயுஷ்யம் (அச) வருஷம், புத்திரன் யசஸ்கரன், குந்துமுதல் கணதரர் (எஎ) இவர்காலத்து ராஜாக்கள், விசயபலதேவர், திப்பிரஷ்டவாசுதேவர், அசுவக்கிரீவ பிரதிவாசுதேவர்.

**சிரோவிரதம்** — "அக்னிரிதி" என்பதாதியான மந்திரங்களால் விபூதியை யெடுத்துத் தேகத்திற் பூசுவது. (சிவாஹஸ்யம்.)

**சிலந்தியியல்பு** — இது எட்டுக்காலையுடைய பூச்சிவகையைச் சேர்ந்தது, முகத்தில் கைபோன்ற இரண்டுறுப்புடையது. இவற்றுட் சிலமரணந் தரத்தக்க விஷமுள்ளவை. இவைகளில் பலவகை உண்டு. இவை வலைபின்னி வாழும். பூமியில் குழியில் வசிப்பவை குழிச்சிலந்தி, செஞ்சிலந்தி, கருஞ்சிலந்தி எனப் பல. இது தலை, உடல் என இரண்டு பாகங்களை யுடையது. தலையில் இரண்டு கண்கள் உண்டு. தலைக்கருகில் மீசையொத்த ஒரு உறுப்புண்டு. இவ்வுறுப்பில் துவாரங்களிருக்கின்றன. இத்துவாரத்திலிருந்து பூச்சிகளைப் பிடிக்கை

யில் விஷம் ஊறிப் பூச்சிகளைக் கொல்கிறது. இந்தப் பூச்சிகளுக்கு 8 கால்கள். இது கூடு கட்டுவதற்கும் ஆகாரத்தைப் பறறுவதற்கும் வேண்டிய நூலை. பின் பாகத்திலுள்ள சிறிய குழிகளிலுள்ள பிசின்போன்ற பொருளால் நூற்கிறது. இது காற்றுப்பட்டால் நூல்போல் உறைகிறது. இது இப் பிசினைக் கிளைகளில் ஒட்டித் தன்னூலால் வலைபின்னித் தான தன் ஓரிடத்திருந்து பூச்சிகள் வலையில் விழுந்தபோது பிடித்து தின்னும். சிலந்தி முட்டையிலிருந்து வெளிவந்தவுடன் தாய்போல் ஆகாரத்தைத் தானே தேடிக்கொள்ளும். இது (எ) வகை. இவைகள் வெளுப்பு, சிவப்பு நிறத்தையும், ஆசனத்தில் சித்திரங்களான மெல்லிய நூல்களைப் பெற்றுமிருக்கும். வாத, பித்த, சிலேஷ்ம, சங்கீரண சிலந்திகள் என உஅ) வகையாய. சிலந்திபேதம் — வாதச்சிலந்தி - இவை பீதச்சிலர்தி, குமுதச்சிலந்தி, மூலவிஷச்சிலந்தி, இரத்தசிலந்தி, சித்திரசிலந்தி, சந்தானிகச்சிலந்தி, மேஜகச்சிலந்தி என்பனவாம். இது வெளுப்புச் சிவப்பு நிறத்தையும் ஆசனத்தில் சித்ரங்களான நூலையும் பெற்றிருக்கும். பித்தச்சிலந்தி - இது, கருமை பொன்மை கலந்த நிறத்துடன் முகத்தில் அனலையும், ஆசனத்தில் தாமரை நூலைப்போல் நூலையும் பெறறிருக்கும். இது கபிலாசிலந்தி, அக்னிமுகச்சிலந்தி, பீதச்சிலந்தி, பதுமச்சிலந்தி, மூத்திரச்சிலந்தி, சுவேதச்சிலந்தி, கறுப்புச்சிலந்தியென (எ) வகை. சிலேஷ்மசிலந்தி - குடலில் நீலநிறத்தையும், வெண்மைநிறம், நீலநிறம்பெற்று ஆசனத்தில் சிவந்தநூல் கொண்டிருக்கும். இது பாண்டுச்சிலந்தி, ரத்தபாண்டுச்சிலந்தி, வண்டுச்சிலந்தி, பிங்கச்சிலந்தி, திரிமண்டலச்சிலந்தி, தூர்க்கந்தச்சிலந்தி, சித்திரமண்டலச்சிலந்தி என (எ) வகையினது. சங்கீரணச்சிலந்தி - இது ஆசனத்தில் பலநிற நூலைப் பெற்றிருக்கும். இது காகச்சிலந்தி அக்னிபதச் சிலந்தி, பொரிவண்ணச்சிலந்தி, வைதேகிச்சிலந்தி, ஜாலமாலினிச்சிலந்தி, மாலாகுணச்சிலந்தி, சுவர்ககச்சிலந்தி என (எ) வகை. (ஜீவ.)

**சிலந்தியின் அஷ்டவிஷபேதம்** — சிலந்திப் பூச்சிகளுக்குச் சுவாசம், பல், மலம், மூத்திரம், சுகலம், வாய், வாய்நீர், பரிசம் என்னும் (அ) இடங்களில் விஷம் உண்டாம். (ஜீவ.)

**சிலம்பம்** — தேகப்பயிற்சிக்காகவும் தம் எதிரிகளை வெல்லுதற்பொருட்டும் ஒற்றையிரட்டைக் கொம்புகளாலும் மற்றும் பல கருவிகளாலும் பழகும் பழக்கம்.

**சிலம்பாறு** — பாண்டிநாட்டில் திருமாலிருஞ்சோலையிலுள்ள ஒரு நதி. (சிலப்பதிகா.)

**சிலம்பி** — சோழநாட்டிலிருந்த தாசி. கம்பரிடம் கவிபெற ஆசைகொண்டு (௫00) பொன்கொடுத்து "தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே, மண்ணாவதுஞ் சோழ மண்டலமே—பெண்ணாவாள், அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும், செம்பொற் சிலம்பே சிலம்பு" என்ற கவியில் பாதிபெற்று ஔவைக்குக் கூழிட்டு "பெண்ணாவாள்" என்றது தொடங்கிப் பாதிச் செய்யுள்பெற்றுச் சுகம் உற்றவள்.

**சிலாசத்து** — (Gypsum) இது ஒரு சுண்ணாம்பின் சேர்க்கைப் பொருள். ஐரோப்பாவில் சில இடங்களில் அகப்படுகிறது. இதனுடன் ஜலத்தைச்சேர்க்கின் இறுகும்.

**சிலாசுரன்** — வீமாசுரனைக் காண்க.

**சிலாதமுனிவர்**—1. இவர் மனைவியார் சித்ரவதியார். இவர் புத்திரன் வேண்டிச் சிவபெருமானை யெண்ணிக் கற்களை ஆகாரமாகக்கொண்டு தவஞ்செய்யச் சிவபெருமான் தரிசனந்தந்து சிலாதன் (கல்லை ஆகாரமாகக் கொண்டவன்) எனப் பெயர் பெற்றவர். சிவபிரான் இவரை நோக்கி நீ விருத்தனுதலால் புத்ரோற்பத்தி உன் மனைவியிடம் அரிதாகும். ஆதலால் நீ யாகஞ்செய்து அப்பேற்றை யடைவாய். நீ யாகஞ் செய்யவேண்டி நிலத்தினை உழவு செய். அவ் வுழுசாலில் ஒரு புதல்வன் உனக்கு உண்டாவன். அவன் எனக்குச் சமானமானவன் என மறைந்தனர் பின்பு அவ்வாறு யாகஞ்செய்ய நிலத்தையுழ அவ் வுழுசாலில் ஒரு பொற்பெட்டியில் நந்திமாதேவர் இருக்க எடுத்து வளர்த்தனர். இவர்க்கு வைதஹவ்யர் என்று பெயர். இவர் பிறந்தகாலத்து வந்ததேவரில் பிரமன் இந்திரனை நோக்கி இக்குழந்தை சகலர்க்கும் ஆனந்தமுண்டாக்கினதால் நந்தீசனெனப் பெயர் அடைக என்றனன். சிலாதன் புத்திரனுதலால் சைலாதியென முனிவர்கள் பெயரிட்டனர். (சிவாஹஸ்யம்.)

2. இவர் இளமைப் பருவத்தில் தம் வீட்டிற்குவந்த ஒரு அதிதிக்கு விளையாட்டாக அவரறியாது அவரது அன்னபாத்திரத்தில் ஒரு சிறு கல்லிட்டனர். அந்த

ணர் அச்சிறு கல்லை அன்னத்துடன் புசித்தனர். சிலாதர் தமது தவப்பலனால் தன்னண்பர்களுடன் யமபுரஞ்சென்று ஆண்டிருந்த காக்ஷிகளைக் காண்கையில் யமனது அரசிருக்கைக் கருகே ஒரு பெரும் பாறை இருக்கக் கண்டு யாது காரணமென்று வினவ அந்தகன், ஒரு வேதியச் சிறுவன் ஒரு அதிதியின் அன்னத்தில் கல்லிட்டதால் அவன் வயது வளருந்தோறும் இது வளர்ந்து பெரும்பாறையாயது; அவன யமபுரம் வருங்கால் இவ்வளவையும் எங்கள் தண்டனையா லவனுண்ண வேண்டுமெனக் கேட்டு அது தான் செய்த தவறென்றறிந்து அதற்குத் தீர்வாக அவர்கள் அவ்வளவினதாகிய பெரும் பாறையை அவனுண்ணில் அப்பாவந் தொலையுமெனக் கூறக் கேட்டுத் தாம் சிவயோகத்திருந்து விழித்து அதனையொத்த ஒரு பாறையைக் குறிப்பிட்டு அப்பாறையிற் சிறிது சிறிது உடைத்துண்டு அப்பாறை முழுதும் கரைத்துத் தமது பாவத்தை யதஞ்செய்து கைலைக்குச் செல்லுகையில் யமபுரத்திலிருந்த தமது பிதுர்க்களைக் கண்டு நீங்களாரென அவர் சிலாதன் பிதுர்க்களெனத் திடுக்கிட்டு அவர்கள் தம்மை நரகத்திலிருந்து நீக்கிக்கொள்ள நீ மணஞ்செய்துகொள்ளல் வேண்டுமென்றபடி மணஞ்செய்துகொண்டு தவத்தால் நந்தியாதேவரை யாகத்திற்கு உழுத படைச்சால்வழி மாணிக்கப் பெட்டியிற் புத்திரனாகப்பெற்று வளர்த்தவர் சிலையை அதஞ்செய்ததால் சிலாதர். (சிவமகா புராணம்.)

3. இவர் ஸ்ரீசைலத்தில ஆயிரம் தேவ வருடம் தவம்புரிந்து இறவாபுத்திரன் வேண்டுமெனச் சிவமூர்த்தியை வரங் கேட்டு அவரது அனுக்கிரகத்தால் யாகஞ்செய்ய உழுதநிலத்தில் கொழுவின் நுதியில் குழந்தையுருவாக நந்திமாதேவரைக் கண்டெடுத்து வளர்த்தவர். (இலிங்க-பு.)

**சிலாதித்யன்** — ஒரு புத்த அரசன். இவன் கிறிஸ்து பிறந்த (௬௩௪) ல் அரசாண்டு புத்தசமயத்தை விருத்தி செய்தனன்.

**சிலீமுகன்**—இவன் ஒரு அரசன் விருத்திராசுரனைக் கொன்ற இந்திரனிடத்துப் பழி வாங்கவேண்டி இந்திரன் நிராயுதனாய் இந்திராணியுடன் இருக்குஞ் சமயமெண்ணி யுத்தத்திற்கு வந்தனன். இந்திரன் வச்சிரத்தை நினைக்க அது வந்தது அதனால் கொலையுண்டு இறந்தவன்.

**சிலுவை** — கிறிஸ்துமதத்தவர் தமக்கடையாளமாக ஏசுவை அறைந்த சிலுவையுருவைத் தெரிவிக்கும் ஒருகுறி, இதனை மேனாட்டிலுள்ள தேசத்தார் பல வடிவமாகச் செய்து தரிப்பர். இதில் (20) உருவவகை உண்டுபோலும்.

**சிலேடையணி** — ஒருவகையாக நின்றதொடர் மொழி பலபொருள்களது தன்மை தெரிய வருவது. இது. செம்மொழி, பிரிமொழிச் சிலேடை ஒருவினைச்சிலேடை, பலவினைச் சிலேடை, முரண்வினைச் சிலேடை, நியமச் சிலேடை, நியமவிலக்குச் சிலேடை, விநோதச்சிலேடை, அவிரோதச்சிலேடை எனப்பல. இதனைப் பல்பொருட் சொற்றொடரணியென்ப. (தண்டி.)

**சிலேஷ்மம்**—1 ரூபம் வழுவழுப்பு, சீதளம், கனம், மந்ததத்வம், நாற்றம், மினுமினுத்தல், ஸ்திரமாகிய ரூபத்தை யுடையது. இடம் - மார்பு, சிரம், கண்டம், நாசி, நா, முதலிய, இடங்களைப்பற்றி நிற்கும். குணம் - மழமழப்பு, அசையாமை, கீல்களுக் குறுதிதந்து தேகத்தைப் போஷிக்கும் குணம் பெற்றிருக்கும். தொழில் - வெண்ணிறமாக்கல், வழுவழுத்தல், பாரித்தல், தினவு, சீதளித்தல், மரியாதை, கர்வம், விரைவில் சீரணித்தல் முதலிய தொழில்களைப் பெற்றிருக்கும். கோபம் - தித்திப்பு, புளிப்பு, உப்பு, குழகுழப்பு, மந்தம், சீதளம் முதலிய பொருள்களை யருந்துங்காலம், ஈரவஸ்திரம் புனையுங்காலம், அசீரணகாலம் இக்காலங்களில் சிலேஷ்மகோபம் உண்டாம். விருத்தி - சிலேஷ்மம் அதிகரித்தால், அக்னிமந்தம், வாய்நீர் ஊறல், வெண்ணிறம் சில்லிடல் முதலிய அதிகமாம். க்ஷீணம் - சிலேஷ்மம் குறைந்தால், பிரமை, சிலேஷ்மஸ்தானங்காழை குறைவு, வியர்வைப் பெருக்கம் கீல்களின் தோற்றம் உண்டாம். (ஜீவ.)

2. இது, அவலம்பகம், கிலேதகம், போதகம், தருப்பகம், சந்திகம் என ஐந்து வகைப்படும். அவலம்பக சிலேஷ்மம் - இதயத்திருந்துகொண்டு மூக்கின் தண்டெலும்பின மூட்டு, இரண்டு தொடையெலும்புகளின் மூட்டுகளுக்கும், தன் வலிமையாலும், இதய ஸ்தானத்தற்கு அன்னரஸத்தாலும், மற்ற நான்கு சிலேஷ்மஸ்தானங்களுக்குச் சலத் தொழிலாலும் ஆதாரத்தை யுண்டாக்கும். கிலேதக சிலேஷ்மம் - இது, ஆமாசயஸ்தானத்தில்

வசித்துக்கொண்டு உண்ட அன்னாதிகளை மிருதுவாக்கும். போதக சிலேஷ்மம் - இது, நாவிலிருந்து கொண்டு உண்ணும் சுவைகளைத் தெரிவிக்கும், தரும்பகசிலேஷ்மம் - இது, சிரசில் வசித்துக்கொண்டு இரண்டு கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரும், சந்திசிலேஷ்மம் - இது, கீல்களில் இருந்துகொண்டு எல்லாக் கீல்களையுந் தளரச்செய்யும். (ஜீவ)

**சிலேஷ்மரோகம்** — இது சீதளத்தாலுண்டாம் ரோகம். இது இருபது வகைப்படும். அவை - வாதசிலேஷ்மம், பித்தசிலேஷ்மம், ரத்தசிலேஷ்மம், க்ஷயசிலேஷ்மம், மூர்ச்சாசிலேஷ்மம், சுஷ்டசிலேஷ்மம், சுரசிலேஷ்மம், மூகைச்சிலேஷ்மம், துக்கசிலேஷ்மம், தொணிச்சிலேஷ்மம், கோஷசிலேஷ்மம், சுவேதசிலேஷ்மம், மகாசிலேஷ்மம், பேனசிலேஷ்மம், லாலாசிலேஷ்மம், வமனசிலேஷ்மம, க்ஷீணசிலேஷ்மம், சோஷசிலேஷ்மம், உத்காரசிலேஷ்மம், இச்காசிலேஷ்மம், சாசசிலேஷ்மம், சுவாசசிலேஷ்மம், தீபனசிலேஷ்மம், மந்தசிலேஷ்மம், தொந்தசிலேஷ்மம், சந்நிபாத சிலேஷ்மம், அதிசாரசிலேஷ்மம், சலசிலேஷ்மம், அக்னிசிலேஷ்மம், முசல்சிலேஷ்மம், வெளிச் சிலேஷ்மம், விகாரசிலேஷ்மம், விரண சிலேஷ்மம், தூர்க்கந்தசிலேஷ்மம், மித்யசிலேஷ்மம், பூதசிலேஷ்மம் என்பனவாம்.

**சிலேஷ்மரோகபூர்வம்**—தேககனம், தேகத்திலு முகத்திலும் மினுமினுப்பு, குடைச்சல், இருமல், இரைபபு, நடுக்கல், சிரோபாரம், நெஞ்சில் கபாதிக்க ஓசை, குளிர்ச்சி, வியர்த்தல, வக்கல், சுரம், குளிர், மந்தாக்னி, வாயில வழுவழுப்பு, கோழை, கணணில் சலக்கோவை, மூக்கில் நீர்வடிதல், மூக்கடைப்பு, தும்மல வாந்தி, இவைகளைத் தனக்குப் பூர்வரூபமாகப பெற்றிருக்கும். (ஜீவ.)

**சில்லி** — விருஷ்ணிவம்சத்து க்ஷத்திரியன்.

**சில்லிகை** — ஆரண்யாக்ஷன் குமரி, தண்டகா சுரனுக்குத தாய்

**சிவகங்கை** — திருக்கைலை மலையிலிருந்து பிரவகிக்கும் நதி.

**சிவகணத்தவர்** — கபாலீசன், விசோகன், சதமேநத்திரன், சதாநிலன், அநந்தருத்ரன், கராளவதனன், பாரபூதி, சோமவர்ஷன், மகாகாயன், சோமன, நிகும்பன, சங்கரன, சூரியாபப்யானன், சர்வமானி, கடாகடன், சங்குகர்ணன், நந்திகன், பிங்காக்ஷன், கூஷ்மாண்டன், ஏகபாதன் முதலியவராம்.

**சிவகலை** — பட்டணத்து அடிகளின் தேவியார். மருதவாணரைக் குழந்தையாக வளர்த்த தவம் உடையவர்.

**சிவகுரு** — 1. சடைமுடி யுடையவராய், விபூதி தூளிதத்தால் வெண்ணிறத்த தேகமுடையராய். பூணுநூலும் யோகபட்டமும் உள்ளவராய்ச் சிவத்யானமா யிருப்பவர். (சைவபத்ததி).

2 இவர் சோளநாட்டில் காலாட்டியென்கிற அக்ராரத்தில் வித்யாதிராயர் என்பவருக்குப் பிறந்தவர். இவர் கல்வி பயின்று மகிபண்டிதன் குமரியாகிய ஆர்யாம்பாளை மணந்து சிவாநுக்ரகத்தால் கலியுகம் (3058)க்குச் சரியான விக்ரமசகம் (14)-வது ஈசுரவூ வைகாசிமீ சங்கராசாரியரைப் பெற்றார்.

**சிவகாமியாண்டார்** — எறிபத்தநாயனார் சரிதையைக் காண்க.

**சிவகாயத்ரிஸ்வரூபம்** — பொன்னிறமாய், நான்கு கைகளும், திரிநேத்ரங்களுமுள்ளவளாய், வரதம், அபயம், ஜபமாலை, கமண்டலம் உடையவளாய் இருப்பள்.

**சிவகுண்டி** — வில்வவனத்தில் சிவார்ச்சனை புரிந்து முத்தி அடைந்தவன்.

**சிவகோசரியார்** — திருக்காளத்தியில் எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்திக்குப் பூசை செய்திருந்த சிவவேதியர். இவர் சரிதையைத் திண்ணனாரைக் காண்க.

**சிவக்கொழுந்து தேசிகர்**—இவர் கொட்டையூரிலிருந்த கவிவல்லவர். மருதவன புராணம், திருநல்லூர்ப்பெருமண புராணம், கோடீசுரககோவை பாடியவர். சென்னை சர்வகலாசாலையில் வித்வானா யிருந்தவர்.

**சிவசமவாதிமதம்** — இவர்கள் பதி, பசு, பாசம் மூன்றும் அநாதி எனவும், ஞானம் அநாதி எனவுங் கூறுவர். அவற்றுள் பசுபாசங்களின் செயலறப் பதிஞானந்தோன்றும் இவ்வாறு தோன்றிய ஞானத்தால் குளவி புழுவைத் தன்னிறம ஆக்குதல் போல் பதிஞானம் பசுவைத் தன் ஞானம் உதிக்கச்செய்து நிற்கும் என்பர் (தத்துவ)

**சிவசருமர்** — 1. திருவிடைமருதூர் சிவவேதியர். இவர் தேவியார் சுசீலை. இவர்கள் இருவரும அன்பர்க்கு அன்னம் பரிமாறிவருகையில் பொருளின்றிக் குழந்தைகளுககு வைத்திருந்த பொருள்களை விற்றுச சிவபூசைமுடித்துச் சிவனடியவர்க்கு

அன்னம் பரிமாற மீளுகையில் சிவமூர்த்தி விருத்தவேதியராக வந்து தமது பசியைத் தெரிவித்துச் சிவனடியவர்க்கு இருந்த அன்னமெல்லாம் தாமே உண்டுபோயினர். சிவசருமர் வீட்டில் சிவனடியவர்கள் பசியால் வருந்துதல் அறிந்து மனைவியின் மாங்கல்யத்தைவிற்றுப் பண்டங்கள் கொணர்ந்து சிவனடியவர் பூசை முடித்தனர். மறுநாள் மிகுந்த பண்டங்களால் அடியவர் பூசைமுடிக்க இருக்கையில் சிவமூர்த்தி சிவனடியவர்போல் எழுந்தருளி அன்னம் புசித்து மீண்டு சிவசருமர்போல், வீட்டில் கோயில் நிவேதனங் கொண்டுவந்து அடியவர்க்கு அளிக்க எனக் கூறி மறைந்தனர். சசீலை தமது கணவரை இதுவரையில் எங்குச் சென்றீர் என வினவுகையில் நடந்தது கூற இது சிவமூர்த்தியின் திருவிளையாடல் இவ்வகைத் திருவிளையாடல் புரிவோர் பொருள்தரலாகாதா என்று எண்ணித் துயில்கையில் சிவமூர்த்தி கனவில் எழுந்தருளி நாம் குழந்தையுருக்கொண்டு இருக்கிறோம் எம்மை எடுத்துச் சென்று பட்டணத்துச் செட்டியாரிடங் கொடுத்துப் பொருள்பெறுக என்றுமறைய இருவருங் குழந்தையுருக் கொண்டிருந்த சிவமூர்த்தியை எடுத்துச்சென்று துலையில் விட்டு அவ்வளவு பொருள்பெற்றுச் சிவபூசை சிவனடியவர் பூசைமுடித்து முத்தி பெற்றவர்.

2. ஒரு கன்னடநாட்டு வேதியர், அகத்தியரைக் கண்டு இளமைபெற்று மீண்டு சிவதருமமும் ஒருவாய்க்காலும் செய்வித்தவர்.

3. திருவிரிஞ்சிபுரத்தில் இருந்த சிவநாதன் என்னும் ஆதிசைவவேதியரின் குமரர். இவரது இளமைப் பருவத்தில் தந்தையார் இறந்தனர். இவர்க்குக் கோயிலில் சிவபூசை முறை வந்தது இவரைச் சேர்ந்த பங்காளிகள் இவரது முறையை இவர் தாய்க்கு அறிவித்தனர். தாய் சிவசன்னிதானஞ்சென்று குழந்தையின் இளமைப்பருவம் தெரிவித்து முறையிட்டனள் சிவமூர்த்தி இவள் கனவிற்றோன்றி நாளை உன் குமரனைத் தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்விக்க எனக் கட்டளையிட்டு மறைந்தனர். விடிந்தபின் சிவசருமரின் தாய் அவ்வகை ஸ்நானஞ்செய்விக்கச் சிவசருமர் இருடியர்போல் உருவடைந்து சிவபூசை செய்யச் சென்றனர். சன்னிதானத்தில் சிவலிங்கமூர்த்தி ஓங்கி யிருத்தல் கண்டு சிவமூர்த்தியை வேண்டச் சிவமூர்த்தி தமது முடியை வளைந்துக் காட்டித் திருமஞ்சனம் கொண்டனர். இச்சிவலிங்கவுரு இத்தலத்தில் சாய்ந்தே யிருக்கிறது

சிவசன்மா — 1. வடமதுரையிற் பிறந்து பலநாள் செல்வத்திற்கு உழைத்துக் கிழப் பருவம் அடைகையில் தலயாத்திரை செய்ய எண்ணி முத்தித்தலங்களாகிய அயோத்தி, மாயாபுரி, காசி, காஞ்சி முதலிய பல தலங்களைத் தரிசித்துத் துவாரகையில் வந்து ஸ்நானஞ்செய்து ஏகாதசி உபவாசம் இருந்து துவாதசி பாரணை செய்கையில் சுரத்தால் இறந்தனன். இவனைக் காலபடர் பற்ற விஷ்ணுபடர் மறுத்து எல்லாவுலகமுங் காட்டிச் சென்று விஷ்ணுபதம் சேர்த்தனர். அங்குச் சில நாள் தங்கி விருத்தகாளனாய்ப் பிறந்து முற்பிறப்பில் சுபாசு என்னும் மறையவன் பெண்ணாகிய சுபானனை, இங்கு ரயித்திரு ஆகப் பிறந்திருப்பவளை மணந்து இறந்து, மறுபிறப்பில் அநங்கலேலையாகப் பிறந்த அவளையே மணந்து காசியில் சிவபிரதிட்டைசெய்து முத்தி அடைந்தவன். (காசிகண்டம்).

2. ஒரு வேதியன், இவன் அகத்தியரைக் காணச்சென்று திருநெல்வேலியில் ஒரு வேதியனிடம் தன பொருள்களை ஒப்புவித்துப் பொதிகைக்குச்சென்று பசிதாகத்தால் வருந்தி இளைத்து இருக்கையில் அகத்தியர் ஒரு விருத்தவேதியர் வடிவாகவந்து பிராமணனை நோக்கி நீர் எங்குப் போகின்றீர் என்ன, வேதியன் அகத்தியரைக் காண என்றனன். வேதியராகவந்த அகத்தியர் நீர் அவரைக் காணமுடியாதென்று அவமதிக்க வேதியன் விருத்தரிடத்துக் கோபித்து என் உயிர் நீங்கினும் அவரைக் காணாது விடேன் என்றுசொல்ல விருத்தவேதியர் தம்முருக் காட்டினர். வேதியன் களிப்படைந்து பணிந்தனன். அகத்தியர் வேதியனை அங்குள்ள தடாகத்தில் முழுகக் கட்டளையிட்டனர். வேதியன் அவ்வகை செய்யத் திருநெல்வேலியில் உள்ள தீர்த்தத்தில் எழும்பச் செய்து அவனது முதுமைபோக்கி இளமை தந்து சென்றனர். வேதியன் தான் முன்பு பொருள்கொடுத்த வேதியரிடம் வந்து பொருள் கேட்க அவன் மறுக்கக் கேட்டுச் சூள் செய்யச்சொல்லி அவ்வகை செய்ய அவன் எரியக்கண்டவன்.

**சிவசாதாக்யம்** — இது சாந்தியதீதையெனும் பராசத்தி சுத்தமான சிவமெனும் பெயரை யுடைத்தாய் அதிசூக்ஷ்மமாய்ப் பிரகாச மாய் ஆகாசத்தில் மின்போல அரூபத் திலே த்யானத்தால் விளங்குவது. (சதா.)

**சிவசிதம்பாம் செட்டியார்** — பட்டணத்து அடிகளுக்கு மாமனர். இவர் தேவியார் சிவகாமி, குமரி சிவகலை.

**சிவசித்தர்** — இவர் வேதியரைச் சிவனடிய வர் காலின் செருப்புக்கும் ஒவ்வார் என்ற னர். அதனல் வேதியர் வாதுக்குவரச் சித் தர் சிவனடியவரின் காற்செருப்பை ஒரு துலையில்வைத்து வேதியர் ஒருவரைத் துலையில்நிறுத்தச் செருப்பு இருந்த துலை தாழக் காட்டியவர்.

**சிவசுவாமி** — 1. கோரனது கடைக் குமரன். இவன் குமரன் கோபதி.

2. சகலகலா பண்டிதனுகிய ஒருவேதி யன். நல் ஒழுக்கம் உடையான். இவன் தேவி பனிதவதி. குமரன் தருமசுவாமி.

**சிவசூரியன்** — சூரியமூர்த்தியைக் காண்க

**சிவஸ்கந்தன்** — சாதகர்ணன் குமரன், இவன குமரன் எக்யசீலன்.

**சிவஞானசித்தியார்** — அருணந்தி சிவாசாரி யார் அருளிச்செய்த சைவசித்தாந்த சாத் திரம்.

**சிவஞானதீபம்** — ஜ்ரேவணாராத்திரியர் இய ற்றிய வீரசைவ சித்தாந்தநூல்.

**சிவஞானதேசிகர்** — தருமபுரமடத்துச் சந்நி யாசி. காசியில் எழுந்தருளியிருந்து காசித் துண்டி விநாயகர் திருவருட்பா இயற்றி னவர்.

**சிவஞானபோதம்** — மெய்கண்டதேவர் அரு ளிச்செய்த சைவசித்தாந்தத் தமிழ்நூல்.

**சிவஞானமுனிவர்** — பாண்டிநாட்டுத் திரு நெல்வேலி ஜில்லா பாபநாசத்தில் விக் கிரம சிங்கபுரத்தில் அம்பல ஆநந்தக்கூத் தர்சகு மயிலம்மையாரிடம் பிறந்து முக்களாலிங்கர் எனப் பிள்ளைத்திருநாமம் பெற்றுக் கல்விகற்கும் வயதில் சில முனி வரை யுபசரித்து அவர்கள் துணையாகத் திருவாவடுதுறைசென்று சின்னபட்டத் திருந்த வேலப்பதேசிகரிடம் சிவதீக்ஷை பெற்றுச் சிவஞானயோகிகள் எனத் தீக்ஷா நாம மடைந்து கல்வி வல்லவராய்த் தொல் காப்பியச் சூத்திரவிருத்தி, தர்க்கசங்கிரகம், சிவஞானபோத பாடியம, சித்தாந்தப் பிர காசிகை, சித்தியார் பொழிப்புரை, அர தத்தசுவாமிகள் அருளிய சுலோகமொழி பெயர்ப்பு, சிவதத்வவிவேகம், காஞ்சிபுரா ணம், கம்பரந்தாதி முல்லையந்தாதி, கலை சையந்தாதி, குளத்தூர்ப் பிள்ளைத்தமிழ், விநாயகர் பிள்ளைத்தமிழ், சோமேச வெண்பா, நன்னூல் விருத்தியுரைத் திருத் தம் இவை செய்து சமாதி யடைந்தனர்.

**சிவஞானவதியார்** — மாணிக்கவாசகருக்குத் தாயார்

**சிவஞானவள்ளலார்** — வள்ளலார் சாத்திரம் என்னும் வைதீக சைவசாத்திரஞ் செய்த வர். இவர் சீர்காழி வள்ளலார் சந்தானத் தைச் சேர்ந்தவரா யிருக்கலாம். இவர் செய்த நூல்கள் சத்தியஞானபோதம், பதிபசுபாச விளக்கம், சித்தாந்த தரிசனம், உபதேசமாலை, ஞானப்ரகாச வெண்பா, ஞானவிளக்கம், அதிரகசியம், சுருதிசாரம், சிந்தனை வெண்பா.

**சிவதத்வம்** — 1. (ரு) சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம். ஞானம் எறிக் கிரியை குறைந்தது.சுத்தவித்தை. ஞானம் குன்றிக் கிரியை உயர்ந்தது. ஈச்சுரம், ஞானமும் கிரியையும் ஒத்தது சாதாக்கி யம். கிரியையாதல் சத்தி, ஞானமாதல் சிவம்.

2. சுத்த மாயை மகாசங்கார காலத் துத் தனது காரியங்களெல்லாம் ஒடுங் கிக் காரண மாத்திரையாய் நின்றவழி, முதல்வனும் தனது சத்தி வியாபாரங்களை ஒழித்துப் பகுப்பின்றித் தானேயாய் நிற்பன், அவ்வாறு நின்ற முதல்வன், சுத்த மாயையை மீளக் காரியப்படுத்தற்கு யோக்யமாம்படி, தன்னின்று வெளிப் பட்ட ஞானசத்தி மாத்திரையான், அச் சுத்தமாயை நோக்கி நிற்பன். அவ்வகை நோக்கியவழி சுத்தமாயையிற் கலக்குண் டாகும் ஞானமாத்திரையாய் நின்ற சிவனு லதிட்டிக்கப்படுவது. இதனை இலயதத் வம், நிட்களதத்துவம், நாததத்வம் என வும் கூறுவர். (சிவ போ.)

3. இது சுத்த தத்வம் எனப்படும். இது சிவத்தாலதிட்டிக்கப்படும் தத்வம். இது சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்யம், சத்தி, சிவம் என ஐவகைப்படும்.

**சிவதர்மம்** — ஒரு புராணம்.

**சிவதர்மோத்தரம்** — இது சந்தான சர்வோத் தமம் எனனும் ஆகமத்தின் பிரிவு. இது பரமதருமம, சிவஞானதானம், பஞ்சயா கம், பலவிசிட்டகாரணம், சிவதருமம், பாவபுண்ணியத் தன்மை, சநநமரணம்,

சுவர்க்கநரகம், சிவஞானயோகம் முதலியவற்றை விளக்கும். இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் மறைஞானசம்பந்த நாயனார்.

**சிவதன்மன்** — இவன் நன்னெறிகடந்து புண்ணியமிழந்ததால் பிரமராக்கதனாகிச் சந்தானதீர்த்தத்தில் தீர்த்தமாடும் சுமதியைப் பிடிக்க அவன் அத் தீர்த்தத்தில் சிறிது தெரித்ததனாலும் இதற்கு முன்பிறவியில் அபுத்திபூர்வகமாய் ருத்ராக்ஷதானஞ் செய்தமையாலும் நல்லுருப்பெற்றுச் சிவபதமடைந்தவன். (புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்.)

**சிவதூதி** — இவள் சத்தியினம்சாவதாரம். இவள் ருரு எனும் அசுரன் தேவர்களை வருத்த, தேவர்கள் சத்தியை வேண்ட, சத்தி தனது அம்சமாகிய இவளை அனுப்பினள். இவள் ருருவை வதைத்துத் தேவர்களின் துன்பம் நீக்கினள் (பதும-புரா.)

**சிவதேவசரணர்** — கோட்கூச்சவ்வைக்குத் தந்தையார். இவரது சரிதையைக் கோட்கூச்சவ்வையைக் காண்க.

**சிவதேவி** — (சைநி.) நேமிநாதசுவாமிகளுக்குத் தாய்.

**சிவநன்** — 1. மித்திரன் குமரன், இவன் குமரன் சுதர்சனன்.

2. சுகோத்திரன் குமரன், இவன் குமரன் கிருதி.

**சிவநாகமையர்** — வசவர் மடத்திருந்த சிவனடியவர். இவரை வசவர்பல்லக்கிலேற்றி உபசரிக்கப் பிராமணர், சாதி சங்கரமாதலைப்பற்றிக் குறைகூற வசவர் சிவனடியவர் பெருமைகளை அவர்க்குக்கூறி அடக்கினர். இவர் தமது தேகத்தைக் கிள்ளிப் பால் சொரிந்தவர்.

**சிவநேசர்** — திருமயிலையில் வைசியர்குலத்தில் பிறந்தவர். இவர் குமரியார் பூம்பாவையம்மை, திருஞான சம்பந்தரைக் காண்க.

**சிவநேயதப்தர்** — பட்டணத்து அடிகளுக்குத் தந்தை.

**சிவபதாகை** — (அ) அவை பிரசாந்தபதாகை, சிசிரபதாகை. பர்ஜந்நியபதாகை, ஜயந்தபதாகை, பூசஞ்சீவபதாகை, அமிர்தபதாகை, நாதபதாகை, ஸ்ரீபதாயபதாகை. இப்பதாகாதேவதைகள் சிவந்தநிறம், இரண்டு கண்கள், கூப்பிய இரண்டு கரங்கள் சர்வாபரணங்களாலலங்கரிப்பட்டவர்களாயிருப்பர்.

**சிவபாத இருதயர்** — திருஞானசம்பந்தசுவாமிகளுக்குத் தந்தையார். தேவியார் பகவதியார். திருஞான சம்பந்தரைக் காண்க.

**சிவபுரம்** — ஸ்ரீ காஞ்சிபுரத்திற்கு ஒரு பெயர். சாபமேற்ற உமையம்மையார் சிவபூசை செய்யுமிடத்துக் கம்பை வெள்ளம் பெருகிச் சிவமூர்த்தத்தை அழிக்கவர அதனைக் கண்ட உமை சிவமூர்த்தியைத் தழுவச் சிவமூர்த்தி தரிசனந் தந்ததால் இப்பெயர் பெற்றது.

**சிவபுரத்திலுள்ள நதிகள்** — வரதா, வரேண்யை, வரேசை, வரவர்ணனி, வராரோஹை, வாரியத்ரை, வரை.

**சிவபுரத்தினுள்ள குமரர்** — சாகன், விசாகன், நைகமி.

**சிவபூசை இயல்பு** — (௪) சரியை, கிரியை, யோகம், ஞானம். இவற்றுள், சரியையாவது — சிவாலயத்திற்கும், சிவனடியவர்க்குந் தொண்டுசெய்தல். கிரியையாவது — சிவபெருமானை அகத்தும் புறத்தும் பூசித்தல். யோகமாவது — விடயங்களின் வழிமனத்தைச் செலுத்தாது நிறுத்தல். ஞானமாவது-ஞானநூல்களை யோதிச் சிந்தித்துத் தெளிந்து நிட்டைகூடிச் சிவானந்தத் தழுந்தல். இவற்றின் பலன் முறையே சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியங்களாம்.

**சிவபூஜையில் சிவாசனம்** — ஆசனம் 5. அநந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம் என்பனவாம். அநந்தாசனம் மூன்றுகோண முடையது. சிங்காசனம் (4) கோணம், யோகாசனம் (4) கோணம், பத்மாசனம் வட்டமானது, விமலாசனம் (6) கோண முடையது. (சைவபூஷணம்.)

**சிவபூசை (அநுசாசநிகபர்வம்)** — 1. பதரிகாச்ரமத்தில் சித்தியடைந்தோர் சிவபூசைசெய்து நலமடைந்தார். 2. சிலர் 12 ௵ சிவாராதனையால் புத்ரவரம் பெற்றார். 3. தண்டிமஹாருஷியால் சிவநாமம் பிரம்மதேவருக்கு உபதேசிக்கப்பட்டது. 4. ஜாம்பவதி புத்ரேச்சையால் குமரனை வேண்டிப் பெற்றாள். 5. ஹிரண்யகசிபு இவன் பத்துக்கோடி வருஷம் தவஞ்செய்து சிவபூஜையால் தேவர்களை அடக்கும் வலிபெற்றான். 6. தமன் - ஹிரண்யகசிபின் புத்ரன் சிவபூசையால் இந்திரனையடக்கி ஆண்டான். 7. மந்தாரன் (க்ரஹன்) சிவபூசையால் இந்திரனை வென்

றுண்டான். 8. வித்யுத்பிரபன் - இவன் ஒரு அசுரன் சிவபூஜையால் திரிலோகங்களை வெல்லும் வலியடைந்தான். 9. சதமுகன் - இவன் பலகோடி வருஷம் சிவபூசைசெய்து பூஜாபலத்தால் யோகசக்தியும் சேகவன்மையும் பெற்றான். 10. பிரம்மதேவர் சிவபூஜைசெய்து (1000) புத்திரர்களைப் பெற்றார். 11. யாஞ்ஞவல்க்யர் சிவபூஜையால் புகழை அடைந்தார். 12. வியாசர் - சிவபூசையால் கீர்த்தியைப் பெற்றார். 13. வாலகில்யர் - சிவபூசையால் கருடனைத் தவத்தாலுண்டாக்கினர். 14. சிவகோபத்தினால் ஜலம்வற்றிப்போக தேவர்கள் சிவபிரானை நோக்கி ஸப்தகபாலம்எனும் யாகம்செய்ய வேறு ஜலம் உண்டாயிற்று. 15. அத்திரியின் பார்யைச் சிவபூசையால் தத்தாத்ரேயர், சந்திரன், துர்வாஸர் முதலிய புத்திரரைப்பெற்றாள். 16. அத்திரியின் பத்தினியான அநசூயை மூந்நூறு வருஷகாலம் உலக்கைமீது படுத்துத் தவமியற்றிக் கணவனில்லாமல் புத்திரனையடைந்தாள். 17. விசர்ணமஹாருஷி சிவபூஜையால் இஷ்ட சித்தியை யடைந்தார். 18. சாகல்ய முனிவர் - 9000வரு சிவனை நோக்கித் தவஞ்செய்து கிரந்தகர்த்தாவாகும் வரத்தையும் குலவர்த்தனனான புத்திரனையும் பெற்றார். 19. கிருதயுகத்தில் சிவனைநோக்கி 6000 வருஷம் தவஞ்செய்து கிரந்தர்த்தாவாகவும் மூப்பிறப்புகளில்லாமையும் பெற்றார். 20. இந்திரன் காசியில் சிவபூசை செய்து பெரும் பேறுகளை யடைந்தான்.

**சிவப்பிரகாச சுவாமிகள்**—1. இவர் காஞ்சிபுரம் குமாரசுவாமி தேசிகர் குமாரர். குமாரசுவாமி தேசிகர், கார்த்திகைக்குத் திருவண்ணாமலை யாத்திரைபோக வழியில் ஒரு நந்தனவனத்தில் பகலில் இறங்கி மீண்டு சாயங்காலம் திருவண்ணாமலைபோய்ச் சேர்ந்து ஈசானியதீர்த்தத்தில் அநுட்டானஞ் செய்துகொண்டு பூசைப் பெட்டகத்தைக் காணாமல் வருந்திப் பகல் தாம் இறங்கியிருந்த இடத்தைப் பார்த்துவர ஆள்விடுத்துத் தாம் உபவாசத்துடன் துயிலுகையில் சிவமூர்த்தி அன்பனே நீ அங்கம் வேறு லிங்கம்வேறாய் இருந்ததுபற்றி இவ்வகை நேர்ந்தது. பூசைப பெட்டகம் உதயத்தில் வந்துசேரும், நீ குருதேவரிடம் வீரசைவ தீக்ஷை பெறுக என்று மறைந்தனர். அவ்வகை குருதேவரிடம் தாரண தீக்ஷைபெற்றுத் தமதூருக்குச் சென்று மூன்று புத்திரர்களையும் ஒரு புத்திரியையும் பெற்றனர். அவர்களுள் மூத்தவர் சிவப்பிரகாசசுவாமிகள், இரண்டாமவர் வேலாயுதர், மூன்றாமவர் கருணைப் பிரகாசர். நான்காவது பெண் ஞானாம்பை, இவர்களைப் பெற்றுச் சிவலிங்கைக்கியமாயினர். சிவப்பிரகாசர் ஆசாரியரிருக்கும் திருவண்ணாமலைக்கு யாத்திரையாகச் சென்று திருமலைப் பிரதக்ஷிணம் வருகையில் சோணசைலமாலை பாடி முடித்துத் தக்ஷணயாத்திரை செய்ய எண்ணித் துறைமங்கலத்தில் தங்கி அவ்விடம் சிவபூசாகாலத்தில் வந்து வேண்டிய அண்ணாமலை ரெட்டியார்க்கு அருள் புரிந்து சிந்துபூந்துறையில் தருமபுராதீனம் மடாதிபராகிய வெள்ளியம்பலத் தம்பிரானை யடுத்து இலக்கணநூல் கற்க வேண்டத் தம்பிரான் இவரது இலக்கியச் தேர்ச்சி யறிய, கு என்று எடுத்து, ஊருடையான் என்று இடையில்வைத்து, கு, என்று முடிக்க என்ன அப்படியே சுவாமிகள் "குடக்கோடு வானெயிறு கொண்டார்க்குக் கேழன், முடக்கோடு முன்னமணிவார்க்கு-வடக்கோடு, தேருடையான் தெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ளல், ஊருடையான் என்னும் உலகு" எனப் பாடிமுடித்தனர். இதனால் தம்பிரான் களித்து அவர்க்கும் தம்பியர்க்கும் இலக்கணநூல் கற்பிக்கச் சுவாமிகள் தமக்கு ரெட்டியார் கொடுத்த (௯00) பொன்னைக் குருதக்ஷிணையாகத் தந்தனர். தம்பிரான் வேண்டாது நமக்கு விரோதமாய்த் திருச்செந்தூரிலிருந்து நம்மைத் தூஷிப்பவனை வென்றுவருக என அவ்வகையுடன்பட்டுச் சென்று அவனைக்கண்டு வாதிட்டு நிரோட்டக யமகம்பாடி அவனை அடிமை கொண்டு தமது ஆசிரியரிடம் விட்டு விடைகொண்டு துறைமங்கலம் வந்து வெங்கைக்கோவை வெங்கைக்கலம்பகம், வெங்கையுலா, வெங்கை யலங்காரம், இயற்றிச் சிதம்பரஞ் சென்று திருமடம் ஒன்று கட்டுவித்து அங்கிருந்து நீங்கி விருத்தாசலம் சென்று பழமலையந்தாதி, பிக்ஷாடனநவமணிமாலை, கொச்சகக்கலிப்பா, பெரியநாயகி கலித்துறைபாடி முடித்தனர். தாம் ஒருநாள் மணிமுத்தாநதிக்கு அருகிருந்த தோட்டத்தின் வழி வருகையில் மாம்பழம் ஒன்று விழுந்திருக்க அது சிவநிவேதனத்திற்கு ஆகுமென எடுத்த

னர். இதைக் கண்ட தோட்டக்காரன் சுவாமிகளை வருத்தச் சுவாமிகள் மனம் நொந்து "அத்துவருந் தொண்டனுக்கா அந்தகனைத் தாளா லடர்த்ததுவுஞ் சத்தி யமேயானால் - கூடுர்தவொரு, மாங்கனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி, சாங்கனிக் காதித்தன்வரத் தான்" எனப்பாட அவன் உயிர் துறந்தனன். பின் வசுமதவாதியா கிய வீரமாமுனி எதிர்க்க அவனை வசுமத நிராகரணத்தால் வென்று சிலநாளிருந்து சிவசாயுச்சியம் பெற்றனர். இவர் செய்த நூல்கள் சிவப்பிரகாச விகாசம், தர்க்க பரிபாஷை, சதமணிமாலை, நால்வர் நான் மணிமாலை, தாலாட்டு, நெஞ்சுவிடுதூது, வேதாந்த சூடாமணி, சிந்தாந்தசிகாமணி, பிரபுலிங்கலீலை, பிள்ளைத்தமிழ், திருப் பள்ளி எழுச்சி, அதிசயப்பத்து, திருக் கூவபுராணம், பிக்ஷாடன நவமணிமாலை, கொச்சகக்கலிப்பா, பெரியநாயகி விருத் தம், பெரியநாயகி கலித்துறை, க்ஷேத் திரவெண்பா, நன்னெறி, சிவநாமமகிமை, அபிஷேகமாலை, நெடுங்கழிநெடில், குறுங் கழிநெடில், நிரஞ்சனமாலை, கைத்தல மாலை, சீகாளத்திப் புராணத்தில் ஒரு பாகம். இவரே துறையங்கலம் சிவப்பிர காசர். (சித்தாந்தசிகாமணி.)

2. இவர் கும்பகோணத்தில் வேளாண் குடியில் பிறந்தவர். இவர் இலக்கிய இலக்கணப் பயிற்சி யுடையவராய்த் திருவாவடுதுறை யடுத்து நமசிவாயமூர்த் திகளிடத்து ஞானதீக்ஷை யடைந்து சிவ ஞான சித்திபெற்றுத் தலயாத்திரைக் காகப் புறப்பட்டுச் சிதம்பர மடைந்து சிவபிரானால் ஒரு சிவலிங்கமும், திருவா வடுதுறையில் பொற்றூளமும் அடைந்து சிதம்பரத்தலத்தின பூசை முட்டுபட பாட றிந்து மைசூர் அரசனைக் காணச் சென்று தமது ஆன்மார்த்த மூர்த்தியைத் தார ணஞ்செய்து கொண்டு தம்கருத்தை முற் றுப்பெற்று அரசன வேண்டியபடி மழை பொழிவித்துத் திரும்புகையில் உடனிருந் தார் ஒருவர் விரைந்து செல்ல எண்ண அவருக்குப் பெண்ணை வெள்ளங்கொள்ள அவர்க்கு விபூதியளித்து முழங்கால் அளவு வெள்ளமிருக்க அருளி, தாம் ஆசாரியரைக் காணச் செல்கையில் தீவட்டிக்கு எண் ணெய்இல்லாதிருக்கக் கவிரிநீரைபபெய்து எரிக்கச்செய்து, திருச்சோற்றுத்துறையி லிருந்த குட்டரோகி யொருவனுக்குத் தம் பலந்தந்து ரோகத்தைப்போக்கிச் சோழன் ஒருவனுக்குப் பிரமகத்தி யொழித்து, விஷத்தாலிறந்து மயானத்துக் கெடுத்துச் சென்ற ஆதிசைவச்சிறுவனது உடலைப் பெற்று ஞானக் கூத்தாவென்று எழுப்பித் திருவண்ணுமலை யாதின பட்டமளித்துத் திருச்செங்கோட்டுக் கல்விடபத்திற்குக் கடலை யருத்துவித்துச் சிலநாள் இருக்க, ஒரு நாள் தியானத்திருக்கையில் பூமி வெடிக்கச் சமாதியடைந்தவர்.

3. திருவாரூரிலிருந்த ஒருசைவர், கோவத்தமெனும் ஊரில் ஒரு புகரில் நிஷ்டை கூடியிருக்கையில் தம்மைவந்த டுத்த சொரூபானந்தர்க்குபதேசித்து முத்தி யடைந்தவர்.

சிவப்பிரகாச தேசிகர் — அருணமச்சிவாய தேவர் மாணுக்கர்.

சிவப்பிரகாசம் — சைவசித்தாந்த சாத்திரங் கள் பதினுன்கனுள் ஒன்று. இது பொது உண்மையென இரண்டு பிரிவினதாய்ப் பதி, பசு, பாச நிலையைத் தெரிவிக்கும் (கoo) விருத்தப்பாக்களைக் கொண்டது. இதனையியற்றியவர், உமாபதிசிவாசாரியர்.

சிவப்பிரகாசர் — இவர் மதுரையிலிருந்த சுத்த சைவர். சைவசித்தாந்த சாத்திர மாகிய சிவப்பிரகாசத்திற்கு ஒரு உரை யியற்றியவர்.

சிவப்பிரதிஷ்டை — பிரதிஷ்டை - இது லிங்கத்திற் செய்யப்படும் பீடஸம்யோகம். ஸ்திதிஸ்தாபனம் - ஸ்படிகாதி பீடத்தில் மந்திரபூர்வமாகச் செய்யப்படுவது. ஸ்தா பனம் - பாணலிங்கத்திற செய்யப்படுவது. ஆஸ்தாபனம் - சதாசிவமூர்த்தி பிரதிஷ் டையில செய்யப்படுவது. உத்தாபனம் - லிங்கபீடம் ஜீரணமானபோது செய்வது.

சிவப்பிரகாசதுரை—இவர் சேற்றூர் ஜமீன் தார். இவர்க்கும் சிவகிரி ஜமீன்தாரவர் களுக்கும் போர் நடக்கையில் உதவிக்குச் சொக்கம்பட்டி தாணுதிபதி பொன்னம் பலப் பிள்ளை தண்டிகையில் சேற்றூருக்கு வந்தவுடனடந்ததை ஒரு கவி கூறியது "சேற்றூரார் நெஞ்சந் திடப்படுமே தென் மலையான், தோற்றோமென் றோடித் துயர் படுமே—மாற்றரசர், தண்டனிடுஞ் சின் னனைஞ் சான்சேனு பதிப்பொன்னன், தண்டிகையைக் கண்டவுடன்றான்." மேற் கூறிய சிவப்பிரகாசதுரை போஜனம் செய்து கரசுத்திசெய்ய வெளிவரும்போது சொக்கம்பட்டி தாணுதிபதி பொன்னம்

பலப்பிள்ளை பாடிய வெண்பா, "ஒரு கையிலே யன்ன மொருகையிலே சொன்னம், வருகையிலே சம்மான வார்த்தை—பெருகுபுகழ்ச், சீமானு மெங்கள் சிவப்பிரகாசத்திருவக், கோமானுக்குள்ள குணம்." ஷை துரையவர்களுக்குப் பொன்னம்பலப் பிள்ளை விடுத்த கவி, "இலவே யனைய விதழ் மடமாதரோ டின்புறுதல், குலவே லரசர்க் கியல்பல்லவே யிக்குவலயத்தில், பலபேர் புசித்துக் கழித்தே யெறிந்திடும் பாண்டஞ்சுத்தி, யலவேதென் சேறைச் சிவப்பிரகாச வகளங்கனே." ஷை துரையவர்களிடம் வந்து ஒரு புலவர் கீழ்வரும் புலவர் தெரியும் என்பது வரையிலும் கூறப், பிரபு அவர் கழுத்தைப் பிடித்துக் கொண்டு இதுவரையில் என்னிடம்வந்து வசை கூறினவர் இல்லை குறைக்கவியும் நசையாகப் பாடுக எனக் கூறியது. "படி வாங்கப் படும்பாடு பரமசிவனறிவனவன் பங்கில்வாழும், வடிவாளு மறிவளவண் மக்களுக்குந் தெரியுமிந்த வருத்தந்தீர்ப் பாய், முடிவேந்த ரடிதாழ்ந்து முறை முறையே திரையளக்கு முகுந்தாமேலாந், துடிவேந்தா ரதிகாந்தா துரைத்திருவா தரைக்கொருவா சுகிர்தவானே."

**சிவப்பிரியன்** — தாருகனைக் காண்க.

**சிவமதி** — இவள் தருசகன் தாய், உதயையோடையின் சகோதரி. அவள் மகளாகிய பதுமாபதியை அபிமானித்து வளர்த்தவள். (பெருங்கதை.)

**சிவமலை** — கொங்குநாட்டிலுள்ள குமாரக் கடவுள் வெற்பு.

**சிவமுனிவர்** — கொங்குநாட்டில் வள்ளிமலையில் தவஞ் செய்துகொண்டு இருந்து பெண்மான் ஒன்றைக் கண்டு அவ்விடம் கந்தமூர்த்தியை எண்ணித் தவம்புரிந்து இருந்த வள்ளிநாய்ச்சியாரைப் பெண்ணாக மான்வயிற்றிற் பெற்றவர். இவர் கண்ணுவர் சாபத்தால் இருடியாகப் பிறந்த விஷ்ணுமூர்த்தி. இந்தமான் இலக்ஷ்மிதேவி.

**சிவமூர்த்தங்களாவன** — (உ௫) சந்திரசேகரர், உமாமகேசர், ருஷபாரூடர், சபாபதி, கலியாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, அந்தகாரி, திரிபுராரி, சலந்தராரி, விதித்வம்சர், வீரபத்திரர், நரசிங்கநிபாதனர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், சக்கிரபாதர், கசமுகாநுக்கிரகர், ஏகபாதர், சோமாஸ்கந்தர், அநங்கசுகபிருது, தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர்.

**சிவமூர்த்தி** — 1. இவர் சாந்தராய் தமக்குமேல் நாயகமில்லாதவராதலால் சர்வகர்த்தாவாயும், மகாப்பிரளயத்தில் சத்ரூபமாய் லயித்திருக்கும் நாசமிலியாயும், ஞானசத்தியால் சகலத்தையுமறியும் சர்வஞ்ஞராயும், ஸ்வப்பிரகாசராகியும், அசலராகியும், அமேயராகியும், ஸ்வபாவசித்தராகியும், ஒப்பிலியாகியும், ஸூக்ஷமராகியும், ஸ்தூலரூபியாகியும், ஞானக்கிரியாசத்தி சரீரியாயும், நிஷ்களராயுமிருப்பவர். இவர் சுவேச்சையால் ஆன்மாக்கள் சநநக்கரைகண்டு தம்மை யடையும்வண்ணம் அவர் அவர் தியானிக்கும்வகை அவ்வவ்வுருக்கொண்டு சகளராய் அவரவர்க் கருளினர். அவற்றுள் சிலவருமாறு.

2. சிவேதலோகிதம், இரத்தம், பீதம், நீலம், விச்வரூபகற்பங்களில் பிரமனுக்குக் காயத்திரி, சரஸ்வதி முதலியவரை அருளி முனிவர்க் கருள்புரிந்தவர்.

3. பிரம விஷ்ணுக்கள், படைப்புத் தொழில் முதலிய வடையச் சத்தியிடம் பிறக்கச்செய்து சிருஷ்டி யருளியவர்.

4. சிலாதருக்குப் பிரத்தியக்ஷமாய்ப் புத்திரப்பேறருளி நந்திக்கு இறவாமையருளியவர்.

5. இந்திரன்முன் யக்ஷனாகித் தோன்றிச் சத்தியெல்லாங் கொண்டு மறைந்தவர். (காஞ்சிபுராணம்)

6. பிரமதேவனை முகத்தினும், இந்திரனைத் தோளினும், ஏனையோரை மற்றைய உறுப்புக்களினும் படைத்தவர்.

7. நிகும்பன் என்னும் அசுரன் தேவரைவருத்த அவனைக் கொன்றவர்.

8. பிரமதேவனுக்குச் சிருட்டியின் பொருட்டுப் பஞ்சாக்ஷரோபதேசஞ் செய்தவர்.

9. பிரதிவியில் சர்வராயும், அப்பில் பவராயும், தீயில் உருத்திரராயும், காற்றில் உக்கிரராயும், ஆகாயத்தில் வீமராயும், சூர்யமண்டலத்து மாதேவராயும, சந்திரமண்டலத்து ஈசானராயும், ஆன்மாவில் பசுபதியாயும் அமர்பவர்.

10. சத்தியை யைந்து முகத்துடன் தமது முகத்திற் சிருட்டித்தவர்.

11. உபமன்யுவிற்குத் தந்தையாராகிய வியாக்கிரபாதமுனிவர் வேண்டுகோளின்படி பாற்கட லளித்தவர்.

12. வீரபத்திரரைத் தக்ஷயாகத்தின் பொருட்டுப் படைத்து அதை அழிக்க வவி அதிலழிந்த தேவரைமீண்டும் உமை வேண்ட உயிர்ப்பித்துத் தக்கனுக்கு ஆட்டுத்தலை யருளியவர்.

13. ஒரு கற்பத்தில் பிரமன் வேண்ட அவன் நெற்றியில் நீலலோகித மூர்த்தியாகத் தோன்றிச் சிருட்டித்தொழில் கற்பித்தவர்.

14. பிரமன் வேண்டுகோளால் ஒரு கற்பத்துப் பிராட்டியாரைப் பிரிந்து பிரிந்த ஆணுருவில் பதினொரு வுருத்திரரைப் படைத்துச் சிருட்டி செய்வித்தவர்.

15. இராவணன், திருக்கைலையைச் சிவபூசைப்பொருட்டுப் பெயர்க்கத் திருவடியின் திருவிரலால் ஊன்றி மதமடக்கியவன் துதிக்க அநுக்கிரகித்தவர்.

16. பிரமன் கர்வித்தகாலத்துப் பயிரவரை யேவி அவனது நடுத்தலையைக் கிள்ளி யெறிந்து அவன் வேண்டுகோளால் கபாலத்தைக் கையிற் பற்றியவர்.

17. இந்திரனுய் உபமன்னிய ருஷியிடமடைந்து சிவதூஷணை செய்து பின் அநுக்கிரகித்தவர்.

18. உமை, தமதருளால் உலகஞ் செழித்திருக்கின்றதென எண்ணியதை யறிந்து தமது உலக உருவமாகிய கலைகளைத் தணிவித்தனர். அதனுல் உயிர்கள் ஒடுங்கின. இதனையறிந்த பிராட்டியார் இறைவனை வேண்ட அதனுல் அநுக்கிரகித்தவர்.

19. தமக்கெனச் செயலிலா திருந்தும் ஸ்ரீ கண்டருத்திரர் முதலியோரிடம் தமது சத்தியால் பஞ்சகிருத்தியம் நடப்பிப்பவர்.

20. சர்வசங்கார காலத்தில் பிரமன், விஷ்ணு, இந்திராதிதேவர்களை யழித்து அவர்களின் எலும்புகளையும் நீற்றையும் அவர்களது நிலையின்மை தெரிந்துய்யத் திருமேனியில் அணிபவர்.

21. தாருகவனத்து இருடிகளும், அவர்களின் பத்தினியரும் செருக்குற்றிருத்தலைத் தேவர் கூறிவேண்ட விஷ்ணுவை மோகினி யுருக்கொண்டு இருடிகளிடம் போக ஏவித் தாம் பைரவத்திருக்கோலத்துடன் இருடி பத்தினிகளிடஞ் சென்று அவர்கள் கற்புக்கெட்டு வேண்ட அவர்களை மதுரையில் தீண்டுகிறேமெனக்கூறி மறைந்து அப்பெண்களின் கணவர்கள் அபிசார வேள்விசெய்து தம்மீது ஏவியதமருகம், அக்நி, மழு, சூலம் இவற்றைக் கையிற் பிடித்தும், புலியைக் கொன்று தோலையுடுத்தும், பாம்பினைப் பயப்படுத்தித் திருவடியில் அடக்கியும், பிரமதகணத்தையும், பேயையும் உடனிருக்கச் செய்தும், மானைக் கையிற்பிடித்து வலியடக்கியும், வெண்டலையை யணிந்தும், முயலகனை, எலும்பொடிய முதுகில் அழுத்தியும் குற்றமிலாது இருந்தவர்.

22. யானையுருக்கொண்டு செருக்கடைந்து தேவர்களை வருத்தித் தம்மை யெதிர்க்கவந்து தம்மை எடுத்து விழுங்கிய கயாசுரனை யுடல்பிளந்து வெளிவந்து அவன் தோலையுரித்துப் போர்த்துக் கஜாரிமூர்த்தி யெனத் திருநாமம் பெற்றவர்.

23. இந்திரன் ஒருகாலத்துக் கர்வப்படப் பூதவுருக்கொண்டு அவன் முன் சென்று கோபித்து அவனுலுண்டான கோபத்தைக் கடலில் விட்டனர். அது குழந்தையுருவாய்ச் சலந்தரனெனப்பட்டது.

24. சலந்தரன் கர்வமடைந்து தம்மிடம் யுத்தஞ்செய்ய எண்ணிக் கைலை நோக்கி வருகையில் அவன் முன் விருத்தராய்ச் சென்று சக்கரங் காலால்கீறி யெடுப்பித்து அச்சக்கரத்தால் அவனுடலைப் பிளப்பித்துச் சலந்தராரி யெனப்பட்டவர்.

25. சர்வசம்மார காலத்து இடபவுருக்கொண்டு தம்மையடைந்த தருமத்தை அதன் வேண்டுகோளின்படி வாகனமாக ஊர்ந்து இடபாருடத் திருநாமமடைந்தவர்.

26. அமிர்தமதன காலத்துப் பிறந்த விஷத்திற்கஞ்சிவந்ததேவர்களுக்கு அபயமளித்துத் தாம் அதை வருவித்துப் புசித்துக் கண்டமட்டில் ஆக்கி நீலகண்டத் திருநாமம் அடைந்தவர்.

27. பார்வதி பிராட்டியார் தமது திரிநேத்திரங்களை மறைத்ததால் அவர் விரல்களில் உண்டாகிப் பெருகிய கங்கையைத் தேவர் வேண்டச் சடையிலணிந்து கங்காதரத் திருநாமம் பெற்றவர்.

28. பகீரதன் பிதுர்க்கள் நற்கதியடையக் கொணர்ந்த ஆகாசகங்கையின் வீறடக்கிச் சடையிலணிந்து அவன் வேண்டுகோட்படி பூமியில் விட்டுக் கங்காவிசர்ஜன மூர்த்தி யெனுந் திருநாமம் பெற்றவர்.

29. பிரமன் வேண்டுகோளின்படி புஜத்தில் சனகர் முதலியவரைப் படைத்தளித்தவர்.

30. கயமுகாசுரனை வெல்ல ஒரு புத்திரனை யளிக்க வேண்டுமென்று தேவர்

வேண்ட விநாயகமூர்தியைப் பிறப்பித்துத் அத்தன்பத்தை நீக்கினவர்.

31. சூரபன்மனுக்கு, வச்சிரயாக்கை, இந்திர ஞாலத்தேர் முதலிய அளித்து அவன் செருக்குற்றகாலத்து அவன்செய்த யாகத்தை அழிக்கக் கங்கையைப் பூமியில் வருவித்துக் குமாரக்கடவுளால் அவனைச் சங்கரிப்பித்தவர்.

32. விபுலன் பொருட்டுக் காலனைச் சூலத்தாற்குத்தித் தாங்கினவர்.

33. பிங்கலன் எனும் வேடன்பொருட்டுக் காலபடரைக் காய்ந்தவர்.

34. பிரமதேவன், தன் குமரியை மானுருக்கொண்டு புணரச்சென்ற காலையில் அவன் தலையைக் கிள்ளியவர். (இது ஒரு கற்பத்தில்.) பிரமனைவேட உருக்கொண்டு எய்து அவள் வேண்ட உயிர்ப்பித்து மணம் புணர்த்தியவர்.

35. சுவேதனது உயிர் கவரவந்த யமன் உடலைச் சூலத்திற்குத்தித் தூக்கிச் சிவனடியவரிடம் நெருங்காதிருக்கக் கட்டளை தந்தவர்.

36. ஆதிசேடன் தவஞ்செய்து தன்னைத் திருமேனியில் அணிந்துகொள்ள வேண்ட விரலாழியாகத்தரித்துப் புஜங்க பூஷணத் திருநாமம் அடைந்தவர்.

37. உமையைத் திருமணங் கொள்ளு முன் அவரது தவநிலை தெரிவிக்க விருத்தராகச் சென்று தம்மை மணக்கவேண்டி அவரது கலங்காநிலை யுணர்ந்து பின் தம் உருக்காட்டிச் சத்தருஷிகளால் மணம் பேசுவித்துத் திருமணங்கொண்டு உமாமகேசத் திருநாமம் பெற்றவர்.

38 கந்தமூர்த்தி திருவவதரிக்க வேண்டித் தேவர்வேண்டத் தமது நெற்றிக் கண்ணிலிருந்து ஆறு தீப்பொறிகளைப் படைத்து, அவற்றை அக்நி, வாயு இவ்விருவரையுங் கொண்டு சரவணத்திலிடக் கட்டளையிட்டுக் கங்கையாலும், கார்த்திகை முதலறுவராலும் வளர்ப்பித்துச் சூரன் முதலியவரை வெல்லக் கட்டளையிட்டவர்.

39. நவவீரர், இலக்கவீரரை உமையின் காற்சிலம்பில் உதித்த பெண்மணிகளிடம் சிருட்டித்துக் கந்தமூர்த்திக்குத் துணைவராக்கியவர்.

40 பிரமனைக், கந்தமூர்த்தி பிரணவத்திற்குப் பொருள் வினவியகாலத்து அவனைச் சிறைசெய்ததால் விஷ்ணுவாதியர் முறையிடப் பிரமனைச் சிறைவிடக் கட்டளையிட்டு அதன் பொருளை வினவிச் சுவாமிநாதத் திருநாமம் குமரனுக்களித்தவர்

41. பகாசுரன் எனப் பெயர் கொண்ட கொக்குருக்கொண்ட அசுரன் ஒருவனையுயிர்மாய்த்து, கர்வம் அடைந்தார், இவ்வகையாவர் என்று அவன் இறகில் ஒன்றை முடியில் அணிந்தவர்.

42. சிலாதமுனிவரின் குமாரர்க்கு யமபாசநீக்கியவர்.

43. அந்தகாசுரன் கர்வித்தகாலத்து அவனைச் சூலத்தாற் குத்தி வெயிலில் உலர்த்தியவர்.

44. அக்நி, வாயு, குபேரன், ஈசானன், நிருதி, யமன், வருணன் முதலியோர் தவஞ் செய்தகாலத்து அவர்க்குத் தரிசனந் தந்து பதமளித்தவர்.

45. துந்திமி யென்னும் அசுரனைக் கொன்று தேவர் துன்பம் நீக்கியவர்.

46. தேவர் பொருட்டுக் காளியுடன் சண்டதாண்டவமாடி ஆதிசேடன், முஞ்சிகேசன், கார்க்கோடன் காரைக்காலம்மையார், விஷ்ணுமூர்த்தி யிவர்களுக்கு, நடனதரிசனம் அருளியவர். இவர் நடனத்தில் காதணிநழுவ அதனைத் தாமே யணிந்தவர் என்ப.

47. மாநந்தையென்னும் தாசியின் பொருட்டு வணிகராய்ச் சென்று தீக்குளித்து அவளுக்கு முத்தியளித்தவர்.

48. தேவாசுர தொந்தயுத்தத்திலே தேவர் தோற்றோடக்கண்டு அவர்களுக்கு வலியளித்துத் தேவர் நாமேவெனறேமென்று செருக்குக் கொண்டகாலையில் இயக்கவுருக்கொண்டு ஒரு புல்லைநாட்டி அக்நிமுதலிய தேவரை அப்புல்லிடம் தங்கள் வலிகளைக் காட்டச்செய்து பங்கமடைவித்தவர்.

49. பண்டாசுரனை ஓமத்தில் நீற்றியவர்.

50. அநசூயை புஷ்பாஞ்சலி செய்ய அத்திரி வேண்டுகோளால் அவள் கையில் குழந்தையுருக்கொண்டிருந்தவர்.

51. தனகுத்தன் மனைவிபொருட்டுத் தாயுருக்கொண்டு மருத்துவம் பார்த்துத் தாயுமான திருநாமம் பெற்றவர்.

52. இவர் விஷ்ணுவை யெண்ணித் தவம்புரிய நரசிங்கமூர்த்தி பிரத்தியக்ஷமாய் இஷ்டசித்தியளிக்கப் பெற்றவர். (திருவேங்கடத்தலபுராணம்.)

53 மன்மதன் தேவர் வேண்டுகோளால் இவர் யோகத்திருக்கையில் புஷ்பபாணத்தை யேவித் தீவிழிப்பட்டெரிய இரதிதேவி சிவமூர்த்தியைத் துதித்துப் புருஷபிச்சை கேட்க அளித்துக் காமாரித் திருநாமம் பெற்றவர்.

54. திரிபுராதிகள் பொன், வெள்ளி, இரும்புக்கோட்டைகளைச் செய்வித்து அக்கோட்டைகளுடன் பறந்து தேவர்களை வருத்தி வந்தனர். இதனால் தேவர்கள் சிவமூர்த்தியைவேண்ட அவர்களில் மூவர் பிழைக்க மற்றவர்களை நீறாக்கித் திரிபுராரி மூர்த்தித் திருநாமமடைந்தவர்.

55 பகாக்ஷன், தேவர்களை வருத்தி வருவதைச் சிவமூர்த்தியறிந்து சிக்ஷிக்க வேண்டி வேதம் தேராகவும், உடனிடதம் குதிரையாகவும், உமையாள் சாரதியாகவும், பிரணவம் சவுக்காகவும், காலசக்கிரம்வில்லாகவும், மாயை நாணாகவும், பாசுபதம் அத்திரமாகவுங்கொண்டு அவனைக் கொன்றவர்.

56 சந்திரன் தக்ஷசாபத்திற் கஞ்சிச் சரண்புக அவனைச் சடையிலிட்டுப் பயமொழித்துச் சந்திரசேகரத் திருநாமம் பெற்றவர்.

57. முஷ்டிகாசுரன், அக்கிரேசுரன், சாந்தாசுரன், தண்டாசுரன், முண்டாசுரன், சார்த்தூலன், குடாசுரன் கோடகமுகன், தூராசுரன், கோராசுரன், பஞ்சமேஷ்டி, வலாசுரன், நிதனுசுரன், மிருகாசுரன், சத்ததந்து, சர்வபூதாசுரன், இகலாசுரன், களாசுரன், பண்டாசுரன், சூலாசுரன், அலாசுரன், திதளாசுரன், யோகினிகன், இலாங்கலக்கினசுரன், வீமாசுரன், சுராசுரன், வீராக்கிரகண்ணியன், வீரமார்த்தாண்டன், பூதாசுரன், பசாசாசுரன் முதலியவர்களை யொவ்வொரு கற்பத்தில் தேவர்கள் வேண்ட வதைத்தவர்.

58. அநலாசுரன், வச்சிரகேசி, சுந்தராசுரன், எந்திராசுரன் முதலிய அசுரர்களை தீக்கண்ணால் எரித்தவர்.

59. திவ்யசித்தராய்க் கணபதிக்குச் சித்திகள் அருளினவர்.

60. மன்மதசுந்தர மூர்த்தியாய்த் தேவர்களை மோகிப்பித்தவர்.

61. புலிமுகன் என்னும் அசுரன் யுத்தத்திற்குவர அவன் தோலையுரித்து அணிந்து வியாக்ராரி மூர்த்தியானவர்.

62. பார்வதி தேவியாருடன் விற்சமராடி வென்றவர்.

63. ஒருமுறை மேருச்சாரலில் பார்வதியாருடன் இருக்கையில் தேவர் குமாரக்கடவுளின் அவதாரத்தை யெண்ணிச் சென்றனர். இக் குறிப்பறிந்த ஸ்ரீகண்டர் வீர்யத்தை அக்கினியிடங் கொடுத்தனர். அதை அக்னி முதலிய தேவர்களுண்டு சகிக்காது சுரநோய்கொண்டு மேருமலைச் சாரலை அடைந்து சரவணத்தில் விட்டனர். அக் கரு ஆறுமுகங்கொண்ட குழந்தையுருவாய் வளர்ந்தது எனவுங் குமாரக்கடவுள் உற்பத்தி கூறுப.

64. சுராக்ஷன் என்பவன் தேவர்க்கு இடுக்கண்புரிய அவனைக் கொன்றவர்.

65. ஒரு பிரளயத்தில் தனித்துநின்று பெருஞ் சிரிப்புச்சிரித்து வீராட்டகேசன் என திருநாமம் அடைந்தவர்

66 மதுரையில், சோமசுந்தர பாண்டியனாய்த்தமது, இச்சையாற் திருமேனிகொண்டு மலயத்துவசன் செய்த தவப்பேற்றால் தடாதகைப் பிராட்டியாராய்த் திருவவதரித்திருந்த பிராட்டியாரைத் திருமணங்கொண்டு, வெள்ளியம்பலத் திருநடனம் முனிவர்க் கருள்செய்து, குண்டோதரனுக்கு அன்னமிட்டு அவன் பசிதணிய அன்னக்குழியும், நீர்வேட்கையாற வையையை அழைப்பித்துத்தந்து, காஞ்சனமாலை கடலாட விரும்ப எழுகடலுடன் மலயத்துவசனை யழைத்துக் கடலாட்டுவித்து, உக்கிரகுமார பாண்டியனைப் பெற்று அவற்கு வேல், வளை, செண்டு அருளிப் பட்டமளித்துத் திருக்கைலைக்கு எழுந்தருளியவர்.

67. கண்வர் முதலிய முனிவர்கள் வேண்ட வேதத்திற்குப் பொருளருளிச் செய்தவர்.

68. அபிஷேக பாண்டியன்பொருட்டு மாணிக்கம் விற்றவர்.

69. வருணன் மதுரையின்மீது பகைத்துக் கடலைவிட அதனைத் தமது சடையிலிருந்த மேகங்களையேவிக் குடிப்பித்தவர். மீண்டும் சத்தமேகங்களை அவன் விட்டது கண்டு தமது சடையிலிருந்த மேகங்களை யேவி நான்மாடக் கூடலாக்கி அவற்றின் வலிபோக்கியவர்.

70. எல்லாம் வல்லசித்தராய் எழுந்தருளிப் பாண்டியன் காணக் கல்லானைக்குக் கரும்பு அருத்தியவர்.

71. மதுரைமேற் சமணரேவிய யானையைக் கொன்றவர்.

72. கௌரியென்னும் பார்ப்பினி பொருட்டு விருத்தகுமார பாலரானவர்.

73. இராஜசேகரபாண்டியன் பொருட்டு மாறி நடித்து வெள்ளியம்பல மாக்கியவர்.

74. பழிக்கஞ்சிய உலோக்துங்க பாண்டியனுக்கு யமபடரால் உண்மை கூறுவித்தவர்

75. தாயைப் புணர்ந்து தந்தையைக் கொன்ற வேதியனது மாபாதகம் தீர்த்தவர்.

76. சித்தன் என்பவனது அங்கத்தைச் சமர்செய்து வெட்டியவர்.

77. புத்தர் ஏவிய நாகம், மாயப்பசு முதலியவற்றை எய்து வதைப்பித்தவர்.

78. சாமந்தர் பொருட்டு மெய்காட்டிட்டவர்.

79. மதுரையில் பிறந்திருந்த தாருகவனத்து இருடிபத்னிகள் பொருட்டு வளையலிட்டு அவர் மையலைப் போக்கிப் புத்திரப்பேறும் அளித்தவர்.

80. குமாரக்கடவுளுக்குப் பாலூட்டிய இயக்கிமார் அட்டமாசித்திவேண்டிப் பணியப் பிராட்டியுடன் தரிசனந்தந்து பிராட்டியைக்காட்டி யிவளை யாராதிக்கின் அட்டசித்தியும் தருவள் என, அச்சித்திகளையுபதேசிக்கையில் பாராமுகமாய்க் கேட்க நீங்கள் பட்டமங்கையிற் பாறைகள் ஆக என்றனர். இயக்கிமார் வேண்ட (கOOO) வருஷங்கள் சென்றபின் நாமே வந்து அச்சாபத்தைப் போக்குகிறோமென அவ்வாறு சென்று அப்பெண்களின் சாபம்தீர்த்து அட்டமாசித்தியுபதேசித்தவர். அப்பெண்கள் பார்வதியார் பாவனையால் சித்திபெற்று முத்தி அடைந்தனர்.

81. காடுவெட்டிய சோழன்பொருட்டு மதுரைத் திருக்கோயிலின் மீனமுத்திரை நீக்கி இடபமுத்திரையிட்டு அவனுக்குத் தரிசனந்தந்து வழித்துணையானவர்.

82. பொன்னனையாள் என்னும் தாசி பொருட்டு இரசவாதஞ் செய்து அவள் மனக்கவலை தீர்த்தருளியவர்.

83. பாண்டியன் சேனையின் பொருட்டுத் தண்ணீர்ப்பந்தல் வைத்துத் தாகநீக்கிச் சேனையை யுத்தத்திற்கு அனுப்பி வெல்வித்தவர்.

84. தனபதியின் உடன் பிறந்தாள் மகன்பொருட்டு மாமானாகவந்து வழக்கிட்டு ஞாதியர் கவர்ந்தபொருள் வாங்கி அளித்தவர்

85. பாணபத்திரர் பொருட்டு விறகாளாய் ஏமநாதன் இருந்த வீட்டுத்திண்ணையில் யாழ் வாசித்து ஏமநாதனை ஓட்டியவர். இவர்பொருட்டுத் திருமுகம்கொடுத்துச் சேரமானிடம் அனுப்பிப் பொருள் கொடுப்பித்தவர். பாணபத்திரரைக்காண்க.

86 கரிக்குருவிக்கு மந்திர முபதேசித்து முத்தியளித்தவர்.

87. வங்கியசேகர பாண்டியன் காலத்து வேடுருவாய்ச் சோழன் சேனைகளை ஓட்டியவர்.

88. சங்கத்தார் பொருட்டுச் சங்கப் பலகை தந்தவர்.

89. சத்திக்கு ஞானமுபதேசிக்கையில் பிராட்டியார் பாராமுகமாகக் கேட்டதறிந்து வலையர் குலத்தில் அவதரிக்கச் சாபமளித்துச் சத்திவேண்ட நாமே வந்து உன்னை மணந்து கொள்ளுகிறோமெனக் கூறினவர். தாய்க்குச் சாபவிளைவு சாத்திரத்தினலென்று அச்சாத்திரங்களைக் கடலிலெறிந்த குமாரக்கடவுளை மதுரையில் மூங்கைப் பிள்ளையாகவும் சமயமறியாது குமாரரை உள்ளேவரவிட்ட நந்திமாதேவரை சுறாமீனாகவும் சாபம் அளித்து அநுக்கிரகித்தவர்.

90. தருமசீலையின் கணவன் பொருட்டு உலவாக்கோட்டை யருளிச்செய்தவர்.

91. வரகுண பாண்டியன் பொருட்டுச் சிவலோகதரிசனங் காட்டியவர்.

92. பாணபத்திரர் மனைவியை இசைவாதில் வெற்றிகொள்ள அநுக்கிரகித்தவர்.

93. பன்றிக்குட்டிகளுக்குப் பாலூட்டி வளர்த்து அவர்களை மந்திரிகளாக்கியவர்.

94. நாரை ஒன்று பொற்றாமரைத்தீர்த்தத்தில் மீனுண்ண வந்து ஞானோதயம் பெற்றுத் தியானிக்க முத்தியளித்தவர்.

95. தருமியென்னும் வேதியனுக்குக் கவி யருளிச்செய்து பொற்கிழி கொடுப்பித்தவர். தருமியைக் காண்க.

96. அறியாமையால் மாறு கொண்ட கீரனைப் பொற்றாமரையில் வீழ்த்திக் கரையேற்றி அநுக்கிரகித்து இலக்கணங் கூறுவித்தவர்.

97. சங்கத்தார்க்கு மூங்கைப்பிள்ளை யால் கலகம் தீர்ப்பித்தவர்.

98. இடைக்காடர் சொற்படி அவர்க்குப் பின்சென்று பின் பாண்டியன் புலவரை க்ஷமைவேண்டி யிரக்கப் புலவருடன் மதுரைக்கு எழுந்தருளியவர்.

99. வாதவூரடிகளுக்குக் குருமூர்த்தியாய் எழுந்தருளி உபதேசித்து, நரிபரியாக்கி, பரிநரியாக்கி, மண்சுமந்து, பாண்டியனு லடியுண்டு சராசரமெல்லாந் தமது திருமேனியென்று காட்டி அவருக்குச் சிவாநந்தவாழ்வளித்தவர்.

100. அருச்சுநன் பாசுபதம் வேண்டித் தவஞ்செய்கையில் அவனைக் கொல்லவந்த மூகாசுரன் என்னும் பன்றியுருக்கொண்ட அசுரனைக் கொல்ல வேடுருக்கொண்டு எழுந்தருளி அருச்சுநனுடன் லீலையாகப் போரிட்டு அவனாலடியுண்டு சராசரமெல்லாந் தமது திருமேனியென்று அறிவித்தவர்.

101. திருவிரிஞ்சையில் வேதியச் சிறுவர்பொருட்டுத் திருமேனி வளைந்துகாட்டி அவ்வளவாற் சராசரங்கள் வளையக்காட்டி அருளியவர்.

102. சூரியனை உன்னொளியால் உலகம் விளங்குகின்றதென்று நாரதர் புகழ அதனால் செருக்குற்ற அவனைத் தமது நெற்றிக்கண் ஒளியால் கர்வபங்கப்படுத்தியவர்.

103. காமவேட்கைகொண்ட வேதியன் ஒருவன் தாசிக்குத்தரப் பொருளில்லாது வருந்தத் தமது பதக்கத்தைத்தந்து தாசியிடஞ் சேர்ப்பித்தவர்.

104. ஒரு வேதியச் சிறுவர்பொருட்டுத் தந்தை தாயார் உபாத்தியாயர் இலாது மயங்க அவ்விடம் விருத்த வேதியராய் எழுந்தருளி அப்பிள்ளைக்கு வேதங் கற்பித்து ஒரு பார்ப்பினி அன்னமிட அன்னமெல்லாம உண்டு பற்றாது மற்றும் பாகமாகாதவைகளையும் உண்டு மறைந்தவர்.

105. விஷ்ணு பிரமனை விழுங்கிய கற்பத்துப் பிரமனுக்கு அந்தர்யாமியாய்த் தரிசனந்தந்து அநுக்கிரகித்தவர்.

106. மேகவாகநகற்பத்தில் மேகவுருக்கொண்ட விஷ்ணுமூர்த்தியால் தாங்கப் பெற்றவர். அக்கற்பத்திற்கு மேகவாகன கற்பமெனப் பெயர்.

107. திருமால் தாமரைகொண்டு தம்மைப் பூசிக்கையில் அம்மலரில் ஒன்று குறையத் தமது கண்ணைப்பிடுங்கி அர்ச்சித்ததனால் களிப்படைந்து தாமரைக் கண்ணனெனத் திருநாமமும் இஷ்டசித்தியும் சக்கரப்பேறும் அளித்தவர். இது திருவீழிமிழலையென்னுந் தலத்தில் பிரத்தியக்ஷம்.

108. விருகாசுரன் எவர் சிரத்தில் தன் கையை வைக்கினும் அவர் எரிய வரம் பெற்று அதைச் சோதிக்கத் தம்மிடம் திரும்பியவனைத் தீக்கண்ணால் எரிக்காது நாடகமாக மறைந்து விஷ்ணுமூர்த்தியையேவிக் கொலைசெய்வித்தவர்.

109. விஷ்ணுமூர்த்தியின் மச்சாவதாரத்தில் மணிகொண்டுசென்று அதன் ஒலியால் கடலிலிருந்த மச்சாவதார மூர்த்தியை மயங்கிவரச் செய்து கொக்குருக்கொண்ட தமது மூக்கால் மீனைப்பிடித்து விழிமணிகொண்டு விரலாழிக்கணிந்து மச்சாரி எனத் திருநாமம் அடைந்தவர்.

110. விஷ்ணுமூர்த்தி கூர்மாவதாரத்தில் செருக்குற அக்காலையில் தோன்றி முதுகோட்டைப் பேர்த்து மார்பு அணியாகக்கொண்டு கூர்மசம்மாரமூர்த்தி யெனப் பெயரடைந்தவர்.

111. நாசிங்கமூர்த்தியாய் இரண்யனைக் கொன்று இரத்தபானத்தால் வெறிகொண்டு மற்றவரையும் பயமுறுத்திய காலத்துச் சிம்புள் என்னும் எண்காற் பறவையுருக்கொண்டு சென்று நாசிங்கமூர்த்தியின் தோலை உரித்து உடுத்துச் சரபமூர்த்தியெனத் திருநாமமடைந்தவர்.

112. பூமியைச் சுருட்டிப் பாதாளத்தில் சென்ற இரணியாக்ஷன்பொருட்டு வராகவுருக்கொண்டு அவனைக்கொன்று தம்மினுமிக்காரில்லையெனச் செருக்குற்ற காலத்தில் அவ்வராகத்தின் கொம்பையொடித்து அணிந்து அநுக்கிரகித்து வராகசம்மாரமூர்த்திப் பெயரடைந்தவர்.

113. வாமனாவதாரத்தில் விஷ்ணுமூர்த்தியின் முதுகெலும்பாகிய கங்காளத்தை வீணாதண்டமாக்கிக் கங்காளத் திருநாமம் அடைந்தவர்.

114. விஷ்ணுமூர்த்தி தேவாசுர யுத்தத்தில் அசுரரை வென்று செருக்கடைந்தபோது அவர்க்குமுன் யக்ஷனாகத் தோன்றித் துரும்பைக் கிள்ளியிட்டுத் தூக்கக் கட்டளையிட்டுக் கர்வபங்கம் செய்தவர்.

115. தேவர் சிவ, விஷ்ணுக்கள் பலமறியக்கொடுத்த வில்லினை யுங்கரித்தலால் மூர்த்தெறிந்தவர்.

116. விஷ்ணுமூர்த்திக்குத் தில்லையில் நடனதரிசனந் தந்தவர்.

117. பரசிராமாவதாரங்கொண்ட விஷ்ணுமூர்த்தி பாசுவேண்ட அறக்கிரகித்தவர்.

118. பலராமர் தம்மைப பூசைசெய்ய இஷ்டசித்தி யளித்தவர்.

119. இராமாவ தாரத்தில் சிவபூசை செய்த விஷ்ணுமூர்த்திக்குப் பிரமகத்தி போக்கியவர்.

120. கிருஷ்ணவதாரத்தில் உபமன்னியரிடம் சிவதீகைஷபெற்றுச் சிவபூசை செய்த விஷ்ணுமூர்த்திக்குப் புத்திரப்பேறளித்தவர்.

121. விசுவசேநனைச் குலத்தார் குத்தியவன் சர்வபங்கப்பட்டுவேண்ட அநுக்கிரகஞ் செய்தவர்.

122. மார்க்கண்டர் பொருட்டால் யமனை உதைத்து அநுக்கிரஹித்தவர்.

123. பிரம விஷ்ணுக்களைத் தம்மிடத்துச் சிருட்டித்து ஏகபாததிரி மூர்த்தியாக நின்றவர்.

124 பஞ்சபூதம், சூர்யன், சந்திரன், ஆன்மா முதலிய எண்குண மூர்த்தியாய் நின்றவர்.

125. ஒரு காலத்தில் விஷ்ணுமூர்த்தி பாதாளமடைந்து அங்கிருந்த அப்ஜரஸ்திரீகளுடன் கூடிப் பல புத்திரர்களைப் பெற்றுத் தம்தொழிலை மறந்திருக்கையில் பிரமாதி தேவர்களால் வேண்டப்பட்ட சிவமூர்த்தி இடபவுருவுடன் பாதாளமடைந்து விஷ்ணு மூர்த்தியின் புத்திரருடன் போர்புரிகையில் விஷ்ணுமூர்த்தி யுத்தத்திற்குவர அவரைப் பணிவித்து வைகுண்டமடையச் செய்தனர். இதனைக் தேவர் கேட்டு அப்பெண்களைக் கூடப் பாதாளம் செல்லத் தொடங்குகையில் சிவமூர்த்தி ஆண்டுச் செல்லும் தேவர் உயிரொழிக எனக் கோபித்தவர். (சிவமகா-புரா.)

126. விஷ்ணுமூர்த்தியைப் பலமுறை சத்தியாகபெற்று அரிஹர புத்ரரைப் பெற்றவர்.

127. பாணாசுரன் சிவபூசை செய்து பல வரங்கள் பெற்று என்னுடன் யுத்தஞ் செய்து வெல்லவ ருண்டோவென, சில நாளைக்குப் பிறகு கண்ணனுல் வெல்லப் படுவாய் என்று அவன் வேண்டுகோட்படி அவனிடமிருந்து கண்ணனுடன் பாணனுக்கு யுத்தம் நேருகையில் தாம் பயந்தவர்போல் நடித்து வாணன் வலியடங்கச் செய்தவர்.

128. தமதஞ்சவு வுலகினசை வெனத் தோற்றுவிக்கச் சப்ததாண்டவ மூர்த்தமானவர்.

129. பராசரமுனிவர் வேண்டுகோளுக்கிரங்கி வக்ராசுரனதியரை வதைக்கச் சத்தியிடம் சண்டகாதினி முதலிய துர்க்கைகளைச் சிருட்டிப்பித்தவர்.

130. தேவாசுர வருத்திய மருத்தனை யுக்கிரவடிவுடன் கொலை செய்தவர்.

131 கோலோகத்திருந்த பசுக்கள் சூயாமல் பாலினையொழிக்கிப் பயன்படக் கருதுகையில் அவற்றை யுற்றுப்பார்த் தெரித்தவர்.

132. ஒரு சமயத்தில் விஷ்ணுவை ஆதிசேடனுற் பிணித்து நூறுயோசனை தூரத்தில் விழும்படி யெறிந்தனர். (சிவமகாபுராணம்).

133. சநகர் முதலியோர், பொருட்டுக் குருமூர்த்தியாய் எழுந்தருளி வேதப் பொருளுணர்த்தித் தக்ஷிணமூர்த்தித் திருநாமம் பெற்றவர்.

134. திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர், பட்டினத்தடிகள் மற்றுமுள்ள நாயன்மார் முதலியவர்களுக்கும் ஆங்காங்குத் தரிசனந்தந்து பல திருவிளையாடல்களைக் காட்டி அநுக்கிரகித்த சரித்திரங்களை யெழுதவும் கூறவும் முடியா. பின்னும் இவர் திருத்தொண்டர் புராணத்துட் கூறிய அடியார் பலர்க்கும் பலபல தலங்களில் அடியவர்கள் எவ்வகை தியானித்தனரோ அவ்வகையெல்லாந் தரிசனந்தந்து அவர்க்கு அருளிய திருவிளையாடல்களையும் எழுதப்புகின் என் சிறிய புத்தகம் அடங்காது. பின்னும் யுகங்கடோறும் சேதனராகிய தேவர் நாகரேயன்றி யிவரைக் குதிரை, சிலந்தி, கழுகு, உடும்பு, குரங்கு, நரி, ஈ, எறும்பு, செல், தேன் வண்டு, ஞெண்டு, யானை, சிங்கம், மயில், அன்னம். புரு, ஆந்தை, பன்றி, ஆமை, முயல், இந்திரகோபப்பூச்சி, கிளி, அன்றில், பாம்பு, தேள், எலி முதலிய பூசித்து முத்திபெற்ற சரிதைகள பலவுள.

135 இவர் ஒரு கற்பத்தில் தம்மையே த்யானித்திருந்த காலத்துத் தம தேகத்துண்டான ஆனந்த பிந்துக்களே சிவலிங்கங்களாயின. (சிவரஹஸ்யம்.)

சிவன் — 1. நாராயணர் இவரது கழுத்தைக் கட்டிக்கொண்டதால் கறுத்த கழுத்துடையானுர். (பார - சாந்.)

2. ஐங்குடுமியுள்ள குழந்தையாக உமையின் மடியிலிருக்க, உமை யிவன் யாரென்று கேட்க அருகிலிருந்த இந்திரன்

வஜ்ரத்தினல் ஓங்கினன் அவன் வஜ்ராயுதம் பிடித்த கையுடன் தம்பித்துப்போனன். இந்தக் குழந்தையைப் பிரமா முதலானோர் துதித்தனர். இவர் கிருஷ்ணனிடத்தில் தூர்வாஸராகச் சென்று பல விதம் சோதித்தார். (பார - அநுசா.)

3. திருண புருஷனைக் காண்க.

சிவன் எண்குண முதலிய — 1. பவமின்மை, இறவின்மை, பற்றின்மை, பெயரின்மை, உவமையின்மை, வினையின்மை, குறைவிலறிவுடைமை, கோத்திரமின்மை, ஐம்முகம் ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம், இருப்பு - கைலை, தரிப்பது கங்கை, முடிப்பது - கொன்றை, உடுப்பது தோல், பதங்கள் - சாலோக, சாமீப, சாரூப, சாயுச்யங்கள். வாகனம் - இடபம், ஆயுதம் - சூலம். தேவி - உமை.

சிவாகஸ்யம் — இது சிவபூசாவிதி. அக்கினி காரியம் சிவகணநிபர்நிலை முதலிய வைகளைக் கூறும் நூல்.

சிவராத்திரி — கால நிர்ணயம், மாசிமீ கிருஷ்ணபக்ஷம், சதுர்த்தசி இரவு பதினன்கு நாழிகை, லிங்கோற்பவகாலம், இதுவே மகாசிவராத்திரி புண்யகாலம் கிருஷ்ண பக்ஷம் திரயோதசி (௩௦) நாழிகைக்குச் சதுர்த்தசி வியாபிப்பது உத்தமம், திரயோதசியில்லாமல் சதுர்த்தசி வியாபிப்பது அதமம். ஒருகாலம் அன்றையிராத்ரிக்கு அமாவாசை பிரவேசிப்பது பரியாய சிவராத்ரி, இந்த மகாசிவராத்திரி தினத்தில் நேரிடும் திரயோதசி பரமசிவத்திற்குத் தேகமாகவும், சதுர்த்தசி தேகியாகவும் அன்றிச் சத்தியாகவும் சிவமாகவும் கூறப்பட்டிருக்கிறது. சிவராத்ரி முதற் சாம முதல் நான்கு சாமங்களிலும் ஆத்மார்த்த, பரார்த்த பூசைகள் நடத்த வேண்டியது. தானஞ்செய்ய வேண்டியது, இதை அனுஷ்டித்தோர் நான்கு யுகங்களினும் முறையே விநாயகர், கந்தமூர்த்தி, பிரமவிஷ்ணுக்களாம். பலன் இம்மையில், சர்சன தானுதி சௌபாக்ய சம்பத்தும், மறுமையில் சுவர்க்காதி போகமுமாம். இதுகாமியம். நிஷ்காமிகள் இகத்தில் புத்தியும், பரத்தில் முத்தியும் அடைவர். (மகாசிவராத்திரி.) பிரமவிஷ்ணுக்கள் பொருட்டுச் சிவமூர்த்தி இலிங்கோற்பவமாய் எழுதருளிய போது தேவர்கள் பூசித்தகாலம் எனவும், ஒரு பிரமகற்பத்தில் சக்தி நாற்சாமத்திலும் சிவபூசை செய்து தாம் பூசித்தகாலம் சிவராத்திரியாக எனச் சிவமூர்த்தியை வரம் வேண்டிப் பெற்ற நாள் எனவும், சக்தி விளையாட்டாகச் சிவமூர்த்தியின் திரிநேத்திரங்களை மூட உலகங்கள் இருண்டன அக் காலத்துச் சிவமூர்த்தியைத் தேவர் வணங்கின காலம் எனவும், பாற்கடலில் தோன்றிய விஷமுண்ட சிவமூர்த்தியை விஷம் பீடிக்காமல் தேவர் இரா முழுதும் பூசித்த காலம் எனவும், ஒரு கற்பத்தில் அண்டங்கள் எல்லாம் இருள உருத்திரர் அந்த இருள் நீங்கச் சிவத்தைப் பூசித்த காலம் எனவும் பல புராணங்கள் கூறும்.

சிவலிங்கசோழன் — இவன் தேவி பத்மவல்லி. இவன் நூற்றெரு சிவாலயங்களைச் சீரணேத்தாரணஞ் செய்த வீரசோழனைப் பெற்றவன். அந்த வீரசோழன் திருவாரூரில் சிவதரிசனஞ் செய்யும்பொருட்டுத் தேர்மீதுசெல்ல அத்தேர் வேகத்தால் பசுவின் கன்று நசுங்கத் தாய்ப்பசு இவன் தந்தையிடஞ் சென்று முறையிட்டது. பிதா தன் குமரனைத் தேர்க்காலில் இட்டு அப்பசுவின் கன்றின் உயிர்க்குப் பிரதியாக நசுக்கக் கட்டளை யிட்டவன். இவனைத் தேரூர்ந்த சோழன் என்பர்.

சிவலிங்கநியாசம் — தண்டபங்கிநியாஸம், முண்டபங்கிநியாஸம், ஸ்ரீகண்டநியாஸம், ஆகமநியாஸம், கலாநியாஸம், மாத்ருகாந்யாஸம் முதலிய.

சிவல்—கௌதாரியினத்திற் சேர்ந்தது. இப்பக்ஷி கபிலநிறமுள்ளது. தான்யம் பூச்சிகள் முதலியவற்றைத் தின்று ஜீவிப்பது.

சிவவாக்கியர் — இவர் வேதியர் குலத்திற் பிறந்து காசி யாத்திரை சென்று இல்லறத்திற் ஆசை கொண்டு ஒரு ஞானியாகிய சக்கிலி, காசும் பேய்ச்சுரைக்காயும் கொடுக்கப்பெற்று அவனுணக்கு எந்தப் பெண் மணலையும் இச்சுரைக்காயையும் சமைத்து இடுகின்றளோ அவளே மனைவி யென அவ்வாறு செய்த ஒரு குறப் பெண்ணை மணந்து இல்லறத்திருந்து மூங்கில் வெட்டுகையில் அது பொன் பொழிய நீத்து ஒரு கீரையைப் பிடுங்குகையில் தன்னிலை நிற்கக் கொங்கணரால் திருந்தியவர். இவரைத் திருமழிசை ஆழ்வாரென்பர். இவர் தமிழில் தம் பெயரால் சிவவாக்கியம் என நூல் செய்தவர். இவர் வந்து பூமியில் பிறக்கையில் "சிவ" என்று சொல்லிக்

கொண்டு விழுந்தபடியால் இவர்க்கு இப் பெயர் இடப்பட்டது.

**சிவனைம்முகம்** — ஈசாநம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்யோசாதம்.

**சிவாகமம்** — ஆகமம் காண்க.

**சிவாகமசம்பந்தம்** — (௬) வகை. சதாசிவருக்கும் அநந்தேசுரருக்கும், பாசம்பந்தம். அநந்தேசுரர்க்கும் ஸ்ரீகண்டருக்கும், மகத்சம்பந்தம். ஸ்ரீகண்டருக்கும் தேவர்களுக்கும், அந்தராளசம்பந்தம். தேவேந்திரற்கும் ருஷிகளுக்கும் திவ்யசம்பந்தம். ரிஷிகளுக்கும் மனிதர்களுக்கும், திவ்யாதிவ்ய சம்பந்தம். மனிதர்களுக்கும் மனிதர்களுக்கும் அதிவ்யசம்பந்தம். (சைவபூஷணம்.)

**சிவாக்கியசோழமகாராஜா** — ஒரு சோழன். ஸ்ரீ அரதத்தாசாரிய சுவாமிகளிடம் விச்வாசம்வைத்து அடிமை பூண்டவன்.

**சிவாக்ரயோகியர்** — இவர் நிகமாகம சைவ பரிபாலக சதாசிவயோகீந்திரர் மாணுக்கர், இவர் தஞ்சாவூரில் சரபோஜி மகாராசா அரசாண்டிருந்தபோது அவ்வரசன் வேண்டுகோளால் வைஷ்ணவாசாரியருடன் வாதிடுகையில் வைஷ்ணவர் தாம் தோற்பதுஅறிந்து யோகிகள் இருந்த குடிசையில் தீ யிட்டனர். குடிசை யெரிந்தும் யோகியர் தேக சலனமில்லாது இருந்தனர். இதனையறிந்த அரசன் வைஷ்ணவரைப் பிடித்துத் தண்டித்து யோகியரையுபசரித்து அடிமை பூண்டனன். இவர் செய்த நூல்கள் ஸ்ரீ சிவஞானபோத பாஷியம், சிததாந்த தீபிகை, சிவஞான சித்தியார் மணிப்பிரவாளவியாக்யானம், வேதாந்ததீபிகை, தத்வதரிசனம், பாஞ்சராத்திர மதசபேடிகை, சைவபரிபாஷைமுதலியன.

**சிவாக்கினிச்வரூபம்** — 1. வெண்மையான பத்மாசனத் திருப்பவராய், நான்குமுகம், நான் குகைகள், பிரம்மஸ்வரூபம், ஜடை, சுருக்கு, கமண்டலம், தண்டம், ஜபமாலை, கைந்நுனியில் தாமரையுடையவராய், செந்நிறத்தராய், முக்கண், பத்துக்கைகளிலும் சிவனைப்போல் ஆயுதமுடையவரா யிருப்பர். (அகோரபத்ததி.)

2. ஒருசரீரம், நான்குகொம்பு, இரண்டு தலைகள், இரண்டு முகங்கள், ஆறுகண்கள் இரண்டு மூக்குகள், எழுநாக்குகள், ஜடையஞ்ஞோப வீதம், முஞ்சி, மூன்று பதங்களுடன் கூடினவராய் எழு கரங்களுடன் ருஷபாரூடரா யிருப்பர். இவர்க்கு வலப்பக்கத்தில் ஹிரண்யை, கனகை, ரக்தை, கிருஷ்ணை யென்கிற நான்கு நாக்குகளும், இடப் பக்கத்தில் சுப்ரபை, அதிரக்தை, பஹுரூபை என்கிறவைகளும் கூறப்பட்டிருக்கின்றன. (ஸ்ரீ-காமிகம்).

**சிவாசாரிய பஞ்சமுத்திரை** — விபூதி, ருத்ராக்ஷம், உபவீதம், உத்தரீயம், தலைச்சீலை.

**சிவாத்துவிதிமதம்** — பதி அநாதி எனவும், அவன் தானே பெறுவானும், ஈவானும், எனவும், தன்னையன்றி அவன் வேறல்லன் எனவங் கூறும். (தத்துவநிஜாநு.)

**சிவாநந்தமுனிவர்** — இவர் ஸ்ரீசைலத்துத் தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர். இவரது நகங்களும் உரோமங்களும் பருவதம் முழுதும் பரவியிருக்கக் கண்ட காந்தருவர் இவரைக் கரடியோ என்றனர். அருகிருந்த சிடர் காந்தருவரைக் கரடிகளாக எனச் சபித்துத் தெலுங்கச் சோமையரால் விமோசனம் அடையக் கூறினர்.

**சிவானந்தலகிரி** — சங்கராசாரியர் இயற்றிய ஒரு சிவமகிமை கூறிய நூல்.

**சிவாலய முனிவர்** — தேவாரம் அடங்கன் முறையை அகத்தியர் திரட்டிக் கொடுக்கப் பெற்றவர்.

**சிவாஜி** — பொம்பாய் ராஜதானியின் மலைப் பிரதேசத்திலுள்ள ஒவ்வொரு மலைகளினுச்சிகளிலும் மலைக்கோட்டைக ளிருந்தன. அக் கோட்டைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிற்றரசனுக் குரியது. அவர்கள் அம்மலையடிப் பிரதேசங்களிலுள்ள நாடுகளை யாண்டு வந்தனர். இவ்வரசர்கள் தக்ஷிணத்திலிருந்த மகம்மதிய அரசனுக்குக் கீழ்ப்படிந் தாண்டு வந்தனர். சிவாஜியாலிவாகள் ஒருமித்தனர். இவன் தந்தை ஷஹாஜி யான்ஸ்லே பீஜபூர் அரசனிடம் வேலைசெய்து வந்தான். தந்தையிவனைப் பூனுவில் உறவினரிடம் வளருமாறு விட்டான். இவனுக்குக் கல்வியில் வெறுப்பும், அஸ்திரசஸ்திர வித்தைகளில் விருப்பும் இருந்தது. இவன் முற்காலத்து இந்துவீரர்களின் புகழ்களைக் கூறிய பாட்டுகளை ஜிஜாபாய் எனுந் தாய்கூறத் தெரிந்துகொண்டான். அவர்களது பெரும்புகழைத் தானுமடைய ஆவல்கொண்டான். இவன் தன்னையொத்த சிறுவர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குத் தலைமைபூண்டு பல சமநிலப் பிரதேசங்களைக் கொள்ளைகொள்வான். இவன் தன் சேநாபலத்தால் முதலில் புரந்தரமலைக் கோட்டையைக் கைப்பற்றினன். வாவர இவன்

வன்மையால் பல மலைக்கோட்டைகளைக் கைப்பற்றிச் செல்வத்திலும் சேனையிலும் வன்மை கொண்டான். பீஜபுரத்தரசன் இவன் துடுக்கை அடக்கும்படி அப்ஜல்கான் என்ற படைத்தலைவனை அனுப்பினன். சிவாஜி பயந்தவன்போல நடித்து நிராயுதனாய் வந்தால் தான் கீழ்ப்படிவதாய்ச் செய்தி அனுப்பினன். துருக்கன் இவன் சொல்லை நம்பித் துணையின்றி வந்தான். சிவாஜி தன் உடைகளில் ஆயுதங்களை மறைத்து அவன்மீது பாய்ந்து இரு புறங்களால் உடலைக் கிழித்து ஈட்டியால் குத்திக் கொன்றான். இவனது போர் வீரர், அப்சல்கான் படைமேற் பாய்ந்து படையை முரியடித்தார்கள். பின் சிவாஜி நாடுமுழுதும் வென்றான். எல்லா மாராட்டியத் தலைவர்களும் அவனுடன் சேர்ந்தனர். கொங்கணமென்ற மேற்கரைக்கெல்லாம் அரசனானன். பிறகு டெல்லி சக்ரவர்த்தியாகிய அவுரங்கசீப் அவனது விருத்தியை அடக்க எண்ணி ஷெயிஸ்ட்கான் எனும் தக்ஷிணத்துப் பிரதியாசனை யுத்தத்திற் கனுப்பினன். அவன் பூனாவில் பெருஞ் சேனையுடன் வந்திறங்கினன். சிவாஜி யிவனது சேனாபலங்கண்டு அஞ்சி யிவனுடன் நேரிற் போர்செயாது எவரும் அறியாதபடி 20 போர்வீரருடன் பிச்சைக்காரவேடம்பூண்டு ஷெயிஸ்ட்கான் இறங்கியிருந்த வீட்டிற்சென்று அவனைக் கொலை செய்யத் தொடங்குகையில் அவன் அங்கிருந்த சாளரத்தின்வழி குதிக்க எண்ணுகையில் அருகிருந்த சிவாஜி அவன் விரல்களை வெட்டினன். ஷெயிஸ்ட்கான் புனாவைவிட்டு ஓடினன். பிறகு ஔரங்கசீப் ஒரு பெருஞ் சேனையை யனுப்ப இவன் தன் தேசத்தில் ஒரு பாகமும், மொகலாய சேனாபத்யமும் தரின் தான் கீழ்ப்படிவதாகக் கூறினன். ஔரங்கசீப் அப்படியே ஒத்துக்கொண்டு சிவாஜியை வரும்படி கூறச் சிவாஜி வந்தனன். சிவாஜியை ஔரங்கசீப் ஒரு வீட்டில் அடைத்துக் காவலிட்டனன். சிவாஜி தான் வியாதியால் வருந்துவதாகக் கூறினன். அவனது ஆட்க ளவனை ஒரு கூடையிலிருத்தி வெளிக்கொண்டுவர, சிவாஜி சந்நியாசி வேடம் பூண்டு தன்னகர்போய்ச் சேர்ந்தனன். பின் ஒருபோதும் இவன் ஔரங்கசீபுக் கடங்காது பல இராஜ்யங்களைக்கட்டியாண்டு 52-ஆம் வயதில் காலமாயினன். பிறகு அவன் குமரன் சாம்பாஜி பட்டமடைந்தான். இவனை ஔரங்கசீப் எளிதிற் கொலைசெய்தான்.

சிவாஷ்டாஷ்ட மூர்த்தங்கள் — சுச. இலிங்கம், இலிங்கோற்பவம். முகலிங்கம், சதாசிவம், மகாசதாசிவம், உமாமகேசம், சுகாசனம், உமேசம், சோமாஸ்கந்தம், சந்திரசேகரம், ருஷபாரூடம், ருஷபாந்திகம், புஜங்கலளிதம், புஜங்கத்திராசம், சந்தியாநிருத்தம், சதாநிருத்தம், காளிதாண்டவம், கங்காதரம், கங்கா விசர்ச்சனம், திரிபுராந்தகம், கல்யாண சுந்தரம், அர்த்த நாரீசம், கஜயுத்தம், சுவராபக்னம், சார்த்தூலஹரி பாசுபதம், கங்காளம், கேசவார்த்தம், பிக்ஷாடனம், சிம்மக்னம், சண்டேசாநுக்ரகம், தக்ஷிணா மூர்த்தம், வீணாதக்ஷிணா மூர்த்தம், காலாந்தகம், காமாரி, லகுளேசம், பைரவம், ஆபதோத்தாரம், வடுகம், க்ஷேத்ரபாலம், வீரபத்ரம், அகோராஸ்தரம், தக்ஷயஞ்ஞஹதம், கிராதம், குருமூர்த்தம், அச்வாரூடம், கஜாந்திகம், ஜலந்தரவதம், ஏகபாததிரி மூர்த்தம், திரிமூர்த்தி திரிபாதம், ஏகபாத மூர்த்தம், கௌரீவரப்ரதம், சக்ரதானஸ்வரூபம், கௌரீலீலாசமன்விதம், விஷாபஹரணம், கருடாந்திகம், பிரம்ம சிரச்சேதம், கூர்ம்மசம்மாரம், மச்சாரி, வராகாரி, பிரார்த்தனாமூர்த்தம், இரக்த பிக்ஷாப்ரதானம், சிஷ்யபாவம்.

சிவி — வராககற்பத்தில் இருந்த இந்திரன்.

சிவிகை — இது வண்டியுருவாக மனிதரால் சுமந்து செல்லப்படும் யானம். இது, பலவுருக்களாகச் செய்யப்படும்.

சிவிங்கி — இது காட்டுப்பூனை யினத்தில் பெரிது. இதன் உடல் கரும்புள்ளிகளைப் பெற்றுச் சிவந்திருக்கும். 3 அடி உயரம், நீண்ட உடல். கழுத்து, மார்பு, விலாப்பக்கம், வால் முனை முதலிய இடங்களில் நீண்ட மயிருண்டு. நகங்கள் பூனைபோ லுள்ளுக்கடங்கா, அதிக மூர்க்கமுள்ளது. இதை வேட்டையாடுவோர் நாயைப்போல் வீட்டில் வளர்க்கிறார்கள். இது வருடத்திற் கொருமுறை 2 குட்டிகள் ஈனும். இது புலியைப்போல் உருவத்தில் சிறியது. இதற்குப் புள்ளியெனப் பெயர். இதற்குப் புலிக்குள்ள எல்லா அமைப்பும் குணமும் உண்டு. இவ்வினத்தி லிரண்டு வகையுண்டு ஒன்று கரும்புள்ளி கலந்த மஞ்சள்தோலை யுடையது, மற்றொன்று உடல்முழுதுங் கருந்தோலையே கொண்

டது, இதைச் சிறுத்தைப்புலி யென்பர். இது பெரிய பிராணிகளை யெதிர்க்காது ஏமாந்தால் குழந்தைகளையுந் தூக்கிக் கொண்டு போய்விடும். முயல், மான், ஆடு முதலியவைகளை வேட்டையாடும், இந்தியாவில் காடுகளில் உண்டு.

சிவியன் — ஒரு இருடி, சத்தியகாமனுக்கு முன்னோன்.

சிவியர் — சிவிகையார் என்பது சிவியா என்ருயிற்று. இடையரில் ஒரு பகுப்பென்றுங் கூறுவர். இவர்கள் மகம்மதிய கலகத்தில் மைசூரிலிருந்து ஓடிவந்தவர்கள் தொழில் பல்லக்குச் சுமத்தல், மீன் பிடித்தல்.

சிவேதகல்பம் — ஒரு கல்பத்தில் சிவபெருமான் சிவேதரூபமாய், வெண்ணிறம், வெள்ளைவஸ்திரம் தரித்துத் தோன்றினர் ஆதலால் அக்கல்பம் அப்பெயர் பெற்றது. இதில் சிவேதலோகிதை ண்டானுள். (இலிங்கபுராணம்.)

சிவேதமாதவன் — ஜகந்நாதத்திலுள்ள விஷ்ணுமூர்த்தத் தொன்று. (பிரகன்னாதீய புராணம்.)

சிவேதன் — 1. கனகவிசயர்க்கு நண்பன். (சிலப்பதிகாரம்)

2. இவன் பிரச்சோதனனுடைய மந்திரிகளுள் ஒருவன். ஆலோசனையில் வல்லவன். நளகிரி என்னும் யானை வெறிகொண்டு நகரை யழித்தபொழுது பிரச்சோதனன் கட்டளைப்படி சென்று மிக்க செற்றத்தோடு சிறையிலிருந்த உதயணனைமிக இரந்து அவன் மனத்தைக் கனிவித்துச் சிறையினின்றும் நீக்கி அழைத்து வந்து அதனை அடக்குவித்து அவனுக்கும் அரசனுக்கும் பழக்கம் செய்வித்தான். அரசன் குமாரர்களுக்கும் வாசவதத்தைக்கும் உரிய கல்விகளைக் கற்பிக்கும்படி அவனது அனுமதியாற் சென்று சொல்லி உதயணனை இணங்குவித்தவன். உதயணனுக்கு உரிய பணிகளை யெல்லாம் பின்னர் அன்புடன செய்துவந்தவன். ஐராபதமெனனு மலையிற் பிறந்த பொன்னின் நாணயங்களிற் பதினுயிரம் நன்கொடையாக உதயணனுல் பெற்றுன். (பெருங்கதை.)

சிவை — 1. அக்கினியின் குமாரனுகிய ஆங்கீரசனுக்குத் தேவி.

2. வாயுவின் தேவி.

3. அனிலன் என்னும் வசுவின் தேவி.

சிவோத்தமர் — அஷ்டவித்யேசுரரில் ஒருவர்.

சிளாபாயி — ஒரு அரசனுக்கு ஒரு பெண் மகவு பிறக்க அவளுக்குச் சிளாபாயிஎன்று பெயரிட்டு ஒரு கல்விமானைக்கொண்டு கல்வி முதலிய கற்பித்துவந்தனன். இப்பெண் தம்தந்தையார் செய்யும் சாளக்கிராம பூசையைப்போல் தானும் பூசை செய்ய வெண்ணித் தன் உபாத்தியாயரை நோக்கி ஒரு சாளக்கிராமம் தனக்குக் கொடுக்க வேண்டினள். உபாத்தியாயர் இவள் விளையாட்டு வியதைப் பொருளாக மதியாது ஒரு உருண்ட கல்லினைச் சாளக்கிராம மென்று கொடுத்தனர். இதைக்கொண்ட சிளாபாயி நாடோறுந் தவருது பூசைசெய்து வருங்காலையில் வயதடைந்து மணமகனைக் கூடி வேட்டகஞ் சென்றனள். செல்லும் வழிக்கண் இவள் பூசைதொடங்கக்கண்ட புருஷன் இதென்னென, உற்ருர் விளையாட்டாகச்செய்வதென்றனர். இதைக் கேட்ட கணவன் பூசைப் பெட்டகத்தை இவளறியாது ஆற்றிலிட்டனன். மறுதினம் பெட்டகத்தைக் காணுது வருந்திப் பெருமானை யெண்ணிப் புலம்பி நான்குநாள் ஆகாரமிலாது பெட்டகம் வந்தாலன்றி உணவுகொள்ளேனென் றிருக்கையில் பெருமாள் இவளதுமன உறுதிக்கு மகிழ்ந்து ஆசாரியனைப்போல் வந்து பூசைப் பெட்டகத்தைத் தந்து அகன்றனர். மீண்டும இவள் பெட்டகத்தைப் பெற்றதறிந்த கணவன்இதை யாற்றினின்றெடுப்பது தேவர்க்கன்றி யேனையோர்க்காகாதென மனைவியிடத் தன்புமிக்கு வைணவனுயினன்.

சிள்வீடு — விட்டிலின் வேறுபாடென எண்ணபபடுகிற ஒருவகைய பூச்சி.

சிறப்பணி — அதாவது ஒப்புமையாற் பொதுமையுற்றிருந்த இரண்டு பொருள்களுக்கொருகாரணத்தால் விசேஷந் தோன்றுதலாம். இதனை வடநூலார் விசேஷாலங்கார மென்பர்.

சிறப்புப்பாயிரம் — நூலாசிரியன் பெயர், நூலின் வழி, அது வழங்குமிடம், நூலின் பெயர், யாப்பு, நூல் நுதலிய பொருள், கேட்போர், அதனுலுண்டான பயன், நூல் வழங்கிய காலம்; நூல் செய்தற்குக் காரணம், இவைகளைக் கூறுவது. (நன்-பொதுப்பா.)

சிறப்புநிலையணி — பிரசித்தமாகிய ஆதாரமில்லாதிருக்க ஆதேயத்தி னிருப்பைச் சொல்லுதல் இதனை விசேஷாலங்காரம் என்பர். (குவல.)

**சிறப்புலிநாயனார்** — திரு ஆக்கூர் என்னுந் தலத்தில் பிராமணகுலத்தில் உதித்துச் சிவபக்தி சிவனடியவர் பக்தியிற் சிறந்து ஸ்ரீபஞ்சாக்ஷரமோதி யாகஞ்செய்து அதன் பலனைச் சிவமூர்த்திக்குத் தத்தஞ்செய்து முத்தியடைந்தவர். பெரிய - புராணம்.

**சிறிய கோவிந்தப் பெருமாள்** — எழுபத்து நாலு சிங்காதனாதிபதிகளில் ஒருவர். எம்பாருக்குச் சகோதரர் என்பர். (குருபரம்.)

**சிறியாண்டான்** — எழுபத்தினாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். உடையவர் திருவடியை ஆசிரயித்தவர். கூரத்தாழ்வானைத் தேற்ற உடையவரால் அனுப்பப்பட்டவர். (குருபரம்பரை)

**சிறியாண்டாள்** — கோவிந்தப் பெருமாளின் தேவியார். இவள் ஆழ்வாரிடம் சந்நியாசம் பெற்ற அம்மையார்களில் ஒருத்தி.

**சிறுகாக்கைபாடினியார்** — ஒரு தமிழாசிரியர். இவர் தம் பெயரால் ஒரு இலக்கண நூல் செய்திருக்கின்றனர்.

**சிறுகாலன்** — நரி உருவமாய்க் கசியபரிடத்தில் சம்வாதம்செய்த இந்திரன்.

**சிறுகுடிகிழான் பண்ணன்** — குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவனுக்கு நண்பன். இவனுக்குப் பண்ணன் எனவும் பெயர். கோவூர்க்கிழாராலும், பாடப்பெற்றவன். புற - நா.

**சிறுகுடி** — 1. இது கிழான்பண்ணனுடைய ஊர். (புறநானூறு.)

2. கள்ள சாதியாரில் ஒருவகையார். (தர்ஸ்டன்.)

**சிறுதன்** — (சூ.) பகீரதன் குமரன். இவன் குமரன் நரபாகன்.

**சிறுதாலி** — இது ஙகக்கோளர், மறவர்சாதியுட்பகுப்பு.

**சிறுத்தைப்புலி**—இது புலியினத்தில் சற்று சிறிது. வால் நீங்க $3\frac{1}{2}$ அடி நீளமிருக்கலாம், உடலில் பழுப்படைந்து புள்ளிகொண்ட மயிர் மூடியிருக்கும், இதற்கு இரவில் கண் நன்றாகத் தெரியும். இது ஆசியா, ஆபிரிக்கா, இந்தியா முதலிய காடுகளின் புதர்களில் வசிப்பது. இது கொல்லும் மிருகங்களைத் தானிருக்கும் புதர்களுக்குக் கொண்டுபோய்த் தின்று மிகுந்ததை வேண்டியபோது தின்னும். இவ்வினத்தில் கருநிறமுள்ளதும் உண்டு.

**சிறுத்தொண்ட நாயனார்** — இவர் திருச்செங்காட்டங்குடியில் வேதியர்குலத்தில் திருவவதரித்துப் பரஞ்சோதியார் எனத் திருநாமங்கொண்டு வேத அத்யயனமும் மந்திரித்தொழிற்குரிய வில்வித்தை முதலியவுங் கற்று வல்லவராய்ச் சோழனிடத்தில் மந்திரித்தொழிலிலும், சிவபக்தி, சிவனடியவர் பக்தியிலும் சிறந்தவராய் இருந்தனர். இவர் அரசன்பொருட்டு வடநாடு சென்று பகைவரைவென்று திறைகொண்டுவர அரசன் இவர் சிவபக்திமான் என்று மற்றை மந்திரியரால் கேள்வியுற்று இவர்க்கு வேண்டிய நிதிகொடுத்து உம்முடைய கருத்தின்படி சிவத்தொண்டு செய்திருக்க என்று நிறுத்தினன். தொண்டர் வெண்காட்டுநங்கை என்னும் தமது மனைவியாருடன் இல்லறநடத்தித் தம்மைத் தொண்டர்களிற் சிறியவர் என்று மதித்துச் சிறுத்தொண்டர் என்னும் நாமம் பெற்றுவருகையில் இவரது அன்பினை உலகமறிந்து பிழைக்கச் சிவமூர்த்தி ஒரு பைரவ திருக்கோலங் கொண்டு இவரது வீட்டிற்கு அமுதிற்கு எழுந்தருளினர். நாயனார் கண்டு களித்து அமுது கொள்ள அழைக்க அடியவர் நாம் ஆறு மாதத்திற்கு ஒருமுறை அமுது கொள்வது; அவ்வுணவு நரமாமிசத்துடன் கூடியதாம். அவ்வூன் ஒரேபுத்திரனாய் அங்கப்பழுதிலானாய் ஐந்து வயதுள்ள சிறுவனை ஒரு உறுப்புங் குறையாது சமைத்ததாய் இருத்தல்வேண்டும் என்றனர். இதனைக்கேட்ட நாயனார் அவ்வகை படைக்கவுடன்பட்டு மனைவியிடம் வந்து அடிய்வர் கூறியதைக் கூறி அயலார் தங்கள் குமரர்களைக் கொலைசெய்யச் சம்மதிப்பரோ என்று தமது குமரனாகிய சீராளதேவனை மனப்படிசெய்து சமைத்துப் பரிகலம்திருத்திப் பைரவக் கோலங் கொண்ட சிவமூர்த்திக்குப்படைத்தனர். பைரவர் எல்லா உறுப்பும் சமைக்கப்பட்டனவோ என, நாயனார் தலையொழிந்த மற்ற உறுப்புக்கள் அனைத்தும் சமைக்கப்பட்டன என்றனர். பைரவர் ஆயின் அதனையும் சமைத்தளிக்க என்றனர். இவ்வகை ஒருக்கால் நேருமென எண்ணி அதனையும் சமைத்துவைத்த சந்தனத்தார் எனுந் தோழியார் அதனைக்கேட்டு அந்தத் தலைக்கறியையும் படைத்தனர். பைரவக் கோலங்கொண்ட சிவமூர்த்தி உட்கார்ந்து நம்முடன் புசிக்க மற்றொரு சிவனடியார் வேண்டும் என்றனர். நாயனார் எங்குந் தேடிக்காணாது கூறப் பைரவர் நீரே நம்முடன் உட்காருக என்றனர். நாயனார்

உடன்பட்டுப் பைரவர்க்குமுன் தாம் புசிக்கின் அடியவர் புசிப்பரென விரைந்தனர். இதற்குள் பைரவர் தடுத்து உமக்குப் புத்திரர் இருந்தால் உடனுண்ண அழையுமெனத் தொண்டர் கட்டளையை மறுக்க அஞ்சி மனம்வருந்தித் தெருவிற் சென்று "சீராள" என அழைத்தனர். சிவாநுக்கிரகத்தால் குமரன் தந்தையின்குரல் கேட்டுச் கல்விச்சாலையிலிருந்து எதிரில் ஓடிவர நாயனர் குமரனைவாரி அணைத்து இல்லுட்புக இலையிலிருந்த உணவுகளும் பைரவரும் மறைந்தனர். சிவமூர்த்தி இடபாரூடராய்க் காட்சிகொடுக்கத் திருவடியிற் சேர்ந்தவர். (பெரிய - புராணம்)

சிறுபஞ்சமூலம்—நீதிநூல்களுள் ஒன்று, காரியாசானல் இயற்றப்பட்டது. சங்கமருவிய பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று.

சிறுபள்ளி தேவராசபட்டர் — எழுபத்துநாலு சிம்மாசனதிபதிகளில் ஒருவர். (குரு பாம்பரை.)

சிறுபாணாற்றுப்படை — (சிறுபாணாறு) ஏறுமாநாட்டு நல்லியக்கோடனை நத்தத்தனர் பாடியது, சங்கமருவிய பத்துப்பாட்டில் ஒன்று.

சிறுபாண்டரங்கன் — இடைச்சங்கப் புலவருள் ஒருவன்.

சிறு பிள்ளையுடையார் — மணக்கால் நம்பியை ஆச்ரயித்தவரில் ஒருவர்.

சிறுபொழுதாவன — மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடுஎன்பன.

சிறுமலை — பாண்டிநாட்டிலுள்ள மலைகளில் ஒன்று. (சிலப்பதிகாரம்)

சிறுமேதாவியார் — கடைச்சங்கப்புலவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை).

சிறுமையணி — அஃதாவது, அற்பமாகிய வாதேயத்தினு மாதாரத்தை மிக வற்பமாகச் சொல்லுதல். இதனை வடநூலார் அல்பாலங்காரமென்பர்.

சிறுமோலிகனர் — இவரைப்பற்றி யாதும் விளங்கவில்லை; குறிஞ்சியைப் பாடியுள்ளார். தலைவி காம நோயால் வருந்துவதறிந்த அன்னை வினவியதற்குக் கூறிய விடை ஆராயத்தக்கது. இவர் பாடியது (நற். கசக-ம் பாட்டு.)

சிறுவெண்டேரையார் — ஒருபழைய செந்தமிழ்ப் புலவர். (புறநானூறு.)

சிறைக்குடியாந்தையார் — ஆதன் தந்தை ஆந்தை. இவர் மனைவியோடு வாழுநாளிற் பொருள்வேண்டிக் காதலியைப் பிரிய நேர்ந்ததுகண்டு நெஞ்சைநோக்கிப் புணர்ந்திருப்பிற் பொருள் அடைவதரிதெனவும் பிரியிற் புணர்ச்சியில்லை யெனவும் பலவாறு கூறி வருந்துவராயினர்: (நற் கசு.) அது கண்ட அவர் காதலி பிரிவர்போலுமென்று சுடுந்துனிகொண்டு பிரியின் இறந்துபடுவேனெனக் கூறி மாழ்கினள். புலவர்பிரான் காதலியை நோக்கி நீ பூப்பெய்திய மூன்றுநாட் பிரிந்துறைவது ஓர் ஆண்டளவு பிரிந்தாற்போலாகின்ற எனக்குப் பிரிவென்பது எப்படி நேரும்? இது காரணமாக நீ இறப்பின் என்னுயிரும் உடன்போகக் கடவதாகவென்றும், நாம் இருவரும் சேர்ந்து வாழாது பிரிந்து ஒருவராக வாழ்வதினும் இறப்பதே நலமென்றும் வற்புறுத்திக் கூறினர். குறு - ருஎ. அங்ஙனம் கூறியதன்றி அவள்கேட்டு இஃதுண்மையென்று கொள்ளுமாறு பூமாலை போன்ற அவளுடைய மேனிதளரினும் மேதக்கது முயங்குதற்கு மினிதாயிராகின்றது குறு - கூஉ. வன்மையாக அணைத்து முயங்கும் அத்தகையாளைப் பிரிந்தால் யான் எப்படி மறந்தமைகுவேன் குறு - கஉங. அத்தகைய நறுந்தண்ணியளைக் கூடுந்தோறும் பிரியகில்லேன் இதனை நீ தெளிவாய் காண் குறு - உஎங. நின்னட்பைவிடுகிலேன் என்று அவள் தெரியுமாறு கூறினர். குறு - ௩௦௦. அவர் பிரிவதில்லையென்று தெளிவித்தலும் காதலி முன்னையினும் பலபடியாக அவர்பாலன்பு மிக்கு அவ்வண்ணமே யொழுகுவாளாயினள், அங்ஙனம் ஒழுகுவதறிந்த ஆந்தையார் உள்ளுருகித் தலைப்புணைக்கொளின் அவளுங் கொள்ளுவள் யான் யாற்றினில் வீழின உடனே தானும் விழுந்துயிர் விடுந்தன்மையளல்லளோ குறு - உஉஉ. என்று கூறிப் பிரிவென்பதைக் கனவிலும் நினையாதவராய் கலந்து முயங்கி மகிழ்ந்துறைவாராயினர். இங்ஙனம் இவர் அழகமைந்த இன்பச்சுவை நனி சொட்ட சொட்டப் பாடிய பாடல்கள் விழைவு விடுத்த விழுமியோரையும் விழை வெய்துவிக்குந் தன்மையவாகும். இவர் பாடல்கள் பிற்காலத்துச் சான்றோர் துறைப்பாற்படுத்தித் தொகைநூலுட் கோத்தனர். இவர் பாடியனவாக நற்றிணையில் கசு-ம் பாடலொன்றும், குறுந்தொகையில் எட்டுமாக ஒன்பது பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**சிற்சுகாசாரியார்**—வருணனம்சமான் வேதியர். சங்காசாரியரை வழிபட்டவர்

**சிற்பம்** — இது சிலை, மண், மெழுகு, சாந்து, செங்கல், கருங்கல், மரம், உலோகம், தந்தம், வண்ணம், கண்டசர்க்கரை முதலியவற்றால் பிரதிமாதி கிராம நிர்மாணத்தைக் கூறும் சாஸ்திரம். இது மயன், விச்வகர்மன் முதலியோராலும் மற்றவர்களாலும் கூறப்பட்டிருக்கிறது. இவைகளுக்கு முதனூல் சிவாகமங்களாம். இச்சிற்பம், ஒருவன் எடுத்துக்கொண்ட காரியம் இனிது முடியவேண்டிக் காலவிதி, நிமித்தபரீக்ஷை, பூபரீக்ஷை, பலிவிதாம், பூகர்ஷணவிதி, சங்குஸ்தாபனவிதி, மானோபவிதி, பதவின்யாசவிதி, சூத்ரநிர்மாணவிதி, வாஸ்துதேவபலி, கிராமாதிலக்ஷணம், விஸ்தார ஆயாமலக்ஷணம், ஆயாதிலக்ஷணம், நக்ஷத்ரசக்ரம், தண்டிகாதிவிதி, வீதித்வாராதிமாநம், கிராமாதிதேவதாஸ்தாபனம், கிராமாதிவின்யாசம், கர்ப்பகியாசம், கிராமக்ரஹவின்யாசம், வாஸ்துசாந்தி, சாலாலக்ஷணம், வர்த்தமானம், நந்தியாவர்த்தம், சுவஸ்திகம், சதுச்சாலாவிதி, அஸ்திசாலாவிதி, மாலிகாலக்ஷணம், லாங்கலம், மௌலிகம், பத்மமாலிகா லக்ஷணம், நகராதிவிபேதம், பூமிலம்பவிதி, ஆத்யேஷ்டகாவிதி, உபபீடவிதி, பாதமானவிதி, பிரஸ்தரவிதி, பிராசாதபூஷணவிதி, கண்டலக்ஷணவிதி, சிகரலக்ஷணவிதி, ஸ்தூபிகாலக்ஷணவிதி, நாளாதிஸ்தாபனவிதி, தளவிசேஷவிதி, மூர்த்தஸிஸ்தாபனவிதி, லிங்காதிபிரதிமாலக்ஷணவிதி, பிரதிஷ்டாவிதி, விமானஸ்தாபனவிதி, மண்டபலக்ஷணவிதி, பிராகாரலக்ஷணவிதி, கோபுரவிதிமுதலியவற்றை விரித்துக் கூறும். ஈண்டு ஒவ்வொன்றையும் எடுத்துக்கூறின் நூல் இடங்கொடாதாகையால் அதில் அடங்கிய விஷயத்தை மாத்திரம் கூறினோம். அதனைக் காமிகாதி சிவாகமங்களினும், சிற்ப நூல்களினும் காண்க.

**சிற்பநூல்** — (௩௨) விச்சுவதருமம், விச்சுவேசம், விச்வசாரம், விருத்தம், தாவட்டம். நளம், மயம், அநுமான், பானு, கற்பாரியம், சிருட்டம், மானசாரம், வத்துவித்யாபதி, பராசாரியம், அருடிகம், சயித்தம், வாத்துபோதம், வித்தாரம், இந்திரம், வச்சிரம், சௌமம், விசுவகாசிபம், மகதந்திரம், விசாலம், சித்திரம், காபிலகாலயூபம், நாமசங்கிதை, சாத்திகம், வசவபோதம், அதிசாரம், வெகுச்சுருதம், மானபேதம் என்பன.

**சிற்பத்திற்குதவிய மரங்கள்** — சிந்தூரவிருக்ஷம், அல்லது கருவாலிமரம் (Oak) இது உறுதியானதும் அழகானதுமான மரம் இதனால் பலவேலைகள் செய்வர். தேக்கு - இது உறுதியும் கனமுமான மரம். இது மிகுதியம் பர்மா, இந்தியாவில் உண்டாகிறது. பல கட்டடங்களும் பல சாமான்களும் இதனால் செய்யப்படுகிறது. தேவதாரு (Pine) வேலை செய்வதற்கு மிருதுவாயும் நீடித்திருப்பதுமாகிய மரங்களில் ஒன்று. அமெரிக்காவில் விசேஷம். சிடர்மாம் - தேவதாருவைப்போன்ற மரம். இதுவும் நெடுநாளிருக்கக்கூடிய மரம் சிரியாவில் மிகுதி. மேல்நாட்டு உறுதியான மரங்கள் எலம், பீச், பிர்ச், ஆஷ் என்பன. (Elm Beech, Birch, Ash) அழகான மரங்கள் மாஹோகானி, செம்மரம், எபோனி, வால்நட், மேபில், (Mahogany, Rose-wood, Ebony, Walnut, Maple) இவை முறையே அமெரிகா, பிரேசில், ஆபிரிகா, இந்தியா, மத்ய ஐரோபா, வடஅமெரிகாக்களிலுள. இவற்றால் அழகிய வேலைகள் செய்யப்படும். இன்னும் இந்தியாவில் தேக்கு, செம்மரம், கருங்காலி, ஆச்சா, கடுக்காய் மரம், மா, சாட்டுவாகை தேவதாரு, அகில் முதலிய உறுதியான மரங்களும் உண்டு.

**சிற்றம்பலநாடிகள்**—இவர் மெய்கண்ட சந்தானத்தைச் சேர்ந்தவர். கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியருக்கு மாணாக்கர் எனவும் கூறுவர். இவர் சிவப்பிரகாசம் என்னும் சைவசித்தாந்த சாத்திரத்திற்குக் கருத்துரைச் சூத்திரம் செய்தனர். இவர் திருச்செந்தூர் அகவலும் செய்தனர் என்பர். இவர்க்கு (௬௩) மாணாக்கர்கள். இவர் தம் மாணாக்கர் அனைவருடன் ஒரு இடத்தில் உணவுகொள்ளுகையில் அங்கிருந்த பரிசாரகன் நெய்யென நினைத்து வேப்பெண்ணெயைப் பரிமாற அனைவரும் அதனையறியாது உண்ண ஒருவர் வேப்பெண்ணெய் என்று அறிந்து உணவைக் கான்று ஆசாரியருக்கு அறிவித்தனர். ஆசாரியர் இவன் பரிபாகம் இல்லாதவன் என்று நீக்கிச் சிலநாளிருந்து தமது சீடர் அனைவரில் ஒருவர் தவிர மற்றவர் அனைவருக்கும் தனித்தனி சமாதிக்குழி செய்

வித்துச் சிடருடன் ஒரே காலத்தில் சமாதியடைந்தவர்.

சிற்றரையம் — இது அரையமென்னும் நகரத்தின் ஒரு கூற்றின் பெயர். (புற நா).

சிற்றுண்டிவகைகள் — இவை செய்யும் வகை முதலியவற்றைப் பாகசாத்திரங்களில் காண்க. பிட்டு, இலட்டுகம், அப்பம், அஃகுல்லி, பில்லடை, தினைமா, நென்மா, கோதுமைமா, தோசை, பூரிகை, கடலைமா சேர்ந்த சாதம், எள்ளோரை, புளியோரை, ததியோதனம், சருக்கரைப் பொங்கல், எலிமிச்சம் பழரஸம் சேர்ந்த சாதம், கிச்சிலி ரஸம், திராக்ஷரஸம், வாதுமைப்பருப்பு, கத்திரிக்காய், வண்டைக்காய், சேமைக்கிழங்கு, கருணை, வாழைப் பழம், தேங்காய், பலாக்காய் முதலிய சேர்ந்த சாதங்கள். துவரம்பருப்பு, பச்சைப்பயறு உளுத்தம்பருப்பு, கடலைப்பருப்பு, கொள்ளுப்பருப்பு முதலிய பொங்கல்கள், உளுந்துவடை, தித்திப்பு உளுந்துவடை, வெங்காயம் சேர்ந்த வடை, இடலி, முருக்கு, கடலைரொட்டி, கோதுமைரொட்டி, கடலைமாதித்திப்பு உருண்டை, பச்சைப்பயறு உருண்டை, துவரை உருண்டை, மாவுருண்டை, பூரணவுருண்டை, பணிகாரம், மகிழம்பூப் பணிகாரம், எருக்கங்காய் கொழுக்கட்டை, குழவுண்டை, அடுக்குப் பணிகாரம், கச்சுருக்காய், எள்ளுருண்டை, எள்ளடை, கடலைச் சுவையல், பேணி, பூந்தி பலகாரம், ஜிலேபி எனும் தேங்குழல், கோதுமைரவைஅல்வா, வாதுமைஅல்வா, பொரிவிளங்காய், பலவித பச்சி, பலவித பாயசங்கள், கிச்சடி வகைகள் முதலியன.

சினி — 1. யுதாசித்தின் குமரன். இவன் குமரன் அநமித்ரன்.

2. அநமித்திரன் குமரன், இவன் குமரன் சத்தியகன்.

3. சூரன் குமரன், இவன் குமரன் போசன்.

சின்னதம்பி புலவர் — இவர் யாழ்ப் பாணத்து நல்லூரினர். இவர் வில்லவராய முதலியாருக்குக் குமரர். வேளாண்மரபினர். சைவர் தமிழ் இலக்கிய இலக்கணம் வல்லவர். இவர் செய்த நூல்கள் மறைசையந்தாதி, கல்வளையந்தாதி, இவர் இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னிருந்தவர் போலும்.

சின்னபொம்மய்ய நாயக்கன்—என்ற பொம்மய்ய நாயக்கன், வேலூர் அரசன், இவன் அப்பைய தீக்ஷிதரை ஆதரித்தவன் (சகம் 1504). (ஆரணிதாலுகா அடைபாலம் சாசனம் நல்லபொம்ம நாயக்கன் சகம் 1493.

சிஃறுழிசைக்கோச்சகக் கலிப்பா — சிலதாழிசைகளோடு பிறவுறுப்புக்களைக் கொண்டுவருவது.

சிஷ்ணு — அருச்சுனன்.

சிஷ்யபாவமூர்த்தி — பிரணவத்திற்குப் பொருள்கூறப் புகுந்த கந்தமூர்த்தியிடம் சிவமூர்த்தி மாணக்கர்போலிருந்து அவர் கூறியதைக் கேட்ட திருவுரு.

சிஷ்யபேதம் — (கரு) அத்வாலகன், பாலகன், நிராதாரி, பிரமாதி, அம்புகன், சியாவகன், பாவகன், அநுமதி, தாமசன், சத்திரபிருது, பௌரேயன், விசாரதி, காலவன். (சைவபூஷணம்.)

சீகண்டர் — சைவபத்ததிசெய்த சிவாசாரியருள் ஒருவர்.

சீகண்டருத்ரர் — அநந்தருக்குக் கீழுள்ள புவனங்களில் அதிகாரரா யிருக்கும் புவனகர்த்தா.

சீகதன் — பாரதவீரருள் ஒருவன். இவன் பாரதப்போரில் முதனாள் யுத்தத்தில் சிகண்டியுடன் போர்புரிந்தவன்.

சீக்கை — ஒருநூல்.

சீசாதகர்ணன் — கிருஷ்ணன் குமரருள் ஒருவன். இவன்குமரன் பௌர்ணமாசன்.

சீசைலமுனிவர் — விஷ்ணுமூர்த்தியாய் அம்பரீஷன் வீட்டில் அபகரிக்கப்பட்டவர்.

சீடதாசி — தேவாங்க வகையினரில் தாசி.

சீதக்காதி — இவர் சாதியில் லப்பை, இருக்கை காயற்பதி, மகாத்தியாகி. பலவித்துவான்களுக்குக் கொடுத்துப் பாடல் பெற்றவர். இவரிறந்து சமாதிக்குழியில் இருக்கையில் படிக்காசுப்புலவர் இவரிறந்தது அறியாது இவர் ஊர்சென்று விசாரிக்கையில் இறந்தனர் எனச், சமாதியைத் தேடிச் சென்று அவ்விடம் "தேட்டாளன் காயற்றுரைசீதக் காதி சிறந்த வச்ர, நாட்டான் புகழ்க்கம்ப நாட்டி வைத்தான்றமிழ் நாவலரை, ஒட்டாண்டியாக்கி யவர்கள் தம் வாயில் ஒருபிடிமண், போட்டா னவனும் ஒளித்தான் சமாதிக்குழிபுகுந்தே" எனப் பாடச் சமாதியிலிருந்த பிரேதம் கை நீட்டியது. விரலில் விலையுயர்ந்த மோதிரம்

இருக்கப் புலவர் அதனைப் பெற்றுப்போன தாகக் கூறுவர். இதனால் "செத்துங் கொடுத்தான் சீதக்காதி" என்பர்.

சீதசத்துருமகாராஜா — அசிதசுவாமியின் தந்தை. இவர் தேவி விசயை.

சீதத்தன்—1. இராசமாபுரத்துள்ள ஓர்வணிகன். இவன் வெள்ளிமலையிலிருந்து காந்தருவதத்தையை அழைத்துவந்தவன்.

2. சீவகன் தோழருள் ஒருவன்.

3. கோவிந்தமகாராஜாவின் புத்திரன்.

சீதநாடு — நீலகிரி, கோயம்பத்தூர்.

சீதார் — 1. இவர் சைநர். ஜயவர்மாவின் தந்தை.

2. சித்திபுரத்தரசன், நீலபதி என். வளுக்குத் தந்தை. (மணிமேகலை.)

சீதாதேவர் — ருஷபதீர்த்தங்கரின் ஆறுவது பிறப்பு.

சீதளதீர்த்தங்கரர் — (சைநர்.) இவர் பத்தாவதுதீர்த்தங்கர். இவர் மலையதேசம் இராசபத்திரலபுரம், தந்தை திருடாதன், தாய் சுநந்தை. இவர் கிருதயுகத்தில் மாசிமாதம் கிருஷ்ணபக்ஷம் துவாதசிதிதி உத்தராடநக்ஷத்திரத்தில் இக்ஷுவாகு குலத்தில் பிறந்தவர், இவர் உன்னதம் தொண்ணூறுவில், சுவர்ணவர்ணம், ஆயுஷ்யம் ஒரு லக்ஷம் பூர்வம், கணதரர் அனகாரர் முதல் எண்பத்தொருவர்.

சீதா -- ஒரு நதி. (பா. பீஷ்).

Theriver yarkh and on which the town of yarkhand is situated (Eastern Turkistan).

சீதாபண்டிதர் — இவர் அரிபக்தி மேற்கொண்டு யாவரிடத்திலும் அன்பு மிகுந்தவர். இவர் தம் மனைவியாருடன் யாத்திரை செய்ய விரும்பி மனைவியாரைக் குதிரை மீதேற்றிக் கொண்டு செல்கையில் ஒரு கிராமத்தருகில் பொழுதுசெல்ல மனைவியார் நாம் திரும்பிவிடுவோம் எனக் கூறினர். ஆண்டுவந்தகள்ளர் சிலர் நாங்களுங்களுக்குத் துணைவருகிறோம் வருக என அழைக்கப் பண்டிதர் இசையாது பிரமாணமிடின் வருவதாகக் கூறக்கள்ளர் பிரமாணமிட்டனர். பண்டிதர் பெருமாளிருக்கின்றனரென்று அவர்களுடன் செல்கையில் கள்ளர் பண்டிதரைக்கொன்று அவர்மனைவியாரிடம் வந்து கணவனிறந்ததைக் கூறி நிற்க மனைவியார் சாக்ஷியாக இருந்த பெருமாள் மறைந்தாரோ என ராமமூர்த்தி கோதண்டத்துடன் தோன்றிக் கள்ளரைக் கொலைசெய்து பண்டிதரை யெழுப்பி வழித்துணை சென்று மறைந்தனர்.

சீதாபிராட்டியார் 1. சநக மகாராஜாவின் புத்திரியார். இவள் பூர்வஜன்மத்தில் வேதம் ஓதிக்கொண்டிருந்த குசத்துவசர் வாயில் தோன்றி வேதவதீ எனும் பெயருடன் வளர்ந்துகொண்டு இருக்கையில் தம்பன் எனும் அரக்கன் இவளைத் தனக்கு மனைவியாக இருடியைக்கேட்க இருடி இவள் விஷ்ணுமூர்த்திக்கு மனைவி; உனக்குக் கொடுக்கேன் என, அரக்கன் கோபித்து இருடியைக் கொன்றனன். தனித்த வேதவதி விஷ்ணுவையெண்ணித் தவஞ் செய்கையில் திக்குவிசயத்திற்கு வந்த இராவணன் இவளைவலிதிற்பிடிக்க வேதவதி நீ தீண்டிய உடலைநான் வைத்திருப்பதில்லை. நானே உன்னரசை அழிக்கிறேன் என்று தீக்குளித்தனள். இவள் இலங்கையில் ஒரு தாமரைப்பொய்கையில் தாமரையிற் பிறந்து சிவபூசைக்கியித்தம் பூக்கொய்யவந்த இராவணன் கண்காண இருந்தனள். இராவணன் அக்குழந்தையை எடுத்துச்செல்ல அங்கிருந்த நிமித்திகர் இக்குழந்தை யிவ்விடம் இருக்கின் இலங்கையழியும் என்றனர். அதனால் ஒரு பெட்டியில் இட்டுக் கடலில்விட்டனன். அது அலையில் மிதந்துவந்து வெள்ளத்தில் மிதிலைநகரிற் புதைந்தது. அத்தருணத்தில் மிதிலைநகர்க்கு அரசனாகிய சநகன் யாகஞ்செய்ய உழுத கலப்பையின் அடிமுனையில் பெட்டிதோன்றத் திறந்துபார்த்துக் குழந்தை யிருக்கக்கண்டு வளர்த்துவந்தனன். இவள் வளர்ந்து பருவமடைந்து வில்லைமுறித்த இராமபிரானை மணந்து நகரினின்று ஆரணியம் நீங்கிய இராமமூர்த்தியை விடாது பின்பற்றிச் சென்று சித்திரகூடங்கடக்கையில் அத்திரியின் ஆச்சிரமத்தில் அநசூயையால் உபசரிக்கப்பட்டுத் தண்டகாரணியத்தில் வந்த மாரீசனாகிய மாயமானைக்கண்டு ஆசைகொண்டு கணவரிடம் பிடித்துத் தாச் சொல்ல, அவர் பிடிக்கப்போக அவன் கூவிய குரல் கேட்ட லக்குமண, சீதா, எனும் ஓசையால் மைத்துனரைப் போகச் செய்து தனித்திருந்து இராவண சந்நியாசியிடம் பிடிபட்டு இலங்கை சென்று அசோகவனத்தில் சிறையிருந்து திரிசடை தேற்றத்தேர்ந்து காமநோயால் விகாரப்பட்டுத்

தன்காவில் விழுந்த இராவணனுக்கு உன்னுயிர் நீங்குமுன் நீ நன்னெறி தேடெனஅஞ்சாது அவன் முகத்தைப் பாராமல் துரும்பைக் கிள்ளியெறிந்து பேசி இராமமூர்த்தி தம்மைத் தேடிவாராததினுல் தன் உயிரைப் போக்கிக்கொள்ளச் சிறையிலிருந்து நீங்கி அசோகவனத்திருந்த சிஞ்சபாவிருக்ஷத்து அருகில் வருங்கால் அனுமனைக்கண்டு அனுமன் வாய்ச்சொல்கொண்டு இராமமூர்த்தியின் செய்தியறிந்து மனந்தேறிச் சூடாமணி தரப்பெற்று அநுமனைச் சிரஞ்சீவியாய் இருக்க வாழ்த்தி அரக்கர் அநுமனுக்குச் செய்த அக்கினி பாதைக்கு அநுமனை அக்கினி வாதிக்காதிருக்க அக்கினியை வேண்டியவள். இராமமூர்த்தி யுத்தத்திற்கு வந்தசெய்தி கேட்டிருக்கையில் இராவணன் மருத்தவனைக் கொண்டு செய்வித்த மாயாசநக வுருவத்தால் மயங்கித் துன்புற்றவள். இந்திரசித்தால் எய்யப்பட்ட பிரம்மாத்திரத்தால் மூர்ச்சையடைந்த இராம இலக்குமணரையும்மற்றவரையும் புஷ்பகவிமானத்திருந்து கண்டு விசனமடைந்தவள். இராவணன் இறந்தபின் அக்கினி குளித்து அருங்கற்பினளாகிச் சேதுகண்டு அயோத்தியடைந்து பட்டமகிஷியாய்க் காடுகாண இச்சைகொண்டு வான்மீகி ஆச்சிரமம் அடைந்து குசலவரைப் பெற்று அவர்களை முன்னிட்டு இராமமூர்த்தியிடஞ் சென்று கற்பினிலை தெரிவித்து யான் என் கணவரைத் தெய்வமாகக் கொண்டது உண்மையாயின் என் தாய் எனக்கு இடங்கொடுக்க என்னப் பூமிதேவியால் தழுவப்பெற்றுப் பரமபதம் அடைந்தவள். இவள் தாய் சத்தியைநோக்கித் தவம்புரிந்து இவளைப் பெற்றனள் என்பது. (கூர்மபுராணம்).

2. கங்கையின் பிரிவு.

3. வேதவதியைக் காண்க. உண்மையாகிய சீதை இராவணனை யடைந்தனள். அக்கியால் சிருட்டிக்கப்பட்ட சீதை இராமர், அக்கி, யிவர்களின் கட்டளையால் சிவனைநோக்கித் தவமியற்றினள். இவள் தவத்திற்கு மகிழ்ந்து தரிசனந்தந்த சிவபெருமானைச் சீதை வணங்கிப் "பதிம்தேஹி," (புருஷன் வேண்டும்) என்று ஐந்துமுறை வேண்டினுள், இதனுல் சிறுநகைகொண்ட சிவமூர்த்தி இவளுககு ஐவராகிய பாண்டவர்களைப் பதியாக அளித்தனர். பிரம்மகைவர்த்தம்.)

4. சிரார்த்தகாலந் தவறுமற் சிரார்த்தஞ்செய்து தான் அங்ஙனஞ் செய்ததற்குப் பசு, பல்குநதி, அக்கி, தாழம்பூ இவர்களைச் சாக்ஷிவைத்து அவர்கள் பொய்சாக்ஷி கூறினதால் முறையே மூகயோக்ய மில்லாமலும், அந்தர்வாகினியாகவும், சர்வபதார்த்தங்களைப் புசிக்கவும், சிவபூஜாவிருத்தம் பெறவும் சாபமிட்டனள். (சிவமகாபுராணம்) இராம மூர்த்தியைக் காண்க.

சீதாப்ரம் — யமபுரவழியிலுள்ள பட்டணம். இங்கு ஆன்மா சீதத்தால் வருந்திப் பன்னிரண்டாம்மாசிக பிண்டத்தை யுண்பன்.

சீத்தலைச்சாத்தனர் — 1. சீத்தலையென்பது ஒரூர். செந்தலை, முகத்தலை, கழாத்தலை, இரும்பிடர்த்தலை என்பனவைபோல் பெருஞ்சாத்தன் பேரிச்சாத்தன் முதலியோரின் வேறுபடுத்த இவரியற்பெயர்க்கு ஊர் பெயர்புணர்த்திச் சீத்தலைச்சாத்தனரெனப் பட்டது. சீத்தலை என்னும் ஊர் திருச்சிராப்பள்ளி ஜில்லா பெருமளூர்த் தாலுக்காவிலுள்ளது. திருவள்ளுவ மாலையில் வரும் மருத்துவன் ருமோதரனர்பாடலில் தலைக்குத்துத் "தீர்வுசாத்தற்கு" என்றிருத்தலானே அதற்கேற்ப சீத்தலை சீப்பிடித்த தலையென்று கதைகட்டிக் கூறுவாருமுளர். தலைக்குத்து ஒருகால் இருந்திருப்பினும் இருக்கலாம். அதுபற்றி சீபிடித்தல் ஒரு தலையன்மையின் சீத்தலைக்குச் சீப்பிடித்த தலையென்று பொருள்கூறுவது பொருத்தமாக தோன்றவில்லை. இவர் மதுரையிற் சென்று தம் காலக்ஷேபத்திற்காக நவதானியங்களைக்கொண்டு விற்று வியாபாரஞ் செய்து வந்தமையிற் கூலவாணிகன் சாத்தனரெனவுங் கூறப்படுவார். வணிகமரபினர், பௌத்தமதத்தினர் சிலப்பதிகாரத்திற் கூறிய கண்ணகியோடு மதுரைமாதெய்வம் வந்து வினவியபொழுது வெள்ளியம்பலத்திற் சயனித்திருந்தவர் அங்குப் பேசியவற்றைக்கேட்டிருந்து அத் தெய்வம் கண்ணகியை விடுத்து நீங்கியபின்னர் அக் கண்ணகி அறியாதபடி அவள் பின்சென்று சேர நாடு புகுந்து சேரன் செங்குட்டுவனுக்கு நிகழ்ந்ததைத் தெரிவித்து, அவன் தம்பி இளங்கோவடிகள் அக் கண்ணகி சரிதமாகிய சிலப்பதிகாரத்தைப் பாட அச் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாகிய மணிமேகலைத்துறவைத் தாமே பாடி வெளியிட்டார். பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப்

புகழ்ந்து பாடினவர். (புறம் ௫௯) இவர் முல்லையொழிய ஏனைய நானிலங்களையும் பாடியுள்ளார். அடிமரங்களில் சுரிமூக்கு நொள்ளைகள் மழைக்காலத்தேறி ஒட்டிக்கொள்வதைக் கூறியுள்ளார் (அகம் ௫௨) வெளிமான்கொம்பினை வாழைப்பூ உதிர்ந்த தாற்றோடு உவமித்துள்ளார் (அகம் ௧௩௪) யாவரும் வியக்குமாறு உள்ளுறை கூறியுள்ளார். (அகம் ௩௦௬, ௩௨௦) இவர் பாடியனவாக நற்றிணையில் மூன்று (௩௬, ௧௨௭, ௩௩௬) பாடல்களும், குறுந்தொகையி லொன்றும், அகத்தி லைந்தும், புறத்தி லொன்றும், திருவள்ளுவமாலையில் ஒன்றுமாகப் பதினொரு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2. கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவர் சங்கமருவவரும் நூல்களில் குற்றம் காணுந்தோறும் கையிலிருக்கும் எழுத்தாணியால் அது பொருது குத்திக்கொள்வது வழக்கம். ஆதலின் இவர்க்கு இப்பெயர் இடப்பட்டது என்பர். இது கட்டுக்கதை.

சீநக்கன் முதலியார் — இவர் சோழனுக்கு மந்திரியார். அரசூரில் சிற்றரசு புரிந்தவர். இவர் பொய்யாமொழியுடன் நட்புக்கொண்டவர். இவர் பொய்யாமொழிப் புலவர்க்குக் கட்டுச்சோறு கொடுத்து "அளிகொளுந் தொடையா னரசைக்குமன், ஒளிகொள் சினக்கனின்று வந்திட்ட சீர்ப், புளியஞ்சோறுண்ட புந்தியிற்செந்தமிழ்த், தெளியும்போதெலாந் தித்தியாநிற்குமே" எனக் கவிபெற்றவர். ஒருநாள் இருவரும் மஞ்சத்தில் வேடிக்கையாக வார்த்தையாடிக்கொண்டு இருக்கையில் பொய்யாமொழி யுறங்க, முதலியார் அரசன் அலுவலாக மஞ்சத்தைவிட்டு நீங்கினர். முதலியார் மனைவி தமது கணவர் படுத்துறங்குகிறாரென எண்ணிப் புலவர் அருகு படுத்து நித்திரை செய்தனர். முதலியார் அரசன் காரியம் முடித்துவந்து மஞ்சத்தில் இருவரும் இருக்கக்கண்டு புலவரைச் சற்று ஒதுங்க இடம் கேட்டு ஐயமிலாது இருவருக்கும் நடுவில் படுத்து நித்திரை செய்தனர். விடிந்து ஒருவர் பின் ஒருவராக வெளிவரக் கண்டவர்களால் இச்செய்தி ஊர் முழுதும் பரவியது. இது அரசன் வரையிற் செல்லவே அரசன் புலவரை அழைத்துக் கேட்கப் புலவர் "தேரையார் செவ்விளநீர் உண்ணப் பழிசுமப்பர், நாரியார் தாமறிவர் நாமவரை நச்சாமை, கோரைவாய் பொன்சொரியும் கொல்லிமலை நன்னாட, ஊரைவாய் மூட உலைமூடி தானிலையே" என்றனர். இதனைக் கேட்ட அரசனும் முதலியாரும் முன்போலவே புலவரிடம் நட்புக்கொண்டிருந்தனர். பின் சிலநாள் கழித்துப் புலவர் நீங்கியகாலத்து முதலியார் மரணம் அடைந்தபோது புலவர் கேட்டு இடுகாடு அடைந்து சிதையில் வேகும் உடம்பை "அன்று நீ செல்லக் கிடவென்றாயா ருயிர்விட், டின்று நீவானுலக மெய்தினாய் - வென்றிதிகழ், மாநக்கபூண்முலையார் மாரனே தென்னரசூர், சீநக்கா செல்லக்கிட" என இடம்கேட்கப் பிரேதம் இடங்கொடுக்கப் புகழ் அடைந்தவர். பொய்யாமொழியைக் காண்க. இவர் காலம் கி. பி. ௧௭-ஆம் நூற்றாண்டாயிருக்கலாம் என்பர்.

சீபட்டர் — பகவத்கீதை தமிழால் ஆக்கிய புலவர்.

சீப்திபண்டிதர் — இவர் ஒரு வீரசைவ அடியவர். அரசன் சபையில் ஒருவர் இவர்க்கு முன் சிவனடியவர்க்குக் கோடிவேதியர் ஒப்பர் என்றுகூற இவர் நெருப்பைச் சீலையில்கட்டித் தொங்கவிட்டுச் சிவனடியவர்க்கு வேதியர் ஒருபோதும் ஒவ்வார் என்றனர். இவர் நெருப்பைச் சீலையில் கட்டியதால் வேதியரிடம் அக்கினி அடங்கியது.

சீபலதேவன் — விச்சலராஜன் மந்திரி இவரது இருக்கையைக் கலியாணபுரம் எனவுங் கூறுவர்.

சீப்பு — பொன்னாலும் வெள்ளியாலும் மரத்தாலும் தந்தத்தாலும் பல சிறு பற்களுடன் செய்யப்பட்ட சற்றகன்ற கருவி. இது பேன் அழுக்கு முதலிய நீக்குதற்குதவி சிக்கறுக்கும்.

சீமந்தம் — பிரதம சர்ப்பமான 4-ம், 6-ம், 8-ம் மாசங்களிலே பும்ஸவனத்துக்குச் சொல்லிய திதி வார நக்ஷத்திரங்களிலே சிங்கம், விருச்சிகம் ஒழிந்த லக்கினங்களிலே 5, 8, 12-ல் பாபக்கிரகங்களை நீக்கி ஒன்பதாமிடஞ் சுத்தியாகப் பூர்வான்னத்தில் சீமந்த கருமஞ் செய்வது.

சீமந்தினி — இவள் சித்திரவர்மன் குமரி. இவள் தனது பதினாலாவது வயதில் மங்கலமிழப்பள் என நிமித்திகர் சொல்லக் கேட்ட தந்தை விசனத்துடன் இருந்தனன். இச்செய்தியைச் சீமந்தினிகேட்டு விசனமடைந்து யஞ்ஞவல்கிய முனிவரின் தேவியாகிய மைத்திரியிடஞ்சென்று

கூறினள். அவள் சீமந்தினிக்குச் சோம வாரவிரதம் அநுஷ்டிக்கக் கற்பித்தனள். சீமந்தினி சோமவார விரதத்தை விடாது அநுட்டித்துவரும் நாட்களில் நிடததேசாதிபனாகிய சந்திராங்கதனை மணந்தனள். சந்திராங்கதன் ஒருநாள் சிநேகருடன் யமுனையில் தோணியில் ஏறிச் செல்லுகையில் எல்லாரும் இறக்க இவன் மாத்திரம் தப்பிப்பிலத்தின் வழிச்சென்று நாகலோகம் அடைந்து நாகராசனால் ஆதரிக்கப்பட்டு அங்கிருந்தனன். சீமந்தினியும் அவள் தந்தையும் சந்திராங்கதனுக்குத் தந்தையாகிய இந்திரசேனனும் கேட்டு விசனமடைந்து செய்யவேண்டிய கிரியைகளைமுடித்துச் சீமந்தினியின் மங்கலசூத்திரம் முதலியவற்றை நீக்கினர். முன் சென்ற சந்திராங்கதன் நாகராசனால் உபசரிக்கப்பட்டுப் பல பரிசுகளைப் பெற்று நீங்கி யமுனைத்துறையில் சோமவாரவிரதத்தின்பொருட்டு நீராடவந்த சீமந்தினியைக் கைமையாய்க் கண்டு தன்மனைவி எனத்தேறி அவளது ஊர், பெயர் முதலிய வினவினன். அவள் தன்னிலையும் தன் மாமன் முதலியோர் பகையரசரால் சிறைபட்டமையும் கூறக்கேட்டு இன்னும் இரண்டு நாட்களில் உன்புருஷன் உன்னிடம் வருவன் நான் அவனது நண்பன் என நீங்கி நிடதநாடு சென்று பகைவரை வென்று தன்மாமன் முதலியோர்க்குத் திருமுகம் எழுதி மறுமணங்கொள்ள மங்கலம் பெற்றவள். இவ்வகைச் சீமந்தினி புருஷனுடன் சோமவாரவிரதம் அநுட்டித்து வருகையில் வேதமித்திரன் புத்திரனாகிய சுமேதா என்பவனும் சதார்ச்சுதன் புத்திரனாகிய சாமவான் என்பவனும் கூடித் தாம் கலியாணஞ் செய்துகொள்ள அரசனிடம் பொருள்பெறச் சென்று கேட்க அரசன் இவர்களைப் பார்த்துச் சீமந்தினி சோமவாரத்தில் நீங்களிருவரும் ஸ்ரீ புருஷ உருவடைந்து சென்று அவள் தரப்பெற்ற பொருளால் மணம்முடித்துக் கொள்ளுங்கள் அவ்வகை போகாதிருப்பின் தண்டிப்பேன் என்றனன். வேதியர் இருவரும் அப்படியே ஒருவன் பெண்ணுருவாகவும் மற்றவன் ஆணாகவும் சென்றனர். சீமந்தினி அவர்களை உமாமகேசுரராகப் பூசித்து வேண்டிய கொடுத்தனள். பொருள்பெற்றவர்கள் நீங்கிச் செல்லுகையில் பெண்ணாக நடித்தவன் பெண்ணுக்குரிய அங்கங்களைப் பெற்றுக் காமத்தால் வருந்திப் புருஷனை அணைந்தனன். இவன் தந்தை தன் ஒரு புத்திரன் பெண்ணானது அறிந்து என் புத்திரன் உன்னால் பெண்ணாயினன் எனக்கு வேறு புத்திரர் இலாமையால் என் உயிரை உன்முன் போக்கிக் கொள்ளுகிறேன் என்றனன். இதைக் கேட்ட அரசன் பயந்து உமையை நோற்றுக்கேட்க உமாதேவியார் என் அன்பர்க்கு மாறுசெய்யேன் ஆதலால் வேறு புத்திரப்பேறு அளிப்பன் எனக்கூறக்கேட்டு வேதியனுக்குக் கூறி அவனுக்கு வேண்டிய அளித்துப் பெண்ணைபுருஷனுக்குச் சாமவதிஎனப் பெயரிட்டு இருவருக்கும் மணம் முடித்தனன். (பிரமோத்தரகாண்டம்.)

சீமாலிகன் — கண்ணனால் தலையறுப்புண்டவன். பெரியாழ்வார் 2-ஆம் பத்து.

சீமூதன் — வியோமசுதன் குமரன். இவன் குமரன் விகுருதி.

சீமூதன் — ஓர் யாழ்வல்லவன். தும்புருக்கு நண்பன்.

சீமூதவாகனன் — ஒரு காந்தருவன். இவன் தன் தேகத்தைக் கருடனுக்கு இரையாகக் கொடுத்து ஒரு நாககுமாரனைப் பிழைப்பித்தவன்.

சீயகங்கன் — கொங்குமண்டலத்துச் சைந அரசன். பவணந்தி முனிவரை நன்னூல் என்னும் இலக்கணம் செய்யக் கேட்டுக் கொண்டவன். இவன் மூன்றாங் குலோத்துங்கன் காலத்தவன். இவனுக்கு அமராபரணன், வகுளலாபுர பரமேசுரன், கங்ககுலோத்பவன் எனவும் பெயர். பவணந்தி காண்க.

சீயராண்டான் — எழுபத்துநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

சீரகம் — இது சம்பாரப் பொருள்களில் ஒன்று. அதிநுட்பமான பயிர். சமசீதவுஷ்ணமுள்ள இடங்களில் பயிராவது. தைலசத்துள்ளது. இதைப்பல நோய்களுக்கும் உபயோகிப்பர். இச்சாதியில் கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், பிளப்புச்சீரகம், பெருஞ்சீரகம், நக்ஷத்ரசீரகம், நாய்ச்சீரகம் முதலியவுண்டு.

சீரதன் — சித்திரரதன் குமரன். இவன் குமரன் விருஷ்டிமான்.

சீரத்துவசன் — சநகன்.

சீராமப்பிள்ளைபட்டர் — பராசபட்டருக்குச் சகோதரர். எழுபத்துநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

சீராளதேவன் — சிறுத்தொண்டர்புத்திரன்.

சீர் — 1. அசைகள் சிறுபான்மை தனித்தும் பெரும்பான்மை இரண்டு முதலாகத் தொடர்ந்தும் வருவதாம். அச்சீர், ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்கு வகைப்படும்.

2. சீர்களின் (தொகை, வகை, விரி) 1. இயற்சீர், 2. உரிச்சீர், 3. பொதுச்சீர் என்னும் தொகையானும்; 1. நேரீற்றியற்சீர், 2. நிரையீற்றியற்சீர், 3. நேரீற்றுரிச்சீர், 4. நிரையீற்றுரிச்சீர், 5. நேரீற்றுப் பொதுச்சீர், 6. நிறையீற்றுப் பொதுச்சீர் என்னும் வகையானும்; 1. சிறப்புடை நேரீற்றியற்சீர், 2. சிறப்பில் நேரீற்றியற்சீர், 3. சிறப்புடை நிரையீற்றியற்சீர், 4. சிறப்பில் நிறையீற்றியத்சீர், 5. சிறப்புடை நேரீற்றுரிச்சீர், 6. சிறப்பில் நேரீற்றுரிச்சீர், 7. சிறப்புடை நிரையீற்றுரிச்சீர், 8. சிறப்பில் நிரையீற்றுரிச்சீர், 9. சிறப்புடை நேரீற்றுப்பொதுச்சீர், 10 சிறப்பில் நேரீற்றுப்பொதுச்சீர், 11. சிறப்புடை நிறையீற்றுப்பொதுச்சீர், 12 சிறப்பில் நிரையீற்றுப் பொதுச்சீர் என்னும் விரியானும் 12-ஆம். (யா - வி.)

சீர்காழித்தலபுராணம் — இது சீர்காழி மகாத்மியம்கூறிய நூல். இது தமிழில் சீர்காழி அருணசலக் கவிராயர் அவர்களால் இயற்றப்பட்டது.

சீர்க்காரி — ஒரு இருடி. இவன் தன் குமாரனுக்குத் தன் பெண்சாதியைக் கொல்லும்படி கட்டளையிட்டனன். குமரன் தந்தை சொல்லை மறுக்கவுங் கூடாது தாயைக் கொலை செய்யவுங்கூடாது யாதுசெய்வது என்று தன் உயிர் போக்கிக்கொள்ள இருக்கையில் சீர்க்காரி நாம் கோபத்தாற் சொன்னேமே குமரன் சொன்னவண்ணம் செய்தானோ என்னமோ என அவர்களிடத்து இரக்கப்பட்டு வீடுவந்து இருவரும் பிழைத்திருக்கக் கண்டு களித்தவன். இவன் குமரன் மேதை.

சீர்த்தி — உதய குமரனுடையதாய் நெடுமுடி கிள்ளியின் தேவி. மாவலி பரம்பரையாள். (மணிமேகலை.)

சீலகன் — மாகதனைக் காண்க.

சீலம் — 10. கொல்லாமை, பொய்சொல்லாமை, களவின்மை, காமமின்மை, பிறர்பாலிரவாமை, உயர்ந்த ஆதனத்திருத்தல், கிடத்தலின்மை, சந்தனம், மாலை முதலியதரியாமை, பொன் வெள்ளிகளைத் தீண்டாமை, பாடலாடல் விரும்பாமை, உதயத்திற்கு முன்பு புசித்தல் (பௌத்தம்) (சிவ - சித்)

சீலவிருத்தன் — கபிலன் என்னும் வேதியனுக்கும் சுருசை யென்பவளுக்கும் பிறந்து மகாபாதகஞ்செய்து புள்ளிருக்கு வேளூர்த் தீர்த்தக்கரையில் இருந்த விபூதி முடிப்பைப் பொற்பை யென்றெடுத்த புண்ணியத்தால் நலமடைந்தவன்.

சீலை — கௌண்டின்னியர்க்குப் பத்தினி.

சீல் — இது நீர்வாழ் பிராணிகளில் ஒன்று. இது வடகடலின் பாகங்களிலும் சீதளபிரதேசங்களிலும் வசிக்கிறது. இது திமிங்கிலவகைகளில் வேறுபட்டது. இதன் தலை உருண்டு இருக்கிறது. இவ்வினத்தில் பலவகை உண்டு. இவற்றில் பெரும்பாலன உடல் ஒத்துத் தலை வேறுபட்டவை. இதன் உடல் பருத்து நீண்டு மழமழப்பா யிருக்கும். இவ்வினத்தில் காதில்லாதன, காதுள்ளன, வாலரஸ் என (3) வகை உண்டு. காதில்லா இனம் ஹார்ப்பு சீல், மார்பில்சீல், கடற்பசு, யானைச்சீல், கொண்டைத்தலைசீல். காதுள்ளவை நாய்முகச்சீல், கடற்சிங்கம், கடற்சிறுத்தை கடற்கரடி என்பன. வாலரஸ் என்பவை பெரிய சீல்கள். கடற்சிங்கம் - இது சீலினம், சிங்கத்தைப்போல் முகமும் பற்களும் பிடரிமயிரும் பெற்றுள்ளது. சிங்கம் நகங்களும் பெற்றது. கடற்பசுச்சீலுக்கு - முகம் பாடுபோன்றிருக்கிறது. யானைச் சீலுக்கு - இதன் மூக்குத் துதிக்கை போல் நீண்டு யானையின் வாய்போல் தலையின் கீழ்ப்பாகத்தி லிருக்கிறது. கொண்டைத்தலைச்சீலுக்கு - தலையில் ஒருவகைத் தசைத் திமில்கொண்டைபோல் 7, 8 அங்குலம்உயர்ந்திருக்கும் பர்சீல் - ஒன்றுண்டு அதனுடம்பில் மயிரடர்த்தி. கடற்கிரி - இதனுடல் நீண்டு கால் குறுகியிருக்கும். இதற்குக் கரடிபோன்று கீரியொத்தவாலுமிருக்கிறது. நாய்முகச்சீல் - நாயின் முகம் போல முகமுள்ளது. இவ்வினத்தில் கடற்சிறுத்தை, கடற்கரடியும் உண்டு.

சீவஉபாதி ஏழு — அநீசத்வம், கிஞ்சிஞ்ஞத்வம், பரிச்சின்னத்வம், மாயாசகித்வம், அற்பசத்தித்வம், பராதீனத்வம், அபரோக்ஷத்வம் இவற்றைக் காரிய உபாதியென்பர். ஆன்மா இவற்றை நீங்கின் சமாதி பெறுவன். (திருமந்திரம்.)

சீவகன் — 1. சத்ரு குமரன்.

2. இவன் ஏமாங்கத நாட்டில் இராசமாபுரத்தில் அரசாண்ட சச்சந்தன் தன் மனைவி விசையையுடன் இருந்ததை யறிந்த கட்டியங்காரன், சச்சந்தன்மீது படையெடுத்துத் தோல்வியடையச் செய்தனன். சச்சந்தன் தன் தோல்வியும் மரணத்தையும் அறிந்த கர்ப்பிணியாகிய சச்சந்தன் மனைவி, பகைவன்கைக்கு அகப்படாமல் மயிற்பொறிமேல் ஏறி ஆகாய வழியிற்சென்று ஒரு சுடுகாட்டில் இறங்கினள். அவ்விடம் சீவகன் பிறந்தனன். கந்துக்கடன் என்னும் வணிகன் இறந்த தன் குழந்தையைப் புதைக்க அந்தச் சுடுகாட்டில் வந்து அவ்விடம் தனித்திருக்கும் குழந்தையைக் கண்டு எடுத்துவந்து மனைவியிடங் கொடுத்து வளர்த்துவந்தனன். இவன் வளர்ந்து சாகசச்செயல் செய்துவருகையில் இவனது சாகசச்செயல் அறிந்த கட்டியங்காரன் கொல்ல யத்தனிக்கையில் தப்பிக்கோவிந்தையை மணந்து வேறு நாடுசென்று காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை முதலியவரையும் மணந்து தன் தந்தையைக்கொன்ற கட்டியங்காரனைக் கொன்று சற்புத்திரரைப்பெற்று நாட்டைக்காத்து அறம் கேட்டு முத்தி அடைந்தவன். இவன் புத்திரர் சச்சந்தன், சுதஞ்சணன், தரணி, கந்துக்கடன், விசயன். தத்தன், பரதன், கோவிந்தன். (சீவகசிந்தா.)

சீவசம்போதனை — இது சைநமத சித்தாந்த நூல் மகததேசாதிபதி கேட்கக் கௌதம கணுதிபரால் கூறப்பட்டது. இதனைத் தேவேந்திரமாமுனிவர் கூறினர்.

சீவடன் — ஒரு சந்நியாசி. இவன் முதலில் நித்திரைசெய்து பிராமணனுய்ப் பின் அரசனுய்ப் பின் தெய்வப்பெண்ணுய், அவள் மானுய் அது பூஞ்சொடியாய் அது வண்டாய் அது யானையாய் அது அன்னமாய் மாறினவன். (ஞானவாசிட்டம்).

சீவதேகம் — (௩) தூலம், குக்குமம், காரணம்.

சீவநதிகள் — எப்போதும் இடையருமல் ஓடும் நதிகளுக்கு ஜீவநதிகள் என்று பெயர். (பூகோளம்.)

சீவரத்தினங்கள் ஏழு — அவை அரசலக்ஷணமுள்ள யானை, எல்லாஞ் செய்ய வல்ல சிற்பி, கற்புடைய பெண், வல்லசேனுபதி, பண்டாரம் காப்போன், உற்பாதம் கூறும் நிமித்திகன், நல்ல லக்ஷணமுள்ள குதிரை.

சீவர்த்தமானசுவாமிகள் — வர்த்தமான தீர்த்தகரைக் காண்க.

சீவலமாறபாண்டியன் — பாண்டியவம்சத்தவன். சங்கரநாராயணர் சோயிற் புராணம் பாடியவன்.

சீவலன் — 1. இருதுபர்ணன் குதிரைக்காரன்.

2. ஒரு இருடி, இவன் புத்திரன் பிரவாகன்

சீனம் — ஆசியாகண்டத்துள்ள ஒரு தேசம். China.

சீனன் — விஷ்ணுவின் அவதாரமாகிய புத்தமூர்த்தியைப் பெற்றவன். கீகடதேசத்தரசன்.

## சு

சுகச்சாயை — சிவ்ஷ்டியின் மனைவி.

சுகண்டன் — அசுவக்கிரீவன் தம்பி.

சுகதருஷி — வைபாடிகமத நிர்மாணகன்.

சுகதன் — புத்தன். (மணிமேகலை.)

சுகநாகன் — நந்திவர்த்தனன் குமரன். இவன் குமரன் காகபர்ணன். இவன் வமிசத்திற் பிறந்த பத்து அரசர்கள் கலியில் (௩௬0) வருஷம் ஆளப்போகிறார்கள்.

சுகநாசன் — தாராபீடனது அமைசசன். வைசம்பாயனனது தந்தை.

சுகண்டன் — அச்சுவக்கிரீவன் தம்பி. (சூளா.)

சுகந்தகிருது — சோமகன் குமரன்.

சுநந்தனன் — ஒரு சாரணன். (சூளா.)

சுகமுனி — 1. வியாசர் குமரர். வியாசர் புத்திரப்பேறு வேண்டிச் சிவபிரானை நோக்கி யாகாதிகாரியஞ் செய்யத் தனித்து அரணியைப் பிடித்துக் கடைகையில் கிருதாசிஎன்னும் அப்சரசு தோன்றி யவரைக் காமத்தில் மூழ்குவித்துத் தான் சுகம் என்னும் கிளியுருக்கொண்டு இருக்கையில் வியாச வீரியம் அரணியில் விழுந்தது. அதனுல் சுகர் பிறந்தனர். சுகரூபியாகிய இவளால் பிறந்தவராதலால் சுகர் எனப்பட்டனர். இவர் பிறக்கையிற்றுனே மகா ஞானியாய் இருக்கையில் நாரதர் இவர்க்கு ஞானங்கூற அதனுல் இவர், தந்தையை விட்டு நீங்க வியாசர் பின்தொடர்ந்து "சுகசுக" என் றழைத்தமையால் மரங்கள் முதலிய ஒய் என்று விடைதந்தன. இவர் றவம்நோக்கிச்செல்லுகையில் பின்ருெடர்

ந்த வியாசரைநோக்கி நீராடிய அரம்பை யர் வெட்கமுறென எழுந்து சேலை யுடுத்தனர் சுகரை நோக்கி எழுந்திராததினுல் சுகர் வியாசரைக் காட்டிலும் உலகவியாபார மற்றவர். சநகரிடத்து ஞானேபதேசம் பெற்றவர். இவர் ஆகாசமார்க்கமாய்ச் சூரியமண்டலத்தில் தேகத்தைத் தகித்து முத்தி பெற்றனர். வியாசரும் கிளியுருக் கொண்டு புணர்ந்து சுகர் பிறந்தனர் என்ப. சுகர் 12 வருஷம் தாய் வயிற்றில் தங்கிப் பிறந்து மாயை நீங்கினவர். இவர் தம் சாயா உருவத்தைப் பூமியில் வைத்துத் தான் முத்தியடைந்தனர். என்பர்.

2. இராவணன் தூதுவர்களில் ஒருவன். வானரசேனைகள் சமுத்திரதீரத்தில் தங்கியிருக்குங்காலை உளவறிந்து அறிவிக்கவந்து விபீஷணராற் கட்டுண்டவன்.

3. யமனுக்குச் சாந்தியிடம் உதித்த குமரன்.

4. சூரபதுமனுக்கு மந்திரி.

5. (பிர.) பலியின் மனைவியிடம் தீர்க்க தபசால் உதித்த குமரன்.

சுகர்நன் — யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷிணையிடம் உதித்த குமரன்.

சுகர்மன் — சைமினிருஷியின் குமாரனுகிய சுமந்தன் புத்திரன். இவன் இருடி.

சுகலன் — பாண்டிநாட்டில் குருவிருந்த துறையிலிருந்து சுகலை எனும் தன் மனைவியுடன்கூடிப் பன்னிரண்டு புத்திரர்களைப்பெற்று அவர்களிடத்து இருந்த அன்பினுல் எது செய்யினும் கேளாதிருக்கத் தாய் தந்தையர் பாண்டியனுலும் அவன் சேனுபதி சற்சாரனுலும் இறந்த காலத்து வேடருடன் அப்பிள்ளைகள்கூடி வியாழபகவான் தவத்திற்கு இடையூறு செய்து அவராற் பன்றிகளாகச் சபிக்கப்பட்டுப் பன்றியின் வயிற்றில் உதித்துத் தாய்தந்தையர் இறக்கச் சிவமூர்த்தியால் பாலூட்டி வளர்க்கப் பெற்றுச் சிவமூர்த்தியின் கட்டளைப்படி சுகுணபாண்டியன் மந்திரியாகி முத்தி பெற்றனர். முற்கூறிய சுகலன் பூருவம் ஒரு விச்சாதரன் புலத்தியர் தவத்திற்கு இடையூருக வீணையிசைபாடி அவரால் பன்றியாகச் சபிக்கப் பட்டவன். (பழனித்தல புராணம்.)

சுகவர்மா — சயமுனி மாணுக்கர்.

சுகன்னி — 1. சையாதி அல்லது யயாதியின் குமரி. இவள் தந்தையுடன் வனத்திற்குச் சென்றகாலத்துச் சௌநகமுனிவர் தவஞ் செய்துகொண்டிருந்த புற்றின்வழிச் சென்றனள். அந்தப்புற்றில் ஒரு ஒளிதோன்ற இவள் அதனைக் குத்தினள். இவள் குத்தினது கண்ணுதலினுல் அரசன் சேனைக்கு இருவிழிகளும் அடைந்தன. அதனுல் அரசன் திடுக்கிட்டு வினவி நடந்தது அறிந்து சியவனருஷிக்குத் தன் குமரியை மணஞ்செய்வித்தனன். இவளை அச்வினி தேவர் கண்டு நீ அதிரூபவதி தவசிக்கு இணங்கி இருக்கிருய் என்ன அதனைக் கணவர்க்கு அறிவிக்கக் கணவர் சொற்படி உங்களில் ஒருவர் ஏற்படுங்கள் என அவர்கள் இருடியிடம் வந்து மூவரும் தடாகத்தில் ஸ்நானஞ்செய்து ஒரே உருவமாகக் காணப்பட்டனர். சுகன்னி கணவரைத் தியானித்து மூவரில் ஒருவரைத் தொடத் தொட்டவர் சியவனராயிருக்க அஸ்வினி தேவர் இருடிக்கு யௌவன மளித்துச் சென்றனர். ஒருமுறை சியவனர் இளமை கொண்டது அறியாத இவளது தந்தை இளமைகொண்ட கணவருடன் இருந்த குமரியைக்கண்டு கற்புநீங்கினை என்று குமரியைக் கோபித்தனன். குமரிசியவனராகிய தம் கணவருக்கு இளமைவந்த வரலாறு கூறித் தேற்றினள். இவளது மற்றைச் சரிதைகளைச் சையாதிசியவனரைக் காண்க.

சுகன் — ஒரு க்ஷத்திரியன். சுபலன் புத்திரன்.

2. பார்க்கவ சியவனாக்குப் பாரி.

சுகஸ்தன் — திருதராட்டிரன் புத்திரன்.

சுகாசநமூர்த்தி — தம்மையடுத்த மாணுக்கர்க்கு ஞானேபதேசஞ்செய்யச் சுகாசனத்தில் எழுந்தருளிய சிவன் திருமேனி.

சுகாநந்தர் — இவர் பாகவதபக்தி யுடையராய் அரிபூசைசெய்து பாகவதருண்ட சேடங்கொண்டு வருநாட்களில் இவரிடத்து அசூயைகொண்ட சிலர் லட்டுப்பலகாரத்தை இது பெருமாளுக்கு நிவேதனமான துண்க என் அவ்வாறுண்டு விழுங்கியபின் இது தக்கவனல்லான் செய்தது இதனையுண்ட நீர் பிராயச்சித்தஞ் செய்து கொள்ளல் வேண்டுமென்னத் தாசர் தாமுண்ட பலகாரத்தை யவர்காண அவர்கள் கொடுத்ததுபோலவே மீண்டும் தா, கண்டோர் பயந்து அபராதக்ஷமை வேண்டிச் சென்றனர். பின் தாசர் யாத்திரைசெய்ய விரும்பி மனைவியாரைநோக்கி நீ பெருமாளையும் பாகவதரையும் பூசித்திருக்க வெனக் கூறிச் சென்றனர். தாசர் ஊரி

லில்லாமை கண்ட காமுகன் ஒருவன், அவர் மனைவியாரிடம் வந்து நான் பாகவதன் என் காம எண்ணத்தைமுடிக்க எனக் கேட்ட சுரசுரீ என்னும் தாசர் தேவியார், அதற்குடன்பட்டுப் பாகவதராக வந்த காமுகனுக்கு அன்னமுதலிய பரிமாறினர். காமுகன் பொழுது சாயக்களிப்புடனிருக்கையில் சுரசுரீ படுக்கை திருத்தித் தம் நாயகரையும் பெருமாளையும் மனத்தெண்ணிப் படுக்கையறைக்கு அழைக்கக் காமுகன் வாசற்படியருகு செல்ல ஆங்கு அந்த அம்மையார் காமுகன் கண்ணுக்குப் பெரும்புலியாக இருக்கக்கண்டு இவனையுறத்துநோக்கக் காமுகன் பயந்து வெளிவந்து விடிந்தபின் அம்மையார் வீடுமுதலிய சுத்திசெய்கையில் பாதம்பணிந்து தாசனாயினன்.

சுகாமர் — பதின்மூன்றாம் மன்வந்தரத்துத் தேவர்.

சுகி — 1 பதினான்காமன் வந்தரத்து இந்திரன்.

2. தருமப் பிரசாபதியின் குமரி. கிளிகளைப் பெற்றவள்.

சுகிருதி — பிரதி குமரன், இவன் குமரன் விப்பிராசன்.

சுகீர்தன் — திருதராட்டிரனுக்குக் குமரன்.

சுகுணகுணபாண்டியன் — 1. இராசாதிராச பாண்டியனுக்குப் பின் அரசுபுரிந்தவன். கரிக்குருவிக்கு உபதேசித்தது இவன் அரசாட்சியில் ஆம்.

2. இராசராசபாண்டியனுக்குக் குமரன். இவன் காலத்துச் சிவமூர்த்தி பன்றிக் குட்டிகளுக்குப் பாலூட்டி மந்திரிகளாக்கினர். இவன் குமரன் சித்திரவிரத பாண்டியன்.

சுகுணசேகரபாண்டியன் — சகுணபாண்டியனுக்குப் பின் அரசாண்டவன்.

சுகுணபாண்டியன் — இவன் திருப்பெருந்துறைக்கு 300 வேதியரை வருவித்து அவர்களுக்கு மானிய முதலிய [illegible]த்து வைத்தான். இந்த வேதியரின் [illegible]ளுக்குச் சிவமூர்த்தி வேதியராய் வந்து வேத முதலியன வோதிவைத்தனர். இவ்வகை வாழுநாட்களில் சுகுணபாண்டியனுக்குப் பின்வந்த வாதுங்கபாண்டியனும் காலம் சென்றனன். இவன் குமாரன் கௌமார பாண்டியன் இவனரசில் உலுண்டாக்ஷன் எனும் குறும்பரசன் வேதியர்க்குக் கொடுத்த மானியத்தைப் பிடுங்கிக் கொண்டான். வேதியர் கௌமாரபாண்டியனிடம் முறையிட்டனர். பாண்டியன் உங்கள் நிலம் என்பதற்கு அடையாளம் என்ன என்றனன். உபாத்தியாயராக இருந்த வேதியர் எமது நிலம் வெட்டச் சுரக்கு மியல்பினது என்றனர். அவ்வாறே குறும்பரசனும் பாண்டியனும் சென்று வெட்டப் பெருந்துறையாக நீர் சுரந்தது ஆதலால் 'பெருந்துறை' நாமம் உண்டாயிற்று.

சுகுணன் — 1. வீமனுக்குச் சலதரையிடம் பிறந்த குமரன்.

2. பிரமசேநன் குமரன்.

3. கிருஷ்ணசர்மனுக்குத் தந்தை.

சுகுணை — சீலவிருத்தனைக் காண்க.

சுகுமாரன் — 1. புளிந்தநகரத்து அரசன்.

2. திருஷ்டகேதுவின் தந்தை. திருஷ்டகேதுவின் குமரன் என்றுங் கூறுவர். இவன் குமரன் விதிகோத்திரன்.

3. வீதிஹோத்திரனுக்குத் தந்தை.

4. இவன் ஒரு வேதியன். காமத்தால் பல பெண்களை மயக்கிவந்தனன். இவனையரசன் ஊரைவிட்டுத் துரத்தக் காட்டிற் சென்று புலைச்சியைக்கூடி மனைவியிறக்கப் பெண்களைப் புணர்ந்து இரண்டு குழந்தைகளைப் பெற்று வழிபறித்துத் திரிகையில் காவலர் பிடிக்கத் தொடர அக்காடு விட்டு வேறு காட்டிற்குச் செல்லுகையில் நாககன்னியர் சிவபூசை செய்வதைத் தரிசித்து இறந்தபின் யமபடர் பற்றச் சிவகணங்களால் தடையுண்டு சிவபதம் அடைந்தவன்.

சுகுமாரி — ஓர் பார்ப்பினி. இவள் விதுமன் எனும் காந்தருவனைக் குரங்காகச் சபித்தவள்.

சுகுருசர் — விபுலரின் குமரர். இவர்க்கு நான்கு குமரர், இவர்களே தருமபக்ஷிகள் ஆனவர்கள்.

சுகூர்ச்சன் — கௌர்ச்சனைக் காண்க.

சுகேசன் — 1. சாலகடங்கடை, வித்யுத்கேசன் என்பவனைப் புணர்ந்து பெற்ற குமரன். இவனைச் சாலகடங்கடை பெற்றுக் கணவனைப் பிரிந்திருக்க மனமில்லாமல் காட்டில்விட்டுச் சென்றனள். இக் குழந்தையைச் சிவமூர்த்தியுடன் அந்தரத்தில் வந்த உமாதேவியார் கண்டு இரங்கி இனி அரக்கர் குழந்தைகள் பிறந்த காலத்திற்றாமே வளர்ந்து பருவமடைய வரம் தந்து போயினள். இதனால் இவன் பருவம்

பெற்றுக் கிராமணியின் குமாரியை மணந்தனன்.

2. சிவகணத்தலைவரில் ஒருவன்.

3. பாத்வாசர் புத்திரன்.

4. சிலோச்சயநகர்த்து வாணிபன். இவனுக்கு அறுவர் குமாரர்கள். இவ்வறுவரும் மணிமுத்தாநதியில் மூழ்கி இஷ்டசித்தி பெற்றனர்.

**சுகேசி** — காந்தாரராஜ புத்திரி. கிருஷ்ணன் பாரியை. (பாரதம்.)

**சுகேசினி** — 1. சகாஅனுக்குத் தேவி. அசமஞ்சசனுக்குத் தாய்.

2. நாசிகேதுஎன்பவனுக்குத் தாய்.

**சுகேசு** — ஒரு அரசன். பிரமனை எண்ணித் தவம் புரிந்து தாடகையைப் பெற்றவன்.

**சுகேதனன்** — 1. (சங்.) சுநிதன் குமரன். இவன் குமரன் தர்மகேது.

2. ஒரு அரசன்.

**சுகேது** — 1. துருபதன் குமரன்.

2. மிதிலன் இரண்டாம் பேரன்.

3. க்ஷேமன் குமரன்.

4. தானவர் எனும் முனிவர் குமார். (சு.) நந்திவர்க்கன் குமரன்.

5. பாரதவீரன்.

6. சர்ச்சரன் குமரன். இவன் பிரமனை நோக்கித் தவஞ்செய்து ஒரு குமரியைப் பெற்றுச் சுந்தனுக்குக் கொடுத்தவன்.

7. சுவேதி புருஷன்.

**சுகேத்திரன்**—அநேக யாகங்கள் செய்த ஒரு அரசன்.

**சுகோத்திரன்** — 1. (சங்.) பௌமன் குமரன், மனைவி கௌசலை, குமரன் அத்தன்.

2. க்ஷத்ரவிரதன் குமரன். இவன் குமரர் காசியன், குசன், கிரிச்சமதன்.

3. பிருகக்ஷத்ரன் குமரன், இவன் குமரன் அஸ்தி.

4. வாநரவீரருள் ஒருவன்.

5. சுதனு குமரன், இவன் குமரன் சிவநன்.

6. சகதேவனுக்கு விசயையிடம் உதித்த குமரன்.

7. சோடச ராசாக்களில் ஒருவன். பூருரவன் பேரனுகிய பீமனுக்குப் பேரன்.

8. சுருதன் எனும் பகீரதன் குமரன்.

9. சுமனஸ் குமரன்.

10. பிருகத்க்ஷத்திரன் குமரன்.

11. சந்திரவம்சம், பூமன்யு புத்திரன் பாரியை ஜயந்தி, குமரன் அஜமீடன். (பார - ஆதி.)

12. இவன் விதிதன் புத்ரன். இவன் செய்த யாக புண்ணியத்தால் இந்திரன் களிப்படைந்து ஒருவருஷம் பொன்மாரி பொழிவித்தான், அதனுல் ஆறுகளில் பொன்னீர் ஓடியது, உலகம் பொன்மயமானது, பூமியும் வசுமதியெனும் பெயரை நிலையாகப் பெற்றது. (பார - சாந்.)

**சுகோஷம்** — மத்திரதேசாதிபதியாகிய நகுலன் சங்கு. (பார - பீஷ்.)

**சுகையன்** — ஆனர்த்ததேசாதிபதி, இவன் பகைவருடன் யுத்தஞ்செய்து இறந்தனன். இவனது தலையோட்டை யோகி ஒருவன் எடுத்து இராக்காலங்களில் கயாதீர்த்தமொண்டு உபயோகப்படுத்திப் பகலில் ஊற்றிவிடுவன் ஆதலால் இவ்வரசன் இராக்காலங்களில் அரசு வீற்றிருந்து பகலில் பேயாய் அலைந்து திரிவன். இவ்வாறு இருக்கையில் வணிககூட்டத்தினர் இவன் திரிந்துகொண்டிருந்த வனத்தில் பகலில் இறங்கிப் பசிதீர்ந்து போயினர். அவர்களில் ஒருவன் தனித்து அவ்விரவில் அங்குத் தங்க, ஒரு பெருமாளிகையும் அரசும் தோன்றியது. வணிகன் உட்சென்று அரசனை வணங்கி உண்டு உறங்கினன். பொழுதுவிடிய அவை கனுப்போலொழிந்தன; வணிகன் ஆச்சரியமடைந்து மறுநாளிருந்து பார்க்க அன்றைக்கும் அவ்வாறு இருக்கச் சென்று அரசனைக்கண்டு வினவ அரசன் தானிறந்த செய்தியையும் யோகியிடம் தன் கபாலமிருக்கும் விதத்தையும் அறிவித்து வணிகனை நோக்கி நீ சென்று யோகியிடமிருக்கும் கபாலத்தை வாங்கி அதனைத் தூளாகச்செய்து கயாதீர்த்தத்தில் போட்டுவிடுவையேல் நான் சுவர்க்கமடைவன் என்றனன். வணிகனும் அவ்வாறு செய்ய நல்லுலகடைந்தவன்.

**சுக்தா** — சித்தூர் இராஜபுத்ரத் தலைவனுகிய உதயசிங்கின் இருபத்திரைறு புத்திரர்களில் இரண்டாவது புத்ரன். இவனது ஐந்தாம் வயதில் ஒருபுதிய வாள், ஆயுதம் செய்பவன் கொண்டுவர அதனைச் சோதிக்க அரசன் கொஞ்சம் பஞ்சு கொண்டுவரக் கட்டளையிட்டான். சிறுவன் தகப்பனைநோக்கி இது எலும்பை வெட்டுமோ வென்று அஞ்சாது தன் விரலை வெட்டினுன், கையிலிருந்து மிகுந்த ரத்தம் வடியவும் அஞ்சாநிலைகண்ட அரசன் சோதிடரை அழைத்துச் சாதகத்தைச் சோதித்ததில் அவர்க ளிவன் மீவார் நாட்டிற்குக்

கேடு விளைப்பான் எனக் கூறினர். இவனைச் சிரச்சேதம் செய்யக் கட்டளைபிறந்தது. கொலைக்களம் கொண்டுபோகையில் சலம்பிர ராஜபுத்ரத் தலைவன் சந்தித்துச் செய்தியறிந்து தனக்குப் புத்திரனிலாமையால் அரசனை யிரந்து இவனைப் புத்திரனாகப் பெற்றான். பிறகு பிரதாபன் இவனுடன் நட்புக்கொண்டிருக்கையில் ஏதோ காரணமாக இருவருக்கும் கைச்சண்டையுண்டாகப் புரோகிதர் விலக்கவும் நிற்காததுகண்டு இருவர்க் கிடையில் புரோகிதர் குத்திக்கொண்டிறந்தார். இப் பாபத்திற்காளானோம் என இருவரும் சண்டையை நிறுத்திச் சென்றனர். பின் சுக்தா அக்பரிடம்சென்று அவன்கீழ் வாழ்ந்துவந்தான். அந்த வம்சத்தவர் சுக்தாவதர். பின்ஹால்டிகாட் எனும் சண்டையில் சகோதரிருவரும் ஒன்றாகச் சேர்ந்தனர்.

**சுக்கிரன்** — A. 1. பிருகுபுத்திரன் பார்க்கவனாய் இருந்த இவன், குபேரனை வெருட்டிய காரணத்தால் குபேரன் சிவமூர்த்தியிடத்து முறையிட்டனன். சிவமூர்த்தி பார்க்கவனைச் சர்வம் அடங்க எடுத்து விழுங்கத் தேவாசுரர் வேண்டுதலால் சுக்கிலவழி விடுத்தருளினர். அது காரணமாய் முன்னினும் அதிக கிரணமும் வெண்ணிறமும் சுக்லன் எனும் பெயரும் பெற்றனன் (காசிகாண்டம்.)

2. இவன் முதலில் பிருகு புத்திரனாய் அத்தேகம் விட்டுப் பிறந்து விச்சுவாசி என்னும் தேவமாதை விரும்பி மூன்றாவது தேசார்ணவ தேசத்தில் ஒரு வேதியனாகிப், பிறகு கோசலாதிபனாய், வேடனாய், அன்னமாய், பௌண்டராதிபதியாய், சூரியவம்சகுருவாய், வித்தியாதரராசனாய், வேதியனாய், சாமகனாய், சைவாசாரியனாய், மூங்கிற்காடாய், ஒருமானாய், மலைப்பாம்பாய், கங்காதீரத்தில் ஒரு வேதியனாய் இருக்கையில் பிருகுவும், காலனும் இவனைக் கண்டு முன்னைய அறிவுதரப் பெற்றுக் காலனால் அசுரகுருவானவன். (ஞானவாசிட்டம்.)

3. இவன் தாயபாகங்கேட்ட நதிபனை ஆறுயோசனை அகலம் பன்னிரண்டு யோசனை நீளமுள்ள யானையாகச் சபித்தனன். உசநன் புத்திரன் என்பர்.

4. இடபாசுர யுத்தத்தில் இறந்த அசுரரை மிருத்துஞ்சய மந்திரத்தால் உயிர்ப்பித்தவன். இவன் குமரர் சண்டமார்க்கன், தம்ஷ்டரன், துவஷ்டரன், பத்திரகருமன். இருவர் பெண்கள், தேவயானி, அரசை. மேற்சொன்ன குமாரின் பெயர்களை இவ்வாறுங் கூறுவர். துவஷ்டரன், தாத்திரி, பதிரன், கன்னன்.

5. இவனிடம் இருந்த மிருதசஞ்சீவினி மந்திரத்தைக் கற்றுக்கொள்ள வியாழபகவான் புத்திரன் கசன் வந்திருப்பதை அசுரர் அறிந்து பலமுறை கசனைக் கொல்லத் தேவயானியின் வேண்டுகோளால் கசனையுயிர்ப்பித்துக் கடைசியில் கசனைக் கருக்கிச் சாம்பலாக்கிக் கள்ளிற்கலந்து சுக்கிராசாரியருக்கு அசுரர் கொடுக்கத் தேவயானி கசனைக் காணாது சுக்கிரனிடங்கூறச் சுக்கிரன் கசன் தன் வயிற்றில் இருப்பது அறிந்து தான் அவனை உயிர்ப்பிக்கின் தானே இறத்தல் அறிந்து வயிற்றில் அவனை யுயிர்ப்பித்து மந்திர முபதேசித்துத் தன்னை மீண்டும் உயிர்ப்பிக்கும்படி கேட்டுக்கொண்டு கசனை வெளிவிட்டவன்.

6. இவன் தன்னியல்பழிந்து ஒரு அரக்கியைச் சேர்ந்து அநேக அரக்கரைப் பெற்றவன்.

7. குபனால் மார்பு பிளப்புண்ட ததீசியை மிருதசஞ்சீவினியால் உயிர்ப்பித்துச் சிவபூசைக்கு ஏவினன்.

8. தேவயானையிடம் யயாதிக்கு ஆசையுற்றதால் யயாதியைக் கிழஉருவாகச் சபித்தவன்.

9. விபுதையால் கயமுகாசுரனைப் பிறப்பித்து அவனைத் தவஞ்செய்து வரம்பெற ஏவினவன்.

10. மாபலி வாமனமூர்த்திக்கு மூன்றடி மண் தானஞ்செய்கையில் தத்த தாரையைத் தடுத்து வாமநரால் ஒரு கண் குருடானவன்.

11. இவன் நக்ஷத்திர மண்டலத்திற்கு மேல் இரண்டுலக்ஷம் யோசனை யுயரத்தில் இருப்பவன். இவன் தேரில் பத்துக் குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். இவனுக்குத் தாத்ரி என்று ஒரு குமரன் உண்டு.

12. இவன் தண்டனுக்குப் புரோகிதனாயிருக்கையில் அவ்வசுரன் இவன் குமரியாகிய அரசையிடம் செய்த தீமைபற்றி அவன் நாடு காடாகச் சபித்தவன்.

13. பகீரதனுக்குக் கோரனாலுண்டாகிய இடரினின்றும் நீங்கக் கந்தவிரதம் அநுஷ்டிப்பித்தவன்.

14. அசுரர் வேண்டுகோளின்படி சிவமூர்த்தியையெண்ணித் தவத்திற்குச்சென்றிருக்கையில் இந்திரன் சயந்தியை யேவி மணக்கச்செய்ய மணந்து அவளுடன் யார் கண்ணுக்கும் புலப்படாமல் பத்துவருஷமிருக்கையில் வியாழன் சுக்ரவுருக்கொண்டு அசுரரை மயக்கி யவன் சொற்படி கேட்பிக்கக்கண்டு தான் சென்று உண்மையான சுக்கிரன் நான்; எனக் கூறியும் கேளாததனால் அசுரர்களைத் தேவர்களால் அபசெயமடையச் சாபந்தந்து மீண்டும் வியாழன், தன் காரிய முடிவில் மறைய அசுரர் தாங்கள் மோசமடைந்தது துணர்ந்து பிரகலாதனை முன்னிட்டுவேண்டத் தன்னை யடைந்த அசுரர்களின் வேண்டுகோளுக் கிரங்கி மீண்டு மவர்களை மாணுக்கராக்கிக் கொண்டவன்.

15. ஒரு அசுரன் சிவபிரானால் வரம் பெற்றுத் தேவர்களை வருத்தியிருந்தவன். (பார - அநுசா.)

17. இக்கிரகம் சூரியன் சந்திரன் இவையிரண்டையுந் தவிர மற்றெல்லா நக்ஷத்திரங்களிலும் பிரகாசமுள்ளது. இது பூமியைவிடச் சூரியனுக்குச் சமீபத்தில் இருக்கிறது. உருவில் ஏறக்குறைய பூமிக்குச் சமமானது. இது சூரியனைவிட்டு (45°) டிகிரிக்குமேல், அடிவானத்திற்கும் உச்சிக்கும் உள்ள தூரத்தில் பாதிக்குமேல் விலகிவராது. கீழ்த்திசையில் சூர்ய உதயத்திற்கு முன்பே காணலாம். இது சூரியனைச் சுற்றியோடும் கிரகமாதலால் நாடோறும் இதன் உதயகாலம் இதன் முந்திய தினத்தின் உதயத்தின் முன்னதாகும். சில தினங்களுக்குப் பிறகு சிறிது சிறிதாகச் சூரியனைவிட்டு (45°) டிகிரிதூரம் விலகிச் சூரியனை நெருங்கத் தொடங்கும். சில நாள்களில் கிழக்கில் காணப்படாது. இது சூரியனைச் சுற்றிவர $7\frac{1}{2}$ மாதங்களாகின்றன. இதைச் சூரிய உதயத்திற்கு முன்பு 3 மாதம் மேற்றிசையிலும், சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு சூரியனுக்குக் கிழக்காக 3 மாத காலத்திற்கு அதிகமாக மேற்றிசையிலும் காண்கிறோம். இது கீழ்த்திசையில் காணப்பட்ட விதமாகவே மேற்றிசையிலும் தோன்றி மறைகிறது. (இயற்கை அற்புதம்)

18. இது, சூரியனுக்கு இரண்டாவது சமவட்டத்தில் சுற்றிவருவது. இது சூரியனுக்கு 6 கோடியே 70 லக்ஷம் மைலுக்கப்பால் நின்று சுற்றி வருகிறது. இது $23\frac{1}{2}$ மணி நேரத்தில் தன்னைத்தானே ஒரு முறை சுற்றி வருகிறது இது சூரியனை 225 நாட்களில் சுற்றி வருகிறது. இதன் சுற்றளவு சுமார் 23,200 மைல், குறுக்களவு சுமார் 7700 மைல். இது நமக்கு அதிக தூரத்தில் இருப்பதால் சிறிய வுருவாகக் காணப்படுகிறது. இதற்கடுத்த வட்டத்தில் நாமுள்ள பூமியாகிய கிரகம் சுற்றி வருகிறது.

B. பதினான்காம் மன்வந்தரத்து ருஷி.

C. சரியாதியின் புத்திரன், பாண்டவர் பக்ஷத்தைச்சேர்ந்தவன், கர்ணனால் கொல்லப்பட்டவன்.

**சுக்கிரவாரவிரதம்** — இந்த வாரத்தில் சுக்கிரன் சத்தியைப் பூசித்து இந்த வாரத்தில் உலகத்தவர் உன்னைப் பூசிக்கின் இஷ்டசித்தி தருக என வரம் பெற்றனன்.

**சுக்கிராசி** — முதலையுருக்கொண்டு சங்கராசாரியரின் காலைப்பற்றிய காந்தருவன்.

**சுக்கிரீவம்** — கிருஷ்ணன் தேர்க்குதிரைகளில் ஒன்று.

**சுக்கிரீவன்** —1 (ரிஷாஜசு) இரக்ஷவிருதன் குமரன், வாலிக்குத் தம்பி, அநுமனுக்கு நண்பன், இவன் மனைவி உருமை. ஒரு முறை மாயாவி என்னும் அரக்கனுடன் போரிடப் பிலத்துள் சென்ற வாலி நெடுங்காலம் மீளாதிருக்க, வாலி அரக்கனால் கொல்லப் பட்டனன் என்றும், ஒருக்கால் அவன் மீளின் தனக்கு இறுதிநேரும் எனவும் எண்ணி அப்பிலத்தை அடைத்து அரசாண்டிருக்கையில் வாலி பிலத்தின் வழிவர அது அடைபட்டு இருத்தல்கண்டு தன் காலால் ஒரு உதைகொடுத்து வழியுண்டாக்கி வெளியில்வந்து தன் தம்பி வஞ்சனை செய்தான் என அவனைக் கொலை செய்ய வருகையில் இவன் பயந்து கிஷ்கிந்தையைவிட்டு ருச்யமூகபர்வதம் (மதங்கர்மலை) அடைந்து இருந்தனன். இராம லக்ஷ்மணர் வரவறிந்து அநுமான் தன் சிநேகனுக்கு அவரது வலி முதலியவைகளைத் தெரிவித்து நட்புச் செய்வித்தனன். இவரது வலியைத் தான் அறியாததால் அதனை அறிய எண்ணி இருக்கையில் குறிப்பறிந்த இராமமூர்த்தி மராமரத்தை எய்தும் துந்துபிஎலும்பைக் காலாலுந்தியும் காட்டினர். இதனால் வல்லவர் என அறிந்து வாலியுடன் வலியபோர்க்குச் சென்று

யுத்தஞ்செய்து இராமமூர்த்தியால் அவனிறக்க, மீண்டும்இராமமூர்த்திக்கு வானரசேனைகளைக்கூட்டுவித்துச் சீதாபிராட்டியைத் தேட அனுப்பி இலங்கைமேற் படைகொண்டு சென்று இராவணன், வாநரப்படைகளை வடக்குக் கோபுரவாயிலிலிருந்து காண்கையில் அவன் மேற் பாய்ந்து அவனுடன் போரிட்டு மகுடபங்கஞ் செய்து, கும்பகர்ணனுடன் மல்லயுத்தம் புரிந்து அவன் மூக்கையும் காதையும்கடித்துவிட்டு ஓடிவந்தவன். கும்பன் என்னும் அரக்கனையும், சூரியகேதுவையும் கொன்றவன். இவன் இராமமூர்த்தியுடன் இராவணன் முடியும் அளவுஇருந்து அயோத்திசென்று பட்டாபிஷேகங்கண்டு தன்பதி அடைந்தான். இருக்ஷவிருதனைக் காண்க.

2. திரிமதி என்பாள் குமரன்.

**சுக்கிரீவ மகாராஜா** — (சைநர்.) புஷ்பதந்த தீர்த்தங்கரின் தந்தை, தேவி ஜயராமை.

**சுக்கிலர்** — தேவி வித்ருமை இந்தத் தம்பதிகள் இருவரும் மகோற்கட விநாயகருக்குப் புல்லரிசிச் சோறிட்டு நற்பதம் பெற்றவர்கள்.

**சுக்கிலன்** — அவிர்த்தானனுக்கு அவிர்த்தானியிடம் உதித்த குமரன்.

**சுக்நுசன்** — விபுலன் குமரன்.

**சுக்திமந்தம்** — இமயமலைக்கருகிலுள்ள மலை. இம் மலைகளுக்கு இடையில் பல்லாட தேசம் உளது. இது பீமசேனனால் செயிக்கப்பட்டது.

**சுக்திமதி** — 1. சுக்திமான் என்னும் பர்வதத்தில் உற்பத்தியாகும் நதி. The river Suvernarekha in Orissa. 2. The river Vetranati in Malwa.

2. சேதிதேசத்தின் ராஜதானி. இதிலுள்ள கோலாகலம் என்னும் பெயருள்ள மலையில் உபரிசரவசுவின் பாரியையாகிய கிரியை பிறந்தனள்.

**சுக்மம்** — சிந்துநதி பிரதேசத்திலுள்ள ஒரு தேசம். (பார - சபா.)

**சுக்மன்** — சிபியின் புத்திரனாகிய பலியின் மனைவியிடத்துத் தீர்க்கதம முனிவனுக்கு பிறந்தவன்.

**சுக்திமான்** — ஒரு பர்வதம். The Western portion of the Vindhya Range near Ujjin.

**சுக்ரீ ஆான்** — ஒரு அசுரன். இவன் புலிமேல் ஏறி ஆகாயவழியிற் செல்கையில் திருமழிசையாழ்வார் யோகப் பிரபாவத்தால் புலி அவ்வழி செல்லாது மறுக அசுரன் இறங்கி இவர் பெரியவர் என மதித்து அவருக்குக் கவசமும் மணிமாலையுங் கொடுக்க அவர் மறுக்கக்கண்டு கொண்டாடிச் சென்றவன்.

**சுக்ரீமதீ** — கடகபுரிக்கு அருகிலுள்ள ஒரு நதி.

**சுக்ரீவம்** — கிருஷ்ணன் குதிரைகளில் ஒன்று (பார - சபா.)

**சுக்ரேசன்** — காசியில் சுக்கிரன் பூசைசெய்த இலிங்கம்.

**சுங்கன்** — புஷ்யமித்திரன் குமரன். இவன் குமரன் அக்கிநிமித்திரன்.

**சுங்கநீதவிர்த்த அபயன்** — இவன் குலோத்துங்க சோழனுக்குப் பாட்டன். விக்ரம சோழனுக்குத் தந்தை.

**சுங்கம் வாங்குவோன்**—வாணிகம் புரிவோரின் மூலப்பொருட்குக் கேடு நேரிடாமல் அவர் பெறும் லாபத்தில் அரசனுக்குரிய பாகம் வாங்குவோன். (சுக்ரநீதி.)

**சுசக்ரன்** — வத்சந்திரன் குமரன்.

**சுசங்கீதன்** — ஒரு காந்தருவன்.

**சுசந்தி** — சூரியவம்சத்து அரசருள் ஒருவன்.

**சுசந்திரன்** — ஏமசந்திரன் குமரன். இவன் குமரன் தூமராசுவன்.

**சுசருதர்** — தன்வந்திரியின் மாணாக்கர்.

**சுசருமர்** — 1. ஒரு முனிவர். தருமர் செய்த இராஜசூய யாகத்தில் உத்காதாவாக இருந்தவர்.

2. திரிகர்த்த தேசாதிபதியாகிய சுதன்வன் குமரன்.

3. நாராயணன் என்போனுக்குக் குமரன். இவன் குமரன் வாசுதேவன்.

4. நகுலனால் கொல்லப்பட்ட கர்ணன் குமரன்.

5. மகததேசாதிபதிகளில் ஒருவன்.

6. அரக்கன் ஒருவனால் கிரகிக்கப்பட்டு உத்தமனால் மீட்டுக்கொடுக்கப்பட்ட மனைவியைப்பெற்ற பிராமணன்.

**சுசர்மன்** — 1. கர்னன் குமரன்.

2. பாஞ்சால தேசத்தவன், கர்னனால் கொல்லப்பட்டவன்.

**சுசனை** — பிரசாபதியின் மனைவி, குமரன் அணிலன்.

**சுசன்மகிருத்** — சோமகன் குமரன்; பிருஷதன் தந்தை.

**சுசக்ஷு** — கங்கையின் பிரிவு.

**சுசாகை** — சுவலபருக்குக் காந்தியிடத் துதித்த குமரி.

**சுசாது** — அநேக பக்தர் எனும் ருஷிக்குப் பத்னி.

**சுசாதை** — 1. அட்டகோண மகருஷியின் தாய், ஏகபாதன் தேவி.

2. ஒரு இடைச்சி, தந்தை பலன். தனக்கு மகப்பேறு உண்டாயின் வனதேவதைக்குப் பஞ்சாமிர்தம் படைப்பதாகச் சங்கற்பித்து, அவ்வாறு பெற்று வனத்தெய்துகையில் புத்தனை வனதேவதையென்று கருதி அவர்க்கூட்டி ஆசீர்வதிக்கப்பட்டவள்.

**சுசாந்தி** — 1. சாந்தியின் குமரன். இவன் குமரன் புரீசன்.

2. அசமீடன் இரண்டாம் குமரனாகிய நீலன் பேரன்.

**சுசாமன்** — ஒரு ரிஷி. தருமர் செய்த ராஜசூயத்தில் ருத்விக்கா இருந்தவன்.

**சுசாருகநன்** — ஒரு யாதவவீரன்.

**சுசி** — 1. அக்கினிக்குச் சுவாகாதேவியிடம் உதித்த குமரன்.

2. (சூ.) சதத்துய்ம்நன் குமரன்.

3. (ச.) சுத்தன் குமரன். இவன் குமரன் திரிகுத்து.

4. (பிரி.) விற்பிரவன் குமரன். இவன் குமரன் க்ஷேமகன்.

5. (யது.) அந்தகன் குமரன்.

6. சுத்தன் குமரன்.

7. மிதிலை நாட்டரசன்.

8. வேதசிரசு முனிவர்க்குப் பாரி.

9. ஒரு இருடி இவன் திரிவக்ரன் தேவியாகிய சுசீலையைப் புணர்ந்து கபாலபரணனைப் பெற்றவன். கபாலபரணனைக் காண்க.

**சுசிட்டுமான்**—கர்த்தமபிரசாபதியின்குமரன்.

**சுசித்திரன்** — 1. திருதராட்டிரன் குமரன்.

2. பாஞ்சாலன், துரோணனால் கொல்லப்பட்டவன், இவன் குமரன் சித்திரவர்மன்.

**சுசிநாதன்** — (சந்.) திருதராட்டிரன் புதல்வன்.

**சுசிமாதேவி** — (சைநர்.) பத்மப்பிரபதீர்த்தங்காருக்குத் தாய், தரணன் தேவி.

**சுசியேஷ்டன்** — அக்கினிமித்திரன் குமரன் இவன் குமரன் வச்சமித்திரன்.

**சுசிரவை** — 1. ஜயத்சேனன் பாரியை. புத்திரன் பராசினன். (பாரதம்.)

2. திருதராஷ்டிரன் பாரியை காந்தாரியின் சகளத்திரம்.

**சுசிவான்** — ஒரு பாகவதன்.

**சுசிவிரதன்** — சத்தியாதனனைக் காண்க.

**சுசீலன்** — 1. (சூ.) சிகண்டியின் குமரன். இவன் தவம் இயற்றுகையில் சிவேதாச்சவர் எனும் முனிவர் இவனிடம்வந்து சிவமந்திரங் கற்பிக்கத் தவத்திலிருந்தவன்.

2. விஷ்ணுபடன்.

3. பிடகநூல்வழித்தொடராதுசிவபூசைமேற்கொண்டு திரிபுரமாண்ட அசுரன்.

4. புஜபலனைக் காண்க.

5. கோசலதேசத்து வைசியன். இவன் தரித்திரத்தால் துன்பம் அடைந்து விரதசீலனாய் ஒழுகும்நாட்களில் ஒரு வேதியர் வர அவரைக்கண்டு தனது வாலாறுகூறி எனது வறுமையால் ஒரு குழந்தையைத் துரத்திவிட்டேன் எனக் கூறி விசனம் உற்றனன். அவர் இவனுக்கு நவராத்திரி விரதம் அநுட்டிக்கக் கூற இவன் அங்ஙனம் அநுட்டித்துவரும் ஒன்பதாவது வருஷக்கடையில் அஷ்டமி அன்று இரவில் தேவி தரிசனந் தந்து இவனை அநுக்கிரகித்து என்றும் வறுமை அடையாவண்ணம் செய்தனள்.

6. ஒரு வேதியன், இவன் இஷ்டகாமியசித்தியின்பொருட்டுப் பாசுபத விரதம் அனுஷ்டித்து நலமடைந்தவன். (சௌரபுராணம்.)

**சுசீலை** — 1. சோமன் தேவி.

2. சிவசருமர் தேவி.

3. திரிவக்ரன் தேவி. இவள் ஒரு புதல்வன் வேண்டிச் சுசிமுனிவரை யணைந்து கபாலபரணனைப் பெற்றவள்.

4. தனபதியைக் காண்க.

5. பிரமசருமன் தேவி, மகா கற்புடையாள், கணவன் கிருஷியால் பெருந்திரவியம் அடைந்து வைதிககாரியம்விட்டு மனைவியின் சொல்லால் மரணகாலத்தில் விரதசீலனாய் மனைவிதந்த காவிரிஸ்நானபலத்தை அடைந்து மரணத்தறுவாயில் இருக்கையில் யமபடர்வந்து சுசீலையின் கற்புக்கு அஞ்சி நீங்கி யமனுடன்கூறிச் சித்திரகுத்தனை அனுப்பினர். இது நிற்க, பிரமசருமன் தன் மனைவி இடம் நல்ல பதார்த்தம் வேண்டும் என்றனன். இதனை மறைவிலிருந்து இவன் உயிரைக் கவரப்பார்த்திருந்த சித்திரகுத்தன் நகைத்தனன். இதனை அறிந்த சுசீலை நகைத்ததற்குக் காரணம்

வினவிச் சித்திரகுத்தனைப் பணிய அவன் சுமங்கிலியாக என வாழ்த்தக் கேட்டு யம புரம் அடைந்து கணவனை மீட்டுச் சுகம் அடைந்தவள்.

**சுசுருதன்** — 1. மிதிலாதிபதியாகிய சயன் தந்தை.

2. காசிராசன் குமரன், விசுவாமித்திரர் குமரர் எனவுங் கூறுவர். இவனால் சிறந்த சுசுருதம் எனும் வைத்தியநூல் இயற்றப் பட்டது.

**சுசேசன்** — அநுமன் கொணர்ந்த சஞ்சீவியை இலக்குமணர்க்கு உண்பித்தவன்.

**சுசேசு**—அசோகவர்த்தனன்குமரன். இவன் குமரன் தெசாதனன்.

**சுசேநன்** — திரிமதி என்பாள் குமரன்.

**சுசேஷன்** — ஒரு வாநரவீரன், தாரையின் தந்தை.

**சுசேஷணன்** — 1. கஞ்சனால் கொல்லப் பட்ட வசுதேவன் குமரரில் ஒருவன்.

2. கண்ணனுக்கு உருக்குமணியிடம் உதித்த குமரன்.

3. உருமைக்குத் தந்தை, வருணனால் பிறந்தவன், சுக்கிரீவனுக்கு மாமன்.

4. சாத்தகியால் கொல்லப்பட்ட கர்ணன் குமரன்.

**சுசோபனை** — ஆயுவென்னும் பெயருள்ள மண்டுகராஜன் புத்திரி. இக்ஷுவாகு வம்சத்தவனாகிய பரீட்சித்தின் தேவி.

**சுச்சிரவன** — மனோரமையைக் காண்க.

**சுச்சுதன்** — சடியின் மந்திரிகளில் ஒருவன். (சூளா.)

**சுச்சோதி** — தேவவன்மன் குமரனாகிய ஒரு அரசன். இவன் தீர்த்தயாத்திரையில் திருப்பூவணத்துப் பிதுர்த் தர்ப்பணஞ் செய்கையில் பிதுரர்களைப் பிரத்தியக்ஷமாகக் கண்டவன்.

**சுஞ்ஞானி** — அல்லமதேவருக்குத் தாய்.

**சுடர்** — 1. (௩) சூரியன், சந்திரன், அக்கி.

2. சூரியன், சந்திரன்.

**சுடர்த்தைலம்**—எண்ணிய மருந்தைத் துணியில் சுருட்டிப் பாத்திரத்தில் நெய்யைவிட்டுக் கீழ்நோக்கிப் பிடித்து எரிக்கத் தைலம் சொட்டுவது.

**சுட்கநாள்** — நக்ஷத்ரம் காண்க.

**சுட்காசி** — மிதுனம், சிங்கம், கன்னி.

**சுட்டேழுத்துக்கள்** — உயிரெழுத்துக்களின் பிரிவினவாய்ச் சுட்டுதலைக் குறிக்கும் அ, இ, உ, எனும் (3) எழுத்துக்கள். (நன்.)

**சுண்ணம்** — பூமியில் நீர்தங்கிய இடத்தில் நத்தை, சங்குப்பூச்சிகள் சஞ்சரிப்பன; அவை நாளடைவில் பூமியில் தங்கி மங்கிப்போம் கிளிஞ்சல்களை வெட்டிக் காளவாயில் சுடவுண்டாம் பொருள். பல கற்களைச் சுட்டவையும் சுண்ணமாம். கற்சுண்ணத்தினால் அன்னம் ஜீரணமாவதுந் தவிரக் குடலைப்பற்றிய சில நோய்கள் நெஞ்சு சிக்கு, வாதகிரிச்சினம், பூரான்கடி இவை நீங்கும். பற்கள் வலிவுபெறும். நெருப்புப்பட்டபுண், சொறி, சிரங்கு தினவு காயங்களாலே யொழுகுகின்ற ரத்தம், அளிந்த விரணம், மண்டைப்புற்று, தலைநோய், சன்னி இவைகளுக்குக் கிரமப்படி யுபயோகப்படுத்துவதுண்டு; சுக்கிலத்திற்கும் பலந்தரும். முத்துச்சுண்ணத்தை யுபயோகப்படுத்துபவர்களுக்கு நீடித்த பேதி விலகும். மலக்கிருமி வயிற்றுநோய் யிவைகளை விளக்கும் வாதரோக மணுகவொட்டாது முகம் பளபளப்பும் தேஜசும் உண்டாகும்.

**சுண்ணும்புக்கல்** — பூமியினடிப்பாகத்துள்ள கல்போன்ற சுண்ணம்.

**சுதகீர்த்தி** — 1. அருச்சுநன் குமரன்.

1. பத்திரைக்குத் தந்தை, கேகயநாட்டு அரசன்.

3. சத்துருக்நன் தேவி.

**சுதக்கணன்** — துரியோதனன் தம்பி, நாலாநாள் யுத்தத்தில் வீமனால் மாண்டவன்.

**சுதக்கணை** — 1. விராடன் தேவி.

2. திலீபன் தேவி. இவள் நெடுநாள் புத்திரப்பேறு இன்றி வசிட்டர் சொற்படி பசுபாலனஞ்செய்து இரகுவைப் பெற்றவள்.

**சுதக்கன்** — ஒரு இராவண வீரன்.

**சுதசாகரன்**—சடியின் மந்திரியரில் ஒருவன்.

**சுதசித்** — ஒரு யாதவ வீரன்.

**சுதசிரவசு** — (பிர.) மாற்சாரியின் குமரன். இவன் குமரன் யுதாயு.

**சுதசு** — சுவாயம்பு மன்வந்தரத்து இருந்த ஒருவர். இவர் விஷ்ணுமூர்த்தியைக் குமரராகப் பெற விரும்பி (௧௨,000) வருடம் தவஞ் செய்தனர். விஷ்ணுமூர்த்தி பிரத்தியக்ஷமாய் இவரைப் பார்த்து மறுபிறப்பில் அந்தப்படி பிறக்கிறோம் என வரம் அளிக்கப் பெற்று வசுதேவர் எனப் பிறந்து கண்ணனைப் பெற்றனர்.

**சுதசேனன்** (சந்.)—1. அபிமன்னன்பேரன்.

2. சகாதேவன் குமரன், தாய் திரௌபதி.

**சுதசோமன்** — பீமசேனன் புத்திரன் துரோணனால் கொல்லப்பட்டவன்.

**சுதஞ்சனன்** — குணமாலையின் புத்திரன். சீவகன் உபதேசத்தால் நாய்ப்பிறப்பு நீங்கி இயக்க உருப்பெற்றவன்.

**சுதஞ்சயன்** — (பிர.) செந்தி குமரன். இவன் குமரன் விற்பிரவன்.

**சுதஞ்சனை** — கச்சன் மனைவி.

**சுதநா** — குரு குமரன், இவன் குமரன் சுகோத்ரன்.

**சுதநுசு** — குருவின் இரண்டாம் குமரன்.

**சுதந்மர்** — பதினொரு கணதரரில் ஒருவர். இவர் சீவகன் சரிதையைச் சேணிக மகாராஜனுக்குக் கூறியவர்.

**சுதந்மன்** — இவன் பிரமதேசமாண்ட அரசருள் ஒருவன். தவமேற்கொண்டு இராஜருஷியாயினான். இவனை இருடிகள் அணுகாதிருத்தலை நோக்கி இவன் அவர்களைக் காரணம் வினவ அவர்கள் நீ, இடையன் ஒருவன் மாட்டுத் தொழுவத்தில் காட்டுப் பூனைவந்து வருத்துகிறதெனக்கூற அதனை எய்யச்சென்று பசுவினை எய்தனை அப்பாபத்தொடர் புடைமைபற்றி உன்னை அணுகாதிருக்கிறோம் ஆதலின் நீ பினாகினியாடிச் சுத்தமுறின் அடைவோமென அவ்வாறு அதின் மூழ்கிப் புனிதமடைந்து இருடி கூட்டத்தை அடைந்தவன். (பெண்ணைநதி புராணம்.)

**சுதந்மை** — சோமகாந்தனைக் காண்க.

**சுதபசி** — காசியில் இருந்த ஒரு வேதியன்.

**சுதபசு** — (பிர) ஓமன் குமரன். இவன் குமரன் பெலி.

**சுதபசுக்கள்** — (அ-வது) மன்வந்தரத்துத் தேவர்.

**சுதபஸ்து** — (சு.) அந்தரிக்ஷன் குமரன்.

**சுதபன்** — 1. பலியின் தந்தை, அணுவம் சத்தவன்.

2. அயோத்திநாட்டு அரசன் தாசிக்குப் பொருள் முதலியவற்றைச் செலவிட்டுக் காவிரியாடிச் சுத்தனானவன். (காவிரித் தலபுராணம்.)

3. தாமசமனுவைக் காண்க.

4. சுவேதனைக் காண்க.

**சுதப்தம்** — யமபுர வழியிலுள்ள பட்டணம். இவ்விடம் ஆன்மாக்கள் தங்கிப் பதினொன்றுமாசிக பிண்டத்தைப் புசிப்பர்.

**சுதபாமுனிவர்** — இவர் ஆரியாவர்த்தத்தில் உதித்து வேதவேதாந்தங்களை யுணர்ந்த முனிவர். இவர் நர்மதை நதிதீரத்தில் தம் மாணக்கர்களுக்கு உபநிடதப் பொருளை உபதேசித்துக்கொண்டிருந்த சாந்தரென்னும் முனிவரிடத்தில் சென்று வேதம் அப்பிரமாணியம் என்று சைன மதத்தைக் கூறச் சாந்தர் கோபித்து நீ வேதபாஹ்யனாய் பௌத்தசமயத்தவனாகுக எனச் சபித்தனர். இவரே பிற்காலத்துத் திருநாவுக்கரையாராய்ப் பிறந்தனர் என அகத்திய பக்த விலாசம் கூறுகிறது.

**சுதமதி** — கௌசிகனென்னும் அந்தணனுடைய புத்திரி; மாருதவேகன் எனும் ஒரு வித்யாதரனால் முன்பு கவர்ந்துகொண்டு போகப்பட்டுப்பின்பு காவிரிப்பூம்பட்டினத்தில் இடப்பட்டு மாதவியின் உயிர்த்தோழியாயிருப்பவள்; மணிமேகலைபால் அன்புடையவள்; சங்கதருமனிடந் தருமங் கேட்டவள். (மணிமேகலை.)

**சுதரிசனபட்டர்** — சீராமபிள்ளைக்குக் குமரர். ஆழ்வான் பௌத்திரர். நடாதூர்அம்மாளை ஆச்ரயித்தவர். இவர் அம்மாளிடத்தில் காலக்ஷேபம் சேவிக்கையில் ஒரு நாள் காலக்ஷேபம் சேவிக்க வாராது இருந்தனர். அம்மாள் காலக்ஷேபத்திற்குக் காத்திருக்க இருந்தவர்கள், அவர் சாமானியர்தானே, நீங்கள் காலக்ஷேபம் தொடங்குக என அம்மாள், பட்டர் வரும்வரையில் காத்திருந்து பட்டரை நோக்கி இதுவரையில் கேட்ட காலக்ஷேபத்தைக் கூறுக என அவர் சொல்ல அனைவரையும் கேட்கும்படி செய்து அவரால் சொல்லப்பட்டவைகளுக்குச் சுருதபிரகாசிகை என்று பெயரும் இட்டனர். துருக்கரால் இடுக்கண் உண்டான காலத்தில் தம் பிள்ளைகளையும் சுருதப்பிரகாசிகையையும் தேசிகரிடங் கொடுத்துத் தாம் திருநாட்டுக்கு எழுந்தருளினர். இவர்க்கு வேதவியாசர் எனவும் பெயர்.

**சுதரிசனமகாராசர்** — சைநர், அரதீர்த்தங்கரின் தந்தையார், தேவி மித்திரசேனை. இவர் குருநாட்டு அரசர்.

**சுதரிசனன்** — 1. கோசலதேசத்தில் துருவசித்து என்றொரு அரசன் இருந்தனன். அவற்கு மனோரமை, லீலாவதி என்று இரண்டு மனைவியர் இருந்தனர். அவ்விருவருள் மனோரமை சுதரிசனனையும், லீலாவதி சத்ருஜித் என்பவனையும் பெற்றனர். ஒருநாள் அரசனாகிய துருவசித்து வேட்டைக்குச் சென்று சிங்கத்தால் மடிந்தனன். தந்தை இறக்க மூத்தவனுக்குப் பட்டந்தர

யோசித்திருக்கையில் இளையவனாகிய சத்ருஜித்தின் தாயைப்பெற்ற யுதாஜித் என்பவன் தன் பேரனுக்குப் பட்டங் கிடைக்க வேண்டுமென்று வாதாட மூத்த மனைவியாகிய மனோரமையின் தந்தையாகிய வீரசேனன் நியாயஞ் சொல்லியுங் கேளாதவனாய், வீரசேனனை யுதாஜித் எதிர்த்துப் போரிட்டுக் கொன்றனன். தன் தந்தை இறந்ததைக் கேள்வியுற்ற மனோரமை அதிக துக்கம் உள்ளவளாய் இந்த யுதாஜித் நமது குமாரனையுங் கொன்றுவிடக்கூடும் என்று ஆலோசித்துப் பட்டணத்தைவிட்டு வெளியிற்சென்று தன் பிதாவிற்குத் தகனாதிகளைச் செய்து காட்டின்வழிச் செல்லுகையில் கள்ளராற் பிடிபட்டுக் கூறை முதலிய இழந்து பாரத்துவாசர் ஆச்ரமம் போய்ச் சேர்ந்தாள். அவ்விடம் இவள் முனிவர்களால் உபசரிக்கப்பட் டிருக்கையில் யுதாஜித் கேள்விப்பட்டுச் சுதரிசனனைக் கொல்லச் சென்று ருஷிகளுக்கு அஞ்சி மீண்டனன். பின் சுதரிசனன் தன் தாயுடனிருந்த கிலீபனை (பேடி) ஒரு முனி புத்திரன் கிலீபனே இங்கு வாயென்று அழைக்கச் சுதரிசனன் அப்பதத்தின் முதலெழுத்தை மனத்திற் பதித்து உச்சரித்து வந்தனன். அது தேவியின் பீஜாக்ஷரமாதலால் அதனை உச்சரித்ததில் இவனுக்குத் தேவியின் அருளால் எல்லாச் சம்பத்தும் உண்டாயிற்று. ஓர்நாள் இவன் கங்கைக் கரையில் இருக்கக் கண்டோர், இவனது அழகு முதலியவற்றைக் கண்டு காசி ராஜபுத்திரியாகிய சசிகலைக்குக்கூற அவள் அவனை அல்லது மற்றவரை மணப்பதில்லை எனத் தீர்மானித்துத் தந்தையாகிய சுபாகு இடம் கூறினள். தந்தை சுயம்வரம் நாட்டச் சகலதேசத்து அரசரும் நிறைந்தனர். பின் சுபாகு தன் குமரியின் எண்ணப்படிக்குச் சுதரிசனனுக்குத் திருமணம் முடிக்க அரசருள் யுதாஜித் தன் பேரனுக்கு இப்பெண்ணை மணக்க எண்ணி வந்தவனாதலால் சுதரிசனனை எதிர்க்கச் சுதரிசனன் அவனைத் தேவியின் மந்திர பலத்தால் எதிர்த்துக் கொலைசெய்து தன் தந்தையின் இராஜ்யப்பிராப்தியை அடைந்தனன்.

2. கேதுவம்சன் அம்சமான ஒரு பாரத வீரன்.

3. பரதனுக்குப் பஞ்சசேநியிடத்து உதித்த குமரன்.

4. ஒரு வித்யாதரன். இவன் சரிதையை ஆங்கீரசுக்களைக் காண்க.

5. ஞானசுதரிசனைக் காண்க.

6. சூரியவம்சத்து அரசன். இவன் குமரன் வீரசகன். இவனுக்குப் பிற்பட்டு மித்திரஸகன் எனப் பெயர் வந்தது.

7. இவன் காலவ முனிவர் பெண்ணாகிய காந்திமதியை வலிய இழுத்தமையால் வேதாளமாக முனிவரால் சபிக்கப்பட்டுத் தந்தையின் வெப்புநோய் தீர்க்க நெருப்பெடுக்கும்படி சுடலைசென்று பிணந்தின்று வேதாள வுருக்கொண்டு சேது ஸ்நானத்தால் சாபம் நீங்கப் பெற்றவன்.

8. சேதுவில் சிவபூஜைசெய்து சர்வ தீர்த்தம் உண்டாக்கினவன்.

9. ஓகவதியின் கணவன்.

10. சுதானைக்கு அக்நியிடம்பிறந்தவன்.

11. ஒரு காந்தருவன் தன் தேவியுடன் நிர்மாணமாய் நீர்விளையாடுகையில் தேவலருஷிவர அவரைக்கண்டு அஞ்சாததால் அவ்விருவரையும் இருஷி புலிகளாகச் சபித்தனர். அவ்விருவரும் புண்ணியதீர்த்தபரிசத்தால் புலியுரு நீங்கிக் காந்தருவ உருப்பெற்றனர். (புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்.)

**சுதரிசநாசாரியார்** — நடாதூர் அம்மாளின் குமாரர்.

**சுதரிசனை** — 1. சுயோதனராசன் அல்லது மநுவம்சத்துத் துரியோதனன் பெண். அக்கினியை மணந்து ஒரு குமரனைப் பெற்றனள். தாய் நருமதை, குமரன் சுதர்சனன்.

2. நீலன் குமரி, நீலனைக் காண்க.

**சுதர்க்கணை** — விராடராசன் மனைவி, கேகயன் பெண் (சுதக்ஷணை).

**சுதர்சனம்** — ஆயிரம் முகங்களுடையதும், வியாப்தமானதும், இரண்டாயிரம் புஜங்களுடையதும், புருஷாக்ருதியானதும், இரண்டாயிரம் கண்களை யுடையதும், ஆயிரம் கால்களை யுடையதுமாகிய விஷ்ணு சக்கிரம். கண்ணனால் சுதக்ஷணன் விட்ட பூதத்தின்மேல் ஏவப்பட்டது. கஜேந்திரன்பொருட்டு முதலைமேல் ஏவப்பட்டது. பாரத யுத்தத்தில் சூரியனை மறைக்கக் கண்ணனால் வருவிக்கப்பட்டது. இருக்குமாங்கதன் பொருட்டுத் துருவாசரால் ஒளி மழுங்கச் சாபம் பெற்றது. இது சலந்திரனை வதைக்கச் சிவமூர்த்தி காலால் வட்டமாகப் பூமியில் கிழிக்க அதனைச் சலந்திரன் தன் வலிகொண்ட அளவு பூமி

யுடன் பெயர்க்க அது தலைமட்டாக வருகையில் அவன் உடலைப் பிளந்தது. இது சிவமூர்த்தியிடம் இருந்தது. இதனை விஷ்ணுமூர்த்தி சிவபூசாபலத்தால் பெற்றனர் என்பர் சைவர். (காஞ்சிபுராணம்). அம்பரீஷனைக் காண்க.

சுதர்சநன் — இவன் இல்வாழ்வோன். இவன் தன் மனைவிக்கு அதிதி பூஜையின் சிறப்பைக்கூறி, அவர்கள் யாதுவேண்டினும் தருகவெனக் கூறினன். ஒருகால் இவனது மனவலி வெளிப்படுத்த ருத்ரபகவான் அதிதியாக வந்து இவர் மனைவியை விருப்ப, மனைவி கணவன் சொல் மறுதுடம்பட்டிருக்கையில் கணவ னழைக்க, மனைவி நான் அதிதிபூசை செய்கிறேன் எனக் கேட்டுக் களித்தவன். (இலிங்கபுராணம்.)

சுதர்சன் — துரியோதனன் தம்பி.

சுதர்மணி — வாசுதேவன் தம்பியாகிய அநீகன் தேவி.

சுதர்மம் — 1. பிரமகற்பங்களுள் ஒன்று. (பிரகன்னாரதிய - புரா.)

2. இந்திரன் மண்டபம். (சுதர்மை).

சுதர்மா — 1. பிரியவிரதன் பேரன், கிருதபிரஷ்டன் குமரன்.

2. துரியோதனன் தம்பி.

3. சிவபூசாதுரந்தரனான ஒரு அரசன்.

4. பிடகநூல்வழித் தொடராது சிவபூசை மேற்கொண்டு திரிபுரத்தையாண்ட அசுரன்.

5. சேணிகமகாராசனுக்குச் சீவகன் சரிதை கூறியவர். கணதரருள் ஒருவர் (சைநர்).

6. தசார்ண தேசத்தரசன். பீமனுடன் யுத்தஞ் செய்தவன். (பார - சபா.)

7. தசார்ணவ தேசாதிபதி இவன் இராசசூய திக்விஜயத்தில் சேனாதிபதியாக்கப்பட்டவன்.

8. இந்திரன் தேர்ச்சாரதியாகிய மாதலியின் பாரியை. இவள் குமரி குணகேசி.

9. கம்சன் சகோதரன். பலராமனால் கொல்லப்பட்டவன்.

10. மதுராபுரியில் கண்ணனைப் பூமாலையால் அலங்கரித்த பூவாணிகன்.

சுதர்மை — இந்திரன் சபை. இது நூறு யோசனை யகலம். (150) யோசனை நீளம், வேண்டுமிடத்துச் செல்லும் வலியுள்ளது.

சுதலம் — கீழ் ஏழுலகத்து ஒன்று, பசுநிறம் உள்ளது.

சுதன் — காளிந்திக்குக் கண்ணனாற் பிறந்த குமரன்.

சுதன்மன் — 1. சாரதன் குமரன். இவன் குமரன் சுவேதசேது.

2. குசுமையைக் காண்க.

சுதன்வன் — 1. வசுதேவருக்கு ஸ்ரீதேவியிடம் பிறந்த குமரன்.

2. உலகபாலகரில் ஒருவன்.

2. திரிகர்த்த தேசாதிபதியாகிய சுசர்மனுக்குத் தந்தை.

4. பூமியில் அரசனாக அவதரித்த இந்திரனது வேறுபிறப்பு.

சுதன்வா — 1. ஒரு பிராமணன். இவன் பிரகலாதன் குமாரனாகிய விரோசனனிடத்தில் ஒரு பெண்ணிமித்தமாக மாறுகொண்டு பிரகலாதனனிடஞ்சென்று தம்மில் யார் உயர்ந்தவர் என வினவ அவர் கூறுதிருக்கக்கண்டு சபிக்கப்புக அவர் கச்யபரிடஞ்சென்று ஐயந்தீர்ந்து கூறினர். (பார.)

2. சுமந்து குமரர்.

3. சங்கராசாரியர்காலத்திருந்த அரசன்.

4. விராத்ய வைசியனுக்கு அவ்விராத்திய ஸ்திரீயிடம் பிறந்தவன். இவனுக்கு ஆசாரி, காருசன், விஜன்மா, மைத்திரன், சாத்துவதன் என அந்தந்தத் தேசங்களில் பல பெயருண்டு.

5. ஆங்கிரச புத்திரன்.

சுதன்வி — ஆகுகன் குமரி. அக்ரூரன் தேவி.

சுதக்ஷணன் — பௌண்டரக வாசுதேவன் எனும் காசிராசன் புத்திரன். தந்தையைக் கொன்ற கண்ணனை வெல்லச் சிவபிரானை நோக்கித் தவமியற்றினன். சிவமூர்த்தி தரிசனந் தந்து இவன் கருத்தறிந்து தக்ஷணாக்கினி வளர்க்கின் அதில் ஒரு பூதம் தோன்றும் அதை உன் பகைவர்மீது ஏவுக, என் அன்பர்மீது ஏவின் அது ஏவினவனைக் கொல்லும் என்று மறைந்தனர். சுதக்ஷணன் அவ்வகை தக்ஷிணாக்கினி வளர்த்திப் பூதத்தைச் சிருட்டித்து மதுரைமேல் ஏவி அதனைத் தீப்படுத்தினன். இதைக் கண்ணன் அறிந்து சுதரிசனத்தை ஏவ அதுஇவனையும் இவன் அனுப்பின பூதத்தையும் கொன்றது.

சுதக்ஷிணன் — பாண்டு புத்திரராகிய தருமருக்குக் குதிரைகளைப் பூட்டிய அரசன்.

சுதா — ஆங்கிரசன் தேவி, தக்ஷன் குமரி. இவள் பிதுர்க்களை ஈன்றாள்.

சுதாகாரம் — பிதுர்க்களைக் களிப்பிக்கும் கர்மம்.

சுதாசநன் — 1. சிவாகன் குமரன். இவன் குமரன் சகதேவன்.

2. (பிர.) பிரகத்ரதன் குமரன். இவன் குமரன் சதாநீகன்.

3. சூரியவம்சத்து அரசன். வசிட்டர் சாபத்தால் அசுரனானவன். இவன் விசுவாமித்திரர் ஏவலால் சத்தி முதலிய (99) குமாரரைக் கொன்றனன். (காஞ்சி-பு.)

சுதாசன் — 1. (சூ.) சர்வகாமன் குமரன். இவன் குமரன் சௌதாசன்.

2. பாஞ்சாலாதிபதியாகிய சியவநன் குமரன். சகாதேவன் தந்தை.

3. கல்மாஷபாதனுக்குத் தந்தை.

சுதாமனி—வசுதேவன் தம்பியாகிய அநீகன் தேவி.

சுதாமன் — 1. விச்வதாமனைக் காண்க.

2. கர்ணனுடைய புத்திரன் அர்ச்சுனனால் திரௌபதி சுயம்வரத்தில் கொல்லப்பட்டவன்.

சுதாயு — ஒரு மகாரதன், வருணராசன் குமரன், தாய் பன்னவாதை. பாரதம் பதினைன்காம்போரில் கிருஷ்ணனால் மோதப்பட்டு இறந்தவன்.

சுதாரை — 1. சிவசூரியனுக்குத் தெற்கிலுள்ள சத்தி.

2. அருக்ககீர்த்தி புதல்வி. (சூளா.)

சுதாவல்லி — கன்றுப்பூர் காண்க.

சுதானினி — சமீகரின் தேவி.

சுதானை — இவள் சுயோதனராஜனுக்கு நருமதையிடம் பிறந்து அக்கினியை மணந்து சுதரிசநனைப் பெற்றவள்.

சுதிருதி — (சூ.) பிரகத்ருதன் குமரன்.

சுதீக்ஷணர் — ஒரு முனிவர். இராமமூர்த்திக்குத் தாம்செய்த தவத்தை யளித்துத்தண்டகாரண்யத்திற்கு வழிகாட்டியவர். இராமமூர்த்தி இவராச்சிரமத்திற்றங்கி அகத்தியர் ஆச்சிரமஞ் சென்றனர். இவராச்சிரமம் நாகபுரிக்கு அருகில் இருக்கலாம்.

சுதுஷை — விதர்ப்பராஜன் தேவி. இவள் சாமகனால் பகைவரிடம் இருந்து அபகரிக்கப்பட்டுப் பின் பிறந்த விதர்ப்பனுக்கு மனைவியாக்கப்பட்டவள். குமரர் கிருதகிருதாள்.

சுதேகன் — திருதராட்டிரன் புத்திரன்.

சுதேகை — குசுமையைக் காண்க.

சுதேவன் — 1. விதர்ப்பதேசாதிபதி. இவன் குமரர் சுவேதன், சுரதன்.

2. (யது.) தேவகன் குமரன்.

3. சம்பு குமரன், விசயன் தம்பி, நபாகனைக் காண்க.

4. தமயந்தியைத் தேடச்சென்ற வேதியன்.

5. அம்பரீஷன் சேனாதிபதி.

6. காசிராஜனாகிய ஹரி அஸ்வன் குமரன். இவன்வீத ஹவியனால் வெல்லப்பட்டான். இவன் புத்திரன் திவோதாசன்.

சுதேவி — 1. நாபியின் குமரி. இவளுக்கு மேருதேவி எனவும் பெயர்.

2. வசுவின் குமரி. நாவாமன் தேவி. இவள் முன்பிறப்பில் கழுகாய்ச் சிவநிவேதனம் கவரச்சென்று சிவவேதியர் வருதலைக் கண்டு அஞ்சிப் பறக்க அவ்விடத்திருந்த தூசுமுதலிய சிறைக்காற்றால் நீங்கினதால் அரசன் மனையிற் பிறந்து அரசியாய் முன்னைய உணர்வு தோன்றிச் சிவபணிவிடை செய்து தன் வரலாற்றினைக் காலவருஷிகேட்க அறிவித்து அவரால் சிவபூசைப் பலன் உணர்ந்தவள்.

சுதேஷணன் — 1. பாதாளவாசியாகிய நாகன்.

2. வசுதேவருக்குத் தேவகியிடம் உதித்த ஒரு யாதவவீரன்.

சுதேக்ஷணை — 1. காந்தார ராஜனாகிய சுபலன் புத்திரி. திருதராஷ்டிரன் பாரியை

2. அனுவம்சத்தில் பிறந்த, சிபி என்பவனுடைய புத்திரனாகிய பலியின் தேவி. அவனுக்குத்தீர்க்கதமன் பிறந்தான். இவள் புத்திரர்கள் அங்கன், வங்கன், கலிங்கன், புண்டரன், சுக்மசேதி ஆக ஐவர்

சுதேக்ஷிணை — 1. திலீபன் மனைவி, மகததேசத்து அரசன் பெண்.

2. விராடன் தேவி, கீசகன் தங்கை.

3. அனுவம்சத்துப் பலியின் தேவி.

சுதை — 1. நயுதன் பாரி.

2. தக்ஷன் குமரி, பரிகிஷத்துக்களுக்கும் சுவர்த்தாக்களுக்கும் தேவி.

சுத்தசைவன் — இவன் சைவரில் பேதப்பட்டவன். இவன் சித்தாந்தியோடு பெரும்பாலும் ஒப்பன் ஆயினும் இவன் ஆன்மாவும் சிவமுங்கூடிய இடத்து ஆன்மா சிவானுபவத்திற்கு உரித்தாகா தென்பன்.

சுத்தபிரம்மம் — அபின்னசத்தி அதீதபிரமத்தில் அடக்கியிருப்பது.

சுத்தபொருள்கள் — ஆகாசம், வாயு, நெருப்பு, பூமியிலுள்ள நீர், தருப்பை. (பார.)

சுத்தமதி — ஓர் நதி. சோதிநாட்டு அருகில் உள்ளது. இது பெண்ணுருக்கொண்டு

ீகாலாகலத்தைக் கூடி வசுபதத்தன் என்னும் ஒரு புத்திரனையும் கிரியை என்னும் புத்திரியையும் பெற்றது.

சுத்தன் — 1. (சங்.) அநேநஸ் குமரன், இவன் குமரன் சுசி.

2. சண்முகசேநாவீரன்.

சுத்யும்நன் — இவன் பூர்வஜன்மத்தில் வேடனாயிருந்தவன். இவன் வழிப்போக்கரின் பொருளைக் கொள்ளைகொண்டு கடைசி காலத்தில் நல்லவர்களின் உபதேசத்தால் சிவஸ்மரணை செய்து மறுபிறப்பில் சூரியவம்சத்தில் பிறந்து நற்கதி பெற்றவன். (சௌர - புராணம்.)

சுத்துய்மன் — இவன் இந்திரத்துய்மன் குமரன் இவன் முற்பிறப்பில் வேடனாய் வழி பறித்துண்டு வாழ்ந்திறந்து யமபுரஞ் சென்றனன். காலன் இவன் செய்த தீங்கென்னென இவன் வழிச்செல்வாரை யாகாபிறகரவென்றான் என, யமன் இவன் சிவநாம சங்கீர்த்தனஞ் செய்ததனால் யமன் கட்டளையால் தெய்வவுலக மடைந்து பல்லாண்டு கடந்து பாண்டிநாட்டரச புத்திரனாய்ச் சிவபூசை செய்து வருகின்றேன் எனத் திரணவிந்து கேட்பக் கூறினன். (கூர்மபுராணம்.)

சுத்ரவிரணரோகம் — இது சிறு விரணங்களைத் தரும் கட்டிகளாம். இவை (௩௬) விதம் உண்டு. 1. அஜகள்ளிகாரோகம், 2. யவப்பிரக்யாரோகம், 3. அலசிரோகம், 4. கச்சபிரோகம், 5. பனசிகாரோகம். 6. பாஷாணகர்த்தபிரோகம், 7. முகதூஷிகாரோகம், 8. பதுமகண்டரோகம், 9. விவூர்தரோகம், 10. மசூரிரோகம், 11. விஸ்போடரோகம், 12. வித்தாரோகம், 13. கர்த்தபிரோகம், 14. கட்சியாரோகம், 15. கண்டரோகம், 16 ராஜிகாரோகம், 17. ஜாலகர்த்தபிரோகம், 18. அக்னிரோகணிரோகம், 19. பரிகல்விரோகம், 20. பீதாரிகாரோகம், 21. சர்க்கராரோகம், 22. சருக்கரார்ப்புதரோகம், 23. வன்மீகரோகம், 24. கதரரோகம், 25. ருத்தகுதரோகம், 26. சில்வரோகம், 27. குநகரோகம், 28. அசலவிரணரோகம், 29. திலகரோகம், 30. மசரோகம், 31. ஜதுமணிரோகம், 32. லாஞ்சனரோகம், 33. வியங்கரோகம், 34. பிரசுப்திரோகம், 35. உத்கோடரோகம், 36. கோடரோகம் என்பன. (ஜீவ.)

சுத்தவித்தை — சதாசிவ நாயனார், தமக்குச் சுதந்தரமான கிருத்யத்தை ஐவகையாகத் திருவுளத்தடைத்தும் மகேசுரமான அவதாரத்தில் சத்தியு மதுவாக நின்று அந்தத் தொழிலை நடத்துகைக்குக் காரணமாக நின்ற அவதாரம்.

வித்யாதத்வம் — சுத்தமாயையில் தூலகாரியத் தோன்றற்கு முதல்வனும், தூல அதிகார அவத்தையினின்று ஞானசத்தியை மிக்குச் செலுத்திப் பிரவிருத்தி செய்தவழி தூலமாய்க் காரியப்பட்ட சுத்தமாயையின் ஐந்தாம் விருத்தி வித்தைக்கேதுவாகிய ஈசானாய் நின்ற சிவனாலதிட்டிக்கப்படுவது. இதனைத் தூலஈசுரதத்வம், அதிகாரதத்வம், பிரவிருத்திதத்வம், தூலசகளதத்வம் என்பர். (சிவ - போ.)

சுத்தவித்யா தத்புவன வாசிகள் — சத்தகோடி மந்திரமூர்த்திகள். சுத்தவித்யாதத்வத்தில் காலம், நியதி, கலை, வித்தை, ராகம், புருடன், மாயை எனும் புவனங்களும் தத்வங்களும் அடங்கியவை. (சிவஞானபோதம்.)

சுத்தாவத்தை — ஆன்மாக்கள், கேவலசகலப்பட்டுப் பிறந்திறந்து திரியுமவதாரத்து அவர்கட்கு இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம், குருவருள், ஞானசாதனம், மும்மலக்கழிவு, வாதனைநீக்கம், ஞானப்பெருக்கமுண்டாகப் பெற்றுத் திருவருளைக் கூடுவது. இது இரவில் இருளோடும் விளக்கோடும்கூடிய கண் ஆதித்தவுதய கிரணத்தால் ஆதித்தனைக் காண்டல் போலும்.

சுத்தாநந்தப்பிரகாசர்—சுத்தானந்தம் எனும் பாதநூல் ஆசிரியர்.

சுத்தி—பொன், இரத்தினம், வெள்ளி, சங்கு இவைகள் ஜலத்தினால் அலம்பின் சுத்தப்படும். செம்பு, இரும்பு, வெண்கலம், பித்தளை, தராய், ஈயம் இவற்றாலான பாத்திரங்களைப் புளித்த தண்ணீர், உப்பு, சாம்பர், சாணம் இவைகளைக் கொண்டு சுத்தி செய்க. நெய், எண்ணெய் இவற்றைக் காகம் தொட்டால் இரண்டு தர்ப்பைகளால் ஒரு துளி அப்பால் எடுத்துவிட்டால் சுத்தி. படுக்கை ஜலத்தாலும், மரப்பாத்திரத்தைச் சீவுகிறதாலும், வீடு பெருக்கி மெழுகுதலாலும், சுத்தமாம். முறம், பண்டி, உலக்கை, உரல், இவைகள் தண்ணீராலும் சுத்தியாம். சருக்கு, சருவம், யூப

ஸ்தம்பம் இவற்றைவெந்நீராலும், தண்ணீராலும் சுத்தி செய்க. ஓர் ஆள் சுமைக்கு மேற்பட்ட நெற்சுமை, வஸ்திரம் அசுத்தப்படின் ஜலப்புரோக்ஷணத்தால் சுத்தமாம். மான்றோல், புலித்தோல், மரவுரி இவைகளை வஸ்திரத்தைப்போல் சுத்திசெய்க. காய், கிழங்கு, பழம் இவற்றைத் தண்ணீரால் சுத்திசெய்க. புழுவாலான பட்டு.ஆட்டுமயிர்க் கம்பளம் இவைகளை உழமண்ணால் சுத்தி செய்க. நேபாள தேசத்துக் கம்பளத்தை வேப்பங் கொட்டையாலும், சால்வையை வில்வப்பழத்தாலும், வெண்பட்டு, சங்கம், தந்தம், மான்கொம்பு, வெண்கடுகினாலும் சுத்தி செய்க. மண்பாத்திரங்கள் மீண்டும் சூளைபோடுதலால் சுத்தியாம். கள், மூத்திரம், மலம், கோழை, இரத்தம், சீ, ரேதஸ் இவைகள்பட்ட பாத்திரம் சூளையில் இடினும் சுத்தமடையா. சண்டாளராதிகளால் அசுத்தப்பட்ட வீடு ஒரு நாள் பசு வசிப்பதால் சுத்தமடையும். பக்ஷியாலும் பசுவினாலும் மோக்கப்பட்டும் மிதிக்கப்பட்டு முள்ளதும், தும்மிய எச்சில், மயிர், புழு இவைகளின் சம்பந்தமுள்ள அன்னமும் மண்ணைக்கிள்ளி அதன் மேல்போடுவதால் சுத்தமாகும். மேகத்தினால் பொழியப்பட்டும் பசுக்கள் குடிப்பதனால் குறைவிலாதும் இருக்கிற ஜலம் சுத்தமானது. தேவர்களுக்குப் புஷ்பம் கட்டுகிறவன், விற்பனைக்காகப் பரப்பப்பட்டவஸ்துக்கள், பிரமசாரியின் பிக்ஷான்னம் சுத்தம் உடையவாம். ஸ்திரீகளின் முகம் பக்ஷிகளால் தள்ளப்பட்ட பழம், பசுவின்கன்றின் வாய், வேட்டைநாயின் வாய் இவை இயற்கையில் சுத்தம் உள்ளன. தொப்புளுக்கு மேற்பட்ட மனித இந்திரியங்கள் சுத்தமுடையன. அதற்குக் கீழ்ப்பட்ட இந்திரியங்களும் அவற்றில் உண்டாம் மலங்களும் அசுத்தம் உடையன. ஈ, ஜலத்திவலை, நிழல், பசு, குதிரை, சூரியகாந்தி, பூமி, காற்று, தீ இவை மேலே படுகிறதினால் அசுத்தமில்லை. சுவர்த்தண்ணீர், ரேதஸ் இரத்தம், சுண்டு மூத்திரம், மலம், காதுக்குறும்பி, நகம், அழுக்கு, கண்ணீர், பீளை, வியர்வு இப்பன்னிரண்டு மலங்களும், ஜலத்தால் சுத்தம் அடையும். வாயினின்று தேகத்தில் விழுந்த ஜலத்திவலை, வாயிற்பட்ட மீசை, பல்வரிசையில் ஒட்டிய பொருள் இவைகளுக்கு எச்சில் கிடையாது. சாப்பிடு முன் வாந்தி செய்தவனும், புணர்ச்சி செய்தவனும் ஸ்நானம் செய்யின் சுத்தமாவர்.

சுத்தீயும்நன் — சாளுவசேநாபதி. இவன் தேவதானவர்களால் சாவில்லாவரம் பெற்றவன்.

2. சாட்சுசமனுவின் குமரன்.

3. இந்திரத்யும்நன் எனும் பாண்டியன் குமரன். கங்கைக்கரையிலுள்ள பிரதிட்டான நகரத்தில் சிவபூசை செய்திருக்கையில் கிரணபிந்துமுனிவர் வந்து இவன் முன்னைபிறப்பைக் கேட்க அரசன் நான் முன்பிறப்பில் வேடன் வழிச்செல்வோர் பொருளை என்னுடன் இருந்தவருடன் கூடிப் பறிக்கையில் அரகர என்று சிவமூர்த்தியின் திருநாமத்தை உச்சரித்ததால் அரசனாய்ச் சிவபூசை கடைப்பிடித்தேன் என்று கூறி முனிவர் அருள் பெற்றவன்.

4. வைவச்சுதமனுவிற்குப் பெண்ணாக முதலில் யாகத்திற் பிறந்து மீண்டும் வசிட்டரால் ஆணாகி உத்கலன், சயன், விகல்வன் எனும் புத்திரரைப் பெற்றுப் பார்வதியார் வனத்திற் சென்று பெண்ணாகி இளைஎனும் பெயருடன் புதனைப்புணர்ந்து புரூரவனைப் பெற்றவன்.

சுத்தியு — பூருவம்சம் சாருவின் புத்திரன் இவன் புத்திரன் வெகுபன்.

சுத்திரமான் — பத்தாம் மன்வந்தரத்துத் தேவர்.

சுத்திரீதி — (சூ) இராஜவர்த்தனன் குமரன்.

சுத்தோதன் — 1. (சூ.) சாக்கியன் குமரன்.

2. ஜினன் தம்பி. இவன் குமரர் கபோதராமா, காசாக்ஷன், காகன், கிருஷ்ணன்.

சுத்ரதன் — (க்ஷத்ரதன்) சசிஎக்னன் குமரன். இவன் கிரகம் நன்மையல்லாத தினத்தில் விதைவிதைத்தால் நாசமாக்குந் தெய்வம்.

சுத்வா — யஞ்ஞசம்பந்தியாய் ஸ்நானஞ்செய்தவன்.

சுநகன் — 1. கிரிச்சமதன் குமரன். இவன் குமரர் சௌநகருஷியாயினர்.

2. குருவிற்குப் பிரமத்வரையால் பிறந்தவன்.

3. புரஞ்சயனுக்கு மந்திரி. இவன் அரசனைக் கொன்று குமரனை விற்றவன். இவன் குமரன் பிரத்தியோதனன்.

4. ஒரு இருடி. பத்தியன் மாணாக்கன்.

சுநசை — ஒரு நதி பாரிபத்திர வனத்தில் உற்பத்தியாவது.

சுநச்சகர் — இவர் விடதானால் சத்தருஷிகளைக் கொல்ல அனுப்பிவைத்த பூசத்தைக் கொன்றவர். இவர் இந்திரனைச் சப்தருஷிகளின் கிழங்கு மூட்டையைக் கொடுப்பித்து மழைபெய்யச் செய்தவர்.

சுநச்சந்திரன் — (பிர.) நிர்மித்திரன் குமரன். இவன் குமரன் பிரகத்கர்மா. (சுநக்ஷத்ரன்).

சுநச்சேபர் — 1. இருசிகருஷியின் புத்திரர். அம்பரீஷனுக்கு யஞ்ஞநிமித்தம் விற்கப்பட்டவர்.

2. அஜீகர்த்தன் குமரன் அசிகர்த்தனைக் காண்க.

சுநந்தம்—பலராமர்கையிற்றாங்கிய உலக்கை.

சுநந்தனர் — கிருஷ்ணன் குமரர்.

சுநந்தன் — 1. விஷ்ணு திக்பாலகன்.

2. புருஷமேரு குமரன். இவன் குமரன் கோரன்.

சுநந்தநந்தன் — விஷ்ணு கிங்கரன்.

சுநந்தமுனிவர் — இவர் சிவமூர்த்தியின் நடனதரிசனம் வேண்டித் திருக்கைலையில் சிவபெருமானிடம் நடனதரிசனம் வேண்டச் சிவமூர்த்தி முனிவரைநோக்கி நீ வடவனம் சென்றிருக்கின் நாம் அவ்விடம் வருகிறோம் என அவ்வகைவந்து தவம்புரிகையில் சடையெல்லாம் பூமியோடு பூமியாய்ப் பொருந்திப் புல்லாகிவளர இவர் மேல் புற்றும் வளர்ந்தது. அதனால் முஞ்சிகேசமுனிவர் எனப் பெயர்பெற்றனர்.

சுநந்தை — 1. கேகயராசன் மகள். தஷ்யந்தன் குமரனாகிய பரதமகாராசன் பாரி.

2. சர்வபூமன் தேவி.

3. சேதிநாட்டரசன் மருமகள், தமயந்தியைத் தங்கைபோற் காத்தவள்.

4. சிவகனை வளர்த்த தாய்.

5. ருஷபதீர்த்தங்கரின் தேவி. (சைநர்)

6. சீதளதீர்த்தங்கரின் தாய். (சைநர்.)

சுநயன் — பிரசக்தி குமரன்.

சுநாபன் — 1. திருதராட்டிரன் குமரன்.

2. காசிநாட்டரசன். அர்ச்சுனனால் செயிக்கப்பட்டவன். கடதேசாதிபதி. (பாரசபா.)

3. சுஷேணன் குமரன்.

4. வச்சிரநாபன் தம்பி.

5. கடகதேசாதிபதி. திக்விஜயத்திற்குச் சென்ற அர்ச்சுனனால் வெல்லப்பட்டவன்.

சுநாமன் — 1. கம்சன் சகோதரன். பலராமனால் கொல்லப்பட்டவன்.

2. கருடன் குமரன்.

3. சுகேது குமரன், இவன் உடன்பிறந்தான் குமரன் சுவர்சஸ்.

சுநிதன் — 1. (சங்.) சந்நிதி குமரன். இவன் குமரன் சுகேதனன். பாண்டவர்க்கு நண்பன்.

2. சுஷேணனன் குமரன். இவன் குமரன் நிருஷசசு.

3. (பிர.) பலன் குமரன். இவன் குமரன் சத்யஜித்.

சுநிதை — அங்கன் தேவி, குமரன் வேநன்.

சுநீதன் — 1. சிசுபாலனுக்குச் சேநாதிபதி.

2. சந்நதியின் குமரன்.

சுநீதி — 1. பஞ்சகன்னியரில் ஒருத்தி.

2. அங்கன்தேவி, வேநன் தாய்.

3. உத்தானபாதன் தேவி, துருவன் தாய்.

4. விரோதன் குமரன். சூசம்பனால் சிறைப்பட்டு வத்சந்திரனால் விடுபட்டவன். சகோதரன் சுமதி.

சுநீதை — அங்கன் பாரி, மிருத்யு புத்திரி, வேநன் தாய்.

சுநுக்னன் — அணுவம்சத்தப் பலி குமரன்.

சுநுஷை — விதர்ப்பன் தேவி.

சுந்தராக்கோன் — காட்டில் வழிதெரியாத புலவர்க்கு வழிகாட்டிக் கவிபெற்ற இடையராகிய சொக்கலிங்கமூர்த்தி.

சுந்தராசாமந்தன் — சவுந்தர சாமந்தனைக் காண்க.

சுந்தரசோழன் — இவன் கனகசோழன் மகன். இவன் மனைவி சித்திரவல்லி. இவன் மகள் உற்பலாவதியைச் சுந்தரபாண்டியனுக்குக் கலியாணம் செய்வித்தனன். இவன் அரசாட்சியில் ஒரு காசிப்பிராமணன் தீர்த்தங்கொண்டு இராமேச்சுரம் செல்ல வருகையில் வழியில் கர்ப்பிணியாகிய தன் மனைவியை இவனிடம் பாதுகாக்கவிட்டுப் போய் ஒருவருஷம் கழித்துவர அரசன் அந்தப் பார்ப்பினியைத் தன் பெண்போற் பாதுகாத்து வந்தனன். இராமேச்சுரஞ் சென்ற வேதியன் திரும்பித் தன் மனைவி நிலையறிய யாரும் அறியாது அந்தப்புரத்தில் ஒளித்திருந்து நடுராத்திரியில் மனைவியின் கைப்பிடிக்கப், பார்ப்பினி ஓலமிட்ட சத்தமறிந்து அரசன் வேதியனை வெட்ட அரசனைப் பிரமகத்திபற்றியது. அரசன் பல சிவாலய பிரதிட்டை செய்து சிவதரிசனஞ் செய்து மத்தியார்ச்சுனஞ் சென்று பூசத்

துறையில் ஸ்னானஞ் செய்து சிவதரிசனஞ் செய்யும்படி கீழைக்கோபுர வாசல் வழிச் செல்லுகையில் சோழபிரமகத்தி அவ்விடம் நின்றுபோய் விட்டது. பின் அரசன் சந்தோஷித்துப் பல திருப்பணிகள்செய்வித்து தன் மகன் காலகாலசோழனுக்குப் பட்டங் கட்டிச் சிவபதம் அடைந்தனன். (ஓரியண்டில் லைபிரெரி, மதராஸ், சோழர்சரித்திரம் )

**சுந்தரத்தோளுடையார்** — எழுபத்துநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குரு பரம்பரை.)

**சுந்தரபாண்டியன்** — இவன் பாண்டிநாட்டரசன், தேவி விந்தியாவலி சேதுதரிசனஞ் செய்யச் சென்று அவ்விடம அவதரித்திருந்த இலக்ஷ்மி தேவியைப் பெண்ணாகக்கொண்டு வளர்க்கையில் விஷ்ணுமூர்த்தி ஒரு சைவவேதியராய் வந்து பூந்தோட்டத்தில் பூப்பறித்துக்கொண்டிருந்த கன்னிகையைக் கைப்பிடித்தனர். கன்னிகை முறையிட்டதால் அரசன் வேதியரை விலங்கிட்டுச் சிறையிலிட்டனன். விஷ்ணுமூர்த்தி அரசன் கனவில் தரிசனந் தந்து தன்னை யறிவிக்க அரசள் களித்துத் தனது கன்னிகையைத் திருமாலுக்குத் திருமணஞ் செய்வித்தனன். திருமால் அரசனுக்கு வேண்டிய வரம் அளித்துச் சேதுவில் சேதுமாதவராய் எழுந்தருளியிருக்கின்றனர். இவனுக்குக் குணநிதி பாண்டியன் எனவும் பெயர். (சேதுபுராணம்.)

**சுந்தரமாறன்** — திருஞானசம்பந்தமூர்த்தி நாயனருடைய திருவருளால் வெப்புநீங்கி அழகெய்தியபின் கூன்பாண்டியப் பெயர் நீங்கி இத் திருநாமம் பெற்றவன். (திருவிளையாடல்.)

**சுந்தரன்** — 1. இவன் சநார்த்தனன் எனும் வேதியன் குமரன். இவன் காட்டில் சமித்துமுதலிய கொய்யச் சென்று பாம்பு கடித்து இறந்தனன். இவன் தந்தை இவன் இறந்ததற்குக் காரணமென்னவென்ன ஆராய்கையில் இவன் முன்பிறப்பில் பசுவின்கன்றைக் குத்திய பாபம் பாம்பாய்க் கடித்திறந்தானென உணர்ந்து மிருதசஞ்சீவி தீர்த்தத்தில் தன் குமரனுடலைத் தோய்த்து உயிர்பெறக் கண்டவன்.

2. திருதராட்டிரன் புத்திரன்.

**சுந்தரமூர்த்திசுவாமிகள்** — ஸ்ரீ கைலாயத்தில் சிவபெருமானுக்குத் திருத்தொண்டு செய்திருந்த ஆலாலசுந்தரர். இவர் நந்தவனத்திற்குப் பூக்கொய்யச்சென்று, அநிந்திதை, கமலினி என்னும் பார்வதியாரின் தோழிமார்களைக் கண்டு மோகித்து, மலரெடுத்துச் சுவாமி சந்நிதானத்திற்குச் சென்றனர். இச்செய்தியை அறிந்த சிவமூர்த்தி சுந்தரரை நீ பூமியில் சென்று இன்பம் அநுபவித்துவருக என்றனர். இவ்வகையே தேவியாரும் அவ்விருவரையும் பணித்தனர். சுந்தரர் மனங்கலங்கி என்னைத் தடுத்தாளவேண்டும் என்றுவேண்டச் சிவபெருமான் அவ்வகை கிருபை புரிந்தனர். அதனால் திருநாவலூரில் ஆதிசைவப் பிராம்மண குலத்தில் சடையனாருக்கும் இசை ஞானியாருக்கும் திருமைந்தராய் அவதரித்து நம்பியாரூரர் என்னும் திருநாமம் பெற்று வீதியில் விளையாடுகையில் நரசிங்க முனையரையர் என்னும் அந்நாட்டரசர் இவரது தேசசைக் கண்டு தந்தையரைக்கேட்டு வளர்க்க வளர்ந்து புத்தூர் சடங்கவிமறையோன் குமரியை மணக்கும் தருணத்தில் சிவபெருமான் ஓர் விருத்த வேதியர் உருக்கொண்டு கலியாணப்பந்தரில் சென்று, நம்பியாரூரரை நோக்கி உனக்கும் நமக்கும் ஒருவழக்கு உண்டு. அது தீர்ந்தபின் நீ மணக்கலாம் என்றார். அது என்ன என்று நம்பிகேட்க, நீ நமக்கு அடிமை என்று முறியோலை காட்டினர். இதை வேதியர்கள் கேட்டு நகைத்தனர். ஆரூரர் சுவாமியை நோக்கிப் பிராமணர் பிராமணர்க்கு அடிமை ஆகுதல் அறியோம். நீர் பித்தரோ என்றார் நான் பித்தனானால் ஆகட்டும். நீ அடிமை செய் என்றார். ஆனால் நீர் காட்டிய ஓலையைப் பார்ப்போம் என்ன, அவ்வகை காட்ட நம்பி கோபத்துடன் அதைப் பிடுங்கிக் கிழித்தனர். சுவாமி ஆரூரரைவிடாது பிடித்து முறையிட வேதியர் விலக்கி, வீண்வழக்கிடும் நீங்கள் எந்த ஊர் என்ன, இந்தத் திருவெண்ணெய் நல்லூர் என்றனர். ஆனால் அந்தவழக்கினை அங்கேகூறிக் கொள்ளப் புறப்படும் என்னச் சென்று வழக்கைக்கூறி மூலமுறி ஓலையை நிசப்படுத்தினர். இதைப் பிராமணர்கள் கண்டு நம்பியாரூரை நீர் அடிமை செய்வது முறை என்றனர். அவ்வகை உடன் பட்ட ஆரூரர், ஐயரே இந்த ஊரில் தங்களுக்குத் திருமாளிகை எங்கு என்னச் சுவாமி, காட்டுகிறேன் வருக என்று பல வேதியர்தொ

டா அருட்டுறை என்னும் ஆலயத்தன் சென்று மறைந்தனர் ஆரூரர் பின்தொடர்ந்து அழைக்க, சுவாமி இடபாரூடராய்த் தரிசனந்தந்து ஆதிசங்கற்பம் அறிவிக்கத் தெளிந்து துதித்தனர். ஆரூரர், நான் என்செய என்னச் சுவாமி நீ நம்மைத் தலந்தோறும் துதித்துவா என்றனர். எப்படித் துதிக்க என்ன நீ நம்மை வலிமையுடன் வைதது வன்றொண்டன் என்னும் பெயர் பெற்றாய், நம்மைப் பித்தன் என்றனை, ஆதலால் அவ்வகையே பாடுக என, அக் கட்டளையைச் சிரமேற்கொண்டு "பித்தாபிறைசூடி" என்னுந் திருப்பதிகம், ஓதித் துதித்தனர். பின்பு தலயாத்திரை செய்யத் தொடங்கித் திருத்துறையூரில் தவநெறி பெற்றுத் திருநாவுக்கரசுகள் திருத்தொண்டுபுரிந்த திருவதிகைக்கு உள்புகாமல் அருகிருந்த சித்தவடமடத்தில் இராத்திரி நித்திரை செய்கையில் சுவாமி விருத்தவேதியராய் எழுந்தருளி அவரது திருவடிகள் சுந்தரர் திருமுடியில்பட நித்திரை செய்கையில் ஆரூரர் இவ்வகை புரியலாமோ என்ன விருத்தர் கிழவனாகையால் தெரியாது செய்தேன் என ஆரூரர், வேறிடத்திற் சயனிக்கச் சுவாமி மீண்டும் அவ்வகை புரியக் கண்டு நீர் யார் என நீ நம்மை அறியாயோ என்று மறைந்தனர். சுந்தரர் அவ்விடம் "தம்மானை" என்ற திருப்பதிகம் ஓதி, சிதம்பரம் அடைந்து துதிக்கையில் திருவாரூர்க்கு வரும்படி அசரீரி கட்டளை உண்டாக, விடைபெற்று நீங்கிச் சீர்காழித் தலத்துள்ளாகாது புறத்திருந்து பதிகம் ஓதி, திருவாரூர் அடைந்து புற்றிடங்கொண்டாரைத் தரிசித்துச் சிவபெருமானால் தமக்குத் தோழன் எனப்பட்டுத் தம்பிரான் தோழன் எனத் திருநாமம் பெற்றிருந்தனர். இவர் இவ்வகை இருக்க முன்னமே பார்வதியாரால் கட்டளைபெற்றிருந்த கமலினியார் திருவாரூரில் ருத்திரகணிகையர் குலத்தில் பரவையார் என்று அவதரித்து ஒருநாள் தரிசனத்திற்குப் போகையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் காணச் சென்றனர். சுந்தரர் கண்டு மயல்கொண்டு இவரைத் தமக்கு மணஞ்செய்விக்கச் சிவபெருமானை வேண்டினர். அவ்வகைச் சிவாஞ்ஞையைச் சொப்பனத்தில் ஏற்ற பெரியோர் பரவையாரைச் சுந்தரர்க்குத் திருமணம் முடித்தனர். பின்பு திருத்தொண்டர்களைப் பாடி அங்கிருந்து கோளிலிசென்று குண்டையூர்க்கிழார் கொடுத்த நெற்களைத் திருவாரூரில் சேர்க்கும்படி சுவாமியைக் கேட்டுப் பூதகணங்களால் திருவாரூரில் பெற்றுக் கோட்புலியார் அடிமைகளாகத் தரப்பெற்ற சிங்கடி, வனப்பகை எனபவர்களைத் தமக்கு புத்திரியாக அங்கீகரித்துத் திருப்புகலூருக்குச் சென்று செங்கல் பொன்னாகப் பதிகமோதி, அங்கு நின்று பல தலம் பணிந்து திருமுதுகுன்றடைந்து பொன் வேண்டி (1200) பொன் பெற்று மணிமுத்தாநதியில் இட்டு இதைத் திருவாரூர்க் குளத்தில் தரவேண்டும் என்று வேண்டி, நீங்கி, திருவாரூர் அடைந்து பரவையாருடன் கமலாலயத் தீர்த்தக்கரையில் வந்து ஜலத்திற் பார்க்கையில் பொன் அகப்படாதது கண்டு பதிகமோதிப் பெற்றுப் பல தலங்களை அடைந்து தரிசிக்க எண்ணங்கொண்டு நீங்கித் திருக்குருகாவூருக்கு அருகுவரப் பரமசிவம் இவரது இளைப்பைத் தணிக்க எண்ணிச் சோலையுடன் தண்ணீர்ப்பந்தல், கட்டமுது வைத்துக் காத்திருந்து சுந்தரர் வருவதைநோக்கி நீர் மிகவும் களைத்திருக்கிறீர், இந்தக் கட்டமுதைத் தொண்டர்கள் உடன் புசித்து இளைப்பாறுக என்னச் சுந்தரர், அவ்வகை செய்து சயனிக்கையில் சிவபெருமான் சோலையுடன் மறைந்தனர். சுந்தரர் விழித்துச் சிவமூர்த்திசெய்த திருவிளையாடற்கு அற்புதம் அடைந்து, திருக்குருகாவூர் அடைந்து பதிகம் ஓதி, விடைபெற்றுப் பலதலம் பணிந்து திருக்கச்சூருக்குவர அங்கு பரிசனத்தார்வரத் தாமதித்தமையால் தொண்டர் பசியைக்கண்ட சிவமூர்த்தி ஒரு வேதியர்போல் எழுந்தருளி நான் இங்குப் பிராமணர் வீடுகளில் அன்னம் கொணர்ந்து தருகிறேன் என்று பிக்ஷை வாங்கித் தந்து சுந்தரர் புசிக்க மனறந்தனர். மறையச் சுந்தரர் திருவடி வருந்த வந்தமைக்கு இரங்கி விடைபெற்று நீங்கிப் பலதலங்கள் தரிசித்துத் திருவொற்றியூர் அடைந்து படம்பக்கநாதரை வணங்கி அங்கிருக்கையில் அங்கு ஆதிசங்கற்பப்படி திருவவதரித்திருந்த அநிந்திதையாகிய சங்கிலியாரைக் கண்டு மயல்கொண்டு சிவபெருமான் கட்டளைப்படி சங்கிலியாருக்குப் பரவை இடம் போகிறது இல்லை என்று மகிழ் அடியில் உறுதி செய்து கொடுத்துத் திருமணம்

செய்துகொண்டு சிலநாள் வசித்துத் திருவாரூர் எண்ணங்கொண்டு உறுதி மறந்து எல்லையைக் கடக்கச் சிவாஞ்ஞையால் கண்மறையத் திருவெண்பாக்கம் அடைந்து சுவாமி கோல்தரப் பெற்றுத் திருக்காஞ்சி அடைந்து ஒருகண் பெற்றுத் திருவாரூர் அடைந்து சுவாமியைத் தரிசித்து மற்றக் கண்ணும் பெற்றுப் பரவையின் ஊடல் தணிக்க இரண்டுமுறைச் சிவபெருமானைத் தூதாக ஏவி ஊடல் தணிக்கப் பெற்றுச் சுவாமியைத் தரிசித்து இருந்தனர். இவ்வகை சுவாமியைப் பரவையிடந் தூதாகச் செலுத்தியதால் இவரிடத்தில் வெறுப்புக்கொண்டு இவரது வருகை அறிந்து உயிர்நீங்கிய ஏயர்கோன் கலிக்காம நாயனாரை உயிர்ப்பித்து நட்புக்கொண்டு திருவாரூர் சென்றிருந்தனர். இவரது வரலாற்றினைச் சிவமூர்த்தியால் அறிந்த சேரமான்பெருமாள் நாயனார், சுந்தரமூர்த்திகளைத் திருவாரூரில் கண்டு தரிசித்து நட்புக்கொண்டு அவருடன் பலதலங்களும் தரிசித்து மீண்டும் திருவாரூர் வந்துசேர்ந்தனர். மீண்டும் இருவரும் புறப்பட்டுத் திருவையாற்றுக்குப் போக வெள்ளம் தடைசெய்ததால் பதிகம் ஓதி நிறுத்தி யணைவிற்சென்று சுவாமியைத் தரிசித்து மீளவெள்ளம் போனது கண்டு சேரனுடு சென்று சேரமான் பெருமாளுடன் வசித்துத் திரும்புகையில் சேரமான் தந்த நிதிகளை எல்லாம் திருமுருகன் பூண்டிக் கருகில் பூதகணங்கள் வேடர்களைப்போல் கொள்ளை கொள்ளக்கேட்டுச் சுவாமி சந்நிதியில் முறையிடப் பொருள்கள் எல்லாம் வாயிற்படியில் இருக்கக் கண்டு எடுப்பித்துக் கொண்டு திருவாரூர் அடைந்து சிலநாள் இருந்து மீண்டும் சேரமானைக் காண எண்ணங்கொண்டு திருப்புக்கொளித்தலம் செல்லுகையில் ஒரு வீட்டில் மங்கலமும் ஒரு வீட்டில் அழுகையும் இருக்கக்கேட்டு விசாரிக்கையில் ஐந்துவயதான இரண்டு பிள்ளைகள் ஏரிக்குச்செல்ல ஒருவனை முதலைவிழுங்கிற்று. ஒருவன் பிழைத்து வந்தான். வந்தவனுக்கு இப்போது உபநயனம் நடக்கிறது. இதைக்கண்ட இறந்த பிள்ளையின் வீட்டார் பிள்ளை இருந்தால் அவனுக்கும் உபநயனம் நடக்கும் அல்லவா என்று துக்கப்படுகின்றனர் எனக்கேட்டு அந்த ஏரி அடைந்து பதிகமோதி முதலையிடத்துப் பிள்ளையைத் தக்கவயதுடன் பெற்று உபநயனச்சடங்கு முடிப்பித்துத் திருவஞ்சைக்களம் எழுந்தருளிச் சேரமான் திருமஞ்சன சமயம் ஆதலால் திருக்கோயிலுள் புகுந்து சுவாமியைத் தரிசித்துப் பந்தத் தொடக்கறுத்து அருள்செயப் பதிகமோதச் சிவமூர்த்தி பிரம விஷ்ணுவாதியரை நோக்கி நீங்கள் வெள்ளையானையுடன் சென்று சுந்தரனை அழைத்துவாருங்கள் என்று பணித்தருள, அவ்வகையே திருக்கோயில் வாயிற்புறத்து வந்த சுந்தரர்க்குச் சிவபெருமான் கட்டளையைத்தெரிவித்து வெள்ளை யானைமீது அழைத்துச் சென்றனர். திருக்கைலைக்குச் செல்லும்சுந்தரமூர்த்திகள் சேரமானை மனதில் நினைக்கச் சேரமானும் அறிந்து குதிரை ஏறித் திருவஞ்சைக்களம் வந்து சுந்தரமூர்த்திகள் திருக்கைலைக்கு எழுந்தருளுவதைக் கண்டு குதிரையின் காதில் ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை ஓதிச் சுந்தரமூர்த்திகளைப் பிரதக்ஷணஞ்செய்து அவரை முன்வணங்கிக் கொண்டு இருவரும் திருக்கைலை அடைந்தனர். இவர்காலம் (8) அல்லது (9) ஆம் நூற்றாண்டெனக் கூறுகிறார்கள். இவர் காலத்தவர்கள் - சோமாசிமாற நாயனார், பெருமிழலைக்குறும்பர், விறன்மிண்ட நாயனார், கோட்புலி, மானக்கஞ்சாற நாயனார், சடையனார், ஏயர்கோன்கலிக்காமர், இசைஞானியார். (திருத்தொண்டர் புராணம்)

சுந்தராமா — பதின்மூன்றாம் மன்வந்தரத்துத் தேவர்.

சுந்தராசுரன் — இவன் தேவரை வருத்திச் சிவமூர்த்தியின் நெற்றிவிழியால் எரிந்த அசுரன்.

சுந்தராநந்தர் — இவர் போகர் மாணாக்கருள் ஒருவர். இவர் ரெட்டிச்சாதியாராம். இவரும் சித்தர். இவர் செய்தநூல் வயித்தியத்திரட்டு. (குலாலபுராணம்.)

சுந்தரி — 1. நருமதை எனும் காந்தருவ மாதின் பெண், மாலியவான் பாரி.

2. முதலில் விஷ்ணுவிடம்பிறந்து கந்தமூர்த்தியை மணக்க இமயச்சாரலில் தவமியற்றக் கந்தமூர்த்தி தரிசனந்தந்து சிவமுனிவரால் மான்வயிற்றிற் பிறந்து வளருக. நாம் அக்காலத்துவந்து மணப்போம் எனக் கூற அவ்வகை பிறந்து முருகக்கடவுளை மணந்த வள்ளிநாயகியார்.

3. ருஷப தீர்த்தங்கரருக்குச் சுநந்தையிடம் பிறந்த குமரி.

4. சார்ங்கதரன் குமரி. இவள் சித்திரன் என்பவனை மணந்து விபசாரஞ் செய்து திரிகையில் கணவன் கோபிக்கக் கணவனைத் தாங்குகையில் கொன்றனள். அரசன் அறிந்து இவளை ஊரைவிட்டு நீக்கநீங்கி நல்லவர் உண்டசேஷம் உண்டு நற்பதம் அடைந்தவள். இப்பெயர்கொண்ட மற்றொருத்தி இவ்வகைசெய்து புருஷனைக்கொன்று அரசனாற் றுரத்தப்பட்டு மற்றொருவனைக்கூடி அவன் தலையில் கருங்கல்லைமோதிக் கொன்றனள். அக்கல் கோயில் திருப்பணிக்கு உதவியதால் முத்திபெற்றவள்.

5. கேகய ராஜனாகிய சார்வபவுமன் பாரியை, இவள் புத்திரன் ஜயத்சேனன்.

**சுந்தரேசபாதசேகரபாண்டியன்** — இவன் வங்கியபதாக பாண்டியன் குமரன். இவன் தன் வருவாய்முழுதும சிவதிருப்பணி செய்வது அறிந்து ஆயிரம் பரிக்கோர் சேவகன் என்னும் சோழன் சண்டைக்கு வரப்பாண்டியன் சொக்கரிடம் முறையிட்டனன். சிவமூர்த்தி அசரீரியாய் நாம் முன்னிற்போம், அஞ்சவேண்டாம் எனக் கூறப் பாண்டியன் சேனைகூட்டி யுத்தத்திற்குவந்த சோழனுடன் யுத்தஞ்செய்யச், சொக்கர் வேடுருவாய்ச் சோழனைத் துரத்தி மறையப் பாண்டியன் அச்சோழனைப் பின்தொடர்ந்து போயினன். சிறிதுதூரஞ்சென்று சோழன் திரும்பிப்பார்க்க வேடன் இல்லாமை கண்டு பாண்டியனைத் துரத்தப் பாண்டியன் திரும்பி மடுவில்விழுந்து ஏறச் சோழன் மடுவில்விழுந்து இறந்தனன். இவன்காலத்து மாமனாகவந்து வழக்குரைத்த திருவிளையாடல் நடந்தது. இப்பாண்டியன் குமரன் வரகுணபாண்டியன்.

**சுந்தன்** — 1. இரணியகசிபின் சந்ததியானகிய நிகும்பன் குமரன். திலோத்தமையைக் காண்க.

2. தாடகை கணவன். இவன் குமார் மாரீசன் சுபாகு. சுகேது மருமகன். இவன் செருக்கால் அகத்தியாது ஆச்சிரமத்திலிருந்த மரங்களை அழித்து அவர் கோபத்தீயாற் சாம்பர் ஆனவன்.

**சுந்தோபசுந்தர்** — இரணியகசிபு வம்சத்தவனான நிகும்பன் குமரர். இவர்கள் இருவரும் சகோதரர். இவர்கள் பிரமனை எண்ணித் தவஞ்செய்து வெகுவரம் பெற்றுத் தேவரை வருத்தத் தேவர் விஷ்ணுமூர்த்தியிடம் முறையிட்டனர். விஷ்ணுமூர்த்தி விச்வகர்மனால் ஒரு அழகுள்ள பெண்ணைச் சிருட்டிப்பித்து இவர்களிடம் அனுப்பினர் அசுரர் இருவரும் பெண்ணின் அழகைக் கண்டு மயங்கி எங்களில் யாரை மணக்கின்றனை என்ன அப்பெண் உங்களில் யார் வலியுள்ளாரோ அவர்களை மணப்பேன் என்றனன். அவ்வகையே இருவரும் ஒருவருக்கு ஒருவர் வலியறிய யுத்தஞ் செய்து மாண்டனர். இவர்களின் குமரர் சும்பநிசும்பர்.

**சுபகன்** — சகுனி உடன்பிறந்தவன், பீமசேனனால் கொல்லப்பட்டவன்

**சுபகை** — 1. இவளொரு தாசி. இவள் பலரிடத்தும் பொருள்பறித்து அவர்கள் இறந்துபோகச் சந்தோஷித்து அயலாருடன் கூடிக் களித்துப் பல ரோகங்களைப் பெற்றுப் பாபியாய் ஞானி ஒருவருக்கு ஏவல்பூண்டு பாவநீங்கி முத்தி அடைந்தவள்.

2. பிராதகையின் புத்தர்.

**சுபசயர்** — ஒரு சிவனடியவர். சிவநிவேதனத்திற்கு அன்னஞ் சமைத்துக்கொண்டிருக்க அச்சமயத்தில் ஒரு சாமவேத வேதியன் அவ்வழி வந்தனன். சுபசயர் சிவநிவேதனம் கண்படுமெனச் செருப்புக்காலால் மூட வேதியன் பரிஹசித்தனன். அதனால் வேதியன் தான் கற்ற வேத முதலியவற்றை மறந்து சுபசயரை வேண்ட அனுக்கிரகித்தவர்.

**சுபதந்தி** — புஷ்பதந்தம் என்னும் திக்கு யானையின் பெண்.

**சுபதேவன்** — 1. கோச்செங்கட் சோழனுக்குத் தந்தை. மனைவி கமலவதி.

2 புட்பதந்தனைக் காண்க.

**சுபத்தி** — தக்ஷன் பெண், தருமன் தேவி.

**சுபத்திரர்** — ஒரு விஷ்ணுபடர்.

**சுபந்திரன்** — 1. ஒரு யாதவவீரன். வசுதேவருக்குப் பௌரவியிடம் உதித்த குமரன்.

2. கேமசரியின் பிதா.

3. தருமபக்ஷிகளைக் காண்க.

**சுபத்திரை** — 1 வசுதேவருக்குத் தேவகியிடம் உதித்த குமரி, கண்ணனுக்குத் தங்கை. இவளை அர்ச்சுனன் சந்நியாசிவேடம் பூண்டு கள்ளமாய் மணஞ் செய்தனன். இவள் இரதம் ஓட்டுவதில் வல்லவள். திரௌபதியிடம் இடைச்சிவேடம் தாங்கிச்சென்று வரம் பெற்றவள். குமரன் அபிமன்யு.

2. எமவர்ணன் குமரி.

3. காமதேனு புத்திரி.

சுபந்து — குந்தலநாட்டிற்கு அடுத்த தேசாதிபதி.

சுபமுகூர்த்தம் — சுபக்கிரகங்கள் (கக, உ, ௬, கூ) இடங்களிலும், கேந்திரத்தானத்தும் நிற்பின் சுபமுகூர்த்தமாம். பாபக்கிரகங்கள் (௩, சு, கக) இவ்விடங்களில் நிற்கின் நல்ல முகூர்த்தமாம். சுக்கிரன் (எ) ஆம் இடம் ஒழியக் கொள்ளப்படும். (விதானமாலை.)

சுபநுணை — கத்துருவால் சிறைப்பட்டவள். (விநதை.)

சுபர்ணர் — திரேதாயுகத்தில் விஷ்ணுவிற்கு ஒரு பெயர்.

சுபலன் — 1. காந்தாரதேசத்து அரசன், குமரன் சகுனி, பெண் காந்தாரி.

2. ஒரு மாயாவி. இவன் முகத்தில் சுவைரிணிகள் காமினிகள், புமும்சலிகள் என்னும் பெண்கள் பிறந்தனர். இவன் அதலலோகாதிபதி.

சுபவிரதை — உத்தராதித்தனைக் காண்க. விருபாக்ஷனுக்குத் தேவி, கௌரியின் தாய்.

சுபன் — 1. யமனுக்குச் சிரத்தையிடத்துதித்த குமரன்.

2. பிரமதேவன் தம்மலிற்றேன்றி இந்திரனேவலால் பூமியில் அரசனாகப்பிறந்து ததீசியைத் தோழமைகொண்டு ஒருநாள் ததீசியிடம் அரசர் பெரியர் எனத் ததீசி வெகுண்டு குத்தச் சுபன் கோபித்து வச்சிரத்தால் எறிந்தனன். இதனால் ததீசிக்கு மார்பு பிளந்தது. ததீசி சுக்கிரனை நினைக்கச் சுக்கிரன் தோன்றித் ததீசியை உயிர்ப்பித்தனன். ததீசி உயிரடைந்து சிவபூசையால் வச்சிரயாக்கை பெற்றுச் சுபனையெதிர்க்கச் சுபன் கோபித்து வச்சிரம் எறிய வச்சிரம் வாய் மழுங்கிற்று. பின்பு சுபன், திருமாலையணைந்து வேண்டத் திருமால் ததீசியை நோக்கிச் சுபனுக்குப் பயந்தேனென்று தேவர்சபையில் கூறுக என்ன அவர் மறுக்கத் திருமால் ததீசியின் மேல் சக்கரம் எறிந்தனர். ததீசி அதனை வென்று நிற்கச் சுபன் வணங்கி நகரஞ் சென்றனன். இவனைக் குபன் என்றுங் கூறுவர். (ஸ்ரீ இலிங்கபுராணம்.)

3. ஆதித்தசோழனுக்குத் துணைசென்று ஈழங்கொண்ட செங்குந்தன்.

சுபாகு — 1. கத்ருதநயன் நாகன்.

2. திருதராட்டிரன் குமரன்.

3. வச்சிரசுவரூபர் குமரர். இவர் குமரர் உக்கிரசேநர்.

4. (சு.) சத்துருக்கன் குமரன். இவனுண்டது மதுரை.

5. யதுவம்சத்துப் பிரதிபாகு குமரன்.

6. சேதிதேசத்து வீரபாகுவின்குமரன்.

7. இருதத்துவசன் குமரர்.

8. காசிராஜன், பீமனால் செயிக்கப்பட்டவன்.

9. ஒரு இராக்ஷசன். மாரீசன் உடன் பிறந்தவன். தாய் தாடகை. இராமனால் கொல்லப்பட்டவன். பிதா சுந்தன்.

10. கிராதராஜன்.

11. குலிந்ததேசத்து அரசன்.

12. ஒரு தேவமாது.

13. திருதராஷ்டிர புத்திரன்.

14. கௌரவ பக்ஷத்தைச்சேர்ந்த க்ஷத்திரியன்.

சுபாங்கி—சந்திரவம்சத்துக் குருராஜன் பாரியை. விடூரதன் தாய். (பாரதம்.)

சுபாசு — சிவசன்மாவைக் காண்க.

சுபாசுபகாலம் — மனிதர் தொடங்குங் காரியம் இடையூறின்றி முடிவுபெறும்வகை நல்லகாலங்களை யெண்ணிச் செய்தலாம்: மாதங்களில் மாசி மாதந் தவிரச் சூர்யன் வடக்கேசெல்லும் உத்தராயனம் சிறந்ததாம். அவசியமானால் தக்ஷிணாயனத்தில் கார்த்திகை, ஐப்பசி, ஆவணி மாதங்களும் ஆகும். பக்ஷங்களில் சுக்லபக்ஷம் சிறந்தது. தேய்பிறையாகிய கிருஷ்ணபக்ஷத்தில் சப்தமி திதி வரையில் சம்மதிக்கப்பட்டது. வளர்பிறையில் பஞ்சமிவரையிலும், தேய்பிறையில் கடைசிபாகத்தையும் விடவேண்டும். இப்பக்ஷங்களின் நடுப்பாகம் மத்திமம். ஒற்றைப்படையாகிய நவமி, அமாவாசை, பிரதமை, திவிதியை, தசமி, தேய்பிறையில் ஷஷ்டியையும் விடவேண்டும். நக்ஷத்திரங்களில் ரோகிணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி, அஸ்தம், சுவாதி, புனர்பூசம், அநுஷம், அச்வனி, மிருகசீருஷம, திருவோணம், பூராடம், மகம், சித்திரை, அவிட்டம், ரேவதி இவை மனுஷருக்கும்; சதயம், விசாகம், பூரம், பூராடம், பூரட்டாதி, திருவாதிரை இவை தேவர்களுக்கும் சிறந்தன. வாரங்களில் செவ்வாய், ஞாயிறு ஒழிந்தவை நலம். சூரியன் அஸ்தமிக்கும்போது வீடுகட்டல் கூடாது. குரு அஸ்தமனத்தில் சுபகார்

யஞ் செய்யக்கூடாது. சுக்ராஸ்தமனத்திலும் பிரதிஷ்டை முதலிய செய்யக்கூடாது. பகலில் கர்ப்பாதானமும், இரவில் வாஸ்துகார்யமும் செய்யக்கூடாது. இராசிகளில் ஸ்திரராசி உத்தமம்; உபயராசி மத்திமம்; சரராசி நீக்கத்தக்கது; சுபராசி குருவுடன்கூடில் நலம்; குரு, சுக்ர உதயங்கள் சிறந்தன. குரு, சுக்ர, புதக்கிரகங்களின் உதயம் முறையே பிராம்மண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரர்களுக்குச் சிறந்தது. இடப்பலன் (௩, ௬, ௰௧) ஆவது இடங்களில் இரவில் பாபிகளாயினும் சுபர்கள்தான். சுபர்கள் (௧௨) வது இடந்தவிர மற்றெவ்விட மிருக்கினும் சுபர்களே, கேந்திரத்தில் பாபிகள் நீக்கத்தக்கவர்கள். சுபர்கள் சிறந்தவர்கள். (௧, ௭) வது வீட்டிலும் இரண்டாமிடத்திலும் இருக்குஞ் சந்திரன் சுபனுகக் கொள்ளவேண்டும். கோசாரபலன் கோசாரத்தை யடைந்திருக்கிற ஐந்தையும் நீக்கவேண்டும்: குரூரநக்ஷத்ரம், பிரமதண்டம், தூமகேதுவினின்று விடப்பட்டது, கிரகணத்தோடு கூடியது, கிரகணத்தால் அபேக்ஷிக்கப்பட்டது, வேதைநக்ஷத்ரம், வ்யதிபாதம், சூலம், வஜ்ரம், விஷ்கம்பம், பரிகம், கண்டம், வைத்ருதி, ஹர்ஷணம், அதிகண்டம், அஸ்தங்கதநக்ஷத்ரம், ஷடசிதிமுகயோகம், சூன்யமாசம், கிரகங்களால் பின்னப்பட்டது, தக்கவாரம், கிரகதோஷமுள்ள ஜ்வாலாநக்ஷத்ரம், திதி, நக்ஷத்திர, மாச, வருஷ, அயனங்களின் முடிவையும், அதிமாசத்தையும் விடல்வேண்டும். வாஸ்துசாந்தி யஜமானனுக்கு அனுகூல நக்ஷத்திரத்தில் பகலில் செய்தல்வேண்டும். (ஸ்ரீகாமிகம்.)

சுபாசுபகிரகங்கள் — புதனும் பிரகஸ்பதியும், பூர்வபக்ஷ சந்திரனும், சுக்ரனும் சுபகிரகங்கள். ஆதித்தன், செவ்வாய், சநி, அபரபக்ஷ சந்திரன், இராகு கேது ஆதித்தனுடன் கூடிய புதன் பாபக்ரகங்கள். சந்திரனும், புதனும் சிலநாள் சுபக்ரகம், சிலநாள் பாபக்ரகமுமாதலால் மத்திம கிரகமென்பது சிலர் பக்ஷம். (விதானமாலை.)

சுபாநனை — சிவசன்மாவைக் காண்க.

சுபாரிசுவம் — பரதகண்டத்தின் கிழக்கிலுள்ள மலை.

சுபாரிசுவன் — 1. திருடநேமியின் குமரன், இவன் குமரன் சுமதி.

2. இலங்கையின தெற்குவாயிற் சேனைத்தலைவன், அங்கதனு லிறந்தான்.

3. சம்பாதியின் குமரன். (கழுகு) இராவணன் சீதையை இலங்கைக்குக் கொண்டு போங்கால் இரையெனப் பறந்து இராவணனுடன் போர்செய்யப் போகையில் அவன் வேண்டுகோளால் விட்டு அச்செய்தியைத் தந்தைக் கறிவித்தவன்.

சுபாரிசுவதீர்த்தங்கரர் — இவர், ஏழாவது சைநதீர்த்தங்கரர், இக்ஷுவாகு வம்சத்தவர். பட்டணம் வாரணாசி, தந்தை சுப்பிரதிஷ்டர், தாய் பிரத்தியுக்ஷேணை. இவர் ஆனிமாதம் சுக்லபக்ஷத் துவாதசி, விசாகநக்ஷத்திரத்தில் அவதரித்தவர். இவர் உன்னதம் (200) வில், மாகதவர்ணம். ஆயுஷ்யம் இருபது நூறாயிரம் பூ கணதரர் பலநாமர்முதலாகிய தொண்ணூற்றைவர்.

சுபார்சுவகன் — (சூ.) இருதாயு குமரன்.

சுபாலன் — கட்கதான் குமரன். இவன் குமரன் ஏதாகரன்.

சுபாவத்துக்குக் கேடுநிகளின் குறிகள் — பசியின்மை, ஆருப்பசி, இரைக்குடலில் நலி, பசிக்கெடுதி, தாகமின்மை, விழுங்கலில்வருத்தம், மலச்சிக்கல், மலத்தளர்ச்சி, சுபாவத்திற்கு விரோதமான வயிற்றுக் கழிச்சல், அதிக வியர்வை, சளி கக்கல், அதிக வாய்ச்சுரப்பு, சுபாவத்திற்கு விரோதமான மூத்திரம்.

சுபாக்ஷணன் — (சூ.) சுவர்சாயுசு குமரன்.

சுபு — கம்சன் தம்பி.

சுபுத்தன் — சாந்திகனைக் காண்க.

சுபுத்தி — பிடகநூல்வழித் தொடாது சிவபூசை மேற்கொண்டு திரிபுரத்தையாண்ட அரசன்.

சுபை — சுபலன் புத்ரி.

சுபோதர் — சைவசித்தாந்த பத்ததிசெய்த ஆசாரியருள் ஒருவர்.

சுப்தக்னன் — மால்யவந்தன் குமரன்.

சுப்பிரதாகம் — 1. திக்கசத்துள் ஒன்று.

2. ஒரு வெள்ளையானை, பகதத்தனுக்குரியது.

சுப்பிரதாபன் — புண்ணியபுஞ்சனைக் காண்க.

சுப்பிரதிகன் — (சூ.) பிரதிகாசுவன் குமரன்.

சுப்பிரதீஷ்டர் — ஒரு விஷ்ணுபடர்.

சுப்பிரதிஷ்டமகாராசர் — சுபார்சுவ தீர்த்தங்கரருக்குத் தந்தை. தேவி பிரத்தியுக்ஷேணை. (சைநர்.)

சுப்பிரதீகம் — ஈசான்யதிக்கிலுள்ள யானை.

சுப்பிரதீகன் — 1. பிதுரார்ச்சிதத்திற்காக அண்ணனுகிய விபாவசுவுடன் சண்டை

யிட்டு யானையாகச் சபிக்கப்பட்டுக் கருடனால் பக்ஷிக்கப்பட்டவன்.

2. ஆத்ரேயருஷியின் அருளால் துர்ஜயன் சுப்ரதீகன் எனுங் குமாரர்களைப் பெற்றுச் சித்ரகூடஞ் சென்று தவமேற்கொண்ட அரசன். (வராஹ புராணம்)

சுப்பிரதீபம் — பகதத்தனது யானை.

சுப்பிரதீபன் — 1. சயிந்தவன் குமரன், தச்சனையால் அருச்சுநனிடத்தில் அடைக்கலமாக விடப்பட்டவன்.

2. சண்முகசேநாவீரன்

3. ஒரு வேதியன், இவனிடம் யோகாங்கனென்னு மறையவன் பிக்ஷைக்குவர, இவன் மறுத்தலால் பிள்ளைகளும் கோபித்தனர். இதனால் யோகாங்கன் நீ உருத்திராக்ஷம் அணியாதவன் எனத் திரும்பச் சுப்பிரதீபன் நானிவ்விடமிருந்து கற்பக மலர் வருவிப்பேன் நீ செய்வையோ என யோகாங்கன், தன்னிடம் உருத்திராக்ஷமணிந்திருந்த ஒரு பூனையைச் சுவர்க்கமனுப்பிக் கற்பகமலரை வருவித்தனன்.

சுப்பிரதீபக்கவிராயர் — இவர் கருமார் கூளப்ப நாயகன் காதல் இவராற் செய்யப்பட்டது. இவர் சிவகங்கைச் சமீனைச் சார்ந்த பழையனூரையடுத்த கொழுனை யென்னும் ஊரினர் என்பர். பலபட்டடை சொக்கநாதப் புலவரைக் காண்க.

சுப்பிரபாவை — 1. அட்டகோணமகருஷியின் தேவி.

2. வதான்யருஷியின் பெண்.

சுப்பிரபை — நாகனைக் காண்க.

சுப்பிரமண்யர்-1குமாரசுவாமிக்குஒருபெயர்.

சுப்பிரமண்யர் பிரதானத்தலங்களாவன— (சு) திருப்பரங்குன்று, திருச்சீரலைவாய் திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோருடல், சோலைமலை.

சுப்பிரமண்ய தீக்ஷிதர் — இவர் ஆழ்வார் திருநகரியென்னும் திருக்குருகூரிலிருந்த வைதிகவேதியர், கனகசபாபதி ஐயரிடம் வடநூல்கற்று வல்லவராய்ச் சுவாமிநாத தேசிகரின் வேண்டுகோளின்படி தமிழ்ப் பிரயோகவிவேகஞ் செய்தவர். (பிரயோக.)

சுப்பிரமண்யதேசிகர்—இவர் சைவவேளாளர், தமிழ்த் தண்டியலங்காரத்திற்கு உரை யியற்றியவர். இவராற் செய்யப்பட்ட நூல் இந்திரவிமானமாலை.

சுப்பிரமண்யபுலவன் — ஒரு தமிழ்க்கவி, சுப்பிரமண்யன் எனும் சிற்றரசனமீது கவி பாடிப் பரிசுபெற்றவன். (தனிப்பாடல்.)

சுப்ரமண்யமுனிவர் — 1. இவர் திருவாவடுதுறை நமச்சிவாய தேசிகர் பரம்பரையில் அம்பலவாண தேசிகர்க்குப் புத்திரர் திரு ஆவினன்குடி அந்தாதி இயற்றியவர்.

2. தொண்டைமண்டலத்துத் தொட்டிக்கலை யெனும் கிராமத்தவர். சைவவேளாளர் சிவஞான முனிவர்க்கு மாணவர். இலக்கிய இலக்கணங்களில் வல்லவர், இவரியற்றிய நூல்கள் துறைசைக் கோவை, கலைசைச்சிலேடை வெண்பா, நலைசைக் கோவை, தணிகை விருத்தம், கேசவப் பெருமாளிரட்டைமணிமாலை. சுப்பிரமண்யர் திருவிருத்தம் பாடிக் குஷ்டரோகிக்கும், திருத்தணிகை விருத்தம் பாடிக் குருடனுக்கும் கொடுத்து ஓதச்செய்து ரோக நிவர்த்தி செய்வித்தவர்.

சுப்பிரமண்ய மூர்த்தங்களாவன — ஞானசந்திரர், ஸ்கந்தர், குமாரர், மயூரவாகனர், கஜாரூடர், பிரமசாஸ்தர், பாலசுப்பிரமணியர், வள்ளிசமேதர், கார்த்திகேயர், ஷண்முகர், தேவசேனபதி, சேனபதி, கிரௌஞ்சாரி, சரவணோற்பவர், சூராரி, தாருகாரி.

சுப்பிரயச்சு — ஓர் அரசன், பிரமகத்தியால் துன்புற்றுச் சநார்த்தனமென்னுந் தலமடைந்து விஷ்ணுமூர்த்தியை யர்ச்சாவதாரமாகக்கண்டு தரிசித்துத் தழுவிப் பிரமகத்தி போக்கிக்கொண்டவன்.

சுப்பிரியன் — 1. தாருகனைக் காண்க.

2 குசுமையைக் காண்க.

சுப்பிரியை — அரிஷ்டன் புத்திரி, ஒரு அப்சரசு.

சுப்ரவிருத்தன் — சௌவீர தேசாதிபதியாகிய ஜயத்ரதன் உடன் பிறந்தவன்.

சுப்ராஜன் — சூரியனோடு செல்லும் கந்தகணத்தவன். (பா - சல்.)

சுப்ராட் — வைவச் சுதமநு புத்திரன்.

சுப்பையர் — வீரசைவர் - திருவேரக புராணம் பாடிய புலவர்.

சுப்பிரயோகை — சையகிரியி லுற்பத்தியாகித் தென்புறமாகப் பாயும் ஒரு நதி.

சுப்பிரன்—1. ஓர் அரசன், தேவி குண்டை.

2. குமாரசுவாமியின் சேநாவீரன்.

சுமங்கலை — சுமதிதீர்த்தங்கரின் தாய்.

சுமட்ரா — மதம் (Sumatra) இவர்கள் சூரிய சந்திரர்களை ஆராதிப்பர். இவர்கள் எல்லாக் காரியங்களுக்கும் பக்ஷி சகுனம் பார்ப்பர். கவியாணஞ் செய்துகொள்பவன் சத்துருவின் சிரசைப் பரியமாக வைக்கவேண்

டியது. இவர்களின் சித்தாந்தப்படி சரீரமும் ஆத்மாவும் மோக்ஷத்தை யடையும்.

சுமதன் — விச்வாமித்திரன் குமரன்.

சுமதி — 1. பரதனுக்குப் பஞ்சசேநியிடம் உதித்த குமரர், தேவி துருவசேனை, குமரன் தேவதாசித்.

2. நிருகன் புத்திரன், இக்ஷுவாகுவம்சம்.

3. (சு) சோமதத்தன் குமரன்.

4. சகரன் பாரி, குமரர் (௬௦௦௦௦) பெயர், அரிஷ்டநேமியின் பெண்.

5. (சங்.) துஷ்டியந்தன் தந்தை.

6. விசாலன் மருமகன்.

7. சுரமஞ்சரியின் தாய்.

8. சுபாரிசுவன் குமரன், இவன் குமரன் சந்நதிமான்.

9. (பிர.) திடசேநன் குமரன். இவன் குமரன் பலன்.

10. விசாலநகர்க் கரசன். காகுத்தன் புதல்வன். இராமலக்ஷ்மணரை யெதிர்கொண்டு தங்கிப்போக வேண்டியவன்.

11. மதிசாரன் குமரன்.

12. இடபன் புத்திரனாகிய பரதன் குமரன்.

13. ஓர் அரசன், திருவல்லிக்கேணி க்ஷேத்திரத்தில் திருமாலருள் பெற்றுப் பிரம உற்சவாதிகள் நடத்தியவன்.

14. ஒரு வேதியன், ஒழுக்கம் நீங்கிக் கள்விற்ற பொருளால் தாம்பூலம் சிவாலயத்திற்குச் சமர்ப்பித்து மறுபிறப்பில் நற்குலத்துதித்து நற்கதியடைந்தவன்.

15. பிருகுவின் சந்ததியான்.

16. விரோதன் குமரர் குசம்பனால் சிறைப்பட்டு வத்சந்திரனால் விடுபட்டவர்.

17. ஒரு தூர்த்த வேதியன், இவனுடல் மேலைச்சிதம்பரக் காஞ்சிநதியில்வீழ முத்தியடைந்தவன்.

18. சிங்கவருமனைக் காண்க.

19. இவன் எச்சதேவன் என்னும் வேதியன் குமரன், இவன் வருணாச்சிரமம் நீத்துக் குறவருடன் கூடிக் கள்ளனாய் வேதியனைக் கொன்று பிரமகத்தி பற்றத் திருவாசர் சொற்படி சேதுஸ்நானஞ் செய்து புனிதனானவன்.

20. தடாதகைப்பிராட்டியாரின் மந்திரி.

21. இவள் பூஷணன் தேவி. இவளும் இவள் கணவனும் சுவர்க்கபோகம் அனுபவித்துக்கொண் டிருக்கையில் செல்வப் பெருக்கைக் கண்டு கௌதமியென்பவள் இச்செல்வத்திற்குக் காரணமென்னவென என் மாமன் முதலியோரும் கணவனும் செய்த சிவபூசாபலமென்று கூறியவள். (சிவமகாபுராணம்.)

22. விஷ்ணுயச்சின் பாரியை.

23. மகாதபதியின் தேவி.

24. திடமதியைக் காண்க.

25. சகல வேதசாஸ்திரமறிந்த ஒரு தத்வஞானி, பிதாவிற்கு ஞானம் உபதேசித்தவன்.

சுமதிதீர்த்தங்கரர் — இவர் ஐந்தாவது ஜைந தீர்த்தங்கரர். இவர் சாகேதபுரத்தில் இக்ஷுவாகுவம்சத்தில் மேகரதருக்குச் சுமங்கலாதேவியிடம் கிருதயுகம், சித்திரைமாதம் பூர்வபக்ஷ ஏகாதசி, மகநக்ஷத்திரத்தில் அவதரித்தவர். உன்னதம் (௩௦௦) வில், கனகவர்ணம், (௪௦) லக்ஷம் பூர்வம் ஆயுஷ்யம், கணதரர்சமரர் முதல் (௧௧௬) பெயர்கள்.

சுமத்திரன் — விருஷணி குமரன், இவன் குமரன் யுதாசித்.

சுமத்திரை — தசரதற்குத் தேவி, இலக்குவனையும் சத்துருக்கனையும் பெற்றவள்.

சுமந்தன் — 1. வியாஸர் மாணாக்கரில் ஒருவன், சைமினியின் குமரன்.

2. குந்திபோசன் குமரன்.

சுமந்திரி — சடியின் முதல் மந்திரி. (சூளா.)

சுமந்திரன் — 1. சூர்யகுலத்தரசருக்கு மந்திரி.

2. சந்து என்னும் புரூரவன் வம்சத்தவன் குமரன்.

3. கலியின் சகோதரர், பாரியை மாலினி, குமரன் சாசன்.

4. பொருள்களின் வரவு செலவுத் தொழிலில் நல்ல பயிற்சிவாய்ந்தவன். (சுக்-நீ.)

சுமந்திது — உன்முகனுக்குப் பிரீதகேசியிடமுதித்த குமரன், பாரி சுநிதை.

சுமந்து — 1. சயமுனி குமரர், இவரது குமரர் சுதனுவர்.

2. ருஷிகளுக்குப் பவிஷயத் புராணம் கூறிய முனிவர்.

சுமனஸ் — 1. மதுவின் பாரி.

2. உல்முகன் குமரன், தாய் நட்வலை.

3. அரியச்வன்குமரன், இவன் குமரன் திரிதன்வன்; சம்பூதிக்கு ஒரு பெயர்.

4. இவன் ஒரு அரசன், இவனுக்குக் காசியில் சிவாலயத்து அபிஷேக தொட்டியிலிருந்த தவளை குமாரனாகப் பிறந்து அரசாண்டது.

சுமனன் — 1. ஓர் அசுரன்.

2. ஒரு ராஜரிஷி.

3. ஒரு வேடராஜன்.

சுமனை—1. உமையின் தோழியரில் ஒருத்தி, சவரிவீசுபவள்.

2. கேகயத் தேசத்துப் பெண். பதிவிரதா தருமத்தைப் பற்றி சாண்டல்யனிடம் பேசியவள்.

சுமனேகன் — கத்ருதநயன் நாகன்.

சுமாலி — 1. நந்தன் குமரன்; கலியில் பூமியை நூறுவருஷம் ஆண்டவன்.

2. அக்கிரகேசனுக்கு மாமன், புத்திரி பிங்கலகேசி.

3. இவன் பாதாளத்திருந்த அரக்கன், இவனைச் சுவாகு மாரீசர் அடைக்கலமாக அடைந்தனர். விஷ்ணுமூர்த்தியின் சக்கரத்தால் கொல்லப்பட்ட அசுரன்.

4. கம்சன் தம்பி, பலராமரால் கொல்லப்பட்டவன்

5. சுகேசன் குமரன், இவன் சரிதையை மாலியவானைக் காண்க. சாவித்திரனு லிறந்தவன்.

சுமாலி,யஞ்ஞமாலி - இவ்விருவேதியரும் தவமியற்றி விஷ்ணு தரிசனத்தால் வைகுண்டமடைந்தவர்கள். (பிரகன்னாரதீயபுரா.)

சுமாலிமாலி — சண்முகசேநாவீரருள் ஒருவன்.

சுமாலினி — விஷ்ணுமூர்த்தியாற் கொலையுண்ட அரக்கன்.

சுமித்திரன் — 1. துருபதன் குமரன்.

2. ஓர் இருடி.

3. ஒரு யாதவவீரன்.

4. (சூ.) சுரதன் குமரன், இக்ஷ்வாகு வம்சமிவனுடன் முடிகிறது. இவன் அபிமன்னனால் கொல்லப்பட்டவன்.

5. அபிமன்யுவின் சாரதி.

6. ஒரு ருஷி, இவர் ஒரு பசு முதல் அநேக பசுக்களை வளர்த்துப் பீனருஷி யென்று பெயர் பெற்றுப் பசுக்களால் பாயப்பட்டுப் பசுவுலகமடைந்தவர்.

7. சமீகருக்குச் சுதாளினியிடம் பிறந்தவன்.

8. வசுதேவன் தம்பியாகிய அநீகன் குமரன்.

9. புளிந்தநகர்க் கரசன்.

10. சௌவீர தேசாதிபதி. பாண்டவர் திக்விஜயத்தில் அர்ச்சுனனால் சமாதானம் செய்விக்கப்பட்டவன்.

11. பார்க்க வம்சத்துப் பிறந்தபேனபாபரன் என்னும் பெயருள்ள ருஷி. இவன் பசுவின் மகிமை கேட்டவன்.

12. ஒரு ராஜ ருஷி ரிஷபருஷியிடம் தர்மங் கேட்டவன்; ஒரு மிருகம் இவனை வேட்டையில் துன்பப்படுத்த அலுத்து ருஷிகளை யடுத்தவன். (பார-சாந்.)

சுமித்திராக்கன் — சிவகணத்தவன்.

சுமித்திரை — சுமத்திரையைக் காண்க.

சுமிருதி — தக்கன் பெண், இவளுக்குச் சிரத்தையென்றும் பெயர். அங்கிரஸன் தேவி, இவளுக்குச் சினிவாலி, இராகை, குகு, அநுமதி என நான்குபெண்கள்.

சுமிருதிகள் — இவை தர்மசாத்திரங்கள், நித்தியகருமங்கள், ஆசாரம், விவகாரம், பிராயசித்தம், இராசதர்மம், வருணச்சிரமம், அக்நிகார்யம், விரதம் முதலிய பலவற்றைக் கூறும். இவைகள் பல இருடிகளால் கூறப்பட்டவை. அவற்றுள் பராசரஸ்மிருதியே கலியுகத்திற்கு உபயோகப்படுவது. இவை பதினெண் வகைப்படும் அவையாவன: (க) அத்ரிஸ்மிருதி, (உ) ஆபத்ஸ்தம்பஸ்மிருதி, (ங) ஆத்ரேயஸ்மிருதி, (ச) ஆங்கீரஸஸ்மிருதி, (ரு) யமஸ்மிருதி, (சு) உசநஸ்மிருதி, (எ) கௌதமஸ்மிருதி, (அ) சங்கஸ்மிருதி, (கூ) சாதாதபஸ்மிருதி, (ய) சம்வர்த்தஸ்மிருதி, (கக) தக்ஷஸ்மிருதி, (கஉ) பிரகஸ்பதிஸ்மிருதி, (கங) பிரசேதஸ்மிருதி, (கச) பாராசரஸ்மிருதி, (கரு) மநுஸ்மிருதி, (கசு) யாஞ்ஞவல்கியஸ்மிருதி, (கஎ) லிகிதஸ்மிருதி, (கஅ) விஷ்ணுஸ்மிருதி. இவையன்றி உபஸ்மிருதிகள் பதினெட்டுள. அவை (க) அத்திரிஸ்மிருதி, (உ) உத்தராங்கிரஸஸ்மிருதி, (ங) கண்வஸ்மிருதி, (ச) கபிலஸ்மிருதி, (ரு) காத்யாயனஸ்மிருதி, (சு) சாதாதபஸ்மிருதி, (எ) தக்ஷஸ்மிருதி, (அ) தௌமியஸ்மிருதி, (கூ) பிரசேதஸ்மிருதி. (ய) புதஸ்மிருதி, (கக) பௌலஸ்தியஸ்மிருதி, (கஉ) நாரதஸ்மிருதி (கங) விஷ்ணுஸ்மிருதி,(கச) விருத்தவிஷ்ணுஸ்மிருதி(கரு)விருத்தமநுஸ்மிருதி, (கசு) லோகிதஸ்மிருதி,(கஎ) லோகாக்ஷிஸ்மிருதி, (கஅ) தேவலஸ்மிருதி என்பர்.

சுமீடன் — சந்திரவம்சத்துச் சுகோத்திரன் புத்திரன் உடன்பிறந்தார் அஜமீடன், புருமீடன் முதலியோர்.

சுழகர் — 1. விநாயகருக்கு ஒரு பெயர்.

2. ஒரு விஷ்ணுபடர்.

3. தர்மபக்ஷியைக் காண்க.

4. கபிலமுனிவர் வைத்திருந்த சிந்தாமணியின்பொருட்டுக் கணன் முதலியவ

ரைச் சங்கரிக்க மலர்ந்த முகத்துடன் கபில முனிவர்க்குத் தரிசனந் தந்ததால் பெற்ற பெயர்.

சுமுகன் — 1. நாகன். இவன் இந்திரன் சாரதியாகிய குணகேசியின் புத்திரியை மணந்தவன். பா - உத்.)

2. கருட புத்திரன்.

3. தருமபக்ஷிகளைக் காண்க.

சுமுகி — ஒரு தேவமாது.

சுமுத்திராதேவி — மனோசயன் பாரி.

சுமுந்து — வியாசர் மாணுக்கர், அதர்வண வேதி.

சுமுனே — தமனைக் காணக.

சுமூர்த்தி — வசிட்டன் மானஸபுத்திரன், பித்ருக்களைக் காண்க.

சுமேதஸ் — சுரதனென்னும் சூரியகுலத்தரசனுக்குத் தேவி ; உபாசனை கூறிய ருஷி.

சுமேதா — சீமந்தினியைக் காண்க.

சுமேரு — இது பரதகண்டத்தின் வடபாகத்தில் துருவநக்ஷத்திரத்தை நோக்கிய மேருவின் சிகரம். மேருவின் வாற்பக்கம் சுமேரு என்பர். இது பல தேவர்களின் இருக்கை.

சுமைதாங்கி — (Crane) இது பலவகைப் படும். இது பெரும்பாரங்களைத் தூக்குவது. இதற்குச் சக்கரம் சேர்த்து நகர்த்தி பல இடங்களுக்குக் கொண்டுபோவர். இதில் பலவகை உண்டு.

சும்பநிசும்பர் — சுந்தோபசுந்தரின் குமரர், இவர்கள் பிரமனையெண்ணித் தவமியற்றி வலிமைபெற்றுத் தேவர்களை வருத்தினர். இவர்களைக் கௌரி தனது உடம்பிலிருந்து கௌசிகிதேவியைச் சிருட்டித்துக் கொலைபுரிவித்தனள். மோகினியின் குமரர் என்பர். கோபேந்திரகன்னிகையைக் கண்டு மோகித்து ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுமாண்டனர். (சிவமகாபுராணம்.)

சும்ஹுன்—பலியின் புத்ரன். இவனால் செம்ஹம் என ஒரு பட்டணம் ஏற்படுத்தப் பட்டது.

சுயக்கியன் — ருசிப்பிரசாபதிக்கு ஆகுதியிடத்துதித்த விஷ்ணுவினம்சம், பாரி தக்ஷிணுதேவி. இவளிடத்துச் சுயமாள் என்னும் தேவகணத்தைச் சகிப்பித்து மூவுலகங்களைக் காத்தார். (பாகவதம்.)

சுயசை—1. நந்திமாதேவர்க்குப் பாரி. மருத்தின் குமரி.

2. மகாபவுமன் தேவி, இவள் புத்ரன் அயுதானன். (பாரா - ஆதி.)

சுயஞ்ஞன் — 1. தசரதனுக்குப் புத்ரகாமேஷ்டி செய்வித்த ஒரு முனிவர்.

2. உசிநரதேசாதிபதி, இவன் யுத்தத்திற்குப் போகையில் பந்துக்கள் விசனமுற யமன் அவர்களைத் தேற்றித் தத்வம் உபதேசித்தனன்.

சுயமாள் — சுயஞ்ஞனுக்குத் தக்ஷிணுதேவியிடம் பிறந்த குமரர்.

சுயுமாசிமன் — ஒரு ரிஷி. கோமகிமை யைப் பற்றிக் கபிலரிடம் சம்வாதம் செய்தவன்.

சுயோதன் — சூர்யகுலத் தரசன். இவன் தேவி நருமதை.

சுயோதனன் — 1. துரியோதனனுக்கு ஒரு பெயர்.

2. சூர்யவம்சத்தரசருள் ஒருவன். நருமதையைப் பெண்டாகக் கொண்டு சுதர்சனையைப் பெண்ணுகப் பெற்றவன்.

சூரகம் — ஒரு நதி.

சுரத — ஒரு வேடராசன், மாண்டவ்யரால் ஞானமடைந்தவன்.

சுரதரு — ஓர் அரசன், கமுகாசலத்தில் தவஞ்செய்து பாபம் நீங்கப் பெற்றவன்.

சுரக்கிருது — விஸ்வாமித்திர புத்திரன்.

சுரசை — 1. காச்யபர் தேவி, தக்ஷன் குமரி, அரக்கரைப் பெற்றவள். தருமன் தேவியெனவுங் கூறுவர்,

2. சுரேந்திரன் குமரி, மாயை.

3. இவள், அநுமனது வலியறியும்படி தேவர்களால் ஏவப்பட்ட தேவ ஸ்திரி. இவள், அரக்கி யுருவடைந்து அநுமன் இலங்கைக்குப் போம் வழியில் ஆகாயம் அளாவநின்று அநுமனைத் தடுத்தனள். அநுமன் இவள் வாயிற்புகுந்து உடலைக் கிழிக்கத் தொடங்குகையில் தன் உண்மையுருக்காட்டி அநுமனை வாழ்த்தினவள்.

சுரதகீர்த்தி — சத்துருக்கன் பாரி, குசத்துவன் பெண்.

சுரதசேநன் — நிதந்துவின் குமரன்.

சுரதபாண்டியன் — பராக்கிரமவாகுபாண்டியனுக்குக் குமரன்.

சுரதன் — 1 ஒரு யாதவவீரன்.

2. ஒன்பதாம் மன்வந்தரத்து இந்திரன்.

3. (சூ). குணகன் குமரன், சகுணன் குமாரன என்ப.

4. சென்னு குமரன், இவன் குமரன் விரேதன்.

5. விதர்ப்ப தேசாதிபதியாகிய சிவேதன் தம்பி. இவன் குமரன் சுதன்மா.

6. நபாகனைக் காண்க.

7. சாவர்ணி மனுவைக் காண்க.

8. தன் ராஜ்யத்தைப் பகைவர் கொள்ள விட்டுச் சுமேதஸ் முனிவரால் தேவி உபாசனையடைந்த சூர்யகுலத்தரசன்.

9. ஒரு அரசன் தான் ஒரு பிறப்பில் எலியாக விருந்து சிவாலயத்தை வலம் வந்த புண்ணியத்தால் மறுபிறப்பில் அரசனானவன்.

10. ஜயத்ரதன் புத்திரன். தாய் துச்சளை. திக்விஜயத்திற்காக வரும் அர்ச்சுனன் வரவைக் கேட்டு மரித்தவன். (பா. அஸ்வ.)

11. சிந்து தேசத்தவன் அருச்சுநன் அச்வமேதக் குதிரைக்குப் பின் சென்றபோது எதிர்த்து துச்சளையால் சமாதானம் செய்யப்பட்டவன். (பாா. அசு.)

சுரதாசர் — இவர் க்ஷத்ரியகுலத்தில் பிறந்து பக்தியுடையவராய் அக்பர் அரசனிடத்தில் உத்தியோகமேற்று மதுரைக்கு அதிகாரியாக வந்து. தன் திரவிய முழுதும் பாகவதர்க்குச் செலவுசெய்து அது போதாமல் அரசன் செல்வத்தையும் செலவு செய்து ஒரு ஆலயங் கட்டுவித்திருக்கையில், கண்டோர், சிலர் இவரிடத்துப் பொருமைகொண்டு அரசனிடத்துக் கூற, அரசன் இவரைச் சிக்ஷிக்க வெண்ணிப் பொக்கிஷத்துடன் இவரை அழைத்துவரச் சேவகரை விடுக்கையில் இவர் அவர்களுக்கு வேண்டிய உபசாரஞ் செய்து பெட்டிகளில் கற்களை நிரப்பி அதில் அரசனுக்கு நான் உனக்கு நன்மை செய்தேனே யொழிய, தீமை செய்திலேன் என வரைந்து அப்பெட்டியில் வைத்து விடியுமுன் காடடைந்தனர். சென்றோர் தாசரைக் காணாது பெட்டிகளை எடுத்து அரசன்முன் சென்றனர். அரசன் பெட்டியைத் திறந்துபார்த்து நிறைய மணிகள் இருக்கக்கண்டு அவர்மேல் பிழைகூறினீர் என்று கோபித்துத் தாசர் எங்கிருக்கினும் கொணர்க என்று கட்டளையிட அவ்வாறே தூதர் காட்டிற்சென்று தாசரைக் கண்டு அரசன் அழைத்துவரக் கூறினமை கூறினர். தாசர் அரசனை அணுகி அரசனுக்குத் தான் செய்த நன்மைகளைத் தெரிவித்து அரசன் கேட்டுக் கொண்டபடி பெருமாளைத் தரிசிப்பித்துப் பக்தியுடனிருந்தனர்.

சுரதை — 1. காசிபரின் பெண், உரோகணி, பத்ராங்கி, கந்திருவை என்னும் பெண்களைப் பெற்றவள்

2. விராடன் முதற்றேவி, குமரர் சதாநீகன், சங்கன், வராகன், ஆதிவராககேது.

சுரத்தின் தசாவஸ்தை — (க) கொஞ்சம் ஞாபகம், (உ) இறந்தவர்களைக் கண்டு பேசுதல்போலிருத்தல், (ங) சித்தபிரமை, (ச) மேல்மூச்சு, (ரு) விழித்தவிழி விழித்ததுபோலிருத்தல், (சு) வேற்றுக்குரலுண்டாதல், (எ) தேகமுழுதும் எரிச்சல், (அ) தன் கையால் முகத்தைத் தடவிக்கொள்ளல், (கூ) சரீரமுழுதும் வியர்த்தல், (ய) தேகத்தைவிட்டுப் பிராணநீக்கம் என்பன (ஜீவரக்ஷ)

சுரத்திலுண்டாம் ஏழுவிததோஷம் — சுரம் உண்டான ஒன்பதுநாள்வரை தருணசுரம். அக்காலத்தில் அபத்தியங்களால் வாதாதிகள் நாபியைப்பற்றி நாடியைக் குடிலப்படுத்தி முகம், கண், நா, எனும் உறுப்புக்களைச் சுருக்கி வெறித்த பார்வையையுண்டாக்கித் தோஷந்தரும். அவை அபத்திய தோஷம், சங்கமதோஷம், விஷமதோஷம், விஷமசீததோஷம், ரக்தசிம்மகதோஷம், பீதஜிம்மகதோஷம், கிருஷ்ணசிம்மகதோஷம் என்பன. (ஜீவ.)

சுரத்துயித்தல்—அரிய வழியிடத்தும் பரந்த காட்டின்கண்ணும் நோவுபடார்தபடி பசுநிரையைச் செலுத்தியது. (பு - வெ.)

சுரநடை — முதிர்ந்த பிணக்கமோங்கிய முற்றின மூங்கிலையுடைத்தாய் நிறைந்த இடத்திலே தலைவியை இழந்த தலைவன் முறையைச் சொல்லியது (பு. வெ. பொதுவியல்.)

சுரநிந்தை — சேட்டைக்கு வருணனிடம் பிறந்த பெண், அதர்மன் தங்கை.

சுரபா — உக்ரசேநன் பெண், சியாமகன் தேவி.

சுரபி — 1. காசிபர் மனைவி; தக்ஷன் பெண், மேனகை முதலிய அப்சரசுக்களையும் பசுக்கள், எருமைகளையும் பெற்றவள்

2. சரூபாவைக் காண்க.

3. சூர்யபுத்திரிகள்.

4. பசுக்கள் இவை, சுநந்தை, சுமனசை, சுசீலை, சுரபி, பத்திரை என ஐவகைப்பட்டுக் கோவுலகத்திருப்பவை.

5. இது முதலில் பிரமனாவினுல் சிருட்டிக்கப்பட்ட பசு. இது மார்த்தாண்டனை மணந்து பதினொரு உருத்திரர்களையும், புண்யை, மாயை, மதுச்யோதை. சிவை, சிக்ரைஸரித்வரை, ஹிரண்யவர்ணை, சுபகை, கவ்யை, ப்ருச்நிசூதாவதி, அங்காவதி,

க்ருதவதி, ததிக்ஷீரபயோவதி, அமோகை, சுரஜை, சத்யை, ரேவதி, மாருதி, ரஸை, அஜை, விகதை, சுத்ததாமை, அதாரிணி, ஜீவை, பிராணவதி, தன்யை, சுத்தை, தேனு, தனுவஹை, சிந்திரை, ருத்தி, சாந்தி, சாந்தமரபை, ஸரித்வரை, இந்த (41) வரும் கோமாதாக்கள். (பார-அநுசா).

6. கோலோகத்தி லிருந்த கிருஷ்ணன் பாலைக்குடிக்க எண்ணித் தன் மனதால் சுரபியெனும் பசுவை மனோரதமெனுங் கன்றுடன் மனதால் சிருட்டித்தனர். ஸ்ரீதாமா எனுங் கோபிகை அதன் பாலைக் கறந்தனள். அப்பாலை கிருஷ்ணன் அருந்துகையில் பாத்திரம் உடைந்து (100) யோசனை சுற்றளவுள்ள ஒரு தடாகமாயிற்று; அதுவே க்ஷீரஸரஸ். (தேவி-பா.)

சுரபிபயங்கரம் — மகாபலியின் எலியுரு. இவன் எலியுருவுடன் இருக்கையில் தேவேந்திரன் இவனைக் கிட்டிப் பரிசித்து இவனிடத்திருந்த லக்ஷுமி தன்னிடத்து வரக் களிகூர்ந்து சென்றனன்.

சுரபூ — உக்ரசேநன் குமரி.

சுரமஞ்சரி — சீவகன் மனைவியரில் ஒருத்தி. ஜீவகனது கானத்தால் மயங்கி அவனை மணந்தவள்.

சுரமியம் — சுரமை நாட்டில் ஒருவனம்.

சுரமை — 1. பிரசாபதி அரசன் நாடு.

2. சுரமஞ்சரிக் கொருபெயர்.

சுரம் — இது, எல்லா ரோகங்களுக்கும் மூலமானது. இது, வாதபித்த சிலேஷ்மங்களின் தொந்தத்தாலும் ஏகதேசத்தாலும் அதிகப்பட்டு ஆமாசயஸ்தானத்தைப்பற்றி அந்த ஆமத்தை உப்பச்செய்து நரம்புகளின் த்வாரங்களையும், ரோமத்வாரங்களையு மறைத்துப் பக்குவாசய ஸ்தானத்தையடைந்து அங்கு இபல்பாக ஜ்வலிக்கின்ற ஜடராக்னியை மேல்வீசிடும இதுவே சுரோற்பத்தி. இது வாதசுரம், பித்தசுரம், சிலேஷ்மசுரம், வாத பித்தசுரம், வாத சிலேஷ்மசுரம், சிலேஷ்ம பித்தசுரம், சந்நிபாதசுரம், ஆகந்துகசுரம் அபிகாதசுரம், சாபசுரம், அபிசாரசுரம், அபிஷங்கசுரம், பூதாவேசசுரம், அவுஷதகந்தசுரம், விஷசுரம், கோபசுரம், பயசுரம், துக்கசுரம், காமசுரம், சந்ததசுரம், சத்தசுரம், அந்நியேத்துகசுரம், துவியாகிகசுரம, திரயாகிகசுரம், சதுர்த்திகசுரம், சாரீரசுரம், மானசிகசுரம், சௌமியசுரம், தீக்ஷணசுரம், உட்சுரம், புறச்சுரம், பிராகிருதசுரம், வைகிருதசுரம், சாத்யசுரம், அசாத்யசுரம், சாமசுரம், நிராமசுரம், சந்நிபாத சுரம், இச்சுரங்கள் ஒன்றுடனொன்றுதொந்தித்துப்பலவகைப்படும். இவற்றின் வகை. (ஜீவரக்ஷ.)

சுரர் — பிரமன் சொற்படி மதுவுண்டதால் இப்பெயரடைந்த தேவர்.

சுராக்கன் — சிவமூர்த்தியால் கொலைசெய்யப்பட்ட அசுரன். (காஞ்சிபுராணம்).

சுராசூரன் — இவன் தேவர்களை வருத்திச் சிவபிரானுலிறந்த அசுரன்.

சுராதிராஜன் — சோழமண்டலம் நிருமித்த சோழன்.

சுராபிதம் — விச்வரூபன் சிரத்திலொன்று, கலிங்கப்பக்ஷி யுருக்கொண்டது.

சுராஷ்டரன் — 1. தீர்க்கதமன் தந்தை.

2. தாமசமனுவின் தந்தை.

சுராஷ்டிரம் — இது ஒரு தேசம். (Surat).

சுரிகைச்சவுண்டையர் — இவர் வசவதேவர் திருக்கூட்டத்தில் முதன்மை பெற்றவர். இவர் ஆன்மார்த்தமாய்ச் சிவபூசை செய்து பகிர்முகமாய்ச் சிவலிங்கத்தில் ஆவாகித்து நிவேதனஞ் செய்கையில் வாளுருவிக் கொண்டு சிவபெருமானை இந்த நிவேதனம் உண்ணவேண்டும் அன்றேல் உயிர் விடுவேன் எனப் பக்தவற்சலனாகிய சிவமூர்த்தி அவ்வகையே உண்ணக் கண்டவர்.

சுருக்கு, சுருவம் — இவை இரண்டும் ஹோமஞ் செய்யச் சாதனமாகிய பாத்திரங்களாம். இவற்றுள் சுருக்குப்பாத்திரமானது (கக) அங்குலம் அளவுள்ளதாய் இருக்க வேண்டியது, கைப்பிடிக் காம்பானது பருமனில் (க) அங்குலமும், நீளத்தில் (உ0) அங்குலமும் இருத்தல் வேண்டும். (௬) அங்குலத்தில் கலசஞ் செய்யவேண்டும். கலசத்து அடியில் பாதாகாரஞ் செய்யவேண்டும். கலசம் விருத்தாகாரமாய் இருக்க வேண்டும். கெண்டிகை நாற்கோணமாய்ச் செய்யப்பட வேண்டும். நெய்விடும் மார்க்கம் கண்டத்தில் இருந்து முகபரியந்தஞ் செய்யவேண்டும். சுருவம் (உச) அங்குலமாம் தண்டம் கட்டைவிரற் பருமனும். இது தண்டமூலத்தில் (௪) அங்குல விஸ்தாரமும், நுனியில் (௬) அங்குல விஸ்தாரமும் இருத்தல் வேண்டும். தண்டாக்ரத்தில் (௬) அங்குலம் விஸ்தாரம் விருத்தம் குண்டலாய் இருத்தல் வேண்டும். விருத்தத்திற்குக் கீழே யானையின் மத்தகத்தி லிருக்கும் கும்பஸ்தலம்போல் பிருஷ்டம் செய்யவேண்டும். பிருஷ்டத்

திற்குமேல் விருத்தத்தில் சேற்றில்வைத்த மாணடிபோல் நடுவுயர்ந்து இருபக்கமும் தாழ்ந்து கிருததாரைக்குத் தானம் இருக்க வேண்டும்.

சுருக் — கருடபுத்திரன்.

சுருசி — உத்தானபாதன் கனிட்டதேவி, உத்தமன் தாய்.

சுருதகர்மன் — 1. அர்ச்சுனன் குமரன் தாய் திரௌபதி. இவனுக்குச் சுருதகீர்த்தி யென்றும் ஒரு பெயர் உண்டு.

2. சகதேவன் புத்திரன். தாய் திரௌபதி. இவனுக்குச் சுருதசேனன் என்றும் பெயர் உண்டு இவன் சுதவ்ஷணன் என்னும் பெயருள்ள காம்போஜராஜனுடன் யுத்தம் செய்தான்.

சுருதகீர்த்தி — 1. வசுதேவன் தங்கை, திருஷ்டகேதுவின் தேவி.

2. அருச்சுநனால் திரௌபதியிடம் பிறந்தவன்.

சுருதசிரவசு — சோமாபி குமரன்.

சுருதசேநன் — 1. சிபி அம்சமான பாரத வீரன்.

2. உக்ரசேநன் குமரன், கிருஷ்ணன் பேரன்மார் சந்ததியிற் சேர்ந்தவன்.

3. ஜநமேசயன் தம்பி.

4. (சு.) சத்துருக்கன் குமரன்.

5. (சங்.) சகதேவன் குமரன், தாய் திரௌபதி.

சுருதசோமன் — பீமனால் திரௌபதியிடம் பிறந்தவன்.

சுருதச்சிரவன்— ஓர் இருடி இவன் சோமச்சிரவன் தந்தை, சநமேசயன் காலத்தவன்

சுருதச்சிரவை — சேதிநாட்டரசனாகிய தமகோஷன் தேவி, சிசுபாலன் தாய், வசுதேவன் தங்கை.

சுருததரன் — புரக்ஞயனுக்கு நண்பன்

சுருததேவன் — 1. விஷ்ணுபடன்.

2. கண்ணன் குமரன.

3. ஒரு வேதியன், கிருஷ்ணமூர்த்தியிடம் அந்தரங்கபக்தியுள்ளவன், வகுளாசுரனுக்கு நண்பன்.

சுருததேவி — வசுதேவன் தங்கை, தந்தவக்கிரன் தாய், விருத்தசருமன் தேவி.

சுருதமுக்யன் — வசுதேவன் குமரன்.

சுருதவர்மன் — திருதராட்டிரன் குமரன்

சுருதன் — 1. (சங்.) பகீரதன் குமரன்.

2. பாஞ்சலராஜனாகிய துருபதன் புத்திரன். பாசறை யுத்தத்தில் அஸ்வதாமனால் கொல்லப்பட்டவன். (பா-து.)

சுருதாநீகன் — விராடராஜனுடன் பிறந்தோன். (பா. து.)

சுருதாபிதானன் — கேகய தேசாதிபதி, இவன் குமரன் சங்கன்.

சுருதாயு — 1. கலிங்க தேசாதிபதி. பாரதப்போரில் அர்ச்சுனனால் கொல்லப்பட்டவன். புத்திரர்கள் தீர்க்காயு, நியுதாயு. (பா - து)

2. அரிஷ்டநேமியின் குமரன்.

சுருதாயுசு — (சங்.) புரூரவசுவிற்கு உருவசியிடமுதித்த குமரன், இவன் குமரன் வசுமான்.

சுருதாயுதன் — வருணன் புத்ரன் என்பர். இவனுக்கு வருணனால் ஒரு கதாயுதம் கொடுக்கப்பட்டது. அக்கதையை எவன்மேல் லேவினும் அவன் உயிரை வாங்காது மீளாது. இவன் பாரதயுத்தத்தில் அருச்சுநனிடம் யுத்தஞ் செய்கையில் இக்கதையைக் கண்ணன்மேலேவ அது அவர் கழுத்தில் மாலையாக விழுந்து மீண்டும் இவனைக் கொன்றது.

சுருதாவதி — பரத்வாஜரின் பெண், இவள் பதரபாசனம் எனும் தீர்த்தக்கரையில் இந்திரன் தனக்கு நாயகனாகவேண்டித் தவம் புரிந்தனள். இந்திரன் வசிட்ட வேடம் பூண்டு இவளிடம் வந்து ஐந்து இலந்தைக் கனிகள் தந்து பாகஞ்செய்யக் கூறினன். கன்னிகை விறகுகளெல்லாம் எரித்தும் பாகமாக வில்லை; விறகுகள் ஆய்விட்டமையால் தன் கால்களை விறகாவைத்து எரித்தனள். இதனால் களித்த இந்திரன் தன்னுருக்காட்டித் தீர்த்தத்திற்கு மகிமையளித்துக் கன்னிகையையுடன் கொண்டேகினன்.

சுருதி — வேதங்கள்.

சுருதீசன் — வீமன் புத்திரன், தாய் திரௌபதி.

சுருதி — ஓர் இருடி.

சுரேசன் — அக்கினி விசேடம்.

சுரேச்வராசாரியர் — இவர் பிரமன் அம்சம். இவரே மண்டன பட்டாசிரியர். இவர்க்கு விச்வரூபாசிரியர் எனவும் விவரணாசாரியர் எனவும் பெயர். இவர் தந்தை இம்மித்திரபட்டாசாரியர்.

சுரேணு — சரஸ்வதியின் கிளை நதி.

சுரேந்திரன் — சூரபதுமன் பாட்டன், மாயைக்குத் தந்தை.

சுரேந்திரகாந்தம் — ஒரு வித்யாதர நகரம்.

சுரை — மத்தியாயபிமானி தேவதை. அமிர்த மதன காலத்தில் பிறந்தவள் கள்ளுக்கு அதிதை,

சுரோசநன்—சலபோஜன் குமரன் ; இவனை யானையென்று வேட்டைக்குச் சென்ற தசரதன் அம்பெய்து கொன்று, இவன் தந்தையால் இராமனைப் பிரிந்து உயிரிழக்கச் சாபடைந்தனன்.

சுரோசீ — வசிட்டருக்கு ஊர்சையிட முதித்த குமரன்

சுலபன் — 1. கம்சனால் மல்லயுத்தத்திற்கு ஏவப்பெற்றுக் கிருஷ்ணனால் மாய்ந்தவன்.

2. அவந்திநாட்டரசன், தேவி சுலபை இவன் அரசாண் டிருக்கையில் மதுருதனன் என்னும் வேதியன் யாசிக்க அவனைக் கண்டு அரசன் சிரித்தனன் அதனால் வேதியன் கோபித்து அரசனை எருதாகச் சபித்தனன். இதைக் கேட்ட அரசன் தேவி, வேதியனை நோக்கி அரசன் செய்த குற்றத்தைப் பொறுக்காமல் சாபமிட்டதால் நீ கழுதையாக எனச் சபித்தனள். மீண்டும் வேதியன் அரசன் தேவியைப் புலைச்சியாகச் சபித்தனன். இந்தச் சாபம்கொண்ட மூவரும் ஒரே கிராமத்தில் இச்சாபவசத்தராய்ப் பிறந்து அந்தக் கிராமத்து விநாயகர் கோவிலுக்கருகில் மேய்ந்துகொண் டிருக்கையில் புலைச்சி சேத்த புல்லை எருது இழுத்தது. அதைப் புலைச்சி அடித்தனள். அந்த எருதிட மிருந்து கழுதை பிடுங்கியது. கழுதையை எருது இடித்தது, எருதைக் கழுதை உதைத்தது. இதனால் பெரும்போருண்டாயிற்று. அங்கு விநாயகதரிசனத்திற்கு வந்திருந்த வேதியர் இவைகளை யடித்துத் துரத்தப் புலைச்சியும் எருதும் கழுதையும் கோயிலைச் சுற்றியோடி வருகையில் புலைச்சி மடியிலும் எருது, கழுதைகளின் வாயிலும் இருந்த புல் விநாயகரிடம் விழுந்ததால் விநாயக பதம் பெற்றவன்.

சுலபை — 1. சநகனுடன் தத்துவ விவகாரம் செய்து ஞானமுணர்ந்தவள்.

2. சுலபனைக் காண்க,

3. தாலவமுனிவர் பாரி.

4. பிரதானன் என்னும் பெயருள்ள ராஜரிஷியின் புத்திரி. தர்மதுவஜன் என்னும் பெயருள்ள ஜனகனுடன் சம்வாதம் செய்தவள்.

சுலக்ஷணை — உத்தராதித்தனைக் காண்க.

சுலோசநன் — திருதராட்டிரன் புத்திரன்.

சுல்லிதேவி — சிவாக்னி விஷயமாய் மடைப்பள்ளியின் அடுப்பில் தியானிக்கப்பட்ட தேவி. இவள், தர்மா தர்மரூபமான சரீரத்தையும், இரண்டு கைகளையும், சமயற்றொழிலையும், வணங்கின முகத்தையும், சிற்சுவரூபத்தையும் உடையவள் (சைவ பூஷணம்.)

சுவகை — ஒரு வேசி, மகாமாயாவி. இவள் செய்த பாபத்தால் ரோகியாகிச் சிவயோகி ஒருவரது கருணையால் பாபநீங்கினவள்.

சுவக்கிரன் — சண்முகசேநாவீரன்.

சுவசம் வேதனு காட்சி — (தன் வேதனைக் காட்சி) ஆன்ம ஞானத்தால் இராகம், வித்தை, கலைமுதலியவற்றா லுண்டாகும் இன்பதுன்பங்களைப் புசிப்பது (சிவ-சித்.)

சுவசனன் — அமிர்தத்தைக் காப்பாற்றிய தேவன். கருடனோடு யுத்தம் செய்தவன்.

சுவசை — பிரசாபதியின் தேவி, அநிலன் என்னும் வசுவிற்குத் தாய்.

சுவஞ்சேயன் — (சங்.) செங்நுவின் குமரன்.

சுவணகம் — கோதாவரியை அடுத்த ஒரு நீர்த்துறை.

சுவணகேது — அச்சுவகண்டன் படைவீரரில் ஒருவன்.

சுவதர் — பிதுருக்களைக் காண்க.

சுவதாதேவி — பிரமன் ஆதியில் நான்கு சரீரமுள்ள பிதுர்க்களையும் மூன்று தேஜோரூபமான பிதுர்க்களையும் சிருட்டித்தனர். அவர்களுக்கு ஆகாரமாகச் சிரார்த்தத்தில்செய்யும் தர்ப்பணத்தையும், ஸ்நான காலத்தில் செய்யும் தர்ப்பணத்தையும் கற்பித்தனர். ஆனால் அதனைப் பிதுர்க்கள் அடையச் சக்தியற்றவர்களாய்ப் பிரமனிடம் கூற அவர் மானசிகமாக ஒரு கன்னிகையைச் சிருட்டித்துப் பிதுர்களுக்குப் பத்தினியாகத் தந்தனர். சுவதாதேவி பிதுர்க்களை மணந்து பிதுர் கிரியைகளில் அவர்களைத் தன்னுடன் துதிப்பவருக்குச் சர்வ சித்திகளையும் அநுக்ரகித்து வந்தனள். (தேவி - பா).

சுவதி — ஆதிசேஷனுக்குப் பாரி இவள் குமரி நாககன்னிகை.

சுவதிதி — வச்சிரன் பாரி.

சுவதை — 1. நருமதையின் பெண், மாலியின் பாரி.

2. தக்ஷன் பெண், விதாதா தேவி.

3. பிதுர்க்களின் தேவி.

சுவநயன் — ஒரு அரசன் கக்ஷிவதனுக்குத் தானமளித்தவன். (இருக்குவேதம்).

**சுவந்மன்** — காந்தியின் குமரன்.

**சுவந்மி** — திருதராட்டிரன் குமரன்.

**சுவபலக்கர்** — பிரசநி குமரர். தேவி காந்தினி. அக்குரூரர் முதல் பன்னிருவர் குமரர். சுவபர்க்கன் எனவும் பெயர்.

**சுவபாகன்** — க்ஷத்தாவுக்கு உக்ரகன்னிகையிடம் பிறந்தவன். ஊருக்கு வெளியில் குடியிருப்பவன். இவன் பிணத்தின் துணியுடுக்கவேண்டும். (மநு)

**சுவயஎக்யன்** — உசீநர தேசத்தரசன். இவனிறந்த காலத்து இவன் மனைவியர் துக்கிக்க யமன் அநித்தியவ் கூறித் தேற்றினன்.

**சுவயம்பிரபை** — ஏமையென்னும் அப்சரசின் பெண். இவள் ஒரு அசுரனிடத்தில் ஆவல்கொண்டு மயன்பொருட்டுப் பிரமன் நிருமித்த பிலத்தில் அந்த அசுரனுடனிருந்தனள். இந்திரன், அசுரனைக் கொன்று இவன் நடத்திய தீங்கால் இவளைப் பிலத்தில் நெடுநாளைக்கிருந்து அநுமனு லதைவிட்டு நீங்கக் கூறிச் சென்றனன். இவள் இவ்விடமிருக்கையில் சீதையைத் தேடச்சென்ற அநுமன் முதலியோர் இதிற்சென்று வழிகாணுது அவள் கூறக்கேட்டு வெளிவந்தனர்.

**சுவயம்பு** — ஒரு ருஷி. ருஷிகளிடம் நரசிங்க பூஜாவிதானம் கேட்டவர். (பிரம - புரா.)

**சுவயம்ஹாரி** — அர்த்தஹாரி, வீர்யஹாரி இந்தத் தேவஸ்தகள் ஆசாரமற்ற இடத்தை யடைந்திருப்பவர்கள்.

**சுவயம்ஹாரிகை** — இவள் பயிரில் தானியம், பசுக்களில் பால் முதலியவற்றைக் கெடுப்பவளாகிய தேவதை.

**சுவயித்தியன்** — ஒரு ராஜருஷி ; இவன் குமரன் மரிக்க தர்மநிஷ்டரான முனிவரால் உயிர்ப்பிக்கப்பட்டான். (பார-சாங்.)

**சுவரம்** — 1. (எ) ச, ரி, க, ம, ப, த, நி.

2. இது மகேச்வருக்குத் தக்ஷயாகத்திலுண்டான கோபத்தால் உதித்த சுவாலாமாலை; இது உலகத்தை வருத்தியது. பிரமதேவர்சிவபெருமானை வேண்டச்சிவபெருமான் அதனைச் சமப்படுத்தினர். பிரமன், இதனை மனிதரிடம் சுவரரோகமாகவும், யானைகளுக்கு மண்டைக்குக் கொதிப்பாகவும், மலைகளுக்குத் தாதுவாகவும், ஜலங்களுக்குப பாசியாகவும், பாம்புகளுக்குச் சட்டையாகவும், ருஷபங்களுக்குக் குளம்புரோகமாகவும், பூமியில் உவராகவும், பசுக்களுக்கு மாலைக்கண்ணுகவும், குதிரைகளுக்குச் சதையடைப்பாகவும், பிற பிராணிகளிடத்தும் இவ்வாறு பகுத்தனர்.

**சுவரலக்ஷணம்** — இது வைத்தியர்களுக்கு நாடி நிதானத்தின் பொருட்டும், யோகியர்க்குச் சமாதி சித்தியின் பொருட்டும், சோதிடர்க்குப் பலாபல சித்தியின் பொருட்டும் முக்கியமானது. சுவரம் என்பது உச்வாசநிச்வாச சம்பந்தம். இதனை நாசித்துவாரத்தின் வரும் இடகலை, பிங்கலை நாடிகளால் உணர்ந்து நேரிடும் பலாப்பலங்களை யுணர்ந்துகொள்ளல்வேண்டும். மூக்கின் வலப்புற துவாரத்திலிருந்து வெளிவரும் ஸ்வாஸம் சூரியகலை, இதுவே பிங்கலை இடநாசித் துவாரத்திலிருந்து வெளிவருவது சந்திரகலை. இதுவே இடகலை எனப்படும். இவற்றின் சுவர பேதம் (க) பவிதம், (உ) வக்ரிதம், (௩) ஸ்புடிதம், (௪) ஸ்கலிதம் அல்லது உபகாதம், (௫) ஸ்வலிதம், (௬) த்வம்ஸமானம், (எ) சுஷுப்தம், (அ) அஸ்தமயம் என எண் வகைப்படும். இவற்றுள் (க) பலிதம் - சுவாசம் மூக்கின் முனையை யொட்டி நடத்தல். இதன் பலம் காரியநாசம். (உ) வக்ரீதம் - வாயுதத்வத்தில் நடக்கையில் அந்தத் தத்வத்தைக் கடந்து தோளில் படுதல். இதன் பயன் காரியநஷ்டம். (௩) ஸ்புடிதம் - சுபதத்வத்தில் நாடி நடத்தற் பொருட்டு இரண்டும் கலத்தல் பயன் சுபம். (௪) ஸ்கலிதம் — ச்வாசங் கண்டுங் காணுதிருத்தல் இதன் பலன் காரியநஷ்டம். (௫) ஜ்வலிதம் தேஜஸ்தத்வத்தில் நாடி விரைவாய் நடத்தல். இதன் பலன் பெருநஷ்டம். (௬) த்வம்சமானம் - மூக்கடைப் பாலேனும் வேறுவகையாலேனும் நாடி யொழுங்காய் வாராமை. இதன் பலன் காரியஹானி (எ) சுஷுப்தம் - நித்திரையில் நாடி நடை. இதன் பலன் அசுபம். (அ) அஸ்தமயம் சுவாசமின்றி யிருத்தல். இதன் பலன் சமாதி அல்லது மரணம். வேறொருவகை நாடியறிதலாவது பால, குமார, ராஜ, விருத்த, மிருத, சங்கிரமம் என அறுவகை. இவற்றுள் (க) பாலசுவரம் - நாடி நடந்தும் நடைகாணப்படாமை. இதன் பலம் ஆலச்யம், அல்பபலன். (உ) குமாரசுவரம் - நாடி செம்மையாய் நடப்பது. இதில் கார்யசித்தி (௩) ராஜசுவரம் - நாடி ஸ்புடமய்ச் செம்மையாய்நடப்பது, இதில், இராஜ்யபிராப்தி. (௪) விருத்தஸ்வரம் - நாடி

அற்றுக் காணப்படுதல இதில் மிச்ரபல சித்தி. (ரு) மிருதஸ்வரம் - ச்வாசம் செம்மையாய்க் காணப்படாமை. இதில் கார்ய ஹானி. (சு) சங்கிரமசுவரம் - இரண்டு நாடிகளும் கணந்தோறும் மாறிமாறி நடத்தல் இதன் பலம் சர்வகார்யஹானி. இந்த நாடி நடையினை ஐந்து தத்வங்களிலடக்கிச் சுபாசுபமறிதல். நாடி (கஉ) அங்குலம் செம்மையாய் ஓடுதல். (க) பிருதிவிதத்வம்-இதில் நற்காரியங்கள், கிருகநிர்மாண முதலிய செய்ய உத்தமம். (உ) அப்பு - சுவாசம் கீழ்நோக்கி (கசு) அங்குலம் ஓடுவது. இதில் விவாகம், பயிர், யாகம், சோபனம் செய்ய நன்று. (ஙு) தேஜஸ்தத்வம் - சுவாசம் மேனோக்கி (அ) அங்குலம் ஓடல். இதில் எந்தக் காரியமும் முடியாது. (ச) வாயுதத்வம் - வாயு தடைப்பட்டதாய் (ச) அங்குலம் நடத்தல். இதில் வாகனமேற நன்று. (ரு) ஆகாசதத்வம் - சுவாசம் மூக்கில் பட்டும் படாதும் ஓடுதல். இதில் கார்யசித்தியுண்டு.

சுவராசி — சூரிய கிரணத்தொன்று.

சுவராபக்ன மூர்த்தி — வாணாசுரன் பொருட்டுச் சுவர்ண ரூபமாய் எழுந்த ருத்ராவசரம்; இந்த மூர்த்தியைப் பூசிக்கின் சுரம் நீங்கும்.

சுவரோசி — சுவாரோஷிசன் தந்தை, தேவி மனோரமையைக் காண்க.

சுவர்க்கத்துவாரம் — சரயுதீரத்திலுள்ள ஒரு தலம், இது ராமர் தன்னடிச் சோதிக்கெழுந்தருளியது.

சுவர்க்கலை — பிரதிகன் தேவி.

சுவர்க்கலோகம் — இது புவலோகத்துக்கு மேல் உள்ளது. இதற்கு அமராவதியெனப் பெயர். இது எண்பத்தைந்து நூறாயிரம் யோசனை பொருந்தியது. இதற்கரசன் இந்திரன், இவன் தேவி இந்திராணி. இவனைத் தேவரும் இருடிகளும் தேவஸ்திரீகளும் சேவித்திருப்பர். இதில் அக்நிட்டோம முதலிய யாகங்களைப் புரிந்தவர்களும், தீர்த்தயாத்திரை செய்தவர்களும், தானம் மகாவிரதம் புரிந்தவர்களும் அவ்விடத்துள்ள போகங்களைப் புசித்திருப்பர். இதில் காமவல்லி சுற்றிய கற்பகத்தரு, ஐராவதம் என்னும் யானை, உச்சைச்சிரவம் என்னுங் குதிரை, சயந்தம் என்னும் மண்டபம், வைசயந்தம், உவசந்தம் என்னும் மாளிகை, சுதன்மம் என்னும் பொக்கிஷம், நந்தனவனம் என்னுஞ் சோலை, நவநிதி, காமதேனு, அமிர்தம், சிந்தாமணி, சூளாமணியென்னும் அணிகள். மேனகை, அரம்பை, உருப்பசி, திலோத்தமை முதலியர் உண்டு. இவன் குமரன் சயந்தன். இவனுக்குச் சாரதி மாதலி, இவனுக் காயுதம் வச்சிரம், இவன் தேர் வியோமயானம். இவன் சபை சுதர்மை, இந்த உலகத்தில் மந்தாரம், பாரிஜாதம், சந்தானம், கல்பகவிருக்ஷம், அரிச்சந்தனம் என்னும் பஞ்சதருக்களும் இருக்கும். இவனுக்கு இடிக்கொடி நூறு அச்சுவமேதஞ் செய்தார் இவ்வுலகாதிபத்தியம் பெறுவர்.

சுவர்க்கன் — காசியரசன், தன்னாடு மழைவளந்தவிர்ந்திருக்கக் கண்டு அவன் பெண்ணாகிய காந்தினியை மணஞ் செய்வித்து நாடு செழிக்கச்செய்த அரசன். இவன் குமரன் அக்குரூரன்.

சுவர்ணசிரன் — ஒரு ரிஷி.

சுவர்ணசூடன் — கருட புத்திரன்.

சுவர்சேநன் — திருதராட்டிரன் புத்ரன்.

சுவர்ச்சலை — 1. சூரியன் தேவி, குமரன் சநி.

2. விசுவசேநனைக் காண்க.

3. தேவலருஷியின் குமரி இவள் பொட்டையும் பொட்டையிலாதவருமான வரை மணப்பேனென்று சுவேதகேதுவை மணந்து இல்லற நடத்தியவள் (பார சாந்.) இவள் ஆத்மஞானத்தைப்பற்றித் தன் கணவனிடம் வினவியவள்.

சுவர்ச்சன் 1. — சூரியவம்சத்துக் காம்பராஜ புத்திரனாகிய சுனிநேத்திரன் புத்திரன். இவன் குமரன் காந்தமன்.

2. கருடபுத்திரன்.

3 அக்னி விசேஷம்,

4 திரௌபதி சுயம்வரத்திற்கு வந்த ஒரு க்ஷத்திரியன்.

5 சுகேதுவின் புத்திரன் உடன் பிறந்தவன் சுநாமன் (பா-ஆதி.)

6. பிரம்ம ரிஷி. (பா வன.)

7. திருதராஷ்டிரன் குமரன்.

8. துர்யோதனனுக்காகவந்த க்ஷத்திரியன்.

அபிமன்யுவால் கொல்லப்பட்டவன்.

சுவர்ச்சஸ் — ஆங்கிரச புத்திரன், பூதியின் சகோதரன், பௌத்தியமன் வந்தரத்தைக் காண்க.

சுவர்ச்சாயுசு — (சு.) சாவநன் குமரன்.

சுவர்ணகஜதானம் — ஆயிரம் முதல் நூறு கழஞ்சு பொன்னினால் யானை செய்வித்து அட்டமியில் விதிப்படி பூசை செய்து வேதியர்க்கு அல்லது சிவாலயத்திற்கு அளித்தலாம்.

சுவர்ணசுவர்ணிகள் — அக்னியின் புத்திர புத்திரியர் அக்னியைக் காண்க. (பிரம புரா.)

சுவர்ணடீ — (சுவர்ணஷ்டீவி) சிருஞ்சயனைக் காண்க.

சுவர்ணதேனுதானம் — ஆயிரங்கழஞ்சுமுதல் நூற்றுவொருகழஞ்சு கடையாகச் சுவர்ணத்தால் பசுவொன்று செய்வித்துக் கொம்பில் பதுமராகம், குளம்பில் வயிரம், புருவ நடுவில் முத்து, வாலில் வயிடூரியம், பல்லில் புட்பராகம் இவைகளைப் பதிப்பித்து அந்த அளவிற் பத்திலொன்று கன்று செய்வித்துப் பூசித்து முப்பது கழஞ்சு பொன்னுடன் வேதியர்க்களித்தலாம்.

சுவர்ணபரிதி — சூரபதுமன் மந்திரி.

சுவர்ணபூமிதானம் — ஆயிரக்கழஞ்சுச்சுவர்ணத்தால் மண்டபமொன் றியற்றுவித்து அதின் நடுவில் மேரு செய்வித்துச் சுற்றிச் சத்த தீவுகளையும், அஷ்டகுலாசலங்களையும், நவகண்ட மொன்பதையுஞ் செய்வித்து விதிமுறைப் பூசித்து வேதியர்க் களித்தலாம்.

சுவர்ணம் — அக்கினியின் பிள்ளை.

சுவர்ணரோமா — (சூ.) மகாரோமன் குமரன், அஸ்வரோமன் தந்தை. மிதிலாதிபதி.

சுவர்ணவதி — ஒரு தீர்த்தம்.

சுவர்ணவர்மா — காசி தேசாதிபதி. இவன் புத்திரி வபுஷ்டை ஜனமேஜயன் பாரியை.

சுவர்ணன் — இவன் திரிபுரத்தைச் சேர்ந்த அசுரர்களில் ஒருவன். இவன் சிவபூசை செய்து சிவபெருமானை வேண்டி அத்தீயினின்று தப்பினவன்.

சுவர்ணவர்ணகான் — காசி தேசாதிபதி, ஜனமேஜயன் மாமன்.

சுவர்ணன் — ஒரு ரிஷி. இவன் ஒரு மநுவால் தூபதீபாதி விஷயங்களைப் பற்றி சம்வாதிக்கப்பட்டவன்.

சுவர்ணஷ்டீவி 1 — சிருஞ்சயனைக் காண்க.

2. இவன் சிருஞ்சயன் புத்திரன் இவன் தந்தை நாரதரை உபசரித்ததால் இவனைப் பெற்றான். இப் பிள்ளையை இந்திரன் கொல்லவெண்ணித் தனது வச்ராயுதத்தை நோக்கி நீ புலியுருக்கொண்டு சுவர்ணஷ்டீவியைக் கொல் என அவ்வண்ணமே அது புலியுருக்கொண்டு காத்திருக்கையில் ஒருநாள் ஏவற்காரியுடன் வனத்தில் உலாவிய பிள்ளையை இந்திரன் ஏவிய புலி கொன்றது. சிருஞ்சயன் மீண்டும் நாரதர் கருணையால் உயிர்ப்பிக்கப் பட்டவன். (பாரா. சாந்.)

சுவர்த்தனன் — காமத்தால் தாயைப் புணரத் தந்தையைக் கொன்று பிரமகத்தி பெற்றுச் சிவபூசையால் நீங்கியவேதியன். (திருவோத்தூர் புரா.)

சுவர்த்தாக்கள் — அக்கினி யபிமான தேவதைகள்.

சுவர்நமகருஷி — மனுவிடத்து ஆசாரவிதி யுணர்ந்தவன்.

சுவர்ப்பானவி — நகுஷன் தாய், ஆயுவின் தேவி.

சுவர்ப்பானன்-1. இராகுவிற்கு ஒருபெயர்.

2. தநு குமரன்.

சுவர்ப்பானு — கர்னன் குமரன்; அருச்சுநனால் கொல்லப்பட்டான்.

சுவர்மன் — ஒரு க்ஷத்திரியன் திரிகர்த்த தேசாதிபதியாகிய சுசர்மனுடன் பிறந்தவன்.

2. திருதராஷ்டிர புத்திரன் பீமசேனனால் கொல்லப்பட்டவன்.

சுவர்மா—1. தசாரணநாட்டரசன், பீமனிடத்தில் யுத்தஞ் செய்தவன்.

2. காந்தியின் குமரன்.

சுவலந்தி — தட்சபுத்திரி ருட்சன் தேவி.

சுவலனபுரம் — ஒரு வித்யாதரநகரம்.

சுவலனரதன் — அமரபுரத்தரசன், சடி அரசன் தம்பி.

சுவலே — பரமேஷ்டியின் தேவி.

சுவவிருதன் — (பிர.) க்ஷேமகன் குமரன். இவன் குமரன் தர்மநேத்ரன்.

சுவா — ஒரு அரக்கன், இரத்தினவலியைக் காண்க.

சுவாகன் — திருதராட்டிரன் குமரன்.

சுவாகாதேவி — 1. தக்ஷனுக்குப் பிரசூதியிடம் பிறந்த குமரி. இவள்மீது யமன் காதல்கொண்டு மணந்து இவளை எலுமிச்சம்பழமாக்கி விழுங்கி வேண்டும்போது வெளிப்படுத்தி மீண்டும் அவ்வகை விழுங்கி வருவன். இப்படி யிருக்கையில் ஒருமுறை நந்தனவநத்தில் இவளை வெளிவிட்டு இவளுடன் விளையாடிய இளைப்பால் நித்திரைகொண்டனன். சுவாகாதேவி அந்தவழி வந்த அக்கினியின்மீது ஆசைகொண்டு அவனைப் புணர்ந்து அக்

னியைப் பழமாக்கி விழுங்கினன். பின் யமன் விழித்து இவளைப் பழமாக்கி விழுங்கினன். உலகத்தில் அக்கி மறைந்தமையால் தேவர் விஷ்ணுவிடம் முறையிட விஷ்ணுமூர்த்தி யமனிடம் வந்து சுவாகாதேவியை வெளிவிடச் செய்து அவளிடமிருந்த பழவுருக்கொண்ட அக்நிதேவனை வெளிப்படுத்திச் சுவாகாதேவியை அக்நிக்கு அளித்தனர். அக்நி சப்தருஷிகளின் பாரியர்களிடம் ஆசைப்பட அவன் ஆசையைத் தணிக்கும்படி அருந்ததியொழிந்த மற்றவர்போல் உருக்கொண்டு அவனது ஆசையை நீக்கினவள். தனது வன்மையால் அருந்ததியுருக்கொள்ள வாராமை கண்டு அருந்ததியைக் கண்டு கூறி அவளை நோக்கி விவாக காலத்தில் "எந்த ஸ்திரீகள், அக்நி பிராமண பந்து மித்ரசந்நிதியில் உன்னை ஸ்மரித்துத் தரிசிப்பார்களோ, அவர்கள் சுகம், தனம், புத்திரர்களைப் பெற்று வைதவ்யமில்லாமல் தமது வாணாளைக் கழித்து உன்னைப்போலக் கீர்த்தியடைந்து புண்ணியலோகத்தை யடைவார்கள்" என்று அநுக்ரகித்தனள். (சிவமகா புராணம்.) இவளுக்குச் சுவாகை எனவும் பெயர். இவளில்லாத அவிசை தேவர் கொள்ளார். (பிரம்மகைவர்த்தம்)

2. பிரமன் முதலியோர் இவளை அக்னிக்குக் கொளுத்துஞ் சக்தியில்லை நீ அவனுடனிருந்து தேவர்களின் அவிசைப் பெறுகஎன அவள் விஷ்ணுவை நோக்கித் தவமியற்ற விஷ்ணு நீ இப்போது அக்னியிடமிரு நான் வராக வுருக்கொள்வன் அக்காலத்தில் நீ நக்னிஜன் புத்திரியாய் நக்னிஜிதி யெனப்படுவை அப்போதுன்னை மணப்பேன் என அவ்வாறு அக்னிக்குத் தேவியாயிருந்து, தக்ஷிணாக்னி காருகபத்யம், ஆகவனியம எனும் மூன்று புத்திரர்களைப் பெற்றனள். சுவாகாவுடன் கூடின மந்திரங்களெல்லாஞ் சகல சித்தியைத்தரும். (தேவி. பா)

3. நித்ராதேவிக்கொரு பெயர்.

சுவாகிதன் — விருஜினவந்தன் குமரன்.

சுவாது — 1. சேதிநாட்டரசன்.

2. (யா.) பிரதிவாகு குமரன். இவன் குமரன் உக்ரசேநன்.

3. துன்மருடன் குமரன்.

4. சண்முக சேநாவீரன்.

5. காசியரசருள் ஒருவன்.

6. சுகந்தன் குமரன் இவன் தந்தையைச் சாம்பராக்கின அகத்தியரை வருத்தச்சென்று அவரால் அரக்கனாக்கப்பட்டுச் சுமாலியை யடைந்து தனக்கு ஒப்பாரித் தந்தை யாக்கிக் கொண்டவன்.

சுவாகை — சுவாகாதேவியைக் காண்க.

சுவாசரோகம் — இருமலின் விருத்தியாலும், வாதாதிக்க வஸ்து பேதங்களினாலும் அஜீரண பேதியாலும், வாந்தியாலும், விடாச்சுரத்தினாலும், தானியச் சுணைகளாலும், புகைகளாலும், காற்றினாலும், மர்மஸ்தானங்களில் பட்ட அடிகளாலும், அதிசீதன சலத்தினாலும், இது உண்டாம். இது சுத்ர சுவாசரோகம், தமகசுவாசம், விச்சின்ன சுவாசம், மகாசுவாசம், ஊர்த்வ சுவாசம் என ஐந்துவகை இது உண்டாங்கால்விலாப்பக்கங்கள் குத்தல், திணறித்திணறி மூச்சுவிடல், வயிறுப்பிசம், நெறிகளில் நோவுமுண்டாம். (ஜீவ)

சுவாசினி — இவள் காசிவாசியாகிய ஒரு பார்ப்பினி. நந்தனவனத்தில் பிரமராக்ஷசால் பிடிக்கப்பட்டுக் கிணற்றில் தள்ளப்பட்டுத் தாய்தந்தையர் எடுத்துத் தேற்றித் சடாயுபுரியில் சடாயுகுண்டத்தில் மூழ்குவிக்கச் சுத்தமடைந்தவள்.

சுவார்ச்சலை — சூரியன் தேவி.

சுவாதன் — நருமதைநதிதீரத்தில் கர்ணகிபட்டணத்தில் உதத்தியவம்சத் துதித்த வேதியன். தன் தாய் கேட்டுக்கொண்டபடி அவளிறந்தபின் அவளெலும்பைக் கங்கையில் விடக் கொண்டு செல்கையில் பொழுதுசாய ஒரு வீட்டில் தங்கிப்போக அவ்விடமிருந்த பசு தன் கன்றினை யடித்தான்; மகனைத் தான் நாளைக் கொன்று அதனாலுண்டான பிரமகத்தியைத் தீர்த்த ஸ்நானத்தால் போக்கடித்துக் கொள்வேனெனக் கூறியதைக் கேட்டு இந்த வுண்மை யறிவோமென மறுநாளிருந்து அவ்வகை அப்பசு அவ்வீட்டு மைந்தனைக் குத்திக்கொன்று நருமதைநதி தீரத்திலுள்ள நந்திகேசுர தீர்த்தத்தில் சென்று முழுகிச் சுத்தமானதுகண்டு தானும் அதனைப் பின்றொடர்ந்து அதில் மூழ்கித் திரும்புகையில் கங்காதேவி தரிசனந்தந்து நானே கங்கை இன்றையதினம் வைசாக சுத்தசப்தமி. இத்திதியில் நானித்தலத்திற்கு வருவது வழக்கமாதலால் இவ்விடத்தில் உன் தாயின் எலும்புகளை விடுக என வேதியன்

அவ்வாறு செய்து தாய் திவ்யவுருப்பெறச் செய்தனன். (சிவமகாபுராணம்.)

சுவாமி — இவனுக்கு அழகுவாய்ந்த ஒரு பெண் உண்டாயிற்று. அப்பெண் காசியில் தவஞ் செய்கையில் அவளை ஒரு அரக்கன் கவர அதையொரு வித்யாதரன் கண்டு மறுத்து அவனைக் கொலைசெய்து தானும் அவனுற்பட்ட காயத்தா லிறந்தனன், இந்தப் பெண்ணும் காந்தருவனிடம் வைத்த சிந்தையால் இறந்தனள். இறந்த இருவரும் மாலியகேது, சலாவதியெனப் பிறந்து அரசு செய்திருக்கையில் காசிப்படங் கண்டு முன்னைத்தான் ஸ்நானஞ் செய்து தவம்புரிந்த தீர்த்த நினைவுவரக் காசிசென்று கங்கையிலாடிச் சிவதர்சனஞ்செய்து சிவமூர்த்தி தாரகம் உபதேசிக்க முத்திபெற்றவன்

சுவாமிதீர்த்தம் — திருவேங்கட மலையிலுள்ள தீர்த்தங்களுள் ஒன்று. சரஸ்வதி எல்லா தீர்த்தங்களுக்கும் மேன்மை பெறும்படி நோற்று இத்தீர்த்தமாயினள்.

சுவாமிதேவன் — அதிவீரராம பாண்டியனுக்கு ஞானசிரியன்.

சுவாமிநாததேசிகர் — இவர் பாண்டிநாட்டில் சைவ வேளாளர்குலத்தில் மயிலேறும் பெருமாள் பிள்ளை யென்பவரிடத்தில் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று வல்லவராய்ச் செப்பறைப் பதியிலுள்ள கனகசபாபதி சிவாசாரியரிடம் வடநூல் பயின்று திருவாவடுதுறைக்குவந்து ஞானதேசிகராகிய அம்பலவாண தேசிகரிடம் ஞானநூலாராய்ந்து ஈசான தேசிகர் எனத் தீக்ஷாநாமம் பெற்றுத் திருநெல்வேலியில் இருந்து நன்னூற்குரைசெய்த சங்கர நமசிவாயப் புலவர்க்குத் தமிழ் கற்பித்து இலக்கணக் கொத்து, தசகாரியம், திருச்செந்திற் கலம்பகம் முதலிய பல நூல்களியற்றினர் இவர் இலக்கண விளக்கம் இயற்றிய வைத்தியநாத நாவலர், தமிழ்ப் பிரயோக விவேகம் செய்த சுப்ரமண்ய தீக்ஷிதர் காலத் திருந்தவர். (இலக்கணக் கொத்து.)

சுவாமை — இராமகங்கைக் கொரு பெயர் (சரயு).

சுவாயம்புமனு — பிரமனுடைய இரு கூறுனவுடலின் ஒருகூறில் சுவாயம்புமனுவும், மற்றக்கூறில் அவன் பாரி சதரூபையும் பிறந்தனர். எழுபத்தொரு சதுர்யுக மாண்டவர். இவர் பெயரால் ஒரு ஸ்மிருதி உண்டாக்கினவர். இவர் சுநந்தாதி தீர்த்தத்தில் (100) வருஷம் தவஞ் செய்து அசுரரைச் சேதித்துத் தெய்வலோகத்தை யாசளித்தனர். சுயக்கியனுக்கு மாதா மகர். இவர் சுயக்கியனை அரியென்று அழைத்ததால் விஷ்ணுவிற்கு இப்பெய ருண்டாயிற்று. குமரர் பிரியவிரதன், உத்தானபாதன். குமரிகள் பிரசூதி, ஆகூதி, தேவஆதி. இவர் முதல் மனு சதரூபையை இவர் குமரியென்று இருக்குவேதத்திற் கூறப்பட்டிருக்கிறது. (பாகவதம்)

சுவாயம்புமன்வந்தரம் — மனுவும், தேவர்களும், மனுப்புத்திரரும், இந்திரனும், ருஷிகளும், அரியினம்சாவதாரமும் இந்த ஆறும் பொருந்தியது.

சுவாரோசிமனு — வருதினி, ஒரு மாயவிப்பிராமணைக்கூட இவன் பிறந்தனன். இவன் மனோரமையின் தந்தை இந்தீவராக்ஷன் அரக்கனானதை நீக்கி மனோரமை அரக்கனால் பிடியுண்டதை நீக்கி அவளை மணந்து விபாவரியிடம் பிராணிகள் பேசும் வித்தைபெற்று அவளையும் பெண்டாக்கிக்கொண்டு வநவேட்டைக்குச் சென்று வநதேவதையைக் கூடித் தியுதிமந்தனைப் பெற்றான். இவனைச் சுவாரோருசியின் புத்திரன் எனவுங் கூறுவர்.

சுவாரோசிஷன் — அக்நியின் புத்ரன், மனுவாயிருந்தவன், தாய் மனோரமை, தகப்பன் சுவரோசி என்றுங் கூறுவர். இரண்டாம் மனு.

சுவாரோஷிதம் — சுவாரோஷிதனுண்ட மன்வந்தரம்.

சுவார்த்தாநுமானம் — (தன் பொருட்டநுமானம்) இது ஒருவனுங் கூறாமல் முன்பு தான் புகையைக்கண்ட இடத்தில் அனலைக்கண்டு பின்புதானே யாதாமோரிடத்தில் புகையுண்டு அவ்விடத்தனலுமுண்டென்று வியாப்தியைக்கிரகித்தறியுமறிவு. சிவ-சித்)

சுவாலகேசன் — சண்முகசேநாவீரன்.

சுவாலதாலு — சண்முகசேநாவீரன்.

சுவாலப்ாதன் — ஒரு அசுரன்.

சுவாலாசுரன் — இவன் தேவர் முதலியோரை வருத்திச் சிவமூர்த்தியால் பொடியாக்கப்பட்டிறந்தவன்.

சுவாலாதேவி — அரிசகன் மனைவி, தக்ஷகன் குமரி.

சுவாலாமாலினி — பண்டாசுர சேநாபதிகளைக்கொன்ற சத்தியின் அம்சாவதாரம். (தே-பா)

சுவாகாகாரம் — தேவர்களைச் சந்தோஷிப்பிக்கும் கர்மம்.

சுவாலாமுகி — தக்ஷயாகத்தில் தக்ஷாயணியின் தேகத்திலுண்டான ஜ்வாலை இமய பர்வதத்தில் விழுந்தது. அது ஜ்வாலாமுகி எனும் தேவதையாயிற்று. இச்சுவாலாமுகியே பிறகு இமயபர்வத புத்ரியாகிய பார்வதி யெனப்பட்டனள்.

சுவாலை — (சந்.) குருவின் தேவி, மகததேசத்தரசன் புத்ரி.

சுவாவ — உன்முகனுக்குப் பிரீதகேசியிடத் துதித்த குமரன்.

சுவாஜி — இல்வலன் என்னும் அசுரனது தேர்க் குதிரை. (பா-வன.)

சுவிதிராசா — ருஷபதீர்த்தங்கரின் ஏழாவது பிறவி.

சுவிரதன் — 1. உசீநரன் குமரன்.

2. இவன் ஒரு வேதியன், கர்ப்பத்தில் நாராயண ஸ்மரணை செய்து கடைசி காலத்தில் வைடூர்ய பர்வதத்தில் சித்தேச்வரலிங்க பிரதிட்டை செய்து பூசித்து முத்தி பெற்றான். (பாத்ம புராணம்.)

3. விஷ்ணுபூசையால் இந்திரபத மடைந்த வேதியன். (பாத்மம்.)

4. ஓர் இருடி, வத்சந்திரனுக்குச் சம்பன் தன்மை கூறியவர்.

சுவிரன் — 1. (பிர.) சிபியின் குமரன்.

2. தேவசிர வசுவிற்குச் சங்கவதியிடத் துதித்த குமரன்.

சுவிஷ்டகிருது—வைசுவதேவபலி கொள்ளும் அக்நி.

சுவிஹரி — சூர்யவம்சத்தரசன் யோகியானவன். நிமியாகத்தில் அரிகதை சொன்னவன்.

சுவீரன் — 1. க்ஷேமியன் (க்ஷேமகன்) குமரன், இவன் குமரன் பிரஞ்சயன்.

2. சிபி, குமரன், வசுதேவன் தம்பியாகிய தேவச்சிரவன் குமரன்.

3. சூரியவம்சத்து மதிராஸ்வன் புத்திரனாகிய த்யுதிமான் புத்திரன். இவன் புத்திரன தர்ஜயன்.

சுவீர்யபாத — குரோதகீர்த்தியின் குமரன்.

சுவுருத்தன் — கதருதநயன், நாகன்.

சுவேச்சை — திருதராட்டிரன் குமரன்.

சுவேதகி — ஓர் அரசன், இவன் நாரதரால் ஒருயஞ்ஞம் செய்வித்து அதில் பன்னிரண்டு வருஷம் அக்நிக்கு நெய்யால் ஆகுதி கொடுத்தனன். இதனால் அக்நிக்கு அக்நிமந்தம் உண்டாய்த் தேஜசும் நீங்கிற்று. அந்நோய் நீங்கும்படி அக்நி காண்டவனத்தை யெரிக்கும்படி அருச்சுநனைக் கேட்டுக் கொண்டனன். இவன் ஒரு ராசருஷி. இவனை அம்பரீஷன் என்றும் கூறுவர்.

சுவேதகேது —1. ஓர் இருடி, இவன் சோபத்தால் குமரனை யமபுரம் பார்க்கச் செய்தவன், அட்டகோணருஷியின் மாமன்.

2. தானவரென்னும் முனிகுமரன்.

3. ஒரு சிவயோகி.

4. மதனநூலாசிரியன்.

5. சுதன்மன் குமரன் இவன் பலதானங்கள் செய்தும் அன்னதானஞ் செய்யாததால் பிரமதேவனால் தன்னுடலைத் தின்னச் சபிக்கப்பட்டவன்.

6. இருக்கு வேதத்திற்கூறப்பட்ட ஒரு ருஷி அருணனுடைய பௌத்திரன் (சாமவேதம்) பிரவாகனால் வேதாந்த விசாரத்தில் வெல்லப்பட்டவன்.

7. இவன் ஒரு வேதியச் சிறுவன், இவனுக்கு ஐந்தாமாண்டில் மரணமுண்டாமென அறிந்த தாய் தந்தையர் வருந்த, இவன் சிவபூசை செய்து யமனை வென்றவன்.

8. புண்டரீகனது தந்தையான மகரிஷி.

சுவேதகிரீடன் — சண்முகசேநாவீரன்.

சுவேதசீகன் — ஒரு சிவயோகி.

சுவேதநதி — சுவேதமுனிவரைக் காண்க.

சுவேதமுனி — அகத்தியர் மாணுக்கர். இவர்க்கு அங்காரகையென்னும் அரக்கி தீமை புரிய இவர் கோபித்து அருகில் விசுவாமித்திர முனிவர் சாபத்தால் கல்லாயிருந்த ஊர்வசிப்பாறையை அவள்மீது ஏவினர்; பாறை அரக்கியைத் துரத்த அவள் பயந்து சேதுவில்விழக் கல்லும் உடன்விழுந்தது. கல் உடனே உருப்பசியுருப்பெற்றது. அங்காரகை கிருதாசியுரு அடைந்தனள். இவர் சிவபூசை செய்த நீர் ஆறாகப் பெருகி நதியாயிற்று. அது சுவேத நதியெனப்படும்.

சுவேதலோகிதன் — ஒரு சிவயோகி.

சுவேதலோகிதகற்பம் — இருபத்தொன்பதாவது கற்பம்.

சுவேதவதி — கமனப் புயங்கன் தேவி; இவள் மகா கற்புடையாள், இவள் கணவன் ரோகியாய்த் தான் தாசிவீடு செல்லவேண்டுமென மனைவியுடன் கூறியபோது சுவேதவதி, அவனைத் தாசிவீட்டிற்குச் சுமந்து சென்றனள். செல்லும் வழியில் கழுவில் தொங்கிக் கொண்டிருந்த மாண்

டவ்யர் மேல்பட்டு அவரை வருத்தியது. வருந்தியமுனிவர் பொழுதுவிடிய இவள் மாங்கல்யமிழக்க எனச் சாபமளித்தனர். இதனைக் கேட்ட சுவேதவதி பொழுது விடியாதிருக்க எனப் பிரதி சாபமளித்தனள். இதனால் பொழுது விடியாது நித்யகர்மாதிகள் தடைபடத் திரிமூர்த்திகளும் அவளுக்கு முன் தோன்றி இவள் வேண்டிய வரம் அளித்து அவரைக் கழுவினின்று நீக்கிச் சாபவிமோசனமும் செய்தனர். (காவிரி புராணம்).

சுவேதவநப்பெருமாள் — மெய்கண்ட தேவரைக் காண்க.

சுவேதவராககற்பம் — 1. சிவமூர்த்திசோதிச்வரூபமாக நின்றபொழுது பிரம்ம விஷ்ணுக்களில் விஷ்ணு சுவேதவராக வடிவமாய்ப் பூமியைப் பிளந்தகாலத் துண்டான கற்பம் ஆதலால் இப்பெயர்த்தாயிற்று. (சிவமகாபுராணம்).

2. பிரமன் உறங்குகையில் பூமி கடலில் அழுந்தியது. பிரமன் விழித்துப் பார்க்கையில் உலகத்தைக் காணாது விஷ்ணுவைத் துதிக்க விஷ்ணுமூர்த்தி சுவேதவராக வுருவெடுத்து நீரிலழுந்திய பூமியைக் கொம்பிற்றாங்கி நிறுத்தினர். ஆகையால் இக்கற்பத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று என்ப.

சுவேதவராகம் — பாத்மகற்பத்தில் மூழ்கிய அண்டத்தை யெடுத்து நிறுத்திய விஷ்ணுவின் வராகத் திருவுரு.

சுவேதன் — 1. காந்தார தேசத்தரசன், காந்தாரியின் தந்தை, திருதராட்டிரன் மாமன்.

2. விராடனுக்கு அபிமான புத்ரன், பாரத முதற்போரில் சேநாபதி, உத்தரனுக்கு அண்ணன், சிவமூர்த்தியை யெண்ணித் தவஞ்செய்து வில்பெற்றுப் போரில் துரியோதனாதிகளைப் பின்னிடச் செய்து வீஷ்மர் வஞ்சனையால் வேறு ஆயுதமெடுத்து யுத்தஞ்செய்து மாண்டவன். கிருஷ்ணவதாரத்தில் கண்ணனுக்கு விருந்து சொல்ல அக்காலத்து வெகுலாசுவனும் விருந்து கூறினன். கண்ணன் அவ்விருவர் வீட்டினும் ஒரேகாலத்தில் விருந்துண்ணக் களித்தவன்.

3. யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷணையிடமுதித்த குமரன்.

4. ஒரு நாகன், பாதாளவாசி.

5. (சு) சம்பன் குமரன்.

6. அம்பரீஷனுக்குச் சேநாபதி, இராக்கதருடன் சண்டைக்குச் சென்று பயந்து திரும்பிச்செல்ல நாணி அங்கிருந்த சிவமூர்த்தி சந்நதியில் தன் தலையறுக்க நிச்சயித்து வாளையெடுத்து அறுக்கையில் சிவமூர்த்தி உனக்கு வெற்றியுண்டாக என அநுக்கிரகித்த வரம்பெற்றுப் பகைவரை வென்று அம்பரீஷனால் வரிசைபெற்று வீரசுவர்க்க மடைந்தவன்.

7. ஒரு வேதியச் சிறுவன்; சிவபூசையால் யமனைக்கடக்க வெண்ணிச் சிவபூசை செய்கையில் யமன் பாசம்வீசச் சிவபிரான் கோபத்துடன் சிவலிங்கத்தில் தரிசனந் தந்து யமனையுதைக்க யமன் உயிர் நீங்கினன். சுவேதன் சிவமூர்த்தியைத் துதித்துத் தனக்கு ஆயுளும், யமனுக்கு உயிரும் வேண்டிப்பெற்றவன். (இலிங்கபுராணம்).

8. இவன், சுதேவன் குமரன், பல ஆண்டுகள் தவஞ் செய்து பிரமலோகமடைய இவனை அவ்விடத்தில் பசிநோய் வருத்தியது. சுவேதன் பசிநோய் கூறிப் பிரமனைவேண்டப் பிரமன் நீ இரப்போர்க்கிடாது உன்னுடம்பைப் போஷித்ததால் இவ்விடத்தும் அந்நோய் உன்னை வருத்தியது ஆதலால் அது நீங்கும்படி நீ முன் தவஞ்செய்த இடமேசெல்; அதற்கருகில் உள்ள குளத்தில் நீ போஷித்த உன்னுடலை அக்குளத்தில் மிதக்கக் காண்பாய். அதைத் தின்று உன்பசி நீங்குக என அரசன இது நீங்கும்வகை எவ்விதமென்றனன். பிரமதேவன் நீ அகத்தியரைக் காண்கையில் நீங்குமென அநுக்கிரகித்தனன். பசிநோய் கொண்ட சுவேதன் தேவவிமானத்திலேறிப் பசிவந்த காலத்தெல்லாம் தன்னுடலைத் தின்றுசெல்லும் நாட்களில் ஒருநாள் பொய்கைக்கரையில் அகத்தியமுனிவரைக் கண்டு தன் சாபம் நீங்கித் தனது வரலாறுகூறி அகத்தியருக்குத் திவ்யாபரணம் ஒன்றுதந்து போயினவன். இவ்வாபரணம் அகத்தியரால் இராமமூர்த்திக்குக் கொடுக்கப்பட்டது.

9. சண்முகசேநாவீரன்.

10. ஒரு சிவயோகி.

11. சோழநாட்டில் திருவெள்ளக்குளத்தில் திருமால் திருவருள் பெற்றவர்.

12 குருகுலத் தரசன். தான் பூப்பிரதக்ஷணஞ் செய்துவருகையில் மனைவி இறந்தது கண்டு வெறுப்புற்றுத் துறவடைந்து தவமேற்கொண்டு சுவேத முனிவ

னெனப் பெயர்பெற்றுப் பின் சிவமூர்த்தியைத் தரிசித்து அவரால் சுதபன் எனும் பெயரையும் நந்திதேவர் பதத்தையும் பெற்றவன்.

13. ஆநர்த்த தேசாதிபதி. மகாபாதகங்களைச்செய்து நோய் கொண்டானாய் நாட்டைவிட் டகன்று தீர்த்தஸ்நானத்தால் புனிதனாய் நல்லுலகடைந்தவன்.

14. பாண்டிநாட்டு ஒரு வேதியன் இவன் வற்சருஷிகோத்திரத்திற் பிறந்தவன். இவன் மகாபாதகன் தான் தீயவழியில் தேடிய பொருள்களைப் பத்திரப்படுத்தி மீண்டும் பொருள்தேட மனங்கொண்டு தன் புத்திரர் நால்வரில் கடைசிப் புத்திரனை அழைத்துக்கொண்டு அவனுக்கு உபநயனஞ் செய்யவேண்டுமென்று பல இடங்களில் பிக்ஷையேற்று வில்வாரண்ய மடைந்தனன். அவ்விடத்தில் பிள்ளை பாம்புகடித்திறக்கப் பிள்ளையை விருத்தப் பிரயாகையில் நீராட்டி வில்வாரண்யத்தில் எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்தியிடம் என் குமரனை உயிர்ப்பிக்கின் நான் தேடிய பொருள்களைக் கொடுத்து விடுகிறேன் என்றனன். சிவமூர்த்தி அப்பிள்ளையை எழுப்பச் சுவேதன் தான் தேடிய பொருள்களைச் சிவபணி விடைக்கு அளித்தனன்.

15. திக்யானைகளில் ஒன்று.

சுவேதாச்சுவன் — சுசிலனுக்குச் சிவமந்திரங் கற்பித்த ஒரு சிவயோகி.

சுவேதாரண்யர் — பட்டணத்தடிகளுக்கு ஒரு பெயர்.

சுவேதி — சுகேதுவின் மனைவி, இவள் கணவன், நாடிழந்து காட்டிற்செல்ல இவளும் உடன்சென்று வருந்துகையில் ஆங்கிரஸ முனிவர் இவரது வருத்தத்தை யெண்ணி நவராத்திரிவிரத மனுட்டிக்கச் செய்தனர். அந்த அநுட்டான பலத்தால் சூரியகேது என்னும் ஒரு புத்திரனை இவளிடமுதித்து இழந்த நாட்டினைச் செயிக்கச் சுகமடைந்தவன்.

சுவேதை — 1. காசிபர் பெண், திக்கசங்களைப் பெற்றவள்.

2. (சங்.) நிகும்பன் பாரி, குமரன் அரசர்மீளி.

சுவேஷை — பரீட்சித்தின் பாரியை. இவளுக்கு வாகுகை என்றும் பெயர். புத்திரன் பீமசேனன்.

சுவேலம் — இலங்கையிலுள்ள பர்வதம், இலங்கைப்பட்டணத்தைக் காண இராமமூர்த்தி இதன்மீது ஏறினர்.

சுவை — (சு.) இனிப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, புளிப்பு.

சுவையணி — உண்ணிகழுந் தன்மை புறத்துப் புலனாய் விளங்க எட்டு வகைப்பட்ட மெய்ப்பாட்டாலும் நடப்பது. இது வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை என எண்வகைப்படும்.

சுவைரிணிகள் — ஒருவகைப் பாதாளத்திலுள்ள கன்னியர்; சுபலன் மூகத்துதித்தவர்கள், இவர்கள் தங்கள் சாதியிலேயே விபசாரஞ் செய்பவர்.

சுவ்யாதன் — இவன் ஒரு வேடன். வழிப்போக்கர்களை ஹர ஹர எனும் சப்தத்தால் (கொல் கொல் எனும் சொல்லால்) கூறிக் கொன்று வழிமறித்துத் தின்று வாணாள் கழித்து வந்து ஆயுண் முடிவில் யமபடர் இழுத்துச் சென்று யமபுரஞ் சேர்த்தனர். அவ்வளவில் சிவகணத்தவர் யமபடரை மறித்து வேடன் தன்னாட்களில் ஹர ஹர மந்திரங் கூறினனாதலின் அவனைக் கயிலைக்கழைத்துச் செல்வோம் எனக் கூறிக் கைலை கொண்டு சேர்த்தனர். (ஆதித்ய புராணம்.)

சுழிகுளம் — சித்திர கவியிலொன்று. எட்டெழுத்தாய் நான்கு வரியும் முற்றுப்பெற்ற பாட்டு. இது முதலு மீறும் சுழித்து வாசித்தாலும் அப் பாட்டே வருவது.

சுனகன் — யவனபுத்திரனாகிய பிரமதன் புத்திரன் தாய் கிருதாச்சி பாரியை மேனகையின் புத்திரியும், ஸ்துலகேச ரிஷியினால் போஷிக்கப்பட்டவளுமான பிரமதுவரை சந்திரவம்சத்துக் கிருத்ஸமதன் புத்திரன்.

சுனச்சகன் — நாய்களுக்குத் துணையாயிருப்பார்க்குத் துணையானவன். யாதுதானியைக் காண்க.

சுனச்சேபன் — அசிகிர்தன் குமரன், இவன் தந்தை இவனை அரிச்சந்திரன் செய்த புருஷமேதயாகத்திற்கு விற்க விச்வாமித்திரரைக் கண்டு குறையிரந்து அவரால் காக்கப்பட்டவன். இவனே விச்வாமித்திரால் ஜ்யேஷ்டனாகக் கொள்ளப்பட்டவன். இவனுக்குத் தேவராதன் எனவும் பார்க்கவன் எனவும் பெயர்.

சுனக்ஷத்ரன் — (சு.) மனுதேவன் குமரன்.

சுனுமா — உக்கிரசேநன் குமரன்.

சுனையன் — 1. பாரிபிப் பிலவன் குமரன். இவன் குமரன் மேதாவி.

2. ஒரு காந்தருவன், அவீக்ஷித்தைக் காண்க.

சுஷத்திரன் — கோசலதேசாதிபதியின் புத்திரன் (பா-து.)

சுஷேணன் — 1 ஜமதக்னி புத்திரன்.

2. திருதராஷ்டிர புத்திரன்.

3. கர்ன புத்திரன்.

4. ஒரு சர்ப்பம்.

5. துர்யோதனனைச் சேர்ந்த ஒரு க்ஷத்திரியன்.

6 விருஷ்டிமான் குமரன், இவன் குமரன் சுநிதன்.

சுஷுழுனு — 1. சூர்யகிரணத்தொன்று.

2. ஒரு தீர்த்தம்.

சுஹக்ஷாபக்தர் — அமாதாபாத் (Ahmadabad) எனும் ஊரில் பேடியுருக்கொண்டு பெருமாளைத் தியானித்திருந்த பக்தர். இவர் இருந்த நாட்டில் மழையிலாது குடிகள் வருந்த அரசன் தெய்வத்தை யெண்ணித் தவம்புரியப் பெருமாள் அரசன் கனவிடைத் தோன்றிச் சுஹக்ஷாபக்தரை வேண்டிக்கேள் மழை வருஷிக்கும் என்று மறைந்தனர். அரசன் விழித்து மந்திரிகளுடன் ஆராய்ந்து பக்தரை யடைந்து பணிந்துவேண்டப் பக்தர் அரசன் கூறியதைப் பெருமாளுக்கு முறையிட்டு வேண்டவும் பெருமாள் மழைபொழிவிக்கா திருந்தனர். அதனால் பக்தர் வருந்தித் தாம் அணிந்திருந்த மூக்குத்தியையும் கைவளையையும் உடைக்கத் தொடங்குகையில் மழை வருஷிக்க அரசன் களித்துப் பக்தருக்குப் பொருள்தரப் பக்தர் மறுத்துச் சமாதிக்குழிசெய்யக் கூறி அதிலிறங்கிப் பெருமாள் திருவடியடைந்தவர்.

## சூ

சூக்குமர் — அஷ்டவித்தியேசுரரில் ஒருவர்.

சூக்குமை — சிவசூர்யத்தானத்தமருஞ்சத்தி.

சூக்தி — சத்தியன் தேவி, இவளில்லாவிடத்துப் பாந்தவ்யமில்லை.

சூசகன் — பிறர் குற்றங்களைக் கண்டு கூறுதற்பொருட்டு அரசனால் நியமிக்கப்பட்டவனாய் அங்ஙனமே அக்குற்றங்களை யறிந்து அரசற்கு அறிவிப்பவன். (சுக்ரநீதி.)

சூசமி — அநுகிலாதன் தேவி.

சூசி — வீமனுடன் போர்புரிந்த வீரன். துரியோதனன் தம்பி.

சூடாமணி உள்ளமுடையான் — மண்டலபுருடன் இயற்றிய சோதிடநூல்.

சூடாமணி நிகண்டு — ஒரு தமிழ் நூல். தெய்வப்பெயர்த் தொகுதிமுதல் பன்னிரண்டு தொகுதிகளை யுடையது. திவாகரத்திற்கும், பிங்கலத்திற்கும் வழிநூலாகவுள்ளது. இந்நூலாசிரியர் வீரபுரத்திலிருந்த மண்டலபுருடர்.

சூடாலை — இவள் ஞானி, இவள் ஞானம் பெற்றுச் சிகித்துவசனாகிய தன்னாயகனுக்குப் போதிக்க, வனஞ்சென்ற நாயகனிடம், கடன் என்னும் தேவகுமரனாய்ச் சென்று அரசனுக்கு ஞானோபதேசஞ் செய்து சமாதியிலிருத்தி, மீண்டும் பெண்ணுருக்கொண்டு மதனிகை யென்னும் பெயருடன் அரசனை மணந்து அவனைச் சோதிக்கச் சோரத்தனஞ் செய்ய அரசன் சித்தசலன மில்லாதிருக்கக் கண்டு தன் நிசவுருக்காட்டி அரசனைப் பிரியாதிருந்து முத்தியடைந்தவள். (ஞானவாசிட்டம்.)

சூடிக்கொடுத்தாள் — ஆண்டாளைக் காண்க. இவளருளியவை திருப்பாவை, நாச்சியார் திருமொழி.

சூதகம் — (கு). ஜநநாசௌசம், மரணாசௌசம்,

சூதசம்மிதை — இது விபூதி, ருத்ராக்ஷம், பஞ்சாக்ஷரம், சிவபூசை, சிவதானமகிமை, ஸ்தலவிசேஷமகிமை இவைகளைச் சிறப்பாகக் கூறும். இது தமிழில் தேவராசப் பிள்ளை யென்பவரால் மொழிபெயர்க்கப் பட்டது.

சூதபுத்ரன் — கர்ணன்.

சூதமாகதர் — அரசரைக் களிப்பிக்கப் பாடுவோர். பிருதுவின் யாகசுத்திகாலத்தில் பிறந்தவர்.

சூதர்—1. (சூ) உரோமஹருஷணர் குமரர், வியாசர் மாணாக்கர், சூத்திரர். இவர் ஒருமுறை புராணபடனஞ் செய்யுங்கால் பலராமரைக் கண்டெழாது இறுமாந்திருந்த காரணத்தால் பலராமரா லுயிரிழந்து இருடிகள் வேண்டுகோளால் மீண்டும் உயிர்ப்பிக்கப் பெற்றவர். (இவரைக் கொன்ற காரணத்தால் பலராமரைப் பிரமகத்திபற்றியது). உக்கிரசிரவசு என்னும் பெயரும் பெற்றனர். இவர் திரையாரணி முதலிய அறுவரிடத்தும் ஆறு சங்கிதைகளைக் கற்றுச் சுகரிடம் நான்கு மூலசங்கிதைகளைக் கற்றவர். சௌநகாதி முனிவர்க்குப் புரா

ணங்களை யோதினவர். இவர் ஆச்சிரமத்துப் பாண்டவர் சிலநாள் தங்கியிருந்தனர். உதங்கனைக் காண்க.

2. பிரமன் யாகஞ்செய்கையில் அக்கும்பத்திருந்து பிறந்தவர். இவர்க்குப் பிரமன் புராணங்கூறினவன். (பிரம்மகைவர்த்தம்.)

3. நின்றேத்துவோர்.

சூதன்—1. மன்னவன், பிராமணப் பெண்ணினைப் புணரப்பிறந்தவன், தேரோட்டுவோன், மந்திரித்தொழில் செய்வோன். (மனு.)

2. விஸ்வாமித்திர புத்திரன்.

சூதாடிக்கேட்டோர் — நளன், தருமபுத்திரன் முதலியோர். (சுக்ரநீதி.)

சூதிகாக்கிருகம் — அச்சுவினி, ரோகிணி, மிருகசீரிஷம், புநர்பூசம், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, அநுஷம், உத்திராடம், திருவோணம், உத்தரட்டாதி, ரேவதிகளிலே திங்கள், வியாழன், வெள்ளி, சனிவாரோதயங்களில்; கும்பம், விருச்சிகம், ஒழிந்த லக்கினங்களில்; இருத்தை ஒழிந்த திதிகளில் சுபகிரகங்கள் நோக்க, அஷ்டமசுத்தியாகப் பிள்ளை பெறுதற்கு இடம் உண்டாக்கி அதில் கர்ப்பஸ்திரி பிரவேசிக்கவேண்டும்.

சூத்திரகன் — 1. விதிசையென்ற நகரின் அரசன் சந்திராபீடனாகத் தோன்றினவன் இவனே.

2. (சூ.) பிரசேநசித் குமரன்.

3. மகததேசாதிபதியாகிய சுசர்மன் சகோதரன், இவன் சகோதரனாகிய சுசர்மனைக் கொன்று அரசாட்சி கொண்டவன்.

சூத்திரங்கள் — இது சுபாசுபகர்மங்களின் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகளடங்கிய நூல்கள், அவை பதினெண் வகை: போதாயனம், ஆபஸ்தம்பம், சத்யஷாடம், திராஹ்யாயனம், அகஸ்தியசாகல்யம், ஆச்வலாயனம், சாம்பவீயம், காத்யாயனம், வைகானஸம், சௌனகீயம், பாரத்வாஜம், அக்நிவைச்யம், ஜைமினீயம, வாதூலம், மாத்யந்தினம், கௌண்டின்யம், கௌஷீதகம், ஹிரண்யகேசி. இவை செய்தோரால் பெயர்பெற்றவை.

சூத்திரசாதனி — ஒரு பிறப்பில் சூத்திரனயிருந்து, தீயபாவத்தால் புழுவாய்ப் பிறந்து வியாசரால் அவ்வுருநீங்கி முறையே, புலையன், சூத்திரன், அரசனாய், யுத்தமுனையிலிருநது பிராமணன் வீட்டிற் பிறந்து அவ்வியேய மகருஷியாய்த் தேவர் வணங்க இருந்தவன். (பாரதம்.)

சூத்திரதருமம் — வேதசாத்திரமறிந்த வேதியனுக்குச் சிசுருஷைசெய்வதே இவனுக்கு மோக்ஷத்தைத் தரும். இவன் உள்ளும் புறமும் பரிசுத்தனாய் உயர்ந்த குலத்தவனைக் கொடுமையாகப் பேசாமல் முதல் மூன்று வருணத்தார்க்கும் ஏவல்செய்து கொண்டு அகங்காரமில்லா திருப்பவன் சூத்திரனாவான்.

சூத்திரம் — 1. குறுகிய செய்யுட்களில் பலவகை யகன்ற பொருள்களைச் செவ்வையாக அடக்கி இனிதாக அப் பொருள் விளங்கத் திட்பம் நுட்பம் சிறந்து வருவதாம்.

2. சிறிய கண்ணாடியில் பெரிய தேகங்களின் உரு செவ்வையாகச்செறிந்து இனிதாக விளங்குதல்போல், சில எழுத்தாலான செய்யுட்களில் பல் பொருள்களை யடக்கித் திண்மை நுண்மையுடன் நிலவுவது. (நன்-பா)

3. இது ஆறு வகைப்படும், பெயர்ச்சூத்திரம், விதிச்சூத்திரம் விலக்கியற்சூத்திரம், நியமச்சூத்திரம், அதிகாரச்சூத்திரம், ஞாபகச்சூத்திரம். பெயர்ச்சூத்திரம்-இலக்கணங்கட் குபகாரமாக இதற்கிது பெயரென்பது விதிச்சூத்திரம் - முன்னில்லதனை மொழிவது; விலக்கியற்சூத்திரம் - பொதுவகையால் விதித்ததனை மறுப்பது; நியமச்சூத்திரம் - முன்னொரு வகையான் முடிந்ததனைப் பின்னும் எடுத்து விதிமுகத்தான் விலக்குவதும், விலக்கும்வகையான் விதிப்பதும் ஆம்; அதிகாரச்சூத்திர - ஆற்றொழுக்கு முதலிய சூத்திரநிலையுள் ஒன்றேற்கும் வகையால் இயைபொருள் விளைப்பது; ஞாபகசூத்திரம் - எளிதுஞ் சிறிதுமாக இயற்றற்பாலதனை அரிதும பெரிதுமாக இயற்றிப் பிறிதொரு பொருளை யறிவிப்பது.

சூத்திரநிலைகள் — 1. பிண்டமாகக் கூறலாகிய பிண்டசூத்ரம், தொகுத்துக் கூறலாகிய தொகைச்சூத்ரம், வகுத்துக்கூறும் வகைச்சூத்திரம், இது இதைக் குறித்ததெனக் கூறும் குறிச்சூத்திரம், செய்கையைக்கூறும் செய்கைசூத்திரம் மேற்கூறிய வகைகளைக்கொண்டு இவற்றின் புறத்தை அடையும புறனடைச் சூத்திரம் என்பன. (நன். - பா)

2. ஆற்றொழுக்கு, சிங்கநோக்கம், தவளைப்பாய்ச்சல் பருந்தின் வீழ்ச்சி என்பன. (நன் - பா.)

சூத்ரம்மூன்று — இது வாஸ்துபத சூத்திரம், அது பர்யந்த சூத்ரம், வின்யாச சூத்ரம், ப்ரமாண சூத்ரம். இவை அளவைக்குரியன. இவற்றின் விரிவைக் காமிகாகமத்தில் காண்க.

சூத்ரவதியார் — சேனையர்கோன் திருத்தேவியார். இந்தம்மாள் ஆழ்வாராசாரியர்களின் சரிதங்களைத் திருமகளிடம் கேட்டவர்கள். (அரிசமயதீபம்.)

சூராபாயி — இவள் ஒரு புரோகித புத்ரி. இவளைத் தந்தை ஒரு வேதியனுக்கு மணஞ்செய்து கொடுத்தனன். இவளுக்கு இளமையிலேயே அரிபக்தி மிகுந்தது. அதனால் அரிநாமம் விடாது செபித்துவரும் காலையிலே மாமியார் வீட்டு மனிதர் வரவுபோக்கிருக்கக் கண்டு இனி மணமகனைச் சேரிற் கருவுண்டாம் பாசமதிக்கப்படும் அரிநாம மறந்து பந்தப்படுவோமென்று எண்ணி வீட்டை விட்டகன்று தன் ஆபரணங்களைத் துளபவனத்திருந்த பாகவதர்க்குத் தானஞ்செய்து அங்கு அரித்யானஞ் செய்யத் திருமால் தரிசனந்தந்து இராதை குண்டத்திருக்கக் கட்டளையிட ஆண்டிருக்கையில் தகப்பன் தேடிச் சென்று மகள் தன் கோலத்தைக் கண்டு அழைக்க மகள், தகப்பனுக்குப் பிறவிக் கடல்நீந்த உமக்கு இன்னும் தோன்றவில்லையோவெனத் தந்தைக்கு நல்லறிவு பிறந்து குமரியை நோக்கி நீ நமதில்லிடம் வந்து அரித்யானஞ் செய்களென அவ்வாறே பெருமான் கட்டளைப்படி சென்று தியானித்துப் பஜனை செய்திருக்கையில் அரசன் கண்டு மோகித்துக் கவன்றனன். அரசன் இவள் ஆற்றிற்கு அக்கரையிலிருந்து இக்கரையிலிருக்கும் தன்னை வெள்ளத்தைக் கடந்துவர அழைத்ததாகக் கனக் கண்டு கனவின் பயனைப் பெரியர்க்குக் கூறிப் பிறவிக்கடல் கடக்க உன்னலாகாது எனப் பிறவிக்கடல் கடக்கச் சூராபாயியையடைந்து உபதேசம் பெற்றனன்.

சூயை — சிவபக்தியால் புருஷனைக் கடந்தவள்.

சூரஆதித்தசோழன் — இவன் அரசர் சூளாமணிச் சோழன் சந்ததியிற் பிறந்து திரிசிரா மலையில் தீர்த்தமாடவந்த நாககன்னியரைத் தொடர்ந்து நாகலோகஞ் சென்று காந்திமதியெனனும் நாக கன்னிகையை மணந்து வெற்றிலை, செங்நெல், சிவலிங்கம் கொண்டுவந்து பூமியில் பதித்து வாழ்ந்தனன். இந்தச் சந்ததியில் (௫0) ஆவது சந்ததியில் பராந்தகச் சோழன் பிறந்தான். இவன் நாககன்னி மணந்த சோழனுயிருக்கலாம். இவன் தந்தை வீர ஆதித்த சோழன் என வுறையூர்ப்புராணங் கூறும். இவனைக் குலோத்துங்கசோழன் எனவுங் கூறுவார்.

சூரகேது — சந்திரகுலத்தரசனாகிய அஸ்தன் மாமன்.

சூரசேநம் — 1. மதுவனம், இது சத்துருக்நன் இலவணசுரனைக் கொன்றபின் அந்நாட்டுக் கிட்டபெயர். யமுனைநதிக் கருகிலுள்ளது.

2 The Kingdom of Wich, Madura was the Capital.

சூரசேநர் — 1. யாதவ பேதம்.

சூரசேநமகாராசா — குந்திதீர்த்தக்கரின் தந்தை, தேவி ஸ்ரீகாந்தை.

சூரசேநன் — 1. குந்திபோஜன் வம்சத்திற் பிறந்தவன், குந்தியின் தந்தை.

2. திராவிட தேசத்தில் மணிமுத்தாநதிக்கரையில் விருத்தாசல க்ஷேத்திரத்தில் சிவாபூசாதுரந்தரனாயிருந்த அரசன் இவன் தன் பரிவாரங்களுக்கும் சிவநாமமே தரித்துச் சிவபதம் பெற்ற அரசன். (சிவ-ரஹ.)

3, நிசந்துவின் குமரன்.

4. கார்த்தவீரியன் குமரன்.

5. சத்தருக்கன் குமரன்.

6 மத்தியதேசத்தரசன். இந்திரனிடம் புருசுண்டிமகாத்மியங் கேட்டவன்.

7. (சு.) அரசன், காஞ்சநமாலையின் தந்தை.

சூரணம் — பலவகை வேர்வித்துகளை யிடித்து வடிகட்டி யுண்ணும் மருந்து வகை.

சூரதாசர் — இவர் முன்ஜன்மத்தில் அக்குரூரர். சத்தியபாமையைக் கண்ணன் நீங்கினதால் விசனமுற்ற சத்தியபாமை இவரைவேண்ட இவர் கண்ணன் வேடம் பூண்டு செல்லாநிற்கையில் அதைக்கண்ட கண்ணன் நீ குருடாகவெனச்சபிக்க அவ்வாறே சூரதாசர் என்னும் பெயருடன் மதுராநகரில் பிறந்து பஜனைசெய்து கொண்டிருக்கையில் ஒருநாள் துவாரகையில் பெருமாள் சந்நிதியில் பஜனை செய்கையில் கண்கள் புலப்பட்டன, இவர் பெருமானை நோக்கி என்னை முன்போலவே கண்ணில்லாமற் செய்க வென்றனர். ஒருநாள் அவந்திநகரத்தரசன் சபையில் தான்சே என்னும் வித்துவான் தான்பாடுகையில் அ

வாசன் உன்னையொப்பார்உலகில் ஒருவரு மிலர் என்று அவனைப்புகழ வித்வான் கேட்டுச் சூரதாசர் முதலிய பெரியோர்கள் இருக்கின்றார்கள் என்றுகூற அவரைத் தன் சபையில் வருவித்துப் பாடச்செய்த னன். இதை அரண்மனையிலிருந்த பெண் கள் கேட்கவேண்டுமென்னு மவாவால் அரசனைக்கேட்க அரசன் அந்தகன் தானே அந்தப்புரம் சென்று பாடலாமென்று விடை கொடுத்தனன். சூரதாசர் அந்தப் புரஞ்சென்று பாடுகையில் முன் இவரு டன் கண்ணால் தாசியாகவெனச் சாபம் பெற்ற சத்தியபாமை இவ்விடம் வந்து இவர்பாடலைக் கேட்டமாத்திரையில் இவ ருக்குக் கண்கள் புலப்பட்டன. உடனே பெண்கள் எல்லாரும் மறைந்துபோகச் சத்தியபாமை நிற்கக்கண்டு பெருமாள் இருவருக்குந் தரிசனந்தந்தனர்.

சூரபத்மன் — மாயை, காசிபரை வஞ்சித்து முதற்சாமத்திற் புணரப் பிறந்த அசுரன். இவன் மாயையிடம் உபதேசம் பெற்றுப் பெருவேள்விசெய்யச் சிவமூர்த்தி தரிசனந் தராததுகண்டு வேள்வியிலிறக்கத் துணி கையில், சிவமூர்த்தி தரிசனந்தந்து வச் சிரயாக்கை, இந்திரஞாலமென்னுந் தேர், விஷ்ணுவாதியருக்கும் பின்னிடா வலிமுத லியவு மளித்து நமது சத்தியொன்றினல் அழிவுஅடைவாய்எனவரந்தரப்பெற்றவன் இவன், சுந்திரனிடம் உபதேசம் பெற்று, மாயையின் போதனையால் திக்குவிஜயத் திற்குச்சென்று இந்திரனிடம் யுத்தஞ்செ ய்தனன். இந்திரன், இவன்போர்க்கு ஆற் ருது குயிலாக மறைந்தனன். இவன், மற் றத் தேவருடனும் போரிட்டு வென்று அர சாண்டிருந்தனன். இவன் பட்டணம் வீர மாயேந்திரம், தேவி பதுமகோமளை, கும ரர்பானுகோபன் அக்நிமுகன், இரணியன், வச்சிரவாகு. குமாரக்கடவுள் இவனிடம் போர்க்குச் சென்றகாலத்தில் இரண்டாம் நாள் யுத்தத்தில் இவன், அவரிடம் எதிர் த்துப் படைகொடி முதலிய இழந்து நிரா யுதனாய்த் தேவர்சிறைவிடக்கூறிய புத்தி கேளாது மீண்டும் படை சேர்த்து வரு வோமென மறைந்தவன். பானுகோபனை யுத்தத்திற்கேவி இறக்கக்கண்டு மீண்டும் சிங்கமுகாசுரனையேவி அவனுமிறக்கத்தா னே யுத்தத்திற்குவந்து சேனாசமுத்திரங் களையிழந்து பதாதியாய் நின்று மாயை யை நினைந்து அவளால் சஞ்சீவியின் நிலையறிந்து தான் சிங்கத்தில் ஏறிக் கொண்டு இந்திரஞாலத்தேரால் அதனை வருவித்து இறந்த அசுரரை மீட்டும் எழுப் பிக் குமாரக்கடவுளுடன் யுத்தம்புரிந்து பதாதியாய்நின்றனன. இவன் மாயையால் சக்கிரவாகப் புள்ளுருக்கொண்டு தேவர் சேனைகளுடன் யுத்தம் புரியக் குமாரக்கட வுள், இந்திரனை மயிலாகவர நினைக்க அவ் வகை வந்த அவன்மீது ஆரோகணித்து அசுர சேனைகளைக் கண்டித்தனர். பின்பு சூரன், பூமி, ஜலம், தீ, காற்று முதலிய உருக்கொண்டு யுத்தஞ்செய்யக் குமாரக் கடவுள் அவைகளுக்கு மாறுகி அடக்க, ஆற்ருது கடல் நடுவுள் மாமர வுருவடைந் தனன். இதனைக்கண்ட குமாரக்கடவுள் மாமரத்தை வேலாயுதத்தால் இருபிளவு செய்தனர். பிளவுண்ட அசுரன், தன் சொந்த உருவுடன் குமாரக்கடவுளிடம் யுத்தத்திற்கு வந்து வேலால் இருபிளவு பட்டு மயிலுஞ் சேவலு மாயினன். சூரன், மாளா ஆயுளுடையான் ஆதலால், குமாரக் கடவுள், மயிலை வாகனமாகவும், கோழி யைக் கொடியாகவும் கொள்ளப் பெற்ற வன். இந்தச் சூரன் பதுமன், சிங்கன், தாருகன், நால்வரும் முதலில் சிவகணத்த வர், சிவதரிசனத்திற்கு வந்த பிரமவிஷ் ணுக்களின் வாகனங்களாகிய அன்னம், கருடன் இவற்றின்மேல் குமாரக்கடவு ளின் வாகனத்தையும், கொடியையும் யுத் தத்திற்கு ஏவிக் குமாரக்கடவுளால் அசுர ராகச் சாபம்பெற்று அவரது வேலால் உயிர்நீங்கி அநுக்கிரகமடைய வரம்பெற் றவர்கள்.

சூரன் — 1. கார்த்த வீரியன் குமரன்.

2. விடூரதன் குமரன், இவன் குமரன் சிநி.

3. தேவமீடன் குமரன், இவன் தேவி மாரீஷை, குமரர் வசுதேவர் முதலியவர்.

4. வசுதேவன் குமரரில் ஒருவன்.

5. ஒரு அசுரன், முகுந்தையைக் கா ண்க.

6. விசயன் என்பவனுக்கு மைந்தன், ஒரு சிவனடியவர் வீட்டில் பொருளபகரி த்து அரசனால் தண்டிக்கப்பட்டு நரகம் அடைந்தவன்.

சூரி — சமஸ்கிருத கவிகளுக்குப் பட்டப் பெயர்.

சூரியதத்தன் — க்ஷத்திரியன். விராடன் உடன் பிறந்தான்.

**சூரியதுவஜன்** — திரௌபதியின் சுயம்வரத்தின்பொருட்டு வந்த க்ஷத்திரியன்.

**சூரியகாந்தக்கல்** — சூரியவொளியில் நெருப்பைக் கால்வது.

**சூரிய, சந்திர மண்டலங்கள்** — சிலகாலங்களில் சூரியனைச்சுற்றியும், சிலகாலங்களில் சந்திரனைச்சுற்றியும் பரிவேடங்கள் காணப்படுவதுண்டு. இதனைச் சூரியமண்டலம் சந்திரமண்டலங்களென்பர். இதனை ஒரு கிரகமென்பர்.

**சூரியசந்திரகோதரிசனம்** — பிள்ளை பிறந்த 3-ம் மாசத்திலே அனுகூலமான சுபதினத்திலே பிள்ளைக்குச் சூரியனைக் காட்டவேண்டும். பிள்ளை பிறந்த 4-ம் மாசத்திலே அன்னப்பிராசனத்திற்கு நிச்சயித்திருக்கிற சுபமுகூர்த்தத்திலே சுப்பிரமண்ய சுவாமியையும், சந்திரனையும் பூசித்துச் சந்திரதரிசனமும் கோதரிசனமும் பண்ணுவிக்கும் சடங்கு.

**சூரியநேத்திரன்** — கருட புத்திரன்.

**சூரியபுரம்** — அரிகுலத்தரசர் நகரம்.

**சூரியப்பிரபை** — சுக்கிரன் குமரி இவளை இக்ஷவாகுவம்சத்திற் றோன்றிய அரசன் ஒருவன் காந்தர்வமணத்தாற் கலக்கச் சுக்ராசாரியர் அவனுடன் எட்டுநாள் சண்டையிட்டு அவனை ராஜ்யத்துடன் சுட்டெரித்தனர். (சிவமகாபுராணம்)

**சூரியர்** — (கஉ) தாத்ரு, சக்கரன், அரியமான், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான, விவச்சுவான், பூடன், சவித்ரு, துவட்டன் இவர்கள், மேஷமாத முதலாகச் சஞ்சரிப்போர்.

**சூரியர் முதலிய வீதி** — (ந) மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி என மூவகைப்படும். இடபம், சிங்கம், மிதுனம், கடகம், நான்கும் மேடவீதி, மீனம், மேடம், கன்னி, துலாம், நான்கும் இடப வீதி, தனுசு, மகரம், கும்பம், விருச்சிகம் நான்கும் மிதுனவீதி.

**சூரியமூர்த்தி**—1. ஒருமுகம் எட்டுக்கைகளில் இரண்டு கைகளில் இரண்டு கமலம், தூபம் மணி, கமண்டலம், அபயம், வரதம், ஜபமாலையுடையராய், பொன்னிறம், பொற்பட்டுவஸ்திரம், பொன்னாபரண முடையவராய் இருப்பர்.

2. வெண்தாமரைமே லிருப்பவராய் மாதளம்பூ நிறமுள்ளவராய், மிக்ககாந்தியான விருத்தமத்யராய், இரண்டு தோள்களிலும் காம்புடன்கொண்ட வெண்டாமரை யுள்ளவராய், ஒருமுகம், இரண்டு நேத்ரம், சிவப்புவஸ்திரமுள்ளவரா யிருப்பர்.

3. பரமவித்தை, சாத்வித தேசஸ், கைவல்யம், ஞானம், பிராகாம்யம், சம்வித்து, போதகம், கதி, ஸ்மிருதி முதலிய உருவத்தால் பரமப்பிரகாசனாய் இருப்பவன். முதலில் இருளான அண்டம் உண்டாக அதன் மத்தியிலிருந்த பிரமன் அதைப் பிளந்தனன். அக்காலத்தில் ஓம் என்னும் ஒலியுண்டாயிற்று. அந்த ஓங்காரத்தால் பூ: புவ: சுவ: எனும் வியாவிருதித்ரயம் உண்டாயின. பின்னும் ஓங்காரத்தால் சூரியனுக்குச் சூட்சுமஉரு உண்டாயிற்று. அதனால் அதிதூலமாகும் (ம:) எனும் வியாவிருத்தியும் அதனால் தூலதரமாகும் ஜந: எனும் வியாவிருதியும் அதனால் தப: சத்யம் எனும் வியாவிருதிகளும் உண்டாயின. இந்த எழு வியாவிருதிகளே சூர்ய உருவமாம். முன்சொன்ன ஓங்காரமே, தேசோராசியான பிரமனாய் எண்ணுக. இந்தப் பிரமனுடைய கிழக்குமுகத்தில் இருக்கு, தக்ஷணமுகத்தில் எஜுஸ், மேற்குமுகத்தில் சாமம், வடமுகத்தில் அதர்வணவேதங்களும் பிறந்தன. இவனது தேஜஸே இருக்குவேத ரூபத்தால் சிருட்டியும், யசுர்வேதரூபத்தால் விஷ்ணுவாய்த்திதியும் சாமவேதரூபத்தால் ருத்ரனாய் லயத்தையும் செய்யும். ஆதலால் இந்தப் பரமபுருஷனே சதுர்வேதமயனும் திரிகுணாத்மகனும் திரிமூர்த்தி சுவருபனும் ஆவன். பிரமன் முதலில் சிருட்டிக்கத் தொடங்குகையில் சிருட்டிகெடப் பிரமன் துதித்து வேண்டத் தன் சுவாலையையொடுக்கினவன். (மார்க்கண்டேயம்.) இவனைச் சிவாகமங்கள் சிவசூரியன் எனக் கூறும். அச்சிவ சூர்யர் நான்குமுகம், எட்டுத்தோள், செவந்த ஆடை, மேற்கில் சத்தியோசாதம், வடக்கில் வாமதேவம் கிழக்கில் தற்புருடம், தெற்கில் அகோரம் ஆகிய நான்கு மூர்த்திகள் நான்குபக்கங்களில் அமரப் பெற்றவர். இவர், நான்கு முகமுடைய பாற்கரனை முன்னும் வலப்புறத்தில் நான்குமுகமுடை பானுமூர்த்தியையும் பின்புறத்தில் நான்குமுகமுடைய ஆதித்யமூர்த்தியையும் இடப் பாகத்தில் நான்கு முகத்தோடுகூடிய இரவியையும் கொண்டு இருப்பர். கிழக்கில் வித்தாரை தெற்கில் சுதாரை மேற்கில் போதினி வடபால் யாப்யாயனியும், சிவசூர்யதா

னத்தில் தீத்தை, சூக்குமை, சேயை, விபூதி, விமலை, அமோகை, நான்கு கரத்தோடுகூடிய வித்துதை, பத்திரை, நான்கு முகமுடைய சர்வதோமுகி, ஆகிய சத்தியருடன்கூடி நிற்பர். இச்சூர்யருக்குப் பீடங்கள் பிரபூதம், விமலம், சாரம், ஆராத்யம், பரமசுகம் என்பனவாம். சூர்யனுடைய கதிரின் வேறுபாடு சூர்யனுடைய **அமுதகதிர்** மழை பொழிவிக்கும், **சுழுமுனைக் கதிர்** சந்திரனுக்கும் **அரிகேசம்** என்பது நட்சத்திரங்களுக்கும், **விச்வகன்மா** புதனுக்கும், **விச்சுவா** வெள்ளிக்கும், **சந்துவிசு** செவ்வாய்க்கும், **சருவாவசு** வியாழத்திற்கும், **சுவராடு** சநிக்கும் ஒளி தரும். மற்றொரு புராணம் சுஷ்மனைச் சந்திரனுக்கும், அரிகேசம் புதனுக்கும், விசுவா வெள்ளிக்கும், வசுரம், கங்கியம் பூமிக்கும், சுருவாவசு வியாழத்திற்கும் சுவ்ராட்சநிக்கும் ஒளிதரும். இச்சூரியன், மேருவிற்கிடதுபக்கத்தி விருந்துகொண்டு மேருவை வலஞ்செய்பவன். முதலில் இந்திர பட்டணத்திலிருந்து புறப்பட்டு யமன் பட்டணத்தை யடைந்து, பிறகு வருணன் பட்டணத்தைத் தாண்டிச் சோமன் பட்டணத்தையடைந்து, மீண்டும் இந்திரன் பட்டணத்தை யடைகிறான். இப்படிப்பட்ட சூரியனுக்கு ஒற்றைச் சக்கரத்தையுடைய தேர், அத் தேர்க்குப் பன்னிரண்டு மாதமாகிற இலைகள் ஷட்ருதுக்களாகிய முளைகள், சாதுர்மாச்யங்களாகிய தொப்பைக் கட்டைகள், சம்வச்சரமாகிய ஒற்றைச் சக்கரம் இந்த ரதத்தின் இருசின் ஒரு முனை மேரு சிகரத்திலும் மற்றொரு முனை மானசோத்திர பர்வதத்திலும் சுழலும். இதில் எழு குதிரைகள் பூட்டப்பட் டிருக்கும். இத்தேரின் உயரம் ௯000 யோசனை அகலம் அவ்வளவு யோசனை, பார் நீளம் ௧௮000 யோசனை, மானசோத்திர பர்வதத்தில் அயனங்கள் முதலிய இருக்கும். அதில் இந்திரன், வருணன், சந்திரன், யமன் முதலியோர்க்குப் பட்டணங்கள் உண்டு. இவற்றில் சூரியன் பிரவேசிக்குமிடத்து நாழிகை, மிகுதி குறைகள் பெற்று உதயமாகி வரும்வழியில் மந்தேகரென்னும் அசுரரால் தடையுண்டு இருடிகள் வேதமோதி யகற்றிய மந்திரக் கணையால் வெளிவந்து உதயமாவன். இச்சூரியன் உதயமாகிப் பூமியிலுள்ள நீரை வறட்டிச்சந்திரனுக்குக்கொடுப்பன். இவன் நாடோறும் மேருவை வலம் வருகையில் இவனுடன் வருகிற பரிசனங்களைக் கூறுவாம். இச்சூரியனைப் புலத்தியன், புலகன், வசிட்டன், அங்கிரா, கௌசிகன், பாரத்துவாசன், பிருகு, கிருது, கௌதமன், காசிபன், சமதக்னி, அத்திரி முதலிய ரிஷிகள் மாதத்திற் கொருவராகத் தோத்திரஞ்செய்வர். கங்கன், தக்கன், நாகன், கம்பளாச்சுவன், நீரன், ஐராவதன், ஏலாபத்திரன், கார்க்கோடகன், சங்கபாலன், தனஞ்சயன், பரமன், வாசுகி இந்த நாகங்களில் ஒவ்வொருவர் மாதந்தோறும் தேரிழுத்துச் செல்வர். ஊருணயு, தும்புரு, நாரதன், ஆகா, ஊகூ, விசுவாவசு, சர்வாவசு, திருதராட்டிரன், சூர்யன், வாச்சன், உக்கிரசேநன், வரருசி, சித்திரன், காந்தரு இவர்களில் ஒவ்வொருவர் மாதந்தோறும் பாடுவர். கிருதத்தலை, சிகத்தலை, மேனகை, சகசந்நிசை, பிரமலோசந்தி, அநுமுலோசை, கிருதாசி, விசுவாசி, உருப்பசி, பூர்வசித்தி, திலோத்தமை, அரம்பை இவர்களில் ஒருவர் மாதந்தோறும் ரதத்தின்முன் நடனஞ் செய்து வருவர். வாதநாபன், வியாக்கிரதான், பிரசேதி, திவதனன், சர்ப்பன், பிரமா, புதன், எச்சியாபுதன், வித்யுத், திவாகரன், பவுரி, செயன் இவர்கள் அரக்கர் மாதம் ஒருவர் காவலாகத் திரிவர். இரதபிருத்து, இருதசித்திரன், இரதேசன், அசுசேணன், இரதசித், சுபாகு, ரதசுவன், அசத்தியசித், தோரணன், சேநசித், தாரச்சியன், அரிட்டநேமி இவர்கள் இயக்கர் மாதத்திற் கொருவர் தேர்த்தாம்பு பற்றுவர். பூஷா, அங்குசன், இந்திரன், பர்ச்சென்யன், கெபர்தி, மித்திரன், தோஷா, அரியமா, விவச்சுவான், விஷ்ணு, வருணன் இவை மாதசூர்யருக்குப் பெயர். இவ்வாறன்றித் தாத்ரு, சக்கரன், அரியமான், மித்திரன், வருணன், அம்சுமான், இரண்யன், பகவான், விவச்சுவான், பூடன், சவித்துரு, துவட்டன் எனவும், பின்னும் அஞ்சன், தாதா, இந்திரன், சவிதா, விசசுவான், பகன், பருச்சனி, தோஷ்டா, மித்திரன், விஷ்ணு, பூஷா எனவுங் கூறுவர். இவர்களின் பெயர்கள் புராணங்கள்தோறும் மாறுபடுகின்றன. சூரியனது கதிர்கள் (௧000) அவற்றில் (௪00) மழைபொழியும், (௩00) கதிர் விரித்து மழைவளத்தை யுண்டாக்கும். (௩00) பனிபெய்யும், இங்

தப் பன்னிரண்டு சூரியரும், பன்னிரு வகையாகக் கதிர்பெறுவர். சித்திரை மாதத்தில் அஞ்சன் (எ000) கதிர்களுடனும், வைகாசியில் தாதா (அ000) கதிர்களுடனும், ஆனியில் இந்திரன் (கூ000) கதிர்களுடனும், ஆடியில் சவிதா (கூ000) கதிர்களுடனும், ஆவணியில் விச்சுவான் (கூ000) கதிர்களுடனும், புரட்டாசியில் பகன் (கக000) கதிர்களுடனும், ஐப்பசியில் பருச்சனி (க000) கதிர்களுடனும், கார்த்திகையில் தோவ்ஷ்டா (அ000) கதிர்களுடனும், மார்கழியில் மித்திரன் (எ000) கதிர்களுடனும், தையில் விஷ்ணு (கக000) கதிர்களுடனும், மாசியில் வருணன் (இ000) கதிர்களுடனும், பங்குனியில் பூடா (க000) கதிர்களுடனும் விளங்குவர். மேல்கூறிய சூர்யமூர்த்திக்கு இளவேனிற்காலத்துக் கபிலவர்ணம், வேனிற்காலத்துப் பொன்னிறம், கார்காலத்துச் சுவேதநிறம், கூதிர்காலத்துப் பாண்டு நிறம், முன்பனிக்காலத்துத் தாம்பிரநிறம், பின்பனிக்காலத்து லோகித நிறங்களாம். இனிப் புராணங்கள் சூரியர் பன்னிருவரையும் காச்யபர் அதிதியைக் கூடிப் பெற்ருர் எனக் கூறும். அக்குமரர் ஆவார் விசுவவான், அரியமா, பூஷா, துவஷ்டா, சவிதா, பகன், தாதா, விதாதா, வருணன், மித்திரன், சுக்கிரன், உருக்கிரமன் என்பவர்களாம். முறையே இவர்களின் சந்திகளாவர். முதற்குமரனுகிய விவச்சுவான் சஞ்ஞாதேவியைப் புணர்ந்து சிரார்த்த தேவன், வைவச்சுதமனு, யமன் யமுனையெனும் இரட்டைப் பிள்ளைகள் அச்வநி தேவர்களையும், பெற்றனன். இந்த விவச்சுவான் சாயாதேவியைக்கூடி சநி, சாவர்ணிமநு, தபதி எனும் ஒரு குமரியையும் பெற்ருன். இரண்டாவதான அரியமா மாத்துருகை யென்பவளை மணந்து அநேக ஞானிகளைப்பெற்ருன். ங. பூஷா, துவஷ்டாவின் தங்கையான ரசனையை மணந்து சந்நிவேசன், விசுவரூபன் என்பவர்களையும்; ச. சவிதா, பிரசனியை மணந்து அக்நிஹோத்ரம், பசுபாகம், சோமம், சாதுர்மாச்யம் எனும் பஞ்சம காயஞ்ஞங்களைப் பெற்ருன். ரு. பகன், சித்தியை மணந்து மகிமா, விபு, பிரபு, என்பவர்களையும், ஆசுகி எனும் பெண்ணையும்; சு. தாதா, தரு, சிநிவாலி, ராகா, அநுமதி என்பவர்களை மணந்து சாயம், தரிசம், பிராதம், பூர்ணமாசம் என்பவர்களையும்; எ. விதாதா, கிரியையை மணந்து பஞ்சசித்தியென்கிற அக்நி குமரனையும்; அ. வருணன், சருஷிணியை மணந்து பிருகு, வால்மீகருஷிகளையும்; கூ. மித்திரன், ஊர்வசியைக்கண்டு மோகித்து விட்ட வீர்யத்தால் அகத்திய, வசிட்டரையும்; பின்னும் க0. ரேவதியை மணந்து உற்சாகன், அரிஷ்டன், பிப்பலன் என்பவர்களையும்; கக. சக்கிரன் அல்லது இந்திரன், பௌலோமி என்றவளை 'மணந்து செயந்தன், ருஷபன், மிட்டுவான் என்பவர்களையும்; கஉ. வாமநன் அல்லது உருக்கிரமன், கீர்த்தியை மணந்து சவுபகன் முதலிய குமரரையும் பெற்றனர். இவனுக்கு (க0000) யோசனை விஸ்தாரம் மண்டல அளவை.

4. பசுவின் வயிற்றில் நெடுநாள் ஒளித்திருந்தவன், சத்திராசித்திற்குச் சியமந்தக மணி கொடுத்தவன்.

5. சமதக்னி முனிவர் பத்தினியாகிய ரேணுகை வெயிலின் வெப்பத்தால் பரிதபித்தகைப்பற்றிச் சமதக்னி முனிவர் சபிக்கத் தொடங்குகையில் பிராமண வுருவங் கொண்டுவந்து அதைத் தடுத்துக் கொண்டவன்.

6. இவன் சுரபிகளைப் பெற்ருன் என்பர். இவன் தேவிமார், சஞ்ஞை, யுஷை, பிரத்யுஷை, சாயாதேவி.

7. ஒருகாலத்துப் பானுகோபனுல் பிடியுண்டு தொட்டிலிற் கட்டுண்டவன்.

8. இராகு கேதுக்களின் வஞ்ச வுருவை விஷ்ணுமூர்த்திக்குக் காட்டி அவ் விருவரது பகையைப் பெற்றவன்.

9. ஜடாயு, சம்பாதி இருவரும் தம் தந்தையாகிய அருணனைக் காணவந்த காலத்து அவர்களைக் கோபித்தவன்.

10. இவன் தேவியாகிய சஞ்ஞிகை சூரியனுக்கு வைவச்சுதமநு, யமன் யமுனைகளைப் பெற்றுச் சூரிய வெப்பம் பொருது தனது சாயையில் ஒரு பெண்ணை நிருமித்துச் சாயாதேவியாக்கி வைத்துவிட்டுத் தகப்பனிடம்வந்தனள். தந்தை கோபித்ததால் இமயச் சாரலில் பெட்டைக்குதிரை யுருக்கொண்டு சூரியனை யெண்ணித் தவஞ் செய்தனள். இது நிற்கப் பின் மணந்த சாயையைத் தன் உரிய தேவியென்று சூரியன் புணர்ந்து அவளிடம் சாவர்ணி மநு, சநி பத்திரை எனும் ஒரு பெண்ணினைப் பெற்றனன். இச்சாயைச் சக்களத்தி

யாதலால் சஞ்ஞிகையின் குமாரர்களைக் கொடுமையாக நடத்தினள். இதை வைவச்சுதமனு பொறுத்திருந்தனன். அதனால் சாயை யமனை ஒருகால் முரியச் சபித்தனள். இதையறிந்த தந்தை குமரனுக்குச் சாபமிடுவரோ என்று யோகத்தறிந்து உனக்குப் புழுக்காலாக என்று, துவட்டா விடஞ் சென்று மனைவியிருக்கு மிடங் கேட்கத் துவட்டா உன் வெப்பத்தை யடக்கி இமயமலைச்சாரலில் சென்று உன் மனைவியைக் காண்க என அவ்வகை ஆண்டுக் குதிரை யுருக்கொண்டு செல்லச் சஞ்ஞை கண்டு பயந்து ஓடினள். சூரியனும் ஓடச் சூரியனுக்கு மூக்கின் வழி வீரியம் தோன்றிற்று. அதில் மருத்தவராகிய அசுவநிதேவர்கள் பிறந்தனர். (பிரமபுராணம்.)

11. இவனை நாரதர் ஒருமுறை உலகமெல்லாம் உன்னொளியால் நிரம்பியதெனப் புகழ்ந்தனர். அதனால் செருக்கடைந்து சிவமூர்த்தியின் நெற்றிக்கண்ணின் ஒளியால் கருவபங்கம் அடைந்தனன். (பழனி - பு.)

12. சூரியனது உஷ்ணத்தைக் கண்டு சஞ்ஞை கண்களை மூடிக்கொண்டனள்; அதனால் சூரியன் சஞ்ஞையைநோக்கி நீ யமனைப்பெறுக என்றனன்.

13. சூரியன் குதிரையுருக்கொண்ட தன் பத்தினியைத் துரத்துகையில் அவன் ரேதசில் சிறிது பூமியில்விழ அதிலிருந்து ரேவதன் குதிரையுடன் சர்வாயுதபாணியாய்ப் பிறந்தனன்.

14. சூரியனுக்குச் சாயையிடம் பிறந்த குமரன், சாவர்ணி மனுவாயினன்.

15. நளாயினியின் சாபத்தால் தேரழுந்தப்பெற்றவன். இவன் உலகத்தைக் காயத்ரிசபித்தவர் அடைவர்.

16. விசுவகர்மனால் சாணையில் தீட்டப்பட்டு ஒளியிழந்து தொக்குத் தோஷமென்னும் வியாதியடைந்தவன்.

17. இவன் தேவி காந்திமதி துவட்டாவின் குமரி. இவளைச் சாயாதேவியின் சொல்லால் சூரியன் கிரணத்தால் வருத்தத் துவட்டா இவனது கிரணத்தைச் சாணையில்தீட்டிக் குறைத்தனன் என்பது. (புள்ளிருக்கு வேளூர்ப்புராணம்)

**நரியன்** — 1. அதிதியின் புத்ரன். இவன் மண்ணினாற் செய்த ஸவர்ணை யென்னும் பெண்ணினிடம் ஸாவர்ணி யெனும் ராஜருஷியைப் பெற்றான். (பார - அநு.)

2. ததுபுத்திரனாகிய அசுரன்.

3. ஆகாயவெளியில் காணப்படும் அண்டங்களுள் சூரியனும் ஒரு கோளம். இதை அக்னிமேகங்கள் சூழ்ந்திருக்கின்றன. அது நமக்குத் தட்டையான ஒரு பொருள் போல் வட்டமாகக் காணப்படுகிறது. இது அண்டகோளங்களுள் முதன்மை பெற்றது. இதனை நடுவாகக்கொண்டு எட்டுக் கிரகங்கள் சமவட்டத்தில் சுற்றிவருகின்றன. அவைகள் புதன், சுக்ரன், பூமி, செவ்வாய், வியாழன், சநி, யுரானஸ், நெப்தியூன் என்பவை. இக் கிரகங்களையும் பல உபக்கிரகங்கள் சுற்றி வருகின்றன. இவை சலகிரகங்களாதலால் இயற்கையில் ஒளியற்றுச் சூரியனிடமிருந்து ஒளியைப் பெறுகின்றன. இக்கிரகங்களுள் பெரிதாகிய சூரியகோளம் வட்டவடிவினதா யுள்ளது. இது தன்னைத் தானே 26 நாட்களுக்கு ஒருமுறை சுற்றி வருகிறது. இதன் சுற்றளவு சுமார் 26 லக்ஷம் மைலுக் கதிகம், இதன் குறுக்களவு 8 லக்ஷத்து 70 ஆயிரம் மைலுக்கு அதிகமேற்பட்டது, இதன் பரப்பு நமது பூமியைக் காட்டிலும் $12\frac{1}{2}$ லக்ஷம் மடங்கு பெரிது, இதன் கனம் பூமியினும் 13 லக்ஷம் மடங்கு அதிகமென்றும் கணித்திருக்கின்றனர். அவ்வளவு பெரிதாயினும் நமக்கு அவ்வளவு சிறிதாகக் காணப்படுதற்குக் காரணம் இது பூமிக்குச் சுமார் 9 கோடியே, 28 லக்ஷத்து, 30 ஆயிரம் மைலுக்கு அப்பாலிருப்பதால் அவ்வகை தோற்றுகிறது. இச் சூரியகோளத்தில் பல புள்ளிகள் காணப்படுகின்றன. அவை 1000 மைல் பரப்புள்ளதாயும், பல மைல் ஆழமுள்ளவையாயும் காணப்படுகின்றன. இப் புள்ளிகள் பல வருஷங்களுக்குப் பிறகு மாறுதலடைகின்றன. இச்சூரியன் 25 நாட்களில் தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக்கொண்டு மணி ஒன்றுக்கு 1500 மைல் வேகத்தில் மேற்கில் செல்லுகிறது. எல்லாத் தீக்களுக்கும் இதுவே மூலம். கால பாகுபாட்டிற்கும் இதுவே காரணம். பூமி சூரியனைச் சுற்றியோடிக்கொண்டிருக்கிறது. சூரியனைச் சுற்றி ஓடும் வீதிக்குச் சூரியவீதி யென்று பெயர். பூமி சூரியனைச் சுற்றியோடும் இருசிக்குத் துருவம் என்றுபெயர். பூமி சூரியனைநோக்கிச் சாய்ந்திருப்பதால் இரவு பகல் ஒரே அளவில்லை. இது மேற்கிலிருந்து சுற்றுகிறது.

**சூர்ப்பகன்** — மன்மதனுற் கொல்லப்பட்ட அரக்கன்.

**சூர்ப்பநகை** — விச்சிரவாவின் குமரி, வித்யுச்சவன் தேவி, குமரன் சம்பு குமாரன். தண்டகவநத்தில் இராமரிருக்கையில் மோகித்து இலக்குமணரால் மூக்கறுப்புண்டு கரதூஷிணை திரிசிரரை யேவிச் சண்டை செய்வித்து அவர்களிறந்த பின்பு இராவணனுக்குச் செய்தி கூறினவள். இராவணன் தங்கை. காமவல்லி யென மறுபெயர் வைத்துக்கொண்டவள்.

**சூர்ப்பாரகம்** — ஒரு தேசம். ஜமதக்னி இருந்த இடம். Shurpalya near Jamkhaudi in the district of Bijapur. (Bombay).

**சூர்யகாந்தம்** — சூரியனொளியில் தீக்காலும் கல்.

**சூர்யதுண்டம்** — காவிரிச் சங்கமத்திலுள்ள ஒரு தடாகம். (சிலப்பதிகாரம்.)

**சூர்யகேது** — 1. சுவேதியைக் காண்க.

2. இராவண சேநாபதி (அ) கோடி சேனைகளையுடையவன், சுக்கிரீவனால் உயிரிழந்தவன்.

3. கர்ணன் குமாரில் மூத்தவன்.

**சூர்யகேதுவன்மன்** — திரிகர்த்த ராச குமரன். தருமரது அச்வமேதக் குதிரையைத் தடுத்து அருச்சுநனுடன் போர் புரிந்து தோற்றுக் காணிக்கை தந்தவன். இவனுடன் பிறந்தார் சூர்யவன்மன், சூர்யவீரியன், சூர்யசண்டவிக்ரமன்.

**சூர்யசத்ரு** — இராவணன் மந்திரியரில் ஒருவன்.

**சூர்யசன்மா** — பஞ்சாக்ஷரமந்திர பலமுடையவன். இவனுடன் ஆநந்தன் என்போன் பகைத்து இவனை வெல்ல வகையறியாது ஒருநாள் பசுவிற்குப் புலித்தோல் போர்த்துப் புலியெனக் காட்டிப் பசுவைக் கொல்வித்து அவன் மனைவி அயலானுடனிருந்தாளெனக்கூறி மனைவி, மகன், மருகி முதலியோரை வஞ்சித்துக் கொலைபுரியச் செய்தனன். பிறகு சூரியசன்மன், இவையெல்லாம் ஆநந்தன் செய்த காரியமென அறிந்து சவை முன்னர்ச் சென்று சிவாலயத்தில் இவை நானறிந்து செய்தவையன்றென்று அவ்விடத்திருந்த பிரதிமா இடங்களுககுப புல்லருத்திப பஞ்சாக்ஷர உபதேசத்தால் இறந்த மனைவி மகன் முதலியோரை எழுப்பினவன்.

**சூர்யசாவர்ணிமநு** — சூர்யனுக்குச் சந்தியா தேவியிடம் பிறந்த குமரன் மநுவானன். எட்டாம்மநு.

**சூர்யசோதி** — சூர்யகுலத் தரசன். இவன், புத்திரரிலாது சூரிய பூசை செய்து தனது மனைவியாகிய யசோவதியிடம் இராச்சியவர்த்தனனையும் வேறொரு தேவியாகிய கலாவதியிடம் சுதரிசநன் என்பவனையும் பெற்றான். இவ்விரு குமரரும் விளையாடி வருகையில் சண்டை செய்து சுதரிசநன் கலாவதியுடன்கூறக் கலாவதியும் அரசனுங்கூடி இராச்சியவர்த்தனனைச் சீறினர். இராச்சியவர்த்தனன் தாயிடம்கூறத் தாய் தவஞ்செய்து சித்திபெறுக என்றபடி தீர்க்கதமமுனிவர் அநுக்ரகத்தால் அட்டமாசித்தி பெற்றுத் தந்தையால் அரசு கொடுக்கப்பெற்று வாழ்ந்தவன்.

**சூர்யதண்டவிக்ரமன்** — திரிகர்த்த ராசகுமரன். சூர்யகேதுவன்மனைக் காண்க.

**சூர்யபுரம்** — அரிகுலத்தரசர் நகரம்.

**சூர்யவர்ச்சன்** — திரிகர்த் ராஜாதிபதி.

**சூர்யவர்மா** — திரிகர்த்த அரசரில் ஒருவன் அருச்சுநனுடன் எதிர்த்து இளைத்தவன். கேதுவர்மன், திருதவர்மன் இவர்களு மிவனுடன் சேர்ந்தவர்கள்.

**சூர்யவன்மன்** — திரிகர்த்த ராச குமரன். சூர்யகேதுவன்மனைக் காண்க.

**சூர்யவீர்யன்** — திரிகர்த்த ராச குமரன. சூர்யகேதுவன்மனைக் காண்க.

**சூர்யாரண்யன்** — திரிசங்கின் தந்தை, திரிதன்வாகுமரன் இவனுக்குத் திரையாரணி யெனவும் பெயர்.

**சூலம்** — 1. இது சிவபெருமானுககு ஆயுதமானது, இது முத்தலையோடு, தன்னை எப்பொழுதும் பணிபவர்க்குச் சுகம் கொடுப்பதும், ஒரு காலையுடையதும், பயங்கரமான பற்களையுடையதும், ஜ்வாலா முகங்களையுடையதும், இரண்டாயிரங் கிரணங்களையுடையதும், எல்லா ஆயுதங்களுக்கும் சிரேட்டமானதும், எல்லாவற்றிற்கும் முதன்மையானதும், அநேகவித சின்னங்களையுடையதும், பலகோடி சத்ருக்களை யழிக்கவல்லதும், கற்பாந்தத்தில் பிரமாதி தேவர்களையும் சராசரங்களையும் அழிக்கவல்லதும் ஆம். (சிவமகா புராணம்.)

2. இது சிவபிரான் கையிலுள்ள சஸ்திரம். இது மூன்று பகுதிகளாகப் புருவ நெறிப்பைச் செய்து பயமுறுத்துவது போன்றது. புகையில்லாமல் ஜவலிக்கின்ற

அக்னிபோலும் பிரளயகாலத்தில் உதயமான சூர்யன்போலு மிருப்பது. (பார - அநுசா.)

**சூதாசூரன்** — ஒரு அசுரன், இன் தேவாதியரை வருத்த விநாயகரும் கந்தமூர்த்தியும் வேண்டச் சிவமூர்த்தி இவனைச் சங்கரித்தனர்.

**சூலிமுதுகிற்சோறிட்டவர்** — இவர் வேளாண்குடியினர். கவிஞர்க்குக் கேட்டதெல்லாம் கொடுக்கிருரென்பதைச் சோதிக்க ஒரு வித்வான் அவரிடஞ்சென்று பிரசங்கிக்கப் பிரபு வித்வானைத் தம்மிடம் விருந்து உண்டு போம்படி வேண்டப் புலவர் உமது மனைவியார் முதுகில் அன்னம் படைக்கின் உண்போமெனப் பிரபு இது எனக்கு அரிதோஎன்று கர்ப்பிணியாயிருந்த மனைவியாரின் முதுகில் அன்னம் படைத் துபசரித்தனர். இதனை "சூலிமுதுகிற் சுடச்சுடவப் போதமைத்த பாலடிசி றன்னைப் படைக்குங் கை" என்பதாற் காண்க.

**சூலரோகம்** — இது உடல் கனத்துத் திமிராய் விறுவிறுத்துப் பிடரியையும் பாதத்தையும்பற்றி யிழுத்துக் கைகால் விரல்கள் பொருத்துக்கள் வீங்கி முடங்கி மலஞ்சிக்கல் முதலிய குணங்களைத் தரும். இது வாதம், பித்தம், சிலேஷ்மம், திரிதோஷம், ஆமம், சர்க்கரா, குன்மம், மேகம், முறிச்சூலை, உலர்த்துச்சூலை, நிதம்பச்சூலை, கறைச்சூலை, சுரசூலை, பக்கச்சூலை, கருப்பச்சூலை, தூரச்சூலை, சாத்யாசாத்யசூலை, வாதவாயுச்சூலை, வாதநீர்ச்சூலை, வாதசுரோணிதசூலை, வாதபித்தசூலை, சந்நிவாதசூலை, சுக்லபிரமேகசூலை, கிரந்திசூலை, மாம்சசூலை, நீர்ச்சூலை, விஷநீர்ச்சூலை, எலும்புச்சூலை, மூலபாண்டுச்சூலை, விஷபித்தசூலை, வாதபாண்டுச்சூலை, பித்தபாண்டுச்சூலை, பாண்டுச்சூலை, விஷபாண்டுச்சூலை, அஸ்திசூலை, சுரசூலை, அண்டவாயு, அண்டச்சூலை, ய்க்கசூலை, அந்தரவாயுச்சூலை எனப் பலவகை.

**சூளாமணி** — தோலாமொழித் தேவரியற்றிய சிறுகாப்பிய மைந்தனுள் ஒ.்றுகிய தமிழ் நூல். இது திவட்டன் என்னும் இராச குமாரன் கதை. இது சொன்னேக்கம் பொருளுக்கமுடையது. யாப்பருங்கலத்திற்குக் காட்டாக இதன் செய்யுள் கூறியிருத்தலால் இது ஒரு பழைய காவியமாகும்.

**சூளி** — 1. ஒரு ருஷி, பிரமதத்தன் தந்தை.

2. வாயுவின் குமரி, உத்தானபாதன் தேவி. (மச்ச புராணம்.)

**சூளிறுதை** — 1. சத்யசகன் பாரி.

2. தருமன் என்னும் அரசன் தேவி.

**சூன்யபந்து** — திரணபிந்து குமரன், இவன் குமரன் வரு.

**சூஷாமகன்** — ஒரு அரசன்.

## சே

**சேகராஜசேகர மன்னவர்** — இவர் ஊர் யாழ்ப்பாணத்துநல்லூர், சமயம் சைவம், கனகசூரிய சிங்கையாரியமன்னர் குமாரர், பராசசேகர மன்னவர்க்கு இளையவர், தமிழில் அபிமானி, தமிழ் வல்லவர், தக்கிண கைலாசபுராணம் பாடியவர். இவர் செகராஜசேகரமாலை செய்வித்தவர். இவர் காலம் முன்னூறு வருடங்களுக்குமுன் என்பர்.

**சேகராஜசேகரன்** — 1. ஈழநாட்டரசன், செகராஜசேகரமென்னுஞ் சோதிடநூல் இயற்றியவன்.

2. சிங்கையாரியச் சக்கரவர்த்தியைக் காண்க.

**சேக்கர்மேகக்குறி** — மூலம், பரணி, பூராட்டாதி, பூராடம் இந்நாட்களில் இரத்தமேகமுண்டாகில் (அ) நாட்களில் மழையுண்டாகும். அசுவநியில் (ஙி) ஆம் நாள், உத்திராடத்து (கக) ஆம் நாள், உத்திரட்டாதியில் (எ) ஆம் நாள், கேட்டையில் (கO) ஆம் நாள், அனுஷத்தில் (கூ) ஆம் நாள் இவற்றில் மத்யானத்தில் இரத்தமேகமுண்டாகில் மழை பெய்யும். மத்யானம் திருவாதிரையில் வெண்முகிலுண்டாகில் (எ) ஆம் நாள் மழைபெய்யும். (விதானமாலை.)

**சேங்கட்சோழன்** — சோழன் செங்கணனுக்கு ஒரு பெயர்.

**சேங்கண்ணர்** — செந்தாமரைக் கண்ணர்க்குக் குமரர், இவர் குமரர் போர்க்காரியார், நம்மாழ்வாருக்குப் பாட்டனுக்குத் தந்தை.

**சேங்கண்ணனூர்** — மதுரைச் செங்கண்ணனூர் என அகத்திற் கூறப்படுபவர் இவரே. குறிஞ்சித்திணையைப் பாராட்டிப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் (கஉஉ) ஆம் பாடலொன்றும், அகத்தில் ஒன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்

திருக்கின்றன. இப்பெயர் உறுப்பால் வந்ததுபோலும்.

**செங்கண்ணன்** — சண்முகசேநாவீரன்.

**செங்கிரந்தி ரோகம்** — பிள்ளைகளுக்குண்டாம் ரோகங்களில் ஒன்று. தேகமுழுதும் செந்நிற வீக்கம், வாய் தடிப்பு, மூத்திர பந்தம், பூனைக்குரலோசை, பிரேதம் போல் கிடத்தல்.

**செங்குட்டுவன்** — சேரலாதன் புத்ரன். இளங்கோ அடிகளுக்குத் தமயன், இவன் சேரநாட்டரசன், இவன், பத்தினித் தெய்வமாகிய கண்ணகியைத் தன்னாட்டில் பிரதிட்டை செய்வித்துப் பூசித்தவன். இவன் நேரிவாயிலில் தன் மைத்துனன் பகைவர் ஒன்பதின்மரை வென்றான். இவன் கரிகாற் பெருவளவனுடைய பெண்வயிற்றுப் பேரன். மதுரைக் கூலவாணிகன் சாத்தனுக்கு நண்பன். கண்ணகிக்கு இமயத்திருந்து சிலைவருவித்துச் சிலைசெய்து விழா இயற்றினவன். இவன் காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டென்பர். (மணிமே.)

**செங்குந்தத் தலைவர்கள்** — இவர்கள் ஒட்டக்கூத்தர் காலத்தவர். பழுவூர்வீரன், பழுவை நாராயணன், கச்சித்தனியன், ஒற்றியூரன், களத்தூரரசன், புற்றிடங்கொண்டான், கோளாந்தகன், புலியூர்ப் பள்ளிகொண்டான், பிணவன், கண்டியூரன், முதுகுன்றமணியன், தஞ்சை வேம்பன். இவர்கள் பன்னிருவரும் வல்லானை வெல்லச் சென்று பதின்மர் இறக்க வீரன், நாராயணன் இருவரும் வல்லான் மனைவிக்கு மாங்கல்ய பிச்சை அளித்தனர்.

**செங்குன்று** — கொடுங்கோளூர்க்கு அயலிலுள்ள மலை. கண்ணகி இங்குக் கோவலனைத் தெய்வவடிவுடன் கண்டு சுவர்க்கம் புக்காள் (சிலப்பதிகாரம்.)

**செங்குன்றூர்க்கிழார்** — கடைச்சங்கத்துப் புலவருள் ஒருவர்.

**செங்கோடு** — முருகக்கடவுள் எழுந்தருளியிருக்கும் தலம். இதனைத் திருச்செங்கோடு என்பர். (சிலப்பதிகாரம்.)

**செங்கோல்**—அரசன், தன் ஆளுகை அரசநீதிப்படி ஆளப்பட்டது என்பதைத் தெரிவிக்கத் தன் கைக்கொண்ட ஒரு கோணுதலிலாத பொற்கோல்.

**செங்கோன்** — இவன் பஃறுளியாறு கடல் கொள்ளப்படுவதற்கு முன்னிருந்த தென்பாண்டி நாட்டரசர்களுள் ஒருவன். இவன் சூரியவம்சத்தவன், ஏற்றுக்கொடியினனாகக் கூறப்படுகிறான், செங்கோன் தரைச் செலவு காண்க.

**செங்கோன் தரைச்செலவு** — இது ஒரு தமிழ் நூல். இது செங்கோன் எனும் தமிழ்நாட்டரசனது படையெழுச்சியைக் கூறுவது. இதனைப் பாடிய புலவர் முதலூழித்தனியூர்ச் சேந்தன் என்பார். (முதலூழி என்பது யுகமன்று காலத்தைக் குறிப்பது) இது பெருவளநாட்டரசனாகிய செங்கோன் வேற்றரசரின்நாடு விரும்பிப் போர்க்குச் சென்றதைக் கூறுவது. இந்நூலானும், உரையானும், ஏழ்தெங்கநாடு, பெருவளநாடென்னும் நாடுகளும், பேராறென்னும் நதியும், மணிமலையெனும் மலையும், முத்தூர் எனும் ஊரும், சக்கரக்கோ, அகத்தியன், நெடுந்துறையன், இடைக்கழிச் செங்கோடன் எனப் புலவர் சிலரும், பெருநூல், இயனூல், சில நூல்களும் தாப்புலி எனும் பாவிகற்பமும், பிறவும் தெரிகின்றன. செங்கோன் என்பவன் சூரிய வம்சத்தவனாகவும், ஏற்றுக் கொடியினனாகவும் கூறப்படுகிறான். இவனாட்டைச் சார்ந்து பேராறென் ஒரு ஆறும், வழிக்கழியென ஒரு கடலும் இருந்தனவாகத் தெரிகிறது. இவன் இடைச்சங்கத்தவர் காலத்தவன், பஃறுளியாறு கடல்கொள்வதற்கு முன் னிருந்தவனாகத் தெரிகிறது.

**செஞ்சிகோட்டை** — இது வட ஆற்காடு ஜில்லாவிலுள்ளது. இது (1383 A. D.) விஜயநகரத் தரசனாகிய அரிஅரனிடத்தில் இருந்து, இரண்டாமுறை ராயர்களிடத்திலும், 3-வது பீஜபூர் அரசர்களிடத்திலும், 4-வது தஞ்சையரசனாகிய சிவாஜி, தேசிங்கென்பவரிடத்திலும், 5-வது 1698-இல் மொகலாயரிடத்திலும், 6-வது 1750-இல் பிரான்சியரிடத்திலும், 7-வது 1761-இல் ஆங்கிலேயரிடத்திலும் பிடிபட்டது. இதனை 1712-இல் சாததுல்லாகான் வசப்படுத்தி யிருந்தான் என்று (S. I. I.) கூறுகிறது.

**செஞ்சோற்றுக்கடன்** — அரசற்கு வேற்றரசரால் துன்பம் வருங்காலத்துப் பகைமேற் சென்று நிரைமீட்டலும், பகை வெல்லுதலுமாம்.

**செடில்மரம்** — ஒரு கனத்த தம்பத்தில் பெருத்துத் துளையமைந்த சுழலும் துலாம் நிறுத்தி அத்துலாத்தின் முனையில் மனிதரைக் குத்திச் சுழலச்செய்யும் மரம்.

**சேட்டிகள்** — இது பெரும்பாலும் வர்த்தகர்க்குரிய பட்டப் பெயர். இப்பட்டத்தை வேளாளரும் பெற்றிருக்கின்றனர். இவர்கள் வேளாஞ் செட்டிகள், பேரி செட்டிகள், நகரத்துச் செட்டிகள், காசுக்கார செட்டிகள், நாட்டுக்கோட்டை செட்டிகள், பன்னிரண்டாம் செட்டிகள் எனப் பாகுபாடு படுவர்.

**சேண்டர்** — கைக்காயிரம் பொன்னுக்கு இராசசேவை செய்து, உடையவர் மடத்திற்குக் கைவழக்கஞ் செய்த பாகவதர்.

**சேண்டலங்காரதாசர்**—உய்யக்கொண்டார் திருவடிசம்பந்தி.

**சேண்பகமலர்** — ஒரு பிராமணன் சென்பகமலரால் சிவபூஜை செய்த விசேஷத்தால் இராஜாவின் அனுக்ரகம் பெற்றுப் பிராமணர் அரசனிடம் பெறும் தானதிகளில் பாதி பெற்றுவந்தனன். இவ்வகை செய்து வருவோன் ஒரு நாள் ஒரு வேதியன் பெற்ற பசுவைத் தனக்குச் சமபாகம் தரவேண்டுமென்று வருத்துகையில் அவன் பாரியைச் சிவசந்நிதானத்தில் முறையிட்டனள். அவ்விடம் தரிசனத்தின் பொருட்டு வந்திருந்த நாரதர் இதனைக் கேட்டு அதிகோபங் கொண்டு சிவாஞ்ஞை பெற்றுவெளிவந்துஅவனுக்குஇச்செருக்கு சென்பகமலரின் பூசாவிசேஷத்தால் வந்ததென்று சண்பக மரத்தையடைந்து சண்பகமே, உன் மலர்களை நாடோறும் எடுப்பவன் எவன் என அது பேசாதிருந்ததுகண்டு கோபித்து நீ சிவபூசைக்கு யோக்கியப் படாதிருக்கவெனச் சபித்து நீங்குகையில் அவ்வேதியன் எதிரில் வரக் கண்டு வேதியனை நோக்கி நீ வேதியர் கொள்ளும் தானத்தில் பகுதி கொள்ளுதலின் ராக்ஷஸவுருவடைக என்று சபித்தனர். இதனைக் கேட்ட பிராமணன் நடுங்கித் தீர்வுவேண்ட நாரதர் மனங்களித்து இராமபிரானுல் நீவதையுண்டு பின் திவ்ய ரூபமடைக என்று மறைந்தனர். இவனே விராதன். (சிவமகா-புராணம்.)

**சேநமேசயன்** — சநமேசயனைக் காண்க.

**சேந்தாமரைக்கண்ணர்** — அச்யுதர் குமரர், இவர்குமரர் செங்கண்ணர். இவர் நம்மாழ்வாருக்குப் பூட்டன்.

**சேந்நாய்** — 1. இது நாயினத்தைச் சேர்ந்த பிராணி மூர்க்கமுள்ளது. மலை, காடு முதலிய இடங்களில் வசிப்பது, (உ) அடிஉயரமுள்ளது,சிவந்த பழுப்பு நிறமுள்ளது. இரத்த பிரியமுள்ளதாதலால் நினைத்த பொழுது வெளிவரும். இந் நாய்க்குப் புலி சிங்கம் முதலிய அஞ்சும். மனிதரையும் எதிர்க்கும்.

2. திரிதரென்னும்மகருஷியைக்கண்டு பயப்படச் செய்தது. (பாரா - சல்லி)

**சேந்நிதுலோத்துங்கன்** — ஒரு சோழன். இவன் காலத்துச் சித்திரகூடம் தில்லை கோவிந்தராஜப்பெருமாள்,கோயிலைவிட்டு வெளியேறினர் என்பர். (சகம் - 1009)

**சேந்நில்**—இது பாண்டிநாட்டிலுள்ள திருச்செந்தூர். இது குமாரக்கடவுள் எழுந்தருளிய தலங்களில் ஒன்று. (சிலப்பதிகாரம்)

**சேந்நு** — 1. குருவின் குமரன், இவன் குமரன் சுரதன்.

2. சந்நுவைக் காண்க.

**சேன்னி** — இது சோழர் பொதுப் பெயராயினும் குலோத்துங்க சோழனுக்கு ஒரு பெயர்.

**சேபஇலக்கணம்** — தருப்பாசனத்தின்மேலாயினும், ஏனையாசனங்களின் மேலாயினும் இருந்து தருப்பையிற் சமைத்த பவித்திரத்தைக் கையிற்புனைந்து சூரியனுக்கு எதிர்முகமாகவாயினும் அல்லது வடக்கு முகமாகவாயினும்ஜெபமாலையைக் கையிற்பிடித்து இஷ்ட தேவதையைத் தியானித்துக்கொண்டு ஜெபிக்கவேண்டும். இச் செபஞ்செய்தல் வாசிகம், மானசிகம், உபாம்சு என மூவிதப்படும். இவற்றுள் வாசிகம், உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம் என்னும் சுரங்களோடு மொழிகளாலும், எழுத்துக்களாலும் திருத்தமாக வாக்கினால் உச்சரிக்கப்படுவதாம். உபாம்சு-இதழ்களைச் சிறுக அசைத்து மந்திரங்களைச் சத்தம் எழாமல் மெதுமாக உச்சரிப்பது. மானதம் ஓரெழுத்தினின்றும் மற்றோரெழுத்து ஒரு மொழியினின்றும் மற்றொரு மொழியாக முறையே மந்திர எழுத்துகளின் தொடர்பைத் தியானித்து ஒவ்வொரு முறைக்கும் சொல்லின் பொருளைச் சிந்தித்து வாக்யார்த்தங்களை அநுசந்தானஞ் செய்வது. இவற்றுள் மானதம் உத்தமம் உபாம்சு மத்திமம்; வாசிகம் அதமம். பலன், வாசிகம் ஒன்று உபாம்சு நூறு மானதம் ஆயிரம் இச் செபத்தை எண்ணிடுகையில் உதயத்தில் கரத்தை மேன்முகமாகவும், சாயங்காலத்தில் கீழ்முகமாக வைத்தும், உச்சியில் இருகையையும் அஞ்

சவியாக ஊர்த்துவமுகமாக வைத்தும், எண்ணிடுக. காலையில் சூரியனைத் தரிசிக்கும் வரையிலும், சாயங்காலத்தில் நக்ஷத்திரந் தோன்றும் வரையிலும் செபித்தல் வேண்டும். உச்சியில் கீழ்த்திசை நோக்கி உட்கார்ந்து செபித்தல் வேண்டும். உலாவிக்கொண்டும், நகையாடிக்கொண்டும், இருபுறமும் நோக்கிக்கொண்டாயினும், அடங்கி அமையாத மனத்துடன் ஆயினும், வேறு விஷயங்களைக் கேட்டுக்கொண்டாயினும் பிறர் கேட்கும்படியாயினும் செபித்தல் கூடாது. செபகாலத்தில் கோபம், சோம்பல், தும்மல், உறக்கம், அபானம் பரிதல், கொட்டாவிவிடல், நாய், நீசர் முதலியோரை நோக்குதலை ஒழிக்கவேண்டும். வேள்விச்சாலை, தேவாலயம், புண்ணியஸ்தலம், பசுக்கொட்டில், புண்ணியதீர்த்தக்கரை, தன்மனை முதலிய இடங்களில் செபித்தல் வேண்டும். சங்கு, வெள்ளி, பொன்முதலியவற்றாற் சமைத்த மணிகளும், நீலோற்பலம் தாமரைவித்துக்களும், ருத்ராக்ஷம், பவளம், படிகம், அரதனம், முத்து, இந்திராக்ஷம், பத்திராக்ஷவிதை, புத்திரஜீவவிதை, இவைகளாற் ஜெபிக்கின் நலம். நூற்றெட்டு, ஐம்பத்துநான்கு, இருபத்தேழு மணிகள் உள்ள மாலை முறையே உத்தம, மத்திம, அதமமாகும். பெருவிரலால் ஜெபிக்கின் முத்தியும், சுட்டுவிரல் சத்துருநாசத்தையும், நடுவிரல் தனலாபத்தையும், ஈற்றயல்விரல் புஷ்டியையும், சுண்டுவிரல் ரக்ஷணத்தையும் செய்யும். பெருவிரல்களுடன் மற்றைவிரல்களைச் சேர்த்தே செய்தல் வேண்டும். அப் பெருவிரல் ஒழிந்த விரற்களால் செபிக்கின்பயனில்லை.

**சேபேச்சுரம்** — ஒரு சிவத்தலம்.

**சேப்பான்மதம்** — பூர்வம் இத்தேசத்தில் ஷிவினிக்ஸூ என்னும் நாஸ்திகமதமும் விகிடோரியட் என்னும் மதமும் கிவாஸ்க் மதமும் ஜமமபோஸ்மதமும் ஷின்டோயிஸம் மதமும் அதிகமாயிருந்தன. இவர்களின் குருக்கள் நிகாஸ் என்னப்படுவர். இந்தக் குருக்களுக்குப் பலசீடர்கள் உண்டு. டிராஸ் என்னும் ஸ்வர்ணதேவாலயங்கள் அநேகமுண்டு. தேவாலயங்களின் வாயிற்களில் தெய்வங்களின் தலையைச் செய்து வைக்கப்பட் டிருக்கும். ஆதியில் காகிதங்களில் எழுதிய படங்களைப்பூசித்து வந்தனர்; பிறகு விக்கிரகங்களை அழாகச்செய்துவைத்துக் கொண்டனர். அமிடாஸ் என்னும் தேவன் பராபரவஸ்து. அவன் ஏழாயிரம் வருடங்கள் எழுதலைகளுடன் குதிரையின் மேலிருந்து அரசாண்டவன். இவனுக்குப் பலிகளைக் கொடுப்பார். இப்போது இத்தேசத்தில் புத்தமதம் விசேஷமாக வியாபித்திருக்கிறது. இவ்விடத்திலுள்ள புத்த விக்கிரகத்தைப் போல் எவ்விடத்திலுமில்லை. பூர்வத்திலிருந்த சின்டோயிஸம் என்னும் மதத்தினர் வாயு, அக்நி, காலம், பித்ருக்கள், சக்கிரவர்த்தி முதலியவரைத் தேவதைகளாகப் பாவித்திருந்தனர். இப்படிப்பட்ட தேவர்கள் எண்பது லக்ஷமிருக்கின்றார்கள். ஜெப்பான் தேசத்து ஒவ்வொருவனும் மந்திரமெழுதிய வஸ்திரம் தரித்திருப்பன். செத்தவனுக்குக் கர்மங்கள் செய்வார்கள். செத்தவர்களைத் தகனஞ்செய்து சாம்பலைவைத்துச் சமாதிமண்டபங்கள் கட்டுவர். புத்தமதத்தைச் சேர்ந்த ஜபானியர் ஒரேமனைவியை விவாகஞ்செய்துகொள்ளுவார்கள். ஸ்திரீகள் விபசரித்தபோது கொல்லுவர். சந்நியாசிகள் கல்யாணஞ் செய்துகொள்ளார்.

**சேம்படவர்** — இவர்கள் தமிழ்நாட்டு வலையர். இவர்கள் பட்டினவர்கள் போலல்லாமல் நல்லஜலம் உள்ள ஆறு, ஏரி, குளம், குட்டைகளில் வலை வீசி சீவனம் செய்பவர்கள். இவர்கள் படகோட்டுதலில் வல்லமை பெற்றவர்களாதலாலும், செம்படச்சியாம்அங்கம்மாளைசம்புவாகியசிவனுக்குக் கொடுத்தமையால் செம்படவர் என்றும், பர்வதராஜன் செம்புபடவிலேறி வலைவீசினகாலத்தில் அகப்பட்ட இராக்கதருடன் ஒரு ருஷியும் அகப்பட்டு அரசனை உன் கோத்திரமென்னவென்று வினவி உன் கோத்திரத்தார் செம்படவராக எனச் சபிக்கப்பட்ட குலத்தினர் ஆதலால் பர்வதராஜ வம்சத்தினர் என்றும், இவர்கள் கடவுளை வணங்கும் காலத்தில் இவர்களைச் சோதிக்கக் கடவுள் ஒரு பெரு மீனை நதியில் தோற்றுவிக்க த்யானத்தை மறந்து மீனைப் பிடிக்க முயன்றதால் நீங்கள் மீன் வலையராகஎன்று சபிக்கப்பட்டவர்கள் என்றுங்கூறுவர். இவர்களின் தொழில் மீன்பிடித்தல், பயிரிடல், நெய்தல், வலைபின்னல், மீன் உலர்த்தல். இவர்கள் தங்களைப் பட்டினவரினும் உயர்ந்தவராக எண்ணுகிறார்கள். இவர்களுக்கு நாட்டான், கவுண்டன்

மணியக்காரன், பாகுத்தன், பிள்ளைபட்டடம். இவர்கள் தங்களைக் குகனுடைய சாதியாதலால் குகவேளாளர் என்பர். பெரும்பாலோர் பூஜாரிகள், இவர்களிற் சிலர் லிங்கதாரிகள். மலையனூரில் சிவபூஜை செய்வோர் செம்படவர் முக்காலியர். இவர்கள் தேவர், செப்பிலியன், எதிநாயகன், சங்கிலி, மாயகுந்தலி, பட்டம், பணிக்கன் என எழுவகைப் பகுப்புப் படுவர். (தர்ஸ்டன்.)

**செம்படவர் கருவிகள்** — பெறங்கவலை, வெல்லடி, வேரீத்து, பேந்தவலை, வரிச்சவலை, சென்னவலை, ஊசிப்பலகை, நூல் முருக்கி, தங்கூசு, தக்கை.

**செம்படவன்** — பிராமணனுக்குச் சூத்திர மனைவியிடம் பிறந்தவன். இவன் படகு ஓட்டுகிறவன். (அருணகிரி புராணம்.) மார்க்கவனைக் காண்க.

**செம்பன்**—ஒரு அசுரன், தேவர்களை வருத்தி இந்திரனுலிறந்தவன். (செவ்வந்தி - புரா.)

**செம்பியனார்** — இது சோழர் குடிக்குரிய பெயர். இதனால் இவர் சோழமன்ன மரபினர் என்று தெரிகின்றது. இவர் கிள்ளைவிடு தூதாகக் கூறிய நற்றிணைப் பாட்டு மிகவும் பாராட்டற்பாலது. இவர் குறிஞ்சித் திணையைப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியது. நற். ௧௦௨-ம் பாட்டு.

**செம்பியன்** — 1. முதல்வள்ளல்கள் எழுவரில் ஒருவன்.

2. பள்ளிகளுக்கு ஒரு பெயர். இவர் சோழகுலத்தவர் என்பர். இவர்களுக்கு செம்பிநாடு.

**செம்பு** — (தாமிரம்) இது, மங்கிய செந்நிறமுள்ள உலோகம், (9) மடங்கு கனமுள்ளது. இது, சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்பட்டு உலையில் ஊதி யுருக்கித் தகடு, கட்டி, கம்பி முதலியவாகச் செய்யப்படுகிறது. உஷ்ணத்தை அதிவிரைவில் பற்றுவது. இது, பான பாத்திரங்களாகவும், விக்ரங்கள் செய்யவும், தகடுகளாக்கிக் கப்பல்கள் கடனீரால் பழுதுருதபடி அடிக்கவும் உபயோகப்படுகின்றது. இன்னும் இதனால் சிறு நாணயங்கள் செய்யப்படுகின்றன. இதனாற் செய்யப்பட்ட பாத்திரங்களில் புளிப்புள்ள பண்டங்களை வைக்கின் களிம்பேறும். அது போக்க ஈயம் பூசுவது வழக்கம். களிம்பு விஷமுள்ளது. இது இங்கிலாந்து, ஷில்லி, ருஷியா, ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்கா, ஸ்பெயின் முதலிய தேசங்களில் கனிகளிலிருந் தெடுக்கப்படுகிறது. இதனுடன் துத்தநாகத்தைக் கூட்டி யுருக்கினால் பித்தளை ஆகிறது. தாம்பிரத்துடன் தகரத்தைச் சேர்த்தால் வெண்கலம் உண்டாம். இதனுடன் நிக்கலைச் சேர்த்தால் ஜெர்மன் சில்வராம்.

**செம்புகோட்டி** — மலைநாட்டு கன்னன்.

**செம்புலப்பெய்ந்நீரார்** — இவர் கடைச் சங்கமருவிய புலவருள் ஒருவர். இவர் குறுந்தொகையுள் (௪௦) செய்யுளில் "செம்புலப் பெய்ந்நீர்போல" என உவமை கூறியிருத்தலின் இப்பெயர்பெற்றனர்போலும்.

**செம்பூட்சேய்** — அகத்தியர் மாணக்கருள் ஒருவர்.

**செம்போத்து** — இதனைக் கள்ளிக்காக்கையென்பர். இது செந்நிறமாய்ச் செங்கணுடையதாய்க்காக்கைபோலுள்ளபறவை. இதன் அலகு காக்கைபோல் நீண்டிராது. பூச்சிகளையும் பழங்களையும் தின்பது.

**செம்மார்** — இவர்கள் தோல்துன்னர், மதுரை, திருநெல்வேலியிலுள்ளவர்கள். இவர்கள் தற்காலம் கிளிஞ்சல்சுடல், தையல் தைத்தல் முதலிய வேலைகளிலும் பழகுகின்றனர். இவர்களிற் சிலர் பறையரில் வேறுபட்டுச் செருப்புத்தொழில்செய்வோர். இதில் தொண்டமான் தோல் மேஸ்திரி இரண்டு வகை உண்டு. இவர்களுக்குப் பட்டம் மேஸ்திரி. (தர்ஸ்டன்.)

**செயகந்தன்** — துரியோதனன் தம்பி.

**செயங்கொண்டார்** — இவர் சோழவளநாட்டில் நன்னிலத்தருகிலுள்ள தீபங்குடி என்னும் ஜைனக்கிராமத்தவர். இவர் முதலில் சைனராக இருந்து பின்பு சைவரானவராகத் தோற்றுகிறது. இவர் அபயனிடங் கோபங்கொண்டபோது "காவலரீகை கருதுங்காற் காவலர்க்கும், பாவலர் நல்கும் பரிசொவ்வா - பூவினிலை, ஆகாப்பொருளையபயனளித்தான் புகழாம், ஏகாப்பொருளளித்தேன் யான். இவர் செட்டிகள்மீது இசையாயிரம் பாடியபோது வாணியர், புகார் தங்களுக்கு ஊர் எனப் பாடக் கூறப் புலவர் "ஆடுவதுஞ் செக்கே யளப்பதுவு மெண்ணெயே, கூடுவதுஞ் சக்கிலியக் கோதையே - நீடுபுகழ்க், கச்சிச்செப்பேட்டிற் கணிக்குங்காற் செக்கார்தாம், உச்சிக் குப் பின் புகாளூர்" என புகார்வரப் பாடித் தந்தனர். இவர் காலம் அபயன்காலம். எனவே. கி. பி. 1070-1118 ஆக இருக்கலாம். (தமிழ்நாவலர் சரிதை).

**செயசேநன்** — 1. (சங்.) பீமன் குமரன், இவன் குமரன் சங்கிருதி.

2. (சங்.) சார்வபூமன் குமரன், தேவி சுபத்திரை, குமரன் ராதி.

3. துரியோதநன் தம்பி.

**செயசோழன்** — இவன் சேரன்குமரியாகிய காஞ்சனமாலையை மணந்து கனகசோழனைப் பெற்று மணிமுத்தா நதியில் படித்துறைகட்டி (சுO)ஆ ஆண்டு முத்தி பெற்றான்.

**செயத்துவசன்** — கார்த்தவீர்யன் குமரன், இவன் குமரன் தாலசங்கன்.

**செயத்ரதன்** — (பிர.) பிரகன்மனசின் குமரன், தேவி சம்பூதி; குமரன் விசயன்.

**செயந்தர்** — திரேதாயுகத்தில் விஷ்ணுவாயிருந்தவர்.

**செயந்தன்** — தருமனுக்கு மருத்துதியிடம் பிறந்த குமாரன், வாசுதேவாம்சம்.

**செயந்தீ** — கேயன் தேவி.

**செயராமன்** — துரியோதனன் தம்பி.

**செயலூரிளம்பொன்சாத்தன்கொற்றன்** — கடைச்சங்கமருவிய புலவன். (அக-று.)

**செயலூர்க்கோடுஞ் செங்கண்ணனார்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர். (திருவள்ளுவ - மாலை.)

**செயலூர்க்கோசனங்கண்ணான்** — கடைச்சங்கமருவியபுலவன். (அக-று.)

**செயவிக்ரமன்** — துரியோதனன் தம்பி.

**செயவீரமார்த் தாண்டதேவன்** — இவன் பஞ்சதந்திரக் கதையென்னும் வடமொழியைத் தமிழாக இயற்றியவன் செங்குந்தர் மரபு.

**செயன்** — 1. சகுநியின் குமரன்.

2. யுயுதாநன் குமரன். இவன் குமரன் குணி.

**செயஸ்துசயன்** — ரசாதிதேவியின் கணவன், குமரர் விந்தாலுவிந்தாள்.

**செய்திவள்ளுவன் பெருஞ்சாத்தன்** — (வள்ளுவர் குடியினர்) இவர் பெயர் பெருஞ்சாத்தன்போலும் இவர் பின்வரும் செய்திகளை முன்னறிந்து சொல்லும் ஆரூடக்காரராகிய வள்ளுவர் மரபினராக இருக்கலாமென்று தோன்றுகிறது. (குறு - 228.)

**செயிர்க்காவிரியார்மகனார்சாத்தனார்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை)

**செயிற்றியனார்** — செயிற்றிய நூலாசிரியர்.

**செயிற்றியம்** — நாடகத் தமிழ் நூலுள் ஒன்று இது செய்தோனாற் பெயர்பெற்றது.

**செய்யத் தகாதன** — 1. அரசன் செய்கையை வெறுத்தலும், அரசனுடன் கலகம் கொள்ளுதலும், அரசனுக்கு எதிர்முகமாக நிற்றலும், அரசன் ஏகாந்தத்தில் தங்காரியங் கூறலும், இனியவற்றை நான் அனுபவித்திருக்கிறேன் என்று அரசனிடங் கூறலும், அரசன் காக்கை வெளிதென்று கூறினும் அன்பின்றி யிருத்தலும், எச்சிலுமிழ்தல், உயர்ந்தபீடத்திருத்தல், தாம்பூலந் தரித்தல், வகைப்படாத வார்த்தை, உறங்குதல் இவற்றை அரசர்முன் செய்தலும், அரசர்முன் தமது செல்வம், கல்வி, தேஜஸ், குண முதலியவற்றை விவரித்துப் பேசலும், பெரியார் கூடியிருக்கும் சவையில் ஆடை களைதலும், காதைச் சொரிதலும், கையை மேல்தூக்கிப் பேசுதலும், பெண்டிரை யுற்றுப் பார்த்தலும், பிறர்தம் காதில் சொல்லும் சொல்லை யுற்றுக் கேட்டலும் ஆகா. ஆசையற்றார் வீட்டை அடையலாகாது. கோபங்கொண்டு நின்றகாலத்தும் ஆசாரியர்பெயரைக் கூறலாகாது, நெடுநேரமளவு மனைவியைக் கோபித்தலாகாது, தம்மிற் பெரியோரையும் புலையரையும் முறைப்பெயரிட்டு அழைத்தலாகாது, வேறொருவர் வீட்டிற் புறக்கடை வழியாய்ப் புகுதல்கூடாது, பொதுமகளிர் வீட்டருகில் வசிக்கக்கூடாது, ஒருவருடன் செல்லுகையில் ஒருவரிடையில் போகலாகாது, ஒருவர் நிழலை மிதித்துச் செல்லவொண்ணாது, முன்னாராய்ந்து பின் பேசவேண்டும், ஊரினர்க்கு வெறுப்பான காரியங்களைச் செய்யலாகாது, அரசரது படையினளவை பகைவர்க்குச் சொல்ல வொண்ணாது. முற்றின புல், முற்றி யுலர்ந்த காட்டிலும் சேர்ந்திருத்த லாகாது, அவற்றைத் தீயிட்டுக் கொளுத்தல் ஆகாது; மழை பெய்கையில் ஓடலாகாது; வழிதெரியாக் காட்டில் தனித்துப் போகலாகாது; மழையின்றிக் காலம் கெட்டாலும் ஒழுக்கம் தவறலாகாது. குடியில்லாத வீட்டிலும், பாழ்ங்கோவிலினுள்ளும், சுடுகாட்டிலும், ஊரில்லா இடத்திலுள்ள ஒண்டிமரத்தினிடத்தும் தனித்துப் போதலாகாது; பகலில் நித்திரை செய்யலாகாது; ஒருவர் எழுந்து போம்போது அழைத்தலும், எங்கே போகிறீர் என்னலும் ஆகாது; ஒருவரைப் பார்த்து உம்முடம்பு நன்றாயிருக்கிறதென்னலும், விளக்கினை வாயினால் ஊதி

அவித்தலும், அடுப்பிலுள்ள நெருப்பை அவித்தலும், அடுப்பின் சுடர் தம்மீது படும்படி குளிர்காய்தலும் கூடாது; பெரியோர் தம்முடன் வருகையில் வாகனமேறல், செருப்புப் பூண்டு நடத்தல், குடை பிடித்துச் செல்லுதலும் கூடாது; பெரியோர் விரும்பியவற்றைத் தாம் விரும்பலும், கீழ்மகளை வீட்டிலழைத்தலும், சிறுவராயினும் இழித்துப் பேசுதலும் ஆகாது. பாம்பு, அரசன், நெருப்பு, சிங்கம், இவை பழகினவென்று இகழ்ந்திருத்தலாகாது. அரசனினும் செல்வம் மிகுதியுடையனுயினும் அதனை அரசனறியச் செய்யலாகாது; ஐங்குரவரையும் பெரியாரையும் காணின் நீங்களுண்டது என்ன எனக் கேட்டல்கூடாது; தாம் ஒருவர்க்குச் செய்த நன்றியைத் தாமே புகழ்தலும், தமக்கு ஒருவரிட்ட உணவை இகழ்தலும் கூடாது; கிட்டாத பொருளுக்கு ஆசைப்படுதலும், இழந்த பொருளுக்கும், நீக்க முடியாத துன்பத்திற்கு வருந்துவதும் ஆகாது; ஒருவர் தலையில் முடித்த பூவைச் சூடலும் மோத்தலும், புலையர்க்கு எச்சிற் பண்டங்களை யளித்தலும், தமக்கு மூத்தோர் முன் உடலின்மீது போர்த்துக்கொள்ளுதலும், கர்வித் திருத்தலும், அட்டணைக்கா லிட்டிருத்தலும், பெரியோரிருக்கும் இடத்தில் அங்கசேட்டை செய்தலும், கடுஞ்சொல் பேசலும், இருவரிருந்து பேசுமிடத்துச் செல்லுதலும், குரவரெதிரில் கையைச் சுட்டிக் காட்டிப் பேசுதலும், பெரியோர் கொடுப்பதை உட்கார்ந்து வாங்கலும், ஆகா. சூதாடுமிடத்தில் போதலும், ஆரவாரம் நீங்காஇடத்தில்போதலும், மடைப்பள்ளியுட் புகலும், பெண்கள் உறைகின்ற இடத்தில் செல்லலும் ஆகா. (ஆசாரக் கோவை.)பலர் நடுவில் பிறரைப்பழித்தல், இழித்தல், பலர் நடுவில் படுத்துறங்கல், தம்மாலாகாதவைகளை ஆகுமென வாக்கிடுதல், ஏழைகளை இகழ்தல், வஞ்சனை பேசல், பயனில் கூறல், பல பிதற்றல், பழிகூறல், ஒரு பொருளை வீசி யெறிதல், கல்லெறிதல், வீண் வினை செய்தல், தூரப் போகின்றவனை அழைத்தல், பிறருடைய சொல் செய்கைகளை நடித்துக் காட்டல், வேகமுடைவனுதல், ஒளித்துக்கொள்ளல், கையொடு கை தட்டுதல், கண் காட்டல், மூக்கசைத்தல் ஆகா.

**செய்யாதி** — (சங்.) வெகுபவன் குமரன். இவன் குமரன் சங்காதி.

**செய்யான்** — இது பூரம்சாதியிற் பெரிது. இது மலை, காடுகளில் வசிப்பது. தேளினும் கொடிய விஷமுள்ளது. இது கடிக்கின் தக்க சிகிச்சை உடனே செய்யாவிடின் மாணம் உண்டாம். துள்ளித் துள்ளி கடிப்பது.

**செய்யுள்**—**1.** பல்வகைத் தாதுக்கள் சேர்ந்த உடற்குயிர்போல் பல சொற்களால் பொருட்கிடனாக எழுத்தசை சீர்தளை அடி தொடைகளாலும் அணிகளாலும் நிரம்பப் பெற்று கவிவல்ல புலவனால் பாடப்படுவது. இது முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என நானகுவகை. (நன்னூல்.)

**2.** செய்யுள் (சு) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடற்பா, மருட்பா

**செய்வன** — தன்னுடம்பு, தன் மனைவி, ஒருவர் தன்னிடம் அடைக்கலம் வைத்த பொருள், தன்னுபத்திற் குதவியான பொருள் இவற்றை அருமையாகக் காத்தல் வேண்டும்.

**செய்வனவாசிய ஆசாரங்கள்** — புனிதப் பொருள் கிடைப்பின் அதைக் கண் சிரசு முதலிய இடங்களிலும் ஒற்றிக்கொள்க. மனைவியின் பூப்பினீராடியபின் பன்னிரண்டுநாள் அவளினீங்காமை.

**செருத்துணை நாயனுர்** — சோணுட்டிலுள்ள மருகலைச் சேர்ந்த ஆரூரில் வேளாளர்குலத்தில் திரு அவதரித்துத் திருவாரூரிற் சிவபணிவிடை செய்துகொண்டு வரும் நாட்களுள் ஒருநாள் பல்லவர்கோன் மனைவி திருக்கோயிலிடம் பூத்தொடுக்கும் மண்டபத்தில் சிந்திய மலர்களில் ஒன்றை மோந்து பார்த்தனள். நாயனுர் அவளைக் கண்டு கோபித்து அவள் சிகையைப் பிடித்து இழுத்து மூக்கையறுத்துச் சிவநேசமிகுந்து சிவகதி யடைந்தவர். இவர் கோச்சிங்கப் பல்லவன் காலத்தவர். (பெ-புரா.)

**செருப்பு** — எருமை, எருது, ஆடு முதலியவற்றின் பதனிட்ட தோல்களால் காலினளவாக மாட்டிக ளமைத்துக் காலைக் காக்கும் விதம் செய்யப்பட்ட பாதரக்ஷை.

**செருப்புக்கட்டி** — மலையாளத்தில் செருப்புத் தைக்கிறவன்.

**செருவிடை வீழ்தல்** — ஆழமுடைத்தாகிய கிடங்கினோடு அரிய காவற்காட்டைக் காத்

துப்பட்ட வேல்வீரர் வெற்றியைச் சொல்லியது. (புற-வெண்பா.)

**சேலவழுங்கல்** — நிலவுபோல ஒளி விடும் வேலினையும் பெரிய மேம்பாட்டினையும் உடையவன் உயர்ந்த மூங்கிலியைந்த வழியிடைப்போவானாக முன்னே நிச்சயித்துப் போக்கு ஒழிந்தது. (பு.வெ. பெருந்திணை.)

**சேலவு** — வில்லாகிய ஏரினையுடைய உழவர் மாற்றாரிடத்தைக் கருதிக் கூற்றொருந்தினகாட்டைக் கழிந்துபோனது. (பு-வெ.)

**செல்கென விடுத்தல்** — பரந்த இருட்காலத்துக் கொழுநனைச் செலவைப் பார்த்துச் சிவந்த ஆபரணத்தினையுடைய தலைவி போவாயாகவென்று சொல்லியது. (புறவெண்பா. பெருந்திணை.)

**செல்லிநகர்** — இஃது பெரும்பற்றப்புலியூர் நம்பியாருடைய ஊர்; செல்லிநாடெனவும், பரசுராம சதுர்வேத மங்கலமெனவும் கூறப்படும். (திருவிளையாடல்).

**செல்லூர்** — குதிரை வடிவத்தை விட்டு நரிகள் சென்ற இடமாம்; இது மதிச்சயமென்னு மூர்க்கு மேற்கும், மதுரைக்கு வடக்குமுள்ளது. (திருவிளையாடல்).

**செல்லூர்க்கிழார்மகனர் பெரும்பூதன்கொற்றனர், செல்லூர்க்கோசிகன் கண்ணனூர்** — கடைச்சங்கத்தவர்கள்.

**செல்லூர்க்கோசிகன் கண்ணனூர்** — இவர் கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். இவர் கௌசிக கோத்திரத்தவர் போலும். இவரியற்பெயர் கண்ணனூர், வேதியராயிருக்கலாம், ஊர் செல்லூர் என்பது பாண்டிநாட்டுச் செல்லிநகராக இருக்கலாம். (அகம் ௬௬).

**செல்லூர்க்கோற்றன்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவர் பெயர் கொற்றனூ யிருக்கலாம். இவர் ஊர் செல்லூர். இவர் குறுந்தொகையில் "கண்ணிமருப்பு" எனும் (௩௬௩) ஆம் கவி கூறியவர்.

**செல்வக்கடுங்கோவாழியாதன்** — இவன் அந்துவஞ்சேர விரும்பொறை யென்னும் சேரன் குமரன். இவன் பெருங்கொடையாலும் அருங்குணங்களாலுஞ் சிறந்தவன். கபிலர் எனும் புலவர் தம்முயிர்த் துணைவனாகிய வேள் பாரி உயிர் நீத்ததும் அவனையொத்த நற்குணங்களிவனிடம் உள்ளனவென்று இவனிடம் வந்து பதிற்றுப்பத்தில் ஏழாம்பத்தைப் பாடினர். இவன் அவர்க்கு நூறாயிரம் காணமும் நன்றா எனும் குன்றில் இவனும் அவரும் ஏறி கண்ணிற் கெட்டிய அளவுள்ள நாடெல்லாம் அளித்தனன். இவன் மனைவி நெடுஞ்சேரலாதற்கு மகட் கொடுத்த வேளாவிக்கோமானுடைய மற்றொரு மகள். இவன் (௨௫) ஆண்டு ஆட்சி புரிந்தவன் இவன் சிக்கற்பள்ளியிடம் காலஞ் சென்றான். இவன் குமரன் பெருஞ்சேர விரும்பொறை. கபிலர் இவனைப் புலாம்பாசறை, வரைபோலிஞ்சி, அருவியாம்பல், உரைசால்வேள்வி, நாண்மகிழிருக்கை, புதல்சூழ்பறவை, வெண்போழ்க்கண்ணி, ஏமவாழ்க்கை, மண்கெழுஞாலம், பறைக்குரலருவி எனும் கவிகளால் பதிற்றுப்பத்தில் புகழ்ந்தனர்.

**செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனூர்** — கீரவிகொற்றனூரிடம் அகப்பொருள்கேட்டவர்.

**செல்வநம்பி** — வல்லபதேவனுக்குப் புரோகிதர், வல்லபதேவனைப் பொற்கிழிகட்டவினவர், ஸ்ரீ வைணவர்.

**செல்வப்பிள்ளை** — இராமப் பிரியரைக் காண்க.

**செவந்தான்** — இவர் மல்லையிலிருந்த பல்லவப்பிரபு. இவர் தமிழ்ப்புலவர்க்குப் பரிசு தந்து கோவைப்பிரபந்த முதலிய பெற்றவர். இவர்மீது இராமசந்திர கவிராயர் "சொன்னமன்ன மாடைதந்தான் வீதியில் வெற்றிலைமடித்துச் சுருளுந்தந்தான், கன்னலின் மோதிரந்தந்தான் சரப்பணி தந்தானிரட்டைக் கடுக்கன் தந்தான் செந்நெல் விளையூர் தந்தான் போர்தந்தான் எல்லையில் வாழ்சிவந் தானுங்கட், கென்ன தந்தானென்றவர்கட் கெத்தனையுத்தரந்தந்தானியம் பத்தானே" இவர் மீது பாடப்பட்ட செவந்தான் கோவை சொன்னயம் பொருணய முடையது. அதனை "மாதாம்படி பட்டுமெய் செவந்தான்குழல் வைத்திசைத்துச், சேதாம்பலங்கனிவாய் செவந்தான் செந்திருமடந்தை, சூதாந்தனந்தைத் துரஞ் செவந்தானைவர் தூது சென்று, பாதாம்புயஞ் செவந்தான் செவந்தான் மல்லைப் பல்லவனே" என்பதாலறிக.

**செவியறிவுறூஉ** — மாற்சரியம் கெடுதலில்லாத நின்று நிலைத்த பெரிய எண்ணத்தை, தருமத்தை யாராயும் செங்கோலினையுடையார்க்கு உணர மொழிந்தது. (பு. வெ. பாடாண்.)

**சேவிலி** — தலைமகளுடைய நற்றாய்த்தோழியாய்த் தலைமகளுக்கு வருந்துக்கம் களைந்து

நல்லறிவும் ஆசாரமும் கொளுத்தித் தலைமகளை வளர்த்த தாய். (அகம்.)

**சேவ்வாய்** — 1. அங்காரகனைக் காண்க.

2. இது சூரியனுக்கு நான்காவது வட்டத்தில் நின்று சூரியனைச் சுற்றி வருகிறது. இது 14 கோடியே, 10 லக்ஷம் மைல் தூரத்திற்கப்பாலிருந்து சூரியனைச் சுற்றி வருகிறது. இது 24 மணி, 37 நிமிஷம், 23 விநாடியில் தன்னைத்தானே ஒருதரஞ் சுற்றி வருகிறது. இது 687·9 நாட்களில் சூரியனை ஒருமுறை சுற்றி வருகிறது. இதன் குறுக்களவு 4230 மைல், இதற்கிரண்டு உபகிரகங்கள் உண்டு, இது தோற்றத்தில் சிறு நக்ஷத்ரம்போலக் காணப்படுகிறது. இதனைச் சோதனை செய்ததில் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன என்பர். இதில் பூமியும், சமுத்திரங்களும், ஆறுகளும், கால்வாய்களும், நாகரிக வேலைப்பாடுகளாகக் காணப்படுதலால் இது நமது பூமியைப்போல் மனிதர் வசிக்கும் இடம் என்று எண்ணப்படுகிறது. இது செந்நிற முடையது. இந்துக்கள் இதைப் பூமி புத்ரன் என்பதற்கு இது ஒரு அத்தாக்ஷி. இது செந்நிறமாய்க் காணப்படுதலால் செவ்வாய் எனப்படும். இதனை அங்காரகன், குஜன் என்பர். இது சுக்ரனுக்கு அருகில் இருப்பது.

**சேவ்வேண்**—எண்ணிடைச்சொல் தொக்க தொகைநிலை. (நன்னூல்.)

**சேவ்வைச் சூடுவார்** — விண்டுபுராண பாகவத புராணம் தமிழில் பாடிய புலவர் இதையே ஆரியப்பமுதலியார் பாடியதாகக்கூறுவது. இதனை "கதிக்கு மறுபிறப் பொழித்துக் கதிகொடுக்கும் பாகவத கதையை முன்ன, மதிக்கு முயர் வடமொழியாற் புனைந்தருள வியாதமுனிவரனே மீள, வுதிக்கு நிம்பை மாதவ பண்டிதச்செவ்வைச் சூடியென வுலகுபோற்ற, விதிக்குமறையவர் குலத் திற்றோன்றி யருந்த மிழாலும் விளம்பினனே" என்பதாலறிக. இவரிருந்தது நிம்பை யெனும் வேம்பத்தூர். பிறப்பால் வேதியர். இவர் காலம் சாலிவாகன சகாப்தம் 1494. இவர் உறத்தூரிலிருந்த வேதியர்பால் கல்வி கற்றவர். இவர் தம் ஆசிரியரால் கன்றாப்பூர் சிங்கராயன் என்பானுக்கு விற்கப்பட்டனர். இவர் பாடிய நூல் சுந்தரபாண்டியம். இது கச்சிவீரப்பன் எனும் மதுரை அரசனுக்கு அமைச்சனாகிய செவ்வந்தியின் துணைவனும் படைத்தலைவனுமாகிய திருவிருந்தான் வேண்டுகோளின்படி பாடியது.

**சேள்ளை** — பெண்மகளிர்க்குப் பழையகாலத்தில் வைத்திருந்த ஆசைப் பெயர்.

**சேறிவு** — இது வைதருப்ப செய்யுணெறியுளொன்று. இது நெகிழ்ந்த இசையின்றி வரத்தொடுப்பது.

**சேனசித்** — பிரகதகர்மாவின் குமரன். இவன் குமரன் சுதஞ்சயன்.

**சேன்னமல்லையர்** — இவர், சிதம்பரம் பச்சைகந்தையர் மடத்து வீரசைவர், சிவசிவ வெண்பா அருளிச்செய்தவர். (வீரசைவர்.)

**சேன்னவசவர்** — நாகாம்பையார் குமரர், வசவரிடம் வந்து அடிமை பூண்டவர். (வீரசைவர்.)

**ஜேட்டிகள்**—இவர்கள் தெலுங்கு நாட்டினவர்கள். இவர்கள் இராஜ ஸமஸ்தானங்களில் கைகால் பிடித்தல், எண்ணெய் தேய்த்தல், சிலம்பம் கற்பித்தல் முதலிய தொழில் மேற்கொண்டவர்கள், (தர்ஸ்டன்.)

## சே

**சேகம்** — சர்மண்வதி, பாடலாவதி இரண்டிற்கும் மத்தியிலுள்ள தேசம்.

The Country South of the river Charmanwati and North of Avanti.

**சேகம்பூதனர்**—சிலபிரதிகளிற்சேகம்பூதனரென் றிருத்தலானே இருந்தவாறே பதிப்பிக்கப்பட்டது. சேந்தம் பூதனாரென்பவரும், மதுரை எழுத்தாளன் சேந்தம் பூதனாரென்பவரும் இவரே. மதுரைக் கடைச்சங்கத்து வீற்றிருந்தவரா யிருந்தவர். பெரும்பாலும் குறிஞ்சியையும், முல்லையையும், நெய்தலையும் புனைந்து பாடியுள்ளார். இவர் மாலைப்பொழுதைச் சிறப்பித்துப் பாடல் கேட்போர் மனதைப் பிணியாநிற்கும் (நற் ௬௯). யானையை மலைப்பாம்பு பற்றிப் புரட்டு நெறியென நெறியினதேதங்கூறுநிற்பர் (நற்உ௬௧). கழுதைமேல் உப்புப்பொதிக் கொண்டு செல்லும் வழக்கை விளக்கிக்கூறுகிறார் (அகம்உ0எ). இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு (௬௯, உ௬௧) பாடலும், குறுந்தொகையில் மூன்றும், அகத்தில் இரண்டுமாக ஏழு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**சேகிதானன்** — யதுகுலத்தவன், தருமருக்கு அம்புபுட்டில் தாங்கினவன்.

**சேக்கிழார்** — இவர் தொண்டைமண்டலத்துக் குன்றத்தூரில் சேக்கிழார்குடி யென்னும் சைவவேளாளர் குடியிற் குன்றத்தூர்கிழாருக்குப் புத்திரரா யவதரித்துக் கல்வி கேள்விகளில் வல்லவராய் இருந்தனர். ஒருநாள் இவர் தந்தையைச் சோழன் உலகப் பொருள்களுள் எது பெரிதென்று வினவக் குன்றத்தார்கிழார் விடைதர மயங்கி வீடு வந்து கவலையுடனிருக்கச் சேக்கிழார் கண்டு நடந்ததை வினவி, "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும், ஞாலத்தின் மாணப்பெரிது" என்னுந் திருக்குறளை யெழுதித் தரப் பெற்றுச் சோழனுக்குக் காட்டினர். சோழன் அதிக களிப்படைந்து சேக்கிழாரை வருவித்துத் தனது சமத்தான வித்வானும் மந்திரியும் ஆக்கினன். சேக்கிழார், சோழனிடம் இருக்கையில் சோழன் சைன நூலாகிய சீவகசிந்தாமணியைக் கேட்டுக் களிப்புடனிருக்கையில் இவர், வெறுப்புடனிருக்கக் கண்டனன். இவர் வெறுப்புடனிருக்கக் கண்ட சோழன் அவ்வகை இருப்பதற்குக் காரணம் வினவச் சேக்கிழார் சிந்தாமணி பொய்க்கதை, மெய்க்கதை கேட்கவேண்டும் என்றனர். அரசன் அக்கதை யாதெனச் சேக்கிழார் அது திருத்தொண்டர் புராணமென்றனர். ஆயின் கூறுக என அதைக் கேட்க நல்ல சுபமுகூர்த்தம் ஏற்படுத்துக என, அரசனிடம் விடை பெற்றுச் சிதம்பரஞ் சென்று நடராசமூர்த்தியைத் தரிசித்து நிற்கையில் அசரீரி 'உலகெலா' மென முதலெடுத்துத் தர அதனையே முதலாகக்கொண்டு (௪உஅ௬) செய்யுட்களாற் திருத்தொண்டத் தொகையை முதனூலாகவும், பொல்லாப்பிள்ளையா ரியற்றிய நம்பியாண்டார் நம்பிகள் அருளிய கலித்துறையந்தாதியை வழிநூலாகவுங் கொண்டு திருத்தொண்டர் புராணத்தைப் பாடி முடித்துச் சோழனுக்கு அறிவித்து ஒரு வருஷம் திருச்சந்நிதானத்திலிருந்து அரங்கேற்றினர். இவரைச் சோழன் யானைமீ திருத்தித் தான் பின்னிருந்து கவரி வீசிச் சென்றனன். இவர்க்குச் சோழன் தன் பெயரையே பட்டமாகக் கொடுத்தனன். அதனால் இவர்க்கு **உத்தமச்சோழப்பல்லவராயர்** என ஒரு பெயருண்டு. அரசனுக்கும் இதுவே பெயராய் இருக்கலாம். இவர்க்குச் **சேவையர்காவலர்**எனவும், **அருண்மொழித்தேவர்** எனவும், **தொண்டர் சீர் பரவவல்லார்** எனவும் பெயர். இவர்க்குப் பாலறுவாயர் என்று ஒரு சகோதரர் இருந்தனர். இவர் தமது குன்றத்தூரில் மடவளாகம் ஏற்படுத்திச் சோழநாட்டிலுள்ள திருநாகேச்சுரம்போல் திருத்தலமுண்டாக்கிச் சிவகதி பெற்றவர். சேக்கிழார் அபயன் எனும் சோழன் காலத்தவர் எனத் தெரிதலால் இவர் காலம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டாகலாம் என்பர். (திருத்தொண்டர் புராணம்.)

**சேக்பரீதுதாசர்** — இவர் புருஷனில்லாப் பூவைப்பெற்ற புத்ரர். இவர் தம் தாயை நோக்கித் தாம் கடவுளைக் காணவேண்டும் என்று காடடைந்து பன்னிரண்டு வருடந் தவஞ்செய்தும் காணாது தாய் கொடுத்த ஒரு அப்பத்தை மடியிற் கொண்டு உண வாதிகளருந்தாது இலைகளைப் புசித்து அவ் வழியிற் சருக்கலரைப் பொதி கொண்டு சென்ற வணிகனை இது என்ன பொதி என்றனர். அவன் மண் என்று கூறித் தன்னூர்ப் போய்ப் பார்க்க அது மண்ணா யிருக்க அவைகளைக் கொண்டு மீண்டும் அடையத் தாசர் இது என்ன பொதி எனச் சருக்கரையென்று, பொதிகளை நோக்கச் சருக்கரையாக இருக்கக்கண்டு களித்து ஒரு தட்டில் சருக்கரை வைத்துத் தரக் கண்டு தாசர் வேண்டாது ஒடினர். இவ்வகை பன்னிரண்டு வருடங்கள் கழிந்தும் பெருமாளைக் காணாது தாயை யடைந்தனர். தாய் சடையிலிருந்த இலைகளை நீக்க வருந்தித் தாய் கொடுத்த அப்பத்தைக் கொடுத்து மீண்டுங் காடடைந்து பசிகலந்த காலத்துச் சருகருந்தி இருபத்து நான்காமாண்டில் பெருமாளைத் தரிசித்துப் பெருமாள் கட்டளைப்படி நாடடைந்து பெருமாளைத் தரிசித்திருந்தவர்.

**சேடக்குடும்பியன்** — தன்பா லடைக்கலம் புகுந்த கண்ணகி இறந்த துன்பத்திற் கிரங்கி இறந்த மாதரியை மறுபிறப்பில் மகளாகப்பெற்ற திருஅநந்தபுரத்து வேதியன். (சிலப்பதிகாரம்.)

**சேடதாசையர்** — ஒரு வீரசைவ அடியவர், இவர் அரனுக்கென நெய்த பட்டாடையைச் சிவனடியவர்க்குக் கொடுத்துப் பொருள்பெற்று அப்பொருளைச் சங்கரதாசையர் விஷயமாய்ச் செய்த அபராதத்தில் இழந்து அவரால் மீண்டும் பெற்றவர், இவர், பல்லவராயன் தேவிக்கு ஆசாரியரா யிருந்ததைச் சமணர் அறிந்து வெறு

த்து அரசனிடம் கூறினர். அரசன் தன் தேவிக்கு இவரை நீக்கும்படி கூறினன். அரசன் தேவியாகிய சற்குணமாதேவி அரசனை நோக்கி எமதாசாரியரை இச் சமணர் வெல்வரேல் அவ்வகைச் செய்வன் என்றனள். அந்தப்படி அரசன் வாதிடக் கட்டளையிடச் சமணர் குடத்தில் விட நாகத்தையிட்டு இக் குடத்தில் கையிடுக என அவ்வாறு பதிப்பொருள் சிவனெனக் கையிட்டு அப் பாம்பைச் சிவலிங்கமாக எடுத்துக் காட்டி அரசனையும் சமணரையும் சைவராக்கி அச் சிவலிங்கத்தையும் அந்த இடத்தில் தாபித்தனர். அத் தலம் உத்தரேச்சுரம் எனப்படும்.

**சேடமலை** — திருவேங்கடம், இது சேடன் இவ்விடம் தவஞ்செய்ததால் வந்த பெயர்.

**சேடன்** — ஆதிசேஷனைக் காண்க.

**சேடி**—ஒரு வித்யாதரநகரம். (மணிமேகலை).

**சேட்டலூர் ஆழ்வான்**—எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குரு பரம்.)

**சேணிகமகாராசன்** — மகததேசத் தரசன் ஸைநன்.

**சேணியர்** — ஒருவகை நெய்வோர். கன்னட தேவாங்கருக்கும் பெயராக இருக்கிறது. காஞ்சிபுரத்துச் சேணியர் வலங்கையார், இவர்கள் சந்திரசேகராருஷி, நீலகண்டருஷி, மார்க்கண்டேயருஷி கோத்ரங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களிற் சிலர் லிங்கதாரிகள், சிலர் சைவர். காஞ்சி திருஞானசம்பந்தர் மடத்தைச் சேர்ந்தவர்கள். (தர்ஸ்டன்.)

**சேதன்** — துருஹியன் பௌத்ரன்.

**சேதி** — உசிகன் குமரன், இவன் குமரர் சிசுபாலன் முதலியவர்.

2. விதர்ப்பதேசாதிபதியாகிய உரோமபதன் குமரன், இவனாண்ட தேசம் சேதி தேசம்.

3. இருக்குவேதத்திற் புகழ்ந்து கூறப்பட்ட அரசன், இவன் புத்ரன் கஷு.

4. ஒரு சிவாலயம். இது சைத்தியாலயமென்றும் வழங்கப்படும். இது வித்தியாதரருடையஉலகில் உள்ளது(பெருங்கதை).

5. The Country comprised the Southern portion of Bundelkhand and the Northern portion of Jubbalqore Rewa.

**சேதிநாடு** — 1. இது மிருகாவதியின் தந்தைக்குரிய நாடு. இதற்கு உரியனா யிருந்ததுபற்றி உதயணன் "சேதியர் பெரும் பெயரண்ணல்," "சேதியர் பெருமகன், "சேதிபன்," "சேதியர்மகள்," "சேதியரண்ணல்" என வழங்கப்படுவான். இதில் மிக அழகியதும், தவஞ் செய்தற் குரியதுமான ஒரு மலையுண்டு. இந்நாடு யூகிக்கு உதயணனாற் சீவிதமாகப் பின்பு அளிக்கப்பட்டது. (பெருங்கதை.)

2. மலையமானாட்டிற்கு ஒரு பெயர். தமிழர் சேதிதேசத்தை விட்டுத் தென்னாடடைந்தபின் தங்கள் நாட்டிற்கு இட்ட பெயர்.

**சேதிமர்த்தியன்**—உபரிசரவசுவின் குமரன்.

**சேதிராயர்**—1. இவர் சோழபரம்பரையைச் சேர்ந்த சேதியர்க்கு அரசரா யிருக்கலாம், சிவமூர்த்தியைப் பாடி முத்திபெற்றவர். இவர் தமது திருப்பாசுரத்தில் சேதியர் கோன் எனத் திருவாய்மலர்ந்திருத்தலின் இவர் அரசரெனப் புலப்படுகிறது. இவர் திருப்பாசுரம் ஒன்பதாந் திருமுறையிற் சேர்க்கப்பட்டது.

2. புதுவைக்கணிருந்த ஒரு வேளாண் குடியினர். மகோபகாரி, எரெழுபது கம்பர் அரங்கேற்றுகையில் உடனிருந்து கேட்டவர். இவரை அரங்கேற்றுஞ் சவைக்கண் விடந்தீண்டச் சேதிராயர் பிரசங்கத் தடையாமெனத் தெரிவிக்காதிருக்க விடந் தலைக்கேறி மூர்ச்சித்து விழுந்தபோது கம்பர் அறிந்து 'ஆழியான் பள்ளியணையே பவன் கடைந்த, வாழிவரையின் மணித்தாம்பே—பூழியான், பூணே புரமெரித்த பொற்சிலையிற் பூட்டுகின்ற, நாணே யகலநட" எனவும் "மங்கையொரு பாகர்மார்பிலணியாமே, பொங்குகடல் கடைந்த பொற்கயிறே — திங்களையுஞ், சிறியதன் மேலூருந் தெய்வத் திருநாணே, யேறிய பண்பே யிறங்கு" எனக் கூறி யிறக்கினர். இதனை "அழுவதுங்கொண்டு புலம்பாது நஞ்சுண்டது மறைத்தே, ரெழுபதுங் கொண்டு புகழ்க்கம்பவாணனெழுப்ப விசை, முழுவதுங் கொண்டொரு சொற்பேசநெய்யின் முழுகிக்கை, மழுவதுங்கொண்டு புகழ்கொண்டதாற் றொண்டை மண்டலமே" (எ-ம்.) "பாவலர்தா — மேரெழுபதோதியரங்கேற்றுங் களரியிலே, காரிவிட நாகங் கடிக்குங்கை" (எ-ம்.) "காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம்மரபை, நாவலரைக் காவலரை நல்லோரைப் பூவலய, முள்ளத்தகும் புதுவை யூரைச் சிறப்பித்தான், பிள்ளைப் பெருமாள் பிறந்து" என

வருவனவற்றுற் காண்க. இவர்காலம், (கி. பி. 11-ஆம் நூற்றாண்டு.)

**சேதிராயன்** — குலபூஷண பாண்டியனை வெல்லவகை பார்த்திருந்து புலியாலிறந்த வேடராசன்.

**சேதிஷன்** — உபரிசரவசுவின் குமரன்.

**சேது** — 1. தீர்க்கன் பேரன்.

2. (பிர.) பப்ரு குமரன், இவன் குமரன் ஆரத்தன்.

3. இராமமூர்த்தி இராவணனை வதை செய்ய இலங்கைக்குச் செல்கையில் நளன் எனும் வாநரத்தச்சன் வாநரசைந்யங்களைக் கொண்டு கட்டிய அணை. இது (௧0௨) யோசனை நிகளம் (௧0) யோசனை அகலம். இது மூன்று நாட்களில் கட்டி முடித்தது. புண்யஸ்நான கட்டம். இராமேச்சுரத்திற்கும் இலங்கைக்கு முள்ள அணை.

**சேதுகன்**—விருதர்ப்பன் உடன்பிறந்தவன்.

**சேதுபுராணம்** — சேது என்னும் இராமேச்சுரப் புராணம். நிரம்ப அழகியர் இயற்றியது.

**சேதுமாதவன்** — சுந்தர பாண்டியனைக் காண்க.

**சேநசித்** — 1. (ஞ.) கிரிசாசுவன் குமரன்.

2. விசுவசித்தன் குமரன், இவன் குமரர் ருசிராச்வன், திருடாது, காச்யன், வச்சன்.

3. இட்சுவாகு குலத்திற் பிறந்த பரீட்சித்தின் குமரனாகிய தலராஜன் புத்திரன். (பார - வன.)

**சேநன்** — கந்தமூர்த்தியா லிறந்த அசுரன்.

**சேநாதிபதி** — திருதராட்டிரன் குமரன்.

**சேநாதிராஜ முதலியார்** — இவர் யாழ்ப்பாணத்துள்ள இருபாலையென்னும் ஊரினர். சைவர். இற்றைக்கு எண்பது வருடங்களுக்குமுன் னிருந்தவர். அவதானி, இவர் செய்த நூல்கள் நல்லைவெண்பா, நல்லைக் குறவஞ்சி, நல்லையந்தாதி, நீராவிக்கலி வெண்பா, ஊஞ்சற்பதிகங்கள் முதலிய.

**சேநாபதி** — 1. பிராமணன் அரசகன்னிகையைப் புணரப் பிறந்தவன்.

2. இது சேனைத்தலைவன் எனப் பொருள்படும். இது சாலியர், ரங்குனிகள், கைக்கோளர் முதலிய பலர்க்குப் பட்டம். (தர்ஸ்டன்.)

**சேநாபதிமகள்** — இவள் வாசவதத்தையின் உயிர்த்தோழி. நீர்விழவிற்குச் செல்லத் தாயின் ஏவலர் அழைக்கவந்தபொழுது வாசவதத்தை இவளுக்கு மிக விசித்திரமான சிற்பத்தொழிலமைந்த ஒருவகை அலங்காரம் செய்துகொண் டிருந்தனள். அரசனைச் சேனாபதி பாதுகாத்தல்போல அரசன்மகளைச் சேனாபதியின் மகள் பாதுகாத்தல் மரபென்பது இதனால் அறியப்படும். (பெருங்கதை.)

**சேநாநாபிகர்** — இவர் மானூரில் ஏனாதியர் குலத்திற்றோன்றி அரிநாமம் மறவாது பஜனை செய்துகொண்டு அரசனுக்கு ஏவற்றொழில் பூண்டு வருவார். ஒரு நாள் இத்தொழில் பஜனைக்கு இடையூறு செய்வதென்றெண்ணி அதனை விடுத்து அரசனிடம் அணுகாதிருந்தனர். அரசன் ஏவலாளர் இவரிடம் வந்தழைக்க இவர் மனைவியிடம் இல்லையென்று சொல்லும்படி கூற அவ்வாறே மனைவியும் கூறினள். இவரிடம் வந்த ஏவலாளரில் ஒருவன் அரசனிடமணுகி இவர் உள்ளிருந்துகொண்டே இல்லையெனக்கூறினரென அரசன் வெகுண்டு அவரைப் பாசத்தாற் கட்டிக்கொண்டு வருகவென்றனன். இதனை அறிந்த பெருமாள் சேனாநாபிகர் உருக்கொண்டு அடப்பத்துடன் அரசனிடஞ் சென்று அரசனுக்கு முகவேலை செய்கையில் சந்தோஷங்கொண்டு உன் கையால் எண்ணெய் என் தலையில் இடுகவென்ன அவ்வாறே எண்ணெயிடுகையில் எண்ணெய்க் கிண்ணத்தில் சதுர்ப்புஜத்துடன் பீதாம்பர குண்டலங்களைக் கண்டு மேல்நோக்க நாவிதனை யிருக்கக்கண்டு, மீண்டும் எண்ணெய் வள்ளத்தைப் பார்க்கப் பீதாம்பரதாரியாயிருக்கக் கண்டு அவசங்கொண்டவனாய் இரண்டு ஜாமமாகியும் எழுந்திராதது கண்ட ஏவலர் அழைக்க உணர்வடைந்து நாவிதரைப் புகழ்ந்து இங்கே நீர் நான் வருமளவும் இருக்க, இராதொழியின் என்னாவி நீங்குமென்றனன். நாவிதர் நான் வீடு சென்று மீண்டும் வருகிறேனென்று விடைபெற்றுச் சேனாநாபிகர் வீடுசென்று அடப்பத்தை மூலையில் மாட்டி மறைந்தனர். அரசன் சபைக்குவந்து சேனாநாபிகரை அழைத்துவாருங்களென ஏவலாளர் ஓடிச் சேனாநாபிகரையழைக்கச் சேனாநாபிகர் அரசன் கோபித்தான் என்று பயந்துவரவும் அரசன் சேனாநாபிகரைக் கண்டு திடுக்கிட்டெழக்கண்டோர் நகைக்க அரசன் அவரை மதிக்காது காலையில்காட்டிய உமது திருவுருவத்தை மற்றொரு முறைகாட்டுகவென்று இவருடைய பாதத்தைப் பிடி

த்து அங்கிருந்த எண்ணெய்க்கிண்ணற்றை நோக்குதலும் அரியைக் காணுதவனுய் வருந்தி அங்கிருந்தவர் இவர் அரிபக்தர் என்று சொல்லக்கேட்டு உம்மால் அரியைக்கண்டு வணங்கினேனென்று கூறி அன்று முதல் அவரிடத்திலேயே இருக்கச்செய்தனன். சேனாபிகர் அடப்பத்தில் பெருமாளால் வைக்கப்பட்ட பொன் இருந்தது கொண்டு பிராமணர்களுக்குத் தானங்கொடுத்து வாழ்ந்திருந்தனர்.

**சேநாபிசரணம்**—சத்ருமாரணத்தை விரும்பினவன் வல்லூறு எனும் பறவையால் செய்யும் யாகம் (பார - மா.)

**சேநாபிந்து** — 1. துரியோதனன் தம்பி, நாலாநாள் யுத்தத்தில் வீமார்ச்சுநராலிறந்தவன்.

2 துவீபப்பிரஸ்தமென்னும் தேசத்தரசன். அருச்சுநனுல் சயிக்கப்பட்டவன். (பாரதம் சபாபர்வம்).

**சேநாவரையர்** — இவர் தமிழிற் சிறந்த இலக்கணமாகிய தொல்காப்பியத்தின் சொல்லதிகாரத்திற்குச் சிறந்தவுரையியற்றிய புலவர்சிகாமணி. இவர் தமிழில்கொண்டவலிமைபோல் வடமொழியிலும் வல்லவர் என்பது இவர் வடநூற் கொள்கைகளை ஆங்காங்கு உரையிற்கொண்டாளுதலால் விளங்குகிறது. இவரை வேதியர் என்பர். இவரதுபெயரை நோக்குகையில் இவர் அரசராயிருக்கலாம். இவர் இன்ன சமயத்தவர் எனத் துணியக்கூடவில்லை. இதைத்தவிர வேறுநூலாயினும்நூற்குரையாயினும் செய்தனர் என்பதும் தெரியவில்லை. இவர்காலம் இன்னதெனப் புலப்படவில்லை. இவர், உரையாளர் ஆசிரியர் பாரத்துவாசி நச்சிஞர்க்கினியருக்கு முற்பட்டவர் எனத் தெரிகிறது. எவ்வாறெனின் ஆசிரியர் நச்சிஞர்க்கினியர் ஆங்காங்குத் தொல்காப்பியத்திற்கு இவர் கூறிய உரையை மறுத்திருத்தலால் என்க. இவர் உரையாசிரியர்களில் ஒருவர்.

**சேநானி** — நூறு காலாட்களுக்குத் தலைவன். யாமங் காப்போரைக் கட்டளையிடுபவன். (சுக்ரநீதி.)

**சேந்தங்கண்ணனுர்** — இவர் இயற்பெயர் கண்ணனுர். சேந்தன் என்னுந் தந்தைபெயரின் அன்விகுதி கெட்டு அம்முச்சாரியைப் புணர்ந்து சேந்தங்கண்ணனு ரென்றுயிற்று. (தொல். எழு. கூகூ0) இவர் நெய்தற்றிணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். கேட்போர் மனத்தைப் பிணிக்குமாறு இவர் நாரைவிடுதூது கூறியுள்ளார். (நற். கூஉ) இவர் பாடியது.

**சேந்தம்பூதனுர்**—சேகம்பூதனுர் காண்க.

**சேந்தனுர்** — காவிரிப்பூம்பட்டினத்தில் பட்டினத்தடிகள் அரண்மனையில் பொக்கிஷாதிபதியாயிருந்து பட்டினத்தடிகள் கட்டளைப்படி பொருள்களைச்சூறைவிட்டனர். இதைக் கேள்வியுற்ற அரசன் அப்பொருள்களைப் பொக்கிஷத்தில் சேர்ப்பிக்கவும், மிகுந்த சொத்துக்களைக் கர்ட்டவும் வருத்திச் சிறையிலிட இருந்து ஆசாரியரால் நீங்கி மனைவிமக்களுடன் சிதம்பரமடைந்து விறகு விற்றுவரும் லாபத்தால் ஒரு சிவனடியவரை உண்பித்துவரும் நாட்களில் சிவமூர்த்தி ஒருநாள் நடுராத்திரியில் இவரிடஞ்சென்று கூழுண்டு அந்தக்கூழை மறுநாள் தமது திருமேனியில் காட்டிச் சேந்தனுர் வீட்டிலுண்ட கூழென்று அனைவர்க்குந் தெரிவித்து இந்த அற்புதம் இவரால் நடந்ததோ என்று ஐயம்கொண்டவர்க்கு ஐயம்நீங்கத் திருத்தேரையழுந்தச் செய்து சேந்தனுர் திருப்பல்லாண்டுபாடஅசையச்செய்தனர். ஒன்பதாந் திருமுறையுள் சில பாசுரங்கள் இவர் அருளிச்செய்தவை. இவர் காலம், (கி. பி. 11-ஆம் நூற்ருண்டாக இருக்கலாம் என்பர்.

**சேந்தன்** — 1. ஒரு சிற்றரசன்; இவன் காவிரிக்கருகிலுள்ள அம்பர் எனும் நகர்க்கு அதிபதி. இவன் கல்விகேள்விகளில் வல்லவன். தென்மொழி வடமொழிவல்லபுலவன், மகா கொடையாளி. அன்றியும் சம்பாபதியென வழங்கும் புகார் தெய்வத்திற்கு அந்தாதியும், இராமபிரான் கோதண்டம், அர்ச்சுநன் காண்டீபம், முருகக்கடவுள் வேலாயுதம் இவற்றைப் புகழ்ந்தும் பாடியிருக்கிருன். இவன் ஔவையாராற் புகழப்பட்டவன். கல்லாடரும் இவனைப் புகழ்ந்ததாகத் தெரிகிறது.

2. தஞ்சாவூரையடுத்த அம்பல் என்னும் ஊரிற் கதிபதி, பிறப்பால் வேதியர் இவரும் உபயகவி. இவரை அருவந்தையூராண்ட அரசராகவுங் கூறியிருக்கிறது. இவர் திவாகரனென்னும் சைநனுல் நிகண்டு செய்வித்தனர். ஆதலால் அதற்குத் தம்பெயரும் செய்தோன் பெயரும் சேர்த்துச் சேந்தன் திவாகரமெனப் பெயரிடப்பட்டது.

3. இவர்க்கு முதலூழித் தனியூர்ச் சேந்தன் எனவும் பெயர். செங்கோன் தரைச் செலவு காண்க.

4. அழிசியின் வரலாற்றுட் காண்க.

**சேந்தன்கண்ணனார்** — கடைச்சங்கப் புலவர்களிலொருவர்.

**சேந்தன்கீரன்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களிலொருவர். இவர் பெயர் கீரராக இருக்கலாம். கீரரென வேறு புலவரு மிருத்தலின் இவரைச் சேந்தன்கீரன் என்றனர். (குறு - ருகக)

**சேமகன்** — தண்டபாணியின் குமரன் (2) சுகிகுமரன். இவன் குமரன் சுவவிருதன்.

**சேமியன்** — உக்ராயுதன் குமரன். இவன் குமரன் சுவிரன்.

**சேயன்**—அவிர்த்தானனுக்கு அவிர்த்தானியிடத்துதித்த குமரன்.

**சேயாறு** — இது காஞ்சிமா நகர்க்கு ஆயிரம் யோசனை தூரத்தில் சுமேருபருவதத்தில் குமாரக்கடவுளுக்குத் தேவர் தேவசேநாபதி பட்டங்கட்ட அபிஷேகித்த நீர் ஆறாய்ப்பெருகியது என்பது. மற்றொரு விதம் அந்தமாபுரத்து வேதியர் எழுவர் தீமைபுரிந்து வந்து, தாங்கள் புரிவன தீமையென்றறிந்து பிரமனை யெண்ணித் தவம்புரியப் பிரமன்தோன்றி நீங்கள் எழுவரும் இம்மலையில தவஞ் செய்துகொண்டிருங்கள்; குமாரக்கடவுளின்வேல்இம்மலையைப் பிளந்துசெல்லும், அக்காலத்துங்கள் தீமை தீரும் என்று மறைந்தனர். எழுவரும் தவஞ் செய்துகொண் டிருக்கையில் குமாரக்கடவுள் வேல் வந்து அம்மலையைப் பிளக்க அதில் தவஞ்செய்துகொண்டிருந்த இவர்களுடலும் பிளந்தது. அப் பிளவு உண்ட இடத்திலிருந்துவந்த வெள்ளத்துடன் உதிரம் கலந்து வருதலால் இப்பெயர் பெற்றது என்பர்.

**சேயை** — 1. சிவசூர்ய தானத்தமருஞ்சத்தி.

2. சகாதேவன் பாரி.

**சேரநாடு** — வடக்குப் பழனிமலை, கிழக்குத் தென்காசி, மேற்குக் கோழிக்கோடு, தெற்குக் கடற்கரை இந்த எல்லைக் கிடையில் பதின்காதவழி கொண்ட நாடு.

**சேரமாண்டார்** — மகா பொறுமையுள்ள சேரதேசாதிபதி இவரை அவமதிக்க ஒரு சோழன் தன்னிடமிருந்த ஒருவனை அனுப்பிக்க அந்த ஏவலாளன் வந்து சேரமாண்டார் வாசலிலிருந்த காவன் மாமரத்தை வெட்டினன். சேரம் ஆண்டாரின் தாயார் வெளியில் வந்து யாரடா மரத்தை வெட்டுபவன்? எனச் சோழன் ஏவலன் உங்கள் அப்பன் என்றனன். இதைக் கேட்ட சேரம் ஆண்டார் அவன் சொல்வது சரி, ஆகையாற்றான் அவ்வளவு சுவதந்தரமாய் வெட்டுகிறான் என்றனர். அதைக் கேட்ட சோழன் ஏவலாளி, தண்டன் சமர்ப்பித்து உண்மை யுணர்த்திப் போயினன்.

**சேரமானெந்தை** — இவர் கடைச்சங்கத்தவர் காலத்திருந்த சேரமன்னவரில் ஒருவர்போலும். (குறு - உஉ)

**சேரமான் அந்துவஞ்சேரலிரும்பொறை** — உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்க்கு நண்பன். இவன் சோழன் முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளியின் பகைவன். (புறநா.)

**சேரமான் இளங்குட்டுவன்** — கடைச்சங்கமருவிய புலவன். (அகநானூறு.)

**சேரமான் கடலோட்டியவேல் கெழுகுட்டுவன்** — பாணரால் பாடப்பட்டவன். (புறநானூறு.)

**சேரமான் கடுங்கோவாழியாதன்** — இவனைச் சேரமான் செல்வக் கடுங்கோவாழியாதன் எனவும், சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோவாழியாதன் எனவுங் கூறுவர். கபிலர் பாடிய செய்யுளுக்கு நூறாயிரம் காணமும், மலைமீதேறிக் கண்டநாடும் பரிசிலாகத் தந்தவன். (புறநானூறு.)

**சேரமான் கணைக்காலிரும்பொறை** - இவன் செங்கணான் சோழனுடன் போரிட்டுப் பிடிபட்டுக் குடவாயிற்கோட்டத்துச் சிறையிற் கிடந்து தாகங்கேட்டுப் பெறாது பின்பு பெற்று அதை மானத்தா லுண்ணாது கள வழி நாற்பது பாடிய பொய்கையாரால் விடுபட்டவன். (புறம் 74.)

**சேரமான் கருவூரேறிய வொள்வாட்கோப் பெருஞ்சேரலிரும்பொறை** — இவனைக் கண்டபொழுது நரிவெரூஉத்தலையார்க்குப் பழைய நல்லுடம்பு கிடைத்தது. (புறநானூறு.)

**சேரமான் குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை** — பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்தைப் பெருங்குன்றூர்க்கிழார் பாடியதற்கு (௯உ00) பொன் தந்தவன். சேரமான் குடக்கோச்சேர லிரும்பொறைக்கு ஒரு பெயர்.

**சேரமான்குடக்கோச்சேரலிரும்பொறை**— பெருங்குன்றூர்க்கிழாரால் பாடல் பெற்றவன். (புறநானூறு.)

**சேரமான் குடக்கோநெடுஞ்சேரலாதன்** — சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற் கிள்ளியுடன் பொருதுமாய்ந்து கழாத்தலை யாரால் பாடப்பட்டவன். (புறநானூறு.)

**சேரமான்குட்டுவன்கோதை**—வீரன், மிக்க கொடையாளி; குட்டுவநாட்டை ஆண்ட வன். கோனாட்டு எறிச்சலூர்மாடலன் மதுரைக்குமரனாரால் பாடல்பெற்றவன். (புறநானூறு.)

**சேரமான் கோக்கோதைமார்பன்**—இவன் நகரம் தொண்டி என்பது, பொய்கை யாரால் பாடல் பெற்றவன். (புறநா னூறு.)

**சேரமான் கோட்டம்பலத்துத்துஞ்சியமாக் கோதை** — தன் மனைவி இறந்தபொழுது பிரிவாற்ருது இரங்கினவன். (புறநா.)

**சேரமான்சிக்கற்பள்ளித் துஞ்சியசெல்வக் கடுங்கோவாழியாதன்** — குண்டுகட்பா லியாதனல் பாடப்பட்டவன், சேரமான் கடுங்கோவாழியாதனுக்கு ஒரு பெயர். (புற.)

**சேரமான்செல்வக்கடுங்கோவாழியாதன்** - ஒரு சேரன், கபிலரால் பாடப்பட்டவன், சேரமான் கடுங்கோவாழியாதனுக்கு ஒரு பெயர். (புறநானூறு.)

**சேரமான்தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும் பொறை** — இவன், தன் கட்டிலில் அறி யாமல் ஏறித் துயின்ற மோசிகீரனரைத் துன்பஞ் செய்யாமல் அவர் எழுமளவும் கவரிகொண்டு வீசியதனல் அவரா[illegible] ந்து பாடப்பட்டவன். பதிற்றுப்[illegible] ல் எட்டாம் பத்துப் பாடிய அரிசில்[illegible] ஒன்பது நூறாயிரம் காணம் [illegible] சில் கொடுத்தவன். தகடேர்யாத்திரைஇவன காலத்துப் போலும். (புறநானூறு.)

**சேரமான்தோழர்** — ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவா மிகளுக்கு ஒரு பெயர்.

**சேரமான்பாமுளூரெறிந்த நெய்தலங்கான லிளஞ்சேட்சென்னி** — இவன் சேரமானு டைய பாமுளூரை வென்று கைக்கொண் டவன். இவனைச் சோழன் நெய்தலங் கானல் இளஞ்சேட் சென்னி யெனவுங் கூறுவர். இவனைப் பாடியவர் ஊன்பொதி பசுங்குடையார். (புறநானூறு.)

**சேரமான்பாலைபாடியபெருங்கடுங்கோ**— இவன் ஒரு சேரன், கவிவல்லவன் பேய் மகள் இளவெயினியால்பாடப்பட்டோன். இவனைப் பாலைபாடிய பெருங்கடுங்கோ என்பர் (புறநானூறு.)

**சேரமான் பெருஞ்சேரலாதன்** — சோழன கரிகாற்பெருவளத்தானுடன் போரிட்டுத் தன் அம்பு அவன் மார்பைத் தொளைத் துருவியது காணுது முதுகிற் பட்டதென வெண்ணித் தற்கொலை செய்துகொண்ட வன். கழாத்தலையராற் பாடப்பெற்றவன். (புறநானூறு.)

**சேரமான்பெருஞ்சோற்று உதியன்சேரலா தன்**—முரஞ்சியூர் முடிநாகராயரால் பாடப் பட்டவன். இவன் பாரதயுத்தத்தில் இரு வர் சேனைக்கும் உணவளித்தவன். இத ஞல் தமிழ் முதற்சங்கம் பாரதகாலத்திற்கு முற்பட்டது என்பதறியப்படுகிறது. (புற நானூறு.)

**சேரமான் பெருமாணயனர்** — கழறிற்றறி வார் நாயனரைக் காண்க. (பெ-புராணம்.)

**சேரமான்மாந்தரஞ் சேரலிரும் பொறை** — இவன் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியோடு போர் செய்தவன். இவன் காலத்துப்புலவர் பொருந்திலிளங் கீரனர், வடவண்ணக்கன் பெருஞ்சாத்த னர். (புறநானூறு.)

**சேரமான் மாவெண்கோ**—ஔவையாரால் பாடப்பெற்றவன். இவன் காலத்தரசர் பாண்டியன் கானப்பேர்தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளி. (புறநானூறு.)

**சேரமான் யானைக்கட்சேய்மாந்தரஞ் சே லிரும் பொறை** — குறுங்கோழியூர்க்கிழா ராற் பாடப்பெற்றவன் (புறநானூறு.)

**சேரமான் வஞ்சன்** — திருத்தாமனராற் பா டப்பட்டவன். இவன் மகாகொடையாளி [illegible]னூறு.)

**சேரர்** — [illegible]ராஜாக்களும், கோங்கு அர சர்களும் இருவரும் [illegible] என்பர் சிலர் வேறெனப் பிரித்துக் கூறுவர். சேர ரும், கோங்கரும் ஒரே அரசாட்சியில் இரு ந்ததாகத் தெரிகின்றது. கொங்கு நாட்டில் எழு அரசர்கள் தனித்தனி அரசாட்சி செய்ததாகக் கூறப்படுகின்றது. சோர்கள் இவர்கள் ஆண்ட நாட்டை ஆண்டதாகக் கூறுகிருர்கள். அந்த நாடு பாண்டிய நாட் டுக்கு வடக்கும், பல்லவர்களும் சோழர்க ளும் ஆண்ட நாட்டிற்கு மேற்கும், கொங் கணநாட்டிற்குத் தெற்குமாம். இவர்கள் ஆண்டநாடுகள் அந்த அந்த ராஜாக்கள்படி வேறுபடுகின்றன. இவர்கள் சோழ, பாண் டியர்களுடன் ஒரேகாலத்தில் இருந்ததா கத் தெரியவருகிறது. அசோகன் எழுதிய

நூல்களில் கேரளத்தரசன், கேரளபுத்திரன் என்று கூறுகிறது. (**According to Ptolemy VII, 1, 86.**) கரூர் அவர்களுடைய இராஜதானி. ஹியூன்சாங் என்பவன் கொங்கணபுரமென்றும் கூறுகிறான்.

**சேரலாதன்** — செங்குட்டுவனுக்கும் இளங்கோஅடிகளுக்கும் தந்தை. மனைவி சோழன் மகள் நற்சோணை. (சிலப்பதிகாரம்.)

**சேரவம்சாந்தக பாண்டியன்** — இவன் சோழவம்சாந்தக பாண்டியனுக்குக் குமரன் மதுரை ஆண்ட (**52**)ஆம்பாண்டியன்.

**சேரன்**—1. மேற்சேரநாட்டிற்குச் சொன்ன எல்லை கொண்ட நாட்டை ஆள்பவன். இவன் வம்சம், சந்திரவம்சத்து நகுஷன் புத்திரனாகிய யயாதியின் சந்ததியில் ஆச்ரிதன் என்பவனது புத்திரர் மூவரில் ஒருவனால் உண்டாயிற்றெனக் கூறுவர். மேற்சேரர்க்குச் சொன்ன வெற்றியுடன், ஒரு சேரன் இமயத்தில் தன் விற்குறி வைத்ததாகக் கூறி யிருக்கிறது. இவனுக்குப் பனைமாலை, இவன் குதிரை பாடலம், கொடி விற்கொடி, இவனுக்கு உதியன், குடகன், குட்டுவன், குடக்கோ, கேரளன், கொங்கன், கொல்லிவெற்பன், கோதை, சேரலன், பனந்தாரன், பூழியன், பொருனைத்துறைவன், பொறையன், போந்தின் தாரோன், மலையன், மலையமான், வஞ்சிவேந்தன், வானவன், வானவரம்பன், வில்லவன் எனவும் பெயர். இக்குலத்தவருள் ஒருவன் தன்னாடு மழையிலாதிருக்க இந்திரனிடஞ் சென்று மழை வேண்டி வந்தனன். இக்குலத்தில் சிவனடியார், சேரமான்பெருமாணாயனார், திருமார் குலசேகராழ்வார்; சேர ... ளமாண ...டவன்; கோங்க... கோயம்புத்தூர் கரூர் ஆண்டவன். இச் சேரனும் கோங்கனும் சேரன் குமரர்கள். தங்கள் தேசத்தை இருவகையாகப் பிரித்துக்கொண்டனர்.

2. கிருஷ்ணனைப் பக்ஷியென்று அம்பாலெய்து கொன்றவன், ஒரு வேடன்.

**சேரன் செங்குட்டுவன்** — இவன் தமிழ்நாடாகிய சேரர்நாட்டுத் தலைவன். இவன் தந்தை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். தாய் சோழன் மணக்கிள்ளியின் மகள் நற்சோணை, தம்பி இளங்கோ. இவன் மனைவி இளங்கோவேண்மாள், இவள் வேண்மாள் என்பதால் வேளிர்குலத்தவளாக எண்ணப்படுகிறாள். இவனிவளையன்றி வேறெவரையும் மனைவியாகக் கொள்ளவில்லை. இவனுக்குக் குட்டுவஞ்சேரல் என்ற குமரன் ஒருவனிருந்தனன். இவன் தன்னைப் பதிற்றுப்பத்தில் (5-வதால்) பாடிய பாணருக்குப் பெரும்பொருளுடன் இக்குட்டுவஞ்சேரலையும் பரிசாக அளித்தனன். செங்குட்டுவனுக்கு அம்மான் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி யெனவும், அந்த அம்மான் குமரன் சோழன் - இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி யென்றும் எண்ணப்படுகிறது. இவன் தன் தாயாகிய நற்சோணையின்பொருட்டுச் சமைத்த சிலையைக் கங்கை நீராட்டச் சென்றகாலத்து ஆங்கு எதிர்த்த ஆரியமன்னர் நூற்றுவரை யெதிர்த்து வெற்றி கொண்டான். இவன் கொங்கர் செங்களத்துச் சோழபாண்டியரோட னெதிர்த்துக் கொடுகூரை நாசசெய்தனன். (இது மைசூரிராஜ்யத்தின் ஒரு பிரிவு) இன்னுமிவன் கடலை அரணாகக்கொண்டு இடர் விளைத்தவர்களை மரக்கலங்களில் சேனைகொண்டு சென்று வெற்றிகொண்டான். இவன் பாண்டியன் படைத்தலைவனாகிய பழையன் என்பான் மோகூராண்டிருந்தனன். சேரன் செங்குட்டுவனுக்கு மோரிய அரசன் அறுகை நண்பன். அறுகையாகிய நண்பனுக்குப் பழையன் பகைவனாதல் நோக்கி இவன் பழையனுடன் போரிட்டு அவனது காவன் மரமாகிய வேம்பினை வெட்டி அவனது ...னைகளைக் கடாக்களாகக்கொண்டு அவன் ...சிர் கூந்தல்களை அறுத்துக் கயிறாக ... வண்டி இழுப்பித்தான் என்பர். ...ம் கடற்கரையிலிருந்த வியலூரைப லழித்தனன். செங்குட்டுவனுக்கு அம்மானாகிய சோழனிறந்தகாலத்து அவன் மகனும் தன் மைத்துனனு...கிய இளஞ்சோழன் (பெருங்கிள்ளி) பட்டமடைந்தபோது அவனைத் துன்புறுத்திய நேரிவாயிலில் இளங்கோ ஒன்பதின்மர் சோழமன்னரை வெற்றிகொண்டான். இடும்பாதவனத்துப் போரிட்டுப் பகைவரை வென்றான். இவன்காலத்துக் கோவலன் கண்ணகி மணிமேகலைகளின் கதை நிகழ்ச்சி. சில்ப்பதிகார கதாநாயகியான கண்ணகியின்பொருட்டு வடநாட்டு யாத்திரை நிகழ்த்தி நூற்றுவர் கன்னரால் தமிழ்நாட்டரசரை இகழ்ந்த ஆரிய அரசர்க்கு யுத்த செய்தி அறிவித்து நீலகிரியினின்று புறப்பட்டுக் கங்கையாறு கடந்து உத்தரகோசலத்தை யடைய செய்தியறிந்த கனகவிசய

ரென்ற வடநாட்டரசர் உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன், என்போரைத் துணைகொண்டு எதிர்க்க அவர்களுடனெதிர்த்துப் போரிட்டுக் கனகவிஜயருடன் தேர்வீரர் ஐம்பத்திருவரையும் தன்னகப்படுத்தினன். பின் பத்தினிச் சிலையை இமயத்திருந்துஎழுப்பித்துக் கனகவிஜயர் முடிமீதிருத்தி நீர்ப்படை செய்து தன்னுடைந்த பத்தினிக் கடவுளைப் பிரதிட்டை செய்வித்து, தேவந்திமேல் ஆவேசித்த பாசண்டசாத்தன் சொற்கேட்டுத் தன்னுட்டின் மலைப்பக்கத்து வந்திருந்த இளம்பெண்களின்மீது கரகநீர் தெளிக்க அப்பெண்களின் பழம்பிறப்புணர்ந்து பத்தினிக்கடவுட்குக் கோயிலமைத்துப் பிரதிட்டை செய்வித்தனன். அப்பத்தினிக் கடவுள் சரிதத்தை இவன் சகோதரராகிய இளங்கோ அடிகள் சிலப்பதிகாரமெனுங் காவியமாக அக்காலத்து இயற்றி அரங்கேற்றினர். இவன் பெருநற்கிள்ளிக்கு நேர்ந்த ஆபத்தைக் கேள்வியுற்றுச் சேனைகளுடன் சென்று நேரிவாயிலில் அவன் பகைவரை வென்று பட்டத்திருத்தினன். இவன் காலத்திருந்த பாண்டியர் - ஆரியப் படைதந்த நெடுஞ்செழியன், வெற்றிவேற் செழியன் (நன்மாறன்), தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன, கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி. இவன் காலத்திருந்த சோழர்கள் - உறையூர்ப் மணக்கிள்ளி, காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி, இராஜசூயம்வேட்ட பெருநற்கிள்ளி புகாரில் கரிகாற் பெருவளத்தான், கிள்ளிவளவன் (சேட்சென்னி), நலங்கிள்ளியுமாவர். இவன் காலத்திருந்த புலவர்களுள் சிறந்தார் பரணர், சீத்தலைச்சாத்தனூர் மூதலியோர். இவன் கடலிற் கப்பற் படையுடன் சென்று போரிட்டுப் பகைவர்களை வென்றமையால் இவனுக்குக் கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் எனவும் பெயர். இவன் சேனாபதி வில்லவன் கோதை, இவனது தேசவருவாயின் தலைமை அமைச்சன் அழும்பில்வேள், இவ்வமைச்சனுக்கு வானவிறல்வேள் எனவும் பெயர். இவனது தூதுவர் சஞ்சயன், நீலன் எனபோர். இவனது முத்திரை வில் கயல், புலி. இவன் திருமுகம் எழுதுவோர் கண்ணெழுத்தாளர் எனப்படுவோ. இவனுடன் இவன் கோப்பெருந்தேவியுமரசு வீற்றிருப்பள். இவன் முன்னோர் அணிந்திருந்த எழுமுடிமாலை இவனும் அணிந்திருந்தனன். இவன் சற்றேறக்குறைய (கூடு) வருஷம் அரசாண்டிருக்கலாம். இவன் சிவபெருமானையும் விஷ்ணுமூர்த்தியையும் உபாசிப்பவனென்பதைச் சிலப்பதிகாரங் கூறுகிறது. இவன் தங் காலத்து இத்தமிழ்நாட்டரசைப் பெருவிரிவினதாய் வளரச்செய்தனன். இவ்வரசனது காலம் சற்றேறக்குறைய கடைச்சங்கத்தவர் காலமாக வேண்டும். இவனைக் கடைச்சங்கத்திருந்த மாமூலனர், சீத்தலைச் சாத்தனர் முதலியோர் இவனது வடநாட்டு வெற்றிகளைப் புகழ்ந்து பாடியிருத்தலால் இவன் காலம் கடைச்சங்கத்தவர் காலமெனக் கொள்ளப்படுகிறது. இக் கடைச்சங்கம் சிலர் கி. பி. இரண்டாம் நூற்றாண்டெனவும், சிலர் 4, 5-ம் நூற்றாண்டுகளென்றும் கூறுகின்றனர்.

**சேர்வை** — வேலை செய்வோன் என்னும் பொருளது. இது அகமுடையான் வலையன், அம்பலக்காரன், கள்ளன், மறவன், பரிவாரம் முதலியவர்க்கும் பட்டமாக வழங்கி வருகிறது. (தர்ஸ்டன்.)

**சேர்வையணி** — எள்ளும் அரிசியுஞ் சேர்ந்தாற்போல் விளங்கும் பேதத்தையுடைய பல வணிகளது சேர்க்கையாம். இதனை வடநூலார் சம்சிருஷ்டியலங்கார மென்பர். இது மூன்று வகைப்படும். அவை, பொருளணிச் சேர்வையணி, சொல்லணிச் சேர்வையணி, சொற்பொருளணிச் சேர்வையணி எனப்படும். இவற்றி னியல்பைக் குவலயானந்தம் காண்க.

**சேவலூர்க்கிழார்மகன் பெரும்பூதங்கொற்றனர்** — கடைச்சங்க மருவிப் பாடிய புலவர்.

**சேவைகாவலர்** — சேக்கிழார் சுவாமிகளுக்கு ஒரு பெயர்.

**சேறைக்கவிராஜபண்டிதர்** — 1. இவர்க்கு ஆசுகவிராஜ சிங்கம் எனவும் பெயர், இவர் வண்ணம் பாடுவதில் வல்லவராதலின் இவர்க்கு வண்ணக் களஞ்சியம் எனவும் பெயர். சாதியில் இவர் திருக்காளத்தியிலிருந்த செங்குந்தர் மரபினராகிய வேங்கடராஜமுதலியாரால் ஆதரிக்கப்பட்டவர். இவர் ஊர் சேறையென்பதால் இப்பெயர் கொண்ட ஊர்கள் பல இருத்தலின் நிர்மாணிக்க முடியவில்லை. இவர்க்கு முருகக் கடவுள் உபாசனமூர்த்தி, இவர் பாண்டி

நாடு சென்று சிவிலிமாறருடைய பரம்பரையைச் சார்ந்த இராம பாண்டியரைப் பாடிப் பல பரிசு பெற்றவர். "செந்தமிழோர் தங்களிருசீ பாததூளி பொர, வந்த புலவோர் தமார்பாணி - கந்த, னடிகையா ரப் பரவுமாசு கவிராஜன், கடிகையார் கோலாகலன்" பாண்டியராஜா ஆரென்று கேட்டபோது பாடியது. "தென்பாராளு மறிவின் குறுமுனி தெக்கிண கயிலையில் வாழ், செங்குந்தக் குலவேங்கடராயன் திருவா சற்புலவன், என்பேர் வண்ணக்கட்சியதன்றி யெதிர்த்தவர் மார்பாணி, யிந்தத் தேசப்புலவர் மனத்துக்கிடியென வந்தேன் காண், உன்பால் யான்வர வாசற்காரர்க் குத்தாரம் பண்ணி, யுள்ளுக் கென்னை யழைப்பித்தா சிலுரைக்குங் கவிதைகள் கேட், டென்பால் வரிசைகள் பரிசில்கள் நல்கி யிரக்ஷித்திடவேண்டு, இராமா சீவல மாறு பாண்டியராஜ வரோதயனே.

2. மாணுக்கர் பாடியது. நல்ல பாம்பு தீண்டப் பெற்றபோது பாடியது. "ஆறுமுகனுணையவனடியார் தம்மாணை யேறுமயிலாணை யென்னுணை வீறுபுகழ், தேறுகவி ராசராசன் றிருவாணை யேறியவாறேயி றங்கு".

**சேறைக்கவிராஜபிள்ளை** — இவர் சோழ நாட்டுச் சேறையென்னும் ஊரினர். சைவ சமயத்தினர். குலம் கருணீகர், ஆசுகவி பாடுந்திறம் உள்ளவர். இவரியற்றிய நூல்கள் காளத்திநாதருலா, சேயூர்முருகனுலா, வாட்போக்கிநாதருலா, அண்ணுமலையார் வண்ணம், முதலிய.

**சேனஜித்** — பூருகுலத்தில பிறந்த பிருகதிசு வம்சத்தவனுன விசதன் என்னும் பெயருள்ள ராஜபுத்திரன். இவன் புத்திரர்கள் ருசிராஸ்வன், திருடாநு, காசியன், வச்சன் முதலியவர்கள்.

**சேனன்** — கனகமாலை சகோதாருள் ஒருவன்.

**சேனுபிந்து** — பாண்டவ பட்சத்தவனுகிய பாஞ்சால அரசன். (பார. ஆதி.)

**சேனை** — தருமப்பிரசாபதியின் புத்திரி, புருக்களைப் பெற்றுள்.

**சேனைக்குடையார்** — (இலை வாணியர்) இவர்கள் வெற்றிலைக்கொடி நட்டு ஜீவிப்பவர். இவர்கள் தங்களைக் கொடிக்கால் பிள்ளைமார் என்பர். இவர்களுக்கு மூப்பன், செட்டி எனவும் பட்டம் உண்டு. தஞ்சாவூரில் இவர்கள் வீட்டில் வேலை செய்யப் பறையன் போவதில்லை. அம்பட்டர் இவர்களுக்கு வேலை செய்வதில்லை. இவர்கள் வீட்டில் அம்பட்டன் வண்ணுன் உண்ணுன். இவர்கள் இடங்கையைச் சேர்ந்தவர்கள். (தர்ஸ்டன்)

**சேனைமுதலியார்** — விசுவசேநரைக் காண்க.

**சேஷ்டர்** — ஜலத்திற்காதார தேவர், இவர்க்குப் பவர் எனவும் பெயர்.

**சேஷ்டை** — ஜலத்திற்கதிட்டான சத்தி.

## சை

**சைகஷவ்யர்** — இவர் தருமருக்குத் தாம் சிவபிரானிடம் அட்டமாசித்திகளைப் பெற்றதைக் கூறினவர். (பார - அநுசா.)

**சைகாவத்தியன்** — ஒரு ரிஷி. அம்பை பீஷ்மர் தன்னை மணம் புரியாதலால் வெறுப்புற்று இவருடைய ஆச்ரமத்தில் தவமிருந்தனள். (பா - உத்தி.)

**சைகிசவ்யன்** — 1. ஒரு இருடி, அபர்ணையின் கணவர், பித்ருக்களைக் காண்க.

2. ஒரு ருஷி. ருத்ரர் உமையுடன் சென்று வேண்டியதைக் கேளென ஒன்றும் வேண்டேன் என்று மறுத்த ஞானி. (பார - சாந்.)

**சைகீஷவ்யர்** — இவர் சோமதீர்த்தத்தினருகில்தேவலருஷியின் ஆச்ரமத்திற் செல்லத் தேவலர் தாம் இவரை வரவேற்காது தவத்தில் இருந்து பின் இவரை உபசரிக்க வேண்டிக் குடங்கொண்டு கடற்குச்செல்ல அவ்விடத்திலும் இவர் தேவலர்க்குமுன் சென்றிருந்தனர். பின் தேவலர் ஆகாயம், சுவர்க்கம், பிதுர் உலகம், யமலோகம், ஆதித்யலோகம், சந்திரலோகம் முதலிய இடங்களிற் செல்ல அவ்விடமெல்லாஞ் சென்றனர். அவ்வகையான தபசி வசித்த தீர்த்தமாதலால் இதில் பலராமர் ஸ்நானம் செய்தனர். (பார - சல்லி.)

**சைசிடமுனிவன்** — காசியில் தவஞ் செய்து நந்தி தேவரால் விளிக்கப்பட்டு முத்தியடைந்தவன். (காசிகாண்டம்.)

**சைசுநாகர்** — சிசுநாகன் வம்சத்த மகத தேசத்தரசர்.

**சைதன்யமதம்** — சைதனியன் வங்கதேசத்தில் நவத்வீபத்தில் கிறிஸ்துசகம் கசஅகூவுது வருஷத்தில் விஷ்ணு அம்சத்தாற் பிறந்தவன். தந்தை ஜகந்நாதமிச்ரன், தாய் சசீதேவி. இவன் முதற்பெயர் விச்

வம்பான் ; இவன் கிருஷ்ணனைப்போல் நீர்க்குக் கங்காதீரம்வரும் பெண்களைச் சரசஞ் செய்துகொண்டும், தனக்கு வேண்டியவைகளை விரும்பிய வீட்டில் சென்று களவாடியும் வருவன். இச்சைதனியன் கல்வி கேள்விகளில் வல்லவனாய் லக்ஷ்மி தேவி என்பவளை முதல் விவாகஞ் செய்து கொண்டு சிலநாளிருந்து பின்பு அவனுடைய முதல் மனைவி பரமபத மடையவும் பின்பு விஷ்ணுப்பிரியை என்னும் ஒரு பெண்ணை இரண்டாவது மணஞ் செய்து கொண்டனன். பின்னர் தந்தை இறக்கத் தந்தைக்குச் சிரார்த்தஞ் செய்யும்படி கயா தீர்த்தத்திற்குச் சென்றபோது அவ்விடத்தில் ஈச்வரபுரி என்னும் யோகியைக் கண்டு அவரிடத்தில் உபதேசம் பெற்றுச் சதாசாரத்துடன் கூடியிருந்து அரிபக்தியில் மேவிட்டனன். **மதசித்தாந்தம்**-இவன் முத்தி மார்க்கமே போதித்தான். கர்மத்தில் நம்பிக்கை யில்லை. எக்ய, யாக, ஓமாதிகளால் பிரயோஜனமில்லை யெனவும், [illegible]மாசமில்லா விச்வாசம், இடை விடா பக்தி என்பதே மோக்ஷம் எனவுங் கூறுவன். (சகலார்த்தசாகரம்.)

**சைதன்யர்** — கிருஷ்ணவதாரத்தில் மாலாகாரர்வம்சத் துதித்தவர். (சாத்தாதவர் சாத்தானியர் என்ப.)

**சைத்கியகம்** - கிரிவிரசத்துக்கு அரணாயுள்ள மலை.

**சைத்தியர்** — யாதவபேதம் சேதிராசன் வம்சத்தவராதலின இப்பெயர் பெற்றனர்.

**சைத்திரதன்** — சாட்சுசமநுவைக் காண்க.

**சைத்திரரதம்**—குபேரன் பூந்தோட்டம். சித்திரரதனைக் காண்க.

**சைத்திரை** — புதன் தேவி, இவள் குபேரன் வீரியத்தைத் தாங்கிய கிருதாசியின் குமரி. இவளிடத்தில் சைத்திரன் எனும் அரசன் பிறந்தான்.

**சைநசமயம்** — இது ஐந்தாம் நூற்றுண்டில் சைந அகளங்காசாரியர், புத்தருடன் வாதிட்டுச் செயித்து இச்சமயத்தை நாட்டினர். இச் சமயத்தினர் இதினும் மேலான சமயம் இல்லையென்பர். இவர்கள் உலகம் அநாதியென்றும், அவை மூன்றென்றும், அந்தவுலகம்மேல் நடுகீழிடங்களில் இருக்கும் எனவும், அந்தக் கீழுலகத்தடியில் அதோகதியென்று ஒரு உலகம் உண்டெனவும், அதற்குமேல் எழு நரகம் உண்டெனவும், அதற்குமேல் பத்துப்பவணலோக முண்டெனவும், அதற்குமேல் மண்ணுலகம் இருக்கிறதெனவும், அதற்கு மேல் சோதிலோகம் உண்டெனவும், வியந்தாவுலகம், வித்யாதரவுலகமும், இந்த மண்ணுலகில் உண்டெனவும், மேல் பதினறு தேவலோகம் உண்டெனவும், அதன்மேல் அகமிந்திரலோக முண்டெனவும், அதற்கு மேல் மோக்ஷ உலகம் உண்டெனவுங் கூறுவர். இவர்கள் அருகன் அல்லது சினனைத் தெய்வமாகக் கொண்டவர்கள். அவ்வருகனுக்கு (௧00அ) பெயருண்டு. அக்கடவுள், கடையிலா அறிவு, கடையிலாக் காட்சி, கடையிலாவீரியம், கடையிலா இன்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு எனும் அறு குணங்களுடன் கூடியிருப்பர். அவர், வேதங்கள் பன்னிரண்டினையும் வெளியிட்டவர். சந்திராதித்தியம், நித்திய விநோதம், சகலபாசநம் எனும் முக்குடையினையுடையவர். ஆத்யந்தரகிதர். அசோக மரநிழலில் எழுந்தருளியவர், கர்மம் இல்லாதவர். இச்சமயத்தார் கர்மத்தால் முத்தியென்பர். இவர்கள், காலம், உத்சர்ப்பிணி, அவசர்ப்பிணி என இருவகைப்படும் எனவும், அந்தக்காலமிரண்டும் ஒருதரம் முடியின் யுகம் என்பர். இந்தயுகத்தில் போக பூமியுண்டாய்ப் பதினன்கு மநுக்கள்தோன்றினர். இந்த மநுக்கள் காலத்தில் சூர்யசந்திர நக்ஷத்திரங்கள், மேகம், வருஷம், மாதம், வாரம், பகல், இரவு, ஆறு, மலை உண்டாயின என்பர். இந்த மநுக்களில் நாபிமகாராசா காலத்தில் ஜனங்கள் நாபிக்கொடியுடன் தோன்றினர். மேகம் மழை பெய்தன, பயிருண்டாயிற்று. வஸ்திரங்கள் நெய்யப்பட்டன. இந்த நாபிமகாராசாவைப் பிரமன் என்பர். இவர்தேவி மருதேவி. இவர் காலத்தில் இருஷபதீர்த்தங்கரர் என முதல் தீர்த்தங்கரர் தோன்றினர். அத்தீர்த்தங்கரர் (௧) இடப தீர்த்தங்கரர், (௨) அசித தீர்த்தங்கரர், (௩) சம்பவ தீர்த்தங்கரர், (௪) அபிநந்தன தீர்த்தங்கரர், (௫) சுமதி தீர்த்தங்கரர், (௬) பத்மப்பிரப தீர்த்தங்கரர், (௭) சுபார்சுவ தீர்த்தங்கரர், (௮) சந்திரபிரப தீர்த்தங்கரர், (௯) புஷ்பதந்த தீர்த்தங்கரர், (௧0) சீதள தீர்த்தங்கரர், (௧௧) சிரேயாம்ச தீர்த்தங்கரர், (௧௨) வாசுபூச்ய தீர்த்தங்கரர், (௧௩) விமல தீர்த்தங்கரர், (௧௪) அநந்த தீர்த்தங்கரர், (௧௫) தர்ம தீர்த்தங்கரர், (௧௬) சாந்தி தீர்த்தங்கரர்

(கஎ) குந்து தீர்த்தங்கரர், (கஅ) அர தீர்த்தங்கரர், (ககூ) மல்லி தீர்த்தங்கரர், (உ0) முனுசுவிருத தீர்த்தங்கரர், (உக) நமிதீர்த்தங்கரர், (உஉ) நேமிதீர்த்தங்கரர், (உஉ) பார்சுவதீர்த்தங்கரர், (உச) வர்த்தமானதீர்த்தங்கரர் தோன்றினர். இவர்கள் காலத்தில் (க) பரதர், (உ) சகரர், (ங) மகவான், (ச) சநத்குமாரன், (ரு) சாந்திநாதன், (சு) குந்துநாதன், (எ) அரநாதன், (அ) சுபௌமன், (கூ) பதுமநாதன், (க0) அரிசேணன், (கக) ஜெயசேநன், (கஉ) பிரசதத்தன் ஈறாகச் சக்கிரவர்த்திகள் பன்னிருவரும், (க) விசயர், (உ) அசலர், (ங) தர்மர், (ச) சுப்பிரபர், (ரு) சுதர்சநபலதேவர், (சு) நந்திஷேணர், (எ) நந்திமித்ரன், (அ) இராமபலதேவன், (கூ) பலராமன் ஈறாகப் பலதேவர், ஒன்பதின்மரும், (க) திப்பிரஷ்டன், (உ) திவிப்பிரஷ்டன், (ங) சுயம்பு, (ச) புருஷோத்தமன், (ரு) புருஷசிம்மன், (சு) புண்டரீக வாசுதேவன், (எ) தத்தன், (அ) லக்ஷ்மணன், (கூ) நாராயணன் ஈறாக வாசுதேவர் ஒன்பதின்மரும், (க, அசுவக்கிரீவன், (உ) தாரகன், (ங) மது) (ச) மதுசூதனன், (ரு) மதுகிரீடன், (சு) நிசும்பன், (எ) பலீந்தரன், (அ) இராவணன், (கூ) சராசந்தன் ஈறான பிரதிவாசுதேவர் ஒன்பதின்மரும் இருந்தனர். (ருஷபர்முதல் சாரசந்தன் ஈறாகக் கூறியவர்க்குத் **திரிசஷ்டிசலாகா புருஷர்** எனவும் பெயர்.) ருஷபதீர்த்தங்கரர் காலத்தில் சைவசமயம் உண்டாயிற்றெனவும், கங) ஆம் தீர்த்தங்கரராகிய விமல சுவாமிகள் காலத்தில் வைஷ்ணவசமயம் உண்டாயிற்றெனவும், (உங) ஆம் தீர்த்தங்கரராகிய பார்சுவநாத சுவாமிகள் காலத்தில் துலுக்கர்மத முண்டாயிற்றென்றும், (உ0) ஆம் தீர்த்தங்கரராகிய முனுசுவிருத தீர்த்தங்கரர்காலத்தில் மகாகாளாசுரன் என்கிற அசுரனால் யாகங்களுண்டாயின என்றும், சிவ, விஷ்ணு, கணபதி, சுப்பிரமண்யர் சைநவிரதமநுட்டித்த அடியவராகையால் அவர்களும் தொழத்தக்கவர் என்பர். இந்தச் சமயசந்நியாசிகள் சுவேதாம்பரிகள், திகம்பரிகள் என இருவகையார். இவர்கள் கொல்லாவிரதிகள் (கஅ00) சீலாசாரமுடையவர். இவர்கள் புஸ்தகம், கமண்டலம், மயிற்பிச்சம், தாங்கியிருப்பர். இவர்கள், அஷ்டவிதகர்மங்கள் நீங்கி மணியிலொளிபோல் சகசமாய் உபாதீதமாகிய அஷ்டமகா குணங்களைப்பெற்று லோகாக்ரமத்தகஸ்திதராகிச் சுத்தாத்ம சுபாவமெய்தியிருக்கின் ஆகாசமத்தியத்துள் உத்தரோத்தரகமன மடைவர் என்பர். இந்த மதம் கிறிஸ்துசகம் (ரு) ஆம் நூற்றாண்டில் அமோகவருஷன் என்கிற ராசன் அரசாண்டகாலத்தில் அங்குரித்து கூ, க0, கக வரையில் உச்சம்பெற்று, கஉ-வது நூற்றாண்டில் மதுரையாண்ட கூன்பாண்டியன் என்னும் சைந அரசன் சைவனாகிய தால் அதுமுதல் க்ஷீணத்தைப் பெற்றது. இவர்கள் தற்காலம் இருக்குமிடங்கள் திருநறுங்கொண்டை, தீபங்குடி, சித்தாமூர், பெருமண்டூர், இராசமகேந்திரம், காஞ்சிபுரம், திருப்பருத்திக்குன்றம் முதலியன. இவர்கள் செய்த ஸமஸ்கிருதநூல்கள், மகாபுராணம், ஸ்ரீபுராணம், திரிலோகசாரம், கோமடசாரம், பதார்த்தசாரம், இரத்தினகரண்டகம், தர்மபரீக்ஷை, சிந்தாமணி, சூடாமணி, மேருமந்தரபுராணம், நீலகேசிவாதம், சாகடாயனம், அமரம், நயசக்கிரம், சத்தபங்கி, தவளம், விசயதவளம், மகாதவளம், சுபோதினி முதலியன. தமிழ்நூல்கள், சிந்தாமணி, சூளாமணி, சூடாமணி, நீலகேசிவாதம், மேருமந்தர புராணம், திருக்கலம்பகம், யசோதரகாவ்யம், அறநெறிச்சாரம், சீவசம்போதனை, அருங்கலச்செப்பு முதலியவை.

**சைநமாமுனிவர்** — சிநேந்திரமாலை செய்தவர். இவர்க்கு உபேந்திராசர்ரியர் எனவும் பெயர்.

**சைநர்** — யதுவம்சப்பகுப்புள் ஒன்று.

**சைநாதேசசிட்டு** — இது, சைநாதேசத்துக் கடற்கரையிலுள்ள மிகவுயர்ந்த மலைக்குகைகளில் ஒருவிதசிட்டு கூடு கட்டுகிறது. அக் கூட்டை அந்நாட்டார் உரிசையுள்ள உணவுப் பொருளாகக் கொள்கின்றனர். இச்சிட்டுத்தலை கறுப்பும் முதுகு நீலமும், வயிறு செம்மைகலந்த கருநிறங் கொண்டது. இக் கூடுகள் மிகவுயர்ந்த மலைப்பாறைகளில் கட்டப்படுகின்றன. இவற்றையெடுப்பது மிக அருமையாம். இதனை எடுப்பதில் பலர் இறத்தலும் உண்டென்பர். இக்கூடு அதிக விலையுயர்ந்தது. கொட்டைப்பாக்குச் சிட்டு இது தானியங்கள் புழுக்களைத்தின்று சீவிப்பது. இவ்வினத்தில் பல அழகிய வர்ணங்களையும் புள்ளிகளையும் பெற்றவை. இவற்றைப் பலர் வீடுகளில் சிறு கூண்டுகளிலிட்டு வளர்க்

கின்றனர். இது குதித்துங் குதித்து அழகாய்ப் பாடும்.

**சைநியம்** — கிருஷ்ணமூர்த்தியின் குதிரைகளில் ஒன்று.

**சைந்தவன்** — சிந்துதேசாதிபதி, ஜயத்ரதன்.

**சைந்தவாயனன்** — விஸ்வாமித்திர புத்திரன்.

**சைபன்** — (Cyp on) அங்குசநாளி. இது ஒரு ஜல சூத்திரம்.

**சைபியன்** — 1. விருஷ்ணி வம்சத்தரசன்.

2. கோவாசன் என்னும் க்ஷத்திரியன்.

3. கிருஷ்ணன் தேர்க்குதிரையில்ஒன்று.

4. விஷதர்பனுக்கு ஒரு பெயர்.

5. கிருஷ்ணனிடம் யுத்தம் செய்த ஒரு க்ஷத்திரியன்.

**சைப்பியர்** — 1. தருமர் இராஜசூயத்தில் பிரமஸ்தானத்திருந்த ருஷி.

2. சிபிவம்சத்தவர்.

**சைப்பியன்** — 1. கிருஷ்ணனால் செயிக்கப் பட்டவன்.

2. இவன் கொடையால் தர்மநெறி தவருது அரசாளுகையில் இவனது ஈகையைச் சோதிக்க இந்திரன் கழுகாகவும், அக்னி புருவர்கவும் உருக்கொண்டு கழுகு புருவைத் துரத்த புரு அரசனை அபயமடைந்தது. கழுகு அரசனிடம் என் பசிக்கு வாய்ந்த இரையை விடவேண்டுமென அரசன் கழுகை நோக்கி அடைக்கல மடைந்ததை விடேன் என, அவ்வளவு மாம்சம் தருக என, அரசன் மற்ற உயிர்களைக் கொல்ல அஞ்சித் தானேதன் தேகத்தை அறுத்துத் துலையிலிட்டுப் போதாமல் துலைபுகுந்தனன். தேவர் தம் உருக்காட்டி வியந்து சென்றனர். (வால்மீகி-ராமாயணம்)

**சைப்பம் சுக்ரீவம்** — கிருஷணன் தேர்க் குதிரைகள்.

**சைப்யை** — 1. விதேகராசன் பெண்; இவள் தன் கணவனாகிய சததநு, பாகீரதியில் ஸ்நானஞ்செய்து விஷ்ணுபூசை செய்து, திரும்பிவருகையில் ஒரு பாஷண்டியிடத்தில் வீணாய்ப் பேசினதால் பூனை, கழுதை, காக்கை, கொக்கு முதலிய பல சன்மமெடுத்துக் கடைசியில் மானிடவுருப் பெற்றனன். அதுவரையில் சைப்யை எவரையும் மணம்கொள்ளாதிருந்து தன் கணவன் மானிடவுருக்கொண்டதைப் பூர்வசன்மப் பழக்கத்தால் அறிந்து அவனை மணந்து சுகித்தவள்.

2. சியாமகன் தேவி, விதர்ப்பன் தாய்.

3. ஒரு தீர்த்தம்.

4. பிரதீபன் பாரியை.

5. கிருஷ்ணனுடைய பாரியையாகிய மித்திர விந்தைக்கு ஒரு பெயர்.

6. சூரியவம்சத்துச் சகரன் பத்தினி.

7. தியூமத் சேநராஜன் பாரியை.

**சைமினி** — 1. யமபுரியைக் காண்க.

2. சயமுனியைக் காண்க.

3. அளவை நூலாசிரியன். (மணி.)

**சையத்காதி** — (வகுதைநகர்) தமிழ் நாட்டுக் காயற்பதியி லிருந்த லப்பைசாதிப் பிரபு. கொடையாளி தமிழ் வித்வான்களுக்கு வேண்டிய பரிசளித்துப் புகழ்படைத்தவர் இவர் சமாதியிலடங்கிய பின் ஒரு கவிஞர் அவ்விடஞ்சென்று பாடச்சமாதிவெடித்துக் கையிலிருந்த மோதிரம் தந்தான். இதனால் செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்பர்.

**சையமினி** — யமபுரியைக் காண்க.

**சையாதி** — 1. வைவச்சுதமநுவின் குமரன். ஆங்கீரஸர் யாகத்தில் இரண்டாமகவில் செய்யத்தக்க கர்மத்தைச் செய்து ஒரு பெண் பெற்றவர். அப் பெண்ணுக்குச் சுகன்னியெனப் பெயர். இவ்வரசன், குமரியுடன் ஒருகால் சியவனருஷியின் ஆச்சிரமமடைய அப் பெண் பூஞ்சோலையின் ஒருபுறத்திலிருந்த புற்றில் ஒளிவரக்கண்டு அவ்வொளியை முள்ளால் குத்த அதினின்று இரத்தம் பெருகியது. இதனால் சையாதிசேநா சமுத்திரத்தின் இரு விழியும் அடைந்தன. அரசன் துணுக்குற்று நடந்ததை வினவப் பெண் உண்மை கூறக் கேட்டு முனிவரை அபராதக்ஷமை வேண்டிப் பெண்ணையும அவருக்கே மணஞ்செய்வித்தவன். இவன் குமரர், உத்தானபரிகசு, ஆனர்த்தன், பூரிஷேணன்.

2. பிராசீநன் குமரன், தேவி பானுமதி.

**சையாம்மதம்** — இத் தேசத்தார் புத்த தர்மத்தை அனுசரித்தவராயினும் ஒரு விதமான பத்ததியை அனுஷ்டிக்கிறார்கள். அதாவது, சோமகௌதமன் என்பவன் புட்பத்தில் பிறந்து சர்வஞானியாய் ஒரு விருக்ஷதசடியில் தவஞ்செய்து சித்திகளை யடைந்தான். இவனுக்குத் தேவதத்தன் என்று ஒரு சகோதரன் இருந்தனன். இவ்விருவரும் ஒருவருக் கொருவர் யுத்தஞ் செய்து முடிவில் சோமகோதமனை வெற்றியடைந்தான். இவனைத் தேவனாகக் கொள்வர். இத் தேவனுக்குப் பல தேவாலயங்களுண்டு. இவர்கள் தங்கள் தேவனுக்கு ஆட்டுப்பலி யிடுகின்றனர். இச் சம

யத்துச் சந்நியாசிகள் முண்டிதராய்ச் சர்வாங்க க்ஷௌரம் செய்துகொள்வர். இறந்தவர்களைத் தகனஞ் செய்து சாம்பலை வைத்துச் சமாதி கட்டுவர்.

**சையுத்தசமவாயம்** — கண்ணிற்கும் ரூபத்திற்கு முள்ள சம்பந்தம். (சிவ - சித்)

**சையுத்தசம வேதசமவாயம்** — இது கண்ணிற்கும் ரூபத்திலுள்ள ரூபத்துவத்திற்கு முள்ள சம்பந்தம். (சிவ - சித்)

**சையோகம்** — இரண்டு திரவியங்களின் சம்பந்தம். இது பிரிந்திருக்கிற வஸ்துக்களின் சம்பந்தம். (சிவ - சித்)

**சையோகசையோகம்** — எந்தச் சையோகத்தினுற்பத்தியில் சையோகம் அசமவாயி காரணமாயிருக்கிறதோ அது. (தரு.)

**சைய்யகிரி** — கொங்குநாட்டிலுள்ள ஒரு மலை. காவிரிநதிக்குப் பிறப்பிடம்.

**சைரந்திரீயன்** — தஸியூவானவன் அயோகவ ஜாதி ஸ்திரியிடத்தில் பெற்ற குமரன். இவனுக்கு எண்ணெயிடுதல், கைகால் பிடித்தல், வலைதொழில் செய்தல் முதலிய தொழில். (மநு.)

**சைரந்திரி** — பாண்டவர் அஞ்ஞாதவாசத்தில் திரௌபதி வைத்துக்கொண்ட பெயர்.

**சைலாதன்** — சித்ராதன் குமரன், இவன் குமரன் காமரதன்.

**சைலூஷன்** — ஒரு காந்தருவன். சிந்துதீரவாசி.

**சைலோர்தம்**—மேருமந்தரங்களுக்கு மத்தியிலுள்ள ஒரு நதி. (பார - சபா.)

**சைவ எல்லப்பநாவலர் தேவியார்**—இந்த அம்மையார், மணவாள தாசர் தாம் பாடிய அரங்கக்கலம்பகத்தை நாவலர்க்கு அனுப்புகையி லதிலிருந்த "வாடியோடவன்சமன்ன" எனுஞ் செய்யுளைக்கண்டு அதற்குப் பிரதியாய் "கருடனோடை மச்சமாமை கமலமோட முற்கரங், காட்டிலோட மூன்றிராமற் கண்டமட்டி லோடவே, மருளிவந்த சிங்கமோட வாமனென்பு பாறவே, மஞ்சமுள்ள கண்ணனோடை மாரவீறச் சேனனும், இருளினோடை முண்டகத்த னேங்கியோட வென்றவர்க், கிறுமுதங் குயிரளித்த வேந்தல்யாவன்வேதமே, அருளுமந்த முதல்வன்யாவன் அருணைகண்டு வாழ்மினோ, ஆரணுதி மூலமென்ப தறிகிலாத மாக்களே" எனப் பாடித் தந்தவர்.

**சைவசமயகுரவர்கள்** — மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசுகள், சுந்தரமூர்த்திநாயனுர் என்னும் நால்வர்.

**சைவசித்தாந்தசாத்திரம் பதினன்கு** — சித்தாந்தசாத்திரம் (கச) காண்க.

**சைவபத்ததிசெய்தோர்** — க. தூர்வாசர். உ. பைங்களசிவர்; ௩. உக்ரஜ்யோதி; ச. ஸ்ரீகண்டர்; ரு. விஷ்ணுகண்டர்; சு. சுபோதர்; எ. வித்யாகண்டர்; அ. இராமகண்டர்; கூ. ஞானசிவர்; க0. ஞானசங்கரர்; கக. சோமசம்பு; கஉ. பிரமசம்பு; க௩. திரிலோசனசிவர்; கச. அகோரசிவர்; கரு. வருணசிவர்; கசு. பிரசாதசிவர்; கஎ. இராமநாதசிவர்; கஅ. ஈசானசிவர் என்பவர்களாம்.

**சைவபுராணம்** — இது (உச00) கிரந்தங் கொண்டது. இதில் பிரம விஷ்ணுக்களின் பிறப்பு, இறப்பு, பிரபஞ்சசிருட்டி, சிவத்திருந்து யாவுமுற்பத்தி, சிவலிங்கவழிபாடு, புண்யகாலம், புண்யக்ஷேத்ரம், புண்ணிய தீர்த்தம், பிரம விஷ்ணுக்கள் சிவலிங்க வயத்தரானமை, சிவபூசை, யோகம், காசி மகாத்மியம், தீர்த்தமான்மியம், அத்துவிதம், திரிபுரதகனம், தக்ஷயாகம், கணபதி, கந்தர் உற்பவங்கள் அடங்கியிருக்கின்றன.

**சைவம்** — இது சிவமூர்த்தியைத் தெய்வமாகக்கொண்ட மதம். இது ஊர்த்வசைவம், அநாதிசைவம், ஆதிசைவம், மகாசைவம், பேதசைவம், அபேதசைவம், அந்தரசைவம, குணசைவம், நிர்க்குணசைவம், அத்துவாசைவம், யோகசைவம், ஞானசைவம், அணுசைவம், கிரியாசைவம், நாலுபாதசைவம், வீரசைவம், சுத்தசைவம் என்று பலதிறப்படும. பின்னும் காளாமுகம், காபாலம் முதலியவும் உள. அவற்றுள் **சுத்தாத்துவித சித்தாந்தசைவம் உயர்ந்தது.** அவற்றுள் **ஊர்த்தசைவமாவது** - சிவன் ஒருவன் உண்டெனவும் அவன் தத்துவாதீனன் எனவும்; சடை, விபூதி, ருத்ராக்ஷதாரணத்துடன் சிவபூசைசெய்து பஞ்சாக்ஷரம்செபித்துச் சிவவேடம் பொருளாகக்கொண்டு சிவத்தைத் தியானிப்பதே முத்தி எனவும் கூறும். **அநாதிசைவமாவது** - பதி, பசு, பாசம் மூன்றும அநாதி நித்யம் எனவும்; விபூதி, ருத்ராக்ஷம், சிவவேடம் பொருளாகக்கொண்டு சிவத்தியானஞ்செய்து பாசநீங்கிச் சிவனை யடைவதே முத்தியெனவுங் கூறும். **ஆதிசைவமாவது** - சிவனிடத்து மோகமாய் மோக்ஷசாதனங்களுக்கு வேண்டிய வேடங்களும் ஒழுக்கமும் பூண்டு எல்லாஞ் சிவபோகமாயதுபவித்து விபூதி ருத்ராக்ஷ, சிவவேடத்

தின்மேல் விசுவாசமா யிருந்து சிவனை யடைவதெனக்கூறும். **மகாசைவமாவது**-விபூதி, ருத்ராக்ஷம், சடைமுடி தரித்துச் சிவமூர்த்தியைச் சகுணமாகவும், நிர்க்குணமாகவும் தியானஞ்செய்து முத்திபெறலெனக் கூறும். **பேதசைவம்** - விபூதி, ருத்ராக்ஷதாரணஞ்செய்து சிவனடியார், ஆசாரியர் சிவலிங்கம் இவைகளைப் பூசித்து முத்தி யடைதல் எனக் கூறும். **அபேதசைவம்**-விபூதி, ருத்ராக்ஷ தாரணஞ்செய்து பஞ்சாக்ஷர செபஞ்செய்து சிவபாவனைசெய்து அவனாகிறதெனக் கூறும். **அந்தாசைவம்** - எல்லா உயிர்க்கும் ஈசன் உள்ளா யிருத்தலால் சிவன் அந்தப்படி யிருத்தலை ஆராய்ந்து நாடுதல் முத்தியெனக் கூறும். **குணசைவம்** - சிவனது எண் குணங்களையும் துதித்து அவ்வகை தியானித்துச் செபஞ்செய்து முத்தி பெறுவது. **நிர்க்குணசைவம்** - விபூதி, ருத்ராக்ஷதாரணஞ்செய்து பஞ்சாக்ஷரஞ் செபித்து நிர்க்குணனை சிவமூர்த்தியை அருவாகத் தியானித்தல் என்று கூறும். **அத்துவாசைவம்**-விபூதி, ருத்ராக்ஷதாரணஞ்செய்த சைவன் தீக்ஷிதனால் ஷடத்துவாசோதனை செய்யப்பட்டு அவற்றின் முடிவான சிவத்தைத் தியானித்து நிஷ்டைகூடிச் சமாதியிலிருப்பதெனக் கூறும். **யோகசைவம்** - அஷ்டாங்கயோகஞ் சாதித்து அதின் முதலான சிவமூர்த்தியைத் தரிசித்து அஷ்டமாசித்தி பெறுவதெனக் கூறும். **ஞானசைவம்** - விபூதி, ருத்ராக்ஷதாரணனான சைவன் தீக்ஷிதனாய ஆசாரியன் சொன்ன வழியில் நின்று சீவபரபேதமறிந்து ஆத்மா சிவனுடன்கூட நிஷ்டை செய்து இருப்பதெனக் கூறும். **அணுசைவம்** - நித்யமாயிருக்கிற சிவனை உள்ளும் புறம்புமாய்ப் பஞ்சகிருத்யமும் செய்கிறவனென்றறிந்து திகம்பர வேடங்கள் பூண்டு சன்மார்க்க லக்ஷணத்துடனே கூடிக் குருலிங்கவேடம் பொருளாய்ச் சிவனது கிருத்தியங்களால் மகிழ்ந்து மனோலயமடைதல் முத்தியெனக் கூறும். **கிரியாசைவம்** - குருவை யடைந்து சமய விசேஷ தீக்ஷையும்பெற்றுப் பிறகு அத்துவாசோதனை ஆசாரியன் செய்யப்பெற்று ஆசாரியர் சொன்ன வழியில் நின்று தனக்குரிய யாகாதி சிவபூசா கார்யங்களை விடாது கடைப்பிடித்துச் சிவார்ச்சனை செய்து இன்ப மடைவதெனக் கூறும். **நாலுபாதசைவமாவது**-சரியை, கிரியை, யோகங்களை அநுஷ்டித்து ஞானத்தையடைந்து தீவிரதரசத்திநிபாத முடையனாய்ச் சமாதி யடைவதெனக்கூறும். **சுத்தசைவமாவது**-தத்துவத்திரயமாகிற பதி, பசு, பாசம் மூன்றும் அநாதிநித்யம் என்றறிந்து பதி நிச்சயம் பிறந்து மௌனமே பொருளாய் இலயமாக நிஷ்டைகூடிச் சிவத்தை யடைவது எனக் கூறும். வீரசைவ முதலிய தனியே காண்க.

**சுத்தசைவசித்தாந்தம், பதிலக்ஷணம்** - சிவம் என்பட்டது, எல்லாவற்றிற்கு மேலானதாய் அருவம் உருவம் அல்லாததாய், குணங்குறிக ளற்றதாய், ஏகமாய், நித்தியமாய், எண்ணிறந்த ஆன்மாக்களுக்கும் அறிவாகி, அசலமாய், அகண்டிதமாய், ஆனந்தவுருவாய், மலபந்தர்களா லடையப் படாததாய், அணுவாகி, மகத்துமாகி விளங்குவது. **பசுலக்ஷணம்** - ஆணவமலமொன்றுடன் கூடிய விஞ்ஞானகலர், ஆணவம், கன்மம் இரண்டுடன் கூடிய பிரளயாகலர், ஆணவம், கன்மம், மாயை மூன்றுடன்கூடிய சகலர் என பசுக்கள் மூவகைப்படுவர். முற்கூறிய **விஞ்ஞானகலர்** - பக்வர் என்றும், அபக்வர் என்று மிருவகையர், இதில் பக்வர், மலபரிபாகத்தின் மிகுதியால் சிவாநுக்கிரகத்தைப் பெற்றுச் சிவத்துடன் மலரில் மணம்போல ஒற்றுமைப்பட்டு முத்தியடைவர். அபக்வர், மலபரிபாகத்தின் மந்தத்தால் சிவாநுக்கிரகத்தையடைந்தும் அதிகார மலமொன்றுமே யுடையவராய் இருப்பார். அதிகாரமலம் உற்ற விஞ்ஞானகலர் **அணுசதாசிவர், அட்டவித்யேச்வரர், சத்தகோடி மகாமந்திரேசுவரர்** என்று மூவகையர். அவர்களுள், **அணுசதாசிவர்** - சிவாநுக்கிரக மடைந்து சாதாக்கிய தத்வத்தில் இருப்பர். **அஷ்டவித்யேசுவரர்** சுத்தமா யாகிருத்திய அதிகாரிகளாய் மயேசுர தத்வத்திலிருப்பர். **சத்தகோடிமகாமந்திரேசுவரர்** அஷ்டவித்யேசுவரரால் பிரேரேபிக்கப்பட்டுச் சுத்த வித்யாதத்வத் திருப்பர். பின்னும் விஞ்ஞானகலரில் அபக்வருக்குக் கேவலத்தில் ஆன்மா நிற்குந் தன்மையால் வடிவமற்று ஆணவமல முடைமையால் பரிபாகம் வருமளவும் பெத்தரா யிருப்பர். **பிரளயாகலர்**-பக்வர், அபக்வர் என இருவகையர். இதில் பக்வர் பரிபாக மிகுதியால் சிருஷ்டிகாலத்துப் பரமுத்தி அபரமுத்தி பெறுவர். பரமுத்தி பெற்றவர் பரிபாக மிகுதியால் சிவ

த்துடன் கலந்தவர். அபரமுத்தி பெற்றூர் சிவா நுக்கிரகத்தைப் பெற்றுப் பரிபாக மந்தத்தால் அஷ்டவித்யேசுவரரால் பிரேரேபிக்கப்பட்டு அதிகாரமலத்துடன்கூடிப் பிரகிருதி மாயைக்குக் கீழுண்டான கிருத்தியங்களைச் செய்துகொண்டு கலாமத்ய வாசிகளா யிருப்பர். இவர்கள் கன்மத்துக் கீடாகச் சிருட்டிகாலத்துச் சூக்குமதேகத்தோடு கூடிச் சகலராயும் விடுவர். **சகலர்** - மும்மலங்களால் கட்டப்பட்டுச் சரியை, கிரியை, யோகம், ஞானங்களால் முறையே மாயை, கன்மம், ஆணவம் என்கிற மலங்கள் தேயப்பரிபாகம்பெற்று மேற்சொன்ன பிரளயாகல விஞ்ஞானகலபதமடைந்து முத்திபெறுவர். **பாசலக்ஷணம்**-இது மலமெனவும் படும். ஆன்மா இதனுற் கட்டுப்படுதலின் பசு எனப்படும். மேற்சொன்ன பாசம், பசுக்களாகிய ஆன்மாக்களுக்கு அநாதிபந்தமாம். இப்பாசம் ஆணவம் கன்மம், மாயை யென மூவிதப்படும். இவற்றுள் **ஆணவம்** - மற்ற இரண்டினைப்போல் நடுவில் வந்ததல்லாமையால் அநாதியாம். இது, அநேகமாகிய ஜடபதார்த்தம் அநித்தியமாதலால் சடமாய் நித்தியமாய் ஒன்ருயிருக்கும். இது, ஆன்மாக்களுக்கு அநாதிசித்தமாய் மறைவாயிருந்தும் கண்ணிற்குப் படலாதிரோகம்போல வஸ்துவாகவே சொல்லப்படும். செம்பிற் களிம்பு தோன்றியதற்குக் காரணம் எவ்விதமோ அவ்விதமே. ஆன்மா அநுதியே மலசம்பந்தமுடையனுயினுன். சிவன் அநுதியே, மலரகிதனுதலால் நிர்யலனுயினுன். மலம், எவ்விதம் அரிசிக்கு முளை யுண்டாவதில் உமி நிமித்தமோ அவ்வகையே ஆன்மாக்களுக்குச் சரீராதிகள் உண்டாவதற்கு நிமித்தமாம். இது வியாபகனுகிய ஆன்மாவை அநாதியே மறைத்து நீங்காதாயின் ஆன்மா முத்தி பெருனே எனின் கண்ணிற்குப் படலம்போல் மலம் திரவியம், அப் படலத்திற்குப் பாகமுண்டு. அக்காலத்து அது நீங்கும். அவ்வாறு மலபரிபாக காலத்துச் சத்து குன்றும். **கன்மம்** - இது நானுப்பிரகாரமாயும்; ஆன்மாக்களின் பல போகங்களுக்கு இடமாயும், ஆணவத்தைப்போல் சுபாவமாயும், சநந மரணத்துடன் கூடியும், அநாதியாயும், புருடன்தோறும் வெவ்வேருகியும், ஆன்மாவில் சமஸ்கார ரூபமாயும் சூக்ஷ்மமாயு மிருப்பதால் இந்திரியங்களாற் காணப்படாததாயும், மனேவாககுக் காயத்தால் வருவதாயும், தர்மாதர்ம சுவரூபமாயும் பிருதிவிதத்துவமுதல் கலாதத்துவமளவும் உள்ள ஆன்மாக்களுக்குச் சுகதுக்காதி போகங்களைக் கொடுப்பதாயும் இருக்கும். **மாயை** - இது சுத்தம், அசுத்தம் என இருவகைப்படும். இப்பாசம் அநேகவித வன்மையுடன் கூடியதாய், சூக்ஷ்மமாய், அசுத்த மார்க்கத்திற்கு முக்கியோபாதானகாரியாய், நித்தியமாய், பந்தமாய், தன் காரியங்களுக்கு ஆதாரமாய், வியாபகமாய், அசேதனமாய், அஞ்ஞானத்தைச் செய்வதாய்ச் சங்கார காலத்தில் சகலர் பிரளயாகலர் முதலிய ஆன்மாக்களுக்கு இருப்பிடமா யிருக்கும். இனிச் **சுத்த மாயையாவது**, மேற்கூறிய லக்ஷணத்தைப் பொருந்தி யிருப்பினும் சுத்த சுவரூபமாயும் சுத்தாத்துமாவிற்கு உபாதான காரணமாய்ச் சர்வவிஷய ஞாஞதிகளைப் பிரகாசிப்பதாயும் இருக்கும் என்பர் சைவசிந்தாந்திகள். இச் சைவத்தில் **முத்தி** இரு வகைப்படும். அது பதமுத்தியுண்மை முத்தி யென்பன. பதமுத்தி சேர்வார் சரியை, கிரியை யநேகம் புரிந்தவர். அவர் சாலோக, சாமீப, சாரூபங்களையடைவர். உண்மை முத்தி சேர்வோர் மலபரி பாகத்தால் சத்திநிபாதமடைந்து இறைவன் ஞாஞசாரியனு யெழுந்தருளித் தீக்ஷை புரிந்து உண்மை யறிவிக்க வுணர்ந்து தெளிந்து உண்மைப்பொருளுடன் தாதான்மியமா யிருப்பர். இதனையே அத்துவிதமெனப்படும். அவ்வத்துவிதமாவது, ஒருபொருளை அவயவ அவயவிகளாயாதல், குணகுணிகளாயாதல் வேற்றுமைப்பட்டு இரண்டாய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமும், அதுபோல், இருபொருளே அது அதுவாய் ஒற்றுமைப்பட்டு ஒன்ருய் நிற்றற்கேதுவாகிய தாதான்மியமுமெனத் தாதான்மிய சம்பந்த மிருவகைப்படும். அவற்றுள் முன்னையது தாதான்மியமென்றும, பின்னையது அத்துவிதமென்றும் வழங்கப்படும். அதாவது, அன்மைப் பொருள் பற்றி இரண்டென வேற்றுமைப்படாமை நிற்றலேயாம். இது, அபேத சம்பந்தமாகிய ஐக்கியா ஐக்கியமுமன்றி, பேதாபேத சம்பந்தமாகிய தாதான்மியமுமன்றி, பேத சம்பந்தமாகிய சையோகமுமன்றிக் கலப்பும, உடனுதலும், வேருதலுமாகிய மூன்றுந் தன்கட்டோன்றி நிற்றல்பற்றியதாம். இதனை "அலைகடலிற் சென்றடங்கு மாறுபோல்" எனவும், "வானத்தில் வானும்,

மணத்தின் மணமும் போல்" எனவும், அபேதவுவமையும், "பண்ணையும் ஓசையும்போலப் பழமதுவு மெண்ணுஞ் சுவையும்போல் எனவும், நீரும் அமுதமும்போல் எனவும்;" கூறியிருத்தல்போல்சிவத்துடன் கூடியிருந்து ஆனந்தத் தழுந்தல் என்று கூறுப.

**சைவலம்** — சம்புகன் தவஞ்யற்றிய கிரி.

**சைவாகமம்** — ஆகமம் காண்க.

**சைவை** — அங்கன் பாரி.

**சைனர்** — சிவனைத் தொழுவோர், இவர்கள் பெரும்பாலும் பல ஜாதியராக இந்தியா முழுதும் பரவி யிருக்கின்றனர். இவர்கள் தமிழ் நாட்டில் நயினார் எனவும் சாஸ்திரிகள் எனவும பட்டம் வகித்திருக்கின்றனர். (தர்ஸ்டன்).

**சைஷர்** — வேதாத்யயனம் ஆரம்பித்த மாணாக்கர்.

## சொ

**சொக்கநாதப்புலவர்** — இவர் தொண்டை நாட்டிற் பிறந்தவராகத் தெரிகிறது. இவர் இளமையிற் கல்வி கற்றுக் கவி வல்லவராய்ப் பல்லக்கு முதலிய வரிசைகள் பெற்று மாவை கறுப்பனையும், மாதை வேங்கடேசனையும் பாடி வரிசை பெற்று அரிகரப்புத்திரன் என்னும் தட்டான் தன்னிடம் வாதிக்க அவனிடம வாதிட்டு வென்றவர். இவர் சில தனிப்பாடல்கள் பாடினதாகத் தெரிகிறது. (தனிப்பாடற்றிரட்டு.)

**சொக்கப்ப நாவலர்** — இவர் அஷ்டாவதானம் சொக்கப்பநாவலா எனப்படுவர். இவர் தஞ்சைவாணன் கோவைக்கு உரையாசிரியர். இவர் தொண்டைநாட்டுக் குன்றத்தூரினர்.

**சொக்குப்பொடி** — சில மயக்கும் பொருள்களைச் சேர்த்துச் செய்யப்படும் தூள். அறிவை மயக்குவது.

**சொட்டைக்குலத்தாசு** — ஈசுரமுனிகளுக்கு ஒரு பெயர். நாதமுனிகளுக்குத் தந்தை.

**சொட்டைநம்பி** — ஆளவந்தார் குமரர், மணக்கால்நமபியை ஆச்ரயித்தவர். (குருபரம்பரை.)

**சொட்டையம்மாள்** — திருவரங்கப்பெருமாளரையர் பௌத்திரர், உடையவர் திருவடிசம்பந்தி, (எச) சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

**சொநப்பாநந்தர்** — திருவாரூர் சிவப்பிரகாசருக்கு மாணவர்.

**சொர்க்கன்** — தருமிக்குச் சுவர்க்கனிடம் உதித்த குமரன்.

**சொல்** — 1. (சு) பெயர், வினை, இடை, உரி.

2. ஒரு மொழியுந் தொடர்மொழியும் பொதுமொழியுமாய் இருதிணை ஐம்பால் பொருளையுந் தன்னையும் வெளிப்படையாகவுங் குறிப்பாகவுந் தெரிவிப்பது. அச்சொல் உயர்திணைச்சொல், அஃறிணைச்சொல், ஆண்பாற்சொல், பெண்பாற்சொல், பலர்பாற்சொல், ஒன்றறிசொல், பலவறிசொல், தன்மைச்சொல், முன்னிலைச்சொல், படர்க்கைச்சொல், வழக்குச்சொல், செய்யுட்சொல், வெளிப்படைச்சொல், குறிப்புச்சொல், இயற்சொல், திரிசொல், பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்; திசைச்சொல், வடசொல் என்பன.

**சொல்லணியில் ஒருவகை** — பொத்தகம், பிரேளிகை, விரித்துமுடித்த மறைக்கவிப்பாட்டு, நிரோட்டி, அலகிருக்கை வெண்பா, முண்டப்பாட்டு, உயர்மொழி, நிதரிசனம், மாருட்டு, தோகை, திரிபாகி, கண்டகட்டு, ஒருங்கியன்மொழி, ஐயம், உயர்வு, விரவியல், கல்லவல், உருவகம், உவமை, வழிமொழிமடக்கு, தீவகம், வேற்றுமைநிலை, வெளிப்படைநிலை, நோக்கு, உட்கோள், தொகைமொழி, மிகைமொழி, வார்த்தை, தன்மை, பிறபொருள்வைப்பு, சிறப்புமொழி, சிலேடை, மறுமொழி, உடனிலைக்கூட்டம், நுவலாநுவற்சி, வாழ்த்து முதலிய.

**சொல்லூராசிரியர் ஆண்டைப்பெருந்தமானர்** — மணலூர், ஆசிரியர், புளியங்காய்ப் பெருஞ் சேந்தனாரிடம் அகப்பொருள் கேட்டவர்.

**சொல்லூர்க்கருங்கொற்றன்** — கடைச்சங்கமருவிய புலவர். இவர் ஊர் சொல்லூர். இவர் நிறம் கறுப்பாயிருக்கலாம் போலும்.

**சொல்வகை** — ஒன்றைக் கூறுகையில் விரைந்து கூறலும், சொன்னதையே மேன்மேலும் சொல்லுதலும் பொய்யைப் பரக்கச் சொல்லுதலும், சொல்வதை வெகுவாய் விரித்துச் சொல்லுதலும கூடாது. சொல்வதைச் சில சொற்களிலடக்கிக் காலத்திற் கேற்றபடி சொல்லல் வேண்டும். (ஆசாரக்கோவை.)

**சோவயம்வரம்**—(ஸ்வயம்வரம்) இது அரச கன்னிகைகள், தாங்கள் விரும்பிய நாயகர்களை அடையப் பலர்க்கும் அறிவித்து, விரும்பியவர்க்கு மாலை சூட்டுதலாம். அச்சுயம்வரம் மூன்று வகைப்படும். அவை இச்சா சுயம்வரம், பந்தயச் சுயம்வரம், வீர சுயம்வரம் எனப்படும். அவற்றுள் இச்சா சுயம்வரமாவது தமயந்தியைப்போல் கன்னிகையில் விரும்பப்பட்ட புருஷனுக்கு மாலை யிடுவது. பந்தயச் சுயம்வரமாவது - இராமரைப்போல் கொள்வதற்குக் குறித்த பந்தயத்தை முடித்து அக் கன்னிகையைக் கொள்வது. வீரசுயம்வரமாவது - பீஷ்மரைப்போல் வீர தருமத்தினுல் கன்னிகையை வரிப்பது.

**சோவநுபலக்ஷணம்** — எது, ஒன்றிற் சிறப்பாயிருப்பதாய் மற்றவற்றினின்று வேறு பிரித்தறிவிப்பதா யிருப்பது. (தரு.)

**சொற்றெடர் நிலைச்செய்யுள்** — இது, ஒரு செய்யுளினிறுதி மற்றொரு செய்யுட்காதியாக வருவது.

**சோன்னாதன்**—இரத்தினபுரராச குமாரன்.

**சோன்னவண்ணஞ் செய்த பெருமாள்** — பிரமன்செய்த யாகத்தை நதி யுருவாய்த் தடுக்கவந்த சரஸ்வதிக்கு வாக்களித்தபடி யாகத்திலுதித்த சரஸ்வதிக்குத் தரிசனம் தந்தவராதலால் சொன்னவண்ணஞ் செய்த பெருமாள் என்பர். இதனைச் சைவர் சிவாஞ்ஞைப்படி வெள்ளத்தைத் தடுக்கக் குறுக்கே சென்று தடுத்தவராதலால் இப்பெயர் பெற்றனர் என்பர். (காஞ்சி - பு.)

**சோஷூஞ்சி** — (பிர) குந்தி குமாரன், இவன் குமரன் மயிஷ்மான்.

## சோ

**சோகத்தூராழ்வான்** — நாதமுனிகள் மாணாக்கருள் ஒருவர்.

**சோகாபரமானந்தர்** — இவர் பாரசி என்னுமூரில் அரிநாம சங்கீர்த்தனஞ் செய்து பிச்சை யேற்றுண்டு தம்முடைய ஒழுக்கத்திற்குத் தவறுவரில் அன்று உபவாசஞ் செய்து வருநாளில், ஒருநாள் அதிக மழை பெய்து வாசல் நனையவும் தம்மொழுக்கங் குன்றுதிருத்தலைக்கண்ட ஒருவன் கடைக்குச்சென்று உயர்ந்த பட்டாடை வாங்கித்தர அதை அவர் மறுத்து ஒரு சந்தல் வேண்டுமெனக் கேளாதவனுப் இப்பில் இவருக்கு உடுத்திச் சென்றனன். அதனால் பரமானந்தா விழுந்து நமஸ்கரிக்கின் இவ்வேஷ்டி அழுக்குறுமென்று அதின்மேல் நினைவுள்ளாராய் இரண்டு மூன்று நாள் செய்யுங் கடைமைகளை யொழித்துப் பெருமாளை வணங்காதிருக்கும் தேகத்தை வைத்திருப்பதில்லை யென்று ஊர்ப்புறத்திற் செல்லுகையில் உழவன் ஒருவன் எருதுங் கலப்பையுங் கொண்டுவரக் கண்டு அவனை நோக்கி இந்த உத்தரீயத்தை எடுத்துக்கொண்டு இந்த எருதுங் கலப்பையும் எனக்குத் தருகவென அவன் அவ்வாறிசையப் பரமானந்தர் தமதிரு கால்களினும் உழவுக் கயிற்றைக் கட்டி அக் கயிற்றை எருதுகளின் கால்களில் கட்டக் கூறிய அவ்வாறே உழவன் செய்ய எருதுகள் வரை இழுத்து மலை காடு முதலிய இடங்களில் செல்லச் சோகாபரமானந்தரின் தேகமெல்லாந் தேய்ந்து உயிர் நீங்குந் தருணத்திலும் சலியாதிருத்தலைக் கண்ட பெருமாள் தரிசனந் தந்து அவரது உடம்பைத் தடவித் துன்பத்தை நீக்கிக் கருணை செய்தனர்.

**சோகாமேளர்** — இவர் பண்டரியிலுள்ள ஓர் புலையர். இவர் அரிபத்தியுடையராய்க் கோயிலின் அருகுசென்று வந்தனைசெய்து வருநாளில் இவரைக் கண்டோர் உனக்கு அரிபதங் கிடைக்குமோ வென்று பரிகசிக்கவும் துதித்து வருநாளில் ஒருநாளிரவில் பெருமாள் உன்னினைவினுல் உன்னிடம் வந்தேன் உன்னை விடேனென்று கோயிலினுள் அழைத்துச் சென்று இரவு முழுதும் பேசியிருந்தனர். பொழுது விடிந்தபின் அர்ச்சகர் இது என்ன ஆச்சரியம் யாரோ உள்ளிருக்கின்றனர் என்று கதவின் தொளைவழியாகப் பார்க்க உள்ளே புலையனிருப்பதைத் தெரிந்து அப்புலையன் இவ்விடம் வருவனேனென்று மனத்தளர்வுடன் கதவைத் திறந்து வெளிவருக வென்றனர். அர்ச்சகர் புலையனை நோக்கி நீ எவ்வகை ஈண்டு வந்தாயெனப் புலையர், பெருமாள் அழைத்தால் யான் என் செய்வேனென்றனர். அர்ச்சகர் இவ்வூரை விட்டு வெளி செல்லுகவென சோகாமேளர் அவ்வாறிசைந்து சந்திரபாகை நதியின் தீரத்தில் குடிசை ஒன்று இயற்றி அதில் பெருமாளைத் துதித்துவந்தனர். ஒருநாள் சோகாமேளர் உணவருந்துகையில் ருக்மணிநாயகன் வரவில்லை என்மீதென்ன கோபம்

என்கையில் பெருமாள் அவ்விடம் வந்து தெரிசனம்தரச் சோகாமேளர் மனைவியை நோக்கி இத் தயிரைப் பெருமாளுக்கு இடுகவென்ன அவள் தயிரைப் பரிமாறினதில் சிறிது தயிர் சிதறிப் பெருமாளின் உத்தரியத்தை நனைத்தது. இதனால் சோகாமேளர் மனைவியைக் கோபிக்கும்போழ்தில் மேலிருந்த காக்கையும் பெருமாள் உத்தரியத்தில் எச்சமிட்டது. இதைச் சோகாமேளர் கண்டு ஏது நீயும் இவ்வகை குற்றஞ் செய்தாயென்று காகத்தை ஒட்டினர். அவ்விடத்தில் வந்த அர்ச்சகர் இச்செயல்களைக்கண்டு சோகாமேளரை நோக்கிப் பெருமாள் சாட்டில் வந்து உன்னோடு உண்பரோ என்று கோபித்து அவனைக் கையினாலடித்து ஸ்நானஞ்செய்து கோயிலில் சென்று பெருமாளைப் பார்க்கையில் வஸ்திரமெல்லாம் தயிராகவும் கன்னங்கள் வீங்கியும் கண்கள் செகப்புற்று ஒளிர்வதுங் கண்டு அங்கிருந்தோரை நோக்கி இது என்னவென்று வினவித் தாம்வரும்போது வேம்படியில் நடந்த காரியங்கள் பெருமாளுக்கு நிகழ்ந்திருக்கின்றன. ஐயனே! நீ ஜாதியற்றவனென்பதை நாங்களறியோம் நாங்கள் செய்த பிழை பொறுக்கவேண்டும் என்று பணிந்து சோகாமேளரை அடைந்து அழைத்துச் சென்று பெருமாளைத் தரிசிப்பித்தனர். அன்றுமுதல் சோகாமேளர் தரிசித்திருந்தனர்.

**சோகிகள்** — இவர்கள் ஆந்திரதேசத்துப் பிக்ஷைக்காரர். பேசுவது தெலுங்கு, இவர்கள் பன்றி முதலிய வளர்த்தும் பாம்பாட்டியும் அழுக்கு வஸ்திரதாரிகளாய் வீடுகள் தோறும் அலைந்து திரிவர்.

**சோசியக்கள்ளன்** — இவன் கிராமங்களிலும் வழிப்பாட்டைகளிலும் சில சக்கரங்களைப் போட்டுப் பாட்டைசாரிகளையும், ஏமாந்த பெண்களையும் வாய்ப்புரட்டால் மயக்கிப் பொருள் பறிப்பவன். உண்மையான ஜோசியனை இது குறியாது.

**சோடசகணபதிகள்**—பாலகணபதி, தருணகணபதி, பக்தகணபதி, வீரகணபதி, சக்திகணபதி, த்வசகணபதி, பிங்களகணபதி, உச்சிட்டகணபதி, இரத்தகணபதி, க்ஷிப்ரகணபதி, ஏரம்பகணபதி, இலக்ஷ்மிகணபதி, மகாகணபதி, விஜயகணபதி, நிருத்தகணபதி, ஊர்த்வகணபதி. (சை - பூ.)

1. **பால விக்னேச்வரர்** — இவர், வாழை, மா, பலா, விளா, கரும்பு முதலிய காத்தில் கொண்டவராய் ஒருமுகம் உள்ளவராய்ப் பாலசூரியப் பிரபாகாரமாய் விளங்குவோர்.

2. **தருணகணபதி** — பாசம், அங்குசம், அபூபம், விளா, ஜம்பூபலம், என், புள்ளாங்குழல் கையிலுடையவராய் ஒருமுகமுள்ளவராய் மகா பிரகாசமுள்ளவராய் விளங்குவோர்.

3. **பக்தவிக்னேசர்** — தேங்காய், மா, வாழை, சருக்கரைப் பாயசம் தரித்தவராய் ஒருமுகமுள்ளவராய்ச் சரத்கால சந்திரனையொப்ப விளங்குவோர்.

4. **வீரவிக்னேச்வரர்** — வேதாளம், வேல், அம்பு, வில், கேடகம், கட்கம், கட், வாங்கம், கதை, அங்குசம், நாகபாசம், சூலம், குந்தம், பரசு, த்வஜம் தரித்தவராய்ச் சூரியப் பிரபைபோல் விளங்குபவர். இவர் கொண்ட ஆயுதங்களுக் கொப்ப முகங்கள் கூறப்படவில்லை. ஒருமுகமே இருக்கலாம்.

5. **சக்திகணேசர்**—தொடையில்தேவியைக் கொண்டவராய் அவளைத் தழுவினவராய் அந்திவண்ணராய் உள்ளவர்.

6. **த்வஜகணாதிபர்** — இவர் கோரமுகம், சதுர்ப்புஜம் புஸ்தகம், ருத்ராக்ஷம், தண்டம், கமண்டலம், உள்ளவராய்ப் பிரகாசமுள்ளவராய் இருப்பர்.

7. **பிங்களகணபதி**—இவர் மாம்பழம், ஒரு கரத்திலும், மற்றொரு காத்தில் கல்பமஞ்சரியும், பரசு முதலிய ஆயுதங்களைக் கொண்டவராய் யானைமுகத்துடன் தியானிக்கப்படுவர்.

8. **உச்சிஷ்டகணபதி**—இவர் தாமரை, மாதுளைக்கனி, வீணைசாலிபுச்சம், அக்ஷசூத்திரம், உடையவராய் யானைமுகத்துடன் தியாணிக்கப்படுவர்.

9. **விக்கின ராஜகணபதி** — இவர் பாசம், அங்குசம், மாம்பழம், கையிற் கொண்டவராய் இரத்தவர்ண முடையவராய் ஆகுவாகன ரூடராய்த் த்யானிக்கப்படுவார்.

10. **க்ஷிப்பிர விநாயகர்**—இவர் தந்தகல்பம், ரத்நகும்ப முடையவராய், யானைமுகம் உடையவராய் இருப்பர்.

11. **ஏரம்ப விநாயகர்** — அபயம், வாதம், பாசம், தந்தம், அக்ஷமாலை, பரசு, ஐந்துசிரம், ஒன்று சிங்கமுகம், மற்றவை யானைமுகம், கனகநிறமாக த்யானிக்கப்படுவர்.

12. **லக்ஷ்மிகணேசர்**—இவர் தாமரையில் எழுந்தருளினராய் மாணிக்ககும்பம்,

அங்குசம், பாசம், செந்தாமரை யுள்ளவராய்க் கௌரவர்ணமுள்ளவராய்த் தியானிக்கப்படுவர்.

**13. மகாகணேசர்** — இவர் பத்மாசனராய், கதை, தந்தம், பாசம், கும்பம், கௌரவர்ணம், சுவர்ணவர்ணமாய், யானைமுகத்துடன் தியானிக்கப்படுவர்.

**14. புவனேசகணபதி**—இவர், கரும்பு வில், புஷ்பபாணம் பாசம், அங்குசம்உடையவராய்ச் சகலாபரண மணிந்தவராய்த் தியானிக்கப்படுவர்.

**15. நிருத்தகணபதி**—பாசம், அங்குசம், ஒடிந்ததந்தம், கல்பதருவின்மலர், உடையராய். பொன்மேனி யுடையராய், நிருத்தபதமுடையராய்த் தியானிக்கப்படுவர்.

**16. ஊர்த்வ கணபதி** — கஜவக்த்ரம், திரிநேத்ரம், ஏகதந்தம், பாசாங்குசம், ஊர்த்வபாகு, துதிக்கையில் இலட்டுகம், உடையராய்த் தியானிக்கப்படுவர்.

**சோடச சுப்ரமண்ய மூர்த்தங்கள்** —

**1. சத்திதரஸ்வாமி** -- ஒருமுகம் இரண்டுபுஜம் வாமகரத்தில் வஜ்ரம் மற்றக் கரத்தில் வேல் தரித்தவராய் அசுரவதைப் பொருட்டெழுந்த திருவுரு.

**2. ஸ்கந்த ஸ்வாமி** — ஒருமுகம், இரண்டுபுஜம் உள்ளவராய் அரையில் கோவணந்தரித்தவராய்த் தக்ஷிணகரத்தில் தண்டாயுதங்கொண்ட மூர்த்தியாயுள்ளவர்.

**3. சேநாபதிசுவாமி** — இவர் சூர்யப் பிரகாசம் உள்ளவராய்ப் பன்னிரண்டு திருக்கரங்கள் ஆறுமுகம், பன்னிரண்டு நேத்ரங்கள், உள்ளவராய்க் கரங்கள்தோறும் கேடகம், வேல், த்வஜம் முதலிய தாங்கப் பெற்றவராய்த் தேவர் இடுக்கண் தீர்த்தவர்.

**4. சுப்ரமண்ய ஸ்வாமி** — செந்நிறம், சந்திரகாந்தம் போன்ற ஒருமுகம் கேயூராதி ஆபரணங்கள் தரித்தவராய்ச் சதுர்ப்புஜம் அபயவரத முள்ளவராய், வேல், சேவற்கொடி தாங்கினவராயுள்ளவர்.

**5. கஜவாஹனஸ்வாமி** — ஒரு முகம், இரண்டு கண்கள், நான்கு திருக்கரங்கள் வேல், த்வஜம், அபயவரதம், உள்ளவராய் யானை வாகனத்திருந்து தேவர்க்கருள் செய்தவர்.

**6. சரவணபவஸ்வாமி** — அறுமுகம், பன்னிரண்டு கண்கள் பன்னிரண்டு கரங்கள், வேல், த்வஜம், பாசம், தண்டம், டங்கம், பாணம், வரதம், அபயம், வில், உடையவராய்த் தேவரது பிரார்த்தனை பொருட்டுச் சரவணத்தில் அவதரித்தவர்.

**7. கார்த்திகேயஸ்வாமி** — அறுமுகம், ஆறுதிருக்கரம வரத, குலிச, கேடகம், வாம அஸ்தங்களிலும், அபயம், வேல், கட்கம். மற்ற அஸ்தங்களில் கொண்டு தருணரவிபிரகாசராய் ஸாதுக்களால் பூசிக்கப்பட்டவரா யிருப்பர்.

**8. குமாரஸ்வாமி** — ஒருமுகம் நான்கு திருக்கரம் உள்ளவராய் வேல், வாள், த்வஜம், கேடகம் உள்ளவராய்க் குமாரமூர்த்தியாய்த் த்யானிக்கப்பட்டவர்.

**9. ஷண்முகஸ்வாமி** — சிந்தூர காந்தியுடையராய், மயில்வாகனாருடராய். ஆறுமுகமுள்ளவராய், தெய்வயானை சமேதராய். பன்னிரண்டு நேத்திரங் கொண்டவராய், வேல், பாணம், த்வஜம், கதை, அபயம், சவ்யபாகத்திலும் மற்றப் பாசத்தில் வில், வஜ்ரம், தாமரை, கேடகம், வரதம், சூலம் உள்ளவராய்த் த்யானிக்கப்படுபவர்.

**10. தாரகாரிஸ்வாமி** — இவர்,வரதம், அங்குசம், த்வஜம், கட்கம், வில், வஜ்ரம், அபயம், பாசம், சக்ரம், கட்கம், முசலம், சக்தி, இவற்றைப் பன்னிரண்டு கரங்களில் உடையராய் அறுமுகத்தோடு தாரகாசுரனைச் சங்கரித்தவர்.

**11. சேநாநீச்வாமி**—இவர் அறுமுகம் பன்னிரண்டு திருக்கரங்களு முடையராய் மேற்சொன்ன ஆயுதங்களைக் கரத்திலுடையராய்த் தேவர் இடுக்கண் தீர்த்தவர்.

**12. பிரம்ம சாஸ்த்ருமூர்த்தி** — இவர் ஒருமுகம் நான்குதிருக்கரங்களு முடையராய் வாமபாகத்துக் கரங்களில் வரதம், குண்டிகையும், மற்றக்கரங்களில் ருத்ராக்ஷமாலிகை, அபயமுடையராய்ப் பிரமதேவருக்கு உபதேசித்தவர்.

**13. வல்லிகல்யாணசுந்தரஸ்வாமி** — இவர் திருக்கரங்களில் ருத்ராக்ஷமாலிகை, அபயம், குண்டிகை, வரதம், கொண்டவராய் வள்ளி நாய்ச்சியாருடன் விஷ்ணுமூர்த்தி ஜலதாரைசத்தில் நீர்வார்க்க விவாகஞ்செய்யப் பட்டவராய்ச் சகல சுரர்களாலும் சேவிக்கப் பட்டவராயிருப்பர்.

**14. பாலஸ்வாமி** — இவர் குழந்தை புருவாய் மேற்றூக்கிய இரண்டு கரங்களை யுடையராய்க் கைகளில் தாமரைமல ரிரண்டுகொண்டு தாமரையின் னிறங்கொண்டவராய் அம்மையப்பருக் கிடையிலமர்ந்திருப்பர்.

15. கிரௌஞ்சபேதனஸ்வாமி—இவர் அறுமுகம் எட்டுப்புஜங்க ளுடையவராய், அபயம், கிருபாணம், வேல், அம்பு, சவ்ய அஸ்தங்களிலும், வரதம், குலிசம், வில், கேடகம், மற்ற அஸ்தங்களிலும் பெற்றுக் கிரௌஞ்சபேதனஞ் செய்தமூர்த்தி.

16. மயூரவாகன ஸ்வாமி — இவர் பவளநிறமாய் ஒருமுகம் வஜ்ரம், வேல் அபயம், வரதம், மயில்வாகனருடராய்த் தேவரிடுக்கண் தீர்த்தவர்.

**சோடசகிரியையாவன**—1. ருதுசங்கமனம் - நாயகியினது ருதுகாலத்தில் நாயகன் கூடு ம்படி செய்யுங் கிரியை.

2. கர்ப்பாதானம் - இது பிண்டோற் பத்தி செய்தற் பொருட்டு விவாகமான பெண் பூத்தநாள் நான்கிற்குமேல் பதினாறு நாள்களுக்குள் செய்யும் கிரியையாம்.

3. பும்சவனம் - இது பிண்டம் அசைவு டைதற்குமுன்பே இரண்டாவது அல் லது மூன்றாவது மாதத்தில் தரித்த கரு ஆண்மகவாக வேண்டிச் செய்யுங் கிரியை யாம்.

4. சீமந்தம் - இது நாலாம்மாதம் முதல் ஒன்பதாவது மாதம் வரையில் அவரவர் மரபின் வழக்கப்படி செய்யுங் கிரியை யாம். கருப்பத் திருத்தமில்லாத பிள்ளை விராத்தியனும்.

5. ஜாதகர்மம் - குழந்தை பிறந்து நீரா டினவுடன் கொப்பூழ்க்கொடி யறுப்பதற்கு முன் செய்யவேண்டிய கிரியையாம். அதா வது புதல்வன் பிறந்த மாத்திரத்தில் தந்தை தரித்திருக்கிற வஸ்திரத்தோடு ஸ்நானஞ்செய்து பொன் வெள்ளி தானியங் களைத் தானஞ் செய்தபின் பொன், தேன், நெய்சேர்த் திழைத்துச் சிசுவுக்குச் செவ் வெண்ணெய் புகட்டுதலுடன் பிதுர்க்க ளுக்கு இரண்யசிரார்த்தஞ் செய்தலாம்.

6. நாமகரணம் - இது பிறந்த மகவுக்கு 10-அல்லது 12, 16-வது நாள்களில் பிறந்த நக்ஷத்திரத்தைக் குறிக்கும் அக்ஷரங்களை முதலாகக் கொண்ட பெயரிடுவதாம். அல் லது பாட்டன் முதலானர் பெயரையிடுவ தாம்

7. சூரியாவலோகனம் - அதாவது மூன் றாம் மாதத்தில் குழந்தை சூரியனைத் தரி சிக்கச் செய்தல்.

8. நிஷ்கர்மணம் - நான்காம் மாதத்தில் குழந்தை சந்திரனைத் தரிசிக்கச் செய்த லும் சந்நியை மிதிப்பிக்கச் செய்தலுமாம்.

9. அன்னப் பிராசனம் - இது 6-வது அல்லது 8-வது மாதங்களில் குழந்தைக்கு அன்ன மூட்டுதலாம். பெண் குழந்தை யாகில் ஒற்றைப்பட்ட மாதத்தில் செய்வ தாம்.

10. சௌளம் அல்லது சூடாகரணம் - குழந்தைக்கு 1, 3, 5-வது ஆண்டில் மயிர் களைவது. ஏழாவது ஆண்டு அல்லது 8-வது ஆண்டில் காதுகுத்தல்.

11. உபநயனம் - இது குழந்தைக்குத் தீக்ஷை செய்வித்தலாம்.

12. பிண்ட விருத்தி - குழந்தையை வளர்க்கும் கிரியை.

13. காண்டோபக்கிரமணம்-வேதாத்தி யயனம் ஆரம்பிக்கும் கிரியை.

14. காண்ட மோசனம் - வேதாத்தி யயனம் முடித்தல்.

15. சமாவர்த்தனம் பிரமசாரி விர தத்தை முடிக்குங் கிரியை.

16. விவாகம் - இது பிரமசரியம் நீங்கி நற்குலத்துதித்த கன்னிகையைத் தம் மர பிற்குப் பொருந்த மணங்கொண்டு இல் லறம் நடத்தலாம்.

**சோடச மகாராஜாக்கள்** — 1. அங்கன், 2. அம்பரீஷன், 3. இரந்திதேவன், 4. சசி பிந்து, 5. சிபி, 6. சுகோத்ரன், 7. திலீ பன், 8. பரதன், 9. பகீரதன், 10. பிருது, 11. நிருகன், 12. மாந்தாதா, 13. மருத்து, 14. யயாதி, 15. கயன், 16. இராமன்.

**சோணநதம்**—மேற்கேயோடும் நதி. இதற்கு மாகதி யென்றும் பெயர்

**சோணபத்திரை** — அங்க தேசத்திலுள்ள நதி. இதன் கரையில் சுமந்துருவஷியினா சிரமம் இருக்கிறது.

**சோணபுரம்** — பாணாசுரன் பட்டணம்.

**சோணம்** — இது ஒரு நதி. The river Sone; it was the western boundary of Magadha.

**சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பி யார்** — வல்லார்கிழான் பண்ணனைப் பாடி யவர். (புறநானூறு.)

**சோணாற்றுப்பூஞ்சாற்றுப்பார்ப்பான்கௌ ணியன் விண்ணந்தாயன்** — ஆவூர்மூலங் கிழாரால் பாடல்பெற்றவன். (புற-நா.)

**சோணிதபுரம்** — சலந்திரன் பொருட்டு சிவபிரானால் நிருமித்துக் கொடுக்கப்பட்ட பட்டணம். இதில் உள்ளார் ரத்தமுண்டு யோகினிகளாய் வாழ்ந்துவந்தனர். (பாத்ம புராணம்.)

**சோணை** — 1. இது காண்டவனத்தில் மைநாக பர்வதத்திற் ரோன்றிக் கங்கையிற் கலக்கும் நதி. இது செந்நிறமுடையதாதலால் இப்பெயர் பெற்றது. இதில் சோணபத்திரர் எனும் விநாயகர் தோன்றுவர். இதில் சோணகுண்டம் என்பது ஒன்று உண்டு. சிந்துரன் பார்வதியார் வயிற்றிருந்த விநாயக மூர்த்தியின் சிரத்தைச் சேதித்து இக்குண்டத்தி லிட்டானாதலால் இப்பெயர் பெற்றது.

2. விச்வாமித்திரர் ஆச்ரமத்திற்கும் மிதிலைக்கும் இடையிலுள்ள வேறொரு நதி.

3. சோலாதன் மனைவி. (சிலப்பதிகா.)

4. திருவண்ணாமலை.

5. மகததேசத்திலுள்ள நதி.

**சோதகர்கள்** — பங்காளிகளில் எழு தலைமுறைக்குமேல் குல கோத்திரம் தெரிகிறவரையிலுள்ள ஞாதிகள். (மநு.)

**சோதகன்** — ஸ்திரீ, புருடர் நாபியை யிடமாகக்கொண்டு தீமை பேசுவிக்குந் தெய்வம்.

**சோதகை** — கிராஹக தமப்பிரச்சாதகன் விரோதியின குமரிகள். இவர்கள் ஆசாரமில்லாத இடத்தைச் சேர்ந்திருந்து தீமை புரியும் தேவதைகள்.

**சோதமன்** — சௌதர்மேந்திரன்; சௌதர்மமென்பது கற்பலோகம் பதினறனுள் முதலாவது, இநத இந்திரன் பத்திராபதியின் வேண்டுகோளால் உதயணனுக்கு மகனாகப் பிறக்கும்படி சோதவனென்னும் முனிவனுக்குக்கட்டளையிட்டனன்.(பெருங்கதை.)

**சோதவன்** — ஒரு முனிவன். இவன் சௌதர்மேந்திரனுடைய கட்டளையால் நரவாணனாக வந்து பிறந்தவன். (பெ - கதை.)

**சோதி**—நகுஷன் என்னும் வசுவின் குமரன்.

**சோதிகன்** — கத்ரு குமரன், நாகன்.

**சோதிடநூல்கள்** — வடமொழியில், பார்க்கவம், கார்க்கியம், பராசரம், பாரத்வாசம், பிரகஸ்பதீயம், ஆர்ஷயம், பௌர்ஷயம், சித்தாந்த சிரோமணி, சூர்ய சித்தாந்தம், ககோள சித்தாந்தம், ஆர்யபட சித்தாந்தமெனப் பல நூல்களும் தமிழில் வீமேசர உள்ள முடையான், உள்ள முடையான், குமாரசுவாமீயம், சாதகாலங்காரம், சாதக சிந்தாமணி, செகராஜசேகரம், சந்தான தீபிகை, கார்த்திகேயம், அம்மணீயம், சிநேந்திரமாலை, விதானமாலை முதலிய பல வுள.

**சோதிடம்** — 1. கிரகங்களின் சஞ்சாரஞ் சொன்ன கணித நூல்.

2. இது கணிதஸ்கந்தம், சங்கிதாஸ்கந்தம், சாதகஸ்கந்தம் என மூவகைப்பட்டுப் பஞ்சாங்கம் கணிக்கும்விதம், கூறும். சங்கிதாஸ்கந்தம் சகல கிரியைகட்கு நன்னாள் தீநாட்களைக் கூறும், சாதகஸ்கந்தமாவது கிரகங்களைப்பற்றிய பலா பலங்களையும் யோகங்களையும் கூறும்.

**சோதிநீர்ஏரி**—ஆப்பிரிகாகண்டத்துப் பாமா தீவிலுள்ள வாடர்லூ எரியி னீரின் மேற்பாகம். எக்காலத்தும் ஒரேசோதிமயமாய்க் காணப்படுகிறதாம். இதில் தீபாக்னி சத்திண்டென்பர்.

**சோதிமரம்** — தென் அமெரிகாவைச் சேர்ந்த பிரேசில் நாட்டில் உள்ள ஒருவகை மரம். இராக் காலங்களில் பெருஞ்சோதியாகப் பிரகாசிக்கின்றதாம். இந்தியாவிலசிற் சில இடங்களில் இவ்வித மரம் உண்டு.

**சோதிமலர்** — ஸ்வீடன் தேசத்துக் காடுகளில் ஒரு செகப்பும் பொன்னிறமுமான ஒருவகை மலர் புட்பிக்கிறதாம். அது இரவில் சோதியாகப் பிரகாசிக்கிற தென்பர்.

**சோதிமாலை** — 1. திவட்டன் புதல்வி.

2. மேகவாகனன் புதல்வி. அருக்ககீர்த்தியின் மனைவி.

**சோதிமான்** — இவன் மகவுவேண்டித் தவமியற்றிப் பெண்மகவுபெற்றுச் சோதிடரால் இந்த மகவின் பிறப்பு, தேசத்திற்கரிட்டமென வறிந்து பெட்டியிலிட்டு ஆற்றில் விட்டனன். தற்செயலாய் மகவடங்கிய பெட்டி மயனிட மகப்பட மயன் பேழையைத் திறந்து மகவிருப்பது கண்டு தீர்க்க சுமங்கலியாக என ஆசீர்வதிக்கக் கேட்ட மகவு நான் கன்னிகை. என் பிறப்பு நாட்டிற்கு அழிவென்று தந்தையால் ஆற்றில் இடப்பட்டேன் என, மயன் என் தவத்தால் மாங்கல்யத்துடன சந்திரமதியெனப் பிறக்க, என அவ்வாறே அம்மகவு தீக்குளித்து மதிதயன் குமரியாய்ப் பிறந்து அரிச்சந்திரனை மணந்தனள்

**சோதிமின்னல்** — ஐப்பசி மாதம் சோதி நக்ஷத்திரத்தில் சூரியன் வரும்நாளில் கிழக்கில் மின்னினால் மழையுண்டு.

**சோதிலிங்கம் பன்னிரண்டாவன** — மகளராட்டிரத்தின் சோமநாதலிங்கம், ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ச்சுனலிங்கம், உச்சயினியில மாகாளலிங்கம், ஓங்காரலிங்கம, ஹிமவத்கிரியில் கேதாரலிங்கம், டாகினியில்

(டெக்கான்) பீமசங்கரலிங்கம், வாரணாசியில் விச்வேச்வரலிங்கம், கோதாவரி தீரத்தில் திரியம்பகலிங்கம், சிதாபுரம் (பரலே) வைத்யநாதலிங்கம், தாருகா வனத்தில் நாகேச்வரலிங்கம், சேதுவில் இராமேச்வரலிங்கம், சிவாலயத்தில் குச்மேசலிங்கம் என்பனவாம்.

**சோதிவிருக்ஷம்** — இது இராக்காலங்களில் பிரகாசத்தைத் தருவதாம். இவ்வகையில் சோதிப்புல் என ஒன்று உண்டென்பர்.

**சோத்திரதாமா**--நாலாமன்வந்தரத்து இருடி.

**சோத்ஸாகாலி** — சந்தர புத்ரி. வருணன் புத்திரனான புட்கரன் தேவி. (பார-உத்.)

**சோநகரம்** — வாணாசுரன் பட்டணம்.

**சோபஞ்சி** — சநாசித்துக்கு ஒரு பெயர்.

**சோபனம்** — ஒரு வித்யாதர நகரம்.

**சோபனன்** — குந்தநகரத்து வேதியன், ஒரு வேதியனை வணங்கித் தன் வறுமைகூறி அவ்வேதியன் சொற்படி நந்தவனம் வைத்துச் சுவர்க்கமடைந்தவன்.

**சோபனை**—ஆயுதமகாராசன் பெண், இவள் பரீக்ஷித்தை மணக்கையில் நான் நீர்விளையாடேன் அப்படி நேரிடுகையில் உன்னை விட்டு நீங்குவேன் என்று அவனுடன் சிலநாளிருந்து ஒருமுறை நீர்விளையாடுகையில் மறந்த தந்தையால் கொடிய குமரர் பிறக்கச் சாபம் பெற்றவள். இவள் குமரர் சலன், வலன், நலன்.

**சோபாகன்** — சண்டாளனுக்குப் புல்கஜாதிஸ்திரீயிடம் பிறந்தவன். இவன் தொழில் அரசனுத்தரப்படி கொலைசெய்வது. (மநு.)

**சோபாரோகம்** — நரம்புகளில் வீக்கம் உண்டாகி வாந்தி, தேகபாரிப்பு, ஊதல், அதைப்பு, உண்டாகும். இதனைச் சோகை யெனவும் கூறுவர். இது விஷம் தேகத்தில் ஊறுதலாலும், மலை வாசம், நீர்க்கரை வாசம், சாம்பல் மண் முதலிய தின்பதால் உண்டாம். இது வாதசோபை, பித்தசோபை, சிலேஷ்மசோபை, வாதபித்தசோபை, வாதசிலேஷ்மசோபை, சிலேஷ்மபித்தசோபை, திரிதோஷசோபை, அபிகாதசோபை, விஷசோபை முதலாக நிசசோபை; ஆகந்துகசோபை என்பன. இவை நீர்ப்பேதி, அடைகஷாயம், சங்கபாயஸம், சாலாபாவனமேஷமுத்ரம், குடமண்ரோம் முதலியவற்றால் வசமாம்.

**சோமகன்** — 1. பாரதவீரரில் ஒருவன், (சங்கமன்மசம்) புத்திரன் துருபதன், பாஞ்சாலதேசாதிபதி.

2. கிருஷ்ணமூர்த்திக்குக் காளிந்தியிடத்துதித்த குமரன், இவற்கு ஒன்பதின்மர் தம்பியர்.

3. சகதேவன் குமரன், இவனுக்கு 100 குமரர் சேஷ்டன் சுகந்தகிருது. (சுசன்மகிருது.)

4. பிரமன் உறங்குகையில் வேதங்களைத் திருடிச்சென்று விஷ்ணுமூர்த்தியால் கொலையுண்ட அசுரன்.

5. ஒரு அரசன், இவன் குமரன் சந்தன். இவன் இந்தக் குமரன் போதாமல் ஆசாரியரை வேண்ட ஆசாரியர் சந்தனைப் பசுவாக்கி யஞ்ஞம் செய்தனர். அதனால் இவனுக்கு 100 குமாரர் பிறந்தனர். இவன் சகதேவன் குமரனா யிருக்கலாம்.

**சோமகர்** — ஒரு மகருஷி, இவர்க்கு யமுனையில் அர்க்கதந்தர் எனும் முனிவர் பிறந்தனர்.

**சோமகாந்தன்** — 1. சௌராட்டக தேசத்தரசன், இவன் தேவி சுதன்மை, இவன் குமரன் ஏமகண்டன். இவ்வரசன் தொழுநோயால் அரசைப் புதல்வனிடம் ஒப்புவித்துப் பிருகு முனிவர் ஆச்சிரமஞ் சென்று தன்குறை கூற முனிவர் அரசனை நோக்கி நீ முன்பிறப்பில் சித்ரூபன் என்னும் வைசியனுக்குச் சுலோசனையென்னும் தேவியிடம் காமந்தன் என்னும் பெயருடன் குடும்பினியென்பவளை மணந்து பஞ்சமகாபாதகங்களைச் செய்ய அரசன் நாட்டைவிட்டகற்ற நீங்கிவனத்திற் சென்று ஒரு வேதியனைக்கொன்று பிரமகத்தியால் பிடியுண்டு வார்த்திகப்பருவத்தில், ஒருவேதியனுக்கு நீ அபகரித்த பொருளைத் தானஞ் செய்து மீண்டும் வேதியரை அழைக்க அவர்கள் உன்னிடம் தானம் வாங்காது திருப்பணிசெய்யக் கட்டளையிட அந்தப் புண்ணிய பலத்தால் அரசனாய் அதுநீங்கிப் பாபபலம் அநுபவிக்கும் காலம் வந்தமையால் தொழுநோயால் துன்புறுகின்றனை யென்றனர். அரசன் நம்பாமையால் அவனிடமிருந்து அநேக கரிக்குருவிகள் தோன்றி அரசனை வருத்தின. அரசன் அஞ்சி அபயம் செய்ய இருடி, கமண்டல நீரை அவன்மீது தெளிக்க அவனுடலிலிருந்து ஒரு பூதம் தோன்றி நீ முற்பிறப்பில் என்னைக் கொன்றனை; உன்னை விடேன் என இருடி அதனையு மடக்கி நோயை நீக்க நற்பதம் பெற்றவன்.

2. இவன் கௌடதேசாதிபதி, இவன் குமரன் வம்சவிவர்த்தனன், இவனற்குணை நற்செயலுடையனாயினும் கர்மத்தால் மகோதரவியாதி பெற்று வில்வாரண்ய மடைந்து சிவ பூஜையால் நீங்கப்பெற்றவன்.

**சோமதண்டம்** — காவிரியின் சங்கமத்திலுள்ள தீர்த்தம். (சிலப்பதிகாரம்.)

**சோமகேசன்** — ஒரு பாரத வீரன்.

**சோமகேயாதிகள்** — பாஞ்சாலன் படைத்துணைவர்.

**சோமசமஸ்தம்** — அக்நிஷ்டோமம், அத்யக்னிஷ்டோமம், உத்தியம், சோடசி, அதிராத்ரம், அப்தோரியாமம், வாஜபேயம் என்னும் யாகபேதங்கள்.

**சோமசருமன்** — 1. அக்நிசருமனைக் காண்க.

2. சோமநாதத்தில் திருக்கார்த்திகையில் சிவதரிசனஞ் செய்யச்சென்று சந்நிதானத்துத் திருவிளக்குக் கீழ்வீழ்ந்து அவிழ்ந்து போகக்கண்டு சும்மா விருந்து மறுபிறப்பில் பேயாயினவ.

3. சாமாமுனிவனுக்குத் தந்தை.

4. சாலிஹுகன் குமரன், இவன் குமரன் சாத்தனுவன்.

**சோமசிரவசு** — ஜநமேஜயன் புரோகிதன்.

**சோமசீதளமகாராசன்** — காசியிலாண்ட பௌத்த அரசன், இவன் குமரன் உக்ர சீதளன்.

**சோமசுந்தர பாண்டியன்** — மலையத்துவச பாண்டியன் தவத்தால் திருவவதரித்த தடாதகைப் பிராட்டியாரென்று திருப்பெயர்கொண்ட பார்வதிபிராட்டியாரைத் திருமணஞ்செய்ய எழுந்தருளிய சிவமூர்த்தியிச்சையாற் கொண்ட திருவுரு. இவர், தடாதகைப் பிராட்டியாரைத் திருமணஞ் செய்துகொண்டு அம் மணக்கோலந் தரிசிக்கவந்த பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர்கள் பொருட்டு வெள்ளியம்பலத் திருநடன தரிசனம் தந்து, திருமணத்தில் தேவ இருடியர் உண்டு மிகுந்த பொருள்கள் அதிகப்பட் டிருப்பதைத் தேவியார் திருவாய்மலரத் தமது குடையாளாகிய குண்டோதரனுக்கு அன்னமிடச் செய்து, அவை பற்றாமையால் இருந்த மற்றப்பாகமாகாதவைகளையும் உண்டு பசி தீராது வருந்தியவனுக்கு அன்னக்குழி அருளி, நீர் வேட்கையால் வருந்தி அவன் எரி, குளம் முதலிய வறள உண்டும் பற்றாது வருந்தக் கண்டு வைகையை வருவித்தவர். தடாதகையாரின் தாய் கடலாட விரும்பிக் குமரியுடன் கூற அம்மையார் நாயகர்க்குக் கூறச் சிவமூர்த்தி எழு கடலையும் இறந்த காஞ்சனமாலையின் கணவனையும் வருவித்துக் கடலாடச்செய்து உக்கிரகுமார பாண்டியனைப் பெற்று அவனுக்குத் திருமுடி சூட்டி வேல், வளை, செண்டு அருளி, அவற்றைக் கடல, இந்திரன், மேரு இவர்களின்மேல் எறியக் கட்டளை தந்து திருக்கோயிலில் எழுந்தருளி (சுச) திருவிளையாடல் புரிந்தவர்.

**சோமசுந்தரபாதசேகரன்** — இவன் வங்கிய பாத பாண்டியனுக்குப் பின் அரசு செய்தவன். சோழனை மடுவில் வீழ்த்தியவன்.

**சோமசுந்தரமூர்த்தி** — பாணபத்திரர் பொருட்டுப் பாண்டியன் பொன்னறை யிடத்துள்ள பொருள்களையெல்லாங் கொடுத்துப் பிறகு கொடுக்க இல்லாமையால் சேரமான் பெருமாளிடம் திருமுகப்பாசுரம் "மதிமலி புரிசைமாட்க் கூடற்பதிமிசை நிலவும் பானிறவரிச்சிறை, யன்னம்பயில் பொழிலாலவாயின், மன்னியசிவனியான் மொழிதருமாற்றம், பருவக்கொண் மூஉப் படியெனப் பாவலர்க், குரிமையினுரிமையி னுதவ யொளிதிகழ், குருமாமதி புரை குலவிய குடைக்கீழ்ச், செருமாவுகைக்குஞ் சேரலன் காண்க. பண்பால் யாழ்வல பாணபத்திரன், றன்போலென்பாலன்பன்றன்பால், காண்பது கருதிப் போந்தனன், மாண்பொருள் கொடுத்துவர விடுப்பதுவே" என்று வரைந்துகொடுத்துக் கனவிடை சேரமானுக்கும் கட்டளை தந்து பாணபத்திரரை யனுப்பிப் பொருள் கொடுப்பித்தவர்.

2. செண்பகமாறன் தன் மனக் கருத்தைத் தெரிவிக்கும்படி பொற்கிழி தூக்கிப் புலவர்களைக் கேட்கப் புலவர்கள் பலரும் பலவாறு பாட அரசனது எண்ணம் சரிவாராமையால் தருமி எனும் சிவவேதியர் தமக்கு அப்பொருளைக் கொடுப்பிக்கும்படி வேண்டச் சோமசுந்தரக்கடவுள் "கொங்குதேர் வாழ்க்கையஞ் சிறைத்தும்பி காமஞ் செப்பாது கண்டது மொழிமோ, பயிலியது கெழீஇய நட்பின், மயிலியற் செறியெயிற்றரிவை கூந்தலி, னறியவுமுளவோ நீ யறியும் பூவே" என்னும் திருப்பாசுரந் தரப்பெற்று அதனைப் பாண்டியனுக்குக் காட்டப் பாண்டியன் களிப்புற்றுப் பொற்கிழிதர இருக்கையில் நக்கீரர் இப்

பாட்டில் குற்றங்கூறத் தருமி இறைவனிடம் குறையிரக்க இறைவன் புலவர்போற் சங்கத்திற்சென்று "அங்கம் வளர்க்க அரிவாளி னெய்தடவிப், பங்கப்பட விரண்டு கால்பரப்பிச் — சங்கதனைக், கீர்கீரென வறுக்குங் கீரனோ வென்கவியைப், பாரிற் பழுதென்பவன்" எனக் கூறக்கேட்ட நக்கீரர் மறுவிடைதர அவரைச் சங்கப்பலகையினின்று நெற்றிக் கண்ணெருப்பால் பொற்றாமரைத்தீர்த்தத்தில் விழ வீழ்த்தி அவர் அபராதக்ஷமையாகக் கைலைபாதிகாளத்திபாதியந்தாதி பாடி வேண்ட அருள் செய்து இலக்கணம் அகத்தியரிடம் வாசிக்கக் கட்டளை செய்தவர்.

**சோமசுவாமி** — ஒரு வேதியன், இவன் ஒழுக்கம்நீங்கி மதங்கியைப் புணர்ந்து வடவனத்தில் முத்திதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சோமவாரதினம் விரதமிருந்துஇறந்து யமபடரினீங்கி முத்தியடைந்தவன்.

**சோமசூடாமணி பாண்டியன்** — வம்சவிபூஷண பாண்டியனுக்குக் குமரன்.

**சோமசேகர பாண்டியன்** — மணவூர் என்னும் பாண்டிநாட்டரசன், உக்கிரகுமார பாண்டியனுக்குத் தன் குமரி காந்திமதியை மணஞ்செய்வித்தவன்.

**சோமச்சிரவஸன்**—சுருதச்சிரவசுவின் குமரன்.

**சோமச்சிரவம்** — ஒரு புண்ணிய தீர்த்தம், இதனருகில் பாண்டவரை அங்காரவருணன் என்னும் காந்தருவன் பயமுறுத்த அருச்சுனன் அவனை யெதிர்த்து யுத்தம் செய்து வென்றனன். பின்பு அந்தக் காந்தருவன் சித்திரரதன் என்று பெயர் வைத்துக்கொண்டு அருச்சுனனிடம் நட்புக்கொண்டனன்.

**சோமதத்தன்** — 1. கிருசாசுவன் குமரன், இவன் அநேக யாகங்களைச் செய்தான்.

2. குசாசுவன் குமரன், இவன் குமரன் காகுத்தன்.

3. பூர்ச்சிரவனுக்குத் தந்தை, பாகுலீகன் குமரன், இவன் சினியைக் கொல்லச் சிவனையெண்ணித் தவமியற்றிப் பெறாது அவன் சந்ததியாரைக் கொல்ல வரம்பெற்றவன். இவன் குமரர் பூரி, பூரிசிரவசு, சலன்.

**சோமதீர்த்தம்** — கூர்ச்சர தேசத்திலுள்ள பிரபாஸதீர்த்தம், இதில் சந்திரன் ஸ்நானஞ்செய்து தக்ஷசாப விமோசனமடைந்தனன்.

**சோமதேவன்** — வருணனுக்கு இரத்நம், அம்புப்புட்டில் முதலிய கொடுத்தவன். இவன், பவனிடம்பெற்ற தேரால் அசுரரைச் செயித்தனன்.

**சோமதை** — சூளியின் தேவி, இவள் குமரன் பிரமதத்தன்.

**சோமநந்தி** — 1. உமாதேவியார் தேவாசியாகத் தவஞ்செய்கையில் வந்த அசுரன், பிராட்டியைக் கண்டு ஞானோதயமடைந்து பணிந்து திருவடியில் தவமுடியும் காலம் வரைக் காத்திருந்து பிராட்டியார் சிவபெருமானை யடைய அவருடன் கைலையடைந்து நந்தியுடன் காக்குந்தொழில் பூண்டு கணநாதனானவன். இவனுக்குப் புலியுரு. (சிவமகாபுராணம்).

2. சிவகணத்தலைவரில் ஒருவர். கைலாயத்தில் கானஞ்செய்பவர். (சிவரஹஸ்.)

**சோமநாதம்** — கூர்ச்சரத்திலுள்ள சிவத்தலம், சந்திரனுக்கு க்ஷயரோகநீக்க வருளிய திருத்தலம்.

**சோமபர்** — 1. பிரமன் சபையிலுள்ள தேவர், பிதுருக்களைக் காண்க.

2. இவர்க்கு - ரேணுகை, ரேணுகன் இருவரும் சாமகையிலிருந்து பிறந்த புத்ரர். (பார - அநு.)

**சோமபன்** — இராஜசூயஞ்செய்யத் தகுதியுள்ளவன்.

**சோமமகாராஜன்** — இந்த அரசனுக்கு (௧00) தேவியர். மூத்தமனைவிக்கு மாத்திரம் குட்டநோய்கொண்ட ஒரு குமரன் உண்டு. மற்றவர்க்குப் புத்திரபாக்கியம் இலாததைக்கண்ட அரசன் விசனமடைந்து ஒரு முனிவரிடஞ்சென்று தங்குறை கூறி யாசித்தனன். இருடி, அந்த மூத்த மனைவியின் புத்திரனாகிய குட்டரோகியை யாகத்தில் வளர்ந்து தேவர்களுக்கு அவி தந்தனர்; அதனால் நூற்றுவருக்கும் கருவுண்டாயிற்று. யாகஞ் செய்வித்த முனிவர் சிசுஅத்தி தோஷத்தால் நரகமடைந்தனர். அரசன் இறந்து சிசுஅத்தி செய்ததால் ஆதரிச்னம் செய்து நல்வழி அரசு செலுத்தியதால் சுவர்க்கம்புக இருக்கையில் அங்குத் தனக்கு யாகஞ் செய்வித்த முனிவரைக்கண்டு விசனமுற்றுக் காரணம் வினவுமுன் சிசுஅத்திதோஷங் கூற அரசன் நன்றிமறவாது யமனையடைந்து தன் புண்ணியத்தில் பாதி கொடுத்து முனிவரை நரகத்தினின்று சுவர்க்கம்புகச் செய்தவன்.

**சோமமுனிவர்** — திருமூலர் மாணக்கரில் ஒருவர். (திருமந்திரம்.)

**சோமம்** — யஞ்ஞத்தில் உபயோகப்படுத்தும் ஒரு கொடி விசேஷம்.

**சோமரோகம்** — துக்கம், ஆயாசம், மிகு சையோகத்தால் மூத்ரம் அதிகரித்துக் கீழ் வயிற்றில் சேர்ந்து அடிக்கடி நீரிறங்கும். இதனால் தேகம் சந்திரனைப்போல் வெளுக்கும். நாளுக்குநாள் பலவீனமாய் முகம், கன்னம், உதடு மூன்றும் சுஷ்கிக்கும். அதிதாகம், நாவறட்சியுண்டாம்; இது சந்திரனைப்போல் தேகத்தை வெளுக்கச் செய்ததால் சோமரோகம் எனப் பெயர். இதனை வாழைப்பழ ரஸாயனம், சீந்தில், சர்க்கரை முதலியவற்றால் வசம்செய்ய வேண்டும்.

**சோமல்லதை** — இது ஒருவகைக் கொடி. இது காச்மீரதேசத்துக் கணவாயிடத்திலும், பூனாவின் காட்டுப் பிரதேசங்களிலும் வளருகிறது. இது கொடிக்கள்ளியைப் போன்று வெண்மையான பூங்கொத்துக்களைப் பெற்றிருக்கிறது. சிறிது காரமுள்ளதாகவு மிருக்கிறது. வேதத்திற் கூறப்பட்ட சோமபானப்பூண்டு இது என்றே கூறுகின்றனர்.

**சோமவாரவிரதம்** — இது கார்த்திகைமீ திங்கட்கிழமை விடியல் ஸ்நான முதலிய செய்து சிவபூசை முடித்து வேதியதம்பதிகளைச் சிவமூர்த்தியாகவும், பிராட்டியாகவும் பாவித்துப் பூசை முடித்து அவர்களுக்கு அன்ன முதலிய உதவிச் சிவமூர்த்திக்குப் பஞ்சாமிர்தத்தால் அபிஷேக முதலிய நடத்தி உபவசித்தலாம். இது சந்திரன் சிவமூர்த்தியை யெண்ணி விரதமிருந்து சோமன் என்னும் பெயரும் சடையினின்று நீங்காதிருக்கும் வாழ்வும் அடைந்த நாள். இதை அநுட்டித்தோர் சீமந்தினி முதலியவர்;

**சோமவ்வை** — உற்படரைக் காண்க.

**சோமன்** — 1. பிரசாபதிக்கு மநஸ்வநியிடம் பிறந்தவன், இவன் மனைவி மனோகரி, குமாரர் புரோசனன், வர்ச்சிகன், சிசிரன், பிராமணன், வருணன், பெண் பிரதை. இவளுக்கு 10 காந்தருவர் கணவராயினர்.

2. வசுக்களில் ஒருவன்.

3. சந்திரன்.

4. சண்முகசேநாவீரன்.

5. அக்நிமுகனுக்குச் சேநாபதி.

6. இவன் வேதியன் காமத்தால் இழிகுலப் பெண்களைப் புணர்ந்தவன். தேவி சுசீலை, இவள் நல்லொழுக்க முள்ளவள். (காவிரிபுராணம்.)

7. தினகரராஜ புத்திரனாகிய இவன் விளையாடிக்கொண்டிருக்கையில் ஒரு வித்வான் கைகொட்டி யழைக்க இவன் தன்னிடம் வித்வான் யாசிக்கிறதாக எண்ணித் தலையிலணிந்திருந்த சுட்டியைப் பிடுங்கிக் கொடுத்தவன். இதனைத் தினகர வெண்பாவிற் "கையை விரித்தழைக்கக் கண்டு குழந்தைசோமன், செய்ய சுட்டி யீந்தான் தினகரா - பையவே, தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற் றோன்றாமை நன்று" பின்னும் "நிழலருமை வெய்யிலிலே நின்றறிமீ னீசன், கழலருமை வெவ்வினையிற் காண்மின் - பழகு தமிழ்ச், சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை, புல்லரிடத்தே யறிமின் போய்" எ-ம். கூறியிருக்கிறது.

8. திரிபுவனம் எனும் ஊரிலிருந்த ஒரு பிரபு. திரிபுவனம் திருவிடைமருதூர்க்குப் போகும் வழியில் திருநாகேச்சுரத்திற் சமீபத்திலுள்ளது. இவர் ஒட்டக்கூத்தரை கொல்லவந்த இனத்தாரினின்று தப்புவித்தவர். கர்ணபரம்பரை.

**சோமாசிமாறநாயனர்** — சோணாட்டில் திருவம்பரென்னுந் தலத்தில் சிவ பக்தி சிவனடியவர் பக்தியிற் சிறந்து சிவ வேள்விகள் செய்து திருவாரூரடைந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தொழுது அவரிடம் அன்புடையவராய்ச் சிவ பதம் அடைந்தவர். (பெ-புராணம்.) கி. பி. 9ஆம் நூற்றாண்டு.

**சோமாசியாண்டான்** — எழுபத்தினாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர், மேனாட்டில் இருந்தவர். (குருபரம்பரை.)

**சோமாபி** — சகதேவன் குமரன், இவன் குமரன் சுருதசிரவசு.

**சோமாஸ்கந்தம்** — சிவமூர்த்தியும் உமையும் கந்தமூர்த்தியுடன் எழுந்தருளியிருக்கும் திருக்கோலம்.

**சோமுகன்**—1. சிவபூதகணத்தவரில்ஒருவன்.

2. அக்நிமுகன் சேநாபதியரில் ஒருவன் விரமாபுரந்தரனால் மாண்டான்.

**சோமி** — ஆற்றூரிலிருந்த ஒரு தாசி, தமிழில் வல்லவளா யிருந்தவள். காளமேகரால் பாடப் பெற்றவள்.

**சோம்பிதம்** — விச்சுவரூபன் சிரத்தி லொன்று. இது கபிஞ்சலப் பறவையாயிற்று.

**சோலையப்பன்** — இவர் முத்துக்கிருஷ்ண பூபாலன் தமரர். இவர் கொடையாளர் புலவர்க்குக் கொடுத்துப் புகழ் பெற்றவர். இவரைச் சவ்வாது புலவர், "அலையான் கவடுபடா ஞருடனுங்காயான், இலையென் பதோர் நாளுமில்லை - கலைநேர்ந்த, சாலை முத்துகிருஷ்ணனருள் சற்குணசிந் தாமணியைச் சோலையென்று சொன்னவாரார் சொல்" எனப் பாடினர்.

**சோவனார்** — ஒரு வீரசைவர், இவர் சிவதரிசனமில்லாது அன்ன முண்ணுமை யறிந்த சமணர், இவரைத் தங்கள் இருப்பிடத்துக் கொண்டுபோய் ஜினனைச் சிவமூர்த்தியென்று வணங்கச் செய்தனர். இவர் நோக்கம் பட்டதும் ஜைன விக்கிரகம் பொடியாயிற்று.

**சோழஅரசர்கள்** — சோழநாடு தென்னிந்தியாவில் ஒரு பெரும்பாகம். சோழர்கள் தென்னிந்தியாவின் கீழ்ப்பாகத்தையும், பாண்டியர்கள் தென்பாகத்தையும், சேரர்கள் மேல்பாகத்தையும் ஆண்டனர். இவர்கள் அசோகர் காலத்துக்கு முற்பட்டவர்கள் என்று கிரீக் சரித்திரக்காரர் கூறியிருக்கின்றனர். A. D. 2-ம் நூற்றாண்டில் உறையூர் இவர்களுக்கு இராஜதானியாக இருந்தது. 7-ம் நூற்றாண்டில் மலைக்கூற்றம் (கும்பகோணம்) இராஜதானியாக இருந்தது. 10-ம் நூற்றாண்டில் தஞ்சாவூர் இராஜதானியாக இருந்தது. டாக்டர் பர்னல் என்பவர் 10-ம் நூற்றாண்டில் கங்கைகொண்ட சோழபுரம் இராஜதானியாக கூறுகிறார். சோழர்களுக்குப் புலிக்கொடி இது பல்லவர்களிடத்திலிருந்து பிடுங்கிக் கொண்டது. இராஜராஜன் காலம் முதற் கொண்டு சோழ வம்சம் தெரியவரினும் (A. D. 1023-ல்) இராஜராஜன் காலத்துக்கு முன்னிருந்த சோழர்களைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. Lovis Rice என்பவர் கூறுகிறபடி இராஜராஜனுக்கு முன் மைசூருக்குக் கிழக்கில் பின்வரும் சோழர்கள் அரசாண்டதாகக் கூறப்பட்டுள்ளது.

1. ஆதித்தியவர்மராஜேந்திர சோழன் A. D. 867 io 927.
2. வீரசோழ நாராயணராஜன் 927 to 977.
3. தாசோத்தியராயன்.
4. பராந்தகராய அரிமாலி.
5. திவ்விய ராஜன் அல்லது தேவராய சோழன்.
6. அரிவரிதேவன் அல்லது திரிபுவன வீரதேவசோழன் 986 to 1023.

இந்தச் சோழர்கள் டாக்டர் பர்னல் கூறுகிறபடி A. D. 850 to 1023 இந்தியாவின் வடபாகத்திலும் அரசாண்டார்கள் சோழர்கள் அரசாட்சி B. C. 250-ல் இருந்ததாக அசோகன் சாஸனத்தினல் தெரிகின்றது. பாண்டியர்கள் அரசாட்சிக்கு முற்பட்டதாகத் தெரியவருகிறது. எவ்வாறெனில் சோழர்களுடைய பெண்ணைப் பாண்டிய நாட்டை ஸ்தாபித்த முதல் பாண்டியன் மணம் புரிந்ததாகத் தெரிகின்றது.

சிங்கள சரித்திரகாரர்கள் B. C. 247-ல் சோழர்கள் இலங்கையை எதிர்த்து அதை (44) வருஷம் ஆண்டதாகக் கூறுகிறார்கள். அதற்கு (100) வருஷத்திற்குப் பிறகு மறுபடியும் படை யெடுத்தனர். மூன்றும் படை யெடுப்பு A. D. 110 சிங்களர் சோழ ராஜ்ஜியத்தின்மேல் A. D. 113 படை யெடுத்தார்கள். அதுவன்றியும் சோழனோடு பகைத்த பாண்டியனுக்கு உதவியாக 10-ம் நூற்றாண்டில் ஒரு பெருஞ் சேனையை அனுப்பினர். இதில் பாண்டியன் தோல்வி யடைந்ததால் சோழர்கள் மீண்டும் சிங்களத்தின்மேல் படையெடுத்து அபஜயப்பட்டார்கள்.

ராஜராஜன் காலத்தில் கிழக்குச் சாளுக்கியர்களுக்கும் சோழர்களுக்கும் சம்பந்தம் இருந்தபடியால் வேங்கநாடும் கலிங்கநாடும் சோழ ராஜ்யத்தைச் சேர்ந்தன. இராஜராஜன் இலங்கையை அரசாண்ட 4-வது மிகுண்டுவின் அதாவது 1023 A. D. காலத்தவன் என்று தெரிகின்றது. இராஜ இராஜன் A. D. 1059 இலங்கையின்மேல் படை யெடுத்து ஜெயித்து மிகுண்டுவைச் சிறைப்படுத்தினன்.

இராஜராஜேந்திரசோழன் அல்லது குலோத்துங்க சோழன் I A. D. (1064 - 1113) இவன் மிக்க பராக்கிரமுள்ளவன். தன்னுடைய அரசாட்சியை ஒரிஸ்ஸா வரையில் பரவசெய்து பாண்டிய அரசாட்சியைத் தன்வசப்படுத்திப் பல்லவர்களைக் காஞ்சியிலிருந்து துரத்தினன். (11)-ம் நூற்றாண்டில் வங்காளத்தை செயித்தான். சோழர்கள் முதலாவது சோமேஸ்வரன் காலத்தில் மேற்குச் சாளுக்கியர்களை நாசம் செய்தார்கள். அநேக ஜைனர்களுடைய கோயில்களை இடித்துத் தகர்த்தனர்.

குலோத்துங்க சோழனுக்கு I வீரன் ராஜேந்திரசோழன் (2) கோப்பரகேசரி வர்மன், கோவிராஜகேசரிவர்மன் என்று பெயர்கள் உண்டு. இவன் ஆகவமலவன் சோமேஸ்வரதேவன் என்னும் மேற்குச் சாளுக்கிய அரசனைத் துங்கபத்திரைக்கு அருகில் வென்றான். இவன் விக்ரம பாண்டியன் குமாரனாகிய வீர பாண்டியனைச் செயித்து இவன் சகோதரனாகிய கங்கைகொண்ட சோழனை மதுரைக்கு அரசனாக்கினான். இவன் தந்தை இறந்த பின் சில காலம் இலங்கையைத் தன் வசப்படுத்தி வைத்திருந்தான். மிகுண்டுவின் குமாரனாகிய கசியபன் சோழப் பிரதிநிதியை இலங்கையிலிருந்து ஒடடித் தானே அரசனாயினான்.

கசியபன் இறந்த பிறகு இலங்கை அரசு மந்திரியாகிய லோகேஸ்வரன் குமரன் விஜயபாகு I என்பவனால் கவரப்பட்டது. விஜயபாகு சோழர்களைத் துன்பப்படுத்தியதால் குலோத்துங்கன் விஜயபாகுவின் தூதனை மூக்கையும், காதையும் அறுத்து அனுப்பினான். இதனால் ஒரு போர் உண்டாயிற்று. சோழர்கள் சிங்கள நாட்டிற்குள் புகுந்து மாந்தோட்டியில் இறங்கி ராஜதானியைப் பிடித்துக் கொண்டார்கள். அரசன் புறங்காட்டி ஒடினான். சோழர்கள் நகரத்தை நாசப்படுத்தினர். விஜயபாகு மீண்டும் படையெடுத்துச் சோழரை இலங்கையிலிருந்தும் துரத்தினான்.

குலோத்துங்கன் I Died. 11.13. அவன் குமரன் விக்கிரம சோழன் காலத்தில் சிங்களர் படையெடுத்துவர விக்கிரம சோழன் அவர்களைத் துரத்தி அடித்தான்.

ஆடுதொண்டை சக்கிரவர்த்தி - இவன் குலோத்துங்க சோழன் I பிள்ளையென்று கூறப்படுகின்றான். இவனுக்குக் கரிகால சோழன் என்றும் பெயர்.

சாரங்கதரன் என்பவன் குலோத்துங்கனுடன் I கூட பிறந்தவன் என்று கூறுவதன்றியும் அப்பகாவியம் என்று அப்பகவியினால் இயற்றப்பட்ட தெலுங்கு இலக்கணத்திற்கு உரையெழுதிய நன்னயபட்டர் சாரங்கதரனை ராஜராஜன் குமரன் என்று கூறியிருக்கின்றனர். இது சாரங்கதரன் சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இது நம்பதக்கது அன்று. இந்தச் சாரங்கதான் கேசரி வம்சத்தைச் சேர்ந்தவனாகக் காணப்படுகிறது.

சிங்கள சரித்திரத்தின்படி பராக்கிரமபாகு (1153 - 1186) குலசேகரபாண்டியன் எதிர்த்து ராமேச்வரத்திற்கு அருகிலுள்ள நாடுகளைக் கைப்பற்றிக் குலசேகர பாண்டியனைச் சிம்மாசனத்தைவிட்டு நீக்கி அவன் குமரன் வீரபாண்டியனைச் சிம்மாசனம் ஏற்றினான். நீக்கப்பட்ட குலசேகர பாண்டியன், சோழர்கள் உதவியால் சிங்களரை எதிர்த்துத்தோற்றான். இதில் சோழ நாட்டின் சிலபாகம் சிங்களர் வசமாயிற்று. குலசேகரன் சிங்களரிடம் சரண் அடைந்தான். மறுபடியும் அவனைச் சிம்மாசனத்தில் ஏற்றினர். ஜெயிக்கப்பட்ட சோழநாடு வீரபாண்டியன் வசமாயிற்று

**சோழநாடு** — கடல் கிழக்கு, வெள்ளாறு தெற்கு, கோட்டைக்கரை மேற்கு, ஏணாடு வடக்கு இருபத்துநாற்காதம் எல்லையாகக் கொண்ட பூமி "கடல் கிழக்குத் தெற்குக் கரை பொருவெள்ளாறு, குடதிசையிற் கோட்டைக் கரையாம் - வடதிசையில், ஏணாட்டுப்பண்ணை யிருபத்து நாற்காதஞ் சோணாட்டுக்கெல்லையெனச் சொல்" என்பதால் அறிக. இது காவிரியால் வளம் பெற்று அநேக சிவாலய விஷ்ணுவாலயப் பிரதிஷ்டைகளுடைய புண்ணிய பூமியாம்.

**சோழநாட்டுப் பிடவூர்கிழார்மகன் பெருஞ்சாத்தன்** — 1. இவன் வேளாளரில் உழுவித் துண்போன், முடியுடை வேந்தர்க்கு மகட் கொடை நேர்தற்குரியன்.

2. இவன் வேளாளன். மதுரை நக்கீரரால் பாடல் பெற்றவன். (புற-நா.)

**சோழர்கள்** — இவர்கள் தமிழ் நாட்டில் தொன்று தொட்டு அரசாண்டு வந்தவர்கள். சோணாட்டை அரசாண்டவர்கள். இது இவர்களுக்குக் குடிப்பெயர். தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தருள் முதல்வர். இம்மூவேந்தர்களின் அரசு, (டெலாமி) கூறியபடி A-D இரண்டாம் நூற்றாண்டிலும், (பெரிப்லஸ்) மூன்றாம் நூற்றாண்டிலும் இருந்ததாகக் கூறுவர். சோழர்களது ராஜதானி இரண்டாம் நூற்றாண்டில் மேலைக் கூற்றம். (கும்பகோணம்) பின்னர் மூன்றாம் நூற்றாண்டின் உறையூர் இராஜதானியாயிருந்தது. ஏழாம் நூற்றாண்டில் தஞ்சை இராஜதானியாயிற்று. சோழ ராட்சியம் முதலில் நாகர் எனும் ஒருவித காட்டுச்சாதியாரால் ஆளப்பட்டு வந்தது. அவர்கள் பட்டணம் நாகப்பட்டணம் (உரகபுரம் எனப்பட்டது: பிறகு அவர்களை யோட்டி

இவர்கள் அரசாண்டார்கள். இரண்டாம் நூற்றூண்டில் தொண்டைநாடு (பொடாலமி) கூறியபடி நாமதர் எனும் ஜாதியாருக்கு நாடாயிருந்தது. A-D ஏழாம் நூற்றூண்டில் ஹூயூன்ஸங் கூறியபடி காஞ்சி ஒரு சிற்றரசாயிருந்தது. இக்காஞ்சி ஏழாம் நூற்றூண்டின் மத்தியில் மேலைச்சாளுக்கியரால் செயிக்கப்பட்டது. (8)-ம் நூற்றூண்டில் சோழர்களால் செயிக்கப்பட்டது.

**சோழவம்ச சரித்திரம்** — (கோபிநாதராவ் கூறியபடி) சோழர்கள், சற்றேறக்குறைய (4) ஆம் நூற்றூண்டில் சோழ நாட்டை அரசாண்டிருந்தனர். அவர்களுக் குட்பட்டுப் பலர் சோழநாட்டை ஆண்டிருந்தனர். இந்தச் சோணுட்டரசர் (6) ஆம் நூற்றூண்டில் அரசாண்டனர், (8) ஆம் நூற்றூண்டின் மத்தியில் பல்லவ வம்சத்தவனுகிய பரமேசுர போத்தரச னிறந்தான், இவனுக்குப்பின் நந்திவர்மபல்லவ மல்லன் அரசாண்டான். இவனைத் தமிழ்நாட்டரசர்களி னுதவியால் சித்திரமாயன் எனும் பல்லவன் எதிர்த்தான். பிறகு நந்திவர்ம பல்லவனை எதிர்த்தனர். உதயசந்திரனெனும் படைத்தலைவன் அவனை விடுவித்தான். இந்தக் காலமுதல் (கி - பி. 760) தமிழ் நாட்டரசர் தலை யெடுத்தனர். இவர்களில் ஒருவருக்கொருவர் பெண் கொடுக்கும் சம்பந்தம் உண்டு (கி-பி- 862) பட்டங்தரித்த வரகுண பாண்டியன் தாய் ஒரு சோழன் மகள். இவர்கள் நிருபதுங்கனெனும் பல்லவனையும் அவன்கீழ்ச் சிற்றரசனை பிரதிவிபதி - (1) என்னும் அரசனையும் வென்றனர். அக்காலத்தரசாண்ட தமிழரசர் - விஜயாலயன் மகன் ஆதித்தசோழனும், பாண்டியன் மாறஞ்சடையனும், வாகுணபாண்டியனுமாம். இவர்களில் ஆதித்தன் நிருபதுங்கனைச் செயித்துச் சோணுட்டின் ஒரு பகுதியைப் பற்றினன். வரகுணன் - திருப்புறம்பியத்தில் நடந்த போரில் பிரதிவிபதியைக் கொன்றுன்.இக் காலமுதல் 13-வது நூற்றூண்டு வரையில் சோழராஜ்யம் உச்சம் பெற்றிருந்தது.

இச் சோழவம்சத்தில் அடிக்கடி எடுத்துக் கூறப்படுவோர் பராந்தகன், இராஜராஜன், இராஜேந்திரன். இவர்கள் மூவர்கள் இவர்கள் சந்ததியாரும் இப்பெயரால் வழங்கப் படுகிறுர்கள்.

**சோழவம்சாந்தக பாண்டியன்** — இரிபுமர்த்தனபாண்டியனுக்குக் குமரன்.

**சோழவாணிபமகருஷி கோத்ரன்** — ஒரு வைசியகுலத் தலைவன். சிபிச்சக்கிரவர்த்தி யாகஞ் செய்த காலத்தில் அதை விக்னஞ் செய்யப் புரு வுருக்கொண்டுவந்த இந்திரன் பொருட்டுத் தசை நிறுக்கத் தராசிட்டு நிறுத்தவன்.

**சோழனும் தேவியும்** — "காடுமீனம்படக் கண்டநங்கண்டன்வேற், கோடுமேயுந்துறைத்தொண்டியிக்கோனகர், தேடுநீடுங் கொடிதெரியநாமுய்யவக், த்ாடுமேபாடுமே யன்னமேயின்னமே" இது தேவி பாடியது. "மலையினும் கானினும் போயினர் வருவரே, முலையின்மேற் பசலைபோய் முதனிறங் கொள்ளுமே, துலையிலங்கிய கொடைச்சோமன் வாழ்பு வனையில் தலையிலங்கிய நடத்தன்னமே யின்னமே" இது சோழன் பாடியது.

**சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி** — தேர்வண்மலையனைத் துணையாகக்கொண்டு சேரமான் மாந்தரஞ் சேரலிரும் பொறையோடு பொருது அவனை வென்றவன் உலோச்சனுரால் பாடல்பெற்றவன், ஔவையாராலும் பாடப் பெற்றவன், பாண்டரங்கண்ணனுரால் பாடல் பெற்றவன். (புற - நா.)

**சோழன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நலங்கிள்ளி சேட்சென்னி** — இவன் சிறந்த வீரன், கோனுட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக்குமரனுராற் பாடப் பெற்றவன். (புற - நா)

**சோழன் உருவப்பஃறே ரிளஞ்சேட்சென்னி** — பாணராலும் பெருங்குன்றூர்க் கிழாராலும் பாடப் பெற்றவன். கரிகாற்பெருவளத்தானுக்குத் தந்தை. அழுந்தூர் வேளிடை மகட்கொண்டான். (புற - நா.)

**சோழன் கரிகாற்பெருவளத்தான்** — இவன் சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி புதல்வன், நாங்கூர் வேளிடை மகட்கொண்டோன். தம்முள் மாறுபட்டு வந்து நியாயங் கேட்டோர் இருவர், இவன் இளையனென்று கூறியது நோக்கி நரை முடித்துத் தன்னை விருத்தன்போற் காட்டி நியாயங் கூறியவன். இளமையில் நெருப்பாற் சுடப்பட்டவன். தான் கருவூரிலிருக்கையில் கழுமலமென்னும் ஊரிலிருந்த யானையாற் கொண்டுவரப்பட்டு அரசாட்சிக்குரி.ப வனுயினவன் இரும்பிடர்த் தலையார்க்கு மருமான். கடியலூர் உருத்திரங்கண்ணனுர் இயற்றிய பட்டினப்பாலைக்குப பதி

ஞறு நூருயிரம் பொன் பரிசளித்தவன். இவன்மீது முடத்தாமக்கண்ணியார் பொருநராற்றுப்படை பாடிப் பரிசு பெற்றனர்; சேரமான் பெருஞ்சேரலாதனுடன் பொருதுவென்றவன். இவனைக் கரிகாலன் எனவும், சோழன் கரிகால் வளவன் எனவும், கூறுவர். கரிகாற்சோழன் ஒருவன் இவனுக்குப் பின் இருந்ததாகத் தெரிகிறது. (புற - நா.)

**சோழன்குராப் பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவளவன்** — உறையூர் மருத்துவன் தாமோதரனாரால் பாடப் பெற்றவன். பாண்டியன் வெள்ளியம்பலத்துத்துஞ்சியபெருவழுதியுடன் நட்புடையான். (புற - நா.)

**சோழன் குளமுற்றத்துத்துஞ்சிய கிள்ளிவளவன்** — ஆலத்தூர்க்கிழாராலும், ஐயூர்முடவனாராலும், எருக்காட்டூர் தாயங்கண்ணனாராலும் பாடல் பெற்றவன். (புற - நா.)

**சோழன் செங்கணன்** — இவனே கோச்செங்கட்சோழன் என்பர். இவன் ஒரு சோழன் சேரமான் கணைக்காலிரும்பொறையைச் சிறை வைத்துப் பொய்கையார் களவழி நாற்பது பாட விடுதலை செய்தவன். இவன் திருமங்கையாழ்வார் காலத்தவன் என்பதைப் பெரிய திருமொழி (6) ஆம் பத்தாலறிக. ஆதலால் இவன் காலம் சற்றேறக்குறைய சகூ00 வருஷமாகிறது. (புற - நா)

**சோழன் செருப்பாழியெறிந்த இளஞ்சேட்சென்னி** — ஊன்பொதி பசுங்குடையரால் பாடல் பெற்றவன். (புற - நா.)

**சோழன் நலங்கிள்ளி** — ஆலத்தூர் கிழாராலும்; உறையூர் முதுகண்ணன் சாத்தனாராலும் பாடப் பெற்றவன. இவன் ஆற்றலுடையான் எனவுங் பொதுமகளிரை விரும்பாதவன் எனவும், வரையாது கொடுக்கும் வள்ளல் எனவும், கூறுப. இவன் பாண்டி நாட்டிலிருந்த எழரண்களை அழித்துக் கைக்கொண்டு அதில் தன் கொடியை நாட்டினவன். மாவளத்தானுக்குத் தமயன், இவனுக்குச் சேட்சென்னி எனவும், புட்பகை எனவும், தேர்வண்கிள்ளி எனவும், பெயர். நெடுங்கிள்ளியுடன் பகைகொண்டோன் பலவரசருடன் போர் செய்தலைப் பொருளாகக்கொண்ட இவன் உறையூர் முதுகண்ணன்சாத்தனர் சொல்லால் அதனைத் துறந்து அறமேற்கொண்டான். (புற - நா.)

**சோழன்நலங்கிள்ளி தம்பிமாவளத்தான்** — தாமப்பல் கண்ணனாராற் பாடப் பெற்றவன். (புற - நா.)

**சோழன் நல்லுருத்திரன்** — இவன் ஊக்கமுள்ளாரிடம் விருப்பும், மடிகளிடம் வெறுப்பும் உள்ளவன். இவனுக்குச் சோழன் நல்லுத்தரன் எனவும் பெயர் கூறுவர். (புற - நா.

**சோழன் நெய்தலங்கான லிளஞ்சேட் சென்னி** — ஊன்பொதி பசுங்குடையரால் பாடல் பெற்றவன். சேரமான் பாமுளூரெறிந்த நெய்தலங்கானல் இளஞ்சேட்சென்னிக் கொரு பெயர். (புற - நா.)

**சோழன் புலவன்** — பாண்டியன் போரிற் புறந்தந்தோடுவது கண்டு கூறியது. "மானபரன பயன்வந்தானென வழுதி, போன வழி யாரேனும் போவாரோ — ஆனல், படவே யமையாதோ பாவியே னிந்தக், குடைவேலுடை நுழைந்தகோ" வசை பாடிய புலவனை மதுரையிற் பாண்டியன் கண்டு முனியப் பின்னுங் கூறியது. "இலங்கிலை வேற்கிள்ளி யெதிர்மலைந்த அந்நாட், பொலங்கலனும்பொன்முடியுஞ்சிந்த- நிலங் குலுங்க, ஒடினர் மேலோ வுயர்தாள வொண்குடையாய், பாடினர் மேலோ பழி" கம்பனைக் கொன்ருனென்று பழிகூறலின் பாண்டியனிடத்துச் சோழன் விட்ட புலவன் முடி சூட்டு மங்கல்நாள் பாடிய வசை "பாண்டியரிற் பாண்டியரிற் பாழான பாண்டியரிற், ஈண்டிரென விட்ட வெழுத்தல்ல - பூண்டதிருப், போகவென்றும் வேற்றூர் புகுதவென்று நீயிவண்விட், டேகவென்று மிட்ட வெழுத்து" இது கேட்டுப் பாண்டியன் நன்ருகவே பொருள் கண்டு பொருள் கொடுக்கப் புலவன் மறுத்தான்.

**சோழன் நெடுங்கிள்ளி** — இவன் செங்குட்டுவன் தாயுடன் பிறந்த அம்மான் சோழன் மணக்கிள்ளியின் மகனுமானவன். இவன் உறையூர்ச் சோழரில் ஒருவன். இவன் காரியாற்றில் கிள்ளி வளவனுடனும் நலங்கிள்ளியுடனும் செய்த போரில் இறந்தனன். ஆதலால் இவனுக்குக் காரியாற்றுத் துஞ்சிய நெடுங்கிள்ளி யெனப் பெயர்.

**சோழன் பெருங்கிள்ளி** — சோழன் நெடுங்கிள்ளியின் மகன். உறையூர்ச் சோழன். இவனுக்கு விரோதமாக இவன் ஜாதியார் கலகம் விளைக்க இவன் மலையமானது முள்ளூர் மலையில் ஒடி ஒளித்தனன். இவனை அந்த ஆபத்தில் காத்தவன் மலைய

மான் மகன் திருக்கண்ணன். இவனுக்கு நேர்ந்த ஆபத்தைச் செங்குட்டுவன் கேட்டு விரைந்து வந்து பகைவர் ஒன்பதின்மரை நேரிவாயிலில் வென்று தன்னம்மான் மகனாகிய இவனைப் பட்டத்திருத்தினன். இவன் பின்னர் இராஜசூயம் வேட்டு இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியெனப் பட்டான். இவனும் கண்ணகிக்குக் கோயில் கட்டுவித்து விழா நடப்பித்தான்.

**சோழன் பெருந்திருமாவளவன்** — இவன் குராப்பள்ளியி லிறந்தவன். காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனாரால் பாடப் பட்டவன்.

**சோழன்போர்வைக்கோப்பெருநற்கிள்ளி** - இவன் தித்தன் என்னும் சோழன் மகன். முக்காவனாட்டு ஆமூர்மல்லனைப் பொருது வென்றான், சாத்தந்தையாரால் பாடல் பெற்றான். இவன் தன் தந்தையுடன் பகைத்து நாடிழந்து வறுமையடைந்து புல்லரிசிக் கூழுண்டிருந்தவன். (புற. நா)

**சோழன் மணக்கிள்ளி** — சேரன் செங்குட்டுவனுக்குத் தாய்ப் பாட்டன். இவன் உறையூரிலிருந் தாட்சி புரிந்தவன். சோழன் நெடுங்கிள்ளியின் தந்தை.

**சோழன்முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி** - உறையூர் ஏணிச்சேரி முடமோசியாரால் பாடப் பெற்றவன். சேரமானந்துவஞ்சேரலிரும் பொறையோடு பகைமையுடையவன். (புற. நா)

**சோழன் வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி** — சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனுடன் பொருதுகழாத் தலையாரால் பாடப்பெற்றவன். (புற. நா)

**சோழன்** — இச் சோழன் மேற் சொன்ன சோழநாட்டை ஆண்டவன், துஷ்யந்தன் பேரனாகிய ஆச்சிரதன் குமரன். இவன் முதலாகச் சோழவம்சம் உண்டாயிற்று. இந்த வம்சத்தில் கரிகாற் சோழன் செண்டு சாத்தாவிடம் பெற்று இமயத்திலெறிந்து புலிக்குறி நாட்டினன். ஒரு சோழன் பசுவின் கன்றின்மேல் தேர்விட்டதற்காகத் தன் குமரனைக் கொன்றான். இவர்களது கதைகளைத் தனித்தனி காண்க. ஒரு சோழன சிவமூர்த்திக்கு முந்நூற்றறுபது கலம் சம்பா அரிசி நிவேதித்து வேண்டவன் |களிக்கச் சிவபெருமானுண்டனர்.

**சோழியஏனாதிதிருக்குட்டுவன்** — கோனாட்டு எரிச்சலூர்மாடலன் மதுரைக்கு மரனாரால் பாடப்பட்டவன். (புற. நா)

**சோழிக ஏனாதி** — நெடுமுடிக் கிள்ளியின் மந்திரியரில் ஒருவன். (மணிமேகலை)

**சோழிய வேளாளர்** — 1. இவர்கள் சோழநாட்டு வேளாளர். இவர்கள் நற்குடி 4000 பசுங்குடி 12000, 60000. இவர்கள் சோழநாட்டிலிருந்து நிலந்திருத்தியும் உழுதும் உழுவித்தும் அரசர்க்கு அமைச்சு முதலிய தொழில் பூண்டும் இருந்தவர்கள்.

2. இவர்கள் வேளாளரில் ஒருவகையாக எண்ணப்படுகின்றனர் பண்டாரங்களும், மடத்துத் தம்பிரான்களும், ஓதுவார்களும் இவர்களைச் சேர்ந்தவர்கள். (தர்ஸ்டன்.)

**சோளசிம்மபுரம்** — நூற்றெட்டுத்திருப்பதிகளில் ஒன்று. இதில் எழுந்தருளிய பெருமாள் அக்காரக்கனி அழகியசிங்கர்

**சோளசூடாமணி பாண்டியன்** — மதுரை யாண்ட 58 ஆம் பாண்டியன்.

**சோளீசர்** - இராமதேவர் மாணாக்கர்.

**சோளம்** — இது ஒருவித தான்யம். பருத்து மஞ்சளாயும் செவந்தும் உருட்சியா யுள்ளது. இத் தானியங்கள் வரிசையாக முத்துப் பதித்ததுபோல் ஒரு கதிரில் தோன்றி அழகாயிருக்கும். இதன் மாவினை ஆகாரமாகப் பதஞ்செய்து உண்பர். இது வட அமெரிக்கா, தென் ஜெர்மனி, இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய இடங்களில் பயிரிடப்படுகிறது.

**சோற்றில் எண்வகைத் தோஷங்கள்** — அஸ்திரிதம், பிச்சளம், அசுசி, குவதிதம், சுஷ்மிதம், தக்தம், விரூபம், அநர்த்துசம். (1) அஸ்திரிதம் - கஞ்சி சுற்றிக்கொண்ட அன்னம் இதைப் புசிக்கின் ஆமயரோகம் உண்டாம. (2) பிச்சளம் - அவிந்த அன்னம், இதையுண்ணின் குன்மரோக முண்டாம். (3) அசுசி - புழு, மயிர் முதலிய கூடிய அன்னம். இதைப் புசிக்கின் வாய் நீர் ஒழுகலுண்டாம். (4) குவதிதம் - நருக்கரிசிபட்ட அன்னம் இதைப் புசிக்கின் அசீரண ரோகமுண்டாம். (5) சுஷ்மிதம் - சிறிது வெந்தும் மிகவேகாததுமான அன்னம் இதனால் இரத்த பீடன ரோகமுண்டாம். (6) தக்தம - காந்தின அன்னம் இதைப் புசிக்கின் இந்திரியநாசமுண்டாம். (7) விரூபம் - விறைத்த அன்னம் இதையுண்ணின் ஆயுட்க்ஷீணம். (8) அநர்த்துசம் - பழைய சாதம் இதையுண்டால் அதிநித்திரை சீதாதிரோகங்களுண்டாம்.

**சோனகம்** — ஆரிய நாட்டுக்கு மேற்கின் கணுள்ள நாடு.

**சோணை** — வச்சிர நாட்டைச் சாரந்த ஆறு. (சிலப்பதிகாரம்.)

**சோஷணன்** — இவன் பிரகலாதனைக் கொல்ல இரணியகசிபுவால் அனுப்பப்பட்ட அசுரன். இவன் மாயையால் பிரகலாதன் உள்ளிற் புகுந்து வாட்ட விஷ்ணு அவன் உளத்தில் தேன் அமுதம் பொழிந்து அசுரனை இளைக்கச் செய்தனர். (மச்சபுரா.)

## சௌ

**சௌகந்திகம்** — குபேரனது உத்தியானவனத்திலுள்ள மடு. இதிலுள்ள பூவொன்றைத் திரௌபதி, நதியில் கண்டு விரும்பி வீமனைக்கேட்க வீமன் அவ்விடஞ்சென்று கொண்டுவந்து கொடுத்தனன்.

**சௌகீஷவ்யன்** — காசி க்ஷேத்திரத்தில் நிஷ்காமிய தவஞ்செய்து அஷ்டமாசித்தியடைந்தவன். (சிவமகா புராணம்).

**சௌதாசன்** — இவன் ஓர் அரசன். வசிட்ட சாபத்தால் அரக்கனானவன் இவனே கல்மாஷபாதன் இவனுக்கு மித்ரசகன் என மற்றொரு பெயர். இவன் கங்கா தீர்த்தமாடிச் சுத்தனானன். பிரகந்நாரதீய-புராணம். (பார - அச்.)

**சௌத்ராந்திகன் மதம்** — புத்தரில் பேதவாதி. இவன் உருவம், ஞானம், வேதனை, குறிப்பு, வாசனை என்பன தொடக்குறுதல் பந்தம் அவை முற்றும் அழிதல் மோக்ஷம் என்பன்.

**சௌத்ராமணி** — இநதிர பிரீதியாகச் செய்யப்படும் யாகங்களில் ஒன்று. இது மூலிகைகளைக் கிள்ளுதலால் வடிந்த ஒருவித கள்ளை (கௌடீ, பைஷ்டீ, ஆவா, மதிரா, மதயம்) எனும் கள்ளுகள் அல்லாத கள்ளை கிரகா எனும் பாத்திரத்திற்கொண்டு ஓமஞ்செய்து அந்தச் சேஷத்தை ஆசமனஞ் செய்து முடிப்பது.சோமபானஞ் செய்வது போல் சுராபானஞ் செய்தலாகாது. (பாரதம் மா.)

**சௌத்தி** — ரோமகிருஷ்ணர் புத்திரனாகிய உக்கிரசிரவன். இவனால் நைமிசாரண்யவாசிகளுக்கு மகாபாரதம் சொல்லப்பட்டது. (பா - ஆதி.)

**சௌத்திராமணி** — துருபதன் பாரியை. இவளுக்குக் கௌசவீத்திஎன்று மற்றொரு பெயர்.

**சௌநகர்** — பிருகு முனிவர் மனைவியை அரக்கன் தூக்கிச்செல்லுகையில் அவன் தோளில் பிறந்தவர். இவர் தவமேற்கொண்டு புற்றிலிருந்தபோது, யயாதி அல்லது சையாதியின் குமரியால் கண் குத்துண்டு யயாதியின் குலத்தவர்க்குக் கண்போகச் சாபந்தந்து அக் கன்னிகையைச் சையாதி தர மணந்து அவற்கு அநுக்கிரகித்தவர். இவர்க்குச் சநகன், இருசிகன் முதலிய நூறு குமரர். இவர் சையாதிக்கு யாகஞ்செய்வித்து அச்வநிதேவர்க்கு அவிகொடுக்க இந்திரன் இவர் மேல் சினந்து வச்சிரமெறிந்தனன். இதனால் முனிவர் கோபித்து இந்திரனைக் கைதம்பிக்கச் செய்து யாகத்தில் பூதமொன்றைச் சிருட்டித்து ஏவ இந்திரன் பயந்து வேண்டப் பொறுத்தவர். குசன் வீட்டில் (௬௨) நாள் உறங்கிக் குசனுக்கு வரங்கொடுத்தவர். பாகீரதியில் (௧௨) வருடம் தவஞ்செய்து செம்படவர் வலையில் அகப்பட்டுத் தன்னை விற்கச் சொல்லினர். செம்படவர் நகுஷனுக்கு விற்க நகுஷன் ஒரு பசு தந்தனன். செம்படவர் பசுவை ருஷிக்குத் தானஞ் செய்தனர்; அதனால் அவர்களையும் தம்மொடு வலையில்வந்த மீன்களையும் சுவர்க்கமடை வித்தவர். இவரைச் சுநகர் புத்திரர் எனவும் கூறுவர். இவர் மாணுக்கர் ஆசுவலாயநர். இவரை நாயினிடம் பிறந்தவர் என்பர்.

**சௌநந்தை** — வத்சந்திரன் தேவி.

**சௌந்தர்யலகரி**—கவிராசபண்டிதர் மொழிபெயர்த்த தோத்திரப்பா.

**சௌந்தன முனிவர்** — ஓர் இருடி.

**சௌபகன்** — உருக்கிரமனுக்குக் கீர்த்தியிடம் பிறந்த குமரன்.

**சௌபங்கம்** — சிவாஞ்ஞையால் மயனால் நிருமிக்கப்பட்டுச் சாளுவனுக்குக் கொடுக்கபபட்ட விமானம்.

**சௌபத்ரதீர்த்தம்** — தென்கடற் கருகிலுள்ளது. சேமங்களைத் தரவல்லது. இதில் வந்தை என்பவள் அநேகநாள் முதலையாக இருந்து அருச்சுநனால் அது நீங்கினள்.

**சௌபத்திரன்** — சுபத்திரையின் புத்திரன்.

**சௌபான்** — ஒரு அக்னி.

**சௌபம்** — சாளுவராஜனுடைய விமானம். நினைத்த இடம் செல்லும். (பாகவ.)

**சௌபரி** — சவுபரியைக் காண்க.

**சௌபலன்** — நகுலனால் கொல்லப்பட்ட துரியோதனனது நண்பன். இவன் குமரன் சகுநி.

**சௌபலி** — காந்தாரிக்கு ஒரு பெயர்.

**சௌமனஸம்** — மேற்குத் திக்கில் பூமியைத் தாங்கி நிற்கும் திக்கு யானைகளில் ஒன்று.

**சௌமியம்** — ஒரு புராணம்.

**சௌமியர்** — அக்நியபிமான தேவதைகளாகிய நாற்பத்தைம்பதின்மர்.

**சௌமியன்** — 1. ஏகாதசருத்திரரில் ஒருவன்.

2. புட்கரதேசத்தரசன். இவன் தேவி வசுமதி. இவன், தன் மனைவியைவிட்டுத் தீயொழுக்க முள்ளவனாயிருத்தலை மனைவி அறிந்து தன் ஆசாரியன்தேவி சத்திய விரதைக்குக் கூறினள். அந்தச் சத்திய விரதை, இவளுக்கு ருத்ராக்ஷமகத்துவம் கூறிருத்ராக்ஷம் புனைவித்தனள். இதனால் சௌமியன் வீடுதங்கித் தன்தேவியிடம் காலஞ்ஞானி, சித்ராங்கனையென இரண்டு குமரிகளைப் பெற்றவன். அந்தக் குமரிகள் இருவருள் காலஞ்ஞானி யென்பவளைத் தாமரைக் கண்ணன் என்பவன் மணந்தனன், இத் தமாரைக் கண்ணன், தன் தேவியை நெருங்குகையில் காலஞ்ஞானி, நீர் ருத்ராக்ஷமணியாததால் உம்மைத்தொடேன் என்று நீங்கினள். தாமரைக் கண்ணன், தன் மனைவியை நோக்கி அவ்விட மெழுதியிருந்த விஷ்ணுவின் பிரதிமையைக்காட்டி இப்பிம்பம் ருத்ராக்ஷ மான்மியம் கூறுமேல் நான் புனைகிறேன் என்றனன். அப்படியே காலஞ்ஞானி விஷ்ணுபிம்பத்தால் உருத்திராக்ஷ மான்மியம் கூறுவித்துக் கணவனை உருத்திராக்ஷம் புனையச் செய்து கலந்தனள். ஒழிந்த சித்ராங்கனை வியூதனை மணந்து அவனுக்கு உருத்திராக்ஷதாரணஞ் செய்வித்து நாயகனுடன் முத்திபெற்றனள்.

**சௌமினி** — ஒரு பார்ப்பினி, இவள் மணங்கொண்டு சிலநாள் கணவனுடன்கூடிச் சுகித்திருந்து கைம்மையாய்க் கள்ளப்புணர்ச்சிசெய்து கருவடைந்தனள். இதை யறிந்த சுற்றத்தார் ஊரைவிட்டு நீக்க ஒரு வேளாளனைக்கூடிக் கள்குடித்து, வெறியால் ஆட்டினிறைச்சி தின்ன எண்ணி இருளில் பசுவின் கன்றை ஆடெனக் கொன்று விளக்கெடுத்துப் பார்க்கையில் பசுவின் கன்றாயிருக்கச் சிவசிவ என்று கூறி அதனைத் தின்றனள். வேற்றூர்க்குச் சென்ற கணவன் வந்து கன்றைக்கேட்கக் கன்றைப் புலி கொன்றதெனக் கூறிச் சிலநாளிருந்து இறந்தனள். நமன், இவளை நரகததிலிடாது மணங்கொள்ளாத புலைச்சியாக என அவ்வகை பிறந்து தாய் தந்தையர் ஊன், கள் முதலிய உண்பிக்க உண்டு வளர்ந்து தாய்தந்தையர் இறக்கத் திக்கற்றவளாயினள். இவள், பிச்சையின் பொருட்டுச் சிவராத்திரி தரிசனத்திற்குக் கோகரணஞ் செல்வாருடன்கூடிச் சென்றனள். அவ்விடம் பிச்சைகேட்டுக்கொண்டிருக்கையில் ஒருவன் வில்வத்தை இவள் கையிலிட அவ்வில்வத்தை இவள் புறத்தில் எறிந்தனள். அவ்வில்வம் அவ்விடமிருந்த சிவலிங்கத்தின்மீது விழுந்தது. அதனாலும், அந்தச் சிவராத்திரி முழுதும் ஆகாரமின்றி யிருந்ததனாலும், பனியால் ஸ்நானஞ் செய்ததாலும், பாபம் நீங்கி முத்திபெற்றனள்.

**சௌம்பகம்**—சிவாஞ்ஞையால் மயன் சாளுவனுக்குக் கொடுத்த விமானம்.

**சௌரசேநீ** — சூரசேநதேசத்துப் பாஷை.

**சௌரபேயன்** — தீர்க்கதமனுககுக குரு. (பாரதம் - ஆதி.)

**சௌரபேயி** — 1. வந்தையைக் காண்க.

2. ஒரு அப்சரஸ்திரீ, நாரீ தீர்த்தம் காண்க.

**சௌரமானம்** — சூரியனை முதலாகக்கொண்டு கணிக்கும் வானசாத்திர அளவு.

**சௌரம்** — சூரியனைக் குறித்துக் கூறும் உபபுராணம்.

**சௌராயாணி** — சூரியனுடைய குடும்பசம் பந்தப்பட்டவன்.

**சௌராடசோமையர்** — இவர் வீரசைவ அடியவர். குட்டவ்வையைக் காண்க.

**சௌராட்டிரம்**—ஒரு தேசம் (சூரட்) என்பர்

**சௌரி** — 1. சங்கமன் என்னும் அரசன் காக்கும் யமபுரிவழியிலுள்ள பட்டணம். இதில் ஆன்மா மூன்றுமாசிக பிண்டத்தை யுண்பன்.

2. கண்ணனுக்கு ஒரு பெயா.

3. வத்சந்திரன் குமரன்.

4. பிரசக்கி குமரன்.

**சௌவீரம்** — 1. சுவீரன் ஆண்ட தேசம்.

2. ஒரு தேசம். Sawira the Country between the Indus and the Zhelum.

**சௌனம்** — சுன்ஹன் நிருமித்த பட்டணம்.

## ஞா

**ஞாயிறுகிழவர்** — தொண்டைநாட்டுப் புழற் கோட்டத்து அவதரித்தவர். குமரியார் சங்கிலியார்.

**ஞானகலாம்பையார்** — பட்டினத்தடிகளின் தாயார்.

**ஞானக்கூத்தர் - சிவப்பிரகாசதேசிகர்** — விருத்தாசல புராணம், திருவையாற்றுப் புராணம் பாடிய துறவி. இவர் இருக்கை சிவன்பாக்கம் எனும் ஊர். துறையூராதீனத்தவர்.

**ஞானசங்கார்** — சைவபத்ததிசெய்த சிவாசாரியருள் ஒருவர்.

**ஞானசிவர்** — சைவபத்ததிசெய்த சிவாசாரியருள் ஒருவர்.

**ஞானசுதரிசநன்** — அக்நிக்குச் சுதரிசனையிட முதித்த குமரன். யோகவதியை மணம் புணர்ந்து இல்லறம் வழுவாது நடத்தி யமதருமராசனால் யமவாசனையின்றி யிருந்தவன்.

**ஞானப்பிரகாச சுவாமிகள்** — 1. இவர் (யாழ்ப்பாணம்) வீணாகானபுரத்தில் சாலீவாடீசுரநகரத்தில் கார்காத்த வேளாளரில் முடிதொட்ட வேளாளராகிய பாண்டிமழவர்குலத்தில் (300) வருஷத்திற்கு முன் தோன்றி ஆதிசைவரிடம் சிவதீக்ஷைபெற்றுக் கௌடதேயஞ் சென்று வடநூல் பயின்று திருவண்ணாமலை யாதீனமடைந்து சந்நியாசம்பெற்று அங்கிருந்து பல நூல்களியற்றினர். இவரிருந்த மடத்தருகில் புதையலிருப்பதை மாணாக்கரறிந்து சுவாமிகளுக்குத் தெரிவித்தனர். இவர் அதைக்கொண்டு குளமும் மடமும் செய்யக் கட்டளையிட்டனர். இவர் சிவஞான சித்தியார்க்கு உரை, பிரமாணதீபிகை, சித்தாந்த சிகாமணி, சிவஞானபோதவிருத்தி, பௌஷ்கர வியாக்யான முதலிய இயற்றினர்.

2. சாலிவாகனசகம் (கசாகூ) இல் சந்திரகிரியாண்ட கிருஷ்ணதேவராயரிடம் முதன்மந்திரியா யிருந்த அம்பி, அறம் வளர்த்தான் முதலியாரால் வேளாளருக்குக் குருவாக நியமிக்கப்பட்டவர். இவரிடம் பொறாமைகொண்ட வேதியருட் சிலர் இவரைமயக்க ஒரு தாசியை அனுப்பினர். அத்தாசி, இவரிடம் வந்து தன்னைக்கூட அழைக்க ஞானப்பிரகாச சுவாமிகள் நீ விரும்பியது கோசந்தானேயென்று அதனைப் பிடுங்கி அவளிடந்தந்து அனுப்பினர். அக்கோசம்பெற்றுச் சென்ற தாசி, பிராமணரிடங் கூறப் பிராமணர் சுவாமிகள் இறந்தனரென்று களிப்புட னிருந்தனர். சுவாமிகள், விடிந்து தீர்த்தக்கரையில் சிவபூசை செய்யக்கண்ட வேதியர் நடுங்கிப் பயந்து அதுமுதல் பக்தியுடனிருந்தனர். இவர் திருக்காஞ்சியில் மடஞ்செய்தெழுந்தருளி யிருந்தவர்.

**ஞானப்பிரகாசப்பட்டாரகர்** — இவர் திருவாரூரிலிருந்த சுத்தசைவ வேளாளர், தமிழில் புட்பவிதி செய்தவர்.

**ஞானப்பிரகாசர்** — சிவஞானசித்தியார் பரபக்ஷத்திற்கு உரைசெய்த ஒரு ஆசிரியர். இவர் திருவொற்றியூர் ஞானப்பிரகாசர் என்று கூறப்படுவர்.

**ஞானப்பூங்கோதை** — திருக்காளத்தியீசுரர்க்குத் திருத்தேவியின் திருநாமம்.

**ஞானவாசிட்டம்**—இது வசிட்டரால் இராமமூர்த்திக்கு உபதேசிக்கப்பட்ட ஆத்மபோத நூல். இதனைத் தமிழில் செய்யுணடையாக வீரைஆளவந்தார் இயற்றினர்.

**ஞானவாலன்** — சிவபூசா வைராக்யத்தால் முத்திபெற்றவன்.

**ஞானவிண்மகன்**—பிரமனது வேறுவடிவம்.

**ஞானும்பிகை** — துறைமங்கலம் சிவப்பிரகாசருக்குத் தங்கை. பேறைச் சாந்தலிங்க சுவாமிகளுக்குத் தேவியர்.

**ஞானுமிருதம்** — வாகீசராற் செய்யப்பட்ட ஒரு சைவசாத்திரம். இது திரிபதார்த்தவுண்மை கூறுவது. இது அகவற்பாவாலாயது.

## த

**தகடூர்** — இது மைசூர் இராச்சியத்திலுள்ள நாடு என்பர். பழைய தமிழ் நூல்களில் எடுத்தாளப்பட்டு வருகிறது. இது - மைசூருக்கும், குடகிற்கும் தெற்கி லுள்ளது. இது அதிகமானஞ்சியினுடை.

**தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறை** — ஒரு சேரன், அரிசில்கிழாரால் பாடப்பெற்றவன். தகடூர் யாத்திரை இவன்மீது செய்திருக்கலாம். இவன் வேளாவிக்கோவின் மகண்மகன். இவன் பேகன் காலத்தவன்.

**தகாம்** — 1. ஒரு பிரமவித்தை. இது சிவச்சுரூபம் சொன்னதென்பர்.

2. ஒரு உபநிஷத்து.
3. கனிகளிலிருந்தெடுக்கப்படும் உலோகப் பொருள்களுள் ஒன்று. இது, வெள்ளியைப்போல் வெண்மையுள்ளது. இது ஜலத்திலும் (7) மடங்கு கனமுள்ளது. வெள்ளீயம் என்பர். இது, களிம்புள்ளதன்று. அதிக நயப்புள்ளதாதலால் இதனால் பாத்திர முதலிய செய்ய இயலாது. இதனுடன் ஈயத்தையாவது துத்தநாகத்தையாவது கலந்து பாத்திரங்கள் செய்வார்கள். இதனால் செம்பு முதலிய பாத்திரங்கள் களிம்பேருமற் பூச்சுப் பூசுவர். இதை இருப்புத் தகட்டிற் பூசி விளக்குக்கூடு, குவளை முதலிய செய்வர். இதைச் செம்புடன் கலக்கின் வெண்கலமாகிறது. முகம் பார்க்கும் கண்ணாடிகளுக்குப் பின்புறத்தில் ரஸம் போடுதற்கு அச்சமான தகரத்திற்கு உபயோகப்படுகிறது. கண்ணாடி யளவிற்குத் தக்க தகட்டின்மீது ரஸத்தை வார்த்து அதன்மீது கண்ணாடியைப் பொருத்தின் சிறிது பொழுதில் ரஸம் கண்ணாடியில் சேர்ந்துவிடுகிறது. இது இங்கிலாந்து, ஸ்பெயின், பான்காக், மலயா, ஆஸ்திரேலியா முதலான இடங்களி லுண்டாகிறது.

**தகுதியணி** — தகுதியாகிய இரண்டு பொருள்களுக்குச் சம்பந்தத்தைக் கூறுதல். இதனைச் சமாலங்கார மென்பர். (குவல.)

**தகுதியின்மையணி** — பொருந்துதற்குத் தகுதியில்லாத பொருள்களுக்குப் பொருத்தங் கூறுதல். இதனை விஷமாலங்கார மென்பர். (குவல.)

**தகுதிவழக்கு** — இடக்கரடக்கல் - சொல்லத்தகாததை மறைத்து வழங்குவது; மங்கலம் - அமங்கலமானதை மங்கலமாக்கூறல்; குழூஉக்குறி - ஒரு கூட்டத்தார் யாதேனும் ஒரு காரணம்பற்றி ஒன்றன்பேரை மாற்றி வேறு பெயரிட்டு வழங்குவது. (நன்.)

**தகைவு** — வாதியானவன் தன்னாற் கூறப்பட்ட காரியத்தில் நில்லாமலும், அக் காரியத்தைக் கேட்டுக் கடந்தேனும் போகிற பிரதிவாதியை அரசனாணையால் தகைவு செய்தல். அத்தகைவு, இடத்தகைவு, காலத்தகைவு, பயணத்தகைவு, செய்கைத் தகைவு என நான்கு வகைப்படும். இடத் தகைவு - இடத்தை விட்டுப் போக்குதலைத் தகைதல், காலத்தகைவு - இன்ன காலத்தில் நீ காணப்படல்வேண்டும் அன்றேல் அரசனாணை கடந்தவனாவாய் என்பது. பயணத்தகைவு - வேற்றூர்க்குச் செல்லுதலை அரசனாணை கூறித் தடுத்தல், செய்கைத்தகைவு - பிரதிவாதி செய்யும் காரியத்தைத் தகைத்தல். (விவகாரசாரசங்கிரகம்)

**தக்கநாடு** — கேமமாபுரத்தையுடைய தேசம்.

**தக்கன்** — 1. பிரமன் மானசபுத்திரர்களில் ஒருவன், பிரமனது கட்டைவிரலிற் பிறந்தவன் என்றுங் கூறுவர். இவன் தாரணியைக் கூடி (௧000) குமாரர்களைப் பெற்றனன், இவர்கள் நாரதர் உபதேசத்தால் மகா ஞானிகளாய்த் துறவடைந்தனர். இதனால் பிரசாவிருத்தி யில்லாதுபோனதால் தக்ஷன் நாரதனிடத்துக் கோபித்து நிலையிலாது திரியவும், கலகப்பிரியனா யிருக்கவும் சாபந் தந்தனன். பின், இவன், அசக்னியிடம் (௬0) பெண்களைப் பெற்றுத் தருமப்பிரசாபதிக்கு (௧0) பெண்களையும், காசிபர்க்குப் பதின்மூவரையும், சந்திரனுக்கு இருபத்தெழுவரையும்; பூதர், ஆங்கிரச, கிரிசுவா என்பவர்களுக்கு இவ்விரண்டு பெண்களையும், தாட்சயபருக்கு நான்கு பெண்களையும் கொடுத்தான். இவர்களுள் சந்திரன், கிருத்திகை, உரோகணிகளொழிந்த மற்றவரிடம் அன்பிலாதிருந்ததால் சந்திரனைக் கலைகள் தேயச் சபித்தனன். அச்சந்திரன் சிவமூர்த்தியை வேண்டிச் சாபம் போக்கிக்கொண்டனன். இவன் சிவமூர்த்தியை யெண்ணித் தவஞ் செய்து அம்மூர்த்தி பிரத்தியக்ஷமாகத் தான் உமையைக் குமரியாகப் பெறவும் சிவமூர்த்தி மருமகனாகவும் வரம்வேண்டிப் பெற்று உமாதேவியைப் புத்திரியாகப் பெற்றுத் தாக்ஷாயணியெனப் பெயரிட்டு வளர்த்துச் சிவமூர்த்திக்குத் திருமணஞ் செய்வித்தனன். ஒருநாள் தன் குமரியைக் காணவேண்டித் திருக்கைலைக்குச் செல்லப் பூதகணங்களால் தடைபட்டுத் திரும்பிக் கோபாவேசனாய் விஷ்ணுவாதி தேவர்களை யாகத் தலைவராக்கி ஒரு வேள்வி செய்யத் தேவர், இருடியர் முதலியோர்க்குத் திருமுகம் அனுப்பினன். யாகத்திற்கு வந்த இருடிகளில் ததீசிமுனிவர் சிவமூர்த்திக்கு அவி கொடுக்கும்படி பலவிதத்திற் கூறியுங் கேளாது யாகந் தொடங்கினன். இந்த யாகக் காட்சியைக் காணத் தாக்ஷாயணி வந்தனள். தக்கன், உபசரிக்காது இருக்க உமாதேவியார் இது சுடுகாடாக எனச் சபித்து நீங்கிச் சிவமூர்த்தியை யடைந்து நடந்தவை கூறி யாகமழிய வேண்டினள். சிவமூர்த்தி, வீரபத்திரரைச் சிருட்டிக்க

உமாதேவியார் மகா காளியைச் சிருட்டித்து யாகத்தை அழித்துவர அனுப்பினர். அக் கட்டளை யேற்ற தேவ தேவிகளிருவரும் பூத கணங்களோடு தக்கன் யாகசாலை புகுந்து தேவர்களை வருத்தித் தக்கன் தலையையும அறுத்தனர். அத் தக்கனது தலையை ஒரு பூதம் விழுங்கிற்று. மீண்டும் பிரமன் தன் குமரனை எழுப்பச் சிவமூர்த்தியை வேண்டிய காலத்துத் தக்கனது தலையைக் காணாது அத்தலைக்குப் பதிலாக ஆட்டுத் தலையை வைத்து எழுப்பினர். தக்கன், ஆட்டுத்தலை பெற்றுப் பிரமன் சொற்படி கங்காதீரத்தில் சிவப்பிரதிஷ்டைசெய்து பூசித்துச் சிவகணத் தலைமை பெற்றனன். இவன் பெண்கள் புருஷன் வேண்டிப் புருஷாயதம் என்னுந் தவஞ்செய்ததால் புருஷனையும் நக்ஷத்ர பதத்தையும் பெற்றனர். இவன் உமாதேவியார் யாகங்காண வந்தபோது மதியாதிருந்ததால் சூரியகுலத்து மாரிஷையிடம் மனிதனாய்ப் பிறந்தான்.

2. பானு பட்டணத்தை யாண்ட வல்லவனுக்கும், கமலை யென்பவளுக்கும் பிறந்தவன். இவன் பிறப்பில் குட்ட நோயுடனிருக்கத் தந்தை, தாயுடன் குமரனைக் காட்டிற்றுரத்தினன். இவள் தன் குமரனுடன் காட்டிற் செல்லுகையில், முற்கல முனிவர் அவ்வழி செல்ல அவரது தேகக் காற்றுப்பட நோய் நீங்கி மன்மதனைப் போல் வடிவுகொண்டு குண்டின தேசாதிபதியாயினன். இதற்கு முன் பிறப்பிலிவன் வல்லாளன் தந்தை கல்யாணன். இவன் குமரன் பிரகத்பானு.

**தக்கயாகப்பரணி** — ஒட்டக்கூத்தரா லியற்றப்பட்ட பரணிப்பிரபந்தம். சொற்சுவை பொருட்சுவை நிரம்பியது.

**தக்கயோகம்** — திதிகளைக் காண்க.

**தக்கிணன்** — பாண்டி நாட்டிலுள்ள திருத்தங்காலி லிருந்த வார்த்திகன் என்னும் வேதியன் குமரன். (சிலப்பதிகாரம்).

**தங்கால்** — இது பாண்டிநாட்டுள்ள ஊர்களுளொன்று.

**தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்** — செங்கண்ணனெனப் பலருளராதலின் அவரின் இவர் வேறென்பது தெரிய "ஊரும் பெயருமுடைத் தொழிற் கருவியும், யாருஞ்சார்த்தியவை யவைபெறுமே" (தொல். பொருள். ௬௩௦) என்ற விதிப்படி ஊரும் குலமும் கூட்டித் தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனெனப்பட்டார். தங்கால் என்பது திருத்தண்காலென இக்காலத்து வழங்கப்படுகிறது; இது ஸ்ரீவில்லிபுத்தூருக் கருகிலுள்ளதொரு விஷ்ணுத்தலம். ஆத்திரேயன் - ஆத்திரேய கோத்திரத்துப் பிறந்தவன். எனவே இவர் அந்தணர் மரபினராவர். முகம் புகுகிளவி பாடவல்லவருள் இவருமொருவர்; குறிஞ்சித்திணையைப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடிய உள்ளுறை வியப்புடையது. இவர் பாடியது நற். ௩அசும் பாட்டு.

**தங்கால் பொற்கொல்லன் வெண்ணாகனார்** - பொற்கொல்லனென்றமையானே இவர் கம்மாளரென்பது வெளிப்படை. ஊர் முற்கூறிய திருத்தண்காலே. அகம் முதலாய சில ஏடுகளிலும் புறத்திலும் பொற் கொல்லனென்பது பிறழ்ந்து பூட் கொல்லனென்றும் பூட் கொற்றனென்றும் எழுதப்பட்டுள்ளது. இஃது ஏடெழுது வோரால் நேர்ந்தவழு. பூட்கொல்லனென்பது பொருள் பொருந்தாமையால் பூட்கோலவன் (பூண்கட்டிய தடிக்கொம்புடையவன்) எனத்திருத்தப்பட்டது போலும். பூட் கொற்றனை முடக்கொற்றனென்று திருத்தவுமாயிற்று. (பூட்கொல்லன். பூண் செய்யும் கொல்லன். அஃதாவது பணித்தட்டான் என்று பொருள் படலாம்.) இவர் பாடலிற் சிலவற்றிலே தமது மரபைப் "பொன்செய் கம்மியன் கைவினை கடுப்ப" (நற் ௩௩௩) எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார். மதுரைப் பொற்கொல்லன் வெண்ணாகன என ஒருவர் அகத்திற் காணப்படுகிறார். திருத்தண் காலி லிருந்த இவர் மதுரைக்குச் சங்கமேறி அங்கு வைகியதனால் மதுரைப் பொற்கொல்லன் வெண்ணாகனெனப் பட்டாரோ அறியக் கூடவில்லை. ஆயினும் மதுரையை நீங்கித் தங்காலென்றதளவே இவர் பாடல் கணக்கிடப்படுகிறது. இவர் குறிஞ்சியையும் பாலையையும் பாராட்டிப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ௩௩௩ ஆம் பாடலொன்றும் குறுந்தொகையில் ஒன்றும் அகத்தில் இரண்டும் புறத்திலொன்றுமாக ஐந்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**தங்கால்பூட்கோவலனார்**—ஒரு செந்தமிழ்க் கவி, கடைச்சங்கமருவியவர். கோவனார் என்ப. (புற. நா.)

**தங்கால் முடக்கோற்றனார்** — கடைச்சங்க
மருவிய புலவர். (அக - று.)

**தசகாரியம்** — 1. தத்வரூபம், தத்துவதரிச
னம், தத்வசுத்தி, ஆத்மரூபம், ஆத்மதரிச
னம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம்,
சிவயோகம், சிவபோகம் என்பனவாம்.

2. தத்துவரூபம் - (௩௬) தத்வங்களின்
தொழிலைத் தனக்கு வேறாயறிதல். தத்வ
தரிசனம் - தத்வங்களைச் சடமென அறிந்து
நீங்குதல். தத்வசுத்தி - தத்வங்களைச் சிவ
ஞானத்தால் தனக்கு அன்னியமாக் காணல்,
ஆத்மரூபமாவது - மூவகை மலங்களுநீங்கி
ஆத்மஞானமெனும் அறிவே வடிவென
அறிதல். ஆத்மதரிசனமாவது - தனக்
கொரு செய்தியுமில்லையென்றறிந்து சிவன்
செயலென நிற்றல். ஆத்மசுத்தியாவது -
பெத்தத்தினும் முத்தியினும் சிவன் உபக
ரிக்கிறானென்று தற்சுதந்தரமற்றுச் சிவ
ஞானத் தழுந்தி நிற்றல். சிவரூபமாவது -
ஆணவமலத்தி லழுந்திக் கிடக்கும் ஆன்மா
வைச் சிவன் பஞ்சகிருத்தியஞ் செய்து
மலங்களை நீக்கி மோக்ஷத்தில் விடுவன் என்
றறிதல். சிவதரிசனமாவது - சிவன் செய்
யும் பஞ்சகிருத்யத்தை ஆன்மா செய்யான்
என்றறிந்து ஆன்மாவைத் தெரிசிப்பது.
சிவபோகமாவது - சிவசத்தி செய்யுங் கிரு
த்தியங்க ளனைத்தும் சிவனுக்குச் சற்று
மில்லை யென்றறிந்து சிவசத்தியை யன்றித்
தனக்கும் பிறர்க்கும் செய்தி யில்லையென்று
தெரிந்து திருவருளி லழுந்தல். சிவபோக
மாவது சிவத்தோடிரண்டறக் கலந்து
சிவாநந்தத்தை அநுபவித்தழுந்தல்.

**தசநாடி** — இடைகலை, பிங்கலை, சுழுமுனை,
காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை,
சங்குனி, வைரவன், குருதை என்பன.

**தசபாரமிதை** — தானம், சீலம், பொறை,
நிஷ்கர்மம், பிரக்ஞை, வீர்யம், சத்தியம்,
துணிவு, மயித்ரி, பிதாகம். (பௌத்தம்.)

**தசமுகன்** — 1. இராவணனுக்கு ஒரு பெயர்.

2. சண்முக சேநாவீரன்.

3. சிங்கமுகாசுரனுடைய படை வீரன்
சிங்கனென்னும் பூதனால் மாண்டவன்.

**தசரதன்** — 1. இவன் சூரியவம்சத்து அஜன்
புத்திரன். இவன் தேவியர் கௌசலை,
சுமித்திரை, கைகேசி.

2. இவன் தேவர் வேண்டுகோளால்
கைகேசி தேர் நடத்தச் சென்று அசுரத்
தலைவனாகிய சம்பரனைக் கொன்றவன்.

3. இவன் அரசாளுகையில் சநி உரோ
கணிசகடையிற் பிரவேசித்தலறிந்த கணி
தர் இவனிடம், நாடு பன்னிரண்டு வருடம்
மழையிலாது வற்கடமாமெனக் கூறக்
கேட்டுச் சநிபகவானிடஞ் சென்று யுத்தஞ்
செய்து இனி எந்தக்காலத்தும் உரோ
கணிசகடையிற் போகாதபடி வரம் தரப்
பெற்று௬0,000வருஷம் அரசு புரிந்தவன்.

4. இவன் குமரியாகிய சாந்தையை
உரோமபதன் சுவீகாரமாக வேண்டிக்
கலைக்கோட்டுமுனிக் களித்தனன்.

5. இவன் ஒருமுறை வேட்டைமேற்
சென்று இருளில் ஒரு தடாகத்தரு கிருந்த
னன். அவ்விடம் கண்ணில்லாத தந்தை
யின் தாகம் தணிக்கவந்த முனிச் சிறுவனை
யானையென்று அம்பெய்து அருகில் வந்து
கண்டு அஞ்சி அக் குமரனது வரலாறு
அறிந்து கண்ணில்லாத முனிவரைக்கண்டு
நடந்ததைக் கூறினன். அரசன் அறியாது
செய்ததைப் பொறுக்க என வேண்டிய
தால் முனிவர் விசனமுற்று உயிர் நீங்கு
கையில் யான் புத்திர சோபத்தால் உயிர்
நீங்குமாறு நீயும் புத்திர சோபத்தால் உயிர்
நீங்குக எனச் சாபமேற்றவன்.

6. இவன் தனக்குப் புத்திர ரிலாமை
யால் உரோமபதனிடமிருந்த கலைக்கோ
ட்டு முனிவரைக்கொண்டு அசுவமேத மிய
ற்றிப் புத்திரகாமேஷ்டியுஞ் செய்ய அதி
னின்று, பூதந் தோன்றிப் பாயச மளித்து
மறைந்தது. அப் பாயசத்தில் ஆசாரியர்
சொற்படி பாதிகூறு மூத்த மனைவியாகிய
கௌசலைக்கும், சிறிது சுமித்திரைக்கும்,
சிறிது கைகேசிக்குந் தந்து மிகுதியை மீண்
டும் சுமித்திரைக் களித்தனன். இதனால்
அம்மூவரும் நான்கு குமாரரைப் பெற்றனர்.

7. ஒருமுறை வசிட்ட ராச்சிரமத்தில்
துருவாசர் வர அவரை நோக்கி எம்மக்
கள் ஆயுளுந் திறலும் கூறுக எனக் கேட்
டனன். துருவாசர், பிருகு மனைவியை
யொறுத்ததால் அவரால் உன் மனைவியைப்
பிரிக என்ற சாபப்படி இவ்வவதாரத்தில்
உன் புத்திரருள் மூத்தவன் அனுபவிப்பன்
எனக் கூறக் கேட்டவன். வளர்ந்த குமார
ருக்கு இராம, பரத, இலக்குமண, சத்து
ருக்கர் எனப் பெயரிட்டுக் கல்வி முதலிய
கற்பித்து விச்வாமித்திரர் இராம இலக்கு
மணரை யாசிக்க அவர்க்குப் பின் அனுப்
பினவன். இராமமூர்த்தியின் மணச்செய்தி
கேட்டு மிதிலை சென்று குமாருடன்

அயோத்தி மீளுகையில் வந்தெதிர்த்த பாசிராமரை இராமருடன் யுத்தஞ் செய்யாதிருக்கவேண்டிப் பாசிராமன் தோற்கக் கண்டு களித்துக் குமரருடன் அயோத்தியடைந்து இராமனுக்கு முடிசூட எண்ணி ஆயத்தப்படுகையில் கைகேசி செய்த வஞ்சனையாலும் இருடியின் சாபத்தாலும் உயிர் நீங்கப் பெற்றவன்.

8. இராவண வதத்திற்குப் பிறகு மௌனநிலை யடைந்த இராமரைத் தரிசித்துக் களித்துப் பரதனைத் தம்பியாகவும், கைகேசியைத் தாயாகவும் பெற வரங்கள் அளித்தவன்.

9. இவன் எட்டுத் திக்கிலும் பூமி, ஆகாசத்திலும் செல்லும் ரதங்கள் பெற்றிருந்தமைபற்றித் தசரதன் என்று நாமம் பெற்றவன் என்பர்.

10. இவன் சநியுடன் யுத்தஞ் செயப்புகக் கண்ட சூரியனிவனைச் சநியைப் பூசித்து அதனை நீக்கிக்கொள்ளக் கட்டளை செய்தனன்.

11. ஒரு முறை தண்டகாரண்யத்தில் வேட்டைக்குச் சென்று இளைப்புடன் தன் சேனை முதலியவற்றைத் தூரத்தி விருத்தித் தான் ஒரு விருக்ஷத்தடியில் நித்திரை செய்தனன். அந்த மரத்தடியில் ஒரு புற்றிருந்தது. அந்தப் புற்றினைத் தசரதன் நித்திரை மயக்கத்தால் உதைக்க அப் புற்று உடைபட்டு அதிலிருந்து ஓர் அரவம் கோபத்துடன் நித்திரை செய்யும் தசரதனைக் கடிக்க வந்தது. இவை அனைத்தையும் ஓர் மரத்திலிருந்து பார்த்திருந்த சடாயு திடீரென்று பறந்து வந்து நாகத்தை மூக்காற் கௌவிக் கொத்திக் கொன்றனர். பக்ஷிராசனது வேகத்தால் நித்திரை தெளிந்த தசரதன் காலயமன் என்று எண்ணி வில்லினைக் கையிலேந்தச் சடாயு அரசனை அணுகி நடந்தவை கூறி அரசனுக்குக் கனியும் நீரும் உதவி இளைப்பைப் போக்கித் தனது வரலாறு கூறினன். இதனால் தசரதன் இது முதல் நீ எனக்குச் சகோதரனாக எனத் தழுவிக்கொண்டனன். (புள்ளிருக்கு வேளூர்ப்புராணம்.)

இவன் மந்திரிகள் திருஷ்டி, சயந்து, விஜயன், சித்தார்த்தன், அர்த்தசாதகன், அசோகன், மந்திரபாலன்.

(a) (சூ.) மூலகன் குமாரன் அல்லது நாரீகவசன் குமரன், கல்மாஷபாதன் பேரன், விருத்தசருமன் தந்தை.

(b) நவரதன் குமரன், இவன் குமரன் சகுனி.

(c) தர்மரதன் குமரன், இவனுக்கு ரோமபதன் என்றும் பெயர்.

**தசவர்க்கம்** — க-வது கிருகமிருக்கிற ராசி வர்க்கம், உ-வது சூரிய சந்திரவோரை, ங-வது - திரைக்காணம், ச - வது - திரிம்சாங்கிசம், ரு-வது சத்தமாம்சம், சு-வது நவாம்சம், எ-வது தசாம்சம், அ-வது-துவதசாம்சம், கூ-வது - கலாம்சம், க0-வது சஷ்டியாம்சம்.

**தசவாயு** — பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன்.

**தசனேற்பவரோகம்** — பிள்ளைகளுக்குப் பல் முளைக்கும்போது உண்டாம் ரோகம். இதனால் பேதி அற்பசுரம், மயக்கம், தாகம் முதலியவுண்டாம். (ஜீவ.)

**தசாசுவன்** — சூரியவம்சத்து அரசன் இக்ஷுவாகு புத்திரன். மாகிஷ்மதியாண்டவன். இவன் புத்திரன் மதிராஸ்வன்.

**தசாச்சுவமேதம்** — ஒரு தீர்த்தம்.

**தசாயுதங்கள்** — வச்ராயுதம், த்வஜாயுதம், கதாயுதம், பத்மாயுதம், சக்ராயுதம், சக்தியாயுதம், தண்டாயுதம், வாளாயுதம், பாசாயுதம், திரிசூலாயுதம். (சைவபூஷ.)

**தசாயுத வடிவங்கள்** — 1. வஜ்ரம் - புருஷாகாரமான பெருத்தவுரு, கடினம், மிக்க பலம் உள்ளது. 2. சக்தி - ஸ்ரீரூபம் சிவந்த நிறம் முக்கோண வடிவம். 3. தண்டம் - புருஷாகாரம் கறுத்த நிறம், சிவந்த கண் உடையது. 4. கட்கம் - புருஷரூபம், கருநிறம், கோபக்கண் உடையது. 5. பாசம் - எழுமுடிச்சு, வாலுடன் கூடிய சர்ப்பரூபம் புருஷவுருவம் உடையதா யிருக்கும். 6. த்வஜம் - புருஷவுருவம், மஞ்சள் நிறம், திறந்த வாய், பலமுள்ள கைகள் உடையதாயிருக்கும். 7. கதை - மஞ்சணிறம், கன்னிகையுரு, பெருத்த புருஷ்டம் உடையதாயிருப்பது. 8. திரிசூலம் - புருஷவுரு, தெய்வத்தன்மை, நீல நிறம் உடையது. 9. பத்மம் - புருஷவடிவம், தெய்வத்தன்மை, வெண்ணிறம், அழகுள்ள கண்கள் உடையது. 10. சக்கரம் - நூறு கிரணமுடைய முகம், கறுத்த நிறம், புருஷ வடிவம் உடையது.

**தசாரணதேசம்** — தசாரணை யென்னும் நதியால் சூழப்பட்ட தேசம்.

**தசாருகன்** — 1. நிருவிருதி குமரன், இவன் குமரன் வியோமசுதன்.

2. மதுரையிலிருந்த எதுகுல மன்னன். காசிராச புத்ரியாகிய கலாவதியை மணந்து அணையப்புக அவர் உனக்குத் தீக்ஷையின்று என மறுக்கக் கற்கருஷியிடம் சிவ தீக்ஷை பெற்று அவளைப் புணர்ந்து நற்கதியடைந்தவன்.

**தசார்ணவம்** — 1. A Part of the Chatisgarh District.

2. காசிக்குத் தெற்கிலுள்ள தேசம்.

**தசார்ணி** — காந்தார அரசனாகிய அமலன் புத்திரி.

**தச்சன்** — அரசன், பார்ப்பினியைப் புணரப் பிறந்தவன். (அருணகிரிபுராணம்.)

**தஞ்சன்** — ஒரு அரக்கன் இவனை விஷ்ணு கொல்ல இவன், தன் பெயரால் இப் பட்டணம் இருக்கக் கேட்டனன். அவ்வாறு ஆகுக எனத் தஞ்சாவூர் எனப்பட்டது. (தஞ்சை - கெஜடி.)

**தஞ்சாதூரன்** — தஞ்சாவூராண்டு குலோத்துங்கனால் ஜெயிக்கப்பட்டவன்.

**தஞ்சைவாணன்** — 1. இவனுக்கு வரோதயன், சந்திரன் என மறு பெயருண்டு. இவன் மதுரைக்குத் தஞ்சாக்கூரை ஆண்ட சிற்றரசன் எனவும், மதுரை, திருநெல்வேலிகளை ஆண்ட பாண்டியர்களுக்கு மந்திரியாயும், சாமந்தனாயு மிருந்தவனென்றும், வாண வம்சத்தவன் எனவும் கூறுவர். தஞ்சைவாணன் கோவையில் இப்பிரபுவை "வைலயநாடன்" வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன் "மீனவர் தம் செங்கோன் முறைமை செலுத்திய வாணன்", "மாவலிவாணன்", "மல்லையம் போர் வென்ற வாணன்", "தென்னன் றன்னைப் பணிந்து குற்றேவல் செய்யாது சமர்க்கெழுந்த மன்னைப் புறங்கண்ட வாணன்", "கன்னடர் மண் கொண்ட வாணன்", "வேளாண்மரபு விளக்கிய வாணன்" எனக்கூறியிருத்தலால் இவன் மூவேந்தரும் அஞ்சத்தக்கவனாக இருந்தான் எனத் தெரிகிறது. தஞ்சை வாணன் கோவையில் வல்லத்துப்போர் செய்தவனாகக் கூறி யிருத்தலால் இவன் காலம் கி. பி. 16 - ஆம் நூற்றாண்டின் கடைக்காலமாகும். இவன்மீது பொய்யாமொழிப்புலவர் ஒரு கோவைப் பிரபந்தம் பாடி மேற்கூறியபடி புகழ்ந்தனர். பின்னும் தஞ்சைத் தெருவினை "திறையின் முறை கொணர்ந்து தேவரெலா மீன்ற (வி)றையு மிறை கிடக்கலாமா - வறை கழற்கால், போர்வேந்தர் போர்மாளப் போர்வாளுறை கழித்த, தேர்வேந்தன் தஞ்சைத் தெரு" எனப் புகழ்ந்தனர்.

2. சந்திரவாணனைக் காண்க.

**தஞ்சைவாணன் கோவை** — தஞ்சாக்கூர் வாணன்மீது பொய்யாமொழிப் புலவரால் செய்யப்பட்ட கோவைப் பிரபந்தம்.

**தடத்தலக்ஷணம்** — பொதுலக்ஷணம்.

**தடமித்தன்** — கனகமாலையின் பிதா. (சிங்.)

**தடாதகைப்பிராட்டியார்** — மலையத்துவச பாண்டியன், புத்திரர் வேண்டித் தவமியற்றினன். இவனிடம் இந்திரன் தோன்றி யாகஞ்செய்ய ஏவினன். அவ்வகை யாகஞ் செய்கையில் யாகத்தில் பார்வதி பிராட்டியார் மூன்று முலையுடைய குழந்தையாகத் திரு அவதரித்தனர். அரசன் குமரியின் உறுப்பின் மிகுதியைப் பற்றிக் கவலுகையில் அசரீரி இக் குழந்தைக்குக் கணவன் தோன்றுகையில் ஒரு முலை மறையுமென அரசன் கேட்டுக் களிப்புடனிருந்தனன். தடாதகைப்பிராட்டியார் சகல கலைகளும் கற்றுத் தந்தை முடி புனைவிக்கப் புனைந்து செங்கோல் செலுத்தி உலகெலாம் வென்று பகைவரிடம் திறைகொண்டு கைலாயத்திற்கு யுத்தத்திற்குச் சென்று நந்தி முதலிய சிவகணத்தவருடன் யுத்தஞ் செய்து அவர்களைப் பின்னிடச் செய்தனள். இதனால் சிவமூர்த்தி யுத்தத்திற்கு வர அசரீரியின் சொற்படி ஒரு முலை மறைந்தது கண்டு நாணிச் சோமசுந்தரராக எழுந்தருளிய சிவமூர்த்தியை மணந்து குண்டோதரனுக்கு அன்னமிட்டு நாணி உக்கிரகுமார பாண்டியனைப் பெற்றுத் திருமணம் புணர்த்தி இறைவருடன் திருக்கோயிலில் எழுந்தருளியவர். தாய் காஞ்சனமாலை.

**தட்சன்** — விருகனுக்குத் துருவாக்ஷியிடம் பிறந்தவன்.

**தட்டாரப்பூச்சி** — வண்டினத்தைச் சேர்ந்தவை. மாம்சபக்ஷணி இது பறந்து ஆகாயத்திற் பறக்கும் சிறு பூச்சிகளைப் பிடித்துத் தின்னும்.

**தட்டான்** — கம்மாள வேறுபாடு, பொன் வேலை செய்வோன்.

**தட்டான் கருவிகள்** — பட்டறைக்கட்டை பட்டறை, சுத்தி, கம்பீச்சு, கொறடு, சாமணம், ஊதுகுழல், நீர்கார், கும்பிடுசெட்டி, கரி, உமி, திராசு, படிகட்டு, குன்றிமணி,

அறம், ராவி, வாள், பர்மா, பிரஷ், தண்ணீர்த்தொட்டி, கரித்தொட்டி, பூட்டுசு, உருக்கு வார்க்கும் கல், மூசை, கதிர், உமித் தொட்டி, சுத்தி பட்டறை தேய்க்கும் கல், விளக்கு குழை, பித்தளை பிரஷ், பாஷாதிம்மை, பேராதிம்மை, மெட்டச்சு, கடியச்சு, வெட்டறம்பு, மணி தேய்க்கும் அச்சு, கரசாணை, கைசாணை, மெருபாளை முதலியன.

**தண்டகபுரம்** — தண்டகராசன் இத்தலத்து விஷ்ணுவை யெண்ணித் தவமியற்றினதால் காஞ்சிக்கு இவன் பெயரால் ஒரு பெயர் வந்தது.

**தண்டக நாட்டெல்லை** — தென் திசைக்கண் கன்யாகுமரி, வட திசைக்கண் விந்தியம், கிழக்கு மேற்குக்கடல் எல்லையாகக் கொண்ட நாடு.

**தண்டகன்** — 1. துரியோதனன் தம்பி.

2. ஒரு அரசன் திருக்காஞ்சியில் தவமியற்றினவன்.

3. சண்முக சேநாவீரன்.

4. இக்ஷவாகுவின் புதல்வன் விந்தியத்திற்கும் சைவலத்திற்கும் இடையிலுள்ள நாட்டையாண்டவன். சுக்கிரன் புதல்வியாகிய அரசையை வலிதிற் புணர்ந்ததால் சபிக்கப்பட்டுத் தன்னாட்டில் கன்மாரி பொழிய அழிவெய்தினன். (சுக் - நீ.)

**தண்டகாரண்யம்** — தண்டனைக் காண்க.

**தண்டகேது** — ஒரு க்ஷத்திரியன் தமிழ் நாட்டரசன் பாண்டியன். (பா - துரோ.)

**தண்டதரன்** — திருதராட்டிரன் புத்திரன்.

**தண்டத்தலைவன்** — குடிகள் அழிவெய்தாவாறு தண்டம் விதித்தல், மிக்கவன்கண் இன்மை, மிக்க இரக்க மின்மையாகிய குணங்களுடையான். (சுக் - நீ.)

**தண்டநாதன்** — திருதராட்டிரன் புத்திரன்.

**தண்டபாணி** — 1. அகீநரன் குமரன், இவன் குமரன் க்ஷேமகன்.

2. காசியிலுள்ள ஒரு தேவன். இவன் காசியில் தவம் புரிந்து சிவமூர்த்தியிடம் தண்டம் பெற்றுக் காசியின் வளங்கள் வெளி போகாது காத்திருக்கும் சந்நியாசி.

3. சுப்பிரமண்ய சுவாமிகளின் ஆசார்ய திருக்கோலத்துள் ஒன்று.

4. வாமனமூர்த்தியின் முதுகெலும்பைக் கொண்ட சிவாவசரக்கோலம்.

**தண்டம்** — இது, அரசனிடமிருந்து தீமை செய்வோரைத் தண்டிக்கும் தெய்வம். பிரமனால் சிருட்டிக்கப்பட்டு அரசனிடம்வைத்திருப்பது தண்டபுருஷன் என்பர். (மனு.)

**தண்டலங்கிழவமகருஷிகோத்ரன்** — காஞ்சியில் சோழன் சபையில் தலை வழக்கிட்டு கீர்த்தி பெற்றவன்.

**தண்டன்** — 1. மகதநாட்டரசன்.

2. (தண்டகன்) இக்ஷவாகுவின் குமரன். இவன் கொடியவனாய்த் தண்டத்திற் குட்படுவன் என அறிந்த தந்தையா விடப்பட்ட பெயர். விந்தியத்திற்கும் சைவலத்திற்கும் இடைநாட்டை யாண்டவன். பார்க்கவ புத்திரியாகிய அரசையை வலிதிற் புணர்ந்த காரணத்தால் சாபம் பெற்றான். இச் சாபத்தால் நாடு காடாகி மண்மாரி பொழியப் பார்க்கவரால் சாபமேற்றவன்.

3. சண்முக சேநாவீரன்.

4. சூரபதுமன் மந்திரி.

5. இவன் ஒரு அரசன், வேட்டைக்கு வந்து பார்க்கவ முனிவர் ஆச்சிரமத்தில் அம் முனி பத்தினி உபசரிக்கக் கண்டு மயல்கொண்டு கைப்பற்ற அதனைத் தருப்பைப் பொருட்டுக் காட்டிற்குப் போன முனிவர் கண்டு கோபித்து அரசனை அலி ஆகவும் விலக்காத மந்திரியை வேடனாகவும், சபித்தனர். இவன் மந்திரி சிந்துமேதன். இவ்வரசன் சாபம் கலிகாலனால் நீங்கிற்று.

**தண்டாசுரன்** — 1. ஒரு அசுரன், இவன் நாரதரால் வயிற்றில் உபதேசிக்கப் பெற்றவன். சில்விகையின் குமரன். இவன் பிரம விஷ்ணுக்களைத் தொந்தரை செய்யச் சிவமூர்த்தி இவனைச் சத்தியால் கொலை செய்வித்தனர்.

2. (சூ.) துந்துமாரன் குமாரன், குமரன் அரியசுவன். இவனுக்குத் திருடாசுவன் எனவும் பெயர். சந்திராசுவன் எனவும் பெயர்.

**தண்டாயினன்** — காஞ்சி யாண்ட அரசருள் ஒருவன்.

**தண்டாரணி** — பல தாபதர்கள் தங்கியிருக்கும் ஆச்சிரமங்களையுடையது. (பெ-கதை)

**தண்டி** — 1. பிரமன் புத்ரரில் ஒருவன் திரிதன்வாவுக்குச் சிவநாம சங்கீர்த்தனஞ் செய்யக் கற்பித்து அச்வமேத பலமுண்டாக்கினவன்.

4. கையில் மைக்கோல்கொண்டு ஜனங்கள் செய்யும் நன்மை தீமைகளைக் குறிக்கும் தேவன்.

3. சூரியனுக்கு வாயிற் காவலன.

4. ஒரு தமிழாசிரியர். அலங்கார நூல் தமிழில் இயற்றியவர். அம்பிகாபதி புத்திரர் என்றுங் கூறுவர். தண்டியாசிரியர் எனவுங் கூறுவர். (தண்டியலங்காரம்.)

5. சத்தியால் கொல்லப்பட்ட அசுரன்.

6. ஒரு மகருஷி, இவர் சத்திய வுலகத்திருந்தவர். இவர் சிவாநுக்ரகத்தால் பெருநூலாசிரியரானார். இவர் செய்த சாங்கிய நூலைப் பலர் அநுசரித்து நற்பத மடைந்தனர். சிவமகாபுராணம்.

7. இவர் ஒரு ருஷி. கிருத யுகத்தில் (1000)வரு சிவத்யானஞ் செய்து சாங்கிய சாஸ்திராதிகளைக் கண்டித்து வித்வாம்சராயினர். எக்காலத்தும் நீங்காத பக்தியையும் விரும்பினவர். (பா - அநுசா.)

**தண்டியடிகள்நாயனார்** — திருவாரூரில் திருஅவதரித்துப் பிறவிக் குருடராய்ச் சிவத்தொண்டு வழுவாமல் செய்துவரும் நாட்களில் கமலாலயமருங்கு, சமணர் மடம் நெருங்கித் தீர்த்தங் குறைவா யிருப்பதை யெண்ணி யதைத் தோண்டி நீர்க் குறை நீக்க நீர்க்கரைக்கும் மேற் கரைக்குமாகத் தறி நட்டு அதில் கயிறு கட்டி அக் கயிறு கண்ணாக அந்தக் குளத்தைச் சீர்திருத்து கையில் சமணர் பொறுமல் நீர், இந்தப்படி செய்வதனால் செந்துக்கள் இறக்குமே உமக்கு நேத்திரமில்லாததுபோல் நாங்கள் சொல்லும் அறம் கேட்கக் காதுமில்லையோ வென்று கூறி அவர் கட்டியிருந்த தறி, கூடை, மண்வெட்டி, முதலியவைகளைப் பிடுங்கி எறிந்தனர். நாயனார் அவர்களை நோக்கிச் சிவனருளால் எனக்குக் கண் தெரிந்தால் நீங்கள் என்ன செய்துகொள்ளுகிறீர்கள் என, நாங்கள் ஊரைவிட்டு ஓடிவிடுகிறோம் என்றனர். நாயனார், சுவாமி சந்நிதியில் சென்று சமணர் கூறியதைக் கூறி முறை யிட்டனர். சிவபெருமான், நாயனார் கனவில் எழுந்தருளி அன்பனே உன் கண் தெரிந்து சமணர் குருடராகக் காண்பாய் என்று, அரசனுக்கும் நாயனார் வழக்கைத் தீர்க்கக் கனவிற் பணித்து மறைந்தனர். விடிந்த பின் அரசன், நாயனாருடன் சமணரை வினவ அவர்கள் சம்மதித்தது கண்டு தீர்த்தக்கரை சென்றனன். நாயனார், நான் பரமசிவனுக்குமெய் யடியனானால் நான் கண் பெற்றுச் சமணர் கண்ணிழப்பர் என்று குளத்திலுள்ள நீரில் மூழ்கி எழுந்து கண் பெற்று நின்றனர். சமணர்கள் கண்ணிழந்தனர். இதனை அரசன் கண்டு வியந்து சமணரை ஊரைவிட்டகற்றினன். நாயனார் இவ்வகை தொண்டு செய்திருந்து முத்தி யடைந்தனர். (பெ. புராணம்.)

**தண்டியலங்காரம்** — 1. ஒரு அணியிலக்கணம். இது தண்டியாசிரியராற்செய்யப்பட்டது. இதற்குச் சுப்பிரமணிய தேசிகர் உரை செய்தனர். இது பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் மூன்று இயல்களை யுடையது.

**தண்டியின் உருவம்** — இவர் திருக்கைலையின் தென்புறத்தில் பெரிய வயிறும் தொங்குகின்ற சிகையும், மைக் கூண்டும், எழுதுகோலும் வைத்துக்கொண்டு ஜனங்கள் செய்கிற கன்மங்களுக்குச் சாக்ஷியாய் அந்தக் கன்மங்களை எழுதுகிறவராவர்.

**தண்டிலேயன்** — ரௌத்திராஸ்வன் புத்திரன்.

**தண்டினி** — மணித்வீபத்தில் சக்ராலயத்தின் கீழ்த்திசையிலுள்ள கிருகத்தில் உள்ள சத்திகளில் ஒருத்தி. (சிவரஹ.)

**தண்டீசர்** — சண்டேசுர நாயனாருக்கு ஒரு பெயர்.

**தண்டுலசாயி** — திருதராட்டிரன் குமரன்.

**தண்டுலபிரஸ்தகம்** — ஜராஸந்தன் சிவபூசை செய்து இஷ்டசித்தி யடைந்த இடம். (பார - சபா.)

**தண்ணீர் வடியுமரம்** — இவ்வகை மரங்கள் ஐரோப்பாவிலுள்ள ஸ்வட்ஜர்லாண்டின் காடுகளிலுள்ளவை. இம் மரத்தை முதிர்ந்தபின் வெட்டினாலும், தொளைத்தாலும் இதிலிருந்து சுத்தமான தண்ணீர் ஏராளமாகச் சுரக்கின்றது என்பர்.

**ததிபாண்டன்** — ஒரு இடையன், கண்ணன் இவனிடம் ஒரு நாடகமாக அடைக்கலம் புக இந்த இடையன் இவரைத் தயிர்ப் பானையால் மறைத்தனன். பிறகு கிருஷ்ணமூர்த்தி தம்மை விடக் கேட்க இடையன் எனக்கும் என்சாலிற்கும் மோக்ஷம் தரின் விடுவேனென்ன அவ்வகை இருவருக்கும் முத்திதரப் பெற்றவன். இவனைக் குயவன் என்பர் குலாலர்.

**ததிமுகன்** — 1. கத்ருகுமரன், நாகன்.

2. சுக்கிரீவனுக்கு அம்மான்; ஒருவானரவீரன் மதுவனக்காவலன் அங்கதனிடம் அடிபட்டுச் சரண்புக்கவன்.

**ததியக்கன்** — அதர்வணன் புத்திரன்.

**ததிவாகன்** — 1. அங்கன் குமரன்.

2. ஓர் க்ஷத்திரியன் தவிதரன் புத்திரன்.

**ததீசி** — 1. அதர்வ என்னும் ருஷிக்குச் சாந்தியிடமுதித்த குமரர். இவர்க்குத் தத்தியங்கர் எனவும் பெயர். இவர்க்குக் குதிரைமுகம் என்று கூறுவர். மகாவிரத ஒழுக்கமுடையவர், துவட்டாவிற்கு நாராயணகவசம் உபதேசித்தவர். இந்திரன், விருத்திரன்முதலிய அசுரரை வெல்ல இவரிடம்வந்து முன்பு தேவரும் அசுரரும் பாற்கடல் கடைகையில் இருதிறத்தவரும் ஆயுதங்களுடன்வர அவைகளை விஷ்ணுமூர்த்திவாங்கி இம்முனிவரிடத்து வைத்தனர். அந்த ஆயுதங்களை நெடுநாள் இவர் வைத்திருந்தும் அவற்றை யாரும் கேளாததால் இவர் விழுங்கினர். அவைகள் திரண்டு இம்முனிவரது முதுகந்தண்டைச்சேர்ந்திருந்தன. அம்முதுகந்தண்டை இந்திரன் கேட்கத் தமது உயிரை ஒரு பொருட்டாக எண்ணாமல் முதுகெலும்பு கொடுத்த கருணாமூர்த்தி. குபன் என்னும் அரசனை நண்புபூண்டு அவன் அரசர் பெரியர்என இவர் அந்தணர் பெரியர்என வாதிட்டு அரசனைமோத அரசன் வச்சிரத்தால் எறிய உடலறுந்து சுக்கிரனை நினைக்கச் சுக்கிரன் மிருதசஞ்சீவினி மந்திரத்தால் உயிர்தரப்பெற்றுச் சிவபூசைசெய்து வச்சிரயாக்கை பெற்றுக் குபனைமுடியிடற வுதைத்தனர். இதனால் குபனுக்கு விஷ்ணுமூர்த்தி பரிந்துவந்து சக்கரத்தையும் அனேக விஷ்ணுக்களையும் ஏவினர். இருடி அவ்விஷ்ணுவின் மாயைகளைத் தமது கட்டைவிரலில் உதித்த அனேக விஷ்ணுக்களையேவி மாற்றிச் சக்கரத்தைப் பின்னிடச்செய்து பல பாணங்களைத் தருப்பையி லாவாகித்துப் பிரயோகித்துப் பிரமன் வேண்டுகோளால் நிறுத்திக் குபனுக்கு அருள்புரிந்தவர். தக்கன்செய்த யாகத்திற்குச் சென்று அவனுக்குச் சிவமூர்த்தியின் சிறப்புக்களைக்கூறிச் சிவமூர்த்திக்கு அவிகொடுக்கப் போதித்தனர். அவன் இவரது சொற்களைக் கேளாததால் செய்யும் யாகமழியவும் அந்த யாகத்திற்கு வந்த தேவர்கள் மாளவும் வேதியர் இருபிறப்பாளராகத் தங்கள் நிலைதவறி வேறு தெய்வங்களைத்தொழுது முத்தியிழக்கவும் சபித்தவர். இவரது மற்றசரிதங்களை இந்திரனைக்காண்க. ஒருமுறை முனிவர்கள் வைகுண்டத்தை வாயினால் சிருட்டித்தனர். இதனால் திருமால் கோபித்தனர். இதைக்கண்ட ததீசிமுனிவர் தமது உடலெல்லாம் வைகுண்டம் காட்டினர் (தீர்த்தகிரிபுராணம்).

2. சாரஸ்வதரைக் காண்க.

3. இவர் பிருகுவம்சத்தவராகிய **துந்துமுகர்** குமரர். இவருடன் சூர்யவம்சத்தரசனாகிய சையாதியின் குமரன் க்ஷுபன் தனது தந்தையின் கட்டளையால் துந்துமுகரைச் சரணடைந்து வேதமுதலிய சகல கலைகளையுங் கற்றுவருகின்ற நாட்களில் ததீசி க்ஷுபனைநோக்கி நான் ஒரு காலத்தில் உன்னிடம் தன தான்ய பசுக்களை வேண்டி வருவேனாயின் தருவையோவென, அவ்வாறாகுக வென்றனன். பின் க்ஷுபன் தன்னரசையடைந்து ராஜ்யமாளுகையில் ததீசி செல்ல க்ஷுபன் மறந்து பேசுதலறிந்து கோபித்தவரா யுன் செல்வத்தினும் மிக்க செல்வத்தை நான் சிவபெருமானிடம் பெற்றுவருகிறேனென அவனை விட்டுச் சிவமூர்த்தியை யெண்ணித் தவம்புரிந்து பெற்றுத் தம் செல்வத்தைக் காணும்படி க்ஷுபனுக்குக் கூற க்ஷுபனும் முனிவரை வச்சிரத்தால் எறிந்து முனிவர் செல்வத்தைக் கண்டு அவ்வாறு பெற எண்ணி விஷ்ணுவை நோக்கித் தவம்புரிந்து செல்வங்களையும் அஸ்திரங்களையும் பெற்று முனிவரது வீறடக்க யுத்தத்திற்கு வந்து அஸ்திரங்களைப் பிரயோகிக்க முனிவர் தருப்பையை அபிமந்திரித்துச் சேனை முதலியவர்களைக் கொல்லவும் விஷ்ணு உதவி செய்ய வந்து சக்ரப்ரயோகஞ் செய்து, இளைத்து முனிவரை வேண்டிச் செல்ல அரசனும் அடங்கிப் பணிந்து சென்றனன். இவர் தேவி கர்க்கமுனிவர் குமரியாகிய மித்ராணி. (சிவரஹ)

**தத்தனேரி** — திருவிளையாடலிற் கூறப்பெற்றுள்ள தத்தனென்னும் பாண்டியனுண்டாக்கிய ஊரென்று தெரிகின்றது. குதிரை வடிவமொழிந்த நரிகள் தத்திச் சென்ற இடமாதலின் தத்து நரியென்று முதலில் வழங்கிய பெயர். அப்பால் இங்ஙனம் ஆயிற்றென்று சொல்வதுமுண்டு; இவ்வூர் செல்லூர்க்கு மேற்கேயுள்ளது. (திருவிளை)

**தத்தன்** — 1. மெய்ப்பொருள் நாயனாருக்கு மந்திரி. நாயனாரைக் கொன்றவனைக் கொலை செய வெழுந்து நாயனார் தடுக்கச் சொற்கடவாது நின்றவன்.

2. சீவகன் குமரருள் ஒருவன்.

3. பராச ருஷியின் புத்ரன்.

**தத்தாத்ரேயர்** — 1. அத்திரி ருஷியின் புத்திரர். அத்திரி ருஷிக்கு அநசூயையிடம் அவதரித்து யோகத்திருக்க விரும்பிய போது இருடிச்சிறுவர் விடாது பின்பற்றுவதை யெண்ணி இவர்களை விட்டுத் தனித்திருக்க (௧00) வருஷம் சலத்தில் யோகஞ் செய்துகொண்டிருந்து அம் மடுவினின்றும் வெளி வருகையில் சிறுவர் விடாதது எண்ணி ஒரு அழகுள்ள பெண்ணுடன் வந்தனர். அதைக் கண்ட முனிச் சிறுவர் அவரிடம் வெறுப்புக் கொள்ளாதிருக்கவும் முனிவர், கள்ளருந்தல் முதலிய பஞ்சமகா பாதகஞ் செய்து வெறித்திருப்பவராய் அவர்களுக்குக் காட்ட இருடிச் சிறுவர்கள் விட்டு நீங்கினர். முனிவர், பற்றற்றவரா யோகத்திருந்தனர். இவ்வாறு இருக்கையில் தேவர்களுக்கும் சம்பராசுரனுக்கும் யுத்தம் நடந்தது. தேவர்கள், முனிவரிடம் தம் குறை கூறினர். முனிவர் என் கண் காண அசுரர் உங்களை வருத்துகையில் அசுரர் அழிவர் என்றனர். பின் சம்பராசுரன் யுத்தத்திற்கு வந்து தேவரை வருத்துகையில் தேவர் தத்தாத்திரேயரிருந்த ஆச்சிரமத்தில் ஒளிந்தனர். சம்பரன் முதலியோர் தத்தாத்திரேயரிடம் இருந்த இலக்ஷுமியின் அவதாரமாகிய அவருடைய பத்தினியைக் கண்டு தூக்கித் தலைமேல் வைத்துக் கொண்டு தேவரை வருத்தாமல் ஆச்சிரமத்தை விட்டு (௭) அடி சென்றனர். இலக்குமி அவரிட மிருந்து மறைந்தனள். முனிவர் தேவர்களை நோக்கி இலக்குமி அவர்களிடமிருந்து நீங்கினள். இனி அசுரர் உங்களுக்குத் தோற்பர். சென்று யுத்தஞ் செய்யுங்களெனக் கூறித் தேவர்களுக்கு வெற்றி தருவித்தவர். அத்திரி தவஞ் செய்கையில் விஷ்ணு தரிசனந் தந்து தம்மை அவருக்குத் தத்தஞ் செய்ததால் இப் பெயர் பெற்றனர். இவரால் யதுக்கள், ஏயாள், ஞான சம்பந்தத்தை யடைந்தனர். சகோதரர் சோமன், துர்வாசன். (பாகவதம்)

2. வேதங்களைப் பரவச் செய்தவர், பாண்டவர் முற்பிறப்பில் இவரை ஆதரித்து மறுபிறப்பில் சகல சாம்பிராச்சியமும் பெற்றனர். கார்த்தவீர்யார்ச்சுநன் இவரை யடுத்து ஆயிரங் கைகளும் சகல சம்பத்தும் பெற்றனன்.

3. புலகருக்குப் பிரீதியிடம் பிறந்தவன்.

**தத்தியங்கர்**—தத்தாத்திரயருக்கு ஒரு பெயர்.

**தத்துவதர்சி** — பதின்மூன்று மன்வந்தரத்து ருஷி.

**தத்புருஷகல்பம்** — பிரமன் ஒரு காலத்துச் சிவபெருமானைத் தத்பரமாகத் தியானிக்க அப்போது தத்புருஷ வுருவாகத் தோன்றின கல்பம். (லிங்க - புரா.)

**தத்புருஷமூர்த்தி** — இவர் மூன்று கண்கள், பொன்னிறம், மஞ்சள் பட்டு வஸ்திரம், கரத்தில் ஜபமாலை யுடையவர்.

**தத்துவப்பிரகாசர்** — 1. திருவொற்றியூர் ஞானப்பிரகாச தேசிகருக்கு மாணாக்கர். சிவஞானசித்தியாருக்குப் பரபக்ஷ வுரை இயற்றியவர்.

2. சிற்றம்பலநாடிகளுக்கு மாணாக்கர். இவர் தத்துவப் பிரகாசமென்னும் சைவ சித்தாந்த சாத்திரஞ் செய்தவர்.

**தத்துவம்** — (௯௬) ஆன்மதத்துவம் (24), நாடி (10), அவத்தை (5), மலம் (3), குணம் (3), மண்டலம் (3), பிணி (3), விகாரம் (8), ஆதாரம் (6), தாது (7), மரபு (10), கோசம் (5), வாயில் (9).

**தத்துவராயர்** — இவர் சோழநாட்டில் வீரையென்னும் ஊரில் பிறந்த வேதியர். இவர் உபயகவி. இவருடன் சகபாடியா யிருந்தவர் சுவரூபாநந்தர். இவ்விருவரும் சந்நியாசிகளாய் ஞானாசாரியரைத் தேட ஒருவர் தென்னாடும், மற்றவர் வடநாடும் செல்லப் புறப்படுகையில், அவ்விருவரும் நம்மில் யார் முதலில் ஆசாரியரைக் காண்கிறோமோ அவர்கள் மற்றவருக்கு ஆசாரியர் ஆகிறதென உடன்பட்டுப் புறப்பட்டுச் சென்றனர். தென்னாடு சென்ற சுவரூபாநந்தர் சிவப்பிரகாசரைத் தரிசித்து உண்மை யுணர்ந்தனர். முன் சொன்ன சங்கேதப்படி தத்துவராயர் இவர்க்கு மாணாக்கர் ஆயினர். இவர் செய்த நூல் தத்துவராயர் சரித்திரம் அல்லது பாடுதுறை. இவராற் சசிவர்ண போதமும் சசிவர்ணன் என்னும் மாணாக்கன் பொருட்டுச் செய்யப்பட்டது. இவர் கலிமடலும் ஈசுரகீதை பிரமகீதையும் செய்தனர்.

**தத்தை** — 1. கண்ணப்ப நாயனுர்க்குத் தாய்.

2. சம்பன் பெண். இரண்யகசிபின் தேவி.

3. பிரச்சோதனன் மகளாகிய வாசவதத்தை. (பெ. க.)

**தத்வப்ரகாசர்** — 1. இவரை ராயர் கூத்தனூர் அப்பன்வால கோகிலர்கள் எப்படியென்றபோது கூறியது. கட்டளைக்கலித்

துறை "மன்கவிதரவும் பொழிற் கூத்த னூரப் பன்வாய் தலைமன், தன்கவி தெள் ளியபால் வாலகோகிலந் தானுரைத்த, நன்கவி பாலுக்கிடு சர்க்கரைக்கவி நாங்கள் சொல்லும், புன்கவியுப் பொடுகாய மென் றே சொல்லி போற்றுவரே" ஒட்டக்கூத்த னென்றொருபுலவன் வரவு கேட்டுச் சொல்லியது. "பறியாரோ நின்வாயிற் பல்ல தனைப் பாரோர், முறியாரோ நின்முதுகின் முள்ளைச்-சிறுகவொரு, மட்டப்பேர் போ தாதோ வாக்கிதுவே யானக்கால், ஒட்டக் கூத்தன் தானுனக்கு" ஒருவன் புடவை தரப் பார்த்துச் சொல்லியது. "வெற்றிப் பாடுங் குணப்பாடும் வீரப்பாடு மொருகவி யில், தெற்றிப் பாடவதுகண்டு சினக்கரசர் துகிலீந்தார், பற்றிப் பார்க்கவதனூடே பலதேவேசர் வீற்றிருந்தார், சுற்றிப் பார்க் கப் பயப்பட்டுத் தூரவைத்துத் தொழு தோமே" உலோபரைப் பாடியது. "குரங் குமாய் நண்டு கட்டித் தேளுங் கொட்டிக், குடியாத மதுக்குடித்தே பேயுமேறி, இரங் கவருங் காஞ்சொறியின் பொடியுந் தூவி, இஞ்சிதின்று கொள்ளிபிடித் தெழுந்தாற் போலத், தருங்கருணை யில்லாத புல்லர் வாழ்வில், தண்டிகையின் மீதேறிச் சம்பத் தேறிக், கருங்கை மதக்களிறேறிக் கழுவி லேறிக், காடேறி நாடேறித் திரிவார் கண்டீர்" தீயோரைப் பாடியது. "பாம்பு கடித்தா லதுவுமீட்க வல்லோம், பசாசறை ந்தா னீறிட்டுப் பார்க்க வல்லோம், வேம்பு கசப்பறக் கறியுமாக்க வல்லோம், விறல் வேழத்ததிகந் தந்தணிக்க வல்லோம், சாம் பொழுது திடமாகப் பேச வல்லோம், தர ணியின்மேல் கல்லாத தொன்று மில்லை, தீம்பரை நல்லவராக்கிக் குண முண்டாக் கத், திறமதறியாம னின்று திகைக்கின் றோமே" தத்வப் பிரகாசபண்டாரத்திற் கிலக்கணம் வருமோவெனக் கேட்டபோது பாடியது. "கவிகளாகத் திரியுங் கள்ளர் நாள் நன்னூற், சுவடியிருந் தாவதென்ன சொல்வீர் - குவலயத்துக், காட்டுக் கெரி த்தநிலாக் கண்ணிரண்டு மில்லாதான், வீட்டுக் கெரித்த விளக்கு"

2. இவர் விஜய நகரத்தரசர் கிருஷ்ண தேவமகராயர் காலத்திருந்த ஒரு புலவர், இவர் சரிதம் ஒன்றுந் தெரியவில்லை. இவர் பண்டாரம் என்பர். இவர் திருவாரூர் கொடி யிறங்காமற் றகைந்தது. மருவுபுகழ் கிட்ணமக ராயராணை, யரியவட மலையா ணை, - திருவாரூர்ப். பாகற்கொடி யறுப பார் பாதந் திருவாணை, தியாகக் கொடி யிறக்காதே" கிருஷ்ண தேவராயருக்கு எழுதி விடுத்த பாட்டு. "ஊழி துலுக்கல்ல வொட்டியான் தானுமல்ல, வீழி துலுக்கு வந்து மேவிட்டு - வாழி, சிறந்த திருவா ரூர்த் தியாகருடை பூசை, இறந்ததே கிட் ணராயர்" இது கேட்டு ராயர் பட்டர்களை மாற்றியபோது பாடியது. "உண்ட வயிற் றிலு மிக்காந்த விட்டதே, தொண்டரே வீழித் துலுக்கரே - பண்டெல்லாம், அப் பமவ லெள்ளதிரசமுந் தோசைகளும், குப் புவதும் போச்சே கவிழ்ந்து" விஜயநகரத் தரசரது அதிகாரியாகிய சாளுவநாயகர் புலவரைப் படுத்துக் கொள்ளக் கூறிய போது பாடியது. "மூட்டை கலம்புழுதி முக்கலஞ் சுத்தப்பாழ், வீட்டை விடுதியாய் விட்டாயே - போட்ட, தடுக்கெல்லாம் பீறல் தலையணையேல் வைக்கோல், படுக்க லாமோ சொல்லப்பா" இதைக் கேட்டுத் திருத்தோணியப்பர் பாடியது.

**திருத்தோணியப்பர்** — இவர் ஒரு புலவராக இருக்கலாம் ஷை தத்வப்ரகாசர் காலத்தவர் போலும் "ஆயிரவர் புலவோரி லொரு வன் பிரபந்தகவியவ ராயிரத்து ளொரு வன், அந்தாதி தூதுலாப் பரணிக்கோவை க்கமகனவ ராயிரர்க்கு ளொருவன், போயி டம்பெறு நாடகபுராணிக னவன்போ லாயி ரர்க்கு ளொருவன், பொருட்பெருங் காப்பி யம் புகல்வாக்கி மற்றவன்போ லாயிரர்க்கு ளொருவன், பாயிரந்தரு பஞ்சலக்ஷணவி தானியப்படி யாயிரர்க்கு ளொருவன், பரச மயதர்க்க நூல்பகர்வாதி மற்றுமப்படி யா யிரர்க்கு ளொருவன், தேயமெண்டிசை பரவுதேசிகோத்த மனத்திறத் தாயிரர்க்கு ளொருவன், சிவனைத்துதித் துண்டுடுத்துக் கொடுத்திடுந் தெய்வச்சிவக் கியானியே". "குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டிய னிங் கில்லை, குறும்பியள வாக்காதைக் குறித் துத் தோண்டி, எட்டினு லறுப்பதற்கு வில்லி யில்லை, இரண்டொன்றாய் மயிரை முடிந்திறங்கப் போட்டு, வெட்டுதற்குக் கவியொட்டக் கூத்தனில்லை, விளையாட்டுக் கவிபாட்டு விரைந்து பாடித், தெட்டுதற் குத் தமிழறியாத் துரைகளுண்டு, தெள் ளடித்துப் புலவரெனத் திரியலாமே". "நினைவுகவி சொல்வோமெனச் சொலிப் பிறர்கவிதை, நினைவினைத் திருடி வை யோம், நீடுலகின் மனிதரைப் பாடிலோ

ம்நாமென்று, நீள்வகைகள்பாடஅறியோம், பிணையிலைய நாவலருடன் பங்குபேசிப் பிரபந்தங்கள் பாடிக்கொடோம், பேசுவது தேவாரமே யலால்வாய்க் கெளியபேய்க் கிரந்தங்கள் பேசோம், இனிமைதரு பூருவத்துக் குருக்களை மறந், தெட்டிடத்துத் தீக்ஷைபோயிட்ட சிறுபேர்மாற்றி மாதமொரு பேரிட்டழைக்க நாமிறுமாந்திரோம், தனியிருந் தெம்மைப் புறங்கூறுவார் பாடுதணியக்கவி பாடுவோம், சமண நூல்களைப் பொருளெனக் கொளோந் திருஞானசம்பந்த ரடியர்நாமே".

**தத்வவதி** — ஒரு வேதியன், இவன் தேவி வம்சவதி, புத்திரப்பேறிலாது சிவபூசையால் புத்திரப்பேறு பெற்றவன்.

**தநு** — 1. காசிபர் தேவியரில் ஒருத்தி, இவளிடம் விப்ரசித்தி, நமுசி, சங்கன், வருணன், பலோயன், விலோமன் முதலிய தானவர் பிறந்தனர்.

2. ஒரு காந்தருவன், தூலகேச ருஷியால் கபந்தனாகச் சபிக்கப்பட்டவன்.

**தநுக்கிரகன்** — திருதராட்டிரன் குமரன்.

**தநுர்வேதம்** — உபவேதம் நான்கனுள் ஒன்று.

**தந்தகாதகன்** — அரிச்சந்திரனை வெருட்ட விச்வாமித்திரனு லனுப்பப்பட்ட வேதாளம்.

**தந்தமூலரோகங்கள்** — இது பற்களின் வேரில் உ ணணுகின்ற ரசாதிவஸ்துகளின் பேதத்தால் சீதளவாய்வு வியாபிக்கும்போது பிறந்து ரோகத்தைத் தருவது. அது: 1. சிதாதரோகம், 2. உபகிருசரோகம், 3. தந்தபுப்புடரோகம், 4. தந்தவித்திரதிரோகம், 5. தந்தசுஷீரரோகம், 6. தந்தமகாசுஷீரரோகம், 7. அதிமாமிசரோகம், 8. தந்தவிதர்ப்பரோகம், 9. வாததந்தமூலரோகம், 10. பித்ததந்தமூலரோகம், 11. சிலேஷ்மதந்தமூலரோகம், 12. திரிதோஷதந்த மூலரோகம், 13. க்ஷததந்தமூலரோகம் ஆக தந்தமூலரோகம் 12.

**தந்தரோகங்கள்** — 10. தந்தரோகம் உண்ணுகின்ற ரசாதி வஸ்துக்களின் பேதத்தால் வாயினிடத்தில் சீதளவாய்வு வியாபிக்கும்போது பிறந்து உபத்திரவத்தைச் செய்யும். இதனால் பற்களில் உஷ்ண வஸ்துக்கள்படின் இதவும், சீதளவஸ்துகள் படின் வேதனையும் உண்டாம். அதனால் உண்டாகும் ரோகங்கள் 10. 1. தந்ததாளனரோகம், 2. தந்தஹரிஷரோகம், 3. தந்தபேதரோகம், 4. தந்தசலனரோகம், 5. தந்தகாராளரோகம்; 6. அதிதந்தரோகம், 7. தந்தசருக்காராரோகம், 8 தந்தகபாலீகாரோகம், 9. தந்தசியாவரோகம், 10. தந்தபிரலூனரோகம், ஆ[illegible]ந்தரோகம் 10.

**தந்தவக்கிரன்** — 1. கரூசதேசாதிபதி.

2. ஒரு அசுரன்.

3. விருததர்மாவிற்குச் சிருததேவாவிடம் ருஷியின் சாபத்தால் பிறந்தவன்.

4. இடையெழுவள்ளல்களில் ஒருவன்.

5. இவன் பூர்வம் விஷ்ணுமூர்த்தியின் துவாரபாலகன், குரோதகீர்த்தியின் குமரன், சால்வனுக்கும் சிசுபாலனுக்கும் தோழன். கிருஷ்ணன் அத்தை மைந்தன், இவன் கிருஷ்ணமூர்த்தியா லிறந்தான்.

**தந்தன்** — சண்முகசேநா வீரன்.

**தந்தாகிருஷ்டி** — இவள் குழந்தைகள் உறங்குகையில் பல்கடிக்கச்செய்யும் தேவதை. இவளது குமரிகள் விஜல்பை, கலகை.

**தந்தி** — 1. சுவர்க்கன் குமரன்.

2. வெகுதூரத்தில் நடக்குஞ் செய்திகளை அடையாளங்களால் மின்சார ஆகர்ஷண சக்தியைக்கொண்டு கம்பிகளின் வாயிலாகத் தெரிவிக்கும் கருவி.

**தந்திசயிலம்** — ஒரு புண்ணியமலை.

**தந்திரபாகை** — ஒரு நதி, காச்மீரத் தருகிலுள்ளது.

**தந்திரபாலன்** — சகாதேவன் மச்சநாட்டில் ஒளித்து வசித்த காலத்தில் வைத்துக் கொண்ட பெயர்.

**தந்திரம்** — இது ஆகமம்; இது லௌகிக தந்திரம், வைதிகதந்திரம், ஆத்யாத்மிகம், அதிமார்க்கம், மந்திரமுதல் பலவகை. இவை ஈசான தத்புருஷ அகோர, வாம, சத்யோஜாத முதலான மூர்த்த சதாசிவ மூர்த்தியால் கூறப்பட்டன. இவை சித்தாந்தம், காருடம், வாமம், பூததந்தரம், பைரவம் என 5 பேதம்.

**தந்துக ஆகர்ஷணசக்தி** — இது திரவபொருளைத் தனக்குள்ள துவாரங்களின் வழியாய் உறிஞ்சுஞ் செயலுள்ள சக்தி. (Capillary attraction).

**தந்துநிறை** — வாராலே கட்டின துடிகறங்க ஊரினுள்ளார் விரும்ப ஆனிரையை மன்றத்திடத்துச் செலுத்தியது. (பு - வெ.)

**தந்துமாறன்** — சங்கவருணரென்னும் நா[illegible]ரியாரால் பாடப்பட்டவன். (புற. நா)

**தந்துமான்** — அக்னிவிசேடம்.

**தந்துவர்த்தனசோழன்** — 1. ஒரு சோழன். இவன் புத்திரப்பேறிலாது பவாநிகூடலை யடைந்து சங்குகன்னரால் தீர்த்தஸ்நான முதலியசெய்து இலங்கைக்கனி பெற்றுக் குலவர்த்தன சோழனைப் பெற்றான்.

**தந்தோற்பவரோகம்** — பாலரோகங்களில் ஒன்று. பிள்ளைகள் பஞ்சினால் சரடு, கயிறு முதலியவற்றை விழுங்குதலால் உண்டாவது. இதனால் சுரம், பேதி, இருமல் முதலிய உண்டாம். (ஜீவ.)

**தந்தை** — (சங்.) புருகுமாரனாகிய சனமேஜயன் மனைவி.

**தந்தையர்** — (இ) பிறப்பித்தோன், கற்பித்தோன், மணமுடிப்பித்தோன், அன்னங் தந்தோன், ஆபத்திற்குதவினோன்.

**தந்தையின் ஆணையைக்கடந்து துன்பமடைந்தோர்** — யயாதியின் புதல்வர், விசுவாமித்ரரின் புதல்வர்.

**தபங்கமுனிவர்** — இவர் தவத்திலிருக்கையில் இவரை ஒரு புலி பாயப்போயிற்று. சளன் என்கிற அரசன் அப்புலியைக் கொன்று விஜயன் எனப் பெயர் பெற்றனன்.

**தபசி** — சமவர்ணன் தேவி, சூரியன் குமரி.

**தபசு** — பன்னிரண்டாமன்வந்தரத்து ருஷி.

**தபதி** — 1. ஓர் மநு, சூர்யபுத்ரன்.

2. யயாதியின் பெண்.

3. சம்வர்ணனை மணந்தவள், சூர்யபுத்ரி.

4. குருவின்தாய், சவ்வருணன் தேவி.

5. பிரகஸ்பதிஸவனமென்கிற யாகஞ் செய்தவன்.

6. ஸ்தல நிர்மாணம் முதலியவைகள் செய்யும் சாஸ்திரி.

**தபதிகுமரர்** — யயாதிபெண்ணின் குமரர்.

**தபதிநாராயணர்** — ஒரு இருடி. இவர் ஆச்சிரமத்தில் பாண்டவர் தீர்த்தயாத்திரையில் வசித்தனர்.

**தபநன்** — 1. ஒரு அரக்கன் மேகசன் என்னும் வாநரரால் மாய்ந்தவன்.

2. அமிர்தத்தைக் காப்பாற்றிய தேவன். (பார ஆதி.)

3. பாஞ்சாலதேசத்து அரசன், கர்னனால் கொல்லப்பட்டவன்.

**தபநாபி** — வீமன் குமரன்.

**தபந்தீ** — ஒரு இருடி, இவனுக்குக் காதியாயநன் எனவும் பெயர்.

**தபன்** — ஒரு அக்கி, இவன் சவநன, ஆங்கிரசன், வசிட்டன், பிராணன், கஸ்யபன், என்பவர்க்குப் பிறந்தவன்.

**தபுதாரநிலை** — அணிந்த ஆபரணத்தினையுடையாளை இழந்தபின் தனிமையுடனே தங்கி இல்லிடத்து அவதரிக்கும் ஆண்மகன் முறைமையைச் சொல்லியது. (புறவெண்பா பொது.)

**தபோமூர்த்தி** — பன்னிரண்டாம் மன்வந்தரத்து ருஷி.

**தப்ததும்பம்** — ஒரு நரகம், உருக்கெண்ணெய் நிரம்பியது.

**தமகோஷன்** — சேதிதேசத்தரசன், இவன் மனைவி சாத்வதி.

**தமசாதீரம்** — அயோத்தியின் வட கோடியெல்லை.

**தமசு** — ஒரு குளிர்ந்த இருள்சூழ்ந்த நரகு.

**தமசை** — 1. ருக்ஷபர்வதத்திலுள்ள ஒருநதி.

2. The river Tonse between the Saraju and the Goomti, which flowing through Azamharh, falls into the Ganges. தமசைக் காண்க.

**தமநமுனிவர்** — குண்டினபுரத் தரசனாகிய வீமராசனுக்குப் புத்திரப்பேறளித்த முனிவர். இவர் அநுக்கிரகத்தாற் பிறந்ததால் தமயந்தி என்ன அரசன் குமரிக்குப் பெயரிட்டனன்.

**தமநிகை** — மேனகையென்னும் தேவதாசியின்பெண், இவளுக்கு மதனிகை எனவும்பெயர்; இவள் வித்யுத்ருபனால் கவரப்பட்டு அவன் இறந்தபிறகு சந்தரன் எனும் பக்ஷியரசனை மணந்து தாக்ஷியைப் பெற்றாள். தருமபக்ஷிகளைக் காண்க.

**தமப்பிரசாதன்** — மனத்திலிருந்து குரோதமுண்டாக்குவோன்.

**தமயந்தி**—1. தமநமுனிவர் வரப்பிரசாதத்தினால் வீமராசனுக்குப் பிறந்தவள். இவள், சுயம்வரத்தில் மணமாலைசூட்டக் கொலுவில் வந்தகாலத்தில் சரஸ்வதி தோழியாக வந்து அரசர்களின் பெயரைக் கூறினள். இவள், நளனை மணந்து கலிபுருஷன் கொடுமையால் கணவனைக் காட்டிற் பிரிந்து பாம்பின் வாய்ப்பட்டு வேடனால் நீங்கி அந்த வேடன் தன்னிடம் தீய எண்ணம் கொண்டதனால் அவனைக் கற்பின் வலியால் எரியச்செய்து சேதிதேசம் சென்று அந்நாட்டரசியால் ஆதரிக்கப் பெற்றுத் தாய் வீடடைந்து தந்தையால் தேடுவித்து வருவிக்கப்பட்ட நளமகாராசனைக் கூடிச் சுகித்திருந்தவள். இவள் குமரன் இந்திரசேநன், குமரி இந்திரசேனை.

2. ஆருகனைக் காண்க.

**தமலிப்தர்** — கங்கைக்கு மேற்கிலுள்ளதேச வாசிகள்.

**தமனன்** — ஒரு ரிஷி. இவனுடைய வரபிரசாதத்தால் தமயந்தி பிறந்தாள்.

2. தமயந்தியுடன் பிறந்தவன்.

3. பௌரவன் புத்திரன்.

**தமன்** — 1. (சு.) மருத்தன் தந்தை.

2. குபேரனைக் காண்க.

3. தமன் என்னும் அரசனுக்கு இராச்சியவர்த்தனன் என்னும் புத்திரன் பிறந்தனன். இவன் வளர்ந்து விரேதன் குமரியாகிய மானினியை மணந்து (எ000) வருஷம் ஆண்டுவந்தனன். ஒரு நாள் தன் தேவி அரசனுக்கு எண்ணெயிடுகையில் அவன் கண்ணீர் அரசன் தலையில் விழுந்தது. அரசன் என் அழுகின்றனையெனத் தேவி உமக்கு நரைவந்ததே என்றனள். அரசன் இதற்கு வனவாசமே மருந்தென்று தன் புத்திரனுக்குப் பட்டாபிஷேகம் செய்ய இருக்கையில் பட்டணத்துச் சனங்கள் அரசனை நீங்க மனம் இலாது சூரியனையெண்ணித் தவமியற்றி அரசன் (க0,000) வருஷம் ஜீவிக்க வரம்பெற அதை அரசி அரசனுக்கு அறிவிக்க அரசன் முன்னிலும் அதிக விசனமுற அரசி விசனமுறுவதற்குக் காரணங் கேட்டனள். நான் சிவதிசையுடனிருக்கையில் நீயும் உன் புத்திரனும் இந்தப் பட்டணவாசிகளும் சாக அதனைக் கண்டு விசனமுறலாயிற்றே என்றனன். அரசி, அதற்கு என்ன உபாயம் செய்யலாம் என்ன அரசன், அரசியுடன் சூரியனையெண்ணித் தவமியற்றிப் பட்டணவாசிகளும், குமரனும், தன்பத்தினியும் சாகாதிருக்க வரம்பெற்றவன். (மார்க்கண்டேய புராணம்).

4. நரிஷ்யந்தன் புத்திரன், இவன் அரசாளுகையில் தசாரண தேசாதிபதியாகிய சாருகருமன், தன்னுடன் பிறந்தாளாகும் சுமுனையென்பாளுக்குச் சுயம்வரம் சாற்றினன். அதில் அவள் தமனைவரிக்க அரசர்கள் கோபித்து அவளைப் பலாத்காரமாய்க்கிரகிக்க, தமன் பெரியோர்களால் தூண்டப்பட்டு அரசர்களைவென்று அவளை மணந்து அரசாளுகையில் இவனது பகைவனாகிய வபுஷ்மந்தன் ஒரு நாள் வேட்டைக்குச் சென்று அங்குத்தவஞ் செய்யும் தமன் தந்தையாகிய நரிஷ்யந்தனை நீ யாரென் அவன் யோகத்தால் பேசாதிருக்கக்கண் ருகிருந்த அவன் மனைவியாகிய இந்திரசேனையால் தவஞ்செய்வோன் தன் பகைவனாகிய தமன் தந்தையென்றறிந்து யோகத்திலிருந்த அவனைக்கொல்ல இந்திரசேனை தன் குமரனுக்கு நடந்த செய்தி கூறி யனுப்பித் தன் கணவனுடன் தீக்குளித்தனள். தமன், தந்தை பகைவனால் இறந்த செய்திகேட்டு அதிகோபாவேசனாய் நான் வில்தாங்கி உயிருடன் இருக்கையில் என் தந்தையைப் பகைவன் கொல்லவா என்று என் தந்தையைக் கொன்றவனைக் கொன்று அவன் உதிரத்தால் என் தந்தைக்குப் பிதுர்க்கடன் செய்வேன் அவ்வகை செய்யாவிடில் என் வில்லுடன் தீயில் புகுகிறேன் என்று சபதம் கூறி வபுஷ்மந்தனுடன் யுத்தத்திற்குச் சென்று யுத்தஞ்செய்து கடுங்கோபத்துடன் அவனைத் தள்ளிச் சின்னபின்னபடுத்தி அவன் சிரத்தைக் கையில் கொண்டு உதிரத்தால் தர்ப்பண முடித்தவன். (மார்க்கண்டேயம்).

**தமிழகம்** — 1. இது தமிழ் வழங்கும் இடமாகிய சோழ பாண்டிய சேரர்களால் ஆளப்பட்ட இடம். இம் மூவேந்தர்களும் இத் தமிழ் நாட்டுப் பழங்குடிகள். எவ்வாறெனின் மக்கள் வெள்ளை நிறமுடையார், மஞ்சணிறமுடையார், கருநிறமுடையார், செம்பினிறமுடையார் என நான்கு வகையினராவர். இவர்களுள் வெள்ளை நிறமுடையார் காக்கேசியர், மஞ்சணிறமுடையார் மங்கோலியர், கருநிறமுடையார் நீக்ரோவர், செம்பினிறமுடையார் அமெரிக்காவின் பழங்குடிகள். இவர்களில் மஞ்சள் நிறமுடைய மங்கோலியர் இமயமலையின் வடபக்கத்திருந்த மேட்டு நிலங்களில் வசித்தமையின் தம்மை உயர்ந்தவரெனும் பெயருள்ள வானவர் இயக்கர் என்றனர். இவர்கள் இமயமலைகளின் கணவாய் வழியாய் இந்தியாவில் நுழைந்து தமிழ் மக்கள் வாழ்ந்திருந்த தமிழக் எனுந் தலத்தில் குடிபுகுந்து பழைய தமிழ் மக்களுடன் கலந்து தமிழராயினர். இத் தமிழர் தாங்களிருந்த இடம் விட்டு தமக்கு இன்னும் இடம் தேடித் தென்னாட்டிற் புகுந்து அங்கு வசித்து வந்த நாகர் முதலியவரை ஓட்டி, அவர்கள் வசித்து வந்த வடவேங்கடம், தென்குமரி, குணகடல், குடகடல் எல்லைகளாகக்கொண்ட நாட்டை ஆண்டு வந்தனர். அவர்கள் ஆண்ட நாடே தமிழகம் எனப்பட்டது.

2. இது தமிழ் நாட்டிற்கு முற்காலத்து வழங்கிய பெயராம். இதனை "இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறிய" எனச் சிலப்பதிகாரத்தும், "சம்புத் தீவினுட் டமிழக மருங்கில்" என மணிமேகலையிலும், "இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்க" எனப் பதிற்றுப்பத்திலும் கூறியவாறறிக. இப்பெயர் 1750 வருடங்களுக்குமுன் டாலமி முதலிய யவன பண்டிதர்களால் 'திமிரிக்' எனவும் 'டமிரிக்' எனவும் திரிந்து வழங்கப்பட்டு வந்தது.

**தமிழறியும் பெருமாள் ஏலங்குழலி** — அளகேசன் ஆண்ட அளகாபுரி ராசகுமாரி. இவள் உப்பரிகையிலிருக்கையில் பத்திரகிரிராச குமாரனாகிய சந்தனகுமரன் கல்வி கற்காமல் மூடனானதால் தந்தையால் நாட்டினின்றும் துரத்தப்பட்டு இவளிருக்கும் அரண்மனையோரமாய் வருகையில் இவள் சந்தன குமரனிடம் மோகித்துத் தன்காதிலிருந்த ஓலையில் தன்கருத்தை எழுதி அவ்வரசகுமாரன் எதிரில் இட்டனள். (அவ்வோலையின்கருத்து இன்று இரவு நீ அருகிருக்கும் நன்காட்டுச் சத்திரத்திலிருந்தால் நான்வந்து காண்கிறேன் என்பதாம்) எதிரில் விழுந்த ஓலையை இராசகுமாரன் எடுத்து எழுத்தறியாதவன் ஆதலால் ஒரு குட்டரோகியிடம் அதை வாசிக்கும்படி காட்டினன். குட்டரோகி, தான் இராசகுமாரத்தியை வஞ்சிக்க எண்ணிச் சந்தனகுமரனை நோக்கி உன்னைக் கொலைசெய்ய ஆக்னை பிறந்திருக்கிறதாம் நீ பிழைத்துப்போக வேண்டுமோம் என்று அவனுக்கு வாசித்துக் காட்டி ஓலையைக் கிழித்தெறிந்தனன். இதைக்கேட்ட சந்தனகுமரன் பயந்து நீங்கினன். குட்டரோகி தன்னைச் சுத்தஞ் செய்துகொண்டு சத்திரத்தில் சென்றிருந்தனன். இராசகுமாரி, அவனுடன் வந்து தழுவித் தான் கண்டவன் அல்லாததால் உடனே மரித்தனள். அரச குமாரன் ஊரரால் அரசகுமாரி இறந்ததறிந்து குட்டரோகி நம்மை மோசஞ் செய்தனன் என்று உயிர் நீங்கினன். இந்த இருவரும் ஆண், பெண் பேய்களாய் அந்தச்சாவடியிலிருந்து யாரையும் அவ்விடம் வரவொட்டாமல் துரத்தியிருந்தனர். ஒருநாள் அச்சத்திரத்தில் ஔவையார் வரப் பெண் பூதம் கோபத்துடன் வந்தது. இதனைக் கண்டு ஔவை இவைகளின் வரலாறறிந்து கவி கூறப் பேய்களிரண்டும் கேட்டு இவள் சரஸ்வதிதேவி யென்று தம் முருக்கொண்டு பணிந்தன. ஏலங்குழலி, ஔவையைப் பணிந்து நின்று தான் இவ் விராசகுமரனைச் சேர்ந்திருக்க வரங் கேட்டனள். ஔவையார் அவ்வகை அநுக்கிரகித்தனர். அந்தப்படி இவள் உறையூரில் கரிகாற்சோழன் ஆலத்திப் பெண்களில் முதல்வியாகிய மரகதவடிவி யென்பவளுக்குச் சண்பகவடிவியெனப் பிறந்து (௧000) பொன் கொடுக்கிறவர்களைச் சேர்வதென்று வைத்துக்கொண்டு வருகிறவர்களை மருட்டி அநுப்பிவிட்டு இருக்கையில் ஒருநாள் சோழன் சமஸ்தானத்திற்குப் போய் வரும்போது அந் நகரத்தில் விறகுதலையனாய்ப் பிறந்திருந்த சந்தன குமாரனுடைய விகார உருவத்தைக் கண்டு காரி உமிழ்ந்தனள். சந்தன குமாரனாகிய விறகுதலையன் இவளைக் கூடவேண்டுமென்கிற கருத்துள்ளவனாய் (௧000) பொன் தேடி அவளுக்குக் கொடுத்துப் பொலிவிழந்து தமிழ்ச் சங்கத்தவரிடம் முறையிட்டு நக்கீரர் உதவியால் அவளை வெல்விக்கத் தமிழறியும்பெருமாள் இறந்தனள். நக்கீரர் தமிழறியும் பெருமாளை உயிர்ப்பித்து விறகுதலையனுக்குக் கல்யாணஞ் செய்வித்தனர். இது கற்பனைக்கதை. நக்கீரர் கடைச் சங்கத்தவர். இவர் இக்காரியம் செய்தனர் என எங்கும் தெரியவில்லை. இவர் அவளுடன் கவி வாத செய்த காலத்தில் பாடிய செய்யுட்கள் அவர் வாக்குகளாகத் தோன்றவில்லை.

**தமிழ்** — 1. இந்தப் பாஷை முதலில் கைலாயத்தில் குமாரக் கடவுளுக்குச் சிவமூர்த்தி உபதேசிக்கக் குமாரக்கடவுள் அகத்திய முனிவருக் குபதேசிக்க அவர் தம் மாணாக்கர் முதலியோருக்கு உபதேசிக்க வெளி வந்தது. ஆதலால் சிவமூர்த்தியின் தமருகத்திலிருந்து பாணினிவாயிலாக வெளிப்பட்ட வடமொழியும், அம் மூர்த்தியின் குமாரரால் அகத்தியர் வாயிலாக வெளிப்பட்ட இப் பாஷையும் ஆராயுமிடத்து ஒரே பிறப்பினவாம். ஏற்றத் தாழ்வுடையவாகா. பின்னும் "இற்றைக்கு மூவாயிரத்தைஞ்ஞூறு வருஷத்திற்குமுன் இருந்த வியாசர் காலத்தவனாகிய அருச்சுனற்குத் தன் மகளைக்கொடுத்த இந்திரவாகன் மதுரைக் கடுத்த பூழி யென்னும் மணவிபுரத்தில் அநந்தகுண பாண்டியனிலிருந்து பதினெட்டாவது பாண்டியனாகிய சித்திரவிரமபாண்டியன் காலத்திற் சிற்றரசு புரிந்

வன்". இவனுண்ட மணலிபுரம் வியாசரால் வடமொழிப் பாரதத்திற் புகழ்ந்து சொல்லப்பட்டிருக்கிறது. பின்னுந் தமிழ்நாட்டரசர் மூவரும் சூர்ய சந்திர வம்சத்திலிருந்து பிரிந்தவர்கள். இவர்கள் துவாபர யுகத்திற்கு முன்பும் அரசாண்டதாகத் தெரிகிறது. ஒரு பாண்டியன் பாரத யுத்தத்தில் பாண்டவர்களின் சேனைக்கு அன்னமிட்டதாகத் தெரிகிறது. இவன் தமிழ்ப்புலவரை ஆதரித்தவன். இது நிற்க முதலாழ்வாராகிய நம்மாழ்வார் தாம் அருளிச்செய்த பாசுரங்களின் இறுதியில் முன்னிருந்த தமிழைத் தாமருளிச் செய்ததாகக் கூறியிருக்கின்றனர். பின்னும் இவ்வரிய பாஷை மற்றைப் பாஷைகள்போல் வேறு பாஷைகளின் துணைவலிபெருது தானாய் விளங்கும் எற்றமுற்றது; இதனை அறிவுள்ளோர் பலர் பழைய நூல்களிற் கண்டறியலாம். ஆயின் தமிழென்பது திராவிடம் என்பதின் திரிபன்றோவெனின் திரிபாகாது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மகராஷ்டரம், கூர்ச்சரம் இவைகளையும் திராவிடமென்பவாகலின் இதற்கே உரியதாகாது. ஆயினும் அப் பெயர் கூறவந்த வடநூலார் அக்காலத்திற்கு முன்றானே தோன்றிய பாஷைக்குத் தாங்கள் பெயரறியாது அந் நாட்டில் தாங்கள் வந்தகாலத்து இட்ட பெயராகவு மிருத்தலின் இது வட மொழிக்குப் பிந்தியதாகாது. வடமொழி வடநாட்டிலிருந்ததுபோல் தென்மொழி தென்னாட்டிலிருந்தது. இதனால் தமிழ்ப் பாஷை தனித்த பூர்வ பாஷையென்பது கொள்ளக் கிடந்தது.

2. இத்தமிழ் தமிழகமாகிய பரதகண்டத்தில் தொன்றுதொட்டு வழங்கிய பாஷையாம். இது சிவபெருமான் வாயிலாக வந்த பாஷை. எவ்வாறு ஆரிய பாஷை அநாதியென்பரோ, அவ்வாறே தமிழும் அநாதியாம். இது, அகத்தியனார் வாயிலாக வந்ததென்பது நம்பத்தக்கதன்று. சிவபெருமான் அகத்தியரைத் தென்னாடு செல்க எனக் கட்டளையிட்டகாலத்து அது தமிழ்நாடாதலின் அப்பாஷை யுணர்த்துக எனக் கேட்டனர் எனக் காந்தபுராணங் கூறுதலால் அத்தமிழ் அகத்தியருக்கு முன்னரே இருந்ததென்பது தெள்ளிதினறியலாகும். இன்னும் தமிழறிந்தார் பலர் அக்காலத்தில் இருந்தனர் என்பதைப் பல பிரமாணங்களா லறியலாம். முன்னிருந்த தமிழையே குமாரக்கடவுள் வழி அகத்தியருணர்ந்து இலக்கணஞ் செய்தனர். இதனைக் கம்பர் "சுடர்க்கடவன் தந்ததமிழ் தந்தான்" எ-ம், "என்றுமுள தென் றமிழியம்பி யிசைகொண்டான்" என்பனவற்றாலறிக. இத்தமிழ் பண்டைக்காலத்து இமயமலைமுதல் கன்னியாகுமரி வரையி லிருந்ததாகத் தெரிகிறது. ஆரியருக்குமுன் தமிழ்நாடாயிருந்த இந்துதேசம் ஆரியர் வந்தபின் ஆரியர்நாடாக ஆயிற்று. இந்த ஆரியரும் ஐரோப்பியரும் ஒருங்கு மத்ய ஆசியவாசிகளா யிருந்தனர் என்பதை அவர்கள் பேசும் சொற்களா லறியலாம். வடமொழிகள் பல ஆங்கிலபாஷையில் வழங்குதலே இதற்குச் சான்றாம். மாத்ரு Mother, பிதுர் Father, பிராத்ரு Brother, கோ Cow, யூயம் You, அகம் I, ஆயின் தமிழ்மொழிகள் ஒவ்வாவோ எனின், ஒவ்வா என்பதே எம்மனோர் துணிபு. ஆயினும் இத்தமிழை யொத்து, இத்தமிழ்நாட்டிற் கணித்தான சீனம் அருகிருந்ததால் அப்பாஷை தமிழை ஒருவாறு ஒத்து விளங்குகின்றது. எவ்வாறெனின் தமிழ்நாட்டிற்கு வடக்கிருந்ததால் அவர்களும் தமிழைத் தழுவினவர் எனக் கூறலாகும். எவ்வாறெனின் அத்தமிழ்ச் சொற்கள் பல அப்பாஷையில் வழங்கலே அதற்குச் சான்றாம். தமிழில் நீ என்பதற்குச் சீனபாஷையில் நீ, நான், ஞான், யாம், யாம், பெண், பெண், எஃகு, எஃ, இடத்தையுணர்த்தும் கண், கண், இரண்டென்னும் எண்ணையுணர்த்தும் ஈர், ஈர் என வழங்குதலால் என்க. தமிழர் தென்னாடடைதற்குமுன் கங்காதீரத்தி லிருந்தனர் என்பதற்குப் பல சான்றுகளுண்டு. தமிழராகிய வேளாளர் தம்மைக் கங்காபுத்திரர் என்பர். கன்னடதேசத்து வேளாளர் தாங்கள் கௌடதேசவாசிகளாதலால் தங்களைக் கவுண்டர் என்பர். இத்தமிழர் தாங்களிருந்த பழைய நாட்டின் பெயரே தாங்கள் குடிபுக்க தென்னாட்டிற்கும் அப்பெயரிட்டனர். வங்காளநாட்டின் இராஜதானி சம்பாநகர் தமிழ்நாட்டில் சம்பாபதி, (காவிரிப்பூம்பட்டினம்) சோழநாட்டிற்கும் தொண்டைநாட்டிற்கும் இடையிலுள்ள நாட்டை மகதநாடென்றும், மலையமாநாட்டிற்குச் சேதிநாடென்றும், வடநாடுகளின் பெயரிட்டமை காண்க. இன்னும் வங்காளத்திற்கு வடக்கே, நேபாளத்திற்குக்

கிழக்கே தீமல் எனும் சாதியார் இன்னும் வசிக்கின்றனர், அவர்களது பாஷை தமிழை ஒத்து இருக்கிறது. காரிகிழார் எனும் முதற்சங்கப் புலவர் முதுகுடிமிப் பெருவழுதியைப்பாடிய புறநானூற்றில் "படாதுபனிபடு நெடுவரை வடக்கும், தெனுஅதுருகெழு குமரியின்றெற்கும், குணுஅதுகரைபொரு தொடுகடற்குணக்கும், குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின்குடக்கும்" எனத் தமிழிற்கு இமயவரையை எல்லையாகக் கூறுதலாலறிக. இன்னும் அகத்தியரைப்போன்று வடநாட்டிருந்து வந்த வன்மீகனர், மார்க்கண்டேயர், கோதமனர் முதலியோரும் தமழறிந்து தருமபுத்திரனைப் பாடினர் என (புறம் ௩௬௬) ஆம் செய்யுளால் அறியக் கிடக்கிறது. இதனல் அக்காலத்திருந்த பாண்டுபுத்திரும் தமிழறிந்தவரென்றே தெரிகிறது. இன்னும் பாண்டவர்க்குத் துணைபுரிந்தவனும் தலையேழுவள்ளல்களி லொருவனுமாகிய அக்குரூரன் என்பவனைத் தலைச்சங்கப் புலவராகிய குமட்டூர்க் கண்ணனர் "போர்தலைமிகுத்த ஈரைம்பதின்மரொடு, துப்புத்துறைபோகிய துணிவுடையாண்மை, அக்குரனனையகை வண்மையையே" எனப் பாடுதலால் அக்காலத்து வடநாட்டிருந்தார் தமிழரென் றறியலாம். தமிழ்க்குத் தொண்டுசெய்தோர் இத்தமிழ் "தமிழெனு மளப்பருஞ்சலதி" எ-ம், "நீண்ட தமிழ்வாரி நிலமேனிமிரவிட்டான்" "எத்திறத்தினு மேழுலகும் புகழ்முத்து முத்தமிழ்" "தமிழ்ப்பாட் டிசைக்குந் தாமரையே" "இழைத்தாரொருவரு மில்லாமறைகளை யின்றமிழாற் குழைத்தார்" எனக் கம்பராலும்; "பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்" "தமிழினீர்மை பேசித் தாளம்வீணை பண்ணி", "தமிழ்ச்சொலும் வடசொலும் தாணிழற்சேர" என திருஞானசம்பந்தராலும், "பாலேய் தமிழ்" என ஸ்ரீ சடகோபரா்லும்; மற்றைய நாயன்மார்களாலும் ஆழ்வாராதிகளாலும் புகழப்பட்டு இனிமைகொண்டு விளங்குவது. கம்பர், "உழக்குமறைநாவினு முயர்ந்துலகமோதும், வழக்கினும் மதிக்கவினினும் மரபினடி, நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ்செங்கட், தழற்புரை சுடர்க் கடவுள் தந்த தமிழ் தந்தான்".

3. (௩) இயல், இசை, நாடகம.

**தமிழ்ச்சங்கங்கள்** — மதுரையில் முதலிடை கடைச்சங்கள் இருந்தன. இவையன்றி சடகோபர் காலத்து ஒன்றிருந்தமை விக்ரமசகம் (௫௨௬) (கி. பி. 470)-இல் பூஜ்யபாதர் மாணக்கர் வச்சிரநந்தி என்பவரால் தென்மதுரையில் ஒரு சங்கம் கூட்டப்பட்டது. Bombay Royal Asiatic Society's Journal No. XLIV. vol xvii p p 74.

**தமிழ்நாடு** — வடக்கின்கண் வேங்கடமும், தெற்கின்கண் குமரி யாறும், கிழக்கும் மேற்குங் கடலுமாகிய இவற்றிற்கு உள்ளிட்ட நாடுகளாம். இதனுள் தமிழ் வளர்ந்தது தென்மதுரை. இந் நாட்டகத்துள் நாற்பத்தொன்பது நாடுகள் கடல் கொண்டன. அவை எழ்தெங்கநாடு, ஏழ்மதுரைநாடு, எழ்முன்பாலைநாடு, எழ்பின்பாலைநாடு, எழ்குன்றநாடு, எழ்குணகாரைநாடு, எழ்குறும்பனைநாடு என்பன.

**தமிழ்நாட்டிலிருந்த ஆயங்கள்** — இந்த வரிகள் இராஜராஜ சோழன் III காலத்தன. நெல்லாயம், காசாயம், பாடிகாவல், சில்வரி, எடுத்துக்கொட்டி, அரிமுக்கை, கார்த்திகை அரிசி, கார்த்திகைக்காசு, கார்த்திகைப்பச்சை, வேலிப்பயிறு, நீர்நிலக்காசு, தறியிறை, கடையிறை, காலகதப்பாட்டம், தட்டாரப்பாட்டம், ஆசுவக்கடமை, செக்குக்கடமை, எரிமீன்காசு, இனவரி, பட்டோலைக்காசு முதலியன.

**தமிழ்நாட்டின் மூவரசரின் பழைமை**— இத்தமிழ் நாட்டைத் தொன்றுதொட்டு சேர சோழ பாண்டிய ரென்னும் மூவரசரும் ஆண்டு வந்தமைபற்றி தமிழ் நாட்டரசரும் அவர்களது பாஷையாகிய தமிழும் பழைமை பெற்றதாம். இப் பழைமை நோக்கியே பாண்டியர் பழையர் எனப்பட்டனர் போலும். பின்னும் பாண்டியர் எனும் சொல்லும் பண்டை என்னும் சொல்லடியாகப் பிறந்த பழையரெனும் பொருளே பயக்கும். இவ்வாறே உதியன் எனும் சேரன் பெயரும், சென்னியெனும் சோழன் பெயரும் தொன்றுதொட்ட முதன்மையை யுணர்த்தும் பெயர்களாய் தமிழரசர்களது பழமையைத் தெரிவிப்பனவாம். இன்னும் இவர்களது பழைமையை நிரூபிக்க வேறு காரணங்களும் உள. இனி காலம் வேதகாலம், சரிதகாலம் என வகுத்தவர்களில் தத்தர் என்பவர் வேதகாலம் கி, மு. 2400 முதல் 1400 வரையிலுமென அறுதியிட்டனர். பாரதப்போர்,

கிறிஸ்து பிறப்பதற்கு 1400 வருடங்களுக்குமுன் நடந்ததாம். இப்போரில் பதினெட்டு நாளும் அவ்விரு பெருஞ் சேனைகட்கும் பெருஞ் சோறளித்தவன் பெருஞ்சோற்றுதியன் சேரலாதன், என அக்காலத்து அவ் வரசனுடனிருந்த முரஞ்சியூர் முடிநாகராயர் எனும் புலவர் கூறி யிருக்கின்றனர். சோழன் ஒருவன் பாரதப் போர் முடியுமளவும் தருமன் படைக்குப் பேர்த் துணையாக இருந்தான் எனக் கலிங்கத்துப்பரணி "தங்கள் பாரத முடிப்பளவும் நின்று தருமன் தன் கடற்படை தனக்குதவி செய்த அவனும்" எனக் கூறும். பாண்டவர்களில் ஒருவனான சகதேவன் தெக்கணஞ் சென்று பாண்டியர்களை வென்றான் எனச் சபாபர்வம் (31)-ஆம் அத்தியாயத்திலும், அர்ச்சுனன் ஓர் பாண்டியன் மகளை மணந்தான் என்பதையும் பாரதம் கூறும். இனி இராமாயண காலம் பாரதத்திற்கு முற்பட்ட காலமாதலை பாரதத்தில் இராமன் கதை கூறுமாற்றால் விளங்கும். இராமாயண காலத்தில் இராமன் அகத்தியராச்சிரமஞ் சென்றதாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்த அகத்தியர் கட்டளையை மேற்கொண்டு ஒரு சோழன் ஆகாயத்தில் அசைந்துகொண்டிருந்த கோட்டையைத் தகர்த்தான் ஆதலின் அவன் தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் எனப்பட்டனன். பின்னும் வானரரைச் சுக்ரீவன் சானகியைத் தேடவிட்ட ஞான்று அவர்கள் தமிழ் நாட்டினுஞ் சென்றனர் எனக் கூறப்படுதலாலும் தமிழும் தமிழரசரும் இராமாயண பாரத காலத்திற்கு முற்பட்டவர் என்பது தெரிகிறது. ஆதலால் தமிழ் நாடே பரத கண்டத்திற் தொன்றுதொட்டதெனவும் அதனையாண்ட அரசரே பழையர் எனவும் அவர்கள் வழங்கும் பாஷையே முதலிலிருந்ததெனவும் அறியக் கிடக்கின்றது.

**தமிழ்நாட்டு விளையாட்டுகள்**—சுக்குச்சுக்கு - இதனைப் பலிசப்பான் என்பர். இது இரண்டுகக்ஷியார் நிலத்தில் ஒரு கோடுகிழித்து அக்கோட்டிற் குள்ளும் புறம்பும் ஒவ்வொரு கக்ஷிக்காரர் இருந்துகொண்டு கோடுதாண்டி வந்தவனைத் தீண்டின் தீண்டப்பட்ட கக்ஷி தோல்வித்தானத்தை அடைவது. கிளியாந்தட்டு - இதனை உப்புக்கோடு என்பர். சதுரங்கமாய்ப் பல கோடுகள் நிலத்தில் கீறி இரண்டுகக்ஷிக்காரர்களில் ஒருவ கோடுகளைத் தாண்டிச் செல்கையில் மற்றவர் தாண்டிவருவோன் வராதிருக்கத் தடுத்து அவனைத் தீண்டல். மரக்குரங்கு - மரத்தின்மேலேறிக்கொண்டு விளையாடும் விளையாட்டு. வைக்கப்பிரி - ஒருவனை முதுகின்மேல் போட்டிழுத்துச் செல்லும் விளையாட்டு. கண்ணும்பூச்சி - ஒருவனை மற்றக்கக்ஷியார் ஒளியும்வரையில் கண்ணை மூடிவிட்டு ஒளிந்தவரைப் பிடிக்கச் செய்தல். குருட்டுக்கண்ணும்பூச்சி - ஒருவன் கண்ணை இறுகக் கட்டிப் போட்டுத் தீண்டினோன் பெயர்கேட்டல் உண்மைகூறின் அப்பெயரோன் கண்ணைக் கட்டிக்கொள்ளல். பேய்ப்பந்து - வேட்டியைப் பந்துபோல்செய்து வட்டமாய் உட்கார்ந்திருப்போர்பின் தெரியாது வைத்து அவனறியாதிருக்கின் அவனைப் பந்தால் எறிதல். குண்டாடல் - (கோலி) இது சிறு குண்டுகளைப் பள்ளத்திலெறிந்து பலவகையாக விளையாடல். பந்தாடல் - பூமிமீது பந்தெறிந்தும், குதிரைமீதிருந்தும் பந்தெறிந்து விளையாடல். சீட்டாடல் - பல சீட்டுகளைக் கணக்கிற்கேற்றபடி எறிந்தாடல், இது பலவகை. தாயகட்டம் - சில கொட்டைகளைக்கொண்டு கிழித்த கோடுகளில் வைத்து ஆடல். எழாங்காய் - சில பந்துகளைக் கையிலிருந்து மேலெறிந்து அவை கீழ்விழாது கையாற்பிடித்தல். சொக்கட்டான் - நான்கறைகீறி அதில் உள்ள வீடுகளில் பாய்ச்சிகையில்விழுந்த கணக்கின்படி காய்களை அமைத்தாடல். சோழி - மேற்கூறியதுபோன்ற விளையாட்டு. சதுரங்கம் - சதுரமாக அறைகள் அமைந்த பலகையில் சதுரங்கசேனை அமைத்தல்போல் காய்களமைத்து ஆடல். பல்லாங்குழி - ஒரு குழிகளமைத்த பலகையில் கொட்டைகளிட்டு ஆடல். இவையன்றி மூலைபந்தம், நொண்டிவிளையாட்டு, பாண்டி, கிறுக்கி, கிட்டிபில்லி, காவட்டி கூவேகூ, பன்றி ஆட்டம், காற்றாடி, பம்பரம், மாவலி, தட்டாமாலை, தும்பிவிளையாட்டு, கிள்ளாபுரண்டி, கோலாட்டம், மல்லுவிளையாட்டு (குஸ்தி), கொம்மையடித்தல், நிலாச்சோறு, நீந்தல், ஓடம், சாய்ந்தாடல், சிறுதேருருட்டல், ஊசலாடல், குதிரை, எருது, ஆடு, சேவல், காடை, கௌதாரி, புறா முதலிய பந்தயம்விடல், பாரதிவிருத்தி விலக்கியற்கூத்து, கானக்கூத்து, கழாய்க்கூத்து, பலகறையாடல்,

நிலவில் மண்குழித்தானேதேடல், ஒற்றை இரட்டை கோட்டுப்புள்ளி பச்சைக்குதிரை முதலிய.

**தம்சன்** — ஒரு அசுரன் இவன் பிருகுமுனிவரின் பாரியையைப் பலாத்காரமாகஇழுத்ததனால் அவர் கோபித்து மலமூத்ராதிகளையுண்ணும் புழுவாகச் சபிக்கப்பட்டவன். இவன் சாபதீர்வு கேட்க உனக்குப் பிருகு வம்சத்திலுண்டான ராமனால் தீர்வு உண்டாம் எனக் கூறப்பட்டவன் இவனே கர்ணனைப் புழுவாகத் துளைத்தவன். (பார. சாந்தி.)

**தம்சு** — சந்திரவம்சம் மதிநாரன் புத்திரன் அவன் புத்திரன் இளினன்.

**தம்பமித்ரன்** — சார்ங்கபக்ஷி யுருக்கொண்ட மந்தபாலமுனிவர் புத்திரனாகிய பக்ஷி.

**தம்பலப்பூச்சி** — இதனை இந்திரகோபப் பூச்சி யென்பர். இப் பூச்சி பட்டினிறமாப் பூமியினுள்ளிருந்து பனிக்காலத்தில் மேல் வந்து உலாவுவது. இதனைக் கவிகள் சிந்திய மணிகளுக்கு உவமை கூறுவர். இது ஒரு சிறு வண்டு.

**தம்பன்** — 1. ஒரு வாநரத் தலைவன்.

2. ஒரு அரக்கன், குசத்துவசரைக் கொன்றவன்.

**தம்பிரான்தோழர்** — சிவமூர்த்தியால் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இடப்பட்ட பெயர்.

**தம்போற்பவன்** — நரநாராயணரால் கருவபங்க மடைந்தவன். (சுக்-நீ.)

**தம்ஷ்டிரி** — சுக்ர புத்ரன்.

**தயாவிருத்தி** — (கஉ) கல்வி பயிற்றல், துயர் தீர்த்தல், தண்டத்தினீக்கல், ஐயந்தேற்றல், பிறர்குணத்து அழுக்காறின்றிப் பொறுத்தல், பிறராற் செய்யப்படுந் தீமை மறந்து நன்றி நினைத்தல், பிறர்க்கு வேண்டித் தெய்வம் வழிபடல், இவை உயிர்க்கேழுபகாரம். உணவு, பானம், உடை, இடம், அடிமை காத்தல், சிறை நோய் மூன்றுந் தீர்த்தல், பிணமடக்கல் இவை உடற்கு எழ் உபகாரம். (அ) பிறர்க்குப் பொருள் வரவை உவத்தல், பிறர் செல்வம் பொறுத்தல், பிறர் கருமத்திற்கு உடன்படல், தீமைக்கஞ்சல், பிறர் கருமம் முடிக்க விரைதல், பிறர் ஐயந்தீர்த்தல், நன்மை கடைப்பிடித்தல், பிறர் துயர்க்கு இரங்கல்.

**தயித்திராந்தகன்** — சிவகணத் தலைவரில் ஒருவன்.

**தயிரிய மகாராஜா** — அத்திரி யென்னும் பிராமணருக்குச் செல்வங் கொடுத்தவன்.

**தயிர்** — தயிர் என்பது பாலைச் சூடாகக்காய்ச்சி ஆறிய பின் அதில் மோரை 1 பலம் விட்டால் அது, இம் மோரின் சேர்க்கையால் தன்னிலை மாறிக் கட்டிவிடுகிறது. இதுவே தயிர் என்பது. இதனுடன் இடைக்கிடை நீர் சேரின் மோராகிறது. தயிரிலுள்ள எட்டை மோரிலிட்டுக் கடையின் வெண்ணெய் ஆகிறது. வெண்ணெயை உருக்கினால் நெய் ஆகிறது. தயிர்வகை - பசுவின் தயிர், எருமைத்தயிர், வெள்ளாட்டின்தயிர், செம்மறியாட்டுத்தயிர், ஒட்டைத்தயிர் முதலிய இவற்றின் குணங்களைப் பதார்த்தகுண சிந்தாமணியைக் காண்க.

**தயூகன்** — சிவகணத் தலைவன்.

**தயை** — தக்ஷனுக்குப் பிரசூதியிட முதித்த குமரி, மோகன் தேவி, இவளில்லாவிடத்துத் தயவில்லை.

**தயைசாந்தன்** — சயிந்தவனுக்குச் சிவ விரதம் கூறிய முனிவன்.

**தரணி** — 1. பிரமன் புத்திரி.

2. தக்ஷன் பெண், மேருவிற்குத் தேவி, குமரன் மந்தரான்.

4. சீவகன் புத்திரருள் ஒருவன்.

5. வியன் தேவி

**தரணி மகாராஜா** — பத்மப் பிரபருக்குத் தந்தை, தேவி சுசிமை. (சைநர்)

**தரதன்** — பாஹ்லிகதேசத் தரசன். இவன் பிறந்தபோது பூமி அதிர்ந்தது (பார - சபா.)

**தரதம்** — 1. Dardistan, north of Kashmir on the upper bank of the Indus.

2. காஸ்மீரத்துக்கு வடக்கில் உள்ள தேசம்.

**தரமேயு** — (சந்.) ரௌத்திராசுவன் குமரன்.

**தரவிணைக்கொச்சகக்கலிப்பா** — இரண்டு தரவைக் கொண்டு வருவது.

**தரவு** — கலிப்பாவிற் கூறிய செய்யுட்களில் முன்னிற்கும் உறுப்பு.

**தரவு கொச்சக் கலிப்பா** — தரவு ஒன்றுடன் வருவது.

**தரளிகை** — மகாசுவேதையின் செடி.

**தரன்** — 1. ஒரு வசு. இவனது மானசபுத்திரர், மகதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், காபாலி, சௌமியன். இவர்கள் ஏகாதச ருத்ரர் எனப்படுவார்.

2. கலுழவேகனிடத்திருந்த வித்தியாதரன், இவன் கப்பல் முழுகியதைப்போல

மாயஞ்செய்து ஸ்ரீதத்தனைக் கலுழவேகன் பால் அழைத்துச் சென்றவன்.

3. வசுதேவருக்குப் பத்திரையிடம் உதித்த குமரன்.

4. அணு குமரன்.

**தராசு** — 1. இது எடுத்தலளவைத் தெரிவிக்கும்கருவி இது பலவகைப்பட்ட பொருட்களை நிறுப்பதில்வேறுபடும். பெரும்பாலும் துலாவென்னும் கோலிற்கு இடையில் ஒரு தொளையுடையதாயும் அக் கோலில் (2) கடையிலும் ஒவ்வொரு தொளைகளைப் பெற்று அத் தொளைகளில் தொடுத்த இரண்டு தட்டுகளையுடையது. இதுபொன், மணி, மருந்து நிறுப்பவர்களிடம் சிறுவடிவாக இருக்கும். நாட்டுப்புறங்களில் ஒரு தட்டுடனிருப்பது தூக்கெனப்படும். (உல).

2. இது ஒரு நடுக்கொம்பில் மையமாகவும் கொம்பின் இரண்டு பக்கங்களிலும் ஒவ்வொரு தொளை பெற்றதாய் ஒத்த அளவுள்ள கயிற்றினால் தட்டுகளைக் கோத்து நடுத்தொளையில் கயிறு கோத்து எடை அறிவது. இது பலவகை. முள்தராசு, முருக்குக்கம்பி தராசு, ரோமன்ஸ்டீல் பார்ட் முதலிய.

**தராபாலன்** — வைதிசமென்னும் பட்டணத்தரசன். இவன் ஒருகாலத்து விதஸ்தா வேத்ரவதி சங்கமத்தில் பார்வதியாரின் சாபத்தால் நரியுருக்கொண்டிருந்து பன்னிரண்டு வருஷங் கழிந்தபின் விதஸ்தாவேத்ரவதி சங்கம க்ஷேத்ரத்தில் சாபமொழிந்து கைலையடைக என்றபடி நதியில் வீழ்ந்து திவ்யதேகம் பெறக்கண்ட அரசன் அந்நதி சங்கமத்திற் சிவாலயங் கட்டுவித்துப் புராணங் கேட்டுப் புராணிகனுக்குப் பொருளுதவிச் சுவர்க்க மடைந்தவன். (சிவமகாபுராணம்).

**தரிசனசெட்டி** — நீலியால் கொல்லப்பட்டவன். இவன் முற்பிறப்பில் புவனமதி என்னும் கச்சிப்பதி வேதியன். இவன் காசி யாத்திரைசென்று சிவஞ்ஞானி யென்பவனுக்குத் தங்கையாகிய, நவஞ்ஞானியை மணந்து அவருடன் சிலநாளிருந்து தன் சொந்தமனைவியை நினைத்துச் சேதுஸ்நானம்சென்று சிவஞ்ஞானியென்னும் மைத்துனனுடனும், நவஞ்ஞானியென்னும் புது மனைவியுடனும் திருவாலங்காட்டிற் கருகு சேர்ந்து நவஞ்ஞானியின் தமயன் வெளியில் போயிருந்த சமயங்கண்டு புது மனைவியையும் குழந்தையையும் கொன்றனன். சிவஞ்ஞானி வந்து பார்த்துத் தங்தை யிறந்த செய்தி கண்டு தானும் இறந்தனன். இவன் பிற்பிறப்பில் செட்டியாகப் பிறந்தனன். இவன் தந்தையாகிய நாகந்தை செட்டி இவனுக்குப் பேயால் மாணமுண்டாகுமென அறிந்து மந்திரவாள் தரப்பெற்றுப் பெரியவர்த்தகனாய் ஒருநாள் மனைவியை நீங்கித் திருவாலங்காட்டின் வழிச் செல்கையில் பழிவாங்க வேண்டுமென்றிருந்த (நவஞ்ஞானி) நீலி பழைய நாயகனாகிய செட்டியிடம்வந்து தாசியைப்போலவும்,நாககன்னிகைபோலவும், தண்ணீர்ப் பந்தல் வைத்திருக்கும்பார்ப்பினியைப்போலவும், மனைவியைப்போலவும் வஞ்சித்துக் கொல்லவந்தனள். செட்டி அவைகளுக்கு அஞ்சாது கையிலிருந்த மந்திரவாளால் தப்பித் திருவாலங்காடு சேர்ந்தனன். நீலி இவனது மனைவிபோல் உருக்கொண்டு பழையனூர் (எ0) வேளாளரிடம் முறையிட்டனள். இவ்விருவர் வழக்கினையும் கேட்ட வேளாளர், நீலியின் சொற்படி மந்திரவாளைச்செட்டியிடமிருந்து நீக்குவித்து இருவரையும் ஒரு அறையில் சமாதானத்துடனிருக்க ஏவினர். நீலி, அறையுட்சென்று ஊரடங்கிய பிறகு செட்டியை முன்பழிக்குப் பழி வாங்கினள். இதனால் செட்டி மாண்டனன். பின் நீலிசெட்டியின் தாய் போல் உருக்கொண்டு எழுப்து வேளாளரையும் பழிவாங்கினள்.

**தரிசனுவாணீயம்** — (க) சக்ஷுதரிசனுவரணீயம், அசக்ஷுதரிசனுவரணீயம், அவதிதரிசனுவரணீயம், கேவலதரிசனுவரணீயம், நித்ராதரிசனுவரணீயம், பிரசலாதரிசனுவரணீயம், நித்ராநித்ராதரிசனுவரணீயம்,பிரசலாபிரசலாதரிசனுவரணீயம்,ஸ்தியானகிரந்திதரிசனுவரணீயம்.

**தரித்திரன்** — துந்துபியின் குமரன்.

**தரு** — (ரு) அரிச்சந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம்.

**தருக்கம்** — என்பது பதார்த்தங்களை அளந்தறிதல், அப்பதார்த்தங்களாவன திரவியம், குணம், கருமம், சாமான்யம், விசேடம், சமவாயம், அபாவம் என எழுவகைப்படும். இப்பதார்த்தங்களைப் பொருளுண்மைக்கு அளந்து கூறுதல். அது காட்சி அல்லது பிரத்யக்ஷம், அநுமானம், ஆகமம், அபாவம், அர்த்தாபத்தி, உபமானம், என அறுவிதமென்ப. சிலர் பாரிசேஷம், சம்பவம், ஐதிகம், இயல்பு என நான்கு மியைத்துக்

கூறுவர். இவைகளின்மேலும் அறைவர். இவை முன்கூறிய பிரத்யக்ஷ அநுமான ஆகமங்களில் அடங்கும். அவற்றுள் காட்சி அல்லது பிரத்யக்ஷம், பொருள்களை ஐயவிப ரீதமின்றி நேராக அறிதல். அக்காட்சி - ஐயக்காட்சி திரிபுக்காட்சி யென்றும், பின்னும் இந்திரியக்காட்சி, மானதக்காட்சி, தன்வேதனைக்காட்சி, யோகக்காட்சி யெனவும் நான்குவகை. மேற்கூறிய காட்சி சாமான்யம் விசேடமென இருவிதப்படும். சாமான்யம் - சமுதாயமாயறிவது. விசேடமாவது - பிரித்தறிவது. இந்த இந்திரியக்காட்சியின் சம்பந்தம் - சையோகம், சையுத்தசமவாயம், சையுத்த சமவேதசமவாயம், சமவாயம், சமவேதசமவாயம், விசேடணவிசேடியபாவம் என அறுவகை. பின்னுமது மானதப் பிரத்யக்ஷம் - அதாவது ஞானேந்திரிய ஞானத்தான் மயக்கற அறியும் அறிவு. ஸ்வேதனைப்ரத்யக்ஷமாவது - தத்வங்களாலுண்டாம் இன்பதுன்பங்களை உயிருட னுணர்வறிதலாம். யோகப்ரத்யக்ஷமாவது - யோகத்திருந்து முக்கால இயல்புகளையு மறிதல். அநுமானமாவது - குணமாகச் சொல்லப்பட்ட எதுக்களைக்கொண்டு காணாத பொருள்களைக் காணப் பெறுதல். அது அநுமிதிக்குக் காரணமாவது. அது சுவார்த்தானுமானம், பரார்த்தானுமானம் என இருவகைப்படும், இந்த அநுமானம் பக்ஷ, சபக்ஷ, விபக்ஷ மூன்றிலே, இயல்பு, காரியம், அநுபலத்தி எனும் எதுத்ரயங்களினால் எதுமத்தாகிய சாத்யங்களை த்ருடவ்யாப்திகளினால் நிச்சயிக்கும் அநுமிதிஞானம். ஆகமமாவது - ஆப்த வாக்யப்பொருளைக் கூறுவோன் வாக்கு. அவை மந்திரம், தந்த்ரம், உபதேசம் என மூவகைப்படும். இனி பக்ஷப்போலி, எதுப்போலி, உவமைப்போலி முதலியவற்றினையும் மற்றப் பொருள்களின் நிரூபணங்களையும் விரிந்த நூல்களிற் காண்க.

**தருசகன்** — இவன் மகததேயத்து அரசன். இவனுடைய இராசதானி இராசகிரியமென்பது. இவன் பதுமாபதி யென்பவளுடைய் தமையன், ஆருணியை வெல்லுவதற்கு இவனுடைய நட்பைப்பெற எண்ணிய உருமண்ணுவா முதலிய மந்திரிகளுடன் உதயணன் மாணகனென்னும் அந்தணப் பிரமசாரி வடிவங்கொண்டு அந்நகர் புறச்சோலையிற் சிலகாலம் மறைந்திருந்தனன். இவன் தந்தையாற் புதைத்துவைக்கப்பட்ட வைப்புத் திரவியங்கள் உதயணனால் அறிந்து எடுத்துக்கொடுக்கப்பட்டன. சில நீரூற்றுகளும் அவனால் இவனுக்குக் காட்டப்பட்டன; பதுமாபதியைக் கேகய அரசனுக்குக் கொடுத்தற்கு இவன் எண்ணினனென்பதையறிந்து போர்செய்தற்கு வந்த அரசர் எழுவரையும் மந்திரிகளுடன் சென்று, உதயணன் வென்றானென்பது பற்றி அவனுக்கு பதுமாபதியை மணஞ் செய்வித்தனன். தனக்கு உதயணன் செய்த உதவியை நினைத்து அவனுக்கு உதவியாகத் தன் மந்தரிகளையும், சதுரங்க சேனைகளையும் அனுப்பி வெற்றியுண்டாகும்படி செய்தான். எலிச்செவி யரசனாற் சிறையில் வைக்கப்பட்டிருந்த உருமண்ணுவாவை விடுவித்துஉதயணன்பால்அனுப்பினன். உதயணனுக்கு இவனிடத்தில் மிகுந்த அன்பு உண்டு. இவன் மிக்க புகழுடையான்; அரசர்க் கரசன், மிக்க வீரன்; சதுரங்கச் சிறப்புகளை யுடையோன்; ஒவ்வொன்றையும் ஆராய்ந்து செய்பவன்; நன்றியறிவுடையோன். இவன் தந்தையும் உதயணன் தந்தையும் மிக்க நட்புடையோரென்று தெரிகிறது. இவன் பெயர் மகத மன்னன், தரிசகன், தருசககுமரனெனவும் வழங்கும். (பெருங்கதை.)

**தருநிலை** — காவிரிப்பூம்பட்டினத்துள்ள கோயில்களு ளொன்று. (மணிமேகலை.)

**தருப்பசயனம்** — சேதுவில் இராமமூர்த்தி தருப்பையில் சயனித்த இடம். இது புண்யஸ்நான கட்டம். நிர்மலமான க்ஷேத்ரம்.

**தருப்பணபஞ்சதீர்த்தம்** — தேவதீர்த்தம், ஆரிடதீர்த்தம், மானுஷதீர்த்தம், பூததீர்த்தம், பிதுர்தீர்த்தம் என்பன. தேவதீர்த்தம் கைந்நுதியில் விடுவது, ஆரிடம் விரல்களி னிறைச்சந்தியில் விடுவது, மானுஷம் கனிட்டிகைமூலத்தில் விடுவது, பூததீர்த்தம் மணிக்கட்டில் வருவது, பிதுர்தீர்த்தம் தர்சனி அங்குட்ட மிரண்டிற்கு நடுவில் ஒடுக்குவது. மேற்கூறியமுறையால் தேவராதியர்க்குத் தர்ப்பணஞ் செய்க.

**தருப்பை** — 1. இது பிரமனது மூக்கிற் பிறந்த பரப்பிரம்மத்தினிடத்துப் பிறந்தது. இதனை ஓ தர்ப்பையே, சுபத்தைத் தருவதே, எனது எல்லாப் பாவங்களையும் போக்குக என்று கூறி ஹும்பட் என்கிற மந்திரத்தால், ஒருமுறை பேதித்து மேலெடுக்கவேண்டும். இத்தருப்பையில்

பெண்தர்ப்பை அக்கிரஸ்தூலமுடையது. மூலஸ்தூலம்உடையது. நபும்ஸகதர்ப்பை. அடிமுதல் நுனிவரை ஒரே சமகனம் உள்ளது புருஷ தர்ப்பையாம். இவ்வகைத் தருப்பையின் அடியில் பிரமனும், இடையில் விஷ்ணுவும், முனையில் சங்கரனும் ஆகிய திரிமூர்த்திகளும் வசிக்கின்றனர். தருப்பை, நாணல், யவைப்புல், அறுகு, நெற்புல், விழல்மற்ற தானியங்களின் புல், மருள்மட்டை, சவட்டைக்கோரை, கோதுமைப்புல் இவை பத்துவித தருப்பைகள் என்னப்படும். இத்தருப்பையினைத் தேவதைகளை உத்தேசித்து நுனியாலும், மனிதர்களை உத்தேசித்து மத்தியாலும், பிதிர்க்களை உத்தேசித்துத் தருப்பையினை மடித்து நுனியாலும் தர்ப்பணஞ் செய்ய வேண்டும். இத்தருப்பையினை ஆதிவாரத்தில் கொய்வனேல் அதனை மற்ற ஆதிவாரம்வரையில் உபயோகிக்கலாம். அமாவாசையிற் கொய்வனேல் ஒருமாதம் வரையில் உபயோகிக்கலாம். பௌர்ணமியில் அறுப்பனேல் ஒரு பக்ஷம் உபயோகிக்கலாம். பாத்திரபதமாதத்தில் கிரகிப்பனேல் ஆறுமாதம் வரையில் உபயோகிக்கலாம். சிராவண மாதத்தில் கிரகிக்கின் ஒரு வருஷம் உபயோகிக்கலாம். சிரார்த்த காலத்தில் கிரகித்தது அன்றைக்குமாத்திரம் உதவும். ஐம்பது குசைப்புற்களால் பிரம்ம கூர்ச்சம் செய்தல்வேண்டும். அதிற் பாதியால் ஆசனம் விதிக்கப்பட்டு உள்ளது. (விகிதஸ்மிருதி.)

2. கருடனைக் காண்க.

**தருமதத்தன்**—1. சத்தியாதனனைக் காண்க.

2. இவன் சந்திரகுலத்து நந்தன் புத்திரன். இவன் வேட்டைக்குச் சென்று தனித்துப் பொழுதுபட்டதால் மிருகங்களுக்கு அஞ்சி ஒரு மரத்தில் ஏறியிருக்கையில் காடியொன்று சிங்கத்தாற் றுரப்புண்டு அரசனிடம் வந்து மரத்திலேறி அரசனே! நீ பாதியிரவு விழித்திரு, நான் பாதியிரவு விழித்திருக்கிறேன் என்று அரசனிடம் உறுதிபெற்றுக்கொண்டு அரசனை முந்தித் தூங்கும்படி ஏவிற்று. அப்போது அடியிலிருந்த சிங்கம் காடியை நோக்கி அரசர் கொடியர் ஆதலால் கீழ்த் தள்ளுக என்றது. காடி, நம்பினவரைக் கொலைசெய்தல் கூடாது என்று மறுத்தது. பின் அரசன் விழிக்கக் காடி உறங்கிற்று. சிங்கம் அவ்வகை காடியைத் தள்ளும்படி அரசனைக்கேட்க அரசன் யோசியாது காடியைத் தள்ளினன். காடி, அரசனைநோக்கி, அரசனே! நான் சானகாட்டன் என்னும் இருடி, நீ என்னிடம்செய்த தீமையால் பித்தனாக எனச் சபித்தனன். சிங்கத்தை நோக்கி நீ பத்திரன் என்னும் காந்தருவன், குபேரன் மந்திரி, நீ இமயச் சாரலில் உன் மனைவியுடன் நீர் விளையாடுகையில் சமித்தொடிக்கவந்த கௌதமர், உன் நிர்வாணத்தைக் கண்டு சிங்கமாக எனச் சபித்தனர். இந்தத் தருமதத்தன் காட்டில் திரிந்து சயமினி சொல்லால் சேதுதீர்த்தமாடிச் சுத்தனாயினன். (சேதுகதை.)

**தருமகோபன்** — சூரபதுமன் மந்திரி, புண்டரீகமென்னும் யானையை ஏவல்கொண்டு வீரவாகுவால் மாண்டவன்

**தருமசகன்** — கேயபுரத்தரசன், இவனுக்கு (க00) பேர் தேவிமார். இவர்களுள் மூத்தவளுக்கு ஒரு குமரன், அவன் பெயர் சந்திரன். மற்றத் தேவியர்க்குப் பிள்ளைகள் இல்லாமையால் இவன் புத்திரகாமேஷ்டி செய்து (க00) மனைவியரிடத்தும் (க00) குமாரரைப் பெற்றான்.

**தருமசன்மன்**—இவன் ஒரு வேதியன், மாலுதானருஷி கோபத்தால் கல்லானவன். எக்யசருமனைக் காண்க.

**தருமசாவகன்** — ஒரு புத்தன். நாகபுரத்தின் அருகிலுள்ள ஒரு சோலையிலுள்ளவன். புண்ணியராசனுக்குத் தருமோபதேசஞ் செய்தவன்.

**தருமசீலன்** — 1. விஷ்ணுபடன்.

2. புண்யபுஞ்சனைக் காண்க.

**தருமசீலை** — ஒரு வேளாளர் தேவி, இவளும் இவள் கணவனும் சிவனடியார்க்கு அன்னமிட்டுச் செல்வம்நீங்கி வறுமைவந்த காலத்தில் சிவமூர்த்தி உல்வாக்கோட்டை அருளி அடியவர்க்கு அமுதளிக்கக் கட்டளையிடப் பெற்றவர்.

**தருமசேனன்** — 1. ஒரு அரசன், இவனிடம் இலக்ஷ்மி அவதரித்து விஷ்ணுமூர்த்தியை மணந்தனள்.

2. திருநாவுக்கரசுகள் சமணசமயம் புகுந்து பெற்ற பெயர்.

**தருமஞ்ஞன்**—1. வேதசன்மா என்னும் வேதியன் குமரன். இவன் தந்தையின் எலும்புகளைக் குடத்திலிட்டு யாத்திரைசெய்கையில் திருப்பூவணத்திலுள்ள மணிகன்னிகையில் தங்கினன். அவ்விடத்தில் கால்

இடறிக் குடம் நீரில்விழ வேதியன் அதனை எடுத்துத் தாமரைமலராகக்கண்டு தீர்த்தத்தின் பெருமையுணர்ந்து ஸ்நானஞ்செய்து முத்திபெற்றனன். (திருப்பூவண புரா.)

2. எமநதிதீரத்தில் அரசாண்டிருந்த அரசன் புத்திரப்பேறு இல்லாமையால் அவிநாசித்தல யாத்திரைசெய்து அக்கிவருமன், இரண்யசேநன் என்னும் இரண்டு புத்திரரைப் பெற்றவன். (அவிநாசித்தல புராணம்.)

**தருமதத்தன்** — 1. அரிபுரத்துத் தேவதத்தன் குமரன்; இவன் தாய்தந்தையர் தேடி வைத்த பொருள்களைக் கபடசந்நியாசி ஒருவன் வஞ்சித்துப் பொன்செய்து தருகிறேன் என்று வாங்கி மறைந்தனன். இதனால் இவன் உயிரிழந்து, தருமத்திற்கு வைத்த பொருள்களை யெல்லாம் விற்று இரசவாதம் செய்ததால் காட்டானையாய் உசத்தியமுனிவரைத் தூக்கிச் செல்லுகையில் முனிவர் இவனது முன்னைய நிலைமையறிந்து தமது தவத்திற் சிறிது உதவினர். யானையா யிருந்தவன் தேவவுருப் பெற்றனன். இவன் காட்டானையா யிருக்கையில் உசத்தியமுனிவர் குமரி இவனது யானையுருவத்தைக்கண்டு பயந்து மடுவில் குதித்து உயிர் நீங்கினள். இவனுக்குத் தனதத்தன் எனவும் பெயர்.

2. சச்சந்தன் மந்திரி.

3. காசி அரசன் புரோகிதர்; இவர் பிரமனம்சம். இவரிடம் சித்திபுத்திகள் அவதரித்து விநாயகரை மணந்தனர்.

4. காவிரிப்பூம்பட்டணத்து எட்டிபட்டம்பெற்ற வணிகன். (மணிமேகலை.)

5. கலகன் எனும் அசுரனுக்கு விஷ்ணு மந்திரம் உபதேசித்து அவனதுஇராக்ஷஸப் பிறப்பொழித்ததால் தசரதனாகப் பிறந்தவன். (பதுமபுராணம்.)

6. தருசகனுடைய மந்திரிகளுள் ஒருவன். ஆருணியோடு போர்செய்தற்குச் சென்றபொழுது உதயணனுக்கு உதவியாக அனுப்பப்பட்டு முன்படையில்நின்று பொருத வீரன். அவனை வென்றதற்குக் காரணனாக இருந்ததுபற்றி, நெய்த்தோர்ப் பட்டிகையும், பத்தூரும் உதயணனாற் பெற்றவன். (பெருங்கதை.)

**தருமதேவதை** — வெள்ளைநிறம், நான்கு பாதம், இரண்டுகொம்புகள், உயர்ந்தமுசுப்பு, பூமியிற்படியும் வாலுமுள்ள எருதின் உரு. இது முதல்யுகத்தில் நான்கு பாதத்துடனும், இரண்டாம் யுகத்தில் மூன்று பாதத்துடனும், மூன்றும் யுகத்தில் இரண்டுபாதத்துடனும், நான்காம் யுகத்தில் ஒருபாதத்துடனும் நடக்கும். இது திருமாவின் மார்பிற்பிறந்து சமஸ்த பிராணிகளையுங்காத்து இஷ்டத்தைக் கொடுப்பது.

**தருமதை** — பித்ருக்களைக் காண்க.

**தருமத்துவசன்** — சர்வகாலமும் யமனரண்மனையிலிருப்பவன், ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாபங்களை யமனுக்கறி விப்பவன்.

**தருமநூல்** — (கஅ) மநு, அத்திரி, ஔரிதம், விட்ணு, யாஞ்ஞவற்கியம், உசனம், ஆங்கீரசம், யமம், ஆபத்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம், பிரகற்பதி, பாராசரம், வியாசம், சங்கலிதம், தக்கம், கௌதமம், சாதான்மம், வசிட்டம். இவற்றுள் கிருதயுகத்திற்கு மநுவும், திரேதாயுகத்திற்குக் கௌதம ஸ்மிருதியும் துவாபரயுகத்திற்குச் சங்கலித ஸ்மிருதியும், கலியுகத்திற்குப் பாராசர ஸ்மிருதியும் முக்கியமாம்.

**தருமபக்ஷிகள்** — விபுலருக்குச் சுகுருசர், தும்புலவர் என்று இரண்டு குமரர் இருந்தனர். அவர்களுள் சுகுருசருக்கு நான்கு குமரர். இவர்களே பிறகு தர்மபக்ஷிகளானார்கள். இவர்கள் தம்தந்தைக்கு ஏவல் செய்து கொண்டிருக்கையில் இந்திரன் ஒரு பக்ஷியுருக்கொண்டு மிகப்பசியோடு வந்து தான் விந்தமலையுச்சியிலிருந்து ஒருவன் எய்த அம்பினால் விழுந்ததாகவும் பசியால் வருந்து வதாகவும் நடித்துத்தனக்கு நரமாமிசம் வேண்டுமென்றனன். முனிவர் தம் புத்திரர்களை நோக்கி இந்த அதிதியாக வந்த பக்ஷிக்கு இரையாகுக எனப் புதல்வர்கள் உடம்படாததினால் பக்ஷிகளாக எனச் சபித்தனர். பின்பு புத்திரர் வணங்கிக் கேட்கத் தந்தை என் வாய்தப்பாது. ஆதலால் இச்சாபம் உங்களை ஜயமினிமுனிவர் சந்தேகம் கேட்கும்போது நீங்கும். என அவ்வாறே சாபம் ஏற்றிருந்தனர். இது நிற்க, இந்திரன் ஒருமுறை அரம்பை, மிசிரகேசி, ஊர்வசி, திலோத்தமை, கிருதாசி, வபு இவர்களுடனிருக்கையில் நாரதர்வர இப்பெண்களும் இந்திரனும் பணிந்தனர். இந்திரன் முனிவரை நோக்கி இந்தப் பெண்களுள் எவள் உமக்கிஷ்டமோ அவளை உமதேவலுக்குக் கொள்க என முனிவர் உங்களுள் அழகுள்ளவள் வருக என்றனர். எல்லாருமிருக்க வபு என்பவள்

வந்தது கண்டு நாரதர் அவளை நோக்கி நீ இமயச்சாரலில் துருவாசர் தவஞ்செய்கின்றனர் அவர் தவத்தைக்குலைக்க என்றனர். அவ்வண்ணஞ் சென்று அவரை ஆசையூட்ட அவர் சினந்து நீ பறவையுருக்கொண்டு 16-வருஷமிருந்து 4-குஞ்சுகளைப் பொரித்து அரம்பை யுருவாக என்ச் சாபமேற்றனள். இதுநிற்க; கங்கன், கந்தரன் எனும் புள்ளரசுகளில் கங்கன் ஒரு நாள் கைலைக்கருகிற் சென்று அங்குத் தன் மனைவியுடன் சரசமாயிருந்த வித்யுத்திருவன் எனும் அரக்கனைப் பார்த்திருக்க அரக்கன், நாங்கள் உல்லாசமாயிருப்பதை நீ காண இம்மலையில் வந்ததென்னெனப் புள்ளரசு இம்மலை யாவர்க்கும் பொது என அரக்கன் கோபித்து வாளாலெறிந்து கொன்றனன். தமயனிறந்ததை யறிந்த தம்பியாகிய கந்தரன் அரக்கனுடன் யுத்தத்திற்குச் சென்று அரக்கனைக் கொன்று அவ்வரக்கன் மனைவி தமனிகையைப் பக்ஷியுருக்கொளச் செய்து உடனழைத்துச் சென்று அவளைப் புணர்ந்து தார்க்ஷியெனும் பெண்ணைப் பெற்றான். இவளே துருவாச சாபம் பெற்றவள். மந்தபால முனிவர் குமரர், ஜரிதாரி, துரோணர் முதலியோருள் துரோணர் தார்க்ஷியைமணந்தனர். தார்க்ஷி கருப்பமடைந்து பாரதயுத்தம் காண்கையில் அருச்சுனன், பகதத்தன் மீதேவிய அம்புகளில் ஒன்று பட்டு வயிற்றைக் கிழிக்க வயிற்றிலிருந்த நான்கு முட்டைகள் யுத்தபூமியில்விழ அவற்றைப் பகதத்தன் யானைமணி அறுந்து விழுந்து மூடிக்கொள்ளப் பொரிந்து வளர்ந்து கூச்சலிடுகையில் யுத்தகளத்திலிருந்த வீஷ்மரைக் காணவந்த சமீகமுனிவர் அக்கூச்சலைக் கேட்டு அவற்றையெடுத்து வளர்த்தனர். இவர்கள் பெயர், பிங்காக்ஷன், விபோதன், சுபத்திரன், சுமுகன். இவர்களே முன் தந்தையால் இந்திரன் பொருட்டுச் சாபமேற்ற சுகுருசர் குயரர். இவர்கள் பக்ஷியுருக்கொண்டு சாப வரலாறு எண்ணிவேதமோதிக் கொண்டிருக்கையில் வியாசர் மாணாக்கர் ஜயமினிமுனிவர் இவ்வோசை கேட்டு அவ்விடஞ் சென்று சிலதரும சங்கைகள் கேட்கச் சாபநீங்கிச் சென்றனர். (மார்க்கண்டேய புராணம்).

**தருமபாதன்** — இவன் செல்வமுள்ள வணிகன், செல்வங்களைத் தருமத்தில் செலவிட்டுக் காசியில் ஒருகுளமெடுத்து வறியனாய் ஒருவேதியினிடம் (க00) பொன் கடன்வாங்கிக், கொடுக்க முடியாது தான் எடுத்த குளத்தை அவனுக்குக் கொடுக்க, வேதியன் தருமமறிந்தவரை நோக்கி நான் இந்தக் குளத்தையெவ்வளவு காலம் வைத்திருக்கலாம் என அவர்கள் இதில் ஒரு கல்விடின் மிதக்கும் அதுவரை வைத்திருக்க என்றனர். உடனே ஒரு பாறையைக் குளத்திட அதில் ஒரு கன்றும் பசுவும் நீர் குடித்தன. குளத்திலிட்டகல் மிதக்கக் குளத்தை வணிகன் வசமாக்கினர். (காசிகாண்டம்).

**தருமபாலன்** — காசியில் தருமஞ் செய்து முத்தியடைந்தவன் (காசிரகசியம்).

**தருமபுஞ்சன்** — சண்டதருமன் குமரன். வேதியன். இவன் கொலைபாதகள் மேற்கொண்டு நாத்திகனாய்ச் சண்டாளரிடம் உண்டு பின் தந்தையால் நல்லறிவு பெற்றவன்.

**தருமபுத்ரர்** — பாண்டுமகாராசனுக்குக் குந்திதேவியிடம் யமமந்திரத்தால் பிறந்தவர். இவர், தந்தையிறக்கப் பெரியதந்தையால் வளர்க்கப்பட்டுத் தம் தம்பியருடன் வில்வித்தை முதலிய கற்றுப் பெரிய தந்தையால் இளவரசாயினர். இதைப் பொறாத துரியோதனன் அரக்குமாளிகை யொன்று நிருமித்துப் பாண்டவர் உறங்குகையில் தீப்படுத்த எண்ணினன். இதை யறிந்த வீமனால் அதினின்று நீங்கி வேத்திரகீயமடைந்து அருச்சுனன் கொண்டு வந்த திரௌபதியை வியாசர் சொல்லால் தம்பியருடன் தாமும் மணந்து திருதராட்டிரன் சொற்படி அத்தினபுரம் வந்து சேர்ந்து ஒரு பழைய நகரை ஆண்டு கண்ணன் அருளால் அதை இந்திரபிரத்தமென்னும் நகராக்கி, நாரதர் கட்டளைப்படி இராஜசூய முடித்து சம்ராட் பட்டம் அடைந்து செல்வத்தோடிருந்தனர். இதைக்கண்டுபோன துரியோதனன், துர் ஆலோசனையால இவனையும் தம்பியரையும் நாட்டை விட்டு அகற்ற மண்டபம் ஒன்று கட்டுவித்து அதைக் காண வருவிப்பதுபோல் வருவித்துச் சகுனியைக் கொண்டு சூதாடுவித்து நாடு, செல்வம் முதலியவற்றை உபகரித்துக்கொண்டனன். இதனால் துரியோதனனுக்கு அடிமையாய்த் திரௌபதியால் நீங்கித் துரோணர் சொற்படி பன்னிரண்டு வருஷம காட்டிலும் ஒரு வருஷம் கரந்தும்

வசித்துப் பின் வெளிப்பட்டு முறையே ௩, ௯, ௧௨, ௧௬, ௧௭, ௧௮ ஆம் நாட்களில் யுத்தம் புரிந்து துரோணருடன் யுத்தஞ் செய்கையில் "அசுவத்தாமா அதாகுஞ்சரம்" எனக் கண்ணன் சொற்படி கூறித் துரியோதனுதியரை வென்று கர்ணனைத் தம் தமயனென்று துக்கித்துத் தன் தாயிடம் விசனமடைந்து இனிப் பெண்கள் எந்தரகஸ்யத்தையும் மனத்தில் கொள்ளா திருக்க எனச் சபித்து அரசேற்று முடிசூடி ஆண்டுகொண் டிருந்தவர். மேருசாவர்ணி, வியாசர், நாரதர், பரசிராமர், அசிதர் முதலியவர்களால் தருமம் உபதேசிக்கப்பட்டவர். சௌநகர் கூறிய மந்திர பலத்தினுல் சூரியனிடமிருந்து அக்ஷயபாத்திரம் பெற்றவர். உரோமசன்மரிடத்து நளன் அகத்தியர் முதலியோரது கதை கேட்டறிந்தவர். அரணியவாசத்தில் அருச்சுநனைக் காணுது அவலமடைந்து உரோமசன்மரால் தேறியவர். மருத்து மகாராசன் புதைத்து வைத்த பொருளைக் கொண்டு யாகஞ் செய்தவர். இவர் தவத்திற்குச் செல்கையில் இரண்டு வேதியர், நிலவழக்கிட்டு இவனிடத்தில் நிலம் வாங்கினேன். அதில் ஒரு பொற்குவை இருந்தது. அதை நிலம்விற்றவன் கேட்கிருன் இதற்கென்ன நீதி யென்றனர். தருமர் இவ்வழக்கை வீமனுக்குக் காட்ட வீமன், இவர்களுள் வாங்கினவன் நேற்று என்னிடம் வந்து அவனிட மிருந்து வாங்கியநிலத்திலிருந்ததைஅவனுக்கே கொடுக்கவேண்டு மென்று கூறினன். இன்றைக்கு மறுக்கிருன் ஆதலால் இன்றைக்கே கலி பிறந்தது, நாம் தவத்திற்குப் போவோமென்றனன். தருமர் வழக்காளிகளைப் பரிசித்தினிடம் அனுப்பிவிட்டுக் காட்டிற் கேகினர். இவர் சுவர்க்கம் போகையில் யமன் நாயுருக்கொண்டு பின் தொடரக் கண்டு இந்த நாய்க்கு நற்பதவி கொடுக்கின் நான் விமான மேறுவேனென்று இந்திரனிடம் கூற யமன் தன்னுருக்கொண்டு வாழ்த்தினன். இவர் விமானமேறிச் சுவர்க்கஞ் சென்று நாரதரைத் தரிசித்துச் சுற்றத்தவரைக் காண விரும்பித் துரியோதனன் கொலுக் கண்டு கர்ணன், வீமன், அருச்சுநன், துரௌபதி முதலிய பந்து மித்திரர்களை நரகத்திற் கண்டு விசனமுற்று ஆகாய கங்கையில் ஸ்நானஞ்செய்து திவ்யதேகம் பெற்று யம தரிசனம செய்து அப்பால் பரமபதத்தில் கண்ணனையும் அவன் தேவியர் எண்மரையும் கண்டு பணிந்தவர்.

**தருமபுத்திரன்** — இவன் ஓரரசன். கோதமனூரால் பாடல் பெற்றவன். (புற-நா.)

**தருமப்பிரஜாபதி** — ஓர் பிரசாபதி, பாரி மூர்த்திதேவி, குமரர் நரநாராயணர்.

**தருமமூர்த்தி** — சிவ பூசையால் உயர்நிலையடைந்த முனிச்சிரேட்டர். (சிவரகசியம்)

**தருமவர்மா** — நிஷ்களாபுரி யாண்ட சோழன் தசரதன் காலத்தவன். திருவரங்கத்தில் கோபுர முதலிய திருப்பணிகள் செய்வித்தவன்.

**தருமவியாதன்** — ஒரு வேடன் கௌசிகனென்னும் வேதியனுக்கு அறமுரைத்தவன். இவன் பூர்வம் வேதியன். ஒரு இருடி மான்றோலிட்டுப் போர்த்துத் தவஞ்செய்ய அவரை மானென்று எய்து அவரால் வேடனுகச் சாபமடைந்தவன்.

**தருமன்** — 1. வருணன் குமரன், மனைவி நிருதி, குமரர் மகாபயன், பயன் மிருத்யு குமரிகள் காக்கை, சேனை, பர்சினி, திருதராஷ்டரை, சுகி.

2. திரேதா யுகத்தில் விஷ்ணுவுக்கு ஒரு பெயர்.

3. ஒரு அரசன், பாரி, சூனிருதை.

4. ஓர் வணிகன், தாய் தந்தையரிறக்கக் குட்டநோய் கொண்டு பசியால் வருந்தி நாகைக் காரோகணத்துப் பலிபீடத்திருந்த அன்னத்தைப் புசிக்கச் சிவமூர்த்தி யிவனிடம் கருணை புரிந்து பெருஞ் செல்வமளிக்கப்பெற்று வாழ்ந்தவன்.

5. காந்தாரன் குமரன், இவன் குமரன் கிருதன்.

6. ஹேஹயன் குமரன், இவன் குமரன் நேத்திரன்.

7. பிருது சிரவசுவின் குமரன், இவன் குமரன் உசநசு, இவனுக்கே மறு பெயர் என்பர்.

8. திருவள்ளுவர் திருக்குறளுக்கு உரையியற்றியவர்களில் ஒருவர்.

9. அருஷனுக்குத் தந்தை.

10. மாநந்தையைக் காண்க. இவன் பன்னிரண்டு வயதில் இறப்பன் எனக் கேட்ட தந்தை, ஸ்ரீருத்திரத்தால் பதினுயிரம் வருஷம் இருக்கச் செய்யப்பெற்றவன்.

11. ஒரு அரசன் கோதமனூரால் பாடல் பெற்றவன்.

12. யமனுக்கு ஒரு பெயர்.

13. சுபுத்தன், விபுலன் இவ்விருவரும்

ஒரு நாட்டிலிருந்தவர். இவர்களுள் சுபத்தன் புத்திரன் தருமன். விபுலனுக்குச் சந்திரசேநன், மிருதுசந்திரன் என இரண்டு குமரர் இருந்தனர். இவர்களுள் தருமனும், மிருதுசந்திரனும் இல்லறத்திருந்தனர். சந்திரசேநன் துறவியாயினன். இதைக் கேட்ட தருமன் துறவுகொள்ள இருக்கையில் பிருகு முனிவர் பஞ்சாக்ஷர உபதேசஞ்செய்து இல்லறம் நன்றென்று சென்றனர். சந்திரசேநன் சித்தி வல்லனாய்ப் பலநாள் கழித்துத் தருமனிடம் வந்து தன் வல்லமையைக் காட்டி இந்திரனை அழைத்தனன். தருமன் பஞ்சாக்ஷர பலத்தால் பிரமனை அழைத்துக் காட்டினன். இதைக் கண்ட சந்திரசேநன் தருமனைக் குருவாகக் கொண்டு பஞ்சாக்ஷர உபதேசம் பெற்றனன்.

14. ஓர் மநு, தக்ஷன் பத்துப் பெண்களை மணந்தவன். இவன் தேவியர் கீர்த்தி, லக்ஷ்மி, திருதி, மேதா, புஷ்டி, சிரத்தை, கிரியை, விருத்தி, இலச்சா, மதி, குமரர், சமன், இராமன், அருஷன். (பாகவதம்)

15. சைந பதினேந்தாவது தீர்த்தங்கரர். இவர் ரத்னபுரம் குருவம்சம், தந்தை பானு மகாராசா, தாய் சுப்ரபை. இவர் மாசி மாதம், சுக்லபக்ஷத் திரியோதசி, பூசநக்ஷத்திரத்தில் பிறந்தனர். உன்னதம் (௪0)வில் சுவர்ணவர்ணம் (௧0) லக்ஷம் ஆயுஷ்யம். புத்ரன் சுதர்மன்; கணதரர் அரிஷ்டசேநர் முதல் (௪௩) இவர் காலத்து இராசாக்கள் சுதர்சனபலதேவன். புருஷசிம்ம வாசுதேவன். மதுக்கிரீடவன், பிரதி வாசுதேவன். இவர் காலத்துச் சக்கிரவர்த்தி மகவான் என்கிற சக்கிரவர்த்தி, சநத் குமாரன்.

**தருமஷணன்** — சஞ்சய னிரண்டாவது புத்திரன். (மா - புராணம்.)

**தருமா** — (ச.) சங்கிருதி குமரன்; இவன் மகாரதன்.

**தருமாகரன்** — இவன் தவநிலைக்கு அஞ்சிய இந்திரன், இவன் தவத்தைக் கெடுக்க அரம்பையராலும் ஆகாதென உணர்ந்து யவனதேசத்தில் தாழ்ந்த சாதியிற் பிறந்து பிரமதேவரிடம் அழகுபெற்ற சதமாயைக்குப் பல வரந்தந்து இவன் தவத்தைக் கெடுக்க ஏவ அவள் அவ்வாறு சென்று அவனை வயப்படுத்தி அவனுடன் இருந்து தவத்தைக் கெடுத்தனள். இவன் தான் கெட்டநிலை உணர்ந்து சிவகீதையில் விபூதி விசுவரூப அத்தியாயம் ஓதி சுத்தம் அடைந்தனன். இவன் ஓதிய காரணத்தால் பாவம் அடைந்த அவ்விரு அத்தியாயங்களும் கங்கையில் அன்ன உருக்கொண்டு முழுகித் தூய்மை பெற்றன. அதனால் பாபமடைந்த கங்கை சிவதீர்த்த ஸ்நானத்தால் சுத்தையாயினள்.

**தருமி** — 1. ஒரு சைவ வேதியர், மதுரையை யாண்ட வங்கியசூடாமணி பாண்டியன், ஒருநாள் நந்தனவனத்திற்குப் போயினன். அவ்விடமிருந்து ஒரு புது மலரின் மணம் வர உணர்ந்து இதேது புது மணம், இந்த நந்தனவனத்திலுள்ள மலர்களின் மணம் நாமறியோமே என்று அந்த மணம் வரும் வழியை நோக்கினன். அது தனது மனையாட்டியின் கூந்தலென்றறிந்து அது புஷ்ப மணத்தின் வேறாயிருந்ததால் சந்தேகித்துக் கொலுவில் பொற்கிழி யொன்று தொங்கவிட்டு என் கருத்தைத் தெரிவித்தவர் இந்த ஆயிரம் பொன்னிறைந்த கிழியைப் பெறலாமென்றனன். சங்கப்புலவர் அனைவரும் தனித்தனிப் பாட அரசன் சம்மதமிலாது இருந்தனன். இப்படியிருக்க மேற்கூறிய வேதியன் சொக்கநாதரையடைந்து தனது குறை கூறி அரசன் கருத்தை அறிவித்து அப் பொருளைத் தனக்குக் கொடுப்பிக்க வேண்டிச் சொக்கநாதர் "கொங்குதேர்" என்கிற கவி யருளப் பெற்று அரசனுக்கு அறிவித்தனர். அரசன் சம்மதித்துச் சங்கத்தவர் அநுமதிக்கனுப்பப் புலவர் எல்லாரும் ஒத்துக்கொண்டனர். நக்கீரர் செய்யுளில் சொற்குற்றமில்லை பொருட்குற்றம் உண்டென்றனர். அது என்னெனின் உத்தமப் பெண்களின் கூந்தலில் இயற்கை மணம் கிடையாது; செயற்கையென மறுத்தனர். வேதியர் மீண்டு சொக்கருக்கு அறிவிக்கச் சொக்கர் ஒரு புலவர்போல் உருக்கொண்டு நக்கீரரிடம்வந்து இச் செய்யுளில் என்ன குற்றம் என்றனர். நக்கீரர் பொருட் குற்றத்தைக் கூறினர். சொக்கர், ஆயின் உத்தம லக்ஷணமுள்ள பதுமினிப் பெண்களுக்கோவெனின், அதுவும் அவ்வாறேயென்றனர். சொக்கர் தேவமாதருக்கோ என, கீரர் அதுவும் அவ்வாறே என்றனர். சொக்கர் நீ வணங்கும், ஞானப்பூங்கோதைக்கோ என, கீரர் அதுவும் அடியவர் முடியிடுதலால் உண்டாவதேயென்று சாதித்தனர். இதைக்கேட்ட சொக்கர் தமது நெற்றிக் கண்ணைக்காட்டக் கீரர்,தேவரீர் இன்னவர்

என்று அறிந்தேன். ஆயினும் நான் கூறியதே உண்மை யென்றனர். சொக்கர் மஹறயக் கீரர் நெற்றிக்கண்ணின் தீவெம்மை யாற்ருது பொற்ருமரையில் விழுந்து கரைகாணுது அலைந்து நல்லறிவு தோன்றி நீரிலிருந்தபடி கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி பாடிக் கரைகண்டு தான் செய்தது குற்றமென்றறிந்து தருமிக்குப் பொற்கிழி கொடுப்பித்துக் கடவுளை வணங்கினர். சோமசுந்தரமூர்த்தியைக் காண்க. (திருவிளையாடல்.)

2. சிங்களதேயத்துச் சவிதா என்னும் வேதியன் குமரன், இவன் தனக்குரிய பொருளைச் சிவாலயத்திற் களித்து நற்கதி பெற இவனுக்கிளையார் அவற்றை யபகரித்து நாகமடைந்தனர்.

**தர்க்கம்** — 1. வாதம்; இது சாதகதர்க்கம், பாதகதர்க்கம் என இருவகை. சாதகமிருக்கின் சாத்தியமிருக்குமென்பது சாதக தர்க்கம். சாத்யமினருயின் சாதகமின்ருமென்பது பாதகதர்க்கம். (தரு.)

**தர்சம்** — அமாவாசையிற் செய்யும் யாகம்.

**தர்சகன்** — தாதா என்பவனுக்குச் சினிவாலியிடம் பிறந்த குமரன்.

**தர்துரம்** — கிழக்குத்தொடர்ச்சி மலையின் தென்பாகம். The Southern Partition of Eastern Ghats. தர்தரம் காண்க.

**தர்ப்பாரணியம்** — கயைக்கு அருகிலுள்ள க்ஷேத்திரம்.

**தர்மகேது** — 1. ஆர்யகருக்கு வைத்திருதியிட முதித்த விஷ்ணுவினம்சம்.

2. (ச.) சுகேதனன் குமரன், இவன் குமரன் சத்தியகேது.

**தர்மசாவர்ணிமநு** — பதினெராமன் வந்தரத்து மநு.

**தர்மசுவாமி** — சிவசுவாமியின் குமரன், இவன் கல்வியில் வல்லவனுய் வேசையர் மயலில் மயங்கிச் செல்வ முழுதும் இழந்து கள்ளருந்திப் பலநாள் கழித்துத் தான் செய்தது தீங்கென்றறிந்து வேதியரைப் பிராயசித்தங் கேட்டனன். அவர்கள் நெய்யைக் கொதிப்பித்து வாயில் வார்க்க இருக்கையில் நாரதர் தரிசனங் தந்து அவ்வாறு செய்தலைத் தடுத்துச் சித்திரா நதியாடச் செய்யப் பாபம் நீங்கினன்.

**தர்மதரிசி** — 18-வது புத்தன்.

**தர்மத்துவசன்** — (சூ.) சதத்துவசன் குமரன். இவனிடத்து லக்ஷ்மி பெண்ணுகப் பிறந்தனள். சரஸ்வதியைக் காண்க.

**தர்மத்வஜன்** — இவன் ஏகாதசி விரதபலத்தால் பல அரசர்களை வென்று மோஹினி, நாககன்னிகை முதலியவர்களை மணந்த அரசகுமாரன். (பிரகன்னாரதிய புராணம்.)

**தர்மநேத்ரன்** — 1. ஹேஹயன் குமரன், இவனுக்குத் தர்மன் எனவும் பெயர்.

2. சுவவிரதன் குமரன், இவன் குமரன் சிரதன்.

**தர்மாதர்** — இவர் சிவபூஜையால் சித்திபெற்று நந்திமாதேவரால் விஷ்ணுத்வமடைந்தவர். (சிவரஹஸ்யம்.)

**தர்மாதன்** — 1. திவிரதன் குமரன்; இவன் குமரர் சித்திராதன், உரோமபதன்.

2 சித்திராதன் குமரன்.

**தர்மவர்மா** — திருவரங்கத்தில் பெருமாள் அருள் பெற்ற சோழன்.

**தர்மவாக்யன்** — திருதராட்டிரன் குமரன்.

**தர்மவாதி** ... திரிசங்கின் தேவி, அமபரீஷனுக்குத் தாய். இவள் புத்திரப்பேறு இலாது இருக்கத் திருமால் கனவிற்ருேன்றி ஒரு கனி பிரசாதிக்க உண்டு அம்பரீஷனைப் பெற்றவள்.

**தர்மவியாதன்** — விஷ்ணு பக்தனுகிய வேடன்.

**தர்மவிரதன்** — தண்டகாரண்யத் திருந்து இராமரைக் கண்டு தரிசித்தவன்.

**தர்மவிரதை** — கயாசுரனைக் காண்க.

**தர்மாங்கன்** — இருக்குமாங்கதன் குமரன்.

**தர்மாங்கதன்** — ருக்மபூஷணன் என்னும் வேதியன் குமரன், விஷ்ணுபூஜையால் இந்திரபதமடைந்தவன். (பாத்ம புரா.)

**தர்மாரண்யம்** — 1. அதூர்த்தரஜன் கட்டின பட்டிணம்.

**தர்மாரண்யர்** — ஒரு வேதியர், பதுமனைக் காண்க.

2. கயைக்குச் சமீபத்திலுள்ள ஒரு க்ஷேத்திரம். Four miles from Buddha-Gaya in the district of Gaya.

**தர்மலக்ஷணம்** — சந்தோஷம், பொறுமை, மனோநிக்ரகம், அந்யாயமாய்ப் பொருள் தேடாமை, நல்லொழுக்கம், இந்திரிய நிக்ரகம், சாஸ்திர ஞானம், பிரம்ம ஞானம், உண்மை, கோபமின்மை. (மநு.)

**தலன்** — 1. சலன் தம்பி.

2. பரீட்சித்து மூன்ருவது புத்திரன் தாய். மண்டூக புத்திரியாகிய சுசோபனை.

**தலாதலம்** — ஒரு பாதாளம், இது கற்கள் நெருங்கியதென்பர்.

**தலைக்கணை** — சயனிக்கும் அணையில் தலை படுக்கைச் , மேனோக்கி யிருக்க உயர் வாய்ச் சயனத்திற்குக் கூறிய உள்ளீடுடன் செய்யப்படுவது.

**தலைக்காஞ்சி** — வலியோங்க மாற்றார்தம் மறத்தொழிலைக் கடந்தவன். பசுந்தலை மிதிப்பைச் சொல்லியது. (பு - வெ.)

**தலைக்கோட்டுத்தண்டு** — ஒரு தமிழ் நூல். இன்னது கூறியதென்று தெரியாது. நூலிறந்தது.

**தலைக்கோலமைதி** — பொதியமலையின் மூங்கிலால் கணுக்குக்கணு சாண் அளவு உள்ளதாய் எழுசாண் நீளம் உளதாய்ச் சயந்தனைத் தெய்வமாகப் பெற்றது.

**தலைச்செங்காடு** — காவிரிப்பூம் பட்டணத்தருகிலுள்ளது; மாடலனிருந்தவூர். (சிலப்பதிகாரம்.

**தலைத்தோற்றம்**—வலியினை விரும்பினோன் ஆனினத்தைக் கைக்கொண்டு வருதலையறிந்து உறவுமுறையார் மனமகிழ்ந்தது. (பு - வெ.)

**தலைப்பாகை** — இது தலையிலணியும் வஸ்திரம். இது தேசங்கள்தோறும் பலவகைப்படுகிறது. இந்துதேசத்தவர் வஸ்திரத்தைத் தலைக்கணிவர். மற்றவர் பலவித குல்லாய்களும் தொப்பிகளும் அணிவர்.

**தலைப்பெயநிலை** — இனிய ஒளிநகையினையுடைய பிள்ளையென்னும் தான் கொடுக்கக் கடவதனைக் கொடுத்த மாதா இறந்த முறைமையைச் சொல்லியது. (பு. வெ. பொது.)

**தலைமலைகண்டதேவர்** — இவர் ஊர் பாண்டிநாட்டுநயினார் கோயிலையடுத்த காடடர்ந்தகுடி யென்பர். இவர் மறவர், அந்தகர், இவர் கல்வி வல்லவர். மணத்தில் விருப்பங்கொண்டு கன்னிகையைக் கேட்க அம்மறவர் சாதி வழக்கப்படி மும்முறை களவு செய்து அக்களவில் அகப்படாதவர்க்குப் பெண் கொடுப்பதுபோல் இவர் களவு செய்யாதவர் ஆதலால் மறவர் இவர்க்குப் பெண் தர மறுத்தனர். இவர் மணஞ்செய்துகொள்ளப் பொன் வேண்டிக் களவின் பொருட்டுத் திருப்பூவணத்திலுள்ள தாசி வீட்டில் அத் தாசியின் படுக்கை அறைக்கண் உள்ள கட்டிலடியில் ஒளித்திருந்தனர். தாசி தான் கட்டிலில் உறங்குமுன் திருப்பூவணநாதர்மேல் செய்யுள் பாடி முடிப்பதுபோல் கவிபாடச் செய்யுள் முடியாது மயங்குகையில் அடியிலிருந்த தேவர் கேட்டுச் செய்யுளை முடித்தனர். தாசி திடுக்கிட்டு நீவிர் யார் எனத் தேவர் வரலாறு கூறித் தாசியிடம் பொன் பெற்று மணமுடித்துக்கொண்டனர். இவர் மருதாந்தாதி இயற்றினர்.

**தலைமாராயம்** — தலையைக் கொடுவந்தான் மனமுவப்ப வில்லினையுடைய மன்னன் செல்வத்தைக் கொடுத்தது. (பு. வெ.)

**தலையணைவிதி** — கழுத்திற்கும், தோளிற்கும் மத்தியிலிருக்கும் அளவான உயரமுள்ளதாகவும், நீளமுள்ளதாகவும் இலவம் பஞ்சியினால் தைப்பித்த தலையணையின்மேல் சிரசு வைத்து நித்திரை கொண்டால் பாதாதிகேசமட்டும் உள்ள எந்தப் பக்கத்து நரம்புகளும் பிசகாமல் இருக்கும். அன்றியும் சிரசைப் பற்றிய ஆவர்த்த நோய்களும் நீங்கிவிடும்.

**தலையற்றநாள்** — நக்ஷத்திரங் காண்க.

**தலையுதையராசி** — இராசி காண்க

**தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்** — இவன் மதுரையிற் பாண்டியன் மரபிலே தோன்றிக் கல்வி கேள்வி வீர முதலியவற்றாற் சிறந்து கவிபாடுந் திறனுமுடையனாய் மாங்குடி மருதனார் முதலாகிய வித்வான்களாற் புகழ்ந்து பாடப்பெற்று இளமையிலேயே அரசவுரிமை கைக்கொண்டு ஆட்சி புரிந்து வருவானாயினன். அந்நாளில் சேரமான் யானைக்கட் சேய்மாந்தரஞ் சேரலிரும் பொறையும் சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் வேளிர் ஐவரும் இந் நெடுஞ்செழியனை இகழ்ந்து கூறிப் பாண்டிநாட்டைக் கைப்பற்றக் கருதி மதுரையை முற்றுகையிட்டார்கள். அது கண்ட நெடுஞ்செழியன் சினமிகுத்து "நகுதக்கனரே" (புறம் எஉ) என்ற செய்யுளால் வஞ்சினங் கூறிப் போருக்கெழுந்து உழிஞைசூடிப் போர் செய்யத் தொடங்கினன் (புறம் எக.) இவன் மிக்க இளையனாயிருந்தும் அஞ்சாமற் கடும்போர் புரிந்து அவ்வெழுவருந் தோற்றோட வென்றான். (புறம் எக.) தோற்ற எழுவரும் ஓடிச் சென்று சோழநாட்டிற் புகும்போதும் இவன் விடாது பின் தொடர்ந்து சென்று திருத்தலையாலங்கானத்து மறித்து நின்று பெருஞ் சமர் நடத்தி இடைக்குன்றூர்க்கிழாரால் பாடல் பெற்றவன்.

**தலையாலங்காலத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** — இவன் கோச்சேரமான் யானைக்கட் சேய்மாந்தாரஞ் சேரலிரும்பொறையுடன் இளமையில் போரிட்டு அவனைச் சிறையிலிட்டுச் சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரான், இருங்கோவேண்மான், பொருநன் என்பவரையும் வென்றான். பழைய வேளிருடைய முத்தூற்றுக்கூற்றையும் வேள் எவ்வியின் மழலைக்கூற்றையும் கைக்கொண்டவன். மறக்களவேள்வி அறக்களவேள்வி செய்தான். மாங்குடி மருதனாரியற்றிய மதுரைக்காஞ்சிக்குத் தலைவனிவனே. செய்யுள் பாடுவதில் வல்லவன். இவனை நெடுஞ்செழியன் எனவுங் கூறுவர். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனும் இவனாக விருக்கலாம். (புற - நா.)

**தலையாலங்கானம்** — இது நெடுஞ்செழியன் இரு பெரு வேந்தரையும் ஐம்பெரு வேளிரையும் பொருதுவென்ற ஊர். இது ஆலங்கானம் எனவும் தலையாலங்காடு எனவும் வழங்கும். (புற - நா.)

**தலையோடு முடிதல்** — உறழ் பூசலின் ஓவாதவலியினை யுடைய கைப்பிடித்தான் தலையுடனே திரண்ட வளையினையுடையாள் இறந்தது. (பு - வெ.)

**தலைவிக்குரிய அவத்தை மெய்ப்பாடு** — நகுமுகம்புரிதல், பொறிநுதல்வியர்த்தல், நகுநபமறைத்தல், சிதைவு பிறர்க்கின்மை இவை முதலவத்தைகள். கூழைவிரித்தல், காதொன்று களைதல், ஊழணிதைவரல், உடைபெயர்த்துடுத்தல் இவை இரண்டாமவத்தைகள். அல்குல்தைவரல், அணிந்தவைதிருத்தல், இல்வலியுறுத்தல், இருகையும் எடுத்தல் இவை மூன்றாமவத்தைகள். பாராட்டெடுத்தல், மடந்தபவுரைத்தல், ஈரமில்கூற்றம், ஏற்றலர்நாணல், கொடுப்பவைகோடல் இவை நான்கும் நான்காமவத்தைகள். தெரிந்துடம்படுதல், திளைப்புவினைமறுத்தல், கரந்திடத் தொழிதல், கண்டவழியுவத்தல் இவை ஐந்தாமவத்தைகள். (தொல்.)

**தவதி**—சவ்வருணன் தேவி, சூரியன் பெண், குருவின் தாய்.

**தவதிசயந்தம்** — ஓர் இடத்தின் பெயர். (பெ. கதை)

**தவந்தகன்** — வயந்தகனுடைய மகன். (பெ. கதை.)

**தவழனி** — ஆதிக்குத் தந்தை. இந்த ஆதி பிறந்த பிறகு இவர் விராலிமலைக்குத் தவத்திற்கு ஏகினர்.

**தவளகிரி முதலியார்** — இவர் தொண்டை நாட்டில் வெண்குன்றமென்னும் ஊரிலிருந்த வேளாளர். இவர் வீட்டுக்குக் கம்பர் விருந்தாய்ச் சென்றகாலத்து இவரது குமரன் பாம்பாலிறக்க அப்பிரேதத்தை மறைத்து அவருக்கு அன்னமிடப் புலவர் முதலியார் குமாரை அழைக்க முதலியார் நடந்ததைக் கூறினர். கம்பர் "ஆழியான் பள்ளியணையே" என்ற செய்யுளைக் கூறி உயிர்ப்பித்து வேளாளர்மீது ஏரெழுபது பாடப்பெற்றவர். இவற்குப் பிற்காலத்துச் சோழன் சபையில் முதலியார் குமரர் மந்திரியாக இருந்தபொழுது சோழன் ஒருநாள், முதலியாரின் புத்திரரை நோக்கிக் கம்பர் கூறிய ஏரெழுபது உண்மையோ என அனைத்தும் உண்மையெனக் காய்ச்சிய நெய்யில் முழுகி யெழுந்து கையில் மழுவேந்தினவர்.

**தவளமலை** — சாவக நாட்டிலுள்ள மலை. (மணிமேகலை)

**தவளை** — 1. இது பெரும்பாலும் நீரில்வாழ் பிராணி. சில நிலத்திலும் வசிக்கின்றன. தவளைகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. இவை தம் முட்டைகளை நீர்ப்பூண்டுகளிலும், தண்ணீரிலும் வழுவழுத்த திரவத்துடன் கூடி யிடுகின்றன. இம் முட்டைகளினின்றும் குஞ்சுகள் (10) நாட்களில் வெளியாகிச் சிறப் புழுப்போல் தலை பருத்தும் வால், மீன் குஞ்சுகளுக்கு இருப்பதுபோல் சிறுத்தும் இருக்கும். வரவர இவற்றிற்குக் கண் கை கால் முதலிய உறுப்புக்களுண்டாகின்றன. அப்போது முன்னைய வால் குறைந்து போகின்றது. இவற்றிற்குப் பின்கால்கள் நீளம். தவளைகளுக்குச் சுவாசாசயம் நெஞ்சிலிருப்பதால் சுவாசம் நெஞ்சுள் செல்கையில் அது துருத்திபோல் வீங்குதலும் வாடுதலும் கொள்ளும். நீர்வாழ் தவளைகளுக்குக் கால்களும் கைகளும் இடையில் தோலால் இணைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றின் நாக்கு பிளவுள்ளதாதலால் பூச்சிகளை நாவின் பிளவினால் பற்றித் தின்னும். இவ்வினத்தில் சொரித்தவளை, பச்சைத்தவளை, கொம்புத்தவளை, ஒட்டுத்தவளை, பறக்கும் தவளை, தேரை முதலிய உண்டு. இத் தேரை மெல்லிய கை கால்களை யுடைத்

தாய் மரங்களிலுங் குளிர்ந்த இடங்களிலும் வசிக்கும். இதனிடம் ஒருவித விஷ நீர் உண்டு. அந்நீரைத் தனக்கு அபாயம் நேருகையில் பீச்சுகின்றது. அந்நீருடம்பிற் படின் வெப்பத்தால் கொப்புளம் உண்டாம். இவ் வினத்தில் மேனுகெளில் ஒடடுத்தவளை, பறக்குந் தவளை யென்பன செடி கொடிகளில் ஒட்டி வாழும். பறக்குந்தவளை தாண்டிச் செல்லப் பாதங்களினிடையில் ஜவ்வு பெற்றுப் பறக்கும்.

2. சிவவீரியம் பொருத அக்னி, மடுவில் ஒளிக்க அவரைத் தேடிய தேவர்களுக்கு அந்த மடுவின் உஷ்ணத்தைப் பொருத தவளை அக்னியின் இருப்பிடத்தைக் கூறினதால் நாக்கில்லாதொழிகவெனச் சாபமிட அவ்வகை பெற்று மீண்டும் தேவர்களால் வாக்களிக்கப்பட்டது. (பார - அநு.)

**தவிடு** — அரிசியைக் குத்திக் கொழிக்கையில் அரிசியினின்று நீங்கும் மெல்லிய கவசத்தொகுதி.

**தவித்யோதன்** — யதுவம்சத்துத் துந்துபியின் குமரன். இவனுக்கு அபிசித் எனவும் பெயர்.

**தழற்கண்ணன்** — சிங்கமுகாசுரனிடம் யுத்தஞ் செய்த சண்முக சேனாவீரன்.

**தழிஞ்சி** — 1. ஒரு வீரன் தனக்குக் கெட்டோடுவார் முதுகுபுறத்துக் கூரியவாளோச்சாத மிக்க மறப்பண்பை விரும்பிச் சொல்லியது. (பு - வெ.)

2. கைவளர்ந்து நடவாநின்ற ஆயுதத்தையுடைய சேனை தங்களெல்லேயிற் புகுதாதபடி அருமையுடைத்தான வழி யிடத்தைக் காத்தது. (பு - வெ.)

**தழும்பன்** — இவன் ஒரு கொடையாளி. ஊனூர் என்னும் நகரத்தின் தலைவன். போரிற் புண்பட்ட அழகுடையவனென்று பாணரால் சிறப்பிக்கப்பட்டவன். (நற்றிணை) அத் தழும்புடைமையின் தழும்பனெனப்பட்டான். இவன் இயற்பெயர் புலப்படவில்லை. "தூங்கல் பாடிய வோங்குபெரு நல்லிசைப்பிடி மிதிவழுதுணை பெரும்பெயர்த் தழும்பன் கடிமதில் வரைப்பி னூனூரும்பர்" என அகம் 229-ல் நக்கீரனுராற் சிறப்பித்துப் பாடப் பெற்றவன். "வெண்ணெல்லரிஞர் தண்ணுமை வெரீஇ இக்கணணக கொண்ட தீந்தேனிரியக்கள்ளரிக்குங் குயஞ்சிறு, மீன்சீவும் பாண்சேரி, வாய்மொழித் தழும்பனூரன்ன ... பெருந்துறை மரனே" எனப் பரணராற் (புறம் கூசஅ) - ல் புகழ்ந்து பாடப் பெற்றவன். இவனைப் பாடியவர் பரணர்.

**தளை** — 1. நின்ற சீரினீற் றசையோடு வருஞ்சீரின் முதலசை ஒன்றியேனும் ஒன்றாதேனும் கூடி நிற்பது. அது, நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை, ஒன்றியவஞ்சித்தளை, ஒன்றாதவஞ்சித்தளை, கலித்தளை என எழுவகைப்படும்.

2. (தொகை, வகை, விரி). (i) வெண்டளை, (ii) ஆசிரியத்தளை, (iii) கலித்தளை, (iv) வஞ்சித்தளை என்னும் தொகையானும்; 1. இயற்சீர்வெண்டளை, 2. உரிச்சீர்வெண்டளை, 3. பொதுச்சீர்வெண்டளை, 4. நேரொன்றாசிரியத்தளை, 5. நிரையொன்றாசிரியத்தளை, 6. கலித்தளை, 7. ஒன்றியவஞ்சித்தளை, 8. ஒன்றாதவஞ்சித்தளை என்னும் வகையானும்; 1. இயற்சீர்ச் சிறப்புடைவெண்டளை, 2. இயற்சீர்ச்சிறப்பில்வெண்டளை, 3. உரிச்சீர்ச்சிறப்புடை வெண்டளை, 4. உரிச்சீர்ச்சிறப்பில்வெண்டளை, 5. பொதுச்சீர்ச் சிறப்புடைவெண்டளை, 6. பொதுச்சீர்ச் சிறப்பில்வெண்டளை, 7. நேரொன்றிய சிறப்புடை ஆசிரியத்தளை, 8. நேரொன்றிய சிறப்பில் ஆசிரியத்தளை, 9. நிரையொன்றிய சிறப்புடை யாசிரியத்தளை, 10. நிரையொன்றிய சிறப்பில் ஆசிரியத்தளை, 11. சிறப்புடைக் கலித்தளை, 12. சிறப்பில் கலித்தளை, 13. ஒன்றிய சிறப்புடை வஞ்சித்தளை, 14. ஒன்றிய சிறப்பில் வஞ்சித்தளை, 15. ஒன்றாத சிறப்புடை வஞ்சித்தளை, 16. ஒன்றாத சிறப்பில் வஞ்சித்தளை என்னும் விரியானும் அறிக. (யா. வி.)

**தளை யிலக்கணம்** — நேரொன்றாசிரியத்தளை - மாமுன் நேர் வருவது. நாள்முன் நேர் வருவது.

நிரையொன்றாசிரியத்தளை - விளமுன் நிரை வருவது மலர் முன் நிரை வருவது.

வெண்சீர்வெண்டளை - காய் முன் நேர் வருவது, பூ முன் நேர் வருவது.

இயற்சீர்வெண்டளை-மா முன் நிரையும், விள முன் நேரும் வருவன. நாள்முன் நிரை வருவதும் மலர் முன் நேர்வருவது.

ஒன்றியவஞ்சித்தளை - கனி முன் நிரை வருவது நிழல்முன் நிரை வருவது.

ஒன்றாவஞ்சித்தளை - கனிமுன் நேர்வருவது நிழல் முன் நேர் வருவது.

கலித்தளை - காய் முன் நிரை வருவது, பூ முன் நிரை வருவது.

**தற்கமுனி** — ஆகாயவாணியிடந் தான பலங் கேட்ட முனிவன்.

**தற்குறிப்பணி** — அஃதாவது, ஒரு பொருளை மற்றொரு பொருளினது தரும சம்பந்தத்தினாலே இஃதஃதன்று என்று தெரிந்திருந்து மப்பொருளாக அத்தியவசயித்தலாம். இதனை வடநூலார் உத்ப்ரேக்ஷாலங்கார மென்பர்.

**தற்குறிப்பேற்றவணி** — இது ஒரு பொருளுக் கியல்பாந் தன்மையொழிய, கவி, தான் கருதிய தொன்றை அதன் மேலேற்றிக் கூறுதல். (தண்டி.)

**தற்பன்** — யமனுக்கு உன்னதியிட முதித்த குமரன்.

**தற்புருடன்**—சிவபிரான் திருமுகத்தொன்று. பீதகற்பத்தில் பிரமனுக்குமுன் தரிசனந் தந்து காயத்திரியை யுதவி நான்கு இருடிகளைத் தந்தருள் புரிந்தவர்.

**தனகன்** — பத்திரசேநகன் குமரன், இவன் குமரர் கிருதவீர்யன், கிருதாக்னி, கிருதகர்மா, கிருதோசா.

**தனகுத்தன்** — திரிசிராப்பள்ளி வர்த்தகன், இவன் மனைவி பொருட்டுச் சிவமூர்த்தி தாயுருக்கொண்டு உதவித் தாயுமானத் திருநாமம் பெற்றனர்.

**தனசிரி** — ஒரு சைநப்பெண், ஜம்புத்வீபத்துப் பரதக்ஷேத்ரத்து முருகச்சமெனும் நகரத்து ராஜா தனபாலன். அந் நகரத்து வைசியன் ஸ்ரீபாலன் இவன் தேவி தனஸ்ரீ இவர்களுக்குப் புத்ரன் ஜயத்சேநன், இவனுக் கிளையாள் ஸ்வர்ணமாலை, இவர்களுக்குக் கர்மகரனாய் வர்த்திப்பான் சிலதரன். ஸ்ரீபாலன் ஒரு வியாதியா லிறந்தான். தனஸ்ரீசிலதரனைக் கொண்டே கிருஷியாதி ஜீவனோபாயங்க ளெல்லாஞ் செய்வித்துச் செல்லா நின்ற காலத்து, தனச்ரி சிலதரனுடன் கூட ஏகாந்த பிரதேசத்திருந்து கிருக காரியங்களைப் பேசுவதைக் கண்டு ஜயத்சேநன் சகியாதவனாகி அரசனிடம் முறையிட அரசன் தனச்ரியை அழைப்பித்து உண்மை விசாரிக்கத் தனச்ரி அச்சத்தால் புகுந்தபடி உரைக்க அரசன் கோபித்து இவளை மூக்கரிவித்துச் சகட்டின் காலில் கட்டி யிழுப்பிக்க ஆஞ்ஞை பெற்றவள். (சைநகதை.)

**தனஞ்சயன்** — 1. கத்ரு குமரனான நாகன்.

2. (சு.) பெரிகசு குமரன்.

3. (ச.) சத்தியாயுசு குமரன்.

4. சண்முக சேநாவீரன்.

5. ஒரு அக்கி.

6. அருச்சுநன்.

7. காசியில் தாயின் எலும்பை விடச் சென்று பொருளென்று கள்ளரிடம் பறிகொடுத்துத் தான் மாத்திரஞ் சென்று ஆடிய வணிகன்.

8. தனஞ்சய மென்னும் வடநூல் இயற்றிய சைநன்.

9. ஒரு வணிகன, குலசேகரபாண்டியனைக் காண்க.

**தனஞ்சயன் வடிவம்** — பொற்றாமரையிற் பாண்டியன் படித்துறையிற் கிழக்குத் தூணிலுள்ள வடிவம் (தனஞ்சயனென்பவன் இத் தலத்தை முதலிற் கண்டு, மணலூரிலிருந்த குலசேகர பாண்டியனுக்கு இத்தல விசேடத்தைத் தெரிவித்த வணிகன். (திருவிளை - திருநகர.)

**தனதத்தன்** — 1. தருமதத்தனைக் காண்க.

2. விண்டுதத்தன் குமரன், இவன் வாமதேவமுனிவரிடம் உபதேசம் பெற்றுச் சிவபூசை செய்து யமபுரஞ் சென்று மீண்டும் உயிர்பெற்று முத்தி யடைந்தவன்.

3. புனிதவதியாரின் தந்தை.

**தனதேவன்** — இவன் ஒரு சைந வைசியன். புண்டரீக நகரத்து ஜினதேவன் கப்பல் யாத்திரை வர்த்தகத்தின் பொருட்டுத் தனதேவனைத் துணையாக்கொண்டு அவனுக்கு (1,000) பொன் சரக்கு வாங்கக் கடன் கொடுத்தான். தனதேவன் கப்பல் வர்த்தகம் நடத்தி அதில் அவனுக்குக் கிடைத்த (10,000) பொன்னில் சினதேவனிடம் வாங்கிய ஆயிரம் பொன்னும் லாபம் உள்பட (1,500) பொன் கப்பற் கூலி (500) பொன்னும் ஆக (2000) பொன்னைச் சினதேவனுக்குக் கொடுத்து மிஞ்சிய (8000) பொன்னைத் தான் எடுத்துக்கொண்டான். இதனால் பொறாமை கொண்ட ஜினதேவன் அரசனிடம் கப்பலில் கிடைத்த பொருளனைத்தும் தன்னைச் சேரவேண்டுமென அரசனுக்கு இரண்டு மாணிக்கங்களைக் கொடுத்து நீதிக் கழைப்பிக்க அரசன் தனதேவனை வருவித்துச் சாக்ஷியில்லாமையால் இருவரையும் துலாபாரத்து நிறுப்பித்து மூன்று நாட்கள் உபவாச மிருக்கச் செய்து சினதேவனே அசத்தியனென்றறிந்து தனதேவனுக்கே பொருளனைத்தையும் கொடுப்பிக்கத் தனதேவன் (8000) பொன்னல்

லது கொள்ளேன் என அதனைக் கொடுத்து ஜினதேவன் பொன்னனைத்தையும் தன தாக்கிச் சினதேவனைத் தேசாந்தரம் செல லும்படி கட்டளையிடத் தனதேவன் வருந்தி என்னையே அவ்வாறு செய்கவென அரசன் அதிசயித்துத் தனதேவனுக்கு 200,000 பொன்னும் ஆடை முதலியவுங் கொடுத்துச் சம்மானம் செய்வித்துத் தன தேவன் வேண்டுகோளால் சினதேவனை மன்னித்தான் என்பது. (சைநகதை)

**தனபதி** — 1. பதுமைக்குப் பிதா.

2. ஒரு வணிகர், இவர் தேவி சுசீலை, இவர் அதிக திரவியம் சம்பாதித்துத் தமக் குப் புத்திரர் இல்லாமையால் தங்கை பிள் ளையை வளர்த்து வருகையில் தங்கை தன் பிள்ளையால் நீங்கள் பெருவாழ் வடைந்தீர் என்று ஏசினள். இதனால் விசனமடைந்து இருவரும் இனிவரும் பிறப்பிலாவது புத் திரப்பேறடையச் செல்வங்களை மருமகனு கிய தங்கையின் குமானிடம் ஒப்புவித்துத் தவஞ்செய்யச் சென்றனர். இதனையறிந்த தாயத்தார் மருமகனிடம் இருந்த பொருள் களைப் பறித்துக்கொள்ளத் தனபதி வணிக ரின் தங்கை, சொக்கரைத் துதித்தனள். சொக்கர் கனவிற்றோன்றி அம்மே, நீ தன பதியின் தாயத்தாரை அரச ஞணையிட்டு அம்பலமேற்று நாம் உன் பொருளை வாங் கித் தருகிறோம் என்றனர். இவள் விடி ந்து அவ்வாறு செய்து அவர்களைக் கூட்டிக் கொண்டு அம்பலமேறினள். சொக்கர் மாமனைப்போல் வந்து சாதிமுதலியகூறிப் பொருளை வாங்கித் தந்தனர். (திருவிளை.)

3. மதுரையி லிருந்த வணிகர், தேவி குணசாலினி மூங்கைப் பிள்ளையாருக்குத் தந்தை.

**தனபாலன்** — 1. பதுமுகன் தந்தை.

2. ஒரு வணிகன், மிளகு பொதி போட் டுக்கொண்டு திருவிரிஞ்சை நகருக்கருகில் வருகையில் பொழுதுபோனது கண்டு சிவ மூர்த்தியை வழித் துணையாயின் மிளகு பொதி தருகிறேனென்று வேண்டினன். அவ்வகையே சிவமூர்த்தி இவன் காஞ்சி நகர் போமளவும் வழித்துணையாய் மறைந் தனர். பிறகு கள்ளர் மறிக்க வழித்துணை வந்தோர் கள்ளரைத் துரத்தி மறைந்தனர். வணிகன் சொன்னது மறந்து முழுதும் விற்க வாங்கியவர் மிளகு, முழுதும் பயறு யின. அதை வாங்கியவர் மீண்டும் வணிக னிடம் கொடுப்ப வணிகன் மிளகு பொதி யைச் சிவமூர்த்தி (...படி அடியவர்க் களித்துக் களித்திருந்தவன். இத்தலத்தில் சிவமூர்த்திக்கு மார்க்கசகாயத் திருநாமம். (திருவிரிஞ்சை - புராணம்).

3. குபேரனுக்கு மந்திரி, இவன் இரு தாசியெனும் வேசி யின்பத்தில் மூழ்கிக் குபேரன் சபைக்குச் செல்லாததால் யானை யாகச் சாபமடைந்து திரிந்து வேதாரண்ய தீர்த்தம் படிந்து பவித்திரனானவன். (வேதாரண்ய புராணம்.)

**தனயித்நுருக்கன்** — வித்யோதனன் குமரன்.

**தனக்ஷயன்** — ஒரு காந்தருவன், குபேரன் தனதில்லாளுடன் விளையாடிக்கொண்டிரு க்க அத் தம்பதிகளைக் கண்டு அசுரனுகச் சாப மேற்றவன்.

**தனுசாடர்** — இவர் ஒரு அரி பக்தர். இவர் ஏழு வயதாக இருக்கையில் இவர் வீட்டி னைச் சில பாகவதரடைந்து சாளக்கிராம பூசை செய்கையில் இவர் கண்டு அவரை நோக்கித் தாமும் அவ்வாறு பூசை செய்ய வேண்ட அவர்கள் இவன் இளையனென்று ஒரு கல்லினை இவரிடங்கொடுத்துச் செல லப் பக்தர் அதனைப் பூசித்துத் தாம் கொள் ளும் உணவை நிவேதித்து வருவர். , ஒரு நாள் ஆடு மாடுகளை மேய்த்து வருகையில் தமது பெருமாளைப் பூசித்துக் கட்டமுதை நிவேதித் துண்டனர். மற்றொரு தினம் கழனியில் நெல் விதைக்கக் கொண்டுசெல் கையில் அரிதாசர் பசித்துவரத் தாம் கொ ண்ட நெல்லை அவர்களுக்கு அமுது செய் திட் டனுப்பினர். இவ்வாறு விதைக்க விதையிலாது பாகவதரை அமுது செய் வித்து வருகையில் அயலார் நிந்திக்கப் பெருமாள் விதையிலாது கழனியில் பெரு விளைவு செய்விக்கக் கண்ட அயலார் இவர் அரிபக்தர் என்று அஞ்சி அன்பு பாராட் டத் தாசரும் பெருமாளைப்பூசித்துவந்தனர்.

**தனுதிகாரி** — கொடைக்குணம், அவாவின் மை, பிறர்குண மறிதல், மடியின்மை, அருள், இன்சொல், தானத்திற்குத் தக்க வரை யறிதல், வணக்கம், இரப்போர் முகத்தை வேறுபடச் செய்யாமை, தான் கவர்ந்து கொள்ளாமை ஆகிய இக்குணச் செயல்களை வாய்ந்தவன். (சுக் - நீ.)

**தனுயு** — 1. தட்சப்பிரஜாபதியின் புத்திரர்.

2. கசியபன் தேவி.

**தனிகன்** — தூர்த்தமன் குமரன், கார்த்தவீர் யார்ச்சுநன் பேரன்.

**தனிச்சயம்** — இது பாண்டியன் இந்திரனைத் தளைநீக்கி நின்று செயித்த இடம்; மதுரைக்கு மேற்கேயுள்ளது. முருகக்கடவுளின் ஆலயத்தை யுடையது. "ஐயங்கோட்டை தனிச்சயம்" என வழங்கும். (திருவிளையாடல்.)

**தனித்திருக்கலாகா இடங்கள்** — தாயாயினும், உடன்பிறந்தாளாயினும், மகளாயினும் தனித்திருக்கின் அந்த இடத்தில் ஆண் மகன் தனித்திருத்தல் ஆகாது. புலன்களை அடக்கலரி தாதலால் என்பர். (ஆசாரக்கோவை).

**தனிமகனர்** — இவர் பாடலுள் "பாழ்காத்திருந்த தனிமகன் போன்றே" என உவமை கூறிய அருந்தொடர் மொழியே இவர்க்குரியவையாகி வழங்கலாயிற்று. இயற்பெயர் புலப்படவில்லை. பாலைத்திணையைப் புனைந்து பாடியுள்ளார். என்னெஞ்சம் அவர்பாற் சென்றொழிந்தது. உடம்பு மாத்திரம் பாழ் காத்திருந்த தனி மகன் போல் இங்கு இராநின்றதெனத் தலைவி கூற்றாக வியக்குமாறு கூறியுள்ளார். இவர் பாடியது. (நற். கருக-ம் பாட்டு.)

**தனிஷ்டாபஞ்சமி** — நக்ஷத்திரங் காண்க.

**தனு** — ஒரு அசுரன். இவனுக்கு **ரம்பன், கரம்பன்** என்பவர் குமரர். இவர்களிருவரும் புத்திரப்பேறு வேண்டிப் பஞ்சநதமெனும் நதிக்கரையில் தவஞ் செய்கையில் கரம்பன் செய்யுந் தவத்தினை யாற்றாது இந்திரன் முதலையாய் அவனை ஆற்றில் இழுத்துக் கொன்றனன். இவனிறந்ததை யறிந்த ரம்பன் தன் தலையை அரியச் சிகையைப் பிடித்து வாளெடுக்கையில் அக்கிதேவன் பிரத்யக்ஷமாய் என்னவேண்டுமென்ன உலகம் வணங்கத்தக்க ஒரு புத்ரன் வேண்டுமென்றனன். அப்படியே ஆகுக என்று வரந் தந்து சென்றனன். மற்ற சரித்திரத்தை மகிஷனைக் காண்க. (தேவீ - பா.)

**தனுக்கோடி தீர்த்தம்** — இராமமூர்த்தி சிவபூசை செய்யும்படி தமது வில்லின் நுனியால் கண்ட தீர்த்தம். (சேதுபுராணம்).

**தனுத்தரன்** — கனகவிசயருக்கு நட்பாளனுகிய அரசன். (சிலப்பதிகாரம்).

**தனேச்வரன்** — ஒரு வேதியன் மகா பாபி. இவன் தனேச்வரத்தில் தீர்த்த ஸ்நானம் செய்து கார்த்திகை விரதம் அநுஷ்டித்துப் பாப நீக்க மடைந்தவன். (பதுமபுராணம்).

**தன்குணமிகையணி** — அஃதாவது, மற்றொன்றன் சார்பினுலே தனதியற்கைக் குண மிகுதலாம். இதனை வடநூலார் அநுகுணலங்கார மென்பர்.

**தன்மசயன்** — மனோசயனைக் காண்க.

**தன்மநிட்டை** — இவள் முன் பிறப்பில் ஒரு புலைச்சி. பசுவிற்கு நீர் அருத்திச் சிவாலயத்தில் பிராட்டியின் திரவியத்தைக் கவர்ந்ததால் பாண்டிநாட்டில் விருகன் எனும் அரசனுக்குக் குமரியாய்ப் பிறந்து தந்தை, நாடு முதலிய இழப்பக் காட்டில் அலைந்து புண்ணியதீர்த்தக் கரைப்பாங்கர் தேவியைப் பூசைசெய்து பல வரங்களைப் பெற்றவள்.

**தன்மனைவரைதல்** — இது, உடன்போய் மீண்டுவந்த தலைவன், தலைவியைத் தன்னூர்க்குக் கூட்டிப்போய்த் தன் மனையின்கண் வரைந்துகோடல். இது வினுதல், செப்பல், மேவல் எனும் வகையினையும்; நற்றாய்மணனயற் வேட்கையிற் செவிலியை வினுதல், செவிலிக்கு இளைவரைந்தமையுணர்த்தல், வரைந்தமை செவிலி நற்றாய்க்குணர்த்தல், தலைவன் பாங்கிக்கு யான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்று எனல், பாங்கிதானது முன்னே சாற்றியதுரைத்தல்.

**தன்மன்** — வராகமந்திரஞ் செபித்துப் பிரம பத மடைந்தவன்.

**தன்மேம்பாட்டுரையணி** — இது, ஒருவன் தன்னைத்தானே புகழ்வது. (தண்டி.)

**தன்மைநவிற்சியணி** — சாதிசுபாவ தருமத்தையாவது, தொழிற்சுபாவ தருமத்தையாவது கூறுதலாம். இதனை வடநூலார் சுபாவோக்தியலங்காரம் என்பர். (குவல.)

**தன்வந்தரி** — 1. இவர் அநு எனும் அரசன் புத்திரர் என்பர். இவர் பரத்வாஜரிடம் ஆயுர்வேதங்கற்று அதை எட்டுவகையாகப் பிரித்துத் தம் மாணவர்களுக்கு உபதேசித்தவர். (பிரம புராணம்.)

2. விஷ்ணுவினம்சங்களில் ஒன்று. இவர் பாற்கடற் பிறந்த தேவ வைத்தியர். ஒரு கையில் கமண்டலம், ஒரு கையில் கதை யுடையவர். (பாகவதம்). இவர் மீண்டும் தீர்க்கதமர் புத்திரராய் அவதரித்து வைத்தியநூல் லோகோபகாரமாய் அருளிச் செய்தனர் என்பர். இவர் அருளிச்செய்த நூல்கள் தன்வந்திரி நிகண்டு, வைத்திய சிந்தாமணி, சிமிட்டுரத்தினச்சுருக்கம், கலைஞானம். இவர் காசிராஜனிடத்தும் அவதரித்தனர் என்பர். இவரைத் தீர்த்தபசு குமரர் எனவும், இவர் குமரர் கேதுமான்

எனவும், இவர் மாணாக்கர் சுசருதர்எனவுங் கூறுவர்.

**தன்வன்** — சமதக்னியின் குமரன், தாய் இரேணுகை.

**தன்னைவேட்டல்** — 1 பகையைச் சீக்கும் ஒளிநெடு வேலினையுடைய கொழுநனைக் காணவேண்டி அவன்பட்ட போர்க்களத்துள் அழகிய ஆபரணத்தையுடைய மனையாள் போயினதும் அத்துறையேயாம். (புறவெண்பா.)

2. தமது வேந்தன் விசும்பைச் சேர்ந்தானாக, வெய்ய மாறுபாட்டை யுடையானொரு வீரன் உயிரை ஆகுதிபண்ணியது. (புறவெண்பா.)

**தக்ஷகர்** — ஒரு இருடி, இவர் குமரி மாயை இவன் பதின்மரை மணந்தனள்.

**தக்ஷகன்** — 1. கத்ரு குமரன், பிராமண வடிவங் கொண்டுவந்து பரிச்சித்தின் விஷவேகம் தீர்க்கவந்த வேதியனைச் சந்தித்து அவனுக்கு வேண்டிய கொடுத்துத் திருப்பிப் பரிச்சித்தினைப் பாம்பாகச் சென்று கடித்தவன். சர்ப்பயாகத்திற்குப் பயந்து இந்திரனிடம் அபயம் புகுந்தவன். வாசுகியின் தம்பி.

2. பரதன் குமரன.

**தக்ஷசிலை**—1. பரதரால் காந்தருவநகரத்தில் நிருமிக்கப்பட்ட பட்டணம். இது தக்ஷனால் நிருமிக்கப்பட்ட பட்டணம் என்ப. காந்தாரதேசத்துப் பட்டணம்.

2. Taxila, one mile North-East of Kalaka-Serai between Attock and Rawalpindi. It is on the bank of the Vitasta. (Jhelum) தக்ஷசிலையைக் காண்க.

**தக்ஷணாதேவி** — 1. விஷ்ணுவினம்சாவதாரமாகிய சுயக்ஞியன் தேவி.

2. பிரஜாபதியின் புத்ரி.

**தக்ஷிணை** — ஒருமுறை ருசிப்பிரசாபதிக்குச் சுவாயம்புமநுவின் குமரியாகிய ஆகுதியிடம் பெண்ணாக உதித்த இலக்குமி அவதாரம் யக்ஞமூர்த்தியாகிய விஷ்ணுவை விவாகஞ் செய்து கொண்டவள். யக்ஞமூர்த்தியை உடன்பிறந்தோன் என்பர். இவள் பதின்மரைப் பெற்றனள் என்பர்.

**தக்ஷபிரமா** — மகாசுவேதையின் தந்தையான அம்சனுக்கும், காதம்பரியின் தந்தையான சித்திரரதனுக்கும் பாட்டன்.

**தக்ஷயக்ஞஹதமூர்த்தி** — தக்ஷன் செய்த யாகத்தை அழிக்கவந்த சிவமூர்த்தியின் திருவுருவம்.

**தக்ஷன்** — 1. தக்கனைக் காண்க.

2. (சு.) பாதருக்குக் குமரன்.

3. அஷ்டமாநாகங்களில் ஒன்று.

4. வசுதேவன் தம்பியாகிய விருகன் குமரன். பிரமனது தக்ஷண பாகத்தில் வேகத்துடன் பிறந்ததால் இப் பெயர் பெற்றனன்.

5. யாகத்தால் சிக்ஷிக்கப்பட்டுத் தவமேற்கொண்டு மூன்றுகண் பெற்றான் (பார - சாந்.)

**தக்ஷிணபிநாகினி** — தென் பெண்ணை.

**தக்ஷிணாக்னி** — யஜமானனைத் தக்ஷிணதிசையை அடைவிப்பதால் தக்ஷிணபாகத்தை யடைவதால் இப்பெயர் பெற்றது. இது ருத்ரர் என்று சொல்லப்படுகிறது இது கோபஸ்வபாவமுள்ளது. இது அந்தரிக்ஷமாகக் கருதப்படுகிறது. இது அர்த்தசந்திர வடிவுள்ளது. (பார - அச்.)

**தக்ஷிணாதேவி** — 1. யக்ஞனுக்குத் தேவி. இவள் தீக்ஷாரூபிணியாய் எவ்விடத்தும் பூசையேற்பவள். இவளில்லாத கர்மங்கள் நிஷ்பலமாம். இவள் மகா லக்ஷ்மியின் தேகத்திற் பிறந்து சகலகர்ம பூர்த்தியின் பொருட்டுப் பிரமனால் யக்ஞனுக்குக் கொடுக்கப்பட்டவள். (பிரம்மகைவர்த்தம்).

2. இவள் கோலோகத்தில் கிருஷ்ணனுடன் ரமித்திருந்த சுசீலாதேவி. இவள் கிருஷ்ணனது வலப்பாகத்தில் இருக்கக் கண்ட ராதை இவளைக் கண்டு கோபித்து இனிச் கோலோகத் திருப்பையாயின் நீ பஸ்பமாக எனச் சபித்தனள். சுசீலை பூலோகம் வந்து தவமியற்றினள். அப்போது தேவர்கள் ஒரு பெரிய யாகத்தைச் செய்து பலமடையாமற் போயினர். அப்போது தேவர்கள் பிரமனிடம் முறையிடப் பிரமன் கிருஷ்ணனைத் தியானிக்கக் கிருஷ்ணன் மகாலக்ஷ்மியிடமிருந்து மானுஷலக்ஷ்மியைப் பிரித்தெடுத்துப் பிரமனுக்குத் தக்ஷிணையாகக் கொடுத்தார். அவளைப் பிரமன் யக்ஞமூர்த்திக்கு மனைவியாக்கினன். அவள் சர்வகர்மபலனாகப் பிள்ளையைப் பெற்றாள். இவளைச் சர்வகர்மங்களுக்கும் தக்ஷிணையாகக் கொடுக்கின் எல்லாப் பலன்களையு மடைவர். தக்ஷிணையில்லாமல் செய்யும் யாகாதிகிருத்ய பலன் பலிச்சக்ரவர்த்தியை அடையும்படி வாமனரால் பலிக்கு வரமளிக்கப்பட்டது. (தேவி - பாக.)

**தக்ஷிணாமூர்த்தி** — 1. சநகர் முதலிய முனிவர்க்கு உண்மை உபதேசிக்க எழுந்தரு

ளிய சிவமூர்த்தியின் திருவுரு. இந்தத் தக்ஷிணமூர்த்தம் யோக தக்ஷிணமூர்த்தம், வீணைதக்ஷிணமூர்த்தம் எனப்படும்.

2. திருஆவடுதுறை மடத்தைச் சார்ந்த ஒரு தம்பிரான் சுவாமிகள். இவர் செய்த நூல்கள் தசகாரியம், உபதேசப் பஃறொடை.

**க்ஷேச்சுவரம்** — குருக்ஷேத்திரத்தில் உள்ள சிவத்தலம். (பிரகன்னாரதிய புராணம்.)

**தஸியூ** — அயோகவான் தக்ஷா சண்டாளன் இவர்களுக்குத் தம் சாதிப் பெண்களிடத்தும் நான்கு வருணப் பெண்களிடமும் பிறந்தவன். (மநு.)

## தா

**தாகரோகம்** — இது பிரமை, நடுக்கம், தேக எரிவு, காங்கை, தாகம், சோருதல், வாயுலரல், எவ்வளவு ஜலமருந்தினும் திருப்தியிலாமை, அன்னத்வேஷம், குரல்கம்மல், நெஞ்சு நா உதடு வறட்சி, நாவால் உதட்டைத் தடவல், பிரலாபம் முதலிய குணங்களைத் தனக்குப் பூர்வரூபமாகப் பெற்றிருக்கும். இது வாத, பித்த, சிலேஷ்ம,தொந்த, ரஸக்ஷய, உபசர்க்கதாக ரோகமென அறுவகைப்படும். இது மணல் கஷாயம், அமிர்தாதிச் சூர்ணம், கர்ப்பூரக்குளிகை முதலியவற்றால் வசமாம். (ஜீவ.)

**தாக்கர்** — ஒரு முனிவர். அயன் என்பவன் குமரனாகிய துந்து என்பவனுக்குப் பிரமகத்தி நீங்க அருள்புரிந்தவர்.

**தாசமார்க்கம்** — சிவபெருமானெழுந்தருளியிருக்குந் திருக்கோயிலில் திருஅலகிடுதல், திருமெழுகிடல், மலர்பறித்தல், மாலைதொடுத்தணிதல், புகழ்ந்துபாடல், திருவிளக்கிடல், நந்தவன முண்டுபண்ணல், சிவனடியவரைக்கண்டு வழிபட்டு அவர்க்கு வேண்டிய பணிசெயல் முதலிய செய்தல், இதை மேற்கொண்டவர் சாலோகபதமடைவர்.

**தாசராசன்**—1. நயினாசாரியரால் ஸ்ரீ வைஷ்ணவனாக்கப்பட்ட பிராமணன், இவனுக்குத் தாசரதி யென்றும் பெயர்.

2. பிரமன் சாபத்தால் மீனுருக்கொண்டிருந்த அப்சரப் பெண்ணினைச் சாபம் நீக்கினவன். மச்சகந்திக்குத் தந்தை.

**தாசரி** — தாதன், இவன் வைஷ்ணவன். விஷ்ணுவை ஆராதித்து வீடுகள்தோறும் தப்பை சேமகலம்கொட்டிப் பிழைப்பவன். இவன் சாத்தானியர் எனுஞ் சாதியரில் ஒருவனாயிருக்கலாம். இவர்கள் ஜநப்பர், பள்ளிகள், வள்ளுவர், கங்கதுல்லர், கொல்லர் எனப் பலவகைச் சாதியரில் சேர்ந்தவர்கள். (தர்ஸ்டன்.)

**தாசாரகர்** — யதுகுலபேதம், கம்சன் பகைவர்.

**தாசிஅம்மைச்சி** — இவள் அந்தகக்கவி வீரராகவ முதலியார் காலத்துக் காஞ்சீபுரத்திற் கருகிலுள்ள திருப்பனங் காட்டிலிருந்த வித்வாம்ஸி. இவள் கவி வீரராகவ முதலியார் சந்திர வாணன்மீது கோவை பாடி அரங்கேற்றுகையில் அக்கோவையில் "பெருநயப் புரைத்தல்" என்னுந் துறைப் பாற்படும் "மாலேநிகராகுஞ் சந்திரவாணன் வரையிடத்தே,பாலேறிப்பாயச் செந்தேன் மாரிபெய்ய நற்பாகுகற்கண், டாலேயெருவிட முப்பழச்சேற்றின முதவயன்,மேலே முளைத்தகரும்போ விம்மங்கைக்கு மெய்யெங்குமே" எனும் பாடலைப் பிரசங்கிக்கையில் இவள் கரும்பு புன்செய்ப் பயிராயிற்றே, சேற்றில் முளைத்த கரும்பென்றீரே என ஆக்ஷேபிக்கக் கவிராயர் வேண்டுமாயின் மாற்றிவிடலாம் என்று எடுவாசிப்பானை நோக்கிக் கொம்பைத் தூக்கிக் காலை நிறுத்து என்னலும் தாசி தலைகுனிந்து நண்புபூண்டவள். இவளைக் காஞ்சிபுரத்து வேதியர் கர்வபங்கப்படுத்த எண்ணி இவள் வீட்டையிடித்து அவ்வழி இரதம் செலுத்த எண்ணியிருத்தல் அறிந்த அம்மைச்சியினண்பராகிய அந்தகக்கவி வீரராகவ முதலியார் இவள் பொருட்டு "பார்ப்பார் குரங்காய்ப் படை யெடுத்து வந்தீரோ, தேப்பெருமாளே கச்சிச் செல்வரே — கோப்பாகக், கொம்மைச் சிங்கார லங்கைக் கோட்டை யென்று வந்தீரோ, அம்மைச்சி வாழுமகம்" என இரதம் திரும்பிச் சென்றதென்பர்.

**தாதூான்** — சரலோமாவின் குமரன், இவன் உடலைவிட்டுத் தேவவடிவெடுத்து யாகஞ் செய்தவன்.

**தாசையர்** — இவர் ஒரு வீரசைவர் ; இவர் ஓர் ஊர்க்குப் போகச் செல்கையில் இடையில் ஒரு ஆற்றைக் கடக்கவேண்டியிருந்து படகிற்குச் செல்ல அங்கிருந்தவர் எல்லாம் தாரணமில்லாமை கண்டு படகேறச் சம்மதிக்காமல் ஆற்றைவற்றச் செய்து கடந்து சென்றவர்.

**தாடகாயனன்** — விஸ்வாமித்திர புத்திரன்.

**தாடகை** — 1. சுகேதுவின் குமரி, சுந்தன் தேவி. இவள், தன்கணவன் அகத்தியர் கோபத்தா லிறக்க அகத்தியரிடஞ் சென்று, தீமைசெய்யத் தொடங்கினள். முனிவர் இவளையும், இவள் குமரரையும் அரக்கராகச் சபித்தனர். இவள் அரக்கியாய் முனிவர் செய்யும் யாகாதிகாரியங்களுக்குத் தீமை செய்துவந்தனள். விச்வாமித்திரர் ஏவலால் இராமமூர்த்தி இவளைக் கொன்றனர்.

2. திருப்பனந்தாளிலிருந்த ஒரு சிவபக்தி மிகுந்தவள். இவள் சிவமூர்த்திக்குத் திருமஞ்சன முதலிய முடித்து மாலை சாத்துகையில் உடை நெகிழ்ந்ததுகண்டு அவ்வுடையை முழங்கையால் இடுக்கி மாலை சாத்துதலுக்கு இடையூறு வருதல் கண்டு துக்கிக்கச் சிவமூர்த்தி தமது முடியைச் சாய்த்துக் கொடுத்தனர்.

**தாடசபன்** — தக்ஷன் மருமகன் ; இவனுக்குத் தாரட்சியர், காசிபர் என்றும் பெயர்.

**தாடைக்கு நடுவில் உண்டாகும் ரோகம்** — அது (1) கண்டாலஜிரோகம், இது எந்தப் பக்கத்துத் தாடையிலாவது நீங்காத வீக்கத்தைப் பிறப்பிப்பது. தாடைகளில் (8) ரோகங்களுண்டாம் அவை தாளுரோகம் எனவும் கூறப்படும். தாடைக்கு உட்புறத்தில் வீக்கத்தையும், தடிப்பையும் உண்டாக்கிப் புண்களாக மாறச்செய்வது. இதனால் தாடையில் (8) வித ரோகங்கள் பிறக்கும். அவை 1. தாளுபிடகரோகம், 2. தாளுகளசுண்டிகாரோகம், 3. தாளுசம்ஹதிரோகம், 4. தாளாற்புதரோகம், 5. தாளு கச்சபரோகம், 6. தாளுபுப்புடரோகம், 7. தாளுபாகரோகம், 8. தாளுசோஷரோகம் ஆகத் தாடைரோகம் எட்டு.

**தாணி** — துருவன் என்னும் வசுவின் தேவி.

**தாணு** — ஏகாதசருத்திரர்களில் ஒருவன்.

**தாணுதீர்த்தம்** — வசிட்டரைக் காண்க.

**தாண்டகம்** — (உஎ) எழுத்து முதலாக உயர்ந்த எழுத்து அடியினவாய் எழுத்தும் குருலகுவும் ஒத்துவருவன அளவியற்றாண்டகம், ஒவ்வாது வருவன அளவழித்தாண்டகம்.

**தாண்டவமூர்த்தி** — நாராயண குருவின் மாணாக்கர், கைவல்யநவநீதம் செய்தவர். இவர் சோணாட்டு நன்னில மென்னும் ஊரார், வேதியர்

**தாண்டவம்** — இதுபஞ்சகிருத்தியதாண்டவம் என்றும், அகோரதாண்டவம் என்றும், ஊர்த்ததாண்டவம் என்றும், ஆச்சரிய தாண்டவம் என்றும் ஆனந்த சௌந்தரிய தாண்டவம் என்றும் பலவிதப்படும்.

**தாண்டவம் ஐந்து** — சிவபிரானுடைய நடனம். இவை அற்புததாண்டவம், அநவரததாண்டவம், ஆனந்ததாணடவம், பிரளயதாண்டவம், சங்காரதாண்டவம்.

**தாண்டவராயசாஸ்திரியார்** — இவர் ஏரகம் அநந்தநாராயண வாத்தியார் குமாரர். கரும்பைநகர் பெரியாண்டி புழுகணிவேந்து எனும் பிரபுவின் வேண்டுகோளால் பாகவதசாரமெனும் நூலியற்றிய புலவர்.

**தாண்டன்** — ஒரு ரிஷி.

**தாண்டியன்** — ஒரு ரிஷி. (பா - சா.)

**தாதகி** — பவணமாதேவன் தேயம்.

**தாதன்** — 1. கம்பர் காலத்துச் சோழனிடத்துச் சிறப்படைந்த ஓர் வணிகன். இவன் கவிவல்லான், இவனுக்குச் சோழன் வரிசை செய்தலைக் கம்பர் பொறாராய்ச் சோழனை நோக்கி இவற்கு இத்தகைய வரிசைசெய்தல் எம்போன்றவரை இழித்தலோ டொக்கும் எனக் கேட்ட தாதன் கம்பரிடத்துக் கோபங்கொண்டு கம்பர் பாடிய மும்மணிக் கோவைக்குக் குற்றங்கூறி, யவரையுமிழித்து வசை பாடினன் என்ப. தாதன் சோழன் பாற்பெற்ற ஊர் தொண்டை நாட்டின்கணுள்ள கூவம். தாதன் பாடியவசை "கைம்மணிச் சீரன்றிச் ; சீரறியாக்கம்ப நாடன் சொன்ன, மும்மணிக் கோவை முதற்சீர் பிழைமுனைவாளெயிற்றுப், பைம் மணித்துத்திக் கனமணிப் பாந்தட்படம் பிதுங்கச், செம்மணிக்கண் பிதுங்கப்பதம் பேர்த்த செயதுங்கனே."

2. தமிழ்ப்பேசும் வைணவ பிச்சைக்காரன். தாசிரியோடு ஒப்பானவன். (தர்ஸ்.)

**தாதா** — 1. ஒரு தேவன்.

2. நந்நிதியெனும்பிற் பிறந்தவன்.

3. பிருகுவிற்குக் கியாதியிட முதித்த குமரன், தேவி ஆயதி.

4. காச்யபருக்கு அதிதியிட முதித்த குமரன் ; துவாதசாதித்தரில் ஒருவன், பாரிகள் குரு, சிநிவாலி, ராகை, அநுமதி.

**தாதாசாரி** — காஞ்சீபுரத்திலிருந்த வைணவ வேதியர், இவர் வடகலையார். அப்பைய தீக்ஷிதருடன் வாதஞ் செய்தவர்.

**தாதி** — சோழன் இவளை ஒரு புலவனுக்குக் கொடுக்க அவள் ஊடலிற் கூறியது.

"முன்னுளிருவர் முயங்கும்படிகண்டு, மன்னுபணிதவிர்த்து வாழ்வித்தாய் - தன்னுர் தம், சேனைகண் டாவிக்குஞ் செம்பியர் கோன் கண்விழித், தானைகண்டார் தாமவர்" எனக் கூறினள்.

**தாதை** — 1. பாதாளத்திருந்து இரவையுண்டாக்கும் பிரமன் பெண்.

2. பிரமனுல் சிருட்டிக்கப்பட்ட தேவன்

**தாது** — (எ) இரதம், சுக்லம், இரத்தம், மூளை, தசை, எலும்பு, தோல்.

**தாதுகதை** — 'புத்தன் எலும்பு முதலிய தாதுக்களை கொண்டார் சரிதை கூறும் புத்தநூல்.

**தாதுவின்பேதம்** — ரஸதாது, ரத்ததாது, மாமிசதாது, மேதோதாது, அஸ்திதாது, மச்சதாது, சுக்கிலதாது என எழுவகைப் படும். இவை சரீரத்தைத் தாங்கி ரத்தப் புஷ்டிதந்து பூரிக்கச்செய்து காந்திதந்து கருப்பவுற்பத்தியுஞ் செய்விக்கும். (ஜீவ.)

**தாத்ரீ** — சுக்கிரன் குமரன், அசுரபுரோகிதன்.

**தாத்திரிகை** — திரௌபதியின் தோழி.

**தாபசன்** — 1. உத்தமனிக்குப் பிராதா.

2. பிரியவிரதனுக்கு இரண்டாவது பாரியிட முதித்த குமரன்.

**தாபதநிலை** — குருந்தப்பூமலரும் மாலையினையுடைய கணவன் இறந்தானுகக் கரிய பெரிய கண்ணினையுடையாள் வைதவிய மெய்தியவாற்றைச் சொல்லியது. (பு.வெ. பொது.)

**தாபதவாகை** — தபோதனவேடத்தார் புண்ணியத்தோடு தழுவி ஒழிதலுணராத நடையைச் சொல்லியது. (புறவெண்பா.)

**தாபத்தியர்** — தபதிவம்சத்துப்பிறந்த சந்திரவம்சத்தரசர்.

**தாப்பிசைப்பொருள்கோள்** — செயயுளில் இடைநிற்குமொழி ஒழிந்த முதலினுமீற்றினும் சென்று பொருளைத் தருவது. (நன்னூல்.)

**தாமக்மதம்** — இம்மதாசாரியன் பிராணஞ்திஸ்கு என்பவன். இது ஒருவிதமான வைணவ மதம், இவன் எல்லா மதங்களையும் ஒரு மதமாக்க முயன்றவன். இம்மதத்தவர் தேவகுமாரர்கள் என்றுபாவம். இவர்களுக்கு விக்ரக ஆராதனை யில்லை. இவர்கள் தங்கள் தேவாலயங்களில் மத கிரந்தங்களைப் பூசிப்பவர். இக் கிரந்தங்களில் ஹிந்து வேதம் குரான் முதலியவற்றின் சாரங்கள் அடங்கி யிருக்கின்றன.

**தாமசமநு** — சுராஷ்டிரன், ஒரு மகா வீரனுகிய அரசன், இவ்வரசன் மந்திரி சூரியனை எண்ணித் தவமியற்றி அரசனுக்குத் தீர்க்காயுள் தரப்பெற்றதால் நெடுநாள் அரசாண்டவன். இவன் தனது நாடு, தனகளத்திர புத்திராதிகளை யிழந்து காடடைந்து தவஞ் செய்துகொண் டிருக்கையில் மழை பெய்து இவனை வெள்ள மடித்துக்கொண்டு போயிற்று. அரசன், ஒரு மிருகத்தின் வாலைப் பற்றிக் கரையேறி அடுத்த காட்டை யடைந்து தான் பற்றியது மிருகமென்றறிந்தும் அதனிடம் மோகங்கொண்டனன். மிருகம், அரசனது எண்ணம் அறிந்து அரசனை நோக்கி அரசனே என்னை என் தொட்டனை நான் கருப்பவதி ஆலிங்கனத்திற்குத் தக்கவள் அல்லள் என்று மனித பாஷையால் கூறியது. இதைக் கேட்ட அரசன் நீ யார் என மிருகம், நான் பூர்வத்தில் திருடதன்வன் என்னும் அரசன் குமரி, உன் பாரியைகளில் முதல்வி, என் பெயர் உற்பலாவதி என்றது. அரசன் மிருகத்தை நோக்கி உனக்கு இந்தப் பிறவி எவ்வாறு வந்ததென மிருகம், நான் இளமையில் என் தோழியருடன் வனத்தில் விளையாடுகையில் ஒரு பெண் மிருகத்தை ஆண் தொடர்ந்து வந்தது. அதனைக் கண்ட நான் அப் பெண் மிருகத்தை ஆண் சேரவொட்டாமல் ஒட்டினேன். பின் தொடர்ந்து வந்த புருஷா மிருகம் என்னை நோக்கி மனித பாஷையால் நான் செய்யவந்த கருப்பாதானத்தை ஏன் விலக்கினுய் என்றது. நான் பயந்து நீ யாரென நான் நிர் உருத்தசக்ஷன் என்கிற முனி புத்திரன். என் பெயர் சுதபன். என்னைத் தடை செய்ததால் சபிப்பேன் என்றது. நான் பயந்து அறியாமல் செய்த காரியத்தைப் பொறுக்க என வேண்டப் புருஷா மிருகம் என்னை மணந்தாலன்றி விடேன் என்றது. அதனை நோக்கி நான் மிருகவுருக் கொள்ளேன் என்றனன். அதனுல் இருடி புத்திரன் கோபித்து நீ மிருகமாக என்றனன். நான் மீண்டும் வேண்ட முனிவன், நீ இரண்டு சன்மம் மிருகமாக இருந்து இரண்டாவது சன்மத்தில் சித்தவர்ய முனிபுத்ரனுகிய லோலன் உன் கருவில் வருவன்; அக்காலத்து உனக்குப் பூர்வஞான முண்டாய் மனித வாக்காகப் பேசுவாய். உன் ஜன்மம் விடுதலையாம். அந்த லோலன் மனுவாவான் என்றுபோயி

னன். அக்காலம் வந்தது நீர் தொட்டதால் கருவடைந்தேன். இதோ இப் புத்திரனைக் கொண்டுபோம் என ஒரு புத்திரனைப் பெற்றுப் புண்ணிய உலகடைந்தது. அவ் வனத்திலிருந்த இருடிகள் குமரனுக்குத் தாமசமநு என்று பெயரிட்டனர். இவனை அகத்தியர் யானையாகச் சபிக்க முதலையால் பிடியுண்டு விஷ்ணு சக்கரத்தால் விடுபட்டனன் என்பர். இவன் நாலாம் மநு.

**தாமக்கிரந்தி** — பாண்டுபுத்திரனாகிய நகுலன் மச்சநாட்டில் கரந்துறைந்த காலத்து வைத்துக்கொண்ட பெயர்.

**தாமத்தர்** — திருவள்ளுவர் குறளுக்கு உரை இயற்றியவர்களுள்ஒருவர்.உரையாசிரியர்.

**தாமந்தை மகருஷிகோத்ரன்** — குமாரக் கடவுள் சூரபன்மனை வென்ற காலத்து உதவி செய்து செந்தோன்றிமாலை பெற்ற வணிகன்.

**தாமப்பல் கண்ணனார்** — ஒரு தமிழ்ப் புலவர்; வேதியர், மாவளத்தானைப் பாடிப் பரிசு பெற்றவர். (புற. நா.)

**தாமரன்** — கண்ணனால் கொல்லப்பட்ட அரக்கன்; முராசுரன் குமரன்.

**தாமரை**—காசிபர் தேவி, தக்ஷன் குமரி, வல்லூறு, கழுகு முதலியவற்றைப் பெற்றாள்.

**தாமலிப்தர்** — ஒருவித அரசர்.

**தாமவித்தம்** — ஒரு தேசம்.

**தாமவியாளகடர்** — சம்பரன் சேநாபதியர்.

**தாமன்** — 1. ஒரு கோபாலன். கண்ணனிடம் அந்தரங்க பக்தியுள்ளவன், ஒருமுறை கண்ணன் விளையாட்டாக இவனைத் தோளில் தூக்கினர்.

2. திருஞான சம்பந்த சுவாமிகளைக் காண்க.

3. தமயந்தியின் தமயன, விதர்ப்பன் குமரன்.

**தாமான்தோன்றிக்கோன்** — ஒரு கொடையாளி; இவன் தோன்றியென்னும் மலைக்குத் தலைவன். ஐயூர்முடவனாரால் பாடப் பெற்றவன். (புற - நா.)

**தாமாஜிபண்டிதர்** — இவர் பேதரி என்னும் பட்டணத்தில் வசித்த ஒரு வேதியர். இவர் ஒரு மிலேச்ச அரசனிடம் உத்தியோகஞ் செய்துவருகையில், அவன் இவரை மங்களவேடு என்னுங் கிராமத்திற்கு அதிகாரியாக்கினன். இவர் அக்கிராமஞ் சென்று பக்தி மேலிட்டவராய்ப் பாகவத கைங்கர்யத்தி லீடுபட்டுத் தம் பொருள்கள் முழுதும் அப்பாகவதர் பொருட்டுச் செலவிட்டனர். பின் ஒரு க்ஷாமம்வர அப் புர ஜனங்கள் அன்ன விருப்புடையராய் அரசனது தான்ய முழுதுங் கொள்ளையிட்டனர். இச் செய்தி யறிந்த அரசன் இவரைத் தண்டிக்க எண்ணி வருவிக்கப் பெருமாள் ஒரு வெட்டியானைப்போல் வேடங் கொண்டு அரசன் பொருள் முழுதுந் தாங்கிப் பண்டிதர் தந்த திருமுகம்போல் ஒரு திருமுகம் கொடுத்து அரசனிடம் பண்டிதர் கொடுத்த பொருள் முழுதும் ஒப்புவித்து ரசீது பெற்று வரிசை பெற்று பண்டிதர் இருக்குமாடம் வந்தனர். இதற்குள் பண்டிதர் அரசனிடம் வர அரசன் எதிர்கொண்டு மரியாதை செய்து நடந்தவை கூறப் பண்டிதர் தம் பொருட்டுப் பெருமாள் வந்ததற்கு விசனமடைந்து அரசனை விட்டு நீங்கிக் கைங்கர்யபரரா யிருந்தனர்.

**தாமிரபர்ணி** — 1. திருநெல்வேலி சில்லாவிலுள்ள ஒரு நதி.

2. அஞ்சனம் என்னும் திக்கு யானையின் பெண்.

**தாமிரலிப்தி** — கங்கைக் கருகலுள்ள ஒர் நகரம்.

**தாமிரன்** — முராசுரன் குமரன், கிருஷ்ணனால் கொல்லப்பட்டவன்.

**தாமோதரம்பிள்ளை** — இவர் யாழ்ப்பாணத்துச் சிறுபிட்டி வைரவநாதம்பிள்ளை குமாரர். குலம் வேளாளர் குலம். சமயம் சைவம். தமிழில் பயிற்சியுள்ளவர். தொல்காப்பியம் என்னும் இலக்கணத்தை முதலில் அச்சிட்டு வெளியிட்டவர். சைவ மகத்துவம், கட்டளைக்கலித்துறை முதலிய செய்தவர்.

**தாமோதரன்** — 1. கிருஷ்ணவதாரத்தில் தாம்பால் வயிற்றில் கட்டுண்ட விஷ்ணுவிற்கு ஒரு பெயர்.

2. இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் மருத்துவன் தாமோதரரின் வேறாக இருக்கலாம்.குறு-கூஉ, ககூ௪.

**தாம்பாலிப்தம்** — ஹுக்லிக்குச் சமீபத்திலுள்ள ஒரு தேசம்.

Tamluk is on the river Salrai, just above the junction with the river Hugli.

**தாமிரபர்ணி** — இந்த தேசத்தின தென்பாகத்தில் திருநெல்வெலி சில்லாவிலுள்ள பொதிகை மலையிலுண்டாம் நீர்வீழ்ச்சி.

The river Tamaraparani is in Tinnevelly (South India)

**தாம்பிரதீபம்** — ஒரு தீவு. சகதேவன் திக்விஜயத்தில் வென்றது.

**தாம்பிராருணம்** — இது ஒரு தீர்த்தம்.

**தாம்பூலம்** — இது மங்கலப் பொருள்களில் ஒன்று. பரத கண்டத்தவரால் கொண்டாடப்பட்ட பொருள். தாம்பூல ரசத்தினால் கிருமி கபம் தாகம், பல்நோய், விடாய் இவைகள் நீங்கும். பசி, பெண்களுறவு, நாவுரிசை, மலசுத்தி, நுண்ணறிவு, சுக்ல விருத்தி, தருமகுணம், அழகு முதலிய உண்டாம். தாம்பூலத்தில் முதலில் வெறும் பாக்கினை வாயிலிடலாகாது, என்னெனின் அப் பாக்கில் அதி துவர்ப்பு, சொக்கு, மூர்ச்சை, புழு உளுத்தல், பசைப்பு இவை முதலிய குற்றங்களுளவாய்த் தேகத்திற்குக் கெடுதி தரும். ஆதலின் முதலில் குற்றமில்லாத வெற்றிலையை மென்று அதன் சாரத்தினை யருந்திப் பின் பாக்கினை யருந்தின் அப் பாக்கிலுள்ள தோஷங்கள் போம். பாக்குகளில் கொட்டைப்பாக்கு கோழை, மலம், மலக்கிருமிகளை நீக்கும். அதிகமாகத் தின்றால் சோபாரோகத்தை விளைக்கும். களிப்பாக்கு நெஞ்சிற் கோழையும் அதிசாரத்தையும் மனமகிழ்ச்சியையுந் தரும். பித்த அருசியைப் போக்கும். வெறும் பாக்கினை மாத்திரம் தின்னலாகாது. பாக்குகளில் மிக்க இளம்பிஞ்சு அதிக முதிர்ச்சி, மிகப்புதிது, பச்சை, புழுவாடல், சோருதல், இவ்வித தூர்க்குணமுள்ளவைகளை நீக்கவேண்டும். வெற்றிலைகளில் சாதாரணமானதை யருந்தில் கபம், சீதளம், காணுக்கடியின் தூர்க்குணம், திரிதோஷம் விலகும். கம்மாறு வெற்றிலை சிரோபாரம், சலதோஷம், சந்நி, மந்தாக்நி வயிற்றுப்பிசம், வலி முதலிய நீங்கும். வெற்றிலையை யருந்துகையில் சுண்ணந் தடவுதற்கு முன் காம்பு, நுனி, நீண்ட நரம்பு, பின்புறத் தோல் இவைகளை நீக்க வேண்டும். இவற்றை நீக்காதருந்துவரேல் சக்கிரவர்த்தியாயினும் செல்வத்தை இழந்து வறியராவர். சுண்ணத்தில் கற்சுண்ணம் அன்னத்தைச் சீரணப்படுத்திக் குடலிற் பற்றிய நெய்ச்சிக்கல், பேதி, வாதகிரிச்சரம், புழுவின் கடி முதலிய சில் விஷங்கள் காயங்களினிரத்தம், கனோய், சந்நி இவைகளை நீக்கிச் சுக்கில விருத்தியையுந் தந்து வன்மையையுந் தரும். தாம்பூலத்தை யருந்துகையில் காலையிற் பாக்கை அதிகமாகச் சேர்த்தால் சரியாக மலங் கழியும். மத்தியான்னத்தில் சுண்ணத்தை அதிகப்படுத்த நல்ல பசி யுண்டாகும். மாலையில் வெற்றிலையை அதிகப்படுத்த வாய் மணந்தரும். தாம்பூல ரசத்தில் முதல் சுரக்கும் வாய்நீர் நஞ்சு, 2-வது நீர் மிருபித்தம், 3-வது நீர் அமிர்தம், 4-வது அதியினிப்பு, 5, 6-வது பித்தம் அக்நிமந்தம் பாண்டுரோகம் இவற்றை யுண்டாக்கும்.

**தாம்போதியார்** — கடைச்சங்க மருவிய புலவர். (அக - நா.)

**தாயங்கண்ணனார்** — சோழநாட்டு எருக்காட்டூர்த் தாயங்கண்ணனாரென்பவர் இவரே. எருக்காட்டூர் தஞ்சாவூர்ஜில்லா, நன்னிலந் தாலுக்காவில் காவாலங்குடிக்குக் கீழ்ப்பாலுள்ளது. இவர் பெயர் ஏடெழுதுவோரால் பிறழ்ந்தெழுதப்பட்டுத் தையங்கண்ணனாரெனவும், கதையங்கண்ணனாரெனவும் காணப்படும். காடு வாழ்த்துப் பாடியவர் இவரொருவரே. "மலர்செலச்செல்லாக்காடு வாழ்த்து"க்கு நச்சினார்க்கினியர் இவர் பாடலையே உதாரணமாகக் கொண்டார். (புறம் நடுகூ) பிற்பகுதி. இவர் சேரலாது சுள்ளியாற்றில் யவனர் வந்து பொன் கொடுத்து மிளகுப்பொதி வாங்கியேகும் வியாபாரச் சிறப்பையும் சேரலனிடத்திருந்த பொற்பிரதிமையைப் பாண்டியன் போர்புரிந்து பெற்றதையும் பரங்குன்றத்தின் சிறப்பையும் விளங்கக் கூறியுள்ளார்; அகம் கசகூ. தொண்டையர் வேங்கடமும், சேரர்கொல்லியும், சோழர் காவிரியும், உறையூரும் இவராற் பாராட்டப்பட்டுள்ளன. அகம் உகரு, உருஎ. எழினியென்பான் இவராற் பாடப்பெற்றுள்ளான். அகம் கOகு. இவர் நெய்தல், பாலை, குறிஞ்சிகளின் வளங்களைச் சிறப்பித்துப் பாடும் ஆற்றலுடையார். குராவரும் பைப் பாம்பின் பல்லோடு உவமித்துள்ளார். அகம் உரு.எ. இதனையே எடுத்தாண்டனர் கம்பரும் "குராவரும் பனைய கூர்வாளெயிற்று வெங்குருளை நாகம்" — கார்காலப் படலம் செய்யுள் கூ. இவர் பாடியனவாக நற்றிணையில் உசகூ-ம் பாடலொன்றும் குறுந்தொகையி லொன்றும் அகத்திலேழும் புறத்திலொன்றுமாகப் பத்துப் பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**தாயங்கண்ணியார்** — ஒரு தமிழ்க் கவி. (புற - நா.)

**தாயர்** — (ரு). பாராட்டும் தாய், ஊட்டும் தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித் தாய், அன்றியும் அரசன் தேவி, குருவின் தேவி, அண்ணன் தேவி, தன் தேவியை ஈன்றாள், தன்னை ஈன்றாள்.

**தாயிசமதம்** — சீனதேசத்தில் முதல் முதல் கான்பீயூகஸ் மதமிருந்தது. அதன்பிறகு, தாயிஸமதம்; கான்பீயூகஸ் காலத்திலிருந்த தாயிசா வென்பவன் இம்மதத் தாபகன், இவன் மனிதர், பூமி, ஆகாயம் என்பவை உண்டாதற்கு முதற் காரணம் ஒன்று உண்டு எனவும், அக்காரணம் அநாதியெனவும், அந்தக் காரணப்பொருள் மூன்று முறை மனுஷ்யாவதாரம் எடுத்ததென்றும், ஒவ்வொருவரும் யோகத்தை அநுட்டித்து இந்த ஜன்மத்தைப் போக்கடிக்க வேண்டுமென்றுங் கூறுவன்; கி. மு. 1034 வருஷத்தில் பிறந்த சோதாஜ் என்னும் விஞ்ஞானியால் எழுதப்பட்ட அநேகமான ஜடஅஜடதத்துவக் கிரந்தங்கள் முக்யாம்சமான பிரமாணங்கள். சீன தேசத்தில் மூன்றாவது மதம் பௌத்தமதம் இதுவே பெரும்பாலும் அத்தேசத்தில் வியாபித் திருக்கிறது. இதுவன்றியில் கி. பி. 1833இல் டேபிங் என்னும் கிறிஸ்து மதமொன் றுண்டாயிற்று. ஹங்சாஸ்டியு என்பவன் ஒரு சிறு கிரந்தத்தை ஆதாரமாகக்கொண்டு இந்தக் கிறிஸ்துமதத்தை விர்த்தி செய்தனன். சீனரின் சிருஷ்டி விர்த்தி செய்தனன். சீனரின் சிருஷ்டி விஷயமான அபிப்பிராய மெவ்வாறெனின் ஆதியில் ஜடபதார்த்த மாத்திரம் ஒரே பிண்டமாக இருந்து பிறகு அது இரண்டாய்அதிலொன்றுபெண்ணும்மற்றொன்று ஆணுமாயிற்று; பின்னும் சூக்ஷ்ம தேகம் மேலும், ஸ்தூலதேகம் கீழுமாய் அதினின்றும் சமஸ்தமு முண்டாயின. ஆகையால் ஆகாசத்திற்கும் பூமிக்கும் சம்பந்த முண்டென்பர். பின்னும் அனைத்தும் ஸ்திரி புருஷரூபமாகவே இருக்கின்றன வென்பது அவர்களின் அபிப்பிராயம்.

**தாயுமானர்** — 1 திரிசிராப்பள்ளியில் திருக்கோயில் கொண்டிருக்கும் சிவமூர்த்தியின் திருநாமம். காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த அரதனகுத்தனுக்கு ஒரு பெண் பிறந்தது. அவளைத் திரிசிராப்பள்ளியில் தனகுத்தனுக்கு விவாகஞ் செய்வித்துத் தந்தை இறந்தனன். தனகுத்தனும் மனைவியும் திரிசிராப்பள்ளியி லிருக்கையில் மனைவிக்குப் பிரசவகாலம் வந்தது. இதையறிந்த தாய் பெண்ணிடம் வர எண்ணி வந்து காவிரிப்பெருக்கால் அக்கரையில் நின்றனள். பெண் தாயையெண்ணி வருந்தச் சிவமூர்த்தி அப்பெண்ணிட மிரக்கங்கொண்டு தாய்போல் திருமேனி தாங்கி மருந்தெண்ணெய் முதலிய கொண்டு வந்து அப்பெண்ணுடனிருந்து பிரசவமானபின் ஏழாம்நாள் குழந்தையைத் தொட்டிலில் இட்டனர். ஆற்றின்வெள்ளம் வற்றியது. பெண்ணின் தாய் மகளிடம்வரத் தாயான சிவமூர்த்தி மறைந்து இடபாரூடராய்க் காட்சி கொடுத்தனர். பெண் என் தாயுமானரோ என்ன அதுவே திருநாமமாய் வழங்கியது. (செவ்வந்திபுராணம்).

2. இவர் ஊர் வேதாரண்யம் என்பர். விஜயரகுநாத சொக்கலிங்க நாயகர் சமஸ்தானத்தில் சம்பிரதியாயிருந்த கேடிலியப்பப் பிள்ளையின் கனிட்ட குமாரர். இவர் இலக்கிய இலக்கணங்கள் கற்று வல்லவராய்த் திருமூலர் மரபில் எழுந்தருளிய மௌனதேசிகரிடம் தத்துவோபதேசம் பெற்று அப்பியாசியாயிருக்கையில், தந்தையிறக்க அவரது உத்தியோகத்தைத் தாம் ஏற்றுத் தமது நிஷ்டையையும் விடாதிருந்தனர். அரசன் இவரது நிலைகண்டு பணிந்து இவரைத் தமது உத்தியோகத்திருந்து வேறாக்கி அவருக்கென வேறிட முதலிய செய்வித்துக் காலஞ் சென்றனன். இவ்வரசன் மனைவி தம்மீது காதல் கொண்டிருப்பதை நாயனர் அறிந்து இராமநாதபுரஞ் சென்றிருந்தனர். இவரது தமயனாராகிய சிவசிதம்பரம்பிள்ளை இவரது சந்ததி விர்த்தியின் பொருட்டு இவரை வேண்டித் திருமணஞ் செய்வித்தனர். அந்த அம்மையாரும்இவரைமணந்துகனகசபாபதிப்பிள்ளை யென ஒரு குமாரரைப் பெற்றுக் காலமாயினள். பின் தாயுமானர் துறவடைந்து பல தோத்திரப்பாக்களைப் பாடிச் சிவபதமடைந்தனர். இவர் காலம் சற்றேறக்குறைய (கடுo) வருஷம் இருக்கலாம். இவரது பரிபூரணத்தைக் கண்டிரங்கி அருளையர் இவரைத் துதித்தனர். (திருப்பாடற்றிரட்டு).

**தாரகசித்** — குமாரக்கடவுள்.

**தாரகன்** — 1. கிருஷ்ணன் தேர்ப்பாகன்.

2. குமாரக்கடவுளால் கொல்லப்பட்ட அசுரன். (இவன் புத்திரர் திரிபுரவாசிகளாகிய வித்துற்மாலி, கமலாக்ஷன், தார

காக்ஷன் சூரபதுமன் சகோதரன். ஒரு காலத்து விஷ்ணு மூர்த்தியிடம் யுத்தம் புரிந்து அவர் ஏவிய சக்கரத்தை மார்பணியாகக் கொண்டவன்; இவனுக்கு யானைமுகம். வீரவாகுவினை மாயையால் வஞ்சிக்கக் கிரவுஞ்சத்தில் மறைந்து வெளிப்பட்டுப் பூதப்படைகளை வதைத்து மீண்டுங் குமாரக் கடவுளுடன் கிரவுஞ்சன் சகாயமாகப் பலமாயத்தால் யுத்தஞ் செய்து வேலாயுதத்தால் வீரசுவர்க்க மடைந்தனன். மனைவி சவுரி.

3. தருப்புத்திரன்.

4. இரண்யாக்ஷன் குமரன்.

5. ஒரு சிற்பி.

**தாரகாம்யம்** — தேவர்க்கும் அசுரர்க்கும் உண்டான யுத்தம்.

**தாரகாரி** — தருசகன் மந்திரிகளுள் ஒருவன். உதயணன் ஆருணியோடு போர்செய்தற்குச் சென்றகாலத்தில் உதவியாக அவனால் அனுப்பப்பட்டோன். (பெ - கதை).

**தாரகாக்ஷன்** — திரிபுரத்தசுரரில் ஒருவன்; தாரகன் குமரன்.

**தாரகேசன்** — பாதளகேதன் தம்பி.

**தாரணி** — 1. கலுழவேகன் மனைவி.

2. சத்தியாதனனைக் காண்க.

**தாரணை**—1. (க)நாமதாரணை,வச்சிரதாரணை, மாயாதாரணை, சித்திரதாரணை, செய்யுட்டாரணை, நிறைவு குறைவாகிய வெண்பொருட்டாரணை, சத்ததாரணை, வத்துத்தாரணை, சதுரங்கதாரணை.

2. சொல்லணியின் வகை, அவை, நாமதாரணை, அக்கரதாரணை. செய்யுட்டாரணை, சதுரங்கதாரணை, சித்திரத்தாரணை, வயிரத்தாரணை, வாயுத்தாரணை, நிறைவு குறைவாகிய வெண்பொருட்டாரணை, வச்சிரதாரணை, இவைகளை உடு அக்கர சங்கேதங்களால் இடம்படவறிந்து தரித்து அநுலோபமாகவும், பிரதிலோபமாகவும் பிறவாறுகவுஞ் சொல்வது. (யாப்பு - வி.)

**தாரன்** — ஒரு வானர வீரன்; வாலி சுக்ரீவருக்கு மாமன், தாரைக்குத் தந்தை, வியாழன் குமரன்.

**தாரஷ்டி** — த்ருடனைக் காண்க.

**தாரக்ஷியர்** — தாக்ஷபனைக் காண்க. (தாட்சபன்).

**தாராகணங்கள்** — நக்ஷத்ரகூட்டங்கள், தூமகேதுக்கள், ரோகிணேயர்கள், சப்தருஷிகள், உல்கா பாதங்கள், மின்னல்கள், ஊஷ்ண பாதங்கள், ஜ்யோதிர் கணங்கள் என்பன.

**தாராபலம்** — ஜென்மநக்ஷத்திர முதல் தற்கால நக்ஷத்திரம் வரை எண்ணிவந்த தொகையின பலாபலன்.

1, 19 ஜன்மம்-மத்திமம். 2, 11, 20 சம்பத்து - உத்தமம். 3, 12, 21 விபத்து அதமம். 4, 13, 22 க்ஷேமம்-உத்தமம். 5, 14 பிரத்தியம்-மத்திமம். 6, 15, 24 சாதகம்-உத்தமம். 7, நைதனம்-அதமம். 8, 17, 26 மைத்திரம்-உத்தமம். 9, 18 பரமமைத்திரம்-சமம். 10 கர்மம்-மத்திமம். 16 ஸாங்காதிகம்-அதமம் 23 வைநாசிகம் - அதமாதமம். 25 மானசம் அதமாதமம். 27 சமுதாயிகம்-அதமம்.

**தாராட்சன்** — தாரகாசுரன் புத்திரன்.

**தாராபீடன்** — சந்திராபீடனது தந்தை.

**தாராபுரம்**—போஜன் ராஜதானி.

**தாரிஷ்டவம்சம்** — வைவச்சுதமனுப்புத்திரனுகிய திருஷ்டனுலுண்டான வம்சம்.

**தாருகன்** — 1. ஒரு அரக்கன். இலக்குமணரால் கொலையுண்டவன்.

2. காளியைக் காண்க.

3. ஒரு அசுரன், இவன் குமரர் வித்துற்மாலி, கமலாக்ஷன், தாரகாக்ஷன்.

4. மாநந்தையைக் காண்க.

5. ஒரு அசுரன், இவன் தேவி தாருகை, இத்தாருகன் தன் தவவலியால் தேவர் முதலியவர்களை வருத்தத் தேவர் ஔரவ முனிவரிடம் முறையிட்டனர். ஔரவர் இனி அசுரர் தேவர்களுக்குத் தோற்றுப் பின்னடைக என அவ்வாறே தேவர் அசுரர்களுடன் போரிடத் தாருகனுடன் கூடிய அசுரர் பறக்கும் தமது பட்டணத்துடன சமுத்திர நடுவில் சென்று ஆங்குக் கப்பலோட்டி வருவோரை வருத்தி வருகையில் சுப்பிரியன் என்பவன் கப்பலோட்டிவர அவனைச் சிறையிலிடச் சுப்பிரியன் காராக்ரகத்தில் சிவபூசை செய்து சிவப்பிரத்யக்ஷங் கண்டு சிவப்பிரியனுய் இருக்கையில் அசுரன் அவனைக் கொல்ல அசுரரை யேவினன். சிவப்பிரியன் சிவத்யானத்துடனிற்கச் சிவமூர்த்தி சிவப்பிரியனுக்குப் பாசுபதமளித்து அசுரரைத் தோல்வியடைந் திறக்கச் செய்தனர். (சிவமகா புராணம்).

**தாருகாசுரன்** — மாயை காசிபரை மூன்றாஞ் சாமத்துப் பெண்யானை யுருக்கொண்டு புணர யானைமுகத்துடன் பிறந்த அசுரன்,

இவன் விஷ்ணுமூர்த்தியுடன் ஒருமுறை சண்டை செய்தவன். இவன் பட்டணம், மாயாபுரம், தேவி சவுரி, குமரன் அதிசூரன். சுப்பிரமண்யரால் கொல்லப் பட்டவன். மறுபிறப்பில் அகம்பனுனன்.

**தாருகாவனம்** — இந்த வநத்திலிருந்த முனிவர்கள் கருமமே பலன்தரும், தெய்வம் வேண்டாவெனவும், இம்முனிவர் தேவியர் கற்பேயுயர்ந்தது மற்றில்லையெனவும் கடவுளை இகழ்ந்திருந்தனர். இதனால் சிவமூர்த்தியும், விஷ்ணுமூர்த்தியும் முறையே பிக்ஷாடனத் திருக்கோலமும் மோகினித் திருக்கோலமும் கொண்டு அம் முனிவரிடத்தும் அம்முனி பத்தினிகளிடத்தும் மனநிலை யறியச் சென்றனர். திருமால் முனிவரிடஞ் செல்ல முனிவர்கள் மாலைக் கண்டு மயங்கிப் பின் சென்றனர். சிவமூர்த்தி முனிவரின் தேவியரிடஞ் செல்ல அக் கற்பினிகள் பிக்ஷாடனரைக் கண்டு மயல் கொண்டு பின்சென்று அவரை மனத்தாற் றழுவி (சஅ,000) முனிவரைப் பெற்றுக் கற்பழிந்தனர். இதனால் முனிவர்கள் சிவமூர்த்தியிடம் கோபித்து ஆபிசாரயாகமொன்று செய்து, பூதப்படை, பாம்பு, முயலகன் உடுக்கை, மழு, மான், வெண்டலை, புலி, அழல், அலகை, சூலம் முதலியவைகளை அதில் பிறப்பித்து ஏவ அவை சிவமூர்த்தியை ஒன்றுஞ் செய்யாது அடங்கின. பின் சாபமிட்டனர். அவையும் ஒன்றுஞ் செய்யாதடங்கியதால் முனிவர்கள் நீங்கள் யாரெனச் சிவமூர்த்தி நாம் கைலையிலுள்ளோம் என்று மறைந்தனர். பின் இருடிகளை நோய் முதலிய வருத்தின. முனிவர்கள் இந்திரனிடஞ் சென்று கேட்க இந்திரன், முதல்வரிருவரும் எதிரில் தரிசனம் தந்தும் அறியாமையால் இந்த நோய் உங்களை வருத்துகின்றது என்றனன். அதனால் முனிவர்கள் சிவபூசை செய்து பேறுபெற்ற வனம்.

**தாருகி** — தாருகன் தேவி, சத்தி பூசையால் அசுரர் அழியாதிருக்க வரமடைந்தவள். தேவர்களையும் மற்றவரையும் வருத்தி வீரசேனனால் தோல்வியடைந்தவள். (சிவமகா புராணம்).

**தாருணன்** — 1. இராக்கதன், பிராமணனைத் தின்னப்போய் அப்பிராமணன் அஞ்சாது களித்தலைக் கண்டு வெருவி இவனது மெய்யிலுற்ற பசி நோய்க்குக் காரணங் கேட்டுப் பிராமணனை விட்டவன்.

2. ஒரு அசுரன், இவன் பிரமனை எண்ணித் தவம்புரிந்து அம்மூர்த்தி தரிசனந்தர என்னெதிர்ப்பட்டவர் சுரத்தால் துன்பமடைந்து இறக்க என வரம்பெற்றுத் தேவரை வருத்தித் திரிகையில் தேவர் வேண்டச் சிவமூர்த்தி குபேரனுடன் சண்டிகையை ஏவத் தாருணன் சண்டிகையைக் கண்டு மயல் கொண்டுவரச் சண்டிகை கொலைசெய்தனள்.

**தாரை** — 1. பிரகஸ்பதியின் மனைவி, சந்திரன் இவளைப் புணர இவளிடம் புதன் பிறந்தனன். அந்தப் புதனைப் பிரகஸ்பதி கண்டு தன் குமரன் என்று சந்திரனிடம் வாதிடப் பிரமன் இரகசியத்தில் கேட்டு உண்மையறிந்து புதனைச் சந்திரனுக்குக் கொடுத்தனன்.

2. இரவிவன்மன் புத்திரி, துச்சயாசன் மனைவி, யானையால் உடன்பிறந்த வீரை இறந்தாளென்பது கேட்டு மேன்மாடத்திருந்து பூமியில் விழுந்திறந்து அடுத்த பிறவியில் மாதவியாகப் பிறந்தவள். (மணிமேகலை.)

3. வாலியின் தேவி, அங்கதன் தாய், இவளைச் சுக்கிரீவன் வாலிக்குப் பிறகு தேவியாகக் கொண்டனன். இவள் அமிர்தத்திற் பிறந்தவள். வாலியை இரண்டாமுறை சுக்கிரீவனுடன் யுத்தத்திற்குப் போகாதிருக்க வேண்டியவள்.

**தார்** — முந்துற்றுச் சென்று போர்செய்யும் படை.

**தார்க்கிகன்மதம்** — வித்தியாகற்பனை தோஷம், பிரவிருத்தி, சநநம், துக்கம் என்பவைகளை நீக்கிச் செல்லத் துக்க ஒழிவுண்டாம். அதுவே முத்தியென்பன்.

**தார்தார்மதம்**—பூர்வம் தார்த்தாரதேச ஜனங்கள் மார்ஸ் என்னும் தேவதையைப் பூஜித்துக்கொண்டும் குதிரைகளைப் பலி கொடுத்துக்கொண்டு மிருந்தனர். பிறகு குதிரைகளை அடிக்கும் சவுக்கைத் தெய்வமாக நினைத்துப் பூஜித்துக்கொண் டிருந்தனர். மங்கோலியா தார்த்தாரிகள் நிடிகே என்னும் தேவதையைச் சிருட்டிகர்த்தா என்று நம்பினர். பின்னும் டாபிலாமா என்னும் சந்நியாசி இருபதினாயிரம் சீடர்களுடன் லாசா என்னு மிடத்தில் இருக்கிறார். ஆகையால் அவரும் தேவனே யென்பர். இந்தச் சந்நியாசிக்கு ஹான்சிங் என்பவரும், தேவ என்பவரும் முக்கிய மாணாக்கர். இவர்களில் சாதாரண ஜனங்கள் மானிப்பா

என்னும் தேவதையை ஒன்பது தலைகளுடன் செய்து கிராமதேவதையாகப் பூசித்துப் பலிகொடுத்துக்கொண்டு வருகின்றனர். கடுச்சடா என்னும் தேவன் பரிசுத்தத்தையும் மறுஜென்மத்தையுங் கொடுப்பன். இவர்களில் சிலர் பூமியைத் தெய்வமாக நம்பி வெறுந்தரையில் படுத்துப் புரளுவர். ஜாகாகிஸ் என்னும் தார்த்தாரிகள் இறந்தவர்களே தேவதைகளென்று பூசிக்கின்றனர். டாங்குசஸ் என்னும் ஜாதியார் சுகமானன் என்னும் சிருஷ்டிகர்த்தா இருக்கின்றனன் என்பர். பிராட் என்பவர்கள் சூரியசந்திரன் தெய்வமென்பர். அவ்விடத்திலுள்ள காக்கேஷிய ஜாதியார் பெரியமனிதரே தெய்வமென்பர். தேசாசாரம் - மாத்ருகமனம் செய்தல் நியாயமென்பர். நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களை விவாகஞ் செய்துகொள்ளல் நலம் என்பர். உத்தமஸ்திரிகள் இறந்துபோனால் அந்த ஸ்திரிகளைப்போல் பிரதிமைசெய்து வைத்துக்கொள்ளுவர். செத்த பிணத்தை நன்றாக உலர்ந்தபிறகு அலங்காரஞ்செய்து பூசித்து அடக்கஞ்செய்வர்.

**தார்நிலை** — தூசிப்படையைத் தடுப்பனென அரசற்கு ஒரு வீரன் தனது தறுகண்மையைச் சொல்லியது. ஒருகுடை வேந்தனைக் குடைவேந்தர் பலர் அடையப் போரிடத்துத் தனிவீரன் தானே தடுத்தற்கு முரித்த அத்துறை. (பு. வெ.)

**தார்பிச்சுக்கட்டி** — இது தேவதாருவைப் போன்ற ஒருவித மரத்தின் துண்டுகளிலிருந்து எடுக்கப்படுகிறது. மேற்படி மரத்துண்டுகளை ஒரு வட்டமான குழியில் நிரப்பிக் குழியினடியில் ஒரு துவாரமிட்டுக் குழாயைச் செலுத்தி வைப்பர். அக்குழாயின் ஒருமுனை குழியினும் மற்றொருமுனை ஒரு தொட்டியினும் பொருந்தியிருக்கும். மேற்சொன்ன மரத்துண்டுகளில் நெருப்பிட்டுக் கொளுத்திக் குழியை நன்றாக மூடுவார்கள். குழியிலிருக்கும் கட்டையிலிருந்து கருமையான திரவம் குழாயின் வழியாகத் தொட்டியில் விழுகிறது. இதுவே தார், கீல். இந்தத் தாரை கழுத்து வளைந்த பாத்திரத்தில் காய்ச்சினால் தார் எண்ணெயாகிறது.

**தார்க்ஷி**—துர்வாஸமுனிவர் தவத்தை அழிக்கச்சென்று அவர் சாபமிடப் பக்ஷியான வபுஸ், என்னும் அப்சரசு. கந்தரனுக்குத் தமனகையிடத்துப் பிறந்த பெண்.

**தார்க்ஷிகன்** — 1. ஒரு முனிவன்; வேட்டைக்கு வந்த துந்துமாரன் என்னும் அரசன், மான்தோல்போர்த்துத் தவஞ்செய்துகொண்டிருந்த இவனது குமரனை மானென்று எண்ணி அம்பெய்து கொன்றனன். இம்முனிவன், குமரன் இறந்ததால் விசனமடையாமல் குமரனை மீண்டும் உயிர்ப்பித்தனன். இவனுக்குத் தார்க்கிகன் எனவும் பெயர்.

2. ஒரு விஷ்ணுபடன.

**தாலகேது** — 1. கிருஷ்ணனால் செயிக்கப்பட்ட வருணன் சேவகன்.

2. வச்சிரகேதுவின் குமரன், இருதத்துவசனைக் காண்க.

**தாலசங்கன்**—செயத்துவசன் குமரன், இவனுக்கு (௧00) குமரர் உதித்தனர். அவர்கள் நூற்றுவரும் சகரனால் சங்கரிக்கப்பட்டனர். இவர்களுள் ஜ்யேஷ்டன் விதிஹோத்ரன்.

**தாலத்துவசன்** — நாரதரைக் காண்க.

**தாலப்பியமுனிவர்**—புலஸ்தியர் மாணாக்கர்.

**தாலப்யர்** — இவர் பாஞ்சால அரசனாகிய திருதராஷ்டிரனைப் பசுக்கள்கேட்க அவன் கோபத்தினால் செத்த பசுக்களைக்கொண்டு போக என ருஷி அரசனிடத்துக் கோபித்துச் செத்த பசுவின் மர்மிசத்தில் ராஜ்யங் கற்பித்து அவாகிர்ண க்ஷேத்ரத்தில் யாகஞ் செய்ய இராஜாவின் ராஜ்யம் க்ஷீணித்தல் கண்டு ருஷியைக் கண்டு வணங்கிச்செய்த பிழைபொறுக்க வேண்டக் கருணை செய்தவர். இவர்க்குப் பகர் என்று ஒரு பெயர். (பார - சல்லி).

**தாலவமுனிவர்**—ஒரு இருடி; தேவி சுலபை.

**தாலி** — மங்கலசூத்ரங் காண்க.

**தாவரங்கள்** — ஓரிடத்திலிருந்து ஓரிடம் அசையாதவை. அவை மரம், செடி, கொடி, பூண்டு, புல் முதலிய. இவை இடம்விட்டு அசையக்கூடாதன ஆயினும் பிராணிகளென்றே கூறலாம். இவை பிராணிகளைப்போல் வளர்ந்து ஆகாரங்கொண்டு தம் வர்க்கத்தை விருத்திசெய்து நாளடைவில் அடைகின்றன. இவை பிராணிவகைப்போல் பல பாகங்களை யுடையன. இவ்வாறு பலவேறுபட்ட தொழில் செய்யுமிவற்றை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, தன்னை விருத்தி செய்வது. மற்றது, தன்னினத்தை விருத்தி செய்வ்து. தன்னை விருத்தி செய்வன, வேர், அடிமரம், வேர். தன்னினத்தை விருத்தி செய்

வன பூ, பழம், விதை. மேற் கூறிய பாகங்கள் ஒரு தாவரத்திற்கு இன்றியமைந்த ஒவ்வொரு உறுப்புக்களும் பல கண்ணறைகளைப் பெற்றவை. கிச்சிலிப்பழத்தின் தோலினுட்பாகத்தில் பல சுளைகளைப் பிரித்துப் பார்த்தால் பல இரஸமுள்ள பைகளைக் காணலாம். அந்த ஒவ்வொரு பையும் ஒவ்வொரு கண்ணறை. அவ்வொரு கண்ணறையினும் பாகுபோன்ற ஒருவித சத்து நிறைந்திருக்கிறது. அச்சத்தே ஜீவஅணு. மேற்சொன்ன அறைகள் ஒவ்வொன்றிற்கும் தோல் போன்ற கவசம் உண்டு. இவ்வறையி லடங்கிய அணு பல காரியங்களைச் செய்கின்றது. இது ஈரத்தை யுறுஞ்சும், பரவக்கூடியது. பிரிந்து புது அறைகளைச் செய்யக்கூடியது. அசையுந் தன்மையுள்ளது. தாவரப் பொருளாகிய இதற்கு இதுவே முக்ய ஆதாரம்.

**வேர்** - இது, மூன்று வகையாகப் பிரிகிறது. ஆணிவேர், பக்கவேர், சல்லிவேர் ஒவ்வொரு தாவரத்திற்கும் ஓர் பாகம் பூமியின் மேலும், ஓர் பாகம் பூமிக்குள்ளும் இருக்கின்றன. உட்பாகமான வேர், இரண்டு தொழில்களைச் செய்கிறது. அவை அசையாதிருத்தல், ஆகாரங்களை யாராய்ந்து கொடுத்தலாம். மேல்பாகமாகிய கிளை, இலை முதலிய வேரின் வழியாகத் தம் ஆகாரத்தைப் பெறுகின்றன. ஆணிவேர், இவை புளி, மா முதலிய மரங்களில் மரம் காற்று முதலியவற்றால் நிலைபெயராதபடி மரத்தை யசையாது நிறுத்துவது. இந்த ஆணிவேர் உறுதியாகக் கீழ்நோக்கிச் செல்லச்செல்லப் பக்கத்தில் சிலவேர்கள் அசையாது தாங்கக் கிளைக்கும் அவற்றைப் பக்கவேர் என்பர். இப் பக்கவேர் செல்லுகையில் இவற்றில் சில சிறு வேர்கள் கிளைக்கின்றன. அவற்றை வேய்த்துய்கள் என்பர். இவையே மரஞ் செடிகளுக்கு வேண்டிய ஆகாரங்களைப் பூமியினின்றும் கிரகிக்கின்றன. மற்றொரு வகைச் சல்லிவேர் என்பர். அது நெல், சோளம், கேழ்வரகு முதலிய சின்னாட் பயிருக்கு உள்ளவை. இவை, மண்ணையும் மணலையும் பிடித்துக் கொள்ளும் வலியுள்ளவை. சதைப்பற்றுள்ள வேர் முள்ளங்கி, சருக்கரைவள்ளி போன்றவை. இவை, தங்கள் இலை கொடி வளர்தற்குரிய ஆகாரம் போக மிச்சத்தை வேரில் சேர்க்கின்றன. ஒடுவேர் பூசினை, சுரை, சக்கரைவள்ளி முதலிய ஒடுகையில் கணுக்களில் வேருண்டாகிப் பூமியில் பதிவது. விழுதுகள், சில தாவர வகைகளில் கிளைகளிலும், கொடிகளிலும் வேர் கிளைத்துப் பூமியில் இறங்கி நிலைப்பவை. அடுத்த மரத்தின் சாரத்தால் வளர்வன. புல்லுருவி, கொத்தான், இவ்வேர்கள், வளரும் பகுதி, வளரும் பகுதியின் மூடி என இருவகை. வேர்கள் ஆகாரத்தைத் தேடி மண்ணிலும் நீரிலும் செல்லும். வளரும் பகுதி அம்மண்ணாலும் நீராலும் தேயா வகை மூடிய கவசம் வளரும் பகுதியின் மூடி. ஆகாரத்தைச் சேர்ப்பவை உண்மையில் உறையில்லாத பாகத்தில் மெல்லிய இழைபோன்ற வேர்களே. ஆகாரம், வேர்களின் நுனிகள், தம்மிடமுள்ள ஒருவிதத் திரவத்தின் உதவியால் பூமியிலுள்ள மட்கின எரு, மண், சுண்ணும்பு, இரும்பு, மரவுப்பு இவைகளின் சாரத்தைக் கிரகிக்கின்றன. பூமியிலிருக்கும் ஆகாயம், இப் பொருள்களை மழை நீரால் கரைத்து வேருக்குதவுகிறது.

**தண்டு, அடிமரம்** - வேரின் மேலும், கிளை முதலியவற்றிற் கடியிலும் உள்ள பாகத்தைத் தண்டு, அடிமரம் என்பர். இதனைத் தமிழ்நூலார் அறை யென்பர். இவ்வறை பொரியறை, பொருக்கறை, கோழறை என மூவகைப்படும். மராமுதலியவற்றின் அறைபொரி போலிருத்தலின் பொரியறை, புளி முதலியவற்றின் அறை பொருக்கறை, வாழை முதலியவற்றின் அறை வழுவழுத்திருத்தலின் கோழறை. இவ் வறைகள், மரங்களுக்கு மூன்றுவகையில் உதவுகின்றன. (1) இலை, கிளை, பூ, பழம் முதலிய தாங்கிநின்று அவற்றின்மேல் சூர்யவெப்பம் படும்படி செய்கிறது. (2) பூமியிலிருந்து வேர்தரும் உணவை மேற்பாகத்தில் செலுத்துகிறது. (3) இலையுதிர்காலத்து வெயிலால் வருந்துன்பத்திற்கு உணவைச் சேகரித் துதவுகிறது. அடிமரமாகிய அறையானது கிளை முதலியவைகளைத் தாங்குவதற்கு உறுதியாய் இருத்தல் வேண்டும். இரண்டு, மூன்று மாதம் வளரும் தாவரங்கள் இளந் தண்டுகளைப் பெற்றிருக்கின்றன. இவற்றில் சில கணுக்களைப் பெற்றும் இருக்கின்றன. அடிமரம் தண்டு முதலியவற்றின் வகை :—

1. தொத்தும் கொடிகள் இவை கொழு கொம்புகளைப்பற்றி நிற்பவை.

2. ஓடும் கொடிகள் இக்கொடிகள் பூமியில் படர்ந்து கணுக்களில் உண்டான வேர்களைப் பூமியில் பதிக்கின்றன.

3. நேராக நிற்கும் மரங்களின் அடி மரமானது கிளை முதலியவற்றைத் தாங்க உறுதியாக நிற்கின்றது. தாமரை, அல்லி முதலானவைகளும் தண்டின் உதவியால் நிற்கின்றன.

4. கிழங்குகள் - தண்டு முதலியவைகளில் சேர்ந்தவை அல்ல. இவைகளில் குருத்துப் பதிந்திருத்தலால்.

5. அடிமரத்தின் உள்அமைப்பு - இவை ஒற்றை இலைப் பருப்பில் உண்டாவன, இரட்டை இலைப் பருப்பில் உண்டாவன என இருவகை. நெல், சோளம் முதலியவை ஒரு இலைப்பருப்பில் உண்டானவை. புளி, அவரை, மொச்சை இரட்டைப்பருப்பில் உண்டானவை. புளி, தேக்கு, ஆல் இவைகளை வெட்டிப் பார்த்தால் (4) பிரிவையுடையதா யிருக்கும் (1) வெளிப்புறம் - இது மரத்திற்குப் போர்வைபோல உரிக்கக்கூடியதான மரப்பட்டை. (2) உள் மரப்பட்டை - இது பசுமை நிறமுள்ளதாய் வெளி மரப் பட்டைக்குள் ளிருப்பது. (3) மரப்பாகம் - இது மரக்குழாயான கம்பிக் கூட்டம். (4) மரத்தின் உட்சோறு - இதைச் சோற்றி என்றும் சொல்வார்கள். இச் சோற்றியைச் சுற்றி மரப்பாகம் இருக்கிறது. மரம வளரவளர, சோற்றி குறைந்துவிடுகிறது. வெளி மரப்பட்டை கடினமாயும், துவளக்கூடிய தல்லாததாயும் இருக்கிறது. உள் மரப்பட்டை அநேகமான ஜீவாணுக்களையுடைய அறைகளைக்கொண்டிருக்கிறது. இப் பாகத்தை வெட்டிவிட்டால் மரம் வளராது.

**மரக்குழாய்க்கூட்டம்**-மரத்தை அசைய விடாமல் உறுதியாய் நிற்கும்படி செய்யும் பாகம். உள் மரப்பட்டையும், மரக்குழாய்க் கூட்டத்தின் வெளிப்பாகமும் மரத்துக்கு முக்கியமானவை. அந்த இரண்டு அடுக்குகளுக்கு இடையில் மரத்தை விருத்திசெய்கிற கண்ணறைகளையுடைய அடுக்குஒன்று உண்டு. பூமியிலிருந்து ஜலம் அடிமரத்தின் வழியாய்ச் செல்லுகின்றது.

**விதை முளைத்தல்** - அவரைபோன்ற விதைகளை ஊறவைத்து உரித்துப் பார்த்தால் மெல்லிய தோல் உரிபடும். அதை இரண்டாகப் பிளந்தால் இரு விலைகளாகும். இவ்விலைகள் சேர்ந்திருக்கும் மூலையில் முளை அரும்பு காணப்படும். விதையின் மேற்பாகத்தில் ஒரு பிளவு தோன்றும், அது விதையின்மீதுள்ள வெள்ளைக் கோட்டைச் சேர்ந்திருக்கும். அந்தக் கோட்டின் வழியாக நீர் சென்று விதையைப் பருக்கச்செய்து முளையைக் கிளப்புகிறது. முளைக்கு இரண்டு பாகங்கள் உண்டு. ஒன்று மேல்நோக்கி வளரும் செடியின்பாகம், மற்றொன்று கீழ்நோக்கி வளரும் வேரின் பாகம். நெல் முதலியவற்றின் விதை அவரை முதலியவைபோல் மேல் கிளம்பாமல் பூமிக்குள்ளே இருக்கிறது.

**இலை** - இலைகள் மரங்களுக்குக் கெடுதி வாராமல் அடிமரத்தையும், வேரையும் குளிர்ச்சிசெய்து காக்கின்றன. அவைகள் நரம்பு, இலைப்பரப்பு என இரண்டு பகுதியை யுடையன. நெல், தெங்கு முதலியவற்றின் இலைகள் நரம்புகளை நடுவில் பெற்றிருக்கின்றன. மற்றச் செடி இலைகளின் நரம்புகள் வலைகளைப்போலப்பின்னப் பெற்றிருக்கின்றன. நரம்புகளின் வழியாக இலைகளுக்கு வேண்டிய ஆகாரத்தை அடைகின்றன. இலைகள் பலவித உருவத்தைப்பெறும்: சில வட்டமாகவும், முட்டைகள்போலவும் அம்புகள்போலவும், ஈட்டிகள்போலவும், குளம்படிபோலவும், பக்ஷிகளின் இறகுகள்போலவும் இருக்கின்றன.

**நிறங்கள்** - பொதுவில் இலைகள் எல்லாம் பசுமைநிற முடையவாயினும் சில மஞ்சள், வெள்ளை, சிகப்பு, முதலிய நிறங்களைப் பெற்றிருக்கின்றன. இலைகளின் மேற்புறம் சிலவற்றிற்கு பளபளப்பாயும், சிலவற்றிற்கு வழுவழுப்பாயும், சிலவற்றிற்குச் சுரசுரப்பாயும் உண்டு. இலைகள் ஒற்றை இலை, கிளைத்த இலை என இருவகைப்படும். அரசு, ஆல் முதலிய ஒற்றை இலை. அவரை, ரோஜா முதலிய கிளைத்த இலை. எல்லா இலைகளும் காம்புகளையுடையன; அவற்றில சில நீண்டும். சில குறுகியும் இருக்கின்றன.

**புட்பம்** - தாவர உற்பத்திக்குப் புட்பம் மூக்கிய காரணம். புட்பத்தில் காம்பு, புற இதழ், அக இதழ், மகரந்தக் காம்பு, மகரந்தம், அண்டகோசம் எனப் பல பாகங்கள் உண்டு.

**காம்பு** - இது புட்பத்தைக் கிளையுடன் சேர்ப்பது.

**புறஇதழ்**-இதனைப் புட்பகோசம் என்று சொல்லுவார்கள். இது கிண்ணத்தைப் போல் (4 அல்லது 5) இதழ் சேர்ந்திருப்பது. புட்பங்களுக்கு அடியில் இருக்கும் சில புட்பங்களுக்குப் புற இதழ்கள் தனித்தனியாய் இருக்கும்.

**அகஇதழ்** - அகஇதழ்களைப் புட்பதளம் என்று சொல்லுவார்கள். இவை பல வர்ணங்கள் உள்ளதும், மிருதுவாயும், அழகாயும் இருப்பன. இவற்றிற் சிலவற்றின் தளங்கள் அடுக்காகவும், சிலவற்றிற்குப் பிரிவுபட்டும், சிலவற்றிற்கு ஒற்றையாகவும் இருக்கும்.

**மகரந்தக்காம்பு** - இதனைக் கேசரம் என்றும், பூந்தாள் என்றும சொல்லுவார்கள். புட்பத்திற்குள் அகஇதழ்கள் எத்தனை இருக்கின்றனவோ, அத்தனை மகரந்தக்காம்புகள் உண்டு. மகரந்தக்காம்புகள் ஒன்றாய்ச் சேர்ந்து குழையைப்போல் காணப்படும். காம்புகளுக்கு நுனியிலாவது, பக்கத்திலாவது மகரந்தப்பை உண்டு. அந்தப்பை முழுதும் மஞ்சன்போன்ற மகரந்தப்பொடிகள் நிறைந்திருக்கும்.

**அண்டகோசம்** - மகரந்தக் காம்புகள் ஒன்றுசேர்ந்து குழைபோலிருந்தால் அண்டகோசம். அக்குழைக்குள் இருக்கும் காம்புகள் தனித்திருப்பின் அண்டகோசமும் தனித்திருக்கும். அண்டகோசத்தின் நுனி சற்றுத் தடித்து, சிறுத்து, அடிபெருத்து இருக்கும். சுனையோடு தடித்து இருக்கும் நுனிப்பாகத்திற்கு கீலாக்கிரம் எனப் பெயர். கீலாக்கிரத்தில் எப்பொழுதும் பசை இருக்கும், மகரந்தத்தூளை இப்பசை பற்றிக் கொள்ளுகிறது. கீலாக்கிரத்தின் கீழும், அண்டாசயத்திற்கு மேலுமாய்க் கம்பிபோலிருக்கும் பாகத்திற்குக் கீலம் என்று பெயர். இக்கீலம் தொளைகொண்டது. கீலாக்கிரத்திலிருந்து வரும் மகரந்தப்பொடி கீலத்தின்வழியாக விதைப்பைக்குள் போகின்றது. விதைப் பையிற்கு அண்டாசயம் என்று பெயர். இதில்தான் விதை உண்டாகின்றது.

**காய்கள்** - புட்பங்கள் முற்றி இதழ்கள் விழுந்ததும் பூவிலுள்ள அண்டாசயமே காயாக மாறுகிறது. இது நாடகள் செல்லச் செல்ல விதை முதிர்ந்து பழமாகிறது.

**பழம்** - பழத்தில் மூன்று பாகங்கள் உள்ளன. ஒன்று பருபபை மூடிக்கொண்டிருக்கும் உறுதியான கவசம்; இரண்டாவது வெளித் தோலுக்கும் கொட்டைக்கும் நடுவில் இருக்கும் தசை; மூன்றாவது மேல் தோல். பழங்களின் மேல்தோலானது கொட்டை முதிரும் வரையில் பசுமைநிறமாக இருந்து முதிர்ந்தபின் நிறமும் ருசியும் வேறுபடுகின்றது. பழங்களிற் சில சதைப்பற்றுள்ளனவாகவும், சில இல்லாதனவாகவும் இருக்கும். பழங்களில் மாம்பழம், இலந்தைப்பழம், அத்திப்பழம் முதலிய மிருதுவானவை. விளாம்பழம் வில்வப்பழம் ஓடு உள்ளவை. பலாப்பழம், சீத்தாபழம், ஊமத்தங்காய் முள் உள்ளவை. பலா சீத்தா, மாதுளை, இச்சிலி முதலிய பல வித்துக்களையுடையன. மா, முதலியன ஒரு வித்து உள்ளவை. வாழை, பனை, ஈந்து முதலிய பல பழக்களை யுடையவை.

**விதைகள் பாவும் விதம்** - விதைகள் நிறைந்துள்ள பழங்கள் பழுத்துக் கீழே வீழ்ந்தால் மரத்தடியில் வீழ்ந்த விதைகள் நன்றாய் முளைத்துப் பயிர் ஆகா. பக்ஷிகளும், மிருகங்களும் பழங்களை உண்டு விதையைப் பல இடங்களில் சிதறுகின்றன. அவை சூரிய வெப்பமும், குளிர்ச்சியும் பரவின இடத்தில் நன்றாக முளைக்கின்றன. சில செடிகளில் வாலையுடைய விதைகள் காற்றில் பறந்து பல இடங்களில் விழுந்து செடிகளாகின்றன. அவை எருக்கு முதலியவை போன்றவை.

**பூவில்லாத தாவரங்கள்சில** - காளான் முதலிய போன்றவை. மற்றொரு வகை பாசி முதலியன.

**வேரில் வித்துள்ளவை** - வேர்க்கடலை முதலியன.

**தாழம்பூ** — சிவப்பிரீதியல்லாமை சீதையால் வந்த சாபம். (சிவபுராணம்.)

**தாளசங்கன்** — கார்த்தவீரியன் பேரன்.

**தாளம்** — கொட்டும், அசையும், தூக்கும், அளவும் பொருந்தும்படி புணர்ப்பதாம். மேற்கூறியவை மாத்திரையின் பெயர்களாம். அவற்றுள் கொட்டுக்கு மாத்திரை அரை, அதன் வடிவு க. அசைக்கு ஒரு மாத்திரை, வடிவு எ. தூக்குக்கு இரண்டு மாத்திரை, வடிவு உ. அளவிற்கு மூன்று மாத்திரை, வடிவு ஃ. இவற்றின் தொழில் கொட்டு அமுக்குதல், அசைதாக்கி எழுதல், தூக்குத் தாக்கித் தூக்குதல், அளவு தாக்கின ஓசை மூன்றுமாத்திரை பெறுமளவும் வருதல். இத்தாள வகையினைப் பரதத்திற் கூறினும் ஆண்டுக் காண்க.

**தாளவகையோத்து** — இது தாளவகையி னிலக்கணம் கூறும் நூல்களுள் ஒன்று.

**தாளுதுவான்** — திருமங்கையாழ்வார்க்கு மந்திரி.

**தானம்** — (௩) தலைப்படுதானம், இடைப்படு தானம், கடைப்படுதானம். அவையாவன: அறத்தான் ஈட்டிய பொருளை முக்குற்றம் அற்ற நற்றவத்தோரைக் கொள்க எனப் பணிந்து குறை இரந்து தம் உள்ளம் உவந்து ஈதல் தலைப்படுதானம். ஆதுலர், குருடர், மாதர்முதல் பிறர் சிறுமையைப் பற்றி மனம் இரங்கி ஈவது இடைப்படு தானம். புகழ், ஆர்வம், கைம்மாறு, அச்சம், கண்ணோட்டம், காரணம், கடைப்பாடு இவற்றைப்பற்றி ஈவது கடைப்படு தானம். இது பலவகைப்படும். இவற்றுள் பதினாறு சிறந்தன.

**தானங்கள்** — 1. தேவர்க்கும் நல்லோர்க்கும் ஈந்து புண்ணியம் அடைதல்; அவை பல வகையாயினும் அவற்றுள் (௧௬) சிறந்தன. இரண்யகர்ப்பதானம் - பொன்னால் (௭௨) அங்குலம் உயரமும் அதில் மூன்றம்சம் அகலமும் உள்ள தாமரைபோன்ற கும்பஞ் செய்வித்து அதில் தயிர், நெல், பால் முதலிய நிறைத்து வேதிகை செய்வித்து அதின்மேல் இரண்டு மரக்கால் எள்ளைப் பரப்பி அதன்மீது கும்பத்தை நிறுத்தித் தான கற்பவிதிப்படி பூசித்துப் பிரதக்ஷண முதலியசெய்து எஜமானன் அந்த இரண்ய கும்பத்தில் ஒரு விஸ்வாசகாலம் இருத்தல் வேண்டும். இப்படி யஜமானன் கடத்திருந்து வெளிவருமுன் ஆசாரியன் இரண்யகும்பத்திருக்கும் இரண்யகற்பனாகிய புருஷனுக்குக் கர்ப்பாதானம், பும்சவனம், சீமந்தம், சாதகர்மம் முதலிய கிரியைகள் செய்தலவேண்டும். பின்யஜமானன் அதை விட்டு வெளிவந்து அந்தக் கலசத்துடன் கிராமாதிகளையும் தானஞ் செய்யவேண்டும். அவ்வகை செய்தவன் (௧00) கோடி கல்பம் பிரமலோகத்தில் வசித்துத் தனது பிதுருக்களை நரகத்திலிருந்து நீக்குவன்.

2. இரண்யாச்வதானம் - (௩) முதல (௧000) பலமுள்ள பொன்னால் குதிரையொன்று செய்வித்து நானாவித உபகரணமான ஒரு சையத்தையும், (௮) சுவர்ண கலசங்களையும் வேதிகையில் தாபித்து விதிப்படி பூசிப்பதாம. இப்படிச் செய்தவன் தேவாகளால் பூசிக்கபபட்டு இந்திர பதம் அடைவன்.

3. இரண்யாச்வரததானம் (௩) முதல் (௧,000) பலமுள்ள பொன்னால் ரதம் செய்வித்து அதில் தன் இஷ்டதேவதையைப் பொன்னாற் செய்வித்து நிறுத்தி அத்தேர்க்கு (௮) அல்லது (௪) பொற்குதிரைகள் பூட்டி வஸ்திராதிகளால் அலங்கரித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம். இவ்வகை தானஞ்செய்தவன் பாபம் நீங்கித் தேசோசரீரனாய்ச் சிவபதமடைவன்.

4. உபயகோமுகிதானம் - பசுவின் பிரசவகாலத்தில், பசுங்கன்றின் பாதிதேகம் தாயின் வயிற்றிலும் மற்றப்பாதி வெளியிலும் இருக்கக்கண்டு பசுவினைப் பொன், வெள்ளிமுத்து முதலானவைகளால் அலங்கரித்துத் தக்ஷிணையுடன் வேதியனுக்குத் தானஞ்செய்வதாம். இவ்வகைத் தானஞ் செய்தவன் தரணிதான பலனடைவதன்றிப் பிதுருக்களையும் திருப்தி செய்தவனாகிறான்.

5. கனககல்பலதிகாதானம் - (௫) முதல் (௧,000) பலமுள்ள பொன்னால் நீர்க்காக்கை, அன்னம் முதலிய பக்ஷிகள், வித்தியாதர பிரதிமைகள் முதலியவற்றோடு கூடிய (௧0) கல்பகக் கொடிகளைச் செய்வித்து விதிப்படி பூசித்துத் தக்க வேதியர்க்குத் தானஞ்செய்வதாம். இவ்வகை புரிந்தவன் சத்திய உலகம் அடைவன்.

6. கனககாமதேனுதானம் — (௧,000) (௫00) (௨௫0) கணக்குள்ள பலத்தோடு கூடிய பொன்னால் கன்றோடுகூடிய பசு செய்வித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம். இவ்வகைத் தானஞ்செய்தவன் தேவர்களால் பூசிக்கப்பட்டுச் சிவபதம் பெறுவன்.

7. கல்பவிருக்ஷதானம் — (௩) பலம் முதல் (௧,000) பலம்வரையில் பொன்னால் திரிமூர்த்தி பிரதிமைகளுடன், (௫) கிளைகளோடு நானாவித பக்ஷிகள், பழங்கள் முதலியவற்றுடன் கற்பகத்தரு செய்வித்துக் கிழக்கில் சகளத்திர காமதேவயுக்தமான சந்தானவிருக்ஷத்தையும், தெற்கில் லக்ஷ்மியோடுகூடிய மந்தாரவிருக்ஷத்தையும், மேற்கில் சாவித்திரியோடு கூடிய பாரிசாத விருக்ஷத்தையும், வடக்கில் சுரபியோடுகூடிய ஹரிச்சந்தனவிருக்ஷத்தையும் நிருமித்து விதிப்படி ஓமாதிகள் பூஜை முதலிய செய்து நமஸ்கரித்துத் தானஞ் செயவதாம். இவ்வகைச் செய்தவன் சித்த, சாரண, கின்னர, அப்சரசுக்களால் சேவிக்

கப்பட்டுச் சூரியவருண விமானத்தேறி (௪00) கல்பம் விஷ்ணுபதத்தில் இருப்பன்.

8 கார்ப்பாஸதானம் - ஐந்து பாரம் முதல் (20)பாரம் நிறையுள்ள பருத்தியைத் தக்கவர்க்குத் தானஞ் செய்வதாம். இதைச் செய்தவன் உருத்திரலோக மடைவன்

9 கிருதபர்வததானம் · (௫) கும்பம் நெய்முதல் (20) கும்பம் நெய்யைத் தக்கவர்க்குத் தானஞ் செய்வதாம். இப்படிச் செய்தவன் சிவபதம் பெறுவன்.

10. கிருஷ்ணஜினதானம் - மாசி, ஆடி, கார்த்திகை மாதங்களிலும், பௌர்ணிமை, சந்திரசூர்யகிரகணம், உத்தராயண துவாதசி புண்ணியகாலங்களில், ஆகிதாக்னியாகிய வேதியனுக்கு விதிப்படி கிருஷ்ணஜினம் (மான்தோல்) தானஞ் செய்தலாம். இவ்வகைப் புரிந்தவன் சிவசாயுச்யம் அடைவன்.

11. குடதேனு தானம் - நாலுபாரம் முதல் கூடியவரையில் பெல்லத்தால் பசுவும் கன்றும் செய்வித்து ஆபரணங்களால் அலங்கரித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம். இவ்விதம், வெண்ணெய், எள், தான்யம், சர்க்கரை, உப்பு, ரத்னம் பொன்முதலியவற்றாலும் செய்வித்து மந்திர ஆவாகனஞ்செய்து தானஞ் செய்யின் நெடுநாள் கோஉலகத்தில் சகல சௌபாக்கியங்களை அநுபவித்துப் பின் விஷ்ணு பதம் அடைவன்.

12. குடபர்வததானம் — மூன்றுபாரம் முதல் (10) பாரம்வரையில் பெல்லத்தால் பர்வதம் செய்வித்து விதிப்படி தானஞ் செய்வது. இவ்வகை செய்தவனுக்குப் பசுபதி சாந்நித்யமாவர்.

13. கோசகஸ்திரதானம் - (௩) பலம் முதல்கொண்டு (1,000) பலமுள்ள பொன்னால் (10) பசுக்கள் செய்வித்து அவற்றினிடையில் ஒரு பொன்விருஷம் செய்வித்து நிறுத்தி பின் (௧,000) பசுக்களை, பொன், வெள்ளி முதலானவைகளா லலங்கரித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம். இவ்வகைச செய்தவன் பாபம் நீங்கித் தன்னுடைய (101) கோத்திரத்துடன் தானும் கைலையில் வசிப்பன்.

14. சர்க்கராபர்வததானம் — இரண்டு பாரம் முதல் எட்டுபபாரம் வரையில் சர்க்கரையை மலைபோல் குவித்துத் தானஞ் செயவது. இதைச் செய்தவர் சிவபத மடைவர்.

15. சப்தசாகரத்தானம் (௫) முதற்கொண்டு (௧,000) பலம் அளவுள்ள பொன்னால் சாண் அளவுள்ள (௭) கும்பங்கள் செய்வித்து முதற் கும்பத்தில் உப்பு நிறைத்து அதில் சரஸ்வதியுடன் கூடிய பிரம தேவனையும், இரண்டாவதில் பால் நிறைத்து விஷ்ணுமூர்த்தியினையும், (௩-வதில்) நெய் நிறைத்துச் சிவமூர்த்தியையும் (௪ வதில் பெல்லம் நிறைத்துச் சூரியனையும், (௫-வதில்) தயிர்நிறைத்துச் சந்திரனையும், (௬-வதில்) சர்க்கரை நிறைத்து லக்ஷ்மியையும், (௭-வதில்) சுத்தோதகம் நிறைத்துப் பார்வதியார் முதலியவர்களை யெழுந்தருளுவித்து விதிப்படி பூசித்துத் தானங்களைச் செய்வது. இங்ஙனஞ் செய்தவன் விஷ்ணுபதமடைவன்.

16. சுவர்ணபர்வத தானம் - (௨௫0) பலம் முதல் (௧,000) பலம் பொன்னினால் பர்வதம் செய்வித்து விதிப்படி தானஞ் செய்யின் பிரமபதம் அடைவன்.

17. சையாதானம் - நல்ல மரத்தில் கட்டில் செய்வித்து அதனைப் பலவிதமாக அலங்கரித்துப் பாயல்விரித்துத் தீர்த்தம், சந்தனம், புஷ்பம், தாம்பூலம், மற்றும் ஸ்திரீ புருஷர்களுக்கு வேண்டியவும் அமைத்து நவக்கிரக பூசைசெய்து சில விஷ்ணுக்கள் இதனால் மகிழக் கடவர்என யோக்கியனுக்குத் தானஞ்செய்தல். இதனால் சுவர்க்கம் உண்டாம்.

18. தராதானம்-(௪00) முதல், (௧,000) பலமுள்ள பொன்னினால் ஜம்புத் தீவு போல் நானாவித அநேக பர்வதசாகர நகர கிராமங்கள், பாரதாதி நவவருஷங்களோடு கூடிய பூமி, அவைகளைச் சுற்றிக் கடல் செய்வித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செயவதாம். இவ்வகைத தானஞ் செய்தவன் தன் கோத்ரங்களுடன் (௩) கல்ப காலம் வைகுண்டத்தில் வசிப்பன்.

19. தான்யபர்வததானம் - இந்தப பர்வததானம், லவணத்தாலும், பெல்லத்தாலும், பொன்னினாலும, வெண்ணெயாலும், எள்ளினாலும் இரத்தினத்தினாலும் வெள்ளியினாலும், சர்க்கரையாலும மலைபோற் செய்வித்து வியதிபாத முதலான புண்ய காலஙகளில் (௧,000) மரக்கால் நெல்லை மேருவாக வைத்து நவமணிகளாலலங்கரித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வது. இத்தானஞ் செய்தவன் தெய்வவுலகடைவன்.

**20.** திக்பாலகதானம் - வேதியர் எட்டுப் பெயரை வருவித்து அவர்களை ஆசனத்திவிருக்கச் செய்து அவர்களி னடுவில் சிவமூர்த்தியைப் பூசித்துப் பத்துக் கழஞ்சு பொன்னுற் பதினொரு விமானம் செய்வித்து அதை வேதியர்க்கு விதிப்படி தானஞ்செய்து பலவேதியர்க்கு அன்னமிடலாம்.

**20.** திலபர்வததானம் - மூன்று மாக்கால்முதல் பத்துமரக்கால் எள்ளினைப் பர்வதம்போற் குவித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வது. இவ்வகைச் செய்தவன் சுவர்க்கமடைவன். 10 சாண்கோலொன்று நட்டு அது மறைய எள்கொட்டி அதன் மேல் மண்டலஞ்செய்து ஆடையால் மூடி மலர்தூவி அதில் சிவமூர்த்தி பள்ளிகொள்வதாய்த் தியானித்துச் சிவமூர்த்தியைப் பூசித்து விதிப்படி தக்ஷிணையுடன் பிராமணனுக்குக் கொடுத்தலாம். திலதேனு, திலபத்மதானங்களைத் தனித்தனி காண்க.

**21.** துலாபுருஷதானம் - இத் தானஞ் செய்பவன் பரிசுத்தனாய்ப் பதினாறு முழத்திற்குக் குறையாமல் மண்டபஞ் செய்வித்துப் புண்ணியா வாசனம் முடித்து எழடிவேதிகை செய்வித்து நான்கு குண்டங்கள் செய்விக்கவேண்டும். பிறகு வேதிகையில் கலசத்தாபனம் செய்து அதில் திரிமூர்த்திகளைப் பூசித்து எழுமுழமுள்ள தேவதாரு முதலிய இரண்டு தம்பங்களை இரண்டுமுழம் பூமியில் புதைத்து அதின் மேல் சுவர்ண முதலியவைகளால் அலங்கரித்துத் துலாதண்டம் நிறுத்தி லோகமயமாகும் தட்டுகளைச் சங்கிலிகளில் மாட்டி அத்துலாத்தைக் கொடி முதலியவைகளாலலங்கரித்துக் குருவையும் வேதமறிந்த எட்டுருத்விக்குகளையும் வருவித்து நான்கு திக்குகளில் இவ்விருவரை நிறுத்திப் பிரமாதி தேவர்க்கு ஓமஞ்செய்து எஜமானன் ஆசாரியருடன் பலி பூசைகள் முடித்து அத்தினத்தில் எல்லோரும் உபவசிக்க வேண்டும். மறுநாள் ஸ்நானாதிகள் முடித்துப் பரிசுத்தனாய் நானாவித பூஷணாலங்கிருதனான எஜமானன், ஆசாரியனோடு துலைக்கு நமஸ்கரித்துத்துலா ஆரோகணஞ் செய்தல் வேண்டும். அதில் ஒரு தட்டில் எஜமானனிருந்து மறுதட்டில் ஸ்வர்ணத்தை வைத்துச் சமமாகத் தூக்கி க்ஷணநேரம் அதிலிருந்து அதினின்றும் இறங்கி அதிலுள்ள திரவியத்தில் பாதி ஆசாரியனுக்கும் மிகுதியை ருத்விக்குகளுக்கும் கொடுத்து அவர்கள் ஆக்ஞையால் மற்றவர்களுக்கும் தானாதிசன்கொடுத்தல் வேண்டும். இப்படிச் செய்தவன் கீர்த்தியையும் ஆயுளையுமடைந்து விஷ்ணுபத மடைவன்.

**22.** பஞ்சலாங்கலதானம் - சாரமுள்ள நூறுகிராமங்கள் அன்றி யதாசக்தி கிராமத்தையும் மரத்தாற் செய்யப்பட்ட ஐந்து கலப்பைகளையும், பொற் கொம்பா லலங்கரிக்கப்பட்ட பத்து எருதுகளையும் ஐந்து முதல் (க,000) பலம் உள்ள பொற் கலப்பைகளையும் கன்றோடு கூடிய பசுக்களையும் விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம். இவ்வகைச் செய்தவன் விமானமேறிச் சிவபதம் அடைவன்.

**23.** பிரமாண்டதானம் - இருபது பலம் முதற்கொண்டு (க,000) பலம் வரையில் தன் சக்திக்கு இயன்ற அளவு (க00) அங்குல நீளம் இரண்டு கலசங்களும், எட்டுத் திக்கு யானைகளும், அஷ்டதிக்குப் பாலகரும் உள்ள ஒரு பிரமாண்டத்தைச் செய்வித்து அதில் திரிமூர்த்தி விக்ரகங்களை எழுந்தருளச் செய்து பட்டு வஸ்திராபரணாதிகளால் அலங்கரித்து அந்தப் பிரமாண்டத்தை இரண்டு மரக்கால் எள்ளில் நிறுத்தி விதிப்படி பூசை முதலிய முடித்துத் தானஞ் செய்வதாம். இவ்வகை செய்தவன் பாபம்நீங்கி இந்திரபதம் அடைவன்.

**24.** மகாபூதகடதானம் - நூறு அங்குல நீளமுள்ளதாய், நானாவித ரத்தினங்கள் இழைத்த கும்பத்தைப் பால் நெய் முதலியவைகளால் நிறைத்து அதில் ஒரு சுவர்ண கற்பவிருக்ஷத்தை நிறுத்தி விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம். இவ்வகைச் செய்தவன் கோடிசூர்யப் பிரகாசமுள்ள விமானமேறி வைகுண்ட பதம் அடைவன்.

**25.** ரத்னதேனுதானம் - வச்சிரம், பவளம், வைடூர்யம், கோமேதகம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், சர்க்கரை, பெல்லம் முதலியவற்றால் புராணாதிகளில் கூறியபடி ரத்னபசு செய்வித்து விதிப்படி பூசித்துத் தானாதிகளைச் செய்வதாம். இவ்வகை செய்தவன் மதனசமான காந்தியுள்ளானாய் விஷ்ணுபத மடைவன்

**26.** ரத்னபர்வததானம்-முந்நூறு பலம் முதல் (க,000) பலம் வரையில் இரத்தினத்தால் பர்வதஞ் செய்வித்துத் தானஞ்

செய்வதாம். இது செய்தவர் பிரமகத்தி தோஷம் நீங்கி விஷ்ணுபதம் அடைவர்.

27. ரௌப்பியபர்வததானம் - (உ௫00) பலம் முதல் (௬0,000) பலம் வரையில் ரௌப்பியபர்வதஞ் செய்வித்துத் தானஞ் செய்யின் சிவலோகமடைவர்.

28. லவண பர்வத தானம் - நாலுமரக் கால்முதல் பதினறு மரக்கால் வரையில் உப்பை விதிப்படி தானஞ்செய்யின் சத்தி உலகம் அடைவர்.

29. விச்வசக்ரதானம் - ஆயிரம் முதல் (உ௫0) பலம் பொன்னுல் பதினறு இலைகளுள்ள விச்வசக்கரத்தை ஏழு ஆவரணத் தோடு கூடியதாகச் செய்வித்துச் சங்குசக்கிரதாரணுகிய விஷ்ணுமூர்த்தியை எட்டுத் தேவியருடன் பிம்பத்திற் செய்வித்திருத்தி விஷ்ணுமூர்த்தியின் தசாவதார பதுமைகளை நிருமித்து விதிப்படி பூசித்துத்தானஞ் செய்வதாம். இவ்வகைத் தானஞ்செய்தவன் அரிபதமடைவன்.

30. ஹேமஹஸ்திரததானம் — ஐந்து பலம் முதல் ஒரு பாரம்வரையில் பொன்னுல் புஷ்பரதம் செய்வித்து நான்கு பொன் யானைகளும், இரண்டு உயிர் யானைகளையும் பூட்டி அவ்விரதத்தின் மத்தியில் லக்ஷ்மீ நாராயணனையும் இரண்டு பக்கங்களில் பிரம்ம மகேச்வராதி தேவவிக்கிரகங்களையும் எழுந்தருளச்செய்து விதிப்படி பூசித்துத் தானஞ்செய்தலாம். இத்தானஞ் செய்தவன் வித்தியாதரரால் பூசிக்கப்பட்டுச் சிவபதமடைவன்.

31. பருத்திதானத்தால் - யமதூதரிடத்தில் அச்சம் உண்டாகாது.

32. தானியதானத்தால் - யமனும் தூதரும் சந்தோஷித்து ஜீவனுக்கு வேண்டியவற்றைக் கொடுப்பர்.

33. பூதானஞ்செய்யின் - எத்தனை அடிகள் தானம் செய்தானே அத்தனை காலம் சுவர்க்கத்தில் இன்புறுவன்.

34. மாராடிதானத்தால் - மார்க்கத்தில் முள் முதலியவற்றுல் துன்புறாது குதிரை யேறி யமபுரஞ் செல்வன்.

35. குடைதானத்தால் - நிழலுள்ள வழியிற் செல்வன், மழையால் துன்பமடையான்.

36. தீபதானஞ்செய்யின் - இருள் வழியில் பிரகாசத்துடன் செல்வன். மாண முதல் ஓராண்டு தீபதானஞ்செய்யின் ன் குலத்தோரையும் சுவர்க்கத்தில் புகுவிக்கும். ஆசனபபலகையும் செம்புஸ்தாலியும் சுயம்பாகப் பொருளும் தானஞ் செய்யின் மரித்தவன் மார்க்கத்தில் இனிது செல்வன்.

37. வஸ்திரதானஞ்செய்யின் - யமதூதர் நல்லுருவத்துடன் தோன்றுவர்.

38. பூமி, சுரபிகள், சுவர்ணம் - இம் மூன்றும் தானங்களில் விசேடமாம். எவ்விதமெனின் பூமி விஷ்ணுசம்பந்த மாதலாலும், சுவர்ணம் அக்கினியின் மகவாதலாலும், சுரபிகள் சூரியபுத்திரிகளாதலாலும் விசேஷமாம். இவற்றைத் தானஞ் செய்வோன் அம்மூன்று லோகத்தையும் அடைவன்.

39. பருத்திதானம் மகாதானமாகும். இது தேவர் அந்தணர் முதலியோர்க்குப் பூணுூற்கு உபயோகம் ஆகையால் மிகச் சிறந்ததாம். இத் தானம் செய்தவன் சுவர்க்கவாசியாகச் சிலநாள் வசித்து அழகிய மேன்மையுடையவனுய்ச் சிவபதம் அடைவன்.

40. திலதானம், கோதானம, தானியதானம், சுவர்ணதானம், பூதானம் செய்யின் - மகாபாதகங்கள் நசிக்கும். இவைகளை உத்தமபிராமணருக்கே கொடுத்தல் வேண்டும்.

41. திலதானத்தாலும் இரும்பைத் - தானஞ்செய்தலாலும், யமன் உவப்படைகிறன்.

42. இலவணதானத்தால் - இறக்கிறவனுக்கு நமனிடம் அச்சம் உண்டாகாது.

**தானவர்** — 1. ஒருமுனிவர் அட்டகோண மகருஷியின் தாயுடன் பிறந்தாளை மணந்தவர். குமரன் சுகேது.

2. காச்யப ருஷிக்குத்தநுவிட முதித்த குமரர். அவர்கள் அஜோமுகன், அந்தகன், அடிதானவன், அருணி, அருட்டன், அநுதாபகன், இல்வலன், ஏகசக்ரன், கபிலன், புலோமன், சம்பரன், திவிமூர்த்தனன், அயக்கிரிவன், சங்கசிரன், விபாவசு, விருஷபர்வன், விப்ரசித்தி, வாதாபி, சுவர்பபானன், நமுசி, வக்தரயோதி, காலநாபன், திரியம்சன், சல்யன், நபன், நரகன், புலோமன், தாம்ரகேது, சச்ருமன், விருபாக்ஷன், துர்ச்சயன், வைச்வாநரன், தாரகன் முதலியோர்.

**தானியமாலி** — 1. அதிகாயன் தாய், இராவணன் தேவியரில் ஒருத்தியாகிய அபசரசு.

2. இவள் ஒரு அப்சாசு. இவள் கைலையில் சிவபிரான் சந்நதியில் நடிக்கச் சிவபிரான் இவளுக்கு ஓர் விமானம் அளித்தனர். இதில் ஏறிவருகையில் வழியிலிருந்த தடாகத்தில் இறங்கி நீராடிக்கொண்டிருந்தனள். இவளது அழகைக்கண்டு காமுற்ற சாண்டில்யமுனிவன் தன்னெண்ணத்தை இவளுக்குத் தெரிவிக்க இவள் முனிவனை நோக்கி 3 நாட்கள் தீண்டாதவளாதலின் நான்காம்நாள் வருகிறேனென நீங்கி நான்காம்நாள் நீராடி வருகையில் திக்குவிஜயத்தின்பொருட்டு வந்துகொண்டிருந்த இராவணன் இவளை வலியப் புணர்ந்தனன். அப்போதிவளிடம் அதிகாயன் பிறந்தான். பின் இவள் முனிவனிடம்வர, முனிவன் நீ ஒருவனுக்கு முதலில் வார்த்தைகொடுத்து அதைக் கடந்து வேறொருவனைச் சேர்ந்தாயாதலால் நீ முதலையாக என்று சபித்தனன். இச்சாபத்தால் பயந்து இவள் தீர்வுகேட்க இராமகாரியத்தின் பொருட்டு வரும் அநுமனால் தீரும் என்று போயினர். இவள் சஞ்சீவியின்பொருட்டு வந்த அநுமன் காலைத் தடாகத்தில் பற்றி அவனால் சாபம் நீங்கினள்.

**தானியவகை** — 1. **நெல்வகை** அறுபதாம். குருவை, ஆனைக்கொம்பன், இலுப்பைப் பூச்சம்பா, ஈர்க்குச்சம்பா, கருடன்சம்பா, கம்பம்சம்பா, கறுப்புக்கார், கோணற்குருவை, கல்குருவை, கருங்குருவை, குத்தாலை, காட்டுக்குத்தாலை, காட்டழிவாணன், சிவப்புச்சிறுமணியன், சடைச்சம்பா, சிவப்புச்சம்பா, சீரகச்சம்பா, சன்னசம்பா, சுகதாஸ்சம்பா, சிவப்பு ஒட்டன், செப்புலிப்பிரியன், செங்கார், செங்குருவை, சாம்பல்வாரி, செம்பாளை, தங்கச்சம்பா, தட்டைச்செம்பாளை, தில்லைநாயகம், நறுக்குச்சம்பா, நீலன்சம்பா, பக்கிரிசம்பா, பழையபவுன்சம்பா, பொடித்திலலை, பிசாணம், புனுகுச்சம்பா, பூங்கார், பெருங்கார், பொன்கம்பிச்சம்பா, மல்லிகைச்சம்பா, மணல்கார், மருதூர்வாசனை, மிளகி, முத்துவெள்ளை, மொக்குமட்டை, வாழைப்பூச்சம்பா, வால்குருவை, விராலிச்சம்பா, வெள்ளைச்சிறுமணி, வெள்ளைச்சம்பா, வெற்றிலைச்சம்பா, வெள்ளை ஒட்டன், வெள்ளைகபிஸ்தலம், வெள்ளைக்குருவை, வெள்ளைக்கூம்பாளை, மணக்கத்தை, வாலான், நவரைச்சம்பா, கல்லுவ்டைச்சம்பா, குண்டுசம்பா, வளைதடிச்சம்பா, கோரைச்சம்பா, குறுஞ்சம்பா, தாளான்சம்பா, மைச்சம்பா, கோடைச்சம்பா, காடைச்சம்பா, குன்றிமணிசம்பா, அன்னமழகி, சொர்ணவாரி.

2. இவ்வகையில் இந்தியாவில் பயிராவன நெல்தானியமேயன்றி வேறுவகைகளும் உண்டு. அவை உண்பனவற்றிற்கு உதவியான முதற்காரண உணவுவகையினும் அதற்குத் துணைக்காரணமான கதிர்த்தானிய வகையினும் சேர்ந்தவை. முதற்காரணவகையில் நெல்லைப்பற்றிக் கூறியதைக் காண்க. கதிர்த்தானியவினத்தில் சவ்வரிசி, மூங்கிலரிசி, கோதுமை, கேழ்வரகு, கம்பு, சாமை, தினை, செஞ்சோளம், கருஞ்சோளம், குறுவாகு, வரகு முதலிய. **காய்த்தானிய** வகையில் கொடியிலும் செடியிலும் பயிராவன; துவரை, உளுந்து, கடலை, மொச்சை, பருங்காராமணி, பனிப்பயறு, பச்சைப்பயறு, தட்டைப்பயறு, வெண்பயறு, கரும்பயறு, கொள்ளு, எள், அவரை, பீன்ஸ்விதை முதலிய பல.

**தானை** — (சு) தேர், கரி, பரி, வாள், வில், வேல்.

**தானைநிலை** — இரண்டு சேனையும் மறத்தை ஏத்தப் போர்க்களத்துச் சிறப்பெய்தியது. (புறவெண்பா.)

**தானைமறம்** — 1. வேற்படையினது தறுகண்மையைச் சொல்லிப் பகைவருடைய கேட்டிற்கு நோவினும் முறைமையாக விசாரித்துரைப்பின் அதுவேயாம். (புறவெண்பா.)

2. பொர எதிர்ந்த இருவகைச் சேனைதாம் பொருதுமடியாமை பரிகரித்த ஆற்றலினது உயர்ச்சியைச் சொல்லியது (புறவெண்பா.)

3. பொலிவுபெற்ற பூமி காவலற்கு உறுதிகூறுதற்கும் பெறும் அதுவென்று சொல்லுவர்.

**தான்மிகபாண்டியன்** — ஒரு பாண்டியன்; இவன் தேவி வித்துருவதை.

**தான்மிகன்** — ஒரு அரசன்.

**தான்யாதிபதி** — அரசனுக்கு நெல் முதலிய தான்யங்களின் சாதி, அளவு, விலை, உறுதி கூறுகொள்ளுமுறை, தூய்மை ஆக்கமுறையறிந்து கூறுவோன். (சுக்ரநீதி.)

**தாக்ஷாயணி** — தக்கன் மகளாய்ப் பிறந்த பார்வதிபிராட்டி, சிவபெருமானை மதிக்காது செய்தயாகத்தில் வீழ்ந்துடல் விட்டவள்.

**தாஜ்மஹால்** — இது, ஆக்ரா நகரத்துக்கு 3 மைல் தூரத்தில் யமுனையாற்றின் மேற்கரையில் கட்டிய ஒரு பெரிய அழகிய மஹால். இது ஷஜஹான் எனும் டில்லி சக்ரவர்த்தி தன் மனைவி மும்தாஜ்ஜமால் என்பவளது ஞாபகச்சின்னமாகக் கட்டப்பட்டது. இது 22 வருஷகாலம் கோடி ரூபாய் செலவிட்டு, 20,000 வேலைக்கார ராகிய காபூலியர், கோலகண்டா வேலைக்காரர், சிங்களர், இத்தாலியர் முதலியவர்களா லியற்றப்பட்டது. இது அழகிய பூஞ்சோலைகள் வாவிகள்சூழ இடையில் பளிங்குக்கற்களால் பார்ப்போர் கண்களைக் கவரும்படி செய்யப்பட்டது. தற்காலம் 300 வருஷங்களாயும் இது இப்போது தான் கட்டப்பட்டதுபோ லிருக்கிறது. இதில் இவளை அடக்கஞ்செய்த சமாதி யிருக்கிறது.

**தாஸ்**—வட இந்தியாவிலுள்ள ஜைந நாடோடிகள்.

## தி

**திகைப்பூண்டு** — இது தென் இந்தியா காடுகளிலுள்ள ஒருவகைப் பூண்டு. இதை மிதிக்கின் புத்தி மயக்கமடைந்து அலைந்து திரிவர் என்பர்.

**திக்கஜம்** — அட்டதிக்கஜத்தைக் காண்க.

**திக்கு** — 1. இது நித்தியம், விபு, சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், சையோகம், விபாகம் எனும் ஐந்துகுணம் உடையது.

2. (அ) கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு. இவற்றுடன் ஆகாயம், பூமிசேர, பத்தாம்.

**திக்குப்பாலகர்** — அட்டதிக்கு பாலகரைக் காண்க.

**திக்குப்பாலகர் குறிகளாவன** — கொடி, புகை, சீயம், நாய், இடபம், கழுதை, யானை, காகம். இவை யெண்டிசையோனி யென்ப.

**திக்குப்பாலகன்** — (சுராட்டு) பதினாயிரம் ஊர்களின் வரிகளை அரசனுக்குச் சேர்ப்பிப்பவன். (சுக்கிரநீதி.)

**திக்குவணன்** — பிராமணனுக்கு அயோகவ கன்னி இடத்துப் பிறந்தவன். இவன் தொழில் தோல்வர்த்தகஞ் செய்வது. (மநு.)

**திக்தி** — (சு.) விதி அவ்வயன் குமரன்.

**திக்மகேது** — வச்சிரன் குமரன்.

**திசா** — வடக்குத்திசையின் தேவதை, அவஷ்டவக்ரரைப் பலவிதமாக மயக்கினவள்.

**திசைச்சொல்** — எனைத் திசைகளிலிருந்து ஒரு பாஷை வழங்குநாட்டில் வழங்குவது.

**திசைமுகக்கரு** — பிரமகாயிகலோக முதலிய பிரமலோகம் இருபதினுமுள்ள இருபது வகைப்பட்ட பிரமகண பிண்டங்கள்.

**திசையறிகருவி** — இது, நாவா யாத்திரிகளாகிய கப்பலோட்டிகளுக்குக் கடிகாரம் போல் திசைகளைக் குறிப்பிட்ட வட்டபீடிகையில் பொருத்தப்பட்ட காந்த ஊசி. இது வடக்குநோக்கியே நிற்பதால் மற்றத் திசைகளை எளிதில் அறியலாம்.

**திசையோனிநிலை** — கருடன் - கிழக்கு, பாம்பு - மேற்கு, சிங்கம் - தெற்கு, யானை - வடக்கு, பூனை - தென்கிழக்கு, எலி - வடமேற்கு, நாய் - தென்மேற்கு, முசல் - வடகிழக்கு. இவைகளில் அருக்கனில் கருடனை வைத்து முறையே பார்க்கும்போது எதிர்க்கெதிர் பகை யோனி நிற்கும் அவற்றுள் கருடன் திசையிலிருந்து பாம்பு திசைக்குப் போகலாம். பாம்பு திசையிலிருந்து கருட திசைக்குப் போகலாகாது. ஏனெனின், கருடன் இரைகொள்ளப்போகையில் பாம்பு இரையாக வரும். ஆதலால் ஒருவன் யாத்திரைக்குப் பக்ஷி முதலிய சகுனங்கள் பார்க்கையில் இரை யாகும் யோனி திசையிலிருந்து இரை யெடுக்கும் யோனி திசைக்கு அவை போகலாகா.

**திடசேநன்** — சிரதன் குமரன், இவன் குமரன் சுமதி.

**திடணை** — திக்ஷணுவைக்காண்க. குமரர் வேதசிரசு, தேவன், வயிநன், மநு.

**திடமதி** — ஒரு சூத்திரன், இவன் முனிவன் ஆகவேண்டித் தன் நண்பனாகிய சுமதி முனிவனை நோக்கி என்னைப் பிராமணன் ஆக்குக என்ன அவன் அவ்வாறே எஞ்ஞோபவீதம்சாத்தி வேதமந்திரம் உபதேசித்தனன்; அதனால் முனிவன் பல பிறவி எடுத்து முடிவில் வேதியனாய்ப் புண்ணிய தீர்த்த ஸ்நானபலத்தால் முத்தி அடைந்தனன். திடமதியோ பல ஜன்மங்களில் பட்டு உழன்று பருந்தாய்த் தீர்த்தயாத்திரை செய்தவர். உடலினின்று தெறித்த நீர்த்துளியால் பவித்தரனாய்த்தேவர் உலகு அடைந்தனன். (திருச்செங்கோட்டுப் புராணம்.)

**திடவிரதன்** — ஒரு அரசன், வேட்டைமேற் சென்று தாகத்தால் விஷங்கலந்த நீரை யுண்டு சிவபூசையால் அதைப் போக்கிக் கொண்டவன்.

**திடன்** — 1. (சங்.) மதிவான் குமரன், மனைவி காளிந்தி.

2. திரிகர்த்தன் தம்பி.

**திட்டத்துய்ம்மன்** — துருபதன் குமரன். யாகத்தில் தேருடன் பிறந்தவன். திரௌபதியின் சகோதரன். பாரதயுத்தத்தில் சேனாபதியாயிருந்தவன். இவனை அக்கி அம்சம் என்பர். இவன் குமரன் திருஷ்டகேது, அக்கியும்சம். இரண்டாநாள் பாண்டவர் சேநாபதி.

**திட்டிவிடம்** — கண்களில் விடமுடையதோர் பாம்பு. இது நஞ்சுவிழியரவெனும், அழற்கணுகம் எனவும் வழங்கப்படும். (Epigraphia Indica, Vol. 3. Page. 232.) காண்க.

**திணகன்** — ஒரு க்ஷத்திரியன்.

**திணை** — 1. (உ) உயர்திணை, அஃறிணை. (ங) குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் இவை முறையே மலை, மணற்காடு, காடு, ஊர், கடல்சார்ந்த நிலங்கள்.

2. (உ) அகத்திணை, புறத்திணை.

**திணைமாலை நூற்றைம்பது**—மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனர் மாணக்கர் கணிமேதாவியர் இயற்றியது. அகப்பொருளை நதிணைக்கும் முப்பது முப்பதாகப் பாடிய நூற்றைம்பது வெண்பாக்களை யுடையது.

**திணைமொழி ஐம்பது** — 1. ஐந்திணையைப் பற்றிச் சாத்தாந்தையார் மகனர் கண்ணன் சேந்தனரா லியற்றப்பட்ட தமிழ் நூல். இது சங்கமருவிய நூல், ஐந்திணையிற் சேர்ந்தது.

2. கண்ணஞ்சேந்தனரியற்றியது. ஒவ்வோர் அகப்பொருட்டிணைக்கும் பத்தாகப் பாடிய ஐம்பது வெண்பாக்களை யுடையது.

**திண்டாமுண்டி** — சிவகணத்தலைவரில் ஒருவன்.

**திண்டி** — (டிண்டி) ஒரு வேடன். இவன் அயோத்தி வந்து இருடிகளைக்கண்டு தவஞ்செய்துகொண் டிருக்கையில் இவனைப் புற்று மூடிற்று. இராமர் அவதரித்தபின் லீலையாய் அப்புற்றைக் குத்த அதிலிருந்து வேடன் தோன்றி இராம மூர்த்தியைத் தொழுது முத்தி பெற்றவன்.

2. ஒரு தேவன். இவன் சூரியனிடம் ஞானேபதேசம் பெற்றுப் பிரமனிடஞ் சென்று ஆதித்ய கிரியாவிசேஷங்களைக் கூறினவன். (பவிஷ்யத் - புரா.)

**திண்டிமன்** — வேதாந்ததேசிகரிடம் வாதிட்டுத் தோற்ற கவி.

**திண்டீரன்** — ஒரு அசுரன், இவன் தேவர்களை வருத்தத் தேவர்கள் அரியைப் பிரார்த்திக்க விஷ்ணுமூர்த்தி நாம் பூமியில் மல்லிகார்ச்சுனனாய் அவதரித்து உமது துன்பத்தை நீக்குகிறோம் என்றபடி அவ்வாறு ஸ்ரீசந்திரன் என்பானுக்குக் குமரராய் அவதரித்து அசுரனைக் கொன்றனர். மல்லிகார்ச்சுனனைக் காண்க.

**திதளாசுரன்** — தேவர்களை வருத்தித் தெய்வலோகத்தை தன் வசப்படுத்தி யிருந்த சிவமூர்த்தியா லிறந்த அசுரன்.

**திதி** — 1. காச்யபர் தேவி, தக்ஷன் குமரியரில் ஒருத்தி, தைத்தியரைப் பெற்றவள். திருப்பாற்கடல் கடைந்தகாலத்துத் தேவர் செய்த வஞ்சனையால் சினங்கொண்டு காசிபர் சொற்படி (க,000) வருஷம் தவஞ்செய்கையில் இந்திரன், ஒருநாளுறங்குகையில் வாயு வுருவமாக வயிற்றில் புகுந்து பிண்டத்தை (எ) கூருகச் செய்து நீங்கினன், அவர்களே மருத்துக்கள். இரண்யனிரண்யாக்ஷனை (க00) வருஷம் சுமந்து பெற்றவள்.

2. இவள் அதிதி இந்திரனைப் பெற்றது போல் தானும் ஒரு குமரனைப் பெறக் காசிபரை வேண்டிப் பெறுமளவில் வலிமை கண்ட அதிதி பொருமைகொண்டு இந்திரனை நோக்கி உன் பகைவனைக் கொல்க என இந்திரன் இவள் வயிற்றிற் புகுந்து எழு கூருகச் சிசுவைச் சேதித்தனல் திதி யுணர்ந்து அதிதியை வசுதேவர் தேவியாகப் பிறந்து எழு குமாரர்களைப் பெற்று அதனல் வருத்தமுறவும், இந்திரனைத் தன் பதமிழந்து துன்புறவும் சாப மளித்தவள். (தேவி - பாரதம்).

**திதிகளாவன** — பிரதமை, துவிதியை, திரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, ஷஷ்டி, சப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி அல்லது அமாவாசியை ஆக (கரு). பதினைந்தாம் திதி கிருஷ்ண பக்ஷத்தின் இறுதியாயின் அமாவாசையும் சுக்கில பக்ஷத்தின் இறுதியாயின் பௌர்ணமியும் வரும். இதில் சந்திரன் தோன்றும் முதல் பக்ஷம் சுக்கிலபக்ஷம் என்றும், சினிவாலி என்றும் பெயர். சந்திரன் குறையும் பிற

பக்கம் கிருஷ்ணபக்ஷம் எனவும் குரு எனவும் பெயர் பெறும். இவற்றில் பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி மூன்றும் நந்தை எனப்படும். துவிதியை, சப்தமி, துவாதசி மூன்றும் பத்திரை எனப்படும். திரிதியை, அஷ்டமி, திரயோதசி மூன்றும் சயை எனப்படும். சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி மூன்றும் இருத்தை எனப்படும். பஞ்சமி, தசமி, பௌர்ணமி மூன்றும் பூரணை எனப்படும். இவற்றுள் நந்தையும், பத்திரையும் சுபகாரியங்கள் செய்ய ஆகா. திதி அமுத யோகங்களாவன - ஞாயிற்றுக்கிழமையில் பிரதமையும், ஷஷ்டியும்; திங்கட்கிழமையில் துவிதியையும், சப்தமியும்; செவ்வாய்க்கிழமையில் சதுர்த்தசியும்; புதன்கிழமையில் அஷ்டமியும், திரிதியையும், திரயோதசியும்; வியாழக்கிழமையில் நவமியும்; வெள்ளிக்கிழமையில் ஏகாதசியும்; சனிக்கிழமையில் சதுர்த்தசியும் வருவன. சுப யோகங்கள் - ஞாயிற்றுக்கிழமையிற் அஷ்டமியும், திங்களில் நவமியும், செவ்வாயில் ஷஷ்டியும், புதனில் திரிதியையும், வியாழனில் ஏகாதசியும், வெள்ளியில் திரியோதசியும், சனியில் சதுர்த்தசியும் வருவன. நாச யோகங்கள் - ஞாயிறில் சதுர்த்தசியும், திங்களில் ஷஷ்டியும், செவ்வாயில் சப்தமியும், புதனில் துவிதியையும், வியாழனில் அஷ்டமியும், வெள்ளியில் நவமியும், சனியில் சப்தமியும் வருவன. ஞாயிறில் பஞ்சமியும், கார்த்திகையும்; திங்களில் துவிதியையும், சித்திரையும்; செவ்வாயில் பூரணையும், ரோகணியும்; புதனில் சப்தமியும், பரணியும்; வியாழனில் திரயோதசியும், அனுஷமும்; வெள்ளியில் ஷஷ்டியும், திருவோணமும்; சனியில் அஷ்டமியும், ரேவதியும் வருவனவாம். அக்னி யோகங்கள் - ஞாயிறில் துவாதசியும், திங்களில் ஷஷ்டியும், செவ்வாயில் சப்தமியும், வெள்ளியில் தசமியும், சனியில் ஏகாதசியும் வருவனவாம். தக்க யோகங்கள் - ஞாயிறில் துவாதசியும், திங்களில் ஏகாதசியும், செவ்வாயில் பஞ்சமியும், புதனில் துவிதியையும், வியாழனில் ஷஷ்டியும், வெள்ளியில் அஷ்டமியும், சனியில் நவமியும் வருவனவாம்.

**திதித்யாச்யம்** — பிரதமைக்கு - உச, அஷ்டமிக்கு - உ0, த்விதியைக்கு - கஉ, திரிதியைக்கு - ௫௫, சதுர்த்திக்கும் நவமிக்கும் - ௫, பஞ்சமிக்கும் ஷஷ்டிக்கும் - ௫ச, சப்தமிக்கு - ௩க, தசமிக்கு - ௩௩, ஏகாதசிக்கு - க, துவாதசிக்கு - க௫, திரயோதசிக்கு - உக, சதுர்த்தசிக்கு - எ, பூரணைக்கு - உ௯, அமாவாசைக்கு - ௯, இந்த நாழிகைகளுக்குமேல் - ச நாழிகை த்யாஜ்யம்.

**திதித்ரயம் தினத்ரயம்** — ஒரு வாரத்தில் (௩) திதிகள் (௩) நக்ஷத்ரங்கள் வருதல். இவ்வகை நாட்களில் தேவ உற்சவாதி சுபகாரியங்கள் கூடா. (விதானமாலை).

**திதி நக்ஷத்ரயோகங்க்ளின் விருத்தி க்ஷயம்**- நக்ஷத்திரவர்த்தனை, நாழிகை ஆறரை, க்ஷயம் - நான்கேகால். யோகவர்த்தனை நாழிகை (க) க்ஷயம் (அ) திதிவர்த்தனை நாழிகை (௫வ) க்ஷயம் ஆறரை.

**திதியமிர்தயோகம்** — திதிகளைக் காண்க.

**திதியன்** — நெடுஞ்செழியனால் தலையாலங்கானத்துச் செரு வெல்லப்பட்டவன். இவன் குறுக்கை யென்னும் ஊர்ப்புறத்து அன்னியொடுபொருது அவனது நாவன்மரத்தை வெட்டியவன்.

**திதியாதிபலம்** — தத்தமுடைய நட்பாட்சி உச்சத்தினும், வர்க்கோதயத்தினும், வக்ரித்தகாலத்தினும் மும்மடி பலமுண்டாம். அத்தமித்து நின்ற பொழுதும், நீச்சத்து நின்ற பொழுதும் பாதிப் பலமுண்டாம். சத்ருபவனத்தில் நின்ற பொழுது கூற்பலமுண்டாம். திதியில் வாரம் பலம்; இவ்விரண்டினும் நக்ஷத்திரம் பலம்; இம்மூன்றினும் உதயம் பலம்; இந் நான்கினும் உதயத்து நின்ற பிரகஸ்பதியும், சுக்ரனும் பலவான்கள். (விதானமாலை).

**திதிராசிதோஷம்** — திரிதியையில் சிங்கம், மகரம்; சப்தமியில் கர்க்கடகம், தனு; பஞ்சமியில் கன்னி, மிதுனம்; திரயோதசியில் இடபம், மீனம்; ஏகாதசியில் தனு, மீனம், நவமியில் விரிச்சிகம், சிங்கம்; பிரதமையில் மகரம், துலாம் இந்தத் திதிகளில் இந்த இராசிகளுதயமாகச் சுபம்கூடாது. (விதா.)

**திதிக்ஷு** — மகா மனுவின் குமரன். இவன் குமரன் குருசத்திரன்.

**திதிக்ஷுப்தி** — பிராதா இறந்தவன், தமயன மனைவி புத்திர உற்பத்திக்காகத் தர்மமாகத் தன்னிடத்தில் வந்திருந்தபோதிலும் அவளிடத்துக் காமத்தினால் ஆலிங்கன முதலிய சிருங்கார சேஷ்டை செய்கிறவன்.

**திதிகை** — தக்ஷகனுக்குப் பிரசூதியிடத் துதித்த குமரி, யமன் தேவி.

**தித்தன்** — உறையூரிலிருந்த சோழன், சோழன் பிண்டநெல்லி நாட்டினன். கோர்

வைக்கோப் பெருநற்கிள்ளியின் தந்தை. (புற - நா.)

**தித்திரி** — 1. ஒரு பக்ஷி தைத்திரீயத்தைக் காண்க.

2. ஒரு ரிஷி.

3. ஒரு சர்ப்பம்.

**தித்திரிபுரிலன்** — ஒரு நாகன்.

**திந்துசாரன்** — நிதந்துவின் குமரன்.

**திபதகேது** — தெக்ஷசாவர்ணி மநுப் புத்திரன்.

**திபோதாசன்** — திவோ தாசனுக்கு ஒரு பெயர்.

**திப்புத்தோளார்** — கடைச்சங்கத்துப் புலவர். இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். நாயகனைக் குமரவேளுக் கொப்பாக குறுந்தொகை முதற் செய்யுள் கூறியவர்.

**திமி** — காசிபர் தேவி, தக்ஷன் குமரி சலசந் துக்களைப் பெற்றவள்.

**திமிங்கலன்** — இராசத பர்வதத்தி னரசன்.

**திமிங்கிலம்** — இது நீர்வாழ் மிருகம். இது நீர்வாழ் பிராணிகளில் பெரிது; சுமார் 80 அடி நீளம் இருக்கும், இதன் தலை பெரியது. வாய் பெருத்து அகன்றிருக்கும், வாயில் பற்களுக்குப் பதிலாகச் சீப்புப்போன்ற எலும்புகள் மேலுதட்டினின்று தொங்கும்; இது பன்னடைபோன்றது. இதனுவிது உட்கொள்ளும் ஆகாரத்துடன் சேர்ந்த நீரை வடிக்கிறது. தொண்டை குறுகியது. கண்களும் காதுகளும் சிறியவை. கண்களுக்கருகி லிரண்டு பக்கங்களிலும் ஏறக்குறைய (9) அடி நீண்டும் (4) அடி அகன்றுமுள்ள முட்களுண்டு. கால்கள் குறுகியவை. வால் ஏறக்குறைய (20) அடி நீண்டு வலியதானது. நிறம் கறுப்பு, தோல் தடித்திருக்கும், வயிறுவெளுத்தது, இதன் ரத்தம் மிருக ரத்தம்போ லுஷ்ணமானது. இது தன் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும். இது சுவாசத்தை உள் வாங்குகையில் நீர் உட்சென்று வெளி வருகையிலதிதூரம் உயரும். இது நீர் மட்டத்தின் மேல் வந்து நித்திரை செய்யும். இது வடகடல் வாசி. இதைக் கொழுப்பிற்காகவும், தோல், எலும்பிற்காகவும், உணவிற்காகவும் வேட்டை யாடுவார்கள். இதன் வேட்டை அபாயமானது, இதற்கென்றுள்ள படவில் ஏறி ஈட்டியில் கயிறு கட்டி யெறிந்து பிடிப்பர். இது தன் வாலால் படகையும் கப்பலையும் எறிந்து மூழ்குவிக்கும். இதனைத் தூரத்திலிருந்து சுட்டுங் கொல்வர். திமிங்கிலத்தை விழுங்குமீன் திமிங்கிலகலம். திமிங்கில வகையில் - சாகபக்ஷணி, மாமிசபக்ஷணி என இரண்டு வகைகளுண்டு. சாகபக்ஷணிக்குப் பற்களுண்டு, மாமிசபக்ஷணிக்குப் பற்கள் கிடையா. இத் திமிங்கிலங்களில் மன்னுத்தித் திமிங்கிலம், கோங் திமிங்கிலம், கூன் திமிங்கிலம், ஸ்டெல்லாய் திமிங்கிலம்,பல்லுள்ள திமிங்கிலம், வெள்ளைத் திமிங்கிலம், நீலத் திமிங்கிலம், தலைபருத்த திமிங்கிலம், ஈட்டி மூக்குத் திமிங்கிலம் என பல பேதங்கள் இருக்கின்றன. மன்னுத்தித் திமிங்கிலம் - மேற்கூறிய திமிங்கிலம்போன் றுள்ளது. இது குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்ப்பதாதலின் இதனைக் கடற்பசு வென்பர். கோங் திமிங்கிலம் - இது அமெரிகா, ஆஸ்திரேலியா கடல்களி லுள்ளது. இதன் விலா தட்டை, வயிறு முதுகுகளின் பக்கம் அகற்சி. இது 10, 15 அடி நீளம், இது சாகபக்ஷணி. ஸ்டெல்லாய் திமிங்கிலம் - மன்னுத்தி போன்றதே. இது 20 முதல் 25 அடிகள் நீளம், சாகபக்ஷணி. கூன் திமிங்கிலம் - இது வடகடலிலுள்ளது. 60 அடி நீளம். இதன் மூக்கு மற்ற திமிங்கிலங்களுக்கிருப்பதுபோ லில்லாமல் நேர் மட்டமாய் நிமிர்ந்திருக்கிறது. இதன் முதுகு கூன் பக்கத்தில் சிறகு பெற்றிருக்கிறது. இதற்கு ஏற்றத் தாழ்வான வரிகளுண்டு. வடகடற்றிமிங்கிலம் - இது 80 அடிகளுக்கு மேற்பட்ட நீளமும் அதற்குத் தகுந்த கனமுள்ளது. இதன் வாயில் கீழ் நோக்கிய பல் 10, 15 அடிகள் நீளம். இது இரை வேண்டிய காலத்து வாயை அங்காந்துதிரிய வாயிற் பட்டவைகளைக்கொண்டு நீரை மூக்கின் வழி மேல்நோக்கி விடும். இது எல்லாத் திமிங்கிலங்களிலும் பெரிது. தென்கடற்றிமிங்கிலமும் 70அடிகள் நீளம். இதன் நாக்கு 20 அடி நீளம், 12 அடிகள் அகலம், இது மாமிசபக்ஷணி. தலைபருத்த திமிங்கிலம் - இது தக்ஷிண சமுத்திரவாசி. இதன் வாய் முகத்தின் மேல்பாகத்திராமல் சுறாவைப்போல் கீழ்பாகத்தி லிருக்கிறது. இது 60 அடிகளுக்கு மேற்பட்ட நீளம், இதன் மூக்கு 12 அங்குல நீளம், கண்கள் சிறியவை. இத் திமிங்கிலத்தில் ஒருவகையான மஞ்சள் எண்ணெ யிருக்கிறதாம். ஒருவகை உயர்ந்த மெழுகும் இதனிடம் உண்டாகிறது. அதனை ஸ்பெர்மாவிட்டி

வாக்ஸ் என்பர். இதன் குடலிலிருந்து அம்பர்கிரீஸ் எனும் மணப்பொருள் எடுக்கின்றனர். கிராம்பஸ் - இது ஒருவகை திமிங்கிலம், இது 30 அடி நீளம். இது திமிங்கிலங்களையும் வேட்டையாடித் தின்றுவிடும். மகா வலிவுள்ள ஜெந்து.

**திமித்துவசன்**—இந்திரன் வேண்டுகோளால் தசரதன் துணையிருக்க இந்திரனால் கொல்லப்பட்ட அசுரன். இப்போரில் கைகேயி தசரதனுக்கு இரதம் செலுத்தி இரதத்தில் அவனது மூர்ச்சை தெளிவிக்க அவன் களிப்படைந்து இரண்டு வரம் கேட்கவென அவற்றை வேண்டியபோது பெறுகிறேன் என்று இராமனை வனம் புகச் செய்தனள்.

**திமிராபதம்** — முக்கியமான அக்னி.

**திம்மராஜன்** — இவன் கி. பி. 1515-ல் விஜயநகர சமஸ்தானத்தில் மந்திரியாக இருந்தவன். விஜயநகரத்தரசன் கட்டளைப்படி செங்கற்பட்டை அரசாண்டவன். இவன் தன் பெயரால் செங்கற்பட்டில் ஒரு குளம் தோண்டுவித்தான். அதற்குத் திம்மராஜா குளம் என்று பெயர்.

**திம்மவாது** — திர்யோதனன் தம்பி.

**தியா** — எட்டாவது வசு. இவன் தேவி அங்குலா. அஷ்டவசுக்களும் தங்கள் தேவியருடன் பூலோகத்திற்கு வரும்போது வசிஷ்ட தேனுவாகிய நந்தினியைக் கண்டு தியாவின் மனைவி அதின் சிறப்புக்களைக் கேட்டுப் பூலோகத்தில் உசிநருடைய மகளுக்கு அதனது பாலை யுண்பிக்க எவ்வகையேனும் களவு செய்து தரவேண்டும் என அவ்வகை உடன்பட்டுச் செய்து வசிட்டரால் மனிதனுகப் பிறக்கச் சாபமேற்றுப் பூமியில் பீஷ்மராகப் பிறந்தவர்.

**தியாகராஜகவிராயர்** — இவர் ஊர் விருத்தாசலம், சைவர், மயூராசல புராணம் பாடியவர்.

**தியாகராஜமூர்த்தி** — இயர் விஷ்ணுமூர்த்தியால் பூசிக்கப்பட்ட சோமாஸ்கந்தர். எவ்வகை எனின், விஷ்ணுமூர்த்தி புத்திரப்பேறு வேண்டிச் சிவமூர்த்தியை எண்ணித் தவம் இயற்றினர். சிவமூர்த்தி ஒரு புத்திரன் உண்டாக வரமளித்தனர். தேவியார் தம்மைப் பூசிக்காததினுல் சினம் கொண்டு அப் புத்திரன் பிறந்து சில நாட்களில் மரணம் அடைக எனச் சாபம் இட்டனர். இதனுல் விஷ்ணுமூர்த்தி பிராட்டியாரை வணங்கிக் கேட்கப் பிராட்டியார் நமது சாபம் அனுபவியாமல் ஒழியாது எனக் கூறிப் பின்னர் அநுக்கிரகித்தனர். உன் புத்திரன் பிறந்து இறைவனது நேத்திரத்தினுல் அழிந்து மீண்டுமெழுந்து நெடுநாள் உருவிலியாய் இருக்க என்றனர். அன்று முதல் விஷ்ணுமூர்த்தி சோமாஸ்கந்த திருவுருவத்தினைத் திருப்பாற்கடலில் தாம் துயிலும் அரவணையில் தமது மார்பு இடத்துக்கொண்டு யோகநித்திரை புரிந்து இருந்தனர். அந்தக் காலத்துச் சோமாஸ்கந்த மூர்த்தி "மேகமொன்று நீள்வெள்ளி வெற்பிணைந்தென விளங்கு நாகணைமேவி, யோக நற்றுயில் கொண்டுறை கடவுணெட் டுயிர்ப்பசைவா லன்னு, ஞகமீதசைந் தாடியேயமர்ந்தன னமுத சந்திர மோலி, யேக நாயகனம்பிகை கந்தனே டெண்ணிலாவுல குய்ய" என்றபடி அசைந்து ஆடி இருந்து வரம் தந்தவர் ஆதலால் இப் பெயர் பெற்றனர். இச் சோமாஸ் கந்தமூர்த்தியை விஷ்ணுவிடம் இந்திரன் தன்னுடு வளம் பெறவேண்டிப் பெற்றுப் பூசித்து வருகையில் வலன் என்னும் அசுரனை இந்திரன் வேண்டுகோளால் வெல்லும்படி வந்த முசுகுந்த சக்கரவர்த்தி கேட்க இந்திரன் அது விஷ்ணுவின் கட்டளையால் கொண்டு செல்லத்தக்கதென அவ் விஷ்ணுவின் கட்டளை ஏற்று முசுகுந்தன் கேட்கத் தர மனமிலாத இந்திரன் வேறு ஆறு சோமாஸ்கந்தமூர்த் தங்களைச் சிருட்டித்துத் தர அவற்றைச் சக்கிரவர்த்தி மறுப்ப இறுதியில் இந்திரன் தான் பூசித்த சோமாஸ்கந்தமூர்த்தியினைக் கொடுக்கக் களிப்புடன் பெற்றுத் திருவாரூரில் பிரதிஷ்டை செய்வித்து மற்ற ஆறு மூர்த்திகளையும் "சீரார் திருவாரூர் தென்னுகை நள்ளாறு, காரார் மறைக்காடு காராயல், நேரே - உற்ற திருவாய்மூர் உகந்த திருக்குவளை, சத்தவிடங்கேசர் தலம்" என்னும் ஆறு திருத்தலங்களில் பிரதிஷ்டை செய்வித்துத் தரிசித்து இருந்தனன்.

**தியாசகன்** — பிதுர்க்கள் பதின்மரில் மூவர்.

**தியாச்சியம்** — நக்ஷத்திரங்களில் சுபகாரியம் செய்யக்கூடாதகாலம். நக்ஷத்திரம் காண்க.

**தியுமத்சேநன்** — 1. மகாபலனுயிருந்த ஒரு அரசன் கிருஷ்ணனுல் செயிக்கப்பட்டவன்.

2. சாளுவன் பாண்டவர் சேநாபதி பிரத்தியும்நனுடன் யுத்தஞ் செய்தவன்.

3. சாளுவ தேசாதிபதி சத்தியவதனன் பிதா. சாவத்திரியின் மாமன்.

4. கிருஷ்ணனால் வெல்லப்பட்டவன்.

**தியுமந்தன்** — சுவரோசி மனுவிற்கு வநதேவதையிடம் பிறந்த குமரன்.

**தியுமான்** — 1. வசிட்டருக்கு ஊர்சையிடம் உதித்த குமரன்.

2. சூர்ய வம்சத்து மதிராஸ்வன் புத்திரன்.

3 சாளுவராஜன். ருசிகன் பொருட்டு ராஜ்ஜியத்தைக் கொடுத்தவன்.

**தியூதம்** — சொக்கட்டான் சதுரங்க முதலிய வெளிப்படைத் திருட்டு. (மநு.)

**திரசதயன்** — இருக்கு வேதத்திற் புகழப்பட்ட ஒரு அரசன்.

**திரசதன்** — புருகுத்தன் குமரன், அநரண்யன் தந்தை.

**திரசதாசயன்** — மாநதாத்ரியன் பௌத்திரன், இவன் ருக்வேதத்தாற் புகழப்பட்ட கொடையாளி.

**திரசனு** — (தம்சு) ஒரு க்ஷத்திரியன் அந்தியனான் புத்திரன், தாய் சாஸ்வதி, மனைவி காளிந்தி, புத்திரன் இளீளன்.

**திரடசுதன்** — இத்மவாகனைக் காண்க.

**திரடதன்வா** — ஒரு அரசன்.

**திரணகூபம்** — ஒரு தடாகம், பலராமர் தீர்த்தயாத்திரைகாலத்து ஸ்நாநஞ் செய்தது.

**திரணபிந்து** — 1. பந்து என்பவன் குமரன். இவற்கு மூன்று குமரர். விசாலன், சூன்யபந்து, தூம்பிரகேது. ஒரு பெண் இளிபிளை. காசிபருக்கு மாமனார், புலத்தியர்க்கு மாமன் எனவுங் கூறுவர். சுத்தியும்னன் முற்பிறப் புணர்ந்து களித்தவர்.

2. ஒரு இருடி, இவர் செய்த தவத்தைக் கெடுக்கத் தேவர் அரணி யென்ற தேவமாதை அநுப்ப அவள் இவரை மயக்க இருடி சினந்து நீ மானிட வுருக்கொள் எனச் சபித்தனர். அச்சாபம் ஏற்ற அந்த மாது போஜராஜன் புத்திரியாகிய இந்துமதியெனப் பிறந்தனள்.

3. மருத்சக்ரவர்த்தியின் வம்சத்தவனான புதன் குமரன்; இவன் குமரன் விசாலன்.

4. ஜமதக்னியின் குமாரராகிய தொல்காப்பிய மகருஷிக்கு ஒரு பெயர். இவரைத் திரணதூமாக்னி யென்பர்.

5. ஒரு இருடி; இவர்க்குச் சிவபெருமான் ஒரு [illegible]த்திலிருந்து பிரசன்னராய் அவரது குட்டநோயை நீக்கினர்.

**திரணபிந்துசரம்** — திரணபிந்து அரசனால் உண்டாக்கப்பட்ட ஒரு தீர்த்தம்.

**திரணபுருஷன்** — இவன் தேவர் முதலியோரின் இறுமாப்பைக் கெடுக்கச் சிவபிரானால் துரும்புபோல் செய்விக்கப் பெற்ற புருஷன். இவன்மீது விதி விஷ்ணு இந்திராதியர் யுத்தத்திற்கு வந்து சற்று மவனை அசைக்க வலியற்று நீங்கித் தேவியை துதித்து அவளருளால் மகாதேவனை வணங்கி உண்மை யுணர்ந்தனர். (சிவரஹஸ்யம்).

**திரணாசநன்** — கௌதமிதீரத்து இருந்த பன்னசனன் குமரன். சிவத்தைத் தரிசிக்காமல், சத்தியைத் தரிசித்த தோஷத்தால் அரக்க வுருக்கொண்டு நாரத முனிவர் சொற்படி மணிகன்னிகையில் மூழ்கி நல்லுருவ வடைந்தவன். (திருப்பூவண புராணம்).

**திரணாவர்த்தன்** — ஓர் அரக்கன், கண்ணன் குழந்தைப் பருவத்துக் கண்ணனைஅந்தரத்துத் தூக்கிச் சென்று கொல்ல முயன்று அவரால் கொல்லப்பட்டவன்.

**திரமிடம்** — கர்நாடக ஆந்திர தேசங்களுக்கிடையிலுள்ள நாடு. Part of the Deccan from Madras to Seringapatam and Cape Comorin. Its Captial wasKanchipura, mo-dern name Conjeevaram.

**திரமிடன்** — 1. இருஷபனுக்குச் சயந்தியிட முதித்த குமரன்.

2. சத்தியாதனனைக் காண்க.

**திரயநுணன்** — இருக்கு வேதத்திற் கூறப்பட்ட ஒரு அரசன்.

**திரயாரணன்** — சூர்யாரணியன். திரயாருணிரிக்ஷியன் குமரன்.

**திரவணன்** — வருணன் குமரன்.

**திராவிடம்** — 1. (இ) தமிழ், ஆந்திரம், கன்னடம், மகராட்டிரம், கூர்ச்சரம்.

2. தட்சணத்திலிருந்து கன்னியாகுமரி ஈறாக உள்ள தேசம்.

**திராவிடன்** — சூர்யவம்சத் தரசன்; இவன் யோகியாயினன்.

**திரவிணகன்** — அக்கி யென்னும் வசுவிற்கு வசோர்த்தாரையிட முதித்த குமரன்.

**திரவியத்தன்மை** — நித்யாநித்ய வஸ்துக்களில் சமவாய சம்பந்தமுடையதாயும், நித்யமரயும், குணகர்மங்களில் சமவாய சம்பந்தமில்லாததாயுமுள்ள சாதி.

**திரவியம்** — (இ) மலைபடுவன, காடுபடுவன, நாடுபடுவன, நகர்படுவன, கடல்படுவன. மலைபடுதிரவியம் - மிளகு, கோஷ்டம், அகில், தக்கோலம், குங்குமம். காடுபடுதிரவியம் - இருல், தேன், அரக்கு, நாவி, மயிற்பீலி. நாடுபடுதிரவியம் - செந்நெல்,

சிறுபயிறு, கரும்பு, வாழை, செவ்விளநீர். நகர்படுதிரவியம் - அரசன், பித்தன், மந்தி யானை, கண்ணாடி. - கடல்படுதிரவியம் - உப்பு, முத்து, பவளம், சங்கு முதலிய.

**திராவகயந்திரம்** — மருந்திட்ட பாத்திரம். அப் பாத்திரத்தின் பொருத்தமான தூம் பமைந்த நீர்நிலை மூடி எரிக்கத் தூம்பின் வழி திரவம் இறங்குவது.

**திராவிடபூபதி** — திராவிட தேசத்தரசன். இவனிடம் அகத்தியர் யாகத்திற்குப் பொருள் கேட்க இவன் அவரது எண்ணத்தை முடிக்கவில்லை.

**திராவிடம்** — தமிழ்க்கு ஆரியரிட்ட ஒரு பெயர். ஒரு தேசம்.

**திராவிடாசாரி** — வேதாந்த சூத்திரத்திற்குப் பாஷ்யஞ் செய்தவர்.

**திராக்ஷாராமம்** — ஆந்திர, கர்னாடக, மகாராட்டிர தேசங்களுக்கு இடையிலிருக்கும் பர்வதம்.

**திராக்ஷை** — இது கரடு முரடான கொடி, இது உறுதியானது. ஒவ்வொரு கொடியிலும் பல கணுக்கள் உண்டு. இதன் இலைகள் பீர்க்கனிலைபோ லிருக்கும்; பூ சிறிதாக இருக்கும். பூ மாறினவுடன் பிஞ்சுகள் கொத்தாய் முதிர்ந்து பழமாம். ஒவ்வொரு குலையில் (50) - க்கு மேற்பட்ட பழங்களிருக்கும். குலை முனை குவிந்தும் அடி பருத்துமிருக்கும். பழங்கள் பசுமை நிறமாக இருக்கும். ஒவ்வொரு பழத்திலும் (2, 3) விதைகளுண்டு. இதன் உற்பத்தி பதி வைத்தல். பழம் தின்றால் பித்த சாந்தம். தேனில் ஊறவிட்டுண்ணவும், சாராயம் செய்யவும் உதவும்.

**திரிகதுத்து** — ரசஸ்ஸு குமரன.

**திரிகடுகம்** — சங்க மருவிய நீதி நூல். இது பதினெண்கீழ்க்கணக்குகளுள்ஒன்று. இது நல்லாதனாரால் இயற்றப்பட்டது. மும்மூன்று பொருள்களை விளக்கும் வெண்பாக்கள் (கடவுள் வாழ்த்துட்பட) நூற்றொன்றுடையது.

**திரிகந்தம்** — கிராம்பூ, நாவற்பூ, சண்பகப்பூ.

**திரிகர்த்தம்** — பாகலீக தேசத்திற்குத் தென்மேற்கிலுள்ள விபாசைநதிக்குச் சமீபத்திலுள்ள தேசம். இது ஆர்யாவர்த்தத்திற்கு மேற்கிலுள்ள தேசம். இத் தேசாதிபதி திரிகர்த்தன். Jalandhar, a part of the district of Lahore.

**திரிகாலவாசுதேவர்** — யதுகுல பேதம்.

**திரிதுந்து** — (ச.) சுசியின் குமான், பிரமனுக்குச் சாரதி, இவன் குமரன் சாந்திரதன்.

**திரிகூடம்** — ஒரு பர்வதம்.

**திரிகூடராசப்பகவிராயர்**—இவர் குற்றாலம் பாண்டிநாட்டில் மேல் அகரம் எனும் கிராமத்தில் வேளாளர் மரபில் பிறந்தவர். மகாகவி, இவர் காலம் முத்துவிஜயரங்க சொக்கநாதநாயகர் காலம், அவர் இவர்க்கு நில முதலிய கொடுத்து ஆதரித்தார். இவர் குறவஞ்சி பாடியதால் களிப்படைந்த அரசர் இவர்க்குக் கொடுத்த இடத்திற்குக் குறவஞ்சி மேடு என்று இப்பொழுதும் வழங்குகிறது. இவர் செய்த நூல்கள் திருக்குற்றாலபுராணம், குற்றாலக் குறவஞ்சி, குற்றாலமாலை, குற்றாலச்சிலேடை வெண்பா, குற்றாலயமகவந்தாதி, குற்றாலவுலா, பரம்பொருள்மாலை, குற்றாலக்கோவை, குழல்வாய்மொழிகலிப்பாமாலை, கோமளமாலை, குற்றாலம் பிள்ளைத்தமிழ், நன்னகர்வெண்பா, குற்றாலவெண்பா அந்தாதி முதலிய.

**திரிசங்கு** — 1. சூர்யகுலத்தரசன், திரிபந்தனன் குமரன், பாரி கேகய ராசபுத்திரியாகிய சத்யவதி, இவன், தான் உடலுட சுவர்க்கமடைய வேண்டித் தனது ஆசாரியராகிய வசிட்டமுனிவரைக் கேட்க அவர் மறுத்ததால் ஆசாரியரைக் கோபித்தனன். அதனால் வசிட்டர் திரிசங்குவை சண்டாளனாகச் சபித்தனர். திரிசங்கு விச்வாமித்ரரிடம் அடைந்து நடந்ததைக் கூற விச்வாமித்ர முனிவர் தமது தபோபலத்தினால் போகச் செய்து சுவர்க்கத்தை அடைந்தனன். அவ்விடம் தேவர்கள் சண்டாளதேகமுள்ள இவனைக் கண்டு தலைகீழாய்த் தள்ள விழுகையில் விச்வாமித்திரர் இவனுக்கு அபயம் தந்து ஒருபதம் தரப்பெற்று அந்தரத்தில் நின்றவன். இவன் குமரன் அரிச்சந்திரன். சூர்யாரண்யன் குமரன் எனவுங் கூறுவர். பிருது குமரன் எனவுங் கூறுவர். (பாகவதம்).

2. இவன் திரையாருணன் குமரன்; இவனுக்குச் சத்தியவதனன் எனவும் பெயர். இவனது தீச்செயலால் இவனை இவன் பிதா வனத்திற் கோட்ட அவ்விடத்தில் இவன் விச்வாமித்திரர் குடும்பத்தைக் காக்கத் தீத்தொழில் செய்துகொண்டு வருகையில் இவன் பிதா வசிட்டரை நோக்கி இராஜ்யத்திற்குக் குமரனில்லையென இன்னும் சிறிது நாளில் சத்தியதனன் இராஜ்யம் பெறுவானெனக் கூறிச் சத்தியவதன

ணத தான் தவத்திலிருக்கையில் ஏவல் செய்யக் கட்டளையிட்டுப் பன்னிரண்டு வருஷம் யோகத்திருந்தனர். அச் சமயத்தில் விசுவாமித்திரர் குடும்பத்தைக்காக்க உணவுகாணப்படாது வசிஷ்டதேனுவைக் கொன்று விசுவாமித்திர குடும்பத்திற்குக் கொடுத்துத் தானும புசித்தனன். இதனை யறிந்த வசிட்டர் உன்னை இப்பொழுதே கொல்வேன் உன் தந்தைக்கு உன்னை அரசனுக்கு கிறேனென்று வாக்களித்ததால் மனம் வரவில்லையாயினும், நீ பரஸ்திரீகளைப் புணர்ந்ததும், ஜீவஹிம்சை செய்ததும், பசுவைக் கொன்றதுமாகிய மூன்று குற்றங்களைச் செய்தனை உன் குற்றத்திற்காக முன்னமே யுன்தலையில் சங்கினை யடிக்கவேண்டும்; அவை மூன்றினையுஞ் சேர்த்து அடிக்கிறேனென்று அவன் தலையில் சங்கடிக்கச் சத்தியவதனன் எனும் பெயர் நீங்கித் திரிசங்காயினன். (சிவமகாபுராணம்). இவன் தேவி சத்யரதை. (சங்கு - முளை.) சத்திய விரதனைக்காண்க.

3. அவிபூ குமரன் இவன் குமரன் சித்திரா தன்; இவன் ஒருவேதியன் கிருத்திகா விரதம் அநுஷ்டித்து அரசன் ஆயினன்.

**திரிசடை** — விபீஷணன் குமரி. சாநகி இலங்கையில் சிறையிருந்தகாலத்து அவளைத் தேற்றியவள். பிரமாத்திரத்தால் மூர்ச்சித்த இராமலக்குமணரைக்கண்டு சீதாபிராட்டி துக்கித்தகாலத்து அவளைத் தேற்றியவள்.

**திரிசதசு** — (ச.) புருகுச்சன் குமரன், (சூ.) மாந்தாதாவுக்கு இந்திரன் இட்டபெயர்.

**திரிசந்திதிகை பீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று.

**திரிசஷ்டிசலாகாபுருஷர்கள்** — சைநசமயங் காண்க.

**திரிசகன்** — நாலாமன் வந்தரத் திந்திரன்.

**திரிசிரன்** — 1. விசிரவசுவிற்குக் காலையிடத் துதித்த குமரன். இவன் சூர்ப்பநகையாற் றூண்டப்பட்டு இராமபிரானிடம் யுத்தத்திற்குவந்து இரண்டு தலையிழந்து பிறகு ஒரு சிரத்துடன் மாயத்தால் யுத்தஞ் செய்திறந்தவன். இவனுக்கு மூன்றுசிரம்.

2. சநகர்சனைக் காண்க.

**திரிசிரா** — இராவணன் குமரன்; அதிகாயன் யுத்தத்தில் அநுமனால் கொல்லப்பட்டவன்.

**திரிசூல பீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று.

**திரிசொல்** — கற்றவர்க்கே பொருள் விளங்குஞ் சொல்.

**திரிதசீ** — அகத்தியர் குமரர்; தாய் உலோபாமுத்திரை.

**திரிதண்டி** — சந்நியாசி இவன் வாக்தண்டம், கர்மதண்டம், மனோதண்டம் மூன்றுமுடைமை யினிப் பெயர் பெற்றான். (வாயுபுராணம்).

**திரிதர்** — கௌதம புத்திரர், இவர் வேதத்தில் வல்ல சாந்தர் இவர்க்கு ஏகதர், திவிதர் என இரண்டு சகோதரர் இருந்தனர். இவர்கள் யாகத்தின் பொருட்டுப் பொருள் சம்பாதிக்க விரும்பித் திரிதரை முன்னிட்டுப் பொருள்களும் பசுக்களும் சம்பாதித்து வருகையில் திரிதர் முன்சென்றார். சென்ற திரிதருக்குச் செந்நாயொன்று காணப்பட்டது. அதைக் கண்டு பயந்து திரிதர் கிணற்றில் விழுந்தார். பின்வந்த சகோதரர்கள் இவரால் நமக்கு லாபங் கிடையாதென்று கிணற்றிலேயே விட்டுச் சென்றனர். திரிதர் கிணற்றிலிருந்தபடி அடைந்த ஜலத்தைத் தோண்டித் தொங்கிய கொடியைச் சோமரசமாகவும் நீரை நெய்யாகச் செய்து ஓமஞ் செய்தார். தேவர்கள் இவர் செய்த யஞ்ஞத்திற்கு வந்து பாகங்கொண்டு அவரைக் கிணற்றினின்றே சரஸ்வதியை அக் கிணற்றில் பெருகச் செய்தனர். சரஸ்வதி பெருகி யிவரை வெளிப்படுத்தினள். திரிதர் தேவர்களை நோக்கி இதில் எவர்கள் ஸ்நானஞ் செய்யினும் அவர்கள் எல்லா யாக பலன்களையுமடைய வரம் பெற்றனர். இவர் தம்மைக் கிணற்றினின்று மீட்காத உடன்பிறந்தாரைச் செந்நாய் குரங்குகளாகச் சபித்தனர். பலராமர் தீர்த்தயாத்திரையில் இதில் ஸ்நானஞ்செய்தார். (பா - சல்.)

**திரிதன்வா** — (சூ.) விசுமன் குமரன்; தண்டியால் சிவநாமம் ஓதி அச்வமேதபல மடைந்தவன்.

**திரிதன்வன்** — திரையாரணி தந்தை. சுமநன் குமரன்.

**திரிதன்** — 1. பிரமன் புத்திரன்.

2. கௌதம புத்திரன்.

**திரிதிவை** — ஒருநதி; இது பாரிபத்ர பர்வதத்தில் உற்பத்தியாவது.

**திரிதினஸ்பிர்க்கு** — ஒரு திதியாவது, ஒரு நக்ஷத்திரமாவது, ஒரு யோகமாவது மூன்று நாட்களிற் கலந்திருப்பது.

**திரிதூலமுனி** — ஒரு தவசி.

**திரிபணி** — 1. அஃதாவது உபமானப்பொருளானது அப்பொழுது நிகழ்கின்ற செய்கையிற் பயன்படுதற் பொருட்டு உபமே

யத்தி னுருவத்தைக்கொண்டு பரிணமித்த லாம். இதனை வட நூலார் பரிணாமாலங் காரம் என்பர்.

2. உவமைப் பொருள் உபமேயத்தின் உருவத்தைக்கொண்டு வேறுபடுதல். (பரிணாமாலங்காரம்).

**திரிபந்தனன்** — (சூ.) திரியகுலான் குமரன்.

**திரிபாகி** — இது சொல்லணியி லொன்று. மூன்றெழுத்தாய் ஒன்றின் பெயராய், முதலுமீறும் ஒன்றின் பெயராய், இடையுமீறும் ஒன்றின் பெயராயினவென்று வாசகம் செய்வது. பாதிரி என நிறுத்தி, பாதிரி, பாரி, திரி, என்றவிழ்ப்பது. (யாப்பு - வி.)

**திரிபாதத்திரிமூர்த்தி** — சிவமூர்த்தி ஒருவரே தம்மில் பிரமவிஷ்ணுக்களை யொடுக்கிக் கொண்டு தாம் ஒருவரே திரிமூர்த்தி சுவரூபர் என்பதைத் தெரிவிக்க நின்ற திருக்கோலம்.

**திரிபுட்கரயோகம்** — முக்கால் நாளான புனர்பூசம், விசாகம், பூரட்டாதி; கால் நாளான கார்த்திகை, உத்திரம், உத்திராடமும், பத்திரையான துதியை, சப்தமி, துவாதசியும், வெள்ளி, வியாழம், செவ்வாய் சேர்ந்த நாள் திரிபுட்கரயோகமாம். இவ்யோகத்தில் மரித்தல், சுடுதல் செய்தால் அக்குடியில் மூவர் மரிப்பர். (விதானமாலை).

**திரிபுராதாசர்** — இவர் மதுராநகரத்தரசனது மந்திரி. இவர் இல்லறத்து வெறுப்புள்ளவராய் மாதவன்மீது சிந்தைகொண்டு தமக்கிருந்த பொருள் முழுதும் பாகவதர்க்குக் கொடுத்துப் பிக்ஷைசெய்துகொண்டு துளசிவனத்தில் கண்ணனைக்கண்டு அவன் வடிவழகை யனுபவித்திருக்கையில் ஒரு நாள் பெருமாளுக்கு ஒரு போர்வையிட எண்ணங் கொண்டு பொருளிலாமையால் மசிக்கூட்டினை விற்றுப் போர்வை வாங்கி அர்ச்சகனிடந் தந்து பெருமாளுக்குப் போர்க்கவென அர்ச்சகன் இது பெருமாளுக்குப் பற்றாத போர்வையென்று படுக்கை பாகக் கொண்டனன். பெருமாள் தமக்குக் குளிர் கலக்கச் செய்து நடுக்க அர்ச்சகர் எங்குள்ள போர்வைகளும் போர்க்க நின்றிலது. தாசர் கொடுத்த கலைமேல் துயின்றோன் கனவிடைப் பெருமாள் சென்று தாசர் கொடுத்த கலையினைப் போர்க்கின் குளிரடங்குமென அவ்வாறு செய்யக் குளிர் நின்றது. இதனை யறிந்த பாகவதர் தாசரைப் பணிந்து போற்றினர்.

**திரிபுரபைரவிபீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று.

**திரிபுரம்** — 1. தாரகாசுரன் குமாரராகிய வித்துற்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் இவர்கள் மூவரும் சிவபூஜாபலத்தால், பொன் வெள்ளி, இரும்புக் கோட்டைகளைப் பெற்று அக்கோட்டைகளுடன் பறந்து சென்று தேவர்களை வருத்தியிருந்தனர். இதனால் தேவர், சிவமூர்த்தியிடம் முறையிடச் சிவபிரானிவர்க ளிடத்துள்ள சிவபற்று மாறில் இவர்க்குச் செல்வங்குறையுமெனக்கூறக் கேட்டுக் களிப்புடன் விஷ்ணுமூர்த்தியிடம் சென்று சிவமூர்த்தி திருவாய் மலர்ந்தருளியதைக் கூறினர் விஷ்ணுமூர்த்தி, தாம் புத்தராயவதரித்து நாரதரைச் சீடராகக் கொண்டு திரிபுராதிகளிடஞ் சென்று அவர்களுக்குள்ள சிவப்பற்றைக் கெடுத்தனர். அதனால் புத்தர் சிவவிரோதிகளாயினர். சிவமூர்த்தி இவ்வசுரரது இறுமாப்பைக் கெடுக்க எண்ணித் தேவர்களை நோக்கித் தேர்கொண்டுவரக் கட்டளையிட்டனர். விஷ்ணுமூர்த்தி, சூர்ய, சந்திரர்களைத் தேருருளையாகவும், காலம், வானம், உதயகிரி, அத்தகிரி, காட்டை, கணம், லவம், வேள்வி, ஐம்பூதம், இந்திரியம் இவற்றை முறையே பார், மேலிடம், நுகம், முன் கொம்பு, கொம்புக்காதாரப் பொருள்களாகவும், புராணங்களைப் படமாகவும், உலோகாலோகபர்வதம் படியாகவும், அஷ்டகுல பர்வதங்கள் விதானமாகவும், அண்டமுகடு கொடிஞ்சியாகவும், இடைவெளி தட்டாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், வாசுகியை நாணாகவும், மேருவை வில்லாகவும், பிரமனை முட்கோல் பிடித்துத் தேரைச்செலுத்தும் சாரதியாகவும் செய்வித்துத் தேர் முடிந்ததென்று கூறினர். சிவமூர்த்தி தேர்மேல் ஆரோகணித்து வில்லைக் கையிலேந்தி விஷ்ணுமூர்த்தியைப் பாணமாக்கி எய்யத் தொடங்குகையில் விஷ்ணுமூர்த்திக்கு மனதிலுதித்த இறுமாப்பை யெண்ணித் திரிபுரத்தை நோக்கியும் இவரது எண்ணத்தை யெண்ணியும் சிரித்தனர். இச்சிரிப்பின் சுவாலையால் திரிபுரம் தீப்பட்டது. இதில் மேற்கூறிய மூன்று அசுரர் சிவபூசை விடாமல் இருந்தவராதலால் தீப்படாமல் காக்கப்பட்டனர்.

2. மற்றொரு காலத்தில் [illegible] பொருட்டுச் சிவபிரான் வேதச்சா நா [illegible]

தேர்ச்சவும் உபநிடதங்கள் குதிரைகளாக வும், உமையவள் சாரதியாகவும் பிரணவம் சவுக்காகவும் கால சக்கரம் வில்லாகவும், மகாமாயை நாணுகவும், பாசுபதாத்திரம் பூட்டி அவ் வசுரனது வலி யடக்கினர்.

3. ஒருகாலத்து, சத்ததந்து வென்பான் செய்த யாகத்தை அழித்தற் பொருட்டு அவி யுண்ண வந்த தேவர்களை ஆகாசமே தோாகவும், வாயு குதிரையாகவும், அக்னி வில்லாகவும், சந்திரன் நாணுகவும், வருணன் அம்பாகவும் குமாரக்கடவுள் தேர்ப் பாகனுகச் சென்று தேவர்களை வென்றவர்.

4. ஒரு வித்யாதர நகரம்.

**திரிபுராந்தகன்** — திரிபுரத்தை எரிக்க எழுந்த சிவன் திருவுரு.

**திரிபுராரி** — 1. திரிபுரமெரித்த சிவமூர்த்தி.

2. ஒரு வேதியன் கங்கை யாடச்சென்று வழியில் யமுனை, மணிகன்னிகை ஆடுக எனக் கூறக் கேட்டுப் மறித்துச் சென்று காசி க்ஷேத்திரத்தினையும், கங்கையையும் காணுது அசரீரி யமுனை சொற்படி செய்க எனக் கூறக்கேட்டுத் திரும்புகையில் பேய்கள் தங்கள் பாபம் ஒழிய மணிகன்னிகை ஆட வேண்ட அங்ஙனம் உடன்பட்டுத் தீர்த்தம் ஆடி நலம் அடைந்தவன். (வேதாரண்ய - புராணம்).

**திரிபுருஷ்டன்** — வஸுதேவருக்குத் திருதியிடம் பிறந்த குமரன்.

**திரிபுவனதேவன்** — வச்சணந்தி, குணவீர பண்டிதர் காலத்திலிருந்தவன்.

**திரிபுவனவீரதேவராயன்** — ஒரு அரசன், பட்டரைத் தம்மிடம் அழைத்தவன்

**திரிபுஷ்கரம்** — ஒரு மகா க்ஷேத்ரம்.

**திரிமதி** — ஆனகதுந்துபி குமரி, இவள் ஒரு இயக்கனை மணந்தவள். இவள் குமரர், சுகேசன், சுக்ரீவன், வீரன், போசன், ஆவாகன்.

**திரிமூர்த்தி** — 1. பிரம்ம, விஷ்ணு, ருத்திரர்கள்.

2. அஷ்டவித்தியேசுரரில் ஒருவர்.

**திரிமூர்த்திவாசம்** — காஞ்சிக்கு ஒரு பெயர்; திரிமூர்த்திகளும் இத் தலத்தில் வசித்தலால் வந்த பெயராம்.

**திரியதுணன்** — (சூ.) அரியச்வன் குமரன்.

**திரியம்சன்**—(தா.) விப்ரசித்திக்குப் புத்ரன்.

**திரியம்பகம்** — சிவமூர்த்தியின் வில், இது தக்ஷயஞ்ஞ அதத்தில் எடுத்தது.

**திரியம்பகன்** — மூன்று கண்களுடைய சிவமூர்த்தி, கணபதி, வீரபத்திரர் முதலியவருக்குப் பெயர்.

**திரியு** — யயாதியின் புத்திரன், இவன் புத்திரன் பப்புரு.

**திரிலிங்கதேசம்** — (தெலுங்க தேசமெனப் படும்). காளேச்வரம், க்ஷிதிதாம், திராக்ஷாராமம், அல்லது ஸ்ரீசைலம் காளேச்வரம் பீமேச்வரம் இவைகளுக்கு நடுவிலிருக்கும் தேசம். இவர்கள் பேசும் பாஷை தெலுங்கு.

**திரிலோகசோழன்** — இவன் சோழ ராஜாக்களில் ஒருவன். இவனைப் பிரமகத்தி பிடிக்க இவன் காஞ்சிநதி மூழ்கிப் போக்கிக் கொண்டான்.

**திரிலோசநன்** — மூன்று கண்களையுடைய சிவமூர்த்தி.

**திரிலோசநசிவாசாரியார்** — இவர் சித்தாந்த சாராவளி யென்னும் சிவாகமபத்ததி திருவாய் மலர்ந்தவர். இவர் சிவாகமங்களையாராயச் சிவமூர்த்தியை வேண்டி மூன்று கண்கள் பெற்று இப் பெயர் பெற்றனர். இவர் சைவ ஆமர்த்தக மடத்தைச் சேர்ந்த சம்புசிவாசாரியரின் மாணுக்கர்.

**திரிலோசனதாசர்** — இவர் தட்டார் ஜாதியைச் சேர்ந்தவர்; இவரை அரசன் அழைத்து ஜேகிர் எனும் பணிசெய்து கொடுக்கும்படி பொன்மணி முதலிய வுதவி இதனை மூன்று தினத்திற் செய்துகொடுக்கக் கட்டளையிட்டனன். தாசர் உடன்பட்டு வருகையில் பாகவதர் எதிர்வரக் கண்டு அவர்களை உபசரித்து இரண்டு நாட்கள் வரையிலும் வைத்திருந் தனுப்ப அரசன் தொழிலைத் தட்டார் மறந்து அரசனுக்கு அஞ்சி காட்டிலொளித்தனர். இவருக்கு வருந் துன்பத்தை நீக்கப் பெருமாள் இவரைப் போல் உருக்கொண்டு ஜேகிர் எனும் பணி செய்துகொண்டு அரசனிடஞ் சென்று கொடுக்க, அரசன் மகிழ்ந்து கொடுத்த வெகுமானங் கொண்டு தட்டாரது மனைவியாரிடங் கொடுத்துப் பாகவதருக்கு உணவளிக்கச்செய்து தாம் அந்த உணவில் சிறிது வஸ்திரத்தில் முடிந்துகொண்டு காடடைந்து தாசரைக் கண்டு தாம் திரிலோசனன் பாகவதருக்கிட்ட அன்ன மயக்கத்தால் வழி தெரியாது ஈண்டடைந்தேன் நீ களைத்திருக்கிறாய் இவ் வுணவில் சிறிது அருந்துக என உண்பித்து அத் தாசர், தம்மை யுடனழைத்துவரப் பின்றொடர்ந்து

வீடடைந்து வளம் நோக்கி மனைவியை வினவ அவள் எல்லாம் நீ செய்திருக்க வினவுவ தென்னென வியந்து இது பெருமாளின் விளையாட்டெனப் புறத்தில் வந்து பின்றொடர்ந்தவரை நோக்கக் காணாது பெருமாள் தமக்காக வருந்தியதற்கு வருந்தித் துதித்திருந்தவர்.

**திரிவக்கிரன்** — ஒரு அரக்கன்; தேவி சுசீலை கபாலபரணனைக் காண்க.

**திரிவக்கிரை** — மதுராபுரியில் கண்ணபிரான் திருவவதரித்துத் திருவிளையாடல் புரிந்த காலத்தில் அவர்க்குச் சந்தனம்பூசி அவரைக் கூட எண்ணங்கொண்ட குப்சை; இவளைக் கண்ணபிரான் தீண்டிக் கூனை நிமிர்த்தி இவளிடம் உபசுலோகரைப் பெற்றனர்.

**திரிவிக்ரமரூபம்** — இரண்டு முகம், நான்கு தோள் மேலிரண்டு கைகளும் இரண்டு கமலம் பிடித்தவராய் மற்ற இரண்டு கைகளும் அஞ்சலியத்தராய் கறுப்பு ரத்னாபரணம், கறுப்பு வஸ்திரம் உடையராயிருக்குஞ் சூரியமூர்த்தி.

**திரிவிக்ரமன்** — வாமனவுருக்கொண்டு மாவலிபாலடைந்து உலகளந்து தமது தரிசனந் தந்த விஷ்ணுமூர்த்தியின் திருக்கோலம்.

**திரிவுக்காட்சி** — ஒரு பொருளை மற்றொரு பொருளாக உணர்தல். (தரு.)

**திரிவேணி** — கங்கை யமுனை சரஸ்வதி கூடுமிடம்.

**திரிவேணி சங்கமம்** — கங்கை, யமுனை, சரஸ்வதி முதலிய மூன்று நதிகள் கூடுமிடம். பிரயாகை (அலகாபாத்) இவ்விடம் நீராடினோர் சுவர்க்கமடைவர். தேகத்தை விட்டோர் அமிர்தமாகிய மோக்ஷத்தைப் பெறுவர். (இருக்கு).

**திரிஷ்தர்** — ஒரு முனிவர், இவர் கார்த்தவீரியார்ச்சுனனுக்கு அக்னியை அஸ்திரமாக அருள் செய்தவர்.

**திரிஃயு** — யாயித புத்திரன் (2) சந்திரவம்சத்து மதிமான் புத்திரன்.

**திரிஹாயாணி** — வேதவதியைக் காண்க.

**திருஆடானை** — துருவாசமுனிவர் பிருகுமுனிவரது ஆச்ரமம் அடைந்த காலத்து பிருகு அவரை உபசரியாததால் துருவாசர் அவரைத் தலைஆடுருவாகவும் உடல் யானைவடிவமாகவும் சபித்தனர். இச்சாப வடிவொழிய பிருகு பூசித்த தலம். (வீரசிங்-புரா.)

**திருஆப்பனூர்** — சோழாந்தகன் என்னும் பாண்டியனிமித்தம் சிவபெருமான் ஆப்பினிடம் தோன்றிய தலம். (வீரசிங் - புரா.)

**திருக்கச்சிநம்பிகள்** — இவர் பிறப்பால் வைசியர், ஆளவந்தார் திருவடி சம்பந்தி, சங்குகர்ணாம்சம், இளையாழ்வாரைக் காணக் காஞ்சிக்கு எழுந்தருளியபோது உடையவர், வர்ணாச்சிரமம் தவறித் தம்மைத் தண்டன் சமர்ப்பிக்க வெண்ணுகையில் தடுத்து அவர்க்கிருந்த ஐயப்பாடுகளைப் பெருமாள் நியமனப்படி இளையாழ்வாருக் கறிவித்தவர். இவர் கச்சித் திருவருளாளனுக்கு ஆலவட்ட கைங்கர்யம் செய்துவரும் நாட்களில் பெருமாள் இவரிடம் அன்புடன் வார்த்தை சொல்லி வருவர். இவர், ஒருநாள் அருளாளன் என்னும் சிறுவனைத் தீவட்டி பிடிக்க என்று கூறிச் சந்நிதிக்கு எழுந்தருளினர். நம்பி சந்நிதிக்கு எழுந்தருளியபின் மழை பிடிக்கவே, அருளாளன் வீடுவந்து உறங்கினன். நம்பி ஆலவட்ட கைங்கர்யத்தை முடித்துச் சிறுவனைத் தேடச் சிறுவனுக்குப் பதிலாகப் பெருமாள் தீவட்டி பிடித்து வந்து நம்பியை வீட்டில்விட நம்பியின் மனைவியார் எதிர்கொண்டு சிறுவன் முன்பே வீடு வந்து சேர்ந்ததனால் தீவட்டி பிடிப்பவன் யார் என்றனர். நம்பி சிறுவனை நோக்கப் பெருமாள் மறைந்தனர். நம்பி பெருமாள் எழுந்தருளியதைப்பற்றி வருந்தப் பெருமாள் உனதன்பைப் பலருமுணர்ந்து பிழைக்க இவ்வகை செய்தனமென்றனர். நம்பி சிலநாளிருந்து பரமபதமடைந்தனர். இவர் ஸேநாபதியாழ்வாரம்சம். இவர் திருமழிசைக்கடுத்த பூவிருந்தவல்லியில் வீரராகவ செட்டியார்க்குக் கமலையார் என்கிற தேவியாரிடம் சகஞ (கூகூக)-க்குமேற் செல்லாநின்ற சௌம்யவருஷம் மாசிமீ சுக்கில தசமி வியாழக்கிழமை அவதரித்தவர். இவர் தமது சகோதரருடன் தமக்கு வைத்த நிதிகள் எல்லாம் பெருமாள் விஷயத்தில் செலவிட்டுப் பெருமாள் நியமனப்படி செங்கழுநீர் சிந்தியிருந்த வழி நோக்கிச் சென்று கச்சிநகர் புகுந்து பெருமாளைச் சேவித்து நியமனப்படி திரு ஆலவட்ட கைங்கர்யஞ் செய்திருந்தவர். இவர் காஞ்சிபுரத்தில் கைங்கர்யஞ் செய்துகொண் [illegible] க்கையில் வள்ளுவர் ஒருவர் இவர் [illegible] தூளிகளைத் தம் சிரசில் கொண்டுவருத [illegible] கண்டு அவரை யாது காரணமென் [illegible] கேட்க அவர் பாகவத பக்தியால் நன்மை உண்டாமென், நம்பிகள் இது தக்க [illegible] றென வள்ளுவர் ஏது தக்கதோ அ [illegible]

பெருமாளை வினவி அருளுக என அவ்வாறே வினவிப் பாகவத பாதரேணுவால் பதவியுண்டாமெனக் கூற வள்ளுவர் தேவரீர் திருவடிப் பிரபாவத்தாலிது எனக்கு வாய்த்த தாகையால் தேவரீரிருக்குப் பேறு வாய்க்கும் காலம் வாய்ப்பதையும் பெருமாளை வினவிக் கூறுவிரேல் அருகிருந்து சேவித்திருப்பேனென அவ்வாறே பெருமாளைப் பேறு வாய்க்குங் காலம் கேட்க ஆசார்ய அபிமானத்தால் முத்தி சித்திக்குமெனக் கேட்டுப் பெரிய நம்பிகளிடம் உருமாறிச் சென்று மாடு மேய்ப்பவனைப்போல் கைங்கர்யம் செய்துகொண்டிருக்கையில் ஒருநாள் பெரிய நம்பிகள் கிராமாந்தரஞ் சென்று மீள்கையில் மழை வெள்ளத்தில் வண்டி செலுத்திவந்து விளக்குக் கூட்டை ஒரு கையிலும் மாடுகளை ஒரு கையிலும் பற்றி வண்டி யழுந்துமிடங்களில் வண்டியைத்தூக்கித் தாம் நம்பிகளைக் குருமாளிகையில் கொண்டு சேர்த்தனர். பிறகு திருக்கச்சிநம்பிகள் மழையால் வருந்தி மூலையில் தாம தரித்திருந்த ஈரவுடை களைந்து பழைய வுடையை உடுத்தித் திருமாளிகைப்புறத்தி லிருக்கப் பெரியநம்பிகள் வேறு உடை கொண்டு மாட்டுக்காரனைத்தேடக்கச்சிநம்பிகள் எதிர்வரக்கண்டு திருக்கசிநம்பிகள் என வுணர்ந்து காரணம் வினவி அளவளாவி யிருந்தனர்.

**திருக்கண்ணபுரத்தந்தாதி** — முனையதரையர்க்கு எழுதி விடுத்த செய்யுள். "இன்றுவரிலென்னுயிரை நீபெறுவை யிற்றைக்கு, நின்றுவரிலதுவு நீயறிவை - வென்றி, கலவிமுயங்கியவா றெல்லாம், நினையாயோ நெஞ்சத்து நீ." (தமிழ்நாவலர் சரிதை).

**திருக்கண்ணமங்கையாண்டான்** — நாதமுனிகளையாச்ரயித்த ஸ்ரீவைணவர். இவர் இரண்டு நாய்கள் சண்டை யிட்டு இறக்கக் கண்ட சொந்தக்காரர் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு இறக்கக் கண்டு, அப்ராக்ருதநித்ய சம்பந்தியான பெருமாள் திருவடிகளில் பரநியாசம் செய்தபின் ஒன்றும் செய்யக்கூடாதெனப் பெருமாளை ஆராதித்து முத்தி யடைந்தவர். இவர் திருக்கண்ணமங்கையில் வாழ்க்கைப்பட்டிருந்த ஸ்ரீமந் நாதமுனிகளின் உடன்பிறந்தாள் குமரர். இவர் பராபவ௵ ஆவணி மீ திருவோண நக்ஷத்திரத்தில் அவதரித்து லக்ஷ்மீநாத தர்தாசார்யரென்கிற பெயர் பெற்று எல்லாச் செல்வங்களையும் பெற்றிருந்தநால் திருக்கண்ணமங்கையாண்டான் என்னப்பட்டு நாதமுனிகள் திருவடிகளில் ஈடுபட்டுக் கைங்கர்யபரரா யிருக்கையில் ஒருநாள் பல்லக்கிலேறி வருகையில் இரண்டு சூத்திரர் நாய்கள் பொருட்டு மாய்ந்து கிடத்தலைக் கண்டு விரக்தி பூண்டு மௌனத்துடனிருந்து பெருமாளது தீர்த்தபிரசாதம் ஸ்வீகரித்துச் சில நாட்களிருந்து பெருமாள்மேல் வீடுதரப் பரமபதமடைந்தவர்.

**திருக்கண்ணப்பதேவர்மறம்** — நக்கீரர் கண்ணப்பரது அன்பினை யெடுத்துப் பாடிய பிரபந்தம். கல்லாடரும் ஒன்று இப்பெயராலியற்றினர்.

**திருக்கண்ணபுரத்தாச்சான்** — எழுபத்தினாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை).

**திருக்கலிகன்றிதாசர்** — நம்பூர் வரதராஜருக்கு ஒரு பெயர். நம்பிள்ளைக்கும் பெயராம்.

**திருக்களிற்றுப்படியார்** — சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கினுள் ஒன்று. திருக்கடவூர் உய்யவந்தார் அருளிச் செய்தது.

**திருக்காளத்தி புராணம்** — திருக்காளத்தி மான்மியம் சொன்ன நூல், கருணைப்பிரகாசதேசிகர் செய்தது

**திருக்குருகூர்தாசர்** — ஆளவந்தார் திருவடி சம்பந்தி.

**திருக்குருகூர்ப்பெருமாள் கவிராசர்** — இவர் பாண்டி மண்டலத்துத் திருக்குருகூரினர். இவர் வைசிய வைணவர். இலக்கிய இலக்கணங்களில் வல்லவர். மாறனலங்காரம், மாறனகப்பொருள், குருகைமான்மியம், மாறன்கிளவிமணிமாலை முதலிய இயற்றியவர்.

**திருக்குருகை** — தக்ஷிணபினாகினிக்குத் தென் கரையிலுள்ள விஷ்ணுத் தலம்.

**திருக்குருகைப்பிரான்பிள்ளான்** — பிரசண்டாம்சரான இவர், கலி (௪௧௮௨)-க்குமேல் பிலவ௵ ஐப்பசி மீ திங்கட்கிழமை திருமலையில் (திருவேங்கடம்) அவதரித்தவர். (குருபரம்பரை).

**திருக்குருகைப்பிரான்** — பிள்ளானுக்கு உடையவர் இட்ட திருநாமம். பெரிய திருமலைநம்பியின் குமரர்; இவர் குமரர் புண்டரீகாக்ஷர்.

**திருக்குருகைப்பெருமாள்கவிராயர் அல்லது சடையன்** — இவர் மாறனலங்காரமெழுதிய

அணியிலக்கண மியற்றியவர். இதற்கு உரை தென்திருப்பேறையூரினராகிய காரி இரத்தின கவிராயரா லியற்றப்பட்டது. இதில் உள்ள உதாரணச் செய்யுட்கள் பலவும் சடகோபர் விஷயமானவை.

**திருக்குறள்** — இது, திருவள்ளுவ நாயனரா லியற்றப்பட்ட தரும நீதிநூல்; இது அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பாலாகவும், இல்லறவியல், துறவறவியல், அரசியல், அங்கவியல், ஒழிபியல், களவியல், கற்பியல் என எழு வியல்களாகவும் (கங்ரு) அதிகாரங்களாகவும் வகுக்கப்பட்டது. இந்நூற்கு தருமர், மணக்குடையர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் முதலிய உரையாசிரியர்கள் உரை இயற்றினர். இவ்வுரைகளுட் பரிமேலழகர் உரை சிறந்ததாகும். இதற்கு முப்பானூல், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தமிழ்மறை, பொதுமறை எனப் பெயர். இது சங்கமருவிய பதினெண்கீழ்க்கணக்கி லொன்று. இதனது பெருமையைத் திருவள்ளுவமாலையா லறிக.

**திருக்குறிப்புத்தொண்ட நாயனர்** — இவர் தொண்டைநாட்டில் காஞ்சிபுரத்தில் ஏகாலியர் குலத்தில் திருஅவதரித்துச் சிவனடியவர் குறிப்பின்படி அவர்க்கு ஆடை முதலிய அழுக்கு நீக்கி உதவிவருவர். இவ்வகை செய்துவரும் நாட்களில் சிவபெருமான் ஒரு விருத்தராய் அழுக்கடைந்த கந்தையுடன்வர அவரைத் தரிசித்த நாயனர் எதிர்கொண்டு பணிந்து உம்முடைய கந்தையைத் தந்தால் அடியேன் அழுக்கு நீக்கித் தருகிறேன் என்றனர். விருத்தர், இது கந்தையாயினும் குளிர்க்கு ஆதரவாயிருக்கும், பொழுதுபோகுமுன் கொடுக்கின் தருகிறேன் என்றனர். நாயனர், அதற்கு உடன்பட்டுக் கந்தையை வாங்கிக் கசக்கி வெள்ளாவியில் வைத்து மீண்டும் கசக்கப் புகுந்தனர். அப்போது வான வெயில்மூடி மழை பெய்தது. நாயனர், வாக்குத் தவறும் எனவும், விருத்தர் குளிரால் வருந்துவர் என எண்ணியும், பெரியவர்க்குத் தீங்கு செய்தவன் ஆகிறேன் என நினைத்தும் தாம் ஆடைவெளுக்கும் கருங்கற்பாறையில் தமது சிரத்தை மோதக் கணிசையில் சிவமூர்த்தி பாலநின்றே தமது திருக்கரத்தால் நாயனரது சிரத்தைப் பிடித்து "அன்ப உனது பத்திமையை மூவுலகும் பரவச் செய்தனம்" இனி நம் உலகு அடைக எனத் திருவாய் மலரத் திருக்கைலை யடைந்தவர். (பெரிய புராணம்.)

**திருக்குறுங்குடிநம்பி** — 1. திருக்குறுங்குடி பெருமாள், உடையவரிடத்தில், ஸ்ரீவைஷ்ணவர்போல் வந்து பஞ்சசமஸ்காரம் பெற்றனர், பின் ஸ்ரீவைஷ்ணவநம்பி யென்று பெருமாளுக்குப் பெயருண்டாயிற்று. (குருபரம்பரை).

2. எழுபத்திரு சிம்மாசனதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

**திருக்குறுந்தாண்டகம்** — திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பிரபந்தத் திரட்டு

**திருக்குன்றத்தாசிரியர்** — சொல்லூராசிரியர் ஆண்டைப் பெருங்குமரனரிடம் பொருளதிகாரம் கேட்டவர்.

**திருக்கோட்டி நம்பி** — உள்ளமுடையான் எனும் சோதிட நூலாசிரியர். இவர் சகரணுண்டு (1200)-இல் வடமொழியிலிருந்த நூலாகிய உள்ளமுடையானைத் தமிழில் இயற்றினர். இவர் வெண்பைக்குடி நாட்டுப் பிரதேசம். பாண்டவன் மங்கலமான பஞ்சமாதேவி சதுர்வேதி மங்கலம் கடலூர் ஆரியன் எனச் செந்தமிழ்ப் பத்திரிகை கூறுகிறது.

**திருக்கோட்டியூர்நம்பி** — 1. புண்டரிகாக்ஷம், இவர் கலி (சΩஉச) இல் சர்வசித்து வைகாசிமீ சனிக்கிழமை திருவவதரித்தவர், ஆளவந்தார் திருவடிசம்பந்தி.

2. இவர், வெண்பைக்குடி நாட்டுப்பிரதேசம், பாண்டவன் மங்கலமான பஞ்சமாதேவி சதுர்வேதிமங்கலம், கடலூராரியன். திருக்கோட்டிநம்பியென ஒருவர் உள்ளமுடையான் சாத்திர மெட்டிலிருப்பதால் உள்ளமுடையான் நூலாசிரியர் [illegible] தெரிகிறது.

**திருக்கோவலூராழ்வான்** — எழுபத்திரண்டு சிம்மாசனதிபதிகளில் ஒருவர். (குருபரம்.)

**திருக்கோவையார்** — ஸ்ரீமன் மாணிக்கவாசக சுவாமிகளால் அகப்பொருளிலக்கணப் பொருந்தச் சிவமூர்த்தியை நாயகனாக எண்ணித் தம்மை அடிமையாகக் கொண்டு திருவாய்மலர்ந்த சட்டத்தைக் கலித்துறை. இதற்கு உரையாளர் நச்சினார்க்கினியர் உரையியற்றினர் என்பர் சிலர். [illegible] பேராசிரியர் உரை [illegible]

வர். இதற்குத் திருச்சிற்றம்பலக்கோவையார் எனவும் பெயர்.

**திருக்கோளூர்பெண்பிள்ளை**—இவள் உடையவர் திருக்கோளூருக்கு எழுந்தருளுகையில் சில ரஹஸ்யங்களைக் கூறிச் சிஷ்யையானவள்.

**திருசானு** — பானுவுரன் குமரன்; இவன் குமரன் கரந்தமன்.

**திருச்சாளக்கிராமம்** — ஒரு புண்ணியக்ஷேத்திரம். இதில் விஷ்ணுமூர்த்தி எழுந்தருளியிருப்பர்.

**திருச்சிற்றம்பலக்கோவையார்**—திருக்கோவையாரைக் காண்க.

**திருச்சிற்றம்பலநாவலர்** — இவர் ஊர் தொண்டைநாட்டு மாம்பாக்கம், சைவர். அண்ணுமலையார்மீது அண்ணுமலைச் சதகம் என நூறு எண்சீர்க்கழிநெடிலடியால் சதகம் பாடிய புலவர்.

**[தி]நச்சிற்றம்பலமுடையார்**—சேக்கிழார்பொருட்டு "உலகெலாம்" எனத் திருவாக் கருளிச் செய்தவர். பெற்றான் சாம்பான் என்னும் அடியவர்க்குத் தீக்ஷை செய்விக்கும் பொருட்டுக் கொற்றவன்குடி யுமாபதி சிவாசாரிய சுவாமிகளுக்குத் திருமுகப் பாசுரம் "அடியர்க்கெளியன் சிற்றம்பலவன் கொற்றம், குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப், பெற்றான் சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து, முத்திகொடுக்கை முறை." என அருள் செய்தவர். உமாபதிசிவாசாரியாரைக் காண்க. சேக்தனுரைக் காண்க.

**திருச்சிற்றம்பலமுனிவர்**—இவர் வேதாரண்யத்திருந்த புலவர். திருக்காவிரிபுராணமியற்றியவர்.

**திருச்சிற்றம்பலம்** — இது ஞானகாசமாய்ச் சிவபிரான் திருநடஞ்செய்யும் தலம். இது திருத்தில்லையென்னுந் தலத்திலிருப்பது. இதற்குத் தகராகாசம், கனகசபை, பொன்னம்பலம், ஞானபரமாநந்தசபை எனவும் பெயர். இது ஆநந்தசுவ ரூபமாதலாலும், சபாநாயகன் ஆநந்தசுவரூபியாகிய ஞானமயமாய்ப் பிரபஞ்சகிருத்தியத்தின் பொருட்டுத் திருநடஞ் செய்ததாலும் இப்பெயர் பெற்றது. தேவர்கள் இதின் உண்மையைப் பொற்றகட்டில் எழுதிப் பூசித்ததால் சிதம்பரம் என்று இதற்கு ஒரு பெயர். இது விராட்புருடனுக்கு இருதய கமலமாயிருத்தலின் புண்டரீகபுரம் [என] பெயர் பெற்றது.

**திருச்யன்** — அகத்தியமுனிவர்க்குக் குமரன்.

**திருச்செங்கோடு** — முருகக்கடவுள் எழுந்தருளிய திருப்பதிகளில் ஒன்று. (சிலப்பதி.)

**திருச்செந்தில்** — குமாரக்கடவுள் பொருட்டு விசுவகர்மன் நிருமித்த பட்டணம்.

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர்** — சோழமண்டலத்தில் சீர்காழியென்னுந் திருப்பதியில் வேதியர்வம்சத்தில் கௌணியர்கோத்திரத்தில் சிவபாத இருதயர்செய்த தவத்தால் அவர் மனைவியாகிய பகவதியார் திருவயிற்றில் திருஅவதரித்தனர். இவர்க்குச் சாதகன்மாதி சடங்குகள் முழுதும் தந்தையார் களிப்புடன் செய்தனர். பிள்ளையார், தமது மூன்றுமாண்டில் ஒருநாள் ஸ்நானத்திற்குச் செல்லுந் தந்தையாரினுடன் செல்ல அழ, தந்தையார் உடனழைத்துச்சென்று குளக்கரையில் இருத்தித் தாம் நீருள்மூழ்கி அகமருஷண ஸ்நானஞ் செய்தனர். பிள்ளையார் தந்தையாரைக் காணுமல் பண்டைய நினைவுவரத் திருத்தோணியப்பரின் விமானத்தை நோக்கி அம்மே, அப்பாவென்று அழுதனர். சிவமூர்த்தி இவர்க்கு அருள்புரியத் திருவுளங்கொண்டு பிராட்டியுடன் இடபாரூடராய் எழுந்தருளி இறைவியை நோக்கிப் பாலூட்டக் கட்டளையிட்டனர். பிராட்டியார் திருமுலைப்பாலைப் பொன் வள்ளத்திற்பெய்து பிள்ளையாரின் கண்ணீரைத் துடைத்துப் பால்வள்ளத்தைப் பிள்ளையார் கரத்தில் அளித்துச் சிவமூர்த்தியிடங் கலந்தனர். தந்தையார் ஸ்நானமுடித்துக் கரையேறிப் பிள்ளையார் வாயினின்று ஒழுகுகின்ற பால்கண்டு நீ யார்தந்த பாலையுண்டாய் என்று ஒரு சிறு மாறுகொண்டு பயமுறுத்தி அடிக்கப்புகப் பிள்ளையார் சிவானந்தம் பெருக உச்சியின்மீது எடுத்துச் சுட்டிய திருக்கரத்துடன் தமக்கு ஞானப் பாலூட்டுவித்து அந்தரத்தில் இடபாரூடராய்ப் பிராட்டியாருடன் எழுந்தருளியிருக்கும் அம்மை அப்பரை "தோடுடைய செவியன்" என எடுத்துத் திருப்பாசுரத்தாற் பாடித் துதித்துத் திருக்கோயிலுட் சென்று துதித்துப் பணிந்தனர். இவ்வற்புதக் காட்சியைக் கண்ட கேட்ட பலரும் பிள்ளையாரை வணங்கினர். இதைக்கண்ட தந்தையார் ஆநந்தத்தால் பிள்ளையாரைத் தோளில் தூக்கிச் சென்றனர். மறுநாள் விடியற்காலத்தில் பிள்ளையார் திருக்கோலக்கா என்னும் திருப்பதியை அடைந்து

முன்னின்று ஒத்தறுத்து "மடையில்வாளை
பாய" எனுந் திருப்பதிகம் ஓதியருளினர்.
சிவமூர்த்தியின் அருளால் ஸ்ரீ பஞ்சாக்ஷர
மெழுதிய 'திருபொற்றாளம்' திருக்கரத்
தில் வந்திருந்தது. இதைக்கண்ட பிள்ளை
யார்களிப்படைந்து இசையோங்கத் தாளங்
கொட்டிப் பாடி விடைபெற்றுத் தந்தை
யார் தோளில் தூக்கிச்செல்லத் தோணி
யப்பர் திருஆலயம் அடைந்து வணங்கித்
தமது திருமாளிகை யடைந்தனர். இவ்வற்
புதங்கண்ட திருநனிப்பள்ளி வேதியர்
பிள்ளையாரைத் தம்மூர்க்குவர வேண்ட
இசைந்து சென்று திருப்பதிகம் பாடித்
துதித்து அவ்விடம் நீங்கிப் பலதலஞ்
சேவித்துச் சீர்காழியை அடைந்தனர். இவ
ரது செய்திகேட்ட திருநீலகண்ட யாழ்ப்
பாணர் இவரைத் தரிசிக்கும் பொருட்டு
விறலியருடன் சீர்காழிவந்து சேர்ந்தனர்.
பிள்ளையார் எதிர்கொள்ளப் பாணர் வணங்
கினர். பிள்ளையார் அவருடன் தோணியப்
பரை வணங்குகையில் பாணர், யாழில்
சிவமூர்த்தியைப் பாடக் கேட்டுக் களிப்
படைந்தனர். திருநீலகண்டயாழ்ப்பாணர்
பிள்ளையார் அருளிய திருப்பதிகங்களைக்
கேட்டு அவைகளை யாழிற்பாடி அன்று
முதல் பிள்ளையாரைப் பிரியாதிருக்கும்
வரம்பெற்றனர். பின் திருத்தில்லைசென்று
பதிகமோதித் தரிசித்துத் தில்லை (௩000)
வரைச் சிவகணங்களாகக் கண்டு தாம்
கண்டபடியைத் திருப்பதிகத்தில்வைத்துத்
துதித்தனர். இவர் யாழ்ப்பாணர் வேண்
டத் திருஎருக்கத்தம்புலியூர் முதலிய பல
தலங்களை வணங்கித் திருநெல்வாயிலரத்
துறைக்குப்போக விரும்பித் தந்தையாரின்
தோளைவிட்டிறங்கி நடந்து மாறன்பா
டியை அடைந்தனர். சூரியன் அத்தமடைந்
தனன். அன்றிரவு அங்கிருக்கையில் சிவ
மூர்த்தி வழியால் வருந்திய பிள்ளையார்க்கு
முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்
சின்னம் அருளத் திருவுளங்கொண்டு அரத்
துறை வேதியரது கனவில் தனித்தனி
சென்று பிள்ளையார் வரவு அருளி அவர்
களுக்கு முத்துச்சிவிகை, முத்துக்குடை,
முத்துச்சின்னம் கொடுக்கக் கட்டளையிட்
டுப் பிள்ளையார் சுவப்பனத்தில் அவற்றை
ஏற்கக் கட்டளைதந்து மறைந்தருளினர்.
வேதியர் விடிந்து இவ்வாஞ்ஞைப்படி
செய்ய அவற்றைப் பிள்ளையார் ஏற்றனர்.
பின் அத்தலம் நீங்கிப் பல தலஞ் சேவித்

துச் சீர்காழி யடைந்து உபநயனுதிகளை
பெற்று யஞ்ஞோபவீததாரணம் செய்து
கொண்டு வேதியர்க்கு ஸ்ரீ பஞ்சாக்ஷர மகி
மையைத் தெரிவித்திருந்தனர். இவரது
புகழைக் கேள்வியுற்ற திருநாவுக்கரசு
சுவாமிகள் பிள்ளையாரைவணங்க எழுந்தரு
ளப் பிள்ளையாரும் எதிர்சென்று வணங்
கிக் கலந்து சிவதரிசனம் செய்தருளினர்.
பின் திருநாவுக்கரசுகள் பலதலஞ் சேவிக்க
எண்ணி விடை கொண்டனர். பிள்ளையா
ரும் பலதலம் வணங்கும் எண்ணமுள்ளவ
ராய்த் திருக்கண்ணார்கோவில் முதலிய பல
தலங்களையும் காவிரிக்கு வடபால் திருவட
மாந்துறை வரையிலுள்ள தலங்களையும்
வணங்கி மழநாடு சென்று திருப்பாச்சி
லாச்சிரமத்திற்கு எழுந்தருளினர். ஆங்குக்
கொல்விமழவன் முயலகவியாதியால் வருந்
தும் தன் குமரியைத் திருக்கோயிலிலிருத்
திப் பிள்ளையாரின் வரவு நோக்கி எதிர்
கொண்டு வணங்கிக் கட்டளை பெற்று எழு
ந்து சுவாமிகளுடன் சந்நிதி யடைந்தனன்.
பிள்ளையார் திருக்கோயில் அடைந்ததும்
ஸ்மரணையற்றுக் கிடக்கும் குமரியைக்
கண்டு இவள் யார் என்றனர். மழவன்
அடியேன் குமரியென்னப் பிள்ளையார்
அவள் வரலாறு உணர்ந்து "துணிவளர்"
எனும் திருப்பதிகமோதி அவள் நோயைப்
போக்கினர். பிள்ளையார் அந்நாடு நீங்கிக்
கொங்கு நாடடைந்து திருக்கொடிமாடச்
செங்குன்றூர் தரிசிக்கையில் பனியால்
திருக்கூட்டத்தவர் சுரப்பிணி கொண்டு
வருந்துதல் அறிந்து அது நீங்கும்வகை
"அவ்வினைக் கிவ்வினை" என்று திருநீல
கண்டத் திருப்பதிகம் ஓதியருளினர். அப்
பிணி அவ்வூரைவிட்டே நீங்கியது. பிறகு
அவ்விடம் நீங்கிச் சோணாடு அடைந்து
திருப்பட்டீச்சுரத்திற்கு எழுந்தருளுகை
யில் கோடை மிகுந்தபடியால் சிவாஞ்ஞை
யால் பூதம் ஒன்று முத்துப்பந்தர்கொண்டு
நிழல் செய்தது. அவ்விடம் நீங்கிப் பல
தலஞ் சேவித்துத் திருவாவடுதுறையில்
எழுந்தருளி யிருக்கையில் சிவபாத இருத
யர் யாகஞ் செய்தற்குப் பொன் வேண்டு
மென்றனர். பிள்ளையார் "இடரினும் தள
ரினும்" என்னுந் திருப்பதிக மோதினர்.
அப்போது பூதம் ஒன்று சிவாஞ்ஞையால்
உலவாக்கிழிதந்து மறைந்தது. அக் கிழி
யைப் பிள்ளையார் சிவபாத இருதயருக்குக்
கொடுத்து யாகஞ் செய்ய அனுப்பினர்.

பிள்ளையார் தருமபுரம் அணைந்தார். அத்தலம் திருநீலகண்டயாழ்ப் பாணரின் தாய் பிறந்த இடமாதலால் அவர் சுற்றத்தவர் எதிர்கொண்டு பாணரை நோக்கி நீர் பிள்ளையாரின் திருப்பதிகத்தை யாழிலிட்டு வாசித்தலால் இசை யுலக முழுதும் பரவுகின்றது என்றனர். இதைக் கேட்ட திருநீலகண்டயாழ்ப்பாணர் நடுங்கிப் பிள்ளையாரை இசை, யாழில் அடங்காதிருக்கப் பதிக மோதக் கேட்டுக் கொண்டனர் பிள்ளையார் அவ்வகை "மாதர் மடப்பிடியும்" எனும் யாழ்முரி பாடினர். பாணர் அப் பாசுரத்தை யாழில் வாசிக்க இயலாமையால் யாழைமுரிக்கத் தொடங்கினர். பிள்ளையார் யாழினைவாங்கிச் சிவமூர்த்தியின் புகழினடங்குமோ என்று மீண்டும் பாணரிடம் தந்தருளினர். பின் அவ்விடம் நீங்கிச் திருச்சாத்தமங்கை யடைந்து தம்மை எதிர்கொண்ட திருநீலநக்கநாயனருடன, அயவந்தி தரிசித்து அவர் வீட்டில் விருந்துண்டு நீங்கிப் பல தலங்கள் சேவித்துத் திருச்செங்காட்டங்குடி சேவிக்கச் சென்றனர். அங்குச் சிறுத்தொண்ட நாயனர் எதிர்கொள்ள, அவருடன் கணபதீச்சுவரம் வணங்கி அவரிடம் விருந்துண்டு அவ்விடம் நீங்கித் திருமருகலுக்குச் சிவ தரிசினத்திற்கு எழுந்தருளினர். அங்குத் தாமன் எனும் வணிகபுத்திரி தன் பிதா தன்னையொழிந்த அறுவரையும் தன் மருகருக்குக் கொடுக்கிறேன் என்று சொல்லி அறுவரையும் பிறரிடம் பொருள்பெற்று மணஞ் செய்வித்துத் தன்னையு மவ்வாறு செய்ய எண்ணியிருக்கையில் இவள் தன் பிதாவின் மருகனிடம் இரக்கமடைந்து அவனைத் தான் மணந்து கொள்ளும்படி துணிந்து அவனுடன் பிதா அறியாமல் வெளிவந்து இத்தலத்தில் அவ்வணிக குமாரனுடன தங்கினள். அன்றிரவு நாயகனாகக்கொள்ள நினைந்த வணிக குமரன் பாம்புதீண்ட இறந்தனன். இவ்வணிக கன்னிகை அவனைத் தீண்டாது அத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்தியிடம் தன் குறைகூறி இரந்தனள். இவளது குறைகேட்ட அவ்விடம் எழுந்தருளிய பிள்ளையார் அவளிடம் கருணைகூர்ந்து "சடையாயெனுமால் சரணீயெனுமால்" எனுந் திருப்பதிக மோதினர். வணிகன் உயிர்பெற்று எழுந்தனன். பிள்ளையார் அவ்விருவரையும் மணஞ் செய்துகொள்ள அனுப்பினர். பிறகு பிள்ளையார் அவ்விடம் நீங்கித் திருப்புகலூர் அடைந்து அவ்விடம் எதிர்கொண்ட முருகநாயனருடன் தரிசனஞ் செய்திருக்கையில் ஆங்குவந்த திருநாவுக்கரசுகளை எதிர்கொண்டு அழைத்துத் திருவாரூரின் புகழ்கேட்டு அவ்விடம் எழுந்தருளி வன்மீகநாதரைத் தரிசித்து மீண்டும் திருப்புகலூரை யடைந்து திருநாவுக்கரசுகளுடனும் முருகநாயனருடனும் எழுந்தருளி யிருந்தனர். இவ்விடம் பிள்ளையாரிருக்குஞ் செய்திகேட்டு திருநீலநக்க நாயனரும் அவ்விடம் சென்றிருந்தனர். பிள்ளையார் அவ்விடம் நீங்கித் திருக்கடவூரடைந்து குங்கிலியக்கலய நாயனர் எதிர்கொள்ள அத்தலம் சேவித்து அவர்வீட்டில் அமுதுண்டு இருந்தனர். மறுநாள் சிவாஞ்ஞைப்படி திருநாவுக்கரசுகளுடன் திருவீழிமிழலை சென்று சீர்காழியிற்கண்ட திருக்கோலத்தை அங்குத் தரிசித்து மழையின்மையால் உயிர்களும் சிவனடியார்களும் வருந்துதற்கிரங்கி இருவரும் திருத்துயில் கொண்டனர். அவ்விருமூர்த்திகளின் கனவிலும் சிவமூர்த்தி எழுந்தருளி இப்பஞ்சம் நீங்கி மழைபெய்து நாடு செழிக்குமளவும் உங்களிருவர்க்கும் பொற்காசுகொடுப்போம் அவற்றால் சிவனடியவரை உண்பிக்க என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். விழித்து இருவரும் நித்தியநைமித்தியாதிகளை முடித்துத் திருக்கோயிலடைந்து திருவாயிலில் பொற்காசு இருக்கக்கண்டு தொழுது எடுத்துச் சிவனடியவரை உண்பித்து வருகையில் திருநாவுக்கரசுகள் திருமடத்தில் அடியவர் விரைந்து உண்பதையும் தம்மடத்தில் காலதாமதங் கொண்டு அடியவர் உண்பதையும் நோக்கிக் காரணம் வினவினர். பரிசாரகர் காசிற்கு வாசிகேட்குதலால் காலதாமதமாதலையும் திருநாவுக்கரசுகள் காசிற்கு வாசி வேண்டாமையையும் அறிவித்தனர். அதனைப் பிள்ளையார், திருநாவுக்கரசுகள் அக்காசு பெறுதல் திருத்தொண்டின் பலன் எனத் தாமே யறிந்து வாசிதீரக் காசு வேண்டி அடியவரை உண்பித்து வருகையில் மழை பொழிந்து உலகம் செழித்தது. பிள்ளையார் அவ்விடம் நீங்கித் திருநாவுக்கரசுகளுடன் வேதாரணியம் எழுந்தருளினர். முன் வேதம் பூசித்தகாலத்தில் மூடப்பட்ட திருக்கதவத்தைத் திறந்து தரிசனம் செய்ய ஆவலுள்ள பிள்ளையார், அப்பரை

நோக்கி நீர் திறக்கவும் திருக்காப்பு நீங்கப் பதிகம் ஓதுக என்றனர். அவ்வகை அப்பர் பதிகம் பாட அது திறக்காமை கண்டு “இரக்கமொன்றிலீர்” எனத் திருப்பதிகம் அருள உடனே திருக்கதவந் திறந்தது. அடியவர் இருவரும் திருக்கூட்டத்தவருடன் சென்று சிவதரிசனஞ் செய்து வெளிவந்தனர். பிள்ளையார் அத்திருக்கதவத்தை மீண்டும் திருக்காப்பிட “சதுரம்” எனத் திருப்பதிக மோதினர். உடனே திருக்கதவம் மூடிக்கொண்டது. பின் சிவாஞ்ஞையால் அப்பர் திருவாய்மூர்க்குச் செல்லப் பிள்ளையார் கேட்டு உடன் சென்று நடன தரிசனங்கண்டு பின் வேதாரணியம் அடைந்தருளினர். இவ்வகைப் பிள்ளையார் எழுந்தருளி யிருக்கையில் பிள்ளையாரின் அற்புதச் செயல்களைப் பலராற் கேள்வியுற்ற பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியாரும், பாண்டியன் மந்திரியாகிய குலச்சிறையாரும் தங்கள் நாடு சமண்மூடிப் பாழடைதலை யெண்ணி, வருந்திப் பிள்ளையாரைப் பாண்டி நாட்டிற்கு எழுந்தருளிவரத் தூது விடடனர். அவ்வகையே பிள்ளையார் பாண்டி நாட்டிற்கு எழுந்தருள இவரது வரவைக் கேட்ட மங்கையர்க்கரசியார் ஆனந்தம் அடைந்து தமது மந்திரியாரும் அந்தரங்க சிவபக்திமானுமாகிய குலச்சிறையாரை எதிர்கொள்ள விடுத்தனர். பிள்ளையார் திருவாலவாயுடையார் திருச்சந்நிதி யடைந்து ஆண்டிருந்த மங்கையர்க்கரசியார் பணிய அருள்சுரந்து குலச்சிறையார் காட்டிய திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர். பிள்ளையார் எழுந்தருளுதலைக் கேட்ட சமணர் பொறுதவராய் அரசனிடம் கண்டு முட்டுப்பட்டமை கூறினர். அரசனும் கேட்டு முட்டாயினேன் என்றனன். அதனால் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் திருமடத்தில் அக்கினியை ஏவக் கட்டளை பெற்று ஏவினர். அக்கி செல்லாமையால் அரசன் அறியின் நம்மை அவமதிப்பன் என்று தாங்களே ஒவ்வொருவரும் கொள்ளியைக் கொண்டு சிவனடியவர் துயில் கொள்கையில் மடத்தில் இட்டனர். திருமடம் தீப்பற்றக் கண்ட சிலர் அதனை அணைத்துச் செய்தியைப் பிள்ளையாருக்குத் தெரிவித்தனர். பிள்ளையார் இஃது அரசனால் விளைந்ததென்று அறிந்து சிவனடியவரை வருத்தவந்த தீ அரசனைப் பையப்பற்றக்கடவது என்று திருப்பதிகமருள அது வெப்பு நோயாய் அரசனை அணுகியது. அரசன் சுரநோயால் வருந்துதல் கண்டு பல வைத்தியர் ஔஷதத்தைத் தந்தனர். அவை யொன்றும் பயன்தராவாயின. சமண முனிவர் தம் மந்திரத்தைப் பீலியில் ஏற்றி அம்மயிற்பீலியாலும் குண்டிகையின் நீராலும் அரசனைத் தடவி நீர் தெளித்தனர். அந்நோய் முன்னையினும் அதிகமாயிற்று. இதனால் பாண்டியன் சமண முனிவரைக் கோபித்தனன். அச்சமயம் அறிந்து மங்கையர்க்கரசியார் சமணர் செய்த கொடுமை இவ்வகை உம்மைச் சார்ந்திருக்கலாம். ஆகையால் இவ்விடம் எழுந்தருளியிருக்கும் திருஞானசம்பந்த மூர்த்திகளைச் சவைக்கண் வருவிக்கக் கட்டளையோ என்றனர். அரசன் இப் பெயர் கேட்டலும் சிறிது ஆவல் கொண்டு வருவிக்கக் கட்டளை யிட்டனன். பாண்டிமாதேவியாரும் குலச்சிறையாரும் திருமடஞ் சென்று தங்கள் குறை கூறி வேண்டினர். பிள்ளையார் ஆலவாயார் திருவருள்பெற்று அரசனை யணைந்து அவன் இடுவித்த ரத்னாசனத்தில் எழுந்தருளியிருந்தனர். பாண்டியன் பிள்ளையாரை நோக்கித் தமது ஊர் எது என்றனன். பிள்ளையார் உத்தரமாக “பிரமபுரம் வேணுபுரம்” என்னுந் திருப்பதிக மோதினர். இதைக் கண்ட சமணர் பொறாராய் வாதிட்டு ஒருவருக் கொருவர் பேசினர். மங்கையர்க்கரசியார் பதைத்து முன்பு நோயை நீக்க அரசனிடம் கூறினர். அரசன் இருவரையும் நோக்கி உங்கள் சமய வன்மையை இருவரும் எனது வெப்பு நோயைத் தீர்த்தலால் தெரிவிக்கின், தீர்த்தவர் எவரோ அவர் பக்கஞ் சேர்வேன் என்றனன். சமணர் அரசனை நோக்கி உமது இடப்பக்கத்து நோயை நாங்கள் தீர்க்கிறோம், சைவர் வலதுபாக நோயைத் தீர்க்கட்டும் என்று தமது பீலியால் மந்திரம் ஓதித் தடவினர். பிள்ளையார் ‘மந்திரமாவது நீறு’ என்னுந் திருப்பதிகமோதி அரசனது வலப்பாகத்தை விபூதியால் தடவினர். அரசனது வலப்பாகம் நீரோடைபோல் குளிர்ந்தது. இடப்பாகம் முன்னிலும் மிக்க வெம்மை யடைந்தது. அரசன் பொறுனாய்ச் சமணரை நோக்கச் சமணர் மயிற்பீலி தொண்டு மீண்டுந் தடவினர். அரசனது உடல் வெம்மை மயிற் பீலியைக் கருக்கிச் சமணர் மேலும் பாய்ந்தது. இத

ஞல் சமணர் ஒதுங்கினர். பாண்டியன் பிள்ளையாரை நோக்கி மற்றைப்பாகத்து நோயைத் தீர்க்க வேண்டினன். பிள்ளையார் முன்போல் விபூதி இட அந்தப் பாகமும் தணிந்தது. பாண்டியன் உய்ந்தேன் என்று பிள்ளையாரின் திருவடிகளைப் பணிந்தனன். இதைக் கண்ட சமணர் இனித் தருக்கம் பேசவேண்டுவதில்லை. நாமிருவரும் நம் சமய உண்மைகளெழுதப்பெற்ற ஏடுகளை அக்நியில் இடுவோம். ஏடுகள் வேகாவாயின் அச் சமயம் சற்சமயமெனக் கொள்வோம் என்றனர். பிள்ளையார் உடன்பட்டனர். அரசன் கட்டளையால் அக்நி வளர்க்கப்பட்டது. அதில் பிள்ளையார் தாம் அருளிச்செய்த திருப்பாசுரத்தில் எடுத்தவுடன் தோற்றிய திருநள்ளாற்று "போகமார்த்த" என்னும் திருப் பாசுரத்தைத் தொழுது எடுத்து அக்கியில் இட்டு, "தளிரிளவளரொளி" என்னுந் திருப்பதிக மருளிச் செய்தனர். சமணரும் தங்கள் சமய உண்மை யெழுதப்பட்டிருந்த ஏட்டையிட்டனர். அது வெந்தொழிந்தது. பிள்ளையாரிட்ட ஏடோ வேகாது பசுமை கொண்டு இருந்தது. அதை யாவருங்கண்டு வியக்க மீண்டும் எடுத்துத் திருமுறையிற் கோத்தனர். பின் சமணர் மற்றொரு வாது செய்ய வெண்ணி அரசனை நோக்கி இருவரும் தங்கள் தங்கள் சமய வுண்மைகள் எழுதிய ஏடுகளை ஓடும் வைகையில் இடுவோம். எதிர் ஏறும் ஏட்டினவர் உயர்ந்த சமயத்தினராகி உண்மை யறிவோமென்றனர். அவ்வாறே பிள்ளையார் இசைந்தனர். அரசனும், மந்திரி முதலியோரும் சமண முனிவரும் சூழ்ந்துவரப் பிள்ளையார் வைகை நதி யடைந்தனர். முதலில் சமணர் தங்கள் சமய வுண்மைகள் எழுதிய அத்தி நாத்தி என்னும் ஏட்டை ஆற்றில் இட்டனர். அது கடலை நோக்கிச் சென்றது. சமணர் நூறுவிற் கடைதூரம் அதன் பின் சென்று பின் செல்லக்கூடாமல் மீண்டனர். இதையறிந்து அரசன் பிள்ளையாரை நோக்கினன். பிள்ளையார் அரசன் குறிப் புணர்ந்து "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக" என்னுந் திருப்பதிக மோதி ஆற்றில் இட்டனர். அவ்வேடு ஆற்று நீரைப் பிளந்து எதிர் ஏறியது. (இத்திருப் பதிகத்தில் "வேந்தனு மோங்குக" என்று அருளிச் செய்ததால் அரசனுக்கு இருந்த கூனும் நிமிர்ந்தது.) மந்திரியார் குதிரை மீதேறி ஏட்டைத் தொடர்ந்து செல்லவும் நிற்காமை கண்டு பிள்ளையார் "வன்னியும் மத்தமும்" என்னும் திருப்பதிகம் அருளிச் செய்தனர். ஏடு திரு ஏடகத்தில் நிலைபெற்றது. குலச்சிறையார் ஏட்டினைத் தொழுது சிரமேற்றாங்கி வந்து பாண்டியனுக்குக் காட்டினர். பாண்டியன் முதலானோர் மெய்பூரித்தனர். சமணர்கள் தாங்கள் கூறியபடி கழு வேறினர். பிள்ளையார் திருவாலவாயுடையார் திருச்சந்நிதி யடைந்து, சிவமூர்த்தியை வணங்கினர். பிறகு திருநீலகண்ட யாழ்ப்பாணர் தம்மை வந்துகாண அவருடன் அவருக்கு அருளிய திறத்தை "ஆலநீழல்" என்னுந் திருப்பதிகத்தால் துதித்து எழுந்தருளி யிருந்தனர். பிள்ளையார் தம்மை யெண்ணிவந்த தந்தையாருடன் பலதலங்களைத் தரிசிக்க எண்ணி அவ்விடம் நீங்கிப் பாண்டி நாட்டுப் பல தலங்களை வணங்கி அங்கிருந்தபடி ஈழநாட்டுத் தலங்களைத் துதித்துச் சோழ நாடு அடைய நினைந்தனர். பாண்டியன் பிரிவாற்றாது வருந்த அவனை நிறுத்திப் பிரிந்து, சோணாட்டுப் பல தலங்களை வணங்கி முள்ளிவாய்க்கரை யடைந்து சிவதரிசனஞ் செய்தற்கு ஆற்று வெள்ளம் தடை செய்ததால் ஓடம் விடுவோர் அஞ்சுதல் கண்டு அங்கிருந்த ஓடத்தில் திருக்கூட்டத்துடன் ஏறி "கொட்டமேகமழும்" என்னுந் திருப்பதிகம் அருளிச் செய்தனர். ஓடம் அக்கரை யடைந்தது. பிள்ளையார் சிவதரிசனஞ் செய்து திருத்தெளிச்சேரி யடைந்து அங்குச் சிவமூர்த்தியைத் தரிசித்து நீங்குகையில் பௌத்தர்களிருக்கும் போதிமங்கை சமீபித்தது. இவரது வருகையின் ஆரவாரங் கேட்ட புத்தர் பொறாராகிப் புத்த நம்பியுடன் கூடி வாதத்திற்கு வந்தனர். பௌத்தர் வாதம் செய்ய வந்ததை யறிந்த சம்பந்தசரணாலயர் பொறாது "புத்தர் சமண் கழுக்கையர்" என்னுந் திருப்பதிகம் அருளிச் செய்து இப்புத்தன் சிரத்தில் இடிவிழக் கடவது என்றனர். புத்தநந்தி இடி விழுந்து இறந்தனன். ஒழிந்த புத்தரில் அஞ்சியகன்றோர்போக மற்றவர் வாதிற்கு வந்தனர். சம்பந்தசரணாலயர் அவர்களுடன் வாதிட்டு வென்றனர். இதனால் புத்தர் பலர் சைவராயினர். அவ்விடம் நீங்கித் திருப்பூந்துருத்தியில் எழுந்தருளியிருக்கும் திருநாவுக்கரசுமூர்த்திகளைக்

காண விரும்பி ஆண்டு எழுந்தருளுகையில் திருநாவுக்கரசுகள் பிள்ளையார் வரவு அறிந்து எதிர்கொண்டு ஜன நெருக்கத்தினுள் புகுந்து சிவிகைதாங்கி வருவோரில் ஒருவராய்த் தாங்கி வந்தனர். பிள்ளையார் திருப்பூந்துருத்தி யடைந்தவுடன் அப்பர் எங்கு உள்ளார் என அப்பர், "சிவிகை தாங்கும் பெருவாழ்வுற்று இங்கு உள்ளேன் என்று வந்தனர்". பிள்ளையார் சிவிகை விட்டிறங்கி அரசுகளை வணங்க அரசுகளும் வணங்கிச் சிவதரிசனம்செய்து இருந்தனர். பின் தொண்டைநாடு தரிசிக்க எண்ணிப் பல தலங்களைச் சேவித்துத் திருவோத்தூர் அடைந்து தரிசனஞ்செய்து இருக்கையில் அத் தலவாசியாகிய சிவனடியவர் ஒருவர் வந்து நான் பரமசிவத்தின் பொருட்டுப் பயிராக்கிய பனைகள் எல்லாம் ஆண் பனைகளாகப் பலன் அற்றன. இவற்றைக் கண்ட சமணர்கள் இவைகளைக் காய்க்கச் செய்யக்கூடுமோ என்று நகைக்கின்றனர் எனக் கூறினர். இதைக் கேட்ட பிள்ளையார் பரிந்து சுவாமியை வணங்கிப் "பூந்தொத்தாயின" என்னும் திருப்பதிகம் பாடி யருளினர். அதனால் ஆண் பனைகள் பெண் பனைகளாய்க் குறும்பை யீன்றன. அவ்விடம நீங்கிப் பல தலம் சேவித்துத் திருவாலங்காட்டிற்கு அருகு அணைகையில் முன்னம் காரைக்கால் அம்மையார், மிதித்தல் அஞ்சித் தலையால் நடந்த தலம் என்று தாம் மிதித்தற்கு அஞ்சி அத் தலத்தைச் செல்லாது அருகிருக்கும் கிராமத்தில் இரவைப் போக்கினர். சிவமூர்த்தி அன்றிரவு கனவிற்றோன்றி நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ என்று சொல்ல விழித்துத் துதித்து "துஞ்சவருவாரும்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினர். பின் திருக்காளத்தி தரிசித்து அங்கிருந்தவண்ணம் வடநாட்டுத் திருப்பதிகளைப் பாடித் துதித்துத் திருவொற்றியூர் அடைந்து சிவதரிசனஞ் செய்திருந்தனர். இது நிற்க, திருமயிலையில் வைசியர் குலத்தில் சிவபக்தியிற் சிறந்த சிவநேசச்செல்வர் என்னும் பெயர் உள்ளவர் ஒருவர் இருந்தார். இவர் திருஞானசம்பந்தமூர்த்திகளின் அற்புதச் செயல்களைக் கேட்டு அவரிடத்தில் அன்பு பூண்டு இரவும் பகலும் அவரைத் தியானித்து இருந்தனர். இவருக்கு அழகு வாய்ந்த பூம்பாவை யென்னும் ஒரு குமரி இருந்தனள். இவர் அன்பின் மிகுதியால் தமது செல்வங்களையும் பூம்பாவையையும் திருஞானசம்பந்த மூர்த்திகளுக்குக் கொடுத்து மணஞ்செய்விக்க எண்ணியிருந்தனர். பூம்பாவையார் ஒருநாள் தமது தோழியருடன் பூங்காவனத்திற் சென்று பூக்கொய்து வருகையில் பாம்பு கடித்து இறந்தனள். தந்தையரா பல விஷ வைத்தியர்களைக் கொண்டு பார்த்தும் பலனின்றாயிற்று. பின் உயிர்நீங்கிய தேகத்தை இரண்டொரு நாள் வைத்தும் காத்தும் பயனில்லாதது அறிந்து ஒருவாறு தேறி உடலைத் தகனஞ் செய்து எலும்புகளைக் குடம் ஒன்றில் அடைத்துக் கன்னிமாடத்தில் வைத்துத் திருஞானசம்பந்தர் வரவை எதிர்நோக்கி யிருந்தனர். பிள்ளையார் திருவொற்றியூரில் எழுந்தருளி யிருக்கும் செய்தி செட்டியார் கேட்டுத் தெரு முதலிய அலங்கரித்து எதிர்கொண்டு வணங்கினர். பிள்ளையாரும் வணங்கிச் சென்று சிவநேசரது செய்தி கேட்டுச் சிவமூர்த்தியிடம் விடைபெற்றுத் திருமயிலை யடைந்தனர். பிள்ளையார் சிவநேசரது கருத்தை முற்றுவிக்கவும் ஆருகதர், பௌத்தர் நிலைகெடவும் திருவுளங் கொண்டு கபாலீச்சுரமுடையாரை வணங்கிச் சிவநேசரை நோக்கி உமது மகளிரின் எலும்பை நிறைத்த குடத்தைத் திருமதிலின் புறத்துக்கொண்டு வருக என்றனர். சிவநேசர் அவ்வகை செய்து குறிப்பித்தனர். பிள்ளையார் திருக்கோபுரவாயிலின் நேரே எழுந்தருளி எலும்பு இருக்கும் குடத்தை நோக்கி "மட்டிட்ட புன்னை" என்னுந் திருப்பதிக முதலாக ஒன்பது திருப்பதிக மோதினர். பத்தாம் திருப்பதிகத்தில் பூம்பாவை குடத்தினின்றும் (கஉ) வயதுடன் எழுந்தனள். இவ்வற்புதத்தைக் கண்டு தேவர் பூமாரி பொழிந்தனர். பின் பிள்ளையார் சிவநேசரை நோக்கி உமது குமரியை அழைத்துச் செல்லும் என்றனர். செட்டியார், இக் கன்னிகையைத் தேவரீர்க் கென்றே நியமித்தது என்று பிரார்த்தித்தனர். பிள்ளையார் சர்வான்மாக்களும் உய்யும்படி இவளைப் பிழைப்பித்தபடியால் இவ்வார்த்தை தகாது என மறுத்தனர். இதனால் சிவநேசர், தம் குமரியை வேற்றோர்க்கு விவாகஞ் செய்விப்பதில்லையெனக் கன்னிமாடத் திருத்தினர். பூம்பாவை சிவத்தியானத்திருந்து முத்தி யடைந்தனள். பிள்ளையார் திருமயிலை நீங்கிப் பல தலங்களைச் சேவித்துச் சீர்காழி

யடைந்து முருகநாயனூர் திருநீலநக்கநாயனூர் முதலியவருடன் இருந்தனர். பின் சிவபாதவிருதயர் தமது குமாருக்குத் திருமணஞ் செய்விக்க எண்ணிப் பிள்ளையார்க்குக் குறிப்பித்தனர். இச்செய்தி கேட்ட பிள்ளையார் உடன்படாமை யறிந்து வேதியர் பலருக்குக் கூற வேதியர்கள் வேதவொழுக்கம் வளர்க்கவந்த தேவரீர் வேதவிதி யொழுகிக் காட்டாவிடின் யாதாம் என்றனர். அதனுல் பிள்ளையார் உடன்பட்டது அறிந்து தந்தையார் திருநல்லூரில் நம்பாண்டார்நம்பியின் குமரி பிள்ளையார்க்குத் தக்கவளென்று அறிந்து அக் கன்னிகையை மணப்பெண்ணுகத் தீர்மானித்துத் திருமணநாள் கொண்டனர். பிள்ளையார் அந்நாளில் நம்பாண்டார்நம்பியின் சுற்றத்தவர் எதிர்கொள்ளத் திருநல்லூர் அடைந்து பெருமணமென்னும் ஆலயத்தை வணங்கித் திருமணப்பந்தல் அடைந்தனர். நம்பாண்டார்நம்பி விதிப்படி தமது குமரியைத் திருஞான சம்பந்தமூர்த்திகளுக்குக் கொடுத்தேனென்று கோத்திர சூத்திரங்களைக் கூறிப் பிள்ளையார் திருக்கரத்தில் நீர் வார்த்தனர். பின் பாணிக்கிரகண முகூர்த்தம் வந்த அளவின் மணமகளைப் பிள்ளையாரின் வலப்பக்கம் சேர்த்தனர். பிள்ளையார் திருக்கடி சூத்திரம் புனைந்து மந்திரத் தீவலஞ்செய்து இவ் வில்லொழுக்கம் வந்தமையால் இவளுடன் எம்பெருமான் திருஅருட்கழல் சேர்வனுக என்று திருவுளங்கொண்டு சிவமூர்த்தி எழுந்தருளி யிருக்கும் பெருமணக் கோவில் அடைந்து அடியேனை யாண்ட பெருங்கருணையின்று பிரிவறக்கூட்டும் என்னுந் தோற்றத்தால் 'நல்லூர்ப்பெருமணம்' என்னுந் திருப் பாசுரத்தால் உமது திருவடி அடையும் தருணம் ஈது என்று விண்ணப்பித்தனர். எல்லாமுடைய நாயகன் "ஐய" நீயும் இந்த மாதரும் இத் திருமணங் காணவந்தாரும் இச்சோதியுட்டோன்றும் பெருவழியிற் சேர்க என்று அருட்சோதி யுருவாயிருந்தனர். பிள்ளையாரும் திருநீலநக்கர், நம்பாண்டார்நம்பி, திருநீலகண்டயாழ்ப்பாணர் திருமணங் காணவந்த திருக்கூட்டத்தவரும் அச்சோதியுட் கலந்தனர். பின் திருவருட்சோதி மறைந்தது. (பெ-புரா.)

**திருஞானசம்பந்தருடன் வாதிட்ட புத்தர்** — சந்துசேநன், இந்துசேநன், தருமசேநன், கந்துசேநன், கனகசேநன், கனகநந்தி, புட்பநந்தி, பவணநந்தி, சுனகநந்தி, குனகநந்தி, திவணநந்தி, அநகநந்தி.

**திருடஅனு** — பாஞ்சாலபதி சேநசித் குமரன் இவனுக்குச் சத்யகருமன் என்று பெயர்.

**திருடநேமி** — புதன் மரபில்வந்த சத்யதிருதன் புத்ரன்.

**திருடவிரதன்** — அங்க தேசாதிபதி, விசியன் குமரன்.

**திருட்டாந்தப் போலி**—திருட்டாந்தத்திற்குக் கூறிய இலக்கணம் பெருமல் திருட்டாந்தம்போலத் தோன்றுபவை திருட்டாந்தப் போலி. அவை பதினெட்டு. சாத்தியவிகலன், சாதகவிகலன், உபயவிகலன், ஆச்ரயவீனன், அவ்யாப்தியபிதானன், விபரீதவியாத்தியபிதானன், சாதனுவியாவிருத்தன், சாத்யாவியாவிருத்தன், உபயவியாவிருத்தன், ஆச்ரயவிரத்தீனன், வியாவிருத்தியபிதானன, விபரீதவியாப்தியபிதானன், சந்தித்தசாத்தியன், சந்தித்தசாதனன், சந்தித்தவுபயன், சந்தித்தஆச்ரயன், சந்தித்தசாத்யாவியாவிருத்தன், சந்தித்தசாதனுவியாவிருத்தன். (சிவ - சித்.)

**திருட்டாந்தம்** — ஏதுவிற்கும் சாத்யத்திற்கும் வியாப்தியைக் கிரகிக்கும் தலம். (சிவ-சித்.)

**திருணநரன்** — சிவமூர்த்தியால் தேவர்களின் கர்வபங்கத்தின் பொருட்டுச் சிருட்டிக்கப்பட்ட புல்போல்வன். இவனை யெதிர்க்கத் திரிமூர்த்திகள் முயன்று பின்னடைந்தனர்.

**திருததேவர்** — தேவகன் நமரி, வாசுதேவன் பாரிகளில் ஒருத்தி.

**திருததேவி** — வசுதேவன் பாரி குமரன் திருவிஷ்டன், தேவகன் பெண்.

**திருதராஷ்டிரன்** — 1. கௌரவவம்சத்தவன், காந்தருவ ராசனுகிய அரிட்டன் குமரனுகிய அம்சன் என்பவனது அம்சத்தால் பிறந்தவன். துரியோதனன் ஒழிந்த இவன் நூறு குமாரும் விசிரவசு குமாரர் அம்சம். இவன் விசித்திரவீரியன் பாரியாகிய அம்பிகை யிடத்து வியாசராற் பிறந்தவன். இவன் தேவி காந்தாரி. இவன் மூன்று தேசத்திற்கும் தலைவன் ஆதலின் இப்பெயர் பெற்றுன் என்பர். (ஆயின் திரிதராட்டிரனென்று இருத்தல் வேண்டும். திருதராட்டிரன் என்ப ஆனது மரு.) இவன், குருநாட்டை அரசாண்டு தனது தம்பியாகிய பாண்டுவிலை இளவரசாக்கி இருவரும் அரசாண்டு வருகையில் பாண்டு இறக்கப் பாண்டுவின் குமரர் சிறுவராக

லால் அவர்களுக்குக் கல்வியோடு தனுர் வித்தை முதலியவைகளைக் கற்பித்து வளர்த்து வந்தனன். பாண்டவாது புத்திகோசரத்தையும் சாகசத்தையும் கண்ட துரியோதனன் பொறுமை கொண்டு தன் பிதாவிடம் முறையிட்டுக் கொண்டபடி கேட்டுப் பாண்டவரை இந்திரப்பிரத்தத்திலிருந்து வருவித்துச் சபாமண்டபம் காண்பித்துச் சகுனியால் சூதாடுவித்துக் காட்டிற் கேகினன். பாண்டவர் காடு சென்று மீண்டு நாடடைந்து யுத்த சந்நத்தராயிருக்கையில் சஞ்சயனை ஏவி அவரது கருத்தறிந்து பாண்டவர் சண்டை புரிகையில் பதினெட்டு நாளும் நடந்த செய்திகளைச் சஞ்சயனாலறிந்து யுத்தத்தில் துரியோதனாதியர் இறந்தபின் சிலகாலமிருந்து தவத்தை யடைந்து காடு சென்று நாரதரால் இனிவரும் பதவியில் குபேரனிடத்தில் யக்ஷராஜனாயிருப்பையெனக் கேட்டு வியாசரால், இறந்த மைந்தர் முதலியவரைக் கண்டு தவஞ்செய்கையில் காட்டுத் தீப் பற்றிவர அதிலகப்பட்டுக் காந்தாரி, குந்தி, சஞ்சயனுடன் மேலுலகமடைந்தவன். தருமராஜனுக்குப் பட்டமான பதினெட்டாம் வருஷம் இறந்தான். இவன் காந்தருவ அம்சம்

2. பாதாளவாசியாகிய நாகன.

3. சக்கிராங்கன் குமரன். இவன் தன் குலம்நீங்கித் தன் பாரியுடன் நந்தனவனத்திற் சென்று மிருத்தியு லிங்கம் பூசித்து வாணாசுரனாகப் பிறந்து குடமுழாமுழக்கினவன். (கடம்பவநபுராணம்).

4. ஒரு காந்தருவன். இவனை யிந்திரன், மருத்துச் செய்த யாகத்தில் பிரகஸ்பதியைப் புரோகிதராய்க் கொள்ள ஏவப்பட்டவன். (பார - அச்வமேதபர்வம்).

**திருதராஷ்டிரன்புத்திரர்நூற்றுவர்**—(1) துரியோதனன், (2) யுயுத்சு, (3) துச்சாதனன், (4) துச்சகன், (5) துச்சலன், (6) துர்முகன், (7) விவிஞ்சதி, (8) விகர்ணன், (9) சலசந்தன், (10) சுலோசநன், (11) விந்தன், (12) அநுவிந்தன், (13) துர்த்தருடன், (14) சுவாகு, (15) துர்ப்பிரதருடணன், (16) துர்மருடணன், (17) துருமுகன், (18) துர்க்கருணன், (19) கர்ணன், (20) சித்திரன், (21) உபசித்திரன், (22) சித்திராக்கன், (23) சாரு, (24) சித்திராஙகன், (25) துர்மதன், (26) துர்பிரகாசன், (27) விவித்சு, (28) விகடன், (29) சமன், (30) ஊர்ணநாபன், (31) பத்மநாபன், (32) நந்தன், (33) உபநந்தன், (34) சேநாபதி, (35) சுடேணன், (36) கண்டோதரன், (37) மகோதரன், (38) சித்திரவாகு, (39) சித்ரவர்மா, (40) சுவர்மா, (41) துருவிரோசநன், (42) அயோவாகு, (43) மஹாவாகு, (44) சித்திரசாபன், (45) சுகுண்டலன், (46) வீமவேகன், (47) வீமபலன், (48) பலாகன், (49) வீமவிக்ரமன், (50) உக்ராயுதன், (51) வீமசரன், (52) கனகாயு, (53) திருடாயுதன், (54) திருடவர்மா, (55) திருடகத்ரன், (56) சோமகீர்த்தி, (57) அநூதரன், (58) சராசந்தன், (59) திருடசந்தன், (60) சத்தியசந்தன், (61) சகச்சிரவாகு, (62) உக்கிரச்சிரவா, (63) உக்ரசேநன், (64) சேநாநி, (65) மகமூர்த்தி, (66) அபராசிதன், (67) பண்டிதகன், (68) விசாலாக்ஷன், (69) துராதரன், (70) திருடகத்தன், (71) சுகத்தன், (72) வாதவேகன், (73) சுவர்ச்சசன், (74) ஆதித்யகேது, (75) வெகுவாதி, (76) நாகத்தன், (77) அநுயாயி, (78) நிஷங்கி, (79) கவசி, (80) தண்[illegible], (81) தண்டதரன், (82) தனுக்கிரகன், (83) உக்கிரன், (84) பீமரதன், (85) வீரன், (86) வீரவாகு, (87) அலோலுபன், (88) அபயன், (89) இரௌத்திரகர்மன், (90) திருடரதன், (91) அநாதிருடியன், (92) குண்டபேதன், (93) விராவி, (94) தீர்க்கலோசநன், (95) தீர்க்கவாகு, (96) மகாவாகு, (97) வியுடோரு, (98) கனகாங்கதன், (99) குண்டசித்து, (100) சித்திரகன்.

**திருதராஷ்டிரை** — தருமன் புத்ரி. விச்சுளிகளைப் பெற்றவள்.

**திருதவ்ரதன்** — ஒரு வேதியன். இவன் மனைவி, புத்திரனைக் கூடிய பாபம் பற்ற தௌதபாப தீர்த்த ஸ்நாநஞ்செய்து நலமடைந்தாள். (பிரமபுராணம்).

**திருதவன்மா** — ஒரு சோழன். திருவேங்கடமலை யுண்டான காலத்திருந்தவன்.

**திருதன்** — 1. காந்தாரன் பேரன்.

2. இவன் ருக்குவேதத்திற் புகழப்பட்டவன்.

**திருதி** — 1. மனுவென்னும் ஏகாதசருத்திரர் தேவி.

2. (சூ.) விபிலாசுவன் குமரன்.

3. தக்ஷன் பெண். தருமன் தே

4. விசயன் குமரன். இவன் குமரன் திருதவிருதன்

5. கபிலன் தேவி. இவளில்லாவிடம் தைரியமின்றி யிருக்கும்.

**திருதிவிருதன்** — 1. வசுர்தச ருத்திரருள் ஒருவன். தேவி தீக்ஷை.

2. திருதி குமரன். இவன் குமரன் சத்தியகர்மா.

**திருதுசேது** — தெக்ஷசாவர்ணி மநுப் புத்திரன்.

**திருத்தக்கதேவர்** — இவர், சோழர் குலத்துதித்துக் கல்வியில் வல்லவராய்த் தம் மத சித்தாந்தமாகிய ஆருகதசமய வுண்மை யறிந்து துறவு பூண்டு இருந்தனர். இவர் மதுரை நகரடைந்து சங்கப் புலவர்களுடன் பழகி அளவளாவி யிருக்கையில் சங்கத்தவர்கள், உங்கள் சமயத்துப் புலவர்கள் வீட்டுநூல் கூறவல்லரேயன்றிக் காமநூல் கழறும் வலியிலர் எனத் தேவர், அங்ஙனம் அன்று அவர்கள் அதனை வெறுத்துச் செய்திலர். காமச்சுவை யறியாதாரன்று என்றனர். அது உண்மையாயின் நீர் ஒரு நூல்செய்கவென்றனர். தேவர் அதை மனசிற்கொண்டு தமது எண்ணத்தைத் தமது ஆசிரியர்க்குத் தெரிவிக்க, ஆசிரியர், அப்போது அவ்வழி யோடிய நரியைக் காட்டி இந்நரிச் சாதியை முன்னிட்டு ஒரு சரிதை செய்யக் கட்டளையிட்டனர். தேவர் அதனைச் சிரத்திற்கொண்டு யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையாமை பொருளாக நரிவிருத்தம் என ஒரு நூல் செய்து ஆசிரியருக்குக் காட்டினர். ஆசிரியர் களிப்புற்றுச் சீவகன் சரிதையைக் காவியமாக்க என்று கடவுள் வாழ்த்துப்பாடி யருளினர். திருத்தக்கதேவர் ஆசிரியர் பாடிய "செம்பொன்" என்னும் கவியைச் சிரமேற்கொண்டு தாமும் "மூவா முதலா" என்னும் ஒரு செய்யுளியற்றியாசிரியர்க்குக் காட்டினர். ஆசிரியர், திருத்தக்கதேவர் செய்ததே நன்றாயிருத்தல் கண்டு அதனை முன்வைக்கக் கட்டளையிட ஆசிரியர் கட்டளைக்கஞ்சி அதனை முன்வைத்து எட்டு நாட்களில் சீவக சிந்தாமணியைப் பாடிமுடித்து ஆசிரியர்க்குக் காட்டினர். ஆசிரியர் காவியத்தைச் சங்கத்தவர்க்குக் காட்டக் கட்டளையிட அவ்வகைப் பாண்டியனவைக்களத்துச் சங்கத்தார் முன்பு கூறச் சங்கத்தவர் கேட்டுக் களித்தனர். அவர்களுட் சிலர் இவர் இளமைப்பருவந் தொடங்கித் துறவு பூண்டிருத்தலின் காமச்சுவை கண்டவர் போல் கவிபாடியிருத்தல் எண்ணத்தக்கதெனச் சந்தேகித்தலைத் தேவருணர்ந்து இருப்புக் கட்டியைப் பழுக்கக்காய்ச்சுவித்து நான் இளமைமுதல் துறவுபூண்டு தீநெறியொழுகா திருத்தல் உண்மையாயின் இத்தீ என்னைச்சுடா தொழிக எனக் கட்டியைத்தழுவினர். புறங்கூறிய சிலர் நடுங்கித் தேவரை வேண்டிக்கொள்ளத் தேவர் அவர்களை நோக்கி நீங்கள் எனது துறவொழுக்கத்தைப பலரறியச் செய்தீர் ஆதலின் நன்மையே புரிந்தீரெனக் களிப்பித்து, ஆசிரியரைச் சேர்ந்திருந்தனர். இவர் செய்த நூல்கள், நரிவிருத்தம், சீவக சிந்தாமணி. இவர் திருவள்ளுவரிருந்த மயிலை நகரத்தில் அவர் காலத்திருந்தாரென்றும் கூறுவர். (சீவக சிந்தாமணி.)

**திருத்தங்கால்** — பாண்டி நாட்டிலுள்ளதோரூர் ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சமீபமாக வுள்ளது. (சிலப்பதிகாரம்).

**திருத்தாமனூர்** — சேரமான் வஞ்சனைப் பாடிப் பரிசுபெற்றவர். (புற.நா.)

**திருத்திரன்** — பாஷ்ய எனும் அரசனுக்குப் புத்திரன், இவன் ருக்வேதத்திற் புகழ்ந்து கூறப்பட்டவன்.

**திருத்தொண்டரந்தாதி** — நம்பியாண்டார் நம்பிகளாலருளிச் செய்யப்பட்ட தொண்டர் சரிதை.

**திருத்தொண்டர் புராணம்** — சிவனடியவர் சரிதை சொன்ன நூல். இது சேக்கிழார் சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்டது

**திருத்தோணியப்பர்** — இவர் விஜயநகரத்தரசராகிய கிருஷ்ணதேவ மகராயர் காலத்திருந்த ஒரு புலவர். தத்வப்ரகாசனைக் காண்க.

**திருநகரிப்பிள்ளை** — எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர், ஸ்ரீ வைஷ்ணவர். (குருபரம்பரை.)

**திருநகர்** — வேசாலி என்னும் அரசனது நகர். (பெ.கதை)

**திருநறையூர்நம்பி** — திருமங்கையாழ்வார்க்கு ஆசாரியர்.

**திருநாவுக்கரசு சுவாமிகள்** — திருமுனைப் பாடி நாட்டில் திருவாமூரில் வேளாளர் குலத்தில் குறுக்கையர் குடியில் புகழனார்க்கு மாதினியார் வயிற்றில் திலகவதியார் என்னும் ஒரு புத்திரியும்; இரண்டாவது இவரும் அவதரித்தனர். இவர்க்குத் தந்தையார் மருணீக்கியார் எனத் திரு

நாமம் இட்டுக் கல்வி முதலிய கற்பித்து வந்தனர். திலதவதியாருக்கு மணப்பருவம் சமீபித்தவுடன் இராஜா விடத்தில் சேனாதிபதித்தொழில் புரிந்து வருபவரும் தம் குலத்துக் கொத்தவருமாகிய கலிப்பகையார் திலதவதியாரைத் தமக்கு மணஞ்செய்துதரக் கேட்கத் திலதவதியாரின் தந்தை உடன்பட் டிருந்தனர். இவ்வகை இருக்கையில் அரசன் ஏவலால் கலிப்பகையார் யுத்தத்திற்குச் சென்று அங்கே நெடு நாளிருந்தார். இங்குப் புகழனர் காலஞ்சென்ருர். மாதினியாரும் சககமனம் அடைந்தனர். முன்சொன்ன கலிப்பகையார் யுத்தத்தில் இறந்தனர். ஆதலால் திலதவதியார் எனக்கென நியமித்த கணவர் இறந்தனர். ஆதலின் நானும் இறப்பேனெனத் துணிந்து இருக்கையில் மருணீக்கியார் தமக்கையாரை நோக்கி உம்மைத் தாய் தந்தையர்க்குப் பதிலாக எண்ணி யிருக்கிறேன்; நீர் இறப்பிராயின் உமக்கு முன் நானும் இறப்பேன் என மருணீக்கியார் பொருட்டு உடல்துறவாது உயிருடன் இருந்தனர். மருணீக்கியார் கல்வியில் வல்லவராய் யாக்கையும் செல்வமும் நிலையாமை யுணர்ந்து தமது செல்வங்களை அறவழியிற் செலவு இட்டுப் பாடலிபுத்ரமடைந்து சமணர் பள்ளியுட் சென்று அவர்கள் போதனைக்குட்பட்டுச் சமணமதம் சார்ந்து அதை மெய்ச்சமயமெனக் கொண்டு அச் சமயத்தில் வல்லவராயினர். சமணர் இவரது வல்லமை யறிந்து அவருக்குத் தருமசேனர் என்கிற பெயர் தந்து தங்களுக்கு ஆசிரியரும் ஆக்கினர். இது நிற்க, திருவாமூரிலிருந்த திலதவதியார் சிவபக்தி முதிர்வால் சிவபுண்ணியஞ் செய்ய விரும்பித் திருவதிகை வீரட்டானம் சென்று சிவபணிவிடை செய்துவருகையில் தன்னுடன் பிறந்தார் சமணசமயத்தில் ஆழ்ந்து இருப்பதை யெண்ணி வருந்திச் சிவமூர்த்தியைத் · துதித்து அவரை ஆட்கொள்ள வேண்டுமென வேண்டினர். சிவமூர்த்தி திலதவதியாரின் சுவப்பனத்தில் அவனைச் சூலைநோய் தந்து ஆட்கொள்வோம் மனக்கவலை யொழிக என்று திருவாய் மலர்ந்து மறைந்தனர். பரமசிவம் திருவாய் மலர்ந்தபடி சூலைநோய் தருமசேனரைப் பற்றி வருத்தியது. சமணர்தங்களுக்குத் தெரிந்த மந்திர ஔஷதங்களைப் பிரயோகித்தும் தணியாமையால் கைவிட்டனர். மருணீக்கியார் இச் செய்தியைத் தம்தமக்கைக்குத் தூதின் வழி தெரிவித்தனர். தூதன் திருவதிகை வந்து திலதவதியார்க்குத் தெரிவித்தனன். திலதவதியார் பரமசிவத்தின் பெருங்கருணையை யெண்ணி நான் சமணர் இருக்கையில் வரேன் என்று கூறினர். தமக்கையார் வாராமை நோக்கித் தாமே ஒருவரும் அறியாமல் பாயுடை, உறி, குண்டிகை முதலியவற்றை யுதறிச், சூலை துணையாக ஆப்தராய் உள்ளார் கைலாகு கொடுக்கத் தமக்கையாரிடம் வந்து நீரே துணை உம்மையே ஆதரவு என்று அடைந்தேன் என்று திருவடியில் விழுந்தனர். திலதவதியார் தம் தம்பியாரை யெழுந்திருக்கச் செய்து இது பரமசிவம் ஆட்கொள்ளச் செய்தது என்று ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைத் தியானித்து மருணீக்கியார்க்கு விபூதி கொடுத்தனர். மருணீக்கியார் அதை ஆவலுடன் தமது தேக முழுவதும் பூசிக்கொண்டனர். திலதவதியார், மருணீக்கியாரைத் திருப்பள்ளி யெழுச்சியில் திருக்கோயிலுக்கு அழைத்துச்சென்றனர். மருணீக்கியார் சுவாமியைப் பிரதக்ஷிணஞ்செய்து வணங்கி நின்று திரு அருளால் தமிழில்பாடும் வல்லமை அடைந்து "கூற்ருயினவாறு விலக்ககலீர்" எனுந் திருப்பதிகம் பாடியருளினர். உடனே சூலைநோய் நீங்கியது. மருணீக்கியார் உடல் பூரிக்க ஆனந்தத் /தழுந்தி வணங்குகையில் சிவமூர்த்தி அசரீரியாய் நீ அற்புத மதுரமாகிய தேவாரத்தால் நம்மைத் துதித்தபடியால் உனக்குத் திருநாவுக்கரசு என்னும் பெயருண்டாகுக என்று மறைந்தனர். அரசுகள் தாம் மனமொழி மெய்களால் திருத்தொண்டு செய்யத் திருவுளங்கொண்டு தியானம், பாடுதல், உழவாரப் பணிவிடை இவற்றை விடாது இயற்றினர். இவ்வகைச் சிவத்தொண்டு செய்து இருக்கையில் சமணர்கள் இவர் சைவரானதைப் பாடலிபுத்ரத்தரசன் அறியின் நம்மைத் தொலைத்து அவனும் சைவனுவன் என நீங்கிப் பல்லவராயனிடம் வந்து தருமசேனர் பொய்யாகச் சூலைநோய் என நடித்துச் சைவ்சமயம் புகுந்தனர். ஆதலால் அவரையழைத்துத் தண்டிக்கவேண்டும் என்றனர். பல்லவன் உடன்பட்டுச் சேனைகளை அனுப்பத் திருநாவுக்கு அரசுகள் "நாமார்க்கும்" என்னுந் திருப்பதிகமோதினர். பின்னும் மந்திரிகள் வேண்டி

யழைக்க நமக்கு வரும் அபாயங்கட்குச் சிவமூர்த்தி யிருக்கிறார் என்று அரசன் எதிர் நின்றனர். பல்லவன் இவனுக்கு யாது தண்டனையெனச், சமணர் நீற்றறையில் இடுவது, ஆகும் எனப், பல்லவன் உடன் பட்டு ஏவலாளரிடம் கூற, அவர்கள் அரசுகளை நீற்றறையிலிட்டனர். அரசுகள் "மாசில் வீணையும் மாலைமதியமும்" என்னுந் திருப்பதிகம் பாடிக்கொண்டு நீற்றறையில் பொய்கையில் இருப்பதுபோல் இருந்தனர். எழுநாட் சென்றபின் பல்லவன் நீற்றறையைத் திறந்து பார்க்கக் கூற அரசுகள் களிப்புடன் இருக்கக்கண்டு ஏவலாளர் கூறினர். சமணர் அரசனை நோக்கி நம்மதத்தில் கற்றமந்திர வலியால் பிழைத்தனன். ஆதலால் நஞ்சூட்டவேண்டும் என அரசன் அவ்வகைக் கட்டளையிட்டனன். பிறகு நஞ்சூட்டப் பட்டும் அரசுகள் களிப்புடன் இருந்தனர். இதை அரசன் கேட்டு இவனை என்ன செய்வது எனர், சமணர்கள் யானையை விட்டுக் கொல்ல ஏவுக என்றனர். பல்லவன் அவ்வகையே யானையையும் பாகரையும் ஏவுவிக்க அரசுகள் யானையின் முன் "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்" என்னுந்திருப்பதிகம் ஓதினர். யானை யரசுகளை வலஞ்செய்து வணங்கிப்போயிற்று. பாகர் கொல்லத் தாண்டினர். யானைப் பாகரையும் எதிர்ப்பட்டவரையும் கொன்று நாசமாக்கியது. சமணர் அரசனை யடைந்து எங்கள் மந்திரத்தைக் கொண்டே எங்களை ஒட்டினன் எனப் பல்லவன் கோபித்து இவனை யாது செய்வது என்றனன். சமணர் கல்லைக்கட்டிக் கடலில் இடுவது தரம் என்றனர். அவ்வகை அரசன் சம்மதிக்க ஏவலாளர் கற்றூணிற் பிணித்துக் கடலிலிட்டனர். அரசுகள் சிவமூர்த்தியின் திருவடி துணையாப்பற்றி "சொற்றுணை வேதியன்" எனும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடக் கல் தெப்பமாக மிதந்து அரசுகளைத் தாங்கிச் சென்று திருப்பாதிரிப் புலியூர் கொண்டு சேர்த்தது. அரசுகள் அத்தலத்தில் எதிர்கொண்ட சிவனடியவர்களுடன் சென்று ஆலயத்தையடைந்து, "ஈன்றாளுமாய்" எனத் திருப்பதிகம் பாடி அவ்விடத்து எழுந்தருளியிருந்தனர். பின் திருவதிகை தரிசிக்க ஆவல்கொண்டு அவ்விடம் நீங்கி அத் தலவாசிகள் எதிர்கொள்ள ஆலயத்துள் சென்று "வெறிவிரவு" எனவெடுத்து "ஏழையேன் பண்டிகழ்ந்தவாறே" எனத் துதித்திருக்கையில் முன் தீங்கு செய்த பல்லவன் திருவதிகை வந்து அரசுகளை வணங்கிச் சைவனாயினன். பாடலிபுரத்திலிருந்த காடவன் என்னும் அந் நாட்டரசனும் சமணசமயம் பொய்யென்று அறிந்து சமணப்பள்ளிகளையிடித்துக் கற்களைக் கொண்டுவந்து திருவதிகையில் குணதரீச்சுரம் கட்டினன். பின் அரசுகள் பல தலங்களையும் வணங்கப் பேர் அவாவுடையராய்ப் பல தலங்களைச் சேவித்துத் திருத்தூங்கானைமாடஞ்சென்று சிவமூர்த்தியை நோக்கி அடியேன் சமணசமயத்தோடு அழுக்கடைந்த இந்தத் தேகத்துடன் உயிர் வாழேன் அடியேன் உயிர் வாழ்தற்பொருட்டுத் தேவரீர் திருவிலச்சினையாகிய இடபக்குறியையும் சூலக்குறியினையும் பொறித்தருளவேண்டும் என்று "பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்" எனத் திருப்பதிகம் பாடி விண்ணப்பிக்க அவ்வகை ஒரு பூதம் அவ்விலச்சினைகளை யிட்டது. அவ்விடம் நீங்கிப் பல தலம் தரிசித்துச் சிதம்பரத்தில் உழவாரத் திருத்தொண்டு செய்து திருப்பதிகம் பாடி யிருந்தனர். இவ்விடம் அரசுகள் இருக்கையில் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மகிமைகளைக் கேட்டு அவரை வணங்கவேண்டும் என்னும் அவாவினால் சிவமூர்த்தியிடம் விடைபெற்றுச் சீர்காழிக்கு எழுந்தருளினர். இவரது வரவையறிந்த திருஞானசம்பந்தர் எதிர்கொள்ள அரசுகளும் கண்டு வணங்கப் பிள்ளையார் அப்பரே என்று வணங்கினர். இருவரும் ஆலயத்துட் சென்று வணங்கிப் பின் அவரிடம் விடைபெற்றுச் சோணாட்டுப் பல தலங்களையும் வணங்கித் திருச் சத்தி முற்றம் என்னும் தலமடைந்து "கோவாய் முடுகி" என்னுந் திருப்பதிகத்தால் திருவடியைச் சிரத்து வைத்து அருளல்வேண்டும் என்று விண்ணப்பித்தனர். பரமசிவம் "திருநல்லூருக்கு வா" என்று கட்டளையிட்டனர். அவ்வகை யரசுகள் திருநல்லூரடைந்து தரிசிக்கையில் சிவமூர்த்தி திருவடியைச் சிரத்தில் சூட்டி யருளினர். அரசுகள் "நினைத்து திருவடி யென்தலை மேல் வைத்தார்" என்ற திருப்பதிகம் ஓதினர். பின்னும் பல தலங்களைத் தரிசித்துத் திங்களூர் வழியாகச் செல்லுகையில் அப்பூதி யடிகள் தம்மிடத்தில் மிக

பேரன்பு வாய்த்தவராய் இருத்தல் கண்டு அவர் திருமாளிகைக்கு எழுந்தருளினார். அப்பூதி அடிகள் அப்பருக்கு அமுது படைத்தல் வேண்டித் தமது புத்திரர் இருவரில் மூத்த திருநாவுக்கரசுகளை நோக்கித் தோட்டத்திற்சென்று வாழைக் குருத்துக் கொண்டுவரச் சொல்லினர். அக் குமரர் இலை கொய்கையில் பாம்பு தீண்ட விஷம் ஏறுவதன்முன் இலையை வீட்டில் இட்டுக் கீழே விழுந்து இறந்தனர். அப்பூதியார், சவத்தை மறைத்து இனி நாயனார் அமுதுகொள்ளாரே என்று தடுமாற்றமின்றி அரசுகளை அமுதுசெய்ய அழைத்தனர். அரசுகள் அவ்விடம் நடந்தவைகளைத் திருவருளால் உணர்ந்து அவரது அன்பை நினைந்து திருவருள் சுரந்து சவத்தைச் சிவாலயத்து முன்னே கொணர்வித்து "ஒன்றுகொலாம்" என்னுந் திருப்பதிகம் பாடினர். உடனே அப் புத்திரர் உயிர்பெற்றனர். அப்பூதியடிகள் உயிர்பெற்றதற்கு மகிழாமல் அரசுகள் அன்னம் புசியாததற்கு வருந்துதலைக்கண்ட அரசுகள் அவரிடம் அமுதுண்டு "சொல்மாலை" என்னுந் திருப்பதிகத்தில் அவரைச் சிறப்பித்து நீங்கிப் பலதலங்கள் சேவித்து நமிநந்தியடிகள் நீரினால் விளக்கேற்றினமையைச் சிறப்பித்துப் பாடிப் பல தலங்களுக்குச்சென்று சேவித்துத் திருவாரூரை வணங்கித் திருப்புகலூரில் இருக்கையில் திருஞானசம்பந்தமூர்த்திகளைக் கண்டு அவருக்குத் திருவாரூரினது திருவாதிரைப் பெருமைகளைச் சொல்லிப் பின் திருவாரூர் சென்று திரும்பிய திருஞானசம்பந்தரை எதிர்கொண்டு முருகநாயனார் மடத்தில் சிறுத்தொண்டநாயனார், திருநீலநக்கநாயனாருடன் இருந்தனர். சில நாள்களுக்குப் பிறகு அரசுகள் திருஞானசம்பந்த சுவாமிகளுடன் பலதலங்களை வணங்கிக் குங்கிலியக்கலய நாயனார் செய்த விருந்து உண்டு திருக்கடவூர் முதலிய பல தலங்களைவணங்கித் திருவீழிமிழலை யடைந்து பஞ்சத்தின் பொருட்டுச் சிவமூர்த்தி யருளிய படிக்காசு பெற்றுச் சிவனடியவரை உண்பித்துப் பஞ்சம் நீங்கியவுடன் பல தலங்களை வணங்கி வேதாரணியம் எழுந்தருளி வேதம் பூசித்து மூடப்பட்டிருந்த திருக்கதவம் திறக்கப் பாடித் தரிசித்து அருகித்திரை செய்கையில் "நாம் வாய்மூரிலிருப்போம் வா" என அப்பர் "எங்கே யென்னை ... என்னும்"

திருப்பதிகம் பாடிக்கொண்டு செல்லச் சிவமூர்த்தி இவருக்குத் தரிசனந் தந்த கோலத்துடன் முன்னடந்தனர். நெடும்பொழுது அம்முன் னடப்பவரை நெருங்கிலர். சிவமூர்த்தி சமீபத்தில் காட்சி கொடுப்பவர்போல் அருகிருக்கும் ஆலயத்தில் மறைந்தனர். அப்பர் திருவாய்மூருக்குச் சென்றதறிந்த ஆளுடைய பிள்ளையார் திருவாய்மூரடையச் சிவமூர்த்தி இருவருக்கும் தரிசனந்தந்தருளினர். பின் இருநாயன்மார்களும் வேதாரணியம் சென்று இருக்கையில் திருஞானசம்பந்தர் பாண்டிமாதேவியா ரனுப்பிய திருமுகத்தால் மதுரைக்கு எழுந்தருளத் திருநாவுக்கரசுகள் பிரிதற்கஞ்சி நாகைக்காரோண முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருவாவடுதுறை யடைந்து திருஞானசம்பந்தமூர்த்திகளுக்குப் பொன்கொடுத்ததை "மாயிருஞாலமெல்லாம்"என்னுந்திருப்பதிகத்தாற் பாடிப் பழையாறையிற் சென்றார். அங்கே வடதளியென்னும் ஆலயத்தில் சிவலிங்கமூர்த்தியைச் சமணர் மறைத்திருத்தலைக் கேள்வியுற்று அமுது செய்யாமல் திருவுருவைத் தரிசித்தன்றிச் செல்லேனென இருக்கச் சிவமூர்த்தி அரசன் கனவிற் சென்று தாமிருக்கும் ஆலயத்தின் அடையாளங் கூறித் தம்மை வெளிப்படுத்தித் தரிசிக்க நாவுக்கரசு விரும்புகிறான் ஆதலால் சமணரைப்போக்கி ஆலயம் செய்க என்றனர். மறுநாள் அரசன் சமணர்களையோட்டி நாவுக்கரசுகளை வணங்கி ஆலயம் சமைத்தனன். நாவுக்கரசுகள் "தலையெலாம் பறிக்கும் சமண்" என்னும் திருப்பதிகம் பாடித் துதித்தனர். பின் பலதலங்களை வணங்கித் திருப்பைஞ்ஞீலி செல்லுகையில் பசி தாகத்தால் வருந்தி மனந்தளர்ந்து சென்றனர். இவரது வழியிளைப்பு நீக்கச் சிவமூர்த்தி வேதியராய் ஒரு தோப்பும் குளமும் உண்டாக்கிப் பொதிசோறும் வைத்து இருந்தனர். இவரது வரவை நோக்கிக் கிட்டி வழிநடையால் வருந்தினீர்போலக் காண்கிறது. என்னிடம் பொதிசோறு இருக்கிறது; அதையுண்டு இக்குளத்துச் சலத்தைப் பானஞ்செய்து போக என்றனர். வேதியர் பொதிசோற்றைத்தர அப்பர் வாங்கிப் புசித்து நீருண்டு இருக்கையில் வேதியர் நீர் எங்கே போகின்றீர் என அப்பர் திருப்பைஞ்ஞீலி செல்கின்றேன் என வேதியர் நானும் அவ்விடமே

செல்கின்றேன் என உடன் சென்று திருப்பைஞ்ஞீலி சென்றவுடன் மறைந்தருளினர். அப்பர் அதுகண்டு ஆநந்தக் கண்ணீரொழுக அழுது அலறி வணங்கித் திருத்தொண்டு செய்துகொண்டிருந்தனர். பின் அத் தலம் நீங்கித் திருஅண்ணுமலை முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு தொண்டை நாட்டுத் திருப்பதிகளை வணங்கித் திருக்காளத்தி, திருப்பருப்பதம் சேவித்து அவ்விடம் நீங்கி உத்தர கைலாசத்தில் பரமசிவம் வீற்றிருக்கும் திருக்கோலம் தரிசிக்க விரும்பிக் காசியை யடைந்து நீங்கி இராப்பகல் நித்திரையின்றி உணவு இன்றி நடந்தனர். கால்கள் இரண்டும் தேய்ந்தன. கைகள் ஆதரவாக நடந்தனர். அவையும் தேய, மார்பினல் நகர்ந்து சென்றனர். அது முரிய உருண்டு சென்றனர். அதனல் தேக முழுதும் உறைய அப்பர் அன்பால் மனம் தளராது நகருதற்கு முடியாமையால் வழியிற் கிடந்தனர். பரமசிவம் இவரது கருத்தை முற்றுவித்தற்கும் தமிழ் வேதம் தமிழ் நாட்டில் பரவவும் வேண்டி ஒரு தடாக நிருமித்து முனிவர் உருவுடன் எதிரில் தரிசனம் தந்து நீர் எங்கு ஏகுகின்றீர் என்றனர். அப்பர் சிவசின்னங்களுடன் இருப்பவரைக் கண்டு திருக் கைலைக்குச் சிவதரிசனத்திற்குச் செல்கின்றேன் என முனிவர் தேவர்களாலும் அடையப்படாத அக் காட்சி மனிதர்களுக்கு எளிதோ திரும்புதலே நன்று என்றனர். அப்பர் அத் தரிசனம் செய்தாலல்லாமல் அநித்திய உடல் கொண்டு திரும்பேன் என்றனர். சிவமூர்த்தி இவரது துணிவு நோக்கி "நாவுக்கரச" எழுந்திரு எனலும் குறைந்த உறுப்புக்களைப் பெற்று அப்பர் எழுந்து அஞ்சலி அத்தராய்த் தமது குறை வேண்டினர். பரமசிவம் அப்பரை நோக்கி இத் தடாகத்தில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்து அத் தலத்தில் கைலாசகிரியில் நாம் வீற்றிருக்கும் திருக்கோலம் கண்டு தரிசி என்று கட்டளையிடலும் அப்பர் அக் கட்டளையைச் சிரமேற்கொண்டு ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித்துத் தடாகத்தில் ஸ்நானஞ்செய்து திருவையாற்றிலிருக்கும் ஒரு வாவியில் எழுந்து கரை ஏறி வழியிலே சராசரங்கள் தத்தம் துணையுடன் இருத்தலைக் கண்டு அவற்றைச் சிவசத்தி யுருக்களாகத் தியானித்துத் திருக்கோயில் அடைந்து திருக்கைலாச தரிசனம் கண்டு ஆநந்தங்கொண்டு வணங்கினர். பின் அவ்விடம் நீங்கித் திருப்பூந்துருத்தி சேர்ந்து ஒரு திருமடம் கட்டுவித்துத் திருத்தாண்டகம் பாடிக்கொண்டிருக்கையில் பாண்டி நாட்டில் சைந மதங்களைந்து சைவம் பரவச்செய்து தாம் இங்கிருப்பதைத் தேடி எழுந்தருளுகின்ற திருஞானசம்பந்தர் வரவுக் கெதிர்கொண்டு சென்று ஒருவரு மறியாமல் சன நெருக்கத்தினுள் புகுந்து அம் மூர்த்திகளின் சிவிகைகளைத் தாங்கி வருவார் ஆயினர். திருஞானசம்பந்தர் திருப்பூந்துருத்தி அடைந்து அப்பரைக் காணுமையால் அப்பர் எங்குற்றூரென இங்குற்றேன் என்று எதிர் சென்று வணங்கிச் சிவதரிசனம் செய்து அளவளாய் இருந்தனர். பின் திருநாவுக்கரசுகள் பாண்டி நாட்டிற்கு எழுந்தருள எண்ணிச் சென்று நின்றசீர்நெடுமாறநாயனுரும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறைநாயனுரும் வணங்கித் துதிக்கச் சில நாளிருந்து பாண்டி நாட்டுத் திருப்பதிகள் அனைத்தும் சேவித்துத் திருப்புகலூர் அடைந்தனர். இத் தலத்தில் அரசுகள் உழவாரத் தொண்டு செய்கையில் இவரது வைராக்கியத்தை உலகத்தவர்க்குத் தெரிவிக்கச் சிவபெருமான், உழவாரப் படையிடும்தோறும் பொன், நவமணி முதலிய தோன்றச் செய்தனர். அரசுகள் அவற்றைப் பருக்கைக் கற்கள்போல உழவாரப் படையில் ஏந்திக் குளத்தில் எறிந்தனர். பின் சிவாஞ்ஞையால் அரம்பையர் இவரிடம் வந்து பலவாறு மயக்கியும் இவர் தம் தொண்டிலிருந்து தமது வினையை முன்னிலையாக்கொண்டு நான் திருவாரூரில் எழுந்தருளிய சிவமூர்த்திக்கு ஆளானேன் உங்களால் ஆட்டுண்ணேன் என்னுங் கருத்தால் "பொய்ம்மாயப் பெருங்கடலில்" என்னுந் திருப்பதிகம் பாடினர். இதனுல் அரம்பையர் தங்கள் கருத்து முற்றுமல் வணங்கிச் சென்றனர். அரசுகள் தம்மைத் திருவடிக்கீழிருத்திடும், என்னுங் கருத்தால் "எண்ணுகேன்" என எடுத்து "உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" எனுந் திருப்பதிக மருளிச் சிவபெருமான் திருவடியை யடைந்தனர். இதில் சுருங்கிய கதைகளைத் திருஞானசம்பந்தர் கதையைக் காண்க. இவருக்குத் திருநாவுக்கரசுகள், மருணீக்கியர், தருமசேனர், வாகீசர், அப்பர், ஆளுடைய அரசு

எனவும் பெயர். இவர் அருளிச் செய்த திருமுறைகள் (௩). (பெரிய புராணம்).

**திருநாவுடையபிரான் தாசர் அண்ணர்** — இவர் எழுபத்திநன்கு சிம்மாசனுதிபதிகளில் கோமடத்தாழ்வாருடைய திருவம்சத்தவர். இவர் கொல்விக்காவல்தாசர் குமாரத்தியை மணந்து சிக்கலில் கொல்லிக்காவல்தாசர் வீட்டிலிருந்தார். இவர் தம் மாமனர் திருநாட்டுக் கெழுந்தருளின பின் தம் மனைவியரை அழைத்துக் கொண்டு திருநகரிக் கெழுந்தருளி யிருந்தவர். இவர் குமாரர் மணவாளமாமுனிகள்.

**திருநாளைப்போவார்நாயனர்** — இவர் சோணுட்டில் ஆதனூரில் புலையர் குலத்தில் அவதரித்து நந்தனர் எனத் திருநாமம் பெற்று, சிவபக்தியுடையராய்ச் சிவாலயங்களுக்குப் பேரிகை முழவு, யாழ் முதலியவைகளுக்குத் தோல், வார், நரம்பு, கோரோசனம் உதவி வருவர். இவர் பல சிவாலயங்களையும் தரிசிக்க விரும்பித் திருப்புன்கூரில் சுவாமியை நேரே தரிசிக்க எண்ணிச் சிவமூர்த்தியை வேண்டச் சிவபிரான் தமக்கு முன்னிருந்த நந்திபிரானை விலக்கிக் காட்சி தந்தருளினர். இவர் சிதம்பரத்தில் நடராசமூர்த்தியைச் சேவிக்க வெண்ணித் தமக்கு அத்தலத்துள் செல்லும் ஆதிக்க மில்லாமையால் மனந் தளர்ந்து ஆசை யெழும்போ தெல்லாம், "நாளைப் போவேன், நாளைப் போவேன்" என்று பலமுறை சொல்லிக்கொண் டிருந்து துணிந்து அத்தலத்தை யடைந்து உள் செல்லாது திருவெல்லையை வலஞ்செய்து கொண்டிருக்க நடராஜமூர்த்தி அவர் கனவிற் ருேன்றி நீ நெருப்பில் மூழ்கி நம்மை வந்து தரிசிப்பையென்று அருளிச்செய்து தில்லைவாழந்தணருக்கும் திருநாளைப்போவார் பொருட்டுத் தீவளர்த்தக் கட்டளையிட்டு மறைந்தனர். தில்லைவாழந்தணர் இறைவன் சொற்படி நந்தனரிடம்சென்று தீவளர்த்த நந்தனர் தீயினை வலம் வந்து உள்புகுந்து முனிவர் உருக்கொண்டு வேதியராய் வந்து சுவாமி சந்நிதானத்து நடராஜமூர்த்தியைச் சேவித்து மறைந்தனர். (பெரிய புராணம்).

**திருநிலயகம்** — 1. ஒரு வித்தியாதர நகரம். 2. போதன நகரில் ஒரு நந்தவனம்.

**திருநீலகண்டநாயனர்** — இவர், சிதம்பரத்தில் குயவர் குலத்தில் திருஅவதரித்துச் சிவனடியவர்களுக்குத் திருவோடு தரும் நியமம் பூண்டு சிற்றின்ப இச்சையுடையராய் நிகழ்வதை மனைவியா ரறிந்து இனி எம்மைத் தீண்டில் திருநீலகண்டம் என ஆணையிட்டனர். இதைக் கேட்ட நாயனர், அஞ்சி எம்மையெனப் பன்மையாய்க் கூறியதால் எந்த மாதரையுந் தொடாமல் கொண்ட வொழுக்கம் தவருது ஒழுகி வரும் நாட்களில் சிவமூர்த்தி இவரது ஒழுக்கத்தை உலகறிந்துய்யச் சங்கமராய் எழுந்தருளி ஒரு ஒட்டினை அவரிடத்துக் கொடுத்து நாம் மீண்டும் கேட்கும் போது இதனைக் கொடுக்க எனப்பணித்து, கொடுத்த ஒட்டினை மாயையால் மறைத்து, மீண்டும் நாயனரிடம் வந்து ஒட்டினைக் கேட்டனர். நாயனர் ஒட்டினை வைத்த இடத்தில் சென்று பார்க்கக், காணுது சங்கமரிடம் வந்து மயங்கினர். சங்கமர், நீ என் ஒட்டினைக் களவுசெய்தனை அதனை நீ களவு செய்யாதது உண்மையாயின் நீ உன் மனைவி கைப்பற்றிக்கொண்டு தீர்த்தத்துண்முழுகிக் கூறுகவென அங்ஙனமே உடன்பட்டு இருவரும் கோலின்முனைகளை இருபுறத்தும் பற்றி முழுகி இளமைபெற்று மேலெழுந்து சிவாஞ்ஞையால் முத்தி யடைந்தவர். (பெரிய புராணம்).

**திருநீலகண்டயாழ்ப்பாணநாயனர்** — இவர் திருஎருக்கத்தம்புலியூரில் திரு அவதரித்து மதுரையில் யாழ் வாசிக்கையில், மழை வருஷிக்க அசரீரியால் பலகையிடக் கட்டளை பெற்று, பலகை பெற்று, அதிலிருந்து, யாழ் வாசித்துத் திருவாரூரில் சிவமூர்த்தியால் நிருமிக்கப்பட்ட வடவாயிலாற் சென்று தரிசித்து, சீர்காழி சென்று திருஞானசம்பந்த சுவாமிகளிடம் கட்டளை பெற்றுத் திருப்பதிகங்களை யாழிலமைத்துப் பாடித் திருஞானசம்பந்தசுவாமிகளைப் பிரியாதிருந்து ஸ்ரீசம்பந்தர் திருமணத்தில் முத்தி யடைந்தனர். இவர் வரகுணபாண்டியன் காலத்தவர். பாணபத்திரர் எனவும் பெயர். இவர் காலம் சற்றேறக்குறையச் சம்பந்தர் சேரமான்பெருமாணுயனர் காலமாக இருக்கிறது. பாணபத்திரரைக் காண்க. (பெரிய புராணம்).

**திருநீலநக்கநாயனர்** — சோழநாட்டுச் சாத்தமங்கையென்னுங் கிராமத்தில் பிராமண குலத்தில் திருஅவதரித்துச் சிவார்ச்சனை செய்து வரும் நாட்களில் ஒரு நாள் சிவ பூசை செய்யும்படி மனைவியார் பூசைக்கு வேண்டிய பொருள்களைத் தாங்கிவர அய

வந்தி ஆலயத்திற் சென்று சிவபூசை செய்கையில் சுவாமிமீது ஒருசிலம்பி விழுந்தது. அருகிலிருந்த மனைவியார் சிலம்பி விழுந்தது கண்டு சுவாமியின் திருமேனியை ஊதித்துமித்தனர். இதனைக் கணவர்கண்டு நீ அநுசிதமான காரியம் செய்தனை யாகையால் எனக்குப் புறம்பென மனைவியார் அஞ்சி ஆலயத்து ளிருந்தனர். நாயனார் வீட்டிற்குச் சென்றனர். சிவமூர்த்தி, நாயனார் கனவிற் சென்று தமது திருமேனியைக் காட்டி, உன் மனைவி ஊதித்துமித்த விட மொழிய மற்ற விடம் சிலம்பியின் கொப்புளம் என, நாயனார் விழித்துக் களிப்புடன் ஆலயத்துட் சென்று இறைவனைப் பணிந்து மனைவியாரை வீட்டிற்கு அழைத்து வந்தனர். இவ்வகை இருக்கும் நாட்களில் திருஞானசம்பந்த மூர்த்திகள் அத் தலத்திற் கெழுந்தருள அவரை எதிர்கொண்டு அவர்க்குத் திருவமுது செய்வித்து அவருடன் வந்த பாணருக்கு இடங் கொடுத்து நித்யாக்கினி வலஞ் சுழித்ததனால் சாதி யுயர்ந்ததன்று பக்தியே யுயர்ந்ததென்றறிந்து சிலகாலமிருந்து திருஞானசம்பந்தமூர்த்திகள் திருமணஞ் சேவித்து முத்தி பெற்றவர். (பெரிய புராணம்).

**திருநீற்றுச்சோழன்** — அநபாயச் சோழனுக்கொரு பெயர்.

**திருநீற்றுமதில்** — கோச்செங்கட் சோழனைக் காண்க.

**திருப்பாணாழ்வார்**—இவர் கலியுகம் (௩௱௪௨) துர்மதி வருஷம், கார்த்திகை மாதம், கிருஷ்ண துவிதியை புதன்கிழமை, ரோஹணி நக்ஷத்திரத்தில் திருஉறையூரில் நெற்கதிரில் திருஅவதரித்துப் பிள்ளையில்லாப் பஞ்சம தம்பதிகளால் எடுத்து வளர்க்கப் பசும்பாலுண்டு வளர்ந்து உடலால் உட்செல்லக் கூடாமையால் காவிரிக்கரையி லிருந்து பெரியபெருமாள் திருச்சந்நிதியை நோக்கிப் பாடிக்கொண்டிருந்தனர். பெருமாள், உகந்து லோகசாரங்க முனிகளுக்குத் திருப்பாணாழ்வாரைத் தோளிற் றூக்கிவரக் கட்டளை யிட்டனர். லோகசாரங்கமுனிகள் பெருமாள் கட்டளையைக் கோயிலனந்தக்கொத்துக்கும் அறிவித்து ஆழ்வாரைத் தோளில் எழுந்தருளச் செய்துகொண்டு பெருமாள் முன்னிறக்கி யருளினர். ஆழ்வார் பெருமாளைக் கண்ணாரச் சேவித்து "அமலனாதிப்பிரான்" எனத் திருப்பாசுரம் அருளிச்செய்து பெரியபெருமாள் திருமேனியில் அந்தர்ப்பவித்தனர். இவர் (20) திருநக்ஷத்திரம் எழுந்தருளி யிருந்தனர். (குருபரம்பரை).

**திருப்பாற்கடல்** — இது, சத்த சமுத்திரங்களில் ஒன்று. இதில் திருமால், ஆலிலைமீதும் திருஅநந்தாழ்வான்மீதும் எழுந்தருளி அடியவர்க்கு அருள் செய்திருக்கின்றனர். இதனைத் தேவர், பலமுறை கடைந்து சிந்தாமணி முதலிய பொருள்கள் பெற்றனர். தேவர் பொருட்டு, கார்த்தவீரியன், வாலி முதலியவரும் இதைக் கடைந்தனர். இதனை, உபமன்னியர் பொருட்டுச் சிவமூர்த்தி பானஞ் செய்ய அளித்தனர். பாற்கடல் கடைந்ததைக் காண்க.

**திருப்புகழ்** — பலசந்தங்களாக அருணகிரிநாதரால் குமாரக்கடவுளைப் பாடிய தோத்திரப்பா.

**திருப்புட்குழிஜீயர்** — திருவாய்மொழி கேட்கும்படி திருமலையாழ்வாருக்குக்கூர குலோத்தமதாசர் கூறிய ஸ்ரீவைணவர்

**திருப்பெருந்துறை** — சுகுண பாண்டியனைக் காண்க.

**திருப்ரவேசயோகம்** — பூர்வபக்ஷத்து நல்ல கிழமையுடன் கூடின அன்றைய பக்ஷமும்; நக்ஷத்திரமும், சுபயோகமும் வர, வாராதிபன் உச்சத்தானமேறி உச்சாம்சம் பெற உச்சராசி லக்னமாகக் கற்பாதானம், கிரகாரம்பம் விவாகம் செய்யின் முறையே சக்ரவர்த்தித்வம், அழியாச்செல்வம், பூர்ணாயுள் பெருஞ் சம்பத்துண்டாம். (விதானமாலை).

**திருமகள்**—இவள் ஒருகாலத்துக் கோக்களிடத்திற் சென்று தான் அவற்றின் தேகத்திருக்க வேண்ட கோக்கள் நீ நிலையற்றவள் எனக் கூறின.

**திருமங்கலியத்திற்குப் பொன்னுருக்குதல்**— திங்கள், புதன், வியாழம், வெள்ளி வாரங்களும்; பிரதமை, சதுர்த்தி, அஷ்டமி, நவமி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசியை ஒழிந்த திதிகளும்; அச்சுவினி, ரோகிணி, மிருகசீரஷம், புனர்ப்பூசம், பூசம், மகம், உத்தரத்திரயம், அத்தம், சுவாதி, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம், ரேவதி ஆகிய நட்சத்திரங்களும்; விருஷபம், மிதுனம், கர்கடகம், கன்னி, துலாம், தனுசு, மீனராசிகளும், எட்டாமிடம் சுத்தமுமாக ஸ்திரி புருஷர்களுக்கு அநுகூலமான நட்சத்திரங்களிலே திருமங்கிலியத்திற்குப் பொன்னுருக்க நன்று.

**திருமங்கையாழ்வார்** — இவர் கலி (௩௯௯) இல் நளஞூ, கார்த்திகைமாதம், பௌர்ணமி, வியாழக்கிழமை கிருத்திகையில் திருவாலி நகரத்தில் நீலனென்னும் சேநாபதிக்குப் புத்திரராய்ச் சோழராசனுக்குக் கீழ்ச்சிற்றரசரா யிருந்துகொண்டு, தாளூதுவான்; நீர்மேனடப்பான், நிழலின் மறைவான், தோலாவழக்கன், சாயைபிடிப்பான் முதலிய மந்திரியருடன் குமுதவல்லியை மணத்தற் பொருட்டுக் கேட்க அவள் திருவிலச்சினை இல்லாததால் மறுக்கத் திருநறையூர் நம்பியிடத்தில் திருவிலச்சினைபெற்றுக் குமுதவல்லியை மணந்து பலவரசர்களைச் செயித்துப் பரகாலன் என்கிற பெயர் தாங்கியிருக்கையில் சோழன் பகுதிப்பணம் வராதிருத்தலைக் கண்டு ஆழ்வாரைப் பிடிக்கக் கட்டளை யிட்டனன். ஆழ்வார் வந்தவர்களை ஒட்டச், சோழன் ஆழ்வாரைத் தந்திரமாய்ப் பிடித்துச் சிறையிட்டனன். ஆழ்வார் ததியாராதன பங்கத்திற்கு விசனமடைய அத்திகிரிப்பெருமாள் இவரது கனவில் திருக்காஞ்சிக்கு வாரும் என்று திருவாய் மலர்ந்து மறைந்தருள ஆழ்வார் சோழன் மந்திரிகளைப் பார்த்து நான் செலுத்த வேண்டிய தொகையைக் காஞ்சிபுரத்திற்கு என்னை அழைத்துக் கொண்டு போவீராயின் தருகிறேனென்று அவர்களுடன் சென்று பெருமாளைச் சேவித்து வேகவதியிற் புதைத்திருந்த பொருள்களை யெடுத்துப் பகுதிகட்டி மிகுதியைத் ததியாராதனத்திற்கு வைத்துத் திருவாலிநகர்க்கு எழுந்தருளினர். இச்செய்தியைச் சோழன் அறிந்து தனத்தை ஆழ்வாருக்குக் கொடுப்பித்து க்ஷாமணஞ் செய்துகொண்டு போயினன். பின் ததியாராதனத்திற்குப் பணமில்லாமையால் உலுத்தரிடத்தும், அவைணவரிடத்தும் உள்ள பொருள்களைப் பறித்துத் ததியாராதனஞ் செய்வித்து வருகையில் ஒரு நாள் நெற்றியில் திருமண்ணில்லாத பெண்ணொருத்தியின் கையிலிருந்த வெள்ளிக்கிண்ணத்தைப் பறிக்க அவள், நாராயணன் நம் சொத்தை அங்கீகரித்தான் எனச்சொல்லக் கேட்டு அதைப் போட்டுவிட்டுச் செல்கையில் பெருமாள் நாய்ச்சியாருடன் மணக்கோலங் கொண்டுவர அவரிடஞ்சென்று அவ்விருவரது திருவாபரணங்களைக் கழற்றித்தரப் பெற்றுப் பெட்டகத்திட்டுத் தூக்குகையில் பளுவாயிருந்ததுகண்டு மணவாளனை இந்தத் தம்பன மந்திரம் எனக்குச் சொல்லுமெனப் பெருமாள் ஆழ்வார் திருச்செவியில் அஷ்டாக்ஷரம் உபதேசிக்கக் கேட்டுத் திகைத்து நிற்கையில் பெருமாள் சேவைசாதித்து "நம் கலியர" என்று அழைக்க ஆழ்வார், பெருமாளைக் கண்குளிரத் தரிசித்துப் பெரிய திருமொழி முதலியவைகளால் துதித்து நாலுகவிப் பெருமாளெனப் பெயரடைந்து திவ்ய தேசயாத்திரை செய்துவருகையில் காழிச்சீராம விண்ணகரஞ்சென்று சம்பந்தன் என்கிற வித்வானை வென்று திருவரங்கஞ் சென்று கைங்கர்யஞ் செய்துவரும் நாட்களில், நாகப்பட்டினத்துப் பௌத்தர் கோயிலில் செல்வமிருக்கிறதாகக் கேள்விப்பட்டு அங்குச்சென்று அதற்குக் காவலாகச் சுழன்றுகொண்டிருந்த சக்கரத்தை வாழைமரத்தைச் சக்கரத்தில் கொடுத்து நிறுத்திச் சுவர்ண பௌத்த விக்ரகத்தை உருக்கித் திருமதில் முதலிய கைங்கர்யஞ் செய்வித்து ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வாரைக் கோயிலுக்கு எழுந்தருளச் செய்வித்து ஒரு பரமபதவாயில் ஏற்படுத்தி அத்தியயன உற்சவம் செய்வித்து (௧0௫) திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்து திருக்குறுங்குடியில் திருநாட்டிற்கு எழுந்தருளினர். இவர் அருளிச்செய்த பிரபந்தங்கள் திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரிய்திருமடல். இவர்க்கு நீலநிறத்தார், பரகாலன், கலியன், நாலுகவிப்பெருமாள், அருள்மாரி என்று பெயர். இவர் குதிரைக்குப் பெயர் ஆடன்மா. (குருபரம்.)

**திருமணத்தூணம்பி** — அழகிய மணவாளன். காணியாளரான சிங்கப்பிரான் புத்திரன். சிங்கப்பிரானைக் காண்க.

**திருமண்**—மலையின் உச்சி, நதிக்கரை, புண்ய பூமி, சமுத்திரதீரம், புற்றுக்கள், துளவத்தின் அடிகளில் உள்ள மண்களைக் கிரகிக்க வேண்டும். (பிரமாண்ட புராணம்). மேற்கூறிய மண்களில் கறுத்தமண் அனிஷ்டங்களை ஒழிக்கும், செம்மண் வசியத்தைத்தரும், பச்சைமண் செல்வந்தரும், வெள்ளைமண் வைஷ்ணவமாம். இவற்றைத் தரிக்கையில் பெருவிரலால் தரிக்கின் புஷ்டியைத்தரும்; நடுவிரல் ஆயுளைத் தரும்; ஈற்றயல் விரல் இச்சித்தவுண்டியைத் தரும்; சுட்டுவிரல் மோக்ஷத்தைத் தரும். நகத்தால் தரிக்கக்கூடாது. இத்திருமண் தரிக்கு மிடத்துத் தீச்சுவாலை

போலவும், மூங்கிலிலைபோலவும், தாமரையின் அரும்புபோலவும், இதழ்போலவும், மீனைப்போலவும், ஆமையைப் போலவும் தரித்தல் தகுதியாம். பத்து அங்குல நீளமுள்ள ஊர்த்துவ புண்டரம் உத்தமம். ஒன்பதங்குலம் மத்திமம். எட்டங்குலம் அதமம், பின்னும் சிலர் ஏழு ஆறு ஐந்தங்குல அளவையுடையன மத்திமம், நான்கு மூன்று, இரண்டு அங்குல அளவையுடையன கனிஷ்டமெனவுங் கூறுவர். இப் புண்டரங்களைக் கேசவன் முதலிய பன்னிரு திருமந்திரங்களுடன் நெற்றி முதலிய பன்னிரண்டு தானங்களிலும் வாசுதேவனைச் சிரத்தின் மீதும் கொண்டு தியானித்தல் வேண்டும். இவ்வாறு தியானித்தவன் நீசனேயாயினும் பரிசுத்தனாகிறான். இதில் ஐயமில்லை (சத்தியவிரதர்) கோபிசந்தனத்தால் ஊர்த்துவ புண்டரம் தரித்தவன் பாபங்களை யொழிக்கிறான். சாளக்கிராமத்திற்குத் தரித்த செஞ்சந்தனத்தைத் தேகத்திற்றரித்தவன் முத்தனாகிறான். புண்டரம் காண்க.

**திருமண்டன்குடி** — தொண்டரடிப் பொடியாழ்வார் திரு அவதாரத்தலம்.

**திருமலைநம்பி** — சுமுகாம்சம், இவர் திருவரங்கப் பெருமாளரையருக்குப் பின் கலி (௩0எ௫)-க்கு மேல் ஸ்ரீ முகஞு புரட்டாசிமீ வெள்ளிக்கிழமை அவதரித்தவர். ஆளவந்தார் திருவடிசம்பந்தி.

2. பெரிய திருமலைநம்பிக்கு ஒரு பெயர்.

**திருமலைநல்லான்** — உடையவர் மேல்கோட்டைக்கு எழுந்தருளியிருந்தபோது ஆச்ரயித்த ஸ்ரீ வைஷ்ணவர் (எச) சிம்மாசனாதிபதியரில் ஒருவர். தேசிகர் திருவடியை ஆச்ரயித்தவர் என்பர். (குருபரம்பரை)

**திருமலைநாதர்** — இவர் சிதம்பரப்பாட்டியல் இயற்றிய பரஞ்சோதியாரின் தந்தையார். சிதம்பரபுராணம், மதுரையுலா இயற்றியவர்.

**திருமலையப்பர்** — நயினாராசாரியர் திருவடி சம்பந்தி,

**திருமலையர்**—திருவள்ளுவர் திருக்குறளுக்கு உரையிட்ட ஆசிரியர்களில் ஒருவர்.

**திருமலையாழ்வான்** — திருவாய் மொழிப் பிள்ளைக்கு ஒரு பெயர்.

**திருமலைராயன்** — காளமேகர் என்னும் புலவர் திலகரைத் தன் சம்ஸ்தான வித்வானாகிய அதிமதுரக்கவியின் வார்த்தை கேட்டு யமகண்ட முதலிய பாடச்செய்து காளமேகரை உபசரிக்காததால் மண்மாரி பொழிய வசைபெற்று நாடிழந்த சிற்றரசன். இவன் சாளுவகோப்பையன் குமரன். இவனை ஒரு புலவன் "இந்திரன் கலையாயென் மருங்கிருந்தான் அக்கினி உதரம் விட்டகலான், யமனெனைக்கருதான் அரனெனக் கருதி நிருதிவந்தென்னை யென்செய்வான், அந்தமாம் வருணனிருகண் விட்டகலான் அகத்தினென் மக்களும்யானு, மநிலமதாகுமமுதினைக் கொள்வோம் யாரெதிரெமக்குளாருலகிற், சந்ததமிந்த வரிசையைப் பெற்றுத் தரித்திர ராஜனை வணங்கித், தலைசெயு மெம்மை நிலைசெய் சற்கீர்த்திச் சாளுவகோப்பை யனுதவும், மந்தரப் புயத்தான்றிரு மலைராயன் மகிழ்வோடு விலையிலாவன்னோன், வாக்கினாற்கு பேரனாக்கினான் அவனே மாசிலீசான பூபதியே" யென்று பாடிப் பரிசுபெற்றனன்.

**திருமழிசையாழ்வார்** — இவர் துவாபரயுகத்தில் சித்தார்த்திஞு தைமீ கிருஷ்ண பிரதமைகூடிய ஞாயிற்றுக்கிழமை மக நக்ஷத்திரத்தில் திருமழிசையில் பிருகு முனிவர் தவஞ்செய்கையில் அத் தவத்தைக்கெடுக்க இந்திரனால் ஏவப்பட்ட தேவஸ்திரீயிடம் அவதரித்துப் பிருகு முனிவரால் பிரப்பஞ் செடி நிழலில் வளர்த்த இருந்து அழுதனர். அக் காலையில் உலோகமாதாவாகிய ஸ்ரீ மகாலக்ஷ்மி அவ்விடம் எழுந்தருளித் தமது திருமுலைப்பாலைக் கறந்து ஒரு வள்ளத்தில் வைத்து, அப்பால் ஒவ்வொரு திவலையாக வாயில் விழச்செய்து மறைந்தனள். இவ்வகை வளரும் நாளில் திருமழிசைக்கடுத்த காட்டிலுள்ள திருவாளன் என்னும் வேடன் புத்திரனில்லாத தன் பத்தினியிடம் இப் புத்திரரைக் கண்டு கொடுக்க வேடத்தி அன்பினால் பாலூட்ட உண்ணமல் ஒரு சூத்திரர் அன்பாலூட்டிய பாலுண்டு வளர்ந்து எட்டாம் வயதில் வேடச் சேரியை விட்டகன்றுபரமத நிராகரணஞ் செய்திருந்தனர். இவ்வகை யிருக்கையில் ருத்ரர் ஆகாச வீதியில் செல்ல அந் நிழல் மேல்படாமல் ஒதுங்கிய ஆழ்வாரைக்கண்டு உமக்கு வேண்டிய வரம் கேளீர் என்றனர். ஆழ்வார், மோக்ஷம்தருக என ருத்ரர் அது என்னாலாகாது நாராயணனே தரவல்லான் என்ன ஆனால் இந்த ஊசியின் பின்னே நூல் போகச்செய்க என உருத்திரன் கோபித்து நெற்றிக்கண்ணை விழிக்க ஆழ்வார் திருவடியில் ஒரு கண்ணை ஆக்கித்

தீயை யேவினர். அக்நி ருத்ரனைத் தகிக்க ருத்திரன் அபசயப்பட்டு ஆழ்வாரை க்ஷாமணங் கேட்டுக்கொண்டு பக்திசாரர் என்கிற திருநாமம் சாற்றிச் சென்றனன். முதல் ஆழ்வார்கள் மூவரும் இவருடன் கூடித் திருவல்லிக்கேணி தரிசித்தனர். இவருண்ட பாலின் சேஷத்தால் சூத்திரருக்குப் பிறந்த கணிகண்ணர், ஆழ்வார் காஞ்சியில் எழுந்தருளியிருக்கையில் கைங்கர்யம் செய்துகொண்டிருந்து அச்சந்நிதியில் கைங்கர்யம்செய்த விருத்தையிட்த்து அன்புவைத்து அவ்விருத்தையைக் குமரியாக்கினர். இதைக் கேள்வியுற்ற பல்லவராயன் என்கிற ராஜா தன்னை யெளவன புருஷனாகச் செய்யக் கேட்டனன். கணிகண்ணர் மறுத்தனர். அதனால் பல்லவன் என்னாட்டைவிட்டு நீங்குக என்றனன். இதனைக் கணிகண்ணர் திருமழிசை ஆழ்வாருக் கறிவித்து நீங்க ஆழ்வாரும் "கணிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி, மணிவண்ணா நீ யிங்கிராதே — துணிவுடனே, செந்நாப் புலவனியான் செல்கின்றேனீயுமுன்றன், பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்" என்று ஊரைவிட்டு நீங்கினர். இதனால் பெருமாளும் நீங்கினர். பெருமாள்நீங்கவே நகரம் வெறுமையடைந்தது. இதனால் அரசன் துக்கமடைந்து இருவரையு மடைந்து வேண்டி மீண்டு மெழுந்தருளச் செய்தனன். இவ்வகை சிறிதுநாளிருந்து ஆழ்வார், பெரும்புலியூர் வேதியர் தம்மைச் சூத்திரர் என இகழ்ந்தமை யெண்ணி அக் கிராமத்திற் செல்லாது விலக அவ்விடமிருந்த பெருமாள் ஆழ்வார் சென்ற வழி நோக்கினர். இதனை அறிந்த நம்பி வேதியருக் கறிவிக்க அவ் வேதியர், தங்களுக்கு வேதாத்தியயனத்தில் விட்ட இடந் தெரியாது மறந்தமைக்கும் பாகவத தூஷணமே காரணமென் றுணர்ந்து ஆழ்வாரை நமஸ்கரிக்க ஆழ்வார் வேதமுணர்ந்தும் அவர்கள் எண்ணியதை விளக்க வர்ணாச்சிரமத்தால் வாயாற் கூறாமல் ஒரு கறுப்பு நெல்லைப் பிளந்து காட்டினர். இதனால் வேதியர் வேதத்தில் விட்டவிடமறிந்து சென்றனர். இதுநிற்க, அவ்வூரில் யாகஞ் செய்ய யத்தனித்த வேதியர் யாக பலஸித்தி யடைய வேண்டி ஆழ்வாரை யக்யஸதஸில் உட்காருவித்தனர். அவ்விடமிருந்த சில வேதியர் அருவருத்தனர். இதனை ஆழ்வாரறிந்து திருமார்பில் திருவாழி ஆழ்வானைக் காட்டினர். இதனால் வேதியர் பயந்து பிரார்த்திக்க ஆழ்வார் கடாக்ஷித்து அவ்விடமிருந்து திருக்குடந்தைக்கு எழுந்தருளி ஆராவமுதனைச் சேவித்து (உ,௩00-ஸு) யோகத்திலிருந்து திருநாட்டுக் கெழுந்தருளினர். இவர் சக்கிராம்சம். இவர் (௪,௭0உ-ஸு) எழுந்தருளியிருந்தனர். இவர் சுக்திகாரன், கொங்கணர் முதலியவர்களை வெற்றிகொண்டனராம். இவர் செய்தவை நான்முகன் திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம் முதலிய. (குருபரம்பரை.)

**திருமறுமார்பன்** — இலக்குமியையும் மச்சத்தையும் மார்பிலுடைய திருமால்.

**திருமாபத்தினி** — கண்ணகியின் சிறப்புப் பெயர். (சிலப்பதிகாரம்).

**திருமாலாயுதம்** — (௫) சங்கம், சக்கிரம், சார்ங்கம், வாள், கதை.

**திருமாலிருஞ்சோலைதாசர்** — ஆளவந்தார் திருவடிசம்பந்தி.

**திருமாலைதந்த பெருமாள்** — மணவாளமாமுனிகள்காலத்துத் திருவரங்கத்தலத் ததிகாரி; மணவாளமா முனிகளைத் திருவாய்மொழிக்கு வியாக்கியானம் கூறச் சொல்லிக்கேட்டு அவர்க்கு முப்பத்தாறாயிரப் பெருக்கென்று பெயரிட்டவர்.

**திருமாலையாண்டான்** — வநமாலாம்சரான இவர் கலி (௪,0௬0)க்குமேல் சர்வதாரிஸு மாசிமீ வெள்ளிக்கிழமை அழகர்மலையிலவதரித்தனர். இவர் திருமலைநம்பிக்குப் பின்னவர். ஆளவந்தார் திருவடிசம்பந்தி.

**திருமால் அவதாரம்** — 1. (௧0) மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனம், பரசிராமன், இராமன், பலராமன், கண்ணன், கற்கியாம்.

2. (௧௫) சநகன், சநந்தனன், சநாதன், சநற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்ரீவன், தத்தாத்ரேயன், மோகினி, யாகபதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்.

**திருமாளிகைத்தேவர்** — இவர் போகரிஷியின் மாணாக்கர், பலருள்ளும் சிறந்தவர், சுத்த சைவர். திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்தவர். இவர் ஒருநாள் சிவபூசை செய்து அந்தச் சிவபூசா பிரசாதத்தைக் கருவூர்த் தேவர்க்கு அளிக்கக் கருவூர்த் தேவர் அதைக் களிப்புடன் ஏற்றுக்கொண்

டனர். மீண்டும் ஒருநாள் கருவூர்த்தேவர் சத்திபூசைசெய்து இவர்க்குப் பிரசாத மளிக்க அதைத் திருமாளிகைத்தேவர் ஏற்காதிருந்தனர். இதைக் கருவூர்த்தேவர் தமது ஆசிரியருக்கு அறிவித்தனர். போகர் கருவூர்த்தேவரை நோக்கித் திருமாளிகைத்தேவர் கொடுத்தது சிவப்பிரசாத மாகையால் நீ கொள்ளத்தகும், அவர் சதாசார முள்ளவர்; உமது நிவேதனம் பொருந்தாதெனக் கருவூர்த்தேவர் அமைந்தனர். இவர் ஒருமுறை, சேந்தனருடன் சிதம்பர தரிசனத்திற்குச் சென்று அங்கு ரதம் செல்லாதிருந்தலைதக் கண்டு பதிகமோதி ரதம் வடமில்லாது ஒடக் கட்டளையிட்டவர். ஒருநாள் தாம் காவிரிநதியில் ஸ்நானஞ்செய்து சிவபூசைக்குப் புட்பங் கொண்டு திரும்புகையில் வழியில் சவத்தைக்கண்டு சிவபூசைக்கு ஆசுசம் நேராதபடி புட்பத்தை ஆகாயத்திலெறிந்து நிற்கச்செய்து பிரேதத்தைச் சுடலைமட்டும் நடந்துசெல்லக் கட்டளையிட்டனர். இவரைக் கண்ட மாதர்கள் இவரிடம் மயல் கொண்டு இவரைப்போல் புத்திரரைப் பெற்றதுகண்டு வேதியர் முதலிய பலரும் அக்கால மாண்டிருந்த நரசிங்கராசனிடம் முறையிட்டனர் அரசன் கோபித்துத் திருமாளிகைத்தேவரைக் கட்டிக்கொண்டு வரக் கட்டளையிடக் காவலாளிகள் தேவரிடஞ் சென்று தாம் ஒருவரையொருவர் கட்டிக்கொண்டு வந்து சேர்ந்தனர். பின் அரசன் படைத்தலைவரை அனுப்பி வெட்டிக்கொண்டு வாருங்கள் என அவர்கள் தம்மையே வெட்டிக்கொண்டு சென்றனர். பின்பு அரசன் படையெடுத்துச் செல்லத் தேவர் பிராட்டியை வேண்டினர். பிராட்டி மதிலிடமிருந்த நந்திகளை ஏவ அவை சென்று அரசனை முதுகிடச்செய்து திரும்பின. இவ்வாறிருந்து முத்திபெற்றவர்.

**திருமுக்கூடல்**—இது காஞ்சிமாநகர்க்கு அருகிலுள்ள தலம். இது கம்பாநதி, வேகவதி, சேயாறு இம் மூன்று புண்ணியநதிகள் சந்திக்கு மிடத்துள்ளது.

**திருமுடி** — இது ஒருவகை கொற்றர் வகை, இவர்கள் பெண்கள் ஒழுங்கற்றவர்கள் சேலம், கோயம்புத்தூரில் உள்ளவர்கள். (தர்ஸ்டன்).

**திருமுருகாற்றுப்படை** — பத்துப்பாட்டில் ஒன்று. நக்கீரதேவர் முருகவேளை யாற்றுப்பட்டது.

**திருமுறைகண்டசோழன்** — அபயகுலச்சோழனைக் காண்க. இவரை இராஜராஜதேவர் என்பர்.

**திருமூலநாயனர்** — திருக்கைலையில் நந்திதேவர் அருள்பெற்ற சித்தர்; பூமியில் அகத்தியமுனிவருட னிருக்க எண்ணி வரும் வழியில் உள்ள தலங்களைச் சேவித்துத் திருவாவடுதுறை சேவிக்க வருகையில் அவ்வூரிலுள்ள மூலன் என்னும் இடையன் தன் பசுக்களை ஒட்டிக்கொண்டு மேய்க்கவந்து உயிர் நீங்கினன். இடையன் உயிர்நீங்கியதைக் கண்ட பசுக்கள் அவனுடலை நக்கி வருந்துவதைக்கண்ட சிவயோகியார் அப்பசுக்களின் துன்பத்தைப் போக்கத் தம்முடலைப் பத்திரப்படுத்தித் தாம் அம்மூலன் உடலிற் புகுந்து பசுக்களைக் களிப்பித்துப் பொழுது நீங்கியபின் பசுக்களை வீடுசேர்த்துத் தாம் தனித்து நின்றனர். இவ்வகைநின்ற சித்தரைமூலன் மனைவி கண்டு கணவனெனை எண்ணித் தொடச் செல்லுகையில் சித்தர் அவளை நோக்கித் தம்மைத் தொடுதற்கு நியாயம் இல்லையெனப் பொதுமடஞ் சென்று இருக்க இடைச்சி அவ்வூர் வேதியரிடஞ் சென்றுகூற அவர்களிவரைக்கண்டு சிவயோகியென்று இடைச்சியைஅகற்றினர். பின்பு சிவயோகியார் தாம் பத்திரப்படுத்திய உடம்பினைப் பார்த்துக் காணமல் யோகத்தால், பரமசிவம் சிவாகமங்களைத் தமிழிற் செய்ய இவ்வகை செய்தனர் என்று அறிந்து தாம் அத்தலத்தில் அவ்வாலயத்திற்கு மேற்புறத்தில் அரசமாத்தடியில் யோகத்தி லமர்ந்து வருஷத்திற்கொரு பாடலாக (௩,000) பாடல்கள் அருளிச்செய்தனர். இச்சித்தமூர்த்தி மூலன் உடலில் புகுந்தமையால் திருமூலர் என்னும் திருநாமம் பெற்றனர். இவர் அருளிய சாத்திரம் திருமூலர் திருமந்திரம் எனப்படும். இவர் (௩,000) வருடம் இருந்து முத்தியடைந்தனர். (திருமந்திரம்.)

**திருமூலர்திருமந்திரம்**—திருமூலநாயனர் என்னும் சித்தரால் அருளிச் செய்யப்பட்ட சாத்திரம்; இது சிவாகமங்களின் சாரங்களடங்கியது.

**திருமூலர்மரபு** — காலங்கர், அகோரர், திருமாளிகைத்தேவர், நாதாந்தர், பரமானந்தர், போக தேவர், திருமூலர். (திருமந்.)

**திருமோகூர் அப்பன்**—ஆளவந்தார் திருவடி சம்பந்தி.

**திருமோகூர் ஆழ்வான்** — எழுபத்திநான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்).

**திருமோகூர்நின்றான்** — ஆளவந்தார் திருவடி சம்பந்தி.

**திருவசந்தீ** — சூர்யவம்சத் தரசன்.

**திருவணன்** — பிருதுசக்கிரவர்த்திக்கு அர்ச்சசியிடத்துதித்த குமரன்.

**திருவநந்தபுரத்தம்மை** — உடையவர் திருவடிசம்பந்தி.

**திருவரங்கத்தமுதனார்** — கூரத்தாழ்வார் திருவடி சம்பந்தி, இராமாநுச நூற்றந்தாதி அருளிச் செய்தவர்.

**திருவரங்கத்தம்மை** — ஆக்கியாழ்வா னிருந்த ஸமஸ்தானத்தரசன் தேவி; யாமுனர்க்கு ஆளவந்தார்என்று திருநாமம் இட்டு அழைத்தவள். ஆளவந்தார் திருவடி சம்பந்தி.

**திருவரங்கப்பெருமாளரையர்** — சங்கு கர்ணும்சரான இவர் கலியின் (௪,0௫௮) பிங்கள௵ வைகாசி௴ கிருஷ்ணப்பிரதமை வெள்ளிக்கிழமை அவதரித்தவர்; பெரிய நம்பிக்குப் பின்னவர், ஆளவந்தார் புத்திரர். இவர்க்கு ஆளவந்தாராழ்வார் எனவும் பெயர். மணக்கால்நம்பிகளை ஆச்ரயித்தவர். உடையவர்க்கு ஒரு ஆசிரியர்.

**திருவரங்கமாயோன்** — உடையவர் திருவடி சம்பந்தி; காவலதிகாரி.

**திருவரங்கமாளிகையரையர்** — உடையவரது பண்டாரம் நோக்குவோர்.

**திருவரங்கம்**—1. இக்ஷவாகு மகாராசா தவஞ் செய்ததறிந்த இந்திரன், உருப்பசி, மன்மதன் முதலியோரை அனுப்பியும் சலியாமைகண்டு தானேவர அக்காலத்தும் சலிப்பில்லாதிருக்கப் பிரமனிடங் கூறப் பிரமன் இக்ஷவாகுவிடம்வர அக்காலத்து ஸ்ரீ விஷ்ணுமூர்த்தி விமானத்துடன் எழுந்தருளிக் காக்ஷிதந்து தன்னை அவ்விடம் பூசிக்கக் கட்டளையிட்டனர். பிறகு இராமமூர்த்தி அம்மூர்த்தத்தை விபீஷணருக்குக் கொடுக்க விபீஷணர் தென்னாடு செல்லுகையில் இருடிகளும் தருமவர்மாவும்வேண்டக் காவிரிமத்தியில் கட்டியிருந்த திருக்கோயிலில் பிரதிட்டித்தனர். அதுவே திருவரங்கம்.

2. திரு அயோத்தியிலிருந்து சுவர்ண விஷ்ணுமூர்த்தியைப் பெற்று இலங்கையில் பிரதிட்டிக்கச் சென்ற விபீஷணர், இவ்விடம் திருமஞ்சனத்தை முடித்து எடுக்கையில் வாராததால் வருந்தி நின்றனர். விஷ்ணுமூர்த்தி விபீஷணர் கனவில் தரிசனந் தந்து இத்தலம் பூர்வம் அகிலாண்டநாயகி தவஞ் செய்ததாலும், ஸ்ரீமகாலக்ஷ்மி நடனஞ் செய்யுச் சிவமூர்த்தி அநுக்கிரகித்ததாதலாலும் ஸ்ரீ அரங்கம் என்றாகியது. ஆதலால் இவ்விடம் நாம் இருக்க விரும்புகின்றோம் என, விபீஷணர் அவ்விதம் பிரதிட்டைசெய்து பூசித்துவரும் தலம். (திருஆனைக்கா புராணம்). இதிலுள்ள தீர்த்தங்கள் சந்திரபுஷ்கரணி, பில்வதீர்த்தம், சம்புதீர்த்தம், சம்பு, அச்வத்தம், புன்னாகம், வகுளம், கதம்பம், ஆம்ரம், பலாசம் முதலிய தலவிருக்ஷங்களு முண்டு. இத்தலத்தில் திருகோயில் கோபுரம் முதலிய கைங்கர்யங்கள் தர்மவர்மா வென்னும் சோழனால் செய்யப்பட்டன.

**திருவருட்பா** — இராமலிங்கப்பிள்ளை யென்னும் வித்வான் பாடிய சிவத்துதிகள்.

**திருவல்லிக்கேணிபாண்பெருமாளரையர்** - உய்யக்கொண்டார் திருவடிகளை ஆச்ரயித்த ஆசாரியர்.

**திருவழுதிவளநாடர்** — ஒரு வேளாளர், இவர் குமரர் அறந்தாங்கியார்.

**திருவழுந்தூரந்தாதி**—இவளைச் சோழன் எந்த ஊர் என்றபோது அவள் பாடியது. "கம்பன் பிறந்தவூர் காவிரிதங்குமூர், கும்பமுனி சாபம் குலைந்தவூர் — செம்பதுமத், தாதகத்து நான்முகனுந் தாதையுந் தேடிக் காணா, வோதகத்தார் வாழுமழுந்தூர்" என்றனள்.

**திருவள்ளுவநாயனார்** — ஒரு பிரளயத்தில் பிரமன் ஒடுங்கியிருக்க, சிவமூர்த்தியார் என வள்ளுவர் என்றார். அவ்வகையே ஆதிக்கும் பகவனுக்கும் திருமயிலை நகரத்திற் பிறந்து தாய் தந்தையர் விட்டு நீங்க "எவ்வுயிருங் காக்கவொரு வீசனுண்டோ இல்லையோ, அவ்வுயிரின் யானொருவனல்லவோ - வெவ்வி, அருகுவது கொண்டிங் கலைவதே னன்னே, வருகுவது தானே வரும்." என்று வேளாளரிடம் வளர்ந்து அவர்களை விட்டு நீங்கி ஒரு பனையடியிலிருந்து மார்க்கசகாயன் என்னும் வேளாளன் வேண்டுகோளுக்கிரங்கி வேதாளத்தைப் பஞ்சாக்ஷரத்தால் ஒட்டி, யவன் பெண்ணாகிய வாசுகியை மணலைச் சமைக்கச் செய்து அவள் செய்ய மணந்து, ஏலேலசிங்கன் என்னும் வர்த்தகனிடம் நூல் வாங்கி நெசவுத்தொழில் செய்து இல்லற நடத்தி வருகையில் ஊர்த்த தாண்டவத்தி னழுவிய

குழைபூண்ட காரணத்தைச் சங்கைகொண்டு தம்மை வந்து கேட்ட தேவர்க்குப் "பூவிலயனும் புரந்தரனும் பூவுலகைத் தாவியளந்தோனும் தாமிருக்க -- நாவில், இழைநக்கி நூனெருடு மேழையறிவேனே, குழைநக்கும் பிஞ்ஞகன்றன் கூத்து" எனக் கூறி அறிவித்து இருந்தனர். இவ்வகையிருக்கையில் ஏலேலசிங்கர் சிவபூசையில் ஊற்றமில்லாதிருத்தலை அவருக்குத் தெரிவித்து அவரை அடிமைகொண்டு அவர்க்கு ஞானோபதேசஞ் செய்து புத்திரப்பேறளித்துக் கரை தட்டிய ஏலேலசிங்கர் கப்பலை ஏலேயாவென இழுத்துப் போக்கிப் பஞ்சம் வந்தகாலத்தில் ஏலேலசிங்கரை நெல் விற்கக் கட்டளையிட்டு அதனால் வந்தபொருளை உருக்கிக் கடலி லிடச்செய்து மீண்டும் பெறச்செய்து அழகாநந்தர் முதலியோர் வேண்டுகோளால் திருக்குறள் அருளிச்செய்து சங்கத்தவரை வென்று இல்லறம் பெரிதோ துறவறம் பெரிதோ வெனத் தம்மைச் சங்கைசெய்து கேட்ட அன்பர் ஒருவர்க்கு அவரே தெரிந்து உணரும்படி, தண்ணீர் மொண்டுகொண்டிருந்த தமது மனைவியாரை அழைக்க அந்த அம்மாள் கிணற்றில் பாதிவழி வந்த நீர்க்குடத்தைக் கிணற்றில் விட்டுவந்ததையும், மற்றொரு நாள் பழையது சாப்பிடுகையில் அன்னம் சுடுகிறதென விசிறியதையும், மத்தியானத்தில் நெய்துகொண்டிருந்த நூனுழி தவறிக் கீழ்விழ அதைப் பார்க்க விளக்குக் கொண்டுவரச்சொல்ல அந்தம்மாள் விளக்குக் கொண்டு வந்ததையும் தெரிவிக்கச் சங்கை செய்தவர், தக்க மனைவி யிருக்கின் இல்லறமே நன்று என்றுணர்ந்து நீங்கினர். இவ்வகை இல்லறம் நடத்தியிருந்து சில நாளைக்குப் பிறகு பத்தினியார் தேகவியோகமாகையில் அந்தம்மாளுக்கிருந்த சங்கையை நீக்கி "அடிசிற்கினியாளே யன்புடையாளே, படிசொற் றவறாத பாவாய் - அடிவருடிப், பின்றூங்கி முன்னெழுந்த பேதையே, போதியோ என்றூங்கு மென்கண்ணிரா" என்று வருந்தித் தாம் சிலநாளிருந்து திருக்குறள் அரங்கேற்றச் சங்கத்தவரிடஞ்சென்று அதை ஏற்கச்செய்து சங்கப்பலகை மீதிருந்து அவர்களுடன் வாதிட்டு வென்று சங்கத்தாரால் புகழப் பெற்றுத் திருமயிலைக்குத் திரும்பித் தமது மாணுக்கரை நோக்கித் தமது தேகத்தை விட்டு உயிர் நீங்கின் அதனை அலங்கரித்து அடக்காது ஊர்ப்புறத்தில் எறியக் கட்டளையிட்டுப் பரிபூரண மடைந்தனர். அவ்வகை மாணுக்கர் செய்தனர். இவருடலைப் பரிசித்த பக்ஷி ஜாதிகளும் முத்தி யடைந்தன. இவர் தேகம் இருந்த இடத்தில் தற்காலம் திருமயிலையில் இவர் கோவிலிருக்கிறது. இவரைச் சைநர், தம் மதத்தவரில் ஏளாசாரியர் என்பவர் என்பர். இவர்க்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப்புலவர், மாதாநுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் என்று திருநாமம். இவர் விதேகமுத்தியடைந்த திருநக்ஷத்திரம் மாசிமீ உத்தர நக்ஷத்திரம். இவர்க்குத் தந்தை யாளிதத்தன் எனும் வேதியன் என்பது பழைய நூல் "யாளிகூவற் றூண்டு மாதப் புலைச்சி காதற்காசனியாகி மேதினி, யின்னிசை யெழுவர்ப் பயந்தன ளீண்டே" எனும் ஞானமிர்தத்தா லறிக. இவரைத் திருவள்ளுவமாலையிற் புகழ்ந்திருத்த லன்றிப் பொய்யாமொழிப்புலவர் முதலியவர் பிற்காலத்தும் புகழ்ந்து இருக்கின்றனர். "குறுமுனிவன் கோத்தெடுத்த கொற்சேரியூசி, யுறுவிலைக்கு விற்றதனேடொக்கும் - தெறுகலியைச், செற்றவேன்மாற திருவள்ளுவனார் வாய்ச், சொற்றகு முப்பால் வாழ்த்துச் சொல்" "முப்பாலு முண்டோ முலைப்பாலினி நுகரோம், எப்பாலுக் கப்பாலு மாயினே - மெய்ப்பொருளு, முள்ளபடியுணர்ந்தோ மோதிக் குறைதீர்ந்தோம், வள்ளுவனார் வைப்பெமக்கு வாய்த்து." சைநர் வாழ்த்து "வாழிமறையா னினங்கள் வாழிமறை யாகமங்கள், வாழிமனு நீதிமன்னர் மன்பதைகள் - வாழியரோ, தெள்ளுகுறட் செந்தேன் செவிகுளிரப் பெய்த முகில், வள்ளுவர் பாதமலர்." மற்றொருவர் "எப்பாலு மேத்துவா மின்பம் பொருளறமா, முப்பாலு மாயிரத்து முந்நூற்று - முப்பதா, வோரடி முக்காலுரைத்த திருவள்ளுவனா, ரீரடி முக்காலுமே" "அவனே புலவனவனே கவிஞனவனே தமிழை யறிவோன் - சிவனறிய, வள்ளுவதேவன் வசனத்தை மெய்யாக வுள்ளுவதேவ னுளன்" இவரைச் சோழநாட்டில் மதுரையில் வசித்திருந்ததாகவுங் கூறுவர். அதனை வள்ளுவமாலை நல்கூர்வேள்வியார் "உப்பக்கநோக்கி உபகேசி தோண்மணந்தான், உத்தரமா மதுரைக்கச்சென்ப - இப்பக்கம், மாதாநு பங்கி மறுவில் புனச்செந்நாப், போதார் புனற்கூடற்கச்சு" என்பதா லறிக

**திருவள்ளுவமாலை** — இது திருக்குறளைச் சிறப்பித்துப் பாடிய நூல்.

**திருவாசகம்** — திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசக சுவாமிகளால் அன்பிற் சிவனைப் பொருளாக அருளிச் செய்யப்பட்ட திருமுறை.

**திருவாதவூரர்** — பாண்டி நாட்டில் திருவாதவூரில் அமாத்தியர் குலத்தில் சிறந்த அந்தணராகிய சம்புபாதசரிதருக்கும் சிவஞானவதிக்கும் புத்திரராய்த் திருஅவதரித்துத் திருவாதவூரர் என்ற திருநாமம் அடைந்து கல்வியில் முதிர்ந்து பாண்டியனிடத்தில் மந்திரித்தொழில் பெற்றுத் தென்னவன் பிரமராயன் என்னுஞ் சிறப்புப் பெயர் வாய்ந்து தேகமும் செல்வமும் நிலையாமையுணர்ந்து பதிநூல் ஆராய்ந்து சிவமூர்த்தியிடம் அன்பு மேலிட்டு ஆசாரியரைத் தேடிக்கொண்டு மந்திரித் தொழிலில் இருந்தனர். இவ்வகை யிருக்கையில் சோழதேசத்தில் குதிரைகள் வந்திருக்கின்றன எனத் தூதர் பாண்டியனுக்குக் கூறினர். பாண்டியன் (சக) கோடி பொன் கொடுத்துக் குதிரை கொண்டுவரும்படிச் சோணாட்டிற் சிலரை யனுப்பினன். திருவாதவூரர் பொன் கொண்டு திருப்பெருந்துறை யடைந்தனர். இவரது அதிதீவ்ரபக்வமறிந்து சிவமூர்த்தி இவரை அடிமைகொள்ளும்படி ஒரு வேதியர் உருக்கொண்டு ஒரு குருந்தமரத்தடியில் இவர் காண எழுந்தருளி யிருந்தனர். வாதவூரர் குருமூர்த்தமாய் எழுந்தருளி யிருப்பவர் அருகிற்சென்று பணிந்து மனமுருகி நின்று குருமூர்த்தமாய் எழுந்தருளியிருந்த வேதியரது திருக்கரத்திலிருந்த சாத்திரத்தை இது என்ன சாத்திரம் என்றனர். குருமூர்த்தி இது சிவஞானபோதம் என்றனர். வாதவூரர் சிவமாவதும் ஞானமாவதும் போதமாவதும் என்னென்று வினவி அதனைத் தேவரீர் அடியேனுக்குத் தெரிவிப்பீராயின் அடியேன் அடிமையாவேன் என்றனர். அவ்வாறு குருமூர்த்தி அருளிச்செய்யக் கேட்டுப் பணிந்து என்னை அடிமையாகக் கொள்க என்று இரந்துநின்றனர். குருமூர்த்தி இவரை ஆட்கொண்டு சிவஞானம் உபதேசித்துத் திருவடித் தீக்ஷைசெய்து அருளப் பின் திருவாதவூரர் மந்திரி மரியாதைநீக்கிக் கோவணமுடுத்து ஆசிரியரிடத்தில் பணிந்து நின்றதைக் கண்ட அரசதூதர் அழைத்தனர். திருவாதவூரர் அறுக்கக்கண்டு ஏவலர் பாண்டியனிடஞ் சென்று தெரிவித்தனர். பாண்டியன் ஒற்றரிடம் திருமுகம் கொடுத்து வாதவூரரை அழைத்துவரக் கட்டளையிட்டனன். ஒற்றர்சென்று வாதவூரரிடம் திருமுகம் காட்ட வாதவூரர் குருமூர்த்தியின் திருமுகம் கண்ட கண்ணால் வேறோர் திருமுகம் காண்பதில்லை என்று அரசன் அனுப்பிய திருமுகத்தைக் குருமூர்த்தியிடம் காட்டினர். குருமூர்த்தி ஆவணிமீ மூலநாளில் குதிரைகள் வரும் என்று ஒரு மாணிக்கங்கொடுக்க அதைப் பெற்று விடைகொண்டு குருமூர்த்தி கொடுத்த மாணிக்கத்தைக் கொடுத்துப் பாண்டியனைக்கண்டு குதிரைகள்வர நல்லநாளில்லாமையால் அவற்றை நிறுத்தி வந்தோம். அவை ஆவணிமூலத்தில் வருமென்றுகூறி அரசன் மரியாதைசெய்ய விருந்தனர். குதிரைகள் வரும்நாள் நெருங்கியதால் மந்திரியரில் ஒருவன் சென்று வாதவூரர் குதிரைகள் கொள்ளவில்லை அந்த வேளையில் உமது கோபத்தையாற்ற அவ்வகை கூறினர் என்றனன். பாண்டியன் ஒற்றரை யேவிக் குதிரைகள் இருக்குமிடம் அறிந்துவரச் செய்தனன். ஒற்றர் குதிரைகள் எங்கும் காணப்படவில்லை யென்று வந்து கூறினர். இதனால் பாண்டியன் கோபித்து வாதவூரரைச் சிறை யிட்டனன். பின்பு பாண்டியன் இன்று குதிரைகள் வாராவிடின் எரிக்கின்ற வெயிலில் உம்மை நிறுத்துவேன் என்றனன். பின்பு குதிரைகள் வாராமையால் ஏவலாளிகள் வாதவூரரை வெயிலில் நிறுத்தினர். அதனால் சலிக்காமைகண்டு கிட்டியிட்டனர். வாதவூரர் சிவமூர்த்தியை யெண்ணித் தியானித்தனர். சிவமூர்த்தி சிவகணங்களைக் குதிரைவீரர்களாகவும் நரிகளைக் குதிரைகளாகவும் மாற்றித் தாம் குதிரைத் தலைவராய் எழுந்தருளுதல் கண்டு வாதவூரர் பாண்டியனுக்கு அறிவித்தனர். பாண்டியன் அமைச்சரைப் புகழ்ந்திருக்கையில் குதிரைவீரத் தலைவர் பாண்டியன் முன்வந்து அக்குதிரைகளை அவன் காண ஓட்டிக்காட்டி இனிக் குதிரைகள் உன்னவே, நாளயவை எப்படியாயினும் எமக்குத் தொடக்கு இன்று எனக் கயிறுமாறி அரசனுக்கு அக்குதிரைகளின் இலக்கணங்களைக் கூறினர். பாண்டியன் மகிழ்ந்து விலையிடற்கரிய ஒரு பீதாம்பரம் கொடுத்துப் போக்கினன். அக்குதிரைத் தலைவர் அதைச் சவுக்கால் வாங்

இக் குதிரையின்மேல் இட்டு விடைகொ ண்டு நீங்கினர். அன்றிரவு குதிரைகள் எல் லாம் நரிகளாய் முன்னிருந்த குதிரைகளை யும் கடித்துவிட்டுச் சென்றன. இதைப் பாண்டியன் அறிந்து வாதவூரரிடம் கோபி த்துப் பொருள்களையெல்லாம் வெயிலில் வைகையில் நிறுத்தி வாங்கும்படி கட்டளை யிட்டனன். அவ்வகை ஏவலாளர் வை கையில் நிறுத்தி வருத்தினர். இதனால் வாதவூரர் இரங்குவதைக் கேட்ட சிவமூர் த்தி கங்கையை வைகையிடம் ஏவினர். அவள் பெருக்குடன் வரக்கண்ட பாண்டி யன் பயந்து இது எதுபற்றி உண்டாயிற்று என்று அமைச்சரால் அறிந்து வாதவூரர் துன்பத்தை நீக்கப் பெருக்கு அடங்கியது. அவ் வெள்ளத்தைப் பட்டணத்தில் வாரா மல் தடுக்க ஊரிலுள்ள குடிகளை ஏவினன். எல்லாரும் பங்கின்படி வெள்ளத்தைத் தடு த்தனர். பிட்டு விற்கும் வந்தி யென்பவள் பங்கு அடையாதது கண்டு அரசன் ஏவலர் அவளைக் கேட்கக் கிழவி சிவமூர்த்தியைத் தியானித்தனள். சிவமூர்த்தி இவளிடம் ஒரு கூலியாளாக எழுந்தருளி நான் உன் னிடம் வேலை செய்வேன் எனக்குக் கூலி தா என்றனர். கிழவி என்னிடம் உள்ள பிட்டுக்களை விற்று அந்தியிற் கூலி தரு வேன் என்றனள். கூலியாளாக வந்தவர் கூலியாகவே பிட்டை வாங்கியுண்டு ஆளா யிசைந்து வேலை செய்தும் சில போது செய்யாமல் தாமதித்தும், பலமுறை பிட் டை யுண்டு கரையை அடைக்காமல் ஒரு கொன்றை மாநிழலில் இளைப்படைந்தவர் போல் திருத்துயில் கொண்டனர். பாண் டியன் கரைகள் அடைபட்டதைக் காண வேண்டி வந்து எல்லார் பங்குகளும் அடை பட்டும் வந்தியின் பங்கு அடைபடாமைக் கண்டு இதனை அடைப்பவன் யார் என்ற னன். அரச ஏவலர் இதோ கொன்றைமர வடியில் உறங்குபவன் என்றனர். கூலி யாளர் அரசனைக் கண்டு பயந்தவர்போல் இருப்ப ஏவலாளர் கூலியாளரைப்பற்றி அரசனிடத்துக் குறை கூறினர். பாண்டி யன் கோபித்துக் கையிலிருந்த பிரம்பால் ஒரடி கூலியாளரை அடித்தனன். கூலி யாளர் ஓர் கூடை மண் உடைப்பில் போ ட்டு அடைத்து மறைந்தனர். அவ்வடி அணு முதல் மகத்தாகிய சராசரப்பொருள் கள்மேலும் தன்மீதும் படக்கண்டு பாண்டி யன் திடுக்கிட்டு அஞ்சினன். சிவமூர்த்தி அசரீரியாய்ப் பாண்டியனே நாம் இத் திரு விளையாடலை வாதவூரன்பொருட்டுச் செய் தோம். இதனை நீ அறியாது அவனைக் கோபித்தனை என்றனர். பாண்டியன் வணங்கி வாதவூ ரடிகளை மீண்டும் மந் திரியாயிருக்க வேண்டினன். அடிகள் பாண்டியனை விட்டு இறைவனைத் தேடிச் சென்றனர். திருவாதவூரர் பாண்டி நாடு விட்டுப் பல தலங்களும் சென்று வணங்கி ஸ்ரீசிதம்பரத் தலமடைந்து ஆரா அன்பு கொண்டு பலநாள் இருந்து பாடிப் பணி ந்து துதித்து வருகையில் சைவர் ஒருவர் ஈழநாடு சென்று புத்தர்முன் பொன்னம்ப லம் என்றனர். புத்தர், அரசன்முன் கூறிச் சைவரை அழைத்து அரசனிடம் விட்ட னர். புத்த அரசன் புத்த குருவுடன் தில்லை மூவாயிரவரை வாதிடத் துணிந்து தில்லை யடைந்தனன். சிவமூர்த்தியைத் தில்லை மூவாயிரவர் தியானிக்கச் சிவமூர்த்தி அவர் கள் கனவிற் றோன்றி வாதவூர் அடிகளைக் கொண்டு வாதிடுக என்று திருவாய்மலர்ந் தனர். தில்லைமூவாயிரவர் வாதவூர் அடி களைப் புத்தருடன் வாதிட வேண்டினர். வாதவூர் அடிகள் வாதிடத் தொடங்கி அவர்கள் வினவிய வினவிற்கு விடை கூறினர். புத்தர் கேளாது மறுத்ததால் வாதவூரர் வாக்கின் தேவியாகிய கலைமகளை நோக்கிக் கலைவாணி, பொய்யர் வாக்கி னின்றும் நீங்குக என்றனர். உடனே புத்த குருக்கண்மாரனைவரும் ஊமைகளாயினர். இவ்வற்புதக் காட்சி கண்ட புத்த அரசன் வாதவூர் அடிகளை நோக்கி வாக்குள்ளவர் வாக்கிழந்தனர். வாக்கில்லாத என் குமரி யாகிய ஊமை வாக்குப் பெறுவாளேல் நான் சைவன் ஆகின்றேன் என்றனன். வாதவூரர் பெண்ணை வருவித்து ஒழிந்த புத்தர் கேட்ட வினாக்களுக்கு விடை அவ் வூமைப் பெண் தரக் கட்டளை யிட்டனர். அவ்வகை வினாக்களுக்கு விடை அப்பெண் தரப் புத்த அரசன் கண்டு களித்துச் சைவ னாயினன். வாயிழந்த புத்த குருக்கண்மார் அனைவரும் வாதவூரடிகளை வேண்டி வாய் பெற்றுச் சைவராயினர். பின் வாதவூரர் தம்மிடம் இருக்கையில் சிவமூர்த்தி ஒரு வேதியர்போல் இவரிடம் எழுந்தருளினர். வாதவூரர் ஆசனமிட்டுத் தேவர் எந்தவூர் என்றனர். வேதியர் நாம் இருப்பது பா ண்டிநாடு உம் புகழைக் கேட்டு நீர் பாடிய செய்யுட்களை ஓத வந்தேன் என்றனர்.

வாதவூரர், அவைகளை எழுதவேண்டும் என்றனர். வேதியர் எழுத உடன்பட்டனர். வேதியர் பல செய்யுட்கள் எழுதி முடித்த பின்பு வாதவூரரை நோக்கித் திருச்சிற்றம்பல முடையார்மீது ஓர் கோவைப் பிரபந்தம் பாடவேண்டும் என்றனர். வாதவூரர் எழுதப் பாடி முடித்தனர். பின் வேதியராய் எழுந்தருளிய சிவமூர்த்தி புத்தகத்தின் முடிவில் மாணிக்கவாசகன் சொற்படி அம்பலவாணன் கையெழுத்து எனக் கையொப்பமிட்டுத் திருச்சிற்றம்பல முடையார் திருவாயிற் படியில் திருமுறையை வைத்து மறைந்தனர். அதைக் கண்ட வேதியர் ஒருவர் தில்லைமூவாயிரவருக்கு அறிவிக்க அனைவரும் கூடி அருச்சித்து அது திருவாசகமும் திருக்கோவையுமா யிருக்கக் கண்டு புளகாங்கிதராய்த் திருவாதவூரரிடஞ் சென்று நடந்தவை கூறிப் பொருள் கேட்டனர். வாதவூரரைப் பொருள் கூறும்படி வேதியர் அனைவரும் பின்பற்ற வாதவூரர் திருச்சிற்றம்பலத்தில் சென்று நடராஜமூர்த்தியைச் சுட்டி இவரே பொருள் என்று மறைந்தருளினர். இவருக்கு அருள்வாசகர், மாணிக்கவாசகர், திருவாதவூரடிகள், தென்னவன் பிரமராயன் எனவும் பெயர். இவர் திருப்பாதிரிப்புலியூரில் பாடலேசுரரைத் தரிசிக்க எழுந்தருளி யிருக்கையில் கெடிலநதி பிரவகித்து வருவது அறிந்து வந்த இறைவர் சித்தராக எழுந்தருளித் தம் கரத்தில் உள்ள பிரம்பால் கெடிலத்தை நோக்கிப் பாடலிவனத்திற்கு வடபுறமாக விலகச் செய்தனர். பின்பு சுவாமிகள் பாடலிவனஞ் சென்று தரிசனஞ் செய்தனர் என்பது அத் தலபுராணம்.

**திருவாதவூரர்புராணம்** — மாணிக்கசுவாமிகள் புராணம்; இதை இயற்றியவர் கடவுள் மாமுனிவர்.

**திருவாய்மொழிப்பிரபந்தம்** — முதல் ஆழ்வார்கள் மூவரும் அருளிச் செய்த வெண்பா அந்தாதிகள். திருமழிசை யாழ்வார் அருளிச்செய்த நான்முகன் திருஅந்தாதி, திருச்சந்த விருத்தம், நம்மாழ்வார் அருளிச்செய்த ருக்வேதசாரமான திருவிருத்தம், யசுர்வேதசாரமான திருவாசிரியம், அதர்வணவேதசாரமான பெரிய அந்தாதி, சாமவேதசாரமான திருவாய்மொழி, மதுரகவியாழ்வார் அருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு, குலசேகராழ்வார் அருளிச்செய்த பாசுரங்கள், பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டு முதலிய, ஆண்டாள் அருளிய பாசுரங்கள், தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த திருமாலை, திருப்பள்ளியெழுச்சி முதலியவையும், திருப்பாணழ்வார் அருளிச்செய்த அமலனதிப்பிரான் முதலியவும், திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் முதலிய அடங்கினவையாம்.

**திருவாய்மொழிப்பிள்ளை** — இவர் அண்ணர் என்பவர்க்குக் குமரர்; இவர்க்குத் திருமலை ஆழ்வான் எனப் பிள்ளைத்திருநாமம். இவர் அவதரித்த தலம் குந்தி நகரம். இவர்க்கு ஸ்ரீ சைலேசர் எனவும் பெயர் என்பர். இவர் தாய், பிள்ளைலோகாசாரியார் கோயிலைவிட்டு வெளியேறினதால் தரியாது உயிர்விடச் சிறியதாயாரிடம் வளர்ந்தனர். இவர் தமக்குக் கூரகுலோத்தமதாசர், திருவிருத்தத்திற்குப் பொருள் சொல்லேன் என்று மறுத்ததால் தாம் பிள்ளை லோகாசாரியரை இளமையில் ஆச்ரயித்தவர் என்பதைச் சிறியதாயாரா லுணர்ந்து அடங்கி, கூரகுலோத்தமதாசர், விளாஞ்சோலைப் பிள்ளை, நயினாச்சாம்பிள்ளை முதலியவர்களிடம் திருவாய்மொழி யெல்லாஞ் சேவித்துத் திருநகரி சென்று, காடுவெட்டி, நாடாக்கிக் குடியேற்றி ஆழ்வாரைப் பிரதிட்டை செய்வித்துச் சடகோபதாசர் எனவும், திருஅனந்தபுரத்தில் விளாஞ்சோலைப் பிள்ளையிடத்து ரகஸ்ய விசேஷங்களைக் கேட்டுத் திருவாய்மொழியில் வல்லவராகையால் திருவாய்மொழிப்பிள்ளை யெனவும், பெயர்பெற்றுச் சதுர்வேதமங்கலமென வொருவூர் திருநகரியில் உண்டாக்கி உடையவர்க்குக் கோயில் கட்டுவித்துக் காடுவெட்டியையன் எனப் பெயரடைந்து மணவாளமாமுனிகளுக்குப் பஞ்சஸமஸ்காரஞ்செய்து திருநாட்டிற் கெழுந்தருளிய வைஷ்ணவாசாரியரில் ஒருவர்.

**திருவாரூர் நாகராஜநம்பி** — இவன் திருவாரூர் தேவஸ்தான குருக்கள். இவன் அறுபத்துமூவர் விக்ரகங்களில் இரண்டைக் கருமானுக்கு விற்றுவிட, அவன் நறுக்கி உருக்கினன் என்பதைக் கிளிக்குக் கற்பித்து அதனைக்கொண்டு கிருஷ்ணதேவராயருக்கு அறிவித்தார் என்பது. வெண்பா -

"முன்னூ றறுபத்து மூவரிருந் தாரவரில், இந்நா ளிரண்டுபே ரேகினர் — கன்னன், நறுக்கினன் விற்றுவிட்ட நாகராஜநம்பி, இருக்கின்றான் கிருஷ்ணராயா." கிருஷ்ணதேவராயர்காலம் 1509—1529. (தமிழ் நாவலர் சரிதை.)

**திருவாரூர் பிறந்தவர்** — திருவாரூரில் பிறந்தவர் அனைவரும் சிவகணத்தவரா யிருந்ததனால் அக்காலத்துச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் புகழ்ந்து பாடப்பட்ட தொகையடியவர்கள். (பெரியபுராணம்.)

**திருவாலவாய்த்தம்பிரானர்**—பழைய கணக்குகள் முதலியவற்றில் ஸ்ரீ சோமசுந்திரக் கடவுளுக்கு இத் திருநாமமே வழங்கப் பெற்றுவந்ததாம். "தம்பிராற்கேதுகுலம்" என்பதனானுமுணர்க. (திருவிளை.)

**திருவாலவாய்நல்லூர்** — இவ்வூர் சமயநல்லூர்க்கு மேற்கேயுள்ளது. இக்காலத்துத் திருவாநல்லூரென வழங்கப்படுகின்றது. (திருவிளையாடல்.)

**திருவாலி** — மயிலையிலிருந்த ஒரு பிரபு. கம்பருக்கு உதவி செய்த பிரபு.

**திருவாலியமுதனர்** — இவர் திருமயிலையில் வேதியர் குலத்து அவதரித்துச் சிவத்தைப் பாடி முத்திபெற்றவர். இவரது திருப்பாசுரம் ஒன்பதாந் திருமுறையாக்கப்பட்டது.

**திருவாழ்மார்பர்** — காரியார் மாமனர், நம்மாழ்வாரின் தாயைப்பெற்ற தந்தை.

**திருவாளன்** — ஒரு வேடன்; திருமழிசையாழ்வாரையெடுத்து வளர்த்தவன்; இவன் தேவி பங்கயச்செல்வி.

**திருவிண்ணகரப்பன்** — உய்யக்கொண்டார் திருவடிசம்பந்தி.

**திருவிளக்குப்பிச்சன்** — திருவரங்கத்தில் பெருமாளுக்குத் திருவிளக்குக் கைங்கர்யம் செய்துகொண்டிருந்து நம்பிள்ளைத் திருவோலக்கத்தைப் பெருமாள், நின்று காணப், பெருமாளைச் சிம்மாசனத்திருந்து கேட்கச் செய்தவர்.

**திருவிளையாடல்** — இவை மதுரைமா நகரத்தில் சிவபெருமான் செய்த திருவிளையாடல்கள் : (1) குருவையிழந்த இந்திரனது சாபத்தைப் போக்கியது. (2) வெள்ளையானைக்குத் துருவாசரால் வந்த சாபந் தீர்த்தது. (3) கடம்பவனத்தை யழித்து நாடாக்கியது. (4) உமாதேவியார் மலயத்துவச பாண்டியற்குத் தடாதகையாய்த் திரு அவதரித்தது. (5) சிவபெருமான் சோமசுந்தரபாண்டியனக வெழுந்தருளித் தடாதகைப் பிராட்டியாரைத் திருமணங் கொண்டது. (6) பதஞ்சலி வியாக்ரபாத ரிஷிக ளிருவருக்கும் வெள்ளியம்பலத் திருக்கூத்துத் தரிசனங் காட்டியருளியது. (7) தடாதகைப் பிராட்டியார் பொருட்டுக் குடையாளாகிய குண்டோதரனுக்கு அன்னமிட் டருளியது. (8) குண்டோதரன் பொருட்டு வைகையையும் அன்னக்குழியையும் வருவித்தது. (9) தடாதகைப் பிராட்டியாரின் வேண்டுகோளுக்கிரங்கிக் காஞ்சனமாலையாட எழுகடல் அழைப்பித்தது. (10) காஞ்சனமாலையுட னீராடச் சுவர்க்கத்திருந்த மலையத்துவசனை வருவித்தது. (11) தடாதகைப் பிராட்டியிடம் உக்ரகுமார பாண்டியன் திருவவதரித்தது. (12) உக்ரகுமார பாண்டியற்கு வேல், வளை, செண்டருளியது. (13) கடல்சுவற வேலெறிந்தது. (14) அவ்வுக்ரகுமாரன் தன்னுடன் எதிர்த்த இந்திரன் முடிமேல் வளையெறிந்தது. (15) மேருவிலிருந்த நிதியெடுக்கக் கொடாத மேருவைச் செண்டாலெறிந்தது. (16) வேதத்திற்குப் பொருளறியாது மயங்கிய இருடிகளுக்குப் பொருள் அருளிச்செய்தது. (17) பாண்டியகுமாரன் கிரீடத்தின்பொருட்டு மாணிக்கம் விற்றது. (18) மதுரைமீது வருணன்விட்ட கடலை வற்றச்செய்தது. (19) வருணன் ஏவிய மழை தடுத்து நகரத்தை நான்மாடக்கூடலாக்கியது. (20) எல்லாம் வல்ல சித்தராய் எழுந்தருளிச் சித்துச் செய்தது. (21) சோதிக்கவந்த பாண்டியன் பொருட்டுக் கல்லானைக்குக் கரும் பருத்தியது. (22) மதுரையை அழிக்கச் சமணர்களேவிய யானையை எய்தது. (23) கௌரியம்மையின்பொருட்டு விருத்த குமாரர் பாலரானது. (24) பாண்டியன் பொருட்டுக் கான்மாறி யாடினது. (25) கொலைக்கஞ்சியவேடன்பொருட்டுப் பழிக் கஞ்சி, வேண்டிய பாண்டியற்காக வணிகன் மணத்திற் சாக்ஷிகாட்டி யருளியது. (26) தந்தையைக் கொன்று தாயைப் புணர்ந்தான் மாபாதகந் தீர்த்தது. (27) வாட்படை யாசிரியன் மனைவியை வலிமையி விச்சித்த மாணக்கனது அங்கம் வெட்டியது. (28) சமணர் மதுரைமீதேவிய நாகத்தை யெய்தது. (29) சமணர் ஏவிய பசுவை நந்திதேவரை ஏவிக் கொல்வித்தது. (30) சவுந்தர சாமந்தனெனுஞ் சேனாதிபதியின் பொருட்டுப் போர்ச்சேவ

கராய் மெய்க்காட்டிட்டது. (31) பாண்டியனுக்கு உலவாக்கிழி யருளியது. (32) மதுரைவீதியில் அவதரித்திருந்த இருடிபத்தினிகள் பொருட்டு வளையல் விற்றது. (33) இயக்கியர்களுக்கு அஷ்டமாசித்தி அருளிச் செய்தது. (34) சோழன்பொருட்டு மீன இலச்சினை யிட்டிருந்த கதவந் திறப்பித்துத் தரிசனந் தந்து அவன் மீண்டபின் இடபக்குறி யிட்டது. (35) பாண்டியன் படைக்குத் தண்ணீர்பந்தற் வைத்தது. (36) பொன்னனையாள்பொருட்டு ரசவாதஞ் செய்தது. (37) மதுரை மீது படைகொண்டுவந்த சோழனை மடுவில் ஆழ்த்தியது. (38) வேளாளராகிய அடியவர்பொருட்டு உலவா நெற்கோட்டை யருளியது. (39) தாயத்தார் வழக்கிடமயங்கிய வணிகன் மருகன் பொருட்டு மாமனாகவந்து வழக்குத்தீர்த் தருளியது. (40) வரகுணதேவர் பொருட்டுச் சிவலோகம் காட்டி யருளியது. (41) இசைவல்ல பாணபத்திரர்க்குப் பகைவனை விறகாளாய் இசைபாடி ஒட்டுவித்தது. (42) பாணபத்திரர் பொருட்டுச் சேரமான்பெருமாளுயனுருக்குத் திருமுகந்தருளியது. (43) அப்பாணபத்திரர் மழையால் வருந்தாது பாடப் பலகையிட்டது. (44) ஈழதேசத்துப் பாண்வல்லாளைப் பாணபத்திரர் மனைவி வெல்ல அருள்செய்தது. (45) தாயிழந்த பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தது. (46) பன்றிக்குட்டிகளைப் பாண்டியர்க்கு மந்திரியர் ஆக்கியது. (47) கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்தருளியது. (48) நாரைக்கு முத்திகொடுத் தருளியது. (49) பிரளயத்தழிந்த மதுரைமாநகரின் எல்லையை அரவகங்கணத்தால் அறிவித்து ஆலவாயாக்கியது. (50) பாண்டியன்பொருட்டுப் படைத்துணைசென்று சுந்தரப்பேரம்பெய்தது. (51) நக்கீரர் முதலிய புலவர்பொருட்டுச் சங்கப்பலகை தந்தது. (52) பாண்டியன் ஐயந்தீரத் தருமிக்குக் கவிதந்து கிழியறுத்துக் கொடுப்பித்தது. (53) தருமிக்குத் தந்த கவிக்குக் குற்றங்கூறிய நக்கீரரைப் பொற்றாமரைத் தீர்த்தத்தில் வீழ்வித்துப் பின் கரையேற்றியது. (54) கீரருக்கு இலக்கணம் உரைப்பித்தது. (55) சங்கத்தார் கலகத்தை மூங்கைப்பிள்ளையால் தீர்ப்பித்தது. (56) பாண்டியனுடன் கோபித்து நீங்கிய இடைக்காடர் பிணக்குத்தீர்த்தருளியது. (57) பாதர்குலப்பெண்பொருட்டு வலைவீசி அவளை மணந்தருளியது. (58) வாதவூரடிகளுக்குபதேசித்தது. (59) அரசனுக் கஞ்சிய வாதவூரர்பொருட்டு நரிகளைப் பரிகளாக்கியது. (60) பாண்டியனுக்களித்த பரிகளை நரிகளாக்கியது. (61) வாதவூரடிகள்பொருட்டு வைகைவெள்ளம் வருவித்து அதை அடைக்க ஏவிய வந்திபொருட்டுக் கூலியாளாய்ச்சென்று பிட்டுக்கு மண்சுமந்தது. (62) திருஞானசம்பந்தசுவாமிகளால் கூன்பாண்டியன் சுரத்தையும் கூனையும் நீங்குவித்தது. (63) சம்பந்த சுவாமிகளின் வாதத்திற்தோற்ற சமணர் கழுவேறியது. (64) வணிகப் பெண்ணுக்குச் சாக்ஷியாக வன்னியும், கிணறும், இலிங்கமும் வருவித்தது.

**திருவிளையாடற் புராணம்** — இது மதுரை சொக்கநாத சுவாமிகள் செய்த திருவிளையாடல்களை வடமொழியிற் கூறியபடி தமிழில் பரஞ்சோதி முநிவராற் (௬௪) படலங்கள் அடங்கிய (௩,௩௬௩) திருவிருத்தங்களாக இயற்றப்பட்ட நூல். இது சொன்னேக்கம், பொருளேக்கம், சாமுத்திரிகாலக்ஷணம், பாதம், அச்வலக்ஷணம், ரத்தின பரீக்ஷை முதலியவற்றிற்கு இலக்கியமாகும். இவர் சாலிவாகனசகம் (௧,௬௩௦) இல் இதைப் பாடினர் என்பர். அது சற்றேறக்குறைய (௩௪௦) வருஷங்கள் ஆகிறது.

**திருவிஷ்டன்** — வசுதேவருக்குத் திருத்தேவியிடம் உதித்த குமரன்.

**திருவீதிகள் ஐந்து** — இவை தென்மதுரையிலுள்ளவை 1. ஆடி வீதி, 2. சித்திரை வீதி, 3. ஆவணி மூலவீதி, 4. மாசி வீதி, 5. கோட்டை வெளிவீதி. இவற்றுள், சித்திரை வீதியில் மாசித் திருவிழாவும் மாசி வீதியில் சித்திரைத் திருவிழாவும் மதுரையில் இக் காலத்து நடைபெறுகின்றன. (திருவிளையாடல்)

**திருவுந்தியார்** — சைவ சித்தாந்த சாத்திரம் பதினான்கனுள் ஒன்று.

**திருவெண்ணெய் நல்லூர்** — உமை வெண்ணெயால் கோட்டை கட்டி இடையிலிருந்து பஞ்சாக்னி வளர்த்திப் பூசை செய்த தலம். (வீரசிங் - புரா.)

**திருவேங்கடசுவாமி** — மாதைத் திருவேங்கடநாதரைக் காண்க.

**திருவேங்கடம்** — புரந்தரன் என்னும் வேதியன் குமாரனாகிய மாதவன் தான், ஆசாரம்

குறைந்து நீச்சப்பெண்ணினை மணந்து களவுமேற்கொண்டு வாழ்ந்து நீச்சப்பெண் தன்னைவிட்டுத் தூரத்த மனம் குன்றி ஸ்ரீநிவாஸப்பெருமாள் எழுந்தருளி யிருக்கும் திருமலையடைந்து அதின்மீது ஏறினன். இவன் பாப (கடம்) தேகம் சடசடவென்று நெருப்புப்போல் வேக இவன் சுடர்விடு பசும் பொன்போல் தோன்றினமையால் திருமலைக்கு (வேம், கடம்) வேங்கடம் எனப் பெயர் வந்தது. இது கருடாழ்வானால் வைகுந்தத்திருந்து கொண்டுவந்து பிரதிட்டிக்கப்பட்டது என்பர். (திருவேங்கட புராணம்).

**திருவேங்கடையர்** — இவர் ஸ்ரீவில்லிபுத்தூர் வேதியர். உபமான சங்கிரகம் தமிழில் செய்தவர்.

**திருவையாற்றுச்சைவன்** — திருவையாற்றில் சிவபூசை செய்துவரும் ஆதிசைவர் இருபத்து நால்வரில் ஒருவர். கங்கா யாத்திரைசென்று நெடுநாள் வராதிருந்தனர். இதையறிந்த ஏனைய இருபத்து மூவரும் யாத்திரை சென்றவரது காணியாட்சி சுவதந்திரங்களைக் கவரத்தொடங்கினர். யாத்திரிகரது மனைவி சிறுமைந்தனுடனே அவர்கட்கு நியாயங் கூறியுங் கேளாமையால் மனைவி சிவபிரானுடன் முறையிட்டனள். சிவமூர்த்தி காசியாத்திரைசென்ற பிராமணர்போல் காவடியுடன்வந்து நீங்கள் சுகமோ என்று தழுவிக்கொண்டு என் சுவதந்தரத்தை இல்லையென்றவர் யாரென்று கேட்கப் பிராமணர்கள் "நாங்கள்செய்த பிழை பொறுக்க என்று பிரார்த்தித்தனர்" இவ்வாறிருக்கையில் மனைவியும் மைந்தரும் பிரிவாற்றாமைக் கிரங்கிக் காணியிழந்தமையுங் கூறினர். சிவமூர்த்தியாகிய வேதியர் ஸ்நாந முதலியசெய்து சிவபூசை முடித்து ஒருமடத்திலிருக்கையில் காசி யாத்திரை சென்ற வேதியர் காவடி தாங்கி மடத்தில் வந்துநிற்கக், கண்டார் யாவரும் திகைத்தனர். பின்வந்தாரை, முன்னிருந்தவர் நீர் யாரென்ன நான் முதற்பூசைக் குரியோன் இருபத்து நால்வரில் ஒருவன் என்றனர். அதுகேட்ட முன்னவர் பின்னவரை பலவாறு உபத்திரவப்படுத்த அவர் பலசாசனங்களைக் காட்டி நிரூபித்தனர். இவ்விருவர் சாசனங்களிலும் சிவபெருமான் சாசனமுயர்ந்ததால் உரிமை சிவமூர்த்தியாகிய வேதியரதாயிற்று. உடனே சிவபிரான் மறைந்து ஆகாயவாக்காக நம்மை அர்ச்சிக்கும் சைவனாகிய இவனுக்குக் காணியாட்சி முதலிய எல்லா உரிமையுங் கொடுங்க ளென்ன அவர்களும் அவ்வாறே செய்தனர். இதனை "ஐயாறதனில் சைவனாகியும்" என்னும் மணிவாசகர் வாக்காலுமறிக.

**திருஷத்வதி** — 1. யமுனைநதிக்கு மேல்பாலிருக்கும் நதி.

2. ஒரு நதி The Caggar which flowed through Ambala and Sirhind, now lost in the sands of Rajaputana.

**திருஷ்டகேது** — 1. சிசுபாலன் புத்திரன்.

2. (சு) சுதிருதி குமரன்.

3. திட்டத்துய்ம்மன் குமரன்.

4. சத்தியதிருதி குமரன்.

5. சுகுமாரன் குமரன்; இவன் குமரன் வீதிஹோத்ரன்.

6. சத்யகேதுவின் குமரன்; இவன் குமரன் சுகுமாரன்.

7. கேகயதேசாதிபதி, சுதகிருதியை மணந்தவன்; இவன் குமரர் சந்தாதனன் முதலிய ஐவர்.

**திருஷ்டதுய்மன்** — திட்டதுய்மனைக் காண்க.

**திருஷ்டதுவிதி** — குருக்ஷேத்திரத்தருகிருக்கும் நதி.

**திருஷ்டவர்மன்** — 1. அக்குரூரன் தம்பி.

2. சுவபலருக்குக் காந்தியிட முதித்த குமரன்.

**திருஷ்டன்** — (சு) வைவச்சுதமநுவின் குமரன்; நபாகன் தந்தை, இவனிடம் தாரஷ்டியென்கிறவர் பிறந்து பிராமணராயினர்.

**திருஷ்டி** — யதுவம்சத்துக் குந்தி புத்திரன்.

**திருஷ்யன்** — அகஸ்தியன் புத்ரன்.

**திருஹ்யன்** — யயாதிபுத்ரருள் ஒருவன்.

**திரேதாக்னிகள்** — 1. பவமானன், பாவகன், சுசி; இவர்கள் வசிட்டர் சாபத்தால் அந்தர்த்தானனுக்குக் குமரராய்ப் பிறந்த அக்நிகள்.

2. இது தக்ஷணாக்நி, காருகபத்யம், ஆஹவனீயம் என மூன்று வகைப்படும். வேதிகைக்குத் தக்ஷணத்தி லிருப்பது தக்ஷணாக்நி. காருகபத்யம் எஜமானனால் மற்ற அக்னிகளுக்கு முன் ஸம்ஸகரிக்கப்பட்டது. ஆகவனீயம் கிரியாசமாப்திபர்யந்தம் ஓமஞ்செய்யத் தகுந்தது.

**திரேதாயுகதேய்வம்** — தருமவுருவத்துடன் சபமாலிகையையும், துடுவையும், கையிற் கொண்டு களிப்புடனிருக்கும்.

**திரேதாயுகம்** — சதுர்யுகத்தில் இரண்டாவது யுகம். இதற்கு வருஷம் கஉ லக்ஷத்து கூசு௲.

**திரைகருவாளர்** — ஒருவித அரசர்.

**திரையம்சகன்** — விப்ர சித்தியின் குமரன்.

**திரையர்** — இவர்கள் சோழவரசர்களில் ஒரு பிரிவினர். தொண்டை நாடாண்டவர்கள். இவர்கள் கடலுள்ளிட்ட நாட்டிலிருந்து வந்து இந் நாட்டை ஆண்டது பற்றித் திரையர் எனப் பட்டனர். இவர்கள் தமிழ் நாட்டினரல்லர். பெரும்பாணறில் "பதிரைதரு மரபினுரவோரும்பல்" என்வும், "கங்குலு நண்பகலுந்துஞ்சாவியல் பிற்ருய், மங்குல் சூழ்மாக்கடலார்ப்பதா உம், வெம்சினவேற், கான்பயந்த கண்ணிக்கடுமான்றிரையனே, யான் பயந்தேனென்னுஞ் செருக்கு" வெண்பாவானும் அறிக. இத்திரையர், வங்காளத்திரையர், சீனத்திரையர், கடாரத்திரையர், சிங்களத்திரையர், பல்லவத்திரையர் எனப் பலவகுப்பினராவர். (கடாரம் - பர்மா)

**திரையன்** — ஆதொண்டைச் சக்ரவர்த்தியைக் காண்க.

**திரையன்மாறன்** — இடைச்சங்கப் புலவருள் ஒருவன்.

**திரையாரணி** — 1 ஒரு இருடி ; உரோமஹருஷணர் மாணுக்கா.

2. உருக்ஷயன் குமரன் ; இவர்கள் பிராமணராயினர்.

3. திரிசங்கின் தந்தை; இவனைச்சூர்யாரண்யன் என்பர்.

**திரைவர்ணிதேவி** — அந்தகாசுரவதத்தின் பொருட்டுச் சிவமூர்த்தியிடம் முறையிடச் சென்ற திரிமூர்த்திகளிடம் ஒரே உருவாகப் பிறந்த சத்தி. (வராக - புரா.)

**திரௌபதாதித்தன்** — கீசகன் திரௌபதியைப் பிடிக்கவருகையில் கிங்கரனுல் கீசகனைத் தடுத்த சூரியன்.

**திரௌபதி** — பாஞ்சால தேசாதிபதியாகிய துருபதன் யாகத்தில் பிறந்தவள். ஆகையால் இப்பெயர் பெற்றனள். இவளுக்குப் பாஞ்சாலியெனவும் ஒரு பெயர். இவள் இதற்கு முன்ஜன்மத்தில் நளாயனன் குமரி ; இந்திரசேனை யென்னும் பெயரால் மௌத்கல்யனை மணந்து பதிவிரதையாயிருக்கையில் கர்மத்தால் மௌத்கல்யருஷிக்குக் குட்டவியாதி யுண்டாயிற்று. அப்படியிருந்தும் இந்திரசேனை கணவனிடம் மிகுந்த அன்பாயிருந்தனள். இதனுல் முனிவர் களித்து இந்திரசேனையை என்னவரம் வேண்டும் என்ன, அவள் தனக்குச் காமத்தில் இன்பம் நிரம்பாமையால் அதைப் பூர்த்திசெய்க என அவ்வகை முனிவர் ஐந்து வகையாய்க் களித்திருக்கையில் முனிவர் முத்தியடைந்தனர். இந்திரசேனையும் கணவருடன் உயிர் விட்டுக் காமவிச்சை நிரம்பாமையால் காசிராச புத்திரியாகப் பிறந்து சிவமூர்த்தியை யெண்ணித் தவமியற்றினள். சிவமூர்த்தி பிரத்தியக்ஷமாய் என்ன வேண்டுமெனப் பதிம்தேஹி, பதிம்தேஹி, பதிம்தேஹி, பதிம்தேஹி, பதிம்தேஹி என்று ஐந்து முறை கூறினள். அவ்வகை அம்மூர்த்தி அருளி மறைந்தனர். அதனுல் திரௌபதன் குமரியாய்ச் சுயம்வரத்தில் அருச்சுநனுல் கொண்டுவரப்பட்டுக் குந்தியின் கட்டளைப்படி ஐவரையும் மணந்து சுகத்துடனிருக்கையில் தன் கணவர்கள் மாயச் சூதாடிய காலத்தில் அடிமைப்பட்டபோது துரியோதனன் சொற்படி துச்சாதனன் துகில் உரியக் கண்ணனை வேண்டி மாளாத் துகில் பெற்று, மறுசூதாடி அவர்களை அடிமையினின்று நீக்கி ஐவருடனிருந்து கொடுஞ்சபதங்கள் செய்து ஆரண்யஞ்சென்று ஆற்றில் பாரிஜாத மலர்கண்டு, வீமனுல் அதை வருவித்து, அமித்திரமுனிவர் பொருட்டுப் பழுக்கும் நெல்லிக்கனியைப் பறித்துக் கொடுக்க அருச்சுநனைக்கேட்டு அது இன்னுர் பொருட்டென அறிந்து ஐவர் கண்ணனை வேண்டிப் பொருந்துவிக்கத் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கத் தானும் தன் கருத்தைத் தெரிவித்து முழுதும் பொருந்தச்செய்து ஐவருடனிருந்து இளம்பஞ்சபாண்டவர்களென்று தருமனுக்குப் பிரதிவிந்தனையும், பீமனுக்குச் சுருத சோமனையும், அருச்சுநனுக்குச் சுருத கீர்த்தியையும் நகுலனுக்குச் சதாநீகனையும், சகாதேவனுக்குச் சுருதசேநனையும் பெற்றுத் துரியோதனனிறந்தபிறகு அவள் செய்துகொண்ட சபதப்படி கூந்தலை முடித்துக் கலிபிறந்து பாண்டவர் தமது இராச்சியத்தை விட்டுத் தவமேற்கொண்டு இமயமலை செல்கையில் அவர்களுடன் முழுதும் இல்லாமல் இறந்தவள். இவள் முன்னிறந்ததற்குக் காரணம் பாண்டவர் ஐவரும் கணவராயிருக்க அருச்சுநனிடம் அதிக அன்பு மிகுந்தபடியால் என்பர். இவள் பஞ்சகன்னியரில் ஒருத்தி, பதிவிரதாசிரோமணி.

**திலகசேனை** — பரதகனுடைய தங்கை. இவளை யூகி மணஞ்செய்து கொண்டனன். (பெருங் கதை.)

**திலகவ்வை** — இவள் வீரசைவப்பற்றுள்ளவள். சிவபக்தியில் மிகுந்தவள். இவள் சிவாலயமில்லாத இடத்திலிருக்கும் தம் கணவனைவிட்டு நீங்கப் புருஷன் கொல்ல வருகையில் சிவாலயத்தில் எழுந்தருளிய சிவமூர்த்தியிடமடைந்து தன் நாயகன் காணப் புருஷவடிவம் பெற்றவள்.

**திலதவதியார்** — திருநாவுக்கரசுகளுக்குத் தமக்கையார். திருநாவுக்கரசுகளைக் காண்க.

**திலதேனுதானம்** — (க0) கழஞ்சுபொன்னால் தாமரைமலர் ஒன்று செய்வித்து வேதிகையில் வைத்து வெள்ளை ஆடையால் சுற்றி மலர்ந்த எள்ளின் பூப்போல் பொன்னால் செய்வித்து அதன்மேல் வைத்து அதன் மீது சிவபூசை செய்து பொற்கமலத்தின் வடபால் பதினொரு வேதியரை யிருத்தி அவர்முன் (கக) வஸ்திரம் விரித்து எள்ளினாற் பசுசெய்து அதின்கொம்பு (க) கழஞ்சுபொன்னிலும், குளம்பு (உ) கழஞ்சு வெள்ளியிலும், கவசம் வெண்கலத்தாலும் செய்வித்துப் பதினொரு இடத்துந் தனித்தனி இருத்தி உருத்திரமந்திரத்தால் பூசித்துக் கீழ்பால் துவாதசாதித்தரையும், அக்கிதிக்கில் வேதியரையும், வித்தியேசுரரை அஷ்டமூர்த்திகளாகப் பூசித்து ஐந்து கழஞ்சுபொன் தக்ஷிணையுடன் பசுவை வேதியர்க்குத் தானஞ் செய்தலாம்.

**திலபத்மதானம்** — மெழுக்கிட்ட பூமியில் வெள்ளை வஸ்திரம் விரித்து மூன்று கலம் எள் பரப்பி அதன்மேல் பத்துக்கழஞ்சு பொன்னால் எட்டிதழ்க் கமலம் செய்து மூன்று கழஞ்சில் உமையுஞ் செய்து இருத்திச் சிவமூர்த்தியுடன் விதிப்படி வித்தியேசுரரையும் பூசித்துத் தக்ஷிணையுடன் வேதியர்க்கு அளிப்பது.

**திலீபன்** — 1. (சூ.) அம்சுமான் குமரன். இவன் சுதக்ஷிணையாகிய தன் மனைவியிடம் புத்திரப்பேறு இல்லாமையால் வசிட்டரை, கேட்க அம்முனிவர் அரசனை நோக்கி நீ தெய்வவுலகு சென்று மனைவியை விரும்பித் திரும்புகையில் வழியிலிருந்த கபிலையைப் பூசியாது திரும்பினை யாதலால் அக்கபிலை என் வம்சத்தவரைப் பூசித்தாலன்றிப் புத்திரப்பே றுண்டாகாதிருக்க எனச் சபித்தது. அதனை நீ ஆகாய கங்கையின் அரவத்தால் கேளாதொழிந்தனை ஆதலால் கபிலையைப் பூசிக்க என்று கூறுகையில் வசிட்டதேனு சமீபித்தது. இது நற்சகுனமென்று அரசன் அன்று முதல் வசிட்டதேனுவைப் பூசித்து வருகையில் ஒருநாள் இந்தப் பசு இமயச் சாரலில் மேய்ந்து கொண்டிருக்கையில் கும்போதரன் என்னும் பெயருள்ள சிவகிங்கரன் சிங்கத்தின் உருக்கொண்டு அத் தேனுவைப் பிடிக்கப் பசு அரசனை நோக்கி அபயமிட்டது. அரசன் சிங்கத்தை வதைக்கச் சென்று அம்பினை யெடுக்கக் கை தூக்கினன். எடுத்த கை தம்பித்தது. இதனால் அரசன் அச் சிங்கத்தை நோக்கிப் பசுவினை விட்டு என்னைப் பக்ஷிக்க என்று அருகு சென்றனன். சிங்க வுருக்கொண்ட கிங்கரன் தன்னுருக் கொண்டு அரசனை நோக்கி அரசனே உன்னைச் சோதிக்கப் புகுந்தனன் என்று கூறி மறைந்தது. அரசன், பசுவினை வசிட்டராச்சிரமம் செலுத்தினன். இவன் குமரன் பகீரதன். கங்கை பூமிக்கு வரத் தவஞ் செய்து பலமடையாதவனாய்ச் சுவர்க்கம் அடைந்தவன். (இரகுவம்சம்).

2. விருத்தசருமனுக்கு ஒரு பெயர்.

3. இவன் செய்த யாகத்தில் யாகதக்ஷிணையாகப் பொன்னாற் செய்வித்த ஆயிரம் யானைகளைக் கொடுத்தான். இவன் பொன்னாலாகிய சஷாலமெனும் யூபத்தம்பத்தினடுவில் ஆறுயிரம் தேவர்களும் காந்தருவரும் நடித்தனர். (பார - சாந்.)

**திலோதகி** — அயோத்தியிலுள்ள நதி, இது, இலக்குமணர் கரி, பரி முதலியவை நீருண்ணப் பாணத்தால் நிலமகள் முதுகைப் பிளந்து வரவழைத்தது. இது திலம்போல் கருநிறம் கொண்டது.

**திலோத்தமை** — 1. பிரமனால் படைக்கப் பட்டு அவன் மயல்கொளக் கிளியுருக்கொண்டு ஒடி நீங்கினவள். இவள் அழகினால் மயல்கொண்ட பிரமன், நான்கு திக்கில் முகங்கொண்டு பார்த்ததில் நான்கு முகம் உண்டாயிற்று என்பர். ஒருமுறை சகத்திரா நீகனை மோகிக்க அவன் உடன் படாததால் அவனை (கசஞு) மனைவியை நீங்கச் சாபம் அளித்தவள். பிரமன் எவலால் விச்வகர்மனால் அழகுடைய பொருள்களில் எல்லாம் எள்ளள வெடுத்துச் சிருட்டிக்கப்பட்டவள். இவள் ஒருகால் விந்திய மலைக்கருகில் வரச்சுந்தோப சுந்தர் இருவரும் இவள் அழகினைக் கண்டு மயல்கொண்டு இவளிரண்டு கைகளையும் பிடித்துக்

கொண்டு என் பெண்டு, என் பெண்டு என்று போரிட்டு மாண்டனர்.

2. பதுமைக்குத் தாய்.

3. புத்திசேநன் தாய்.

4. நாடகத் தெய்வமகளிர் எண்பதின் மருள் ஒருத்தி. (பெ - கதை.)

**தில்லைநாயக சோதிடர்** — சம்புகேசுரத்திற் இறந்தவர், சாதகசிந்தாமணி இயற்றியவர்.

**தில்லைநாயக முதலியார்** — தொண்டைநாட்டவர்; வேளாளர்; வேங்கடாசலசாமி என்பவரின் மாணுக்கர்; தமிழில் ஜாதகாலங்காரம் இயற்றியவர்; இது வடமொழி யோகமஞ்சரியின் மொழிபெயர்ப்பு.

**தில்லைமாளிகைமடம்** — இது பெரும்பற்றபுலியூர் நம்பியாருடைய ஆசிரியர் எழுந்தருளியிருந்த இடம். (திருவிளை.)

**தில்லைவாழந்தணர்** — ஸ்ரீ சிதம்பரத்து நடராஜமூர்த்திக்கு ஆராதனையில் விருப்புற்றுத் திருக் கைலையிலிருந்து எழுந்தருளிய சிவகணத்தவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளால் புகழ்ந்து பாடப்பெற்றவர்கள். (திருத்தொண்டர் புராணம்).

**திவஸ்பதி** — பதின்மூன்றும் மன்வந்தரத்து இந்திரன்.

**திவாகரமூர்த்தி** — இரண்டு முகம் நான்கு கைகள். இரண்டு கைகளில் வில்வம், இரண்டு கைகளில் இரண்டு கமலங்கள், மஞ்சட் பட்டு வஸ்திரம், முத்துமாலையுடையவராய் இருக்குஞ் சூர்யமூர்த்தி.

**திவாகரம்** — 1. ஒரு மலை.

2. திவாகர முனிவரால் இயற்றப்பட்ட தமிழ் நிகண்டு. இது பன்னிரண்டு தொகுதிகளை யுடையது.

**திவாகரர்** — தமிழில் தம் பெயரால் நிகண்டு செய்து சேந்தனென்னும் அரசனுக்குக் கொடுத்து அதற்குச் சேந்தன் திவாகரம் எனப் பெயரிட்டவர்.

**திவாகரன்** — 1. ஒரு துளுவ சந்நியாசி விஷ்ணுவைத் திருவனந்தபுரத்தில் பூசித்து முத்தி பெற்றவன்.

2. கந்தமாதனத்தரசன். (சூளா.)

**திவாயோகம்** — ஆயிலியம், அச்வநி முதற்கால்; பரணி, மூலம் இரண்டாங்கால்; திருவோணம், உத்திரம் மூன்றும்கால்; மிருகசீரிஷம், சோதி நாலாங்கால் திவாயோகமாம். இவற்றில் சுபங்கள் செய்யல் ஆகாது. இரவிற் செய்யலாம். சந்திரன் பூரணனு யொரு சுபக்ரகத்துட னிற்கையில் பகலும் தோஷமில்லை. (விதான.)

**திவிட்டன்** — பிரசாபதியின் இளைய ராணி வழிப் புத்திரன். நவவாசுதேவ அவதாரத்தில் ஒன்று.

**திவிமிடன்** — அஸ்தி குமரன்.

**திவிரதன்** — 1. நகபானன் குமரன். இவன் குமரன் தர்மரதன்.

2. திதிவாகன் குமரன்.

**திவோதாசன்** — 1. பீமரதன் குமரன்; இவன் குமரன் துயுமான்.

2. முத்கலன் குமரன்.

3. (தியுமந்தன்) பகீரதன் குமரன்.

4. காசி அரசனுகிய பீமசேநன் புத்திரன். அவன் புத்திரன் பிரதர்தனன்.

5. மேனகையின் புத்திரன்.

6. வாரணுதிபதியாகிய தன்வந்தரி புத்தரனுகிய கேதுமதன் புத்திரன். பீமரதன் என்றும் பெயர்.

7. காசிராஜ வம்சத்துத் தன்வந்தரி பௌத்ரனுன பீமரதன் புத்ரன். இவன் தன்வந்தரியின் குணங்களுடைமையின் தன்வந்தரியெனப் பட்டனன். இவன்பால் விசுவாமித்ர குமாராகிய சுருதர் முதலியோர் இவனிடம் வைத்திய சாத்திரம் கற்றனர்.

**திவோதாஸன்** — ஒரு கற்பத்தில் உலகமழிந்தது. அக்காலத்தில் இரிபுவைப் பிரமன் நோக்கி நீ உலகத்தை யாளுக உனக்கு சேஷன் மோகினியைப் பாரியை யாக்குவான், தேவர்கள் வேண்டிய கொடுப்பர். அதனுலுனக்குத் திவோதாஸன் என்று பெயர் உண்டாகும் என்றனன். அவ்வகை திவோதாஸன் தேவரை மதியாது அரசாளிக்கத் தேவர் பொருமை கொண்டு இவன் தவத்திற்குக் காரணமான அக்நியைக் கிரகிக்க அரசன் எல்லாவிடத்தும் நிறைந்து சலியாதிருக்கச் சிவமூர்த்தி இவன் நிலையை மாற்றும்படி யோகினிகள், துவாதசாதித்தர், பிரமன் சிவகணங்கள், கணபதி இவர்களை யேவிக் கலக்கினர். அவர்களால் முடியாமை கண்ட விஷ்ணுமூர்த்தி பௌத்தமதம் போதித்துச் சனங்களை மயக்கியது கண்ட அரசன் காசியில் சிவப்பிரதிட்டை செய்து பூசித்து முத்தி யடைந்தான். இவன் குமரன் சயமாஞ்சயன். தேவியை அங்கமோகினி யெனவுங் கூறுவர். (காசிகாண்டம்).

**திவ்வியமங்களமூர்த்தி**—சிவபிரான் சர்வ சம்மார காலத்தில் எல்லாம் நீங்கத் தனித்திருந்து பெற்ற பெயர்.

**திவ்யம்** — பிரமனால் சூரியனிடம் வைக்கப்பட்ட அக்னி.

**திவ்யன்** — சாத்துவதனன் குமரன்.

**திவ்யாங்கருஷி** — நாசு கேதுக்குத் தந்தை.

**திறல்விந்து** — துரியோதனனுக்குத் தம்பி.

**திறைகொண்டுபெயர்தல்**—கொல்லும் வலிமிகும் எயிலினிடத்து மன்னரெல்லாம் தாழ்வுசொல்ல முறைமையான திறையைக்கொண்டு இருந்த ஊரினின்றும் எடுத்துவிட்டது. (புறவெண்பா.)

**தினபலன்** — ஜன்ம நட்சத்திரமுதல் அன்றைய நட்சத்திரம் வரையில் எண்ணிக் கண்ட தொகையுடன் ஞாயிறு முதல் அன்றையவாரம் வரையிலும் பிரதமை முதல் அன்றைய திதிவரையிலுங் கூட்டிக் கண்ட தொகையைச் சேர்த்து ஒன்பதிற் கழித்தமிச்சம் (க) வியாகூலம்; (உ) சுபம்; (௩) துர்வார்த்தை (௪) பந்து தரிசனம்; (௫) பெண்போகம்; (௬) சுபம் (எ) கலகம்; (அ) ரோகம்; (கூ) ஞானவாக்கியம்.

**தினமிருத்து** — அஸ்தம், அவிட்ட முதற்கால்; விசாகம், திருவாதிரை இரண்டாங்கால்; ஆயிலியம், உத்திரட்டாதி மூன்றாங்கால்; பரணி, மூலம் நான்காங்கால். தினமிருத்துவாம். இக் காலங்களில் சுபகன்மங்கள் நீக்கபபடும். இரவில் தோஷமில்லை. சந்திரன் பூரணனாய் ஒரு சுபக்கிரகத்துடன் நிற்கையில் பகலிலும் தோஷமில்லை. (விதானமாலை.)

**தினை**—(சாமை) ஒருவகைத் தானியம். இது ஏழைகளுக்கு ஆகாரமாக உதவுகிறது. இது வட ஆப்ரிகா, யுனைடெட்ஸ்டேட்ஸ், இந்தியா, ஐரோப்பாவின் தென்பாகம் முதலிய இடங்களில் விளைகிறது.

**தின்னூநரி** — மதுரைக்குத் தெற்கே ஒருகாததூரத்திலுள்ளதோரூர். (திருவிளை.)

**திஷ்டன்** — (சூ.) வைவச்சுதமனுவின் குமரன்; இக்ஷ்வாகுவிற்குச் சகோதரன்; இவன் குமரன் நாபாகன்.

**துஷ்யந்தன்** — தூர்யசித் என்பவன் அபிமான புத்ரன், துஷ்யந்தனுக்குச் சகோதரன்.

**திக்ஷிணை**—கிரிசாசுவன்தேவி, தக்ஷன்பெண்; இவளுக்குத் திடணை எனவும் பெயர்.

## தீ

**தீ** — (௩) உயிரிலுள்ளதீ, உதரத்திலுள்ளதீ, வனத்தில் எழுந்தீ. (௩) காருகபத்யம், ஆகவனீயம் தக்ஷிணாக்நி

**தீக்குணம்** — (க0) பொய் சொல்லல், கோட்சொல்லல், கோபித்துச் சொல்லல், பயனில சொல்லல் இவை நான்கும் வாக்கின் தீக்குணம். களவாடல், வறிதேதொழில் செயல், கொலைசெயல் இம்மூன்றும் காயத் தீக்குணம். கொலை நினைக்கை, காமப்பற்று, ஆசை இம்மூன்றும் மனத் தீக்குணம்.

**தீபகல்பம்** — மூன்று புறங்களில் மட்டும் ஜலம் சூழ்ந்து இருக்கும். அதற்குப் பரியாயத் தீவு அல்லது தீபகல்பம் என்று பெயர். (பூகோளம்).

**தீபகன்** — வேத தருமரைக் காண்க.

**தீபதிமான்** — கிருஷ்ணன் புத்திரன்.

**தீபமும் தீபாராதனையும்** — தேவாலயங்களில் முக்கியமாய்ச் சிவாலயங்களில் பலவகைப்பட ஒன்று முதல் முறையே தீபார்த்திகள் பலவகைப் பேதங்களாகத் தேவர்களுக்கு ஆராதிப்பது. ஆராதனை காலத்தில் தேவர்கள் அனைவரும் தேவதரிசனத்தின் பொருட்டு வந்து அவ்வுருவமாக நின்று ஆராதனை தெரிசித்து விடை கொண்டு செல்வதாக ஆகமங்கள் கூறுகின்றன. அவற்றுள் ஒன்று முதல் ஐந்தளவுள்ள தீபார்த்திகள் ஈசனாதி தேவர்கள் என்றும், திரிதீபம், தத்வத்ரயம் என்றும், பஞ்சதீபம், பஞ்சகலாசத்திகள் என்றும், சப்ததீபங்கள், சப்தமாதர்கள் என்றும், நவதீபம், நவசக்திகள் என்றும், ஏகதீபம், ஸரஸ்வதி ஸ்வாகாதேவி யென்றும் மற்றைய ருஷபாதி ரூபமுள்ளவை பல தேவர்கள் அவ்வுருக்கொண்டு வந்து தெரிசிப்பவர் என்றும் சோடசங்களாகிய உபசாரங்கள் பஞ்சபூதாதி தேவதா தரிசனமென்றும், ஸ்ரீகாரணத்தில் ஒரு பாகத்தில் கூறப்பட்டிருக்கின்றது. இந்தத் தீபார்த்திகள் ரந்திராதாரமாகவும், ஏகாதாரமாகவும் கொம்புகளை ஆதாரமாகவும் பெற்றதாம். இவை சர்வகிர்த்திம நாசத்தின் பொருட்டும், சர்வலோக இதத்தின் பொருட்டும் செய்யப்படுவன. தீபாராதனைகளில் காராம் பசுவின் நெய் உத்தமம், மற்றப் பசுக்கள் மத்திமம். ஆட்டின் நெய்யும் எண்ணெயும் அதமம். விருக்ஷபீஜங்களின் நெய் நீக்கத்தக்கவை. முதலில் தீபாராதனை செய்யுமிடத்து நாகார்த்தி முதலாகக் கடதீபம் இறுதியாகச் செய்யவேண்டியது. பின்னும் பதினாறுகலைகொண்ட தீபமும், பக்ஷத்வீபமும், வாரதீபமும், ருத்ரம். நிர்திஷ்

டம், சப்தமாதரம், நிவிர்த்யாதி, கலாத்வீபம், ஸரஸ்வதித்வீபம் முதலிய தீபார்த்திகளைச் செய்யவேண்டியது. தீபார்த்திகளை யெடுத்துத் தேவர்களுக்கு ஆராதனை செய்வதில் மூன்றுமுறை தீபபாத்திரத்தை எடுத்து ஈஸ்வாருக்கு ஆராதனை செய்தல் வேண்டும். அதில் முதன்முறை லோகரக்ஷணார்த்தமும் இரண்டாமுறை கிராமரக்ஷணார்த்தமும், மூன்றாமுறை பூதரக்ஷணார்த்தமுமாகத் திரிப்ரதக்ஷணமாகப் பாதாதிமத்தகம் வரையில் எடுத்து மத்தகம், லலாடம், மார்பு, திருவடிகள் முதலியவற்றைக் குறித்துப் பிரணவாகாரமாய்க் காட்டல் வேண்டும் இத்தீப ஆர்த்திகளின் முடிவில் கற்பூரார்த்தி செய்யப்படும். 'இது நீராஞ்ஜனம் என்று கூறப்படும். இதனால் தேவாராதனை செய்யின் சர்வசித்திகள் உண்டாம். இதனைச் செய்யுமிடத்து நாலங்குலம் ஜ்வாலை உயரம் எழும்பக் கற்பூரம் எற்றின் உத்தமம். மூன்றங்குலம் மத்திமம், இரண்டங்குலம் அதமம். நீராஞ்சன பாத்திரமாகிறது விருத்தமாய்ச் சூர்ய மண்டலாகாரமா யிருத்தல் வேண்டும். இடையில் அக்னிதேவனுடைய இருப்பாய்க் கற்பூராதிகள் பதித்தல் வேண்டும். (ஸ்ரீகாரணம்.)

**தீபம்** — 1. எண்ணெய், வர்த்தி, அக்நியால் யோஜிக்கப்பட்டது. இது சகல புண்ணியங்களையும் தரும். (விரதசூடாமணி).

2. மேனோக்கி வியாபித்து இருளைக் கெடுப்பது. ஆதலால் இது மனிதர்களுக்கு உற்சாகத்தையும் சக்தியையும் உண்டாக்குவது. இது பலிக்குச் சுக்ரன் கூறியது. (பாரதம் அநுசாசனிகபர்வம்).

**தீபயஷ்டி** — (தீவட்டி) இது, ஒரு கொம்பில் தீப்பிடிக்கும் எண்ணெய்ச் சேர்ந்த பொருள்களைச் சேர்த்து வெளிச்சந் தரச் செய்வதும், கிண்ணம்போன்ற இருப்புப் பாத்திரத்தில் எரி நெருப்பிட்டு ஒளிரச் செய்யுங் கருவி.

**தீபஸ்தம்பம்** — கலங்கரை விளக்கம் காண்க.

**தீபாவளிபண்டிகை** — இது ஐப்பசிமீ கிருஷ்ணபக்ஷ திரயோதசி இரவில் சதுர்த்தசி சம்பந்த மடைகையில் உலகத்தைத் துன்புறுத்தித் துன்ப இருள்மூடச் செய்திருந்த பிராக்ஜோதிடபுரி யாண்ட நரகாசுரனைக் கண்ணன் கொன்றதின்பொருட்டுக் களிப்பினால் எண்ணெயிட்டு ஸ்நானஞ்செய்து விளக்கிட்டுக் களிப்பது.

**தீப்பறவை** — இது, பறவைகள் எல்லாவற்றினும் பெரிது. உயரம் (6, 7, 8) அடிகளிருக்கும். இது ஆப்பிரிக்காவின் அகன்ற வனாந்தரவாசி, இதன் கால்களும் கழுத்தும் ஒட்டகத்தைப்போல் நீண்டிருப்பதால் ஒட்டகப்பக்ஷி யென்பர். இது ஒட்டகத்தைப்போலவே பல நாட்கள் நீர் குடியாது வசிக்கும்; இது பறவாது; கால்களில் பருத்த இரண்டு விரல்களுண்டு. குதிரையின் வேகத்திற் கதிகம் ஓடும். இதனைப் பழக்கி இதன்மேல் சவாரி செய்கிறார்கள். இதன் இறகுகளை ஆபரணமாகவும் முட்டைகளை ஆகாரமாகவும் முட்டை யோட்டைப் பான பாத்திரமாகவும் உபயோகிக்கிறார்கள். இதனை வேட்டை யாடுகையில் அலுத்த பறவை தன்னை எதிரிகள் காணவில்லையென மணலில் தலையை மறைத்துக்கொள்ளும். அக் காலத்தில் அதனைப் பிடித்துக்கொள்வர்.

**தீமந்தன்** — 1. விரோசனன் குமரன்.

2. புரூரவன் குமரன்.

**தீமுருகற்பாஷாணம்** — (நிபாக்னி) (Phosphorus) இது எலும்பி னின்றும், சில உலோகங்களினின்றும் எடுக்கப்படுகிறது. இது தண்ணீரிலிருக்கும் வரையில் தன் குணத்தை வெளியிடாது. வெளி வந்து காற்றுப்படின் தீப்பற்றும். இது தீக்குச்சுகள் செய்ய உபயோகப்படுகிறது.

**தீமைவிளைக்கும் தேவதைகள்** — இவர்கள் துச்சகன் சந்ததியார். அவர்களாவார்: தந்தாக்கிருஷ்டி, உக்தி, பரிவர்த்தகன், அங்கயுக், சகுனி, கண்டபிராதருது, கற்பகனன், சசியக்னன், நியோஜிகை, விரோதினி, சுவயம்ஹாரிகை, பிராமணி, ருதுஹாரிகை, ஸ்மிருதிஹாரிகை, பீஜாபஹாரிணி, வித்வேஷணி, தந்தாக்கிருஷ்டி, விஜல்பை, கலகை, காலஜிஹ்வன், பரிவர்த்தினி, அவிக்னன், மேகனை, க்ஷுத்ரகன், சோதகை, கிராஹகை, தமப்பிரசாதகன், சோதகன், கிருஹன், அர்த்தஹாரி, வீர்யஹாரி, குசஹாரிணி, குசத்துவயஹாரிணி, ஜாதஹாரிணி, பிரசண்டன், வாதரூபை, அரூபை, அபகர்வைஷ முதலியவர்; இவர்கள் செய்கைகளைத் தனித்தனி காண்க.

**தீயதேவதைகள்** — தென்னாட்டில் சிலர் மாரி திருவிழாவில் கணக்கில்லா ஆட்டுக்குட்டிகளைப் பலியிடும் தேவதைக்குக் குட்டிக்குறுமாயி எனவும், இரத்தங்களைச சட்

டியிற் பிடித்து நிவேதிப்பது சட்டிக்குரு மாயி எனவும், பள்ளத்தில் ரத்தம் நிறைத்து நிவேதிக்கும் தேவதைக்குப் பள்ளக் குருமாயி எனவும், ஓலையினால் மாரியம்மன் செய்து வணங்குவது ஓலைப்பிடாரி எனவும், பின்னும் செல்லாச்சி, பேயாயி, பூமாயி, வீராயி, சடையாயி, மலையாயி, பொம்மக்காள், வெள்ளாயி, இளங்காளி, கருங்காயி, ஒண்டிவீரன், சங்கிலிவீரன், காத்தாயி, துர்க்காயி, கங்கையம்மை, வட்டப்பநாச்சி, கருமுனி, செம்முனி, வாழ்முனி, பூங்குறத்தி, வேங்கை யம்மன், கருவேங்கை, மலைவேங்கை, முடியாலழகி, முடிமேல்முடியழகி, மாப்பிள்ளை வீரன், பத்தினி யம்மை, தீப்பாஞ்சாள், பொம்மி, சூரியசுவாமி, மன்னாதலிங்கம் வணங்குவர். (உ - வ.)

**தீயர்** — இவர்கள் மலையாள நாட்டு இழுவர், இவர்கள் தொழில் கள்ளிறக்குதல் பயிர் வேலை செய்தல். மற்றும் பல தொழில் செய்தல். (தர்ஸ்டன்).

**தீயவை** — இது, சுலாவுதலையுஞ், (சுண்டு தலையு) மன்னாப்பொருளையு மேற்கொண்டு உரைத்த வொருவற்குப் பரிந்து சொல்லிய துணராது அல்லதை உணர்ந்து பக்ஷபாதமாவதுவாம். (யாப்பு - வி.)

**தீயன்** — சூரபன்மன் மந்திரி.

**தீரன்** — பலி அரசன்.

**தீர்க்கசிவகன்**—இவன் காசிராசனாகப் பிறந்தவன்.

**தீர்க்கதபசு** — ஒரு ருஷி, பலியின் க்ஷேத்திரத்தில் புத்திர உற்பத்தி செய்தவர்.

**தீர்க்கதமசு** — உசீனனது மனைவியாகிய மமதையைக் குரு வலியப் புணரப்போக வயிற்றிலிருந்த கரு நான் உன் தமயன் மைந்தன் உன் கரு இதிலமையாதெனத் தடுக்கக் குருஅக்கருவை நீ குருடனாகெனச் சபித்தனன். அதனாலிவன் இப்பெயர் பெற்றனன். இவன் தமபி மனைவியைப் புணரச் சென்றபோது தம்பி கோபித்து இவனைக் கங்கையில் விட மாபலியென்போன் கங்கையிற் செல்லுமவனையெடுத்துத் தன்னிருக்கையில் வைத்திருக்கையில் இவன் அம்மாபலிக்குப் புத்திரர் இலாமை கண்டு சுதேக்ஷணை புத்திரப்பேறு வேண்டின் உன் மனைவியென்னிடம் வருகவென அரசன் அவன் மனைவிக்குக் கூற அவள் உடன்படாது தோழியையனுப்பத் தோழி தவத்தால் ஞானியை அன்புடன் புணர இவளிடம் கட்சீவதன் பிறந்தனன். பின் முனிவன் அரசன் வேண்ட அன் மனைவி உப்பு, தேன், தயிர் கலந்து என்னுடம்பிற் பூசித் தன்னாவின் நக்கின் புத்திரர் உளராம் என அவ்வாறு அவள் புரிகையில் அபானத்தைப் பூசாது விட்டனள். ஆதலால் அவளுக்கு அபானமில்லாக் குமரன் பிறந்தனன். இவளுக்கு அங்கன், வங்கன், கலிங்கன், சிங்கன் முதலிய புத்திரர்கள் பிறந்தனர். இந்தத் தீர்க்கதமசு பின்னால் இவன் கோசம்ரக்ஷணம் செய்தமையால் தவத்தால் கோதமனாயினன். (மச்ச. புரா)

**தீர்க்கதமன்** — 1. பவயமுனிவர் குமரன், தாய் மமதை, இவன் தாய்வயிற்றி லிருக்கையில் வியாழன் கபடமாய்த் தன்தாயைப் புணர்ந்ததை அறிந்து கோபித்தனன். இதனால் வியாழன் கோபித்துக் கண்ணில்லாது போகச் சபிக்கப்பட்டவன். தீர்க்கதேவன் மாணாக்கன். இவன் பிரதோஷ காலத்தில் மனைவியைப் புணர்ந்ததால், கிராதரைப் போல் நூறு புத்திரரைப் பெற்றான். பலியின் மனைவியைப் புணர்ந்து அங்கனைப் பெற்றான்.

2. இவன் பிரகஸ்பதியால் பிறவியந்தகனாய்ப் பிறந்து ஒரு எருது தர்ப்பையை மேய அதன் கொம்பைப் பிடித்து உன்னை விடேன் என்றனன். அவ்வெருது முனிச் சிரேட்டரே நாங்கள் அறிவில்லாதவர்கள் நாங்கள் செய்த தவறு பொறுக்க என வேண்ட விட்டுத் தன் மனைவியிட மிருக்கையில் அவளிந்தப் பிறவி யந்தகனிட மிருப்பது நலம் அல்ல, என்று ஒரு கட்டையில் கட்டிக் கங்கையில்விடக் கூவிக்கொண்டு வெள்ளத்தில் சென்றனன். இவனைப் பலி எனும் அரசன் எடுத்துப் பரிபாலிக்கச் சந்தோஷித்து அரசனே என்ன வரம் வேண்டும் என அரசன் புத்திரர் வேண்டுமென்று தன் மனைவியை முனிவனிடம் போக ஏவினன். அரசபத்தினி தான் செல்லாமல் தன் தோழியை அனுப்பினள். அத் தோழியிடம் இரண்டு புத்திரர் பிறந்தனர். அப் புத்திரரை அரசன் நோக்கித் தன் தேவியிடம் பிறந்தவர் அல்லரென் றறிந்து மற்றொருநாள் தன் தேவியை அனுப்பினன். முனிவர் நான் உன்னைப் பரிசிக்கேன் நீ என்மீது தயிர், உப்பு, தேன் முதலியவற்றைக்கலந்து என் உடம்பெல்லாம் பூசிப் புணரின் இஷ்டசித்தி பெறுவை யென அவ்வாறேசெய்து

அபானஸ்தானத்தில் பூசாததனுல், இருடி உனக்கு அபானமில்லாத புத்திரன் பிறப்பன் என்றனன். இதைக்கேட்ட இராஜமகிஷி வேண்ட முனி அவளை உடம்பெங்கும் தடவிப் பார்த்து என் பரிசத்தால் உனக்கு அநேக புத்திரர் பிறப்பர் என்றனர். பின் முனிவனை முன்சொன்ன எருதின் தாய் வந்து தன் குமரனுக்குச் செய்த உதவிக்கும், கோதர்மம் கைக்கொண்டதற்கும் உதவியாக உனக்குக் கண் கொடுக்கிறேன் என்று உடலைமோந்து பிரகஸ்பதியின் சாபத்தை நீக்கிற்று. இந்த அரசனுகிய பலியின் சந்ததியில் (௬௬) வது கர்ணன். இவனைச் சூதன் என்பவன் வளர்த்தது பற்றிச் சூதவம்சத்தவன் எனப்பட்டனன்.

3. உதத்யன் குமரன். இவன் பாரி பிரதேஷிணி, குமரர் கௌதமர் முதலியோர்.

4. கக்கீவன் தந்தை.

5. ஒரு ரிஷி. உசத்தியன் குமரன்.

**தீர்க்கதவன்** — புண்ணிய பாவனர்க்குத் தந்தை. இவனிறந்ததற்குப் பாவநன் விசனப்பட்டதறிந்த புண்ணியன், யாக்கை நிலையாமைகூறித் தேற்றினுன்.

**தீர்க்கதுண்டன்** — ஒரு காகம். இது தருவாசரிட்ட பலி அன்னத்தைக் கவர்ந்து செல்லுகையில் மற்றொரு காகம் அதனை மறித்தது. அதனுல் அந்த அன்னம் ஒரு சிவனடியவர் பாத்திரத்தில் விழுந்தது. அது இரண்டாமுறை கவர்ந்துசெல்லுகையில் அதை ஒரு வேடன் எய்தனன். அதனுல் உயிர்நீங்கிச் சிவகணமாயிற்று. (அவிநாசித்தல புராணம்.)

**தீர்க்கதேவன்** — ஒரு முனிவன், தீர்க்கதமனுக்கு ஆசிரியன்.

**தீர்க்கபாகன்** — திருதராட்டிரன் குமரன்.

**தீர்க்கபாகு** — (சு.) கட்டுவாங்கன் குமரன். இவன் குமரன் ரகு.

**தீர்க்கபாதன்** — கருமுக வாநரத் தலைவன்.

**தீர்க்கபுசன்** — திருதராட்டிரன் குமரன்.

**தீர்க்கப்பிரக்யன்** — 1. பாரதவீரரில் ஒருவன், உருஷபர்வன் அம்சம்.

2. உத்தர கோசலநாட்டரசன்.

**தீர்க்கயஞ்ஞன்** — பீமனுல் திக்குவிஜயத்தில் செயிக்கப்பட்ட வடநாட்டரசன்.

**தீர்க்கலோசனன்** — துரியோதனன் தம்பி, பதினுன்காம்நாள் பீமனுல் இறந்தவன்.

**தீர்க்கவசன்** — திருதராட்டிரன் புத்திரன்

**தீர்க்கன்**—மகதராஜன். பாண்டுவால் கொல்லப்பட்டவன்.

**தீர்க்காதேவி** — நிருதியின் தேவி.

**தீர்த்தங்கரர்** — இவர்கள் சைநதீர்த்தங்கரர்கள். இவர் ஆதிதீர்த்தங்கரர் எனவும், மத்தியகாலதீர்த்தங்கரர் எனவும், பவிஷ்யத்காலதீர்த்தங்கரர் எனவும் மூன்றுவகையர். இவர்களுள் ஆதிதீர்த்தங்கரர்களைப் பற்றியும், பவிஷ்யத்காலதீர்த்தங்கரர்களைப் பற்றியும் ஒன்றும் தெரியவில்லை. மத்யகால தீர்த்தங்கரர்களைப்பற்றி அவ்வவர் பெயர்களில் காண்க. ஆதிதீர்த்தங்கரர்கள் இருபத்தி ஞல்வர். நிர்வாண, சாகர, மகாசாது, விமலப்பிரப, ஸ்ரீதர, சுதத்த, அமலப்பிரப, உத்தர, ஆங்கிர, சந்மதி, சிந்து, குசுமாஞ்சலி, சிவகண, உத்சாக, ஞானேச்வர, பரமேச்வர, விமலேச்வர, யசோதர, கிருஷ்ண, ஞானமதி, ஸுத்தமதி, ஸ்ரீபத்ர, அதிக்கிராந்த, சாந்தாச்சேதி முதலியவர். மத்தியகாலதீர்த்தங்கரர் அல்லது வர்த்தமான தீர்த்தங்கரர், ருஷபர், அசிதர், சம்பவர், அபிநந்தனர், சுமதி, பத்மப்பிரப, சுபார்சுவ, சந்திரப்பிரப, புஷ்பதந்த சீதள, சிரேயாம்ச, வாஸுபூச்ய, விமல, அநந்த, தர்ம, சாந்தி, குந்துநாத, அர, மல்லி, முனுஸுவிரத, நமி, நேமி, பார்சுவ, வர்த்தமானர் முதலிய இருபத்திஞல்வர். பவிஷ்யத்காலதீர்த்தங்கரர் மகாபத்ம, சுரதேவ, சுபார்சுவ, சுயம்பிரப, சர்வாத்மபூத, தேவபுத்ர குலபுத்ர, உதங்க, புரோஷ்டில செயகீர்த்தி, முநிஸுவ்ரத, அர, நிஷ்பாப, நிஷ்கஷாய, விபுல நிர்மல, சித்ரகுத்த, சாமதிகுப்த, ஸ்வயம்பு, அநவிர்த்தகர், சய, விமல, தேவபால, அநந்தவீர்யாச்சேதி முதலிய இருபத்திஞல்வர்.

**தீர்த்தபசு** -- சுராஷ்டரன் குமரன். இவன் குமரன் தன்வந்திரி.

**தீர்த்தப்பிள்ளை** — கந்தாடை லக்ஷ்மணசாரியர் குமரர். வேதாந்ததேசிகர் திருவடி தீர்த்த விசேஷத்தால் பிறந்தவர். இவர்க்கு ஆயிஆழ்வான் பிள்ளை எனவும் பெயர்.

**தீர்த்தமாகாத்மியம்** — தீர்த்தங்களாவன: கங்கை, கோதாவிரி, நருமதை, சிந்து, ஜம்புமார்க்கம், கோடிதீர்த்தம், சர்மண்வதி, சோமநாதம், பிரபாஸகம், சரஸ்வதி, பிண்டாரகம், கோமதி, சர்வசித்தி, பூமிதீர்த்தம், பிரம்மதுங்கம், பஞ்சநதம், பீமதீர்த்தம், கிரீந்திரம், தேவிகை, பாபநாசநி, குமாரகோடி, குருக்ஷேத்ரம், வாரணுசி,

கபாலமோசனம், பிரயாகை, சாளக்ராமம், வடேசதீர்த்தம், வாமநதீர்த்தம், காளிகாசங்கம், லௌஹித்யம், கரதோயம், சோணம், ஸ்ரீபர்வதம், கோல்வகிரி, சக்யதீர்த்தம், மலயதீர்த்தம், துங்கபத்திரை, வரதா, தபதி, பயோஷ்ணி, தண்டகாரண்ய தீர்த்தம், காளஞ்சரம், முஞ்சவடம், சூர்ப்பாரகம், மந்தாகினி, சித்ரகூடம், சிருங்கபேரம், அவந்தி, அயோத்யாதீர்த்தம், சரயு, நைமிசதீர்த்தம், கும்பகோணம், பாபநாசம், யமுனை, சேது, மணிகர்ணிகை, பலபத்ரை, மாயா, மதுரா, அவந்தி, கேதாரம், நீலதண்டம், நேபாளம், இமவந்தம், கிருஷ்ணை, க்ஷீரம், பினுகி, தாம்ரபர்ணி, வைகை, முதலிய தீர்த்தங்கள். இத் தீர்த்தங்களை நாடோறும் மனோவாக்குக் காயங்களால் ஸ்மரித்தாலும், வித்யை, தபம், கீர்த்தி முதலிய பலம் பெறுவர். தீர்த்தயாத்திரை விரும்பிய ஒருவன் லகுஆகாரமுள்ளவனாய் ஜிதேந்திரியனாய்ப் புறப்படின் ஸர்வயஞ்ஞ பலங்களை அடைவன். மூன்று இரவு உபவாசமாய்த் தீர்த்தக்கரையிலிருந்து காஞ்சனம், பசு முதலியவை தானஞ் செய்தவன் எல்லாப் பலன்களையும் அடைவன். கையிலொன்று மில்லானும் தீர்த்தயாத்திரையை முன்னிட்டுப் பிரயாணப்படின் யஞ்ஞபலன் பெறுவன். மேற்கூறிய தீர்த்தங்களில் இரு அயநங்கள், கிரஹண புண்யகாலம், சந்த்ரயோதசி, துவாதசி, அமாவாசை, பூரணை, ஏகாதசி, பிதுர்திவசம், வருஷசங்கிராந்தி, ஆடி, ஆவணி மூலம், தீபாவளி, மகாநவமி, யுகாதி, கேதாரவிரதம், விநாயகசதுர்த்தி, கந்தசஷ்டி, சிவராத்ரி, கோகுலாஷ்டமி, கார்த்திகை, மகம் முதலிய விரததினங்களில் ஸ்நானஞ்செய்து சங்கற்பஞ்செய்து (௧00) (௧000) முழுக்கிட்டுக் காயத்ரியாதி மந்திரங்களைச் செபித்து, மரணமானவர்களின் எலும்புகளைத் தீர்த்தத்திலிட்டுப் பிண்டங்கள் முதலிய போட்டுத் தர்ப்பணாதிகள் செய்யின் பிதுர்க்கள் நற்கதி பெறுவதுடன் தாங்களும் இம்மையில் சகலபோகங்களையுமடைந்து மறுமையில் சுவர்க்காதி போகங்களையும் முத்தியையும் பெறுவர். தீர்த்தோத்தமமாகிய கங்கையில் எவ்வளவு காலம் மரணமடைந்தவன் எலும்பு இருக்குமோ அவ்வளவு காலம் அவன் சுவர்க்கத்தில் இருப்பன். ("யாவதஸ்தி சகங்காயாம் தாவத்ஸ்வர்க்கே ஸதிஷ்டதி") கங்கையைத் தரிசிக்கினும், பரிசிக்கினும், உரிசிக்கினும், கீர்த்திக்கினும் புண்ணியத்தையடைகிறான். மகாதீர்த்தமாகிய பிரயாகை; இது திரிமூர்த்தி ஸ்தானம், இது யமுனையும், கங்கையும் கூடுமிடம்; இது பூதேவிக்கு ஜனனமென்று கூறப்படும். இதின் மிருத்திகையை யெடுத்துப் பூசிக்கொள்ளினும் சர்வபாவங்களினின்று நீங்குவான். கங்காத்வாரத்திலும், பிரயாகையிலும், கங்கைசாகர சங்கமத்திலும், தானம் முதலிய செய்பவன் சுவர்க்காதி போகங்களையடைவன். பிரயாகையிலிருக்கும் வடமூலத்தில் உயிர்விட்டவன் விஷ்ணுபதம் பெறுவன். (ஆக்னேய - புராணம்).

**தீவகவணி**—(விளக்கணி) குணம், தொழில், சாதி, பொருள் குறித்து ஒரு சொல் ஓரிடத்தினின்று செய்யுளின் பல இடத்தினின்ற சொற்களோடு பொருந்திப் பொருளை விளைவிப்பது. இது மேற்கூறிய குண முதலிய பற்றி முதனிலை, இடைநிலை, கடைநிலைகளைப்பற்றி முதனிலைக் குண தீவகமுதலியவாக வேறுபட்டுவரும். பின்னும் மாலை, விருத்தம், ஒரு பொருட் சிலேடை யெனவுங் கூறுபடும். (தண்டி.)

**தீவதிலகை** — 1. மணிப்பல்லவத்துள்ள புத்த பீடிகையை இந்திரன் கட்டளைப் படியே காத்திருப்பவளாகிய ஒரு தெய்வ மங்கை. மணிப்பல்லவத்து முதலில் மணிமேகலையைக்கண்டு அவள் தனிமைதீர்த்து அளவளாவியவள். மணலில் புதைந்திருந்த புண்ணியராசன் பழயசரீரத்தை அவனுக்குக் காட்டியவள். (மணிமேகலை).

**தீவு** — 1. (எ) நாவல், இறலி, குசை, கிரவுஞ்சம், புட்கரம், இலாங்கலி, பூகம்.

2. நான்கு பக்கங்களிலும் ஜலத்தால் சூழப்பட்ட பூபாகத்திற்குத் தீவு என்று பெயர். (பூகோளம்).

**தீன்மதிநாகன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். (குறு - ௧௧௧.)

**தீக்ஷிதர்** — சோதிஷ்டோமஞ் செய்த பரம்பரையில் பிறந்தாருக்குப் பட்டப்பெயர்.

**தைக்ஷ** — 1. திருதவிருதனென்னும் ஏகாதசருத்திரன் தேவி.

2. தீ என்பது தானம். க்ஷீ என்பது க்ஷயம், புக்தி, முக்தி, தானமும், பாசக்ஷயமுஞ் செய்வதால் இப் பெயர் உண்டாயிற்று. இது முதற்கடவுளிடம் இருந்து வழிவழியாகத் தேவர்கள், முனிவர்கள், மனிதர்கள் வரையில் படனசிரவணங்கள்

செய்யும் ஜனங்களுக்கு அபீஷ்டமான புத்தி, முக்தி, ரூப் பலங்களைக் கொடுப்பதாயும், மலாதி பாசங்களை க்ஷயிப்பதாயும் இருக்கும் கிரியை எனப்படும். இது பௌதகீ, நைஷ்டிகீ என இருவிதப்படும். அவற்றுள் பௌதகீ விசித்திரமான அபீஷ்டபோகங்களைக் கொடுத்துப் பின்னல் மோக்ஷத்தைத் தருவது. நைஷ்டிகீ என்பது, நிஷ்டையைக் கொடுப்பது. இது தவத்தவர் சம்பந்தமாதலால், இப் பெயர் பெற்றது. பின்னும் இத் தீக்ஷைகள், சாபேக்ஷை, நிராபேக்ஷை என இருவிதப்படும். சமயாசாராதி அநுஷ்டானங்களை அபேக்ஷித்தது சாபேக்ஷை, அதை அபேக்ஷியாதது நிராபேக்ஷையாம். பின்னும் இத்தீக்ஷை நிராதாரை, சாதாரை என இருவகையாம். இவற்றுள் நிராதாரை என்பது இறைவனே நேரில் தம்மைத் தியானிக்கும் அடியவர் பொருட்டுச் செய்வதாம். சாதாரை குருமூர்த்தியை அதிட்டித்துச் செய்வது. பின்னும் ஞானசாரியன் பார்வையாலும், அஸ்தமஸ்தகசையோகத்தாலும், திருவடிமுடி சூட்டலாலும் தீக்ஷை செய்வதும் உண்டு. இது மந்திரங்கள் விஷசக்தியைப் போக்குவது போல ஆன்மாக்களுக்கு அநாதியே உண்டாகிய மலசக்தியைப் போக்குவதால் தீக்ஷை, ஆன்மசமஸ்காரமாம். பின்னும் சேதனசேதன சுவரூபத்தைப் பிரகாசிப்பித்து மோக்ஷத்தைத் தருவதாதலின் இப்பெயர்த்தாகும்.

3. இது, ஆசாரியன், ஆன்மாவைப்பற்றிய பாசம் நீங்கச் செய்யப்படுவது. இது மாணாக்கன் பக்குவம் நோக்கிப் பலவகைப்படும். நயனதீக்ஷை - இது, மீன் தனது முட்டைகளைக்கண்ணால் பார்த்துக் காப்பது போல் ஆசாரியன் மாணாக்கனை அருட்கண்ணால் நோக்கிப் பாசம் நீக்குவது. பரிசதீக்ஷை - கோழி தன் சிறகால் தழுவிக் காத்தல்போல் ஆசாரியன் மாணாக்கனை ஞானஅஸ்தத்தால் மத்தகத்தில் தொட்டுப் பாசநீக்கல். மானததீக்ஷை - ஆமை தன் முட்டைகளை நினைத்த காலத்தில் அவை பொரிந்துடன் செல்வது போல் ஆசாரியன் மாணாக்கனைப் பரிபாக மெண்ணித் தீக்ஷித்துப் பாச நீக்குதல். வாசக தீக்ஷை - பஞ்சாக்ஷர உபதேசத்தால் தீக்ஷிப்பது. சாத்திர தீக்ஷை - சிவாகமங்களைப் போதித்துத் தீக்ஷித்தல். யோகதீக்ஷை - யோக மார்க்கத்தால் மாணாக்கனிருதயத்திற் சென்று தீக்ஷித்தல். அவுத்திரீ தீக்ஷை - ஓமாதி காரியத்தால் தீக்ஷிப்பது. ஞான தீக்ஷை - இது, ஒளத்திரியில் குண்ட மண்டலாதிகள் முதலிய மனத்தால் பாவித்துத் தீக்ஷிப்பது. கிரியாதீக்ஷை - குண்ட மண்டலாதிகள் செய்து தீக்ஷிப்பது. இது, நிர்ப்பீஜம், சபீஜம் என இருவகை. நிர்ப்பீஜம் - சத்தியோநிர்வாணம், அசத்தியோ நிர்வாணமென இருவகை. சத்தியோநிர்வாணம் - விருத்தர் முதலிய பக்குவர்க்குச் செய்யுந் தீக்ஷை. அசத்திய நிர்வாணம் - வாலிபர் முதலிய மற்றவர்க்குச் செய்வது. சபீஜதீக்ஷை - ஆசாரியரை யடுத்து வேத சிவாகமங்களை ஓதிச் சமயாசாரங்களில் வழுவாது நிற்பவருக்குச் செய்வது. இது, உலோகதர்மணி சிவதர்மணி யென இரண்டாம். உலோகதர்மணி ஆசாரியன் மாணாக்கனைப் பதப்பிராப்தியாகிய புவனங்களில் சேர்ப்பிக்கச் செய்யப்படுவது. சிவதர்மணி - மோக்ஷகாமியாகிய மாணாக்கனுக்குச் சிகாச்சேதன முதலிய செய்து மோக்ஷத்தை அடைவிக்குந் தீக்ஷை. சமய, விசேடம், நிருவாணம், ஆசாரியா வபிஷேக முதலிய, நிர்ப்பீஜ சபீஜ தீக்ஷைகளிலடங்கும். (சித்தா.)

## து

**துகண்டன்** — ஒரு அரசன்.

**துகாராம்** — இவர் திண்டகாமனு எனுங்கிராமத்தில் வணிகர் குலத்தில் அவதரித்தவர். இவர் சத்யவிரதராயிருந்து இல்லற நடத்திவருநாட்களில் துஷ்காலம் நேரிட்டதால் விவகாரத்தில் விரக்திபெற்று ஏகாதசி விரதம் அநுட்டித்து அரிபஜனை செய்து பகவானருளால் கவிகள்பாடித் தமது மகிமையால் சிவாஜி அரசனுக்கு நேரிட்ட துன்பத்தை விலக்கி அவன் கொடுத்த செல்வத்தை விரும்பாது இருந்தனர். இவ்வாறு தாம் கீர்த்தனைகள் செய்யும் சமயத்தில் ஒருத்தி தன்னுயிர் நீங்கின குமரனை இவர்க்கு முன்னிட்டு வருந்த அவனை உயிர்ப்பித்தனர். இவர் இரண்டுமாதகாலம் காட்டில் திரிந்துகொண்டிருக்கையில் இவர் மனைவி இவரைத்தேடிப் பிடித்து மனைக்கண் கொண்டுவந்து வசிக்கையில் இவர் மனைவியை நோக்கிப் பிரபஞ்சக் காவடியைச் சுமந்து வாணாள் வீணாக்

காது பகவான் திருவடியை எண்ணின் நலமடையலாமென்று அவளுக் குபதேசித்து அவளை வீடு முதலியவைகளைக் கொள்ளைவிடக் கட்டளையிட்டனர். அவ்வாறு மனைவிசெய்து பகவானைத் தியானித்துக் கொண்டிருக்கையில் குழந்தைகள் பசியாலழ அன்னமில்லாது இந்தப் பகவான் திருவடியை நம்பினதால் என் சம்சாரம் நீருயிற்றென்று ஒரு கருங்கல்லைத் தலைமீது சுமந்துகொண்டு பகவான் காலை உடைக்கிறேனென்று கோயிலுக்குள் செல்லுகையில் ருக்மணி ஒரு பொதி பொன் பணங்களைச் சுமந்துகொண்டு வந்துதர அதனைத் துகாராம் வாங்கிச் சாதுக்களுக்குப் பகிர்ந்தளித்தனர். சிஞ்சவடி கிராமத்தில் காணுபத்ய மதத்தவர் சிலர் இவரை இக்ழுகையில் இவர் அவ்விடஞ் சென்று போஜனஞ் செய்யுஞ் சமயத்தில் தன்னுடன் உண்ணப்பெருமாளேயன்றிக் கணபதியையும் வருவித்துடன் புசித்தனர். இவர் ஒருமுறைச்வரநோயால் பண்டரியென்னு மூருக்குப் பெருமாளைச் சேவிக்கப் போகமுடியாமல் பெருமாளைத் தமக்கு முன்வந்து சேவைதரும்படி கடிதம் எழுதினர். அவ்வாறே பெருமாள் கருடாரூடராய்த் தரிசனந்தந்தனர். துகாராம் பெருமாளுக்கு அன்னம் பரிமாறி ஆனந்தத்தால் பஜனை செய்கையில் கேட்போர் பரவசமாயினர். அச்சமயத்தில் மண்டபத்தில் தீப்பற்றிய செய்தியைச் சம்பாறு கோதையெனுங் கிராமத்திருந்து பஜனை செய்து கொண்டிருந்த ஷேக்மஹமத் எனும்பக்தர் ஞானதிருஷ்டியா லறிந்து அணைத்தனர். இவர் அக்ஷரஞானமில்லாத ஒரு வேதியனுக்கு ஆறு சாத்திரமும் வரச்செய்தனர். பகவான், பாபாஜி எனும் பெயரால் துகாராம் கனவிடை கேசவசைதன்யம் ராகவசைதன்யம் என்றும் உபதேசித்து அவர் செய்த கவிகளனைத்தையும் குஜனரைக் கூடி ஆற்றில்விட அவையனைத்தையும் உத்தரிக்கச் செய்தனர்.

**துகில்** — கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, குச்சரி, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி, இவை இக்காலத்து வழக்கில் ஒழிந்தன. இக்காலத்து, தோவத்தி, அங்கவஸ்திரம், நுண்டுகில், பாகை, சீலை, வட்டு, துண்டு, இரட்டு, துப்பட்டி, நாட்மடி, அங்கி, சல்லா, புடவை, பாவாடை, தாவணி, ரவிக்கை, கச்சு முதலிய வழங்கி வருகின்றன.

**துக்கதம்** — யமபுரவழியிலுள்ள பட்டணம். ஆன்மா ஒன்பதாமாசிக பிண்டத்தை இப்பட்டணத்திலிருந்துண்பன்.

**துங்கபத்திரி** — துங்கை, பத்திரி இவ்விரண்டு நதிகளும் ஒரு பெயர்பெற்றுப் பிறந்த நதி.

**துங்கப்பிரஸ்தம்** — இராமகிரிக்குக் கிழக்கிலிருக்கும் மலை.

**துங்கவேணி** — ஒரு நதி.

**துங்காரண்யம்** — ஒரு க்ஷேத்திரம்.

**துசுவாசநன்** — துரியோதனன் தம்பி.

**துசேநன்** — இராவண சேநாபதி.

**துச்சகன்** — 1. இவன், காவிரிநதி தீரத்தில் சையமலை வழியாய்ச் செல்லும் வழிப்போக்கர்களைப் பறித்துத் தின்பவன், சோநாட்டரசன், திருத்தில்லைக்கு நடராஜர் தரிசனத்திற்குப் போகையில் அவன் சேனைகளால் பிடிபட்டு அவர்களிட்ட சுமையைத் தாங்கிச்சென்று அத்தலத்தைத் தரிசித்ததால் முத்தியடைந்தவன்.

2. பிரமனால் தமோகுணவுருவாய்ச் சிருட்டிக்கப்பட்டு உலகங்களை விழுங்க வருகையில் பிரமன், அதைவிலக்கித் தீயரிடம் சேர்ந்து அவர்களது பலத்தை அநுபவிக்கச் செய்தனன். இவன் கலியின் தேவிக்கு ருதுகாலத்தில் சண்டாள தர்சநத்தால் பிறந்த நிர்மாஷ்டியை மணந்து அவளிடம் தாந்தாகிருஷ்டி, உக்தி, பரிவர்த்தி, அங்கயுக், சகுனி, கண்ட பிராந்தன், கர்ப்பக்னன், சத்யக்னன் என்னும் எட்டுக்குமரர்களையும் த்யோஜிகை, விருதினி, சுவயம்ஹாரகரி, பிராமணி, ருதுஹாரிகை, ஸ்மிருதிஹாரிணி, பீஜஹாரிணி, வித்வேஷிணி என்னும் எட்டுப் பெண்களைப் பெற்றனன்.

**துச்சநி** — துச்சாதனன் குமரன்; அபிமன்னனுடன் மலைந்து இறந்தவன்.

**துச்சந்தன்** — ஒரு அரசன்; இவனை இராவணன் திக்குவிசயத்தில் வென்றான்.

**துச்சந்தை** — சத்திமனைவி; இவள் கருவுற்றிருக்கையில் கல்மாஷபாதனால் துரத்தப்

பட்டு அஞ்சி மாமனுரை வந்தடைந்து (கஉ) வருடம் பொறுத்துப் பராசரைப் பெற்றனள்.

**துச்சயன்** — 1. (சங்.) அனந்தன் குமரன். இவன் மனைவி கற்பினையுடையாள். இவனொருகால் யமுனைநதி யடைய அவ்விடத்திருந்த உருப்பசியைப் புணர்ந்து வீட்டில் வர மனைவி அறிந்து நீ பரத்தையைப் புணர்ந்ததால் அப்பாபம் நீங்கக் கண்ணுவரிடமணைந்து வேள்வி செய்து வருகவென்றனள். அந்தப்படி அரசன் இமயத்தருகில் செல்கையில் ஒரு கின்னரன் மாலை யேந்திவர அவனுடன் சண்டை யிட்டு அவனது மாலையைப் பறித்துச் செல்லுகையில், யமுனை நதிக்கருகில் சென்றனன். அவ்விடஞ் சென்ற அரசன் முன்னைய நினைவால் உருப்பசியை நினைந்து செல்லுகையில் மீண்டும் உருப்பசியைக் கண்டு அம்மாலையை அவளுக் கணிந்து அவளுடனிருந்து இமய மடைந்து கண்ணுவரைக் கண்டு அவர் கட்டளை பெற்றுக் காசியில் ஆநந்தகான மடைந்து பாவ நீங்கிப் பட்டணஞ் சென்று பத்தினியுட னிருந்தனன். (காசிமான்மியம்).

2. இவன் ஒரு மிலேச்சன்; காமத்தால் பல பெண்களைப் புணர்ந்து சிறையிடப்பட்டு உயிர்விட்டுப் பைசாச வுருவமடைந்து (உகு) பிறவிகள் விலங்குகளாய்ப் பின் ஒரு வனத்தில் அரக்க வுருவமடைந்து வாமதேவ முனிவரை விழுங்க வந்து அவர் உடம்பிலிருந்த விபூதியைப் பூசுண்டு அவ்வுரு நீங்கித் திவ்ய தேகம் பெற்று முத்தியடைந்தவன். (பிரமோத்தரகாண்டம்).

3. கச்சய நகரத்தரசன்; தாரை, வீரைகளின் கணவன். (மணிமேகலை).

4. இவன் சையமலையிலிருந்த வேடன். இவன் வேடனுயினும் வேதியர் முதலிய நாற்குலத்தவர்போல் வேடம் பூண்டு வழிபறித்துச் சீவிக்குநாட்களில் சிதம்பர தரிசனத்தின் பொருட்டுத் தன்னுடு விட்டுவந்த சபாபதிப் பிரியசேரன் பரிவாரத்தில் திருட எண்ணிச் செல்லுகையில் அவனது காவலாளர் பிடித்துக் காவலுடன் அவன் மீது சுமை வைத்துச் சிதம்பரம் கொண்டு சென்றனர். ஆண்டு இவன் கரங்கண்டிறக்க இவனைச் சிவகணங்கள் சிவலோகத்துக்கொண்டு சென்றனர்.

**துச்சலை** — திருதராட்டிரனுக்குக் காந்தாரியிடம் பிறந்த குமரி. சயிந்தவன் தேவி. அச்வமேதக் குதிரைக்குப் பின் போன அருச்சுநனைக் கண்டு அழுதவள்.

**துச்சாதனன்** — துரியோதனன் தம்பி; திரௌபதியின் துகிலை யுரிந்தவன்; துசுவசன் எனவும் இவனுக்குப் பெயர்.

**துச்சீலன்**—1. காம்பிலிதேசத்து வேதியன். சிவதூஷணை செய்ததால் ஊரைவிட்டு அகற்றப்பெற்று வயிற்றுவலி கொண்டு வருந்துகையில் ஒரு வேதியன் விபூதிகுண்டத்து நீறிடுக என அது என் செய்யும் என்று இகழ்ந்ததால் வேதியன் வேங்கை ஆக எனச் சபித்த சாபம் ஏற்றுப் பாம்பு கடித்து இறந்து வேங்கையாய் விபூதிகுண்டத்து நீறு அணிந்த வேடனைப் பிடித்து அவனால் இறந்து அவன் தேகத்து நீற்றினை அணிந்ததால் நல்ல உரு அடைந்தவன். (புள்ளிருக்குவேளூர்ப் புராணம்.)

2. குண்டினபுரத்தில் யஞ்ஞசீலனுக்குப் புண்ணியவதியிடம்பிறந்த குமரன். இவன் வேதியனுயினும் துராசாரம் உள்ளவனுய்த் துன்புற்றுப் பின் தீர்த்த ஸ்நானத்தால் புனிதனுனவன். (புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்.)

**துச்சுருமேளன்** — ஒரு அரசன்; அரம்பையர்போகம் பெற்றவன்.

**துச்சேதா** — இவன், மகததேசத்து வேதியன்; பலநூல் கற்றுக் கற்றவரை அவமதித்து இறந்து பிரம்மராக்ஷஸாய்க் காசிக்குப் போகும் வழியில் ஒரு இலவமரத்திலிருந்து வழிச்செல்வோரை அழைத்து, கொன்றுண்டு திரிகையில் காசிக்குச் செல்லும் ஒரு வேதியனை நல்ல வார்த்தை சொல்லி அழைத்தனன். வேதியன் காசியைச் செபித்துக்கொண்டு வரக்கேட்டு நல்லறிவு தோன்றி அவனுடன் காசி சென்று கங்கையாடிப் பிரமராக்ஷஸ வுருமாறியவன். (காசிரகசியம்.)

**துடி** — கடலில் வேற்றுருக் கொண்டிருந்த சூரனது நெஞ்சத்தைப் பிளந்த முருகக் கடவுள், அக்கடலில் துடிகொட்டி ஆடிய கூத்து.

**துடிதலோகம்** — தெய்வலோகத்தொன்று. (மணிமேகலை.)

**துடிநிலை** — கட்டும் கழல்வீரர் பழங்குடி முறைமையில் மிக்க கண்ணியையுடைத்தாய் ஒலிக்கும் துடியைக்கொட்டுமவன் குணத்தைச் சொல்லியது. (புறவெண்பா.)

**துடிநூல்** — உடலின் துடித்தலையும் அதன் பலத்தையும்பற்றிக் கூறும் நூல்.

**துடியர்** — இவர் மருதநிலமாக்கள் இணையென்னும் மருதநிலப் பறையொலிப்பவராதலால் இப்பெயர் பெற்றனர். இக்காலத்துப் "பள்ளர்" எனப்படுவோர் இவரென்று தெரிகிறது.

**துடியின் நுணுக்கங்கள்** — இது மனித தேகத்தில் உண்டாம் உறுப்புகள் துடிப்பதனால் உண்டாகும் நன்மை தீமைகளைத் தெரிவிப்பது. உச்சி துடிக்கில் இடர் நீங்கும்; அதன் வலப்பாகம் (து-ல்) அச்சம்; அதன் இடப்பாகம் (து-ல்) பெருமை; பின்தலை (து-டி) சத்துருக்களுண்டாம்; தலைமுழுதுந் (து-டி) சம்பத்துண்டாம்; இடதுநெற்றி (து-டி) சம்பத்து; வலது நெற்றி (து-டி) பிணிநீங்கும்; வலப்புருவம் (து-டி) பெருமை; இடப்புருவம் (து-டி) தீயவார்த்தை; இரண்டு புருவங்கள் (து-டி) பெருமை; வலஙிமை (து-டி) வழக்கு நேர்ந்து விலகும்; இடைக்கண்ணின்மேல் இமை (து-டி) விசனம்வந்து மாறும்; கண்ணின் முன்குவளை (து-டி) புகழும் செல்வமுமுண்டாம்; வலக்கண்ணின் கீழிமை (து-டி) துணைவனுக்குத் துன்பம்; வலது கண் முழுதும் (து-டி) பிணிவந்து மாறும்; இடக்கண்முழுதுந் (து-டி) செல்வமிகும்; கழுத்துமுழுதும் (து-டி) மரணந் தெரிவிக்கும்; வலதுமூக்கு முழுதும் (து-டி) சம்பத்துண்டாம்; இடமூக்கு (துடி) செல்வமெய்தும்; மேலிதழ் (து-டி) இனியவார்த்தை; கீழிதழ் (து-டி) தின்பண்டங்கள் உண்டாம்; பிடரி வலம் (து-டி) நன்மை; இடம் (து-டி) பெருமைஉண்டாம்; முதுகு (து-டி) செல்வந்தரும்; வலதுபுஜம் (து-டி) வழக்கு ஜெயிக்கும்; இடதுபுஜம் (து-டி) தூரசெய்தி வரும்; இடது மார்பும் புஜமும் (து-டி) சாச்செய்தி; வலது கண்டக்கை (து-டி) தோஷந் தீரும்; வலது முழங்கை (து-டி) தவப்பயனும்; இட முழங்கை (து-டி) தனஞ்சாரும்; அகங்கை வலம் (து-டி) ஈனம்; இட அகங்கை (து-டி) லாபம்; வலப்புறங்கை (து-டி) வழக்கு; இடப்புறங்கை (து-டி) துன்பம்; கையில் பெருவிரல் சுட்டுவிரல் (து-டி) லாபம்; நடுவிரல் (து-டி) நல்லசெய்தி; மோதிரவிரல் (து-டி) பெருமை; சிறுவிரல் (து-டி) மரணம்; வலக்கை அடி (து-டி) எடுத்த காரியம் முடியும்; இடக்கையின் பெருவிரல் (து-டி) நிறையுண்டாம்; சுட்டுவிரல் (து-டி) இராஜநோக்காம்; நடுவிரல் (து-டி) பெருமையுண்டாம்; மோதிரவிரல் (து-டி) நன்மைசாரும், சிறுவிரலாயின் சாவில்லை; நெஞ்சு (து-டி) நோக்காடு; வலதுமுலை (து-டி) சா; இடதுமுலை (து-டி) பிரியம்; தொப்புள் (து-டி) விசனம்; வயிறு (து-டி) நோய்வந்து நீங்கும்; வலப்புற முதுகு (து-டி) நோய்வந்து தீரும்; இடதுபுறம் (து-டி) குடியிருந்த வீட்டைவிட்டு நீங்குவான்; முதுகு (து-டி) நோய் நீங்காது; வலது செட்டை (து-டி) புதுவஸ்திரம கிடைக்கும்; இடது (து-டி) பிரியவார்த்தை; செட்டைகளிரண்டும் (து-டி) துன்பம்; வலவிலா (து-டி) விசனம்; இடவிலா (து-டி) மனையிழப்பாம்; இடை (து-டி) புகழுண்டாம்; கோசம் (து-டி) தாரத்தாரால் விசனம்; கீழ்க்கோசந் (து-டி) நன்மை; வலதுபீஜம் (து-டி) யானை குதிரை யேறுவான்; இடதுபீஜம் (து-டி) நோயாகும்; இரண்டும் (து-டி) வழக்கு; வலத்தொடை (து-ல்) வழக்குண்டாகி வெல்லும்; இடைத்தொடை (து-ல்) இனியவார்த்தை; இருதொடைகளும் (து-ல்) செம்பொனுண்டு; வலமுழந்தாள் (து-ல்) கோபம்; இடமுழந்தாள் (து-ல்) பந்துசேரும்; இரண்டு முழந்தாள்களும் (து-ல்) சம்பத்துண்டாம்; வலது கணைக்கால் (து-ல்) சம்பத்து; இடது கணைக்கால் (து-ல்) சாவார்த்தை; வலது கண்டைக்கால் (து-ல்) அடிமையாவான்; இடது கண்டைக்கால் (து-ல்) நோய்துன்பமுண்டாம்; இரண்டு கணைக்காலும் (து-ல்) பிரயாணம்; வலப்புறவடி (து-ல்) நோய்; இடப்புறவடி (து-ல்) வழக்காகி வெல்லும்; வலது உள்ளங்கால் (து-ல்) பொருள் கைக்கூடும்; இடது உள்ளங்கால் (து-ல்) பிணிவந்து நீங்கும்; கால் விரல்கள் (து-ல்) செல்வமும் நன்மையு முண்டாம்.

**துடுப்பு** — இது கோல்போல் முனை யகன்ற மரத்துண்டு. இதில் சிற்றுரு சோறு முதலிய கிளறுவதற்கும், பேருரு படகு, கட்டுமரம் ஒட்டுதற்கும் உதவி.

**துடைப்பம்** — ஊகந்தாள், தென்னைநரம்பு, ஈந்தோலை முதலியவற்றால் குப்பை தூசு முதலிய விலக்கச் சேர்த்த வீடு பொருள்களின் கற்றை.

**துட்டகேது** — சிசுபாலன் குமரன்.

**துட்டியந்தன்** — (சங்.) நீலன் குமரன். தாய் இரத்தினமாலை. இவன் வேட்டைக்குச் சென்று கண்ணுவ ராச்சிரமத்தில் சகுந்தலையைக் கண்டு மணந்து பரதனைப் பெற்

ழன். சுமதி குமரன் என்று கூறுப. பூரு வம்சத்து இளீநனுக்கு ரதந்தரை யிடம் பிறந்த குமரன் எனவும் கூறுவர்.

**துட்டை** — தக்ஷன் பெண்; தருமன் தேவி.

**துட்பன்னியன்** — இவன் பாடலிபுத்திர அரச குமரரைக் கொன்றவன்; இவன் செய்கையைப் பசுமான், அரசனிடங் கூறிக் காட்டில் துரத்த அங்கு ஒரு யானை இவனை விழுங்க அதனாற் பேயாகி, அகத்தியராற் சாப நீக்கமடைந்தனன்.

**துணையிளங்கிள்ளி** — காஞ்சியில் புத்தாலயம் கட்டுவித்த ஒரு சோழன். தொடுகழற் கிள்ளியின் தம்பி. (மணிமேகலை).

**துணைவயிற்பிரிவு** — நண்பனாகிய வேந்தனுக்குப் பகை வேந்தரிடையூறுற்றவழி அவ்விடையூறு தீர்த்தற்குத் தலைமகன் துணையாகப் பிரிதல், இது துணைவயிற் பிரிந்தமை தோழி தலைமகட் குணர்த்தல், தலைவி பின்பனிப்பருவங் கண்டு புலம்பல், தோழி யாற்றுவித்தல் முதலிய.

**துண்டிகோம்** — ஒரு தேசம்.

**துண்டிவினாயகர்** — 1 துராசாரன் என்னும் அரசனைக் கொல்லும்படி பார்வதி பிராட்டியார் ஐந்து திருமுகமும் பத்துத் திருக்கரங்களுடனிருக்க அம்முகங்களிலிருந்து ஐந்து திருமுகமும் பத்துத் திருக்கரங்களுடனும் விநாயகமூர்த்தி திருஅவதரித்துத் துராசாரனைச் சங்கரித்தனர். ஆதலால் இவர் வக்கிரதுண்டர் எனவும், துண்டிவிநாயகர் எனவும் பெயர் பெற்றனர்.

2. காசியிலெழுந்தருளி யிருக்கும் விநாயகர். (காசிரகசியம்).

**துண்டீரன்** — ஒரு சிவகணத் தலைவன்.

**துண்டுமுகன்** — ஒருவேதியன். இவன் பாரி விசாலை, இவன் ஒரு குமரனை அமாவாசையிற் பெற்று வளர்த்து மணஞ் செய்ய அவன் மனைவியை விரும்பாது தீயொழுக்கம் பூண்டு கொலைமேற் கொண்டு அரசனால் துரப்புண்டு காசியடைந்து கங்கையில் மூழ்கிச் சிவமூர்த்தியால் காதில் பஞ்சாக்ஷரம் உபதேசிக்கப் பெற்று முத்தியடைந்தவனுக்குத் தந்தை. (இலிங்க புராணம்).

**துதி** — பிரதிகர்த்தாவின் தேவி; இவளுக்கு ஸ்துதியெனவும் பெயர்.

**துதிக்கையால் தண்ணீர் குடிக்கு மரம்** — தென் அமெரிக்காவின் ஆற்றங்கரையில் உள்ள காடுகளில் ஒருவகை மரம் விழுதுடன் கூடியதாக இருக்கிறது. அது தனக்கு நீர் வேண்டும்போது விழுதை நீட்டி நீர் குடிக்கிறதாம் குடித்தபின் விழுதைச் சுருக்கிக்கொள்ளுகின்றதாம். யாராவது தண்ணீர் ஊற்றினால் துதிக்கையாலுண்டு நீரூற்றினவருக்கு நன்றி செலுத்துதல் போல் மரத்தை அசைக்கிறதாம்.

**துதிமந்தன்** — பிரிய விரதன் குமரன், இரவுஞ்சத் தீவையாண்டவன்.

**துதிமான்** — ஒன்பதாம் வந்தரத்து ருஷி.

**துத்தநாகம்** — சிறிது நீலங்கலந்த வெண்ணிறமுள்ள உலோகம். இது, அடித்தால் நீளத்தக்கது. ஈயத்தைப்போல் பொடியாகாது. இது, எளிதில் களிம்பேறாத உலோகமாதலால் இதனால் போஜன பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. இதைத் தகடுகளாக அடித்துக் கட்டடங்களுக்கு உபயோகிக்கிறார்கள்.

**துத்தமன்** — ஒரு காந்தருவன்; இவன் தன் மனைவியருடன் நீராடுகையில் அவ்விடம் காலவருஷிவர அப்பெண்களஞ்சிச் சேலையுடுத்தனர். இவன் மாத்திரம் உடை உடுக்காதிருந்ததால் அரக்கனாகச் சபிக்கப்பட்டுக் காலவரைக் கொல்லவர முனிவர் விஷ்ணுமூர்த்தியின் சக்கரத்தால் இவ்வரக்கனைக் கொலை செய்வித்தனர்.

**துந்திமி** — ஒரு அரக்கன்; இவன் சிவன் விஷ்ணு முதலிய தேவர்களிடம் யுத்தத்திற்குப்போக அவர்கள் வாலியிடம் அனுப்ப வாலியால் கொலை யுண்டவன். இவனுக்குத் தலையி லிரண்டுகொம்புண்டு.

**துந்திவன்** — இவன் ஓர் காந்தருவன் உபயகாவிரிக்கு அருகில் எருக்கு வனத்தில் இருந்து புராணதூஷணஞ்சொல்லி அரக்கனாய்க் காலவமுனியைப் பிடித்துக்கொண்டு விஷ்ணு சக்கரத்தால் மாண்டவன்.

**துந்து** — 1. மதுகைடவர்க்குக் குமரன்; விஷ்ணுவைக் கொல்லப் பிரமனை நோக்கித் தவஞ்செய்து பலநாள் கடற்கரையிற் றூங்கி ஆன்மாக்களை வருத்தினவன். இவன், குவலயாயுசுவன் குமரரில் மூவர் தவிர மற்றவர்களைக் கொலைசெய்து குவலாயசுவனா விறந்தவன்.

2. (சூர்.) அஜன் என்னும் அரசன் குமரன், இவன் மான்றோல் போர்த்துத் தவத்திலிருந்த இருடியை மானென்று அறியாது கொன்று, சாந்தமகருஷியால் அவரை எழுப்பக் கேட்டுக்கொண்டவன்

3. ஒரு அசுரன், மதுவின் மைந்தன். பூமியையழிக்கப் பாதாளத்தில் தவஞ்செய்

கையில் வருஷத்திற் கொருமுறை சுவா சம்விடுவான் அப்பொழுது பூமி, மலை, விருக்ஷங்கள் ஏழுநாள் நடுங்கும் இவன் குவலயாசுவனுல் கொல்லப்பட்டான்.

**துந்துபன்** — ஒரு சிவகணத்தலைவன்.

**துந்துபி** — 1. அநுகுமரன்; இவன் குமரன் தரித்திரம்.

2. மயன் குமரன்; மந்தோதரியின் சகோதரன் வாலியால் கொல்லப்பட்டிறந்தவன். இவன் எலும்பின் குவியலை இலக்குமணர் காலால்தள்ளித் தம் வலிமையைச் சுக்கிரீவனுக்குத் தெரிவித்தனர்.

3. யதுவம்சத்து நரன் குமரன்.

4. மாயாவியின் குமரன்.

5. இந்திராதியரை வருத்திச் சிவமூர்த்தியால் கொலையுண்ட அசுரன்.

6. உதத்தனைக் காண்க.

7. ஒரு அசுரன், இவன் ஒரு முனிக்குமாரன் போலுருக்கொண்டு விஷங்கலந்த நாவற்கனி கொண்டுவந்து விநாயகரை உண்பிக்க விநாயகர் இவனை மோதகம் அருத்திக் கொன்றனர்.

8. தரன் குமரன்.

9. இவன் மகிஷ வடிவமான அசுரன் சிவ்பிரானிடம் வரம் பெற்றவன். (பாரதம் - அநுசாசநி.)

**துந்துமாரன்** — 1. கபிலாசவனுக்கு ஒரு பெயர்.

2. குவலயாச்வனைக் காண்க; இவன் விலங்கின் தோல்போர்த்திருந்த தார்க்கிக ருஷியின் புத்திரனை விலங்கென்றெண்ணிக் கொன்றவன். துந்துவெனு மரக்கனைக் கொன்றவன். (பிரா. புரா)

**துந்துமாரி** — முதல்வள்ளல்கள் எழுவரில் ஒருவன்.

**துந்துமி** — 1. அசுரன்; பிரகலாதனுக்கு மாமன்; இவன் காசியில் தவஞ்செய்த முனிவரை வருத்தியதால் சிவமூர்த்தியிவனைக் கொன்றனர்.

2. ஒரு காந்திருவன், பிரமன் பூசைக்கு வைத்திருந்த மலரை மோந்து கழுதையாகச் சாபமடைந்து பின் நீங்கினவன். (திருவோத்தூர் புராணம்).

**துப்பிரதன்** — மூதேவியின் கணவன்.

**துமத்சேநன்** — சத்யவந்தன் தந்தை, சாவித்திரிக்கு மாமன், சாள்வதேசத்தரசன்.

**துமயன்** — யமனுக்குப் புஷ்டியிடமுதித்த குமரன்.

**துமி** — இரேவதன் குமரன்.

**துமிந்தன்** — இராமமூர்த்தியால் விபூஷணனிடமனுப்பப்பட்ட வாநரவீரன்.

**துமிரன்** — இவன் இராமகார்யமாய்ச் சீதையைத் தேடச்சென்ற வாநரவீரர் ஒரு பொய்கையைக்கண்டு நீருண்டு உறங்குகையில் அங்கதனை மார்பிலறைந்து அங்கதனுல் அறையுண்டிறந்தவன். இவனுக்குப் புட்கலன் என்றும் ஒரு பெயர்.

**தும்பி** — இது வண்டின் இனத்தைச் சேர்ந்தது. இதற்கு வண்டிற் குள்ளதுபோல் முகத்தில் பரிச வுறுப்புக்க ளுண்டு. ஆறு கால்களும் கண்ணடிபோன்ற இறக்கைகளும் கொண்டு பறக்கும்.

**தும்பிசேர்கீரனர்** — இவர் பெயர் தும்பிசேர்கீரன். கீரனென்பது இயற்பெயர். சேர் அடைமொழி. இதன் பொருள் விளங்காமையால் இவர் பெயரைச் சேர்க்கீரனர் என்று பதிப்பிக்கலாயிற்று. தமது பாடலிலே தும்பியை நோக்கி "கொடியை வாழி தும்பி" (நற். உஎஎ) எனவும் "அம்ம வாழியே மவிச்சிறைத் தும்பி" (குறு. நகஉ) எனவும் விளித்து அதனைப் பலவாருகப்பாராட்டிக்கூறலின் இவர் தும்பிசேர்கீரனர் எனப்பட்டார். இவர் எல்லாத் திணையையும் பாடியுள்ளார். தலைவனிடம் சென்று தன்னிலை உரைத்தா யல்லையேயென்று தும்பியைத் தலைவி முனிந்து கூறியதாக இவர் பாடியது இனிய சுவையுடையதாகும். (நற். உஎஎ) தலைவனை முயங்காது கண்ணலே நோக்கி மட்டு மகிழ்தற்கு மக்கள் நடைவண்டி இழுத்து மகிழ்தலை உவமைக் கூறியுள்ளார். (குறு. சுக) வண்டுவிடு தூது இவர் பாடியது ஆராயத்தக்கது. (குறு. நகூஉ) இவர் பாடியன வாக நற்றிணையில் (உஎஎ)-ம் பாடலொன்றும் குறுந்தொகையில் நாலுமாக ஐந்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**தும்பிமோசிகீரன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் குறுந்தொகையில் (நஉ0) செய்யுட்கள் பாடியவர். இவர் மோசிகீரனில் வேறு. இவர் ஊர் மோசியாக இருக்கலாம்.

**தும்புரு** — விபுலன் குமரர்; இந்திரனைப்பாடிய பாவத்தால் நாரதரால் பூமியிற் திருவேங்கடத்தில் ஒரு பொய்கையில் தள்ளப்பட்டு அக்கரையில் தவமியற்றிச் சித்தி பெற்றவர். காந்தருவர், இவர் செய்த நூல் தும்புரீயம் என்பர்.

**தும்பை** — குருதியாற் சிவந்தகளத்து மாறு பாட்டை நினைந்து பசுந் தும்பையாகிய போர்ப் பூவை முடியிடத்துச் சூடியது. (பு - வெ.)

**தும்பையரவம்** — அழகணிந்த வீரக்கழற் காலினையுடையான். தனது சேனையைத் தலையளி பண்ணியது. (பு - வெ.)

**தும்மலின்குணகுணங்கள்** — பலமுறை தும்மினல் காரியசித்தி, தும்மின பிறகு இருமின்லாபம், ஒரு தும்மல் தீமை, தும்மின பிறகு மூக்குச்சிந்தினல் மரணம், ஒரே தும்மல் தும்மின போதுடன் சிந்தினபோதும், எடுத்த காரியத்தைச் செய்யாமல் காலம் போக்கிப், பிறகுசெய்யின் தோஷமில்லை. தாம்பூலம் தரித்துக் கொளப் போம்போதும், போஜனம் செயத்தொடங்குகையிலும், படுக்கைக்குப் போகும்போதும் தும்முதல் நலமாம். ஒருகாரியத்தை ஆலோசிக்கும் போதாயினும், காரியத்திற்குப் பிரயாணஞ்செய்யும் போதாயினும், நான்கு கால்களையுடைய ஜெந்துக்களில் ஏதேனும் தும்மினல் மரணமாயினும், மரணத்தையொத்த தீமையாயினும் விளையும். தும்மிக்கொண்டே படுக்கைவிட்டெழுதல் நல்லது, தும்மிக்கொண்டு உட்கார்ந்திருத்தல் காரியாலசியம். போராடிக்கொண்டே தும்முதல் காரிய ஆனி, தாம்பூலம்தரித்துக்கொண்டு தும்முதல் நல்லது. தும்முங்காலையில் செம்பு, பித்தளை முதலியவைகளைத் தொட்டுக் கொண்டிருக்கில் காரியநலமாம், இரும்பு, வெள்ளிகளைப் பிடித்துக் கொண்டிருக்கில் காரியங்கெடும். இளம் பிள்ளைகள், குழந்தைகள், தாசிகள், பறையர் தும்மின் காரியசித்தி. கர்ப்பஸ்திரீ, மலடி, தூரமானவள், விதவை, கண்ணில்லாள், ஊமை, மொண்டி, வண்ணாத்தி, வாணிச்சி, சக்கிலிச்சி, சுமைதூக்கிக் கொண்டிருப்பவள் இவர்களில் எவர்தும்மினும் கஷ்டங்கள் உண்டாம். நெடியினும் மூக்குத்தூள் போடுவதினும் உண்டாகும் தும்மல் பலனில்லை.

**தும்மிசகரோகம்**—வாயினல் கோழை கோழையாகக் கக்கல், வார்த்தை கேட்க அருவருத்தல், நெஞ்சலரல், அதி நித்திரை, சோம்பல் இவைகளை யுண்டாக்கும். இது தேகத்தை நாசமாக்குதலால் இப் பெயர் பெற்றது. (ஜீவ.)

**தும்மிசகவிஷமரோகம்** — இது வழக்கமாகப் புசிக்கிற வஸ்துக்களை விட்டு, நாள்தோறும் சாராயத்தையும் அதிவிருப்பொடு மிகுதியுங் குடித்தும் புசித்தவர்களுக்குத் தும்மிசகமென்றும், விஷமென்றும் இரண்டு ரோகங்கள் பிறப்பனவாம். (ஜீவ.)

**துயரவற் குரைத்தல்** — மயங்கிய மாலைக்காலம் மயில்போன்ற இயலின் வருந்தலை அறியச் சொல்லி அவன்படத்தைத் தோழி தலைவற்குச்சொல்லியது. (பு.வெ. பெருந்.)

**துயிந்தன்** — ஒரு வானர சேனாபதி.

**துயிலேடைநிலை** — கொல்லும் வலியினையுடைய வேந்தர்க்கு அருள எழுந்திருப்பாயாகவெனக் கட்டுங்சழல் வேந்தனைத் துயிலெழுப்பியது. (பு. வெ. பாடாண்.)

**துயுமன்** — விப்ராசித தேசத்துக்குக் காவலாளி, சத்தியோதா, அவிர் முகிவாசல்களுக்கு அதிகாரி, புரஞ்சநன் சிநேகன்.

**துயுமான்** — திவோதாசன் குமரன்; இவனே பிரதான், சத்ருசித், வச்சன், ரித்துவசன், குவலயாசுவன் என்று பெயருற்றுன். இவன் குமரன் அளர்க்கன்.

**துய்மனன்** — சாக்ஷுஷமனுவிற்கு நட்வலையிடத்துதித்த குமரன்.

**துரககதி** — (இ) மல்லகதி, மயூரகதி, வியாக்ரகதி, வானரகதி, இடபகதி.

**துராசதன்** — பிரமசுரன் குமரன், இவன் தவம்புரிந்து சர்வசித்திபெற்று, பிரமன், விஷ்ணு முதலியோர் பதிகளைவென்று ஆங்காங்கு ஒரு அசுரரை நியமித்துக் கொடுங்கோன்மை செய்துவருகையில் மந்திரிகளிவனைநோக்கி உனக்குப் பயந்து தேவர் காசியையடைந்தனர் எனக்கேட்டுப் படைகொண்டு செல்லத் தேவர் இறைவியை வேண்ட இறைவி முகத்தில் வக்கிரதுண்ட விநாயகரைத் தோற்றுவித்துத் தொலைத்தனள்.

**துராசாரன்** — 1. வக்கிரதுண்டரால் கொலை செய்யப்பட்ட அசுரன்.

2. துராசாரத்தால் பாபமடைந்து சேதுஸ்நானத்தால் சுத்தமடைந்த வேதியன்.

**துராலிங்கர்** — அகத்தியர் மாணக்கர்.

**துரிஞ்சல்** — வௌவாலினத்தைச் சேர்ந்தது. இது உருவத்தில் வௌவாலைப்போன்று இருக்கும். இரவில் இரை தேடப் புறப்படும். பகலில் வெளி வரின் காக்கைகள் குத்தும். இது இருளடைந்த இடங்களிலும் கோயில்களிலும் தலை கீழாகத் தொங்கும்.

**துரியோதனன்** — இவன் திருதராட்டிரனுக்குக் காந்தாரியிடம் பிறந்த குமாரில் மூத்தவன். இவன் கலியம்சம். இவன்

பிறந்தபோது நரிபோல் ஊளையிட்டான். பூர்வம் இராக்கதனாயிருந்தவன். இவன் பிறந்து துரோணரிடம் வில்வித்தை முதலிய கற்றுவருகையில் பாண்டவர்கள் அதிதீவிர புத்திமான்களாயிருத்தல்பற்றி பொறாமையால் அவர்களிடம் உட்பகைகொண்டு அதிகமாய் வீமனைப் பகைத்து, அன்னத்தில் விஷமிட்டும், வீமன் நித்திரைசெய்கையில் அவனைக்கட்டி ஆற்றிலிட்டு நாகங்களையேவிக் கடிப்பித்தும், வசிநாட்டிக் குதிப்பித்தும், அரக்குமாளிகை கட்டுவித்து நெருப்பிட்டும் இன்னும் பல துன்பங்கள் செய்வித்துக் கர்ணன், துச்சாதனன், சகுனி முதலியோர் துற்புத்திகேட்டுப் பீஷ்ம, துரோண, விதுரர் முதலியோரது நற்புத்தி கேளாமல் தந்தையைத் தன் வசப்படுத்திச் சகுனியால் சூதாடுவித்துத் துச்சாதனனை ஏவித் திரௌபதியின் துகில் உரியச்செய்து திரௌபதியால் தொடை முரியச் சாபம் எற்றுப் பாண்டவரைப் பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒரு வருடம் அஞ்ஞாத வாசமும் செய்துவர எவுவித்துப் பாண்டு புத்திரர் காட்டிற் சென்றிருக்கையில் மாரணஹோமஞ் செய்வித்துப் பூதத்தையேவிப் பாண்டவர்களுக் கெதிரில் காட்டில் பாசறையில் செல்வத்துட னிருக்கையில் சித்திரசேநனால் கட்டுண்டு பாண்டு புத்திரரால் விடுபட்டு அரசாண்டிருக்கையில் பாண்டு புத்திரர் அஞ்ஞாத வாசத்தில் விராடநகரத்தி லிருந்ததைக் குறிப்பாலுணர்ந்து அவ்விடமிருந்த ஆனிரைகளை மடக்கி அருச்சுநன் வெளிப்பட்டது கண்டு தூதுவிட்டு அவர்களது மனமறிந்து தூது வந்த கண்ணனை மாயச்சிங்காதனத்திருத்தி அவமானமடைந்து விதுரனிடம் பகைகொண்டு பாண்டவருடன் யுத்தஞ் செய்யத் தொடங்கிப் பதினேழுநாள் யுத்தஞ் செய்கையில் பீஷ்மன், துரோணன், கர்ணன், சல்லியன் இவர்களைச் சேநாபதிகளாக்கி அபிமன்யுவைக் கபடமாய்க் கொல்வித்துப் பாசறை யுத்தத்தில் இரவில் அசுவத்தாமனையேவி இளம்பஞ்ச பாண்டவர்களையும் மிகுதிச் சேனைகளையுங் கொலைசெய்வித்துப் பதினெட்டாநாள் சலஸ்தம்பனம் செய்து இறந்தவர்களை எழுப்ப முயலுகையில் வீமசேனனிவனைப் போருக்கழைப்ப மானத்திற்கஞ்சி நீரைவிட்டு வெளியில் வந்து போரிட்டுத் தொடைமுரிந்திறந்து முதலில் அற்பபுண்ணியத்தால் சுவர்க்க மநுபவித்துப் பின் நரகமடைந்தவன். இவன்தேவி பானுமதி, இவன் குமரி இலக்குமணை. இவன் ஒரு இருடியால் தொடைமுரியச் சாபமடைந்தவன்.

2. அந்தகாசுரனுக்கு மந்திரி.

3. மநுகுலத்தரசரில் ஒருவன். சுதரிசனன் தந்தை.

**துரு** — 1. கவஷன் புத்திரன்.

2. இரும்பில் ஈரமான காற்றுப்படுதலால் உண்டாவது துருப்பிடித்த இரும்பு, துருப்பிடியாத இரும்பினும் எடை யதிகமாகிறது.

**துருதன்** — (ச) இரேயன் குமரன்.

**துருதி** — தருமன் எனும் மனுவின் தேவி.

**துருத்தி** — காற்று நீர் முதலியவற்றைத் தன்னிற்கொண்டு வெளிவிடும் தோலாலும் வேறு பொருளாலும் செய்த கருவி. இது பெருந்துருத்தி, சிறுதுருத்தி என இருவகை.

**துருபதன்** — 1. பாஞ்சாலதேசத்துப் பிருஷதன் குமரன்; இவனும் துரோணாச்சாரியரும் ஒருசாலை மாணாக்கராயிருக்கையில் தனக்கு நாடுவருங்கால் பாதி இராச்சியம் கொடுப்பதாகக் கூறினன். இவ்வாறு அவன் அரசேற்று ஆண்டிருக்கையில் துரோணரிவனிடம் வறுமையால்வர அரசனிவரை அறியாததுபோலிருந்து அவமதித்தனன். இதனால் துரோணர் கோபித்து உன்னை என் மாணாக்கனால் அவமதிக்கிறேன் என்றுகூறி வீஷ்மரிடம் வந்து குருமக்கள், பாண்டு மக்களுக்கு வில்வித்தை கற்பித்து அருச்சுநனால் துருபதனைக் கொண்டுவரச்செய்து அவமதித்தனர். இதனால் உட்பகைகொண்ட துருபதன் துரோணரைக் கொல்லக் குமரனும் தன்னைவென்ற அருச்சுநனுக்கு ஒருபெண்ணும் பெறத் தவமியற்றி யாகத்தில் திட்டத்துய்ம்மனையும் திரௌபதியையும் பெற்றுப் பகைதீர்ந்தனன். இவன் அக்னி கோத்ரமுநிவர் மாணாக்கன். குமரர் திட்டத்துய்ம்மன், சிகண்டி, சுமித்திரன், பிரியதரிசனன், சித்திரகேது, சுகேது, துவசசேநன் (பாரதம்.)

2. அசாதசத்துருவன் குமரன்; இவன் குமரன் அற்பகன்.

**துருபதேயன்** — பாரதவீரரில் ஒருவன்.

**துருமகாந்தன்** — புட்பமாகாண்டத்திற்குக் காவலர்க வைக்கப்பட்டவன்.

**துருமசேநன்** — 1. திருஷ்டத்துய்மனால் கொல்லப்பட்ட அரசன்.

2. தருமராஜனால் கொல்லப்பட்ட ஒரு அரசன்.

**துருமன்** — 1. கிம்புருடராசன். இவனருச்சுநனால் ஜயிக்கப்பட்டவன். (பார - சபா.)

2. கிம்புருஷாசாரியன்.

**துருவசந்தி** — (சூ). பாஷ்யன் குமரன்.

**துருவசிந்து** — சுதரிசனனைக் காண்க.

**துருவசு** — (ச). யயாதிக்குத் தேவயானியிடம் உதித்தகுமரன். இவன் வம்சத்தவர் தந்தையின் சாபத்தால் கிராதருக்கு அரசராயினர். இவன் குமரன் வன்னி.

**துருவநக்ஷத்திரம்** — இது, வடக்கேயுள்ள நக்ஷத்திரங்களில் ஒன்று. தன்னைச் சுற்றியுள்ள நக்ஷத்திரங்களுக்கு நடுவில் பெரிதாகக் காணப்படுவது. இது பூமியின் வடபாகத்தை நிர்ணயிக்க அறிகுறியாக உள்ளது. திசை தெரியாது கப்பலைச் செலுத்தும் மாலுமிகளுக்கு வடக்குத் திசையை அறிவிப்பது.

**துருவமண்டலப் பறவைகள்** — இவ்வினத்தில் பலவகை உண்டு. அவற்றுள் ஆக் என்பது ஒருவகை. இவ்வினத்தில் பேலரிஸ், மெர்குலஸ், வ்ராட்டர்குலா, ஆல்கா எனும் வகைகளுண்டு. முதலிற் கூறிய பேலரிஸ் என்பவை துருவமண்டலத்தையடுத்த காமஸ்காட்கா எனும் இடத்தில் இருக்கிறது. இது 1 அடி நீளமும், குறுகிய காலும், கழுத்தும், நீலநிற மூக்கும், சிவந்த மஞ்சளித்த கால்களும், தோலிணைந்த கால்களும் உடையது, இதன் தலை, முதுகு, பிடரி கறுப்பு. கழுத்து, மார்பு, மற்றப் பக்கங்கள் வெண்மை. இதன் கண்களிலிருந்து ஒரு நீண்ட வெள்ளை ரேகை முதுகின் பக்கமாக வளைந்திருக்கிறது. இதன் வயிற்றிலுள்ள வெண்மை கோடைகாலத்தில் கருமைகலந்த செந்நிறமாகவும் மழைக்காலத்தில் வெண்ணிறமாகவும் மாறுகிறது. இதன் மார்பின் தோல் ரப்பரைப்போல் சுருங்கவும் நீளவுங் கூடியது. இது கூட்டமாய்ச் சேர்ந்து வசிப்பது, தண்ணீரில் வேகமாய் நீந்துவது.

**மேர்குலஸ்** - இது மேற்கூறிய இனத்தில் சிறிய இனம்.

**வ்ராட்டர்குலா** - இது ஆக் இனத்தில் கிளிபோல் மூக்குக்கொண்டது. (puffin) கடற்கிளி அல்லது கிளிமூக்குப் பறவை இது மான்தீவை அடுத்த பிரதேசங்களில் கோடைகாலத்திலும், மழைக்காலத்தில் பிரான்ஸ், ஸ்பெயினை யடுத்த பிரதேசங்களுக்கு வந்துவிடுகிறது. இதன் உயரம் 1 அடி. இதன் மூக்குக் கிளிமூக்குப்போல் பெரிதாய் இருக்கிறது. வாயினிருபுறங்களின் கோடியில் தசை நக்ஷத்திரம்போல சிவந்த நிறமாய் வளர்ந்திருக்கிறது. இது பூமியில் வளைதோண்டி முட்டையிடுகிறது. இதன் முட்டை அதிக பெரிது.

**ஆல்கா** - இது துருவமண்டலப் பறவையில் ஆக் இனத்தைச் சேர்ந்தது. இது ஆக் இனத்தில் பெரிய உருவுள்ளது. இது ஐரோப்பாவின் வடபாகத்திலுள்ள நியூபவுண்ட்லாண்ட் முதலிய தீவுகளின் கடற்பக்கங்களில் வசித்தது. இதன் மாமிசத்துக் காசைப்பட்ட அந்நாட்டார் இதன் வம்சத்தின் கரு அறுத்தனர். இப்போது இது அரிது. இப்பறவையின் மூக்குத் தடித்துக் கிளியின் மூக்குப்போல் முனை வளைந்து நீண்டு கறுத்து இருக்கிறது. இதன் உடலின் கடைசிபாகத்தில் இரண்டு குறுகிய தோலடிகள் இருக்கின்றன. இவை செந்நிறமுள்ளவை. இப் பறவையின் இறக்கைகள் சீல் முதலியவற்றின் இறக்கைபோலச் சிறகில்லாமலிருக்கின்றன. இது அதிகம் பறவாததால் கரை ஓரங்களில் வசிக்கிறது. இதன் தலையும், மூக்கும் கருநிறமானவை. மார்பும், வயிறும் வெண்மை. இது கடலில் அதிவேகமாய் நீந்தும்.

**ரேசர்பில்** - மர், பிளாக்பில்ஆக் எனும் பெயருள்ள ஆக் இனம். இது பிரிடிஷ் தீவுகள், ஸ்காத்லாண்ட், வட அமெரிக்காவின் கீழ்க்கரையிலுள்ள மலைப்பிரதேசங்களில் வசிக்கின்றது. இதனுடல் 15 அங்குல நீளம், கால்கள் குறுகித் தடித்தவை. பாதம் தோலடி பெற்றது. இது தண்ணீரில் வேகமாய் நீந்தும். இப் பறவைக்கு இறக்கைகள் உண்டு, பறக்கும். இதற்குத் தலை, பிடரி, முதுகு கருமையும்; மற்றவை வெண்மை நிறம். இதன் வெண்மை கோடைகாலத்தில் மாறுகிறது. இது ஒரே முட்டையிடுகிறது, இதன் முட்டை வெண்மையாயும் பெரிதாயுமிருக்கு மென்பர்.

**தல்லிமாட்** - இது துருவமண்டல பறவையினத்தைச் சேர்ந்தது. இது 1½ அடி உயரம். இதன் தோலடிப் பாதங்கள் உடலின் கடைசியில் குறுகி யிருக்கின்றன.

இதன் மூக்குக் கருமை, கால்கள் சிவந்தவை. இதன் தலையும், கழுத்தும், முதுகின் பக்கமும் கறுப்பு. வயிறு பழுத்த வெண்மை. இது ஐரோப்பாகண்டத்து நியூபவுண்ட்லாண்ட், ஐஸ்லாண்ட் முதலிய இடங்களில் கூட்டம்கூட்டமாயிருக்கிறது. இது பெரிய முட்டை கோடைகாலத்தில் குழிதோண்டி அதில் இடுகிறது. இதன் முட்டைகளை வேட்டைக்காரர் வர்த்தகத்திற்காகத் திருடி விற்கின்றனர்.

**பேன்குயின்** - இது ஆபிரிகாவின் தெற்கிலுள்ள மகாசமுத்திரத் தீவுகளில் வசிப்பது. இது 3, 4 அடிகள் உயரம், ½ அடி கனம். இதற்குத் தலையும் முதுகும் கறுப்பாயும், வயிற்றுப்பக்கம் சுத்த வெண்மையாயும் இருக்கிறது. இதற்குத் தலையில் கொண்டையுண்டு. கால்கள் அதிக குறுகி அடிவயிற்றின்கீழ் ஒதுங்கியுமிருக்கின்றன. இது நேராய் நிற்கவல்லது. இதன் மூக்குச் சிறுத்து நீண்டு கூர்மையாயும் கறுப்பாயு மிருக்கிறது. இப் பறவையினத்தில் 7, 8 அடிகள் உயரமுள்ளவையு முண்டு. பென்குயின் அரசன் என்பர். இது பாக்லண்டு தீவுகளிலிருக்கிறது. இவை கூட்டம் கூட்டமாய் வசிக்கும். இந்தப் பறவைகள் பாறைகளில் முட்டையிட்டு ஒரு மாதம் அடைகாத்துக் குஞ்சு பொரிக்கும். இது குஞ்சுகளுக்குத் தன் வாயை அண்ணாந்துகாட்ட அக்குஞ்சுகள் தம் தலையைத் தாயின் வாய்க்குள் தலையை நுழைத்து இரைகொள்ளும்.

**துருவன்** — 1. உத்தானபாதனுக்குச் சுநீதியிடம் உதித்தகுமரன்; இவன் ஒருமுறை சுருசியுடன் கூடியிருந்த தன் பிதாவையணையத் தந்தை இவனைக்கண்டு களிக்காதிருந்ததையறிந்து இருக்கையில் மாற்றாந்தாயாகிய சுருசிவந்து சக்களத்தி புத்திரனாகிய இவனைநோக்கி நீயென்வயிற்றில் பிறவாமல் சுநீதியிடம் உதித்ததால் உனக்குத் தந்தையிடம் இருக்கும் உரிமையில்லையென்றனள். அதைக்கேட்ட அரசனும் சும்மாவிருந்தனன். இதனால் துருவன் தாயை அணைந்து நடந்தவைகூறி இருடிகளையணைந்து நாரதரால் உபதேசம்பெற்றுத் தவமியற்றுகையில், பேயொன்று பயமுறுத்த அஞ்சாது பெருந்தவமியற்றித் துருவபதம் என ஒருபதம் பெற்றனன். இவனதுபதம் சப்தருஷி மண்டலத்திற்கு மேல் பதின்மூன்று லக்ஷம் யோசனை தூரத்திலிருப்பது. இவன் தவநிலை நீங்கித் தாய்தந்தையரைக் கண்டு (உசு,000) வருடம் அரசு ஆண்டு, உத்தமனைக்கொன்ற யக்ஷருடன் போரிட்டு மனுவானுபதேசிக்க நீங்கினவன். இவன் பாரி பிரமி, இளை; குமாரர் கல்பன், வற்சரன். (பாகவதம்) (காசிகாண்டம்).

2. அஷ்டவசுக்களில் ஒருவன், தருமனுக்கு, வசுவிட முதித்தவன்பாரி, தரணி.

3. பலராமன் தம்பி.

4. மதிசாரன் குமரன்.

5. பிரசாபதிக்குப் புத்தியிடம் பிறந்தவன்; குமரன் காலன்.

6. வசுதேவருக்கு ரோகணியிடம் பிறந்த குமரன்.

**துருவாசர்** — 1. அத்திரிருஷிக்கு அநசூயையிடம் உதித்த குமரர்.

2. கோபாலர், இவராச்சிரமஞ் சென்று தங்களிலொருவனைக் கர்ப்பிணியாக வேடமிட்டு இவள் வயிற்றில் பிறப்பது ஆணோ பெண்ணோவெனப் பரிகசிக்க முனிவர் உங்கள் வம்சத்தை நாசமாக்கும் ஓர் இருப்புலக்கை பெறுக எனச் சாபமிட்டவர்.

3. ஒரு வித்யாதரமாது. இலக்குமியைப் பூசித்துப் பெற்ற மாலையைத் தாம் பெற்று இந்திரனுக்குக் கொடுக்க இந்திரன் அதனை அசட்டையாக வாங்கியதால் இந்திரனது செல்வ முழுதும் கடலையடையச் சாபமிட்டவர்.

4. இவரது சகோதரர் தத்தாத்திரேயர், சோமர்.

5. தேவதத்தனை நாரையாகச் சபித்தவர். ஹேஹயன் தத்தாத்திரேயரைக் கொல்ல வர இவர் ஏழு நாளில் அநசூயையிடம் பிறந்து அரசனை நீறாக்கினர்.

6. சுவேதகியஞ்ஞத்தை முடித்தவர்.

7. மௌற்கல்வியரிடம் அன்னம்வேண்டிப் புசித்தவர்.

8. துரியோதனன் ஏவலால் பாண்டவரிடத்துப் பதினைந்து நாழிகைக்கு மேல் வந்து அன்னம் வேண்டிக் கண்ணனால் பசி நீங்கினவர். அம்பரீஷனிடத்திருந்த விஷ்ணு சக்கரத்தால் துறப்புண்டு இறுதியிலவனை வேண்டி நீங்கப் பெற்றவர், கிருஷ்ணனை வேடனால் உள்ளங்காலி லடிப்பட்டு இறக்கச் சபித்தவர்.

9. வசிட்டாச்சிரமஞ் சென்ற தசரதருக்கு அவர் பிள்ளைகளின் உற்பாதம் கூறியவர்,

10. இராமமூர்த்தி, கால முனியுடன் ஏகாந்தத்தில் பேசுகையில் இவர் வரக் கோபத்திற்கஞ்சி வாயிலில் இருந்த இலக்குமணர்விட இவர் சென்று இராமமூர்த்தியை நோக்கி, நான் ஆயிரம் யாண்டு தவம் புரிந்து மிகப் பசித்தேன் அன்னம்வேண்டுமெனக் கேட்டுண்டவர்.

11. அசமுகி இவரைப் புணர்ந்து வாதாவி, வில்வலனைப்பெற அக்குமரர் இவரை நோக்கி, இதுவரையில் செய்த தவத்தைக் கேட்க மறுத்தது கண்டு கொல்ல வர முனிவர் கோபித்து நீங்கள் அகத்தியரால் இறக்கவெனச் சபித்து மறைந்தவர்.

12. தாம் சிவபூசை செய்து முடிவில் சிவமூர்த்தி முடியிலிருந்து பெற்ற மாலையைப் பவனிவரும் இந்திரனுக்குக் கொடுக்க அவன் யானைமீதிட அந்த வெள்ளை யானை அப் புஷ்பத்தை எறியக் கண்டு கோபித்து இந்திரன் முடியிடறவும் வெள்ளையானை காட்டானையாகவும் சாபமிட்டவர். குந்திக்கு மந்திர முபதேசித்தவர். வபுஸ் என்னும காந்தருவப் பெண்ணைப் பக்ஷியாகச் சபித்தவர். திரிபுரமெரித்த சிவமூர்த்தியின் சினத்தீக் குழந்தை யுருக்கொண்டு நிற்க இதைத் தேவர்கள் யார் எனச் சிவமூர்த்தி இவன் துர்வாசனாம். இவனை அநசூயைப் பொருட்டருளினேம் என்றனர். அதனால் அவளிடம் வளர்ந்து இருடி ஆயினர். ஒருக்கால் கிருஷ்ணமூர்த்தியிடத்திற் சென்று இடக்கரான செய்கைகளைச் செய்து அவரைப் பாயசம் வினவிக் கொணர்ந்து வாங்கிச் சாப்பிட்டு மிகுதியைத் தம்மேல் பூசச்செய்து இரதத்தின் மேலேறிக்கொண்டு காடு மேடுகளில் கிருஷ்ணனையும் உருக்மணியையு மிழுக்கச் செய்து மனந்தளராததினால் சகல வரமுங் கொடுத்துக் கண்ணனை நோக்கி நீ என் மீது பாயசம் பூசுகையில் என்னுள்ளங் காலில் படாததினால் உனக்கு உள்ளங்காலில் உயிர்நிலையென்று கூறி மறைந்தவர்.

**துருவிநீதன்** — ஒரு வேதியன். தந்தை இத்மவாகன், தாய் உருசி, தாயைப் புணர்ந்து வியாசர் சொல்லால் சேதுஸ்நானஞ்செய்து சுத்தனானவன்.

**துருவிமோகன்** — திருதராட்டிரன் குமரன்.

**துருவிருத்தன்** — பாப கிருத்தியங்களைச் செய்த ஒரு வேதியன். கருணாபரிபூரணர் என்னும் சிவகணத்தவரால் தடுத்து ஆளப் பெற்றவன்.

**துருவேசனை** — சுமதியின் தேவி.

**துரோடகாசாரியர்** — சங்கராசாரியர் காலத்தவர், அக்னியம்சம்.

**துரோணர்** — 1. (சுக்ரன் - அம்சம்) தந்தை பாரத்துவாசமுனி, பாரி சதாநந்தர் புத்திரியாகிய கிருபி. இவர் துருபதனிடம் அசுவத்தாமனுக்குப் பால்வேண்டிப் பசு கேட்கச்சென்று அவன் மறுத்தமையால் அவனை நோக்கி என் மாணாக்கனா லுன்னைக் கட்டிக் கொண்டுவரச் செய்கிறேன் என்று சபதம் கூறிப் பீஷ்மரையடைந்து பாண்டு மக்களுக்கு வில் வித்தை கற்பித்து அவர்களில் வில் வல்லானாகிய அருச்சுநனை ஏவித் துருபதனைக் கட்டிவரச் செய்து அவனை விட்டவர். இவரை ஆற்றில் முதலை பற்ற அருச்சுந னிவரை விடுவித்தனன். பிரமனிடமிருந்து இந்திரனிடம் வந்த கவசத்தைத் தாம் பெற்றுத் துரியோதனனுக்குக் கொடுத்தவர். இவர் பாரத யுத்தத்தில் (கரு)-ஆம் நாளில் தருமராசன், சொன்ன அசுவத்தாமா அதரகுஞ்சர மென்னுஞ் சத்தங் கேட்டுத் திட்டத்துய்மனால் உயிர் நீங்கியவர்.

2. பிரமனைநோக்கித் தவம்புரிந்து மறுபிறப்பில் நந்தகோபனாய்ப் பிறந்து கிருஷ்ணனைப் பெற்றவன், இவன் தேவி வசுமதி, இவளே யசோதை.

3. வசுக்களில் ஒருவன், தருமத்திற்கு வசுவிடமுதித்த குமரன், பாரி அபிமதி.

4. மந்தபால முனிவர் குமரர், தரும பக்ஷிகளைக் காண்க.

**துர்கிரன்** — (சங்.) யயாதிக்குச் சன்மிஷ்டையிட முதித்த குமரன்.

**துர்க்கன்** — சதாக்ஷியைக் காண்க.

**துர்க்கா** — ஒரு மாயாதேவி.

**துர்க்கியன்** — யயாதியின் புத்ரன்.

**துர்க்கை** — 1. காளி.

2. விந்தமலையிற் பிறக்கும் நதி.

3. இவள் சலசத்திகளுக்கும் அதிதேவதை. இவளுக்கு நூறு புஜங்களுண்டு. இவள் தன் கரங்களில் எல்லா ஆயுதங்களையுங் கொண்டிருப்பவள்.

**துர்க்கைபீடம்** — சத்திபீடங்களில் ஒன்று.

**துர்க்கையின் கோட்டம்** — துர்க்கை கோயில், இஃது இரண்டிடத்தில் உள்ளது ஒன்று உச்சயினியின் பக்கத்துள்ளது, மற்றொன்று நருமதையாற்றுக் கப்பாலுள்ள பாலை நிலத்திலிருப்பது. (பெ. கதை).

**துர்ச்சயன்** — 1. திருதராட்டிரன் குமரன்.
2. குரோதகீர்த்தியின் குமரன்.
3. தநுப்புத்திரன்.
4. ஒரு வாஸ்து.

**துர்த்தமன்** — 1. காந்தார னிரண்டாம் பேரன். பத்திரசேனன் புத்ரன்.
2. பிரியவிரதன் வம்சத்தாசருள் ஒருவன்.
3. இவன் கதம்பநகரத்து மதனன் புதல்வன்; இவன் கொடியருடன் கூடிக் குடிகளை வருத்திவருகையில் ஒருமுறை வேட்டை வசத்தனுய்க் காசியெய்த இவன் செய்த தீமைகள்தோன்றி ஞானமுண்டாய் முத்தியடைந்தனன். (காசிகாண்டம்.)
4. சுவாயம்பு மநுகுலத்தரசன், இரைவதனைக் காண்க.

**துர்த்தருஷன்**—1. திருதராட்டிரன் குமரன்.
2. இராவண சேநாபதி; அநுமனால் மாண்டவன்.

**துர்த்தன்** — அஜன் தந்தை.

**துர்மதன்** — 1. புரக்ஞயனுக்கு நண்பன்.
2. பத்திரசேனன் குமரன்.
3. வசுதேவருக்கு ரோகணியிடம் பிறந்த குமரன், வசுதேவருக்குப் பௌரவியிடம் பிறந்த குமரன் என்பர்.

**துர்மாணம்** — ஜீவர்கள், தாம் செய்யும் தோஷங்களால் ஆயுள் குறைந்து இறக்கின்றனர். மரித்த வீட்டில் போஜனஞ் செய்கின்றவனும், பிறன் மனைவியரைப் புணர இச்சிப்பவனும், தனக்குத் தகாத இழிதொழிலைப் புரிகின்றவனும், இகபரத்துக்கு உறுதியாய் நல்வினைபுரியாதவனும், பெரியோரைப் பூஜியாதவனும், தூய்மை இல்லாதவனும், தெய்வபக்தி இல்லாதவனும், பாபங்களையே செய்கின்றவனும், பிறன்கேடு சூழ்கின்றவனும், பொய்பேசுகின்றவனும், ஜீவகருணை இல்லாதவனும், சாஸ்திரப்படி நடவாதவனும், தனக்குரிய கருமத்தைத் தவிர்த்துப் பிறனுக்குரிய கருமத்தைப் புரிகின்றவனும், புண்ணிய தீர்த்தம் ஆடாதவனும், தேவாராதனம் செய்யாதவனும், துர்மரணம் அடைவன். (கருடபுராணம்).

**துர்மருஷணன்** — சிரஞ்சயனுக்கு இராஷ்டிரபாலியிட முதித்த குமரன்.

**துர்முகன்** — 1. மால்யவந்தன் குமரன்.
2. துர்யோதனன் தம்பி.

**துர்யசித்** — யயாதிக்கு நான்காம் பேரன், இவன் துஷ்யந்தனது சகோதரனை வளர்த்தக்கொண்டான்; இவனுக்கு மருத்து என்றும் பெயர்.

**துர்யோதனன்** — துரியோதனனைக் காண்க.

**துர்வசு** — யயாதிக்குத் தெய்வயானையிடத்துப் பிறந்த புத்திரன்.

**துர்வாகன்** — திருதராட்டிரன் குமரன்.

**துர்ஜயன்** — சுப்ரதீகன் குமரன். இவன் தேவராஜனை வெல்ல நினைத்ததை நாரதர் தேவராஜனுக்குக் கூற அவன் இவனுக்குச் சுகேசி, மித்ரகேசி என்பவர்களை மணஞ் செய்வித்தனன். இவன் குமரன் பிரபாவசு. (வராஹ புராணம்).

**துலசி** — 1. சங்கசூடன் தேவி, சங்கசூடன் சிவபிரானால் யுத்தத்திலிறந்தபின் விஷ்ணு இவன் வேடந்தரித்து இவளைப் புணர்ந்தனர். இப் புணர்ச்சி வேறுபாடுணர்ந்த துலசி நீ பாஷாணமாகுக எனச்சபிக்கையில் திருமால் அவளை நோக்கி நீ பூர்வத்தில் என்னைப் பதியாகப் பெறத்தவஞ் செய்தாயாதலால் இவ்வாறு நிகழ்ந்ததெனக்கூறி அவளை நோக்கி நீ இவ்வுடல் விட்டுக் கோலோகமடைக உன்னுடல் கண்டகி நதியுருவடைக. உன் ரோமங்கள் துளசிகளாகுக. அத்துளசி மூன்றுலகங்களிலும் சிறக்க. தேவர்க்குரித்தாக. அத் துளசி என் சந்நிதியில் எல்லா மலர்களினுஞ் சிறக்க. அத் துளசி மூலத்தில் எல்லாப் புண்ய தீர்த்தங்களும் அதிஷ்டித்திருக்க. துளசிதள தீர்த்தம் மேல்விழ அதிபுண்யம் உண்டாகுக. தேவர்கள் பலரும் அதனடியில் வசிக்க. துளசி பத்ரதானத்தால் பதினுயிரம் கோதானம் செய்த பலமடைக. துளசி நீர், மரண காலத்தில் எவன் மேற்படுமோ அவன் வைகுண்டமடைக. எவன் துளசி கட்டையால் செய்த மணியணிவானோ அவன் அச்வமேதபலம் அடைக என்று வரம் அருளினர். இதன் விரிவைப் பிரம்மகைவர்த்த புராணம் பிரகிருதி கண்டத்திற் காண்க. திருமாலும் அவள் சாபப்படி கண்டகி நதியில் சிலாரூபமாகிய சாளக்கிராமமாய் இருந்தனர்.

2. தர்மத்துவசன் மாதவியென்னும் தன் தேவியுடன் நூறு திவ்யவருஷம் கூடியிருக்கையில் அவள் வயிற்றில் கார்த்திகை மாத சுக்ரவாரத்தில் ஒருபெண் பிறந்தது. இவளுக்குத் துலசியென்று பெயரிட்டனன். இவள் பிறந்து குழந்தைப் பருவத்தில் தானே பதரிவனஞ்சென்று தவமேற்கொண்டு பிரமனை நோக்கித் தவமி

யற்றிப் பிரமன் தரிசனந்தந்து என்ன வரம் வேண்டுகின்றா யென்றனன். யான் பூர்வத்தில் கோலோகத்திலிருந்த துளசி யெனும் கோபிகை, இராதைக்குத் தோழி நான் கிருஷ்ணனுடன் கிரீடிக்கக்கண்ட ராதை, என்னைப் பூமியிற் பிறக்கச் சாபமிட்டனள். அதனால் பூமியிற் பிறந்தே னெனப் பிரமன், நீ சுதாமன் எனும் கோவலன் பூமியில் சங்கசூடனாகப் பிறந்திருக்கிறான். அவனை மணந்து அநந்தரம் நாராயணனுக்கு விருக்ஷரூபமாய்ப் பிரியையாய்ப் பிருந்தாவனத்தில் பிருந்தை யெனும் பெயருடன் விளங்குவாய் என்றனர்.

3. சரஸ்வதி, இலக்ஷ்மி, கங்கை மூவரும் வைகுண்ட நாதனுக்குத் தேவியர். இவர்கள் மூவரும் வைகுண்டத்தில் இருக்கையில் கங்கை, விஷ்ணுவைக் காமத்தால் நோக்க, இதனைக்கண்டு சரஸ்வதி கங்கையைப் பிடித்துச் சண்டை இடப்போகையில், இலக்ஷ்மி இடையில் நின்று விலக்கியதால் நீ செடி ஆகவெனச் சரஸ்வதியால் சபிக்கப்பட்டனள். பின் கங்கையை நீ அந்தர்வாகினியாகிப் பாதாளஞ் செல்க எனவும் பாபிகளின் பாபத்தை நதி உருவாகப் பூமியிற் சென்று சுமக்க எனவும், சபித்தனள். இந்தக் கலகத்தை அறிந்த திருமால், லக்ஷ்மியை நோக்கி நீ தருமத்துவசனுக்குக் குமரியாய்ச் சங்கசூடனை மணந்து துளசியாய்ப் பின் பத்மாவதி நதி உருவாய், என்னை அடைக எனவும், கங்கையை நோக்கிப் பகீரதனால் பூமியை அடைந்து சந்தனுவை மணந்து சிவனை அடைக எனவும் கூற அவ்வாறு அடைந்தனர்.

**துலாதரன்** — 1. விஷ்ணுபக்தனாகிய வைசியன்; காசிலி இருடிக்குப் பிரமகீதை உபதேசித்தவன்.

2. சாசலியைக் காண்க.

**துலாபுருஷதானம்** — தானத்தைக் காண்க.

**துலாப்பிரமாணம்** — இது, வாதி பிரதிவாதிகள் நியாயசபையில் பிரமாணஞ் செய்வதில் ஒன்று. ஒரு பெரிய தராசை நிறுத்தி ஒரு தட்டில் தம் நிறைக்குத்தக்க பொருளையிட்டு மற்றொன்றில் தாம் ஏறி நின்று ஒரு அடையாளமிட்டுத் தராசை நோக்கி ஓ திராசே நீ சத்தியத்திற் கிருப்பிடமா யிருக்கிறாய் முன் தேவர்களால் நிருமிக்கப்பட்டுள்ளாய்; ஆகையால் சத்தியத்தைக் கூறு. என்னைச் சம்சயத்திலிருந்து விடுவி தாயே நான் பாவி ஆயின் என்னைக் கீழ்கொண்டு போ, சுத்தனாயின் மேல்கொண்டு செல் என்று பிரார்த்திப்பது (யாஞ்ஞவல்கம்).

**துலுவம்சம்**—சந்திரகுப்தன் வழிவந்த சூத்ர குலம். இவரே துளுவர் எனப்பட்டுத் தமிழ் நாட்டிற் குடியேறினர்.

**துல்யவக்ரான்** — பரத்துவாச முனிவர் குமரன்; இவன் இந்திரனை யெண்ணித் தவமியற்றி ஓதாதுணர்ந்தவன்; தந்தையிடத்துக் கீதவித்தை கற்றவன். இவன் பராவசுதேவியைக் காமுற்றுக் கைப்பற்றப்போகையில் அவள் தம்பி மாமனாரிடத்து அடாததைக்கூற மாமனாகிய இரப்பியர் பூதங்களையேவிக் கொலைபுரிய மாண்டவன். இவனுக்கு வக்ரன் என்றும் பெயருண்டு. இரப்பியர் புத்திரனால் மீண்டுமுயிர் பெற்றவன்.

**துல்லியன்** — பலநூற் பயிற்சியையுடைய ஓரரசன் பெருவழியிடையே தருமத்திற்காக நீர்நிலைகள் பல உண்டாக்கியவன். (பெருங்கதை).

**துவகன்** — பிரியவிரதன் பேரன்; கிருதபிருஷ்டன் குமரன்.

**துவசகேது** — துருபதன் குமரன்.

**துவசசேநன்** — துருபதன் மகன்.

**துவசேநன்** — பாஞ்சாலன் குமரன்.

**துவதிகன்** — கந்திற் பாவையைச் சேர்ந்து முக்காலச்செய்தி அறிவிக்குந் தேவன்.

**துவராபதி** — ஒரு பழைய நகரம். இதனரசன் சங்கரன். (பெ. கதை).

**துவரை** — துவாரகையைக் காண்க.

**துவரைநாடு** — இது பாண்டிவள நாட்டிலுள்ள சிறு நாடுகளுள் ஒன்று; வைகைக் கரையிலுள்ளது; (துவரை யென்பது மதுரைக்கு மேற்கேயுள்ள துவரைமானென்னு மூராக இருத்தல்கூடு மென்கின்றனர். (திருவிளையாடல்).

**துவரைக்கோமான்** — 1. இடைச் சங்கப் புலவன்.

2. இடைச்சங்க காலத்திருந்த ஒருசிற்றரசன். இவன் கண்ணபிரான் வழியினனும் வேளிர்வழியினனாய்த் தெற்கினாண்ட ஒருவனாகக் கருதப்படுகிறான்.

**துவர்** — (௧௦) நாவல், கடுக்காய், நெல்லி, தான்றி, ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக் காசு, மாந்தளிர்.

**துவஜவதி** — அரிமேதஸ் புத்திரி.

**துவஷ்டரன்** — சுக்ரன் குமரன்; அசுர புரோகிதன்.

**துவஷ்டரை** — அச்வநிதேவர்களுக்குத்தாய்; இவளுரு வடவாக்னிபோன்றது. சூரியன் தேவி.

**துவஷ்டா** — 1. பவன் என்னும் சூரியனுக்குத் தோஷையிட முதித்தகுமரன்; தேவி விரோசனை; குமரன் விரசன்.

2. யௌவநன் புத்ரன்.

3. பிரமன் குமரன்.

4. சுக்ரபுத்ரன்; விச்சுவவுருவன் தந்தை; இவன் சரிதையை இந்திரனைக் காண்க; இவன் சடையையறுத்து யாகஞ்செய்ய விருத்திராசுரன் பிறந்தான் என்பர்.

**துவாதசலக்ன விவரம்** — 1. ஜன்மலக்னம் - இது, அந்தந்த மாதராசியின் நாழிகையை மேற்படி மாத தேதியின் ஈவின் வகைக் கழித்து மிச்சம் நின்ற நாழிகையைச் சநன காலம் வரை யெண்ணிக் கண்ட நாழிகையில் வருவது ஜன்ம லக்னமாம்.

2. ஒராலக்னம் - உதய முதல் சநனகாலம் வரை யெண்ணிக் கண்ட நாழிகையை உதய முதல் ராசி (1-க்கு 27) நாழிகையாகக் கழித்துக் கண்டது லக்னமாம். இதனை ஆண் ராசிக்கு வலமாகவும், பெண் ராசிக்கு இடமாகவும் பார்த்துக்கொள்ளவும்.

3. கடிகாலக்னம் - இது, உதய முதல் சநனம் வரை யெண்ணிக் கண்ட நாழிகையை உதய முதல் இராசி ஒன்றிற்கு நாழிகை ஒன்ருகத் தள்ளிக் கண்டது லக்னமாம். இதனையும் ஆண், பெண்ணிற்கு வலமிடமாகக் கொள்க.

4. ஆரூடலக்னம் - இது, லக்ன முதல் லக்னுதிபதிநின்ற இராசிவரை யெண்ணிக் கண்ட தொகை யெத்தனையோ அதை லக்னுதிபதி நின்ற இராசி முதலாக எண்ணிக் கண்ட லக்னமாம். அவன், லக்னத்திலும் (எ)இலுமிருந்தால் ஆரூட லக்னமாம்.

5 நக்ஷத்திரலக்னம் - இது, ஜன்ம நக்ஷத்திரத்தில் ஜநனம் வரையிற் சென்ற நாழிகையை இராசி (க க்கு ங) நாழிகையாகத் தள்ளிக் கண்ட லக்னமாம். அச்வநி, மகம், மூலத்திற்கு இடமாகவும், மற்றவைகளுக்கு வலமாகவும் ஜநன லக்ன முதல் எண்ணிக் கொள்ளவும்.

6. காரகலக்னம்-இது, உதயாதி ஜன்மம் வரைச் சென்ற நாழிகையை ராசி க-க்கு ஐந்துநாழிகையாகக் கழித்துக் கண்ட தொகையை எந்தக் கிரகஸ்புடத்தில் அதிகமாக இருக்கிறதோ அந்தக் கிரகமிருக்கிற ராசி முதலாக எண்ணிக் கண்ட லக்னமாம்.

7. ஆதெரிசலக்னம் - இது, ஜன்ம லக்னத்திற்கு ஏழாவது லக்னம்.

8. ஆயுர்லக்னம் - இது, உதயாதி சென்ற நாழிகையை இராசி ஒன்றுக்கு ஐந்து நாழிகையாகக் கழித்துக் கண்ட தொகையைச் சந்திரனின்ற அங்கிசலக்ன முதலாக எண்ணிக் கண்ட லக்னமாம்.

9. திரேக்காணலக்னம் - இது, லக்னத்தை மூன்றுகூறிட்டுச் சரத்திற்கு (க-ரு-கூ) ஆகவும், ஸ்திரத்திற்கு (கூ-க-ரு) ஆகவும், உபயத்திற்கு (ரு-கூ-க) ஆகவும் எண்ணிக் கண்ட லக்னமாம்.

10. அம்சலக்னம் - இது, முன்சொன்ன காரக கிரகத்தின் த்வதாம்சலக்னமாம்.

11. நவாம்சலக்னம் - இது, லக்னத்தை ஒன்பது பங்காக்கி எத்தனையாம் பங்கில் ஜன்மமோ அதை அந்த ராசித் திரிகோண சரராசியாக எண்ணிக் கண்ட லக்னமாம்.

12. பாவலக்னம் - இது, உதயாதி ஜன்மம்வரைச் சென்ற நாழிகைகளை இராசி (க)-க்கு (ரு) நாழிகையாகத் தள்ளிக் கண்ட தொகையை மேஷ முதலாக எண்ணிக் கண்ட லக்னமாம்.

**திதிப்பிரசங்கை** - (திதிகளிற் செய்யும் சுபா சுபகாரியங்கள்) பிரதமையில் - ஸ்திர கன்மங்களும், சாந்தியும், துதியையில் - சுப கன்மங்களும், மந்திரோபதேசமும், திரிதியையில் - வாஸ்துவின்யாசமும் விவாகமும், இராஜ்யாபிஷேகமும், பட்டபந்தனமும், வித்தியாரம்பமும், சதுர்த்தியில் - யானை கட்டலும், விருத்தம் கொளலும், யுத்தஞ்செய்தலும், நிகளபந்தனமும், பஞ்சமியில்- விவாகம், தனம், தான்யசங்கிரகம், குளம் கல்லலும், சஷ்டியில் - வாத்து விடுதல், விஷவாத அப்பியாசம், குரூரகன்மங்கள் ஔஷதசாத்திரகாரதகனங்கள், சத்ருதர்சனம், நிகளபந்தனமும், சத்தமியில் - யாத்திரை, அலப்பிரவாகம், ஆபரணதாரணம், சகலசுபகன்மம், விவாகம், அஷ்டமியில் - அறுத்தல், சுடுதல், அட்டைவிடல், காரமிடுதல், மருந்துண்ணல், சத்துருஜயம், அட்டகை, உருத்திராபிஷேகம், நவமியில்- அட்டகை, துர்க்காபூசை, தசமியில்-தபம், விவாகம், கிராம, கிரகப்பிரவேசம், தனதான்யசங்கிரகம், ஏகாதசியில்-உபநயனம். கன்னிகாதானம, கோதானம், பூதான, துவாதசியில் - சோலை வைத்தல், பூமா

வைத்தல், தன்மம் பண்ணல், உழுதல், விதைத்தல், நெல்லறுத்தல், தான்யசங்கிரகம், விஷ்ணுபூசை, ஆபரணம்பூணல், திரயோதசியில் - வாகனமேறல், விவாகம், சித்திரகன்மங்கள், சதுர்த்தசியில் - குரூரமந்திராப்பியாசம், ஆகமம், ஔஷத அப்பியாசம், சாந்திகருமம் பௌரணையில் - மங்கலகன்மம், தன்மகாரியங்கள், கிரகப்பிரவேசம், அமாவாசையில் - சமுத்திர ஸ்நானம், பிதுர்தர்ப்பணம், தானம், சிரார்த்த கன்மமும் செய்யலாம். (விதான.)

**துவாதசாதித்தர்** — ஆதித்யரைக் காண்க.

**துவாபரயுகத் தெய்வம்**—வில், அம்பு வாள், கட்வாங்கம், கையிற்கொண்டு புண்ணிய பாபம் கலந்தவுருவுடன் குரோத முடைத் தாயிருக்கும்.

**துவாபரயுகம்** — சதுர்யுகத்தில் மூன்றாவது யுகம். இதற்கு வருஷம் எட்டுலக்ஷத்து அறுபத்துநாலாயிரம்.

**துவாரகை** — இது முத்தித்தலங்கள் ஏழுள் ஒன்று. கூர்ச்சரத்திற்கு மேற்கிலிருப்பது. இதில் பரமபதவாசியாகிய விஷ்ணுமூர்த்தி உலகபார நிவர்த்திக்காகக் கிருஷ்ண மூர்த்தியாயும் பலராமமூர்த்தியாயும் இலக்ஷ்மிதேவி முதலியவர் தேவியாராகவும் திருஅவதரித்தனர். இதில் ஐந்துதினம் திருமாலைத் தியானித்திருந்து இறந்தவர் எலும்பு விஷ்ணுமூர்த்தியின் சங்கின் உருஅடையும் என்று காசிமான்மியம் கூறும். கண்ணனுக்குப் பிறகு கடல் கொண்டது. (காசிகாண்டம், கருடபுராணம்). (Dwaraka in Guzerat).

**துவிசக்கர வண்டி** — இது, முன்னும் பின்னுமாக இரண்டு சக்கரங்களை யுடையது. இதில் ஏறிச் செலுத்துவோன் தன் காலடியிலுள்ள சக்கரத்தில் பொருந்தியுள்ள மிதியடியைக் காலால் மிதித்து மிதித்துத் தூக்கச்செல்லுந் தொழில்களுள்ளது. மூன்று சக்கர வண்டியுமுண்டு.

**துவிசாரசதுலோத்தம பாண்டியன்** — இராசசார்த்தூல பாண்டியனுக்குக் குமரன், இவன் குமரன் ஆயோதனப்பிரவீணன்.

**துவிதன்** — 1 கிட்கிந்தையாண்ட ஒருவானரன்.

2. பிரமன் மானஸபுத்திரருள் ஒருவன்.

3. துவிவிதனுக்கு ஒரு பெயர்.

**துவிமீடன்** — அத்தியின் குமரன்.

**துவிமூர்த்தனன்** — தநுகுமாரில் ஒருவன்.

**துவிவிதன்** — நரகாசுரனுக்கு நண்பனாகிய வானரன் ; சுக்கிரீவன் மந்திரி, மயிந்தனுக்குத் தம்பி. நரகாசுரனைக் கண்ணன் கொன்ற காரணத்தால் கோபமூண்டு துவாரகை முதலிய பட்டணங்களைத் தீயிட்டு வருத்திக் கோகுலம்வந்து கோவியருடன் விளையாடும் பலராமரை வருத்தி யவரால் இறந்தவன். இலக்குமணரைக் காண்க. இவன் லக்ஷ்மணருக்குச் சுரநோய்போக்கி வேதனம் பெற்றவன்.

**துவைதம்** — மார்த்தவமதத்தைக் காண்க. இது சீவாத்மா பரமாத்மா இவ்விரண்டும் வேறென்றும் முத்தியிலும் வேறாக அச்சு மாறாது இருக்குமென்றுங் கூறும்மதம்.

**துவைதவனம்** — பாண்டவர்கள் நீருண்ட நச்சுப்பொய்கை. (பார - மஹாப்.)

**துவைபாயனம்** — குருக்ஷேத்திரத்திற்கு அருகில் உள்ள தீர்த்தம் ; துரியோதனன் படை இழந்த பின் இத்தடாகத்தில் மறைந்து ஜலத்தம்பனம் செய்தனன். (பார.சல்)

**துளசாபுரபீடம்** — சத்திபீடங்களில் ஒன்று.

**துளசி** — 1. கார்ப்பு மணமுமுள்ள மூலிகை. நல்ல துளசி, கருந் துளசி, செந் துளசி, கர்ப்பூரத் துளசி, காட்டுத் துளசி, சிவத் துளசி, சிறு துளசி, நாய்த் துளசி, நிலத் துளசி, பெருந் துளசி எனப் பலவகைப் படும்.

2. தர்மத்வசன் எனும் மநுவம்சத்தரசன், தன் மனைவி மாதவி, நூறு வருடம் கருக்கொண்டு ஒரு குமரியைப் பெற்றாள். அக் குழந்தை அழகில் ஒப்பில்லாதிருந்ததால் (துள - ஒப்பு, சி - இலாதது) துளசி எனப் பெயரிட்டனர். இவள் பதரிவனஞ் சென்று நாராயணன் புருடனாக வர எண்ணித் தவஞ் செய்தனள். பிரமனிவட்குத் தரிசனந் தந்து என்ன வரம் வேண்டுமென நான் நாராயணனைக் கணவனாக விரும்புகிறேனெனப் பிரம னிவளை நோக்கி அம்மா கிருஷ்ணன் தேகத்தில் பிறந்த சுதர்மன் எனும் கோபாலன் முன்னொருகால் உன்னைக்கண்டு மோகித்து அவ்வாசையை முடிக்காதவனாய் வருந்துகையில் ராதை அவனைப் பூமியில் பிறக்கச் சபித்தனள். அவன் பூமியில் சங்கசூடனாய்ப் பிறந்திருக்கிறான். நீ அவனை மணந்து பின் விருக்ஷரூபமாய்ப் பிருந்தாவனத்தில் பிருந்தாவனி எனும் பெயருடன் கிருஷ்ணனுட னிருப்பாய் என்று மறைந்தனன். பின் இவள் தன்னை நாடிவந்த சங்கசூடனை மணந்தாள்,

பின் சங்கசூடன் சங்காருடன் யுத்தஞ்செய்து மாண்டபின் விஷ்ணு சங்கசூடனைப்போலுருக்கொண்டு துளசியைப் புணரத் துளசி கரண வேறுபாட்டால் நீ என் கற்பைக் கெடுத்ததால் கல்லாகவென்று சபித்தனள். பின் விஷ்ணு தமது பூர்வ விருத்தாந்தங் கூறி அவளைச் சமாதானப்படுத்தி நீ கண்டகிநதி யுருவாய் உன்னுடம்பு துளசி விருக்ஷமாம். அது எல்லாராலும் கொண்டாடப்படும். நான் அதில் ஓர் மலையுரு ஆவேன். இத்துளசி வைகுண்டமடைய அவளைச் சரஸ்வதி கோபித்தபடியாலிவள் துளசிவனம் வந்தனள். விஷ்ணு இவளைச் சந்தோஷப்படுத்தி மீண்டும் வைகுண்டமழைத்துச் சென்றனர். இவளை இவளுக்குரிய (அ) நாமங்களுடன் கார்த்திகை பௌர்ணமியில் பூசிப்போர் எல்லா சித்திகளையு மடைவர். (தேவி - பா.)

**துளசிதாசர்** — அத்தினபுரத்திற் கனோஜா என்னும் பெயரின் உத்தமகுலத்து, ஆத்மராமருக்கு வான்மீகிமுனிவர் பெருமான் கட்டளைப்படி புத்திரராகவென அவ்வாறே துளசிதாசரெனப் பிறந்து வளர்ந்து மமதா என்பவளை மணந்து அந்நாட்டரசனிடத்தில் தொழிலமைந்திருக்கு நாளையில் ஒரு நாள் அரசன் சேனையுடன் வனஞ்சென்றிருக்கையில் . மமதையின்றாய் வீட்டிலிருந்து தூதுவன் ஒருவன் உன்றாய் உன்னைப்பார்க்க விரும்பினள் என்றனன், இதைக்கேட்ட மமதை தன்மாமியிடம் விடை பெற்றுக்கொண்டு தாயகஞ்சென்று தாயுடன் சந்தோஷ வார்த்தையாடிக் கொண்டிருக்கையில் வனம்போன துளசிதாசர்மீண்டு வீட்டிற்குவந்து தாயைத்தன் மனைவியெங்கென அவள் தாய்வீடு சென்றாளெனக் கேட்டு அவ்விரவில் புறப்பட்டு மாமிவீடு சென்று கதவையடைத் திருந்ததறிந்து ஒருவருமறியாமல் மேல் முகட்டிவேறும் பாம்பைத் தனக்கு மனைவிவிட்ட கயிறெனவெண்ணி அதனைப் பிடித்துமேன்முகட்டேறி இழியுந் தருணத்தில் அனைவரும் ஒலியினால் விழித்துக்கொண்டு பயந்து நோக்க மமதையும் வெளிவந்து இந்த இரவினில் எவ்வாறு வந்தீர். இந்த மாளிகை மீதேற எவ்வாறு கூடியதென நீ விட்டதாம்பினால் ஏறினனெனப் பார்ப்போமென வெளிவந்து நோக்க அது பாம்பாயிருந்தது கண்டு காமத்தால் பாம்பெனவுமறிந்திலிர் போலும் எனக் காமத்தை அற்பமெனக் கணவற் கிகழ்ந்து அறிவிக்கத் துளசிதாசர்க்கு ஞானோதயமாகி நீ எனக்கு அறிவுதந்ததால் மனைவியாகாய், குருவென விட்டகன்று வனமடைந்து பகீரதியில் மூழ்கி நித்யகரும மியைத்துத் தவமியற்றி வருவார், கமண்டலத்தில் நீர்கொணர்ந்து கைதாலலம்பி மிகுந்த நீரை அங்கிருந்த மரத்தடியில் அதிகமாக வூற்றிவருவர். இவ்வாறு பன்னிரண்டு வருடஞ் செய்துவருகையில் ஒரு நாள் அம்மரத்திலிருந்த பேய் இவர் முன்வந்து நான் ஆறு, கிணறு, ஏரி முதலிய ஜலமுண்டும் என்தாகந் தணியாது இந்த மரத்திலிருந்த எனக்குப் பன்னிரண்டு ஆண்டு நீர்தந்து தாகம் போக்கினீர் உமக்கு வேண்டும் வரங்கேளுமெனத் துளசிதாசர் இதென்ன கற்பகத்தருநினைக்கக் கள்ளிவந்ததுபோல நான் இறைவனை எண்ணித் தவமியற்றப் பேய்வந்ததென வந்த இதனை என்ன கேட்பதெனத் துணிந்து எனக்கு இராமதரிசனந்தர வரந்தாவெனக் கேட்க இது என்னலாகாது ஆயினும் அவ்வாறு செய்விக்கும் வாயு புத்திரரை உமக்கு அறிவிக்கிறேன். அவரால் நீ கொண்ட எண்ணத்தினை முடித்துக் கொள்க என அவரைக்காணுதல் எவ்வகையென நீ நாடோறுங் கேட்கும் இராமகதைக்கு எல்லார்க்கு முன்னர்வந்து கிழவுருவத்துடன் கிழிந்த ஆடையுடையராய்க் கையில் கோல்பிடித்துக் கதை கேட்டானந்தங்கொண்டு செல்வோர்க்குப் பின்னெழுந்து போவாரோ அவர் எனக் கூறக்கேட்டுக் கதைகேட்கச் சென்று அவர் திருவடிகளைவணங்க மாருதி நீவணங்கத் தகுமோ என இராமனடி உன்னுவோராதலால் வணங்கத் தகுமென்று தம்வேண்டுகோள் கூற அநுமன் ஆயினவ்வாறு செய்வேனென இராமரைப் பிரார்த்தித்தலும் இராமர் அநுமனுடன் கோதண்டமேந்தித் தரிசனந்தந்து அவ்வாறாகவெனத் துளசிதாசர் வீட்டில் குரங்குக் கூட்டங்களுடன் திருக்கனைப்போல் சென்று அவரறியாதிருத்தலுணர்ந்து மறைந்தனர். மாருதி துளசிதாசரிடஞ் சென்று இராமதரிசனமாயிற்றோவெனக் கேட்கக் குரங்குக் கூட்டங்களுடன் வந்த திருக்கனையல்லாமல் இராமனை இலக்குமண சீதாஞ்சனேய சகிதமாய்த் தரிசித்திலேன் என உளம்வருந்துகின்றவரைத் தேற்றித் தாம் இராமரைத் துதிக்க இராமர் தரிசனந்தந்து அவ்வாறு

துளசிதாசருக்குத் தரிசனந்தர உவந்து நால்வருமாய்த் துளசிதாசருக்குத் தரிசனந் தந்து அநுமான் சொற்படி அடியவர் சிரத்தில் கரம்வைத்தருளிப் போயினர். பின் அநுமான் இராமநாமமே கூறுதலாலடைந்தபயனெனக் கூறி அங்கிலையிலிருக்கச் செய்தவாறு துளசிதாசர் காசியில் மடம் ஒன்றுகட்டிப் பாகவதர்க்கு அமுதருத்தி இராமபஜனை செய்திருக்கையில் ஒருநாளிர்வில் இவர் மடத்துத் திருட எண்ணிக் கள்ளரிருவர் மடத்துட்புகுந்து பொருள்களைக் களவுசெய்து மீளுகையில் வீரரிருவர் வெளியில் வில்லும் அம்பும் கொண்டு நின்று புறத்தில் போகாவண்ணம் மருட்டக் கள்ளர் மற்றோர் வழியிற்போக எண்ணிச்செல்ல ஆண்டும் அவ்வாறு நிற்கக் கண்டு புறத்திற் செல்லாது அஞ்சிமடத்திலிருந்தனர். பொழுதும் புலர்ந்தது. கள்ளர்கள் தாசரையணுகி நாங்கள் தங்கள் மடத்தில் களவுசெய்யவந்த கள்ளர் என்று வணங்கி நடந்தசெய்திகளையுங்கூறத் தாசர் அவ்விடமிருந்தாரை இவர்களைத் தடுத்தோர் யார்? இவ்விடத்திலுள்ள பொருள்கள் பாகவதரின் பொருட்டன்றோ என வினாவ, எவரும் அங்ஙனஞ் செய்தாரிலர் எனக்கேட்டு இராமனே என்பொருட்டு அவ்வாறு ஏவலனாக வந்தானெனப் பல விதத்திலுந் துதித்துக் கள்வரை நோக்கி நீங்கள் வேண்டிய பொருள்களைக் கொண்டுசெல்க என அக்கள்வர் உய்யுமாறு இராம தரிசனம் செய்தோம் உம் திருவடித் தரிசனமே வேண்டும் அன்றிவேறு வேண்டோமென அவ்விடமிருந்து பணிசெய்து வந்தனர். இவ்வாறு நடந்து வருகையில் ஒரு நாள் ஒருவர்வந்து "ஜானகிராம" என அவர்முன் உட்கார்ந்து நான் பிரமகத்தி செய்தவன் எனக்கு அன்னமளிக்க எனக் கூறக்கேட்ட பாகவதர்கள் தம்முடனுண்ணல் அடாது எனமறுக்கத் தாசர் இவனது பிரமகத்தி இராமநாமம் கூறவே தீர்ந்தது என வேதியர் பிரமஹத்தி தீர்ந்ததை எமக்குப் பிரத்தியக்ஷமாகக் காட்டவேண்டுமென உடன்பட்டு நீங்களெவ்வாறு விரும்புகிறீர்களெனக் கேட்கக் காசியில் சிவாலயத்தெதிரிலுள்ள சிலாநந்திமுன் இவனுக்கிட்ட அன்னத்தை வைக்க அது எழுந்துண்ணுமேல் உடனுண்போமென அவ்வாறு தாசர் செய்ய அது உண்ணக் கண்டு பாகவதர் அன்பும் அச்சமும்கொண்டு அப்பிரமகத்தி செய்தாருடனுண்டிருந்தனர் இவ்வாறிருக்கையில் ஒருநாள் ஜெயத்பாலன் எனும் வணிகனிறக்க அவனைச் சிதைக்குக்கொண்டு போயிட்டு மனையாள் அவனுடன் தீப்புகச் செல்லுகையில் வழியிலிருந்த தாசர் மடத்தைக் கண்டுள்புகுந்து தாசரைப் பணிந்தனள். தாசரிவளை நோக்கிஅம்மா நீ எட்டுப் புத்திரர்களைப்பெற்று உன் கணவனுடன் சுகித்திருக்க என ஆசிர்வதிக்க அவள் நடந்த செய்தி கூறத் தாசர் கேட்டு இராமன் என்னாவிலிருந்து கூறியபடியால் பொய்யாகாதெனக் கூறக் கேட்டகன்று கணவன் சிதையிடம் போகக் கணவனெழுந்தமை அறிந்து களிப்படைந்து அவனுடன் தாசரை யடைந்து பணிந்து எட்டுப் புத்திரர்களைப் பெற்றுக் களித்திருந்தனள். இவர் செய்த அற்புதங்களைக் கேட்ட அக்காலத்தரசனாகிய அக்பர் சக்கிரவர்த்தி இவரைவருவித்து இராமரைக்காட்டினாலன்றி விடேனெனக் கூறக்கேட்டு அநுமானிடம் முறையிட அநுமானிவ்வரசன் பட்டணத்தில் குரங்குக் கூட்டங்களை ஏவிக் குடிகளைத் தொந்தரை செய்வித்தனர். இதனால் துன்புற்ற குடிகள் மந்திரி, கள்வழி அரசனுக்கறிவிக்க அரசன் தாசரைக்கேட்டுக்கொள்ளத் தாசர் அவ்விடையூற்றை அநுமனாலகற்றிச் சடமூடர் என்பவரைத் தொண்டராக்கிக்கொண்டு அவன் நாட்டில் ஒருவருடகால மிருந்தனர். அவ்விட மிருக்கையில் உச்சயினிபுரத்து வணிகன் ஒருவனுக்கு அழகுள்ள பெண்மகவொன்றுண்டாய்ப் பருவம் சமீபித்தது கண்டு தந்தை அவளைப படத்தில் எழுதி அவளுக்கேற்ற வரனைத்தேடுமாறு சிலரை விடுத்தனன். சென்றோர் பல இடங்களில் சென்றும் சாதிக்கேற்ற அழகுள்ளோன் காணாது பாணபூரில் வந்து அங்குள்ள வணிகனுக்குக் காட்ட அவன் தனக்கு இரண்டு பிள்ளைகளென்றும் அவ்விருவரில் ஒரு கண்ணில்லான் குமரன், மற்றது அழகுள்ள பெண்ணெனவுங்கூறி அவர்களை நோக்கி என் பெண்ணிற்கு ஆண்வேடமிட்டுக் காட்டிப் பெண்ணுக்குரியாரை மயக்கி மாங்கல்யதாரண சமயத்தில் என் குமாரனைத் தாரணஞ் செய்விக்கச் செய்து விட்டீர்களாயினுமக்கு வேண்டிய தருகிறேனெனக் கூறக் கேட்டோர் இசைந்து சென்று பெண்ணுள்ள வணிகனுக்குப் பாணபூரில் மாப்

பிள்ளை இருக்கிறுனெனக் கூறி நாளமைத்து மணத்தில் மாங்கல்யதாரணத்தைப் பிள்ளையாற் செய்விக்க முடியாமையால் பெண்ணுல் முடிப்பித்து நீராடச் செல்லுகையில் பிள்ளைவீட்டுக்காரர் ஒருக்கால் நீராடிற்கபடம் வெளியாகு மென்றஞ்சி என் மகனுக்குடம்பு செம்மையில்லை இரவில் நீராடலாமென உடம்பட்டு இரவில் நீராடச் செல்லுகையில் பிள்ளைவீட்டார் ஒவ்வொருவராய் விட்டகன்றனர். இதற்குக் காரணமென்னென நீராடும் பிள்ளையை நோக்கப் பெண்ணுயிருக்கக் கண்டு மனம் வருந்தி அவமதித்து அப்பெண்ணைக் கழுதைமேலேற்றி ஊர்வலம் வருவிக்கையில் துளசிதாசர் மடத்தையடைந்து தாசரை அவ்வாணுருக்கொண்ட பெண்வணங்கத் தாசர் நீ உன் மனையாளுடன் வாழ்க என்று ஆசிகூறக் கேட்ட பெண், தன் வரலாறுகூறக் கேட்ட தாசர் விட்டலன் அநுக்கிரகிப்பான் எனப்பெண் ஆணுக அனைவருங்களித்துத் தாசரைப் புகழ்ந்து முன்போலழைத்துவந்து மண முடித்தனர். பின் அரசன் கேட்டுத் தாசருக்கு மரியாதைசெய்ய நீங்கிக் கோகுலம், யமுனை, பிருந்தாவனம், மதுரை முதலிய திருப்பதிகளை வணங்கிப் பிரியதாசரிடமடைந்து நீர் பாகவதர் சிறப்பெழுதிய புத்தகந்தாருமெனக்கேட்கச் சிறப்பு ஆண்டிலாதது கண்டு எண்ணுகையில் துளவோனச் சீரமைந்த புத்தகத்தை யமைக்க அது கொண்டு கோயிலிற் சென்று இவர் சீர் நானெழுதாமை கண்டு இராமனெழுதினுனெனக்கூறி யாவர்க்கும் இவர்சீர் எழுதத்தரமோவெனப் புகழ இருந்தவர்.

**துளசிதேவி** — இவள் சுத்த சத்வச்வரூப விஷ்ணுசத்தி புஷ்பரூபிணி; பூதேவியைப் பாத பரிசத்தால் சுத்தஞ் செய்பவள். போககாமிகளுக்குப் போகத்தையும், மோக்ஷகாமிகளுக்கு மோக்ஷத்தையுந் தருபவள். (தேவி - பா.)

**துளுவர்** — துளுவநாட்டுச் சனங்கள். இந்நாட்டிலிருந்து தமிழ் நாட்டில்வந்து குடியேறியவரும் துளுவர் எனப்படுவர்.

**துளுவவேளாளர்** — 1. இவர்கள் கன்னடதேசத்தில் துளுவநாட்டிலிருந்துவந்து அரசனேவலால் நாட்டை வளப்படுத்திக் காணியாட்சி கொண்டவர்கள்.

2. இவர்கள் துளுவ நாட்டிலிருந்து வந்த வேளாளர். (துளுவம் தென்கன்னடத்திலுள்ளது) இவர்களே ஆதி வேளாளர். இவர்கள் ஆதொண்டைச் சக்ரவர்த்தியால் தொண்டை நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டவர்கள். இவர்கள் தமிழ்நாடு முழுதும் பரவி யிருப்பவர்கள். இவர்கள் தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஜில்லாக்களில் இருப்பவர்கள். மாவலிபுரம் தேரில் ஆதொண்டைச் சக்ரவர்த்தி ஏழாம் நூற்றுண்டில் அரசு செலுத்தியதாகக் கூறியுள்ளது. காஞ்சிபுரம் இவனுக்கு இராஜதானி. இவன் ஸ்ரீசைலத்திலிருந்து பிராமணர்களுடன் வேளாளரையும் அழைத்து வந்தனன் என்பர். இவர்கள் தலைநாடு காஞ்சி. ஆதொண்டை சக்ரவர்த்தி குறும்பாது (24) கோட்டைகளைச் செயித்துத் தன் பெயரால் தொண்டை மண்டலமெனப் பெயரிட்டு அந் நாட்டில் குடியேறிய வேளாளரைத் தொண்டை மண்டலம் துளுவவேளாளர் எனப் பெயரிட்டனன். (தர்ஸ்டன்).

**துறை** — மக்களு மாவுமன்றிப்பிற தோன்றினவாயினும் அவற்றை முன் சொல்லியவற்றோடு பொருந்தும்வண்ணம் ஆராய்ந்து இலக்கணம் வழுவாதபடி தன்னையன்றி உரைப்போருங் கேட்போரு முண்டாதலின்றிக் கவிஞனுல் கூறப்படுவது. (அகம்).

**துறைக்கவி** — மனம், களி, தாது, வயிரபம், சம்பிரதம், தவசு, குறம், கணிக முதலியன. (வீரசோ).

**துறைக்குறுமாவிற் பாலங்கொற்றனர்** — இவர் விஷயமாக யாதும் விளங்கவில்லை. தமது பாடலில் வணிகனைக் கிளவித் தலைவனுக அமைத்துக் கூறியதனுல் இவர் வணிக மரபினரோவென் றையங்கொள்ளப்படுகின்றது. இவர் பாலையைப் பாடியுள்ளார். இவர் பாடியது (நற். அ௨௬-ம் பாட்டு).

**துறையூர் ஓடைகிழார்** — ஆய்வள்ளலைப் பாடிப் பரிசு பெற்றவர். (புற - நா.)

**துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகள்** — திருவாவடுதுறை ஆதீனத்து மெய்கண்டசந்தானத்தவர். ஓர்காலத்துச் சிதம்பரம் நடராஜரது வரும்படிகளைப் பெருமாளுக்காக்கின வடுகனது அக்ரமம்பற்றி இராய வேலூரில் அரசு செய்துகொண்டிருந்த விருபாக்ஷிராயரிடஞ் சென்று அவரது முதன் மந்திரியாகிய இலிங்கண்ணபத்தர் மூலமாகத் தமது காரியத்தை வெற்றிகொள்ள எண்ணித் தாம் சைவராயினும்

தமது சிவபூசை நாயகரை ஒரு சிறு பெட்டகத்திருத்திச் சிரசில் தரித்துக்கொண்டு அவன் முன்னிலையிற்சென்று தமது எண்ணத்தை நிறைவேற்றி அவ்வரசன் தன் நாட்டில் மழையிலாதிருப்பதை அறிவித்து வேண்டச் சுவாமிகள் மேகராகக் குறிஞ்சிப்பண்ணில் தேவாரத்தை ஓதி மழை பெய்வித்தனர். அரசனிதனால் களிப்படைந்து சுவாமிகளுக்குத் திருவண்ணாமலையில் ஒரு மடம் கட்டுவித்து அதில் எழுந்தருளியிருக்கச் செய்தனன். இவர் மாணாக்கர் வேலையர், கருணையர்.

**துற்கடன்** — 1. இவன் மாசிமாதத்தில் பாசமறுத்தான் துறையிலாடி முத்திபெற்ற வணிகன்.

2. இவன் மகாபாதகஞ் செய்துகொண்டு வந்தவன். பல பிறவிகளுக்கு முன் சிவயோகி ஒருவருக்கு அன்னமிட்ட புண்ணியத்தால் நல்லறிவுதோன்றித் தன் பாபங்களை ஒரு வேதியர்க்கறிவித்துத் தீர்வு உணர்ந்து ஸ்ரீ சிதம்பர தரிசனம் கண்டு முத்தியடைந்தவன். (சூதசம்மிதை.)

**துற்கன்** — ஒரு அசுரன்; இவன் தேவர்களை வருத்திச் சிறையிடத் தேவர் சிவமூர்த்தியிடம் முறையிட்டனர். சிவமூர்த்தி பிராட்டியை ஏவப் பிராட்டி காளராத்திரி யென்னுந் தோழியை ஏவித் தேவர் சிறைவிடுவிக்கக் கூறுவித்தனள். காளராத்திரி சென்று கூற, அசுரன் இவளது அழகைக் கண்டு மயங்கிப் பற்றச் சில அசுரரை ஏவினன். காளராத்திரி அந்த அசுரரை உங்காரத்தாற் சாம்பராக்கித் தேவியிடம் கூறினள். இதற்குள் அசுரன் தேவியிடம் சென்று யுத்தம் புரிந்து தோற்று யானையுருக்கொண்டு யுத்தத்திற்கு வந்து துதிக்கை யறுபட்டு மீண்டு எருமை யுருக்கொண்டு வந்து சூலத்தாற் குத்துண்டு ஆயிரம் கைக்கொண்டு அத்திரம் எறியப் பிராட்டி ஒரு அத்திரம் எறிந்து உயிர் மாற்றினள். இவன் உரு என்னும் அசுரன் குமரன். (காசிகாண்டம்).

**துற்கி** — துற்கனைக் கொன்ற சத்தி.

**துற்துணன்** — 1. சூரபன்மன் மந்திரி.

2. இவன் சகோதரன் துராசாரன். இவ்விருவரும் மதிமான் என்னும் அரச குமரர் தீமை செய்தலால் தந்தையால் நீக்கப்பட்டுக் காட்டில் ஒரு வேதியருக்கு உதவி புரிந்து நலமடைந்தவர்.

**துற்சடை** — திருதராட்டிரன் பெண்; இவள் கணவன் சயிந்தவன் அல்லது சயத்ரதன்; இவளுக்குத் துற்சலை யெனவும் பெயர்.

**துற்சலை** — துற்சடையைக் காண்க.

**துற்பான்** — படச்சாருக்கு அரசன்.

**துற்புத்தி** — காமதையைக் களவிற் புணர்ந்தவன்.

**துற்முகி** — அசமுகிக்குத் தோழி.

**துற்றேரிசநன்** — ஒரு வேடன்; இவன் வழிபறித்துத் திரிகையில் சிதம்பரத் தலத்திற்குச் சிவ தரிசனத்திற்கு வரும் வேதியனிடமிருந்த குடையையும் பொருளையும் பறித்து மீண்டும் பிராமணனுக்குக் குடையைக் கொடுத்தனன். அக்குடை பெற்ற வேதியன் வேறொருவன் வெயிலில் வருந்தக் கண்டு அதைப் பிடித்த புண்ணியத்தினால் முத்தி பெற்றவன்.

**துன்பவணி** — அஃதாவது, விரும்பப்பட்ட பொருளைக் குறித்து முயற்சி செய்ய, அதற்குப் பகைப் பொருள் கிடைத்தலாம். இதனை வடநூலார் விஷாதனாலங்காரம் என்பர்.

**துன்மதன்** — 1. திருதராட்டிரன் குமரன்.

2. சுபாலபரணன் குமரன், அரக்கன்.

3. மதுரையிலிருந்த வேள்விமானென்னும் பிராமணன் குமரன். தீயவழி நடந்து ஒழுக்கம் கெட்டதனால் தந்தை வெறுக்க அரசனால் ஊரைவிட்டுத் துரத்தப்பட்டுத் தில்லையில் சிவ தரிசனம் செய்வாருடன் சென்று தாசி யாடலைக் காணப்போய்ச் சிவதரிசனம்செய்து காட்டில் பாம்பு கடித்திறந்து தரிசனபலத்தால் யமபடரினின்று நீங்கி முத்தி யடைந்தவன்.

4. ஒரு வேடன்; வழி பறித்துத் தீயனாய்த் திரிந்து கடைசியாய் ஒரு வேதியனைக் கொலைபுரியச் செல்லுகையில் அவன் சொன்ன சொற்படி தானடைந்த பொருள்களைப் புண்ணியத்திற் செலவு செய்து நற்கதி யடைந்தவன்.

**துன்மந்திரன்** — ஒரு அசுரன்; இவனைச் சிவமூர்த்தி மந்திரத்தாற் கொன்று மந்திரயஞ்ஞர் எனப் பெயர் பெற்றனர்.

**துன்மருஷணன்** — திருதராட்டிரன் குமரன்.

**துன்மருடன்** — திருதராட்டிரன் குமரன்.

**துன்மனன்** — ஒரு வேதியன் துராசாரனாய் அரசன் அரண்மனையில் களவு செய்கையில் காவலாளர் துரத்த ஓடி மணிகன்னிகையில் வீழ்ந்து முத்தி பெற்றவன். (திருப்பூவண புராணம்).

**துன்மார்க்கன்** — 1. திருபதனுடன் பாரதப் போரில் யுத்தஞ் செய்தவன்.
2. பாரதப் போர்வீருள் ஒருவன்.

**துன்முகன்** — 1. திருதராட்டிரன் குமரன். 14-ம் நாள் வீமனு லிறந்தவன்.
2. நலன் என்னும் சூர்யகுலத் தாசன் குமரன். வாமதேவர்மீது ஏவிய அம்பால் மாய்ந்து மீண்டும் உயிர் பெற்றவன்.
3. இராவணன் மந்திரியரில் ஒருவன்; பதினறு கோடி சைந்யத் தலைவன், அநுமனால் இறந்தவன்.
4. துன்மருடன் குமரன்.
5. சூரபன்மன் மந்திரி.
6. ஒரு வானரத்தலைவன்.
7. இந்திரன் சபை நோக்கி வந்த கங்கையின் வஸ்திரம் வாயுவால் விலகி அங்கிருந்தவர் கண் மூடிக்கொள்ள இவன் மாத்திரம் அவளைப் பார்த்ததால் பூமியில் யயாதி புத்திரனுகப் பிறந்து கங்கையை மணக்கச் சாபம் பெற்றவன்.

**துன்முகி**—ஓர் அரக்கி, அயமுகிக்குத்துணைவி வீரமாகாளரால் கூந்தலறுப்புண்டவள்.

**துன்னர்** — ஒருவகை சாதியார். துணி முதலியவை தைப்போர், தோல் துன்னர் - செருப்புமுதலிய தைப்போர்.

**துஷர்சனன்** — திருதராட்டிரன் குமரன்.

**துஷிதர்** — இரண்டாமன்வந்தரத்துத்தேவர்.

**துஷிதை** — வேதசிரன் என்னும் ருஷியின் பாரி.

**துஷ்கிரமன்** — திருதராட்டிரன் குமரன்.

**துஷ்டகேது** — சிசுபாலன் குமரன். (அநுகிலாதனம்சம்.) தருமனுக்கு உதவி செய்தவன்.

**துஷ்ட தேவதைகள்** — பாமரர் சிலர் நீரில் இறந்த பெண்களைப் பாதாள பொன்னியம்மை எனவும், தீப்பட்டிறந்தவளை அக்கியம்மை எனவும், ஒருத்தியைப் புதைத்த இடத்தில் புற்றுக் கண்டால் புத்தம்மை எனவும், புற்றில் நாக மிருக்கக் கண்டால் நாகாத்தாள் எனவும், எந்தச் சாலையிலேனு மிறந்துகிடந்தவளைச் சாலாம்பாள்எனவும், பனையடியி லிறந்தவளைப் பனையாயி எனவும் வணங்குவர். (உ . வ.)

**துஷ்டநந்தன்** — திருதராட்டிரன் குமரன்.

**துஷ்டி** — 1. தக்ஷனுக்குப் பிரசூதியிடம் உதித்த குமரி, யமன் தேவி.
2. சுநந்தன் தேவி, இவளில்லா விடத்துக் களிப்பில்லை.

**துஷ்டிமந்தன்** — கஞ்சன் தம்பி.

**துஷ்டிமான்** — உக்கிரசேநன் குமரன்.

**துஷ்பதருஷணன்** — திருதராட்டிரன் குமரன்.

**துஷ்யந்தன்** — துட்டியந்தனைக் காண்க.

**துஸ்வாஸன்** — பதினேழாநாள் யுத்தத்தில் வீமனுல் கொல்லப்பட்டவன்.

## தூ

**தூக்கணங்குருவி** — இது ஊர்க்குருவிபோல் மஞ்சணிறமாம். கழுத்தில் கறுப்பு நிறம் வாய்ந்த சிறு பறவை. சுறுசுறுப்புள்ளது. இனத்துடன் வாழ்வது. இது பனை தென்னை ஈந்து முதலியவற்றின் நரம்புகளை அலகால் கிழித்து மரங்களில் கூடு கட்டும். இது அக் கூடுகளை மரத்தில் தொங்கும்படியாகப் பின்னிப் பின்புறம் வழியும் உள்ளில் பல அறைகளையும் செய்து முட்டையிட்டபின் குஞ்சுகளுக்கு வெளிச்சத்தின் பொருட்டுச் சேற்றைக் கூண்டினுள் அப்பி அதில் மின்மினிப் பூச்சுகளை வைக்கும். இதை மஞ்சள் குருவி யென்பர்.

**தூக்குமரம்** — கடுங்கொலை செய்தோரைத் தூக்கி உயிர் போக்கு மரம். இது நீண்ட கோலில் குறுக்கிட்ட சட்டமிட்ட வடிவது. அதில் கழுத்தில் கயிறிட்டு உயிர் போக்குவர்.

**தூக்கு** — தாளங்களின் வழிவரும் பேதம்; அது தான், செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு என எழு வகைப்படும். அவை "ஒருசீர் செந்தூக்கு, இருசீர்மதலை, முச்சீர்துணிபு, நாற்சீர்கோயில். ஐஞ்சீர்நிவப்பே, அறுசீர்கழாலே, எழுசீர்நெடுந்தூக்கு, என்மனுர் புலவர்" என்பதனுல் அறிக.

**தூங்கலோரியார்** — இவர்; தழும்பனையும் அவனது ஊனூரையும் பாடியதாக "வாய்வாட்ட மிழகப்படுத்தவிமிழிசை முரசின் வருநர்வரையாப் பெருநாளிருக்கைத் தூங்கல் பாடிய வோங்குபெரு நல்லிசைப்பிடி மகிழூறு துணைப் பெரும்பெயர்த் தழும்பன் கடிமதில். வரைப்பினூ ணூரும் எனும் கணக்காயனர் மகனர் நக்கீரனர் (அகம் உகசு-ல்) புகழ்ந்து கூறியுள்ளார். அங்ஙனம் இவர் பாடிய பாடல் காணப்பெருமையின் அழிந்ததுபோலும். இவர் மருதத்திணையையும் பாலைத்திணையையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியன

வாக நற்றிணையில் கூ0-ம் பாடலொன்றும், குறுந்தொகையில் இரண்டுமாக மூன்று பாடல்கள் இருக்கின்றன.

**தூங்குழஞ்சிமரம்** — இந்தியாவில் சாலைகளில் நிழலுக்காக வளர்க்கு மரங்களில் ஒன்று. இது சூரிய னஸ்தமிக்கும் மாலைக் காலத்து இலைகளைச் சுருக்கிக்கொண்டு உதயத்தில் விரிந்திருக்கிறது.

**தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன்** — அகத்தியர் சொற்படி முதலிற் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரவிழாச் செய்வித்த சோழன். ஆகாயத்தில் செல்ல வல்ல மூன்று கோட்டைகளை வாளாலெறிந்து அசுரரைவென்று சுவர்க்கத்தைக் காத்தவன். (மணிமேகலை).

**தூசங்கொளல்** — சித்திரக்கவியில் ஒன்று. ஒருவன் ஒரு வெண்பாச் சொன்னால் அதனீற்றெழுத்தே ஈருக, அதன் முதலெழுத்தே முதலாக மற்றொரு வெண்பாவின் ஈற்றினின்று மேற் பாடுவது. (யாப்பு வி.)

**தூணன்** — 1. விஸ்வாமித்திர புத்திரன்.

2. குபேரன் தூதன்.

**தூதபாவை** — பஞ்சநதத்தைக் காண்க.

**தூதலக்ஷணம்** — நற்குடியிற் பிறந்தானாகவும், சகல சாஸ்திரம் அறிந்தவனாகவும், கண் சிமிட்டுதல் முதலிய சாடைகள் சிட்டிக்கைப்போடுதல் முதலிய செய்கைகள் இவற்றினைக் கைகண்டறிபவனாயும், பொருள் விருப்பில்லாதவனாயும், சமர்த்தனாயும், நற்குலத்தில் பிறந்தவனாயும் இருப்பவன் தூதனாவான். அத் தூதன் சகலரையும் சிநேகிப்பவனாகவும், அன்புளானாகவும், ஞாபகமுளானாகவும், தேசகாலங்களை அறிந்தவனாகவும், தேகபுஷ்டி யுள்ளவனாகவும், பயமிலானாகவும், பல பாஷைகளைப் பேசுகிறவனாகவும், சத்துரு இடத்தில் மறைந்து சென்று அவன் செய்கை, அபிப்பிராயம், அவன் சேனையின் அபிப்பிராயம், பலம், இச்சை இவைகளை அறிபவனாகவும், சத்துருவினிடம் சென்று அவன் செய்கைகளை அறியுமிடத்துத் தனக்குத் தீங்குநேராது தப்பித்துக் கொள்பவனாகவும் இருத்தல் வேண்டும். இவ்வகைத் தூதன், தான் வகுத்துக் கூறுவான், கூறியது கூறுவான் என இருதிறப்படுவன். பின்னும் வேற்றரசர் இடஞ்சென்று பேசும் பொழுது தான் காரியங்களைத் தொகுத்துச்சொல்லி அவனுக்கு ஆகாதகாரியங்களை அறிவிக்கும் இடத்துக் கொடுஞ்சொற்களை நீக்கி நகை விளைக்கும் சொற்களைக் கூறியும், தான் எடுத்த காரியத்தைப் பகைவர் மனங்கொளக்கூறி அவர் கோபிக்கினும் அஞ்சாது காலத்தோடு பொருந்த அது முடிக்கத்தக்க உபாயம் அறிபவனும், பகைவரிடம் செல்லும் காலம், சென்றகாலம், சொல்லும் இடம் அறிந்து தான் கூறப்போம் விஷயத்தை முன்னே விசாரித்து உரைப்பவனும், பகையரசரது அமைச்சர்களைத் தம் வசமாக்கும் வன்மை உடையவனும் தூது கூறத்தக்கவனாவான். இவ்வகைச் செய்கை உடையானை அரசன் தூதாகக் கொள்ளல் வேண்டும். (மநு)

**தூதன்** — பிறருடைய இங்கிதம், ஆகாரம், செயல்களை யறிதல், மறவியின்மை, காலம் இடம் அறிந்து செய்தல், சந்திவிக்ரம் முதலிய ஆறு குணங்களையு மாராய்ந்தறிதல், சொல்வன்மை, அஞ்சாமை முதலிய குணங்களுடையவன். (சுக் - நீ.)

**தூதிடையாடல்** — யுகம்போன்ற மாலைக்காலத்துத் தலைவியுற்ற துன்பத்தைப் பார்த்துத் தோழி விட்டு நீங்காளாய்த் தலைவனிடத்தே தூதாகி நடந்தது. (பு. வெ. பெருந்திணை.)

**தூதிற்பிரிவு** — இருவரசரும் தம்மிற் பொரா நின்ற இடத்து அவரைச் சந்து செய்வித்தற்குப் பிரிதல். இது, தலைமகனுணர்ந்த தோழி தலைமகட்குரைத்தல், தலைவி முன்பனிப்பருவங் கண்டு வருந்தல், தோழி யாற்றுவித்தல் முதலிய.

**தூபம்** — பிசின்களானும், கட்டைகளாலும் உண்டாக்கப்படுவன. தேவர்களுக்கு மணமுள்ளவைகளான பிசின்களால் தூபமளிக்கவேண்டும் தேவதைகளுக்கு வேறு உக்கிரமான கட்டைகள் முதலிய புகை அமைத்தல்வேண்டும். இது பலிக்குச் சுக்ரர் கூறியது. (பார - அநுசா.)

**தூபயந்திரம்** — பெருத்த குண்டுசட்டியில், சரக்கை வைத்துச் சட்டி வாயில் சல்லடை போன்ற சீலை கட்டிப் பொருத்தமான மேல்சட்டி மூடி யெரிப்பது.

**தூபலகன்** — கிருஷ்ணனால் கொலையுண்ட மல்லன்.

**தூப்புல் அப்பை** — தேசிகர் திருவடி சம்பந்தி.

**தூப்புல்குல முடையார்தாசர்** — மணவாள மாமுனிகளுக்கு ஒரு பெயர்.

**தூப்புல்பிள்ளை** — வேதாந்த தேசிகரைக் காண்க.

**தூமகீர்த்தி** — குந்திபோசன் குமரன்.
**தூமகேது** — 1. பிருது சக்கிரவர்த்திக்கு அர்ச்சிசு இடத்திலுதித்த குமரன்.
2. விநாயகருக்கு ஒரு திருநாமம்; இவர் சரிதையைத் தூமாசுரனைக் காண்க.
3. மேககூடத்தரசன்.
**தூமப்பர்** — ஒரு இருடி; மங்கணசித்தரைக் காண்க.
**ரமவதி** — ஒரு தீர்த்தம்.
**ரமன்** — ஒரு வாநரசூரன்.
**ரமாசுரன்** — இவன் முற்சநகத்தில் விகுதி யென்னும் அரசன்; இவன் இந்திரபதம் பெற (கக) யாகமுடித்துக் கடைசியாகஞ் செய்கையில் இந்திரனால் ஏவப்பட்ட நாரதர் இவனிடஞ்சென்று இவன் மனைவியைக் கேட்க இவன் மறுத்தமையால் யாகத்தை அழித்து மறுசநகத்தில் அசுரனுகச் சபித்தனர். இவன் அசுரனாய்த் தேவ இருடியரை வருத்தி வருகையில் அசரீரி, சுமுதையிடம் பிறக்கும் சிசு உன்னைக் கொல்லுமெனக் கேட்டுச் சுமுதையையும் அவள் கணவன் மாதவராசனையும் மஞ்சத்துடன் காட்டிற்கொண்டு போய்விட அவ்விடம் விநாயகமூர்த்தி இவர்களுக்குக்குழந்தையுருவாய்த் தரிசனம் தந்து வளர்ந்து வந்தனர். இவர் வளர்ந்து அநேக அசுரரைக்கொன்ற செய்தியை மாதவராசன் கேட்டுச் சண்டை செய்யவர விநாயகமூர்த்தி, தமதுவாயில் புகையுண்டாக்கிச் சேனை முழுதும் கொன்றனர். இதனால் விநாயகருக்குத் தூமகேதுமூர்த்தி யெனவொருதிருநாமம் உண்டாயிற்று.
**தூமாசுவன்** — சுசந்திரன் குமரன்; இவன் குமரன் சிரஞ்சயன்.
**தூமாதிபஞ்சகிரகங்கள்** — தூமன், விதிபாதன், பரிவேடம், இந்திரதனுசு, தூமகேது.
**தூமாதிபுடம்** — சுத்தாதித்யன் புடத்தை வைத்து, அதில் நான்கு இராசியும் பதின்மூன்று பாகையும் கூட்டி நின்றநிலை தூமபுடமாம், இதனை மண்டலராசியிற் களைந்து நின்றது வியதிபாதபுடமாம், இதில் (சு) இராசி கூட்டப் பரிவேஷபுடமாம், இதனை மண்டலராசியிற் களைந்து நின்றது இந்திரதனுப்புடமாம். (விதானமாலை).
**தூமாதிமார்க்கம்** — பித்ரு லோகத்திற்குப் போகும்வழி. ஆன்மாக்கள், தாம்செய்த அக்னிஹோத்ர தூமத்தை மார்க்கமாகக் கொண்டு செல்வராதலின் இம்மார்க்கத்திற்கு இப்பெயர் வந்தது.
**தூமாக்ஷன்** — இராவணன் மந்திரிகளில் ஒருவன். பிணந்தின்பவன்; அநேக ராக்கதருக்குத் தலைவன். இந்திரசித்துக்குத் துணையாய்த் தேருடன் வந்தவன். அநுமனால் இறந்தவன். தூம்ராக்ஷன் எனவும் பெயர்.
**தூமோர்ணை** — யமன் மனைவி.
**தூம்பாகேது** — 1. பாதனுக்குப் பஞ்சசேநியிட முதித்த குமரன்.
2. திரணபிந்து குமரன்.
3. தநுபுத்ரன்.
**தூம்பிராசுரன்** — சும்பநிசும்பரின் மந்திரி கௌசிகி தேவியிடம் யுத்தஞ் செய்யச் சென்று மரணமடைந்தவன். (தேவி.பா.)
**தூம்பிராணிகன்** — பிரியவிரதன் பேரன்; மேதாதியின் குமரன்.
**தூம்பிராஷ்டன்** — யமசந்திரன் குமரன்.
**தூம்ராகேசன்** — கிரிசாசுவனுக்கு அர்ச்சசியிடம் பிறந்த குமரன்.
**தூம்ரலோசநன்** — ஒரு அசுரன்; காளியினால் கொல்லப்பட்டவன்.
**தூம்ராசுவன்** — நபாகனைக் காண்க.
**தூம்ரை** — பிரசாபதியின் மனைவி; குமரன் வருணன்.
**தூயமுனிவேழவன்** — உடையவர் திருவடி சம்பந்தி; திருமஞ்சன கைங்கர்யபரர்களில் ஒருவர்.
**தூரச்ரவணயந்திரம்** (Telephone) — இது, தூரத்திலுள்ள ஓசைகளைக் காதிற் கேட்கும்படி தந்திமூலமாய்ப் பொருத்திய குழல் வடிவமைந்தது. இது பேசுவானுக்கும் கேட்பானுக்கு மிடையில் குழலில் பொருத்தி யிருக்கும் தந்தி வழியாய்ப் பேசுவானுடைய ஓசையைக் காற்றுக்கொண்டு செல்வது. இது, ஓசையின் அணுக்களின் வேகத்தைக் காற்று கொண்டு சென்று கேட்பானுக்கு அறிவிப்பதுமாம். மின்சார வழியாலும் செல்லுவது.
**தூரதிருஷ்டிக் கண்ணாடி** — தூரத்திலுள்ள பொருள்களை அருகிற் காட்டும் கண்ணாடி.
**தூராசுரன்** — ஒரு அசுரன்; சிவமூர்த்தியால் கொலையுண்டவன்.
**தூர்ச்சடி** — சிவலிங்கரன்.
**தூர்த்தன்** — 1. (ச) குசன்குமரன்.
2. துரியோதனன் சகோதரன்.
**தூர்வாசசிவர்** — சைவபத்ததிசெய்த சிவாசாரியருள் ஒருவர்.
**தூர்வாசம்** — ஒரு தீர்த்தம்.
**தூர்வாக்ஷி** — வசுதேவர் தம்பியாகிய விருகன் தேவி.

**தூலகர்ணன்** — ஒரு காந்தருவன்; சிகண்டிக்குப் புருஷத்வம் கொடுத்துச் சிகண்டியின் ஆயுள்வரையில் தான் பெண்ணுருப் பெற்றிருந்தவன்.

**தூலகேசன்** — பிரமத் துவரையை வளர்த்து ருருவுக்குக் கொடுத்த இருடி.

**தூலசிரசு** — 1. ஒரு இருடி; தனுவென் பவனைக் கபந்தனுகச் சபித்தவர்.

2. இவர் மேருவின் ஈசானத்தில் தவம் புரிந்தார். இவர்மீது வாயு குளிர்ந்து வீசினன் அதனுல் களிப்புற்ற இவர் விருக்ஷங்களை நோக்கி நீங்கள் சோபையைச் செய்தலால் நீங்கள் எக்காலத்தும் புஷ்பங்களும் பழங்களும் பெறுதிருக்கவென்று சபித்தனர். (பார - சாந்.)

**தூலசிரன்** — ஒரு அரசன்; விதூமனைக் காண்க.

**தூலபீடம்** — சத்திபீடங்களில் ஒன்று.

**தூவலகன்** — கிருஷ்ணனுல் கொல்லப்பட்ட அசுரன்.

**தூஷதர்** — ஒரு தேவ வகுப்பினர்.

**தூஷ்ணன்** — 1. விசிரவசுவிற்குக் கலையிடம் பிறந்த குமரன்; அசுரன். இவன் சூர்ப்பநகையேவலால் இராமமூர்த்தியிடம் வந்து நெற்றிக்கு நேராய்ப் பாணத்தைவிட இராமமூர்த்தி அதனைத்தடுத்து ஒரு அம்பு எய்ய இறந்தவன்.

2. இரத்தனமாலா பர்வதத்தி விருந்த தைத்திய அரசன். இவன் சிவ பூஜாதுரந்தரராகிய வேதியர்களை வருத்தியதால் சிவபெருமான் ஒரு வழியிலிருந்து உக்ரவுருவத்துடன் எழுந்தருளி அசுராதியரைக் கொன்றனர். இச்சிவமூர்த்தி தோன்றிய இடம் மகாகாளேசுரம்.

## தே

**தேசாதனன்** — சுதேசு குமரன்; இவன் குமரன் சங்கதன்.

**தேண்டகன்** — (தண்டனை செய்வோன்.) அரசன் சூத்திரகன்னிகையைப் புணரப் பிறந்தவன்.

**தேண்டன்** — இக்ஷுவாகு குமரன்.

**தேத்தசுவாலாதூமதோஷம்** — பாபக்கிரகங்கணின்று கழிந்தநாளும், நின்றநாளும், நிற்கப்புகுகிற நாளும், தெத்தசுவாலாதூம நாள் என்று பெயர். இந் நாட்களில் சுபங்கள் கூடா. இந் நாட்களுடன் கூடிச் சந்திரன், சுக்ரன் கடந்துபோதல், உடனிற்றல், நோக்குதல் செய்யின் நன்றும். (விதான.)

**தேமனி** — கிலாதன் தேவி.

**தேய்வத்துக்காசுநம்பி** — ஆளவந்தார் குமரர், மணக்கால் நம்பியின் திருவடிசம்பந்தி. இவர் குமரர் பெரிய திருமலைநம்பி. குமரியர், பூமிபிராட்டி. பெரிய பிராட்டி.

**தேய்வப்பெருமாள்** — ஆளவந்தார் திருவடி சம்பந்தி.

**தேய்வயானி** — சுக்கிரன் பெண்; யயாதியின் பாரி. இவள் வியாழபகவான் புத்திரனுகிய கசன் சாபத்தால் யயாதியை மணந்தனள். இவளும் சன்மிஷ்டையும் நீர் விளையாடச்சென்று முடிவில் அறியாது இவள் வத்திரத்தைச் சன்மிஷ்டை உடுத்திக்கொள்ள இவள் கோபித்தனள். அதனுல் சன்மிஷ்டை இவளை வெறுத்துக் கிணற்றில் தள்ளினள். கிணற்றிலிருந்த இவளை அவ்வழிவந்த யயாதிகண்டு எடுத்துவிட இவள் அரசனை மணந்து தனக்குத் தீமைசெய்த சன்மிஷ்டையையடிமையாக்கிக் கொண்டவள். பின் யயாதி சன்மிஷ்டையிடம் ஆசை கொண்டிருந்ததைப் பிதாவிடங்கூறிப் புருடனுக்குச் சாபம் வருவித்தவள். இவளிடத்து யயாதியாலுண்டான குமரர், எது, துருவசு. இவள் மணங்கொள்ளாததற்கு முன் மிருதசஞ்சீவினி மந்திரத்தின் பொருட்டுத் தன் பிதாவிடம் வந்து அவற்கு வேண்டிய உபசாரங்களைச் செய்திருந்த கசனை அசுரர் பலவிதத்திலும் கொன்றதுகண்டு தந்தையிடங்கூறி உயிர்ப்பிக்கச்செய்து கடைசியில் தன் எண்ணத்தைக் கசனுக்குக் குறிப்பிக்க அவன் உடன்படாததினுல் மிருதசஞ்சீவினி மந்திரம் கசனுக்குப் பலியாதிருக்கச் சாபமிட்டவள்.

**தேய்வயானை** — இவள், விஷ்ணுவின் குமரியா யவதரித்துச் சரவணப் பொய்கைக் கரையில் குமாரக்கடவுளை மணக்கத் தவமியற்றினள். இவளெதிரில் குமாரக்கடவுள் தரிசனந்தந்து நீ இந்திரனிடம் வளருக; நாம் உன்னை மணக்கின்றேமெனத் திருவாய் மலர்ந்து மறைந்தனர். அக்கட்டளைப்படி தவத்திலிருந்து நீங்கிக் குழந்தையுருக்கொள்ள இவளை ஐராவதம் என்னும் வெள்ளையானை வளர்த்து இந்திரனிடம் கொடுத்தது. இவள் யானையால் வளர்க்கப்பட்டதால் தெய்வயானை எனப்பட்டனள்.

**தேய்வலோகம்** — (சு) (1) மகாராஜிகலோகம், (2) திரயத்திரிம்சத்லோகம், (3) யாமலோகம், (4) துஷிதலோகம், (5) நிருமாணாதிலோகம், (6) பாநிருமிதவசவிருத்திலோகம். இது பௌத்தநூலிற் கண்டது.

**தேய்வவன்மன்** — சுமந்தமுனிவரிடம் புராணங்கேட்டுச் சித்திபெற்ற அரசன்.

**தேய்வவாரியாண்டான்** — ஆளவந்தார் திருவடிசம்பந்தி.

**தேய்வீகமகாராஜன்** — இவன் நடுநாட்டை ஆண்ட அரசருள் ஒருவன். இவன் கல்யாணத்தில் ஔவைசென்று, பாலாறு, செய்யாறு, பெண்ணையாறு இம்மூன்றினையும் முறையே பால், நெய், வெண்ணெயாக வரும்படி எவினள். ஆதலால் அவ்வாறு வந்தனவென்பர். சிவமூர்த்தி தனித்து இருக்கையில் பர்வதராஜன், காணச் சென்று சாபம் அடைந்து குகமுனிவர் யாகத்தில் பிறந்து தெய்வீக அரசனென்று பெயர் பெற்றனன். இவன் தெய்வப்புரவி ஊர்ந்து காசி, சிதம்பரம், இராமேச்சுரத்தை நாள்தோறும் தெரிசித்து வருவன். இவனிடமுள்ள குதிரையைப் பிடுங்க ஆவல்கொண்ட தமிழ்நாட்டரசர் மூவரும் மந்திரியரை எவிக் குதிரையைக்கேட்டு அனுப்பினர். அரசன் மறுத்தமையால் மூவரசரும் யுத்தசந்நத்தராய் நாங்கள் தோற்பின் எங்கள் கன்னியரைத் தருகின்றோம்; நீர் தோற்பின் உமது குதிரையைத் தருக எனப் பந்தயம் இட்டு யுத்தத்தில் தோற்றுத் தம்து கன்னியரை அரசனுக்கு மணப்பித்தனர். இவன் காரண்டன், வல்லூரன் எனும் இரண்டு அசுரரை வதைத்துப், பாண்டியன் புத்திரியாகிய காஞ்சனமாலையை மணந்து, நரசிங்கமுனையரையநாயனாரைப் பெற்றுச் சோழன் புத்திரியாகிய பொன்மாலையிடம் மெய்ப்பொருள் நாயனாரைப் பெற்றுச் சேரன் குமரியாகிய பத்மாவதியிடம் சித்திரசேநனைப் பெற்று முத்தி அடைந்தனன். இவன் வழியில் நந்தமான்வம்சம், சுதர்மான்வம்சம் மலையமான்வம்சம் உண்டாயின.

**தேரிநிலைவினை** — செயலையுங் காலத்தையும் வெளிப்படையாகத் தெரிவிப்பது. (நன்.)

**தேலிபோன் (Te'ephone)** — தூரத்திலுண்டாம் ஓசையை மீண்டும் மின்சார சக்தியால் தெரிவிக்கும் கருவி.

**தேலுங்கச்சோமையர்** — இவர் கலியாணநகரத்திருந்த வீரசைவ அடியவர். இவர் சிவபூசைக்குப் புட்பத்தின் பொருட்டுச் செல்ல அவ்விடமிருந்த காடிகளிரண்டு தமக்குச் சிவாநந்த முனிவரா லுண்டான சாபத்தை நீக்க வேண்டின. அவ்வகையே அவற்றிற்குக் காந்தருவ உருவத்தைக் கொடுத் தநுக்கிரகித்தவர்.

**தேலுங்கு** — திரிலிங்கதேசம் காண்க. இது கண்ணுவரால் ஏற்படுத்திய பாஷையென்பர். இதன் எழுத்து, உச்சரிப்பு முதலிய வடமொழியை யொத்திருக்கும். இதில் பல சிறந்த நூலாசிரியர்கள் பற்பல இலக்கண நிரம்பிய நூல்களியற்றி யிருக்கின்றனர்.

**தேளிவு** — இது வைதருப்பநெறியி லொன்றாகிய செய்யுணெறி. இது, கவியாற் கருதப்பட்ட பொருள் கேட்போருக்கு உளங்கொண்டு விளங்கத் தோன்றுவது. (தண்.)

**தேள்ளுப்பூச்சு** — இது பறக்காது, இரத்தத்தை உறுஞ்சும் பூச்சு வகையில் ஒன்று. இவ்வகையில் மாட்டுத் தெள்ளு, நாய்த் தெள்ளு முதலியவையும் உண்டு.

**தேற்காழ்வான்** — எழுபத்தினாலு சிங்காசனாதிபதியரில் ஒருவர். வைணவாசாரியர். (குருபரம்பரை.)

**தேற்பன்** — உசீநரன் குமரன்.

**தேன்அமேரிக்கா** — இது தீபகற்பம். இது வடக்கில் கொஞ்சங் குறைய மற்றப் பாகங்கள் கடலாற் சூழப்பட்டுள்ளது. இதன் தேசங்கள் கொலம்பியா, ஈக்வடார், வெனிசுலா, கயானா, பிரேசில், பெரு, பொலிவியா, உருகுவே, சில்லி, பாடகோனியா முதலிய.

**தேன்காஞ்சி** — இவர்கள் திருநெல்வேலி ஜில்லா தென்காசியிலிருந்து குடியேறினவர்கள். (தர்ஸ்டன்).

**தேன்திசை** — இது ஒரு வேளாண்பகுப்பு. இவர்கள் கோங்குவேளாளரைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கோயம்புத்தூர் ஜில்லாவில் இருக்கின்றனர். (தர்ஸ்டன்).

**தேன்பாண்டி** — தமிழ்நாட்டிலொன்று. திருநெல்வேலி.

**தேன்னவன்பிரமராயன்** — மாணிக்கவாசகசுவாமிகள் மந்திரியாக விருந்த காலத்துப் பாண்டியனால் தரப்பட்ட பெயர்.

**தேன்னலிராமகிருஷ்ணன்** — இவன் ஒரு வேதியன்; கிருஷ்ணதேவராயர் அரசாட்சியில் அவர் சமஸ்தானகவிகள் எண்பதின்மரில் இவன் விகடகவி; தெலுங்கநாட்டவன். இவன், பாண்டவர்க்கும் இராமருக்

கும் சிலேஷையாகப் பாரதகதையையும் இராமாயண கதையையும் ஒரு செய்யுளில் பொருந்தப் பாண்டரங்க விஜயமென ஒரு நூல் செய்திருக்கின்றனன். இவன் மகாகவி. இவன் காளியைத் தியானிக்கக் காளி (௧000) சிரங்களுடன் கோரவுருக் கொண்டு தரிசனந் தந்தபோது அவளைக் கண்டு அஞ்சாது அம்மே, எமக்கு ஒரு சிரம் ஒருமூக் கிருதொளை யிருந்து சலரோகம் கண்டால் துன்பம் அடைகின்றோம். உமக்குச் சலரோகங் கண்டால் ஆயிர மூக்கால் எப்படிச் சிந்துவீர் எனக் காளி இவனது அஞ்சாநிலைக்குக் களித்து விகடகவியாகுகஎன ஆசிர்வதித்துச்சென்றனள் இவனைதென்னாட்டார்திருவாழித்தான் என்பர்.

**தென்னை** — இது, நாணலின் சாதியில் ஒரு வகை. இது, மணற்பாங்கான உஷ்ணப் பிரதேசத்து விருக்ஷம். இது, (60 - 70) அடி வளரும். இதின் மடல்கள் ஒவ்வொன்றிலும் பல தனித்தனி இலைகள் உண்டு. நன்றாய் முதிர்ந்த நெற்றை மணற்பூமியில் நீர் பாய்ச்சினால் சில மாதங்களுக்குப் பின் முளை கிளம்பும். நாற்றுக்கள் ஏறக்குறைய வளர்ந்த பிறகு (10) அடிக்கு ஒன்றாக நடுவார்கள். நன்றாக வளர்ந்த மரம் (5) வருஷத்தில் பலன் தரும். இது (40 - 50) வருஷம் பலன் தரும். தென்னைமரம் இளநீர், தேங்காய், தேங்கா யெண்ணெய், கள், தென்னைவெல்லம் முதலிய பலன்களைத் தரும். ஓலையை வீடு மேய்வர், நரம்பால் துடைப்பம் முதலிய செய்வர், மட்டையால் நார் திரித்துத் தாம்புக்கயிறு திரிப்பர். அடிமரம் வீட்டு வரிச்சல் துண்டுகளாம். ஓட்டைப் பான பாத்திரமாக்குவர். இதன் வகை பல அவை செவ்விளநீர், பச்சையிளநீர், கேளி, மஞ்சள்கச்சி, அடுக்கிளநீர், கருவிளநீர், சோரி இளநீர், ஆயிரங்கச்சி, குண்டற்கச்சி யிளநீர், நக்கவாரி முதலிய.

**தேக்ஷசாவர்ணி** — வருணபுத்திரன்; ஒன்பதாமன்வந்தரத்து மநு.

**தேக்ஷணன்** — விஷ்ணு திக்பாலன்.

**தேக்ஷன்** — சித்திரசேனன் குமரன்.

## தே

**தேகத்தில் மர்ம ஸ்தானங்கள்** — புருவம், உச்சி, கண்டம், மார்பு, மார்பினடி, உந்தி, உதடு, பீசம், முழங்கால், கணுக்கால், இடுப்பு, காலின் பெருவிரல், சுட்டு விரல், தோள் இந்தப் பதினன்கு இடங்களாம். இவற்றில் அதிகாயம் படில் அசாத்யத்தை விளைக்கும். (ஜீவ.)

**தேக பலம்** — இது, மூன்று விதப்படும். அவை சகசபலம், காலபலம், யுத்திருதபலம் என்பன. சகசபலம் - வியாதியா லடிப்படாததாய் தந்தையருக்குப் பிறந்தவர்க்குச் சுபாவமாய் உண்டாவது. காலபலம் - பிண்டந்தரித்த காலத்தினாலும் யவ்வன காலத்தில் பிதாவிற் குண்டான புத்திரற் குண்டான பலம். யுத்திருதபலம் - சிலம்ப முதலிய பழக்கத்தினாலும், நன்றாகப் புசித்தலாலும், தாது விருத்திப் பொருள்களை உண்பதாலும் உண்டாவது.

**தேகளீசன்** — திருக்கோவலூரி லெழுந்தருளிய விஷ்ணுமூர்த்தி.

**தேங்காய்** — இது தேவர்க்கு நிவேதிக்கும் பொருள்களுள் விசேஷமானது. தேங்காயை ராசிகளினின்று சுத்தமானதாகப் பார்த்து அதில் பால்யம், விருத்தம் என்கிற மிக இளசும், அதிமுற்றலும் நீக்கி யௌவனம் என்கிற நடுத்திரமானதைக் கொள்ள வேண்டும். கொள்ளுமிடத்துத் துர்க்கந்தமானதும், கோணலுள்ளதும், அதிகீனமானதும், பின்னமானதையும், மழுமழுப்பில்லாததையும், கண்ணில்லாததையும், அதிதூலமானதையும், அதிசூக்ஷமமானதையும், குடுமியில்லாததையும், அழுகினதையும், நீர்வற்றினதையும், மற்றுமுள்ள குற்றமுள்ளவைகளையும் நீக்கித் தேங்காயைக் கனிஷ்டாங்குலமுள்ள சிகையுள்ளதாய்க்கொண்டு அதன் சிகையுடன் முகத்தின் பாகமாய்த் தேங்காயைப் பிடித்துக் கொண்டு அருகிலிருக்கிற கல்லின்மேல் காயைச் சாணளவு உயரத்தூக்கி மந்திரஞ் செபித்து ஒரே அடியில் இரண்டு பாகமாம் படி உடைக்கவேண்டும். அப்படி உடையின் அக்கார்யம் சுபத்தைத் தருவதும் தனதான்ய விருத்தியும் தருவதாம். முகத்தின் பாகத்தில் முக்கால்பங்கும், அடிப்பாகத்தில் காற்பங்குமாகவும், அல்லது அடிப்புறம் முக்கால்பாகமாகவும், மேற்புறம் கால்பாகமாகவும், உடையின் புருஷர் ஸ்திரீகளாகிய இருவருக்கும் அந்யோன்ய கலகம் விளையும். தேங்காய் பொடிப் பொடியாய் உடையின் தாம்கொண்ட கார்யம் நாசமாம். கண்ணின் புறமாக உடையின் எஜமானன் கெடுவன். முதன்மை

யான கண்ணின் நரம்பில் உடையின் ஆசாரியன் கெடுவன். தென்புறமாயுள்ள கண்ணின் நரம்பிலுடையின் கிராமமும், தன்னிருக்கையும் கெடும். வடபுறத்தின் கண்ணையடுத்த நரம்பில் உடையின் தன்னூரையாளும் அரசன் வேறுவன். தேங்காயின் முகம் உடைந்தால் க்ஷோபம் உண்டாம். நீண்டு உடையின் பயமுண்டாம். தேங்காய் உடைக்கத் தொடங்குகையில் கைவிட்டு நழுவி அப்பால் விழின் கர்ப்பத்தினுள்ள கருச் சிதையும், பல சுக்கல்களாய் உடையின் கிராமவாசிகள் பசியால் வருந்துவர். தேங்காய் உடைகையில் உள்ளில் நீரிலாதிருப்பின் மழை நீங்கும். குடுமியில்லாதிருக்கின் தனக்ஷயம். தேங்காயினுள்ள நீர் துர்க்கந்தமாயிருக்கின் இராஜ்யச் செல்வமாயினும் கெடும். தேங்காய் அழுகி நாறுமேல் மகாமாரியால் வருத்தமுண்டாம். இவ்வகை நேருமேல் அவ்வகைத் தேங்காயைநீக்கி வேறொரு யௌவனமாகிய தேங்காயை மூன்று கண்ணுள்ளதாய் இரண்டுபாகம் மூலபாகத்திலும், ஒரு பாகம் முதற்பக்கத்திலும், முகபாகத்தில் மூன்றுபாகமும், பின்புறத்தில் இரண்டு பாகமும் அல்லது இரண்டுபாகமும் சமமாகவேனும் உடைக்கின் சர்வசித்திகளும் உண்டாம். (ஸ்ரீ - காரணம்.)

**தேசம்** — (ருசு) அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம், ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கர்நாடம், காசம், காச்மீரம், காந்தாரம், காம்போஜம், கிராமம், குருகு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயம், கேரளம், கொங்கணம், கொல்லம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம், சிந்து, சீனம், சூரசேனம், சோழம், சோனகம், திராவிடம், துளுவம், தெங்கணம், நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டியம், புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், யுகந்தரம், வங்கம், வங்காளம், விதர்ப்பம்.

**தேசாயி** — இவர்கள் வடஆற்காடு ஜில்லாவில் உள்ளவர்கள். இவர்கள் தேசத்துக்குரியவராகத் தம்மைக் கூறுவர். இவர்கள் தலைவன் தேசாயி செட்டி யெனப்படுவன்.

**தேசிகப்பை** — ஓர் பரத்தை.

**தேசிகர்** — 1. வேதாந்ததேசிகரைக் காண்க. 2 ஒரு பண்டாரத்தார் வகுப்பின் பட்டப் பெயர்.

**தேசிக்குதிரைகால்கள்** — (உச) அவை: (1) கீற்று, (2) கடிசரி, (3) மண்டலம், (4) வர்த்தனை, (5) காணம், (6) ஆலீடம், (7) குஞ்சிப்பு, (8) கட்டுப்புரியம், (9) களியம், (10) உள்ளாளம், (11) கட்டுதல், (12) கம்பித்தல், (13) ஊர்தல், (14) கடுக்கல், (15) வாங்குதல், (16) அப்புதல், (17) அணுக்குதல், (18) வாசிப்பு, (19) குத்துதல், (20) நெளிதல், (21) மாறுகால், (22) இட்டுப்புகுதல், (23) சுற்றிவாங்குதல், (24) உடற்பிரிவுஎன்பனவாம்.

**தேசிங்கு ராஜன்** — நடு நாட்டில் செஞ்சியெனும் மலைக்கோட்டையை (1717-1723 A - D)-யில் ஆண்ட சுத்த வீரன். இவன் பெயர் ஜெயசிங்காக விருக்கலாம். இவன் கர்னாடக நவாபிடம் யுத்தஞ் செய்தான். இவன் சாததுல்லாவுடன் போரிட்டு மாண்டவன். (தென் ஆற்காடு கெஜட்டியர்).

**தேசோகநப்பர்**—பிரமன் சாயையிலுதித்த தேவர்.

**தேநவர்** — ஆயுள்வேதம் பயின்றவர். சுசுருதருக்கு நண்பர்.

**தேதிமழை** — ஆனிமீ 10உ, ஆடிமீ 8உ., ஆவணிமீ 6உ, புரட்டாசிமீ 4உ, ஐப்பசிமீ 2உ, கார்த்திகைமீ 1உ இந்தத் தேதிகளில் மழைபெய்ய வேண்டும்.

**தேநுமதி** — ஒரு தீர்த்தம்.

**தேயிலைச் செடி** — இது இருபதடி வளரக்கூடியது. இதனை அடர்ந்து (5-6) அடிகளுக்குமேல் வளர விடுகிறதில்லை. இது எக்காலமும் பசுமை நிறமாகவேயிருக்கும். ஒவ்வொரு வருஷமும் விதையெடுத்து வசந்தகாலம் வரையில் மணலில் புதைத்து வைப்பார்கள். பிறகு நாற்றுவிட்டு (10 - 12) அங்குலம் வளர்ந்தபின் பிடுங்கி நடுவார்கள். இது மேற்சொன்னபடி வளர்ந்தபின் அறுவடை செய்வார்கள். வருஷத்திற்கு (3)முறை இலை அறுவடை. இலையைப் பறித்து உலர்த்திக் குவியலாக வெகுநா ளிருந்தால் பழுப்படையும். இதினால் கறுப்புத் தேயிலையும், நிறம் பழுப்படையாத தேயிலையில் பச்சைத் தேயிலையும் செய்கிறார்கள். இந்த இருவகைத் தேயிலையும் நெருப்பில் வாட்டிப் பிறகு, கையினாலாவது யந்திரத்தினாலாவது சுருட்டுவார்கள். பிறகு இருப்புத் தட்டுகளில் வைத்து வாட்டுவார்கள். அப்போது அது பக்குவப்படும். இதில் கஷாயம் செய்து

சாப்பிடுகிறார்கள். குடலுக்கு வலிமை தரும். அதிகம் குடித்தால் பித்தம் செய்யும்.

**தேயு** — 1. இது உருவ தன் மாத்திரையிற் றோன்றிச் சத்தம் பரிசம், உருவமெனும் மூன்று குணமுடைத்தாய்ப் பாகஞ் செய்தல் முதலிய தொழிற்பட்டதாய் உயிர்கட்குபகாரமாய்ப் பொருள்களை விளக்குவதும் சுடுவதுமாகி நிற்பது: ஒன்றுவிக்குந் தொழிலாகிய கவர்ச்சியுமுடையது. இது, நெகடிவ், பாசிடிவ் எனும் காந்த சக்தியின் பேத விருத்திபெற்று உலகத்தை நிறுத்துவதற்கு ஆதாரமாய் எழுவகை நிற வேறுபாட்டிற்குக் காரணமாயிருக்கிறது. தற்கால ஆராய்ச்சி நூலார் தீயினிடத்து விளங்கும் எழுவகை நிறபேதங்களே ஒளிக்குக் காரணம் என்பர். இந்த எழுவகை ஒளி நிறங்களே அக்னிகோளமாகிய சூரியனிடத்துத் தோன்றுபவை. அவற்றைச் சூரியனுடைய எழு குதிரைகள் என்பர்.

2. இது தேயுத்தன்மை சாமான்யமுடையது. நித்யம், பரமாணுரூபம், சரீரம். சூரியலோகத்திற் பிரசித்தம், ரூபம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்வம், அபரத்வம், திரவத்வம், சமஸ்காரம் எனும் பதினொரு குணமுடையது.

**தேய்புரிப்பழங்கயிற்றனார்** — இவர் பாடலில் நெஞ்சமும் அறிவும் மாறுகொண்டிருத்தலால் என்னுடம்பு இரண்டு யானையாவிழுக்கப்பட்டுத் தேய்புரிப்பழங்கயிறு இற்றொழிவதுபோல அறிய வேண்டியது தானேவென்று கூறி அருந்தொடர் மொழியாகிய உவமையே இவர்க்குப் பெயராயிற்று. இயற் பெயர் புலப்படவில்லை. இவர் பாலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியது. நற். உஅச - ம் பாட்டு.

**தேநர்ந்தசோழன்** — அநபாயச் சோழனைக் காண்க.

**தேரை** — இது உருவில் தவளைபோலிருப்பது. சற்றுப் பெரிது. தேரையின் மேற்புறம் குமிழ்குமிழா யிருக்கும். அடிப்புறம் மஞ்சணிறமாயிருக்கும். இது தவளையைப் போல் தாவாமல் தத்திப்போம். இது நீரில் செல்லாது. சுவாசாயத்தாலும் நாசித்வாரத்தாலும் மூச்சுவிடும். பற்கள் இல்லை. தவளையைப்போல் பசைகொண்ட நாவால் ஆகாரத்தைத் தாவித் தின்னும். இது தன் விரோதிகளைத் தன் பின்பக்கத்துள்ள துர்நாற்ற நீரால் பீச்சியோட்டும். இது நீரருகிலுள்ள மரங்களின்மீதிருந்து முட்டையிடும், அம் முட்டைகள் தவளை முட்டைகள்போல வளர்ந்து தரைக்குவரும்.

**தேரையர்** — இவர் தருமசௌமியர் மாணாக்கர்; இவரை அகத்தியர் மாணாக்கர் என்று சிலர் கூறுவர். இவர், ஒருவருக்குத் தலைநோயிருந்த காலத்து அதைத் தீர்க்க அகத்தியருடன் செல்ல அகத்தியர் கபாலத்தை நீக்கிப் பார்க்கையிற் தேரையிருக்க அதையெடுக்கச் செல்லுகையில் இவர் தடுத்துத் தாம்பாளத்தில் நீர்காட்டின் அது குதித்து விழும் என அவ்வகைக் காட்ட அது குதித்து நீரில் விழுந்தது. இவ்வகைக் குறிப்பாகக் கூறியபடியால் தேரையர் எனப் பெயர் உண்டாயிற்று என்பர். இது கற்பனுகதை. இவர் வாதத்தால் உலகத்தைக் கெடுத்தலை அகத்தியருணர்ந்து இவரது உயிரை வரவழைத்தனர். பின் தேரையர் இராமதேவரென்னும் பெயரால் உலகத்தில் சிவித்திருந்தனர் என்பர். இதனையும் கற்பனுகதை யென்பர். இவர் செய்த நூல்கள் பதார்த்தகுண சிந்தாமணி, நீர்க்குறி நெய்க்குறி சாத்திரம், தைலவருக்கச் சுருக்கம். வைத்திய யமகவெண்பா, மணிவெண்பா, மருத்துப்பாரதம் முதலிய.

**தேர்** — இரும்பினுலாக்கப்பட்டதும், எளிதிற் செல்லத்தக்க உருளைகளையுடையதும், பரியங்க இருக்கையையுடையதும், தாமே தாங்கி அசையத்தக்க படிகளையுடையதும், நடுவமைந்த இருக்கையிலிருந்து நடத்தத்தக்க தேர்ப்பாகனை யுடையதும், அம்பு வாள் முதலிய போர்க் கருவிகளையுடையதுமான நடு விடத்தையுடையதும், விரும்பிய வண்ணம் நிழலைச் செய்வதும், அழகு மிக்கதும், சிறந்த குதிரைகளையுடையதுமானது அரசன் தேர்.

**தேர்மறம்** — தளிர்விரவின பூமாலையினையுடைய வலிய மன்னன் மிடைந்த மணித்தேரின் நன்மையைச் சொல்லியது. (புறவெண்பா).

**தேர்முல்லை** — கோபித்தெழும் அரசாகிய பகைவர் தம்முடைய நிலைமையை உறவாக்கி மீண்ட அன்பர்தம் தேர் வந்த படியைச் சொல்லியது. (பு. வெ. பொது).

**தேர்வண்கிள்ளி** — சோழன் நலங்கிள்ளிக்கு ஒரு பெயர்.

**தேர்வண்மலையன்** — ஒரு கொடையாளி, வடவண்ணக்கன் பெருஞ் சாத்தனாற்

பாடப்பட்டவன். சோழன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்குத் துணையாய் நின்று சேரமான் மாந்தரஞ்சேர லிரும் பொறையை வென்றான். (புற - நா.)

**தேவகங்கை**—தேவகுல்லியாவைக் காண்க.

**தேவகன்** — 1. ஆகுகன் குமரன்; இவன் குமரர் தேவவான், உபதேவன், சுதேவன், தேவவரதன்.

2. போஜகுலத் தலைவன்; தேவகி தந்தை; உக்ரசேனன் தம்பி, குமரி தேவகி.

3. உதிஷ்டரால் கௌரவியிடத் துதித்த குமரன்.

4. தருமர் குமரன்.

**தேவகி** — 1. சுவாயம்பு மன்வந்தரத்தில் பிரசன்னியெனும் பெயரடைந்தவள். இவள் போஜகுலத்தவனாகிய தேவகனுக்குக் குமரியாகப் பிறந்து வசுதேவரை மணந்து இருக்கையில் கம்சன், இவள் வயிற்றுதித்த எட்டாவது கரு உன்னைக் கொல்லுமென அசரீரிகூறக் கேட்டதால் சிறையிலடைக்கப் புருஷனும் தானு மிருந்தனர். இப்படியிருக்க இவளிடம் பிறந்த எழு கருக்களைச் சேதிக்க எட்டாவது கண்ணன் பிறந்து இடம்விட்டு மாறி மாயையை வருவித்திருத்தினர். கம்சன் சிசுவினைக் கொல்ல மேலெறிகையில் உன்னைக் கொல்பவன் நந்தகோபன்மனையில் வளருகிறான் என்று மாயை மறையக் கேட்டுச் சிறையிருந்து விடுவிக்க நீங்கியவள். இவள் குமரர் கிரதிவந்தன், சுதேக்ஷணன், மித்திரசேநன், ருசு, சமந்தன், பத்திராக்கன், சங்கருஷணன், ஸ்ரீ கிருஷ்ணன், சுபத்திரை. தன் வயிற்று இறந்த மைந்தரைப் பாதாளத்திருந்து கிருஷ்ணரால் தரவேண்டிக் கண்டு களித்தவள். இவள் வயிற்றில் சாபத்தால் இரண்யனுக் குதித்த மரீசி மைந்தர் அறுவரும் பிறந்தனர்.

2. விஷ்ணுவினம்சமான கபிலருக்குத் தாய்.

**தேவகிரி** — 1. தாருகாசுரன் பட்டணம்.

2. சதத்துரு யமுனை நதிகளுக்கு இடையிலிருக்கும் மலை.

**தேவதலத்தார்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவர் தேவகுலத்தார் என்பதால் அந்தணராகலாம். (குறு - ந.)

**தேவதுல்லி** — உத்கீதன் தேவி.

**தேவதுல்லியா**—பூர்ணிமா என்பவர் குமரி. இவள் அரியின் பாதப்பிரக்ஷாளனத்தால் தேவகங்கையாயினள்.

**தேவகூடம்** — ஒரு நதி.

**தேவசர்மா** — ஒரு வேதியன், அயோத்தியிலுள்ள சம்புதீர்த்தத்தில் நீராடிச் சுத்தனானவன்.

**தேவசன்மா** — 1. ஒரு வேதியன், இவன் விரும்பியதைத் தருகிறேனென்று கூறித் தராததனால் நரியுரு வடைந்தவன்.

2. ஒருரிஷி, மனைவி உரிசை. (சேது-பு.)

**தேவசாவர்ணிமநு** — பதின்மூன்றாமன்வந்தரத்துமநு. சாவர்ணிமநுவைக் காண்க.

**தேவசிரவசு** — சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரன்.

**தேவசிரேஷ்டன்** — ருத்திரசாவர்ணி மநுப் புத்திரன்.

**தேவசேநன்** — பிரசாபதியின் சேனாதிபதியரில் ஒருவன்.

**தேவசேநாபதி** — குமாரக்கடவுள்.

**தேவசேநாபதிபானு** — (சூ.) பானுவின் குமரன்.

**தேவசேனை**—1. அரிஷ்டநேமியின் பெண்.

2. இவள் பிரகிருதியின் ஆறாவது அம்சமானவள் ஆனதால் இவளுக்குச் சஷ்டியென்று ஒரு பெயர். பாலருக்கு அதிஷ்டான தேவதை, விஷ்ணு மாயாரூபிணி, பிள்ளைகளைக் காப்பவள், மாத்ருகைகளில் பிரசித்தி பெற்றவள், ஸ்கந்தமூர்த்தியின் தேவி. தைத்தியர்களால் ஆக்ரமிக்கப்பட்ட தேவர்கள்பொருட்டு இவள் சேனை ஆயினள் ஆதலால் தேவசேனையென இவளுக்குப் பெயர். இவள் சிசுக்களை ரக்ஷிப்பவள். இவள் சூர்யவம்சத்துப் பிரியவிரதன் வெகுகாலம் புத்திரரிலாது பெற்ற அருங் குழவியை இழந்து ஸ்மசானத்துச் சென்று குழந்தையை மார்பில் வளர்த்திக்கொண்டு வருந்தி மூர்ச்சித்திருக்கையில் பிரத்தியக்ஷமாய் அவ்வரசனுக்கு இறந்த குமரனையெழுப்பி யளித்தனள். (பிரம்மகைவர்த்தம்.) இவள் பூர்வம் பிரமனால் மானவிகமாய்ச் சிருட்டிக்கப்பட்டுக் கந்தமூர்த்திக்குக் கொடுக்கப்பட்டவள்.

3. சஷ்டி தேவியைக் காண்க.

**தேவசோழன்** — குலோத்துங்க சோழன் குமரன்; பிதாவைப்போல் (௬0) வருஷம் அரசாண்டு தன் குமரன் சசிசேகரச் சோழனுக்குப் பட்டம்கட்டி நற்கதி பெற்றவன்.

**தேவச்ரவசு** — வசுதேவன் தம்பி.

**தேவதத்தமுன்** — தேவதாசித்தின் குமரன்; தாய் ஆசூரி, தேவி தேவமதி, குமரன் பரமேஷ்டி.

**தேவதத்தம்** — 1. இந்திரனால் அருச்சுனனுக்குக் கொடுக்கப்பட்ட சங்கம்.

2. கற்கி ஏறும் குதிரை.

**தேவதத்தன்** — 1. நாகன், பாதாளவாசி.

2. அக்னிவேசன் தந்தை.

3. சீவகன் தோழன்.

4. அரிபுரத்தில் வணிககுலத் துதித்தவன்.

5. சத்யவிரதனைக் காண்க.

6. ஒரு காந்தருவன். இவன் மரத்திலேறிக் கனிபறிக்கையில் அக்கனியில் ஒன்று அடியில் தவஞ்செய்துகொண்டிருந்த துருவாச முனிவர்க்கெதிரில் விழுந்து இடையூறு விளைத்தமையால் அவரால் நாரையாகச் சபிக்கப்பட்டுச் சிவபூசையால் முத்தி பெற்றவன்.

7. (சூ.) உக்கிரசிரவசு குமரன்.

8. சத்தியவிரதனைக் காண்க.

9. பதுமயோனியைக் காண்க.

10. கௌதம புத்தருடைய நண்பன். அன்னத்தை எடுத்து வளர்த்த புத்தருடன் அன்னத்தைத் தர வாதிட்டவன்.

**தேவதரிசநன்** — திருவேங்கட மான்மியஞ் சொன்ன இருடி.

**தேவதாசித்** — சுமதியின் குமரன்; தாய் துருவசேனை; தேவி ஆசூரி; குமரன் தேவததிமுன்.

**தேவதாசியர்** — முதுநூலார் இவர்களை எழுவகையாகப் பிரித்திருக்கின்றனர். (1) தத்தை - இவள் தானே தன்னைத் தேவனுக்குக் கொடுத்தவள். (2) விக்கிரீதை - இவள் தேவாலய ஊழியத்திற்கு விற்கப்பட்டவள். (3) பிருஹுத்ய - தன் குலவிர்த்திக்காகத் தன்னைக் கோயில் ஊழியத்திற்குத் தந்தவள். (4) பக்தை - தன்னைப் பக்தியால் தேவனுக்கு ஒப்பித்தவள். (5) ஹரிதா - கடவுளால் வசப்படுத்தப்பட்டவள். (6) அலங்காரை - தன் தொழிலில் வல்லவளாய் அரசனால் கோயிலுக்கு அனுப்பப்பட்டவள். (7) ருத்ரகணிகை - சம்பளம் பெற்றுக் கோயில் வேலை செய்பவள். இவர்கள் வலங்கைத் தாசிகள், இடங்கைத் தாசிகளென இருவகையர். இவர்களில் வலங்கைத்தாசியர் இடங்கையாருக் கேவல் செய்யார்.

**தேவதாருவனம்** — தாருகாவனம் காண்க.

**தேவதா ஸ்நானோதக பிரமாணம்** — இது நியாய சபையில் வாதி பிரதிவாதிகளின் உண்மை யறியச் செய்விக்கும் பிரமாணங்களில் ஒன்று. இது, உக்ரமான துர்க்காதி தேவதைகளுக்கு அபிஷேகம் செய்வித்த ஜலத்தைக் கொண்டு (௩) முறை தீர்த்தத்தை (ஆசமனம்) உண்பிக்கவேண்டும். இவ்வாறு உண்டோர்களில் எவருக்காயினும் (௧௪) நாட்களுக்குள் இராஜீக தெய்வீகமான துன்பம் உண்டாக இல்லையோ அவன் சுத்தன். (யஞ்ஞவல்கியம்).

**தேவதேவி** — திருக்கரம்பனூரிலிருந்த தாசி; தொண்டரடிப் பொடியாழ்வாரைத் தன் வசமாக்க எண்ணி அவரை மயக்கமுடியாமல் கைங்கர்யபரையா யிருந்து ஒருநாள் மழையில் இவள் நனையக்கண்டு ஆழ்வார் தம்மிடத்தில் ஒதுங்க அழைக்கச் சென்று அவரைத் தம் மனப்படியிருக்க மயக்கித் தன் வீடு சென்றனள். ஆழ்வாரும் பின் சென்று பிரிவாற்றாது இருந்தனர். பெருமாள், பொற்கும்பாளம் ஆழ்வார் கொடுத்ததாயிவளிடம் கொடுத்தனர். இவள் வாங்கிக் கோயில் அதிகாரிகள் கேட்கையில் ஆழ்வார்மீது கூறினள். அதிகாரிகள் ஆழ்வாரைக் கேட்டனர். பெருமான், ஆழ்வார் அறியார் என்பதை அர்ச்சகர் மூலமாய்த் தெரிவிக்க வுணர்ந்து களித்துத் தனது திரவியம் எல்லாவற்றையும் பெருமாள் கைங்கர்யத்தில் செலவிட்டுப் பரமபத மடைந்தவள்.

**தேவதையார்** — தரணி திலகமெனும் நகரத்து ரதிவேகன் என்பான் ஒரு வித்யாதரன் ராஜகிருக நகரத்துள்ள பெரியோர்களை வணங்க நினைத்து உத்தரமதுரையில் சர்வகுப்திபட்டாரகரைப் பணிந்து தான் செல்லுங் காரியத்தைக்கூற அவர் அப்படியாயின் அந்நகரத்துள்ள ஸ்ரீரவதிதேவதையென்பாளுக்கு என் ஆசீர்வாதம் கூறுக என அவன் அங்கு வந்து தன் மாயையால் பிரமன், திருமால், சிவபெருமான், புத்தர், அருகர் போன்ற வடிவங்களை முறையே கொண்டு தருமோபதேசஞ் செய்தனன். இதனை யறிந்த அந் நகரத்தார் பலரும் வந்து தேவதையாரை அழைத்தார்கள். அவர், இது மாயம் என்று துணிந்து சொல்லி அங்கே போகாதிருந்தனர். பின் அந்த வித்யாதரன் தேவதையாரிடம் வந்து அவர் அடுப்பில் மூட்டிய நெருப்பைக் குளிரும்படி செய்ய, அவர் முன் மாயை செய்தோரும் நீரோ என்ன அவன் சர்வகுப்திபத்தாரகர் உமக்கு ஆசீர்வாதம் கூறினர். உமது தர்சன மகாத்மியத்தைப் பரீக்ஷிக்க

வேண்டி இவ்வண்ணம் என்னல் விக்ரியை பண்ணப்பட்டது. இவ்வகை சம்யந்த்வ சுத்தராயினர் இக்காலத் தெங்குமில்லை யென்று ஸ்தோத்தரித்து நமஸ்கரித்துப் போயினன். (சைநகந்தை).

**தேவத்துதி** — ஒரு ருஷி.

**தேவநதி** — கிராமணியின் குமரி; சுமேகசன் பத்ரி.

**தேவநாகம்** — ஐராவதக் கன்று.

**தேவநாயகர்** — இவர் மாகறலூர்த் தேவநாயகர் எனப்படுவர். இவர் புறப்பொருள் வெண்பாமாலைக்கு உரையாசிரியர் என்பர்.

**தேவந்தி**—கண்ணகியின் பார்ப்பனத் தோழியாய் மாநாய்கன் மனையில் வளர்ந்தவள். சாத்தன் என்னும் தெய்வத்தின் மனைவி. (சிலப்பதிகாரம்.)

**தேவந்தைமகருஷிகோத்ரன்**—சோழன் தன் பெண்ணை ஸ்ரீரங்கநாதருக்குத் திருக்கல்யாணஞ் செய்வித்த காலத்துக் கற்பூரதீபமிட் டருள்பெற்ற வணிகன்.

**தேவபத்தன்** — சசிவருணனைக் காண்க.

**தேவபர்வதங்கள்** — மகேந்திரம், மலயம், சஹ்யம், விந்தியம், உதயபர்வதம், பாரியாத்ரம், ஸ்ரீபர்பதம். (காரணம்.)

**தேவபாகன்** — 1. வசுதேவன் தம்பி.

2. சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரன்.

**தேவபாது** — கிருஷ்ணன் குமரர்.

**தேவபாசன்** — சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரன்.

**தேவபாண்டியன்** — இவன், கூன்பாண்டியன் மதுரையையாளுங் காலத்துத் திருநெல்வேலியை ஆண்டவன்.

**தேவபித்ருக்கள்**—கவ்யவாகர், அநலர், சோமர், யமர், அர்யம்ணர், அக்னிஷ்வாத்தர், பரிஹிஷி, ஆஜ்யபர், சோமபர்.

**தேவபீடன்** — (சூ.) கீர்த்திதரன் குமரன்.

**தேவபூதி** — கர்த்தமப் பிரசாபதியின் தேவி, கபிலருக்குத் தாய், சுவாயம்புமனுவின் பெண்; புத்திரனல் யோகமுணர்ந்து முத்தியடைந்தவள்.

**தேவப்பிரயாகை** — அளகந்தை நதி, கங்கையுடன் கூடுமிடம்.

**தேவமதர்** — ஒரு ருஷி; நாரதருடன் பிறப்பிற் சம்வாதம் செய்தவர். (பார - அச்வ.)

**தேவமதி**—தேவததிமுன் என்பவன் தேவி.

**தேவமித்திரன்** — மாண்டுகேயர் சிஷ்யன்.

**தேவமீடன்** — இருதிகன் குமரன், இவன் குமரன் சூரன். வசுதேவனுக்குப்பாட்டன்.

**தேவயானம்** — தெய்வவுலகம் போம்வழி.

**தேவயானி** — சுக்கிரனுக்கு ஊர்ச்சஸ்வதியிடம் உதித்த குமரி. யயாதியின் தேவி. தெய்வயானியைக் காண்க.

**தேவரவணம்** — ஒரு வித்யாதர நகரம்.

**தேவராவிவிருதன்** — சாத்துவதன் குமரன்; இவன் குமரன் புரு, பப்புரு இவர்களால் (கoகூ) பெயர் முத்தியடைந்தனர்.

**தேவரக்ஷிதா** — தேவகன் குமரி, வசுதேவன் பாரியாள்.

**தேவரக்ஷிதை** — வசுதேவன் தேவி. குமரர் நவசாத்திரன், கேதன்.

**தேவராசபட்டர்**—யதுகிரிப் பெருமாளுக்கு உடையவர் சொற்படி புரோக்ஷண முதலிய செய்த நம்பியார்.

**தேவராசபிள்ளை** — வல்லூரினர். சைவர், சூதசங்கிதை தமிழில் இயற்றியவர்.

**தேவராசப்பெருமாள்** — நடாதூர் தேவராசப்பெருமாளைக் காண்க.

**தேவராசன்** — 1. விஷ்ணுமூர்த்தி.

2. இந்திரன்.

**தேவராதன்**—1. சுநச்சேபனுக்கு ஒருபெயர்.

2. (சூ.) சுகேது குமரன்.

3. ஒரு இருடி, மிருகாவதியைக் காண்க.

4. யதுவம்சத்துக் கரம்பி குமரன்.

5. மிதிலைநகரத்து ஸுகேதன் குமரன்.

6. ஒரு தவசி; சயையைக் காண்க.

7. நிமியின் வம்சத்தில் ஆருவதானவன். இவனிடத்தில் தக்ஷப்ராஜாபதி யாகத்தில் வீரபத்ரர் வைத்திருந்த வில்லைத் தேவர்கள் கொடுத்திருந்தனர். அது பிறகு ராமனல் மிதிலையில் கொள்ளப்பட்டது.

**தேவராயசுவாமிகள்** — கந்தர்சஷ்டி கவசஞ் செய்த ஒருதமிழ் ஆசிரியர்.

**தேவருலகு** — (சுவர்க்கம்.) இதற்கு நாயகன் தேவேந்திரன். இவன் மனைவி புலோமசை, குமரன் சயந்தன். இதில் ஐராவதம், காமதேநு, சந்தானம், அரிச்சந்தனம், பாரிசாதம், மந்தாரம், கற்பகம் முதலிய ஐந்தருக்கள் உண்டு. இவர்கள் ஊண் அமிர்தம், வயித்தியர், உபேந்திரர் என்னும் விஷ்ணு; குரு, வியாழன் இவர்க்கு இரவுபகலில்லை. இதில் இந்திரன் முப்பத்து முக்கோடி தேவர் வணங்க வீற்றிருப்பன். இதற்கு அரசராவார் நூறு அச்வமேதம் முடித்தவர். இவ்வுலகத்தை யாகஞ்செய்தவரும் மகாவீரரும் அடைவர். சுவர்க்கலோகம்காண்க.

**தேவர்** — 1. (இ.) பிரமா, விஷ்ணு, ருத்ரன், மகேசன், சதாசிவன்.

2. இது புதுச்சேரியிலுள்ள தெலுங்க வர்த்தகருக்குப் பெயர். இது தேவியைப் பூசிக்கும் ஒச்சருக்கும் பட்டம். மறவர்களுக்கும் ஒரு பட்டம். (தர்ஸ்டன்).

**தேவர்கள்** — இவர்கள் ஆதித்யர் (யஉ) உருத்ரர் (தக), வசுக்கள் (அ), அசுவநிதேவர் (உ), திக்குப்பாலகர் (அ), இவர்கள் அந்தந்தத் தொழில்களைப் பற்றிக் கடவுளால் சிருட்டிக்கப்பட்டவர். திக்குப்பாலகர் நீங்க முப்பத்துமூவர்.

**தேவலகர்** — தேவபூசைக்குரியோர். இவர்கள் ஐவகைப்படுவர். (க) கர்மதேவலகர், (உ) கல்பதேவலகர், (ந) சுத்ததேவலகர், (ச) ஹீனதேவலகர், (ரு) ஸ்விஷ்டதேவலகர். அங்யசூத்ர மார்க்கத்தினால் எவன் ஒருவருஷம் பூஜைசெய்கிறானோ அவனும், அதீக்ஷிதனாய்ச் ச்வயமாகப் பூசிப்பவனும் கர்மதேவலகன் எனப்படுவன். அந்தவிதமாகவே மூன்று வருஷம் பூஜைசெய்பவன் கல்பதேவலகன் எனப்படுவன். அப்படியே சுவகர்மநிரதனாய் அங்ய சூத்ரத்தின்படி ஆசாரமும் தீக்ஷையும் பெற்றவன் சுத்த தேவலகன் எனப்படுவன், ஹீனாசாரத்துடன் கூடினவனாய்ச் சுவசூத்ரம், அங்ய சூத்ரமார்க்கங்களை விட்டு நடக்கிறவன் ஹீனதேவலகன் எனப்படுவன். எவன் ஸதாசாரசமன்விதனாய்ச் சந்திகளில் பூஜிப்பவன். அவன் ஸ்விஷ்டதேவலகன் எனப்படுவன். (ஸ்ரீ - காரணம்.)

**தேவலகன்** — திருவேங்கட மான்மியங்கேட்டுணர்ந்த இருடி.

**தேவலர்** — அசிதரைக் காண்க. அத்திரி, ஒரு காலத்துத் தேவாசுரர்களுக்கு யுத்தம் நடக்க அதில் சுவர்ப்பானு என்பவன் சூர்ய சந்திரர்களை அம்பாலடிக்க ஒளி கெட்டது. அதனால் இருள்மூட அசுரர் நன்றாக அடிக்கப்பட்டனர். அடியுண்ட தேவர் அத்திரியை வேண்ட அத்திரி சந்திரனாகி ஒளி கொடுத்தனர். பின் சூரியனுக்கும் ஒளி கொடுத்து அசுரரை நீருக்கினர். (பாரதம் அநுசாசநிகபர்வம்).

**தேவலன்** — 1. வியாசர் மாணாக்கரில் ஒருவன்.

2. அட்டவசுக்களில் ஒருவனான பரத்து பூஷன் குமரன். இவன் குமரன், க்ஷமாவர்த்தன், மனஸ்வி.

3. அக்ரூரனுக்கு மூத்த குமரன்.

4. யது வம்சத்தனாகிய தேவகன் குமரன்; தேவகியின் சகோதரன்.

5. பிரமன் குமரரில் ஒருவன்; இவன் குமரன் பிரசாபதி.

6. கௌசிகனைக் காண்க.

7. ஒரு இருடி.

8. அசித முனிவர்க்குத் தம்பி. இவன் இந்திரனாற் சபிக்கப்பட்டு அஞ்ஞானத்தாற் கோபமுற்று அதர்மமான தபமியற்றி இறுதியில் சிவார்ச்சனையால் நற்கதி பெற்றான். (சிவமகா புராணம்.)

9. ஒரு இருடி, இவர் தீர்த்தம் ஆடச் செல்லுகையில் அத்தீர்த்தத்தில் இவரைக் கண்டு நாணமிலாது நீராடிக்கொண்டிருந்த (எ) பெண்களையக்ஷ ஸ்திரீகளாகச் சபித்து அவர்கள் வேண்ட இராமாவதாரத்தில் நீங்கும் என்றவர்.

10. ஒரு இருடி சுதரிசநனைக் காண்க.

**தேவவதன்** — தேவகன் குமரன், இவனுக்குத் தேவர்த்தன் எனவும் பெயர்.

**தேவவதி** — கிராமணியெனுங் காந்தருவன் பெண். சுகேசன் தேவி, இவளுக்குத் தேவமணி எனவும் பெயர்.

**தேவவல்லி** — மரீசிமுனிவர் தேவி, வல்லபையை வளர்த்ததாய்.

**தேவவன்மன்** — காந்தியின் குமரன்.

**தேவவா** — அக்ரூரன் குமரன்,

**தேவவாதி** — 1. ரோதனன் குமரன்; இவன் குமரன் ரிஷன்.

2. அக்ரோதன் குமரன்.

**தேவவான்** — 1. தேவகன் குமரன்.

2. ருத்ரசாவர்ணி மநுப் புத்ரன்.

**தேவவிரதன்** — பீஷ்மனுக்கு முதற்பெயர்.

**தேவஷூதி** — மகததேசத் தாசன்; பாகவரதன் குமரன்; சுங்கவம்சத்திற் பிறந்தவன்; தன் மந்திரியாகிய கண்ணுவனால் கொலை செய்யப்பட்டவன்.

**தேவவோத்திரர்** — யோகேச்வரர் எனும் விஷ்ணுவைப் பெற்றவர்.

**தேவனார்** — இவர் நெய்தற்றிணையைப் பாடியுள்ளார். சோழரது ஆர்க்காட்டைச் சிறப்பிக்கிறார் இவர் பாடியது நற். (உஉஎ) ம் பாட்டு.

**தேவன்** — 1. கிரிசாசுவனுக்குத் திக்ஷணையிடம் உதித்த குமரன்.

2. பிரதீபன் குமரன். இவன் தந்தை துறவடைந்த துணர்ந்து தானுந் துறவடைந்தனன்.

3. வைதிசாநகரத்திலிருந்த வணிகன், பிரேதஜன்மங் கொண்டவன். பபபராவா கனைக்கண்டு பிரேதசன்மம் நீங்கக் கருமஞ்

செய்யும்படி தன்னிடமிருந்த மணியைக் கொடுத்தவன்.

4. தேவாங்கருக்கு ஒரு பட்டம்.

**தேவஷத்திரன்**—தேவராதி குமரன், இவன் குமரன் மது.

**தேவக்ஷத்திரன்** — யதுவம்சத்துத் தேவராதன் குமரன்.

**தேவஸ்தானன்** — ஒரு இருடி தருமபுத்திரரிடம் தோன்றி இல்லறமே சிறந்ததெனக் கூறியவர். (பார - சாங்.)

**தேவஸ்தாணு** — பாரதயுத்தமுடிவில் தன் சுற்றத்தார் இறந்ததைப்பற்றி விசனமுற்ற தருமபுத்ரரைத் தேற்றிய முனிவர்.

**தேவாங்கு** — இது, குரங்கினத்தில் ஒரு வகை. சிறிய உருவமும் நீண்ட கால்களுமுடையது, வாலில்லை. இது தலையை மார்பில் வைத்துக்கொண்டு எப்பொழுதும் உறங்கும். முகம் பூனையை யொத்திருக்கும். கைகளும் கால்களும் குரங்கைப் போல் நீண்டவை. இது மரங்களை உறுதியாய்ப் பிடித்து மெதுவாய்ச் செல்லும். இரவில் பூச்சிப் புழுக்களையும் பழங்களையுந் தின்னும். இதனினும் பெரிது ஆபிரிகா கண்டத்துத் தேவாங்கு. இவ்வினத்தில் மற்றொருவகை மடகாஸ்கர் தீவிலிருக்கிறது அதனை ஆய் என்பர்.

**தேவாசிரம மண்டபம்** — இது, திருவாரூரிலுள்ள ஆயிரக்கால் மண்டபம். இதில் அடியவர்களெழுந்தருளி யிருப்பர். இவர்களைத் திருத்தொண்டத் தொகையால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடினர்.

**தேவாதிதி** — புரூவம்சத்துக் குரோதனன் புத்திரன். தாய் காளிங்கி.

**தேவாநீகன்** — (கு.) க்ஷேமதர்மா குமரன். இவன் குமரன் பீனகு.

**தேவாந்தகன்** — 1. இராவணன் குமரன்; இலக்குமணர் அதிகாயனுடன் யுத்தஞ்செய்கையில் அநுமனால் கொல்லப்பட்டவன்.

2. இரௌத்திரகேதுவின் குமரன். நாரதர் உபதேசத்தால் தவஞ்செய்து பல சித்திபெற்றவன். இவன், திரிலோகத்தையும் தன்வசப்படுத்தித் தேவர் முனிவர்களை வருத்தி விநாயகமூர்த்தியிடம் பல அசுரரையேவிக் கடைசியில் தானேவந்து யுத்தஞ்செய்தனன். விநாயகரிவனை வெட்டுந்தோறும் காமுஞ் சிரமும் வளருதல் கண்டு பேருருக்கொண்டு திருவடியால் வயிற்றைக் கிழித்துக் கொன்றனர். இவன் தம்பி நராந்தகன்.

**தேவாபி** — 1. (சங்.) குரோதன் குமரன்; இவன் குமரன் உருசுகன்.

2. பிரதீபன் குமரன், சந்தனுக்கு மூத்தோன். இவன் அரசுவேண்டாது காடடைந்து தவமேற்கொண்டான். இவன் கலியுக அந்தத்தில் தருமத்தை நிறுத்தக் காலாபம் என்னும் கிராமத்தில் தவஞ்செய்கையில் கல்கியடைய அவரையடைந்து இந்திரனு லனுப்பப்பட்ட இரதத்திலேறிச் சென்றவன்.

**தேவாபிருதம்** — நிஷததேசத்தி லிருக்கும் பட்டணம்.

**தேவாரண்யம்** — ஒருகாடு; இதிலுள்ள இருடியர் அருச்சுநனைக்கண்டு உபசரித்தனர்.

**தேவாரதி** — குந்தி குமரன். இவன் குமரன் தேவக்ஷத்திரன்.

**தேவாரம்** — இது திருஞானசம்பந்த சுவாமிகள், அப்பர் சுவாமிகள், சுந்தரமூர்த்திசுவாமிகள் மூவர்களாலும் சிவமூர்த்தியின் மீது அருளிச்செய்யப்பட்ட தமிழ் வேதம். இதிலிறைவன் கட்டளைப்படி சிதைந்தன போக மிகுதியை அபயகுலச் சோழராஜா பலராற்கேட்டு ஆவலால் நம்பியாண்டார் நம்பியால் பெற்றார்.

**தேவி** — 1. பார்வதிபிராட்டியார், ஸ்ரீமகாலக்ஷ்மி முதலியவர்க்குப் பெயர்.

2. மேருதேவியின் பெண்; கேதுமாலன் பாரி.

3. விரோசனன் பாரி, பலிக்குத்தாய்.

**தேவிகாலோத்திரம்**—இது இப்பெயருள்ள ஆகமத்தின் தமிழ்மொழி பெயர்ப்பு.

**தேவிகை** — ஒரு நதி.

**தேவிச்சிரவை** — ஒரு நதி.

**தேவிபீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று.

**தேவேந்திரமாமுனி** — ஜீவசம்போதனை யென்னும் ஜைநநூலைத் தமிழால் மொழி பெயர்த்தவர்.

**தேள்** — இது சிலந்தி வருக்கத்தைச் சேர்ந்தது. விசேஷமாய் உஷ்ண காலத்தில் கூரைகளிலிருந்து விழும். இதற்குச் சிலந்திக்கில்லாத ஒரு முள்ளமைந்த வாலுண்டு. இதன் வால் ஆறு மணிகளாலானது. வாலின் நுனியில் கொடுக்கிருக்கின்றது. இதனல் பிராணிகளைக் கொட்டிக் கொல்லுகிறது. தேளின் தலையினிருபுறத்திலும் இரண்டு விரல்களமைந்த இரண்டு கைகள் உண்டு. இவற்றின் கால்கள் எட்டு, கண்கள் (8, 12, 20) பெண் தேள் தடவைக்கு (40, 50) குஞ்சு பொரிக்கும். இதில் வா

தத்தேள், பித்தத்தேள், சிலேஷ்மத்தேள், செந்தேள், கருந்தேள், நச்சுத்தேள், மாத்தேள்முதலிய வகை உண்டு.

**தேனன்** — காவிரியில் வீழ்ந்திறந்து சுவர்க்கமடைந்தவன்.

**தேனிக்குடிகீரனுர்** — கடைசங்கத்துப் புலவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை.)

**தேனீ** — இது முதுகெலும்பில்லாப் பிராணி வகையில் சேர்ந்தது. இதற்கும் வாயில் துதிக்கையும் பற்களும் உண்டு. இவற்ருல் பூவிலுள்ள தேனை யுறுஞ்சி வாழும். இது பலவகையாக மெழுகமைத்துக் கூடு கட்டி அதில் முட்டையிட்டுக் குஞ்சுகளுக் காதாரமாய் அதில் தேனை அமைக்கும்.

**தேனுகாசுரன்** — இவன் கம்சனுக்கு நண்பனுகிய அசுரன். இவன் பிருந்தாவனத்திற் கருகிலிருந்த அசுரன். இவன் கழுதையுருக்கொண்டவன், பலராமருடன் போர் செய்ய வந்தனன். இவனைப் பலராமர் காலைப் பிடித்து எறிந்துவீச மாண்டவன்.

**தேனுமதி** — இந்திரப்பிரத்தத்திற்கு அருகிலுள்ள தீர்த்தம்.

**தேன்** — இது ஒருவகைப் பூச்சியினுல் புஷ்பங்களிலும் மற்றவைகளிலிருந்தும் கொண்டு சேர்க்கும் பொருள், இது இனிப்பான திரவம். இது மலைத்தேன், கொம்புத்தேன், மரப்பொந்துத்தேன், புற்றுத்தேன் மனைத்தேன், கொதுகுத்தேன் என பலவகைப்படும்.

**தேன்சிட்டு** — இவ்வினத்தில் ஒரு வண்டு போன்ற உருவுள்ளவைகளும் உண்டு. இவற்றின் உடல் சிறிதும் இறக்கைகள் நீண்டு முள்ளவை. இவை நிறத்தால் நீலம், அலகு மெலிந்து நீண்டு முன் வளைந்திருக்கும். இது, பூக்களிலுள்ள தேனைத் தேடி யுண்ணும். இது பூக்களி லுட்கார்ந்து தேனை யுண்பதுமன்றிப் பறந்தவிதமாகவே பூக்களில் அலகை நுழைத்துத் தொங்கும் மலர்களிலுள்ள தேனைக் குடிக்கிறது.

**தேஜஸ்வி** — அகத்தியர் பேரன்; திருச்யன் புத்திரன்.

**தேஜோவதி** — அக்னிதேவன் பட்டணம்.

## தை

**தைக்கும் யந்திரம்** — இது, மனிதர் துணி முதலியவைகளைக் கையால் தைத்துக் கஷ்டப்படாமல் நூலை யந்திரத்திலுள்ள சிற்றூசியில் கோத்துக் கையாலாயினும் காலாலாயினும் சற்று அசைக்கின் தானே வேண்டியபடி தைப்பது.

**தைசசன்** — சுவப்பனுவஸ்தையுடன் ஆத்மா கூடியிருக்கையில் பெற்ற பெயர்.

**தைத்தியசேனை** — தேவசேனைக்கு மூத்தவள்; அரிஷ்டநேமியின் பெண்.

**தைத்தியர்** — திதி புத்திரர்; திதி காசிபருஷியைச் சந்தியாகாலத்திற் புணர்ந்ததால் பிறந்த அரக்கர்.

**தைத்தியவனம்** — வியாசர், பாண்டவருக்கு வெளிப்பட்டு உபதேசித்த வனம்.

**தைத்திரியர்** — ஒரு ருஷி; கௌதாரியிடம் பிறந்தவராம்.

**தைத்திரீயம்** — ஒரு உபநிஷத்து. இது யசுர் வேதசாகை. வைசம்பாயனர் கோபத்தால் யஞ்ஞவல்கியரால் விடப்பட்ட எசுர்வேதத்தை அவர் மாணுக்கர் தித்திரிபக்ஷி யுருக்கொண்டு அருந்தியதால் அதற்கு இப்பெயர் உண்டாயிற்று.

**தைத்திரேயர்** — கிருஷ்ண யசுர்வேதிகள்.

**தைபாயனம்** — துரியோதனன், தன் சேனைகள் இறந்தபின்பு ஜலஸ்தம்பனம் செய்திருந்த மடு.

**தையங்கண்ணனர்** — கடைச்சங்க மருவிய புலவன். (அகநானூறு).

**தையற்பறவை** — இது, சிறு உருவமுள்ளது. இதன் தலை, கழுத்து, முதுகு கபில நிறம். வயிறு சாம்பல் நிறம். அலகு மெலிந்து கூர்மையுள்ளது. இது மரங்களில் தன் சத்துருக்களுக்கெட்டாத வகையில் உதிராத இலைகளுள்ள மரங்களில் இலைகளை ஒன்று சேர்த்து மரப்பட்டைகளின் நாரினுல் தைத்து மிருதுவான படுக்கை யமைத்து முட்டை யிட்டுக் குஞ்சு பொரிக்கிறது. வீவர்பர்ட் - ஆபிரிக்காக் கண்ட பறவைகளில் ஒன்று. இது தையற்பறவைபோல நீர்ப்புறமாகச் சார்ந்துள்ள மரங்களை ஆராய்ந்து நார்போல அறுத புற்களைக் கொண்டுவந்து பின்னி வாய்ப்புறம் நீர்மட்டத்திலிருக்கும்படி கூடு கட்டுகிறது.

**தைவதம்** — ஒரு தீர்த்தம்.

## தோ

**தோகாநிலை** — வினைமுற்று, ஈரெச்சங்கள், எழுவாய், விளி, இரண்டு, முதலிய ஆறு உருபுகள் விரிந்து நிற்பன. (நன்னூல்).

**தோகை ஆறு** — வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவு

மைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை.

**தொகைநிலை** — 1. கேடின்றியே நிறையக் கீர்த்தியை நிறுத்தி எல்லாரும் போர்க்களத்திலே மடிந்தது. (பு. வெ.)

2. எல்லா அரணிடத்துமுள்ள மாறுபாட்டு மன்னர் பலரும் அந்த எயிலிடத்தே அவன் பாதத்தைச் சேர்ந்தது. (பு. வெ.)

**தொகைநிலைச் செய்யுள்** — இது, ஒருவராலுரைக்கப்பட்டுப் பலபாட்டாய் வருவனவும், பலரா லுரைக்கப்பட்டுப் பலபாட்டாய் வருவனவுமாம். இது பொருள், இடம், காலம், தொழில், பாட்டு, அளவு முதலியவற்றாற் தொகுப்படைந்தவை. இது பெருங்காப்பியம், காப்பியம் என இரண்டுவகைத்து. (தண்டி.)

**தொடர் நரி** — இவ்வூர் நரிகள் ஒன்றையொன்று தொடர்ந்து சென்ற இடமாம். தத்தனேரிக்கு மேற்கே யுள்ளது. (திருவிளை.)

**தொடர்நிலைச் செய்யுட்குறியணி** — அஃதாவது, சாதிக்கத் தக்க பொருளை வாக்கியார்த்தத்தினாலாயினும் பதார்த்தத்தினாலாயினும் அவ்விரண்டினாலுமாயினுஞ் சாதித்தலாம். இதனை வடநூலார் காவியாலங்கார மென்பர்.

**தொடர்நிலைச்செய்யுட் பொருட்பேறணி** — அஃதாவது ஒருபொருளைச்சொல்லத் தண்டாபூபிகா நியாயத்தின் மற்றொரு பொருடோன்றுதலாம். தண்டாபூபிகா நியாயமாவது தண்டத்தை அபகரித்தலினாலதனிற் சேர்த்துவைத்த அப்ப முதலிய வுணவபகரிக்கப்படுதலுந் தானே விளங்கல். இதனை வடநூலார் காவியார்த்தாபத்தியலங்கார மென்பர்.

**தொடர்பின்மையணி** — காரணம் ஓரிடத்திருப்பக் காரிய மற்றோரிடத்துப் பிறத்தலைக் கூறுதல். இதனை அசங்கதியலங்காரம் என்பர். (குவல.)

**தொடர்மழுதுவமையணி** — அஃதாவது, இரண்டு வாக்கியங்களிலுஞ் சாதாரண தர்மத்தைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரதிவஸ்தூபமாலங்கார பென்பர்.

**தொடரக்காஞ்சி** — கொலை யஞ்சாத பெரிய நிலையினையுடையவன் புண்ணினைத் தீண்டுதற்குப் பயப்பட்டு நடுங்கிப் போய்ப் பெயர்ந்தது. (பு. வெ.)

**தொடித்தலைவிழுத்தண்டினார்** — 1. கடைச்சங்கப் புலவருள் ஒருவர்; பெருஞ்சாத்தனைப் பாடியவர். (திருவள்ளுவமாலை).

இவர் பாடற்கணுள்ள அருந் தொடரே இவர்க்கும் பெயராயிற்று.

**தொடுகதிர்க்கிள்ளி** — காஞ்சி நகராண்ட சோழரில் துணையிளங்கிள்ளிக்கு முன்னோன். (மணிமேகலை).

**தொடுப்புழை வேளாளர்** — இவர்கள் மலையாளத்திலுள்ள தொடுப்புழை தாலுக்காவில் குடியேறிய வேளாளர். இவர்கள் ஆதியில் தென்காஞ்சி கும்பகோணத்திருந்தவர்கள். இவர்கள் ஐந்நூற்றில்லர், மூன்னூற்றில்லர் என இருவகையர். இவர்கள் நாஞ்சி நாட்டு வேளாளரை யொத்தவர்கள். இவர்கள் பாஷை மலையாளம். (தர்ஸ்டன்.)

**தொடை இலக்கணம்** — தொடை - பல அடிகளிலேனும், பல சீர்களிலேனும் எழுத்துக்கள் ஒன்றி வருவதாம். அது எதுகைத்தொடை, மோனைத்தொடை, முரண்தொடை, இயைபுத்தொடை, அளபெடைத்தொடை என ஐந்தும்; அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று இவற்றுடன் பொருந்தி ஒவ்வொன்றும் எட்டெட்டுப் பாகுபாடுடையவாம். அவை அடியெதுகை, இணையெதுகை, பொழிப்பெதுகை, ஒரூஉவெதுகை, கூழையெதுகை, மேற்கதுவாயெதுகை, கீழ்க்கதுவாயெதுகை, முற்றெதுகை மற்றவையு மிவ்வாறு கூட்டிக் காண்க. அடிதோறு முதலெழுத்தொன்றி வரத் தொடுப்பது மோனைத்தொடை, அடிதோறும் இறுதிக்கணின்ற எழுத்தானும் சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடியியைபுத்தொடை, அடிதோறும் முதலிலுள்ள இரண்டாமெழுத் தொன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத்தொடை, அடிதோறு முதற்கண் சொல்லானும் பொருளானும் மறுதலைப்படத் தொடுப்பது அடிமுரண் தொடை, அடிதோறு முதலில் உயிராயினும் மெய்யாயினும் அளபெடுத் தொன்றி வரத் தொடுப்பன அடியளபெடைத்தொடை, அடிதோறு மிறுதிக்கணின்ற எழுத்தானும், அசையானும், சீரானும், அடியானும், மற்றை அடிக்காதியாகத் தொடுப்பது அந்தாதித்தொடை, ஓரடி முழுதும் ஒருசொல்லேவரத்தொடுப்பது இரட்டைத்தொடை, கூறிய தொடைகளும் தொடை விகற்பங்களும் போலாது வேறுபடத் தொடுப்பது செந்தொடை. (காரிகை) - முதலிருசீர்க்கண் மோனை முதலிய வரத் தொடுப்பது இணை, முதற்சீரிலும், மூன்றாஞ்சீரிலும்

மோனை முதலிய வருவது பொழிப்பு, நடு இருசீரிலுமின்றி முதற்சீரிலும் இறுதிச் சீரிலும் மோனை முதலிய வரத் தொடுப்பது ஒரூஉ. இறுதிச் சீரிலின்றி ஒழிந்த மூன்று சீரிலும் மோனை முதலிய வரத் தொடுப்பது கூழை; முதலயற் சீரிலில்லாமல் மற்ற மூன்று சீரிலு மோனை முதலிய வருவன மேற்கதுவாய், ஈற்றயற் சீரின்றி யொழிந்த மூன்றிலும் மோனை முதலிய வரத் தொடுப்பது கீழ்க்கதுவாய், சீர் தோறு மோனை முதலிய வரத் தொடுப்பது முற்று.

தொடை — (தொகை, வகை, விரி) - (i) மோனை, (ii) எதுகை, (iii) முரண், (iv) இயைபு, (v) அளபெடை, (vi) செந்தொடை, (vii) இரட்டைத்தொடை, (viii) அந்தாதித்தொடை என்னும் தொகையானும் 1. தலையாகுமோனை, 2. இடையாகு மோனை, 3. கடையாகுமோனை, 4. தலையாகெதுகை, 5. இடையாகெதுகை, 6. கடையாகெதுகை, 7. சொன்முரண், 8. பொருண்முரண், 9. சொற்பொருண்முரண், 10. மோனைமுரண், 11. எதுகை முரண், 12. செம்முரண், 13. மோனையியைபு, 14. எதுகையியைபு, 15. முரணியைபு, 16. அளபெடையியைபு, 17. மயக்கியைபு, 18. செவ்வியைபு, 19. மோனையளபெடை, 20. எதுகையளபெடை, 21. முரணளபெடை, 22. மயக்களபெடை, 23. செவ்வளபெடை, 24. இயற்செந்தொடை, 25. மருட்செந்தொடை, 26. ஒருபொருளிரட்டை, 27. இருபொருளிரட்டை, 28. பலபொருளிரட்டை, 29. இருமுற்றிரட்டை, 30. எழுத்தந்தாதி, 31. அசையந்தாதி, 32. சீரந்தாதி, 33. அடியந்தாதி, 34. மயக்கந்தாதி, 35. இடையீட்டந்தாதி யென்னும் வகையானும்; 1. அடிமோனை, 2. இணைமோனை, 3. பொழிப்புமோனை, 4. ஒரூஉமோனை, 5. கூழைமோனை, 6. மேற்கதுவாய்மோனை, 7. கீழ்க்கதுவாய்மோனை, 8. முற்றுமோனை, 9. அடியெதுகை, 10. இணையெதுகை, 11. பொழிப்பெதுகை, 12. ஒரூஉவெதுகை, 13. கூழையெதுகை, 14. மேற்கதுவாயெதுகை, 15. கீழ்க்கதுவாயெதுகை, 16. முற்றெதுகை, 17. அடிமுரண், 18. இணைமுரண், 19. பொழிப்புமுரண், 20. ஒரூஉமுரண், 21. கூழைமுரண், 22. மேற்கதுவாய்முரண், 23. கீழ்க்கதுவாய்முரண், 24. முற்றுமுரண், 25. அடியியைபு, 26. இணையியைபு, 27. பொழிப்பியைபு, 28. ஒரூஉவியைபு, 29. கூழையியைபு, 30. மேற்கதுவாயியைபு, 31. கீழ்க்கதுவாயியைபு, 32. முற்றியைபு, 33. அடியளபெடை, 34. இணையளபெடை, 35. பொழிப்பளபெடை, 36. ஒரூஉவளபெடை, 37. கூழையளபெடை, 38. மேற்கதுவாய் அளபெடை, 39. கீழ்க்கதுவாய் அளபெடை, 40. முற்றளபெடை, 41. கடையிணைமோனை, 42. பின்மோனை, 43. இடைப்புணர்மோனை, 44. கடைக்கூழைமோனை, 45. கடைமோனை, 46. கடையிணையெதுகை, 47. பின்னெதுகை, 48. இடைப்புணரெதுகை, 49. கடைக்கூழையெதுகை, 50. கடையெதுகை, 51. கடையிணைமுரண், 52. பின்முரண், 53. இடைப்புணர்முரண், 54. கடைக்கூழைமுரண், 55. கடைமுரண், 56. கடையிணையியைபு, 57. பின்னியைபு, 58. இடைப்புணரியைபு, 59. கடைக்கூழையியைபு, 60. கடையியைபு, 61. கடையிணையளபெடை, 62. பின்னிணையளபெடை, 63. இடைப்புணரளபெடை, 64. கடைக்கூழையளபெடை, 65. கடையளபெடையென்னும் வகையானும், 66. அசைவிராளச்செந்தொடை, 67. சீர்விராளச்செந்தொடை, 68. இசைவிராளச்செந்தொடை, 69. முற்றுவிராளச்செந்தொடை, 70. குறையீற்று ஒருபொருளிரட்டை, 71. குறையீற்றுப் பலபொருளிரட்டை, 72. நிறையீற்று ஒருபொருளிரட்டை, 73. நிறையீற்றுப் பலபொருளிரட்டை, 74. குறையீற்றுமுற்றிரட்டை, 75. நிறையீற்றுமுற்றிடையிரட்டை, 76. மண்டிலவெழுத்தந்தாதி, 77. செந்தொடை யெழுத்தந்தாதி, 78. மண்டிலவசையந்தாதி, 79. செந்நடையசையந்தாதி, 80. மண்டிலச் சீரந்தாதி, 81. செந்நடைச் சீரந்தாதி, 82. மண்டிலவடியந்தாதி, 83. செந்நடையடியந்தாதி, 84. மண்டிலமயக்கந்தாதி, 85. செந்நடைமயக்கந்தாதி, 86. மண்டில இடையீட்டந்தாதி, 87. செந்நடை யிடையீட்டந்தாதி என்னும் விரியானும் வரும்.

தொட்டகாஞ்சி — அகன்ற இல்லிலே தலைமகனுடைய புண்ணைப் பரிகரிக்க நான்ற முலையினையும் பெரிய வாயினையுமுடைய பேய்மகள் புண்ணைத் தீண்டியது. (பு.வெ.)

தொட்டியர் — ஒருவகைக் குறச்சாதியர். இவர்கள் பாம்பாட்டியும், பன்றி மேய்த்

தும் நாடோடிகளாகத் திரிவர். இவர்கள் தேவதை ஜக்கம்மா, பொம்மக்கா. இவர்களுக்குப் பட்டம் நாய்க்கன், இவர்கள் தங்களில் வயது முதிர்ந்தவர்களையும் மணங் கொள்வர். இவர்களில் காட்டுத் தொட்டியர் என்று ஒருவகை உண்டு. அவர்கள் நரி, எலி முதலிய தின்பர். இவர்கள் கம்பள வகுப்புகளில் சேர்ந்தவர்கள். கப்பலியன், அனப்பன், தொட்டியன், குருபன், கும்மரன், மீதரன், ஒட்டன், சக்கிலியன் இவர்கள் தலைவர் மேட்டுநாய்க்கன், கொடைநாய்க்கன், கம்பளிநாய்க்கன். (தர்ஸ்டன்).

**தொட்டிலேற்றல்** — பிள்ளை பிறந்த (க௦)-ம் நாள், (க௨)-ம் நாள், (க௬) ம் நாள், (௯௨)-ம் நாளாதல் சுபக்கிரக முதயமாகப் பஞ்சாங்க யோகம் நன்றாக ஊர்த்துவ முகராசி நட்சத்திரங்களிலே பிள்ளையைத் தொட்டில் ஏற்றவேண்டும்.

**தொண்டமான்** — கள்ளர் சாதியில் ஒரு வகை. இவர்கள் தொண்டமான் நாடாகிய புதுக் கோட்டையிலிருந்து வந்தவர்கள். இவர்கள் தொழில் சுண்ணம்பு கொளுத்தல், பறையடித்தல்; இவர்களுக்குச் சோழிகன் பட்டம், புதுக்கோட்டை ஜமீன்தாருக்குத் தொண்டைமான் பட்டம். இவர்கள் அங்கிருந்து வந்தவர்களாதலா லிவர்கள் அவ்வாறு அழைக்கப்படுகிறார்கள் (தர்ஸ்டன்).

**தொண்டரடிப்பொடியாழ்வார்** — இவர் கலியுகத்தில் (௨௦௮௬) பிரபவஹூ மார்கழியீ கிருஷ்ணசதுர்த்தசி செவ்வாய்க்கிழமை கேட்டைநக்ஷத்திரத்தில் திருமண்டங் குடியில் ஒரு புரச்சூட ஸ்ரீவைஷ்ணவருக்குத் திரு அவதரித்தனர். இவர் வனமாலாம்சர், இவர் திருஅவதரித்து விப்ரநாராயணர் என்ற திருநாமம் சாற்றப்பெற்று ஓதியுணர்ந்து திரு அரங்கத்தில் திருமாலைகைங்கர்யம் செய்து கொண்டு மகாவிரக்தரா யிருத்தலைப் பிராட்டிகண்டு பெண்ணையுமாணை நினைக்கும் இவரை மாயை என்னசெய்யுமெனப் பெருமாள் அதை உனக்குக் காட்டுகிறேன் என்று விரக்தராகிய இவரைத் தேவதேவியை விட்டு மயக்க ஏவினர். தேவதேவி மயக்க மயங்காதது கண்டு தாசியாகிய அவள் தானும் கைங்கர்யபரையா யிருக்கையில் ஒருநாள் நல்லமழை வருஷித்துத் தேவதேவியை நனைத்தது. இவளைக் கண்ட ஆழ்வார் இரக்கமடைந்து தேவதேவியைத் தம் பர்ணசாலையிடம் அழைத்தனர். அவளும் விருப்புடன் வந்து குளிர்காய்ந்திருக்கையில் விப்ரநாராயணராகிய ஆழ்வார் அவள் விருப்புடன் கூடியிருந்து அவள் நீங்கச் சகியாதவராயிருக்கையில் பெருமாள் பிராட்டிக்குக் காட்டினர். பிராட்டி, மீட்க அருள் செய்யவேண்டுமெனப் பெருமாள், திருக்கோயில் பொன் வட்டிலை அவள் வீட்டிவிடக் கோவில் பரிசாரகர் தேடுகையில் அது தேவதேவி யிடத்திலிருப்பதுணர்ந்து அவளைக் கேட்கத் தாசி விப்ரநாராயணர் கொடுத்தனர் என்றனள். இவ்வகையிருக்கப் பெருமாள் அர்ச்சகரிடம் ஆவேசித்து நாமே செய்தோமென்று கோயிலதிகாரிகளுக்குப் பணிக்கக் கேட்டடங்கினர். பின்பு ஆழ்வார் விசன முற்றுப் பாகவத தீர்த்தங்கொண்டு பெருமாளைத் தொழுது நிற்கப் பெருமாள் தொண்டரடிப்பொடியென அழைத்துக் கடாக்ஷித்தனர். ஆழ்வார், திருமாலை, திருப்பள்ளியெழுச்சி அருளிச் செய்து (க௦௫) திருநக்ஷத்ர மெழுந்தருளியிருந்து திருநாட்டுக்கெழுந்தருளினர். (குருபாம்பரை.)

**தொண்டனூர்நம்பி** — விடல தேவராயன் குமரியைப் பிடித்திருந்த பிசாசை உடையவரால் ஒட்டவேண்டிய ஸ்ரீ வைஷ்ணவர். எழுபத்தினாலு சிங்காசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

**தொண்டி** — சோழகுலத்தவ ருறையும் நகரம். இது சேதுநாட்டிற்குத் துறைமுகமாக இருக்கிறது. சேரர்க்குரிய தொண்டி குடகடற் கரைக்கணுள்ளது. அது குட்டுவன் தொண்டி யெனப்படும். இது கடற்கரையிலுள்ளது. (புற - நா.) (சிலப்.)

2. இது, சேரர்களுக்கு இராஜதானியாயிருந்த பட்டணங்களில் ஒன்று. "நன்னகர்மாந்தை" "குட்டுவன்மாந்தை" எனப் புலவர் புகழ்ந்திருக்கின்றனர்.

**தொண்டியாமூர்ச்சாத்தன்** — கடைச்சங்கமருவிய புலவன். (அகநானூறு.)

**தொண்டியோர்** — சோழகுலத்தவர்.

**தொண்டைநாடு** — காஞ்சிபுரி; தொண்டைனைக் காண்க.

**தொண்டைமான்** — சிவகணத் தலைவன்; இவன் மாலதி யென்பவளைக் காமுற்று அரசனாய்ப் பூமியிற் காஞ்சிபுரியைச் சிலகாலமாண்டனன்.

**தொண்டைநாடு**—மேற்கில் பவளமலையினையும், கிழக்குக் கடலையும், தெற்குப் பின

னி நதியையும், வடக்குத் திருவேங்கடத்தையும் எல்லையாகக்கொண்ட நாடு.

**தொண்டைமானிளந்திரையன்** — கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாடல் பெற்றவன், நாகபட்டினத்துச் சோழன், பிலத்தின்வழி நாகலோகஞ் சென்று நாககன்னிகையைப் புணர்ந்தனன். ஆங்கு அவளுக்கு ஒரு புத்திரன் பிறக்க அவள், அரசனை யான்பெற்ற புத்திரனை என்செய்க என்றனள். அரசன் ஆதொண்டைக் கொடியைச்சூடி அனுப்புக என்று தன்னகரஞ் சென்றனன். நாககன்னிகை தன் புத்திரனுக்கு அரசன்சொற்படி ஆதொண்டை மாலையை அடையாளமாகச் சூட்டிக் கடலில் விட்டனள். குமரன் கடலினின்று கரையேறி அரசனால் உரிமை பெற்றனன். இவனே ஆதொண்டைச் சக்கிரவர்த்தி, காஞ்சிமண்டல மாண்டவன். (புறநா.)

**தொண்டைமான்** — A. ஆதொண்டைச் சக்கிரவர்த்தியைக் காண்க. இவன் சோழனுக்கு நாககன்னிகையிடம் பிறந்து திருவேங்கடத்தில் பெருமாளுக்குத் திருத்தொண்டைச் செய்ததனால் தொண்டைமான் என்று பெயர் பெற்றவன். இவன் ஒரு சன்மத்தில் அரங்கதாசன் என்னும் சூத்திரன்; திருவேங்கடத்தில் புட்பகைங்கர்யஞ் செய்துவருகையில் மனைவிமாருடன் நீர்விளையாடிக் கொண்டிருந்த குண்டலன் என்னும் காந்தருவனைக்கண்டு எச்சிலடைந்து புட்பத்தைக் கொட்டித் தீர்த்தமாடி அசரீரி சொற்படி தொண்டைமானாகப் பிறந்து திருப்பணி நடத்திப் பகைவர்க்கஞ்சி வேங்கடத்துப் பெருமாளிடம் முறையிட்டு அவர் சங்காழிதரப் பெற்றுப் பகைவரை வென்று பெருமாளை இத் திருவேங்கடத்தில் சங்காழியிலாது என்றும் தரிசனந்தர வரம்பெற்றவன். தொண்டைமான் என்பது சோழர் பின்வந்த அரசருக்குப் பட்டப் பெயர் என்றுங் கூறுவர். சோழர், பல்லவர்களைச் செயித்து அவர்கள் நாட்டைக் கைக்கொண்டபின் இப் பட்டத்தை வகித்தனர் என்பர்.

B. இவன் காஞ்சி நகரத்திருந்த ஓர் அரசன். அதியமானெடுமானஞ்சி, ஔவை இவர்கள் காலத்தில் இருந்ததாகக் கூறுகின்றனர். (புறம்.)

**தொண்டையில் உண்டாகும் ரோகம்** — (18) எனப்படும். இந்த ரோகம் திரிதோஷங்களில் கண்டத்தின் உட்புறத்தில் தூர்மாமிசம் வளருதல், புண்ணுதல், ஜலம் வடிதல் முதலிய உண்டாம். 1. கண்டவாதரோகணி, 2. கண்டபித்தரோகணி, 3. கண்டசிலேஷ்மரோகணி, 4. கண்டரத்தரோகணி, 5 கண்டதிரிதோஷரோகணி, 6. கண்டசாலிகரோகம், 7. களபிருந்தரோகம், 8. துண்டகேரிகாரோகம், 9. களஒகரோகம், 10. அலாபுகரோகம், 11. சதக்கினிரோகம், 12. களவித்திரதிரோகம், 13. களாற்புதரோகம், 14. வாதகளகண்டரோகம், 15. பித்தகளகண்டரோகம், 16. சிலேஷ்மகளகண்டரோகம், 17. மேதோகளகண்டரோகம், 18. சுரக்கினிரோகம் ஆக கண்ட ரோகம் (18).

**தொம்பரவர்** — (தொம்பர்) இவர்களிற் சிலர் கழைக்கூத்தராய் ஊர் ஊராய்த் திரிந்து ஆட்டம் ஆடிப் பிழைப்பர். பலர் மரத்தால் சீப்பு, சுருளி முதலிய செய்து கடைகளில் விற்றுப் பிழைப்பர். இவர்கள் பெரும்பாலும் மராத்தி, தெலுங்கு, முதலிய பேசுவர். இவர்களிற் சிலர் ஜாலவித்தை செய்வர். இவர்கள் பெரும்பாலும் தாழ்ந்த ஜாதியர். (தர்ஸ்டன்)

**தொய்யில்** — மாதர்முலைமீதெழுதுஞ் சந்தனக்கோலம். இது மன்மதனது கொடிபடை முதலிய எழுதலாம்.

**தொலைவு** — கூறியதுகூறல், மாறுகொளக்கூறல், பொருளலகூறல், மயங்கக்கூறல், கேட்போருக்குத் துன்பமுண்டாகப்பழித்தமொழிகளால் இழித்துக்கூறல், தானே ஒருபொருளைக் கருதிக்கூறல், இன்னவகையால் மனங்கொளாமையாம். (யாப்பு - வி.)

**தொல்கபிலர்** — இவர் பாடிய நற். 114-ல் கரையைப் "புள்ளித்தொல்கரை" என்று கூறிய அடைச் சிறப்பால் தொல்கபிலரெனப்பட்டார். குறிஞ்சித் திணையைச் சிறப்பித்துப் பல படியாகப் புனைந்து பாடியுள்ளார். பல உள்ளுறைகளடுக்கிக் கூறியுள்ளார். நற். 328 மடலேறுவனெனுந் தலைவன் கூற்றாக இவர் கூறியது வியப்புடையதாகும். குறு. 14. இவர் பாடியனவாக நற்றிணையில் நாலு பாடல்கள், குறுந்தொகையில் ஒன்றும், அகத்தில் ஒன்றுமாக ஆறு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**தொல்கபிலன்** — கடைச்சங்க மருவிய புலவர். (அகநானூறு.)

**தொல்காப்பியதேவர்** — 1. இவர் ஒரு தமிழாசிரியர். இவர் திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம் பாடினவர். இத் தலத்திற்கு

வந்த இரட்டைப் புலவர்களை அத் தலவாசிகள் கலம்பகம் பாடித்தர வேண்டியபோது தொல்காப்பியதேவர் பாடியுள்ள இத்தலத்திற்கு நாங்கள் கலம்பகம் பாடல் தகுமோ எனப் புகழப்பட்டவர். இவர்காலம் இரட்டைப் புலவர் காலத்திற்கு முன்னிருக்கலாம். இதனை "தொல்காப்பிய தேவர் சொற்றதமிழ்ப் பாடலன்றி, நல்காத் திருச்செவிக்கு நாமுரைத்த தேறுமோ, மல்காப் புனல்ததும்ப மாநிலத்துக் கண்பிசைந்து, பல்காற் பொருளிழக்கும் பாற்கடலோன் நீந்தார்க்கே" என்பதா லறிக.

2. சமணர் கோவிலுக்குக் கல்லறுப்பிக்கச் சிவ தலத்தார் தங்களெல்லை யென்றபோது பாடியது. "வேதமொழி விசும்பு மேனி சுடர்விழிமண், பாதந்திருப் பாதிரிப் புலியூர் - நாதர், பரமாம்பரமாம் படுகெடலெண்டிக்கும், கரமாமவர்க் குயிர்ப்பாங்கால்" இவர் கலம்பகம் பாடிச் சிதம்பரத்தில் கயிறுபோட்டுப் பார்க்கக் கண்ட கவி, "பாடுவார் பாடும் பரிசில் வரிசை யெல்லாம், ஆடுவாரன்றி யயலாரறிவரோ, தோடுவார் காதன்றே தோன்ருத்துணையையர், பாடுவாரோ ரிருவர்க்கிட்ட படை வீடே."

**தொல்காப்பிய மகாமுனிவர்** — அகத்தியர் மாணாக்கருள் ஒருவர்; ஜமதக்கி முனிவர் குமரர். இவர் சரிதையை அகத்தியரைக் காண்க. இவர் தமிழில் ஐந்திலக்கணம் இயற்றியவர். இவர்க்குத் திரணதூமாக்கி யெனவும் பெயர். அகத்தியர் இவரைச் சுவர்க்கம் புகாதிருக்கச் சபித்ததினால் ஆசிரியரையும் அவ்வாறு சபித்துப் பாண்டியன் மகாகீர்த்திசபையில் அதங்கோட்டாசான் முன்னிலையில் தாம் இயற்றிய நூலை அரங்கேற்றியவர். (தொல்காப்பியம்.)

**தொல்காப்பியம்** — இது அகத்தியர் மாணாக்கருள் ஒருவரும், திரணதூமாக்கினி யென்னும் பெயர் பெற்றவருமாகிய தொல்காப்பிய குடியிற் பிறந்த தொல்காப்பிய மகருஷியா லருளிச் செய்யப்பட்டது. இது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி முதலிய ஐந்திலக்கண நிரம்பியது. இது (கசுகஉ) சூத்திரங்கள் கொண்டது. இதற்குக் கல்லாடர், இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலியோர் உரைகூறி யிருக்கின்றனர். இது தமிழிற் சிறந்த இலக்கணம். இடைச்சங்கத்தார்க்கும், கடைச்சங்கத்தார்க்கும் நூலாக விருந்தது.

**தொழில்** — 1. (ங) ஆக்கல், காத்தல், அழித்தல். (ச) உழவு, தொழில், வரைவு, வாணிபம், விச்சை, சிற்பம்.

2. அந்தணர் அறுதொழில் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். அரசர் அறுதொழில் - ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படைபயிற்றல், பொருதல். வைசியர் அறுதொழில் - ஓதல், வேட்டல், ஈதல், பொருளீட்டல், பசுக்காத்தல், ஏருழல். சூத்திரர் அறுதொழில் - முதன் மூவர்க்கும் ஏவல் செயல், பொருளீட்டல், உழுதல், பசுக்காத்தல், குயிலுவத் தொழில் செயல், காருகவினை செயல்.

**தொழிற்பெயர்** — முதனிலை புடைபெயர்ச்சி விகுதி ஏற்பது. (நன்.)

**தொழுனை** — யமுனைநதிக் கொரு பெயர். (சிலப்பதிகாரம்.)

**தொளைக்கருவி** — நாகசுரம், புல்லாங்குழல், முகவீணை, தவளசங்கு முதலியன.

**தொள்ளைக்காதர்** — இவர்கள் சாணர் வகையில் சேர்ந்தவர்கள். இவர்கள் நாடாரென அழைக்கப்படுகின்றனர். இவர்கள் சென்னையில் நெற் குத்தி வியாபாரஞ் செய்கின்றனர். தொள்ளைக்காதர் குடிசை, இவர்களிருக்கும் இடம். (தர்ஸ்டன்).

**தொற்றங்கொற்றனார்**—கடைச்சங்க மருவிய புலவர் (அகநானூறு.)

**தொன்மை** — பழைமைத்தாய் நிகழ்ந்த பெற்றி உரைக்கப்படுவது. (யாப்பு - வி.)

## தோ

**தோகைமலைக்குறவர்** — சென்னை இராஜதானியின் தெற்கில் உள்ள ஒருவகைக் குறவர்கள். இவர்கள் குறவர்களல்லர்; ஒருவகைத் திருட்டுத் தொழில் செய்வோர். (தர்ஸ்டன்).

**தோசலன்** — கம்சனால் மல்லயுத்தத்திற் கேவப்பட்டுக் கிருஷ்ணனால் மாய்ந்த ஒரு அசுரமல்லன்.

**தோடகாசிரியர்** — ஆனந்த கிரியென்போர். சங்கராசாரியர்க்கு மாணக்கர்.

**தோடர்** — நீலகிரியிலுள்ள ஒருவகைச் சாதியார். இவர்கள் எருமைகள் வளர்த்துப் பால் நெய் விருத்திசெய்து ஜீவனம் செய்வர். வீட்டிற்குள்ளிருந்து இவர்கள் வெளிகளில் பெரும்பாலார் உலாவுவதில்லை. இவர்கள் தங்களுடைய தொழிலையே செய்வார்

கள். அல்லது வேறு யாருக்கும் அடங்கி நடப்பவர்கள் அல்லர். (தர்ஸ்டன்).

**தோட்டி** — கிராமத்தில் தொண்டு செய்பவன். இவன் எல்லாத் தாழ்ந்த வேலையும் அதிகாரிகள் கட்டளையிட்டால் செய்பவன். கிராமத்தாரை அழைத்தல், காவல் காத்தல், குப்பை களைதல், பணவசூலைக் கஜானவில் சேர்த்தல் முதலிய வேலைகள் எல்லாம் செய்பவன். ஆனாலும் இவன் பெறும் சம்பளம் மிகச் சிறிது. (தர்ஸ்டன்).

**தோட்டிமலை** — இது கண்டீரக்கோப்பெருநள்ளியுடையது. (புற - நா.)

**தோட்டையங்காரப்பை** — வானமாமலை ஜீயர் திருவடி சம்பந்தி. வாதூலகோத்திரத்தவர். இவர் சோளங்கிபுரத்தில் வியாபகரா யிருந்தவர்.

**தோத்தாரம்மன்** — கிடாம்பி இராமாநுசப் பிள்ளான்.குமரி, அப்புள்ளார் சகோதரி.

**தோபகன்** — அறநூல்வழி ஒழுகுகின்றவனை அரசனால் ஏவப்படாமலே சலம் முதலியவைகளை அரசர்க்கு முதலில் தெரிவிப்பவன். (சுக்ரநீதி.)

**தோயன்மாறன்** — கோனாட்டு எறிச்சலூர் மதுரைக் குமரனாரால் பாடப்பெற்றவன்.

**தோரியமடநீதையர்** — ஆடலில் முதிர்ச்சி பெற்ற மங்கையர்.

**தோலாந்தா எரிப்பு** — ஒரு பாத்திரத்தின் நடுவில் மருந்தைக் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டு எரிப்பது.

**தோலாமொழித்தேவர்** — சூளாமணி என்னும் தமிழ்க்காப்பியஞ் செய்தவர். இவர் கார்வெட்டி நகராண்ட விசயராசன்காலத்திருந்ததாகத் தெரிகிறபடியால் இவர் இருந்தகாலம் சற்றேறக்குறைய (கஙி00)ளூ இருக்கலாம் என்பர். (சூளாமணி.)

**தோலாவழக்கன்** — திருமங்கை யாழ்வாருக்கு மந்திரி.

**தோலுழிஞை** — வெற்றியுடன் இசையை உண்டாக்குமெனச் சொல்லிப் பழையதாகி வந்த கிடுகு படையைச் சிறப்பித்தது. (புறவெண்பா).

**தோல்** — இழுமென்ற மெல்லியவாய சொற்களால் விழுமியவாய்க் கிடப்பனவும் எல்லாச் சொற்களுடன் கூடிய பல அடிகளையுடையனவாய்க் கிடப்பனவும் என இருவகை. (யாப்பு - வி.)

**தோல்வித்தானம்** — தோல்வித்தானமாவது யாதேனும் ஒரு விஷயத்தில் ஒருவர் கொள்கைக்கு மற்றொருவர் கொள்கை மாறுபட்டுழி மெய்யுணர்வகைவருதல் காரணமாக நியாய சபையிலே வாதியும், பிரதிவாதியுமாகி நின்று பிரமாணதிகளோடும் வாதிக்குந் தருக்க வாதத்திலே தமொழிக் கூறுதலினாலாவது தவறென்றாகக் கூறுதலினாலாவது ஒருவர் தோல்விக்கிடனாதலேயாம். "வாதம் பேசுவார் தோல்வியுறுதற் கேதுவே தோல்வித் தானம்" என்பது தருக்க சங்கிரகதீபிகை. தோல்வித் தானத்தினை வடநூலார் நிக்கிரகத்தானம் என்பர். நிக்கிரகம் - தோல்வி, தள்ளுதல்; தானம் - இடம், இருக்கை; வாதி - தன் பக்ஷத்தை முதலெடுத்துக் கூறுவோன்; பிரதிவாதி - வாதி கூற்றுக்களை மறுத்துரைப்போன். தோல்வித்தானம் (22) வகைப்படும் என்று சில தருக்க நூல்களுக்குச் சிவஞான சித்தியும் கூறும். "காண்டுந் தோல்வித் தானமிரண்டிருபத்திரண்டாம்" என்பது சிவஞானசித்தி. தோல்வித்தானங்கள் (22)-ம் சிவஞானசித்தி யுரைகளுள்ளே மறைஞானசம்பந்தர், சிவாக்கிரயோகியார், சிவஞானதேவர், நிரம்பவழகியதேசிகர் என்னும் நால்வரும் செய்த உரைகளிலும் கௌதமருடைய நியாய சூத்திர வுரையிலும், தருக்க சங்கிரகதீபிகையின் உரையாகிய நீலகண்டீயத்திலும், விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. நியாய சூத்திரத்திலே கூறப்பட்டுள்ள (கசு) பதார்த்தங்களுள்ளே தோல்வித் தானமும் ஒன்று. அதுவே இறுதியிற் கூறப்பட்டுள்ளது. தருக்க சங்கிரகதீபிகையிலும் உத்தேச மாத்திரையாகக் கூறப்பட்டிருக்கின்றன. தருக்க பரிபாடையிலுஞ் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன். பிரபாகரம் பாட்டம் முதலிய நூல்களிலே விரித்துக் கூறப்பட்டிருக்கின்றன.

(1) பிரதிஞ்ஞா ஹானியாவது பிரமாணம் முதலியவைகளாலே சாதிக்கத் தக்கதென்று தன்னால் விரும்பிச் சொல்லப்பட்ட பொருளைச் சாதித்து முடியாது அப்பொருட்குக் கேடுறுமாறு பேசுதல். பிரதிஞ்ஞாஹாநி என்பதற்குப் பிரதிவாதி கூற்றுக்களை அங்கீகரித்துக்கொண்டு தன் கொள்கைகளை விடுதலென்பாரு முளர். பிரதிஞ்ஞா - உடன்பட்டுக் கூறப்பட்ட பொருளையுடைய வாக்கியம்; ஹாநி கேடு, அழிவு, விடுதல்.

(2) பிரதிஞ்ஞாந்தரம் - பிரதிஞ்ஞாந்தரமாவது தன்னாலே முன்னர்க் கூறப்பட்ட

பிரதிஞ்ஞை பிரதிவாதியாலே மறுத்துரைக்கப்பட்டுழி அதனைச் சாதிக்காமல் வேறொரு பிரதிஞ்ஞையைக் கூறுதல். பிரதிஞ்ஞை - மேற்கோள்; அந்தரம் - வேறு.

(3) பிரதிஞ்ஞாவிரோதம் - பிரதிஞ்ஞாவிரோதமாவது தன்னாலே சொல்லப்பட்ட மேற்கோளுக்குச் சம்பந்தமில்லாத வேறோரேதுவினைக் கூறுதல். பிரதிஞா-மேற்கோள்; விரோதம் - மாறுபாடு.

(4) பிரதிஞ்ஞாசந்நியாசம் - பிரதிஞ்ஞாசந்நியாசமாவது தன்னாலே கூறப்பட்ட மேற்கோள் பிரதிவாதியாலே மறுக்கப்பட்டுழி அதனை முற்றும் விட்டுவிடுதல். பிரதிஞ்ஞா - மேற்கோள். சந்நியாசம் - முற்றவிடுதல்.

(5) எத்துவந்தரம் - எத்துவந்தரமாவது தன்னாற் சொல்லப்பட்ட பிரஞ்ஞையின் எது பிரதிவாதியாலே மறுக்கப்பட்டுழி வேறோர் எதுவினைக் கூறுதல். எது - காரணம், அந்தரம் - வேறு இதனை எத்துவபரம் எனவும் கூறுவர்.

(6) அர்த்தாந்தரம் - அர்த்தாந்தரமாவது தன்பால்வருந் தோல்வியை மறைக்கக் கருதி முன்னர்ச் சொன்னபொருட்கு உபயோகமில்லாத வேறு பொருள்களைக் கூறுதல். அர்த்தம் - பொருள். அந்தரம் - வேறு

(7) நிரர்த்தகம் - நிரர்த்தகமாவது பிரதிவாதியாதும் பேசானாகவுந் தான் வீண் வார்த்தைகளைப் பேசுதல் நிரர்த்தகம் - பயனில் வார்த்தை. நிர் - இன்மை. அர்த்தகம் - பொருளுடையது.

(8) அவிஞ்ஞாதார்த்தம் - அவிஞ்ஞாதார்த்தமாவது சபையாரும், பிரதிவாதியும் அறிந்துகொள்ளற்கரிய பொருளுடைய சொற்களை எடுத்துக்கொண்டு பேசுதல். அவிஞ்ஞாத - அறியப்படாத, அர்த்தம் - பொருள்.

(9) அபார்த்தகம் - அபார்த்தகமாவது யாதேனும் ஒரு பொருளும் இல்லதாக ஒன்றோடொன்று அவாவிப் பொருந்துதலில்லாத சொற்களைத் தொடுத்துக் கூறுதல். அவாய்நிலை முதலியன இல்லனவாகப் பேசுதல் என்பாருமுளர். அப - நீங்கிய, அர்த்தகம் - பொருளுடையது அபார்த்தகம் என்பதனைப் பொருட்போலி என்று மொழிபெயர்ப்பாரு முளர்.

(10) அப்பிராப்த்தகாலம்-அப்பிராப்த்தகாலமாவது மேற்கோள், எது முதலியனவெல்லாம் முறைதவறி முன் பின்னாக நிற்குமாறு பேசுதல். அப்பிராப்த-அடையப்படாத, காலம்.

(11) நியூநம் - நியூநமாவது தன்னாற் சொல்லப்பட்ட பிரதிஞ்ஞையை நிலைபெறுத்தும் உறுப்புக்களை முற்றக்கூறாது சில உறுப்புக்கள் குறைவுபடக் கூறுதல். நியூநம் - குறைவு, குன்றக்கூறல்.

(12) அதிகம் - அதிகமாவது இயையும் உபயோகமும்பற்றி எது முதலிய உறுப்புக்களை அதிகமாகக் கூறுதல். அதிகம் - மிகை, மிகைப்படக் கூறுதல்.

(13) புநருத்தம் - புநருத்தமாவது அநுவாதமின்றி முன்சொன்ன சொல்லினையாவது பின்னுங் கூறுதல். புநருத்தம் - கூறியதுகூறல். புந - பின்னர், உக்தம் - சொல்லுதல். அநுவாதமாயின், புநருத்தம் குற்றமாகாது.

(14) அநநுபாடணம் - அநநுபாடணமாவது வாதியினாலுஞ் சபையாராலும் சொல்லப்பட்ட வாக்கியத்தை மறுக்கும்போது பின்னர் எடுத்துக் கூறுதலாகிய அநுவதித்தலைச் செய்ய இயலாமை. அநநுபாடணம் - வழிமொழிய மாட்டாமை. அந் - இன்மை. அநுபாடாணம்-வழிமொழிதல். அநு - பின். பாடணம் - சொல்லுதல்.

(15) அஞ்ஞானம் - அஞ்ஞானமாவது சொல்லப்படும் வாக்கியம் மூன்றுமுறை சொல்லப்பட்டுச் சபையாரால் பொருளறியப்பட்டும் அதன் பொருளை அறியமாட்டாமை. அஞ்ஞானம் - அறியாமை. அ - இன்மை. ஞாநம் - அறிதல்.

(16) அப்பிரதீபை - அப்பிரதீபையாவது வாதியாலே சொல்லப்பட்டது உத்தரங்கூறுதற் கேற்றதென் றறிந்தும் உத்தரங் கூறாது கடவுளைத் தியானித்தல், வேறொன்று படித்தல், மேலே பார்த்தல் முதலியன செய்து யுத்தியின்மையைக் காட்டுதல். அப்பிரதீபை - புத்தியின்மை; அ - இன்மை; பிரதீபை - புத்தி, காலத்துக் கேற்ற அறிவு. அப்பிரதீபை என்பதனை அப்பிரதிரூபகதை என்பாருமுளர்.

(17) விக்ஷேபம்-விக்ஷேபமாவது நியாயசபையிலே வாதமாரம்பித்த பின்னும் வாதியாவது, பிரதிவாதியாவது மத்தியஸ்தர் முதலினோரில்லை என்று சொல்லி எடுத்த விஷயத்தைத் தூரவிடுத்துக் காலங்கழித்தல். விக்ஷேபம் - தூரவிடுதல்.

(18) மதாநுஞ்ஞை - மதாநுஞ்ஞையாவது தான் கூறியவைகளிலே பிரதிவாதி

எற்றிய குற்றங்களை மறுத்துரையாது உடம்பட்டுப் பிரதிவாதிக்கு வெறுப்புண் டாகஎண்ணி இட்டமுள்ளவைகளைக் கூறு தல். மத - அறியப்பட்ட. அநுஞ்ஞை - சம்மதி.

(19) பரியநுயோச்சியோபேக்ஷணம் பரியநுயோச்சியோபேக்ஷணமாவது மறுத் துரைத்தற்குத் தக்கதாகப் பிரதிவாதி கூறிய வாக்கியந் தோன்றுதலை அறிந்தா வது அறியாமலாவது மறுத்துரையாது விடுத்தல். பரியநுயோச்சியம் - உடன்ப டற்குரியது. உபேக்ஷணம்-விருப்பின்மை.

(20) நிரநுயோச்சியாநுயோகம் - நிரநு யோச்சியாநுயோகமாவது தோல்வித்தான மடையாதவனை அடைந்தனை யென்று தோல்வித்தானங் கூறுதல். நிரநுயோச் சியம் - உடன் படாமைக்குரியது. அநு யோகம் - சொல்லற் கியைந்தது.

(21) அபசித்தாந்தம் - அபசித்தாந்தமா வதுயாதேனும் ஒரு சாத்திரசித்தாந்தத்தை அநுசரித்துப் பேசத் தொடங்கி அதனை மறந்து அந்தச் சித்தாந்தத்திற்கு மாறு யுள்ள வேறொரு சித்தாந்தத்தினைப் பின் அநுசரித்துப் பேசி முடித்தல். அப-விப ரீதம். சித்தாந்தம் - முடிந்தமுடிபு. அபசித் தாந்தம் என்பதனைப் போலிச்சித்தாந்தம் என்பாருமுளர்.

(22) எத்துவாபாசம்-எத்துவபாசமாவது எடுத்துக் கொண்ட பிரதிஞ்ஞைக்கு இயை பில்லாத எதுக்களைக் கூறுதல். எது - காரணம். ஆபாசம் - போலி.

**தோழப்பர்** — 1. இவர் வேங்கடாசாரியர் என்று இயற்பெயருள்ள ஒரு ஸ்ரீவைஷ் ணவர். இவர் வைதிகசார்வ பௌமரென வும் கூறப்படுவர். ஹாரீதகோத்திரத்திற் பிறந்தவர். ஸ்ரீ ஆதிவண் சடகோபசுவாமி களுக்குச் சிஷ்யர். இவரது ஊர் மணற் பாக்கம். இவர் வடமொழியில் கிருஹ்ய ரத்நம், ஸ்மிருதிரத்நாகரம், பிதிர்மேதசா ரம், தசநிர்ணயம், ஆசௌசசதகம் முத லிய இயற்றினவர்.

2. இவர் மேனுட்டவர், இவர் பட்டர் பிரான் புருஷாகாரமாக மணவாளமாமுனி களை ஆச்ரயித்தவர். அழகிய மணவாளப் பெருமாள் நயினருக்குத் தம்பியார்.

**தோழி** — இவள் செவிலிக்கு மகளாய் நன் மையுந் தீமையு மாய்தலுடன் தலைமக ளுக்கு உசாத்துணையாய் அவளது வருத் தந் தீர்த்தற்குரிய அன்பு பொருந்திய துணைவியாம்.

**தோற்கருவி** — இவை பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திரவளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசா ளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகு ணிச்சம், விரலேறு, பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை என்ப வைகளாம். இவை அகமுழவு, புறமுழவு, அகப்புறமுழவு, புறப்புறமுழவு, பண் ணமைமுழவு, நாண்முழவு, காலைமுழவு என எழுவகைப்படும். அவற்றுள் அக முழவு மத்தளம், சல்லிகை, இடக்கை, கரடிகை, பேரிகை, படகம், குடமுழா முதலிய. அகப்புறக் கருவியாவன - தண் ணுமை, தக்கை, தகுணிச்சம் முதலிய. புறமுழவாவன - கணப்பறை முதலிய. புறப்புறக் கருவியாவன - கூறியவற்றுள் அடங்காத நெய்தற்பறை முதலிய. பண் ணமை முழவாவன - முரசு, நிசாளம், துடு மை, திமிலை முதலிய. வீரமுழவு நான் காம். நாண்முழவாவன - நாட்பறை அதா வது நாழிகைப்பறை. காலை முழவாவன - துடி, மத்தளம்; இதில் மத்து ஓசைப் பெயர். இசை இடனுகிய கருவிகட்கு எல்லாம் தளமாதலின் மத்தளம் எனப் பெயர் ஆயிற்று. இதற்கதிட்டான தெய் வம், நான்முகன் என்று கூறுப. சல்லி கை - சல் என்ற ஓசை உடைமையின் பெற்ற பெயர். ஆவஞ்சி - ஆவின் வஞ் சித்தோலைப் போர்த்தலால் பெற்ற பெயர். குடுக்கை - குடுக்கையாக அடைத்தலால் குடுக்கை என்ப. இடக்கை - வினைக்கிரி யைகள் இடக்கையால் செய்தலால் பெற்ற பெயர். கரடிகை - கரடி கத்தினுற்போல் ஓசை உடைத்து ஆதலால் பெற்ற பெயர். மத்தளம், சல்லிகை, உடுக்கை இவைகளை முதற்கருவி, இடைக்கருவி, கடைக்கரு விகளாகக் கொள்க. இவையன்றிக் கர டிப்பறை, பன்றிப்பறை, ஒரு கட்பகு வாய்ப்பறை, தும்பி, தூரியம், பம்பை, தம்பட்டம், தலைவிரிபறை, மரக்காற்பறை முதலிய உளவாம்.

**தோற்றம்**—(உ) சரம், அசரம். (சு) பையிற் பிறப்பன, முட்டையிற் பிறப்பன, நிலத் திற் பிறப்பன, வியர்வையிற் பிறப்பன.

**தோற்புன்னர்** — சாலியன் பார்ப்பினியைப் புணரப் பிறந்தவன்.

**தோஷங்கள்** — (எ) 1. அபத்தியதோஷம், ஸ்திரீசங்கமதோஷம், விஷமதோஷம், விஷமசீதளதோஷம், ரக்தசிக்வகதோஷம், பீதசிக்வகதோஷம், கிருஷ்ணசிக்வகதோஷம்.

2. இது குழந்தைகளுக் குண்டாகும் தோஷங்கள். இது (க)வகை (1) நாய்முள் தோஷம் - இது வாயில் முட்போல் எழும்புதல் பாலுண்ணாமை, அள்ளு, கபம், கால்வலி, சுரம் உண்டாம்.

(2) எச்சில்தோஷம் - இதனால, மயக்கம், சுரம், பேதி, சீறியழல் உண்டாம்.

(3) குளிசதோஷம் - இது, கருப்பம் வேண்டின ஸ்திரிகுளிசம் கட்டிக்கொள்ளுகையில் எதிர்ந்த குழந்தைகளுக்கு உச்சி பள்ளம் விழல், கண் குழிதல், அதிசுரம், இளைப்பு, பேதி உண்டாம்

(4) தூரஸ்திரீபரிச தோஷம் - தேக இளைப்பு, பாலெதிரெடுத்தல் பேதி, கண்ணிற் பீளை இதற்கு முட்டுத் தோஷம் எனப் பெயர்.

(5) சையோகபுருஷபரிசதோஷம்-கண் குழி விழல், உடம்புபசத்தல், சீறியழல், பாலெதிரெடுத்தல் இதை விஷதோஷம் என்பர்.

(6) சையோகஸ்திரீபரிசதோஷம் - நெஞ்சு வறட்சி, கண் குழிதல், வெளிறல், பால் குடியாமை, நித்திரையின்மை முதலிய உண்டாம்.

(7) அளிதோஷம் - பாலெடுத்தல், நெஞ்சடைப்பு, தேக நாற்றம் உண்டாம்.

(8) குளித்தவள் எடுத்த தோஷம் - பாலெடுத்தல், உச்சி பள்ளம், வாயுலரல் முதலிய உண்டாம்.

(9) தேரை தோஷம் - இது தேரைகள் குழந்தைகளின்மேல் வீழ்ந்து பீச்சுவதால் உண்டாவது. கால் கைகள் சூம்பல், மாறு நிறம், வாட்டம், பாலுண்ணாமை, முதலிய குணங்களை உண்டாக்கும்.

**தோஷன்** — 1. யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷிணையிட முதித்த குமரன்.

2. வசுக்களில் ஒருவன் தருமத்திற்கு வசுவிடத்துதித்த குமரன், பாரி சர்வரீ.

**தோஷா** — புட்சிபாரன் பாரி, குமரர் பிரதோஷன், நிசிதன், வியுஷ்டி.

**தோஷை** — 1. பவகன் தேவி.

2. புஷ்பாருணன் தேவி.

**தோஷ்டா** — காச்யபருக்கு அதிதியிட முதித்த குமரன்; துவாதசாதித்தரில் ஒருவன்; இவனைத் துஷ்டா என்பர்; துஷ்டாவைக் காண்க.

## தௌ

**தௌமீயர்** — 1. மந்தாரன் தந்தை.

2. ஒரு இருடி; பாண்டவருக்குக் குரு.

**தௌர்வாசம்**—துருவாசர் செய்த புராணம்.

## ந

**நகரன்** — சத்ரு குமரன், நாகன்.

**நகர்வன** — இவ்வினத்திற் சில தரையில் ஊர்ந்து செல்வன. சில கால்களால் நடப்பன. சில பறப்பன உண்டு. நகர்வன புழு, பாம்பு முதலிய; நடப்பன எலி, கீரி, அணில் முதலிய; பறப்பன ஈ, கொசுகு, வண்டு முதலிய. இவற்றிற் சில மனிதர்க்கு உதவியாயும், சில துன்பஞ் செய்வனவாயு மிருக்கின்றன. பட்டுப் புழு மண்புழு போல்வன பட்டைத் தருகின்றன. மண்புழு பூமியைத் தொளைத்துப் பண்படுத்துகின்றன. சில வண்டுகள் துன்பஞ் செய்யும் கொசு முதலியவற்றைத் தின்று சுகமுண்டாக்குகின்றன.

**மண்புழு** - இது, மண்ணில் அழுகிய பொருளைப் பிறப்பிடமாக்கொள்வது. இதற்குக் கைகால் முதலிய உறுப்புகளில்லை. இதற்கு வாயும், ஆசனத்வாரமும் உண்டு. இது வளைதோண்டும்போது மண்ணை வாய் வழி யுறுஞ்சி மலத்வாரவழி விட்டுவிடும். இவ்வினத்தில் சிறுபாம்பு என ஒன்றுண்டு. அது விஷமுள்ளது.

**ஒளிப்புழு** - இது, மேனாடுகளிலுள்ள புழுக்களில் ஒன்று. இப்புழுவின் உடலில் ஒருவகை ஒளியுண்டு. அவ்வொளியால் விரோதிகளைப் பயமுறுத்தும். அவ்வொளியைத் தான் வேண்டும்போது உண்டாக்கிக் கொள்கிறது. ஆண்புழுவிற்கு ஒளியில்லை. அது பறந்துபோய் விடுகிறது. இது தளிர்களை உணவாக் கொள்ளும். இன்னும் ஐரோப்பாவில் ஒருவகைப் புழு (Bristleworm) இப் புழு அட்டையைப் போன்று நகருகையில் ஒருவித திரவத்தைக்கொண்டு நகருகிறது. இதனுடம்பில் மயிர்களடர்ந் தழகாயிருக்கும் என்பர்.

**சிறுப்புழு** - சாணிகளிலும் மலங்களிலும், அழுகிய மாம்சங்களிலும், புளித்த மாக்களிலும், ஈக்களிடும் முட்டைகளிலும், அழுகிய பொருள்களி லுண்டாம். சில புழுக்கள் மரங்களிலும், இலைகளிலும், இடத்திற்குத்தக்க நிறம் பெற்றிருக்கும்.

**உடம்பில் கூடுகட்டும்புழு** - சில புழுக்கள் தங்கள் வாயிலுள்ள எச்சிலைக்கொண்டு தங்களைச் சுற்றிக் கூடுகட்டிக்கொண்டு அவைகளை மூடவும் திறக்கவும் வைத்துத் தம்மைக் காத்துக்கொள்கின்றன.

**எறும்பின்பகை** - சில புழுக்கள் மண்வெட்டிபோன்ற தலைகளைப் பெற்றுப் பூமியில் குழிதோண்டி அக்குழியைச்சுற்றி மணலைக் காவலாகக் கொண்டிருக்கும். ஏதேனும் எறும்பு தவறிக் குழியில் விழின் அதனை ஆகாரமாகக் கொள்ளும். இவ்வகை புழுக்கள் ஆபிரிக்கா பாலைவனத்திலதிகம் உண்டு என்பர். ஒருவகை வண்டு பாம்பார்டியர்பீட்டல் இது தன் பின்புறத்தில் ஒருவகை விஷத்ரவத்தைப் பீச்சுவது.

**மரப்புழு** - இப் புழுவிற்கு வண்டுகளுக்கிருப்பதுபோல் ஆறு கால்களுண்டு. முன் வாயில் முன் நீண்ட கூரிய பற்களுண்டு. இப் பற்களால் மரங்களைத் தொளைத்துண்கின்றன. இவ்வினத்திற் சில வண்டுகளாக மாறிப் பறந்து மரங்களைத் தொளைக்கின்றன.

**சிரோசிபாலஸ்** - இது லண்டன் பட்டணத்தை அடுத்த கிராமங்களிலுள்ளது. இது பார்வைக்கு விநோத உருவுள்ளது. 2 அங்குல நீளம், இதன் தலையில் படிகம் போன்ற கொண்டையுண்டு. கால்கள் 120 உடல் கண்ணாடிபோல் ஒளியுடன் கூடியும், நீலங்கலந்த பசுமையாயும் வால் சிவந்துமிருக்கிறது. இது நீரிலும் நிலத்திலும் வாழும். தண்ணீரில் மல்லாந்து நீந்தும்.

**கம்பளிப் பூச்சிகள்**-இவை ஒருவகைப் புழுக்கள். இவற்றின் தேகத்தில் ஒரு வகையான மயிர்கள் அடர்ந்திருக்கின்றன. அம்மயிர்கள் தேகத்தின்மீது படின் ஒரு வகையான அரிப்புத் தடிப்புண்டாம். சில வேளைகளில் புண்ணாகியும் விடும். இவை ஆயிரக்கணக்கான முட்டைகளிடும். அவற்றிலிருந் துண்டாம் புழுக்கள் தோட்டங்களை நாசமாக்கும்.

**துணிப்புழு** - ஈரப்பசையுள்ள கம்பளிகள், சால்வைகளில் வால் நீண்ட புழுக்களுண்டாய் முட்டையிட்டுப் புழுக்களாகின்றன. அப்புழுக்கள் தம்மைக் காத்துக் கொள்ளக் கம்பளிகளை வாயிலுள்ள பற்களால் கத்திரித்துக் கூடுகட்டுகின்றன.

**அரக்குப்புழு** - இது ஒரு சிறிய புழு, இதற்கு ஆறு கால்களும், இரண்டு பரிச உறுப்புகளும், கண்களுமுண்டு. இவை செந்நிற முள்ளவை. இவை துவர்ச்சத்துள்ள மரத்தின் சத்தை உறுஞ்சுகின்றன. பெண்புழுக்களின் வயிற்றில், பிறந்த 2 மாதத்தில் சிவந்த திரவப்பொருளுண்டாம். அதுவே அரக்குச் சாயத்திற்கு ஆதாரம். பின்பு அவை கொம்புகளில் ஒருவித பசையால் கூடுகட்டுகின்றன. அக் கூடுகளில் இப் புழுக்கள் ஒருமாதகாலம் தூங்குகின்றன. பிறகு பட்டாம்பூச்சி யுருக்கொண்டு பறந்து செல்கின்றன. இப் பூச்சிகள் கூட்டைவிட்டுச் செல்வதற்குமுன் கூட்டை வெந்நீரிலிட்டு அரக்கைச் சுத்தஞ்செய்து சாயத்தையும் கொள்வர். இச்சாயம் பட்டு நூற்கு உதவி.

**சாயப்பூச்சி** - இது அமெரிக்காகண்ட தேசங்களில் கள்ளிச் செடிபோன்ற செடிகளில் கூடுகட்டி வசிக்கும். இது செந்நிறமாய் வண்டுபோல ஆறுகால்களைப் பெற்று முகத்தி லிரண்டு பரிச உறுப்புடனிருக்கும். இப்பூச்சுகளை உலர்த்தி இடித்துத் தண்ணீரில் கரைத்துச் சாயம் உற்பத்தி செய்கின்றனர்.

**இந்திரகோபப்பூச்சி** - இது இந்தியாவில் செம்மண் களர்நிலங்களில் உள்ளது. வண்டுபோல் ஆறு கால்களைப் பெற்றுப் பட்டுப்போல் நிறங்கொண்டது. இது மழைக்காலங்களி லுற்பத்தியாகி 3 வாரமிருந்து அழிகிறதாம். இது முட்டையிட்டுக் குஞ்சுபொரிப்பது. இதன் வேறுவகை உற்பத்தி இப்பூச்சியைச் சுத்தமாகக் காயவைத்து மக்காமல் பத்திரப்படுத்தி வேண்டும்போது அதைஇடித்துத்தூளாக்கி ஈர வைக்கோலின்மீது தூவி அவ் வைக்கோலை மடித்து ஈர இடத்தில் 12 மணி நேரம் வைத்திருந்தால், தூவின துகள்கள் பூச்சிகள் ஆகின்றன. ஆதலி னிதனை உயிர்த்தெழும் பூச்சி என்பர்.

**பட்டாம்பூச்சி** - (வண்ணாத்திப் பூச்சி) இது, கம்பிளிப்பூச்சிகளில் திருந்தியவுருவுள்ளது. இதன்இறக்கைகள்பட்டுப்போலிருத்தலாலிதற்கு அப் பெயர் வந்தது. இவை, இலைகளில் சிறு முட்டைகளிடுகின்றன. இவை கூட்டினின்று வெளி

வந்தபோது புழுவினுருவடைந்து இலைகளை ஆகாரமாகக் கொள்கின்றன. பின்னிவற்றிற்கு அழகான இரக்கைகள்தோன்றிப் பறந்து சென்று புட்பங்களிலுள்ள தேனையுண்டு சீவிக்கின்றன. இப்பூச்சிகளில் பல வேறுபாடுகளுளஎன. அவை (8000) த்திற்கு அதிகம் என்பர்.

**வெட்டுக்கிளிகள்** - இவை, பசும் புற்றரைகளில் குளிர்ந்த இடங்களில் வசிக்கின்றன. இவை புழுவினத்தில் திருந்திய இரக்கைகொண்டவை. புற்களிலுள்ளவை பசுமை, மற்றவை பல நிறங்கொண்டவை. இவை தம்முட்டைகளைப் பூமியிலிட்டு மணலால் மறைக்கின்றன. இவை இலைகளைத் தின்று ஜீவிக்கின்றன. சில வெட்டுக்கிளிகள் ஆயிரக்கணக்காய் வெகுதூரம் பறந்து சென்று பயிர்களை நாசஞ்செய்கின்றன. சில காலத்திற்குமுன் சில சாதியர் வெட்டுக்கிளிகளை ஆகாரமாக் கொண்டிருந்தனராம். இவ்வினத்தில் ஈட்டித்தலை வெட்டுக்கிளிகளுண்டு. இவற்றிற்குக்கொண்டைகள் மிருகங்களின் கொம்புகள் போலவும், சிலவற்றிற்கு ஆயுதங்கள் போலவு மிருக்கின்றன. இவைகளுக்குக் கண் வாய்கள் மற்ற வெட்டுக்கிளிகளைப்போ லிலாமல் கால்களுக்குக் கீழ்ப்புறமாக இருக்கின்றன. இவை பச்சோந்தியைப் போல் நிறமாறுபாடடைகின்றன.

**கொசுக்கள்** - இவை, அழுக்கு நீரில் தோன்றும் புழுவினத்தில் திருந்தியவை. இவ்வினத்தில் (400)க்கு மேற்பட்ட வகைகள் உண்டு. இவ்வினத்தில் பெண்கொசுக்களே இரத்தபானி. இவை புழுவுருமாறிய பின் நான்கு கால்களும், ஊசிபோல் உதிரம் உறுஞ்சும் துதிக்கையும் சிறகும் பெறுகின்றன. ஒரு கொசு ஆயுட்காலத்தில் (400) முட்டைகளிடுகின்றன.

**ஈக்கள்**-இவைகளும் புழுக்களின் வேறுபட்டுச் சிறகு பெற்றவை. இவ்வினத்தில் வீட்டு ஈ, காட்டீ, குருட்டீ, தேனீ, கதண்டீ, நாயீ, எனப்பலவகை. வீட்டீ ஒரே மூச்சாக (760) கஜம் பறக்கும் என்பர். இதனுடல் (3) பகுதிகளாகப் பிரிவுள்ளது, சிலவற்றிற்குக் கண்கள் பெரியவை. சில ஈக்கள் கொசுக்கள் பெற்றிருக்கும் ஊசிபோன்ற உறுப்பால் இரத்தம் உறுஞ்சும். சில ஈக்கள் நாறிய பொருள்களில் புழுக்களை ஈனும். இவை மலம், மூத்ரம், அழுகிய பொருள்கள்மீது உட்கார்தலால் அவற்றிலுள்ள புழுக்கள் இவற்றின் கால்களில் ஒட்ட இவை அன்னபானாதிகளில் தங்குவதால் மனிதர்களுக்குப் பல வியாதிகளுண்டாகின்றன.

**தேன் ஈக்கள்** - இவை வசதியான மரங்களில் தம்மிடத்துண்டான ஒருவகை மெழுகைக்கொண்டு முதலில் தேனைச்சேகரித்துவைக்கக் கூடு செய்து பிறகு முட்டைகளிட இடஞ் செய்கின்றன. இத்தேன் நீர், சர்க்கரை, பூவின்சத்து, சாயப்பொருள், நிரஸவஸ்து சேர்ந்தவையென்று ஆராய்ந்தோர் கூறுகின்றனர்.

**மின்மினிப்பூச்சிகள்** - இவை ஈக்களினினத்தைச் சேர்ந்தவை. இவை மின்னலைப்போல விட்டுவிட்டு ஒளி கொடுத்துப் பறப்பவை. இவற்றிற் சிலவற்றிற்கு உடலின் பின்னும், சிலவற்றிற்கு மார்பிலும், சிலவற்றிற்குக் காலிலும் ஒளியுண்டாகின்றது. இவ்வாறு ஒளியுண்டாவதற்கு அவற்றின் உடம்பில் பாஸ்பரஸ் எனும் ஒருவகை பாஷாணசத்துள தென்பர். இவை பலவகை ஒளிகளை உண்டாக்குகின்றன. இவ்வகையில் தென் அமெரிகாவிலுள்ள ஒருசாதி விளக்கின் ஒளிபோலவே ஒளிதருகின்றதாம். அவற்றைப் பிரயாணிகள் பிடித்து இரவில் கால்களில் ஒட்டவைத்துக்கொண்டு நடப்பர் என்பர்.

**பேன்கள்** - இவை, அழுக்கிலும், வயர்வையிலும் உண்டாவன. இவ்வினத்தில் தலைப்பேன், சீலைப்பேன், மாட்டுப்பேன், செடிப்பேன் முதலிய உண்டு. இவைகளுக்கு ஆறு கால்கள். உணவு உதிரம் உறுஞ்சல் இவைகளும் ஒட்டுவியாதியை உண்டு செய்வன. இவ்வினத்தில் செடிப்பேன், அசுவுணி, மாப்பூச்சி, பட்டைப்பேன் முதலியவுண்டு. செடிப்பேன் தலைப்பேன் போலுருப் பெற்றதாய்ச் செடியின் சத்தையுறுஞ்சுவது. அசுவுணி (அசரை) அவரை முதலிய செடிகளில் கூட்டமாக இருந்து செடியின் சத்தையுறுஞ்சும். மாப்பூச்சி செடிகளில் வெண்ணிறப் புள்ளியிட்டதுபோல் தொட்டால் ஒட்டும் மாப்போலிருந்து செடிகளின் சத்தை ஈர்ப்பது. பட்டைப்பேன் மரப்பட்டைகளினிடத்தில் தங்கி மரச்சத்தை ஈர்ப்பது. எரிபூச்சி இது அவரை முதலிய கொடிகளில் தங்கிச் சத்தை உறுஞ்சுவது.

**செதிள்பூச்சிகள்** - இவை மரப்பட்டைச்செதிள்களிலிருந்து மரச்சத்தையுண்

பன. இவை கம்பு எனும் காளியத்தைப் போல் உருவமுடையது.

**மோட்டுப்பூச்சி** - இது ஆறு கால்களையும் இரத்தமுறுஞ்சும் ஒரு துதிக்கையுமுடைய்து. அழுக்கில் பிறப்பவை. இவை தொத்து வியாதியுண்டாக்குவன.

**தெள்ளுப்பூச்சிகள்** - இவை மோட்டுப் பூச்சியினத்தில் வேறு பட்டவை இவை, மாடு, நாய், பூனை முதலியவற்றிலும் வீடுகளின் மூலை முடுக்குகளிலும் வசித்து இரத்தம் உண்பன. இவை அதிவேகமாய்த் துள்ளி மறைதலால் இவை துள்ளுப் பூச்சியாம் பெயர் பெற்றிருக்கலாம்.

**மெழுகுபூச்சிகள்** - இவை மோட்டுப் பூச்சியினத்தைச் சேர்ந்தவை. இவை இளமையில் ஒருவகை மெழுகை மரத்தில் கக்குகின்றன. இவற்றைச் சீனர் பல வேலைகளுக்கு உபயோகிக்கின்றனர்.

**சீனவிளக்குப் பட்டாம் பூச்சிகள்** - சைன தேசத்தில் ஒருவகை பட்டாம்பூச்சிகளுக்கு நீண்ட மூக்குகள் இஷ்டப்படி நீட்டவும் குறுக்கவு முண்டு. இம்மூக்கின் ஒளியால் இரவில் இரை தேடுகின்றன. இவற்றைப்போல் தென் அமெரிகா பிரசில் நகரத்தும் சில நீண்ட கழுத்துகளும் சிலுவைபோல் நீண்டகொம்பும் கொம்பின் குறுக்கில் சிறு பந்துபோன்ற உறுப்பும் இஷ்டப்படி நீட்டக் குறுக்கப் பெற்றும் ஒளி பெற்றும் இருப்பன என்ப.

**தும்பிகள்** - இவற்றின் உருவம் கொசுக்களை ஒத்தது, கண்கள் பெரியவை. இரக்கைகள் அபிரகத் தகடுபோ லுள்ளன. இவையும் புழு வகையில் திருந்தியவை. இவை கொசு, புழுக்களையுந் தேனையும் ஆகாரமாக்குகின்றன. இதனைத் தட்டாரப்பூச்சி யெனவுங் கூறுவர்.

**காப்பான்பூச்சி** - இது, செந்நிறமாய் இருளடைந்த வீடுகளிலும், பெட்டிகளிலுமிருந்து அசுத்த காற்றை யுண்டாக்கி மனிதர் உறங்குகையில் கடிப்பது.

**பாச்சை** - இது, ஒரு சிறு பூச்சி வீடுகளிலுள்ள பெட்டி பலகணி முதலியவற்றிலிருந்து மனிதர் உறங்குகையில் கடிப்பது.

**பிள்ளைப்பூச்சி** - இது அழுக்குள்ள நீர் தங்குமிடங்களி லுண்டாகிச் சிறு புழுக்களைத் தின்று ஜீவிப்பது.

**சுவர்க்கோழி** - இது,ஒருவகைப் பூச்சி. இது பாசைப்போன்று பெரிதாயிருக்கும். இது தன் காலின் பின்புறத்துள்ள வால் போன்ற உறுப்பைத் தட்டுதலால் ஒருவகை ஓசை செய்கிறது.

**எறும்புகள்** - இவை முட்டையினின்றும் பிறப்பனவற்றைச் சேர்ந்தவை. இவ்வினத்தில் பலவகை உண்டென்பர். அவை சிற்றெறும்பு, கட்டையெறும்பு, சிவப்பெறும்பு, கறுப்பெறும்பு, தேனெறும்பு, பயிர் செய்யும் எறும்பு, வெள்ளை எறும்பு, முசட்டெறும்பு, நாயெறும்பு, தச்சுவேலை யெறும்பு, சம்மட்டி எறும்பு, கொத்து வேலை எறும்பு, பறக்கும் எறும்பு. சிற்றெறும்பு - இவற்றின் உடல் (3) வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தலை, உடல், வயிறு. இவை முதிரின் இரக்கைகளும் கொள்ளுகின்றன. வாயில் பரிசவுறுப்புக்களிரண்டுள; கால்கள் ஆறு. இவை பிராணிகளை வாயினுற் கடித்து வயிற்றினிறுதியிலுள்ள கொடுக்கினுல் விஷமூட்டுகின்றன. இவற்றினும் பலவகைத் தொழில் செய்வன உண்டு. கட்டை யெறும்பு - கட்டைகளிலும், மரங்களிலு முள்ளவை; இவை சில் விஷமுள்ளவை. சிவப் பெறும்பு - செந்நிறமுள்ளவை; இவையு மெறும்பின் வகையின. கறுப்பெறும்பு - கருநிறமுள்ளவை; இவை கடித்தால் கடினமாகக் கடியில் உதிரமும் உண்டாம். தேன் எறும்பு - இவை அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ளவை. இவை கட்டெறும்பின் வடிவுள்ளவை; இவை தேன்களைச் சேகரித்துத் தமக்கு அடிப்புறத்துள்ள பைபோன்ற உறுப்பில் சேர்த்துண்கின்றன; அந் நாட்டார் அவற்றின் தேனைத் தங்கள் விருந்து காலங்களில் உபயோதப்படுத்துகின்றனர். பயிர் செய்யும் எறும்புகள் - அமெரிக்காவின் மற்றொரு பக்கத்தில் ஒருவிதமான எறும்புகளிருக்கின்றன; அவை கூட்டமாகச் சென்று இலைகளைப் பறித்துக்கொண்டு வந்து தம் வளைகளில் வசதியான இடத்தில் சேகரிக்கின்றன; அவை காளான்களாக முளைக்க அவைகளைச் சில ஜாதி எறும்புகள் ஆகாரமாகக் கொள்கின்றன; சில தாம் இருக்கும் இடத்தைப் புழுதியாக்கி எருவிட்டு ஒருவிதமான தானியத்தை விதைத்துப் பயிரான பின் தமக்குள்ள களஞ்சியங்களில் சேர்த்து வைத்து உண்கின்றன. கூடிவாழ் எறும்புகள் - சில எறும்புகள் கூட்டமாய்க் கூடி வெள்ளங்களுக்கஞ்சி மேட்டுப்பாங்கில் புற்றுகளைக் கட்டி வாழ்கின்றன. வெள்ளம் புற்றுகளை மூடின் அவை யொன்

ற்றையொன்று பந்துபோற் கட்டிக்கொண்டு மிதந்து சென்று மேடான இடங்களிலேனும் மரங்களிலேனும் ஏறிக் கூடி வாழ்கின்றன. சில எறும்புகள் தானியங்களைத் தங்கள் கூடுகளில் தக்க இடங்களில் சேகரித்து வைத்து மழைக்காலத்தில் உண்கின்றன. சில எறும்புகள் சேகரித்த தானியங்களை மாவாக்கி அவற்றை மாத்திரைபோல் திரட்டி உலரவைத்துச் சேர்த்து வேண்டிய போது உண்கின்றன. இவற்றைப் பிஸ்கோத் சுடும் எறும்பென்பர். வெள்ளை எறும்பு - வெண்ணிறமாயுள்ள எறும்பு. முசுட்டெறும்பு - இவை மரஞ்செடிகளின் குளிர்ந்த இடங்களில் கூடுகட்டி வாழ்கின்றன. சிலவற்றிற்குக் கால்கள் நீளம், இவ்வெறும்புகள் முட்டையிட்டே வாழ்கின்றன. இம் முட்டைகள் தோன்றும்போது சிறியனவாய் வெளிவந்த பின் வளருகின்றன. இவற்றில் சில எறும்புகளுக்குப் பேய்க்கால் எறும்புகள் என்று பெயர். அவை கருமையாய் உருவத்தில் சிறிதாய்க் கால்கள் சற்று நீண்டிருப்பன. எறும்புகள் பெரும்பாலும் வளை தோண்டி வாழ்வன. சில எறும்புகள் மரத்தில் கூடுகட்டி வாழ்வன. சில மரப்பட்டைகளை மென்று கூழாக்கித் தேனடைபோன்ற கூடுகளைக் கட்டுவன. அவை காற்றிற்கும் மழைக்கும் விழா. ஆஸ்திரேலியாவிலுள்ள சில எறும்புகள் பெரிய புற்றுக்களைத் தெற்கு வடக்காகக் கட்டுகின்றனவாம். அவற்றிற்கு அந்நாட்டார் காந்த எறும்பென்று பெயரிட்டிருக்கின்றனர்.

**குளவி** — இது, எறும்பினத்தில் திருந்திய பெரிய உருவும் இரக்கையும் உடையது. இது புழுக்கள் முதலியவற்றை ஆகாரமாக்கிக்கொள்வது. இவற்றிற் சில மண்ணாலும் சில அரக்கை யொத்த பொருள்களாலும் கூடுகள் கட்டி முட்டையிட்டு அவற்றிற் காதாரமாகப் புழுக்களைக் கொன்று கூட்டில் புகுத்தி மூடுகின்றன. அதன் குஞ்சுகள் பருவமடைந்த பின் கூட்டைவிட்டு வெளியாகின்றன. இவ்வினத்தில் கருங் குளவிகள் உண்டு.

**கறையான், சேல், சிதல்** — இவை எறும்பின் வகைகளில் திருந்தியவை. இவை நிறத்தால் வெண்மை, இவை ஒன்றுசேர்ந்து வாழ்தலால் பெரிய புற்றுக்களைக் கட்டுகின்றன. இவை தாம் பெற்ற பொருள்களை அரித்துத் தின்கின்றன. இவற்றிற்கு வயது வந்தபோது அவை இரக்கை பெற்றுப் பறந்து பல இடங்களை அடைகின்றன. இவ்வீசல்களுக்குப் பிறப்பிடமாய்ப் பெருஞ் செல் ஒன்று புற்றின் அடிப்பாகத்திலிருக்கின்றது. அது, ஒரு நாளில் (80) ஆயிரம் முட்டையிடுமென்பர்.

**அந்துப்பூச்சி** - இது சிறு பட்டாம்பூச்சி போன்ற உருவமுள்ளது. இது நெல், அரிசி முதலிய உருப்படி யிருக்க உள்ளிருக்கும் சத்தை அரிப்பது.

**வண்டுகள்** - பெரும்பாலும் வண்டுகளுக்கு (6) கால்களும் உள்ளும் புறம்புமாக நான்கு இரக்கைகள் இருக்கின்றன. மேலிரக்கை ஓடுபோல் மெல்லிய உள் இரக்கைக்குக் காப்பாக இருக்கின்றது. இவ்வினத்தில் பல லக்ஷகணக்கானவை உண்டென்பர். அவற்றுள் சில உளுவண்டு, மரவண்டு, உருட்டுவண்டு, பொன்வண்டு, முதலிய. வண்டினத்தின் கண்களுக்கு இமைகளில்லை. அவற்றிற்குக் கண்கள் சல்லடைக் கண்களை யொத்தன. பற்கள் வாள் போன்றவை. உளுவண்டு - இவ்வண்டின் மூக்கில் ஊசிபோன்ற உறுப்பொன்றுண்டு. அதனால் இது தானிய முதலியவற்றைத் தொளைத் துண்கிறது. பொன்வண்டு - வண்டை யொத்துத் தலை மாத்திரம் பளபளப்புள்ள ஒளியுள்ளதாய் இலைகளைத் தின்பது. மரவண்டு - மரங்களுக்குள்ளாய் மரங்களைத் துருவிப் பலவழியாக்கி நாசஞ் செய்வது. உருளைக்கிழங்கின் வண்டு - இது உருளைக்கிழங்கின் செடிகளை நாசமாக்குவது. மாம்பழ வண்டு - இது, மாம்பழத்தினுள் உள்ள வித்தை இடமாக்கொண் டரித்துத் தின்பது. உருட்டுவண்டு - இது, பூமியில் வளை தோண்டி ஆகாரத்தின் பொருட்டுச் சாணி, மல முதலியவற்றை உருட்டிக்கொண்டு சேர்ப்பது. தேன்தும்பி - இது மேல்நாட்டுக் காடுகளிலுள்ள வண்டு. இதற்கு நீண்ட தும்பியுண்டு. அதனால் பறக்கையில் பூக்களில் உள்ள தேனைக் கிரகிக்கிறது. மருந்து வண்டு - இது ஐரோபாவின் தென்பாகத்திலிருக்கிறது. இவ்வண்டுகளில் ஒருவகைத் தைலமிறக்கி மருந்தாக உபயோகிக்கின்றனர்.

**நாகப்பூச்சி** - (பூநாகம்) இது பூமியில் வளைதோண்டிக்கொண்டு மண்ணைத்தின்று மண்ணையே எச்சமிட்டு வாழ்வது. இவ்வினத்தில் மேற்கிந்திய தீவு முதலியவற்

தில் ஒருவகை உண்டு. அவை பாம்பின் தோலையொத்த தோலும், பல்லியின் தலை போன்ற தலையும் பெற்றவை. இவை 2 அடிகளுக்குமேலும் தக்க கனமும் பெற்றவை. மற்றொருவகை உடலில் பாம்பிற்குள்ளதுபோல் கட்டுகள் உண்டு. மற்றொருவகைக்குப் பாம்பின் நாக்கையொத்த நாக்கும் உண்டு. சில விஷமுள்ளனவாக யிருக்கின்றன.

**மாவட்டை** - இந்தச் சாதியில் பலவகை பேதமும் நிறமும் உண்டு. இதன் உடல் பல வளையங்கள் பெற்றவை. தேகமுழுதும் பல கால்களுண்டு. இதற்குப் பயம் நேருகையில் அது தன்னைப் பந்துபோல் சுருட்டிக்கொள்கின்றன.

**பூரான்** - இது தட்டையான உருக்கொண்டு பல கால்களையும், பின்பக்கம் கூரிய கொடுக்கையும் முகத்தில் பரிசவுறுப்பையுங் கொண்டது. இது தன் கொடுக்கால் கொட்டும். இவ்வினத்தில் சிறுபூரான் என்பது பூரானைப்போல் நீண்டு மெலிதா யிருக்கும். இது செவிகளில் நுழையும் என்பர். இதனுடலில் ஒருவித ஒளிப்பசை இராவில் தோற்றும்.

**செய்யான்** - இது பூரான் இனத்தில் பெரிது. இதன் உடலில் கறுப்பும், மஞ்சளுமாகிய பட்டைகளுண்டு. இது பாம்பினும் கொடிய விஷமுள்ளது. இது மரங்கள் புதருகளடர்ந்த இடங்களில் வாழ்வது.

**ஜலமண்டலி** - இது பூரானினத்தைச் சேர்ந்தது. இதனுடம்பில் பல வளையங்களும் பல கால்களுமுண்டு. முகத்தில் இரண்டு பரிசக் கொம்புகளும், பின்புறத்தில் இரண்டு நீண்ட விஷமுள்ள கொடுக்குகளும் இருக்கின்றன. இது மனிதரைக் கொட்டினுல் வியர்த்து இறப்பர். இதுவே சீதமண்டலி. இதில் ரத்தமண்டலியும் உண்டு.

**இராமபாணம்** - இது ஒருவகைப் பூச்சி. இது தலையில் ஊசிபோல் உறுப்புப் பெற்றுத் தலைபருத்தும், உடல் சிறு சிதல்போல் சிறுத்து முள்ளது. இது அம்புபோல் தொடங்கிய இடத்திருந்து நேராகப் புத்தகங்களின் எட்டைத் தொளைப்பது.

**தேள்** - இது நண்டைப்போல் கைகளையும் கால்களையும்பெற்றது. இதற்கு உடம்பில் பல வளையங்களுண்டு. இதற்குச் சிலந்திபோல் கண்களுண்டு. கட்டமைந்த கொடுக்கின் முனையில் முள்ளொன்றுண்டு. அதனால் மனிதரைத் துன்புறுத்துகிறது. இவ்வினத்தில் செந்தேள், கருந்தேள், நச்சுத்தேள் நண்டுதெறுக்கால் என்பன உண்டு செந்தேள் முதலியவும் விஷமுள்ளனவே. நச்சுத்தேள் உருவத்தில் சிறிதாய்ப் பனை, புளி முதலிய மரங்களில் வசிப்பது. இது மகா விஷமுள்ளது. நண்டு தெறுக்கால் இது உருவத்தில் பெரிய தேளினத்தது. இது ஒரு அடி நீளத்திலுமிருக்கிறதாம் இது மகா விஷப்பிராணி. மரணத்தையு முண்டாக்கும். இவைகளில் உச்சிலிங்கத்தேள் வாதத்தேள், பித்தத்தேள், சிலேஷ்மத்தேள் என நால்வகை.

**சிலந்திப்பூச்சி** இவை பூச்சிகளைப் பிடித்துத் தின்பன ஆதலால் அதற்கு வேண்டிய உறுப்புக்களைப் பெற்றிருக்கின்றன. இவை நிலத்திலும், நீரிலும் பூக்களிலும், மரங்களிலும், வீடுகளிலும் வாழ்கின்றன. இவற்றிற்கு (8) கண்களுமுண்டு. அக்கண்களை அவை வேண்டியபடி சுழற்றுகின்றன. இப்பூச்சிகளுக்கு முன்காலின் முனையில் விஷமுண்டு. கால்களில் கூர்மையான நகமும் உண்டு. இது, தன் வயிற்றின் பக்கங்களிலுண்டாம் ஒருவகைப் பசையால் வலை நெய்து பதுங்கியிருந்து கொசுகு முதலிய பூச்சிகள் அதில் வந்து சிக்குகையில் திடீரெனப் பாய்ந்து கொடுக்கால் விஷமூட்டிக் கொன்று தின்னும். பூச்சிலந்தி - பூவிலுள்ள தேனையுண்ணவரும் பூச்சிகள் மீது பாய்ந்து கொன்றுதின்பது. குழிச்சிலந்தி பூமியில் வட்டமான குழி தோண்டிப் பதுங்கியிருந்து அதில் வரும் பூச்சிகளைப் பிடித்தருந்தும் இவ்வினத்துப்பூச்சிகள் முட்டைகளை ஒருவகை பட்டுப்போல் வட்டப்பொருளில் வைத்துக்காக்கிறது. நீர்ச்சிலந்தி - நீரில் கூடுகட்டி அந்நீரைத் தனக்குத்துன்பமிலாது அதில்வரும் பூச்சிகளையும் பிடித்தருந்தும். பெருஞ்சிலந்தி அவை ஆபிரிகா முதலிய தேசங்களில் (10) அடி அகலமாய் உறுதியான வலைகளைப் பின்னிப் பக்ஷிகள், குரங்குகளையும் எதிர்க்கத்தக்க வலிபெற்றிருக்கின்றன.

**பல்லி** - இது, நீண்ட உடலையும், குறுகிய நான்கு கால்களையும், வாலையும், குவிந்தவாயினையும் உடையது - இது முதலையினத்திற் சிறியது. இவ்வினத்தில் பலவகை உண்டு. வீட்டுப்பல்லி, மரப்பல்லி, கண்ணாடிப்பல்லி, ஓந்திப்பல்லி, வேலிப்பல்லி,

ஒட்டுப்பல்லி, பறக்கும்பல்லி, இவை மழமழப்பானதும், கண்ணாடித் தோலையும், புள்ளித் தோலையும், வரித் தோலையும், சொறித்தோலையும் பெற்றிருப்பவை. கால்களில் மழமழப்பான இடங்களையும் பற்றத்தக்க நகங்களைப் பெற்றவை. வீட்டுப்பல்லி இதனைச் சுவர்ப்பல்லி என்பர். இவை, வீட்டுச் சுவர்களிலிருந்து ஈ, கொசுகு முதலியவற்றைப் பிடித்துத் தின்பன. மரப்பல்லி மரங்களிலிருந்து பூச்சிப்புழுக்களை உணவாக் கொள்பவை. இவை சுவர்ப்பல்லியினும் சற்றுப் பெரிய உருவுடையவை கண்ணாடிப்பல்லி பளபளப்பாய்த் தேகத்தினுள்ளுறுப்புகளும் தெரியு நிலைமையான கண்ணாடிபோன்ற தோலுள்ளவை ஓந்திப்பல்லி இதன் உடல் மஞ்சளை யொத்திருக்கும் இது தன் தேகத்தைப் பலவித நிறங்களாக மாற்றும் வன்மையுள்ளது. வேலிப்பல்லி வேலிகளிலிருந்து சீவிப்பவை. இவை தம்விரோதிகளை ஏமாற்றும் சக்தி பெற்றவை. ஒட்டுப்பல்லி இதன் கால்கள் சுவரில் ஒட்டும் வகை பந்துபோலிருக்கும். அதிவேகமாய்ச் சுவரில் ஓடும். பறக்கும் பல்லி இது மேற்குக் கரையோரங்களிலுள்ளவை. இதற்கு முன்கால்களுக்குக் கீழ்பக்கங்களில் பறக்கத்தக்க தோல் தாங்கல் உண்டு.அதன் உதவியாலிது அதிதூரம் தாவிச் செல்லுகிறது.

**பெரும் பல்லிகள் (Moniter)** - அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா முதலிய நாடுகளில் உள்ளவை. இவை (4) முதல் (8) அடி நீளமும் அதற்குத் தக்க உடற்கனமுள்ளவையுமாம். இவை உடலில் வரிகளையும் புள்ளிகளையும் பெற்றவை. சில பல்லிகள் விஷப்பற்களுள்ளவை, அவற்றை இகுனு என்பர். இகுனு தன் வாலால் பூச்சிகளைப் பிடித்துத் தின்னும். மெரிக்காவைச் சார்ந்த அரிசோனா நாட்டில் (காலாஸ்மானெட்டர்) ஒருவகைப் பல்லி நீர்க்கரை யோரங்களில் வசிக்கிறது. அதற்கு மற்றப் பல்லிகளுக்கு இருப்பவைபோல் கை கால்களிராமல் சற்று நீண்டு பருத்தவை. இவை பூச்சி, தவளை முதலிய பிராணிகளை ஆகாரமாகக் கொள்ளுபவை. இவை தேன் கூடுகளிலுள்ள தேனீக்களை வாலால் பலமுறை ஒட்டித் தேன் உண்ணும். இவ்வினப் பல்லி சயாம் தேசத்திலும் வளை தோண்டிக்கொண்டு வசிக்கும். அவைகளும் தவளை, நண்டு, ஆமை முதலியவற்றை ஆகாரமாக்கொள்ளுகின்றனர்.

**அறணை** - இது பல்லி யினத்தில் ஒருவகை. இதன் தேகம் மழமழப்பாய் வரிகள்கொண்டிருக்கும். இதன் நாக்குப் பாம்பின் நாக்கையொத்தது. இச்சாதியில் $1\frac{1}{2}$-அடி நீண்டவையுமுண்டு. பூச்சிகள் உணவு.

**எலிகள்** - எலிகளின் இனத்தை எகர வருக்கத்தில் கூறினேனாயினும், பின்னையும் அவ்வினத்திற் சிலவற்றின் வேறுபாடுகளைக் கூறுகிறேன். இவற்றுள் நீரெலி, காரெலி, வெள்ளெலி, முள்ளெலி, தாண்டும் சுண்டெலி, தூங்கெலி, வீங்கெலி, இரைப்பெலி எலிகள் ஒருமுறைக்கு (8) குட்டிகள் போடுகின்றன. காலமுமிடமும் வாய்க்கின் வருடத்தில் (800) குட்டிகள் ஈனும் என்பர். இவை கடிக்கின் விஷத்தால் துன்பமுண்டாம். வீங்கெலி - கடிக்கின் உடல் வீங்கித் துன்பமாம். இரைப்பெலி - கடிக்கின் இரைப்பினால் சுவாசரோகமுண்டாம். வெள்ளெலி - கழனிகளின் வரப்புகளிலிருந்து தான்ய நாசஞ்செய்வன. குண்டெலி - இவை ஆபிரிக்காக் கண்டவாசிகள் இவற்றிற்கு வால்கள் இல்லை; சில வால் குறுகியவை. நீரெலி - இது வளை தோண்டுவிதம் அரண்களை ஒக்கும். தண்ணீர்க்குள் அதிகநேரம் மூழ்கியிருக்கும். முள்ளெலி - இது பெருச்சாளிபோல் பருத்து மயிர் அடர்ந்து சிறு முட்களைப் பெற்றிருக்கும். இது தோட்டங்களை நாசஞ் செய்வது, இதனை அகழெலி என்பர். தாண்டும் சுண்டெலி - இதற்குப் பின் கால்கள் நீளம், இதன் வால் குச்சுபோல் திரண்டது. இது முயலைப்போல் தாண்டித் தாண்டிச் செல்லும்.

**எலி மிருகம்** - ஆஸ்திரேலியா, ஆண்டிஸ்மலை நாடு முதலியவற்றிலுள்ளது. (2) அடி நீளம், ($1\frac{1}{4}$) அடி உயரம். இதன் காலும் கையும் நாய், ஆடு முதலியவற்றிற்குள்ளனபோல் நீண்டவை. இது சாகபக்ஷணி.

**மூஞ்சூரு** இது சுண்டெலியினத்தின் வேறுபாடு. இவ்வினத்தில் 6 அங்குல முதல் பன்றியளவு முண்டென்பர். அவை கஸ்தூரி மூஞ்சூரு, துதிக்கை மூஞ்சூரு, நக்ஷத்ரமூக்கு மூஞ்சூரு, பன்றிக்கால் மூஞ்சூரு, குண்டெலி மூஞ்சூரு, சுண்டெலி மூஞ்சூரு எனப்படும். இம் மூஞ்சூருகளுக்குப் பின்காலின் பக்கமாய் ஒருவகை

நாற்றத்தைதல மிருக்கிறது. அதை அது விரோதிகளிடம் பயம் உண்டாம்போது வெளியிடுகிறது. இவ்வகை மூஞ்சூறுகளில் அமெரிக்காவிலுள்ளவற்றிற்கு வயிற்றின்பக்கமாய் ஒருவகை வாசனைப் பொருளுண்டு. ஆதலாலதனைக் கஸ்தூரிமூஞ்சூறு என்பர். வட அமெரிக்கர் முதலிய இடங்களில் ஒருவகை - மூஞ்சூறுக்கு மூக்கு யானைத் துதிக்கைபோல் நீண்டிருக்கிறது. அது துதிக்கை மூஞ்சூறு. நக்ஷத்ரமூக்கு மூஞ்சூறு - ஐரோப்பாவின் வடபாகத்தில் இருக்கிறது. இம் மூஞ்சூறின் மூக்கின் தசை நக்ஷத்திரம்போ லிருக்கிறது. இது தன் நீண்ட நாவால் பூச்சிகளைப் பிடிக்கும். பன்றிக்கால் மூஞ்சூறு - இது ஆஸ்திரேலியா வாசி. இதன் உடல் அடியில் பருத்தும், தலைபக்கம் சிறுத்தும், பின்காலும் வாலும் பருத்தும், முன்கை சிறுத்தும், காதுகள் நீண்டும் இருப்பதால் முயலைப்போல உட்காருவதற்கும், குதித்துச் செல்வதற்கும் உதவி. கால்களிலுள்ள நகங்கள் பன்றியை யொக்கும். மூஞ்சூறு மிருகம் - இது தென் அமெரிக்கா பிரதேசவாசி. இது உருவத்தில் மூஞ்சூறை ஒத்தது. 3 அடி நீளம், 2 அடி உயரம். இது பன்றியைப்போ லிருக்கிறது. இதற்கு வால் இல்லை. தாவரங்களைத் தின்கிறது. மர மூஞ்சூறு - இது ஐரோப்பியவாசி. இதன் கால் கைகள் பூனையை யொத்தவை. விரல்கள் மூஞ்சூறு போன்றவை. தேகம் மயிரடர்ந்தது. இது மரங்களில் ஏறிக் கூடு கட்டி வாழும். மாம்சபக்ஷணி.

பெருச்சாளி - இது எலி யினத்தில் பெரிது. இதற்குக் கூரிய நகங்களும் வலுத்த பற்களுமுண்டு. இவற்றின் உதவியாலிது வலுத்த கட்டடங்களையும் மரங்களையும் கல்லும். இது வளை தோண்டி வசிப்பது. இவ்வினத்தில் பலவகை உண்டு. தீனிப்பை பெருச்சாளி - இது வட அமெரிக்கா வாசி. இதன் கழுத்தடியில் தீனிப்பை பெற்றிருக்கிறது. இது தன் இரையை அப் பையில் அடக்கிக்கொண்டு வேண்டியபோது உண்கிறது. இதன் வால் குட்டை. காங்கேரு பெருச்சாளி - இது ஆஸ்திரேலிய வாசி. இதன் முன் கை குறுகியும், பின் கால் நீண்டும், தடித்தும் இருக்கிறது. உடல் முன் சிறுத்தும், பின் பருத்துமிருக்கிறது. இது எலியைப்போல் கை கால்களை ஊன்றி நடவாது. பின் கால்களை ஊன்றிக் காங்காருபோல் குதித்துக் குதித்து நடக்கிறது. இதற்கு வால் கைபோல் உதவுகிறது. இது வளை தோண்டி வாழாமல் கூடு கட்டி வாழ்கிறது. பையுள்ள பெருச்சாளி - இது ஆஸ்திரேலிய வாசி. இதன் முகம் வட்டம், கால் கை வால் குட்டை, உடல் பருமன், கழுத்தும் தலையும் பன்றியை யொத்த பருமன். இதனடி வயிற்றில் காங்கேருக்கு இருப்பதுபோல் ஒரு பை உண்டு. அதில் அது தன் குட்டிகள் தாமே இரை தேடும் வரையில் வைத்து உலாவுகிறது.

பெருச்சாளி மிருகம் - இது தென்அமெரிக்கா வாசி. இது ஒரு பன்றியைப்போன்றது. வாலில்லை, மற்ற உறுப்புகள் பெருச்சாளியை யொத்தவை. இது (2½) அடி உயரம். கால்கள் தடித்து உயர்ந்தவை. விரல்கள் நீரில் வசிக்கும் பிராணிகளுக்கு உள்ளவைபோல தோற்பாதம். இது தண்ணீரில் மூழ்கி நீர்ப் பூண்டுகளை உண்டு வசிக்கிறது.

வாத்து மூக்கு மிருகம் - இது ஆஸ்திரேலியாவின் தெற்கிலுள்ள நீர்நிலைகளின் கரையில் வளை தோண்டி வசிப்பது. இதன் முகத்திலுள்ள மூக்கு வாத்தின் மூக்கைப் போன்று தட்டையா யிருக்கும். இதன் குறுகிய கையும் காலும் மிருகங்களுக்குள்ளவை போன்றவை. இதனடி தோலடி. இது தண்ணீரில் வேகமாய் நீந்து மீன் முதலியவற்றை ஆகார மாக்கும். இது கருப்பமடைகையில் வயிற்றிற்குள் முட்டையா யிருந்து அதிலே முதிர்வடைந்து பருவகாலத்தில் முட்டையை விட்டு வெளிப்படுகிறது. இதனுடல் மயிரால் மூடப்பட்டிருக்கிறது.

ஓணான் - இது பல்லி யினத்தில் ஒரு வகை. இதன் முதுகு பல்லிகளுக்கிருப்பதுபோ லில்லாமல் தலைமுதல் வாலின் தொடக்கம் வரையில் வாள்போன்ற முள்ளின் வரிசைகளுண்டு. இவ்வினத்தில் பலவகை ஓணான்களுண்டு. மலையோணான், கறுப்போணான், பச்சைஓணான், செந்நிற ஓணான், பச்சோந்தி முதலிய. இவை மலைகளிலும், புதர்களிலும், பூச்சிகளையும், புழுக்களையுந் தின்று ஜீவிக்கின்றன. இவற்றிற்கு முதுகு கரடுமுரடுள்ள தோலைப் பெற்றிருக்கிறது. மலையோணான் மலைகளில் செந்நிறமுள்ள தலை யுடையதாய் உடல் முழுதும் கறுப்பு நிறம் உடையதா

யிருக்கிறது. கறுப்போனான் - மலைகளி லேயே கறுப்பு நிறமாயிருக்கிறது. இவை கள் தசைப்பற்றுள்ள தோல்போல் பூமி யில் குழி தோண்டி முட்டைக ளிட்டு அக் குழியை மண்ணால் நிரப்பிப் போய்விடு கின்றன. அம் முட்டைகள் சூரிய உஷ் ணத்தால் பருவகாலத்தில் வெளிவருகின் றன. இவற்றில் சில ஓணான்களுக்குச் சிர த்தில் கொண்டையும், சிலவற்றிற்கு அலை தாடியும் உண்டு. இவ்வகை ஓணான்கள் ஆபிரிக்காகண்டக் காடுகளிலிருக்கின்றன. இதை (Hooded Blood Sucker) என்பர். ஆஸ்திரேலியா நாட்டின் மேற்பக்கத்துக் காடுகளில் ஒருவகை விநோத அமைப்பு உள்ள ஓணான் உண்டு. அதன் உடலும் பின் காலும் வாலும் நீண்டவை. முன் கைகள் குறுகியிருக்கின்றன. அதன் கழுத் தைச் சுற்றிலும் மெல்லிய தோல் வளர்ந்து இறக்கைபோல் உதவுகிறது. இது ஒரு மரத்திலிருந்து மற்றொரு மரத்திற்குத் தாவுகையில் அத் தோல் விரிந்து வேக மாய்ச் செல்லச் செய்கிறது. ஆதலால் இதனைப் பறக்கும் அணிலைப்போல் பறக் கும் ஓணான் என்பர். இதனை ஆங்கிலத் தில் (Frill Lizard) என்பர். பச்சை ஓணான் - இது உடலில் பசுமை நிறமுள் ளது. இது, மற்ற ஓணான்களை யொத்து நிறத்தில் மாத்திரம் மாறுதலுள்ளது. செந் நிற ஓணான் - இது ஓணானையொத்து உடல் செந்நிறமாய்ப் பருத்துள்ளது. இது மலை வாசி. பச்சோந்தி - இது பச்சை ஓணான் சாதியில் ஒன்று. இதன் தலை தட்டையா யும், கால் விரல்கள் அகன்றும் இருக்கும். இது, தரையில் நடப்பதில்லை, இது மரக் கிளைகளில் வசிக்கும். இது மிக்க கோப முள்ளது. பாம்பைப்போல் சீறுந் தன்மை யுள்ளது. நாக்கும் பாம்பின் நாக்கைப் போல் நீண்டே யிருக்கும். இது, தன் வாலை மரங்களில் சுருட்டிக்கொண்டு தாவி ஏறும். இது, இயற்கையில் பசுமை நிறங் கொண்டதாயினும் பலவித நிறபேதங்க ளைக் கொள்ளத்தக்க சக்தியைப் பெற்றிரு க்கிறது. இது, தன் நிறபேதத்தால் பிரா ணிகளை மயங்கச்செய்து அவற்றை இரை யாக்குகிறது. இந்த ஓணானினத்தில் உடும்பு சேர்ந்ததே. அதனை மலை ஓணான் என்பர். இதனை உடும்பு எனும் வரியில் காண்க. இவ்வினத்தில் சில அமெரிக்கா கண்ட காடுகளில் உள்ளன. இதற்கு மெட்டாகோ என்று பெயர் (The Matao) என்பர். இதன் முதுகில் வட்டமான செ திள்களும் அம் முதுகின் நடுவில் நடுக்கட் டிட்டதுபோல் மூன்று பட்டைகள் காணப் படுகின்றன. இதற்குத் தலை சிறிது உடல் பெரிது, வாலும் கால்களும் குறுகியன. இது, பாலைவனங்களில் வளை தோண்டிக் கொண்டு அதில் வசிக்கிறது. இது மற்ற பிராணிகளுக்கு அஞ்சுவதில்லை. இதை யொத்த மற்றொரு பிராணியும் வட அமெ ரிக்காவைச் சேர்ந்த மெண்டோசா தீவி லிருக்கின்றது. அதற்குக் கிளாம்போரஸ் டிரங்காடஸ் என்று பெயராம். இது (15) அங்குல நீளமுள்ள குறுகிய பிராணி. இதன் கால்களில் நீண்ட பாதங்களுண்டு. இதன் தோல் செதிள்களைப் பெற்றுக் கன மாய் ஒழுங்காக முதுகை மூடிக்கொண்டு இருக்கும். அதன் விளிம்பில் குஞ்சம்விட் டதுபோல் மயிர்க் குச்சுகளிருக்கின்றன. இதற்கு வால் குச்சுபோல் நீண்டிருப்பதால் வாலினால் உடலின்மீதுள்ள தூசுகளைத் துடைத்துக்கொள்ளும் இது பூமியில் வளை தோண்டிக் கொண்டு பூச்சிகளைத் தின்று ஜீவிக்கும். (இயற்கை அற்புதம்).

**எறும்புத்தின்னி** — இது, தென் அமெ ரிக்கா பிரேசில் நாட்டிலுள்ளது. இது காடியைப்போல் மாமேறு வன்மைபெற்ற வளைந்த நகங்கொண்டது. இம் மிருகத் தின் வாலிலுள்ள மயிர்கள் கூரிய முட்கள் போல் அடர்ந்து நுனி அழுந்திக் கூர் மையா யிருக்கிறது. அவ் வாலினால் புற் றுக்களைத் தோண்டி எறும்பு, செல் முத லியவற்றை ஆகாரமாக்குகிறது.

**சிலந்திப் பூச்சிகளின் பேதம்** - (28) இவை வாதத்தில் (7), பித்தத்தில் (7), சிலேஷ்மத்தில் (7), சங்கிரணத்தில் (7). வாதச்சிலந்தி - (7) வகை. பீதச்சிலந்தி, குமுதச்சிலந்தி, மூலவிஷச்சிலந்தி, ரத்தச் சிலந்தி, சித்திரச்சிலந்தி, சந்தானிகச்சில ந்தி, மேஜகச்சிலந்தி. பித்தச்சிலந்தி - (7) வகை. கபிலாசிலந்தி, அக்னிமுகச்சிலந்தி, பீதச்சிலந்தி, பதுமச்சிலந்தி, மூத்திரச்சில ந்தி, சிவேதச்சிலந்தி, கறுப்புச்சிலந்தி. சிலேஷ்மசிலந்தி - (7) வகை. பாண்டுச் சிலந்தி, ரத்தபாண்டுச்சிலந்தி, வண்டுச்சில ந்தி, பிங்கச்சிலந்தி, திரிமண்டலச்சிலந்தி, துர்க்கந்தச்சிலந்தி, சித்திரமண்டலச்சில ந்தி என்பர். சங்கிரணச்சிலந்தி - (7) வகை அவை காகச்சிலந்தி, அக்னிபதச்சிலந்தி,

லாஜவர்ணச்சிலந்தி, வைதேகிச்சிலந்தி, ஜாலமாலினிச்சிலந்தி, மாலாருண்ணச்சிலந்தி, சுவர்ச்சச்சிலந்தி என்பன. இந்தச் சிலந்திகளுக்கு விஷம், சுவாசம, பல், மலம், மூத்திரம், சுக்லம், வாய், வாய்நீர், ஸ்பரிசம் எனும் (8) இடங்களில் உண்டாம். இவை மனிதர்மீது படில் எல்லா துர்க்குணங்களுமுண்டாம்.

**நகபானன்** — அங்கன் குமரன்; இவன் குமரன் திவிரதன்.

**நகுலன்**—பாண்டுவின் தேவியாகிய மித்திராதேவியிடம் அச்வநிதேவர் மந்திரத்தால் பிறந்தவன். இவனுக்குத் திரௌபதியிடம் சதாநீகனும், இரேணுமதி யென்னும் பெண்சாதியிடம் நிர்மித்திரனும் பிறந்தனர். இவன் தன்னை அழகுள்ளவன் எனச் செருக்குற்றதால் சகாதேவனுக்குப் பின்னிறந்தனன்.

**நகுலேஸ்வரி பீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று.

**நகுஷன்**—1. (சங்.) ஆயுவிற்குச் சுவர்ப்பாவியிடம் பிறந்தவன். புரூரவசுவின் பேரன். காண்டவப்பிரஸ்த மாண்டவன். செம்படவர் வலையிலகப்பட்ட சௌநகரை மீட்கப் பசுவை விலையாகத் தந்தவன். இவன் நூறு அச்வமேதயாகஞ் செய்து இந்திரபதம் பெற்றுப் புலோமசையாகிய இந்திராணியிடம் சத்த முனிவர்களும் பல்லக்குத் தாங்கச் செல்கையில், விரைவில் செல்லும் அவாவால் காமவெறி மீறிச் சர்ப்ப சர்ப்ப வென்றனன். இதனால் அகத்தியர் கோபித்துச் சர்ப்பமாகச் சபித்தனர். இவன் பெரும்பாம்பாகவிருந்து வீமசேனனை விழுங்கித் தான் கேட்ட தருமசந்தேகங்களுக்கு விடையளித்த தருமபுத்திரரால் சாபம் நீங்கப் பெற்றவன். இவன் தேவி பிரியம்வதை; குமரர் ஆயாதி, உத்தவன், சங்கியாதி, யயாதி, எதி, கிருதி, (பாகவதம்.)

2. கத்ரு குமரன், நாகன். நளனைக் கடித்தவன்.

3. பிரசாபதிக்கு ரதையிடம் பிறந்தவன் வசு.

**நகைக்கும் பறவை** — இது ஆஸ்திரேலியா கண்டத்திலுள்ளது. இது இந்தியா நாட்டின் மீன்குத்திப் பறவைபோ லிருக்கிறது. இதற்குத் தலையும் வயிறும் கருமை கலந்த செந்நிறம், பின்புறம் நீலங் கலந்த பசுமை. மாம்ஸபக்ஷணி. கழுத்து உடலுடன் சேர்ந்தே பிரிவிலாதிருக்கிறது. இது இனிய குரலுடன் முதலில் பாடத் தொடங்கிப் பிறகு பின் உரத்த சத்தத்துடன் வெகுநேரம் ஹா, ஹா, ஹா என்று நகைக்கிறதாம். இது, அதிகாலையிலும் மனிதர் படுக்கைக்குப் போகும்போதும் நகைக்கிறதாம். பழகிய பறவைகள் சில குறிப்பிட்டால் நகைக்கின்றன. இவற்றை வைத்தியசாலைகளில் நோயாளிகளைக் களிப்பிக்க வளர்க்கின்றனர்.

**நக்கணன்** — கடைச்சங்கமருவிய புலவர்.

**நக்கண்ணையார்** — இவர் பெண்பாலர். பெருங்கோழிநாய்க்கன் மகள். நக்கண்ணை எனவும் கூறப்படுவர். நக்கண்ண சுலோசனை என்னும் வடசொல்லின் மொழிபெயர்ப்பு. அரசற்கு மகட்கொடை நேரும் வணிக மரபினர். உரையூர் வீரைவேண்மான்வேளியன் தித்தனது மகன். போர்வைக்கோப் பெருநற்கிள்ளி என்னும் சோழன் தன் தந்தையோடு பகைத்து நாடிழந்து புல்லரிசி கூழுண்டு வருந்தியவன். ஆமூர் மல்லனைப் போரில்வென்றது கண்ட இந்தக் கண்ணையார் அவ்வாசனைத் தாம் உணர்ந்து முயங்க விரும்பித் தம் காதன் மிகுதியையும் அவனை அணைத்து முயங்குதற்கு அவையத்தார் காண்பரே என்றஞ்சுவதையும் அவனைப் பல்காலும் காணப்பெறினும் முயங்காமையினாலே தம மேனி பசலை பூத்ததையும் பலவாறாக விரித்துக் கூறி வருந்துவாராயினர். புறம் (அங, அச) இன்னும் தாம் சிலம்பொலிப்ப ஓடிச் சென்று தம் மனையின்கண்ணுள்ள பனையடியில் மறைந்து நின்று நோக்கித் தாம் தம்முடைய வளையும் கலையும் முதலானவை தோற்கும் ஆண்மை உடையன் அவன் எனவும் கூறியுள்ளார். புறம் (அரு). இவர் நெய்தலையும் குறிஞ்சியையும் புனைந்து பாடியுள்ளார். சோழர் மரபின் அழிசியினது ஆர்காட்டைச் சிறப்பிக்கிறார். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு (ககூ, அஎ.) பாடல்களும் அகத்திலொன்றும் புறத்தில் மூன்றுமாக ஆறு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**நக்கத்திரசீவகன்** — க்ஷத்திரியப் பெண்கள் சோரத்தில் மறையவனைக் கூடிப்பெற்ற குமரன்.

**நக்கீரனார்** — இவர் மதுரைக்கணக்காயனார் மகனார். கடைச்சங்கத்துத் தலைமைப்புல

வர். இவர் மூடத்திருமாறன் கடைச்சங்கம்
கண்ட காலத்தில் புலவர் திலகராயிருந்து
இறையனர் திருவாய் மலர்ந்தருளிய
அகப்பொருளுக்கு உரைகண்டு வங்கிய
சூடாமணிபாண்டியன் காட்டிய பொற்கிழி
பெறத் திருமுகப்பாசுரம் ஆலவாயாரிடம்
பெற்றுத்தந்த தருமிக்கு அப்பாசுரத்தில்
குற்றங்கூறி மறுத்துச் சிவமூர்த்தி யெதி
ரில் வந்து கேட்கவும் அஞ்சாது குற்றங்
கூறி மறுத்த அக்குற்றத்தால் பொற்ரு
மரையில் வீழ்ந்து கறையேறி அகத்திய
முனிவரிடம் அவ்விலக்கண முணர்ந்து
பார்வதிபிராட்டியார் கூந்தலுக்கும் செயற்
கைமணம் என்ற பழிப்பால் குட்டநோய
டைந்து அது தீரும்படி "ஆலவாயிலமர்ந்
தாய் தணிந்தென்மேல், மெய்யெரிவு
தீர்த்தருளும்வேதியனே" எ-ம், "என்மேற்,
சீற்றத்தைத் தீர்த்தருளுந் தேவாதிதே
வனே, யாற்றுவு நீ செய்யுமருள்" என்று
வேண்டி வெப்புத்தணியத் திருக்கைலைய
டையச் செல்கையில் வழியிலிருந்த ஒரு
தீர்த்தத்தையும் ஆலமரத்தையுங்கண்டு சிவ
பூசைசெய்ய உட்கார்ந்து சிவபூசை செய்
கையில் ஒரு ஆலிலைமரத்திலிருந்து வீழ்ந்து
பாதிமீனகவும் பாதிபறவையாகவும் மாறிச்
சலத்தில் விழுந்தபாகம் பறவையையும்
பூமியில் வீழ்ந்தபாகம் மீனையும் இழுக்கக்
கண்டு சிவபூசையினின்று மனத்தைமீட்டு
இதனைக் கண்டனர். இதுநிற்க அயக்கிரீ
வன் எனும் பிரமரக்ஷஸு ஒன்று, இரு
மனப்பட்டுச் சிவபூசையயற்றும் வித்து
வான்கள் ஆயிரவரை ஒருமிக்க உண்ண
எண்ணங் கொண்டு தொள்ளாயிரத்துத்
தொண்ணூற் ரென்பதின்மரை ஒருகுகை
யில் அடைத்துவைத்து ஒருவருக்காகத்
தேடிக்கொண்டு இருந்து நக்கீரர் அகப்பட
ஆயிரவராக்கி நற்காலமென்று எண்ணித்
தூக்கிச் சென்று குகையிலடைத்து ஸ்நா
னஞ் செய்துவரச் சென்றது. இவரைக்
கண்ட குகையிலிருந்த புலவர்கள், இவ
ரைக்கண்டு ஓகோ, எங்களுக்கு இன்றை
க்கு முடிவுகாலம் வைத்தனையே யென்று
பூதத்தின் செய்தியினையும் தங்கள் செய்தி
யினையும் கூறி முறையிட்டனர். இவற்
றைக் கேட்ட நக்கீரர், திருமுருகாற்றுப்
படை யோதி "குன்றமெறிந்தாய்" என
வும், "குன்றமெறிந்ததுவும்" எனவும் துதி
த்து அப் பூதத்தினைக் குமாரக்கடவுள் வே
லாற் கொல்வித்துச் சிறையிருந்த புலவர்
களைத் தங்களிடம் போக விடுத்துத் தாம்
முருகக்கடவுள் கட்டளைப்படி ஒரு தீர்த்தத்
தில் மூழ்கித் தக்ஷிண கைலையாகிய திருக்
காளத்தியில் எழுந்து குட்டநோய் நீங்கிப்
பிராட்டியையும் சிவமூர்த்தியையும் தரிசித்
துக் கைலைபாதி காளத்திபாதி யந்தாதி
பாடித் துதித்து முத்திபெற்றனர். இவர்
தமிழறியும்பெருமாளை வாதில் வென்றனர்
என்பர். இவர் செய்த நூல்கள் திருமுரு
காற்றுப்படை, கைலைபாதி காளத்திபாதி
யந்தாதி, இறையனரகப்பொருளுரை,
திருவீங்கோய்மலை எழுபது, திருவலஞ்சுழி
மும்மணிக்கோவை, திருவெழுகூற்றிருக்
கை, பெருந்தேவபாணி, கோபப்பிரசாதம்,
காரெட்டு, போற்றிக்கலிவெண்பா, திருக்
கண்ணப்பதேவர் திருமறம் முதலிய. இவர்
குமரர் கீரவிகொற்றனர், நெடுநல்வாடை
இயற்றியவர். இவர் மதுரை நக்கீரனென
வும், கணக்காயனர்மகனர் நக்கீரரெனவும்
கூறப்படுவார். இயற்பெயர் கீரனர் ந-சிற
ப்புப் பொருளுணர்த்தும் இடைச்சொல்,
ஒரு காலத்துச் சங்கப்புலவரில் இவர் தலை
மைப் பெற்றிருந்ததுமுண்டு. இறையனர்
அகப்பொருளுக்குஉரை செய்தவர் இவரே
(இப்பொழுதுள்ள அவ்வுரை இவர் கூறி
யதனை வரன்முறையாகப் பாடங் கேட்டு
வந்து ஈற்றில் இளம்பூரணர் எழுதிவைத்த
தென்று ஊகிக்கப்படுகின்றது. திருமுரு
காற்றுப்படை, நெடுநல்வாடை இவ்விரண்
டினையும் இவரே இயற்றி யருளினர்.
நல்லா நிலங்களிலுஞ் சென்று அவற்றின்
இயற்கை யமைப்பை ஆராய்ந்து அவ்வந்
நிலங்களிலே பிறந்து வளர்ந்தவரினும்
வல்லவராய்ச் செய்யு ளியற்றும் ஆற்றல்
வாய்ந்தவர். இவர் மகனே கீரவிகொற்
றனு ரென்பவர். இந் நக்கீரனர் சங்கத்தில்
வைகுநாளில் கொண்டான் என்னும் குய
வன் பட்டிமண்டப மெய்தி வடமொழியே
சிறப்புடையதென்றும் தமிழ் சிறப்புடைய
தன்றெனவு மிழித்துக் கூறினன். அது
கேட்ட நக்கீரர் வடமொழியே தமிழைச்
சிறப்புடைய மொழியென்று ஒப்புக்கொள்
ளுகின்றது. தமிழை இகழ்ந்த நின்னை
வட மொழியாலே இறக்கும்படி கூறுகி
றேன். அது நின்னை இறக்கச் செய்யா
தாயின் தமிழ் தீதே யென்று சொல்லி,
"முரணில் பொதியில் முதற்புத்தேள்
வாழி, பரணர் கபிலரும் வாழி - அரணிலா,
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்

கொண்டான், ஆனந்தஞ் சேர்க சுவாகா" என்று கூறலும் அவன் அவ்விடத்தே வீழ்ந்து உயிர் துறந்தான். (ஆனந்தம் - சாக்காடு) அதனை நோக்கிய ஏனையோர் வந்து வேண்ட, "ஆரிய நன்றுதமிழ் தீதெனவுரைத்த, காரியத்தாற் காலற்கோட் பட்டானைச் - சீரிய, அந்தண் பொதியி லகத்தியனா ராணையினாற், செந்தமிழே தீர்க்கசுவாகா" என்றொரு வெண்பாப்பாட அவன் உயிர்பெற் றெழுந்தான் என்பர். இந் நக்கீரனார் பிரபுவாகிய அருமனையும் அவனது சிறுகுடி யென்னும் ஊரையும் பாராட்டிப் பாடியுள்ளார். நற். (௩௬௭) பாண்டியன் நெடுஞ் செழியன் தலையாலங்கானத்துச் செருவென்றதனை விளங்கக் கூறியிருக்கிறார். அகம் (௩௬) வள்ளலாகிய பாரியின் பறம்புமலையை மூவேந்தரும் முற்றுகை செய்திருந்தபொழுது அடைபட்டிருந்த பாரி புலவர்பெருமானாகிய கபிலரது கட்டளைப்படி கிளிகளை விடுத்து நெற்கதிர்களைக் கொண்டுவந்து உண்டிருந்ததை சுருக்கி கூறியுள்ளார். அகம் (௭௮) வைப்பூர் எவ்வி இடையிலே தூதாகச் சென்று சமாதானப்படுத்தவும் அடங்காது, அன்றியும், அழுந்தூர் திதியினும் போர் செய்ததனைக் கூறியுள்ளார். அகம் (௧௨௬) கார்த்திகை மாதத்துக்குக் கார்த்திகைக்குப் புதுவதாக மணம் புரிந்து கொண்ட மருமகளை அழைத்து வந்து அவளால் முதலில் பால் அடுப்பில் வைக்கச் செய்வதும் கார் நெற்கதிர்களை மண்படாமற் கொணர்ந்து அவலிடித்துப் பொரித்து நிவேதிப்பதும், அன்று வீடுகளிலும், தெருக்களிலும் வைத்துக் கொண் டாடுவதுமாகிய கார்த்திகை விழாவை இவர் விரித்துக் கூறுவது படிப்பார்க்கு வியப்பைக் கொடா நிற்கும். அகம் (௧௪௧) மற்றும் இவர் கிள்ளிவளவனையும், இடையர் தலைவனாகிய கழுவுளென்பானையும், வடுகர் தலைவன் எருமையென்பானையும், குட்டுவளைசோலையும், திறையனையும், பழையன்மாறனையும் ஆங்காங்குப் பாராட்டிக் கூறுவதுடன் அவரவர்க்குரிய காவிரிப்பட்டினம், மருங்கூர்பட்டினம், தொண்டி, குடநாடு, பவத்திரி, மதுரை முதலிய பதிகளையுஞ் சிறப்பிக்கின்றார். அகம் ௨௦௫, ௨௫௩, ௨௯௦, ௩௯௦, ௩௪௦, ௩௪௬ தூங்கலோரியார் பாடிய தழும்பனது ஊணூரென ஊணூரைப் பாராட்டிக் கூறியுள்ளார். அகம் (௨௨௬) இவர் பாடிய அகப்பாட்டுகளில் பெரும்பாலுஞ், சேர சோழ பாண்டியர் சிற்றரசர் இவர்களில் யாரையேனுங் கூறாது விடுவதில்லை. இன்னும் இவரால் புறத்தின் பாடப் பெற்றோர் பாண்டியன் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறனும் புறம் (௫௬) சோழநாட்டுப் பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தனும் புறம் (௩௯௫) (பிடவூர் - திரிசிராப்பள்ளிக்கு கீழ்பாலுள்ளது). இவர் சிவபெருமானோடு வாது கூறியதாகத் திருவிளையாடல் கூறா நிற்கும். இவர் பாடியனவாகப் பத்துப்பாட்டில் இரண்டும், நற்றிணையில் எழும், குறுந்தொகையில் எட்டும், அகத்தில் பதினேழும், திருவள்ளுவமாலையில் ஒன்றும், புறத்தில் மூன்றுமாக முப்பத்தெட்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. இவையேயன்றிப் பதினோராந் திருமுறையில் இவர் செய்த பிரபந்தஞ் சில உள. யாப்பருங்கல விருத்தி யுரையில் நக்கீரர் நாலடி நாற்பது என ஒன்று கூறப்படுகிறது. இதுகாறும் அது அச்சில் வந்திலது.

**நக்கீரர் கோயில்** — இது மேலமாசி வீதியிலிருக்கின்றது. சங்கத்தார் கோயிலெனவும் வழங்கும். (திருவிளையாடல்).

**நக்கீரர் திருவுருவம்** — இது திருப்பரங்கிரிக் கோயிலில் ஸ்ரீ முத்துக்குமாரஸ்வாமியின் பக்கத்தே யுள்ளது; உத்ஸவமூர்த்தி; திருப்பரங்குன்றத்தில் ஒவ்வொரு வருடத்தும் நடக்கும் பங்குனித் திருவிழாவில் நான்காந் திருநாளில் முருகக்கடவுள் நக்கீரனாரைச் சிறைமீட்டருளிய திருவிளையாடல் நடைபெறும்பொழுது இந்த மூர்த்தி எழுந்தருளுதல் மரபு. (திருவிளையாடல்).

**நக்தன்** — பிருது குமரன்.

**நக்னசித்** — அயோத்திநாட் டரசன், இவன் குமரி சவுந்தரியவதி. இவன் கும்பாண்டனிடத்திலிருக்கிற எழு ருஷபங்களை எவன் செயிக்கிறானோ அவனுக்குத் தன் குமரியைக் கொடுப்பதாகக் கூறினன். உடனே கண்ணன் அந்த எழு ருஷபங்களுக்கு எழு ரூபமாகிக் கொம்பைப் பற்றிக் கீழே தள்ளிக் கட்டிப்போட்டதைக் கண்டு திருமணமுடிப்பித்தவன். நக்னசித்தை யென்று இவன் குமரிக்குப் பெயர்.

**நக்னசித்தை** — நக்னசித்தின் குமரி, கிருஷ்ணன் பாரி, இவளுக்குச் சவுந்தரியவதி யெனவும் பெயர்; இவளுக்கு அசுவசேனன் முதலிய பதின்மர் குமார்.

**நக்னிஜிதன்** — சுவாகாதேவியைப் பெண்ணாகப் பெற்றவன். சுவாகாதேவியைக் காண்க.

**நங்கன்** — ஒரு அரசன், மகாத் தியாகி.

**நசிரம்** — ஒரு தீர்த்தம்.

**நச்சிகேதசன்** — ஒரு அரசன், வல்லியென்னும் வேதபாகத்திற்கு வியாக்யாதி, இவன் தந்தை வர்ஜசாவன். இவன் தன் பிதாவை நோக்கி உலக வெற்றியின் பொருட்டு என்னை யாருக்கு ஒப்புக்கொடுக்கப்போகிறீரென்று தொந்தரைசெய்ய அவர் யமனிடம் இவனை ஒப்புக்கொடுக்க யமன் இவனை எற்றுக்கொண்டு இவனுக்கு வேதாந்த ஞானம் போதிக்க ஞானம் பெற்றவன்.

**நச்சினர்க்கினியர்** — (இவரை மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினர்க்கினியர் எனவுங் கூறுவர்.) ஆசிரியர் நச்சினர்க்கினியர், பாண்டிவளநாட்டுள்ள மதுராபுரியிற் பிராமணகுலத்திற் பாரத்துவாச கோத்திரத்திற் பிறந்தவர். தமிழ்ப்பாஷையிலுள்ள பலவகையான எல்லா நூல்களிலும் அதிபாண்டித்திய முடையவர். இவரது சமயம் சைவமே. இவர் இன்னராதல், "வண்டிமிர்சோலை மதுரா புரிதனி, லெண்டிசை விளங்க வந்த வாசான், பயின்ற கேள்விப் பாரத்துவாச, னன்மறை துணிந்த நற்பொரு ளாகிய, தூய ஞான நிறைந்த சிவச்சுடர், தானே யாகிய தன்மை யாளன்" என்னும் உரைச் சிறப்புப் பாயிரத்தால் விளங்கும். சிவஸ்தலங்களுட் சிறந்த சிதம்பரத்தினது திருநாமங்களாகிய "திருச்சிற்றம்பலம்", "பெரும்பற்றப்புலியூர்" என்பவற்றை முறையே ஆறெழுத் தொருமொழிக்கும் எழெழுத்தொரு மொழிக்கும் உதாரணமாக, இவர் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்து மொழிமரபில், "ஓரெழுத்தொருமொழி" என்னுஞ் சூத்திரத்து விசேடவுரையிற் காட்டி யிருத்தலாலும், சைவசமயத்துச் சிறந்த நூல்களாகிய திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவையார் என்பவற்றினின்றும் தமது உரைகளிற் பலவிடங்களில் இலக்கிய விலக்கணப் பொருள்களுக் கன்றித் தத்துவப் பொருளுக்கும் மேற்கோள்கள் எடுத்துக்காட்டி யிருத்தலாலும், அங்ஙனம் மேற்கோள் கொண்ட சிலவிடங்களில் எழுதியுள்ள விசேட வுரைகளாலும், சிந்தாமணியிற் நாமகளிலம்பகத்து "மேகம்மீன்ற" என்னும் நுகுடீடம் செய்யுளில் "போகம்மீன்ற புண்ணியன்" என்பதற்கு எழுதிய விசேடவுரையாலும், திருமுருகாற்றுப் படையுரையிற் காட்டிய சில நயங்களாலும், உரைச் சிறப்புப்பாயிரத்தில் "தூய ஞான நிறைந்த சிவச்சுடர், தானேயாகிய தன்மையாளன்" எனக் கூறப்பெற்றதனாலும், மற்றுஞ் சிலவற்றாலும் இவர் சைவசமயியாதல் நன்கு வெளியாகும். இவ் வுரையாசிரியர், பத்துப்பாட்டினுக்கும், தொல்காப்பியத்திற்கும், கலித் தொகைக்கும், சீவகசிந்தாமணிக்கும், குறுந்தொகையிற் பேராசிரியர் பொருளெழுதா தொழிந்த இருபது செய்யுட்களுக்கும், உரை செய்தருளினர். இன்னும் சில நூல்களுக்கு இவர் உரையியற்றினரென்பர்; அவை இவையென்று புலப்படவில்லை. இக்காலத்து வழங்கும் திருக்கோவையா ருரை, பேராசிரியராற் செய்யப்பட்ட தென்று தெரிகின்றமையாலும், இவர் அந்நூற்குச் செய்த வேறுரை கிடையாமையாலும், அதற்கும் திருக்குறள் முதலிய மற்றுஞ் சிலவற்றிற்கும் இவர் உரை செய்திருப்பதாக இவருடைய உரைச் சிறப்புப்பாயிரத்திலேனும் வேறொன்றிலேனும் கூறப்படாமையாலும், அவைகள் இங்கே எழுதப்பட்டில. சீவகசிந்தாமணிக்கு நச்சினர்க்கினியர் முதன்முறை ஒருரை யெழுதி, அக்காலத்துப் பிரசித்திபெற்றிருந்த சைன வித்துவான்கள் சிலருக்குக் காட்ட, அவர்கள் அவ்வுரையை அங்கீகரியாமைகண்டு, பின்பு ஆருகத நூல்கள் பலவற்றையும் நலமுற ஆராய்ந்து இரண்டாமுறை ஓர் உரையை எழுதி அவர்களுக்குக் காட்டவே, அவர்கள் உற்றுநோக்கி வியந்து அவ்வுரையை அங்கீகரித்துக் கொண்டார்களென்று சைனர் கூறுகின்றனர். தொல்காப்பியவுரை முதலியவற்றில் வேதம், வேதாங்கம் முதலிய பல நூல்களிலிருந்தும் பல உரைகளிலிருந்தும் பற்பல அரிய விஷயங்களை ஆங்காங்கு எடுத்துக்காட்டி நன்குவிளக்கிப் போகின்றமையாலும் பிறவாற்றாலும் இவரை வடமொழியிலும் மிக்க பயிற்சியுள்ளவராகச் சொல்லுவதுடன் பலவகையான கலைகளிலும் பயிற்சியுடையவரென்று சொல்லுதற்கிடமுண்டு. உரையாசிரியர், சேனாவரையர், பேராசிரியர், ஆளவந்தபிள்ளை யாசிரியர் முதலிய உரையாசிரியர்கள் இவருடைய உரையில் எடுத்துக் கூறப்பட்டிருத்தலின், அவர்

களுக்கு இவர் காலத்தினுற் பிற்பட்டவ ரென்று தெரிகின்றது: அமிழ்தினுமினிய தமிழ்மடவரல் செய் அருந் தவத்தின் பெரும்பயனாக அவதரித்தருளிய இம் மஹோபகாரியின் அருமை பெருமைகள் விரிவஞ்சி விடுக்கப்பட்டன. இவர் காலத்தில் ஆசிரியர் பரிமேலழகரும் உடனிருந்ததாகக் கூறுவர். எவ்வகையெனின் "குடம்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே, உடம்போடுயிரிடை நட்பு." என்னுங் குறளில் குடம்பை என்பதற்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூண்டு எனவும் ஆசிரியர் பரிமேலழகர் முட்டையெனவும் கூறினதாகவும், பரிமேலழகாது உரை கேட்ட நச்சினார்க்கினியர் பரிமேலழகர் உரையைப் புகழ்ந்ததாகவுங் கூறுவர். "பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியு, மாரக்குறுந் தொகையுளைஞ் ஞான்குஞ் - சாரத், திருத்தகு மாமுனி செய் சிந்தாமணியும், விருத்தி நச்சினார்க் கினியமே." "எவனுலவாயிடை வந்த முதவாயுடையனென வியம்பப் பெற்றோன், எவன் பண்டைப் பனுவல்பல விறவாது நிலவவுரை யெழுதி யீந்தோன், எவன் பரம வுபகாரி யெவனச்சினார்க்கினியனெனும் பேராளன், அவன்பாத விருபோது மெப்போது மலர்கவெனதகத்து மன்னோ."

**நச்சுமனார்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை.)

**நச்செள்ளையார்** — ஒரு தமிழப் புலவர். இவர், காக்கைபாடினியார் நச்செள்ளையார் எனப்படுவர். இவர் பதிற்றுப்பத்தின் கணுள்ள ஆறும்பத்தால் ஆடுகோட்பாடுச் சேரலாதனைப் புகழ்ந்துபாடி அவனாற்கல னணிக என்று ஒன்பது துலாம் பொன்னும் நூறாயிரங்காணமும் அளிக்கப்பெற்று அவன் பக்கத்து வீற்றிருக்குஞ் சிறப்பும் எய்தியவர். ராடினி, செள்ளை எனும் பெண்பாற் பெயர்களாலும், கலனணிதற்குப் பொன் பெற்றதனாலும் பெண்பாலாராக அறியப்படுகின்றார். பதிற்றுப்பத்து ஆறும் பத்தில் "யாத்த செய்யுளடங்கிய கொள்கைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார்" இதில் அடங்கிய கொள்கை, என்பது பெண்பாலாரைக் குறிக்கின்றது. குறுந் தொகையில் "திண்டேர்நள்ளி,.......... விருந்துவரக்கரைந்த காக்கையதுபலியே" எனும் பாட்டில் காக்கை கரைந்தமைபற்றி யருமை பாராட்டிக் கூறியதனால் இவர்க்கு இப்பெயர் வந்தது. குறுந்தொகையில் ௨௧௦-ம் பாட்டும், புறநானூற்றில் ௨௭௮-ம் பாட்டும், எட்டுத்தொகையுள் இவர் செய்தனவாக (௧௨) செய்யுட்களும் காணப்படுகின்றன.

**நஞ்சீயர்** — இவர் திருநாராயண புரத்தில் (௪௨௧௪) கலிக்குமேல் விஜய௵ ஜநநம். பட்டர் திருவடிசம்பந்தி. இவர் வேதாந்தி என முதலில் நாமம்பெற்று இருக்கையில் வாதபிக்ஷைக்குவந்த பட்டரால் செயிக்கப் பெற்றுச் சிலநாளிருந்து பிக்ஷைக்குவந்த ஸ்ரீவைஷ்ணவருக்குப் பிக்ஷையிட மறுத்த தேவியை வெறுத்துத் திரவியத்தைப் பகுத்துப் பெண்சாதிக் களித்துக் குரு தக்ஷிணைகொண்டு யதியாச்ரமம் அடைந்து ஆசாரியரைக் காணப்போகையில் பட்டர், நம் ஜீயர்வந்தார் என அன்றுமுதல் இவர்க்கு நஞ்சீயர் எனப் பெயர் உண்டாயிற்று. இவர்க்கு ஸ்ரீ ரங்கநாதரென்பது தாசிய நாமம். இவர் திருவாய்மொழிக்கு ௯,000 படி வியாக்கியானம் செய்து ஒரு ஸ்ரீவைஷ்ணவரிடம் தர அந்த ஸ்ரீவைஷ்ணவர் அதை யெடுத்துச் செல்கையில் வெள்ளத்தில் சிதற அவைகளை ஒருவாறு கேட்டபடி அவர் பூர்த்திசெய்து நஞ்சீயரிடம் கொடுக்கச் சீயர் அபிப்பிராய பேதத்தைக் கண்டு உண்மை வினவிக் களித்து நம்பிள்ளையென அழைத்தனர். அதுமுதல் அவருக்கு நம்பிள்ளையெனப் பெயராயிற்று. இவர்க்கு வேதாந்த வேதியர், மாதவாசாரியர் என்று வேறு பெயர்கள். இவர் திருநக்ஷத்ரம் பங்குனி யுத்திரம்.

**நஞ்சுகலந்த அன்னசோதனை** — நஞ்சுகலந்த அன்னத்தைக் கண்ட அன்னம் சோர்ந்து விழும், வண்டுகள் குழறி யொலிக்கும், மயில் நிலைகலங்கித் துள்ளியாடும், கோழிகள் விரைந்து கத்தும், அன்றில் மயங்கும், குரங்கு மலங்கழிக்கும், காடை மயிர் சிலிர்க்கும், நாகணவாய் எதிரெடுக்கும். (சுக்-நீ.)

**நஞ்சுகன்** — ஓர் இயக்கன். (பெ - கதை).

**நஞ்சுண்டதேவர்** — மைசூரில் நெடுநாளைக்கு முன் அரசரா யிருந்தவர்.

**நடராஜர்** — 1. சிவமூர்த்தத்துள் ஒன்று.

2. கிரனூரிற் பிறந்த ஒரு சோதிடர்; சாதகாலங்கார மியற்றியவர்.

**நடாதூரம்மாள்** — சுபத்திராம்சரான இவர் கலி (௪௨௬௬) க்குமேல் பார்த்திவ௵ சித்திரை௴ திங்கட்கிழமை காஞ்சியில் தேவ

ராஜப் பெருமாளுக்கு வாதகுரு என்று அவதரித்தனர். இவர் எங்களாழ்வானிடம் பாஷ்யம் சேவிக்கப் பிதாவின் கட்டளைப் படிசென்று எங்களாழ்வான் வீட்டு வாசற் கதவைத் திறக்க எங்களாழ்வான் யார் என்றனர். வரதகுரு பிரதியுத்தரமாக நான் தான் என்றனர். இதைக்கேட்ட எங்களாழ்வான், நான் செத்தபின் வருக என அனுப்பத் திரும்பிப் பிதாவிடங் கூறினர். பிதா ஆசாரியரிடம் நானென்னும் அகங்காரத்தை யொழித்து அடியேன் எனக் கூறுத லொழிந்து, நான் என்றதனுல், அவர் அவ்வகைக் கூறினர் என்று மீண்டும் அனுப்பினர். வரதகுருவும் மீண்டும் சென்று ஆசாரியரைக் கண்டு அடியேன் இராமாநுசதாசன் என்று தண்டன் சமர்ப்பித்தனர். ஆசாரியர்களிடத்துப் புத்திரனைப்போல் அன்புள்ளவராய் எனக்குக் கொள்ளியிட்டுக் கர்மாதிகிரியைகள் செய்வதாய்ப் ப்ரதிக்ஞை செய்து தருவீராகில் ஸ்ரீபாஷ்யம் பிரசாதிக்கிறே னென்றனர். வரதகுரு அதனைப் பிதாவிற்கு விண்ணப்பித்துப் பிதாவின் நியமனம்பெற்று ஸ்ரீ பாஷ்யகோசத்தைக் கொண்டு ஆழ்வானுக்குப் பிரதிக்ஞை செய்துகொடுத்துப் பாஷ்யாதிகளை ஐயந்திரிபறச் சேவித்தனர். இவர் தமதாசார்யர் திருநாட்டுக் கெழுந்தருள அவர்க்குச் செய்யவேண்டிய சரமக்கிரியைகளை முடித்துக் கச்சிவாய்த்தான் மண்டபத்தில் காலக்ஷேபஞ் சாதித்திருந்தனர். இவரிடத்தில் கிடாம்பு அப்புள்ளார் ஸ்ரீகிருஷ்ணபாதர் என்கிற வடக்குத் திருவீதிப்பிள்ளை முதலியவர்கள் ஆச்ரயித்திருந்தனர். இவ்வகை இவர் பாஷ்ய காலக்ஷேபம் செய்துவருகையில் ஒருநாள் அப்புள்ளார் ஸ்ரீவேங்கடநாதாசார்யர் என்னும் பிள்ளைத் திருநாமம்பெற்ற வேதாந்த தேசிகருடன் காலக்ஷேபங் கேட்டிருக்கையில் வேதாந்த தேசிகரின் திவ்ய தேஜஸைக் கண்டு மயங்கிக் காலக்ஷேபத்தில் விட்ட விடந் தெரியாமலிருக்க மூன்று வயதுள்ள வேங்கடநாதாசாரியர் விட்டவிடங் குறிப்பித்திருந்தனர். இதனுல் அதிகக் களிப்படைந்த வரதகுருதூப்பில் பிள்ளையை ஆசீர்வதித்து அப்புள்ளாரிடம் ஒப்புவித்து ஸ்ரீபாஷ்யாதிகளைப் பிரசாதிக்கக் கட்டளையிட்டனர். ஸ்ரீபராசபட்டர் இவரது காலக்ஷேபம் சேவித்துவருநாளில் ஒருநாள் வராதிருந்தது கண்டு வரதகுரு பிரசங்கத்தை நிறுத்த மற்றவர்கள் பிரசங்கத்தை நடத்தக் கூற வரதகுருவும் அவர் வந்தவுடன் தாம் கூறிய அர்த்தங்களைக் கூறச்செய்து அதற்குச் சுருதப்பிரகாசிகை யெனப் பெயரிட்டனர். இவ்வகையிருக்கையில் சிலர் இவரிடம் வாதத்திற்குவர அவர்களிடம் வாதிட அப்புள்ளார் கேட்க அங்ஙனமே அவர் வாதிட்டு வென்றது கண்டு அவர்க்கு வாதிஹம்ஸாம்புதர் எனப் பெயரிட்டுப் பெருமாளுக்குப் பாலமுது செய்வித்துவந்தனர். அவ்வகை வருகையில் ஒருநாள் பாலமுது ஸமர்ப்பிக்கையில் பால் உஷ்ணமா யிருந்ததுகண்டு தம்முடைய கைவிரலைப் பாலில் இட்டுப் பார்த்தனர். இதனைக் கண்ட பெருமாள், தாய் குழந்தைக்கு அன்றோ இவ்வாறு பால் ஊட்டுவது என்று "என் அம்மாளோ" என்று அழைத்தனர். அது முதல் அம்மாள் எனத் திருநாமம் வந்தது. இவர் ஒருநாள் ஆரண்யத்தின் வழியாகத் திருவேங்கடஞ் செல்கையில் வழியில் மகாரண்ய மாகையால் பெருமாளுக்குப் பிரசாதம் அமுது செய்விக்கத் தகுந்த இடம் நேராமல் இருந்தது. அதனுல் இவர் பெருமாளுக்குத் திருஆராதனம் செய்துவிட்டுத் தாம் உபவாசமா யிருந்தனர். இதைக் கண்ட திருவேங்கடமுடையான் ஒரு வேதியராய் இவர்க்கு முன் எழுந்தருள அம்மாளும் தேவர் யார் என்ன நான் திருவேங்கடமுடையான் அமுது செய்த பிரசாதத்தைத் தேவர் பொருட்டுக் கொண்டு வந்தேன் தேவர் அமுது செய்தபின் உமக்கு விடை தருகிறேன் என்று கூறி அம்மாளமுது செய்தபின் மறைந்தருளினர். அம்மாள் இது பெருமாள் செயலென்று துதித்துத் திருவேங்கடஞ் சென்று பெருமாளைச் சேவித்துத் திரும்பிக் கச்சிக் கெழுந்தருளிச் சிலகாலமிருந்து திருநாட்டுக்கு எழுந்தருளினர்.

**நடாதூராழ்வான்** — உடையவர் திருவடிசம்பந்தி, உடையவர் சகோதரி புத்திரர், இவர் குமரர் நடாதூர் தேவராசப் பெருமாள். நயினுசாரியர் திருவடிசம்பந்தி. (குருபரம்பரை).

**நடாதூர் தேவராசப்பெருமாள்** — நடாதூராழ்வான் குமரர்.

**நடிக்கும் ஆஸ்திரேலிய மயில்** — இது, மயிலைப்போல் உருவமுள்ளதாயும் அழகுடையதாயுமுள்ளது. இதன் தோகை, நீண்டு முனை வளைந்து சுருண்டு சிவப்பும், பசு

மையும் கறுப்பும் கலந்து மற்ற இறகுகளுக் கிடையிலிருக்கிறது. இதனிடையிலுள்ள (16) சிறகுகள் வீணைகளின் தந்திகள்போல் அமைந்திருக்கின்றன. இப்பறவை பல நிறமுடையது. வால் செகப்பு, உச்சி மண்டூர நிறம், கழுத்துப் பச்சை, முதுகு மங்கலான செகப்பு, வயிறு செம்மைகூடிய மஞ்சள். இது, களிப்பு மிகுந்தபோது காலை மாலைகளில் தோகையை விரித்து நடிக்கிறது. இது புழுக்களைத் தின்னும். இதனை லையர் பறவை (Lyre Bird) என்பர்.

**நடிக்கும் சித்திரப் பறவைகள்** — (1) இரு கொண்டை கொண்ட ஊங்காரப்பறவை (Double Crested Humming Bird) இது தென் அமெரிக்கா வாசி. இதற்கு நெற்றியின்மீதுள்ள இறகும், செவிப்பக்கங்களிலுள்ள இறகுகளும், தாடியும், இறக்கை, தோகை, வயிறு, முதுகு முதலிய இடங்களிலுள்ள சிறகுகள் வெவ்வேறு வகையும் நிறமும் உண்டு. இது தனக்குக் களிப்பு மிகும்போதும், தன் பேடையைப் பார்த்து அதிக அனந்தத்துடன் நடனம் செய்கிறது.

(2) இவ்வினத்தில் மற்றொன்று நியூகினியா வாசி. இதனிறகுகள் பச்சையும் நீலமுங் கலந்த பொன்னிறம். இதனை ஊங்காரத்தங்கப்பறவை (Gold Humming Bird) என்பர். இதன் விரிந்த சிறகுகளும் தோகையும் ஆடுதற்கே அமைக்கப்பட்டவைபோ லிருக்கின்றன. இது சிறு சிட்டளவினது, இதன் முட்டைகள் பட்டாணி அளவுள்ளவை, இதனைச் சூரியப்பறவை (Sun Bird) என்பர்.

(3) இவ்வினத்தில் வேறொன்று அமெரிக்கா நாட்டுக் காடுகளிலிருக்கிறது. இதனைக் கொலீன்பறவை (The Goolen Bird) என்பர். இப் பறவையின் அலகிற் கருகில் மீசையைப்போன்ற மெல்லிய இறகுகள் பக்கத்திற்கு மும்மூன்றாக இருபக்கங்களிலும் வெகு நீண்டிருக்கின்றன. அம் மீசைகளின் கடைசியில் மயிலின் இறகுக் கண்போல ஒரு சிறகு இருக்கிறது. இதன் தோகைகள் மற்றப் பறவைகளுக் கிருப்பதுபோ லில்லாமல் வெகு அழகானவை. இது நடிக்கையில் தோகைகளையும் சிறகுகளையும் விரித்து நடிக்கிறது.

(4) அமெரிக்கா நாட்டில் பாரடைசியா மாக்னிபிகா (Paradisea - Magnifica) என்னும் பறவை உண்டு. இதன் வாற்புறத்திலிரண்டு கம்பிகள்போன்று (3) அடிகள் நீண்ட தோகை வளர்ந்திருக்கிறது.

(5) இவ் வினத்தில் சூபர்ப் (The Superb) எனும் ஓர்வகை மெலூகா தீவுகளிலிருக்கிறது. இது ஒரு காக்கை அளவுள்ளது. இதன் முதுகுபக்கத்தில் படல்போல் விரிக்கக்கூடிய இறகுகளிருக்கின்றன. அவை அழகிய செந்நிறமுள்ளவை. இவை சூரியனைக் கண்டு ஆடும்போது அதிவிநோதமாய் மறக்கத்தகாததா யிருக்கும் என்பர்.

(6) இவ்வினத்தில் வேறொன்று நியூகினியா தீவிலிருப்பது. அதனைக் கிங்பர்ட் ஆப் பாரடைஸ் (King Bird of Paradis ) என்பர். இதன் சிறகுகள் பச்சை நிறம், தலை, கழுத்து, முதுகு பசுமைகலந்த நீலம்; வயிறும், வாலும் கரிய செந்நிறம். இதன் வால்புறத்தி லிரண்டு சிறு கம்பிகள் நீண்டு வளர்ந்து வளைந்து முனைகள் சுருண்டிருக்கின்றன. அச் சுருள் முனையிலுள்ள சிறகுகள் அழகியன. இது ஆடும்போது புருகளைப்போல் சிறகுகளை அகல விரித்துப் வளைந்தும் நெகிழ்ந்தும் ஆடும்.

(7) இவ்வினத்தில் வேறொன்று கிரேட் பர்ட் ஆப் பாரடைஸ் (Great Bird of Paradise) என்னும் ஒருவகை நியூகினியர் நாட்டுக் காடுகளில் இருக்கிறது. இதன் உடல் (16) அங்குல நீளம். இதன் கண்கள் வட்டமாய்ச் செந்நிறமுள்ள இமைகளுக் கிடையில் பொன்னிறமாய் விளங்குகின்றன. இதன் இறகுகள் பல வர்ணமுள்ளவை. இதன் நெற்றியும், கழுத்தின் முன்பாகமும் மஞ்சள்நிறம். இதன் தொண்டையிலும், மார்பிலும், கழுத்திலும் உள்ள சிறு சிறகுகள் நீலங் கலந்த பசும் பொன்னிறமானவை. இதன் உடலின் இருபக்கங்களிலும் (2) அடிகள் நீண்ட தோகை இறகுகள் வளர்ந்திருக்கின்றன. இவ்விறகுகள் அழகிய செம்பொன்னிறமாய் முனை செம்பி னிறங்கொண்டு இருக்கின்றன. தோகைகள் மிக நீண்டு மயிற்றோகைபோலிருக்கின்றன. இத் தோகைகளி லிரண்டு மயிரிலாத கம்பிபோல் அதிகமாய் நீண்டு வளர்ந்திருக்கின்றன. அவற்றி னுனியில் அழகிய குஞ்சுகளுண்டு. இதற்கு உற்சாகம் உண்டாகும்போது இது தன் தோகையை விரித்தாடித் தன்னைக் கவித்துக்கொள்கிறது. இவை கூட்டங் கூடி ஆடுகின்றன. மாம்ஸபக்ஷணி.

**நடுகல்** — இது, வென்றியான் மேம்பட்டுத் துறக்கம்புக்க பெருவீரர் பெயரையும் அவர்கள் ஆங்காங்குப் புரிந்த போர்ச்செயல்களையும் ஒரு நெடுங்கல்லில் எழுதி அதனை நாட்டி அதில் அவர்களின் உருச் செய்து மாலை, பீலி முதலிய புனைந்து வழிபடுதல் தமிழ்நாட்டுப் பழைய வழக்கமானது.

**நடுக்காட்டுத்தியாகி** — இவர் இடையர், தம்மை விரும்பி வந்தவர்க்கு உபகரித்துப் புகழடைந்தவர்.

**நடுவிலாழ்வான்** — எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை).

**நடுவில் திருவீதிபிள்ளைபட்டர்** — நம்பிள்ளை திருவடிசம்பந்தி. இவர் பின் பழகிய பெருமாளுடன் சமஸ்தானஞ் சென்று அரசன் கேட்ட இராமாயணசங்கைக்கு விடை தர மயங்குகையில் பின் பழகிய பெருமாள் கூறிய சமாதானத்தைக் கேட்டு அரசனுக்கு விடை தந்து அரசனளித்த பரிசுகளை நம்பிள்ளைக்கு அளிக்க நம்பிள்ளை மறுக்க விசனமுற்று அவரை ஆச்ரயித்தவர்.

**நடுவூர்** — இது, இம்மையே தருவார் கோயில் உள்ள இடம். இதிலுள்ள ஸ்வாமிக்கு இஷ்டாபீஷ்ட ப்ரதாயகர், இம்மையே நன்மை தருவாரெனவும் அம்பிகைக்கு மத்தியபுரநாயகி, நடுவூர் நாயகியெனவும் திருநாமங்கள் வழங்கும். சுந்தரமாறர் பூசித்த தலம்; இது மேலவாசிக்கு மேற்கே யுள்ளது. (திருவிளையாடல்).

**நடைமச்சம்** — இம் மீன் அமெரிக்கா நாட்டைச் சார்ந்த மெக்சிகோ நகரத்திலுள்ள நீர்நிலைகளி லுள்ளது. இம் மீன் 8, 9 அங்குல நீளமுள்ளது. இதன் தோல் கபில நிறமாய்ப் புள்ளிகொண்டது. இதன் கழுத்தை யடுத்து இரண்டு கால்கள் நான்கு விரல்களுடன் இருக்கின்றன. இதற்கு மீனுக் கிருப்பதுபோல் செட்டைகளும் செவிகளும் சுவாசப்பையும் உண்டு. தரையில் நடமாடும் பிராணிகள்போல் காற்றுத் தாங்கும் பையுமுண்டு.

**நடையாடுபதஞ்சலி** — கூரத்தாழவானுக்கு ஒரு பெயர்.

**நட்டுவன்** — இவன் நடனத்தொழிலில் வல்லவன், இவன் தேவ தாசிகளுக்கு நடனத்தொழில் கற்பிப்பவன். இவன் தாசி புத்திரன். சில ஒச்சர்களும் நட்டுவத்தொழில் தமிழ் நாட்டில் செய்கின்றனர். நடனி நடிக்கையில் இவன் பின்னின்று நடன பாஷையைக் கூறிச் சதிக்குத் தக்கபடி தாளவொத் தறுப்பவன். (தர்ஸ்டன்).

**நட்வலை** — சக்ஷுர்மநுவின் பாரி; உல்முகனுக்குத் தாய்.

**நண்டு** — இது, எட்டுக் கால்களும் நீண்டு நாற்புறமும் சுழலத்தக்க கண்களிரண்டும், இரண்டு விரல்போ லங்கங்களுள்ள கைகளிரண்டும் பெற்றது. நமக்கு எலும்புகளுள்ளதுபோல அதன் உடம்பு ஓட்டால் மூடப்பட்டிருக்கிறது. கடல் நண்டுகளின் ஓடு பல வர்ணமாய்ப் புள்ளிபெற்றிருக்கும். கால்கள், அடிவயிற்றிலிருந் துண்டாம். இதற்கு முதுகின் பிற் பாகத்தில் வால் ஒன்று உண்டு. இது நீரிலும் நிலத்திலும் வசிக்கும். இதில் கழிநண்டு, கழனிநண்டு, குளநண்டு, கடல்நண்டு எனப் பல. நண்டுகளில் பலவகைப் பேதங்க ளிருக்கின்றன. இவற்றில் சிறிது காலங்குல அகலம். பெரியது (2) அடிகளுக்குமே லிருக்கின்றது. இது தன் வயிற்றிலேயே முட்டைகளைப் பொரித்துக் குஞ்சுகள் வெளியில் உலாவும் பருவத்தில் தன் வாய்ப்பக்கத்தி னடியிலுள்ள புது ஒட்டைத் திறந்து வெளிவிடுகிறது. பழைய ஒடு விழுந்து விடுகிறது. இதனால் முதல் கெடாது. இவற்றிற்கு எட்டுக்கால்களும் கத்தரிபோன்ற இரண்டு கைகளும் உண்டு. இவ்வினத்திற் சில தம்மைக் காத்துக்கொள்ள நத்தை ஒடுகளிற் புகுந்து தம்மைக் காக்கும் எனவும் சில கடற்றாமரை யெனும் புழுவை வேறு பிராணிகள் தம்மை யடையாமல் தாங்கிநிற்கும் எனவும் கூறுவர். சில நண்டுகள் பல வர்ணங்களுடன் இருக்கும் என்பர். ஐரோப்பாக் கடல்களில் சில நண்டுகளுக்கு அளவுக்குமேல் ஒடு வளர்ந்து இருப்பதால் அதனை எதுவும் தொந்தரவு செய்வதில்லை.

**நண்டுவாய்க்காலி** — இதை நண்டுதெறுக்கால் என்பர். இது தேளைப்போல் உருவுடைத்தாய் உறுப்புகள் வலுத்துக் கறுப்பாயிருக்கும். கொடிய விஷப் பிராணி. களிலும் புதர்களிலும் வசிப்பது.

**நதிகள்** — 1. (எ) கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, காவிரி, குமரி, கோதாவரி.

2. இவை, மலையின் அருகிலுள்ள நீரூற்றிலிருந்து உண்டாவன. நிலத்திலிருந்து குமிழியிட்டுப் புறப்படுவன ஊற்று நீர். இந்த ஊற்று நீரே நதி. இது, பூமி எந்தப் பக்கம் சாய்ந்திருக்குமோ அந்தப் பக்கம் ஒடும். இது பாயும்போது பூமியைக் கரை

த்துக் கொண்டே போகும். உற்பத்தி ஸ்தானத்திருந்து போகப்போக அகலும், இதற்குக் காரணம் பல உபநதிகள்சேர்தல். பெரு நதிகளால் பல கிளை நதிகள் பிறந்து பல பூபாகங்களிற் பிரவகித்தும் பூமியைச் செழுப்பிக்கும். ஊரிலுண்டாம் அதிக ஜலத்தைத் தன்னிற் பெற்றுக் கடலிற் சேர்க்கும்.

**நதிபன்** — சுக்கிரன் என்னும் பிராமணனுக்குத் தம்பி. தாயபாகங்கொடாத தமயனை மூன்று யோசனை யகலம் ஆறு யோசனை உயரமுள்ள ஆமையாகச் சபித்தவன்.

**நதிமுகப்பூமி** — ஆறு சமுத்திரத்தில் கலக்குமுன் பல கிளைகளாகப் பிரிந்து தனித் தனியே ஓடிக் கடலிற் கலப்பதும் உண்டு. அப்போது அந்தப் பிரிவுகளுக்கு இடையில் திட்டுத்திட்டாக தீவுகள் ஏற்படும். அந்தத் தீவுகளுக்கு நதிமுகப்பூமி அல்லது டெல்டா என்று பெயர். (பூகோளம்).

**நதிமூலம்** — ஆறுகள் உற்பத்தியாகு மிடம். நதி கடலிற் சேருமிடம் முகத்துவாரம், ஒரு நதியிலிருந்து பிரியும் நதி கிளைநதி, ஒரு நதியில் வந்து சேரும் நதி உபநதி, மலையிலிருந்து நீர் பாய்தல் நீர்வீழ்ச்சி.

**நத்தத்தனார்** — இடைக்கழிநாட்டு நல்லூரார், இவர் எறுமாநாட்டு நல்லியக்கோடன்மீது சிறுபாணாறு பாடியவர், கடைச்சங்கத்தவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை).

**நத்தை** — இது மெதுவான தேகத்தையுடையது. இச் சாதி முதுகெலும்பில்லாதவை. இதற்கு முன்புறத்தில் வட்டமான தலையிருக்கிறது. அதில் (4) கொம்புகளுண்டு. (2) பெரியவை, (2) சிறியவை. பெரிய கொம்புகள் கண்கள். சிறியவை ஸ்பர்சனிகள் அடியில் ஒரு பாகத்தைச் சுருக்கி மற்றொரு பாகத்தை நீட்டிக்கொண்டு நகருகிறது. ஓடு, தேகத்தை மறைத்துக்கொண்டொட்டி யிருக்கும். இது பம்பரம்போலிருக்கும். இது நகருகையில் ஒருவித பிசின் தேகத்திலுண்டாகிறது. இது அப்பிராணி நகருதற்கு அநுகூலமாய்ச் செய்கிறது. வெயிற் காலத்தில் இது கற்பாறை, மரங்கள் முதலியவற்றில் ஒட்டி யிருக்கும். இவை நிலத்திலுள்ளவை, நீரிலும் இவ்வகைப் பிராணிகளுண்டு. இவற்றில் சிற்றின நத்தைகளும் உண்டு.

**நந்தகன்** — 1. குரோதகீர்த்தியின் குமரன். (பக்தாஸ்தன அம்சம்).

2. வச்சமித்திரன் குமரன். இவன் குமரன் புனிந்தன்.

**நந்தகமகாமுனி** — சோணாட்டுக் கூடலூரில் தவம் புரிந்து விஷ்ணுமூர்த்தியின் அருள் பெற்றவர்.

**நந்தகோபன்** — கோகுலத்தரசன், வசுதேவர் நண்பன்; பலராம கிருஷ்ணர்களை வளர்த்தவன்; இவன் முற்பிறப்பில் துரோணன் என்பவன் ஏகாதசி விரதமிருந்து துவாதசி தீர்த்தமாட யமுனை நதிக்குச் சென்று வருணப் பிரத்தியனால் வருண லோகத்திற்குக் கொண்டுபோகப் பட்டுக் கண்ணன் மீட்க மீண்டும் யமுனையை யடுத்த மடுவில் ஸ்நானஞ் செய்து பரமபத தரிசனஞ்செய்து கண்ணனை நாராயணன் என்று தரிசித்திருந்தவன். அம்பிகை பூசைக்குச் சென்று அவ்விடத்து மலைப்பாம்பினால் விழுங்கப்பட்டுக் கிருஷ்ணமூர்த்தியால் விடுபட்டவன்.

**நந்தட்டன்** — கந்துக்கடன் புதல்வன், சீவகனுக்குச் சகோதரன் என்பர்.

**நந்தனப் பறவைகள்** (Paradise Bird) — இவை உருவத்தில் அழகிய சிறகும் ஓசையும் பெற்றுக் கண்ணைக் கவர்வன. இவ்வினத்தில் ஒருவகை நியூகினியா நாட்டுக் காடுகளிலுள்ளவை. இவற்றிற்குத்தலையும், உடலும் ஊதா நிறம். இதன் முதுகுப்பக்கமுள்ள சிறகுகள் மேலுயர்ந்து முனை வளைந்து குவிந்து அடுக்கடுக்கா யிருக்கின்றன. சிறகுகளின் அடிப்பாகம் ஊதா நிறமாயும், இடையில் உயர்ந்த பச்சை நிறமாயும், முனை வெளுத்துப் பளபளப்பாயும் இருக்கிறது. இதனை (Grand Promerops) என்பர். இவ்வினத்தில் வேறொன்று உண்டு. அதனைப் பாரடைசியா என்பர். அது கயானு முதலிய இடங்களிலுண்டு. இச்சிட்டினத்திற்குத் தலையில் அழகிய கொண்டையுண்டு. இவற்றினாணிற்கு (3) அடிகள் நீண்ட அழகிய இரண்டு தோகைகள் இருக்கின்றன. இதற்குத் தலையும் கழுத்தும் செம்பு நிறம். இவை இந்தியாவிலும் சிலோனிலும் உண்டு. ஒரிநாத்ராகட்டெயில் (Ornith Racket Tail Bird) இது, நியூகினியா முதலிய நாடுகளிலிருக்கிறது. இதன் தலை கறுப்பு, கழுத்து நீலங் கலந்த பசுமை, வயிறு மஞ்சள் நிறம், முதுகு கறுமைகலந்த செம்மை, இதற்குள்ள வால் சிறகுகளில் (2) இறகுகள் (3) அடி நீண்டு அவற்றின் முனையில் வட்டப

சிறு இறகுகள் பெற்றிருக்கின்றன. இதன் காலில் மயிர்க் குச்சுகள் உண்டு. இதன் மூக்கு மீன்குத்திப் பறவை மூக்குப்போல் நீண்டிருக்கிறது. இதுவும் பாடுமினம்.

**நந்தனர்** — திருநாளைப்போவாரைக் காண்க.

**நந்தன்** — 1. விஷ்ணுமூர்த்தியின் படர்களில் ஒருவன்.

2. திருதராட்டிரன் புத்திரன்.

3. கண்ணனை வளர்த்தவன். இவன் தேவி யசோதை.

4. பிருதுஷேணன் குமரன், தாய் ஆகுதி, தேவி பிரதிபுத்திரை, குமரன் கேயன்.

5. மகாநந்துக்குச் சூத்திரப் பெண்ணிடம் உதித்துப் பிறகு மகாபத்மன் என்கிற பெயரடைந்து க்ஷத்திரியரை நாசஞ் செய்தவன். மகத தேசாதிபதி இவனுக்குச் சுமாலி முதலிய எட்டுக் குமாரர்.

6. வசுதேவர்க்கு மந்தரையிடம் உதித்த குமரன்.

7. சந்திரகுலத் தரசனாகிய தருமகுத்தனுக்குத் தந்தை.

8. நபாகனைக் காண்க.

**நந்தன் சாம்பன்** — பேராவூர்ப் பிரபுவைக் காண்க.

**நந்தி** — 1. இவர்க்கு இடது கையில் சூலம், வலதுகையில் செபமாலை. இராவணனைக் குரங்கால் உன் பட்டணமழிக வெனச் சபித்தவர். சர்வசம்மார காலத்தில் சிவமூர்த்தியை அடைக்கலம் புகுந்து வாகனமானவர். கருடனை உச்வாசநிச்வாசத்தால் கர்வபங்கஞ் செய்ததால் பூமியில் பசவேசராகப் பிறந்து சிவபூசை செய்து கைலையடைந்தவர். சிவாக்கினையால் பிரமன் யாகசாலைக்குச் சென்று அவ்விடத்துச் சிவமூர்த்தியை நிந்தை கூறிய தக்கனைத் தலையறவும் இந்தச் சிவ நிந்தை கேட்டிருந்த தேவர் பிறந்திறந்து சூரனால் வாதையடையவும் சாபமிட்டுத் திருக்கைலை யடைந்தவர். சிவமூர்த்தி பிராட்டிக்கு ஞானோபதேசஞ் செய்த காலத்தில், குமாரக்கடவுளை அவர்களிடம் கட்டளையின்றி விட்டு இதனால் சுறா மீனாகச் சாபமடைந்து வலையராய் வந்த சிவமூர்த்தியால் பிடியுண்டு சாபநீக்க மடைந்தவர். இவர் தவமியற்றிப் பருவதவடிவம் பெற்று ஸ்ரீபர்வதமாய்ச் சிவமூர்த்தியைத் தாங்கினவர். விஷ்ணுமூர்த்திக்குச் சிவமான்மியங் கூறியவர்.

2. அருஷன் மனைவி.

3. ஒரு சிவகிங்கரன்.

4. பாரச ருஷியின் புத்திரன்.

5. இவன், தொண்டைநாட்டு ஆறைப் பதிக்காவலன். இவன் பல்லவர் வம்சத்தவன். இதனை "மல்லைவேந்தன் மயிலை காவலன், பல்லவர் தோன்றல் பைந்தார் நந்தி" எனவும், "பல்லவர்கோனந்தி" எனவும், "அமரர்கோமானடுபோர்நந்தி" எனவும் கூறியவற்றா லறிக. இவன் அவனி நாராயணன், விடேல், விடுகு, குவலமார்த்தாண்டன், மனோதயன், தேசபண்டாரி, நந்திச்சீராமன் எனவும் பெயர் பெறுவன். இவன், குருக்கோட்டை வென்றதாகவும், தெள்ளாற்றில் பகைவரை வென்றதாகவும், பழையாற்றுச் சண்டை வென்றதாகவும், புகழப்படுவன். இவன் பொருளை யிரவலர்க்குச் செலவு செய்தலில் பொறாது இவனைக் கொலைபுரிய வெண்ணிய இவன் சகோதரன் வசையாகக் கலம்பகம் பாடி அதில் ஒரு கவியை ஒரு புலவனை அவர் ஏகாந்தத் தலத்துச் சுவரைத் தொளைத்துக் கூறிவிட்டு ஓடச் செய்தனன். அவ்வகை செய்த புலவன் கூறிய செய்யுள் ஒன்றைக் கேட்டு அவற்றை முற்றும் கேட்க ஆவல் கொண்டவனாய் இருக்கும் நாட்களில் ஒருநாள் நகரை வலம் வருகையில் தாசி யொருத்தி இச் செய்யுளை வீணையில் பாடக் கேட்டு (கக) பந்தல்களைச் சுடலையளவு போடச் செய்வித்துச் சுடலையில் சிதையடுக்கச் செய்வித்துத் தாசியை அழைப்பித்து ஒவ்வொரு பந்தலில் ஒவ்வொரு செய்யுளைக் கேட்டு வருகையில் அப்பந்தல்கள் தீப்பற்றக் கண்டும் மனஞ் சலியாது நூறாவது செய்யுளைக் கேட்க ஆவல்கொண்டு சிதைமேலிருந்து "வானுறு மதியையடைந்த துன் வதனம் வையகமடைந்த துன் கீர்த்தி, கானுறுபுலியை யடைந்த துன் வீரம் கற்பகமடைந்த துன் கரங்கள், தேனுறு மலராளரியிடஞ் சேர்ந்தாள் செந்தழல் புகுந்ததுன் மேனி, யானுமென் கவியுமெவ்விடம் புகுவேமெந்தையே நந்தி நாயகனே" என இதைக்கேட்டுச் சிதை தீப்பற்ற உயிர் நீங்கினவன். இவனது நாடு மயிலையென்றுங் கூறுவர். இவனையே நந்தித் தொண்டைமான் என்பர். அதனை "பொள்ளாறுழை வழிப்போய்த் தலை நீட்டும் புலவர் முன்சொல், கள்ளாருஞ் செஞ்சொற்கலம்பகமே கொண்டு காயம்விட்ட, தெள்ளாறை நந்தி யெனுந் தொண்டை

மான் கலிதீர்ப்பதற்கு, வள்வார் முரசம திர்த்தாண்டதுந் தொண்டை மண்டலமே" என்னுந் தொண்டைமண்டல சதகத்தா லறிக.

6. இவனுக்கு நந்திபோத்தரையன் எனவும் பெயர். இவன் பல்லவ அரசர்களில் எட்டாந் தலைமுறையானவன். இவன் கி. பி. 830 முதல் 854 வரை ஆண்டான். இவனுக்கு இராஜதானி காஞ்சி முதலிய. இவன் தந்தையாகிய தந்திவர்மனை வரகுணபாண்டியன் படையெடுத்து வந்து வென்று பெண்ணையாற்றின் கரையிலுள்ள அரைசூரிலிருக்கையில் அப் பாண்டியனை இவன் தெள்ளாற்றில் வென்றனன். பிறகு இவன் வரகுணனைப் பின் தொடர்ந்து பழையாறு, வெள்ளாறு, குருக்கோட்டை, வெறியலூர், தொண்டி முதலிய இடங்களில் வென்றான்.

**நந்திகள் நால்வர்** — சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்ரபாதமுனிவர், திருமூலர்.

**நந்திகிராமம்**—இராமன் காடுசென்று மீளும் காலவரையில் அவரது திருப்பாதுகையை வைத்துப் பரதன் பூசித்த இடம். அயோத்தியாபுரியைச் சேர்ந்தது. இதில் பரத குண்டம், சத்துருக்கின குண்டம், கயா குண்டம், சடாகுண்டம், பிசாசவிமோசன தீர்த்தம், மானசதீர்த்தம் முதலிய இருக்கின்றன.

**நந்திகோத்ரர்** — அவுரவருஷியின் தந்தை.

**நந்திக்குகை**—இக் குகை திருத்தணிகையில் விஷ்ணு தீர்த்தத்திலிருந்து மேல் திருத்தணிகைக்குப் போகும் வழியில் வடக்கில் உள்ளது. (திருத்தணிகை புராணம்).

**நந்திசேநன்** — சண்முக சேநாவீரருள் ஒருவன்.

**நந்திதுர்க்கம்** — மைசூரில் உள்ளமலை. இதில் பாலாறும், வடபெண்ணை உற்பத்தி.

**நந்திதேவர்** — செந்நிறம், முக்கண், சடை, வலக்கையில் ஜபமாலை, இடைக்கையில் சூலம், அபய, வரதங்கொண்டு சதுர்ப்புஜரா யிருப்பார்.

**நந்திதேவன்**—ஒரு புண்ணிய சீலன்; இவன் நாற்பத்தெட்டு நாள் காட்டில் சலபானத்துடனிருந்து ஒருநாள் சிறிது ஆகாரங் கிடைத்துக் குடும்பத்துடனுண்ண விருக்கையில் இந்திரன் பசியுள்ளவன் போல் வந்து யாசிக்க அவனுக்குக் கொடுத்துச் சுவர்க்கமடைந்தவன்.

**நந்தித்தொண்டைமான்** — நந்தியையும் கருணாகரத் தொண்டைமானையுங் காண்க.

**நந்திநாதோத்பவம்** — காசியிலுள்ள நதி, நந்திதேவர் செய்த நாதவொலியா லுண்டானது.

**நந்திமண்டலம்** — ஸ்ரீசைலத்தில் நிருதி மூலையில் நந்திமாதேவர் தவஞ்செய்த இடம்.

**நந்திமாதேவர்** — 1. வீதஹவ்யர் எனும சிலாத முனிவர், தம் பத்தினியார் சித்ரவதியார் புத்திரப்பேறு வேண்ட முனிவர் சிவமூர்த்தியை யெண்ணித் தவமியற்றச் சிவ பெருமான் தரிசனந்தந்து யாகஞ்செய்வதற்கு நிலத்தை யுழுவாய் ஆண்டு நம்மை யொக்கும் அழகுவாய்ந்த புதல்வன் உண்டாவன் என்று திருவுருக்காந்தனர். அவ்வாறே சிலாதர் யாகஞ்செய்ய நிலத்தை உழ உழுசாலில் பொற்பெட்டியில் அவதரித்துப் பிரமதேவரால் எல்லாத் தேவர்களையுங் களிப்பித்தமையால் நந்திதேவர் எனப் பெயரடைந்து சிலாதமுனிவர் புத்திராதலால் சைலாதியென இருடிகளால் பெயர்பெற்று வளர்ந்து சகலகலை வல்லவராய்ச் சிவபெருமானை யெண்ணி மும்முறை தவஞ்செய்து முதலில் திருவடியில் நீங்காத அன்பும், இரண்டாமுறை சிவநிந்தை, சிவனடியவர் நிந்தை, விபூதி ருத்ராக்ஷநிந்தை செய்பவரைத் தண்டிக்கும் ஆணையும், மூன்றாமுறை சிவபெருமானைப் போல் நித்யராய் எல்லாராலும் துதிக்கப் பெறுதலும், சிவசாரூப்யமும், பட்டாபிஷேகமும், மகவாம்பேறும், கணாதிபத்யமும், சிவஞானாசாரியத்வமும், பிதுர்தேவர்களின் இருதயத்திற்றோன்றிய கன்னிகையாகிய சுயஞ்சையின் திருமணமும், பெற்றுத் திருக்கைலை யடைந்தவர். (சிவரஹஸ்யம்.)

2. ஸ்ரீசைலத்தில் சிலாதமுனிவர் சிவமூர்த்தியை யெண்ணித் தவமியற்றி அவரருளால் இறவாக்குமரன் வேண்டினர். சிவமூர்த்தி நமதருளால் உன்னிடம் ஒரு குமரன் உதிப்பன் எனத் திருவாய்மலர்ந்து மறைந்தனர். அந்தப்படி சிலாதமுனிவர் யாகஞ்செய்ய உழுத நிலத்தில் நந்திமாதேவர் குழந்தையுருக்கொண்டு திருவவதரித்தனர். இவர் திரு அவதரித்த ஏழாண்டில் மித்திராவருணரால் மரணமறிந்து சிவமூர்த்தியை யெண்ணித் தவமியற்றிச் சிவமூர்த்தியின் அருள் பெற்றுப் பிராட்டியாரால் ஞானப்பால் அபிஷேகிக்கப்பட்டுச்

சிவக்கணங்களுக்கு இறைமை பூண்டு சுயசையென்பாளை மணந்து திருக்கைலையில் எழுந்தருளி யிருந்தனர். வீரகனைக் காண்க.

**நந்திமுகன்** — சிவகணத்தவரில் ஒருவன். ஈசானரிடம் யோகசாஸ்திரம் கேட்டவன்.

**நந்திவர்கன்** — (சூ.) உதாவசு குமரன்.

**நந்திவர்த்தன ஞசயன்** — அற்பகன் குமரன் ; இவன் குமரன் மகாநந்தி.

**நந்திவர்த்தனன்** — வாசநன் குமரன் ; இவன் குமரன் சுநாகன்.

**நந்தினி** — 1. இந்திரப்பிரத்தத்திற் கருகிலுள்ள நதி.

2. வீரன் தேவி, விவிம்சன் தாய்.

**நந்தை**—1 ஒருநதி, கைலைக்கருகிலுள்ளது.

2. ஒருகன்னிகை இவள், தந்தை சாபத்தால் ஊமையாய் மீண்டும் சுகர்மனால் நீங்கப் பெற்றவள்.

3. இவள் சிவபத்தியால் உருத்திராக்ஷத்தைப் பூண்டு சிவபூசை கடைப்பிடித்து முத்திபெற்றவள். இவள் தான் வளர்த்த கோழிக்கும், குரங்கிற்கும் உருத்திராக்ஷம் புனைந்தனள். அதனால் கோழி காச்மீரத்தரசன் புத்திரனாகவும், குரங்கு அவ்வரசன் மந்திரியாகிய சுதன்மாவின் குமரனாகவும் பிறந்து முத்திபெற்றன. மந்திரி குமரன் பெயர் தாரகன்.

4. திதிகளைக் காண்க.

**நந்நிதி** — அநங்கன் குமரன், காமக்குரோத முதலிய துர்செய்கையால் சந்ததியில்லாது இறந்தனன். முனிவர் இவன் நாட்டிற்கரசன் இல்லாமைகண்டு இவனிடதுதோளைக் கடைந்தனர். அதினின்றும் கோரரூபமாய் ஒருவன் பிறக்க அவனை நீ வேடர்க்கரசாய்க் காட்டையாள்க என விடுத்துப் பின்னும் வலது தோளைக் கடைந்தனர். அதில் பரமகாரன் என்பவன் நற்குணனாய்ப் பிறந்தான். அவன் எலும்பைக்கடையத் தாதா, விதாதா பிறந்தனர்.

**நபசுவான்** — முராசுரன் குமரன், கண்ணனுடன் பொருதிறந்தவன்.

**நபசுவதி** — 1. அந்தர்த்தானன் இரண்டாம் தேவி, அவிர்த்தானன் தாய்.

2. விதிதாசுவன் இரண்டாவது பாரி, நபஸ்தி எனவும் பெயர்.

**நபஸ்தீ** — நபச்சுவதிக்கு ஒரு பெயர்

**நபன்** — 1. (சூ.) நடன் குமரன், இவன் குமரன் புண்டரீகன்.

2. விப்ரசித்தி குமரன்.

**நபாகன்** — 1. நாபகன் தந்தை.

2 வைவச்சுவதமனுவின் புத்திரனாகிய திருஷ்டன் புத்திரன். இவன் ஒரு வைசியகன்னிகையாகிய சுப்பிரபையை இச்சித்துத் தந்தை முதலியோர் மறுக்கவும் நிற்காது இராக்கதமணஞ் செய்துகொண்டு இராஜபிரஷ்டனாகி அரசனை எனக்கு என்ன கதி என்றனன். தந்தை பசுபாலனஞ்செய்து சீவிக்கக் கட்டளையிட்டபடி ஜீவித்து வந்தனன். இவனுக்குச் சிலநாள் தரித்துப் பனந்தனன் என்னும் புத்திரன் பிறந்து தன்தாயால் தங்கள் வரலாறு உணர்ந்து தவஞ்செய்யச் சென்று, நீபன் என்னும் முனியிடத்துத் தன் குறைகூறி அவர் கற்பித்த அஸ்திரசஸ்திர வித்தைகளைக் கற்று வல்லவனாய் ஞாதிகளையோட்டித் தந்தையிடத்துக் கூறினன். தந்தை, நான் இராச்சியமாளேன் என் தந்தை கூறிய சொல்லைப் பரிபாலித்து வருவேன் என்றனன். பனந்தன் தாய், அரசனை நோக்கி நீர் வைசியன் அன்று. நானும் வைசியகன்னிகை அல்லள். என் தந்தையும் வைசியனல்லன். என் தந்தையின் சரித்திரம் கூறுகிறேன் கேளும் என்றனள். பூர்வம் சுதயவன் என்னும் அரசன், தன் சிநேகனும் தாம்ராசுவன் குமரனுமாகிய நளனுடன் கூடி வேடிக்கையாக வநம் பார்க்கச் சென்றனன். அவ்விடம் ஜலத்திற்கு ஒரு வேதியன் தேவி பிரமதி யென்பவள் வந்தனள். இவளை நளன் தொட்டிழுத்தனன். அதனால் பிரமதி வாய்விட்டரற்ற அவள் கணவனாகிய வேதியன் வந்து அரசனைக்கண்டு கூறினன். அரசன், தன் நண்பனிடம் வைத்த கருணையால்தான் வைசியன், அரசனிடம் கூறுக என்றனன். இதனால் வேதியன், அரசனை வைசியனாகச் சபித்து நளனைச் சாம்பலாக்கினன். இதைக்கண்ட அரசன் பயந்து வேதியனை வேண்டினன். வேதியன், உன் குமரியை எந்த அரசன் பலாத்காரமாய்க் கல்யாணஞ் செய்து கொள்ளுகிருனே அக்காலத்தில் நீ அரசனுவாய் என்று போயினன். அந்தச்சுவேதனே சுதயவன் இந்த என்தந்தை. இனியென் சரிதை கூறுகிறேன் கேளும். பூருவம் கந்தமாதனத்தில் சுரதன் என்னும் முனிவன் தவஞ் செய்துகொண் டிருந்தனன். அக்காலையில், ஒரு கழுகு மான் குட்டி ஒன்றைத் தூக்கிச்சென்று அம்முனிவர் முன் நழுகவிட்டது. அந்த இருடி, அதன்மீது கருணையுடன் கன் கண்களை

மூடித்திறந்து பார்க்கையில் நான் பிறந்த
னன். அதனால் எனக்குக் கிருபாவதி
யென்று பெயரிட்டனர். இவ்வகைப்பட்ட
நான் வளர்ந்து என் தோழியருடன் ஒரு
நாள் வனத்தில் விளையாடச் சென்றேன்.
அவ்விடம் அகஸ்தியன் என்னும் வேதியன்
வந்தனன். அவனை நான்பார்த்து நீ வைசி
யன் அன்றோ என வேதியன், நீ என்னை
வைசியன் என்றதால் வைசியக் கன்னி
கையாகவெனச் சபித்தனன். நான் வேதி
யனை வணங்கிக் கேட்க அவ் வேதியன்
உன் மகன் எக்காலத்து அரசு செய்கின்
றானோ அக்காலத்து உன் வைசியத்து
வம்போய் இராஜஸ்திரீ ஆக என்றனன்.
ஆதலால் நான் இராஜஸ்திரியே என்ற
னள். இதைக்கேட்ட அரசன், நான் பித்
ருவாக்ய பரிபாலனஞ் செய்கிறேன் உன்
குமரன் அரசாளட்டும் என்று குமரனுக்
குப் பகுதி செலுத்தி வந்தனன். குமரன்
நெடுநாள் அரசாண்டு, பநந்தன், வத்சந்தி
ரன், நந்தன் என்னும் குமரரைப் பெற்றுத்
தவ மடைந்தவன்.

**நபுலவிபுலர்** — சீவகன் தம்பியர்; காமக்
கிழத்தியரிடத்துச் சச்சந்தனுக்குப் பிறந்
தவர்.

**நப்பண்ணனார்** — இவர் கடைச்சங்க மருவிய
புலவருள் ஒருவர். பரி பாடலில் குமாரக்
கடவுளைப் பாடியவர். இவர் பண் பாடுத
லில் வல்லவரா யிருக்கலாம். ஆதலினி
வர்க்குப் பண்ணனார் என்பது பெயர்.
ந. சிறப்புணர்த்தும் இடைச் சொல்.
(பரி.பா.)

**நப்பாலத்தனார்** — 1. கடைச் சங்கத்தவருள்
ஒருவர். (திருவள்ளுவமாலை).

2. ந. சிறப்புப் பொருளுணர்த்து
மிடைச்சொல். பாலத்தன் இயற் பெயர்.
இனிப் பாலத்தனாரெனக் கூறப் படுவரும்
இவரேயாவர். யாப்பருங்கல மேற்கோ
ளுள் நப்பாலத்தனார் சூத்திரமெனச் சில
சூத்திரங்காட்டப் படுதலின் இவர் யாப்பி
லக்கணம் செய்துள்ளார் என்று அறியப்
படுகிறது. இவர் பாலைத்திணையைச் சிறப்
பித்துப் பாடியுள்ளார். கடையெழுவள்ளலி
லொருவனாகிய கொல்லியாண்ட வல்வில்
லோரியைப் பாராட்டிக் கூறியுள்ளார். நற்.
(சுஉ) இப்பாலை நிலத்தைப் படைத்தோன்
இதில் மெல்லநடந்து காண்பானாகவென்று
சுரத்தினருமை கூறியுள்ளார். நற். (உசO)
இவர் பாடியனவாக இரண்டு பாட்டுகள்
கிடைத்திருக்கின்றன.

**நப்பின்னை** — கண்ணன் தேவியரில் ஒருத்தி.
இவளை நீளாதேவியின் அவதாரம் என்பர்.

**நப்பூதனார்** — இவர் காவிரிப்பூம் பட்டினத்
துப் பொன்வாணியனார் மகனார்; இவர்
முல்லைப்பாட் டியற்றியவர்.

**நமச்சிவாயக்கவிராயர்** — இவர் ஊர் பாண்
டிநாட்டுச் செங்கோட்டை, சைவ வேளா
ளர். காலம் நூறு வருஷங்களுக்கு முன்
னிருக்கலாம். இவர் கல்வி வல்லவர்,
உலகுடையம்மை யந்தாதி சிங்கைச் சிலே
டை வெண்பா முதலிய இயற்றியவர்.
விக்ரமபுரவாசி எனவும் கூறுவர்.

**நமச்சிவாய தம்பிரான் சுவாமிகள்** — திரு
வாவடுதுறை மடத்தைச் சார்ந்த ஒரு தம்
பிரான். இருபா இருபஃதிற்கு உரையா
சிரியர்.

**நமச்சிவாயதேசிகர்** — சிவப்பிரகாச தேசி
கர் மாணாக்கர்.

**நமச்சிவாயப்புலவர்** — தொண்டைநாட்டி
லிருந்த தமிழ்ப் புலவர்களில் ஒருவர்.
இன்ன வருணத்தினர் எனத் தெரியவி
ல்லை. இவர் பிரம்பூர் ஆனந்தரங்க பூபதி
யைப் புகழ்ந்து பாடி யிருத்தலால் தொண்
டை நாட்டில் இருந்தவராகத் தெரிகிறது.
(தனிப்பாடற்றிரட்டு).

**நமஸ்காரம்** — இது தேவர்களையும் பெரி
யோர்களையும் வணங்கும் வணக்கமாம்.
இது தண்டாக்ருதியாய் விழுந்து நமஸ்கரி
த்தலும், நின்றபடியும், இருந்தபடியும் நம
ஸ்கரித்தலென இருவகைப்படும். விழுந்து
நமஸ்கரித்தல் இருவிதப்படும். அஷ்டாங்க
நமஸ்காரமும், பஞ்சாங்க நமஸ்காரமெனவு
மாம். இவற்றுள் அஷ்டாங்க நமஸ்காரம்
தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோ
வாய். புஜங்களிரண்டு என்னு மெட்டவய
வங்களும் நிலத்துப் பொருந்தும்படி நமஸ்
கரிப்பது. இது பூமியில் சிரத்தை வைத்து
மார்பு பூமியிலே படும்படி வலக்கையை
முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே
நீட்டிப் பின் அம் முறையே மடக்கி வலப்
புயமும் இடப்புயமும் மண்ணிலே பொரு
ந்தும்படி கைகளை அரையை நோக்க நீட்டி
வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்
னும் மண்ணிலே பொருந்தச் செய்வது.
பஞ்சாங்க நமஸ்கார மென்பது தலை, கை
யிரண்டு, முழந்தாளிரண்டு என்னுமைந்
தவயவங்களும் நிலத்திற் பொருந்தும்படி

வணங்குவதாம். மற்ற நமஸ்காரமென்பது இரண்டு கைகளையும் அஞ்சலிப்பதாம், இந்த நமஸ்காரம் தேவர், குரு, பெரியோர், மூத்தோர், நண்பர், தாய், தந்தை முதலியவர்களுக்கு உரியதாம். தவத்தாலும், வயதாலும், ஞானத்தாலும், உயர்ந்தவர்கள், நித்யம் நமஸ்கரிக்கத் தக்கவர்கள். எந்தக் குருவானவர் வேத சாஸ்திரோபதேசத்தால் துக்கத்தைப் போக்கடிக்கத் தக்கவரோ அவரை நித்யம் நமஸ்கரிக்கவேண்டும். நாஸ்திகனையும், கெட்டமரியாதையுள்ளானையும், நன்றி மறந்தவனையும், கிராம புரோகிதனையும், கள்வனையும், வஞ்சகனையும், பித்தனையும், மூர்க்கனையும், சூதாடுபவனையும், நடந்து கொண்டிருப்பவனையும், அசுசியாளனையும், எண்ணெய் தேய்த்துக்கொண்டிருப்பவனையும், செபஞ் செய்துகொண்டிருப்பவனையும், வேதபாஹ்யனையும், காருடவித்தைக்காரனையும், சோதிஷங் கூறிப் பிழைப்பவனையும், பாதகனையும் அதுபோலவே புருஷனைக் கொன்ற பூவையையும், ரஜஸ்வலையானவளையும், விபசாரியையும், பிரசவித்தவளையும், செய்த நன்றி மறந்தவனையும், அதிகோபியையும் நமஸ்கரிக்கக்கூடாது. சபையிலும் யஞ்ஞசாலையிலும், தேவாலயத்திலும், புண்யக்ஷேத்திரத்திலும், புண்யதீர்த்தத்திலும், வேதாத்யயன காலத்திலும், பிரத்யேகமான நமஸ்காரம் பூர்வத்திற் செய்த புண்ணியத்தைப் போக்கும். சிரார்த்தம், தானம், தேவதார்ச்சனம், யஞ்ஞம், தருப்பணம் செய்பவனையும் நமஸ்கரிக்கக் கூடாது.

**நமி** — கச்சன் புதல்வன.

**நமிசதுண்டம்** — ஒரு தீர்த்தம.

**நமிதீர்த்தங்கரர்** — இவர் அங்கதேசத்தில் மிதிலாநகரத்தில் விசயமகாராஜாவுக்குப் பிப்பலாதேவியிடம் முதல் தீர்த்தங்கரர்கள் அவதரித்த யுகத்தில் ஆடிமாதம், கிருஷ்ண பக்ஷம், தசமி, அசுவனியில் பிறந்தவர். உன்னதம் (கரு) வில், சுவர்ணவர்ணம், (௯000)ஆயுஷ்யம். புத்திரன் சுப்பிரபன். சுப்பிரபர் முதலான (கஎ) கணதரர். சக்ரவர்த்தி சயசேநன்.

**நமிநந்தியடிகள்** — இவர் சிவாலயங்கள் தோறும் திருவிழா தரிசிக்கும் நியமம் பூண்டவர். இவர், ஒரு சிவாலயத்தில் நடேசமூர்த்தியின் திருவுருவத்தைத் தரிசித்து இவர்க்கு வாதநோயானதால் திருமேனி வளைந்தது. ஒருகண்ணும் சாய்ந்தபார்வை. ஒரு திருவடியேற்றம் எனக் கவலையடைந்து இந்நோய் தீரும் மருந்து ஆராய்வேன் என்று அருச்சகரைக் கேட்டனர். இவர் பேதையென அறிந்த வேதியர், அடியவரிடம் பொருள் வாங்கிக்கொண்டு ஒரு தயிலத்தைக் கொடுத்தனர். அடியவர் அத்தயிலத்தைச் சிவமூர்த்தியின் திருமேனியிற் சாத்தியும் நோய் தீராமைகண்டு சுரிகையெடுத்து ஊட்டியரிய முயலுகையில் சிவமூர்த்தி பிரத்தியக்ஷமாய் என்ன வேண்டுமென உமது திருமேனியில் வாதநோய் தீரவேண்டுமெனச் சிவமூர்த்தி அதின் விளைவை அருளிச்செய்து முத்திதரப் பெற்றவர்.

**நமிநந்தியடிகள்**—இவர் சோழநாட்டில் எமப்பேரூரில் பிராமணகுலத்தில் திரு அவதரித்துச் சிவத்தொண்டு சிவனடியவர் தொண்டில் வழுவாது இருந்தவர். இவர், திருவாரூரில் வன்மீகநாதரை வழிபட்டு அளவில்லாமல் தீபம் எற்றுதற்கெண்ணி மாலைக்காலம் நெருங்கியவுடன் ஆங்கு அருகிலிருந்த சமணர்வீடுகளில் நுழைந்து சிவமூர்த்திக்குத் திருவிளக்கிட நெய் தருக என்று கேட்டனர். சமணர், உங்கள் மூர்த்திக்குக் கரத்தில் நெருப்பிருக்க எரிமிகையன்றோ என்று மறுத்தனர். அடியவர் அதுகேட்டு வருந்திச் சிவசந்நிதானத்து முறையிட்டனர். சிவமூர்த்தி ஆகாயவாணியாக அடியவரை நோக்கி நமிநந்தியே குளத்தின் நீரை மொண்டு தீபமிடுக என்றனர். இதைக் கேட்ட அடியவர் மனங்குளிர்ந்து அந்தப்படி விடியுமளவும் விளக்கெரித்து வந்தனர். அடியவர், ஒரு முறை திருவாரூர் வீதிவிடங்கப் பெருமான் உற்சவங் கொண்டு திருமணலிக்கு எழுந்தருள உடன் சென்று மீண்டு, சுவாமிதிருச் சந்நிதிக்கு எழுந்தருளியபின் தமது வீடுசென்று உள் புகாமல் வெளியில் இருந்தனர். இவரது பத்தினியார் சிவார்ச்சனைக்கு உள்ளே எழுந்தருள்க என்றனர். அடியவர் நான் சுவாமி உற்சவத்தில் உடன்சென்று பலரைத்தொட்டுத் தீட்டுண்டாயிற்று. ஸ்நானமுடித்தபின் அர்ச்சிப்பேன் என்றனர். இதனுள் சிவச்செயலால் அடியவர்க்குச் சிறிது நித்திரை உண்டாயிற்று. அந்நித்திரையில் கனவில் சிவமூர்த்தி அடியவர்க்குத் தரிசனந்தந்து "திருவாரூர்ப் பிறந்தாரனைவரும் சிவகணங்கள் அதை நீ காண்

பாய் என்று மறைந்தனர்" காயனார் விழித்தெழுந்து தாம் நினைத்தது குற்றமென்று சிவார்ச்சனை முடித்து மனைவியார்க்கு நிகழ்ந்ததைக் கூறி விடிந்தபின் திருவாரூர்க்குச் சென்று, திருவாரூர்ப் பிறந்தவர்களையெல்லாம் சிவ கணங்களாகக் கண்டு தரிசித்து அவர் அவ்வுருநீங்கி முன்போலானம்மையுங் கண்டு சிவ மூர்த்தியை அபராதக்ஷமை வேண்டித் தம்மூர் விட்டுத் திருவாரூரில் குடி புகுந்து சிவப்பணி செய்து முத்தி பெற்றவர். இவர் தொண்டைச் சிறப்பித்து அப்பர் சுவாமிகள் தேவாரத்தில் புகழ்ந்திருக்கிறார். (பெரிய புராணம்).

**நமுகாசி** — தநு குமரன், தானவன்.

**நமுசி** — விப்ரசித்தியின் குமரன். பாரி பிரபை. தேவாசுர தொந்த யுத்தத்தில் இந்திரன் இவன்மீது வச்சிர மெறிந்தனன். அவ் வச்சிரம் இவன் சருமத்தையு மறுக்காதிருந்தது. அதனைக் கண்ட இந்திரன் இவன்மீது நனையாமலும் ஈரமாயுமிருந்த நுரையை யெறிந்து கொன்றனன். (பாகவதம்).

**நம்பாடுவார்** — இவர் ஒரு பாணக்குடியில் திருக்குறுங்குடிக் கருகிலுள்ள முனிக்கிராமத்தில் அவதரித்த பாகவதர். இவர் ஏகாதசிதோறும் வீணையைக் கையிற் கொண்டு திருக்குறுங்குடி பெருமாளை மதிற்புறத்திருந்து பாடி யுவப்பித்துப் பெருமாளே தம்மிடம் வந்து வெகுநாள் சேவை சாதிக்கப்பெற்று அந்தரங்கமா யிருந்தனர். இவ்வாறு நடத்திவருகையில் இவர் ஒரு கார்த்திகை மாதத்திய சுக்லபக்ஷ ஏகாதசியில் பெருமாளைப் பாடிக்கொண்டே தம்மை யறியாதவராய்க் காட்டிற்குள் புக அங்குப் பூர்வஜன்ம மந்தர லோபகிரியா லோபத்தால் பிரம்மராக்ஷஸாய் இருந்த வேதியன் இவரை விழுங்கவரத் திடுக்கிட்டு அந்தப் பிரமராக்ஷஸிற்குத் தாம் பெருமாளை யுகப்பித்து மீளுகையில் தம்மைக்கொடுப்பதாய் வாக்களிக்க அவ்வாறே பிரம்மராக்ஷஸ் விடை கொடுக்கச் சென்று பெருமாளைப் பாடி மீண்டு பிரம்மராக்ஷஸிடம் வரப் பிரமராக்ஷஸ் இவரை வணங்கித் தன் வரலாறு கூறி ரக்ஷிக்க வேண்ட இவர் தாம் பாடும் கைசிகிகானத்தினாலுண்டான புண்யத்திற் சிறிது உதவி அப் பிரமராக்ஷஸப் பிறவி மாற்றிப் பரமபத மடைந்தவர். ஆகையால் அந்த ஏகாதசியை கைசிக ஏகாதசி என்பர்.

**நம்பாணன்** — திருப்பாணாழ்வாருக்கு ஒரு பெயர். இவர்க்குப் பாணநாதன், பாணன், முனிவாஹனன், பாண்டுபெருமான், கவீச்வரன் என்றும் பெயர்.

**நம்பாண்டார் நம்பி** — திருஞானசம்பந்த சுவாமிகளுக்குப் பெண் கொடுத்தவர்.

**நம்பி** — இவர் திருக்குறுங்குடியில் வாழ்ந்த புலவர். வல்லமென்னும் ஊரில் வாழ்ந்த காளத்திமுதலியாரிடஞ் சென்று கண்டவுடனே "பொாடக்கயம்பிடி யென்றான் மதனுமிப்பூவையுமா, தாடக்கமுஞ் சற்றநிந்திலளே மலர்த்தாள் வணங்கா, மூாடக்கவுடக் கெடிமன்னர் வெற்றி முடிபிடுங்குங், காடக்களிற் றண்ணலே வல்லமாநகர் காளத்தியே". இப் பாடலைப் பாடி யவர் யானை முதலிய செல்வந்தரப் பெற்றவர்.

**நம்பிகருணாகரதாசர்** — நாதமுனிகளை ஆச்ரயித்த ஸ்ரீவைஷ்ணவர்.

**நம்பிகாடநம்பி** — இவர் சோழநாட்டுப் பூந்துருத்தித் தலவாசியர்ன வேதியர், இவர் தாம் அருளிச்செய்த திருமுறையில் ஆன்காங்குச் சைவசமயாசாரியர் மூவரையும் துதித்திருக்கின்றனர். இவர் சிவ பக்தி சிவனடியவர் பக்தியால் சிவத்தைப் பாடி முத்தி பெற்றவர்.

**நம்பிகுட்டுவனார்** — குட்டைநாட்டை ஆட்சி புரிந்தமையிற் சேரர்பரம்பரையார் குட்டுவரெனப்பட்டார். ஆதலின் இவர் சேர வம்சத்தினரே யாவர். நம்பி - வீரத்தன்மை யுடையவன். இவர் நெய்தல் வளத்தைப் பெரும்பாலும் பாராட்டிப் பாடி யிருப்பதோடு குறிஞ்சியையும் பாடியுள்ளார். தலைமகனது மலைமேற்பட்ட காற்று வந்து வீசின் இறைமகளது ஆகத்துள்ள பசலை தணியுமென்று இவர் காதற் சிறப்புக் கூறியது சுவையுடையதாகும். நற். (உ௩௬). ஆம்பல் மலர்வது காக்கை கொட்டாவி விடுதல்போலுமென்று கூறியுள்ளார். நற். (௩௪௫). இவர் பாடியனவாக நற்றிணையில் மூன்று பாடல்களும், குறுந்தொகையில் இரண்டுமாக ஐந்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**நம்பிதுறந்தேவர்** — உடையவர் திருவடி சம்பந்தி, பரமைகாந்தியரில் ஒருவர்.

**நம்பிநெடுஞ்செழியன்** — பேரெயில் முறுவலாரால் பாடப்பட்டவன், இவன் அரசர்க்குரிய எல்லா இன்பங்களையும் அநுபவித்த தன்றி எல்லா நன்மைகளையு முடையவன். (புற. ௨௩௯).

**நம்பியாண்டார் நம்பி** — திருநாரையூரில் எழுந்தருளியிருந்த சிவ வேதியர் குலத்துதித்தவர். இவர் தந்தையார் ஒரு நாள் வேற்றூருக்குப் போயிருக்கையில் தாய், பிள்ளையாரைப் பூசிக்க அன்ன முதலிய கொடுத்து ஏவினள். அவ் வண்ணமே நம்பியுஞ் சென்று பூசித்துப் பிள்ளையார் சந்நிதியில் அன்ன முதலிய படைத்துப் புசிக்க வேண்ட, அவர் புசிக்காதிருந்தால் தமது தலையைச் சிலைமேல் மோத இருக்கையில் பிள்ளையார் தடுத்து அமுது செய்தனர். பின்னும் நம்பி, காலதாமதமாயிற்று உபாத்தியாயர் தண்டிப்பர் கல்வி யருளிச் செய்க என வேண்ட அவ்வகையே விநாயகர் சகலகலையும் அருளிச் செய்தனர் என்பர். இவ்வகை நடந்துவரும் அற்புதத்தைக் கேள்வியுற்ற அபயகுலச் சோழன் (இராசராசதேவர்) நம்பிகளை வணங்கிப் பிள்ளையாருக்கு மகாபூசையாதிகள் செய்வித்து மூவரோதி யருளிய தேவாரத் திருமுறைகளிருக்குமிடம் அறிய விரும்பி விநாயகரைக் கேட்கும்படி வேண்டினன். நம்பியார் விநாயகரைக் கேட்டுத் தில்லையின் மேற்குக் கோபுரத்தை யடுத்த திருமதிலில் சேமித்திருக்கிறதாகக் கூறியவர். இவர் அருளிச் செய்த நூல்கள், திருநாரையூர் விநாயகர்மீது திருவிரட்டைமாலை, கோயிற்றிருப்பண்ணியர் திரு விருத்தம், திருஞானசம்பந்தர் திருவந்தாதி, திருஞானசம்பந்தர் திருச்சண்பை விருத்தம், திருஞானசம்பந்தர் திருமும்மணிக்கோவை, திருஞானசம்பந்தர் திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருஞானசம்பந்தர் திருத்தொகை, திருநாவுக்கரசு சுவாமிகள் திருவேகாதசமாலை. இவர் பிள்ளையாரால் திருத்தொண்டர் சரித்திரமறிந்து திருத்தொண்டர் திருஅந்தாதி அருளிச் செய்தனர். இவர் திருமுறைகளை ஏழாக வகுத்தவர்.

**நம்பியாரூரர்** — சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பிள்ளைத் திருநாமம்.

**நம்பிள்ளை** — இவர் கலி. (சுகூ0அ)க்குமேல் பிரபவஞு கார்த்திகைமீ நம்பூரில் திருவவதரித்தவர். இவர் நம்பூரில் வரதராஜரென்னும் பெயருடன் அவதரித்து நஞ்சீயரால் நம்பிள்ளையெனப் பெயரடைந்தவர். நஞ்சீயரைக் காண்க. இவர் திருநாமம் கலிவைரி, திருக்கலிக் கன்னிதாசர், லோகாசாரியர். ஸ்ரீ - சூக்திசாகரர். இவர் திருவடிகளில் வடக்குத் திருவீதிப்பிள்ளை, பெரியவாச்சான்பிள்ளை, இருவரும் ஆச்ரயித்தனர். இவர், ஒரு ஆற்றைக் கடக்கையில் ஓடம், பாரத்தால் முழுகுவ தறிந்த ஓடக்காரன் யாராவது ஒருவர் இறங்கின் எல்லாரும் உயிர் பிழைக்கலாம் என, அதிலிருந்த அம்மை யொருத்தி பிள்ளை யுயிர் வாழின் உலோகோபகாரமாகும் என்று வெள்ளத்தில் குதித்தனள். அம்மை யாற்றில் விழுந்து ஒரு திடர் கண்டு உயிர் தப்பி விசனமுறும் நம்பிள்ளையை அடைந்தனள். தம்மை வேண்டிய அம்மைக்கு வைகுந்தம் தர எழுத்திட்டுக் கொடுத்தவர். வடக்குத் திருவீதிப்பிள்ளை யியற்றிய லக்ஷத்திருபத்தையாயிரம் கிரந்தத்தைப் புற்றில் வைத்தவர். ஈயுண்ணிமாதவருக்கு முப்பத்தாறாயிரப் படியைக் கொடுத்தவர். இவர் பெரியவாச்சான் பிள்ளையைத் திருவாய்மொழிக்கு (உச,000)-ப்படி வியாக்யானம் எழுதக் கட்டளை யிட்டவர். இவர்க்குக் கந்தாடைதோழப்பர், லோகாசாரியர் என்று பெயரிட்டனர். நடுவிற்றிருவீதிப்பிள்ளை, அரசன் தனக்குக் கொடுத்த பரிசை யிவர்க்குக் கொடுக்க அதனை மறுத்தவர். இவர் திருவடிகளில் ஆச்ரயித்தவர்கள், பெரியவாச்சான்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பின் பழகிய பெருமாள் ஜீயர், ஈயுண்ணிமாதவப் பெருமாள்.

**நம்பூத்ரீ** — (நம்பூரி) இவர்கள் மலையாளத்திலுள்ள ஒருவகை பிராமணர். இவர்கள் பெரும்பாலார் காணியாட்சிக்காரர் பெரிய வர்த்தகர்கள். இவர்கள் ராஜதானி வேலைகளில் விருப்பமில்லாதவர். இவர்களில் சிலர் சிவாலயங்களில் அர்ச்சகர்களாக இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலார் கல்விமான்கள் அதிக வைதீகர்கள்.

**நம்பூர்வரதராஜர்** — ஒன்பதினாயிரப்படியை நஞ்சீயர் சொற்படி பட்டோலை கொண்டு எழுதினவர்; நஞ்சீயர் திருவடி சம்பந்தி.

**நம்மாழ்வார்** — இவர் கலியுகம் பிறந்த நாற்பத்துமூன்றாநாள் பிரமாதிஞு, வைகாசிமீ பௌர்ணமி வெள்ளிக்கிழமை விசாகநக்ஷத்திரம் கூடிய கற்கடலக்கினத்தில் சேனைமுதலியார் அம்சமாய்த் திருக்குருகூரில் காரி யென்பவருக்கு உடைய நங்கையிடத்தில் திருவவதரித்துத் தாய்ப்பாலுண்ணாது தாமே வளர்ந்தனர். இது பெருமான் செயலென்று தாய் தந்தையர் (யஉ)-ஆம் நாள் மாறன் என்று நாமகரணஞ் செய்து பொலிந்து நின்றபிரான் சந்நிதிக்கு எடுத்துச்

செல்ல, ஆழ்வார் தவழ்ந்து சென்று பெருமாள் சந்நிதியின் வடபுறத்திலிருந்த திருப்புளியடியில் பதுமாசனமிட்டு யோகத்தெழுந்தருளி யிருந்தனர். இவ்வகை (௰௬) நாள் கழிந்தபின் பெருமாள் கட்டளையால் சேனைமுதலியார் அவரிடத்தெழுந்தருளிப் பஞ்சஸமஸ்கார முதலியசெய்துபோயினர். இவர் இவ்வகை இருத்தலைக் கண்ட தாய் தந்தையர், இவர் சடவாயுவைக் கோபித்தவராகையால் சடகோபன் எனப் பெயரிட்டு மகிழ்ந்தனர். இவர் அப் புளிக்கீழ் எழுந்தருளி யிருந்து மதுரகவியாழ்வார் பொருட்டு நான்கு வேதசாரங்களையும் தமிழில் அருளிச்செய்து பெருமாள் பிரசாதித்த மகிழமாலை சூடி வகுளாபரணரென்றும், தம் பாசுரங்களால் பர மதங்களைப் போக்கினதால் பராங்குசரெனவும் திருநாமம் பெற்று (௩௫) திருநக்ஷத்திரம் எழுந்தருளி யிருந்து திருநாட்டுக் கெழுந்தருளினர். இவர் மற்றைய சரிதங்களை ம்துரகவியாழ்வாரைக் காண்க. (குருபரம்பரை) இவர் மதுரையில் (௩௦௦) புலவர்களைப் பெற்றிருந்த சங்கப் பலகை ஆழ்வார் எழுதித்தந்த ஒரு சீட்டிற்கு இடந்தந்து அவர்களைக் கீழ் தள்ளியது. அதனால் புலவர்கள் ஆழ்வாரைப் புகழ்ந்தனர் என ஒரு செய்தி உண்டு. (சடகோபரந்தாதி காண்க).

**நயநிலைப்படலம்** — (நாடகம்) இது கூத்தமார்க்கமெனவும் படும். அது பெரியோரை தலைமக்கள் மேவச் செய்யப்பட்ட மெய்ப்பொருள்பற்றி வருதல், சிறியோரைத் தலைமக்களாக்கி ஒளியும், விருத்தியும், சாதியும், சந்தியும், சுவையும் முதலாகப் பல விகற்பத்தானும் வருவதுமாம். (வீரசோ.)

**நயித்திரு** — 1. ஒரு முனிவன்.

2. சிவசன்மாவைக் காண்க.

**நயினாசாரியர்** — தேசிகர் குமரர். இவர்க்கு வரதாசாரியர் என்றும் பெயர். இவரும் தந்தையைப்போல் பலரிடத்தில் வாதஞ்செய்து திவ்ய தேச யாத்திரை செய்து வருகையில் கேரளதேசம் சென்று மடைப்பள்ளி பரிசனங்களுக்குத் தலைச் சுமையாய் க்ஷுத்ரர் ஏவிய கல்லை அவர்களுக்கே திருப்பி அவர்கள் வேண்ட அதைப் போக்கிச் சாகல்லியமல்லன் விட்ட பூதத்தைப் பல்லக்குச் சுமப்பித்துத் தாஸராஜாவென்கிற பிராமணனை ஸ்ரீவைஷ்ணவனாக்கித் தம்மிடம் வாதத்திற்கு வந்த மாய சந்நியாசியை அண்ணனைக் கொண்டு வெல்வித்துத் தம்மை ஆச்ரயித்த முதலிகளுக்குப் பாஷ்யகாலக்ஷேபாதிகளைச் செய்து (௬௬)வருஷமிருந்து திருநாட்டிற் கெழுந்தருளினர். (குருபரம்பரை).

**நயிஷதன்** — ஒரு அரசன்.

**நயினர்** — இது வேளாளரின் ஒரு வகுப்பு. இவர்கள் ஜயினர்களாயிருந்து பின் வேளாளரானவர்கள். இது ஜயினர்க்குரிய பட்டம். தற்காலம் கைக்கோளர், பள்ளிகள், உடையார் முதலியவர்க்கும் வழங்கி வருகிறது. இது சிவனடியவர்களுக்கும் வழங்கி வருகிறது. இளையான்குடிமாறனாயினார். (தர்ஸ்டன்).

**நயுதன்** — (சங்.) ரெயசேநன குமரன்.

**நயுதாயு** — ஒரு மகாரதன்.

**நாகசதுர்த்தசி** — தீபாவலியைக் காண்க.

**நாகம்** — I. இது உலகத்தில் பாபஞ் செய்தவர் அடையும் இடம். இது புராணங்கள் தோறும் பலவகைப்படும். இது தொகையால் இருபத்தெட்டு வகையால் நூற்று நாற்பது, விரியால் இருபத்தெட்டுக்கோடியாம். 1. கோரம், 2. கோராத்கோரம், 3. அதிகோரம், 4. கோரதரம், 5. கோரரூபம், 6. தாளதரம், 7. பயாநகம் 8. காளராத்திரி, 9. பயோற்கடம், 10. சண்டம், 11. மகாசண்டம், 12. சண்டகோலாகலம், 13. சண்டதரம், 14. சரோருஹம், 15. சலசவதி, 16. வீமம், 17. வீமவீடனம், 18. கராளம், 19. விகராளம், 20. குலிசம், 21. முக்கோணம், 22. ஐங்கோணம், 23. தீர்க்கதாம் 24. பரிவர்த்துளம், 25. எழுநிலம், 26. எண்ணிலம், 27. தீர்க்கவொளி, 28. மாயை. மற்றுமொரு விதம்: 1. தாமிச்ரம், 2. அந்ததாமிச்ரம், 3. ரவுரவம், 4. மகாரவுரவம், 5. கும்பிபாகம், 6. காலசூத்திரம், 7. அசிபத்திரவநம், 8. சூகாமுகம், 9. அந்தகூபம், 10. கிருமிபோஜனம், 11. சந்தங்கிசம், 12. சூரமி, 13. வச்சிரகண்டம், 14. சலமரி, 15. வைதரணி, 16. பூயோதம், 17. பாணரோதம், 18. வைச்சம், 19. லாலாபக்ஷம், 20. சாரமேயாதனம், 21. விசாயபானம், 22. ஷாரகர்த்தமம், 23. ரக்ஷோகணபோஜனம், 24. சூலப்புரோதம், 25. தெந்தசூகம், 26. வடதிரோதானம், 27. பரியாவர்த்தனம், 28. சூசீமுகம் என்பவையாம். இவற்றுள் இராசநரகம், ரௌரவம், இதற்கு இராசநரகம் கும்பீபாகம், ஆதலாலிவை இராஜராஜநரகம் எனப்படும். இந்த இரண்டு இராஜ நரகங்களுக்கும் உயர்ந்த

தர்தலால் அவீசியை இராஜாதிராஜநரகம் என்பர். இவற்றை மகாபாவிகள் அடைவர். இவற்றின் விரிவுகளையும், இவற்றை அடைவோரையும் மகா புராணாதிகளிலும் ஆகமங்களிலும் காண்க.

II. (உஅ) (1) தாமிச்ரம் - பறா பொருள், மனைவியரைக் கவர்ந்தோ ரிந்நரகத்தில் தள்ளப்பட்டு மூர்ச்சித்திருக்கு மிடம்.

(2) அந்ததாமிச்ரம் - மனைவி கணவனை வஞ்சித்த வஞ்சகர் கண்ணிழந்து வருந்தும் நரகம்.

(3) ரௌரவம் - பிறன் பொருள்களை வஞ்சித்தோர், ருரு எனு மிருகங்களால் வருந்தும் இடம்.

(4) மகாரௌரவம் - ருரு எனு மிருகங்கள் வெளிவிடாது பாபிகளை வருத்துமிடம்.

(5) கும்பிபாகம் - பிறவுயிரைக்கொன்று தின்றோரைக் கும்பியிற் பாகப்பட்ட பொருளைப்போல் வருந்தும் இடம்.

(௦) காலசூத்திரம் - தாய் தந்தையரை வருத்தினவர்கள், காலத்தைக் காட்டுஞ் சூரியனைப்போல் கொளுத்தப்படும் இடம்.

(7) அசிபத்ரவனம் - தெய்வத்தை நம்பாது விட்டவன், இவ்விடத்தில் வாள் போன்ற முட்களையும் இலைகளையுமுடைய மரங்களால் துன்புறுத்தப்படுவான்.

(8) பன்றிமுகம் - அதர்மமாகச் சிக்ஷை செய்பவனும் மற்றத் தீமை செய்வோரும் அடையும் பன்றிபோன்ற முகத்தையுடைய நரகம்.

(9) அந்தகூபம் - கொலை செய்வோன், துரோகிகள் அடையும் நரகம். இதில் பல விஷப் பிராணிகளால் துன்புற்றுக் கண் தெரியாது ஆன்மா வருந்துவன்.

(10) கிருமி போஜனம் - தெய்வ பூசையில்லாதார் பசியால் வருந்தித் தாமும் புழுக்களாய்த் தம்மையொத்த பெரும் புழுக்களால் புசிக்கப்படும் இடம்.

(11) அக்நிகுண்டம் - வலிவாகப் பிறன் பொருள் கொண்டானடையும் தீ நிறைந்த இருப்புச்சால்.

(12) வச்ரகண்டம் - புணரக்கூடாதவரைப் புணர்ந்த ஆண் மகனும் பெண்ணும் அணையும் இருப்புத் தம்பம்.

(13) சான்மலி - உயர்வு தாழ்வு எண்ணாது புணர்ச்சி விரும்பினோன் முட்களால் கொத்துண்ணும் நரகம்.

(14) வைதரணி - சாஸ்திர தர்மக்கேடு செய்தவர்களைத் தள்ளி வருத்தும் சீரத்தம் முதலிய துர்க்கந்தப் பொருள்களும், புழுக்களும் நிறைந்த நீர்நிலை.

(15) பூயோதம் - ஆசார பிரஷ்டனடையும் மலமூத்ர சிலேத்மாதிகள் நிறைந்த நரகம்.

(16) பிராணரோதம் - பிராணிகளை ரோதனஞ் செய்பவனும் செய்விப்பவனும் யமபடர்களால் பிராண இம்சையடையுமிடம்.

(17) வைசசி - டம்பத்தின் பொருட்டு யாகாதிகள் செய்பவனைச் சாட்டையால் யமபடர் வீசி யடிக்கும் நரகம்.

(18) லாலாபக்ஷம் - தன் மனைவியைக் களிப்பால் தீயகாரியத்திற்கு உட்படச் செய்வோன் அடையும் நரகம்.

(19) சாரமேயாதனம் - வீட்டில் தீ யிட்டவர், விஷமூட்டியவர், பிராணி வதை செய்வோர், இராஜாங்கத்தைப் பாழாக்குவோர் பலவகைப்பட்ட (எ00) நாய்களால் துன்புறுத்தப்படும் நரகம்.

(20) அவீசி - பொய்சாக்ஷி சொல்வோர், பாவ புத்தியுடையோர் முதலியவர்களை நூறு யோசனை யுயரமான மலை யுச்சியிலிருந்து தள்ளி உயிர்போகாது வருத்தும் நரகம்.

(21) பரிபாதனம் - கள் முதலிய குடிபபோரை உருகிய இரும்பைக் குடிக்கச் செய்யும் நரகம்.

(22) க்ஷாரகர்த்தமம் - தன்னைத் தானே புகழ்பவனடையும் நரகம்.

(23) ரக்ஷோகணம் - நரமேதஞ் செய்தவர்களையும், நரமாம்சம் புசித்தவர்களையும், கொல்லப்பட்டவர்கள் ரக்ஷஸ்களாய்க் கொன்றவைகளைப் புசிக்கும் நரகம். அவ்வகை மாம்சப்க்ஷணிகளும் அப் பிராணிகளால் உண்ணப்படுவர்.

(24) சூலப்ரோதம் - கிராமகாதி, அபகாரி, தற்கொலைஞன், நம்பிக்கைத்துரோகி முதலியவர்கள் சூலத்திற் கோக்கப்பட்டு கழுகு முதலிய பக்ஷிகளால் துன்புறுநரகம்.

(25) தந்தசூகம் - தீய பாபாதி காரியங்களைச் செய்தோர், விஷப்பிராணிகளாலும், பல முகங்களையுடைய பிராணிகளாலும் வருத்தப்படும் நரகம்.

(26) வடாரோகம் - மலைகளிலும், விருக்ஷங்களிலும் வசிக்கும் மிருக, பக்ஷிகளை வருத்துவோர் மலையினின்றும் விருக்ஷத்திருந்தும் கீழ்விழத் தள்ளி வருத்தும் நரகம்.

(27) பிரியாவர்த்தனகம் - அதிதிகளைப் பூசிக்காதவன் அடையும் நரகம்.

(28) சூசீமுகம் - தங்களைச் செல்வர்கள் என்று மதித்து இறுமாந்திருப்போர், தர்மஞ் செய்யாமல் பொருளைக் காத்திருப்போர் அவர்களை ஊசியின் முகமொத்து வருத்தும் நரகம். (தேவி - பாகவதம்).

III. (எ) அள்ளல், ரௌரவம், கும்பீபாகம், கூடகாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

IV. (1) கிரௌரவம - ருரு எனும் பிராணிகளால் ஒரு கணமேனும் தாங்கற்கரிய துன்பம் விளைப்பதாய் அக்நிச்வாலையுடையதாய்ப் பற்பல துன்பம் அனுபவிக்குமிடம்.

(2) சூகரம் - பன்றிகளால் வருத்தப்படும் இடம்.

(3) உரோதம் - அசையாது நிறுத்தப்படும் இடம்.

(4) தாலம் - பனைமடற்களால் அறுத்தலும் அதன்மீதிருந்து நூக்கலுமான இடம்.

(5) தப்தகும்பம் - காய்ச்சிய எண்ணெய்க் கும்பத்தில் தள்ளும் இடம்.

(6) இலவணம் - உடலைப் பிளந்து உப்பிடும் இடம்.

(7) இலோகிதம் - இரத்தம் ஒழுக வந்தக்கும் இடம்.

(8) உதிராம்பம் - கொதிக்கும் இரத்தத்திற் போடுமெ   ம்.

(9) வைதர ரி - உதிரப்பெருக்கமைந்து எவ்வகையினுந் தாண்டற்கரியதானவிடம்.

(10) கிருமிசம் - புழுக்கள் தொளைக்கும் இடம்.

(11) கிருமிபோசனம் - புழுக்களை உண்பிக்கும் இடம்.

(12) கிருட்டிணம் - நெருப்பிற் காய்ச்சிய இருப்பு முட்களின்மேல் நடக்கச் செய்யும் இடம்.

(13) தாருணம் - தாங்கக்கூடாத குளிராயிருப்பது.

(14) சந்தமிசனி - ஆயுதத்தால் நாக்கை அறுக்கப்படும் இடம்.

(15) அசிபத்திரவனம் - வாள் போன்ற இலைகளையுடைய காடு.

(16) பூயவகம் - சகிக்கக்கூடாத துர்நாற்றமுடைய இடம்.

(17) கருட்ணசூத்ரம் - சக்கிரத்திற் சுற்றிக் கால்விரலிற் கயிறு பூட்டி உடல் முழுதும் ஒன்றுகும்படி இறுக்கி வருத்துமிடம்.

(18) தமசு - இருள் நிறைந்த இடம்.

(19) சுவபோசநம் - தன்னுடம்பை அறுத்துக் கொடுக்கத் தானே உண்ணுமிடம்.

**நரகரி** — இரண்யகசிபைக் கொன்ற விஷ்ணுவின் திருவுரு. இவர் சிரம் சிங்கவுருவமாகவும் மற்றத் தேகம் மனித வுருக்கொண்டு தம்மைத் துதித்த பிரகலாதன் பொருட்டுத் தூணிற் றோன்றித் தேவரைத் துன்புறுத்திய அவ்வசுரனைக் கொன்று கோபமடங்காது நின்று, தேவர் வேண்டுகோளால் இலக்குமி யடையக் கோபநீங்கிப் பிரகலாதனை அநுக்கிரகித்தனர் என்பர். இவர் கோபங்கொண்ட காலத்தில், சரபவுருக்கொண்ட சிவமூர்த்தியால் தோல் உரியுண்டு கோபமடக்கினர் என்பர் சைவர். அச் சரபத்தை வெல்ல நாராயணப்பக்ஷியாய் விஷ்ணு வந்தனர் என்பர் வைணவர். (பாகவதம், ஸ்காந்தம்).

**நரகரிதாசர்** — இவர் திருமாலிடம் அன்பு பூண்டவராய்த் திருமால்கொண்ட பல அவதாரங்களையும் நாடகமாக நடித்து வருவர். இவரது சீடர் இவர் கொண்ட வேடத்திற்கிணங்கத் தாமும் வேடங்கள் பூண்டு நடிப்பர். ஒரு:ள் இவர் நரசிங்க வுருக்கொள்ளச் சீடன் ஒருவன் இரண்யவேடமும் மற்றொருவன் பிரகலாத வேடமும் கொண்டு நடிக்கையில் பிரகலாதன் இரணியன் முன் விஷ்ணுமூர்த்தியின் சர்வ வியாபகநிலை கூற இரணியன் கோபித்து இந்தத் தூணிலுந் திருமாலிருப்பனோ எனக் கோபத்துடன் அறைய அதில் நரசிங்கவேடங்கொண்டிருந்த தாசர் வெளிப்பட்டு இரணியவேடங்கொண்டிருந்த அவனது உடலைப்பிளந்து மாலையிட்டனர். இதனை அக்காலத்திருந்த இராமராஜர்முன் பலர் கூற அரசர் நரஹரிதாசரைத் தசரதராகவும் ராம, கைகேசியர் இருவரும் சீடராகவும் வரச்செய்து இராமனை விட்டுத் தசரதர் பரிதபித்து உயிர் நீங்கும் சரிதை நடிக்கச் செய்கையில் இராமன் வனம் புகவும் தசரத வேடம் பூண்ட தாசர் உண்மையாகவே உயிர்நீங்கிப் பரமபதம் பெற்றவர்.

**நரகரிபக்தர்** — இவர் பண்டரிபுரத்தில் வாழ்ந்த ஒரு தட்டார். சிவப்ரீதி யுள்ளாராய்த் திருமாற் கோயிலருகிருந்து உட்செல்லாதவராய் வாழ்கின்ற நாளில் வணிகன் ஒருவன் புத்திரப்பேறு வேண்டிப் பெருமாளை வணங்கிப் பெற்று அப் பெருமானுக்கு அரைநாண் செய்யவேண்டி இவரிடத்துச் சென்று கூற அவர் பெருமாளின் அளவெடுத்துவா வென்றனர். வணிகன் அவ்வாறே அளவெடுத்துத் தரத் தட்டார் அவ்வாறு

செய்து தந்தனர். அதைப் பெருமாளுக்குச் சாத்த அது பற்றுதிருப்பதைக் கண்டு வணிகன் தட்டானுக்குச் சொல்லி வேண்டினன். மீண்டும் அதைச் சரிப்படுத்தித் தர வணிகன் கொண்டு காட்ட ஒரு விரற்கடை அதிகப்பட்டது. அதைச் சரிப்படுத்தித் தர ஒரு விரற்கடை குறைந்தது. இவ்வாறு நீட்டவுங் குறையவும் இருத்தலைக் கண்டு வணிகன் நான் செய்த குற்றமென்னே என வருந்தி, நீயே அளவுகாண் என வேண்டவும் நாம் சிவமூர்த்தியை யன்றிக் காண்பதில்லென மறுத்தனன். பின்னும் வணிகன் வேண்டக் கண்களைக் கட்டிக் கொண்டு வணிகன் அழைத்துச் செல்லக் கோயிலுட் புகுந்து பெருமாளைத் தடவ அவர் மான்மழு சதுர்ப்புஜத்துட னிருக்கக் கண்டு துணுக்கெனக் கண்களை யவிழ்த்துப் பெருமாளைக் கண்டு மீண்டும் கண்களை மூடினன். மீண்டு அவ்வாறு சிவச் சின்னங்களைக் கண்டு கண்களைத் திறக்க விஷ்ணுவாகக்கண்டு மயங்கிக் கண்மூடின் சிவனாகவும் திறக்கில் திருமாலாகவும் இருக்கக் கண்டு கண்களில் நீர் ததும்பத் திருவடிகளில் வணங்கி மனமுருகி உன்னில் சிவன் வேறென்று நினைத்த எனக்கு என்னில் அவன் வேறல்லன் என அறிவித்து நின்றவனே எனத் துதிக்கப் பெருமாளும் தம் சிரத்தில் சிவக்குறி காட்ட நரஹரியும் பணிந்து நாமதேவர் செய்த விருந்துண்டு சிவமூர்த்தியின் கட்டளைப்படி பெருமாளைப் பணிந்து வந்தனர்.

**நரகன்** — விப்ரசித்தி குமரன்.

**நரகாசுரன்** — வராகவுருக்கொண்ட விஷ்ணுவிற்குப் பூமிதேவியிடம் பிறந்த அசுரன். இவன் பிராக்சோதிஷம் எனும் பட்டணம் ஆண்டவன். இவன் துவஷ்டாவின் குமரியாகிய கசேரு என்பவளை யானையாகச் சென்று சிறை கொண்டான். குமரன் பகதத்தன். இவன் மந்திரிமார், அயக்கிரீவன் பஞ்சகன், நிசும்பன், பிராபணன், முரன் முதலியவர். இவன் அதிதியின் காதணியையும், வருணன் குடையினையும் கவர்ந்தமையால் விஷ்ணுமூர்த்தி கிருஷ்ணவதாரத்தில் இவனிடத்துப் போர்புரிந்து கொலை செய்துஇவன்செல்வங்களையும் காதணியையும் இவனிடமிருந்த மணிமாலையினையும் பரித்தனர். இவனுக்குத் துவிவிதன் என்கிற வாநரன் நண்பன். (பாகவதம்) இவன் பட்டணம் மாகிஷ்மதி யெனவுங் கூறுவர்.

**நரசிங்கமுனையரையர்** — திருநாவலூர் சாசனத்திற் கூறிய நரசிங்கவர்மன் கன்னரதேவன் கி - பி. 957. இவருக்குமுன முனையதியரையன், குலமாணிக்கன் இராமதேவன், நரசிங்கவர்மனுக்கு முன்னோர்கள்.

**நரசிங்கமுனையரையநாயனுர்** — 1. திருமுனைப்பாடி நாட்டில் அரசு வீற்றிருந்து சிவனடியவரிடத்து அன்பு பூண்டவர். இவர் திருவாதிரை நக்ஷத்திரத்தில் வருகின்ற சிவனடியவர்க்கு அமுதுடன் நூறு பொன் கொடுத்து வருவர். இவ்வகை நடத்தி வருகையில் பொன் பெறவேண்டிக் காமுகன் ஒருவன் சிவவேடம் பூண்டுவர அவனை மற்ற அடியவர்கள் இகழ்ந்தது கண்டு அவனுக்கு அமுதிட்டு இருநூறு பொன் கொடுத்தனுப்பிச் சிவவேடந் தரித்த அடியவரிடத்து அன்பால் முத்தி யடைந்தவர். (பெரிய புராணம்).

2. இப்பெயர் கொண்ட மற்றொருவர் இருந்ததாகத் தெரிகிறது. இவர் சுந்தரமூர்த்திசுவாமிகளைப் புத்திரராகக் கொண்டு வளர்த்தவர். இவர் குறுநில மன்னர். இவர் திருமுனைப்பாடி நாட்டை அரசாண்டவரின் வேறுதல்வேண்டும். ஏனெனில் அவர் சரித்திரத்தில் சுந்தரமூர்த்தி சுவாமிகளைப்பற்றிக் கூறுததாலும், திருத்தொண்டத்தொகையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இவரைப் புகழ்ந்திருத்தலாலும் என்க. இவர்கள் வழியில் நந்தமான்வம்சம் உண்டாயிற்று. தெய்வீக அரசனைக் காண்க. இவர் காலம் ஔவையார் காலம். தந்தை தெய்வீக அரசன், தாய் பாண்டியன் குமரியாகிய காஞ்சனமாலை.

**நரசிங்கமூர்த்தி** — இரண்யகசிபுவை வதைத்த விஷ்ணுவினவதார விசேஷம். நரகரியைக் காண்க. இம்மூர்த்தி காசிபர்க்குச் சமித்தின் பொருட்டுச் சென்று சமுத்திரத்தில் முழுகிய வாலகில்லியரை ரக்ஷித்தனர்.

**நரசிங்கவர்மன்** — ஒரு மலை நாட்டரசன்.

**நரசிம்மமேதா** — கடேமண்டலீ யென்னும் ஊரில், நாகாவேதியர்க்குக் குமாரராய்ப் பிறந்து உபநயனம் முதலியவடைந்து தாய் தந்தையர் இறக்கச் சிறிய தந்தையால் வளர்க்கப் பெற்றவர். இவர் விளையாட்டில் காலம் போக்கி ஒருநாள் களைத்து வந்து அண்ணன் மனைவியைத் தாகங் கேட்க நீ என்னசெய் திளைத்தனை நீ இவ்வாறு திரிந்து வருகின்றாய் கலியாணஞ் செய்துகொண்டு கல்வி யில்லாமல் மனைவி

மக்களை எவ்வாறு காப்பாற்றப்போகிறாய் எனக் கூறிய வார்த்தையைக் கேட்டு இல்லற வெறுப்புடையவராய் நாடு விட்டுக் காடடைந்து அங்கோர் சிவாலயந் தோன்ற அதனுட் புகுந்து அந்தச் சிவக்குறியின் மேல் ஏழு நாள் படுத்து ஆகாரம் முதலிய இல்லாமலிருக்கச் சிவமூர்த்தி தரிசனந் தந்து இராமமந்திர முபதேசித்துக் கண்ணனைத் தெரிசிப்பிக்கிறேன் எனக் காளிந்தி தீரமடைந்து கண்ணனைக் கண்டு இருவரும் வணங்கினர். கண்ணன் இவர் யார் என்ன இவர் பூர்வ ஜன்மத்தில் புலியாய்ப் பிம்பாஜி அருள்பெற்று இச் சன்மத்தில் வேதியராய் என்னை வேண்ட நான் உம்மைத் தரிசிப்பித்தனன் என்றனர். இதைக் கேட்ட கண்ணன் அவருக்கு அருள்புரிந்து என்னைப் பாடுகவென அவ்வாறு பாடியிருக்குங் காலத்தில் இவரது சுற்றத்தவர் இவரைத் தேடிச் சிவாலயத்தில் கண்டு திருமண முடித்து வைத்தனர். மேதா அவ்வூரில் உஞ்ச விருத்திசெய்து பிழைத்து வருநாளில் சாமபுரத்து ஒரு வேதியன் தன் பெண்ணை மேதாவின் மகனுக்குக் கொடுக்கக் கிருஷ்ணபட்டரால் நிச்சயிக்கப்பட்டு மணமுடிக்க இருக்கையில் பலரால் மேதா அதிக வறியன் எனக்கேட்டு விசனமடைந்து கிருஷ்ணபட்டரை வெறுக்கக் கிருஷ்ணபட்டர் மேதாவை அடைந்து நாளை சம்பிரமத்துடன் மணத்திற்கு வருகவென்ன மேதாவும் கண்ணனைத் தியானிக்கக் கண்ணன் ருக்மணியை நோக்கி நீ முன்னின்று மணத்தை முடிப்பிக்கவென அவ்வாறே யானை சேனை பரிவாரங்களுடன் மேதா பிள்ளையை அழைத்துக்கொண்டு செல்ல மணப்பிள்ளை வருவதைக் கேட்ட திரிபுராந்தகன் என்னும் வேதியன் அதிச வியப்படைந்து கலியாண மண்டபத்தி லழைத்துச் சென்று பெண்ணைவிட அவ்விடத்தில் கண்ணன் எழுந்து உபசரிக்கக் கண்டு திரிபுராந்தக வேதியன் நீர் யார் எந்த ஊர் புதிதாக இருக்கின்றதே என்று கேட்க நாம் இருப்பது துவாரகை என் பெயர் சாமளநம்பி எனக்கு மேதா நண்பனாகையால் மணம்புரிவிக்க வந்தேனென்று இருவருக்கும் மணமுடித்து அவர்கள் சொந்த ஊருக்கனுப்பி மேதாவை நோக்கி நீ எக்காலத்தில் எண்ணுகின்றனையோ அப்போது வந்து உதவுகின்றனன் என்றனன். ஒருநாள் கேசவபட்டர் என்பவர் துவாரகைக்குச் செல்வோர் வழியில் கள்ளரால் பொருளை இழந்து செலவிற்கு இல்லாமல் மேதாவை யடைய மேதா அறுநூறு வராகன் தந்து துவாரகையிலிருக்கும் சாமளநம்பியிடம் அதை மீண்டும் கொடுத்துவிடும்படி அனுப்ப அவ்வாறே கேசவபட்டர் துவாரகை சென்று கண்ணனைத் தரிசித்து அர்ச்சகரை நோக்கி இவ்வூரில் சாமளநம்பி என்பவர் யாவரென்று கேட்க அவர் அப் பெயர் சொண்டார் யாவருமிவ்வூரிலிலர் என்று சொல்லக் கேட்டு ஊர் முழுதுந் தேடிக் காணுதவராய் அலுத்திருக்கையில் கண்ணன் சாமளநம்பியாய்த் தரிசனந் தந்து நானே சாமளநம்பி என்று அப்பொருளைப் பெற்றுக் கள்ளரால் இழந்த பொருளையும் அவருக்குக் கொடுத்து மறைந்தனர். பின்பு ஒருநாள் மேதா தன் மகள் சோபனத்திற்கு வேண்டிய வரிசை முதலிய வேண்டுமென இவரை ஒருவன் வந்து கேட்க மேதா சும்மா வெறுங் கையுடன் செல்ல அங்கிருந்தவர் என்ன வேண்டுமோ யெழுதுகவென்ன வேண்டிய பொருள்களெல்லா மெழுதினர். பின்பு மேதா பெருமாளை வேண்டப் பெருமாள் மேதாவின் ஆளாகச் சென்று எழுதிய எல்லாவற்றையுந் தந்தனர். பின்பு அனைவரும் வியந்து இவரைப் பெருமாளின் தொண்டர் என்று கொண்டாடினர். இவர் தாம் பஜனை செய்யுங் காலத்தில் பெருமாள் தரித்துக் கொள்ளுந் துளவமாலை தாசர் கழுத்திலிருந்தலைக்கண்டு பலர்கூற அவ்வூர் அரசன் நீ உலகத்தாரை மயக்குகின்றாய் இன்று நான் காண அதனை விழச்செய்ய வேண்டும் அன்றேல் தண்டிப்பன் எனத் தாசர் பெருமாளைப் பஜனை செய்யவும் விழாதிருத்தல் கண்டு, பின்னும் பஜனைசெய்ய மற்றும் விழாதிருக்கத் தாசர், நீர் இன்றைக்கு உம் துழாய்மாலையை அணியாவிடின் உமக்கு என்ன குறைந்துபோகும் என்று பாடுகையில் அத்துழாய்மாலை இவர் கழுத்தில் வந்துவீழ்ந்தது. அரசன் பயந்து உபசாரஞ் செய்தனன்.

**நரதேவன்** — தடமதத்தனுக்குப் பெயர். சைநன்.

**நரநாராயணர்** — 1. தருமப் பிரசாபதிக்கு மூர்த்தாதேவியிட முதித்த விஷ்ணுவினவதார விசேஷம். இவர்களை வெதிரிகாச்சிரமத்திலிருந்த இருடிகள் யோகமுறைக்க வேண்ட இவர்களிருவரும் சிவவிஷ்ணுக்க

ளாயிருந்து அவர்களுக்கு யோக முரைத்தனர். (கூர்மபுராணம்.) இவர் தவமியற்றுகையில் இந்திரனால் ஏவப்பட்ட தெய்வகன்னியரிவரை மயக்க வந்தனர். அதனையறிந்த இவர் தொடையில் அநேக அப்சரசுக்களைச் சிருட்டித்து விட்டனர். இப்பெண்களை இந்திரனால் ஏவப்பட்ட அப்சரசுக்கள் கண்டு இவர்கள் தம்மினும் அழகு பெற்றிருத்தலால் வெட்கி மறைந்தனர். ஊருவில் பிறந்ததால் ஊர்வசி எனப் பெயர் பெற்றனள். தேவர்க்குச் சகாயமாக யுத்தஞ் செய்து அசுரரைச் செயித்தவர். (பாகவதம்.)

2. பிரமனுக்குத் தருமன் எனும் ஒரு குமரன் இருந்தனன். அவனுக்கு அரி என்றும், கிருஷ்ணன் என்றும் இரண்டு குமரர் இருந்தனர். இவ்விருவரே நரநாராயணர். இவர்கள் மகாயோகிகளாயிருந்தது கண்டு இந்திரன் இவர்களின் தவத்தைக் கெடுக்க அப்ஸரஸ்ஸுக்களையேவச் சலிக்காது இருந்து அந்த அப்ஸரஸுக்களினும் அழகு மிகுந்தவளாய்த் தமது தொடையிலிருந்து ஊர்வசியினையும் பல அப்ஸரஸுக்களையும் சிருட்டித்துத் தவமழியாது பெற்றவர். இவர்களுடன் தீர்த்தயாத்திரைக்கு வந்த பிரகலாதன் ருஷிகளுக்கு அம்பறாத்தூணி, வில் அம்பு இருப்பது யுக்தமன்று என்று போரிட்டு வெற்றிபெறாமல் நாராயணர் சொற்படி யுத்தத்தை நிறுத்திப் பாதாளஞ் சென்றனன். மேலே இந்திரனால் ஏவப்பட்ட அப்ஸரஸுக்களை நாராயணர் சபிக்கத் தொடங்குகையில் நரன் தடுக்க, நின்றுமோகித்த அவர்களைத் துவாரகையில் பிறக்கச் செய்தவர்.

**நரபதிதேவன்** — கேமமாபுரத்தரசன்.

**நாபாகன்** — 1. (சூ.) திஷ்டன் குமரன்.

2. (சூ.) சிறுதன் குமரன்; இவன் குமரன் அயுதாயுசு.

3. வைவச்சுத மனுபபுத்திரன்; இவன் குருகுலவாசியாகச் சென்று, மீண்டு, தன் முன்னவரை யெனக்கு என்ன வைத்தீரென்றுகேட்க அவர்கள் உன் தந்தையை வைத்தோமென, இவன், தந்தையைச் சென்று வினவினன். தந்தை உன்னை அவர்கள் வஞ்சிக்கும்வகை அவ்வகைகூறினர். ஆயினும் உனக்கு உதவிபுரிகின்றேன் அவ்வகை செய்க. அதாவது, அங்கிரசுக்கள் யஞ்ஞம் செய்கிறார்கள் அதில் ஆறும் நாள் கர்மத்தில் செய்யவேண்டிய வைவச்சுவசூக்தங்களை அவர்கள் மறந்துவிடுவர். அதை அவர்க்கு அச்சமயத்தில் கற்பிப்பையேல் அந்த யாகமுடிவி லுனக்கு வேண்டிய தனத்தைக் கொடுப்பர்களென்று ஏவினன். இவன் அவ்வகை புரிந்து முடிவில் தனத்தைப்பெறுகையில் யஞ்ஞத்தினின்று ஒரு மகாபுருஷன் தோன்றி யஞ்ஞசேஷம் எனதெனத் தடுக்கத் தந்தையின் அநுமதி பெற்ற குமரன், மீண்டும் தந்தையை அடைந்து யஞ்ஞமூர்த்தியாய்த் தோன்றியவர் உருத்திரமூர்த்தி யெனவுணர்ந்து அவரைவேண்டி அந்தமூர்த்தியால் அநுக்கிரகிக்கப்பெற்றவன். (பாகவதம்.)

**நாப்பிரசாபதி** — ஒரு பிரசாபதி; இவர் தேவி மேரு. உருக்கிரயனென்னும் விஷ்ணுவைப் பெற்றவர்.

**நாமேதம்** — 1 ஒருமலை; இமயத்திற்கருகிலுள்ளது. இதில் ஒருகால் கருடன் வாலகில்லியரிருந்த ஆலின்கிளையை எறிந்தான். இது நூறுயோசனை விஸ்தாரமுள்ளது.

2. இது புருஷப்பசுவை வைத்துயாகஞ் செய்யும் யாகம்.

**நாவர்மணன்** — இவன ஒரு அரசன, இவன நல்லோரை அடைந்து சிவமகாத்மியம், சிவபூஜாவிசேஷம் முதலிய கேட்டறிந்து அவ்வழி ஒழுகி நலம் பெற்றவன். (சௌர புராணம்).

**நரவாணதத்தன்**—உதயணனுக்கு வாசவதத்தையினிடம் பிறந்த புத்திரன். இவன் குபேரனது அருளினாலுதித்தவனாதலின் இப் பெயர் பெற்றனன். (நரவாகனன் - குபேரன்.) இவன் வித்தியாதர சக்கரவர்த்தியாகப் பின்பு ஆயினன். (பெ. கதை.)

**நாவாமன்** — சூர்யவம்சத்தரசன்; இவனுக்கு (௧0,000) தேவிமார். இவன் பாஞ்சாலதேசமாண்டவன். இவன் தேவியரில் முதல்வி சுதேவி.

**நான்** — 1. தாபசன் என்னும்மநுப்புத்திரன்.

2. (சூ.) சுந்திரிதி குமரன்.

3. ஒரு தேவருஷி.

4. கயன் குமரன்.

5. சங்கிருதி தந்தை. (சந்.) மன்யு குமரன். இவன் குமரன் சங்கிருதி.

**நாாந்தகன்** — 1. இராவணன் குமரன்; அங்கதனால் கொல்லப்பட்டவன்.

2. தேவாந்தக னிறந்ததைக் கேட்டு மகோற்கடர்மீது யுத்தத்திற்கு வந்து பூமிதேவி யெடுத்து விழுங்கச் சுக்குமவுருக்

கொண்டு வேள்வி நடத்திக் குதிரையொன்றுபெற்று அதில் ஏறித் தானே மகோற்கடருடன் யுத்தஞ்செய்து விநாயகமூர்த்தியின் கொம்பினு லிறந்தவன்.

**நரி** — இது நாயினத்தைச் சேர்ந்த பிராணி. இது நாயைப் போலவே உருவுள்ளது ஆயினும் முகமும் காதும் நீண்டு வால் மயிரடர்ந்திருக்கும். பற்களும் கால் நகங்களும் உறுதியுள்ளவை. இது மோப்பம் பிடிக்குஞ் சக்தியுள்ளது. இது இரவில் இரை தேடுவது வழக்கம். நடு இரவில் கண் தெரியாது. அந்தக் காலத்தில் இடுக்குகளில் நுழைய மீசை மயிரை உபயோகிக்கிறது. நரியின் காது ஓசைவரும் பக்கம் திரும்புஞ் சக்தியுள்ளது. நரி மாம்ஸ முதலியவற்றைக் கடித்துத் தின்னுமல் விழுங்கும். கோழிகளைத் திருடுகையில் காலினல் கூண்டைத் தோண்டி உள்நுழைந்து திருடும். ஆண் நரிகளில் சிலவற்றிற்குக் கொம்பு முளைப்பதுண்டு. இதற்கு பீஜத்தருகில் ஒருவித தைலம் உண்டு. வேட்டை நாய் முதலிய தன்னைத் துரத்துகையில் அது தன்னை நெருங்குவ தறிந்து தைலத்தை விடும். அந்தத் துர்நாற்றத்தால் துரத்திய நாய் பின்னிடைய நரி ஓடி மறையும்.

**நரி கழுது சம்வாதம்** — ஒரு பராமணனுக்கு ஒரே பிள்ளை. அது இறக்க அதனை மயானத்திலிட எடுத்துச் சென்று துக்கப்படுகையில் கழுகு, இறந்த பிள்ளைக்குத் துக்கப்படுவதால் பயனில்லை யென்று கூறி அவர்களை வீட்டிற் கனுப்புகையில், நரி மறுத்து அப் பிள்ளை பிழைக்கும், கழுகின் சொற்களைக் கேளாதீரென்று தடுத்தது. இவ்வாறு இரண்டும் பலமுறை தடுக்கும் செய்கை கண்ட சிவமூர்த்தி பிள்ளைக்கு உயிர் தந்து தாய் தந்தையரைக் களிப்பித்தனர். (பார. - சாந்தி.)

**நரிக்குடி** — இது ஆளுடைநாயகர் நரிகளைக் குதிரைகளாக்கிய இடம்; புதுக்கோட்டையைச் சார்ந்த மிழலை நாட்டில் உள்ளது. (திருவிளையாடல்).

**நரிவெருஉத்தலையார்** — கடைச்சங்கத்துத் தமிழ்ப் புலவருள் ஒருவர்; இவர் யாது காரணத்தாலோ தம்முடம்பு வேறுபட்டிருந்து சேரமான் கருவூரேறிய வொள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறையைக்கண்ட நாளில் அவ் வேறுபாடு நீங்கித் தம்முடம்பு பெற்றனர். இதனைப் புறநானூறு (இ-ம்) செய்யுளாலும், தொல்காப்பிய நச்சினர்க்கினியம் மெய்ப்பாட்டியல் "புதுமை பெருமை" எனும் சூத்திரத்திற்கு அவர் எழுதிய உரையாலும் அறிக. இவராற் பாடப்பட்டோன் ஷை சோமான். (திருவள்ளுவமாலை.)

**நரிஷ்யந்தன்** — 1. வைவச்சுதமனுவின் குமரன்; இவன் குமரன் சித்ரசேநன்.

2. மருத்சக்ரவர்த்தியின் குமரன்.

3. இந்திரசேனை என்பவளை மணந்தவன். இந்த இந்திரசேனை (கூ) வருடம் கருத்தாங்கித் தமனைப் பெற்றாள்.

**நருமதை** — 1. நாகராசன் தங்கை; புருகுச்சன் பாரி.

2. ஒரு காந்தருவப்பெண்; சுந்தரி, கேதுமதி, சுவதை இப் பெண்களைப் பெற்று மாலியவான், மாலி, சுமாலி இவர்களுக்கு அளித்தவள்.

3. ஒரு நதி; இவள் பெண்ணுருக்கொண்டு சுயோதனனை மணந்து சுதர்சனையைப் பெற்றவள்.

4. பித்ருக்களைக் காண்க. இப் பெயர் கொண்ட நதி விந்தமலைக்கருகில் அமரகண்டகியில் உற்பத்தியாய் மேற்கே செல்லுகிறது; இது மேற்கடலில் விழுவதால் நதமெனப்படும்.

5. உஞ்சை நகரில் உள்ள ஐம்பதினயிரம் நாடகக் கணிகையருள் தலைக்கோற் பட்டம் பெற்றவளும், சாமரை யிரட்டையுந் தமனியக்குடையு மாமணியடைப்பையுமருப்பிய லூர்தியும் பைந்தொடி யாயமும் பட்டமு முடையோளும் ஆகிய ஒருத்தியின் மகள். பிரச்சோதனனால் நன்கு மதிக்கப் பெற்றவள். வாசவதத்தைபாலுள்ள அன்பின் மிகுதியால் தனக் குண்டான வேறுபாடு இவளாலுண்டாயிற்று என்று பிறரறிந்து கொள்ளும்படி வயந்தகனைக் கொண்டு உதயணனல் வருவித்துக்கொள்ளப்பட்டவள். (பெ. கதை).

**நருமதையாறு** — விந்தமலையி லுண்டாவது. பத்திரை யென்னும் தெய்வ மகளொருத்தி பெண் யானையாகும்படி குபேரனற் சாபம் பெற்றது, இதன் கரையிலே தான். (பெ. கதை). The river Narbada rises in the Amarakantaka Mountain. (நர்மதைக் காண்க).

**நரைமுடிநெட்டையார்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் உருவத்தைநோக்கிய பெயர்போலும். அக. ங்கூ.

**நலன்.** — சூர்யகுலத்தரசனாகிய பரிச்சித்திற்குச் சோபனையிடம் உதித்தவன். ஒருமுறை இவனிடம் இவனது தமயனைக் கொன்ற வாமதேவமுனிவர் வந்தனர். அரசன் கோபித்து என் தமையனைக் கொன்ற உன்னைக் கொல்வேன் என்று அம்பினை யேவினன். முனிவர் அதனை அரசன் குமரன் மீது ஏவி, அரசன் கையினைத் தம்பிக்கச் செய்தனர்.

**நல்கூர் வேள்வியார்** — கடைச்சங்கத்துப் புலவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை.)

**நல்லச்சுதனார்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் பெயர் அச்சுதரா யிருக்கலாம். நல்லழிசி, நல்லெழுனி என்பனபோல் நல் என்பது அடைமொழி. இவர் பரிபாடலில் கந்தமூர்த்தியின் படைவீடுகளில் ஒன்றாகிய திருப்பரங்குன்றத்தைப் புகழ்ந்திருக்கின்றனர். (பரிபாடல்).

**நல்லதங்காள்** — மதுரைநகரத்தில் இராமலிங்கமகாராசன் இந்திராணி யென்பாளை மணந்து அரசாண்டு வருகையில் புத்திரப்பேறிலாது சிவபெருமானை யெண்ணித் தவம்புரிந்து அவரநுக்ரகத்தால் ஒரு குமரனையுங் குமரியையும் பெற்றனர். இவர்க்கு நல்லதம்பி நல்லதங்கையெனப் பெயரிட்டு வளர்த்தனர். இராமலிங்கப் புரவலர் நல்லதம்பிக்கும் மூளி அலங்காரிக்கும் விவாகம் நடத்தித் தாம் தேகவியோகமாயினர். நல்லதம்பி தங்கையாகிய நல்லதங்கையைக் காசிராஜனுக்கு வதுவை புரிவித்துச் சகல ஸ்ரீதனங்களும் தந்து தம்பதிகள் இருவர்களையும் காசி நகர்க்கனுப்ப அங்கு ஈச்வர கிருபையால் மக்களெழுவரை ஈன்று சுகமாக (40) ஆண்டு வாழ்ந்துவரும் நாளில் 12 வருடம் மழையில்லாது பஞ்சம் உண்டாக அப்பொழுது காசிராஜன் தனக்குண்டான செல்வமனைத்தையும் குடிகளுக்கு உதவி புரிந்து ஏழையாகிய காசி மன்னன், மனைவி புதல்வரோடு ஈனஸ்திதியை நினைத்து வருந்துவதைக் கண்ட நல்லதங்கை, தன் அண்ணன் ராச்சிய மடைதலே தகுதியெனக் கூறினதை மறுத்த மன்னனுக்குச் சமாதானங்கூறி அரசனை விடுத்துக் காட்டில் கிடைக்கும் கிழங்கு முதலியவற்றைப் பறித்து மக்களுக்குக் கொடுத்துப் பசி தீர்ந்து தன் அண்ணன் இராஜ்யமடைய மூளி யலங்காரி நாத்தி வருகையை அறிந்து தாளிட்டுக் கதவை அடைக்க நல்லதங்கை பலமுறை கெஞ்சியும் கதவைத் திறவாமல் இருக்கவே தன் பதிவிரதா தர்மத்தால் கதவு திறக்கச்செய்து உள்நுழைந்து அண்ணியுடன் வார்த்தை யாடிக்கொண் டிருக்கச் சுற்றிலுமுள்ள தின் பண்டங்களைக் கண்ட குழந்தைக்ள் அவாவினால் எடுப்பதை மூளி கண்டு பிடுங்கி யெறிந்து விரட்டப் பசி மேலிட்டதால் வருந்தும் குழந்தைகளுக்கு உணவு வேண்டுமென, வேண்டியபடி, மூளி 12 வருடஞ்சென்ற பழைய கேழ்வரகையும் சில்லித் தோண்டியையுங் கொடுத்தும், கல் மனதுடைய கபடியாம் மூளி அலங்கார்ரி அடுப்பெரிப்பதற்குப் பச்சைவாழை மரத்தையுங் கொடுக்கத் தன் பதிவிரதா மகிமையால் கொழுந்தோங்கி எரியச் செய்து கூழாக்கினும் மூளி பசி தணியாதபடி அதைக் கரைத்துக் குழந்தைகளுக்கும் நாத்திக்கும் வார்த்து வெளிப்படுத்தி மறுபடியும் கதவை யடைக்கத் துக்க சாகரத்தில் மூழ்கின நல்லதங்கை, மனதுபொறாது அண்டை யயலாருக்குத் தன்னிலை தெரிவித்து வெளி சென்றிருக்கும் அண்ணனுக்கு அறிவிக்கச் செய்து எங்கேனும் பாழ்ங் கிணற்றிலாவது வீழ்ந்து உயிர் துறப்பது நலமெனத் தேடி வருகையில் இடைப்பிள்ளைகளால் பாழுங் கிணறொன்று கண்டு அதன் கரையில் தமையன் கலியாணத்துத் தனக்குக் கொடுத்த புடவையின்மீது அழுகல் தேங்காயை வைத்துத் தன் மங்கலநாணைத் தாமரை யிலைமேல் கழற்றி வைத்துவிட்டுக் குழந்தைகளின் நிலை கண்டு அழுது தன் ஏழு பிள்ளைகளையுந் தள்ளித் தானும் விழுந்தனள். இங்கிப்படியிருக்க வேட்டைக்குச் சென்ற நல்லண்ணன் அரண்மனைக்குத் திரும்பித் தங்கையுங் குழந்தைகளையும் எங்கெனத் தன் தங்கையும் மக்களும் எவ்வளவு கூறியும் நில்லாமல் தம் ஊருக்குத் திரும்பிச் சென்றனர் என்று மனைவியாம் மூளி கூறினதை நம்பாது, தன் தங்கையைத் தேடி வரும் வழியில் இடைப்பிள்ளைகளால் உண்மை தெரிந்து கிணற்றிடை வந்து கரைக்கண் இருந்த அடையாளங்களைக் கண்டு மக்களெழுவரையும் தங்கையையும் எடுத்து ஈமக்கடன் முடித்து அரண்மனை வந்து கபடமாய் மூளியின் பந்துக்களைக் கல்மனைடபஞ் சேர்த்து மண்டபம் இடிந்து யாவரும் மாளச்செய்து மூளியைச் சுண்ணாம்புக் காளவாயில் எரித்தனன். மழை பெய்ப

நகர் க்ஷேமப்படவும் தன் மனைவி நல்லதங்கையைப் புத்திருடன் அழைத்துக் கொண்டுபோக வந்த காசிராஜன் மைத்துனனால் அவர்களுக்கு நேர்ந்த மரணத்தைக் கேட்டு இனி இருப்பதில்லையெனத் தானும் தன் உயிர்விடப்போகுஞ் சமயத்தில் பரமாத்மா தரிசனந்தந்து யாவரையுமெழுப்பி நல்வரமீந்து ஆசிகூறி மறைந்தனர். இது கற்பனை கதை.

**நல்லந்துவனார்** — 1. கடைசங்கப் புலவருள் ஒருவர்; கலித்தொகையில் நெய்தற்கலியும் பரிபாடலில் நான்கும் பாடியவர். (கலித்தொகை).

2. இவர் அந்துவனாரெனவும் ஆசிரியர் நல்லந்துவனாரெனவுங் கூறப்படுவர். இவர் இயற்பெயர் அந்துவன் "அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை" (அகம் ௫௯) என மதுரை மருதனிளநாகனார் கூறுமாற்றானுமறிக. அந்துவனெனப் பிறருமுளராகலின் இவர் நல்லந்துவனாரெனவும், அந்தணராதலின் ஆசிரியர் நல்லந்துவனாரெனவுங் கூறப்பட்டார். ஆசிரியர் என அடைமொழி கொடுத்துக் கூறுவது அந்தணர்க்கே யன்றிப் பிறர்க்குக்கூறும் வழக்குப் பண்டில்லை. கலித்தொகை இவர் செய்ததாக அதன் பதிப்பாசிரியர் கூறுநிற்பர். இவர் அகப்பொருட்சுவையைக் கலிப்பாக்களாற் பலப்படப் புனைந்து யாவரும் வியக்கப் பாடும் ஆற்றலுடையவர் பரிபாடலில் நீர்விளையாட்டணி இவர் பாடியவை பயிலுந்தோறும்அளவிலா மகிழ்ச்சியெய்துவிக்குந் தன்மையன அன்றிப் பிரிந்த தலைவி கையறவு கொண்டு புலம்பும் பாடல்கள் கருதழிக் கன்மனத்தையும் உருகச் செய்யும் (கலித்தொகை) இவர் எல்லா திணையையும் விரித்துப் பாடுந் திறமுடையவர். நம்மை நினைந்து குன்றமும் அழாநிற்குமென்று கேட்போரிரங்குமாறு கூறியுள்ளார். (நற். ௮௮) நாழிகை வட்டிலாற் பொழுதறிவதல்லது ஞாயிற்றை அறியப்படாத மழைக் காலமெனக் கார்காலத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். (அகம் ௭௩). இதனைக் "காலமறிவுற் றுணர்தல் கன்னலள வல்லால் மாலைபகலுற்ற தெனவோர் வரிது மாதோ" என்றார் கம்பரும். கார்காலப் படலம் செய்யுள் (௭௩) கலித்தொகையை நீக்கி இவர் பாடியனவாக நற்றிணையில் (௮௮)-ம் பாடலொன்றும், அகத்திலொன்றும், பரிபாடலில் நாலும், திருவள்ளுவமாலையில் ஒன்றுமாக எழு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**நல்லவை** — இருவர் மாறுகொண்ட காலத்து அவரது இயல்புணர வல்லோர், தருமநெறி நின்றோர், மெய்ப்பொருளைக் கண்டோர், பொறுமையுடையோர், கற்றவர், கல்விக்கடாவிடை யறிந்தோர், கோபமில்லார், மூர்க்கமிலார், இனிய முகத்தோர், இருந்துரை கேட்போர், வேந்தனொரு சார்பானுயினும் தாம் நடுநிலை பிறழாதோர், கூடியது நல்லவையாம். இதில் தோல்வியுறினும் தோல்வியல்ல, வெற்றிபெறின் சிறப்பாம். (யாப்பு - வி.)

**நல்லழசியார்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் பெயர் அழுசியாக இருக்கலாம். நல் என்பது அடைமொழி. இவர் பரிபாடலில் வையையைச் சிறப்பித்துப் பாடியவர். (பரிபாடல்).

**நல்லாசிரியர்** — யாப்பருங் கலக்காரிகையுரையிற் கூறப்பட்ட தொல்லாசிரியரில் ஒருவர்.

**நல்லாதனார்** — கடைச்சங்கததவா காலத்து இருந்த புலவருள் ஒருவர். இவர் திரிகடுகமென ஒரு நீதி நூல் செய்திருக்கின்றனர். இவர் தாம் செய்த நூலுக்கு முதலில் திருமாலைக் "கணணகன்ஞாலமளந்தது" எனத் துதித்திருத்தலால் இவரைத் துணிந்து வைணவர் என எண்ணலாகாது. திருமால் காத்தற் கடவுளாதலின் அந்நூல் இடையூறின்றி நின்று நிலவுதல் வேண்டிக் காப்புக் கூறினர் என்பர்.

**நல்லாப்பிள்ளை** — இவர் சோழமண்டலத்தில் மதலம்பேட்டில் கணக்கர் குலத்தில் சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்கு முன் பிறந்தவர். இவர் வில்லிபுத்தூரார் செய்த பாரதத்தை விரித்துத் தம் பெயராற் செய்தவர்.

**நல்லார்பூரன்கிழான** — கடைசசஙகமருவிய புலவன். (அகநானூறு).

**நல்லாவூர்கிழார்** — இஃது ஊரபற்றி வந்த பெயர். இவர் வேளாளர், இயற்பெயர் எழுதப்படவில்லை. இவர் தாம் பாடிய 'உழுந்துதலைப்பெய்த" என்னும் (அகம் ௮௬)-ம் பாட்டில் முன்காலத்து நிகழ்த்தும் வதுவைச் சடங்கை விரித்துக் கூறியுள்ளார். குறிஞ்சித் திணையைப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையிலொன்றும், அகத்திலொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**நல்லாறனார்** — யாப்பருங் கலக்காரிகை யுரையிற் கூறப்பட்ட தொல்லாசிரியரில் ஒருவர்.

**நல்லான்சக்கரவர்த்தி** — திருமலை நல்லானுக்கு ஒரு பெயர்.

**நல்லிசைவஞ்சி** — 1. சததுருக்கள் வேற்றுப்புலம் அழியவிட்ட வென்றி வேலனையுடையவன் வெற்றியைச் சொல்லியது. (பு. வெ.)

2. எடுத்து விட்ட பின்பு பகைவர் தேசத்துக் கோட்டை இரங்கலை அழித்துச் சொல்லினும் முன்பு சொன்ன துறையேயாம். (பு. வெ.)

**நல்லியக்கோடன்** — ஒரு சிற்றரசனாக இருக்கலாம். இவன் எறுமாநாட்டை ஆண்டவன். இவன்மீது நல்லூர் நத்தத்தனார் சிறுபாணாற்றுப்படை இயற்றிப் பரிசு பெற்றனர்.

**நல்லிறையனார்** — இவர் வறுமையால் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பொருள்தரப் பாடியவர். (௫௯௫) (புற - ௪௦௦.)

**நவதானியம்** — அரிசி, கோதுமை, துவரை, பயறு, கொள், உளுந்து, எள், காராமணி, கடலை.

**நவநதி** — கங்கை, யமுனை, நர்மதை, சரஸ்வதி, கோதாவிரி, காவிரி, சரயு, குமாரி, பயோஷ்ணி.

**நவநந்தனர்** — ஒன்பது இடையர்கள், கோபிகைகளைக் காண்க.

**நவநாதசித்தர்** — சத்துவநாதர், சாலோகநாதர், ஆதிநாதர், அருளிதநாதர், மதங்கநாதர், மச்சேந்திரநாதர், கடயந்திரநாதர், கோரக்கநாதர், குக்குடநாதர் முதலியோர்; இவர்கள் உச்சாடனம், மோகனம், ஸ்தம்பனம், மாரணம்,ஆக்ருஷ்ணம், வித்துவேஷணமாகிய ஆறுக்கும் நூல் செய்தவர்கள், கந்தளேந்திரர், கோரக்கர், கொங்கணர், நாகார்ச்சுநர், மச்சேந்திரர், பீமநாதர், அருணகிரிநாதர், புஜங்ககுருநாதர், ஆதிநாதர் எனவுங் கூறுவர்.

**நவநிதி** — கச்சபநிதி, கற்பநிதி, சங்கநிதி, பதுமநிதி, நந்தநிதி, நீலநிதி, மகாநிதி, மகாபதுமநிதி, முகுந்தநிதி யென்பர். மற்றொருவிதம் வண்டோகை, மனோகை, பிங்கலிகை, பதுமை, சங்கை, வேசங்கை, காளை, மகாகாளை, சர்வதம் எனவுங்கூறுவர்.

**நல்லூர்ச்சிறுமேதாவியார்** — இவர் நன்பலூர்ச்சிறுமேதாவியா ரெனவுங் கூறப்படுவர். அந்தணரென்று ஊகிக்கப்படுகிறார்; முல்லைத் திணையில் நரி ஊளையிடுகின்ற பேரொலி முதைப்புனங்காவலர் ஊதுங் கொம்பினொலியோடு ஒருங்கிசைக்குமென்று வியப்புறக் கூறியுள்ளார். (அகம் ௧௪) இவர் முல்லையையும், குறிஞ்சியையும் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், அகத்திலொன்றும், திருவள்ளுவமாலையி லொன்றுமாக மூன்று பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**நல்லூர்நத்தத்தனார்** — நல்லியக் கோடன் மேற் சிறுபாணாறு பாடிய புலவர்.

**நல்லெழுனியார்** — இவர் கடைச்சங்க காலத்துப் புலவரோ அக்காலத்திருந்த அரசர் பரம்பரையினரோ தெரியவில்லை. இப்பெயர் கொண்ட் அரசர் ஒருவர் மத்தியுடன் போரிட்டனர். இவர் பரிபாடலில் திருமாலைப் புகழ்ந்து பாடியுள்ளார். (பரிபாடல்).

**நல்வழுதியார்** — இவர் கடைச்சங்கத்தவர் காலத்திருந்த புலவர். இவர் பெயரை நோக்குமிடத்து இவர் பாண்டியர் வம்சத்தவர்போல் காணப்படுகிறது. இவர் கல்வி வல்லவர். இவர் செய்யுள் பரிபாடலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இவர் தம் நாட்டின் வையையைப் புகழ்ந்திருக்கிறார். (பரிபாடல்).

**நல்விளக்கனார்** — இவர் நல்விளக்கு என்னுமூரினர். இஃது ஊர்பற்றி வந்த பெயர். இவர் குறிஞ்சியைச் சிறப்பித்துப்பாடினர். இவரது பாடலிற் கூறிய உள்ளுரையும், இறைச்சியும், இனிமைதரா நிற்கும். இவர் பாடியது (நற். ௮௬)-ம் பாட்டு.

**நல்வெள்ளியார்** — இவர் மதுரை நல்வெள்ளியா ரெனவும், நல்லொளியா ரெனவுங் கூறப்படுவர்.இஃதவரெழுதவோர்மிகை. இவர் பெயரானே பெண்பாலரென்று தெரிகிறது. இவர் பாடியவற்றில் குறை நேர்ந்த தோழி குறைநயப்பக் கூறியது. நுண்ணுணர்வினோரை மகிழச் செய்யும் (அகம் ௫௨) இவர் குறிஞ்சியையும், பாலையையும் புனைந்து பெருஞ்சுவை பயப்பப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும், குறுந்தொகையிலொன்றும், அகத்தில் ஒன்றுமாக நான்கு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**நல்வேட்டனார்** — இவர் மிளைகிழான் நல்வேட்டனாரெனவுங்கூறப்படுவர். வேளாண் மரபினர். மிளை - ஒரூர். இவர் பேய்க்காஞ்சியைத் தலைமகன் தனக்கு உவமை கூறியதாகப் பாடியுள்ளார். அடைந்தார்க்கு வருந் துன்பத்தைப் போக்குவதே செல்வமெனப்படும். ஏனைச்செல்வம் தவப்பயனா லெய்துவனவா மென்கிறார். (நற். உ௧0). இரவுவரும் நெறியினேதத்தை விரித்துக் கூறுகிறார். (நற். உ௯உ). இவர் பாடியனவாக நற்றிணையில் நாலு பாடல்களும், குறுந்தொகையி லொன்றுமாக ஐந்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**நல்வேளாளர்** — வேளாளரில் ஒரு வகுப்பார். இவர்கள் கொண்டைகட்டி வகுப்பார்போல் நாங்களும் ஒருவகை யென்பர்.

**நவகண்டங்கள்** — நவவருஷங்கள். கண்டங்கள் காண்க.

**நவகோடிநாராயணசெட்டி** — இவன் வைரவாணிப மகருஷிகோத்ரன். இவன் முதலில் ஒரு மனைவியை மணந்து மீண்டு மற்றொருத்தியை மணந்தனன், இதனால் சுற்றத்தவர் கோபித்தனர். இவன் அந்த இரண்டாவது மனைவியை விட்டுவிட்டுக் கப்பலிற் சென்றனன். இந்த இரண்டாவது மனைவி காளியை வேண்டிக் குறையிரப்பக் காளி புத்திரப்பேறு அருளினள். இவ்வாறு காளியின் வரத்தால் பிறந்த புதல்வன் வளருநாள்களில் ஒரு நாள் இவனுடன் கற்கும் மாணாக்கர்கள் உன் தந்தை, யார் என்றனர். குமரன் தாயிடம் வந்து கேட்டனன். தாய் இப்புத்திரன் தந்தை அயலூருக்குப்போய் வந்திருப்பதறிந்து புத்திரனுக்குத் தந்தையைக் காட்டினள். குமரன் அறிந்து தந்தையிடம் சென்றனன். தந்தை இவனை அறியாதவனாதலால் துரத்தினன். குமரன் பலரறிய இவனைத் தெருவிற்கு இழுத்துக் காளியைக் கொண்டு சாக்ஷி கூறுவித்து நாடு முதலிய பெற்று வயிரவாணிபன் எனப் பெயர் பெற்றனன். இதுவே தமிழ் நூலாகிய வளையாபதி கதை என்பர்.

**நவக்கிரக அம்ஸங்கள்** — நவக்கிரகமென்பது சோதிஷ சாஸ்திரங்களில் பிரதானமாகக் கொண்டுள்ளது எப்படியெனில், சிவபெருமானே சூரியனாகவும், உமையம்மையாரே - சந்திரனாகவும், சுப்பிரமணியரே - அங்காரகனாகவும், திருமாலே புதனாகவும், பிரமாவே - குருவாகவும், இந்திரனே - சுக்கிரனாகவும், யமதருமரே - சனியாகவும், பத்திரகாளியே - இராகுவாகவும், சித்திரகுத்தனே-கேதுவாகம்,இருப்பதாகத் தெரிகிறது. இவையன்றியும் தூமாதி பஞ்சக் கிரகங்களும் சொல்லப்படுகின்றன.

**நவக்கிரகங்கள்** — சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி, ராகு, கேது முதலியவர்.

**நவக்ரகவாதிமதம்** — இது நவக்ரகங்களால சிருட்டி, திதி, சங்காரம் மூன்றும் உண்டாம் என்னும். எவ்வாறெனின், திசாபுத்தி, உச்ச, நீச்சங்கள், நட்பு, ஆட்சி, பகை, கவிப்பு, பார்வை இவற்றால் உண்டாம் சுகாசுகம், ஆயுள், மரணம், இவைகளை யுண்டாக்கி ஆக்கியும், காத்தும், அளித்தும் தங்கள் பதங்களைத் தருதலால் இக்கிரகங்களே தெய்வமென்னும். இதனால் வழக்கத்தில் நான்பிறந்த வேளை என்றும், பிறந்த நக்ஷத்ரபலம். எ - ம., என்கிரகசாரம், எ - ம்., திரிமூர்த்திகளையும் இக்கிரகங்கள் பிடித்தலைக்கும். எ - ம்., இம்மதங்கொண்டாரும் மற்றவரும் கூறுவர். இதில் நவக்ரகம் ச்வரூபநிலை, இக்கிரகங்கள் நக்ஷத்ர ராசி முதலியவற்றுடன் கூடி விரிகிறதே தடத்தம், இவைகளில் கட்டுப்பட்டு ஜநநமரணப்படுவதே பந்தம், இந்தக் கிரகங்களைப் பூசித்து ஓமாதிகளைச்செய்து லயப்படுவதே முத்தி. இவர்களுள் சூர்யவாதி- சூர்யன் உதயத்தில், அயனாய் உலகத்தை யெழுப்பி, மழைபொழிவித்துத் தான்யாதிகளையுண்டாக்கி ரக்ஷித்து விஷ்ணுவாய், பின் அச்சீவராசிகளைச் சங்கரித்தலால் ருத்ரனாய்த் திரிமூர்த்தியாய் விளங்குவன் என்பன். இவனது மந்திரத்தால் இவன் உலகடைதல் முத்தி யென்பன். சந்திரவாதி — சந்திரனது அமுதகலை, நில, நீர், பை, முட்டை மற்றைப் பூதங்கள், இவற்றில் வர்த்திக்கும். சந்திரன் ஸ்திரீபுமான்களுக்குக் காம விகாரத்தை உண்டாக்கிக் கூட்டுவிப்பன் ; அதனால் உலகம் சிருட்டியாம். இவனால் பயிர்கள் விருத்தியாம். அந்தப்பயிரால் உலகம் பிழைக்கும். அதுவே, திதியாம். பின் சந்திரகலை குறையச் சீவராசிகள் கெடும். ஆதலால் அதுவே சங்காரமாம். இவனைப் பூசித்து அவனுலகடைதல் முத்தி. ஏனைய கிரகங்களு மிவ்வாறே. (தத்துவநிஜாநு.)

**நவசக்திகள்**—வாமை, ஜேஷ்டை, ரௌத்ரீ, காளி, கலவிகரணி, பலவிகரணி, பலப்பிரமதனி, சர்வபூததமனி, மனோன்மனி, பின்

னுமவவாறுங கூறுவர். தீப்தை சூக்ஷமை. குஜை, பத்ரை, விபூத்யை, விமலை, அமோகை, வித்யுதை, சர்வதோமுக்யை இவர்கள் - விளக்குகளின் சுவாலைபோல் தீ நிறமுள்ளவர்களாய் ஒருகையிற் பதுமமும், மற்றொருகையிற் சாமரமும் உள்ளவர்களாய்ச் சர்வாபரண பூஷிதர்களாயிருப்பர்.

**நவசாத்திரன்** — வசுதேவருக்குத் தேவகியிடம் உதித்த குமரன்.

**நவபாஷாணம்** — 1. இது இராமர் நவக்ரக பிரதிட்டை செய்த இடம். இராமேச்சுரத்தருகிலுள்ளது.

2. சாதிலிங்கம், மனோசிலை, காந்தம், தாரம், கெந்தி, ரஸகற்பூரம், வெள்ளைப்பாஷாணம், கௌரிபாஷாணம், தொட்டிப்பாஷாணம். பின்னும் இவை முப்பத்திரண்டு வகை யென்ப.

**நவப்பிரம்மாக்கள்** — பிரம தேவருக்குச் சிருட்டிக்குத் துணையாய் அவர்க்குள்ள செல்வம், போகம், ஆயுள், ஆயுதம், உரு முதலிய பெற்றிருப்பர்.

**நவமணிகள்** — கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம்.

**நவாதன்** — பீமரதன் குமரன.

**நவரத்நம்** — விக்ரமார்க்கன் சபையிலிருந்த ஒன்பது புலவர்கள். இவர்கள் தன்வந்தரி, க்ஷணபகர், அமரஸிம்ஹர், சங்கு, வேதாலபட்டர், கடகர்ப்பரர், காளிதாசர், வராகமிஹிரர், வரருசி என்பவர்கள்.

**நவராத்திரிவிரதம்** — 1. ருதுக்களில் வசந்தருது, சாத்ருது என்னும் இரண்டு ருதுக்களும் மனிதருக்கு ரோகத்தை விளைத்து நோய் செய்வதால் யமனுடைய இரண்டு கோரப் பற்களுக்குச் சமானமாகக் கூறப்பட்டிருக்கின்றன. ஆகையால் அவற்றால் உண்டாம் துன்பத்தினின்றும் நீங்க வேண்டிய மனுஷர் இந்த நவராத்திரி விரதத்தைச் செய்தல்வேண்டும். பூஜைக்கு வேண்டியவைகளை அமாவாசை தினத்திலேயே சேகரித்துக் கொண்டு அன்று ஒருவேளை போஜனத்துடன் உபவாசியாய் இருந்து மறுநாள் பிரதமை முதல்பூஜைக்கு ஆரம்பித்தல் வேண்டும். நான்குமுழ நீளமும் ஒருமுழ உயரமுள்ள வேதிகை யமைந்த அலங்கரித்த மண்டபத்தில் ஒரு சிங்காதனம் அமைத்துத் தான் வேதம் உணர்ந்த வேதியர் ஒன்பதின்மர் அல்லது ஐவர், மூவர், ஒருவருடன் மண்டபத்திற் சென்று ஆசனத்தில் சங்கு, சக்ர, கதா பத்மத்துடன் கூடிச் சதுர்ப்புஜத்துடன் ஆயினும், பதினெண்கரத்துடன் கூடியவளாகவே தேவியின் திரு வுருவத்தைத் தாபித்து அலங்கரித்துக் கும்பபூஜையின் நிமித்தம் கலசம்தாபித்து அதில் கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களை நிரப்பி மாவிலை முதலிய ஐந்துவகைத் தளிர்களை மேலே வைத்துப் பூஜித்தல் வேண்டும். பின் சங்கற்பஞ் செய்துகொண்டு வாசனைத் திரவியங்களாலும்; பலவகை மண மலர்களாலும் தேவியைத் தூபதீபங்களால் மந்திரபூர்வமாய் விதிப்படிபூசித்து நவாவரண பூஜையுஞ் செய்து அர்க்கியங் கொடுத்துப் பலவகை நிவேதனங்கள் செய்தல் வேண்டும். பின் ஹோமார்த்தமாய் யோனிகுண்டம் அமைத்துத் தண்டிலம் இட்டு ஓமத்தைப் பூர்த்தி செய்தல்வேண்டும். பூஜிப்போன் சயன சுகாதிகளைவிட்டுத் தரையிற் படுத்து உறங்கவேண்டும். பிரதமையில் அஸ்த நக்ஷத்திரங்கூடில் விசேஷமென்றும், அத்தினத்தில் தேவியைப் பூஜிக்கின் சகலாபீஷ்டங்களையுந் தருவள் எனக் கூறுவர். கும்ப பூசைமுதல் ஓமாந்தம்வரையிற் செய்யத் தகுவனவற்றைச் செய்து பின் கன்னிகைகளைப் பூஜித்தல் வேண்டும். அக்கன்னிகைகள் யாவரெனின் இரண்டு வயதுமுதல் பத்துவயது அளவுள்ளவர்களாம். இக் கன்னியர்களுக்கு முறையே குமாரி, திரிமூர்த்தி, ரோகணி, காளிகா, சண்டிகா, சாம்பரா, துர்க்கா, சுபத்திரா என்று ஒவ்வொருவருக்கும் பெயராகும். இவர்களை வேதமந்திரங்களால் பூஜித்தல் வேண்டும். மேற்சொன்ன கன்னிகையரைத் தினம் ஒவ்வொருவராகவேனும், அல்லது முதனாள் தொடங்கி ஒவ்வொன்று அதிகமாகவேனும், பூஜை நடத்தல் வேண்டும். ஒருவன் நவராத்திரி முழுதும் பூசிக்க அசந்தனுவனேல் அஷ்டமியில் அவசியம் பூஜித்தல் வேண்டும். என்னெனின் பூர்வம் தக்ஷயாகத்தை அழித்த பத்திரகாளி தோன்றிய தினமாலகயால் என்க. அசக்தரானோர் சப்தமி, அஷ்டமி நவமி இம்மூன்று தினத்திலும், பூசிப்பரேல் ஒன்பது தினத்திலும் பூசித்த பலனை அடைவர். இவ் விரதத்தை மேற்கொண்டவரெல்லாச் செல்வங்களையும் அடைந்து உயர்பதம் அடைவர். இதனை அநுட்டித்தோர் சுசீலன் சுகேது முதலியோர்.

2. விரதங்களில் ஒன்று. இது புரட்டாசிமாசம் பூர்வபக்ஷப பிரதமை முதல் திரிதிகை வரையில் உருத்திரியையும், சதுர்த்தி முதல் ஷஷ்டிவரையில் இலக்குமியையும், சப்தமிமுதல் நவமி வரையில் சரஸ்வதியையும், பூசித்துத் தசமியில் முடிப்பது. இதனைச் சுகேது என்னும் அரசன், அரசாட்சி யிழந்து வருந்தியதால் அவன் மனைவியாகிய துவேதியை ஆங்கீரச முனிவர் இவ்விரதம் அநுட்டிக்கக் கற்பித்தனர். அவ்வகை அவள் அநுட்டிக்க அவ்வநுட்டானத்திற்குப் பின் அவள் வயிற்றிற் பிறந்த குமாரனாகிய சூரியப்பிரதாபன் இழந்த நாட்டைப் பகைவரிடமிருந்து மீட்டனன் என்பர்

**நவவருஷம்** — பரதவருஷம், ஏமகூட வருஷம், நிஷதம், இளாவிருதம், நீலம், சிவேதம், குரு, பத்திராச்வம், கேதுமாலம் என்பன.

**நவவிதசம்பந்தம்** — பிதாபுத்ர சம்பந்தம், ரக்ஷயரக்ஷக சம்பந்தம், சேஷசேஷி சம்பந்தம், ஞாத்ருஞேய சம்பந்தம், சரீரசரீரி சம்பந்தம், ஆதார ஆதேய சம்பந்தம், விசேஷண விசேஷிய சம்பந்தம், ஆச்ரியாச்ரியி சம்பந்தம், ரக்ஷ்யரக்ஷகஸம்பந்தம்.

**நவவீரர்** — உமாதேவியாரின் காற்சிலம்பினின்று சிந்தியமணிகளில் பிறந்த பெண்கள் சிவமூர்த்தியை விருப்பால் நோக்கிக் கருப்பெற்று நவவீரர்களைப் பெற்றனர். இவர்கள் குமாரக்கடவுளுக்குத் துணையாயிருப்பவர். இவர்களில் முதல்வர் வீரவாகுதேவர். மற்ற எண்மர் வீரகேசரி, வீரமகேந்திரன், வீரமகேசன் வீரபுரந்தரன், வீரராக்ஷசன், வீரமார்த்தாண்டன், வீரராந்தகன், வீரதீரன் என்பவராம்.

**நவன்** — உசீநரன் குமரன்.

**நளகிரி** — இது பிரச்சோதனது பட்டத்து யானை, மிக்க வீர்யமுடையது. மதவெறிகொண்டு உஞ்சை நகரை அழித்துக் கலக்கிய இதன் கோபத்தை அடக்கி ஊர்ந்தமையாலேதான் உதயணன் சிறைவீடு பெற்றான். (பெ. க.)

**நளகூபரன்** — குபேரன் குமரரில் ஒருவன். இவனும் இவன் தம்பியாகிய மணிக்கிரீவனும் மதுவுண்ட மயக்கத்தால் சலக்கிரீடை செய்து கொண்டிருந்தனர். அப்போது நாரதர் அவ்விடம் வந்தனர். அவரைக் கண்டு இவ்விருவரும் எழுந்திராது வணங்காதிருந்ததால் முனிவர் கோபித்து மரமாகச் சபித்தனர். இவன் தம்பியுடன் நந்தகோபன் வீட்டில் விருக்ஷமாயிருந்து கிருஷ்ணமூர்த்தி ஆய்ச்சி கட்டிய உரலுடன் தவழ்ந்து சென்றதால் சாபநீங்கி நலமடைந்தனன். இவனிடம் ஆசைகொண்டு அரம்பை ஒருமுறை வந்துகொண்டிருக்கையில் இராவணன் கண்டு அவளை வலிதிற் புணர்ந்தனன். அரம்பையா லுணர்ந்த இவன் இராவணனை இனி உடன்படாப் பெண்களைப் புணரின் தலை வெடித்து இறக்கவெனச் சபித்தனன்.

**நளவெண்பா** — இது புலவர் திலகராகிய புகழேந்திப் புலவரால் மூன்று காண்டங்களாக வகுத்துப் பாடப்பட்ட நளன் சரிதை. இதில் ஆங்காங்கு சந்திரன் சுவர்க்கியைப் புகழ்ந்திருக்கிறது.

**நளன்** — 1. நிடதநாட்டில் மாவிந்த நகரத்தையாண்ட வீரசேநன் குமரன்; சந்திர வம்சத்தவன். இவன் ஒருநாள் பூஞ்சோலையில் உலாவுகையில் அவ்விடம் வந்த அன்னப் பறவையைக் கண்டு பிடித்தனன். அது பயந்ததைக் கண்டு மீண்டும் விடுத்தனன். அதனால் அன்னம் செய்ந்நன்றி மறவாது அரசனை நோக்கி நளனுக்கு ஆசை யுண்டாகும்படிக்குக் குண்டினபுரத்தரசன் குமரியாகிய தமயந்தியினது அழகு முதலியவற்றைக் கூறியது. இதைக்கேட்ட அரசன் அவளிடம் ஆசைகொண்டு அன்னத்தைத் தூதாகச்செல்ல வேண்டினன். அதற்கு உடன்பட்ட அன்னம் தமயந்தியிடந் தூதாகச் சென்று நளனது அழகு முதலியவைகளைத் தமயந்திக்குக் கூறியது. இவனது அழகு முதலிய கேட்ட தமயந்தி. இவனிடம் ஆவல்கொண்டு வருந்தினள். இதைத் தோழியாலறிந்த அரசன் சுயம்வரம் நாட்டினன். இதைக்கேட்ட இந்திரன், வாயு, அக்னி, யமன் முதலியவரும் அவளிடம் ஆவல்கொண்டு சுயம்வரத்திற்கு வந்து இவள் நளனிடம் ஆவல் கொண்டிருப்பதறிந்து நளனைத் தூதாக மாயவுருக் கொடுத்து அனுப்பினர். இவன் சென்று தேவரை மணக்க வேண்டியும் தமயந்தி இசையாமையால் திரும்பித் தேவர்க்குக் கூறினன். இதனால் இந்திரன் பல ஆயுதங்களையும் அக்நி, தீயிலாது சமைக்கவும் வாயு அச்வமந்திரத்தையும், யமன் கதாயுதத்தையு நளனுக்குக் கொடுத்தனர். பின் நளன் சுயம்வர மண்டபமடைய இந்நான்கு தேவரும் அவனைப்போ லுருக்

கொண்டு நின்றனர். தமயந்தி தார்வாடல், கண்ணிமைத்தல் முதலியவற்றால் தேவர்களினின்றும் நளனைத் தெய்வச்செயலால் அறிந்து மாலையிட்டனள். தமயந்தியின் சுயம்வரங்கேட்ட கலிபுருஷன் இவளை மணக்கும்படி ஆவல்கொண்டு வருகையில் தமயந்தி நளனை மணந்தனள் எனக் கேட்டுக் கோபித்து அவர்களைச் சுகமநுபவிக்காமற் பிரித்துவிடுகின்றேன் என்று நெடுநாள் காத்திருந்தனன். ஒருநாள் சந்திவந்தனை செய்ய நளன் பாதங்களைச் சுத்தி செய்கையில் அப்பாதத்திற் சிறிது மறுக்கண்டு அது காரணமாக அவனிடம் புகுந்து அவனது நல்லசிந்தையெல்லாந் தன் வசப்படுத்திப் புட்கர ராஜனுடன் கூடி அவனைச் சூதாட எவினன். புட்கரன் கொடிதூக்கி இவன் நாட்டில் வர நளன் இது என்ன கொடி யென்றனன். புட்கரன் இது சூதுவெல்லுங் கொடியென்ன ஆயின் ஆடுவோமென மந்திரிகள் தடுக்கவும் சூதாடி நாடுநகர முதலியவற்றைத் தோற்றுத் தன் மனைவிமக்களுடன் அரண்யஞ் சென்றனன். இவ்வகை சென்ற அரசன், தன் மனைவி தன்னுடன் வருதல் தனக்கு மனம்பொருது அவளது தந்தையின் நாட்டிற்கு ஏகச் சொல்லினன். தமயந்தி நாயகனைப் பிரிய உடன்படாமை கண்டு குமரனாகிய இந்திர சேநனையும், குமரியாகிய இந்திரசேனையையும் வீமன் பட்டணம் அனுப்பினள். தேவியோ அரசனைப் பின்பற்றிச் சென்று காட்டின் வழிச் செல்கையில் ஒரு அன்னத்தைக் கண்டு முன் தனக்குக் கணவனது அழகு முதலியவற்றைக் கூறிய அன்னமென எண்ணி அதைத் தனக்குப் பிடித்துக் கொடுக்க வேண்டினள். அவ்வகை நளன் தான் உடுத்த உத்தரீயத்தை எறிந்து பிடிக்க எண்ணித் தனது உத்தரியத்தை வீசியெறிகையில் அந்த அன்னம் கலியால் ஏவப்பட்டதாதலின் அவனது ஆடையைக் கிரகித்துக் கொண்டு சென்றது. ஆடையின்றி யிருந்த அரசன் தன் மனைவியை விட்டு நீங்குமெண்ண முடையவனாய் மனைவியுடன் மண்டபத்தில் உறங்குகையில் அவளது ஆடையிற் பாதியைக் கருவி கொண்டு துணித்து மனைவியைத் தனித்து விட்டு நீங்கினன். நீங்கிய அரசன் காட்டின்வழிச் செல்லுகையில் கார்க்கோடகன் என்னும் பாம்பு சனியினேவலால் தன்னுருவுடன் தீயிலிருந்து நளனைத் தன்னைக் காக்கும்படி அழைக்க, நளன் இரக்கப்பட்டு அப்பாம்பை வாலைப்பிடித்து இழுத்துத் தீயைவிட்டு வெளியில் விடுகையில் அப்பாம்பு திரும்பிக் கடித்தது. அரசன் இவ்வகை உபகாரத்திற்கு அபகாரஞ் செய்யலாமோவெனக் கார்க்கோடகன் அரசனை நோக்கி அரசனே! நீ உன் உண்மை யுருவுடன் செல்லின் எல்லாரும் அஞ்சுவர் ஆதலின் இவ்வகை செய்தேன் நீ உன் உண்மையுருவேண்டின் என்னை நினைக்கின் உனக்கு இவ்வுரு நீக்கி உன் சொந்த உருவத்தைத் தருவேன் என்று நீங்கியது. பின் அரசன் இருதுபர்ணனிடஞ்சென்று வாகுகன் என்னும் பெயருடனிருந்தனன். இதுநிற்க, அரசனைவிட்டுத் தனித்த தமயந்தி விசனமடைந்து காட்டின்வழி புலம்பிச் செல்லுகையில் பாம்பொன்று இவளைப் பிடித்துக்கவ்வ இவள் புலம்புகையில் வேடன் ஒருவன்வந்து அப்பாம்பைக் கொன்று தமயந்தியிடம் கெட்ட நினைவு கொள்கையில் தமயந்தி அவனை எரித்துப், பொதிமாட்டுக்காரரைப் பின்பற்றிச் சென்று சேதிநகரத்து அரசன் அரண்மனைபோய்ச் சேர்ந்தனள். இவ்வகையிருக்க வீமராசன் தன் மருமகனும் மகளும் நகர்நீங்கின செய்தியறிந்து விசனமடைந்து பல இடங்களுக்குத் தம் தூதவரையனுப்பிப் பார்த்துவரச் செய்கையில் புரோகிதன் ஒருவன் சேதிநகரத்தில் தமயந்தியைக் கண்டு விசனமடைந்து இவளிருக்குஞ் செய்தியை அரசனுக்கு அறிவித்தனன். வீமராசன் சேதிநகரத்திலிருந்து தன்குமரியை வருவித்தனன். பின் வீமன் தன் மருமகன் இருக்கும் இடத்தையறிய விரும்பித் தூதரையனுப்பத் தூதனொருவன் இருதுபர்ணன் சபைசென்று அரசனை நிந்திக்க அங்கிருந்த வாகுகன் பரிந்து பேசியதுணர்ந்து அரசனிடங்கூற அரசன் அதை அறியும்படி தமயந்திக்கு நாளைமறு சுயம்வரமென இருதுபர்ணனுக்கு அறிவித்தனன். இருதுபர்ணன் களிப்புடன் வாகுகன் தேரோட்டுவதில் வல்லவனென அறிந்து தேரோட்டிச் செல்லுகையில் இருதுபர்ணன் மேலாடை வீழ்ந்ததுகண்டு வாகுகனைநோக்கி யெடுக்கச் சொல்லுகையில் வாகுகனாகிய நளன், இருதுபர்ணனை நோக்கி இரதம் இப்போது இருபத்து நான்கு காதம் வந்தது என்றனன். இதைக்

கேட்ட இருதுபர்ணன் ஆச்சரியமடைந்து ஒரு ஆலமரத்தினைநோக்கி அம்பொன்று எய்து அவ்வொரு அம்பு அம்மரத்தின் இலைகளிலெல்லாம் வடுச்செய்தது காட்டி இந்த அஸ்திரமந்திரம் உனக்குத் தருகிறேன் இந்த அஸ்வமந்திரத்தை எனக்குத் தெரிவிக்கவெனக் கேட்க வாகுகன் அவ்வாறுசெய்து திரும்புகையில் கலி அரசனையணைந்து நான்செய்த கொடுமைகளைப் பொறுக்க இனி உன் சரிதம் படித்தவரிடத்தும் அணுகேன் எனக் கூறி வேண்டிய வரம் தந்துபோயினன். வாகுகனாகிய நளன் வீமன் பட்டணமணைந்து அரசனுடன் வீமன்விட்ட விடுதியில் இருந்தனன். இவ்வகை இருக்கத் தமயந்தி அரசனைக் குறிப்பாலுணர்ந்து உரு வேறுபட்டிருத்தலால் சந்தேகித்து அச்சந்தேகம் நீக்கிக் கொள்ளத் தம் மக்களிருவரையும் வாகுகன் தனித்திருக்கையில் அனுப்பினள். வாகுகனாகிய நளன் மக்களைப் பார்த்து, "மக்களை முன்காணு மனநடுங்கா வெய்துயிராப் புக்கெடுத்து வீரப்புயத்தணையா மக்காணீர், என் மக்கள்போல்கின்றீர் யார் மக்களென்றுரைத்தான், வன்மக்களியானைமன்," என்று, மக்காள்நீர் என்மக்களைப் போல்கின்றீர் யார்மக்கள் என விசனமடைந்ததை யறிந்த தமயந்தி தந்தையிட மறிவிக்க வீமன் வாகுகனிடம் வந்து ஒளியாமல் தன் உருவினைக் காட்டவேண்டினன். நளன் கார்க்கோடகன் கொடுத்த துகிலையுடுத்துச் சொந்தவுருவுடன் நின்றனன். இதைக் கண்ட வீமன் களித்து நளனைத் தன்னிடமிருத்தி இருதுபர்ணனைத் தன் பட்டணமனுப்பினன். பின் நளன் தன் பட்டணமணைந்து புட்கரனைவென்று அரசு கொண்டு நெடுநாளாண்டு பின் தன் குமரனுக்கு அரசுதந்து தவமேற்கொண்டனன். நளனைக் கடித்த பாம்பைக் கார்க்கோடகன் எனவும் நகுஷன் எனவுங் கூறுவர்.

2. நளாயினியின் தந்தை. இவனுக்கு நளாயணன் எனவும் பெயர்.

3. (சூ.) நிஷதன் குமரன், இவன் குமரன் நபன்.

4. வாநரத்தச்சன் மயன்குமரன். இரத்தக்கண்ணனைக் கொன்றவன். விச்வகர்மனாற் பிறந்தவன், சேதுகட்டினவன்.

5. முதல்வள்ளல்கள் எழுவரில் ஒருவன்.

6. நிருசஷசுகுமரன். இவன் குமரன் பாரி பிப்பிலவன்.

7. அனுவின் குமரன்.

8. ஆகுகனைக் காண்க.

**நளாயணன்** — இந்திரசேனையின் தந்தை; ஒரு இருடி.

**நளாயினி** — நளன் அல்லது நளாயணன் குமரி. இவளே திரௌபதியாகப் பிறந்தவள். இவளை மௌத்கல்யருஷி மணந்து பலவாறு சோதித்துப் பின்னும் சோதிக்க எண்ணிக் குட்டநோய்கொண்டு தீர்த்த யாத்திரை செய்யவேண்டுமெனத் தேவியிடங் கூறினர். அவ்வகையே இவள் கணவனைக் கூடையிலிட்டுத் தூக்கிக்கொண்டு தீர்த்தங்கள் தோறுஞ்சென்று ஸ்நானஞ் செய்வித்து வந்தனள். இவ்வகை வருகையில் முனிவர் ஒரு தாசியிடம் புணரவேண்டுமெனக் கேட்க இவள் ஒரு தாசிக்கு வேண்டிய பணிசெய்து அவளை இசைவித்து இவரைத் தூக்கிக்கொண்டு இருளில் ஓர் சோலைவழி சென்றனள். அவ்விடம் பூர்வகர்மத்தால் மாண்டவ்யருஷி கழுமரத்தில் தொங்கிக்கொண்டிருந்தனர். இவள் சென்றது இருளிலாதலால் அக். கூடை மாண்டவ்யர் காலிற்பட்டு அவருக்கு வருத்தம் உண்டாக்கியது. மாண்டவ்யர் இவளைப் பெண்ணெனவறிந்து நீ பொழுதுவிடிய மங்கல மிழக்கவெனச் சபித்தனர். இவள் பொழுதுவிடியாதிருக்கச் சபித்தனள். இதனால் தேவர்க்கு நித்திய கருமாதிகள் நடவாதது கண்டு தேவர் மாண்டவ்யரை வேண்ட அவர் இவளிடம் அநுக்கிரகம் புரியப் பொழுது விடியச் செய்த கற்பினி. இவளது கற்பின்நிலை கண்ட மௌத்கல்யமுனிவர் உனக்கு என்ன வேண்டுமென நீரே எனக்கு ஐந்துருவாயிருந்து இம்மை மறுமைகளில் சுகமளிக்கவென அவ்வகையருளிச் சிலநாளிருந்து நன்னெறியடையச் செல்லுகையில் இவள் பின்தொடர்தல் கண்டு நீ மனிதயோனியிற்பட்டு ஐந்துபுருடரை மணக்க எனச் சபித்து நீங்கினர். இவள் அவ்வுடல்விட்டுக் காசிராஜன் புத்திரியாகப் பிறந்து சிவமூர்த்தியை யெண்ணித் தவஞ்செய்து அம்மூர்த்தி தரிசனந்தந்து என்ன வேண்டுமென நாயகன்வேண்டுமென ஐந்துமுறை கேட்டதால் அவ்வகையருளி மறைந்தனர். இவள் பின் துருபதன் யாகத்தில் திரௌபதியாகப் பிறந்து ஐவரை மணந்தனள். இவளது மற்ற சரித்திரங்களைத் திரௌ

பதியைக் காண்க. இவளுக்கு இந்திரசேனை யெனவும் பெயர்.

**நளினி** — 1. அசமீடன் பாரி. இவள் குமரன் நீலன்.

2. கங்கையின் பிரிவு.

**நளினை** — கனகமாலையின் தாய.

**நள்ளி** — கடையெழு வள்ளல்களில் ஒருவன், தோட்டியெனும் மலைநாட்டிற்குத் தலைவன். தன்மனத்து நிகழ்கின்றவற்றை மறையாதுகூறி நட்புச்செய்தவர்க்கு இல்லறத்து வேண்டிய நல்கினவன். கண்டீரக்கோ பெருநள்ளிக்கு ஒருபெயர். இவன் காட்டில் வன்பரணரெனும் புலவர் மிடியைப்பார்த்து அவர்க்குவேண்டிய நல்லுணவுதந்து தான் பூண்டிருந்த ஆரத்தினையுங் கடகத்தினையும் தந்து தன் பெயர் கூறாதுசென்றவன். (புற. நா.)

**நற்குணம்** — (ய) மெய்யுரை, நல்வார்த்தை, இனியவைகூறல், பயனுடைய சொல்லல், இவைவாக்கின் நலம், திருக்கோயில் வலம்வரல், தவம்புரிதல், தானஞ்செயல், இவை காயத்தின் நலம், அருள்நினைவு, அவாவறுத்தல், தவப்பற்று இவை மூன்றும் மனத்தின் நற்குணம்.

**நற்சேந்தனார்** — இவர் கோடி மங்கலத்துவாதுளி நற்சேந்தனாரெனவும் கூறப்படுவர். வாதுளி யென்றதனால் வாதுள கோத்திரத்தினரெனவும் அந்தணர் மரபினரெனவுங் கொள்ளப்படும். பாலைத்திணையையுங், குறிஞ்சித்திணையையும், புனைந்து பாடியுள்ளார். இவர் பாடிய குறைநயப்பு நுண்ணுணர் வினோரை மகிழப் பண்ணுகிற்கும். நற் கஉஅ. இவர் பாடியனவாக நற்றிணையில் மேற்காட்டிய பாடலொன்றும், அகத்திலிரண்டுமாக மூன்று பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**நற்பாக்கிழான் மகருஷிகோத்ரன்** — வணிக வம்சமுதல்வரில் ஒருவன். இந்த வம்சத்தில் திருக்கச்சிநம்பி காஞ்சியில் வரதாஜப் பெருமாளுக்குப் புட்பத் திருவாலவட்டக் கைங்கர்யஞ் செய்துவந்தனர்.

**நற்றங்கொற்றனார்** — இவர் குறிஞ்சியைப் புனைந்து பாடியுள்ளார். தலைவன் பிரிவினாலே தலைவி தன்னுடம் பிளைத்தமை யறிவுறுத்துவாள் யான்கைவளை வேண்டினேனாக எவ்வளவு இளைத்தாலும், கழலாதபடி எந்தை சிறுவளை யணிந்தனென்று கூறியது பெருநயம் பயக்கும் தன்மையதாகும். இவர் பாடியது. நற். கஙசு-ம் பாட்டு.

**நற்றத்தம்** — நற்றத்தர் செய்தநூல்.

**நற்றத்தர்** — அகத்தியர் மாணாக்கர். இவர் யாப்பிலக்கணஞ் செய்தவர். அதற்கு நற்றத்தம் எனப்பெயர்.

**நற்றமனார்** — இவர் குறிஞ்சித் திணையைப் பாடியுள்ளார். பிரிவிடைத் தோழி யாற்றுவிப்பது இரும்பினைப் பழுக்கக் காய்ச்சிய உலையிற் கொல்லன் பனைமட்டற் சின்னீர் தெளித்து நெருப்பைத் தணிப்பதுபோல் ஆகுமென்று கூறியுள்ளார். இவர் பாடியது. நற். (கஙங)-ம் பாட்டு.

**நற்றமிழுணர்ந்த நங்கைமார்கள்** — 1. ஆதிமந்தியார் - இவர் நல்லிசைப்புலமை மெல்லியலார் "மள்ளர்குழீஇய விழவினானும்" எனுங் குறுந்தொகையில் இது காதலற் கெடுத்த ஆதிமந்தியார் பாட்டு என்றமையான், அறியப்படும் இவர், திருமாவளவன் எனச் சிறந்த கரிகால்வளவன் திருமகளார். சேரநாட்டு ஓர் மன்னனாகிய ஆட்டனத்தியை மணந்தவர். இவர் தங்காதலனுடன், கரிகாற்சோழனாற் கழாஅர் எனும் ஊரிற்காவிரி முன்றுறையிற் சிறப்பித்துக் கொண்டாடப்பட்ட புதுப்புனல் விழவிற்குச் சென்றாராக ஆண்டு வனப்பினும், ஆடுதற்றொழிலினும், கண்டார் எல்லாரும் விரும்பத்தக்க தம்முயிர்க் காதலனாகிய ஆட்டனத்தியை நீர்விளை யாடுகையில் காவிரிவெள்ளம், அவனை யாண்டுந்தேடிக் காணப்பெறாது புனல்கொண் டொளித்ததோ கடல்கொண்டு புக்கதோ என்று கலுழ்ந்த கண்ணராய் மருண்ட சிந்தையராய் அலமந்து அக்காவிரிசெல்லுந் திசையெல்லாஞ் சென்று கடல்வாய்புக்கு, அவனைக்கூவி யாற்றினார்க்கு அக்கடலே அவ்வாட்டனத்தியைக் கொணர்ந்து வந்து முன்னிறுத்திக் காட்டியவளவில் ஆங்கவனைத் தழுவிக்கொண்டு பொற்கொடி போலப்போந்தார் என்ப. இக்கதை நெடுந்தொகையினும் சிலப்பதிகாரத்தும் கண்டது. இவர் பெயரும் இவரது கணவர் பெயரும் சிறுபான்மை முதற்சொல்லொழித்து மந்தி எனவும், அத்தி எனவும் வழங்கப்படும். இவ்வாதி மந்தியார் வெள்ளிவீதியார் எனும்புலமை மெல்லியலார்க்கு முற்பட்டவர்.

2. வெள்ளிவீதியார் - இவரும் பெண்கவி, இவர் சரிதையை இவர்பெயர் கூறும் வழிக் காண்க.

 நற்றமிழுணர்ந்த நங்கைமார்கள்

3. உப்பை - உறுவை.

4. ஒக்கூர் மாசாத்தியார் - இவர் பாண்டிநாட்டு ஒக்கூர் எனும் ஊரினராக இருக்கலாம். இவ்ர் புறத்திணையில் ஒருத்தி தன்மகனைப் போருக்கனுப்புதல் பற்றிப் பாடினர். குறுந்தொகை, அகநானூறு, முதலிய வற்றில் சில பாடல் பாடினவராகத் தெரிகிறது.

5. ஔவையார்-ஔவையாரைக்காண்க.

6. காவற்பெண்டு - இவர், புறப்பாட்டில் "சிற்றிநற்றூண்" எனும் பாட்டைப் பாடியவர். இச் செய்யுளை நோக்கின் ஒரு மறமகள் என்பதூஉம், புலியொத்தபோர் வீரனொருவனை மகனாகவுடையார். எ-ம், அத்தகைய வீரகுமாரனைப் போர்க்களத்துப் போக்கியபின் அவனைப் பெற்ற தம் வயிற்றினைப் புலிகிடந்துபோன முழையாகக் கருதினவர், எ-ம், அறியக் கிடந்தன. இவர் அரசாது மெய்க்காவல், மனைக்காவல், ஊர்க்காவல், பாடிகாவல், இவற்றிலொன்றற்குரிய காவற்குடிக்கண் பிறந்தவர்.

7. காக்கைபாடினியார் நச்செள்ளையார்-நச்செள்ளையாரைக் காண்க.

8 காரைக்காற் பேயம்மையார்.

9. காமக்கணிப்பசலையார் - நற்றிணை (உசங).

10. கிழார் கீரனெயிற்றியார் - குறுந்தொகையில் நடு, உகூக, பாடல்களும், நற்றிணையில், உஅக, ஆம் பாட்டும், அகநானூற்றில் ககூங, உகஎ, உநடு, உகச, பாடல்களும் இவர் பாடியவை. இவரது நற்றிணைப் பாட்டில் சோழர்கழாரூரும், அதன் கட்புலாற் சோற்றூற் பலியீதலும் கூறப்பட்டுள்ளன.

11. குறமகள் இளவெயினி இவர் குன்றுடை வாழ்க்கைக் குறவர் குடியினர். குறமகள் குறியெயினி யென்பாரொருவர் உளராதல் பற்றி இவர் இளவெயினி யெனப் பட்டனர். இவர் தமது எயினர் குடித் தலைவனாகிய ஏறையென்பானை "தமர்தற்றப்பின்" எனும் புறப்பாட்டாற் புகழ்ந்து பாடினர். இதனால் ஏறைக்கோன் தன்னிற் சிறந்தோர் தவறிழைப்பிற் பொறுமையும், பிறர்வறுமைக்கண் நாணுடையனாதலும், பிறராற் பழிக்கப்படாத வலியுடையனாதலும், காந்தண்மாலையுடையானென்பதும், மலை நாடுடையன் என்பதும் அறியக் கிடந்தன. இவன் சேரன் படைத்தலைவன் என்ப. இவனது நாடு பெருங்குன்ற நாடாகும்.

12. குறமகள் குறி எயினி - இவர் குறவர் குடியினர். இவர் குறிசொல்லும் வழக்குடையராதலால் இவர்க்கு இப்பெயர் வந்தது. இவர் நற்றிணையுள் "நின்குறிப்பெவனோ தோழி யென்குறி........சாரனாடனோடாடியநாளே" எனும் (நஎகு) வது பாடல் பாடினர்.

13. குன்றியாள் - இவரும் பெண்கவி இவர் குறுந்தொகையுள் (கூO) பாட்டுப் பாடியவர்.

14. குமிழிநாழல் நப்பசலையார் - அகப்பாட்டு (ககூO.)

15. தமிழறியும் பெருமாள.

16. நல்வெள்ளி - நற்றிணை, எசஎ, குறுந்தொகை, நகூகு பாடியவர்.

17. நெடும்பல்லியத்தை - இவர் பாடியன குறுந்தொகையில், கஎஅ, உOந - செய்யுட்கள்.

18. பாரிமகளிர் - இவர் சரிதையை இவர் பெயர் கூறியவழிக் காண்க.

19. பூதபாண்டியன் தேவியார் - இவர் சரிதையை இவர் பெயர் கூறியவழிக் காண்க.

20. பூங்கண்ணுத்திரையார் - இவர் பெயரான் பெண்பாலாராகக் கருதப்படுகிறார். புறநானூற்றில் "மீனுண்கொக்கு" எனும் செய்யுளும், குறுந்தொகையில் சஅ, கஎக, செய்யுட்களும் இவர் பாடியன

21. பேய்மகள் இளவெயினி - இவர் பெயர் கூறியவழிக் காண்க.

22. பொன்மணியார் - குறுந்தொகை, நகூக.

23. போந்தைப்பசலையார் - அகப்பாட்டு ககO.

24. மதுவோலைக் கடையத்தார் - நற்றிணை, நகூக

25. மாறோக்கத்து நப்பசலையார் - இவர் நாயகன் பிரிவுக்காலத்து மகளிர்க்கெய்தும் பசலையெனும் தேமலின் பெயரால் இவர் சிறந்து விளங்கியதால் பெண் பாலாராகக் கருதப்படுகின்றனர். இவர் புறநானூற்றில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனையும், மலையமான் திருமுடிக்காரியையும், அவன் மகன் மலையமான் சோழிய வேனாதி திருக்கண்ணனையும், பாடியுள்ளார், இவர் புலவர் பெருமானான கபிலரையே அதிகமாக மதித்தவராவர். இவர்

நற்றிணையுள் "புணரிற் புணருமாரெழிலே பிரியின்" எனுஞ் செய்யுளில் பசலையினியல்பு நன்குரைத்த வாற்றால் இப்பெயருற்றாரென ஊகிக்கப்படுகிறார். பசலைப்பெயருற்றார் சிலருளர்.

26. மாற்பித்தியார் - புறம், ௨௫௧, ௨௫௨.

27. முன்னியூர்ப்பூதியார் - அகம் ௧௭௩.

28. வருமுலையாரித்தி - இவர் குறுந்தொகையில் ௧௭௬-ஆம் பாட்டுப் பாடியவர்; இவர் தன்னெஞ்சு நெகிழ்த்தவன் வராமை பொருட்டிரங்கினர். வருமுலை யென்பதால் பெண்பாலாகக் கருதப்படுகிறார்.

29. வரதுங்கராமன் தேவியார்.

30. வில்லிபுத்தூர்க் கோதையார்.

31. வெண்மணிப் பூதியார் - குறுந்தொகை. ௨௯௯.

**நற்றிணைநானூறு** — இது ஐந்திணைகளைப்பற்றிக் கூறியநூல். இது கடைச்சங்கத்தவராற் கையாளப்பட்டது. இது பாரதம் பாடிய பெருந்தேவனார் முதல், ஆலங்குடி வங்கனாரிறுதியாகப் பாடிய பாக்களையுடையது. இதைத் தொகுத்தவன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதியாம்.

**நற்றுநவன்** — துரியோதனன் தம்பி.

**நன்பலூர்ச்சிறுமேதாவியார்** — கடைச்சங்கமருவிய புலவர்.

**நன்னனார்** — கடைச்சங்கமருவிய தமிழ்ப்புலவர். பரிபாடலில் (12) பாடலுக்கு இசை வகுத்தவர்.

**நன்னன்** — 1. விச்சிக்கோவின் பரம்பரையைச் சேர்ந்தவன். பல்குன்றக் கோட்டமுடையான். இவன் மகன்மீது இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் மலைபடுகடாம்பாடினர். இவன் ஒரு காலத்துப் பெண் கொலை செய்தவன். (புறநானூறு.)

2. இவன் மலையாளம் ஜில்லாவில் மேல்பால் மேலைக் கடலோரத்திலுள்ள பூழி நாட்டை யாண்ட ஒரு சிற்றரசன். சேரர் பரம்பரையைச் சேர்ந்தவன் "நன்னனுதியனருங் கடிப்பாழி" அகம் (௨௫௮); உதியன் - சேரன். இவன் சிற்றரசனாதலின் வேள் என்னும் பட்டம் எய்தினன் "நறவுமகிழிருக்கை நன்னன் வேண்மான்" அ (௯௭). பாண்டியர் நாயக்கருக்குக் கப்பங் கட்டத் தொடங்கியபின் வேள் எனப் பட்டஞ் சூடியது இங்கு நோக்கத்தக்கது. "சீவல வேளென மகுடஞ் சூடினனே" இந் நன்னனது பூழி நாடும் பிறவுங் கொங்கணதேச மெனப்படும்; "பொன்படு கொண்கான நன்னன்" நற். (௩௯௧). (கொண்கானம் - கொங்கணம்) கடம்பின் பெருவாயில், பாரம், பிரம்பு, வியலூர் இவை இவனுடைய ஊர்கள்; பதிற்று (௪)-ம் பதிகம் அகம் (௧௫௨, ௩௯௬). இவனூடு மிக்க நீர் வளமுடையது; அகம் (௩௯௯). (எழில் மலை மேலைக்கடலருகிலுள்ள கற்றூரிலிருந்து வடக்கே (௧௮) மைலிலுள்ள தொரு மலை. எழில்மலை யென்ற ரெயில்வே ஸ்டேஷனுமுள்ளது; அதனை ஸப்தசைலமெனப் பலருங் கூறுவர். பாழியை முன்பு வடுகர் கைப்பற்றி ஆண்டு வருநாளில் சோழன் நெய்தலங்கானலிலுள்ள இளஞ்சேட் சென்னி யென்பவன் படையோடு சென்று பொருது வடுகர்களைக் கொன்று பாழியையும் அழித்து மீண்டான். அதனால் இவன் செருப்பாழி யெறிந்த இளஞ்சேட்சென்னி யெனவுங் கூறப்படுவன். "இளம்பெருஞ் சென்னி......செம்பொழி புரிசைப் பாழி நூறி வம்பவடுகர் பைந்தலை சவட்டி" அகம் (௩௭௫). வம்பவடுகர் - புதியராய்த் தமிழ் நாடு புகுந்த வடுகர்). இந் நன்னன் மிக்க கொடையாளி; இரவலர்க்கு யானை முதலாய பரிசளிப்பவன். "இசைநல்லீகைக்களிறு வீசுவண் மகிழ்......நன்னன்" அகம் (௧௫௨). "அகவுநர்ப் புரந்த அன்பின் ......நன்னன்" அகம் (௯௭). இவன் ஆற்றலாற் பிண்டன் முதலானோரை வென்று மிகுந்தபொருளீட்டி அப் பொருளைப் பாழியிற்சேமித்து வேளிர் பலரைக் காக்குமாறு வைத்திருந்தனன்; அகம் (௨௫௮). முன் கூறிய பிண்டனோடும் இன்னும் பல அரசரோடும் போர்செய்து அவரைக் கொன்றவுடன் அகம் (௧௫௨) அப் பிண்டன் முதலானோருடைய உரிமை மகளிரைப்பற்றி வந்து அம் மகளிர் தலையைச் சிரைத்து அக்கூந்தலைக் கயிறாகத் திரித்து அக் கயிற்றினால் அப் பகை யரசரின் யானையைப் பிணித்து வந்தவன்; நற். (௨௭௦). இவன் பிறந்தநாட் கொண்டாட்டம் பலராலும் புகழப்படுவது; மதுரைக்காஞ்சி (௬௧௮, ௬௧௯) அடிகள். இவனது தோட்டத்திலுள்ள மரத்தின் பசுங்காய் அருகிலோடிய கால்வாயில் விழுந்து வருவதனை அங்கு நீராடச் சென்ற ஒரு பெண்ணெடுத்துத் தின்ற தவறுக்காக அவளை அவளது தந்தை பல யானைகளும் அவள் நிறை பொன்

னும் கொடுப்பதாக இரந்து வேண்டியும்
இரங்காணுய்க் கொல்லுவித்தனன். குறு.
(உகஉ). இவன் கொடுங்கோ லன்றோ
வேறெதனுலோ சேர நாட்டை அக்கால
த்து அரசாண்டு வந்த களங்காய்க்கண்ணி
நார்முடிச்சேரல் இவனை போர்செய் தழிப்
பது கருதித் தன் சேனுபதி ஆஅய் எயினனை
பெரும் படையொடு செல்ல விடுத்தனன்.
இந்த ஆஅய்எயினன் வெளியம் என்னும்
ஊரில் வேளிர் மரபிற் பிறந்தவன். அகம்
(உ0அ). மிக்க வீரமுடையவன் வேண்டி
னோர்க்கு வரையாது யானை முதலியவற்
றைக் கொடுக்கும் வண்மை யுடையவன்.
அந் நாளில் மதுரையிலிருக்கும் அகுதை
யென்பவன் தான் மிக்க வீரமுடையவனு
யிருந்தும் இவ் ஆஅய்எயினனுக்கு நடுங்கி
யொடுங்கி யிருந்தனன்; இத்தகைய மேம்
பாடு கொண்ட இவ் ஆஅய்எயினன் நன்ன
னது படைத்தலைவனுகிய மிஞிலி மிக்க
வீரமுடையவ னென்று பிறர் தடுத்துக்
கூறியதையுங் கேளாமல் (அகம் ௩௪௬).
அவனோடு பாழியென்னு மிடத்திற் போர்
தொடங்கினுன். அப்பொழுது அந் நன்
னன் தனது பேய் கூட்டருகில் (அகம்
கசஉ) நின்று கூறிய கட்டளையை மேற்
கொண்டு அவன் படைத் தலைவனுகிய
மிஞிலி வந்தெதிர் நின்று போர் தொட
ங்கி நண் பகற்பொழுதில் வேலாலெறிந்து
ஆஅய்எயினனைக் கொன்றான். விழுந்த
எயினன்மேல் வெயில் படாவாறு பறவை
பந்தரிட்டாற்போலச் சூழ்ந்தன. நன்னன
மனமழுங்கி யிருந்தனன்; (அகம் உ0அ).
பிறகு அவ்எயினனது உரிமை மகளிர்
திரண்டெழுந்து காவிரியாற்றுக்கு வந்து
தங்கள் வழக்கப்படி சரமக்கிரியை முடி
த்து அலங்கரித்த எயினன்போன்ற வடிவ
மொன்றனை அந் நீரில் போகட்டு நீராடிப்
பெயர்ந்து போயினர்; (அகம் கஅக). இப்
பெரும்பூசல் கேட்டு மதுரையில் அடங்கிக்
கிடந்த அகுதை அச்சம் நீங்கி மகிழ்வா
னுயினுன்; (அகம் உ0அ). இங்ஙனம்
சேனுபதி முடிந்தானென்பது கேட்ட கள
ங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் வெகு
ண்டு பெரும் படையொடு வந்து பெருந்
துறையென்னு மிடத்தில் நன்னனுல் பாது
காக்கப்பட்டு வந்த அவனது காவன் மரமா
கிய வாகையை வெட்டிச் சாய்த்தனன்.
(இவ் வாகைப் பறந்தலை வாகையென்னும்
பெயரொடு இப்பொழுது முளது) இதனை
அறிந்த நன்னன் தன் பெரும் படையொடு
வந்து எதிர் நின்று பலநாள்காறும் போர்
செய்ய ஈற்றில் சேரலன் படையால் நன்
னன் இறந் தொழிந்தனன்; "சூடாஅ,
திரும்பொன்வாகைப் பெருந்துறைச் செரு
விற், பொலம்பூணன்ன பொருகடத்தொ
ழிய வலம்படுகொற்றந் தந்தவாய்வாட்,
களங்காய்க்கண்ணி நார்முடிச்சேர, லிழந்த
நாடு தந்தனன்" (அகம் ககக). நன்னன்
கதையை யாண்டும் எடுத்துக் காட்டினவர்
பரணர்; (நற். உஎ0, ௩௩௧). இந் நன்ன
னுடைய பாழியும் பாரமும் பிறவும் சேனு
பதி மிஞிலி யென்பவனுல் முன்பு காக்கப்
பட்டு வந்தன; (நற். உ௬௫).

**நன்னன்வேண்மான்** — "என்பவன, சங்க
நாளிலே, தமிழகத்திற் பெருவள்ளலாய்
விளங்கிய ஒரு சிற்றரசன். இவன் வேளிர்
குலத்தைச் சேர்ந்தவ னென்பது, இவ
னுக்கு வழங்கும் 'வேண்மான்' 'வேள்'
என்னும் அடைகளால் விளங்குகின்றது.
வேண்மான் வேளிர்தலைவன். சங்கநூல்
களிலே, நன்னன் என்னும் பெயருடை
யாரிருவர் காணப்படுகின்றனர். இவரில்
ஒருவன், பத்துப் பாட்டிலொன்றாகிய
'மலைபடுகடாம்' கொண்டவன். அப்பாட்
டியற்றிய இரணிய முட்டத்துப் பெருங்
குன்றூர்க் கௌசிகனுர், தாம் பாடிய
வேண்மானை 'நன்னன்சேய் நன்னன்'
எனக் கூறுதலால், மற்றொருவனுகிய நன்
னன், இவ்வேண்மானுடைய தந்தையெ
ன்று தெரிகின்றது. இவ்விருவருள் மக
னுகிய நன்னனே புலவர் புகழ்ச்சிக்கு
இலக்காய் விளங்கியவன். இவனை 'நன்
னன் ஆய்' எனவும் வழங்குவர். பத்துப்
பாட்டில் இவனுக்கு "பல்குன்றக் கோட்
டத்துச் செங்கண்மாத்து வேள்" என்னும்
அடை குறிக்கப்பட்டிருத்தலால், இவன்
நாடு பல்குன்றக் கோட்டமென்னும் பெயர்
கொண்டது என்பதும், இவன் தலைநகர்
செங்கண்மா என்பதும் வெளியாகின்றன.
இவன் மலைநாடு "ஏழிற்குன்றம்" எனவும்
வழங்கும். அஃது ஏழு மலைப் பகுதிகளைப்
பெற்றிருந்தமையால், இப்பெயர் கொண்
டதாகத் தெரிகிறது. பல்குன்றக்கோட்
டம் என்னும் பெயர் வந்ததன் காரணமும்
இதுவேயாம். அவ்வேழு மலைகளிற் பாழிச்
சிலம்பு, நவிரம் என்னுமிரண்டே இப்
போது தெரிவன. நன்னனுட்டில், பாழி,
வியலூர், பாரம், பிரம்பு — என்ற ஊர்க

ணும், சேயாறு என்னும் நதியும் இருந்தன
வென்பது முன்னூல்களால் அறியப்படு
கிறது. இவனாண்ட பல்குன்றக் கோட்ட
நாடு, இப்போது வட ஆர்க்காடு தென்னார்
க்காடு ஜில்லாக்களில் அடங்கியுள்ள தென்
பர். நன்னனது நவிரமென்னும் மலைமேல்
"காரியுண்டிக் கடவுள்" என்னும் சிவபி
ரான் கோயிலொன்றுண்டு. அகநானூற்
றில் "பாடுநர்செலினே, அருங்குறும் பெறி
ந்த பெருங்கல வெறுக்கை, சூழாது சுரக்
கும் நன்னன்" "இசைநல் லீகைக் களிறு
வீசுவண்மகிழ்ப், பாரதத்துத் தலைவனாரா
நன்னன்" என இவன் புகழப்படுதலோடு,
மலைபடுகடாத்தில் அடியில் வருமாறு சிறப்
பிக்கப்படுகின்றான். "வின்னவி றடக்கை
மேவரும் பெரும்பூண் நன்னன்சேய் நன்
னற் படர்ந்த கொள்கையோடு" மதுரைக்
காஞ்சியில் மதுரையி னிகழும் பலவகை
யான உவகையாரவாரத்தைப்பற்றிச் சொ
ல்லும்போது, மான்குடிமருதனார் என்னும்
பழைய புலவர், "பேரிசை நன்னன் பெரு
ம்பெயர் நன்னாட், சேரிவிழவி னார்ப்பெழுந்
தாங்கு" என்று உவமிக்கின்றார். இதனால்
செங்கண்மாவில் நன்னன் வேண்மானது
பிறந்த நாட் கொண்டாட்டம், தமிழக
முழுதும் புகழத்தக்க விமரிசையுடன் நடை
பெறுவதென்பது விளங்கும். இக் கொண்
டாட்ட தினம், 'நன்னனாள்' என்ற பெயர்
பெற்றது என்று நச்சினார்க்கினியர் கூறு
வர். இந் நன்னன் சேரமானது படைத்
தலைமை வகிக்கும் கௌரவமும் பெற்றிருந்
தான். இவனுக்கு "வானவிறல்வேள்"
என்னும் சிறப்பு மலைபடுகடாத்தில் கூறப்
பட்டுள்ளது. இத் தொடர் மொழியே
மதுரைக் காஞ்சியில் அழும்பில்வேள் என்
பானுக்கும் வழங்குகிறது. இனி, நன்னன்
வேண்மானுடைய தந்தையாகிய நன்னன்,
கொடுங்கோல னென்றும், கல்வியருமை
யறியாதவ னென்றும், அதைப்பற்றிப் புல
வரை வெறுத்தவ னென்றும் தெரிகின்
றன. இவனது கொடுங்கோலைக் குறித்து
ஒரு கதை, பரணர் என்னும் பழைய புலவ
ராற் குறிக்கப் பட்டுள்ளது. இந்நன்னனது
சோலையிலே அவன் தின்று மகிழ்தற்
கென்றே வைத்து வளர்க்கப்பட்ட ஒரு
மாத்தின் இனிய காயொன்று, அச்சோ
லைப்பக்கத்தே ஓடும் ஆற்றில் வீழ்ந்து அய
லதாகிய துறையில் ஒதுங்க, அவ்விடத்தே
குளித்தற் பொருட்டுச் சென்ற பெண்ணொ
ருத்தி, அவ்வொதுங்கிய காயை அறியாது
எடுத்துத்தின்றாள். இச்செய்தியைச் சோ
லைக் காவலரால் அறிந்த நன்னன் பெருஞ்
சினங்கொண்டவனாய், தான் தின்னற்குரிய
காயை அப்பெண் தின்றதன் பொருட்டு,
அவளைக் கொலைபுரிந்துவிடும்படி கட்டளை
யிட்டனன். அப்பெண்ணின் தந்தையோ,
தன் செல்வமகளுக்கு நேர்ந்த விபத்தை
எண்ணிக்கலங்கி, நன்னனிடஞ் சென்று
"அரசே! என்மகள் தமக்குரியகாய் என
அறிந்துவைத்து அதனைத் தின்றவளல்லள்.
அறியாது செய்ததைப் பொறுத்தருள்க;
அவள் புரிந்த இத்தவறுக்காக எண்பத்
தொரு யானைகளையும், அவள் நிறையளவு
பொன்னாற் செய்த பாவையையும் யான்
ஈடுதரவல்லேன். அவட்கு விதித்தகொ
லைக்குற்றத்தை மட்டும் நீக்கியருள்க"
என்று பலவாறு மன்றாடினன். எவ்வளவு
மன்றாடியும், அறத்தை நோக்கானாய், உள்
ளிரஞ்சிறிது மில்லானாய், அக் கொடுங்
கோல் நன்னன் அப்பெண்ணைக் கொலை
புரிந்தே தன் சினந்தீர்ந்தனன்" என்பது.
இதனை, "மண்ணிய சென்ற வொண்ணுத
லரிவை......பகைமுக வூரிற்றுஞ்சலோ
விலளே" எனக் குறுந்தொகையில் வரும்
பரணர் பாடலான் அறிக. நன்னனுடைய
அறிவீனத்தையுங் கொடுங்கோலையுங் குறித்
தற்கு, சங்கநாளிலே வழங்கிய இக்கதை
யேசான்றாம். இக் கொடியோனுக்கு, நற்
குணமே திரண்ட நன்னன் வேண்மான்,
பிறந்தனன். பண்டைக்கால வழக்கப்படி,
தந்தை பெயரையும் உடனிணைத்து "நன்
னன்சேய் நன்னன்" என்று இவ்வேண்
மானை முன்னோர் வழங்கினர். உலகத்தார்
கூறும் பழிச்சொல்லுக் கிலக்காய் நின்ற
நன்னன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சே
ரல் என்னும் வேந்தனால், தன்னூர்ப்
புறத்தே போரிற் கொல்லப்பட்டு ஒழிந்த
பின், அவன் மகனாகிய நன்னன்வேண்
மான் பல்குன்றக் கோட்டத்தைத் தன்
செங்கோலால் மகிழ்வித்தான். தன்றந்தை
சேரனுடன் பகைத்திறந்தனனாயினும் நன்
னன்வேண்மான் அவனுடன் நட்புக்
கொண்டிருந்ததோடு, முற் கூறியவாறு
அச்சேரன் படைத்தலைவனும் ஆயினன்.
நன்னன்சேய் நன்னன், பெருவள்ளலாய்ப்
புலவர் புகழ்ச்சிக்குரியவனாக விளங்கினும்,
இவன் தந்தை புரிந்த தீச்செய்கைகளை,
இவன் நற்செய்கைகள் பிற்காலத்து மறை

த்துவிட்டனவாகக் காணவில்லை. தந்தையாகிய நன்னன், பெண் கொலை புரிந்த பழிமட்டும் உடையனல்லன். அவன் கல்விபெருமையறியாத கசடனுமாதலால் தன் பாற் பரிசில்வேண்டிவரும் நல்லிசைப் புலவரை யெல்லாம் வெறுத்து, அவர் வராமல் தன்வாயிற் கதவடைத்து வந்தான். இஃது, அக்காலத்துப் புலவர்களுக்கெல்லாம் பெருத்த கோபமூட்டியதோடு அவன் மேல் வசைபாடவும் அவர்களைத் தூண்டிற்று. நல்லிசைப் புலவராகிய ஔவையார், ஒருகால், பல்குன்றக்கோட்டம் என்ற எழிற்குன்றஞ் சென்றிருந்தபோது, இந் நன்னன் அவரது அருமை பெருமைகளை அறியாது உதாசீனனாயிருக்க, அதனைப் பொறுக்காத அம்மெல்லியற் புலவர், "இருடீர் மணிவிளக்கத் தெழிலார்கோவே குருடேயு மன்றுநின் குற்றம் — மருடே யும், பாட்டு முரையும், பயிலா தனவிரண், டோட்டைச் செவியு முள" என அவனை முனிந்து பாடினர். நன்னன் வழிவந்த இளவச்சிரக்கோ என்பானும் இளம்கண்டீரக்கோ என்பானும், ஓரிடத்துச் சேர்ந்திருந்தபோது, அங்கே சென்ற பெருந்தலைச் சாத்தனார் என்னும் நல்லிசைப் புலவர், முன்னவனைத் தழுவி மரியாதை செய்து, பின்னவனாகிய இளவச் சிரக்கோவைப் புல்லாதொழிய இதனைக் கண்டான் "என்னைநீர் புல்லாமைக்குக் காரணமென்ன" என்று புலவரைக் கேட்பவும், அவர் "இவன் - பெண்டிருந் தம்தரத்தினின்று பரிசிலர்க்கு யானைக் கொடையளிக்கும் கண்டீரக்கோன் : ஆதலால் அவனைத் தழுவினேன் ; நீயும் - நன்னன் மரபிலுதித்த பெருமையுடைமையோடு இயற்கையின் நற்குணங்களுடைய னாதலால் தழுவற்குரியவனேயாயினும், நின்முன்னோனொருவன் பரிசில் வேண்டிச்சென்ற புலவர்க்கு வாயிற் கதவடைத்தமை பற்றி ; நம்மலையை எம்மவர்பாடுதல் தவிர்ந்தார்" நன்னன் வழியில் வந்த இளைஞனொருவன் "இளவச்சிரக்கோ" என்னும் பெயருடையானென்பது, புறநானூற்றால் அறியப்படும். இளவச்சிரக்கோ என்பது இளவிச்சிக்கோ எனத்திரித்தும் வழங்கப்பெறும். இவ்விளைஞன் பெயர் கொண்டு, இவன் முன்னோர் "வச்சிரக்கோ" அல்லது "விச்சிக்கோ" என்றழைக்கப் பட்டனர். என்பது பெறலாகின்றது. இவ்வாறே நன்னன் வழியினனொருவனை வில்கெழு தானைவிச்சியர் பெருமகன்" எனக்குறுந்தொகையிற் (கூஉஅ) வது செய்யுளில் கூறப்படுதல் காண்க. வச்சிரக்கோ "என்பதற்கு வச்சிரநாட்டரசன் என்பது பொருள்."

**நன்னாகனார்** — கரும்பனூர்க் கிழானைப பாடியவர். இவர்க்குப் புறத்திணை நன்னாகனார் எனவும் பெயர் (புறநானூறு.)

**நன்னாகையார்** — இவர் கடைச்சங்ககாலத்து பெண்கவியாகலாம். இவரது ஊர் நாகைப் பட்டினமாக இருக்கக்கூடும். (குறு - ககஅ, கஉ௬).

**நன்னூல்** — 1 இது எழுத்துச்சொல் பொருள்யாப்பு அணிமுதலிய ஐந்தும் நிறைந்த நூல். பிற்கூறிய மூன்றுமிறந்தன. தற்காலமுள்ளவை எழுத்துஞ் சொல்லுமேயாம். இது சநாகாபுரம் பவணந்தி முனிவராற் செய்யப்பட்டது.

2. இது பவணந்திமுனிவர் செய்தது. இவர் தொல்காப்பியத்தை முதனூலாகக் கொண்டு தம் காலத்தில் வழங்கிய வடமொழி இலக்கணங்களையும் தழுவிச் சுருங்கச் செய்தனர். இதில் எழுத்தும், சொல்லுமே காணக் கிடைக்கும். இதற்குச்சமண முனிவர் ஒருவர் உரை செய்தனர். இதனை நூலாசிரியரே செய்தனர் என்றும் கூறுப. பின்னர் சங்கர நமச்சிவாயப் புலவர் என்பார் விளக்கமாக விருத்தியுரை செய்தனர்.

**நஸ்வசீரன்** — பாரதவீரருள் ஒருவன். நயசீரன் அம்சம்.

**நக்ஷத்ரகன்** — விச்வாமித்திரன் மாணாக்கன். அரிச்சந்திரனிடம் கடனைத் தண்ட உடன் சென்றவன்.

**நக்ஷத்திரங்கள்** — (இவர்கள் தக்ஷன்குமரியராய்க் கிரகராசியாதிகளுட னியைந்து உலகத்துப் பலாபலன்களை அறிவிப்பர்.) அவற்றின் மிருகம், பக்ஷி, மரம், கணம், அதிதேவதை, தியாச்சியம், கீழ்நோக்குநாள், மேனோக்குநாள், சமநோக்குநாள், சதாசிவநாள், சுஷ்கநாள், ஜலநாள், புருஷநாள், பெண்ணாள், அலிநாள், அமங்கலநாள் முதலிய வருமாறு :- அசுவனி - குதிரை, இராஜாளி, எட்டி, தேவகணம், சரஸ்வதி, (௫௦) சம, சுஷ், புரு, பரணி - யானை, காக்கை, நெல்லி, மனுஷகணம், துர்க்கை, (உ௫) மேல் சுஷ், புரு, கார்த்திகை - ஆடு, மயில் அத்தி, இராக்ஷதகணம், அக்கினி, (௩௦) மேல், சுஷ், பெண், உரோகணி - பாம்பு, ஆந்தை, நாவல், மனுஷகணம், பிரமன்,

(சo) கீழ். சதா, சல, புரு, மிருகசிரம் - சாரை, கோழி, கருங்காலி, தேவகணம், சந்திரன், (கசா) சம. சல, அலி, திருவாதிரை - நாய், அன்றில், செங்கருங்காலி, மனுஷகணம், சிவன், (உக) கீழ், சுவ்ஷ், பெண், புனர்பூசம் - பெண்பூனை, அன்னம், மூங்கில், தேவகணம், அதிதி, (௩0) சம, சல, பெண்; அமங், பூசம் — கடா, நீர்க்காக்கை, அரசு, தேவகணம், பிரகஸ்பதி, (௩0) சதா, சல, பெண், அமங், ஆயிலியம் - ஆண்பூனை, சிச்சிலி, புன்னை, இராக்கதகணம், ஆதிசேடன், (௩உ) மேல். சல, புரு, மகம் - ஆணெலி, ஆண் கழுகு, ஆல், இராக்கதகணம், சுக்கிரன், (௩0) மேல், சுவ்ஷ், புரு, பூரம் - பெருச்சாளி, பெண்கழுகு, பலாசு, மனுஷகணம், பார்வதி (உ0) கீழ், மேல், சுவ்ஷ், உத்தரம்- எருது, சிள்வண்டு, அலரி, மனுஷகணம், சூரியன், (கஅ) கீழ், சதா, சுவ்ஷ், புரு, அஸ்தம்-எருமை, பருந்து, ஆத்தி, தேவகணம், சாத்தா, (உஉ) சம, சதா, சல, பெண், சித்திரை - ஆண்புலி, மரங்குத்தி, வில்வம், இராக்கதகணம், விஸ்வகர்மா, (உ0) சம சல, புரு, சுவாதி-கடா, ஈ, மருது, தேவகணம், வாயு, (கசா) சம, சல, புரு, விசாகம்-பெண்புலி, செவிரற்குருவி. விளா, இராக்கதகணம், குமரன், (கஎ) மேல், சல அலி, அனுஷம்-பெண்மான், வானம்பாடி மகிழ், தேவகணம், லக்ஷ்மி, (க0) சம, சதா சுவ்ஷ், அலி, கேட்டை-கலை, சக்கிரவாகம், பிராய், இராக்கதகணம், இந்திரன், (கசா) சம, சல, புரு, மூலம்-பெண்ணாய், செம்போத்து, மரா, இராக்கதகணம், அசுரர், (ருக) மேல், சுவ்ஷ், புரு, பூராடம் - ஆண் குரங்கு, கௌதாரி, வஞ்சி, மனுஷகணம், வருணன், (உ௫) மேல், சல, புரு, உத்திராடம்-மலட்டுப் பசு, வலியன், பலா, மனுஷகணம், கணபதி, (உ0) சதா, சுவ்ஷ், புரு, திருவோணம் - பெண்குரங்கு, நாரை, எருக்கு, தேவகணம், விஷ்ணு, (க0) கீழ். சதா, சல, அலி, அவிட்டம் - காமதேனு, வண்டு வன்னி, இராக்கதகணம், வசுக்கள், (ய) கீழ், சுவ்ஷ், அலி, சதயம் - பெண்குதிரை, அண்டங்காக்கை, கடம்பு, மனுஷகணம், யமன், (கஅ) கீழ், சுவ்ஷ், அலி, பூரட்டாதி - புருஷாமிருகம், உள்ளான், தேமா, மனுஷகணம், குபேரன், (கக) மேல், சுவ்ஷ், புரு, உத்திரட்டாதி - பாற்பசு, கோட்டான், வேம்பு, மனுஷகணம், காமதேனு, (உசா) கீழ், சதா, சுவ்ஷ், அலி, ரேவதி - பெண்யானை, வல்லூறு, இருப்பை, தேவகணம், சனி, (௩0) சம, சதா, சுவ்ஷ், அலி இந்த நக்ஷத்திரங்களுக்குக் கூறிய நாழிகைக்குமேல் (சா) நாழிகைதியாச்சியம். நக்ஷத்திர இராசிகள் - அசுவநி, பரணி, கார்ததிகை, முதற்கால், மேஷம். கார்த்திகைப்பின் முக்காலும், உரோகணியும், மிருகசிரத்து முன்னரையும், ருஷபம் மிருகசிரத்துப் பின்னரையும், திருவாதிரையும், புனர்பூசத்து மூன் முக்காலும் மிதுனம். புனர்பூசத்துப் பின்காலும், பூசமும், ஆயிலியமும், கர்க்கடகம். மகம், பூரம், உத்திரத்து முதற்காலும், சிங்கம். உத்திரத்துப்பின் முக்காலும், அத்தமும், சித்திரைமுன் அரையும் கன்னி. சித்திரைப் பின் அரையும், சோதியும், விசாகத்து முன் முக்காலும், துலாம். விசாகத்துப் பின் காலும், அனுஷமும், கேட்டையும், விருச்சிகம். மூலம், பூராடம், உத்திராடத்து முதற்காலும், தனுசு. உத்திராடத்துப் பின் முக்காலும், திருவோணமும் அவிட்டத்து முன் அரையும் மகரம். அவிட்டத்துப் பின்னரையும், சதயமும், பூரட்டாதி முன்முக்காலும், கும்பம். பூரட்டாதி பின் காலும் உத்திரட்டாதியும், ரேவதியும், மீனம். இவை நக்ஷத்திரங்கள், நிற்கும் இராசிகள். கார்த்திகை, உத்திரம், உத்திராடம் இவை மூன்றும் காலற்ற நாள்கள். மிருகசிரம், சித்திரை, அவிட்டம் இவை மூன்றும் உடல் அற்றன. புனர்பூசம், விசாகம், பூரட்டாதி இவை மூன்றும் தலை அற்ற நாட்கள். இந்த ஒன்பது நாட்களும் மனை முகூர்த்தத்திற்கும், புணர்ச்சிக்கும் யாத்திரைக்கும் ஆகா. தனிஷ்டா பஞ்சமிகளாவன - அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி. ரேவதி இவற்றில் மரணமானல் அந்த வீட்டினை (க) மாதம் மூடவேண்டும். விகற்ப பாகமாகிய ரோகணிக்கு மாதம் (சா), கார்த்திகை, உத்திரத்திற்கு மாதம் (௩), மிருகசிரம், சித்திரை, புனர்பூசம், விசாகம், உத்திராடத்திற்கு மாதம் (உ). நக்ஷத்திர நாச யோகங்களாவன - ஞாயிறில் விசாகமும், திங்களில் சதயமும், செவ்வாயில் அவிட்டமும், புதனில் ரேவதியும், வியாழனில் ரோகணியும், வெள்ளியில் பூசமும், சனியில் உத்திரமும், வருவன. கிழமை பிறந்தநாள் - ஞாயிறில் பரணியும், திங்களில் சித்திரையும், செவ்

வாயில் உத்திராடமும், புதனில் அவிட்டமும், வியாழனில் கேட்டையும், வெள்ளியில் பூராடமும், சனியில் ரேவதியும் வருவனவாம். இந்த நாட்களில் செய்யும் காரியங்கள் எல்லாம் தீமையாய் விளையும். பஞ்சக்கோள் நின்றதோஷம் - சூரியன் நின்ற நக்ஷத்திரத்திற்கு ஏழாம் நக்ஷத்திரம் உற்பாதம் எனவும், பத்தாம் நக்ஷத்திரம் தாரகம் எனவும், பதினைந்தாம் நக்ஷத்திரம் பிரமதண்டம் எனவும், இருபத்தொன்றாம் நக்ஷத்திரம் காலன் எனவும் பெயராம். செவ்வாய் நின்ற நக்ஷத்திரத்திற்கு ஏழாம் நக்ஷத்திரம் சூலம் எனவும், பத்தாம் நக்ஷத்திரம் சக்கிரம் எனவும், பதினைந்தாம் நக்ஷத்திரம் கண்டம் எனவும், இருபத்தொன்றாம் நக்ஷத்திரம் காலன் எனவும் பெயராம். புதன் நின்ற நக்ஷத்திரத்திற்கு எட்டு, பதினெட்டு, இருபத்துநான்காம் நக்ஷத்திரங்கள் கண்டம் என்பர். வியாழன் நின்ற நக்ஷத்திரத்திற்கு (எ, கூ) ஆவதும் கொடுமை. சுக்கிரன் நின்ற நக்ஷத்திரத்திற்கு ஏழு, ஒன்பதாம் நக்ஷத்திரங்கள் கொடுமை என்பர். சனி நின்ற நக்ஷத்திரத்திற்கு (ரு, கூ, க0, கக, கஉ) நக்ஷத்திரங்கள் பந்தம் எனவும் பெயர். இராகு கேது நின்ற நக்ஷத்திரங்களுக்கு ஏழாம் நக்ஷத்திரம் பரிகம் எனப்படும். இவை சுபகாரியங்களுக்கு ஆகா. அபிசித்து நக்ஷத்திரம் - உத்திராடத்து முடிவில் பதினைந்து நாழிகையும், திருவோணத்து முடிவில் நான்கு நாழிகையும், நான்கு விநாடியுமாம். அக்கினி நக்ஷத்திரமாவன - பரணி மூன்றாம்பாத முதல் உரோகணி முதல் பாதம் வரையிலும், சூரியன் நிற்கும் நக்ஷத்திரமாம். அஷ்டமராசிக்கூறு - சன்ம நக்ஷத்திரத்திற்குப் பதினாறும் நக்ஷத்திரம் முதல் பதினெட்டாம் நக்ஷத்திரம் வரையிலுள்ள நக்ஷத்திரம். கலைஞானபர்த நக்ஷத்திரம் - சன்ம நக்ஷத்திரத்திற்குப் பதினாறும் நக்ஷத்திரம் வைநாசிக நக்ஷத்திரம் - சன்ம நக்ஷத்திரத்திற்கு (உஉ)-ஆம் நக்ஷத்திரம். கண்டாந்த நாழிகை - அசுவனி, மகம், மூலம் முதற்காலும் ஆயிலியம், கேட்டை, ரேவதி (ச) - ஆம் காலுமாம். அர்த்தமூல நாழிகை - மூல நக்ஷத்திரத்தின் முதலில் இரண்டு நாழிகையாம். பாடர்வாரி நக்ஷத்திரம் - பரணி, சதயம், திருவோணம், அநுஷம், கேட்டை, சோதி, விசாகமாம்.

**நக்ஷத்திர ஆண் பெண் அலி** - புருஷ நக்ஷத்திரங்கள் - பரணி, கிருத்திகை, உரோகணி, புனர்ப்பூசம், பூசம், அஸ்தம், அநுஷம், திருவோணம, பூரட்டாதி, உத்திரட்டாதியாம். பெண் நக்ஷத்திரங்கள் - அசுவனி, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், சித்திரை, சோதி, விசாகம், கேட்டை, பூராடம், உத்திராடம், இரேவதி இவை பெண்ணும். மிருகசீரிஷம், சதயம், மூலம் இவை அலியாம். (விதானமாலை.)

**நக்ஷத்திரங்களின் தசைகளும் இருகதும் காலஅளவும்** - அசுவனி, மகம், மூலம்- கேதுதிசை வருடம் 7. பரணி, பூரம், பூராடம்-சுக்ரதிசை வருடம் 20. கிருத்திகை, உத்திரம், உத்திராடம் - சூரியதிசை வருடம் 6. ரோகணி, அஸ்தம், திருவோணம் - சந்திரதிசை வருடம் 10. மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம் - அங்காரகதிசை வருடம் 7. திருவாதிரை, சுவாதி, சதையம் - இராகுதிசை வருடம் 18. விசாகம், பூரட்டாதி, புனர்பூசம் - குருதிசை வருடம் 16. பூசம், அநுஷம், உத்திரட்டாதி - சநிதிசை வருடம் 19. ஆயிலியம், கேட்டை, ரேவதி - புதன்திசை வருடம் 17. ஆக திசை 9-க்கு வருடம் 120. ஜன்ம நக்ஷத்திரத்திற்கு 6-வது நக்ஷத்திரதிசை உற்பன்னதிசை, 3-வது நக்ஷத்திரதிசைமிருத்யுதிசை, சூர்ய ஸ்புடத்தில் கண்ட நக்ஷத்திரதிசை பிராணதசை, 8-வது நக்ஷத்திரதசை ஆதானதசை, இடமாக 4-வது நக்ஷத்திரதசை வாமதசை, சூர்ய சந்திரர்களுடைய ஸ்புடங்களைக் கூட்டிக் கண்ட நக்ஷத்திரதசை உடுதசை, சனிஸ்புடத்திற் கண்ட நக்ஷத்திரதசை நிர்யாணதசை, சந்திர சூர்ய லக்னஸ்புடங்களைக் கூட்டிக் கண்ட நக்ஷத்திரதசை மகாப்பிராணத்சை, குளிக நிர்யாணதசை. (சோதிட நூலிற் காண்க).

நக்ஷத்திரங்கள் ஆகாயத்தில் பிரகாசிக்கும் ஜோதி உருவமானவை. இவற்றுட் சில தனியாகவும், சில கூட்டங்கூட்டமாகவும் இருக்கின்றன. இவை, ஒவ்வொன்றும் காந்தியிலும், உருவத்திலும் சூரியனுக்குச் சமமானவை. இவை யாதொரு கிரகங்களின் ஒளியைப் பெற்றவைகள் அல்ல, சுயம்பிரகாசமானவை. அவை பூமிக்கு வெகுதூரத்தி லிருப்பதால் மிகச் சிறிய உருவினவாகவும், காந்தியற்றனவாகவும் காணப்படுகின்றன. கம்பி இல்லாத தந்தி பூமியி

விருந்து சூரியனைப் போய்ச் சேர (அ) நிமிஷம் ஆகின்றது என்றும் மிருகசிருஷ நக்ஷத்திரங்களுக்குச்சமீபத்திலிருக்கும் அக்கினி நக்ஷத்திரத்தைப் போய்ச்சேர (கூ) வருஷம் ஆகின்றது என்றும் கூறுகிறது. ஆதலால் நமக்கும் நக்ஷத்திரங்களுக்கும் அதிக தூரம் இருக்கின்றது. அவற்றின் தொகை கணக்கிட முடியா. இவ்வாறு மேற் கூறிய நக்ஷத்திரங்கள் சற்றேறக் குறைய (7000) இருக்கின்றன என்று கூறுகிறார்கள். அசுவனி முதலிய (27) நக்ஷத்திரங்களும் உரு முதலியவும் சூரிய வீதிக்கு ஒரு புறத்திற்கு (8०) டிகிரியாக (16°) டிகிரி அகலமுள்ள பிரதேசத்திற்கு ராசி மண்டலம் என்று பெயர். இந்த ராசி மண்டலத்தின் எல்லைக்குள் பூமியும், சந்திரனும் சூரியனைச் சுற்றி வருகின்றன. இந்த ராசிமண்டலத்தில் சந்திரன் பூமியை (27) நாட்களில் ஒருதடவை சுற்றி வரும் போது இம் மண்டலத்தையும், அதன் உட்புறமாக ஒருதடவை சுற்றி வருகின்றது. ஒவ்வொரு தினத்திலும் இம் மண்டலத்தில் சந்திரனுக்கு நேர் மேலாக இருக்கும் ஸ்தானத்தைக் குறித்துக் காட்ட, ராசி மண்டலத்தை (27) சமபாகங்களாக வகுத்திருக்கிறார்கள். நக்ஷத்திரம் - அசுவனி (உடு) குதிரைமுகம் எண் 3, பரணி (2) அடுப்பு (எ) 3, கார்த்திகை (2) அம்பட்டன் கத்தி (எ) 6, ரோகணி (2) வண்டி (எ) 5, மிருகசீருஷம் (2) அம்பு (எ) 3, திருவாதிரை (2) பவளம் (எ) 1, புனர்பூசம் (2) வில் (எ) 6, பூசம் (2) புடலம்பூ (எ) 3, ஆயிலியம் (2) ஸர்ப்பம் (எ) 6, மகம் (2) டோளி (எ) 5, பூரம் (2) கட்டிக்கால் (எ) 2, உத்திரம் (2) கட்டிற்கால் (உ) 2, அஸ்தம் (2) கை (எ) 5, சித்திரை (2) முத்து (எ) 1, ஸ்வாதி (2) மாணிக்கம் (எ) 1, விசாகம் (2) குசவன் சக்கரம் (எ) 5, அநுஷம் (2) மோதிரம் (எ) 4, கேட்டை (2) சக்கரம் (எ) 3, மூலம் (2) மேழி (எ) 5, பூராடம் (2) கட்டிற்கால் (எ) 2, உத்திராடம் (2) கட்டிற்கால் (எ) 2, திருவோணம் (2) வேர் (எ) 3, அவிட்டம் (2) மிருதங்கம் (எ) 5, சதயம் (2) பூனைக்கண் (எ) 100, பூரட்டாதி (2) கட்டிற்கால் (எ) 2, உத்திரட்டாதி (2) கட்டிற்கால் (எ) 2, ரேவதி (2) மீன் (எ) 2. அசுவனி முதல் (27) நக்ஷத்திரங்கள். மேற் கூறிய (27) நக்ஷத்திரக் கூட்டங்களுள் ஒவ்வொரு நக்ஷத்திரக் கூட்டமும் ஷை (27) ஸமபாகங்களுள் ஒரு ஸமபாகத்தைக் கவர்கிறது. ஷை ஒவ்வொரு ஸமபாகத்தையும் சந்திரன் கடந்து செல்லவேண்டிய காலத்தையொரு நக்ஷத்திரம் என்கிறார்கள். எந்தத் தினத்தில் எந்த நக்ஷத்திரக் கூட்டத்திற்கு நேர் மேலாகச் சந்திரன் இருக்கிறதோ அந்த நாள் அந் நக்ஷத்திரம்.

**வலவோட்டு நக்ஷத்திரங்கள்** - அசுவநி, பரணி, கார்த்திகை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், அஸ்தம், சித்திரை, சுவாதி, மூலம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி. ஆக 15.

**இடவோட்டு நாள்** - ரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, மகம், பூரம், உத்திரம், விசாகம், அநுஷம், கேட்டை, திருவோணம், அவிட்டம், சதயம். ஆக 12.

**நக்ஷத்திரங்கள்** - இவை ஆகாயத்திற் காணப்படும் கிரகங்களை யொத்த சுடர்ப் பகுதிகள் இவை அளவற்றவை. அவற்றுள் பலவகை உருவங்களும் நிறங்களும் பெற்றவை அதிகம் உண்டு. அவற்றுள் சில பூமிக்குக் காணப்பட்டு மறைவன.

**வால்நக்ஷத்திரம்** - இதனைத் தூமகேது என்பர். இது 75, 76 வருஷங்களுக்கு ஒரு முறை சூரியனைச் சுற்றி வருகிறது. இது தலையில் நக்ஷத்திர உருவத்துடன் பின்னால் நீண்டு அகன்று வெண்ணிறம் பெற்ற வாலைப்பெற்றிருக்கிறது. இந்த நக்ஷத்திரங்களில் பலவகை வெவ்வேறு வடிவினவாய் நீண்டும், குறுகியும், வளைந்தும், பிரிந்தும் இருக்கிறன என்பர். இவை ஆகாயத்தில் கூட்டங்களாக இருக்கின்றன. அவற்றுள் (270) வால் நக்ஷத்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. மற்றொன்று வால் குறுகிய தூமகேது; இது ($3\frac{1}{2}$) வருஷத்திற் கொருமுறை சூரியனைச் சுற்றுகிறதாம். மற்றொன்று ($6\frac{1}{2}$) வருஷத்திற் கொருமுறை சூரியனைச் சுற்றி வருகிறதாம். பலவாலி நக்ஷத்திரம் - இது பல வால்களைப் பெற்ற நக்ஷத்திரம். மற்றொரு தூமகேது (2000) வருஷ அளவிற் சூரியனைச் சுற்றி வருகிறது. சில வால் நக்ஷத்திரங்கள் பகலிலும் பிரகாசத்தைத் தரும் ஒளியுள்ளன என்பர். இவ்வகை நக்ஷத்திரத்தின் வால் உச்சிவானத்திருந்து அடிவானம் வரையில் நீண்டிருந்ததாகக் கூறுவர்.

**எரிநக்ஷத்திரங்கள்** - இரவில் ஆகாய வெளியிலிருந்து நக்ஷத்திரங்களைப்போல்

பூமியில் ஒரு நேராகவும் சாய்ந்தும் வீழ்பவை. இவைகளை விண் வீழ்கொள்ளியென்பர். இவை சூரியனைச் சுற்றி கோடிக்கணக்காய்ச் சுழன்று வரும் கற்களும், பாறைகளும் நிலைமாறி வாயுமண்டலத்தைக் கிழித்துக் கொண்டு அதிவேகமாகப் பூமியை நோக்கி வருதலால் சுடர்விட்டு எரிகின்றன வென்றும் அவ்வகை வருவதில் சில வழியில் நீற்றுவிடுகின்றன வென்றும், சில பூமியில் கல்லுருக்கொண்டு வீழ்கின்றன என்றும் எண்ணப்படுகிறது. இவ்வாறு விழும் விண் வீழ்கொள்ளியின் தொகை ஒரு நாளைக்கு 10 முதல் 20 கோடிக்கணக்கென்று எண்ணப்படுகிறது.

**பொறிநக்ஷத்திரங்கள்** - இவை விண் வீழ்கொள்ளிகளில் வேறுபட்டவை. இது பெரிய தீவட்டிபோல் எரிந்துகொண்டு பூமியை நோக்கி வருகையில் அளவற்ற பொறிகளைச் சிதறிக்கொண்டு பல இடிமுழக்கம் போன்ற வெடிகளுடன் கீழிறங்குவனவாம். இது (1869) வருஷத்தில் ஒருமுறை இங்கிலாந்தில் காணப்பட்டதாம்.

**நக்ஷத்திரமழை** ஆகாயத்தில் சில காலங்களில் எரிநக்ஷத்திர கூட்டங்கள் போல் நக்ஷத்திரங்கள் மழைபோல் வருஷித்து அடங்குகின்றன. அவை ஆகாயத்தைவிட்டுப் பூமியில் வருகையில் புதைபாணங்களைப்போல் காணப்பட்டு அடங்குகின்றன. இதனைத் தத்வ சாஸ்திரிகள் கிரகங்கள் நிலைமாறுதலால் உண்டாவதென்று கூறுகின்றனர்.

**நக்ஷத்திரகல்யன்** — ஒரு இருடி அதர்வண வேதி.

**நக்ஷத்திர திருஷ்டி** — ஆதித்தன் நிற்கின்ற நாளும், அதற்கு முன் (௩) நாட்களும், பின் (௩) நாட்களும் குருடாம். அதற்கு முன் (௪) நாட்களும், பின் (௪) நாட்களும் ஒரு கண் உள்ள நாட்களாம். ஒழிந்த (௧௨) நாட்களும் இரு கண்களுள்ள நாட்களாம். (விதானமாலை).

**நக்ஷத்திரபதம்** — சத்த இருடியர், உல்கைகள், மின்னல், தூமகேதுக்கள், ரோகிணேயர், ஊஷ்ணபாதம் முதலிய கூடிய கணதேவர்களிருக்கும் பதவி.

**நக்ஷத்திர மீன்** — இது கடலில் வசிக்கும் பிராணி. இதன் எலும்பு நக்ஷத்திர உருப்போல் காணப்படுகிறது.

## நா

**நாககன்னிகை** — உரகபதியின் மகள். அருச்சுனன் தேவி. குமரன் அரவான்.

**நாககன்னிமணந்தசோழன்** — சூர ஆதித்த சோழனைக் காண்க.

**நாகசம்** — பரிச்சித்தால் தக்ஷகனுக்கு அஞ்சி நிருமிக்கப்பட்ட கோட்டை.

**நாகணவாய்ப்புள்** — 1. (மைனு) இது சிட்டினத்தில் சேர்ந்தது. இது, கறுப்பு நிறமாய் இரக்கையில் வெளுத்திருக்கும், மூக்குமஞ்சள் நிறம், இதைக் கிளியைப்போல் பழக்கிப் பேசப் பயிற்சிசெயின் நன்றாகப் பேசும்.

2. இதில் இருவகை. ஒன்று கறுப்பு நிறங்கொண்டது, இறகில் வெண்மை நிறமுண்டு. இதன் அலகும் கண்ணின் ஓரமும் மஞ்சள் நிறம். இது கூடு கட்டுவதில்லை. மரப்பொந்துகளிலும் சுவரிடுக்குகளிலும் பஞ்சு முதலிய வைத்து முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். இது உருவத்திற் சிறியதாயினும் பக்ஷிகளுடன் சண்டையிட்டு அவைகளைக் கூரிய அலகால் குத்திவோட்டும். இச்சாதியில் மஞ்சள் நிறங்கொண்டதும் உண்டு. இதனை மைனு என்பர்.

**நாகதந்தன்** — திருதராட்டிரன் குமரன்.

**நாகதன்வம்** — வாசுகி ராஜனுக அபிஷேகம் பண்ணப்பட்ட இடம்.

**நாகநாட்டரசர்** — மணிபல்லவத்துள்ள புத்தபீடிகையை எடுத்துச் செல்லமுயன்று தம் முட்பகைமை கொண்டு போர்செய்த இரண்டரசர். (மணிமேகலை.)

**நாகந்தைமகருஷிகோத்ரன்** — ஔவைக்குப பொற்படாமும் கருநெல்லிப் பழமுங் கொடுத்து அந்தாதியும் நவமணிமாலையும் பெற்றனன்.

**நாகபந்தம்** — இது சித்திரக்கவியிலொன்று. இது இரண்டு பாம்புகள் தம்முள் இயைவனவாக உபதேசமுறைமை யானெழிதி அதில் ஒரு நேரிசை வெண்பாவினையும் ஒரு இன்னிசை வெண்பாவுமெழுதிச் சந்திக்களினின்ற வெழுத்தே மற்றையிடங்களினு முறுப்பாய் நிற்கப் பாடுவது. இதில் மேற் சுற்றுச்சந்தி நான்கிலும் (௪) எழுத்தும், கீழ்ச்சுற்றுச்சந்தி(௪)இலும் (௪) எழுத்தும் (2) பாம்பிற்கு நடுச்சந்தி (௪) இலும் (2) பாட்டிற்கும் பொருந்த (௪) எழுத்தாகச் சித்திரத்தில் அடைப்பது.

**நாகபலி** — பலியைப் புஷ்பங்களோடும் கறுப்பு வஸ்திரங்களோடும், சந்தனத்துடனும் சூரியன் அஸ்தமிக்கும்போது புற்றில் போடவேண்டும். இப்படிப் போடுவதால் பூமியைத்தாங்கும் நாகர்கள் சந்தோஷிக்கிருர்கள். இதனுல் வேண்டிய இஷ்டசித்திகள் உண்டாம். இச்சரிதை திக்கஜங்களால் ரேணுகன் எனும் யானைக்குக் கூறப்பட்டது. (பார.அநுசா.)

**நாகபுரம்** — சாவக நாட்டுப்பட்டணம். புண்ணிய ராஜனுடைய இராசதானி. சிலசாசனங்களில் போகவதிபுர மென்றுவழங்கும். (மணிமேகலை.)

**நாகபுராணன்** — கத்ருகுமரன், நாகன.

**நாகப்பிரதிட்டை** — ஒரு கருங்கல்லில் ஒரு படம், இருபடமுள்ளனவாகப் பாம்புகள் எழுதி அச்சிலையை முதனுள் அதிவாசஞ் செய்வித்து அன்றிரவு தம்பதிகள் உபவாசமிருந்து மறுநாள் நாகசிலைக்குப் பூசை முதலியசெய்து அரசடியில் விதிப்படி பிரதிட்டை புரிந்து பூஜித்துப் பந்துசனங்களுடன் பிராமணபோஜனஞ் செய்விப்பது. இது செய்தோர் புத்திர பாக்கியம் பெறுவர். பெண்ணுகவே பெறும்பேறு ஆணுகமாறும்.

**நாகமாலை** — சச்சந்திரன் பரிவாரசனங்களில் ஒருத்தி.

**நாகமுக்கியர்** — சர்ப்பங்கள் அதிகமாகையால் எல்லாவற்றின் பெயர்களைக் கூற முடியாது. முக்கியமானவை மாத்திரம் கூறப்படுகிறது. சேஷன் முதலிற் பிறந்தவர், அவருக்குப பின் வாசுகி, ஐராவதன், தக்ஷகன், கார்க்கோடகன், தனஞ்சயன், காறியன், மணிநாகன், ஆபூரணன், பிஞ்சாகன், ஏலாபுத்ரன், வாமநன், நீலன், அநீலன், கல்மாஷன், சபலன், ஆர்யகன், உக்ரகன், கலசபோதகன, சுமனஸ், ததிமுகன், விமலபிண்டகன், ஆப்தன், கோடாகன், சங்கன், வாலிசிகன், நிஷ்டாநகன், ஹேமகுஹன், நகுஷன், பிங்கலன், பாஹ்யகர்ணன், ஹஸ்திபதன், முத்கர பிண்டகன், கம்பலன், அசுவதரன், காலீயகன், வ்ருத்தன், சம்வர்த்தகன், பத்மகரிருவர், சங்கமுகன், கூச்மாண்டகன், க்ஷேமகன், பிண்டாரகன், காவீரன், புஷ்பதமிஷ்டரன், பில்வகன், பில்வபாண்டரன், மூஷிகாதன், சங்கசிரஸ், பூர்ணபத்ரன், ஹரித்திரகன், அபராஜிதன், ஜ்யோதிகன், ஸ்ரீவஹன், கௌரவ்யன், திருதராஷ்டிரன், சங்கபிண்டன், விரஜஸ், சுபாகு, சாலிபிண்டன், ஹஸ்திபிண்டன், பிடாகன், சுமுகன், கௌணபாசனன், குடரன், குஞ்சரன், பிரபாகரன், குமுதன், குமுதாக்ஷன், தித்திரி, ஹலிகன், கர்த்தமன், பகுமூலகன், கர்க்கரன், அகர்க்கரன், குண்டோதரன், மகோதரன், இவர்கள் சிறந்தோர். இவர்களில் ஆதிசேஷன் அயோக்யாளாகிய நாகர்களுடன்சேர விருப்பமற்றவராய்த் தவமேற்கொண்டு பிரமாவினுல் பூமியைத் தாங்கக் கட்டளை பெற்ருர். வாஸுகிதன் குமரியாகிய சலற்காரையை ஜரத்காரு ருஷிக்கு மணஞ் செய்வித்தான். பாற்கடல் கடையத் தாம்பானுன். தக்ஷகன் பரீக்ஷித்தைக் கடித்துப் பிராமண சாபத்தைப் பூர்த்திசெய்தான். ஏலாபுத்ரன் ஆஸ்தீகரால் சாபநிவர்த்தியை நாகர்களுக்குக் கூறினுன். இவர்களுள் பெரும்பான்மையோர் தாயின் சாபமேற்று ஜநமேஜயன் சர்ப்பயாகத்தில் மாண்டனர்.

**நாகம்போத்தன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவராக இருக்கலாம். (குறு. உசஉ).

**நாகரர்** — இவர் ஒரு ருஷி. தம் பெயரால் ஒரு லிபி ஏற்படுத்தியவர். அதற்குப் பெயர் நாகரம்.

**நாகர்** — 1. ஒரு மனிதஜாதியார். இவர்கள் நாடு நாகநாடு, நாகர்மலை முதலிய உண்டு. வாசுகி முதலிய குலநாகங்களின் குலத்திற் பிறந்து நாகமுத்திரை பெற்றிருத்தலின் இப்பெயர் பெற்றனர். (மணிமேகலை).

2. தமிழ்நாட்டில் பண்டைக் காலத்துப் பரவியிருந்த ஒருவகைச் சாதியர். இவர்கள் தங்கள் முடிமேல் ஐந்தலை, முத்தலைகளையுடைய நாகவடிவமுடைய தொன்றைத் தரித்து வந்தமையின் இப் பெயரடைந்தனர்.

**நாகர்மலை** — இதிலுள்ள நாகர்கள் ஆடையில்லாமற் சஞ்சரித்தவர்களென்றும், இழிவான தொழில்கள் பலவற்றைச் செய்து கொண்டிருந்தவர்க ளென்றும் தெரிகின்றது. (மணிமேகலை).

**நாகவீதி** — தருமன் பெண்.

**நாகனூர்** — ஒரு இசைத்தமிழ் வல்ல புலவர். பரிபாடலில் உள்ள (11)-ஆம் பாடலுக்கு இசைவகுத்தவர். (பரிபாடல்).

**நாகன்** — 1. கண்ணப்பர் தந்தை. பாரி தத்தை.

2. (அ) வாசுகி, அநந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன், இவை யெண்டிக்கில் பூமியைத் தாங்க நடுவில் சேஷன் தாங்குவன்.

**நாகன்றேவனார்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர் (திருவள்ளுவமாலை).

**நாகாசுரன்** — ஒரு அசுரன். இவன் விஷ்ணு, பிரமன், வாசுகி முதலியவரை வென்று சிவமூர்த்தியிடம்வந்து திருவடியால் உதையுண்டு அழுந்தின நாகவுருவமுள்ளவன்.

**நாகாம்பை** — 1. வசவதேவர்க்குத் தங்கை. வசவர் சொற்படி குண்டலத்தைச் சங்கமருக்கு அளித்தவள். இவள் குமரர் சென்னவசவர்.

2. கிருஷ்ணதேவராயன் தாய்.

**நாகேசுவரர்** — குமுதன் என்ற நாகன் பொருட்டுத் தோன்றிக் குசனால் ஆராதிக்கப்பட்டுச் சரயுதீர்த்தத்தில் எழுந்தருளிய சிவப்பிரதிட்டை.

**நாகைக்காத்தான்** — இவன்மீது வருண குலாதித்தன் மடல் என்று ஒரு பிரபந்தம் ஒரு பெண் கவியால் பாடப்பட்டது.

**நாகைக்காரோணம்** — இது நாகப்பட்டினத்துள்ள சிவத்தலம். இது சிவமூர்த்தி பிரம விட்டுணுக்களையும் மற்றவர்களையும் தம்முள் அடக்கிக்கொண்ட சிவன் திருவுரு இவ்விடம் பிரதிட்டிக்கப்பட்டது.

**நாங்குடிவேளாளர்** — கோட்டை வேளாளரை விட்டுப் பிரிந்த வேளாளர். இவர்களும் கொண்டைகட்டி வேளாளரைப்போல் அரசர்க்கு முடிசூட்டுவோர் என்று கூறுவர்.

**நாசயனன்** — கலாவதியைக் காண்க.

**நாசயோகம்** — திதிகளைக் காண்க.

**நாசிகரோகங்கள்** — இவை பனி, பனிக்காற்று, எதிர்க்காற்று, நாசியில் தூசு அடைதல் உரத்தவார்த்தை, மிகுநித்திரை, நித்திரைபங்கம், குளிர்ந்த ஜலத்தில் மூழ்கல், கண்ணீரை அடக்குதல், மேடுபள்ளமுள்ள இடத்தில் படுத்தல், தேசபேத ஜலபானம், வெகு தாகபானம், அதிக ஸ்திரி சையோகம், வாந்தி அடக்கல் இக்காரியங்களினால் முத்தோஷங்களும் அதிகரித்து நாசியைச் சேர்ந்து ரோகத்தையுண்டாக்கும் அது வாதபீனிசம் முதலாக (18) வகைப்படும். 1. வாதபீநசரோகம், 2. பித்தபீநசரோகம், 3. சிலேஷ்மபீநசரோகம், 4. திரிதோஷபீநசரோகம், 5. ரத்தபீநசரோகம், 6. துஷ்டபீநசரோகம், 7. அதிதும்மல்பீநசரோகம், 8. நாசிகாசோஷரோகம், 9. நாசிகாநாகரோகம், 10. கிராணபாகரோகம், 11. நாசிகாசிராவரோகம், 12. அபீநசரோகம், 13. நாசிகாதீபிகைரோகம், 14. பூதிநாசிகாரோகம், 15. பூயாசிரநாசிகரோகம், 16. நாசிகாபுடகரோகம், 17. நாசாரசரோகம், 18. நாசிகாற்புத ரோகம் என (18) வகைப்படும்.

**நாசிகேது** — 1. திவ்யாங்க மகருஷி குமாரன். இவன் தந்தை சொல்லிய காலந் தவறிச் சிவபூசைக்குப் புட்பங் கொண்டுவந்ததால் தந்தை சொற்படி நாகதரிசனஞ் செய்து பின் இந்திர, பிரம விஷ்ணு சிவலோகங்களைத் தரிசித்து மீண்டவன்.

2. உத்தாலகமுனிவர்க்கு ஒருநாள் வீரியங் கலிதமாக அதையொரு தாமரை மலரிலிட்டு விதிசை நதியில் விட்டனர். அந்நதிக்குத் தீர்த்தமாடப் பிரகுதரன் குமரியாகிய சுகேசினி வந்தனள். அவள் அந்த மலரினையெடுத்து முகர அம்மூக்கின் வழி இருடியின் வீரியஞ்சென்று கருக்குழியில் பதியக் கன்னிகை கருக்கொண்டனள். குமரியின் கருக்குறியைத் தாயறிந்து புருடனுக்கு அறிவிக்க அரசன் தன் குமரியைத் துற்கடமுனிவ ராச்சிரமத்திற்கருகாம் வநத்தில் விட்டனன். சுகேசினி அம்முனிவராச்சிரம மடைந்து தன்னை இன்னளென அறிவித்து அவ்விருடிக்கு ஏவல் புரிந்திருக்கையில் நாசியின்வழி ஒரு ஆண்குழந்தையைப் பெற அம்முனிவர் அவள் நாசியின் வழிபிறந்ததால் நாசிகேது எனப் பெயரிட்டனர். பின் துற்கடமுனிவர் நாசிகேதுவை உத்தாலகரிடம் அனுப்பி அவருக்கு வேண்டிய பணிகளைச் செய்யக் கட்டளையிட்டனர். அவ்வாறே நாசிகேது அவர்க்கும் ஆண்டிருந்த முனிவர்களுக்குஞ் செய்து வருகையில் முனிவர் களிப்படைந்து நீயார் என நாசிகேது உமது குமரன் எனக் கேட்டு ஞான திருஷ்டியால் நடந்தவை அறிந்து ஆயின் உன் தாயை அழைக்க என அவ்வாறே தாயையழைக்க அவள் துற்கடர் கட்டளைப்படி நடக்க என அவர் கட்டளைப்படி தன் பாட்டனாகிய பிரகுதரனுக்கு அறிவித்து உத்தாலகமுனிவரை வருவித்துத் தன் தந்தைக்கு மணஞ் செய்வித்தவன். இவ்வாறிருக்க உத்தாலகர்

ஒருநாள் தன் குமரனுடன் தீர்த்தமாடச் சென்று தருப்பையை மறந்து வந்தபடியால் குமரனை நோக்கித் தருப்பை யெடுத்துவர ஏவக் குமரர்சென்று தருப்பையைக் காணாது வெறுங்கையாய் வந்து தருப்பை யில்லாமைகூற முனிவர் வேறு கருப்பையாயினும் கொண்டுவராது வந்தமையால் கோபித்து நீ யமபுரங் கண்டு மீளுக என்றனர். உடனே குமரன் இறக்க முனிவர் அறியாது சபித்தேனென விசனமுறுகையில் குமரன் எழுந்திருந்து தந்தையைப் பணியத் தந்தை குமரனைத் தீர்க்காயுளாயிருக்க என வாழ்த்த அவ்வாறிருக்கையில் முனிவர்கள் இவனிடம்வந்து நரகலோக மெவ்வாறிருந்ததென அவர்களுக்கு யமபுரச்செய்தி கூறினவன். (நாசிகேது கதை).

**நாசியன்** — கத்ருதநயன் நாகன.

**நாச்சைசயர்** — ஒரு வீரசைவர். சமணரை வென்று கருவறுத்தவர்.

**நாஞ்சில்வளவன்** — இவன் ஒரு வளளல. இவனை ஒளவை அரிசிகேட்க ஒரு யானை கொடுத்தான். ஆதலால் இவன்மீது "தடவுசிலைப் பலவுநாஞ்சிற் பொருநன்" எனப் பாடினன்.

**நாஞ்சில்வள்ளுவன்** — ஒரு சிறைப் பெரியனாற் பாடல் பெற்றவன். நாஞ்சில் மலையுடையான் இவனைப் பாடிய புலவர், மருதன் இளநாகனர், கருவூர்க் கதப்பிள்ளை. சோழனுக்குப் படைத்துணை யானவன். (புற-நா.)

**நாஞ்சினாட்டுவேளாளர்** — இவர்கள் மலையாளத்துப் பரவியுள்ள வேளாண்குடி மக்கள். இவர்கள் பாண்டியர்களுக்கும் மலைநாட்டாருக்கும் யுத்தம் நடக்கையில் திருவனந்தபுரத்தை அடைக்கலமாகக் கொண்டவர்கள். இவர்களில் பெரும்பாலார் உழவர். (தர்ஸ்டன்).

**நாடகச்சாதி** — இது பத்துவகை. நாடகம், பிரகரணம், பாணம், பிரகசனம், டிமம், வியாயோகம், சம்வாகாரம், வீதி, அங்கம், ஈஹாமிருகம் முதலிய. (தண்டி - உரை).

**நாடகத்தமிழ்** — இது நிலத்தோடும், கலத்தோடும், கண்டத்தோடும், கருவியோடும், நிலையோடும், இயக்கத்தோடும், இருவகை. பலவகை விலக்குறுப்புக் கை கால் வட்டணை, பொருள், விருத்தி, யோனி, சந்தி, சாதி, சுவை, குறிப்பு, சத்துவம், அவிநயம், சொல், சொல்வகை, வண்ணம், வரி, சேதம் என்பனவற்றோடும்; கதையோடும் பல கூத்துக் கூறுங்கால் உய்த்துணர்வில்லோர்க்குச் செவிச்சுவை பயக்கக் கூறுவது. (சிலப்பதிகாரம்.)

**நாடகம்** — அகநாடகம், புறநாடகம் என இரண்டு. அகநாடக உரு (உஅ). அவை கந்த முதலாகப் பிரபந்த மிறுதியாக வுள்ளவை. கந்தம் என்பது - அடிவரையறையுடைத்தாய் ஒரு தாளத்தாற் புணர்ப்பது. பிரபந்தமென்பது - அடிவரையறை யின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது. புறநாடக உருவாவன தேவபாணி முதலாக அரங்கொழிச் செய்யுளீறுகச் செந்துறை விகற்பங்களெல்லாம் என்க. அகநாடகத்திற் குரியவை கீற்றுக்கடிசரி முதலிய தேசிற்குரிய கால்களும், சுற்றுதல், எறிதல், உடைத்தல் முதலாகிய வடுகிற்குரிய கால்களும், உடற்றூக்கு முதலாகிய உடலவர்த்தனையுமாம். புறநாடகத்திற் குரிய ஆடல்களாவன - பெருநடை, சாரியை, பிரமரி முதலாயினவும் பதினோராடலிற் கூத்துக்களுமாம்.

**நாடார்** — சாணர்க்கு ஒரு பட்டப்பெயர்.

**நாடி** — (கூ.) சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி, இவற்றுள் சுழிமுனை, ஆதாரம் ஆறிலும் நிற்பது. இடைகலை பிங்கலை கத்திரிகைச் சாற்போல் உடல்முழுதும் பின்னி நிற்பது. காந்தாரி, நாபியிலும், அத்தி, சிகுவை கண்களிலும், அலம்புடை, புருடன், இவை காதுகள் இரண்டினும், குரு, நாபியிலும், சங்கினி, உபத்தத்திலும் உறையும்.

**நாடிகள்** — (உடம்பிலுள்ள நிலையை நாடுதலால் இப்பெயர்.) இவை தேகத்தில் உந்திச் சுழியிலிருந்தெழுந்து கீழ் மேலாய்ப் பேய்ப்பீர்க்கின் கூடுபோல் தேகத்தைப் பின்னி நிற்பனவாம். இவை தேகமுழுதும் (72,000) எனத் தமிழ் நூல்கள் கூறும். ஆயினும் இவற்றில் தசநாடிகள் முக்யமானவை, அவற்றிலும் இடைகலை, பிங்கலை, சுழிமுனை முக்கியமானவை. இவை மூன்றும்ஒன்றாய் ஒருநரம்பாகி இடைகலை வாத நாடியாகவும், பிங்கலை பித்தநாடியாகவும் சுழிமுனை சிலேத்மநாடியாகவும் நடந்து இருதயத்தின் குணங்களைத் தெரிவிக்கும். தசநாடிகளினிலையினை நாடிகள் பத்தில் தெரிவித்தோம். இந்நாடிகளினடை இருதயத்தின் சம்பந்தமான சுவாசநிலையையும்

அநுசரித்து நிற்கும். இச்சுவாசம் நாழிகை யொன்றுக்கு (௩௬0) சுவாசமாக, நாள் ஒன்றுக்கு (உக,௬00) ஆக அங்குலப்பிரமாணம் ஓடும், இதுவே வாதநாடி, இதற்கு மாத்திரை (௧) பிங்கலை (௧௨) அங்குலப்பிரமாணமோடும் இதுவே பித்தநாடி, மாத்திரை (அரை). சுழிமுனை இந்த இரண்டு நாடிகளினும் பகிர்ந்தோடும் இதுவே சிலேத்மநாடி மாத்திரை (வ) நாடிகளின் நடை இருதயத்தினிடது சடாங்குவியும்போது இரத்தம் நரம்பின் வழியோடிப் பலநாடிகளில் பரவும், அப்போது நாடிகள் விரியும். மீண்டுமது விரிகையில் நாடிகளில் இரத்தங் குறைந்து நாடிசுருங்கும். இவ்வாறு விரிந்துங்குவிந்தும் வருதலால் அதனுடனியைந்த நாடிகளும் விரிதலும் குவிதலுமடைகின்றன. இச்செய்கையே நாடிநடையாம். நாடிபார்க்கும் விதம்-கையைப் பிடித்து நெட்டை வாங்கிப் பெருவிரற் பக்கமாகவிருக்கும் ஆரையென்பின் மேல் ஓடும் நாடியை மணிக்கட்டுக்கு ஓரங்குல மேலாக மூன்று விரலாற் சமமாக மெதுவாக அழுத்திநாடியைப் பரீக்ஷித்த பின் விரல்களை மாறிமாறி அழுத்தியுந்தளர்த்தியும் பார்த்தால் நாடி நடையை யறியலாம். புருஷருக்கு வலது கையிலும், பெண்களுக்கு இடது கையிலும் நாடிபார்க்கவேண்டும். இவ்வாறு நாடியையாராயு மிடத்துப் பெருவிரல் நீங்கச் சுட்டுவிரல் வாதம், நடுவிரல் பித்தம், மோதிரவிரல் சிலேஷ்மமாம். இவற்றில் சேராத பெருவிரல், சுண்டுவிரல் பூதநாடிகளாம். புருஷர்களுக்கு வாதநாடி மயில், அன்னம், கோழி நடைகளை யொத்தும், பித்தநாடி, ஆமை, அட்டைகளை யொத்தும், சிலேத்மம் பாம்பு, தவளைகளை யொத்தும் நடக்கும். பெண்களுக்கு - வாதம் சர்ப்பம் போலும், பித்தம் - தவளைபோலும், சிலேஷ்மம் - அன்னம்போலும் நடக்கும். இதில் குருநாடி இந்த ஐந்து விரலையுஞ் சேர்ந்திருக்கும். இந்த நாடிகளின் நடைவேறுபட்டால் நோய்களின் வேறுபாடுகளை யறியவேண்டும். நாடி படபடக்கும் காலம் - நடந்தலுத்தபோதும், உணவருந்திய பின்பும், உஷ்ணமாகப் பதார்த்தங்களைத் தின்ற காலத்தும், சாராயம், புகையிலை, லாகிரி வஸ்துக்கள், வெயில், சுரம் நித்திரைபங்கம், மனச் சஞ்சலம், அதிக பலவீனம், இரத்தம் வடிதல் முதலிய காலங்களிலாம். நாடிகளின் உண்மை யறியாமை - பசி, விசனம், குளிர், அதிநித்திரை, விருத்தர், பாலர், க்ஷயரோகிகள், தரித்திரர், சிற்றின்பஞ் செய்தோர், தண்ணீரில் மூழ்கினோர்க்கு நாடி உண்மை தெரியாது.

**நாடிக்ரந்தம்**—சோதிட நூல்கள்; சூர்யநாடி, சந்திரநாடி, குசநாடி, புதநாடி, சுக்ரநாடி, குருநாடி, சாமிநாடி, இராகுநாடி, கேதுநாடி, சர்வசங்கிரகநாடி, பாவநாடி, துருவநாடி, சர்வநாடி, சுகநாடி, தேவிநாடி முதலிய தெரிவிக்கு நூல்.

**நாடிவிரணரோகம்** — இது நரம்புகளில் உண்டாகும் கட்டி விஷமித்தால் நரம்பைப் பற்றி மாமிசதாது முதல் அஸ்திவரையில் சிலையோடித் துன்பப்படுத்துவது. இது வாத, பித்த, சிலேஷ்ம, திரிதோஷ, அஸ்திபேதத்தால் உண்டாம். (ஜீவ.)

**நாடுகோட்பாடு சோலாதன்** — காக்கைபாடினியார் நச்செள்ளையாராற் பாடல்பெற்றவன்.

**நாடுபடுதிரவியம்** — செந்நெல், சிறுபயறு, செவ்விளநீர், செங்கரும்பு, வாழை முதலிய.

**நாடுவாழ்த்து** — காலிலே உறத்தாழ்ந்த பெரிய கரத்தினையுடையான் தேசத்தினது நன்மையைச் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)

**நாட்டமைதி** — (ய) செல்வம், விளைநிலம், செங்கோல், நோயின்மை, வளம், குறும்பின்மை.

**நாட்டாழ்வார்** — (நாடாவார்) கள்ளர்சாதியில் ஓர் வகுப்பினர்.

**நாட்டான்** — நாட்டுப்புரத்தான் எனும் பொருள்பட்டது. இது வேளாளனுக்குத் தாழ்ந்த ஒரு பிரிவு. இந்தப் பட்டம் தமிழ்ச் செம்படவர், பட்டணவர், கள்ளர் இவர்களுக்கும் வழங்கி வருகிறது.

**நாட்டுக்குற்றம்** — 1. (எ) தொட்டியர், கள்வர், யானை, பன்றி, விட்டில், கிள்ளை, பெருமழை.

2. (அ) விட்டில், தன்னரசு, வேற்றரசு யானை, மிகுமழை, மிகுகாற்று, கிள்ளை, நட்டம்.

**நாட்டுக்கோட்டைச் செட்டிமார்** — இவர்கள் ஆதியில் சந்திரகுலத்தைச் சேர்ந்த வைசியர்கள். இவர்கள் நாகநாட்டில் சந்தியாபுரியில் வாழ்ந்துகொண் டிருந்தவர்கள். இவர்கள் இரத்தின விநாயகரை வணங்கி வருவர். இவர்கள் சைவர். இவர்

கள் தாங்களிருந்த நாட்டரசனால் பீடிக்கப்பட்டுத் தொண்டைமண்டலத்துக் காஞ்சிபுரியில் குடிபுகுந்தனர். இது கலி. (204) இல் இங்கு அரசனால் இடம் விடப்பட்டு வாழ்ந்து வருகையில் கலி. (2312) இல் அரசன் விதித்த வரியின் கொடுமைச் சகிக்கமுடியாமல் காவிரிப்பூம் பட்டணம் சேர்ந்தனர். அந்தக்காலத்தில் அப்பட்டணம் அதிக வளம் பெற்றிருந்தது. இதிலிருந்த வடக்குவீதி மற்ற செட்டிகளுக்கு இருப்பிடமாயிற்று. அரசன் இவர்களை கிழக்கு, மேற்கு, தெற்கு வீதிகளில் இருக்கச் செய்தனன். அரசன் இவர்களுக்குச் சிங்கக் கொடியும், பொற்கலசமும் கொடுத்தனன். இவர்கள் அரசன் தூண்டுதலாற் சிதம்பரத்திலுள்ள ஈசான சிவாசாரியார் மடத்திற்குச் சீடர்களாயினர். கலி. (3775) இல் பூவாண்டிசோழன் இவர்களை வருத்தியதால் இவர்கள் தங்கள் குழந்தைகளை ஆத்மநாதாசாரியர் வசம் ஒப்புவித்துத் தற்கொலைபுரிந்து கொண்டனர். பிறகு இராஜபூஷணசோழன் பட்ட மடைந்தனன். வளர்க்கப்பட்ட மூன்றுவீதிக்காரரும் திருவாரூர், கும்பகோணம், திருவாஞ்சியம் எனும் மூன்று மடத்திற்குச் சீடராயினர். ஏறத்தாழ கலி (3808) இல் சுந்தரபாண்டியன் வைசியரில் சிலரைப் பாண்டிநாட்டிற்கனுப்பக் கேட்டுக்கொண்டனன். அவ்வாறே இவர்கள் பாண்டிநாட்டில் ஒங்காரக் குடியில் குடிபுகுந்தனர். கிழக்குவீதியார் இளையாத்தைக் குடியிலும், மேற்குவீதியார் அறையூரிலும், தெற்குவீதியார் சுந்தரப்பட்டணத்திலும் மூன்றுவகையாக வாழ்ந்து வந்தனர். இவர்களில் இளையாத்தைக் குடிவகுப்பு நாட்டுக்கோட்டைச் செட்டிகள் தங்களுக்கு ஒரு கோவில் போதாதெனக் கேட்க அரசன் இவர்களுக்கு மாத்தூர், வயிரவன்பட்டி, இரானியூர், பிள்ளையார்பட்டி, நேமம், இலுப்பைக்குடி, சூரைக்குடி, வேளாங்குடி முதலிய தேவஸ்தானங்களைக் காட்டினன். இவர்கள் நாட்டரசன் கோட்டையிலிருந்து வந்தவர்கள் ஆதலால் இப்பெயர் பெற்றனர். இவர்கள் வெகு செட்டாக வர்த்தகஞ் செய்வோர். பெருஞ் செல்வ முள்ளவர்கள். இவர்களுக்குத் தற்கால இருப்பு திருப்பத்தூர், தேவக்கோட்டை. இவர்கள் வர்த்தகத்தின் பொருட்டுப் பெண்டு பிள்ளைகளையும் விட்டுத் திரைகடலோடி வேற்று நாடுகளிலும் தங்கள் வர்த்தகத்தைச் செய்வர். இவர்களுக்குப் பல புத்திரர் இருக்கினும் தந்தை யிருக்கும்வரையில் ஒற்றுமையாய் வாழ்வர். இவர்கள் தங்கள் இலாபத்தில் ஒரு பகுதியைத் தருமத்தின் பொருட்டுச் செலவிடுவர். இவர்கள் பிறந்த சிலநாள் பொறுத்துத் தலையை முண்டனஞ் செய்வர், அதுமுதல் தாங்கள் அவ்வாறே முண்டனஞ் செய்துகொள்வர். இவர்கள் சைவசமயத்தை அநுசரித்தவர்கள். சிதம்பரம், திருவண்ணாமலை, மதுரை, திருக்காளத்தி முதலிய பல சிவாலயங்களைப் புதுக்கிய திருப்பணி வியக்கத்தக்கது. இவர்களைத் தமிழ்நாட்டரசரின் மாறிய பிறப்பெனவே புகழலாம். இவர்கள் தேச, மத, கல்வியின்பொருட்டு ஏற்படுத்தியுள்ள கலாசாலைகள் இவர்களுடைய புண்ணிய நிலைமைக்கு ஒரு அறிகுறியாம். இவர்கள் உலகநன்றி யெக்காலு மறக்கத்தக்கதன்று.

**நாட்டுச்சாம்பன்** — கிராமப் பறையன்.

**நாணயங்கள்** — இவை பொன், வெள்ளி, செம்பு, அலுமீனியம், பித்தளை முதலிய லோகங்களால் பண்டமாற்றற்பொருட்டு அரச முத்திரையிட்டுச் செய்யப்பட்ட காசுகள்.

**நாண்மங்கலம்** — தருமத்தினை யுண்டாக்கும் செங்கோலினையும், அருளினையும் விரும்பியோன் பிறந்த நாளின் தன்மையைச் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)

**நாண்முல்லை** — பகைவர்நாணச் சிவந்த ஆபரணத்தினையுடைய மடந்தைத் கணவன் பிரிந்த இல்லிலே தங்கித் தன்னைப் பரிகரித்தது. (பு. வெ. பொது.)

**நாதசன்மா**—விருத்தாசலபுராணம் அநவர்த்திக்குக் கூறியவன்.

**நாதமுனிகள்** — கஜாநனம்சரான இவர் கலியுகம். (௩௬அ௪) இல் சோபகிருதுவருஷம் ஆனிமாதம் புதன்கிழமை வீரநாராயணபுரத்தில், ஈச்வரமுனிகளுக்குத் திருவவதரித்து நாதரெனப் பிள்ளைத்திருநாமம் பெற்று ஒதியுணர்ந்து அரவிந்தப் பாவையை மணந்து மன்னனார் என்று திருநாமமுடைய வீரநாராயணபுரத்துப் பெருமாளிடத்தில் ஈடுபட்டு யோகநிஷ்டராய் இருந்தனர். அக்காலத்தில் இவருக்கு ஒரு புத்திரர் பிறந்தனர். அக்குமாருக்கு ஈச்வரமுனிகள் எனத் தந்தையின் பெயரிட்டு யோகத்திருந்து நீங்கித் திவ்யதேச யாத்திரைசெய்து தமதிடந் திரும்பி மன்னனா

ருக்குக் கைங்கர்யஞ் செய்து வருகையில் திருநகரியிலிருந்துவந்த ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஓதியருளிய "ஆராவமுதே" என்னுந் திருவாய் மொழியைக் கேட்டு மகிழ்ந்து அதைக் கிரகித்து மற்றப் பாசுரங்களைக் கேட்க அவர்களதையறியாமையால் மனம் வருந்தி அவர்களுக்கு அந்தப் பாசுரம் வந்தவழி வினவினர். அவர்கள் திருக்குடந்தையிற் பெற்றோமென அத்திருப்பதிக்கெழுந்தருளி அங்கிருந்த பெரியவர்களைக் கேட்டனர். அக்குடந்தை நாட்டவரும் இத்திருப்பதிகமே அறிவோமென அங்கிருந்து திருநகரிக்கெழுந்தருளி வினவினர். அங்கிருந்தாரில் பெரியராகிய பராங்குசதாசரென்பவர் திருவாய்மொழியென்று கேட்டதுண்டு ஓதியறியோம் ஆயினும் எங்கள் சாம்பிரதாயமாய் ஆழ்வார் விஷயமாய் அருளிச் செய்யப்பட்ட கண்ணினுண் சிறுத்தாம்பு என்னும் பாசுராதிகளை (கஉOO) முறை ஓதின் ஆழ்வார் பிரத்தியக்ஷமாவாரெனக் கேட்டு அவ்வகை புரிய ஆழ்வார் மதுரகவிகளிடம் யோகத்தெழுந்தருளி என்ன வேண்டுமென்றனர். நாதமுனிகள் திருவாய்மொழி பிரசாதிக்க என்றனர். ஆழ்வார் அவ்வகை அருளிச்செய்து மறைந்தனர். பின்பு நாதமுனிகள் திருவரங்கஞ் சென்று திருஅத்தியயனோற்சவம் நடப்பித்துத் திருக்குடந்தையில் நம்மாழ்வாரைப் பிரதிட்டை செய்வித்து ஆராவமுதாழ்வாரெனப் பெருமாளுக்குத் திருநாமம் சாற்றி அங்கிருந்து வீரநாராயணபுர மெழுந்தருளிக் கீழையகத்தாழ்வான் மேலையகத்தாழ்வான் முதலியவர்க்குத் திவ்யப்பிரபந்தங் கற்பித்தருளிப் பிரசித்தி செய்தனர். இப்பிரபந்தத்தை இரண்டு தாசிகள் தேவகான மனுஷ்யகானத்துடன் கங்கைகொண்ட சோழபுரத்தில் சோழன் சமஸ்தானத்தில் பாடினர். அரசன் மனுஷ்யகானம் பாடினவளுக்கு வேண்டிய பரிசளித்துத் தேவகானம் பாடினவளைச் சம்மானிக்காது விட்டனன். தேவகானம்பாடிய தாசி ஆத்மார்த்தமாய்ப் பாடிக்கொண்டு வீரநாராயணபுரத்திற்பாட நாதமுனிகள் களிப்படைந்து மாலை முதலிய பிரசாதித்தருளினர். இதையறிந்த சோழன் நாதமுனிகளை வருவித்துத் தேவகானத்தின் பெருமை என்னவென அவர் ஒரு தாளத்தைக் கருங்கற்றூணில் வைத்துக் கானம் பாடச்சொல்ல அத்தூண் உருகிற்று. பின்பு பாடலை நிறுத்தித் தாளத்தையெடுக்கச் சொல்லத் தாளம் இறுகிற்று. பின்னும் நாதமுனிகள் ஏககாலத்து 400 தாளங்களைத் தட்டச் சொல்ல அவைகள் இவ்வளவினவென்று நிறைகூறித் தேவகானப் பெருமை அறிவித்தனர். அரசன் மகிழ்ந்து தேவகான தாசிக்கு மரியாதை முதலிய நடத்தி நாதமுனிகளைத் துதித்திருந்தான். இவ்வகை நடத்திய பின்பு நாதமுனிகள், குருகைக்காவலப்பன், புண்டரீகாக்ஷர், நம்பிகருணாகரதாசர், ஏறுதிருவுடையார், திருக்கண்ணமங்கையாண்டான், வானமாதேவியாண்டான், உறுப்புட்டூர் ஆச்சான்பிள்ளை, சோகத்தூர் ஆழ்வான், இவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்திருக்கையில் வங்கிபுரத்தாய்ச்சி தன் பெண்ணாகிய அரவிந்தப்பாவையைப் பார்க்க அழைத்தனள். நாதமுனிகள் அரவிந்தப் பாவையைப் புண்டரீகாக்ஷருடன் வங்கிபுரத்தாய்ச்சியிடம் அனுப்பினர். ஆய்ச்சி புண்டரீகாக்ஷருக்கு முன்னாள் நீரிவிட்ட சேடித்த அன்னத்தை இட்டனள். புண்டரீகாக்ஷர் அதைக் களிப்புடன் உண்டு நாதமுனிகள் வினவிய காலையில் நடந்தவைகூற நாதமுனிகள் களித்து நம்மை உய்யக்கொண்டீர் என்றனர். இவற்றையறிந்த வங்கிபுரத் தாய்ச்சி புண்டரீகாக்ஷரிடம்வந்து க்ஷமிக்கக் கேட்கக் களித்திருக்கையில் நாதமுனிகள் தம் குமாரரிடத்தில் ஒரு குமரன் உதிப்பன் அவனுக்கு யமுனைத்துறைவன் எனப் பெயரிடுக என உய்யக் கொண்டாருக்குக் கட்டளையிட்டு யோகத்தெழுந்தருளியிருந்தனர். சிலநாள் கழித்து யோகநீங்கி யெழுந்து ஈசுரமுனிகளின் குமரருக்கு மணக்கால்நம்பி, யமுனைத்துறைவன் எனப் பெயரிட்டதைக் கண்டு களித்து இருந்தனர். இவ்வாறு இருக்கையில் ஒருநாள் நாதமுனிகள் தீர்த்தமாடச் சென்றிருக்கையில் இவரது குமரிகள்வந்து ஐயரே இரண்டு வில்லிகள் ஒரு பெண்பிள்ளை, ஒரு குரங்குடன் வந்து உம்மை வினவினர். நாங்கள் அவர் நீராடி வருவரென்றோம், அவர்கள் விரைந்துவரச் சொல்லுகவெனக் கூறித் தென்திசை சென்றனர் எனக் கேட்டு, அவ்வில்லிகள் சென்ற திசைநோக்கிச் சென்று கங்கைகொண்ட சோழபுரத்தை அடைந்தனர். அங்கிருந்தாரை இரண்டு வில்லிகள் ஒரு பெண்ணரசியுடனும் குரங்குடனும் செல்

யின்றதைக் கண்டீரோவெனக் கேட்டு அப்புறஞ் செல்லுகையிற் பெருமாள் அழகிய சிங்கராய்ச் சேவைசாதித்தருளினர். நாதமுனிகள் சக்கிரவர்த்தி திருமகனை வலிய வந்தும் காணப்பெற்றிலோமென்று மூர்ச்சித்திருக்கையில் பெருமாள் சக்கிரவர்த்தித் திருமகனுய்ச் சேவைசாதித்தருளக் கண்டு களித்துக் குருகைக்காவலப்பன் கோவிலில் திருநாட்டுக் கெழுந்தருளினர். இவர் (௩௪0) வருஷம் எழுந்தருளி யிருந்தனர். இவர் அருளிய பிரபந்தம் நியாயதத்வம், யோகரகஸ்யம்.

**நாதம்** — 1. சிவரூபமாய்ச் சூக்ஷ்மாதி சூக்ஷ்மமாய் யோகிகளால் உணரப்படும் பொருள்.

2. என்பது, த்வனி. இது இரண்டு கரத்திலுள்ள கட்டைவிரல்களை இரண்டு காதின் துவாரத்தில் மூடிக்கொண்டால் கேட்கும் ஓசையே நாதம். (சி - சா.)

3. என்பது அதிகிராந்த விந்துக பராசத்தியினிலே. இந்த நாதம் பரநாதம், அபரநாதம், பராற்பரநாதம் என மூவகைப்படும். அவற்றுள் பரநாதம் - உன்மனுகலாதி சாந்தியதீத கலாந்தகாரிய சிவகலா சத்தியையும், சமனுதி அபாவிந்து நிவர்த்தியந்த காரியசத்தி கலாசத்தியையும், சமாகாராத்மகமாயுள்ள காரணசாந்திய தீத கலா ரூபமகாமாயை. இது பரசிவதத்வங்களாகிய வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதை முதலிய ஐந்து கலைகளை வியாபித்திருக்கும். அபரநாதம் - என்பது இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்தவகை, முதலிய சத்திகளின் கலைகளாய் அபரசிவ தத்வமெனப்படும். பராற்பரநாதம் - உன்மனை எனப்படும். இந்த உன்மனை சமனை இவ்விரண்டும் சிவசத்தி கலைகளாம்.

**நாதர்** — நாதமுனிகளுக்குப் பிள்ளைத்திருநாமம்.

**நாதவன்**—குண்டலபுரத்தின் முதல் அரசன். இவனால் தோன்றியகுலம் நாதவகுலம்.

**நாதிகன்** — பாரதவீரரில் ஒருவன். காலபுத்திரர் அம்சம்.

**நா நீண்ட பறவை** — இது மீன்குத்தியினத்தது. இதன் வால் சிறகுகள் குட்டை. இதன் இறக்கையிலும் முதுகிலும் கறுப்பும் வெண்மையுமான கோடுகள் அடுக்காயிருக்கின்றன. இதனலகு சிறியதாயினும் அதிலுள்ள நாக்கு அலகினும் நீண்டது. இப்பறவை அந்நாவை நீட்டித் தூரத்திலுள்ள பூச்சி புழுக்களை அந்நாவிலுள்ள பசையால் ஒட்டச்செய்து உண்ணும்.

**நாபகை** — ஒரு நதி.

**நாபாகன்** — 1. நரபாகன் எனவும் பெயர். திஷ்டன் குமரன். இவன் சுப்பிரபை யென்னும் வைசியப்பெண்ணை மணந்ததால் வைசியனானன். இவன் குமரன் பலந்தன். இவன் இராஜருஷியாயினன்.

2. சுகோத்ரன் குமரன்.

**நாபாநேதிஷ்டன்** — மநுவின் புத்ரன். இவன் தமது பிதுரார்ச்சித பொருளைப் பாகித்துக் கொள்வதினின்று நீக்கப்பட்டிருந்தவன்.

**நாபாஜிபக்தர்** — காசி நகரத்தில் அக்ரஜி யென்னும் பக்தர் அரிபக்தி மிகுந்தவராய் வருங்காலையில் க்ஷாமம் வந்தது. அந்நாட்களில் ஒருநாள் அவ்வூரிலிருந்த ஒருத்தி தன் பிள்ளையுடன் உணவில்லாது வருந்தி ஆற்றினருகடைந்து பிள்ளையைக் கரையில் விட்டு ஆற்றில் வீழ்ந்து இறந்தனள். குழந்தை தாயைக் காணுமல் ஆற்றருகு தனித்து அழுதுகொண் டிருக்கையில் அக்ரஜிபக்தர் ஆற்றிற்கு ஸ்நானத்திற்குச் சென்று அப்பிள்ளை தனித்தழுதலைக்கண்டு வரலாறறிந்து பயப்பட வேண்டாமென்னும் பொருள்பட நாபாஜி என்றுகூறி உடனழைத்துவந்து மடத்தில்விட்டு நாபாஜியென அழைத்து வந்தனர். பக்தர் இளைமைப் பருவமுதல் தாசரது ஏவல் முதலிய செய்தலாலும் அரிகீர்த்தனை கேட்டலாலும் மெய்யறிவடைந்திருந்தனர். இதனை அறியாத அக்ரஜி ஒருநாள் நாபாஜியை நோக்கி நான் பெருமாளைப் பூசிக்கச் செல்கின்றேன் உள்ளே ஒருவரையும் விடாது புறத்தே காத்துக்கொண்டிருக்க எனக் கூறித் தியானத்திருக்கையில் அன்றைக்குப் பெருமாள் தரிசனங்கொடாததுகண்டு வருந்துகையில் புறத்திருந்த நாபாஜி இன்று பெருமாள் கடலின் வணிகன் ஒருவனது கப்பல்மூழ்க அதனை அவன் அக்ரஜிக்கு இக்கப்பலிலுள்ள பொருள்களில் ஐந்திலொன்று தருவதாகப் பிரார்த்திக்கக் கேட்டு அக்கப்பலைக் காக்கச் சென்றிருக்கிறார் ஆதலால் தரிசனந் தந்திலர், அத்தொழில் முடிந்தமையால் இனித் தியானிக்கின் வருவர்என, அவ்வாறு தியானிக்கப் பெருமாள் ஈரவஸ்திரத்துடன் தரிசனந் தரச் செய்தி கேட்டுணர்ந்து நாபாஜியைப் புகழ்ந்து உமக்கு இத்தகைய

ஞான மெவ்வகை வந்ததெனத் தேவரீரது பெருமையெனக் கூறிப் பெருமாள் அருள் பெற்று இருந்தவர்.

**நாபி** — 1. ஆக்னீத்ரசுதன். குமரி சுதேவி. தேவி மேரு. (பாகவதம்.)

2. இரண்யரோமன் அல்லது இரண்ய ரேதஸுக்குக் குமரன்.

**நாபிக்கிழங்கு** — இதுவே விஷநாபி. இது விஷமுள்ள மருந்து. இவ்வகையில் வெண்ணாவி, கருநாவி, சூத்திரநாவி முதலிய உண்டு. இவற்றைச் சுத்தி செய்யாது மருந்துகளுடன் சேர்க்கின் மரணத்தை யொத்த துன்பம் விளைக்கும்.

**நாபிமகாராசா** — இவனுண்டது அயோத்தியாநகரம். இக்ஷவாகுவம்சம். தேவி மருதேவியம்மாள். குமரர் இருஷபதீர்த்தங்கரர். இவரைச் சைநர் தம் சமயத்தினர் என்பர். (மா - புராணம்.)

**நாமகரணம்**—பிராமணருக்குப் பிள்ளை பிறந்த 12-ம் நாளும், க்ஷத்திரியருக்கு 16-ம் நாளும், வைசியருக்கு 21-ம் நாளும், சூத்திரருக்கு 31-ம் நாளும் நாமகரணம்செய்ய வேண்டும். இந்நாட் கழிந்தால் சுபதினங்களிலே ஸ்திரிராசிக ளுதயமாக லக்கினம் 5-ம்இடம், 8-ம்இடம் சுத்தமாகப் பூர்வான்னத்திலே நாமகரணஞ் செய்யவேண்டும்.

**நாமகள்** — கடைச்சங்கத்தி லிருந்த சரஸ்வதியினம்சம். திருவள்ளுவர்க்கு "நாடாமுதனுன்மறை நான்முகனுவிற், பாடாவிடைப்பாரதம் பகர்ந்தேன், — கூடாரை, என்ருவன் மீனுயர்த்த வேந்திலே வேல்வேந்தனே, வள்ளுவன் வாயதென்வாக்கு" எனப்புகழ்ச்சி கூறியவள்.

**நாமதேவர்** — ஒரு பாகவதர். இவர் ஒரு தொழிலுமின்றி இருந்தபோது தாய் இவரை நோக்கி மகனே நமக்குப் பொருளுண்டாகும் வகை ஏதேனும் வர்த்தகாதிகள் செய்யாதொழியி னில்லறம் எவ்வாறு நடக்குமெனக் கூறக்கேட்டு யான் பணமிலாது யாது செய்வதெனக் கேட்ட தாய் இவரை நோக்கி இவ்வூரில் எவர்க்கும் உபகரியாத லோபிதாதா என்பவன் அதிக பொருள் வைத்திருக்கின்ருன் அவனிடைச் சென்று கடன்பெற்று வர்த்தகஞ் செய்வோமென்று தானே சென்று எனது மகன் ஒரு வேலையுமின்றிச் சும்மாவிருக்கின்ருன் அவனுக்கு வர்த்தகஞ் செய்யப் பொருளுமில்லை ஆதலால் நீ எனக்கு ஆயிரம் வராகன் தரில் ஆறுமாத அளவில் கொடுத்து விடுகிறேனெனக் கேட்க விட்டலன் அவனது இற்புகுந் துடன்படுத்தத் தாப் பொருள்பெற்று வந்து மகனிடங் கூறினள். மகனுமதற் குடன்பட்டு நிதி பெற்று வேதியருடன் எந்த வர்த்தகஞ் செயி னன்ருமென ஆயத் தாம் எண்ணியபடி அவரும் சமாராதனை செய்வது குற்றமில்லாத வர்த்தகமெனக் கூறக்கேட்டுக் கங்கையினருகு ஒரு மடங் கட்டி அதிலன்னதானஞ் செய்து வருகையில் அனைவருங்கேட்டு நாமதேவரிடஞ் செல்லின் அன்னங் கிடைக்குமென்று சென்று புசித்துவந்தனர். இச்செய்தி நாடெங்கும் பரவப் பண்டரிபுரத்து வேதியரும் நாமதேவரிடம் செல்லின் உண்டு தக்ஷிணையும் பெற்று மீள்வோமென்று செல்லச் செல்வோரைக், கடன்கொடுத்த சௌகார் எங்குச் செல்கிறீர்களெனக் கேட்க அவர்களுண்மை கூறக்கேட்டுத் தானுஞ் செல்ல உடன்பட்டுச் சென்று அவரது ஈகையைக் கண்டு மனம் புழுங்கிச் செல்வர்க்குங் கொடுக்கவாராத ஈகையை நோக்கி என் பணம் போயிற்று இனி இவனிடம் தாப் பணமேது என்று ஏங்கி வருந்தி யிருப்பவனை நாமதேவர்கண்டு அடிவணங்கிச் சமாராதனைக்கு வந்தவர்களைநோக்கி, அடிகளே இதோ இருக்கிற பிரபுவே சமாராதனைக் குரியவர் அவரிடம் நீர் பெற்று அன்னமுண்க எனக் கூற அவ்வாறே சமாராதனைக்கு வந்தோ ரிவனை நீர்வார்க்கக் கேட்கக்கண்ட சௌகார், நான் தாய் தந்தையரின் சிரார்த்தமும் பொருள் செலவாமெனச் செய்தறியேன், கோவில்போ யறியேன், குளமெடுத்தறியேன், தருமகாரியங்கள் செய்தறியேன், இப்போதிவ்விடம் வந்திருக்கும் பிராமணரால் இந்த நாமதேவனுல் நிந்திக்கப்படலானேனென்று விழலுக்கு இறைத்த நீர்போல் என் பணம் போயிற்றென்று நாங்கள் வெகுதூரத்திலிருந்து அன்னதானத்தை நோக்கிவந்து அதிக பசியுட னிருக்கின்ருேமென்று தம்மை நிந்தித்துக்கூறும் வேதியரை நோக்கி இதோ நிந்தனைக்கும் உங்கள் பசிக்குமஞ்சி நீர் வார்க்கிறேன், இந்த அன்னதானப் பலன் நாமதேவனதாக என நீர்வார்த்தனன். இதனைக்கண்ட வேதியர் சிரித்தனர். சமாராதனைக்கு வந்தோர் நாமதேவர் உபசரிக்கக் கண்டு தக்ஷிணை வாங்கிச் சென்றனர். பின் சௌகார் நாமதேவரை நோக்கி

என் கடனை நீயே தரவேண்டு மெனச் சண்டவாதம் புரிந்து இல்லை யென்பை யேல் உன்னெதிரில் உயிர்விடுவேனென்ற னன். இவனது மூரட்டுச் செய்கைகண்ட நாமதேவர் பெருமாளைத் துதிக்க அவர் ஒரு வற்சவுருவுடன் தோன்றி எதிரிலிருக் கும் தீர்த்தத்தில் அவனை மூழ்கச்செய்யின் கடன்தீருமென்றுகூறி மறைந்தனர். நாம தேவரும் சௌகாரை நோக்கி நீ இந்தத் தீர்த்தத்தில் மூழ்கின் உன் கடனைத் தருகி றேனெனச் சௌகார் ஒகோ எனை நீரில் தள்ளி உயிர்போக்க எண்ணுகின்றனை யெனக் கூறி அவ்வா றுடன்படேனென்று கடைமுறை துணிந்து சலத்திற்சென்று மூழ்க அவ்விடமிருந்த பிலவழிச்சென்று பாதாளலோகத்தை அடைந்தான். அங்கு துருக்கர் உருக்கொண்டு இருக்கும் சாதுக்க ளுடன் பெருமாள் ஓர் துருக்க அரசரைப் போல் கண்ணைக் கவரத்தக்க சோதிமய மான இரத்தின சிங்காசனத்தில் வீற்றிருக் கக்கண்டு இதென்னென ஆச்சரியமடைந் திருக்கையில் ஆங்கு நின்றவர் எம்பெருமா னும்மை உண்ண வழைக்கின்றான், மாம்ச முதலியவும் அன்னமும் பலவாகப் புசிக்க விருக்கின்றன எனக் கூறக்கேட்ட சௌ கார் மனனடுங்கி ஆங்குப் பணமிழந்தோம் ஈங்குச் சாதியுமிழக்கக் காலம் வந்ததெ தன வெண்ணி இத்தருணத்தில் நம்மைக் காப்ப வன் நாமதேவனேயெனச் சிந்திக்கையில் நாமதேவர் தோன்றி அஞ்சேல் சிங்காசனத் திலுள்ளான் துளவுபூண்டோன், மற்றவர் சாதுக்கள் அவர்களுடன் நீ உண்கவென நீர் மாயஜாலம் செய்ய வல்லவர் என்று அறியேன் உம்மிடம் கடன்சீட்டு எழுதியும் வாங்கிலன் நீர் இவ்வேளை என்னிடம் விடுவிரேல் இனி என்றும் கடன்கேளேன் எனக்கூறத் தேவர் இவ்விடம் உண்டுவருக என நான் உண்ண எனக்குணவாதிகளை யும் சமைக்க எரிமுட்டையும் வாங்கித் தருக என்றனர். அவை தந்தபின் னிந்த யவனர்களுக்குப் புறத்து என்னை விடுக என்ன நாமதேவர் உன்விழியை மூடிக் கொள் என அவன் மூடிக்கொண்ட மாத் திரையில் பண்டரிபுரத்துச் சந்திரபாகைத் தீர்த்தத்தில் எழுந்து அவ்விடங் கொடுத்த எரிமுட்டையை நதியில் உதறி வெளி வந்து இதென்ன நான் கங்கையில் மூழ் கினேன் சந்திரபாகையி லெழுந்தேன் நாம தேவர் கொடுத்த சாமகிரியைகளெல்லா மிருக்கின்றன என்று வீடடைய மனைவி பொருள் பெற்றீரோ வென நாமதேவர் மனிதரல்லர் தேவர் எனக் கூறுகையில் மனைவி வஸ்திரத்திலிருந்த முடியிலொட்டி யிருந்த எரிமுட்டையை நோக்க அது பொன்னாயிருந்தது கண்டு என் விதியி னளவாகப் பொருள் கிடைத்தது நான் நாமதேவரை வீணே நிந்தித்தேன், என அவரைத் துதித்திருந்தனன். பின் நாம தேவர் என்பொருட்டு மிலேச்ச வேடங் கொண்டு வந்தனையெனத் திருமாலை வண ங்கி அவருடன் பண்டரிபுர மடைந்தனர்.

நாமம் — (சுரு) நாககதி, திரியக்கதி, மனுஷ் யகதி, தேவகதி ஆக ச. நாகதத்யாநுபூர்வி, திரியக்கத்யாநுபூர்வி, மனுஷ்யகத்யாநு பூர்வி, தேவகத்யாநுபூர்வி ஆக ச. ஏகேந் திரியம், த்விந்திரியம், திரீந்திரியம், சது ரிந்திரியம், பஞ்சேந்திரியம் ஆக ரு. ஔதா ரிகசரீரம், வைகரீகசரீரம், ஆகாரகசரீரம், தைசசசரீரம், கார்மணசரீரம், ஆக ரு. ஔதாரிக பந்தனம், வைகரீக பந்தனம், ஆகாரகபந்தனம், தைசசபந்தனம், கார்ம ணபந்தனம் ஆக ரு. ஔதாரிகஸங்காதம், வைகாரிகஸங்காதம், ஆகாரகஸங்காதம், தைசசஸங்காதம், கார்மணசங்காதம் ஆகரு. ஔதாரிகாங் கோபாங்கம், வைகாரிகாங் கோபாங்கம், ஆகாரகாங் கோபாங்கம், ஆக ங. வச்சிரவிருஷப நாராசசம்ஹநநம், வச்சிர நாராசசம்ஹநநம், நாராசசம்ஹநநம், அர்த்த நாராசசம்ஹநநம், கீலிதஸம்ஹந நம், அசம்பிராப்த ஸரபாடிகாசம்ஹநநம். ஆக சு. சமசதுரச்ச சமஸ்தானம், நியக் ரோத சமஸ்தானம், சுவாதி சமஸ்தானம், வாமன சமஸ்தானம், குப்ச சமஸ்தானம், ஹீண்ட சமஸ்தானம் ஆக சு. ஸினிக்தஸ் பரிசம், ரூக்ஷஸ்பரிசம், சீதஸ்பரிசம், உஷ் ணஸ்பரிசம், உருபரிசம், லகுபரிசம், மிரு துபரிசம், கர்கசபரிசம் ஆக அ. சிவவேதம், பீதம், அரிதம், அருணம்; கிருஷ்ணம் ஆக வருணம் ரு. திக்தம், கடுகம், கஷாயம், ஆம்லம், மதுரம் ஆக ரஸம்-ரு. துர்கந்தம், சுகந்தம், ஆக கந்தம்-உ

1-அகுர்லகு, 2-உபகாதம், 3-பாகதம, 4-ஆபதம், 5-உத்யோதம், 6-உச்வாசநிச்வா சம், 7-பிரச்சதவிஹாயோகதி, 8-அப்ரச் சதவிஹாயோகதி, 9-ஸ்திரம், 10-அஸ்தி ரம், 11-சுபம், 12-அசுபம், 13-பாதரம், 14-சூக்ஷ்மம், 15-திரஸம், 16-ஸ்தாவரம், 17-பிரத்யேகம், 18-ஸாதாரணம், 19-பரி

யாப்தி, 20-அபர்யாப்தி, 21-சுபகம், 22-துர்பகம், 23-சுசுரம், 24-துச்சுரம், 25-ஆதேயம், 26-அநாதேயம், 27-அச்சகீர்த்தி, 28-அயச்சகீர்த்தி, 29-நிர்மாணம், 30-தீர்த்தகாத்வம் ஆக 30.

**நாமலார்மகன் இளங்கண்ணன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் பெயர் இளங்கண்ணராக இருக்கலாம். இவரது தந்தையார் நாமலார் என்பவர் போலும். (குறு - உகூ0.)

**நாமனூர்** — மேகத்திற்குப் புணைகொடுப்போர் யாரென்று பாண்டியன் கேட்டபொழுது வந்த மற்றையோரைத் தள்ளிவிட்டு "நாம்முன்" என்று சொல்லிக்கொண்டு புணைகொடுத்தற்கு வந்த உபகாரியினுடைய ஊர். இது களவேள்வி நாட்டிலுள்ள எழூர்களுள் ஒன்று. (திருவிளையாடல்.)

**நாயகன்** — 1. பத்துச் சிற்றூர்களுக்கு அதிபனாக நியமிக்கப்பட்டவன்.

2. இருபது யானைகளுக்கும், (20) குதிரைகளுக்கும் தலைவன். (சுக்.நீ.)

**நாயடி** — இவர்கள் இந்துக்களில் மிகத்தாழ்ந்த ஜாதியார். இவர்கள் நாயடித்துத் தின்போராதலால் இவர்கள் இப்பெயர் பெற்றனர். இவர்கள் இந்துக்களிருக்கும் இடத்திற்கு வெகுதூரத்தில் இருப்பவர்கள். இவர்களுக்கு எதாவது கொடுப்பதனால் அதை வெகுதூரத்தில் கீழேவைத்து விட்டால் அவர்கள் அதை எடுத்துக் கொள்வர். (தர்ஸ்டன்.)

**நாயர்**—மலையாளததிலுள்ள சாதியார். இவர்கள் ஆரியர்களுக்கும் யக்ஷகாந்தருவப் பெண்களுக்கும், பிறந்தவர்கள் என்கிறார்கள்: சுத்த நாயர்கள் போர்வீரர்களாயிருந்தனர். தற்காலம் உள்ள பலவகைச் சாதியார் இங்குக்குடிபுகுந்து சிலநாள்கள் சென்றபின் நாயர்கள் என்பர். தற்கால வர்த்தகர் சித்திரவேலையர், எண்ணெய் விற்போர், பல்லக்குச் சுமப்போர், அம்பட்டர் முதலியவரும் தங்களை நாயர் என்பர். (தர்ஸ்டன்.)

**நாயன்மார் அறுபத்துமூவர் முதலியோர்** — (க) தில்லைவாழந்தணர், (உ) திருநீலகண்டகுயவநாயனார், (ங) இயற்பகையார், (ச) இளையான்குடிமாறநாயனார், (ரு) மெய்ப்பொருணாயனார், (சு) விறன்மிண்ட நாயனார், (எ) அமர்நீதிநாயனார், (அ) எறிபத்த நாயனார், (கூ) ஏனாதிநாத நாயனார், (க0) கண்ணப்பநாயனார், (கக) குங்கிலியக்கலய நாயனார், (கஉ) மானக்கஞ்சாற நாயனார், (கங) அரிவாட்டாய நாயனார், (கச) ஆனாய நாயனார், (கரு) மூர்த்திநாயனார், (கசு) முருக நாயனார், (கஎ) உருத்திரபசுபதி நாயனார், (கஅ) திருநாளைப்போவார், (ககூ) திருக்குறிப்புத் தொண்டர், (உ0) சண்டேச நாயனார், (உக) திருநாவுக்கரசு சுவாமிகள், (உஉ) குலச்சிறை நாயனார், (உங) பெருமிழலைக்குறும்ப நாயனார், (உச) காரைக்காலம்மையார், (உரு) அப்பூதியடிகள், (உசு) திருநீலநக்கர், (உஎ) நமிநந்தியடிகள், (உஅ) திருஞானசம்பந்த சுவாமிகள், (உகூ) ஏயர்கோன் கலிக்காமர், (ங0) திருமூலர், (ஙக) தண்டியடிகணாயனார், (ஙஉ) மூர்க்கநாயனார், (ஙங) சோமாசிமாறர், (ஙச) சாக்கிய நாயனார், (ஙரு) சிறப்புலிநாயனார், (ஙசு) சிறுத்தொண்டர், (ஙஎ) கழறிற்றறிவார், (ஙஅ) கணநாதநாயனார், (ஙகூ) கூற்றுவ நாயனார், (ச0) பொய்யடிமையில்லாத புலவர், (சக) புகழ்ச்சோழ நாயனார், (சஉ) நரசிங்கமுனையரையர், (சங) அதிபத்த நாயனார், (சச) கலிக்கம்பநாயனார், (சரு) கலிநீதி நாயனார், (சசு) சத்திநாயனார், (சஎ) ஐயடிகள் நாயனார், (சஅ) கணம்புல்லநாயனார், (சகூ) காரிநாயனார், (ரு0) நின்றசீர் நெடுமாற நாயனார், (ருக) வாயிலார்நாயனார், (ருஉ) முனையடுவார் நாயனார், (ருங) கழற்சிங்க நாயனார், (ருச) இடங்கழி நாயனார், (ருரு) செருத்துணை நாயனார், (ருசு) புகழ்த்துணை நாயனார், (ருஎ) கோட்புலிநாயனார், (ருஅ) பத்தராய்ப்பணிவார், (ருகூ) சித்தத்தைச் சிவன்பால் வைத்தார், (சு0) திருவாரூர்ப் பிறந்தார், (சுக) முப்போதுந் திருமேனி தீண்டுவார், (சுஉ) முழுநீறுபூசியமுனிவர், (சுங) அப்பாலுமடிசார்ந்தார், (சுச) பூசல் நாயனார், (சுரு) மங்கையர்க்கரசியார், (சுசு) நேசநாயனார், (சுஎ) கோச்செங்கட் சோழ நாயனார், (சுஅ) திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார், (சுகூ) சடையநாயனார், (எ0) இசைஞானியார்.

**நாயுடு** — இது தெலுங்கு பேசும், பலிஜர், போயர், கவரைகள், கொல்லா, கலிங்கர், காபு, வெலமர். இவர்களுக்குப் பட்டம்.

**நாய்** — 1. இது நீண்டவுடலும் உறுதியான தேகமும் கால்களும் உடையது. இதன் மார்பு நீண்டு அகன்றிருக்கும் ஆதலால் அதிக ஆகாயத்தை சுவாசித்து களைப்படை

வதில்லை. சில நாய்கள் ரோமம் குட்டையாயிருத்தலால் தண்ணீரில் நீந்தும். இதன் கண்ணின்மணி, வெளிச்சம் அதிகமாக இருக்கையில் சிறுத்தும் வெளிச்சம் குறையும்போது பெருத்தும் இருக்கும். தலை நீண்டும் கீழ்வாய் உறுதியாயு மிருக்கும் இதற்கு மேலும் கீழுமாக (42) பற்கள் உண்டு. நாக்கு மிருதுவாயும் ஈரமாயும் இருக்கும். இதற்கு முன்கால்களில் (5)விரல்களும் பின்கால்களில் (4) விரல்களும் உண்டு. குளிர்தேசத்திலுள்ள நாய்களுக்கு மயிர் நீண்டும், மற்றவற்றிற்குக் குட்டையாயு மிருக்கும். வால் மேனோக்கி வளைந்திருக்கும். இது சந்தோஷத்தில் வாலை ஆட்டும். பயத்தில் வாலைப் பின்கால்களுக்கிடையில் வைக்கும். ஓடும்போது வால் விறைத்து நிற்கும். வேட்டைநாய்-இதற்கு தேகமும் காலும் மெலிந்தும், தலையும் வாயும் நீண்டுமிருக்கும். இதற்கு மோப்பம் பிடிக்கும் சக்தி அதிகம் உண்டு. பாளையக்காரநாய், நரிவேட்டைநாய், இரத்தமோப்பநாய், பறவைவேட்டைநாய், காவல்காக்கும்நாய், புல்டாக், மாஸ்டிப்நாய், பட்டிநாய், மலைநாய் - இது குளிர்தேசங்களில் பனியிலழுந்துவோரைக் காப்பது. நியுபவுண்ட்லண்நோய் இது கப்பலினின்று கடலில் தத்தளிக்கும் பிராணிகளைக் காப்பது. நீர் வேட்டைநாய் இது நீரிலுள்ள பிராணிகளைப் பிடிப்பது. முயல்வேட்டைநாய் இது குள்ளமானது முயல் சென்ற வழியை மோப்பத்தாலறிந்து பிடிக்கும். கௌதாரி பிடிக்கும்நாய் இது கௌதாரியுள்ள இடத்தை மோப்பத்தா லறிந்து வேட்டைக்காரனுக்கு அறிவிக்கும். வீரநாய் மூக்குச் சிறிதாயும், நெற்றி அகன்றுமிருப்பது. இது எருதோடும் சண்டைசெய்யும் எலிகொல்லி-இது அதிகுள்ளமானது இது ஸ்காட்லண்டிலு மிங்கிலாண்டிலுமுண்டு. இன்னும்பலவகை நாய்கள்உண்டு.

2. இவ்வுருவங்கொண்டு யமன் சுவர்க்காரோகணஞ் சென்ற தருமராசனைப் பின்தொடர்ந்து சென்று தன்னைத் தெரிவித்தனன். (பார - சுவர்க்கம்.)

3. இது தருமர் சுவர்க்கத்திற்கு சென்றபோது தம்பியர் திரௌபதி முதலியோர் நீங்கியகாலத்தும் நீங்காதுசென்ற யமனுரு.

4. வயிரவர்க்கு வாகனமானது.

5. விச்வாமித்ரன் க்ஷாமகாலத்து இதன் ஊனைத் தேவர்க் கவிசாகத் தந்தான்.

6. நெடுங்காலத்திற்கு முன் மனிதர்களால் தமக்கெனக் காட்டிலிருந்து கொண்டு வந்து வீட்டில் பழக்கிய இனத்தில் ஒன்று. இவ்வினம் தேசகால வேறுபாட்டால் பலவுருவமும் குணமும் கொண்டவைகளாக இருக்கின்றன. இவை தன்னை வளர்த்த எசமானனிடம் விஸ்வாஸ முள்ளவை. மோப்பம் பிடிப்பதில் வல்லவை.

7. இது பல நாடுகளில் பல் உருவமும் தன்மையுங்கொண்ட பிராணி. வீடுகளில் காவற்குப் பயனுறுத்தும் பிராணி. இச்சாதியில் பலவகை உண்டு. அவற்றினை உருவப்படத்தில் காட்டினலன்றி அவை விளங்கா. அவற்றிற்கு மேனாட்டார் வழங்கிவரும் பெயர் மாத்திரம் கூறுவன் :— (1) கூகர்ஸ்பானியல், (2) ஸ்கைடெரியர், (3) பிரஸ்ஸல்ஸ்கிரிப்பன், (4) பீல்ட்ஸ்பானியல், (5) புல்டெரியர், (6) எஸ்கிமோநாய், (7) பக், (8) ஸ்மூத்பாக்டெரியர், (9) கிரேட்டேன், (10) பிளாக்ரிட்ரைவர், (11) பீகில்ஹவுண்ட், (12) பாஸ்ட்ஹவுண்ட், (13) கால்வி, (14) ஓடர்ஹவுண்ட், (15) மாஸ்டிப், (16) புல்டாக், (17) கிங்சார்லஸ்பானியல், (18) ஸ்காட்ச்டெரியர், (19) விப்பெட், (20) நியூபவுண்லண்ட்நாய், (21) ஸ்காட்ச்டீர்ஹவுண்ட், (22) ஸெயிண்ட்பெர்னர்ட், (23) ஐரிஷ்டெரியர், (24) பிரெஞ்ச்புல்டாக், (25) டாச்சண்ட், (26) சௌ, (27) பெகினீஸ், (28) யார்க்ஷையர்டெரியர், (29) க்ளம்பர்ஸ்பானியல், (30) டால்மரடியன், (31) பாயின்டர், (32) பாக்ஸ்ஹவுண்ட், (33) ஸெட்டர், (34) கிரேஹவுண்ட், (35) ப்ளட்ஹவுண்ட், (36) பாஸ்டன்டெரியர், (37) பொமரானியன், (38) ஸ்கிப்பெர்க், (39) இங்கிலிஷ்ஷீப்டாக், (40) ஏயிரிடேல்டெரியர், (41) ரஷ்யன்போர்ஸோயி, (42) பிரெஞ்ச்கார்டெட்பூடில்.

8. காட்டு நாய் - இது நாயை ஒத்த பிராணி. இது, எல்லாத் தேச காடுகளிலும் உண்டு. இது புதர், மலைகளிலிருந்து இரவில் இரைதேடத் தொடங்கித் தம்மில் சில வெளியில் காவற்காத்துச் சில மிருகங்களைப் புதரிலிருந்து வெளிப்படுத்தி வேட்டையாடும். தப்பினவற்றை வெளியில் காவலிருக்கும் நாய்கள் கொன்றருந்தும். இந் நாய்கள் உருவத்தில் சிறியவை ஆயினும் புலி, சிங்கம் முதலியவற்றையும் எதிர்க்கும்.

**நாய்கள்** — சியாமம், சபளம் இவையிரண்டும் யமபுரஞ் செல்வோரைத் தடுக்கும் நாய்கள். உலகத்தவர் நாய்களுக்குப் பலியிடின் யமவேதனையினின்று நீங்குவர்.

**நாய்க்** — இது அரசசேநாபதிகளுக்குப் பட்டப் பெயர். இது தற்காலம், பிள்ளைகள், இருளர், வேடர், பலிஜர், கவரைகள், முத்திலியர், ஒட்டன், தோட்டியன், உப்பிலியன் முதலியவர்களுக்குப் பட்டப்பெயராயிருக்கிறது. (தர்ஸ்டன்.)

**நாய்ச்சியார் திருக்கோலம்** — இலக்ஷ்மி தேவி தன்னினும் அழகு வாய்ந்தார் இல்லையென்று செருக்குக் கொண்ட காலத்து அவளது வீறு அடக்கத் திருமால் எடுத்த ஜகன்மோகினி திருவுரு.

**நாரசிங்கம்** — உபபுராணத் தொன்று.

**நாரதம்** — ஒரு தீர்த்தம்.

**நாரதர்** — 1. பிரமன் புத்திரர். இவர் கையிலிருப்பது மகதியாழ். இவர் தக்ஷன்குமாராகிய அரியசுவர்கள், சபள சுவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்து ஞானிகளாக்கினமையால் தக்ஷனால் நிலையிலாது திரியச் சபிக்கப்பட்டவர். வந்தை முதலியவர் முதலையாகச் சாபம்பெற்று எந்தத் தீர்த்தத்தில் அடையலாமென் றெண்ணி யிருந்தபோது தோன்றித் தென் சமுத்திரக் கரையிலுள்ள தீர்த்தங்களைக் கூறி மறைந்தனர்.

2. (க000), வருஷம் பிரமசபையைக் காணத் தவஞ் செய்தவர்.

3. தருமபுத்திரனை இராசசூய யாகஞ் செய்யத் தூண்டிவிட்டவர்.

4. விசுவாநரனுக்கு உன் குமரனாகிய அக்னி (கஉ) வயதில் இடிவிழுந்து சாவான் எனக் கூறியவர்.

5. கம்சனுக்குக் கிருஷ்ணன் முதலியோர் உற்பத்தி கூறியவர்.

6. நரகாசுரனாற் சிறையிடப்பட்ட கன்னிகைக்கு முன் தோன்றி நீங்கள் கண்ணனால் சிறைநீக்கப் படுவீர் என்றனர்.

7. பாண்டவர் காட்டிற் கேகியபின், திருதராட்டிரனுக்குக் குலநாசங் கூறியவர்.

8. துரியோதனனுக்கு அருச்சுநன் தவநிலை குறிப்பித்தவர்.

9. தமயந்தியின் சுயம்வரத்தைத் தேவேந்திரனுக்குத் தெரிவித்தவர்.

10. உன்னைப்போல் உயர்ந்தமலை உலகத்தில் இல்லையென்று மேருவைப் புகழ்ந்தவர்.

11. தருமருக்குத் தீர்த்தமகிமை கூறியவர்.

12. மேருவின் தன்மையை விந்தமலைக்குக் கூறி விந்தமடைந்த இறுமாப்பைக் கண்டவர்.

13. அசுபதியெனும் மத்திர தேசாதிபதிக்குச் சாவித்திரி விரதங் கற்பித்தவர்.

14. அசுபதிக்குச் சத்தியவான் குண முதலிய கூறியவர். சாவித்திரிக்கு உபதேச மளித்தவர்.

15. பாகவதத்தை வியாசருக்கு உபதேசித்தவர்.

16. துருவனுக்குத் தத்துவ முபதேசித்தவர்.

17. பிராசீன பர்கியிடஞ் சென்று நீ செய்த கர்மத்தால் சுகப்பிராப்தி இல்லையென்று துறவடையக் கூறியவர்.

18. இவர் பிரமபுத்திரர்களை வஞ்சித்துத் தவசிகளாக்கினதால் பிரமன் இவரைப் பல பெண்களைப் புணர்ந்து காமுகராயிருக்கச் சபித்தனர். இவர் பிரமாவை நோக்கி நிரபராதியாகிய என்னைச் சபித்ததால் உன் மந்திரங்கள் உலகத்தில் பலிக்காமலிருக்க, மூன்று கற்பம் வரை நீ அபூஜ்யனாகுக எனச் சபித்து நாரதர் உபபர்க்கணன் எனும் கந்தருவனாய்ப் பிறந்து தவஞ் செய்கையில் சில காந்தருவ ஸ்திரீகள் இவரைக்கண்டு மோகித்து அவ்வுடலை விட்டுச் சுத்ரரதன் குமரிகளாய் இவரை மணந்தனர். இவர் ஒருநாள் பிரமன் சபைக்குச் சென்று அவ்விடம் நடித்துக்கொண்டிருந்த அரம்பையைக் கண்டு ரேதசை விட்டனர். இவரது சித்த சப்லத்தைக் கண்ட பிரமனிவரை மனிதராகப் பிறக்கச் சபித்தனன். (பிரம்மகைவர்த்தம்.) உபபர்க்கணன் தேவியரில் சிறந்தவள், மாலாவதி. இவர் பிறந்த காலத்து மழையில்லாதிருந்தது. இவர் பிறந்தவுடன் நாரமாகிய மழை வருஷித்ததால் நாரதர் என்று பெயருண்டாயிற்று. பின்னும் இவர் தம்மோடு கூடியிருந்த சிறுவர்களுக்கு நாரம் என்னும் ஞானத்தை உபதேசித்ததால் இப்பெயர் பெற்றனர். நாரதன் எனும் நாமம்பூண்ட காச்யப முனிவன் அநுக்ரகத்தால் பிறந்தமையின் இப்பெயருண்டாயிற்று. (பிரம்மகைவர்த்தம்). இவர் சூத்ர யோனிஜராகிய நாரதர். பிரம்ம புத்திரராகிய நாரதர் பிரமனது கண்டத்திலிருந்து அநேக நரர் பிறந்தமை

யால் அக்கண்டம் நரதம் எனப்படும். அந்த நரதமாகிய கண்டத்தில் இவர் பிறந்தபடியால் நாரதர் எனப்பட்டனர்.

19. பிரதேசுக்களுக்கு ஞானோபதேசஞ் செய்தவர். இவர் ஒரு கற்பத்தில் உபபிரமணன் எனுங் காந்தருவனா யிருந்து நவப்பிரசாபதிகள் சத்திரயாகஞ் செய்கையில் கானஞ்செய்ய இவரை அவர்கள் அழைத்த காலத்துச் சென்று கானஞ் செய்து அவ்விடத்துத் தம்மோடுவந்த காந்தருவப் பெண்களைக் கண்டு காமாதுராய்க் கூடியிருக்கப் பிரசாபதிகள் சூத்திராகச் சபித்தனர். அவ்வகை பிறந்து பிரம்மஞானிகளுக்குப் பணிசெய்து மறுஜன்மத்தில் பிரமனுக்கு மானஸபுத்திரராய்ப் பிறந்தனர். இவர் தக்ஷப்பிரசாபதி புத்திரருக்குப் பொருளுண்மை யுபதேசித்து அவர்களைத் திருப்பினதால் அந்தத் தக்ஷப்பிரசாபதியால் நிலையிலாது திரியவும், மனைவிபுத்திரர் இல்லாதிருக்கவும் சாபமேற்றனர். இவர் நைட்டிகப்பிரமசரியம் அநுட்டித்த ஊர்த்தரேதஸான இருடி.

20. பிரகலாதன் கருவி லிருக்கையில் நாராயணமந்திரம் உபதேசித்தவர்.

21. மணிக்கிரீவனை விருக்ஷமாகச் சபித்தவர்.

22. இரண்யகசிபின் தேவியைச் சிறைகொண்ட இந்திரனுக்கு ஞான உபதேசஞ் செய்து நீக்கியவர்.

23. திரிமூர்த்திகளும் எழுந்தருளியிருக்கையில் பொதுவில் நமஸ்கரித்து உத்தம தேவருக்கென்று கலகம் விளைவித்தவர்.

24. பெண்ணுருவடைந்து கண்ணனைப் புணர்ந்து பிரபவாதி வருஷங்களைப் பெற்றவர்.

25. வாயுவிற்கும் ஆதிசேடனுக்கும் நடந்த யுத்தத்தில் ஆதிசேடனிடஞ் சென்று இசைவாசித்துச் சேடனைத் தம்வசப்படுத்தித் தலை யெடுக்கச்செய்து வாயுவிற்கு வெற்றியளித்தவர். (காஞ்சிபுராணம்.)

26. சித்திர கேதுவென்னும் சூரசேநதேசத்தரசனுக்கு ஞானோபதேசஞ்செய்து துக்கநிவாரணஞ் செய்தவர்.

27. தேவாசுர தொந்த யுத்தத்தில் இருவரையுஞ் சமாதானப்படுத்தி நிலைக்கனுப்பினவர்.

28. அரிச்சந்திரனுக்குப் புத்திர உற்பத்தி நிமித்தம் வருணமந்திரம் உபதேசித்துப் புத்திரப்பேறு அளித்தவர்.

29. இவர் பஞ்சபாரதீயமென ஒருநூல் செய்தனராம்.

30. தருமருக்குச் சிசுபாலன் பூர்வநிலை கூறியவர்.

31. இவர் தேவேந்திரன் சபையில் புரூரவசு சரியையைக் கானஞ்செய்ய உருவசி கேட்டுப் புரூரவசுவிடம் மோகங்கொண்டு புரூரவசுவை அடைந்தாள்.

32. கம்சனிடஞ்சென்று கண்ணன் வசுதேவருக்குத் தேவகியிடம் பிறந்தவர் என்று உண்மை கூறியவர்.

33. கண்ணனிடஞ்சென்று உற்பாதங் கூறிக் களித்தவர்.

34. மாயாவதியிடஞ் சென்று பிரத்தியும்நன் முன்பிறப்புணர்த்திப் பிரத்தியும்நனை மணக்கச்செய்தவர். மீண்டும் துவாரகைசென்று பிரத்தியும்நன் மாயாவதி இவர்களின் பூர்வோத்திரங் கூறியவர்.

35. கிருஷ்ணமூர்த்தியிடத்துப் பாரிசாதமலர்கொடுத்து அதைக் கண்ணன் உருக்குமணிக்குக் கொடுத்ததைக்கண்டு வந்து சத்தியபாமைக்கு அறிவித்துச் சத்தியபாமைக்கும் கண்ணனுக்கும் ஊடல் உண்டாக்கியவர்.

36. கண்ணன் முதலியவர்க்கு அநிருத்தன் இருக்கை கூறியவர்.

37. கண்ணனது சர்வவியாபகங்கண்டு துதித்தவர்.

38. நாராயணருஷியிடம் தத்துவங்கேட்டு வியாசமுனிவர்க்குக் கூறியவர்.

39. சிஞ்சயனுக்குப் புத்திரப் பேறு அருளிச்செய்தவர்.

40. திரிபுராதிகளை அழிக்கப் புத்தர் உருக்கொண்ட விஷ்ணுவிற்குச் சீடராய்ச் சென்றவர்.

41. சுவர்ணடீஎனும் குழந்தை இறந்த காலத்துத் தந்தைக்கு உறுதிகூறி இறந்த பிள்ளையை யமனிடத்துச் சென்றுமீட்டு அளித்தவர்.

42. பஞ்சசூடையால் பெண் பிறப்பு இழிவெனச் சொல்லக் கேட்டவர்.

43. மருத்துவிற்குச் சமவர்த்தனரால் யாகம் முடிக்கக் கற்பித்தவர்.

44. பாண்டவர்க்குத் திருதராட்டிரன் காந்தாரி குந்திசஞ்சயன் இவர்கள் தாங்கள் இருந்த வனம்விட்டு வேறு வனஞ்சென்று மூங்கிற்றீயில்பட்டு இறந்ததைத் தெரிவித்தவர்.

45. தருமனைச் சுவர்க்கத்திற் கண்டவர்.

46. தக்கன் வேள்வியை உமைக்குத் தெரிவித்தவர்.

47. திருமால் சந்நிதானத்துத் தும்புரு முதலியோர் ஒருகால்பாடப் பார்க்கச்சென்ற நாரதரை விஷ்ணுகணங்கள் துரத்த வெட்கி யாழ்கற்கத் திருமாலை நோக்கித் தவம்புரியத் திருமால் அசரீரியாய்க் கானவிந்துவிடங் கற்கவென அதைக்கேட்டு கானவிந்துவிடங் கற்று அமையாது தும்புருவிடங்கற்று அமையாது சாம்பவதியினிடத்துப் பூரணமாய் யாழ்கற்றவர்.

48. அம்பரீஷன் குமரியாகிய சிரீமதியைவிரும்பி அரசனைக்கேட்க அம்பரீஷன் பருவதரிஷியும் விரும்பினபடியால் உங்களிருவரில் கன்னிகையாருக்கு மாலையிடுவளோ அவர் கொள்கவென முனிவர் மணமாலைகாலத்துப் பருவதனுக்குக் குரங்கு முகமாகவெனச் செய்து தாம் மணமண்டபம்வரப் பருவதரிஷியும் அவ்வாறு நாரதரைச்செய்து மணமண்டபம்வர இருவரும் குரங்கு முகமாயிருக்க இருவருக்கும் நடுவில் விஷ்ணு தோன்றினர். அப்பெண் விஷ்ணுவை மாலையிட்டனள். நாரதர் அம்பரீஷனிடம் வந்து கோபிக்க அம்பரீஷனிடமிருந்து ஆழிதுரத்த விஷ்ணுவால் ரக்ஷிக்கப்பட்டு மாயஞ்செய்த விஷ்ணுவைத் துதியாதிருந்தவர்.

49. இராவணன் திக்குவிஜயஞ்செய்து வருகையில் தோன்றி அவனை இது யமபுரம்போம் வழியெனத்தூண்டி யமனுக்கும் இராவணன் வருகையைத் தெரிவித்தவர்.

50. சராசந்தனிடம் அடைபட்ட அரசர் செய்தியைக் கண்ணனுக்குக் கூறி அரசரை மீட்பித்தவர்.

51. தக்கன் சிவத்தைநோக்கி வேள்விசெய்வதைச் சிவமூர்த்திக்கு அறிவித்தவர்.

52. இருவரும் பர்வதரென்னும் உடன்பிறந்தாள் குமாரும் ஒருவருக்கொருவர் மனோவிருத்தியில் எப்படி நேருகிறதோ அதனை மறைக்கக் கூடாதென்று பூப்பிரதக்ஷணஞ் செய்யவந்து கார்காலத்தில் சஞ்சயதேசத் தரசனிடந் தங்க அவ்வரசனிவ்விருடிக ளிருவரையும் வரவேற்றுத் தன் குமரி தமயந்தியை அவர்களுக்குப் பணி செய்யக் கட்டளையிட்டான். அவ்வாறு தமயந்தி பணிசெய்து வருகையில் இவள் நாரதரின் மகதியாழின் இசைவயப்பட்டு நாரதரிடம் அதிக அன்புவைத்துத் தன்னை அவ்வாறு நடத்தாதிருத்தலை அறிந்த பருவதர் இவரைக் காரணங்கேட்க இவர் கூறாது தாமதித்தலால் இவரைக் குரங்கு முகமாகுக எனச்சபித்தனர். நாரதரும் சொற்ப குற்றத்திற்கு இவ்வகைச் சபித்ததால் நீ சுவர்க்கவாச மொழிந்து மிருத்யு லோகவாசியாக எனச்சபித்தனர். பின் தமயந்திக்குத் தந்தை மணஞ் செய்விக்க எண்ணி நாயகனைத் தேடுகையில் தமயந்தி நாரதரொழிந்த மற்றவர்களை மணக்கேன் எனத் தாயாகிய ஸைதையும் தந்தையும் குரங்கு முகனாகிய இருடிக்கோ வாழ்க்கைப்பட வுள்ளாயென்று பலவாறு தடுக்கவுங் கேளாது நாரதரை மணந்தனள். பின் நாரதமுனிவர் மனங்குன்றி அவ்விடமிருந்த காலத்தில் பர்வதர் அவ்விடம்வர நாரதர் எதிர்கொண்டுபசரிக்கத் தமயந்தியையெண்ணி இரக்கமுற்று நன்முகமடைய நாரதருக்குக்கூற இவரும் பிரதியாய்ச் சுவர்க்க சஞ்சாரஞ்செய்ய வரந்தந்தனர். (தே-பாகவதம்.)

53. ஒருகாலத்து இவர் ஸ்வேதத்வீபத்தில் விஷ்ணுவைக் காணச் சென்றனர். அப்போது அவருடனிருந்த லக்ஷ்மிமறைய இவர் நான் இருடியாய் மாயையை வென்றிருக்க என்னைக்கண்டு லக்ஷ்மி மறையக் காரணமென்ன என்ன விஷ்ணுமாயை எவரையும் விடாதென்ன இவர் அம்மாயையை எனக்கு அறிவிக்க வேண்டுமென வேண்ட விஷ்ணு இவரை உடனழைத்துச் சென்று கன்யா குப்ஜமென்னும் பட்டணத்தருகில் ஒரு சிங்கார வனத்திலுள்ள தடாகத்தில் இவரை ஸ்நானஞ் செய்யும்படி கூற அவ்வாறே இவர் தமது மகதியாழை வைத்துவிட்டு ஸ்நானஞ்செய்து கரையேறுதலும் ஒரு திவ்யமான பெண்ணுரு வடைந்தனர். விஷ்ணுவோ யாழைக் கையிற்கொண்டு மறைந்தனர். இவ்வாறு நாரதர் பெண்ணுருக் கொண்டிருக்கையில் அவ்வழிவந்த தாலத்துவஜன் எனும் அரசனிவரைக் கண்டு காமுற்றுத் தன்னகரங்கொண்டு சென்று மணந்தனன். இவருக்கு அவனிடம் பன்னிரண்டு குமரர் பிறந்து அக்குமரர் பாணிக்கிரகணஞ் செய்துகொண்டு அவர்களுக்குப் பல குமரர்கள் பிறக்க அவர்களைக்கண்டு களித்துத் தமது பூர்வநிலை இதுவென்று அறியாமலிருக்கையில் வேற்றரசன் தாலத்துவசனோடு யுத்தத்திற்கு வந்து போர்செய்து

அவன் குமாரர்களேயும் பேரன்மார்களேயுங் கொல்ல இவர் விசனமடைந்து இருக்கையில் விஷ்ணு விருத்த வேதியராய் வந்து தேற்றி அவ்விடமிருந்த தடாகத்தில் மூழ்கச் சொல்ல இவர் மூழ்கவும் புருஷவுருக் கொண்டு தம் எதிரில் வீணைகொண்டு நிற்கும் விஷ்ணுவை நோக்கித் தமக்கு இந்த உரு இவரால் வந்ததென்று சிந்தித்திருக்கையில் நாம் போகலாம் வா என்று அழைக்கத் தமக்குப் பெண்ணுருவமும் ஆண் உருவமும் வந்ததற்குக் காரணமறியாமற் போயினர். இவர் பெண்ணுப் பன்னிரண்டு வருஷ மிருந்தபோது பிறந்த பல பிள்ளைகள் வீரவன்மன், சுதன்மன் முதலியோர்.

54. பிரமவிஷ்ணுக்கள் தாம்பரமென்று யுத்தஞ் செய்தகாலத்துச் சிவத்தினுண்மை கூறியவர்.

55. சூரபன்மனுக்குப் பயந்து இந்திரன் ஒளித்தகாலத்துச் சயந்தனுக்கு உறுதி கூறியவர்.

56. அகத்தியர் கமண்டலத்திருந்த காவிரியை இந்திரனிடத்துக் கூறி விநாயகரால் கவிழ்க்கச் செய்தவர்.

57. இவர் ஒரு யாகஞ்செய்ய அதில் ஒரு ஆடுபிறந்தது. அதனைக் குமாரக்கடவுள் வாகனமாகப் பெற்றனர்.

58. கிருத்திகா விரதம் விநாயகரிடம் போதிக்கப் பெற்றுச் சத்தருஷிகளினும் மேலாம்பதம் பெற்றனர்.

59. சம்புவன் தவஞ்செய்வதை இராமமூர்த்திக்கு அறிவித்தவர்.

60. இவர் கங்கையைப் பணியாது சென்று அக் கரையில் நிஷ்டைகூடி யிருந்தனர். அவ்வகை இருக்கையில் கங்கை நம்மைப் பணியாது சென்றனன் எனப் பெருகிவர அதை இவர் அறியாதிருந்தனர். அப்போது அவ்விடம் வந்திருந்த யானை அக்கங்கை நீரைவாரி யிறைத்து அறிவித்தது. நாரதர் கங்கையின் வீறைக் கண்டு மந்திரத்தால் அதைத் தம்பிக்கச் செய்தனர்.

61. சிருஞ்சயனிடஞ் சென்று அவன் குமரியாகிய சுகுமாரியை மணக்க எண்ணியிருக்கையில் இவர் தங்கை குமரனுகிய பர்வதன் இளைத்துப் போதலைக் கேட்கச் சொல்லாதிருத்தல்கண்டு குரங்கு ஆக என இவரைச் சபிக்க இவர் சுரலோகம் போகாதிருக்க என அவனைச் சபித்தவர்.

62. சுகருக்கு ஞானோபதேசஞ் செய்து தந்தையினின்று நீக்கியவர்.

**நாரதன்** — 1. விஸ்வாமித்திர புத்திரன்.

2. கசியபர்பாரியையிடத்துப்பிறந்தவர்.

**நாரதி** — விஸ்வாமித்திர புத்திரன்.

**நாரதீயபுராணம்** — இது (உ௫, 000) கிரந்தங்களுடையது. விஷ்ணுதுதி. விஷ்ணுவின் ஆராதனைக்குரிய புண்ணியகாலம் துருவர், பிரகலாதர்சரிதை மோகினியின் சரிதை முதலியவற்றைத் தெரிவிக்கும்.

**நாராயணகண்டர்** — சித்தாந்தசாராவலி யெனும் சைவசாத்திர உரையாசிரியர்.

**நாராயணகிரி** — திருவேங்கடம்.

**நாராயணகோபாலர்** — கிருஷ்ணனுக்குச் சமானமான வலியுள்ளார். அருச்சுனனால் பாரதயுத்தத்திற் கொலையுண்டவர்.

**நாராயணசரஸு** — ஒரு தீர்த்தம். இதன் கரையில் தக்ஷன்புதல்வர் தவம்புரிந்து இஷ்டசித்தி பெற்றனர்.

**நாராயணசுவாமி** — கடுவையெனும் ஊரினன். தமிழில் விதானமாலை நூலாசிரியன்.

**நாராயணதாசர்** — ஒரு தமிழ்க் கவிஞர். திருவெவ்வளூர் அந்தாதி இயற்றியவர்.

**நாராயணதாசன்** — நாராயணசதகம் பாடிய ஒரு புலவன்.

**நாராயணபாரதி** — தொண்டை நாட்டில் வெண்ணெயென்னும் ஊரிற்பிறந்த பிராமணர். இவர் மணவாள நாராயணனென்னும் பிரபுவை முன்னிட்டுத் திருவேங்கட சதகமென்னும் மணவாள நாராய்ணசதகம் பாடியவர். முத்தாரையர் குமரர்.

**நாராயணமுதலியார்** — தொண்டைநாட்டிற் கூவமெனும் ஊரிலிருந்து தானிருக்கும் ஊரைக் கடலென்றுபாடிய புலவனுக்குப் பொன்மீன்செய்து கொடுத்துக் கவிபெற்றவர். இவர் மரணகாலத்து ஒரு புலவர் "இடுவோர் சிறிதிங்கிரப்போர் பெரிது, கெடுவாய் நமனே கெடுவாய் — படுபாவி, கூவத்துநாரணனைக் கொன்றயே கற்பகப்பூங், காவெட்டலாமோகரிக்கு" என்று பாடிச்சென்றனர்.

**நாராயணருஷி**—1. திருவேங்கடத்தில் தவஞ்செய்து சித்திபெற்ற இருடி.

2 விஷ்ணுவினம்சாவதாரங்களில் ஒருவர். இவர் ஆன்மாக்களுக்குஞானோபதேசஞ் செய்யும் பொருட்டு இவ்வுருத்தாங்கினர்.

**நாராயணர்** — ருத்ர நாராயணப் போரில் ருத்ரர் நாராயணர்மீது சூலத்தையெறிய அது பட்டவிடம் ஸ்ரீவர்சம் ஆயிற்று. ருத்

ரரை நாராயணர் கழுத்தில் பிடிக்க அவர் பிடித்த இடம் நீலகண்டமாயிற்று. (பார-சாந்திபர்வம்.)

**நாராயணன்** — திருமாலுக்குள்ள திருநாமங்களில் முதன்மையானது. இதுவே (நாராயணாய நம) எனும் திருமந்திரம். நாரம் என்றால் சலம், அதனை இடமாகக்கொண்டவர் ஆதலின் இவர்க்கு இத்திருநாமம் உண்டாயிற்று. இந்தமந்திரம் பிரணவசகிதமாய் அஷ்டாக்ஷரம் எனப்படும். இது எட்டுத் திரு அக்ஷரமும், மூன்று பதமுமாய் இருக்கும். மூன்றுபதமும் மூன்று பொருள்களைச் சொல்லும். அதாவது சேஷத்வம், பாரதந்தர்யம், கைங்கர்யமுமாம். இதில் முதற்பதம், ஏகாக்ஷரமான பிரணவம். இது வேதசாரம். அதாவது வேதங்கள் ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு அக்ஷரமாக எடுத்தது. இதன் பெருமையினை விரிக்கிற்பெருகும். இதுநிற்க நாராயணபதம் நாரங்களுக்கு அயனமென்றபடி. நாரங்களாவன, நித்தியவஸ்துக்களுடைய திரள். அவையாவன ஜ்ஞானாநந்தா மலத்வாதிகளும், ஞானசக்தியாதிகளும், வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகளும், திருமேனியும், காந்தி ஸௌகுமாராதிகளும், திவ்ய பூஷணங்களும், திவ்யாயுதங்களும், பெரிய பிராட்டியார் தொடக்கமான நாய்ச்சிமார்களும், நித்தியஸூரிகளும், சத்ர சாமராதிகளும், திருவாசல் காக்கும் முதலிகளும், கணதிபரும், முக்தரும், பரமாகாசமும், ப்ரக்ருதியும், பத்தாத்மாக்களும் காலமும், மகதாதி விகாரங்களும், அண்டங்களும், அண்டங்கட்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களும், ஆம். அயனமென்றது இவற்றிற்கு ஆச்ரயமென்றபடி. அங்ஙனம் அன்றி இவை, தம்மை ஆச்ரயமாக வுடையன என்னலுமாம். ஆய என்கிறபதத்தால் எல்லா அடிமைகளும், செய்யவேண்டுமென்று அபேக்ஷிக்கிறது. நமஸ்ஸாலே நாம் வழுவில்லா அடிமை செய்யவேண்டும் என்கிற பிரார்த்தனையைக் காட்டுகிறது. இன்னும் இந்த மகாமந்திரத்தின் பெருமையை விரிந்த நூல்களிற் காண்க.

**நாராயணி** — சத்தமாதர்களில் ஒருத்தி.

**நாரி** — 1. மேருதேவியின் பெண். குருவின் பாரி.

2. தக்ஷன்பெண். புலத்தியன் தேவி.

**நாரிதீர்த்தம்** — காரண்டவம், ஸௌபத்ரம், பிரசஸந்நம, பௌலோமம், பாரத்வாசம் என்னும் பெயர் கொண்ட தீர்த்தங்கள் இதில் இருக்கும். இதில் நந்தை, ஸமீசி, ஸௌரபேயி, லதை, வஸை எனும் ஐந் தருவப்பெண்கள் ஒரு இருடி சாபததால் முதலைகளாயிருந்தனர். இவர்கள் அருச்சுநனால் சாபம் நீங்கினர்.

**நாரின்வகை** — நார் என்பது செடிகளினின்று எடுக்கப்படுவது. சணல், கற்றாழை, பனை, தென்னை முதலியவற்றின் தண்டு, மட்டை இவற்றைத் தண்ணீரில் ஊறவிட்டெடுத்து அடித்துச் சுத்தம்செய்து கயிறு திரிப்பர்.

**நாரீகவசன்** — மூலகனுக்கு ஒரு பெயர். பரசிராமர் அரசர்களைக் கொலை செய்த காலத்துப் பெண்கள் இவனைக் கவசம் போற் காத்ததலால் இவனுக்கு இப்பெயர் கிடைத்தது, மூலகனைக் காண்க. (பாகவதம்.)

**நாரைகள்** — இவை கொக்கினத்தில் பெரியவை. இவ்வினத்தில் பல வேறுபாடுகள் உண்டு. இவைகளுக்குச் கழுத்தும், மூக்கும், காலும் மிக நீளம். உடல் சற்றுப் பருத்தது. காலும் மூக்கும் மஞ்சள்கலந்த செந்நிறம். உடம்பு வெண்மை முதலிய பலநிறம். இவ்வினத்தில் ஐரோப்பாவின் வடபாகத்தில் ஒரு இனம் உண்டு, இவ்வினத்திற்குத் தலையிலும் கழுத்திலும் கொண்டையும் தாடியுமுண்டு. அவற்றினுள்ள சிறகுகள் சுருண்டிருக்கும். இதன் தலைப்பக்கம் கறுத்தும், முதுகு சாம்பல்நிறமாயும, வயிறு வெண்மையாயு மிருக்கும். கழுத்தில் சிற்றிறகுகள் புள்ளியுடன் வழுவழுப்பாயுள்ளன. இவை நின்றபடி தூங்கும். தூங்குகையில் சில காவல்புரிகின்றன.

நெடுங்கால்நாரை - இது நீண்ட கால்களை யுடையதாதலால் இப்பெயர் பெற்றது. தலை கறுப்பு, முதுகுபக்கம் செவப்புக்கலந்த சாம்பல் நிறம். இதன் கால்களும் அலகும் செந்நிறம். இதன் மூக்கு கீழ்நோக்கி வளைந்திருக்கிறது. இவை மீன்களையும் தளிர்களையுந் தின்கின்றன. இதன் கால்கள் தோலடிகள். இவை 2, 3 அடி தண்ணீரிலும் நடந்துசென்று இரைதேடும். இது தூங்கும்போது ஒரு காலை மடக்கிக்கொண்டும், கழுத்தை வளைத்து உடலில் சுற்றிக்கொள்ளும். இது மெதுவாய்ப் பறக்கும். வருஷத்திற் கொருமுறை 2 முட்டைகளிட்டுக் குஞ்சு பொரிக்கும்.

தூடிப்பை நாரை - இது தென்ஆபிரிகா கண்டத்தின் மேற்குக்கரை நீர் நிலைகளில் வசிப்பவை. இது 5, 6 அடிகள் உயரம். இதற்குத் தூரமாகப் பறப்பதற்கான இறக்கைகளுண்டு. இவ்வின ஆணிற்குக் கழுத்துப்பக்கத்தில் ஒரு தோற்பை தொங்குகிறது. அப்பையின் மேற்பாகம் இரத்தம்போற் சிவந்து பளபளப்பா யிருக்கிறது. இது அந்நாட்டாரால் வளர்க்கப்பட்டு வீட்டில் அவர்களுடன் உலாவுகிறது.

நெடுங்கழுத்து நாரை-இது அமெரிக்கா கண்ட வாசி. இதன் கால்கள் 1½ அங்குலம் உயரம், இதன் தோலகன்ற பாதங்களிலுள்ள விரல்கள் 3 அங்குல நீளம், உடல் ¾ அடி கனம், இதன் கழுத்துப் பருத்து 8, 9 அடிகள் நீளத்திற்குப் பாம்பைப்போல் நீண்டிருக்கிறது. இதில் பெண்பறவை கழுத்துமுதல் வால்வரை 5, 6 அடிகள் நீளமும், ஆண் பறவை 8, 10 அடிகள் நீளமும் இருக்கின்றன. மூக்குக் கூர்மையாய் 4 அங்குலம் நீளம், வாயினுட்புறத்தில் கூரிய சிறு பற்களுண்டு. இதன் மேல்மூக்குக் கருமை, கீழ்மூக்கு மஞ்சள் நிறம். இதன் வாய் கண்ணுக்குப் பின்புறம் வரையில் நீண்டிருக்கிறது

**நார்ப்பொருள்கள்** — சணல் - (Flax) இது ஒருவித வருஷாந்தரப் பயிர், இரண்டடி உயரம் உள்ளது, நீலப்பூப் பூப்பது, இது தற்காலம் எல்லா நாடுகளிலும் பயிர் செய்யப்படுகிறது. இச் செடிகளை நன்றாக உலர்த்தித் தண்ணீரில் ஊறியபின் தண்டுகளிலுள்ள பசுமை நீங்கும். பின்னவற்றை நறுக்கி அவற்றிலுள்ள கயிறுபோன்ற நாரினைச் சிக்கறுத்துச் சணல்நூலாக்கிநெய்வர். இந்தச் சணல் துணிகளில் முக்கியமான சல்லா டாமஸ்க். இது முதலில் சிரியா தேசத்திலுள்ள டாமஸ்க் தேசத்தில் நெய்யப்பட்டது. இரண்டாவது கேம்பிரிக். இது பிரான்ஸ் தேசத்திலுள்ள கேம்பிரிக் எனும் இடத்தில் நெய்யப்பட்டது.

பஞ்சு - இது பல இடங்களில் பயிராகும் பொருள். இது உயரத்தில் நான்கு ஐந்தடி யிருக்கும். இதிற் பலவகையுண்டு. இது ஏராளமான பஞ்சைக் கொடுக்கும். இதனை நூலாக்கிப் பலவித வேஷ்டிகள் நெய்வர்.

பாரசீக சணல் - (Hemp) இது முதலில் பாரசீக விளைபொருள். தற்காலம் ரஷ்யா, வடஇந்தியா, வட அமெரிகா, ஆபிரிகா முதலிய இடங்களில் பயிரிடப்படுகிறது. இதன் நாரினால் உறுதியான கான்வாஸ்கள், கப்பற் பாய்கள், மெல்லிய கயிறுகள் மற்றும் பல செய்யப்படுகின்றன.

காசருக்கனூர் - இச் செடி இந்தியாவின் வடபாகங்களில் பயிரிடப்படுகிறது. இது 12, 14 அடி உயரம் வளரும், இதன் நாரினால் கோணிகள் நெய்வர்.

தென்னை, பனை - இவற்றின் நாரினால் கயிறுகள் பின்னுவார்கள்.

**நாலடியார்** — 1. இது சைநமுனிவர்களால் இயற்றப்பட்ட நீதிநூல். சங்க மருவிய பதினெண்கீழ் கணக்கினுள் ஒன்று. நானூறு வெண்பாக்களை யுடையது. பதுமனார் என்பவர் இவைகளை முப்பாலாய் நாற்பது அதிகாரங்களாகப் பகுத்து உரையும் இயற்றினர். கடவுள் வாழ்த்தும் அவரே இயற்றியதென்பர்.

**நாலாயிரக்கோவை** — காங்கேய முதலியார் மீது ஒட்டக்கூத்தர் பாடிய கோவைப் பிரபந்தம்.

**நாலுகவிப்பெருமாள்** — திருமங்கை மன்னன் பட்டப்பெயர்.

**நாலூராச்சான்**—ஒரு வைஷ்ணவர் சோழனுக்கு மந்திரியென்பர்.

**நாலூராச்சான்பிள்ளை** — திருவாய்மொழிப் பிள்ளைக்கு மருமகன்.

**நாலூரான்** — உடையவரை ஆச்ரயித்தவர்.

**நாலைகிழவன்நாகன்** — ஒருவள்ளல். வடநெடுந்தத்தனாற் பாடப்பட்டவன். பாண்டியனுடைய வீரன். (புற. நா.)

**நால்வகைத்தேவர்** — முப்பத்துமூவர் அவர் வசுக்கள் எண்மர், திவாகரர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், மருத்துவர் இருவர். மூவாறு கணங்களாவார் கின்னரர், கிம்புருடர், விச்சாதரர், கருடர், பூதர், இயக்கர், உரகர், சுரர், சாரணர், முனிவர், பரகதியோர், சித்தர், காந்தருவர், தாரகைகள், பசாசர், இராக்கதர், போகபூமியர், ஆகாசவாசிகள்.

**நாவில் உண்டாம் ரோகம்** — நாவில் திரிதோஷங்களினால் சிவந்தும், கொப்பளங்கள் உண்டாகியும் வருவது. இவை நாபிக்கு அடி இடம், நாபி, இருதயம், கண்டம், நாக்கு இந்த ஐந்து ஸ்தானங்களைப்பற்றிப் பிறக்கும். இது (1) வாதஜிக்வாகண்டக ரோகம், (2) பித்தஜிக்வாகண்டக ரோகம், (3) சிலேஷ்மஜிக்வாகண்டகரோகம், (4) ஜிக்வாலஜகரோகம், (5) அதிஜிக்வாரோ

கம், (6) உபஜிக்வாரோகம் ஆக ஜிக்வாரோகம் 6.

**நா ?** — அரிசி முதலிய தானியங்களை அளக்கும் கருவி. இது மாக்கால், படி முதலாகப் பலவகைப்படும்.

**நாழிகைக்கருவி** — இது பளிங்கினால் உடுக்கைபோன்று ஒருபுறம் சிறு மணல்நிறையப் பெற்றது. இம் மணல் மேல்புறமிருந்து கீழ்புறம் சிறுக விழுந்துவிடின் அரைமணி, அம்மணல் விழுந்த பக்கத்தை மீண்டுந் திருப்ப அது மறுபக்கம் நிறையின் அரைமணி, இவ்வாறு திருப்பி மணி தெரிந்துகொள்வோர் ஆன்றோர். (உல.)

**நாழிகைவட்டில்** — இது நாழிகையின் அளவைத் தெரிவிக்கும் ஒருவகைக் கருவி. இது மெல்லிய தகட்டால் கிண்ணம் போன்று இடையில் ஊசி முனையினும் சிறிய துவாரமுள்ளது. இதனை நீருள்ள தொட்டியில் மிதக்கவிடின் இதில் நீர் அச் சிறு புழைவழி சென்று நிரம்பிக் கிண்ணம் நீரில் அமிழின் ஒரு நாழிகையாம். (உல - வ.)

**நாளீசங். ௺** — ஒரு கொக்கு. இதற்கு இராஜதர்மன் எனவும் பெயர். ஒரு வேதியச் சிறுவன் தன் பிதுராஸ்திகளைத் தீயவழியில் செலவிட்டு இதனிடை வர இது தன்னண்பனால் பொருள் தருவித்தது. இந் நன்றி பெற்ற வேதியச் சிறுவன் கொக்கினைக் கொல்லக் கொக்கினண்பன் வேதியச் சிறுவனைக் கொன்றனன். பின் கொக்கின் மனைவி கணவனை உயிர்ப்பிக்க எழுந்து வேதியச் சிறுவனையும் எழுப்பி நற்புத்தி கூறி நெடுநாளிருந்தது.

**நாள்** — பூமி ஒருமுறை தன்னைச் சுற்றி வருவது.

**நாள்விஷம்** — அஸ்தத்திற்கு (உஉ) இன்மேலும், ஆயிலியத்திற்கு (௩க) இன்மேலும், திருவாதிரைக்கு (கக) இன்மேலும், பூரட்டாதிக்கு (கசு) இன் மேலும் அடையவே நான்கு நாழிகை விஷம். இரேவதி, புனர்பூசம், கார்த்திகை, மகம் இவற்றிற்கு (௩௦) இன்மேல் நான்கு நாழிகை விஷம். உத்திரட்டாதி, பரணி, பூராடம் இவற்றிற்கு (உச) இன்மேல் நான்கு நாழிகை விஷம். பூசம், உத்திராடம், மூலம், பூரம், சித்திரை இவற்றிற்கு (௨௦) இன்மேல் நான்குநாழிகை விஷம். அவிட்டம், அநுஷம், திருவோணம் இவற்றிற்கு (க) இன்மேல் நான்கு நாழிகை விஷம். அச்வநிக்கு (௫௦) இன்மேல் நான்கு நாழிகை விஷம். மிருகசீரிஷம், சோதி, கேட்டை இவற்றிற்கு (கச) இன்மேல் நான்கு நாழிகை விஷம். உரோகணிக்கு (௪௦) இன்மேல் நான்கு நாழிகை விஷம். உத்திரம், சதயம் இவற்றிற்கு (கஅ) இன்மேல் நான்கு நாழிகை விஷம். இதில் சகல மங்கல காரியங்களும் நீக்கவேண்டும். இந்த விஷகடிகையில் சந்திரன் சுபாங்கிசத்து நிற்கச் சுபகிரகத்தாற் பார்க்கப்பெறினும், சுபக்ரகத்துடன் கூடி நிற்பினும், பிரகஸ்பதிகேந்திர திரிகோணத்தில் நிற்பினும் விஷகடிகை தோஷமில்லை. அப்போது அமுதத்தைச் செய்வன் சந்திரன். (விதானமாலை)

**நாற்கவிராசநம்பி** — இவர் தொண்டைநாட்டிற் புளியங்குடியில் பிறந்த உய்யவந்தார் என்பவருக்குக் குமரர். இவர் சைநர். இவா தமிழ்நூல்கற்று வல்லவராய் ஆசு, வித்தாரம், மதுரம், சித்திரம் என்னும் கவியில் வல்லவரானதுபற்றி, இவருக்கு நாற்கவிராசநம்பி என்று பெயர் வந்தது. இவர்க்கு இதற்குமுன் நம்பியென்பது பெயராயிருக்கலாம். இவர் அகப்பொருளின் விரிவைச்சுருக்கிச் சுருங்கிய நூலாகத் தம்பெயரால் நாற்கவிராசநம்பி அகப்பொருளென இயற்றினர். அந்நூல் அகத்திணையியல் களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் என ஐந்து இயல்களையுடையது. (அகப்பொருள் விளக்கம்.)

**நாற்கால் இராசி** — மேஷம், ரிஷபம், சிங்கம், தனுசு ஆக ௪.

**நானகதாசர்** — இவர் பஞ்சாபுதேசத்தவர்; அரிபக்தி மிகுந்தவராய்த் துருக்கதேசமாதலால் வேதியர்களையுந் தேவாலயத்தையும் தம்மரசனிடஞ் சொல்லி இடித்துவிடுவரென்று தாமே கோயிலை இடித்துப் பின்னர் ஒரு மசீதுகட்டி அதனையுமிடித்துச் செல்வமுழுது மழித்துத் தனித்திருக்கையில் துருக்கர் தம்மவன் ஒருவன் வேஷதாரியாய்த் திரிகின்றனென்ன அரசன் கேட்டு ஒரு தூதனையனுப்பி வருக எனத் தாசர் அரசனுக்கு நான் நாராயணனை வணங்குவோனுன்னிடம் வரவேண்டியதில்லையென்று ஒருகவி எழுதியனுப்ப அரசன்கண் டுளமகிழ்ந்து ஆயினும் பின்னுமறிவோமென்று கோபித்தவன்போல் சில வீரரையனுப்பி அவரை அழைத்துவரக் கட்டளையிட வீரர் தாசரிடஞ்சென்று

அழைக்கத் தாசர் நாராயணஸ்மரணை செய்ய அயுதமென்னு மெண்கொண்ட விஷ்ணுபடர் அவர்களைப் புறங்கொடுக்கச் செய்தனர். இதனையறிந்த அரசன் தாசரை யடைந்து, பணிந்து புகழ்ந்தனன். இவர் மக்கத்திற்குச் சீடருடன் செல்லுகையில் வழியில் ஆற்றில் வெள்ளம்வர அலக்நிரஞ்சன் என்று தாண்டிச்சென்றனர். சீடர் திகைக்கத் தாசர் நம்மைநினைத்து ஆற்றைக் கடக்க என அவ்வாறுசெய்து கடந்தனர். பின் மக்கத்தை அடைந்து அங்கிருந்தோர் இங்குப் புதைந்திருக்கும் இந்துக்கள் விக்ரகத்தை எழுப்புமெனக் கேட்கப் பூமியில் மூடியிருந்த திருமால் விக்ரகத்தை எழுப்பித் தரிசிப்பித்து ஒரு ஆற்றைக் கடக்கமுடியாது திகைத்த அரசனுக்குக் கடுதாசியால் கலஞ்சமைத்து அதில் அவன் சேனையுடன் ஆற்றைக் கடப்பித்துக் கோரக்கர் சொற்படி அரித்துவாரத்திருந்த நான்குலக்ஷம் ஜனங்களுக்கு உணவளித்து அரிபஜனைசெய்து களித்தவர்.

**நான்மணிக்கடிகை** — இது சங்கமருவிய பதினெண்கீழ்க் க்ணக்கினுள் ஒன்று. நீதிநூல். ஒவ்வொரு செய்யுளும் தனித்தனி நான்கு நீதிகளைக் கற்பிக்கும். இதனை இயற்றியவர் விளம்பிநாகனுர். கடவுள்வாழ்த்து உட்பட நூற்றொரு வெண்பாக்களையுடையது.

**நான்மாடக்கூடல்** — தென்மதுரைக்கு ஒரு பெயர். இம்மதுரைமா நகரத்தின்மீது வருணன் கோபித்து மேகங்களை ஏவி மழை பொழிவித்த காலத்துப் பாண்டியன் சோமசுந்தர மூர்த்தியை மழையைத் தடுக்க வேண்டினன். அதனல் சிவமூர்த்தி தம்மிடமிருந்த மேகங்களை நான்கு மூலையிலும் ஏவி நீரைப்பருகி மழைதடுக்க ஏவினர். அதனல் இப்பெயருண்டாயிற்று. இங்ஙனமன்றி வேறுங்கூறுவர். திரு ஆலவாய், திருநள்ளாறு, திருமுடங்கை, திருநடுவூர் இவைகளுக்கு நடுவிருத்தலின் இப்பெயர் பெற்றதென்பர் நச்சினர்க்கினியர்.

## நி

**நிகண்டன் கலைக்கோட்டுத் தண்டனர்** — மான்கொம்பை நிமிர்த்திக் கைக்கோலாகக் கொண்டமையால் இவர் கலைக்கோட்டுத் தண்டனெனப்பட்டார். இவர்து இயற்பெயர் புலபபடவில்லை. நிகண்டன் என்ற அடைமொழியால் இவர் தமிழில் நிகண்டொன்று செய்தாரென்று தெரிகிறது. அதுவே கலைக்கோட்டுத் தண்டனெனப்படுவது. இதனை இடுகுறிப்பெயர் என்று கொண்டார். களவியலுரைகாரரும், நன்னூல் விருத்தியுரைகாரரும் (சூத். ௩௧) அஃது இதுகாறும் வெளிவந்திலது. இவர் நெய்தலைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியது (நற். ௩௮௨-ம்) பாட்டு.

**நிகம்பன்** — சுந்தோபசுந்தருக்குத் தந்தை.

**நிகழ்வினவிற்சியணி** — இது முன் நடந்ததையேனும், பின் நடப்பதையேனும் அப்போது நடக்கிறதாகச் சொல்லுதலாம். இதனைப் பாவிகாலங்காரம் என்பர். (குவல.)

**நிகிர்தி** — டம்பமாயைகளின் குமாரன், இது (உருவகம்.)

**நிகும்பலை** — இலங்கைத்தீவில் இந்திரசித்து யாகஞ்செய்த இடம்.

**நிதும்பன்** — 1. (சங்.) அஸ்தன் குமரன்.

2. அரியசுவன் குமரன். குமரன் பர்ஹிணசுவன்.

3. இராவணனுக்கு அம்மான். பெரிய ஆகாரமுடையவன். இவனுக்கு ஒன்பது கோடி சைந்யம். இவன் அக்னியுடன் போர்செய்து வென்றவன். இராவணனுக்குச் சீதையை விட்டுவிடும்படி புத்திபோதித்தவன். மாருதியால் அறையுண்டிறந்தவன்.

4. கும்பகர்ணன் குமரன். அநுமனுல இறந்தவன்.

5. சிவமூர்த்தியால் கொல்லப் பட்ட அரக்கன்.

6. சண்முக சேநாவீரன்.

7. சிவகணத்தவன், இவன் தேகமுழுதும் வாயும், எண்ணிறந்த கைகால்களுமுள்ளவன்.

**நிக்கனன்** — யதுவம்சதது அநமித்திரன். ஜேஷ்டபுத்திரன். இவன் புத்திரர் சத்ராசித், பிரசேநன்.

**நிக்துருந்தனம்** — ஒரு நகரம்.

**நிக்துரோதன்** — உக்கிரசேநன் குமரன்.

**நிக்ரகத்தானம்**—என்பது, ஒருவராலும் கண்டிக்கப்படேன் என்பவன் மதத்தைக் கண்டிக்கப்படுவது. இது அப்ரதிபத்தி, விப்ரதிபத்தி எனவும், இவற்றின் பேதம் பிரதிஞ்ஞாஆனி, பிரதிஞ்ஞாந்தம், பிரதிஞ்ஞாவிரோதம், பிரதிஞ்ஞாசந்யாசம், ஏதுவந்தரம், அர்த்தாந்தரம், நிரர்த்தகம், அவிக்

யாதார்த்தம், அபார்த்தகம், அப்பிராத்தகாலம், நூனம், அதிகம், புனருத்தம், அநுபாடன், அஞ்ஞாதம், அப்பிரதிபை, விக்ஷேபம், மதாநுஜ்ஞை, பரியநுயோச்சியாபேக்ஷணம், அபசித்தாந்தம், ஏதுவாபாசன், இருபத்திரண்டு. (சிவ - சித்.)

**நிசாகரர்** — விந்திய பர்வதத்தை ஆச்சிரமமாகக் கொண்ட இருடி. இவ்வாச்சிரமத்தில் சம்பாதி சூரியனைக் காணப் பறந்து இரக்கைகள் கருகிவிழ இவர்கண்டு இராமதூதனாகிய அநுமனுக்குச் சீதையை இராவணன் கொண்டு சென்றவழி கூறின் இரக்கை முளைக்குமென அநுக்கிரகித்தவர்.

**நிசிதன்** — 1. தோஷாவிற்குப் பட்சிபாரானால் பிறந்த குமரன்.

2. ஒரு யாதவன்.

**நிசுந்தன்** — சுந்தோபசுந்தர் தந்தை

**நிசும்பன்** — 1. சத்தியுடன் யுத்தஞ்செய்து மாண்ட அசுரன், சும்பனுக்குச் சகோதரன்.

2. நரகாசுரனுக்கு மந்திரி. இவன் நரகாசுர சம்மார்த்தின் பொருட்டுக் கண்ணன் செல்லுகையில் கண்ணனை எதிர்த்து மாண்டவன்.

3. சும்பன் எனும் அசுரனுக்குத் தமயன். இவன் ஒருகாலத்தில் தனக்குத் தன் தம்பியால் இரையாகக் கொடுக்கப்பட்ட பிரத்யும்நனை ஆகாயமார்க்கமாக நெடுந்தூரங் கிளம்பி அங்குவிடுப்ப இவன் தெய்வகதியால் சும்பன் பட்டணத்தில் ஒரு மலையை அடைந்து அம்மலையிலிருந்த உத்யானவனத்திருந்த சும்பன் புத்ரியாகிய லக்ஷ்மியைக் காந்தர்வ மணஞ் செய்துகொண்டனன். இதனையறிந்த சும்பனிருவரையும் வஜ்ரபஞ்சரத்தில் காவலிடப் பிரத்யும்நன், தேவி உபாசனைப்ரிய, தேவியார் ஒரு கிளியுருக்கொண்டு உள்ளடைந்து பஞ்சரத்தை உடைத்தெறியச் சும்ப நிசும்பர் யுத்தத்திற்கு வந்து பிராட்டியைக்கண்டு மோகித்து ஒருவருடன் ஒருவர் யுத்தஞ் செய்திறந்தனர்.

**நிசுளாபுரியரசன்** — தொண்டரடிப் பொடியாழ்வார் காலத்திருந்த உறையூர் அரசன்.

**நிச்சக்கிரன்** — அசிம கிருஷ்ணன் குமரன் அஸ்தினபுரம் கங்கையில் முழுகிய காலத்துக் கௌசாம்பிகை நகரத்தில் வசித்தவன். இவன் குமரன் உதகன்.

**நிடதம்** — அஷ்ட குலாசலங்களில் ஒன்று. இது ஏமகூடபர்வதத்திற் கப்பால் (௯000) யோசனையில் இருக்கிறது.

**நிடாதன்** — சவனனைக் காண்க.

**நிதநாசுரன்** — இவன் ஒரு அசுரன். இவன் விஷ்ணுமூர்த்தி உலகங்களை உண்டு உமிழ்வதுபோல் உலகங்களெல்லாம் உண்டு பிராணிகளை வருத்தி வருகையில் பிரம்மாதி தேவர்கள் இவன் துன்பம் பொறுக்காது சிவமூர்த்தியிடம் முறையிட்டனர். சிவமூர்த்தி இவன்மீது ஒரு அம்பினையேவ அவ்வொரு அம்பு இவன் உயிரை உண்டு மீண்டது.

**நிதந்து** — ஒரு இராச ருஷி. இவன் குமார் சால்வேயன், சூரசேநன், சுருதசேநன், திந்துசாரன், அதிசாரன் முதலியவர்கள்.

**நிதரிசனவணி** — ஒருவகையான் நிகழ்வதோன்றற்குப் பொருந்திய பயனைப் பிறிதொன்றற்கு நன்மை புலப்பட நிகழ்வதாதல், தீமைபுலப்பட நிகழ்வதாதல், செய்ததனைச் சொல்லுவது. (காட்சியணி)

**நிதாகர்** — 1. ருபன் சீடர் புலத்தியர் குமார்.

2. இரிபுவின் மாணாக்கர். இவர் சநகர் முதலியவர்க்கு உபதேசித்தவர்.

**நிதி** — இது எட்டு வகைப்படும். பதுமநிதி, மகாபதுமநிதி, மகாநிதி, கச்சபநிதி, முகுந்தநிதி, குந்தநிதி, நீலநிதி, சங்கநிதி என்பன.

**நிதிபதி** — பரமதத்தன் தந்தை.

**நிதியின்கிழவன்** — 1. குபேரனுக்கு ஒரு பெயர்.

2. தலைச்சங்கப் புலவருள் ஒருவர். இவர் குபேரனாகவே இருக்கலாம்.

**நிதியைப்பற்றியது** — நிலத்திற் றோண்டிப் புதைத்து வைக்கும் பொருளின் வைப்பு. உபநிதி - மற்றொருவன்பால் நம்பி அடைக்கலமாக வைப்பது. பண்டமாற்று - ஒரு பொருளைப் பெறுதற்கு விலையாகக் கொடுக்கப்படுவது. ஆதமர்ணிகம் - வட்டியுடனாதல், அது இல்லாமலாதல் பெற்றுக் கொள்வதாக கொடுக்கப்பட்ட பொருள். கடன் - வட்டியுடன் பெறுவதாகக் கொடுக்கப்பட்ட பொருள். யாசிதம் - வட்டியின்றிப் பெறுவதாகக் கொடுக்கப்பட்டது தன்னுரிமை யொழிவதாகிய செலவு இம்மையது, மறுமையது என (உ) வகை. இம்மைச் செலவு பிரதிதானம், பரிசில், வேதனம், போக்யம் என (ச) வகைப்படும். பிரதிதானம் - ஒன்றற்கு விலையாகக் கொடுக்கப்படுவது. பரிசில் - ஒருவனுக்கு வீடு முதலியன குறித்த உவகையுடன் கொடுப்பது. வேதனம் - கூலியாகக் கொடுப்பது.

உபபோக்யம் - நெல் முதலிய தானியங்கள், இல்லம், சோலை பசு முதலிய, கல்வி முதலிய ஈட்டுதற் பொருட்டும் காத்தற் பொருட் செலவிடும் பொருள். போக்யம்- அரசன் தன் சௌக்யத்தின் பொருட்டுச் செலவிடும் பொருள். மறுமைச் செலவு - செபம், ஓமம், அருச்சனை, தானம் என்பன நிதியைப் பற்றியது. புனர்யாதம் - விசேடவரவினிமித்தம் செய்யப்படுஞ் செலவு இதற்கு நிவர்த்தம் எனவும் பெயர். ஆவர்த்தம் - விசேட செலவினா லுண்டாகும் வரவு இதற்கு நிவர்த்தி யெனவும் பெயர். திரவியம் - பலகறை முதல் இரத்தின மிறுதியாயின. தனம் - பசு, ஆடை, தானியமுதல் புல்லிறுதியாயின. (சுக்-நீ).

**நீதிவாகன்** — ஒரு வணிகன். குருவாலேவப் பெற்று மடமிடித்து நரகமடைந்தவன்.

**நித்தயோகினிநிலை** — பகலை (அ) பங்காக்கி (க) வது பங்கில் கிழக்கிலும், (உ) வது வடமேற்கிலும், (ங) வது தெற்கிலும், (ச) வது வடக்கிலும், (ரு) வது மேற்கிலும், (சு) வது தென்கிழக்கிலும், (எ) வது வடக்கிலும், (அ) வது தென்மேற்கிலும் நிற்கும். யாத்திரைக்கு இந்த யோகினி பின்பக்கமும், இடப்பக்கமுமாக இருத்தல் வேண்டும். இதனைப் பார்க்குமிடத்துக் கிழக்கை முதலாகக்கொண்டு பார்க்க.

**நித்தியகருமம்** — இது ஒவ்வொருவனும் நாடோறுஞ் செய்யத்தக்க கருமங்கள். நல்லவன் பிராம்ம முகூர்த்தத்தில் எழுந்து இஷ்டதேவதையை வணங்கி உதயகாலத்துக் கோற் கையனாய் வீட்டிற்குத் தூரத்தில் நிர்ச்சனமாயும் சலமுள்ள இடமாயுமிருக்குமிடத்தை அடைந்து மூத்திரம், முள், புழு, எலும்பு, மலஞ் சூழ்ந்த இடம், வழி, புல், ஆறு, பள்ளம், ஜலமுள்ள இடம், பசுவின் சாணமுள்ள இடம், சாம்பல் சூழ்ந்த இடம், சுடுகாடு, வீட்டை அடைந்த தோட்டம், மாட்டுக்கொட்டகை, அரசு முதலிய புண்ணிய விருக்ஷங்கள், நாற்சந்திகூடுமிடம், இவைகளையொழித்து, ஸ்திரீகள், பசுக்கள், அந்தணர், சூரியன், சந்யாசி, சந்திரன், விகாரப்ரதேசம், இவைகளைப் பாராமல், பகலினும், இருசந்தியினும் வடக்குமுகமாகவும், இரவில் தெற்கு முகமாயும் காதில் யஞ்ஞோபவீதத்தைச் சேர்த்துத் தலையை உத்தரீயத்தால் மூடிப் புல் முதலிய செத்தைகள் அமைந்த பூமியில் தன்னை ஒருவருங் காணாதபடி மறைந்த புதருக்குள் மௌனமுடையனாய் மூக்கின் நுனியைப் பார்த்துக் கொண்டு மலஜலத்தைக் கழித்தல் வேண்டும். மலவிசர்ஜனஞ்செய்தபின் புல், ஓட்டுப்பாளம், மண்ணாங்கட்டி இவற்றால் குதத்தையடைந்திருக்கிற மலத்தை நீக்கி, இடதுகையினால் தனது குறியைப் பற்றினவனாய் நல்லமண்ணை யெடுத்துத் தனக்கு வலது பக்கத்தில் வைத்துக்கொண்டு, குதத்தைப் பத்துமுறைக்குமேல் மனத்தூய்மை யுண்டாம் வரையில் சுத்திசெய்து கால்களை அலம்பிக் கொண்டு இரண்டு கைகளையுமெழுமுறை சுத்திசெய்து வேறொரு கரையடைந்து ஆசமனஞ் செய்து குச்சுகளில் முருங்கை, நறுவிலி ஆமணக்கு முதலியவொழித்து புங்கு பில்வம், கருங்காலி, அருச்சுனம், நாயுருவி, நாகை, மா, மருது இவைகளில் சுண்டுவிரற் பருமனுள்ளதாய், பன்னிரண்டங்குலமுதல் எட்டங்குல நீளமுள்ளதாய் ஈரமுள்ளதாய்த் தோலுடன் கூடினதாய் ஒழுங்காயுள்ளதைக் கொண்டு தந்தங்களிலுள்ள அழுக்கைப் போக்கி நாவழித்துச் சுத்தியுண்டாம் அளவுவாயைக் கொப்புளித்து நீராடல் வேண்டும். இந்நீராடல் வாருணம், பஸ்மம், ஆக்னேயம், ஐந்திரஸ்நாநம், வாயவ்யஸ்நாநம், மந்திரஸ்நாநம், மானஸஸ்நாநம்எனப்படும். இவற்றில் எல்லா மதத்தாருக்கும் வாருணஸ்நாநம் உரியது. அதிலும் ஆற்றங்கரை, மலையருகு, புண்ணிய பூமி, பிரம்மவிருக்ஷத்தினடி, தருப்பையினடியிலுள்ள தீர்த்தம் விசேடம். இப்படிப்பட்ட சுத்தசலத்தில் எட்டங்குல அளவின் கீழ்நின்று இரண்டு கைகளாலும் முகம், கண், மூக்கு, காது முதலான வுறுப்புகளை மூடிக் கொண்டு இஷ்டதெய்வத்தைத் தியானித்து நீராடல் வேண்டும். இரவில் நீராடல் கூடாது. மகாயக்யம், மாதப்பிறப்பு, கிரகணம், இத்தினங்களில், இரவிலும் நீராடலாம். நிர்வாணமாக நீராடல் கூடாது. மற்றப் பஸ்மஸ்நாநம் முதலியவை சைவருக் குரியவை. அதில் பஸ்மஸ்நாநம் வெண்மையுள்ள விபூதியால் செய்வது; ஆக்னேயஸ்நாநம் பிராதக்காலத்திற்கு முன் விதிப்படி ஜலத்தில் ஸ்நாநஞ்செய்து முடித்துப் பின் பஸ்மஸ்நாநஞ் சந்திகள் தோறுஞ் செய்வது. ஐந்திரஸ்நாநம் வெயிலிலும் மழையிலுஞ் செய்வது. வாயவ்யஸ்நாநம் கிழக்கு முகமாயிருந்து கைகளை உயரத்

தூக்கினவனாய்ச் சிரோமந்திரத்தை நினைத்து எழடிசென்றவனாய்ப் பசுவின் கூட்டத்தில் காற்றினால் பறக்கிற தூளிகளில் செய்கிற ஸ்நாநம். இந்த ஸ்நாநம் ஸ்நாநங்களிற் சிறந்ததாம். மந்திரஸ்நாநம் சத்யோஜாத முதலிய ஆகமமந்திரத்தால் செபிக்கப்பட்ட சலத்தால் ஸ்நாநஞ் செய்வது. மானஸஸ்நாநம் பிரணவ வுச்சரிப்புடன் கூடிய பிராணாயாமாதிகளைச் செய்வது; நீராடும்போது பேசினால் வருணன் சத்தியைக் கெடுக்கிறான். இவ்வகை ஸ்நாநாதிகள் முடித்து மந்திரபூர்வகமாக நீர்க்கடன் முதலியவற்றைத் தேவருஷி பிதுர்களுக்குச் செய்து சைவ வைஷ்ணவர்கள் நெற்றியில் திரிபுண்டராதி குறிகளைத் தரித்துக் கிழக்கேனும் வடக்கேனுமிருந்து சந்திகளிற் காயத்ரி முதலிய ஜபித்தல் வேண்டும். **சந்தியாவந்தனம்** - இச்சந்தியாவந்தனம் பிராதக் காலம், மத்யான்னம் சாயங்காலம் அர்த்தயாமம் ஆகிய நான்கு காலங்களிலும் செய்தல் வேண்டும்; பிராதக்காலசந்தி நக்ஷத்திரங்கள் தோன்றும்போது செய்தல் உத்தமம்; நக்ஷத்திரங்கள் மறைந்தபோது செய்தல் மத்திமம். சூரியன் பாதி உதிக்கும்போது செய்தல் அதமம்; சாயங்காலச் சந்தியைச் சூரியன் பாதி அத்தமிக்கும்போது செய்தல் உத்தமம்; அத்தமயமான்பின் ஆகாசத்தில் நக்ஷத்திரங்கள் தோன்றுமுன் செய்தல் மத்திமம்; நக்ஷத்திரங்கள் தோன்றும்போது செய்தல் அதமம்; மத்தியான சந்தியைப் பதினைந்து நாழிகையாகிய மத்தியான்னத்தில் செய்தல் உத்தமம்; மத்தியான்னத்துக்கு முன் ஒரு நாழிகையில் செய்தல் அதமம். இச்சந்தியா தேவதை காலையில் காயத்திரி யென்றும் மத்யான்னத்தில் சாவித்ரி யெனவும் சாயங்காலத்தில் சரஸ்வதியெனவும் கூறப்படும். இச்சந்தியா தேவதைகளுள் காயத்ரி செந்நிறத்தவராயும் சாவித்ரி வெண்ணிறத்தவராயும் சரஸ்வதி கருநிறத்தவராயும் உபாசிக்கப்படுவர். இவர்களுள் காயத்ரி பிரமன் வடிவம், சாவித்ரிருத்ரன் வடிவம் சரஸ்வதி விஷ்ணுவடிவம். இக்காயத்ரி தேவதைகளின் தியானம் சைவஸ்மார்த்த வைணவர்களுக்கு வேறுபடும். யார் விரத நியமத்துடன் சந்தியை உபாசிக்கிறார்களோ அவர்கள் பாவத்தை உதறி அழியாத பிரமலோகத்தை அடைகிறார்கள். பகற்காலத்தில் மனோவாக்குக் காயங்களால் செய்கிற பாபங்களை மாலைச்சந்தி யுபாசனையால் உபாசகன் போக்கடிக்கிறான். இரவில் அங்ஙனஞ் செய்தோன் காலைச் சந்தியா வந்தனத்தால் போக்குவன். இதனை இருடிகள் நெடுங்காலம் உபாசித்தால் தீர்க்காயுளையும் நல்ல பேறறிவையும் பெரும் புகழையும் கீர்த்தியையும் பிரமவொளியையும் பெறுகின்றனர். சந்தியாவந்தனமில்லாதவன் அசுசியுடையனாய் நித்தமும் எல்லாக் கருமங்களுக்கும் தகாதவனே யாகின்றான். எக்கருமமும் பயன்தராது. சந்தியைவிட்டவன் சூத்திரனே யாகின்றான். அவ்வகைச் சந்தியா வந்தனாதிகளைச் செய்தவன் சுத்தனாய் ஆசமனாதிகளைச் செய்து சைவனேல் சிவபூசையையும் வைணவனேல் விஷ்ணுவாதி தேவதா பூசைகளுஞ் செய்க. இந்தக் காயத்ரிக்குரிய மந்திரங்களைக் குருமுகமாயறிக.

**நித்தியசூரிகள்** — ஸ்ரீ வைகுந்தத்தில் பரமபத நாதனைப்போல் சாரூபமடைந்து நித்தியானந்த வாசிகளாய் எழுந்தருளியிருக்கும் முத்தாத்மாக்கள். அவர்கள் சேனை முதலியார் குமுதர், குமுதாக்ஷர், புண்டரீகர், வாமனர், சங்குகர்ணர், சர்ப்பநேத்திரர், சுமுகர், சுப்பிரதிஷ்டர், சண்டர், பிரசண்டர், பத்திரர், சுபத்திரர், ஜயர், விஜயர், தாத்ரு, விதாத்ரு, பிரப்புருதி முதலியவர்கள்.

**நித்தியதானம்** — பலன்கருதாது முனிவர்க்குப் பொருளைப் பரிவுடன் அளிப்பது.

**நித்தியநாதன்** — இவன் முக்கால முணர்ந்த அரசன். இனி வரும்பிறப்பில் ஜென்ம நீக்க மென்றறிந்து தவஞ்செய்கையில் குமாரக்கடவுள் ஆசாரியராய் எழுந்தருளி ஞானோபதேசஞ்செய்ய முக்திபெற்றவன்.

**நித்தியப்பிரளயம்** — ஜன்மாதி யவஸ்தைகளால் ஆத்மா நாடோறும் லயமடைந்து திரும்பிச் சாக்கிராவஸ்தை யடைதல்.

**நித்திரன்** — பாண்டுவிற்குப் பௌத்திரன்.

**நித்திரை** — காலாக்கினிருத்ரர்க்குத் தேவி; இவள் சகலரையும் இளைப்பாறச் செய்பவள். (பிரம்மகைவர்த்தம்.)

**நித்திரைசெய்து விழிக்கையில் பார்க்கக்கூடாவிதி** — நித்திரை செய்து விழித்த உடன் அங்கயீனம், வஸ்திரயீனம், பாவம், காவிவஸ்திரம், கிரகசங்கை, ஊமை, மொட்டைத்தலை, செவிடு, அழுகை, சடை, கூன், அழக்குமேனி, விரிந்த மயிர்த்தலை,

குஷ்டம், கொலை,எண்ணெய்த்தலை, மனோவியாகூலம், உன்மாதம், ஆருகம், விதவை, பாம்பு, பூனை, சாம்பல், எருமை, கயிறு, உலக்கை, முறம், இவைகளைப் பார்த்தால் அன்றைக்குக் கெடுதி அல்லது பல துன்பங்களுண்டா மென்றறிக.

**நித்திரைசெய்து விழித்தவுடன் பார்க்கவேண்டிய விதி** — நித்திரைசெய்து விழிக்கும்போது தாமரைப்பூ, தங்கம், தீபம், கண்ணாடி, சூரியன், புகையொழிந்த நெருப்பு, செஞ்சந்தனம், கட்டில், வயல், சிவலிங்கம், முகில் சூழ்ந்தமலை, கன்றையுடைய பசு, கற்பகவிருட்சம், தமது வலக்கை, மனைவி, மிருதங்கம், இவற்றுளெதுவேனும் ஒன்றைப்பார்க்கில் உத்தமம். விழித்தவுடன் கண்ணாடியைப் பார்த்துக்கொண்டுவரில் வீரியவிர்த்தியும், மகிழ்ச்சியும், சர்வவசியமும், ஞானமும் அதிகரிக்குமென்பர்.

**நித்திரை செய்விதி** — முறைப்படி இடதுபக்கமாகப் படுத்துக் காலை நீட்டிக்கொண்டு நித்திரை செய்தால் பஞ்சேந்திரியங்களினயர்வும்,ச்ரீரவருத்தமும் நீங்கும். இளைத்தமனத்திற்கு உற்சாகமும் ஆயுள் விர்த்தியுமுண்டாகும். தேகாதிபாதம் வரைக்கும் வஸ்திரத்தால் மூடிக்கொண்டு நித்திரை செய்தால் இரண்டு நேத்திரங்களுக்கும், இரண்டு புஜங்கட்கும் வன்மையுண்டாம். அன்றியும் குளிர், பனி, வெயில், தூசி, மேகம், இவைகளால் விளைகின்ற குற்றங்களணுகாவென்றறிக.

**நித்யகர்மப்பிரிவு** — ஆறு. நித்யம், நித்யாங்கம், நைமித்திகம், நைமித்திகாங்கம், காமியம், காமியாங்கம். (சைவபூஷணம்.)

**நித்யசமை** — தர்மம், நித்யம் அநித்யம் எனும் விகற்பத்தினால் தர்மிநித்யமென்று சாதிப்பது. (தரு.)

**நித்யசையோகம்** — வியாபகப் பொருள்களிரண்டிற்குள்ள சையோகம். (தரு.)

**நிபகண்டர்** — ஒரு இருடி.

**நிபந்தனகாரர்** — சுருதி ஸ்மிருதி ,யாசாரங்கியமனஞ் செய்த வைதீகர்.

**நிபந்தனர்** — ஒரு ருஷி. இவர் தம் தாய்க்கு சம்சாரத்தை அரண்யமாகக் கூறியவர். (பார - சாக்.)

**நிப்புதி** — கேமசரியின் தாய்.

**நிமரோசி** — பசமானன் குமரன்

**நிமர்த்தனன்** — சுவபலருக்குக் காந்தியினிடம் உதித்தகுமரன்.

**நிமி** — 1. சூர்யவம்சத்து இக்ஷுவாகு குமரன். இவன் ஒரு யாகஞ்செய்ய வசிட்டரை வரிக்க அவர், இந்திரன் யாகத்தின் பொருட்டு வரித்தானாகையால் அது முடிந்தபின் வருவேன் என்றனர். அரசன் கௌதமரைக் கொண்டு யாகமுடிப்பித்து அந்த இளைப்பால் துயில்புரிந்தனன். இச்சமயத்தில் ஒருநாள் வசிட்டர் இவன் கொலுவிற்கு வந்தனர். அரசன் துயில்வது கண்டு தம்மால் யாகமுடித்துக் கொள்ளாத கோபமும் ; காத்தும் தம்மை எதிர்கொள்ளாத கோபமும் மிஞ்சி அரசனை உடல்நீங்கச் சபித்தனர். அரசன் துயில்நீங்கித் தனக்கு நேரிட்ட சாபமுணர்ந்து நான் துயிலும்போது சபித்தமையால் வசிட்டரும் உடல்நீங்க எனச்சபித்தனன். உயிர்நீங்கிய அரசன் தேகத்தை முனிவர்கள் தயிலத்திலிட்டுப் பக்குவப்படுத்தினர். பின் முனிவர் ஒன்றுகூடி அரசனுக்காக ஒரு யாகஞ்செய்தனர். தேவர் வந்து காற்றுருக்கொண்ட நிமியை யாது வேண்டுமென இனித்தேகம் வேண்டேன், எல்லாருடைய கண்களிலும் இருக்க விரும்புகிறேன் என்றனன். தேவர் அங்ஙனமளித்ததனால் இவன் எல்லாவுயிர்களின் கண்களிலிருந்து இமைகளையசைத்து நிமிஷமாக்கிக் கொண்டிருக்கின்றனன். இதுநிற்க, இவன் நாட்டிற்கு அரசன் இலாமையால் முனிவர்கள் இவனுடலை அரணியிலிட்டுக் கடைந்தனர். அதினின்று ஒருமகா புருஷன் தோன்றினன். அக்கடைந்ததினாற் பிறந்த புருஷனுக்கு முனிவர்கள் மிதிலன் எனவும், ஜனித்ததால் ஜனகன் எனவும், விதேகனால் உண்டானதுபற்றி வைதேகன் எனவும் பெயரிட்டனர். இவன் யாகத்தில் சுவிஹரி முதலிய யோகியர் அரசனுக்கு அரிகதை கூறினர். அரசன் சாபத்தால் உயிர்நீங்கிய வசிட்டர் ஊர்வசியைக் கண்டு மோகித்த மித்திராவருணரால் உயிர் பெற்றனர். (பாகவதம்.)

2. அபூர்வன் குமரன். இவன் குமரன் பிரகித்ரன்

**நிமிடம்** — ஒரு தீர்த்தம்.

**நிமித்தகாரணம்** — எது சமவாயி காரணம், அசமாவாயி காரணமல்லாததாய் மற்றுங் காரணமாவது. (தரு.)

**நிமித்திகன்** — சச்சந்தன் மந்திரி.

**நிம்பராஜு** — தேவதைடணம் எனும் கிராமத்தில் கருணிகர்விருத்தியை அவலம்பித்

திக் குடும்பசமேதராய்த் தீர்த்த யாத்திரை செய்து, தாம் கீர்த்தனங்கள் செய்ய எண்ணங்கொண்டு பகவதாராதனை செய்கையில் பகவான் விநாயகர் வழியாய் வித்தையிற்றேர்ச்சிவரச் செய்வித்து நிம்பராஜர் கீர்த்தனை செய்கையில் கேட்டுண்டான ஆனந்தத்தால் பெருமாளிவர்க்குச் சிரம பரிகாரத்தின் பொருட்டுச் சாமரமிரட்டப் பெற்றவர்.

**நிம்பன்** — 1. ஒரு அசுரன். காளியாற் கொலையுண்டவன்.

2. பாண்டியனுக்கு ஒரு பெயர்.

**நிம்பார்க்கமதம்** — கிறிஸ்து பிறந்த (கஉ) வது சகாப்தத்தில் இம்மதம் உண்டாயிற்று. இம்மதத்தாபகர், பாஸ்கராசாரியர். இந்தப் பாஸ்கராசாரியர் ஒருநாள் ஒரு துறவியைத் தமது வீட்டிற்குப் பிக்ஷைக்கழைக்க அவர் வருவதாய் வாக்களித்துச் சூரியாஸ்தமனசமயம் வரையிலும் வாராமையால் ஆசாரியர் அதுவரையில் போஜனமின்றி யிருந்தனர். இவ்வாறிருக்கையில் சூரியன் அத்தமித்தனன். சந்நியாசியும் வந்தனர். சூரியாஸ்தமனத்திற்குப் பிறகு துறவிகள் போஜனம் செய்வதில்லை யாதலால் ஆசாரியர் சூரியனைப் பிரார்த்தித்தனர். அப்போது சூரியன் நிம்பவிருக்ஷமாகிய வேம்பின்மேல் தன் கிரணத்துடன் பிரகாசித்தான்; அச்சூரியனைக் கண்டு இருவரும் புசித்தனர். அதுமுதல் பாஸ்கராசாரியருக்கு நிம்பார்க்கர் என்று பெயருண்டாயிற்று. இவரைச் சூரியசித்தாந்தம் செய்தவர் எனவும், வேதபாஷ்யம் செய்தவர் எனவும் கூறுவர். இம் மதசித்தாந்தம், கடவுள் ஒருவனே எனவும், அவர் விக்ரகத்தைத் தொழுது ஆனந்தப் படுதல்போல் மறுமையிலும் இவ்வகை ஆனந்தம் உண்டு எனவும் கூறும். இவர்களுக்கு கிருஷ்ணமூர்த்தி தெய்வம். இவர்கள், ஜீவனை நாயகியாகவும், பரமாத்மாவை நாயகனாகவும் எண்ணுவர்.

**நிம்மலகன்** — சிவகணத்தவரில் ஒருவன்.

**நிம்மவ்வை** — இந்தம்மாள் வீரசைவ ஒழுக்கமேற்கொண்டவள். இவள் புதலையென்னும் ஊரில் சிவனடியவர்க்குத் தீர்த்தமெடுத்துக் கொடுக்கும் திருப்பணிசெய்து தன் குமரன் மாடு மேய்த்ததனால் வரும் கூலிகொண்டு சிவனடியவரைப் பூசித்து வருவர். இவ்வகையிருக்கு நாட்களில் திருக்கைலையில் சிறுத்தொண்ட நாயனர் வலியசெயல் செய்து முத்தியடைந்தோமென இறுமாந்திருத்தலைச் சிவமூர்த்தி அடக்கத் திருவளத்தெண்ணிச் சிறுத்தொண்டரைச் சேடராக அழைத்துத் தாம் ஒரு சங்கமர் வேடம்பூண்டு நிம்மவ்வை வீட்டுக் கெழுந்தருளினர். நிம்மவ்வை எதிர்கொண்டு பணிந்து இருவரையும் உபசரித்து எழுந்தருளியிருக்கச் செய்து அதிரசமுதலிய பலகார வகைகளையும் திருவமுதும் சமைத்துத் தீர்த்தத்திற்குச் சென்றனள். அச்சமயத்தில் இவள் குமரன் அன்னைவருமுன் அவ்விடமிருந்த அதிரசத்தில் ஒன்றெடுத்தருந்தினன். அன்னை உணர்ந்து அவ்விடத்திருந்த உலக்கையெடுத்து அவன்மீது அடித்தனள். அதனால் புத்திரனிறந்தனன். பின்பு அவன் தொட்ட பலகார வகைகளை எடுத்தெறிந்து வீடு முதலியவைகளை மெழுகிட்டுப் பலகாரம் திருவமுது முதலிய விரைவிற் செய்து முடித்துச் சங்கமரை எழுப்பினள். சங்கமர் உன்னைத் தேடிவந்த குமரன் எங்குச் சென்றனன் என ஔவை குமரன்செய்த தீமைகளைக்கூறித் தேவரீர்க்குச் சமைத்த அன்னத்தைத் தேவரீர் அருந்தவேண்டுமென வேண்டினள். சிவமூர்த்தி குமரனையெழுப்பித் தாயிடம் அனுப்ப ஔவை இவன் சிவனடியவர்க்குத் தீமை செய்தவன். இவன் முகத்தைப் பாரேன் என்று சிறுத்தொண்டர் பிரமிக்கக் கூறினள். சிவமூர்த்தி இந்தத் தாயுடன் குமாருக்கும் முத்தியளித்தனர்.

**நிம்மனர்** — அநமித்திரன் குமரர். இவ் குமரர் சத்திராசிதன் பிரசேநன்.

**நிம்ரோசி** — பசமாநன் குமரரில் ஒருவன்.

**நியகோத்ரான்** — கஞ்சன் தம்பி.

**நியக்குரோதம்** — இதனடியில் பாண்டவர் சென்றனர். இந்த விருக்ஷத்தைத் தட்சகன் கடித்தான்.

**நியதி** — மேருவென்பவன் குமரி. விதாதாவின் தேவி.

**நியத்** — பீமன் என்னும் ஏகாதசருத்திரன் தேவி.

**நியாயமன்றம்** — உலகியல், வேதம், அறநூல் முதலியவற்றிற் சிறந்த அந்தணர், ௩, ௫, ௯, வரைக்கொண்டது. அம்மன்றத்தில் அறிவுவாய்ந்த வணிகர்களை வழக்கு கேட்போராக நியமித்தல்வேண்டும். இதன் (௧0) அங்கங்களாவன — அரசன், நீதிபதி, நீதிமன்றத்தவர், அறநூல், கணக்

..காளர், எழுத்தாளர், பொன், நெருப்பு, நீர், வலாளர். (சுக் - நீ.)

**நியாயவகை** — இவை இக்காரணத்தால் இவ்வகையாகும் என ஆட்சியை எண்ணி மீமாம்சை ஆதி நியாய நூல்களில் ஆன்ரோரால் எடுத்துக்காட்டிய நியாயங்களாம். அவை ஆங்காங்குப் பலவிடங்களில் வந்த வழிக் காண்க. எனக்குக் கிடைத்த சில வற்றை மாத்திரம் ஈண்டுத் தெரிக்கிறேன். அவை :

1. அப்யர்ஹித நியாயம் - அதாவது முன்னே சம்மானிக்கத் தக்கவரை முன் பூசித்து மற்றவர்களுக்குப் பின் மரியாதை செய்வது.

2. ஸ்தாலிபுலாக நியாயம் - அதாவது ஒரு பானை சோற்றிற்கு ஒருசோறே பத மாகக் கொள்வது.

3. காகதாலிய நியாயம் - பனையின்மேல் காக்கை ஏறவும் பனம்பழம் வீழவும் உள்ள சம்பந்தம்.

4. வீசிதரங்கநியாயம் - அலை எதிர்த் துக் கரையினிடம் வீச அதைத்தொடர்ந்து மற்றொன்று பின்பற்றுதல் போன்றது.

5. கதம்பமுகுள நியாயம் - கதம்ப விருக்ஷத்தின் அரும்பு மலருகையில் நான்கு இதழும் ஒன்றுசேர விரிந்து மணம்வீசு வது போல்வது.

6. களேகபோதநியாயம் - பலநெற்களங் களில் புறாக்கள் தானியங்களைப் பொறுக்கி உணவு அருந்தல் போல்வது.

7. தண்டாபூபிகாநியாயம் - தடியை எலி தின்றது என்றாற் போல்வது.

8. கைமித்திகநியாயம் - அதுவே அப் படி ஆனால் மற்றதற்குக் கூறுவானேன் எனற்பாலது.

9. தூலாருந்ததிநியாயம் - தூலமாய் எதிர்தோற்றும் பொருளைக் காட்டி அருந் ததியைக் காட்டுதல் போல்வது.

10. ஸ்வாமிபிருத்ய நியாயம் - ஆண் டான் அடிமைத்திறம் கூறுவது.

11. மயூரநிருத்தநியாயம் - ஒன்றைத் தாபிக்கும் வழி மற்றொன்று விட்டுப் போதலுக்கு மயிலின் நடக்கையை எடுத் துக் காட்டுவது.

12. கபோதகநியாயம் - புறாக்கள் ஏதே னும் ஒரிடத்திலிறங்கப் பெறின் பலவும் ஒருங்கே இறங்குவது போல்வது.

13. குணாக்கரநியாயம் - ஒருபுழு யாதே னும் ஒரு மரத்தினை அரித்துச் செல்லுகை யில், அம்மரத்தில் அதனால் உண்டாகிய இரேகைகள் எழுத்துபோல் தோன்றுவது. இது ஒன்று செய்ய ஒன்றாய் முடிவது.

14. காகாக்ஷகோளகநியாயம் - காக் கையின் இருகண்களுக்கும் ஒரு மணியே நின்று உதவுவதுபோல, ஒரு பொருளே நின்று இருபக்ஷத்தும் உதவுவது.

15. தேகளீதீபநியாயம் - வாசற்படியி லிட்டதீபம் வீட்டினுள்ளும் புறமுமாகிய இருபுறத்து இருளையும் நீக்குதல் போல் ஒரு பொருள் இடையினின்று இரண்டி டத்தும் பயன்தருவது.

16. பிராமணவசிட்டநியாயம் - பிராம ணர் வந்தார் என்றபோது அவருள் ஒரு வராகிய வசிட்டரும் வந்தார் என்பது போதருமாயினும், விசிட்டம் பற்றி வசிட் டரை வேறு பிரித்துக் கூறுதல்போல், ஓரினப்பொருளைக் கூறுகையில் அவற் றுள் தலைமைபற்றி ஒன்றை வேறெடுத் துக் கூறுதல் போல்வது.

17. அந்தகூபபதனநியாயம் - குருட னொருவனுக்குக் கண்ணுள்ளா னிவ்வழி செல்லுக என வழிகாட்டியும் அவ்வழி செல்லாது வேறுவழி சென்று கிணற்றில் விழுவதைப்போல்வது.

18. சியாலசாரமேயநியாயம் - ஒருவன் தன் வீட்டிலிருக்கும் நாய்க்கிட்ட பெயரே தன்மைத்துனனுக்கு மிருத்தல் நோக்காது, அந்த நாயைத் தன் வீட்டிலிருந்து விலக்க எண்ணியபோது, தன்மனைவியை நோக்கி நாயின் பெயரைக் கூறியதை வீட்டினின் றும் விலக்குக என, மனைவி (சியாலன் = மைத்துனன்) மைத்துனனை விலக்கக் கூறி யதாக எண்ணி விலக்கியது போல்வது. இது பெயர் இரண்டிற்கும் ஒன்றாயிருத் தல் பற்றி, ஒன்றை மற்றொன்றாக ஆரா யாது, செய்யும் நெறி.

19. சுந்தோபசுந்தநியாயம சுந்தன், உபசுந்தன் இருவரும் திலோத்தமைபொரு ட்டு ஒருவரோடொருவர் போரிட்டு மாய்ந் ததை யொப்பது. இது ஒன்றினை யொன் றழிக்கும் நெறிபோல்வது.

20. அந்தகஜநியாயம், அந்தஹஸ்தி நியாயம் - யானைகாண விரும்பிய குருடன் ஒருவன், யானையின் ஒருறுப்பைத் தடவிப் பார்த்து யானையின் வடிவை நிச்சயிப்பது போல்வது. இது ஒன்றினைமுற்ற ஆரா யாது ஒரு பாகத்தினை மாத்திரம் பார்த்து நிச்சயிப்பது போல்வதோர் நெறி.

21. அசமலோட்டிர நியாயம் - ஒரு கல்லுடன் மண்ணுங்கட்டியை ஒப்புநோக்கின் மண்ணுங்கட்டி மெல்லிதாகவும், அதனையே பஞ்சுடன் ஒப்புநோக்கின் மண்ணுங்கட்டி வலியதாகவும் கொள்ளப் படுதல்போல், ஒன்றொடுநோக்கி ஒன்றற்கு வன்மை மென்மைகள் கற்பிக்கப்படுதலாகிய ஒரு நெறி. பின் வருவனவற்றை விளக்கின் விரியுமாதலின் அறிந்தார்பால் கேட்டுணர்க.

22. சாகா சங்கரமணநியாயம். 23. பசுபாகநியாயம். 24. வரகோஷ்டிநியாயம். 25. லீடாலீடநியாயம். 26. கௌதமபசுநியாயம். 27. அந்த ஜடகநியாயம். 28 அந்தபரம்பராநியாயம். 29. அசோகவநிகாநியாயம். 30. காகதந்தகவேஷணநியாயம். 31. கூபயந்தர தாடிகாநியாயம். 32. கட்டகுடி பிரபாதநியாயம். 33. திருணக்ஷரநியாயம். 34. நிருபநாபித புத்திரநியாயம். 35. பங்கப்ரக்ஷாளனநியாயம். 36. பிஷ்டபேஷணநியாயம். 37. பீஜாங்குரநியாயம். 38. லோகஜும்பகநியாயம். 39. வந்நீதூமநியாயம். 40. விஷக்கிரிமிநியாயம். 41. விஷவிருக்ஷநியாயம். 42. விருத்தகுமாரி வாக்கியநியாயம். 43. சாகாசந்திரநியாயம். 44. ஸிம்ஹாவலோகநியாயம். 45. ஸூசிகடாகநியாயம். 46. ஸ்தூணநிகநநநியாயம். 47. ரோடிபக்ஷணநியாயம் 48. ஹூதாதந்துநியாயம். 49. மணிமந்திராதிநியாயம். 50. கோபலீவர்த்தநியாயம். 51. உஷ்டரகண்டக போஜகநியாயம். 52. அந்தபங்குநியாயம். 53. அந்தகோலாங்குலநியாயம். 54. சாவிநீநியாயம். 55. திரணாரணீமணிநியாயம். 56. தண்டசக்ரநியாயம். 57. இராசபுரபிரவேசநியாயம். 58. சங்கவேளாநியாயம். 59. சதபத்ரபேதநியாயம். 60. சிருங்கக்ராஹிகாநியாயம். 61. ஸ்தவிரலகுடநியாயம், முதலிய.

**நியோகிகை** — ஒரு தேவதை, பாதாரம், பாதிரவ்வியம், கிரகிக்கத் தாண்டுபவள். இவளுக்கு மத்தை, உன்மத்தை, பிரகிருஷ்டை, நாரி என நால்வர் குமரிகள். இவர்கள், கிரகத்தர் முதலியோர், தமது பாட்டன் பூட்டன் முதலியவர்க்குப் பலியிடாவிட்டால் அவர்கள் செல்வத்தைக் கெடுப்பவர்கள்.

**நிரஞ்சரன்** — சண்முகசேநாவீரரில் ஒருவன்.

**நிரநுயோச்யாநு போகம்** — நிக்ரகத்தாத் பிராத்தனாகாதவனை நிக்ரகஞ் செய்யவேண்டுமென்று நிக்கிரகிக்கிறது. (இது ஏவப்படாதவனை ஏவுதல்.) (சிவ - சித்.)

**நிரமித்திரன்** — நகலன் குமரன்.

**நிரம்ப அழகியர்** — ஒரு தமிழாசிரியர், இவர் வேதாரண்யத்தில் சைவவேளாளர் குலத்தில் தோன்றிக் கல்விபயின்று வல்லவராய் ஞானநூல் அறியவேண்டி விருப்பங்கொள்ளக், கருணை ஞானப்பிரகாசசுவாமிகளிடம், சிவதீக்ஷைபெற்று மதுரையில் வசித்து இருந்தனர். இவர் ஒருநாள் ஒரு மரத்தடியில் சிவத்தியானத்துடன் இருக்கையில் அவ்வழி சென்ற சிற்றரசன் ஒருவன் அவ்விடம் தனித்து மரத்தடியில் உட்கார்ந்திருப்பவர் யாரென்று வினவ அவ்வேவலர் இவர் இருந்த நிலையையும் இவரது தேக அடையாளங்களையுங் கூற அரசன் இவரை அறிந்தவன் ஆதலாலும் இவர் தேகத்திலிருந்த நுணுக்காய்க் கிரந்தியாலும் நிரம்ப அழகியரோ என்றனன். அதுவே பெயராயிற்று. இவர் சாலிவாகனசகம். (கசஙூ0)-க்கு மேலிருந்தவர் என்பர். இவர் திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவருடன் வாசித்தவராம். இவர் செய்த நூல் சேதுபுராணம், சிவஞான சித்திசுபக்ஷ உரை, திருவருட்பயனுரை. (சேதுபுராணம்).

**நிரம்பையர்காவலர்** — அடியார்க்கு நல்லார்க்கு ஒரு பெயர்.

**நிரர்த்தகம்** — பிரதிவாதி ஒன்றுஞ் சொல்லாதிருக்கையில் தான் வீண் வார்த்தையைச் சொல்லுகை. (சிவ - சித்.)

**நிரனிறையணி** — சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள்கொள்வது. இதனை யதாசங்கியாலங்கார மென்பர் வடநூலார். (தண்டி.)

**நிரக்ஷரேகை** — பூமியின் வட துருவத்திற்கும், தென் துருவத்திற்கும் (கூ0) டிகிரியில் பூமத்யபாகத்திலுள்ள ரேகை.

**நிராங்காரன்** — அல்லமதேவருக்குத் தந்தை.

**நிரீசுரசாங்கியன்மதம்** — பிரகிருதி மூலம், புரியஷ்டகம், விகிர்தி என மூன்றுமெனவும் அது தூலசூக்ஷ்ம பரமெனப் பெயரடைந்து சுத்தபுருடன் சந்நிதானத்தில் பாலன் சேட்டை புரிவதுபோல் உலகம் யோனி பலவாய்ப்பிறந்து ஒடுங்குமெனவும் தெய்வம் வேண்டா எனவுங் கூறுவன். (தத்துவநிஜாநுபோகசாரம்.)

**நிருகமகாராசன்** — 1. இவன் இக்ஷுவாகுவம்சத்து வைவச்சுதமநுவின் இரண்டாம் புத்திரன். இக்ஷுவாகு தம்பியெனவுங்கூறுவர். இவன் புஷ்கரக்ஷேத்திரத்தில் பிராமணருக்குக் கோதானஞ் செய்தனன். தானஞ்செய்த பசு மீண்டும் அரசன் பசுக்கூட்டத்தில் வந்தது. அதை மீண்டும் அரசன் வேறொருவருக்குத் தானஞ் செய்தனன். தானங்கொண்ட இரண்டு பேரும் ஒருவருக்கொருவர் மாறுகொண்டு அரசனையணுகிச் சிலநாள் காத்திருந்தும் அரசன் குறைகளைக் கேளாததினால் நீ ஏழைகளுக்குத் தரிசனங் கொடாததினால் ஓணானாகவெனச் சபித்தனர். இவ்வரசன் தான் வசிக்கச் சுகமாகப் பள்ளங்களைச் செய்துகொண்டு வசித்துக்கொண் டிருந்தனன். இவனுக்குச் சாபம் கிருஷ்ணாவதாரத்துக் கிருஷ்ணமூர்த்தியால் நீங்கிற்று.

2. உசீநரன், இரண்டாங் குமரன்.

**நிருசக்ஷு** — சுநிதன் குமரன். இவன் குமரன் நளன்.

**நிருதன்**—1. வைவச்சுதமநுவின் இரண்டாம் புத்ரன். இக்ஷுவாகு தம்பி.

2. உசீநரன் இரண்டாம் புத்ரன்.

**நிருதி** — 1. இவன் பூர்வஜன்மத்தில் பிங்கலாக்ஷன் என்னும் வேடன். இவன் வேடனாயிருந்தும் தீமைசெய்யும் வேடர்களை அடக்கி வருவன். இவ்வகை ஒழுகி வரும் நாட்களில் புண்ணியத்தால் யாத்திரை செய்வோரைச் சிலவேடர் மறுக்க அவ்வேடர் பலருடன் இவன் போரிடுகையில் மாண்டு நிருதியாயினன். இவன் தவத்தால் தென்மேற்குத் திசைக்குக் கடவுளாயினன். தேவி தீர்க்காதேவி; பட்டணம், கிருஷ்ணாங்கனை; வாகனம் நரவாகனம்; (பூதம்) ஆயுதம் குந்தம்; இவன் உலகத்தை, இழிந்தவராயினும் நன்மை செய்தவர் அடைவர். இவர் வாகனமாகிய பூதம் பராசரமுநிவர் வேள்வியா விழுக்கப்படச் சிவபெருமானை யெண்ணி அது முறையிடச் சிவபிரான் வேள்வியை நிறுத்தக் கட்டளையிட்டதால் நிறுத்த, உயிர் பெற்றது. (காசிகாண்டம்.)

2. முதல்வள்ளல் எழுவரில் ஒருவன்.

3. இராமனென்னும் மநுப்புத்திரனுக்கு மனைவி.

**நிருத்தக்கை** — (௩0) அவை சதுரச்சிரம், உத்துவீதம், தலமுகம், சுவத்திகம், விப்ரகீர்ணம், அருத்தரேசிதம், அராளகடாமுகம், ஆவித்தவத்திரம், ஆசிமுகம், இரேசிதம், உத்தானவஞ்சிதம், பல்லவம், நிதம்பம், கசதந்தம், இலதை, கரிக்கை, பக்கவஞ்சிதம், பக்கப்பிரதியோகம், கருடபக்கம், தண்டபக்கம், ஊர்த்துவமண்டலி, பக்கமண்டலி, உரோமமண்டலி, உரப்பார்சுவார்த்த மண்டலி, முட்டிகசுவத்திகம், நளிநீபதுமகோசம், அலபதுமம், உற்பணம், இலளிதை, வலிதை என்பனவாம்.

**நிருத்தி** — ஒரு தருக்கநூல்.

**நிருபஞ்சயன்** — மேதாவி குமரன். இவன் குமரன் அபூர்வன்.

**நிருபதுங்கன்**—ஒரு பல்லவ அரசன், இவன் தந்திவர்மன் குமரன்; இவன் சதுர்வேதிமங்கலமெனுங் கிராமத்தைப் பிராமணர்களுக்குத் தானஞ்செய்ததாகப் பல்லவர் வம்சாவளியில் கூறப்பட்டுள்ளது. (சுவல்ஸ்.)

**நிருமலதானம்** — கடவுளுவப்பெய்த ஞானிகளுக்குதவல்.

**நிருலோமன்** — திருவேங்கடத்தில் தவஞ்செய்து கொண்டிருந்து ஸ்ரீராமமூர்த்தி எழுந்தருளத் தரிசித்துப் பரமபதமடைந்தவன்.

**நிருவண முகத்தினங்கங்கள்** — பதினான்கு. இவை நாடகவிகற்பங்கள். சந்தி, விரோதம், கிரதனம், கிண்ணயம், பரிபாடனம், பிரசாதம், ஆனந்தம், சமயம், கிருதி, ஆபாடனம், உபகூகனம், பிரசத்தி, பிரசனம், சங்காரம். நிருவாணமாவது - விளைந்தபோகம் வீதிவரையாலறுத்துப் படுத்துவைத்து துகளுங் களைந்து கொண்டுண்மகிழ்ந்தாற் போலக்கொள்வது. (வீர - சோ.)

**நிருவிருதி** — விருஷ்ணி குமரன். இவன் குமரன் தசாருகன்.

**நிருடலக்ஷணை** — நீலஞ்சூடினான் என்பதில் நீல குணத்தைவிட்டுக் குணியை உணர்த்தல். (தரு.)

**நிருபருத்ரன்** — நரேந்திரமிருகாசன சகோதரன் ஹேஹயவம்சத்தவன்.

**நிருபன்** — பிரகலாதன் குமாரன்.

**நிரைநிரை** — இது பொருள்கோளில் ஒன்று. பெயரும் வினையுமாகிய சொல்லையும் அவை கொண்டுமுடியும் பயனிலைகளையும் வேறுவேறாக நிறுத்தி முறையாகவேனும் எதிராகவேனும் நிறுத்தி இதற்கிது பயனிலையென்பது படக்கூறுவதாம். (நன்.)

**நிரையசை**—குறிலிணையேனும், குறினெடிலேனும் தனித்தும் ஒற்றடுத்தும் வருவது.

**நிரோதினி** — ஒரு சத்தி.

**நிர் உர்த்தசஷன்** — தாமசமநுவைக் காண்க.

**நிர்மித்திரன்** — 1. நகுலனுக்கு ரேணுமதியிடம் பிறந்த குமரன்.

2. யுதாயுதாயு குமரன். இவன் குமரன் சுநக்ஷத்ரன்.

**நிர்மோகன்** — 1. சாவர்ணிமநுப் புத்திரன்.

2. பதின்மூன்று மன்வந்தரத்துருஷி.

**நிர்வாக்கியன்** — புரஞ்சயனுக்கு நண்பன்.

**நிர்வாணதீக்ஷை** — மோக்ஷத்தைத் தரும் தீக்ஷை. அது (௪) வகை. சத்யோ நிர்வாணம், அசத்யோ நிர்வாணம், லோகதர்மிணி, சிவதர்மிணி என்பன. சத்யோ நிர்வாணம் ஆசாரியர் ஷடத்வசோதனை சிகரச்சேதம் ஓமஞ்செய்து சிவபதத்தில் ஆன்மாவைச் சேர்த்த மாத்திரையில் தேக நீக்க முண்டாவது. அசத்யோ நிர்வாணம்-கர்மத்தின் முடிவில் ஆன்மாவைச் சிவபதத்தில் சேர்ப்பது. உலோகதர்மிணி - பாபகர்மங்களைச் சோதித்துப் புண்யகர்மங்களைச் சோதியாமல் இல்வாழ்வானுக்குச் செய்யப்படுவது. சிவதர்மிணி - புண்ணிய பாபங்க ளிரண்டையுஞ் சோதித்து மோக்ஷ விருப்புள்ள துறவிக்குச் செய்யப்படுவது. (சைவபூஷணம்.)

**நிர்வாணருஷிகள்** — பதுமஞரா மனவந்தரத்துத் தேவர்.

**நிர்வாணிநிலை** — ஞாயிறு, வியாழம - தென்கிழக்கு, திங்கள், வெள்ளி - தென்மேற்கு செவ்வாய், சனி - வடமேற்கு புதன் - வடகிழக்கு இவள் பிரயாணத்தில் பின்னல் நன்று, முற்பக்கந்தீது இவள் நிற்குந்திசையில் போகல் ஆகாது.

**நிர்விர்த்தி** — திருஷ்டி குமரன்.

**நில அளவு** — ஐயாயிரமுழம் ஒரு குரோசம், ஒருகுரோச அளவுள்ளதும், ஆயிரம் கருட அளவுள்ள வெண்பொற் காசுகள் அரசிறையாகப் பெற்றதும் கிராமம் எனப்படும். அந்தக் கிராமத்தின் அரைக்கூறு பல்லி. பல்லியின் அரைக்கூறு கும்பம் எனப்படும். பிரமன் கொள்கைப்படிக் ($2\frac{1}{2}$) கோடி முழங்களாதல் (உ௫00) சதுரநிவர்த்தனங்களாதல் ஒரு குரோசம். நடுவிரலினடுவண் உள்ள இரண்டு ரேகைகளினடுப் பாகம் அங்குலம். அங்குலம் (உ௪) கொண்டது முழம். முழங்கள் (௪) கொண்டது கோல், முழங்கள் (௫) கொண்டது இலகு. (உ௫) கோல்கள் கொண்டது நிவர்த்தனம். (உ௫) நிவர்த்தனங்கள் பரிவர்த்தனம். (சுக் - நீதி.)

**நிலக்கரி** — 1. நெடுநாட்களுக்கு முன் கடல்களாலும் ஆறுகளாலும் மூடப்பட்ட பூமியில் இருந்த மகாவிருக்ஷங்கள் மண்ணில் உருக்கெட்டுக் கரியாக மாறுவது.

2. இது பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப்படுவது. கருநிறமும், மிருதுவும், பளபளப்பும் உள்ளது. யந்திரங்களுக்கும் உலோகங்களை உருக்குதற்கும் அடுப்பெரிக்கவும் உதவும். டெக்கான், இங்கிலாந்து முதலிய தேசங்களிலுண்டாவது.

**நிலங்கு** — இது ஒருவகை நிலங்கீறி உணவு கொள்ளும் பறவை.

**நிலந்தரு திருவிற்பாண்டியன்** — கடைச்சங்கம் நிறுவிய முடத்திருமாறனுக்கு ஒரு பெயர். இவனுக்குச் சயமாகீர்த்தி யெனவும் ஒருபெயர் உண்டு. சயமாகீர்த்தியைக் காண்க.

**நிலமண்டில வாசிரியப்பா** — எல்லா அடிகளும் அளவொத்த நாற்சீரடிகளாக வருவன. (யாப்பு - இ.)

**நிலம்** — ஐவகைப்படும். அவை, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்பன. அவற்றுள் குறிஞ்சி, மலைசார்ந்த நிலம். பாலை, சுரஞ்சார்ந்த நிலம். முல்லை, காடுசார்ந்த நிலம். மருதம், ஊர்சார்ந்த நிலம். நெய்தல், கடல்சார்ந்த நிலம். சொன்ன முறைப்படி குறிஞ்சிக்குத் தெய்வம், குமாரக்கடவுள்; உயர்ந்தோர், பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி; தாழ்ந்தோர், குறவர், கானவர், குறத்தியர்; புள், கிளி, மயில்; விலங்கு, புலி, கரடி, யானை, சிங்கம்; ஊர், சிறுகுடி; நீர், அருவி, சுனை; பூ, வேங்கை, குறிஞ்சி, காந்தள்; மரம், சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம் மூங்கில்; உணு, மலைநெல், மூங்கிலரிசி, தினை; பறை, தொண்டகம்; யாழ், குறிஞ்சியாழ்; பண், குறிஞ்சிப்பண்; தொழில், வெறியாடல், தேனழித்தல், ஐவனமென்னும் மலைநெல் விதைத்தல், தினைகாத்தல், கிழங்கு அகழ்தல், அருவியாடல், சுனையாடல் முதலியவாம். இது கூதிரும் யாமமும், முன்பனியுமாகிய இருபொழுதுகளையுமுடைத்து. இந்நிலத்து வசிப்போருக்கு உதிரத்தைப் பீடிக்கின்ற சுரமும், வயிற்றில் ஆமக்கட்டியும், வல்லைக்கட்டியும், உண்டாம். சிலேஷ்மம் மீறும். பாலைக்கு - தெய்வம், கன்னி, உயர்ந்தோர், விடலை, காளை, மீளி, எயிற்றி. தாழ்ந்தோர், எயினர், எயிற்றியர், மறவர், மறத்

தியர்; புள், புறா, பருந்து, கழுகு; விலங்கு, செந்நாய்; ஊர், குறும்பு; நீர், குழி, கூவல்; பூ, குரா, மரா, உழிஞை; மரம், பாலை, ஓமை, இருப்பை; உணவு வழி பறித்தன, பதியிற்கவர்ந்தன; பறை-துடி; யாழ் - பாலையாழ்; பண் - பஞ்சுரம்; தொழில் - போர்புரிதல், சூறையாடல்; பொழுதுவேனில், நண்பகல், பின்பனி என்பன. இந்நிலத்தார்க்கு முத்தோஷங்களும் அவற்றால் வரும் நோய்களும் உண்டாம். முல்லைக்கு - தெய்வம் - நெடுமால்; உயர்ந்தோர் - குறும்பொறை நாடன், தோன்றல்; மனைவி; கிழத்தி, தாழ்ந்தோர், இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்; புள்- காட்டுக்கோழி; விலங்கு - மான், முயல்; ஊர் - பாடி; நீர் - கான்யாறு, குறுஞ்சுனை- பூ - குல்லை, முல்லை, தோன்றி, பிடவம்; கொன்றை, காயா; மரம் குருந்து; உணவு, வரகு, சாமை, முதிரை; பறை - ஏற்றுப் பறை; யாழ்-முல்லையாழ்; பண் - சாதாரி; தொழில் - சாமை வரகுவிதைத்தல், கடாவிடல், கொன்றைக்குழலூதல், ஆடு மாடுகள் மேய்த்தல், விடைதழுவல், குரவையாடல், கான்யாருடல்; பொழுதுகார்காலமு மாலையுமாம். இந்நிலம் பித்தாதிக்கமான இடமாம், அதனுடன் வாததோஷமும் அதிகப்படும். இவ்விருவகைத் தோஷங்களால் பல ரோகங்கள் உண்டாம் மருதநிலம் - தெய்வம் - இந்திரன், உயர்ந்தோர் ஊரன், மகிழ்நன் கிழத்திமனைவி; தாழ்ந்தோர் - உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர்; புள் - வண்டானம், அகன்றில், நாரை, போதா கம்புள், குருகு, தாரா; விலங்கு - எருமை, நீர் - யாறு, கிணறு, குளம்; பூ; தாமரை, கழுநீர், குவளை. காஞ்சி வஞ்சி - மரம் - மருது; உணவு. செந்நெலரிசி வெண்ணெலரிசி; பறை - கிணைமுழவு; யாழ் - மருதயாழ்; பண் - மருதம்; தொழில் - விழாக்கொளல், வயற்களைகட்டல், அரிதல், கடாவிடல்; குளங்குடைதல், புனலாடல், கலம் விடுதல். இந்நிலம் நல்லநீர் வளப்பம் பொருந்தினுல் முத்தோஷங்களால் உண்டாகும் தோஷங்களைப் போக்கும்; அன்றியும் இந்நிலப் பொருள்களை உண்பவர்தம் பேர்சொல்லினும் நோய்கள் அணுகா. நெய்தனிலம் - தெய்வம் - வருணன். உயர்ந்தோர் - சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி. தாழ்ந்தோர் நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர். புள் - காக்கை. விலங்கு - சுறா. ஊர் - பாக்கம், பட்டினம். நீர், உவர்நீர்க்கேணி, சுவர்நீர். பூ - நெய்தல்- கைதை, முண்டகம், அடம்பு. மரம்-கண்டல், புன்னை, ஞாழல். உணவு-மீன், உப்பு, முதலிய விற்றலால் பெறுவனவும், மீனு முணங்கலும். பறை - கோட்பறை, நாவாய்ப்பம்பை. யாழ் விளரியாழ். பண் - செவ்வழி; தொழில் மீனுப்புப்படுத்தல், அவை விற்றல், மீனுணக்கல், புள்ளோப்பல், கடலாடல். காலம் - ஆதித்தன் அஸ்தமனம். இந்நிலம் உவர்ப்பு உள்ளது ஆதலின் பித்த வாத சேர்க்கை உள்ளதாம். இதில் வசிப்போர் தேகத்து ஒருவித தடிப்பும், பாதத்துச் சிலீபதரோகமும், குடலண்ட விருத்தியும் பெறுவர். பின்னும் இந்நிலம் வன்பால், மென்பால், இடைப்பால் என்று மூன்று வகைப்படும். அவற்றுள் வன்பால் குழியின் மண்மிகுவது. மென்பாலா வது மண்குறைவது. இடைப்பாலாவது ஒப்பது.

**நிலன்** — கத்ருகுமரன் நாகன்.

**நிலாமுகி** — இதனைச் சகோரபக்ஷி யென்பர். இது சந்திரோதய காலத்தில் சந்திரிகையையுண்டு ஜீவிப்பதென்பர். (உல - வ.)

**நிலை** — (ச) பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்யாலீடம். இவை விற்றொடுத்து அம்பினை எய்வார்க்கு நிலை. ஒரு காலில் நின்று ஒருகால் மடக்கல் பைசாசம், இரு காலும் பக்கமாக வளையமண்டலித்தலே மண்டலம், வலக்கால் மண்டலித்து இடக்கால் முந்துறலே ஆலீடம், வலக்கால் முந்துற்று இடக்கால் மண்டலித்தலே பிரத்தியாலீடம்.

**நிலைஜலயந்திரம்** — 1. (Brahmah Press) இது, திரவபதார்த்தமாகிய நீர் முதலியவற்றை அழுத்துஞ் சக்தியால் மேல்கொண்டு வருவது. இது பஞ்சுமூட்டை முதலியவற்றை அழுத்தவும் உதவும்.

2. இது, நிலையாகவுள்ள ஜலத்திற்குள்ள சக்தியை நமக்குத் தெரிவிப்பது. இதனைப் பர்மா பிரெஸ் என்பர். இது பஞ்சு மூட்டைபோன்ற மூட்டைகளை அழுத்திக்கட்டும் நீர்சக்தி யந்திரம்.

**நிவரையேளியந்தியனர்** — கடைச்சங்க மருவிய புலவர். (அகநானூறு.)

**நிவர்த்திகலை** — இது சிவாகமம் கூறிய கலா புவனங்களில் ஒன்று. இதில் (கO அ) அசுத்த புவனங்கள் உள என்று கூறும்.

**நிவர்த்தி கலையில் கீழ்பால் இந்திர திசையிலுள்ள உருத்திரர்** — கபாலீசன், சடன், புத்தன், வச்சிரதேகன், பிரமர்த்தனன், விபூதி, அவ்வியயன், சாத்தன், பிநாகி, திரிதசாதிபன், எனப்பத்துஉருத்திரர். இந்திரனைக் கீழ்த்திசைக் காவலின் நியமித்து வைகும்புவனங்கள் பத்து. மேலும் அவ்வத் திசையிற் கூறப்படும் உருத்திரர் அவ்வத் திசைக் காப்பாளராகிய அங்கியங்கடவுள் முதலியோரை அவ்வத்தொழிலில் நியமித்து அவர் வழிபட வீற்றிருப்பரென்றறிக.

தென் கீழ்பால் அங்கித்திசையின்-அங்கியுருத்திரன், உதாசனன், பிங்கலன், காதகன், அரன், சுவலனன், தகனன், பப்புரு, பதுமாந்தகன், கயாந்தகன், என்னும் உருத்திரர் வைகும்புவனம் பத்து. தென்பால் இயமன்றிசையில் யாமியன், மிருத்தியு, அரன், தாதா, விதாதா, கருத்தா, சையோத்தா, வியோத்தா, தருமன், தருமபதி என்னும் உருத்திரர் வைகும்புவனம் பத்து.

தென்மேல்பால் நிருதிதிசையில் நிருதி, மாரணன், அந்தா, குரூரதிருட்டி, பயானகன், ஊர்த்துவகேசன் விருபாக்கன், தூமிரன், உலோகிதன், திமிட்டிரி என்னும் உருத்திரர் வைகும்புவனம் பத்து. மேல்பால் வருண திசையிற் பலன், அதிபலன், பாசவத்தன், மாபலன், சுவேதன், சயபத்திரன், தீர்க்கவாகு, சலாந்தகன், மேகநாதன், சுநாதன் என்னும் உருத்திரர் வைகும்புவனம் பத்து.

வடமேல்பால் வாயு திசையிற் - சீக்கிரன், இலகு, வாயுவேகன், சூக்குமன், தக்கணன், கயாந்தகன், பஞ்சாந்தகன், பஞ்சசிகன், கபர்த்தி, மேகவாகனன் என்னும் உருத்திரர் வைகும்புவனம் பத்து.

வடபாற் குபேரனுஞ் சோமனும் வைகுந் திசையில் நிதிசன், உருபவான், தன்னியன், சௌமியதேகன் சடாதரன், இலக்குமிதரன், அரதனதரன், சிதரன், பிரசாதன், பிரகாமதன், என்னும் உருத்திரர் வைகும்புவனம் பத்து.

வடகீழ்பால் ஈசான திசையில் வித்தியாதிபன், ஈசன், சர்வஞ்ஞன், ஞானபுக்கு, வேதபாரகன், சுரேசன், சருவன், சேட்டன், பூதபாலன், பலிப்பிரியன், என்னும் உருத்திரர் வைகும்புவனம் பத்து.

கீழ்க்கண்ணதாகிய மாயோன்றிசையில் - இடபன், இடபதரன், அநந்தன், குரோதனன், மாருதாசனன், கிரசனன், உதும்பரன், ஈசன், பணிந்திரன், வச்சிரதமிட்டிரி என்னும் உருத்ரர் வைகும் புவனம்பத்து.

மேற்கண்ணதாகிய பிரமன் திசையிற் - சம்பு, விபு, கணாத்தியகன், திரியக்கன், திரிதசேசன், சமூவாகன், விவாகன், நபன், இலீச்சு, திரிலோசனன் என்னும் உருத்திரர் வைகும் புவனம்பத்து.

எல்லாவற்றிற்கும் மேலாக வீரபத்திரன், பத்திரகாளி, என்னு மிவர் வைகும் புவனம் இரண்டு. ஆகச் சாதாரண புடவிதத்துவத்திற் புவனம் நூற்றெட்டுக் கண்டுகொள்க. இந்த நூற்றெட்டுப் புவனமும் பிருதிவியண்டம் ஆயிரங்கோடியினும் இவ்வாறே வேறு வேறுள்ளன. (சிவஞான பாடியம்.)

**நிவாதகவசம்** — இது காற்றும் நுழையாத திண்ணிய கவசம்.

**நிவாதகவசர்** — எக்காலத்தும் நீங்காத கவசத்தைப் பெற்றவர். இவர்கள் பிரகலாதன் வம்சத்து அசுரர். இவர்கள் முப்பது கோடியர். இவர்களிருக்கை மேற்றிசைக் கடலுக்கருகிலுள்ள தோயமாபுரம். யமனை நோக்கித் தவம்புரிந்து மகாவரம் பெற்றவர்கள். இராவணன் திக்குவிஜயஞ்செய்து வருகையில் பிரமன் சொற்படி இவர்களை நட்புக்கொண்டு இவர்கள் பட்டணத்தில் (கக) திங்கள் தங்கிவந்தனன். இவர்கள் தேவர்களைத் துன்புறுத்தினர். தேவர்கள் அருச்சுநன் சிவமூர்த்தியிடம் தவத்தால் பாசுபதம் பெற்றதறிந்து இந்திரனிடம் கூற இந்திரன் அருச்சுநனை இவர்கள்மீது யுத்தத்திற்கு ஏவுவித்தனன். அதனால் இவர்கள் கருவற்றனர்.

**நிழலின்மறைவான்** — திருமங்கை யாழ்வாரின் மந்திரியரில் ஒருவன்.

**நிறவிந்தி** — ஒரு நதி.

**நிறையறிகருவி** - இது, இரும்பினால் பலகைபோன்று முனையில் எண்ணினளவைக் காட்ட வைக்கப்பட்ட இரும்பு பிம்பத்தைப் பெற்ற அளவு கருவி. இதில் வைக்கப்பட்ட கனப்பொருள்களின் நிறையை இதுகாட்டும். இவ்வாறே மேனாட்டார் ஒருவன் யாத்திரை செய்த அளவைக் காணக் கடிகாரம்போன்று பதவளவறி கருவிகண்டு பிடித்திருக்கின்றனர். அதனைப் பீடோமிடர் என்பர். (Pedometer.)

**நிலைக்கலாகாதன** — பொய், கோள், பிறர் பொருளைக்கவர விரும்பல், பிறர் செல்வங் கண்டு பொறாமைகொளல் முதலிய.

**நினைப்பணி** — ஒரு பொருளைக்கண்டு ஒப்புமையினால் மற்றொருபொருளை நினைத்தல். இதனை ஸ்மிருதிமத் அலங்காரம் என்ப. (குவ.)

**நினைப்பு** — இது போலிகளுள் ஒன்று. இது, குழவிப்பருவத்தே தந்தை தாயரை யிழந்தோன் காரணங்கருதாது நினக்கின்னார் தந்தை தாயெனப் பிறர் சொல்வதனைக் கருதிக்கோடல்.

**நின்மலர்** — இவர் மண்கேருஷியின் மாணாக்கரில் ஒருவர். இவர் கல்விவல்லராய் ஆசிரியரை மதியாததனால் அவரால் பிரமராக்ஷஸாகச் சாபம் அடைந்து நாரதர் சொற்படி தக்ஷிண பினாகினியில் தீர்த்தமாடிப் புனிதரானவர். (பெண்ணைநதி புராணம்).

**நின்மலன்** — இவன் தன் தமயன் தேவியைப் புணரச்செல்கையில் அவளால் குட்டநோய் அடையச் சாபம் ஏற்று ரோமசருஷியால் பினாகினி நதியில் மூழ்கிச் சுத்தம் அடைந்தவன். (பெண்ணைநதி புராணம்).

**நின்மலாவத்தை** — (சுத்தாவத்தை) இது, அமலசாக்ரம், அமலசுவப்பனம், அமலசுழுத்தி, அமலதுரியம், அமலதுரியாதீதம். ஆக 5. அமலசாக்ரமாவது - ஆசாரியராலே ஞானதீக்ஷை பெற்றுத் திரிபதார்த்தவுண்மையை விசாரித்தறிந்து கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து பொருளுடனே நிட்டைகூடும் பகுதிக்குக் கருவியினின்று நீங்கி விசாரித்து நிற்பது. அமலசுவப்பனமாவது - கருவிகளினின்று நீங்கியும் நீங்காதும் நிற்காது நடுவே சற்றுப்பதைப் புண்டாய் நிற்பது. அமலசுழுத்தி - தத்துவங்களினின்று நீங்கி மேலான கேவலத்தனாய் நிற்பது. அமலதுரியம் - கேவல நீங்கி அருளினாலே தன்னையுமருளையுங் கண்டு தன் வசமழிந்து அருள் வசமாய் நிற்றல். அமலதுரியாதீதம் - பணியற நின்று சிவத்தைத் தரிசித்து ஆனந்தத்தில் அழுந்தி நிற்பது. (சித்தா.)

**நின்றசீர்நெடுமாறநாயனார்** — சத்துருசாதன பாண்டியன் குமரர். இவர் சைநசமயத்துக்குட்பட்டு, மயங்கி நிற்கையில் இவரது பத்தினியாராகிய மங்கையர்க் கரசியார் சைவப்பற்றுள்ளவராய்த் திருஞான சம்பந்தமூர்த்திகளை மதுரைக் கெழுந்தருள வேண்டி அவர் வரச்சமணரை வாதில் வெல்வித்தனர். அதனால் இவ்வரசர் சைவராயினவர். இவரது மற்ற சரிதங்களைத் திருஞானசம்பந்த சுவாமிகளைக் காண்க. (பெ-புராணம்.)

**நிஜகுணயோகீந்திரர்** — கன்னடத்தில் விவேகசிந்தாமணி இயற்றியவர்.

**நிஷக்கிரியன்** — தத்வஞானத்தை யுடையவனை சந்நியாசி.

**நிஷதம்** — 1. நிஷதனால் ஆளப்பட்டதேசம்.

2. ஒருமலை இந்நாட்டில் உள்ளது.

3. Narwar, The Capital of Nalaraja. This is also called Nalapura.

**நிஷதன்** — 1. (சூ.) அதிதியின் குமரன். இவன் குமரன் நளன்.

2. குரு குமரன்.

3. சிராமன்பௌத்ரன். குசன்புத்திரன்.

**நிஷாதர்** — கருடனால் பக்ஷிக்கப்பட்ட வேடர்.

**நிஷாதன்** — பிராம்மணனுக்குச் சூத்திரப் பெண்ணிடம் பிறந்தவன். தொழில் மீன் பிடிப்பது. (மநு.)

**நிஷதாதிபன்** — பாரதவீரரில் ஒருவன். காலபுத்திரன் அம்சம்.

**நிஷிங்கி** — திருதராட்டிரன் குமரன்.

**நிஷிதா** — பாகுகனைக் காண்க. இவன் வம்சத்தவர், நிஷிதா காடுகளில் வசித்தனர்.

**நிஷ்ஃக்ருதி** — அக்னி விசேடம்.

**நிஷ்டாநுபூதி** — தாம் நிஷ்டையில் அனுபவித்த அநுபவம் கூறும் நூல். இது ஆறுமுகசுவாமிகளால் இயற்றப்பட்டது.

**நிஷ்டோகன்** — கத்ருகுமரன். நாகன்.

## நீ

**நீக்கத்தக்கவர்** — அபத்னீகன், பொய்சாக்ஷிசொல்வோன், கிராம புரோகிதன், துஷ்டன், விஷமிட்டவன், சடன், சோதிஷசீவி, குண்டன், பௌநர்பவன், விடன், அதிவிர்த்தன், அதிக முண்போன், தந்தைக் கிணங்காதவன், அபக்ஷ்யபக்ஷி, பஞ்சாங்கம் சொல்வோன், துச்சீலன். (முதலியவர்.)

**நீசகன்** — அபிமன்யுவுக்குப் பிறகுவந்த ஏழாவது அரசன். இவன் அரசில் அத்தினபுரம் முழுகியது.

**நீதிநெறிச்சோழன்** — ஒரு சோழன். இவன் காலத்தில் வல்லான் என்பவன் அரசர்களை வருத்திக் கொண்டிருக்க அவனை அதிசூரன், சூரன், என்னும் செங்குந்தரால் அடக்கி வென்று வந்த அவ்வீரருக்குப் பரிசு அளித்தவன்.

**நீதிபதி** — உலகியலேயும், நூன் முறையை யும், நீதியையும் அறிந்தவன். (சுக் - நீ.)

**நீபன்** — 1. பிருதுகுமாரன். இவனுக்குநூறு பிள்ளைகள் உண்டானுர்கள். இவன் குமரன் சமரன், இவன் காம்பீலிதேசத்து அரசன்.

2. நபாகனைக் காண்க.

**நீராட அவசியம் வேண்டியகாலம்**—தெய்வ வணக்கம் செய்யும்போதும், தீக்கனுக்காண் கையிலும், அசுசி உண்டான காலத்தும், உண்டதைக் கக்கினபோதும், க்ஷௌரம் செய்துகொண்ட காலத்தும், உண்ணும் போதும், புணர்ச்சி உண்டானபோதும், பொழுதேற நித்திரை செய்தபோதும், இழிசனர்களைத் தீண்டினபோதும், மலசலங் கழித்தபோதும், நீராடல்வேண்டும்.

**நீராடும் நீர்மை** — தடாக முதலியவற்றில் நீராடுகையில் நீந்துதலும், நீரில் எச்சிலு மிழ்தலும், தண்ணீரைக் குடைதலும், தண்ணீரில் விளையாடுதலும் கூடா.

**நீரின்வகை** — மழைநீர், ஆலங்கட்டி நீர், பனிநீர், தண்ணீர், ஆற்றுநீர், குளத்துநீர், தாமரைக் குளத்துநீர், ஏரிநீர், சுனைநீர், ஓடைநீர், கிணற்றுநீர், ஊற்றுநீர், பாறை நீர், அருவிநீர், அடவிநீர், வயல்நீர், பாசி கலந்தநீர், கடல்நீர், துவர்நீர், வேர்கள் ஊறியநீர், இன்னும் பலவகை நீர்களுள. இவற்றின் குணங்களைப் பதார்த்தகுண சிந் தாமணியால் அறிக.

**நீருற்று** — பூமியில் விழுந்த மழையைக் கிரகித்த மணற்பூமி தான் கிரகித்த நீரைமீண் டும் வெளியில் ஊற்றுவது.

**நீர்** — 1. பஞ்சபூதங்களி லொன்றாய்த் தன் மாத்திரை காரணமானதாயுள்ள திரவம். இந்நீர் நில வேறுபாட்டால் பல ருசிகளை யும் குணங்களையும் பெற்றிருக்கும். கடல் நீர் ஆற்றுநீர், ஏரிநீர், குளத்துநீர், சுனைநீர், மடுநீர், கிணற்றுநீர், முதலிய இவையன்றி, மழைநீர், பனிநீர், முதலியவும் உண்டு.

2. இது இரசதன் மாத்திரையில் தோன் றியது. இது சத்தம், பரிசம், ரூபம், கந்த மெனும் நான்கு குணமுடைத்தாய் நெகிழ் வித்துப் பதஞ்செய்தலாகிய தொழிற் பாட் டைப்பெற்று உயிர்களெல்லாம் தன்னுற் சீவித்தற்கேதுவாய் நிற்பது. இது, திரவ ரூபமாயினும், பனிக்கட்டி, ஆலங்கட்டி, ஆவி, காற்று எனும் வேறுருக்களைப்பெ றும். நீர், ஆவியாகப் பரிணமிக்கையில் அதன் இயற்கையில் (1700) பங்கு மிகு கின்றது. ஜலத்தில் உப்பின் குணமொ ன்று அதிகரித்திருக்கிறது. அக்குணம், கடின பதார்த்தங்கள் உண்டாவதற்கும், உண்பனவற்றிற்கு உரிசை தருதற்கும் உதவுகிறது. நீரில் ஒருபங்கு பிராணவாயு வும், இரண்டுபங்கு ஜலவாயுவும், இருக்கிற தாகத் தற்கால ஆராய்ச்சிக்காரர் கூறு கின்றனர்.

**நீர்களின் குணகுணங்கள்** — நீர் கடவுளால் ஆன்மாக்கள்பொருட்டுப் பல இடங்களில் சுறக்கச் சிருட்டித்த திரவப்பொருளாம். அந்நீர், மழைநீர், ஆற்றுநீர், ஆலங்கட்டி நீர், பனிநீர், குளத்துநீர், ஏரிநீர், கிணற்று நீர், ஓடைநீர், சுனைநீர், ஊற்றுநீர், பாறை நீர், அருவிநீர், அடவிநீர், உப்புநீர், சமுத் திரநீர் எனப் பலவிதப்படும். இவை நிலத்தியல்பால் அவற்றின் குணங்களும் வேறுபடும். இவற்றுள் மழைநீர், குளிர் ச்சியையும், நல்லறிவையும், ஆற்றுநீர், சுக்கில விருத்தியையும், ஆலங்கட்டிநீர், குளிர்ச்சியையும் உண்டாக்கும். பனிநீர், சொரி, கிரந்தி இவைகளைப் போக்கும். குளத்துநீர், வாதரோகத்தையும், ஏரி நீர், வாயுவையும், உண்டாக்கும். கிணற் றுநீர், விதாகம், உஷ்ணம், தீபனம் இவற்றை நீக்கும். ஓடை நீர், மிகுந்த தாபத்தையும், சுனைநீர், சீத சுரத்தையும் உண்டாக்கும். ஊற்றுநீர், பித்தாதி கத்தைப் போக்கும். பாறைநீர், சந்தத சுரம் உண்டாம். அருவிநீர், இரத்த பித் தரோகத்தைப் போக்கும். அடவிநீர், தேகபாரம், வலியவிஷம் சுரம், உண்டாம். உப்புநீர், பித்தரோகத்தை உண்டாக்கும். சமுத்திரநீர், பலவித வியாதிகளைப் போக் கும். "பாசித்தண்ணீர் நோயாக்கும், பரு த்தவோடைத் தெளிவூறல், நேசித்திடவே பிணியில்லை, நிலைநீர்க்குண்டாம். குடல் வாதம், மாசித்தண்ணீர் பித்தகற்றும், வளர்க்குஞ் சுரத்தைச் சாகூறல். தேசத் தண்ணீர்க் குணந்தன்னைத் தெளியச் சொன்னேந் திண்ணமிதே." "ஆற்றுத் தண்ணீர்க் கழகுண்டாம், அடைந்த சுனை க்கு மகோதரமாம், தூற்றுமாரிமெய்யிறுக் கும், தொலையாக்கிணறே கயந்திரட்டும், மாற்றுங் குளமே வியாதியில்லை, மாறாச் குளமே வியாதியுண்டு, தோற்றுமதுர மொழிமயிலே துலங்குந் தண்ணிர்க் குணங் காணே." சந்திரசூரியகிரணங்கள், காற்று, அணுகாததும், கிருமி, துர்வாசனை, சேறு,

தடித்தல், சாகுதிரல், ருசியின்மை முதலிய நீர்கள் ஸ்நான பானங்களுக்கு உதவா. வெந்நீரால், எதிர்க்கின்றவுணவு, புளியேப்பம், குன்மம், சீதக்கட்டு, சுரம், காச முதலிய நீங்கும்.

**நீர்க்காக்கை** — இது காக்கை உருவொத்து நீரிலுள்ள பிராணிகளால் வாழும் பறவை. நீரில் நீந்தி மீன்களை வேட்டையாடுவது. நீர்க்கரை யோரங்களிலுள்ள மரங்களில் கூடுகட்டி வாழும்.

**நீர்க்குதிரை அல்லது ஆற்றுக்குதிரை** — இது மத்திய ஆபிரிகாவின் ஆற்றோரங்களில் வசிப்பது. இது பெரிய எருமைபோல் தடித்த தோலுள்ள மிருகம். துப்பாக்கியால் சுடினும் சாகாதது. கால்கள் குறுகி உடல் நீண்டது. (Hippopotamus.)

**நீர்க்குதிரை அல்லது நீர்ப்பன்றி** — (ஹிபோடமஸ்) இது காண்டாமிருகத்தை ஒருவாறு ஒத்திருக்கும். இதற்குப் பருத்தவுடலும், தடித்துக்குறுகிய கால்களும், தடித்த தோலும், அகன்றவாயும், நீண்ட பற்களும் உண்டு. கொம்பில்லை. ஏறத்தாழ நாலடி உயரமும் (12) அடி நீளமும் உள்ளது. இது தண்ணீரில் வசிக்க விருப்பமுள்ளது. இது காய், கிழங்கு, இலை முதலியவற்றைத்தின்று ஜீவிக்கும். இது ஆப்பிரிகா கண்டத்து நயில் நதிக்கரையில் வசிப்பது. இது தம் கூட்டத்துடன் கூடி வாழும் மிருகங்களில் ஒன்று.

**நீர்நாய்** — இது நீர்க்கரை யோரங்களில் வசிக்கும் பிராணி. இது உருவத்தில் எலியைப்போன்றது. வால் அகன்று தட்டையாய்ச் செதிள் மூடியிருக்கும். பருமனில் பூனையளவிருக்கும். முன்னங்கால் குறுகியும் பற்கள் பலமாகவுமிருக்கும். உடலில் மிருதுவான மயிர் அடர்ந்திருக்கும். இவை பல ஒன்றுசேர்ந்து வாழும். இவை ஆற்றோரங்களில் வீடு கட்டுதற்குப் பற்களால் பெரிய மரக்கிளைகளைக் கடித்துத் தள்ளி அகன்றவாலினாலும் முன்கைகளைச் சேர்த்தும் மணலைக்கொண்டு வட்டமாக வீடு கட்டி நீர் மட்டத்தடியில் வாழும். இது கோடை காலத்தில் கந்த மூலாதிகளைப் புசிக்கின்றன. மழைக்காலத்தில் மரப்பட்டைகளைத்தின்று பிழைக்கின்றன. இவை அணிற் பிள்ளைகளைப்போல் உட்கார்ந்து முன்னங்கால்களால் ஆகாரத்தைத்தின்கின்றன. இவற்றின் ரோமத்தால் தொப்பிகள் செய்யப்படுகின்றன. வட அமெரிக்கா, ஐரோப்பா நதிகளில்வாழ்வன

**நீர்ப்பரப்புகள்** — இவைகள், மகாசமுத்ரங்கள், கடல்கள், விரிகுடாக்கள், வளைகுடாக்கள், ஆறுகள், ஏரிகள், எனப்பிரிவுள்ளவைகளா யிருக்கின்றன. இவ்வகை நீர்ப்பரப்பு இக்கோளத்தைச் சூழ்ந்து பூமி வறளாமல் நெய்ப்பைத்தந்து காக்கின்றது. இந்நீர்ப் பரப்புகளின் ஆழங்கள், எங்கும், 2, 3, மைல்கள் ஆழமுள்ளவைகளென்பர். ஆயினும் சிற்சில இடங்களில் அதிகம் உண்டு. தென் அமெரிகாவின் கீழ்க்கரையிலுள்ள ரையோடிலாபிளாடா முகத்துவார சமுத்திரத்தின் ஆழம் (8) மைல். பிலிப்பயின் தீவுக்கு வடக்கில் உள்ள கடலின் ஆழம் (18) மைல் என்பர். கடலில் (1000) அடிகளுக்குக் கீழ் இருளே திணிந்திருக்கிறதாம். ஒளியென்பதே இல்லை. மகாசமுத்திரங்களி னடிப்பாகம், பூமியைப் போலவே, மலைகள், குன்றுகள், சமவெளிகள், பள்ளத்தாக்குகள், எரிமலைகள், இரத்தினவகைகள், உலோகவகைகள், மரங்கள், செடிகள், பூண்டுகள் முதலிய பெ[...]றிருக்கிறது. ஒவ்வொரு காலங்களில் மகா சமுத்திரங்களில் அலைகள் இயற்கைதவ[...] (70) அடிக்குமேல் கிளம்புகிறதும் உண்டென்பர். சில கடல்களில் ஆறுகளைப் போல் நீரோட்டம் கொள்ளுகிறது. ஆ[...]லால் கடல்களில் நீர்ச்சுழிகள் தோன்றுகின்றன். அந்நீர்ச் சுழல்கள் நீரோட்டங்கள் ஒன்றுடன் ஒன்று சேர்வதனால் உண்டாகி யாத்திரை செய்யும் கப்பல்களை நாசஞ்செய்கின்றன. இவ்வகைச் சுழல்கள் நார்வே தேசக் கடற்கரை யோரமாக நேரிடுகின்றன என்பர்.

நீர்ப்பரப்பு - சில வேளைகளில் தரையில் வீசும் சுழல்காற்று, கடலிலுண்டாகி ஜலத்தைமேல் நோக்கியிழுத்துத் தூண்கள் போல் நிற்கச்செய்கிறது. அக்காலத்திலதிலகப்பட்ட பொருள்களை ஆகாயத்தில் தூக்கியெறிந்து பின்தரையில் மோதுகிறது. இவ்வாருகிய நீர்ப்பரப்புக்களில் சில பள்ளமாயும், சிலமேட்டுப் பாங்காயு மிருக்கின்றன. காஸ்பியன் கடல் அதிக பள்ளமான நீர்மட்ட முடையது. மத்யதரைக் கடல் மேட்டுப்பாங்கானது. பெரும்பாலும் இக்கடல்கள், உருசியாலும், குணத்தாலும் நிறத்தாலும் வேறுபடுகின்றன. எல்லாக் கடல்களும் உப்புநீர் உடையன. மத்ய

நரைக் கடலின் கீழ்க்கரையில் சாக்கடல் (Dead Sea) என்பதொன்றுண்டு. இது (9) மைல் அகலமும் (47) மைல் நீளமும் உள்ளது. இதனீர் பசுமை. ஆழம் (1308 அடி) இதில் ஜார்டன், முதலிய பலநதிகள் பாய்கின்றன. ஆயினும் இந்நதி அந்நீரை எங்கு ஒளிக்கின்ற தென்பதறியவில்லை. இதில் நீர்வாழ்வன இல்லை, வெயிற்காலத்துப் பறவைகள் அக்கடலின்மீது பறந்து செல்லினும் இறக்கும் என்பர். இதனீர் உப்பால் கனத்திருப்பதால் இதில் மனிதன் விழுந்தா... அமிழ்ந்து போகிறதில்லை மிதப்பன்.

ஏரிகள் - ஏரிகளில் மிகப் பெரியவை வட அமெரிக்காவில் உள்ளவை... ஆப்பிரிகாவில் (30) சதுரமைலுள்ள மகதி ஏரி சோடாவுப்பு உள்ளது. சுவிட்ஜர்லண்டில் உள்ள ஒரு ஏரிநீர். (10) வருஷத்திற்கொருமுறை செந்நிறமாக மாறுகிறது.

யார்க்கென்னும் ஏரி (13) வருஷம் தண்ணீர் வற்றியிருக்கும். அதில் ஜனங்கள் பயிர்செய்து வருவர். பதின்மூன்றாம் வருஷத் தொடக்கத்தில் நீர் சுரக்கத்தொடங்கி நீர் நிறைந்து ஒரு வருஷத்தில் வற்றிப்போகிறது.

கருங்கடல் - கருநிறமுள்ளது, அரேபியாவை யடுத்த செங்கடல், செந்நிறமுள்ளது, சீனவை அடுத்தது மஞ்சட்கடல், ஐரோப்பாவின் வடக்கில் வெண்கடல் இவை நிற பேதமுள்ளவை.

நதிகள் - மலைகளிலும், மேட்டு நிலங்களிலும் பெய்யுமழை நீரும், பனிப்பாறைகளின் கரைநீரும் அவ்விடங்களில் ஊறி ஊற்றெடுப்பது. சில நதிகள் வெயிற்காலத்து வற்றிப்போம். சிலவற்று, அவ்வற்று. நதிகள் ஜீவநதிகளாம். இவ்வகை நதிகளில் பெரியது வட அமெரிக்கா கண்டத்திலுள்ள மிசிசிபி. இது (4382)மைல் நீளம், மற்றொன்று தென் அமெரிக்காவிலுள்ள அமேசான். இது, (400) மைல் நீளமுள்ளது.

நீர்வீழ்ச்சிகள் - வட அமெரிகா கண்டத்தில் (228) அடி உயரமுள்ள பாறைமீதிருந்துவிழும் நயகார நீர்வீழ்ச்சி உலகநீர்வீழ்ச்சிகளில் பெரிது. தென் ஆப்பிரிகா கண்டத்தில் சாம்பசி நீர்வீழ்ச்சி. இது (400) அடிகளுக்கு மேலிருந்து விழுகிறது. இந்தியாவில் குற்றால நீர்வீழ்ச்சி.

**நீர்ப்பல்லி** — இது, நீரிலுள்ள பிராணி பல்லிபோல்வது, இது ஐரோப்பா, அமெரிகா தேசங்களின் நீர்நிலைகளி லுள்ளது. இது, (3) அடிகள் முதல் (12) அடிகள் வரையில் நீண்டுள்ளது. இதற்கு மீனுக்குள்ளதுபோல கழுத்திலிருந்து வால்வரையில் தட்டையாகச் சட்டைகள் இருக்கின்றன. இது நீரிலுள்ள பூண்டுகளுக்கிடையில் குஞ்சுபொரிக்கிறது.

**நீர்ப்பூ** — தாமரைப்பூ, வெள்ளைத்தாமரைப்பூ, அல்லிப்பூ, செவ்வல்லிப்பூ, கழுநீர்ப்பூ, கருநெய்தற்பூ முதலிய.

**நீர்ப்பூண்டுகள்** — இவை, நீரிலுண்டாம் பூண்டு செடிகொடி முதலிய நீர்ப்பூண்டு வகைகளில், நீர் ஆரை, நீரடிமுத்து, நீர்ப்பூலா, நீர்முள்ளி, நீர்மேனெருப்பு முதலிய பூண்டுகளும், நீர்வஞ்சி அல்லி, நெய்தல், கழுநீர், தாமரை, செங்குவளை முதலிய. தாமரையில் செந்தாமரை, வெண்டாமரை, நீலத்தாமரையென வேறு பாடுண்டு. இவற்றின் கொடிகள், நீர்நிலைகளில் அழகாய்ப் பரந்து ஒரு அடிக்கு மேற்பட்ட இலைகளைப் பரப்பி நிற்கும். இவ்விலைகளின் மேற்புறத்தில் ஒருவகைசுணையுண்டு. அதில் நீர் பற்றுவதில்லை. மலர் வெண்டாமரையில் புறவிதழ் வெண்மை கலந்த பசுமையாயும் அகவிதழ் மிக்க வெண்மையாயும் மணத்தோடுகூடிப் பல இதழ்களைப்பெற்றிருக்கும்: இவ்விதழ்கள் ஆயிரக் கணக்காகவும் இருக்குமென்பர். செந்தாமரை மலரின் அகவிதழ் வெண்மை கலந்த செந்நிறமாயிருக்குமென்பர். நீலத்தாமரையுமுண்டென்பர். இவற்றின் இதழ்கள் ஆயிரங்கொண்டவை சகஸ்ர பத்திரமெனவும், நூறிதழ்கொண்டவை சதபத்ரமெனவும் கூறுவர். இத்தாமரைகளின் நடுவிலுள்ள கொட்டைகளை மணிகளாகக்கொண்டு அணிவர். இவற்றின் கிழங்குகளை அவித்து உணவுப்பொருளாகக் கொள்வர். நீலநிறத்தாமரை அமெரிகாவி லிருந்துகொண்டு வரப்பட்டது. இது நீர்க்குள் வளர்ந்து பல பாகங்களில் பாவி வயல்களிலுஞ் சென்று நான் விருத்தியடைந்து பயிர் முதலியவைகளைக் கெடுத்தலால் இதனை இராக்ஷஸ தாமரை யென்பர். இவ்வகையில் தென் அமெரிகாவிலுள்ள அமேசான் நதியைச் சார்ந்துள்ள ஓடைகளில் (30) அடி முதல் (40) அடி அகலமுள்ள இலைகளுள்ளதும், மலர் (2) அடி குறுக்களவும், (7)

அடி சுற்றளவுள்ளதாகவும் உள்ள விக்டோரியா தாமரை என்பதுண்டென்பர். அதில் ஒரு குழந்தையை உட்காருவித்தால் தாங்கி நிற்கும் என்பர். இதன் காய்களின் வித்துக்களை அந்நாட்டினர் உணவாகக் கொள்கின்றனர்.

நீர்முள்ளி - இது நீர்க்கரைகளிலும் நீருள்ள வயல்களிலும் வளரும் பூண்டு. இது நீரில் கரைத்த மஞ்சளைத் திரட்டித்தரும் ஆச்சரிய சக்தியுள்ளது. நெட்டி இது சிறு இலைகளையுடைய செடி. இது நீரிலிருந்தும் நீரைப்பற்றுது. இலேசானது, இதனால் பிரதிமைகள் முதலிய செய்வர்.

கோரைவகை - சம்பங்கோரை, நெட்டிக்கோரை, கத்திக்கோரை, வாட்கோரை முதலிய. இவற்றின் இலைகள் புல்வகையில் பெரியவை. இவை வளர்ந்து பூவிடுந்தருணத்திலிடையில்தண்டுண்டாம். அத்தண்டுகளால் பாய்கூடாரம் முதலிய செய்வர். ஆப்பிரிகாவின் நயில் நதிக்கரையில் பாபிரஸ் எனும் ஒருவகை. அந்நாட்டார் ஓலைபோல் அதனைப் பிளந்து தங்கள் நூல்களை எழுதிப்படித்தனர் என்பர். அல்லி, தாமரைபோன்ற சாதியாயினும் இதின் இலைகள் வாள்போன்ற விளிம்புடையன. இவற்றுள் வெள்ளல்லி, செவ்வல்லி, நீல அல்லி, ஆகாச அல்லி, சிற்றல்லி முதலிய. செங்கழுநீர் மிகச்செவந்து மணமுள்ளதாயிருக்கும். இதனை அரக்காம்பல் என்பர்.

**நீர்மேனடப்பான்**—திருமங்கையாழ்வாருக்கு மந்திரி.

**நீர்யானை** — இதனை டாபிர் என்பர். இது யானையைப்போல் உடலும், காலும் குறுகியும் தடித்தும் இருக்கும். இதற்கு மூக்கு யானையின் துதிக்கைபோலச் சற்று நீண்டிருக்குமாயினும் யானையைப்போல் நீட்சியுடையதன்று. இது மிக்க வன்மைகொண்ட மிருகம், நீரில்வசிக்கப் பிரியமுள்ளது. இதற்குக் காய் கனி கிழங்குகளில் பிரியமதிகம். இதற்குச் சிவிங்கியே விரோதி. இச்சிவிங்கி இதன்மேல் பாய்கையிலிது விரைந்து ஒடி மரத்தில் பாய்ந்து அதனைக் கீழே தள்ளிவிட்டு ஒடிவிடும். இதன் தோல் தடித்திருப்பதால் முட்புதர்களுக்கு அஞ்சாது. இது சாதுவான மிருகம். கோபமூட்டப்படின் எதிரியின்மீது பாய்ந்து கொல்லும். இது (5-6) அடி உயரமுள்ளது.

**நீர்வாழ்வன** — இவை ஜலத்தில் வாழ்வன. தற்கால நூதன ஆராய்ச்சியார் நீரில் பல லக்ஷக்கணக்கான பிராணிகள் இருக்கின்றனவெனக் கூறுகின்றனர். அவை பூச்சியினம், புழு இனம், விராட்டு இனம், சங்கு இனம், அசரையினம், விலாங்கு இனம், கெண்டையினம், வாளையினம், இருலினம் எனப் பலவகைப்படும். இப்பிராணிகள் நீரில் அழுகிய பொருள்களைத் தமக்குப் பிறப்பிடமாகக் கொண்டுள்ளன. முதலில் இவைகளின் தோற்றம் வழுவழுப்புள்ள பொருளாய்க் காணப்படுகிறது. அவை அமீபா, பாக்டீரியா எனப்பிரிவுடையன. அமீபா வழுவழுப்புத் தோற்ற வுற்பத்தி, பாக்டீரியா சிறு அணுக்களிடம் பிறப்பு. இவ்விருவகையும் காலதேச மாறுபாட்டால் பலவகை யுருப்பெறுகின்றன. ஜெல்லிமீன், இதை நாய்க்குடல் என்பர். இது உச்சியில் வழுவழுப்புடைய குடை போன்று அடியில் குடல்போல் தொங்கும் உறுப்புக்களையுடையது. இது தன்னிடந் தொங்கும் குடலுருவ மூலமாய்ப் பூக்களை உணவாகக்கொண்டு சிரத்திலுள்ள குடை யுருவத்தை விரித்தும் குவித்தும் நீரில் நீந்திச்செல்லும். இதனைச் சொறி மீன் என்பர். இது மனிததேகத்திற் படில் அரிப்புண்டாம். இரவில் இதனிடம் வெளிறிய ஒளி உண்டு. இவ்வினத்தில் கடம்பான் (Octopus) என்பதும் ஒன்று. இவை கடல்களி னடிப்பாகத்தில் வசிப்பவை. இவை கம்பிபோன்ற கைகளால் பிராணிகளைச்சுருட்டி உணவாக்கும். முள்பலாச்சி (கடல் முட்பன்றி அல்லது கோளமீன்) (The Diodout) இது கிளிபோல் முகமும் மீன்போல் வாலும் செவுள்போல் காதும் உடைய கடற் பிராணி. இது தன் தேகத்தில் பலாக்காயின் முட்கள்போல் முட்களைப் பெற்றிருக்கிறது. இது, தன்னியற்கையி லுலாவுகையில் தன் தேகத்து முட்களைச் சுருக்கிக்கொள்ளும், தன் விரோதிகளைக் கண்டபோது உடம்பின் முட்களைச் சிலிர்த்துக்கொள்ளும். இதைக் கண்ட மற்றவை இதனை நெருங்கா. இது தன்னிடம் விஷமுள்ள மலத்தைப்பெற்று இருத்தலால் இதைக் கடலோடிகள் பிடிப்பதில்லை.

நீர் எட்டுக்கால் பூச்சி - இது நீரின் அடிப்பாகத்திலும் மேற்பாகத்திலுமுள்ள பூச்சி. இன்னும் நீரில் பூமியில் வசிக்கும்

பிராணிகளைப்போல் நீர்வண்டு, நீர்த்தேள், நீர்ச்சிலந்தி, நீர்க்குளவி, அட்டைகள். கிளிஞ்சல் பூச்சிகள், நத்தைப்பூச்சிகள், முத்துப்பூச்சிகள், சங்குகள் முதலிய.

விலாங்கு - இதனை மலங்குமீன் என்பர். இது பாம்பைப்போல் நீண்டவுடலும் முகமும், மீனைப்போல் வாலுமுள்ள பிராணி. இது கடலிலும், நன்னீரிலுமுண்டு. இவ்வினத்தில் தென் அமெரிகாவைச் சார்ந்த ஏரிகளில் ஒருவகை மின்சார சக்தியுள்ள விலாங்கு உண்டு. அவை தம்மிடமுள்ள மின்சாரத்தால் பிராணிகளை மயக்கி ஆகாரமாக்குகின்றன. இவை (20) அடி நீளமிருக்கிறதாம். விலாங்கினத்தில் அமெரிக்கா கடல்களில் ஒருவகை உண்டு. அவை கடலின் அடிப்பாகத்திலிருண்ட இடங்களிலிரைதேடத் தமது விளக்கொளி போன்ற கண்களை நீட்டி அவ்வெளிச்சத்தில் இரை தேடுகிறதாம். அதனை விளக்கு மீன் (Lantern Eel) என்பர். அமெரிகாவைச் சேர்ந்த மெக்சிகோ நாட்டுநீர் நிலைகளில் விலாங்குபோல் உருவமும் பல்லியின் கால்கள்போல் கால்கள் கழுத்தருகிலுமுள்ளஒருவித முண்டென்று கூறுவர். நீர்ப்பல்வி - (நீர்ப்பல்லி) காண்க. நடைமச்சம், முதலை, இருல்மீன் இது, நீர்ப்புழு இனத்தில் ஒன்று. இதன் மேற்றோல் வளையம்போன்று எளிதில் உரிக்கக்கூடியதாய் இருக்கிறது. இதற்கு மீசையும் கால்களும் உண்டு. இது நீரில் தன் உடலை மடக்கியும் நீட்டியும் அதிவேகமாய்த் தாண்டும். இவ்வினத்திற் சில (3) அடிகளுக்கு மேலுண்டு. இவ்வினத்தில் சிறியது சின்ன கூனி. இவ்விருல்களிற் சில பல கால்களையும் வால்களையும் பல வர்ணங்களையும் பருமனிளமுள்ளவைகளா யிருக்கின்றன. பலவகை நண்டுகள், ஆமைகள், பலவகை மீன்கள் பலவகைத் திமிங்கிலங்கள், வீல்கள், நீர்நாய்கள், டால்பின் மீன்கள்.

**நீர்விழவு** — இதன் காலவரையறை இருபத்தொரு நாள். இது மிகவுஞ் சிறப்பாக உஞ்சை நகரத்தில் நடைபெற்றது. இந்த விழவு நடக்கும்போதுதான் யூகியின் வேண்டுகோளால் வாசவதத்தையை உதயணன் பிடிமீதேற்றித் தன்னிடஞ் சென்றனன். இது துறைகொள்விழவு, புனல் விழவு, பொங்கு புனல்விழவெனவும் வழங்கும். (பெ - கதை.)

**நீர்வீழ்ச்சி** — மலையுச்சிகளில் உள்ள ஊற்றுகள் பெருக்கெடுத்து மலையிலிருந்து கீழே விழும். அதற்கு நீர்வீழ்ச்சி அல்லது ஆகாய கங்கை என்று பெயர். (பூகோளம்.)

**நீலகண்டசிவாசாரியசுவாமிகள்** — இவர் பிறப்பால் வைதிகசைவரோ அல்லது சிவாசாரியரோ நன்றாகத் தெரியவில்லை. இவர் சைவபாஷ்யகாரர். சுவேதாசாரிய சுவாமிகளுக்கு மாணாக்கர். இவர் சைவசித்தாந்தபுறமாகப் பிரமசூத்திர பாஷ்யம் அருளியவர். இவர் காலம் சங்கராசாரிய சுவாமிகளுக்கு முற்காலம் என்பர். இவர் தமது பாஷ்யத்தால் தகரவுபாசனை அதிக முள்ளவர் என்பது தெரிகிறது. இவர் இயற்றியவை பிரம்மமீமாம்சா பாஷ்யம், சிவதத்வ ரஹஸ்யம், சிவலீலார்ணவம்.

**நீலகண்டதீக்ஷிதர்** — இவர் வைதிகசைவதுயர், இவர் செய்த க்ரந்தங்கள், கலிவிடம்பனம், கங்காவதரணம், நளசரித்ரம், நீலகண்ட சம்பு, நீலகண்டதீக்ஷிதீயம், வைராக்யசதகம், சாந்திவிலாசம், ஸபாரஞ்ஜனம்.

**நீலகண்டன்** — 1. அச்சுவக்கிரீவன் தம்பி.
2. சிவகணத்தவன்.

**நீலகிரி** — செங்குட்டுவன் வஞ்சி நகரத்திலிருந்து இமயமலைக்குச் செல்லும்பொழுது இம்மலையில் தங்கியிருந்தான். (சிலப்பதிகாரம்.)

**நீலகேசி** — 1 இவள், ஆவணநகரத்து நாதகுப்தனுர் எனும் அருக சமயத்தாசிரியரை வென்றனள் எனக்கூறப்படுதலை உணர்ந்த சைநர் மிகச்சினந்து குண்டலகேசியையும் அவளுக்குபதேசித்த அருக்க சந்திரனையும் வாதில் வென்றதாகக் கூறியநூல். இந்நூல் நீலகேசித் தெருட்டெனப்படும். இது குண்டல கேசிபோல் ஓர் பெண்ணின் செய்திகூறி அவள் பல சமயங்களை வென்றமை கூறுவது. இவள் கபிலவாஸ்துவில் புத்தரிடம் வாதிட்டவளாம்.
2. காசியரசன் மகள்.
3. மந்திரவரசன் மனைவி.
4. விரிசிகையின் தாய்.
(2–4: பெ.கதை)

**நீலகேசித்தெருட்டு** — ஒருதமிழ்ச்சைனநூல், இது சுகதநிர்ணயச் சருக்கமுதல் பத்துச் சருக்கம் அடங்கியது. வியந்தரமங்கையாகிய நீலகேசி, பௌத்த முதலிய சமயங்களைக் கண்டித்துச் சைநசமயத்தைத் தாபித்ததாகக் கூறப்பட்டது. இதற்கு நீலகேசி விருத்தி சமயதிவாகரம் எனும் ஒரு உரையும் உண்டு.

**நீலத்துவசன்** — நீலன் குமரன். விந்திய தேசாதிபதி, விஜயனுடன் போரிட்டிறந்தவன்.

**நீலநிறத்தன்** — திருமங்கை யாழ்வாருக்கு ஒரு பெயர்.

**நீலபதி** — சிதரனென்னும் அரசன் புத்திரி. இராகுலனுடைய தாய். அத்திபதியெனும் அரசன் மனைவி. (மணிமேகலை.)

**நீலமாலை**—1. இராமமூர்த்தி வில்லொடித்த சேதியைச் சீதைக்கறிவித்த தோழி.

2. சோனாட்டிலுள்ள ஒரு மலை.

**நீலம்** — அஷ்ட குலாசலங்களில் ஒன்று. மேருவிற்கு (க000) யோசனை அப்புறத்திலுள்ளது.

**நீலரதன்** — 1. அசவகாவன் தம்பி.

**நீலலோகிதகற்பம்** — சிவன் அகோரத் தோற்றமாய்ப் பிரமனுக்கு அகோரமந்திரம் அருள்புரிந்த கற்பம்.

**நீலலோகிதன்** — 1 சிவன் திருநாமங்களில் ஒன்று.

2. ஏகாதசருத்திருள் ஒருவன்.

**நீலவண்ணன்** — இவன் சோழதேசத்துச் சசிவர்ணனுகிய வேதியன் குமரன். இவன் மகாபாதகனய் ஒருவேளாளன் குமரியுடன் கூடித் திருடிப்பிழைத்து ஊராரால் தூரத் தப்பட்டுத் தன்னூடு விட்டுப் பாண்டிநாடு சென்று ஒரு வீட்டில் அன்னந்திருடித் தான்புசித்து ஒருவேதியனுக்கு அருத்திப் பாம்புதீண்ட இறந்து வேதியனுக்கு அன்னமிட்டதால் நற்கதி அடைந்தான்.

**நீலவராகர்** — இரண்யாக்ஷனைக் காண்க.

**நீலன்** — 1. குரோதகீர்த்தியின் குமரன்.

2. (சங்.) திடன்குமரன். தாய் காளிந்தி.

3. திருமங்கையாழ்வாருக்குத் தந்தை.

4. சண்முகசேநா வீரன்.

5. சுக்கிரீவன் சேனைத்தலைவன். அக்னியம்சம். பிரகத்தனைக் கொன்றவன். கும்பகர்ணனுற் சோர்ந்தவன்.

6. அஜமீளன் குமரன்.

7. வாநரத்தலைவன்.

8. செங்குட்டுவனுடைய ஒற்றரிற்றலைவன். (சிலப்பதிகாரம்)

9. மாஹிஷ்மதியரசன்: இவன் நித்தியாக்னி வளர்க்கையில் அக்னி ஜ்வலிக்காது நின்று இவனது பெண் சுதர்சனை வந்து தொட்டகாலத்தில் ஜ்வலிக்கக்கண்டு நீலன் கோபமடைந்து சபிக்கப் போகையில் அக்னி பிராமண உருக்கொண்டு எதிரில் வந்து தான் நீலன் குமரியிடம் ஆசைகொண்டிருப்பதைக் கூறி மணந்தனன். இவன் சகாதேவனிடம் யுத்தஞ்செய்து மாண்டனன். விந்திய தேசாதிபதி என்பர். இவன் அக்கினியைத் தன்கோட்டைக்குக் காவலாக்கினன். (பார-சபா)

10. இவன் சிவஞ்ஞானியென்று பெயர் பூண்டு தங்கையாகிய நவஞ்ஞானியின் மரணத்தால் தானும் மரணமடைந்து பேயுருப்பெற்றுத் திருவாலங்காட்டில் புரிசைக்கிழான் பேயெனநீக்க ஒரு வேலமரத்தில் இருந்தனன். ஊரார் அந்த வேலமரத்தை வெட்ட அந்தக் கோபத்தால் அவ்வழியாக இரத்தினசபாபதிக்கு நிவேதனங்கொண்டு சென்ற வேதியரை மோதினன். வேதியர் சிவமூர்த்தியிடம் முறையிட்டனர். சிவமூர்த்தி குண்டோதரனை ஏவி அப்பேயைக் கொலை செய்வித்தனர்.

11. மாகிஷ்மதி பட்டணத்தரசன். இவன் மனைவியை அக்னி காவிற் புணரக் கருதினமை அறிந்து இவனக்னியை சிறையிட்டவன். (சிவமகா புராணம்.)

**நீலாங்கனை** — மயூரகண்டன் மனைவி.

**நீலாம்பரிபீடம்**—சத்திபீடங்களில் ஒன்.

**நீலி** — 1. இவள் முற்பிறப்பில் நவஞ்ஞா யென்னும் பார்ப்பினி, தன்கணவன் னையும் தன்குமாரனையும் கொலை செ தால் பழிக்குப் பழிவாங்கத் திருவாலங் காட்டில் புரிசைக்கிழாருக்குப் புத்திரியாகப் பிறந்து அவன் பேயென்று நீக்க அலைந்து திரிந்து தரிசன செட்டியாகப் பிறந்திருக்கும் தன் கணவனைக் கண்டு களித்து அவனைப் பலவாறு மயக்கிப் பழையனூர் வேளாளரிடம் முறையிட்டு அவர்கள் (எ0) பெயரையும் அவனுயிர்க்குப் பிணையாக இருக்க உடன்படுத்தினன். அவர்கள், அவ்வாறு பிணையிருப்பதாகச் செட்டிக்குக் கூறி அவனுடன் இருக்கும்படி உடன்படுத்தினர். இவள் அவனிடமிருந்த மந்திரவாளை நீக்கச்செய்து அவனுடனிருந்து அவனைக் கொலை புரிந்து மீண்டும் செட்டியின் தாய்போல் வந்து வேளாளர் (கக) பெயரையும் தீயில் முழுகச் செய்வித்து மிருந்த ஒருவன் போயிருந்த கழனியிடம் அவன் மகள் போற் சென்று நடந்த செய்திகூறிப் பழிவாங்கினன். வேலமரத்திலிருந்த அண்ணன் இறந்ததற்கு ஊரார் வெட்டிய வேலமரம் காரணமாதலால் ஊரார் எழுபது பெயரையும் பழிவாங்கினன்.

2. சங்கமவின் என்னும் வைசியன் மனைவி. கோவலன் கொலை யுண்டிறக்க முற்பிறப்பில் அவனைச் சபித்தவள். (சிலப்பதிகாரம்.)

3. அஜமேடன் தேவி. இவள் புத்திரர் துஷ்யந்தன், பரமேஷ்டி முதலானவர்கள்.

**நீலை** — கும்பன் பெண், கிருஷ்ணன் தேவி.

**நீளன்** — அசமீடனுக்கு நளனியிடம் உதித்த குமரன், இவன் குமரன் சாந்தி.

**நீளாதேவி** — விஷ்ணுமூர்த்தியின் சத்தி.

**நீளோபாபக்தர்** — இவர் ஒரு வேதியர். துக்காராம் எனும் பக்தருக்குச் சீடர், இவர் அரிகீர்த்தனை செய்துகொண்டு பிக்ஷை செய்து மனைவியுடன் வாழ்ந்து வருநாளில் தம் குமரிக்கு மணநாள் நெருங்கியது கண்டு வருந்தப் பெருமாள் ஒரு விருத்த வேதியராய் வந்து தமக்கு அன்னமிடும்படி தாம் கொண்டுவந்த சிறிது அமுதைச் சமைப்பதில் கூடப்போட்டுச் சமைக்கச் செய்து பெருமாளுக்கு நிவேதனஞ் செய்வித்து அதை அவர்கள் அளிக்கவுண்டு நீளோபாவை நோக்கி நாளை உன்குமரியின் திருமணமாதலின் அதனில் நானும் உண்டு களித்திருக்க வெண்ணுகிறேனெனக் கேட்டு, அவ்வகை இருந்து அம் மணத்திற்கு வேண்டிய எல்லா மடைத்தொழில் முற்றும் தாமே செய்தும் உண்ட பரிகல முதலியவற்றைத் தாமே புறத்திட்டு மணந்தீர்ந்த பின் நீளோபா சுற்றத்தினர்க்கு வேஷ்டி முதலிய கொடுக்கையில் இவ்வேதியர்க்கும் ஒரு வேஷ்டி தர விடோபா, விடோபா, என்று அவர் கூறிய பெயரிட்டழைக்க மறைந்தது கண்டு, இவ்வாறு நம்மிடம் வந்தோன் கண்ணன் என்று வருந்துகையில் பெருமாள் கனவிடைத்தோன்றி உன் அன்பினை உலகறிய வந்தேனென்று தரிசனந்தந்து ஆசீர்வதித்து மறைந்தனர்.

**நீறுபூசிகள்** — இது வேளாளரை ஜைநர் கூறும் சொல். இவர்கள் சிவனடியவர்கள் காலத்து ஜைநர்களாக இருந்து சைவர்களாக மாறியவர்கள்.

## நு

**நக்கிராயுதன்** — திருதராட்டிரன் குமரன்.

**நட்பஅணி**—இது பிறர்கருத்தைத் தெரிந்துகொண்டு வேறுபட மொழியாது குறிப்பினுலாயினும், தொழிலினுலாயினும், அரிதாகநோக்கி உணருந் தன்மையுடையது. இதனை சூக்ஷமாலங்காரம் என்பர் வடநூலார். (தண்டி.)

**நுளம்பு** — கொதுகின் சாதியிற் சிறிதாகிய ஒருவகை.

**நுளையர்** — செம்படவர்க்கு ஒரு பெயர்.

## நூ

**நூலிற்குப் பத்துவகை அழகு** — சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்த்தல், ஓசையுடைமை, ஆழமுடைத்தாதல், முறையின்வைப்பு, உலகமலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்தது. (நன் - பா.)

**நூல்** — 1. இது முதனூல், வழிநூல், சார்புநூல் என மூவகைப்படும். அவற்றுள் முதனூலாவது, ஆதிபகவனால் ஆன்மாக்கள் பொருட்டுத் திருவாய்மலர்ந்தருளிய வேதாகமங்களாம். வழிநூலாவது, முதல்வன் நூலை முழுதும் ஒத்துச் சிறிது வேறுபட்டிருப்பதாம். சார்புநூலாவது, முதனூற்கும் வழிநூற்கும் சிறிதொத்து வேறுபாடுடையதாய் முடிவதாம். எதிர்நூலென்பது மொன்றுண்டு. அது முதல்வனூலின் முடிந்த பொருளை ஓராசிரியன் யாதானுமோர் காரணத்தாற் பிறழ வைத்தால் அதனை கருவியாற்றிரிபு காட்டி ஒருவாமை வைத்தற்கு ஒள்ளியோனொரு புலவனால் உய்க்கப்படுவது. (யாப்பு - இலக்கணம்.)

2. இது சாத்திரத்திற்கு ஒரு பெயர். பஞ்சினுலாகிய நூல் கனத்த மரத்தின் கோணல் முதலிய தீர்த்து செம்மைபடுத்துவதுபோல் மாணுக்கரது மனக்குற்றங்களை நீக்கிச் செம்மையுறச் செய்தலின் இது உவமை ஆகுபெயராய்ச் சாத்திரத்திற்கும் கூறப்பட்டது. (நன்.)

3. இது பொதுச்சிறப் பென்னும் பாயிரங்களையுடைத்தாய் முதல் வழி சார்பென்னும் மூன்றிலொன்ருய் அறம் பொருளின்பம் வீடென்னும் நான்கையுந் தருவதாய் எழு மதங்களைத் தழுவி, பத்துவகைக் குற்றங்கணீங்கப் பெற்றதாய், பத்துவகை அழகுடைத்தாய், (கஉ) உத்திகளைப் புணர்க்கப் பெற்றதாய், ஒத்து, படலம், எனும் உறுப்புக்களைப் பெற்றுச் சூத்திரங் காண்டிகை விருத்தியெனும் விகற்பங்களையுடையது. (நன்னூல்.)

4. பருத்தியெனும் ஒருவகைச் செடியில் வித்தினை மூடிக்கொண்டிருக்கும் மெல்லிய பஞ்சை இராட்டினத்திலிட்டு நூலாக்கிப் பலவித ஆடைகள் நெய்வர். இந்நூல்களுக்குப் பலவகை சாயமிட்டு சாயவஸ்திரங்களாக்குவர்.

**நூல்யாப்பு** — தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பு, என நான்குவகை. (நன்னூல்.)

**நூழிலாட்டு** — பொருகளத்தைப் பொருந்திய சேனைகெடத் தன் மார்பைத்திறந்த வேலைப் பறித்து எறிந்தது. (பு.வெ).

**நூழில்** — வீரக்கழன்மன்னர் சேனையைக் கொன்று அழலும் வேலைத்திரிந்து ஆடுதலை விரும்பியது. (பு.வெ).

**நூற்கு உரைகூறும் வகை** — பாடம், கருத்துரை, சொற்களை வகுத்துரைத்தல், பதப்பொருளுரைத்தல், தொகுத்துரைத்தல், உதாரணம், வினவுதல், விடைகூறல், விசேடங் கூறல், வேற்றுமைத்தொகை முதலிய விரித்தல், அதிகாரத்தோடுபொருந்த வுரைத்தல், துணிந்திதற்கிதுவே பொருளெனவுரைத்தல், பயனுரைத்தல், ஆசிரியவசனங்காட்டல் ஆக (கச) வகை. (நன் - பா.)

**நூற்குக்குற்றம்** — (கO) குன்றக்கூறல், மிகைபடக்கூறல், கூறியதுகூறல், மாறுகொள்க்கூறல், வழூஉச்சொற் புணர்த்தல், மயங்கவைத்தல், வெற்றெனத்தொடுத்தல், மற்றொன்றுவிரித்தல், சென்றுதேய்ந்திறுதல், நின்று பயனின்மையாம்

**நூற்பயன்** — அறம், பொருள், இன்பம், வீடு அடைதலாம்.

**நூற்பெயர்** — நூற்குப்பெயர், முதனூலாலும், கருத்தனாலும், மிகுதியாலும், அளவாலும், பொருளாலும், செய்வித்தவனாலும், குணத்தாலும், காரணத்தாலும், இடுகுறியாலும், உண்டாம். இவை முறையே பாரதம், தொல்காப்பியம், களவியல், நாலடி, அகப்பொருள், சாதவாகனம், நன்னூல், நிகண்டு முதலிய. (நன்.)

**நூற்றுவர்க்கன்னர்** — கங்கையின் வடகரையிலுள்ள மாளவப் பிரதேசங்களை ஆண்டவர்கள். இவர்கள் சேரன் செங்குட்டுவன் காலத்தவர்கள். வடநாட்டு யாத்திரையில் சேரனுக்குதவி புரிந்த நூற்றுவர்.

**நூனம்** — ஸ்வசித்தாந்தத்தில் கூறிய அவயவங்களை யறிந்து பிரயோகிக்காமல் மாறிக் குறைத்துப் பிரயோகித்தல். (சிவ.சித்)

## நெ

**நெடியோன்குன்றம்** — தமிழ் வழங்கு நிலத்திற்கு வடவெல்லையாக உள்ளதோர் மலை. (சிலப்பதிகாரம்).

**நெடுங்கணக்கு** — உயிர் முதல் எல்லா எழுத்துக்களின் வரிசை.

**நெடுங்கல்நின்றமன்றம்** — காவிரிப்பூம் பட்டினத்துள்ள ஐவகைமன்றத்துள் ஒன்று. இது பித்தேறினோர், நஞ்சுண்டோர், முதலியவரின் துயர்தீர்ப்பது (சிலப்பதிகாரம்).

**நெடுங்கழுத்துப்பரணர்** — ஒரு செந்தமிழ்ப் புலவர். (புற - நா)

**நெடுங்கிள்ளி** — காரியாற்றுத் துஞ்சியநெடுங்கிள்ளிக்கு ஒருபெயர். இவன் சோழர் பரம்பரையைச் சேர்ந்தவன். ஆவூரும், உறையூரும் இவனதுரிமை. சோழன் நலங்கிள்ளி இவனை முற்றுகைசெய்து இவன் கோட்டைவாயி லடைக்க உள்ளிருந்து கோவூர்க்கிழாரால் தேற்றப் பட்டவன். (புற-நா).

**நெடுங்குளம்** — பாண்டி நாட்டுள்ள ஒரூர். மதுரைக்குச் செல்லும் வழியிலுள்ளது. (சிலப்பதிகாரம்).

**நெடுஞ்சடையன்** — அதிகனுடன் பொருத பாண்டியன்.

**நெடுஞ்செழியன்**—1. பாண்டிநாட்ட ரசருள் ஒருவன். இவன் தேவியின் பெயர் கோப்பெருந்தேவி. கோவலனைச் சிலம்பின் பொருட்டுக் கொல்வித்துத் தான் செய்தது தவறென அறிந்து கண்ணகியால் மாண்டவன். (மணிமேகலை)

2. இவன் வெற்றிவேற்செழியன் மகன். இவன் தன்னுடனெதிர்த்த தமிழரசர் எழுவருடன் தலையாலங்கானத்துப் போரிட்டு வென்றான். இவனுக்குப் பின் பட்டமடைந்தவன் உக்கிரப் பெருவழுதி.

**நெடுநல்வாடை** — இது பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரர்பாடிய அகவற்பா.

**நெடுநேரம்நிற்கலாகாஇடங்கள்** — கோபித்துச் சண்டைசெய்யும் இடத்திலும், கள் குடித்துக் களித்தாடும் இடத்திலும், பரத்தையர் சேரியிலும், சிநேகம்தளர்ந்த இடத்திலும், அநேகர் வருவதும் போவதுமாயிருக்கும் தண்ணீர்த் துறையிடத்தும் நிற்கலாகாது. (ஆசாரக்கோவை).

**நெடுந்தொகை** — (௪OO) கடைச்சங்கத்தவர் கையாண்ட தமிழ்நூல்.

**நெடுமாறநாயனார்** — கூன்பாண்டியனுக்கு ஒரு பெயர்.

**நெடுமாறன்** — இவர்க்கு நெல்வேலிவென்ற நெடுமாறன் எனவும் பெயர். இவரே நின்ற சீர்நெடுமாறநாயனார் இவருடன் நெல் வேலியில் பொருதவன் நந்திபோதவன் மனுடைய சேநாபதி உதயசந்திரன். நந்தி போதவன்மன் காலம் உதயேந்திரசாசனத் தால் கி. பி. 710 முதல் 760 வரை யென அறியப்படுகிறது. திருஞானசம்பந்தர் கால மும் இதுவாம்.

**நெடுமுடிகிள்ளி** — இவன் காரியாற்றிற் போரிட்டுச் சேரர் பாண்டியர்களை வென்ற பாண்டியன். இவனுக்குக் கிள்ளிவளவன், மாவண்கிள்ளி, வடிவேற்கிள்ளி, வென் வேற்கிள்ளி யெனவும் பெயர். இவன் கரி காற்சோழன் குமரன். இவன் காலத்திற் புகார் கடல் கொண்டது. சோழர் மேன் மை கெட்டது. இவன் குமரன் தொண் டைமா னிளந்திரையன். (மணிமேகலை).

**நெடுமொழிகூறல்** — மன்னரின் மேம்பட்ட நிறைமதிபோலும் கொற்றக் குடையினை யுடையோற்கு ஒரு வீரன் தன்னுடைய மேம்பாட்டைத் தான் உயர்த்திச் சொல்லி யது. (பு.வெ).

**நெடுமொழிவஞ்சி** — பகைவர் தஞ்சேனை யைக் கிட்டித் தன்னுடைய ஆண்மைத் தன்மையை உயர்த்திச் சொல்லியது. (பு-வெ).

**நெடும்பல்லியத்தனார்** — பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடிப் பரிசுபெற்றவர். (புற-நா)

**நெடும்பாரநாயனார்**—இவர், இமயவரம்பன் தம்பி. பல்யானைச் செல்கெழுகுட்டுவனுக் குப் புரோகிதர். இவர் தம்மரசனை நான் சுவர்க்கம் புகவேண்டுமென அரசன் ஒன் பது பெருவேள்வி வேட்பித்துப் பத்தாம் வேள்வியில் தம்மனைவியுடன் சுவர்க்க மடைந்தவர். (பதிற்றுப்பத்து).

**நெடுவெண்ணிலவினார்**—இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் குறுந் தொகையுள் "நெடுவெண்ணில" வென நிலவை நோக்கிச் செய்யுள் கூறினமையின் இப்பெயர் பெற்றனர். குறு சஎ. பெண் பாலார் ஆகலாம்.

**நெடுவேளாதன்** — குன்றூர் கிழாரால் பா டப்பட்டவன். (புற-நா).

**நெடுவேள்குன்றம்** — திருச்செங்குன்றென் னும் குமரவேள் மலை. (சிலப்பதிகாரம்).

**நெட்டிமையார்** — பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடி யவர். (புற-நா).

**நெட்டெழுத்துக்கள்** — உயிரெழுத்துக்களில் நெடிய ஓசைகளைப் பெற்ற, ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ எனும் ஏழுமாம். (நன்.)

**நெப்டியூன்** — இந்தக் கிரகம் சூரியனுக்கு எட்டாவது வட்டத்திலிருப்பதாக காலி என்பவரால் (1846) வருஷத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. இது, சூரியனுக்கு (279) கோடியே (17) லக்ஷம் மைல் தூரத்திற்கப் பால் இருந்து சூரியனைச் சுற்றிவருகிறது. இது, சற்றேறக்குறைய (164) வருஷகால அளவில் சூரியனை ஒருமுறை சுற்றிவருகிற தென்பர். இதன் குறுக்களவு (34,800) மைல். இதற்கு ஒரே உபக்கிரகம் உண் டென்பர். இது தன்னைத்தான் சுற்றும் நிலை அறியப்படவில்லை யென்பர்.

**நெய்** — 1. இது, தேஜஸ்தருவது, பாவத் தைப் போக்குவது, தேவர்க்கு யஞ்ஞமூல மாய் ஆகாரமாவது, இது காமதேனுவிடம் பிறந்தது. ஆகையால் பாபஹாரம் என்று விஷ்ணு தர்மோத்தரம் கூறுகிறது.

2. நெய்ப்புள்ள திரவப்பொருள். இது மிருகங்களிடத்தும் மரக்கொட்டைகளிடத் தும் எடுத்து உருக்கப்படும். பசு, ஆடு, எருமை, ஒட்டை முதலிய மிருகங்களிட மும், எள், ஆமணக்கு, இருப்பை, புன்னை, வாதுமை, வேம்பு, புங்கு, தேங்காய், கடுகு, சேங்கொட்டை, முதலிய வித்துக்க ளிடத்தும் நெய் எடுப்பர்.

**நெய்க்குறி** — தேரையர் செய்த மூத்திர பரீக்ஷை நூல்.

**நெய்தல்** — நிலத்தின் வகைகளைக் காண்க.

**நெய்தற்கார்க்கியனார்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் பெயர் கார்க்கியனார். இவர் நெய்தலைப் பாடுதலில் வல்லவராதலில் இவர்க்கு இப்பெயர் வந் ததுபோலும். (குறு-கஉ-உகஉ)

**நெய்தற்சாயத்துய்த்த ஆவூர்க்கிழார்**—கடை ச்சங்கமருவிய புலவர். (அகநானூறு.)

**நெய்தற்றத்தனார்** — 1. கடைச்சங்கமருவிய புலவர்.

2. இவர் இயற்பெயர் தத்தனென்பதே. வேறு தத்தனென்பார் பலருளராதலாலும், இவர் நெய்தற்றிணையைச் சிறப்பித்துப் பாடியிருத்தலாலும் ஏனைய தத்தர்களின் இவர் வேறென்பது தெரிய நெய்தற்றத்த னார் எனப்பட்டார். நெய்தலேயன்றிப்

பாலையையும், பாடியுள்ளார். நீ படுந்தயரை தலைமகனூர்க்குச் சென்று அவனறியும்படி கூறுவோமோவென்று தோழி தலைமகளை நோக்கிக் கூறியதாக மகழ்விக்கின்றூர். நற் (சக) இவர் பாடியனவாக மேற்கூறிய பாடலொன்றும் அகத்திலொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

நெய்யுண்டாழ்வான் — எழுபத்தினுலு சிங்காசனதிபதிகளில் ஒருவர். (குருபரம்.)

நெருப்புக்கோழி — இது எல்லாப் பறவைகளிலும் பெரிது, கால்கள் நீண்டிருக்கும். விரல்களைக்கொண்டிருக்கும். உயரம்ஆறடி முதல் எட்டடியிருக்கும். தலை சிறிது. தொடையி லிங்குமங்கும் மயிருண்டு. இது (2) மனிதரைத் தன்னுடம்பிற் ருங்கி ஒடும். இதன் சிறகுகள்சிறியவை; ஆதலால் மேற்கிளம்பிப் பறவா. அதிக விரைவாய் குதிரை வேகத்திற் கதிகம் ஓடும். இதின் பெட்டை மணலில் முட்டையிட்டு அவயவங்காக்கும். இதினிறகுகள் அழகாகவும் மெதுவாகவுமிருத்தலால் ஐரோப்பியர் முடியணிக்காக ஆப்பிரகரிதனை வேட்டையாடுகிறூர்கள். இது வேட்டையில் களைத்த காலத்துத் தன்னை வேட்டைக்காரர் பார்க்கவில்லையென வெண்ணித் தலையை மணலில் மறைத்துக்கொள்ளும். இதன் முட்டைகளை உணவாகவும், முட்டையோட்டைப் பான பாத்திரமாகவும், ஆபரணமாகவும் உபயோகிப்பர். இது ஆப்பிரிகா கண்டத்துப் பாலைவனவாசி. ஆகாரம் புல் பூண்டு முதலிய.

நெருப்புப்பொடி — இது வெடி மருந்து நாளிகக் கருவிகளுக்கிடுவது. செய்முறை- சுவர்ச்சிலவணம் (வெடியுப்பு) பலம் (ங) கந்தகம் பலம் (க) சதுரக்கள்ளி அல்லது எருக்கன்கரி பலம் (க) இவைகளைப் பொடித்துக் கலந்து சதுரக்கள்ளி, எருக்கு, வெள்ளைப்பூண்டு இவற்றின் ரஸங்களால் காய்ச்சி வெயிலிலுலர்த்தி சருக்கரைபோல் பிசைந்து உபயோகித்தலாம். இதற்கு இரும்பு, ஈயங்களினுலாக்கப்பட்ட உருண்டைதாக்குங் கருவி (குண்டு.) (சுக்.நீ.)

நெல் — புல்வகையில் சேர்ந்த பயிர். இது உலகிலுள்ள எறும்பு முதல் யானையீருகவுள்ள எல்லாப் பிராணிகளுக்கும் ஆகாரமாகவுள்ளது. இது, நன்செய், புன்செய் நிலங்களில் விளையும் பயிர். இவ்வகை நெற்கள் உருவ வேறுபாட்டினும், உரிசை வேறுபாட்டினும் பலவகைப் படும். இந் நெல்வகை இந்தியாவில் (300)க்கு மேற்பட்ட வேறுபாடுள்ளன வென்பர். ஜபானியர் இதில் (4000) வகைகளுக்கு மேற்பட்டிருக்கிற தென்பர். இவற்றின் நிறம் பொன்மை, வெண்மை. இந்தியாவில் பூர்வம் பெரும்பாலார் உழவைக் கொண்டே எல்லா செல்வங்களையும் பெற்றனர். அரசனும் உழவரிடம் பெற்ற செல்வத்தாலேயே அரசாண்டு வந்தான். வேற்று நாட்டவரும் இந்நாட்டின் வளங்கண்டே இந்நாட்டிற் படையெடுத்து வந்தனர். அத்தகைய பெருஞ் செல்வத்தைத் தந்த நெல் தற்காலம் உழவர் தாழ்வடைந்ததால் குறைவுபட்டது. அதற்குக் காரணம் நம் நாட்டு எரு முதலிய அயல்நாடு சேருதலாம். இவ்வகை பெருமைபெற்ற நெல்லின்வகை கார்நெல், மணக்கத்தைநெல், வாலான், கருங்குறுவை, ஈர்க்குச்சம்பா, புழுகுச் சம்பா, கைவரைச் சம்பா, செஞ்சம்பா, கல்லுண்டைச் சம்பா, குண்டுச் சம்பா, மல்லிகைச்சம்பா, இலுப்பைப்பூச் சம்பா, மணிச்சம்பா, வளைதடிச்சம்பா, கோரைச்சம்பா, குறுஞ்சம்பா, மிளகுச் சம்பா, சீரகச்சம்பா, காளான்சம்பா, மைச் சம்பா, கோடைச்சம்பா, காடைச்சம்பா, குன்றிமணிச்சம்பா, அன்னமழகிச் சம்பா, புட்டரிசி நெல் முதலிய பல உண்டு.

**நெல்லின் பல வதுப்புகள்** — நமது நாட்டில் விளைவிக்கும் நெல்லில் 1, கார், 2. சம்பா, 3. குறுவை, 4. அன்னதானம், 5. அறுபதாங்கோடை, 6. மிளகி, 7. செம்மிளகி, 8. சீரகச்சம்பா, 9. சிறுமணிச் சம்பா, 10. சின்னசம்பா, 11. பெரிய சம்பா, 12. வாடைச்சம்பா, 13. ஊசிச் சம்பா, 14. இலுப்பைச்சம்பா, 15. மல்லிகைச்சம்பா, 16. கம்பன் சம்பா, 17. கைவளைச்சம்பா, 18. குங்குமச்சம்பா, 19. குண்டுச்சம்பா, 20. கோடைச்சம்பா, 21. ஈர்க்குச்சம்பா, 22. புனுகுச்சம்பா, 23. துய்யமல்லிச்சம்பா, 24. மோரன்சம்பா, 25. பாலன்சம்பா, 26. சீவன்சம்பா, 27. செம்லிப்பிரியன், 28. பிசானம், 29. மலைகுலுக்கி, 30. மடுவிழுங்கி, 31. காடைக் கழுத்தன், 32. செம்பாளை, 33. பூம்பாளை, 34. முட்டைக்கார், 35. கடப்புக்கார், 36. வெள்ளைக்கார், 37. மோசனம், 38. மணக் கத்தை, 39. பிச்சைவாரி, 40. ஈசற் கோவை, 41. இறங்குமேட்டான், 42.

தென்னெல், 43. வெண்ணெல், 44. அருஞ்சோதி, 45. பொங்கையோச்சாலி, 46. பொன்கம்பி, 47. புளங்கல், 48. பெங்காளம், 49. டர்மான், 50. பைகோசம்பா முதலான அநேக ஜாதிகளுமிருக்கின்றன.

**நெற்பயிருக்கு ஏற்ற எருவகை** — எருக்கிலை, கொழுஞ்சி, அவிரி, ஆவிரை, வேப்பிலை, நொச்சி வாகை, பூவரசு, புங்கு, வாதநாராயணாதி இலைகளும், ஆமணக்கு, வேம்பு, வேர்க்கடலை, இருப்பை, புங்கு, புன்னை, முதலான பிண்ணாக்குகளும் போடலாம். ஒரு ஏக்கருக்கு மாட்டு எரு பத்து வண்டியாகவும், இலை எரு ஐந்து வண்டியாகவும், அல்லது தனி அவிரியாகில் மூன்று வண்டியும், வேர்க்கடலைப் பிண்ணாக்கு இரண்டு பாரமாகவும், தோற்கிடங்கு மயிரை ஒரு வண்டியாகவும் உபயோகிக்கலாம். சீனா, ஜப்பான், முதலிய தேசங்களில் புளித்த மலத்தையும், ஐரோப்பா, அமெரிக்கா தேசங்களில் எலும்புப் பொடி, பிரகாசிதம்கலந்த சுண்ணாம்பு, சாம்பல், பலவகைப் பசுந்தாள், மீன் எலும்புத் தூள், பட்சிகளின் புழுக்கை முதலியவற்றையும் எருவாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். நிலத்தில் களர் இருந்தால் பாச்சான், பிரண்டை, பனையோலைகளைப் போட்டு மிதித்து அதிகத் தண்ணீர் கட்டினால் களர் எடுபட்டுப்போம். பசுவின் எருவைப் போட்டால் சாகம் ருசியாக இருக்கும்.

**நெற்பயிர்க்குத் தக்க நிலம்** — நெற்பயிரானது அதிகத் தண்ணீருள்ள இடங்களிலெல்லாம் மிகுதியாக விளையக்கூடினும் களிமண், செம்மண், நதியோரம், மணல்படுக்கை, மிச்ரமண் முதலானவையே இப்பயிருக்கு ஏற்றவை.

**நெற்பயிருக்கு வேண்டிய உழவு** — "நெல்லுக்கு நான்குழவு" என்னும் பழமொழி நம் நாட்டாருக்குத் தெரிந்த விஷயம். நெல் தொன்றுதொட்டுச் சேற்றில் விளையும் பயிராகையால் இதற்குப் புழுதியுழவு கூடாது. மேலும், மண் மட்க வேண்டியதைக் கருதி நான்கு நாள்விட்டு, விட்டு உழுதல் உத்தமம். நெற்பயிரின்வேர் ஒரு அங்குலம் வளர்ந்து பரவும் தன்மையுடையதாதலால் உழவுக்குத் தக்கபடி பயிர் விருத்தியாகும்.

**நெற்பயிர்** — இது புன்செய, நன்செய் நிலங்களில் பயிரிடப்படுவது. பூமியை நன்றாயுழுது புழுதியாக்கி உலர்த்தி நன்றாகக் காய்ந்த விதையைப் புழுதியில் விதைப்பர். இது புழுதிக்கால்பயிர். கழனியை உழுது நீர்பாய்ச்சி எருத்தழை முதலிய போட்டு அவை நன்றாயழுகியபின் பறம்படித்து நாற்றுகளைத் தூரமாக நட்டுப் பயிரிடுவது நடவு. இது நன்செய் பயிர். நெற்பயிருக்கு நிறையத் தண்ணீர்ப் பாய்ச்சி, களைபறித்து எருவிடவேண்டும். இவ்வாறு செய்தால் நல்ல பலன் தரும். இதில் பலவகை நெற்கள் உண்டு. இது, முக்யமாய் சம உஷ்ணமுள்ள தேசங்களில் பயிராகிறது. இந்தியா, பர்மா, சீனா, முதலிய இடங்களில் பயிராகிறது. இதன் தாள் வைக்கோலாய் மாடுகளுக் குணவாகும். நெல்லை அரிசியாக்கி ஆகாரமாகவும், தின்பண்டப் பணிகாரங்களாகவும் செய்கிறார்கள். இதன் விரிவை தான்யவகைகளில் காண்க.

**நெல்லைநாதர்**—சிவராத்திரி புராணம் பாடிய புலவர்.

**நெல்லையப்பபிள்ளை** — இவர் திருநெல்வேலியி லிருந்த தமிழ்வித்வான். திருநெல்வேலி புராணம், திருப்பாச்சூர் புராணம் முதலிய பாடியவர்.

**நெல்லைவருக்கக் கோவை** — வேம்பத்தூர் புலவர்களுள் ஒருவராகிய அம்பிகாபதி என்பவரா லியற்றப்பட்டது.

**நெற்குன்றவாண முதலியார்**—இவர் தொண்டைநாட்டு நெற்குன்றமென்னும் ஊரில் இருந்த வள்ளல். காளமேகர் என்னும் கவிவாணர், இவர் இல்லாதகாலத்து வீட்டு முன்றிலில்வந்து கவிபாட அக்கவியைக் கேட்ட தாதியொருத்தி தக்க பரிசளித் தனுப்பினள். இதற்குள் முதலியார் வந்து மணி பொன் முதலிய தம் பொருள்களையுங் கொடுத்துத் தாமும் அடிமையென்று, "கற்கும்கவிவல்லவந்தணர் கோனபிகாளிக் கியாம், விற்கும் பரிசனமாகி விட்டோம் வடவேங்கடமும், பொற்குன்றமும் புகழ்க் கங்காநதியும் பொதியமும் போல், நெற்குன்றமும் நம்மரபு மெந்நாளும் நிலைநிற் கவே" எனப் பாடித் தந்தவர். இவர் இருந்த ஊரில் கனப்பானன் என்னும் வேளாண்குலத்துக் கவியும் இருந்ததாகத் தெரிகிறது. திருப்புகலூரில் தரிசனார்த்தமாக வந்தபோது திருப்புகலூரந்தாதி பாடியவர். (காளமேகர் காலம்).

## நே

**நேசநாயனர்** — காம்பீலியென்னும் திருப்பதியிலிருந்த சாலியர். இவர் சிவனடியவர்க்கு உடை கோவணம் கீள் முதலிய நெய்து கொடுத்துச் சிவனடியவர்களைப் பூசித்துச் சிவபக்தி யுடையவராய் முத்தியடைந்தவர். (பெ-புராணம்).

**நேத்திரன்** — தர்மன் குமரன். இவன் குமரன் குந்தி.

**நேத்ரதேவர்** — செந்நிறம், பரமசிவத்தின் இச்சாஞானக்கிரியா ச்வரூபமாய்ச் சோம சூர்யாக்னி ச்வரூபமாயுள்ளவர்.

**நேத்திரரோகங்கள்** — இவை தாய், வயிற்றில் பிள்ளை இருக்கும் காலத்தில் கிருமி ஜனிக்கும் வஸ்துக்களைப் புசித்தலாலும், பாஷாண முதலிய புகைபடுதலாலும், சிரத்திலும் கண்களிலும் அடி உண்டாலும், பாரம் சுமத்தலாலும், வெயிலில் நடத்தலானும், தைலமுழுக்கு தவறுதலாலும், முத்தோஷங்களும் அதிகரித்து, தனித்தாவது, தொந்தித்தாவது மூவித நரம்புகளின் வழியாய் சிரசை அனந்து கண்களின் ஆறுஸ்தானங்களைப்பற்ற (94) விதரோகங்களைப் பிறப்பிக்கும். அவை, இமைகளில் (24) வெள்விழிச்சந்தில் (9) வெள்விழியில் (13) கருவிழியில் (5) பாவையில் (27) கண்கள் முற்றிலும் (16). இதன் விரிவை ஜீவரக்ஷாமிர்தத்தில் காண்க.

**நேமிசந்திராசாரியர்** — சைந ஆசாரியருள் ஒருவர். இவர் கோமடாசாரம், லப்தீசாரம் என்னும் நூல்கள் செய்தவர்.

**நேமிநாத சுவாமிகள்** — சைந தீர்த்தங்கர், இவர் கசார்த்தாதேசத்தில் சௌரிய புரத்திலிருந்த சமுத்திரவிசய மகாராஜாவுக்குச் சிவதேவியிடம் பிறந்தவர். இவர் ஆவணி மாசம் சுக்கிலபக்ஷம் ஷஷ்டி சித்திரை நக்ஷத்திரத்தில் பிறந்தவர். உன்னதம் (கo) வில், நீலவர்ணம், ஆயுஷ்யம் (கooo) வருஷம், இவர்க்குக் கணதரர் வரதத்தர் முதலியவர். இவர் காலத்து இராசாக்கள், பலராம பலதேவர், கிருஷ்ண வர்சுதேவர், சராசந்த பிரதிவாசுதேவர், பிரமதத்தன், சக்கிரவர்த்தி, பாண்டவர், துரியோதனுதிகள். இவர் வாமநாதபுர மென்னும் தென்மயிலையில் இருந்தபோது இந்த நாடு இருமுறை கடல்கொண்ட காலத்து மயிலைமான் அரசனை நோக்கி ஜைநபிம்பத்தை அப்புறப்படுத்த வவினர். இந்த நேமிநாதச்வநுமியே இரண்டாமுறை மயிலை கடல் கொண்ட காலத்துச் சித்தாமூரில் பிரதிஷ்டிக்கப்பட்டவர். இவர் இருபத்திரண்டாவது தீர்த்தங்கரர்.

**நேமிநாதம்** — நேமிநாத தீர்த்தங்கரர் பெயரால் குணவீரபண்டிதராற் செய்யப்பட்ட எழுத்தும் சொல்லும் அமைந்த இலக்கண நூல். இது பத்துவகை அழகோடுங்கூடிய வெண்பாவாலாயது.

**நோசை** — குறிலேனும், நெடிலேனும் தனித்தும் ஒற்றடுத்தும் வருவது.

**நேரிசை ஆசிரியப்பா** — ஈற்றயலடி முச்சீரும் மற்றையவடிகள் நாற்சீருமாய் வருவது. (யாப்பு - இ.)

**நேரிசையொத்தாழிசைக்கலிப்பா** — தரவு முதலிய ஆறுறுப்புக்களில் அராகம், அம்போதரங்கம் ஒழிய வருவது (யாப்பு-இ.)

**நேரிசை வெண்பா** — நான்கடியாய் இரண்டாமடியி னிறுதிச்சீர் தனிச்சீராக நான்காமடி முச்சீராக முடிவது. (யாப்பு - இ.)

**நேரிவாயில்** — உறையூரின் தெற்குவாயிற் கண்ணதோர் ஊர். (சிலப்பதிகாரம்).

## நை

**நைடதம்** — இது தமிழில் நளன் சரித்திரத்தை விரித்துக் கூறுவது. (ந௦௦) வருடத்திற்கு முன் தென்காசியிலிருந்து அரசு செலுத்திய அதிவீரராம பாண்டியரால் இயற்றப்பட்டது. இது வடமொழி நைஷதம்போன்று பலவகை அலங்காரம் அமைந்தது.

**நைகாசரீ** — நிருதிசம்பந்தமான சக்தி.

**நைமிசாரண்யம்**—1. இது இமயமலைக்கருகிலுள்ள வனம். இருடிகள் தாங்கள் தவமியற்றுதற்கு வசதியான நல்ல இடம் அருளுக எனப் பிரமதேவனை வேண்டப் பிரமதேவர்ஆராய்ந்து தருப்பையொன்றையெடுத்து நேமி (சக்கரம்) போற்செய்து அதனை உருட்டி இதன்பின் செல்லுக. இது எவ்விடம் நிற்குமோ அந்த இடம் உமக்குத் தவ மியற்றுத்தற்கு வசதியான நல்ல இடமாகும் என்றனர். அவ்வகை சென்ற நேமி நின்ற இடமாதலால் இதற்கு இப்பெயர் வந்தது. ஒருகால் நிமிஷமாகிற கண்ணிமைப்போதில் திருமால் இவ்விடமிருந்து அசுரரைக் கொன்றதாலும் இப்பெயர் பெற்றதென்பர். இங்கு நரநாரா

யண இருடி தவஞ்செய்தனர். இதற்கு நைமிசவனம் எனவும் பெயர்.

2. Nimsar, 24 miles from the Sandila Station of oudh, and Rohilkand Railway, and 20 miles, from Sitapur. It is situated on the left bank of Goomti.

**நைமித்திகப்பிரளயம்**—பிரமனுடைய பகற் காலம் நீங்கி இரவுண்டாமளவில் உண்டாம் பிரளயம். வராகக்கற்பத்தைக் காண்க.

**நைமிஷியம்** — ஸரஸ்வதி ருஷிகளின்பொருட்டு எழாகப்பிரிந்த இடம். (பார-சல்ய.)

**நையாண்டிப்புலவன்** — ஒரு தமிழ்ப்புலவன். இராமசந்திர கவிராயன் காலத்தவன். தொண்டை நாட்டவன்; பள்ளிகொண்டான் என்னும் பாதவன்மீது "வள்ளி கொண்டான் மயிலேறிக் கொண்டான் மதிபோலுமலே, வெள்ளி கொண்டான் விடையேறிக் கொண்டான் விண்ணவர்க் கமுதம், துள்ளிக் கொண்டான் புள்ளி லேறிக்கொண்டான் சுபசோபனஞ் சேர், பள்ளிகொண்டான் புகழேறிக் கொண்டானென்று பார்க்கவென்றே" என்று பாமாலைப்பாடிப் பரிசுபெற்றவன். (தனிப்பாடற்றிரட்டு).

**நையாயிகன்** — இவன் பிருதிவி முதலாகிய பூதம் ஐந்தெனவும், திக்கு, மனம், புத்தி, ஆத்மா முதலிய திரவியம் ஒன்பதெனவுங் கூறுவன். பூதங்கள் அணுக்கூட்டம் என்றும் இதில் அநாதி அணுச் சத்தாய்க் கெடாதிருக்கு மெனவும், காரியமாகிய அணுக்கள் வேருயிருந்து உலகங்களாய்ச் சத்தாய்ச் சடமாய் நித்தியமுமாய்க் கெடுமெனவும், இவ்வகை ஸ்தூல அணு சூக்ஷும அணு என அணுக்கள் இருவிதமெனவும், இந்த அணுக்கூட்டங்களே அகிலமாயிற்றெனவும், அகிலங்களில் ஆத்மாக்கள் வியாபிகளாய் அநேகமாய் இருக்குமெனவும், ஆன்மகுணமே புத்தியெனவும், முன்சொன்ன அகிலங்களில் குணம் புத்தியாயிருக்கிற ஆத்மாக்க ளியல்பாக அதில் மறைந்து பந்தப்பட்டுச் சனனமரணப்படும் எனவும், ஆன்மாக்கள் தமக்கென அறிவைப் பெருவெனவும், புத்தி முதலாகிய அந்தக்கரணமே அறிவைத் தருமெனவும், இவற்றைத் தரும் சருவஞ்ஞீவன் ஆத்மாவுக்குக் கன்மத்தால் அறிவிப்பான் எனவும், காலம் நித்தியம் எனவும், இவற்றைப் பிரேரேபிப்பவன் கடவுள் எனவும், ஆத்மா ஆகாயம்போல் மகத்பரிமாணமாய்ப் பாஷாணம்போல் சடமாய் மனச்சையோகத்தால் சித்ததர்ம யுக்தனுயிருப்பன் எனவும், முன் சொன்ன கர்மங்கள் எல்லாம்விட்டுப் புத்தி முதலான கரணவிகற்பங்கெட்டு ஆகாயம் போலும் பிணம்போலும் சமாதிபொருந்திப் பாஷாணம்போல்வது முத்தியெனவுங் கூறுவன். (தத்துவநிஜாநுபோகசாரம்)

**நைஷதம்**—நளன் கதைசொன்ன ஒரு நூல்.

**நைஷ்டிகன்** — ஓர் சிற்பி.

**நைஷ்டிக பிரமசாரி** — விவாகமில்லாமலும் சந்நியாஸ ஆச்சிரமம் கொள்ளாமலுமிருக்கிற பிரமசாரியாம். (ஹரீதஸ்மிருதி.)

## நோ

**நோச்சி** — ஏவறையையுடைய முடக்குகளைத் தாங்கின நிலைமையினையுடைய எயில் காக்கும் வீரர்மலைந்தபூவைப் புகழ்ந்தது. (புறவெண்பா.)

**நோச்சிநியமங்கிழார்** — ஒரு செந்தமிழ்க் கடைச்சங்கப் புலவர். இஃது ஊர்பற்றி வந்த பெயர். நொச்சிநியமம் ஓரூர். இவர் வேளாண் மரபினர். இக்காலத்து ஆராய்ந்தறிதற்குமரிய பூக்கோட்காஞ்சி யியற்றியவர் (புறம் உ௯௩.) குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளாராதலின் இவரூர் குறிஞ்சியினகத்தது போலும் நீ படுந்துயர்தான் யாதென்று வினவிய தாய்க்குத் தலைவன் மார்பணங்கென்று தவறியுரைக்கத்தொடங்கினேனென்று தலைவிகூறுவதாகப் படிப்போர்க் கினசுவையூட்டுகின்றனர் (நற். கஎ.) தலைவியின்மொழி கேட்பினுய்வேன் அன்றேலென் னுயிரோடெல்லா மொருங்கழியுமென்று தலைவன் கூறுவது. இனிய சுவையதாகும். (நற். உ0௧.) புதுவதாகப் பூத்த வேங்கைமலரைப் பெற வேண்டி மகளிர், புலி, புலி, யென்று பூசலிடுவதையும் அதனைக்கேட்டுப் புலிபோலுமென்று ஆடவர் வில்லம்புடன் வருவதையும் விரித்துக் கூறியுள்ளார். (அகம் ௫௨.) (புலி, புலி என்றால் வேங்கையின் கிளை தாழ்ந்துகொடுக்கு மென்பது வழக்கு.) இவர் பாடியனவாக நற்றிணையில் மூன்று பாடல்களும், அகத்திலொன்றும், புறத்திலொன்றுமாக ஐந்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**நோய்**—அரிசியைச் சுத்தப்படுத்த குத்துகையில்நொறுங்கிய அரிசியின் துணிக்கைகள்.

## நோ

**நோக்கர்**—இவர்கள் பள்ளிகளுக்குச் சாதிப்பிள்ளைகளென வருஷந்தோறும் ஜாதியார் இருக்கும் கிராமங்களிற்சென்று கடமை வாங்குகிறார்கள். இவர் சுபாசுபங்களில் அநுமன், புலி, அக்னி முதலிய கொடிகளைத் தாங்கி விருதுகூறி வருவர். இவர்கள் காஞ்சியில் தேர் அழுந்தியபோது நோக்கன் ஒருவன் சர்ப்பிணியாகிய தன் குமரியைப் பலியாகத் தந்தனன். பின் ரதம் நிலைவிட்டுக் கிளம்பியது. அதுமுதல் அரசன் இவர்களைச் சாதிப்பிள்ளைகளாக ஏற்படுத்தினன் என்பர். இவர்கள் பூணூல் தரித்து ஒரு பறையும் பூரியும்கொண்டு திரிவர். (தர்ஸ்டன்.)

**நோதகர்** — கௌதமருடைய குமரர். இருக்குவேதத்தில் ஒரு பாகத்திற்கதிகாரி.

**நோதனுக்யசையோகம்**—பரிசமுடைய திரவியத்திற்கு மூர்த்த திரவியத்தோடு உண்டாகிய சையோகம். (தரு.)

**நோய்பாடியார்**—இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். யுத்தத்தில் வீரங்காட்டி வென்றோரது பெயரும் பீடுமெழுதி நடுகல் நடுதலைக் கூறியுள்ளவர். இவர் நோயின் தன்மையைப் பாடிய மருத்துவத்தொழில் மேற்கொண்டதனால் இப்பெயர் பெற்றாரென ஊகிக்கப்படுகிறது. (அகம் கூஎ.)

## ப

**பகட்டுழலலை** — பழனத்தின் மிக்க நன்மையாகிய முயற்சி யான்வந்த இளைப்பும் பாரம் பொறுத்தலும் அகன்றமனைக் குரிமையாளனை எருடன் உவமித்தது. (புறவெண்பா பொது.)

**பகதத்தன்** — ஆதிவராக மூர்த்திக்கும் பூமிதேவிக்கும் பிறந்த நரகாசுரன் குமரன். இந்திரனுடன் யுத்தம்புரிந்த அரக்கர் ஒடியொளிக்கும்படி இந்திரனுக்கு உதவிபுரிந்து தோழமைபெற்றவன். இவன் பாஷ்கலன் அம்சமென்பர். இவன் பட்டணம் மாகிஷ்மதி. இவன் யானை சுப்ரதீபம். இவன் ஒருமுறை அருச்சுநனுடன் யுத்தஞ்செய்து நட்புச்செய்து கொண்டவன். பாரத முதனாள் யுத்தத்தில் துரியோதனனுக்கு உதவியாய்க் கடோற்கசனுடன் சண்டையிட்டவன். பூமிதேவி வேண்டுகோளால் கண்ணன் இவனைக் கொல்லாது விட்டனர். இவன் நகரம் பிராக்சோதிஷம். (பார - சபா.)

**பகநகன்** — ஒரு ரிஷி. விஸ்வாமித்திர புத்திரன்.

**பகந்தரணம்** — இது எக்நேரமும் குந்திக்கொண்டிருத்தல், குதிரை யேற்றம், சதா கடின ஆசனத்தில் உட்காரல், மூலவியாதிக்குக் காரணமான வஸ்துக்களைப் புசித்தல் முதலியவற்றால் அடிவயிற்றிற்கும், மூத்திரப்பைக்கும் அருகிலிருக்கிற கெட்ட உதிரம்மாமிசங்களை யோட்டி உள்ளும் புறம்புமாய் ஒரு அங்குல இரண்டங்குல கட்டிகளைச் சேரவுண்டாக்குவது. இது வாத, பித்த, சிலேஷ்மாதிகளைப்பற்றி வாத பகந்தரம், பித்த பகந்தரம், சிலேஷ்ம பகந்தரம் வாதபித்த பகந்தரம், வாதசிலேஷ்ம பகந்தரம் சிலேஷ்மபித்த பகந்தரம், திரிதோஷ பகந்தரம், சதபோனக பகந்தரம், உஷ்டரக்கிவ பகந்தரம், பரிசிராவி பகந்தரம், பரிக்ஷேபி பகந்தரம், ருசு பகந்தரம், அரிசே பகந்தரம், சம்புகாவர்த்த பகந்தரம், ஆகச பகந்தரம் எனப் பதினைந்து வகைப்படும். (ஜீவ.)

**பகலிரவின்முகூர்த்தங்கள** — ஒரு முகூர்த்தமாவது (உ) நாழிகை, உதய முதலாக, ரௌத்ரம், சர்ப்பம், மைத்ரம், பைத்ருகம், வாஸவம், அம்பு, விசுவதேவம், அபிசித்து, பிரசாபத்யம், அயிந்திரம், அக்னி, நிருதி, வாருணம், அக்கியம், பாக்யம் என்ற (கரு)ம், பகல் முகூர்த்தங்களாம். ரௌத்ரம், அஜேகபாதம், அகிர்ப்புத்னி, பூஷா, கந்தருவம், இராக்கதம், அக்னி, பிரசாபத்யம், சந்திரம், அதிதி, பார்க்கவஸ்பத்யம், வைஷ்ணவம், ஸாவித்ரி, துவாட்டிரம், வாயவ்யம் என்ற (கரு)ம், இராமுகூர்த்தம். இந்த முகூர்த்தங்கள் நந்நாளோடொக்கும். இந்தச் சுபமுகூர்த்தங்களில் சுபகன்மங்கள் செய்யப்படும். இவற்றில் அசுவநியைக் காந்தருவம் எனவும், பரணியை ராக்கதம் எனவும் பெயரிட்டனர். (விதானமாலை.)

**பகல் நித்திரை** — பகல் நித்திரையானது, தண்டம், மேட்டரக்ஷியம், ஊருஸ்தம்பம், சருவாங்கம், உக்கிராக்கிரகம், சப்தி, அனுஸ்தம்பம், திருக்குஸ்தம்பம், சோணிதம், ஆட்டியம், புருவாடோபகம், கிருத்திரசி,

ஊர்த்துவம், சம்பூகம், அவபேதம, அவ
தந்திரம், அவதானம், விவுர்தாசியம் என்
னும் (கஅ) வித வாதரோகங்களைத் தரு
தற்கு ஒரு வித்தாகும் என்க.

**பகவதியார்** — திருஞான சம்பந்த சுவாமிக
ளுக்குத் தாய். சிவபாத இருதயருக்குத்
தேவியார்.

**பகவந்கீதை** — அருச்சுநன் பொருட்டுக்
கண்ணன் உபதேசித்த ஞானயோக நூல்.

**பகவன்** — பெருஞ்சாகரன் புதல்வன். இவன்
காசியாத்திரையின் பொருட்டுப் புறப்ப
ட்டு மேலூர் அகரத்தில் தங்கினன். அவ்
விடம் ஒரு பெண் வர அவளைப் புலைச்சி
யென்று சட்டுவத்தால் அடித்துத் துரத்
திக் காசியாத்திரைசென்று மீண்டு மறு
படி அச்சத்திரம் வந்து தங்கி முன்சட்டு
வத்தடியுண்ட பெண்ணைக்கண்டு மயல்
பூண்டு அவளை வளர்த்தவரிடஞ் சென்று
அவளை மணந்து மங்கலஸ்நானத்தின் பொ
ருட்டு அவன் மயிரைவகிர்ந்து தாம் அடித்த
அடியைக் கண்டு இவள் ஆதியாளென்று
ஓடுகையில் அவளும் பின்றொடர இரு
வரும் பாணர்சேரியில் ஒரு மண்டபத்திற்
புணர்ந்தனர். இவ்விருவருக்கும் ஒளவை
பிறந்தனள். கணவனுடன் செல்லவேண்டி
ஆதி, குழந்தையை விட மனமிலாது மயங்
குகையில் அக்குழந்தை என்னைவிட்டு நீங்க
மயங்கற்க எனக் கவிகூறக் கேட்டு அப்
புறம் கணவனுடன் சென்று பல இரவுகள்
தங்கி ஆங்காங்கு உப்பை, அதிகமான்,
உறுவை, கபிலர், வள்ளி, திருவள்ளுவர்
முதலியவரையும் பெற்று விட்டுச் சென்ற
வன். இவனுக்கு ஞாளிதத்தன் எனவும்
பெயர்.

**பகவான்** — ஐச்வரியம், வீரியம், புகழ், திரு
ஞானம், வைராக்கியம் இவ்வாறு பெருங்
குணங்களையுடைய கடவுளுக்குப் பெயர்.

**பகழிக்கூத்தர்** — இவர் சேதுமன்னர் அர
சாட்சிக்குள்ளாகிய செம்பிநாட்டைச் சேர்
ந்த சன்னசிக் கிராமத்தில் வைணவப் பிரா
மண குலத்தினராகிய தர்ப்பாதனரென்னு
மறையவ ரருந்தவத்தால் அவருக்கு மைந்த
ராகப் பிறந்து வளர்ந்து தமிழிலக்கிய
விலக்கணங்களையும் ஐயந்திரிபறக் கற்று
வல்லவராய் எல்லாரும் நன்கு மதிக்கத்
தக்க வித்துவானாக விளங்கி யிருந்தனர்.
அங்ஙனமிருக்குங் காலத்தி லொருநாள்
வயிற்றுவலி நோயாற் பீடிக்கப்பட்டு பெரி
தும் வருந்தி அந்நோய் நீங்குதற்குத் தக்க
மருந்துகள் பலவாகவுண்டும் நீங்காமையால்
இனி எம்பெருமானாகிய திருச்செந்தூரி
லெழுந்தருளியிருக்குங் குமாரக்கடவுளைப்
பாடி இந்நோயைத் தீர்த்துக்கொள்ளுவே
னென்று நினைத்துப் பிரார்த்தித்து அக்
கடவுள்மீது திருச்செந்தூர்ப் பிள்ளைத்
தமிழ் எனப் பெயரிய பிரபந்தத்தைப்
பாடிமுடித்து நோய்நீங்கப் பெற்று மன
மகிழ்ச்சியடைந்து திருவருளை வியந்து
திருச்செந்தூருக்குச் சென்று முருகக்கட
வுளைத் தரிசனஞ்செய்து அவர் சந்நிதியிலே
அநேக வித்வான்களும், அடியார்களும்சூழ
இருந்து அரங்கேற்றி ஆனந்த பரவச
மடைந்து ஆராதித்தனர். பின்னர் சபையி
லிருந்தவர் பகழிக்கூத்தருக்குச் செய்ய
வேண்டிய மரியாதையொன்றேனும் செய்
யாமற் பராமுகமாக இருந்துவிட்டனர்.
அங்ஙன மிருத்தற்குக் காரணம் இவர்
வைணவரா யிருந்ததென்று சிலர் கூறுவர்.
பகழிக்கூத்தர் சபையார் செய்யு மரியாதை
யைப் பொருட்படுத்தாது தமதிருப்பிடஞ்
சென்று நித்திரை செய்வாராயினர். குமா
ரக்கடவுள் பகழிக்கூத்தரதுமெய்யன்பைப்
பிறருக்கு அறிவிக்கும்பொருட்டுத் தமது
திருமார்பில் விசேஷாலங்காரமாகச் சாத்
தப்பெற்றிருந்த விலையுயர்ந்த மாணிக்கப்
பதக்கத்தைக் கொண்டுவந்து நித்திரை
செய்து சயனித்திருந்த பகழிக்கூத்தரது
மார்பி லணிந்துவிட்டுச் சென்றனர். மறு
நாள் திருவனந்தற் பூசைசெய்யவந்த பெரி
யவர்களுங் கோவிலதிகாரிகளுஞ் சுவாமி
மார்பிலிருந்த பதக்கத்தைக் காணாமல் மதி
மயங்கி இதைத் திருடிச்சென்றவன் யாவ
னென்று ஊரெங்குந் தேடுவாராய் எங்கும்
காணாமல் பகழிக்கூத்தரது மார்பிலிருக்கக்
கண்டு, இக்காரியஞ் செய்தவன் உயிர்
தொறு மொளித்திருந்த நம் குமாரக்கட
வுளேயன்றி வேறில்லையென்று முன்னை
நாள் நிகழ்ச்சியாலறிந்து பகழிக்கூத்தரை
வணங்கி உம்முடையபெருமையை அறியா
திருந்த எங்கள் அபராதத்தைப் பொறுத்
துக்கொள்ளல் வேண்டுமென்று பிரார்த்
தித்துப் பல்லக்கிலேற்றி அநேக விருது
கள், வாத்தியங்கள்சூழ வெகு விநோதமாக
நகர்வலஞ் செய்வித்துச் சாமி சந்நிதானத்
திற் கொண்டுபோய்த் தீர்த்தம், விபூதி,
சந்தனம், மாலை, பரிவட்டம் முதலியவை
களா லுபசரித்தனுப்பினர். இவரைச் செங்
குந்தர் மரபினர் என்றுங் கூறுகின்றனர்.

**பகற்குறியிடையீடு** — பகற்குறிக்கண் வந்த தலைவன் குறிக்கட்செல்லாது இடையீடு பட்டுப்போதல். இது விலக்கல், சேறல், கலக்கம் எனும் வகையினையும், இறைவனைப் பாங்கி குறிவால்விலக்கல், இறைவியைக் குறிவால்விலக்கல், இறைவி ஆடிடநோக்கியழுங்கல், பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டகறல், பின்னுள் நெடுந்தகை குறிவயினீடு சென்றிரங்கல், வறுங்களநாடிமறுகல், குறுந்தொடி வாழூர் நோக்கி மதிமயங்கல்.

**பகன்** — 1. கத்ருதநயன் நாகன்.

2. பிருகு முனிவருக்கு இரண்டாம் பேரன். தாய்வயிற்றில் (கoo) வருஷமிருந்தவன். தந்தையர் கிருதவீரியனால் இறந்தமையறிந்து அவன் வம்சத்தவரைக் கொல்லத் தவஞ் செய்கையில் இவன் பிதுர்க்கள் அத்தவத்தைத் தடைசெய்ய விட்டு நீங்கி அத் தவாக்கினியை அவர் கட்டளையால் கடலில் விட்டனன். இதுவே வடவையானது

3. தக்ஷயாகத்தில் கண்பறி கொடுத்தவன். காசிபருக்கு அதிதியிட முதித்த குமரன். துவாதசாதித்தரில் ஒருவன். தேவிசித்தி. குமரர்மகிமா, விபு, பிரபு ஒருபெண், ஆசுசி.

4. சூரனுக்கு மாரிஷையிடம் உதித்த குமரன்.

5. கங்கிசனுக்குக் கங்கையிடம் உதித்த குமரன்.

6. சூரபதுமன் மந்திரி.

7. வஸுதேவர் தம்பியாகிய கங்சர் குமரன்.

8. கம்சனால் அனுப்பப்பட்ட கொக்குருக்கொண்ட அசுரன். இவன் கண்ணனைக் கொல்லவந்து கண்ணனை விழுங்க வாய் அக்கிபோல் கொளுத்தியதால் விட்டுக் கண்ணனால் வாய்பிளவுண்டிறந்தவன். இவன் தம்பி அகாசுரன்.

9. ஏகசக்கிர வனத்திலிருந்து அவ்விடமிருந்த குடிகளை வருத்திக்கொண்டிருந்த ஒரு அசுரன். பாண்டவர்கள் ஏகசக்கிரபுரத்தில் வசிக்கையில் அவ்வூரார் இந்த அசுரனுக்கு ஒரு வண்டி அன்னமும் இரண்டு கடாக்களும் ஓட்டுபவனையும் ஆகாரமாக முறையாக அனுப்புதல் அறிந்து தாம் குடியிருந்த வீட்டுக்காரியின் முறை வரக்கண்டு அவ்வீட்டுப் பிள்ளையின் தாய் அழுதல் நோக்கிக் குந்தியின் ஏவலால் வீமராசன் அவ்வண்டி யன்னத்தை மாடுகள் பூட்டித் தானே ஓட்டுபவனாகச் சென்று அவ்வாகாரமெல்லாம் தான் புசித்துப் பசிவேளை கழித்துச்சென்று அசுரன் யுத்தத்திற்குவர அவனுடன் போரிட்டுக் கொன்றனன். இவனுக்குப் பகாசுரன் எனவும் பெயர்.

10. தேவாசுர யுத்தத்தில் இந்திரனாற் கொல்லப்பட்ட அசுரன்.

11. ஒரு ரிஷி, தாலப்பியன் உடன் பிறந்தவன்.

**பகஸ்தமநன்** — கூரயாநன் புத்திரன்.

**பகாசி**—திருதராட்டிரன் குமாரரில் ஒருவன்.

**பகாசுரன்** — கொக்குருவாய்ச் சிவமூர்த்தியை எதிர்த்து இறந்தவன். இவனிறகைச் சிவமூர்த்தி தேவர்வேண்டலாற் சடையிலணிந்தனர்.

**பகாக்ஷன்** — ஒரு அசுரன். இவன் தேவரை வருத்திவருகையில் தேவர் முறையிடக் கேட்டுச்சிவமூர்த்தி, வேதத்தைத் தேராகவும், உபநிடதம் குதிரையாகவும், பிரணவம் சவுக்காகவும், காலசக்கிரம் வில்லாகவும், மாயை நாணாகவும், பாசுபதம் அத்திரமாகவும், உமையைச் சாரதியாகவுங் கொண்டு யுத்தஞ்செய்து கொன்றனர்.

**பகிரம்பட்டர்** — இவர் பைடணபுரியிலிருந்த வேதியர்: இவர் வேதங்களை யுணர்ந்து ஒழுக்கந்தவறாது அதிதிபூசை செய்து கொண்டு வருநாட்களில் ஒரு நாள் தாம் உணவு கொள்கையில் போஜனபதார்த்த மொன்றில் உப்பிலாததுகண்டு மனைவியை நோக்கிப்பதார்த்தத்தில் உப்பின்மை உணர்த்தினர். அவள் தங்களுக்கு வயது அறுபது முடிந்தும் பதார்த்தருசி விடவில்லையெனக் கூறப் பட்டருக்கு விரக்திபிறந்து தம்மைக் கண்டோர் வெறுக்கும் வகை ஒரு காஜியையடைந்து சுன்னத் முதலிய சடங்குகள் செய்துகொண்டு மகம்மதியராய்ச் சிலநாள்தரித்து வேதியரிடம்வந்து பிராயச்சித்தாதிகளைச் செய்துகொண்டு திரிகையில் அத்தேசத் தரசனாகிய மகம்மதியன் இவரை அழைத்துத் துருக்கனாகிய நீ ஏன் மீண்டும் வேறு மார்க்கத்திற் சென்றனையென வினவினன். பட்டர் நான் மகம்மதியனாயகாலத்தும் என் இந்து மார்க்க சின்னமாகிய கர்ணவேதை போகவில்லை. இந்துமார்க்கத்தான் ஆனகாலத்தும் உங்கள் அடையாளமாகிய சுன்னத் நீங்கவில்லை ஆதலால் நான் எவனோ தெரிந்

திலன் என்று விடைகூறி நீங்கிப் பித்த னைப்போல் திரிந்து நாகநாதர் அநுக்ரகம் பெற்று நற்கதியடைந்தவர்.

**பகிர்முகத்திலங்கம் பதின்மூன்று** — இது நாடகவிகற்பம். விலாசம், பரிசர்ப்பம், விதூதம், சமம், நாபம், நமதுதி, பிரகமம், நிரோதம், பரியுபாசனம், வச்சிரம், புட்பம், உபநியாசம், வருணசங்காரம் என்பன. பகிர்முகமாவது - முளைத்த அங்குரம் ஓங்கி மூத்தாற்போலத் தலைமக்கள் சொன்ன பொருளைப் பொலியுமாற்றால் விரிவாற் சொல்வது. (வீரசோ.)

**பகீரதன்**—1. (சூ.) திலீபன் குமரன். இவன் தன் மூதாதைகள் வரலாற்றினை வசிட்டராலுணர்ந்து அவர்கள் நற்கதியடையப் பிரமனை நோக்கி (௬0,000) வருஷந் தவம் புரிந்தனன். பிரமன் தரிசனந்தந்து கங்கையையுஞ் சிவமூர்த்தியையு மெண்ணித் தவம்புரியக் கட்டளையிடக் கங்கை அரசனுக்குத் தரிசனந்தந்து, நான் பூமிக்குவரின் என்னைப் பொறுக்க வல்லவரைத்தேடுக என்று மறைய, அரசன் மீண்டும் பிரமனையெண்ணித் தவம்புரிந்து பொறுப்பாருணர்ந்து சிவமூர்த்தியை நோக்கித் தவமியற்றித் தாங்கவேண்டி வரம்பெற்றுக் கங்கையை யெண்ணித் தவமியற்றி அவள் வர முன்சென்று கங்கையைக் கொணருகையில் வழியில் சந்நுருஷி தமது ஆச்சிரமங் கெடுதல்கண்டு அக்கங்கையை ஆசமித்தனர். அரசன் திகைத்து இருடியைவேண்டிக் குறைகூறிக் கங்கையை இறந்தோர் எலும்பில் பாய்வித்துச் சுவர்க்கமடைவித்தவன். இவன் குமரன் சிறுதன். இவன் அக்கங்கை தன் காரணமாகப் பூமியில் வந்ததால் பாகீரதியென மும்முறை அழைத்து அப்பெயர் நிலைக்கச் செய்தனன். இவன் பிராமணர் செய்த யாகத்திற்கு இடையூறு வாராமற் காத்ததனால் அவர்கள் இவனைத் தேகத்துடன் சத்திய உலகம்போய்த் திரும்பிவர வரமளித்தனர். அங்ஙனமே அவ்வுலகம் போய் மீண்டவன். இவன் தனக்குக் கோரனால் உண்டாகிய இடரைத் தீர்த்துக் கொள்ளச் சுக்கிரனை யடுத்துக் கந்தவிரதம் சுக்கிரன் உபதேசிக்கப்பெற்று அநுட்டித்து அவனை வென்றவன்.

2. இவன் ஒரு யாகஞ்செய்து அந்த யாகத்தில் பத்துலக்ஷம் கன்னிகைகளை சுவர்ணம் யானை, தேர், குதிரைகளுடன் தானஞ் செய்தான். இந்த யாகத்தில் சோமபானத்தால் வலியடைந்த இந்திரன் பல்லாயிரம் அசுரர்களைச் செயித்தான். இவனுக்குப் பகீரதி பெண்ணாகி இவன் மடியில் வளர்ந்தாள். ஊர்வசிப் பெயர் அடைந்தாள். (பார - சாந்.)

**பகுபிரத்தன்** — இவன் ஒரு சூத்திரன், மறுபிறப்பில் பிரியவிரதன் என்கிற அரசனானன். (திருமுட்ட - புராணம்)

**பகுராதன்** — (பூ.) புரஞ்சயன் குமரன்.

**பகுளாசுவன்** — மிதிலாபுரிக்கரசன். இவன் கிருஷ்ணனிடம் மிக்க அன்புள்ளவன். இவன் பட்டணத்திற்குக் கண்ணன் இருடிகளுடன் எழுந்தருள அரசன் எதிர் கொண்டு உபசரித்தனன்.

**பகுளை** — உத்தானபாதன் புத்திரனாகிய உத்தமன்பாரி.

**பகை** — (ந) பைசாசர், உலகு, உடல்.

**பகைவீடு** — (சூரி) ரிஷப, மிது, கர்க், கன், விரு, மகம், கும்பமும், (சந்) மேஷ, மிது, சிங், துலா, மக, கும்பமும் (செவ்) சிங், தனு, கும், மீனமும், (புத) சிங், தனுசும், (குரு) மேஷ, விருச்சிகமும், (சுக்) கர்க், சிங்கமும், (இராகு) மிது, துலா, தனு, கும்ப, மீனமும், (கேது) (குளிக) க்கும் மேஷ, மிதுன, சிங்க, கன்னி, தனுசும், பகையாம்.

**பகோதரன்** — ஒரு இராவண சேநாவீரன்.

**பகோளம்** — சூரியனை, நாபியாயுடைய காலச்சக்கிரம் பச்சிமமுகமாய் மானஸோத்திர பர்வதத்தின்மீது நித்யம் ஒரு பிரதக்ஷணம் வருவதாயும், அதில் பிரதிஷ்டிதங்களான கிரகங்கள், தம்தம் கக்ஷைகளில் எதிர்முகமாய் அவரவர்கட்குத் தக்க அளவின்படி சுற்றிவருகிறதாகவும் பூமி நிலையாக நிற்பது பிரத்தியக்ஷ சித்தமாயிருப்பதைப்பற்றிக் கப்பலில் இருப்பவர்களுக்குக் கரையோடுவதாய்த் தெரிந்தபோதிலும் நிதானித்துப் பார்க்கும்போது கரையோடாமல் கப்பலோடுவதாய்த் தெரிவதுபோல், எவ்வளவு நிதானித்துப் பார்த்தாலும் பூமியோடாமல் நிலையாக நிற்பதாய்க் காணப்படுகிறதென்கிறதாயும் பூமி சுற்றுகிறதென்னும் பக்ஷத்தில், மேகமண்டல சந்திரமண்டல பரியந்தங்களான ஆகாசாதி சுற்றுகிறதென்றே கொள்ள வேண்டுகையாலே இரண்டிற்கும் கதியுண்டென்று கொள்ளுகிறதைக் காட்டிலும் பிரத்யக்ஷ சித்தமான பூமியை ஸ்திரமாகக்கொண்டு பகோளமே சுற்றுகிறதாகக் கொள்ளுகை

உசிதமாய்ச் சாஸ்திரங்களுக்கு விரோதமின்றி இருக்கிறதென்றும் பூர்வ திருக்கணிதசித்தாந்திகள் பலரும் பூமியை ஸ்திரமாகக்கொண்டே கிரகண்கிரகசமாக வக்கிராதி சராதிகளைக் கண்டறியும்படி காட்டிய கணனமார்க்கங்கள் சரியாயிருக்கின்றன வென்பதாகவும் சூரியனை நாபியாகவுடைய காலசக்கரத்தில் கிரகங்களெல்லாம் பிரதிஷ்டிதங்களா யிருக்கையாலே அந்தச் சக்கிரநாபியான சூரியன் பிராக்கதியாய்ச் சுற்றுகையாலுண்டாகும் சக்கரசலனமே கிரகக்ஷேத்திரங்களுடைய தூரத்திற்குத் தக்கபடி பேதப்பட்டுச் சகல கிரகங்களுடைய வக்கிராதி சாங்களுக்குக் காரணமாகிற தென்கிறதாகவும் பூர்வமீமாம்சையில் லோகவேதாதி கரண சித்தாந்தமுதலியவற்றில் விவரித்திருக்கிறது.

**பக்கசித்திரை** — திதிகளில் பூர்வபக்ஷம் உத்தமம், அபரபக்ஷம் மத்திமம், அதமம், அதமாதமம் எனப்படும். இவ்விரண்டு பக்ஷத்தில் சதுர்த்தியும், நவமியும், சஷ்டியும், அஷ்டமியும், துவாதசியும், சதுர்த்தசியும் பக்கசித்திரை யெனத் தவிரப்படும். பக்கசித்திரையென்ற பக்கங்களில் தோஷமான நாழிகை சதுர்த்திக்கு அ, நவமிக்கு உடு, சஷ்டிக்கு க, அஷ்டமிக்கு கச, துவாதசிக்கு க0, சதுர்த்தசிக்கு டு ஆக நாழிகைகளைக் கழித்தால் இத்திதிகள் நன்றாம். பிரதமை முதலாக நந்தை, பத்திரை, சயை, இருத்தை, பூரணை என்றடைவே பெயராக கடு பக்கமும், கூ பரிவிருத்தியாக எண்ணப்படும். சுபகாரியங்களில் பக்கசித்திரை யொழிந்த திதியும், பூரணையும் நன்றாம். பூர்வபக்ஷத்து பிரதமை முதல் பஞ்சமி இறுதியும், அபரபக்கத்து ஏகாதசி முதல் அமாவாசை இறுதியும் தவிரப்படும். சிலர் சுபகருமங்களுக்கு இரண்டு பக்கத்தும் ஒற்றித்த பக்கத்துப் பிரதமையும், பௌரணையும், நவமியும் நீங்கிய திதிகள் நன்றெனவும், இரட்டித்த திதிகளில் தசமியும், துதியையும் ஒழிந்தன தீதாமென்றுங் கூறுவர். இரண்டுபக்ஷத்திலும் வந்த சத்தமியும், திரயோதசியும், வித்யாரம்பத்திற்கு விசேஷித்துத் தவிரப்படும்.

**பக்குடுக்கை நன்கணியார்** — ஒரு செந்தமிழ்ப் புலவர். (புற. நா.)

**பக்துவர்** —(கூ) கருமகாண்டி, ஞானகாண்டி, பக்திகாண்டி.

**பக்திஸாரர்** — திருமழிசை யாழ்வாருக்கு உருத்திரமூர்த்தி இட்டபெயர்.

**பக்வாபதம்** — யமபுரவழியிலுள்ள பட்டணம். இவ்விடம் ஆன்மா எட்டாமாவிக பிண்டமுண்டு செல்வன்.

**பங்கயச்செல்வி** — 1. திருவாளன் என்னும் வேடனுக்குத் தேவி. திருமழிசை யாழ்வாரை வளர்த்தவள்.

2. திருமகள்.

3. சரஸ்வதி.

**பங்காசுவன்** — இவன் இந்திரனைப் பகைத்து யாகஞ்செய்து நூறு பிள்ளைகளைப் பெற்று வேட்டை மேலேகி இந்திரனால் வெருட்டப்பட்ட குதிரையுடன் ஆற்றிற் படிந்து பெண்ணுருக்கொண்டு ஒரு இருடியை மணந்து மீண்டும் (க00) குமாரரைப் பெற்றுத் தன் பட்டணமேவந்து தான் அரசனாகியிருந்த காலத்திருந்த பிள்ளைகளிடத்தில் இவர்களையுஞ் சேர்த்து வாழச்செய்து சென்றதையறிந்த இந்திரன், பிள்ளைகளுக்குள் கலகம்விளைத்து (உ00) பிள்ளைகளையும் சாகச்செய்கையில் மனைவியர் அழ இந்திரன் வேதியர் உருக்கொண்டு வந்து பகையின் வரலாறுகூறி அரசனை உனக்கு எந்தப் பிள்ளைகள் வேண்டுமெனல் நான் பெண்ணாயிருந்த காலத்துப்பெற்ற பிள்ளைகளும் என் பெண்ணுருவமுமே வேண்டுமென இந்திரனைக் கேட்டுக்கொண்டவன்.

**பங்குநமாநதி** — ஒரு தீர்த்தம்.

**பசமாநன்** — 1. சாத்துவதன குமரன். இவன் குமரர் நிமரோசி, கங்கணி, விருஷணி. மற்றொரு மனைவியிடத்தில் சதசித், சகத்ரசித், அயுதசித்.

2. அநந்தன் குமரன்.

**பசவேசன்** — நந்தியைக் காண்க.

**பசாசுரன்** — இவன் தேவர் முதலியவர்களை வருத்தத் தேவர் வேண்டுகோளால் சிவமூர்த்தி, இவனைச் சோமதேவராகிக் கொன்றனர்.

**பசி** — சாத்வதன் குமரன.

**பசு** — 1. கபிலையைக் காண்க. முகயோக்யமல்லாமை சீதைகொடுத்த சாபம்.

2. இது முதுகெலும்புள்ள சாகபக்ஷணி. தலை குதிரையினும் சற்று சிறிது. இது அகன்ற நெற்றியும், இரண்டு கொம்புகளும், பருத்த கண்களும், நீண்டு தடித்த கழுத்தும், அலதாடியும், அகன்ற மார்பும், தடித்த தோலும், நீண்ட வாலும், உறுதியான கால்களும், பிளவுபட்ட குளம்பும்

உள்ளது. இதற்குக் கீழ்வாயில் மாத்திரம் பற்கள் உண்டு; மேல்வாயில் இல்லை. கடைவாயில் மேலும் கீழும் உண்டு. இது புல்லைத் தலையசைத்துத் துண்டிக்கும். இதற்கு 4 இரைப்பைகள் உண்டு. முதற்பையில் உட்கொள்ளும் உணவை நிரப்பிக்கொண்டு சற்று இளைப்பாற, முதலில் உண்ட உணவு இரண்டாம்பைக்குச் செல்லும், சென்றவுணவு சிறுசிறு உருண்டைகளாகி மீண்டும் வாய்க்கு வந்து அரைக்கப்பட்டு மூன்றாம்பை சென்று, அவ்விடமிருந்து நான்காம்பை சென்று ஜீரணமாகும். பசு பால்தரும். இதனுண் எருது வண்டி இழுக்கும். எருதிற்கு முசிப்புண்டு. சாணம், மூத்ரம் எருவாகும். பால், தயிர், வெண்ணெய் பயன்படும். இவ்வினத்தில் சீமைப்பசு, வடநாட்டுப்பசு, குட்டைப்பசு, எருமை, ஆடு, மான் கடம்பை முதலிய சேர்ந்தவை. இந்துக்கள் பசுவைத் தெய்வமாகக் கொண்டாடுவர்.

3. திக்குப்பாலகருக்குக் கொடுக்கப்பட்ட பசுக்கள் - சுஷுமதை, இந்திரனுக்கும்; கபிலை, யமனுக்கும்; ரோஹிணி, வருணனுக்கும்; காமதேனு குபேரனுக்கும் கொடுக்கப்பட்டன. (பார - அநுசா.)

**பசுங்குண்டன்** — ஒரு அசுரன்.

**பசுசகன்** — 1. ஒரு இருடி. இவன் தேவி சண்டி.

2. ஒரு ருஷி, இவன் பசுக்களுக்குத் துணையாயிருப்பவன்.

**பசுபதி** — அக்னிக்கு அதிதேவதை, பூவருக்கு ருத்திரர் எனவும்பெயர். சரங்களாகிய ஆத்மாக்களைச் செலுத்துந் தலைவன். சிவமூர்த்தி.

**பசுபதிநாயனர்** — இவர் வெய்யலூர் என்னுந் தலத்திலிருந்த வீரசைவர். இவர் சிவமூர்த்தி விடமுண்டாரெனச் சில சங்கமர் வருந்த இவர்க்குச் சிவமூர்த்தி தரிசனந்தரக் கண்டு விஷத்தை உமிழவேண்டினர். சிவமூர்த்தி அதனைப் பூமியில் விடின் உயிர்களுக்குத் துன்பமுண்டாம். அந்த விஷம் நம்மை யொன்றும் புரியாது என மடிமீதிருந்து பார்க்கவெனக் கூறக்கேட்டு அவ்வகை சிவமூர்த்தியின் மடியிலிருந்தவர்.

**பசுப்பறவை** — (Cow Bird) இது அமெரிகாவிலுள்ள ஒருவகைப் பறவை. இது கூட்டமாக உலாவுவது. தன் பேடையேயல்லாமல் மற்ற பக்ஷிகளுடன் புணருமியல்பினது. இது மற்ற பக்ஷிகளின் கூடுகளில் குயிலைப்போல் முட்டை யிட்டுவிட்டுப்போக அம்முட்டைகள் வேறு பக்ஷிகளால் பொரிக்கப்பட்டு வளர்க்கப்படும். இது பூச்சிகளை உணவாக்கும்.

**பசுமான்** — துட்பண்ணியனைக் காண்க.

**பசுவின்முலைகள்** — பசுக்களின் நான்கு முலைகளும் சுவாஹாகாரம், சுவதாகாரம், வஷ்டாகாரம், ஹந்தாகாரம் என்று நான்குவகை. இவற்றை முறையே தேவர், பிதரர், பூதேசுவரர், மனுஷர், புசிக்கின்றனர்.

**பச்சை** — தமிழ்ப் பறையர்களில் ஒரு வகுப்பு. இவர்கள் பச்சைமலையில் தங்கியிருந்தவர். பச்சைகுத்தி குறவர்க்கும் ஒரு பெயர்.

**பச்சோந்தி** — இது பச்சைநிறமுள்ள மலை ஓணன் சாதி. மெலிந்த தேகமும், சுருண்ட வாலும், சற்று நீண்ட காலு முடையது. இது அடிக்கடி தன்னியற்கை நிறமாகிய பசுமையை வெவ்வேறு நிறமாக மாற்றவல்லது. மயிலுக்குப் பகை. விஷப்பிராணி. இது தன் ஆகாரத்தை நாவினல் தாவிப் பிடித்துத் தின்னும்.

**பச்சையப்ப முதலியார்** — இவர் காஞ்சிபுரம் விஸ்வநாத முதலியார் குமரர் தாய் பூச்சியம்மாள். இவர்கள் காஞ்சிபுரத்தில் வசித்துவந்த ஏழைகுடும்பத்தினர். சாதியில் அகமுடைய வேளாளர். இவர் கருப்பத்தி லிருக்கையிலேயே தந்தை காலமாயினர். பின் தாய் தன்னிரண்டு பெண் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு தம் கணவருக்கு நண்பராயிருந்த ஆர்க்காட்டுச் சுபேதாரின் காரியகாரராய்ப் பெரியபாளையத்ததிகாரியா யிருந்த ரெட்டிராயரெனும் மார்த்தவரிடம் வந்து சேர்ந்தனர். இந்த ராயர் இவர்களைத் தந்தைபோலாதரித்து வந்தனர். ஆங்கில ஆண்டு 1754-இல் பெரியபாளயத்தில் பச்சையப்ப முதலியார் ஜநநம். பச்சையப்ப முதலியாரின் ஐந்தாம் வயதில் ராயர் காலமாயினர். பிறகு பூச்சியம்மாள் ஆதரவற்றுச் சென்னை வந்து மூன்று குழந்தைகளுடன் சேர்ந்து கோட்டைக்கு வடமேற்கிலுள்ள ஒற்றைவாடை சாமிமேஸ்திரி தெருவிலுள்ள ஒரு சந்துவீட்டில் குடியிருந்தனர். பிறகு இந்தம்மாள் நெயத வாயல் பௌனி நாராயண பிள்ளை த்வபாஷியின் உதாரகுணத்தைக் கேள்வியுற்று அவரை யடுத்து தம்மிடமிருந்த சிறு பொருளை அவரிடம் ஒப்பு

வித்து குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டி னர். பிள்ளையவர்களும் பூச்சியம்மாளைத் தங்கைபோல் காத்துப் பிள்ளைக்குக் கல்வி பயிற்றியும் வந்தனர். முதலியாரும் பிள்ளை யவர்களிடத்தில் அன்பும் பணிவும் கொண் டொழுகினர். பின் முதலியார் பிள்ளையவர் களின் வர்த்தகமுறை த்விபாஷித் தன்மை முதலியவற்றை நன்குணர்ந்தனர். முதலில் இவர் பீங்கான் கடைகளில் சரக்குகள் கொள்ளவரும் ஐரோப்பியருக்கு த்விபா ஷியாயிருந்து சிறிது பொருள்சேர்த்தனர். பிறகு ராணுவ உத்யோகத்திருந்த ஒரு துரையிடம் முதலியார் பழக நேர்ந்தது. இந்தத் துரை இவர்க்கு ஓர் உத்யோகம் கொடுத்தனர். இதைக் கொண்டு இவர் மரக்கலயாத்திரைசெய்து பொருள் சேர்க்க எண்ணிப் பிள்ளையவர்களுக்கும் தாய்க்கும் கூறுமல் பாலவாயில் சத்திரம் சேர்ந்தனர். தாயாரிவரது பிரிவாற்ருதவராய்ப் பிள்ளை யவர்களிடம் முறையிட, பிள்ளையவர்கள் அவரை உத்யோகத்திலமர்த்திய துரையி டம் பேசி அழைத்து வந்தனர். பிறகு முதலியார் தென்னுட்டிற்குப்போனவோராங் கில அதிகாரியிடம் த்விபாஷியாய்ச் சென்று சிறிது பொருள் சாம்பாதித்தனர். அவ்வதிகாரி நிக்கல்ஸ். இவர் தம் சம்பாத னையைப் பிள்ளையவர்களிடமே வைத்திருந் தனர். இவர்க்கு தமக்கை சுப்பம்மாள். அவளுக்கு ஓர்பெண் ஐயம்மாள் என இருந் தனள். அவளையே முதலியாருக்கு மணஞ் செய்வித்தனர். இவர் முதலில் செய்வித்த சிவதருமம் காஞ்சியில் ஏகம்பாலயத்தில் ஸ்ரீ பலிநாயகர் சிவகாமியம்மை யெனும் இரண்டு விக்ரங்கள் வார்ப்பித்து 1774ஸு மார்ச்சீ 27உ கும்பாபிஷேகமும் முடித் தனர். பிறகு பங்குனி உத்திரகல்யாண மண்டபமும் முடித்தனர் பிறகு இவர் கம்பெனியாரவர்களுக்கு த்விபாஷியாக இருந்து வெகு திரவியம் சம்பாதித்தனர். வாலாஜாநவாபின் காரியஸ்தராகிய ஜோ ஸப்சலிவன் துரையவர்களுக்கு த்விபாஷி யாக இருந்து பெரும்பொருள் சேர்த்தனர். தஞ்சாவூர் அரசர் சிலபாளையப்பட்டுச் சிற்றரசர்களுக்கும் உதவிசெய்து பெரும் பொருள் சம்பாதித்தனர். இவர் தஞ்சா வூரில் சிலநாள் வசித்திருந்தனர். இவர் சென்னையில் பிரபலராயிருந்த வீரப்பெரு மாள் பிள்ளையவர்களிடம் நட்பூண்டு இருந்தனர். வீரப்பெருமாள்பிள்ளை சிந்தா திரிபேட்டையில் வசித்தனர். முதலியார் அவர்க்கருகில் வசிக்கவேண்டுமென எண் ணிக் கோமளீசுரன்பேட்டையில் ஒரு வீடு கட்டுவித்து வசித்தனர். பிறகு இவர்க்குத் தேகத்தில் பலவித நோய்களுண்டாக அவை தணியுநிமித்தம் கும்பகோணத்தில் வசித்தனர். அது 1794-ம் ஸு. இக்கா லத்தில் முதலியாரவர்கள் ஒருவில் சாச னம் எழுதினர். இவர் 1794ஸு மார்ச்சீ 31உ சிவபதமடைந்தனர். இவர்க்குப்பின் வாரீஸ் இலாமையால் இவரது ஆஸ்தியை அண்ணுசாமிப் பிள்ளை அவர்கள் 42,080 பெறுமான கம்பெனி பத்திரங்களையும், 200000 ரூபாய்கள் பிறரிடமிருந்து வர வேண்டியவைகளையும் கோர்ட்டில் கட்டி னர். இந்தப் பணம் 47 வருஷம் கோர்ட் டில் இருந்தது. இவற்றின் வட்டிமுதல் எல்லாம்சேர்ந்து கடைசியில் நான்குலக்ஷ த்து நாற்பத்தேழாயிரத்து இறுநூற்று அறுபத்தேழு. இப் பெருநிதியை சென் னையில் வசித்திருந்த பௌணி - நாராய ணப்பிள்ளை, ஐயாப்பிள்ளை, அண்ணுசாமிப் பிள்ளை, ஸ்ரீநிவாசப் பிள்ளை முதலிய பிர புக்களின் பெருமுயற்சியாலும், அக்காலத் தில் அட்வோகேட் ஜெனரலாகவிருந்த ஜார்ஜ் நார்ட்டன்துரை அவர்களுடைய பேருதவியாலும், அப்போது கவர்னராக விருந்த கனம் எல்பின்சடன் பிரபுவின் உதாரகுணத்தாலும், சுப்ரீம் கோர்ட்டார் அவர்கள் ஒன்பது நிர்வாக அங்கத்தினரை (டிரஸ்டிகளை) நியமித்து தர்மபரிபால னஞ் செய்யும்படி ஏற்படுத்தினுர்கள். அவர்கள் ஏற்படுத்திய தருமம் இதுசாறும் நிலைத்து நடைபெறுகின்றது.

**பச்சையம்மன்** — மலையரையன் புத்திரி. மன்னுதனுகிய சிவமூர்த்தியை மணந்த வள். (இரேணுவைக் காண்க.)

**பஞ்ச ஔஷதங்கள்**—இவை யாகத்திற் குரி யவை. சீதேவியார் செங்கழுநீர், குமிழ், நழுமுருங்கை, ஒரிலைத்தாமரை, விஷ்ணு கிராந்தி. (சைவபூஷணம்.)

**பஞ்சகந்தம்**—1. இவை அகிற்சந்தனம், காச் மீரசந்தனம் ; வில்வசந்தனம், செஞ்சந் தனம் என்பவை. (சைவபூஷணம்.)

2. உருவம், வேதனை, குறிப்பு, பாவ னை, விஞ்ஞானம். (மணிமேகலை.)

**பஞ்சகம்பார்க்க** — ஞாயிறு முதலாக அன் றைய வாரம் வரையும் பிரதமை முதலாக அன்றைய திதிவரையும் அச்சுவினி முதல்

அன்றைய நக்ஷத்திரம் வரையும் மேஷமுதல் அப்போது தயலக்கினம் வரையும் எண்ணிக்கண்ட தொகையை ஒன்பதிற் கழித்து மிச்சம் ௩-௫-எ-௯ உத்தமம். மற்ற க-உ-சு-௬-அ நீக்கப்படும். இவைகளில்

ஒன்று மிருத்யு பஞ்சகம், உ-அக்னி பஞ்சகம், சு-ராஜபஞ்சகம், ௬-சோரபஞ்சகம், அ-ரோகபஞ்சகம், இவ்வாறுகண்டுகொள்க. இவற்றுள் ராஜபஞ்சகமும், அக்னிபஞ்சகமும், இராத்திரியில் சோரபஞ்சகமும், ரோகபஞ்சகமும், எல்லாக் காரியங்களிலும் மிருத்யு பஞ்சகமும் ஆகா. இவற்றிற்குத் தான பிரீதி-க இரத்தினம்-உ. சந்தனக் குழம்பு, சு-எலிமிச்சம்பழம் ௬-தீபம், அ-தான்யம்.

**பஞ்சகலைகள்** — நிவர்த்திகலை - தம்மையடைந்த ஆன்மாக்களின் சங்கற்பநிவர்த்தி செய்வது. பிரதிட்டாகலை - இது ஆன்மாவின் சங்கற்பநிவர்த்தியைப் பிரதிட்டித்து உறுதியாக்குவது. வித்யாகலை - சங்கற்ப நிவர்த்தி திடமானபின் சர்வார்த்தஞானத்தைப் பிரகாசிக்கச்செய்வது. சாந்திகலை - இது தன்னை யடைந்த ஆன்மாவிற்கு ஞானம் பிரகாசித்தபின் இராகத்வேஷம் நீங்கச் சாந்தியைச் செய்வது. சாந்தியாதீதகலை - தன்னிற் பொருந்தின ஆன்மாக்களுக்கு விகற்பஞானஞ் சாந்தமாயிற்றென்கிற முன்னினைவுங் கழிந்து அதீதமாய்ப் பரமாய் நிற்கச்செய்வது. (சித்தாந்தம்.)

**பஞ்சகற்பம்** — இவை ஸ்நானம் செய்யும் பொருள்கள். கஸ்தூரிமஞ்சள், மிளகு, வேப்பம்வித்து, கடுக்காய்த்தோல், நெல்லிப்பருப்பு இவற்றை முறைப்படி காராம்பசுவின் பால்விட் டரைத்துக் கொதிக்க வைத்துத் தலைமூழ்கின் பிணிகள் சேரா. (தேரையர்.)

**பஞ்சகன்னியர்** — மேனை, சாவித்திரி, அருந்ததி, அநசூயை, சுநீதி எனவும், அகஸ்யை, மந்தோதரி, சீதை, தாரை, திரௌபதி, எனவும் கூறுவர்.

**பஞ்சகௌடம்** — இது சுத்தகௌடம், கானுகோபிஜம், சராசந்து, மாந்தலை, உத்கலம். என்பன. அவற்றுள் சுத்தகௌடம், ஸ்ரீநகரமுதல் பதரிகேதாரம் வரையிலுள்ள இடம், கானுகோபிஜம் - அயோத்திமுதல் காசிவரை. சராசந்து - டில்லிமுதல் அஸ்தினபுரிவரை. மாந்தலை - மிதிலைமுதல் பங்காளம்வரை. உத்கலம் - ஜகந்நாதம் முதல் ஒட்டியம்வரை உள்ள இடங்களாம்.

**பஞ்சகௌவ்யம்** — இது கோமூத்திரம், கோமயம், பால், தயிர், நெய் இவை பஞ்சகவ்வியம் என்று கூறப்படும். கோமூத்திரத்திற்கு வருணனும், கோமயத்திற்கு அக்கியும், பாலிற்குச் சந்திரனும், தயிர்க்கு வாயுவும், நெய்க்கு விஷ்ணுவும் தேவதைகளென்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. பின்னும் செந்நிறத்த பசுவினிடம் கோமூத்திரத்தையும், வெள்ளைப்பசுவினிடம் கோமயத்தையும், பொன்னிறத்த பசுவிடத்துப் பாலையும், நீலநிறத்த பசுவினிடம் தயிரினையும், கருநிறத்த பசுவினிடம் நெய்யினையும் கொள்ளின் நலமெனப்படும். கோமூத்திரம் கோமயம் இரண்டும் ஆறு மாத்திரை எடையும், நெய்யும் பாலும் மூன்று மாத்திரை எடையும், தயிர் பத்து மாத்திரை இடையளவும் இருத்தல் வேண்டும். இதை மந்திரபூர்வமாகக் கலந்து பிராமணசந்நிதியில் உண்டவன் சகல பாபத்தினின்றும் நீங்கிச் சுத்தமடைகிறான்.

**பஞ்சகௌளர்** — உத்கலம், கன்னியா குப்சம், கௌடம், மிதிலை, சாரஸ்வதம், என்னும் ஐந்து தேசத்து வேதியர்

**பஞ்சசத்திகள்** — பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி இவ்வைந்து சத்திகளும் பரமசிவ பிரேரகமாகிய நிட்களம்.

**பஞ்சசபூதாசுரன்** — ஒரு அசுரன், இவன் ஆத்மாக்களின் பஞ்சபூதங்களினும் நெருங்கி வருத்தச் சிவமூர்த்தி இவனை இந்திரனைப்போல் உருக்கொண்டு வச்சிரத்தால் வீசி இறக்கச் செய்தனர்.

**பஞ்சசமஸ்காரம்**—வைஷ்ணவர்கள் தீக்ஷையில் ஆசாரியரிடம் பெறுவன. தப்தசங்க சக்ராங்கனம், ஊர்த்வபுண்டரம், தாஸ்ய நாமம், திருமந்திரம், திருவாராதனையாம்.

**பஞ்சசன்** — 1. சங்குருவமான ஒரு அசுரன். பிரபாசதீர்த்தத்தில் சாந்தீபனி குமாரனைக் கொன்றவன். இவனைக் கிருஷ்ணமூர்த்தி கடலில் நுழைந்து கொன்று அவன் உடலைப் பாஞ்சசன்னியமாகப் பெற்றனர்.

2. சுக்கிலாதன் குமரன்.

**பஞ்சசாதாக்யம்** — சிவசாதாக்யம், அமூர்த்திசாதாக்யம், மூர்த்திசாதாக்யம், கர்த்திருசாதாக்யம், கன்மசாதாக்யம் என்பனவாம். இவை முறையே பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தியில் தோன்றும். (சதா.)

**பஞ்சசாதாக்ய மூர்த்திகள்** — சதாசிவன், ஈசன், பிரமீசன், ஈசுரன், ஈசாநன்.

**பஞ்சசாயகன்** — அரவிந்தம், அசோகம், மாம்பூ, முல்லை, நீலம் ஆகிய புட்பங்களைக் கணைகளாகக் கொண்ட மன்மதன்.

**பஞ்சசிகன்** — 1. ஜநகனுக்குத் தத்துவ முபதேசித்த முனிவன். இவன் தவத்தால் அக்நிசிகாகாரமாய் ஐந்து சிகைகளைப் பெற்றதால் இப்பெயர் அடைந்த பிரமபுத்ரன்.

2. ஒரு ருஷி, ஜனகரிடம் மோக்ஷதர்மம் கேட்டவன். (பிரகன்னாரதீயம்.)

**பஞ்சசுத்தி** — பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, லிங்கசுத்தி என்பன. (36) தத்வங்களும் நாமல்ல அவை ஜடமென அறிதல் - பூதசுத்தி. பூதங்கள் ஜடமென அறிதலும் திருவருளாலன்றி ஆன்மபோதத்தா லன்றென அறிகை - ஆன்மசுத்தி. ஆன்மபோதத்தால் தானே அறிகைக்குச்சேட்டையில்லையென்று கண்டதுகொண்டு ஆன்மாவிற்கறிவில்லையென அறிந்து கண்டுகேட் டுண்டுயிர்த்துற்றறிவதெல்லாம் திருவருளென அறிகை - திரவியசுத்தி. ஐந்தெழுத்தைச் சிவாமுதலாக மாறியதனுண்மையை விசாரித்தறிகை - மந்திரசுத்தி. பதி, பசு பாசங்களில் பிரிவறநின்று அவற்றைச் சேட்டிப்பித்து நின்ற தன்மையை அறிந்து அத்தகைய சிவம் இலிங்கமூர்த்தத்தினும் எழுந்தருளியிருக்குமென அறிகை - இலிங்கசுத்தி.

**பஞ்சசூடை** — 1. நாரதருக்குப் பெண்களின் இயற்கையைப்பற்றிக் கூறியவள். (பார - அநுசா.)

2. நாரதருக்குப் பெண்ணிழிவு கூறிய ஒரு அப்சரசு.

**பஞ்சசூனம்**—இல்லறத்தானுக்கு ஒவ்வொரு பகலினும் ஐவகைச்சூனம் உள. அவை கண்டினி, பேஷிணி, சுல்லி, சலகும்பம், உபஸ்கரம் என்பன. (சூனம் - கொலை) கண்டினி - உலக்கை, உரல், அரிகருவி முதலியவற்றால் முறித்தல் முதலிய. பேஷிணி - அம்மிகொண்டு அரைத்தல், சுல்லி - சமைக்குமிடம், சலகும்பம் - நீர்க்குடம், இதனு லாடை முதலிய வெளுத்தல், உபஸ்கரம் - முறம், சல்லடை முதலியவற்றால் நோம்பல் சலித்தல் முதலிய. இவை உயிர்க்கொலைக்கிடமாதலின் இவற்றை ஐவகை வேள்வியால் நீக்கல்வேண்டும். (யமஸ்மிருதி.)

**பஞ்சசேநன்** — 1. தக்ஷனுக்கு மாமன். அசக்நி தந்தை.

2. சமகிலாதனுக்கு மதியிடம் உதித்த குமரன்.

**பஞ்சதாமோதை** — பூதாவின் தேவி. பூதங்களைப் பெற்றவள்.

**பஞ்சதிசை** — சநநகாலத்து உதிக்கின்ற ராசியின் நவாம்சத்தால் பிராணதிசையும், செநநகாலத்து தற்காலம் ஆதித்யனின்ற ராசிவசத்தால் ஜீவதிசையும், சாந்திரமாதத்துத்திதி (௩0) தின் நடக்கின்ற திதிவகையால்வந்த ராசி நவாம்சத்தால் மனோதிசையும், தற்காலத்து ராகுநின்ற ராசி நவாம்சத்தால் மிருத்துதிசையும், ஒருவன் பிறந்தபொழுது நின்ற உதயராசியின் நவாம்சத்தையுடைய நாளில் காலால் சரீரதிசையும் அறிக. (விதானமாலை.)

**பஞ்சதிரவியம்** — ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோஷ்டம், சண்பகமொட்டு என்பன. (சைவபூஷணம்.)

**பஞ்சதிராவிடர்** — கன்னடம், தெலுங்கு, மகாராட்டிரம், கர்நாடகம், கூர்ச்சரம், என்னுந்தேசத்துப் பிராமணர். கன்னடம், மைசூர் முதல் கோலகொண்டாவரை; தெலுங்கு, காளத்திமுதல் கஞ்சம்வரையில்; மகாராட்டிரம், கோலகொண்டா முதல் மேற்குக் கடல்வரை; கர்நாடகம் (தமிழ்) கன்யாகுமரி முதல் காளத்திவரை; கூர்ச்சரம் குசராத்திமுதல் டில்லிவரையிலுள்ள தேசங்களாம்.

**பஞ்சநதம்** — இது காசியிலுள்ள தீர்த்தகட்டம். பிருகுவின் மருமகனுகிய வேதசிரசு முனிவர், சுசிலயக்கூடி ஒரு குமரியைப் பெற்றனர். அக்குமரி தவஞ்செய்கையில் தருமன் அவளை வலிதிற் புணர்ந்தனன். அதனால் அக்குமரி அவனை நதியாகவெனச் சபித்தனள். அப்பெண்ணைத் தருமன் கல்லாகச் சபித்தான். இவ்விருவர் செய்தியும் அறிந்தமுனிவர் நீ சந்திரகாந்தக் கல்லாய்த் தூதபாவையென்னும் நதியுருக்கொண்டு உன் நாயகனுகிய தருமனுடன் கூடுக என்றனர். இவ்விரு நதிகளுடன் சூரியன் தவஞ்செய்ததால் அவனுடலில் ஒழுகிய வியர்வையாலாகிய கிரணை (௧) கங்கை (௨) யமுனை (௩) இவை சேர்ந்து பஞ்சநதமாயின. (காசிகாண்டம்.)

**The Punjab - The Country of 5 rivers called Satadra Vipasa, Iravati Chandrabhagh, and Vitasta.**

**பஞ்சநன்**—நரகாசுரன் மந்திரி. நரகாசுர சங்காரத்தில் கண்ணனுல் சங்கரிக்கப்பட்டவன்.

**பஞ்சநாதம்**—இவை பஞ்சபூதங்களால் உண்டாம் நாதங்களாம். அவையாவன: மாத்தாலுண்டான மத்தளம், முழவு முதலிய பிருதிவி சம்பந்தங்களாம். சங்கு முதலிய நாதங்கள் ஆப்ஜமென்னும் ஜலசம்பந்த வாத்யங்களாம். செம்பு, பித்தளை முதலிய வற்றுற் செய்யப்பட்ட பூரி சின்ன முதலிய ஆக்னேய சம்பந்தமாம். மூங்கிலினுண்டான புல்லாங்குழல் முதலிய வாயவ்யமாம். வாயாற்பாடப்பட்ட இசை முதலிய ஆகாய சம்பந்தங்களாம். (ஸ்ரீ-காரணம்.)

**பஞ்சபட்டை**—இவை யாகத்திற்குரியவை. நாவற்பட்டை, அத்திப்பட்டை, மாம்பட்டை, அரசம்பட்டை, ஆலம்பட்டை. (சைவபூஷணம்.)

**பஞ்சபரமேட்டிகள்** — அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள். இது சைநநூலிற் கண்டது.

**பஞ்சபருவங்கள்** — கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி, கிருஷ்ணபக்ஷசதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, மாதப்பிறப்பு. (சைவபூஷணம்.)

**பஞ்சபல்லவம்** — (தளிர்) அரத, அத்தி, இரளி, மா, வெண்ணெச்சி. (பிரமாண்டபுராணம்.)

**பஞ்சபன்** — சோழர் சரிதை காண்க.

**பஞ்சபாரதீயம்** — இது நாரதன் செய்த இசைத்தமிழ் நூல்.

**பஞ்சபிரமதோற்றம்** — சிவசாதாக்ய மெனுந்தத்துவமும், சதாசிவமெனும் மூர்த்தியும் பொருந்தினது ஈசானம், அமூர்த்தி சாதாக்யமெனுந் தத்துவமும், ஈசனெனும் மூர்த்தியும் பொருந்தினது சத்யோஜாதம், மூர்த்தி சாதாக்யமெனுந் தத்துவமும் பிரமீசனெனு மூர்த்தியும் பொருந்தினது வாமதேவம், கர்த்திரு சாதாக்யமெனும் தத்துவமும் ஈசுரனெனும் மூர்த்தியும் பொருந்தினது அகோரம், கன்மசாதாக்ய மெனும் தத்துவமும், ஈசாநன்எனும் மூர்த்தியும் பொருந்தினது தற்புருஷம். (சதா.)

**பஞ்சபூதத்தலம்** — திருக்காஞ்சி, திருவானைக்கா, திருவண்ணமலை, திருக்காளத்தி, ஸ்ரீசிதம்பரம்.

**பஞ்சபூதவாதிகளின்மதம்** — இதில் பிருதிவிபூதவாதிமதமாவது - பிருதிவி சத்த பரிச ரசகந்தங்களுடனுங் கூடி ஷட்ருசி முதலிய சகல பதார்த்தங்களுக்கும் சகல போகங்களுக்கும் தனுகரண புவனபோகங்களுக்கும் நால்வகை யோனிகளுக்கும் பிறப்பிடமாயும் நவநிதிகளுக்கு உற்பத்திக் காரணமாயும், மகாமலைகள் மகாநதிகளுக்குப் பிறப்பிடமாயும் எல்லா அண்டங்களாயும் விரிந்திருப்பதால் இதுவே திரிமூர்த்திகளின் சுவரூபமெனவுங் கூறுவர். அப்புபூதவாதிமதம் - சகல ஜீவராசிகளையும் சலமயமான சுக்லசோணித வுருவங்களாய்ச் சரங்களைச் சிருட்டித்து அசரங்கள் முளைத்து வளர்தற்குத் தான் காரணமாதலால் பிரம சுவரூபமாயும் எல்லாப் பொருள்களையும் மழையுருவாய் வளர்த்து உணவாதிகளைத்தருவதால் விஷ்ணுசுவரூபமாயும் பின் வானங்குன்றச் சராசரங்களையு மழித்தலால் உருத்திர சுவரூபமென்றுங் கூறுவர். இம் முத்தொழிலும் அப்புவே புரிதலால் அதனைப் பிரமசுவரூபமென்பர். அக்நிபூதவாதிமதம் - அக்னியே ஆகாரம், நித்திரை, பயம், சுகமுமாம். இந்த நான்கில் ஆகாரத்தால் சத்ததாதுக்களுண்டாய்த் தாதுக்களாற் சுக்லசுரோணித முண்டாய் அதனுல் விஷயங்களாய் அதனுல் சராசரங்களுண்டாம். ஆகையால் பிரமசுவரூபமாகவும், அதனுல் தண்டுலாதிகள் உணவாகி ஆன்மாக்களி னுதரத்தில் அக்னிமயமாய் நின்று பசனமுதலிய செய்வித்து வளர்த்தலால் விஷ்ணுவாகவும், இறுதியில் காலாக்னியாய் அழித்தலால் உருத்திர சுவரூபமாகவும், இம்முத்தொழிலுமேற்று நிற்றலால் பிரமசுவரூபமென்றுங் கூறுவர். வாயுபூதவாதிமதம் - வாயு நால்வகையோநி, எழுவகைத் தோற்றங்களாகிய சராசரங்களிற் புகுந்து யோநிகளின்வழி வீரியத்தைப் பதித்து ஏற்றக்குறைவால் பலவுருக்களைச் சிருட்டித்து (எஉ,000) நாடிகளிலும் நிறைந்து ஆன்மாக்களை யாக்கலால் பிரமசுவரூபமென்றும், அவ்வகைப் படைக்கப்பட்ட உருக்களில் தானியங்கிக் காத்தலால் விஷ்ணுவாகவும், தானச் சராசரங்களி னீங்கின் அவை அழிதலால் ருத்திரனுய் முத்தொழிற் செய்தலின் வாயுவே பிரமமாமென்பர். ஆகாசபூதவாதிமதம்-ஆகாசந் தன்னையொழிந்த நான்கு பூதங்களைத் தாங்கிக் கொண்டு எல்லாவற்றிற்கும் பிறப்பிடமாய் அவற்றுள்ளும் புறம்பும் வியாபித்து முத்தொழிலுஞ்செய்து நிற்றலால் ஆகாசமே பிரமமென்பர்.

**பஞ்சப்பிரம்மம்** — (1) 1. மந்திரப்பிரம்மம், 2. கிரியாப்பிரம்மம், 3. தத்வப்பிரம்மம், 4. பீஜப்பிரம்மம், 5. மூகப்பிரம்மம். இதில் ஈசானுதி ஐந்தும் மந்திரப்பிரம்மம். ஆவாகனம், ஸ்தாபனம், ஸானித்யம், ஸந்நிரோதனம், அவகுண்டனம் என்பவை கிரியா பிரமமாம். பிரமன், விஷ்ணு, ருத்திரர், மகேச்வரர், சதாசிவர் இவர்கள் தத்வபிரமமெனக் கூறப்படுவர். ல, வ, ர, ய, ஹ, இவைப் பீஜப்பிரமம். மேற்கூறிய பஞ்சப் பிரம்மங்களில் சத்யோஜாதிகளைந்தும் மூகப்பிரமங்களாம்.

(2) மூர்த்திபிரமம், தத்வப்பிரமம், பூதப்பிரமம், பிண்டப்பிரமம், கலாப்பிரமம், பதப்பிரமம் எனப் பகுக்கப்பட்டிருக்கிறது. இவற்றைச் சிவாகமங்களிலறிக.

**பஞ்சப்பிரேதபாசிவம்** — சர்வசம்மார காலத்தில் பிரம, விஷ்ணு, ருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகிய பஞ்சமூர்த்திகளின் தேகங்களைத் தெப்பமாகக்கொண்டு அவற்றின்மீது எழுந்தருளி மீண்டும் சிருட்டியாதிகளைச் செய்விக்க விஷ்ணுவாதியரைச் சிருட்டிக்கும் சிவமூர்த்தியின் திருவுரு இவரது சத்தி பஞ்சப்பிரேத பாராசத்தி.

**பஞ்சமகாயஞ்ஞம்** — கிரகஸ்தன் எந்திரம், முறம், அம்மி, துடைப்பம், உரல், உலக்கை, தண்ணீர்க்குடம், இவற்றினை உபயோகித்துக் கொள்வதால் அவனுக்கு ஐவகைக் கொலைகள் உண்டாகின்றன. இந்த ஐவகைப் பாவங்களையும் போக்குவதற்காக மகருஷிகளால் தினந்தோறும் ஐந்து மகாயக்யங்கள் கிரகஸ்தனுக்கு விதிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வைந்து யக்யத்தில் வேதம் ஓதுதல் பிரம்ம யக்யம், அன்னத்தினுலாவது திலத்தினுலாவது பிதுர்க்களைக் குறித்துத் தர்ப்பணஞ்செய்வது பிதுர் யஞ்ஞம், தேவதைகளைக் குறித்து அக்னியில் ஹோமஞ்செய்வது தேவயஞ்ஞம், வாயசபலி முதலியவைப்பது பூதயக்ஞம், அதிதிகளுக்குச் சாப்பாடுபோடுவது மாநுஷயக்ஞம், இவர் இந்த ஐந்து யஞ்ஞங்களையும் அமுதம், குதம், பிருதம், பிராமியகுதம், பிராசிதம் எனப் பெயரிட்டு வழங்கி வருகின்றனர்.

**பஞ்சமண்** — இவையாக காரியத்திற்குதவி. மலைமண், கடல்மண், குளத்தின் மண், ருஷபத்தின் கொம்பிலுள்ள மண், சிவாலயத்திலுள்ள மண்.

**பஞ்சமரபு**—அறிவனர்செய்த இசைத்தமிழ் நூல்.

**பஞ்சமுக ஆஞ்சநேயன்** — சதகண்டன் என்னும் அரக்கன் இராவண வதை கேட்டு இராமனிடம் யுத்தஞ்செய்ய எண்ணினன். இராமன் அநுமன்மீதாரோகணித்து இவன் பட்டணம் போயினன். இவன் மாயையால் பலவுருக்கொண்டு யுத்தம்புரிய அநுமான் இராமனை இளைப்பாறச்செய்து தான் குரங்கு, நரசிங்கம், கருடன், வராகம், குதிரை ஆகிய (5) முகங்களுடனும் (15) கண்கள், (10) தோள்களுடன் தோன்றி அரக்கனை வதைத்தனன்.

**பஞ்சயஞ்ஞம்** — தேவயஞ்ஞம், பூதயஞ்ஞம், பிதுர்யஞ்ஞம், நரயஞ்ஞம், பிரம்மயஞ்ஞம்.

**பஞ்சயவம்** — சம்பாநெல், வால்நெல், குழைச்செந்நெல், வரகு, மூங்கிலரிசி.

**பஞ்சரத்னம்** — சுவர்ணம், ரஜிதம், முக்தம், ராஜாவர்த்தம், பவழம், இவையன்றி, பொன், வயிரம், நீலம், பத்மராகம் முத்து எனவும் கூறுப. (ஆதித்யபுராணம்.)

**பஞ்சருபங்கள்**—அநுமானத்திலுள்ள, பக்ஷதருமத்வம், சபக்ஷத்வம், விபக்ஷவியாவிருத்தி, அபாதித விஷயத்வம், அசத்பிரதிபக்ஷம் என்பன. (தரு.)

**பஞ்சவடி** — 1. தண்டகவனத்தில் கோதாவரி தீரத்தருகில், அரசு, வில்வம், ஆல், நெல்லி, அசோகமென்னும் ஐந்து மகாவிருக்ஷங்கள் சூழ்ந்த இடம். இதில் ஸ்ரீராமமூர்த்தி அரண்யவாசத்திற் சிலநாள் தங்கி இருந்தனர். இதில் அருச்சுநன் கண்ணனிறந்தபின் அவர் தேவிகளுடன் மீண்டு இவ்விடம் தங்கி வேடராற் பொருள் முதலிய இழந்தனன். இது நாஸிக் எனும் பட்டணத்திற்கு இரண்டு மைல் தூரத்திலுள்ளது.

2. கோதாவரி தீரத்தில் நாசிகக்ஷேத்திரத்தின் சமீபத்திலுள்ள ஒரு ஸ்தலம். (Nasik on the Godavari.)

**பஞ்சவற்கலம்** — நியக்ரோதம், ஔதும்பரம், அசுவத்தம், கல்லால், நீர்கொச்சி.

**பஞ்சலாங்கலதானம்** — சந்தனமரத்தாலேனும், தேக்காலேனும், ஐந்துகலப்பைகள் செய்து கொம்பைப் பொன்னுலும், குளம்பை வெள்ளியாலும் அலங்கரித்துள்ள எருதுகள் பத்துப் பூட்டி ஓமஞ்செய்து பத்து வேதியரைப் பூசித்து ஒரு சிற்றூராயினும் பேரூராயினும் பிராமணருக்குக் கொடுத்துக் கலப்பையைத் தானஞ்செய்வது.

**பஞ்சலிங்கம்** — இவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் இலிங்கங்கள். இவை திருக்காஞ்சி, ஜம்புகேசுரம், திருவண்ணுமலை. திருக்காளத்தி, ஸ்ரீ சிதம்பரம் என்னும் தலங்களில் வீற்றிருக்கும் மூர்த்தங்களாம்.

**பஞ்சவில்வம்** — வில்வம், கிளுவைப்பத்திரம், மாவிலங்கு, விளா, நாயுருவி, அல்லது நொச்சி. (சைவபூஷணம்.)

**பஞ்சாக்கினி** — இராகம், வெகுளி, காமம், சடம், தீபனம்.

**பஞ்சாங்கதுணம்** — பக்ஷம் ஒருகுணம். கரணம் (உ) குணம், வாரம் (அ) குணம், நக்ஷத்திரம் (ச) குணம், யோகம் (௬) குணம் முகூர்த்தம் லக்ஷம் குணம். நக்ஷத்திரம், திதிகூடின வாரயோகங்கள் பதினுயிரம் குணமாம். (விதானமாலை.)

**பஞ்சாங்கம்** — திதி, வாரம் நக்ஷத்திரம், யோகம், கரணத்தைக் கூறுவது.

**பஞ்சாபகாசு** — மந்தகருணன் தண்டகாரணியத்தில் உண்டாக்கிய மடு.

**பஞ்சாமிர்தம்** — 1. இது கருப்பஞ் சாறு, தேன், நெய், பால், தயிர் முதலியவற்றைத் தனித்தனி பாத்திரங்களில் வைத்து அப்பாத்திரங்களில் கருப்பஞ் சாறிட்ட பாத்திரத்தை இடையினும், தேன் பாத்திரத்தைக் கிழக்கினும், பால் வார்த்த பாத்திரத்தை மேற்கிலும், தயிர்ப் பாத்திரத்தைத் தெற்கிலும், நெய்ப் பாத்திரத்தை வடக்கினும் கீறிய யந்திரத்தில் வைத்து மந்திரத்தாற் பூசித்துத் தேவர்களுக்கு அபிஷேகிப்பது.

2. பால், தயிர், சர்க்கரை. தேன், நெய். (சிவதர்மம்).

**பஞ்சாயுததாரணம்**—பிள்ளைபிறந்த ஐந்தாம் நாள் பிள்ளையை சுத்த ஜலத்தினுல் முழுக்காட்டிச் சுபக்கிரகங்களுதயமாகப் பஞ்சாயுதந் தரித்து பூதபிசாசு அணுகாதபடி காவற்செய்வதாகிய காப்புந்தரித்து அரைஞாண் கட்டவேண்டியது.

**பஞ்சாயுதன்** — திருமால். சங்கு, சக்கிரம், வாள், கோதண்டம், கதை முதலிய எந்தினவன்.

**பஞ்சார்க்கதோஷம்** — இந்திர தனுவிலே (கஎ) பாகையைக்கூட்ட சுத்தாவிபுடமாம். இந்தப் புடங்களை நாட்பார்க்கும்படியே பார்த்துற்றநாளும், சந்திரனும் ஒருநாளாக நின்றதாகில் பஞ்சார்க்கதோஷமாம். இதில் சுபகன்னங்கள் தவிரப்படும். இப்படியே இலக்னத்தையும் தவிரப்படும். இலக்னமாவது, உற்ற நாளுடைய இராசி. சந்திரன் இடபம், கர்க்கடகத்திலும், ரவி, சிங்கமேடத்திலும், ரவி, சந்திரனுபசயதானத்திற்பினும் பஞ்சார்க்கம் ஞாயிற்றுக்கிழமையில் வரினும் ஷ தோஷம் இல்லை. (விதானமாலை.)

**பஞ்சார்க்கம்** — இந்திரவில், கேது, தூமம், பரிவேடம், விதிபாதம்.

**பஞ்சாவயம்** — இது தருக்கத்திற்குரியது. பிரதிஞ்ஞை, எது, திருஷ்டாந்தம், உபநயம், நிகமனம் என்பன. பிரஞ்ஞை - இந்தப்பருவத நெருப்புடையது என்பது, ஏது-புகையினுலென்பது, திருஷ்டாந்தம் - பாகசாலைபோல என்பது, உபநயம் - அப்பாகசாலைபோலிப்பர்வதமும் புகையுடையதென்பது, நிகமனம்- ஆகையாலிப்பர்வதமும் நெருப்புடையது.

**பஞ்சாளத்தார்** — கருமான், கொல்லன், தட்டான், கன்னன், தச்சன் இவர்கள் காந்தக் கற்கோட்டை யொன்று கட்டிக்கொண்டு அதில் குடிபுகுந்து அரசனை மதியாமலிருக்கையில் அரசன் இவர்களைச் செயிக்கப் பலவழியில் முயன்றும் முடியாமை நோக்கி இவர்களைச் செயிப்பவர்க்கு வெகுமானஞ் செய்வதாய்ப் பிரசித்தப்படுத்தினன். இதனை யறிந்த தாசி யொருத்தி அந்தக் காந்தக் கற்கோட்டையின் புறத்தில் வீடு ஒன்று கட்டிக்கொண்டு வசித்து அக்கோட்டையிலிருந்த கம்மாளனைத் தன் வசப்படுத்தி அவனுடன் விளையாட்டாய்க் காந்தக் கற் கோட்டை எவ்வாறு வெல்லப்படுமென்று கேட்க அவன் கோட்டை அழிதற்கு வரகுவைக்கோல் காரணமென உளவறிந்து அரசனுக் கறிவித்தனள். அரசன அதனுல் இவர்களைச் செயித்தனன்.

**பஞ்சான்னம்** — எள்ளன்னம், கடுகன்னம், புளியன்னம், பயற்றன்னம், உளுந்தன்னம். வேறுவகை - கோதுமையன்னம், சம்பா அரிசிஅன்னம், புல்லரிசியன்னம், மூங்கிலரிசியன்னம், குழைச்செந்நெலரிசியன்னம். பின்னும், சுத்தான்னம், தயிரன்னம், சர்க்கரையன்னம், நெய்யன்னம், பரமான்னம், என்பன. (சைவபூஷணம்.)

**பஞ்சாக்ஷரம்** — இது சைவர்களால் இஷ்டகாம்யசித்திகளை விரும்பியும், முத்தியை விரும்பியும், செபிக்கப்படும் மகாமந்திரம். இதுபோக பஞ்சாக்ஷரம் எனவும், மூக்திபஞ்சாக்ஷர மெனவுஞ் ஸ்தூலபஞ்சாக்ஷர

மெனவும், ஸூக்ஷ்ம பஞ்சாக்ஷரமெனவும் பலவகைப்படும். இவற்றின் அக்ஷரங்களை மாறிச் செபித்தலால் பலன்கள் வேறுபடும். அப்பலன்களை விரும்பியோர் ஆசாரியர் கூறியவகைமாறிச் செபிக்கின் அப்பயன்களைப் பெறுவர். இம்மகாமந்திரத்தைப் பிரணவத்துடனும், பீஜாக்ஷரத்துடனும் சேர்த்தும், அஃதின்றியும் செபிப்பர். இதன் உண்மைகளை ஞானசிரியர் பாற் சைவர் கேட்டறிக.

**பஞ்சுகோட்டி** — இது தொழிலால் சிலஜாதிகளுக்கு வந்தபெயர். தற்காலம் சில மகம்மதியரும் மற்றவர்களும் இந்தத் தொழில் செய்து ஜீவிக்கின்றனர்.

**பஞ்சுகொண்டான்** — மகம்மதியர் திருவரங்கத்தைக் கொள்ளை கொண்டபோது தடை செய்தவர்.

**பஞ்சோதகம்** — பலோதகம், பில்வோதகம், இரத்னோதகம், கந்தோதகம், குசோதகம் என்பன.

**படகுதச்சன்** — சூத்திரன் பார்ப்பினியைப் புணர்ந்து பிறந்தவன்.

**படச்சரர்** — அபர மச்சிய தேசத்தவர்.

**படலம்** — 1. ஒருவழிப் படாமல் கல்ந்த பொருள்களுடையதாய் பல்பொருள்களைத் தரும் பொதுச் சொற்கள் தொடர்ந்து வருவது. (நன்.பா.)

2. வேற்றுமையுடைய பல பொருள்களால் தோற்ற முடைத்தாகத் தொடர வைப்பது.

**படிக்காசுப்புலவர்** — ஏறக்குறைய (250) வருஷங்களுக்குமுன் தொண்டைமண்டலத்தில் பொன்விளைந்தகளத்தூரில் செங்குந்தர்மரபிற் பிறந்து சிவானுக்கிரகத்தால் தமிழ்க்கலை முழுதும் கற்று இல்லறம் நடத்திவரும் நாட்களில் வல்லைநகர் காளத்தி பூபதியைக் கண்டு "பெற்றூ ளொருபிள்ளையென்மனையாட்டியப் பிள்ளைக்குப் பால் பற்றாது கஞ்சி குடிக்குந் தரமல்ல பாலிரக்கச், சிற்றாளு மில்லை யிவ்வெல்லா வருத்த முந் தீரவொரு, கற்றா தரவல்லை யோவல்லைமாநகர்க் காளத்தியே" எனப் பாடிக் கன்றும் ஆவும் பெற்றுத் திரும்பி மாவண்டூரில் மிக்க பிரபுவாயிருந்த கஸ்தூரிமுதலியார் குமாராகிய கறுப்பு முதலியார் வேண்டுகோளின்படி தொண்டைமண்டல சதகம் பாடி அரங்கேற்றிப் பல பொருள் பெற்று முதலியார் பல்லக்குச் சுமக்கக் களிப்படைந்து, "காவைவென்றிடு கத்தூரிகண்மணிக் கறுப்பனென்று, மாவையம் பதியான் றொண்டைமண்டல சதகங் கேட்டு, நாவலர் புகழ்ந்து மெச்ச நவநிதி பொழிந்து நன்றாய், பூவுலகெங்கும் போற்றப் புகழ்நிலை நிறுத்தினனே" எனவும், "ஓர் கறுப்புமில்லாத தொண்டைவள நன்னாட்டி லுசிதவேளைச், சீர்கறுப் பொன்றில்லாத கஸ்தூரி மன்னனருள் சேயைப்பார்மே, லார்கறுப்பனென்று சொல்லியழைத்தாலு நாமவனை பண்பினாலே, பேர்கறுப்பனிறஞ் சிவப்பன் கீர்த்தியினால் வெளுப்பனெனப் பேசுவோமே" எனவும், "எல்லப்பனம்மையப் பன்றரு திருவேங்கடநாத னெழிற்சீராமன், வல்லக்கொண்டையன்மாதை வேங்கடேசுரன்போல் வரிசை செய்தே, செல்வத்தம்பி யருடனே கத்தூரிமகன் கறுப்பன் தெருவீதிக்கே, பல்லக்குத்தான் சுமந்தானது நமக்கோராயிரம் பொன்பரிசுதானே" எனப்பாடித் தென்னாட்டில் இரகுநாத சேதுபதி சமஸ்தான மடைந்து "மூவேந்து மற்றுச் சங்கமும் போய்ப்பதின் மூன்றேடிரு, கோவேந்தரு மற்றுமற்றொரு வேந்தன் கொடையுமற்றுப், பாவேந்தர் காற்றிலிலவம் பஞ்சாகப்பறக்கையிலே, தேவேந்திர தாருவொத்தாய் ரகுநாத செயதுங்கனே" எனப்பாடிப் பரிசுபெற்றுப் பல்லக்கு வரிசைகளுடன் மதுரையை அடைந்தபொழுது இவரது ஆரவாரத்தைத் திருமலைராயன் கண்டு கிளிக்கூட்டுச் சிறையிலிவரை அடைக்கப் புலவர் "நாட்டிற் சிறந்த திருமலையாதுங்க நாகரிகா, காட்டில் வனத்திற் றிரிந்துழலாமற் கலைத்தமிழ்தேர், பாட்டிற்சிறந்தபடிக் காசனென்னுமோர் பைங்கிளியைக், கூட்டிலடைத்து வைத்தாயிரைதாவென்று கூப்பிடுதே" எனப்பாடி (இச்செய்யுள் சவ்வாது புலவர் கூறியதாகவுங் கூறுவர்.) அவரைத் தம் வசப்படுத்திப் பரிசுபெற்றுக் காயற்பட்டண மடைந்து "காய்ந்து சிவந்தது சூரியகாந்தி கலவியிலே, தோய்ந்து சிவந்தது மின்னார் நெடுங்கண்க டொல்பலனா, லாய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சமநுதினமும், ஈய்ந்து சிவந்தது மால்சீதக் காதியிருகரமே" எனப்பாடி அவர் சமாதியான தறிந்து சமாதிக்குழியிடம் போய் "தேட்டாளன் காயற்றுரை சீதக்காதிசிறந்தவஜ்ர, நாட்டான் புகழ்க்கம்பநாட்டினைவத்

தான் புகழ்நாவலுரை, யோட்டாண்டியாக் கியவர்கடம் வாயிலொரு பிடிமண், போட்டாணவனு மொளித்தான் சமாதிக் குழி புகுந்தே" என்பாடிச் சமாதி வெடிக்க வைரமோதிரம் விரலிலிருந்து தாப்பெற்றுத் திருச்செந்தூரடைந்து முற்கரையப் பரையெனச் செய்யுள்பாடி வைதீசுரன் கோயிலடைந்து புள்ளிருக்கும்வேளூர்க் கலம்பகம்பாடிச் சின்னாட் சென்றபின் துறவு பூண்டு சிதம்பரமடைந்து "பொல்லாத மூர்க்கருக் கெத்தனை தான் புத்திபோதிக்கினும், நல்லார்க்குண்டான குணம் வருமோ நடுராத்திரியில், சல்லாப்புடவை குளிர்தாங்குமோ நடுச்சந்தைதனில், செல்லாப்பணஞ் செல்லுமோ தில்லை வாழுஞ் சிதம்பரனே." எனவும், "வேல் கொடுத்தாய் திருச்செந்தூரர்க் கம்மியின் மீது வைக்கக், கால் கொடுத்தாய் நின்மணவாளனுக்குக் கவுணியர்க்குப், பால் கொடுத்தாய் மதவேளுக்கு மூவர்பயப்படச் செங்கோல் கொடுத்தாயன்னையே யெனக் கேதுங் கொடுத்திலையே" எனச் சிவகாமியைத் துதித்துத் தில்லையில் வசித்து ஒருதிருமடங்கட்டி ஆலயமடைந்து ஸ்ரீ நடராஜ மூர்த்தியைத் தரிசித்து ஸ்ரீ நடராஜமூர்த்தி பஞ்சாக்ஷரப்படியில் நாடோறும் வைத்தருளும் ஐந்து பொற்காசு பெற்றுப் படிக்காசுத்தம்பிரான் எனப் பெயரடைந்து சிலநாளிருந்து சிவபதமடைந்தனர். இவர் செய்யுள் பாடுந்திறத்தைப் பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் புகழ்ந்து "மட்டாருந்தென் களந்தைபடிக் காசனுரைத்த தமிழ்வரைந்த வேட்டைப், பட்டாலே சூழ்ந்தாலு மூவுலகும் பரிமளிக்கும் பரிந்தவேட்டைத், தொட்டாலுங் கை மணக்குஞ் சொன்னாலும் வாய்மணக்குந் துய்ய சேற்றில், நட்டாலுந் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டினது நளினந்தானே" எனப்பாடியிருக்கின்றனர். இவர் சந்தப்பாக்கள் பாடுவதில் வல்லவர் என்பதை "வெண்பாவில்" என்னுஞ் செய்யுளாற்காண்க. இவர்பாடிய நூல் புள்ளிருக்குவேளூர்க்கலம்புகம், தொண்டைமண்டலசதகம்.

**படியாரிப் பாச்சையர்** — வசவர் காலத்து அவரிடத்திருந்த சங்கமர்.

**படுகர்** — நீலகிரி பக்கத்திலுள்ள ஒருவகைச் சாதியர். இவர்கள் தோடர், கோடர் என இருவகை. இவர்கள் பல வேலைகள் செய்வர்.

**படுத்தெழும்ஈச்சமரம்** — இது ஒரு ஆச்சரியமான ஈச்சமரம். இந்தியாவில் வங்காள நாட்டிலுள்ள பரித்பூரிலுள்ள ஒரு தோட்டத்தில் இருப்பது. இது 16 அடி உயரமும், 10 அங்குல கனமுள்ளதாம். இது சூரிய அஸ்தத்தில் படிப்படியாகத் தாழ்ந்து உறங்கி விடுகிறது. சூரிய உதயத்தில் படிப்படி பழையபடி நிமிர்கிறதாம்.

**படுமாத்தூர்மோசிகீரன்கொற்றன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவரது இயற்பெயர் கீரர் கொற்றன். இவரது ஊர் மோசி, படுமாத்தூர், பாண்டி நாட்டிலுள்ளவை. (குறு - நஎக)

**படுமரத்து மோசிகீரனர்** — மோசிகீரனர் காண்க. (குறு - நஙு, எகு, நஅரு.)

**படைகளின் வகை** — உரிமைப் படை, துணைப்படை, மூலப்படை, அமயப்படை, வன்படை, மென்படை, பயிற்சிப்படை, பயிற்சியில்படை, குழுப்படை, தனிப்படை, கருவிபெறுபடை, தன்கருவிப்படை, ஊர்திபெறுபடை, தன்னூர்திப்படை எனப் பலவகைப்படும். உரிமைப்படை - வேதன முதவிக்காக்கப்படுவது; இது கூலிப்படை யெனவும்படும். துணைப்படை - நட்புரிமைப்பற்றிக் காரியத்திற்கு துணை செய்வது. மூலப்படை - பல் யாண்டுகளாகத்தொடர்ந்து நிற்பது. அமயப்படை - சின்னாட்களிற் சேர்க்கப்படுவது; இதற்குப் புதுப்படை யெனவும் பெயர். வன்படை - போர் செய்தலில் மனவெழுச்சியுள்ளது; போர் செய்தலில் மனவெழுச்சி யில்லாதது - மென்படை. படை வகுத்துப் போர்செய்தலில் திறமைவாய்ந்தது - பயிற்சிப்படை. அத்திறமை யில்லாதது - பயிற்சியில்படை. அரசனால் நியமிக்கப்படும் படைத்தலைவனை யுடையது - குழுப்படை. படைத்தலைவனை யின்றித் தனியே தலைமைகொண்டு போர்செய்வது - தனிப்படை. தலைவனால் தரப்பட்ட அம்பு வாள் முதலிய உடையது - கருவிபெறுபடை. அங்ஙனம் கருவி பெறாமல் தாமே கருவி கொண்டு செல்வது - தன்கருவிப்படை. தலைவனால் தரப்பட்ட ஊர்தியை யுடையது - தன்னூர்திப்படை. வேடர் முதலியோரால் கூட்டப்பட்ட படை - காட்டுப்படை. பகைவனை விட்டுத் தன்னிடம் வந்த படை - பகைப்படை.

**படையாச்சி** — இவர் பள்ளிகளில் ஒரு வகுப்பார்.

**படை வகுப்பு** — 1. படைத்தலைவன், ஆறு, மலை, காடு, மதில் ஆகிய இடங்களில் எங்கெந்த இடங்களில் அச்சந்தோன்றுமோ அந்தந்த இடங்களுக்கு வியூகமாகச் செய்யப்பட்ட படைகளுடன் செல்லவேண்டும். படைகளின் முன்னணியில் அச்சமுண்டாயின் மகரவியூகம், சேனவியூகம், சூசிவியூகமாதல் வகுத்துச் செல்லவேண்டும். பின்னணியில் அச்சமுண்டாயின், சகடவியூகத்தையும், முன்னும் பின்னு மச்சமுண்டாயின் வச்ரவியூகத்தையும், எல்லாப் பக்கத்திலு மச்சமுண்டாயின் சருவதோபத்திர வியூகம், சக்ரவிகம், வியாளவியூகம் வகுத்தல்வேண்டும். வாத்திய முதலிய ஒலிக் குறிப்பால் செய்யப்படும் படை வகுப்பின் செயல்கள் - திரண்டுகூடல், பரவிநிற்றல், நாற்புறத்துஞ் சுற்றுதல், நெருங்குதல், முன்போதல், விரைந்துபோதல், பின்னுக நடத்தல், வரிசையாக எதிர் நோக்கிப் போதல், நேராக எழுந்து நிற்றல், நிலத்திற் புரளுதல், அஷ்டதளம், சக்கிரம், கோளம், ஊசி, சகடம், அர்த்த சந்திரன் ஆகிய இவற்றின் வடிவை யொப்ப விருத்தல், சிற்சிலவாகப் பிரிந்து நிற்றல், ஒழுங்குபட நிரைநிரையாக நிற்றல், படைக்லை கையிற் ருங்குதல், அவற்றை உபயோகிக்கக் லக்யிற் ருங்குதல், சித்தஞ்செய்தல், குறியைத்தாக்குதல் பிறவுமாம். (சுக் - நீ)

2. (ஃ) அணி, உண்டை, ஒட்டு, யூகம்.

**படை வழக்கு** — 1. முத்து விளங்கும் ஆபரணத்தையுடைய சின்மன்னன் தம்மில் இனமொத்தவர்க்கு ஆயுதத்தைக் கொடுத்தது. (பு. வெ.)

2. அரசன் படை வழங்கின பின்னர்க் கழல்வீரர் உயர்த்துச் சொல்லினும் முன்பு சொன்ன துறையேயாம். (பு. வெ.)

**பட்டபாதாசாரியர்** — குமாரக்கடவுள் அவதாரமானவர், இவர்க்குப் பட்டகுமாரன் எனவும் பெயர். இவர் செய்த நூல்கள் கௌமாரம் என்னும் வியாகரணம், பாட்ட பிரதீபம் என்னும் மீமாம்ஸை முதலியவாம். இவர் சுதன்வா அரசன் சபையிலிருந்த புத்தரை வாதில் வென்று மலைமீதிருந்து குதித்து வேதம் உண்மையென்று சாதித்து அரசன் வைத்திருந்த பாம்பின் குடத்தில் கையிட்டு அதிலிருந்த திருமால் விக்ரகத்தை எடுத்துக்காட்டிப் புத்தரைக் கர்ணத்தில் இட்டவர். இவர் மாணுக்கர் மண்டனமிசரர்.

**பட்டமங்கலம்** — இது சோமசுந்தரக்கடவுள் அட்டமாசித்தி அருளிய ஊர்; பட்டமங்கை யெனவும் வழங்கும். சிவகங்கையைச் சார்ந்தது. (திருவிளையாடல்).

**பட்டர்** — 1. இவர் திருக்காஞ்சிக்கு அடுத்த கூரம் எனும் ஊரில் ஜனித்த ஆழ்வான் எனும் திருநாமம்கொண்ட கூரத்தாழ்வார் குமாரர். கலிஙூ (சஉஉச) சுபகிருதுஙூ வைகாசிீ பௌர்ணமியில் அனுஷம் புதன்கிழமை அவதரித்தவர். இவர்க்குப் பராசரபட்டர் என்று உடையவரால் பெயரிடப்பட்டது. இவர் சகோதரர் சீராமப்பிள்ளை. இவர் குழந்தைப் பருவத்தில் பெருமாளுக்கு நிவேதிக்கும் இன்னடிசிலை யளாவி விளையாடினமையின் ரங்கபுத்ரர் என்று ஒரு பெயர் இவர்க்குண்டு. இவர் ஒருநாள் ஆழ்வான் திருவாய்மொழி அநுசந்திக்கையில் "உறுமோபாவி" என்னும் திருப்பாசுரத்தில் சிறுமாமனிசர் என வருதலின்கண் சிறுமை பெருமை ஒன்றிற் பொருந்துமோ வென்னத் தந்தையார் வடிவுசிறுத்து அறிவுபெருத்தவர்கள் என்று கூற ஏற்றுக்கொண்டவர். ஐந்தாவது வயதில் தெருவில் விளையாடிக் கொண்டிருக்கையில் விருதுடன் சென்ற சர்வஞ்ஞபட்டனை ஒருபிடி மண்ணெடுத்து இது என் எனவினவி அவன் சொல்லாதுநிற்க இது ஒருபிடி மண்ணென்று கூற அறியாத உனக்கு விருதெதற்கு எனக் கர்வபங்கப் படுத்தியவர். இவர் ஏழாவது ஆண்டில் வேதாத்தியனத்திற்குச் சென்று உபாத்தியாயர் ஓதுவிக்க அத்யயனஞ்செய்து மறுநாள் சென்று மற்றவர்கள் ஓதினதையே ஓதுதல்கண்டு அதை ஓதாமல் விளையாடிக்கொண்டிருக்கத் தாய்தந்தையர் அத்யயனத்திற்குப் போகவில்லையோ வென்று கேட்க இவர் ஓதினதையே மீண்டும் ஓதலால் போகவில்லை யெனத் தாய்தந்தையர் ஆயின் நேற்று ஓதியதைக் கூறுக என்ன அணுவும் பிசகாமல் கூறக்கேட்டுக் களித்தனர். ஒருநாள் பெருமாளைச் சேவிக்கச் சென்று திரை நீக்கி உள் செல்லப் பெருமாள் சினந்து வெளியேறக் கட்டளையிட்டு மீண்டும், அழைத்து வெளியில் சென்ற காலத்தென்னினைந்தா யென்ன, பெருமாளையும் பிராட்டியையும் நினைத்தேனென் நம்மாணை அவ்வாறிருக்கவெனப் பெருமாளால் நியமிக்கப் பட்டவர். இவர் பெருமாள் ஆணையாற் பெரிய நம்பிகளின்

சம்பந்திகள் வம்சத்தில் திருமணஞ் செய்யப்பட்டவர். இவரது வேதாந்தோபந்யாசத்தைக் கேட்ட உடையவர் இவர்க்கு வேதாந்தாசார்யர் எனப் பெயரிட்டனர். பின் ஆழ்வானிறக்க அவருக்குச் சரம கைங்கர்ய முடித்துத் தந்தையின் பிரிவாற்ருது பெருமாள் சந்நதியில் நிற்கப் பெருமாள் தேற்றி வேதாசார்யபட்டர் என்று பெயரிட்டனர். ஒரு காலத்துப் பலர் கூடி வாதமிட அவர்களுக்குத் தக்கவிடை கூறி யடக்கினவர். மற்ருெரு காலத்தில் இவரது சர்வஞ்ஞதையை அறிவோமென்று ஒரு குடத்தில் பாம்பையடைத்து இதில் உள்ளதென்ன என வெண்கொற்றக்குடை யென்று விடைதந்து சர்வஞ்ஞதையை வெளியிட்டவர். இவர் மேல்நாட்டு வேதாந்தியை வெல்லச் செல்லுகையில் அநந்தாழ்வான் பட்டர் எதிர்கொண்டு இவரைத் தழுவி எங்கள் குடிக்கரசு என்றனர். அதுவே இவர்க்கு ஒரு பெயராயிற்று. பின் வேதாந்தியிடம் ஆடம்பரங்களுடன் செல்லின் நாள் பல ஆகும் எனப் பலர் கூறக் கேட்டுப் பிக்ஷுவைப்போல் அவனிடம் சென்று பிக்ஷை வேண்ட அவன் என்ன பிக்ஷை யென்ன தர்க்க பிக்ஷை யென்ன அவனுடன் பத்து நாள் வாதமிட்டு வென்று திருவரங்கம் திரும்பி யிருக்கையில் வேதாந்தி சந்நியாசித்துக்கொண்டு அடைய, நஞ்ஜீயர் வந்தார் என்றனர். அன்றுமுதல் வேதாந்திக்கு நஞ்ஜீயரென்று பெயர் உண்டாயிற்று. பின் நஞ்ஜீயர் வினவிய சில வினக்களுக்கு விடை தந்தருளித் தமது பிரசங்கத்தில் ஐயமுற்று ஆக்ஷேபித்த வித்வான்களுக்குத் தக்க விடை பகர்ந்திருந்தனர். ஒரு காலத்துப் பட்டர் பிரம்மரதத்தில் எழுந்தருளுகையில் நஞ்ஜீயர்பட்டரை யறியாது ஸ்ரீபாதந் தாங்கப் பட்டர் மறுத்தது கண்டு விசனமுற்று நான் பழையபடி கிரகத்தனுதல் தமக்கு விருப்போ எனப் பட்டர் அவரது ஆசார்ய பக்திக்கு வியந்திருந்தனர். சேதுயாத்திரை செய்து திரும்புகையில்வேடன் ஒருவன் குடிலில் தங்கி அவன் கூறிய முயலின் செய்தியால் சரணகதியினிலையை நஞ்சீயருக்கு அருளிச் செய்து திருவரங்கஞ் சேர்ந்து, வீரசுந்தரன், ஜீரணமான ஆருவது பிராகாரத்தைப் பழுது பார்க்கத் தொடங்குகையில் அம்மதிலின் சேர்மைக்கு மாருகவிருந்த பிள்ளைபிள்ளையாழ்வான் திருமாளிகையைவிட்டுத் திருமதில் எடுக்கவேண்ட வீரசுந்தரன் சம்மதியாது அதனை இடித்ததால் மனஸ்தாபங்கொண்டு தனித்துநீங்கி நடுவழியில் பசிதாகத்தால் வருந்தி நஞ்சீயரை யெண்ணினர். நஞ்சீயர் ஆசாரியர் போனவழி அறிந்து பொதிசோறும் நன்னீருங் கொண்டு சென்று காலமறிந்து உண்பிக்க உண்டவர். பின்னர் போசளதேசத்து அம்மணியாழ்வாணடிமைபுக அவர்க்குக் கடாக்ஷித்துப் போக்கப் போதில்லை அடியேற்கு உய்ய அருள்செய்க என வேண்ட அவர்க்குக் கடற்கரைவெளியை நினைத்திருக்க அருளி அதன் தொழிலையு மருளிச் செய்தனர். திரிபுவன தேவராய னென்கிற அரசன் தன்னரண்மனைக்குப் பட்டரை எழுந்தருளவேண்ட மறுத்ததுகண்டு அவனே வந்து பணிய அவனுக்கு உய்யும்வழி அருளிச் செய்தவர். ஒரு ஸ்ரீவைஷ்ணவர் உமக்கும் நமக்கும் பணியில்லை யென்று விலக அவரை வலிய ஆட்கொண்டவர். பெருமாள் திருவோலக்கம் தெரிசிக்கச் சென்று ஏவலாளன் ஒறுக்க அவனுக்குப் பொறுமைகூறி அவனை ஆட்கொண்டவர். ஒருநாள் பெருமாளுக்குத் திருஆலவட்ட கைங்கர்யஞ் செய்து வருகையில் சந்தியா காலந் தவறுதலை மாணுக்கர் அறிவிக்க அது பெருமாளின் கைங்கர்யபரர்களுக்கின்றென ப்ரமாணமருளிச் செய்தவர். தாம் உண்ணும் உணவில் வேப்பெண்ணெய் விடக் களிப்புடன் உண்டு ஜிதேந்திரியரென்று அறிவித்தவர். இவருடைய தாயாராகிய ஆண்டாள் இவரிடம் புத்ரவாஞ்சை வையாது ஆசார்யபக்தி வைத்திருந்தனள். இவர் திருவரங்கர் சந்நதியில் புராணம் வாசிக்கும் நியமனத்தால் ஸ்ரீரங்கேச புரோகிதர் எனப் பெயர் பெற்றவர். இவர் ஒரு முறை கைசிக புராணத்தைப் பரக்கப் பிரசங்கிக்கப் பெருமாளுகந்து திருமாலை, திருப்பரிவட்டம், திருவாபரணம், திவ்ய சிங்காதனத்தையுமருளி மேல்வீடு தந்தோமென அங்கீகரித்துத் தாயைச் சேவிக்க ஆண்டாளும் "நலமந்தமில்லாத நாடுபுகுவீர்" என்று வாழ்த்த பட்டரும் "அம்மாள் அடியேன் வேண்டுவதீதே" என்று கோஷ்டியிலிருந்து 'அலம்புரிந்த" எனும் பாசுரத்திலுள்ள "அஞ்சிறைப்புள்ளின் தனிப்பாகன்" என்பதையெண்ணப் பெருமாள் தரிசனந்தரத் திருவடி யடைந்தவர்.

2. தமிழில் பகவத்கீதை இயற்றியவர். இன்ன இடத்தினரென்று தெரியவில்லை.

**பட்டர்பிரான்** — பெரியாழ்வாரைக் காண்க.

**பட்டவை** — விவசுவான் மூன்றாவது பாரி.

**பட்டாபிஷேகம்** — இச்சடங்கு அரசன் ஒருவன் சிங்காசனத்திற்கு வரும்போது செய்யும் சடங்காம். இது இருக்கு வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. இச்சடங்கில் அரசனை அவனுக்காகச் சித்தம் செய்யப்பட்ட சிங்காதனத்தில் உட்காருவித்து அவன் உட்கார்ந்திருக்கையில் பல புண்ணிய தீர்த்தங்களைக்கொண்டு அரசனுக்குச் சர்வாதிகாரத்தை நிச்சயப்படுத்தவேண்டி வேதருக்குகளால் மந்திரபூர்வமாக அப்புண்ணிய தீர்த்தங்களைப் பிரார்த்தித்து, தேன், தயிர், மது, இரண்டுவிதப்புல், தானியக்கதிர், இவைகள் கலந்த தீர்த்தத்தை அரசன் சிரசில் அபிஷேகஞ்செய்து பட்டம் கட்டுவது.

**பட்டாரியர்** — பட்டு நெய்யும் சாலியர்.

**பட்டி** — விக்கிரமார்க்கன் தம்பியும் மந்திரியுமா யிருந்தவன்.

**பட்டிமுனி** — இவர் பிரமன் அவதாரமாய் மேலைச் சிதம்பரத்தில் தவஞ்செய்து சிவமூர்த்தியின் நடனதரிசனங் கண்டவர்.

**பட்டினசுவாமி** — ஓர் வணிகன், தன் செல்வம் இழந்து வறியனாய்க் காட்டில் அலைந்து பின் திருவாரூர் அடைந்து சிவபூசை செய்வார்க்குத் தாமரைமலர் விற்றுச் சீவித்துத் தானும் ஒருநாள் சிவபூசை செய்த பலத்தால் மறுபிறப்பில் சூரியகுலத்துப் பத்திரசேநன் எனும் வேந்தனாகப் பிறந்து சிவபூசைசெய்து முத்திபெற்றவன்.

**பட்டினத்தடிகள்** — சிவமூர்த்தி குபேரனுடன் பல தலங்களுக்குச் சென்று காவிரிப்பூம்பட்டினத்தை யடைய அத்தலத்தில் குபேரனுக்கிருந்த விருப்பத்தைச் சிவமூர்த்தி உணர்ந்து இப்பட்டணத்தில் பிறக்க என்றனர். குபேரன் சிவமூர்த்தி திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்டு அடியேனை ஆட்கொள்ளவேண்டும் என வேண்டச் சிவமூர்த்தி அவ்வகை அருள்புரிந்து திருக்கைலைக்கு எழுந்தருளினர். அக்கட்டளைப்படி குபேரன் அப்பட்டணத்தில் சிவநேய குப்தருக்கும் அவர் மனைவிக்கும் புத்திரராய்ச் சுவேதாரண்ணியரென்னும் பெயருடன் அவதரித்துச் சகல கலைகளையுங் கற்றுக் கனவில் சிவமூர்த்தி சுவேதாரண்யரைச் சந்நிதிக்கு வரும்படி கட்டளையிட்டபடி சென்று கனவிற்கண்ட உருவுடன் வந்த ஞானசாரியரிடம் தீக்ஷைபெற்று அவர் எழுந்தருளச்செய்த சிவலிங்க மூர்த்தத்தைப் பூசித்து மகேச்வர பூசையும் நடத்திவந்தனர். இவ்வகை நடத்திவருகையில் செல்வம் குறைந்ததால் தாமும் தாயும் இனிவரும் மகேச்வர பூசைக்குத் திரவியம் இல்லாதிருந்தமைகண்டு விசனத்துடன் நித்திரை செய்கையில் சிவமூர்த்தி வீட்டில் சேமித்துவைத்திருந்த பொருள்களைத் தெரிவித்தனர். சுவேதாரண்யர் பொருள்களை யெடுத்துச் சிவனடிவர்க்குச் செலவிட்டு 16-வது வருஷத்தில் சிவகலையென்னுங் கற்புடையாளை மணந்து இல்லறம் நடத்திப் பட்டினத்துச் செட்டியாரென்று பெயர்பெற்றுச் சிவசருமர், சுசீலையென்பவர்கள் கொடுத்த குழந்தையுருவாகிய சிவமூர்த்தியைப்பெற்று அக்குழந்தை நிறையுள்ள பொன்னை அவர்களுக்குக் கொடுத்து அக்குழந்தைக்கு மருதப்பிரான் என நாமகரணஞ் செய்து அக்குழந்தையிடம் பல திருவிளையாடல்கள் தரிசித்து அவர் கொடுத்த பெட்டியினிடமாகக் காதற்ற ஊசியும் ஓலையுங்கண்டு துறவுபூண்டு தாயின் ஈமக்கடன் முடிக்க அந்தவூரில் மௌனமடைந்திருந்தனர். இவர் இருந்த நிலையறிந்த தமக்கை பொருளாகி அப்பத்தில் விஷங்கலந்துதர அதனையறிந்த பட்டினத்தடிகள் அப்பத்தை வீட்டிறப்பில் செருகினர். அது வீட்டைச் சுட்டெரித்தது. பின் தாயார் இறக்க அவளைச் சுற்றத்தவர் மயானத்திற்குக் கொண்டு வந்தனர். பட்டினத்தடிகள் விரைந்துசென்று சுற்றத்தவரை விலக்கிச் சவத்தை வாழைத்தண்டுகளின் மீதுவைத்துச் சமஸ்காரஞ் செய்து தாய்க்கடன் கழித்து அவ்விடம் விட்டு நீங்கித் திருமருதூரடைந்து சிவமூர்த்தியைத் துதித்துத் திருவாரூரில் இறந்த பிள்ளையை எழுப்பிக் கொங்கு நாடடைந்து இரவில் பசியால் பிக்ஷைகேட்கையில் கள்ளனென்று ஒருவன் அடித்த அடியைப்பட்டு உச்சயினிபுர மடைந்து காட்டிலிருந்த ஒரு கணபதி ஆலயத்தில் நிஷ்டைகூடி இருந்தனர். அந்நாட்டரசனாகிய பத்திரகிரி ராஜன் அரண்மனையில் கொள்ளையிடச் சென்ற கள்ளர் எமக்குப் பொருளகப்படின் உமக்கு முத்தாரம் சாத்துகிறோமென்று சொல்லி அரசன் அரண்மனை சென்று திருடி அவ்வழி வருகையில்

விநாயகர்மீது முத்தாரத்தை எறிந்தனர். அவ்வாரம் அவ்விடம் நிஷ்டைகூடியிருந்த பட்டினத்தடிகள் திருக்கழுத்தில்விழுந்தது. உலகத்தோற்ற மறியாத பட்டினத்தடிகள் நிஷ்டைநீங்கி வெளியில்வர அரசன் சேவகர் பட்டினத்து அடிகளைப்பிடித்து அரசனிடம் சென்றனர். அரசன் பட்டினத்தடிகளைக் கழுவேற்றக் கட்டளையிட்டனன். அக்கட்டளைப்படி சேவகர் கழுமரத்தடியில் அடிகளை நிறுத்தினர். அடிகள் "என் செயலாவது" என்ற திருப்பதிகமோதிக் கழுமரத்தை நோக்கக் கழுமரம் தீப்பட்டெரிந்தது. அதுகண்ட அரசன் அச்சமடைந்து அடிகள் திருவடியையடைய அடிகள் கருணைசெய்து அரசனைத் திருவிடைமருதூருக்கு அனுப்பித் தாம் பல தலங்கள் தரிசித்துத் திருவிடைமருதூரை யடைந்தனர். இவரிடம் சிவமூர்த்தி சித்த மூர்த்திகளாக வந்து பிகைஷகேட்க அடிகள் பத்திரகிரியார் நாய், சட்டி வைத்திருத்தலை யெண்ணிப் பத்திரகிரியான் சமுசாரி அவனிடம் செல்கவென அருளினர். அவ்வாறு சித்தர் சென்று பட்டினத்தடிகள் அருளிய வார்த்தைகளையும் கூறப் பத்திரகிரியார் நாயையுஞ் சட்டியையும் விட்டனர்- பின் சிவமூர்த்தி பத்திரகிரிராஜாவிற்குத் தரிசனம்தந்து முதலில் முத்தியளித்தனர். அடிகள் ஆராமையால் விசனமடைந்து சேந்தனாரைச் சிறையினின்று நீக்கித் திருவண்ணாமலை யடைந்து தாசியைக்கண்டு மயல் கொண்டு அவள் அழைத்தபோது வாராமையால் அவளை நீக்கி, அவளிடம் அருணகிரிநாதர் திருவவதரிக்க அருள்புரிந்து அவ்விடமிருந்து நீங்கித் திருவொற்றியூரடைந்து இடைச்சிறுவரோடு கூடி விளையாடிக்கொண்டிருக்கையில் ஒருநாள் இடைச்சிறுவர்களை நோக்கி விளையாட்டாகத் தம்மை மூடச்செய்ய அவர்கள் அவ்விதம் மூடச் சிவலிங்க உருவமாயினர். இவரருளிய பிரபந்தங்கள் கோயினான் மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபாவொருபது முதலியன. இவர்காலம் 11-ஆம் நூற்ருண்டென ஊகிக்கப்படுகிறது.

**பட்டினப் பறவைகள்** — இவை மத்திய ஆபிரிக்காவாசி. இவை ஆயிரக்கணக்காய் ஒன்று சேர்ந்து புற்களால் பல கூடுகள் கட்டுகின்றன. அவை (8, 10) அடிகள் உயரத்திலும் அகலத்திலும் கட்டி பட்டினம்போல் வசிப்பதால் பட்டினப்பறவை என்பர். இக் கூடுகளுக்கு வழி பின்புறத்தில் உள்ளது.

**பட்டினப்பாக்கம்** — காவிரிப்பூம் பட்டினத்து உள்ளநகர். (சிலப்பதிகாரம்.)

**பட்டினப்பாலை** — சோழன் கரிகாற்பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய தமிழ்நூல்.

**பட்டினவர் கருவிகள்** — பெருவலை, மடி, தளை, மடங்கு, மாட்ளே, உறிக்கயிறு, மேலாவலை, புணைக்கட்டை, மடிக்கட்டை, மதவலை, பெரியமரம், மேங்கா, தைலேமரம், கோக்காமரம், தூரிவலை, குப்பா, கோலாவலை நெற்றிவலை, கண்ணிவலை, மாப்புவலை, இறுக்காவலை, வாழைவலை, வெளவால்வலை, கொண்டைவலை, கடுப்பு, சின்னகண்ணிவலை, தூண்டில்கள், மேலாமரம், கடப்பர, முண்டுபலகை, தாளா, அல்சா, தண்டு, படகு, கட்டுமரம், துடுப்பு.

**பட்டினவர்** — இவர்கள் இந்தியாவின் கீழ்க்கடற் கரையில் கிருஷ்ணாநதி முதல் கன்யாகுமரி வரையில் வியாபித்திருக்கும் கடலோர்டிகள். இவர்கள் செம்படவரின் வேறு. இவர்கள் கரையி லிருத்தலால் கரையார் என்பர். பட்டினவர் எனின் கடற்கரை யடுத்த பட்டினத்துள்ளார் என்பது. அவ்வாறன்றி இவர்கள் சிவபெருமானுக்குப் பட்டு நெய்து கொடுத்தலால் பட்டு நெய்வோர் பட்டனவர் என மருவிற்றென்பர். தாசராஜன் என்று ஒருவன் ஹஸ்தினபுரத் தருகில் அரசு செய்து கொண்டிருக்கையில் அவன் புத்திரரிலாது வருந்திச் சிவபெருமானை நோக்கித் தவமியற்றினன். சிவபெருமான் தவத்திற்கு உவந்து தாமரைகள் நிறைந்த தடாகத்தைக் காட்டி அதனிடம் போய்ப் பிள்ளைகளை அழையென அங்ஙனம் அரசன் செய்ய அதிலிருந்து ஐயாயிரம் பிள்ளைகள் வந்தனர். அவர்களில் மூத்தவனுக்கு அரசும் மற்றவருக்குப் பெருஞ் செல்வமும் கொடுக்க மூத்தவனொழிந்த மற்றவர் கப்பலேறி கரைவழி வந்து தங்கி உள்நாட்டுச் செம்படவரை நட்புக்கொண்டு அவர்கள் தொழிலை கடலிற் செய்தனர். இந்தப் பட்டினவர்கள் சின்னபட்டினவர், பெரிய பட்டினவர் என இரு வகுப்பார். இவர்களுக்

குப் பட்டம் ஆரியர், ஐயாயிரத்தலைவர், ஆர்யநாட்டுச் செட்டிகள், அச்சுவேளாளர், கரைதுறைவேளாளர், வருணகுலவேளாளர், வருணகுலமுதலி, குருகுலவம்சத்தார், பிள்ளை. இவர்கள் உள்நாட்டுச் செம்படவரினும் உயர்ந்தவர்கள் என்பர். இவர்கள் பெரும்பாலும் சைவர். இவர்கள் மற்ற தேவதைகளையும் வணங்குவர். இவர்களுக்குக் குலதேவதை குட்டியாண்டவன், பாவாடைராயன், படைத்தலைத்தெய்வம். இவர்கள் ஜாதித்தலைவன் யஜமானன். அவனுக்கடங்கி ஜாதியா ரிருக்கவேண்டியது. இவர்களது மற்றக் காரியங்கள் இந்துக்களைப் போன்றது. (தர்ஸ்டன்.)

**பட்டு** — ஒரு புழுவினுல் உண்டாகும் நூல். இது மிருதுவாயும் இலேசாயும் உள்ளது. இப் பூச்சி வெள்ளை நிறமுள்ள புழு. இது வயதடைந்து பூச்சியாக மாறுகிறது. இது தனக்குக் கூடுகட்ட முசுக்கொட்டைச் செடியில் இடம் கிடைத்தவுடன் தன் தாடையினடிப்புறத்துள்ள பிசின்போன்ற திரவத்தால் தன்னைச் சுற்றிக்கொள்ளுகின்றது. அத் திரவம் காற்றில்பட நூலாகிறது. இது கூட்டிலிருந்து வெளிவந்தவுடன் கூட்டை யெடுத்து வெந்நீரிலிட்டு நுனியைக் கண்டு நூலை யெடுக்கின்றனர்.

**பட்டுநூல்காரர்** — இவர்கள் முதலில் குஜராத்தி தேசத்திலிருந்து வந்தவர் என்கிறுர்கள். பின்னும் இவர்கள் சௌராஷ்டகத்திலிருந்து வந்த சௌராஷ்டக பிராமணுளென்று தங்களைக் கூறிக்கொள்வர். இவர்கள் பெரும்பாலும் வைஷ்ணவரும் சிலர் வடமர்களுமா யிருக்கின்றனர். பிராமணரைப்போல் நடை வுடை பாவனை. இவர்களில் பெண்கள் மாத்திரம் பிராமணப் பெண்கள்போல் காணப்படவில்லை. தொழில் பட்டு நெய்தல். மதுரை யாண்ட மங்கம்மாள் காலத்து இவர்களுக்குப் பிராமண மரியாதை கொடுக்கப்பட்டதாம். இவர்கள் தங்கள் நாடுகளிலிருந்து துரத்தப்பட்டு வடநாடுகளில் குடிபுகுந்து கடைசியாய் மதுரை வந்து சேர்ந்தனர். இவர்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்படுவர். கௌண்டர், சாலியர், வைத்தியர், பௌதுலர். அதாவது முதல்வர், மூத்தோர். வைத்தியர், வைதிகர். (தர்ஸ்டன்.)

**பட்டுப்பூச்சியும் பட்டும்** — இதன் பிறப்பைப் பூச்சியினம் காண்க. இப் பூச்சி தன்னைச் சுற்றிக்கொண்ட நூற் கூண்டைவிட்டு வெளிவராமுன் கூட்டை வெந்நீரிற் போட்டுப் பூச்சை இறக்கச்செய்து நூலைப் பிரிப்பர். இதுவே பட்டு.

**பட்டைப்பேன்** — இதுவே மரமூட்டுப்பூச்சி. இது மரங்களின் பட்டைகளின் சாரத்தை உறுஞ்சி ஜீவிப்பது.

**பட்டோஜீதீக்ஷிதர்** — சித்தாந்த கௌமுதி செய்த வடநூலாசிரியர்.

**பணிக்கன்** இந்தப் பட்டம் மலையாள நாட்டது. இது அவ்விடத்தில் அம்பட்டன், கம்மாளன், மாரன், பாணன், பறையன் முதலியவர்க்கு வழங்கி வருகிறது. சிலர் இந்தப் பட்டங் கொண்டு மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களில் சாணுர்க்குத் தலை சிறைத்து ஜீவிக்கின்றனர்.

**பணி செய்வோன்** — (பணிச்சவன்) இவன் தமிழ் நாட்டில் வேலை செய்வோன். இவனது வேலை பிரேதம் கண்ட வீட்டார் சொற்படி பிரேத செய்தி கூறிப் பிரேதத்திற்கு வேண்டிய பாடை, பல்லக்கு மற்ற சிறு வேலைகளைச் செய்து சங்கு முதலிய ஊதிப் பிரேதத்திற்கும் கர்மாந்தத்திற்கும் தொழில் செய்வது. இவர்களில் வலங்கை இடங்கைப் பணி செய்வோர் உண்டு. இவர்கள் திருநெல்வேலி முதலிய இடங்களில் நூலச்சு வேலை, கோயில்களில் நாகசுரம் வாசித்தல், செங்கல்பட்டுஜில்லாவில் சவத்திற்குரிய வேலை செய்தல். இவர்களுக்குப் புலவர், பண்டாரம், பிள்ளை, முதலி பட்டம். (தர்ஸ்டன்.)

**பணியர்** — இவர்கள் கறுத்த உருவமும் அகன்ற மூக்கும் சுருண்ட மயிரும் உள்ள சாதியார். இவர்கள் வயநாடு, எரநாடு, கள்ளிக்கோட்டை, கோட்டயம் முதலிய காபி தோட்டங்களில் வேலை செய்து அடிமைகளாக உள்ள சாதியார். இவர்கள் ஆபிரிக்காவிலிருந்து இங்கு வந்து குடிபுகுந்தவராகக் கூறப்படுகின்றனர். இவர்களின் பெண்களும் கிழங்கு முதலிய தோண்டித் தின்று வாழ்ந்திருக்கிறுர்கள். இவர்கள் நம்பிக்கையுள்ள வேலையாட்கள். (தர்ஸ்டன்.)

**பண்** — 1. (ச) பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி.

2. பாலையாழ், குறிஞ்சியாழ், மருதயாழ், செவ்வழியாழ் என நான்கு. இவற்றின் திறனுவன, அராகம், நேர்திறம், வன்பு, குறுங்கலி நான்கும் பாலையாழ்த்திறம். நைவளம், காந்தாரம், பஞ்சுரம், படுமலை,

மருள், செந்திறம் இவை குறிஞ்சியாழ்த் திறம். நவிர், வடுகு, குறிஞ்சி, திறம் இவை மருதயாழ்த்திறம். நேர்திறம், பியாதிறம், யாமயாழ், சாதாரி, செவ்வழி யாழ்த்திறம். பண்ணின் நரம்புகள் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என எழு. (வீரசோ.)

**பண்டரன்** — பலியின் மனைவியரிடத்துத் தீர்க்கதபசா லுதித்த குமரன். இவன் பேரால் பௌண்டரகதேசம் உண்டாயிற்று.

**பண்டர்** — இவர்கள் மொண்டித்தனம் செய்யும் ஒருவிதச் சாதியார்.

**பண்டா** — இது இமயமலையில் (7000) அடிக்குமேலுள்ள காட்டில் வசிக்கும் பிராணி. இது பூனைபோன்று வட்டமான முகமும் நீண்ட வாலும் மயிரடர்ந்த தேகமும் பெற்ற சாகபக்ஷணி. இது இரவில் பதுங்கியிருந்து பகலில் இரை தேடும்.

**பண்டாசுரன்** — இவன், சிவமூர்த்தியிடம் ஊடல் கொண்ட பிராட்டி, மன்மதன் இறந்த சாம்பலைநோக்க அதிலிருந்து பிறந்து ஆன்மாக்களின் சுக்கில சோணிதங்களை யுண்டு வருத்திவருகையில் தேவர் வேண்டுகோளால் சிவமூர்த்தி உயிர்களையெல்லாம் ஓமத்திலிட்டு எரித்து ஒழிந்து நின்ற பண்டாசுரனைப் பிராட்டியை யேவிக் கொல்வித்தனர்

**பண்டாரத்தார்** — 1. இவர்கள் சோழநாட்டு வேளாளரில் உயர்ந்தவர்கள். தீக்ஷாவானவர்கள். சமயம், விசேடம், நிருவாணம், ஆசார்யாபிஷேக மடைந்து சிவாலயங்களில் ஓதுவார் மூர்த்திகளாகவும், திருக்கோயில்களில் அணுக்கத்தொண்டராகவும், திருஆவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், சூரியனர்கோவில் முதலிய மெய்கண்ட சந்தானநிபதிகளாய் மகா கல்விமான்களாய் அம் மடத்துப் பொருள்களை நிர்வகிக்கும் காரிய நிர்வாகராய்ப் பல தேவஸ்தான தருமத்தாபகராய் இருக்கும் நான்கா மாச்ரமப் பண்டார சந்நிதிகள். இவர்கள் சிவாசாரியர்களாய் குருபீடத்தில் அமர்ந்தவர்கள். இவ்வாறுந் தன்மை சில வீரசைவ மடத்திலு முண்டு.

2. இவர்கள் குடும்பிகளாய் காவி வேஷ்டி யுடுத்துத் தேகமெங்கும் விபூதி பூசி லிங்கதாரணஞ்செய்து கோவில்களில் திருவிழா முதலிய ஆகும்காலத்துப் பிக்ஷையெடுத்தும் சிறு மடங்கள் கட்டிக்கொண்டு பஞ்சி யடித்து ஒன்று பாதியாக தேவார திருவாசகங்களைப் பிணங்களுக் கோதிக் கண்ட வீட்டில் பிக்ஷை சோறுண்ணும் பள்ளி, எகாலி, அம்பட்டன் முதலிய கலப்பு சாதி வேஷக்காரர். இவர்கள் சில பிடாரி கோவில்களில் பூஜாரி வேலை செய்தும் ஜீவிப்பர். இந்தப் பண்டாரப்பட்டம் சில வள்ளுவர்க்கும், பணிச்சவர்க்கும், பறையர்க்கும் உண்டு.

**பண்டாரி** — தேவஸ்தான பொக்கிஷதாரன். தேவாங்கரில் ஒரு வகுப்பு. தேவாங்க சாதியாருக்குப் பணி செய்யும் ஒருவன். கொங்கணி வேதியர் தலைவனுக்கு உதவியா யிருப்பவன். (தர்ஸ்டன்.)

**பண்டி** — இருசு, பார், சக்கரம் முதலிய வற்றாலாக்கப்பட்டுத் திறந்து மூடியுமுள்ள சகடம். இது ஒன்று இரண்டு முதலிய எருது, குதிரைகளா லிழுக்கப்படுவது.

**பண்டிகாரர்** — கொங்கணிவாஸிபர்.

**பண்டிதர்** — திரிபுவன தேவன் காலத்து அவன் சபையிலிருந்து வச்சணந்திமாலையைக் குணவீரபண்டிதர் அரங்கேற்றக் கேட்டவர்.

**பண்டிதன்** — 1. இது வித்வான்களுக்கும் முற்காலத்தில் கோர்ட்டுகளில் இந்து தர்ம சாஸ்திரங்களை நியாயாதிபதிகளுக்கு எடுத்து கூறும் தரும சாஸ்திர வித்வான்களுக்கும் பெயர். இப் பட்டம் அம்பட்டன், ஜோசியன், வைத்தியனுக்கும் வழங்கி வருகிறது.

2. அறத்தின் உண்மை யறிந்தவன். (சுக் - நீ.)

3. திருதராஷ்டிரன் புத்திரன். (பாரா பீஷ்ம.)

**பண்ணன்** — தமிழ் நாட்டுச் சிற்றரசர்களி லொருவன். இவனை மாற்றார்கிழார்மகனர் கொற்றங்கொற்றனர் "தனக்கென வாழாப்பிறர்க் குரியாளன் பண்ணன் சிறுகுடிப் படப்பை" எனப் பாடப்பட்டவன். (அக - நிச.)

**பண்பு** — உயிர், உயிரிலாவாகிய பொருட்களின் குணம். (நன்.)

**பண் வகை** — பண்கள் - பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி. பண் என்பது நிறைந்த நரம்புள்ளது. பாலையாழ்த்திறம் - என்பது குறைந்த நரம்புள்ளது. அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி, ஆசான். பாலையாழ்த்திறத்தின் வகை - தக்கராகம், அந்தாளிபாடை, அந்தி, மன்றல், நேர்திறம், வராடி, பெரியவாடி, சாயரி, பஞ்சமம்,

திராடம், அழுவகு, தனுசி, சோமராகம், மேகராகம், துக்காகம், கொல்லிவராடி, காந்தாரம், சிகண்டி, தேசாக்கிரி, சுருதி, காந்தாரம். குறிஞ்சியாழ்த்திறம் - நைவளம், காந்தாரம், படுமலை, மருள், அயிர்ப்பு, பஞ்சுரம், அராறு, செந்திறம். குறிஞ்சி யாழ்த்திற வகை - நட்டபாடை, அந்தாளி, மலகரி, விபஞ்சி, காந்தாரம், செருந்தி, தௌடி, உதயகிரி, பஞ்சுரம், பழம்பஞ்சுரம், மேகராகக்குறிஞ்சி, கேதாரி, குறிஞ்சி, கௌவாணம், பாடை, சூர்துங்கராகம், நாகம், மருள், பழந்தக்காரம், திவ்ய காராடி, முதிர்ந்தஇந்தளம், அநுத்ரபஞ்சமம், தமிழ்க்குச்சரி, அருட்புரி, நாராயணி, நட்டராகம் ராமக்கிரி, வியாழக்குறிஞ்சி, பஞ்சமம், தக்கணுதி, சாவகக்குறிஞ்சி, ஆந்தாளி. மருதயாழ்திறம் - நவிர், வடுகு, வஞ்சி, செய்திறம். மருதயாழ்த்திறவகை - தக்கேசி, கொல்லி, ஆரியகுச்சரி, நாகத்வனி, சாதாரி, இந்தளம், தமிழ்வேளர், கொல்லி, காந்தாரம், கூர்ந்தபஞ்சமம், பாக்கழி, தத்தளபஞ்சமம், மாதுங்கராகம், கௌசிகம், சீகாமரம், சாரல், சாங்கிமம். செவ்வழியாழ்த்திறம் - நேர்திறம், பெயர் திறம், சாதாரி, முல்லை செவ்வழியாழ்த் திறவகை - குறண்டி, ஆரியவேளர், கொல்லி, தனுக்காஞ்சி, இயந்தை, யாழ்பதங்காளி, தொண்டைக்கிரி, சீவனி, யாமை, சாளர், பாணி, நாட்டம், தாணு, முல்லை, சாதாரி, பைரவம், காஞ்சி, மன்னுமந்தாரம். பண்திறம்பையுள், காஞ்சி, படுமலை இம்மூன்றும் (103) வகைப்படும். இன்னும் நேர்திறம் - துக்காகம் எனவும், காந்தார பஞ்சமம் - ஊழ்ப்பு எனவும், சோமராகம் - குறுங்கலி எனவும், காந்தாரம் - சாரல் எனவும், நட்டபாடை - நைவளம் எனவும், பழம்பஞ்சுரம் - பஞ்சுரம் எனவும், கவிவாணம் - படுமலை எனவும், அநுத்திரபஞ்சமம் - அயிர்ப்பு எனவும், குறிஞ்சி - அராறு எனவும், செந்துருதி - செந்திறம் எனவும், தக்கேசி - நவிர் எனவும், வடுகு - இந்தளம் எனவம், பாக்கழி - வஞ்சி எனவும், சிகண்டி - செய்திறம் எனவும், சாதாரி-முல்லை எனவும, நேர்திறம் - புறநீர்மை எனவும் கூறுவர்.

**பதகர்** — நீலகிரியிலுள்ள மலைநாட்டார்.

**பதங்கன்** - 1. சண்முகசேனாவீரன்.

2. இவன் நராந்தகன் ஏவலால் விதுலனுடன்கூடிக் காசிப்பட்டணஞ் சென்றிருந்த மகோற்கடருடன் யசனருரை வருத்தி மகோற்கடரால் இறந்தவன். நராந்தகன் சிறியதந்தை.

**பதங்கி** — காசிபன்றேவி, தக்ஷன் குமரி, பக்ஷிகளைப் பெற்றவள்.

**பதசக்தி விருத்தியைக் கிரகித்தற்கேது**—(8) வியவகாரம், உபதேசம், உபமானம், கோசம், வியாகரணம், விவரணம், சந்நிதானம், வாக்கியசேஷம் என்பன.

**பதஞ்சலி** — அத்திரியின்றேவியாகிய அநசூயையிடம் பிறந்தவர். இவர் ஆதிசேடன் அவதாரம். தாருகவனத்தில் சிவமூர்த்தியின் ஆநந்த நடனதரிசனந் தரிசித்த விஷ்ணுமூர்த்தி தனித்து ஆதிசேஷன்மீதிருந்து பரவசப்பட்டுப் புளகாங்கிதம் அடைந்தனர். இதைக்கண்ட சேடன் விஷ்ணுமூர்த்தியை நோக்கி இப்புளகிதத்திற்குக் காரணமென்னவென்றனர். விஷ்ணுமூர்த்தி காரணங்கூறச் சேடன் அத்திருநடன தரிசனங்காண ஆவல்கொண்டு சிவமூர்த்தியை யெண்ணித் தவஞ்செய்கையிற் சிவமூர்த்தி பிரமன்போல் வந்து சேடனைநோக்கி யாது வேண்டுமென்றனர். சேடன் நாம் உம்மிடத்தில் யாதும் வேண்டோமென்று தவந் தொடங்குகையில் சிவமூர்த்தி தரிசனந்தந்து யாது வேண்டுமென்றனர். சேடன் பணிந்து தாம் அறியாது செய்தற்கு க்ஷமைவேண்டிச் சுவாமி அடியேன் நடனதரிசனங் காண விரும்புகின்றேன் எனச் சிவமூர்த்தி சேடனைநோக்கி நீ அநசூயையிடம் குழந்தையாய் வளர்ந்து தில்லையடைந்து அவ்விடம் முன்பே நடனதரிசனங் காணத் தவஞ்செய்திருக்கும் வியாக்கிரபாதமுனிவருடன் இருக்க, நாம் அவ்விடம் நடனதரிசனம் தருகிறோமென மறைந்தனர். அவ்வகையே சேடன் ருதுஸ்நானஞ் செய்து சிவத்தியானத்துடன் அஞ்சலிசெய்து நிற்கும் அநசூயையின் கரத்தில்விழ அநசூயை பாம்பெனக் கையெடுக்கப் பாதத்தில் விழுந்து பதஞ்சலியெனக் காரணப்பெயரடைந்து சிதம்பரமடைந்து வியாக்கிரபாதருடனிருந்து சிவமூர்த்தியின் நடனதரிசனங்கண்டு களித்துப் பாணினிசூத்திரத்திற்குப் பாஷ்யம், இன்னும் பல நூல்கள் இயற்றியவர். (கோயிற் - புராணம்.)

**பதஞ்சலிமுனிவர்** — தம் பாஷ்யத்தில் சந்திரகுப்தன் புஷ்பமித்திரன் சபையையும் எடு

த்துதகரித்தலால் இவர் அவ்வரசர் காலத்திற்குப் பின்னவரெனலாம்.

**பதஞ்சலி முனிவர் ஸ்தோத்திரம்** — திருமணம் நிகழ்ந்த பின்பு நடன தரிசனஞ் செய்த பதஞ்சலிமுனிவர் சோமசுந்தரக் கடவுளை ஸ்துதித்தனவாகச் சில சுலோகங்கள் மதுரை முதலிய இடங்களில் வழங்குகின்றன; அவை பதஞ்சலிக்கு நடம் புரிந்ததை வலியுறுத்தும். (திருவிளை.)

**பதடிவைகலார்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவர் தாம் பாடிய குறுந்தொகை (323)இல் "பதடி வைகல்" எனப் பாடியிருத்தலி னிவர்க்கு இது பெயராயிற்று.

**பதம்** — எழுத்துக்கள் தனித்தேனும் தொடர்ந்தேனும் பொருளைத் தெரிவிப்பது. இது பிரிக்கப்படுமாயின் பகுபதம், பிரிக்க முடியாததாயின் பகாப்பதம். இப் பகுபதம் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என ஆறுருப்புகள்.

**பதரபாசனம்** — இது ஒரு தீர்த்தம். இதில் ஒருகாலத்துப் பன்னிரண்டு வருடம் க்ஷாமம் நேரிட ரிஷிகள் இத் தீர்த்தம் விட்டு உணவின்பொருட்டு இமயஞ் சென்றனர். தனித்த அருந்ததி இத்தீர்த்தக் கரையில் தவமேற்கொண் டிருந்தனள். சிவமூர்த்தி இவளது நியமமறிய இருடியாய் வந்து இலந்தைப் பழங்களைத் தந்து பாகஞ் செய்யக் கூறினர். இவள் அந்தப் பழங்களைப் பாகஞ் செய்துகொண்டே வந்த இருடியைக் கதைகள் சொலக் கேட்டனள். இக் கதையால் பன்னிரண்டு வருடங்கள் சென்றன. ருஷி அருந்ததியை ஆசீர்வதித் தேகினர். க்ஷாமம் நீங்கியது. ருஷிகள் வந்து சேர்ந்தனர். தீர்த்தம் சிவபிரானால் ஆசீர்வதிக்கப்பட்டது. (பார - சல்வி.)

**பதரி**—1. வடக்கில் இருடிகள் தவஞ்செய்த இடம். இதில் நரநாராயணர் தவஞ்செய்தனர். பின்னும் வியாசர் முதலியவர் இவ்வனத்தில் இருந்தனர் இது இலந்தைவனம்.

2. Badarinath. The temple of Nara-narayana is built on the bank of the Bishen-Ganga (Alakananda). It was the hermitage of the celebrated Rishi Vyasa.

**பதரீபாசனம்** — ஒரு புண்ணியதீர்த்தம்.

**பதவடிவம்**—(32) சகளம், பேசகம், பீடம், மஹாபீடம், உபபீடம், உக்ரபீடம், ஸ்தண்டிலம், மண்டூகம், பரமீசம், ஆசனம், ஸ்தானீயம், தேசியம், உபயசண்டகம், பத்ராசனம், பத்மகர்ப்பம், திரியுதம், விருத்தபோகம், கர்ணாஷ்டகம், கணிதபாதகம், சூர்யவிலாசம், சுசம்ஹிதம், சுப்ரதிகாந்திகம், விசாலம், விப்ரகர்ப்பம், விச்வேசம், விபுலபோகம் விப்ரகாந்தம், விசாலாக்ஷம், விப்ரபுத்தி, விச்வசாரம், ஈஸ்வரகாந்தகம், இந்திரகாந்தகம். (ஸ்ரீ - காமிகாகமம்.)

**பதவி** — (4) சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்யம், இவற்றுள் கடவுளின் உலகம் அடைதல் சாலோகம். கடவுளின் சமீபத்தில் இருத்தல் சாமீபம். கடவுளின் உருவு அடைதல் சாரூபம். கடவுளை ஒன்றி வாழ்தல் சாயுச்யம்.

**பதரிகாச்ரமம்** — இங்கு நரனுடன் நாராயண னிருக்கிறான். இவ்விடம் கொடுக்கப்படும் தானமும் தவமும் செபிக்கப்பட்ட மந்திரமும் விசேஷ பலனைத் தருகிறது. விசேஷமாய் அவ்விடம் மஹாதேவர்க்குப் பிரீதியான தீர்த்தமாகிய கங்கை யிருக்கிறது. இவ்விடம் பிதுர்கர்மம் செய்பவன் தன் குலத்துப் பிதுர்க்களையெல்லாம் துன்பத்தினின்று கடக்கச் செய்கிறான். இங்கு சுடுகையுடன் கூடிய தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், இதில் சந்திர சூரியர்கள் முதலியோர் கோவில்களிருக்கின்றன. (பா-மா.)

**பதிற்றுப்பத்து** — ஒரு தமிழ் நூல், பத்து கடைச்சங்கத்து புலவர்களியற்றியது. இது எட்டுத் தொகையுள் நான்காவது. இது சேரர் வளம் முதலியவற்றை நன்கு தெரிவிப்பது. இது ஒவ்வொரு புலவரும் பப்பத்தாகச்செய்தமையின் இப்பெயர் பெற்றது. இதில் முதலும் கடையுமிறந்தன. இரண்டாம்பத்து-இமயவரம்பன்நெடுஞ் சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார்பாடி உம்பற்காட்டு ஐஞ்ஞூறூர் பிரமதாயமும் (கூஅ) யாண்டு தென்னாட்டுள் வருவதனிற் பாகமும் பெற்றது. மூன்றாம்பத்து - இமயவரம்பன் தம்பி பல்யானைச்செல் புகழ்க் குட்டுவனைப் பாலைக் கௌதமனார் பாடிச் சுவர்க்கம்பெற்றது. நான்காம்பத்து - களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனார்பாடி நாற்பது நூறாயிரம்பொன் பரிசிலும் அவனாள்வதிற் பாகமும்பெற்றது. ஐந்தாம்பத்து - கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பரணர் பாடி உம்பற்காட்டு வாரியையும் அவன் மகன் குட்டுவன்சேரலையும் பரிசில்பெற்றது. ஆறாம்பத்து - ஆடுகோட்பாடு சே

வாதனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடி ஒன்பதுகாப்பொன்னும் நூறாயிரம் காணமும்பெற்று அவன் பக்கத்திருத்தல் கொண்டது. ஏழாம்பத்து - செல்வக்கடுங்கோவாழியாதனைக் கபிலர்பாடி நூறாயிரம் காணமும் அவன் மலைமீதேறிக் கண்டு கொடுத்தநாடும் பெற்றது. எட்டாம்பத்து - தகடூரெறிந்த பெருஞ்சேரலிரும்பொறையை அரிசில்கிழார்பாடி ஒன்பது நூறாயிரம்காணம் பரிசில்பெற்றது. ஒன்பதாம்பத்து - குடக்கோ இளஞ்சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர்கிழார் பாடி முப்பத்தீராயிரம் காணம் பெற்றது. இது, புறப்பொரு ளிலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்துள்ளது. சேரர் குலத்தாருடைய பெருமையை நன்றாக விளக்கும். ஒவ்வொரு சேரர்மீது ஒவ்வொரு புலவர் பப்பத்துச் செய்யுளாகப் பாடிய நூறு செய்யுட்களை யுடைமையின் இந் நூல் "பதிற்றுப்பத்து" என்னப்பெற்றது.

**பதினெண்கணத்தவர்** — அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர், போகபூமியர். (பிங்கலம்.)

**பதினெண்கீழ்க்கணக்கு** — 1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னாநாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழிநாற்பது, 7. ஐந்திணையைம்பது, 8. ஐந்திணையெழுபது, 9. திணைமொழியைம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. நூற்றைம்பது, 12. திருக்குறள், 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழமொழி, 16. சிறுபஞ்சமூலம், 17. முதுமொழிக்காஞ்சி, 18. ஏலாதி என்பனவாம். இப்பதினெட்டில் திணையைப்பற்றிய நூல் ஒன்று இருத்தல்வேண்டும். அதன் பெயர் தெரியவில்லை.

**பதினோராந்திருமுறை** — இது திருவாலவாயுடையார், சேரமான் பெருமாணாயனாருக்கு அருளிச்செய்த திருமுகப்பாசுரம். காரைக்காலம்மையார் அருளிய திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம், திரு இரட்டைமணிமாலை, அற்புதத் திருவந்தாதி, ஐயடிகள் காடவர்கோன் அருளிய க்ஷேத்திரத் திருவெண்பா, சேரமான் பெருமாணாயனார் அருளிய பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திரு ஆதியுலா, நக்கீரதேவர் அருளிய கைலைபாதி காளத்திபாதியந்தாதி, திருவீங்கோய்மலை யெழுபது, திருவலஞ்சுழிமும்மணிக் கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந் தேவபாணி, கோபப்பிரசாதம், காரெட்டு, போற்றிக் கலிவெண்பா, திருமுருகாற்றுப் படை, திருக்கண்ணப்பர் திருமறம், கல்லாடர் அருளிய திருக்கண்ணப்பர் திருமறம், கபிலதேவநாயனார் அருளிய மூத்தநாயனார் இரட்டைமணிமாலை, சிவபெருமான் திரு இரட்டைமணிமாலை, சிவபெருமான் திருவந்தாதி, பரணதேவநாயனார் அருளிய சிவபெருமான் திருவந்தாதி, இளம் பெருமானடிகள் அருளிய சிவபெருமான் திருமும்மணிக்கோவை, அதிராவடிகள் அருளிய மூத்தபிள்ளையார் திருமும்மணிக்கோவை, பட்டினத்தடிகள் அருளிய கோயினான்மணிமாலை, திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவிடைமருதூர் திருமும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபாவொருபது, நம்பியாண்டார் நம்பியருளிய திருநாரையூர் விநாயகர் திருவிரட்டைமணிமாலை கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம், திருத்தொண்டர் திருவந்தாதி, திருஞானசம்பந்தர் திருவந்தாதி, திருஞான சம்பந்தர் திருச்சண்பை விருத்தம், திருஞானசம்பந்தர் திருமும்மணிக்கோவை, திருஞானசம்பந்தர் திருவுலா, திருக்கலம்பகம், திருத்தொகை முதலிய பிரபந்தங்களின் திரட்சி.

**பதினொருதிசைகள்** — 1-வது ஏழுகிரகங்களுக்கும் விதித்த நக்ஷத்ரதிசைகள், 2-வது உற்பன்னதிசை, 3-வது மிருத்யுதிசை, 4-வது பிராணதிசை, 5-வது ஆதானதிசை, 6-வது வாமதிசை, 7-வது உடுதிசை, 8-வது நிரியாணதிசை, 9 வது மகாப்பிராணதிசை, 10-வது குளிகநிர்யாணதிசை. 11-வது காலசக்ரதிசை.

**பதுமகற்பம்** — பிரமாவுக்குக் கூறிய ஆயுள் முடியுங்காலம்.

**பதுமகாரிகை** — இவள் பிரச்சோதனுடைய தேவிமார் பதினாயிரவருள் முதல்வி. வாசவதத்தையின் நற்றாய். இவள் பெயர் வடமொழி நூலொன்றில் ஸ்ரீமதி யென வழங்கும். (பெ - கதை.)

**பதுமகோமளை** — விச்வகர்மன் பெண், சூரபன்மன் தேவி.

**பதுமசரஸு** — மகதநாட்டிற்கு அருகிலுள்ள ஒரு ஓடை.

**பதுமநாபன்** — ஒரு விஷ்ணுபக்தன், இவனை பக்ஷிக்கவந்த பூதத்தை விஷ்ணு சக்கரம் கொன்றது.

**பதுமநிதி** — தாமரைவடிவினதாகிய ஒருநிதி. பாற்கடலில் தோன்றிய பொருள்களில் ஒன்று.

**பதுமபாதாசாரியர்** — சநந்தனாசாரியருக்கு ஒரு பெயர்.

**பதுமபுராணம்** — இது மகாபுராணம் பதினெட்டனுள் ஒன்று. (ருகு 000) கிரந்தமுள்ளது. இது பிரமத்தோற்றம், பூப்பிரதேசம், சுவர்க்கவிசேஷம், பாதலவிசேஷம், மகாதீர்த்தஸ்நான மான்மியம், நாராயண மந்திரவிசேஷம், முதலியவற்றையுணர்த்தும். இதற்குப்பதுமம்எனவும்பெயர்.

**பதுமவத்தன்** — நளனது மந்திரி.

**பதுமயோனி** — ஒரு லோபிப்பிராமணன். இவனிடம் தேவதத்தன் எனும் வேதியன் வந்து என் வறுமையின் பொருட்டு உணவும் வேட்டியுந் தருகவென், நீ என்னிடம் ஏவல் செய்யின் அவ்வகை தருவேன் என்றனன். தேவதத்தன் உடன்பட்டு ஏவல் செய்து வருகையில் ஓர்நாள் வேட்டிகேட்கக் கடையிலிருக்கிறது கொள்க என்றனன். அதனால் தேவதத்தன் கோபித்து நீ செல்வமிழந்து பலபிறவியடைந்து வேதாளம் ஆகுக எனச்சபித்து நீங்கினன். அவ்வாறே பதுமயோனி அத்தினம் இரவில் கள்ளரால்பொருள் இழந்து பலபிறவியடைந்து வேதாளமாய் ஒரு மரத்திலிருக்கக் காசிக்குச்சென்று தன் மனைவியுடன் வரும் பிரகஸ்யோமன் தேவியைப் பிடித்துக்கொண்டு அப்பிரகஸ்யோமன் மூன்று நாள் பிநாகினி நதியில் தீர்த்தஸ் நானஞ் செய்த பலனைத்தாப் பெற்றுச் சுத்தனாய்த் தெய்வ உருவடைந்தவன். (பெண்ணைநதி புராணம்.)

**பதுமாதன்** — மேகபுர ராசகுமரன்.

**பதுமனார்**—1. வையையிலெறிந்த ஏடுகளில் எதிர்ந்த ஏடுகளிலிருந்த வெண்பாக்களைத் திரட்டிய நாலடியார்க்குப் பால் இயல் அதிகாரம் வகுத்து உரை இயற்றிய தமிழாசிரியர்.

2. கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். இவர் நாலடியார்க்குப் பாலியல் வகுத்தவரல்லர். (குறு - சு.)

**பதுமன்** — 1. பத்மதடாகத்திருந்த ஒருசர்ப்பராசன். பிருகுவென்னும் பிராமணனுக்குச் சூரியமண்டலப் பெருமை கூறியவன்.

2. பிரமதேவனுக்கு ஒரு பெயர்.

3. சண்முகசேனா வீரருள் ஒருவன்.

4. ஒரு அரசன். இவன் தேவி லீலை. இவன் ஒரு பிறப்பில் அரசனாயிருந்து மறுபிறப்பில் வேறு அரசனாகி மற்றொரு பிறப்பில் விரோதனாய் மற்றொரு பிறப்பில் வசிட்டனாயினன். இவன் தேவி அருந்ததியாயினள். (ஞானவாசிட்டம்.)

ரு. அஷ்டமாநாகங்களில் ஒன்று.

**பதுமாக்ஷன்** — கௌசிகரென்னும் பாகவதரையும் அவர் மாணாக்கரையும் ஆதரித்தவன்.

**பதுமாபதி** — தருசக அரசன் தாயினுடைய சகோதரியின் மகள். இவள் தந்தை காசிராசன், தாய் உதயையோடை, அபிமான புத்திரியாகத் தருசகன் தாய் மிகப் பாராட்டி வளர்த்துவந்தமையின் இவள் தருசகன் தங்கையென்று கூறப்படுவாள். இராசகிரியத்தில் ஏழுநாள் நடந்த காமனுடைய விழாவில் வழிபடுதற்குக் காமன்கோட்டத்திற்குச் சென்றபொழுது அக்கோயிலின் வாயிலில் வேற்றுவடிவங்கொண்டு மாணகனென்னும் பெயருடன் நின்ற உதயணனுக்கும் இவளுக்கும் நட்புண்டாகிக் காந்தருவ மணம் முதலில் நடைபெற்றது. பிறகு அவனைத் தன் கன்னிமாடத்திற்கு ஒருவரும் அறியாதபடி அழைத்துவந்து பலநாள் வைத்திருந்தனள். பகைவர் தருசகனோடு போர்செய்தற்கு வந்தபோது உதயணன் புறத்தேயிருந்து வந்தவன் போல வந்து தன்னை இன்னனென்று பலருந் தெரிந்துகொள்ளச் செய்து தோழர்களோடு சேர்ந்து அப்பகைவரை வென்றனன். அதனால் இவள் உதயணனுக்கு மணஞ் செய்விக்கப்பட்டு இரண்டாம்பட்டத் தேவியாயினள். உதயணன் வெற்றியடைந்தபின் பட்டத்தேவிகட்குரிய விருத்தியையும் இவள் பெற்றவள். கற்பிற் சிறந்தவள். பலகாலம் பிரிந்துவந்த வாசவதத்தையுடன் இருக்கும்படி தன் கணவனை வேண்டிய உத்தமி. அவனுடன் ஒரு கலத்திலே அயின்றவள். "வாசவதத்தையின் கோபத்தைத் தீர்த்தற்கு நீ செல்" என்று உதயணன் அனுப்பும்பொழுது "என்செயிர்காணாத தெய்வமாதலி னுயிர்தந்தருள்" என்றும் அவனாற் கூறப்பட்டவள். இவள் வாசவதத்தைபோன்ற தோற்ற முடையவள், சிறந்த குணத்தினள், பிறருடைய குற்றத்தைச் சிறிதும் அறியாதவள்,

னிய சொல்லை யுடையவள், கல்வி கேள்விகளில் சிறந்தவள், தன் மாற்றாளாகிய வாசவதத்தைபாற் பொறாமை கொள்ளாதவள், அவளுக்கு அநுகூலத்தையே தேடுபவள். இராசனை, ஈராவதி, யாப்பியாயினி என்பவர்கள் இவளுடைய உயிர்த் தோழியர்கள். இவள் பெயர் பதுமாநங்கை, பதுமாவதி யெனவும் வழங்கும். (பெருங்கதை.)

**பதுமினி** — வியனைக் காண்க.

**பதுமுகம்** — சிவகன் தோழரில் ஒருவன்.

**பதுமை** — 1. ஸ்ரீ தத்தன் மனைவி.

2. சிவகன் மனைவியரில் ஒருத்தி.

3. இவள் ஒரு தூதி. உதயணன் வெற்றிபெற்றுக் கௌசாம்பி நகரத்தில் வாசவதத்தையுடன் அரசாட்சி செய்துகொண்டிருக்கும்பொழுது அவளுடைய அன்பைப் பெறவேண்டி அவனுக்கும், அவளுக்கும் பல வேலைக்காரர்களுடன் அரும் பொருள்கள் பலவற்றை அனுப்பிய பிரச்சோதனனால் சமாதானமாகப் பேசுதற்கு அவளிடம் அனுப்பப்பட்டவள். இவள் அங்ஙனமே உதயணனைப் பார்த்தபொழுது பேசித் தன் தலைவன்மீது அவனுக்கிருந்த மனவருத்தத்தைப் போக்கினவள். (பெ-க.)

4. ஒரு வேட்டுவச்சி, சிவபூசா நிவேதனஞ் செய்த சேட பரிகலபரிசத்தால் மறுமையில் நற்கதி யடைந்தவள். (சிவர.)

**பத்தராய்ப்பணிவார்** — இவர்கள் தொகையடியவர். சிவதரிசனஞ் செய்தல், சிவகதைகேட்டல், முதலியவைகளையே பொருளாகக்கொண்டு திருவாரூரில் புற்றிடங்கொண்ட சிவபிரானிடத் தன்பு பூண்டு முத்தியடைந்தவர். (பெரிய-பு.)

**பத்தர்** — இவர் செட்டி வகுப்பினர். லிங்கதாரிகள், சில தட்டாரும் இந்தப் பட்டம் பெறுவர்.

**பத்திபாலன்** — 1. யாமங் காப்போரை மாற்றி யமைக்குந் தொழில் மேற்கொண்ட படைத்தலைவன். (சுக் - நீ.)

2. ஐந்து அல்லது ஆறு காலாட்களுக்குத் தலைவன். (சுக் - நீ.)

**பத்திய பதார்த்த வகை**—பொன்னாங்காணி, சிறுகீரை, அன்றுருக்கிய பசுநெய், சுண்டைக்காய்வற்றல், கோவைக்காய்களின் வற்றல், அவரை, முருங்கை, பனிப்பயறு, மாவடு, அத்திப்பிஞ்சு, வாழைக்கச்சல், விரால், குறவை, ஆமை, மலங்கு, கடற்குரவை, தேளி, அயிரை, சன்னை, சுதும்பு, நெய்த்தோலி, உடும்பு, சுரு, திருக்கை, காடை, கௌதாரி, ஊர்க்குருவி, வெள்ளாட்டுவற்றல், குறவைக்கருவாடுகளுமாம். (தேரையர்.)

**பத்தியம்** — இது, வியாதிப்பட்டவன் மருந்துண்கையில் உண்ட மருந்தின் குணம் கெடாமல் மருத்துவன் கூறியபடி உணவும் மற்றையவுங் கொண்டிருத்தல்.

**பத்தியன்** — கபந்தருஷியின் மாணாக்கன், இருடி.

**பத்திரகர்மன்** — சுக்கிரன் புத்திரன்.

**பத்திரகாளி** — 1. காளிக்கு ஒரு பெயர்.

2. பத்திரைக்கு ஒரு பெயர்.

**பத்திரகாளிபீடம்** — சத்திபீடங்களில் ஒன்று.

**பத்திரகிரிராஜர்** — இவர் பத்ரகிரி அரசர், இவர் அரசளிக்கையில் பட்டினத்தடிகள் அவ்வூர்க்காட்டுப் பிள்ளையார் கோவிலில் நிஷ்டை கூடியிருக்க இவ்வரசர் மாளிகையில் திருடப்போம் கள்வர் எமக்குப் பொருள் அகப்படின் ஆபரணஞ் சாத்துகிறோமென்றபடி கள்வர் பொருள் கொண்டு மீளுகையில் ஆபரணஞ் சாத்த அது நிஷ்டை கூடியிருந்த பட்டினத்தடிகள் கழுத்தில் விழுந்தது. கழுத்தில் பூண்ட முத்தாரத்துடன் வெளிவந்த பட்டினத்தடிகளைக் காவலர் கள்வனென்று அரசரிடம் விட அரசர் அடிகளைக் கழுவிலேற்றக் கட்டளையிட்டுத் தாமுந் தொடர்ந்து கழுமரத்தை யடைந்தனர். பட்டினத்தடிகள் சிவமூர்த்தியைத் தியானித்துக் கழுமரத்தை நோக்க மரம் பற்றியது. அரசர் துணுக்குற்றுப் பணிந்து அடிமை பூண்டு அடிகள் கட்டளைப்படி துறவு பூண்டு திருவாரூரடைந்து பிக்ஷைசெய்து ஆசாரியருக்களித்துச் சிவயோகிக்கு எச்சில் அளித்ததால் நாயுருக்கொண்டு தம்மை யடைந்த நாய்க்கும் சிறிது அன்னம் அளித்து வந்தனர். இவ்வகை இருக்கையில் சிவமூர்த்தி சித்தவுருக்கொண்டு பட்டினத்தடிகளிடம் பிக்ஷைக்கு எழுந்தருள அடிகள் பத்திரகிரியான் சமுசாரி அவனிடம் செல்க என்றபடி அரசனிடம் எழுந்தருளிப் பட்டினத்தடிகள் திருவாய்மலர்ந்த சொற்களைக்கூறியருளினர். அரசர் இவ் வோடும் நாயுமல்லவோ என்னைச் சமுசாரியாக்கினவென்று ஓட்டை நாயின்மீது எறிந்தனர். அந் நாய் உயிர் நீங்கிக் காசிராசன் மகளாய்த் தம்மை யடைய, ஆசாரியரிடங்காட்டி அவர் அநுக்

கிரகத்தாற் சோதியில் கலந்தனர். பின்னும் இவர் ராஜாவாயிருக்கையில் (கூ ) விவாகஞ்செய்து, பிதாவாகிய கோவிந்த சுவாமி, பிரமவீரியம் சூத்திரயோனியில் உற்பவித்ததால் நரகமென்று சொல்லக் கேட்டு அரசை விட்டுத் துறவடைந்து பட்டினத்தடிகளை அடைந்தவர் எனவுங் கூறுவர்.

**பத்திரசிரவசு** — பத்திராசுவ வருஷம் ஆண்டவன்.

**பத்திரசேயனன்** — இருஷபனுக்குச் சயந்தியிடம் உதித்த குமரன்.

**பத்திரசேனன்** — 1. கண்ணனுடன் விளையாடிய கோபால குமரன்.

2. (சங்.) மகிஷ்மான் குமரன் மகிஷ்மந்தன், இவன் குமரர் துர்மதன், தனகன்.

3. இக்ஷுவாகு வம்சத்தரசன். பகையரசரைச் சிவபூசாபலத்தால் வென்றவன்.

4. தருமன் தந்தை, காச்மீரத்தரசன்.

**பத்திரசோழன்** — இவன் கல்யாணசோழன் மகன். இவன் (எ0) வருஷம் அரசாண்டு சிவாக்ஞையால் சிவபதமடைந்தவன். இவனுடன் சோழவம்சம் அற்றுப்போய் விட்டது. இச்சோழர்கள் கலியுகத்தில் (ககூசு) வருஷம் ஆண்டார்கள்.

**பத்திரபாகு** — வசுதேவருக்குப் பௌரவியிடம் உதித்தகுமரன். இவனுக்குப் பத்திரன் எனவும் பெயர்.

**பத்திரமாது** — குரோதவசையின் குமரி.

**பத்திரமித்திரன்**—பத்மஷண்டம் எனும் நகரத்து வைசியன். இவன் தன்னுடு விட்டன்னிய நாடு சென்று செல்வமடைந்து சிம்மபுரமடைந்து அந்நகரத்துக் குடிபுக எண்ணித் தன் பொருளை சிம்மசேநராஜனது மந்திரியாகிய சத்தியகோஷனிடம் ஒப்புவித்துத் தன்னுடுசென்று திரும்பி வந்து கேட்க மந்திரி மறுத்துத் தன்புறுத்த அரசனும் வணிகன் புலம்பலைக் கேளாதிருக்க அரசன் தேவியாகிய இராமதத்தைச் சூதினுல் மந்திரியிடமிருந்த செல்வத்தை வாங்கித்தந்து சத்தியகோஷனைச் சிக்ஷித்தனள். பின் பத்திரமித்திரன் வரதர்மரிடமுபதேசம் பெற்று நன்மை பெற்றனன். இவன் மறுஜன்மத்தில் இராமதத்தையிடம் சிம்மசந்திரனுகிப் பிறந்தான். இவனது முதற் பிறப்பு பத்திரமித்திரன் இரண்டாவது சிம்மசந்திரன், பின் அஹமித்திரன், பின் சக்ராயுதன்.

**பத்திரவகைகள்** — இவைகள் அரசாட்சிகளில் காரியக்காரரால் எழுதப்படும் பத்திரங்கள். செய்ல்முறைப் பத்திரம் - இது வரவு செலவை யெழுதுவது, வெற்றி பத்திரம் - வாதி பிரதிவாதிகளின் தீர்மானமெழுதியது, ஆஞ்ஞா பத்திரம் - நாடு காப்பாளர்முதலியவர்க்குக் கட்டளைகொடுக்கும் பத்திரம், பிரஞ்ஞாபன பத்திரம் - பெரியோர்க்கு வணக்கமாக அறிவிக்கும் பத்திரம், சாசன பத்திரம் - அரசன் தன் முத்திரையோடு தன் ஆணைவழிநின்று ஏவலாளர் ஏவல் செய்யக் கொடுப்பது. பிரசாதன பத்திரம் - அரசன் ஒருவன் செய்த வேலையினுனுதல் வீரச்செயல் முதலியவற்றுலு மகிழ்ந்து அவனுக்களித்த நில முதலியவற்றைக் குறிப்பிடும் பத்திரம். போக பத்திரம் - ஒருவனுக்கு இப்பொருளை அனுபவித்துக்கொள் என எழுதிக் கொடுத்தது. கரத பத்திரம் - இவனுக்கு இவ்வளவு வரியென எழுதிக் கொடுத்தது. உபாயன பத்திரம் - கையுறையாக கொடுக்கப்படும் பொருளைப் பற்றியது. புருடாவதிக பத்திரம் - இப்பொருள் இவனன்றி யிருவர் மூவர் மக்களால் அநுபவிக்கற்பாலது என எழுதித்தந்தது. காலாவதிக பத்திரம் - இன்ன பொருளை இவ்வளவுகால மிவர்கள் அநுபவிக்கலாமென யெழுதித்தருவதாம். பாக பத்திரம் - உடன் பிறந்தார் முதலியோர் மனவொற்றுமையுடன் குடும்பப் பொருளைக் கூறிட்டுக்கொள்ளும் பத்திரம். தான பத்திரம் - நில முதலியவற்றைச் சத்தியமாக இடையூறின்றி நன்கொடையாக உதவி யெழுதியது. கிரய பத்திரம் - இல்ல முதலியவற்றை அவற்றிற்கு தக்க விலை பெற்று உரியவன் எழுதித்தருவது. சாதி பத்திரம் - பொருளையீடுகொட்டியெழுதியது. சத்தியலேகியம் - ஊரார் ஒருங்கு கூடியொற்றுமைப் பொருட்டு எழுதுவது. சம்விற்பத்திரம் - அரசர்கள் தம்முள் பகைமையின்றி அரசியல் தருமங்களைக் காத்தற்கெழுதிக் கொள்வது. கடன் பத்திரம் - வட்டிதருவதாகப் பொருள் பெற்றுக் கொண்டு சாக்ஷிகளுடன் எழுதிக்கொள்வது. சுத்தி பத்திரம் - ஒருவனைப் பற்றிய பழி ஆதாரமின்மையால் விலக்கப்பட்டுழி சாக்ஷிகளுடன் எழுதுவது. சாமயிக பத்திரம் - வர்த்தகர் தங்கள் பொருள்களைதொழிற் பொருட்டு ஒன்று கூடிச் சேர்த்து அதன் பொருட்டு எழுதிக் கொள்வது.

சம்மதி பத்திரம் - வாதி பிரதிவாதிகள் நீதி மன்றத்தவர் முதலிய அதிகாரிகளால் எழுதப்படாமல் தாங்களே சம்மதித்து எழுதிக் கொள்ளும் பத்திரம். மங்கல பத்திரம் - க்ஷேமபத்திரம் எனவும் பெயர். திரு, மங்கலம், எனுஞ் சொற்களுடன் தலைவனையும் பணியாளனையும் அவன் தொழிலையும், அடிமையின் வணக்கத்தையும், தலைவனது வாழ்த்தையும், குறிப்பிட்டு தலைவனும் அடிமையும் எழுதிக்கொள்வது. அபியோக பத்திரம் — ஒருவன் தனக்குச்செய்த தீங்கை விளக்கமாகத் தெரிவிப்பது. இதற்குப்பாஷாபத்திரம் எனவும்பெயர். ஆயவிய பத்திரம் - வரவு செலவு எச்சங்களை அறிவிப்பது. பத்திரம்-இராஜகீயம், லௌகீகம் என இருவகை. இன்னும் தன்கையாலெழுதப்படுவன, பிறர்கையாலெழுதப்படுவன என இரண்டு வகைப்படும். அவை சான்றுடையன, சான்றில்லன என இரண்டு வகைப்படும். இலௌகீக பத்திரம்-பாகம், தானம், விலைகொண்டுவிற்றல், விலைகொடுத்துக் கொள்ளல், பெறுதல், தொழில் நடத்தல், கடன் என (எ) வகைப்படும். இராஜகீய பத்திரம் - கட்டளையிடுதல், அறிவித்தல், தீர்மானித்தல், என (ந) வகைப்படும். (சுக் - நீ.)

**பத்திரவடம்** — கைலாச பர்வதத்திலுள்ள ஒரு ஆலவிருக்ஷம். (பார - வனபர்வம்).

**பத்திரவதி** — பரிட்சித்தின் தேவி. புத்திரன் ஜனமேஜயன்.

**பத்திரவேகை** — சந்திராபீடனது தாம்பூல கரங்கத்தை தாங்குபவள்.

**பத்திரன்** — 1. சுக்கிரன் குமரன். அசுர புரோகிதன்.

2. யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷிணையிடம் உதித்தகுமரன்.

3. அரக்கனிடஞ் சென்ற சீதையை இராமமூர்த்தி வைத்து இல்வாழ்க்கை நடத்துகிறனெனக் கூறியவன்.

4. சண்முக சேநாவீரன்.

5. பத்திரபாகுக்கு ஒரு பெயர்.

6. விசுவசேநனைக் காண்க.

7. ஒரு அரசன். சிவபெருமானிடம் துவஜம் பெற்று அக்கொடியினை நாட்டி அன்னமிட்டு வருகையில் ஒவ்வேதியர் ஒருவர் உண்ண அத்துவசம் விழக்கண்டு சிவபெருமான் சொற்படி உயர்ந்தோரைத் தெரிந்துகொண்டவன்.

**பத்திராக்கன்** — வசுதேவருக்குக் தேவகியிடம் உதித்தகுமரன்.

**பத்திராங்கி** — காசிபர் பௌத்ரி. சுரதையின் பெண், மாங்களையும் கொடிகளையும் பெற்றவள்.

2. (சூ) குவலயாசுவன் குமரன்.

**பத்திராசுவ வருஷம்** — மேருமலைக்குக் கீழ்ப்புறத்தில் பத்திராசுவனால் ஆளப்பட்ட பூமி.

**பத்திராசுவன்** — 1. அக்னியித்திரனுக்குப் பூர்வசித்தியிடம் உதித்தகுமரன். இவன் தேவிபத்திரை.

**பத்திராதன்** — 1. பிருகத்கர்ணன் தந்தை. சம்பன் பேரன்.

2. பாதன் குமரன்.

**பத்திராதேவி** — 1. குபேரன் மனைவி.

2. வசுதேவர் மனைவி.

**பத்திராபதி** — இஃது ஒரு பெண்யானை, பிரச்சோதனனுக்குரியது, மிக்கவேகமுடையது; ஒப்பற்றது; ஊர்ந்து செல்லும்படி உதயணனுக்குப் பிரச்சோதனனுற் கொடுக்கப்பட்டது. நீர் விழவில் இதன் மேலே தான் வாசவதத்தையை ஏற்றிக் கொண்டுஉதயணன் தன் நகர் சென்றனன். செல்லுகையில் காலகூடமென்னும் வியாதியால் இடையே இது வீழ்ந்து இறந்து விட்டது. கோசாம்பிநகரத்தை அடைந்து வாழ்ந்துகொண் டிருக்கையில் உதயணன் இதன் ஞாபகார்த்தமாக இதுவீழ்ந்த இடத்திலும் கோசம்பியிலும், கோயில் சமைத்து அவற்றில் இதன் வடிவங்களையமைப்பித்து நித்தியபூசை முதலியவற்றை நடத்திவரும்படி செய்வித்ததன்றி இதன்பெயரால்அன்னசத்திரமும், தண்ணீர் பந்தர் முதலியனவும் அமைப்பித்தனன். இப்பெயர் பத்திராவதியெனவும் வழங்கும். பத்திராபதி யென்னும் தெய்வப்பெண் குபேரன் சாபத்தால் இந்த யானையாகப் பிறந்து இறந்த பின்பு பழைய உருவத்தை யடைந்தாளென்று ஒரு வரலாறு காணப்படுகின்றது. இறக்கும் பொழுது உதயணன் தனக்குச் செய்த மந்திரோபதேசத்தை நினைத்து பத்திராபதி யென்பவள் அவனுக்குச் சந்ததி உண்டாக வேண்டுமென்று குபேரன் முதலியவர்களிடத்தில் வரம்பெற்று அதனுற் கருப்பவதியாயிருந்த வாசவதத்தையின் மயற்கையைத் தீர்க்கும் பொருட்டு ஒரு தச்சனுகவந்து விமானமொன்றைச் செய்வித்து அதில் அவளையும், உதயணன்

முதலியவர்களையும் ஏற்றிச் சென்றுகாட்ட வேண்டிய இடங்களைக்காட்டி அவர்களுக்கு மகிழ்ச்சியளித்து விடைபெற்றுத் தன்னிடம் சென்றனள். (பெ - கதை.)

**பத்திராயு** — இவன் ஒழுக்கங்கெட்ட பிராமணச் சிறுவன். சிவயோகி யொருவரையுபசரித்ததால் மறுபிறப்பில் சந்திராங்கதன் என்னும் அரசன் குமரனாகப் பிறந்து தாயின் சக்களத்திகளால், கருப்பத்திருக்கையில் விஷமூட்டப்பெற்றுத் தாயுங் குமரனும் நீங்கா நோயினராய்க் காட்டில் விடப்பட்டனர். இப்படியிருக்க முன் இந்த இராசகுமாரன் பிராமணச் சிறுவனாயிருக்கையில் வந்த சிவயோகி தோன்றி விபூதி கொடுத்து இருவரையும் நிர்மல தேகிகளாக்கினர். இவ்வகையிருக்கையில் அயல் நாட்டரசர் சந்திராங்கதனை வென்று தேர்க்காலிற்கட்டிச் செல்வதை யுணர்ந்து பத்திராயு, அரசனைமீட்டுத் தாயிடம்வரப் பகையரசர் இவனுக்குப் பெண்ணினைக் கொடுத்துத் தகப்பனிடஞ் சேர்த்தனர். சிவபத்திமானாயிருக்கும் பத்திராயு வேட்டைக்கு வருகையில் உமாமகேசர் பிராமண உருக்கொண்டுவரப் புலி யொன்று அந்தப் பிராமண தம்பதிகளைத் துரத்தியது. தம்பதிகள் இருவரும் அரசனிடம் அபயமடைந்தும், புலி பிராமணன் மனைவியைப் பிடித்துக்கொண்டு குகைக்குட் செல்லப் பிராமணன் அரசனை நோக்கி நீ அம்புடனிருந்ததை யெண்ணி உன்னையடைந்தும் காவாததால் உன்னைச் சபிக்கிறேன். அல்லாவிடின் உன் மனைவியை யெனக்குக் கொடு வென்றனர். அரசன் பழிக்கஞ்சி மனைவியைக் கொடுத்துத் தான் தீப்புக இருக்கையில் சிவமூர்த்தி தரிசனந்தந்து பிராமணராகவந்த தம்பதிகள் நாங்களே, துரத்தியபுலி மாயையாகும்; உனதன்பை வெளியிடவந்தோம் என்று அவனுக்குவேண்டிய வரங்கள் பிரசாதித்து மறைந்தனர்.

**பத்திராவதி** — அத்தினபுரத்திற்கு ஐந்து காதத்திலுள்ள நகரம்.

**பத்திராள்** — மூன்றா மன்வந்தரத்துத் தேவர்கள்.

**பத்திரை.** — 1. மேருதேவியின் பெண், பத்திராசுவன் பாரி.

2. சுதகீர்த்தியின் குமரி, கேகயநாட்டுச் சந்தர்த்தனன் தங்கை; கிருஷ்ணனை மணந்தனள். இவள் குமரர் அகலன், சங்கரசித்தன் முதலிய பதின்மர்.

3. சிவசூர்யதானத்து அமருஞ் சத்தி.

4. கோசலராசன் பெண், குமரன்கேசி. வசுதேவன் பாரி.

5. வீரபத்திரர் தேவி.

6. கேகயன் பெண்.

7. உச்சத்தியின் தேவி. சோமன் மகள். வருணனால் அபகரிக்கப்பட்டவள். (பாரதம் - அநு.)

8. குபேரன் தேவி. (பா - ஆதி.)

9. இவள் ஒரு தெய்வமங்கை. குபேரனுக்குப் பலவகைப் பணி புரிந்தொழுகும் எண்பது நாடக மகளிருள் ஒருத்தி. (பெ - கதை.

10. திதிகளைக் காண்க.

**பத்திரைபீடம்** — சத்திபீடங்களில் ஒன்று,

**பத்தியம்** — இன்ன நோய்க்கு இன்ன ஆகாரம் ஆகும் இன்ன ஆகாவென வைத்திய நூலில் கூறியவண்ணம் உணவாதிகளைக் கொள்வது.

**பத்தினிக்கடவுள்** — கண்ணகியின் சிறப்புப் பெயர். (சிலப்பதிகாரம்).

**பத்தினியர்** — கண்ணகி, திரௌபதி, சாவித்ரி, அகலிகை, சீதை, நளாயினி முதலிவர்கள்.

**பத்துப்பாட்டு** — இது பத்துநூல்களடங்கிய தமிழ்நூல். சங்க மருவியது. இதிலடங்கியவை திருமுருகாற்றுப் படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப் படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி. நெடுநல்வாடை குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்.

**பத்துவகை நூற்குற்றம்** — நூற்குற்றம் காண்க.

**பத்மகிரி** — பௌத்தர் இருக்கை. இவ்விடமிருந்த பௌத்தர்களை இராமாநுசர் செயித்தனர் என்பர்.

**பத்மசாலியர்** — இவர்கள் வடுகு பேசும் நெய்யக்காரர்கள். இவர்கள் சென்னை ராஜதானி முழுதும் வியாபித்திருக்கின்றனர். இவர்கள் பாவனருஷியைத் தங்கள் கோத்ர முதல்வனாகக் கொண்டவர்கள். இவர்களில் சிலர் வைணவர், சிலர் சைவர், சிலர் இலிங்கதாரிகள்.

**பத்மநாபவேதியர்**—ஒரு பாகவதர். காசியில் செல்வ நிறைந்தோனாகிய ஓர் வணிகன் ஐந்து பிள்ளைகளுடன் கூடிய தன் மனைவியுடன் வாழ்கின்ற நாளில் குட்டநோயால் வருந்தி வெகுகாலம் துன்புற்றுப் பல நல்ல

தர்மங்களைச் செய்தும் நோய் குறையாமல், தன் சுற்றத்தவரை நோக்கி என்னைக் கங்கையில் விடுகவென்னச் சுற்றத்தோர், அவனைக்கொண்டு கங்கைக்கரையை யடைய ஆங்குப் பலர்கூடி யிருக்கையில் அக் கூட்டத்தைக் கண்ட பத்மநாப வேதியர் இது என்ன கூட்டமென்று கேட்க ஓர் வணிகன் தர்மஞ்செய்வோன் குட்ட நோயால் வருந்துற்றுக் கங்கையில் விழவந்தனன் என்றனர். அதனைக்கேட்ட பத்மநாபவேதியர் அவனிடஞ் சென்று தேகத்தின் அருமைகூறி அவனுக்குத் தாரகமந்திரம் உபதேசித்தனர். அதனால் வணிகன் நோய் தீர்ந்து அவர் திருவடியில் வீழ்ந்து பத்மநாபவேதியர்க்கு அருள்செய்த கபீரிடத்திற்போய்ப் பத்மநாப வேதியரது புகழை எடுத்துரைத்தனன்.

**பத்மநாபன்** — விஷ்ணு.

**பத்மப்பிரபர்** — இவர் ஆறாவது சைநதீர்த்தங்கரர். இக்ஷவாகு வம்சத்தவர். பட்டணம் கௌசாம்பி. தந்தை தரணன். தாய் சுசிமை. இவர் ஜநநம் கார்த்திகைமாசம் கிருஷ்ணபக்ஷம் திரயோதசி சித்திரை நக்ஷத்திரம், உன்னதம் (௨௫௦) வில், பத்மராக வர்ணம், ஆயுஷ்யம் (௩௦) நூறாயிரம்பூ, வச்ரசமரர் முதலாக (௧௧௦) கணதரர்.

**பத்மயூகம்** — கௌரவரால் வகுக்கப்பட்ட க்ஷத்திரயூகம். இதை அபிமன்யு உடைத்தான். (பா - துரோ.)

**பத்மன்** — ஒரு நாகன். கோமதி தீரத்தில் நைமிசவனத்திலுள்ள நாகச்சுனையிலுள்ளவன். இவனைக் கண்டு தரும விசாரஞ்செய்ய தர்மாரண்யன் எனும் ஒரு வேதியர் சென்று நாகன் சூரியரதத்தை வகிக்கப் போயிருக்கிறார் என்னக் காத்திருந்து வந்த பின் நாகன் சூரியனுடைய கதையினையும் சூர்யாந்தர்யாமியின் ஸ்வரூபத்தையுங் கூறக் கேட்டுக் களித்தனர். (பார-சாந்தி.)

**பத்மாவதி** — 1. விச்வபூர்த்தியாண்ட நகரம், விந்தமலைக் கருகிலுள்ளது.

2. லக்ஷ்மியின் அவதாரமாய் நதியுருவானவள், துலசியைக் காண்க.

**பத்மினி** — சித்தூர் அரசனாகிய லக்ஷ்மணசிங்கின் மாமன் பீமசிங்கின் தேவி. இவள் அழகிற் சிறந்தவள். இவளது அழகைக் கேள்விப்பட்ட பட்டாணி அரசனாகிய அல்லாவுதீன் எனும் மகம்மதிய அரசன் ஒரு பெருஞ் சேனையைத் திரட்டிக்கொண்டு சித்தூரை பலநாள் முற்றுகை யிட்டான். இரசபுத்ரர் சித்தூரைப் பலநாள் காத்தனர். பின் அல்லாவுதீன் பத்மினியைத் தன்னிடம் ஒப்புவித்தால் முற்றுகை விடுவதாகக் கூறினன். அது மறுக்கப்பட்டது. அவ்வாறில்லாவிடினும்ஒருமுறை பார்க்கவாவது விடுங்களென்றான். அதுவும் மறுக்கப்பட்டது. அதுவுமறுக்கப்படக் கண்ணாடிகளைக் கொண்டு பிரதி பிம்பமாவது காட்டப்படின் போதும் எனவே இக் கொள்கைக் கிசைந்தனர். அல்லாவுதீன் தன் காவலரைக் கோட்டைக்கு வெளியே நிறுத்திக் கோட்டைக்குள் நுழைந்தான். அல்லாவுதீனை மரியாதையுடன் அழைத்துச் சென்றனர். இராஜ புத்திரர்கள் வாக்கை நிறைவேற்றினர். அல்லாவுதீன் திரும்புகையில் அவனை வழிவிட பீம்சிங்கும் உடன் சென்றான். பீம்சிங் கோட்டைக்கப்புறஞ் செல்ல, மறைந்திருந்த பட்டாணிய காவலர் பீம்சிங்கை சிறையிட்டனர். அல்லாவுதீன் பீம்சிங்குக்கு பதில் பத்னியைத் தரின் சிறை நீக்கப்படும் என்றான். பத்மினி தன் மானங் காக்க ஏற்பாடு செய்துகொண்டு அல்லாவுதீனிடம் போகத் தீர்மானித்தாள். அப்போது இவளுடைய மாமனாகிய கோராவும், மருமகனாகிய படாலும் ஒரு யோசனை சொன்னார்கள். போர்க்களத்தை விட்டுச் சேனைகள் தங்களிடங்களுக்குச் செல்ல வேண்டும் என்றும், அவளுடைய அந்தஸ்துக்குத்தக்கபடி தோழிமார்கள் பலர் சூழ்ந்துவரவும் பந்தோபஸ்து செய்து வைக்கும்படி சொல்லி யனுப்பினர். அவ்வாறே முகம்மதியன் இசைந்தான். குறித்த தினத்தில் ஆயுதபாணியாகிய சிறந்த போர் வீரர்களை உட்காருவித்த (700) பல்லக்குகளும் அப் பல்லக்குகளைச்சுமக்க போர்வீரர் அவ்வாறு பெயராக உருமாற்றி முகம்மதியனிருக்கும் இடத்தில் மறைவுடனிருக்கின்றனர். பத்மினி பீம்சிங்கைப் பார்த்து வருவதற்கு அரை மணி காலம் கொடுக்கப்பட்டது. முகம்மதிய அரசன் காலதாமதம் குறிப்பதற்கு முன் வேடதாரிகள் தங்கள் போர்க் கோலத்துடன் வெளிப்பட்டதால் உண்டான கிளர்ச்சியில் பீம்சிங் சிறையினின்று தப்பி அருகில்ஆயத்தமாயிருந்த குதிரைமேலேறிக் கோட்டை யடைந்தனன். இதில் இரச புத்திரர்களுக்கும் மகம்மதியருக்கும் நடந்த யுத்தத்தில் பல ரசபுத்ர வீரர் மாண்டனர். கோராவும் மரண மடைந்தான்.

இவன் மனைவியும் தீப் புகுந்தனள். இக்காலத்திற்குப் பிறகு லக்ஷ்மணசிங் பட்டமடைந்தான். இவன் காலத்தில் அல்லாவுதீன் பெருஞ் சேனையுடன் சித்தூரைத் தாக்கினன். லக்ஷ்மணசிங்கவர்களை யெதிர்த்து தன் கிராம தேவியின் சொற்படி (12) புத்திரர்களையும் யுத்தத்தில் இழந்தான். அதில் அஜேஸிங் ஓடி யொளித்தான். இதில் சித்தூரிலிருந்த பல இராச பத்தினிகளும் பத்மினியும் பூமிக்குள் வெட்டப்பட்டிருந்த தீ நிறைந்த குழிகளில் விழுந்து மானத்தைக் காத்துக்கொண்டனர். இவ்வாறு செய்த தார்த்தாரியன் தான் சித்தூரை நாசஞ்செய்து தான் ஜெயித்த சிற்றரசனாகிய மால்தேவனிடம் ஒப்புவித்துத் தன் நகரம் சென்றான். இந்த லக்ஷ்மணசிங்கிற்கு ஆர்சிங் என மற்றொரு குமாரன் உண்டு.

**பத்ரமதி** — காசிபர் பெண், ஐராவதத்தைப் பெற்றாள் என்பர்.

**பத்ரம்** — வடக்கில் பூமியைத் தாங்கி நிற்கும் திக்கு யானைகளில் ஒன்று. (இரா - பால.)

**பத்ரை** — உசத்தியரைக் காண்க.

**பநசன்** — ஒரு வானரவீரன். சங்கனென்னும் அரக்கனைக் கொன்றவன்.

**பநந்தன்** — நபாகனைக் காண்க. வத்சந்திரன் குமரன்.

**பநம்பாரனர்** — அகத்தியரது மாணாக்கர் பன்னிருவரில் ஒருவர். இவர் பனம்பாரமென்னும் ஊரிற்பிறந்ததால் இப்பெயர் பெற்றனர். இவர் தம்பெயரால் இலக்கணஞ் செய்தனர் என்பர். அதிற் சில சூத்திரங்கள் தவிர நூல் அரிதாயிற்று. இவர் தொல்காப்பியத்திற்குப் பாயிரங் கூறினர்.

**பந்தகன்** — கத்ரு குமாரர்களில் ஒருவன். நாகன்

**பந்தனந்தாதி** — பந்தனென்னும் வணிகன் மீது ஔவையாரால் பாடப்பட்ட வெண்பாமாலை.

**பந்தன்** — 1. திரணபிந்துக்குத் தந்தை.

2. இவர் காவிரிப்பூம்பட்டினத்து வணிகர். இவர் வர்த்தகஞ் செய்தற் பொருட்டுக் கப்பலிற் சரக்குகளை யேற்றிக் கப்பலை நடுக்கடலிற் செலுத்தச் செய்து பிரயாணப்பட்டுப் போகையில் ஆதிசேடன் இவரிடம் விருப்புற்றுக் கடலினுள்ளிடத்திருந்து ஒருகரத்தை இவரது கப்பலுக்கெதிரில் நீட்டினன். செட்டியார் நம்மை யாரோ யாசிக்கிறா னென்று எண்ணித் தமது கப்பலில் இருந்த சரக்குகளிற் சிறந்தவைகளைத் தந்தனர். இவ்வகை இரண்டு மூன்று முதலாக ஆயிரங்கரங்கள் தனித்தனி ஒவ்வொரு கரங்களுக்குங் கப்பலில் இருந்த சரக்குகளை யெடுத்துக் கொடுத்துக் கடைசி கரத்திற்குக் கொடுக்கச் சரக்கு இல்லாமையால் தாமே அக்கரத்திற் புகுந்தனர். ஆதிசேடன் மகிழ்ந்து இவரைச் சுமந்துசென்று தன்னகரத்தில் இருத்தித் தமது குமரியை இவருக்குத் திருமணஞ் செய்வித்துப் பன்னிரண்டு வருடம் நாகலோகத்தில் வைத்திருந்தனன். இவரது சுற்றத்தார் இவர் கடலில் இறந்தனரென்று எண்ணி இவர்க்குக் கர்மாதிகள் செய்விக்கத் துணிந்தனர். இதனையறிந்த சேடன் பந்தனுக்கு வேண்டிய உபசாரத்துடன் மரியாதை முதலிய செய்வித்துப் பல நாகரத்தினங்களும், பொத்திக்கொண்டால் இளமைமாறாத பொன் வஸ்திரமும், உண்டால் நீடுவாழச் செய்வதாகிய கருநெல்லிக்கனி யொன்றுந் தந்து அனுப்பினன். பந்தன் தனது பட்டணம் வந்ததும் அரசனைக் கண்டு தான் கொண்டுவந்த நெல்லிக்கனியில் ஒரு பாதியைக் கொடுத்து இருக்கையில் ஔவை இவன்மீது அந்தாதியும் நவமணி மாலையையும் பாடிவந்தனள். பந்தன் அரசனுக்குக் கொடுத்திருந்தபாதி நெல்லிக்கனியையும் பொன் வஸ்திரத்தையும் ஔவைக்குக் கொடுத்துக் களிப்புற்று இருந்தனன்.

**பந்தாட்டு** — இது, பலவிதமாகிய பந்துகளைச் செய்கை வேறுபாட்டால் ஒருவர், இருவர், மூவர் பலர் சேர்ந்து விளையாடும் விளையாட்டு. இது, தற்காலம் நம்நாட்டில் இறந்தது. இப்போது மேனாட்டாரதைக் கொண்டாடுகிறார்கள். குதிரை மீதிருந்தும் ஆடுவர்.

**பந்து** — (சூ.) வேகவான் குமரர்.

**பந்தும், பாவையும்** — முற்காலத்தரசர்கள் தம் அரண்மனை வாயிலில் வலியறியாதெதிர்க்கும் அரசரது ஆண்மையினை யழித்து மகளிரொடொப்பநோக்கி அவர் கொண்டு விளையாடுவதற்குப் பந்தும்பாவையும் தருதல் ஒருதலையெனத் தெரிவிக்கப் பந்தும் பாவையினையும் தூங்க விடுதல் மரபென்ப. இதனை "வரிப்புனை பந்தொடு பாவைதூங்க" என்னும் திருமுருகாற்றுப் படையானறிக

**பப்பரவாயணி** — விஸ்வாமித்திர புத்திரன். (பா - அது.)

**பப்பா** — இவன் சூரியவம்சத்து நாகதீதன் குமரன். இவன் தந்தை மலைநாட்டரசர்களால் கொல்லப்பட்ட பொழுது இவனைச் சில பிராமணர்கள் வளர்த்தனர். இவன் இளமையில் மாடு மேய்த்து கொண்டிருக்கையில் அருகிருந்த சோளங்கிராஜ புரத்து ராஜகன்னிகை அக்காட்டிற்குள் ஊஞ்சலாட வந்தனள். வந்தவள் ஊஞ்சற்கயிறு கொண்டுவர மறந்து மாடுமேய்க்கும் பப்பாவை ஒரு கயிறு கேட்டனள். பப்பா முன்பு ஒரு விவாக விளையாட்டுக்குடன்படின் தான் கயிறு கொடுப்பதாகக் கூறினன். அவ்வாறே அக்கன்னிகைகள் பப்பாவைமணமகனாகவைத்து ராஜபுத்திரியை மணமகளாக்கி விவாகச் சடங்கை முடித்தனர். இவ்விளையாட்டு, வினையாக முடிந்தது. சிலநாள் சென்றபின் சோளங்கிராஜ புத்ரத்தலைவன் தன்மகளின் விவாகத்தைப் பற்றி புரோகிதரை யோசிக்கையில் அவளுக்கு முன்னமே விவாகம் முடிந்திருக்க வேண்டுமெனக் கூறத்திடுக்கிட்டு உண்மையறிந்தனன். பப்பா தனக்கு என்ன நேரிடுமோ வெனப்பயந்து அருகிருந்த பலேவன், தேவன் எனு மலைநாட்டரசர்களை நட்புகொண்டு அந்த ராஜபுத்திரியையே மணங் கொண்டான். பின் இவன் சித்தூர் அரசன் பிரமராஜ வம்சத்தவனென்று அவனுடன் நட்புகொண்டான். அவன் இவனை பெரிய ஜாகீர்தாராக்கினன். இதனால் மற்ற சாகீர்தாரர்கள் பொருமை கொண்டு சித்தூர் அரசன்மீது சத்துரு ஒருவன் எதிர்த்தகாலத்து உதவிசெய்ய மறுத்தனர். இதனால் பப்பா ஒருவனுமே போர்க்களம் சென்று எதிரிகளைத் தாக்கினன். இதனால் மற்ற சாகீர்தாரர்களும் பணிந்து பப்பாவையே சித்தூருக்கு அரசனாக்கினர். இவனே கி. பி. (713) இல் சித்தூரைத் தாக்கிய முகம்மதபின் காசிமைத் தோற்கச் செய்தவன்.

**பப்புரு** — 1. (சங்.) திரியு குமரன். இவன் புத்திரன் சேது.

2. தேவவிரதன் குமரன்.

3. துருஹ்யன் குமரன்.

4. சாத்வதன் பேரன்.

5. விதர்ப்பன் பேரன்.

6. ஒரு இருடி.

**பப்ருதன்** — வஸுதேவன குமரன்.

**பப்புருமாலி** — ஒரு ரிஷி.

**பப்புருவாகனன்** — 1. அருச்சுனனுக்கும் பாண்டிநாட்டரசன் குமரியாகிய சித்திராங்கதைக்கும் பிறந்தவன். உலூபியால் தந்தையுடன் யுத்தஞ்செய்யத் தூண்டப்பட்டு அருச்சுனனுடன் பெரும்போரிட்டு மூர்ச்சிக்கச்செய்து தந்தையென் றறிந்து வாசுகிகொடுத்த நாகரத்தினத்தால் உயிர்ப்பித்தவன். இவன் முத்துக் கதிபதி, யாதவர் சமுத்திர ஸ்நானத்திற்குப்போய், ஒருவருக்கொருவர் சண்டையிட் டிறந்தகாலத்துத் தனித்த கிருஷ்ணன் இவனை நோக்கித் தமது மனைவியரைத் துவாரகையில் விட்டுவரக் கட்டளையிட்டனன். அக்கட்டளை யேற்ற இவன் அப்பெண்களை யழைத்துச் செல்கையில் செண்பை யெடுத்துச் சுழற்றிவந்த வேடன் அடிக்க இறந்தவன்.

2. மகோதயநாட்டரசன். இவன் ஒரு முறை வேட்டைக்குச் சென்று ஒரு மானை யெய்ய அது அடியுண்டு அக்காட்டைத் தாண்டிச் சென்றது. பின்தொடர்ந்த அரசன், அங்கு ஒரு பிரேதஜன்மத்தைக்கண்டு அதன் பிறப்புக்கேட்டு அதனிடம் மணி பெற்று அப்பிரேதத்திற்குக் கர்மஞ்செய்து பிரேதசன்மத்தை நீக்கினவன். பிரேதம் முற்பிறப்பில் தேவன் எனும் வணிகன்.

**பம்பரம்** — இது ஒரு சிறுமரத்துண்டால் குடம்போன்று முனையில் கூரிய ஆணி பதித்த கருவி. இது சிறுவர் விளையாட்டுக்கருவி. இதில் கயிறு சுற்றிப் பூமியில் எறியஇது பம் என்ற ஓசையுடன் தன்னைச் சுற்றுவது. இந்த விளையாட்டில் பலவகை உண்டு. இவ் வகை விளாம்பழத்திலும் பம்பரம் செய்வதுண்டு. இது கண்களுக்குச் சுழற்சியின் வேகத்தைக் காட்டுவது.

**பம்பைக்காரன்** — தொழிலால் வந்த சாதி. இவன் பூஜாரிக்கு உடனிருந்து பம்பை யடிப்பவன்.

**பம்பை** — 1. கிட்கிந்தைக்கருகில் தண்டக வனத்திலுள்ள மடு.

2. ஓர் தவப்பெண்.

3. A branch of the river Thungabhadra. It rises in the Rishyamukha mountain which is 8 miles from the Anagandi hills. இராமர் தங்கிய இடம்.

**பயமுறுத்துஞ் செடி** — (The frightening Plant) அமெரிக்காவின் அகன்ற வெளிகளில் உண்டாகும் ஒருவகைச் செடி. காய் முற்றிச் சிதறி விழுகையில் கிலுகிலுஎனும்

சத்தம் உண்டாகிறது. அதைக் கேட்கும் ஊரார் கிலுகிலுப்பை பாம்பெனத் திடுக்கிட்டு ஓட்டம் பிடிப்பராம்.

**பயிரைக் கெடுக்கும் பூச்சிகள்** — நாவைப் பூச்சி, கருவண்டு, புழுக்கள், பட்டாம் பூச்சி, கம்பளிப்பூச்சி, வெட்டுக்கிளி, அந்து, சிட்டு, எலி.

**பயன்** — 1. தருமன் குமாரன்.

2. காலகன்னியை மணந்தவன். இவனுக்கு யவனேசுரன் எனவும் பெயர்.

**பயாபதி** — பிரசாபதியெனும் ஒரு சைந ராசன்.

**பயிரவமுனிவர்** — ஒரு இருடி, இவர் தவத்தில் இருக்கையில் பரிட்சித்து இவர் கழுத்தில்செத்த பாம்பினையெடுத்துச் சுற்றினன்.

**பயிரவர்** — பிரமன் தனக்குச் சிவமூர்த்தியைப்போல் ஐந்து சிரம் உண்டெனச் செருக்கடைந்த காலத்தில் அவனிடஞ் சென்று அவனுடைய நடுச்சிரத்தைக் கிள்ளிய சிவா அவசரம்.

**பயிலவமுனிவர்** — ஒரு இருடி. உதங்கருக்கு ஆசிரியர். வியாசர் மாணுக்கர். இருக்குவேதி, இவர் தம் குமரியை உதங்கருக்குக் கொடுத்தனர். இவர் குமரர் வேததருமர்.

**பயை** — எதியென்பவன் தேவி.

**பயோவிரதம்** — பங்குனிமாதம் சுக்கிலபக்ஷ பிரதமைமுதல் பன்னிரண்டு நாள்கள் அநுட்டிக்கும் விரதம். இது பிரமதேவனால் காசிபருக்கு உபதேசிக்கப்பட்டுக் காசிபரால் அதிதிக்கு உபதேசிக்கப்பட்டது.

**பயோஷ்ணி** — விதர்ப்பநாட்டில் விந்திய பர்வதத்தருகில் பிரவகிக்கும் நதி. இதை தபதியென்பர்.

**பரகாலன்** — மற்ற மதத்தவர்களை வென்றதால் திருமங்கையாழ்வாருக்கு வந்த பெயர்

**பரகேசரி ராஜேந்திர சோழ தேவன்** — இவன் இராஜராஜன் குமரன். இவனுக்கு பூர்வதேசமும், கங்கையும், கடாரமும் கொண்ட இராஜேந்திரனெனவும் பெயர். இவனுக்கு மதுராந்தகன், உத்தமசோழன், விக்ரமசோழன், பண்டிதசோழன், முடிகொண்டசோழன் எனப் பல ,பெயர்கள் உண்டு. இவன் கி. பி. (1012) முடிசூட்டப் பெற்முன். இவன் மைசூர்நாட்டு, இடைதுறைநாடு, வனவாசி, கொற்றிப்பாக்கை, மண்ணைக்கடகம், ஈழம், மலைநாடு முதலிய வென்று மேலைச்சாளுக்கிய அரசனாகிய ஜயசிங்கன் 2-ஐ, உச்சங்கி துர்க்கத்தில் தாக்கினான். பின்னும் ஒட்டர தேசம் கோசலைநாடு, இலாடம், வங்காளம் முதலிய தேசங்களை வென்று இந் நாட்டரசர்களாகிய இந்திராதன், கோவிந்தசந்திரன், இரணசூரன், மகிபாலன் முதலியவர்களை வென்று மகிபாலன் தலையில் கங்கா தீர்த்தங்கொணர்வித்தா னென்பர். பின் கப்பற்படை கொண்டு நக்கவாரி தீவுகளை வென்று கடாரத்துறையாகிய மாப்பப்பாளயத்திலிறங்கி அந் நாட்டரசனாகிய சங்கிராம விஜயோத்துங்கனை வென்றான்- இவன் தன் தங்கை குந்தலவையின் கணவனாகிய விமலாதித்தனை வென்று அவனாட்டிலுள்ள மஹேந்திர பர்வதத்தில் புலிக்கொடி நாட்டினான். இவன் கல்வியில் விருப்புள்ளவன். இவன் தன் பெயராகிய கங்கைகொண்ட சோழனென்பதைக் குறியாகக் கொண்டு கங்கைகொண்ட சோழீச்வரம் எனும் தலம் ஏற்படுத்தினான். இவ்வரசனுக்குப் பின்வந்த சோழர் பலர் இதை ராஜதானியாகக் கொண்டனர். இக்கங்கைகொண்ட சோழபுரமே கருவூர்த்தேவரால் திருவிசைப்பாவில் பாடப்பட்டது. ஸ்ரீமந் நாதமுனிகள் இவ்வூரில்தான் பரமபதம் அடைந்தனர்,

**பரசிராமர்** — 1. பிருகுவம்சத்திற் பிறந்த சமதக்னி முநிவர்க்கு இரேணுகையிடம் பிறந்த குமரர். இவர் விஷ்ணுவின் அம்சாவதாரம். இவர் க்ஷத்திரியநாசஞ் செய்யும்படி யெண்ணிச் சிவமூர்த்தியை நோக்கித் தவம்புரிந்தனர். சிவமூர்த்தி புலையர் உருக்கொண்டு இவர் இருக்குமிடம்வர இராமர் கோபித்து யுத்தஞ் செய்தனர். கடைசியில் புலையர் உருக்கொண்ட சிவமூர்த்தி, வேதியர் வருந்தும்படி யுருட்ட வேதியர் மனக்கவலையடைந்து திதிக்கையில் சிவமூர்த்தி தரிசனந்தந்து பரசு கொடுத்து இன்றுமுதல் உனக்குப் பரசிராமன் எனப் பெயருண்டாகவென்று திருவாய் மலர்ந்து மறைந்தனர். அதுமுதல் இப்பெயர் இவருக்காயிற்று.

2. இராமமூர்த்தி மிதிலையில் வில்முரித்து ஜானகியைத் திருமணம்புரிந்து மீளுகையில், வழியில் எதிர்த்துத் தம்மிட மிருந்தவில்லை வளைக்கச்செய்து தமது தவத்தை அவ்வில்லிற் பூட்டிய அம்பிற்கு இலக்காக்கித் தவத்தை யிழந்தவர்.

3. கர்ணனுக்குத் தாம் சிவமூர்த்தியிடங் கற்ற வில்வித்தையைக் கற்பித்து அவன் தன்னைப் பிராமணனென்று கூறி வஞ்சித்

தமையால் சமயத்தில் அவ்வித்தை பலியா திருக்கச் சாபமளித்தவர்.

4. அம்பையென்னும் காசிராசன் பெண் பொருட்டு மாணுக்கராகிய பீஷ்மரிடம் யுத்தம்புரிந்து தோற்றவர்.

5. கார்த்தவீரியனைக் கொன்ற தோஷத் தால் தந்தை சொற்படி ஒருவருஷம் தீர்த்த யாத்திரை சென்றவர்.

6. தந்தைசொற்படி தாயைக் கொன்று மீண்டும் தந்தையால் தமயன்மார் தபோ தனராகவும், தாய் கற்புக்கெடாது உயிர் பெறவும் வரம்பெற்றவர். கார்த்தவீரிய னைக் கொன்றதால், இவர் இல்லாத சம யங்கண்டு கார்த்தவீரியன் குமரர், ஜமதக் னியைக் கொன்றனர். இதைக் கண்டு இரேணுகைவர அவளையும் எதிர்க்க அவள் இருபத்தொரு அடியுண்டு தன் குமரன் வருமளவும் உயிர் தாங்கியிருந்தனள். கும ரன்வர நடந்தது கூறியிறந்தனள். கும ரன் இறந்த தாய் தந்தையர்க்குக் கருமஞ் செய்கையில் ஐந்தாம்நாள் இரவில்தன்மீது ஒருபுலி பாய்ந்ததுபோற் கனுக் கண்டு "அம்மா, அம்மா" என்று அலறினன். இரேணுகை தன்னைக் குமரன் அழைக் கிருனென்று அதுவரையில் தனக்குக் கும ரன் செய்த கருமத்தால் ஏற்பட்டிருந்த தலையுடன் வெளிப்பட்டுப் பார்க்கப் பாசி ராமர் இதனைக்கண்டு தத்தாத்திரேயருக்கு அறிவிக்க முனிவர் கர்மம் பூர்த்தியாகு முன் அழைத்ததால் இவ்வகையாயிற்று எனக் கர்மத்தைப் பூர்த்தி செய்வித்தனர். தாய் உயிர்பெற்றுத் தலைமாத்திரமாய்த் தெய்வமாயினள். தந்தை சத்திய உலக மடைந்தனர்.

7. இனி வரப்போகிற மன்வந்தரத்தில் சப்தருஷிகளில் ஒருவராகப் போகிறவர். மகேந்திரபர்வதத்தில் இருக்கிருர். இவர் சிரஞ்சீவிகளில் ஒருவர்.

8. தாய் இருபத்தொரு அம்புபட்டு இரு பத்தொருமுறை தன்னைக்கண்டு மார்பில் அறைந்து கொண்டதால் இருபத்தொரு தலைமுறை அரசர்களை நாசஞ்செய்த இரத் தம் பெருகிச் சமந்த பஞ்சகமென்னும் பெயரால் ஐந்து மடுக்களாயின.

9. இவர் அரசரை நாசஞ்செய்து அப பூமிகளை யெல்லாம் காசிபருக்குத் தானஞ் செய்தனர்.

10. காந்தனென்னும் சோழனிடம் போரிடவந்து அவன் ஒளிக்கச்சென்றவர்.

11. இவர் க்ஷத்ரிய நாசஞ் செய்து யயாதிபதனமெனும்க்ஷேத்திரத்தில்நடந்த யாகத்தில் பராவசு சொல்லால் பிரதர்த்த னன் முதலிய க்ஷத்ரியர்களை நாசஞ்செய்து பூமியை கச்யபருக்குத் தானஞ் செய்தார். கச்யபர் க்ஷத்ரியரைக் காக்க வேண்டித் தானம் வாங்கிய பூமியில் இருத்தல்கூடாது தென்கரை செல்கவெனச் சென்றவர். சமுத்திரராஜன் இவருக்குப் பயந்து சூர்ப் பாகார மெனும் ஒரு தேசம் நியமித்துத் தந்தான். (பார - அநு.)

12. சிவசூலத்தால் கார்த்திவீர்யனைச் செயித்தவர். இவர் தன் சகோதரரை வதைத்ததால் துக்கமடைந்து சிவபூசை செய்து நல்வரங்களையும் மரணமிலாமை யையும் கோடாலியையும் பெற்ருர். (பாரதம் அநுசாளிகபர்வம்).

**பாசிவன்** — உன் மனதீதத்தில் யோகிய ரால் தரிசிக்கப்படும் சிவமூர்த்தி; சக்தி மனோன்மனி.

**பாசு** — ஒரு அரக்கன், இவன் பிராமண வேடங்கொண்டு சாகல்யமுனிவரிடம் அதி தியாகச் சென்று அன்னம் வேண்ட அவர் இவ்வது கபடமறிந்து முற்பிறப்புணர்த்த அவரைத் துதித்துச் சென்றவன். (பிர்ம்ம புராணம்).

**பாசுராம சதுர்வேதி மங்கலம்** — செல்வி நகர். (திருவிளையாடல்).

**பரஞ்சோதிமுனிவர்** — 1. சத்தியஞானதரிச நிகள் மாணுக்கர். மெய்கண்ட தேவர்க்கு ஆசிரியர்.

2. இவர் சோழநாட்டு வேதாரண்யத்த வர். சைவவேளாளர். (வேதாரண்ய புரா ணம்.) இவர் அதிவீர ராமபாண்டியன் காலத்து மதுரையிலிருந்த புலவர் திலகர். இவர் சைவவேளாளர், இவர் நிரம்ப அழ கியர் காலத்தவர் என்பர். இவர் செய்த நூல்கள் திருவிளையாடற் புராணம், மது ரைப் பதிற்றுப் பத்தந்தாதி முதலியவை. இவர் சாலிவாகனசகம் (கசஙு0) க்குமேல் இருந்ததாகத் தெரிகிறது. (திருவிளை.)

**பரஞ்சோதியார்** — 1. இவர், மதுரையுலா, சிதம்பரபுராணம் இயற்றிய திருமலைநாத ருக்குப் புத்திரர். மெய்கண்டார் சந்தானத் தினராய்க் கச்சிப்பதியி லிருந்தவரும் தம க்கு ஞானசாரியருமாகிய தத்வஞான பிர காசமுனிவர் ஆணைப்படி சிதம்பரப்பாட்டி யல் செய்தவர்.

2. சிறுத்தொண்டருக்குப் பிள்ளைத் திருநாமம்.

**பரணர்** — 1. இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். கபிலரோடு நட்புடையாரா யிருந்தவர். சோழன் உருவப்பஃறேரிளஞ்சென்னியைப் புகழ்ந்து பாடியவர். புறம் (4). நெடுஞ்சேரலாதனும் பெருவிறற்கிள்ளியும் போர் புரிந்து மடிந்ததனையும் போர்க்களத்தின் அழிவையும் நோக்கி இரங்கிக் கூறினர். புறம் (63). வையாவிக்கோப் பெரும் பேகனைப் பாணாற்றுப்படையும் இயன்மொழியும் பாடி உவப்பித்தருளினர். புறம் (141, 142). அவனால் நீக்கப்பட்ட கண்ணகி யென்பாளை மீட்டும் அவன் அழைத்துக்கொள்ளும்படி பாடியருளினர். புறம் (144, 145). மகட்பாற் காஞ்சியென்னுந் துறை பலரினும் பலபடப் புனைந்து பாடியுள்ளார் புறம் (336, 341). அம்மகட்பாற் காஞ்சியின்கட் குட்டுவனையும் அவனது முசிறியையும் புகழ்ந்து பாடினர். புறம் (343). "வாய்மொழித் தழும்பனூனூரன்ன" எனத் தழும்பனையும் அவனது ஊணூரையும் பாராட்டிக் கூறுவராயினர். புறம் (348). தித்தனையும் அவனது உறையூரையுங் கூறியுள்ளார். புறம் (352). சேரமான் கடலோட்டியவேல் கெழுகுட்டுவனை எர்க்கள உருவகம் பாடிப் பரிசில்வேட்டனர். புறம் (369). (சிலப்பதிகாரத்திற் கூறப்படும் செங்குட்டுவனிவனே). இச் செங்குட்டுவனைப் பதிற்றுப்பத்து ஐந்தாம் பத்துப்பாடி அவன் கொடுத்த வரிசை எல்லாம்பெற்று மீள்வாராயினர். அகத்திலும் இவரால் அச் செங்குட்டுவன் புகழ்ந்து பாடப் பெற்றான். அகம் (396). வள்ளலாகிய வல்விலோரியைப் புகழ்ந்து கூறுவாராயினர். நற்றிணை (6). கொல்லிமலையிலமைந்த கொல்லிப்பாவையின் தோற்றமும் அதனியல்பும் ஆங்காங்கு உவமைமுகத்தால் கூறியுள்ளார். நற். (201) குறு. (89) அகம் (62, 208). கொண்கானத்து (கொங்கணம் - மலையாளம் ஜில்லா) முன்பிருந்த நன்னன் என்னுஞ் சிற்றரசனது கொடை முதலியனவும் அவனது கொடுஞ் செயல்களும் அவனொடு சேரமான் போர் செய்ததும, சோன் சேனாதிபதி ஆஅய் எயினனை நன்னன் சேனாபதி மிஞிலி என்பான் கொன்றதும் பிறவும், நன்னனது பாழியில் பொருள் சேமித்துக் காவலோம்பியதும், இவரே விரித்துக் கூறுகின்றார். நற். (265, 270). குறு. (73, 292). அகம் (152, 181, 208, 258, 356, 396). சோலனது தொண்டியைப் புகழ்ந்தது. குறு. (128). சேந்தனது உறையூர் காவிரி அழிசியின் ஆர்க்காடு, இவற்றைப் பாராட்டிக் கூறியது. குறு. (258). அஃதை தந்தையைப் பாராட்டியது. குறு. (298). விச்சியர்கோன்போரும் குறும்பூரார் ஆவாரிப்புங் கூறியது. குறு. (328). தித்தனது உறையூருங் காவிரியும் மத்தியின் கழாருங் கூறியது. அகம் (6). வெளியன் தித்தனது கானலம் பெருந்துறையும் பிண்டன் தோல்வியும் நள்ளியின் சோலைச் சிறப்பும் ஆஅய்கானத்துச் சிறப்புங் கூறியது. அகம் (152). அதகனது வேங்கை மலையைப் புகழ்ந்து கூறியது. அகம் (162). மணல்வாயில் உறத்தூரைப்பாடியது. அகம் (262). பேவர் என்னுமூரிலுள்ள சோழர் சேனாபதி பழையனைப் புகழ்ந்தது. அகம் (186). ஆஅய் அண்டிரனது பொதிய மலையைப் புகழ்ந்தது. அகம் (198). மற்றும் இவர் சோழன் கரிகாற் பெருவளத்தான் மகள் ஆதிமந்தி யென்பாள் தன் காதலனை யிழந்து புலம்பிய கதையை விரித்துஞ் சுருக்கியும் உவமமாக்கியும் பல இடங்களில் கூறுகின்றார். அகம் (135, 222, 126, 236, 376, 396). திருவழுந்தூர்த் திதியனும் அன்னிகுடி அன்னியும் பொருத கதையை விளக்கிப் பல இடங்களிலும் உவமிக்கிறார். அகம் (196, 262). அதிகமான் நெடுமானஞ்சி திருக்கோவலூரை வென்றதனைப் பாராட்டிக் கூறினர். அகம் (372). அங்ஙனம் பாடியதனை எடுத்துக் காட்டிப் "பரணன் பாடினன் மற்கொல்" என ஔவையாராற் புகழ்ந்து பாடப் பெற்றார். புறம் (99). இவர் பாடிய பாடல்களொவ்வொன்றினும் யாரையேனும் புகழாமலும், அக்காலத்து நிகழ்ந்த கதைகளிலொன்றைப் புகுத்தாமலும் பாடுவதில்லை. இன்னும் வாகைப்போரிற் பாண்டியன், அதிகன், கொங்கர், சேரசோழ பாண்டியர், வேளிர், சேரலன், சேனாபதிகளையன் இவரெல்லாம் நம்புலவர் பாடலால் நிலைபெற்று விளங்குகிறார்கள். அகம் (202)ல் மாதரை இவர் வருணித்திருப்பது வியக்கத்தக்கது. இவர் பாடியனவாக நற்றிணையில் பன்னிரண்டு (6, 100, 201, 247, 260, 265, 270, 280, 300, 310, 350, 356) பாடல்களும், குறுந்தொகையில் பதினைந்தும்,

பதிற்றுப்பத்தில் பத்தும், அகத்தில் முப்பத்திரண்டும், புறத்தில் பன்னிரண்டும், திருவள்ளுவமாலையி லொன்றுமாக எண்பத்திரண்டு பாடல்கள் கிடைத்து இருக்கின்றன.

2. கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவர் செய்தநூல் சிவபெருமான் திரு அந்தாதி.

3. இவர் சங்கப்புலவருள் ஒருவர். எட்டுத்தொகையுள் ஒன்ருகிய பதிற்றுப்பத்தில் ஐந்தாம்பத்துப்பாடிக் கோச்செங்குட்டுவனிடம் மலைநாட்டிலுள்ள உம்பற்காட்டுவாரியையும் அவன்மகன் குட்டுவன் சேரலையும் பரிசிலாகப் பெற்றவர். இவர் சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி, சேரமான்குடக்கோ நெடுஞ்சேரலாதன், சோழன்வேற்பஃறடக்கை பெருநற்கிள்ளி, வையாவிக்கோப் பெரும்பேகன், சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் முதலியவரைப் பாடியதாகத் தெரிகிறது. திருவள்ளுவமாலையிலுள்ள "மாலுங்குறளாய்" எனும் வெண்பா செய்ததாகத் தெரிதலின் உக்கிரப்பெருவழுதியாரும் அம்மாலையை இயற்றிய மற்றப் புலவர்களும் இருந்த காலத்தவர் என்று எண்ணப்படுவர். கபிலருடைய அருந்துணைவர். அதிகமானெடுமானஞ்சி, கோவலூர்த் தலைவனை வென்று அவ்வூரைக் கைக்கொண்டமை இவராற் கூறப்பட்டுள்ளது. எட்டுத்தொகையில் (அஉ) செய்யுட்கள் இவர் பாடினவாகத் தெரிகிறது. சிவபெருமான் திருவந்தாதி இயற்றிய பரணரும் இவராக இருக்கலாம் என்பது சில அறிவாளிகளின் நோக்கம். (பதிற்றுப்பத்து.)

4. சுதேசப் பழங்குடிகளில் ஒரு வகுப்பினர். இவர்கள் கல்வியிலும், ஆடல் பாடல்களிலும் வல்லவராயிருந்ததபற்றித் தமிழ் நாட்டரசர்களால் மதிக்கப்பெற்று இருந்தனர். இவர்கள் ஒரு மூங்கிற்கோல் கைக்கொண்டிருப்பர்.

**பாதகண்டம்** — பரதனல் ஆளப்பட்ட பூமி. இஃது அரசிலையுருவாய் மகாகண்டமாகிய ஆசியகண்டத்திற்குத் தெற்கில் இருப்பது.

**பாதகன்**—பிரச்சோதனனுடைய மந்திரிகள் பதினுயிரவருள் ஒருவன். சாலங்காயனுக்கு அடுத்தபடி யென்னும் பெருமை வாய்ந்தவன்; சிறந்த நூற்பொருள்களை அறிந்தவன். உதயணன்பால் மிக்க அன்புடையவன். ஐராபதம் என்னும் மலையிற் பிறந்த சிங்கச்சுவண மென்னும் பொன்னில் எட்டிலக்கம் நன்கொடையாக உதயணனல் அளிக்கப்பெற்றவன். (பெ-கதை.)

**பாதசேநாபதியம்** — ஆதிவாயிலார் செய்த ஒரு தமிழ் நூல்.

**பாதசேநாபதியார்** — இவர் பாத நூலாசிரியர்.

**பாதமுனிவர் செய்த பாதநாட்டிய வகை** — அப்பாதங்கள் 108-இன் பெயர் மாத்திரம், மைசூர் கவர்ன்மெண்டார் அச்சிட்ட பாத சாஸ்திரம் (vol - I)-இன்படி எழுதப்பட்டன. 1. தாலபுஷ்பம். 2. வர்திதம். 3. வலிதோருகம். 4. அபவித்தம். 5. ஸமனகம். 6. வீனம். 7. ஸ்வஸ்திகரேசிதம். 8. மண்டலவஸ்திகம். 9. நிகுட்டகம். 10. அர்த்தநிகுட்டகம். 11. கடிச்சின்னம். 12 அர்த்தரேசிதகம். 13. வக்ஷஸ்வஸ்திகம். 14. உன்மத்தம். 15. ஸ்வஸ்திகம். 16. புருஷ்டஸ்வஸ்திகம். 17. திக்ஸ்வஸ்திகம். 18. அலாதகம். 19. கடிஸமம். 20. ஆக்ஷிப்தரேசிதம். 21. விக்ஷிப்தாக்ஷிப்தகம். 22. அர்த்தஸ்வஸ்திகம். 23. அஞ்சிதம். 24. புஜங்கத்ராஸிதம். 25. ஊர்த்வஜாநு 26. நிகுஞ்சிதம். 27. மத்தள்ளி. 28. அர்த்தமத்தள்ளி. 29. ரேசகநிகுட்டிதம். 30. பாதாபவித்திகம் 31. வலிதம். 32. தூர்ணிதம. 33. லாலிதம். 34. தண்டபக்ஷம். 35 புஜங்கத்ராஸ்தரேசிதம். 36. நூபுரம். 37. வைசாகரேசிதம். 38. ப்ரமாகம். 39. சதுரம். 40. புஜங்காஞ்சிதம் 41. தண்டரேசிதம். 42. விருச்சிககுட்டிதம். 43. கடிப்ராந்தம். 44. லதாவிருச்சிகம் 45. சித்ரம். 46. விருச்சிகரேசிதம். 47. விருச்சிகம். 48. வியம்சிதம். 49. பார்ச்வநிகுட்டகம். 50. லலாடதிலகம். 51. திராந்தகம். 52. குஞ்சிதம் 53. சக்ரமண்டலம். 54. உரோமண்டலிகம். 55. ஆக்ஷிப்தம். 56. தலாவிலாஸிதம். 57. அர்கலம். 58. விக்ஷிப்தம். 59. ஆவர்தம். 60. டோலாபாதம். 61. நிவிருத்தம். 62. விநிவிருத்தம். 63. பார்ச்வகாந்தம். 64. நிசும்பிதம். 65. வித்யுத்பிராந்தம் 66. அதிக்ராந்தம். 67. விவர்த்திதகம். 68. கஜக்ரீடிதம். 69. தலஸம்ஸ்போடிதம். 70. கருடபுலுதகம். 71. கண்டசூசி. 72. பரிவிருத்தம். 73. பார்ச்வஜாநு. 74. கிருத்ராவலீனகம். 75. ஸம்நதம். 76. ஸூசி. 77. அர்த்தசூசி. 78. சூசிவித்தம். 79. அபக்ராந்தம். 80. மயூரலலிதம். 81. ஸர்பிதம். 82. தண்டபாதம்.

83. ஹரிணப்லுதம். 84. பிரேங்கோலிதம். 85. நிதம்பம். 86. ஸ்கலிதம். 87. கரி ஹஸ்தகம். 88. பிரஸர்பிதகம். 89. சிம்ம விக்ரீடிதம் 90. சிம்மாகர்ஷிதகம். 91. உத் ருத்தம். 92. உபஸ்ருதம். 93. தலஸங் கட்டிதம். 94. ஜநிதம். 95. அவஹித்தம். 96. நிவேசம். 97. ஏலகாக்ரீடிதம். 98. ஊருத்ருத்தம். 99. மலஸ்கலிதகம். 100. விஷ்ணுக்ராந்தம். 101. ஸம்பிராந்தம். 102. விஷ்கம்பம். 103. உத்தட்டிதம். 104. விருஷபக்ரீடிதம். 105. லோலிதம். 106. நாகபஸர்பிதம். 107. சகடாஸ்யம். 108. கங்காவதரணம்.

**பாதம்** — இது, பாவ ராக தாளமென்னும் மூன்றின் முதலெழுத்துக்களைத் திரட்டி யிட்ட பெயராம். இம் மூன்றெழுத்துக்க ளும் பிரணவ விகாரமெனவும், இவற்றிற் குப் பிரமன் முதலிய மும்மூர்த்திகளும் அதிதேவதைகள் எனவுங் கூறுவர். இப் பரதம் பாவராக தாளவகையால் மூன்று விதப்படும். அந்தப்பாவம் கரவகையால் நாற்பத்தொன்றும், சிரவகையாற் பத்தும் பதவகையாற் பத்தும், நேத்திரவகையால் எழும், இரசவகையால் ஒன்பதும், சுரவ கையால் ஆறுமாம். அக்கரவகை, ஒற்றை க்கை, இரட்டைக்கை என இருவகைப்ப டும். ஒற்றைக்கையினை - வருக்குமிடத்தில் பதாகை, திரிபதாகை, பிறை, சர்ப்பசிரம், சாளயம், மான்றலை, பற்மகோசம், சிலீ முகம், தேசிமுஷ்டி, சிகரம், சூசிகம், கபித் தம், கடகம், சாந்தாங்கிசம், அன்னவாய், முகிழ், திரிலிங்கம், மிருகசிரம், சிங்காகம், கூர்மம், பூர்ணம், மென்றிலை, முன்னதம் என (உஙு) ஆம். இனி இரட்டைக்கை - அஞ்சலி, புஷ்பாஞ்சலி, தாடனம், பதா கை, சங்கற்பம், டோளம், உற்சங்கம், உப சாரக்கை, அபயவரதம், மகரக்கை, கரு டக்கை, பாரதிக்கை, கலகக்கை, சுபசோ பனக்கை, பத்மமுகிழ்க்கை, மல்லயுத்தக் கை, பதாகைசோத்திகம், கத்திரிசோத்தி கம் எனப் பதினெட்டாம், ஆகக் கரவகை (சக). இனிச் சிரவகை - சமசிரம், கம் பிதசிரம், ஆகம்பிதசிரம், துதசிரம், விதாத சிரம், உக்கிதசிரம், நிகுஞ்சிதசிரம், அதோ முகசிரம், கந்தானனசிரம், அனுக்குச்சிரம் என (கம). இனிப் பதவகை - சமபதம், மண்டிலபதம், குஞ்சிதபதம், அஞ்சிதபதம், வடிம்புபதம், தாடிதபதம், நாகபந்தபதம், சாடகதிப்பதம், திருத்தமூர்த்திப்பதம், கரு டகிலைப்பதம் ஆக (கம). இனி நேத்திரம் - காந்தைக்கண், பயாநகக்கண், கருணைக் கண், மூடாம்பரக்கண், அற்புதக்கண், வீரக்கண், நகைக்கண் என (எ). இரச வகை - பெருநகைரசம், சோகரசம், கருணு ரசம், வீரரசம், அச்சரசம், சாந்திரசம், அற் புதரசம், ரௌத்திரரசம், சிருங்காரரசம் என (கூ). சுவை - இனிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, புளிப்பு, உவர்ப்பு என (சு) இவை சேர்ந்தது பாவமாம். இனி இராகம் - மொழிக்கு முதற்காரணமாய் நாதந்தோன்றும். அந்த நாதமே, அகர, உகர, மகரம் என்கிற பிரணவத்தின் வடிவு. அந்தப் பிரணவமாகிய ஓங்கார த்வனியினின்றும் சுரத்வனி, நிர்க்கோ ஷத்வனி, நிர்ணயத்வனி, வேணுத்வனி, காளத்வனி, சங்கத்வனி; மேகத்வனி, பேரித்வனி, மத்தளத்வனி, குமந்தத்வனி யென்னும் பத்துவித துவனிகள் தோன் றின. அத்தொனிகள் காரணமாக ஆன்மா மனது, அக்னி, வாயு, ஆகிய நான்கின் முயற்சியால் எழு சுரங்களும், மந்த இசை, தாரை இசை, மத்திம இசை, யென்னும் மூன்று இசைகளும் தோன்றின. அச் சுரங்களாவன ச, ரி, க, ம, ப, த, நி என் னும் குறிகளையுடைய குரல், துத்தம், கைக் கிளை, உழை, இளி, விளரி, தாரமென்பன வாம். முறையே இவற்றின் ஆயுள். அதி தேவதை, இடம், காலம், த்வனி, மலர், சுவை, நாமம், பயன், வாரம், திதி, நக்ஷத் திரம், நிறம், உணவு, ஜாதி, பூச்சு, வஸ்தி ரம், அணி, அப்பசித்தவர், விருக்ஷம், வாக னம், ஆயுதம் முதலியவற்றை விரிந்தநூல் களுட் காண்க. மேற்கூறிய சுரங்கள் - சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ் சமம், தெய்வதம், நிஷாதம் எனப் பெயர் பெறும். அச்சுவரங்கள் ஆரோகணம், அவ ரோகணம், டாலு, ஆந்தோளம், ஸ்புரிதம், ஆவாதம், மூர்ச்சனை, திரியுச்சம், பிரத்தி பாஹதம், கற்பிதமெனப் பத்துவித கம கங்களோடு சுருதியுடன்கூடி மேகவிரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், கைசிகம், வராளி, மலஹரி, பல்லதி, இந்தோளம், படமஞ் சரி, நாராயணி, நாட்டை, வசந்தம், பௌளி, சீராகம், பங்காளம், கூர்ச்சரி, கௌளி, காந்தாரி, காம்போதி, இலலி தை, தேவக்கிரியை, தேசாக்ஷரி, மாளவி, சாவேரி, தேசி, சாரங்கம், தோடி, இராமக் கிரியை, வேளாவளி, பைரவி, குண்டக்

கிரியை, தன்னியாசி யென்னும் தலைமை பெற்ற இராகங்களைப்பெற்று நிலவும். இந்த முப்பத்திரண்டு இராகங்களும் விரிவாற் பலவிதப்படுமென்பர் இசைநூலார். இவற்றுள்—பைரவி, புருட விராகம்; பிராமணசாதி; மனைவிகள், தேவக்ரியை, மேக விரஞ்சி, குறிஞ்சி; அதிதேவதை, ஈசன். பூபாளம், புருடவிராகம், பிராமணஜாதி, இதன் மனைவிகள் வேளாவளி, மலஹரி, பௌளி; அதிதேவதை திருமால். சீராகம், புருடவிராகம், அரசசாதி, இதன் மனைவிகள் இந்தோளம், பல்லதி, சாவேரி; அதிதேவதை சரஸ்வதி. படமஞ்சரி புருடராகம் அரசசாதி; இதன் மனைவியர், தேசி, இலலிதை, தோடி; அதிதேவதை இலக்குமி. வசந்தம், புருடராகம், வைசிய சாதி, இதன் மனைவியர் இராமக்கிரியை, வராளி, கைசிகம்; அதிதேவதை, சூரியன். மாளவி, புருடராகம், வைசியசாதி இதன் மனைவியர் நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி; அதிதேவதை நாரதன். பங்காளம், புருடராகம், சூத்திரசாதி, இதன் மனைவியர், தன்னியாசி, காம்போதி, கௌளி; அதிதேவதை விநாயகர். நாட்டை புருடராகம். சூத்திரசாதி இதன்மனைவியர், தேசாக்ஷரி, காந்தாரி, சாரங்கம். அதிதேவதை தும்புருவர். இனி இராகங்களில் குணம்பற்றியவை, இரக்கம்பற்றிய ஆகரி, கண்டாரவம், நீலாம்பரி, பியாகடம், புன்னாகவராளி, துக்கவிராகங்கள். மேற்கூறிய இராகங்களுடன் வராளியுஞ் சேர்ந்துவரும். மகிழ்ச்சியிராகம்காம்போதி, தன்னியாசி, சாவேரி. யுத்த இராகம் நாட்டை. இனிக் காலங்குறித்த இராகங்களாவன—வசந்தகால இராகங்கள் காம்போதி, அசாவேரி, தன்னியாசி. மாலையிராகம், கல்யாணி, காபி, கன்னடம், காம்போதி. யாமராகம், ஆகிரி. விடியற்காலராகம், இந்தோளம், இராமகலி, தேசாக்ஷரி, நாட்டை, பூபாளம். உச்சியிராகம், சாரங்கம், தேசாக்ஷரி முதலிய. இராகங்கள் பலவற்றுள், ஆகிரி, இந்தோளம், இராமகலி, சாரங்கம், பூபாளம் நீங்கின மற்றவை, உச்சியிராகங்களாம். இனிப்பாப் பற்றிய இராகங்களாவன — சங்கராபரணம் வெண்பாவிற்கும், தோடி அகவற்கும், பந்துவராளி கலிப்பாவுக்கும், பைரவி கலித்துறைக்கும், தோடி தாழிசைக்கும், கலியாணி, காம்போதி, மத்தியமாவதி முதலிய விருத்தத்திற்கும், சௌராட்டிரம் உலாவிற்கும், பூபாளம் தேவாரத்திற்கும், கேதாரகௌளம் பிள்ளைக்கவிக்கும், கண்டாரவம் பரணிக்கும், தக்கவை யென்பர். பின்னும் விரிப்பிற் பெருகுமென நிறுத்தித் தாளவகை சிறிது கூறுதும். சதாசிவமூர்த்தியின் ஈசான திருமுகத்தில் உற்கடிதமும், தற்புருடமுகத்தில் சம்பத்துவேட்டமும், அகோரமுகத்தில் சட்பிதா புத்திரிகமும், வாமமுகத்தில் கச்சற்புடமும், சத்தியோசாதமுகத்தில் சாசற்புடமும், தோன்றினவென்பர். பின்னும், ஆதிதாளம், பார்வதிலோசனம், குடுக்கம், சிங்கணந்தம், திரிமாத்திரை என்பன முற்கூறியவற்றிற்கு உபதாளங்களாம். பின்னும் சில நூலார் அங்கதாளம், உபாங்கதாளம், பங்கதாளம், விபாங்கதாளம், சுத்ததாளம், அனுதாளம் என ஆறுவிதங் கூறுவர். மற்றுஞ் சிலர் துருவதாளம், அடதாளம், ஏகதாளம், திரிபுடைதாளம், உருபகதாளம், சம்பைதாளம், மட்டியதாளம் எனவும், சிலர் அருமதாளம், சமதாளம், சித்திரதாளம், நிவர்த்ததாளம், துருவதாளம், சயதாளம், படிமதாளம், விடதாளம், அரிதாளம் என ஒன்பது விதமெனவுங் கூறுவர். இவற்றைச் சச்சற் புடமுதல் பெத்தாபரண மீறாக (கOஅ) பேதங் கூறுவர். இது காலம், மார்க்கம், கிரியை, அங்கம், கிரகம், ஜாதி, களை, இலயை, யதி, பிரத்தாரமெனப் பத்துவித தாளப் பிரமாணத்தைப் பெறும். காலத்தைக் கூறுமிடத்துத் தாமரைப்பூவின் இதழ், நூறடுக்கி அதில் ஊசியைச் செலுத்துங் காலம் கணமாம். கணம் எட்டுக் கொண்டது இலவமாம். இலவம் எட்டுக்கொண்டது காட்டையாம். காட்டை எட்டுக்கொண்டது நிமிடமாம். நிமிடம் எட்டுக் கொண்டது துடியாம். துடி இரண்டு கொண்டது துரிதமாம். துரிதம் இரண்டு கொண்டது இலகுவாம். இலகு இரண்டு கொண்டது குருவாம். இலகு (ங) கொண்டது புலுதமாம். குரு இரண்டுகொண்டதுகாகபதமாம். அதாவது நிமிடத்திற்கு அரைவீச மாத்திரை, துடி கால்மாத்திரை, துரிதம் அரைமாத்திரை, குரு இரண்மாத்திரை, புலுதம் மூன்று மாத்திரை, காகபதம் நான்கு மாத்திரை. மார்க்கம் என்பது தக்கணம், வார்த்திகம், சித்திரம், சித்திரதாம், அர்த்தசித்திரப், அதிசித்திரம் என ஆறும். தக்கணமாதி

யாகக் கூறிய மார்க்கமாறில் தக்கணம் எட்டுமாத்திரை கூடியகளையையும், வார்த்திகம் நான்குமாத்திரை கூடிய களையையும், சித்திரம் ஒருமாத்திரை கூடிய களையையும் சித்திரதரம், ஒருமாத்திரை கூடிய களையையும், அர்த்வசித்திரம் அரைமாத்திரைகூடிய களையையும், அதிசித்திரம் கால்மாத்திரை கூடியகளையையும் பொருந்தும். கிரியையாவது, தேசிகம், மார்க்கமென இரண்டுவகைப்படும். தேசிகமென்பது துர்வகம், சர்ப்பிணி, கிருடிபை, பதுமினி, விசர்ச்சிதை, பதாகை, விட்சிப்த்தம், பதிதம், என எட்டுவகைப்படும். மார்க்கமாவது நிசத்தம் நான்கும், சசத்தம் நான்கும் என எட்டாம். நிசத்தமாவது ஆவாபம், நிட்கிராமம், விட்சேபம், பிரவேசம், என நான்கு வகைப்படும். சசத்தமாவது துருவம், சம்மியம், காளம், சந்நிபாதம் என நான்காம். அங்கமாவன பிறை, மதி, கணை, வில், பாம்பு, புள்ளடி. இவற்றின் பரியாய நாமம் முறையே அநுதுரிதம், துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம் என்பனவாம். பிறைக்குக் கால்மாத்திரை, மதிக்கு அரைமாத்திரை, கணைக்கு ஒரு மாத்திரை, வில்லுக்கு இரண்டுமாத்திரை, பாம்புக்கு மூன்று மாத்திரை, புள்ளடிக்கு நான்கு மாத்திரை. அந்தக்கரணமென்பது உத்துவேட்டிதம், அபவேட்டிதம், பரிந்தாய விருத்தம், பரி விருத்தமென நான்காம். தானகமாவது ஆடவர் நிலைத்தானம் ஆறு, பெண்களின் நிலைத்தானம் எழு, தேசி இருபத்து மூன்று, ஆதனம் பதினைந்து, ஆக தானகம் ஐம்பத்தொன்று. கிரகம் நான்காவன, அதீதம், அநாகதம், சமம், விடமென நான்காம். அவற்றுள் குரல்முன்னும், தாளம் பின்னும் வருவது அதீதமாம். தாளம் முன்னும் குரல் பின்னும் வருவது அநாகதம். குரலுந்தாளமும் முன்னும் பின்னுங் கலப்பது விடமாம். சாதியாவன - சதுரசிரம், திரிசிரம், மிசிரம், கண்டம், சங்கீரணம் என ஐந்தாம். களை யென்பது ஒருகளை, இருகளை, நாற்களை என மூன்றாம். அந்தக் களைகள் அக்கரகாலமாகக் கிரியையோடு வரல் ஏகளை; இரட்டித்துவரல் துவிகளை. துவிகளையிரட்டித்துவரல் சதுர்க்களையாம். இலயையாவது விளம்பமென்றும், மத்திமமென்றும், துரிதமென்றும் மூன்று வகைப்படும். யதி யென்பது சமம், விடமம், மிருதங்கம், வேதமத்தியம், கோபுச்சம், சுரோதோவகம் என ஆறும். நெட்டங்கழும் குற்றங்கழும் சமமாய்வரல் சமயதியாம். எல்லா அங்கமும் ஒழுங்கின்றி விரவிவருவது விடமயதியாம். முதலிலும் இறுதியிலும் குற்றங்கமும், இடையில் நெட்டங்கமும் வருவது மிருதங்கயதியாம். முதலிலும் இறுதியிலும் நெட்டங்கமும் இடையில் குற்றங்கமும் வருவது வேதமத்தியயதியாம். முதலிற் நெட்டங்கமும் கடையிற்குற்றங்கமும் நிரையே வருவது கோபுச்சயதியாம். முதலிற் குற்றங்கமும் கடையில் நெட்டங்கமும் நிரையே வருவது சுரோதோவகயதியாம். பிரத்தாரயதியைப் பெருநூல்களிற் காண்க. தாளங்கள் சச்சற்புடத்துக்கு குரு-உ, இலகு-க, புலுதம்-க ஆகமாத்திரை (ச). சாசற்புடத்திற்கு குரு-க, இலகு-உ, குரு-க, ஆகமாத்திரை (கூ). சட்பிதாபுத்திரிகத்திற்குப் புலுதம்-க, இலகு-க, குரு-உ. இலகு-க, புலதம்-க ஆகமாத்திரை-கஉ, சம்பத்துவேட்டத்திற்குப் புலுதம்-க, குரு-ங, புலதம்-க ஆகமாத்திரை-கஉ. உற்கடிதத்திற்கு குரு-ங, ஆகமாத்திரை ஆறும். மற்றொருசாரார் கூறிய துருவத்திற்கு இலகு-க, குரு-க, துரிதம்-க. இதற்குச் சுரம், சரிகம, கரிசரி, கரிசரிகம, மட்டியத்திற்கு இலகு-க, துரிதம்-க, இலகு-க, இதற்குச் சுரம் சரிகரி, சரி, சரிகம. உருபகத்திற்கு இலகு-க, துரிதம்-க. இதற்குச்சுரம் சரிசரிகம. சம்பைக்கு இலகு-க, அநுதுரிதம்-க, துரிதம்-க இதற்குச்சுரம் ச, ரிக, சரி, சரி, கம, திரிபுடைக்கு துரிதம்-உ, அநுதுரிதம் க, இதற்குச்சுரம் சரிக சரிகம அடதாளத்திற்கு இலகு-க, துரிதம்-உ, இலகு-க இதற்குச் சுரம், சரிகா, சாரிகா, மா, மா. ஏகதாளத்திற்கு இலகு-க, இதற்குச்சுரம் சரிகம.

2. நாடகத் தமிழ்நூலுள் ஒன்று.

**பரதர்** — 1. இருஷபருக்குச் சயந்தியிடம் உதித்தகுமாரர். இவர் ஆண்டதால் இக்கண்டம் பரதகண்டமெனப் பெயர்பெற்றது. இவர் பாரி பஞ்சசேநி. இவர் கோடி வருஷம் அரசாண்டு புலகராச்சிரமம் அடைந்து யோகத்திருக்கையில், ஒருமுறை கண்டகி நதிதீரமடைந்து சந்திவந்தனை செய்கையில் பெண்மானொன்று சிங்கத் தொனிகேட்டு நடுங்கிக்கருவுயிர்த்திறந்தது. பரதராகிய இராசருஷி அந்தமான் குட்டியை யெடுத்து வளர்த்து அதனிட

த்து அதிக அன்புள்ளாராய் மரணந்தத்தில் அம்மானிடம் நினைவுடன் உயிர்விட்டட . ஆகையால் முனிவர் மறுபிறவியில் அம்மானுருவடைந்து முன்னைய நினைவு மறவாராய்ச் சில நாள் கழித்து அப்பிறவி நீங்கி ஆங்கிரச கோத்திரத்துள் ஒரு பிராமணனுக்குள்ள இரண்டு தேவியரில் கனிஷ்டையிடத்துதித்த இரட்டைகளில் ஆணுகப்பிறந்து பித்தனைப்போல் திரிந்து இருந்தனர். இவ்வகைத் திரிகையில் ஒருவன் புத்திரப்பேறு வேண்டி நரபலி கொடுக்க இவரைக் கொண்டுபோய்ப் பலி கொடுக்க முயற்சிக்கையில் காளி எதிர்த்து அவனைச் சங்கரித்தனள். பின் இவர் இட்சுக்மதிதீரத்தில் உன்மதம் பிடித்தவர்போல் திரிந்திருக்கையில், சவ்வீரதேசாதிபதியின் பல்லக்குச் சுமப்பவர் இவரைத் தம்மொடு பல்லக்குச் சுமக்கப்பிடித்தனர். அவ்வகை இவர் பிடிபட்டுப் பல்லக்குச் சுமந்து மெல்லச் செல்லுகையில் ரகுகுணனென்னும் அவ்வரசன் கோபிக்க அதற்கு விடைகூறி அரசனுக்கு ஞானுபதேசஞ் செய்தவர். இவரே சடபாதர் (பாகவதம்.)

2. தசரதருக்குக் கைகேசியிடம் உதித்த குமரன். தேவி மாண்டவி, இவன் தன் சகோதராகிய ஸ்ரீ ராமமூர்த்தி பட்டம் விட்டுக் காட்டிற்குச் சென்றது பற்றித் தாயைக்கோபித்து இராமமூர்த்தி மீண்டும் நாடுவந்து சேருமளவும் நந்திகிராமத்தில் அவரது திருப்பாதுகையை யாசித்துப் பெற்றுப் பூசித்து வந்து நகர் வருங்காலம் தவறுதல் அறிந்து தீயில்விழ யத்தனித்துத் தீவலம் வருகையில் கௌசலா தேவியால் நீதி கூறப்பட்டு அநுமன்காட்டிய முத்திரைமோதிரத்தால் தடையுண்டு பின் இராம பிரானைத் தரிசித்து அவரிடம் இராச்சியத்தையொப்புவித்து அவர்கட்டளைப்படி காந்தருவநகரைச் செயித்துப் பிள்ளைகளுக்கு அளித்து அயோத்தியடைந்தவன். (இராமாயணம்.)

3. அங்கிராவிற்கு மிருதியிடம் உதித்த குமரன்.

4. சீவகன் புதல்வரில் ஒருவன்.

5. இவனே கோவலன். இது இவனுக்கு முற்பிறப்பின் பெயர். இவன் சிங்கபுரத்தரசனிட மிருந்தபொழுது காரணமின்றிச் சங்கமனென்னும் வணிகனைக் கொன்று அவன் மனைவியாகிய நீலியாற் சபிக்கப்பட்டான். (மணிமேகலை.)

6. சூர்யகுலத்தரசன். இவன் குமாரன் பத்திரரதன்.

7. பாரதத்தை இயற்றிய ஒரு தேவன்.

**பாரதவருஷம்** — இது இமயத்திற்குத் தென்பாகமுள்ள பூமி. இதனை அக்னித்துருவன் தன் குமாரனுகிய நாபிக்குக் கொடுக்க அந்நாபி தன் பேரனுகிய பாரதனுக்குக்கொடுத்ததால், இப்பெயர் அடைந்தது. பாரத கண்டமும் இதுவே.

**பாரதவர்** — ஒரு குருநிலமன்னர். புலவர்க்குப் பொருள் கொடுத்துப் புகழடைந்தவர். (புற - நா)

**பாரதன்** — 1. துஷ்யந்தனுக்குச் சகுந்தலையிடம் பிறந்த குமரன். தேவி, சுநந்தை, குமரன் பௌமன். இவன் சம்ராட்பட்டம் பெற்றவன்; இவன் பரத்துவாசர் அநுக்கிரகத்தால் புமன்யன், உதமன்யன் என்பவர்களைப் பெற்றுன். இவன் அக்னிசயனமென்னும் யாகம் (உஎ,000) வருஷஞ் செய்து, விதேக புத்திரிகள் மூவரிடத்துங் கூடிப் புத்திரனைப்பெற்று, இவர்கள் யோக்கிய ரன்றெனத் தோன்றி வெறுத்தபடியால் இவன் தேவிமார் இப்புத்திரரைச் கொலைசெய்தனர். இவ்வகை மும்முறை கொலைபுரியவே, சந்ததி நிலையாமைகண்ட அரசன், தேவர்களைக்குறித்து யாகமொன்று இயற்றினன். அந்த யாகத்தில் தேவர் தோன்றி அரசனுக்குப் பாரத்துவாசன் என்னும் ஒருபுத்திரனை அளித்தனர் (பாகவதம்). இவன் தனது ஆசாரியருக்குப் பதினேழு கோடி வெள்ளை யானைகளைத் தானமளித்தவன்.

2. இவன் ஒரு சக்கிரவர்த்தி, உதயணனுடைய குல முதல்வன். (பெ - கதை.)

3. இவன் தேவர்களைக் குறித்து யமுனைக்கரையில் (300)-ம், ஸரஸ்வதிக் கரையில் (20)-ம், கங்கைக் கரையில் (14)-ம், மற்ற இடங்களில் பலவுமாக (1000) அசுவமேத யாகங்களைச் செய்தான். பல வேதிகைகளைப் போட்டு ஆயிரக்கணக்கான குதிரைகளைக் கட்டி யாகஞ் செய்தவன். (பார - சாந்தி.)

4. அக்னி விசேடம். (பார - வனபர்.)

**பாரதேச்வாசக்கிரவர்த்தி** — சைநர், இருஷபதீர்த்தங்கருக்கு யசச்சுதியிடம் பிறந்த குமரர்.

**பாரத்துவாசர்** — 1. ஒரு இருடி. தந்தை உதத்தியன். தாய் மமதை. பிரகஸ்பதியாற் பிறந்தவர். இவர் அச்சிரமம் கிருங்கி

பேரம். தற்காலம் பிரயாகை யென்னப்படும். ஒருமுறை வியாழன் தன் தம்பியாகிய உதத்தியன் பாரியாகிய மமதை கருத்தாங்கி யிருக்கவும் அவளை வலிதிற் புணர்ந்தனன். வயிற்றிலிருந்த கருவாகிய தீர்க்கதமன், வியாழன் கருவைத்தடை செய்ததனுலும் அந்த வியாழ வீரியத்தை மமதை தாங்காததினுலும் வியாழன் கரு வெளிப்பட்டு ஒருருக்கொண்டது. அதற்குத் தேவர் பரத்துவாசர் எனப் பெயரிட்டழைத்துப் பரதன் வம்சவுத்தாரணத்திற்கு அப் பிள்ளையை அளித்தனர். இவருக்கு வித்தன் எனவும் ஒரு பெயர். இவரைக் கலசத்திற் பிறந்தவரெனவுங் கூறுவர். இவர் குமரன் துல்யவக்ரன். கரிக் குருவியிடம் பிறந்தவரெனவுங் கூறுவர். இப்பெயர்கொண்ட மற்றொருவர் சயன் என்னும் அக்னிக்குக் குமாராயிருந்தனர். இவர் ஆச்சிரமத்தில் இராமமூர்த்தி வனஞ் சென்றபோது தங்கிச்சென்று மீளுகையில் இவர் எதிர்கொண்டு அழைக்க வந்து தங்கி விருந்துண்டு சென்றனர். இவர் துல்ய வக்ரன் என்னுந் தன்குமரன் பூதத்தாலிறந்தானென்று உயிர் நீத்தவர். இவர் இருக்குவேதத்தின் ஆறுவது காண்ட கீதங்களைச் செய்தவர். சுகேசன் என இவர்க்கு ஒரு குமரன் உண்டு. இவர் பசியினுல் விருது என்னுந் தச்சனிடம் அநேக பசுக்களைத் தானம் வாங்கினர். (மநு) (பாகவதம்) யவக்ரீவனைக் காண்க.

2. இவர்க்கு வாக்துஷ்டன், குலோதனன், ஹிமசிரன், பிசுநன், கபி, பிதுர்வர்த்தி, ஸ்வஸ்வரூபன் என எழு புத்திரர் இருந்தனர். இவர்கள் தீ நடக்கையால் பிரஷ்டர்களாய் அச்சநன மொழிந்து கௌசிக புத்திரராகத் தோன்றிக் கர்க்கமுனிவர் சீடர்களாய் அவர் தம் பசுவினையும் கன்றினையும் ஒட்டிவரக் கூறக்கேட்டு அவ்வாறு கன்றையும் பசுவையும் ஒட்டி வருகையில் பசியால் பசுவைக் கொன்று கர்க்கருக்குப் புலி யடித்துவிட்டதென்று பொய் கூறிப் பிதுர்க்களுக்குப் பிரீதிசெய்து அக்கோமாமிச மருந்திப் பொய் பேசியதால் வேடராகப் பிறந்து, பிதுர் பிரீதி செய்ததால் பூர்வஜன்ம ஞானமுண்டாய்க் காலஞ்சா மலையில் மிருகங்களாய்ப் பின் சக்கரவாகப் பக்ஷிகளாய் நீபதேசத்தரசனைக் கண்டு நாம் இவ்வகைஅரசனுவோமென்று பிதுர் பிரீதி செய்ததால் மறுஜன்மத்தில் காம்பிலி தேசத்தில் அவ்வாசனுக்கு அநுஹன் எனப் புத்திரனுகவும் மற்றப் பக்ஷிகள் அந் நாட்டில் வேதிய புத்திரர்களாகவு மானுர்கள். (சிவமகா புராணம்.)

3. இவர்க்குக் குமரா எழுவர் இருந்தனர். இவ்வெழுவரும் மானஸசாசின் கரையில் யோகு புரிகையில் ஒழுக்கக் குறைவால் யோகம் கைகூடாது மரண மடைந்து மறுபிறப்பில் குருக்ஷேத்திரத்தில் கௌசிக முனிவரது குமாரராய்த் தோன்றித் தந்தை இறக்கப் பின் கார்க்க முனிவர்க்குச் சீடராய் அவரது ஓமதேனுவைக் காத்து வருகையில் பசியால் வருந்தி அப் பசுவைக் கொன்று தின்ன முயது கையில் அவர்களுள் ஒருவன் ஆலோசனையாய் அப் பசுவைக் கொன்று பிதுர்களுக்குச் சிரார்த்தஞ்செய்து உண்போமென்ன உடன்பட்டு அவ்வகை செய்துண்டனர். பின் இவர்கள் குருவின் பசுவைக் கொன்றதால் சில இழி பிறப்புக்களையும், பிதுர் சிரார்த்தஞ் செய்ததால் பூர்வ ஜன்ம ஞானமும் உயர்கதி அடைதலையும் பெற்றுத் தசார்ணவ தேசத்தில் எழு வேடர்களாயும், காலஞ்சரகிரியில் எழு மிருகங்களாயும், சரத்வீபத்தில் எழு சக்ரவாகப் பக்ஷிகளாயும், மானஸசாசில் பத்மகர்ப்பம், அரவிந்தாக்ஷம், க்ஷீரகர்ப்பம், சுலோசனம், குருபிந்து, சுபிந்து, ஹைமகர்ப்பம் எனப் பெயர் பெற்று பொன்னிறமாகிய எழு அன்னங்களாயும், காம்பிலிதேயத்து எழு சிறந்த மானிடராயும் பிறந்து முற்பிறப்பினை ஞானத்தா லுணர்ந்து முடிவில் முத்தி பெற்றனர். (கம்பராமா - ஆரண்யபர்வம்.)

4. இவர் கங்கையிற் ஸ்நானஞ் செய்யச் சென்ற காலத்து உலக மளக்க எடுத்த திரிவிக்ரமனுல் அடிக்கப்பட்டார். (பாரதம் சாந்திபர்வம்).

**பாத்தைகூறல்** — மணங் கமழும் மாலையை யுடைய தலைவன் மாலை எமக்குப் பெறுதற்கு எளிதென்று சொல்லிப் பாங்காயினர் கேட்பப் பரத்தை மொழிந்தது. (பு. வெ. பெருந்திணை.)

**பரத்தையிற் பிரிவு** — இது, தலைவன் பரத்தையர்மேற் காதலாய்த் தலைவியைப் பிரிந்து பரத்தையர் சேரியிற் சேறல். இது வாயில்வேண்டல், வாயில்மறுத்தல், வாயினேர்வித்தல், வாயினேர்தல், என நான்கு வகையினையும், காதலன் பிரிவுழி கண்டோர் புலவிக்கு ஏதுமதாமவ் விறைவிக்

கென்றல், தனித்துழி யிறைவி தனித் தழுதிரங்கல். ஈங்கிதுவென்னெனப் பாங்கி வினுதல், இறைமகன் புறத்தொழுக் கிறை மகளுணர்த்தல், தலைவியைப் பாங்கி கழறல், தலைவி செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி யவ்வணி யுழையர்கண் டழுங்கிக்கூறல், பரத்தையர் கண்டு பழித்தல், பரத்தைய ருலகிய னோக்கி விடுத்தலிற் றலைவன் வரவு கண்டு வந்து வாயில்கண் மொழிதல், தலைமகன் வரவு பாங்கி தலைவிக் குணர்த்தல், தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல், புணர்ச்சியின் மகிழ்தல், முதலிய (கக)-ம் உணர்த்தவுணரு மூடற்குரியனவாம், இனி உணர்த்த வுணரா வூடற்குரியன — வெள்ளணி யணிந்து விடுத்துழித் தலைமகன் வாயில் வேண்டல், தலைவி நெய்யாடிய திருவை சாற்றல், தலைவன் தன் மனத்துவகை கூர்தல், தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றல், தலைவி யுணர்ந்து தலைவனொடு புலத்தல், தலைவி பாணனை மறுத்தல், வாயின் மறுக்கப்பட்ட பாணன் கூறல், வறவியாயின் மறுத்தல், விருந்தொடு வந்துழி பொறுத்தல் கண்டு இறையோன் மகிழ்தல், விருந்து கண்டொளித்த வூடல் வெளிப்பட நோக்கிச் சீறேலென்றவள் சீறடி தொழுதல், இஃதெங்கையர் காணினன்றன் றென்னல், அங்கவர் யாரையு மறியேனென்றல், காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல், தலைவியைப் பாங்கி தணித்தல், தலைமகள் புலவி தணியாளாகத் தலைமகன் ஊடல், பாங்கி யன்பிலை கொடியையெனத் தலைவனை யிகழ்தல், ஆயிழை மைந்தனு மாற்றுமையும் வாயில்களாக வரவெதிர்கோடல், மணந்தவன் போயபின் வந்த பாங்கியோடு இணங்கிய மைந்தனை யினிதிற் புகழல், தலைவி தலைவனைப் புகழ்தல், பாங்கி மனைவியைப் புகழ்தல் என்பன. (அகம்.)

**பரத்தையேசல்** — அழகிய பழனத்தையுடைய ஊரனுடனே நீர்விளையாட்டு விரும்பும் மெல்லிய சொல்லினையுடைய தலைமகள், பரத்தையைப் புல்லற் கூறியது. (பு வெ. பெருந்திணை.)

**பரத்தை வாயில் பாங்கி கண்டுரைத்தல்** — உங்கள் வீட்டிடத்து மடவாள் சொன்ன வார்த்தை நீங்க எங்கள் அகத்திடத்துப் பாகனும் தேரும் வருமெனச் சொல்லி இற்பரத்தை தோழிக்குச் சேரிப் பரத்தை தோழி சொல்லியது. (பு. வெ. நற்றிணை.)

**பரத்வாசதீர்த்தம்** — தென்கடற் கருகிலுள்ளது. அச்வமேத பலந்தருவது.

**பரத்வாசி** — மாளவதேசத்தில் பிரவகிக்கும் நதி.

**பரநாதகலைகள்** — வியாபினி, வியோமரூபை, அனந்தை, அனாதை, அனாசிருதை, இவை ஐந்தும் அபரநாதத்தை நடத்தும் கலைகள். பரவிந்தும் பரநாதமும் சத்திசிவாத்மகமாயிருந்து அபரவிந்து அபரநாதத்தை நடத்தும். (சதா.)

**பரந்தாமன்**—விஷ்ணுவின் திருநாமங்களில் ஒன்று.

**பரபிரமம்** — அபின்னசத்தி விசாம்பித்துச் சுத்த பிரமத்தை வியாபரிக்கையில் அப்பிரமம் பரையினது வியாபகத்தி லிருக்கு நிலை. (நானு).

**பரமகாரன்** — நன்னிதியின் வலப்புசத்தில் உதித்தவன்.

**பரமசுகம்** — சிவ சூர்யபீடத் தொன்று.

**பரமசுந்தரி** — 1. பிரமசுந்தர யோகியின் மனைவி. கற்பிற் சிறந்தவள்.

2. யூகியின் தாய். (பெ-கதை.)

**பரமதத்தன்**—புனிதவதியார்க்குக் கணவன். நிதிபதி வணிகன் குமரன்.

**பரமபதத்திலுள்ள நித்ய முத்தர்கள்** — ஆதிசேஷன், கருடன், சேனைமுதலியார், ஜயர், விஜயர், சுநந்தர், நந்தர், சங்ககர்ணர், புஷ்கரர், புஷ்கராக்ஷர், குமுதாக்ஷர், கஜாநநர், பிருச்சநிகர்ப்பர், காளர், புண்டரீகர், குமுதர், வாமர், ஜயச்சேநர், சுப்பிரதிஷ்டர், சுமுகர், அமாணவ புருஷர், சருவக்ந்தி முதலியோர். (அரிசமய தீபம்.)

**பரமனையேபாடுவார்** — சிவபெருமானையே பாடி முத்திபெற்ற தொகையடியவர்கள்.

**பரமன்** — சிவன், விஷ்ணு, பிரமன்.

**பரமானந்தர்** — காரணமான ஆனந்தரூப சத்தியுடன் பரப்பிரமங் கூடிச் சர்வானந்தமெனுஞ் சுழுத்தி யவஸ்தை யடைகையில் பரப்பிரமமென்கிற பெயர் நீங்கிய நிலை. (நானு.)

**பரமேசுவரப்புலவர்** — இவர் திருவண்ணாமலையிலிருந்த ஒரு புலவர். சேறைக் கவிராஜ பண்டிதர் காலத்தவர். இவரைப்பற்றிய சரிதம் ஒன்றும் தெரியவில்லை. இவர் சேறைக்கவிராஜ பண்டிதரை "கண்ணார் மதிக்கும் கவிராஜசிங்கங் கடந்துதிரு, வண்ணாமலையப்பர்மேல் வண்ணம்பாடி முத்தாலத்தி கொண், டெண்ணாயிரமடவார்சூழ பல்லக்கிலேறி வந்தான், உண்ணா

முலையெல்லன் மூலைகடோறு மொதுங்கி னனே” எனப் பாடியவர்.

**பரமேஷ்டி** — 1. பிரமனுக்கு ஒரு பெயர்.

2. இந்திரத்துய்மனுக்கு ஒரு பெயர்.

3. தேவததிமுன் குமரன். தாய் தேவமதி. மனைவி சுவலை. குமரன் பிரதிகன்.

4. ஒரு பிரஜாபதி, இவன் புத்ரன், எஜநயன்.

**பாராசதுஞ்சான்** — அயோதன பாண்டியனுக்குப் பின் அரசு செய்தவன்.

**பரர்** — ஒன்பதா மன்வந்தரத்துத் தேவர்.

**பரவர்** — 1. நெய்தனிலமாக்களில் ஒரு வகைச் சாதியரர் ; வலை வீசின திருவிளையாடல் விழா நடத்துவிப்போர். (திருவிளையாடல்).

2 இவர்களைப் பரதவரென்றும் கூறுவர். இவர்கள் கடலோடடி வகுப்பினர். இவர்கள் தங்களை கந்தமூர்த்தி சரவணப் பொய்கையி விருந்து உதித்த காலத்தி லுதித்து அவர்க்குத் துணை புரிந்தவரென் றும் சீர்காழி வெள்ளங் கொண்ட காலத்து தோணி யியக்கித் தோணிபுரத்தில் தங் கினவர் என்றும், பராசருக்குப் பெண் கொடுத்த குலமென்றும், சிவபெருமானுக் குத் தங்கள் பெண்ணைக் கொடுத்தவர்க ளென்றும் உயர்வு கூறுவர் இவர்கள் தமிழ், மலையாளம், கன்னடமென மூன்று வகைப்படுவர். தமிழர் மீன் பிடிப்போர், மலையாளப்பரவர் முத்துக் குளிப்போர், சுண்ணம்பு சுடுவோர். இவர்கள் பட்டம் குருப், கன்னடபரவர் குடை கட்டிகள் பேய்க்கூத்தாடுவோர். (தர்ஸ்டன்).

**பரவிந்து கலைகள்** — சூக்ஷமை, அதிசூக்ஷை மிருதை, அமிருதை, வியாபினி இவை அபரவிந்துவை அதிட்டித்து நிற் கும் கலைகள். (சதா.)

**பரவை** — போர் செய்ய எழுந்த அவுணர் மோகிக்கத் திருமகள் ஆடியகூத்து.

**பரவையார்** — திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்து அவதரித்தவர், இவர்க்கு முற்பிறப்புக் கமலினியைக் காண்க.

**பரஷு** — ஒரு அரசன், இவன் புத்திரன் திருந்திரன்.

**பராகி** — விபுவின் தேவி.

**பராக்கிரமவாகு**—ஈழத்தரசர்களில் ஒருவன்.

**பராக்கிரமவாகு பாண்டியன்** — விக்கிரம வாகு பாண்டியனுக்குக் குமரன.

**பராங்குசதாசர்** — திருக்குருகூர்வர்சியாகிய ஸ்ரீ வைணவர். நாதமுனிகளுக்குக் கண் ணினுண் சிறுத்தாம்பு அருளி, ஆழ்வாரை யோகத்தில் காண அருளியவர்.

**பராங்குசநம்பி** — எழுபத்தினுலு சிம்மாசனுதிபதிகளில் ஒருவர். சிறியகோவிந்தப் பெருமானுக்கு ஒருபெயர். (குருபரம்பரை)

**பராங்குசர்** — நம்மாழ்வாருக்கு ஒரு பெயர்.

**பராசக்தி** — அருட்சத்தி. பரசிவத்தில் ஆயிரத்தில் ஒரு கூறுன நிட்கள சிவத்துடன் கூடிக் கிருத்யத்தைத் திருவுளத்திற் கொள்வது. (சதா - ம்).

**பராசபட்டர்** — 1. இவர் மார்த்தவ வித்துவான். அப்பைய தீக்ஷிதால்சைவரானவர்.

2 கூரத்தாழ்வான் குமரர். உடையவர் சொற்படி ஸஹஸ்ர நாமபாஷ்யஞ் செய்தவர். எழுபத்தினுலு சிம்மாசனுதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

**பராசரமுனிவர்** — 1. வசிட்டர் பேரர். சத்திமுனிவர் குமரர். தாய் திரசந்தி. இவர்தாய் வயிற்றில் இருப்புழி, தந்தை இறந்தனர். இவர் பிறந்து தாய் மடியிலிருக்கையில் தாயை அமங்கலையாகக்கண்டு உதிரன் என்னும் அரக்கனல் தந்தையிறந்ததைத் தாயாலறிந்து அரக்கரைக்கொல்லச் சத்திரவேள்விசெய்தனர். அதில் அரக்கர்வந்து இறக்கையில் நிருதியின் வாகனமாகிய பூதம் சிவமூர்த்தியை யெண்ணி ஓலமிட்டது. அதனுல் சிவமூர்த்தி புலத்தியர் முதலியோர் வேண்டுகோளால் யாகத்தை நிறுத்தக் கட்டளையிட்டனர். அதனுல் நிறுத்தி அரக்கவம்ச முதல்வராகிய புலத்தியரால் புராணம்பாட அருள்பெற்றவர். இவர் புத்திரர்களாகிய தத்தன், அநந்தன், நந்தி, சதுமுகன், பருதிபாணி, மாலி முதலிய அறுவரும் விளையாட்டாகச் சரவணப் பொய்கையில் முதலையுருக் கொண்டு நீரைமோதி விளையாடினர். அதனுல் நீர்கலங்கி அதிலிருந்த மீன்கள் மேல் மிதந்தன. அம் மீன்களை இந்த இருடி புத்திரர்கள் பொறுக்கிக் கோரையிற் கோத்து விளையாடுகையில், பிதா சரவணப் பொய்கைக்கு ஸ்நானத்திற்கு வந்து பிள்ளைகளைக்கண்டு கோபித்து நீங்கள் நெறியல்லா நெறிசெய்வதால் மீன்களாக எனச் சபித்தனர். சாபமேற்ற குமரர் சாபம் நீங்கும்வகை எவ்வகையென முனிவர், குமாரக் கடவுள் இப் பொய்கையில் திருவவதரிப்பார். அவர் பொருட்டு உலக மாதாவாகிய உமாதேவியின் திருமுலைப்பால், இப் பொய்கையிற் சித

றும் அதனுல் நீங்கள் சாபத்தினின்று நீங்குவீர்கள் என்றனர். இவர் ஒருமுறை யமுனையாற்றினைக் கடக்கச் செல்கையில் அவ்விடமிருந்த செம்படவராஜன் பெண்ணைக்கண்டு விரும்பி அவளுக்கிருந்த மச்சநாற்றத்தைப் போக்கி மணந்தந்துகூடி வியாசரைப் பெற்றனர். இவர் தாய்வயிற்றில் (12) வருட மிருந்தவராம். கொல்லவேண்டி வந்த அரக்கர்களால் விடப்பட்ட அம்பைப் பின்னிட்டுப் போம்படி செய்ததாலும், யாவரினும் சிறந்த மன்மதனுடைய சம்மோஹன முதலிய அம்பின் வேதனை யொழித்தவராதலாலும் பாவ எண்ணத்தையுடைய அன்னியரிடத்துத் தமது கோபமென்னும் அம்பைச் செலுத்துவ தொழிந்தவராதலாலும், தாயின் கருப்பத்திருந்து மந்திரோச்சாரணத்தால் வயிற்றைப்பீறி வெளிப்பட்டவராதலாலும் பராசர் எனப்பட்டனர்.

2. விஷ்ணுமூர்த்தி தேவர்களுக்குப் பாகித்து மிகுந்த அமிர்தத்தை இவரிடம் கொடுக்க இவர் அசுரர்க்குப் பயந்து பூமியில் புதைத்து வைத்தனர். அதைக் கவர வக்ராசுரன், தண்டாசுரன், வீராசுரன், மூவரும் முயலுகையில் அவர்களுக்குப் பயந்து பராசர் சிவமூர்த்தியை வேண்டச் சிவமூர்த்தி சத்தியிடம் சண்டகாதினி, வீரை, சயந்தி, சயமர்த்தினி எனும் நான்கு துர்க்கைகளைப் படைத்து அசுரரைக் கொலை செய்வித்தனர். பிறகு முனிவர் அந்த அமுதகுடத்தை எடுக்கவராது அது நதியாய்ப் பிரவகித்தது. அதுவே அமுதநதி, பவாநிகூடலிலுள்ளது.

3. இவர் சிவபூஜையால் சாவர்ணிமன் வந்தரத்தில் சப்த ரிஷிகளில் ஒருவனும், பாரதவம்ச விருத்தி செய்பவனும், பாரத கதா கர்த்தாவும், வேதத்தைப் பகுப்பவனும், கிருஷ்ணத்வைபாயன னென்னும் பெயருள்ளவனும் ஆகிய வியாசரைப் பெற்றவர். (பார - அநுசா.)

**பாராசரம்** — 1. ஒரு புராணம்.

2. ஒரு தருமநூல்.

**பாராசரன்** — 1. சோழநாட்டிலிருந்த ஒரு வேதியன். இவன் மாந்தரஞ்சேரலிரும்பொறையிடம் பரிசுபெற்றுத் திருத்தங்காலில் தக்ஷிணமூர்த்தியைப் பரீக்ஷித்து அவனுக்குப் பரிசளித்தவன். (சிலப்பதிகாரம்.)

2. பாஷ்களர் மாணக்கன்.

**பாராசிதன்** — பாரதவீரரில் ஒருவன். காலபுத்திரன் அம்சம்.

**பாராசுரன்** — 1. சிவமூர்த்தியின் வரத்தால உலகர்க்குத் தீமை செய்துகொண்டிருந்த அசுரன். இவனை நரசிங்கவுருக்கொண்டு விஷ்ணுமூர்த்தி கொலைபுரிந்தனர்.

2. ஒரு இருடி, இவர் தேவி வீர்யவற்சலை, விக்னராசர் என்னும் விநாயகமூர்த்தியை வளர்த்தவள்.

**பாராதீதன்** — கத்ருதநயன்; நாகன்.

**பாராந்தகச்சோழன்** — சூரஆதித்தசோழன சந்ததியான். இவன் சாரமாமுனிவர் சிவமூர்த்திபொருட்டு நாகலோகத்திலிருந்து கொண்டுவந்துபதித்த செவ்வந்திமலரைப் பூவாணிகன் பறித்துக்கொடுக்க விருப்பாயேற்றுச் சாரமாமுனிவர் பூவாணிகனைப் பிடித்துக் கொடுத்தும் தண்டியாமல் மீண்டும் பூவைத் திருடிவந்துகொடுக்க உடன் பட்டிருந்தமையால் முனிவர் சிவமூர்த்தியிடம் முறையிட்டு வேண்டினர். அதனுல் சிவமூர்த்தி ஏவலால் மண்மாரி இவன் பட்டணத்தையும் இவனையும் பின்றொடர்ந்து அழித்தது. இதில் இவன் மனைவி ஒருத்தி தப்பிக் கரிகாற்சோழனைப் பெற்ருள்.

**பாராந்தகன்** — 1. இவர் விஜயாலயன் மகனை ஆதித்தசோழனது குமரர். இவர்க்கு இராஜாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன் என்று மூன்று குமரர் உண்டு. இவர் பாண்டிநாடு ஈழநாடு ஜெயங்கொண்டவர். இவர் வாணராசனைவென்று தம் சிற்றரசில் ஒருவரான பிரதிவிபதிக்கு ஆந்திரதேயத்தின் மேற்கிலுள்ள வாணதேசத்தைத் தந்து அவனுக்கு மாவலிவாணராயன் எனும் பட்டமுஞ் சூட்டினுர். இவர் பல்லவர்களையும் வென்று தம் பெயரால் வீரநாராயணச்சேரி என்று ஓர் ஊர் உண்டாக்கினுர். கொப்பரகேசரியைக் காண்க. இவர்க்குக் கோக்கிழானடிகள் எனும் கேரளத்தரசன் புதல்வி மனைவி. இவர்க்கு மதுரைகொண்ட பரகேசரியெனவும் பெயர். (Epigraphia Indica Vol. VII. Dates of Chola kings.)

2. ஆதித்தன் - I. குமரன் கி. பி. 907-இல் முடிசூட்டப் பெற்றவன். இவனுக்கு வீரநாராயணனென்றும், மதுரைகொண்ட கொப்பரகேசரி எனவும், இவன் இலங்கையை வென்றதனுல் சங்கிராமாரகவன் எனவும் பெயருண்டு. இவன் மதுரையைச் செயித்தபோது அவ்விடம் மாண்ட...

இராஜசிம்ம பாண்டியன், இந்த ராஜசிம்ம னுக்கு இலங்கை யரசனாகிய ஐந்தாம் காசி பன் உதவி புரிந்ததால் பராந்தகன் இலங் கையையும் போரிட்டு வென்றான். ஆத லால் மதுரையும், ஈழமும்கொண்ட கோப் பரகேசரி எனப்பட்டனன். இவன் வைது ம்ப் அரசனாகிய சயந்தனையும், வாணபுர அரசர்களை வென்று அவர்களிடத்துப் பெண் கொண்ட கங்கரசனாகிய பிரதிவி பதிக்கு வாணகப்பாடி அல்லது வடுகவழி யைக் கொடுத்து செம்பியன் மாவலிவாண ராயன் எனப் பட்டமளித்துத் தனக்குட் படுத்தினான். இப் பிரதிவிபதிக்கு வீர சோழன் என மற்றொரு பெயருண்டு. இவன் சிதம்பரம் பொன்னால் வேய்ந்தான். இவன் பட்டத்தரசி கேரளராஜன் பெண். இவனுக்குப் பல மனைவியர் உண்டு. இரா ஜாதித்தன் கோக்கிழானடிகள் எனும் மனைவியிடம் பிறந்தவன்.

**பாராயனார்** — இவரைப்பற்றி யாதும் விளங்க வில்லை. நெய்தலைச்சுவை மிகத் தோன் றப் பாடியுள்ளார், இவர் பாட்டில் தலை மகன் தலைமகளை ஐயுற்று வினவுவது இனிமை பயவா நிற்கும். இவர் பாடியது நற். (கருரு)-ம் பாட்டு.

**பாரார்த்தாநுமானம்** — (பிறர்பொருட்டநு மானம்) சுவார்த்தாநுமானத்தாற் தான் கண்டதைப் பிறர்க்குத் தெரிவிப்பது. (சிவ சித்).

**பாராவசு** — 1. இரப்பியர் குமாராகிய ருஷி. அருத்தாவசு சகோதரன். இவர் அரசன் பொருட்டு வேள்விசெய்கையில் ஒரு கர்ம வசத்தால் இரவில் செல்கையில் மான் தோல் போர்த்திருந்த தந்தையை மிருக மென்று கொன்று நீங்கித் தந்தையென்று அறிந்து தம்பியாகிய அருவாவசுவை (அர் த்தாவசு)த் தன் பிரமகத்தி நீங்கத் தவஞ் செய்ய ஏவித் தான் அரசனுக்கு வேள்வி செய்துகொண் டிருந்தனன். அருவாவசு பன்னிரண்டு வருஷம் தவமுடித்து மீண்டு வேள்விச்சாலை வரத் தமயன் அரசனை நோக்கி இவன் பிரமகத்தி செய்தோன், இவனை நீக்குக எனத் தம்பி திடுக்கிட்டு அரசனாணையால் நீங்கிச் சூரியனை எண் ணித் தவம்புரிந்து தந்தையை உயிர்ப்பித் துத் தமயனைச் சேதுஸ்நானத்தால் புனித னாக்கினவன். (சேது - புராணம்.)

2. யவக்ரீவனைக் காண்க.

**பாராவதன்** — இலிங்கியைக் காண்க.

**பரிகசப்பறவை** — இது வட அமெரிக்கா யுனைடெட் ஸ்டேட்ஸ் முதல் பிரேஸில் நாடு வரையிலுள்ளது. இதன் முதுகு கருமை கலந்த செம்மை, இறக்கைகளும் வாலும் கருமை, வயிறு மங்கலான வெ ண்ணிறம். இப் பறவையின் குரல் கம்பீர மாயும் இனிப்பாயும் இருக்கும். இது ஒரு சங்கீதவித்துவானைப்போலக் குரலை உயர்த் தியும் தாழ்த்தியும் பாடும். இது ஒவ்வொரு வகையான பக்ஷிகளின் குரல்போல் பாடி அவற்றை அவமதித்து ஏமாற்றும். சில வேளைகளில் இராஜாளிப் பறவைபோலக் கூவிப் பறவைகளை மருட்டும். பழக்கப் பட்டால் வீட்டிலுள்ள நாய் கோழி முதலி யதுபோல் கூவி விகடஞ் செய்யும். இது போர் வீரனாகவு மிருக்கிறது. பறவைக் குஞ்சுகளைக் கவர வரும் பாம்புகளைக் கொ த்திக் கொல்லும். இதன் வன்மை இனி மைகளைக் கருதிய அரசாங்கத்தார் இதை யாரும் கொல்லக்கூடாதென உத்தரவளித் திருக்கின்றனர்.

**பரிகநேமி** — சண்முக சேநாவீரன்.

**பரிகிஸ்தன்** — பராசினபர்ஹிக்கு ஒரு பெயர்.

**பரிகிஷ்துக்கள்** — 1. அக்னியபிமானி தேவ தைகள்.

2. பிதுரர்.

**பரிகிஷ்த்** — அவிர்த்தானனுக்கு அவிர்த்தா னியிடம் பிறந்த குமாரன்.

**பரிகிஷ்மதி** — பிரியவிரதன் தேவி. விச்வ கர்மன் பெண்.

**பரிசிரவர்**—சந்திரவம்சத்து அரசர். பீமசே னன் புத்திரர். தாய் சுகுமாரி, பாரியை சைபியசுந்தரி, புத்திரர் தேவாபி, சந்தனு, பாகலிகன். (பாரதம் ஆதிபர்வம்).

**பரிசில்விடை** — அரசனுடைய மனங் களி ப்ப வெல்லும் புகழைச் சொன்னோர்க்குப் பெறும் பேற்றை வழங்கி இனிமை மிக விடை கொடுத்தது. (பு. வெ. பாடாண்.)

**பரிசிற்றுறை** — பூமி யிடத்தைக் காக்கும் தொழிலையுடைய அரசன் முன்னே கரு திய பேறு இதுவெனச் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)

**பரிசினிலை**—உபகாரி இன்பத்திலே அசைய இரப்பாளன் போவானாக ஒருப்பட்டது. (பு. வெ. பாடாண்.)

**பரிச்சித்து** — (பரிக்ஷித்து) அபிமன்யு விற்கு உத்தரையிடம் பிறந்த குமாரன். இவன் தாய் வயிற்றிலிருக்கையில் பாரத யுத்தம் நடந்தது. அக்காலத்தில் அசுவத்

தாமன் பாண்டுபுத்திரர் வம்சம் நாசமாம் படி பாணப்பிரயோகஞ் செய்தனன். அந்தப் பாணம் உத்தரையின் வயிற்றிலிருந்த இக் கருவைப் பேதிக்கச் சென்றது. அவ்விடம் திருமால் பஞ்சாயுதத்துடன் நின்று அத்திரத்தை யுங்கரிக்க அத்திரம் நீங்கியது. அங்குத் திருமால் திருவடிப்பரிசம் பெற்றமையால் பரிச்சித்து எனப் பிறந்து கலிகடிந்து தருமம் நான்குபாதத்தால் நடக்கச்செய்தனன்.

2. இவன் இராஜருஷி. இவன் ஒரு நாள் வேட்டைக்குச் சென்று வேட்டையாடுகையில், அம்பிற்குத் தப்பிச் சென்ற மிருகத்தைப் பின்றொடருகையில் அது மறைந்ததுகண்டு அவ்விடம் மௌனமடைந்திருந்த சமீகருஷியைக் கண்டு மிருகம் எப்படிப் போயிற்றென்ன அவர் பேசாதிருந்தது கண்டு அவ்விடம் இறந்து கிடந்த பாம்பொன்றை யெடுத்து அந்த ருஷியின் கழுத்தில் சுற்றி நீங்கினன். அவ்வரசன் செயல்களை அருகிருந்த இருடியூழாலுணர்ந்த அம்முனிவரின் குமாராகிய சிருங்கிமுனி கோபித்து இவ்வகை தீமைபுரிந்த இவன் இன்று ஏழாநாள் தக்ஷகனால் இறக்க என்று சாபமிட்டனன். இதனைக் கௌரமுகரால் அறிந்த அரசன் சுகரால் தத்துவமுணர்ந்து ஏழாநாள் தக்ஷகனால் கடியுண்டு இறந்தனன். இவன் குமரன் ஜநமேஜயன். சாபமிட்ட முனிவரை மகாசத்தர் எனவும், கடித்த பாம்பினைக் கார்க்கோடகன் எனவும் தேவி பாகவதம் கூறும். (பரிக்ஷயம் = நாசம்). குருகுலம் நாசமடைந்த பின் பிறந்தவனாதலால் பரிக்ஷித்து எனவும் பெயர் பெற்றவன்.

3. குரு குமரன்.

4. சூர்யகுலத்தவனாகிய ஒரு அரசன், இவன் ஆயுதமகாராஜன் புத்திரியாகிய சோபனையைக் காட்டில் மணந்து ஒரு தடாகத்தில் நீர்விளையாடச் செல்லுகையில் அவள் மறைய அவ்விடமிருந்த தவளைகள் விழுங்கினவென்று அக் குளங்களிலிருந்த தவளைகளையெல்லாங் கொலைபுரியச் செய்தவன்.

**பரிச்சேதம்**—(௩) காலப்பரிச்சேதம், தேசப்பரிச்சேதம், வஸ்து பரிச்சேதம். ஒரு காலத்து உண்டு, ஒருகாலத்து இல்லை என்பது காலப்பரிச்சேதம். ஒரு தேசத்து உண்டு. ஒரு தேசத்து இல்லை என்பது தேசப்பரிச்சேதம். ஒரு பொருள் இதுவாகும், ஒருபொருள் இது அன்று என்பது வஸ்து பரிச்சேதம்.

**பரிணமவாதசைவன்**—உயிர் கெட்டுக் கூடி அரனடியில் ஒன்றுபடும் என்பன்.

**பரிதி** — 1. ஒரு தீர்த்தம்.

2. திருவள்ளவநாயனார் திருவாய் மலர்ந்தருளிய திருக்குறளுக்கு உரையிட்டவர்களில் ஒருவர்.

3. அக்கிக்கு அலங்காரமாகச் சூழப்படும் சாகைகளாகும். இவை பெரும்பாலும் பலாச சாகைகளாம்

4. யாககாரியத்தில் பலாசம், மா இவற்றின் கொம்புகளால் இரண்டு முழ நீளமும் பெருவிரல் கனமுமாக அமைக்கப்பட்ட விறகு.

**பரிதிக்கண்ணன்** — சூரபதுமன் குமரன்.

**பரிதியின் ஏழு குதிரைகளாவன**—தினமணி, கத்யை, லோகபந்து, சுரோத்தமை, தாமநிதி, பத்மினீவல்லபை, ஹரி: இவையன்றிச் சப்தா என்கிற ஒரு குதிரையேயுண்டு. (விங்காபட்டீயம்.)

**பரிதிபாணி** — பராசருஷியின் புத்திரன்.

**பரிபாடல்** — இது சங்கத்தாரால் தொகுக்கப்பட்ட எட்டுத்தொகையுள் ஐந்தாவது பாவகையுள் ஒன்று. இதுமுறையே திருமால், குமரவேள், கடல், வையை, மதுரை முதலியவர்க்கு, அ, ௩௧, க, உ௬, ௪, ஆக எழுபது பாடல்கள் கொண்டது. இதனைத் "திருமாற் கிருநான்கு செவ்வேட்கு முப்பத், தொருபாட்டுக்காரு கோளுக்கொன்று — மருவினிய, வையையிருபத்தாறு மாமதுரை நான்கென்ப, செய்யபரி பாடற்றிறம்" (இதற்குப் பரிமேலழகர் உரையியற்றியதாகத்தெரிகிறது) "விரும்பியருணிலவெற்பிமயக் குன்றின், வரும்பரிசு புள்ளூருமாலே — சுரும்பு, வரிபாடலின் சீர்வளர் துளவத்தோளாய், பரிபாடலின் சீர்ப்பயன்" என்பதால் அறிக.

**பரிமளகந்தி** — வேதவியாசர் தாய். பராசர் தேவி.

**பரிமளாலயன்**--இரத்தினவலியைக் காண்க.

**பரிமாணனார்** — யாப்பருங்கல விருத்தியுட் கூறப்பட்ட தொல்லாசிரியர்களில் ஒருவர்.

**பரிமேலழகர்** — இவர் தொண்டை நாட்டில் திருக்காஞ்சிபுரத்திலிருந்த அருச்சக வேதியர். இவர் இளமையில் அழகரெனப் பெயரடைந்து தமிழ்ப்புலமையும் வட நூற்புல்மையும் பெற்று வேதப்பொருளமைந்தி

யுடைய வள்ளுவர் அருளிய திருக்குறளுக்குத் தருமர், மணக்குடையர், தாமத்தர், நச்சர், பரிதி, திருமலையர், மல்லர், கவிப்பெருமாள், காளிங்கர் என்பவர்கள் இயற்றிய உரையேயன்றித் தாமும் ஓர் உரை செய்தனர். அவ்வுரையை அரசன் முன் பிரசங்கிக்க அரசன் இதனை அவ்விடமிருந்த உருக்குப் பரிமேலிருந்து கூறுவீராயின் ஒப்புவோமென அவ்வகையே பழுக்கக் காய்ச்சிய பரிமேலிருந்து தம் உரை சிறந்ததெனக் கூறிப் பழுதில்லாமல் வந்தமையால் பரிமேலழகர் எனப்பட்டனர். இதனை "திருத்தகு சீர்த்தெய்வத் திருவள்ளுவர்தங் கருத்தமைதி தானேகருதி — விரித்துரைத்தான், பன்னு தமிழ்தேர்பரி மேலழகனெனு, மன்னு முயர் நாமன் வந்து" எ-ம் "பாலெல்லா நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள, நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ-நூலிற், பரித்தவுரையெல்லாம் பரிமேலழகன், தெரித்தவுரையாமோ தெளி" எனக் கூறியிருத்தலின், இவரே உரையாளர் எனப் பெயரடைந்தனர். இவர் காலத்திருந்த நச்சினார்க்கினியர் விருத்தராதலின் அவர்க்குத் தாம் இயற்றிய உரையைக்காட்ட ஆசிரியர் சென்றிருக்கையில் நச்சினார்க்கினியர், "குடம்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே" என்னும் திருக்குறளுக்கு உரை கேட்க ஆசிரியர், "முன்தணியாத முட்டை தனித்துக்கிடப்ப, அதனுட் கிடந்தபுள் பருவம் வந்த காலத்துப் பறந்துபோன தன்மைத்து" எனக் கூறிக்கேட்டுத் தாம் கூடென உரை கூறியதைத் தெரிவித்து ஆசிரியர், பரிமேலழகர் உரையைப் புகழ்ந்தனர். இவர் தம் உரையில் ஆங்காங்குத் திருக்கோவையார், நாலடியார், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றை யெடுத்து உதகரித்திருப்பதினாலும், கம்பராமாயண முதலியவற்றை உதகரித்தில்லாமையாலும், இவர் காலம் கம்பர் காலத்திற்கு முந்தியிருக்கலாம். இவர் நக்கீரர் அருளிச்செய்த திருமுருகாற்றுப் படைக்கும் ஒரு சுருங்கிய உரை இயற்றினர். அதனை "அரிமேலழகுறூஉ மன்பமைநெஞ்சப், பரிமேலழகன் பகர்ந்தான்-விரிவுரைமூ, தக்கீரிஞ்ஞான்று தனிமுருகாற்றுப்படையாம், நக்கீரனல்லகவிக்கு," என்பதாலறிக. இவர் சைவநூல்களுக்கு உரையியற்றி யிருத்தலாலும், திருக்குறளில் இறைவனது எட்டுக்குணங்களைத் தமது கொள்கையாகக் குறித்து மற்றவைகளைப் பிறன் கோளாகக் கூறுதலானும் ஸ்மார்த்தர் என்பர். அரிமேலன் புறூஉம் அன்பமையந்தணன் என்பதால் வைணவர் என்பர். இவர் பரிபாடற்கு ஒருரை செய்திருப்பதாக "கண்ணுதற் கடவுளண்ணலங் குறுமுனி, முனைவேன் முருகனென விவர்முதலிய, திருந்து மொழிப் புலவருந்த மிழாய்ந்த, சங்கமென்னுந் துங்கமலிகடலு, ளரிதினெழுந்த பரிபாட்டமுதம், அரசுநிலை திரீஇயவளப் பருங்காலங், கோதில்சொன் மகளேதை கக்கிடத்தலிற், பாடிய சான்றவர் பீடுநன்குணர, மிகைபடுபொருளை நகைபடு புன்சொலிற், றந்திடைமடுத்த க ந் தி த ன் பிழைப்பும், எழுதினர்ப் பிழைப்பு மெழுத்துருவொக்கும், பகுதியின்வந்த பாடகர்ப் பிழைப்பும், ஒருங்குடன் கிடந்த வொவ்வாப்பாடமும், திருந்திய காட்சியோர் செவி முதல் வெதுப்பலிற், சிற்றறிவினர்க்குந் தெற்றெனத் தோன்ற, மதியின் றகைப்பு விதியுளியகற்றி, யெல்லையில் சிறப்பிற் றொல்லோர் பாடிய, வணிதிகழ் பாடத்துத் துணிதருபொருளைச் சுருங்கியவுரையின் விளக்கக் காட்டினன், நீணிலங் கடந் தோன்று தொ ழு ம ர பி ற், பரிமேலழகனுரிமையி னுணர்ந்தே." என்பதால் தெரிகிறது. பின்னும் "திருந்திய தமிழறி தெய்வப் புலமை..........பரிமேலழகனெனப் பெயர் படைத்துத், தரைமேனுதித்த தலைமையோனே" எனும் பழைய வுரைப்பாயிரத்தை யடுத்து "விரைத்தாரலங்கற் றிருவள்ளுவர் முன்னம் வெண்குறட்பா, நிறைத்தார்மிகு பொருளுன்கும் விளங்க நெறிப்புலவ, ருரைத்தார் பலரு மதற்குரை தன்னை யுலகறிய, கருத்தான் வருத்தமைத் தா ன் கலைதே ரொக்கை காவலனே" என்பதனாலும், "முன்னுரைத்த தேவர்குறள் ..........., இன்னிது வென்றுரைக்க வெய்தினான் — முன்னூற், பரிமேலழகிய கோப்போற்று தமிழ்க் கூடல், பரிமேலழகிய னென்பான்." என்பதால் இவர் சோழபாண்டி மண்டலங்களிலுள்ள ஒக்கூரினராகவும், மதுரை நகரத்தினராகவும் இருக்கலாம் எனவும் அறியப்படுகிறது.

**பரியாயவணி** — இது தான் கருதியதனைக் கூறாது அப்பொருள் தோன்றப் பிறிதொ

ன்று கூறுவது. இதனை முறையிற் படர்ச்சியணி யென்பர் தமிழ்நூலார். (தண்டி.)

**பரிவநுயோச்சியாபேக்ஷணம்** — வாதம் பண்ணவந்த இடத்து அந்த வாதம் பிறரால் நிக்ரயிக்கப்படுதலால் நிக்ரயிக்கப்பட்டோமென்னும் பரிபவமின்றி யிருத்தல். (சிவ - சித்).

**பரிவர்த்தகன்** — இவன் சிசுக்களை காப்பத்திலிருந்து கலைக்குந் தேவதை.

**பரிவருத்தனையணி** — ஒரு பொருள் ஒன்றற் கொன்று கொடுத்து ஒன்று கொண்டனவாகச் சொல்வது. (தண்டி.)

**பரிவர்த்தினி** — பர்வதையின் தாய்.

**பரிவாரம்** — மறவரில் ஒரு வகுப்பார். இவர்களிற் சிலர் அகமுடையராகவு மிருக்கின்றனர். இவர்கள் மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களில் இருக்கின்றனர். கோயம்பத்தூரிலுள்ள சில மீன் பிடிப்பவர்களும் பரிவாரிகள் எனப்படுவர். இவர்களை சேர்வைக்காரர், அம்பலக்காரர் என்பர். (தர்ஸ்டன்).

**பரிவித்தி** — தம்பி கல்யாணஞ்செய்துகொள்ளத் தான் கலியாணமின்றி யிருக்குந் தமயன்.

**ப்ரிவீரமங்கலம்** — சிவபெருமான் குதிரை வீரராக எழுந்தருளிய இடமாம். இவ்வூர் ஆளுடையார் கோயிலுக்குத் தெற்கே 1½ நாழிகை வழித் தூரத்திலுள்ளது. (திருவிளையாடல்).

**பரிவேடக்குறி** — ஆடிமாதம் பூரணையில் முதற் பத்துநாழிகையில் சந்திரனைப் பரிவேடமிட்டால் ஐப்பசியிலும், இரண்டாம் பத்திலிட்டால் கார்த்திகையிலும், மூன்றாம்பத்திலிட்டால் மார்கழியிலும் மழையுண்டு. இரவு முழுதும் இட்டிருந்தால் இந்த மூன்று மாதங்களிலும் மழை உண்டு.

சந்திரன், குரு, சுக்ரருடனே பரிவேடமிட்டால் நல்ல மழை உண்டு. செவ்வாய், சநியுடன் பரிவேடமிடில் மழையில்லை. கிரகணகாலத்தில் பரிவேடமுண்டானல் ராஜாக்களுக்கு ஆகாது.

**பரிவேடக்குறியின்குறி**—பூரம், உரோகணி, உத்திரம், அத்தம், சித்திரை, சோதி, விசாகம் இந் நாட்களில் மழை பெய்யும்போது வில்விட்டால் 5, 6, 10, 20, 21 இந் நாட்களுக்குள் மழை பெய்யும். உத்தரம், பூரம், இரேவதி, திருவாதிரை இந் நாட்களிலே சந்திராதித்தர்களைப் பரிவேடிக்கில் 7, 8, 9, 18 நாட்களுக்குள் மழை பெய்யும். (விதானமாலை).

**பரிவேத்தா** — உடன்பிறந்த தமயன் விவாகமில்லாதிருக்க எவன் முன்னதாக விவாகஞ்செய்து கொள்ளுகிருனே அவனுக்குப் பெயர்.

**பரீக்ஷை** — இலக்கியத்திற்கு இலக்கணம் பொருந்துமோ பொருந்தாதோ என ஆராய்தல்.

**பரீக்கைத்தலைவன்** — பிறர்க்குதவி புரியும் விருப்பம், பிறர்பழி தூற்றாமை, அழுக்காறின்மை, பிறர்குணங்கோடல், பிறர்குணமறிந்து மகிழ்தல் ஆகிய குணங்களை யுடையவன். (சுக் - நீ.)

**பருத்தி** — 1. ஒருவித தாவரம். இது மரப்பருத்தி, செடிப்பருத்தி யென இருவகை. பருத்திமரம் சீனு முதலிய தேசங்களில் பயிராகிறது. செடிப்பருத்தி 2, 3 அடி உயரம் பயிராகிறது. இதிலுண்டாகும் பஞ்சு உலகினர்க்கு துணி முதலியவற்றிற்கு உபயோகம்.

2. இது ஒருவகைச் செடி. இது உருவத்தில் மூன்று பிளவுள்ள இலைகளுள்ளதாய் கருமைகலந்த பசுநிறங்கொண் டிருக்கும். இது பயிராகக் கரிசல், செவ்வல் நிலங்களே தக்கவை. இவற்றில் பலவகையுண்டு. உப்பம்பருத்தி, போர்பன்பருத்தி, நாடான்பருத்தி, ஈஜிப்ட்ப்ருத்தி, பெருபருத்தி யென்பன. இதன் வித்துக்களைச் சாணியிலிட்டு ஊறவிட்டு மேலிருக்கும் பஞ்சைப்போக்கிக் காயவைத்துப் பூமியையுழுது உழுபடைச்சாலில் விதைப்பார்கள். இது காய்க்கும் பருவத்தில் மழை கூடாது. இது ஆறு மாதத்தில் காய்க்கும். காய்கள் வெடித்தவுடன் பஞ்செடுக்கத் தொடங்க வேண்டும். செடியிலிருந்து (3) முறை பஞ்செடுப்பார்கள். இதில் நூல் நூற்று வஸ்திரங்கள் செய்வர். இதில் வெண்பஞ்சு, செம்பஞ்சு, இலவம்பஞ்சு என (3) வகை. இலவம்பஞ்சு மரத்திலுண்டாவது. இது இந்தியாவில் பல்லாரி, கர்நூல், கடப்பை, திருநெல்வேலி, பம்பாய், குசிராத், பீரார் மாகாணத்திலும் பயிரிடப்படுகிறது. இதில் ஒருவித எண்ணெயும் எடுக்கிறார்கள். இதன் கொட்டைகளை மாட்டிற்கு ஆகாரமாக்குவர்.

**பருத்திக்கோல்லையம்மாள்** — எழுபத்திஞலு சிம்மாசனுதிபதிகளில் ஒருவர் (குருபரம்பரை.)

**பருத்தி வகைகள்** — உப்பம்பருத்தி, ஐம் பருத்தி, காட்டுப்பருத்தி, குப்பைப்பருத்தி, செம்பருத்தி, தாளிப்பருத்தி, நாடன்பரு த்தி, பூப்பருத்தி, வேலிப்பருத்தி யெனப் பலவகைப்படும்.

**பருந்து** — 1. இது சாதாரண இந்து தேசத் தில் காணப்படும். மாம்சபக்ஷணியாகிய பக்ஷி. இது, கறுத்த நிறமும் வளைந்த அலகும் வலிய கால்களும் $1\frac{1}{2}$ அடி நீள முள்ள இரக்கைகளும் உள்ள பறவை. மரங்களில் சிறு குச்சுகள் கந்தைகளைக் கொண்டு கூடு கட்டி முட்டைகள் இட்டு வாழ்வது. கிராமங்களில் செத்துக் கிடக் கும் பிராணிகளையும் கோழி, எலி, பெருச் சாளி முதலிய தின்று ஜீவிப்பது.

2. இப் பறவை பிங்கல நிறமுள்ளது. இதன் இறக்கை நீண்டு நன்றாய்ப் பறக்கக் கூடிய வன்மையுள்ளது. இதன் கால்க ளில் கூர்மையான நகங்களுண்டு. அவற் றால் இவை இரைகளைத் தாவிப் பிடிக்கும். மூக்கின் முனை வளைந்து மாமிசங்களைக் கிழிக்குந் திறத்திலிருக்கும். கண்கள் கூர் மையாய்க் காணும் வன்மையுள்ளவை.

**செம்பருந்து** - (கருடன்) இதன் கழுத் தும் மார்பும் வெண்மை, தேகம் செந்நிறம், இதுவும் கரும்பருந்து போன்றது. இத னைப் பாம்புகள் கண்டு அஞ்சும் என்பர். இவ்வகையில் ஆபிரிக்கா கண்டத்திலுள்ள வைகளுக்கு இறக்கைகள் வாலினும் அதி கம் நீண்டவையாய் முட்போல் கூர்மை யுள்ளவை. இதன் தலையும் முதுகும் பச்சை நிறம், வயிறு மேக நிறம்.

**பருவதகன்** — சிவகணத்தவன்

**பருவதம்** — நந்திமாதேவர் தவத்தால் மலை யுருக்கொண்ட இடம். இதுவே ஸ்ரீசைலம்.

**பருவதன்** — ஒரு இருடி. அம்பரீஷனுக்கு புத்திரகாமேஷ்டி செய்வித்து நீங்க, அவன் கவலுகையில் அம்பரீஷன் குமரியாகிய ஸ்ரீமதியிடம் விருப்பமடைந்து விஷ்ணு வின் மாயைக்குட்பட்டுக் குரங்கு முகம் பெற்று அப் பெண்ணைத் தான் மணவாத தினால் அம்பரீஷனைக் கோபித்து அந்த காரத்தை யேவினன். அம்பரீஷனிட மிருந்த ஆழி முனிவனைத் துரத்த விஷ்ணு வால் இரக்ஷிக்கப் பெற்று விஷ்ணு செய்த வஞ்சனையால் அவரை வணங்காதவன். நாரதர் உடன்பிறந்தாள் குமரன். இவரும் நாரதரும் ஒருவருக்கொருவர் மன எண் ணங்களை ஒளிக்காது இருப்போமென இருக்கையில் நாரதர் அதைக் கடந்ததால் குரங்கு முகமாக நாரதரைச் சபித்தவன், இவன் நாரதனைக் குரங்கு முகமாக்கிய தால் இவனைக் கழுதை முகமாக ஸ்ரீமதி சபித்து விஷ்ணுவை மணந்தனள்.

**பருவம்**—(எ) பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண். இவர்க்கு முறையே வயதெல்லை ஐந்துமுதல் ஏழளவும் பேதை. எட்டுமுதல் பதினொன்று அளவும் பெதும்பை, பன் னிரண்டு முதல் பதின்மூன்று அளவும் மங்கை. பதினான்கு முதல் பத்தொன்பது அளவும் மடந்தை. இருபது முதல் இருபத் தைந்து அளவும் அரிவை. இருபத்தாறு முதல் முப்பத்தொன்று அளவும் தெரிவை. முப்பத்திரண்டு முதல் நாற்பது அளவும் பேரிளம்பெண். (2) வாலை, தருணி, பிர விடை, விருத்தை. (3) கார் கூதிர், முன் பனி, பின்பனி, இளவேனில், முதுவே னில், இவை ஆவணி முதலிரண்டிரண்டு மாதங்களாகக் கணக்கிடப்படும்.

**பருவமயங்கல்**—1 அழகிய வெள்வளையினை யுடையாள் வருந்தப் பாங்கி காலத்தை அன்றுமென மருண்டு வருத்தமுற்றது. (பு. வெ. பெருந்திணை.)

2. அவ்விடத்துத் தலைவர் சொன்ன காலம் இஃது அன்றெனை மணம் பொருந் தின மாலையினையுடைய தலைவி தேறுத லும் அத்துறையேயாம் (பு. வெ. பெருந்.)

**பருஉமோவாய்ப்பதுமன்** — இவர் கடைச் சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். இவர் இயற்பெயர் பதுமன். இவரது மோவாய் பருத்திருத்தலை நோக்கி இப் பெயரிட்ட னர்போலும். (குறு - ௧0௧.)

**பரோக்ஷன்** — அநுபுத்திரன். இவன் புத் திரன் காலநரன்.

**பர்க்கன்**—1. (சந்.) விதிகோத்ரன் குமரன். இவன் குமரன் பார்க்கபூமி.

2. பிரகிருதியை அஷ்டமூர்த்தமாய்த் தாங்கி நிற்கும் சிவமூர்த்தம்.

**பர்கிஞசுவன்** — கிருசாசுவன் தந்தை. இவ னுக்கு அமிதாசுவன் என்றும் பெயர்.

**பர்சன்யன்** — 1. ஓர் பிரசாபதி.

2. மேகநாதன்.

**பர்நாகன்** — தமயந்தியைத் தேடச் சென்ற பிராமண தூதன். (பாரதம் வனபர்வம்).

**பர்நாசை** — ஒரு நதி. இதற்குச் சீததோ யம் என்றும் பெயர். The River Banks

in Rajaputana; a tributary of the Chambal. (பாரதம் துரோணபர்வம்).

**பர்ஞதன்** — ஒரு வேதியன். சருகு முதலிய போஜனஞ்செய்து சிவபூசை செய்து வருகையில் ஓர் நாள் தருப்பை கொய்ய அது அவன் கையிற் பட்டு உதிர மொழுகியது. அதனைக்கண்ட யோகியாகிய அவன் ஆநந்தக் கூத்தாடுதல் கண்ட சிவபெருமான், ஓர் வேதியரா யாங்குச் சென்று எக்காரணத்தால் கூத்தாடுகின்றனை யெனக் கேட்க விடை பகராது நடித்தது கண்டு அவ்விரலின் இரத்தத்தையகற்ற அதினின்றும் அமுதமொழுகியது. பின்னும் சிறிதுநேரங் கழித்ததினின்றும் விபூதி யொழுகியது. அதனைக்கண்ட வேதியன் அவரைப் பணிந்து கணதிபர் பதமடைந்தவன். (சிவமகாபுராணம்).

**பர்மியாசுவன்** — இருக்ஷன் குமான். இவன் குமார் காம்பீலியன், சிருஞ்சயன், பிருகதிக்ஷன், யவீநான், முத்கலன்.

**பர்வதங்கள்** — பருவதங்கள் மனதை ஒருமைப்படுத்தி தவஞ் செய்யவல்ல முனிவர்களுக்கு மனோக்யமான வாசஸ்தலமாகும். அங்கு பாபிகள் வசித்தால் அவர்கட்கு யக்ஷர்களின் பாதை யுண்டாகும்.

**பர்வதராஜபுத்திரி** — பார்வதி.

**பர்வதர்** — தேவமுனிவர். இராவணன் இவரை யார் என்னிடம் யுத்தஞ் செய்யும் வலியுள்ளார் என மாந்தாதாவைப் பலசாலி யெனக் காட்டியவர், நாரதருடன் பிறந்தாள் குமரர்.

**பர்வதை** — ஒரு தேவதை இவளுடன் விருக்ஷை கூடியிருப்பள். இவர்கள் இருவரும் மரம் மலை முதலியவற்றிலிருந்து பெண்களின் கருப்பத்தை அபகரிப்பவர்கள்.

**பலகறை** — இது, கடலிலுண்டாம் ஒருவித பூச்சியின் மேற்புற வோடு. இது, பல நிறங்களுடனும், வடிவங்களுடனும் இருப்பது, இதனை நாணயமாகவும் வழங்குவர்.

**பலகாச்வன்** — குசிகன் தந்தை.

**பலகார வகை** — உளுந்தின் பலவகை வடை, பலவகை தோசை, உளுந்து முதலிய பயற்று வகை உருண்டை இடலி, முருக்கு, மனோப்பு, தித்திப்புவடை, கடலை ரொட்டி பல்வித பணிகாரங்கள், தோய்ப்பான், எருக்கங்காய்க்கொழுக்கட்டை, நீர்க்கொழுக்கட்டை, குழவுருண்டை, பூரணவுருண்டை, பலவித அடைகள், கோதுமைகஜருக்காய், கோதுமைநொய் சுருளைப் போளி, எள்ளுருண்டை, பூரி, பாலேட்டுப் பலகாரம், பேணிப்பலகாரம், பூந்தி இலட்டு, பனிநீர்லட்டு, ஜிலேபி என்னும் தேன்குழல், அல்வா, பலவித அல்வாக்கள், பொரிவிளங்காய், மசால்வடை, பகோடா, மோர்வடை, பலவகைப் பாயசங்கள், அமாமோகன் மாங்காய் தித்திப்பு முதலிய.

**பலக்புகார்** — ஒரு மிலேச்ச அரசன். இவன் கபீர் தாசரிடத்தில் உபதேசம் பெற்று அதை மறந்து ஒருநாள் தன் படுக்கையில் வந்து தன்னைக் கூடாது ஒருபுறமாகப் படுத்துறங்கின தாசியை நான்கு சவுக்குகள் முரியுமளவும் அடிக்கும்படி கூறித் தானும் பார்த்திருக்கையில் தாசி அடிபட்டும் தான் அழாதவளாய்ச் சிரித்துக்கொண்டு வருதலை நோக்கி அரசன் அவளை என்னே சிரிக்கின்றனை என்றனன். தாசி படுக்கையின் ஒருபுறத்தி லுறங்கின எனக்கு இவ்வளவு தண்டனையாளுல் முழுதிலும் படுத்துறங்கின உமக்கு எவ்வளவு உண்டாகுமெனச் சிரித்தேன் எனக் கேட்டு அரசன் திடுக்கிட்டு ராச்சிய முழுதும் மந்திரி [illegible]சமாக்கித் துறவடைந்து ராமநாமம் பஜித்துக் காடடைந்து பெருமாளைத் தரிசித்து அவ்விடம் நீங்கி அப்பாற் சென்று ஒரு ப[illegible]கீரை யடைய, அப்பக்கீர் தனக்குப் பெருமாள் கொடுத்த இரண்டப்பத்தை வைத்துக்கொண்டு இவரைக்கண்டு இவர்க்கு ஒரு அப்பம் போதுமேயென்று எண்ணி இவரை நீ புதியவனிங்கிருத்தல் கூடாதெனப் பலக்புகார் சற்றகல இருந்தனர். இதுவரையில் அரசனுக்கு எட்டுநாட்களாயின. ஆகாரங்கிடையாமையால் பெருமாள் பிராட்டியைப் பலக்புகாருக்கு அன்னமளித்துவரக் கூறப் பிராட்டி அன்னமளித்தனள். இதைக் கண்ட முன்னைய பக்கீர் நான் நெடுநாள் தியானித்தும் அன்னந்தரவில்லை. எட்டுநாளைய பக்தனுக்கு அருளினுன் என்று பெருமாளிடத்து வெறுப்பாய் உறங்கப் பெருமாள் கனவிடை அவன் ராச்சிய சம்பத்தனைத்தையும் விட்டு நிஷ்காமியனுய் என்னைத் தியானித்தான். நீயோ அவ்வாறு செய்யாது தியானித்தாய் என்றுவிடையருளப் பகீர் பலக்புகாரைச் சரணமடைந்து இருவரும் நட்பினராய்ப் பகீர்களின் மடமடைய அப் பகீர்கள் இவரைப்பகீர்களுக்குரிய சின்னமிலாமை கண்டு இகழப் பெருமாள் பெரிய பக்கீர் போல வந்து இவரது நிலை [illegible]ரிவித்தனர்.

பக்கீர்கள் வெளிவந்து பலக்புகாரைப் பணிந்து மடத்திற் கொண்டடைந்தனர்.

**பலசூதனன்** — பலனைக்கொன்ற இந்திரன்.

**பலதன்** — அரசப்பெண் வணிகனைக்கூடப் பிறந்த கரு.

**பலதேவன்** — பலராமன் (மணிமேகலை.)

**பலநீதன்** — நாபாகன் குமரன். இவனுக்கு அலந்தன் எனவும் பெயர். வச்சிர மிரீதி தந்தை.

**பலபடப்புனைவணி** — ஒரு பொருளில், பலரும் பல தருமங்களினால் பல பொருள்களை ஆரோபித்தலும், ஒருவரே ஒரு பொருளில் விஷய பேதங்களால் பல பொருள்களை ஆரோபித்தலுமாம். இதனை வடநூலார் உல்லேகாலங்காரம் என்பர்.

**பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்** — 1. இவர் வேளாண்குடியினர். இவர் ஒருநாள் தெருவழிச் செல்லுகையில் கம்மாளராகிய சுப்பிரதீபக் கவிராயர் காலிற் பாதரக்ஷை யிட்டுச் செல்லுதலைக் கண்டு "சாணுருங் கள்குடியார் பணிக்கர் சாராயமுண்ணுர், கோணுது பாதகுறடு செய்தான் பெருங் கூலி யல்லால், நாணுது வீதிதோறும் போட்டுச் செல்வது ஞாயமில்லை, வீணுவடா சுப்பிரதீபா வஞ்ஞான விளக் கொளியே." என்று பாடியதைக் கேட்ட சுப்ரதீபக் கவிராயர், "தேவை முத்துராமலிங்கச் சேதுபதிமீது விஞ்சைக் கோவையென்ற பில்லி வைத்துக் கொன்ருயே-பாவிநீ, இட்டகவி தான் வசையாயேன் சொன்னுய் சேர்ந்த பல, பட்டடை சொக்கா முழுவம்பா" என்றனர். சுப்ரதீபக் கவி இறந்தபோது இவர், "செய்யகொழுனைச் சிவசுப்ரதீபா, வெய்ய கொழுந்தழலில் வேவுதே - ஐயையோ, நின்மலனுர் வெண்ணீற்று நெற்றிக்கண் காணுத, மன்மதன்காண் என்று சொன்ன வாய்" என்றனர்.

2. சற்றேறக்குறைய (உ௫0) வருடங்களுக்கு முன் இவர் சிவகங்கை ஜமீனைச் சார்ந்த கடம்பங்குடியி லிருந்தவர் என்பர். இவர் எப்போதும் அரையில்பட்டுடுத்திருந்தமையாலிவரைப்பட்டடையென்றும் கூறுவர். இவர் சொக்கர் மீதும் மீனுக்ஷியம்மை மீதும் கவிகளும், சிவந்தான், செங்குன்றையூரான் வல்லைக் காளத்தி முதலியார் முதலியவரைப் புகழ்ந்தும் பாடியிருக்கின்றனர். இவர் படிக்காசுப் புலவர் கவியைப் புகழ்ந்து பாடியிருக்கின்றனர்.

**பலபத்திரர்** — பலராமருக்கு ஒரு பெயர். பராக்கிரமத்தால் விசேஷித்ததால் பெற்ற பெயர்.

**பலப்பிரமதனர்** — பலப்பிரமதனி சத்திக்கு நாயகராகிய சிவமூர்த்தம். சூர்யவியாபி.

**பலப்பிரமதனி** — சூர்யனிடம் வியாபித்திருக்கும் சிவசத்தி. இவளுக்கீசர் உக்ரர் அல்லது பலப்பிரமதனர்.

**பலராமர்** — 1. இவர் விஷ்ணுவின் அம்சமாய் வஸுதேவருக்கு உரோகணியிடம் அவதரித்தவர். இவரை ஆதிசேஷன் அம்சமெனவும் பரமபதநாதரது வெண்ணிறமான அம்சமெனவும் புராணங்கள் கூறும். இவர் யோகமாயையால் கிரகிக்கப்பட்டவராதலால் சங்கருஷண ரெனவும், பெயர் பெறுவர்.

2. இல்வலன் என்னும் நிசாசரனைக் கொன்றவர். ஒரே குண்டலத்தை யுடையவர். ஆயுதம் கலப்பை. இவர்க்கு வாருணியாகிய யமுனை இரண்டு நீலவஸ்திரங்களும் ஒரு பொன்மாலையு மளித்தனள். ஆகையால் அதனை யணிந்து, நீலாம்பரன் எனப் பெயரடைந்தனர்.

3. ஆயர்பாடியில் இருக்கையில் வெந்துவிதனென்னும் வாநரனைக் கொன்றவர். இவர் முதலில் தேவகிகர்ப்பத்தில் இருந்து பின் உரோகணி கர்ப்பத்தில் சேர்ந்தனர் என்பர்.

4. சங்கசூடனது சிரோரத்தினத்தின் பொருட்டு கண்ணனிடம் கோபித்து விதர்ப்பதேசத்திலிருந்து மீண்டும் அதைக் கண்ணனளிக்கப் பெற்றுக் கொண்டவர்.

5. உருக்மணி மணத்தில் தம்முடன் சொக்கட்டான் ஆடித்தோற்றுச் செயித்தேனெனப் பரிகசித்த உருக்மியை அலாயுதத்தாற் கொன்றவர்.

6. கிருஷ்ணனுற் பிருந்தாவனத்திற் கேவப்பட்டுக் கள்ளுண்டு களித்துக் கோபிகைகளுடன் விளையாட யமுனையை அழைக்க வாராதிருத்தல் கண்டு கோபித்துக் கலப்பையால் அதை இழுத்தவர். இவருக்குக் காந்தியென்று ஒரு தேவி.

7. துரியோதனன் குமரியாகிய இலக்ஷ்மணை பொருட்டு அத்தினபுரத்துடன் கௌரவரை அலாயுதத்தால் கங்கையிற் றள்ள உத்தேசித்தவர்.

8. பாண்டவர் யுத்தத்தை உற்பாதத்தால் அறிந்து தீர்த்தயாத்திரை சென்று வலன் என்பவனை அலாயுதத்தாற் கொன்

று ரைவதமலைக்கு அருகில் புராணம் சொல்லிக் கொண்டிருந்த சூதர் தம்மைக்கண்டு எழுந்திராததினால் அவர் சிரத்தைக் கொய்து மீண்டும் இருடிகள் வேண்டலால் உயிர்ப்பித்து உக்கிரசிரவஸு என்னும் பெயர் தந்து பன்னிரண்டு வருடம் தீர்த்த யாத்திரை பூப்பிரதக்ஷணம் செய்து பிரமகத்தி போக்கிக்கொண்டு துரியோதனனை இடுப்பின் கீழ் அடித்து இறக்கச் செய்து அவன் மகுடத்தை உதைத்த வீமன்மீது கோபித்துக் கடுஞ்சினமடைந்து கண்ணனாற் கோபமாறினவர்.

9. இவர் ஒருமுறை சராசந்தனிடங் கோபித்துக் கலப்பையால் அவனை மோதினர்.

10. கம்சனால் மல்லயுத்தத்திற்கு ஏவப்பட்ட முஷ்டிகனையும் அவன் துணைவன் கூடனையுங் கொன்றனர்.

11. கம்சனைக்கொன்ற கண்ணனுடன் யுத்தத்திற்கு வந்த அவன் தம்பியர் எண்மரையும் அலாயுதத்தாற் கொன்றவர். இவர், கண்ணனை நீங்கினவரல்லராதலால் கண்ணன் சரித்திரங்கள் பெரும்பான்மை இவரையுஞ் சாரும். இவர் பாரி இரேவதி மற்றொரு தேவி வாருணி.

12. இவர் சிலநாளிருந்து யதுவம்சம் இருடிசாபத்தால் ஒருவருக்கொருவர் சண்டையிட்டு இறந்த காலத்துச் சமுத்திர ஸ்நானத்திற்குச் சென்ற இவர் தனித்து ஓர் விருக்ஷத்தையடைந்து அதனடியில் தியானத்திருக்கையில் கண்ணன் தம்மிடம் வரக்கண்டு சேஷவுருக்கொண்டு கடலடைந்தனர் என்பர். இவர்க்குப் பனைக்கொடி.

**பலராமர் ஸ்நானஞ் செய்த தீர்த்தங்கள்** — ஸ்தலங்கள். விநசனை, சுபூமிகை, கர்க்கஸ்ரோதஸ், மகாசங்கம், நைஸர்க்கிகம், நாகதன்வா - இது நாகரிருப்பிடமான இடம். ஸப்தசாரஸ்வதம்.

**பலவிகாணர்** — சந்திரவியாபக மகாதேவருக்கு ஒரு பெயர்.

**பலவிகரணி** — சந்திரனிடத்தில் வியாபித்துப் பலத்தை விளக்குஞ்சத்தி. இவட்கு ஈசர், மகாதேவர் அல்லது பலவிகரணர்.

**பலன்** — 1. சுமதி குமரன். இவன் குமரன் சுநீதன்.

2. பாணாசுரன் குமரன்.

3. பலராமனுக்கு ஒரு பெயர்.

4. வத்சந்திரன் குமரன்.

5. இவன் எஞ்ஞனுக்குத் தக்ஷிணையிடம் பிறந்தவன். இவன் சகல கர்மங்களினும் தக்ஷிணை கொடுத்த பலனளிப்பவன்.

6. இவன் ஒரு அசுரன். சிவபிரானால் வரம் பெற்றவன். (பார - அநுசா.)

7. க்ஷத்திரியன், பரிக்ஷித்தின் மூன்றாவது புத்திரன். மண்டூக கன்னிகையாகிய சுசோபனையிடம் பிறந்தவன்.

**பலா** — இது, இந்தியாவில் இனிப்பான மா, வாழை என்னும் முக்கனிகளில் ஒன்று. இதன் பழம் இரண்டடிக்கு மேற்பட்டு நீண்டுமிருக்கும். மலையாளநாட்டில் இதை பலவகையாக உபயோகப்படுத்துகின்றனர். இவ்வகையில் வேர்ப்பலா, தேன்பலா முதலிய பலவகை உண்டு. இதன் இலையை உண்கலமாக உபயோகிப்பர்.

**பலாகன்** — 1. கத்ருதநயன் நாகன்.

2. வத்சந்திரன் குமரன். உத்தமனைக் காண்க.

**பலாகாச்வன்** — குசிகன் தந்தை. அசகன் குமரன், பூரு வம்சத்தவன்.

**பலாசினி** — மகாநதியிற் கலக்கும் ஒரு நதி.

**பலாசுரன்** — இந்திரனிடம் போரிட்டு அவனால் கொல்லப்பட்ட அசுரன்.

**பலாசுவன்** — விஃவகாசனைக் காண்க.

**பலாச்வன்** — 1. கனித்திரன் பேரன். இவனுக்குக் காந்தமன் எனவும் பெயர்.

2. வீர்யசந்திரன் குமரியாகிய வீரையை மணந்து ஒரு குமரனைப் பெற்று சோதிடரால் பிறப்பின் கிரகநிலையாராய்கையில், தீயகிரகவீக்ஷண்ய மில்லாமையால் அவீக்ஷித்து எனப் பெயரிட்டு வளர்த்தவன்.

**பலாயநன்** — வீமன் மச்சநாட்டிற் கரந்துறைகையில் வைத்துக்கொண்ட பெயர்.

**பலி** — 1. விரோசனன் என்னும் அசுரனுக்குத் தேவியென்பவளிடம் பிறந்த அசுரன். பிரகலாதன் பேரன், இவன் மகாவீரன். இவன் ஒரு யாகஞ்செய்ய அதில் குதிரை, தேர், சிங்கத்துவசம், தனுசு, இரண்டு அம்பறாத்தாணி, ஒருகவசம் உண்டாயின. இவனுக்குப் பிரகலாதன் கவசமொன்று அளித்தனன். சுக்கிரன் சங்கம் கொடுத்தனன். இவன் இவைகளைக் கொண்டு சுவர்க்க முதலியவற்றைச் செயித்து அரசாண்டிருந்தனன். பின்பு சில நாள் பொறுத்து அச்வமேதஞ் செய்கையில் விஷ்ணு காசிபரிடத்து வாமனராய் அவதரித்துப் பலியின் யாகசாலையாகிய

பிருகுவக்ஷ க்ஷேத்திரத்திற் சென்று மூன்
றடி மண்யாசித்தனர். இது விஷ்ணுவின்
மாயையென்று அசுரப் புரோகிதனாகிய
சுக்கிரன் தடுத்தனன். அதைப் பலிகே
ளாததால், சுக்கிரன் சினந்து நீ ஐஸ்வர்ய
பிரஷ்டனாகவெனச் சபித்தனன். வாம
னர் யாசித்தபடி பலிதந்தனன். எற்ற
வாமனர், ஈரடியால் மூவுலகளந்து ஓரடி
வைக்க இடம் பெறுமலிருக்கச் சக்கிரவர்
த்தி தன் சிரத்தைக் காட்டினன். அச்
சிரத்தை வாமனர் கிரகித்துப் பலிக்குச்
சாவர்ணிமன்வந்தரத்தில் இந்திரனாகவரந்
தந்து இந்திரனாகும் வரையில் பாதாளவுல
கத்திற் சகல இன்பங்களையும் அனுபவிக்
கச்செய்து விஷ்ணு மூர்த்தியையும் துவா
ரகபாலகராய் எழுந்தருளியிருக்கின்றனர்.
இந்த உலகத்தில் பாட்டனாகிய பிரகலாத
னும் உடனிருக்கின்றனன். இவன் பாதாங்
குஷ்டத்தால் இராவணன் திக்கு விஜயத்
தில் தள்ளப்பட்டான். இவன் தேவி விந்
தியாவலி. இவன் சிரஞ்ஜீவி. இவனுக்கு
நூறுகுமரர். அவர்களுள் வாணசுரன் மூத்
தோன். இவன் எலியாயிருந்து சிவாலயத்
துத் திருவிளக்கைத் தூண்டிச் சக்கிரவர்த்
தியாயினன் என்பர். இவன் பாதாளத்திரு
க்கையில் தேவகியிடம் உதித்த மைந்தர்
இவனிடம் இருந்தனர். அவர்களை அனுப்
பக் கண்ணன் கட்டளையிட அவ்வகை
அனுப்பினன்.

2. இவன் ஒருகாலத்தில் இந்திரனுக்
குப் பயந்து கழுதை உருக்கொண்டு பாழ்
ஞ்சுவரில் ஒளித்திருந்தனன். அப்பொழுது
இந்திரன் இவனிருப்பிடத்தி லிவனைத்
தேடிக்காணாது சுவரிடம் கண்டு இவ்வாறி
ருப்பதற்குக் காரணம் கேட்க இதற்கு
விஷ்ணு மீன், ஆமை, வராகம் முதலிய
ஆனதற்கு என்ன காரணமோ அது தான்
காரணமெனக் காலபலங் கூறி நட்புக்கொ
ண்டவன் (தேவி - பாகவதம்).

3. கிருச்சமத முனிவர் யோகவிழிப்
பில் பிறந்த அவுணன். இவன் தவத்தால்
திரிபுரங்களைப் பெற்றுத் திரிபுரன் எனப்
பெயர் பெற்றனன். இவன் சுக்கிலம், சுபி
லம், சுவிர்த்தி என்னுங் கோட்டைகளை
நிருமித்துஅவற்றைக் காக்க வச்சிரதமிஷ்
டிரன், வீமாகாயன், காளகூடன் என்பவர்
களை நியமித்துச் சண்டன், பிரசண்டன்
இவர்களைச் சத்தியலோகம், வைகுந்தம்
இவைகளைக் காக்க ஏற்படுத்தி ஒரு மனை
வியுடன் கூடி மதனன் என்பவனைப்
பெற்று அநேககாலம் அரசாண்டனன்.
(பாகவதம்.)

4. சூர்யகுலத்தரசன், புத்திரனில்லாது
தவஞ்செய்யப் போயினவிடத்துத் தீர்க்க
தமனைக் கண்டு அரண்மனைக் கழைத்து
வந்து அவனால் தன் மனைவியாகிய சுதேஷ்
ணையிடம் அங்கன், வங்கன், களிங்கன்,
புண்டரசன், சுக்நன் எனும் குமாரைப்
பெற்றான். இவன் தந்தை, சுதபசு, சுத
பன் எனவுங் கூறுவர்.

5. இந்திரனாற் கொல்லப்பட்ட அசுரன்.

6. எக்காலத்தும் தேவர்கள் கிருகஸ்
தனை அநுசரித்திருக்கின்றனர். ஆதலால்
இல்லறத்தான் முதலில் தேவர்களுக்கும்
பின் அதிதிகளுக்கும் கொடுக்கவேண்டும்.
அதிதிகளுக் கிடுவதால் யக்ஷ, ராக்ஷஸ பித்
ருக்கள் முதலியோர் திருப்தியடைகின்ற
னர். நல்லபழம் அன்னம் தேவர்களுக்கும்,
மாம்ச மது முதலிய பைசாசர் முதலிய
வர்க்கும், பொரி எள் முதலிய பிதுரர்
யக்ஷர் முதலியோர்க்கும் பலியிடவேண்
டும். (பாரா - அநுசா.)

**பலிதன்** — ஒரு எலி. வேடன் வலையில்
அகப்பட்ட பூனையை விடுவித்தது.

**பலிபுச்சகன்** — ஆரியாவர்த்தத்தை ஆண்ட
அரசர்களில் தலைவன். இவன்வழி அரசர்
முப்பத்துமூவர். (விஷ்ணு புராணம்).

**பலியும் பலிதேவதையும்** — 1. பலி என்
பது தேவர்களை யெண்ணியிடும் தான்ய
ஸங்கிரகம். இதில் பகாரம்; பலவர்த்தன்
யம்; லிகாரம் தான்யஸங்கிரகம், இவ்வி
ரண்டும் சேர்ந்தது பலி எனப்படும். இந்தப்
பலிகளுக்குத் தேவதை இடங்களுக்குத்
தக்கபடி கூறப்பட்டிருக்கிறது.

2. கிரகஸ்தன் ஓமகார்யத்தை முடித்
துக் கொண்டு கிழக்குத் திக்கில் இந்திர
னுக்கும், இந்திரபரிஜனங்களுக்கும், தெற்
கில் யமனுக்கும், யமபரிஜனங்களுக்கும்,
வடக்குத் திக்கில் சோமனுக்கும், சோம
பரிஜனங்களுக்கும், தேவர்களுக்கு வீட்
டின் வாசற்படியிலும், ஜலதேவதைகளு
க்கு ஜலத்திலும், வனதேவதைகளுக்கு
உரல், உலக்கை இரண்டில் ஒன்றிலும்,
லக்ஷ்மிக்குத் தன் வீட்டில் வடகிழக்கிலும்,
அல்லது தன் சயனத்தின் தலைப்பக்கத்
திலும், பத்ரகாளிக்குத் தன் வீட்டின்
தென் மேற்கிலாவது அல்லது தனது
சயனத்தின் காற்பக்கத்திலும், பிரமனுக்

கும் வாஸ்து புருஷனுக்கும் வீட்டின் நடுவிலும், விசுவேதேவர்களுக்கும் பகலிரவுகளில் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் தேவதைகளுக்கும் முற்றத்திலும், சர்வாந்தர்யாமிக்கு மெத்தையின் மேலிடத்திலும் அல்லது தனக்குப் பின்புறத்திலும், பிதர்க்களுக்கு மிகுந்த எல்லாவற்றையும் தென்முகமாகக் காலை மடித்துக்கொண்டு பூமியிலும், பலி வைக்கவேண்டியது. பின் தன் வீட்டிற்குச் சமைத்த அன்னத்திற் கொஞ்சம் எடுத்து நாய், பதிதன், சண்டாளன், நீராப்பிணியன், காக்கை, கிருமி முதலியோருக்குச் சுத்தபூமியில் பலி வைக்க வேண்டியது. இவ்வாறு நாடோறுஞ் செய்பவன் மேலானபதவி யடைகிறான்.

**பலினன்** — (சூ.) விவசன் குமரன். மகா கொடிய கிருத்தியங்களைச் செய்த கொடுங் கோலரசன். இவன் குமரன் கரந்தன்.

**பலிஜர்** — தெலுங்கு நாட்டு வர்த்தக ஜாதியார். இவர்கள் வளையல் முதலிய விற்று வாழ்வோர்.

**பலை**—1. இராமமூர்த்தி மிதிலைக்குச் செல்லுஞ் சமயத்தில் விச்வாமித்திரர் உபதேசித்த மந்திரம்.

2. (க) கடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய் இவை திரிபலை யென்பர்.

**பலோமன்**—தனுப்புத்திரனாகிய தானவன்.

**பல்காயனார்** — ஒரு யாப்பிலக்கண நூலாசிரியர். இவர் யாப்பு, காரிகைக்கு உதாரணமாகக் காட்டியிருக்கிறது.

**பல்கு** — இஃது ஒரு நதி.

**பல்குநன்** — அருச்சுநனுக்கு ஒரு பெயர்; பங்குனி உத்தரத்தில் பிறந்தவனாதலால்.

**பல்பொருட் சொற்றொடராணி**—அஃதாவது பல பொருள்களைத் தருதற்குரிய சொற்களைப் புணர்த்துக் கூறுதலாம். இதனை வடநூலார் சிலேஷாலங்காரம் என்பர்.

**பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி** — இவன் பஃறுளியாறும் பிறநாடுகளும் கடல் கொள்வதற்குமுன் ஆண்ட பாண்டியன். முடத்திருமாறனுக்கு முன் ஆண்டவன். இவனை "எங்கோவாழி" (புறம் 6) நெட்டிமையார் பாடினர்.

**பல்யானைச் செல்கெழுகுட்டுவன்** —

1. இவன் நெடுஞ்சேரலாதனுக்குத் தம்பி, செங்குட்டுவனுக்குச் சிறிய தந்தை. இவன் பாலைக்கௌதமனார் வேண்டுகோளின்படி (௧0) வேள்விகளை நடப்பிக்க முடிவில் பார்ப்பனப் புலவரும் அவர் பத்தினியும் சுவர்க்கம் புகக் கண்டவன். இவன் (உ௫) ஆண்டு செங்கோல் செலுத்தினன்.

2. இமயவரம்பன் தம்பி, பாலைக்கௌதமனால் பாடல் பெற்றவன். இவனைப் பல்யானைச் செல்கெழுகுட்டுவன் என்பர்.

**பல்லக்கு** — இது ப்ரதகண்ட வாசிகளில் மனிதரால் சுமக்கப்பட்ட வாஹனம். இது மூடுபல்லக்கு, மூடாப்பல்லக்கு எனப் பலவகை. மூடாப்பல்லக்கு ஒரு கோணக்கணை மேலிருக்க பலகை பூட்டிக் கணைகளில் ஆள்கள் சுமந்து செல்வது. மற்றவை பெட்டிபோல் உள்ளில் தலைவனிருக்கக் கணை தாங்கிச் செல்வது. இவை பலவிதமாகச் செய்யப்படும் தண்டிகையும் இதன் பாற்படும்.

**பல்லவதேயம்**—1. பல்லவன் ஆண்டநாடு.

2. தனபதி அரசன் நாடு.

**பல்லவராயன்**—காஞ்சிபுரத்தை அரசாண்ட அரசன். இவன் காஞ்சியில் கணிகண்ணன் நிராதவண்ணம் அகல்வித்துப் பின்பு க்ஷமைவேண்டியவன்.

**பல்லவன்** — இவனும் வில்வலன் என்பவனும் பூர்வம் விஷ்ணு துவாரபாலகராகிய ஜயவிஜயர். இவர்கள் அசுராகப் பிறந்து விஷ்ணு பூசாபலத்தால் அப்பதமடைந்தவர்.

**பல்லவி** — இந்திரத்யுமனுக்குப் பாட்டன்.

**பல்லாங்குழி** — இது ஒரு விளையாட்டுப் பலகை. இதில் பக்கத்திற்கு (7) ஆக இரண்டு பக்கத்திற்கு (14) குழிகளில் குழிக்கு (5)ஆக (70) காய்களைக்கொண்டு ஒவ்வொரு குழியிலுள்ள காயை ஒவ்வொன்றாக எடுத்து இருவர் குழியிற் போட்டு ஆடுகையில் யாருடைய பக்கத்தில் காய்கள் எல்லாம் சேர்ந்துவிடுகின்றனவோ அவர்கள் வென்றவர்களாம். இது ஒருவகை இன்னும் இதிற் பலவகை யுண்டு.

**பல்லாடம்** — ஒரு தேசம்.

**பல்லாதன்** — உதக்சேநன் குமரன்; கர்ணனால் பாரதயுத்தத்தில் கொல்லப்பட்டவன்.

**பல்லி**—இது ஊரும் இனத்தைச் சேர்ந்தது. தேகம் நீண்டு நான்கு கால்களும் ஒரே அளவாக இருக்கும். வால் நீண்டிருக்கும். மணலில் முட்டை யிடும். முட்டைகள் சூரிய வெப்பத்தால் பொரிந்து விடும். இதன் மூத்திரம் தேகத்திற்படின் நெருப்புப் பட்டதுபோல் சிறு கொப்புளங்க ளெழும்பும். இதன் வால் அறுந்தாலும் முளைக்கும். இது சிறு தேள், ஈ, கொசுகு முதலிய தின்னும்.

**பல்லி சொல்லுகை, விழுகை** — ஞாயிறு — கிழக்குத் திக்கில் கெவுளி சொன்னால் பயம், அக்னிதிக்கில் - தீமை, தெற்கு திக்கில் - சுகம், நைருதி திக்கில் - பந்து தரிசனம், மேற்கு திக்கில் - சண்டை, வாயுதிக்கில் - வஸ்திரலாபம், வடக்கில் - தனலாபம், ஈசான்யதிக்கில் - லாபம், ஆகாயத்தில் - ஜயம், பூமியில் - நினைத்த காரியமாகும்.

திங்கள் — கிழக்கு திக்கில் - தனலாபம், அக்கினிதிக்கில் - கலகம், தெற்குதிக்கில் - பகை, நிருதிதிக்கில் - விரோதம், மேற்கு திக்கில்-இராஜசபாப் பிரவேசம், வாயுதிக்கில் - அமங்கலம், வடதிக்கில் - வஸ்திரலாபம், ஈசான்யதிக்கில் - கலியாணவார்த்தைகள், ஆகாயத்தில் - க்ஷேமசமாச்சாரம், பூமியில் - ஐஸ்வரியப் பிராப்தி.

செவ்வாய் — கிழக்கு - சம்பத்து, அக்கினி - பந்துலாபம், தெற்கு - விசனம், நிருதி - சத்துரு, மேற்கு - காரியானுகூலம், வாயு - தூரதேசத்து சமாச்சாரம், வடக்கு - சத்துருபயம், ஈசான்யதிசை - வாகனரோகணம், ஆகாயத்தில் - தூரதேசப் பிரயாணம், பூமியில் - விசேஷதன லாபம்.

புதன் — கிழக்கு - சந்தோஷம், அக்கினி - திரவிய லாபம், தெற்கு - சரீரசார்ட்டியம், நிருதி-பந்துஹானி, மேற்கு - பயம், வாயு - தனநாசனம், வட - சுகம், ஈசான்யம் - நினைத்தகாரியமாகாது, அம்பரத்தில்-நல்ல சமாச்சாரம், பூமியில் - ஐஸ்வரியமுண்டாகும்.

வியாழம் — கிழக்கு - அசுபம், அக்கினி பந்துசன்மானம், தெற்கு - தனலாபம், நைருதி சமஸ்தகாரியங்கள் சித்திக்கும், மேற்கு - நஷ்டம் வாயு - நல்லவார்த்தை, வடக்கு - நினைத்த காரியமாகாது, ஈசான்யம்-போஜன, சௌக்கியம் வானத்தில்-கலகம், பூமியில் - கலக முண்டாகும்.

வெள்ளி—கிழக்கு-சுபவார்த்தை. அக்கினி - அலங்காரம், தெற்கு - பந்துதரிசனம், நிருதி நல்ல கேள்வி, மேற்கு - சந்தோஷம், வாயு-வீட்டிற் கலகம், வடக்கு-கலக வார்த்தை, ஈசான்யம் சத்துருபயம் ஆகாயத்தில் - வஸ்துலாபம், பூமியில்-சுத கஸ்நானம்.

சனி — கிழக்கு - வெகு வார்த்தை. அக்கினி - சந்தன திரவியலாபம், தெற்கு - ராஜ தரிசனம் நிருதி - ரோகம், மேற்கு - நூதன வஸ்திரலாபம், வாயு - நூதன ஸ்திரி சம்போகம், வடதிசை - பிரியசமாச்சாரம், ஈசான்யம்-திருடர் பயம், ஆகாயம்-காரிய ஹானி,பூமியில்-சகல காரிய சித்தி.

**பல்லிசொல்லும் ராசி** — "எழுவாய் மேஷம் படைபூசல், இடவங்கடகங் குடிபோக்கும், நடுவாய் மிதுன நல்வசனம், நண்டு விழுந்து களிப்பாகும், கழிவேயாகுந் தனஞ்சிங்கம், கன்னிபழங்காய் வெற்றிலையாம், தொழுதே தூதன் றுலமாகும், தூங்குதேள்பொன் பெண்வருத்தே" "வில்லில் விருந்து மிகவுண்டு, வேண்மெகரம் விண்ணமுதாம், நல்ல கும்பநோயுண்டாம், நாட்டுமீனங்களியாகும், அல்லிற் சிறந்த குழன் மடவா, யறியச்சொன்னே மன்னிசையாஞ், சொல்லும் பல்லி கொடிசூரன், தும்மலென்றே யறிந்திடவே."

**பல்லிசொல்லும் பதினறுகாதல்** — "அருக்கன்மேற் பயநாச மிரண்டிற்சாவு அகன்றவர்பின் மீண்டிடுவார் மூன்றேயாகில், உருக்கமுள்ள சாவதனைக் கேட்க நாலு, ஒரு சண்டையுண்டைந்தா முறவாமாறு, விரிதலையுமழுகுரலு மழையுநோயு மென்மேலுந் துக்கமுண்டாகுமேழு தரித்திடு பூச்சந்தனமு மணமுங்கொண்டு தருதியுள்ளோர் கூடிவரலாகுமெட்டே."

"சித்தமிக மகிழ்ச்சியுண்டா நாலோடைந்து, தீதாகவேயுரைக்குந் தெரியும்பத்து, அத்தமிசை யாத்திரைகா ணுறேடைந்தி, அக மகிழ்ச்சிக் கலியாணமாறோடாறு, பத்திவருங் காணிக்கை பதிமூன்றிற்குப் பறந்துவருமிழவோலை பதினாலுக்கு, மெத்தவரு முறவின் முறையேழு மெட்டும், மென்மேலும் யோகமுண்டாம் பதினறுக்கே."

**பல்லிவிழும்பலன்** - தலையில் கலகம், முகம் பந்து தரிசனம், புருவம் இராஜானுக்கிரகம், மேலுதடு தனவிரயம், கீழுதடு தனலாபம், மூக்கு வியாதி சம்பவம், வலது செவி தீர்க்காயுசு, இடது செவி வியாபார லாபம், நேத்திரங்கள்—காராக்கிரகப் பிரவேசம் முகவாய்க்கட்டை—இராஜ தண்டனை, வாயில் பயம், கண்டம் சத்துருநாசனம், வலதுபுஜம் ஆரோக்கியம், இடது புஜம் ஸ்திரிசம்போகம், வலதுமணிக்கட்டு பீடை, இடதுமணிக்கட்டு கீர்த்தி, ஆண்குறி தரித்திரம், மார்பு தனலாபம், வயிறு தானியலாபம், நாபி இரத்தினலாபம், உபயபாரிசம் வெகுலாபம், தொடைகள் பிதா

அரிட்டம், முழங்கால்கள் சபம், கணைக் கால் சபம், பாதம் பிரயாணம், ஸ்தனங் களில் பாவசம்பவம், புட்டம் சுபம், நகங் கள் தனநாசம், கூந்தல் மிருத்துபயம்.

**பல்வலன்** — இல்வலன் என்னும் அரக்கன் குமரன். இவன் இருடிகளை வருத்திக் கொண்டிருந்ததைக் கண்ட பலராமர் அலாயுதத்தால் இழுத்துக் கதாயுதத்தாற் கொல்ல இறந்தவன்.

**பல் விளக்கக்கூடா விதி** — செங்கல்மாவு, மணல், கரி, தென்னம்பாளை, வைக்கோல் இவைகளால் தினமும் பல் துலக்குவோ ரிடயிதில் இலட்சுமி நீங்கி மூதேவி வந்து சேர்வாள்.

**பல் விளக்கும் விதி** — கருவேலங் குச்சியி னல் பற்களுக் குறுதியும் வேப்பங்குச்சியி னல் பற்களுக்கு ஒளியும் நீர்ப்பூலாக்குச்சி யினல் வீரிய விருத்தியும் ஆலம் விழுதி னல் லக்ஷ்மி கடாக்ஷமும் நாயுருவியினல் துலக்கினல் வசிகாரமு முண்டாம்.

**பவகாரணி** — அழகர் மலையிலுள்ள ஓர் பொய்கை. (சிலப்பதிகாரம்.)

**பவகிரி** — ஓர் வித்யாதர நகரம். (சூளா.)

**பவச்சுதன்** — சடியின் மந்திரிகளில் ஒரு வன். (சூளா.)

**பவணத்தாசன்** — இவன் யூகியின் வலப்பக் கத்துப் பற்களுள் ஒன்று முறிந்துவிடும்படி வேலை யெறிந்தவன். (பெ - கதை.)

**பவணந்திமுனிவர்**—1. இவர் சைநமதத்தவர். இவர் சநகாபுரம் எனும் ஊரினர். இவரது ஆசிரியர் சநகாபுரம் சன்மதிமுனிவர். இத னைத் தொண்டைமண்டல சதகம் "தன் னூர்ச் சநகையின் சன்மதிமாமுனி தந்த மைந்தன், நன்னூலுரைத்த பவணந்திமா முனி நற்பதியும், சின்னூலுரைத்த குண வீர பண்டிதன் சேர்பதியும், மன்னூபுரத் திருவன்ன மின்னே தொண்டைமண்ட லமே" என்பதாலறிக. இவர் செய்த நூல் நன்னூல் எனும் இலக்கணம் இந் நூல் தமிழ் நாட்டாரால் கொண்டாடப்படும் சிறந்த அழகமைந்த இலக்கணக் களஞ்சி யம். இதனை "முன்னேரொழியப் பின் னேர் பலரினுள் நன்னூலார் தமக்கு எந் நூலாரு மிணையோ வென்னுந் துணிவே மன்னுக" எனும் இலக்கணக்கொத் துரை யானும் "பலகலைக் குரிசில் பவணந்தி யெனும் புலவர் பெருமான்" எனும் (நன். விரு. சூ. 136)லும் அறிக. இந் நூலைச் செய்வித்தவன் சீயகங்கன். இவன் கொங்கு மண்டலத்திலுள்ள குறும்பு நாட்டில் சநா காபுர மாண்டவன். இதனை "கங்கக்குரி சிலுவக்க நன்னூலைக் கனிந்துபுகல், துங் கப்புலமைப் பவணந்திமாமுனி தோன்றி வளர், கொங்கிற் குறும்புதனிலாதி நாத குரு விளங்கும், மங்குற்பொழிற் சநகாபுர முங் கொங்குமண்டலமே" என்பதாலறிக. இவர் காலம் கி. பி 1178 முதல் 1216 வரையில். இது மூன்றாங் குலோத்துங்கன் காலம். இவர் "பிங்கலமுதலா நல்லோருரி ச்சொலி னயந்தனர் கொளரே" எனக்கூறு தலால் இவர்செய்த நூல் பிங்கலநிகண்டிற் குப் பிற்பட்டதாம். இராமநாதபுரத்திற்கும் மதுரைக்கும் இடையில் அரசுசெய்துகொ ண்டிருந்த சீயகங்கன் தமிழ் இலக்கணமை ந்தினையும் எளிதில் உணர ஒருநூல்செய்ய வேண்டுமெனவேண்ட நன்னூல் என்னும் ஒருநூல் செய்தனர். இது ஐவகை இலக்க ணம் நிரம்பியது. இதில் தற்காலம் எழுத் துஞ் சொல்லுமே இருக்கிறது. இந்த நூலுக்குச் சிறப்புப்பாயிரம் இயற்றியவர் இவர் மாணக்காராகிய சமணமுனிவர். இந் நூற்கு மயிலைநாதர், ஆண்டிப் புலவர், சங் கரநமச்சிவாயர், சிவஞானசுவாமிகள் முத லியோர் உரை இயற்றினர். (நன்னூல்.)

**பவணமாதேவன்** — யசோதரன் பிதா.

**பவணம்** — இது நாகலோகம், போகத்தி லும் சிறந்தது. பிறர் அணுகுதற் கரியது. (பெ. கதை.)

**பவநஞ்சயன்** — கின்னரதேச ராசகுமாரன்.

**பவநர்** — மன்யுவிற்குச் சத்தியையிடத்து உதித்த குமார். தேவி தோஷை. குமரன் துவஷ்டா.

**பவநவேகன்** — பவபுரத்தாசன்.

**பவபுரம்** — ஒரு வித்யாதரநகரம். (சூளா.)

**பவபூதி**—போஜன் சமஸ்தானத்திருந்த ஒரு வடநூற்புலவன்.

**பவமானன்** — 1. அக்னிக்குச் சுவாகாவிட த்து உதித்த குமரன்.

2. இவன் ஒரு அரசன். இவன் சிச்சிக பக்ஷியிடம் தரும சம்வாதஞ் செய்து தரும முணர்ந்து கங்கா தீர்த்தமாடிச் சுத்த மடைந்தவன். (பிரம புராணம்.)

**பவம்** — சிவகணங்கள் வசிக்கும் உலகம்.

**பவரத்தனன்** — சிவகணத்தவரில் ஒருவன்.

**பவர்பர்ட்**—(Bower Bird) இது ஆஸ்திரே லியா கண்டவாசி. இது நம் நாட்டு மணிப் புறுவை ஒத்து இருக்கிறதாம். இது மரக் கிளைகளிலும், தரையிலும் புற்களைக்கொ

ண்டு அலங்காரமான கூடுகட்டித் தரைக் கூடுகளில் உல்லாசமாக விளையாடுகிறதாம். இதுபோல் இங்கிலாந்தில் ஒருவகைப் பறவை அழகிய கூடு மரங்களில் கட்டி அவற்றிற்கு அலங்காரமான பொருள்களைப் பட்டணங்களிலிருந்து சேகரித்து அமைக்கின்றன என்பர்.

**பவளக்கோடிப் பூச்சி** — இது, கடலில் பாறைகளில் ஒட்டிக்கொண்டு இருக்கும். இது கடலிலிருந்து உறிஞ்சும் சுண்ணாம்பின் உதவியால் இறுகிப்போகிறது.

**பவளப்பாடிப் புலவர்**—இவர் வீரசைவர். சாநந்தக்கணேச புராணம் பாடியவர்.

**பவளம்** — இது, கடலில் பாறைகளைத் தமக்கு இடமாக்கொண்ட பூச்சிகளின் உடற் கவசம். இது உஷ்ணமான பிரதேசங்களில் கடலில் அதிகமாக உண்டு. இது, சுண்ணாம்பின் சத்தைக் கொண்டது. இப் பூச்சிகள் பவழத்தைக் கவசமாக்கொண்டு தலையில் பல மலர்போல் உறுப்புக்களைப் பெற்றிருக்கிறது. தனக்கு அபாயம் நேரும்போது, கைகளை யுள்ளிழுத்துக்கொள்கின்றன. இவை பலவகையாய்ப் புற்றுகளாகவும், பூண்டுகள் போலவும் வளர்ந்திருந்தும் வளர்கின்றன.

**பவளம் கட்டி** — இவர்கள் கோங்கு வேளாளரில் ஒருவகையார். பவளமாலை தரித்திருப்பவர். (தர்ஸ்டன்.)

**பவனஞ்சன்** — கின்னர கீதராச குமாரன். (சூளாமணி.)

**பவனவேகன்** — பவபுரத்தரசன். (சூளா.)

**பவன்** — 1. ஒரு பிரசாபதி. சோமதேவனுக்கு அசுரரைச் செயிக்க இரத முதலிய கொடுத்தவன். தக்ஷயாகத்தில் நந்தியால் சிக்ஷிக்கப்பட்டவன்.

2. ஏகாதசருத்திரருள் ஒருவன். தேவி அம்பிகை. இவன் பூதனென்பவனுக்குச் சாபியென்பவளிடம் உதித்தவன்.

3. அருச்சுனனுக்குப் பிராமண ஒழுக்கங் கூறிய பிராமணன்.

4. பூமியை அதிஷ்டித்து ஆத்மாக்களைக் காக்கும் சிவமூர்த்தி.

**பவாதிகரணம்** — கரணமாவன - பவம், பாலவம், கௌலவம், தைதுலம், கரசை, வணிசை, விட்டி இவை யேழும் சரகரணம். சகுனம், சதுஷ்பாதம், நாகவம், கிமஸ்துக்கினம் என்ற நான்கும் ஸ்திர கரணம். இவை வருமாறு, பூர்வபக்ஷத்துப் பிரதமை பிற்கூறுதி அமாபக்ஷத்துச் சதுர்த்தசி முற்கூறந்தம் (௱௪) கரணமும் ஒரு திதிக்கு (௨) கரணமாக வரும். அவை வருமாறு, பூருவபக்ஷத்துப் பிரதமை பிற்கூறுபவம், துதியை முற்கூறுபாலவம், பிற்கூறு கௌலவம், திரிதியை முற்கூறு தைதுலம், பிற்கூறு கரசை, சதுர்த்தி முற்கூறுவணிசை, பிற்கூறுவிட்டி, பஞ்சமி முற்கூறு முதல் அஷ்டமி முற்கூறளவும், அஷ்டமி பிற்கூறுமுதல் ஏகாதசி பிற்கூறளவும், துவாதசி முற்கூறுமுதல் பௌர்ணமி முற்கூறளவும், பௌர்ணமிபிற் கூறுமுதல், அமாபக்ஷத் திரிதியை பிற்கூறளவும்,சதுர்த்தசி முற்கூறுமுதல் சத்தமிமுற்கூறளவும், சத்தமி பிற்கூறுமுதல் தசமி பிற்கூறளவும், ஏகாதசி முற்கூறுமுதல் சதுர்த்தசி முற்கூறளவும் இவ்வகை சரகரணங்கள் ஏழும் வரும். சதுர்த்தசி பிற்கூறுமுதலாகத் திரகரணங்கள் நான்கும் வரும். அவை வருமாறு சதுர்த்தசி பிற்கூறு சகுனம், அமாவாசை முற்கூறு சதுஷ்பாதம், பிற்கூறு நாகவம், பிரதமை முற்கூறு கிமஸ்துக்கினம் இவை நான்கும் சரகரணத்தில் ஏழாவதான விட்டியுந் தவிரப்படும். பவம், பாலவம், கௌலவம், தைதுலம், வணிசை என்ற ஐந்து கரணங்களில் சுபகாரியங்கள் செய்யலாம். கரசை மத்திமம். திரகரணங்கள் நான்கும் விட்டியிற் தோஷாங்கமான சாமங்களும் தவிரப்படும். விட்டியின் முடிவில் (௩) நாழிகை நன்று. (விதானமாலை).

**பவாநி** — 1. இமயபர்வத ராஜகுமரி.

2. கங்கையின் பிரிவுகளில் ஒன்று.

3. கலாவதியைக் காண்க.

**பவானிபீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று.

**பவித்திரம்** — 1. இது தருப்பையால் வலயமாக முடிந்து சுத்தத்தினிமித்தம் கரத்தில் தரிக்கப்படுவது. பவித்திரத்தின் வலயம் இரண்டு அங்குலமும், பிரமமுடி ஒரு அங்குலம் பிரமாணமுமாக அனைத்தும் கலந்து நான்கு அங்குலம் இருக்கவேண்டும். சுருதி ஸ்மிருதி சம்பந்தமான காரியங்களைப் பவித்திரம் இன்றி ஒருக்காலும் செய்யக் கூடாது. அப்படிச் செய்யின் செய்யும் காரியம் அனைத்தும் வியர்த்தமாம். இது மனோவாக்குக் காயங்களினால் செய்யப்படுகிற பாவத்தினால் விழுகின்ற நரகத்திலிருந்து காக்கப்படுகிறதால் பவித்ரம் என்று பெயர்.

2. பதுமுகன் தாய்.

3. பிளவாத முனைகளை யுடையதும், உலராத முனைகளுடையதும், பசுமையான நிறமுள்ளதுமான தர்ப்பையால் பவித்ரம் செய்யவேண்டும். கோவின் வாலரோமத்தால் செய்தபவித்ரம் விசேஷம். (விகித ஸ்மிருதி.)

**பவித்திரர்** — பதினான்காம் மன்வந்தரத்துத் தேவர்.

**பவித்திரை** — விசாரசருமர் தாய். எச்சதத்தன் தேவி.

**பவியசூடாமணி பாண்டியன்** — முழுதகண்டராமனைக் காண்க.

**பவிரகாசன்** — புரிசைக் கிரியென்னும் பட்டணத்து அரசன். பாவஞ்செய்து நரியாய்ப் பிறந்தும் மாம்சபக்ஷணம் நீக்கி நன்மையடைந்தவன்.

**பவிஷ்யத்புராணம்** — இது பதினெண்புராணங்களுள் ஒன்று. இது உலக உற்பத்தி சிருட்டிபேதம் முதலியவற்றை உரைப்பது. (கச,000 கிரந்தமுடையது.)

**பவுராரி** — வசுதேவருடைய பாரி.

**பவுஷ்பஞ்சி** — சகவர்மா மாணாக்கர்.

**பவோற்பவன்** — 1. சிவமூர்த்தியின் திருநாமங்களில் ஒன்று.

2. ஏகாதசருத்ரரில் ஒருவன்.

**பவ்யன்** — 1. ஓர் முனிவன், பாரி மமதை.

2. பிரியவிரதன் குமரன்; சாகத்தீவை யாண்டவன்.

**பழமதுரை** — இது கடல் கொள்ளவந்த மதுரை. இது இப்போதுள்ள மதுரைப் பதிக்குக் கிழக்கே இருந்ததாகத் தெரிகின்றது; "தமிழொடு பிறந்த பழமதுரையில் வளர்ந்தகொடி" (மீனாட்சி, சப்பாணி. க-இ. பழமதுரை மேடென்ற ஓரிடமும், பழமதுரை முனியென்ற ஒரு முனியின் கோயிலும் அங்கேயுண்டு. (திருவிளை.)

**பழமொழி**—சைநமுனிவராகிய மூன்றுறையரையனரால் செய்யப்பட்ட நீதிநூல்.சங்கமருவியபதினெண்கீழ்க்கணக்கினுள்ஒன்று ஒவ்வொருபழமொழியை இறுதியில்பெற்ற நானூறு வெண்பாக்களையுடையது.

**பழவகை**—ரஸ்தாளிப்பழம், மொந்தன்பழம், செவ்வாழை, வெள்வாழை, அடுக்குவாழைப்பழம், மலைவாழை பச்சைவாழைப்பழம், கருவாழைப்பழம், நவரைவாழை பலவகை பலாப்பழங்கள், பலசாதி மாம்பழங்கள், விளாம்பழம், இலந்தைப்பழம், அத்திப்பழம், நாவற்பழம், வெள்ளைநாவற்பழம், சம்புநாவற்பழம், குழிநாவற்பழம் தொட்டை மூந்திரிகைப்பழம், தமர்த்தம் பழம், கொய்யாப்பழம், எலுமிச்சம்பழம், பலவகை நாரத்தம்பழம், சீத்தாப்பழம், தொம்மட்டிமாதுளம்பழம், பேரீச்சம்பழம். பலவகைக் கிச்சிலிப்பழம், பூதகிச்சிலிப் பழம், வெள்ளரிப்பழம், முலாம்பழம், தர்போசிப்பழம், காரை, சூரை, பாலை, புளி, களா, மாதுளம்பழம், பனம்பழம்.

**பழனியப்பன் சேர்வைக்காரர்** — இவர் நொச்சியூரிலிருந்த கவிவாணர். இவர் சற்றேறக்குறைய (கoo) வருஷங்களுக்கு முன்னிருந்தவர். திருவுசாத்தான புராணம் இயற்றியவர்.

**பழனி ஜமீன்தார்** — இவர் ஒரு புலியைச் சுட்டுக் களிப்புடன் வந்த சமயத்தில் ஒரு கவிஞர் கூக்குரலிட்டு பின்வருங் கவிகூறக் கேட்டு, அக் கவிப்புலிக்கு இரண்டுபை ரூபா கொடுவென்று கட்டளையிடப்பெற்ற போது கூறியது. "பையாடரவப் பணியேந்து சொக்கர் பதியைவிட்டு, வையாபுரிக்கு வரும்போதிலென்னை வழிமறித்து, மெய்யாத் தொடர்ந்து கவிப்புலிதானும் வெருட்டுகின்றது, ஐயா விசயகிரித் துரையேயுன் னடைக்கலமே."

**பழிச்சினர்பணிதல்**—விளங்கிய கீர்த்தியை யுடைய, இறைவனைப் பெறும்பேற்றை நினைந்து வாழ்த்தினராய் வணங்கியது. (பு. வெ. பாடாண்.)

**பழையர்** — இவர் மலைநாடுகளில் தேனெடுத்துவரும் ஒரு பழங்குடியினர். "பழையர்தம் மனையன பழநறை" என்பது இராமாவதாரம். இக் குடித்தலைவர் முன்னாளிற் சிறந்த வீரராய் விளங்கினர். சங்ககாலத்தே தலையாலங்கானத்துச் செருவென்றநெடுஞ்செழியற்கு முக்கிய படைத்தலைவனாக விளங்கிய "பழையன் மாறன்" என்பான் இக்குடியைச் சேர்ந்தவனென்றே கருதப்படுகிறுன்.

**பழையனூர்நீலி** — நீலியைக் காண்க.

**பழையன்** — 1. பாண்டிநாட்டில் மோகூரில் உள்ள குறுநிலமன்னன். இவன் காவல் மரமாக வேம்பினை வளர்த்தனன்.(புற நா.)

2. இவன் பாண்டியன் படைத்தலைவன், மோகூராண்டவன். இவன் அறுகை என்னும் மோரிய அரசனுக்குப் பகைவனாதலால் அவ்வறுகைக்கு நண்பனாகிய செங்குட்டுவனிவனுடன் போரிட்டு வென்றான்.

**பளிக்கறைமண்டபம்** — இது காவிரிப்பூம்பட்டினத்தைச் சார்ந்த உவவனத்திலுள்ள

தோர் மண்டபம். இதில் மணிமேகலை தன்னை உதயகுமரன் கவரவந்தபொழுது முதலில் இம் மண்டபத்திலேதான் ஒளித்துக்கொண்டாள் இதிற் புத்தபாத பீடிகையொன் றுண்டு. (மணிமேகலை).

**பள்ளத்தாக்கு**—இரண்டு மலைகளுக்கு இடையில் பள்ளமாய் தோன்றும் பாகம் பள்ளத்தாக்கு. (பூகோளம்).

**பள்ளர்** — திரிசிராப்பள்ளி, திருநெல்வேலி முதலிய இடங்களில் பயிரிடுந் தொழில் மேற்கொண்ட சாதி. இவர்கள் முதலில் பள்ளமான குழிகளில் வாழ்ந்து வந்தனர் என்றும் அல்லது பள்ளமான கழனிகளைப் பயிரிடுவதில் வல்லவரென்பதனால் இப் பெயர் பெற்றனர் என்பர். இவர்கள் பறையரினும் சற்று உயர்ந்தவர்கள். இவர்களிற் சிலர் மார்மீது சீலை இட்டு மறையார். இவர்களிருக்கும் இடம் பள்ளச்சேரி. இவர்கள் பிராமண பெண்ணிற்கும் சூத்திரனுக்கும் பிறந்தவர்கள். (தர்ஸ்டன்).

**பள்ளிகள் அல்லது வன்னியர்** — இவர்கள் தாங்கள் அக்னிகுல க்ஷத்ரியர் என்பர். இவர்கள் ஒரு ஈஜிப்ட் தேசத்து இடையரின் தலைவராகவும் இருந்தனராம். திருவாங்கூர் அரசராயிருந்த குலசேகராழ்வார் தங்கள் குலத்தவரென்று அவருக்கு விஷ்ணுத் தலங்களில் பூசையாதி சிறப்புக்கள் செய்துவருகின்றனர். இவர்களிற் சிலர் குலசேகரப் பெருமாள் சபை யென்று ஒன்று வைத்துக்கொண்டும் இருக்கின்றனர். இவர்கள் காஞ்சிபுரத்தில் பல்லவரால் கட்டப்பட்ட கோபுரத்தைப் பள்ளி கோபுரமென சுவதந்தரம் பாராட்டித் தமதென்று பழுது முதலிய பார்த்துவருகின்றனர். இவர்கள் பல்லவ அரசனும் சிதம்பர ஸ்தலத்தைக் கோயிலாக்கியவனுமான இரண்யவர்மன் தங்கள் குலத்தவன் என்பர். அர்ச் தோமை காலத்தில் மைலையையாண்ட கந்தப்பராஜா தங்கள் அரசன் என்பர். அக்னி, வன்னி ஒரு பொருட் சொற்களாதலால் இவர்கள் அக்னிகுலத்தவர் அல்லது வன்னியர் எனப்படுவர். தென்னிந்தியாவில் யாவரும் ரசபுத்திரர் என்று இவர்களைத் தவிரக் கூறுவா ரில்லை. வடபி, மாஹி என்றிரண் டாசர்கள் வாயுவையும், சூரியனையும் பக்ஷிக்க உலகம் இருண்டது. தேவர்கள் வேண்டப் பிரமன் ஜம்புமகருஷியை யாகஞ் செய்யக் கூறினன். ருஷி யாகஞ் செய்ய அதில் ஒரு புருஷன் அச்வாரூடனாய்த் தோன்றிப் பன்னிரண்டு முறை அசுரர்களுடன் யுத்தஞ் செய்து வாயுவையும் சூரியனையும் அவர்கள் தேகத்தினின்று விடுவித்தனன். அவன் ருத்ரவன்னியன் எனப்பட்டு அரசாண்டனன். அவனுக்கு ஐந்து குமாரர், இவர்களே வன்னியகுல முதல்வர்கள் என்பர். இந்தச் செய்தி சீர்காழி வைதீசுவரர் ஆலயத்திற் கூறியுள்ளது. (இது வடாபி செய்தி. அதாவது பல்லவ சாளுக்யர் யுத்தம்) இவர்கள் பிராமணரினும் தங்களை உயர்ந்தவர் என்பர். பிராமணர் உபநயனத்தில் பூணூல் தரிப்பர். இவர்களுக்குப் பூணூல் பிறப்பிலேயே உண்டென்பர். செங்கல்பட்டு ஜில்லா திருவிடைச்சுரம், மணிமங்கலம் முதலிய இடங்களில் வந்நியராயனால் நன்கொடை அளிக்கப்பட்டது. இந்தத் திருவிடைச்சுரம் (A-D. 1509-30) விஜயநகரத்தரசனாகிய கிருஷ்ண தேவராஜன் காலத்தில், வன்னிய அரசராகிய கந்தவராயன், செந்தவராயனால் ஆளப்பட்டது. இவர்கள் சம்புமகருஷி கோத்ரத்தவராதலால் இவர்கள் அரசருக்கு, சம்புகுலபெருமாள், சம்புவரர்யன், அழகிய பல்லவன், எதிரிலி சோழ சம்புவராயன் எனப் பட்டங்க ளுண்டு காஞ்சிபுரத்தில் வந்நியர் சாதித் தலைவன் மஹாநாட்டான் எனப்படுவன். இவன் வீரசம்புகுலத்தவன் என்பர். இவர்கள் வீரர் எனப்படுதலால் இவர்களுக்குப் படையாச்சி பட்டமும் உண்டு. இவர்கள் பல்லவர் அரசாக்ஷிக்குப்பின் வேளாளர்க்குப் பயிரிடுங் குடிகளா யிருந்தனர். இவர்கள் திரௌபதி அக்னியிற்பிறந்தவளாதலால் அவளை வணங்கி நெருப்புத் திருவிழா செய்வர். தற்காலம் தாங்கள் உயர்ந்தார் என பிராமணரைப்போல் வெண்ணூல் பூண்டு க்ஷத்ரியர் என்றும் பிராமணர் என்றும் கூறுவர். சிலர் கட்டுப்பாட்டிற்குள் ளடங்கி மீன் பிடித்தல், படகோட்டல், நடுவீட்டுத் தாலிகட்டல், மாமிசம் புசித்தல் முதலிய விட்டிருக்கின்றனர். இவர்கள் அக்னி குதிரை யேறிய ராயரௌத்தமிண்டநாயனார் எனவும், சாமிதுரை சூழப்ப சோழகனார் அஞ்சதசாசிங்கம் எனவும், குப்தர் எனவும் பட்டங் கூறுவர். இவர்கள் குமளத்தில் ஸ்ரீநிவாஸன்கோவில் கட்டித் தாங்களே பட்டர்கள்போல் அர்ச்சகரா யிருப்பர். இந்தக் குமுளப்பள்ளிகள் தாங்கள் பள்ளிகளுக்கு குருக்கள் என்பர்,

இவர்களின் பட்டங்கள் நாய்க்கர், வர்மா, படையாச்சி, கண்டன், சேரன், சோழன், பாண்டியன், நயினார், உடையார், சம்புராயர், பிள்ளை, ரெட்டி, கௌண்டன், காவாண்டான், செம்பியன், சோழகனார். இவர்கள் சூர்ய, சந்திரவம்சத்தவ ரன்றியும், அக்னிகுலம், ருத்ரவன்னியன், கிருஷ்ணவந்நியன், சம்புவந்நியன், பிரம்மவந்நியன், இந்திரவந்நியன் எனவும் கூறுவர். பின்னும் அக்னி, அரசு, க்ஷத்ரியன், நாகவடம், நாட்டாமன், ஓலைவந்நியன், பாண்டமுட்டு, பெருமாள் கோத்ரம், பள்ளிகள் சைவர், வைஷ்ணவர். இவர்களிற்சிலர் பேய் பிசாச வணக்கமுடையர். மைசூரில் வநபள்ளிகள் என சிலருண்டு. இவர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் மற்ற சாதியருடன் சேரா மல் தனித்திருப்பர். இவர்க ளிருக்கும் தெரு பள்ளித்தெரு எனப்படும். இவர்களிற் சிலர் தேன் பள்ளிகள் என்பர். இவர்கள் பாண்டவர்கள் வந்நிமரத்தில் தங்கள் ஆயுதங்களை வைத்தனர் வந்நிசம்பத்தினால் என்பர்.

**பள்ளிகொண்டான்** — இவர் ஒரு பரதவர் குலத்தைச்சேர்ந்த பிரபு. இவர் பலவித்வான்களுக்குப் பொருள் உதவிக் கவி கொண்டவர்; இவர்மீது நையாண்டிப்புலவன் "வள்ளிகொண்டான் மயிலேறிக் கொண்டான் மதிபோலுமலை, வெள்ளி கொண்டான் விடையேறிக்கொண்டான் விண்ணவர்க்கமுதம், துள்ளிகொண்டான் புள்ளிலேறிக் கொண்டான் சுபசோபனஞ் சேர், பள்ளிகொண்டான் புகழேறிக் கொண்டானென்று பார்க்கவென்றே." எனப் பாடிப் பரிசுபெற்றவன்.

**பள்ளிதாசிரி** — தமிழ்நாட்டுத் தமிழ் பேசும் தாசிரி ஜாதியர்.

**பள்ளிமிசைத் தொடர்தல்**—மிகவும் பெரிய கங்குலிடத்துப் பெரியவரைநாடனை உறக்கத்தை யொழிந்து சயனத்திலே பற்றியது. (பு. வெ. பெருந்திணை).

**பறக்கும் மிருகங்கள்** — ஆபிரிகாவின் கீழ்ப்பாகவாசி. பிராணிகளில் சில மரமேறும் பழக்கமுள்ளவை. அவ்வினத்தில் சிலவற்றிற்குப் பறப்பதற்கு உதவியான இறக்கை போன்ற தோல் கழுத்திற்கும் தோள்களுக்கு மிடையிலும் முன்கால் பின்கால்களுக்கிடையிலும் உள்ள விலாப்பக்கங்களிலும் பின்கால்களின் பின்புறந்தொடங்கி வால் வரையிலும் வளர்ந்திருக்கிறது. இவற்றின் உதவியால் இப்பிராணிகள் மரம் விட்டு மரம் தாவும்போது (50) கஜத்திற்கு மேல் தாவுகின்றன. இவற்றிற் சில பறக்கும் பூனை, பறக்கும் குரங்கு, பறக்கும் குள்ளநரி. இவற்றை (பிளிரோபிட்ரா) என்பர்.

**பறக்கும் மீன்** — இது நீர்வாழ் சாதியிலொன்று. இது (கஉ) அங்குல நீளமுள்ளது. இது கூட்டமாக வசிக்கும். இம்மீன்களை வேறு மீன்கள் துரத்தின் இவை அவற்றினின்று தப்ப நூற்றுக்கணக்காய் மேலெழும்பிச் சிறிது தூரம் பறந்து தப்பும். பின் நீரில் நீந்திச் செல்லும் என்பர்.

**பறநாட்டுப் பெருங்கொற்றனார்** — கடைச் சங்கமருவிய புலவர். (அகநானூறு.)

**பறம்புநாடு** — 1. பாரி என்னும் வள்ளலின் நாடு. முந்நூறு ஊர்களையுடையது (புற.நா)

2. இது வேள்பாரியெனும் வள்ளல் ஆண்ட நாடு. இது பாண்டிநாட்டிலிருந்த தாகச் சாசனங்கள் கூறும். இது பாரிமலை, பிரான்மலை யெனும் கொடுங்குன்றமாயிருக்கலாம்.

**பறவைகள்** — இவற்றின் பொது இலக்கணம் பறத்தலால் பறவை. இவை எலும்புக்கூடு, அலகுகள், பாதம், நகம், கழுத்து, காது, கண், இறகுகள் எனும் இவற்றின் சேர்க்கையால் அமையப்பெற்றவை. பிராணிகளின் எலும்புக ளவற்றின் தேகங்களைத் தாங்கிச் செல்கின்றன. பூமியில் நடமாடும் பிராணிகளின் எலும்புகள் கனமாயிருக்கின்றன. ஆகாய சஞ்சாரியாகிய பக்ஷிகளின் எலும்புக்கூடு, இலேசாய்த் துவாரமுள்ளதா யிருக்கிறது. இக் குழாயெலும்புகள் சுவாசாசயத்துட னியைந்து பறவைகள் பறக்கையில் தங்களிடத்துள்ள காற்றை உதவுகின்றன. அப்போது எலும்புகளில் காற்றில்லாமையால் பறவைகள் எளிதாகப் பறக்கின்றன. இறக்கைகள் - இவை இறகுகளைப்பெற்று ஆகாயத்தில் செல்லச் செய்தலா லிறக்கையெனப்படும். இறக்கை ஒரு விசிறிபோன்றது. இதில் அடியில் குழல்போன்ற உட்சத்தமைந்த எலும்புடன் சம்பந்தப்பட்ட இறகுகள் பக்கவிலாவுட னியைந்து இருக்கின்றன. இவ்விறக்கைகள் பறவைகளுக்குக் கை போல் உதவுகின்றன. இவ்விறக்கைகள் உயர்ந்து பறக்கும் பக்ஷிகளுக்கு நீண்டும், பூமியில் உலாவும் பறவைகளுக்குக் குறுகியும் உள்ளன. இறகுகள் - பேரிறகுகள், நடுத்தரமான போர்வை யிறகுகள், சிற்றிற

குகள் என மூவிதம்; பேரிறகுகள் பறவைகளின் இறக்கையிலும் வாலிலும் உள்ளவை. போர்வை யிறகுகள்-இவை பறக்கும்போது தேகத்துடன் ஒட்டிக்கொண்டு பறப்பதற்கு உதவுகின்றன. சிற்றிறகுகள்-பக்ஷிகளின் தேகத்தை யொட்டித் தேகத்துள்ள உஷ்ணம் வெளிப்படாது காக்கின்றன. இறக்கைகளி னிறகுகள் — தென்ஞோலைபோல் இருபக்கங்களிலும் நெருங்கிய மிருதுவான மயிர்போன்ற பொருளால் ஆக்கப்பட்டவை. பறவைகள் இறக்கைகளின் தொடர்ச்சி பிரியாமல் தமது வாலிற் கடியிலிருக்கும் ஒருவகை தைலப்பொருளை மூக்கிற்கொண்டு இறக்கைகளுக்குத் தடவிப் பிரியாதிருக்கச் செய்யும். அலகுகள் - பறவைகளின் ஜீவனத்திற்குத் தக்கபடி இருக்கின்றன. தான்யத்தால் ஜீவிப்பவைகளுக்கு அலகுகள் குட்டையாயும் உறுதியாயும் இருக்கின்றன. கொட்டையை உடைத்துத் தின்னும் பறவைகளுக்கு அலகுகள் உறுதியுடையனவாயும், நுனியில் சற்று வளைந்து மிருக்கின்றன. ஜலத்திலும் ஜலக்கரையிலும் ஜீவிக்கும் அன்னம், வாத்து முதலியவற்றிற்கு அலகுகள் தட்டையாயும் சீப்பையொத்த பற்களிருக்கின்றன. மரங்கொத்தும் பறவைகளின் அலகுகள் நீண்டும் நீளமான நாவையும் பெற்றிருக்கின்றன. மீன்கொத்தும் பறவைகளி னலகுகள் நீண்டு கூர்மையாக இருக்கின்றன. மாம்சபக்ஷணிகளினலகுகள் வலிவாகவும் நுனிவளைந்து மாம்சங்களைக் கிழிக்கத்தக்கனவாகவு மிருக்கின்றன. பறவைகளுக்கு இரண்டு இரைப்பைகளுண்டு, விழுங்கும் இரைகள் முதல் இரைப்பையில் தங்கி அதிலுள்ள ஒருவகை சத்தில் ஊறிப் பிறகு இரண்டாவதான சுரசுரப்புள்ள கல்லீரலை யடைகிறது. பறவைகளின் கால்கள் - இவைகளுக்குக் கால்கள் அவைகள் தங்கி யுலாவும் இடங்களைப் பற்றினவாக அமைந்துள்ளன. இரையாக பக்ஷி மாம்சங்கள் முதலியவற்றைப் பிடிக்கும பக்ஷிகளுக்குக் கால்களில் முன்பக்கத்தில் மூன்று விரல்களும், பின்பக்கத்தில் ஒரு விரலும் உண்டு. கிளைகளைப் பற்றிக்கொண்டு விழாது உட்காரும் பறவைகளுக்குக் கால்கள் முன்பக்கம்நீண்டு மெலிய மூன்று விரல்களும், பின்பக்கத்தில் ஒரு குட்டையான விரலும் உண்டு. மரம் ஏறும் மரங்கொத்தி முதலியவற்றிற்கு முன்பக்கத்தில் இரண்டு விரல்களும், பின்பக்கத்தில் இரண்டு விரல்களும் உண்டு. காடை, கவுதாரி முதலிய நடக்கும் பறவைகளுக்கு கால்களில் முன்பக்கத்தில் மூன்று விரல்களும், பின்பக்கத்தில் ஒரு விரலும் தடித்து இருக்கின்றன. கோழி முதலியவற்றிற்கு விரல்கள் தடித்திருக்கின்றன. நீரில் நடக்கும் நாரை முதலிய பக்ஷிகளுக்குக் கால்களும் மூக்கும் நீண்டிருக்கின்றன. நீந்தும் பறவைகளாகிய அன்னம் வாத்து முதலியவற்றிற்கு முன்பக்கத்தின் இடையில் தோலகன்ற மூன்று தோலடிப்பாதங்களும், பின்பக்கத்தில் குட்டையான ஒரு விரலும் உண்டு. ஓடும் பறவையாகிய தீப்பறவை முதலியவற்றிற்குத் தடித்துக் குட்டையான இரு முன்விரல்களுண்டு. அவை ஒன்றைவிட வொன்று நீண்டிருக்கும். பறவைகள் நிலப்பறவை, நீர்ப்பறவை என இருவகைப்படும். இவற்றிற்கு அலகும் சிறகும் பாதமுமே முக்யமானவைகள். இவை இடபேதங்களாலும், நிறபேதங்களாலும், உருவபேதங்களாலும், பலவகைப்படும். இவ்வினங்களில் ஒரு அங்குல முதல் 10 அடி உயரமுள்ளவைகளும் உண்டு. இவற்றின் உடல் அவற்றின் தொழிலைப்பற்றியதா யிருக்கிறது. இவை காற்றில் பறப்பவை ஆதலால் இறக்கைகள் உண்டு. இவற்றின் உடலை சிறு சிறகும், பெருஞ்சிறகும் மூடியிருக்கும். இச் சிறகுகளில் மார்பின் புறத்தை மூடியிருப்பவை சிறு சிறகு, இறக்கையிலுள்ளவை பெரியவை, வால்புறத்தது இறக்கையினும் சற்று சிறியது. பறவைகள் காற்றில் நீந்திச்செல்பவை ஆதலால் அவற்றின் சிறகு ஒன்றுடன் ஒன்று ஒட்டியிருக்கும். இவை மழைகாலத்தும் பறப்பவை ஆதலால் சிறகுகள் தண்ணீர் ஒட்டாத தைலப்பசையுள்ளவைகளாக இருக்கின்றன. பறவைகளின் கால்களில் 4 விரல்களே உண்டு. அவற்றில் 3 முன்புறம் உண்டு. மூக்கு முன்புறம் கூர்மையாயும், பின்புறம் மிருதுவாயுமிருக்கிறது. மாம்சபக்ஷணிகளின் மூக்கு வளைந்து கூர்மையாயும், சாகபக்ஷணிகளின் அலகு நேராகவும் இருக்கிறது. பக்ஷிகள் முட்டையிட்டுக் குஞ்சுபொரிக்கும். அவை உருவிற்குத் தக்கபடி பெரிதாயும் சிறிதாயுமிருக்கும். அவை அடைகாக்கும் காலமும் உருவிற்குத்தக்க வேறுபாடு கொண்டன. சிட்டுகள் 12 நாளும், கோழிகள் 21

நாளும், வாத்துகள் 25 நாளும், நீர்ப்பறவை 31 நாளும், அன்னம் 42 நாளும், தீக்கோழி 42 நாட்களும் அவயங் காக்கின்றன. பறவைகளை சிட்டு, புறா, காக்கை, கொக்கு, கோழி, ஆந்தை இனங்களாக வகுத்திருக்கின்றனர். 1. தையற்பறவை, 2. பட்டினப்பறவை, 3. பவர்பர்ட், 4. வானம்பாடி, 5. ஊர்க்குருவி, 6. தூக்கணங்குருவி, 7. ஆகாயவலை, 8. சைநாசிட்டு, 9. கொட்டைப்பாக்குச்சிட்டு, 10. ஊங்காரப்பறவை, 11. நகைக்கும்பறவை, 12. பரிகசப் பறவை, 13. தேன்சிட்டு, 14. மலர்க்கொண்டைப் பறவை, 15. கனேரிப் பறவை, 16. நந்தனப் பறவைகள், 17. நடிக்கும் சித்திரப் பறவைகள், 18. கிளிகள், 19. மயில், 20. கோழிகள், 21. புறாக்கள், 22. மீன்குத்தி, 23. கொண்டலாத்தி, 24. மரங்கொத்தி, 25. நாநீண்டபறவை, 26. ஆள்காட்டிக்குருவி, 27. காகம், 28. குடைப் பறவை, 29. கைவி, 30. விநோத மூக்குள்ள பறவை, 31. உள்ளான், 32. அன்றில், 33. கொக்கினம், 34. நாரைகள், 35. ஆலா, 36. கிரேட் ஆல்பட்ராஸ், 37. துருவமண்டலப்பறவைகள், 38. கொம்புள்ள மூக்குப் பறவை, 39. வாத்துகள், 40. அன்னப் பறவை, 41. கோட்டான், 42. பருந்து, 43. வல்லூறு, 44. கழுகுகள்.

ஆலா (Gull) - நீர்ப்பறவை இனத்தில் சேர்ந்தது. இது காக்கைபோல இருக்கும். இவற்றுள் சில நன்னீரிலும், சில உப்புக் கடலிலும் ஜீவிப்பவை. இவ்வினத்தில் பல வேறுபட்டவை யுண்டு. இதற்கு மூக்கும் காலும் செவந்த மஞ்சணிறம், முதுகும் கழுத்தும் மேகநிறமாயும், தலையும் பிடரியும் கருமையாயும் இருக்கின்றன. இது நீரில் நீந்தத்தக்க தோலடிகளுடையது. இவை கடலிலேயே வாரக்கணக்காய் சிலவேளை தங்குகின்றன. அப்போது அது உப்புநீர் அருந்துவதில்லை. இவ்வினத்தில் ஒருவகை ஆபிரிகாகண்டத்தின் தென்கோடி முனையிலிருக்கிறதாம். அதற்கு கிரேட் ஆல்பட்டிராஸ் (The Great Albatras) என்று பெயர். இதன் உடல் தலைமுதல் 3 அடிகள் நீளம். இதன் இறக்கைக ளிரண்டினையும் விரித்தால் 18 அடிகளுக்குமே லிருக்குமாம். இது பலநாள் கடலிலேயே தங்கி வாழும். அதிஉஷ்ண காலத்தில் ஆகாயத்தில் அதிஉயரப் பறந்து இரண்டொரு நாட்கள் ஆகாயத்திலேயே தங்குகின்றன என்பர். இது ஒவ்வொரு வேளை ஆகாரத்தின்பொருட்டு மரக்கலங்களைத் தொடர்ந்து பல மைல்கள் செல்லுகின்றன. இதன் இறக்கைகளும் தோலடிப் பாதங்களும் நீந்துதற்கு உதவிபுரிதலால் இது நீரில் அதிவேகமாய் நீந்தி மீன்களைப்பிடித்தருந்துகிறது. இது பேடு அடைகாக்கையில் ஆண் காவல் செய்கிறது.

ஊர்க்குருவி - இது வரிகளமைந்த கபில நிறமுள்ளது. இதனலகு தான்யபக்ஷணிகளாகிய பிராணிகளுக்குள்ளதுபோல் குறுகியதாயிருக்கும். இது ஊரில் வீட்டுக் கூரைகளில் கூடுகட்டி வாழ்வது.

அன்னப்பறவை - இது வாத்தின் இனத்தைச் சேர்ந்தது. அவ்வினத்தில் பெரிய உருவமுள்ளது. இதன் கழுத்து நீளம், இதன் மேல்வாய்ப் பக்கத்தில் சிறுபள்ளம் உண்டு. இதன் மூக்கும் கால்களும் சிவந்த மஞ்சள் நிறமானவை. இதன் அகன்ற தோலடிப்பாதங்கள் தண்ணீரில் வேகமாய் நீந்தவுதவி, இதன் வலுத்த இறக்கைகளால் நன்றாய்ப் பறக்கும். இதன் இறக்கைகளிரண்டும் விரியின் (8) அடிகளகலமிருக்கும். அன்னப்பறவையின் தூவி யணைகளுக்குதவி. இவை வருடத்திற் கொருமுறை (6, 8) முட்டைகளிட்டு குஞ்சு பொரிக்கும். இது அழகுள்ள பறவை.

ஆகாயவலை — இது ஒருவகை ஊர்க்குருவி இனத்தது. மாம்சபக்ஷணி. (தைலம்) எனவும் பெயர். இரை தேடுகையில் இதன் வாயை அகலத்திறந்து பறப்பதால் அகப்படும்இரையையுண்டு சீவிக்கும். இது மரங்களிலுள்ள நார்ப்பொருள்களால் எச்சிலைக் கூட்டிக் கூழாக்கி மஞ்சள் நிறமான கூடுகட்டுகிறது.

ஆள்காட்டிக்குருவி - இது முதுகில் பழுப்பு நிறமும், கழுத்தும், வயிறும், வெண்மைநிறமும், தலையில் சிறு கொண்டையும், சிறிய அலகும் கொண்டது. இது இராக்காலங்களில் உலாவும், கோட்டான் ஆந்தை முதலிய பறவைகளைப்போல் இரவில் உலாவும் பறவைகளில் ஒன்று. இது நீர்வாழ்வனவற்றைப் பெரும்பாலும் உண்பது. நீர்வற்றிப்போனால் நெடுந்தூரம் யாத்திரை செய்து நீருள்ள இடந்தேடிச் செல்லும். இது இரவில் இரை தேடித்திரிகையில் மனித நடமாட்டங்காணின் ஒருவித ஓசை

விடுகிறது. அதனால் திருடர் முதலியோர் மனிதர் நடமாட்டத்தை அறிகின்றனர்.

ஷங்காரப் பறவை - இது நமது நாட்டின் சிட்டினை மொத்தவை. ஷங்காரப் பறவை காண்க.

விப்பெனும் சத்தப்பறவை - இது ஆஸ்திரேலியா நாட்டது. இது குயிலினத்தைச் சேர்ந்ததென்பர். இதன் தலையும் வாலும் நீலநிறம். பின்புறம் செம்மை கலந்த கருமை. மாம்ஸபக்ஷணி. இது, காலை மாலைகளில் பாடுகையில் சவுக்கை வீசினால் கேட்கும் ஓசைபோல் கேட்பதால் இதை (Whip Lark) என்பர். இதனாணிற்குக் கொண்டையுண்டு. இவ்வாண் பறவை உற்சாகத்துடன் வாலை விரித்து ஆடிப் பாடுமாம்.

உள்ளான் - இது கொக்கினத்தைச் சேர்ந்தது. இது நீண்ட கால்களும், நீண்ட மூக்கையும் பெற்றிருக்கும். கழுத்துக் குறுகல். வால் குறுகல். இது உலாவும்போது வாலை ஆட்டிக்கொண்டே உலவும். நிறம் செம்மைகலந்த சாம்பல் நிறம். உடலில் வரைவரையான கோடுகளுண்டு. இது புதர்களில் மஞ்சள்கலந்த பசுமைநிறமான கூடுகட்டும். சதுப்புநிலங்களிலுள்ள புழுப் பூச்சிகளைத் தின்னும்.

அன்றில் - இதன் முதுகுப்பக்கம் சாம்பல்நிறம், தலை கறுப்பு, வயிறு வெண்மை. இதற்கு தலை சிறுத்து மூக்குப் பருத்து முன்னுக்கு வளைந்திருக்கிறது. இது செழித்த நீர்நிலையுள்ள இடங்களைத்தேடி வசிக்கும். இப்பறவை ஆண்பெண்கள் ஒன்றை விட்டு ஒன்று பிரியா.

உள்ளானின் ஒருவகை - ஆசியா, ஆபிரிகா, அமெரிகாவிலுண்டு. அதன் தலைப் பக்கம் கருமை, முதுகு சாம்பல் நிறம், வயிறு வெளுப்பு. இதன் கால்களும் விரல்களும் அதிகம் நீண்டவை. வளைவு இல்லை. இவற்றி னுதவியாலிது நீரிலுள்ள தாமரை, அல்லி, பாசி முதலியவற்றில் நடந்து சென்று பூச்சி புழுக்களைத் தின்னும். இதன் முட்டை பசுமை.

**பறவைப் பெயர்கள்** — அன்னம், சிம்புள், சக்கிரவாகம், மயில், கருடன், சாதகப்புள், கழுகு, பருந்து, அசுணம், கருங்கிளி, பசுங்கிளி, பஞ்சவர்ணகிளி, வெள்ளைக்கிளி, கிலாமுகி, செம்போத்து, குயில், கோட்டான், ஆந்தை, நாகணவாய்ப்புள், வலியன், காரிப்பிள்ளை, கரிக்குருவி, சிச்சிலி, கூகை, கோழி, தூக்கணங்குருவி, ஊர்க்குருவி, கிலங்கு, கானங்கோழி, வானம்பாடி, காடை, சிவல், கௌதாரி, பகண்டை, அண்டங்காக்கை, மணிக்காக்கை, கரும்புறா, மாடப்புறா, தவிட்டுப்புறா, காட்டுப்புறா, உள்ளான், சம்பங்கோழி, அன்றில், கொய்யடிநாரை, கருநாரை, வெள்நாரை, நீர்க்காக்கை, நீக்குருவி, வாத்து, பலவகைக் கோழிகள்.

**பறிசாபாகவதர்** — இவர் லக்ஷ்மிக் கன்பராய்ப் பண்டரியில் வாழ்ந்துகொண்டிருக்குங்கால் ஒரு நாள் லக்ஷ்மிதேவி தரிசனந்தந்து உனக்கு என்ன வேண்டுமெனப் பாகவதர் என்னுடைய வறுமை நீங்கவேண்டுமென லக்ஷ்மிதேவி, ஓர் பரிசக்கல் இவரிடம் கொடுத்து இதனிடம் இரும்பைக் காட்டின் பொன்னாக்குமாதலால் அவ் வகை செய்து வறுமை நீங்குக என்றனள். அவ்வாறே பாகவதர் மனைவியிடத்தினைக் கொடுத்து அவ்வாறு செய்து வாழ்ந்துவருகையில், ஒரு நாள் மனைவியாகிய கமலசா, சந்திரபாகை தீர்த்தத்தில் நீர் மூழ்கவருங் காலத்தில் நாமதேவரது மனைவி ராஜாயி இவளை எதிர்கண்டு நானும் வருகிறேன் சற்றுநில் என்றுகூறி அவளும் நீர்மொண்டுகொண்டு வருகையில் இருவருள் இராஜாயி கமலசாவைப் பார்த்து நான் வறுமையால் வருந்துகின்றேன் நீ வளத்தோடு கூடியிருப்பதற்குக் காரணம் என்னவெனக் கமலசா தனக்கு லக்ஷ்மிதேவியால் உண்டான பரிசக்கல்லின் தன்மைகூறக் கேட்டு அதனைத் தான் பார்க்கவேண்டுமெனக் கமலசா வீட்டிற்குச்சென்று அதைக் கண்டு, அதைக் கமலசா இவளுக்குக் கொடுத்து நீ இரும்புகளைப் பொன்னாக்கிக் கொண்டு இதை என்னிடத்தில் மீண்டும் தருகவெனக் கூறித்தர, அவ்வகை ராஜாயி புரிந்து வளமாக அன்ன முதலிய தன் புருஷருக்குப் படைத்து வருங்காலத்தில் நாமதேவர் இவ்வகை வளப்பத்திற்குக் காரணம் என்னவென வினவ, இவள் கூறுமை கண்டு தான் கூறினால் அல்லாமல் உணவு செய்யேன் என்ன அவ்வகையே மனைவியார் அக்கல்லைக்காட்ட நாமதேவர் அந்தக் கல்லைச் சந்திரபாகைத் தீர்த்தத்தில் வாங்கியெறிந்து விட்டனர். கமலசா இதை அறிந்து கேட்கச் சிலரிது ஞாயமன்றெனவுங் கூறினர். இதையறிந்த பறிசாபாகவதர் நாமதேவரை நோக்கி இது நிராசை

யற்றவர்க்கு அழகன்றெனக் கோபிக்க நாமதேவர் பாகவதரை நோக்கி அந்த ஆற்றிற்கு அழைத்துப்போய் அதில் மூழ்கி அதிலிருந்த கற்களை வாரிக்குவித்து உமது பரிசக்கல்லை எடுத்துக் கொள்ளுகவெனப் பாகவதர் . ஒன்றும் தோன்றுமல் தம்மிடத்திருந்த இரும்புகளை அந்தக் கற்களின் மீது நீட்ட அவையனைத்தும் பொன்னுயின. இதையறிந்த பாகவதர், நான் நாமதேவரது மகிமையறியாமல் இவ்வகை செய்தேனென்று அவரது திருவடியில் வணங்கித் தீக்ஷைபெற்று அடியவராயினர்.

**பறையர்** — இவர்கள் தமிழ்நாட்டுப் புராதன குடிகள். இவர்கள் தமிழ்நாட்டில் பறையரென்றும், வடநாட்டில் மாலமாதிகரென்றும் அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தொழில் பயிரிடுதல், அடிமைவேலை செய்தல், சுபாசுபங்களுக்குப் பறைகொட்டல், பயிர்க்கு நீர்ப்பாய்ச்சும் கம்புக்கட்டி பண்ணையாள், தலையாரி, வெட்டுவான், ஊர்க்காவல் முதலிய வேலைசெய்தல். இவர்கள் ஒருகாலத்தில் பலமுள்ள கூட்டத்தினராக இருந்தனர். இவர்களை வழக்கத்தில் பறையர் என அழைப்பது. இவர்களைப் புலையரென நிகண்டு, பிங்கலந்தை, திவாகரம் முதலிய கூறும். இவர்கள் புலைத்தொழில்செய்தலால். நந்தனர், பெற்றூன்சாம்பான், திருப்பாணுழ்வார், முதலியோர் இப் புலையர் சாதியைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பிராமணர்களை எங்களையொத்தவர்கள் என்பர். அவர்களுக்கும் ஊர்க்குப்புறம்பாக அக்கிராகாரம் உண்டு, எங்கட்கும் ஊர்க்குப் புறம்பாக, இடம் உண்டு, அவர்க ளிருக்குமிடத்தில் நாங்கள் போகக்கூடாது, நாங்க ளிருக்குமிடத்தில் அவர்கள் வரக்கூடாது. அவர்களுக்கும் பூணூல் உண்டு, எங்களுக்கும் பூணூல் உண்டு என்பர். இவர்கள் சில திருவிழாக்களில் மற்ற சாதியாருடன் ஒத்த சுதந்திரர்களா யிருக்கின்றனர். பெரும்பாலும் தென்னுட்டில் நடைபெறும் இரதோற்சவங்களில் ரதமிழுக்க இவர்களே முன்னிற்கின்றனர், திருவாரூரில் சுவாமிக்குமுன் யானையேறும் பெரும்பறையன் யானைமீது எறிக்கவரிவீசிச் செல்கிருன், இவன் பிடாரியார் திருவிழாக்களில் மாரிக்குத்தாலி கூறைகொண்டுதன் குலப்பெருமை கூறிக்கொண்டு சார்த்தி மரியாதை பெறுகிருன். மைசூரிலுள்ள மேற்கோட்டையில் நடக்கும் உற்சவத்தில் புலையர்களுக்கு சந்நிதிக்குட் புகுந்து தரிசனம் செய்யும் சுவதந்திரம் உண்டு. இவர்கள், மழையிலாக் காலத்து ஒரு சடங்கு செய்வது உண்டு. அச்சடங்கின் செய்தி, சுக்ரன், தன்னிடம் விட்டு வைப்பாட்டி வீட்டிற்குச் சென்றிருத்தலால் மழை பெய்யவில்லை என்று அவன் வைப்பாட்டியைக் கொடும்பாவியாக மண்ணுலும் வைக்கோலாலும் பிரதிமைசெய்து அதை ஒரு ரதத்தில் வைத்து எழு எட்டு நாட்கள் தெருக்களில் இழுத்து கடைசி நாளில் வெட்டியான் தன்தலை சிறைத்துக் கொண்டு அக்கொடும் பாவிக்குப் பிரேதசமஸ்காரம் செய்வன் இதனுல் வெட்கமடைந்த சுக்ரவைப்பாட்டி சுக்ரனை சொந்த இடம் அனுப்புவள். பின் மழை பொழியும் என்பது மழைக்கும் முதலானவர்கள். இவர்கள் சில இடங்களில் கிராமாதிபதிகளா யிருக்கின்றனர். செங்கல்பட்டு ஜில்லா தையூரில் எழு பறைச்சேரிக்கு அதிபதிகளாக இருக்கின்றனர், இடைப்பாளையம், வரதராஜபுரம் (வண்டலூருக் கருகிலுள்ளது) தென் ஆற்காடு ஜில்லாவில் கோவிந்த நல்லூர், ஆண்டிபேட்டை, இந்த இடங்களில் அவர்களே கிராமமுனிஸிப் வேலை பார்த்து வருகின்றனர். இவர்களில் பல வகுப்புகள் உண்டு. அம்மபறையன், கட்டிப்பறையன், கீழ்க்கட்டி, கோலியர்ன், கொங்கு, .கொறம், கோட்டை, முரசு, மொட்டை, பச்சை, சாம்பன், சங்கு, சோழியன், தங்கலான், வலங்கமத்து, அறுத்துக்கட்டாதவர், வலை, தாதன். இவர்களுள் கோலியன் துணி நெய்வோன், வள்ளுவன் இவர்களுக்குப் புரோகிதன், மருத்துவன், உறுமிக்காரன், பம்பைக்காரன், பறையடிப்பவன், பொடராயன் வண்ணர வேலைசெய்பவன். இவர்கள் 9-வது நூற்றுண்டில் பல்லவர் காலத்து உயர்பதவியில் இருந்ததாகத் தெரிகிறது. பல்லவர்க்கு வள்ளுவரே புரோகிதம் செய்திருந்தார்களென்று கூறப்பட்டிருக்கிறது. இந்த வள்ளுவர்கள் கோவில்களில் இருந்ததாகவுஞ் சொல்லப்படுகிறது. "ஸ்ரீவள்ளுவம் பூவாணவன் உவச்சன்" ஆறுவள்ளுவரை நித்யகட்டளைக்கு வைத்துக்கொண்டு கோவில் காரியம் நடத்த வேண்டியது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனுல் ஆதி திராவிடரென்று

தங்களை உயர்த்திக் கூறும் பறையர் ஒரு காலத்து உயர்ந்த நிலையிலிருந்தவளாகக் காணப்படுகின்றனர். எல்லாப் பறையர்க்கும் மேலதிகாரியாக நவாபு காலத்தில் தேசாயி செட்டியை ஏற்பாடு செய்தனர். அத்தேசாயி வாரியன் அல்லது சலவாதியை வைத்துக் கொண்டு அவர்களுக்கு நேர்ந்த வழக்குத் தீர்த்து அதிகாரஞ் செலுத்துவன். தேசாயி இவர்களிடம் கட்டணம் பெறுவன்.

**பறையன்** — ஊர்காத்துப் பறைசாற்றும் புலைமகன்.

**பறையூர்** — சோநாட்டில் உள்ளதோர் ஊர். (சிலப்பதிகாரம்.)

**பற்கான்** — சிவகணத்தவரில் ஒருவன்.

**பற்குநன்** — அருச்சுநன்.

**பனம்பாரனார்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். இவர் தொல்காப்பியத்திற்குப் பாயிரங்கூறிய பனம்பாரனாரின் வேறாகலாம். காலத்தை நோக்கின் இவர் ஊர் பனம்பாரமாயிருக்கலாம். இவர் குறுந்தொகை (௫௨)வது செய்யுள் பாடியவர்.

**பனி** — 1. ஆகாயத்தில் கலந்துள்ள நீராவி குளிர்ந்த காற்றுப்பட நீராகப் பரிணமிப்பது. இது, மூடுபனி, உறைபனி, ஆலங்கட்டி முதலியவாகும்.

2. பூமியினின்று கிளம்பின நீராவி மழைத் துளிகளாகப் பரிணமிக்குமுன் இறுகுவது. இந்நீரணுக்கள் படிப்படியாகக் கீழிறங்கி வாயுமண்டலத்தை அணுகுகையில் கல்மழை ஆம். இதுவே ஆலங்கட்டி.

3. இது, இரவில் வானம் தெள்ளிதாக இருக்கையில் பூமிகுளிர அதிலுள்ள வெப்பம் ஆவியாய்ப் பரிணமித்துக் குளிர்ந்து பெய்வது. இதனைப் புல், மரம், கல் முதலிய பொருள்களில் அறியலாம்.

**பனிக்கட்டி** — அதிக குளிர்ச்சியினால் நீர் உறைந்து கற்போலாதல். இதுஆலங்கட்டி போல்வது. ஆலம் - சலம்.

**பனிநீல நங்கை** — ஜைநராகிய ஜினதாஸர் பௌத்தராகிய சாகரதத்தர் மகள். சிலகல்யாணியை மணந்து ஒரு பெண் பெற்றனர். இப்பெண் பொழுதுவிடியுமுன் ஜினாலய பூசைக்கு மலர் பறித்துக்கொண்டு தருகையில் அவள் கேசத்தில் முத்துக்கோத்தது போலிருந்த பனித்துளிகளைக்கண்ட தவசியவளுக்குப் பனிநீல நங்கையெனப் பெயரிட்டனர். ஜினதாசர் தன்தங்கை குமரன் ஆர்ஹதனாக இருப்பதெண்ணி, தன் குமரியாகிய பனிநீலநங்கையைப் பார்சுவதத்தனுக்கு மணஞ் செய்வித்தனர். பின்பொருநாள் பார்சுவதத்தன் மணச்செய்தியை விசாரிக்க விசாகதத்தனிடம் தன் குருவாகிய பௌத்தர்வர பனிநீலநங்கை அவரை வணங்கவில்லை. அவள் வணங்காமையால் மனம் வருந்திய குரு அவ்விடம் விட்டு நீங்குகையில் மாமனாகிய விசாகதத்தன் குருவை நிர்ப்பந்தப்படுத்தி மருமகளை மாம்சம்சமைத்துப் படைக்கக் கூறினன். அருகமத விரோதமாகிய செயலாதலால் மனங்கொள்ளாது தோழி சொன்ன உபாயத்தால் குருவின் செருப்பி லொன்றைச் சமைத்தூட்டி அவர் கேட்டபொழுது ஒரு செருப்பைக் கொடுப்பித்தனள். இச்செய்தியறிந்த குரு வெட்கமடைய பனிநீலநங்கையின் தோழி சிறுவர்களைத் தூண்டிப் பௌத்தகுருக்கண்மார் தங்கள் செருப்புக்களைத் தாங்கள் சமைத்துண்பர் எனப் பரிகசிப்பித்தனள். இதனால் விசாகதத்தரும் அவரது பெண்ணும் கோபித்து பனிநீலநங்கையைத் தனியே வைத்தனர். பின்னொருநாள் பார்சுவதத்தன் மரக்கலமேறப் போயினன். அன்றே பனிநீலநங்கை பருவமடைந்து தோழிக்குச் செவ்வணியணிந்து விடுப்ப அவன் நாலாம் நாள் வருவேன் என்று கூறினன். நாலாம்நாள் வெள்ளணியணிந்து விடுப்ப அவனன்றிரவு வந்து கூடி மோதிரமும் வேறும் அடையாளந்தந்து நீங்கினன். இவள் கருவுற்ற (௫) ஆம்மாதம் நாத்துனார் பழிக்க நங்கை என் கற்பு காட்டியல்லது உணவு கொள்ளேன் என (௧௮) நாட்கள் பட்டினிகிடந்தனள். இதனால் சாதனதேவதை ஏரியையுடைச்செய்தது. அரசன் பெருமுயற்சி செய்து கட்டியும் நிற்காமையால் பதிவிரதைகளைக் கொண்டடைப்பிக்கவும் அடைபடாமையால் இன்னும் பதிவிரதைகளுளரோ வென்ன பனிநீலநங்கை கர்ப்பிணியாதலால் வரவில்லையென அரசன் விசாகதத்தரைக் கேட்டுப் பல்லக்கனுப்பி வருவிக்க நங்கை தன் கற்புக்கூறி ஒரு கூடை மண் மடையில் போட ஏரி அடைபட்டது. பிறகு அரசன் அவளது பிரியப்படி ஜினாலயபிரதிட்டை செய்வித்தனன். (சைந.கதை)

**பனை** — 1. இது உஷ்ணதேசத்து மரம். இது கொட்டையிலிருந்து முளையுருவிக் கிழங்காகி முளைக்கும். இதற்கு நீர் பூசாரமே,

இது (20) க்கு மேற்பட்ட வருஷங்களில் பலன் தரும். தோட்டக்கால்களில் வேலியாக வைப்பர். அடிமரம் கனத்துத் தூண் போலிருக்கும். மடல்கள் வாள்போல் கூர்மையுடனிருக்கும். ஓலை வீடுமூடவும், பாய் முடையவும், புத்தகங்கள் முதலிய பல வேலைகளுக்குதவும், காய் நுங்காம், பழம் பணுட்டு செய்வர். கள்ளைச் சாறுக்கி வெல்லம், கற்கண்டு முதலிய செய்வர். அடிமரம் வீட்டிற்கு வலச்சல் முதலிய செய்வர்.

2. சிந்துதேசத்தில் பெரும்பாலும் எல்லா நிலங்களிலும் வளரும் மரம். இது புல்வகையில் பெரிது. இப் பனை இந்துக்களுக்குப் பலவகையில் உதவி, வீட்டுக்குக் கூரையாகவும், படுக்கப் பாயாகவும், எழுதவும் மற்றும் பலவிதத்தில் உதவுகிறது. இது முதலில் கிழங்கையும், முதிர்ச்சியில் நுங்கு, பழம், கள், சாறு, வெல்லம், வீடுகளுக்குத் தூலப்பட்டை, வரிச்சல், நார், கயிறு முதலிய வகைகளாக உபயோகப்படுகிறது. இதன்வகை, நாட்டுப் பனை, அலகுப்பனை, கூந்தற்பனை, தாளிப்பனை, நிலப்பனை முதலிய.

**பனைநாடு** — முடத்திருமாறன் காலத்தழிவடைந்த பாண்டி நாட்டில் ஒன்று.

**பனையோலை விசிறி** — பனையோலை விசிறியினுல் வாததோஷம், சிலேஷ்மரோகம், பித்தாதிக்கம், அரோசகம், ஆகிய இவைகள் நீங்கும்.

**பன்சசேனி** — இருஷபன் குமாஞகிய பரதன் பாரி. விச்வரூபன் பெண்.

**பன்றி** — இதன் முகம் நீண்டு இருபுறத்திலும் கொம்புகளைப் பெற்றிருக்கும். இது தன் நீண்டமூக்கை பூமிக்குள் நுழைத்துக் கிழங்கு முதலிய தோண்டித் தின்னும். பிளவுபட்ட குளம்புகள் உள்ளது. இதன் தேகத்தில் முரட்டு மயிர்கள் உண்டு. இது நாட்டில் தாழ்ந்த ஒட்டர், குறவர், உப்புரவர் முதலியவர்களால் ஆகாரத்தின் பொருட்டு வளர்க்கப்படுகிறது. இது ஒருமுறைக்கு ஐந்தாறு குட்டிகள் போடும். இதன் உடல் பருத்தும், கால்கள் குறுகியு மிருக்கும். இதில் ஒருவகை, காட்டில் வாழும் பன்றியுமுண்டு. அது காட்டுப்பன்றி. இது பருத்தவுடல் பெற்றுக் காட்டில் வசித்து நாட்டில் வந்து பயிர்களை நாசஞ்செய்வது. இதை ஆகாரத்தின் பொருட்டு வேட்டையாடுகிருர்கள்.

**பன்றிக்காடி** — இது, இமயமலைச் சார்பில் உள்ள பிராணி. இதன் தேகத்தில் காடிக் கிருப்பது போல் மயிர் மூடியிருக்கும். இதன் உடலும் முகமும் பன்றியை யொத்தவை. இதன் வால் நீளம். இது கோபிக்கையில் மயிரைச் சிலிர்த்துக் கொண்டு காடிபோல் பின்கால்களில் நின்றுகொண்டு போரிடும்.

**பன்றிநாடு** — இராமநாதபுரம் சிவகங்கை முதலிய சேர்ந்தது.

**பன்னகசயனன்** — பாம்பிடம் பள்ளிகொண்ட திருமால்.

**பன்னகாபரணன்** — தாருகவனத்து இருடிகள் சிவமூர்த்தியிடம் விரோதித்து ஆபிசாரயாகஞ்செய்து ஏவிய பாம்புகளை அணிகளாக அணிந்த சிவமூர்த்தி.

**பன்னவாதை** — சுதாயுவின் தாய்.

**பன்னுசன்** — திரணுசனைக் காண்க.

**பன்னிரண்டு (பாவம்) தேசை** — உதயம், தனம், பிராதரு, தோழமை, புத்ரன், சத்ருபாரி, மிருத்யு, புண்ணியம், கருமம், ஆயம், வியம், இவை ஒருவனுக்குச் சன்மம் முதலாக நேர்வன. (விதான).

**பன்னிரண்டு லக்னம்** — க-வது சன்மலக்னம், உ-வது ஓராலக்னம், ங-வது கடிகாலக்னம், ச-வது ஆருடலக்கனம், ரு-வது நக்ஷத்ரலக்னம், சு-வது காரகலக்னம், எ-வது ஆதெரிசலக்னம், அ-வது ஆயுர்லக்னம், கூ வது திரேக்காணலக்னம், ௧௦-வது அங்கிசலக்னம், கக-வது நவாங்கிசலக்னம், கஉ வது பாவலக்னம்.

**பன்னிருபடலம்** — அகத்தியர் மாணுக்கர் பன்னிருவராலும் கூறப்பட்ட புறப்பொருணுல்.

**பன்னிருபாட்டியல்** — இஃது இந்திரகாளியார் முதலான பல புலவர்களாற் செய்யப்பட்டது. இதில் நூல்களுக்குரியப் பத்துப் பொருத்தங்களின் இலக்கணமும் தொண்ணூற்றறுவகைப் பிரபந்தங்களின் இலக்கணமும் சொல்லப்பட்டுள்ளன. இது பழைய நூல்.

**பன்னிருவர் ஆழ்வார்கள்** — பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணுழ்வார், திருமங்கையாழ்வார்.

**பன்னாடுதந்தபாண்டியன் மாறன்வழுதி** — நற்றிணை தொகுப்பித்த பாண்டியன்.

**பன்ஹாஜிரசபுத்திரர்** — குஜராத்தி தேயத்தில் டோகராபூர் என்னும் நகரத்தில் இருந்த அரசனிடத்தில் உத்தியோகஸ்தர். ஒரு தீபாவளி பண்டிகையில் ஒருநாள் தீபோற்சவம் செய்துகொண் டிருக்கும்போது பன்ஹாஜி, தம் முன்றானையைக் கசக்கினர். அரசன் அதுகண்டு என்ன என்று வினவத் துவாரகையில் பெருமாள் தீபோற்சவங் கொள்ளுகையில் அர்ச்சகர் தீபார்த்தி செய்யத் தீப்பட்டுப் பெருமாள் திருவாடை பற்றியது. அதனைக் கசக்கினேன் என்றனர். அப்போது பெருமாள் என்ன ஆடையுடுத்திருந்தனர் என்னப் பச்சையாடையென்றனர். உடனே அரசன் தன்னினத்தவனாய்த் துவாரகையிலிருந்த அரசனுக்கெழுதிஉண்மையறிந்து பக்தருக்கு மானிய முதலிய கொடுத் துபசரித்து வந்தனன்.

**பஜமாநன்** — 1. அந்தகன் குமரன்.

2. விரோதன் தந்தை.

**பஸ்மம் - விபூதி** — இது ஆதியில் சிவனிடத்தில் பக்தியுள்ளவர்க்குக் காப்பின்பொருட்டுச் சிவபிரானால் கொடுக்கப்பட்டது. (பார-அநு 147-சுத்).

**பஸ்மாசுரன்** — சுகன் என்னும் அசுரன் குமரன். (இவனை விருகாசுரன் எனவுங் கூறுவர்.) இவன் சிவமூர்த்தியை யெண்ணித் தவம்புரியச் சிவமூர்த்தி இவனுக்குத் தரிசனந்தந்து யாது வேண்டு மென்றனர். அசுரன், நான் எவர் சிரத்தில் கைவைக்கினும் அவர்கள் இறக்கவென வரங்கேட்டு அவ்வகை அம்மூர்த்தி அருள்புரியப் பெற்றனன். இதன் உண்மையறிய அசுரன் சிவமூர்த்தியின் சிரத்தில் கை வைக்கத் தொடங்குகையில் சிவமூர்த்தி நாடகமாய் மறைந்தருளினர். உடனே விஷ்ணுமூர்த்தி இவ்வசுரன் காணும்படி பெண்ணுருக்கொண்டு வந்தனர். அசுரன் இப்பெண்ணைக்கண்டு விரும்பிப் பின்செல்லப் பெண் நீ ஸ்நானஞ்செய்து வருகவென அவ்வகை அவன் ஸ்நானஞ் செய்கையில் அறியாது தன் கரத்தைத் தானே தலையில் வைத்துக்கொண்டு இறந்தனன். இவர் செய்கையைக் கண்ட சிவமூர்த்தி விஷ்ணுவின் கோலத்தைக்கண்டு புணர்ந்து அரிஅரபுத்திரனைப் பெற்றனர் என்பர் சைவர். பின்னும் சிலர் விஷ்ணு பிரமசாரியுருக்கொண்டு அவனெதிரில் தோன்றி அவன் தலையை அவனே தொடும்படி தந்திரஞ்செய்து இறக்கச் செய்தனர் எனவுங் கூறுவர்.

**பஷ்யன்** — இரண்யநாபன் குமரன்.

**பக்ஷசபக்ஷ ஏகதேசவிருத்தி விபக்ஷவியாபகம்** — திக்கு, காலம், இவை திரவியம், அமூர்த்தமாகையினால் என்கிற ஏது பக்ஷ ஏகதேசமாயிருக்கிற மனத்தினிடத்திலும், சபக்ஷ ஏகதேசமாயிருக்கிற பூமியாதியிடத்திலும் இராதிருத்தலால் விபக்ஷமான ஆன்மா ஆகாசத்தில் வியாபித்திருத்தலாலும் என்ப. (சிவ. சித்).

**பக்ஷசபக்ஷவியாபகவிபக்ஷ ஏகதேசவிருத்தியென்கிற அனேகாந்திகள்**—இது பசு, கொம்பை யுடைத்தாகையினால் என்கிற இந்த ஏது, பக்ஷமாயிருக்கிற இந்தப் பசுவினிடத்தும், சபக்ஷமாயிருக்கிற எல்லாப் பசுக்களிடத்தும், வியாபித்திருத்தலாலும் விபக்ஷ ஏகதேசமாகிற கோஜாதியி லிருத்தலினாலு மென்க. (சிவ. சித்)

**பக்ஷத்ரயவ்யாபக அனேகாந்திகள்** — சத்தம் அநித்யம் அறியப்படுகையினாலென்கிற ஏது; பக்ஷமாயிருக்கிற சத்தத்தினிடத்திலும், சபக்ஷமாயிருக்கிற கடத்திலும் விபக்ஷமாயிருக்கிற ஆகாசத்திலும் இருக்கையாலென்க. (சிவ. சித்).

**பக்ஷம்** — 1. பூர்வபக்ஷம், அபரபக்ஷம் என இரண்டாம். பக்ஷம் பதினைந்துநாள் கொண்டது. பிரதமைமுதல் பௌர்ணமி வரையில் பூர்வபக்ஷம் எனவும், பௌர்ணமி முதல் அமாவாஸ்யை வரையில் அபரபக்ஷம் எனவுங் கூறுவர். இதனைச் சுக்கிலபக்ஷம், கிருஷ்ணபக்ஷம் எனவுங்கூறுவர்.

2. துணி பொருளுக்கிடமாம். அதாவது-இந்த மலையில் நெருப்புண்டென்று சுட்டிக் கூறுதல்.

**பக்ஷவிபக்ஷ ஏகதேசவிருத்தி சபக்ஷவியாபகமாகிய அனேகாந்திகள்** — திக்கு, காலம், திரவியமல்ல மூர்த்தமா யிருக்கையினால், எனவே, பக்ஷஏகதேசமான மனத்திலும், விபக்ஷ ஏகதேசமான ஆன்மாவினிடத்தும், இருத்தலாலும், சபக்ஷமாயிருக்கிற குணாதிகளை யெல்லாம் வியாபித்திருக்கையாலும், சபக்ஷ முதலிய விருத்தியுமிவைகளில் வந்து வியாபிக்குமாதலால் என்பர். (சிவ.சித்).

**பக்ஷவிபக்ஷ ஏகதேசவிருத்தி யென்கிற விருத்தன்** — நித்யஞ் சத்தம் பிரயத்னாந்திரமாகையினால், இந்த ஏது, வாயு முத

லான சத்தமாயிருக்கிற பக்ஷஏகதேசத்தி லும், திரணமாதியா யிருக்கிற விபட்ச ஏகதேசத்திலும் இல்லாதபடியால் என்க. (சிவ. சித்).

**பக்ஷவிபக்ஷவியாபகசபக்ஷ ஏகதேசவிருத்தியேனும் அனைகாந்திகள்** — இது, கோவல்ல கொம்பை யுடைத்தாகையால், இந்த ஏது, பக்ஷமாயிருக்கிற பசுவினிடத்திலும் விபக்ஷமான எல்லாப் பசுக்களிடத்தும், சபக்ஷமான யானை முதலியவிடத்தும் இருக்கையினுல் என்க. (சிவ. சித்).

**பக்ஷவிபக்ஷவ்யாபக விருத்தன்** — சத்தம், நித்யம் காரியமாகையால் இந்தக் காரியத்வமென்கிற சாத்தியத்திற்கு விபரீதமாயிருக்கிற அநித்யத்தோடு வியாப்தமாகையாலும் பக்ஷவிபக்ஷ வியாபகனுகையாலும். (சிவ. சித்).

**பக்ஷவியாபகசபக்ஷவிபக்ஷ ஏகதேசவிருத்தியேனும் அனைகாந்திகள்** — சத்தம், அநித்யம், பிரத்யக்ஷமாகையினுல் என்கிற ஏது, பிரத்யக்ஷத்வம் பக்ஷமான சத்தம் எல்லாவற்றிலும் இருக்கையினுலும் சபக்ஷ விபக்ஷங்களிலெங்கு மிராமலிருக்கையாலுமென்பர். (சிவ. சித்).

**பக்ஷாபாசம்** — பக்ஷமாயுள்ள நெருப்பினிடம் சூடில்லாமை ஆபாசமாகையால். அநுஷ்ணம் வஹ்நி என்பது. இதனை அப்ரசித்திவிசேடணம் என்பர். (சிவ. சித்).

**பக்ஷி** — (இ) வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில், இவற்றிற்கு முறையே எழுத்து அ, இ, உ, எ, ஒ உண்டி, நடை, அரசு, தூக்கம், சாவு; பிற்பக்கமாகில் உண்டி, சாவு, தூக்கம், அரசு, நடை; சா, தூக்கம் இல்லாதபொழுது அறிந்து செய்யுள் முதலிய செய்தல் நன்மை.

**பக்ஷிகள்** — பக்ஷிகளில் பலபுண்ணிய வுருக்கொண்டன உள. அவற்றிற் சில சுருக்கிக் கூறுகிறேன். அன்னம் பிரமனுக்கு வாகனம். கருடன் விஷ்ணுவிற்கு வாகனம். மயில் கந்தமூர்த்திக்கு வாகனமாயது, இந்திரனுக்கு ஆபத்துக்காலத்தில் உடம்பையுதவியது. கழுகு சடாயுவின் உரு, இவ்வுருக் கொண்டோர் இருமுனிவர் பிரத்தியக்ஷமாகக் கழுகாசலத்தில் தவம் புரிகின்றனர். சிம்புள் - நரசிங்கத்தின் கர்வ பங்கத்தின் பொருட்டு வீரபத்திரரால் எடுக்கப்பட்டவுரு. குயில், தக்ஷயாகத்திற்குப் பயந்த இந்திரற்கு உருவம். மன்மதகாளம், கரிக்குருவி, மதுரையில் சிவமூர்த்தியாலுபதேசிக்கப் பெற்றது. கோழி, கந்தமூர்த்திக்குக் கொடியாம். அன்றி, திருசிராப்பள்ளியில் அரசன் சேனையை மறித்துப் போரிட்டதுமாம். புரு, சிபியின் பொருட்டு அக்னிகொண்ட தேகமாம். அன்றி வாதிட்ட இருவர் தவத்தால் புணர உருக் கொடுத்ததுமாம். ஆந்தை, சிவபூசைசெய்து முத்தியடைந்த உருவமுமாம். காகம், சநிக்கு வாகனமாம். இவ்வுருக்கொண்ட அசுரன் உருவமுமாம். யமப் பிரீதியுமாம். நாரை, மதுரையில் பொற்றாமரையினின்று நல்லறிவு பெற்ற உருவாம். ஈ, சிவபூசை செய்ததால் ஈங்கோய்மலையெனப் பெயர் தந்ததுமாம். பூவை-மன்மதன் தூதாம். கருடன், விஷ்ணுவிற்கு வாகனமாம். கழுகு-சம்பாதி, சடாயு, முதலியோர் கொண்ட உருவாம். சக்ரவாகம், இது பெண்கள் கொங்கைக் கிணையாகக் கூறும் பக்ஷி. இதனைக் காமத்திற்குத் தூண்டும் புள்ளாகக் கூறுவதுண்டு. இது பகற்காலத் திணை பிரியாதிருந்து இரவில் பிரிந்து நிற்பதாகக் கூறுவர். இதனைக் கவிகள் நூல்களிற் புகழ்ந்து கூறுவர். கிளி, மன்மதனுக்கு வாகனமாம். தூது செல்லவுமாம். சுகருக்கு உருவமாம். கல்கிக்குச் சிவமூர்த்தியால் கொடுக்கப்பட்டது. இது காலமறிந்து கூறுவது. இது சிம்மளத்தீவின் பெருமையையும் பத்மாவதியின் விசனத்தையும் கல்கிக்குக் கூறி மணக்கச் செய்தது. அநந்தருஷியின் மனமயக்கத்திற்குக் காரணம் வினவி மார்க்கண்ட ருஷியைப் பிரளயகாலத்தில் எதை எப்படிக் கண்டீர் அதை அப்படிக் கூறுக எனக் கேட்டது. (கல்கி - புரா.) கோட்டான் இலக்குமியைக் காண்க.

**பக்ஷிசுவரர்** — ஒரு முனிவர், இவர் விநதை புத்திரருள் ஒருவர். இவர் க்ஷீராப்தியின் பாலுண்டு உயிர் தாங்கிவருகையில் அக்கடலிலுள்ள சலசரங்கள் மனைவி மக்களுடனிருத்தல்கண்டு தாமும் அவ்வாறிருக்க விரும்பிச் சுதன்மனெனும் அரசனிடஞ்சென்று தன்னெண்ணத்தைத் தெரிவிக்க அரசன் இவர் பக்ஷியுருக்கொண்டிருத்தலை யெண்ணித் தம் பதினைந்து பெண்களுள் விரும்பியவர் உம்மை மணந்து கொள்ளக்கடவர் என இருடி மன்மதனையொப்ப வடிவுகொண்டு அவர்களிடஞ்செல்ல அவர்களனைவரும் இருடியை மணந்து சுகித்தனர். (சிவமகாபுராணம்.)

**பக்ஷிதோஷம்** — அந்தி, சந்தி, நடுப்பகல், பாதியிரவு ஆகிய காலங்களில் சிசுக்களைத் தெருக்கடக்க வேறு தெருவிற் கெடுத்துச் செல்வதால் நான்குவித பக்ஷிதோஷங்களுண்டாம். அவை ஆண்பக்ஷி, பெண்பக்ஷி, அலிப்பக்ஷி, மலட்டுப்பக்ஷி என்பவற்றாலுண்டாம். அவை ஆண்பக்ஷிதோஷம், முதல் நான்கும், வாப்புள்தோஷம், நீர்ப்புள்தோஷம், தூங்குப்புள்தோஷம், அணுமத்துப்புள்தோஷம், காணுப்புள்தோஷம், என்பனவாம். (ஜீவ.)

**பஹிஷ்டை** — முன்னொருமுறை தேவேந்திரன் விருத்திராசுரனைக்கொன்ற பழி இவனைப் பிரமகத்தியாய்ப் பிடித்தது. ஆதலால் இந்திரன் தன் குறையைப் பிரமதேவரிடத்துக் கூறி இரக்க, அந்தத் திசைமுகன் பிரம்மகத்தி தோஷத்தை நான்கு பாகமாய்ப் பகுத்துஸ்திரீகளிடம் ஒருபாகத்தைத் தந்து, ரஜஸ்வலையாகும்போது அத்தோஷம் அணுகுமாறு நியமித்தனன். ஆகையால் பகிஷ்டையான ஸ்திரீயை நான்கு நாளும் புருஷன் பார்க்கலாகாது. இந்தப் பஹிஷ்டையான ஸ்திரீ பஹிஷ்டையான முதனாள் சண்டாள ஸ்திரீயையும், இரண்டாம் நாள் பிரம்மஹத்தி செய்தவளையும், மூன்றுநாள் வண்ணாத்தியையும், நான்காநாள் புனலாடியபின் சுத்தம் உடையாளையும் ஒப்பள். மற்றை மூன்று பாகம் ஜலத்தில் நுரை, மண்ணில் உவர், மரத்திடைப் பிசின் ஆயின.

**பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா** — பல தாழிசைகளோடு மற்ற உறுப்புக்களைக் கொண்டு வருவது.

**பஃறுளி** — 1. குமரியாற்றிற்குத் தெற்கிலுள்ள நதி, கடல் கொள்ளப்பட்டது. (சிலப்பதிகாரம்.)

2. இது வடிம்பலம்பநின்ற பாண்டியனு லுண்டாக்கப்பட்ட ஓராறு. (புற-நா).

**பஃறொடைவெண்பா** — நான்கடியின் மிக்க பல அடிகளைப் பெற்று வருவது.

## பா

**பா** — 1. (ச) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, இவற்றுடன் மருட்பாக் கூட்ட ஐந்தாம். முறையே இவற்றிற்குச் சாதி, நிலம், நிறமாமாறு. வெண்பா-மறையோர், முல்லை, வெண்மையும், ஆசிரியப்பா-வரசர், குறிஞ்சி, செம்மை, கலிப்பா-வணிகர், மருதம், பொன்மை, வஞ்சிப்பா-சூத்திரன், நெய்தல், கருமை, நாள் இராசியாவன, கார்த்திகை முதல் ஆயிலியமீறாக வேழுநாள்களும், கர்க்கடகம், விருச்சிகம், மீனமென்னும் மூன்று இராசியும் வெண்பாவிற்காம். மகமுதல் விசாக மீறுகிய ஏழுநாள்களும், மேஷம், சிங்கம், தநுசு எனும் மூன்று ராசிகளும் ஆசிரியப்பாவிற்காம். அனுஷமுதல் அவிட்டமீறாகிய எழுநாளும் மிதுனந்துலாம் கும்பமென்னும் மூன்றும் கலிப்பாவிற்காம். சதயமுதல் பரணியீறாகிய ஆறுநாளும், இடபம், கன்னி, மகரம்என்னும் மூன்றுராசியும் வஞ்சிப்பாவிற்காம். முறையே அதிதேவதை, புஷ்பம், சந்தனம், ஆடை, ஆபரணமாமாறு வெ-சந்திரன், வியாழம், ஆ-சூரியன், செவ்வாய், க-புதன், சநி வ-இராகு, கேது, புஷ்பமுதலிய மேற்கூறிய நிறப்பகுதியாற் கொள்க.

2. பாட்டு, இது இரண்டு முதலிய அடிகளால் ஆக்கப்பட்டு வெண்பா முதலிய பெயர்பெற்று வருவது. அப்பா, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா நூற்பா, என ஆறு வகைப்படும். (யாப்பிலக்கணம்).

**பாகஎக்ஞம்** — இது அஷ்டகம், ஆக்ரஹாயணம், ஈசானபலி, சர்ப்பபலி, சிரார்த்தம், ஸ்தாலிபாகம், பார்வணம், மாசிகம் முதலிய சேர்ந்த வைதிக எஞ்ஞம்.

**பாகஎக்யன்** — சசிவர்ணனைக் காண்க.

**பாகசாசநன்** — பாகன் என்னும் அசுரனைக் கொன்ற இந்திரன்.

**பாகராட்டிரன்** — பாரதவீரருள் ஒருவன்.

**பாகர்** — யானை ஒட்டுவோர். இரதம் ஒட்டுவோன் சாரதி.

**பாகலிகம்** — கேகயத்திற்கு வடகிழக்கிலும் பியாஸ், சட்லிஜ் என்னும் இருநதிகளுக்கிடையே உள்ள ஒரு நாடு.

**பாகவதபுராணம்** — இது பதினெண்ணுயிரங்கிரந்த முள்ளது. இது பரிச்சித்தின் சாபம், சுகர் உபதேசம், கிருஷ்ணன் சரிதை, மன்வந்தரம், சூர்யவம்சசரிதம், பூரு, யயாதி, பிரியவிரதன் மரபு, புவிதர்மம் முதிலியவற்றை உரைக்கும். இப் பெயரால் மற்றொரு புராணம் வழங்கும். அதனைத் தேவிபாகவதம் என்பர். இதனைத் தமிழில் அருதாரியப்ப முதலியார் (சகஎ0) செய்யுளாக மொழிபெயர்த்தனர்.

**பாகவரதன்** — புனிந்தன் குமரன், இவன் குமரன் தேவஹூதி.

**பாகன்** — விருத்திராசுரன் தம்பியாகிய அசுரன். இந்திரனாற் கொல்லப்பட்டவன்.

**பாகஸ்வரி** — தலாரண தேசத்து அதிபதி. ருதுபரனி. (பா. சபாபர்வம்).

**பாகாசித்தன்** — சத்தம நித்யம்பிரயத்தினத்திற்குப் பின்புண்டாகையினால், இந்த எதுவில், யாலவாதி சத்தங்களுக்கு ஈச்வரப்ரயத்னம் பூர்வத்வ முண்டாயிருக்கையினும், மானுஷப்ரயத்தினத்தினாலே உண்டாயிருக்கிற தீவிரத்வம், மந்தத்துவ முதலாயிருக்கிற தந்ததா லோஷ்டகங்களின் வியாபாரத்தினாலே ஜந்யத்வ மில்லாதபடியாலென்க. (சிவ சித்).

**பாகீரதி**—1. கங்கைக்கு ஒருபெயர். சூர்யவம்சத்துப் பகீரதன் தவத்தால் பூமிக்குவந்தபடியால் இப்பெயர் அடைந்தனள். இவள் பிரமன் சபைக்கு வந்தபோது வாயுவும் உடன் வந்த வேகத்தால் ஆடைசற்று விலக அதை வருணன் ஆவலுடன் கண்டதால் பிரமனிடம் சாபமடைந்து வருணனாகப் பூமியில் உதித்த சந்தனுவை மணந்து வசுக்களைப் புத்திரனாகப் பெற்றுத் தன்பதம் அடைந்தனள்.

2. தேவராட்டி வேடம்பூண்ட ஒருத்தி தன் மக்கள் உதயணன்பாற் கற்று கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்குவதாகத்தெரிந்த பிரச்சோதனன் அவன் அழைத்துப் பாராட்டி மறுநாட் சேனைகளுடன் கௌசாம்பிக்கு அனுப்ப எண்ணியது தெரிந்து அதனால் தன்னுடைய சூளுறவு தவறி விடுமே யென்றெண்ணிய யூகியின்கட்டளையால் தெய்வாவேசங் கொண்டவள்போல் உஞ்சை நகரின் வீதியில் வந்து ஆடிச் சனங்களை நோக்கி நீங்கள் நீர்விழவு செய்யத் தொடங்கிராயின் மறுபடியும் நளகிரியினிடத்தே புகுந்து ஊரை அழித்துவிடுவேன் என்று சொல்லி அச்சுறுத்தி நீர் விழாச் செய்யும்படி செய்வித்தவள் இவள். (பெ. கதை).

**பாகுகன்** — 1. வேநனுடைய வலதுதொடையைக் கடைந்ததால் பிறந்த கோரரூபமுடையவன், இவனை இருடிகள் நிஷிதா வென்றழைத்தனர்.

2. (சூ.) விருகன் குமரன், இவன் இராச்சியத்தைப் பகைவர் அபகரிக்கையில் அரசன் பாரியருடன் வநமடைந்து மரணமடைய உடனிறக்கவெண்ணிய பாரியரை அவுரவருஷி தடுத்தனர். இவர்களுள் முதல்வி சுமதி, கருப்பிணியென்றுணர்ந்த சகக்களத்தியர் அவளுக்கு நஞ்சூட்ட அவள் அவுரவர் அனுக்கிரகத்தால் உயிர்பெற்றுச் சகரனைப்பெற்றாள். (பாகவதம்.)

**பாதசுசி** — பதினொன்காம் மன்வந்தரத்து ருஷி.

**பாதுதாயன்**—பார்ப்பினி வைசியனைக்கூடிப் பெற்ற பிள்ளை.

**பாதுதை** — இமயபர்வதத்தில் பிறக்கும் ஓர் நதி. (பா - வன)

**பாதுபலி** — ருஷபத்தீர்த்தங் கரருக்குச் சுநந்தையிடம் பிறந்தவர்.

**பாதூரதன்** — பிரஞ்சயன் குமரன்.

**பாதுலிகன்** — சோமதத்தன் தந்தை, அசாங்கனம்சம், சந்தனுதம்பி, பிரதீபன் குமரன்.

**பாக்கிழார்** — குன்றத்தூரில் இருந்த வேளாண் குலத்தவர்.

**பாக்கு** — 1. இளம்பாக்கு, களிப்பாக்கு, மற்றது வெட்டை. இது பனை, தென்னை போன்ற புல்வகையினைச் சேர்ந்தது. குளிர்ந்த இடங்களில் பயிராவது, இது நெடுநாள் இருக்குமென்பர். இது பாளைவிட்டு மலர்ந்து குலைகளினிறையக் காய்கொண்டு பழுக்கும். ஒவ்வொரு குலையிலும் அதிக காய்களிருக்கும். ஒரு மரத்தில் 4, 5, 6 குலைகளுண்டாம். இதன் காய்கள் பழுத்தபின் தோல் நீக்கி வெற்றிலையும் சுண்ணம்பும் கலந்த நீரில் வேகவைத்துச் சாயப் பாக்குச் செய்வர்.

2. பாக்கு என்பது கமுகமரக் கொட்டை. இதனைப் பகுத்துப் பதஞ்செய்வதால் இதனைப் பாக்கென்பர் போலும். இச்சொல் பகு எனும் பகுதி இரட்டித்து முதனீண்ட ஆகுபெயர்.

3. மிகவும் பிஞ்சு, அதிகமுதிர்ச்சி மிகவும் புதிய பாக்கு, பச்சை நிறமானமேனிப் பாக்கு, சொக்குதல், ஆகிய இப்பாக்குகளில் ஒன்றகப்பட்டாலும் தின்னமல் ஒழிக்கக்கடவாய்.

**பாக்யவதி** — ஒரு வைசியன் பெண். இவள் தமக்கை புண்ணியவதி. இவ் விருவரும் கேதாரநாதர் விரதம் அநுட்டித்து அரசரை மணந்து செல்வத்திருந்தபோது பாக்யவதி செல்வத்தால் விரதத்தை மறந்து அரசனால் நீக்கப்பட்டுக் காடடைந்து புத்திரனைத் தமக்கையிடம் அனுப்பிச்செல்வம் பெற்றுவரக் கூறினள். இப் புத்திரன் செல்வம்பெற்று வரும்வழியில்

இரண்டு முறை கள்ளரால் பறிபட்டு அசரீரியால் கேதாரவிரதக் கேடென்று கூறப்பெற்றுப் பெரியதாயிடங்கூறி விரதம் அனுட்டிப்பித்து மீண்டும் செல்வம் முதலிய பெற்றுத் தாயிடம் அடைந்து செல்வத்துடன் இருந்தனன்.

**பாக்லீகம்** — ஒருதேசம் இந்து நதிக்கருகில் உள்ளது. இளன் ஆண்டது.

**பாக்லீகன்** — பாகுலிகனைக் காண்க.

**பாக்லீயர்** — பூதநந்தன் குமரர் பதின்மூவர்.

**பாங்கற்கூட்டம்** — இது மூன்றுநாள் பாங்கனால் கூடுங் கூட்டம். இது சார்தல், கேட்டல், சாற்றல், எதிர்மறை, நேர்தல், கூடல், பாங்கிற்கூடல் எனும் வகையினையும், தலைவன் பாங்கனைச் சார்தல், பாங்கன் தலைவனை யுற்றது வினுதல், தலைவன் உற்றதுரைத்தல், கற்றறிபாங்கன் கழறல், கிழவோன் கழற்றெதிர் மறுத்தல், கிழவோன் பழித்தல், கிழவோன் வேட்கை தாங்கற் கருமைசாற்றல், பாங்கன் தன் மனத்தழுங்கல், தலைவனேடழுங்கல், எவ்விடத்தெவ்வியற்றென்றல், அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றல், பாங்கனிறைவனைத் தேற்றல், குறிவழிச்சேறல், இறைவியைக் காண்டல், இகழ்ந்ததற் கிரங்கல், தலைவனை வியத்தல், தலைவியை வியத்தல், தலைவன் தனக்குத் தலைவிநிலைகூறல், தலைவன்சேறல், தலைவியைத் தாண்டல், கலவியின் மகிழ்தல், புகழ்தல், பாங்கியொடு வருகெனப் பகர்தல், பாங்கிற்கூட்டல்.

**பாங்கியிற்கூட்டம்** — இது, பாங்கி கூட்டுவிக்கத் தலைவன் கூடும் கூட்டம். இது இரந்து பின்னிற்றல், சேட்படை, மடற்கூற்று, மடல்விலக்கு, உடன்படல், மடற்கூற்றொழிதல், குறைநயப்பித்தல், நயத்தல், கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல் எனப் பன்னிருவகையினையும், தலைவனுட்கோள் சாற்றல், பாங்கி குலமுறைகிளத்தல், தலைவன் தலைவிதன்னையுயர்த்தல், பாங்கி யறியாள்போன்று வினுதல், இறைவனிறைவிதன்மை யியம்பல், பாங்கி தலைவியருமை சாற்றல், தலைவனின்றியமையாமை யியம்பல், பாங்கி நின்குறை நீயேசென்றுரையெனல், பாங்கியைத் தலைவன்பழித்தல், பாங்கி பேதமையூட்டல், காதலன்தலைவி மூதறிவுடைமைமொழிதல், பாங்கி முன்னுறுபுணர்ச்சி முறையுறக்கூறல், தன்னிலை தலைவன்சாற்றல், பாங்கி உலகியலுரைத்தல், தலைமகன் மறுத்தல், பாங்கியஞ்சி யச்சுறுத்தல், தலைவன் கையுறைபுகழ்தல், பாங்கி கையுறை மறுத்தல், ஆற்றுநெஞ்சினேடவன் புலத்தல், பாங்கியாற்றுவித்தகற்றல், இரந்து குறைபெறுது வருந்தியகிழவோன் மடலேபொருளெனமதித்தல், பாங்கிக்கு உலகின்மேல்வைத்துரைத்தல், அதனைத் தன் மேல்வைத்துச் சாற்றல், பாங்கி தலைமகளவயவத்தருமைசாற்றல், தலைமகன் தன்னைத்தானே புகழ்தல், பாங்கி அருளியல் கிளத்தல், கொண்டுநிலைகூறல், தலைவி யிளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல், தலைவன் தலைவி வருத்தியவண்ணமுரைத்தல், பாங்கி செவ்வியருமைசெப்பல், தலைவன் செவ்வியெளிமைசெப்பல், பாங்கியென்னை மறைத்தபின் எளிதெனநகுதல், அந்நகை பொருதவன் புலம்பல், பாங்கி தலைவனைத்தேற்றல், பாங்கி கையுறையேற்றல், கிழவோனுற்றல், இறைவன்றனக்கு குறைநேர்பாங்கி யிறைவிக்கு அவன்குறையுணர்த்தல், இறைவியறியாள் போன்று குறியாள்கூறல், பாங்கி யிறையோர்கண்டமை பகர்தல், பாங்கியைத் தலைவிமறைத்தல், பாங்கி யென்னைமறைப்பதென்னெனத்தழால், பாங்கி கையுறை புகழ்தல், தோழிகிழவோன் துயர்நிலை கிளத்தல், மறுத்தற்கருமைமாட்டல், தலைவன்குறிப்பு வேருக நெறிப்படக்கூறல், தோழி தலைவியைமுனிதல், தலைவி பாங்கியைமுனிதல், தலைவி கையுறையேற்றல், இறைவி கையுறையேற்றமை பாங்கி யிறைவற்குணர்த்தல், (பகற்குறி) பாங்கி தலைமகற்குக் குறியிடங்கூறல், பாங்கி குறியிடத்து இறைவியைக்கொண்டு சேறல், பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கல், இறைவி யிறையோனிடத் தெதிர்ப்படுதல், புணர்ச்சியின் மகிழ்தல், புகழ்தல், தலைமகளைத் தலைமகன்விடுத்தல், பாங்கி தலைவியைச்சார்ந்து கையுறை காட்டல், தலைவியைப் பாங்கிற்கூட்டல், நீங்கித் தலைவற் கோம்படைசாற்றல், உலகியல் மேம்படவிருந்து விலக்கல், விருந்திறைவிரும்பல், எனும் விரியினை யுடைத்து. (அகம்).

**பாங்கிமதியுடன்பாடு** — இது தலைவி வேறுபாட்டைக்கண்டு புணர்ச்சியுண்மை கண்டாராய்ந்து தன் மதியையுடம் படுத்தல். அது முன்னுறவுணர்தல், குறையுறவுணர்தல், இருவருமுன்வழியவன் வரவுணர்தல்,

என்பனவற்றையும், இதில் முன்னுறவுணர்தல், ஐயமுற்றோர்தல், ஐயந்தீர்தல், ஆராய்தல், இருவருமுள்வழியவன் வரவுணர்தல்-எதிர்மொழி கொடுத்தல், இறைவனை நகுதல், மதியினவாவர் மனக்கருத்துணர்தல் எனும் வகையினையும் தோற்றத்தாலாராய்தல், ஒழுக்கத் தாலையந்தீர்தல், சுனை நயப்புரைத்தல், சுனை வியந்துரைத்தல், தகையணங்குறுத்தல், நடுங்கநாட்டம், பெட்டவாயில் பெற்றிரவு வலியுறுத்தல், ஊர்வினுதல், பெயர் வினுதல், கெடுதி வினுதல், ஒழிந்ததுவினுதல், யாரேயிவர் மனத்தெண்ணம் யாதெனத்தேர்தல், எண்ணந்தெளிதல், தலைவன் கையுறையேந்தி வருதல், தலைவ னவ்வகைவினுதல், எதிர்மொழி கொடுத்தல், இறைவனை நகுதல், பாங்கிமதியின வரவர்மனக்கருத் துணர்தல், முதலிய விரியினையு முடைத்து.

**பாங்சுவனன்** — ராஜரிஷி. (பா.அநு.)

**பாசகர்ணன்** — சுமாலி குமாரனாகிய அரக்கன், இராவண சேநாபதி, அநுமனால் மாண்டவன்.

**பாசண்டசாத்தன்** — (கூசு) வகைத்தருக்கக் கோவையில் வல்லஜயனென்னுங் கடவுள். (சிலப்பதிகாரவுரை.)

**பாசண்டம்** — இது சமயங்களைத் திரட்டிச் சொன்ன நூல்.

**பாசமறுத்தான்றுறை**—சிதம்பரத்தில் குருத்துரோகத்தால் வருணனுக்குண்டான பாச மொழித்த துறை.

**பாசறைநிலை** — நிறைமதி போன்ற கொற்றக்குடையின் கீழேதாழ்வு சொல்லி வேந்தர் பலரும் மாற்சரியத்தை விடவும் அவ்விடத்தினின்றும் போகானாகி மறத்தினையுடைய் மன்னன் பாடி வீட்டிலே இருந்தது. (பு - வெ.)

**பாசன்** — இருடிபுத்திரன் தவத்தால் ஞானமடைந்தவன்.

2. திருதராட்டிரன் குமரன்.

**பாசி**—1. இது பசுமை நிறங்கொண்டிருக்குங் காரணத்தால் பாசி எனப் பெயர்பெற்றது. இதில் பலவகை உண்டு. நீர்ப்பாசி, நிலப்பாசி, கற்பாசி, கடற்பாசி முதலிய. முதலில் நீர்ப்பாசியில் உப்பு நீர்ப்பாசி, நன்னீர்ப்பாசி என இருவகையுண்டு. உப்புநீர்ப்பாசிகள் கடற்பாசிகளாம். இப்பாசிகள், கடலில் காடுகளைப் போலடர்ந்து கப்பல்கள் போகவழியிலாது கடலை நிலமெனக் கூறும்படி நெடுந்தூரம் அடர்ந்திருக்கின்றன. இவ்வகைப் பாசிகளை லேசோனியா (Lessonia) என்கின்றனர். இன்னும் கடல்களில் ஆயிரக்கணக்கான நீண்ட ஒருவகைப் பாசி உண்டு. அப்பாசி உஷ்ணப்பிரதேசத்தையடுத்த கடல்களில் உண்டென்பர் அதனை மேக்ராகிஸ்டிஸ் (Mycrocystis) என்பர். இன்றும் கடல்களில் மூங்கிலைப்போல் கிளைக்கும் கெல்ப் (Kelp) எனும் ஒருவகையும், உண்டு. இதில் உப்புண்டாக்கிப் பலவகைக்கு உபயோகிக்கின்றனர். ஐரோப்பாவின் வடகடலில் ஐஸ்லண்டை யடுத்துள்ள கடற்பாறைகளில் ஒருவகைப் பாசிகள் கற்றாழைபோல் வளருகின்றன. அவற்றை அந் நாட்டார் உணவாகக் கொள்கின்றனர். அன்றியும், கடல்வாழ் திமிங்கிலங்களும் உணவாகக் கொள்கின்றன. அவற்றை சீவிட் ஐசிங் கிளாஸ் என்பர். அப்பாசி ஐர்லாண்டை அடுத்த கடற்பாறைகளிலு முண்டென்பர். இவற்றை ஆகாரப்பொருளாகப் பிற நாடுகளுக்கும் அனுப்புகின்றனர். இன்னும் பாலுள்ள கள்ளிகளைப் போலச் சோதிப்பாசிகளும் உண்டென்பர். இவை இரவில் ஒரே சோதியாய்க் காணப்படுகின்றன என்பர். நன்னீர்ப்பாசி-இது, நல்ல நீருள்ள ஆறு, ஏரி, ஓடை, கசம், குளம், முதலிய நீர்நிலைகளில் உண்டாவது. இச்சாதியில் பலவகை உண்டு. அவை கொத்துப்பாசி, கொட்டைப்பாசி, குடற்பாசி, கோழைப்பாசி, அழுக்குப்பாசி, அழுக்கு நீக்கும்பாசி, சினைப்பாசி, இலைப்பாசி, கொடிப்பாசி, வேப்பம்பாசி, வேலம்பாசி, நாற்றப்பாசி, ஆற்றுப்பாசி, கடற்பாசி, கற்பாசி, கூந்தற்பாசி, பழம்பாசி, முட்டைப்பாசி, வழுக்குப்பாசி எனப் பலவகையுண்டு. நிலப்பாசி வகைகளில் பலவகை உண்டு. அவை, மண்ணிலும், கற்கள், பாறைகள், மரங்கள் முதலியவற்றில் உண்டாவன. இவை பாறைகளில் கண்ணுக் கெட்டாத சிறிய இலைகளைப் பெற்றுப் பச்சைப்பட்டு விரித்தாற்போல் வளருகின்றன. கற்பாசி மலைகளில் நீர் தங்குமிடங்களில் வளர்வன.

**பாசிநிலை** — பகைவருடைய வலிகெட அகழியிடத்துப் பூசலை மேற்கொண்டது. (பு. வெ.)

**பாசினி** — தருமன் குமரி. பருந்துகளையும், ஆந்தைகளையும் பெற்றனள்.

**பாசுபதசைவன்** — இம் மதத்தவர்க்குச் சிவன் விபூதியுஞ் சடைமுடியும் உடைய மூர்த்தியாய் அருள் செய்வன். இது அகச் சமயத்துள் ஒன்று.

**பாசுபதமூர்த்தி** — அருச்சுநனுக்குப் பாசுபதந்தரவும், ஆத்மாக்களுக்குப் பதியாந்தன்மையைத் தெரிவிக்கவும் எழுந்தருளிய சிவபிரான் திருக்கோலம்.

**பாசுபதம்** — இது சிவாஸ்திரம். சூர்யனைப் போலப் பிரகாசிப்பதும், எல்லாத் தேவர்களின் ஸாரமானதும், ஆயிரம் கைகளும், நாக்குகளும், வாய்களுமுடையதும், பயங்கரமான ஸர்ப்பரூப முடையதாய்க் கைகளில் பலவிதமான அஸ்திரசஸ்திரங்களைப் பெற்று மிருப்பது. நிகரற்றது. எல்லாப் பிராணிகளுக்கும் பயத்தைத் தருவது. (பாரதம் அநுசாசிகபர்வம்.)

**பாசுபதாஸ்திரம்**—1. இது ஐந்துமுகம் பத்துக்காதுகள் முகம் ஒவ்வொன்றிற்கு மும்மூன்றுநேத்ரம், பார்க்கக்கூடாத அதிபயங்கரமான பத்துக்கைகளும், மகாபலமும், கோரைப்பற்களுடைய அதிபயங்கரமும், அதியுக்ரமும், மகத்தாகிய த்வனியும், ஜயிக்கப்படாததாகியும், நாக்கையுதட்டிலே நக்கிக்கொண்டு கோடிசூர்யப் பிரகாசமாய் வலதுகைகளில் அக்னி, வேதாளம், சூலம், சத்தி, அங்குசம், இடதுகைகளில் சர்ப்பம், குந்தம், சக்ரம், கட்கம், முத்கரம், இவ்வித ஆயுதங்களை யுடையதாய்ச் சத்ருசங்காரியாய் ரோகங்களைப் போக்கடிப்பதாய் இருக்கும்.

2. சிவாஸ்திரம், அர்ச்சுனனால் அடையப்பட்டது. (பா - துரோ.)

**பாசுபதிமதம்** — இவன் நிமித்தகாரணன். இவன், முதலில் பரமாணு உபாதான காரணமாய் உலகத்தையுண்டாக்க ஆன்மாக்கள் மும்மலத்தில் கட்டுண்டு ஆகமத்தின்படி சிவபூசையால் கன்மநீங்கிப் பதியோடு ஒப்பது மோக்ஷம் என்பன். (தத்.)

**பாசுமதன்** — பஞ்சவன் புத்திரன், பித்ருக்களைக் காண்க.

**பாச்வரர்** — அறுபத்துநான்கு கணதேவர்.

**பாஞ்சசன்யம்** — 1. பஞ்சசனைக் காண்க.

2. ஒரு அக்னி.

**பாஞ்சராத்ரம்** — வைஷ்ணவாகமத்தில் ஒன்று. இதை அநுசரித்தவர் பாஞ்சராத்திரர். இது வைஷ்ண வாகமம், இது, விஷ்ணுவாலயப் பிரதிட்டைக்குரிய விதி, குண்டமண்டலஸ் தபனவிதி, அக்னிகார்ய விதி, துவஜாரோகண விதி, தீக்ஷை, ஆராதனம், நிருஹாராதனம், பூஜை, பஞ்சகௌவ்யம், மஹோற்சவம்,யாகசாலா விதி, ஜீர்ணோத்தாரணம், நாராயணபலி, முத்ராலக்ஷணம், துஸ்வப்னப் பிராயச்சித்தம், ஸ்ரீ வைகுண்டலக்ஷணம், மந்திரவிதி, யோகம், ஆசார்யலக்ஷணம், பிரதிமாலக்ஷணம், ஜலாதிவாஸனம், நயனோன்மீலனம் முதலிய விரிவாகக் கூறும். இதில் பின்சொல்லும் சம்மிதைகளல்லாமல் காபிஞ்சலசம்மிதை, காச்யபசம்மிதை விரிவாகப் பலவிஷயங்கள் கூறும். இது பவித்ரோச்சவாதிவிதி முதலியவற்றை விரிவாகக் கூறுவது. இது ஐந்து நாளையில் திருமால் பிரமனுக்கு உபதேசிக்கப் பிரமதேவர் நாரதருக்குபதேசிக்க நாரதர் மற்றமுனிவர்க்கு உபதேசித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இது நூற்றெட்டுச் சம்மிதைகளாக வகுக்கப்பட்டிருக்கிறது. அவை, 1-பாத்மம், 2-பாத்மோத்பவம், 3-மாயாவைபவம், 4 நளகூபரம், 5-திரைலோக்யமோஹனம், 6-விஷ்ணுதிலகம், 7-பரமாஹ்வயம், 8-நாரதீயம், 9-தானதீயம், 10 வாசிஷ்டம், 11 - பௌஷ்கராஹ்வயம், 12 - ஸனத்குமாரம், 13 - ஸநகம், 14 - ஸத்யார்க்யம், 15-விச்வசம்மிதை, 16-சநகாந்தம், 17-மகீப்ரச்னம், 18-ஸ்ரீ பிரச்னம், 19-புருஷோத்தமன், 20 - மாஹேந்திரசம்மிதை 21-பஞ்சபிரச்னக்யம், 22 - தத்வசாகரம், 23-வாகீசம், 24-சாத்வதம், 25-தேசோத்ரவிணம், 26 ஸ்ரீகராஹ்வயம், 27-சாம்பர்த்தம், 28-விஷ்ணுசத்பாவம், 29-சித்தாந்தம் 30-விஷ்ணுபூர்வகம், 31-விஷ்ணுதத்வம், 32 - கௌமாரம், 33 - ரஹஸ்யம், விஷ்ணுபூர்வகம், 34 - விஷ்ணுவைபாவிகம், 35 - சௌரம், 36-சௌம்யம், 37 - ஈச்வரசம்மிதை, 38 - அநந்தாக்யம், பாகவதம், 39 - ஜயாக்யம் மூலசம்மிதை, 40 - புஷ்டிதந்த்ரம், 41-சௌநகீயம், 42-மாரீசம், 43-தக்ஷசம்மிதை, 44-ஔபேந்திரம், 45-யோகஹ்ருதயம், 46-ஹாரீதம், 47-பாரமேச்வரம், 48-ஆத்ரேயம், 49-ஐந்திரம், 50 - விஷ்வக்சேநம் ஔசனசாஹ்வயம், 51 - வைஹாயசம், 52-வைஹகேந்திரம், 53-பார்க்கவம், 54 பரபூருஷம், 55-யாஞ்ஞவற்கியம், 56 - கௌதமீயம், 57 - பௌலஸ்தியம் சாகலாஹ்வயம், 58 ஞானார்ணவம், 59 - ஜாமதக்னியம், 60-யாம்யம் நாராயணத்மகம், 61-பாராசர்யம், 62 ஜாபாலம், 63-காபிலம், 64-

வாமனுத்வயம், 65-ஜயோகரம், 66-பிரா கஸ்பத்யம், 67 - ஜைமினம், வாமனுஹ்வ யம், 68 - காத்யாயனீயம், 69 - வால்மீகம், 70 - ஔபகாயனசம்மிதை, 71 - இரண்ய கர்ப்பம், 72 - ஆகஸ்தியம், 73 - காருஷம், 74-போதாயனுஹ்வயம், 75-பாரத்வாஜம், 76-நாரசிம்மம், 77-கார்க்கியம், 78-உத்தர பூர்வகம், 79-சாதாதபம், 80 - ஆங்கீரசம், 81-காச்யபம், 82-பைங்களாஹ்வயம், 83 - திரைலோக்யவிஜயம், 84 - யோகம், 85 - நாரதீயம், 86-வாருணம், 87-கிருஷ்ணம், 88-ஆம்பரம், 89 - ஆக்னேயம், 90 மார்க் கண்டேய சங்கிரகம், 91 - மகாசநத்குமா ரக்கியம், 92-வியாசாக்கியம், விஷ்ணுசம் மிதை, 93 - அகிர்புத்னியசம்மிசை, 94 - பிரம்மராகவசம்மிதை, 95 - மார்க்கண்டே யம், 96 - பார்வதம், 97 - பிரம்மநாரதசம் மிதை, 98-சுக்ரருத்ரசம்மிதை, 99-உமாம கேச்வரசம்மிதை, 100 - தத்தாத்ரேயம், 101 - சர்வாக்யம், 102-வாராஹம், 103 - மஹிராஹ்வயம், 104 - சங்கர்ஷணக்யம், 105 - பிரத்தியும்னம், 106 - வாமனம், 107-கல்கிராகவம், 108-பிராசேதசாக்யம் முதலிய.

**பாஞ்சலன்** — ஆருணியென்னும் பெயருள்ள ரிஷி. (பா.ஆதி.)

**பாஞ்சாலன்** — 1. சத்திக்கு ஓர்படன்.

2. மதனநூல் ஆசாரியன்.

3. அரம்மியாசுவனைக் காண்க.

4. பாஞ்சாலதேசம் ஆண்டவன். துரு பதன்; அருச்சுனனால் கட்டுண்டவன். துரி யோதனனைச் சோமகேயாதிகளால் அடிப் பித்தவன். உபயாசனுசன் முதலிய முனி வரால் யாகாக்னியில் திட்டத்துய்ம்மனை யும் திரௌபதியையும் ஒருவில்லையும் பெற்றவன். பாரதவீரரில் ஒருவன். மருத் துவர் அம்சம்.

**பாஞ்சாலதேயம்** — இது மிக்க நீர்வளமு டையது. ஆருணி யரசனுடைய தேயம். (பெருங்கதை).

**பாஞ்சாலமுனிவர்** — இவர் வாமதேவரால் உபதேசிக்கப் பட்டவர்.

**பாஞ்சாலம்** — இந்திரபிரஸ்தத்திற்குக கிழக் கில் உள்ள தேசம். இது வடபாஞ்சாலம், என்றும், தென் பாஞ்சாலம் என்று பிரிக் கப்பட்டிருக்கின்றது. முதலாவதற்கு இராஜதானிஹாஹிச்சத்திரம், இது துரோ ணரால் அபகரிக்கப்பட்டது. இரண்டா வதற்கு இராஜதானி காம்பிலி துரவபதி யின் தந்தையாகிய துருபதனல் ஆளப்பட் டது. Rohilkhand. (பா. பீஷ்மபர்வம்.)

**பாடகச்சீறடி பணிந்தபினிரங்கல்** — குவடு நீண்ட மலையினை யுடையவன் குவித்தகை யுடனே பாடகமணிந்த சிற்றடியிலே வண ங்கிய பின்பு நெஞ்சு நெகிழ்ந்தது. (பு. வெ. பெருந்திணை).

**பாடங்கேட்போர் கேட்கத்தகாதோர்** — தன்மகன், ஆசிரியன்மகன், அரசன்மகன், அதிகப்பொருள் தருவோன், வழிபடு வோன் சொல்வதை விரைவிற் கிரகிப் போன் ஆகிய இவர்களுக்கு ஆசிரியன் பாடம் கூறலாம். கள்ளுண்போன், சோம் பேறி, மானி, காமி, கள்வன், பிணியன், ஏழை, பிணக்கன், சினத்தன், துயில் வோன், மந்தன், நூலின்விரிவிற்கஞ்சு வோன், இரக்கமிலான், பாவி பொய் கூறு வானுக்குப் பாடங்கூறலாகாது.

**பாடலனார்**—ஒரு தமிழ்நூல் ஆசிரியர், இவர் சொன்ன சூத்திரம் காரிகையின் ஒரு இடத்தில் உதகரித் திருக்கிறது.

**பாடலாவதி** — 1. இருக்ஷபர்வதத்தில் உற் பத்தியாகிப் பாயும் நதி.

2. அநுபதேசத்தின் சமிபத்தில் பாரி யாத்தரிகிரியில் தோன்றிச் சர்மன் நதியில் கலக்கும் உபநதி The Kali-scind a branch of the Cambol.

**பாடலிபுத்திரம்** — இதற்குக் (குசுமபுரி, புஷ்பபுரி) எனவும் பெயர். இது தற்கா லம் பாட்ன கங்கைக் கரைக்கண் இருக்கி றது. மகததேசாதிபதியாகிய உதயாச்வ னல் நிருமிக்கப்பட்டது. இது பௌத்த ரும் வைதிகசமயத்தாரும் இருந்த இட மென்று சீனயாத்ரிகன் ஹியூன்த்சாங் கூறி யிருக்கின்றனன்.

**பாடலீபுரம்** — இது, வடக்கே சோணை நதிக்கு வடபுறத்திலும், கங்கை நதிக்குச் சிறிதுதூரத்திலும் இருந்த பட்டணம். இது (க) மைல் நீளமும், ஒன்றரைமைல் அகல மும், (சுஈ) வாயில்களும், (டுஎச) கோபு ரங்களும் பெற்றிருந்தது. இது, நந்தர், மௌரியர், ஆந்திரர் முதலியோரது பிர பல ஆட்சித்தலமா யிருந்தது. இது மௌ ரியவம்ச முதல்வனாகிய சந்திரகுப்தனும் அவன் பேரன் அசோகசக்ரவர்த்தியும் ஆண்டது. இதில் இருந்த அரச அரண் மனை (ச) ஆம் நூற்றாண்டுவரை அழியா திருந்தது என சீனயாத்திரிகனாகிய பா-ஹீ யான் என்பவன் எழுதிய சரித்திரத்தால்

தெரிகிறது. இது பிற்காலத்துக் கங்கைப் பெருக்காலழிந்தது. இதன் அழிவை (எ) ஆம் நூற்றாண்டின் சீனதேசத்திலிருந்து யாத்திரைசெய்த ஹ்யூங்-த்ஸாங் கூறியிருக்கிறார்.

**பாடல்** — 1. என்பது இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம், உச்சம் எனும் எட்டும் கொண்டது.

2. பாடாலிபுத்திர நகரம். இதிலுள்ள பொன்வினைஞர் பண்டைக்காலத்தில் மிக்க பெயர் பெற்று விளங்கினார்கள்.

**பாடாணவாதசைவன்** — இவன் ஆன்மா முத்தியிலும் சகசமலம் நீங்காது கல்போற் கிடக்கும் என்பன்.

**பாடாண்** — இசையும் வலியும் சீர்தூக்காக் கொடையும் தண்ணளியும் என்று சொல்லுமிவற்றைத் தெரிந்து சொல்லியது. (பு. வெ.)

**பாடிகாப்பான்** — இவன் சர்வரக்ஷன் என்பவன். இவன் தன் மனைவியின் ஆபரணங்களை இரவலாக வாங்கி அணிந்து கொண்டு வியபசாரத் தொழிலால் அம்பலத்தில் வந்த தன்தாயை வெருட்டித் தீங்கிழைத்து அவளது ஆபரணங்களைப் பறித்துச் சென்று தன் மனைவிக்குக் கொடுப்ப அவள் ஊகித்தறிந்து உண்மைகண்டு வெளிப்படுத்த அவ்விருவரும் தண்டிக்கப்பட்டனர். (சைநகதை).

**பாடை** — பிணந்தூக்க எட்டடி நீளமாய் இரண்டு கொம்புகளமைத்துப் பிணத்தின் அகலத்திற்குத் தக்கபடி குறுக்குப் புள்ளமைத்து வணிபோல் கட்டப்பட்ட பிணப்படுக்கை.

**பாட்டகம்** — சத்தியூதியென்பவனது நகரம். (பெ. கதை.)

**பாட்டமதம்** — இம்மதத்தாபகர் பாட்டர் என்பவர், இம்மத சித்தாந்தம், ஆத்மா க்ஷணிகரூபமன்று, ஆயினும் ஸ்திரச்வரூபமான ஆத்மா சடமாகவும் சித்தாகவும் இருக்கிறான்; எவ்வாறெனின்? நித்திரையினின்று எழுந்தவன் நான் மரம்போல் தூங்கினேன் எனவும், விழித்துக் கொண்டவனுக்கு அறிவு உதித்தலின் சித்ஸ்வரூபமென்றுங் கூறப்படுகிறான். சுஷுப்தியில் ஆத்மஸ்வரூபம் தவிர வேறொன்றும் தோன்றா திருத்தலின் ஸ்மரணத்திற்குக் காரணம் சுஷுப்தியின் ஞானமே ஆதலால் இதுவே ஆத்மஸ்வரூபம் என்பன். இதனால் ஆத்மா பிரகாசனாகவும் அப்பிரகாசனாகவு மிருக்கிறான். எவ்வாறெனின் சுஷுப்தியில் சேதனனுடைய ஆபாஸ சகித அஞ்ஞான நந்தமயகோசம் ஆத்மா என்று கூறப்படுகிறது. ஆதலால் ஆநந்தமயகோசமே ஆத்மா என்பது இம்மதம். இம்மதத் தாபகருக்கு வார்த்திககாரர் எனவும் ஒரு பெயர். (தத்துவநிஜாநு).

**பாட்சர்** — இது எலி யினத்தது. ஆசாம், அரகான் முதலிய மலைப்ரதேசங்களில் பூமியில் வளைதோண்டிக்கொண்டு வசிக்கிறது. இது, சாகபக்ஷணி. இதன் தேகத்திலழுத்தமான மயிருண்டு. இது கோபங்கொள்ளும்போது மயிரை முள்ளம் பன்றிபோல் சிலிர்த்துக்கொண்டு உருமுகிறது. இது நாயினளவாக இருக்கிறது. மரமேறித் தேன்கூடுகளை யுறிஞ்சித்தின்னும். இது மாரிக்காலத்திற்கென்று ஆகாரந்தேடிவைத்துக் கொள்ளுகிறது. இவ்வினத்தில் மற்றொருவகை ஆப்ரிகா மலைப்பிரதேசங்களிலுண்டு. அவற்றிற்கு ராடில் என்றுபெயர். இது ($1\frac{1}{4}$) அடி நீளம் (3) அடி உயரம். பூமியில் வளைதோண்டி வசிப்பது. சாகபக்ஷணி.

**பாட்டாசாரியன்மதம்** — இவன் வேதம் நித்தியமாய் அநாதியாய் முதல் ஈறு இன்றியிருப்பது, இது ஒருவராற் கற்பிக்கப்பட்டது அன்று என்பன். இதை அநுட்டித்து இதில் உள்ள யாகாதிகர்மங்களைச் செய்வது முத்தியென்பன்.

**பாட்டியல்** — இது வச்சணந்தி, குணவீர பண்டிதன், இந்திரகாளி முதலியவர்களாற் செய்யப்பட்ட செய்யுளிலக்கணம்.

**பாட்டியன்மரபுடையார்** — இவர் யாப்பருங்கலவிருத்தியுள் கூறப்பட்ட தொல்லாசிரியர்களில் ஒருவர். இவர் செய்யுளிலக்கணஞ் செய்தவரா யிருக்கலாம். பெயர் விளங்கவில்லை.

**பாணபத்திரர்** — இவர் வரகுணபாண்டியன் சபையிலிருந்த யாழ்வல்ல பாணர். இவர் காலத்துப் பாண்டியன் சபையில் தன் யாழ்வல்லமையைக் காட்டிப் பரிசுபெற ஏமநாதன் என்னும் வடநாட்டான் ஒருவன் வந்து செருக்குற்றிருத்தலைப் பாண்டியன்கண்டு பத்திரரை அழைத்து ஏமநாதனுடன் பாடவல்லீரோ என்றனன். பாணர் சொக்கர் அருளால் பாடவல்லேன் என்று சொக்கரைத் துதிக்கச் சென்றனர். சொக்கர் ஏமநாதன் வீறு அடங்க ஓர்விறகு விற்பவராய் விறகுகொண்டு யாழேந்தி ஏமநா

தன் வீட்டப்புறத்தில் விறகையிறக்கித் தாம் ஒருபுறத்தில் எழுந்தருளி யாழினை மீட்டிச் சாதாரிராகம் பாடினர். வீட்டில் இருந்த ஏமநாதன் புறத்தில் வந்து கேட்டு மனம் உருகி நீ யார் என்றனன். விறகு விற்பவர் நான் பாணபத்திரர் மாணுக்கருள் ஒருவன். என்னை அவர் கிழவன் என்று நீக்க நான் விறகு வெட்டிச் சீவிக்கிறேன் என்றனர். ஏமநாதன் இந்த விறகுதலையன் பாட்டு இப்படியிருக்குமாயின் பாணபத்திரன் பரட்டு எப்படிப்பட்டதோவென்று அஞ்சிப் பாதி இரவில் ஊரைவிட்டு ஓடினன். இதனைச் சொக்கர் பாணருக்கு அறிவித்துத் திருக்கோயில் எழுந்தருளினர். பின்பு பாணபத்திரர் இதனை அரசனுக்கு அறிவிக்க அரசன் சொக்கரைப் பாடுக என்றபடி அரசனிடஞ் செல்லாது சிவமூர்த்தியைச் சந்நிதிக்கு எதிரில் இருந்து பாடி வந்தனர். இவர் அரசனிடஞ் செல்லாமையால் பொருளின்றி வறுமையடைந்து வருந்துவதைச் சொக்கர் அறிந்து அரசன் பொக்கிஷத்தில் இருந்து பல பணிகளையும், பொன்களையும் நாடோறும் கொடுத்துவருகையில் பாணர் இவைகளைப் பெற்று உருக்கித் தாமும் அநுபவித்துத் தன்னைச் சார்ந்தவர்க்கும் கொடுத்து வந்தனர். இவ்வகை கொடுத்தல் சிலநாள் நிற்கப் பத்திரர் வறுமையால் உடல்வாடி நித்திரை புரிந்தனர். அப்போது சொக்கர் சித்தமூர்த்திகளாய்க் கனவில் தரிசனந் தந்து இனி அரசன்காணில் காவலாளரைத் தண்டிப்பான் ஆதலால் நாம் உன்வறுமை நீங்கும்படி சேரனுக்குத் திருமுகங்கொடுக்கின்றோம், கொண்டுசென்று காட்டி வறுமை நீங்குக என்று "மதிமலிபுரிசை மாடக்கூடற், பதிமிசை நிலவும் பானிற வரிச்சிறை, அன்னம்பயில் பொழிலால வாயின், மன்னியசிவன்யான் மொழிதரு மாற்றம், பருவக்கொண்மூ உப்படியெனப்பாவலர்க்கு, உரிமையினுரிமையினுதவி யொளிதிகழ், குருமாமதிபுரை குலவிய குடைக்கீழ்ச், செருமாவுகைக்குஞ் சேரலன்காண்க, பண்பால்யாழ்வல பாணபத்திரன், தன்போலென் பாலன் பன்றன் பால், காண்பது கருதிப் போந்தனன்மாண் பொருள்கொடுத்து வரவிடுப்பதுவே" இத் திருப்பாசுரமளித்துத் திருக்கோயில் எழுந்தருளினர். பாணர்விழித்துத் திருமுகத்தை எதிரிற்கண்டு சிரமேற்கொண்டு சேரநாடு சென்றனர். இதற்கு முன்பே சிவமூர்த்தி பாணரது வரவைச் சேரருக்கு அறிவித்ததால் சேரர் பாணரை எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர். பின் சேரமான் பெருமாணுயனுர், உபசரிக்கப் பாணபத்திரர் அவ்விடமிருந்து மதுரைக்கு வரவேண்டுமென நினைக்கையில் சேரமான் பெருமாணுயனுர் அவரது அவாவளவு பொன்கொடுத்து வழிவிட்டனர். இவ்வகை மதுரைக்கு மீண்ட பாணபத்திரர் நாடோறும் அர்த்தசாமவரையில் கடவுளைப்பாடும் நியமம்பூண்டு வருநாளில் இவரது அன்பைப் பலர்க்கும் சிவமூர்த்தி தெரிவிக்க வேண்டிப் பெருமழை வருஷிக்கச் செய்தனர். பாணர் நந்திதேவருக்குப் பின்னிருந்து பாடுகையில் மழையின் குளிர்ச்சியாலும் அடியில் வெள்ளம் ஓடுதலாலும் கைகால் முதலிய விறைத்தும் அசையாது பாடுதல் கண்ட சொக்கர் பலகையொன்று அருளி அதின் மீதிருந்துபாடி மழைவிட வீடுசென்றனர். விடிந்தபின் பாண்டியன் கேட்டுப் பத்திரரை அழைத்து முன்போலவே வரிசை நடத்திவந்தனன். திருநீலகண்டயாழ்ப்பாணநாயனுர் எனவும் இவருக்குப் பெயர். இவர் திருஞானசம்பந்தமூர்த்திகள் காலத்து இருந்தவராகவும், சேரமான் காலத்தவராகவும் தெரிகிறது.

**பாணபத்தன்** — பாணர் குலத்தவனுகிய ஒரு சிவயோகி, பட்டினத் தடிகள் காலத்தவன்.

**பாணம்** — நாடக விகற்பத்தொன்று. தூர்த்தனுதல், தலைவனுதல் தானுஞ்சொல்லி நின்ருர் சொல்லையு மநுவதித்து சொல்லிய ஐவகைச் சந்தியுள்ளும் கடைக்கண் சந்தியங்கம் ஒன்ருவது. (வீரசோ.)

**பாணர்** — 1. வைசியன் பிராமணப் பெண்ணைப் புணரப்பிறந்தவர்.

2. தையற்காரர் - அங்கம் வெட்டின திருவிளையாடல் நடத்துவோர் இவர்களே. (திருவி)

3. இசைப்பாணர் யாழ்ப்பாணர், மண்டைப்பாணர் எனப் பலர். (நச்சர்.)

4. இவர்கள் தற்காலம் திருநெல்வேலி முதலிய தமிழ் நாட்டில் தையல்தைத்து ஜீவிக்கின்றனர். முற்காலத்து இவர்கள் அரசர்களைப் பாடிப்பரிசு பெற்று வாழ்ந்த அறிவுடையார். தற்காலத்திலும் சிலர் கூத்துமுதலிய ஆடி ஜீவிக்கின்றனர். இக்குலத்தில் புகழ்பெற்ற சிவனடியவர்களு மிருந்

தனர். அவர்கள் பாணபத்திரர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் மற்றுஞ் சிலர் குடைமுதலிய செய்து ஜீவிக்கின்றனர்.

**பாணலிங்கம்** — பாணாசுரனைக் காண்க.

**பாணவித்யாதரன்** — பாணவம்சத்திற் பிறந்த ஒரு அரசன். இவன் ஜகதேகமல்லனுடைய புத்ரன்.

**பாணன்** — 1. ஓர் காந்தருவன். பிற்பிறப்பில் கீசகனாய்ப் பிறந்தான்.

2. பலிச்சக்கிரவர்த்தியின் குமரன்.

3. சிவகணத்தவரில் ஒருவன்.

4. சமீகருக்குச் சுதாமினியிடம் உதித்த குமரன்.

5. (சூர்.) புரஞ்ஜயன் குமரன். இவன் குமரன் அநரண்யன்.

6. வசுதேவன் தம்பியாகிய அநீகன் குமரன்.

**பாணாசுரன்** — 1. பலியின் குமரன். இவன்பட்டணம் சோணிதபுரம். இவன் கம்சனுக்கு நண்பன். இவன் சிவபூசாபலத்தால் அகண்டைச்வர்யமும் ஆயிரங்கைகளும் பெற்றுச் சிவமூர்த்தியை நோக்கித் தேவரீர் தவிர என்னோடு யுத்தம் புரியவல்லார் இல்லையாதலின் என்னோடு யுத்தம் புரிவாரைத் தெரிவிக்கஎன வேண்டினன். ஆவதுணர்ந்த சிவமூர்த்தி அசுரனை நோக்கி உன் கோட்டையின் துவசம் எக்காலத்துத் துணிபட்டு விழுகிறதோ அக்காலத்தில் உன்னிலும் வலியன் உன் வலியை அடக்குவன் என்று மறைந்தனர். இதனை யறிந்த பாணாசுரன் அரண்மனைக்குச் சென்று சுகத்துடன் சிலநாள் இருந்து உஷையென்னும் குமரியைப் பெற்றுவளர்த்து வந்தனன். அந்த உஷை வளர்ந்து பருவமடைந்து கனவில் அநிருத்தனைக் கண்டு காமுற்றுத் தன் தோழியால் அவனை வருவித்துக் களவிற் புணர்ந்து வருகையில் பாணாசுரன் அறிந்து அநிருத்தனை விலங்கிட்டனன். இதனை நாரதரால் அறிந்த கிருஷ்ணமூர்த்தி வாணாசுரன்மீது யுத்தத்திற்குச் சென்று சிவபூசை செய்த இரண்டு கரங்கள் தவிர மற்றக் கரங்களை யறுத்தனர். பின் இவன் தாய் கொட்டரி புத்திர் பிக்ஷைதரக் கண்ணனைவேண்ட அவ்வகை கண்ணன் அளித்தனர். பின்பு பாணாசுரன் அநிருத்தனையும் உஷையையும் கண்ணனிடம் சேர்த்து அபராதக்ஷமை வேண்டினன். இவனே கடைசியில் சிவபூசாபலத்தால் திருக்கைலையடைந்து குடமுழா முழக்கும் திருப்பணிசெய்து வருவானாயினன். தென்திசை மலைகளில் பொருள் நிரப்பி வைத்தவன். இவன் சிவபூசை செய்து இறைவன் எதிர்ப்பட நாடோறும் ஆயிரம் சிவலிங்கம் பூசிக்க வரம் பெற்றவன். இவன் பூசித்த லிங்கம் பாணலிங்கம்.

2. இவன் பல சாஸ்திரங்களைப் பெரியாரிடம் கேட்டு வருகையில் சிவலிங்க மகிமையையும் சிவபூஜா விசேஷங்களையுங் கேட்டுச் சிவபூசைசெய்ய விரும்பிச் சிவபெருமானை நோக்கிப் பலநாள் தவஞ்செய்தனன். இவன் தவத்திற் குவந்த சிவபெருமான் நீ வேண்டிய தென்னவென எனக்கு ஆயிரஞ் சிரமும் இரண்டாயிரங் கைகளும் பதினாயிரம் லோக ஆட்சியும் பதினான்கு கோடி சிவலிங்கங்களும் வேண்டும் என்றனன். அவ்வாறே அவனுக்கு அநுக்ரகித்து பிரமத கணங்களைக்கொண்டு கங்கைக்கரையினின்று சிவலிங்கங்களை வருவித்துக் கொடுத்துச் சிவபூஜை செய்யும்படி யேவி மறைந்தனர். அவ்வாறே வாணாசுரன் சிவபூஜைசெய்து பல கோடிகாலம் எல்லாப் போகங்களையும் அநுபவித்துப் பதினான்கு கோடிச் சிவலிங்கங்களை ஸ்ரீசைலம், கங்கை, நீலகண்டம், நேபாளம், யமுனை, மற்றும் புண்ணிய நதிகள், கன்யாகுமரி, முதலியபுண்யத்தலங்களி லமைத்தனன். அந்த லிங்கங்களே, தற்காலம் காணப்படுவன. அவற்றுள் உத்தமமானவை, ரேகையாகிய கீறலும், பிந்துவாகிய வட்டமும், களங்கமாகிய கறுப்பும் மிருகனமும், பலவர்ணங்களாகிய சித்திரமும், உச்சிக்குழியும், பருக்கைக் கல்லும், பக்கத்தழும்பும், வெடிப்பும், இன்றி, லிங்கத்திற் கமைந்த பீடத்துடன் உருண்டையாய், கருநாவற்பழம் போல் கறுப்பாய், பார்வையைக் கவரத்தக்கதாயிருப்பது உசிதமானதாகும். இவ்வகை லிங்கங்கள் இவனால் பூசிக்கப்பட்டவை. (சைவபூஷணம்.)

**பாணாற்றுப்படை** — மிகவுயர்ந்த மலைவழியிடத்துப்பாணனைவழியிலேசெலுத்தியது. (பு. வெ. பாடாண்.)

**பாணி** — என்பது கொட்டும், அசைவும், தூக்கும் அளவும் ஒட்டப் புணர்ப்பது.

**பாணினி** — ஒரு மகருஷி, இவர்தமது உள்ளத்தில் உலகமுய்ய வியாகரணம் அருளிச் செய்யவேண்டிச் சிவமூர்த்தியைத் தரிசித்து நிற்கையில், சிவமூர்த்தி இவரது

மனஎண்ணமறிந்து தமது திருக்கரத்தில் இருந்த நாதமயமாகியடமருகத்தைச்சிறிது அசைத்தனர். அதிலிருந்து எழுத்துக்கள் உண்டாயின. அவ்வெழுத்துக்களை அருகிருந்த இவர், பன்னிரண்டு சூத்திரமாக்கினர். இதற்குப் பதஞ்சலி முனிவர் பாஷ்யஞ் செய்தனர்.

**பாணினீயம்** — பாணினி செய்த இலக்கணம்.

**பாண்டரங்கண்ணனுர்** — சோழன் இராசசூயம்வேட்ட பெருநற்கிள்ளியைப் பாடியவர். (புற. நா.)

**பாண்டரங்கம்**—இது வானோராகிய தேரில் பிரமன் காணப் பாரதி வடிவாகிய இறைவன் வெண்ணீறணிந்தாடிய கூத்து.

**பாண்டாயனி** — ஒரு ரிஷி. (பா. சபா.)

**பாண்டவர்** — பாண்டுமகாராஜன் புத்திரர் பாண்டுவிற்குக் குந்தி, மாத்ரியென இருவர் தேவியர். இவர்களில் குந்திக்குத் தருமன் பீமன், அருச்சுநன் என மூவர் குமாரரும், மாத்ரியிடம் நகுலனும் சகாதேவனும் பிறந்தனர். இவர்கள் சரித்திரத்தைப் பாரதத்திற் காண்க.

**பாண்டிநாடு** — "வெள்ளாறது வடக்காமேற்குப் பெருவழியாம், தெள்ளார் புனற்கன்னி தெற்காகும் — உள்ளார, ஆண்டகடல்கிழக் காமைம்பத் தறுகாதம், பாண்டிநாட் டெல்லைப்பதி" இவற்றை எல்லையாகக்கொண்ட நாடு.

The Modern districts of Tinnevelly and Madura in South India. Its Capitals at different periods were Uragapura now called Negapatam and Madura.

**பாண்டித்துரைத்தேவர்**—இவர் இராமநாதபுரத்தைச் சேர்ந்த பாலவநத்தம் ஜமீன்தாரர். இலக்கிய இலக்கணங்களுணர்ந்தவர். தமிழபிமானி. மதுரையில்தற்காலம் தாபித்துள்ள தமிழ்ச் சங்கம் கண்டவர். வித்வான்களை யாதரித்து அவர்களைத் தமிழில் ஊக்கமுண்டாக்குபவர். தக்க பரிசுமளித்தவர். சைவப் பற்றுள்ளவர். நானியற்றிய அபிதான சிந்தாமணியை அச்சேற்றிப் பிரசுரஞ் செய்வித்தவர். இவர் செய்த நூல்கள் சிவஞானசுவாமிகள் இரட்டைமணி மாலை, இராஜராஜேஸ்வரி பதிகம், சைவ மஞ்சரித்திரட்டு, பன்னூற்றிரட்டு முதலிய.

**பாண்டிப்பெருமாள்** — இவர் ஸ்ரீசிவஞானபோதத்திற்குத் தெளிவான ஓர் உரையெழுதிய ஆசிரியர். இவரது காலம் மரபு முதலிய விளங்கவில்லை.

**பாண்டியமண்டலாதீசுவரர்** — ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளின் விருதாவளித் திருநாமங்களுள் ஒன்று. (திருவிளை)

**பாண்டியர்** — 1. ஜடாவர்மன் குலசேகரன்- 1190 - 1214.

2. மாரவர்மன் சுந்தரபாண்டியன் I — 1216 - 35.

3. மாரவர்மன் சுந்தரபாண்டியன் II— 1238 - 57.

4. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் I — 1251 - 61.

5. வீரபாண்டியன் — 1252 - 67.

6. மாரவர்மன் குலசேகரன் I—1268- 1308.

7. ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் II— 1275 - 90.

8. மாரவர்மன் குலசேகரன்II—1314- 21.

9. மாரவர்மன் பராக்ரம பாண்டியன்— 1334 - 52.

10. ஜடாவர்மன் பராக்ரம பாண்டியன்-- 1357 - 72.

11. ஜடிலவர்மன் பராக்ரம பாண்டியன் அரிகேசரி தேவன் — 1422 - 61.

12. ஜடிலவர்மன் பராக்ரம பாண்டியன் குலசேகரன் — 1479 - 99.

13. ஜடிலவர்மன்ஸ்ரீவல்லபன்-1534-37.

14. மாரவர்மன் சுந்தரபாண்டியன் III-- 1531 - 55.

15. ஜடிலவர்மன் ஸ்ரீவகாப அதிவீரராமன் - 1562 - 67.

**பாண்டியனகழ்வீதி** — பள்ளத்தெரு. மாசிவீதி ஆவணிமூல வீதிக்கு இடையே கீழ்பாலுள்ளது. (திருவிளை).

**பாண்டியன்** — 1. துஷ்யந்தன் பேரனாகிய ஆசரிதன் குமரன் என்பர். இவன் முதலாகப் பாண்டியவம்சம் பரவிற்று என்பர். சிலர், இதுவன்றி இந்திரன் பழிபெற்றுச் சிவபூசையாற் பழிநீங்கிச் சிவமூர்த்தியின் எதிரில் நிற்கையில் சிவமூர்த்தி இந்திரனை நோக்கி இக்கடம்பவனத்தைக் கெடுத்து நாடாக்கி நீ ஆள்க. உன்னிடம் மலையத்துவசன் என ஒரு குமரன் பிறப்பன். அவன் யாகத்தில் உமை குமரியாகத் தோற்றுவள். அவளை நாம் திருமணம் புணர்வோம் என்

றனர். அவ்வகை இந்திரன் குலசேகர பாண்டியனாகப் பிறந்து அரசாண்டனன். அதுமுதல் இந்த வம்சம் பெருகியது. இவர்கள் மதுரை திருநெல்வேலி முதலிய வற்றை ஆண்டனர்.

2. விச்சுளிவித்தை யாடினவள் கூறியதைக் கேட்டு சடையநாத வள்ளல் கொடையைச் சோதிக்கச் சிலரை விட்டபோது கூறியது. "இரவலாளரே பெருந் திருவுறுக, அரவுமிழ் மணியுமலை கடலமுதும், சிங்கப்பாலுந் திங்கட்குழவியும், முதிரைவாலுங் குதிரை மருப்பும், ஆமைமயிரு மன்னத்தின்பேடும், ஈகென இரப்பினு மில்லென வறியான், சடையனை யயின் றைத் தலைவனை, உடையது கேண்மி னுறுதியாராய்ந்தே" தொண்டைமண்டலத்து வேளாளரைப் பாடியது. விருத்தம், "வையம் பெறினும் பொய்யுரைக்க, மாட்டார் தொண்டைநாட்டாரென், றையன் களந்தைப் புகழேந்தி யாண்டா னுரைத் தவரோநீர், எய்யுஞ் சிலைவேள் வடிவோனே யிராசாதிபனே யிரப்போர்கள், ஐயந்தவிர்த்த பெருமானே யாவோ மடியோ மாவோமே." இதில் பின்னிரண்டடி வேளாளர் பாடியது. அறம் வளர்த்தான் முதலியாரைப் பாண்டியன் கலம்பகம் பாடலாமோ என்ன புலவர்க்குக் கூறியது. "உங்கண் மனந்தெரியும் புலவீரொருசிர் மரபெண், திங்கண் மரபினத் திங்களின் கூடச் செம்பூரமா, துங்கன் மரபினிற் கங்கையுஞ் சூடினன் சோதியன்றோ, எங்கண் மரபுண்டெனக் கவிபாடினம் யாமவர்க்கே" விட்டல ராசாவைப் பாடியது. "தொட்டிலிருக்கத் தொடங்கிய நாண் முதலாய், அட்டதிக்கு நின்குடைக் கீழாயிற்றே — விட்டலையா, தன்குமரியன்றித் தனிக்குமரி கொள்ளாநீ, தென்குமரிக் கேகுவதென் செப்பு."

3. இது தமிழ் நாட்டு மூவரசர்களில் பாண்டிநாட்டரசனுக்குப் பட்டப் பெயர். இது தற்காலம் தமிழ்நாட்டு அம்பட்டன், கம்மாளன், ஓச்சன், பள்ளன், வண்ணான், சாணான், ஒருவகை வேளாளன் முதலியவர்க்குப் பட்டமாக இருக்கிறது.

**பாண்டியன் அறிவுடை நம்பி** — இவன் சிறந்த அறிவுடையான், எல்லாச் சுகங்களிலும் புத்திரப்பேறு சிறந்த தென்பதைப் பாடியவன். இவன் காலத்துப் பிசிராந்தையார் புலவர். (புற-நா.) (அக-நா.)

**பாண்டியன் ஆரியப் படைதந்த நெடுஞ் செழியன்** — கோவலனைக் கொல்வித்தவன்; கற்றோர்பால் மதிப்புடையான். ஊழ்வலியாற் கோவலனைக் கொல்வித்தான். இவன் தன்னுயிரொக்க ஆரியரைத் தருவித்தமையின் இப்பெயர் பெற்றான். (புற-நா.)

**பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்** — ஆவூர் மூலங்கிழாரால் பாடப் பெற்றவன். இவன் தமிழ்நாட்டரசர் மூவரினும் மேம்பட்டு விளங்கினோன். இவனைப் பாடிய புலவர், மதுரை மருதனிளநாகனார், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், ஆவூர்மூலங்கிழார், வடம வண்ணக்கன்பெரிய சாத்தனார். (புற-நா.)

**பாண்டியன் ஏனாதி நெடுங்கண்ணனார்** — பாண்டியனிடத்தில், ஏனாதிப்பட்டம் பெற்றவர்போலும்; கடைச்சங்கமருவிய புலவர். (அகநானூறு.) (குறுந்தொகை).

**பாண்டியன் கருங்கையொள்வாட பெரும் பெயர் வழுதி** — ஒரு பாண்டியன். இரும்பிடர்த்தலையால் பாடப் பெற்றவன்; ஈரமுங் கொடையு முடையவன். (புற-நா.)

**பாண்டியன் கானப் பேர்தந்த வுக்கிரப் பெருவழுதி** — ஒளவைபாடலுக் களித்தவன். திருவள்ளுவர் குறளுக்குச் சிறப்புப்பாயிரங் கூறினவன். வேங்கை மாபனை வென்று கானப்பேர் அரண்கொண்டான். (புறம்).

**பாண்டியன்கீரஞ்சாத்தன்** — ஆவூர் மூலங்கிழாரால் பாடப் பெற்றவன். இவன் புலவர்க்கு ஆணையிட்டுப் போகாது மறுத்து உணவளித்தவன். இவனுக்குப் பாண்டிக் குதிரைச் சாக்கயவன் எனப் பெயர்உண்டு. (புற-நா).

**பாண்டியன் கூடகாரத்துத் துஞ்சியமாறன் வழுதி** — ஐயூர் முடவனாராலும், மருதனிள நாகனாராலும், பாடப் பெற்றவன். வடநாட்டரசரை வென்று கீழ்ப்படுத்தினவன். இவன் கூடகாரத்து இறந்ததனால் இப்பெயர் பெற்றான். (புற-நா.)

**பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்** — மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரால் பாடப் பெற்றவன். கூடினோர்க் கினியன், கூடார்க்குப் பகைவன். (புற-நா.)

**பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன்** — பகைவரை,

வெல்லுதலிற் சிறந்தவனும், குடிகளைப் பாதுகாத்தலில் வல்லவனும், கல்வியுடையோனுமாம். (புற நா)

**பாண்டியன் நெடுஞ்செழியன்** — குடபுலவியனாரால் பாடப்பெற்றவன். தலையாலங்கானத்துச் செரு வென்றவன். இவன் சேரன், செம்பியன், திதியன், எழுநி, எருமையூரான், இருங்கோ வேண்மான், பொருநன், இவர்கள் எழுவரையும் வென்றவன். இவன் ஊர் கொற்கை, இவன் மீது மாங்குடிமருதனார் மதுரைக்காஞ்சி பாடிப் பரிசுபெற்றார். இவனை சோழனும், சேரனும் சிறியனென் றிகழ வஞ்சினக் காஞ்சி பாடினன். (புறம்-72.)

**பாண்டியன் படித்துறை** — இது பொற்றாமரையின் வடபாலுள்ள படித்துறை. (திருவிளை).

**பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி** — நெடும்பல்லியத்தனாராலும், காரிகிழாராலும், நெட்டிமையாராலும் பாடப் பெற்றவன். அநேக யாகங்களைச் செய்தவன். சிவமூர்த்தியிடம் அன்பு வாய்த்தவன். (புற நா.)

**பாண்டியன் பன்னாடுதந்தான்** — இவன் கடைச் சங்கத்தவர் காலத்திருந்த பாண்டிய மன்னரில் ஒருவன். (குறு - உ௭0.)

**பாண்டியன் புலவன்** — சோழன் புறங்கொடையிற் பாடியது. "ஆறெல்லாஞ் செந்நீருகெல்லாம் பல்பிணங்கள், தூறெல்லாஞ் சோழன் சுரிகுஞ்சி — மாறில்லாக், கன்னிக்கோனேவமுடிக்காரிக் கோன்பின்னெடரப் பொன்னிக்கோன்யோனபுகார்"

**பாண்டியன் மதிவாணனார்** — நாடகத் தமிழ் நூலாசிரியர்களில் ஒருவர்.

**பாண்டியன் மாறன் வழுதி** — இவன் மாறன் வழுதி யெனவுங் கூறப்படுவான். மதுரைப் பாண்டியர் மரபினன். குறிஞ்சியையும் முல்லையையும் புனைந்துபாடியவன். பூவிலை மடந்தையைக் காண்டலும் பருவவாவறிந்து தலைமகன் பிரிவிற் கிரங்குவது கேட்போரிரங்குதற்குரியதாகும். நற்.௬௭இவன் பாடியபாட்டுஇரண்டு. (நற். ௬௭.௯0௪.)

**பாண்டியன்மாகீர்த்தி** — இவன் ஒரு பாண்டியன்; இவன் இருபத்துநாலாயிரம் ஆண்டு அரசு வீற்றிருந்தான் ஆதலின் இவனும் இவன் சபையிலிருந்தாரும் அறிவு மிகுந்திருத்தலின் தொல்காப்பியமுனிவர் தாம் செய்த இலக்கணத்தை இவன் சபையில் அரங்கேற்றினர்.

**பாண்டியன் வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி** — காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனாரால் பாடல் பெறறவன். இவன் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருமாவளவனுடன் நட்புடையான்.(புற)

**பாண்டிவம்சசேனபாண்டியன்** — சேரவம்சாந்தக பாண்டியனுக்குக் குமரன்.

**பாண்டீச்சுர பாண்டியன்** — வம்சசிரோமணி பாண்டியனுக்குக் குமரன்.

**பாண்டீரம்** — துவாரகையில் இருந்த ஓர் ஆலவிருக்ஷம். இதன் அடியில் கண்ணன் விளையாடிக் கொண்டிருந்தனன்.

**பாண்டீரவடம்** — கண்ணனும் பலராமனும் கன்றுகள் மேய்த்த துவாரகையிலுள்ள வெளி. (நாச்சியார் திருமொழி.)

**பாண்டு** — 1. இவன் விசித்திரவீரியன் தேவியாகிய அம்பாலிகையிடம் வியாசரால் பிறந்தவன். இவன் தேவியர் குந்தி, மாத்திரி. இவன் ஒருமுறை வேட்டைக்குச் சென்று அவ்விடம் மான் உருக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்த இருடி தம்பதிகளை மானென்று நிசபுத்திசெய்து அம்பினால் எய்தனன். மான் உருக்கொண்ட இருடி தன் நிசவுருவுடன் வெளிப்பட்டு நீ, யாங்கள் விளையாடியிருந்தபோது அம்பினால் எய்தனை ஆதலால் உன் நாயகியுடன் புணருகையில் உயிர் நீங்குக எனச் சபித்து உயிர்விட்டனன். இச்சாபம் உணர்ந்த அரசன் தனக்கு நேரிட்டதைத் தனது பாரியர்க்குத். தெரிவித்தனன். குந்தி தனக்குத் தெரிந்த மந்திரத்தால் தருமன், வீமன், அருச்சுனன் மூவரையும் பெற்று மிகுந்த மந்திரத்தை மாத்திரிக்கு உபதேசித்து நகுலசகாதேவரையும் பெறுவித்தனள். பின் அரசன் சிலநாளிருந்து சுவர்க்கமடைந்தனன். இவனை யக்ஷத்தலைவன் அம்சமென்றும் மருத்கணம்சமெனவும் கூறுவர்.

2. ஒரு இருடி. கொங்குநாட்டில் விஷ்ணுவையெண்ணித் தவஞ்செய்து சித்தியடைந்தவர்.

3. தண்டகாரண்யத்திற்கு அப்பால் இருக்கும் ஒரு பர்வதம்.

**பாண்டுகம்பளம்** — இந்திரன் ஆசனம். இதன் அசைவால் இந்திரன் உலகச் செய்திகளை அறிவான் என்பர். (மணிமேகலை).

**பாண்டுசோபாகன்** — சண்டாளனுக்கு வைதேக ஸ்திரீயிடம் பிறந்தவன். இவனுக்கு மூங்கில் வேலை. (மநு.)

**பாண்டுராஷ்டாம்** — பாண்டிய நாடு. (பா. பீஷ்.)

**பாண்டுரோகம்** — மார்புஅதிரல், தேகம் சுறசுறத்தல், அரோசகம், மஞ்சள் மூத்ரம், வியர்வை, மந்தாக்னி, தேகம் இளைத்தல், ஆயாசம், இக்குணங்களைத் தனக்குப் பழைய ரூபமாகப்பெறும். இது, வாத பாண்டு, பித்தபாண்டு, சிலேஷ்மபாண்டு, திரிதோஷபாண்டு,மிருத்திகாபுக்தபாண்டு, அசாத்யபாண்டு, விஷபாண்டு, முதலிய வாகப் பேதப்படும். இதனை வசந்தகுசுமா காமாத்திரை முதலியவற்றால் வசமாக்குக.

**பாண்பாட்டு**—விளிர்த்த கொம்பினையுடைய யானையை யெறிந்து பறந்தலையிற் பட்டார்க்குயாழ் வாசிக்கும் கைத்தொழிலில் வல்லபாணர் உரிமை செய்தது. (பு வெ.)

**பாண்வரவுரைத்தல்** — மாண்ட ஆபரணத்தினை உடையாளுக்கு வயலூரான் தன்பாணன் வரவைத் தோழி சொல்லியது. (பு. வெ. பெருந்திணை.)

**பாதகம்** — 1. (கி.) கொலை, பொய், களவு, கள்ளருந்தல், குருநிந்தை.

2. (எ.) அகங்காரம், லோபம், காமம், பகை, பேருண்டி, காய்தல், சோம்பல்.

**பாதகவுரு** — உக்கிரன், புளிந்தன், காலகன், முத்தாயிகன், முதலியவர்.

**பாதஞ்சலம்**—பதஞ்சலியால் இயற்றப்பட்ட யோகபாஷ்யம்.

**பாதபங்கயமலை** — இது பாதபங்கயமென்றும்வழங்கப்படும். இம்மலையைக் கிருத்திர கூடமென்று தற்காலத்தில் வழங்குகின்றனர். மகத நாட்டின் இராஜதானியாகிய இராசக்ருக நகரத்தின் அருகிலுள்ள மலை. இதில் புத்தன் அடிச்சுவடு உளதென்பர். (மணிமேகலை).

**பாதபீடிகை** — புத்தனுடைய பாதப்படிமங்களுள்ள பீடம். பண்டைக் காலத்து பௌத்தரால் வழிபாடு செய்யப்பட்டுவந்ததென்றுந் தெரிகின்றது. இப் பீடிகை மாமணி பீடிகை யென்றும், தாமரைபீடிகை யென்றும், புத்தபீடிகை யென்றும், தர்மபீடிகை யென்றும் வழங்கப்படும். (மணிமேகலை.)

**பாதபேதரோகம்** — இது, வெகுதூர சஞ்சாரத்தாலும், அதிக உஷ்ணத்தாலும், பாதத்திலுள்ள சிலேஷ்மம் நாசமடைகையில் பிறந்து வாதபித்தத்தை அதிகமாக்கி குதிகால் உள்ளங்கால் முதலிய இடங்களிலும், அவற்றின் ஓரங்களிலும் சிற்றுக்கிற்றான வெடிப்புக்களையுண்டாக்கி அவ்வெடிப்பின் வழியாக இரத்தம்வடியச் செய்வது. (ஜீவ)

**பாதமயக்கு**—இது சித்திரக் கவியிலொன்று. மூவர் மூன்றுசிரிய அடி சொன்னால்தான் ஓர் அடி பாடிக் கிரியை கொளுத்துவது. (யாப்பு - வி.)

**பாதம்** — இது ஐந்துவகை — அவை, சமநிலை, உற்கடிதம், சஞ்சாரம், காஞ்சிதம், குஞ்சிதம், என்பன.

**பாதரஸம்**—இதுவே ரஸம் எனும் பொருள். இது பூமியிலுண்டாம் பொருள். இது வெண்மையும் ஒளியும் கனமுள்ள திரவப் பொருள். இது, சைநா, ஜபான், ஐரோப்பா, அமெரிகா முதலிய இடங்களில் அகப்படுகிறது. இது லிங்கமெனும் பொருளுடனும் கலந்திருக்கும். இலிங்கத்தை வாலையிலிட்டு இறக்குவது வாலை ரஸம் என்பர். இதனை ஔஷதங்களுக்கும் வேறு வேலைகளுக்கும் உபயோகிப்பர்.

**பாதரஸவாயுமானி பரோமீடர்** — (Barometer) இது வாயுவினமுத்தும் சக்தி, உஷ்ணத்தின் ஏற்றத்தாழ்வு, காற்றோட்டம், மழை அல்லது நீராவியின் ஏற்றத்தாழ்வு களை அளக்கும் கருவி.

**பாதவன்மீகரோகம்** — நெய்த நிலவாசம், மல சலம் ஊறிய பதார்த்தம் சிலேஷ்ம பிரதான வஸ்து. இவற்றைப் புசித்தலால் இரண்டு தொடையிலுள்ள நரம்புகளில் சிலேஷ்ம நீர் நிறைந்து பாதங்களில் வியாபித்து துர்மாமிசத்தை வளர்த்து அதைப் புற்றுப்போல் பருக்கச் செய்யும். இது வாதவன்மீகம், பித்தவன்மீகம், சிலேஷ்ம வன்மீகம் எனப்படும். இதனைச் சிலிபதம் எனவும், யானைக்கால் எனவுங் கூறுவர்.

**பாதவேகன்** — திருதராட்டிரன் குமரன்.

**பாதாளகேது** — ஒரு அரக்கன். இவன் சரிதையைக் குவலயாச்வனைக் காண்க. காலவன் தவத்தினை மதாலசையால் அழிப்பித்தவன். இருதத்துவசனைக் காண்க. வச்சிரகேதுவின் குமரன் என்பர்.

**பாதீடு** — கவர்த்ததலையம்பினையுடைய கிளை கொள்ளை கொண்ட பசுநிரையைச் செய்தார் செய்த தொழில் வகையை அறிந்து கொடுத்தது. (பு. வெ.)

**பாதுகாக்கத்தக்க எச்சில்கள்**—மலங்கழித்தல், சலங்கழித்தல், புணர்ச்சி, உமிநீர், முதலிய எச்சிலுடன் செய்யத்தகாதவை ஓதல், பேசுதல், நித்திரை செயல்.

**பாத்திரம்** — பிரமனிடத்து உதித்த அக்னி.

**பாத்மபுராணம்** — பதுமபுராணம் காண்க.

**பாத்ருத்விதியைவிரதம்**—கார்த்திகை சுக்லபக்ஷத் துவிதியையில் வருவது. இந்நாளில் உடன் பிறந்தாள் தன் உடன் பிறந்தானைத் தன் வீட்டிற்கழைத்து வந்து மரியாதை முதலிய செய்வதாம். இது யமுனை, தன் உடன் பிறந்த யமனைத் தன் வீட்டிற்கழைத்துவந்து விருந்து முதலிய செய்வித்ததால் இதை உலகத்தவர் கொண்டாடுகிறார்கள். இதனால் யமபயநீங்கி இஷ்டசித்தி யடைவர்.

**பாநு** — 1. தக்ஷன் பெண். குமரன் தேவருஷபன்.

2. வசுதேவன் தம்பி.

3. கிருஷ்ணமூர்த்திக்குச் சத்தியபாமையிடம் உதித்தகுமரன். இவனுக்கு ஒன்பதின்மர் தம்பியர்.

4. பிரதிவியோமன் குமரன்.

5. தருமன் தேவி.

6. நான்கு முகமுடைய சூர்யன். சிவசூர்யனுக்கு வலப்புறம் இருப்பவன்.

7. ஏமாங்கனைக் காண்க.

**பாநுகம்பன்** — சிவகணங்களில் ஒருவன், சிவமூர்த்தியின் சந்நிதியில் ஆயிரம் வாயால் சங்கம் பூரிப்பவன்.

**பாநுகோபன்**—சூரபன்மன் குமரன். இவன் இளமைப்பருவத்தில் தொட்டிலில் தூங்கும்போது சூரியன் முகத்தில் காய்ந்தனன். அவனைப் பிடித்துக்கட்டிப் பிரமன் வேண்டுகோளால் விட்டுப் பாநுகோபன் எனப் பெயர் பெற்றனன். அசமுகியின் கையை அறுத்தவர்களைத் தண்டித்தற்குப் பிதாவின் ஏவலால் புறப்பட்டு இந்திரன் நாட்டைக்கொளுத்திச் சயந்தனைச் சிறையிட்டவன். நவவீரர்களையும் பூதப் படைகளையும் வென்று மூர்ச்சையாக்கிக் கடையில் வீரவாகுதேவர் பிரயோகிக்க எடுத்த பாசுபதாத்திரத்திற்குப் பயந்து மேகத்தில் மறைந்து மயேந்திரபுரி சேர்ந்து இரண்டாம் நாள் தகப்பன் தோற்றதற்கு வருந்தி அவனிடம் செலவுபெற்றுக் கொண்டு மூன்றாநாள் மாயையை வேண்டி அஸ்திரம்பெற்று வீரவாகுவுடன் சண்டை செய்யப் புறப்பட்டு யுத்தத்தில் பலதேவாஸ்திரங்கள் விட்டுச் சலித்து எதினாலும் வெல்லமுடியாதென்று மனமிளைத்து, கடைசியில் மாயைதந்த மோகனாஸ்திரம் பிரயோகித்து வீரவாகுதேவர் முதலியவரைப் பிணித்துக் கடலில் இட்டுத் தந்தையுடன் சயவார்த்தை கூறி மீண்டும் யுத்தஞ் செய்யப் புறப்பட்டு வீரவாகுதேவருடன் போர்செய்து தேவாஸ்திரங்களைப் பிரயோகித்து இரண்டு கரங்களும் முடிகளும் அறுபட்டு இறந்தவன். ஒரு காலத்துத் தன் தாயாகிய பதுமகோமளை இலக்ஷ்மி காத்திருந்த பொன்னங்கிளி வேண்டுமென, வைகுந்தஞ் சென்று வலியப் பிடுங்கிக் கொண்டு வந்து தந்தவன்.

**பாநுசீதளமகாராஜா** — காசியில் ஆண்ட புத்தஅரசன். இவன்குமரன் சோமசீதளன்.

**பாநுதேவன்** — (1) கிருஷ்ணன் குமரன்.

2. க்ஷத்திரியன் பாஞ்சாலத் தேசத்தவன். கர்னனால் கொல்லப்பட்டவன். புத்திரன் சக்கரதேவன். (பா. கர்ன.)

**பாநுமதி** — 1. சையாதியெனுஞ் சந்திரகுலத்தரசன் மனைவி.

2. துரியோதனன் தேவி.

3. சகதேவன் பாரியை.

4. அகம்யாதியின் தேவி.

5. கிருதவீரியன் புத்திரி அவள் புத்திரன் சார்வபவுமன் (பா. ஆதி.)

6. ஆங்கிரச புத்திரி.

**பாநுமந்தன்** — (1) சநகன் குமரன்.

2. காண்டிக்யன் குமரன்.

3. சுருதாயுதம்பி.

4. சநகன் இரண்டாம் பேரன்

**பாநுமான்** — (1) (சூ) பிரகஸ்தன் குமரன்.

2. (சூ.) கேசித்துவசன் குமரன்.

3. கலிங்கதேசத்தவன். பீமனால் கொல்லப்பட்டவன். (பா. பீஷ்.)

**பாநுவிதியை** — இது சித்தரைமாசம் ஞாயிற்றுக்கிழமை த்விதியையில் சூரியனை எண்ணி ஆராதிக்கும் விரதம்.

**பாநுவிந்தன்** — 1. ஒரு யாதவவீரன்.

2. கிருஷ்ணன் குமரன்.

**பாநுவுரான்** — (சங்.) கெற்கன் குமரன். இவன் குமரன் திரிசாநு.

**பாபநக்ஷத்ரம்** — திருவாதிரை, கேட்டை, ஆயிலியம், பரணி கார்த்திகை, மூப்பூரம், இந்நாட்களில் சுபகார்யம் செய்யலாகாது. இந் நக்ஷத்ரங்களுடன் பாபவாரங்களுற்ற இருத்தைகள் கூடில் அவமிருத்துயோகம் எனப்படும். இதிற் செய்யும் காரியங்கள் நாசமாம் இந்த யோகங்களில் வியாதி கண்டால் மரணம் நேரும். (விதானமாலை)

**பாமுளூர்** — இது சேரநாட்டிலுள்ள தோரூர். (புற. நா.)

**பாம்பன்** — இவன் ஒரு வீட்டில் நெல் திருடித் தீமைமுதலிய செய்து மறுபிறப்பில் பாண்டியநாட்டிற் பிறந்து சிவபணிசெய்து திருவிழாவில் வாகனந்தாங்கி மீண்டும் எலியாகப் பிறந்து சிவாலயத்தில் பணிவிடைசெய்து வலம்வந்திருக்குஞ் சமயத்தில் கார்த்திகை தீபவுற்சவத்தில் நெய்விளக்குஒளி குறைய அதனை முகத்தால் தூண்டித் தீமுகத்திற்பட்டு வெளியில் வரப் பருந்தடிக்க அதற்குத் தப்பித்துக்கொண்டு உயிர்விட்டு விமானத்தேறி யமபுரஞ்சென்றுமறு பிறப்பில் சிவபணி செய்ததாலும் திருவிழாவில் வாகனந்தாங்கியதாலும் விரோசனன் என்னும் அசுரனுக்குப் புத்திரனாகிய மாபலியாகப் பிறந்தனன்.

**பாம்பாட்டி** — அந்தணன் சூத்திரகன்னிகையைப் புணரப் பிறந்தவன்.

**பாம்பாட்டிச்சித்தர்** — இவர் பாண்டிநாட்டில் இருந்ததாகக் கூறுகின்றனர். இவர், வனாந்தரத்தில் பாம்பைப் பிடித்தாட்டிக்கொண்டிருந்து ஒருமுறை நவரத்ன பாம்பைப் பிடிக்கச் சென்றபோது சட்டைமுனிவர் அங்குவர அவரிடம் தீக்ஷைபெற்றுச் சமாதியிலிருந்து மீண்டும் எழுந்து பல சித்துக்கள் செய்தவர். இவர் ஒரு அரசன் இறந்தபோது அவன் உடலிற் புகுந்து அவன் மனைவியுடன் இருந்து செத்த பாம்பொன்றை ஆட்டியதால் இப்பெயர் பெற்றனர் என்பர். இவர் செய்த நூல் பாம்பாட்டிச் சித்தர்பாடல், சித்தராரூடம், சில வைத்திய நூல்கள். இவர் கொங்குநாட்டில் மருதமலையடிவாரத்தில் தவஞ்செய்திருந்ததாகவுங் கூறுவர்.

**ாயகன்** — ஒரு இடையன். இவன் திருமாலின் சங்குதாங்கிய கைகளுக்குக் கடகமும், ஆழ்வார்களின் பாசுரங் கேட்ட செவிக்குக் குண்டலமும் அணிந்து முத்தி பெற்றவன்.

**பாயிரம்** — 1. என்பது நூலிலடங்கிய பொருளை முன்னே கூறுதல். அது பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் என இருதிறப்படும். அவற்றுள் பொதுப்பாயிரம், நூலினது வரலாறும், ஆசிரியன் வரலாறும், ஆசிரியன் பாடங்கூறும் வரலாறும், மாணாக்கன் வரலாறும், மாணாக்கன் கல்வியறியும் வரலாறுங்கூறுவது. சிறப்புப் டாயிரமாவது — நூலாசிர்யன் பெயர், நூல் வந்தவழி, நூல் வழங்கும் எல்லை, நூலின் பெயர், நூலின் யாப்பு, நூல் குறித்த பொருள், கேட்போர், நூற்பயன், முதலிய கூறுவது. இப்பாயிரம் இயம்புவோர், தன்னாசிரியன், தன்னோடு கற்றோன், தன் மாணாக்கன், உரைகாரன் முதலியோர்.

2. பல்வகைப் பொருளையுந் தொகுத்து முன்னுரைப்பது. இதற்கு முகவுரை, பதிகம், அணிந்துரை, நூன்முகம், புறவுரை, தந்துரை, புனைந்துரை யெனவும் பெயர். இப் பாயிரம் பொதுச்சிறப்பென இருவகைத்து. (நன்.பொ.)

**பாரசீகமதம்** — இம்மதத்தை ஜரசுஸ்தா யென்பவர் ஸ்தாபித்தார். இவர் கிறிஸ்து பிறக்க அநேக வருஷங்களுக்குமுன் இருந்தவர். இவர் இறந்து 3534 வருஷம் ஆயினதென்று கூறுகிறார்கள். இவர் பால்யத்தில் வேத வேதாங்கங்களைக் கற்று மதஸ்தாபனஞ் செய்யத் தொடங்கினர். இவர்களுடைய தேவனுக்கு ஜரானஹாகுரான் என்று பெயர். இவர் இந்த உலகத்தைச் சிருட்டித்து அஹரீமா (இருட்டு) என்னும் உபதேவனைச் சிருட்டித்து அவனை அஞ்ஞானத்திற்குத் தேவனாக்கி அஹரீமா செய்யும் கெட்ட காரியங்களைப் போக்க ஆரமசெட் என்னும் சூரியனை சிருட்டித்தனர். இவ்விருவருக்கும் (3000) வருடம் யுத்தம் நேரிடப் பிறகு ஆரமசெட் செயித்தானாகையால் ஜனங்கள் அஞ்ஞானம் நீங்க ஆரமசெட்டைத் துதிக்க வேண்டும். இறந்தோர் மூன்று தினத்தில் கடவுளை அடைவர். இறந்த சரீரத்தைக் காக்கையும் கழுகும் உண்ணவிடல் புண்ணியம். இவர்கள் நீதி விஷயங்களெல்லாம் இந்துக்களை அனுசரித்திருக்கின்றன. இவர்கள் பெரும்பாலும் அக்னியைப் பூசிப்பர். கடவுள் முதலில் ஆகாசத்தையும் பூமி, பர்வதங்கள் சூரிய சந்திராதி நக்ஷத்திரங்களையும் சிருட்டித்தாரென்றும், பிறகு கெயோமாத் என்னும் ஆதிமனுஷன் உற்பத்தியாகையில் அவனைக் கொல்ல அவ்விடத்திலிருந்து ஓர் இடபம் பிறந்ததென்றும், அதன் வயிற்றினின்று 10 புருடர்களும் பெண்களும் பிறந்தார்களென்றும் அவர்களில் மெஜிக்கியா, மெஜிக்கினா என்னும் முதல் தாய் தந்தையர்கள் பிறந்து ஆட்டின் பால் குடித்து அவர்களும் அவர்களுக்குப் பிறந்த சயமாக்விசிகாக், என்பவரும் பாவிகளானார்களென்றும்; ஆதலால் உலகத்தவர்களெல்லாம் பாவிகளானார்க

லென்றும் இந்தலோகமுழுதும் தாமசேதுவால் நாசமாகும் என்றும் கூறுவர்.

பாம்பு — இது, ஒரு விஷமுள்ள ஊரும் பிராணி. இவைகளில் சில பெருவிஷமுள்ளவை. சில சில்விஷமுள்ளவை. இவை உருண்டு நீண்டு பிளவுபட்ட நாவினையுடையவாய், கண்ணே செவியாகவுடையன. இவற்றுள் நாகம், விரியன், கருவழலை பெருவிஷமுள்ளவை. சாரை, மண்டலி, கண்குத்திப் பாம்பு, கருவழலைப் பாம்பு, குக்கிடம், நீர்ப்பாம்பு, கொம்பேறி மூர்க்கன், சாணாரமூர்க்கன், புடையன், சவுடி மயக்கரா, மண்ணுளி முதலிய. இவை ஆடிமாதம் கருக்கொண்டு கார்த்திகையில் பொரிக்கும். இவை 200-க்குமேல் முட்டையிடும். அவற்றிற் சில கெடும். இவை பிறந்த 10 நாட்களில் ஆதித்தனை நோக்கிப்பார்க்க மேற் பற்கள் நான்கிலும் விஷமூறும். இப்பற்களுக்கடுத்த பாகத்தில் விஷப்பையுண்டு. அவ்விஷத்தைப் பற்களிலுள்ள துவாரத்தின்வழியாய்விஷத்தை யூற்றும். இவற்றின் பற்கள் காளி, காளாத்ரி, யமன், யமதூதி. இது பிறந்த 60 நாளில் தோலுரிக்கும். விரியன் பாம்பின் வகை, கத்திரி விரியன், விரியன், பெருவிரியன், ரத்த விரியன், குறுவிரியன், புல்விரியன், முருக்கரவு சலவிரியன், முரட்டுக் கத்திரிவிரியன். பாம்பின் பகை - இருதலை மணியன், செந்நாய், மயில், அன்னம், எருதின் குளம்பு, கீரி, இடி, மின்னல், காடி, பன்றி செம்போத்து, கருடன், முதலை, ஆந்தை, காக்கை, கூகை. வயது - 120. இது 120 வருஷம் வாழ்ந்தபின் உடல் தேய்ந்து குறுகும். படம் சிறகாய்ப் பறக்கும். அது மாநாகம் - குக்குடசர்ப்பம் எனப்பெயர் பெறும். அக்காலத்து விஷம் கண்ணிலிறங்கிப் பார்த்த பொருளை எரிக்கும். இதனை ராசாளிப்பாம்பென்பர். இவற்றின் வேகங்களை வாயுவேகம், வருணவேகம், அங்கிவேகங்களிலடக்கிப் பத்துக் கூறுவர். (சித்தாரூடம்.) இவை, பூமியிலுண்டாம் கால்களிலாத புழு இனங்களில் திருந்தியவை. இவற்றிற்கு தலையும் வாலும் குறுகி உடல் பருத்து நீண்டிருக்கும். இவைகளில் சில 100-அடிகள் நீண்டவை. இவ்வினத்தில் 300-க்கு மேற்பட்ட வகையுண்டு என்பர். இதிற் பல கொடுவிஷமுள்ளவை. சில சில்விஷமுள்ளவை. இவற்றில்நல்லபாம்பென்பதே பொல்லாத விஷமுள்ளது. இது படமெடுத்தாடிச் சீறிக்கடிப்பது. இவற்றிற்கு விஷம் காலையில் சூரியவெப்பத்தில் படம் விரித்தாடலால் உண்டாகிறதென்பர். பாம்புகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றன. அம் முட்டைகள் பாம்பினத்திற்குத் தக்கவுருவத்தினையும் நிறத்தினையும் பெற்று நீண்டுள்ளவை. இந்தப் பாம்பின்வகையில் பலபேதம் உண்டு. நல்லபாம்பு, சாரைப்பாம்பு, விரியன்வகை, மண்ணுளிப் பாம்பு, கொம்பேறிமூர்க்கன், பச்சைப் பாம்பு, நீர்ப்பாம்பு, சிறுபாம்பு முதலிய உண்டு. இவற்றின் எலும்பு பூமியில் நகரக்கூடிய விதமாய்இணைக்கப்பட்டுள்ளது. நாக்குப் பிளவுபட்டது, நிறம் பலவகை. இவை வருஷத்திற்கிருமுறை சட்டையுரிப்பவை.

நல்ல பாம்பு-விஷமுள்ள பாம்புகளில் முதன்மையானது. இதற்கு வாயில் விஷப்பையுண்டு. அவ் விஷப்பைக்குத் தொளைகொண்டு வளைந்த கூர்மையான பற்களுக்கும் சம்பந்தம் உண்டு. இவை பிராணிகளைக் கடித்து ஒருசார் தலையைத் திருப்புகிறது. திருப்பியவுடன், அவ்விஷப்பையிலிருந்து விஷம் பல்லின்வழி ரத்தத்திற் கலந்து கொல்கிறது. இதன் கழுத்து தசைப் பெற்று அகன்று பரவியிருக்கிறது. அதனைப் படம் என்பர். அப்படத்தில் வளைந்த பகர எழுத்துப்போல் ஒரு கறுத்தரேகை இருக்கிறது. இதன் விஷம் நீலங்கலந்த மஞ்சள் நிறம். இப்பாம்பினத்தில் சிலவற்றிற்கிரண்டு தலைகளிருக்கின்றனவாம். அவற்றை இருதலைமணியன் என்பர். எகிப்து தேசத்தில் ஒருவகைப்பாம்பிற்குத் தொளைகளமைந்த இரண்டு கொம்புகளிருக்கின்றனவாம். இது விரைந்து செல்வதால் இதனை சர்ப்பம் என்பர். இவை திவ்யசர்ப்பம் பௌமசர்ப்பம் என இருவகை. திவ்ய சர்ப்பம் ஆதிசேஷன் முதலிய எண்வகை நாகங்கள்.

பௌமசர்ப்பங்கள் - தருவீகாம், மண்டலி, இராஜமந்தம், நிர்விஷம், வைகாஞ்சம் என ஐவகைச் சாதியாம்.

தருவீகாசர்ப்பம் - இது உடல்முழுதும், கலப்பை, குடை, துவசம், அங்குசம் போல் புள்ளிகளைப் பெற்றுக் காண்டியையொத்த படத்தைப் பெற்று வேகநடையுடையது.

மண்டலிசர்ப்பம்-இது உடல் முழுதும் மண்டலமான புள்ளிகளைப் பெற்று மந்த நடை பெற்றிருக்கும்.

**இராஜமந்தசர்ப்பம்** - இது உடல் மினுமினுப்புடன் மந்த நடைபெற்றது.

**நீர்விஷசர்ப்பம்** - திவ்யம், சாலகம், பாதகம், விருக்ஷசாயி, கலசி, புட்கரம், க்ஷீரி, வாகினி, சாரவாகினி, வருஷாப்புவிகம், சோதிரதம், சட்கம், கோத்திரம், பலாககம், கசபக்ஷம், பிலவோற்பேதம் எனப் பதினாறு வகை.

**வைகாஞ்சசர்ப்பம்** - இது மூவிதபேதமுள்ள சர்ப்பம். இந்தச் சர்ப்பங்கள் நூற்றுக்குமேல் கார்த்திகை மாதத்தில் முட்டையிடும். இவற்றிற் சில காற்றினாலும் வெயில் மழையால் கெடும். இவற்றிற்கு மேல்வாயில் (7) கோரைப்பற்களும் கீழ்வாயில் (7) கோரைப்பற்களு முண்டாம். இவை பிரம, க்ஷத்ரிய, வைசிய, சூத்ர சாதி என நான்கு வகைப்படும். இவ்வகையில், கருநாகம் - இதுவே கிருஷ்ணசர்ப்பம், சிறுநாகம் - இது தருப்பை அகலமுள்ள படத்தையும் பருத்த ஈர்க்கையொத்த உடலையும் பெற்றுத் தாழம்பூவில் வசிப்பது. இதைப் பூநாகம் புல்நாகம் என்பர்.

**கோளசர்ப்பம்** - இது பசுவின் மூக்கில் சனிப்பது.

**வழிச்சர்ப்பம்** - இது எப்பொழுதும் கடிப்பதற்கே வழிக்கட்டிக் கொண்டிருப்பது.

**மூர்க்கன்** - இது பாம்பின் வகைகளில் இதற்கு கொம்பேறி மூர்க்கன், சாரைமூர்க்கன், பனையேறி எனவும்பெயர். இது மரங்களின்மீதிருந்து தொந்தரை செய்வது.

**மயக்குச்சர்ப்பம்** - இது கண்ணில் விஷமுடையது. இதன் பார்வைபடின் மயக்கமும் சுழற்சியுமுண்டாம்.

**முறுக்குச்சர்ப்பம்** இது கடித்தால் உடலை முறுக்குதலும், பதறலும் உண்டாகும்.

**சாரை** - இது நீண்ட உடலையும், வேகத்தையும் பெற்றது. இது கடிப்பதும், வாலால் அடிப்பதும் பாதமுதல் மார்புவரையில் சுற்றிக்கொண்டு வாலினாலும் அடிக்கும். இதில், வெண்சாரை, கருஞ்சாரை, செஞ்சாரை, மஞ்சட்சாரை, என நால்வகை உண்டு. இவைகளைக் கண்ட எருமைகளுக்கு மாலைக் கண் உண்டாம்.

**புடையன்** இது நீண்ட உருவத்தையும் அழுக்குநிறத்தையும்பெற்று வாலின்முனையால் குத்தி தேகத்தில் புடைகளை உண்டாக்கும்.

**கிலு கிலுப்பைப்பாம்பு** - இது வட அமெரிகாவிலுள்ளது. இப்பாம்பு தன் விரோதிகளைக் கண்டவுடன் தன் வாலைக் குலுக்குகிறது. அக்கலகலத்த ஒலியால் பிராணிகள் அஞ்சியோடி விடுகின்றன.

**மலைப்பாம்பு** - பாம்பினத்தில் பெரிய உருவமும் நீளமும் கனமும் உள்ளது. இப்பாம்பிற்கு பெரிய மிருகங்களும் அஞ்சும். இவை பிராணிகளின்மீது பாய்ந்து சுற்றிக்கொண்டும் கடித்தும் கொல்கின்றன.

**விரியன்** - என்பது பாம்பின் ஒருவகை. இது பெருவிரியன், ரத்தவிரியன், செவ்விரியன், நீர்விரியன், பொறிவிரியன், புல்விரியன் (6) வகை கருவழலை, மூர்க்கன், மயக்குசர்ப்பம், முறுக்குசர்ப்பம்.

**மண்ணுளிப்பாம்பு** - தம்பாக்கு, வெள்ளி, ரத்தநிறங்களைப் பெற்று நீண்ட பயற்றங்காயளவிருக்கும். இதனைச் சிறுபாம்பென்பர்.

**காலியாங்குட்டி** - ஒரு சாண், இரண்டு ஜாண் நீளமுள்ளது. கடிக்க அறியாது. கடிக்கில் விஷம்.

**கண்குத்திப்பாம்பு** - பசிய உருவத்துடனீண்டு மிருப்பது மரங்களில் வசிக்கும்.

**வெண்ணந்தைப்பாம்பு**-பருத்தசெக்குபனை, தூண்போல் பருத்து வாலும் தலையும் ஒரே மொத்தமாய் வரிகளைப் பெற்று ஆடு, மாடு, கோழி முதலியவற்றை விழுங்குவது. இதனை மலைப்பாம்பு தாசிரிப்பாம்பென்பர்.

**கௌதோசர்ப்பம்** - இதன் பேதம் (62) வகை.

**பாம்பின் பொது அமைப்பு** - பாம்புகளின் தேகம் நீண்டு உருண்டிருக்கும். தலை முட்டை வடிவம்பெற்று வாய்ப் பக்கம் குறுகியிருக்கும், வால்மெலிந்து கூரியதாயிருக்கும். இதற்கு வேறு உறுப்புக்கள் இல்லை. சருமம் செதில் செதிலாக விருக்கும், கண்கள் வட்டமாயிமையிலாதிருக்கும். இவைகளுக்கு காதுகள் கிடையா. கண்களுக்கடுத்துக் கேள்விச் சவ்வுகளுண்டு. அவற்றால் சிறு சத்தத்தையு மறியும். இது, அடிக்கடி தன் பிளந்த நாவை நீட்டி வஸ்துக்களின் தன்மையை யறிந்துகொள்ளும். இதற்கு ஏறக்குறைய நூற்றுக்கு மேற்பட்ட தொளை வாய்ந்த எலும்புகளாலாகிய முதுகெலும்புகளுண்டு. இவற்றால் பலவிதமாக வளைந்தோடும். இதன் விலா எலும்புகள், இரட்டையிரட்டையாய் முதுகெ

லும்புடன் பொருந்தியிருக்கின்றன. பாம்பின்தோல், ஒன்றன்பின் ஒன்றாக அடுக்கின பல செதிள்களாலானது. இதன் விலா செதிள்களைப்பற்ற, செதிள்கள் பூமியைப்பற்றுதலால் இது ஊர்ந்து செல்லுகிறது. நமக்கு இரண்டேகால், பாம்பிற்குடம்பெல்லாம் கால். அதன் விலாவுடனியைந்த செதிள்களெல்லாம் கால்கள். பற்கள்மேல்கீழ்வாய்களில் வளைந்து கூர்மையாக இருக்கின்றன. இது ஆகாரத்தை மென்று தின்கிறதில்லை. பல்லாற் பிடித்து விழுங்குகிறது. இதன் பற்கள் உள்நோக்கி வளைந்துள்ளன. பாம்பு இரையை விழுங்குகையில் அத்தாடையெலும்புகள் விரிகின்றன. இது, தவளை, எலி குருவிகளின் குஞ்சுகள் முதலியவற்றைத் தின்று ஜீவிக்கிறது. விஷப்பாம்புகளுக்கு பற்களில் சிறு தொளைகள் உண்டு. அவற்றின் வழியாக அருகிலிருக்கும் பையிலுள்ள விஷம் இரங்கிக் கடிவாயிலூறும். இந்த விஷப்பை மேல்வாயின் பின்பக்கத்திலிருக்கிறது. இதில் மஞ்சள் நிறமான எண்ணெய்போன்ற திரவம் உண்டு. இதுவே விஷம். இது, 20-க்கு மேற்பட்ட தோல் முட்டைகளையிடும். அவை சூரிய உஷ்ணத்தாலும் மற்றவையாலும் சூடுகொண்டு பொரிந்து குஞ்சுகளாம். இது மண்டலமாக வளைந்து தூங்கும். பாம்புகள் அடிக்கடி சட்டையுரிக்கும். இவ்வகைப் பாம்பில் பலசாதி உண்டு. இந்துக்கள், சர்ப்பசாதியை பிரம, க்ஷத்ரிய, வைசிய, சூத்ர ஜாதியாகப் பிரித்திருக்கின்றனர். பிரமசர்ப்பம், மேற்புறம் பல நிறமாய்ப் படத்தில் சங்கவடிவான புள்ளிகள்பெற்று ஆலயங்களிலும், க்ஷத்ரியசர்ப்பம், பொன், பேரீந்தின்பழம், முதலிய நிறம் பெற்று படத்தில் சங்கு, சந்திரன், சக்கிர முதலிய புள்ளிகளைப்பெற்று மரப்பொந்துகளில் வசிக்கும். வைசியசர்ப்பம், இது பல நிறம் பெற்று படத்தில் வட்டம், பிறை இவைகளை யொத்த புள்ளிகளைப்பெற்று வீடுகளில் வசிக்கும். சூத்திரசர்ப்பம் கருநிறம் பெற்று உடம்பெல்லாம் சிறுத்து நீண்ட புள்ளிகளைப் பெற்றுப் புற்றுகளில் வசிக்கும். ஆண்சர்ப்பம் - அகன்ற படத்தையும், பெண்சர்ப்பம் குறுகிய படத்தையும் பெற்றிருக்கும். இதில் கருநாகம், சிறுநாகம், விரியன், பெருவிரியன், ரத்தவிரியன், கட்டுவிரியன், கண்ணாடிவிரியன், கத்திரிவிரியன், குறுவிரியன், புல்விரியன், சலவிரியன், மூரட்டுக் கத்திரிவிரியன் துண்டுவிரியன், வழலைப்பாம்பு, வெள்வழலை, கருவழலை மயக்கரவு, முருக்குசர்ப்பம், சாரை இது பருத்து நீண்ட உடலுள்ளது. வெண்சாரை, கருஞ்சாரை, மஞ்சட்சாரை, செஞ்சாரை, புடையன் இது நீண்டவுருவத்தையும், அழுக்குநிறத்தையும் பெற்று வாலின் முனையால் குத்தி தேகத்தில் புடைகளை உண்டாக்கும். கண்குழிப்பாம்பு - பசுமை நிறமாய் மரங்களில் வசிப்பது. கொம்பேறி மூர்க்கன் மரங்களில் வசிப்பது. மண்ணுளிப் பாம்பு பூமிக்குள் இருப்பது. காவியாங்குட்டி - வெண்மையாய் தேகத்தில் வரிகளைப்பெற்று ஒருசாண் இரண்டு சாண் அளவாயிருக்கும். வெண்ணந்தைப் பாம்பு (மலைப்பாம்பு) செக்கு, பனைமரம், தூண் முதலிய போல் பருத்த வுடல்கொண்டு மலை காடு முதலியவற்றில் வசிப்பது. பறவைநாகம் குக்கிடசர்ப்பம்இவை பறந்து செல்லும் நாகமாம். தற்காலமில்லை நிகண்டில் கூறப்பட்டது. கிலு கிலுப்பைப் பாம்பு இது நகர்ந்து செல்லுகையில் வாலினுனியிலுள்ள ஒரு உறுப்பால் கிலு கிலுப்பைப்போல் ஓசையைச் செய்கிறது. இது மகா விஷமுள்ளது.

**பாய்** — இது, நித்திரை செய்தற்கு மெல்லிய கோரை முதலியவற்றால் செய்யப்பட்டது. இது, கொத்தளிப்பாய், கோரைப்பாய், புற்பாய், பிரப்பம்பாய், தாழம்பாய், ஓலைப்பாய், சம்புப்பாய், ஈச்சம்பாய், தோற்பாய், எனப் பலவகை.

**பாய்களின்விதி** — பனையோலைப் பாயில், சயனிப்பவர்களுக்கு அதிக உஷ்ணமும், வாதநிக்கிரகமும் செய்யும், சற்று பித்தம் விளைக்குமென்பர்.

தாழம்பாயில், தூங்குபவர்களுக்கு தலை சுழற்றல், பாண்டுரோகம், பித்ததோஷம், நீராமைகட்டி, வெகு மூத்திரம், இவைகளை விலக்கும்.

மூங்கிற்பாயில், துயில்பவர்களுக்கு மூத்திரக் கிரிச்சினம், உஷ்ணபித்தம், ஆகிய இவைகள் மேலு மேலும் விருத்தியாமென்க.

சிற்றீச்சம்பாயில், நித்திரை செய்பவர்களுக்கு அதிக உஷ்ணம், தேகவுளைவு, கபசினம் இவையுண்டா மென்க.

கோரைப் பாயில், சயனிப்பவர்களுக்கு அக்கினி மந்தமும், சுரதோஷமும், நீங்கும்.

தேகம் குளிர்ச்சி யுண்டு. சுகநித்திரை கொடுக்கு மென்க.

பேரீச்சம் பாயில், சயனிப்பவர்களுக்கு வாதகுன்மம், சோகையும், நீங்கும். பசி பாண்டு உஷ்ணாதிக்கம் உண்டா மென்க.

சாதிப்பாயில், அல்லது பிரப்பம்பாயில் சயனிப்பவர்களுக்கு மூலரோகம், சீதமலம் சீதசுரம், சிரோரோகம் இவையுண்டாக்கு மென்க.

**பாரதம்** — சந்திரன் புத்திரன் புதன். இப்புதன் மனுப்புத்திரனாகிய இளன் என்பவன் பார்வதியாரின் சாபத்தால் இளையென்னும் பெண்ணுருவடைய அவளைப் புணர்ந்தனன். அவள்வயிற்றில் புரூரவா பிறந்தனன். இவன் ஊர்வசியைப் புணர்ந்து ஆயுவைப்பெற்றான். ஆயுவின் புத்திரன் நகுஷன். நகுஷன்புத்திரன் யயாதி, இவ்வகைமுறையே தோற்றிய அரசர்களின் சந்ததிகளைச் சந்திரவம்சாவளியிற் காண்க. இந்த வம்சத்தில் பரதன் என்னும் அரசன் பிறந்தான். அதனால் இக்குலத்தவர் பாரதராயினர். இக்குலத்தில் குருஎன்பான் ஒருவன்பிறந்தான். அதனால் இக்குலத்தவர்க்குக் கௌரவர் எனவும் பெயர் உண்டு. பிரமன் சாபத்தால் வருணன் சந்திரகுலத்துச் சந்தனு என்னும் அரசனாகவும், கங்கை மானிடப்பெண்ணாகவும் உதித்தனர். இக்கங்கை வயிற்றில் வசிட்டர் சாபத்தால் வசுவென்பவன் புத்திரனாகப் பிறந்தான். இவனே பீஷ்மன். சந்தனு பரிமளகந்தியைப் புணர்ந்து சித்திராங்கதன், விசித்ரவீரியன் இருவரைப் பெற்றான். சித்திராங்கதன் என்னும் பெயரால் பொறாமைகொண்ட காந்தருவன், சித்திராங்கதனைக்கொல்லப், பீஷ்மன் விசித்திரவீர்யனுக்கு முடிகவித்துக் காசிராஜன் புத்திரியாகிய அம்பிகை அம்பாலிகை என்னும் இருவரையும் மணஞ்செய்வித்தனன். இவ்விசித்ரவீரியன் பன்னாள் அரசாண்டு சுவர்க்கமடைந்தபின் சந்ததிக்கு மகவிலாமையால் பரிமளகந்தி வேதவியாசரைச் சிந்தித்துத் தனதெண்ணத்தைத் தெரிவித்து அம்பிகையைப் புணரும்படி வேண்ட அவ்வகை அவர் புணருகையில் அம்பிகை, கண்மூடிப் புணர்ந்தமையால் கண்ணிலான் பிறப்பன் என்றனர். அதனால் வருந்தியதாய், மீண்டும் அம்பாலிகையைப் புணரவேண்ட அவள் அச்சத்தால் உடம்பு வெளுத்தமையால் வெண்ணிறமான குமரன் உதிப்பன் என்றுகூறிப் போக மனக்குறைவடைந்து மீண்டும் வியாசரை நினைக்க வந்தஅவரை நோக்கிக் குற்றமிலா மகவுவேண்டுமென, அம்பிகை அஞ்சித் தோழியைவிடுக்க அவள் களித்திருந்தமையால் சுபுத்திரன் பிறப்பான் என நீங்கினர். இவர்கள் முறையே திருதராட்டிரன் பாண்டு, விதுரன் முதலியோராம். இவர்களுள் திருதராட்டிரன் அத்தினபுரியை ஆண்டு வந்தான். இத்திருதராட்டிரனுக்குத் துரியோதனன் முதலிய நூறுபுத்திரர் உண்டு. பாண்டு குந்தியைமணந்து ஒருநாள் வேட்டைக்குச் சென்று கிந்தமன் சாபத்தால் புத்திரன் இன்றி இருந்தமையின் குந்தி கணவனது கட்டளைப்படி துருவாசர் தனக்கு உபதேசித்த மந்திரபலத்தால் யமனைத் தியானித்துத் தருமபுத்திரனையும், வாயுவைத் தியானித்து வீமசேநனையும் இந்திரனைத் தியானித்து அருச்சுனனையும்பெற்று அசுவனிதேவ மந்திரத்தை மாத்திரிக்கு உபதேசித்தனள். மாத்திரி இம்மந்திரத்தைத் தியானித்து நகுல சகாதேவரைப் பெற்றனள். பாண்டு காமத்தால் மாத்திரியைப் புணர்ந்து தேகவியோக மாயினன். பாண்டவரும் துரியோதனாதியரும் இளமைதொட்டு ஒருவர்க்கொருவர் பகைபாராட்டி வந்தனர். துரியோதனன் வீமனிடத்துப் பகைபாராட்டி ஒருநாள் நித்திரை செய்கையில் கயிறுகளாற் கட்டிப்பிராமணகோடியெனுங் கங்கைக்கரையில் வெள்ளத்திலிட அவன் கயிறுகளைச் சேதித்துக்கொண்டு கரையடைந்தனன். மற்றொருநாள் பல சர்ப்பங்களை ஏவிக் கடிப்பிக்க அவற்றைக் கொன்றனன். இவ்வாறு துரியோதனாதிகள் பாண்டவர்களைத் தீமைசெய்து வந்தனர். பாண்டவரும் துரியோதனாதியரும் கிருபாசாரியர் துரோணாசாரியரிவர்களிடம் தனுர்வித்தை பயின்றுவந்தனர். இவ்விருவரும்இவ்வாறு வளருகையில் திருதராட்டிரன் தருமபுத்திரனுக்கு இளவரசுபட்டந் தந்தனன். அதுபொறாத துரியோதனன், தந்தையுடன்கூறி வாரணாவதத்தை ஆளும்படி க்கட்டளையிட்டனன். ஒருமுறை அரக்குமாளிகை ஒன்று கபடமாய் நிருமித்துப் பாண்டவர்களைக்கொல்ல எண்ணிவருவித்து அதிலிருக்கச் செய்கையில் நடுராத்திரியில் வீமன் இவர்களது கபடமெண்ணி விழித்திருந்தோனாதலால் அதைக் கொளு

த்திவிட்டு ஒருவரும் அறியாமல் தமயன்
தம்பியரையும் தாயையும் தாங்கிக்கொண்டு
இடும்பவனம் அடைந்தனன். அங்கு வந்த
இடும்பனைக் கொன்று அவனுடன் பிறந்த
இடும்பியைத் தாய்சொற்படி மணந்து
கடோற்கசனைப் பெற்றனன். அவ்விடம்
நீங்கி ஐவரும் வேதியர்வேடம் பூண்டு ஏக
சக்ரநகரடைந்து தாய்சொற்படி பகாசுரனை
வீமன் கொலைபுரிய வாழ்ந்திருந்தனர். பின்
திரௌபதியின் சுயம்வரம் கேட்ட அருச்
சுனன் சென்று அங்குக் கட்டியிருந்த மச்
சயந்திரத்தை அம்பினு லெய்து அறுத்துத்
திரௌபதியைக் கொண்டுவர, வேதவியா
சமுனிவர் கட்டளைப்படி ஐவரும் அவளை
மணந்து வாழ்ந்திருக்கையில் திருதராட்
டிரன் சொற்படி அத்தினபுரம் ஐவரும்
அடைந்தனர். ஆண்டு திருதராட்டிரன்
அத்தினபுரியைத் துரியோதனனும் காண்
டவ பிரத்தமென்னும் ஒரு பழைய நகரத்
தைப் பாண்டவரும் ஆள நிருமித்தனன்.
கண்ணனருளால் அந்நகரம் தெய்வத் தச்ச
னால் நிருமிக்கப்பட்டு இந்திரப்பிரத்தம்
ஆயிற்று. இவ்வாறிருக்கையில் ஏதோ ஒரு
காரணத்தால் வனத்திற்குத் தருமபுத்திர
ரால் அனுப்பப்பட்ட அருச்சுநன் ஆண்டு
தீர்த்தயாத்திரை செய்து நாககன்னிகை
யையும், பாண்டியன் குமரியையும் கிருஷ்
ணன் தங்கையாகிய சுபத்திரையையும்
மணந்து நீங்கிக் கிருஷ்ணனுடன் காண்ட
வன மெரித்துக் காண்டீவம், அம்பறாத்
தூணி அநுமக்கொடியுள்ள ரதம், அக்நிதரப்
பெற்று மயனால் சபை பெற்றுத் தம் பட்
டணமடைந்திருக்கையில் தருமராசன் நார
தர் சொற்படி இராசசூய யாகஞ்செய்து
சம்ராட் என்னும் பெயரடைந்து செல்வத்
துடனிருப்பதைக் கண்டு போன துரியோ
தனன், பொறாமைகொண்டு சகுனி கணர்ன்
முதலானோரது துராலோசனையால் ஒரு
மண்டபங் கட்டுவித்துப் பாண்டவரை வரு
வித்து அவருடன் சகுனியைக்கொண்டு
சூதாடுவித்து எல்லாச் செல்வங்களையும்
கவர்ந்து அவர்களையும் அடிமைகொண்டு
திரௌபதியைத் துச்சாதனனைக் கொண்டு
மானபங்கஞ் செய்வித்தான். கண்ணபிரா
னருளால் மாளாத் துகில்வளர அதை
ஒழித்து அவளைத் தன் மடிமீது உட்காரக்
கட்டளையிட்டதனால் திரௌபதி, அவனைத்
தொடையின் வழி உயிர் நீங்கச் சபித்து
என்னை அவமதித்த இத் துரியோதனாதி

யரை வென்று வெற்றி முரசு முழங்குகை
யில் என் கூந்தலை முடிப்பேனென்று சப
தஞ்செய்தனள். மற்றவர்களும் அவ்வாறே
சபதஞ்செய்தனர். இவை கேட்ட திருத
ராட்டிரன் பாண்டவரது அடிமை நீங்கி
யூருக்கனுப்பத், துரியோதனன் ஏவலால்
துச்சாதனன், நாடும் செல்வமும் கொ
டோம் அடிமை நீங்கிக் காடுசெல்க என்ற
னன். பின் திருதராட்டிரன் கருத்துணர்ந்த
துரோணர், நீங்கள் பன்னீராண்டு வனத்
திலும் ஓராண்டு அஞ்ஞாதவாசத்திலும்
போக்கி வருவீராயின் நாடுபெறுவீர் என்
றான். இச்சொற்களைக் கேட்ட திரௌபதி
பாண்டவர் ஐவரும் யானும் என்புத்திரரும்
அடிமை நீங்கச் சூதாட வேண்டுமெனத்
துரியோதனன் பந்தயப்பொருள் என்
னென, யான்செய்த தருமமென்று தருமன்
கூற அதற்கிசைந்து ஆடுகையில் தெய்வ
பலத்தால் பாண்டவர் அடிமை நீங்கித்
தந்தை சொற்படி காடுசென்று (கஉ) வரு
ஷம் வசித்து ஒரு வருஷம் விராடபுரத்
தில் ஒருவருந்தோன்றாது வசிக்கையில்
நாடுவளமிகுந் திருத்தலைக்கண்டு பாண்ட
வர் இங்குவசிக்கின்றாரோ என்னேவெனச்
சந்தேகித்து அவ் விராடராசனது பசுக்
கூட்டத்தைத் துரியோதனாதியர் வளைத்
தனர். அவ் விராடராசன் புத்திரனாகிய
உத்தரன், தான் அப்பசுக் கூட்டத்தை மீட்
கவேண்டிப் பேடி உருக்கொண் டிருந்த
அருச்சுநனைச் சாரதியாகக்கொண்டு தேர்
ஏறிப்போய்ப் பகைவர் சேனையைக்கண்டு
பயந்து பின்னிட விஜயன் அவனைத்தே
ரிற் பிணித்துச் சென்று வன்னிமரத்தின்
மீதிருந்தபடைகளை எடுப்பித்து உத்த
ரனைத் தேர்ச்சாரதியாக்கிப் பகைவருடன்
போர் புரிந்து வென்று நிரைமீட்டு விராட
நகரை அடைந்தனன். தங்களுக்குக் குறி
த்தவருஷம் அன்றோடே முடிந்ததாகை
யால் பாண்டவரும் தமது உண்மை உருக்
கொண்டனர். பின் உத்தரையை அபிமன்யு
விற்கு மணப்பித்து உத்தரன் செய்த சிறப்
பேற்றுத் தங்கள் வெளிப்பாட்டைச் சுற்
றத்தவருக்கு அறிவித்து அவர்களுடன்
உபப்பிலாவியத்திலிருந்து ஆலோசித்துப்
புரோகிதனைத் தங்கள் நாடுதரும்படி துரி
யோதனனிடந் தூதாக அனுப்பினர். இத்
தூதின் செய்திகேட்ட துரியோதனன் நாடு
கொடேன் என்றனன். அதைக் கேட்ட
வீஷ்மர் துரோணராதியரும் நீதி கூறவும்

மறுத்தமையால் அச்செய்தியை உலூக முனி பாண்டவர்க்கு அறிவித்தனன். துரியோதனன் துரோணர்முதலானோர் ஆலோசனையால் கண்ணபிரானைப் படைத்துணை அழைக்கச் சென்று யோகநித்திரை செய்யும் கண்ணபிரானது முடியின் பக்கத்தில் உட்கார்ந்தனன். அருச்சுநன் கண்ண பிரானது திருவடிப்பக்கத்து இருந்தனன். கண்ணன் துயிலுணர்ந்து முதலில் அருச்சுநனைக்கண்டு பின் துரியோதனனது வேண்டுகோளுக்கு நாராயண கோபாலரைத் துணைகொள்ளும்படி ஏவித் தாம் அருச்சுநற்குச் சாரதியாய் இருக்க உடன்பட்டனர். பின் திருதராட்டிரன் ஏவலால் சஞ்சயமுனி பாண்டவரிடம் ஞானோபதேசஞ் செய்யச்செல்லப் பாண்டவர் அதற்கு உடம்படாமை அறிந்து மீண்டனன். பின் கண்ணபிரான் பாண்டவரது கருத்துணர்ந்து துரியோதனனிடம் தூதுசென்று அன்று விதுரன் இட்ட விருந்துண்டு மறுநாள்சென்று நீதியைக் கூறக்கேட்காமையால் மீண்டனர். பின் துரியோதனன் விதுரனை நோக்கி நீ கண்ணனுக்கு விருந்திட்டனை என்று வெகுள விதுரன் இப்பாரதப்போர் முடியுமளவும் இந்த வில்லை எடுப்பதில்லை என முரித்துச் சென்றனன். இது நிற்க, கண்ணனைக்கொல்ல எண்ணிய துரியோதனாதியர் ஓர் நிலவறை சமைத்து அதில் அரக்கரை நிறைத்து மேலொரு பொய்ச் சிங்காதனம் அமைத்து அதில் கண்ணனை வருவித்து உட்காருவிக்கக் கண்ணன் அதில் உட்கார்ந்த மாத்திரையில் அதனை உணர்ந்து விசுவரூபங்கொண்டு தமது திருவடியால் அறைக்குள்ளிருந்த அரக்கர் உயிர்போக்கி இந்திரனை அழைத்துக் கர்ணனிடம் உள்ள கவசகுண்டலங்களைக் கவரப்போக்கினர். இந்திரன் விருத்த வேதியனாய்க் கர்ணனிடஞ் சென்று யாசித்து அவைகளைப்பெற்று மீண்டனன். பின்னர் கண்ணபிரான் குந்திதேவியிடம் சென்று கர்ணன் அவளது புத்திரன் என்பதைத் தெரிவித்துக் கர்ணனிடஞ்சென்று, அர்ச்சுநனுக்குப் பாரத யுத்தத்தில் உயிர்க்கொலை நேராதபடி ஒரு முறைக்கு மேல் நாகாஸ்திரம் எய்யாதிருக்க வரம் பெறக் கற்பித்து ஏவ அவள் சென்று தன்னைத்தாயென அறிவித்து அவன் தந்தசேலையை யுடுத்து வரம்பெற்று மீண்டதைக் கண்ணனுக்கு அறிவித்தனள். கண்ணன் இவற்றைப் பாண்டவர்க்குஅறிவித்தனன். இதுநிற்க, திருதராட்டிரன் பாரதப்போர் யாதாய்முடியுமோ என்ற அச்சத்தால் சஞ்சயனை மீண்டும் பாண்டவர்கள் காடுசெல்லும்படி கற்பிக்க ஏவினன். அச்சஞ்சயன் உபப்பிலாவியம் வந்து கண்ணனைக் கண்டு பின் பாண்டவர்களைக்கண்டு ஞானோபதேசஞ்செய்ய அதற்குப் பாண்டவர் உடன்படாதுபோர் செய்தே நாட்டைப்பெறுவோமென்று கூற அவ்வகைசென்று துரியோதனாதியர்க்கு உரைத்தனன். இருதிறத்தவரும் போர்க்கு நன்னாள்குறித்து அரவானைக் காளிக்குப் பலியிட்டு அவன் பாரதப் போர்காண வரம்வேண்டத் தந்து அணிவகுத்துப் போர்க்களங் குறுகினர்.

முதல்நாட்போர் — யுத்தகளத்திற்கு வந்திருவர் சேனைகளும் அணிவகுப்படைந்து யுத்தஞ் செய்யத் தொடங்கி அருச்சுநனும் வீமனும், வீமனும் சுயோதனனும் தருமனும் சல்லியனும், நகுலனும் சயிந்தவனும், சகாதேவன் - சகுனி, சிவேதன் - துச்சாதனன், திட்டத்துய்மன் - துரோணன், அபிமன்யு - லக்கணன், விராடன் - பூரி, சாத்தகி - பூரிசிரா, சந்தனு - உக்ரவேகன், குந்திபோஜன் - அச்வத்தாமன், கடோற்கசன் - பகதத்தன், பாஞ்சாலன் - கலிங்கன், கிருதபன்மன் - கேகயன், உத்தரன் - கிருதபன்மன், அரவான் - அலம்புதன், சோமதத்தன் - காம்போஜன், சோழன் - மாகதன், பாண்டியன் - கிரதேவன் சிகதன் - சிகண்டி, உத்தமோசா - விகர்ணன், உதார்மன் - விடசேநன் முதலியோர் ஒருவருடன் ஒருவர் மாறுகொண்டு யுத்தம் புரிகையில் பாண்டவர் படைக்குச் சேநாபதியாகிய சிவபெருமானிடம் வரம்பெற்ற சிவேதன் வீஷ்மருடன் யுத்தஞ் செய்தனன். ஒருபுறம் சல்லியன் உத்தரனிடம் போர்புரிந்தனன். அந்தச் சல்லியனால் உத்தரன் மடிந்தான். சிவேதன் பெரும்போரிட்டுப் படைகளைப் பின்னிடச் செய்கையில் ஆற்றாத வீஷ்மர் உனக்கு விற்போர் ஒன்று மாத்திரந்தான் வரும் மற்ற ஆயுதங்களில் வன்மையில்லையென்று பரிகசிக்கக்கேட்டு வாளெடுக்கச் செல்லுகையில் வீஷ்மர் அவனது இரண்டுகைகளையுங் துணித்துக் கொன்றனர். சூரியன் அஸ்தமித்தனன்.

இரண்டாம்நாள் - பாண்டவர்க்குத் திட்டத்துய்ம்மன் சேநாபதியாகித் துரோண

ருடன் எதிர்த்துப் போரிட்டுப் பின்னிடையக் கண்டவீமன் எதிர்த்துச் சேனைகள் பின்னிடையச் சாகைகையில் கலிங்கராஜன் யானைச் சேனைகளுடன் யுத்தத்திற்கு வர அவனையும் அவன் குமாரர்களையு மடித்து வீஷ்மரை எதிர்த்து அவர் தேர்ச்சாரதியின் தலையை உடைத்துச் சேனைகளைச் சங்கரிக்கையில் அபிமன்யுவுடன் வந்து சேனைகளைப் பின்னிடச் செய்தனன். சூரியன் அஸ்தமனமாயினன்.

மூன்றாநாள் - வீஷ்மர் தம் சேனைகளைக் காருடயூகம் வகுக்கத் திட்டத்துயம்மன் தன் சேனையைச் சத்திரயூகமாக வகுக்க வீஷ்மர் பாண்டவருடன் போரிடுகையில் துரியோதனனை மூர்ச்சையடையச் செய்தனன். அதனால் வீஷ்மர் துரியோதனனை மூர்ச்சை தெளிவித்துப் பாண்டவர் சேனைகளைக் கொல்லக் கிருஷ்ணமூர்த்தி கோபித்துச் சக்கரமெடுக்க வீஷ்மர் தேரினின்று இறங்கித் துதிக்க அருச்சுனன் கண்ணனைத் தேரின்மீது ஏறவேண்டக் கண்ணன் தேர்ஏற அருச்சுனன் பகைவர் படையைக் கொல்லுகையில் சூரியன் மறைந்தனன்.

நான்காம்நாள் - படைவகுத்து வீமன் பகைவரைக் கொல்லுகையில் துரியோதனன் வீமனுடன் எதிர்த்து மூர்ச்சித்தனன். இதனைக்கண்ட அவன் தம்பியராகிய சுதக்கணன், பிங்கலசன், விம்வாகு, கலாசந்தன், சேநாவிருந்து, முதலியவர் எதிர்த்து மாய்ந்தனர். இவ்வாறு வீமன் செய்வதைக்கண்ட பகதத்தன் வீமனையெதிர்க்க அதைக் கண்ட கடோற்கசன் வந்து எதிர்த்து முதுகிட அடித்தான். இவ்வாறு யுத்தஞ் செய்கையில் சூரியன் அத்தமித்தனன்.

ஐந்தாம்நாள் - நான்காநாள் யுத்தமுடிந்தபின் வீஷ்மர், துரோணர், கர்ணன், அசுவத்தாமன் இவர்கள் மனக்குறை பெற்று ஒருவரோடொருவர் சண்டை செய்யத் தொடங்குகையில் துரியோதனன் தடுக்கத் தடையடைந்து மறுநாள் படைகொண்டு சண்டை தொடங்கினர். அருச்சுனனும், வீமனும் பலரை எதிர்த்து மாய்க்கையில் துச்சாதனன் எதிர்க்க அவனை வீமன் முதுகிட்டோட அடிக்கையில் துரியோதனன் எதிர்க்க மூர்ச்சையாக்கி அவன் சேனைகளில் (உ௰,௦௦௦,) வீரர்களைக் கொல்லுகையில் பூரிசிரா எதிர்க்க அவனைச் சாத்தகிஎதிர்க்கையில் சூரியன் அஸ்தமித்தான்.

ஆறாம்நாள் - திட்டத்துய்ம்மன் மகாரயூகம் வகுக்க வீஷ்மர் தமது சேனையைக் கிரவுஞ்சயூகம் வகுத்துப் போரிடுகையில் வீமன் வீஷ்மரைப் பதாதியாக்கிச் சல்லியனைத் தேருடனெடுத்தெறிந்து துரியோதனனுடன் போரிடுகையில் அபிமன் விகர்ணனுடன் எதிர்த்து அவன் தேரை அழிக்க அவன் தன் தம்பியாகிய சித்திரசேநன் தேரில் ஏறி யுத்தம் செய்கையில், அபிமன்யு விகர்ணனை மார்பில் தொளைத்து அனுப்பினன். சூரியன் அஸ்தமித்தனன்.

ஏழாம்நாள் - இருவர் சேனைகளுடன் கூடினர். குருமக்கள் சகடயூகம் வகுக்கப் பாண்டவசேநாபதி மாசுணயூகம்வகுத்துப் போரிடுகையில் துரோணர் பாண்டியனைப் பின்னடையச் செய்கையில் கடோற்கசன் கண்டு மாயையால் யானைச்சேனையுண்டாக்கி யானைமேலிருந்து போரிடுகையில் சாத்தகியைச் சதாயுமுதுகிடச் செய்தனன். பின் வீமன், சகுனிசல்லியரை எதிர்த்துப் பின்னிடச் செய்தனன். வீஷ்மருடன் அருச்சுனன் எதிர்த்துப் போரிடுகையில் பொழுதுசாய்ந்தது.

எட்டாம்நாள்-போர்க்களம் புகுந்துவீஷ்மர் தம்படைகளைச் சூசிகாயூகம் வகுக்கக் கண்ணன் சகடயூகம்வகுத்து யுத்தஞ் செய்கையில், துரியோதனன் தன் தம்பியருடன் வீமனை எதிர்க்க வீமன் துரியோதனன் தம்பியர் எண்மரைக் கொன்றனன். பின் அரவான் எதிர்த்துத் துரியோதனன் சேனைகளைப் பாழாக்குகையில் அலம்புதன் அவனைக்கொல்ல அபிமன்யுகண்டு சேனைகளை எதிர்த்துக் கொல்லுகையில் சூரியன் மறைந்தனன்.

ஒன்பதாம்நாள் - இருவர் சேனைகளும் கைகலந்து யுத்தஞ்செய்கையில் அலம்புதன் வீமனை எதிர்க்க வீமன் வேலாயுதத்தால் அவனைக் கொன்றனன். அப்போது அருச்சுனனால் (எ௦,௦௦௦) வீரர்இறந்தனர். பின் திட்டத்துய்ம்மன், தருமன், சிகண்டி, பாஞ்சாலர், இவர்கள் வீஷ்மரையும் துரியோதனன் தம்பியரையும் எதிர்த்தனர். வீஷ்மரால் படையழிவதைக் கண்ட சிகண்டி வீஷ்மர் திகைக்கும்படி அம்புகள் எய்தான். இதைக் கண்ட துச்சாதனன் சிகண்டியைப் பின்னிடச் செய்தான். இவ்வகை இருக்கையில் சதாநீகன் வீஷ்மர்மேல் கணைபெய்து அவரால் இறந்தான். சூரியனும் அஸ்தமித்தான்.

பத்தாம்நாள் - இருவர் படைகளுடன் படைக்களம் புகுந்தனர். வீஷ்மர் அருச்சுநனுடன் எதிர்த்துப் போரிடுகையில் வீமன் அவர்க்குத் துணைவந்தாருடன் போர்செய்தனர். வீஷ்மர் வெகுசேனைகளை யழிக்கக்கண்ட அருச்சுநன் சிகண்டியை யுடன்கொண்டு வீஷ்மருடன் போரிட வீஷ்மர் சிகண்டியைக் கண்டு வில்லினைக் கீழிட்டு அருச்சுநன் அம்பினுல் ஒய்ந்து உயிர்மாயாது சாசயனத்திருந்தனர்.

பதினோராம்நாள் - இருவர் சேனைகளும் யுத்தஞ் செய்யத் தொடங்குகையில் துரியோதனன் துரோணரைச் சேநாபதியாக்கி இன்று தருமரைப் பிடித்துத் தருக எனக் கூறிய செய்தியை யருச்சுநன் தூதராலுணர்ந்து தமயனைக்காக்க வெண்ணிப் போர்க்களம்புகுந்து போரிடுகையில் துரோணர் தருமருடனும், அருச்சுநன் கர்ணனுடனும், போரிட்டனர். இதில் சகாதேவன் சகுனியின் தேரை யழித்து அவன் தேர்ப்பாகனையுங் கொன்ருன். ஒருபால் சல்லியனுடன் நகுலனும் போரிட்டான். மற்ருேர்பால் விராடனும் கன்னனும், துருபதனும் யாகசேநனும், பகதத்தனும், சோமதத்தனும், இலக்கணனும் அபிமனும் போர் செய்தனர். இவ்வாறிருக்கையில் இலக்கணகுமரனை அபிமன் பிடித்துச் செல்லுகையில் சயித்திரதன், சல்லியன், கன்னன் மூவரும் எதிர்க்கக் கண்ட வீமன் சல்லியனுடன் போரிட்டு அவனை மூர்ச்சை யாக்கினுன். அத்தருணத்தில் அபிமன்யு வீமனை நோக்கி நான் அவனைவெல்லேனு எனக்கு நீங்கள் உதவி வரவேண்டுமோ எனப் பேசிக்கொண்டிருக்கையில் இலக்கணகுமரன் தப்பியோடிச் சென்ருன். பொழுது சாய்ந்தது.

பன்னிரண்டாம்நாள் - துரியோதனன் தருமரைப் பிடித்துத் தருகவெனத் துரோணரை வேண்டத் துரோணர் அருச்சுநனும் வீமனும் என்னிடம் அணுகாவிடிற் பிடித்துத் தருவேனென்று சமரிற்புகுந்து மகரயூகம் வகுத்தார். தருமர் மண்டலயூகம் வகுத்தார். திரிகர்த்தன் முதலியோர் அருச்சுநனுடன் போரிட்டனர். துரோணர் திட்டத்துய்மன் வில்லை முரித்துச் சிகண்டியின் தேரைப்பொடித்து நகுலசகாதேவரைச் சாடுகையில் தருமன் பொருது துரோணரை யெதிர்த்து அவரைப் பல பாணங்களால்பொத்தி நிராயுதராக்கி அவர் தேரையுமழிக்க அவர் வேறு தேரேறி யுத்தத்திற்குவர அபிமன், விராடன், திட்டத்துய்மன், குந்திபோஜன் சூழ்ந்துகொள்ளத் துரோணருக்குச் சகுனி, கன்னன், கலிங்கராஜன் முதலியோர் துணையாக வந்து போர்செய்தனர். இதனைக் கண்ட துரியோதனன் ஒருபால் சண்டைசெய்தனன். பகதத்தன் யானைச் சேனையுடன் வந்து தருமனை எதிர்த்துச் சேனைகளை அதமாக்கக்கண்ட தருமர் விசனமுற்றுங் கண்ணபிரானைத் தியானிக்கக் கண்ணன் அருச்சுநனுடன் யுத்தகளங் குறுகினர். அர்ச்சுநன் பகதத்தனை எதிர்த்துப் பலவாறு வருத்த அவன் பொருது இந்திரன்தந்த வேலாயுதத்தை அர்ச்சுநன்மீது எவ அது வருதல் கண்டு திருமால் அதனை மார்பில் ஏற்றனர். அது கண்ணன் திருமார்பில் மாலையாயிற்று. உடனே அருச்சுநன் பகதத்தனது கவசத்தை யறுத்து அவனை மாய்த்தான். பின்காந்தார மன்னர் சகுனியிடம் போரிட்டுப் பின்னிடைந்தனர். சூரியன் மேல்பாலடைந்தான்.

பதின்மூன்ரும்நாள் யுத்தம் - இருதிறத்தவரும் போர்க்கெழுந்து துரோணர் தம் சேனைகளைப் பதும, சூசிக, சக்ரயூகங்களாக வகுத்தனர். திட்டத்துய்மன் தன் சேனைகளை மகரயூகமாக வகுத்துப் போர்செயத் தொடங்குகையில் துரோணர் திட்டத்துய்மனை வருத்த அவன் தருமனையணுகக்கண்டு தேற்றிப் பதுமயூகத்தை நீயுடைக்கவென அவ்வாறுசென்று பதுமயூகத்தைக் கலக்கிப் போரிட்டு அரசர்களை யதஞ்செய்கையில் வீமனும் அவற்குத் துணையாய்ப் போரிடத் துரியோதனன் சேனைகள் அடிபடுகையில் துரியோதனன் சயத்திரதனை நோக்கி, நீ, அபிமனுடன் வீமன் நெருங்காவகை செய்க என அவ்வாறு போரிடுகையில், துரியோதனன் பல வீரர்களுடன் அபிமன்யுவைநெருங்கிப் போரிட அபிமன் பலரை வென்று துன்முகனைக் கொன்று வீமனுக்குத் துணைவரத் திரும்புகையில் விடசேநனை மாய்த்துத் துரியோதனனை வருத்தத் துரியோதனன் இலக்கணகுமரனை அவன்மீதேவ அவன் வந்து போரிட்டு மாய்ந்தான். பின் அபிமன், சக்ரயூகத்தைப் பேதிக்கையில் அபிமன்னுடன் சயத்திரதன் எதிர்த்து அபிமன்னுவை மாய்த்தான். இதனைத் தருமன் முதலியோர் அறிந்து விசனமுறுகையில்

வியாசர் தேற்றினர். இச்செய்தி யறியா அருச்சுநன் சஞ்சத்தவரை வென்று மீளு கையில் அபிம னிறந்த செய்தி யறிந்த கண்ணன், இந்திரனை வேதிய வுருக் கொண்டு தீக்குழியில் அருச்சுநன் காண விழ ஏவ, அவன் அவ்வாறு செயக் கண்ட அருச்சுநன், ஏன் தீயில் விழுகிறீர் எனக் கேட்க, என் மகன் மரணங்கேட் டிறக் கின்றேனெனக் கூறுகையில் அருச்சுநன் சமாதானங்கூற அந்தணன் உன் மகன் இறப்பின் நீ இவ்வாறு செய்யாதிருப்பின் நானிவ்வாறு செய்யேனெனக் கூற உடன் படக் கேட்டு மீண்டு, தேரேறித் துர் நிமித்தங்கள் கண்டு மாயனை நோக்கி இன்றேதோ தீது விளைந்ததென்று பின் அபிமனிறந்த செய்திகேட்டு விசனமடைந்து தீயில்விழ முயலுகையில் வேதியனாகிய இந்திரனால் தடையுண்டு நாளைச் சூரியாத்தமனத்திற்குமுன் சயத்திரதனைக் கொல்லச் சபதங்கூறிக் கண்ணனைச் சிவபெருமானாகப் பூசித்து நித்திரை செய்து கண்ணனுடன் திருக்கைலை யடைந்து, கண்ணன்மேற் சாத்திய மலர்களைச் சிவபெருமான்மீது கண்டு நீரில் முழுகி இருடியால் தருவித்த அத்திரத்தைப் பெற்று மீண்டு கனுநிலை யுரைத்தனன். பொழுது போயிற்று.

பதினான்காம்நாள் யுத்தம் - பதினான்காம் நாள் அருச்சுநன் தருமரைக் காணத் தருமர் அருச்சுநனை நோக்கி, ஏது உன் முகத்தில் மலர்ச்சி யென விஜயன் தான் கண்ட கனுநிலை யுரைத்துக் கண்ணனைப் புகழ்ந்து இராஜமண்டல யூகம் வகுப்பித்து அதினிடை நிற்க, துரோணர் சூசிகாயூகம் வகுத்து அதில் சயத்திரதனை யிருத்தி வேறு ஐந்துயூகங்கள் வகுத்து நின்றார்கள். இதற்குள் அருச்சுநன் சாத்தகியை நோக்கித் தருமபுத்திரரைக் காக்கக்கூறி யூகத்திற் சென்று துன்முகனையுந் துச்சாதனனையும் ஓடச்செய்யத், துச்சாதனன் துரோணர் தேரின்பின் சென்று ஒளிக்க அருச்சுநன் துரோணருக்குத் தன் சபதங்கூறி வழிவிடக் கேட்கத் துரோணர் என்னுடன் யுத்தஞ் செய்துபோக எனக்கேட்டு ஒருவாறு துரோணரைவிட்டு விலகி யப்பாற் சென்று கிருதவன்மனை மூர்ச்சை யடையச் செய்து சுதாயு வந்தெதிர்த்துக் கதைவிட அதைக் கண்ணன் தன் மார்பிலேற்க அவனைக் கொன்று, அப்பாற் சுதீக்ஷணனைக் கொன்று பின் சுதாயு, நியுதாயு, தீர்க்காயு, முதலியவரைக் கொன்று விந்தாநுவிந்தர்வந்து தடுக்க அவரைக் கொன்று இவ்வாறு பதினைந்து நாழிகைக்குள் ஏழக்குரோணி சேனைகளை மடித்துக் குதிரைகளின் இளைப்புத் தீரக் கண்ணன் நீர் வேண்டுமென வருணாஸ்திரத்தால் தடாகமொன்றுண்டாக்கிக் குதிரைகளுடன் தாங்களும் இளைப்பாறி யிருக்கத் துரியோதனன் சேனை மடிந்தமைகண்டு துரோணரை நொந்து கூறத் துரோணர் அவனுடன் சண்டை செய்ய என்னாலாகாது நீயே செல்க என ஒரு கவசத்தை யுதவி யுத்தத்திற் கனுப்பினர். இத் துரியோதனனுடன் அருச்சுநன் யுத்தஞ் செய்ததால் களைத்துச்சாயக் கண்ணன் பாஞ்சசந்யம் பூரித்துக் கௌரவர் சேனை மூர்ச்சிக்கவும், அருச்சுநன் மூர்ச்சை தெளியவுஞ் செய்தனர். பின் கண்ணன் அருச்சுநனை நோக்கி நீ யேது கவசத்திற்குப் பயந்தனைபோலும், அது இந்திரன் கொடுத்த கத்தியால் அழியும் என்று கத்தியைத் தந்து வில்லை வளைத்து எய்க என்ன அருச்சுநன் அவ்வாறு செய்யத் துரியோதனன் கவசம் பிளந்து பொடிபடப் பின்னிடைந்தனன். இப்பால், தருமபுத்திரர் தேவதத்தத்தொலி முன்னாகப் பின் பாஞ்சசன்னியத் தொலி கேட்டதால் ஏதோ தவறெனச் சங்கித்துச் சாத்தகியைப் பார்த்துவர ஏவ, அவரை வழியில் கிருதவன்மன் எதிர்க்க அவனை வென்று இப்பால் துச்சாதனனை யடிக்க அவன் துரோணருடன் முறையிடத் துரோணர் அவனை நிந்தித்தனர். அருச்சுநன் நிலையறிய வந்த சாத்தகி மீளாமையால் அருச்சுநனிலை யறிந்துவரப் பீமனைத் தருமர் அனுப்ப வீமன் துரோணரது சேனைக் கருகில் வருதலைக் கண்டு சேநாவீரர்களும் துரியோதனன் எழுதம்பியரும் எதிர்க்க அவர்களைக் கொன்றனன். இதைக் கண்டு துரோணர் எதிர்க்க அவர் தேரைத் தூக்கி யெறிந்து பொடியாக்கி அவரையுங் கலங்கச் செய்து அப்பாற்சென்று சாத்தகியையும், பின் கிருஷ்ணார்ச்சுநர்களையுங் கண்டு வீமன் தன் சங்கத்தைப் பூரித்தனன். மற்ற நரநாராயணர்களுஞ்சங்கம்பூரித்தனர். இதைக் கேட்டுத் தருமபுத்திரன் களிப்படைந்தான். பின்பு இவ்விருவருடனும் துரியோதனன் முதலியோர் எதிர்க்க அவர்களைப் புறங்கொடுக்கச் செய்து கன்னனைப் பதின்

மூன்றுமுறை வென்று பின்னிடச்செய்து துன்முகன் முதலிய துரியோதனன் தம்பியர் இருபத்தெழுவரைக் கொன்று, விகர்ணன் எதிர்க்க நீ நல்லொழுக்கமுள்ளவன் உன்னோடு நான் போரிடேனென்று விலக அவன் என் துணைவர்களிறக்க நான் தனித்திரேன் என்று வலியச்சண்டைக்கு வர அவனையுங் கொன்று கன்னன் எதிர்க்க அவனுடன் போரிட்டுக் கதையிழந்தனன். இப்பால் சாத்தகியுடன் பூரிசிரா, அலம்புதன் இவர்கள் போரிடுகையில் சாத்தகியைத் தள்ளிப் பூரிசிரா வாளால் வெட்டத் துணிகையில் அருச்சுநன் கண்ணன் சொற்படி அவன் கரத்தைத் துணிக்கப் பூரிசிராவைச் சாத்தகி கொன்றான். இப்பால் அருச்சுநன் கன்னனைத் தூஷித்து அவனுடன் பொருது பின்னிடச் செய்து சயத்திரதனைத் தேடிச் செல்கையில் துரியோதனன் வேண்டுகோளால் மீண்டும் கன்னன் அருச்சுநனுடன் போரிட்டுப் பின்வாங்குகையில் கண்ணன் தம் சக்கரத்தால் பொழுதினை மறைத்தனர். பொழுதின் மறைவுகண்ட அருச்சுநன், காண்டீவத்தைப் பூமியில் வைக்கக் கண்ணன் என் வில்லைப் பூமியில் வைத்தனை யென அருச்சுநன் சபதப்படி செய்வேன் என்று தீப்பாய விருக்கையில் துரியோதனன் கேட்டுச் சயத்திரதனை யானைமீதேற்றிக் கொண்டுவந்தான். இப்பால் தருமபுத்திரர் தேவதத்தத்தொலி கேளாமையால் நானும் அருச்சுநனுடன் தீப்பாய்வேன் என்று கூறினர். இவ்வகை அருச்சுநன் தீப்பாய இருக்கையில் கண்ணன் அருச்சுநனை நோக்கி அருச்சுநா அதோ பொழுதிருக்கிறது சயத்திரதனைக் கொன்று அவன் தலை சிமந்த பஞ்சகமடுவில் தவஞ்செய்து கொண்டிருக்கும் அவன் தந்தையின் கரத்தில் விழச்செய்க என அருச்சுநன் அவ்வாறு செய்யச் சயத்திரதனுடன் அவன் தந்தையு மிறந்தனன். இவ்வாறு இறந்த சயத்திரதனைப் பற்றித் துரியோதனன் விசனப்படுகையில் துரோணர் அவன் விசனத்தைமாற்றி நான் போர்செய்வேனென்று போரிடுகையில் அஸ்வத்தாமன் அஞ்சனவன்மன் முதலியோரை மாய்த்தான். வீமன் வாகுலீகன் தம்பியர் பன்னிருவரை மாய்த்தான். இவ்வகை இருக்கையில் சூரியன் அத்தமித்தனன்.

பதினான்காம்நாள் இராச்சண்டை - பதினான்காநாளிரவில் இருபடைகளும் போரிடுகையில் கடோற்கசனை வருவிக்க என, அவ்வாறு செய்யக் கடோற்கசன் வந்து அன்றிரவு பெரும்போர் மாயைகளுடன் செய்து பலரைவருத்திக் கன்னனுடன் போரிடுகையில் கன்னன் விடுத்த வேலால் மாய்ந்தனன்.

பதினைந்தாம்நாள் யுத்தம் - பதினைந்தாநாள் இருபடைகளும் யுத்தகளம் புகுந்து யுத்தஞ்செய்கையில் துரோணர் பாண்டவர் சேனைகளை அதஞ்செய்து நிற்கச் சப்தருஷிகளும் துரோணரையணுகி நீர் வேதியர் இவ்வகை யுத்தஞ்செய்தல் உமக்குத் தகாதெனத் துரோணர் ஓய்ந்திருக்கையில் கண்ணன் திட்டத்துய்மனைத் துரோணரிடம் போரிடக்கட்டளையிட்டுத் தருமபுத்திரரிடஞ் சென்று அசுவத்தாமா எனும் மாளவன் யானை போரிடைமாய்ந்ததென்றுகூறின் அசுவத்தாமன் போரிடைமாய்ந்ததாக எண்ணித் துரோணர் உயிர் விடுவர் என்று கூறத் தருமர் நான் பொய்கூறேனென்று அசுவத்தாமா அதாகுஞ்சரமென்று சங்கம் பூரித்த மாத்திரையில் கண்ணன் பாஞ்சசன்னியம் பூரித்துக் குஞ்சரமென்பதை மறுக்கக்கேட்ட துரோணர், மகன் மாண்டான் என்று அசைவறச் சுவானுபவத்தி லிருக்கையில் திட்டத்துய்மன் துரோணர்மீது அம்பேவித் தலையை யறுத்தனன். இதையறிந்து அசுவத்தாமன் அக்னியாஸ்திரம், நாராயணாஸ்திரம், பிரயோகஞ்செய்தும் பயனற்றிருக்கையில் வியாசபகவான்தோன்றி, அவனுக்கு ஊழின் வலிகூறக் குருக்ஷேத்ரம் அனுப்பப் பாண்டவரும் பாடி வீடு புகுந்தனர். பொழுது சாய்ந்தது.

பதினாறாம்நாள் யுத்தம் - துரியோதனன் கன்னனுக்குச் சேநாபதிபட்டங் கொடுத்தனன். கன்னன் யுத்தகளம் நெருங்கி யுத்தஞ்செய்கையில் வீமன் கேமதூர்தியைக் கொன்றான். கன்னன் அருச்சுநனுடன் சண்டையிட்டு இளைக்க விஜயன் இன்று போய் நாளை யுத்தத்திற்கு வாவென்று கூறினன். பின் அருச்சுநன் கிருஷ்ணன் கட்டளையால் சஞ்சத்த கோபாலரைக் கொன்று நிற்கையில் தருமர் துரியோதனனை யெதிர்த்து நிராயுதனாக்கிப் பழிக்க மரண மூர்ச்சையடைந்த துரியோதனன் ஓடிமறைந்தனன். சூரியனும் மறைந்தான்.

பதினேழாம்நாள் யுத்தம் - இருவர்சேனைகளும் போர்தொடங்கத் தருமபுத்திரர் கிருஷ்ணமூர்த்தியைப் பிரார்த்தித்து யுத்தசந்நத்தராயினர். கன்னன், துரியோதனனை நோக்கி இன்றைக்கு எனக்குச் சல்லியனைச் சாரதியாகச் செய்வித்தால் நலம் என அவ்வாறே துரியோதனன் வேண்டுகோளால் கன்னனைச்சினந்து பின் ஒருவாறிசைந்து அருச்சுநனை வெல்வேனென்ற கன்னனைப்பழிக்கச் சல்லியனும், கன்னனும் ஒருவர்க் கொருவர் வாட்போர் தொடங்கத் துரியோதனன் சமாதானஞ் செய்தனன். பின் கன்னன் பாண்டவர் சேனையைக்கண்டு பயந்து குறைகூறிச் சண்டை தொடங்கினன். கன்னன், தருமருடன் போரிட்டுத் தருமரை நிந்தித்தனன். இதற்குப் பின் கன்னன் அருச்சுநனுடன் போரிட அருச்சுநன் இவனை வெற்றி பெருது பாசறை புகுந்தனன். கண்ட தருமர் அருச்சுநன் வெற்றி பெருது மீண்டது பற்றி ஏச அருச்சுநன் தருமரைக் கொல்வேன் என்று சினந்தெழக் கண்ணபிரானால் தடுக்கப்பட்டு யுத்தத்திற்குச் சென்றனன். இந்த யுத்தத்தில் துச்சாதனனும் அவன் தம்பிமாரும் இறந்தனர். பின் கன்னன் மிகுந்த கோபமுற்றுச் சல்லியனைப் பழித்து வீமனுடன் எதிர்த்துப் போரிடுகையில் விடசேநன் நகுலனைவென்றூர்க்க அருச்சுநன் அவன் தலையைக் கொய்தனன். இதனால் கன்னன் விசனமுறச் சல்லியன் தேற்றினன். பின், அருச்சுநனை வெல்லத் தேரோட்டச் சல்லியனுடன் கூறச் சல்லியன் இன்றைக்குச் செல்லின் வெற்றிபெருய் என்னக்கேளாது அருச்சுநனுடன் போரிட்டனன். இந்த யுத்தத்தில் அருச்சுநன் வெற்றிபெறுமை கண்ட கண்ணன் கன்னனிடம் வேதியராகச்சென்று அவனது தருமத்தைத் தானம்வாங்கிமீண்டு அருச்சுநனைப் பாணம் பிரயோகிக்க ஏவ அருச்சுநன் அவ்வாறு செய்யக் கன்னன் இறந்தனன். கன்னனது மரணங்கேட்ட குந்தி புலம்பக்கண்ட பாண்டவரும் புலம்பக்கண்டோர், "காடாண்டாரும் பாண்டவர், நாடாண்டாரும் பாண்டவர்" என்னப் பாசறை இருவரும் புகுந்தனர்.

பதினெட்டாம்போர் - துரியோதனன், இறந்த சுற்றத்தினர்க்காகத் துக்கித்துச் சகுனியால் தேறி யுத்தந் தொடங்க வீமனால் துரியோதனனுதியர் மூர்ச்சித்தனர். நகுலன் சகுனியின் சிரத்தைக் கவ்டித்தான். பின் துரியோதனன், சிறிது சேனைகளுடன் யுத்தத்திற்கு வந்து சேனையிழந்து ஓடி ஒருமடுவில் ஒளிக்க அச்வத்தாமனுல் தேறி வீமனால் வெளிப்பட்டுச் சிமந்த பஞ்சக நதிக்கரையில் தருமர் சண்டையை நிறுத்தக்கேட்க அவரைப்பழித்து வீமனால் தொடைமுரியு அடிபட்டுப் போர்களத்தில் விழுந்தனன். தொடைமுரிந்து விழுந்தவனை வீமன் உதைக்கத் தருமரும் பலராமரும் கோபிக்கக் கிருஷ்ணமூர்த்தி அவர்களது கோபத்தைத் தணித்தனர். பின் திருதராட்டிரன் காந்தாரி முதலியோர் விசனப்படக் கிருஷ்ணமூர்த்தி அவர்களைத் தேற்றினர். பின் கண்ணன் அருச்சுநனைத் தேர்விட்டிறங்கக் கூற உடனே தேர் எரிந்தது. பின் துரியோதனன், வீமன் தனக்குச்செய்த தீமைகளை அசுவத்தாமனுடன் கூறி வருந்தி அசுவத்தாமனுக்குச் சேனாபதிபட்டங் கட்டினன்.

பதினெட்டாம்நாள் இராச்சண்டை - பதினெட்டாநாளிரவு அசுவத்தாமன் பாண்டவர்களைக் கொல்லப் பாசறைக்குச் சென்றபோது ருத்ரமூர்த்தி பூதவுருக் கொண்டு எதிரில் வெருட்ட அஞ்சினன். பின்னவனைத் தேற்ற அசுவத்தாமன் வேண்ட ருத்ரமூர்த்தி ஒருவாள் அருளி, இன்றிரவு எவரைச் சந்திக்ினும் வாளால் வெல்வாய் என்று மறைந்தனர். அசுவத்தாமன், இளம் பஞ்சபாண்டவர்களையும், சோழனையும் மடித்தனன். இதைக்கேட்ட வீமன் அசுவத்தாமனைப் போர்க்கழைக்க அஸ்வத்தாமன் கோபித்துப் பிரமாஸ்திரம் விட அதுகண்டு அருச்சுநனும் பிரமாஸ்திரம்விட இரண்டும் போர்செய்ய வியாசர் சரங்களைமீட்கக் கட்டளையிட அருச்சுநன் சரம் அசுவத்தாமன் சிரோமணியைக் கொண்டு மீண்டது. அசுவத்தாமன் கணை பாண்டவர் தேவியரின் கருவழிக்கச் செல்கையில் உத்தரையின் வயிற்றிலிருந்த பரிச்சித்தைக் கண்ணன் காத்தனர். மற்ற கருக்களையழித்த அசுவத்தாமனுக்கு (௩000) வருஷம் குட்டநோய் அனுபவிக்கக் கண்ணன் சாபமளித்தனர். இவ்வாறு பாரத யுத்தம் முடிந்தது. பிறகு திருதராட்டிரன் தன் புத்திரர்களுக்குத் திலதர்ப்பணாதிகள் முடித்து வனஞ்செல்ல வியாசரால் தூண்டப்பட்டுக் காந்தாரியுடன் குந்தியும் உடன்வரச் சதரூபருடைய ஆச்ரமம் சென்று பர்

ணசாலை செய்துகொண்டு (கூ ஞூ) இருந்து காட்டுத்தீயில் பிரவேசமாயினன். பிரபாச தீர்த்தக்கரையில் யாதவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டிறந்தனர். பலராமர் தேக நீங்கினர். கிருஷ்ணமூர்த்தியும் வேடன் அம்பு எறுண்டிறந்தனர். பின் தருமர் தம்பியருடன் (கூகூஞூ) அரசாண்டு பின் தவமேற்கொண்டு இமயமடைந்து (கஞூக்குப்) பின் சுவர்க்கமடைந்தனர்.

**பாரதப்போர்** — கி - மு - பன்னிரண்டாம் நூற்றூண்டு.

**பாரதம்** — 1. வியாசரால் வடமொழியிற் செய்யப்பெற்றுத் தமிழில் வில்லிபுத்தூராரும் நல்லாப்பிள்ளையாலும் மொழி பெயர்க்கப்பட்ட பாண்டவர் கதை. இதை வடமொழியில் வியாசர்கூற விக்னேச்வரர் எழுதினதாகக் கூறியிருக்கிறது.

2 ஜம்புத் தீபத்திலுள்ள வருஷம் (India).

**பாரதம் பாடிய பெருந்தேவனூர்**—1. இவர் தொண்டைநாட்டவர். இவர் பாரதத்தை உரையிடை யிட்ட வெண்பா ஆசிரியங்களால் (கஉ00) பாடல்களாகப் பாடியவர். கடைச்சங்கத்திருந்த (சுகூ) புலவரில் ஒருவர். கடைச்சங்கத்தவர் அனைவரும் பொய்யடிமையில்லாத புலவர் எனத் துதித்திருத்தலால் இவர் சைவர். ஆயின் பாரதத்தில் திருமாலை வணங்கியிருத்தலின், இவர் வைணவர் எனின், புலவர் ஏற்புடைக் கடவுளைத் துதித்தனர். ஆதலால் இவரை வைணவர் எனத் துணிதல் அடாது. இவர் புறநானூறு, நற்றிணை முதலிய நூல்களுக்குச் சிவத்துதி கூறியிருத்தலே இவர் சைவர் என்பதைத் தெரிவிக்கும். (ஐங்குறுநூறு, அகநானூறு).

2. இவர் எட்டுத் தொகையுட் பெரும்பாலனவற்றிற்கும் காப்புச் செய்யுள் பாடியவர். பெருந்தேவனூர் எனப் பிறரு முளராதலின் அவரின் இவர் வேறென்பது தெரியப் பாரதம் பாடிய பெருந்தேவனூரென அடைமொழி கொடுக்கப்பட்டார். வியாஸ பாரதத்தை வெண்பாவும் அகவலும் உரைநடையும் விரவிவரப்பாடி வெளியிட்டமையிற் பாரதம் பாடிய பெருந்தேவனூர் எனப்பட்டார். இவர் பிறந்தது தொண்டைநாடு எனச் 'சீருரும் பாடல் ... பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம் பதிகாண், மாருதம் பூவின் மணம் வீசிடுந் தொண்டைமண்டலமே" எனத் தொண்டைமண்டலச் சதகம் கூறுநிற்கும். இப்பொழுது பாரதவெண்பா வென்று அச்சிட்டு வழங்கு நூலில் முதலில் விநாயக வணக்கமும் அடுத்துத் தெள்ளாற்றிற் போர் வென்ற அரசன் சிறப்புங் கூறுவது காரணமாக இவர் தொண்டை நாட்டிற் பிறந்தவரென்று படிக்காசுப் புலவர் தமது தொண்டைமண்டல சதகத்து எழுதிவைத்தார். தெள்ளாற்றிற் போர் வென்றது கடைச்சங்கம் அழிந்த பல்லாண்டுகளுக்குப் பின்னரேயாம். அதனைக் கூறுதலின் இப்பெருந்தேவனூர் கடைச்சங்கப் புலவரல்லரென்பது தேற்றம். ஆதலின் இப்பொழுது வழங்கும் பாரதவெண்பாப் பெருந்தேவனூர் பாடியதன்றெனவும் பெருந்தேவனூர் பாடியது உதாரணமாக எடுத்தாண்ட சில செய்யுளன்றி நூல் முழுவதும் அழிந்துவிட்டதென்றும் சில பெரியோர் கூறுவதுண்மை யெனக் கொண்டு தொண்டை நாட்டினரென ஒருதலையாகக் கொள்ளா தொழிக. அச்சிட்டு வழங்கும் பாரதவெண்பா நடையையும் உதாரணமாக முன் பெடுத்தாண்ட பாரதவெண்பா அகவல்களின் நடையையும் ஒப்பு நோக்கியறிக. மற்றும் இந் நற்றிணைக்குக் கூறிய காப்பு விஷ்ணு ஸகஸ்திர நாமத்தியான சுலோகமாகிய "ஹூ:வாஉெள" (பூ:பாதௌ) என்றதின் மொழி பெயர்ப்பேயாம். நற்றிணையிலும் அகத்திலும் பெருந்தேவனூரென ஒருவர் காணப்படுகிறுர். அவரின் இவர் வேறென்பது பாரதம் பாடிய என்ற அடை மொழியாற் பெறப்படும். நற்றிணையிலே திருமாலையும் மற்றவற்றிற் சிவபிரான் முதலாயினேரையும் இவர் வணக்கங் கூறுதலால் எல்லா மதத்தினையுந் தன்வயினடக்கிக் கொண்ட அத்துவைத மதத்தினராவர். இவர் பாடியனவாக நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகம், புறம் ஆகிய இவ்வைந்து தொகை நூல்களின் காப்புச் செய்யுள்களைந்தும் திருவள்ளுவமாலையி லொன்றுமாக ஆறு செய்யுள்கள் கிடைத்திருக்கின்றன.

**பாரதர்** — பாரத வம்சத்தில் பிறந்த அரசர்.

**பாரதவெண்பா** — இது பாரதத்தை வெண்பாவாகக் கூறிய தமிழ் நூல். இது பெருந்தேவனூரால் இயற்றப்பட்டது. இதற்கு வெண்பாப் பாரதம் எனவும் பெயர்.

**பாரதன்** — சமான் குமரன். இவன் குமரன் பிரதி.

**பாரதி** — 1. கடம்பையூரில் இருந்த புலவர். இவர் பாரதிதீபமென நிகண்டு ஒன்று இயற்றினர்.

2. இவர் இராமாயணத் திருப்புகழ் பாடிய கவி. இந்நூலுக்கு இராமஜயம் என்றும் ஒரு பெயர் உண்டு என்பது நூலால் தெரிகிறது.

**பாரதிதீபம்** — ஒரு நிகண்டு பாரதியால் இயற்றப்பட்டது.

**பாரதியாவது** — கவுத்தனையே தலையாகக் கூத்துக் கொடுக்கப்படுவது.

**பாரத்துவாசன்** — 1. பரத்துவாசனைக் காண்க.

2 இவர் எல்லா குடும்பங்களையும் தாங்குதலால் இப்பெயர் பெற்றவர்.

**பாரவி** — கிராதார்ச்சுநீயம்செய்த வடநூற் புலவன்.

**பாரன்** — 1. பிருது குமரன்.

2. புஞ்சிக ஸ்தலையென்னும் அரம்பையைக் கூடிக் கலாவதியைப் பெற்றவன்.

3. கலாவதியின் தந்தை.

**பாரி**—இவன் நாடு தகடூர் நாட்டிற்கு அருகிலுள்ளது. சேலம் கோயம்புத்தூருக்கு மேற்கு. இவனுக்கு வேள்பாரி என்றும் பெயர். அரண்வலி முதலிய பெருமைகளும் பல்வகை வளங்களு முடையதும், முந்நூறு ஊர்களைக் கொண்டதுமாகிய பறம்பு அல்லது பறம்புமலையைத் தன் அரசிருக்கையாகக் கொண்ட, வேளிர் குலத் தலைவனான பாரி என்பான், 'வரையாதளிக்கும் பெருவள்ளல்' எனத் தமிழ்நாடு புகழ வாழ்ந்து வந்தான். இவன், மிக்க கொடையாளியும் மிழலைக் கூற்றத்துக்குத் தலைவனுமான வேள் - எவ்வி என்பவனுடைய வழித்தோன்றல். இப்பாரிக்கு அங்கவை, சங்கவை என்னும் மகளிர் இருவர், எல்லாச் சிறப்புடன் கல்விச் சிறப்புடையராயு மிருந்தனர். அந்தணர் திலகராயும் புலவர் பெருமானாகவும் விளங்கிய கபிலர், இப்பாரிக்கு உயிர்த் தோழராக அமைந்தனர். பாரியுடைய பெருங்கருணை விளக்குதற்குச் சிறு கதை ஒன்றுண்டு. இவன் ஒருகால் தேரூர்ந்து காட்டுவழியே சென்றபோது, அங்கே முல்லைக்கொடி ஒன்று படர்தற்குக் கொழுகொம்பில்லாமல் தளர்ந்து நடுங்குவது கண்டு, அவ்வோரறிவுயிரிடத்தும் உண்டாகிய தன் பேரருளால், அக்கொடி இனிது படரும்படி தான் ஏறிச்சென்ற பொற்றேரை யதன் பக்கத்தே நிறுத்திவிட்டுத் தன் மெல்லிய அடிகள் சிவக்குமாறு நடந்து சென்றனன் என்பர். இவ் வரலாறு, பழைய நூல்கள் பலவற்றிலும் புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. இவ்வாறே, இவன், நிழலில்லாத நீண்ட வழியில் தனிமரம்போல நின்று, தன்னை யடைந்த புலவர், மடவார், வறியார், மெலியார் முதலிய யாவர்க்கும் தன் இன்னருள் சுரந்துவந்தமையால் இவன் புகழ் தமிழக முழுவதையும் தன் வயமாக்கிக் கொண்டது. இங்ஙனம், வேள்பாரி உலகம் புகழும் பெருவள்ளலாக விளங்கி நிற்ப, தமிழரசராகிய சேரசோழ பாண்டியர் மூவரும் இவனைத் தம் பகைவனாகக் கொண்டிருந்தனர். நன்மையன்றி வேறு செய்ய அறியாத இவ்வள்ளலிடம் இவ்வேந்தர் செற்றம் வைத்ததற்குக் காரணம் நன்கு அறியப்படவில்லையாயினும், தம்மினும் பாரி படைத்த பெரும்புகழால் நிகழ்ந்த பொறாமையே அதன் காரணமாக வேண்டுமென்பது பல ஏதுக்களால் ஊகிக்கப்படுகின்றது. இவ்வாறு, பாரிக்கும் மூவேந்தர்க்கும் உள்ள பகைமை முற்றிவளரவும், அவ்வேந்தர் ஒன்றுசேர்ந்து படையெடுத்துச் சென்று பாரியது பறம்பு மலையை முற்றுகையிட்டனர். இந்நிலைக்குப் பாரி சிறிது மஞ்சாமலும், அவர் தாக்குதலைப் பொருட்படுத்தாமலும் ஊக்கத்தோடும் அவரை எதிர்த்து நின்றான். அம் முற்றுகைக் காலத்தே, பாரிக்கு உயிர்த்தோழரான கபிலர், உள்ளே கிளிகள் பலவற்றை வளர்த்துப் பழக்கி, அரணுக்கு அப்புறமுள்ள விளைநிலங்களி லிருந்து நெற் கதிர்களை நாளுங் கொண்டுவரும்படி செய்வித்து, பாரியின் குடிபடைகளைக் காத்து வந்தார். முற்றுகையிட்ட மூவேந்தரும்நெடுங்காலம் வரை வெற்றியின்றிப் பாரி சேனையாற் பரிபவப்பட்டு நிற்க, அப்போது, புலவர் பெருமானாகிய கபிலர் வெளியே வந்து, அவ்வேந்தர் நாணும்படி அவரை நோக்கி, "அளிதோ தானே பாரியது பறம்பே, நளிகொண் முரசின் மூவிரு முற்றினும், உழவருழாதன நான்கு பயனுடைத்தே, ஒன்றே, சிறியிலை வெதிரி னெல்விளையும்மே, இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே, மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க் கும்மே,

நான்கே, அணிநிற வோரிபாய் தலின்மீ தழிந்து, திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே வான்க ணற்றவன் மலையே வான த்து, மீன்க ணற்றதன் சுனையே யாங்கு, மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயி னும், புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும் தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன், யானறி குவனது கொள்ளு மாறே, சுகிர்புரி நரம்பின்சீறியாழ்பண்ணி, விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர, ஆடினிர் பாடினிர் செலினே, நாடுங் குன்று மொருங்கீ யும்மே." "கடந்தடு தானை மூவிருங்கூடி, யுடன்றனி ராயினும் பறம்பு கொளற் கரிதே, முந்நூ றூர்த்தே தண் பறம்பு நன்னாடு, முந்நூ றூரும் பரி சிலர் பெற்றனர், யாமும் பாரியுமுளமே. குன்று முண்டுநீர் பாடினிர் செலினே." என்னும் பாடல்களைக் கூறி, நீவிர் மூவிரும் ஒன்றுகூடிப் படைவலி பெரிதுங் கொண்டு எத்தனையோ காலம் முற்றுகை செய் யினும் பாரியது இப்பறம்பு மலையைக் கொள்ளுதல் அரிது; அவனுடைய முந்நூ றூரையும் பாடிப்பரிசிலர் பெற்றதுபோல, நீவிரும் பாடினவராய் வரின் இதனைக் கொள்ளுதல் எளிது" என்று பாரியது புரவலர்க் கருமையும், இரவலர்க் கெளி மையுமாகிய பெருநிலையை அழகாக வெளி யிட்டனர். இதன்மேல், அவ் வேந்தர் சூழ்ச்சிசெய்து, கபிலர் அறிவித்த பாரி யியல்புக்குப் பொருந்துமாறு, தாமே பரி சிலர் வேடம் பூண்டோ, பிறரைப் பரிசில ராக விடுவித்தோ அவனைத் தம்மகப்படும் படி செய்து வஞ்சித்துக் கொன்றுவிட் டனர். அந்தோ! பாரியுடைய உயிர்த் தோழராகிய கபிலர், அவனருமை மகளிர் இருவருடன், தம்மைப் போற்றி வந்த கருணைவள்ளலுக்கு நேர்ந்த அநியாயத்தை எண்ணிக் கலங்கி அவன் பிரிவை ஆற் றாமல் புலம்பி, அவன் அரசிருக்கையையும் அவன் பெருவாழ்வையும், அவன்கொடைச் சிறப்பையும், மற்றும் அவன் குண விசே டங்களையும் நினைக்குந்தோறும் உள்ளம் நெக்கு நெக்குருகித் தவித்தனர். இப் பரிதாப நிலையுடன், கபிலர், பாரிமகளி ராகிய அங்கவை சங்கவை யென்பாரைத் தம்மோடு அழைத்துக்கொண்டு தாம் பழ கிய பறம்புமலையை விடமுடியாமலே விடு த்து, அம்மகளிர்க்குத் தக்க மணவாளரைத் தேடித் தம் நட்புக்கடனைக் கழிக்கச் செல் வாராயினர். முதலில், கபிலர், வேளிர் குலத்தவனாகிய இளவிச்சிக் கோவையும் பின் அக்குலத்து இருங்கோவேள் என் பானையுங் கண்டு, பாரிமகளிரை மணம் புரிந்து கொள்ளும்படி வேண்ட அவ்விரு வரும், பாரிக்கும் பெருவேந்தர் மூவர்க்கும் உண்டாகிய பகைமையைக் கருதிப்போ லும் "முடியாது" என்று மறுத்துவிட்டா கள். பின்பு அப்புலவர் செய்வதொன்று மறியாமல் திகைத்து தம் வாழ்க்கையை முற்றும் வெறுத்தவராய், திருக்கோவ லூரில் தமக்கு வேண்டிய பார்ப்பார் சில ரது பாதுகாவலில் அம்மக ளிருவரையும் வைத்துத் தாம் வடக்கே சென்றார். இச் செய்தியெல்லாம் கேள்வியுற்ற நல்லிசைப் புலவராகிய ஔவையார், பெரிதும் வரு ந்தி, பெருவள்ளலாகிய பாரிமகளிரைத் தாமே சிறப்பிக்க வெண்ணி, அக்காலத் துத் திருக்கோயிலூரை யாண்ட மலைய மானாகிய தெய்வீகனுக்கு அவரை மணம் பேசி, அம்மணத்துக்கு மூவேந்தரையும் வரும்படி செய்வித்தும், பாரிகுடிக்கும் அவ்வேந்தர்க்கு மிருந்த பகைமையைப் போக்குவித்தும், தம் தெய்வத் தன்மை யாற் பற்பல அற்புதச் செயல்களை நிகழ்த் தியும் அக்கலியாணத்தை விமரிசை பெற நிறைவேற்றி, பாரிமகளிரை நல்வாழ்வு பெற வைத்தனர்."

**பாரிக்கிரகரோகம்** — கருப்பஸ்திரீகளின் பாலைக்குடிக்கும் பிள்ளைகளுக்குண்டாம் ரோகம். இது வயிறு பருமை, இருமல், இரைப்பு, வாந்தி முதலிய தரும். (ஜீவ.)

**பாரிசமௌலி** — மாணிபத்திரனுக்கு ஒரு பெயர்.

**பாரிசாதம்** — தெய்வதருக்களாகிய ஐந்தில் ஒன்று. பாற்கடலிற் பிறந்தது. இது நினைத்ததைத் தரவல்லதில் ஒன்று. இதைக் கண்ணன் சத்தியபாமை பொருட் டுப் பூமியிற் கொண்டுவந்து நாட்டினர்.

**பாரிபத்திரம்** — கருசதேசத்திலுள்ள பட்ட ணம்.

**பாரிப்பிலவன்** — நளன் குமரன். இவன் குமரன் சுனையன்.

**பாரிமகளிர்** — "பாரி எனும்வள்ளல் இறந்த பின்னர் அவனதின்னுயிர்த் தோழராகிய கபிலர், பாரியை நீத்துத் தனித்துயிர்வாழ் தற்கு மனமிலராயினும், அவனுடைய அறி வுடை மகளிரைக் காத்தற்கு வேறொரு வரு மிலராதல்பற்றி உயிர் கொடு நின்று,

அம்மகளிர்க்குத் தக்க அறிவும் பெருமையுமுடைய கணவரைத் தேட நினைந்து, அவர்களுடன், அவர்கட்குந் தமக்கும் பேரன்புமிக்க பறம்பினை விடமுடியாமே விடுத்து, அப்பாரியை நினையுந்தோறும் பறம்பினைத் திரும்பி நோக்குந் தோறும் உள்ளம் நெக்கு நெக்குருகிக் கண்ணீர்வார நின்று ஆற்றொணாத் துயராற் பொங்கியெழுந்த அன்புடைப் பாடல்களாற் பாரியினையும் பறம்பினையும் புகழ்ந்து கொண்டே சென்று ஒரூரிற் றங்கினர். அங்கு அன்றிரவு நிலாத் தோன்றியபோது அவருட னிருந்த பாரியினருமை மகளிர், தாம் இதற்கு முந்திய நிலாக்காலத்துத் தமது அரசுநிலையிட்ட திருவுடை நகர்க்கண்ணே இனிது மகிழ்ந்து விளையாடியதும், அடுத்த இந்நிலாக் காலத்துத் தாம் தந்தையிழந்து தண்பறம்பிழந்து தமியராய்த் துச்சிலொதுங்கித் துயர்கூர நின்றதும் தம்முள்ளத்தே தோன்ற, அப்போது, "அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவி, னெந்தையு முடையேமெங் குன்றும் பிறர் கொளா, ரிற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின், வென்றெறி முரசின் வேந்தரெங், குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே" என்னும் பாடலைப் பாடினர். இப்பாட்டால், இச் செய்யுள் செய்தற்கு ஒருமாதத்துக்குமுன், பாரி தன்னரசிருக்கையாகிய பறம்பின்கண் தம்மகளிர் முதலியோருடன் இருந்து வாழ்ந்திருந்தன னென்பது புலப்படுகிறது. இப்பாடல், சங்கத்தாராற் றொகுக்கப் பட்ட புறநானூற்றி லொன்றாகக் காணப்பட்ட வாற்றால், இம்மகளிர் நற்றமிழுணர்ந்த நங்கையருள் ஒருவராக உணரப்படும். பாரிமகளிர் இருவர் ஆதலின், ஈண்டும் 'பாரிமகளிர் பாடியது' எனப் பொதுப்படக் கூறப்பட்டமைபற்றி அவ் விருவருமே செந்தமிழ்ப் புலமையாற் சிறந்தா ராவரென்பதும் தெளியலாகும். புலவரிருவர் சேர்ந்து ஒரு பாடல் பாடுவது முன்வழக்கே. இம்மகளிரது இன்றமிழ்ப் புலமை, தமதரும்பெறற் றந்தையாகிய வள்ளற் பாரிக்கு ஆருயிர்த் தோழராகிய கபிலரென்னும் புலவர் தலைவர்பாற் பெற்றதாகும். பின்னர் கபிலர் அவ்வூரைவிடுத்து இளவிச்சிக்கோ என்பானிடஞ் சென்று இம்மகளிரது உயர்குடிப்பிறப்பு முதலியவற்றை எடுத்துரைத்து இவர்களை மணஞ்செய்து கொள்ளும்படி அவனைப் பாடி வேண்ட, அவனுடம் படாமையால் இருங்கோவேளென்பா னுழைச் சென்று அவனையும் அவ்வாறு வேண்ட, அவனும் அங்ஙனமே உடம்படானாய் மறுக்க இதற்காக அவனை முனிந்து பாடி, பாரிகுடிக்கும் மூவேந்தர்க்கு முண்டாகிய பகைமைபற்றி அரசரொருவரும் இவர்களை மணஞ் செய்து கொள்ள இயையாமற் கபிலர் அம்மகளிரைத் தமக்கினிய பார்ப்பார் சிலர் பாற் படுத்துப் பாரியின் பிரிவாற்றாது வடக்கிருப்பாராயினர். இம்மகளிர் வேளிர்குலக் கொடிகளாதலால் அக்குலத்து நல்லாண் மக்களையே தேடிச் சென்றன ரென்பது தெள்ளிது. அன்றியும், பார்ப்பார்களுக்கும் வேளிர்க்கும் மணநிகழ்ச்சி கூறுதலும் இயையாதாம். கபிலர், மகளிரை அரசர்க்கு மணஞ்செய்ய லாகாமற் பார்ப்பாரது பாதுகாப்பில் வைத்து வடக்கிருக்க ஒளவையார் அது தெரிந்து தெய்வீகன் என்னும் அரசனை, இம்மகளிரை மணஞ் செய்து கொள்ளும்படி உடம்படுவித்து அவர் மணத்தைச் சிறப்ப வியற்றினர் என்பதே இயைபுடைத்தாவது காண்க. இம்மகளிர் புலவர் பேரணியாங் கபில ரந்தணர்பாற் பயின்றமைக்கேற்ற நல்லிசைப் புலமையேயன்றி, வரையா வள்ளியோனாகிய பாரிமகளிர் என்றற்கேற்ற வள்ளற்றன்மை யுடையராயின ரென்பது, "மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும், பாரி மடமகள் பாண்மகற்கு — நீருலையுட், பொன்றந்து கொண்டு புகாவாக நல்கினா, ளொன்றுறு முன்றிலோ வில்" என்னும் பழமொழிச் செய்யுளாலறிக. முன்னமே ஒளவையாரது வரலாற்றுள் இம்மகளிரது திருமணச் சிறப்பு முதலியன கூறப்பட்டனவாதலான், ஈண்டு வேறெடுத்தோதினேனில்லை." (புற-நா).

**பாரியாத்திரன்** — 1. சிவகணத்தவரில் ஒருவன்.

2. (சூ.) அகிகன் குமரன்.

**பாரியாத்திரம்** — 1. ஒரு பர்வதம்.

2. குலபர்வதங்களில் ஒன்று. (பா.பீஷ்).

The western part of Vindya Range extending from the source of the Narmada to the gulf of Canbay.

**பாரியர்டாக்** — இது, மார்மாட் இனத்தைச் சேர்ந்தது. இது பேரிங் ஜலசந்தி பிரதேசத்தி லிருக்கிறது. இது, சிறு நாயை

யொத்த உருவமுள்ளது. இது கூட்டம் கூட்டமாய் வசிக்கும். இவ்வினத்திற்கு வாயில் பை உண்டு. இவை மணலில் வளை தோண்டிக்கொண்டு வசிக்கும். இவை இரைதேடப் புறப்படுகையில் உயர்ந்த இடத்தி லிரண்டு மூன்று இருந்து காவல் செய்கின்றன. அபாயம் வருவதாயின் காவலாளிகள் சத்தமிட மற்றவைகள் வளைகளில் ஓடி ஒளிக்கின்றன. இது,வெளிறிய சாம்பல் நிறமுள்ளதாதலால் இதன் மிருதுவான தோலிற்கு இதை வேட்டையாடுகின்றனர்.

**பாரிஷதாள்** — ஒருவகை பூதசாதியார்.

**பாரிஷேணகுமாரன்** — மகதநாட்டரசனாகிய சேணிகன், சேவினிடத்துப் பிறந்த தன் மூத்தகுமாரனை இளவரசாக்கினன். சேணிகனுக்கு மற்றொரு மனைவியாகிய அமிர்தமகாசேனையிடம் பிறந்த குணசேநன் இதனால் வருந்தித் தன் தாயிடம் கூறினன். அவள் சில திருடர்களுக்குப் பணங்கொடுத்துப் பாரிஷேணன் கட்டளையால் திருடுகிறோமென்று கூறச் செய்தனள். அப்போது தனவான் பாரிஷேண குமாரனைப் பிடிக்க அப்போது அவன் தியானத்துடனு யிருக்கச் சில தேவர்கள் வந்து தனவானைக் கீழே தள்ளிப் பாரிஷேணனைப் பூசித்தனர். பின் அரசனுர்குரிய ஐயத்தையும் ஒருதேவன் தெரிவித்துப் போயினன். தேவர்கள் தனவான்தொட்டதோஷம் நீங்கப் பாரிஷேணனைப் பாற்கடனீராலாட்டிச் சிங்காதனத் திருத்திப் போயினர். அரசன் அமிர்தசேனையையும் குணசேனனையும் நாட்டினின்று துரத்தினன். (சைந.கதை).

**பாநு**—1. ஒரு காந்தருவன். இவன் பெண்ணை ஒரு காந்தருவன் கேட்க மறுத்தமையால் அவனால் கொலையுண்டவன்.

2. சமரன் குமரன்.

3. பிருதுசேநன் குமரன்.

**பார்க்கத்தீரன்** — மகததேசத்து அரசன்.

**பார்க்கதிக்ஷர்** — அஜமீடன் குமரர்.

**பார்க்கபூமி** — 1. (ச.) பார்க்கன் குமரன்.

2. காச்யபர் வம்சம். இவனுக்கு (௫௦௦) புத்திரர். ஒருமுறை இந்திரனுக்குத் துன்பஞ் செய்து கொண்டிருந்த அசுரரைக் கொன்று துன்பந் தீர்த்தவன்.

**பார்க்கக்கூடாதவை** — மின்னல், எரிநக்ஷத்திரம், வேசையரலங்காரம், காலைவெயில், மாலைவெயில் இவற்றைப் புகழைவிரும்புவோர் நோக்கார். (ஆசாரக்கோவை).

**பார்க்கலாகாதவை** — பிறர்மனையாள், கள், களவு, சூது, கொலை இவற்றை நோக்குதலும் செய்தலும்,நினைத்தலும் ஆகா. இவை செய்யின் பலரிகழ்ச்சியும் நாகமும் உண்டாம். (ஆசாரக்கோவை).

**பார்க்கவச்யவனர்** — ஒரு இருடி. இவர் தேவி சுகன்னி. இவரைச் சவனருஷியெனவுங் கூறுவர். இராமமூர்த்தியிடம், லவணசுரன் இடுக்கண் கூறியவர்.

**பார்க்கவமுனிவர்** — இவர் சதானிகன் குமரர், தானதிகளைச் செய்த தன் தந்தை எவ்வாறு இருக்கிறுனென்று கேட்ட வினவிற்கு விடையளிக்கக் கருதிச் சூரியன் முன்னே பிராமண வடிவங்கொண்டு முன்சென்று வழிகாட்ட, யமபுரந் தாண்டிச் செல்லுகையில் ஒரு வேதியன் தன் கையில் தண்டந்தாங்கி இவரை மறுத்து நான் உனக்குப் புராணங் கூறுகையில் ஏதேனுங் கொடுப்பதாகக் கூறிக் கொடாதொழிந்தனை இப்பொழுது நீ செய்த தவத்திற் பாதி தருகவென அதற் கிசையாதது கண்டு சூரியன் நடுக்கூற ஆறிலொன்று கொடுத்து நீங்கப், பின் இடையன் பசு மேய்த்ததற்குக் கூலி கொடாததற்கு ஆறிலொருபங்கு அவனுக்குக் கொடுத்து நீங்கி, ஒரு சாலியன் வஸ்திரம் வாங்கியதில் பாக்கிக்காக மறுக்க மிச்சத்தைக் கொடுத்துப் புண்ணிய நீங்கியதால் மேலே செல்ல வலியற்றுச் சூர்யன் தன் கையைப்பற்றச் சதானிகனிருந்த இடத்திற் சென்றனர். அச்சமயம் அவ்வரசனை யமகிங்கரர் அடுப்பிலேற்றிச் சமைத்துக் கொண்டிருந்தனர். முனிவர் அவனைக் கண்டு இதற்கென்ன காரணமென்ன நான் பலதானதிகள் செய்தவனாயினும் பிரஜாபீடையாற் பொருள் தேடினேனுதலா லிவ்வகை நேர்ந்ததாதலின் என் குமரனிட மிதனைக் கூறி அவனால் தானதிகள் செய்யக் கட்டளையிடின் என் துன்ப நீங்குவேனென அவ்வாறு பூமியில் சதானிகன் குமரனிடங் கூறிச் சதுர்த்தசிவிரத மநுட்டிக்கச் செய்து தானதிகளைச் செய்வித்தனர். (சிவமகாபுராணம்.)

**பார்க்கவம்** — விநாயக மான்மியங் கூறிய உபபுராணத்தொன்று.

**பார்க்கவன்** — 1. வேதசிரசையின் குமரன்.

2. பாஞ்சாலதேசத்தவனாகிய குயவன். திரௌபதியின் சுயம்வரங் காணச்சென்ற பாண்டவர்க்கு இடந்தந்தவன்.

3. சுசச்சேபனுக்கு ஒரு பெயர்.

4. வீதிகோத்ரன் குமரன்.

**பார்காப்பான்** — இவர் கடைச்சங்கத்தவர் காலத்திருந்த அரசராக இருக்கலாம். இவர் குறுந்தொகையில் செய்யுள் (உசச) பாடினர்.

**பார்க்கவி** — பிருகுருஷியின் தவத்தால் அந்த ருஷியிடம் திருவவதரித்த இலக்ஷுமிதேவி.

**பார்க்கஸ்பத்தியமானம்** — சுக்கிரனை முதலாகக்கொண்டு கணிக்கும் கால அளவை.

**பார்சவதீர்த்தங்கரர்** — சைந இருபத்து மூன்றாவது தீர்த்தங்கரர். இவர் வாரணாசியில் உக்ரவம்சத்தில் விசுவசேநருக்கு அவர் மனைவி பிராம்மியிடத்தில் தைமாதம் கிருஷ்ணபக்ஷம் ஏகாதசி விசாக நக்ஷத்திரத்தில் பிறந்தவர். உன்னதம் (க) முழம், பச்சைவர்ணம், ஆயுஷ்யம் (க00) வருஷம், இவர்க்குக் கணதரர் - சுயம்பு முதலாகிய பதின்மர்.

**பார்ப்பனமுல்லை** — செவ்விமிக்க நறுநாற்றஞ் செறிந்த மாலையினையுடைய வீரக்கழலாற் பொலிந்த மன்னர் மாறுபாட்டைக் கெடுக்கும் நான்கு வேதத்தினையுடையோன் நன்மைமிக்க செப்ப முறைமையைச் சொல்லியது. (பு.வெ.)

**பார்ப்பனவாகை** — கேட்கக் கடவன கேட்டுத் தலைமை பெற்றவனையாகத் தான் வெற்றியைப் பெருக்கியது. (பு.வெ.)

**பார்வதி சமேதன்** — பார்வதியுடன் கூடிய சிவமூர்த்தி

**பார்வதி** — தக்ஷனிடம் அவதரித்த தாக்ஷாயணியென்னும் பெயர் நீங்க மலையரையன் தவத்தால் மகளாகத் திருவவதரித்து அவனிடம் வளர்ந்து சிவமூர்த்தியை மணந்த உமை.

**பார்வதியார்** — இவர் பொருட்டுப் பர்வதராஜன் சுயம்வரம் நாட்ட சகல தேசத்தரசரும் அதன் பொருட்டு வந்தனர். அக்காலத்து சிவமூர்த்தி பார்வதியார் மடிமீது குழந்தை உருக்கொண் டிருந்தனர். இதையறிந்த தேவர்கள் பார்வதியையடைய யுத்தம் தொடங்கினர். தேவர்களனைவரும் கைதம்பித்து செயலற்று சிவமூர்த்தியைத் துதித்து அநுக்கிரகம் பெற்றுப் போயினர். (பிரமபுராணம்)

**பார்வதீயன்** — சகுனிக்குச் சூதாட வன்மையைக் கற்பித்தவன். (பார-சபா.)

**பார்ஷணிசேநன்** — ஒரு ருஷி. இவரிடம் அருச்சுநன் தேவலோகத்திருந்து வருமளவும் பாண்டுபுத்திரர் நால்வரும் வசித்திருந்தனர்.

**பாலகர்** — சாதுகாரணர் மாணாக்கர்.

**பாலகன்** — 1. பிரத்தியோதன் குமரன். இவன் குமரன் வியாகயூபன்.

2. (ச.) சுவஞ்செயன் குமரன்.

3. முனிவர் வேடங்கொண்ட ஒரு சமணன்.

4. பிரச்சோதனன் புதல்வர்களுள் ஒருவன். சிறந்தவீரன். இவனை அவன் உதயணனுக்கு உதவியாகக் பகைவன்மேல் அனுப்புதற்குத் தன்னுள் நிச்சயித்திருந்தான். (பெருங் கதை).

**பாலகிருஷ்ண முதலியார்** — இவர் ஒரு வேளாண் பிரபு. இவர் இருந்தது குன்றவர்த்தனமென்னும் ஊர். காஞ்சிபுரம் திருவிழாவிற்கு வந்த ஒரு பெண் திசைதப்பி அடைய அவளைப் பெண்போ லாதரித்து அவளுக்கு வரிசை முதலிய செய்து அவள் புருஷன் தேடிவர அவனை மைத்துன முறை கொண்டாடி யனுப்பினவர்; இதனை "செண்டு......தங்கை முறைமை பெற்ற சீலன்பூ பாலர் தங்குலத்துவந்த பாலகிருஷ்ணசாமியே" என்பதாலறிக.

**பாலகிருஷ்ணர்**—அதர்வண வேதசாகைக்கு வியாக்கியானஞ் செய்த வேதியர்.

**பாலகீர்த்தி** — திருதராட்டிரான் குமரன்.

**பாலகுமாரர்**—பிரச்சோதனனுடைய பிள்ளைகளின் பொதுப்பெயர். (பெ.கதை.)

**பாலகுமாரன்** — ஆரியமன்னருள் ஒருவன். செங்குட்டுவனால் வெல்லப்பட்ட கனகவிசயர் தந்தை. (சிலப்பதிகாரம்)

**பாலக்கிரகோற்பத்தி** — பூர்வம் சிவபிரான் குமாரமூர்த்தியைக் காக்கும் பொருட்டு ஸ்கந்தக்ரஹம், புருஷவிசாககிரஹம், மேஷக்கிரஹம், ச்வக்ரஹம், பித்ருக்ரஹம் எனும் (ரு) கிரஹங்களையும் சகுனி, பூதனை, சீதபூதனை, அதிருஷ்டிபூதனை, முகமண்டலிகை, ரேவதி, சுஷ்கரேவதி எனும் (எ) பெண்கிரகங்களையும் சிருட்டித்தனர். இவை (கஉ) கிரகங்களும் காமரூபிகளாய்ச் சென்று குமாரக்கடவுளைக் காத்துவந்தன.

**பாலக்கிரகதோஷம்** — இது புருஷக்ரகம், பெண்கிரக மெனப் பிரிவுபடும். பாலசுப்ரமண்யருக்கு ஏவல் செய்திருந்து அவராக்ஞையால் அசுசியடைந்த மாதரின் பாலுண்ணும் சிசுக்களை வருத்துவது. இவற்றால் தோஷம் உண்டாமிடத்து அழுகை, சுரம்,

விகாரரூபம், கொட்டாவி, வாயில்நுரை, நெஞ்சில் குறு குறுப்பு, உண்டாம். அப் பூதங்களான தோஷங்களாவன. (1) கந்த கிரகதோஷம், (2) விசாககிரகதோஷம், (3) மேஷகிரகதோஷம், (4) சுவானகிரக தோஷம், (5) பிதுர்கிரகதோஷம், (6) சகு னிகிரகதோஷம், (7) பூதனகிரகதோஷம், (8) சீதபூதனகிரகதோஷம், (9) அதிர்ஷ்டி பூதனகிரகதோஷம், (10) முகமண்டலிகா கிரகதோஷம். (11) ரேவதிகிரகதோஷம். (12) சுஷ்கரேவதிகிரகதோஷம் என்பன வாம். பின்னும் சிலர் (1) நந்தனகிரகம், (2) சுநந்தனகிரகம், (3) பூதனகிரகம், (4) முகமண்டலிகாகிரகம், (5) பிடாலிகாகிரகம், (6) சகுனிகிரகம், (7) சுஷ்கரேவதிகிரகம், (8) அந்நிய வோடாலிகாகிரகம், (9) மத பேதனகிரகம், (10) ரேவதிகிரகம், (11) அர்ச்சகாகிரகம், (12) அற்புதாக்கிரகம். என்பர். பூர்வத்தில் சிவபெருமானால் படைக்கப்பட்ட இவ்வைந்து புருஷகிரகங் களும், இவ்வேழு பெண்கிரகங்களும் குழந் தையாகிய குமரக்கடவுளுக்கு ஏவல் செய் திருந்து சிவாக்கினைப்படி அன்னாதி பலி, ரத்த, கந்த, அக்ஷதை, இவைகளை விரும் பிப் பூலோகத்துவந்து அதிதிபிக்ஷை, பிதுர்விரதம், தேவபூஜை, அக்னிகார்யம், முதலியவற்றைத் தவிர்த்து அசுசிமாதர், அமங்கலமாதர், முதலியவரின் பாலைக் குடிக்கிற சிசுக்களின் ஆரோக்கியம் சுகம், வயது. முதலியவற்றின் பாதியை அபகரிக் கச் சிசுக்கள் அழுங்காலத்தும் மலசலத்தால் அசஹ்யமாகக் கிடக்கும் காலத்தும் நித்ரா நித்திரை காலத்தும், பருவகாலத்தும், வருஷ மாத சந்திகாலத்தும், காடி, ஆந்தை, பூனை, பக்ஷி, முதலியவைகளைப் போலும், முன்பு சேநாதிபத்யத்தைப் பெற்ற கந்த கிரகம் ஆதியான கஉ கிரகங்களும் குழந் தைகளைப் பிடித்து வருத்தும்.

**பாலசந்திரர்** — விநாயகருக்கு ஒரு பெயர். இது, சிறுபிள்ளையாய்ச் சென்று அனலா சுரனை விழுங்கி அவன் வெப்பத்தைச் சகித்துச் சந்திரனைப்போலக் குளிர்ந்திருந் தமையாலும், மாதவராசனும் சுமுதையும் காட்டில் தனித்திருந்து துன்பப்படுகையில் அவர்களுக்குக் குழந்தையுருவாய்க் காட்சி தந்து இடுக்கண் நீக்கியதாலும், பெற்ற பெயர்.

**பாலசரஸ்வதி** — நன்னையபட்டர் மாணாக் கர். வடநூற்புலவர்.

**பாலசுப்பிரமணியக்கவிராயர்** — பழனியி லிருந்தவர். பழனித்தல புராணம் பாடிய வர்.

**பாலத்தனார்** — நப்பாலத்தனார் காண்க.

**பாலரோகம்** — க்ஷீராலஜ ரோகம் - திரி தோஷத்தால் கெடுதி யடைந்ததாயின் பாலையுண்ட சிசுவிற் குண்டாம் ரோகம்.

குண்டாலரோகம் - இது, மாமிச தாது வையொட்டித் தேகத்தில் கட்டிகளைப் பிறப்பித்து வேதனை தருவது. இது வாத குண்டாலக் கட்டி, பித்தகுண்டாலக் கட்டி, சிலேஷ்மகுண்டாலக் கட்டி. இதனைச் செவ்வாப் பென்பர்.

தாலுகண்டகரோகம் - இது தவடையில் முள்ளூறுத்தல்போல் நமைச்சல்போலுண் டாக்கி உபத்திரவஞ் செய்வது.

நிருளிகா இரணம் - இது தேகமெங்கும் சட்டையிட்டது போல் கொப்புளங்களை உண்டாக்கும் ரோகம்.

பாலசோஷரோகம் - சிலேஷ்ம மிகுந்து ரஸதாதுக்களை அடைத்துக்கொள்கையில் சரீரம் சுஷ்கிக்கும். இதனை உள்ளுருக்கி, உடலுருக்கி என்பர்.

துந்தரோகம் - அஜீரணத்தால் வயிறு பருத்து நாபியில் நோய் தருவது.

குதக்கூடரோகம் - பிள்ளைகளின் வயிற் றில் புளித்த மலஞ்சேர்தலால் குதஸ்தா னத்தில் சிவந்த சிலேஷ்மம் திரண்டுருண்டு முண்டாகி வேதனை தருவது.

விஷமசிரா ரோகம் - பிள்ளைகளுக்கு அசீரணத்தால் ரத்த நரம்புகளில் நமைச் சலைத் தந்து துன்பந் தருவது.

முகதூஷிக ரோகம் - பிள்ளைகளுக்கு வாயில் இலவமுள்களைப் போலவே முள் ளுகளை உண்டாக்குவது. இதனை நாய்முள் என்பர். (ஜீவ).

**பாலவிசர்ப்பிரோகம்** — பிள்ளைகளுக்குண் டாகும் விசர்ப்பிரோகம். இது மர்ம ஸ்தா னங்களைப்பற்றி கொப்புளங்களாய்ப் பரவு வது. இது சாத்யா சாத்யம். (ஜீவ).

**பாலவற்கை** — தியுமத்சேநன், தேவி.

**பாலறவாயர்** — சேக்கிழாரின் கனிட்டர். அநபாயச் சோழரால் மந்திரித் தொழில் பெற்று இருந்தவர். தொண்டைமான் பட்டம் பெற்றவர். குன்றத்தூரில் பாலறு வாயர் கேணியெனத் தம் பெயரால் தடா கம் ஒன்று தோண்டுவித்தவர். சைவ வேளாளர்.

**பாலாகா** — பாலாகி என்பவனுக்குத் தாய்.

**பாலாகீ** — அசாத சத்ருவிடம் ஞானோப தேசம் பெற்றவன்.

**பாலாசுரன்** — இவன் பிராமணப் பிள்ளை வடிவாய்ச் சிந்தாசுரன் ஏவலால் விநாயக ருடன் விளையாடி அவரைக் கொலைபுரிய வந்து அவரால் இறந்த அசுரன்.

**பாலாயினி** — பாவ்கஎர் குமரரிடம் வேத மோதிக்கொண்ட இருடிபுத்திரர்.

**பாலாறு** — வசிட்டதேனு ஒருகாலத்து நந்தமா தேவரைக் கண்டு மயல்கொண்டு காமத்தால் பால் சுவறியது. இதையறிந்த வசிட்டமுனிவர் தருப்பையால் ஒரு கன்றை உண்டாக்கி விட்டனர். அதனால் காமந்தணிந்து முலைவழியால் பால்சுரந்து ஒழுகிற்று. அது பாலாறாயிற்று. இது புண்ணிய நதி. இதன் கரையில் அநேக சிவப்பிரதிட்டைகள் இருக்கின்றன.

**பாலி** — ஒரு பிராக்ருதபாஷை. இப்பாஷை யில் பௌத்த நூல்கள் இருக்கின்றன.

**பாலிநதி** — பாலாற்றைக் காண்க.

**பாலூட்டல்** — பிள்ளைபிறந்த (31)-ம் நாள் சந்திர பகவானையும், பூமி தேவியையும், பூசித்து சுபக்கிரக முதயமாகப் பிள்ளைக் குச் சங்கினுற் பாலூட்டல் வேண்டும்.

**பாலை** — 1. ஒன்றும் விளையாவெளி - இதன் கருப்பொருள். தெய்வம் - கன்னி, உயர்ந் தோர் - விடலை, காளை, மீளி, எயிற்றி, தாழ்ந்தோர் - எயினர், எயிற்றியர், மற வர், மறத்தியர், புள் - புறா, பருந்து, எரு வை, கழுகு, விலங்கு - செந்நாய், ஊர் - குறும்பு, நீர் - குழி, கூவல், பூ - குரா, மரா, உழிஞை, மரம் - பாலை, ஓமை, இருப்பை, உணவு - வழிபறித்தன, பதி யிற் கவர்ந்தன, பறை - துடி, யாழ்-பாலை யாழ், பண் - பஞ்சுரம், தொழில் - போர் புரிதல், சூறையாடல்.

2. இது ஒரு தாவரவகை. இதில் மர மும் கொடியுமுண்டு. மரம் - வெட்பாலை, தீம்பாலை, மலைப்பாலை, குடசப்பாலை, குளப் பாலை, கொடிப்பாலை, ஊசிப்பாலை, எழி லைப்பாலை, கறிப்பாலை, கொடிப்பாலை, திரு நாமப்பாலை, நிலப்பாலை, விழுப்பாலை, கழு தைப்பாலை முதலிய.

**பாலைக்கௌதமனர்** — இமயவரம்பன் தம்பி பல்யானைச் செல்புகழ்க் குட்டுவனைப் பாடியவர். (பதிற்றுப்பத்து)

**பாலைநிலம்** — எல்லாரோகங்களும் உண்டா தற் இடமாம்

**பாலைபாடிய பெருங்கடுங்கோ** — 1. இவன் ஒரு சேரன்; சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோவிற்கு ஒருபெயர். கடைச் சங்கத்தவர் காலத்தவன். (புறநானூறு, அகநானூறு.) (குறுந்தொகை.)

2. இவர் சேரமான் மரபினர். சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ வெனவும், பெருங்கடுங்கோ வெனவுங் கூறப்படுவர். பாலைத்திணையைப் பலபடியாகச் சிறப்பித் துப் பாடும் ஆற்றலுடையவர். பெருங் கடுங்கோவென்னு மியற் பெயருடையவர். பாலைத்திணை யொன்றனையே பாடியதனாற் பாலைபாடியவென்னு அடைமொழிகொடுக் கப்பட்டார். கொண்கான (கொங்கண)த் தன்னனையும் அவனது எழில் மலையையும் பாடியுள்ளார். நற்-நகக. பேய்மகன் இள வெயினி என்பவராற் பரிசில் வேண்டிப் பாடப்பெற்றவர். புறம்-கக. மிக்க வீர மும் கொடையு முடையவர். பிரிவச்சங் கூறும் தலைமகன் கூற்றாக "நிற்றுறந் தமை குவெனாயி னெற்றுறந் திரவலர் வாராவைகல், பலவா குகயான் செலவுறு தகவே." குறு. (கடுள) என்பதனல் இவர் கொடைத்தன்மை இவ்வண்ண மாயிருக்கு மென்பதை தெரிந்துகொள்க. பாலைத் திணையை உடன்போக்கு முதலாய பல வகைத் துறைகளையு மமைத்தும் விரித்தும் விளங்கப் பாடியுள்ளார். தலைமகனைத் தலை மகன் பெற்றமை ஒருவன் தான் வழிபடு தெய்வத்தைக் கண்ணெதிர் வரப்பெற்றார் போன்றதென்று கூறுகின்றார். இதில் தலைமகனை இனிதுகூறி நடத்திச் செல் வது வியக்கத்தக்கது. நற்-க. பிரிவுணர்த் திய வழித்தோழி தாம் முன்பு வந்த கொடியசுரம் இப்பொழுதும் என் கண் ணெதிரிலுள்ளது போலச் சுழலா நிற்கு மென இறும்பூது படக் கூறுகின்றார். நற்-சஅ. பூவிலை மடந்தையைக் கண்டு பருவம் வந்ததும் அவர் வந்தாரில்லையே என்று தலைவி கூற்றாக நொந்து கூறுகின் றார். நற்-ககஅ. கோங்கம் மலர்ந்திருப் பதைக் கார்த்திகை விளக் கெடுத்தலுக்கு உவமிக்கிறார். நற்-உ0உ. கூந்தலின் சிறப புக்கூறி அக்கூந்தலிற் சிறந்துகொள்ளும் பயனைக் கொள்ளாது பிரிவோர் அடைத் தானைக் காப்பதை மறந்தனரோவெனத் தோழி கூற்றாக விரித்துக் கூறுநிற்பர், நற் - நடள. குறு - நஎ-ல் இவர் கூறிய உள்ளுறையை அங்ஙனமே கொண்டார்

வாதவூரடிகள் திருக்கோவையார் உஎசுஃ. தலைவன் வாராமையும் தன்னைமுயங்காமையும் தன்னை அயலார் கூடலைபோல அகற்றலுமாகியவற்றைத் தலைவி கூறிய பகுதி இரங்குந் தன்மையதாகும். குறு - உகஃ. பிரிவுண்மையறிந்த தலைவி காதலனை மயக்குந்தன்மையுடைய கோலத்தோடு வந்து அவன்மீது சாய்ந்து முயங்கி வருந்துவதாக இவர் கூறியது நீத்தாரையும் விழைவிக்குந் திறத்ததாகும். அகம்-கு. பிரியுங் காதலர் இரும்பினாலாகிய உயிருடையரெனத் தலைவி கூற்றாகக் கூறுநிற்பர். அகம்-கஅகு. பிரிவோர் பழிவுடையரல்லர். அவரைப் பிணிக்க அறியாத என் தோள்களே தவறுடைய வெனத் தலைவி கூறுவதாக அமிழ்தம் பொழியாநிற்பர். அகம்-உகூஎ. மான்கொம்பு முளைத்து முதிருமளவுந் தோல் பொதிந்திருப்பது கூறுகின்றார். அகம்-உகஃக. பாலைநிலத்திற் பாம்பு வாடிக் கிடப்பது பணஞ் சொரிந்தமை போன்ற தென்கிறார். அகம் - ௩க௩. இவர் பாடியனவாக நற்றிணையில் பத்து (௩,சஅ, ககஅ, உ0உ, உஉச, உ௫௬, ௩கஅ, ௩௩எ, ௩அச, ௩௩௩) பாடல்களும் குறுந்தொகையில் பத்தும் அகத்தில் பதினொன்றும் புறத்திலொன்றுமாக முப்பத்திரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பாலைப்பண்** — 1. எழுவிதம், அவை செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கோடிப்பாலை, விளரிப்பாலை மேற் செம்பாலை என்பன. பின்னும் பாலை நான்கு வகைப்படும். அவை ஆயப்பாலை, சதுரப்பாலை, வட்டப்பாலை, திரிகோணப் பாலை என்பன. இப்பண்கள் தாரம் உழை இளி முதலியவற்றுடன் மாறப் பற்பல வாம. இப்பாலைப் பண்ணில் தக்கராகம், காந்தார பஞ்சமம், சோமராகம், காந்தாரம் முதலிய பிறக்கும். உழைகுரலாகிய கோடிப்பாலை நிற்க இடமுறைத்திரியு மிடத்துக் குரல் குரலாயது செம்பாலை இதனில் குரலிற் பாதியும் தாரத்திலொன்றும் இரண்டின் அந்தரத்திலே கிளையாக்கித் தாரத்திலே நின்றவோரலகை விளரியின் மேலே நடவிளரி குரலாய்ப் படுமலைப்பாலை பிறக்கும். இம்முறையே துத்தம் குரலாயது செவ்வழிப் பாலையாம். இளி குரலாயது அரும்பாலையாம். தாரம் குரலாயது விளரிப்பாலையாம். கைக்கிளை குரலாயது மேற்செம்பாலையாம்.

2. செம்பாலையினும் படுமலைப் பாலை வலிது. படுமலையின் செவ்வழி வலிது. செவ்வழியின் அரும்பாலை வலிது. அரும்பாலையின் கொடிப்பாலை வலிது. கொடிப்பாலையின் விளரிப்பாலை வலிது. விளரிப் பாலையிற் மேற்செம்பாலை வலிது. எழிசைகளில் தாரத்துள் உழையும், உழையுள் குரலும், குரலுள் இளியும், இளியுள் துத்தமும், துத்தத்துள் விளரியும், விளரியுள் கைக்கிளையும் பிறத்தல் தகுதி. இவற்றின் பிறப்பிடங்கள் மிடற்றால் குரல், நவாற்றுத்தம், அண்ணத்தாற் கைக்கிளை, சிரத்தாலுழை, நெற்றியாலிளி, நெஞ்சால் விளரி, மூக்காற்றாரம், பிறக்கும் என்பர். இவற்றின் மாத்திரை, ஓசை, எழுத்து, மணம், சுவை முறையே வருமாறு, ௩, ச, ௩, உ, ச, ௩, உ, வண்டு, கிளி, குதிரை, யானை, குயில், தேன், ஆடு, ஆ, ஈ, ஊ, எ, ஐ, ஓ, ஔ, மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், தாமரை, புன்னை, பால், தேன், கிழான், நெய், எலம், வாழை, மாதுளங் கனி.

தெய்வம் - விச்வாமித்ரன், இயமன், அங்கி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன்.

**பாலையாநந்தர்** — சச்சிதாநந்தமாலை இயற்றிய புலவர்.

**பாலைவனங்கள்** — சில சமபூமிகள் மழைக் காதாரமில்லாமலும், மரங்கள், குட்டைகள் முதலிய நிழல் நீர்வளங்களில்லாமலுமுள வாம். பொறுக்கக்கூடாத உஷ்ணமுள்ள வாய்ச் சூறைக்காற்றினால் துன்புறுத்தும் இடங்களாம். இவ்வகைப் பாலைவனங்களில் சில ஆசியா கண்டத்தில் உள. ஆயினும் ஆபிரிகா கண்டத்திலுள்ள சகாராபாலைவனமே அவற்றுள் பெரியது. சகாராபாலைவனம் இது கிழக்கு மேற்கில் (3000) மைல் நீளமும் தெற்கு வடக்கில் (900) மைல் பரப்புள்ள தென்று எண்ணுகின்றனர். இதில் சில முட்செடிகளும், கற்களுந் தவிரவேறொன்றுமில்லை இங்கு நீர்க்கோழியும், ஒட்டகச் சிவிங்கியும் வசிக்கின்றன. இதிலடிக்கும் சூறைக்காற்று அதில் யாத்திரை செய்பவரை ஒட்டகங்களுடன் மூடிவிடுகின்றது. சில இடங்களில் பொய் மணற் புதையல் மனிதரைஅழுத்திக் கொல்லுகின்றது. இதிலுண்டாம் சூறைக்காற்று (400) அடிமுதல் (6000) அடி உயர்ந்து தூண்கள்போல் நின்று பின் பெருமணல்

மேடாகின்றது. இது வருவதை யறியும் ஒட்டகம் கண்ணை மூடிக்கொண்டு பூமியில் கவிழ்ந்து படுத்துக் கொள்ளுமாம். அதிலிருக்கும் மனிதரும் அதன் பக்கத்தில் கம்பளியால் தம்மை மூடிக்கொண்டு படுத்துக் கொள்வர். சூறை சில வேளைகளில் மனிதரையும் மிருகங்களையுந் திக்குமுக்காட்டி மரணத்தையு முண்டாக்கும். இவ்வகை வனாந்தரத்தில் சில இடங்களில் ஒயசீஸ் எனுமிடங்களுண்டு. அவ்விடங்களில் சிறிது நீர் நிலைகளும் பேரிச்ச மரங்களுமுண்டு. அவ்விடம் பிரயாணிகள் தங்கிப் போவார். இதிற் சில இடங்களில் சில காடுகளும் உண்டு. இந்த இடங்களிலும், இந்தப் பாலைவனத்திற்கு மேற்கிலும் ஒரு பள்ளத்தாக்கான பூமியுண்டு. அதைச் சுற்றிலும் சில பட்டணங்கள் இருக்கின்றன. மற்றொன்று மங்கோலியாவிலுள்ள கோபியென்பதாம். மற்றும் சிறு பாலைவனங்கள் பாரசீகத்திலும், இந்தியாவிலும் உண்டு. ஆயினும் அவை சிறந்தன அல்ல. வெளிகளாம்.

**பால்** — 1. (கு) முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்பன. இவற்றுள் மயிரை உச்சியில் முடித்தல் முடி, பக்கமாக முடித்தல் கொண்டை, பின்னே செருகல் சுருள், சுருட்டி முடித்தல் குழல், பின்னிவிடுதல் பனிச்சை. பால் - (ரு) ஆண், பெண், பலர், ஒன்று, பல.

2. சராசரப் பொருள்களி லுண்டாம் சத்து. இது பெரும்பாலும் வெண்ணிறமாகவும், மஞ்சள்கலந்து மிருக்கும். அசரப்பால் கள்ளி எருக்கு முதலிய மரங்களிலுண்டாம் பால்.

3. (கச) கைக்கிளை முதல் பெருந்திணை இறுவாய் எழும், வெட்சி முதல் பாடாணிறுவாய் எழுமாம்.

**பால்கரப்பான்** — பிள்ளைகளுக் குண்டாம் ரோகங்களில் ஒன்று. தேகத்தில் ஊறல், சொறி, புண், விகாரரூபம் உண்டாக்குவது. கருங்கரப்பான், செங்கரப்பான், வரிகரப்பான், சொறிகரப்பான், ஆனந்தகரப்பான், மண்டைகரப்பான் இது இடுப்பிலுண்டானால் கடுவன் எனப் பெயர் பெறும். (ஜீவ.)

**பால்வகை** — இவை வெண்ணிறத்த ஆதலின் பாலெனப் பெயர் பெற்றன. இவை மக்கள், விலங்கு, தாவரவகைகளி லுண்டு. ஒவ்வொன்றும் பலவகைக் குணங்களுடையன. முலைப்பால், பசுவின்பால், காராம்பசுவின்பால், கொம்பசையும் பசுவின்பால், ஆகாப்பசுவின்பால், எருமைப்பால், வெள்ளாட்டுப்பால், செம்மறியாட்டுப்பால், யானைப்பால், குதிரைப்பால், கழுதைப்பால், தேங்காய்ப்பால், ஆலம்பால், அத்திப்பால், பேயத்திப்பால், தில்லைமரத்தின்பால், திருகுக்கள்ளிப்பால், சதிரக்கள்ளிப்பால், மான்செவிக்கள்ளிப்பால், இலைக்கள்ளிப்பால், கொடிக்கள்ளிப்பால், எருக்கம்பால், வெள்ளெருக்கம்பால், காட்டாமணக்கின்பால், எலியாமணக்கின்பால், பிரமதண்டின்பால், இவற்றின் குணங்களைப் பதார்த்த குணசிந்தாமணியிற் காண்க.

**பால்வடியுமரம்** — இந்த மரம் தென் அமெரிக்கா காடுகளில் இருக்கின்றன. இந்த மரத்தின் பட்டையில் தொளையிடின் அத்தொளையிலிருந்து பசுவின் பாலைப்போல் சுத்தமான உரிசையுள்ள பால் வடிகிறதாம். அதனால் அந்நாட்டார் அதற்குப் பசு மரம் எனப் பெயரிட்டழைக்கின்றனர்.

**பாவகஉலகு** — ஒரு உலகம். இதனை வேள்வி முதலிய அக்னிகார்யம் செய்தவர் அடைவர்.

**பாவகரம்** — காசியில் உள்ள மடு.

**பாவகன்** — 1. அக்னிக்குச் சுவாகாதேவியிடம் உதித்த குமரன்.

2. வசுக்களில் ஒருவன்.

**பாவநருஷி** — இவர், தம் தாயரின் இறந்த எலும்பைப் பல தீர்த்தங்களிலும் கொண்டு சென்று தீர்த்தமாடி அது எலும்பாய் இருக்கக்கண்டு கும்பகோணத்தில் மாமக தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பொற்றாமரைகளாய் இருக்கக்கண்டு களித்தவர்.

**பாவநன்** — தீர்க்கதவனைக் காண்க.

**பாவநாசம்** — திருநெல்வேலியில் உள்ள ஒரு தீர்த்தம்.

**பாவபுண்ணிய வழக்கம்** — (க) செய்தல், செய்வித்தல், உடன்படல்.

**பாவருசி** — இவன் ஒரு வேதியன். இவன் அதிதிபூசை செய்யாது உண்பதில்லையெனும் நியமங்கொண்டு வாழுநாளில் ஒரு நாள் மழை அதிகமாகப் பெய்ததால் ஒருவரும் அதிதிகள் நேராத இவனைச் சோதிக்க வேண்டி அக்னி ஒரு ரோகங்கொண்ட புலையனாய்ப் புண்களில் புழுச்சொரிய ஒரு மரத்தடியிலிருந்தனன். வேதியன் அவனைத் தன்னிடம் உணவு கொள்ளவேண்டத் தான் நீசனென்று மறுப்பவும் வேதி

யனிவ்வுடலைப் பற்றியுபசரிக்கவில்லை எல்லாரிடமும் அந்தர்யாமியாயிருக்கும் இறைவனை உபசரிக்கிறேனென்று வீட்டிற்கழைத்துச் சென்றுபசரித் தன்னமிட அக்னிதன் னுருக்காட்டி அவனுக்கு யோகோபதேசஞ் செய்தனன். (சிவமகாபுராணம்.)

**பாவனி** — ஒரு நதி. The river Irawadi in Burma. (பா. பி.)

**பாவலன்பரிசுபெறக்காற்செய்யும்வகை** - தனக்குப் பரிசுகொடாத பாவிதன் னூலை வேறுபட வெழுதிச்செவந்த பூவினைச் சூடி, தன்மனைக்குப் புறத்திலும், காளிகோவிலிலும், பாம்பு வாழ்புற்றிலும், சுடுகாட்டிலும், வீதியிலும், தான்வழிபடு கடவுளைத் தியானித்து அவன் மேற்பாடிய நூலை நெருப்பிற் கொளுத்தினும் பன்னிரண்டுமாதத்தில் பரிசுகொடாதவன் அழிவான் என அகத்தியர் கூறினர். பாடிய புலவன் பரிசுபெறுமல் மயங்கி நிலைகலங்கின், அப்பாட்டுடைத் தலைவன் சுற்றத்துடனும், அவைக் களத்திருந்தோருடனும் கெடுவன். தான் பாடிய பாட்டிற்குத் தலைவன்றனக்குப் பரிசுகொடானுகில், வேறொருவன் பெயரினைத் தன்னூலிலமைத்து, அவனூரையும், பெயரையும், ஒருசேர அதினின்றும் நீக்கி, சீரினையும், தளையினையும் பின்பு தன்னுற் பாடப்பட்டவன் பாட்டுக்கியைய நாட்டுவனுயின் முன்பு பாடப்பட்ட தலைவன் செல்வமிழந்து வருந்த இலக்குமியும் பின்புள்ளவனைச் சார்வாள். அவனுக்குச் செல்வமுண்டாகாது.

**பாவாடைராயன்** — அங்காளம்மையின் காவற்சேவகன். இவன் ஒரு கீழ்க்குலத்துச் சத்திபூசகன், அங்காளம்மை ஸ்மசானத்திருக்கையில் அவளிடஞ் சென்று உடுக்க ஆடைகேட்டு அவள் கொடுத்த பாவாடையை யுடுத்துக் குழந்தையுருக் கொண்டு அவளிட்ட பணி செய்துகொண்டிருந்து தவத்தால் பூதபிசாசங்களை வென்றிருந்தவனும்.

**பாவிகவணி** — பொருட்டோர் நிலைச்செய்யுட்டிறத்து கவியாற் கருதிச் சொல்லப்படுவதொரு குணம், அது, அத்தொடர் நிலைச் செய்யுள் முழுவது நோக்கிக் கொள்ளப்படுவதல்லது தனித்தொரு பாட்டானேக்கிக் கொள்ளப் புலப்படாதது. (தண்)

**பாவிகள் வசிக்கும் தேசங்கள்**—யுகந்தரம், பூதிலகம், அச்சுதச்சலம், பாஹ்லீகம். யுகந்தரத்திலுள்ளவர்கள் கழுதை ஒட்டக முதலியவற்றின் பாலைப்பானம் செய்பவர்கள், பூதிலகத்திலுள்ளவர்கள் சலத்தில் மலமூத்ரங்களை விடுகிருர்கள், அச்சுதச்சலத்தவர் ஒரே செவியுள்ளவர்களாவர் பாஹ்லீகர் - உலகத்தையே மோக்ஷமாகக் கொண்டவர்கள். (பா. சாந்.)

**பாவிருச்சர்** — இருக்குவேதம் ஓதுகிறவர்கள்.

**பாவினம்** — 1. (தொகை, வகை விரி). (i) வெண்பா. (ii) ஆசிரியப்பா. (iii) கலிப்பா. (iv) வஞ்சிப்பா. (v) மருட்பா என்றுந் தொகையானும் 1. குறள் வெண்பா; 2. சிந்தியல் வெண்பா, 3. இன்னிசை வெண்பா, 4. நேரிசை வெண்பா, 5. பஃறொடை வெண்பா, 6. நேரிசை ஆசிரியப்பா, 7. இணைகுறள் ஆசிரியப்பா, 8. நிலைமண்டில ஆசிரியப்பா, 9. அடிமறிமண்டில ஆசிரியப்பா, 10. நேரிசையொத்தாழிசைக் கலிப்பா, 11. அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பா, 12. வண்ணகவொத்தாழிசைக் கலிப்பா, 13. வெண்கலிப்பா, 14. தாவுகொச்சகக்கலிப்பா, 15. தரவிணைக் கொச்சகக்கலிப்பா, 16. சிற்றாழிசைக் கொச்சகக் கலிப்பா, 17. பஃறாழிசைக் கொச்சகக்கலிப்பா, 18. மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா, 19. குறளடிவஞ்சிப்பா, 20. சிந்தடி வஞ்சிப்பா, 21. புறநிலை வாழ்த்து மருட்பா, 22. வாயுறை வாழ்த்து மருட்பா, 23. செவியறிவுறூஉ மருட்பா, 24. கைக்கிளை மருட்பா என்னும் வகையானும்; 1. குறள் வெண்பா, 2. விகற்பக் குறள் வெண்பா, 3. நேரிசைச் சிந்தியல் வெண்பா, 4. இன்னிசைச் சிந்தியல் வெண்பா, 5. ஒரு விகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா, 6. இருவிகற்ப நேரிசைச் சிந்தியல் வெண்பா, 7. ஒரு விகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா, 8. இரு விகற்ப இன்னிசைச் சிந்தியல் வெண்பா, 9. ஒரு விகற்ப நேரிசை வெண்பா, 10. இருவிகற்ப நேரிசை வெண்பா, 11. ஒரு விகற்ப இன்னிசை வெண்பா, 12. பல விகற்ப இன்னிசை வெண்பா, 13. பல விகற்ப நேரிசை வெண்பா, 14. ஒத்த விகற்பப் பஃறொடை வெண்பா, 15. ஒவ்வா விகற்பப் பஃறொடை வெண்பா, 16. இன்னியல் நேரிசை ஆசிரியப்பா, 17. விரவியல் நேரிசை ஆசிரியப்பா, 18. இன்னியல் இணைக்குறள் ஆசிரியப்பா, 19.

விரவியல் இணைக்குறள் ஆசிரியப்பா, 20. இன்னியல் நிலைமண்டில ஆசிரியப்பா, 21. விரவியல் நிலைமண்டில ஆசிரியப்பா, 22 இன்னியல் அடிமறிமண்டில ஆசிரியப்பா, 23. விரவியல் அடிமறிமண்டில ஆசிரியப்பா, 24. வெள்ளைச்சுரிதக நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா, 25. அகவற்சுரிதக நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா. 26. அளவியல் அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, 27. அளவழி அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா, 28. அளவியல் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, 29. அளவழி வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, 30. கலி வெண்பா, 31 வெண்கலிப்பா, 32. இயற்றரவு கொச்சகக் கலிப்பா, 33. சுரிதகத்தரவு கொச்சகக் கலிப்பா, 34. இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா, 35. சுரிதத்தரவிணைக் கொச்சகக் கலிப்பா, 37. குறைச்சிஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, 38. இயற்பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, 39. குன்றப்பஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா, 40. இயன்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, 41 அயன் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா, 42. இன்னியற் குறளடி வஞ்சிப்பா, 43. விரவியற் குறளடி வஞ்சிப்பா, 41. இன்னியற்சிந்தடி வஞ்சிப்பா, 45. விரவியற் சிந்தடி வஞ்சிப்பா, 46. புறநிலை வாழ்த்துச் சமனிலை மருட்பா, 47. புறநிலைவாழ்த்து இயனிலை மருட்பா, 48. வாயுறை வாழ்த்துச்சமனிலை மருட்பா, 49. வாயுறை வாழ்த்து இயனிலை மருட்பா, 50. செவியறிவுறு உச்சமனிலை மருட்பா, 51. செவியறிவுறூஉ இயனிலை மருட்பா, 52. கைக்கிளைச் சமனிலை மருட்பா, 53. கைக்கிளை இயனிலை மருட்பா என்னும் விரியானும். i. தாழிசை, ii. துறை, iii. விருத்தம் என்னும் தொகையானும். 1. வெண்டாழிசை, 2 வெண்டுறை, 3. வெளிவிருத்தம், 4. ஆசியத்தாழிசை, 5. ஆசிரியத்துறை, 6. ஆசிரிய விருத்தம், 7. கலித்தாழிசை, 8. கலித்துறை, 9. கலி விருத்தம், 10. வஞ்சித்தாழிசை, 11. வஞ்சித்துறை, 12. வஞ்சி விருத்தம் என்னும் வகையானும். 1. வெண் செந்துறை, 2. குறட்டாழிசை, 3. வெள்ளொத்தாழிசை, 4. வெண்டாழிசை, 5. ஓரொலி வெண்டுறை, 6. வேற்றொலி வெண்டுறை, 7. வெளிநிலை விருத்தம், 8. வெளிமண்டில விருத்தம், 9. ஆசிரிய ஒத்தாழிசை, 10. ஆசிரியத்தாழிசை, 11. ஆசிரிய நேர்த்துறை, 12. ஆசிரிய இணைக்குறட்டுறை, 13. ஆசிரிய நிலை விருத்தம், 14. ஆசிரிய மண்டில விருத்தம், 15. கலியொத்தாழிசை, 16. கலித்தாழிசை, 17. கலித்துறை, 18. கலிவிருத்தம், 19. கலி நிலைத்துறை, 20. கலி மண்டிலத்துறை, 21. கட்டளைக் கலித்துறை, 22. கலி நிலைவிருத்தம், 23. கலி மண்டில விருத்தம், 24. வஞ்சிநிலைத் தாழிசை, 25. வஞ்சி மண்டிலத்தாழிசை, 26. வஞ்சி நிலைத்துறை, 27. வஞ்சி மண்டிலத்துறை, 28. வஞ்சி நிலை விருத்தம், 29. வஞ்சி மண்டில விருத்தம் என்னும் விரியின் வகைப்படும். (யாப்பு.இல.)

**பாவின்புணர்ப்பு** — இது சித்திரக்கவியிலொன்று. நால்வர் நான்குபாவிற்கட்டுரை சொன்னால் அவையே யடிக்கு முதலாகப் பாடிப் பொருண் முடிப்பது.

**பாவை** — ஒருவகைக் கூத்து. ஆடல்காண்க.

**பாவைக்கோட்டிலார்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவரியற் பெயர் கொட்டிலார். பாவை யென்பது சோழநாட்டிலுள்ளதாம். இவர் ஒருசோழன் வல்லத்துப் போர் செய்ததையும் நெருஞ்சிப்பூ சுடாவனை நோக்குதலையும் கூறியுள்ளார். (அக.கூ௩கூ)

**பாவைமன்றம்** — காவிரிப்பூம் பட்டினத் துள்ள மன்றம். இது அரசனது கோல் கோடுதலை அறிவிக்கும் இயல்பினது. (சிலப்பதிகாரம்).

**பாளித்தியம்** — பாகத இலக்கணம்.

**பாளையக்காரர்** — இவர்கள் தென்னாட்டில் சில இடங்களிலிருந்த ஒருவகைக் கூட்டத்தார். திருநெல்வேலி ஜில்லாவில் பாஞ்சாலங் குறிச்சியை இடமாகக்கொண்டு 1801 ஆங்கிலேயரில் பலரைக் கொன்ற வீரர். (தர்ஸ்டன்).

**பாற்கடல்கடைந்தது** — தேவர், அசுரருடன் பெருயுத்தஞ் செய்து மடிந்ததால் மடியா மருந்து விரும்பித் தேவர், பூமி தாழியாக மந்தரம் மத்தாகச் சந்திரன் தறியாக வாசுகி நாணாகக் கடற்புனல் தயிராக ஆயிரம் வருஷம் கடைந்தனர். முதலில் விஷம் பிறந்தது. அதனைச் சிவமூர்த்தி பருகித் தேவர் வேண்டுகோளால் கண்டத்திருத்தி நீலகண்டர் எனப்பெயர் பெற்றனர். பின்பு தேவர் மீண்டுங்கடைய மந்தரந்தாழ்ந்தது. அதனை விஷ்ணு ஆமையாய்த் தாங்கினர். அக்கடலில் தன்வந்திரி, அமுதம், அமு

தத்துடன் அறுபதுகோடி அரம்பையர், இவர்களுக்குத் தோழியர், உச்சைச் சிரவமென்னுங்குதிரை, கௌத்துவமணி, பஞ்சதருக்கள், காமதேனு, சந்திரன், ஐராவதம், மூதேவி, திருமகள், வாருணி, பிறந்தன. இவற்றுள், அமுதத்தைத் தேவர்க்கு மோகினி உருக்கொண்ட விஷ்ணுகொடுத்துச் சாகாநிலையருளினர். திருமகளை விஷ்ணு தாம் ஏற்றுக்கொண்டு மற்றவற்றை இந்திரன் முதலியவர்க்கு அளித்தனர். தேவர்கள் அமிர்தம் பெற்றபின் அந்த அமிர்தத்தை நாற்புறங்களிலும் ஜ்வலிக்கின்ற அக்நியைக் காவலிட்டு அந்த அமிர்தமிருக்கும் இடத்திற்குமேல் எவரும் தொடர்தற்குக் கூடாமல் விடாமல் சுழன்று கொண்டிருப்பதும், கூர்மையான முனைகளுள்ளதும், அக்நி, சூர்யன் முதலியவர்களைப்போல் தேஜசுள்ளதும், வாள்போல் எவர்களையுஞ் சேதிப்பதுமாகிய சக்கரத்தைக் காவலிட்டனர். இவை புறக்காவல். அச்சக்கரத்தின் கீழ் அக்னிக்கு ஒப்பான ஒளியுள்ளலவயும் மின்னலைப்போல் நாவுள்ளவைகளும், விஷஜ்வாலையால் பார்த்தவன் நீருரும் வன்மையுடையனவுமாகிய இரண்டு நாகங்களையும் காவலிட்டனர்.

**பாறைகள்** — இவற்றின் சில வியப்பை விளைவிக்கத்தக்க தன்மையுடையன என்கின்றனர். இந்தியாவிலுள்ள இராஜபுதன நாட்டின் தென்புறத்தில் ஆபுமலை என்ற ஒரு மலையிலுள்ள பாறை ஒன்று ஒருமைல் விசாலமுள்ள ஏரியின் பாதி பாகத்தைக் கவிந்துகொண்டு விழாது நிற்கிறதாம். அதனாலதனைத் தவளைப்பாறை என்பர். பர்மா நாட்டிலுள்ள கலாசா என்னுமலையின் வடகோடியில் (3650) அடி உயரமுள்ள மலைமீது ஒரு பெரிய பாறை காற்றில் அசைந்தாடுகிறதாம். அப்பாறைமீது புத்தாலயம் கட்டப்பட்டுள்ளது. அதனை அடுத்த வேறோரிடத்தில் ஒரு செங்குத்தான படகுபோன்ற பாறையும் அசைந்தாடுகின்றதாம். இதன்மீதும் புத்தாலயம் உண்டு. இந்தியாவில் மகாபலிபுரத்தில் ஒருபாறை செங்குத்தாக நிற்கிறது.

**பாற்கரன்** — 1. நான்கு முகமுடைய சூர்யன். சிவசூர்யனுக்கு முன்னிருப்பவன்.

2. உதங்கரால் கபிலை பூசைசெய்ய ஏவப்பெற்று முத்தியடைந்தவன்.

3. ஒருவேதியன். தவத்தால் தலைமை மிக்கவன்.

**பாற்கரியஜன்மதம்** — இவன் சித்தே அசித்தாய்ப் பரிணமித்துச் சீவனுகி மீண்டும் சித்தினிடம் ஒடுங்கும் என்பன்.

**பானப்பொருள்கள்** — தேயிலைக் கஷாயபானம், காப்பிக்கொட்டைக் கஷாயபானம், கோகோபானம், திராக்ஷாரஸ திராவகம், (ஒயின்) பானம் ஆப்பைன் (Hop-bine) பானம், பார்லி அரிசியாலாகிய திராவ பானம். ரம் எனும் பானம், இது கரும்பின் ரஸத்தால் செய்யப்பட்டது. அரக் எனும் பானம், இது அரிசியிலிறக்குவது.

**பானுதத்தன்** — (க்ஷத்) சகுனியுடன் பிறந்தவன். பீமனால் கொல்லப்பட்டார். (பாரா - த்ரோ.)

**பானுதாசர்** — பைட்னபுரத்தில் வேதியர் குலத்தில் பானுதாசர் எனும் அடியவர், சூரியப்பிரசாதத்தால் சத்யசீலாதி குணங்களுற்றவராய்த் தன் மனைவியுடன் கூடிச் சவுளிவியாபாரஞ் செய்து வந்தனர். ஒருநாள் அயல்கிராமத்தில் நடந்த சந்தைக்குத் தம்மொத்த சவுளி வர்த்தகருடன் கூடிக்கொண்டு சென்று காரியம் முடித்துக்கொண்டு பொழுதுபோனதால் ஹரிகதை கேட்க ஆவல்கொண்டு தன் சவுளி முதலியவைகளைத் தன்னுடன் வந்தவர்களைப் பார்த்துக் கொள்ளும்படி கூறிக் கதை நடக்குமிடத்திற் சேகினர். மற்ற வர்த்தகர்கள் இவரிடத்துப் பொருமையால் இவரது குதிரையை அவிழ்த்து விடுத்து மூட்டைகளத்தனையும் குளத்தி லெறிந்துவிட்டுத் திருடர் கொண்டனர் என்போயென்றிருக்கையில் பெருமாள் செயலால் கள்வர்வந்து மற்ற சவுளிக்காரரது மூட்டைகளைக் கொண்டு அகன்றனர். பானுதாசர் கதைகேட்டுவந்ததும் பகவான் குதிரையை மாத்திரம் பிடித்துவந்து தந்தனர். பின் தாசர் தம்மிடம் வந்து தம் நண்பர்கள் வருந்துதலைக்கண்டு நடந்தவைகளை யுணர்ந்து குளத்திலெறிந்த மூட்டைகளை எடுத்துத் தம் நண்பர்களுக்குப் பகிர்ந்துகொடுத்துப் பண்டரிபுரத்து இருந்தனர். இப்பண்டரி புரத்தில் ஒரு வேதியன் வித்யாசகாத்தரசனுகிய ராமராஜன் அம்பிகை பூசாதுரந்தானு யிருத்தல் கண்டு அவனிடஞ் சென்று பண்டரி வைகுந்தம் என்றனன். அரசன் பண்டரி சென்று பெருமாளைத்

தரிசித்து அன்று முதல் அம்பாள் பூஜை விட்டு அரிபூஜை மேற்கொண்டனன். ஒரு நாள் பானுதாசர் வித்யா நகரஞ்சென்று பகவானைப் பூசிக்கையில் பகவான் தரிசனந்தந்து ஒரு ரத்னஹாரத்தை அவரது கழுத்திலிட்டுச் சென்றனர். விடிகையில் பானுதாசர் கழுத்தில் ஹாரமிருக்கக் கண்டார் பானுதாசர் திருடினர் என்று அரசனுக்குக் கூற அரசன் தாசரைக் கழுவேற்றக் கட்டளையிட்டனன். சேவகர் தாசரைக் கழுவேற்ற அம்மரத்தடியில் கொண்டு செல்லத் தாசர் எதுவரினும் உன்திருவடி மறவேனென்று கழுவைநோக்கக் கழு தளிர்த்தது. இதனை அரசனறிந்து அபராதக்ஷமை வேண்டினன். தாசர் பண்டரியடைந்து பெருமாளைத் துதித்திருந்தனர்.

பான்மூல்லை — செவ்வரி கருவரி பரந்தமையுண்ட விழியினையும் தெரிந்த ஆபரணத்தினையு முடையாளை மணந்தவன் வருத்த நீங்கின மனத்துடனே விதியை ஏத்தியது. (பு. வெ. பொது.)

பாஷாணம் — கல்போன்ற விஷப்பொருள். தின்றால் கொல்லும். இது. பிறவிப் பாஷாணமெனவும், வைப்புப் பாஷாணமெனவும் இருவகைப்படும். இவைகளுள் பிறவிப் பாஷாணங்கள் - அஞ்சன பாஷாணம், அப்பிரக பாஷாணம், ஔபலபாஷாணம், லிங்கபாஷாணம், கந்தக பாஷாணம், காட்டுத்தாளக பாஷாணம், கற்பரி பாஷாணம் கற்பாஷாணம், காய்ச்சற் பாஷாணம், காந்த பாஷாணம், கார்முகிற் பாஷாணம், குதிரைப் பல்பாஷாணம், கந்தகம், கௌரிபாஷாணம், கோளக பாஷாணம், சங்கபாஷாணம், பரங்கிப் பாஷாணம், (சவ்வீரம்) சரகாண்ட பாஷாணம், சாலாங்க பாஷாணம், சிலாமதம், சிதாங்கபாஷாணம், சீர்பந்த பாஷாணம், சூதகபாஷாணம், தகட்டுத்தாளகம், தாலம்பம், துத்தபாஷாணம், தொட்டி பாஷாணம், பலண்டுறுக பாஷாணம், மனோசிலை, மிருதபாஷாணம், வெள்ளை பாஷாணம். வைப்புப் பாஷாணங்கள் - அமரசிலை கந்தகம், அயத்தொட்டி பாஷாணம், இந்திர பாஷாணம், இரசிதம், இரத்த பாஷாணம், இலவணபாஷாணம், எருமை நாத்தொட்டி பாஷாணம், கருமுகில் பாஷாணம், காகபாஷாணம், குங்கும பாஷாணம், கோடாசொரி, கோழித்தலை கந்தகம், செப்புத்தொட்டி பாஷாணம், சோரம், தீமுறு கல் பாஷாணம், துருசு, நாக பாஷாணம், ஈயபித்தளை, பஞ்சபக்ஷி பாஷாணம், பவழப்புற்று, பூரம், பொற்றொட்டி, மிருதார்சிங்கி, வாணகந்தகம், வைப்பரிதாரம் முதலிய.

பாஷாண சத்துள்ளமரம் — அமெரிக்காவிலும், போர்ச்சுகலிலும், கொரியாவிலும் உள்ள காடுகளில் இவ்வித மரங்கள் இருக்கின்றன. இவற்றின் காற்றால் பிராணிகள் இறக்கின்றன. இவ்வகையில் சில இந்தியாவில் தின்றால் கொல்லும் எட்டி இரளி, நாபி முதலியவுண்டு.

பாஷாணவகை — பாதரசம், ரசாஞ்சனபாஷாணம், ரசகற்பூரம், ஜாதிலிங்கம், சவ்வீரம், நெல்லிக்காய் கந்தகம், வானகந்தகம், தாளகம், செவ்வரிதாரம், மடலரிதாரம், மனோசிலை, பொன்னரிதாரம், மிருதாரசிங்கி, வெள்ளைப்பாஷாணம், கௌரி பாஷாணம், நீலாஞ்சனபாஷாணம், தொட்டிபாஷாணம்.

பாஷாணவைப்பு — (32) 1. புத்தோட்டுத் தொட்டி பாஷாணம், 2. பொற்றொட்டி பாஷாணம், 3. செப்புத்தொட்டி பாஷாணம், 4. எருமை நாத்தொட்டி பாஷாணம், 5. மிருதார்சிங்கி, 6. இரத்தசிங்கி 7. ஏமசிங்கி, 8. சாதிலிங்கம், 9. கருமுகிற் பாஷாணம், 10. தீமுறுகற் பாஷாணம், 11. வெள்ளை பாஷாணம், 12. சவ்வீர பாஷாணம், 13. கோழித்தலை கெந்தி பாஷாணம், 14. வாணகந்தி பாஷாணம், 15. அரிதாரம், 16. பவளப்புற்று பாஷாணம், 17 கோடாசோரி பாஷாணம், 18. பஞ்சபக்ஷி பாஷாணம், 19. குங்குமபாஷாணம், 20. இரத்த பாஷாணம், 21. துத்தம், 22. துரிசு, 23. ரசித பாஷாணம், 24. தைல பாஷாணம், 25. சூதபாஷாணம், 26. நீலபாஷாணம், 27. கந்தக பாஷாணம், 28. சோரபாஷாணம, 29. காகபாஷாணம், 30. லவண பாஷாணம், 31. நாகபாஷாணம், '32. இந்திர பாஷாணம், 33. குதிரைப்பல் பாஷாணம், கறடகபாஷாணம், வைக்கிராந்த பாஷாணம், தாலக பாஷாணம், அமுத பாஷாணம், சிரபந்த பாஷாணம். (போகர்)

பாஷை—(கஅ) அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போஜம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திரவிடம், துளுவம், பப்பரம், மகதம், மாராடம், வங்கம்.

**பாஷ்காமூர்த்தி** — இரண்டு முகம் நான்கு கைகள், இரண்டுகைகளால் சிவனுக்கு நமஸ்காரம், இரண்டுகைகளில் இரண்டு கமலங்களைப் பிடித்தவராய் நீலரத்னபூஷணம், சிகப்பு வஸ்திரம் சிகப்பு நிறமுள்ளவராய் இருப்பர்.

**பாஷ்கலன்** — 1. இந்திரப்பிரமதி சீடனாகிய இருடி.

2. அநுக்லாதன் குமரன்.

**பாஷ்கலி** — பாஷ்கலன் குமரன்.

**பாஷ்களர்** — பயிலவரிடத்து இருக்கு ஓதிய இருடி.

## பி

**பிங்கலகடகர்** — இவர் பிங்கலனும், கடகனுமெனக் கூறப்படுவர் இவர்கள் உதயணன் தம்பிகள்; அவனுக்கு உயிர்போன்றவர்கள் "தன்னுயிரன்ன தம்பியர். அவன்பால் மிக்க அன்புடையவர்கள் உதயணன் மாயயானையாற் பிடித்துக்கொண்டுபோகப் பட்டபொழுது யூகியின் வேண்டுகோளால் தாய் மிருகாவதியையும், கோசாம்பி நகரத்தையும், பாதுகாத்திருந்து ஆருணியரசன் அந்நகரைக் கைப்பற்றியபொழுது அவனை வெல்லமாட்டாதவர்களாய் தம்முருவத்தை மறைத்துக் கொண்டு பல வீரர்களோடு வேறிடஞ்சென்று ஒளித்திருந்து உதயணன் ஆருணியோடு போர் செய்தற்குச் செல்லும்பொழுது அவனைக்கண்டுபணிந்து பலவாறு புலம்பி வழிபடுவார்களாய் உடனிருந்து உதவி செய்தவர்கள். இவர்கள் புலம்பியபகுதி யாருடைய மனத்தையும் உருக்கும். ஆருணியரசனுடைய பெரும் படைத் தலைவர்களுள் ஒருவனாகிய காந்தாரகனை, இவர்கள் அம்பால் எய்துவென்றூர்கள். கடகபிங்கலரெனவும் வழங்கப்படுவர். (பெருங் கதை).

**பிங்கலகேசி**—சுமாலிபுத்திரி. அக்ரகேசன் தேவி.

**பிங்கலசன்** — துரியோதனன் தம்பி, நாலாநாள்யுத்தத்தில் வீமனால் இறந்தவன்.

**பிங்கலசாரமாணி** — உதயணன் வீரர்பதின்மருள் ஒருவன். (பெருங் கதை).

**பிங்கலந்தை**—பிங்கலர்செய்ததமிழ்நிகண்டு.

**பிங்கல முனிவர்** — பிங்கலந்தை எனும் நிகண்டு இயற்றியவர். இந் நிகண்டு சூடாமணிநிகண்டு சேந்தன் திவாகரம் முதலியவற்றிற்கு முந்திய நூலாதலால் இவர் அந்நூலாசிரியர்களுக்கு முந்தியவர். இவர் ஆதிதிவாகர முனிவர்க்குப் புத்திரர்.

**பிங்கலம்** — ஒருநூல், சந்தோபிசிதம் சொன்னது.

**பிங்கலர்** — பிங்கலந்தை நிகண்டு இயற்றிய சைகர். திவாகரன் குமரன் என்பர்.

**பிங்கலன்** — 1. சிவகணத்தவரில் ஒருவன்.

2. ஒருவேடன் காட்டில் திரிகையில் புலி துரத்தப்பயந்து வில்வமரத்தில் ஏறினன். புலி அவனைவிடாது மரத்தடியில் படுக்கக்கண்டு இரவுமுழுதும் உறக்கம் வாராதபடி வில்வப்பத்திரத்தைப் பறித்துப் போட்டுக்கொண்டிருந்தனன். அப்பத்திரம் அடியில் எழுந்தருளியிருந்த சிவலிங்கத்தின்மீது விழுந்ததால் வேடன் சிலநாள்தரித்து உயிர்நீங்கக் காலபடர் பற்றினர். சிவமூர்த்தி யம டரைச் சீறி முத்தியிற் சேர்ப்பித்தனர்.

3. ஒருகொடுங்கோலரசன், இவன் தன் ஆயுள் இறுதியில் சிவன் திருநாமத்தைப் பெற்ற தன் புத்திரரை அழைத்துச் சிவநாம மகிமையால் காலதூதர் பற்றுதலினின்றும் நீங்கி முத்திபெற்றவன்.

4. வீதகவ்யனைக் காண்க.

5. கத்ருதநயன் நாகன்.

6. ஸர்ப்ப யாகத்திருந்த ருஷி. (பாரஆதி.)

**பிங்கலாக்ஷன்** — நிருதியைக் காண்க.

**பிங்கலை** — 1 உமையின் தோழியரில் ஒருத்தி, கவரி வீசுபவள்.

2. இவள் ஒருவேசை. இவள், நாள் ஒன்றுக்கு (500) பொன் கொடுப்போரைப் புணர்வது என்னும் நியமம் பூண்டிருக்கையில், இவளைச் சேரச் சக்தியில்லாச் சுநந்தன் என்னும் வணிகன், இவளைச் சேர விருப்புற்று மறுபிறப்பிலாயினும் இவளை நாயகியாகக்கொள்ள எண்ணி நினைத்ததைத் தரும் காயத்ரி மடுவில்வீழ்ந்து இறந்தனன். இவனது செயலறிந்த வேசை அந்த வணிகனுக்குத் தங்கையாகும்படி அம்மடுவில் வீழ்ந்து இறந்தனள். இருவரும் தங்கள் இஷ்ட சித்திகளை அடையும்பொருட்டுப் புருக்களாகப் பிறந்து இருவரும் நாயகபாவத்தையும் சகோதரபாவத்தையும் அடைந்தனர். (பவாநி கூடற் புராணம்).

**பிங்களர்** — 1. உலகப்போர்வையைத் தைத்துக்கொண்டிருக்கும் கைலாச மேற்கு

வாயிற் காவலர். இவர்க்கு ஊசிநூல் ஆயுதம்.

2. இவர் சிவகணத்தவர், இவர் திருக்கைலையில் வாயுதிக்கில் செந்நிறமுள்ளவராய்ச் சர்வபூஷணாலங்கிருதராய் ஊசியும் நூலும் கையிற்கொண்டிருப்பவர். பிரமராத்ரியாகிய கறுப்புப்புடவை யுலகத்திற் கெல்லாம் போர்த்திருப்பதைச் சூரியன் உதயகாலையில் கிழித்துப்போட்டு உள்ளே புகுந்து வருவன், பகற்காலத்தில் உலகத்திற்கெல்லாம் போர்த்திருக்கும் வெள்ளைப் புடவையைக் கிழித்து அஸ்தமிப்பன். அவ்விரண்டு புடவைகளையுந் தைத்துத்கொண்டிருப்பவரும் தடியுடன் வாசற்காப்பவருமாயிருப்பவர்.

**பிங்களன்** — 1. ஒரு இருடி. இவன் சிவமூர்த்தியையெண்ணித் தவம்புரிந்து நித்தியத்துவமடைந்தவன்.

2. இவன் விகிர்தன், சபலன், விசாலன், பிங்காக்ஷன் முதலியவருடன் கூடி வேதியர் உருக்கொண்டு மகோற்கடர்மீது அக்ஷதையில் அத்திர ஆவாகனஞ்செய்து, தூவ அவை அவரைத்தம் உருக்கொண்டு பணிந்தன. மீண்டும் விநாயகர் அவர்கள் மீது அக்ஷதை தூவிக்கொன்றனர்.

**பிங்கலை** — 1. தெற்கின்கண் உள்ள பெண்யானை. இதற்கு ஆண்யானை வாமனம்.

2. மிதிலா நகரத்திருந்த தாசி. இவள் தன்னை யாராவது புருஷர் நாடிவருவர் எனக் காத்திருந்து வாராமைகண்டு விரக்தியால் ஞானம் பெற்றவள்.

3. ஒரு வேசி. (பார. சாந்.)

**பிங்காக்ஷன்** — 1. தரும்பக்ஷியைக் காண்க.

2. பிங்களனைக் காண்க.

**பிசாகை** — ருக்ஷபர்வதத்தில் உற்பத்தியாகும் நதி.

**பிசாசமோசனவாவி** — காசியில் உள்ள தீர்த்தங்களில் ஒன்று. இதில் பேயொன்று மூழ்கித் தன் உருப்பெற்றது. சங்குகன்னனைக் காண்க.

**பிசாசம்** — 1. தூலதேகத்திற்கு விதித்த ஆயுளின் அளவை முடியுமுன் தேகநீங்கி வாயுவின் உருவடைந்து கால அளவை நோக்கி யிருக்கும் அந்தராத்மாக்கள்.

2. பாக்லிகம், குந்தலம், நேபாளம் முதலிய தேசத்து வழங்கும் பாஷை.

**பிசாசர்** — ஒருவிதத் தேவ வகுப்பினர்.

**பிசாசன்** — இராவண சேநாபதியரில் ஒருவன். யக்ஷர்களைக் கையால் நசுக்கித் தின்னும் வலியுள்ளவன். இவன் குதிரையில் இருந்து போரிட்டு அநேக வாநரரை மாய்த்து இலக்குமணர்விட்ட வாய்வாஸ்திரத்தால் மாண்டவன்.

**பிசாசி** — ஒரு தேசம்.

**பிசி** — சாத்துவதன் குமரன்.

**பிசிராந்தையார்** — கோப்பெருஞ்சோழன் நண்பராகிய புலவர்; பாண்டிநாட்டில் பிசிரென்னும் ஊரில் இருந்தவர். சோழன் உயிர்நீத்ததுகண்டு பொறாது தாமும் உயிர்விட்டவர். இவர் பெயர் ஆந்தையாராய் இருக்கலாம். பிசிரென்னும் ஊர்ப் பெயர் சார்ந்து இப்பெயர் பெற்றனர் போலும். ஆந்தையென வேறொருவன் இருத்தலின் இவர்க்குப் பிசிராந்தை எனப் பெயர் வந்தது. (புற.நா) (அக நா.) இவர் பாண்டி நாட்டுப்பிசிர் என்னுமூரிலுள்ள ஆதன் தந்தையார், உறையூரை ஆண்டிருந்த கோப் பெருஞ் சோழனுக்கு உயிர்த் தோழனுயுள்ளவர். பரிமேலழகர் அருங்குறள் உரையில் 'கோப்பெருஞ் சோழனுக்கும் பிசிராந்தையார்க்கும்போல உணர்ச்சியொப்பின் அதுவே உடனுயிர் நீங்கு முரிமைத் தாய நட்பினைப் பயக்கும்' என்றெழுதிய தனாலும் இவர்நட்பின் திறமையறிக. ஒருகாலத்துக்கோப்பெருஞ் சோழன் தன் மக்களோடு பகைத்துப் போருக்கெழுதலும் புல்லாற்றூர் எயிற்றியனார் தடுத்து நன்னெறிப் படுத்தினர். புறம் உகந. அவர்மொழி . வழிநின்ற அரசன் தன் இராச்சியத்தை வெறுத்து ஒருமரத்து நிழலில் வடக்கு முகமாகப் பட்டினியிருந்து உயிர்விடத் துணிந்தனன். புறம் உகஉ. அப்பொழுது பற்பல புலவரும் அறிவுடை முதியரும் அருகிருப்ப அரசன் எனது நட்பாளன் பிசிர் ஆந்தை இன்னே வருகுவன். (புறம் உகு.) அவனுக்கும் என்னோடு இடமொழிப்பீராக புறம் உகசு. வென்னுமளவிற் பிசிராந்தையாரும் வந்து சேர்ந்தனர். புறம உகஎ. வந்த இவரும் பட்டினியாகி வடக்கு முகமாயிருந்து அரசனோடு உயிர் நீத்தருளினர். இவ்விருவரும் ஏனைப்புலவரும் ஆங்குப்பாடிய பாடல்கள் கேட்போரை உருக்குந் தன்மைய. இப்பிசிராந்தைய ர் நரைதிரையின்றி நெடுங்காலஞ் ஜீவித்திருந்த முதியோர். புறம் (கஅக) இவர் பாண்டியன் அறிவுடை நம்பியைப் பாடி மகிழ்வித்தார். புறம் கஅச. இவர் நெய்தலையும் (குறிஞ்சியையும் பாராட்டிப்

பாடி யுள்ளார்.) இவர் பாடியனவாக நற்றிணையில் (கக) பாடலொன்றும் அகத்திலொன்றும் புறத்தில் நாலுமாக ஆறு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பிசிர்** — இது பாண்டிமண்டலத்தி லுள்ளதோரூர். (புற. நா.)

**பிசின்** — மரத்தின் பால்கள் வடிகையில் காற்றினால் இறுகிப்போதல், இவற்றிற் சில ஒட்டுந் தன்மையுள்ளவை. அவை விளாம்பிசின் வேலம்பிசின் முதலிய.

**பிசின்கள்** — இவை பலவகை மரத்தினின்று உண்டாம் பசைகள். மாம்பிசின், முருக்கம்பிசின், மலைவேப்பம் பிசின் கருங்காலி, வாகை, இலவு, விளா, முருங்கை, விடத்தேர், அடம்பு, கருவேல், வெள்வேல், ஆவாரை, முதலிய விருக்ஷங்களிலுண்டாம்

**பிச்சுக்கட்டியேரி** — தார் (Asphalt) தென் அமெரிக்காவின் வடக்கிலுள்ள அட்லாண்டிக் மகாசமுத்திரத்தில் உள்ள டிரினிடாட் எனும் சதுரமான தீவுண்டு. அத்தீவில் லாப்ரியா எனும் (100) ஏகராவுள்ள வட்டமான ஏரி ஒன்று இருக்கிறது. அவ்வேரியின் நடுவில் தரர் சுரந்து பொங்கி வெளியில் வந்து இறுகிப்போகிறது. இறுகினபின் அதை வெட்டி யெடுத்து புறத்தேசங்களுக்கு அனுப்புகின்றனர். இவ்வாறு இது பல நூற்றாண்டுகளாகப் பொங்கி வழிந்து வருகிறது. இவ்வருவாயின் காரணம இன்னும் அறியப்படவில்லை. இத்தாரே தேசமெங்கும் உபயோகப் பட்டு வருகிறது.

**பிச்சைப்புரட்டு** — கஷ்டப்பட்டு வேலை செய்ய மனமில்லாச் சிலர் தேகமுழுதும் விபூதிபூசித் திருவோடு கொண்டு பிச்சை யெடுத்தும், சிலர் கண்ணாடிப் படங்களைப் பரப்பிவைத்து சில காசுகளை அதில்பரப்பி, போவார் வருவார்களை பலாத்காரமாய்க் கேட்டு வாங்கியும், சிலர் முள்மிதியடிமேல் நின்று கையில் தண்டாயுதம் தாங்கி உருக்கமாக ஏதோபாடியும், சிலர் வேலமரமுள், நாகதாளி படைகளைப் பக்குவஞ் செய்து அதன்மேல் படுத்து யாசித்தும், சிலர் அண்டை அயலி லுள்ள மொண்டி, முடம், குருடுகளைப் பங்கு கொடுப்பதாயழைத்து வேஷமிட்டு யாசித்தும், ஒற்றைக் கம்பியில் பக்குவமாய்ப் படுத்து மயக்கி யாசித்தும் புரட்டுவார்கள். மற்றும் பலவித பிச்சைபுரட்டுகள் உண்டு.

**பிச்சையப்பமுதலியார்** — இவர் தொண்டைநாட்டில் பெருநகர் என்னும் ஊரில் இருந்த வேளாளர். இவரை ஒருவித்துவான் காணவர அவ்வித்துவானை எதிர்கொண்டு அவருக்குப் பல்லக்குச் சுமந்து அவர்கேட்ட குறிப்புப்படி உணவு முதலிய செய்து முதலியாரும் மனைவியும் படைத்தனர். அதனால் அவ்வித்துவான் இவர்களைப் புகழ்ந்து ஒரு சதகம் பாடினர்.

**பிடகம்** — பௌத்தாகமம். இது விநயபிடகம், சூத்ரபிடகம், அபிதர்மபிடகம் எனப்படும். (மணிமேகலை).

**பிடவூர்** — இது சோழமண்டலத்திலுள்ளதோரூர் (புற. நா.)

**பிடாரன்** — இவன் பாம்பு பிடித்தாட்டி சீவிக்கும் ஒருவகைச் சாதியான்.

**பிட்டங்கொற்றன்** — ஒருவள்ளல், சேரனுக்குச் சேநாபதி. மிக்ககொடையாளி. காரிக்கண்ணனாராலும், உறையூர் மருத்துவன் தாமோதரனாராலும் பாடல் பெற்றவன். குதிரை மலைக்குத் தலைவன். (புற.நா)

**பிட்டன்** — பிட்டங்கொற்றனுக்கு ஒரு பெயர்.

**பிட்டுத்தோப்பு** — இது மதுரைக்கு வடமேற்கில் வையையின் தென்கரையிலுள்ளது. பிட்டுக்குமண்சுமந்ததிருவிளையாடல் விழா நடக்குமிடம். (திருவிளை.)

**பிணந்தின் பெண்டிர்** — யுத்தகாலத்து மடிந்து வீழ்ந்தாருடலைத்தின்ன அவாவிய பேய்ப்பெண்டிர். (நச்சர்.)

**பிணி** — (ந.) வாதம், பித்தம், சிலேத்மம்.

**பிண்டகன்** — கத்ருதநயன் நாகன்.

**பிண்டாரகன்** — கத்ருகுமரன் நாகன்.

**பிண்டம்** — 1. பிதுர்பலி.

2. பூமியைத் தன் கொம்பிற்றாங்கிய திருமால் தம்கொம்பில் மூன்று மண்கட்டிகளைக்கொண்டு பூமியில் கர்ப்பங்களின் மேல் வைத்து அதில் தம்மை உத்தேசித்துக் கர்மாவைத் தம் ரோமகூபத்தின் பிறந்த எள்ளை அபஸவ்யமாக இறைத்து நானே பித்ருக்களைச் செய்கிறேன் என்றனர். உடனே அவருடைய ரோமகூபத்தின் களி விருந்துண்டான அந்தப் பிண்டங்கள் தென திசையை யடைந்தன. இந்தப் பிண்டங்களே, பிதா, பிதாமஹர், பிரபிதாமஹராகட்டும். நானே இந்த மூன்று பிண்டங்களி லுள்ளவனாகிறேன. இந்த நிமித்தமாக பிதுருக்கள் பிண்டமென்கிற பெயரை யடைந்தனர். (பார - சாந்)

**பிண்டமாவது** — உறுப்பு மூன்றும் உள்ள டக்கி நெறிப்பா வடைத்தாய்க் கிடப்பது. (யா. வி.)

**பிண்டாரகம்** — துவாரகைக்கு அருகிலுள்ள ஒருக்ஷேத்திரம். இதில் சிலரிஷிகள் வசித்திருந்தனர். இந்தரிஷிகளை யாதவர்களில் ஒருவனுக்குக் கர்ப்பிணி வேஷமிட்டு ஒரு ரிஷியை நோக்கி இவள் வயிற்றுப் பிறப்பது ஆணோ பெண்ணோ என அந்தரிஷி கோபித்து உங்கள் குலத்தைக் கருவறுப்பதாகிய ஒரு இருப்புலக்கை யென அவன் அவ்வண்ணமே கருவுற்று இருப்புலக்கை பெற அதற்கஞ்சிய யாதவர் அதனை யராவிக் கடலிலிட அவை நாணல்களாக முளைத்தன. ஒருகாலத்துக் கடற்கரைக்கு வேடிக்கையாக வந்த யாதவர் விளையாடுகையில் ஒருவர்க் கொருவர் போர் மூண்டு அந்நாணல்களால் ஒருவர்க்கொருவர் அடித்துக் கொண்டு மாண்டனர்.

**பிண்டாரிகள்** — பொம்பாய் நாட்டிலிருந்து வந்து மைசூர் முதலிய இடங்களில் வேலை செய்யும் ஒரு வகுப்பினர். இவர்கள் முதலில் கள்ளராயிருந்தவர்கள் ஆங்கில அரசில் திருந்தியவர். (தர்ஸ்ட்டன்.)

**பிண்டோற்பத்தி** — பகிஷ்டையான பெண்கள் நான்குதினம் வரையில் மனைக்குப் புறம்பே இருத்தல்வேண்டும். பகிஷ்டையான நான்காநாள் புனலாடியபின்பு சுத்தையாகிறாள். பகிஷ்டையான ஆறுநாள் முதல் பதினெட்டு நாள்வரையிலும் உள்ள இரட்டைநாள் ஏழில் இரவில் புணரின் ஆண்பிரஜைஉண்டாம், ஐந்துதினம் முதல் பதினெட்டுத்தினம் வரையிலும் உள்ள ஒற்றைநாட்களில் புணரின் பெண்மகவு பிறக்கும். இவ்வுயிர் பிறக்கும் வகை எவ்வாறு எனில்கர்மத்தால் மேனிலைசென்ற ஆன்மா மீண்டும் கருமவசத்தால் பூமியில் வருமிடத்து ஆகாயத்தில் இருந்து வாயுவில்தங்கி மேகமார்க்கமாய் மழையுடன் பூமியில் தான்யாதியில்விழுந்து பாகப்பட்டு ஷட்ருசிகளோடு கூடித் தந்தையின் தேகத்தை அடைந்து தாதுவுடன் மூன்றுமாதம் இருந்து ஸ்திரீசையோகத்தில் தந்தைவிந்துவாகனமாக வாயுவசத்தால் கருப்பையில் பவளப்பையில் முத்துப் பதித்தாற்போல் பதியும். இவ்வகை சுரோணிதத்தில் கலந்த விந்துவானது ஒருநாளில் குன்றுமணியளவு திரண்டு தோய்ந்தபாலாம். (ரு நாளில்) நீர்க்குமிழியாம். (எ-ல்) இளவூனும் (ம ல்)சுரோணிதத்திற் கலக்கும். (மசு-ல்) செந்நீர்பறந்து ஊனும் (மரு-ல்) யாம்சப் பிசினியாம். (உசு-ல்) பூர்ண மாம்சமாம் (உரு-ல்) பஞ்சாங்குறமாம். மாதமொன்றில் பஞ்சபூதமும் ஒருமிக்கக்கூடிப் பீஜம் சிறிது உதிக்கும். இரண்டாம் மாதம் மாம்சமும் மேதையும் உண்டாம். மூன்று மாதம், மச்சை அஸ்திகளும் உண்டாம். நாலாம்மாதம் தோலும் கேசமும் ஆம். ஐந்தாமாதம் கண்ணும் நாசியுமாம். ஆறும் மாதம் முதல் மாதா உதாத்தில்விழுந்த அன்னசாரம் இவள்வயிற்றுக்கும் பிள்ளை நாபிக்கும் ஒரு நாளமாய் இருந்து அதன் வழியாக அன்னசாரம் சென்று பிள்ளையின் சுழிமுனைநாடி அடைபடப் பிராணவாயு இடைகலை பிங்கலை வழியாய் நாளொன்றுக்கு உக,சு00 சுவாசம்தோன்றும், இதன்றிச் சிங்குவை முதலானவைகளும் உண்டாம், (எ-ல்) குய்யமும் பாதமும் ஆம். (அ-ல்) சந்திகளும் சர்வாங்கங்களும் உண்டாம். (கூ-ல்) 24-தத்வங்களும் உண்டாம். (ம-ல்) பிறப்புநோக்கும். அப்போது மலையின்கீழ் அகப்பட்டவன்போலக் கருப்பாசயப்பையில் கட்டுப்பட்டுச் சமுத்திரத்தில் ஆழ்ந்தவன்போலக் கருப்பாசய வெள்ளத்தில் அழுந்தி உதாராக்கினியால் வெந்து பிறவி நோக்கும்போது தலைகீழாகி ஆலைவாயிற் கரும்புபோல் நெருக்குண்டு பூமியில் விழும்.

**பிண்ணாக்கு** — இது எண்ணெயுள்ள சரக்குகளைச் செக்கிலிட்டு எண்ணெய் கொண்டபின் தங்கியபொருள். இது; எள்ளுப் பிண்ணாக்கு, தேங்காய்ப் பிண்ணாக்கு, இலுப்பைப் பிண்ணாக்கு, முதலிய. இவற்றை மாடுகளுக்கும் கழனிகளுக்கும் உபயோகிப்பர். இலுப்பைப் பிண்ணாக்கை சிகண்டெடுக்க உபயோகிப்பர்.

**பிதாதா** — தக்ஷன் மருகன்.

**பிதுரர்** — ஒருவகைத் தேவ சா தி ய ா ர். சமதக்னிக்கு நகுலவுருக் கொடுத்தவர். வஸுருத்ரர் ஆதித்தரூபராய்ச் சந்திரலோகத்திருக்கும் தேவஜாதியர். ஆங்கிரசருக்குச் சுதையிடம்பிறந்த தேவவகுப்பினர்.

**பிதுருதுல்யை**—மலயத்தில் உற்பத்தியாகும் நதி.

**பித்ருவம்சவிவரணம்** — பித்ருக்கள் எழுவஞ்சங்களாகப் பிரிக்கப்படுவர். அவர்களுள் முதல் மூன்றுகணத்தவரும் சரீரமில்லாமலும், மற்ற நான்கு கணத்தவரும் சரீரத்

தோடு மிருப்பர். சரீரமில்லாதவர் வைரா
ஜர் எனப்பட்டு யோகப்பிரஷ்டராய்த் தேவ
பூஜ்யராய்ப் பிரமன் நாளினது கடையில்
பிரம்ம வேதிகளாய்ப் பிறந்து பூர்வஞ்
ஞானத்துடன் உத்தமபதவியடைவர். மற்
றவர் யோகிகள் ஆயினர். இந்தப் புத்திரர்
களுக்கு மேனையென்னும் மானசபுத்திரி
பிறந்தனள். அந்தமேநகைக்கு மைநாகனும்
மைநாகனுக்கு கிரவுஞ்சனும் பிறந்தனர்.
பின்னும் உமை, ஏகவருணை, அபரணை என
மூன்றுபெண்கள்பிறந்துமுறையேருத்ரன்
பிருகு, ஜைகிஷவ்யன் என்பாரை மணந்த
னர். முன் சொன்னவர்களே யன்றி விப்
ராஜர் என்றும் பார்க்கிஷர் என்றும்,
இரண்டு பித்ருகணங்கள் உண்டு. இவர்கள்
தருப்பை விமானத்திருப்பவர். புலத்திய
வம்சத்திற் பிறந்தவராய்த் தானவ யக்ஷ
ராக்ஷச காந்தருவாதிகளால் பூசிக்கப்பட்டு
வருவர். இவர்களில் பீவிரியென்னும் யோ
கினிவந்து விஷ்ணுவையெண்ணிக் கண
வன் பொருட்டுத் தவஞ்செய்து குசிகனை
மணந்து கிருத்தியென்னும் பெண்ணை
யும் கிருஷ்ண, கௌர, பிரபு, சம்புஎன்
னும் நான்கு குமாரரையும் பெற்றனள்.
கிருத்தி, பாஞ்சால தேசாதிபதியை மண
ந்தனள். இவர்களன்றி வசிட்டருக்கு சுமூர்
த்தி, மந்தன்என்னும் மானசபித்ருக்கள்
தோன்றிச் சுவர்க்கத்துக்கு மேல் ஊர்த்துவ
லோகத்தை இடமாய்ப் பெற்றுப் பிராமண
ரால் பூசிக்கப்படுவர். இவர்கட்குக் கௌ:
என்னும் மானஸபுத்திரி பிறந்து சுக்கிரனை
மணந்தனள். இவர்களன்றி அங்கிரஸபுத்தி
ரரும் மரீசி புத்திரர்களும் சூர்யமண்டல
வாசிகளாய் **க்ஷத்திரியர்களுக்குப் பித்ருக்
களாவர்**—இவர்களுடைய மானச கன்னி
கையாகும் யசோதை பஞ்சவன் புத்திரனு
கும் பாசுமதனை மணந்து திலீபனுக்குத்தா
யும், பகீரதனுக்குத் தாயும் ஆயினள். இவர்
களன்றிக் சார்த்த புலக பிரசாபதிகளுக்குச்
சந்தானங்களான, சுவதர், ஆஜ்யபர், என்ப
**வர்கள் வைசியர்க்குப் பிதுர்க்களாயினர்.**
இவர்களின் மானச புத்திரியாகும் விரசை
நகுஷன்பாரியாய் யயாதி என்னும் குமர
னைப்பெற்றாள். பின்னும்மானஸர்என்னும்
நாலாவது பித்ருகணங்கள் **சூத்திரர்களுக்
குப் பித்துருக்களாய்ச்** சத்தியலோகத்
திருப்பர். இவர்களுக்கு மானஸகன்னிகை
தருமதை. இவர்கள் அல்லாமல், விராட்புரு
ஷனுலே சிருட்டிக்கப்பட்ட சோமசதர்கள்,
சாத்தியதேவர்களுக்குப்பித்ருக்கள் மரீசி
முதலியவர்களால் சிருட்டிக்கப்பட்ட அக்
னிஷ்வாத்தர்கள் தேவர்களின் பிதுர்க்கள்.
அத்திரிருஷியின் புத்திரரான பருஹிஷத்
துக்கள், தயித்தியர், தானவர், யக்ஷர், கந்
தருவர், உரகர், இராக்கதர், சுபர்ணர், கின்
னரர்களாம். பிராமணர்களின் பிதுர்க்களுக்
குச்சோமபாள் என்றும், க்ஷத்திரிய பிதுர்க்
களுக்கு ஹவிர்புக்கு என்றும், வைசியபி
தூர்க்களுக்கு ஆஜ்யபர்என்றும், சூத்திரர்
பிதுர்களுக்குச் சுகாலிகளென்றும் பெயர்.
இவர்களில் சோமபாள் பிருகுபுத்திரர்.
ஹவிர்புக்குகள் ஆங்கீரசபுத்திரர். ஆஜ்ய
பர் புலஸ்திய புத்திரர்; சுகாலிகள் வசிட்ட
புத்திரர், அக்னிதத்தர்கள், சோமபர்கள்,
பருஹ்ஷத்துகள். அக்னிஷ் வாத்தர்கள்,
சௌமியாள் இவர்களையும் பிராமண பிது
ர்க்களாக அறியவேண்டியது.

**பிதுர்க்கள்** — 1. பிரமதேவர் சில தேவர்க
ளைப் பூர்வத்தில் சிருட்டித்துத் தம்மைப்
பூசிக்கக் கூறினர். பிரமன் வார்த்தையை
மதியாது தங்களைத் தாங்களே பூசித்துக்
கொண்ட அவர்களை ஞான வீனராக எனப்
பிரமதேவன் சபித்தனன். பிறகு அத்தேவர்
சாபத்தீர்வு வேண்டப் பிரமன் என் புத்திர
ரைக்கேட்டுத் தீர்கஎன அவர்கள் பிரமபுத்
திரர்களை வேண்ட அப்பிரமபுத்திரர் புத்தி
ரர்களே உங்களை அச்சாபம் பாதியாது; விரு
ப்பின்படி செல்கஎன்று சாபத்தை விலக்கி
னர். அப்பொழுது பிரமதேவர் தேவர்களை
விளித்து நீங்கள் என் புத்திரர்களால் புத்தி
ரர்களே என அழைக்கப் பெற்றமையின்
அவர்கள் பிதுர்க்களாகவும் நீங்கள் புத்திரர்
களாகவும் விளங்குக என்று அனுக்கிரகித்
தனர். இவர்களைப் பூசிக்கின் பிதுர் பிரீதி
யாம். (சிவமகாபுராணம்.) பிதுர் தேவர்கள்
எழுவர் கவ்யவாகன், அனலன், சோமன்,
யாமன், அரியமான் அக்னிஷ்வாத்தன்,
பர்ஹிஷதன், என்போர். இவர்களில் நால்
வர் தேகத்தோடும் மற்றவர் தேகமின்றியு
மிருப்பர்.

2. பூர்வசிருட்டியில் பிரமதேவர் எழு
வர் பித்ருக்களைச் சிருட்டித்தனர். அவர்
களில் நால்வர் தேகத்தோடு கூடியவர்.
மூவர் தேஜஸ்வரூபர். இவர்களுக்குச் சார்
த்த தர்ப்பண பூர்வகமாய் ஆகாரத்தைக்
கற்பித்தார். இவர்கள் எழுவருக்கும்
ஸ்வதா என்பவள் தேவி. (பிரம்மகைவர்த்
தம்.)

3. சோமபர் என்னும் வேறு பித்ருக்கள் உளர். இவர்களின் மானச புத்திரியாகும் நருமதை அதிவேகமுடையளாக இருப்பள். ஆதலால் வேதியர் பித்ருக்களை யறிந்து சிராத்தாதிகள் செய்தல் வேண்டும் (மச்சபுராணம்.)

**பிதுர்யானம்** — அஜ வீதியின் அகஸ்திய நக்ஷத்திரத்தின் மத்யப்ரதேசம். சுவர்க்க காமிகள் இவ்வழியாக சுவர்க்கம் செல்வர். (யாக்கியவல்க்யம்.)

**பித்தபேதம்** — இது அனலபித்தம், ரஞ்சக பித்தம், சாதகபித்தம், ஆலோசக பித்தம், பிராசகபித்தம் என ஐந்துவகை. அவற்றுள் அனலபித்தம் ஆமாசயத் தானத்திற்கும், பக்குவாசய ஸ்தானத்திற்கு மத்தியிலிருந்துகொண்டு சலரூப வஸ்துக்களை வற்றச் செய்து உண்பதைச் சீரணிக்கச் செய்யும். ரஞ்சகபித்தம், இது ஆமாசய ஸ்தானத்திருந்து ரஸதாதுவைப் போஷிக்கும். சாதகபித்தம் இதயத்திருந்து இஷ்டத்தை முடிக்கும். ஆலோசக பித்தம் கண்களிலிருந்து ரூபங்களைத் தெரிவிக்கும். பிராசகபித்தம் இது சருமத்தைப் பிரவிக்கச் செய்யும். (ஜீவ.)

**பித்தம்** — இது, பளபளப்பு, உஷ்ணம், இலேசத்வம், சலத்தைதருதல், பேதி முதலிய ரூபங்களைப்பெற்றது.

ஸ்தானம் - உந்தி, கண், ஆமம், உதிரம், வியர்வை, சருமம், நாக்கு முதலிய இடங்களைப் பெற்றிருக்கும்.

குணம் - சீரணம், உஷ்ணம், பார்வை, பசி, தாகம், சுவை, ஞாபகம், சௌரியம் முதலியவற்றைக் குணமாகப்பெறும்.

தொழில் - மஞ்சள் நிறத்தால், வெப்பம், தாகம், வியர்வை கோபம், மூர்ச்சை புளித்தல், கசத்தல் இத்தொழில்களைச் செய்யும்.

கோபம் - உப்பு, புளி, காரம், அதிதீக்ஷணவஸ்து, தாகமீறும்வஸ்து, கோபகாலம், சீரணகாலம், ஐப்பசி, கார்த்திகை காலம் இவை அதிகமாகும் காலங்களிலும் மாதங்களிலும் கோபிக்கும்.

விருத்தி - இது அதிகமாயின் - மலம், சிறுநீர், கண்சருமம், அதிகரித்தல் தாகம், அதிபசி, எரிச்சல் உண்டாம்.

சீரணம் - இது குறைந்தால், மந்தாக்னி, சைத்யம், உண்டாம்.

**பித்தரோக பூர்வம்** — இது, அரோசகம், அன்னத்வேஷம், கசப்பு புளிப்பான வாந்தி, வெள்ளோக்காளம், குளிர், சுரம், பிதற்றல், சித்தபிரமை, நாவறட்சி, மயக்கம், மூர்ச்சை, தலை சுழற்சி, கண்சிவத்தல், சுழலல் விழித்தபடியிருத்தல், கொட்டாவி விக்கல், பற்கடித்தல், தேகம், கண், நா, மலம், மூத்திரம், மஞ்சளித்தல், மந்தாக்னி, அசீரணம், வெறித்தபார்வை, திடுக்கிடல், இக்குணங்களைத் தனக்குப் பழைய ரூபமாகக் கொண்டிருக்கும். (ஜீவ)

**பித்தரோகம்** — (சO) வகை அவை, ரத்த பித்தம், ஆம்லபித்தம், ஆவாரணபித்தம், உன்மாதபித்தம், விம்மிருதிபித்தம், திக்த பித்தம், ஆசியபாகபித்தம், சிம்மிகபித்தம், துர்கந்தபித்தம், தத்துருபித்தம், சோகபித்தம், மூர்ச்சைபித்தம், கண்டுபித்தம், பிடக பித்தம் அனலபித்தம், சுவேதபித்தம், இத்மரபித்தம், இக்காபித்தம், சூலைபித்தம், விஷ்டமப்பித்தம், விரணபித்தம், ஊர்த்தவபித்தம், சுவாசபித்தம், செம்பித்தம், சுரும்பித்தம், கரப்பான்பித்தம், எரிபித்தம், துடிப்பித்தம், விஷமப்பித்தம், மூலபித்தம், களப்பித்தம், ஒடுபித்தம், மூடுபித்தம், நடுக்குபித்தம், கபாலபித்தம், தாக பித்தம், திமிர்பித்தம், வலிப்பித்தம், கிருமி பித்தம், மருந்திடுபித்தம், என்பனவாம். (ஜீவ)

**பித்தளை** — இரண்டு பங்கு செம்பும் ஒரு பங்கு துத்தநாகமும் கலந்த கலப்பே பித்தளையாகிறது. இது, மஞ்சள் நிறமுடையது. இது உருகவும், தகடாக அடிக்கவும் கூடியதாதலால் பலவகை பாத்திரங்களும் கருவிகளுமிதனால் செய்யப்படுகின்றன.

**பித்தாமத்தர்** — இவர் இசைத்தமிழ் வல்ல புலவர். பரிபாடலில் (7) ஆம்பாடலுக்கு இசை வகுத்தவர். (பரிபாடல்.)

**பித்ரு** — 1. பிரகதகர்மாவின் குமரன். இவன் குமரன் பிரகன்மனசு.

2 தக்கன் குமரன்.

**பிநாகம்** — சிவமூர்த்தியின் வில், கண்ணுவரைக் காண்க.

**பிநாகி** — 1. ஒரு நதி. இதனைப் பிநாகினி யென்பர்.

2. சண்முக சேநாவீரன்.

**பிநாகிமாமுனி** — ஓர் முனிவர்.

**பிந்து** — விந்துவைக் காண்க.

**பிந்துசரசு** — கர்த்தமப் பிரசாபதிக்கு வரந்தர வந்த விஷ்ணுமூர்த்தியின் கண்ணீர் அவ்விடத்தில் விழுந்தமையால் ஒரு ஸரஸாயிற்று.

**பிந்துசாய்** — A Sacred pool two miles of Gangothri in Himalaya where Bagiratha performed penance to bring down the Ganga from heaven. (பா - சபா.)

**பிந்துசாரன்** — மகததேசாதிபதி. சந்திரகுப்தன் புத்திரன்.

**பிந்துமதி** — 1. மரீசியின் தேவி.

2. சசிபிந்துவின் பெண்.

3. மாந்தாதாவின் தேவி.

2. இது சித்திரக்கவியினுள் ஒன்று. இது பாடிய செய்யுளில் எல்லா வெழுத்தும் புள்ளியுடையனவாக வருதல்.

**பிந்துமான்** — மரீசிக்குப் பிந்துமதியிடத்து உதித்த குமரன். தேவி, சாகா; குமரன் மது.

**பிப்பபாச்சையர்**—ஒரு வீரசைவ அடியவர். இவர் சிவனடியவர்உண்ட சேடத்தை வண்டியில் இட்டு இடபக் கொடிநாட்டி அக்ராரத்து வழிச்செல்லுகையில் அவ்விடமிருந்த வேதியர் பலவாறு தூஷித்துக் கோபித்துக்கொண்டனர். அதனால் இவர் பண்டியில் பொதிந்திருந்த சேடத்தை யெடுத்து வீடுகளின்மேல் எறிந்தனர். அதனால் வீடுகள் எரிந்தன. பின் வேதியர் கூடி வேண்ட எரியும்தீயை வருவித்துக்கொண்டவர்.

**பிப்பலாமகாதேவி** — நமிதீர்த்தங்கரின் தாய்.

**பிப்பலாயனன்**—சூர்யவம்சத்தரசன். யோகியாயினன்.

**பிப்பிலன்** — 1. மித்திரனுக்கு ரேவதியிடம் உதித்த குமரன்.

2. இல்வலன் புத்திரனாகிய அரக்கன்.

3. அரிட்டன் தம்பி.

4. சண்முக சேநாவீரன்.

**பிப்பிலாதனன்** — 1. இருஷபனுக்குச் சயந்தியிடம் உதித்த குமரன்.

2. ஒரு இருடி, வேதாந்த விசாரணைக் கருத்தன்.

**பிம்பசாரன்** — கௌதமபுத்தர் மாணாக்கரில் ஒருவன்.

**பிம்பப்பிரதிபிம்பபாவம்** — இது, சுபாவத்திலே பின்னங்களா யிருக்கினும், ஒன்றற்கொன்றுண்டாகிய ஒப்புமையினால் அபின்னங்களாகிய உபமான உபமேயங்களின் தருமங்களை இரண்டு வாக்யங்களில் தனித்தனி சொல்லுதல். (குவ.)

**பிம்பப்பிரதிபிம்பம்** — (Photograph) இது ஒரு இருண்ட பெட்டி (காமிரா). இது பெரிய பொருளைச் சிறியதாகவும், சிறியதைப் பெரியதாகவும் காட்டும் சுகரும் கண்ணாடிகளை உட்பெற்ற குழலாலமைந்தது. இப் பெட்டியின் கடைசியில் ஒரு கண்ணாடித் தட்டமைந்திருக்கும். இவ்விடம் படமெடுப்பவனிற்பன். இவன் அக்கண்ணாடிகளை நன்றாகவுருக்கொள்ள திருத்தி, அவனுக்குத் திருப்தி ஆனபின் மருந்து பூசிய மற்றொரு கண்ணாடியிட்டுப் பெட்டியின் வாயைமூடிப் படமெடுத்துக் கொள்ள சரியான நிலையிலிருக்கையில் பெட்டியின் வாயைத் திறப்பன். பின்பு அதில் உரு அமையும்.

**பிம்பாஜிபக்தர்** — மண்டலியென்னு மூருக்கு அரசனாகி எல்லாவளங்களுங் குறைவின்றிச் சத்திபூசை செய்பவனாய்ப் பிம்பாஜியென்பவன் ஒருவனிருந்தான். அவன் நித்தியமும் காளிக்குப் பூசை செய்து அவள் உண்டபின் தான் உணவுண்டு வருவான். இவ்வகை வருகையில் இவன் செய்த புண்ணியத்தால் தீர்த்தயாத்திரையாக வந்த பாகவதர்கள் இவன்நாட்டையடைந்தனர். இவர்களது வரவைக்கேட்ட அரசன் அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச்செய்து சத்தியைப் பூசிக்கக் கோவிலையடைந்து பூசித்து அமுதண்ண அழைக்கையில் காளிகாதேவி தரிசனந்தந்து உன்னிடம் வந்த பாகவதர்கள் உண்ட பின்பே நான் உணவுகொள்வேன் எனப் பிம்பாஜி அதனைக்கேட்டு உன்னிலும் உயர்ந்தோர் உளரோ என்ன, காளிகாதேவி எனக்கும் மற்றவர்க்கும் நாயகனுவான் திருமால்; அவனுக்கு அன்பர் பாகவதர் மிக்க உயர்ந்தோர் என்ன, அரசன் காளியை வணங்கி அவனை நான் தரிசிக்க அருள்செய் என்ன அது என்னால் ஆகாது. பாகவதரைப் பணிந்துகொள்கவென, அரசன் அவர்களைப் பணிந்து துதித்து வீட்டிலமுது செய்வித்துக் கூறுவானாயினன். அடிகளே, எனக்கு ராமதரிசனஞ் செய்விக்கவென வேண்ட அவர்கள் ராமானந்தரிடம் உபதேசம் பெறின் ஆகுமென்ன அவ்வாறு ராமானந்தரைச் சரணடைந்து உபதேசம் பெற்றுச் சில நாளிருந்து துவாரகை சென்று கண்ணன் தரிசனந்தரப் பணிந்து மனைவியுடன் அவ்விடம் நீங்கி ஒரு காட்டின் வழி மனைவியுடன் வருகையில்

ஒரு புலிவர மனைவியார் கண்டு பயந்து புலிதின்ன வந்ததென்னப் பிம்பாஜி அத னுள்ளும் இறைவனமர்ந் திருக்கின்றான். நீ என் அஞ்சுகின்றனை யென்னுமளவில் புலியின் முகக்குறிப்பைக் கண்டு தம்மிட மிருந்த துளபமாலையை அதன் கழுத்தி லிட்டனர். புலி தனது கொடுந் தொழில் மறந்து எதிரில்நிற்க அதன்தலையில் தம் கையைவைத்து ராமநாமத்தைச் சொல்லி இன்றுமுதல் நீ கொடுந்தொழில் செய் யாதே எனறனர். அதுமுதல் புலி கொடு மைசெய்யாது சருகருந்தி ஏழு நாளில் முத்திபெற்றது.

**பிரகடை** — வீரேச லிங்கத்திடை யமர்ந்த தெய்வம்.

**பிரகதகட்சு** — அசமீடன் குமரன்.

**பிரகதிசுவன்** — அரம்யாசுவன் குமரன்.

**பிரகதிரமா** — 1. பிரகத்ரன் குமரன். இவன் குமரன் பிரகத்பானு.

2. சுநக்ஷத்ரன் குமரன். இவன் குமரன் சேகதித்.

**பிரகத்கர்ணன்** — பத்ராதன் குமரன்.

**பிரகத்காயன்** — பிரகத்தனுவின் குமரன்.

**பிரகத்தன்** — 1. (சூ.) சகதேவன் குமரன்.

2. குபேரனிடத்துப் பட்டத்தை விரு ம்பி இராவணனால் ஏவப்பட்ட அரக்கன். (இராவணசேநாபதி) சுமாலியின் புத்தி ரன். நீலனால் கொல்லப்பட்டவன்.

3. ஒரு ஆரியநாட்டரசன். இவனுக்குத் தமிழ் அறிவித்ததற்கு இவன்மீது கபிலர் குறிஞ்சிப் பாட்டுப் பாடினர்.

**பிரகத்திருது**—பாரதவீரன்,சூக்குமன்அம்சம்.

**பிரகத்திருதன்** — (சூ.) தேவராதன் குமரன்.

**பிரகத்துவாசன்**—(சூ.) அமித்ரசித் குமரன்.

**பிரகத்தூர்த்தன்** — சதத்துவன் குமரன். இவன் தன் சேனாபதியாகிய புஷ்யதூர்த்த னால் கொல்லப்பட்டவன். இவன் நந்தனுக் குப் பின் கலியாரம்பத்தில் அரசாண்டான்.

**பிரகத்பலன்** — 1. கோசலத்தரசன்.

2. விசுவசாகியன் குமரன் இவன் பாரத யுத்தத்தில், அபிமன்யுவால் கொலையுண் டான். இவன் சூர்யவம்சத்துக் குசன் வம் சத்தவன். பாண்டவர் இராசசூயம் செய்த காலத்தில் அக்கிரபூசைக்கு உரியவன் என்றுசிசுபாலனால் குறிப்பிக்கப்பட்டவன். மகாபலவான்.

3. தேவபாதனுக்கு மூசையிடம் பிறந்த குமரன்.

4. சகுனியின் தம்பி.

**பிரகத்பாநு** — பதினன்காவது மன்வந்தர த்து மநு. விஷ்ணுவின் அம்சம் சாத்த ராயணர் புத்திரர்.

**பிரகத்ரதன்** — 1. உபரிசரவசுவின் குமரன். இவன் குமரன் சாக்ரன், சராசந்தன்.

2. பிருதுலாக்ஷன் குமரன். இவன் கும ரன் பிரகதகர்மா.

3. மகததேசத்து அரசருள் ஒருவன்.

4. அகிலதரன் குமரன். இவன் கும ரன் சிந்துரதன்.

**பிரகந்நளை**—அருச்சுநன் பேடியுருக்கொண்டு மச்சநாட்டில் இருந்தகாலத்து வைத்துக் கொண்ட பெயர்.

**பிரகந்மனசு** — பிரகத்பானு குமரன். இவன் குமரன் செயத்ரதன்.

**பிரகாணசமம்** — 1. எந்த ஏதுவிற்கு அணி பொருளுக்கு மறுதலையான துணிந்த பொருளைச் சாதிக்கும் வேறு ஏது உண்டா யிருக்கிறதோ அது. (தரு)

2. ஏதற்குப் பிரதிபக்ஷமான வேறாகும் ஏது உண்டோ அது.

**பிரகாணச்மை** — வாதி கூறிய ஏதுவினும் சாத்யத்திற்கு விபரீதசாதகமானவேறு ஏது வைக்காட்டல். (தரு)

**பிரகலாதன்** — 1. இரணயகசிபு குமரன். இவன் இளமையில் ஆசாரியபுத்திரனாகிய சண்டனிடத்தில் கல்விகற்கத் தந்தையால் ஏவப் பெற்று ஆசாரியன் கற்பித்தவாறு ஓதாமல் அரிநாமம் ஓதினன். இதை உபா த்தியாயர் அரசனுக்கு அறிவிக்கவும் அஞ் சாது மீண்டும் தந்தை எதிரிலும் அரிநாம மே ஓதினன். அரசன் குமரனிடத்தில் கோபித்து ஆயுதம் முதலியவைகளைப் பிர யோகித்தும் அக்கினியில் தள்ளியும், நாகங் களைவிட்டுக் கடிப்பித்தும், யானையை யே வுவித்தும் கோபுரத்தில் இருந்து தள்ளு வித்தும், கடலில் பாய்ச்சுவித்தும், விஷம் ஊட்டுவித்தும், சம்மட்டியால் அடிப்பித் தும் இம்சிக்கச்சிறிதும் அஞ்சாது இரண்ய கசிபின் எதிரில் இருந்து அரிநாமம் ஸ்ம ரித்தனன். அசுரன் கோபித்து உன்தேவன் எங்கு இருக்கின்றனன் எனக் குமரன் எங்கும் உளன்என, எதிரில் இருந்த தூணில் இருக்கின்றனனோ எனக்கேட்கக் குமரன் ஆம்என அசுரன் அதை உதைக்கத் தூணில் இருந்து வெளிவந்த நரசிங்கத்திரு வுருவை அவனுக்குக் காட்டித் தந்தையை உயிர்போக்குவித்தனன். இவன் விஷ்ணு மூர்த்தி தரிசனந் தந்தகாலத்து அசுரரை

இனிக்கொல்லாவரமும் அரிபதம் மறவா உரிமையும் பெற்றவன் இவன் தாய்வயிற்றில் இருக்கையில் நாரதரால் உபதேசிக்கப்பட்டவன். இவன் தன் தந்தைக்குப்பிறகு இராஜ்யபட்டாபிஷேகம் அடைந்து கொலுவில் இருக்கையில் ஒருநாள் இருடி ஒருவர் இவனிடம் வந்தனர். அவரை எதிர்கொண்டு உபசரிக்காது இறுமாப்புடன் இருக்க இருடி இது உனக்குத் திருமாலால் வந்தது ஆகையால் இனித் திருமால் உனக்குச்சத்துருவாகஎனச் சபித்துச் சென்றனர். அந்தப்படி இவன் திருமாலிடம் விரோதித்துப் பாற்கடல்சென்று ஸ்ரீவிஷ்ணுமூர்த்தியுடன் தேவவருஷம் ஒன்று போராடித் தோற்று நல்லறிவு அடைந்து தவத்தன் ஆயினன். இவன் தாய் லீலாவதி. குமரன் விரோசனன் (கூர்மபுராணம்.)

2. இவன் கௌசிகபுறத்திலிருந்த வேதியன். இவன் சகோதரன் குமாலன். இவ்விருவரும் அப்புறுசால் முனிவரை அடைந்து தவமேற்கொண்டு அவர்க்குப் பணிவிடை செய்திருக்கையில் ஒருநாள் சமித்துக்கொண்டு வரச்சென்று அவற்றை வெட்டிவந்து ஆச்சிரமத்தின் சுவரிடைச்சாத்தச் சுவரிடிந்து விழுந்து குருவின்குழந்தை இறந்தது. இதனைக் குருவறிந்து உங்களில் யாவர் குழந்தையைக் கொன்றவர்கள் அறிந்து வருகவெனக் குளிகைகொடுத்து யமபுரமனுப்பினர். சென்ற இருவருள் பிரகலாதன் தான் கொலைபுரிந்தோனென யமனால் அறிந்துவந்து குருவிடம்கூறக் குரு அவனைப் பெண்ணை நதியில் நீராட்டுவித்துப் புனிதனாக்கினர். (பெண்ணைநதிபுராணம்)

3. இவனுக்கு இந்திரகந்தனன், க்ரஓறன், என்றும் பெயர். இவன் சிவாநுக்ரகத்தால் விஷ்ணுவின் சக்ரமும், இந்திரன் வச்சிரமும், தன்மீதுபடில் பொடியாகும் வரத்தையடைந்தவன். (சிவமகாபுராணம்.)

**பிரகனன்** — சுமாலி குமரன்.

**பிரகஷ்திரன்** — (சங்.) மன்யு குமரன்.

**பிரகஸ்பதி** — 1. பிரமன் மானசபுத்திரர்களில் ஒருவனாகிய (அங்கிரா) அல்லது ஆங்கிரசருஷிக்குச் சிரத்தாதேவியிடம் பூராடத்தில் பிறந்தவன் என்றுங் கூறுவர். பார்யை தாரை, இவன் தவத்தால் கிரகப்தம் பெற்றனன். இவனுக்கு ஆங்கிரஸன் எனவும் பெயர். தேவகுரு; சகோதரன் உதத்தியன், (உசத்தியன்), சகோதரி யோகசித்தி, அங்காரகனுக்கு இரண்டுலக்ஷம் யோசனை உயரத்தில் இருப்பவன். தாரையிடம் சந்திரனுக்குப் பிறந்த புதனைக்கண்டு தன் குமரன் எனச் சந்திரனிடம் வாதாடியவன். இந்திரன் தன்னை அவமதித்ததால் சிறிதுகாலம் அவனைவிட்டு நீங்கி இந்திரனுக்குத் துன்பம் வருவித்தவன். ஒருமுறை தன்தம்பியாகிய உதத்தியன்தேவி, (மமதை), யென்பவள் கருவுற்றிருக்கையில் அவளிடம் அநியாயமாய்க் கருப்பநித்துப் பரத்துவாசனைப் பெற்றவன். அந்த மாதாவின் கருவில் இருந்த குமரன் இவன் கருப்பதிக்க இடம் தாராததினால் அக்குமரனை அந்தகனாகச் சபித்தவன். சநமேசயனுக்குப் புத்திகூறிச் சர்ப்பயாகத்தை நிறுத்தச் செய்தவன். ஒருமுறை இந்திரன் இராச்சியகார்யம் பாராது தெய்வசிந்தனை மேலிட்டிருக்கையில் அவனுக்கு உலகாயதமதம் போதித்துத் தெய்வசிந்தனை நீக்கிச் சிறிதுசிறிதாகத் தெய்வபுத்தி யுண்டாக்கினவன். இவன் தேரில் பொன்மயமான எட்டுக்குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். இவனது நிறம் பொன்.

2. இவர் நீராடச்சென்று ஜலந்தெளியாததால் ஜலத்தைக் கோபித்து இனி தவளை மீன் முதலிய செந்துக்களால் நீங்கள் கலக்கமடைக எனச் சபித்தனர். (பார - சாந்.)

**பிரகஸ்ஸோமன்** — பதுமையோனியைக் காண்க.

**பிரகித்ரான்** — 1. நிம்புத்திரன். இவன் குமரன் சுதாசநன்.

2. சிம்மளத்தீவின் அரசன். இவன் தேவி கௌமதி, இவளிடம் இலக்ஷ்மி அவதரிப்பள்.

**பிரகிருதி** — பஞ்சசத்திகளாகிய துர்க்கை, ராதை, லக்ஷ்மி, சரஸ்வதி, சாவித்ரி இவர்களே ஐவகை பிரகிருதிகள் என்பர். பிர - என்பதெழுச்சி, கிருதி எனபது சிருட்டியையும் தெரிவிப்பதெனக்கொண்டு சிருட்டியில் மனவெழுச்சியுடையர் எனவும், பிர - சத்வகுணம், கிரு - ரஜோகுணம், தி - தமோகுணம் எனத் திரிகுணாத்மக சத்தியெனவும், பிர - முதல், கிருதி - சிருட்டி, சிருட்டிக்கு முதலானவர் என்றும் பொருள் கூறுவர். (தேவி - பா)

**பிரகிருதிகலாஸ்வரூபதேவியார்** — சுவாகாதேவி - அக்னிபத்தினி, இவளில்லாவிடில் யஞ்ஞத்தின் அவிசைத் தேவர்கள் அடையார்.

தக்ஷணுதேவி, தீக்ஷாதேவி - யஞ்ஞபத்தினிகள், இவர்கள் பூஜிக்கப்படாவிடில் எல்லா யஞ்ஞங்களும் வீணும்.

சுவதாதேவி - பிதுர்க்கள் பத்தினி, இவளைப் பூசிக்காவிடின் பிதுர்க்கள் பூஜை வீணுகும்.

சுவஸ்திதேவி - வாயுபத்தினி, இவள் தானம் வாங்கும்போதும் கொடுக்கும்போதும் பூசிக்கப்படுவள்.

புஷ்டிதேவி - கணேசபத்தினி, இவளில்லாவிடில் எல்லோரும் க்ஷீணித்துவிடுவர்.

துஷ்டிதேவி - ஆதிசேஷபத்தினி, எல்லோரையுங் களிப்பிப்பவள்.

சம்பத் - ஈசானபத்தினி, எல்லா செல்வங்களையும் தருபவள்.

திருதி - கபிலபத்தினி, தைரியமடைவர்.

சதி - சத்தியபத்னி, இவளில்லாவிடில் பந்துக்களுள்ளவராகார்.

தயை, பதிவிரதை - இவர்கள் மோகபத்னியர், இவர்களில்லாவிடில் யாதொரு பயனும் அடையார்.

பிரதிஷ்டை - புண்யபத்னி, புண்ணியம் தருபவள்.

சம்சித்தி, கீர்த்தி - சுகர்மபத்னிகள்.

கிரியை - உத்யோகபத்னி. மித்யை - அதர்ம பத்னி. இவள் கிருதாயுகத்தில் காணப்படாமலும், திரேதாயுகத்தில் சூக்ஷ்மையாயும், த்வாபரயுகத்தில் பாதியுருவுடனும், கலியில் முழுவுருவுடன் கலகனுடன் திரிவள்.

சாந்தி, லச்சை - சுசீலைக்குப் பத்தினிகள். புத்தி, மேதை, திருதி தியானபத்னிகள். காந்தி தருமபத்தினி. லக்ஷ்மி மதிபத்னி. காலாக்னிதேவி, சித்தயோகினி, நித்ராதேவி மூவரும் உருத்ரபத்னிகள். சந்தி, இரவு, பகல் இவர்கள் காலபத்தினிகள். பசியும், தாபமும் லோபபத்தினிகள். பிரமை, தாஹிகை தேஜஸின் பத்தினிகள். காலகன்னி, மிருத்யு, ஜரை இவர்கள் சுவரபத்தினிகள். நித்ரா புத்திரிகளான தாந்திரை (சோம்பல்) பிரீதியும், சுகபத்தினிகள் சிரத்தையும், பக்தியும் வைராக்ய பத்தினிகள். இவர்களன்றி தேவமாதாவான அதிதி, பசுக்களின் தாயான காமதேனு, அசுரமாதாவான திதி, கர்த்துரு, விநதை, தநு, சந்திரபத்தினி ரோகணி, சூரியபத்தினி சம்ஞா, மநுபத்தினி சதருபை, இந்திரபத்தினி சசி, குருபத்தினி தாரை, வசிட்டபத்தினி அருந்ததி, கௌதமபத்தினி அகலியை, அத்திரிபத்தினியான அநசூயை. கர்த்தமபத்தினி தேவஹூதி, தக்ஷபத்தினி பிரசூதி, பிதுர்க்களின் மானசிகபுத்திரி மேனகை, அகஸ்தியபத்தினி லோபாமுத்திரை, குபேரபத்தினி குந்தி, வருணபத்தினி பிரசித்தி, வாயுபத்தினி விந்தியா, தமயந்தி, யசோதை, தேவகி, காந்தாரி, திரௌபதி, சௌம்யா, சத்யவதி, ருஷபபுத்திரி குலோத்வகா, மந்தோதரி, கௌசலை, சுபத்திரை, கௌரவி, ரேவதி, சத்தியபாமா, காளிந்தி, லக்ஷ்மணு, ஜாம்பவதி, அக்னிஜிதி, மித்திரவிந்தை, லக்ஷ்மளை, ருக்மணி, சீதை, காளி, பரிமளகந்தி, உஷை, இவளுடைய சகியான சித்ரலேகை, பிரபாவதி, பாநுமதி, மாயாவதி, ரேணுகை, பலராமர் தாயான ரோகணி, கிருஷ்ண சகோதரியான ஏகதந்தை, துர்க்கை, கிராமதேவியர் இவர்கள் எல்லோரும் பிரகிருதியின் கலையானவர்கள், பிரபஞ்ச ஸ்திரீகள் எல்லாரும் அப்பிரகிருதி அம்சத்திற் பிறந்தவர்களே. (தேவி - பா.)

**பிரகிருதிசுவருபம்**—ஐந்து முகங்கள், மூன்று விழிகள், எட்டுப்புயங்கள் மூன்றுகால்கள் உடையாள். (சிவமகா-புரா.)

**பிரகேதி**—1. திதிபுத்திரனுகிய ஒரு அசுரன்

2. மால்யவந்தன் முதலிய அரக்கர்குல முதல்வன். ஏதிக்குச் சகோதரன்.

**பிரகோடன்** — (சூ.) கண்ணனுக்கு இலக்கணையிடத்து உதித்த குமரன்.

**பிரசங்கசமை** — சாதனத்தின் பரம்பரையை வினவுவது.

**பிரசங்கன்** — இராவண சேநாபதியரில் ஒருவன். அங்கதனுல் இறந்தான்.

**பிரசண்டன்** — 1. ஒரு விஷ்ணு படன்.

2. கழுகாசலத்தில் கிரேதா யுகத்தில் பூசித்து முத்தியடைந்த கழுகரசன்.

3. பலியைக்காண்க.

4. வத்சந்திரன் குமரன்.

5. ஸ்மிருதிஹாரணியின் குமரன். பாழடைந்த வீடுகளில் இருந்து துன்பம் விளைவிப்பவன்.

**பிரசன்னடைபீடம்**—சத்திபீடங்களில் ஒன்று.

**பிரசநி**—1. சவிதாவின்தேவி. இவள் அக்னிகோத்ரம், பசுபாகம், சாதுர்மாஸ்யம், முதலியவற்றைப் பெற்றவள்.

2. அநமித்ரன் குமரன். இவன் குமரர் சுவபலக்கர், சித்திரகர்.

**பிரசநிகர்ப்பர்** — 1. சுதசுக்குப் பிரசந்நியிடத்துதித்த குமரர்.

2. திரேதாயுகத்தில், விஷ்ணுவின் பெயர்.

**பிரசந்நி** — சுதசுக்குப்பாரி; சுவாயம்புமன்வந்தரத்தில் இருந்தவள். இவளே ஒருபிறப்பில் தேவகியாய் வசுதேவருக்குப் பாரியாயினள். குமரர் பிரசநிகர்ப்பர்; மற்ருெரு பிறப்பில் அதிதி.

**பிரசந்நுவான்** — (சந்) சன்மசயன் குமரன். இவன்குமரன் பிரவீரன்.

**பிரசாக்ரன்** — புரஞ்சயன் சேநாபதி.

**பிரசாதசிவர்** — சைவபத்ததி செய்த சிவாசாரியருள் ஒருவர்.

**பிரசாதன்** — 1. இந்திரத்துய்ம்மன் வம்சத்தவனாகிய ஒரு அரசன்.

2. யமனுக்கு மைத்திரியிடம் உதித்த குமரன்.

**பிரசாபதி** — 1. தேவலர் குமரர்; இவர் மனைவியர் தூம்ரை, புத்தி, மனஸ்வநி, ரதை, சுசனை, சாண்டிலி, பிரபாசலை இவர்களிடம் அஷ்டவஸுக்கள் பிறந்தனர்.

2. ஒரு பிரமரிஷி. இவர் கௌதமரை நீ காமவேட்கையன் என்று இகழக் கௌதமர் நீ புருவாகி நரமாமிசம் புசிக்க எனச் சபித்தனர். அச்சாபம் ஏற்ற இருடி, புருவாய் நரமாமிசம் புசித்துச் சஞ்சரிக்கையில் ஒருநாள் சோழ அரசன், ஒருவனை நரமாமிசம் கேட்க அச் சோழன் உடல் முழுதும் அறிந்து தந்து உயிர் நீத்தனன். இதனைக்கண்ட இருடி சீர்காழியில் சிவபூசை செய்து அரசன் உயிரை ஈந்து, தம் சாபத்தைப் போக்கிக் கொண்டனர். இதனால் சீர்காழிக்குப் புறவம்என ஒரு பெயர் உண்டாயிற்று.

3. சுரமைநாட்டரசன். திவிட்டன் தந்தை. பாகுவலி வம்சத்தில் பிறந்தவன். (சூளா.)

**பிரசாபதிக்ஷேத்திரம்** — பிரயாகை, பிரதிஷ்டானபுரம், வாசுகிஹிரதம், வெகுமூலபர்வதம், இவைகளுக்கு இடையேயுள்ள புண்ணிய க்ஷேத்திரம். இதில் ஸ்நானஞ் செய்வோர் புண்ணியம் பெறுவர்.

**பிரசாபத்தியம்** — ஒரு விரதம்.

**பிரசாபத்தியன்** — ஓரக்னி; புரந்தரன் புத்ரன்.

**பிரசாவதி** — கும்பகமகாராசாவின் தேவி. மல்லிநாத தீர்த்தங்கரின் தாய்.

**பிரசானி** — 1. மனுப்புத்திரருள் ஒருவன். இவன் குமரன் இக்கு.

2. கனித்திரன் தந்தை.

**பிரசிரமன்** — வசுதேவருக்குச் சாந்திதேவியிடம் உதித்த குமரன்.

**பிரசு** — பயனுக்குத் தமயன்.

**பிரசுசுருகன்** — (சு.) மருத்தின் குமரன்.

**பிரசூதி** — 1. சுவாயம்பு மனுவின் குமரி. தக்ஷப்பிரசாபதியை மணந்து (கசு) பெண்களைப்பெற்று யமனுக்கு (கங) அக்னிக்கு (க) பிதுர்தேவருக்கு (க) உருத்திரனுக்கு (க) ஆகக் கொடுத்தவன்.

2. மநுவிற்குச் சதரூபையிடம் உதித்த குமரன்.

**பிரசேதஸ்** — இவர்கள் பதின்மர். இவர்கள் பிராசீனபர்கிக்குச் சதத்ருவிடம் பிறந்தவர்கள். இவர்கள் உருத்திர உபதேசத்தால் தவஞ்செய்திருக்கையில் நாராயணர் தரிசனந்தந்து கண்டுமகருஷியின் குமரியை மணக்கக் கட்டளை யிட்டபடி அவள் ஒருத்தியைப் பதின்மரும் மணந்து பிரசாசிருட்டி செய்யத் தொடங்கி விஷ்ணுமூர்த்தியிடம் பல வரங்களைப்பெற்று எங்கும் தழைத்திருக்கும் விருக்ஷங்களை அழிக்கத் தமது முகத்தில் அக்னியையும் வாயுவையும் சிருட்டித்து விட்டனர். இதனை யறிந்த பிரமன் விருக்ஷகன்னிகையாகிய மாரிஷையைக் கலியாணஞ் செய்வித்துச் சமாதானப் படுத்தினன். இவர்களிடம் தக்ஷன் பிறந்து பிரசாசிருட்டி செய்தனன். இவர்கள் நாரத உபதேசத்தால் முத்தி பெற்றனர். இவர்கள் ஓஷதிகளை யழிக்கையில் இவர்கள் அதை அழிக்காதிருக்கச் சந்திரன் நீதி கூறினன். (பாகவதம்.) (பிரமபுராணம்.)

**பிரசேதநன்** — 1. பிரசேதசுகளுக்குக் குமரனாய்ப் பிறந்த தக்ஷன்.

2. பிரமனது தேசசால் பிறந்தவன்.

**பிரசேநசித்** — 1. வாங்கலன் குமரன், சூர்யவம்சத்தவன். ஜமதக்னிக்கு மாமன். இரேணுகையின் தந்தை.

2. க்ஷத்திரியன், யாதவன், சத்திராஜித்தின் உடன் பிறந்தவன் இவனுக்கு சேனன் என்றும் பெயர். (பா. சபா.)

**பிரசேநன்** — 1. சத்ராசித்தின் சகோதரன் சியமந்தக மணியைப் பூண்டு வேட்டைமேற்சென்று சிங்கத்தால் மணியுடன் கொல்லப்பட்டவன்.

2. நிம்மனர் குமரன்.

**பிரசை** — பிராம்சுவின் குமரன்.

**பிரச்சிரவணமலே** — இராமமூர்த்தி இலங்கைமேற் சென்ற காலத்தில் மழைக்காலம் மாறும்வரையில் சுக்ரீவன் உபசரிக்கத் தங்கியிருந்த மலே.

**பிரச்சின்னயோகன்** — ஒரு இருடி.

**பிரச்சோதனன்** — இவன் ஒரு சக்கரவர்த்தி என்பர். வாசவதத்தையின் தந்தை, இவனது நாடு. அவந்தி இராசதானி எத்தனேயோ நூற்ருண்டுகளாகப் புகழ்பெற்ற உச்சைனி நகர் வேறு தேசத்தரசர் பலர் ஆண்டு தோறுந் திறை கொடுத்து வணங்கப்பெற்ற பெருவிறல் வாய்ந்தவன். அங்ஙனம் திறை கொடாமையினுலேதான் உதயணனே வஞ்சத்தாற் பிடித்துச் சிறையில் வைக்கும்படி செய்வித்தனன். இவனது சென்னி வழிபடு தெய்வத்தை யன்றியாரையும், வணங்கி யறியாதது. இவனுக்குத் தேவியர் பதினருயிரவர். வாசவதத்தையைப்பெற்ற நற்ருயாகிய பதுமகாரிகை யென்பவள் இவர்களுள் முதன்மை வாய்ந்தவள். இவனுக்குப் பாலகன், பாலகுமரன், கோபலக னென்பவர் முதலிய பல குமாரர்கள் உண்டு, மந்திரிகள் பதினருயிரவர் அவர்களுள் முதன்மை வாய்ந்தவன் சாலங்காய னென்பவன, இவனுக்குள்ள முரசம் பதினருயிரம். இவனுக்கு இப்படியே ஒவ்வொன்றும் பதினருயிரம் பதினருயிரமாகப் பதினறு பகுதிகளிருந்தன. தேவர்கள் விரும்புவதும் சொல்லில் அடங்காததுமான சிறப்பை யுடையவன். இவன் சொல் மிக்க பொருட் சிறப்பை யுடையது. ஆற்றலிலும், வெற்றியிலும், அறிவிலும், நிகரற்றவன்; யாவரும் அஞ்சுதற்குரிய கடுங்கோபத்தினன்; ஆணையிற் சிறந்தவன்; இவனது சேனே பலவகையாகப் பாராட்டபடுகின்றது; "படையுடை வேந்தன்" "படைப்பெரு வேந்தன்" "வீரிய வேந்தன்" "அவந்தி வேந்தன்" "ஏகத்திகிரி இறைவன்" "வெற்றி வேந்தன்" "உஞ்சையர் பெருமகன்" "பெரு வேந்தன்" "ஆற்றல் வேந்தனெனவும்" இவன் பெயர்கள் வழங்கும். (பெ. கதை)

**பிரச்தரேயன்** — யமனுக்கு இரியிடம் உதித்த குமரன்.

**பிரசீதாவன்** — உத்கீதன் குமரன். தாய் தேவகுல்லி. மனைவி விருச்சை. குமரன் விபு.

**பிரஞ்சயன்** — சுவிரன் குமரன். இவன் குமரன் பாகுரதன்.

**பிரணவம்** — இது மூன்றக்ஷரமாய், மூன்று பதமாய், மூன்றர்த்தப் பிரகாசமாய், ஏகாக்ஷரமாய், ஏகபதமாய் ஏகார்த்தப்பிரகாசமாய் இருக்கும். இதில் முதலெழுத்தாகிய அகரம் ஒப்பற்ற முதல்வனுகிய பகவானைத் தெரிவிக்கும். மத்யபதமான உகரம், அவதாரணவாசியாய் இருக்கும். மூன்ருவதான மகரம், ஆத்மவஸ்ரூபத்தை விளக்கும். இம்மூன்று எழுத்துக்களும் மூன்று வேதங்களின் ஸாரமாகும். இதன் முதலெழுத்துக்குப் பொருள் ரக்ஷகம் ஆனமையால் அத்தொழிலுக்குரிய தர்மம் சகல ஐச்வர்யத்தோடு கூடிய ஈச்வரனுக்கேயன்றி மற்றவருக் கில்லாமையால் அது பகவானைத் தெரிவிக்கும். மற்ற அக்ஷரங்கள் முன்சொன்னபடி உணர்த்தும், இது, வைத்துதி, தாமசி, நிர்க்குண விர்த்தி, என மூவிதப்படும். இது, சகல தேவர்க்கும் பிறப்பிடமாயும், மந்திரங்களுக்கெல்லாம் மூலமாயும் இருக்கும். இது, சமஷ்டி, வியஷ்டி, என இருவிதப்படும். இதனை வேத ஆரம்பத்திலும் முடிவிலும் உச்சரிப்பர். இதனை உத்கீதை யெனவும், சுத்தமாயை யெனவும் கூறுவர். இதில் எல்லா உலகங்களும் எல்லாச் சுருதிகளும் தோன்றி ஒடுங்குமென்பர். இதன் உற்பத்தியைச் சூதசம்மிதையில் இவ்வகை கூறி யிருக்கிறது. ஒருமுறை பிரமன், திரிலோகங்களை நீருக்க அதினின்றும் அக்னி, காற்று, சூரியன் தோன்றினர். மீண்டும் தபோ அக்கினியால் அவைகளை அழிக்க அவற்றினின்றும் அகர உகர யகரங்கள் உண்டாயின. அம்மூன்று எழுத்துக்களேயும் திரட்டி ஓம் என வைத்தனன். இது வலம்புரிச்சங்கின் வடிவினது. இதன் பெருமைகளைக் கூறுமிடத்து ஆலம் விதையில் இருந்து சாகோப சாகைகள் தோன்றுமாறுபோல இதில் மந்திரம், புவனம் முதலிய சராசரங்கள் எல்லாம் தோன்றும். இதன் விரிவை உபநிஷத்து ஆதி பெரு நூல்களிற்கண்டு கொள்க.

**பிராணிந்தகன்** — (கு.) மருவின் குமரன்.

**பிரதத்தன்**—இவன் வடநாட்டரசன். இவன் தலயாத்திரை புறப்பட்டுத் திருவண்ணமலே யடைந்து உருத்திரகணிகையைக் கண்டு மோகித்துக் குரங்கு முகமாய் அத்தலத்தில் திருப்பணிசெய்து தன்னுருப் பெற்றவன்.

**பிரதபநன்** — இராவணசேநாபதியரில் ஒருவன். நளன் என்னும் வாநரவீரனால் மாய்ந்தவன்.

**பிரதமசாகையர்**—பிராமணரில் ஒருவகைப் பிரிவினர். இவர்களை மத்யான காலத்தில் பிராமணர் தீண்டார்.

**பிரதரன்** — தியுமானுக்கு ஒரு பெயர்.

**பிரதர்தனன்** — 1. சத்ருசித்துக்கு ஒரு பெயர்.

2. தீவோதாசன் புத்திரன். யயாதியின் தௌகித்திரன். தாய் மாதவி. (பா-உத்தி).

**பிரதர்த்தனன்** — ஒரு அரசன், இவன் சிவபூசையால் நற்கதி அடைந்தவன்.

**பிரதக்ஷிணம்** — இது தேவர்களை வலம்வருதல். இது செய்தலில் ஒவ்வொரு அடிக்குப் பலகோடி புண்யபலமுண்டாம். இவ்வலம் சிவசந்நிதானத்து ஒற்றை யெண்ணுள்ளதாகவும், பிராட்டி சந்நிதானத்து இரட்டை யெண்ணுடனும் பிரதக்ஷணஞ் செய்க.

**பிரதாபசிங்** — ராஜபுதனத்திலுள்ள மீவார் நாட்டு அரசன். உதயசிங்கின்குமாரன். மகாவீரன். இவன்றன் சுற்றத்தார் பட்டணம் முதலிய இழந்து மனவலி கெட்டிருந்தனர். ஆயினும் இவன் மாத்திரம் தன் மனவலி குன்றாமல் தான் உள்ள அளவும் தம் நகரத்தையும் ரஜபுத்திர வம்சத்தையும் முன்னுக்குக் கொண்டுவரப் பார்த்தான். பெரும்பாலான இராஜபுத்திர சிற்றரசர் அக்பருக்குக் கீழ்ப்பட்டதைப்பற்றி விசனமடைவன். இவனுக்கு நண்பனாகிய பூண்டியரசனும் இவன் சகோதரனும் அக்பரைச் சேர்ந்து கொண்டனர். இவன் ஒருவனாகவே இருந்துகொண்டு மொகலாயரை (உடு) வருஷம் ஆட்டுவித்தான். இவன் மொகலாயரைச் சமயம் பார்த்துத் தாக்கிக் குன்றுகளிலும் மலைகளிலும் காணாமல் ஒளிப்பன். இவன் காடு மலைகளைக் கடக்குமிடம் எல்லாம் தன் குமரன் அமரசிங்கையும் இழுத்துச் செல்வான். இவர்க்கு உதவிய இராஜபுத்திரர் தம் உயிரையே இவர் பொருட்டும் வம்சத்தின் பொருட்டும் விட்டனர். இவன் மீண்டும் சித்தூரை மீட்கும்படி சில சங்கற்பங்கள் செய்துகொண்டான். அவை, தங்கொள்கை முடியுமளவும் எவ்வித போகங்களும் எற்பதில்லை, சுவர்ணபாத்திரங்களைத் தொடாது இலையிலுண்பது, பஞ்சணை முதலிய வேண்டாது புல்லணையில் சயனித்தல், க்ஷௌரமில்லை. இவன் இந்த நியமங்கொண்டதால் இப்போதும் உதயபுரி ராணா தாடிவைத்துக் கொள்வதும், தன் பொற் பாத்திரத்தினடியில் இலை போட்டுக் கொள்வதும், தன் படுக்கையின் கீழ் புல்விட்டுக் கொள்வதும் வழக்கமாக இருக்கிறது. இவன் சிதறின இராஜபுத்திரர்களை யொன்று சேர்த்து ஒரு மனதாயிருக்கச் செய்தான். கோமல்மர் கோட்டையைத் தனக்கிருப்பிடமாக்கினான். மொகலாயரிருக்கும் இடங்களுக்குக் கொண்டுபோம் சாமான்களைக் கொள்ளைகொள்ள உத்தரவிட்டான். இதனால் அக்பர் கோபங்கொண்டு அஜ்மீரில் சேனையுடனிறங்கி இவனை எப்படியாயினும் அடக்க வேண்டுமெனத் தீர்மானித்தான். இதனால் பல நாட்டு ராஜபுத்திரர் அக்பருக்குக் கீழ்ப்படிந்தனர். ஒரு நாள் அக்பருக்குப் பெண்ணைக் கொடுத்த மான்சிங் அக்பரைக்காணவர சமஸ்தானத் திருந்தவர் அவனுக்கு மரியாதை செய்து விருந்தளித்தனர். இவன் பிரதாபசிங் எங்கேயென அருகிருந்தவர் அவர்க்குத் தலைவலி யென்றனர். அவரது தலைவலி எனக்குத் தெரியுமென மான்சிங் சொல்ல பிரதாபசிங் எதிரில்வந்து நீ துருக்கியரோடு சம்பந்தமாய் அவருடன் உண்டவனல்லவா என்றான். மான்சிங் உன் கர்வத்தைப் பார்க்கிறேன் என்றான். பிரதாபசிங் நீ எப்பொழுதானாலும் பார்க்கலாமென்று அவனிருந்த இடத்தைக் கங்கா தீர்த்தத்தால் சுத்திசெய்ய உத்தரவிட்டான். இந்த சமாசாரத்தைக் கேட்டு அக்பர் கோபித்துத்தன் மகன் சிலீமையும், மான்சிங்கையும், மகபத்கான் என்பவனையும் சேனையுடன் அனுப்பினான். மலைப்பாங்கான ஹால்டிகாடெனுமிடத்தில் சண்டை நடந்தது. இவன் சலீமைத் தாக்கச் சலீம் உயிர்தப்பி ஓடினான். பிரதாபசிங்கை நாலைந்துமுறை சேநாபதிகள் அபாயத்திலிருந்து தப்புவித்தனர். அதில் ஒருவன் மானா என்பவன். இவ்வாறு நடக்குஞ் சண்டையில் ராணா தனது சிருக் எனும் குதிரை மீதேறித் துணையில்லாமல் ஓடுகையில் இவனைத் தொடர்ந்து இரண்டு முகலாயத் தலைவர்கள் பின்பற்றினர். அவ்வழியில் ஒரு மலையருவி குறுக்கிடச் சிருக்கு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து எஜமானனை வேகமாய்க் கொண்டு போயிற்று. அந்த மொகலாயத் தலைவர்கள் சற்றுத்தாமதித்துப்பின்தொட

ருகையில் ஓ! நீலக்குதிரையில் சவாரிசெய்பவனேஎன்ன, பழகிய தன் குரல் கேட்க இது அக்பரைச் சேர்ந்துகொண்ட சுக்தா எனும் தன் சகோதரன் குரல் எனத் தெரிந்தான். சுக்தா துணையின்றி யோடும் சகோதரனைக்கண்டு மன மிரங்கிச் சகோதர வாஞ்சை மேலிட்டுப் பின் தொடரும் மொகலாயரை வாளால் வீசிக்கொன்று சகோதரனை முத்தமிட்டான். இவ்விடத்தில் குதிரையு மிறந்தது. சுக்தாதன் குதிரையைச் சகோதரனுக்குக் கொடுத்தான். இவன் வலியற்று உண்ணவுமுணவிலாதிருக்கையில் தம் முன்னோரிடம் உதவிபெற்ற ஒருவன் கொஞ்சம் திரவியம் கொடுக்க இதைக்கொண்டு சேனைசேர்த்து மொகலாயரையும் மான்சிங் ராஜ்யமாகிய அம்பர் மீதும் திடீரென்று பாய்ந்தான். இவ்வாறு இருக்கையில் அவனுக்கு வாழ்நாள் குறுகி மரணவஸ்தையிலிருக்கையில் என் வருத்தப்படுகிறீரென ஒருவன்கேட்க துரிக்கியருக்கு நமது கோட்டையை ஒருபொழுதும் விடமாட்டோம் என்கிறஉறுதி மொழியைக்கேட்க என் மனம் தடமாடுகிறது என்முன். உடனே வீரர்களெல்லாம் முன்வந்து மீவார்நாட்டுச் சுதந்தர மெல்லாம் மீட்டாலன்றி நாங்கள் மாளிகை கட்டுவதில்லையெனச் சபதம் செய்தனர். பிரதாபன் இறந்தான். இவன் குமரன் அமரசிங்.

**பிரதாபசூர்யபாண்டியன்** — வங்கிய சூடாமணி பாண்டியன் குமரன்.

**பிரதாபமத்டன்** — 1. ஒரு கிருகத்தன். இவனுக்கு ஒரு குமரன் விரக்தனுகப் பிறந்து இவன் மணஞ்செய்து கொள்ளக்கூறியும் கேளாது தந்தையையும் தன் வசப்படுத்திக்கொண்டு சந்நியாச மடைந்து காசி க்ஷேத்திரத்தில் வசித்தனன்.

2. இந்திரனிடம் உபதேசம் பெற்ற அரசன்.

**பிரதாபமார்த்தாண்ட பாண்டியன்** — வீர பராக்கிரம பாண்டியனுக்குக் குமரன். இவன் குமரன் விக்ரமகஞ்சுகன்.

**பிரதாபருத்ரன்** — காவிரிக்கரைகண்ட சோழனைக் காண்க.

2. (சகம் 1238) (A. D. 1316) இவன் காகதீய அரசன். காஞ்சியில் தருமஞ் செய்தவன். இவன் ரவிவர்மன் கேரளத்தாசனுடன் யுத்தஞ் செய்து தோல்வி யடைந்தவன். (காஞ்சி-சாம்).

**பிரதானன்** — 1. ஒரு ரிஷி, பெண் சுலபை (பா - சாந்)

2. அரசியற் காரியங்க ளனைத்தையும் பார்ப்பவன்.

**பிரதீ** — பாரதன் குமரன். இவன் குமரன் சுகுருதி.

**பிரதிகர்த்தா** — பிரதிகன் குமரன். தாய் சுவர்க்கலை, தேவி ஸ்துதி, குமரர் வியோமன், பூமா.

**பிரதிகன்** — பரமேஷ்டியின் குமரன். தாய் சுவலை, தேவி சுவர்க்கலை, குமரன் பிரதிகர்த்தா.

**பிரதிசாச்வன்** — (சூ.) பானுமான் குமரன்.

**பிரதிஞ்ஞாஆனி**—வாதிக்கையில் வாதி, சபக்ஷ முதலியவைகளைச் சொல்லியதனை முற்ற சாதிக்க மாட்டாமல் விடுகை. (சிவ சித்).

**பிரதிஞ்ஞாசந்யாசம்** — தான் சொன்ன பிரதிஞ்ஞாதிகளைப் பிரதிவாதியானவன் நிந்தித்த விஞவினைச்சொல்லவில்லை என்கை.

**பிரதிஞ்ஞாந்தம்** — வாதி விசேஷியாமல்சொன்ன பிரதிஞ்ஞாதிகளைப் பிரதிவாதியானவன் அதனைத் தூஷித்த அளவில் அந்தப் பிரதிக்யாதிகளைப் பின் விசேஷணத்துடனே கூட்டிச் சொல்லுதல். (சிவ-சித்).

**பிரதிஞ்ஞாபாசம்**—சத்தியிலாசித மென்னும் அறிவு, இதனை அப்ரசித் தோபயம் என்பர்.

**பிரதிஞ்ஞாவிரோதம்** — ஒருவன் பதவாக்கியங்களினுல் ஜகத்கர்த்தாவை அங்கீகரித்துப் பின்பு அந்த ஈச்வரனைக் கர்த்தா அல்ல என்கை. (சிவ-சித்).

**பிரதிட்டாகலை** — அப்புமண்டலத்தில் - அமரேசம், பிரபாசம், நைம்சம், புட்கரம், ஆசாடி, திண்டிமுண்டி, பாரபூதி, இலகுலீச்சுரம் ஆகிய குய்யாட்டகபுவனம் எட்டு. தேயுவண்டத்தின் - அரிச்சந்திரம், சீசைலம், செற்பேசம், ஆமிராதகம், மத்திமேசம், மாகாளம், கேதாரம், வைரவம் ஆகிய அதிகுய்யாட்டகமென்னும் புவனம் எட்டு. வாயுவண்டத்தில் - கயை, குருகேத்திரம், நாகலம், நகலம், விமலம், அட்டகாசம், மகேந்திரம் பீமேசம் ஆகிய குய்யதாட்டகமென்னும் புவனம் எட்டு. ஆகாயவண்டத்தில் வத்திராபதம், உருத்திரகோடி, அவிமுத்தம், மகாலயம், கோகர்ணம், பத்திரகாணம், சுவர்ணக்கம் தாணு ஆகிய பவித்திராட்டகமென்னும் புவனம் எட்டு. தன்மாத்திரை - ஐந்தும், இந்திரியம் பத்தும், மனமும் என்னுந் தன்காரியமாகிய பதினறண்டங்களையும் தன்னுளடக்கி நிற்

கும். ஆங்காரவண்டத்தில் - சகலண்டம், துவிரண்டம், மாகோடம், மண்டலேச்சுரம், காளாஞ்சரம், சங்குகன்னம், தாலேச்சுரம், தலேச்சுரம் ஆகிய தாணுவட்டகமென்னும் புவனம் எட்டு. புத்தியண்டத்தில் - பைசாசம், இராக்கதம், இயக்கம், காந்தருவம், ஐந்திரம், சௌமியம், பிராசேசம், பிராமம் ஆகிய சூக்குமபுவனட்டகம் எட்டு. பிரகிருதியண்டத்தில் அகிருதம், கிருதம், பைரவம், பிராமம், வைணவம், கௌமாரம் ஔமம், சீகண்டம் என்னும் யோகாட்டகபுவனம் எட்டு. ஆக அப்புதத்துவமுதல் மூலப்பகுதி யீறாகிய அண்டங்களைக் காக்கும் உருத்திரர் வைகும் புவனம் ஐம்பத்தாறு. சிவாகமங்களுட் கூறிய "கலாபேதத்திலும் (௫௬) புவனங்கள் உள" என்று.

**பிரதிட்டானபுரம்** — கங்கை யமுனை கூடுகைக்கு வடக்கில்உள்ள பட்டணம். இது புரூரவன் அரசாண்டது.

**பிரதிட்டை** — புண்ணியன் தேவி, இவளில்லாத இடம் ஜீவன் மிருத்யுவாயிருக்கும்.

**பிரதிதிருஷ்டாந்தசமை** — வேறு திருஷ்டாந்தத்தால் சாத்யாபாவத்தைச் சாதிப்பது.

**பிரதிநிதி** — செய்யதக்கன இன்ன செய்யத்தகாதன இன்ன என்று நன்றாக அழுந்தி ஆராயும் அறிவுடையவன். (சுக்ரநீதி).

**பிரதிபாண்டியன்** — மலயத்துவசன் குமரன்.

**பிரதிபிம்பவாதிமதம்** — பிரமம் ஆகாயத்து நிர்மலமாய்ப் பிரகாசிக்கும். சூரியன் கடத்தில்உள்ள ஜலத்தில் தன்னுருவை யொளிப்பித்துத் தனக்குச் சிறிதும் உபாதியில்லாதிருப்பதுபோல், தான் எங்குமாய் ஆன்மாக்களிடம் விளங்கித் தனக்கு உபாதியிலாது தேக நீக்கத்தில் ஆன்மாவைத் தன்னிடம் ஒடுக்கி விளங்கும் என்னும். (தத்துவநிஜாநுபோகசாரம்)

**பிரதிபுத்திரை** — நந்தன் தேவி.

**பிரதிபூ** — ஒருவனுக்காகப் பிணைபட்டு நிற்பவன். (யஞ்ஞவல்கியம்.)

**பிரதிரதன்** — மறு குமரன்.

**பிரதிலோமன்** — உயர்குலப் பெண்ணும் இழிகுலத்தானுங் கூடிப் பிறந்தவன்.

**பிரதிவாகு** — 1 (சூ.) வச்சிரன் குமரன். இவன் குமரன் சுவாகு. (பிரதிபாகு.)

2. சுவபலருக்குக் காந்தியிடம் உதித்த குமரன்.

3. அக்ரூரன் சகோதரன்.

**பிரதிவாதிபயங்கரம் அண்ணன்** — நயினாசாரியர் திருவடிசம்பந்தி; பெருமாள் கோயிலில் மஹாவாக்மியாயிருந்தாரென்று அறிந்த மணவாளமா முனிகள் இவரை வருவித்து இவர்க்கு மூப்பத்தாறுயிரப்படியருளிச் செய்தனர். இதனைக் கேட்டுணர்ந்த இவர், மணவாளமாமுனிவரிடத்துப் பஞ்ச சமஸ்காரம் பெற்றனர். இவர்களுக்கு ஸ்ரீவைஷ்ணவதாசரென்று ஒரு பெயர். அண்ணரைக் காண்க.

**பிரதிவிந்தன்** — தருமராசன் குமரன். தாய் திரௌபதி.

**பிரதிவிந்தியன்** — காசிராஜனுக் குட்பட்ட நிவையாளும் ஓர் அரசன். அருச்சுனனால் செயிக்கப்பட்டவன்.

**பிரதிவிபதி** — மைசூருக்கருகிலுள்ள கங்கபாடியென்னும் நாட்டிற்கரசன். வரகுண பாண்டியனுடன் யுத்தஞ்செய்து தோற்றவன்.

**பிரதிஷ்டானம்** — அஸ்தினபுரத்துக்குச் சமீபத்திலுள்ள பட்டணம். வர்த்தமானபுரம் என்றும் ஒருபெயர். (பா. ஆதி.)

**பிரதீபன்** — சந்திரவம்சத்துப் பீமன் குமரன். இவன்தேவி சுநந்தை, இவன் குமரர் தேவாபி, சந்தனு, பாக்லீகன். இவன் பாண்டு பௌத்திரன் அல்லன். இவன், தொடையில் கங்கைவந்து உட்கார்ந்து உன்னை மணக்கவந்தேன் என, இவன், தொடையில் உட்காரத்தக்கவர் புத்திரன், புத்திரி, மருமகள் முதலியவர்; நான் ஏகபத்னிவிரதனாதலால் என்மகனை மணக்கவென்று கூறி மறுத்தவன்.

**பிரதுகர்மன்** — பிரதுகீர்த்தி, பிரதுசயன், பிரதுதாசன், பிரதுயசன், யதுவம்சத்துச் சசபிந்து குமரர்.

**பிரதூதகம்** — சரஸ்வதிக்கு அருகில்உள்ள தீர்த்தகட்டம். இதில் தீர்த்தயாத்திரை காலத்துப் பலராமர் ஸ்நானஞ்செய்தனர்.

**பிரதேசகு** — தர்மதன் குமரன். இவனுக்கு நூறுகுமரர். மிலேச்சருக்கு அதிபராயினர்.

**பிரதேஷிணி** — தீர்க்கதமன் தேவி.

**பிரதை** — குந்திபோஜன் வம்சத்தவனாகிய சூரசேநன் பெண். குந்தியைக் காண்க.

**பிரதோஷன்** — 1. யஞ்சமூர்த்திக்குத் தக்ஷிணையிடம் உதித்த குமரன்.

2 தோஷாவிற்குப் புட்பிபாரனால் பிறந்த குமரன்.

**பிரத்தியக்ஷம்** — (காட்சிப் பிரமாணம்) நேராகக் காண்கின்ற உண்மை யறிவிற்குக்

காரணமாம். இது, சுவிகற்பம், நிருவிகற்பம், இந்திரியப் பிரத்தியக்ஷம், மானதப் பிரத்தியக்ஷம், ஸ்வவேதனப்பிரத்தியக்ஷம். வஸ்து மாத்திரங் காண்டலும், பொதுவாகக் காண்டலும், கண்ணாற் காண்டலும், மனத்தாற் காண்டலுமாம். ஐயக்காட்சி, திரிவுக் காட்சி.

**பிரத்யயம்** — தர்மாதிகளே மிகுந்து ஸ்தூல ரூபமாய்ப் போக்ய நிலையை அடைந்த போது பிரத்யயங்களாம். பிரத்யயமாவது நம்பிக்கை, அறிவு. அவை ஐம்பதுவகையாம். சித்திகள் எட்டு, துஷ்டிகள் ஒன்பது, அசத்திகள் இருபத்தெட்டு, புத்தி மாற்றங்கள் ஐந்து. இவற்றின் இலக்கணம் மதங்கத்திற் கூறப்படும்.

**பிரத்தியுக்ரான்** — உபரி சரஸுவின் குமரன் பிரத்தியக்ரன் எனவுங் கூறுவர்.

**பிரத்தியும்நன்**—1. ஸ்ரீகிருஷ்ண மூர்த்திக்கு உருக்மணிதேவியிடம் உதித்த குமரன். இவன் பிறந்த பத்தாநாள், சாம்பாசுரன் இவனைத்தூக்கிக் கடலில் இட, மீன் ஒன்று இவனை விழுங்கிற்று. அம்மீனை ஒருவலைஞன் பிடித்தனன். அதன்வயிற்றில் இருந்த குமரனை மாயாவதி வளர்த்தனள். இவனே வளர்ந்து சாம்பாசுரனைக்கொன்று மாயாவதியுடன் துவாரகைச் சென்று தன்னை வளர்த்த மாயாவதியை மணங் கொண்டனன். இவன் முற்பிறப்பில் மன்மதன். மாயாவதி இரதிதேவி. சாம்பவனைக்கொன்ற காரணத்தால் மன்மதனுக்குச் சம்பராரி என ஒரு பெயர்வந்தது. இவன் மீன்வயிற்றில் உதித்ததால் மீனக்கொடியாயிற்று. இவன் குமரன் அநிருத்தன்.

2. விஷ்ணுமூர்த்தியின் வியூகங்களில் ஒன்று.

3. விருஷ்ணிகளுக்குள்ளே மகாரதன்.

4. சாக்ஷுஸமனுவிற்கு நட்வலையிடம் உதித்தகுமரன்.

5. நிசும்பனைக் காண்க.

**பிரத்தியூஷன்** — 1. பிரசாபதிக்குப் பிரபாசலையிடம் உதித்த குமரன். இவன் குமரன் தேவலன்.

2. ஒரு வஸு.

**பிரத்தியோதன்** — 1. சுநகன் குமரன். தந்தையால் அரசனுக்கு விற்கப்பட்டவன். இவன் வம்சத்துப் பிறந்த அரசர் ஐவர். (கங௲அ) வருஷம் பூமி யாண்டார்கள்.

2. சூரியன்.

3. சக்ரீநகன் குமரன்.

4. ஓர் புத்த அரசன்.

**பிரத்திவிந்தியன்**-பாரதவீரன். சகரன் அம்சம்.

**பிரத்திவிஷேணை** — சுபார்சுவ தீர்த்தங்கரின் தாய். சுப்பிரதிஷ்ட மகாராசாவின் தேவி.

**பிரத்துவம்சாபாவம்**—காரணங்களில் தோன்றிய காரியத்தின் அபாவம் இது கெடுதலென்னும் அளவு. இது குடமுடைகையில் ஓட்டில் குடமில்லையென்றூர் போல்வது. (தரு)

**பிரத்துவேஷி** — தீர்கதமக ரிஷியின் பத்தினி. குமரர் கௌதமாதியர் (பா-ஆதி).

**பிரத்துஷாதேவி** — சூர்யன் தேவியரில் ஒருத்தி.

**பிரபங்கரன்** — க்ஷத்திரியன். ஜயதிரிதன் உடன் பிறந்தான்.

**பிரபஞ்சனன்** — 1. ஒரு அரசன். இவன் வேட்டைக்குச்சென்று காட்டில் பாலருந்திக் கொண்டிருந்த பசுவின் கன்றின்மேல் பாணத்தை விட்டுத் தாய்ப் பசுவால் புலியாகச் சாபமடைந்து பின் அப்பசுவை வேண்ட அது நந்தை யெனும் பசுவின் தரிசனத்தால் சாபம் நீக்கமடைவாய் எனப் பெற்றவன். (பாத்மபுராணம்).

2. மணலூர்புறத்தின் அரசன். (பா-ஆதிபர்).

**பிரபந்தம்** — (கசு.) 1. அவற்றுள் சாதகம்-திதி, வார, நக்ஷத்திர, யோக, கரண, ஓரை. கிரகநிலைகளை நன்கறிந்து தலைவனுக்குக் கூறல்.

2. பிள்ளைக்கவி - காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் இவற்றை முறையே அகவல், விருத்தத்தால் பப்பத்தாகக் கூறுவது ஆண்பால் பிள்ளைக்கவி. இவ்வுறுப்புக்களுள் கடைமூன்றும் ஒழித்துக் கழங்கு, அம்மானை, ஊசல், என்பவற்றைக் கூட்டிச்சொல்வது பெண்பாற் பிள்ளைக்கவி.

3. பரணி - போர்க்கண் (1000) யானைகளைக்கொன்ற தலைவனை வீரனாகக் கொண்டு, கடவுள் வாழ்த்தும், கடை திறப்பும், பாலை நிலமும், காளிகோயிலும், பேய்களோடு காளியும், காளியோடு பேய்களும் சொல்லத் தான்சொல்லக்கருதிய தலைவன் சீர்த்திவிளங்கலும், அவன் வழியாகப்புறப்பொருள் தோன்ற வெம்போர் வழங்க விரும்பலும், என்றிவை எல்லாம் இருசீரடி முச்சீரடி ஒழித்து ஒழிந்த மற்றயடியாக ஈரடிப் பஃறொழிசையால் பாடுவது.

4. கலம்பகம் - ஒருபோகும், வெண்பாவும், கலித்துறையும், முதல்கவி உறுப்பாக முற்கூறிப் புயவகுப்பு, மதங்கம், அம்மானை காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல், என்னும், இப்பதினெட்டு உறுப்புகளும் இயைய மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம், வெண்டுறை, இவற்றால் இடையே, வெண்பா, கலித்துறை விரவி அந்தாதித் தொடையால் முற்றுறக் கூறுங்கால் தேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க்கு ஐம்பதும், சூத்திரர்க்கு முப்பதுமாகப் பாடுவது.

5. அகப்பொருட் கோவை - இருவகைப்பட்ட முதற்பொருளும், பதினன்கு வகைப்பட்ட கருப்பொருளும், பத்துவகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்திக் கைக்கிளைமுதலுற்ற அன்புடைக்காமப் பகுதியவாகும் களவு ஒழுக்கத்தினையும், கற்பு ஒழுக்கத்தினையும் கூறுதலே எல்லையாகக் கட்டளைக் கலித்துறை நானூற்றால் திணை முதலாகத் துறைஈறாகக் கூறப்பட்ட பன்னிரண்டு அகப்பாட்டு உறுப்பும், வழுவின்றித் தோன்றப்பாடுவது. இது வெண்பா, அகவல், கலி, வஞ்சி, வண்ணம் இவற்றானும் வழங்கப்படும்.

6. ஐந்திணைச்செய்யுள் - புணர்தல் முதலிய ஐந்து உரிப்பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலிய ஐந்திணையினையும் கூறுவது.

7. வருக்கக்கோவை - அகர முதலாகிய எழுத்து வருக்கமொழிக்கு முதலாம் எழுத்தும் முறையே காரிகைத்துறைப் பாட்டாகப் பாடுவது.

8. மும்மணிக்கோவை - ஆசிரியப்பாவும், வெண்பாவும், கலித்துறையும், முப்பதுபெறப்பாடுவது.

9. அங்கமாலை - ஆண்மகனுக்கும், பெண்மகளுக்கும், மிக்கென எடுத்துக்கூறும் அவயவங்களை வெண்பா வாயிலானும், வெளிவிருத்தத்தாலாயினும், பாதாதி கேசம், கேசாதிபாதம் முறை பிறழாது தொடர்வுறப் பாடுவது.

10. அட்டமங்கலம் — கடவுளைப்பாடி அங்கடவுளர்காக்க என ஆசிரியவிருத்தம் எட்டில் அந்தாதித்துக் கூறுவது.

11. அநுராகமாலை - தலைவன் கனவில் ஒருத்தியைக் கண்டுகேட்டுஉண்டு உயிர்த்து இனிமையுறப் புணர்ந்ததைத் தன் உயிர்ப்பாங்கற்கு உரைத்ததாக நேரிசைக்கலி வெண்பாவாற் கூறுவது.

12. இரட்டைமணிமாலை - முறையானே வெண்பாவும், கலித்துறையும், இருபஃது அந்தாதித்தொடையால் வருவது.

13. இணைமணிமாலை - வெண்பாவும் அகவலும், வெண்பாவும்கலித்துறையுமாகவிரண்டிரண்டாக விணைத்துவெண்பா வகவலிணை மணிமாலை, வெண்பா கலித்துறை இணைமணிமாலையென நூறு நூறு அந்தாதித் தொடை நான்காலும் பாடுவது.

14. நவமணிமாலை - வெண்பா முதலாக வேறுபட்ட பாவும், பாவினமுமாக ஒன்பது செய்யுள் அந்தாதித்துப்பாடுவது.

15. நான்மணிமாலை - வெண்பாவும், கலித்துறையும், விருத்தமும், அகவலும் அந்தாதித் தொடையாக நாற்பது கூறுவது.

16. நாமமாலை - அகவல் அடியும், கலி அடியும், வந்து மயங்கிய வஞ்சிப்பாவால் ஆண்மக்களைப் புகழ்ந்து பாடுவது.

17. பல்சந்தமாலை - பப்பத்துச் செய்யுள் ஒவ்வோர் சந்தமாக நூறு செய்யுள் கூறுவது.

18. கலம்பகமாலை - கலம்பகத்துள் கூறிய ஒருபோகும், அம்மானையும், ஊசலும், இன்றி ஏனை உறுப்புகள் எல்லாம் அமைய அவ்வாறு கூறுவது. இதனை நான்மணிமாலைஎன்ப.

19. மணிமாலை - எப்பொருள் மேலும் வெண்பா இருபதும், கலித்துறை நாற்பதும் விரவி வருவது.

20. புகழ்ச்சிமாலை - அகவல் அடியும், கலிஅடியும், வந்து மயங்கிய வஞ்சிப்பாவால் மாதர்களின் சீர்மையைக் கூறுவது.

21. பெருமகிழ்ச்சிமாலை - தலைவியின் அழகு, குணம், ஆக்கம், சிறப்பினைக் கூறுவது.

22. வருக்கமாலை - மொழிக்கு முதலாம் வருக்க எழுத்தினுக்கு ஒவ்வோர் செய்யுள் கூறுவது.

23. மெய்க்கீர்த்திமாலை - சொற்சீர்அடி என்னும் கட்டுரைச்செய்யுளால் குலமுறையிற்செய்த கீர்த்தியைக் கூறுவது.

24. காப்புமாலை - தெய்வம் காத்தலாக மூன்று செய்யுளானும், ஐந்து செய்யுளானும், ஏழு செய்யுளானும் பாடுவது.

25. வேனின்மாலை - இளவேனிலையும், முது வேனிலையும் சிறப்பித்துப்பாடுவது.

26. வசந்தமாலை - தென்றலைச் சிறப்பித்துப் பாடுவது.

27. தாரகைமாலை - அருந்ததிக் கற்பின் மகளிர்க்கு இன்ன இயற்கைக் குணங்களை வகுப்பிற் கூறுவது. தூசிப்படையின் அணியைப் புகழ்ந்த வகுப்பு என்பாரும் உளர்.

28. உற்பவமாலை - திருமால் பிறப்புப பத்தினையும் ஆசிரிய விருத்தத்தால் கூறுவது.

29. தானைமாலை - அகவ லோசையில் பிறழாத ஆசிரியப்பாவால் முன்னர் எடுத்துச் சொல்லும் கொடிப்படையைக் கூறுவது.

30. மும்மணிமாலை - வெண்பாவும் கலித்துறையும், அகவலும், அந்தாதித்தொடையின் முப்பது பாடுவது.

31. தண்டகமாலை - வெண்பாவால் முப்பது செய்யுள் கூறுவது. இது வெண்புணர்ச்சி மாலை என்ப.

32. வீரவெட்சிமாலை - சுத்தவீரன்மாற்றூர் ஊரில்சென்று பசுநிரை கோடற்கு வெட்சிப் பூமாலைசூடி அவ்வண்ணம் போய் நிரைகவர்ந்தவரில் அவனுக்கு முன்பு தசாங்கம் வைத்துப்போய் வந்த வெற்றி பாடுவது.

33. வெற்றிக்கரந்தைமஞ்சரி - பகைவர் கொண்ட தன்னிரை மீட்போர் கரந்தைப் பூமாலைசூடிப்போய் மீட்பதைக் கூறுவது.

34. போர்க்குளஎழுவஞ்சி-மாற்றார் மேல் போர்குறித்துப் போகின்ற வயவேந்தர் வஞ்சிப்பூ, மாலைசூடிப் புறப்படும் படை எழுச்சிச்சிறப்பை ஆசிரியப்பாவாற் கூறுவது.

35. வரலாற்றுவஞ்சி-குலமுறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் சிறப்பை வஞ்சிப் பாவால் கூறுவது.

36. செருக்களவஞ்சி-போர்க்களத்திலே அட்டமனிதர் உடலையும், யானை குதிரைகளின் உடலையும், நாயும், பேயும், காகமும், கழுகும், பருந்தும், விருந்து உண்டு களித்திருக்கப் பூதமும், பேயும் பாடிஆடும் சிறப்பைப்பாடுவது. இதனைப் பறந்தலைப்பாட்டு என்ப.

37. காஞ்சிமாலை - மாற்றூர் ஊர்ப்புறத்துக் காஞ்சிப்பூ மாலைசூடி யூன்றலைக் கூறுவது.

38. நொச்சிமாலை-புறத்துஊன்றியமாற்றூர் கோடலின்றி நொச்சிப்பூ மாலை சூடித் தன் மதில்காக்கும் திறம் கூறுவது.

39. உழிஞைமாலை - மாற்றாது ஊர்ப புறம் சூழ உழிஞைப்பூ மாலைசூடிப் படை வளைப்பதைக் கூறுவது

40. தும்பைமாலை - மாற்றாருடன் தும்பைமாலை சூடிப்பொருவதைக் கூறுவது.

41. வாகைமாலை - மாற்றாரை வென்று புகழ்படைத்து வாகைமாலை சூடுவதை ஆசிரியப்பாவால் கூறுவது.

42. வாதோரணமஞ்சரி - கொலைபுரி மதயானையையும், எதிர்பொரு களிற்றினையும், அடக்கியும், வெட்டியும், பிடித்துச் சேர்த்தவரின் வீரத்தின் சிறப்பை வஞ்சிப் பாவால் கூறுவது.

43. எண்செய்யுள் - பாட்டுடைத்தலைவனது ஊரினையும், பெயரினையும், பத்து முதல் ஆயிரம் அளவும்பாடி எண்ணால் பெயர் பெறுவது.

44. தொகைநிலைச்செய்யுள் - நெடிலடிச் செய்யுளால் தொகுத்த நெடுந்தொகையும், குறளடிச் செய்யுளால் தொகுத்த் குறுந் தொகையும், கலிப்பாவால் தொகுத்த கலித்தொகையும், போல்வது.

45. ஒலியலந்தாதி - பதினாறு கலை ஓரடியாகவைத்து, இங்ஙனம் நாலடிக்கு அறுபத்துநாலு கலைவகுத்துப் பலசந்தமாக வண்ணமும், கலைவைப்பும், தவறாமல் அந்தாதித்து முப்பதுசெய்யுள் பாடுவது. சிறுபான்மை எட்டுக்கலையானும் வரப்பெறும். அன்றியும் வெண்பா, அகவல், கலித்துறை ஆகிய இம்மூன்றையும் பப் பத்தாக அந்தாதித்துப் பாடுவதுமாம்.

46. பதிற்றந்தாதி - பத்துவெண்பா, பத்துக் கலித்துறைப் பொருட்டன்மை தோன்ற அந்தாதித்துப் பாடுவது.

47. நூற்றந்தாதி — நூறு வெண்பாவினாலேனும், நூறு கலித்துறையினாலேனும், அந்தாதித் தொடையாற்கூறுவது.

48. உலா - இளமைப்பருவம் உற்றதலைமகனைக் குலம், குடி, பிறப்பு, மங்கலம், பாரம்பரை, இவற்றால் இன்னான் என்பது தோன்றத் தலைமையாய் மாதர் நெருங்கிய வீதியிடத்து அவன் பவனிவரப் பேதை முதலிய எழுபருவப் பெண்களும் கண்டு தொழ உலா வந்ததாக நேரிசைக்கலி வெண்பாவால் கூறுவது.

49. உலாமடல் - கனவில் ஒரு பெண்ணைக்கண்டு கலவி இன்பம் நுகர்ந்தோன் விழித்தபின் அவள் பொருட்டுமடல் ஊர்வேன் என்பதைக் கலிவெண்பாவால் முற்றுவிப்பது.

50. வளமடல்—அறம்,பொருள், இன்பமாகியஅம்முக் கூறுபாட்டின்பயனை எள்ளிமங்கையர் திறத்துறூஉம்காமஇன்பத்தினையேபயனெனக் கொண்டுபாட்டுடைத் தலைமகன் இயற்பெயர்க்குத் தக்கதை எதுகையாகநாட்டி உரைத்து அவ்வெதுகைப்படத் தனிச்சொல் இன்றி இன்னிசைக் கலிவெண்பாவால்தலைமகன்இரந்துகுறைபெறாது மடலேறுவதால் ஈரடி எதுகை வரப் பாடுவது.

51. ஒருபாஒருபது - அகவலும், வெண்பாவும் கலித்துறையுமாய் இவற்றுள் ஒன்றனால் அந்தாதித்தொடையால் பத்துப் பாடுவது.

52. இருபாஇருபது—பத்து வெண்பாவும், பத்து அகவலும், அந்தாதித்தொடையான் இருபதிணைந்து வருவது.

53. ஆற்றுப்படை - அகவற்பாவால் விறலி, பாணர், கூத்தர்,பொருநர், இந்நால்வரில் ஒருவர் பரிசிற்குப் போவாரைப் பரிசுபெற்று வருவார் ஆற்றிடைக்கண்டு தலைவன் கீர்த்தியும், கொடையும், கொற்றமும், கூறுவது.

54. கண்படைநிலை - அரசரும் அரசரைப் போல்வாரும், அவைக்கண் நெடிது வைகிய வழிமருத்துவர், அமைச்சர் முதலியோர் அவர்க்குக் கண்துயில் கோடலைக் கருதிக் கூறுவது.

55. துயிலெடைநிலை - தம் வலியால் பாசரைக் கண் ஒரு மனக்கவற்சியின்றித் துயின்ற அரசர்க்கு நல்லபுகழைக் கொடுத் தலைக் கருதியசூதர் துயில் எழுப்புதலாகப் பாடுவது

56. ஊரின்னிசை - பாட்டுடைத் தலைவன் ஊரினைச் சார இன்னிசை வெண்பாவால் தொண்ணூறேனும், எழுபதேனும், ஐம்பதேனும், பாடுவது.

57. பெயரின்னிசை - பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார நேரிசைவெண்பாவால், தொண்ணூரேனும், எழுபதேனும், ஐம்பதேனும், பாடுவது.

58. பெயர்நேரிசை—பாட்டுடைத் தலைவன் பெயரினைச்சார இன்னிசை வெண்பாவால் கூ0, எ0, ரூ0, பாடுவது.

59. ஊர் நேரிசை - பாட்டுடைத்தலைவன் ஊரினைச் சாரநேரிசைவெண்பாவால் கூ0, எ0, ரூ0, பாடுவது.

60. ஊர்வெண்பா - வெண்பாவால் ஊரைச்சிறப்பித்துப் பத்துச்செய்யுள் பாடுவது.

61. விளக்குநிலை - வேலும், வேற்றலையும், விலங்காதோங்கிய வாறுபோலக் கோலொடு விளக்கும் ஒன்றுபட்டு ஓங்குமாறு ஓங்குவதாகக் கூறுவது.

62. புறநிலை - நீ வணங்கும் தெய்வம் நின்னைப் பாதுகாப்ப நின் வழிவழி மிகுவதாக எனக் கூறுவது.

63. கடைநிலை—சான்றோர் சேண்இடை வருதலால் பிறந்த வருத்தந்தீர வாயில் காக்கின்றவனுக்கு என்வரவினைத் தலைவற்கு இசைஎனக் கடைக்கணித்துக் கூறுவது.

64. கையறுநிலை - கணவன் ஒரு மனைவி கழிந்துழி அவர்கட்பட்ட அழிவுப்பொருள் எல்லாம பிறர்க்கு அறிவுறுத்தித் தாம் இறந்துபடாது ஒழிந்த ஆயத்தாரும் பரிசில் பெறும் விறலியரும் தனிப்படர் உழந்தசெயல் அறுநிலையைக்கூறுவது.

65. தசாங்கப்பத்து - நேரிசைவெண்பாவால் அரசன் படைத்த தசாங்கத்தினைப் பத்துச்செய்யுளால் கூறுவது.

66. தசாங்கத்தயல் - அரசன் தசாங்கத்தினை ஆசிரியவிருத்தம் பத்தினாற்கூறுவது.

67. அரசன் விருத்தம் - பத்துக் கலித்துறையும், முப்பதுவிருத்தமும், கலித்தாழிசையுமாக, மலை, கடல், நாடு, நிலை, வருணனையும், வாள்மங்கலமும், தோள்மங்கலமும் பாடி முடிப்பது.

68. நயனப்பத்து - கண்ணினைப் பத்துச் செய்யுளால் கூறுவது.

69. பயோதரப்பத்து முலையினைப் பத்துச் செய்யுளால் கூறுவது.

70. பாதாதிகேசம் - கலிவெண்பாவால் முடிமுதல் அடிவரையில் கூறுவது.

71. கேசாதிபாதம் - கலிவெண்பாவால் முடிமுதல் அடிவரையிற் கூறுவது.

72. அலங்காரபஞ்சகம் -வெண்பா, அகவல், கலித்துறை, ஆசிரியவிருத்தம், சந்தவிருத்தம், இவ்வகையே மாறி மாறி நூறு செய்யுளந்தாதித்துப் பாடுவது.

73. கைக்கிளை - ஒருதலைக் காமத்தினை மிகுந்து செய்யுளாற் கூறுவது. அன்றி

வெண்பா முப்பத்திரண்டு செய்யுளாற் கூறுவதுமாம்.

**74.** மங்கலவெள்ளை - உயர்குலத்து உதித்த மடவாரை வெண்பா ஒன்பதாலும் வருப்பு ஒன்பதாலும் பாடுவது.

**75.** தூது - ஆண்பாலும் பெண்பாலும் அவரவர் காதலைப் பாணன் முதலிய உயர்திணையுடனும், கிள்ளைமுதலிய அஃறிணையுடனும், கூறித் தூதுபோய் மீள்க எனக் கலிவெண்பாவாற் கூறுவது.

**76.** நாற்பது - காலமும், இடமும், பொருளும் ஆகிய இவற்றுள் ஒன்றனை நாற்பது வெண்பாவாற் கூறுவது.

**77.** குழமகன் - கலி வெண்பாவால் மாதர்கள் தங்கையிற் கண்ட இளமைத் தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து கூறுவது.

**78.** தாண்டகம் - இருபத்தேழு எழுத்து முதலாக உயர்ந்த எழுத்தடியினவாய் எழுத்தும், குருவும், லகுவும் ஒத்துவந்தன அளவியற் றாண்டகமெனவும், எழுத்தொவ்வாதும் எழுத்தல கொவ்வாதும் வந்தன அளவழி தாண்டகம் எனவும்படும்.

**79.** பதிகம் - ஒரு பொருளைக் குறித்துப் பத்துச்செய்யுள் கூறுவது.

**80.** சதகம் - அகப்பொருள் ஒன்றன் மேலாதல், புறப்பொருள் ஒன்றன்மேலாதல், நூறு செய்யுள் கூறுவது.

**81.** செவியறிவுறூஉ - பொங்குதலின்றிப் புரையோர் நாப்பண் நவிலுதல் கடனென அவை யடக்கியற்பொருள் உற வெண்பா முதலும் ஆசிரியம் இறுதியுமாகக் கூறுவது.

**82.** வாயுறைவாழ்த்து - வேம்பும் கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற்கள் முன்னர்த் தாங்கக் கூடாவாயினும் பின்னர்ப்பெரிதும் பயன் தருமென மெய்ப்பொருளான வெண்பாமுதலும் ஆசிரியம் இறுதியுமாகக் கூறுவது.

**83.** புறநிலைவாழ்த்து - வழிபடுதெய்வ்ற்புறங்காப்பப் பழிதீர் செல்வமொடு வழிவழி சிறக்க என வெண்பா முதலும் ஆசிரியம் இறுதியுமாகப் பாடுவது.

**84.** பவனிக்காதல் - உலகக் காட்சியால் எய்திய காமமிகுதியைப் பிறரோடு கூறி வருந்துவது.

**85.** குறத்திப்பாட்டு - தலைவன் பவனி வரவு, மகளிர் காமுறுதல், மோகினிவரவு, உலாப்போந்த தலைவனைக் கண்டு வருந்தல், திங்கள், தென்றல், முதலிய ஆலம்பனம், பாங்கி உற்றதென்னென வினவல், தலைவி பாங்கியொடு உற்றது கூறல், பாங்கிதலைவனைப் பழித்துக் கூறல், தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல், தலைவி பாங்கியைத் தூதுவேண்டல், தலைவி பாங்கியொடு தலைவன் அடையாளம் கூறல், குறத்திவரவு, தலைவி குறத்தியொடு மலைவளம் முதலிய வினவல், குறத்தி மலைவளம் நாட்டுவளம் முதலிய கூறல், தலைவன் தலவளம், கிளைவளம் முதலிய கூறல், குறத்தி, குறி சொல்லி வந்தமைகூறல், தலைவி குறிவினவல், குறத்தி தெய்வம் பரவல், குறிதேர்ந்து நல்வரவு கூறல், தலைவி பரிசில் உதவிவிடுத்தல், குறவன் வரவு, புள்வரவு கூறல், கண்ணிகுத்தல், புட்படுத்தல், குறத்தியைக் காமுற்றுத் தேடல், குறவன் பாங்கனொடு குறத்தி அடையாளம் கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குறவன் அணி முதலிய கண்டு ஐயுற்று வினவலும் ஆண்டாண்டுக் குறத்தி விடை கூறலுமாகக் கூறல், பெரும்பான்மை இவ்வகை உறுப்புக்களால் அகவல், வெண்பா, தரவு, கொச்சகம், கலித்துறை, கழிநெடில் விருத்தம், கலிவிருத்தம், இச்செய்யுட்களை இடைக்கிடை கூறி, சிந்து முதலிய நாடகத் தமிழாற் பாடுவது.

**86.** உழத்திப்பாட்டு - கடவுள் வணக்கம் முதலாக முறையே மூத்தபள்ளி, இளையபள்ளி, குடும்பன் வரவோடவன் பெருமைகூறல், முறையே அவர் வரலாறு, நாட்டுவளன், குயிற் கூக்கேட்டல், மழைவேண்டிக் கடவுட்பரவல், மழைக்குறி ஓர்தல், ஆற்றின்வரவு, அதன்சிறப்புக் காண்டல், இவற்றிற்கு இடை இடை அகப்பொருட் டுறையுங்கூறிப் பண்ணைத் தலைவன் வரவு, பள்ளிகள் இருவர் முறையிட்டு, இளையாளை அவனுரப்பல், பள்ளன் வெளிப்படல், பண்ணைச் செயல்வினவல், அவனதுகூறல், ஆயரை வருவித்தல், அவர் வரவு, அவர் பெருமைகூறல், மூத்தபள்ளி முறையிட்டு, குடும்பன் கிடையிலிருந்தான்போல வரல், அவனைத் தொழுவின் மாட்டல், அவன புலம்பல் மூத்தபள்ளியடிசிற்கொடுவரல், அவனவளொடு கூறல், அவனவளை பள்ளிக்கல், ...ட்க வேண்டல், அவன் ...த்தல். அவன் ...றல், அவளவனை ...ட்க வேண்டி...

பண்ணைத் தலைவனை வேண்டல், விதை முதலிய வளங்கூறல், உழவருழல், காளை வெருவல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள் புலம்பல், அவனெழுந்து வித்தல், அதைப் பண்ணைத் தலைவற் கறிவித்தல், நாறுநடல், விளைந்தபின் செப்பம் செய்தல், நெல் அளத்தல், மூத்தபள்ளி முறையீடு, பள்ளிகளுள் ஒருவர்க்கொருவர் ஏசல் என இவ்வுறுப்புக்கள்உற பாட்டுடைத் தலைவன் பெருமை ஆங்காங்குத் தோன்றச் சிந்தும் விருத்தமும் விரவப்பாடுவது.

87. ஊசல்-ஆசிரிய விருத்தத்தானாதல் கலித்தாழிசையானாதல் சுற்றத்தோடும் பொலிவதாக, ஆடீரூசல், ஆடாமோவூசல் என முடியப் பாடுவது.

88. எழுகூற்றிருக்கை - எழறையாக்கிக் குறுமக்கண் முன்நின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியாகும் பெற்றியால் வழுவாது ஒன்று முதலாக எழ் இறுதியாக முறையானே பாடுவது.

89. கடிகைவெண்பா - தேவரிடத்தும், அரசரிடத்தும் நிகழும் காரியம் கடிகையளவிற் றேன்றி நடப்பதாக முப்பத்திரண்டு நேரிசை வெண்பாவாற் கூறுவது.

90. சின்னப்பூ - நேரிசை வெண்பாவால் அரசனது சின்னமாகிய தசாங்கத்தினைச் சிறப்பித்து ௱, ௯0, ௭0, ௫0, ௩0, என்னும் எண்படக் கூறுவது.

91. விருத்த இலக்கணம் - வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், கொடை இவ்வொன்பதினையும் பாடித்து விருத்தத்தால் ஒன்பது வகையுறப் பாடுவது.

92. முதுகாஞ்சி—இளமை கழிந்து அறிவுமிக்கோர் இளமைகழியாத அறிவின் மாக்கட்குக் கூறுவதாம்.

93. இயன்மொழி வாழ்த்து - இக்குடிப் பிறந்தோர்க்கெல்லாம் இக்குணம் இயல்பு என்னும் அவற்றைநீயும் இயல்பாக உடையை என்றும் ஆன்றோர்போல நீயும் இயல்பாக என்றும் உயர்ந்தோர் வாழ்த்து வதாகக் கூறுவது.

94. பெருமங்கலம் - நாடோறுந் தான் மேற்கொள்ளுகின்ற சிறைசெய்தல் முதலிய செற்றங்களைக் கைவிட்டுச் சிறைவிடுதல் முதலிய சிறந்த தொழில்கள் பிறந்ததற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக் கூறுவது.

95. பெருங்காப்பியம் - தெய்வவணக்கமும், செயப்படுபொருளும், இவற்றிற்கு இயைய வாழ்த்து முன்னுளதாய் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளும் பயக்கும் நெறியுடைத்தாய் நிகரில்லாத் தலைவனையுடைத்தாய் மலையும், கடலும், நாடும், நகரும், பருவமும் இருசுடர்த்தோற்றமும் என்றிவற்றின் வளங்களைக் கூறுதலும், மணமும், முடிகவித்தலும், பொழில் விளையாட்டும், நீர்விளையாட்டும், உண்டாட்டும், மகப்பேறும், புலவியும், கலவியும் என்றிவற்றைப் புகழ்தலும் மந்திரமும், தூதும், செலவும், போரும், வென்றியும் என்றிவற்றைப் புகழ்ந்து கூறலும் ஆகிய இவைமுறையே தொடர்வுறச் சருக்கம், இலம்பகம், பரிச்சேதம், என்னும் பகுதியை உடைத்தாய் வீரமுதலிய அவையும் அவற்றை விளக்கும் கருத்தும் விளங்கக் கற்றோரானியற்றப் படுவதாம். நாள் பொருள் ஒழிந்த ஏனைய உறுப்புகளுள் சில குறைந்தியலினும் குற்றமின்று.

96. காப்பியம் - அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கனுள் ஒன்றும் பலவும் குறைந்து ஏனைய உறுப்புக்கள் மேற்கூறியவாறு இயல்வது.

**பிரபலோத்பலன்** — விஷ்ணுபடன்.

**பிரபா** — 1. புட்சிபாரன் அல்லது புஷ்பாருணியின் தேவி; குமரர், பிராதம், மத்தியாந்நம், சாயம்.

2. அஷ்டவக்ரர் தேவி.

**பிரபாகரபட்டர்** — பட்டகுமாரர் மாணாக்கர். இவர்க்கு அஸ்தாமலகாசாரியர் எனவும் பெயர். இவர் வாயு அம்சம்.

**பிரபாகரஜீயர்** — குமாண்டூர் அப்பை; தேசிகரால் யதியாச்ரமம் அடைந்தவர்.

**பிரபாகரமதம்** — பாட்டர் மாணாக்கரில் ஒருவரால் இம்மதம் கற்பிக்கப்பட்டது. இம்மதத்தவர் ஆத்மா சூனியமன்று எனவும், ஆன்மாவிலக்ஷணனை ஆத்மாவிற்கு மனவின் சம்யோகத்தால் ஞானமுண்டாகிறதென்றும், ஞானகுணத்தினால் ஆத்மா சேதனனாகிறான் எனவும், சுபாவத்தில் ஆத்மா ஜடம் எனவும், இச்சடமான ஆத்மாவிடம் சுகதுக்காதிகளாகிய குணங்கள் உண்டாகின்றன எனவும், கூறுவர். இவர் ஆனந்தமயகோசமே ஆத்மா என்பார். இவருட்சிலர் வேதமே பிரமம் என்பார். பின்னும் சீவர்கள் செய்யப்பட்ட செயல்க

ளால் கன்மங்கள் விரியும் எனவும் வேதா நுஷ்டானங்களால் கர்மம் கட்டுப்பட்டு மண் கல்லானதுபோல் சமாதிகூடியிருப்பது முத்தியெனவும் கூறுவர். (தத்துவ நிஜாநு போகசாரம்).

**பிரபாகரன்** — பாண்டி நாட்டரசன். சிவனை நோக்கித் தவஞ்செய்து சந்ததிக்கு ஒரு பிள்ளை பெற்றவன்.

**பிரபாசகதீர்த்தம்** — சாந்தீபனி குமாரன் மரணமடைந்தது. இதனிடத்துக் கண்ணன் வருணனால் எதிர்கொள்ளப்பட்டார். தக்ஷனிட்ட சாபத்தை வருணன் இதில் மூழ்கி நிவாரணம்பெற்றனன். கோகருணத்திற்கு அடுத்தது. இதில் சந்திரன் தேஜசின் பொருட்டுத் தீர்த்தமாடினன்.

**பிரபாசம்** — 1 ஒரு தீர்த்தம் Somnath in Guzerat. A Sacred place of pilgrimage to the Hindus. The celebrated temple of Somnath. பாண்டவர் வனவாசத்தில் தீர்த்தமாடினர். கிருஷ்ணன் தீர்த்தமாடிய இடம் (பா. ஆதி, வன).

2. இது மேற்கு திக்கில் சமுத்திரத்தில் ஹிரண்யஸரஸ் என்னும் தீர்த்தம். இதில் சந்திரன் தக்ஷனாலுண்டான சாப நீக்கத்தின் பொருட்டுத் தீர்த்தமாடினன். அவனுக்கு அத்தீர்த்தம் சாபத்தை நீக்கி ஒளியைத் தந்ததாதலால், இத்தீர்த்தம் இப்பெயரடைந்தது. (பார. சாந்)

**பிரபாசலை** — பிரசாபதி மனைவிகளில் ஒருத்தி, குமரர் பிரபாசன், பிரத்தியூசன்.

**பிரபாசன்** — 1. பிரசாபதிக்குப் பிரபாசலையினிடம் பிறந்தவன். மனைவி யோகசித்தி. குமரன் விச்வகர்மன்.

2. எட்டாம்வஸு, பீஷ்மனாகப் பிறந்தவன். இவனுக்குத் தியாஎனவும் பெயர்.

**பிரபாசை** — பிரசாபதியின் தேவி. பிரத்தியூஷன் தாய்.

**பிரபாவதி**—1. சஞ்ஞாதேவிக்கு ஒருபெயர்.

2. வச்ரநாபன் என்னும் அரக்கன் பெண். பிரத்தும்நன் தேவி.

3. இவள் ஒரு தெய்வமாது. இவள் இந்திரனை நாயகனாக எண்ணித் தவம் புரிய, அவன் வசிஷ்டரைப் போல்வந்து சில இலந்தைப் பழங்களைக்கொடுத்துப் பக்குவஞ் செய்யச்சொல்ல, இவள் அவ்வகையே அவைகளை அடுப்பிலிட்டு அதிக விறகிட்டெரித்தும் வேகாமற் போயின பின் இவள் விறகுகள் ஆய்விட்டதால் விறகுசேடச் செல்லின் அடுப்பின் நெருப்பு நீங்குமென்று தன் கால்களை விறகாயிட்டு எரித்தனள். இதைக் கண்ட இந்திரன் தன்னுருக்காட்டி அவள் வேண்டிய வரம் அளித்தனன்.

4. அரதீர்த்தங்கரின் தாய்.

5. தேவசர்மன்தேவி. அங்கநாட்டரசனாகிய க்ஷித்திர ரதன் புரிரியை. (பா-அநு).

6. வலன் எனும் அசுரனது மனைவி. இவள் ஒரு நரியுருஅடைந்து தீர்த்தமாயினள். (பாத்மம்).

**பிரபு** — 1. பகனுக்குச் சித்தியிடம் பிறந்த குமரன்.

2. பீவரியின் குமரன்; பித்துருக்களைக் காண்க.

**பிரபுடதேவன்** — விஜயநகரத்தரசன். திருக்காளத்தியில் நூறுகால் மண்டபம் முதலிய திருப்பணிகள் செய்வித்துச் சுவப்பனத்தின்படி திருவண்ணாமலைசென்று அருணகிரிநாதரைக்கண்டு பணிந்து அவரால் கந்தமூர்த்தியைப் பிரத்தியக்ஷமாய்ச் சேவித்துத் திவ்வியஒளியால் கண் மயக்கடைந்து அருணகிரியாரால் கண்பெற்றவன். இவன் சரிதையிற் சிலவற்றை அருணகிரியாரைக் காண்க. கசுசுo, கி. பி. இல் இருந்ததாகத் தெரிகிறது.

**பிரபுத்தன்** — 1. இருஷபனுக்குச் சயந்தியிடம் உதித்த குமரன்.

2. சூரியவம்சத்தரசன். யோகியாயினன்.

**பிரபுலிங்கலீலை** — இது அல்லமர் மாயையைவென்ற கதைகூறிய தமிழ்நூல். துறைமங்கலம் சிவப்பிரகாசசுவாமிகள் இயற்றியது. இது வீரசைவ மதத்தைச் சார்ந்தது.

**பிரபூதம்** — சிவசூர்ய பீடம்.

**பிரபோதசந்திரோதயம்** — இது வடமொழியில் கிருஷ்ணமிச்ரர் செய்தநாடகம். இதைத்தமிழில் திருவேங்கட சுவாமி என்பவர் மொழிபெயர்த்தனர். இது வேதாந்தநூல்.

**பிரபை** — 1 நமுசியின்தேவி.

2. இவள் பூர்வத்தில் விசாலக்கண்ணி என்னும் துஷ்டை. கழுகாசலத்தில் சடைவைத்துக் காமுகனை மயக்கி மார்க்கண்டேயன் என்னும் சைவ வேதியனிடம் சிவத்திரவியம் கவர்ந்து மறுபிறவியில் சான்றார் குலத்தில்பிறந்து இறந்து புண்ணியக்ஷேத்ரவாசபலத்தால் திருதமுனிவன் குமரியாய்ப் பிறந்து உதங்கனை மணந்து கங்கையில் இறந்து நலம் அடைந்தவள்.

3. தேவமாதா.

4. ஒரு அப்சரசு.

**பிரமகீதை** — பிரம்மாசெய்த உபநிஷத்;தமிழில் தத்துவராயர் இதனை மொழிபெயர்த்தனர்.

**பிரமகேசன்** — சண்முக சேநாவீரன்.

**பிரமகைவர்த்தம்** — பதினெண் புராணத்துள் ஒன்று. சூரிய புராணம். இது (கஅ,000) கிரந்தமுள்ளது. கிருஷ்ணமூர்த்தி வராகமூர்த்தி முதலியவர்களின் சரிதை உணர்த்தும்.

**பிரமசருமன்** — 1. ஒரு வேதியன், இவன் கொடுந்தொழில் இயற்றிப் பன்றியின் பிறப்படைந்து ஒரு வேதியனைத் துரத்திச் செல்கையில் காவிரியில் ஸ்நானஞ்செய்து மயிராற்றிக் கொண்டிருந்த தாசியின் தலைமயிரின் நீர்த்திவலை மேற்பட நற்சநநம் பெற்றவன்.

2. சுசீலையின் கணவன்.

**பிரமசன்மன்** — சோமசன்மன் தந்தை, சாரமாமுனிக்குப் பாட்டன்.

**பிரமசாரி** — 1. அரித்துவாரமென்னு மிடத்தில் கல்யாணசுவாமி என்பவர் தீர்த்தயாத்திரை செய்யுங்காலத்தில் அவருடன் ஒரு பிரமசாரியுஞ் சென்றனர். இவ்விருவரும் பல தீர்த்தங்களையும் மூர்த்திகளையுந் தரிசித்து மதுராபுரிவந்து கண்ணனைத் தரிசித்து மூன்றிரவு அங்கிருக்கையில் கல்யாணசுவாமிக்குச் சுரங்கண்டது. உடன்சென்ற பிரமசாரி அவரைவிட்டு நீங்காதவராய் அவருக்கு வேண்டிய பத்திய முதலிய பரிகாரங்கள்செய்து அவ்விடத்தில் ஆறு மாதங்கழிந்தபின் பிரமசாரியை நோக்கி எட்டுவயதுள்ள என் குமரிக்கு நீரே கணவரென்றனர். இதைக் கேட்ட பிரமசாரி நீர் கூறின் உமது மனைவியுஞ், சுற்றத்தாரும் ஒப்புவரோவென, கல்யாணசுவாமி பெருமாள்முன் அழைத்துச் சென்று கையில் நீர்வார்த்தனர். கல்யாணசுவாமி பிரமசாரியுடன் தம்மூரடைந்து மனைவியையுஞ் சுற்றத்தாரையும் நோக்கி நடந்தவைகூற அவர்கள் ஒவ்வாமைகண்டு கல்யாணசுவாமி பிரமசாரியை யழைத்துச்சென்று வரலாறு கூறினன். அரசன் பிரமசாரியை நோக்கி கல்யாணசுவாமி நுங் கையில் நீர்வார்க்கையில் அங்கு யார் சாக்ஷியானவர்களெனப் பிரமசாரி கண்ணனென்றுகூற அரசன் கேட்டு அப்பெருமாளிங்குவந்து கூறின் ஒவ்வுவோமென்றனர். இதைக்கேட்ட பிரமசாரி பெருமாளிடஞ்சென்று, நீர் சாக்ஷியாக வரவேண்டுமென்னப் பெருமாள் நீபின்னே திரும்பிப் பார்க்காமல் முன்செல்லுக நான் உனக்கு முன் வருகிறேன். திரும்பிப் பார்ப்பாயேல் வரமாட்டேன் என்றனர். அதைக் கேட்ட பிரமசாரி முன்செல்ல, பெருமாள் பாதச் சிலம்பொலிக்கப் பின்சென்றனர். இச் சிலம்போசையைக் கேட்டு முன்செல்லும் பிரமசாரி அரித்துவாரத்திற்கருகு செல்லச் சிலம்போசை நிற்கக்கேட்டுத் திரும்பிப் பார்த்தனன். இதனால் பெருமாள் என் சொல்லை மறுத்தமையால் நான் அரசனிடம் அணுகேன். நான் இவ்விட மிருக்குஞ் செய்தியை அரசனுக் கறிவிக்கவென அவ்வாறே பிரமசாரிசென்று அறிவிக்க, அரசன் துணுக்குற்றுப் பெருமாளைக்கண்டு வணங்கிப் பிரமசாரிக்குக் கல்யாணசுவாமியின் மகளை மணம் புரிவித்தனன்.

2. நாள்தோறும் விடியற்காலையில் எழுந்து காலைக்கடன்களை முடித்து சுத்தஜலத்தில் ஸ்நானஞ் செய்து தேவருஷி பிதுர்தர்ப்பணங்களையும் இஷ்ட பூஜை முடித்து இருவேளைகளிலும் சமிதாதானம் செய்யவேண்டும். தேன், மாம்சம், கந்தம், புஷ்பம், தித்திப்பு, ஸ்திரீகள், தயிர், பால், நெய், மோர், ஜீவஹிம்சை, சூது, அப்யங்கனம், அஞ்சனம், செருப்பு, குடை, காமம், குரோதம், லோபம், கூத்துப்பாட்டு, பதி சொல்லல், பொய், மாதர்களை ஆசையுடன் பார்த்தல், நீக்கவேண்டும். தனியே படுக்கவேண்டும். தண்ணீர், மலர்கள், தருப்பை, சாணம் முதலிய குருவுக்கு நாடோறும் தரவேண்டும். வேதநிஷ்டராகிய கிரகத்தர் வீட்டில் அன்னபிக்ஷை எடுத்து உண்ணவேண்டும். வேதாத்யன காலத்தில் குருவிற்கு முன்னின்று அவர் கட்டளையிட மறைக்கவேண்டிய உறுப்புக்களை வஸ்திரத்தால் மறைத்து இருவென இருந்து ஓதல்வேண்டும். பிறர் குருவை நிந்திக்கின் காதைப் பொத்திக்கொள்ள வேண்டும். தான் குருவின் வீட்டிலிருக்கையில் தந்தை தாயர் வந்தால் குருவின் உத்தரவின்றி அவர்களை வணங்கக் கூடாது. குருவின் பத்தினிக்கு எண்ணெய் தேய்த்தல், ஸ்நானஞ்செய்வித்தல், உடம்பு தேய்த்தல், தலையாற்றுவித்தல் செய்யக்கூடாது. பிரமசாரி தலையை முண்டிதஞ்செய்து கொண்டாயினும், சடைவளர்த்துக் கொண்டாயினும் இருக்கலாம். ஆசாரியன் கல்விபோதிப்பதால் பரமாத்மாவாகவும், தகப்பன் புத்

ரோற்பத்தி செய்வதால் பிரமனுருவாகவும், தாய் தரித்திருப்பதால் பூமிதேவியுருவாக வும், சகோதரன் தன்னுடன் பிறந்ததால் ஆத்மாவினுருவாகவும் எண்ணப்படுகிறார் கள். ஆதலால் இவர்களை வணங்க வேண் டும். சீடன் வேதமோதும்போது ஆசாரிய தக்ஷிணை கொடுக்கக் கூடாது. ஓதி முடிந்த பின் கொடுக்கலாம். (மநு.)

3. இவர்பெயரினாலேயே இவர் மணம் புரிந்து கொள்ளாது பிரமசாரியம் காத் திருந்த அந்தணரென்று தோன்றுகிறது. "கடவுளாயினுமாக, மடவைமன்ற வாழிய முருகே" என முருகவேளை இவர் பாட லிற் கடிந்து கூறிய மனத்திட்பம் கருதத் தக்கது. இவர் குறிஞ்சியைப் பாடியுள் ளார். இவர் பாடியது நற். ௬௪.

**பிரமசாவர்ணிமநு** — பத்தாம் மன்வந்தரத் துமநு. சாவர்ணி மநுவைக்காண்க.

**பிரமசிருட்டி** — பூர்வத்தில் பிரமன், முகத் தில் வேதவேதாங்கங்களும் புராணாதிகளும் பிறந்தன. பின்பு மரீசி, அத்திரி, ஆங்கி ரஸ், புலத்தியன், புலகன், கத்ரு, பிரசே தஸ், வசிட்டன், பிருகு, நாரதன் முத லிய மானசபுத்திரரையும், தக்ஷனுங்குஷ் டத்தில் தக்ஷனையும், நாபியில் தருமனை யும், மனதில் மன்மதனையும், புருவத்தில் குரோதனையும், அதரத்தில் லோபனையும், புத்தியில் மோகனையும், அகங்காரத்தில் மனசையும், காதில் பிரமோதனையும், கண் களில் மிருத்யுவையும், அங்கத்தில் ஒரு பெண்ணையும், சிருட்டித்துத் தன்மனதில் காயத்திரியை எண்ணினன். அவ்வேளை உடல் அர்த்தநாரி உருவாயிற்று. அந்த உருவில் சதரூபவதியென்னும் குமரி உண் டாயினள். இப்பெண்ணே காயத்திரி; சரஸ்வதியென்னும் பெயருடன் அழைக் கப்பட்டாள். இவள் பிரமனைப் பிரதக்ஷ ணம் செய்யத் தக்ஷணபாரிசம் சென்றனள். பிரமன் அப்பக்கம் ஒரு முகங்கொடு பார்த் தனன். அவ்வகை இவள்சென்ற மற்ற திக்குகளிலும் பார்த்து அவள் அந்தரத்தில் சென்றது கண்டு அந்தரத்தில் ஒருமுகங் கொண்டு பார்த்து அவளை மணந்தனன். (மச்ச புராணம்).

**பிரமசீலன்** — 1. ஒரு ஆசாரமுள்ள வேதி யன். சித்திரகுத்தன் ஒரு முறை யமபடர் களை அழைத்து இப்பெயர் கொண்ட மற் றொருவனை யமபுரம் அழைத்துவரக் கூற யமபடர் இவன் சிவபூசை செய்யும்வேளை யில் இவனை அழைத்துச் சென்றனர். யமன் இவரைக்கண்டு அஞ்சி அருகில் உட் காருவித்து ஆசிகூறி யமபடரை நோக்கி அறைந்து மற்றொருவனன்றோ வாத்தக்க வன் எனக் கோபிக்க, பிரமசீலன் யானும் இந்த யமபுரம் காணும் ஆசையுள்ளேன். ஆதலின் எனக்கு நரகங்களைக் காட்டக் கட்டளையிட வேண்டுமென, யமன் அவ் வாறே படர்களை அழைத்துக் காட்டக் கட் டளை யிட்டனன். அந்நரகத்தில் வேத னைப் படுவோரைப் பிரமசீலன் கண்டு அர கர முழக்கம்செய்ய அதில் ஐவரொழிந்த அனைவரும் நரகம் நீங்கினர். மற்ற ஐவ ரின் செய்தி என்னென்று பிரமசீலன் யம னைக் கேட்க யமன் நானும் அறியேன். நாளை நீர் சிவபூசை முடித்துத் தேகத்து டன் இவ்விடம் வரின் தெரிவிப்பேன் என அவ்வாறே பிரமசீலன் வரக்கண்டு பிரம னிடம் சென்றுகேட்க அவரும் அறியேன் என மூவரும் கூடிக் கைலை அடைந்து நந்திதேவர்பால் அவர்கள் ஐவரும் சிவ நிந்தை, அடியவர் நிந்தை, சிவத்திரவிய கவர்ச்சி செய்தவர் எனக்கேட்டு அதற்குத் தீர்வு உணர்ந்து புண்ணிய தீர்த்தங்கொ ண்டு நரகபூமிசென்று அவர்மீது புரோ க்ஷித்து அவர்களையும் நரகத்திருந்து நீக் கினவன்.

2. ஒரு சிவகிங்கரன்.

**பிரமசுந்தர முனிவன்** — இவன் பல பெரிய முனிவர்களுக்குத் தலைவன். தருமத்தைப் பரிபாலனஞ் செய்வதே இவனுடைய கோட்பாடு. இவனுடைய மனைவியின் பெயர் பரமசுந்தரி என்பது. இவன் யூகி யின் தந்தை. உதயணனுக்கு யானையின் கோபத்தை அடக்கும் வித்தையையும், இந்திரனால் தான்பெற்ற கோடவதி யென் னும் யாழையும், இசைநூலையும், மற்று முள்ள பல வித்தைகளையும் அளித்தவன். யூகியை உதயணன் பால் அடைக்கலமாக ஒப்புவித்தவன். யூகியின் பாலுள்ள கல்வி, அறிவு, ஒழுக்கம், ஆற்றல் முதலிய விசேட குணங்களுக்கு இவனுடைய தவமேகாரண மென்று தெரிகின்றது. (பெ. கதை.)

**பிரமசுரன்** — ஒரு அசுரன். இவன் சிவனை எண்ணித் தவம் இயற்றினன். சிவமூர்த்தி பிரத்தியக்ஷமாகி என்ன வேண்டுமென்ன நான் என்கரத்தை யார் சிரத்திடை வைக்கி னும் அவர் இறக்க என வரங்கேட்டனன். சிவமூர்த்தி அவ்வகை அருள்செய்யக்

கொண்டு அவர்மீதே தன் கையை வைக்கச் செல்லச் சிவமூர்த்தி மறைந்தருளினர். உடனே விஷ்ணுமூர்த்தி ஒரு மோகினியுருக்கொண்டு இவன்எதிரில் தரிசனந்தர அசுரன்கண்டு மயங்கிவேண்ட, மோகினி யான் எவ்வகை நடிக்கின்றேனே அவ்வகை நடிக்கின் உடன்படுவேன் எனக் கூறக்கேட்டு, உடன்பட்டு மோகினி பலவகை நடித்துப் பின் சிரத்தில் தன்கரத்தை வைத்து நடிக்க, அசுரன்கொண்ட வரத்தை மறந்து தன்கரத்தைச் சிரத்தில்வைக்க மாய்ந்தனன். இவனை விருகாசுரனெனவுங் கூறுவர்.

**பிரமசூத்ரம்** — வேதாந்த சூத்ரம்.

**பிரமசேனன்**—இவன் ஆருணியாசனுடைய பெரும் படைத்தலைவர்களுள் ஒருவன். இவன் பெயர் பிரமசேனனெனவும், பமசேனனெனவும் வழங்கும். (பெ. கதை.)

**பிரமதகணம்** — தாருகவனத்து இருடிகள் சிவமூர்த்தியிடம் விரோதித்து ஏவிய பூத கூட்டங்கள். ருத்ரமூர்த்தியிடம் இருப்பன.

**பிரமதண்டம்** — 1. பிரமன் யாகஞ்செய்ய விரும்பித் தமக்கு ரித்விக்கைப் பெருமல் ஆயிரம் வருஷ கருத்தாங்கினர். அவர் தும் முங் காலத்தில் கருமூக்கின் வழியாய் வெளிவந்தது. அது க்ஷுபன் என்றும் சிருட்டிக்கர்த்தாவாய் தண்டமாயிற்று. இது தண்ட நீதியாயிற்று. யாகமுடிந்ததும் தண்டமறைந்தது. தண்டத்திலிருந்து நீதி எனும் ஸரஸ்வதிதேவியும் நீதிகளும் உண்டாயின. இந்த தண்டம் நீதியற்றவரைத் தண்டிப்பது (பார-சாங்.)

2. ஆதித்தியனின்ற நாளுக்கு பதினைக் தாம் நாள் பிரமதண்டமாம். இதில் சுபகாரியங்கள் செய்யக் கூடாது. (விதானமாலை).

**பிரமதத்தன்** — 1. பூசல் நகரத்து அரசன்.

2. இவன் காம்பிலிதேசத்துச் சூளி குமரன். இவன் குசநாபன் நூறுபெண்களை மணந்து அவர்களுக்கு வாயுவால் நேர்ந்த கூனை நிமிர்த்துக்கொண்டவன். இவனையுஞ் சூளி என்பர்.

3. ஒரு அரசன்; கௌதமருக்கு அன்னம் படைக்கையில் அதில் புாலல் இருக்கக் கண்ட இருடியால் பிசாசமாகச் சாபமேற்றவன். இவனுக்கு இச்சாபம் இராமமூர்த்தியின் பரிசத்தால் நீங்கிற்று.

4. அணுகன் குமரன். இவன் யோகியாயினன். இவன் பாரி சரஸ்வதி. குமரன் விச்வசேனன்.

5. மந்திரஹீனமாய் யாகஞ்செய்து ஊமையாய் அயோத்தியில் சிதை குண்டத்தில் மூழ்கி ஊமை நீங்கினன்.

6. பாஞ்சால தேசத்து அருகன் குமரன்; இவன் எறும்புகளின் பாஷை யறிந்தவன். (மச்ச-புரா.)

**பிரமதந்திரசுவதந்திரஜீயர்** — பேருளாளஜீயருக்கு ஒருபெயர்.

**பிரமதருமன்**—ஒரு பௌத்தமுனிவன், அத்திபதியின் மைத்துனன், காயங்கரையெனும் நதிக்கரையிலிருந்து நோற்றோன்; முக்கால மறிந்தோன், மணிமேகலைக்குப் பழம்பிறப் புணர்த்தினவன். (மணிமேகலை)

**பிரமதன்** —மூன்றுமன்வந்தரத்து இருடி.

**பிரமதி** — 1. நபாகனைக் காண்க.

2. (கு.) பிராங்கிசு குமரன்.

3. சியவனருஷிக்குச் சுகன்னியிடம் பிறந்தவர். இவர் கிருதாசியிடம் ருரு என்பவரைப் பெற்றார். ருரு பிரமத்வரையிடம் சுநகரைப் பெற்றார்.

**பிரமதேவர்** — 1. இவர் சிவபிரானை யெண்ணித் தவமியற்றினர். சிவமூர்த்தி தரிசனம் தந்து என்ன வேண்டுமெனத் தேவரீர் எனக்குப் புத்திரராக வேண்டுமென அவ்வாறு பெற்று இவரது நெற்றியினிடத்தில் நீலலோகிதராகத் தோன்றியவர். (ஆதித்ய புராணம்).

2. சத்தியைவேண்டி தக்ஷகுமரியாக வரவேண்டுமென அவ்வாறே தக்ஷகுமரியாகப் பிறந்தனள். (ஆதித்ய புராணம்).

3. நீலலோகிதரென்று பெயருள்ள இவரைப் பூசித்துத் தமக்குப் புத்திரராம் வரத்தையடைந்தார். (பார. அநுசா).

**பிரமத்திரவம்** — சரயுநதிக்கு ஒருபெயர்.

**பிரமத்வரை** — விச்வாவஸு என்னும் காந்தருவனுக்கு மேனகையிடம் பிறந்தகுமரி. இவள் ஸ்தூலகேசருஷியிடம் வளர்ந்துவருகையில் ஒருநாள் பூஞ்சோலையில் சென்று உலாவுகையில் பாம்பொன்று கடிக்க இறந்தனள். இவளை இருடிகள் கண்டு துக்கமுறுகையில் அவ்விருடிகளில் ஒருவராகிய ருருமாத்திரம் விசனத்துடனவர்களைப் பிரிந்து காட்டிற்சென்று அழ, தேவர்கள் எதிர்தோன்றிக் காரணம்வினவி ருருவின் ஆயுளில் ஒரு பாதி தருவதாகக் கூறியபடி தர உயிர்த்தெழச் செய்தனர். எழுந்த இவளை ருருமணந்து தன்பார்யை பாம்பால் இறந்ததால் ருரு எப்போதும் பாம்புகளைக் கொல்லத் தொடங்ினை. இவர் பாம்பு

களைக் கொன்றுவருகையில் ஒருநாள் ஒரு தண்ணீர்ப் பாம்பின் உருக்கொண்டிருந்த சகஸ்திரபாதருஷியைக்கண்டு அவருடைய சாபவரலாறு கேட்டனர். அந்தப் பாம்பு நான் பூர்வம் ககமருஷியை விளையாட்டாய்ப் புல்லையெடுத்து மாலையாகப்போட்டுப் பாம்பென்று பயமுறுத்த அவர் என்னைப் பாம்பாக என்று சபித்தனர். நான் வேண்ட இச்சாபம் ருருவால் நீங்குமென்றனர் என, இதைக்கேட்ட ருரு அந்தப்படி நீக்கி அது முதல் பாம்புகளைக் கொலை செய்வதை விட்டனர்.

**பிரமபுரம்** — திருக்காஞ்சிக்கு ஒரு பெயர். இதிலுள்ள கச்சபேசத்துப், பிரமன், சிவபூசைசெய்து பேறுபெற்றதால் இப்பெயர் வந்தது. சீர்காழிக்கும் கூறுவர்.

**பிரமபுராணம்** — இது (௧0,000) கிரந்தமுள்ளது. இது சூரிய சந்திரவம்ச விவரணம், சிவவிஷ்ணு தலமான்மியம், சகந்நாதத் தலத்தின் சரித்திரம் முதலியவற்றை விவரித்துக் கூறும்.

**பிரமபூ** — வீரசித்தின் தந்தை.

**பிரமமித்திரன்** — இந்தீவராக்ஷனைக் காண்க.

**பிரமமுனி**—பதினெண் சித்தர்களிலொருவர்.

**பிரமமுனிவர்** — திருமூலர் மாணுக்கரில் ஒருவர்.

**பிரமராம்பிகை** — இவள் சிவசத்தி. பூர்வம் அருணன் எனும் அசுரன் பிரமனிடத்தில் எவர்களாலும் வெல்லமுடியாத வரம்பெற்றுத் தேவர்களை வருத்திவந்தனன். இவனால் துன்பம் அடைந்த தேவகணங்கள் சத்தியைப் பிரார்த்திக்கத் தேவி, அவர்களுக்குத் தரிசனம்தந்து நீங்கள் விரும்பியதென்னெனத் தேவர்கள், அம்மணி அருணனென்னும் அசுரன் பாதையால் நிலையற்று வருந்தும் எங்களைக் காக்கவேண்டுகின்றோம் எனத் தேவி அங்ஙனமே ஆருக என்று தன் மலர்மாலையில் மொய்த்திருந்த வண்டுகளை நோக்கி அசுரனைக் கொலை செய்து வருக என அவ்வாறு அவை சென்று அருணனையும் அவன் சேனைகளையுந் தொலைத்து மீண்டன. (தேவி-பா.)

**பிரமருஷிதேசம்**—குருக்ஷேத்திரம், பாஞ்சாலம், சூரசேனம், மசசதேசம் முதலியவை. இது பிரம்மாவர்த்த தேசத்துக்குச் சிறிது தாழ்ந்தது.

**பிரமவை** — ஒரு அரக்கி; பதங்காசுரன் தேவி. குமரர், அந்தகன், அம்பன், துங்கன்; இவள் தன் புதல்வரையும், கணவனையும், கொன்ற பழிதீர்க்கக் காசியில் குழந்தை உருக்கொண்டிருந்த விநாயகரிடம் அதிதி உருக்கொண்டு சென்று விநாயகருக்கு விஷங்கலந்த உண்டி தந்தனள். அதனை விநாயகர் உண்டு சலிக்காது அரக்கியைக் கொன்றனர்.

**பிரமலோகவர்ணனம்** — வேத ஒலிகளால் நிறைந்தும் ஓமப்புகைகளாலும் நாரதர் முதலிய மகருஷிகளாலும் யாக வேதிகைகளாலும் குண்டங்களாலும் புஷ்பங்கள் பழங்கள் தாமரையோடைகளாலும் இராஜ அம்ஸங்களாலும் சாரசபக்ஷிகளாலும் நிறைந்ததும், மந்தமாருதத்தால் அலைக்கப்பட்ட வண்டுகள் பறவைகளின் ஒலியுடையதுமாம். இதனை வேதவொழுக்க முற்ற நல்லோர் அடைவர்.

**பிரமலோசை** — ஒரு அப்சரசு, கண்டுமகருஷியைச் சேர்ந்து, மாரிஷையெனும் ஒரு பெண் பெற்றுப் பிரசேதசுகளுக்குக் கொடுத்தாள். இவள் வருணபுத்திரனாகிய புஷ்கரனால் மாலினியைப் பெற்று உருசிக்குக் கொடுத்தனள். உருசிபிரசாபதியைக் காண்க.

**பிரமலோலுபன்** — கும்பியின் குமரன்.

**பிரமவத்தம்** — சரஸ்வதி நதிக்கு அருகில் உள்ள தேசம்.

**பிரமவித்தை** — 1. துருவன் என்னும் வசுவிற்குத் தாய்.

2. பிரம்மா அதர்வனுக்கு உரைத்தநூல்.

**பிரமவித்யாதவார்** — ஸ்ரீ கண்ட பாஷ்யத்திற்கு வியாக்யானம் செய்த ஆசாரிய சுவாமிகள்.

**பிரமனூர்** — ஒரு தமிழ்ப் புலவர். (புற-நா.)

**பிரமன்** — 1. இவர் பொன்னிறமாய், தாடி, மீசை, நான்குமுகம், மேல்வலக்கையில் ஜபமாலை, இடக்கையில் தண்டாயுதம், கீழ் இடதுகையில் ஸ்ருக், ஸ்ருவம், வலதுகையில் கமண்டலம் உள்ளவராயிருப்பர்.

2. இவர் சுயம்புவாயும், ஒவ்வொருகற்பத்தில் விஷ்ணு ருத்ரர்களிடத்தில் தாம் பிறந்தும் அவர்களைத் தம்மிடம் பிறப்பித்தும், தேவருஷி பித்ருக்களுக்கு மூலகாரணராயும், எல்லா சிருஷ்டிகளுக்கும் காரணராயும் எழுந்தருளியிருப்பவர். இவருக்கு சரஸ்வதி, சாவித்திரி, காயத்ரி தேவியர்.

3. அசுரர் தவஞ்செய்து வரங்கேட்க அவர்களுக்குப் பல வரங்கொடுத்தவர்.

4. இராவணன் திககு [illegible]த்திற்கு வந்து யமனுடன் போரிடுகையில் யமன்

காலதண்டத்தை யேவச் சுழற்றுகையில் யமனுக்குத் தரிசனம் தந்து அதை இராவணன்மீது ஏவாதிருக்க வேண்டி இராவணனை யனுப்பியவர்.

5. நிவாதகவசரை இராவணனுக்கு நட்புச் செய்வித்தவர்.

6. இராவண புத்திரனாகிய மேகநாதனால் இந்திரன் கட்டுண்டகாலத்து அவன் முன் தோன்றி இந்திரனைமீட்டு நிகும்பலை யாகத்தில் இரதத்திற்றோன்றி வரமளித்து இந்திரசித்தெனும் பெயரளித்தவர்.

7. வாயுபுத்திரனாகிய அநுமனை இந்திரன் வச்சிராயுதத்தாலெறிந்த காலத்து அநுமனைத் தடவி உயிரளித்தவர்.

8. கிருதயுகத்தில் குபனை நிருமித்துப் பூமிக்கு அரசனாக்கியவர். இவர் தும்மலில் குபன் பிறந்தனன்.

9. சிவேதனைப் பசிப்பிணி சத்தியவுலகத்திலும் வருத்த அது வருத்தாது தன்னுடலைத் தின்னும்படி வரம் அளித்தவர்.

10. இராமமூர்த்தி சீதையைத் தன்னிடம் மறைத்த பூமிதேவிமீது கோபங் கொண்ட காலத்தில் அவர் முன்தோன்றி உண்மையை யறிவித்தவர்.

11. விஷ்ணுமூர்த்தியுடன் தான் பெரியோனென வாதிட்டுத் தாணுமூர்த்தி இருவருக்கும் முன்னிற்க முடிகாணாது இளைத்துக் கற்பங்கள் தோறும் விஷ்ணுவிற்குக் குமாரராய்ப் பிறப்பவர்.

12. சிவன் எனது புத்திரன், என்னாலுலகம் எல்லாமுண் டாயிற்று எனச் செருக்குக்கொண்ட காலத்துச் சிவமூர்த்தி ஐந்தாவது சிரத்தைக் கிள்ளியெறிய அக்கபாலத்தை, மற்றவர் இதை ருத்ரமூர்த்தியின் திருக்கரத்தில் கண்டகாலத்து அவர்கள் செருக்கடங்கும் வகைதரிக்க வேண்டியவர்.

13. குமாரக்கடவுள் வினவிய பிரணவத்திற்குப் பொருள் கூறாது அவரால் சிறையுண்டு சிவமூர்த்தியால் மீண்டவர்.

14. சிவமூர்த்தியை நோக்கித் தாம் யாகஞ் செய்யத் தொடங்குகையில் தக்கன் சிவனுக்கு அவிர்ப்பாகங் கொடுக்கக்கூடாது என அவனது உத்தரத்திற் கஞ்சி யாகஞ் செய்யாது விட்டவர்.

15. சமுத்திரராசனிடம் வளர்ந்த சலந்தராசுரனைக் காணச் சென்று அவனால் தாடி பிழுப்புண்டவர்.

16. சநகர் முதலியோர்க்குச் சிருஷ்டித் தொழில்கற்பிக்க அவர்கள் செய்யாமை கண்டு சிவானுக்கிரகத்தால் சிருஷ்டித் தொழில் செய்தவர்.

17. ஒரு கற்பத்தில் பாற்கடலில் யோக நித்திரை செய்துகொண் டிருந்த திருமாலிடஞ் சென்று நீ யார் என அவர் உன்பிதா எனக்கேட்டுக் கோபித்து உண்மையுணர்ந்து அடங்கியவர்.

18. ஒரு கற்பத்துத் தாமே பரமெனச் சிருஷ்டி செய்யத் தொடங்குகையில் அச்சிருஷ்டி நடைபெறாமைகண்டு அழுதனர். அந்நீர் ஓர் பிரளயமாயிற்று. அக்காலத்துப் பிரமன் நெற்றியின்வழி நீலலோகித ருத்ரர் தோன்றிச் சிருஷ்டிமுறையைத் தெரிவித்து மறைந்தனர். இது நீலலோகித கற்பம் எனப்படும். பதினொரு ருத்ரர் தோன்றினர் என மற்றொரு புராணங் கூறும்.

19. சூரியனைப் பாசத்தாற் கட்டிச் சென்ற பானுகோபனுக்குத் தெய்வப்படைகள் தந்து சூரியனை விடுவித்தனர்.

20. சித்தி, புத்தியெனும் விநாயக சத்திகளைப் புத்திரிகளாகப் பெற்றவர்.

21. திருக்காஞ்சியில் யாகஞ்செய்வதை இவருடனூடல் கொண்ட சரஸ்வதி தடுக்க வருகையில் விஷ்ணுமூர்த்தியை வேண்டி அவளைத் தடுப்பித்து யாகத்தில் வரதராசர் பிரத்தியக்ஷமாக வரம்பெற்றவர். பின் சரஸ்வதி வெட்கி மரத்தில் மறைந்து கொள்ள மரத்தைச் சோதித்துச் சரஸ்வதியைக்கூடியவர். (காஞ்சி - பு.)

22. இலங்கணியை இலங்கைக்குக் காவலாளியாக்கி அநுமனாலறையுண்டு மீண்டும் சத்தியவுலகம் வருவை, அந்நாளில் இலங்கை இராவணனைவிட்டு நீங்கும் என வரந் தந்தவர்.

23. ஒரு கற்பத்தில் இவர் தியானத்தில் இருக்கையில் ஐந்துருத்ரர் தோன்றிச் சிருஷ்டித்தொழில் கற்பித்து மறைந்தனர்.

24. வசிட்டர்பொருட்டுச் சரயுநதியைப் பூமியிற்றோபாகச் செய்தவர்.

25. ஒருகற்பத்தில் நவப்பிரசாபதிகளாகிய ஆங்கிரசன், அத்திரி, கத்ரு, புலஸ்தியன், புலகன், பிருகு, மரீசி, வசிஷ்டன், தக்ஷன் முதலியவரைப் படைத்தவர். இவரது மானசபுத்திரர் சநகர், சனத்குமாரர், சனந்தனர், சநாதனர், ருபவர், நாரதன், அருணி, அம்சன், யதி முதலியவர். இவர்

கள் ஞானியாயினர். இவர் நிழலில் கர்த்தமன் பிறந்தனன்.

26. தம் தேகத்தில் சரஸ்வதியைப் படைத்து அவளைத் தமக்குத் தேவியாக்கிக் கொண்டனர்.

27. இவர் யோகத்தில் இருக்கையில் கண்ணீர்விழ அதிலிருந்து ருக்ஷவிரசனென்னும் வாநரன் பிறந்தனன்.

28. ஒரு கற்பத்தில், கண்ணில் மரீசியையும், இதயத்தில் பிருகுவையும், சிரத்தில் அங்கிராவையும், அபானனில் கிருதுவையும், வியானனில் புலகனையும், உதானனில் புலஸ்தியனையும், பிராணனில் தக்கனையும், சமானனில் வசிட்டனையும், சுரோத்திரத்தில் அத்திரியையும் (இவர்கள் நவப்பிரசாதிகள்.) பின்னுந் தொண்டையில் அரக்கரையும் சிருஷ்டித்து அந்தவுடலை விட்டனர்; அது இருளாயிற்று. இவர், வேறு உடல்கொள்ள முகத்தில் சத்துவகுணம் பிறந்தது. அதில் தேவர் பிறந்தனர். அத்தேகத்தையும்விட அது பகலாயிற்று. வேறுடலெடுத்துப் பிதுருக்களைப் படைத்து அதையும்விட அது சந்தியாகாலமாயிற்று. பின்னும் வேறுடலை எடுத்து மனிதரைச் சிருஷ்டித்து அதைவிட அது சந்திரிகையாயிற்று. இன்னும் பலவுருக்கொண்டு பூத, பிரேத, பைசாசர்களைப் படைத்தனர். மற்றொரு சிருஷ்டியில் முகத்தில் வேதியரையும், புஜத்தில் அரசரையும், தொடையில் வணிகரையும், திருவடியில் சூத்திரரையும் சிருஷ்டித்தனர். தமோசிருஷ்டிக்குப் பிறகு இவருக்கு இரண்யகற்பத் திருநாமம்வுண்டாயிற்று. பின் சலத்தைப் படைத்துண்ண அசுரர் பிறந்தனர். இவருடலில் பாம்புகளுதித்தன. அவற்றைக் கோபிக்க அக்கோபத்தால் உடல் பொன்னிறமடைந்தது. பின் பூதர், பேய்க் கணங்களைப் படைத்து வாக்கையருந்துதலும் கந்தருவருதித்தனர். காலத்தால் பருந்து முதலிய பறவைகளுமுதித்தன. முகத்தினும், மார்பினும் வேள்வியின்பொருட்டு ஆடுகளுதித்தன. இரண்டுவிலாவினும் வயிற்றினும் பசுக்கூட்டம் பிறந்தன. திருவடியில் சிங்கமுதலியன பிறந்தன. உரோமத்தில் கிழங்குமுதலிய சாகமூலங்கள் உண்டாயின. வேதங்கள் முகத்தில் உதித்தன. பிரமன் தன் தமோ குணத்தைப் பிரிக்க அது இருகூறாகி ஆண்பெண் வடிவுகொண்டு முறைகேடு பாபங்கொலையாயின, அப்பிரமன் உடலிற் சுவாயம்புமனுவும், சதரூபையும் பிறந்தனர்.

29. விஷ்ணுவுடன் சண்டைசெய்த காலத்தில் மகிடாசுரனைச் சிருஷ்டித்து ஏவியவர்.

30. உருப்பசியின் நடனங்கண்டு அவளை விரும்பி அவளால் வெளிவந்த வீர்யத்தைக் கடத்தில்விட்டு அதில் அகத்தியரைப் பெற்றவன்.

31. ஒரு கற்பத்தில் இவர் யாகஞ்செய்ய அங்கிருந்தகலசத்தில்சரஸ்வதிபிறந்தனள்.

32. இவர் சிவனது முடிகண்டேனென்று பொய்கூறியதால் இவர்க்குக் கோயிலிலாது நீங்கச் சிவமூர்த்தி சாபமளித்தனர்.

33. தம்மிடஞ் சரஸ்வதியைப் படைத்து அவளைப் புணரச் செல்லுகையில் அவள் மானுருக்கொண்டோடினள். இவர் ஆண்மானுகத் தொடர்ந்தனர். தேவர் முறையீட்டினுல் சிவமூர்த்தி வேட வடிவங்கொண்டு ஆண்மானை யெய்தனர். அதில் ஒரு சோதியுண்டாகி ஆகாயத்தை யடைந்து ஆதிரைநாளாயிற்று. பின் சரஸ்வதி வேண்டுகோளால்சிவமூர்த்தி இவரை உயிர்ப்பித்துசரஸ்வதிக்கு நாயகனுக்கினர். இது மன்மதனுல் விளைந்ததென்று மன்மதனைச் சிவபிரானெற்றி விழியினுலிறக்கச் சாபந்தந்தவர்.

34. ஒருகர்ப்பத்தில் விஷ்ணுவுடன் உலகமனைத்தையும் படைக்க விரும்பி விஷ்ணுவுடன் உலகமனைத்தையும் உண்டு மீண்டுஞ் சிருஷ்டித்தவர்.

35. தத்புருஷகற்பத்தில் ஆண்மக்களைப் படைத்துப் பெண்மக்களைப் படைக்கத்தெரியாது சத்தியைவேண்டச் சத்தி பிரமனை நோக்கி பிரமனே உனது இடது பாகத்தைப் பெண்ணுக்குக. அவ்வுருவத்தை நோக்கிச் சிருஷ்டிசெய்க எனக்கட்டளைபெற்று அவ்வகைப்பெண்களைச் சிருட்டித்தவர்.

36. பிரமன், சாவித்திரியைநீங்கிக்காயத்ரியுடன் யாகஞ்செய்தனர். சாவித்ரி கோபித்து அந்தயாகத்திற்குப் போகும் தேவர்களை நீருருவாகச் சபித்தனள். அத்தேவரின் பத்தினிமார் பிரமனிடம் முறையிடப் பிரமன் விநாயகரை வணங்கி அவர்களின் நாயகரை மாற்றினர். இந்த விநாயகருக்கு வரம்பவிநாயகர் என்றுபெயர். (பார்க்கவ புராணம்.)

37. ஒருமுறை தவஞ்செய்கையில் காமநினைவுண்டாய்ச் சரஸ்வதியைத் தொடரச்

சரஸ்வதிநீங்க வீரியம்வெளிப்பட்டுச் சலத்தில்தங்க அந்தநீரைக் குணவதி தாக வேட்கையால் உண்டு கண்ணைப் பெற்றனள்.

38. இவர் கொட்டாவிவிட அதினின்றும் சிந்துரன் என்னும் அசுரன்தோன்றப் புத்திரவாஞ்சையால் எவரைத் தழுவினும் இறக்க வரமளிக்க அசுரன் தந்தையையே தழுவச் செல்லப் பிரமன் நீங்கினர்.

39. இவர் தவஞ்செய்வதைத் தடுக்க இந்திரன் திலோத்தமையை ஏவப் பிரமன் ஆண்மானுருக்கொண்டு தொடரச் சிவமூர்த்தியால் தடையுண்டவர்.

40. ஒரு கற்பத்தில் சரஸ்வதியை நூறு பெண்ணுருக் கொளச்செய்து அவர்களைக் கூடித் திவாந்தகன் முதலிய அரக்கர் அநேகரைப் பெற்றனர். சரஸ்வதி நம் புதல்வர் அரக்கரானமை யென்னென நாம் பகற்காலத்தில் புணர்ந்ததால் குமரர் அரக்கராயினர் என்று குமரரையனுப்பித் தாம் இருக்கையில் இந்த அரக்கர் தேவரை இடுக்கண் புரியத் தேவர் பிரமனிடம் முறையிட்டனர். அதனால் இவருக்குக் கோபம்பிறக்க அதினின்று உக்கிரனென்பவன் பிறந்தனன். இவர் அவ்வுக்கிரனை நோக்கி நீ திவாந்தன் முதலியவரைக் கொன்று வருகென அவன் அவ்வாறுசெய்து மீண்டு பிரமதேவனிடம் கூறினன். இவர் அம்மரணச் செய்திகேட்டுப் பிள்ளைகள் இறந்தனரோ என்னும் விசனத்துடன் உக்கிரனைநோக்க அவனுமிறந்தனன். மீண்டும் இவர் நல்ல புதல்வன் வேண்டுமெனத் தவம்புரிந்து இரிபுவைப் பெற்றனர்.

41. குமாரக்கடவுள் சூராதியரை வெற்றிகொண்டு கொலுவிருக்கையில் இவர்க்கு வேலால் வெற்றிவந்தது. அந்தவேல் என்னால் செய்யப்பட்டது என்று செருக்கடைந்து குமாரக்கடவுளால் பூமியிற் பிறக்கச் சாபம்பெற்றவர்.

42. இவர் ஒருமுறை ஓமஞ்செய்கையில் கண்ணிலிருந்து வழிந்தொழுகிய நீரிலும் ஓமத்திலும் அநேகம் குதிரைகள் பிறந்தன.

43. இவர் சந்திவடிவாகிய தென்புலத்தவரை உண்டாக்கியபோது அவர்களினுடலழுக்குச் சிந்தினவிடத்தில் பவளமுண்டாயிற்று.

44. சரஸ்வதியை நாற்பத் தெட்டுருவாய்ப் பூமியிற்சநிக்கும்படி சபித்தவர். அவர்களே சங்கப்புலவர்கள்.

45. பார்வதியாரின் திருமணத்தில் திருவிரலில் ஆசைவைத்துப் பழிசுமந்து சிவபூசையால் நீங்கினவர்.

46. ஒருகற்பத்தில் ஈசுவரசாபத்தால் சப்த இருடிகள் இறந்து பிறந்தனர். எவ்வகையெனில் இப்பிரமதேவர் அசுவமேதஞ் செய்யத்தொடங்கிய காலையில் தேவபத்தினிகளைக்கண்டு அவர் வீரியம்வெளிப்பட்டது. அந்த வீரியத்தை அக்னியில் இட்டு ஓமஞ்செய்ய அதிலிருந்து, பிருகு, அங்கீரஸர், அத்ரி, மரீசி, புலஸ்தியர், புலகர், வசிட்டர் பிறந்தனர்.

47. இவர் ஆயிரம் இதழ் கொண்ட தாமரைகள் கொண்டு வேள்வியில் அர்ச்சிக்க அதில் ஆயிரங்குமாரர்கள் பிறந்தனர். அவர்களை வளர்த்துக் குபேரனுக்குக் கொடுப்பித்து ஆயிரம்பெண்களை மணஞ்செய்வித்தனர். இவர்கள் வணிகராயினர். இவர்களுக்குப் பொன்தராசு பிரமன் தந்தனர். துலாம் விஷ்ணுகொடுத்தனர். மணி கடல்மகள் கொடுத்தனள்.

48. ஒருமுறை சாக்ஷுசமனுவைக் கண்ணில் பிறப்பித்தனர்.

49. சிவேதலோகித கற்பத்தில் சிவமூர்த்தியைத் தியானிக்கச் சத்தியோசாத மூர்த்தியாகத் தரிசனந்தந்து அநுக்கிரகித்தனர்.

50 இரத்த கற்பத்தில் சிவமூர்த்தியைத் தியானித்து அவர் தரிசனந் தந்து நான்கு இருடிகளை உதவப்பெற்றவர்.

51. நீலகற்பத்தில் சிவத்தியானஞ்செய்யச் சிவமூர்த்தி அகோரமூர்த்தியாயெழுந்தருளி அநுக்கிரகிக்கப் பெற்றவர்.

52. ஒருகற்பத்தில் விஷ்ணுமூர்த்தியின் வயிற்றின்வழி அறியாதிருக்கையில் ஒரு காற்றுவந்து தம்மையசைக்க அது சிவமூர்த்தியின் சுவாசமென்று விஷ்ணுமூர்த்தியாலறிந்து சந்தேகந் தீர்ந்தவர்.

53. ஒருகற்பத்தில் உலகசிருட்டி செய்யத் தொடங்கி முடியாது அழ அக்கண்ணீரினிடம் அநேகம் சர்ப்பங்கள் பிறந்தன. பின் நான் செய்தவத்திற்கு இதுவோ பயனென்று உயிர்நீங்க அவ்வுயிர் பதினொரு கூருய் ஏகாதசருத்திரர் ஆயிற்று.

54. தாருகவனத்து இருடிகளைச் சிவபூசை செய்யக் கற்பித்து அவர்கள் கலக்கம் போக்கியவர்.

55. ஒரு கற்பத்தில் இவர் விஷ்ணுவை நெற்றியின் வழி புத்திரராகப் பெற்றவர்.

56. ஒரு கற்டத்தில் சிவமூர்த்தியால் அழிந்து சத்தியிடந்தோன்றிச் சிருஷ்டி செய்தவர்.

57. ஒருகற்பத்தில் சிவ மூர்த்தியை யெண்ணிச் சிருஷ்டித்தொழில் வேண்டச் சிவமூர்த்தி நீலலோகிதராய்த் தோன்றி அஷ்டமூர்த்தங் காட்டினர். பிரமன் அதனைக் கண்டு சிருஷ்டித்தனன். அச்சிருஷ்டி பதினாயிரம் வருடத்தின் பின்னழிந்தது. அதனைக்கண்டு அழுதனன். அழுதநீரிடைப் பூதங்கள் தோன்றின. அவற்றைக் கண்டு பிரமன் மாய்ந்தனன். அவன் உயிர் சத்தியையடைய அச்சத்தி அநேக சத்திகளைப் படைத்தனள். பின் பிரமதேவர் சிவமூர்த்தியிடம் அநேக ருத்திருடன் பிறந்தனர்.

58. ஒரு கற்பத்தில் அக்னி மறைய பிரமன் அக்கினி யுருத்தாங்கித் தம்மிடத்தில் திவ்யம் பௌதிகம், பாத்தியம் என்னும் மூன்ற அக்னிகளைப் படைத்துத் திவ்யத்தைச் சூரியனிடமும், பௌதிகத்தினை ஆண்மக்களின் தேகத்திடத்தும், பாத்தியத்தை உலகத்தினும் மனைகளிடத்தும் கொடுத்தனன்.

59. திரிபுரதகனகாலத்துச் சாரதியாயிருக்க வரம்வேண்டியவர்.

60. ஒரு கற்பத்தில் சிவமூர்த்தியின் திருமுகத்திலுதித்தவர்.

61. கிருஷ்ணவதாரத்தில் ஆயச் சிறுவரையும் கன்றுகளையும் மறைத்து ஒருவருஷத்திற்குப் பின் வெளிப்படுத்திக் கண்ணனை வணங்கினவர்.

62. மரீசபுத்திரர் அறுவரும் தாம் தம் குமரியாகிய சரஸ்வதியை மணந்தது பற்றிச் சிரித்ததால் அசுரராகச் சபித்தவர்.

63. மிருத்யு தேவதையையாக்கிப் பிராணிகளைச் சங்கரிக்கச் செய்தவர்.

64. இராமமூர்த்திக்கு இராவணயுத்த முடிந்தபிறகு (கச) வருட முடிவு கூறி அயோத்திக்குப் போகச் செய்தவர்.

65. திலோத்தமையைப் படைத்து அவள் அழகைக்கண்டு விரும்பியபோது அவள் நான்கு திக்கிலும் ஒடினள். அத்திக்குகளில் ஒவ்வொரு முகங்கொண்டு பார்த்தனர். அதனால் நான்முகன் ஆனவர்.

66. இவருடன் முனிவர் வாதிட்ட காலையில் உரோமத்தில் உரோமாஞ்சரைச் சிருஷ்டித்து அவருடன் வாதிற்கு விட்டவர். (திருஆமாத்தூர்ப் புராணம்.)

67. (க) ஜன்மத்தில் மானஸர் எனப்படுவர், (உ) ஜன்மத்தில் சாக்ஷூசம் எனப்படுவர், (ந) ஜன்மத்தில் வாசிகம் எனப்படுவர், (ச) ஜன்மத்தில் சுரோத்ரஜம் எனப்படுவர், (ரு) ஜன்மத்தில் நத்யம் எனப்படுவர், (சு) ஜன்மத்தில் அண்டஜம் எனப்படுவர், (எ) ஜன்மத்தில் பத்மஜம் எனப்படுவர்.

68. இவர், கௌரிதேவியின் திருமணங் காணச்சென்று அவரது அழகைக்கண்டு பொருது காமமேலீட்டால் துன்புற்றனர். அந்தக் காலையிலிவரிடம் வாலகில்லிய இருடிகள் தோன்றினர். (பிரம - புராணம்.)

**பிரமன்யு** — வீரவிரதனுக்குப் பொசையிடம் உதித்த குமரன்.

**பிரமஹத்தி** — இது பிரமஞான முள்ளவனை யடையும் பேய். இது ரௌத்ராகாரமும், மகாகோரமும், பயத்தைச் செய்வதும், தெற்றிபற்களுடையதும், கறுத்துச் சிவந்த வுருவுள்ளதும், பறட்டைத்தலை யுடையதுமாய் கொன்றவனை வருத்துவது. இது இந்திரன் முதலானவரை வருத்தியது. புராணங்களிற் காண்க. (பார-சாந்.) இது பெண்ணுருவானது. இந்தப் பிரமகத்தியை அக்கினி, ஜலம், பெண்கள், மரங்களுக்கு இருப்பிடமாக்கினர்.

**பிரமஹத்திஸ்வரூபம்** — கருநிறம், நீண்ட கேசம், தீப்பொறிசிதறுங் கண்கள், கோரதந்தங்கள் பொருந்திய வாயும், பயங்காமுள்ள முகம் பெற்றதாயு முள்ளது.

**பிரமாணம்** — 1. நியாயசபையில் வாதி பிரதிவாதிகள் செய்யும் பிரமாணங்கள் ஐந்துவகை. அவை, துலாபிரமாணம், அக்னிப் பிரமாணம், ஜலப் பிரமாணம், விஷப் பிரமாணம், தேவதாஸ்நானோதகம், என்பன. இவற்றைத் தனித்தனி காண்க. (யாஞ்ஞவல்க்யம்)

2. உண்மை யநுபவ ஞானத்திற்குக் காணம்.

3. ஆறுவகை. அவை பிரத்யக்ஷம், அநுமானம், ஆகமம், அபாவம், அருத்தாபத்தி என்பன. (தரு.)

**பிரமாண்டதானம்** — பொன்னினால் அண்டம் ஒன்று செய்வித்து அஷ்டகெசங்களின் உருவு அமைந்த யானைகளால் தாங்குவித்துப் பிரமதேவரைப்போல் உருச் செய்வித்து நடுவில் எழுந்தருளுவித்து விதிப்படி பூசித்து வேதியர்க்குத் தானஞ் செய்விப்பதாம்.

**பிரமாண்டபுராணம்** — இது (கஉ,000) கிரந்தமுள்ளது. இது அண்டத்தின் அளவு இனிவரும் கற்பங்கள் தோறும் நிகழும் கதை முதலியவற்றைத் தெரிவிக்கும்.

**பிரமாதா**—காண்பான், பிரமேயம்-விஷயம், பிரமை - யதார்த்தஞானம், இந்திரியார்த்த சையோகாதியே பிரமைக்குக் கரணமாதலின் அதுவே பிரமாணம். (பிரமாகரணம்)

**பிரமிட்டன்** — இருடி, அகத்தியர் மாணாக்கருள் ஒருவன். கோபிதாரத்துவசனைச் சபித்தவன்.

**பிரமுகன்** — இரேவதிக்குத் தந்தை. இரைவதனைக் காண்க.

**பிரமேகரோகம்** — சதாபெண்போகம், பட்டினி, காரம், உப்பு, துவர்ப்புக்களை அதிகமாகப் புசித்தல் மனக்கிலேசம் இச்செயல்களாற் பிறந்து முதுகெலும்பு, நாபி, குய்யம், மூலாதாரம் இவைகளை யடைந்து மிகுந்த நோவுடன் அடிவயிற்றில் வேதனை தருவது. இது (உக) வகைப்படும். அவை, வாதம், பித்தம், சிலேஷ்மம், தொந்தம், வாதபித்தம், பித்தசிலேஷ்ம பிரமேகங்களெனவும், கட்டிப்பிரமேகம், சலப்பிரமேகம், தந்திப்பிரமேகம், ரத்தப்பிரமேகம், சீழ்ப்பிரமேகம், ஒழுக்குப்பிரமேகம், அரித்ராப்பிரமேகம், மூத்திரக்கிரிச்சரப்பிரமேகம், கரப்பான்பிரமேகம், கல்லுப்பிரமேகம், தந்துப்பிரமேகம், நீச்சுப்பிரமேகம், மலினப்பிரமேகம், மதுப்பிரமேகம், இரணப்பிரமேகம் என்பன. (ஜீவ.)

**பிரமேந்திரன்** — ஒரு தவசி; தீர்த்தயாத்திரைசென்று புண்ணியதீர்த்தமாடிச் சுத்தமடைந்து முத்தியடைந்தவன்.

**பிரமேயசாரம்** — அருளாளப் பெருமாள் அருளிச்செய்த விசிட்டாத்வைத நூல்.

**பிரமோத்தரகாண்டம்** — இது விபூதி, ருத்ராக்ஷம், பஞ்சாக்ஷரம், சோமவாரம், பிரதோஷம், முதலியவற்றின் மகிமைகளைக் கூறும்நூல். இதைத் தமிழில் வரதுங்கராமபாண்டியர் மொழிபெயர்த்தனர்.

**பிரம்பூர் ஆனந்தரங்கப்பிள்ளை**—இவரைப் புதுவை ஆனந்தரங்கப்பிள்ளை யென்பதுமுண்டு. இவர் பல புலவர்களை ஆதரித்து அவர்களிடம் பாமாலைகொண்டவர். இவர் மீது "பாரார் சொல்லாரார் புறவைக்குலங் கடம்மில், சீராருங்கின்னை முதற்செப்பலாவ்—ஒரா, இரம்பை யானந்தரங்கனின் பங்களன்பன், பிரம்பை யானந்தரங்கன் பேர்" எ-ம், "பானுவிரணம் பார்க்கும் பங்கேருகமிலவு, தானும் வரப்பார்க்குஞ் சகோரங்கள் — வானமரும், மையைப் பார்க்கும் மயில்கண் மாவிசயானந்தரங்கன், கையைப் பார்க்கும்புலவோர்கண்" என்பவற்றாலறிக.

**பிரம்மகூர்ச்சம்** — 1. பகலும் இரவும் பட்டினி யிருந்து காலையில் பஞ்சகவ்வியம் சாப்பிடுவது. (பார-அஸ்வ.)

2. இது (50) தர்ப்பையால் கற்றையாகச் சேர்க்கப்பட்டகற்றைவைதிககார்யக்கருவி. இது பிராணிகளின் தேகத்திலுள்ள தோல், எலும்புகளில் பொருந்தியுள்ள பாவங்களைப் போக்கும். (பாராசரம் லிகிதஸ்மருதி).

**பிரம்மகன்னிடாளன்** — பிராம்மணப் பெண்ணிடத்தில் சூத்ரனுக்குப் பிறந்தவன். (மநு.)

**பிரம்மசம்பு**—சைவபத்ததி அருளிச்செய்த சிவாசாரியருள் ஒருவர்.

**பிரம்மசிரச்சேதமூர்த்தி**—பிரமன் தலையைக் கிள்ளிக் கர்வம்போக்கிய சிவன்திருவுரு.

**பிரம்மலோகம்**—20 - 1. பிரம்மகாயிகலோகம், 2. பிரம்மபுரோகிதலோகம், 3. மஹாப்பிரம்மலோகம், 4. பரீத்தாபலோகம், 5. அப்பிரமாணபலோகம், 6. ஆபாஸ்வரலோகம், 7. பரீத்தசுபலோகம், 8. அப்பிரமாணசுபலோகம், 9. சுபகிருஸ்நலோகம், 10. பிரகத்பலலோகம், 11. அஸம் ஞயாயத்துவலோகம், 12 அப்பிரகலோகம், 13 அதபலோகம், 14. சுதர்சலோகம், 15. சுதர்சிலோகம், 16. அகநிஷ்டலோகம், 17. ஆகாசானந்தியாயதனலோகம், 18. விஞ்ஞானந்தியாயதனலோகம், 19. அகிஞ்சநயாயதனலோகம், 20. நைவஸம்ஜ்ஞாயதனலோகம் என்பன. (பௌத்தநூல்.)

**பிரம்மவேதி** — ஒரு தீர்த்தம், இதில் பாண்டவர் ஸ்நானஞ்செய்து பாவம் போக்கிக்கொண்டனர். இதில் ஸ்நானஞ்செய்தவர் தெய்வபிரப்பை அடைவர்.

**பிரம்மாணி** — சத்தமாதாக்களில் ஒருத்தி. (ச) முகம், (ச) புஜம், அன்னவாகனம், ஜபமாலை, கமண்டலம், அபயம், வரதம் முதலிய உடையவள்.

**பிரம்மாவர்த்ததேசம்** — சரஸ்வதி திருஷத்வதி என்னும் தேவநதிகளுடைய மத்ய பிரதேசமானது. தேவர்களால் ஏற்படுத்தப்பட்ட பிரம்மாவர்த்தகதேசம் என்று சொல்லப்படும்.

**பிரம்லோசை** — (1) சகுந்தலையின் தோழி.

2. கருஷன் தேவி.

**பிரயாகன்** — இந்திரன்.

**பிரயாகை** — காசியில் உள்ள நதி; இதில் தீர்த்தமாடினேர் முத்தியடைவர். இத னிடம் கோதானஞ் செய்தவர் அதின் உரோம அளவுகாலம் சுவர்க்கம் அனுப வித்துப் பின் முத்தியடைவர்.

**பிரயாணத்தில் செய்வன** — ஓரிடம் போகை யில் இரண்டு தேவர்களின் நடுவிலும், பல பார்ப்பார் நடுவிலும் செல்லுதல் கூடாது. (ஆசாரக்கோவை.)

**பிரயோகவிவேகம்** — மூலமும் உரையுஞ் செய்தவர் சுப்பிரமணிய தீட்சதர். இது வடமொழியிலக்கண அமைதிகளை விளங் கக் காட்டுவது. இது தமிழிற்கும் ஆரியத் திற்கும் உள்ள இலக்கண ஒற்றுமையை யும் தெரிவிக்கும்.

**பிரயோகன்** — ஒரு அரசன்.

**பிரயோஜனவதி லக்ஷணை** — கங்கையிலி டைச்சேரியெனின் கங்கையெனும் பதத் திற்குக் கரையில் பிரயோஜன முண்மை.

**பிருசன்** — அமிர்த்தத்தை காத்துக்கொண் டிருந்த தேவன். (பா - ஆதி.)

**பிரலம்பன்** — ஒரு அசுரன். இவன் கம்ச னுக்கு உதவியாயிருந்து கோபாலகிருஷ் ணனை வஞ்சிக்க ஒரு கோபாலவேடங் கொண்டு இராமகிருஷ்ணருடன் வந்து விளையாடினன். இவ்விளையாட்டில் தோற் றவர் வென்றவரை முதுகிற் சுமந்து பசுக் களைச் சுற்றிவருவது என்னும் சங்கேதப் படி பலராமரை முதுகிற் சுமந்து அளவு கடந்து போயினன். பலராமர் இவனை அசுரன் என்று அறிந்து காலால் உந்திக் குட்டிக் கொலைபுரிந்தனர்.

**பிரலாவதி** — கலாவதியைக் காண்க.

**பிரவரநந்தி** — பூதநந்தனுடன் பிறந்தவன். கலிங்கலை நாட்டரசன்.

**பிரவான்** — ஒரு வேதியன்; கிருஷ்ண மூர்த்தி பாரிசாத அபகரணஞ் செய்கை யில் இந்திரனுடன் இருந்தவன். இவன் சாத்தகியுடன் யுத்தஞ்செய்தவன்.

**பிரவர்ஷணம்** — ஒருமலை; இதில் பலராம கிருஷ்ணர் தமக்குப் பயந்து ஒளித்துக் கொண்டனர் என்று சராசந்தன் இதைக் கொளுத்தினன்.

**பிரவாகனர்**—சீவலன் புத்ரர், சுவேதகேது வை வேதாந்த சாஸ்திரத்தில் மூடனுக் கியவர்.

**பிரவாஹேஸ்வரவாதிமதம்** — பதி ஒருவன் உண்டு; ஆன்மாக்கள் அனேகர்; மாயை, கன்மம், அனாதி. ஈச்வர அதிகாரத்தை முத்தன் ஒருவன்வந்து அடைவன் என் பன். பிதா குடும்ப பாரத்தைக் குமா ரனிடம் வைத்துத் தான் பாரமற்று இருப் பதுபோல், சிவன் தனது பஞ்சகிருத்தி யத்தை முத்தாத்மாவிடம் வைத்துக் குடும்ப பாரம் அற்று இருப்பன். இந்த முத்தனும் தனக்குப்பின் வருபவனிடம் தன் தொழிலைவைத்துத் தான் பாரமற்று இருப்பன் என்பன். பாரமற்றவன் ஞெப் திமாத்திரமாய் இருப்பதே மோக்ஷமென் பன். இவ்வகைப் பரம்பரையாக வருத லால் பிரவாஹேஸ்வரவாதி யெனப் பெயர் வந்தது.

**பிரவீரநீலன்** — விந்திய தேசாதிபதி.

**பிரவீர பாண்டியன்** — மதுரை யாண்ட (34) வது பாண்டியன்.

**பிரவீரன்** —(1) (சங்.) பிரசந்நுவான் குமான்; இவன் குமரன் மனசுயுவு.

2. வத்சந்திரன் குமரன்.

**பிரளயசித்** — திருக்காஞ்சிக்கு ஒரு பெயர். பிரமகற்பத்து இறுதியில் வந்த வெள்ளம். இதனை முழுகச்செய்யாமல் சத்தியால் காக் கப்பட்டது ஆதலின் இப்பெயர் பெற்றது என்பர்.

**பிரளயம்** — இது உலக ஒடுக்கம்; இது நித் யம், நைமித்திகம், பிராக்கிருதம், ஆத்யந் திகம் எனப்படும். இதில் நித்யம் - நாள் தோறும் ஆத்மாக்கள் சிரமபரிகாரத்தின் பொருட்டுக் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட சுழுத்தி முதலிய அவத்தை. நைமித்தி கம்:— பிரமதேவனுக்கு ஒருநாள் முடிந்த இராத்திரி காலத்தில் உண்டாகும் உலக ஒடுக்கம். பிராக்ருதம் - பிரமனுக்கு விதித்த ஆயுட்காலத்தின் முடிவில் உண்டாம் பிர ளய ஒடுக்கம். ஆத்யந்திகம் - பிரமாதி தேவர்களையும் மற்ற சராசரங்களையும் அழிக்க எழுந்த சர்வசம்மாரம். மனுஷ்ய மானத்தால் சதுர்யுகம் ஆயிரம்முறை திரும் பின் பிரமனுக்கு ஒரு பகல், அவ்வாறே இரவுமாகும். அத்திவாராத்ரம் கூடியது ஒரு நாள். அந்தநாளின் தொடக்கத்தில் சிருட்டி; அத்தினம் முடிவில் சங்காரம். இது தினப்பிரளயம்; அந்தத்தினம் (௩௬௦) ஆயின் பிரமனுக்கு ஒரு வருடம். அந்த வருடம் பரார்த்தசங்கியை ஆனபிறகு பிர கிருதிவரையில் சங்காரம். மீண்டும் அந் தப் பரார்த்தகாலம் ஆனபின்பு பிரகிருதியி லிருந்து குணதத்துவங்கள் சிருட்டிக் கப்படும். இவ்வகை சிருட்டி சங்கார

காலத்தின் அளவு த்விபரார்த்தமாகும். இந்தப் பிரகிருதிவரையில் சம்மாரமே, அவாந்தர சம்மாரமாம். இந்தத் திவிபரார்த்தகாலமும் பரார்த்தமான பின்பு மாயாதத்வத்திலும், மகா மாயையிலும் தத்வசம்மாரம் செய்யப்படும். அதுதான் மகாசம்மாரம் எனப்படும். பரார்த்தம் ஒன்று முதல் பத்துக் கொண்டது. பத்துக் கொண்டதாக ஏற்பட்ட ஸ்தானங்களில் இருபதாவது ஸ்தானம் பரார்த்த சங்கியை.

**பிரளயாகலர்** — இவர்கள், ஆணவம் கன்மம் எனுமிரண்டு மலமுள்ள ஆன்மாக்கள் பிரளயத்தில் மாயதத்துவத்திற் கட்டுண்டிருத்தலால் இப்பெயர் பெற்றவர். இவர்களுக்குத் தனுகரண புவன போகங்கள் அசுத்தமாயை. இவர்களில் பக்குவரை முதல்வன், சகளத்திருமேனியாகிய மான் மழுசதுர்ப்புய, காளகண்ட திருநேத்ரதாரியாயருட் டிருமேனிகொண் டெழுந்தருளி முன்னிலையாக நின்று தரிசனந்தந்து மலத்தைப்போக்கி அநுக்கிரகிப்பன்.

**பிரஜாபத்தியம் முதலிய கிருச்சிர சுவரூபங்கள்** — 1. இவ்விரதம் அநுட்டிக்கிற துவசன், மூன்றுநாள் பகலில் ஒவ்வொரு வேளை உப்பில்லாத அன்னத்தில் இருபத்தாறு கவளமும், மறுமூன்றுநாள் அப்படியே இரவில் முப்பத்திரண்டு கவளமும், மறு மூன்றுநாள் தான் யாசிக்காமல் இருக்கும்போது யாராவது வலிவில் கொடுத்த அன்னத்தில் இருபத்துநான்கு கவளமும், புசித்து, மறுமூன்றுநாள் சுத்த உபவாசம் இருக்கவேண்டியது.

2. சாந்தபனக் கிருச்சிரமாவது - பஞ்ச கவ்வியத்தை மாத்திரம் ஒருநாள் உண்டு மறுநாள் சுத்த உபவாசமிருப்பது.

3. மகா சாந்தபனமாவது - பஞ்சகவ்வியமாகிய ஐந்தில் ஒவ்வொன்றைத் தனித்தனி ஒவ்வொருநாள் உண்டு ஏழாம்நாள் சுத்த உபவாசம் இருப்பது.

4. அதிகிருச்சிரமாவது - மூன்று நாள் பகலில் ஒவ்வொரு கவளமும், மறுமூன்று நாள் இரவில் ஒவ்வொரு கவளமும், மறு மூன்றுநாள் யாசிக்காமல் வந்த அன்னத்தில் ஒரு கவளமும் உண்டு, பின் மூன்று நாள் சுத்த உபவாசம் இருப்பது.

5. தப்தகிருச்சிரமாவது - மூன்று நாள் ஒவ்வொருவேளை ஆறு பலமுள்ள உஷ்ணோதகத்தையும், மறு மூன்றுநாள் ஒவ்வொருவேளை மூன்று பலமுள்ள சுடுகையான பாலையும், பின் மூன்றுநாள் ஒரு பலம் உள்ள உஷ்ணமான நெய்யையும், பின் மூன்று நாள் உஷ்ணமாக வீசுகிற காற்றையும், உண்டு ஒரிடத்தில் வசித்திருப்பது. இந்தப் பன்னிரண்டு நாளும் ஒரேகாலம் ஸ்நாநம் செய்யவேண்டும்.

6. பராக கிருச்சிரமாவது - இந்திரியங்களை அடக்கிக்கொண்டு சாக்கிரதையுடன் பன்னிரண்டு நாள் சுத்த உபவாசம் இருப்பது.

7. பிபீலிகாசாந்திராயனம் என்பது - பகலில் மூன்று காலத்திலும் ஸ்நானம் செய்து, பௌர்ணமாவாசியில் உப்பில்லாத பதினைந்து கவளம் அன்னம் புசித்து மறு நாளாகிய கிருஷ்ணபக்ஷ பிரதமை முதல் அந்தப் பதினைந்து கவளத்தில் ஒவ்வொரு கவளமாகக் குறைத்து வந்து அமாவாசியில் சுத்த உபவாசம் இருந்து மறுநாள் துவக்கி ஒவ்வொரு கவளம் வளர்த்துக்கொண்டு வந்து, மறுபடி பௌர்ணமியில் பதினைந்து கவளம் புசிப்பது. எறும்பு போல் முன்னும் பின்னும் வளர்ந்து நடுக் குறைதலால் இப் பெயர் தந்தனர்.

8. யவசாந்திராயன மாவது - மேற்கூறிய நியமத்துடன் சுக்கிலபக்ஷ பிரதமைமுதல் ஒவ்வொரு கவளமாக வளர்த்து வந்து பௌர்ணமாவாசியில் பதினைந்து கவளம் உண்டு, பின் கிருஷ்ணபக்ஷ பிரதமை முதல் ஒவ்வொன்றாகக் குறைத்து வந்து அமாவாசியில் உபவாசம் இருப்பது.

9 யதிசாந்திராயனமாவது - கிருஷ்ணபக்ஷம் அல்லது சுக்கிலபக்ஷத்தின் பிரதமைகளில் துவக்கி முப்பது நாள் வரையில் நாடோறும் எவ்வெட்டுக் கவள அன்னத்தை உப்பில்லாமல் உண்டு இருப்பது.

10 சிசு சாந்திராயனமாவது - மேற்கூறிய நியமத்துடன் முப்பது நாள் வரையில் நான்கு கவளமும், சூரியன் அஸ்தமித்தவுடன் நான்கு கவளமும் சாப்பிட்டிருப்பது.

**பிரஷதசுவன்** — விருபன் குமரன்.

**பிரஷன்** — சோமகன் குமரன்; இவன் குமரன் துருபதன்.

**பிரஷ்டாநகரம்** — புரூரவன் ஆண்ட பட்டணம்.

**பிரஹுதி** — தேவவோத்திரர் பாரி.

**பிரஹுரான்** — நாகன்; கத்ரு குமரன்.

**பிராகபாவம்** — இது உற்பத்திக்கு முன் காரணங்களில் காரியமின்மை. இது நால்

களில் ஆடையில்லையென்றாற் போல்வது. இது முன்னின்மை.

**பிராக்கிருதம்**—1. இது பிரளயத்தில் ஒன்று. இது பிரமனுக்கு இட்ட ஆயுளின் இறுதியில் உண்டாவது. அது இரண்டு பரார்த்தங் கழியின் உண்டாவது.

2. ஒரு பாஷை. இது அபப்பிரம்சம், பைசாசி, சூசிகா பைசாசி, சௌரசேநி, மாகதி, பிராக்கிருதம், என அறுவகைப்படும். இதற்கு வாருசி, வால்மீகி முதலியோர் இலக்கணஞ் செய்திருக்கின்றனர். இப் பாஷைகளுள் பைசாசி, சூசிகாபைசாசி, பிசாசசாதியர் வழக்கு எனவும், பிராக்கிரதம் பெண்கள் ஆசியக்காரர் வழக்கெனவும், மாகதி இழிந்தோர் வழக்கெனவும், அபப்பிரஞ்சம் துருக்கர் முதலிய அதமர் பேசுவதெனவும், சூரசேநி சண்டாளர் வழங்குவதெனவும் கூறுவர்.

**பிராக்சோதிடம்** — நரகாசுரன் பட்டணம்.

**பிராக்ஜோதிஷம்** — நாகராஜனுகிய பகதத்தன் பட்டணம் Kamrup or Kamakshya in Assam. (பா. சபா.)

**பிராக்ஞன்** — 1. ருசிராச்ரவன் குமரன். (பிராஞ்ஞன்.)

2. கவியின் சகோதரர். பாரி சந்நதி. குமரர், யஞ்ஞன், விக்யன்.

**பிராஞயன்** — சுழுத்தியுடன் கூடிய ஆத்மா.

**பிராங்கிசு** — (சு.) வச்சப் பிரீதி குமரன்.

**பிராசனச்சந்தி**—நாடக விகற்பத்தொன்று. இது சுத்தமும், சங்கீரணமும் என இரண்டாம். சுத்தமாவது, தக்காரை இகழ்ந்து வருவது சங்கீரணமாவது - பாஷண்டன் தலைமகனைத் தோழியரே, கணிகையரே, தூதரே, அலிகளே, பேடியரே யென்றி வரையுடைத்தாய்க் கடைக்கட் சந்தியின்றி யங்கமொன்றுவது. (வீரா - சோ.)

**பிராசாபதிகள் எழுவர்** — மரீசி, அத்திரி, அங்கிரஸ், புலஸ்தியர், புலகர், கிரது, வசிட்டர். (பார - சாந்.)

**பிராசின்னவாணன்**—ஜனமேசயன் குமரன்.

**பிராசீநபரிகி** — அவிர்த்தானனுக்கு அவிர்த்தானியிடம் பிறந்த குமரன். இவன் அநேக யஞ்ஞங்களைச்செய்து அந்த யக்ஞ சாலையில் கிழக்கு நுனியாக இரண்டங்குலம் தருப்பை பரப்பியபடியால் இப்பெயர் அடைந்தனன் என்பர் இவன் தேவி சமுத்துருசு; இவளுக்குப் பத்துக் குமாரர். அவர்கள் பிரசேதசுக்கள் எனப்படுவார். இவனுக்கு நாரதர் புரஞ்சயன்கதை உபதேசித்துத் துறவில் இச்சை வருவித்தனர். இவன் தக்ஷன் காலத்தவன். (பாகவதம்.)

**பிராசீநர்** — ஒரு இருடி; தேவி சரவணி.

**பிராசீநன்** — ஜநமேசயன் குமரன்.

**பிராசீயினுவீதம்** — வேதியர் பூணூலையாவது உத்தரீயத்தையாவது வலது தோளிலும் இடது கையின் கீழிலும் தரிப்பது. (மநு-அத்.)

**பிராசீனகர்ப்பர்**— அபாந்தரதமரைக்காண்க.

**பிராசேதமுனிவர்** — (வான்மீகி) வருணனுக்குப் பத்தாங் குமரர். சிதையின் கற்பினிலையை அச்வமேதத்துச் சகலரும் அறிய இராமருக்கு எடுத்துரைத்தவர்.

**பிராச்சியர்** — இரண்ய நாபன் மாணக்கர்.

**பிராச்சின்னசாலன்** — உபமன்யு புத்ரன்.

**பிராட்டியார்** — மஞ்சள் நிறம், சூலம், கண்ணாடியையுடைய இரண்டு கைகள் கரண்டகம் போன்ற மகுடம் முத்து முதலிய ஆபரணங்கள் உடையராயிருப்பர்.

**பிராட்விவாகன்**—இது நீதிபதிக்குப் பெயர். இவன் வழக்குகளை வினவுதல்பற்றி பிராட் எனவும், வழக்குகளை நியாயமன்றத்தவருடன் கூடி விசாரித்து விசேடமாக எடுத்துரைத்தலால் விவாகன் எனவும் பெயர் (சுக் - நீ.)

**பிராணன்** — 1. விதாதாவின் புத்திரன். பிருகுவின் பேரன். தாய்நியதி. வேதசிரன் தந்தை.

2. தருமனுக்கு வசுவிடம் உதித்தவன்; பாரி, உற்சவதி.

3. சோமனென்னும் வசுவின் குமரன்.

4. இஃது இருதய முதலிய தானங்களில் இருப்பதும், ஐவகைத் தொழிலை உடைத்தாகியதோர் காற்றின் விசேஷமுமாம். இப்பிராணத்தின் வடிவு முதலில் பிரஜாபதி ஒருவனே தன்னைத்தானே எண்ணிக்கொண் டிருந்தான். அவன் களிக்கவில்லை. அதனால் அநேக உயிர்களைப் படைத்தான். அவ்வுயிர்கள் சக்தியில்லாமலும், எழுந்திருக்காமலும் கல்லைப்போல் கிடக்கக் கண்டான். அதனாற் களிப்புண்டாகவில்லை. இவற்றை உயிர்ப்பிக்கும்படி இவற்றுள் நானே புகுவேன் என்று நிந்தித்தான். அவன் தன்னை வாயுரூபமாகச் செய்து உட்புகுந்தான். அவன் ஒருவனால் முற்றும் வல்லவனாகாதவனானான். பின் ஐவகையாகத் தன்னைப பிரித்துப் பிராணன், அபானன், சமானன், உதானன், வியானன் என்று கூறப்பட்டான்.

**பிராதபன்** — ஜயதிரதன் உடன் பிறந்தவன்.

**பிராதஹ** — பிரபாவின் குமரன்.

**பிராதிகாமி** — துரியோதனன் சாரதி; நீதிமான்.

**பிராதை** — தக்ஷன் பெண்.

**பிராப்தி** — அஷ்டசித்திகளுள் ஒன்று. நினைத்த இடஞ்சென்று மீள்வது.

**பிராப்திசமை** — பிராப்தியினுல் எதிர்த்து நிற்பது. (அடைவு.)

**பிராப்தை** — சராசந்தன் குமரி; கம்சன் தேவி.

**பிராமணமுனி** — உரோமபதநாட்டை மழையிலாது நீங்கச்சபித்த இருடி.

**பிராமணர்** — இவர்களில் ஆதிசைவர், வைஷ்ணவர், ஸ்மார்த்தர், மார்த்தவர், ஆராத்யர் எனப் பலவித வகுப்புண்டு. இவர்கள் பிறப்பினை ஆராயுமிடத்துப்பிரமனது முகங்களிற்றோன்றிய இருடிகளின் சந்ததியாரெனப் பலபுராணங்கள் கூறும். பின்னும் சில இருடிகள் சதாசிவமூர்த்தியின் ஐந்து திருமுகங்களில் உற்பவித்தவரெனவும் அவர்களின் சந்ததியார் ஆதிசைவர் எனவுங் கூறும். இவ்வேதியர்க்குத் தொழில் புறந்தூய்மை அகந்தூய்மையுடையராய் ஸ்மிருதியாதிகளில் சொன்ன விதிகடவாது ஓதல் ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் முதலிய அறுவகைத் தொழில் செய்து தெய்வம் வழிபடலாம். இவர்களில் ஆதிசைவர்,முதலில் சிவசிருட்டியிற் றோன்றிய காசியபர் கௌசிகர் முதலிய இருடிகளின் கோத்திரத்திற் றோன்றியவர்களாய்க் கோதாவிரி தீரத்திலிருந்த இந்திரகாளி என்னும் பட்டணத்திலிருந்து முதலில் இராஜேந்திர சோழனுல் அழைத்துவரப்பட்டுக் காஞ்சிமண்டலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட சைவவேதியராகிய சிவாசாரியர்கள். இவர்களும் ஸகோத்திரத்திற் கொள்ளார்; கொடார். மற்றவர் தமிழ்நாடு முதலிய பலநாட்டவர். அவர்களில் வைஷ்ணவர் இருவகைப் படுவர். அவர்கள் வற்சவாதூல, கௌண்டன்ய, பாரத்வாஜ, காசயபர், சடமர்ஷணர், ஆத்ரேய, கௌசிக கோத்திரத்தவரே. இவர்களில் தென்னுசிரிய சம்பிரதாயத்தவர், அஷ்டகோத்ரத்தார், சப்தகோத்ரத்தார், பஞ்சகோத்திரத்தார் எனப் பிரிவுபட்டு அவர்களுள் ஒருவருக்கொருவர் கொடுப்பது கொள்வதேயன்றி முறைதவருர். வடகலையார் முனித்திரயம், மடம் என இருவகைப் பட்டுத் தென்கலையாரின் ஆசாரபேதத்தால் வேறுபடுவர். மற்றவர் ஸ்மார்த்தர், இவர்களில் தமிழ்நாட்டு வேதியர் சோழ தேசத்து வடமர், வடதேசத்து வடமர், வாத்திமார், அஷ்டசகஸ்திரத்தார், பிரஹச்சரணத்தார், காணியாளர், முக்காணியார், சோழியர், வீழியர், கேசியர், குருக்கள், ஆழியாளர் போற்றிமார், சுக்கிலயசூர் அல்லது, மாத்தியாயன சண்டாளர், மூவாயிரவர், சேரநாட்டார், பட்டர்மார்,தில்லை மூவாயிரத்தார், தன்னுயிரத்தார் வேதசாகையார், சரணத்தார், மாத்யமான், நம்பூரியர் இரண்யகேசி சூத்ரதித்தார், பிரதமசாகையார், புதுவூர்திராவிடர், செவ்வையார், திருவாரூர் திராவிடர், ஜவுளிக்கடை வடமர், டமருவடமர் எனப் பலவகைப் படுவர். வடநாட்டு வேதியர் காணகம்முலு, முருகிநாடு, வெலநாடு, வேகிநாடு, நியோகியர், தெலுங்காணியர், மகராஷ்டிரர், கொங்கணத்தர், கன்னட பிராமணர், கர்நாடகர், ஆறுவேலு பிராம்மணர், அறுவதுவக்கலு பிராம்மணர் பனக்க நாட்டார், கம்மாளூரார், வங்காளவேதியர், காசிவேதியர், சுத்தவேல்நாடு, பெருபேடு நாடு, தெலகாரண்யம், காசல்நாடு, பிரதமசாகை, ஆறுவேல நியோகிகள், பிராங்நாடு, பஞ்சகவுடர்முதலியவர்களாம். இவர்களன்றிக் குசராத்திப் பிராம்மணர், கான்யகுப்ஜ பிராமணர், இந்துஸ்தானி பிராமணர், மச்சப்பிராமணர் எனப் பலவகையர். இவர் பிரமதேவர் முகத்திற் பிறந்த இருடிகளின் வம்சத்தவராய் எங்கும் இருப்பினும் இவர்களின் கோத்ர சூத்ரங்களுக்குத் தக்கவாறு ஆசாரங்களும் வேறுபடும். இவர்களுள் தென்னுட்டவர் ஆசாரத்தி லுயர்ந்தோர். ஏனை நாடுகளில் அவ்வாசாரம் குறைந்திருக்கும். அத்தென்னுட்டவர், சைவ, வைஷ்ணவ, ஸ்மார்த்த, மார்த்தவர்கள் எனப் பிரிவுபட்டு ஆசாரத்தாற் பேதப்படுவர். அவர்களில் சைவர் இவர்கள் வேதசிவாகம ஆசாரங்களைக் கைக்கொண்டு அகோரபத்ததியிலும், ஏனைய சிவாசாரியர்கள் கூறிய பத்ததியின் படியும் நடப்பவராம். இச்சைவவேதியரில் ஒரு வேறுபட்டு வீரசைவாகமதீக்ஷைபெற்ற ஆராத்தியர் என்னும் ஒரு சாரார் உளர். அவர்கள் கன்னடமுதலிய தேசத்தவர்களாய்ப் பெரும்பாலார் இருக்கின்றனர். வைணவர்களில் ஆசாரத்தால் வேறுபட்டுத் தென்கலையார் வடகலையார்

என இருதாரத்தார் உளர். ஸ்மார்த்தர்களில் சிலர் சிவதீக்ஷாவான்களாய் இருக்கின்றனர். மற்றவர்கள் ஸ்மார்த்தாசாரம் உள்ளவர்களாய் ஒழுகுகின்றனர். மார்த்தவர்கள் வைணவர்களாய் மார்த்தவ பாஷியம் அப்பியசித்து வருவர். இவர்களே யன்றி வேறு நாடுகளிலுள்ளோர் சத்திமதம், கணுதிபத்தியமதம் இவற்றை அனுசரித்து அவர்களுக்குக் கூறிய ஆசாரத்தின்படி ஒழுகுகின்றனர். கர்ப்பாதானம், பும்ஸவனம், சீமந்தம், உன்னயனம், சாதகர்மம், நாமகரணம், உபநிஷ்கிரமணம், அன்னப் பிராசனம், சௌளம், உபநயனம், மகாநாமியம், மகாவிர்தம் உபநிஷத்து, சோபனம், உத்வகனம், மிருதி என்னும் சோடசகர்மங்கள் உடனே, யசன யாசன, அத்யயன, அத்யாபன, தான, பிரதிக்கிரகம் என்னும் சட்கர்மமும், ஆகிய சகல சற்குணங்களுடனே கூடினவர் பிராமணர்.

**பிராமணுதிகளின் ஜீவனகிருத்தியம்** — பிரமசரியம் நீங்கிய வேதியன் குலவொழுக்கங்களில் உயர்ந்தமனைவியை மணந்துகொண்டு கிருகத்தாச்சிரமத்தில் வசிக்கவேண்டியது. இவன் ஆபத்தில்லாத காலத்தில் பிராணிகளுக்கு வருத்தம் இல்லாமலே எக்யம்செய்வித்தல், ஓதுவித்தல், நல்லபொருளைத் தானம்வாங்கல், அவ்வகை அல்லாதபோது கிருஷிவியாபாரம் முதலிய செய்து சீவிக்கலாம். பின்னும் ருதம், அமிருதம், மிருதம், பிரமிருதம், சத்யாநிர்தம், குசிதம், முதலியவற்றால் ஜீவிக்கலாம். சுநகவிருத்தியால் ஜீவிக்கலாகாது. இவற்றுள் ருதம் என்பது கழனியிலும் மற்ற இடங்களிலும் சிந்தின நெற்களை இரண்டு விரல்களால் பொறுக்குவதும் மேற்சொன்ன இடங்களில் கதிர் நெல்லைப்பொறுக்குவதுமாம். தான் யாசிக்காமலே வருகின்றவை அமிருதமாம். தான் யாசித்துவருகின்றவை மிர்தமாம். பயிரிடுவது பிரமிர்தமாம். வியாபாரத்தால் வந்தது சத்தியாநிர்தமாம். வட்டிவாங்குதல் குசிதம் என்பதாம். சுநகவிருத்தியாவது யசமானன் தினமாய்ப் பார்ப்பதாலும், அவனது மிரட்டுக்கு உட்படுதலாலும், ஈனவேலை செய்வதாலும் நாயின் பிழைப்புக்குச் சரியானதால் அதனை அகத்தியம் நீக்கவேண்டியது. இப்பிராமணன் தனக்கென்று தானியத்தை (௩) வருடம் அல்லது ஒரு வருடம் பதனம் செய்யவேண்டியது. பெருங்குடும்பி மேற்கூறிய ஆறுகிருத்தியங்களால் ஜீவிக்கலாம். அவனுக்குக் குறைந்தவன் வேட்பித்தல், ஓதுவித்தல், ஏற்றல் இம்மூன்றினாலும் ஜீவிக்கலாம். அவனிலும் குறைந்தான் வேட்பித்தல், ஓதுவித்தல் இரண்டினாலும் ஜீவிக்கலாம், அதினும் குறைந்தான் ஓதுவித்தலால் மாத்திரம் ஜீவிக்கலாம், ருத விருத்தியினால் ஜீவிக்கிறவன் ஏழையாதலால் அவன் அக்னி ஹோத்திரத்தில் விருப்புடையவனாய்த் தருச, பௌர்ணிமாச ஆக்ராயண இஷ்டிகளை மாத்திரம் சக்திக்குத் தக்கபடி செய்யவேண்டியது.

**பிராமணி** — புருஷர்களுக்கு நிஷ்காரணமாய்ப் பயத்தை யுண்டாக்குந் தேவதை.

**பிராமரிபீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று.

**பிராம்கு** — 1. வத்சந்திரன் குமரன்.

2. பிரஜானி தந்தை.

**பிராம்மி** — 1. சத்தமாதாக்களில் ஒருத்தி.

2. இவள் காலையில் சிவந்த ஆபரணங்கள், சிவந்த பட்டுப்புடவை, செந்நிறம், சடை, பூணுநூல், சரஸ்வதியின் திருவுருவத்தால் அம்சவாகனத்தி லுள்ளவளாய்ச் சிறுபெண்ணின் உருவமாய் நான்கு முகம் நான்கு அஸ்தங்கள் உள்ளவளாய்ச் சுருக்கு, ஜபமாலிகை வலக்கரத்திலும் தண்டகமண்டலங்கள் இடக்கரத்திலும், உள்ளவளாய்ப் பிராம்ஹி எனும்பெயருடையவளாய் எட்டு நேத்திரங்கள் உள்ளவளாய்த் தியாநிக்கப்படுவள்.

3 ருஷப தீர்த்தங்கரின் குமரி.

**பிராயாகை** — Allahabad.

**பிராயோபவேசம்** — உயிர்நீங்கும்படி தருப்பைமேல் படுத்து உணவின்றி யிருக்கும் வைராக்யம்.

**பிரார்த்தனுமூர்த்தம்**—கௌரியின் ஊடலைத் தீர்த்த சிவன் திருவுரு.

**பிரார்த்துவகன்மம்**—பண்டாரத்தில்சேர்த்து வைத்த பொருளை யெடுத்து அநுபவித்து வருதல்போல், சஞ்சிதத்தி லிருந்து, எடுக்கப்பட்ட சரீரத்தில் புசிக்கப்பட்டு வருவது. (சித்தா.)

**பிரான்சாத்தனார்** — இவர் குறிஞ்சித் திணையைப் பாடியுள்ளார். மகளிர் விளையாடாது இல்லின்கணிருத்தல் அறனுமன்று, ஆக்கமுந்தேயுமென்று அன்னையிடங் கூறுமாறு இற்செறிக்கப்பட்ட தலைவி கூறியதாக வியப்பெய்தக் கூறியுள்ளார் இவர் பாடியது (நற் கூஅ.)

**பிரிச்சந்திரன்** — மநுவின் குமரன். இவன் பசுக்காத்து வருகையில் புலி ஒன்று பசுவைக்கொல்லஅதைக்கொல்லும்படி பாணம்ஏவ அது பசுவின் மீது பட்டுப் பசுவிறக்கப் புரோகிதரால் சூத்திரனுகச் சபிக்கப்பட்டுச் சூத்திரனனவன்.

**பிரிதி** — தக்ஷனுக்குப் பிரசூதியிடம் உதித்த குமரன்.

**பிரிதிமதி** — சயசேநன் மனைவி. (சூளா.)

**பிரிதீவன்** — கீசகன் குமரன்.

**பிரிநிலைநவற்சியணி** — அஃதாவது, பெயர்ச்சொற்களுக்கு உறுப்பாற்றலான் மற்றொரு பொருளைத் தந்துரைத்தலாம். இதனை வடநூலார் நிருக்தியலங்கார மென்பர்.

**பிரிமி**—சிஞ்சுமாரன் குமரி. துருபன் பாரி.; இவள் குமரர் கல்பவற்சரன்.

**பிரியகாரணி** — (சைநி.) வர்த்தமான தீர்த்தங்காருக்குத் தாய்.

**பிரியதரிசநன்** — துருபதன் குமரன்.

**பிரியதர்சன்** — காமரூப தேசத்தரசன் பார்த்திவ பூசை செய்பவன். இவனுடன் பீமன் சண்டைக்கு வந்து இவனை அவன் சிறைவைத்த காலத்தும் பூசை விடாது செய்யச் சிவலிங்கத்திடம் சிவபெருமான் தரிசனந்தந்து வீமனைச் செயிக்கப் பெற்றவன்.

**பிரியமேதன்** — அசமீடன்வம்சத்து உதித்த வேதியன். இவன் பலபசுக்கள் தானஞ் செய்யப் பட்டதாகக் கூறப்பட் டிருக்கிறது. (இருக்கு)

**பிரியம்பதன்** — ஒரு காந்தருவன். மதங்கர் சாபத்தால் யானையாயிருந்து அதனுல் சாபம் நீங்கப்பெற்றவன்.

**பிரியம்வதை** — 1. நகுஷன் தேவி.

2. சகுந்தலையின் தோழிகளுள் ஒருத்தி.

**பிரியவிரதன்** — சுவாயம்பு மநுவிற்குச் சதரூபையிடம் பிறந்தவன். தமயன் உத்தானபாதன், பிரமநாரத உபதேசத்தால் ஞானசம்பன்னன் ஆயினவன். இவன் தேவி, பெரிஹஷ்மதி அல்லது சுகன்னி. குமரர், ஆக்கினியித்திரன், இத்மசிக்குவன், எக்கியபாகு, மகாவீரன், இரண்யரேதஸ், கிருதபிருஷ்டன், சவநன், மேதாதிதி, விதிகோத்ரன், கவி, ஒரு பெண் ஊற்சஸ்வதி. இவனுக்கு மற்றொரு பாரியிடத்தில் உத்தமன், தாபசன், ரைவதன் பிறந்தனர். இவன் பதினொருகோடி வருஷம் அரசாண்டான். இவன் எழுமுறை சூரியனுக்குப் பின் இரதத்துடன் சென்றதனுல் இவன் தேர்ச்சக்கரம் அழுந்தின காரணத்தாலுண்டாகிய பள்ளத்தினுல் சத்த சமுத்திரங்கள் உண்டாயின. அச்சமுத்திரங்களால் சத்ததீவுகள் உண்டாயின. அத்தீவுகளுக்கு அவன் தன் குமாரர்களைஅரசர்களாக்கினன். பின்னும் மற்றொருவிதம். இவன் சுகன்னியை மணக்க அவளிடம் இவனுக்குச் சம்ராட்டு, குக்ஷி என இரண்டு குமரியரும், அக்னியித்ரன், அக்னிபாகு, வபுஷ்மந்தன், தியுதிமந்தன், மேதை, மேதாதிதி, அவ்யன், சவநன், புத்ரன், சோதிஷ்மந்தன், என்னும் பத்துக் குமரரும், பிறந்தனர். இவர்களில் மேதை, புத்ரன், அக்னிபாகு, மூவரும் யோகிகளாயினர். அக்குமரர்களில் ஆக்னியித்ரன் சம்புத்தீவையும், மேதாதிதி, பிலக்ஷத்தீவையும், வபுஷ்மந்தன், சான்மலித்தீவையும், சோதிஷ்மந்தன், குசத்தீவையும், தியுதிமந்தன், கிரௌஞ்சத்தீவையும், அவ்யன், சாகத் தீவையும், புஷ்கரன், புஷ்கரத்தீவையும் ஆண்டனர். (பாகவதம்)

**பிரிவிடையாற்றல்** — முன்கையில் தொடி சோரவெறுத்து வருந்தி இளமதிபோன் நறுதலினையுடைய மடவாள் தலைமகன் பிரிந்த விடத்து அாற்றியது. (பு. வெ. பெருந்திணை).

**பிரிவு** — பரத்தையிற் பிரிவு, ஓதற்பிரிவு, காவற் பிரிவு, தூதிற்பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற்பிரிவு, என அறுவகை.

**பிரிவுழிக்கலங்கல்** — தலைவி பிரிந்த இடத்துத் தலைவன் கலங்கிக்கூறல். இது மருளுற்றுரைத்தல்,தெருளுற்றுரைத்தல் என இருவகைத்து. ஆய, வெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோவெனலும், வாயில்பெற்றுய்தலும், பண்பு பாராட்டலும், பயந்தோர்ப் பழிச்சலும், கண் படை பெருது கங்குனோதலு மெனும் விரியினையுமுடையதாம். இதுவரை (அகம்) மூதனுள் நிகழ்ச்சி முடிவு.

**பிரிவுழிமகிழ்ச்சி** — இது களவின் கிளவி. இது தலைவி பிரிந்து போதலைக்கண்ட தலைமகன் மகிழ்தல். பாகனொடு கூறுதலுமாம். (அகம்)

**பிரீதகேசி** — உன்முகன் தேவி.

**பிரீதி** — 1. (சங்.) குசன் குமரன். இவன் குமரன் சஞ்யன்.

2. தக்ஷன் பெண். புலகன் தேவி. குமரன் தத்தாத்திரயன்.

3. புலத்தியன் தேவி.

4. காடுதிருத்தி நாடாக்கி மலைகளெல்லாவற்றையும் கோமுகமாக்கி உலகம் அரசாண்டவன்.

**பிரீதிமதி** — தேவதத்தன் தாய்.

**பிரீதிவர்த்தனன்** — வர்த்தமான புரத்து அரசன். (சூளா.)

**பிரீதிவன்** — விராடராசன் மைத்துனனாகிய கீசகன் குமரன்.

**பிருகதசிவன்** — 1. தருமபுத்திரனுக்கு நளன் கதையை வநத்திற்கூறித் தேற்றிய இருடி.

2. குவலாயாசுவன் தந்தை

3. சாவஸ்தன் குமரன்.

**பிருகதிஷன்** — 1. பர்மியாச்வன் குமரன்.

2. அஜமீடன் குமரன்.

**பிருகத்கரன்** — அங்கதேசத்து அரசனாகிய பத்திராதன் குமரன்.

**பிருகத்கர்ணன்** — பிருகத்திரதன் தந்தை.

**பிருகத்காயன்** — பிருகத்தனு புத்திரன்.

**பிருகத்சம்மிதை** — இது சூர்யசந்திர கிரகணபலாபலன் முதலிய கூறுநூல். வராகமிகிரர் செய்தது.

**பிருகத்சாதகம்** — வராகமிஹிரர் செய்த சோதிட சாத்திரம்.

**பிருகத்சேநன்** — மத்திரதேசாதிபதி, கிருஷ்ணன் மாமன் க்ஷலமணைக்குத் தந்தை.

**பிருகத்தனு** — பிருகதிஷன் குமரன்.

**பிருகத்திருதன்** — (சூ.) தேவராதன் குமரன்.

**பிருகத்துய்மன்** — ஒரு அரசன்.

**பிருகத்பானு** — பிருகத்ரதன் குமரன். அங்கநாட்டரசன்.

**பிருகத்ரதன்** — 1. சராசந்தன் தந்தை. இவன் நெடுநாள் புத்திரப்பேறு இல்லாது தன்னிரண்டு மனைவியருடன் காட்டிற்குச் சென்று சண்டகௌசிகர் என்னும் முநிவர் அநுக்கிரகத்தால் புத்திரப்பேற்றின் நிமித்தம் ஒரு மாம்பழம் பெற்றனன். அப்பழத்தை இருவருக்கும் இருபிளவாகக் கொடுக்க அம்மனைவியர் இருவரும் சில நாள் தரித்து ஒரேகாலத்தில் ஒவ்வொரு பாதியுருக்கொண்ட ஆண்குழந்தை யுருவத்தைப் பெற்றனர். அரசன் இதைக் கண்டு இது தீமைக்கு உற்பாத மாதலால் புறத்தில் எறியக் கட்டளையிட்டனன். அவ்வகை எறிந்த இருபிளவையும் சரையென்னும் தேவதை ஆகாரமென எண்ணி உண்ணவந்து குழந்தையெனக் கண்டு ஒன்றுசேர்க்க உயிரடைந்ததுகண்டு, புத்திரன் இல்லாத அரசனுக்கு அளித்தனள். அவனே சராசந்தன். இவன், ருஷமன் எனும் நாமாம்ச பக்ஷணியைக் கொன்று அவன் தோலால் (௩) நாபேரிகை செய்து வைத்திருந்தான். இந்தப் பேரிகை ஒருமுறை வாசிக்கின் ஒரு மாதம் சப்திக்குமியல் புள்ளது. (பார - சபா.)

2. மிதிலாதிபதியாகிய தேவராதன் குமரன்.

3. அங்க தேசாதிபதியாகிய பிருகத்கர்ணன் குமரன்.

**பிருகந்தன்** — உலூக தேசாதிபதி. அருச்சுநனுடன் நட்புக் கொண்டவன்.

**பிருகந்நளன்** — ஒரு அரசன் சிவதீர்த்தத்து இருந்த வெண்டாமரையை விருப்பாய்த் தொட்டதால் வெண்குட்ட மடைந்து கௌசிகர் புண்ணியதீர்த்தம் ஆடச்சொல்லியபடி ஆடிப் புனிதனானவன்.

**பிருகந்நளை** — அருச்சுநன் விராடன் நகரத்தில் மறைந்து வசித்தகாலத்தில் வைத்துக்கொண்ட பெயர்.

**பிருகன்** — துரியோதனன் தம்பி. பதினென்காம் போரில் பீமனால் கொல்லப்பட்டான்.

**பிருகன்மனஸ்** — பிருகத்பாநன் குமரன்.

**பிருகக்ஷத்ரன்** — புமன்யன் குமரன்.

**பிருகு** — 1. பிரமன் மானஸபுத்ரரில் ஒருவர். மனைவி புலோமசை, மற்றொரு மனைவி கியாதி; இவர் குமரன் கவி. பௌத்தரான் சுக்ரன். இவர்களன்றி இவர்க்குக் கியாதியால் தாதை, விதாதை என்று இரண்டு குமரர் இருந்தனர். அவர்களுள் தாதைக்கு மிருகண்டும், விதாதைக்குப் பிராணனும் பிறந்தனர். பிராணன்குமரன் வேதசிரன். வேதசிரன் குமரன் உசேநஸ் மிருகண்டின் குமரன் மார்க்கண்டேயன். மற்றொரு குமரன் சௌநகன். இவர் தமது பாரியைக்கு யஞ்ஞத்தின் பொருட்டு அக்னியை உண்டாக்கும்படி கட்டளையிட்டு நீராடச் சென்றனர். இவள் தனித்து இருந்ததை அறிந்த புலோமன் என்னும் அரக்கன் பூர்ணகர்ப்பிணியாயிருந்த இருடி பத்தினியாகிய புலோமசையைத் தூக்கிக்கொண்டு போயினன். இவளது அபயங்கேட்ட வயிற்றிலிருந்த சியவநன் வெளிவந்து அரக்கனை யெரித்தனன். இதனை யோகத்தா லறிந்த இருடி அக்கினியை நோக்கி நீ கண்டும் தடை செய்யாதிருந்ததால் சுத்தவஸ்துக்களேயன்றி அசுத்தப்பொருள்களையும் உண்ணும்படி சபித்தனர்.

இவர் ஒரு அரசனுக்குள்ள இரண்டு புத்திரிகளில் மூத்தவளை மணந்து புத்திரப்பேறு இல்லாது மனைவி வேண்ட அவளுக்குச் சோமவாரத்தில் அரசமரத்தைத் தழுவினால் புத்திரப்பேறு உண்டாகுமென அவள் அவ்வகை செய்து புத்திரப்பேறு அடைந்து காசிராஜனை மணந்த தன் தங்கை, புத்திரன் இலாதிருத்தலைத் தமது நாயகருக்கு அறிவித்தனள். இருடி அவளைப் பலாசமரத்தைத் தழுவக் கட்டளையிட்டுப் புத்திரப்பேறளித்தவர். இவர்க்கு மற்றொரு குமரர் சமதக்கினி. ஒருமுறை இவர் சத்துவ தேவரை அறியும்படி பிரமன், ருத்ரன், திருமால் இவர்களிடஞ் சென்று அவர்களைக் கோபமூட்டினர். அதனால் ருத்ரனும் பிரமனும் கோபித்தனர். இவர் அந்தத் தேவர்கள் இருவரில் ருத்ரனுக்கு இலிங்கமறும்படியும், பிரமனுக்குக்கோயில் இல்லாதிருக்கவும் சாபமளித்து விஷ்ணுவிடஞ் சென்று ஒரு உதை கொடுக்க விஷ்ணு உதைத்தகாலைப் பிடித்து உபசரித்ததால் இவரே சத்துவமூர்த்தி என்று அறிந்து வந்தனர். வீதவ்யனுக்கு அடைக்கலம் தந்து அவனை வேதியனாக்கியவர். மனைவியைக்கொன்ற விஷ்ணுவிற்குத் தன் மனைவியை நீங்கவும் பத்துப் பிறவி கொள்ளும்படியும் சாபம் அளித்தவர். இருசிகரும் இவர்குமரர். இவர் தக்ஷயாகத்தில் வீரபத்திரரால் மீசை, தாடி முதலியவைகளைக் கொளுத்தப்பட்டனர். இவரை வருணன் சந்ததியார் என்று யசுர்வேதங் கூறும். இவர் பிறந்து அதிதேஜோ ரூபமாயிருந்ததால் இப்பெயர் பெற்றனர். இவர்மனைவி அசுரர்க்கு அபயங்கொடுத்ததினால் விஷ்ணுவால் கொலை செய்யப்பட்டபின் இவர் விஷ்ணுவைப் பூமியில் பலபிறவியெடுக்கும்படி சபித்துத் தமது தபோபலத்தால் இறந்த மனைவியின் சிரத்தினை உடலுடன் சேர்த்து உயிர்ப்பித்தனர். (தே - பா.)

2. இவர் தொடையிற் பிறந்ததால் ஔரவர் என்று பெயர்.

3. வருணன் என்னும் ஆதித்தனால் சாருஷ்ணியிடத்து உதித்த மகருஷி.

4. ஒரு வேதியன். சவனருஷியின் தூண்டுதலால் பத்மன் என்னும் நாகராசனிடத்தில் இல்லற தருமம் கேட்டவன்.

5. சிவகணத் தலைவன்.

6. ஒரு சத்தி.

7. பிருகுவம்சத்துப்பெண்களில்ஒருத்தி தொடையிற் பிறந்து ஹைஹயரைக் கண்போக்கி மீட்டுந்தந்தவர். (தே பா.)

**பிருதுகஞ்சம்** — நர்மதை கடலோடு கலக்கும் புண்ணிய க்ஷேத்திரம். Broach, on the river Narbada. This was the hermitage of the Rishi Bhrigu.

**பிருதுகனர்** — பிருகு ருஷியால் யஞ்ஞத்தில் உண்டாக்கப்பட்ட கிங்கரர்.

**பிருதுசிரவணம்** — இமயகிரியிலே சகரன் தவஞ்செய்த தலம்.

**பிருதுசைத்யர்** — சோழநாட்டுத் திருக்கண்ணங்குடியில் திருமால் அருள்பெற்றவர்.

**பிருதுதுங்கம்** — ஒரு புண்ணியத்தலம். இவ்விடம் அருச்சுநன் தீர்த்தயாத்திரையில் பிராயச்சித்தம் செய்து கொண்டனன்.

**பிருதுத்துயிமன்** — இவன் இரப்பிய முனிவர் புத்திரரால் யாகஞ்செய்வித்துக் கொண்டவன்.

**பிருதுக்ஷேத்ரம்** — மேலைச்சமுத்திரக் கரையிலுள்ள புண்யத்தலம். ஆநர்த்த தேசத்து அருகில் உள்ளது.

**பிருக்துத்ஜோதி** — ஒரு ரிஷி. ஆங்கிரச புத்திரன். (பா. து)

**பிருக்துக்ஷத்திரன்**—நிடதேசாதிபதி திருஷ்டத்யும்னனால் கொல்லப்பட்டவன். (பா. து.)

**பிருக்தகீர்த்தி** — ஆங்கிரச புத்திரன்.

**பிருங்கன்** — ஒரு வேடராஜன். வீமனுடன் யுத்தம் புரிந்தவன்.

**பிருங்கிமுனிவர்** — 1. இவர் தேவதரிசனப் பிரியராய், மாம்சமில்லாத தேகத்தையுடையவராய்ச் சிகை வெண்மை நிறம், தண்டம், ஜபமாலை, மூன்றுகண், நிருத்தனம் செய்பவராயிருப்பர். (அ-ப-தி.)

2. ஒரு இருடி; இவர் மோக்ஷகாமியாய்ச் சக்தியை விட்டுச் சிவமூர்த்தியைத் தரிசித்து நீங்குகையில் உமாதேவியார் இவரிடம் தமது கூறாகிய உதிர மாம்சங்களை வற்றச் செய்தனர். இருடி நடக்க வலியற்றுச் சிவமூர்த்தியை வேண்டச் சிவமூர்த்தி ஒரு கோலுங் காலுந்தந்து அநுக்கிரகித்தனர். இதனால் பிராட்டியார் தவஞ் செய்து பத்தர் வழிபாடு தனக்கும் உரிமை பெற்று அர்த்த பாகத்திற் கலந்தனர்.

3. சமீகருஷி, "நீ எனக்குப் பிரியனாயிருந்து உன் பிராணனை எனக்குக் கொடுத்து என்னைக் காக்கவேண்டும்" என்னும் ஒலி கேட்டு யாரோ என்மீது விருப்

பாக இவ்வகைக் கூறுகின்றுள் எனக் கருதிக் காமங்கொண்டு அங்கிருந்த உலர்ந்த சருகில் தம் வீரியத்தைவிட அதினின்று ருஷபமுகத்துடன் தோன்றினவர். (சிவமகாபுராணம்.)

**பிருசாசுவன்** — 1. இவன் அஸ்திரங்களைப் புத்திரராகப் பெற்றவன். (இரா - பால.)

2. (சூ.) சகதேவன் குமரன்.

**பிருசாச்வன்** — ஒரு பிரஜாபதி. இவன் புத்ரர்கள், உபசம்மார மந்திரரூபிகளாய் விச்வாமித்திரர் இராமபிரானுக்கு உபதேசிக்கப் பட்டனர். அவர்களாவார் சத்தியவந்தன், சத்தியகீர்த்தி, திருஷ்டன், ரபசன், பிரதி ஹாரதரம், பராங்முகம், அவாங்முகம், லக்ஷம், அக்ஷவிஷம், திருடநாபம், சுநாபம், தசாக்ஷம், சதவக்தாம், தசசீர்ஷம், சதோதரம் பத்மநாபம், மஹாநாபம், துந்து நாபம், சுநாபம், ஜ்யோதிஷம், கிருசநம், வைராச்யம், விமலம், யோகந்தரம், ஹரித்ரம், தைத்யப்ரசமனம், சுசி, பாஹூ, மஹாபாஹூ, நிஷ்குலி, விருசி, அர்சிமாலி, த்ருதிமாலி, விருத்திமான், ருசிரன், பித்ரு சௌமனஸ், விதூதன், மகரன், கரவீரகரன், தனதான்யன், காமரூபன், காமருசி, மோஹன், ஆவரணம், சிரும்பகம், சர்வநாபன், சந்தானன், வரணன்.

**பிருச்சினி** — அநமித்திரன் குமரன்.

**பிருடி** — ஒரு வேதியன். இவன் மனைவி முருசி. இவர்கள் பஞ்சமகா பாதகஞ் செய்து துன்புற்றுத் தீர்த்த ஸ்நானத்தால் நற்பத மடைந்தவன்.

**பிருடிதன்** — ஒரு வேதியன். இவன்மனைவி முருசி. இவ்விருவரும் பலதல யாத்திரை செய்து சிவயோகி ஒருவரால் கோபர்வத மகிமை கேட்டு அந்த யோகி பிரசாதித்த விபூதி மகிமையால் கோபர்வதம் அடைந்து சிவசாரூபம் அடைந்தவன்.

**பிருதசேநன்** — பரு என்பவன் தந்தை. பிராஞ்ஞன் குமரன்.

**பிருதச்சிரவன்** — சசிபிந்து குமரன்.

**பிருதிவி** — இது, வன்மை, மேன்மை, முதலிய அவயவசையோகமும், கந்தம், ரூபம், ரஸம், பரிசம், சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், அண்மை, சேய்மை, குருத்வம், திரவத்வம், சமஸ்காரம், எனும் பதினன்கு குணங்களுமுடையது.

**பிருதிவிராஜன்** — 1. இவன் ராஜபுத்திர அரசர்களில் ஒருவன். அஜ்மீர், டில்விக்கரசன், இவனுடைய காலத்தில் ஜயசந்திரன் எனும் கன்னேசி அரசன் ஒருவன் இருந்தான். இவர்களிருவரும் மகாராஜ பட்டம் அடைய விரும்பினர். ஒருவருக்கொருவர் விரோதம் உண்டாகி யுத்த சந்நத்தராயினர். இவர்கள் காலத்தில் ஆப்கானிய அரசனுகிய கோரிமகம்மது இந்தியாவின்மீது படையெடுத்துவர இருவரும் சேர்ந்து அவனைத் துரத்தி யடித்தனர். ஆயினு மிருவருக்கும் உள்ள விரோதம் ஒழியவில்லை. ஜயச்சந்திரன் மகாராஜ பட்டம் அடைய யாகம் செய்யத்தொடங்கி யாகம் முடித்தான். ஜயச்சந்திரனுக்கு சம்யுக்தை என ஒரு பெண் இருந்தாள். அவள் பிருதுவியின் வீரதீரங்களைக்கேட்டு அவனை மணக்க விரும்பினுள். பிருதுவியும் அக்கன்னிகையை மணக்க எண்ணங் கொண்டான். சம்யுக்தையின் பொருட்டுச் சுயம்வரம் நாட்டப்பட்டது. அரசர்கள் எல்லாரும் மண்டபத்தில் நிறைந்தனர். பிருதிவி அரசன் மாத்திரம் வரவில்லை. ஜயச்சந்திரன் பிருதிவியிடம் விரோதம் கொண்டதால் பிருதிவியைப் போல் பிரதிமை ஒன்று மண்டபத்தின் வாயிலில் காவலாளிபோல் வைத்தான். இதற்கு முன்பே பிருதிவி மாறுவேடம் பூண்டு அப்பிரதிமைப் புறத்தில் ஒளித்திருந்தான். சுயம்வரமாலை சம்யுக்தையிடம் கொடுக்கப்படச் சம்யுக்தைத் தான் விரும்பியவனைக் காணுது வெளிப்புறத்தில் அவனை யொத்திருந்த பிரதிமைமீது மாலையைச் சூட்டினுள். அவ்விடம் ஒளிந்திருந்த பிருதிவி சம்யுக்தையைத் தூக்கி, குதிரைமீது வைத்துக்கொண்டு குதிரை வீரர் பின் தொடர தன் னகரம் வந்து சம்யுக்தையை மணந்தனன். இவன் கோரி மகம்மதுடன் சண்டையிட்ட டில்லியெனும் இந்திரப் பிரஸ்தத்தில் கடைசியாக ஆண்ட அரசன் அநங்கபாலன். இவன் பாண்டவர் வம்சத்தவன். இவனுக்குப் பின் சந்ததி யில்லாமற் போனதால் இவன் அக்கினிகுல அரசனுடைய மகனும் தன் பௌத்ரனுமாகிய அஞ்மீர் அரசனுகிய பிருதிவிராஜனிடம் டில்லியை ஒப்புவித்தான். கனோஜை ஆண்ட சயசந்திரனும் அநங்க பாலன் போனமையால் அவனுக்கு டில்லியைக் கைப்பற்ற எண்ண முண்டாயிற்று. அதற்காக கஜினி அரசனுகிய ஷாபுமீன உதவி கேட்டான். மகம்மதிய

அரசன் ஒரு சேனையை அனுப்பினன். பிருதிவிராஜன் சமரசிங்கெனும் சித்தூரரசன் உதவியால் மகம்மதியரை பின்னிடையச் செய்தனன். இதைக்கேட்ட ஷாபுடன் இரண்டாமுறை பெருஞ்சேனையுடன் வந்து சித்தூரைப் பிடித்தனன். இதில் சித்தூர்ராணுவாகிய சமரசிங் கொலையுண்டான். இதைக்கேட்ட இவன் மனைவி பிருதை தீப்புகுந்தனள். இந்தக் கலகத்திற்குக் காரணமான கனோஜ நகரத்தரசன் மீதும் முகம்மதியர் எதிர்த்துச் செல்ல சயசந்திரன் தானே கங்கையில் வீழ்ந்து மாண்டனன்.

**பிருது** — 1. (சூ.) வேநன் வலக்கையை இருடிகள் கடைய உண்டான விஷ்ணுவின் அம்சம்; தேவி அக்கையிற் பிறந்த அர்ச்சசு. இவன் அரசாண்ட காலத்தில் பூமி வளம் தராதிருந்ததால், பூமிதேவியைக் கொலை செய்கிறேன் என இவன் எழுந்தனன். இவ்வகை ஆயுதபாணியாய் எழுந்த அரசனைக்கண்டு பூதேவி பசுவுருக்கொண்டு ஓட அரசன் தொடர்ந்து சென்றனன். அப்பூமிதேவி பசுவுருக்கொண்டு அரசனை நோக்கிக் கோபியாதிருக்க என வேண்டிக் கன்றும் பாத்திரமும் கொண்டு வேண்டிய வளத்தைக் கறந்து கொள்ளுக என்றனள். அந்தப்படி அரசன் மனுவைக் கன்றாக்கித் தன் காத்தைப் பாத்திரமாக்கி ஓஷதிகளைக் கறந்தனன். இருடிகள் பிரகஸ்பதியைக் கன்றாக்கி வேதமயமான பாலைக் கறந்தனர். தேவர்கள், இந்திரனைக் கன்றாக்கி அமிர்தங் கறந்தனர். அசுரர், பிரகலாதனைக் கன்றாக்கிச் (சுரா) மத்திய பானத்தைக் கறந்தனர். பின்னும் இம்முறையே காந்தருவர், சிராத்த தேவதைகள், சித்தர், வித்தியாதரர், கிம்புருஷர், இராக்கதர், விசுவாவசு, அரியமா, கபிலர், மயன் முதலியவரைக் கன்றாக்கி வேண்டியவளங்களைப் பெற்றனர். பிறகு பிரம்மாவர்த்த மென்கிற புண்ணிய க்ஷேத்திரத்தில் இவன் குமரன் விசித்திரசுவன் அல்லது விசிதாசுவன் யக்கியஞ் செய்கையில் அச்வத்தைக் கவர்ந்து சென்ற இந்திரனை அரசன் குமரன் தொடர்ந்து சென்று அச்வத்தைப் பிடித்து வந்தும் இந்திரன் மீண்டும் யாகத்தை மறுத்தது கண்டு அரசன் கோபித்து இந்திரனைக் கொலை செய்கிறேன் என்று எழத் தொடங்கினன். இருடிகள் இந்தக் காலத்தில் ஜீவ இம்சை ஆகாது; நாங்கள் இந்திரனை யாகத்தில் கொலை புரிகிறோம் என்றனர். இதை அறிந்த பிரமதேவன் இருடிகளை மறுத்து அரசனுக்குக் கோனசதக் கிருது எனப் பெயர் தந்து சமாதானப்படுத்தினன். பின் இவன் அரியினாலும் சநகர் முதலியவர்களாலும் யோகம் உபதேசிக்கப்பட்டு மனைவியுடன் தவமேற்கொண்டு காடடைந்து சுவர்க்க மடைந்தனன். இவன் விஷ்ணுவின் அம்சமாய்ப் பிறந்தவன். இவன் வேள்வியில் விஷ்ணு சூத புராணிகர்போல் இருந்து புராணஞ் சொல்லினர். இவன் மற்றக் குமரர் அந்தர்த் தானவன், தூமகேசன், அரியச்வன், திரவிணன், விருகன். (மச்ச - பு.)

2. யாதவரில் ஒருவன்.

3. (சூ.) அநேநஸுக் குமரன். விச்வசந்தன் தந்தை. இவனுக்குச் சாகவந்தன் விஸ்வகன் என்வும் பெயர்.

4. ருசிராசுவரன் குமரன்; இவன் குமரன் பாரன்.

5. சசிபிந்தின் குமரன்.

6. ருசகன் குமரன். சியாமகன் தம்பி.

7. விருஷ்ணி குமரன்.

8. (சூ.) அநரண்யன் பௌத்திரன்; இவன் குமரன் திரிசங்கு.

9. பிராசதன் குமரன்.

10. பரன் குமரன்.

**பிருதுகர்மன்** — சசிபிந்து குமரன்.

**பிருதுகிருதி** — சசிபிந்து குமரன்.

**பிருதுசக்ரவர்த்தி** — பூர்வஜன்மத்திற் சூத்திரன் அயோத்தி நகரில் இருந்த விஷ்ணுவாலய பணிவிடையால் மறுபிறப்பில் சக்ரவர்த்தியாயினன். (சிவமகாபுராணம்.)

**பிருதுசிரவசு** — சசிபிந்து குமரன். இவன் குமரன் தருமன்.

**பிருதுசேனன்** — விபுவின் குமரன்; தாய் பராகி, தேவி ஆகுதி, குமரன் நந்தன்.

**பிருதுசேநன்** — பிராஞ்ஞன் புத்திரன். பௌரன் தந்தை.

**பிருதுயசன்** — சசிபிந்து குமரன்.

**பிருதுலாக்ஷன்** — சதுரங்கன் குமரன். இவன் குமரன் பிரகத்ரதன். இவன் நரை திரை மூப்பின்றி கெடுநாளாசியன்றி தேவர்களுக்கு அமிர்தங் கடைந்து கொடுத்த சூரியவம்சத் தரசன்.

**பிருதூதகம்** — 1. உசங்கு காண்க (பாரசல்லி.)

2. இது ஓர் தீர்த்தம். (பா - வன.)

Gebo a where the celebrated Brahmayoni thirtha is situated. It is 14 miles to the west of Thaneswara.

**பிருதை** — சூரனுக்கு மாரிஷையிடம் பிறந்த குமரி. இவள் இளமையில் தங்கள் தந்தையிடம் வந்திருந்த துருவாசரை வழிபட்டு நினைத்த தேவர் தன்னிடம் வரும்படி மந்திரம் பெற்று அம்மந்திர பலத்தை யறியத் தான் தனித்திருக்கையில் மந்திரத்தைச் செபித்தனள். அம்மந்திர தேவதையாகிய சூரியன் முன்னின்று மந்திர பலத்தை யறிவிக்க இவள் தான் கன்னிகையென்று அறிவித்தனள். சூரியன் இவளுக்குத் தக்க பருவந்தந்து கற்பாதானஞ் செய்து நீங்கினன். இவளிடம் அக்காலத்துக் கவசகுண்டலங்களுடன் கர்ணன் பிறந்தனன். பிறந்த அக்குமரனை இவள் ஊர் அலருக்கு அஞ்சித் தன் முன்தானையில் சிறிது கிழித்துப் பெட்டகத் தடக்கிக் கங்கை வெள்ளத்தில் விட்டனள். இவள் பிறகு பாண்டுராஜனை மணந்தனள். இவளுக்குக் குந்தி யெனவும் பெயர். தந்தையைக் குந்திபோஜன் எனவுங் கூறுவர்.

**பிருந்தாவனம்** — 1. யமுனைக்கு மேற்கில் உள்ள துளசிவனம். இவ்விடம் கிருஷ்ணமூர்த்தி பத்தர்களுக்குப் பிரத்தியக்ஷமானூர்.

2. வலாசுரன் தேவியாகிய பிருந்தை உயிர் நீத்த ஸ்மசானம். இதில் திருமாலின் மயக்கந் தீர்தல் பொருட்டுப் பார்வதியாராலும் திருமகளாலும் விதைக்கப்பட்ட விதைகள் முளைத்தன. (பதுமபுராணம்.)

**பிருந்தை** — 1. இவள் சலந்திராசுரன் தேவி. இவள்மீது விஷ்ணுமூர்த்தி மயல்கொண்டு சலந்திரன் சிவமூர்த்தியின் சக்கரத்தால் இறந்ததை அறியாத இவள் இடம் அவனைப்போல் உருக்கொண்டு புணர்ந்து இருந்தனர். இவரது புணர்ச்சி வேறுபாட்டாலும் மற்ற அடையாளங்களாலும் விஷ்ணுவென்று அறிந்த இவள் தீப்புகுந்தனள். அதனால் மயல் தெளியாத விஷ்ணு மால் கொண்டனர். திருமகள் சிவமூர்த்தியை வேண்டச் சிவமூர்த்தி உமைக்குக் கூறப் பிராட்டி சிலவிதைகள் பிரசாதித்து இவ் விதைகளைப் பிருந்தையிருந்த சாம்பலில் தூவுக என்றனள். அவ்வகை திருமகள் செய்தனள். அதில் துளசி உண்டாயிற்று. அதனை விஷ்ணுமூர்த்தி அணிந்து மயல் தீர்ந்தனர். (காஞ்சிபுரா.)

2. இவள் திருமால் தன்னைச் சலந்தரனாக உருமாற்றி இவளை வஞ்சித்ததால் இவள் திருமாலை உன் மனைவியை ஒரு அசுரன் வஞ்சித்துச் செல்லவெனச் சாபம் தந்து தீப்புகுந்தனள். (பதுமபுராணம்.)

**பிருமவலி** — ஒரு இருடி, வேததரிசன் மாணக்கன்.

**பிருமாவிருதன்** — இருஷபனுக்குச் சயந்தியிடம் உதித்த குமரன்.

**பிருஷதபி** — 1. துருபதன் தந்தை.

2. வையவத்ஸத்துத மநுவின் குமரன். (பா. துரோ.)

**பிருஹத்ரதன்** — இவன் அங்கதேசாதிபதி. இவன் விஷ்ணுபதம் எனும் மலையில் யாகஞ் செய்து யானைகளையும், குதிரைகளையும், பசுக்களையும் அக்னிஷ்டோமம், முதலாய எழு யாகங்களில் தானஞ் செய்தவன். இவன் பெரும் புகழடைந்தவன். (பார - சாந்தி.)

**பிரேதஜன்மம்** — பூர்வஜன்மத்தில் மகாபாபம் செய்தவனே பிரேதஜன்மம் அடைவான். ஒருவன் பல தருமங்களைத் தாபித்துவைத்து இறக்க அவன் குலத்தில் பிறந்தவன் அவற்றை யழிப்பானுயின் அவனும், தருமசாலை, வயல், பூங்கா முதலியவற்றின் எல்லையைப் புரட்டினவனும் குளத்தைத் தூர்த்தவனும், சண்டாளனால் அடிபட்டிறந்தவனும், ஜலத்தில் மாய்ந்தவனும், பாம்பேனும் நாயேனும் கடித்திறந்தவனும், இடி விழுந்து இறந்தவனும், நெருப்பாலும், மாடு முட்டியும், கழுத்தில் சுருக்கிட்டும், பாஷாணம் தின்றும், ஆயுதத்தாலும், சமஸ்கார மில்லாமலும், தேசாந்தரத்தில் திக்கற்றும் குஷ்ட முதலிய மகாரோகங்களாலும், திருடனாலும், தாய் தந்தையருக்குச் சிரார்த்தம் செய்யாமலும் மாய்ந்தோர் பிரேத ஜன்மம் அடைவார். பப்புருவாகனைக் காண்க.

**பிரேதபிதுர்க்கள்** — பித்ரு, பிதாமஹா, பிரபிதாமஹா, விருத்தப்ர பிதாமஹா, மாத்ரு, மாதாமஹி, பிரமாதாமஹி, விருத்தப்ரமாதாமஹி, சர்வபித்ருக்கள்.

**பிரேமாபாய்** — இவள் காசியில் அரிபக்தி மேலிட்ட அணங்கு. பாகவதரிடத்தும் பாகவதத்தினிடத்தும் அதிக அன்புகொண்டு நாள்தவறாது பாகவதகாலக்ஷேபஞ் செய்துவருகையில் ஒருநாள் பாகவதர் அவர்களுக்கு உணவளித்தற் பொருட்டு தன் மகனையனுப்பிப் பாகவதம் கேட்டுத்

தனக்குக் கூறும்படி செய்து பாகவதர்க்கு உணவாதிகள் சமைத்தளித்துத் தன் மகன் காலக்ஷேபங்கேட்டு வரக்கண்டு மகனுடன் தானும் உண்டு மகனை நோக்கி கேட்ட பாகவத கதை எனக்குக் கூறுக என்றனள். குமரன், கண்ணன் தயிர்த்தாழியை யுடைத்து வீதியிற் செல்லக் கண்ட தாய் கண்ணனைத் தொடர்ந்து பிடிக்க அகப்படாதது கண்டு வருந்தக் கோபிகைகள் தாங்கள் அன்று கண்ணன் செய்த தீமைகள் கூறக் கேளாதீர் பிரத்யக்ஷமாகக் காண்க வென்றனர். இதைக் கேட்ட தாய் முகம்வாடி யிருக்கையில் கண்ணன் அருகுறத் தாய் தாம்பினுற் பிணிக்கத் தாம்புகள் பற்றுது வருந்துகையில் மற்றொரு தாம்பிற்கு இடந்தந்து உரலில் பிணிபட்டு நிற்கையில் கோவியர் நகைத்துச் சென்றனர். கண்ணன் இனித் தீமை செய்யேன் கட்டவிழ்க்க எனத் தீனபாவனை காட்டத் தாய் இரங்காதிருந்தனள், என்று மகன் கூறிய கதை கேட்கையில், கண்ணனை யார்சென்று கட்டவிழ்ப்பார் என்று கண்ணீருகுத்து இதோ நான் வந்து கட்டவிழ்க்கிறேன் என்று உயிர் நீங்கிப் பரமபத மடைந்தவள்.

**பிர்ப்பலன்** — விஷ்ணுபடன்.

**பிலசேநன்** — துரியோதனன் தம்பி.

**பிலம்லோசை** — ஒரு அப்ஜரஸ்திரி.

**பிலக்ஷம்** — ஒருதீவு; மேல் சமுத்திரத்தில் உள்ளது. அநுமான் சீதாபிராட்டியைத் தேடிச்சென்ற காலத்துப் பாலைவநத்திருந்த பிலத்திற்சென்று அவ்விடத்திருந்த சுவயம்பிரபை தன்னைச் சுவர்க்கத்துக்கு அனுப்பவேண்டியபோது பிலத்தைப் பிளந்து வெளியே வந்ததால் உண்டாகியது.

**பிலக்ஷப்ஸ்ரவணம்** — ஸரஸ்வதிக்கு உற்பத்திஸ்தானம்.

**பிலாங்கர்** — இது வயிற்றில் பையுள்ள மிருக இனத்தில் சேர்ந்தது. பூனையைப் போன்றது. இதன் பின்னங்கால் விரல்கள் மனிதர் விரல்போலும் முன்னங்கால் பூனைவிரல்கள் போலிருக்கிறது. இது பக்ஷிகளைப் பிடித்துத்தின்கிறது. இவ்வினத்தில் கஸ்கஸ் என்றது ஒன்று.

**பிலிப்பியன்மதம்** — (Philipi..u) இத்தீவிலுள்ளோர் சூரியசந்திரர்களை ஆராதிப்போர். பின்னும் அநேக தேவர்களையும் பூஜிப்பர். பாட்டலா என்னும் தேவன் சிருஷ்டிக் கடவுள். இத்தேவனை அப்பா (Apps) என்னும் பெயரினுல் விக்கிரகஞ் செய்து பூஜிப்பர்.

**பில்கணியன்** — ஒரு வடநூற்புலவன். பாஞ்சால தேசாதிபதியின் புதல்வியாகிய யாமினி பூர்ணதிலகைக்குக் கல்வி ஆசிரியனுகி அவளையே மணந்து கொண்டவன். இவன் செய்தநூல் பில்கணீயம்.

**பில்வநதி** — ஒரு நதி.

**பில்வம்**—சிவார்ச்சனைக்குரிய பத்திரம். இது பீமனுல் சிவார்ச்சனைக்கு உபயோகிப்பது.

**பிவிக்கிரந்தன்** — திருதராட்டிரன் குமரன்.

**பிளாபாயி** — ஒரு பிரதானி புத்ரி. இவள் ஒருவனை இளமையில் மணங்கொண்டு கைமையாயினள். இவள் இளமை தொட்டே அரிபூசனை யியற்றித் தன் கணவனிறந்தபின் தந்தை பாலடைந்து பூசைவழுவாது வருகையில் தந்தை இறக்க உடன் பிறந்தாரிருவரும் நாடுகளைப் பிரித்துக் கொண்டனர். இவ்விருவருள் தமயனைப் பிளாபாயி பூசைப் பெட்டகத்துடன் அடைந்து ஜீவித்து வந்தாள். பிரிவுபட்ட இளையோன் தமயனைப் பகைத்து அவன்பொருள்களைக் கொள்கையில் பூசைப்பெட்டகத்தையும் கொள்ளைக்கொண்டனன். பிளாபாயி. பூசைப்பெட்டகத்தைக் காணுது வருந்தி, அது வாராததால் உணவுகொண்டிலள். ஐந்தாநாள் பெருமாள் ஒருவேதியர்போல் கனவிடைவந்து பூசைப்பெட்டகத்தை உதவிச் சென்றனர். பிளாபாயி முன்போல் பூசையியற்றி உணவுகொண்டனள். இச்செய்தியறிந்த தம்பி தமயனை யடைந்து தான்செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டி முன்போல் நாடு முதலிய கொடுத்துச் சென்றனன்.

**பிளிந்தாள்** — ஒருவகை மிலேச்சசாதியார்.

**பிளோர்டியன்மதம்** — இத்தேயத்தவர் விக்கிரக ஆராதனை செய்வர். பின்னும் டாயா வென்னும் பிசாசியை வணங்குவர். இவர்கள் ஆலயங்களில் சபங்களுக்கு உயர்ந்த பதார்த்தங்களை வைத்துப் பூசிப்பார்கள். இவர்களில் அபாலசிட் என்பவர்கள் சூரியனை ஆராதிப்பர். இவர்கள் குருக்கள்மார் ஜவனஸ் என்னும் பெயருடையவர்கள். இவர்கள் சூரியனுக்குமுன் முழங்காலூன்றி நமஸ்கரித்தலேயன்றிச் சாம்பிராணி தூபமுமிடுவர். பின்னும் சூரியனைக்கண்டு கூவும் பக்ஷிகளுக்கு ஆகாரமான தேனை ஆராதிப்பர். இச்சாதியார்

தங்கள் முதல் சக்ததியைத் தேவர்களுக்கும் ராஜாவிற்கும் பலியிடுவர். இச்சாதியரில் கன்னிநிறந்தால் ஸ்திரீ மூன்றுநாட்கள் உபவாசம் செய்யவேண்டும். சிலர் சவத்தை அலங்கரித்துப் பெட்டியில் வைத்து மூன்று வருஷம் பூஜிப்பர். இவர்கள் புண்ணிய பாபங்களினால் சுவர்க்க நரகமடைவரென்றும் வேறு ஜன்மமடைவரென்றும் கூறுவர்.

**பின்னான்** — திருமலை நம்பிக்குக் குமரர். உடையவர் திருவடி சம்பந்தி. திருவாய்மொழிப் பிரபந்தத்திற்கு ஆருயிரப்படி வியாக்கியானம் செய்தவர். உடையவர்க்கு ஞானபுத்திரர்.

**பிள்ளை** — இது முதலில் வேளாளருக்குப் பட்டமாயிருந்தது. இது தற்காலம் அகமுடையான், அம்பலக்காரன், கொல்லா, இடையன், நாயர், கோக்கன், பணிச்சவன், பணிக்கன், பறையன், செய்யக்காரன், செம்படவன், சேனக்குடியன், தேவதாசிப் பிள்ளைகள், குறவர் முதலியவர்க்கும் பட்டமாக இருக்கிறது.

**பிள்ளை அப்பன்** — எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

**பிள்ளை அரசுநம்பி** — ஆளவந்தார் குமரர். மணக்கால் நம்பியின் திருவடி சம்பந்தி.

**பிள்ளைக்கூட்டம்** — வட ஆர்காட்டு மானுவில் இது வன்னியரின் வைப்பாட்டிப் பிள்ளைகளின் பட்டமாக இருக்கிறது.

**பிள்ளைத்திருநறையூர் அரையர்** — எழுபத்தினாலு சிம்மாசனாதிபதியரில் ஒருவர். (குருபரம்பரை.)

**பிள்ளைத்திருமலைநம்பி** — உடையவர் திருவடி சம்பந்தி. பெரிய திருமலை நம்பியுடன் இருந்தவர். எழுபத்தினாலு சிம்மாசனாதிபரில் ஒருவர். (குருபரம்பரை)

**பிள்ளைத்திருவாய் மொழியரையர்** — எழுபத்தினாலு சிம்மாசனாதிபரில் ஒருவர்.

**பிள்ளைத் தெளிவு** — துடியின்கண் மகிழ்ந்தொலிப்பத் தன் புண்ணைப் பிரியப் பட்டு விரும்பிக் கூத்தாடியது. (பு-வெ.)

**பிள்ளை பிறந்த வீட்டிலிருந்து குழந்தையைக் காக்கும் தேவதைகள்** — சீவந்திகை இராகை, அநுமதி, ஸினிவாலி, குருவாதக்னி இவர்கள் கன்னிகை யாஷஷ்டி தேவி சிசாக்ஷணி.

**பிள்ளைப் பெயர்ச்சி** — புண்ணை விலக்கிப் பூசலைத் தாங்கினவனை மாலையினை யுடைய மன்னன் தண்ணளி செய்தது. (பு-வெ)

**பிள்ளைப்பெருமாளையங்கார்** — இவர் மதுரையில் திருமலை நாயகர் அரசு செய்கையில் ஒரு இராயசவேலையில் அமர்ந்து பகவத் குணானுபவராய் இருக்கையில் ஒரு நாள் அரச சபையில் தமது உத்தரீயத்தைக் கிருஷ்ண கிருஷ்ண என்று தேய்த்தனர். அரசன் தேய்த்தது ஏன் என ஐயங்கார், திருவரங்கத்தில் பெருமாள், திருத்தேரில் உற்சவம் கொள்ளும்போது தீவட்டியின் தீப்பிடிக்கத் திரை பற்றியது அதை அவித்தேன் என்றனர். அரசன் இதன் உண்மையை வேவுகாரரை ஏவியறிந்து ஐயங்காரை இனி உமக்கு நமது உத்தியோகம் வேண்டாம் உமது மனப்படி இருக்கவென்று தேவரீர்க்கு வேண்டியதென்ன வென்றனன். ஐயங்கார் திருவரங்கத்தில் ஒரு அறையும் தளிகைப் பிரசாதமும் வேண்டுமென அந்தப்படி கட்டளையிட்டு அவ்விடம் அனுப்பினன். ஐயங்கார் திருவரங்கஞ் சென்று பல பிரபந்தங்கள்பாடி நொண்டிப்பசு தன்மேல்விழ அது காரணமாகப் பரமபதம் அடைந்தனர். இவர்க்கு மணவாளதாசர் எனவும் பெயர். இவர் செய்த நூல்களுக்கு பிள்ளைப்பெருமாள் பிரபந்தமெனப் பெயர். அவை நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி முதலிய எட்டாம். இவர் காலம் சைவ எல்லப்ப நாவலர் காலம் என்பர்.

**பிள்ளையாட்டு** — பகைவர் குடராகிய மாலையைச் சூட்டிக் கையிலே வேலைத் திருப்பிப் பிரியப்பட்டு ஆடியது. (பு-வெ.)

**பிள்ளையார் பாளையம்** — ஒரூர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் சைனர்களை வாதில் வெல்லுதற்கு வந்து திருக்கூட்டத்தோடு முதலில் தங்கிய இடமாம். இது மதுரைக்குத் தெற்கே யுள்ளது. (திருவிளையாடல்.)

**பிள்ளையுறங்காவில்லிதாசர்** — 1. உடையவர் திருவடி சம்பந்தி; தாஸநம்பி; உடையவர்க்குக் கருவூலம் காவல் காப்பவர்.

2. இவர் சோழனிடம் ஜட்டிவேலை செய்திருந்தவர். இவர் உடையவர் காவிரி ஸ்நானத்திற்குப் போய் மீள்கையில் அவரைத் தண்டன் சமர்ப்பித்து நிற்பர். உடையவர். கோஷ்டிகளை நிஷேதித்து இவர் தோளின்மீது தமது காத்தை யிட்டுக் கொண்டு வருவர். இவ்வாறு வருதலைக் கண்ட கோஷ்டிகள் அசூயை கொண்டதறிந்த உடையவர் ஒருநாள் பிள்ளையுறங்

காவில்வி தாசரது ஆசார்ய பக்தி தெரிவிக்க எண்ணிக் கோஷ்டிகள் ததியாராதனத்திற்குச் சென்றிருக்குங்கால் ஒருவரைவிட்டு அவர்கள் உலரவிட்ட வஸ்திரங்களில் ஒவ்வொரு முழம் கிழித்துவிடக் கட்டளையிட அவர்களும் அவ்வாறே செய்தனர். பின் ஸ்ரீ வைஷ்ணவர்கள் அனைவரும் உண்டுவந்து தம் வஸ்திரங்களைக் கண்டு குறைகூற உடையவர் இருப்பவர் பாகவதர்கள். ஒருவருக்கொருவர் செய்திருக்க வேண்டும். அது பாகவத கைங்கர்யமாகட்டுமே என்று சமாதானங் கூறவுங் கேட்காமல் முணு முணுத்தனர். இது நிற்க. உடையவர் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இருவர்களை அழைத்துப் பிள்ளையுறங்காவில்விதாசர் மனைவியார் பொன்னாச்சியார் உறங்குஞ் சமயத்தில் அவரது ஆபரணத்தைக் கழற்றிவரக் கட்டளையிட அவ்வாறு சென்றவர் ஆபரணங்களைக் கழற்றுகையில் அவள் மறுகாதிலுள்ளவைகளையும் பாகவத கைங்கர்யமென்று கழற்றிக்கொள்ளத் திரும்புகையில் விழித்தனள் எனவுணர்ந்து ஸ்ரீ வைஷ்ணவர்கள் நீங்கி உடையவரிடம் பணிகளைத் தந்தனர். இச்செய்தியை மனைவியாலறிந்த தாசர் நீ பாகவதர்க்கு மற்றையாபரணங்களையுங் கொடாமல் அபராதஞ் செய்தனையாதலால் நீ எனக் காகாயென்றனர். இவ் வரலாறறிந்த உடையவர் இவ்விருவர் சங்கதிகளையும் பாகவதர்க்குக் காட்டி ஆசார்ய பக்தி தெரிவித்துப் பொன்னாச்சியாரைப் பிள்ளையுறங்காவில்விதாசரிடம் கூறியேற்கச் செய்தனர்.

**பிள்ளையுறந்தையுடையார்** — எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

**பிள்ளை பிள்ளையாழ்வான்** — அநந்தாழ்வான் திருவடி சம்பந்தி. கூரத்தாழ்வான் சீடர்.

**பிள்ளைராஜ மகேந்திரப் பெருமாளரையர்.** எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

**பிள்ளைலோகாசாரியர்** — வடக்குத் திருவீதிப்பிள்ளையின் குமரர். இவர் குரோதன வருஷம் ஐப்பசிமாதம் திருவோணத்தில் பிறந்தவர். அழகிய மணவாள நயினார்க்குத் தமயன். துருஷ்கர் கலகத்தால் பெருமாள் நாய்ச்சிமாருடன் வெளியேறின பொழுது பெருமாளைப் பிரிதலாற்றாது தாமும் முதலிகளுடன் புறப்பட்டுச் சோதிடக் குடியென்னும் கிராமத்தில் நோய் சாத்திக்கொண்டு விளாஞ்சோலைப் பிள்ளையைத் திருவனந்தபுரத்தமர்த்தித் தாம் திருநாட்டிற்கு எழுந்தருளினவர். இவர் திருவடிகளில், கூரகுலோத்தமதாசர், மணப்பாக்கத்து நம்பி, கொல்லிக்காவல் தாசர், கோயிலண்ணர், திருவாய்மொழிப் பிள்ளையவர் தகப்பனர் அண்ணர், விளாஞ்சோலைப் பிள்ளை ஆச்ரயித்தனர். இவர்செய்த நூல்கள் ரஹஸ்யத்திரயம், தத்வத்திரயம், ஸாரசங்கிரகம், ஸ்ரீ வசன பூஷணம்.

**பிள்ளைவழக்கு** — தப்பாமல் நிமித்தஞ் சொன்னூர்க்கு வஞ்சியாதே பெறு முறைமையைச் சொல்லியது. (பு - வெ.)

**பிறப்பு** — (எ) தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன தாவரம், இவற்றின் யோனி பேதம் எண்பத்து நான்கு நூறுயிரம், அவையாவன தேவர் பதினுன்கு நூறுயிரம், மக்கள் ஒன்பது நூறுயிரம், விலங்கு பத்து நூறுயிரம், புள், பத்து நூறுயிரம், ஊர்வன பதினொரு நூறுயிரம், நீர்வாழ்வன பத்து நூறுயிரம், தாவரம் இருபது நூறுயிரம். அன்றித் தேவர் பதினுறு நூறுயிரம் எனவும், தாவரம் பதினெட்டு நூறுயிரம் எனவும் கூறுவர்.

**பிறர் மனைத்துயின்றமை விறலி கூறல்** — பரத்தையர் சேரியிடத்துத் தலைவன் தங்கினபடி இத் தன்மைத்தெனப் பாணிச்சி எடுத்துச் சொல்லியது. (பு - வெ - பெருந்)

**பிறவாநெறிகாட்டியார்** — திருமலைராயன் சமஸ்தானத்திருந்த புலவரில் ஒருவர்.

**பிறிதிநவிற்சியணி** — கருதிய பொருளை அதற்குரிய விதத்தாற் கூறுது மற்றொரு விதத்தாற் கூறுதலும், கபடத்தினுல் தன்னுலிச்சிக்கப்பட்டதைச். சாதித்தலுமாம். இதனைப் பரியாயோக்தாலங்கார மென்பர். (குவல.)

**பிறிதின் குணம் பெறலணி** — அஃதாவது, ஒரு பொருளானது தன் குணத்தை யிழந்து பிறிதொன்றின் குணத்தைக் கவர்தலாம். இதனை வடநூலார் அதத்குணலங்கார மென்பர்.

**பினகம்** — 1. இது சிவதனு. இது எழுதலைகளும், பெரிய வுடலும், கூரான கோரப்பற்களும், கொடிய விஷமுள்ள நாணினுல் சுற்றப்பட்டதும், ஆனது. (பாரா - அநு - ம்.)

2. திரிபுர விஜயத்தின் பொருட்டுக் கோபங்கொண்ட சிவபெருமான் தம் கரத்திலிருந்த சூலத்தை வளைக்க அது வில்லாய் இப் பெயராலழைக் கப்பட்டது. (பார - சாந்.)

**பிணுகினி** — இது சிவமூர்த்தியின் பிணுகத்தின் வழி வந்தபடியால் இப் பெயர் பெற்றது. பாலாறு, செய்யாறு இவ்விரண்டிற்கும் நடுவிலிருத்தலால் இதனை வெண்ணெய்நதி யென்பர். இது ஔவை தெய்வீக மகாராஜன் கல்யாணத்திற்கு வெண்ணெய் கொண்டுவரச் செய்தலால் வெண்ணெய் நதியாயிற் றென்பார். தெய்வீக மகாராசனைக் காண்க. நந்திக்குச் சிவமூர்த்தி அபிஷேகஞ் செய்விக்க அழைப்பித்த தென்பர் (பெண்ணைநதி புராணம்.)

**பின்சென்றவல்லி** — கரம்பனூர் அம்மை. திருவரங்கப் பெருமாளைத் துருக்கர் கொண்டு போகையில் பெருமாளுடன் சென்று பெருமாளினிலை யறிவித்தவள்.

**பின்பழகிய பெருமாள் ஜீயர்** — நம்பிள்ளை திருவடி சம்பந்தி.

**பின்வருநிலை** — முன்வருஞ் சொல்லும்பொருளும் பல விடங்களில் பின் வரில் பின்வருநிலை. (தண்டி.)

**பின்வரு விளக்கணி** — அஃதாவது முன் வாக்கியத்தில் வந்த விளக்கச் சொல்லேனும் பொருளேனுஞ் சொல்லும் பொருளுமேனும் பின்வாக்கியங்களில் வருதலாம். இதனை வடநூலார் ஆவர்த்தி தீபகாலங்கார மென்பர்.

**பின்றேர்க்குரவை** — இட்டவீரக் கழலினையுடையான் தேரின்பின் செறிந்த தொடியினையுடைய பாணிச்சியர் வீரரோடு கூத்தாடியது. (பு வெ.)

2 பெரிய கழல் வீரரோடு விளர்த்த வளையினையுடைய பாணிச்சியர் பெரிய மேம்பாட்டினை யுடையான்றனது தேரின் பின் ஆடியது. (பு. வெ.)

**பின்னிலை முயறல்** — தலைவி முன்பு தோற்றதன் அழகை நச்சி இரந்து பின்னிற்றலை மேற் கொண்டது. (பு. வெ. பெருந்திணை).

**பிக்ஷாடனமூர்த்தம்** — தாருகவனத்து இருடி பத்தினிகள்கொண்ட செருக்கை அடக்கக்கொண்ட மோகனத்திருவுரு. இவ்வுருவைக்கண்டு தாருகவனத்து இருடிபத்தினிகளும் மோகினி யுருக்கொண்ட விஷ்ணுமூர்த்தியும் மயங்கினர் என்பர் சைவர்.

**பிக்ஷுக்கள்** — அச்மகுட்டர்-இவர்கள் கல்லால் தான்யத்தைக் குத்தி யெடுப்பவர். மரீசிபர் - சந்திர கிரணத்தைப் பானஞ் செய்து திருப்தியடைபவர். பரிப்ருஷ்டிகர்-ஒருவன் கொடுப்பதை வாங்கி யுண்பவர். வைகஸிகர்-பெரியோர்க்கிட்டு மிச்சத்தை யுண்போர். பிரஸங்கியானவர்கள் அக்காலத்திற்கு வேண்டியமட்டும் எடுத்துக்கொள்வோர். (பா - அச்.)

## பீ

**பீகா**—எலியினத்தது. அமெரிகாவைச்சார்ந்த கயான முதலிய இடவாசி. (62) அடி நீளம் (1) அடி உயரம் நிறம் பழுப்பு உடலிற் புள்ளிகள் வால் குட்டை, நீர்நிலைகளை யடுத்து வளையில் வசிப்பவை. தண்ணீரில் நீந்தும். இரவில் இரை தேடும் சாக பக்ஷணி. இது, தனக்குவேண்டிய ஆகாரத்தை வளையில் சேமித்து வைத்துக் கொள்கிறது.

**பீச்சாங்குழல்** — 1. இது ஒரு புறம் வாய் குவிந்தும் ஒருபுறம் வாயகன்றும் உள்ள நீரெறியுங் கருவி. இது உட்டுளைக் கருவி. இதற்குள் அக் குழைக்குச் சரியாய் ஒரு காம்பமைத்து நீரையிழுக்க நீர் மேலேறும். அதைக் கீழமுத்த நீர் சிதறி யோடுவது.

2. ஒரு வாய்க்குவிந்த குழலின் நுனி குறுகிச் சிறு துவாரமுள்ளதா யிருக்கும். இதற்குள் மேலும் கீழுமாக இழுக்கத்தக்க தாய்க்காற்றை யிழுக்கவும் இழுத்தபொருள்மேல் போகாமலும் சுற்றிய ஒருதடையுடன் கூடிய கொம்பு. அதனை திரவப்பொருள்களில் போட்டு இழுத்தால் திரவம் கொள்ளும், தள்ளின் பீச்சும் தன்மைவாய்ந்த கருவி.

**பீடபூமி** — பூமி மட்டத்திற்குச் சற்று உயர்ந்திருக்கும் பூபாகத்திற்குப்பீடபூமி என்று பெயர்.

2. சாதாரண பூமியின் பரப்பிற்கு மேல் மிகவுயர்ந்து மேடு பள்ள மில்லாததாகவுள்ள சமபூமி. இது பெரும்பாலும் மலையடுத்து இருக்கிறது. இப் பீடபூமிகளுள் ஆசியா கண்டத்தினிடையி லுள்ள பாமிர்பீடபூமி கடல் மட்டத்திற்கு (11) ஆயிரம் அடிமுதல் (22) ஆயிரம் அடியளவு உயர்ந்திருக்கிறது. சில சமதரைகள் புல்வெளிகளாகவும், சில சமவெளிகள் பல

வகை விருக்ஷவகைகள் உள்ளன வாகவும் இருக்கின்றன. இவ்வகையான பூப்பிர தேசத்தைச் சமவெளிகள் என்பர்.

**பீடன்** — நரகாசுரன் சேநாபதி.

**பீதகற்பம்** — 1. சிவ பெருமான் பீதவர்ணமாய் விளங்கிப் பீதாங்கியைப் படைத்தனராதலால் அப்பெயர் பெற்றது.

2. பிரமன் சிவமூர்த்தியை யெண்ணித் துதித்துக் காயத்திரி பெற்ற கற்பம்.

**பீதாம்பரப் புலவர்** — இவர் யாழ்ப்பாணத்து நீர்வேலியூரினர். தமிழ்நூற் பயிற்சியுள்ளவர். மறைசைக் கலம்பகம், மறைசைத் திருப்புகழ், நீர்வை வெண்பா முதலிய செய்தவர்.

**பீபற்சு** — அருச்சுனன்.

**பீமகருமன்** — திருதராட்டிரன் புத்திரன்.

**பீமசேநன்** — 1. ஒரு காந்தருவன். (பா-ஆதி.)

2. ரிக்ஷன் குமரன். இவன் குமரன் பிரதீபன்.

3. அபிமன்னன் பௌத்திரன்.

4. பாண்டுவிற்குக் குந்தி தேவியிடம் வாயு அம்சத்தாற் பிறந்த குமரன். இவன் குழந்தையா யிருக்கையில் குந்திதேவி இவனை எடுத்துக் கொண்டு ஒரு மலை மீது ஏறினள். இவளிடம் இருந்த குழந்தையாகிய வீமன் வழுவி மலையில் இருந்த பாறைமீது விழுந்தனன். அதனால் அங்கிருந்த கரும்பாறைகள் தூள்களாயின. இவன் ஆகாயவாணியால் இடப்பட்ட பெயரை யுடையவன். தன்தந்தை இறந்தபின் பெரிய தந்தையாகிய திருதராட்டிரனால் வளர்க்கப்பட்டு வில்வித்தை முதலியவற்றைக் கற்று வருகையில் துரியோதனன் இவனிடத்தில் பொறாமை கொண்டு இவனைப் பலவிதத்தில் கொல்ல எண்ணி அன்னத்தில் விஷமிடுவித்தும், பாம்பை விட்டுக் கடிக்கச் செய்தும், கங்கையில் வசிநாட்டிக் குதிப்பித்தும், பின்னும் பல கொடுமைகள் செய்தனன். இவற்றிற்குத் தப்பித் தங்களுக்குப் பெரிய தந்தை தந்த இடத்தில் இருந்து துரியோதனன் தந்தையை ஏவி வருவித்த காலத்துச் சென்று அரக்குமாளிகையில் இருந்து அது தீப்பட்டு எரிந்த காலத்துத் தீக்குத் தப்பிச் சகோதரரையும் தாயையும் தூக்கிப் பிலத்தின் வழிச்சென்று இடும்பன் வனம் சேர்ந்தனன். அங்கு இடும்பன் இவர்கள்வந்த அரவங்கேட்டு இடும்பியை அனுப்ப அவள் இவனிடம் ஆசை கொண்டிருந்தனள். இதனை அறிந்த இடும்பன் வீமனுடன் யுத்தத்திற்கு வர அவனிடம் போரிட்டுக் கொன்று தாய் சொற்படி இடும்பியை மணந்து கடோற்கசனைப் பெற்று ஏகசக்கிரபுரத்தில் தாயுடன் சென்று வசித்துப் பகாசுரனைக் கொன்று சராசந்தனிடம் பதினைந்துநாள் போரிட்டு வென்று அவனால் சிறை பட்டிருந்த நூறுபெயரைச் சிறைநீக்கித் திரௌபதியுடன் இந்திரப்பிரத்தம் வந்து சாம்பிராச்சியத்துடன் வாழ்ந்திருக்கையில் பெரியதந்தை வருவிக்கச் சென்ற தமயனுடன் சென்று தமயன் நாடு முதலியவற்றைத் தோற்று இருக்கையில் துரியோதனன் ஏவலால் அவன் தம்பியர் திரௌபதியை அவமானப் படுத்துகையில் பல கொடுஞ்சபதங்கள் செய்து நாடு நீங்கிக் காடடைந்து திரௌபதி விரும்பிய மந்தார மலரின்பொருட்டு அளகைசென்று அநுமனுடன் போரிட்டு அவனை நட்புக்கொண்டு தன்தம்பியின் இரதத்தில் கொடியாயிருக்க வரம்பெற்றுப் புட்பத்துடன் மீண்டு மணிமாலன், சலேந்திரன், புண்டரீகன், கிம்மிராசுரன் முதலியவரைக்கொன்று பாம்பாயிருந்த நகுஷனால் விழுங்கப்பட்டு அந்நகுஷனுக்கு இருந்த தருமசந்தேகத்தை நீக்கிய தமயனால் விடுபட்டு நகுஷன் சாபத்தைநீக்கி அஞ்ஞாத வாசங்கழிந்தபின் நாடுகொடாது யுத்தத்திற்குவந்த குருமக்களுடன் போரிடுகையில் துரோணரைப் பதின் மூன்றாநாள் யுத்தத்தில் தேருடன் ஆகாயத்தில் வாரியெறிந்தும், அசுவத்தாமன் ஏவிய நாராயணாஸ்திரத்திற்கு அஞ்சாது போரிட்டுக் கடைசியில் வணங்கியும், துச்சாசனைப் பதினேழாநாள் யுத்தத்தில் கதா யுதத்தால் கொன்றும், பதினெட்டாநாள் யுத்தத்தில் துரியோதனனுடன் போரிடுகையில் கண்ணன் குறிப்பாகக் காட்டிய இடங்கண்டு துரியோதனனை அடித்துக் கொன்றவன். தருமர்செய்த அச்வமேதத்திற்குப் புருஷாமிருகத்தை அழைக்கச் சென்று அழைத்த காலத்தில் (௪) காதம் முன்னே சென்றால் வருகிறேன் அல்லா விடின் உன்னைப் பக்ஷிப்பேன் என உடன்பட்டு ஒருகல் விட்டெறிந்து சிவாலயம் தீர்த்தமுதலிய உண்டாக்கி முன் செல்லி மீண்டும் புருஷாமிருகம் சமீபமாக வரக்கண்டு பலகற்கள் விட்டெறிந்து முன்சென்று தம் நாட்டெல்

லையில் ஒருகாலும் புருஷாமிருகத் தெல்லை யில் ஒரு அடியும் வைக்கையில் மிருகம் பிடித்துக்கொள்ளத் தருமரிடம் நியாயம் கூறி அவர் தீர்ப்பின்படி புருஷாமிருகத் திற்குப் பாதிச் சரீரமளித்துத் தருமருக்கு முன் சுவர்க்க மடைந்தவன். இவன் கும ரன் சுதசோமன், இவனுக்குக் காலியிடம் சர்வகேதனும், சலந்தரையென்னும் தேவி யிடம் சுகுணனும் பிறந்தனர். இவனுக் குச் சிங்கக்கொடி, இவனுக்கு இடும்பியி டம் கடோற்கசன் பிறந்தனன். இவன் வெடுவெடுத்த சொல்லாலும் மிக்க ஊணு லும் அருச்சுநனுக்குப் பின் உயிர் நீங் கினன்.

**பீமசோழன்** — இவன் பாண்டியன் புத்திரி யாகிய வித்யுத்லதை யென்பவளை மணந்து அநேக திருப்பணிகள் செய்து எழுபத் தேழுவருஷம் அரசாண்டு இராஜ ராஜேந் திர சோழனைப்பெற்று நற்கதி யடைந் தவன்.

**பீமநதி** — ஒரு தீர்த்தம்.

**பீமநாதன்** — கைலாயத்து நிருதி திக்கில் காவலாளி.

**பீமபலன்** — ஒரு அக்னி (பார - வந).

**பீமவிந்து** — திருதராட்டிரன் குமரன்.

**பீமபீடம்** — சத்திபீடங்களில் ஒன்று.

**பீமரதன்** — 1. திருதராட்டிரன் குமரன்.

2. யதுவம்சத்து விக்ருதி குமரன். இவன் குமரன் நவரதன்.

3. கேதுமான் குமரன்; இவன் குமரன் திவோதாசன்.

**பீமவேகன்** — திருதராட்டிரன் குமரன்.

**பீமர்** — 1. சிவமூர்த்தியின் திருநாமங்களில் ஒன்று.

2. ஆகாசாதிட்டான தேவர்; இவர்க்குக் கலவிகரணர் எனவும்பெயர். இவரது சத்தி கலவிகாணி.

**பீமாதி** — ஒரு நதி. பீமநதி யென்பர்.

**பீமவரது** — திருதராட்டிரன் குமரன்.

**பீமன்** — 1. ஏகாதசருத்ரருள் ஒருவன். பூத னுக்குச் சுரபியிடம் உதித்த குமரன்.

2. (ச.) விஜயன் குமரன்.

3. (ச.) சகதேவன் குமரன். இவன் குமரன் சடசேநன்.

4. ருக்ஷன் குமரன். பிரீதிபன் தந்தை.

5. விதர்ப்பராசன். இவன் மகள் தம யந்தி.

6. கும்பகர்ணனுக்குக் கற்கடி எனும் தைத்தியப் பெண்ணிடம் பிறந்து தன் தாயால் தந்தை இறந்தமையறிந்து தந்தை யைக்கொன்ற இராமனுடன் போரிட எண்ணிப் பிரமனைநோக்கித் தவம்புரி ந்து பல வரமடைந்து பிரியதர்மன் எனும் அரசனைப் பிடித்துச் சிறையிலிட அரசன் சிறையில் சிவபூசை செய்கையில் வேவு காரர் அரசன் உன்னைக் கொல்ல எதோ செய்கிருனென்று கூறக்கேட்டு அரசனி டம் ஆயுதபாணியாய்ச் சென்று நீ என்ன செய்கிருயென் அரசன் சிவபூசை செய் கிறேனென்று கூறுகையில் உக்ரரூபங் கொண்ட சிவபெருமானுல் கொல்லப்பட் டவன். (சிவமகா புராணம்.)

7. பாண்டுபுத்ரன்.

8. விதர்ப்பதேசாதிபன்.

9. அக்னி விசேஷம்.

10. இநீநன் புத்ரன், துஷ்யந்தனுடன் பிறந்தான். (பார - ஆதி)

**பீமேசுரம்** — வசவர் பூசித்த தலம்.

**பீமை** — 1. சத்தியைக் காண்க.

2. ஒருநதி, இது திரிபுராரியாகிய சிவ மூர்த்தியின் தேகத்தின் வியர்வையிற் றேன்றிய தென்கிருர்கள்.

**பீலிவளை** — வளைவண்ணனென்னும் அரசன் மகள். காவிரிப்பூம் பட்டினத்துக் கழிக் கானற்சோலையில் நெடுமுடி கிள்ளியுடன் கூடிக் கருவுற்றுத் தந்தைநகர் அடைந்த வள். (மணிமேகலை)

**பீலீகரோகம்** — மேடு, பள்ளம், வாய்க்கால் முதலியவைகளை வேகமாகத் தாண்டல், அதிநடை, உண்டபின் வேகமாக வோடு தல், இவற்றால் இருதயத்திற் கிடபாகத்தி லுள்ள பீலீகம் குலுங்கும் இதன் மேல் பெருந்திண்டி, பகல் நித்ரை, அசீரணம் (கூ) வேகங்களை யடக்கல் இவை முதலிய வற்றால் பீலீகம் தன் ஸ்தானத்தை விட்டுச் சரிந்து பலவித உபத்திரவத்தைச் செய்து கட்டிபோல் தோன்றும். இது வாதபீலீ கம், பித்தபீலீகம், சிலேத்மபீலீகம், திர் தோஷ பீலீகம், அசாத்ய பீலீகம் எனப் பல. இவற்றை லவணச்சூரணம், யவாக்ஷா ரக்குழம்பு, சூலைக்குடாரக் குளிகை முத லிய வசமாக்கும். (ஜீவா.)

**பீவரி** — 1. விதேகராசனைக் காண்க.

2. ஒரு யோகினி, பித்ருக்களைக்காண்க. சுசிகன் தேவி.

**பீனருஷி** — சுமத்திரருஷிக்கு ஒரு பெயர்.

**பீஜாபஹாரிணி** — ஆண்பெண்களின் சுக்ல சோணிதங்களை அபகரிப்பவள்.

**பீஷணன்** — 1. காசிராசனுக்குச் சேகவன்; சந்திரமதி சிசு அத்தி செய்தனளெனத் தம் அரசனிடம் விட்டவன்.

2. ஒரு அரக்கன், பகாசுரன் தம்பி.

**பீஷ்மகன்** — 1. குண்டினபுரத்து அதிபதி.

2. இருக்குமணியின் தந்தை. கிருஷ்ணன் மாமன். இவன் குமரன் இருக்குமி, உருக்மீதரன், உருக்மீபாகு, உருக்மீகேசி, உருக்மீநேத்ரன், ஒருபெண் (இருக்மணி) உருக்மணி.

**பீஷ்மர்**—(சங்.) சந்தநுகுமரர். தாய் பாகீரதி. இவர் முற்பிறப்பில் பிரபாசன் என்னும் வசு. பிரமன் சாபத்தால் பாகீரதி வயிற்றில் உதித்தவர். பரசிராமரிடம் வில்வித்தை கற்றவர். இவருக்கு முதற்பெயர் காங்கேயன். தந்தை, செம்படவர் அரசன் குமரியை மணஞ்செய்து கொள்வதின் பொருட்டுத் தாம் இனி மணஞ்செய்து கொள்ளுகிறதில்லையென்று சூளுரைத்தமையால் இப்பெயர் அடைந்து தந்தையால் புண்ணிய உலகப்பிராப்தியும், யமவாதனையின்றிச் சுகமாய் நினைக்கும் போது உயிர்நீக்கவும், வரம்பெற்றவர். அம்பையின் பொருட்டு ஆசாரியராகிய பரசிராமரிடம் போரிட்டு அவரைக் களிப்பித்தவர். பாரதயுத்தத்தில் பத்துநாள் யுத்தஞ்செய்து சிவேதனை முதனாள் வஞ்சனையாற் கொன்று பத்தாநாள் தம்மைக் கொல்ல உருமாறிவந்த சிகண்டி முன்னிற்க ஆயுதம் தொடாது நின்று அருச்சுநன் பாணத்தால் மூர்ச்சையடைந்து பாரதப்போர் முழுதும் சரசயனத்து இருந்துகண்டு உயிர் நீத்தவர். இவர்க்குப் பனைமாலை, இவர் வசுவாயிருந்தகாலத்து வசிட்டரால் இச்சாபம் அடைந்தார் என்ப. இவர் தியா என்கிற வசு என்பர். தியாவைக் காண்க.

**புகலர்** — ஒரு இருடி.

**புகழனர்** — அப்பர் சுவாமிகளுக்குத் தந்தையார். இவர் தேவியார் மாதினியார்.

**புகழாப் புகழ்ச்சி** — இது பழித்தாற் போலும் பாகு பாட்டால் ஒன்றற்கு மேம்பாடு தோன்றவுரைப்பது. இதனை வஞ்சப் புகழ்ச்சியணியெனவும் வியாஜஸ்துதியலங்கார மெனவுங் கூறும். (தண்டி.)

**புகழேந்திப்புலவர்** — இவர் தொண்டைநாட்டுக் களந்தைப்பதியாகிய பொன்விளைந்த களத்தூரிற் பிறந்தவர். இதனை "மாலார்களந்தைப் புகழேந்தியும் தொண்டைமண்டலமே" எ-ம், ஐயன்களந்தைப் புகழேந்தி எ-ம், காரார்களந்தைப் புகழேந்தி எனவுங் கூறியதனானும் அறிக. இவரை முதலில் ஆதரித்தவன் முரணை நகர்க் கதிபனாகிய சந்திரன் சுவர்க்கியெனுஞ் சிற்றரசன். இவ்வரசனைப் புலவர் தாம்பாடிய நளவெண்பாவில் பலமுறை புகழ்ந்திருக்கின்றனர். இம்முரணைநகர் உறையூர்ப் புறத்துமள்ளுவ நாட்டின் கண்ணது. இவர் செஞ்சியர் கோனாகிய காடவர்தலைவன் சொற்றந்தையைப் புகழ்ந்து ஓர் கலம்பகம் பாடினர் என "காரார்களந்தை யெனும்" தொண்டைமண்டல சதகத்தாலும், இவர் அக்கலம்பகத்து "நையும்படியே நங்கொற்ற நங்கோன் செஞ்சிவரைமீதே, யையம்பெறு நுண்ணிடை மடவாயகிலின் றூபமுகிலன்று, பெய்யுந்துளியோ மழையன்று பிரசத்துளியே பிழையாது. வையம்பெறினும் பொய்யுரைக்கமாட்டார் தொண்டை நாட்டாரே" என்பதாற் றெரிகிறது. இவர் இதற்குப்பிறகு பாண்டிமண்டலமடைந்து அப்பாண்டியன் சமத்தானத்து வித்வானாயமர்ந்து பாண்டியனிடத்து விக்ரமசோழனுக்குப் பெண்கேட்கவந்த ஒட்டக்கூத்தர் சோழனைச் சிறப்பித்து "கோரத்துக் கொப்போ" எனப்பாடக் கேட்டு இவர் "ஒருமுனிவனேரியிலோ வுரைதெரித்ததம்மானே, ஒப்பரிய திருவிளையாட் டெறந்தையிலோ வம்மானே, திருநெடுமாலவதாரஞ் சிறுபுலியோ வம்மானே, சிவன்முடியி லேறுவதுஞ் செங்கதிரோ வம்மானே, கரையெதிரல் காவிரியோ வையையோ வம்மானே, கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ வம்மானே, பரவைபணிந்ததுஞ் சோழன் பதந்தனையோ வம்மானே பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதேயம்மானே" என்ற பாடலைக் கூறினர் அதைக்கேட்ட கூத்தர், பின்னும் சோழனைப் புகழவேண்டி "வெற்றி வளவன் விறல்வேந்தர் தம்பிரான் என்று முதுகிற் கிடான் கவசம் துன்றும்", எனக்கூறிச் சற்று ஆலோசிக்கையில் புகழேந்தியார் "வெறியார் தொடைகமழு மீனவர்கோன் கைவேல் எறியான் புறங்கொடுக்கினென்று" எனக் கூறி முடித்தனர். தாம் கூறியவற்றிற்கு மாறாகக் கூறிய புகழேந்தியார்மீது ஒட்டக்கூத்தர்க்குப் பகைமையுண்டாயிற்று. பின்னர் பாண்டியன் பெண் கொடுக்கச் சம்மதித்தபடியால்

சோழன் தன் சமத்தான வித்வானை இரா
ஜகாரியத்திலிருத்தி மணத்தின் பொருட்டு
மதுரைக்குச் சென்று பாண்டியன் புத்தி
ரியை மணந்தனன். பாண்டியன் தன்
குமரிக்குக் கொடுத்த சீதனப்பொருள்க
ளுள் ஒருவராகப் புகழேந்திப் புலவரை
யும் கொடுத்தனன். சோழன் அச்சீதனப்
பொருள்களை முன்னதாக அனுப்புகையில்
புகழேந்திப்புலவரையும் முன்னம் அனுப்
பினன். சோணுடுவந்த புகழேந்திப் புல
வரை ஒட்டக்கூத்தர் கண்டு முன்பு தம்மை
அவமதித்ததை மனங்கொண்டு சிறையி
லிட்டனர். சிறையிலிருந்த புகழேந்தியார்
சிறைச்சோறு வேண்டாது அச் சிறையின்
சாளரவழியாக அந்நாட்டுப் பெண்கள்
தண்ணீர்க்குச் செல்வது நோக்கி அவர்கள்
காதுக்கினிமையாய்ச் செம்பாகமாக மகா
பாரதக்கதைகளிற் சிலவற்றை அல்லி
அரசிமாலை முதலியவாகப் பாடிவந்தனர்.
இக்கதைகளைக் கேட்கும்பெண்கள் நாடோ
றும் கொடுக்கும் அரிசி காய்கறிகளைத்
தாம் சமைத்துண்டு மிகுதியைக் காவற்
சேவகர்களுக்குக் கொடுத்துவருவர். சேவ
கர்களும் இவரிடத்து அன்பு மிகுந்து வந்த
னர். சோழன் கல்யாணம் முடிந்து மனைவி
யுடன் நகரமணுகி ஒரு நாள் யானைமீது
பவனிவந்தனன். அச்சிறப்பைக் காணு
மாறு சிறைச்சாலைமீது நிற்கும் புகழேந்தி
யாரைக் கூத்தர்க்குக் காட்டி இப் புலவர்
சிறந்தவரன்றோ என் வினவுகையில் கூத்
தர் "மானிற்குமோ" என்னுங் கவிகூறப்
புகழேந்திப்புலவர், சோழனை நோக்கி அக்
கவியை வெட்டிப்பாடவோ அல்லது ஒட்
டிப்பாடவோ வென்னச் சோழன் கூத்தரி
டம்வைத்த அபிமானத்தால் ஒட்டிப் பாடுக
என்ன, புலவர் "மானவனுனந்தவாள
ரிவேங்கையும் வற்றிச்செத்த, கானவனு
னந்த வெரியுந்தழலுங் கனைகடலின், மீன
வனுனந்த வெங்கட் சுறவமும் வீசுபனி,
தானவனுனக் கதிரோனுதய முந்தார் மன்
னனே" எனப்பாடியும், சோழன் ஒட்டக்
கூத்தரிடம்வைத்த அபிமானத்தால் சிறை
மீட்கிலன். ஒட்டக்கூத்தப் புலவன் சோழ
னிடம் பரிசுபெறவரும் புலவர்களில் தாம்
கேட்ட வினுக்களுக்கு விடைதராதவர்க
ளைச் சிறையிலிட்டுவைத்து நவராத்திரியிற்
காளிக்குப் பலியிடுதல் வழக்கம். புகழேந்
திப்புலவர் அவ்வாறு அடைபட்ட புலவர்
களிற் சிலரை ஆராய்ந்தெடுத்து அவர்க
ளைக் கல்வியில் வல்லவராக்கிக் கூத்தர்,
சமத்தானத்தி லிவர்களை வருவித்தபோது
தம்மால் தேற்றுவிக்கப்பட்ட குயவன், அம்
பட்டன், கருமான், தச்சன், தட்டான்,
வேளாளன் ஆகிய இவர்களை அனுப்பினர்.
ஒவ்வொருவரும் அரசன் கொலுமுன்
சென்று கூத்தரை அவமதித்து வந்தனர்.
இது புகழேந்தியால் வந்ததென்றறிந்த
ஒட்டக்கூத்தர் அப்புலவர்க்குத் தக்க பரி
சளிப்பித்து அனுப்பினர். இச் செய்தி
யுணர்ந்த அரசன் தேவி புகழேந்திப்புலவ
ரை அரசன் சிறையினின்று விடுதலைசெய்
யாமை யுணர்ந்து அரசன் பள்ளியறைக்கு
வருகையில் வாயிற்கதவடைத்துத் தாழிட்
டுக்கொண்டனள். தான் பற்பல இனிய
மொழிகள் கூறியும் திறவாமையால் அர
சர்கள் தங்களுக்கும் தங்கள் மனைவியருக்
கும் ஊடல் நிகழுகையில் அவ்வூடலைப்
புலவர்களைக் கொண்டு தீர்த்துக் கொள்ளு
தல்போல் அரசன் ஒட்டக்கூத்தரை ஊட
லைத் தீர்க்க அனுப்பக் கூத்தர் சென்று
"நானேயினி" என்னுங் கவிகூறித் திறக்க
வேண்ட அரசி ஒட்டக்கூத்தர் பாட்டிற்கு
இரட்டைத் தாழ்ப்பாளென மற்றொரு
தாழிட்டனள். இது புகழேந்தியைச் சிறை
யிலிட்டதால் வந்ததென வுணர்ந்த அரசன்
புகழேந்தியாரைச் சிறையினின்று நீக்கித்
துனிதீர்க்க அனுப்ப, அவர் சென்று
"இழையொன்றிரண்டு வகிர்செய்த வற்
றொன்றிணையுமிடை, குழையொன்றிரண்
டுகட் கொம்பனையாய் கொண்டகோபந்
தவிர், மழை யொன்றிரண்டுகை மானு
பரணன், நின் வாயில் வந்தால், பிழை
யொன்றிரண்டு பொறுப்பதன்றோ கடன்
பேதையர்க்கே." எ-ம், "தீபங்கமழும்
பைங்கோதையன் விக்ரமசோழன் மன்னர்,
தீபன் புறங்கடைவந்து நின்றானின்றிருப்
புருவச், சாபங் குனியவிழி சிவப்பத்தலை
சாய்த்து நின்ற, கோபந்தணியன்னமே
யெளிதோநங் குடிப்பிறப்பே." எனவும்
கூற இக்கவியைக் கேட்டதும் அரசபத்
தினி ஊடல்நீங்கினள். அதுமுதல்சோழன்
புலவரைச் சமத்தானத்துப் பெருமையா
கவே வைத்து ஆதரித்து வந்தனன். இவர்
முரணைநகர் சந்திரன் சுவர்க்கி வேண்டு
கோளால் நளவெண்பா முடித்து அதனைப்
புலவர் முன்பு அரங்கேற்றுகையில் "மல்லி
கையே வெண்சங்கா" எனும்வெண்பாவில்
ஒட்டக்கூத்தர் மல்லிகை சங்காகவும்

வண்டுகளைச் சங்கநாதஞ் செய்வோனாகவும் கூறக்கேட்டுச் சங்கை ஊதுவோன் சங்கின் புறத்தூதுதலே வழக்கமன்றி மேற்புறத் தூதல் வழக்கமன்று. அவ்வாறு வண்டு தாதுமேற் புறத்தூதல் குற்றமெனப், புலவர் கள்ளுண்டு களித்தான் மயக்கால் அடிப்புற மேற்புற மறியானாதலின் மதுவுண்ட மதுகரங்கள் அவ்வகை ஊதினவெனவும், "செப்பிளங் கொங்கைமீர்" என்ற செய்யுளில் "திங்கட்சுடர்பட்டுக் கொப்புளங் கொண்டவான்" என்றதைக் கொப்புளமாயின் அதில் சீநீர் வடித லுண்டோவென்ன, ஆம் அதில் சீவடிதல் இல்லை சிலைநீர் வடிதலுண்டென்று அது பனிநீர் எனவுஞ் சமர்த்தித்துப் பிரசங்கமுடித்தனர். ஒருநாள் ஔவையார் இருவரையும் நோக்கி மும்மதிவரும்வகை ஒருகவி பாடக் கூறியயதற்கு "பங்கப்பழனத்துழு முழவர் பலவின் கனியைப் பறித்ததென்று, சங்கிட்டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண்டெறியுந்தமிழ்நாடா, கொங்கைக்கமரா பதியளித்த கோவே ராஜகுலதிலகா, வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கு மெலிந்த பிறைக்கும் விழிவேலே" எனக்கூறியிருந்தனர். ஔவையார் இவ்விருவர் அறிவின் நுட்பத்தை அறிவிக்க வேண்டிச் சமிஞ்ஞையாகச் சில குறிப்புகள் காட்டக் கூத்தர் "இவ்வளவு கண்ணிஞள்" என்று தொடங்கி முடித்தனர். புகழேந்தியார் "ஐயமிடுமினற நெறியைக் கைப்பிடிமின், இவ்வளவேயாயினு நீரிட்டுண்மின் — தெய்வம், ஒருவனே யென்றுள்ளுணர வல்லீரேல், அருவினை களைந்துமறும்"என்றனர். இவர் ஒட்டக்கூத்தர் தம்மீது வயிரங் கொண்டிருத்தலை எண்ணி அவரைக் கொல்ல ஒளித்திருக்கும் ஒருநாள், கூத்தர் நளவெண்பாவின் செய்யுளருமை எண்ணிக் கொண்டிருக்கையில் ஒட்டக்கூத்தரின் தேவிபோஜன வேளை கடத்தல் எண்ணிப் போஜனத்திற்கு வந்து அழைக்கக் கூத்தர் மறுத்தது கண்டு சீனிகலந்த பால் கொண்டுவருவேன் எனக் கூத்தர் புகழேந்தியின் வெண்பாவைப் பாலிற்பிழிந்து கொண்டுவரினும் உண்ணே னென்றதை அவ்விடம் கூத்தரைக் கொன்று பழி தீர்த்துக்கொள்ள வந்திருந்த புகழேந்தியார் கேட்டுப் பொருக்கென வெளிப்பட்டுப் பகைவிட்டு அன்பு பாராட்டி யிருந்தனர். இதனைக் கேட்ட சோழனும். அன்புபாராட்டி யிருந்தனன்.

இவ்விருவருடன் அரசன் ஒருநாள் திருநெய்த்தானஞ் சேவிக்கச் சென்று இருவரையும் பாடக் கூறக் கூத்தர் "விக்காவுக்கா" எனப் பாடி முடித்தனர். புகழேந்தியார் "தற்கோலிப்பூ சற்பாசத்தே, தப்பாமற் சாகைக்கே நிற்பீர், முற்கோலிக்கோலிப்பாவித்தே முட்டாமற் பூசித்தே நிற்பீர், வற்றுநெட் டோடைப் பாரைச் சேல்மைப்பூகத் தேறித்தாவிப் போய், நெற்றுநுற்றுலைப் பாகிற்சேர் நெய்த்தானத்தானைச் சேவித்தே"எனப் பாடினர். மற்றொருநாள் திருக்குறுங்குடிப் பெருமாளைப் பாடக் கூறக்கூத்தர் "திக்குளெட்டுக் கய"மெனப் பாடினர். புகழேந்தியார் "எட்டெழுத்தைக் கருத்திற் குறித்திட்டு நித்தம் பாவும். சிட்டர்கட்குத் திருப்பொற் பதத்தைச் சிறக்கத் தருமவ், வட்ட நெட்டைப் பணித்தற்ப நித்தற்கிடம் வாரிசப்பொ, குட்டினத்துக் குலந்தத்தி முத்தீனுங் குறுங்குடியே" என்று பாடினர். இராஜா துலாபுருட தானஞ் செய்தபோது பாடியது. "பொருந்தவொரு தட்டுமேருப் புகினு, மிருந்த திருத்தட் டெழாதாற் — றிருந்து, மறைபுக்க சொல்பயா வன்புறவுக்காக, நிறைபுக்க தெவ்வாறுநீ" எ.ம், புகழேந்தியார் சூதிற்றேவியை உயர்த்திப் பாடியது "பழியும் புகழுமெவர்க்கு முண்டா மிந்தப் பாரிலுனக், கழியுஞ்சிலையுங் கயலுமென்றேவ களங்கதுங்க, மொழியும் பொழுதெங்கள் பெண்சக்ரவர்த்தி முகத்திரண்டு, விழியும் புருவமுமாகி யிப்போதுன்னை வெல்கின்றனவே" எ-ம், இவர் ஒரு சமயத்தில் "தென்னவன் றென்னர் பெருமான் றிறன்மதுரை, மன்னவன் கோக்களிற்றின் வல்லிக்கும்—பொன்னி நாடாவிக்கும் வேந்தா மபயகுலன்மகளிர், தாலிக்கு மொன்றேதளை" எனப்பாடினர். மற்றொரு சமயத்தில் "சத்தம் பயிலும் புலவோர் கதலித்தண்டோட்டம்புகும், பித்தனிவ னென்பாரென்னைக் கண்டார் பெருத்துப் பணைத்துத், தத்தம் பிறகிடும்பார் வேந்தர் தங்கடடமகுட, சத்தமசத்தமாகுங் கொல்யானைச் சயதுங்கனே" என இவ்வாறு பல சமயங்களில் தனித்தனிக்கவிதைகள் பாடிச் சோழனாட்டிலிருந்து காலங்கழித்தனர். இவர் செய்த நூல்கள் நளவெண்பா, கொற்றந்தைக் கலம்பகம், உபமான சங்கிரகம் என்ப. "நானே யினிச்சொல்லி வேண்டுவதில்லை

நளினமலர்த், தேனேகபாடந் திறந்து விடாய்ச்செம் பொன் மாரிபொழி, மானே ரபயனிரவி குலோத்துங்கன் வாசல்வந் தால், தானேதிறக்கு நின்கைம்மலராகிய தாம்ரையே." சார்வபௌம பாண்டிய நண்டி நிமித்தமாகக் கோபித்து ஆரிய சேகரன் வாசலிலேயும் இந்தக் குறும்பு செல்லுமோ எனப் பாடியது. "கவியரசர் தாமுனிவு கொண்டாற் புகழ்கொள், புவி யரசர் சீருர் பொறுப்பர்—கவியரசர், உன் ஞல் முனியிலவர் பொருரோதுமவர்க், கெந்நாடுஞ் செல்லாததில்." ஆரியசேகர ணிடத்திற் போயிருந்து புத்தசமயத்தின் கடகம்யானை வாங்கி மீண்டு மதுரையில் வந்து பாண்டியன் வரிசையளிப்ப இருந்த பின் ஆரியசேகரன் பட்டானென்றுகேட்ட போது பாடியகவி. "அ ஆவிதியோ வடலா ரியர் கோமான், எ ஏவலராவிழிந்த நாள்- ஒ. ஒ, தருக்கண்ணிலுங் குளிர்ந்த தண் ணளிதந்தாண்ட, திருக்கண்ணிலுஞ் சுடு மோதீ" கதிர்காமத்து வேலர்முன்பாம்பை மயில்விடப் பாடியது "தாயரவைமுன் வருத்துஞ் சந்திரோதந் தனக்குள், வாய ரவை விட்டுவிடமாட்டாயோ—தீயரவைச் சீறுமயிற் பெருமாள் தென் கதிர்காமப் பெருமாள், ஏறுமயிற்பெருமாளே." இரா ஜாவைப்பாடாமல் ஒடக்காரனைப் பாடியது. "கயக்கரவி நானுங்கொழும்பிற்பிரசண்டா, கரரோர் கொடைச்செங்கை யீரரோ தன் மைந்தா; இயக்காநின்மார்பிற் செழும் புன்னையந்தார், இப்போது நீ நல்கினெண் பேதைதன்மேல், சயக்காமவேளம் புதை யாது முத்தின், தாமஞ்சுடா சந்தனபூசி ஞலும், தியக்காதுவேயுஞ் செவிக்கும், பொறுக்கும், தீயென்றுமூளாது திங்கட் கொழுந்தே."

பாண்டியன் வாசலில் வந்து அவன் புறப்படவில்லை யென்று பழியாகப் பாதி பாடி, அவன் வந்து வணங்கப் புகழாகப் பாதி பாடியது. "வண்ணீர்மை நூலுக் ககத்தியனுமிவ னென்பதெல்லாம், வெண் ணீர்மை யன்றிவிரகல்ல விக்ரம மாறன் செஞ்சொல், பண்ணீர்மைதேனும் பராக் ரமமாறன் பதங்கழுவும், தண்ணீர் குடித் தல்லவோ கும்பயோனி தமிழ் கற்றதே."

ஆரியசேகரன் ஆனையின்மேல் ஆயிரம் பொன்னும் வரவிட அந்த யானையைப் பாண்டியன் வந்து கேட்கப் பாடியது "பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்கும், காவலர் நிற்கும்படி வைத் தவா கண்டியொன்பதினும், மேவலர் மார் பினும்திண்டோளினும் செம்பொன் மேரு வினும், சேவெழுதும் பெருமாள் சிங்கை யாரியசேகரனே." சித்திரத்தனு மனைப் பாடியது. "புராதனமெண்ணுங் கவிப் புலவீரிந்த புன்குரங்கு, மாரவனம் விட் டிங்கு வந்ததென்னே வந்தவாறு சொல் வேன், தராதலமெண்ணுந்தமிழ் மாரனையு மித்தம்பியையும், இராகவனென்று மிலக் குவனென்று மிங்கெய்தியதே." வேம்பத் தூரார் சமுத்தி சொல்லப் பாடியது. "இந்து நுதலழகோ ரகுராமாவிவட்குக், கொந்து முடிமுகிலோ கோவிந்தா.— வெந்தி நல்சேர், வேலோவிழியிரண்டும் வேங்கடவாணுவயிறும், ஆலிலையோ நாராயணு."

**புகழ்ச்சோழநாயனர்** — சூரியவம்சத்தில் சோழர்குலத்தில் திரு அவதரித்துச் சிவ பக்தி மிகுந்தவராய்ச் சகல அரசரும் தமக் குத் திறைகொடுக்க வாழ்ந்திருக்கையில் அதிகன் என்ற மலைநாட்டரசன் தமக்கு அடங்காதிருக்கிருன் என்று மந்திரியால் அறிந்து அவனை அடக்கும்படி சேனைகளை அனுப்ப அச்சேனை வீரர் பகைவரை வென்று அவர்கள் தலைகளில் சிலவற்றைக் கொண்டுவந்து அரசன்முன் வைத்தனர். அரசன் அத்தலைகளில் ஒன்றில் ஒருசடை இருக்கக்கண்டு நான் சிவனடியார்க்கு அப ராதியானேன் என்று அத்தலையைத் தாம் பாளத்தில் ஏந்தித் தீவலம்வந்து ஸ்ரீபஞ் சாக்ஷரத் தியானத்துடன் தீப்புகுந்து முத் திபெற்றவர். இவர் பல அரசரைவென்று தமது புலிக்கொடியை மேருவில் நாட்டிய வர். (பெ-புராணம்.)

**புகழ்த்துணை நாயனர்** — இவர் செருவிலி புத்தூரிலிருந்த சிவமறையவர்குலச்சிரேட் டர். இவர் நாடோறும் விடாது சரார்த்த பூசை சிவபெருமான் சந்நிதியில் நடத்தி வருகையில் பஞ்சகாலம் வரப் பஞ்சத்தால் இளைத்தவராய்ச் சக்தியற்று அபிஷேகஞ் செய்யப்புகுந்த அபிஷேககலயத்தைச் சிவ பெருமான் திருமுடியில் கைசோர்ந்து நழு கவிட்டு நடுங்கி மூர்ச்சித்து விழுந்தனர். சிவபெருமான் இவர்க்கு அவ்விட நேர்ந்த சிறு நித்திரையிற்ருேன்றி அன்ப இப்பஞ் சம் நீங்கும்வரையில் நாடோறும் பீடத்தடி யில் ஒரு பொன்காசு வைப்போமெடுத் துக் கவலையொழிகவென அவ்வாறேபெற்

றுச் சிவபூஜை விடாது செய்து முத்தி பெற்றவர். (பெ. புரா.)

**புகழ்ந்தனர் பரவல்** — இன்னதொரு பதத்தைக் கிட்டுவோமாகப் பெரியபூமியிடத்து யாங்களெனச் சொல்லிக் கிட்டுதற்கரிய தெய்வத்தின் கட்டும் வீரக்கழலையுடைய பாதங்களைப் பணிந்தது (பு. வெ. படாண்.)

**புகழ்பொருளுவமையணி** — அஃதாவது, இரண்டு வாக்கியங்களுள் முன்னதிலுபமானமாகச் சொல்லப்பட்டதைப் பின்னதிலுபமேயமாக்கியும், உபமேயமாகச் சொல்லப்பட்டதை உபமானமாக்கியுஞ் சொல்லுதல். இதனை வடநூலார் உபமேயோபமாலங்காரமென்பர்; தண்டியாசிரியர் இதரவிதரமென்பர்.

**புகழ்விப்பிவர்கண்டன்** — பாணவம்சத்திற் பிறந்த ஒரு அரசன். இவன் முதலாம் விக்ரமார்க்கனுடைய புத்ரன். இவனுக்கு இரண்டாம் விஜயாதித்தன் என்று பெயருண்டு.

**புகார்** — காவிரிப்பூம்பட்டினம். இது கடல் கொண்டது. (சிலப்பதிகாரம்.)

**புகை** — இது, தீக்கு அறிகுறியாய் அது கொண்ட பொருளிடம் உண்டாகும் பொருள்.

**புகைக்கப்பல்** — நீராவி யந்திரசக்தியால் இலைபோன்ற சக்கிரங்கள் நீரைத்தள்ளிக் கொண்டு செல்லும் கப்பல். இது காற்றில்லாமலே செல்லும் வன்மையுள்ளது. ஒரு பெரிய கப்பல் அகன்ற பத்தடுக்குகளைப் பெற்று இருக்கும். மேல் மூன்று அடுக்குகளில் கப்பற்குரியவர்களும் வேலையாட்களுமிருப்பர். அடியில் சாமான்களின் கிடங்குகளிருக்கும், நடுவில் மனிதர்க்கு சௌக்யமான வீடுகள் போன்ற இருக்கை கொண்டிருப்பது.

**புகைக்கூடு** — வெப்பவாயுவால் நிரப்பப்பட்ட பட்டுப்பை. இயற்கையானவாயுவினும் இலேசாக இருத்தலால் இது ஆகாயக் கப்பலாய் ஆகாயத்தில் செல்லுகிறது. இதற்குள் பை ஒன்று உண்டு.

**புகைக்கூண்டு** — இது ஒரு பெரும்பட்டுப்பை. முழுதும் பின்னற்கயிறால் மூடப்பட்டு புகையால் நிரப்பப்பட்டது. ஆவி காற்றிலும் லேசானதால் அது ஆகாயத்தில் எளிதில் மனிதரையும் சுமந்து செல்லும்.

**புகையிலை** — 1. இது ஒருவிதச் சிறுசெடி. இது (3, 4) அடி உயரம், இலைகள் ஒன்றரை அங்குல நீளமும் (7, 8) அங்குல அகலமும் இருக்கும். இதனிலையே முக்கியமானது இந்தச் செடிகளினிலைகள் முதிர்ந்தபினிவைகளைச். செடியுடன் வெட்டி வெயிலில் (2, 3) மணிநேரம் வைத்து வதங்கியபின் (2,3) செடிகளை ஒன்றாகக்கோத்து நிழலில் உலர்த்துவார்கள். இவை 1 மாதத்தில் நன்றாய் உலர்ந்துபோம். அவைகளை எடுத்துக்காற்று நுழையாத இடத்தில் குவியலாகப்போட்டு வைக்கோலால் மூடுவர். இவ்வாறு (10, 12) நாட்கள் வைத்து எடுக்கின் இலைகள் கறுப்பு நிறமடைந்து மக்கியிருக்கும். இவற்றைக் கட்டாகக் கட்டுவர். இது, இந்துதேசப் பொருளன்று. இது அமெரிக்காவி லிருந்து ஐரோப்பா ஆசியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. இப்போது இந்தியாவில் கோதாவரி, கிருஷ்ணா, திருசிராப்பள்ளி முதலிய ஜில்லாக்களில் பயிரிடப் படுகிறது.

2. இது காரமும் நெடியுமுள்ள மயக்கப் பொருள். இது, கோதாவரி, திரிசிராப்பள்ளி, மதுரை முதலிய இடங்களில் பயிரிடப்படுகிறது. இதனை விதைத்து நட்டுப் பயிரிட்டிருக்கும் சமயத்தில் அறுத்துக் கொத்து கொத்தாக நிழலில் உலர்த்திப் பதப்படுத்துவார்கள். இதைப் பலவகைப் பதப்படுப்பர். மூக்குத்தூள், சுருட்டுப்புகையிலை, வாய்ப்புகையிலை எனப் பலவகை உண்டு

**புங்கனூர்க்கிழவன்** — இவன் தஞ்சாவூர் ஜில்லா சீர்காழி தாலூகாவிலிருந்த பிரபு. இவர் ஒரு கல்யாணஞ்செய்ய அதில் உண்டவர் பலர் செரியா நோய்கண்டு கண்டைபுரட்சியடைந்தார் என ஒருபுலவன் பாடக் கேட்டு மானம் பொறாது உயிர் நீத்தவன். புலவன் பாட்டு "வெண்ணையும் பார்த்தனைகண்ணையும் பார்த்துத்தன் மெய்யிற் பட்ட, புண்ணையும் பார்த்திரு நெடுமால் புங்கனூர்க்கிழவன், பண்ணையுஞ் சேலுகளுந்தட நீள்கயல் பாயுநெடுந் திண்ணையுங் கண்டைபுரட்டுங் கல்யாணத்திற் சென்றவர்க்கே." சோழமண்டல் சதகத்திலும் புகழப் பெற்றவர். (தமிழ்-நா-ச.

**புசுண்டர்** — 1. மதுவுண்டு அன்னங்கள் இரண்டு களிக்கும்போது சிவமூர்த்தி அவற்றைப்பார்க்க அந்த அன்னங்களிடம் சிவகலை காகவுருவத்துடன் பதிந்தது. அன்னம் இருபதுமுட்டைகளைப் பொரித்து இருபத்தோராவது ஒருகாகத்தைப் பொரித்தது. இதுவே புசண்டர் எனப் பெயருற்

றது. இப்புசண்டர் என்னும் காகம் வசிட்டரைக்கண்டு தன் வரலாறும் சதுர்யுகத்தில் தான் கண்ட அதிசயங்களையும், தன் ஆயுளில் பலமுறை தேவர் கடல் கடைந்ததும் விஷ்ணுமூர்த்தி பலமுறை அவதரித்ததும் கூறி உம்மைப்போல் எட்டு வசிட்டர்களைக் கண்டேன் எனவும் கூறினபக்ஷிஉருவாகிய இருடி, இவர் குமரர். உரோமரிஷியென்பர். (போகர்.)

2. ஒருகாலத்துச் சிவசந்நிதியில் சத்திகணங்கள் நடித்தனர். அச்சத்திகளின் வாகனங்களும் மதுக்களிப்பால் களித்தன. அக்காலத்தில் பிரமசத்தியின் அன்னங்கள் சண்டனென்னும் வாயசத்தைக் கூடிக் களித்திருந்து கருவடைந்தன. இதனை அறிந்த பிராமி அவ்வன்னங்களை நீங்கித் தியானித் திருந்தனள். காலாவதியில் அன்னங்கள் கருமுதிர்ந்து காகவுருவமானபுஜண்டர் முதலிய இருபத்தொரு குஞ்சுகளைப் பொரித்தன. இவ் விருபத்தொருவரும் பிராம்மியை யெண்ணித் தவமியற்றப் பிராமியினருளால் ஞானமடைந்து தம் பிதாவாகிய சண்டனைக் காணச் சண்டன் அலம்புதா சத்தியின் அருளால் கற்பகத் தருவில் இருக்க இருந்தனர். இக்கற்பகத்து இருக்கையில் புஜண்டர் ஒழிந்த மற்ற இருபதின்மரும் அநித்யமுணர்ந்து முத்தியடைந்தனர். புஜண்டர் தம்தேகத்துடன் கற்பகத்திருந்து வசிட்டரைக் கண்டு வார்த்தையாடுகையில் உம்மைப் போல் எட்டு வசிட்டர்களைக் கண்டேனென்றவர். (ஞானவாசிட்டம்.)

**புஞ்சன்** — ஒருநாகன். கத்ருதநயன்.

**புஞ்சிகஸ்தலை** — 1. வருணன் பெண்.

2. ஓர் அரம்பை; இவள் பாரனைக்கூடிக் கலாவதியைப் பெற்றனள்.

**புடவகை** — கஜபுடம் - (1000) வறட்டிகள், பன்றிப்புடம் - (50) வறட்டிகள், குக்கிடப்புடம் - (6) வறட்டிகள், காடைப்புடம் - (3) வறட்டிகளாலானவை.

**புடவேதை** — (௬) இராசியும், (௧0) பாகையும் வைத்து இதில் ஆதித்யன் முதலான கிரகங்களின் புடங்களைக் கூட்டி நின்றது வேதைப் புடமாம். இவ்விடத்துச் சந்திரனை யொழித்துக் கொள்ளப்படும். இந்த வேதைப் புடத்தை நாட்பார்க்கும்படியே பார்த்துக்கண்ட நாள், தான் கருதிய நாளாகில், அந்நாள் புடவேதை யென்று தவிரப்படும். (விதானமாலை)

**புட்கரபாகம்** — ஞாயிற்றுக்கிழமைக்கு (௧௧) அடி, திங்கட்கிழமைக்கு ($4\frac{1}{2}$) அடி, செவ்வாய்க்கிழமைக்கு (௬) அடி, புதன்கிழமைக்கு (அ) அடி, வியாழக்கிழமைக்கு (எ) அடி, வெள்ளிக்கிழமைக்கு ($4\frac{1}{2}$) அடி, சனிக்கிழமைக்கு ($4\frac{1}{2}$) அடி மேஷத்திற்கு (உ௧)ஆம் பாகம், இடபத்திற்கு (௧௪)பாகம் மிதுனத்திற்கு (உ௪) ஆம் பாகம், கர்க்கடகத்திற்கு (எ) ஆம் பாகம் பின் சிங்கமுதல் (௪)ம், தனுமுதல் (௪)ம் இவ்வடைவே புட்கரபாகமாம் இவ்வாரங்களில் கூறிய அடிகளிலும் இந்த ராசிகளில் இந்த பாகங்கள் உதிக்கும் காலங்களிலும் சுபகன்மங்கள் செய்யலாம். இவையன்றிச் சிலர் மேடத்திற்கு (எ, ௬) ஆம் பாகைகளும், இடபத்திற்கு (௯-௩) ஆம் பாகைகளும், மிதுனத்திற்கு (௯-அ) ஆம் பாகைகளும், கர்க்கடகத்திற்கு (௩-௧) ஆம் பாகைகளைப் புட்கரமாக கூறுவர். இப்படியே சிங்கதனுவாதி கொள்க. (விதானமாலை.)

**புட்கரம்** — 1. ஒரு தீர்த்தம்.

2. ஒரு மகாஸ்தலம்.

**புட்கரன்** — 1. வீமனது கதையால் இறந்த ஒரு அரக்கன்.

2. நளனைச் சூதாடும்படிசெய்து நாட்டைப் பறித்துக் கொண்டவன். பின்மறு சூதாடித் தான் முதலில்வென்ற நாடுமுதலியவற்றை நளனுக்கு விட்டு ஓடியவன்.

3. பரதன் குமரன்; இராமபிரான் கட்டளைப்படி காந்தருவநகர மாண்டவன்.

4. சிவநாம சங்கீர்த்தனத்தால் முத்தியடைந்த பக்தன்.

5. வருணபுத்திரன். பிரமலோசையிடம் மாலினியைப் பெற்றவன்.

6. சிவன் திரேதாயுகத்தில் நந்தியம்பதியில் இருந்த புண்ணிய வேதியன். யமன் தன் கிங்கரரை நோக்கிப் புட்கலன் என்பவனைக் கொண்டு வாருங்கள் என்ன படர்கள் இவனைக் கொண்டு செல்ல யமன் படரைச் சினந்துபுட்கரனைக்கண்டுகளித்து அவனையுபசரித்து அவனுக்கு நரகங்களைக் காட்டினன். புட்கரன் நரகவேதனைப்படு வாரைக்கண்டு கடவுளைத் துதித்து அவர்களை மன்னிக்கக் கேட்டு யமபுர நீங்கினவன். இவன் முதல் யுகத்தில் நரகலோகம் கண்டு மீண்டவன். (மகாபுரா.)

**புட்கலாவர்த்தம்** — ஒருமேகம் பிரமன் மூச்சிற்பிறந்த மலைகளின் சிறகிற் பிறந்தது.

**புட்கலை** — அரிகரப் புத்திரன் தேவி.

**புட்சன்** — விருகனுக்குத் தருவாட்சியிடம் உதித்த குமரன்.

**புட்சிபாரன்** — வச்சிரன் குமரன்; பாரியர் பிரபா, தோஷா.

**புட்பகந்தன்** — இவன், யமபடர் கையி லகப்பட அவ்யமபடர் திருக்குற்றாலவழி யாக இவனை அழைத்துச் செல்லல் கூடா தெனக் கேட்டுக் குற்றாலமெனத் துதி த்து முத்தியடைந்தவன்.

**புட்பகம்** — உதயணனுக்குரிய நகரங்களுள் ஒன்று. சேனைகளுடனிருந்து இதனைப் பாதுகாத்து வந்தவன். பிடிவீழ்ந்து இறந்தபின்பு வந்து ஓரிடத்தில் வாசவதத் தையும், உதயணனும் தனியே யிருத் தலை வயந்தகனலறிந்த இடவகன் இந் நகரத்திருந்த சேனைகளுடன் சென்று அவர்களைச் சூழ்ந்துகொண்ட வேடர்களை அகற்றிப் பாதுகாத்து வந்தனன். உதய ணனால் இடவகனுக்குக்கொடுத்த விருத்தி களுள் இந்நகரமும் ஒன்று.

**புட்பகாசை** — சத்தியைக் காண்க.

**புட்பகை** — 1. சோமன் நலங்கிள்ளிக்கு ஒரு பெயர்.

2. வரேணியன் தேவி.

**புட்பதந்தமுனிவர்** — இவர் யமபுரஞ்செல்ல அங்கு ஒருவன் தீப்பட்டு எரிதலைக்கண்டு அவன் சிவத்திரவியம் கவர்ந்தவன் என்று அறிந்து திருக்கைலையடைந்து சிவமூர்த் தியை அவன்மீது கருணைசெய்ய வேண் டினர். சிவமூர்த்தி முனிவரை நோக்கி அவன் மரபினர் யாரேனும் தீர்த்தயாத் திரை சென்று புண்ணியநதிகளில் நீரா டின் நீங்குவன் என்றனர். அதனல் முனி வர் இவன் மரபில் பிறந்து புண்ணியதீர்த் தமாடி அவனை நரகத்தில் இருந்து நீக்கி னவர்.

**புட்பதந்தன்** — இவன் கைலையில் இருந்த கணநாதன்; இவன் மாலியவான் என் னும் மற்றவனுடன் பகைத்து ஒருவரை யொருவர் யானையும் சிலம்பியுமாகச் சபித் துத் திருவானைக்காவில் சிவபூஜைசெய்து இறந்து சுவதேவன் என்னும் சோழனுக் கும் கமலவதிக்கும் குமாரனய்ப் பிறந்து தெய்வத் தச்சனல் குறையாக விடப்பட்ட திருப்பணியை முடித்து முத்திபெற்ற வன்.

**புட்பதேளட்டான்** — நாகன். கத்ரு குமரன்.

**புட்பமாகாண்டம்** — பிரசாபதியின் நந்த வனம். (சூளா.)

**புட்பவர்கனன்** — இவன் முற்பிறப்பில் வேடன். இவன் தன் மனைவியுடன் கூடி ஒரு தடாகத்திலிருந்த தாமரை மலர்களைப் பறித்துக் காசிக்ஷேத்ரத்து விலைபகர வாங் குவோரின்மையின் ஆண்டிருந்த ஒங்கார லிங்கத்தின் மேல் இட்டபலத்தினல் இப் பெயருடன் அரசனகப்பிறந்து சிவ பக்தி மானய்த் தவஞ்செய்து சிவபெருமான் பிரத்தியக்ஷமாய் ஒரு தாமரைமலர் தர அதி லேறிப் பலஇடஞ் சஞ்சரித்துத் தன் மனை வியாகிய வேடத்தி இப் பிறப்பில் லாவண் யவதியென்னும் பெயருடன் மனைவியாக வரப்பெற்று ஆயிரம் குமாரரைப் பெற்றுச் சித்தியடைந்தவன்.

**புணர்ச்சி** — சேர்க்கை, இது, இலக்கண நூலில் எழுத்துப்புணர்ச்சி பொருட்புணர் ச்சியென இருவகைப்படும். எழுத்துப் புணர்ச்சி பதங்கள் ஒன்றுடன் ஒன்று புணர் கையில் உண்டாம் தோன்றல் திரிதல் கெடு தலைக் கூறுவது. பொருட்புணர்ச்சியாவது பதங்கள் வேற்றுமையாலும் அல்வழியா லும் பொருளுணக்கிப் புணர்வது. நிலை மொழி வருமொழிகள் கூடுமிடத்துத் தோன்றும் எழுத்துகளின் விகாரம் எழுத் துப் புணர்ச்சி, சொற்கள் பொருளுணக்கத் தால் புணர்வது பொருட்புணர்ச்சி. (நன்.)

**புணர்நிலையணி** — வினையாலும், பண்பா லும் இரண்டு பொருளுக்கொன்றே பொ ருந்தச் சொல்லுவது (இதனைச் சகோக்தி யலங்கார மென்பர்.) (தண்டி.)

**புண்டரநகரம்** — இது வாசவதத்தையும் சாங்கியதாயும், யூகியும் வேற்று வடிவங் கொண்டுதங்கிய இடங்களுள் ஒன்று; அவர் களை கோசம்பி நகர்த்திற்கு அழைத்துச் செல்ல எண்ணிய உருமண்ணுவா, அவர் களைக் கண்டது இந்நகரத்தேதான். (பெ - கதை.)

**புண்டரம்** — 1. வங்காளத்துக்கு மேற்கில் உள்ள நாடு.

2. இது திரிபுண்டரம், ஊர்த்வபுண்ட ரம் என இருவகைப்படும். அவற்றுள் திரி புண்டரமே விபூதியை மூன்று ரேகைக ளாக நெற்றியின்கண் தரித்தலாம். இத் திரிபுண்டரம் மூன்று ரேகைகளாகத் தரித் தற்குப் பலவகைப்பட சுருதி சிவாகமங்கள் கூறும். அகர உகர மகரங்கள் சேர்ந்த மூன்று மந்திரங்களையும், முறையே அநா மிகை, மத்யமை, தர்ஜனிகளில், தியானித் துத் தரித்தல் எனக் கூறும். இவற்றிற்கு

அதிதேவதை பிரமா, விஷ்ணு, ருத்திராம். இதனை வேதியர் எழங்குல விஸ்தார அளவும், அரசர் ஆறு அங்குல அளவும், வைசியரும், சூத்திரரும், மூன்று அங்குல அளவும், ஸ்திரிகள் ஒரு அங்குல அளவையும் தரித்தல்வேண்டும். இது முறையே (உ௩) (க௬) (அ) (௫) ஸ்தானங்களில் தரித்தல் வேண்டும். இதனை வேதியர் அரசர் முதலியோர் தரிக்கின் இராஜவஸ்ய முதலிய சம்பத்துக்களும், மோக்ஷசம்பத்தும்உண்டாம். ஊர்த்வபுண்டரமாவது - மலையின்மேலும் நதிக்கரைகளிலும், புண்ணிய பூமியினும், சமுத்திர தீரத்தினும், புற்றுக்களிலும், துளவத்து அடியினும், கிரகித்த மண்ணினைக்கொண்டு நெற்றியினும் குறித்த வேறிடங்களிலும் ஊர்த்வமாக இடுதலாம். இதில் சுவேத மிருத்திகையே விசேடம் ஊர்த்வ புண்டரங்களை இடையில் வெளி உள்ளவைகளாயும், அழுக்கில்லாதவைகளாயும் எவர்கள் தரிக்கிறார்களோ அவர்கள் அதனால் ஒரு ஆலயம் நியமிக்கின்றனர் என்று விஷ்ணு அருளிச்செய்கிறார். இதனைப் பெருவிரலால் தரிக்கின் புஷ்டியும், நடுவிரலால் தரிக்கின் ஆயுளும், தர்ச்சனியால் தரிக்கின் இச்சித்த உண்டியும்,சுட்டுவிரலால் தரிக்கின் மோக்ஷமும் உண்டாம். நகத்தால் தொடலாகாது. அதனை வர்த்தியில் பொருந்திய தீபத்தைப் போலவும், மூங்கிலின் இலையைப் போலவும், தாமரையின் அரும்பு போலவும், வெண்டாமரையின் இதழ்போலவும், மீனைப்போலவும், ஆமையைப் போலவும் தரித்தல் வேண்டும். (க௦) அங்குலமுள்ள ஊர்த்வ புண்டரம் உத்தமமானதாம். (௯) மத்திமம். (௭) அதமமாம். திரிபுண்டர ஊர்த்தவபுண்டர ஸ்தானாதி மந்திர விசேஷங்களைச் சமயாசாரியர்கள்பால் கேட்டறிக. ஈண்டு எழுதின் விரியும். இப்புண்டரங்களைப் பல சமயத்தினர் பலவகைப் படத் தரிக்கின்றனர். அது காலஇயல்பாம்.

**புண்டரன்** — 1. பலியின் புத்திரன். இவனால் பௌண்டரநாடு உண்டாயிற்று.

2. பலியின் பாரியையாகிய சுதேஷ்ணையின் புத்திரன். (பா. ஆதி.)

**புண்டரீகம்** — 1. திக்கானைகளில் ஒன்று. தருமகோபனுக்குச் சிலநாள் வாகனமாயிருந்து வீரவாகுதேவரால் மீட்சிபெற்றது. அக்னிதிக்கில் உள்ளது.

2. ஒரு தீர்த்தம்.

**புண்டரீகருஷி** — 1. சிவபூசையால் முத்தியடைந்தவன். கற்ககோத்திரத்தில் கார்த்தமன் புத்திரன்.

2. இவர் யாகஞ்செய்கையில் அசுரர் யாகஅவி வேண்டியவரை வருத்த ருஷி மண்டப முதலிய சிருட்டித்தும் வாத்ய கோஷங்கள் செய்தும் ஒரு பிரமசாரியையும் விதவையையும் கலந்து பேசும்படியும் செய்வித்து இருக்கையில் அசுரர் அந்த வாத்ய கோஷாதிகளிலும் பிரம்மச்சாரி விதவை சம்வாதத்திலும் மயங்கியிருக்கையில் ருஷிதேவர்களுக்கு அவிகொடுத்து யாகபூர்த்தி செய்தனர். இதில் அசுரர் வஞ்சிக்கப்பட்டனர். இதுவே பௌண்டரயாகம்.

**புண்டரீகர்** — 1. ஒரு விஷ்ணுபடர்.

2. ஒரு அரசவகுப்பினர்.

3. நாரதரிடத்தில் விஷ்ணுதர்மங் கேட்டவேதியர்.

**புண்டரீகன்** — 1. ஒருவேதியன். மகாபாபி, பிருகுவின் கட்டளைப்படி சகன்னாத நிவேதனம் புசித்துப் புனிதனானவன்.

2. பலியின் நான்காம் புத்திரன்.

3. கத்ருதநயன் நாகன்.

**புண்டரீகாக்ஷன்** — விஷ்ணு.

**புண்டரீகாக்ஷர்** — திருக்குருகைப் பிரான் பிள்ளான் குமரர். நாதமுனிகளுக்குச் சீடர். இவர் ஆசாரியர் கட்டளையால் வங்கிபுரத்தாய்ச்சியகத்திற்கு அரவிந்தப் பாவைக்குத் துணைசென்று அந்த இடத்தில் இட்ட சேடித்த நீருஞ் சோற்றையுமுண்டு, ஆசாரியார் சொற்படி சேடத்தை உகப்பாயேற்றதால் உய்யக்கொண்டார் எனப் புகழ்பெற்று வங்கிபுரத்தாய்ச்சி பரிசாரகர்செய்த குற்றத்தை மன்னிக்க வேண்ட அருள்செய்து, ஸ்ரீராமமிச்ரர், என்னும் மணக்கால் நம்பி. திருவல்லிக்கேணிப் பாண்பெருமாளரையர், சேட்டலூர் செண்டலங்காரதாசர், புண்டரீகாக்ஷதாசர், கோமடத்துத் திருவிண்ணகரப்பன் உலகப்பெருமாள் நங்கை, இவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்து இருக்கையில், (ஆளவந்தார் மனைவி திருநாட்டுக் கெழுந்தருள மணக்கால் நம்பி கிருககார்யத்தையும் பார்த்துவந்து உய்யக் கொண்டாரால் ததியாராதனை செய்யப் பட்டுமீண்ட அவ்வூர்ப்பெண்களுக்குவழி சேறாக இருந்து அப்பெண்கள் மயங்குகையில் முதுகில் நடக்கும்படி செய்த நம்பியின் அற்புத

செயல்களைக் கேட்டு) மணக்கால்நம்பிக்குத்
திருவடி தீக்ஷை செய்து தாம் திருவரங்கத்
தில் எழுந்தருளி யிருக்கையில் தமக்கு நாத
முனிகள் இட்டபணியை மணக்கால் நம்
பிக்கு இட்டுத் திருக்கண்ணமங்கை யாண்
டான் நாய்களிரண்டு சண்டைசெய்து
இறக்கக் கண்ட அதற்குரியார் தம்மில்
சண்டை செய்து ப்ராக்ருதாபிமானத்தால்
இறக்கக்கண்டு அப்பிராக்கிருதமாகிய திரு
நாட்டுக் கெழுந்தருளிய செய்தி கேட்டுத்
தாமும் திருநாட்டுக் கெழுந்தருளினர்.
(குரு - பர.)

**புண்டரீகாக்ஷதாசர்** — உய்யக்கொண்டார்
திருவடிசம்பந்தி.

**புண்டரீகாக்ஷயஜ்வர்** — அநந்தசோமயாஜி
யார் குமரர். இவர் குமரர் அநந்தசூரிகள்.

**புண்டலீகர்** — லோகதண்ட மென்னும் நக
ரில் சந்து எனும் பெயருள்ள பாகவதர்
ஒருவர் இருந்தார். அவர் சாத்தியகியென்
பாளை மணந்து புத்திரப் பேறின்மையால்
பலநாள் தவஞ்செய்து ஒரு புத்திரனைப்
பெற்று அவருக்குப் புண்டலீகர் என்று
பெயரிட்டு வயதுவந்தபின் திருமணமுடித்
தனர். இப்புண்டலீகர் தாய்தந்தையரைப்
பலவாறு வருத்தி வந்தனர். தாய்தந்தை
யர் குமரனுக்குப் பல விதத்தில் புத்தி
போதித்தும் கேளாமையால் இருமுது குர
வரும் அவ்விடம் வந்த கங்காயாத்திரிகர்
களுடன் காசிவசிக்கச் சென்றனர். புண்ட
லீகரும் தந்தைதாயர் காணத் தன்மனைவி
யுடன் குதிரையேறிச் சென்று காசிக்கரு
கில் குக்குடயோகியர் வசிக்கும் ஆச்சிரமத்
தருகிற் சென்று இறங்கினர். மேற் கூறிய
குக்குடர், தாய் தந்தையரே தெய்வமென
வும் அவர்களுக்குச் செய்யும்பணியே புண்
ணியக்ஷேத்ர தீர்த்த தேவதரிசனம் என
வும் கொண்டு வாழ்பவர். இவரது ஆச்சிர
மத்தில் கங்கை, யமுனை, சரஸ்வதி இம்
மூவரும் நாடோறும் தங்கள் பாபங்கள்
நீங்க வேற்றுருக்கொண்டு பணிந்து வரு
வர். இப்புண்டலீகர் குக்குடாச்சிரமத்தை
யணுகி இன்னும் காசி எவ்வளவு தூரம்
இருக்கு மெனக் குக்குடர் நான் அறியேன்
என்றனர். இதனைக் கேட்ட புண்டலீகர்
குக்குடரைக் காசியறியாத நீர் கொண்ட
பிறப்பு என்ன வென்று பரிகசித்து அவரி
டமிருக்கையில் பாதியிரவில் கங்கை,
யமுனை, சரஸ்வதி இம்மூவரும் புலைச்சியர்
உருக்கொண்டு குக்குடர் வீடுவர, புண்ட
லீகர் பேய்களென்று பயந்துபார்க்கப், புகு
ந்த மூவரும் குக்குடர்வீடு சுத்தஞ் செய்து
மெழுகி மற்றும் பணிகளைச் செய்து ஒளி
பெற்று வந்ததைக் கண்டு வியப்புற்றுப்
புண்டலீகர் இந்தச் சாமவேளையில் வந்த
நீங்கள் யாவர் என்று கேட்க அவர்களுள்
கங்கை, மகாபாபி அப்புறம் விலகடா
வென்னப் புண்டலீகர் துதித்து என் பாபத்
தைப் போக்கம்மாவென வேண்டக் கங்கை
கூறுவாள். நீ இச்சன்மத்தில் அதிபாதகஞ்
செய்தவன் முன்னையஜன்ம புண்ணியத்
தால் இக்குக்குடரையும் எங்களையுந் தரி
சித்தாய் என்றனள். புண்டலீகர் நீங்கள்
யார் என நான் கங்கை மற்றிருவருள்
ஒருத்தி சரஸ்வதி மற்றொருத்தி காளிந்தி
நாங்கள் எங்களில் மூழ்குவோர் பாபங்க
ளைக் கைக்கொண்டு ஒளியிழந்து நாடோ
றும் இந்தக் குக்குடருக்குப் பணிசெய்து
ஒளிபெற்றுப் போகின்றோம் எனப் புண்
டலீகர் கங்கையை நோக்கி இக்குக்குடர்
நீங்கள் தொழத்தகுந்த அவ்வளவு புண்ணி
யம் என்செய்தார் எனக் கங்கை இவர்
அன்னையும் பிதாவும் அன்றி வேறுதெய்வம்
உண்டென்று நினையாத புண்ணியர் எனப்
புண்டலீகர் பயந்து தான் செய்த தவறுக
ளைக் கங்காதேவியிடம் கூறிநிற்கக் கங்கை
மனதிரங்கி இனி நீ உன் தாய் தந்தைய
ரைத் தெய்வ மாகக் கொண்டு வழிபடுவை
யே) உனக்குத் திருமாலருள் உண்டாம்
எனக் கூறி மூவரும் நீங்கினர். பின் புண்
டலீகர் குக்குடரை வணங்கித் தம் தாய்தந்
தையரைத் தேடியடைந்து அவர்களுடன்
தீர்த்தமாடித் தாய்தந்தையர்க்குப் பணி
செய்திருந்தனர். இதுநிற்க இந்திரன்,
விருத்திராசுரன் தவஞ் செய்திருக்கையில்
அவனைக் கொலைசெய்த பாபத்தால் பூமி
யிற் கல்லாய் விழச் சபிக்கப்பட்டு வீழ்கை
யில் திருமாலைத் துதிக்க அவர் தரிசனந்
தந்து நீ பூமியிற் புண்டலீகர் வீட்டில் கல்
லாயிரு; நாம் உமது பழையவுருவைத் தரு
கிறோமென்றபடி தாய் தந்தையருக்கு ஏவ
ல்புரியும் புண்டலீகர் வீட்டில் கல்லாயிருக்
கும் இந்திரன் மீது கண்ணன் புண்டலீகர்
காணத் தரிசனந் தந்தார். புண்டலீகர்
துதிக்க உனக்கு என்ன வரம் வேண்டு
மென்ன எக்காலத்தும் விட்டலன் எனும்
திருநாமத்தால் கண்டு எழுந்தருளியிருக்க
வும், பண்டரி என்னும் இத்தலச்சார்பால்
பாண்டுரங்கப் பெயர் நீர் அடையவும் எல்

வாத் தீர்த்தங்களும் ஈண்டுவரவும் வரமருள்க என்று பெற்றவர்.

**புண்ணிபுஞ்சன்** — சவுராட்டிர தேசாதிபதி. இவனுக்குப் புண்யசீலன், தருமசீலன், சுப்பிரதாபன், சத்துருப்ரதாபன், என நான்கு புத்திரர். இவர்கள் நால்வரும் வாசுகியின் குமரியை மணந்தனர்.

**புண்ணியதமீஷ்டான்** — சத்ருகுமரன் நாகன்.

**புண்ணியத்தோற்றம்** — (ச) கல்வி, கொடை, ஒழுக்கம், தவம்.

**புண்ணியபத்திரை** — யமபுரஞ் செல்லும் வழியில் உள்ளநதி; யாமியநகரத்தருகில் உள்ளது.

**புண்ணியம்** — 1. (க) எதிர்கொளல், பணிதல், ஆசனந்திருத்துதல், கால்கழுவல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டல், புகழ்தல், அமுதமேந்தல் முதலிய இவை துறவிகளுக்குச் செய்வன.

2. (எ) நகங்கிருதி, தானம், விரதம், நேகம், நயபோசநம், கனம், உற்சாகம்.

**புண்ணியராசன்** — நாகபுரத்தரசன். பசு வயிற்றிற் பொன் முட்டையிற் றங்கிப் பிறந்தோன், இவன் பிறந்த காலத்து பல நற்குறிகள் நிகழ்ந்தமையின் இப் பெயர் இட்டனர். தருமசாவகமுனிபால் அறங் கேட்டவன். மணிமேகலையுடன் புத்த பீடிகையடைந்து தன் பழம் பிறப்புணர்ந்தவன். இவனுக்குப் பூர்வசன்மப்பெயர் ஆபுத்திரன். (மணிமேகலை.)

**புண்ணியவதி**—1. பாக்கியவதியைக் காண்க.

2. துச்சீலன் தாய்.

**புண்ணியன்** — தீர்க்கதவனைக் காண்க.

**புண்ணொடுவருதல்**—பூமியுடனே இசையை நிறுத்தி ஆயுதம்பட்ட புண்ணுடனே வீரன் றான் வந்தது. (பு. வெ.)

**புண்யகீர்த்தி**—1. பாண்டிநாட்டரசன் காசியில் கங்கையாடிக் கங்காதேவியைக் கண்டு முத்தியடைந்தவன். (காசிரகசியம்.)

2. விதப்ர்பதேசாதிபதி. இவன் தேவி மதனுவதி.

**புண்யகோடீசம்** — காஞ்சியில் உள்ள தலம்.

**புண்யகோட்டிமுதலியார்** — இவர் தொண்டைநாட்டில் மாகறல் என்னும் தலத்தவர். கேட்பவர் வெட்கத்தால் வாய்திறந்து கேட்காரென்று முற்றத்திற் மணற்பரப்பி அதில் எழுதச்செய்து வேண்டிய அளித்துப் பாடல் பெற்றவர். "மணிமுதிலுறு மேழைமாந்தர் நவில வேண்டுவனவின் புநீஇ, நேரில் கேண்மினவை தருவன் யான லதும் நினைவி லுன்னுமவை நவிலநீர், நாணிலென்னுடைய மனைமுன் வாயிறனி னன்மணன் மிகுதி கொட்டியே, நாம் பரப்பியுமிருக்கிறேம தனினுடி வந்ததனையெழுதுமின், காணிலங்குடனே யருள்வமென்ன வவன்கட்டளைப்படி யேதிட்டமாய்க், கையினு லெழுதவு வகையோடு பொருள் கண்டளித்த பிரபுவாரெனிற், பூணிலங்குவரநதி குலத்தில் வருபுண்யனுனதி கண்யனும், புலவர் போற்றுமாகறலின் மேவு மெழில்புண்ய கோடியெனும் பூபனே."

**புண்ணியசிரவணம்** — அழகர் மலைக்கண்ணுள்ள பொய்கை. (சிலப்பதிகாரம்.)

**புண்ணியசீலன்** — புண்ணியபுஞ்சன் குமரன்.

**புண்யவிருக்ஷங்களும், பூண்டுகளும்** — அரசு (அரசுபார்க்க) ஆல் திருமால் பள்ளிகொண்ட இலை, கல்லால் தக்ஷிணுமூர்த்தி குருமூர்த்த மாயெழுந்தருளி இருந்தது, வில்வம் (வில்வம் காண்க) கோன்றை, ஆத்தி சிவனுக்குரிய விருக்ஷம், மருது திருமாவிம் மரத்தை இடந்தனர், குருந்து திருமால் கிருஷ்ணுவதாரத்தில் இதை ஒசித்தனர், வேங்கை குமாரக்கடவுள் வள்ளி நாயகியார் பொருட்டு இம்மரவுருக் கொண்டனர், வன்னி (வன்னியைக் காண்க) மா இது மங்கலகாரியங்களில் கலசாபிமுகமான தேவதைகளின் முடியாகும் பத்திரங் கொண்டது, நெல்லி இம் மரத்தடியில் விஷ்ணுமூர்த்தி எழுந்தருளினர், துளசி விஷ்ணுவிற்குரிய பத்திரம் (துளசிகாண்க) தருப்பை (தருப்பை காண்க) அறுகு அறுகுகாண்க, வாழை இதனடியில் உமாமகேஸ்வரர்க ளெழுந்தருளச்செய்து கதலீ விரதமிருப்பர், எள் எள்ளைக் காண்க, வெற்றிலை நாகலோகத்திருந்து கொண்டு வரப்பட்டது.

**புதவி** — கோவிந்தமகாராசன் மனைவி.

**புதன்** — 1. இவன் வியாழன் தேவியாகிய தாரையிடம் சந்திரனுக்கு உதித்தவன். பிரகஸ்பதியும் சந்திரனும் இன்னனுக்குப் பிறந்தவன் என்று அறியாது வாதாடுகையில் தாயைநோக்கி உண்மைகூறச் சொன்னவன். இவன் தவத்தால் கிரகபதம் அடைந்தனன். நான்கு குதிரைகள் பூண்ட தேரினையுடையான். சந்திரனுக்கு அவிட்டத்தில் உதித்தவன். இவன் தேர்க் குதி

ரைகள் எட்டென்றுங் கூறுவர். சுக்கிரனுக்குமேல் இரண்டு லக்ஷம் யோசனைப் பிரமாணத்தில் இருக்கிறவன். இவன் தவச்சாலையருகு, இளை தோழியருடன் வர அத் தோழியர்களுக்கு இதஞ் சொல்லிக் காந்தருவர்களை அவர்களுக்குக் கணவராக்கி இளையை வசப்படுத்தி மணந்து புரூரவனைப் பெற்றனன். இளனுடைய சாபம் நீங்கிச் சிவபிரானை நோக்கி அச்வமேதஞ் செய்வித்துச் சாபம்நீங்கச் செய்தவன். இருக்குவேதத்தின் ஐந்தாவது காண்டத்ததிகாரியானவன். (காசி காண்டம்) (வேறு.)

2. பந்தனுக்கு ஒருபெயர்.

3. தவசிலன் என்னும் வேதியன் குமரன். இவன் தாசி விருப்பனாய்த் தாய் தந்தை முதலியவரைக் கொன்று காமத்தால் தாலவமுனிவர் பத்தினி சுலபையைக் கைப்பற்ற அவள் இவனைக் குட்டம் பிடிக்கச் சபிக்க அந்த வியாதியால் இறந்து மறு பிறப்பும் அவ்வியாதியால் வணிகனாய்ப் பிறந்து சூரசேநனால் வியாதி நீங்கி நல்லுலகு அடைந்தவன்.

4. சூரியனை யடுத்துச் சுற்றிவரும் கிரகம். இது சூரியனுக்கு (3) கோடியே (60) லக்ஷம்மைலுக்கு அப்பாலிருந்து (24) மணி நேரத்தில் தன்னைத்தானே ஒருதரஞ் சுற்றிக்கொண்டு (88) நாட்களில் சூரியனையும் ஒருமுறை சுற்றிவருகிறது. இதன் சுற்றளவு சுமார் (9500) மைல், குறுக்களவு (3000) மைல் என்றும் எண்ணுகின்றனர். இது நமது பூமிக்கு (5) கோடியே (70) லக்ஷம் மைல் தூரத்திருக்கிறது. சூரியனொளி இதன்மேல் நெருங்கிப் படுதலால் இது நன்றாய்த் தெரிகிறதில்லை. இந்துக்கள் இக்கிரகநிறம் பசுமை என்பர். இதனை அடுத்த கிரகம் சுக்ரன்.

**புதுக்கயத்து வண்ணக்கன் கம்பூர்கிழான்** - இவர் வேளாண் மரபினர் கம்பூரென்னு மூரினர் வண்ணக்கன், நாணய சோதகன் நோட்டக்காரன் புதுக்கயம் என்ற ஊரில் நோட்டக்காரராய் வந்து தங்கியவர். இவர் குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியது நற். உகசு ம் பாட்டு.

**புதுநாட்டான்** — இடையரில் ஒரு வகுப்பு.

**புதுவஸ்திரமுடுத்தல்** — திங்கள், புதன், வியாழன், வெள்ளி வாரங்களும், அசுவினி, ரோகிணி, புநர்பூசம், பூசம், உத்தரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், உத்திராடம், உத்தரட்டாதி, ரேவதி இங் நட்சத்திரங்களும், சதுர்த்தி, அஷ்டமி, நவமி, சதுர்த்தசி, அமாவாசியையொழிந்த திதிகளும், விருஷபம், மிதுனம், கர்க்கடகம், கன்னி, துலாம், மகரம், கும்பராசிகளும் ஆருமிடஞ் சுத்தமாக கோடிவஸ்திரமுடுக்க உத்தமம்.

**புதுவைச்சேதிராயன்** — புவணமுண்ய்ச் சடையன் குமரன். மகா தியாகி. கம்பர் இராமாயணம் அரங்கேற்றிய காலத்து உடனிருந்து கேட்கையில் சர்ப்பந் தீண்டப்பெற்றுக் கம்பரால் நீக்கமடைந்தவர். "காவிரியைச் சோணாட்டைக் காராளர் தம் மரபை, நாவலரைக் காவலரை நல்லோரைப் — பூவலய, முள்ளத்தரும் புதுவை யூரைச் சிறப்பித்தான், பிள்ளைப் பெருமாள் பிறந்து" "மெய்கழுவிவந்து விருந்துண்டு மீளுமவர், கைகழுவ நீர்போதுங் காவேரி,பொய்கழுவும்,—போர்வேற்சடையன் புதுவையானில்லத்தை, யார் போற்ற வல்லாரறிந்து." எனப் புகழப்பட்டவன்.

**புத்** — பூமியில் புத்திரப்பேறு இல்லாதான் அடையும் நரகம்.

**புத்தகயை** — நம்மவர்கள் சொல்லும் கயைக்குத் தெற்கே ஐந்துநாழிகை வழிதூரத்தில் உள்ள ஓர் இடம். இதில் புத்தர் ஞானம் பெற்ற அரசமரம் இன்னும் இருக்கின்ற தென்பர்.

**புத்தநந்தி** — ஒரு புத்தன். இவன் திருஞானசம்பந்த சுவாமிகளுடன் வாதிடவந்து சம்பந்தசரணாலயர் கூறியபடி தலையில் இடி விழுந்து இறந்தவன்.

**புத்தமதம்** — 1. புத்தன் புத்தி தத்துவத்தைப் பொருளாகக்கொண்டு பௌத்தம் எனமதம் உண்டாக்கித் தன்னுடன் கூடிய கண்ணங்க ராகுகாவீரர் முதலிய இருபத்து மூன்று புத்தர்களுக்கும் ஞானபிடகம், விநயபிடகம், அபிதர்மபிடகம் முதலிய ஆகமங்களைப் போதித்துப் பிரசங்கித்துவரச் செய்தனன். இவர்கள் கூறும் உலகோற்பத்தியாவது பாபம் மேலிட்டுக் கோபாக்னியாயெழுந்து செத்து ஜீவர்களை யெரிக்கத் தொடங்குகையில் ஜீவர் நவத்தானங்களில் ஒன்றாகும் பிரம லோகத்தையடைவர். அக்கோபம் அடங்கினபின் புண்யம் மழைத்தாரையாக வருஷித்துக் கோபத்தை யாறச்செய்து பிரளயமாய் மூடிக்கொள்ள அதன்மீது காற்றுவீச அதுபோற்படியும். அந்த நீரேட்டில் ஜீவனும் பறந்து பூமி

யாம். இதில் முன் பிரமத்தானத்தில் இருந்த ஆன்மாக்கள் வந்து பிறப்பர். இவ்வகை உடல் எடுத்த சீவன் பஞ்சகந்தத்தாற் போதமடைந்து வியவகாரியாய்ச் சநனமரணமடைந்து பிரமா, உம்பர், அசுரர், நாகர், நரர், பேய், விலங்கு முதலிய நவத்தானமடைந்து சார்புகெட்டுச் சந்ததியுமாறக் கந்தம் பங்கமடைந்து பேதமை சார்பாக அநித்த மாகிற கன்மகோன்புண்டாய்ப் போதமானபுத்தி சந்தான பரம்பரையாகக் கெட்டு க்ஷணபங்கமடையும் என்பன். இவன் சந்தான பரம்பரையறப் பஞ்சகந்தங் கெடுகிறதே முத்தியென்பன். இவன் பஞ்சகந்தங்களாகிற அநாதிசமூகத்தில் எல்லா முண்டாகி லயமடைகையால் கருத்தா இல்லை, அநாதியான சீவரின் வகையாக உடம்பெடுக்கையால் சீவரும் இதைவிட இல்லை யென்பன். புத்தன் தேவனல்லனோ எனின் இப்பஞ்சகந்தத்தைக் கெடுத்தவனாதலின் தேவனெனப்பட்டனன். இவர்களைப்பற்றிச் சைநர் கூறுவது. பாரிஸ்வதீர்த்தங்கரர் காலத்தில் புத்தகீர்த்தி என்கிற சந்நியாசி சைநரை விரோதித்துச் சில கக்ஷிகள் கூறியதால் அச்சைநர் இவனை விரோதித்து நீக்கினர். இவன் தனித்து ஒரு மதம் உண்டாக்கி அரசருக்குப் போதித்து இம்மதத்தை யுண்டாக்கினன். இம்மதம் காசியில் ஆண்ட பாநுசீதள மகாராஜாவாலும், அவன் குமரன் சோமசீதள மகாராஜாவாலும், அவன் குமரன் உக்ரசீதள மகாராஜாவாலும், பிரபலமடைந்தது. இந்தச் சந்ததியில் ஏமசீதள மகாராஜா தொண்டீரநாடடைந்து காஞ்சியில் அரசாண்டு புத்தசைநதேவாலயங்கள் உண்டு பண்ணினன். இவ்வகை இருக்கையில் சைநருக்கும் பௌத்தருக்கும் வாதம் நேரிடச் சைநரில் அகளங்காசாரியர் என்பவர் 8 நாள் புத்தரிடம் வாதிட்டு வெற்றியடைய அரசன் சைநன் ஆயினன். பின் தோற்றவரைக் காணத்தாட்டுதல் என்ற சங்கேதப்படி அரசன் ஆசாரியரைக் கேட்க ஆசாரியர் கொல்லாவிரதியர் ஆதலால் அதற்கிசையாது அவர்களைக் கப்பலேற்றிச் சிம்மளத்தீவிற்கு அனுப்பக் கட்டளையிட்டனர். அரசன் அவ்வாறு செய்ய இம்மதம் சிம்மள மடைந்தது. மதுரையாண்ட வீரபாண்டியன் புத்தனாயிருந்து சைநனாய் விட்டதால் இவர்கள் சிம்மளமடைந்தனர் என்றும் கூறுவர்.

2. கேடதேசத்துச் சீநன் குமரன். விஷ்ணுவின் அம்சம்.

3. காரியின் தந்தை.

**புத்தமித்திரர்** — பதினொராம் நூற்றாண்டில் மிலக்கூற்றம் என்னும் இடத்தில் பிறந்து வளர்ந்து கல்வியில்லவராய் ஒரு இலக்கணம் விருத்தப்பாவாற் செய்து தன்னை ஆதரித்த வீரசோழன் என்பவன் பெயரை அந் நூலுக்கு இட்டவர். இவர் செய்த நூல் வீரசோழியம்.

**புத்தர் (உஎ) வர்** — இவர்கள் கௌதமபுத்தருக்கு முன்னிருந்தவர்கள். (க) தண்ணகாரர், (உ) மேதங்கரர், (ந) சரணங்கரர், (ச) தீபங்கரர், (ரு) கௌண்டின்னியர், (சு) மங்களர், (எ) சுமங்களர், (அ) இரேவதர், (கூ) சோபிதர், (ம) அநோமதர்சி, (கக) பதுமர், (கஉ) நாரதர், (கந) பதுமோத்தரர், (கச) சுமேதர், (கரு) சுஜாதர், (கசு) பிரியதர்சி, (கஎ) அர்த்ததர்சி, (கஅ) தர்மதர்சி, (ககூ) சித்தார்த்தர், (உ0) திஷ்பர், (உக) புஷ்யர், (உஉ) விபச்சித், (உந) சிகி, (உச) விருஷபர், (உரு) ககுந்தர், (உசு) கோவகாமர், (உஎ) கசியபர்.

**புத்தன்** — ஏறக்குறைய உரு00 வருஷங்களுக்குமுன் பரதகண்டத்தின் வடபாகத்தில் கங்கையின் உபநதியாகிய ரோகிணி நதியின் கரையில் கபிலவாஸ்து என்னும் ஒரு நகரம் இருந்தது. அந்த நகரத்தை யாண்ட சுத்தோதன் தன்மனைவி மாயையுடன்கூடி அரசாளுகையில் புத்திரன் இல்லாக் குறையால் துன்புற்று இருக்கையில் மாயை, ஆகாயத்தில் இருந்து பேரொளியுள்ள நக்ஷத்திரம் ஒன்று வெளிப்பட்டுத் தன் வயிற்றில் புகுந்ததாய்க் கனவு கண்டு தன் கனவைக் கணவனுக்கு அறிவித்தனள். சுத்தோதன் நிமித்திகரை அழைத்துத் தன்மனைவி கண்டகனாநிலையுணர்த்த, அவர்கள் உன் மனைவியிடம் அதிக ஞானவானாய் ஒருபுத்திரன் உதிப்பன், என்று போயினர். அவ்வகையே மாயை கருவுற்று ஒரு புத்திரனைப் பெற்றனள். இப்பிள்ளை அரசனுக்குப் பிறந்ததால் மற்ற அரசர் முதலியோர் களித்து அரசனைக் காணப் பல விலையுயர்ந்த பொருள்கள் கொண்டு வந்தனர். அதனால் களித்த அரசன் தன் குமரனுக்குச் சர்வார்த்தசித்தி அல்லது சித்தார்த்தன் எனப் பெயரிட்டனன். இவ்வகை குழந்தையைக் காண வந்தவர்களுள் சித்தார்த்தன் என்பவர் ஒருசந்நியாசி இவர்

குழந்தையின் இலக்ஷணங்கண்டு தம்மைப் பிறர் வணங்குவதைவிட்டுத் தாமே குழந்தையின் பாதங்களைக் கண்களில் ஒத்தினர். இவ்வகை குழந்தை வளருநாட்களில் தாய், குழந்தை பிறந்த ஏழாநாள் இறந்தனள். பிறகு செவிலித்தாயாகிய பிரசாபதியைக் குழந்தையை வளர்க்கும்படி அரசன் நியமித்தனன். குழந்தைக்குக் கல்வி கற்பிக்கும் வயது வந்தபோது பிதா விச்வாமித்திரன் என்பவனைக் கல்விகற்பிக்க ஏற்படுத்தினன். இவன் ஒருநாள் தனது மைத்துனனாகிய தேவதத்தன் என்பவனுடன் வேட்டைக்குச் செல்ல, அவ்விடம் தேவதத்தன் ஒரு அன்னத்தை அம்பினால் எய்ய அவ்வடி அன்னத்திற்குப்பட்டு அது கீழே விழச் சித்தார்த்தன் அதை யெடுத்துக் காயத்தையாற்றத் தேவதத்தன் அந்த அன்னத்தைக் கேட்கச் சித்தார்த்தன் இது எனக்குரியது கொடேனென்று ஒரு பெரியவரிடம் தங்கள் வழக்கையுரைக்க அவர் வளர்த்தவனுக்கு உரியது என அவ்வகை. அதை வளர்த்து இனத்தில் விட்டுத். தன் தந்தை நாட்டின் வளங்காண அழைக்கச் சென்று வளங்களைக் கண்டு தனக்கு அவை அதிக துன்பம் வருவித்ததை யெண்ணி ஒரு நாகமரத்தடியில் உட்கார்ந்து சிந்திப்பானாயினன். உலகத்து உயிர்கள் ஒன்று சுகமாயிருக்க அவற்றைப் பக்ஷிக்க வேறொன்று காத்திருக்கிறது. இவ்வகை ஒன்றைக் கொன்று விரோதமே செய்கின்றன. எவனும் உழைக்காவிட்டால் பிழைப்பில்லை என்பதை நெடுநேரமெண்ணித் தியானத்தில் இருந்தனன். இத்தியானத்தில் காலையில் உட்காரப் பகற்பொழுதும் நீங்கிற்று. அரசனது வேலையாட்கள் வலிந்தழைக்கச் சித்தார்த்தன் அரசனிடம் சென்றனன். இவ்வகையிருக்கையில் சித்தார்த்தனுக்கு மணபருவம்வர அரசன் தன் குமரனுக்கு மணஞ் செய்விக்க எண்ணி அவன் பிறந்த நாளில் அரண்மனை அலங்கரித்து அவ்வூர்க் கன்னிகைகளுக்குப் பரிசளிப்பதாய் முரசு அறைவித்தனன். கன்னியர் எல்லாரும் இவனது அழகைக்கண்டு நாணினவர்களாய்த் தலைகுனிந்து பரிசுகொண்டு சென்றனர். அவர்களுள் சுப்ரபுத்தன் என்பவனது குமரி யசோதை தலைகுனியாது சித்தார்த்தனிடம் வந்து எனக்கு ஒன்றுமில்லையோவென எல்லாமாய்விட்டது எனக்காக இதை வைத்துக்கொள் என்று தன் மார்பிலிருந்த பதக்கத்தை அவள் கழுத்திலிட்டான். பின் அரசனுக்கு அருகிருந்தார் நடந்தவைகூற அரசன் சுப்ரபுத்தனை என் குமாரனுக்கு உன் குமாரியைத் தருகவெனக் கேட்கச் சுப்ரபுத்தன் அரசர் முறைப்படி கொள்க எனச் சித்தார்த்தன் அப்பெண் பொருட்டு வந்த மற்ற அரசரை வென்றனன். அரசன் இவ்விரு தம்பதிகளுக்கும் திருமணஞ் செய்வித்தனன். இவ்வகை தன் மனைவியுடன் இருந்து ஒருநாள் தன் தேர்ச்சாரதியாகிய சன்னனுடன் நகரவாழ்க்கை காணச்சென்று ஒரு கிழவனையும், ஒரு பிணியாளனையும், ரோகிணி நதிதீரத்தில் ஒரு பிணத்தையுங்கண்டு சன்னனை அவற்றின் நிலைவினாவித் தனக்கும் அவை உண்டாமோவென்று பயந்து தன் மனைவியிடம் தனக்குப் பிறந்த குமாரனைவிட்டுத் துறவடைந்தனன். இவன் அஜாதசத்துருவின் காலத்தவன். (மணிமேகலை.)

**புத்தி** — 1. பிரசாபதியின் மனைவியரில் ஒருத்தி.

2. மன்யு என்னும் ஏகாதசருத்ரன் தேவி.

3. இவர் தொண்டைநாட்டுப பொன்பன்றியூரிலிருந்த பௌத்தர். இதற்கு உரைகண்டார் பெருந்தேவனார் என்னும் ஒருவர். இவரை ஒரு சிற்றரசர் என்பர்.

4. தக்ஷனுக்குப் பிரசூதியிடம் உதித்த குமரி, யமன் தேவி.

5. விநாயகசத்தி, தருமதத்தனிடம பிறந்து விநாயகரை மணந்தவள்.

**புத்திசேநன்** — சீவகன் தோழர் நால்வரில் ஒருவன்.

**புத்திசாகரன்** — ஒரு பௌத்தன், மத்வாசாரியர்டம் வாதிட்டுத் தோற்றவன்.

**புத்தியின் எட்டுவகை பாவங்கள்** — தர்மம், ஞானம், வைராக்யம், ஐச்வர்யம, அதர்மம், அஞ்ஞானம், அவைராக்யம், அனைச்வர்யம.

**புத்திமார்க்கம்** — அன்றலர்ந்த மலர், தூப, தீபங்கள், திருமஞ்சனம், திருவமுது முதலியகொண்டு பூதசுத்தி முதலிய பஞ்சசுத்தி செய்து ஆசனம் பூசித்து அதில் மூர்த்தியைக் கற்பித்து மூர்த்திமானாகிய சுத்தசிவத்தைத் தியானித்துப் பூசித்து அக்னிகாரிய முதலிய செய்தல். இவர்கள் சாமீப பதமடைவர்

**புத்திரர்கள்** — 1. ஔரசன், 2. க்ஷேத்திரஜன், 3. தத்தன், 4. கிருத்திரிமன், 5.

கூடோத்பந்நன், 6. அபவித்தன், இவ்வாறு புத்திரர்களும் பிதுராஸ்திக்கும், பிள்ளையில்லாத ஞாதிகளாஸ்திக்கும் உரியவர்கள். 7. கானீநன், 8. சகோடன், 9. கிரீதன், 10. பௌநற்பவன், 11. சயதத்தன், 12. சௌத்திரன், இவ்வாறு புத்திரர்களும் தந்தையின் பொருளுக்கு மாத்திரம் உரியவர்கள். (மநு.)

1. தன் ஜாதிஸ்திரியைக் கன்னிகையாகவிருக்கும்போது விவாகஞ்செய்து அவளிடத்தில் எந்தப் பிள்ளையைத் தானே பெறுகிறானோ அவனே முக்கியமான ஔரஸபுத்திரனென்று அறியவேண்டியது (மநு)

2. பிள்ளை பிறக்கிறதற்குமுன் இறந்துபோனவன், பேடி, பிள்ளை பிறக்க விரோதமான பிணியுற்றவன், இவர்களின் மனைவியரிடத்தில் மைத்துனன் முதலானவர்களால் மேற்சொன்ன விதிப்படி உண்டுபண்ணப்பட்ட பிள்ளையை க்ஷேத்திரஜன் என்று சொல்லுகிறார்கள். (மநு.)

3. தந்தையுந்தாயும் சம்மதித்து இருவருங் கூடியேனும், ஒருவராயேனும், தங்கள் வயிற்றிற் பிறந்த பிள்ளையைத் தன் ஜாதியாயும் பிள்ளையில்லாமல் துன்பப்படுகிறவனுயும் இருக்கிற ஒருவனுக்குப் பிரீதியுடன் இந்தப்பிள்ளை உனக்கே சொந்தமென்று சொல்லி ஜலத்தைவிட்டுத் தானஞ்செய்யப்பட்டவனைத் தத்தனென்று சொல்லுகிறார்கள். (மநு.)

4. தன் ஜாதியாயும் பிதுர்க்களுக்குச் சிரார்த்தஞ் செய்வதாலும், விடுவதாலும், வரும் குணகுணங்களை யறிந்தவனாகவும் தாய் தந்தையர்களைப் பூசிக்கிறவனுயுமிருக்கிற எந்தப் பிள்ளையைத் தானே பிள்ளையாக வைத்துக்கொள்ளுகிறானோ அவனைக் கிரத்திரப் புத்திரனாகச் சொல்லுகிறார்கள். (மநு.)

5. ஒருவன் மனையாள், கணவன், வீட்டிலிருக்கும்போது அவனுக்குத் தெரியாமல் எந்த ஜாதிபுருஷனேனும் அவளிடத்தில் ஒரு பிள்ளையை உண்டுபண்ணினால் அப்பிள்ளையை அந்தக் கணவனுக்குக் கூடோத்பந்ந புத்திரனென்று சொல்லுகிறார்கள்.

6. தாய் தந்தை இருவராலாவது அல்லது ஒருவராலாவது எறிந்துவிடப்பட்ட பிள்ளையை எடுத்துக் கொள்ளுகிறவனுக்கு அபவித்தபுத்திரனென்று சொல்லுகிறார்கள். (மநு.)

7. எந்தப்பெண் விவாகத்துக்கு முன் தகப்பன் வீட்டிலிருக்கும்போது யாருக்குந் தெரியாமல் இரகசியமாக ஒருவனைப் புணர்ந்து ஒரு பிள்ளையைப் பெற்றுக்கொள்ளுகிறாளோ அந்தப் பிள்ளையைப் பின்பு அவளைக் கலியாணஞ்செய்துகொள்ளுகிறவனுக்குக் கானீநபுத்திரன் என்று சொல்லுகிறார்கள். (மநு.)

8. எவன் ஒரு பெண்ணைக் கருப்பமாகயிருக்கிறாளென்று அறிந்தாவது அறியாமலாவது விவாகஞ்செய்துகொள்ளுகிறானோ அவனுக்கு அந்தக் கர்ப்பத்தினாற் பிறந்த பிள்ளையைச் சகோடபுத்திரன் என்று சொல்லுகிறார்கள். (மநு.)

9. எவன் தனக்குப் பிள்ளையில்லாமையால் ஒரு பிள்ளையை அவன் தாய்தகப்பன்மாரிடத்து விலைக்கு வாங்கிக்கொள்ளுகிறானோ அவன் குணத்தினால் தமக்குத் தக்கவனாயினும் தகாதவனாயினும் வாங்குகிறவனுக்குக் கிரீதபுத்திரனென்று சொல்லப்படுகிறான். (மநு.)

10. எந்த ஸ்திரியானவள் கணவனால் நீக்கப்பட்டாவது கணவனிறந்த பின்பாவது மற்றொருவனைச் சுவேச்சையாகவே புணர்ந்து எந்தப் பிள்ளையைப் பெறுகிறாளோ அந்தப் பிள்ளையைப் பௌநற்பவ புத்திரனென்று சொல்லுகிறார்கள். (மநு.)

11. ஒரு சிறுவன் தாய்தந்தை இறந்துபோயாவது அல்லது அவர்களில் காரணமின்றி நீக்கப்பட்டவனாயாவது தானாகவே ஒருவனைப் புத்திரனாக வந்தடைந்தால் அவனைச் சுயதத்தனென்று சொல்லுகிறார்கள் (மநு.)

12. பிராமணன் தன்னால் விவாகஞ்செய்யப்பட்ட சூத்திர மனையாளிடத்தில் காமத்தினால் உண்டுபண்ணின பிள்ளையானவன் செய்கிற சிரார்த்தகாரியங்கள் பரலோகத்திற்கு உபயோகமாகாததலால் உயிரோடிருந்தாலும் பிணத்தோடு சரியாகச் சொல்லப்படுகிறான். ஆதலால் அவனைப் பார்சவபுத்திரனென்று சொல்லுகிறார்கள். இவன்தான் முன்பு சௌத்திரனென்று சொல்லப்பட்டவன். (மநு.)

**புமன்யன்** — துஷ்யந்தன் புத்திரனாகிய பரதன் தேவியிடம் பரத்துவாசர் அநுக்கிரகத்தால் பிறந்தவன்.

**புழும்சலிகள்** — சுபலன் முகத்துதித்த பாதாளப் பெண்கள். மிகுந்த காமினிகளாய் எல்லாரிடத்தும் விபசரிக்கிறவர்.

**பும்சவனம்** — 1. இது கர்ப்பிணிகள் ஆண் சிசு பெறும்படி செய்யுங்கிரியை; கர்ப்பம் வியக்தமாவதற்கு முன் முதல் மாசத்தில் பூசநக்ஷத்திரத்தில் பொன், வெள்ளி, இரும்பு இவை முதலியவற்றால் சிறு புருஷ உருச்செய்து அக்னியிற் சிவக்கக் காய்ச்சி நான்குபலம் பாலில் தோய்த்து அப் பாலைக் கர்ப்பிணிக்கு அருத்துவது. வெளுத்த தண்டோடுகூடிய நாயுருவி வேர், ஜீவகம், ரிஷபகம், முள் ஐவனம் இவைகளை அரைத்துத் தண்ணீரிற் கலக்கி அருந்தச் செய்யுங் கிரியை.

2. ஒரு விரதம், மார்கழிமாச சுக்லபக்ஷ பிரதமையில் அநுட்டிப்பது.

**புரகதன்** — காலபுத்திராம்சமாகிய பாரத வீரன்.

**புரஞ்ஜயன்** — 1. (சு) விகுக்ஷி குமாரன். இவனைத் தேவேந்திரன் அசுரருக்கு அஞ்சிச் சரண்புக இவன் இந்திரனை நோக்கி நீ எனக்கு வாகனமாயின் அசுரரை வென்று பயமகற்றுவேன் என இந்திரன் அவ்வகை இசைந்து எருதாகித் தாங்கினன். இவன் அதனால் அசுரரை வென்று இந்திரனது பதவியை அவனுக்கு அளித்தனன். இவனுக்கு இந்திரவாகன் எனவும், ககுத்தன், புரஞ்சயன் எனவும் பெயர். இவன் குமரன் பாணன். (பாகவதம்.)

2. பூருவம்சத்து சுவீரன் குமரன். இவனுக்கு நிருபஞ்சயன் எனவும் பெயர்.

3. அனுவம்சத்து சுருஞ்சயன் குமரன்.

**புரஞ்சகன்** — கத்ரு குமரன். நாகன்.

**புரஞ்சயன்** — 1. பிரகலாதவம்சத்து அரசன். இவன் மந்திரியாகிய சுநகன் என்பவனால் கொலை செய்யப்பட்டவன்.

2. விச்வமூர்த்திக்கு ஒரு பெயர்.

3. அவிவேகத்தால் நஷ்டமடைந்த ஒருவன்.

**புரஞ்சனன்** — ஒரு அரசன். தவஞ்செய்யச் சென்று ஒரு பெண்ணிடத்தில் மோகங்கொண்டு நூறுவருடம் அவளிடம் கூடியிருந்தனன். இவன் தேவியர் புரஞ்சனி, வைதற்பி. இவன் பட்டணத்தைப் பயன், காலகன்னிகை யென்பவர்கள், அபகரித்தனர். இவன் பட்டணத்தை ஒரு நாகம் காத்திருந்தது. இவன் ஜீவ இம்சைக்கு அஞ்சாதவன். இவன் தன் மனையாளையே மனத்தில் வைத்து உயிர்விட்டவனாதலால் விதர்ப்பநாட்டில் பெண்ணாகப் பிறந்து மலயத்துவசனை மணக்கப்பெற்றான்.

**புரதை** — சோமன் என்னும் வசுவின் குமரி; இவளுக்குப் பதினொரு கந்தருவர் பிறந்தனர்.

**புரந்தரசித்பாண்டியன்** — வங்கியதீப பாண்டியன் குமரன். இவனது குமரன் வங்கிய பதாகன்.

**புரந்தரன்** — 1. வைவச்சுத மன்வந்தரத்து இந்திரன்

2. அக்னி.

3. மாதவன் தந்தை.

4. ஒரு வேதியன் விஷ்ணுபூசாபலத்தால் சித்திபெற்றவன்.

**புரமீடன்** — அசமீடன் தம்பி. அஸ்திகன் குமரன்.

**புரம்** — (௩) இருப்புமதில், வெள்ளிமதில், பொன்மதில்களையுடைய அரண்கள். இவையே திரிபுரம்.

**புரவிசுரதன்** — சகதேவி குமரன்.

**புராணம்** — ஸ்ரீ சிவமூர்த்தியினிடம் இவைகளைக் கேட்ட நந்திமாதேவர், சநற்குமார முனிவருக்கு உபதேசிக்க அவர் வியாசருக்கு உபதேசிக்க வியாசபகவான் சூதருக்கு உபதேசித்தனர். இப்புராணங்கள் பதினெண் வகைப்படும். அவை சைவம், பவிஷ்யம், மார்க்கண்டம், இலிங்கம், காந்தம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிரமாண்டம், காருடம், நாரதீயம், விஷ்ணு, பாகவதம், பிரமம், பதுமம், ஆக்னேயம், பிரமகைவர்த்தம் முதலியன. இவையன்றி உபபுராணம் பதினெட்டுள. அவை உசனம், கபிலம், காளி, சநற்குமாரம், சாம்பவம், சிவதர்மம், சௌரம், தூர்வாசம், நந்தி, நாரசிங்கம், நாரதீயம், பாராசரீயம், பார்க்கவம், ஆங்கிரம், மாரீசம், மானவம், வாசிட்டம், இலைங்கம், வாருணம் முதலிய. இப்புராணங்களுள் சைவம், பௌஷிகம், மார்க்கண்டம், லிங்கம், காந்தம், வராகம், வாமநம், மச்சம், கூர்மம், பிரமாண்டம் இவை சிவபுராணங்களாம். காருடம், நாரதீயம், விண்டு, பாகவதம், விஷ்ணு புராணங்கள். பிரமபுராணம், பதுமபுராணமிரண்டும் பிரமபுராணங்கள். ஆக்னேயம், அக்னிபுராணம். பிரமகைவர்த்தம், சூரியபுராணம். சைவ முதலிய பத்துப்புராணங்களும், இரண்டுலக்ஷத் தறுபத்தெண்ணாயிரங் கிரந்த முடையன. காருட முதலிய விஷ்ணு புராணங்கள் நான்கும் ஐம்பத்தையாயிரம் கிரந்த முடையன. பிரமமுதலிய இரண்டும் அறுபத்தையாயிரங் கிரந்த

முடையன. ஆக்னேயம் ஒன்பதினாயிரம் கிரந்த முடையது. பிரமகைவர்த்தம் பன்னீராயிரங் கிரந்த முடையது. இப் புராணங்கள், கிருதயுகத்துப் பிரமதேவரால் பிரமமென வொன்றாகி நூறுகோடி கிரந்தங்களாயும், திரேதாயுகத்து இருடிகளால் கோடி கிரந்தங்களடங்கிய நாற்றுப்பதினெட்டுச் சங்கிதைகளடங்கிய பதினெட்டு வகையினவாகவும், துவாபரயுகத்து வியாசபகவானால் நான்குலக்ஷத்து எண்ணாயிரங் கிரந்தங்களடங்கிய பதினெண்புராணங்களாயின. இப்புராணங்கள் வியாசர் வழியாக ரோமகர்ஷணருக்கும் ரோமகர்ஷணர் சுமதி, அக்னிவர்ச்சஸ் முதலியோருக்கும் கூற வெளிவந்தன.

**புராணலக்ஷணம்** — இவை சர்க்கம், பிரதிசர்க்கம், மனுவந்தரம், வம்சம், வம்சாநுசரிதம், ஸ்திதி, ரக்ஷணம், சமுஸ்தை, எது, ஆசிரயம், இப்பத்து லக்ஷணங்களையுடையன. இது கிருதயுகத்தில் நூறுகோடி கிரந்தங்களாகப் பிரமனாலும், திரேதாயுகத்தில் கோடி கிரந்தங்களாய்ப் பதினெண்பாகங்களாக இருடியராலும், துவாபரயுகத்தில் வியாசரால் பதினெண்புராணங்களாகவும், வகுக்கப்பட்டது. பின்கூறிய ஐந்தையும் நீக்கி ஐந்தெனவும் கூறுவர்.

**புராணிகன்மதம்** — திரிமூர்த்திகள், எழுவகைத்தோற்றம், பிரமாண்டம் இவற்றின் நிலைகளையறிவித்துத் தான் கெடாமல் இருப்பதால் புராணமே பிரமம் என்பன். இப்புராணங்கள் சொல்லியவற்றைத்தவறி நடப்பதே பந்தம். இவை நீங்கிப் புராணம் சொன்னவழியில் நடப்பது மோக்ஷம்.

**புராந்தகசோழன்** — ஔவை காலத்திருந்து அவளால் பாடல்பெற்ற சோழன்.

**புரி** — (எ) அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை.

**புரிசைக்கிழார்** — குன்றத்தூரில் இருந்த வேளாண் குலத்தவர். முதுமொழிக்காஞ்சி செய்தவர். சோழனால் குடியேற்றப்பட்ட நாற்பத்தெண்ணாயிரவரில் ஒரு குடி.

**புரிமணை** — பானை முதலியதாங்க வைக்கோற்புரி, பனைநார் முதலியவற்றால் செய்யப்பட்டது.

**புரிமான்** — கோமதி குமான்; இவன் குமரன் சாதகர்ணன்.

**புரியஷ்டகசரீரம்** — பூதமைந்து - க, தன்மாத்திரைஐந்து - க, ஞானேந்திரியமைந்து - க, கன்மேந்திரியம் ஐந்து - க. அந்தக்கரணம் - க, முக்குணம் - க, கலாதி பஞ்சகம் - க, பிரகிருதி - க, ஆக - அ. இது சூக்ஷ்மசரீரம் எனவும்படும்.

**புரீசன்** — சுசாந்தி குமான். இவன் குமரன் அரதன்.

**புரு** — 1. சவ்வீரநாட்டில் இருந்த யாதவன். இவன் மனைவியைச் சிசுபாலன் கவர்ந்தனன்.

2. ஒரு சக்கிரவர்த்தி; தேவி ஜரை. காலகன்னிகையால் நினைத்த இடத்தில் சஞ்சரிக்கச் சாபம் பெற்றவன்.

3. உரோமபதன் குமரன். இவன் குமரன் கிருதி.

4. தேவவிரதன் குமரன்.

5. (ச) யயாதிக்கு சன்மிஷ்டையிடம் உதித்தவன். தந்தைக்கு இளமைதந்து முதுமையேற்றவன்.

6 வசுதேவனுக்குச் சகதேவியிடம் பிறந்தவன்.

**புருககீர்த்தி** — ஒரு இருடி. பிரகஸ்பதி அம்சம்.

**புருகுச்சன்** — மாந்தாதா புத்திரன். இவன் கஸ்யபபுத்திரர்களால் நாகர்களைப் பயமுறுத்தியபடியால் நாகர் தங்கள் குமரியாகிய நருமதையை இவனுக்கு அளித்தனர். இவன் காந்தருவரை வென்றான். இவன் குமரன் வஸுதன்.

**புருகூதபீடம்** — சத்திபீடங்களில் ஒன்று.

**புருகோதரன்** — அணு குமரன்.

**புருசன்** — சுசாந்தி புத்திரன்.

**புருசித்** — 1. போஜவம்சத்தவன். தருமனுக்கு அம்மான்

2. (சூ.) அசன்குமரன்.

3. ருசகன் குமரன்.

4. வசுதேவன் தம்பியாகிய கங்கிசனுக்குக் கங்கனிடம் உதித்த குமரன்.

**புருசுண்டி** — இவர் முதலில் விப்பிராதனென்னும் வேடன். தண்டகவனத்து வழிப்பறித்துத் திரிந்து ஒருநாள் அவ்வழிவந்த முத்கலமுனிவரைக் கொல்லப்போக அவரது பார்வையால் ஞானமுண்டாகி வேண்ட இவருக்கு மந்திரமுபதேசித்து ஒருமாத்தைக் காட்டி இதை நீர் விட்டு முக்காலமும் பூசிக்கவென, அவ்வாறு பலநாள் செய்தல் கண்டு முத்கலர் ஆங்கு அடைந்து பக்திக்கு மகிழ்ந்து இவரிடம் கருணையால் விநாயக மந்திரம் உபதேசிக்க அதனால் தவமேற்கொண்டு விநாயக சாரூப்பமும் புருசுண்டி யென்னும் பெயரும் பெற்ற

வர். மகோற்கட விநாயகர் காசிராஜன் வீட்டில் எழுந்தருளி யிருந்தபோது அவனுக்கு இவரது மகிமையைச் சொல்லி அழைத்து வரச்சொல்ல அவன் தண்டகவனம் வந்து மகோற்கடர் அழைத்தனர் எனப் புருசுண்டி அரசனது கண்ணை மூடிக் காசியில் இருத்தினர். மீண்டும் அரசன் விநாயகர் ஏவலால் வந்து கஜாநநர் அழைத்தனர் எனக் காசியடைந்து விநாயகரைத் தரிசித்தவர்.

**புருடோத்தமநம்பி** — இவர் வேதியர், சிவபத்திமான். சிவமூர்த்தியைப் பாடி முத்தி பெற்றவர்; இவரது திருப்பாசுரம் ஒன்பதாந் திருமுறையிற் சேர்க்கப்பட்டது.

**புருபுருஷன்** — சாட்சுஷ மநுவின் குமரன்.

**புருமித்திரன்** — துரியோதனன் சபையில் இருந்த சூதில் வல்லவன்.

**புருமீடன்** — அஸ்தி குமரன். இவன் குமரன் பிரகதிட்சு.

**புருஷசாமுத்ரிகாலக்ஷணம்** — ஒரு உத்தம புருஷனுக்கு உள்ள உறுப்புக்களுள் உன்னதமான அவயவங்கள் ஆறு, நீண்ட உறுப்புக்கள் ஐந்து, குறுகிய உறுப்புக்கள் நான்கு, அகன்றஉறுப்புக்கள் இரண்டு, செவந்த உறுப்புக்கள் எழு, ஆழ்ந்த உறுப்புக்கள்மூன்று, இவை தொகை. இவற்றை விரிக்கின் முப்பத்திரண்டாம். அவற்றினிலக்கணங்களைச்சுருக்கிக்கூறுகின்றேன். வயிறு, தோள், நெற்றி, நாசி, மார்பு, கையடி இவை ஆறும் உயர்ந்திருப்பின் அவன் இந்திரபோகத்துடன் இருப்பன். கண், கபோலம், செங்கை, மூக்கு, முலை, நடுமார்பு இவை ஐந்தும் நீண்டிருப்பின் நன்மையடைவன். சிகை, சருமம், விரற்கணு, நகம், பற்கள் இவை ஐந்தும் சிறிதாயிருப்பின் தீர்க்காயுளை யடைவன். கோசம், கணைக்கால் நா, முதுகு, இவை நான்கும் குறுகியிருப்பின் செல்வமுள்ளவன் ஆவன். சிரம், நெற்றி இவை இரண்டும் அகன்று இருப்பின் மிகுந்த நலம் அடைவன். உள்ளங்கால், உள்ளங்கை, கண்கள், இதழ்க்கடை, அண்ணம், நா, நகம், இவையேழும் சிவந்திருப்பின் மிக்க இன்பத்தைப் பெறுவன். இகல், ஓசை, நாபி இம்மூன்றும் ஆழ்ந்து இருப்பின் மேலான நன்மை அடைவன்.

பெண்ணிலக்கணம் - பெண்கள், பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என நால்வகையர். இவர்களுள் பத்மினி செண்பக மலர்போன்ற சிவந்த மேனியும், பொய்பேசாமையும், நன்மணம் தங்கிய சரீரமும், மருண்ட பார்வையுடைமையும், உடையாள் மற்றும் அவ்வகையே மற்றப் பெண்களும் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவர் ஆவார். அவர்களில் உயர்ந்தவள் பதுமினி சாதிப்பெண். அவ்வகைப் பெண்களுக்கும் மற்ற ஜாதிப் பெண்களுக்கும் பொதுவில் அங்கலக்ஷணங்களைக் கூறுகின்றேன். மிக நீண்டு குறுகாதவளாய்ப் பிளவுபடாத கடையிணைகளை யுடையவளாய்த் தழைத்து, மேகம்போலவும் வண்டு போலவும் கறுத்துக் கடை குழைந்து இயற்கை மணம் பெற்று நெருங்கி நெறித்து நெய்த்து இருண்ட கூந்தலையுடையாள் தன்னுயகனுக்கு மிக்க செல்வமுண்டாக்குபவள் ஆவள். யானை மத்தகம் போலத் திரண்டுயர்ந்த தலையினையுடையளாயிருப்பின் அவள் புருஷன் தீர்க்காயுள் பெற்று அரசனோடு ஒத்த செல்வமுள்ளவன் ஆவன். எட்டாம்பிறைச் சந்திரன் போல் மயிரும் நரம்பு மில்லாமல் தசை பெற்று மூன்று விரல் அளவு அகன்று விளங்கும் நெற்றியையுடையாள் செல்வத்துடன் ஆரோக்கியத்தை யுண்டாக்குவள். கண்ணின் கடைசிவந்து பசும் பால்போல் வெளுத்து நடுவிழி கறுத்து இமை கருமையாய் இருப்பின் நன்மை யடைவள். புருவம் வளைந்த வில்போல் தம்மிலிரண்டும் ஒத்து இருப்பின் நன்மை பெறுவள். மூக்கு இருதொளையும் உருண்டு எட்பூவைப்போ லிருப்பின் நலம் அடைவள். பின்னும் காதுகள் வள்ளைக்கொடிபோல் நீண்டும் தாழ்ந்தும் நல்ல சுழிகளையுடையனவாயும், முன் தள்ளியும், கபோலம் வட்டமாய், தசையுடையதாய் உயர்ந்து கண்ணாடி மண்டலம்போல் தெளிவான ஊற்றமுடையதாயும், இதழ் கொவ்வைக்கனிபோல் திரண்டு இருபக்கமும் குவிந்து சிவந்தரேகை யொழுங்காகவும், பற்கள் வெளுத்தும், முப்பத்திரண்டிற்குக் குறையாமலும், மிகாமலும் இடைவெளி பெருமலும் இருக்கிறவள் சகலசுகத்தையும் அடைவள். மெல்லிதாய்ச் சிவந்து கோமளமாயும்உள்ள நாபியினையுடையவள் தான் இச்சித்த பொருள்களை நுகருவள். தசைபெற்று வட்டமாய் இரண்டங்குவ அளவினையுடையதாகி அழகாகிய மோவாய் உடையவள் எல்லா நன்மையும் அடைவள்.

பின்னும் முகம் அகவிதழையுடைய செந்தாமரைபோலவும், சந்திரனைப்போலவும், கழுத்துச் சங்குபோன்று தசைபெற்று நான்குவிரல் அளவினதாய்த் திரண்டு மூன்று ரேகை வரையுண்டா யிருந்தால் அவள் கணவன் அரசனோடு ஒத்தவனும். மார்பு தடைபெற்றுப் பதினெட்டு விரல் அளவு அகன்று, மயிர், நரம்பு முதலிய தோன்றாமல் மிதந்து இருப்பவள் சிறப்பை அடைவள். தோள்கள் மூங்கில்களை யொப்பத் திரண்டு தசையுடைத்தாய் மயிர் அகன்று எலும்பு தோன்றாமலும், கைகள் நீண்டும், உருண்டும், விரல்கள் கணுக்கள் பெற்றுச் சிறுத்தும், நகங்கள் சிவந்தும் உருண்டும், சாசரப்பின்றியும், உள்ளங்கை மிருதுவாகிச் சிவந்தும், இடைவெளி யகன்று நடுவிரல் உயர்ந்து மங்கலமாகி நல்ல இலக்கணவரைகளைப் பெற்றிருப்பவள் எல்லா நன்மையும் பெறுவள். தனங்கள், கடினமாய்த் தசையுடையதாய் வட்டமாய், தாமரையரும்பை யொத்து இரண்டும் ஒத்து, இறுமாந்து ஈர்க்கிடை நுழையா வகை நெருங்கியும், வயிறு வட்டமுடையதாய் உரோமவரிசையுடன் கூடிப் பக்கங்களில் மயிர் நரம்பின்றியும், நாபிவலஞ்சுழி பெற்று, ஆழ்ந்திருப்பவள் அழியாச் செல்வமுடையளாம். நிதம்பம் இடையில் மயிர் நரம்பு அற்று இருபத்து நான்குவிரல் அளவாய்ச் சிறுத்து மெலிவதாய் மத்தகம் ஆமையின் முதுகு இரண்டும் நேர் ஒத்தும், தொடைகள், மயிர் எலும்பு தோன்றாமல் யானைத் துதிக்கையையும், வாழைத்தண்டையும் ஒத்தும், முழங்கால் எலும்புதோன்றாமல் வட்டமாய், தசையைப் பெற்றும், கணைக்கால் மயிர் நரம்பு தோன்றாது, இரண்டும் சமமாக உருண்டு சிறுத்தும், புறவடி நரம்பு, எலும்பு, தசைபெற்றும், ஆமைமுதுகுபோல் திரண்டு உயர்ந்தும், கால்விரல்கள் சுத்தமாய் உயர்ந்து செங்கழுநீரினிதழ்போல் ஒழுங்காய்த் திரண்டும், அவற்றினகங்கள் சந்திரன் பிளவுபோல் மிருதுவாகித் தசைந்தும், உள்ளங்கால் தசைப்பிடிப்பாய் மிருதுவாய்ச் சமமாயும், மேனி பொற்சாயலாய் வியர்வு இல்லாமல் அழகாயும், தேகமணம் பாதிரி, குவளை, தாமரை, மல்லிகை, சண்பகம், போலவும், சொற்கள், கிளி, குயில், யாழ் முதலிய ஓசைபோலவும் இருப்பவள் சகலபாக்யமும் பெற்று இந்திராணிபோல் சுகம் அடைவள்.

**புருவசன்** — மது குமரன்; இவன் குமரன் அநு.

**புருவன்** — சாட்சுசமனுவிற்கு நட்வலையிடம் உதித்த குமரன்.

**புருவன்மன்** — ஒரு அரசன், வேட்டைக்குச் சென்று விலங்குகளை வருத்துகையில் மரீசி முனிவர் கோபித்து நீ சிங்கமாக என அரசன் சிங்கவுருக்கொண்டு காட்டில் திரிந்துகொண்டிருந்தனன். இவ்வகை இருக்கையில் பாகவதன் ஒருவனைக்கொல்லச்செல்ல அவன் விஷ்ணுவைத் துதிக்க அதைக் கேட்டு ஞானமடைந்து முன்னுருவடைந்தவன். இவனுக்குச் சிங்கோதரபவன் எனவும் பெயர்.

**புருஷமேரு** — ஸ்தம்பகன் குமரன். இவன் குமரன் சுநந்தன்.

**புருஷாதர்** — ஒருவித இராக்கதர்; வீமனுடன் யுத்தஞ் செய்தவர்கள்.

**புருஷாமிருகம்** — புருஷவடிவும் மிருகவடிவும் உள்ளது; வீமசேநனைக் காண்க. தாமசமனுவைக் காண்க

**புருஷோத்தம பாண்டியன்** — காருண்ய பாண்டியன் குமரன்.

**புருஷோத்தமம்** — ஜகந்நாதஸ்தலம்.

**புருஷோத்தமன்** — வட இந்தியாவில் ஏறக்குறைய (2250) வருஷங்களுக்கு முன் அரசாண்டிருந்த அரசர். இவர் கிரேக்கத் தலைவனாகிய மகா அலக்சாந்தரை எதிர்த்துச் சண்டையிட்டுப் பின் சமாதானம் செய்து கொண்ட அரசர்.

**புருடன்** — வசுதேவனுக்குச் சகதேவியிடத்துப் பிறந்த புத்திரன்.

**புரூரவன்** — (புரூரவசு) இவன், இளன் இளையென்னும் பெண்ணுருக்கொண்ட காலத்துப் புதன் அவளைக்கூடப் பிறந்தவன். பிரதிஷ்டானபுரம் காண்டவப் பிரஸ்தமாண்ட சந்திரவம்சத்தவன். இவன் இராச்சிய கருவத்தால் வேதியரை அவமதிக்க அவர்கள் சாபத்தால் பித்தனாய்த் திரிந்தனன். இவனது கீர்த்தியை நாரதர் யாழில் பாடக்கேட்ட ஊர்வசி, இவனையணைந்து இவனிடம் இரண்டு ஆடுகளைக் கொடுத்து வளர்க்கக் கட்டளையிட்டு அரசனை நோக்கி உன்னைச் சம்போக காலத்தன்றி மற்றைக் காலங்களில் நிர்வாணமாய்க் காணின் நீங்குவேன் என்று கூறி அரசனுடன் இருந்தனள். ஒருநாள் இந்திரன் தன் சபைக்கு

ஊர்வசியை வருவிக்கக் காந்தருவர் அவளிருக்கு மிடம் அணைந்து அவள் தன் ஆடுகளைக் கவர்ந்து சென்றனர். ஊர்வசி கண்டு புலம்ப இருளாகையினாலும் கள்ளர் நீங்குவார் என்ற விரைவினாலும் நிர்வாணமாய்ப் படுக்கைவிட்டு வெளிவந்து காந்தருவரைத் தொடர்ந்தனன். காந்தருவர் இதையறிந்து பன்னலைப் பிரகாசிப்பித்தனர். இது காரணமாக ஊர்வசி நீங்க அரசன் ஊர்வசிமேல் பித்தங் கொண்டவனாய்ச் சரஸ்வதி நதி தீரத்தில் ஊர்வசியைக்கண்டு தன் குறை கூற அவள் வருஷாந்தத்தில் உன்னை அணைகிறேன் என்று அவ்வகை வந்து நீங்குகையில் அரசன் பரிதபிக்க ஊர்வசி அரசனை நோக்கிக் காந்தருவரைப் பூசித்தால் அவர்கள் என்னை உனக்கு அளிப்பர் என்று நீங்கினள். அவ்வகை அரசன் புரியக் காந்தருவர் ஒருஸ்தாலியைத் தந்தனர். அரசன் அதை ஊர்வசியாக எண்ணியிருக்கச் சஞ்சரிக்காமை கண்டு காட்டில் விட்டனன். அதனை மீண்டும் போய்ப்பார்க்கக் காணாது அதினால் உண்டான அரசமரத்தை இரண்டாக்கி உருவசி சாலோக்கியத்தை யெண்ணிக்கடைய அதில் அக்னியுண்டாயிற்று. அது அரசனுக்குக் குமரனாகக் கற்பிக்கப் பட்டது. இவனுக்கு ஊர்வசியிடம் ஆயு, தீயந்தன், அமவஸு, சதாயு, பிறந்தனர். (பாகவதம்.) இவனுக்கு அயிலனெனவும் ஒரு பெயருண்டு.

**புரோகிதன்** — 1. ஒரு வேதியன். அரசன் வேதியர்க்குத் தானமளிக்க இவன் முன்னிலையாகக் கொடுத்த தனங்களைக் கொள்ளை கொண்டதனால் நரகவேதனையநுபவித்து பின்னர் பிரமராக்ஷஸாகப் பிறந்து வருந்திக் கபிலரால் நீங்கப் பெற்றவன்.

2. ஊரிலுள்ளார்க்கு வைதிகச்சடங்கு செய்வோன்.

3. மந்திராநுட்டானம், வேதஞானம், கன்மங்களில் விரைந்த ஆற்றல், பொறியடக்கல், சினலோப மோகங்களின்மை, வேத உபவேதவுணர்ச்சி, அறப்பொருணூலறிவு, அரசனைத் தன் ஒழுக்கத்தாலச் சுறுத்தல், நீதிநூற்பயிற்சி, சத்திர அத்திர தனுர்வேதப் பயிற்சி, படைகளை அணி வகுக்குந்திறம், சாபாநுக்கிரக வன்மை ஆகிய இவையுடையவனாம். (சுக்-நீ)

**புரோசன்**—1. பிரியவிரதன் பேரன், மேதாதிபின் குமரன்.

2. தருமனை வாரணவதத்திற்கு அநுப்பியகாலத்தில் உடன்சென்ற மந்திரி.

**புரோசநன்** — 1. முதலில் பாண்டவர்க்கு மந்திரியா யிருந்து துரியோதனனுடன் கூடிக்கொண்டு அரக்குமாளிகையில் ஐவரைக் கொல்ல நினைத்தவன். இவன் ஒரு சில்பி யெனவும் கூறுவர்.

2. சோமனென்னும் வசுவின் குமரன்.

3. அணிலனென்னும் வசுவின் குமரன் என்றுங் கூறுவர்.

**புரோசவன்** — பிராசனனென்னும் வசுவின் குமரன்; தாய் உற்சவதி.

**புரோச்சிங்கம்** — இந்திரப்பிரத்தத்திற்கு அருகிலுள்ள பிரதேசம்.

**புரோடாசம்** — 1. சுத்தமாகிய நெல்லை அரிசியாக்கி மாவுசெய்து வறுத்து உண்டை செய்து அமைத்தல். (பாரா-மா)

2. ஹோமத்திற்காக மாவினால் உப்பில்லாமல் தட்டிச் சுடப்பட்ட அடை.

**புலகன்** — பிரமன் மானஸ புத்திரர்களில் ஒருவன். பிரமன் நாபியில் பிறந்தவன் எனவுங் கூறுவர். இவனுக்குக் கின்னர கிம்புருஷர் என இரண்டு குமாரர்கள். தேவி, கதி.

**புலக்கசம்** — சண்டாள சாதிகளில் ஒன்று.

**புலத்தியர்** — பிரமன் புத்திரர். இவர் திரணபிந்துவின் தவச்சாலையில் தவஞ்செய்கையில் அரம்பையர் நீர் விளையாட அச்சோலையில் வரக்கண்டு கோபித்து இ பெண்களே இனி என்னெதிரில் யாராவது வரின் கருப்பமுறுக எனச் சபிக்கப் பெண்கள் பயந்து வராதிருந்தனர். இதனையறியாத திரணபிந்துவின் குமரி இவராச்சிரமத்தருகுசெல்லக் கருப்பமுற்றுத் தந்தையிடம் கூறிப் புலத்தியரை மணந்தனள். கார்த்தவீரியனால் சிறையிடப்பட்ட இராவணனை மீட்டவர். பராசரமுனிவர் அரக்கரைக் கொலைசெய்த வேள்வியைத் தடைசெய்தவர். இவர் சரஸ்வதியிடம் செல்ல அவள் புத்திரவாஞ்சை இல்லாதிருந்தமையால், நதியாக என அவளால் அரக்கர்குலத்தில் விபீஷணனாகச் சாபமடைந்தவர். பிரமதேவன் காதிற்பிறந்தவர். இவர் தேவி ஆவிர்ப்பூ, இவர்க்கு விசிரவஸு, அகத்தியர் என இரண்டு குமரர் உண்டு. புலம் என்றால் வேதத்தில் தவத்தை அறிவிக்கும். இவர் தவத்தால் புகழுற்றோராதலின் இப்பெயர் பெற்றனர்.

**புலத்துறைமுற்றிய கூடலூர்கிழார்** — இவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையாரின் வேண்டுகோளின்படி ஐங்குறுநூறு தொகுத்தவர். இவர் கடைச்சங்கப் புலவருள் ஒருவர். மலைநாட்டினதாகிய கூடலூரிற் பிறந்த வேளாளர். இவர்க்குக் கூடலூர்கிழார் என்பது இயற் பெயர். மேற்கூறிய அரசரால் ஆதரிக்கப்பட்டவர். அவரிறந்தபின் மிகவருந்திப் புலம்பியவர். சேரநாட்டினதாகிய மாந்தையெனும்நகரம் இவரால் பாடப்பெற்றது. முதுமொழிக் காஞ்சி யியற்றிய கூடலூர்கிழார் இவரின் வேறுயினவர். இவர்காலத்துப் புலவர்கள் குறுங்கோழியூர்கிழார், பொருந்தி விளங்கீரனர். புலத்துறைமுற்றியஎன்பது இவர்க்கு அடைமொழி. (ஐங்குறு).

**புலமையோர்** — (ச) கவி, கமகன், வாதி, வாக்கி இவர்களுள் ஆசுமுதலிய நாற்கவி பாடுவோன் கவி. அரும்பொருளைச் செம்பொருணடையாக் காட்டி விவகரிப்போன் கமகன். காரணமும் மேற்கோளும் எடுத்துக்காட்டிப் பிறன்கோள் மறுத்துத் தன் கோள் நிறுத்துபவன்வாதி. அறம்பொருள் இன்பம் வீடுகளைக் கேட்கக் கேட்க விரித்துரைப்போன் வாக்கியாம்.

**புலவராற்றுப்படை** — பெரிய இடத்தினையுடைய வானத்துத் தேவர்களிடை மிக்க அறிவாளனை நெறியிலே செலுத்தியது. (பு வெ. பாடாண்).

**புலவரேத்தும் புத்தேணுடு** — நுண்ணிதான அறிவுசென்ற குற்றமற்ற தரிசனத்தையுடையராய் இந்திரிய சயம் பண்ணினர் விரும்பும் மேலுலகத்தைச் சொல்லியது. (பு வெ. பொது).

**புலவி பொருளாகத் தோன்றிய பாடாண் பாட்டு** — விற்போன்ற நெற்றியினையுடையாள் வீரன்றன் அகலத்திடத்தை தழுவேம் யாமென்று சொல்லி ஊடிச் சொல்லியது.

**புலவியுட்புலம்பல்** — அழகிய தொடியினையுடைய மடவாள் தலைவன் மார்பின் மாலையை அறுத்து ஊடலாற்றுளாய்த் தனிமையுற்றது. (பு வெ. பெருந்திணை).

**புலனறிசிறப்பு** — வெவ்விய வேற்றுப் புலத்தினது நிலைமையை அறிவித்தார்க்குத் தம்முடைய கூற்றினும் பெருகச் சிறப்புக் கொடுத்தது. (பு. வெ.)

**புலன்** — 1. (ஐ) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.

2. இயற் சொல்லாற் பொருள் தோன்றச் செய்யப்படும் பாட்டு. (யாப்பு-வி).

**புலி** — இது சிவிங்கி, சிறுத்தையினத்தில் பெரிது. இது நாலடி உயரமும் வால் முதலிய 5-அடி நீளமும் இருக்கும். இதன் உடல், பருத்துவளைந்த கருமையான பட்டைகளைப் பெற்றிருக்கும். இதன் கண்கள் இரவில் அதிகம் பிரகாசிக்கும். ஆதலால் இதன் கண்களைக் கண்ட மிருகங்கள் அஞ்சி மயங்கி இரையாகும். நகங்களும் பற்களும் உறுதியானவை. இது காட்டிலுள்ள நீர்த்துறைகளில் பதுங்கியிருந்து தண்ணீர் குடிக்க வரும் பிராணிகளைக் கொல்லும். இது மனிதர்க்குப் பயப்படும். ஒருமுறை இது மனித மாம்சத்தைத் தின்று ருசிகாணின் பிறகு மனிதனையே கொல்ல எண்ணும். புலி, சிறுத்தை, பூனை, புனுகுபூனை, சிங்கத்தின் இனத்தைச் சேர்ந்தவை.

தேக அமைப்பு ச அடி உயரம், ௬-அடி நீளம், இது சிங்கத்தினினத்தது இராக்காலத்தில் இதற்குக் கண் நன்றாகத் தெரியும், நிறம் மஞ்சள், தேகத்தில் கருமையான கோடுகள் உண்டு, அடிவயிறு வெண்மை, முன்கால் வலிமையாய் நீட்டவும் சுருக்கவுங் கூடிய நகங்களைப் பெற்றது. மீசை உண்டு. உணவு - ஆடு, மாடு, மான் முதலிய. மனிதரையும் கொல்லும். வழக்கம் - இரவில் இரைதேடப் புறப்படும், அதிக குரூரமுடையது. இது தான் கொன்ற இரையைத் தின்னும். இதைப் போனிலும், ஒருவகைப் பிசினைத் தடவிய இலைகளை இது போகும்வழியில் பரப்ப இது அதின்மீதோடுகையில் காலில் ஒட்டியதை கண்ணிலும் முகத்திலும் தேய்க்க ஒட்டிக் கொண்டு கண்மறைய தரையிற் புரளும் அப்போது சுட்டுக்கொல்வர். உபயோகம் - தோல், நகம், பல்—அணை, ஆபரணம், கத்திப்பிடிக்கு உபயோகம்.

**புலிகடிமால்** — இருங்கோவேளைக் காண்க. துவரையில் முனிவன் தடவினுட் டோன்றியோர் வழித்தோன்றி அரயத்துக் கதிபதியாய்த் தவத்திற்றங்கிய பெரியோரைப் பிழைப்பிப்பான் புலியைக் கடிந்தவன்.

**புலிப்பாணி** — போகருஷியின் மாணக்கராகிய சித்தர். இவர் புலியை வட்பாக்கிக் கொண்டு ஜலத்தைத் திரட்டிக் கையிற் கொண்டதால் இப்பெயர் பெற்றார் என்பர். இவர் வைத்தியத்திலும், ஜாலத்திலும் வல்லவர்.

**புலிமுகன்** — 1. பிரமவிஷ்ணுக்கள் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டு விஷ்ணு புலிமுகனையும் பிரமன் மகிடனையும் சிருட்டித்து ஏவ அவ்விருவரும் சண்டையிட விஷ்ணு பிரமாதிகள் வெருவிக் கைலையடைந்தனர். பார்வதிதேவியார் சிவாஞ்ஞையால் அவ்விருவர் சிரத்தையும் அறுத்தனன். அவ்விருவருள் மகிடன் தலைபிராட்டியைத் துதித்ததால் அம்மகிடனுக்குச் சிவகணப்பேறு பிராட்டி அநுக்கிரகித்தனள்.

2. இவன் ஒரு அசுரன். தேவரை வருத்தித் திரிந்து சிவமூர்த்தியிடம் வரச் சிவமூர்த்தி இவன் தோலையுரித்து ஆடையாக அணிந்தனர்.

3. ஒரு காந்தருவன். இவன் ஏகாதசி விரதமிருந்து இவன் துவாதசியில் எண்ணெயிட்டு முழுகியதால் மறுபிறப்பில் புலிமுகனாய்ப் பிறந்து பிறகு முனிவருபதேசத்தால் மகரமாதத்தில் புண்ணிய நீராடிச் சுத்தமடைந்தவன். (மகாபுராணம்)

**புலையன்** — 1. சூத்திரன் பார்ப்பினியைப் புணரப் பிறந்தவன். பறைகொட்டுபவன்.

2. பறையனைக் காண்க.

**புலோமசை** — 1. இந்திராணி. புலோமன் தங்கை அல்லது குமரி.

2. பிருகுவின் மனைவி. புலோமை யெனவுங் கூறுவர்.

3. பிருகு பத்தினி, இவள் ஒரு காலத்தில் இந்திரனிடம் கோபங்கொண்டு உலகத்தில் இந்திரன் இல்லாமற் செய்வேன் எனக்கூற விஷ்ணுமூர்த்தி இவளைக் கொன்றனர். (இரா-பால.)

**புலோமன்** — 1. திதியின் புத்திரனாகிய அசுரன்; இவன் விஷ்ணுவிற்குப் பயந்து பிருகுவிடம் அடைக்கலம்புக விஷ்ணு அவனைக் கொடுக்கக் கேட்க இருடி மறுத்தமையால் விஷ்ணு இருவரையுங் கொன்றனர்.

2. விப்பிரசித்தியின் குமாரனாகிய அசுரன்; இவன் இந்திரனால் கொல்லப்பட்டவன். இவன் தங்கையாகையால் இந்திராணி பௌலோமியெனப் பட்டனள். இந்திராணியை இவன் குமரியெனவுங் கூறுவர்.

3. ஒரு அசுரன், இவன் பிருகுபத்தினியாகிய புலோமையைக் கிரகித்துச் சியவனரால் நீறானவன்.

**புலோமை** — 1. ஒரு அசுரன். தேவிகாளகை. இவர்கள் அறுபதினாயிரம் புத்திரர்களைப் பெற்றனர். பிரமனையெண்ணித் தாய்தந்தையர் இருவரும் தவம்புரிந்து பலவரமும் பொன்மயமான கோட்டையும் பெற்றுப் புத்திரரைப் பாதுகாத்தவர். புத்திரர் காலகேயர்.

2. கச்யபன் தேவி.

3. பிருகுவின் பார்யை. இவர் பூலோமன் எனும் அசுரனால் கவரப்பட்டுப் போங்காலத்தில் சியவனருஷி கர்ப்பத்திருந்து நழுவி விழுந்தனர். அதனால் அவருக்கு அப்பெயர் வந்தது. பிறகு சியவனரால் அரக்கன் நீறானன். இவளை அரக்கன் கவர்ந்து சென்ற காலத்தழுத கண்ணீர் ஆறாய்ப்பெருக அதனால் வதூசரை என்கிற நதி உண்டாயிற்று. (பெண்ணுடன் சென்றது.) இவள் தூக்கித்துக் கொண்டிருக்கப் பிருகு உன்னை அரக்கனுக்குக் காட்டிக்கொடுத்தது யார் என்ன புலோமை அக்னியென்று கூறப் பிருகு அக்னியைச் சர்வபக்ஷகனாகச் சபித்தனர்.

**புல் இனம்** — இவ்வினத்தில் கொடிவகையெனவும், செடிவகையெனவும் இரண்டு வகைகளுண்டு. புல் முதலாக உற்றறியும் ஓரறியுயிர் வகைகளில் பனைமரம் வரையில் இவ்வினத்தைச் சேர்ந்ததென வகுக்கப் படுகிறது. இக் காரணத்தால் தான் பனைக்குப் புற்பதியெனத் தமிழ் நூலார் பெயரிட் டிருக்கின்றனர். இவ்வகையில் கொடிப்புல், இலைப்புல், கொழுக்கட்டைப்புல், சுணைப்புல், அறுகம்புல், புளித்தப்புல், கோரைப்புல், வாசனைப்புல், ஒட்டுப்புல், நெல், கோதுமை, வரகு, கேழ்வரகு, அளத்துப்புல், இரத்தகோமாரிப்புல், உப்பறுகம்புல், ஊர்ப்புல், கச்சற்புல், கடுக்கன்புல், கணைப்புல், கதிர்ப்புல், கமரிப்புல், கம்பம்புல், கர்ப்பூரப்புல், கழிப்புல், கழிமுட்டான் புல், காவட்டம் புல், குசைப்புல், குச்சுப்புல், குஞ்சப்புல், குடைப்புல், கோழிக்காற்புல், சிலைப்புல், சக்குநாறிப்புல், நாணற்புல், சோலைப்புல், தண்டையம்புல், விசுவாமித்திரப்புல், பிரப்பங்காய்ப்புல், விழற்புல், பீசைப்புல், மத்தங்காய்ப்புல், மருக்குற்ப்புல், மாந்தப்புல், முசுறுப்புல், முயற்புல், மூங்கிற்புல் முதலிய. இவற்றுள் கொடிவகைப் புற்களிற் சில (100) அடிகளுக்கு அதிகமாக வளருகின்றன. செடிவகைப் புற்களில் சோ

ளம், கம்பு, முதலிய பெரியவை இப்புல் வினத்தில் பெரும்பாலானவை கணுக்க ளுடையன. இவற்றிற் சில உட்குழலுடை யன. சில சிறு துவாரமுடையனவாய் வயிர முடையனவாயிருக்கின்றன. இவற் றிற் சில மணமுடையனவாயும், சிலவற் றின் தான்யம் எறும்பு, காட்டுவாசிகளுக்கு ஆகாரமாகவும் இருக்கின்றது. கரும்பும், மூங்கிலுமிவ்வினத்த.

**புல்கசன்** — நிஷாதனுக்குச் சூத்ராஸ்திரீயி டம் பிறந்தவன், இவனுக்கு வலைகல்லி யெலிமுதலிய பிடித்தல் தொழில். (மநு).

**புல்லவர்** — ஒரு இருடி. புல்லாரணியத்தில் தவம் இயற்றி விஷ்ணுதரிசனம் கண்ட வர். புல்லாரணி யெனவும் இவர்க்குப் பெயர்.

**புல்லாரணி** — புல்லவரைக் காண்க.

**புல்லாற்றூர் எயிற்றியனார்** — இவர், கோப் பெருஞ்சோழன் தன் மக்களோடு போர் க்கு எழுந்தபோது பாடித் தடுத்த புலவர். (புற. நா).

**புல்லியர்** — இவர்கள் மதுரை ஜில்லாவில் மலையடிவாரத்தில் கிழங்கு காய்கனி முத லிய பறித்துச் சீவிக்கும் ஒருவகைக் காட் டுச் சாதியார். இவர்களுக்குப் பாலியர் எனவும் பெயர்.

**புல்லுருவி** — ஒருவிதப் பூண்டு. இது மரங் களின் மீதே பாவி மரத்தின் சாரத்தைக் கிரகித்துத் தான் படர்ந்த மரத்தைக் கெடுப்பது.

**புல்வகை**—சதுரக்கள்ளி, நாகத்தாளி, பேய் கற்றாழை, செங்கற்றாழை, கற்றாழை, கள்ளி முளையான், மேகநாதப் பூண்டு, அறுகம்புல், சோதிப்புல், தருப்பைப்புல், மாந்தப்புல், காவட்டம்புல், பீனசப்புல், வாசனைப்புல், பேய்ப்புல், பருங்காளான், புற்றுக்காளான், வலைக்காளான், பொறிக் காளான், வரிக்காளான் முதலியன.

**புவநேகவாது** — விஜயகூழங்கைச் சக்கிர வர்த்தி யாழ்ப்பாணத்தில் அரசு செய்த போது அவர்க்கு மந்திரியாயிருந்து பல தருமம் நடாத்திய பிரபு.

**புவநேசன்** — கானவிந்துவைக் காண்க.

**புவனங்கள்** — சுத்தமென்றும் அசுத்தமென் றும் இருவகையாகக் கூறுவர் சைவர். சாந் தியதீதகலையில் (கடு)-ம், சாந்திகலையில் (கஅ)-ம், சுத்தம். வித்யாகலையில் (உஎ)ம் பிரதிஷ்டாகலையில் (நிக)-ம், நிவர்த்திகலை யில் (கoஅ)-ம், அசுத்தம். (சி-சா.)

**புழு** — இது வியாசரால் காணப்பட்டு அதனை ஓட்டத்தின் காரணம் கேட்க தான் வண்டி களுக்குப் பயந்து ஓடுகிறேன் எனக்கேட்டு அதன் பூர்வநிலையுணர்த்த புழுப்பிறவியை நீங்கி அவரது அநுக்ரகத்தால் அரசனு கியது. (பார-அநுசா.)

**புழுமுதலியன** — இவற்றினுடலில் பல வளை யங்கள் உண்டு. அந்த வளையங்களி னடிப் புறம் சுறசுறப்பாயும் மேற்புறம் மிருது வாகவு மிருக்கும். நவ்வொரு அடிப்புறத் திலும் 4 ஜதை முட்கள் உண்டு. இவை களே புழுவின் கால்கள். இவற்றி னுதவி யால் பூமிமீது நகர்கின்றன. உடம்பில் பிசின்போன்ற பசையுண்டு. இப்பசை பூமி யைத் தோண்டுதற்கும், பூமிமீது நகரவும் கூடும். இவை அழுகின பொருள்களைத் தின்கின்றன.

**புளகன்** — ஒரு அரசன். அருணசலத்தில் புழுகுசாத்தி வலிமை பெற்றுத் தேவரை வருத்தத் தேவர் முறைபாட்டால் சிவ மூர்த்தி இவனுக்கு முத்தியளித்தனர்.

**புளிந்தம்** — இது ஒரு தேசம். (பீ. பர்வம்). **This includes the Western portion of Bundelkhand and the district of Sagar.**

**புளிந்தர்** — விதர்ப்ப அநர்த்த தேசத்தவர்.

**புளிந்தன்** — வைசியகுமரியை அரசன் கர விஞல் புணரப் பிறந்தவன்.

**புளினன்** — அமிர்தத்தைக் காத்ததேவன். (பா ஆதி.)

**புளுவர்** — கொங்கு வேளாளரில் ஒரு வகை யார். இவர்கள் கம்பராமாயணத்தில் வல்ல வர் என்பர். இவர்கள் கோயம்புத்தூரில் இருப்பவர்.

**புள்ளுவர்** — பக்ஷிதோஷம் போக்கும் ஒரு வகை மலையாள சாதியார்.

**புறத்திணைநன்னுகனூர்** — ஒய்மான் நல்லியக் கோடன், ஒய்மான் நல்லியாதன், கரும்ப னூர் கிழான் முதலியவரைப் பாடியவர். இவர்க்கு நன்னுகனூர் எனவம் பெயர். (புற-நா.)

**புறத்திரை** — 1. சேனத்தின் வழி மிக்குமேற் கொண்டு பகைவருடைய வெற்றிக்கொடி யணிந்த அரணின் சுற்றிலே விட்டது. (பு-வெ)

2. பகைவரது கண்ணுற் பார்த்தற்கரிய குறும்பின் நூழையும் பெருவாயிலும் யாவரும் புறப்படாதபடி வளைந்து ஊர் மருங்கே விட்டது.

**புறத்துழிஞை** — ஆகாயத்தைக்கிட்டும்காவற் காட்டைக் கடந்து ஆழ்ந்த கிடங்கின் கரையிலே விட்டது (பு-வெ.)

**புறநாட்டுப்பெருங்கொற்றனர்**—இவர்கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் இயற்பெயர் பெருங் கொற்றனர். இவர் நாடு புறநாடா யிருக்கலாம். (அக-௩௨௩)

**புறநானூறு** — இது எட்டுத் தொகையின் ஒன்று. இது கடைச்சங்கப் புலவர் பலராற் பாடப்பட்டது. இதனல் தமிழ்நாட்டுப் புலவர் அரசர் முதலியோரது சரிதை விளங்கும்.

**புறநிலைவாழ்த்து** — நீ வணங்குந் தெய்வம் நின்னைப் பரிகரிப்ப நின்வழி வழிமிகுவதாகவெனச் சொல்லி உண்மை சொல்லியது. (பு. வெ. பாடாண்).

**புறப்பொருள் வெண்பாமாலை** — 1. இது, தமிழிலக்கணம் ஐந்தனுட் பொருளின் பகுதியாகிய புறப்பொருளுக்கு இலக்கணமும், இலக்கியமுமாக அமைந்துள்ளது. பன்னிருபடலத்தின் வழிநூல். இதுவும் பன்னிரு படலங்களையுடையது. இதில் இலக்கியமாக அமைந்துள்ள வெண்பாக்கள் (௩௬௧) நூலாசிரியர் ஐயனரிதனரென்பவர். இவர் சேரகுலத்தவர். மிகச்சிறந்த நூல்.

2. ஐயனரிதனரால் இயற்றப்பட்ட புறப்பொருள் இலக்கணம். இது பன்னிரு படலத்தை முதனூலாகக் கொண்டது. இந்நூற்கு மாகலூர்கிழார் ஓர் உரை செய்திருக்கின்றனர்.

**புறமலைநாடு** — கள்ளரில் ஒருவகை.

**புறவம்** — சீர்காழியின் திருநாமங்களில் ஒன்று, பிரசாபதியைக் காண்க.

**புறா** — 1. இது தன் மனைவியைப் பிடித்துக்கொண்ட வேடன் பொருட்டு அதிதிபூசை செய்யக் கூறிய பெண் புறா சொற்கேட்டு வேடனுக்கு ஆதித்யம் செய்து மழையால் வருந்திய அவனைத் தீக்காயச்செய்து மனைவியினீக்கத்தால் அத்தீயில்வீழ்ந்து சுவர்க்கமடைந்தது. வேடனும் புறாவின் செய்கையாலறிவடைந்து காட்டுத்தீயில் மாய்ந்து சித்தி பெற்றான். (பாரா-காந்.)

2. இது, ஒரு வானப்பறவை. தான்யத்தால் ஜீவிப்பது. இதற்குக் குறுகிய அலகும் சிறிய தலையும் பவழம்போல் சிவந்தகால்களுமுண்டு. இது மூச்சைப்பிடித்து மேக மண்டலம் வரையில் பறக்கும் சக்தியுண்டு இது தன்னினத்தைப் பிரியாது கூட்டமாய் வாழும். இவ்வகையில் பல பல நிறமுள்ள வர்ணமும் உருவ வேறுபாடுகளும் கொண்டுள்ளன. காட்டுப் புறா, பச்சைப் புறா, மணிப்புறா, தவிட்டுப்புறா முதலிய இவ்வினத்தைச் சேர்ந்தவை. கரும்புறா, மாடப்புறா எனப் பலவகை உண்டு.

3. இவை, மற்றப் பறவை யினங்கள் போலாது, உருவத்திலும் உறுப்புக்களிலும் ஒத்து இருக்கின்றன. இவ்வினத்தில் பலவகை உண்டு. அவற்றில் சில நிறத்தாலும் இடத்தாலும் பேதப்பட்டு இருக்கின்றன. இவ்வகையில், மணிப்புறா காட்டுப்புறா, தவிட்டுப்புறா, பச்சைப்புறா என்பனவும், மணிப்புறா - அழகிய நிறமுள்ளதாய் மரங்களில் வாழ்வது. காட்டுப்புறா - நீல நிறமாய்க் காட்டில் வாழ்வது. தவிட்டுப்புறா - தவிட்டினிறமாய் கழனிகளில் தான்யங்களைப் பொறுக்குவது. பச்சைப்புறா - பச்சை நிறமாய் மரங்களில் வாழ்வது. இப்புறாக்கள் சாதுவானவை, வல்லூறு முதலியவை இவற்றை வேட்டையாடும். இவற்றில் வீட்டில் வளர்க்கும் மாடப்புறா நிலத்திலும், ஆகாயத்திலும் கரணம் முதலிய இட்டு உலவும். இவை தம்மை வளர்ப்பவனிருக்கும் இடமறிந்து வெகு தூரம் கொண்டுபோய் விடினும் வந்து சேரும். இவை ஆகாயத்தில் சூரிய மண்டலம் வரையில் பறந்து இரக்கைகள் தீந்தும் வருவது முண்டு. இதிற் சில ஆகாயத்தில் பறந்து செல்கையில் கரணம் போடும். சில தம் பேடுகளை நோக்கி வாலை விரித்து நடனம்செய்வதுண்டு. இவ்வினப் புறாக்களின் உருவபேதங்களை நான் விரிவஞ்சி யெழுதாது, பெயர்களை மாத்திரம் எழுதினேன். இவை தம் பெடைகளைத் தவிரவேறு பெடைகளை விரும்புவதில்லை.

**புறவின் வகை** — இவைகளில் தற்காலம் தெரிந்தவரையில் (40) வகைகளுக்குமேல் பர்லண்ட் சூலஜி (Zoology) யில் கூறப்பட்டிருக்கிறது. இவற்றின் பெயர் ஆங்கிலத்திலுள்ளபடி எழுதுகிறேன். காரியர், பௌடர், ஆமண்ட்டம்ளர், டர்ம்பட்ர், பார்ப், பான்டெயில், ஜாகொபின், காபௌசின், டிராகூன், மொடீனு, ஸ்காண்டரூன், டர்பிட், இங்கிலிஷ் அவுல், நன், மோடில், மாக்பி, ஷோஓமர், ஆர்கேஞ்சில், ஓரியாண்டில் ரோலர், நார்விச்கிராபர், டம்பளர், சாடில்டம்பளர், இங்கிலிஷ்பியர்ட், பால்ட்எட், ரண்ட், குயுமுலெட், டிப்லர், ஆபிரிகன் அவுல், ஓர்கிங் ஓமர்மேன், டொபீ

ஞே, ஒரியண்டல்டர்பிட் பிளாண்டிகெட்டி, சாடிநெட்டி, ஷார்ட்பேஸ்ட், ஆண்ட்வெர்ப், பிரீஸ்ட், பெய்ரி, பிரில்பாக், சுவாலோ, சுவாபெயின், பயர்ஸ்பாட் முதலிய. இவைஉருவத்தில் ஒன்றிற்கொன்று வேறுபட்டும், உணவாதிகளிலும், செயல்களிலும் வேறுபட்டும் இருக்கின்றன.

**புனகா** — இது பிரம்மசாரி தன்னையறியாது வீர்யம் கலிதமானால் ஸ்நானஞ் செய்து ஜபிக்க வேண்டிய மந்திரம். (மநு-அத்.)

**புனருத்தம்** — சத்தத்தினாலும் அத்யாகாரத்தினாலும் தான் சொன்ன வசநங்களைப் பிரயோசனமின்றியில் மீளவும் அதனையே சொல்லுகை. (சிவ-சித்.)

**புனர்வசு** — 1. தரித்திரன் குமரன்; இவன் குமரன் ஆருகன்.

2. யதுவம்சத்துத் துந்துபி குமரன்.

**புனிதவதியார்** — 1. காரைக்கால் அம்மையார்க்கு முதற் பெயர்.

2. காரைக்காலம்மையாரின் கணவரது இரண்டாவது மனைவியின் புத்திரி.

**புனிந்தன்** — நந்தகன் குமரன். இவன் குமரன் பாகவாதன்.

**புனுகு - புழுகு** — இது புனுகு பூனையெனும் பூனையொத்தவை. காட்டில் வாழ்பிராணி. காட்டில் மர முதலிய இடங்களில் தன் பீஜத்தைச் சார்ந்த பையிலுள்ள ஒருவித பசைப் பொருளைப் பீச்ச அதனைச் சேர்த்தெடுக்கும் பொருள்.

**புனுகுப் பூனை** — இது ஒரு காட்டில் வசிக்கும் பிராணி, உருவத்தில் சிறுபூனைபோலவது. இதனிடம் புனுகு எனும் வாசனைப் பொருள் உண்டாவதால் இதைப் புனுகு பூனை யென்பர். இதற்குப் பீஜத்தருகில் வாலின் கீழ்ப்பக்கமாய் ஒரு தைலப்பை இருக்கிறது. இப்பையில் தைலம் ஊறுகையில் அத்தைலத்தை எங்கேனும் தேய்த்துவிடும். அதைக் காட்டுவாசிகள் மணங்கொண்டு வழித்துச் சேர்ப்பர். இதை நகரத்திலுள்ளவர் நடுவில் சுழலும் மூங்கில் அமைந்த கூண்டிலடைத்து வைப்பர். தைலம் ஊறுகையிலதை அகில் தேய்க்கும். அதை வழித்துப் பத்திரப் படுத்தி உபயோகிப்பர். இதுவே புனுகு.

**புனைவிலிபுகழ்ச்சியணி** — இது அவர்ணியத்தை வர்ணிக்க அதனது சம்பந்தத்தால் வர்ணியந் தோன்றுவது. இதனை வடநூலார் அப்பிரஸ்துத பிரசம்சாலங்கார மென்பர். (குவல.)

**புனைவுளிவிளைவணி** — அஃதாவது, சொல்லப்பட்ட வொரு வர்ணியத்தினால் சம்மதமாகிய மற்றொரு வர்ணியந் தோன்றுவது. இதனை வடநூலார் பிரஸ்துதாங்குராலங்கார மென்பர். (குவல.)

**புன்னாடு** — தஞ்சாவூர்.

**புன்னானகநாடு** - இலாவாணக நகரத்திற்கும் மகத நாட்டிற்கும் இடையேயுள்ள தொருநாடு (பெ கதை)

**புஜகேசி** — மானஸமடுவிற்குக் காவலாளி.

**புஜங்கத்திராசமூர்த்தி**—தாருகவனத்து இருடிகள் ஏவிய பாம்புகளை அச்சமுறுத்தி அப்புறப்படுத்திய சிவமூர்த்தியின் திருவுருவம்.

**புஜங்கலளிதம்** — கருடனுக்கு அஞ்சி அபயம்புகுந்த அரவாகினைக் களிப்பித்து அபயமளித்துத் தம்மிடமிருத்திய சிவன் திருக்கோலம்.

**புஜபலன்** — வங்கதேசாதிபதி. இவனிடம் சுசீலன் வந்து கண்டு விபூதி தரியாத உன்னிடம் தானம் வாங்கேனென்று நீங்கினன். நீங்கவே அரசன் செல்வம் நாடு முதலியவற்றை இழந்து மனைவியை வேடர் பிடித்துக்கொள்ள மறுதேயமடைந்து கள்ளனெனக் கையறுப்புண்டு விதர்ப்பநாட்டின் தெருவில் சென்று சிறிது புண்ணியத்தால் சுசீலன் வீட்டுக்கடை சென்று பிச்சை கேட்கச் சுசீலன் கண்டு விபூதி தரியாதவன் அன்றோவெனப் பழைய நினைவுவந்து விபூதி தரிக்கப் பழையபடி குறைந்த கை பெற்று அரசடைந்தவன்.

**புஷ்கசி** — ஒரு அரக்கி, கர்க்கடனுக்கு மனைவி, இவள் குமரி கர்க்கடி. இவள் புருடனுடன்சென்று சுதக்ஷண முனிவரை வருத்த அவரால் புருடனுட னிறந்தவள்.

**புஷ்கரம்** — 1. இது ஒரு தீர்த்தம். The Pushkar, a lake 6 miles from Ajmer. It is called also Pokhra.

2. ஒருதேசம்.

3. சத்தத்தீவுகளில் ஒன்று.

4. மாளவதேசத்துள்ள ஒரு நதி. இதில் விச்வாமித்திரன் தவம் செய்தான்.

**புஷ்கரர்** — கிருஷ்ணன் குமரர்.

**புஷ்கரன்** — 1. பரதன் குமரன்.

2. வசுதேவன் தம்பியாகிய விருகன் குமரன்.

3. நளன் தாயாதியாய்க் கலியுடன் சேர்ந்து நளனுடன் சூதாடி வென்று நளனைக்

காட்டிற் கனுப்பி மீண்டும் அவன் செயிக்கக் கொடுத்தவன்.

4. வருணபுத்திரன்.

5. பரதனது இரண்டாம் புத்திரன். இவன் தாபித்த நகரம் புஷ்கரம்.

**புஷ்காரரண்யம்** — புஷ்கரத்தீவிற் கருகிலுள்ள காடு.

**புஷ்காருணி** — புருவம்சத்து ருக்ஷயன் குமரன்.

**புஷ்கரிணி** — 1. வியுஷ்டிக்குத் தேவி. ஸர்வதேஜஸ் என்பவனுடைய தாய்.

2. உல்முகன் தேவி, அங்கன் தாய்.

**புஷ்கரேக்ஷணிபீடம்** — அறுபத்துநான்கு சத்திபீடங்களுள் ஒன்று. இது பிரபாசக் கரைக்கணுள்ளது.

**புஷ்கலயோகம்** — அமாவாசை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமைகளில் கூடிவருவது.

**புஷ்கலாருணி** — உருக்ஷயன் குமரன். இவன் வம்சத்தவர் பிராமணராயினர்.

**புஷ்கலாவதி** — காந்தாரநகரத்தில் பரதரால் நியமிக்கப்பட்ட பட்டணம்.

**புஷ்கலாவருத்தம்** — புட்கலா வருத்தம் காண்க.

**புஷ்டி** — 1. தருமன் என்னும் மனுவின் தேவி.

2. தக்ஷனுக்குப் பிரசூதியிடம் உதித்த குமரி. யமன் தேவி.

3. கணபதியின் தேவி, உலகத்தில் பூசிக்கப்பெற்றவள். (பிரம்மகைவர்த்த புராணம்).

**புஷ்பகம்** — இது குபேரன் விமானம்; பிரமனால் குபேரனுக்குக் கொடுக்கப்பட்டது. இதில் எவ்வளவினர் இருக்கினும் இடங்கொடுக்கும். இதைக் குபேரனிடமிருந்து இராவணன் கவர்ந்தனன். இராவணசங்காரத்திற்குப்பிறகு இது இராமமூர்த்தியைச் சேனையுடன் தாங்கித் திரு அயோத்தி சேர்ந்தது.

**புஷ்பதந்தம்** — மேற்றிசையானை.

**புஷ்பதந்தர்** — 1. சிவகணங்களில் ஒருவர், இவர் தெய்வமில்லையென இகழ்ந்த பாவமேலீட்டால் தம்மால் பூசிக்கப்பட்ட ஆன்மார்த்தமூர்த்தி மறைய அஞ்சி நாத்திகம் பேசிய வாயின் தந்தங்களை யொவ்வொன்றாகக்கழற்றிப் புஷ்பங்களாக அருச்சித்து மஹிம்நஸ்துதிகூறச் சிவபெருமான் களிப்புற்றுப் புஷ்பதந்த திருநாம மளிக்கவேண்டிய சித்திபெற்றவர்.

2. (சைநர்) ஒன்பதாவது தீர்த்தங்கரர் இவரதுபட்டணம் காகந்திபுரம், இக்ஷவாகு வம்சத்தவர். தந்தை சுக்கிரீவமகாராஜா, தாய் சயராமை, இவர் மார்கழிமாசம் பூர்வபக்ஷபிரதமை மூலநக்ஷத்திரத்தில் பிறந்தவர். உன்னதம் (௧00) வில்வெள்ளைவர்ணம், ஆயுஷ்யம் இரண்டுலக்ஷம் பூர்வம், புத்ரன்சுமதி, விதர்ப்பர் முதலிய எண்பத்தெட்டுக் கணதரர்.

**புஷ்பதந்தன்** — விஷ்ணுபடன்.

**புஷ்பபத்திரை** — மார்க்கண்டர் தவம்புரிந்த நதிதீரம்.

**புஷ்பம்** — இதற்கு சுமனஸ் என்று ஒரு பெயர். தேவர்களுக்கும் சுமனஸ் என்று பெயர். சந்திரன் ஒஷதிநாயகன் ஒஷதிகள் அமிர்தமயமானவை. எவன் இவ்விதமான புஷ்பத்தினால் தேவதைகளைப் பூசிக்கிறானோ அவன் இஷ்டசித்திகளை அடைவான். தேவர்கள் வாசனைகளால் திருப்தி அடைகின்றனர். இது பலிக்கு சுக்ரர் கூறியது. (பார - அநுசா.)

**புஷ்பவகைகள்** — இவற்றிற் சில மணமுள்ளன, சில அழகுள்ளன, சில மணமில்லன குங்குமப்பூ, கொன்றை, மைக்கொன்றை, காட்டாத்தி, சண்பகம் பாதிரி, மந்தாரம், பாரிசாதம், புன்னை, மகிழ், பன்னீர்பூ, குருக்கத்தி, செந்தாழை செம்பரத்தை, அலரி, செம்பருத்தி, நந்தியாவர்த்தம், செவ்வந்தி, தும்பை, தாமரை, அல்லி, குவளை, செங்கழுநீர், நீலோற்பலம், பிச்சி, பலவகை மல்லிகை, முல்லை, வெட்சி, ரோஜா எனும் பலவகைப்பூ, புல், நிலசம்பங்கி, கொடிசம்பங்கி, குருந்து, கோங்கு முதலிய. இவை கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ எனப் பிரிக்கப்படும்

இவை தாவரவர்க்கங்களைச் சேர்ந்த புல் பூண்டு வகைகளின் வித்திற்காதாரமானவை. இவை அகவிதழ் புறவிதழ் புட்பகோசம் அண்டகோசமெனும் பிரிவுகளைப் பெற்றிருக்கின்றன. இம்மலர்களினிதழ்கள் ஓரிதழ்முதல் ஆயிரமிதழ்கள் பெற்றும் அணுமுதல் பல அடிப் பிரமாண நீளமுடையவையாகவும் சில மணமுள்ளவையாகவும் சில மண மற்றும் பல நிறங்களும் பெற்றுத் தனித்தனியாகவும் கொத்துக்களாகவும், சில புட்பங்கள் கருச்சின்னங்களுடன் கூடியும் சில அவையின்றியும், சில எலும்பை யொத்த புறப்புறவிதங்களாகிய பாளைகளுடன் கூடியும் உள்

ளன. பூக்களில் சில விநோதம் உண்டு. சில புட்பங்கள் இலைகளையே தமக்கிடமாகக்கொண்டு புட்பிக்கின்றன. சில இரவில் மலர்வன. சில பகலில் மலர்வன. சில குறித்தகாலம் தவருமல் மலர்வன. மிகப் பெரிய புட்பம் சுமத்ராதீவிலுள்ள நீர்நிலைகளில் அமர்போபால்ஸ் எனும் ஒரு நீர்ப்பூ (8) அடி உயரமும் உட்கமலம் (5) காலன் தண்ணீர்கொள்ளத்தக்க ஆழமும் (5) அடி அகலமுள்ளதாய் ஒரு நீர்ப்பூ மலருகிறதென்பர். இதைப்போலவே தென் சமுத்திரத்தீவிலுள்ள நீர் நிலைகளிலும் ரப்லீஷா ஆர்னல்டி எனும் ஒருவித நீர்ப்பூ (3) அடி அகன்றும் உட்புறம் (3) காலன் தண்ணீர் கொள்ளத்தக்கதாயும் (5) இதழ்கள் கொண்டதாயும் ஒருவகை மலருண்டு என்பர்.

**புஷ்பவந்தன்**—உபரிசரவஸு குலத்தரசன்.

**புஷ்பவாகனன்** — 1. ஒரு அரசன், இவன் காசியில் தவஞ்செய்து சிவப்பிரசாதத்தால் நினைத்த இடஞ் செல்லத்தக்க தாமரையொன்று பெற்று அதனை வாகனமாகக் கொண்டு பிரமதேவரைப் புஷ்கரத்தீவிற் கண்டு அதற்கு அரசனுகவேண்டிப்பெற்று அரசாளுகையில் பதினுயிரம் புத்திரர்களைப் பெற்றுப் பிரசேதஸ் முனிவரால் முற்பிறப்பறிந்து மீண்டுங் காசியெய்தித் தவஞ்செய்து முத்திபெற்றவன்.

2. ஒரு அரசன். பல தானங்கள்செய்த புண்யபலத்தால் சுவர்க்கபதமடைந்தவன். (பதுமம்.)

**புஷ்பவான்** — விருஷபன் குமரன். இவன் குமரன் சத்தியவிரதன்.

**புஷ்பாநுணன்** — துருவன் குமாரனுகிய வச்சரனுக்குச் சர்வர்த்தியிடம் பிறந்த குமரன். இவன் தேவியர், பிரபை, தோஷை; முதற்கூறிய பிரபைக்குப் பிராதம் முதலிய குமாரும் தோஷைக்குப் பிரதோஷன் முதலிய குமரும் உதித்தனர்.

**புஷ்போதகி** — இது யமலோகத்திலுள்ள புஷ்கரிணி, தண்ணீர் தானஞ்செய்தவர்களுக்கு யமபுரத்தில் தாகந்தணிப்பது. (பார-அச்.)

**புஷ்போத்கடை** — விசிரவஸுவின் தேவி. சுமாலியின் பெண். இவளுக்கு மகாபாரிசுவன், மகோதரன், பிறந்தனர்.

**புஷ்யமித்திரன்** — 1. பிரகதர்த்தனுடைய சேநாதிபதி. இவன் குமரன் சுங்கன்.

2. பரதகண்டம் ஆண்ட ஒரு அரசன். இவன் குமரன் துர்மித்திரன்.

3. மகததேசாதிபதியாகிய பருத்ரதன் சேநாதிபதி. இவன் அரசனைக்கொன்று தானே அரசனுயினன். இவன் குமரன் அக்னிமித்திரன்.

**புஷ்யர்** — இருபத்தொன்ருவது புத்தர்.

## பூ

**பூ** — கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என நால்வகைப்படும். கோட்டுப்பூ மரத்திற் பூப்பன; கொடிப்பூ கொடிகளில் மலர்வன; நீர்ப்பூ தடாகாதிகளில் அலர்வன; நிலப்பூ பூமியிற் படர்ந்து விரிவன; அவை முறையே பாதிரி, மல்லிகை, தாமரை, செவ்வந்தி முதலியவை. இம் மலர்களில் புட்பவிதியிற் கூறிய முறைப்படி காலம் அறிந்து இன்ன தேவர்க்கு இன்னமலர் உரிமையென வறிந்து அம் மலர்களில் சாத்துவிக முதலிய குணங்களுள்ள மலர்களிவையென உணர்ந்து விடியற்காலத்து வண்டு புகுதாமுன் சுத்தனுய் அன்று மலர்ந்த மலரினையெடுத்து தேவதாராதனஞ் செய்க. இம் மலர்களில் கொன்றை, ஆத்தி, கொக்கு மந்தாரை, தாமரை இவை சிவமூர்த்திக்கு உகந்தன. விநாயகருக்கு வெட்சி. அறுமுகற்குக் கடம்பு. குருந்து, தாமரை, அலரி இவை விஷ்ணுவிற்காம். பார்வதியார்க்கு நீலமலர். சூரியனுக்குத் தாமரை. திருமகட்குச் செந்தாமரை, நெய்தல். சரஸ்வதிக்கு வெண்டாமரை. துஷ்டதேவதைகட்குச் செம்மலர்களுமாம். மலர்களுள் அரவிந்தம், மாம்பூ, அசோகமலர், முல்லை, நீலம் இவை மன்மதனுக்குரிய பாணங்களாம். செவ்வந்தி சாரமாமுனிவரால் நாகலோகத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. இவைகளுள் ஆத்தி சோழனுக்கும், வேம்பு பாண்டியனுக்கும், பனம்பூ சேரனுக்கும் மாலைகளாம். குவளை தருமராஜனுக்கும், நந்தியாவட்டம் துரியோதனனுக்கும், வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை இவை நிரை கவர்வோர் முதலியவர்க்கு மாலைக்குரிய மலர்களாம். முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம் இவை, அவை மலரும் நிலத்தின் பெயருமாம்.

2. இருவகைத்து போர்ப்பூ, தார்ப்பூ. போர்ப்பூவாவது போரில் இன்ன வேந்தன் வென்ருன் என்பதற்கு அறிகுறி

வேண்டிச் சூடும்பூ. தார்ப்பூ ஆவது ஓர்
விசேடமாக இடுவது முருகக்கடவுளுக்
குக் கடம்பினைத் தார்ப்பூவாகவும் காந்தளை
அடையாளப்பூவாகவும் கூறுப.

**பூகம்பம்** — 1. பூமியின் அசைவு. இது பூமி
யினடிப்பாகத்துண்டான கனலின் மிகுதி
யால் கொதிப்பேறிய பூமியின் மேற்பாகம்
பாரத்தால் அசைவது. இது மிகுதியும்
எரிமலைகளி னருகிலுண்டாம்.

2. ஆதித்தியனின்ற நாளுக்கு எழாம்
நாள் பூகம்பமாம். இதில் சுபகாரியங்கள்
செய்யலாகாது (விதான.)

3. விரூபாக்ஷம் காண்க. (இரா பால.)

**பூகோளபகோளவிஷயம்** — சகலசுருதி
ஸ்மிருதி ஹிதிகாஸ புராணங்களிலுள்ள
பிரமாண வசனங்களாலும் பிரம்மசூரிய
வியாசாதி ஸித்தாந்தவசனங்களாலும் பூர
ணமாயிருக்கிற புராணமார்க்க தீபிகையி
லுள்ள பல விஷயங்களுள் சில சுருக்கிக்
காட்டப்படுகின்றன. அப்பிரமாணங்கள்,
சதுர்த்தசபுவனசப்த த்வீபசப்த சாகரங்கள்
இருக்கிறதாகவும் அவற்றுள் ஜம்புத்வீபம்
நடுவிலிருக்கிறதாகவும் அதன்நடுவில் மேரு
இருக்கிறதாகவும் அதற்குத் தெற்கில் பார
தவருஷம், கிம்புருஷவருஷம், ஹரிவரு
ஷம், வடக்கில் ரம்மியகவருஷம், குருவரு
ஷம், ஹிரண்மயவருஷம், மேருவைச் சுற்
றிலும் இளாவிருதவருஷம், கிழக்கில் பத்
ராஸ்வவருஷமும், மேற்கில் கேதுமால
வருஷமும் இருக்கின்றனவாகவும் கூறப்
பட்டிருக்கின்றன. அவற்றுள் பாரதவரு
ஷம் விஷ்ணுபுராணத்தில் கூறிய விதம்
சமுத்திரத்திற்கு வடக்கிலும் இமால
யத்திற்குத் தெற்கி லிருக்கின்றதாகவும்
(கூ000) யோசனை விஸ்தாரமுள்ளதாயும்
சுவர்க்கமோக்ஷங்களை யடைகிறவர்களுக்
குப் பிரவிர்த்தி நிவிருத்தி கர்மசாதனமான
பூமி இதுதான் என்பதாகவும் இது இந்
திரத்வீபம், கசேறு, தாம்பிரபரணம்,
கபஸ்திமான், நாகத்வீபம், சௌமியத்
வீபம், காந்தர்வத்வீபம், வார்வணத்வீ
பம், பாரத்வீபம், என்கிற பேர்களையு
டைய ஒன்பது கண்டங்களாகப் பிரிக்கப்
பட்டு ஒவ்வொன்றும் ஆயிரம் யோசனை
விரிவுடையதா யிருப்பதாகவும், சகரர்
தோண்டிய உவர்க்கடலால் பெரும்பாலும்
சூழப்பட் டிருக்கிறதாகவும், ஸ்ரீராமாய
ணம் கிட்கிந்தாகாண்டம் (சஂ0) வது சர்க்
கத்தில் "அயம் சுதர்ஸனத் வீப" என்ப
தில் சமஸ்த பிராணிகளுடைய கண்களும்
சூரியாதிதேஜசும், இந்தச் சுதர்ஸன த்வீபத்
திலேயே பிரயோஜனப்படா நின்றன என்
பதாகவும் ஸ்ரீமகாபாரதம் பீஷ்மபர்வத்தி
லடங்கிய ஜம்புகண்டபர்வத்தில் ஐந்தாம்
அத்தியாயத்தில் "சுதர்சனம்பிரவக்ஷியாமி"
என்பதில் ஜனங்களுக்கு நன்றாய்க் கண்
ணுக்குக் காணப்படுகையாலும் வர்த்துலா
காரமாய்ப் பகவத்சக்ர சதுர்சமாயிருக்கை
யாலும் சுதர்சன தேவாதிஷ்டித காலசக்ரா
க்ஷத்திலே கோக்கப்பட்டிருத்தலாலும் சுதர்
சனமென்ற பேருடையதாய் விளாம்பழம்
போல நாலுபக்கமும் மண்டலாகாரமா
யிருக்கையாலே கோளரூபமா யிருக்கிற
தாயும் கூறப்படும். இந்தத் த்வீபத்தைச் சந்
திரமண்டலத்திலே போய்ப்பார்த்தால்.
இதன் சொரூபம் நன்றாய்க் காணப்படும்
என்றதாயும் இந்தப் பரதகண்டத்தில் ஒரு
பாதியில் முயலின் உருவத்தைப்போன்ற
பூமியுடன்சிறிய அரசிலைபோன்ற பூமியும்,
மற்றொருபாதியில் அரசிலை ஆகாரத்தைப்
போன்ற பூமியுமிருக்கிறதாகவும், அவை
சமஸ்த ஔஷதிகளாலே சூழப்பட்டிருக்
கின்றனவாகவும் இந்தப் பரதவருஷத்தில்
முயலின் உருவம்போலவும் அரசிலையின்
உருவம்போலவும் காணப்படுகிற பூமிகளை
யொழிந்தவிடமெல்லாம் சிறிய பூகண்டங்
களோடுகூடி ஜலமயமாக இருக்கின்றதாக
வும் முயலின் உருவத்தின் தலைப்பக்கத்
தையும் உடற்பக்கத்தையும் தக்ஷிணோத்தர
கண்டங்களாகவும், நாககஸ்யப தீபங்களிர
ண்டையும் இரண்டு காதாகவும், தாம்பிரபர்
வதத்தைத் தலையாகவும், மலையபர்வதத்
தைக் கழுத்தாகவும்கூறித் தக்ஷணகண்டத்
தை விவரித்துக்காட்டி உத்தரகண்டமெல்
லாம் உடற்பக்கமாகச் சொல்லியிருக்கிற
தாகவும், இப்பொழுது இந்தப் பரதகண்ட
த்தில் ஒருபாதியி லிருக்கும் முயலின் உரு
வத்தைப்போன்ற பூமியுடன் சிறிய அர
சிலைபோன்ற பூபாகத்தில் முயலின்
காதோடுகூடிய தலைப்பக்கத்தை ஆப்ரிக்கா
வென்றும், கழுத்தருகிலிருக்கும் முன்கால்
பிரதேசத்தை யூரப் என்றும், உடற்பக்கத்
தை எஷ்யாவென்றும், சிறிய அரசிலைபோ
ன்ற பிரதேசத்தை ஆஸ்டிரேலியாவென்
றும், மற்றொருபாதியிலிருக்கும் அரசிலை
ஆகாரத்தைப் போன்ற கண்டங்கள்
வட அமெரிக்கா, தென் அமெரிக்காவென்
றும், ஊணர்கள் சொல்லுவதாகவும், பாரத

வருஷத்தை யொழிந்த வருஷத்வீபங்களிலுள்ளவர்களுடைய சம்பத்தானவை மானுஷ்மா யிருந்தபோதிலும் தேவதைகளுடைய சம்பத்தாகவே இாப்பதாயும் கூறப்பட் டிருக்கிறது. பூப்பிரசாமாயும் ஆகாயப்பிரசர்மாயும் இருக்குங் கோனங்கள் விளாம்பழங்கள்போல ஒன்றின்மேல் ஒன்ருய்க் கணக்கற்றிருக்கின்றனவாயும், மாகபூமிக்கு மேரு இருக்கிறதைப்போல் இந்தப் பாரதவருஷத்திற்கும் ஒரு சிறிய மேருவும் நாபிஸ்தானமும் உண்டென்றும், கைலாசாதி பர்வதங்களுடன் கூடிக் குபேரசங்காதி தேவதைகளுக்கு வாசஸ்தானமா யிருக்கும் மகா ஹிமோத்பர்வதம் நமக்குக் காணப்படமாட்டா தென்பதாகவும், காணப்படுகிற இமோத்பர்வதம் மேற்சொன்ன மகாஹிமோத்பர்வதத்தினுடைய அம்சமாய் அங்குள்ள விசேஷங்களோடே கூடிக்கொண்டிருக்கிற ஹிம்வான் முதலிய பேர்களுடைய ஓர் சிறு பர்வதமாகவும், லவண சமுத்திரத்திற்குச் சற்றுத் தூரத்திற்கப்பால் லங்கையும், அதற்கப்பால் பொன் வெள்ளி சிகரங்களோடு கூடிச் சூரியன் தக்ஷணயனத்தில் சுவர்ணசிருங்கத்திற்குச் சரியாய்ச் சஞ்சரிக்கும்படி ஆகாசத்தை அளாவிப் புஷ்பிதகமென்று ஒரு மலையிருப்பதாகவும், அனந்தரம், குஞ்சரபர்வதம், அகஸ்தியபவனம், போகாவதி, ருஷ்யபர்வதாதிகள் இருக்கின்றனவாகவும் அவை தேவதைகளுக்கன்றி மற்றவர்களுக்குப் புலப்படாவென்றும், இராமாயணம் கிட்கிந்தாகாண்டத்தில் சொல்லியிருக்கிறது. காலதேச வைபரீத்தியாதிகளால் இப்பொழுது இங்குள்ள கிருகக்ஷேத்திராதிகள் அடிக்கடி பூர்வநாமரூபங்களை யிழந்து வேறுநாமங்களை அடைவதைப்போலக் கஸ்யபபிரஜாபதி முதலியவர்களால் பகுக்கப்பட்டிருந்த தேச, நதி, வாவி, கூப, பர்வத, அரண்யாதி பிரதேசங்களும் முன்னெழிந்த பேரொழிந்து புதுப்பெயர்களைப் பெற்றிருக்கின்றன. இதை அறியாதார் குற்றங் கூறுவர்.

**பூகோளம்** — இது, (2) பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கிறது. ஒன்று கிழக்கிலும், மற்ருென்று மேற்கிலும் இருக்கிறன. கிழக்குப் பாதியுருண்டை குணகோளார்த்தமெனவும், மேற்குப் பாதியுருண்டை குடகோளார்த்தமெனவும் கூறப்படும். கிழக்குப்பாதியில் ஆசியா, ஐரோப்பா, ஆப்ரிகா, ஆஸ்டிரோலியாவும், மேற்குப் பாதியில் உத்தாதக்ஷிண, அமெரிகாக்களும் அடங்கியுள்ளது.

**பூக்கள்** — 1. தாமரை, அல்லி, பலவகை கொன்றை, குங்குமப்பூ, ஆத்தி, சண்பகம், பாரிஜாதம், மல்லிகை, முல்லை, பாதிரி, மந்தாரம், புன்னை, மகிழ், பன்னீர்ப்பூ, குருக்கத்தி, குருந்து, செந்தாழை, செம்பரத்தை, அலரி, நந்தியாவட்டம், செவ்வந்தி, கழுநீர், பிச்சி, வெட்சி, இவையன்றிக் கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூக்களில் பலவகை உண்டு. இவை விருக்ஷத்திற்கு முதற்காரணமானவை. இவற்றில் ஆண் பூ, பெண் பூக்கள் உண்டு.

2. புஷ்பவகைகளைக் காண்க.

**பூக்கோணிலை** — மேகம் பொருந்திய கடல் போல் ஒலிக்குஞ்சேனை, பூசலை எற்றுக் கொள்வான் வேண்டி அரசன் கொடுத்த பூவினைக் கொண்டது. (பு. வெ.)

**பூங்கணுத்திரையார்** — ஒரு செந்தமிழ்ப்புலவர். மகளிர்போலும். (புற-நா) (குறு-தொ)

**பூங்கோதை** — மதுரையில் இருந்த கல்வி வல்ல ஒரு தாசி, இவள் சீதக்காதியென்னும் காயலாளுகிய பிரபுவிற்குக் காமக்கிழத்தி யாயினமையால் இவளை இனத்தவர் நீக்கினர். இவள் ஒருமுறை கள்ளரால் பறிக்கப்பட்டுப் பொருள் இழந்து மீண்டும் அப்பிரபுவை நோக்கி யிரக்கமாய் "தினங்கொடுக்குங் கொடையானே தென்காயற் பதியானே சீதக்காதி யினங்கொடுத்த வுடைமையல்ல தாய்கொடுத்த வுடைமையல்ல வெளியாளாசை, மனங்கொடுத்து மிதழ்கொடுத்து மபிமானந்தனைக் கொடுத்து மருவிரண்டு, தனங்கொடுத்த வுடைமை யெல்லாங் கள்வர்கையிற் பறிகொடுத்துத் தவிக்கின்றேனே." எனப் பாடி மீண்டும் பொருள் பெற்றனள்.

**பூசந்தி** — இரண்டு பெரிய பூபாகங்களை ஒன்று சேர்த்து இரண்டு ஜலபாகங்களைப் பிரிக்கும்; அதற்குப் பூசந்தி என்றுபெயர். (பூகோளம்)

**பூசல்நாயனர்** — திருநின்ற வூரில் இருந்த வேதியர். இவர் சிவாலயஞ் சமைக்க ஆயத்தங்கொண்டு பொருள் இல்லாமையால் மனத்தால் சிவாலயம் ஒன்று இயற்றிக் கும்பாபிஷேகத்திற்கு நாள் வைத்தனர். காடவர்கோன் என்னும் அரசன் தான் சிவாலயத்திருப்பணி முடித்துக் கும்பாபிஷேகஞ் செய்வதற்கு நாயனர் வைத்த

நாளே வைத்தனன். சிவமூர்த்தி அரசன் கனவில் எழுந்தருளி நான் பூசல் கும்பாபிஷேகத்திற்குப் போகிறேன் நீ மற்றொரு நாள் வைத்துக்கொள்க என்று திருவாய் மலர்ந்து அந்தர்த்தானமாயினர். இதைக் கனவில் உணர்ந்த காடவர்கோன் திருநின்றவூர்வந்து திருக்கோயிலைக் காணாது பூசல்நாயனாரின் மகிமைகண்டு பணிந்து சென்றனன். பூசல்நாயனார் சிவப்பிரதிட்டைசெய்து கும்பாபிஷேகம் பூர்த்திசெய்து சிவபதமடைந்தனர். (பெரியபுராணம்)

**பூசன்மயக்கு** — 1. பூவையொத்து மழைபோலக் குளிர்ந்த கண்ணினையுடைய பிள்ளை இறந்தானாகப் பொருந்திய பெரிய சுற்றத்தினது ஆரவாரத்தினைச் சொல்லியது. (பு. வெ. பொது)

2. அரசன் இறந்தானாக அகன்ற பூமியினுள்ளார் இரங்கினும் ஆராய்ந்த அறிவினையுடையோர் முன் பின்னுறையென்று சொல்லுவர். (பு. வெ. பொது.)

**பூசன்மாற்று** — நிரைத்திரட்சி பெருக்கக் கைப்பற்றின கரந்தையார் தம்பிணம் பெருக்க வெட்சியார் கெடுத்தது. (பு.வெ.)

**பூச்சிகளினியல்பு** — பூச்சிகள் முட்டையிலிருந்து வெளிவந்து தம்முருவடைவதற்கு முன் பல வேறுபாடுகளை யடைகின்றன. ஒரு பூச்சி ஏறக்குறைய நூறு முட்டைகள் இடுகின்றன. இம் முட்டைகள் முட்டையிலிருந்து வெளிவரும் வரையில் வேண்டிய வுணவு முட்டையில் இருக்கிறது. பெண் பூச்சிகள் முட்டையிடுதற்கு ஊசிபோன்ற ஒரு உறுப்பு அதன் பின்புறத்தில் உண்டு. அதனால் அவை மரங்களைத் தொளைத்து அவற்றுள் முட்டையிடும். சில பூச்சிகளுக்குப் பின் புறத்தில் வாள்போன்ற உறுப்புண்டு; அதனால் தொளைசெய்து முட்டையிடும். சில பூச்சிகள், செடிகள், இலை, வேர், பூ, பழம், மாம்சம், அழுகிய பொருள் முதலியவற்றிலும் முட்டையிடும். முட்டையிலிருந்துவருங் குஞ்சு, முதலில் புழுவுருவாக இருக்கிறது. இப்புழு செடிகளிலுள்ள தளிர்களைத் தின்று நன்றாக முதிர்ந்து பருக்கிறது. இவ்வாறு பருப்பதால் தேகம் வெடிக்கிறது. இவ்வாறு, 5-6, முறை தோலுரிந்தபின் கடைசியாக ஒரு சிறுகூடு கட்டியதற்குள் தான் அடைபடுகிறது. இக்கூட்டினில் அது தன்னுருமாறும். மாறினும் அதனை ஒருதோல் மறைத்து இருக்கும். இது பிறகு வெளிவரும்போது இறக்கை முதலியவற்றோடு வரும். இது வந்தவுடன் தான் முட்டையிடத் தொடங்கும். முட்டை யிட்டவுடன் இறந்து போகிறது.

**பூச்சியபாதசுவாமி** — வைத்திய சாஸ்திரம் செய்த ஜைநாசிரியர்.

**பூச்சியபாதர்** — இவர் ஒரு ஜைநாசாரியர் (கி. பி. 470) இல், இருந்தவர். இவர் மாணக்கர் வச்சிரநந்தி என்பவர். இவரால் தென் மதுரையில் ஒரு தமிழ்ச்சங்கம் கூட்டப்பட்டது. இது திருஞானசம்பந்த சுவாமிகள் காலத்துக்குப்பின் அழிக்கப்பட்டது.

**பூஞ்சாற்றூர்** — சோழமண்டலத்திலுள்ள தோர் ஊர். (புற. நா.)

**பூஞ்சோலைத்தலைவன்** — அரசனது மரஞ்செடிகளுக்கு மண்ணிடல் நீர்ப்பாய்ச்சல் மலர், பழம் மிகுதற்கு வகையறிதல், மரஞ்செடிகளைப் புதிதாக வுண்டாக்குந் திறமை, புழுப்பூச்சிகளாலுண்டாந் தீங்கை நீக்குமறிவு வாய்ந்தவன். (சுக். நீ.)

**பூட்டு** — இது, கதவு, பெட்டி முதலியவற்றில் வைத்தபொருட்களைப் பிறர் தொடாதபடி இரும்பு முதலியவற்றால் தொடர்ப்படுத்துங் கருவி. இதன் திறப்பு திறவுகோல் அல்லது சாவி எனப்படும். தற்காலம் இதனைப் பலவிதப்படச் செய்வர்.

**பூட்டுவிற்பொருள்கோள்** — செய்யுட்களில் முதலிலும் கடையிலும் நிற்கு மொழிகள் தம்முள் பொருணோக்க முடையது.

**பூணூல்** — உபவீதங் காண்க.

**பூதகணம்** — இவை, மந்திர ஸாஸ்திரத்தில் கூறியபடி (கஅ) வகைப்படும். அவையாவன. தேவ, அசுர, காந்தருவ, யக்ஷ, சர்ப்ப, ராக்ஷஸ, கூஷ்மாண்ட, காம, கிரகண, வேதாள, பிரமராக்ஷஸ, யதாகாரிஷ, அர்த்தபிதா, பைசாச, ருகு, விருத்த, சித்த, முனி, முதலிய. இவற்றிற்குப் பரிவாரங்களும் உண்டு. பூதப்பிரவேச பூர்வம். இது பிடிக்குங்காலத்தில் புத்தி கெடல், மிகுசையோக விருப்பம், லோபம், மோகம், முதலியகுணம் உண்டாம். இது பிடித்த பின்பு, தருமக்கெடுதி, ஆசாரவிரதாதிகளைக் கைவிடல், அசுசி, துன்மார்க்கம், பெரியோரை வணங்காமை, மனத்தின்படி நடக்குதல் முதலியஉண்டாம். கணவேச நிதானம் இந்தப் பூதகணங்கள் மனிதரிடத்தில் பிரவேசிக்குமிடத்தில், படிகத்தில் பிரதிபலிக்கிற சூரியகிரணத்தைப் போலும், மனையின்கூரை மூகட்டுவழி இறங்கும் சூரியகிரணம்போலவும் பிரவேசிக்கும்.

பூதகாரியநிதானம் தேவ, அசுர, பூதந்தொடரில் மனதில்பயங்கரம், காந்தருவபூதம் - தேகத்தைத் தொட்டு அசைக்கும். சர்ப்ப பூதம் - தேகத்தில் வாசமாக இருக்கும். யக்ஷபூதம்-தேகமணங்கொண்டு தொடரும். ராக்ஷதபூதம் - மனிதரை வாகனமாக ஏறித் திரியும். கூஷ்மாண்டம், காமம், கிரணம் வேதாளம், பிரமராக்ஷஸம், யதாகாரிஷ, அர்த்தபிதரம், பைசாசம், ஆகிய எட்டுப் பூதங்களும் எடுத்து விழுங்கவருவதுபோல் எதிரில் தோற்றப்படும். குரு, விருத்த, சித்த,முனி,எனும் ச.பூதங்களும் சபிக்கும் பூதக்கிரகண காலநிதானம்—ஒருவருக்குக் கேடுசெய்ய நினைக்குங்காலம், ஊழ்வினையநுபவகாலம், கிரகண சந்தி, பக்ஷங்களின் சந்தி, மாலைமயக்கம், அசுசி, சையோகம், ...ரிகமனம், விரதாநுஷ்டானக்கேடு, விடியச்சாமத்திற்கு முன் ஸ்திரிகளுடன் பிரயாணம், அசுத்த இடசஞ்சாரம், விந்து கலிதம், பா..கோயில், பாழ்ச்சாவடியில் நித்திரை ..., எசசில் புசித்த கையுடனிருத்தல், ...வாணம், வனத்திலும், ஸ்மசானத்திலும பாதியிரவிலிருத்தல் பெரியோர்களை நிந்தித்தல், ஆகிய இக்காலங்களில் தொ...ரும்.

1. தேவபூதம் - குணம்குளிர்ந்த சமப்பார்வை, சுத்தம், கோபமின்மை, மித வார்த்தை, நற்சயனம் அற்ப மல மூத்ரம், வெகு காலசமாசாரம் கூறுதல், தேவப்பிராமண பக்தி, வெள்ளைவஸ்திரம், புஷ்ப கந்தாதிகளில் விருப்பம், நதி, மணற்குன்று, மலை, மேல்வீடு, பால், தயிர்முதலியவைகளில் விருப்பம், முகவிலாசம், ஒருவேளை கண்களை மூடிக்கொள்ளுதல், வரங்கொடுக்குந் தன்மை முதலியவாம்.

2. அசுரபூதம் - பிரமாதிதேவர்களைத் தானெனக் கூறல், விகாரவார்த்தை, அதிபராக்ரமம், அஞ்சாமை, சரீரத்தில் வியர்வு, கோபம், சஞ்சலபுத்தி, அபிமானம் விடுதல் மதுமாம்சவிருப்பு, தேவப்பிராமண குருமாரிடம் விரோதம், பெரியோரைக் கண்டு நகைத்தல், வாய், பல், நகங்களால் சேஷ்டைமுதலிய.

3. காந்தருவபூதம் - ஆசாரம், ஒழுக்கம், சந்தோஷம், வாசனை, மிதவார்த்தை, நந்தவனம், மணற்குன்றுகளிலும் செம்மலரிலும் விருப்பம், அடிக்கடி நகைப்பு, கீதப் பாட்டு முதலிய உடைமை.

4 யக்ஷபூதம் - குந்திக்கொண்டுறங்கல், நகைத்தல், ஆடல், பாடல், அழுதல், வந்தவர் துணியைப்பிடித்திழுத்தல்,துர்பாஷை, பரிகாசம், கைகளையாட்டுதல், ஸ்நானம், போஜனம், மதுமாம்சம், ரத்தம், சந்தனம், தூபம், வஸ்திரம், இவற்றில் இச்சை, கண்சிவப்ப, கலக்கம், நீர்வடிதல், மதத்த நடை, களிப்பு, அதிவார்த்தை, ஸ்திரிகளிடம் கோலாகலம், விகாரமுகம், அதிகோபம், மிகுபலம், அறிவின்மை, தானேபிதற்றல்.

5. ராக்ஷசபூதம் - இது செங்கண், புருவநெறிப்பு, கொடும்பார்வை பேய்க்கூச்சல் பிரமித்து ஓடுதல், அநித்திரை, அன்னவெறுப்பு, நகை, ஏரி மடுக்கரைகளில் திரிதல், இளைத்தல், துர்பலம்,ஆடல், கண்டவர்களை அடித்தல், விகார உருவம், நாணின்மை முதலிய.

6. கூஷ்மாண்டபூதம் - பயங்கர முகம், அதிகோபம், தாமதம் அல்லது மிகுவார்த்தைமுதலிய.

7. காமபூதம் - தானே அடித்துக்கொள்ளல்,பலவிதமாகப் பேசல், அடிக்கடிநாவை நீட்டுதல் ஜபம், அசைவறத் திக்குகளைப் பார்த்தல் அசுசிமுதலிய குணங்களை உண்டாக்கும்.

8. கிரணபூதம் - இது ரத்தநேத்திரம், உக்கிரபார்வை பயங்கரவார்த்தை மிகு ஊண் தீய ஒழுக்கம் உடையது.

9. வேதாளபூதம் - மெய்ம்மை, நடுக்கம், தவடை உலரல், சுகந்தாதிகளிலும், மலர் மாலைகளிலும் தூபவர்க்கத்திலும் இச்சை கொண்டிருக்கும்.

10. பிரம்மராக்ஷஸ பூதம் - கெடுதிச் சேஷ்டை, அதிகதண்டி, தேவர், வைத்தியர், மாந்திரியர், தவத்தார் இவர்களிடத்தில் விரோதம் கத்தி முதலிய ஆயுதங்களால் தானே அடித்துக் கொள்ளல் தேவர்களையும் அவமரியாதையாக அழைத்தல் சமயம் பார்த்து அடித்தல் முதலான குணங்களை உடையதாம்.

11. அர்த்தபிதா பூதம் - இது கண்ணிமைகள் சரிந்து தொங்குதல் தலைமயிர் முறைத்தல் விகாரமுகம், தவடை உலரல் உறுத்தபார்வை அகாலநித்திரை மந்தாக்கினி சுவப்பனத்தில் இறந்தவர்களைக் கண்டுபேசல், கறுப்பாகிய பொருள் வெல்லம் பால் மாமிசம் இவைகளில் விருப்பமுடையனவாயிருக்கும்.

12. பைசாச பூதம் - மனம் தீயவழியிற் செல்லல், நகைத்தல், அறிவுநீங்குதல், நகத்தால் கீறிக்கொள்ளுதல், எவரையும் மதிக்காது பேசுதல், ஒளி நீங்கிச் சங்கையுள்ளவர்களைப்போல் இருத்தல், தெரிந்தும் தெரியாத வார்த்தை, தனது துக்கத்தை ஒருவரோடு சொல்லுதல், தேகதுர்க்கந்தம், தலையிறக்கம், பயங்காக் கூச்சல் அசுத்த நடை, எச்சில், கள், மாமிசம், கீதம், நாட்டியம் பாழ்வீடு இவைகளில் இச்சை, கல் முள், பாம்பு இவைகளிருக்கும் இடங்களில் ஓடுதல், தலைசுற்றியாடுதலாம். பின்னும் சித்தர் முனிவர் குரவர், விருத்தர் முதலிய நான்கு பூதங்களின் லக்ஷணம் அச்சித்தர் முதலிய நால்வரது குணங்களைப் பெற்றிருக்கும் பின்னும் ஈஸ்வரபூதம் இந்திரபூதம், குபேரபூதம், வருணபூதம், யாகசேனபூதம், விரூபாக்ஷபூதம், வித்யுன் மாலிபூதம், சுகபூதம், நிஸ்ததேசபூதம், சாகோர்த்தபூதம், நகுபூதம், மணிமலபூதம், நிகடபூதம், விசாகபூதம், பித்தபூதம், சுமலபூதம், முதலிய பூதங்களின் குணங்களை ஜீவரக்ஷாமிர்தத்தில் காண்க.

**பூதகண்ணுடி**—1. இது உருவங்களைப் பெரிதாகக் காட்டும் கண்ணுடி. இந்தக் கண்ணுடியால் உருக்களை நோக்குமிடத்துப் பொருளின் உருவம் நேராகக் குவிந்துசென்று கண்ணுடியில் திரும்புகையில் ஒளிவிரிந்து தோன்றுகிறது. ஆதலால் பொருள் பெரிதாகக் காணப்படுகிற தென்கிறூர்கள்.

2. கனத்த வடிவான பளிங்கு. இது தன்னையடைந்த பொருளைப் பெரிதாகக் காட்டுவது.

**பூததூடி**—காவனூர்க்கு மேற்கே ௬ நாழிகை வழித்தூரத்திலுள்ளது; குண்டோதரரால் இது இப்பெயர் பெற்றதென்பர். (திருவி.)

**பூதங்கண்டதுளம்** — இது திருப்பரங்குன்றத்திற்கு வடக்குள்ளதோரேரி "தென்காற்கம்வாய்" என வழங்கும்; குண்டோதரனுகிய பூதத்தால் வெட்டப்பட்டது; இதன்கரை பூதங்கண்டகரையென, இக்காலத்தும் வழங்கும்; இதற்குச் சமீபத்தில் கூடை தட்டிப் பறம்பெனச் சிறியமலையொன்றுண்டு. வெட்டியமண்ணை யெடுத்துக் கரையிற் கொட்டிய கூடையை குண்டோதரனுகிய பூதம் இதில் தட்டியதென்பர். (திருவிளையாடல்)

**பூதங்கண்ணனூர்** — இவர் பூங்கண்ணனுரெனவுங் கூறப்படுவர். இவர் குறிஞ்சித்திணையைப் பலபடப் புனைந்து பாடியுள்ளார். தோழியாலே குறை மறுக்கப்பட்ட தலைமகன் தன்னெஞ்சை நோக்கி அவனருளினும் அருளாது விடினும் என் நோய்க்கு அவளன்றிப் பிறிதொரு மருந்தில்லையென்று கூறுவதாக இவர் பாடியது மகிழ்ச்சிதருவதாகும். நற் (௧௪௦.) இவர் பாடியனவாக நற்றிணையில் மேற்காட்டிய பாடலொன்றும் குறுந்தொகையில் ஒன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பூதங்கள்** — (8) இவை ஈச்வராக்ஞையால் திக்குகளைக் காக்க நியமிக்கப்பட்டவை. கிழக்கில் சம்வர்த்தன் வெள்ளைநிறமுள்ளது. தென்கிழக்கில் உன்மத்தன், பொன்னிறமுடையது. தெற்கில் குண்டோதரன், கறுப்புநிறமுள்ளது. தென்மேற்கில் தீர்க்ககாயன், செந்நிறமுள்ளது. மேற்கில் ஹ்ரஸ்வபாதன், பசுமைநிறமுள்ளது. வடமேற்கில் சிங்களுபன், புகைரூபமுள்ளது. வடக்கில் கஜமுகன், அதிரக்தநிறமுள்ளது. வடகிழக்கில் பிரியம்முகன், நீலநிறமுள்ளது. இப்பூதங்கள் ஒவ்வொன்றும் ஒரு முகம், இரண்டு அஸ்தம் உள்ளனவாய்க் கையிற் றண்டம் தாங்கி நிற்கும். (ஸ்ரீ காரணம்.)

**பூதசதுக்கம்** — காவிரிப்பூம்பட்டினத் துள்ளது. இது தவவேடத்து மறைந்து தீமை செய்வோரைக் கொன்று தின்னும் வாழ்க்கையுடைய பூதநிற்கும் இடம். (மணிமேகலை.) (சிலப்பதிகாரம்.)

**பூதசந்தானன்** — இரண்யாக்ஷன் குமரன்.

**பூதச்சோதி** — நிருகன் பேரன்.

**பூதச்சோதிசு** — சுமதியின் புத்திரன்.

**பூதஞ்சேந்தனூர்** — செங்குன்றூர்க்கிழார் புத்திரர். இனியவை (40) செய்தவர். மதுரைத் தமிழாசிரியர் மகனுர் எனவுங் கூறுவர். இவர் சைவவேளாளர்.

**பூதத்தாழ்வார்** — துவாபரயுகம் எட்டுலக்ஷத்து அறுபத்திராயிரத்துத் தொள்ளாயிரத்திரண்டாவதான சித்தார்த்தி வருஷம் ஐப்பசி மாதம் நவமி அவிட்டத்தில் மாவலிபுரத்தில் நந்தவனத்தில் உள்ள குருக்கத்திமலரில் திருவவதரித்தனர். இவர் கதாம்சம் "அன்பேதகளியா" என்றெடுத்து நூறு செய்யுட்களால் திருமாலைப் பாடினவர். இவரது மற்ற சரிதம் பொய்கையாரைக் காண்க. (குருபரம்பரை.)

**பூதநந்தன்** — கலிங்கலைதேசத்து அரசன். இவன் குமரர் பாகுபலியர் பதின்மூவர்.

**பூதபவ்யம்**—ஒருயாகம். இது பிராணிகளைப் பசுவாகக் கொள்ளும் யாகம். (பார-சாந்.)

**பூதப்பாண்டியன்** — ஒல்லையூர்தந்த பூதப் பாண்டியனுக்கு ஒரு பெயர், தேவி பெருங் கோப்பெண்டு, கல்விவல்லன். இவன் புல வனும் வீரனுமாய்ச் சிறந்துவிளங்கினேன். அகநானூற்றிலும் புறநானூற்றிலும் காண ப்படும் இவனது பாடல்களானும் ஒல்லை யூர்தந்த எனும் அடைச்சிறப்பானும் இவ னது புலமையும் வீரமும் உணரத்தக்கன. "மடங்கலிற் சினைஇ மடங்காவுள்ளத்... டவர்ப்புறங் காணேனுயிற் சிறந்த, பேரம ருண் ணிவளொடும் பிரிக" எனும் செய் யுள் இவனது வீரத்தைக் குறிக்கும். இவன் மையல் எனும் ஊரிலிருந்த மாவன் என் பானையும், எயில் எனும் ஊராளியாகிய ஆந்தை யென்பவனையும், அந்துவஞ்சாத் தன், ஆதனழிசி, இயக்கன் என்பவனையும் நண்பனுகக் கொண்டவன். இவனுக்குக் கற்பினுங் கல்வியினுஞ் சிறந்த பெருங் கோப் பெண்டு சிறந்திருந்தனளாதலின் அவளைச் சிறிதும் பிரியாதவனென்பது மேற்கூறிய செய்யுளா லறியக்கிடந்தது.

**பூதப்பாண்டியன்தேவியார்**—இவர் ஒல்லை யூர்தந்த பூதபாண்டியரின் அருந்ததிக்கற் பின் அருங்கலை முதிர்ந்த கோப்பெருப் பெண்டிர். இவர், தங்காதலர்மாட்டு மிக்க அன்புடையார். காதலரும் அவ்வாறிருந்த னர். இவர் நற்றமிழுணர்ந்த நங்கையரில் ஒருவர். இவர் கல்விவனப்புக் குண முத லியவுடன் ஒத்துத் தம் கணவருட னில்ல றத்துணையாய் ஒழுகு நாட்களில் அறிவில் பெருங்கூற்றம் அப்பூதப்பாண்டியரி னின் னுயிரைக் கவர்ந்தது. இந்நிலை அறி வுடைக்கோப் பெருந்தேவியாரின் மன நிலையை யுருக்கியது. பின்னர் ஒருவாறு தேறிய தேவியார் கணவனுடன் தீப்புக எண்ணுகையில் அவ்வமயத்தில் ஆண்டுக் குழீஇ இருந்த மதுரைப் பேராலவாயிலார் முதலிய புலவரும் சான்றோரும், தம்மோ டொத்த அறிவுடையாசனை இழக்கநேர்ந்த இந்நிலையில் தம்மோடொத்த அரசியையும் இழக்கல் ஆகுமோ என்று தேவியாரைத் தீப்புகாமல் விரைந்து தடுப்பாராயினர். அது கண்டு பெருந்தேவியார் ஈமத் தீப் புறத்து நின்றுகொண்டு அச்சான்றோரை நோக்கி 'பல்சான்றீரே பல்சான்றீரே, செல்கெனச்செல்லா தொழிகென விலக் கும், பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே, யணில்வரிக் கொடுங்காய் வாள் போழ்ந் திட்ட, காழ்போனல்விளர் நறு நெய்தீண் டா, தடையிடைக் கிடந்த கைபிழிபிண்டம், வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய்தட்ட, வேளை வெந்தை வல்சியாகப், பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு, முயவற் பெண் டிரே மல்லேமாதோ, பெருங்காட்டுப் பண்ணியகருங் கோட்டம, நுமக்கரிதாகுக தில்ல வெமக்கெம், பெருந்தோட்கணவன் மாய்ந்தெனவரும்பற, வள்ளிதழவிழ்ந்த தாமரை, நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே." எனும் பாடலைக் கூறித் தீயிற் பாய்ந்து மாய்ந்தனர். இச்செய்யுளொன்றே இந் நற்றமிழுணர்ந்த மெல்லியலாரின் நற் றமிழ்ப் புலமையினைச்செவ்விதி னறிவுறுத் தும். இவரது அரிய செயலை வியந்து உடனிருந்து கண்ட மதுரைப் பேராலவா யிலார் எனும் புலவர் புறப்பாட்டுள் "மடங் கலிற்சினைஇ" எனும் புறப்பாட்டி யற்றினர்.

**பூதபுராணம்** — இடைச்சங்க மருவியநூல், அகத்தியர் காலத்து இருந்ததென்பர்.

**பூதமகீபாலன்** — புள்ளலூர் வேளாளன், ஔவையார்க்கு விருந்திட்டுப் பாடல் பெற் றவன்.

**பூதம்** — 1. ஒரு தேவசாதி.

2. (5) நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.

3. தனக்கு உதவிபுரிந்த முசுகுந்தனைக் காக்க இந்திரனல் அனுப்பப்பட்டுக் காவி ரிப்பூம் பட்டினத்துக் கோயில் கொண்ட தெய்வம். (சிலப்பதிகாரம்.)

4. பூதம் (5) வேதாளம், பிரம்மராக்ஷஸ், இருளன், மாடன், கறுப்பன்.

5. அங்காடிப்பூதமெனவும் சதுக்கப்பூத மெனவும் இரண்டுள்ளன. (மணிமேகலை.)

6. ருத்ரமூர்த்தி பாண்டவர்களைக் கொல்ல வந்த அச்வத்தாமாவின் முன் னின்று அவனைப் பயமுறுத்தினர்.

**பூதம்புல்லன்** — இவர் கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். (குறு-௧௧௦).

**பூதாயன்**—ஐந்தா மன்வந்தரத்துத் தேவன்.

**பூதர்** — பிரமனுலாச்யத்தினல் படைக்கப் பட்டவர். தேவவகுப்பினர்.

**பூதனை** — ஒரு அரக்கி, கம்சன் ஏவலையேற் றுக் கோகுலத்தில் இருந்த கண்ணபிரா னுக்கு வஞ்சனையால் முலைப்பால் ஊட்டி மாய்க்க முயலுகையில் கண்ணனல் முலைவழியாக உயிருண்ணப்பட்டு மாய்ந் தவள்.

**பூதனர்** — இவர் பாலைத்திணையைப் புனைந்து பாடியுள்ளார். மகட்போக்கியதாய் பாலையை வருணிப்பதாக இவர் கூறியது மிக்க சுவையுடையதாகும். இவர் பாடியது. நற் உ-ம் கூ-பாட்டு.

**பூதன்** — 1. பூதாவைக் காண்க.

2. வசுதேவருக்குப் பௌரவியிடம் உதித்த குமரன்.

3. தொண்டமண்டலத்துப் புள்வேளூர் என்னும் ஊரிலிருந்து தன்னை யாசித்த வித்துவான்களுக்குப் பொருள் உதவிப் புகழ் அடைந்த பிரபு. இவன் ஒருமுறை ஔவைக்கு உணவளித்து "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும், முரமுரெனவே புளித்த மோரும்—திரமுடனே, புள்வேளூர்ப் பூதன் புகழ்ந்துபரிந் திட்டசோ, றெல்லா வுலகும் பெறும்" எனப் பாடல் பெற்றவன். இவன் ஔவையின் அருளால் கிணற்று நீர்மேலெழுந்து பாய அருள் பெற்றவன்.

**பூதன்தேவனர்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவர், அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை முதலியதொகை நூல்களில் சிற்சில கவிகள்பாடி இருக்கின்றனர். இவர் ஈழநாட்டிலிருந்து மதுரையடைந்தவரென்பது சிலர் கொள்கை.

**பூதன்றேவனர்** — ஈழத்துப் புதன்றேவனரென்பவரொருவர் காணப்படுகிறார். அவர் தாமோ இவரென்றைய மெய்துமாயினும் இவர் மருதத்திணையைச் சிறப்பித்துப்பாடி அத்திணையிலே களவு நிகழ்ந்ததாகவும்கூறியிருப்ப, ஈழத்துப் பூதன்றேவனர் பாடியிருப்பதெல்லாம் குறிஞ்சித்திணையே. ஆதலால் இருவரும் வெவ்வேறுவரென்று கருதலாயிற்று. வைகறையில் எருமையை மேய்க்கக்கொண்டு செல்லுஞ் சிறுவர் அம்மாட்டின் முதுகில் ஏறியிருந்து நடத்தா நிற்பரென்று கூறுகிறார். தலைமகன் நெஞ்சினை நெருங்கித்தைந் நீராடும் அத்தலைமகனல்லது யானுற்ற நோய்க்குப் பிறிதொருமருந்தில்லை யென்று கூறுவதாக இவர் மொழியா நிற்பர். நற் அ௦. இவர் பாடியனவாக நற்றிணையில் அ௦ ம் பாடலொன்றும் குறுந்தொகையிலொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பூதா** — தக்ஷன் இரண்டு பெண்களை மணந்த இருடி. பாரி சரூபா, இவனுக்குப் பூதனெனவும் பெயர்.

**பூதாசுரன்** — இவன் தேவரை இடுக்கண் படுத்தச் சிவமூர்த்தி இவன்முன் வெகு கோடி அற்புதமூர்த்தியாக எழுந்தருளிக் கொன்றனர்.

**பூதார்த்தவாதம்**—தனதர்த்தத்தில் பிரமாணமுள்ள தாய் இலக்ஷணையால் விதேய அர்த்தத்தின் மேன்மையை யறிவிக்கும் வாக்யம். (தரு.)

**பூதி** — 1. ஆங்கீரசர் மாணக்கன், பௌத்தியன் தந்தை. பௌத்திய மன்வந்தாத்தைக் காண்க.

2. ஓர் அந்தணன், வயணங்கோடென்னுமூரிலுள்ளவன், ஆபுத்திரனை வளர்த்தவன். இளம்பூதியெனப் பெயர் பெற்றவன். (மணிமேகலை.)

3. யூகியின் புதல்வன். (பெ. கதை.)

**பூதிபீடம்** — சத்திபீடங்களில் ஒன்று. இது பாராபூதியி லுள்ளது.

**பூதேவி** — 1. திருப்பாற்கடலிற் பிறந்து விஷ்ணுவைச் சேர்ந்தவள். இவள் வராகாவதாரத்தில் விஷ்ணுமூர்த்தியைக்கூடி நரகாசுரனைப் பெற்றவள். பூதேவி விஷ்ணுமூர்த்தியை நோக்கித் தன் புத்திரனுகிய நரகாசுரன் சாகாதிருக்க வரம்வேண்ட விஷ்ணுமூர்த்தி அவனது குற்றத்தை உனக்கு அறிவித்து அவனைக் கொல்லுகிறேனென்று கூறினர். பகதத்தனுக்கு அபயம் கொடுக்கும்படி கண்ணனைப் பிரார்த்தித்தவள். உதங்கர் குண்டலமிழந்தகாலத்து நாகலோகத்திற்கு வழியளித்தவள். சீதாபிராட்டி இராமமூர்த்தியை விட்டுப் பிரிய எண்ணிய காலத்துச் சீதையைக் கையால்தழுவித் தன்னிடம் இருக்கச்செய்தவள். சீதாபிராட்டி தனனிடம் ஒளித்த காரணத்தால் இராமபிரானல் பயமுறுத்தப்பெற்றவள். பூபாரத்தின் பொருட்டுப் பிரமனிடம் முறையிட்டுப் பாரதம் காரணமாகப் பூபாரம் தீர்த்துக் கொண்டவள்.

2. பிரகிருதி தேவியின் பிரதான அம்சமானவள். எல்லாவற்றிற்கும் ஆதாரமானவள்.எல்லா ஒஷதிரூபிணி,ரத்னகர்ப்பிணி, பிராணிகளுக்கு ஜீவனதாரமான சத்திஸ்வரூபிணி. (தேவி-பா.)

3. வராஹவுருக்கொண்ட திருமால் இரணியாக்ஷன் கவர்ந்துசென்ற பூமியை நிறுத்தினபின் பூதேவி பெண்ணுருக்கொண்டு நிற்க அவளிடம் மயல்கொண்டு புணர்ந்து கடேசன் எனும் குமரனைப்பெற்று என் மனைவியுடனீயும் ஒரு பத்தினியாக. நீ இங்

தப் பூமியை வராகவுருக்கொண்டு தாங்குக உன்னை வழிபடுவோர் பல சித்திகளையும் பெறுக; எனவரமளித்தனர். இதனால் களிப்படைந்த பூதேவி நான் எல்லாவற்றையும் தாங்குவேன் ஆயினும், முத்து, சிவலிங்கம், தேவி, விஷ்ணு பிம்பங்கள், சங்கம், தீபம், யந்திரங்கள், யஞ்ஞசூத்ரம், ஜபமாலை, புஸ்தகம், துளசி, புட்பம், மாணிக்கம். வச்ரம், பொன், கோரோசனம், சந்தனம், தீர்த்தம், சாளக்ராமம், இவற்றை ஆசனமில்லாமல் வைக்கின் தாங்க வலியிலேன் என அவ்வாறு வைப்போர் (1000) தேவவருஷம் காலசூத்ரநாகம் பெறுக என வரமடைந்தனள். இவள், எல்லோர்க்கும் ஸ்தானமா யிருத்தலால் பூமி எனவும், காச்யபருக்குச் சம்பந்தமுள்ளவளாதலால் காச்யபி எனவும், சகல விச்வத்தையும் பொறுத்தலின் விச்வம்பரை எனவும், அளவிலாத ரூப முடைமையால் அநந்தை எனவும், பிருது புத்ரியாயும் பெருத்திருத்தலாலும் பிருத்வி எனவும் கூறப்படுவள். (தேவி பா)

**பூத்திரன்** — ஒரு ருஷி, இவனுக்குப் பேரன் சாதன்.

**பூநீர்** — (பூமிநாதம்) நிலத்தில் முன்பனி பின்பனிக் காலங்களில் உப்பு பூமியிலிருந்து இராக்காலங்களில் சோதி யுருவாய் வெளிவருவது. இதனால் பாஷாணாதிகளைக் கட்ட வைத்தியர்கள் ஔஷய நீர் செய்வார்கள்.

**பூந்துருத்திநம்பி** — நம்பி காட நம்பியைக் காண்க.

**பூபசூடாமணிபாண்டியன்** — இராஜ சூடாமணி பாண்டியனுக்கு நண்பன்.

**பூபாலக பாண்டியன்** — பாண்டவர்க்குச் சிநேகனாகிய ஒரு பாண்டியன்.

**பூமகன்** — ஒரு கிரகம். இது பலநிறம்படத் தோன்றின் பூமிக்குத் தீமை விளைவிப்பது.

**பூமா** — பிரதி கர்த்தாவின் குமரன். தாய் ஸ்துதி, தேவி ரிஷிகுல்வி, குமரன் உத்கீதன்.

**பூமி** — 1. இது சைவீபூமி, பிராம்மபூமி, வைஷ்ணவபூமி, ஐந்திரபூமி, பசுபூமி, பூதபூமி, ஆசுரபூமி, பைசாசபூமி, ராக்ஷஸபூமி, வாயுபூமி, வருணபூமி, ஆக்னேயபூமி எனப் பன்னிரண்டுவிதம். இவற்றுள்: சைவீபூமி - கோங்குமரம், மருது, அரசு, விளா, அசோகு, ஆச்சா, நிலத்தாமரை, துளசி, அறுகு, விஷ்ணுகிராந்தி, எலிக்காதிகீரை, இலவு, மலைநன்னாரி, புரு, கிளி, அன்னங்களால் வியாபிக்கப்பட்டது. இது சுபத்தைத் தரும். பிராம்மபூமி - வில்வம், முருக்கு, விஸ்வாமித்ரம், நாணல், மான், நன்மணமுள்ள ஓமத்ரவயங்கள் உள்ள இடங்களாம். வைஷ்ணவபூமி - தும்பைச்செடி, புளியமரம், புங்கமரம், மூங்கில், பருத்தி, எருக்கு, செம்பருத்தி, அன்னப்பக்ஷி, சாமான்ய பக்ஷி மிருகங்கள், முள்ளில்லாத விருக்ஷங்களோடு கூடினது. ஐந்திர பூமியானது - வாழை, பலா, மாமரம், சுரபுன்னை, மகிழமரம், பாதிரிமரம், நொச்சிலி, நெல்லி, கருநெய்தலாலும் வியாபிக்கப்பட்டு வைசிய சூத்திரர்களால் வசிக்கப்பட்டதாம். பசுபூமியாவது - பாதிரி, அகில்களின் மணத்தால் நிறைந்ததும், தனதான்யாதி சம்பத்தைத் தருவதும், அழிஞ்சில் விருக்ஷங்களாலும், பூனை, கீரி, முயல், உடும்பு, சகோரப்பக்ஷி, செந்நாய்களால் வியாபிக்கப்பட்டதுமாம். இது ஜனங்களுக்குச் சம்பத்தும், சௌர்யவீர்யாதிகளை யுண்டுபண்ணுவதுமாம். பூதபூமியாவது - பெருநொச்சில், குறுக்கத்தி, அறுகு, அழிஞ்சில், முருக்கு, மல்லிகை, அலறி, இருப்பையுடன் கூடினதும் விபூதி மணமுள்ளதும், மனிதர்க்கு அன்னத்தையும், புஷ்டியையும் தருவது. ஆசுரபூமியாவது - செராமரம், பெருமரம், மருதமரம், வெங்காயம், துஷ்டஜந்துக்கள், பருந்து, வேடர் முதலியவருடன் கூடித் துர்க்கந்தந் தருவது. பைசாசபூமியாவது - இலவு, மகிழ், தான்றி, நறுவிலி, கழுதை, ஒட்டகம், பன்றி, நரி, சண்டாளர், வேடர் முதலானவர்களால் நிறைந்து சவிட்டு நிலமாய்த் துர்க்கந்தத்துடன் கூடியிருப்பது. ராக்ஷஸபூமியாவது - சண்டாளர், விஷம், திருடர், தலைநோய் முதலியவற்றாலும், மிளகு, வெல்லம், பரிமளவஸ்துக்களாலும் நிறைந்தது. வாயுபூமியாவது - குள்ளநரி, சுவர்க்கோழி, பருக்காங்கல் முதலியவற்றால் நிறைந்ததும் நிர்ப்பாக்கியமானதுமாம். வருணபூமியாவது - பாக்குமரங்களால் நிறைந்து சமஸ்த சித்தியைத் தருவது. ஆக்னேயபூமியாவது - சதுரக்கள்ளி, நறுவிலி மரங்களுள்ளதும், பருக்காங்கற்களுடன் கூடியதும், சவிட்டுமண் உள்ளதும், தண்ணீரில்லாததுமானது. இது சமஸ்தத்தையுங் கெடுக்கிறது. சிவபூமி, பிராம்மபூமி, வைஷ்ணவபூமி இவை பிராம்மணர்களுக்கு வாச யோக்யமுள்ளவை. பசுபூமி அசுரர்க்கும், பூதபூமி சூத்ரருக்கும்

சிறந்தன. பிசாச, ராக்ஷத, அசுரபூமிகள் அந்திமர்க் குரியதாம். பின்னும் பூமியானது ஜாங்கலம், அநூபம், சாதாரணம் என மூவகைப்படும். அவற்றுள் ஜாங்கல பூமியாவது - ஸ்திரமாயும், மிகப் பெரிதாயும், மிக்க பருக்கைக்கற்களை யுடையதாயும், அதிஆழமாக வெட்டப்படினும் உப்பு நீருடையதாயும் உள்ளது. அநூபபூமியாவது - ஆம்பற்புஷ்பங்கள் நிறைந்திருப்பதும், செங்கழுநீர், நெய்தற் புஷ்பங்களை யுடையதும், சூக்ஷ்மமானமணல்களை யுடையதும், கிருஷிசெய்யப்படுவதும், உயர வெழும்பும் ஜலத்தின் சுரப்புடையதுமாம். சாதாரணபூமியாவது - மேற்கூறிய இருவகைக் குணங்களுள்ளதாம். ஜாங்கலபூமி, வாழை, பனை, பலா முதலிய விருக்ஷங்களும் பலவகைப் பயிர்களுக் குரியதுமாம். அநூபபூமி சமஸ்த ருதுக்களிலும் சுகத்தைத் தருவதும் எல்லா அநுகூலங்களைத் தருவதுமாம். சாதாரணபூமி மேற்கூறிய இருவகையுங் கொண்டது.

2. இது, சூரியனுக்கு மூன்றாவது வட்டத்திலுள்ள கிரகம். இது, சூரியனுக்கு (9) கோடியே (20) லக்ஷம் மைல் தூரத்திற்கப்பாலிருந்து சூரியனைச் சுற்றிவருகிறது. இதன் சுற்றளவு சுமார் (24,902) மைல் குறுக்களவு (79265) மைல், வடக்குத் தெற்குத் துருவ முனைகளின் நேரளவு (78997) மைல் நீளம். கோளப்பரப்பின் விரிவு (19) கோடியே (69) லக்ஷத்து, (40) ஆயிரம் சதுரமைல், கனம் சுமார் (600000 0000000000000000)டன் எடை என்றும் கணித்திருக்கின்றனர். இப்பெருங்கோளம் (23) மணி, (56) நிமிஷம், (4·09) விநாடியில் தன்னைத்தானே ஒருமுறை சுற்றிக் கொள்ளுகிறது. இதனால் பூமிக்கு இரவு பகல் உண்டாகிறது. இது, சூரியனை (365) நாள், (5) மணி (49) விநாடியில் ஒரு தரம் சுற்றிவருகிறது. அது ஒரு வருஷம். பூமி சூரியனைச் சுற்றிவரும் வட்டம் சுமார் (58) கோடியே (60) லக்ஷம் மைல் தூரம் இருக்கலாம் என எண்ணுகின்றனர். இது நமக்கு ஒளியற்றதாகத்தோன்றினும் மற்ற கிரகங்களிலிருந்து நோக்கின் ஒளியுள்ளதாகக் காணப்படும் என எண்ணுகின்றனர். இதனைச் சந்திரன் ஒன்று மாத்திரம் சுற்றிவருகிறது.

3. இது, ஒரு கிரகம். இது சூரியனை (366) நாட்களில் ஒருதடவை சுற்றிவருகிறது. மற்ற கிரகங்களிலிருந்து இதைப் பார்த்தாலிதுபிரகாச முள்ளதாகத் தெரிகிறதாம். இது ஒரு காலத்தில் திரவவுருவாக இருந்ததென்றும் காலக்ரமத்தில் உஷ்ணம் தணிய இறுகி உறுதியாயிற்றென்று பூமி சாஸ்திர நிபுணர்கள் கூறுகின்றனர். பூமி உருண்டையாய்த் தன்னைத்தானே சுற்றுகிறது. பூமியின் அடிப்பாகம் அதிக உஷ்ணமான தென்பதற்கு அக்னிமலைகளே சாக்ஷியாம். பூமியை அகழுங்கால் அங்கில வேறுபாடுகளால் அவை பூர்வத்திலிருந்த நிலை தெரிகிறது. இதற்குச் சந்திரன் உபக்கிரகம். சிலதூரம் அகழ்ந்தால் ஒருவித மண்ணும் அதற்கப்பால் வேறுவித மண்ணும் வருதலால் இது படிப்படியாய் வேறுபட்டதென்பது தெற்றெனவிளங்குகிறது. (இ-பொ.)

**பூமிசந்திரன்**—நாகபுரத்தரசன். தேவி அமரசுந்தரி. புண்ணியராசனை வளர்த்தவன். (மணிமேகலை.)

**பூமிதேவி** — 1. கறுத்த நிறமும், கமலங்களொத்த இரண்டு கண்களும், பொன்பூணு லும், இரண்டு கையும், சர்வாபரண பூஷிதையாய், கரண்டக ரூபமான கிரீடமும், சிவப்புப் புடவையும், வலக்கையில் கருநெய்தற்புஷ்ப முடையளா யிருப்பள்.

2. இவள் க்ஷத்ரியவம்சம் பரசிராமரா லழிந்தபின் அவரிடம் தானம்பெற்ற கச்யபரை க்ஷத்திரியரைக் காக்கவேண்டிப் புரு வம்சத்தவனான விதூரதன் புத்திரனாகிய ரிக்ஷவான் கரடிகளால் காக்கப்பட்டிருக்கிறான், சௌதாச புத்திரன் பராசரால் காக்கப்பட்டிருக்கிறான். சிபியின் புத்திரனாகிய கோபதி பசுக்களால் காக்கப்பட்டிருக்கிறான். வத்சனென்பவன் பசுங்கன்றுகளால் காக்கப்பட்டிருக்கிறான். பிருஹத்ரதன் என்பவன் குரங்குகளால் காக்கப்பட்டிருக்கிறான். இவர்கள் என்னைக் காக்கவென இரந்து மீண்டு க்ஷத்ரியரை நிலைக்கச்செய்தவள்.

**பூமித்திரன்** — வாசுதேவன் அல்லது கண்ணுவன் குமரன், இவன் குமரன் நாராயணன்.

**பூமிபிராட்டி** — தெய்வத்துக்காசு;ாம்பிக்குக் குமரி.

**பூமிமாதிலகம்** — பவணமாதேவன் நகர்.

**பூமியின் சீதோஷ்ண வேறுபாடுகள்** — பூமி (5) மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. (1) உத்தர சீதமண்டலம், (2) உத்தர சம சீதோஷ்ணமண்டலம், (3) உஷ்ண

மண்டலம், (4) தக்ஷிணசமசீதோஷ்ணமண்டலம், (5) தக்ஷிணசீதமண்டலம். இவை வடபாகத்திலும் தென்பாகத்திலும் அதிகுளிர்ச்சியாகவும், அதன்மேல், கீழ் (2) பாகத்திலும் சீதோஷ்ணசமமாகவும், நடுவில் அதி உஷ்ணமாகவும் உள்ள பூபாகங்கள். (பூ கோ.)

**பூமியின் பல பிரிவுகள்** — கண்டம் - இது பெரிய பூபாகம். தேசம் - கண்டங்களிலடங்கிய பூபாகம். தீவு - நான்கு பக்கங்களிலும் நீர் சூழ்ந்த நிலப்பிரிவு. தீபகற்பம் - மூன்று பக்கங்களில் நீர்சூழ்ந்த நிலப்பிரிவு. பூசந்தி - பெரிய இரண்டு பூபாகங்களையொன்றுசேர்க்கும் நிலப்பிரிவு. முனை-கடலிற் சென்றிருக்கும் பூபாகத்தின் குறுகிய பாகம். பீடபூமி - கடலுக்கு மேலுயர்ந்துள்ள பூபாகம். மலை - பூமியில் காடு முரடாய் உயர்ந்து கற்களும் மரங்களு நிறைந்தது. குன்று - மலையிற் சற்றுக்குறைந்தது. கணவாய் - இரண்டு மலைகளுக்கு நடுவிற் செல்லுமிடம்.

**பூம்பாவையார்** — சிவநேசர் குமரி. திருஞானசம்பந்தரைக் காண்க.

**பூரணகுண்டலன்** — இவன் ஆருணியரசனுடைய அமைச்சன். உதயணனோடு போர் செய்தற்கு அவன் புறப்பட்டபோது நிமித்தம்நன்றாக இல்லாமையால் "நாம் திரும்பி ஊர் செல்லுதல் நலம்" என்று அவனுக்கு புத்தி கூறியவன் (பெ. கதை)

**பூரணசேநன்**—கட்டியங்காரனுக்குப் படைத்தலைவன்.

**பூரணநாமன்** — திருதராட்டிரன் குமரன்.

**பூரணபத்திரன்** — 1. ஒரு சிவகணத்தவன்.

2. அரிகேசனுக்குத் தந்தை. அரிகேசனைக் காண்க.

**பூரணவருணன்** — மகததேசாதிபதி. பௌத்தன். இவன் கயாவிலிருந்த போதிவிருக்ஷத்தைச் சசாங்கன் வெட்டினனெனக் கேள்வியுற்றுத் துக்கமடைந்து ஒருவாறு தேறி ஆயிரம் கன்றுக்களைக் கொண்டு அவற்றின் பால்கொண்டு மரத்திற்குச் சொரிந்தனன். அதனால் அம்மரம் ஓரிரவில் 7 முழம் வளரக்கண்டு ஆநந்தமடைந்தனன். அதற்கு இவ்வகை இடுக்கண் நேராவகை மதில் செய்வித்தோன் இவனே.

**பூரணவித்து** — பதிரிகாச்சிரமத்தில் இருந்த முநிவன்.

**பூரணை** — அரிகரபுத்திரன் தேவி.

**பூரணையன்** — இவன் ஐதராலி டிப்புக்களின் மந்திரி. இவனது தாய் தந்தையர் மைசூர் வாசிகள். இவர்கள் புத்திரப் பேறிலாது இராமேசுரயாத்திரை செய்து வருகையில் வழியில் தென்னாட்டுக் குஞ்சமேட்டுப் பிராமணர் இவர்களைத் தம் ஊரில் இருக்கச் செய்ய அவ்விடம் இவன் பிறந்தான். இவன் கும்பகோணத்தில் வாசித்து வல்லவனாய்த் தம்மூர் போய் ஐதருக்கு மந்திரியாயினன். (தென்-ஆர்காடு கெஜடியர்.)

**பூரான்** — இதற்குப் பூரம் எனப்பெயர். இது சங்கிலியொத்த நீண்ட வருவுடையது. செந்நிறமாயும், மஞ்சள் நிறமாயும் கறுத்த புள்ளியுள்ள தேகமுடையது இதற்கு முகத்தில் கொடுக்குப்போன்ற இரண்டு கொம்புகளும் வாலில் இரண்டு முள்போன்ற உறுப்பும் பல கால்களும் உண்டு. இது விஷ செந்து. உஷ்ணபிரதேசங்களில் வீடுகளின் சுவர்களிலும் வெடிப்புகளிலும் பூமியிலும் சஞ்சரிப்பது. பூச்சிகளைப் பிடித்தருந்தும்.

**பூரி** — 1. முதனாள் பாரதயுத்தத்தில் விராடனுடன் யுத்தஞ் செய்தவன்.

2. பூரிசிரவன் தம்பி.

3. சோமதத்தன் குமரன். சந்திரவர்க்கனம்சம். பூரிசிரவன் எனவுங் கூறுவர். 14-ம் நாள் பாரதயுத்தத்தில் சாத்தகியிடம் யுத்தஞ்செய்யுங் காலத்தில் அருச்சுனனால் ஒருகையறுப்புண்டு சாத்தகியாற் கொல்லப்பட்டவன்.

**பூரிக்கோ** — குறுந்தொகை தொகுத்தான்.

**பூரிசிரவன்** — பூரிக்கு ஒரு பெயர்.

**பூரிசிரவஸு** — பூரிசிரவனுக்குப் பெயர்.

**பூரிசீலன்** — சண்முக சேநாவீரன்.

**பூரிசேநன்** — சர்யாதி குமரன்.

**பூரிஷேணன்**—1. பிரமசாவர்ணிமனுப் புத்திரன்.

2. சையாதி குமரன்

**பூரிதுய்மனன்** — வீரதுய்மனைக் காண்க.

**பூரு** — யயாதிக்குச் சன்மிஷ்டையிடம் உதித்த குமரன். இவன் தன் தந்தையாகிய யயாதியின் மூப்பைத் தான் வாங்கிக்கொண்டு இளமை கல்கித் தந்தையால் இராச்சியபட்ட மடைந்தவன். குமரன் ஜன்மஜயன் (பாகவதம்).

**பூருவதேசம்**—காந்தாரநாட்டின் ஒரு பகுதி. இதற்கரசன் அத்திபதியென்பவன். (மணிமேகலை)

**பூருவோத்திரன்** — அநு குமரன்.

**பூரு** — அர்ச்சுனன் சாரதி.

**பூர்சகண்டகன்** — விராத்திய வேதியனுக்கு அவ்விதஸ்திரியிடம் பிறந்தவன். இவனுக்கு ஆவந்தியன், வாடதாநன், புஷ்பதன், சைகன், எனப் பலதேசப் பெயர்களுண்டு. (மநு).

**பூர்ச்சபத்திரம்** — ஒருவித ஓலை. வங்க நாட்டார் முற்காலத்து வடநூல்களை எழுதியிருந்த ஓலை. இது இமயமலை முதலிய பிரதேசங்களிலுள்ளது.

**பூர்ணபத்ரன்** — யக்ஷன், அரிகேசன் தந்தை.

**பூர்ணபிரஞ்ஞர்** — ஆநந்ததீர்த்தரைக் காண்க.

**பூர்ணன்** — புத்தசிஷ்யன்.

**பூர்ணிமா** — மரீசிருஷியின் குமரர், தாய் கலை. இவருக்கு விரசை, விசுவகா, தேவகுல்யா என்பவர்கள் குமரிகள்.

**பூர்ணிமை** — தாதைக்கு அநுமதியிடம் பிறந்த குமரி.

**பூர்த்தகர்மங்கள்** — குளம், குட்டை, கிணறு, தடாகம், தேவப்பிரதிஷ்டை, நந்தவனம் வைத்தல், முதலிய. (ஏமாத்ரி.)

**பூர்வசன்மத்தோற்றம்** — பூர்வ ஜன்மத்தில் பாபம் செய்தவன், ஆசாரியனுக்கு அடங்கி நடப்பனேல் ஆசாரியன் தண்டிப்பன். அவ்வாறு இல்லையின் அரசன் தண்டிப்பன். யாரும் உணராவண்ணம் பாபம் செய்யின் யமன் தண்டிக்கின்றனன். பாபம் செய்தவன் பிராயச்சித்தம் செய்யாமல் மரிப்பனேல் அவன் யமலோகத்தில் நெடுநாள் நரக வாசஞ்செய்து பின் நாய் நரி முதலிய பிறப்படைந்து பின் மானிட சன்மம் அடைந்து பூர்வசன்மத்தில் செய்த பாபத்தை யாவரும் அறியத்தக்க குறியுடையவனவன். வார்த்தை சொல்லவொண்ணு நெஞ்சடைப்புடையான் பொய் பேசினவன் எனவும், மடமை, பசு விஷயத்தில் பொய்பேசினவன் எனவும், பிறன் இல்லத்தைக் கொளுத்தினவன் எனவும், குஷ்டரோகி, பிரம்மஹத்தி செய்தவன் எனவும், புழுக்குற்ற பல்லன், கட்குடித்தவன் எனவும், புழுக்குற்ற நகம் உடையானைச் சுவர்ணம் திருடினன் எனவும், விகாரமான மேனியுடையான், குரு பத்தினியைப் புணர்ந்தான் எனவும், சண்டாள சன்மனைத் தன் சாதியில் வேறொருத்ரியைப் புணர்ந்தவன் எனவும், தரித்திரனை ஒருவனுக்கும் ஒன்றும் கொடாதவன் எனவும் அறிக. அசத் சூத்திரனுக்குப் புரோகிதம் செய்தவன் பன்றி சன்மம் அடைவன். கிராம புரோகிதன் கழுதை ஜன்மம் அடைகிறான். ஸ்நானம் சந்தி தேவாராதனை யின்றிப் புசிப்போன் காக்கையாகிறான். வீட்டில் மறைவிடங்களில் அன்றி வெளியில் உண்டவன் குரங்காகிறான். யாரும் அஞ்ச அதட்டிப் பேசினவன் பூனைச் சன்மம் அடைகிறான். செடிகளைக் கொளுத்தினவன் மின்மினிச் சன்மம் அடைகிறான். பிராமணனுக்குத் தீயபதார்த்தம் கொடுத்தவனும், சூத்திர ஸ்திரீயைப் புணர்ந்த வேதியனும் வண்டி இழுக்கும் எருதாவர். வேதியனுக்குப் பழஞ்சோறு அளித்தவன் கருங்குரங்காவன், காரணமின்றி விரோதித்தவன் குருடனாய்ப் பிறக்கிறான். புஸ்தகம் திருடினவன் பிறந்து சிறிது நாள் கழித்துக் குருடனாகிறான். பிராம்மண குடும்பத்தை நசிக்கச் செய்தவன் பெறுகிற குழந்தையை இழக்கிறவனாகிறான். பசிக்கிறவற்கு அன்னம் கொடாதவன் மக்களைப் பெறாதவனாகிறான். ஆடை திருடினவன் உடும்பு பிறப்பை அடைகிறான். பிறர் மரிக்க விஷங்கொடுத்தவன் பாம்பாகிறான், சந்நியாசி ஆச்சிரமம் அடைந்தவன் மனைவியைப் புணர்ந்தவன், பிசாச சன்மம் அடைகிறான். அன்னிய ஸ்திரீகளைப் புணர்ந்தவன் சிறுவயதில் இறக்கிறான். குரு பத்தினியைக் கூட விரும்பினவன் ஓணானாகிறான். தனக்குக் கீழ்ச் சாதிப் பெண்ணைக் கூடினவன் செந்நாயாகிறான். குளம், கிணறு தூர்த்தவன் மீன்பிறப்பு அடைகிறான். நியாய விரோதஞ் சொன்னவன் கோட்டானாகிறான். ஏகோதிஷ்டம் உண்டவன் நாயாகிறான், தத்தாபகாரம் அடைந்தவன் நரியாகிறான், இராஜ ஸ்திரீயைப் புணர்ந்தவன் இழிபிறப்பு அடைகிறான், வேதியருக்குத் தோஷம் கற்பித்தவன் ஆமைச் சன்மம் அடைகிறான், தக்ஷிணைபெற்று ஆராதனை வேதாத்யயனம் செய்வித்தவன் சண்டாளசன்மம் அடைகிறான், கனிவிருக்ஷங்களை வெட்டினவன் ஒரு கதியும் இல்லாதவனாகிறான், வாசனைத் திரவியங்களைத் திருடினவன் நாற்ற சரீரி ஆகிறான், பிறன் பொருள் வவ்வினன் புழுவாகிறான். (காருடம்.)

**பூர்வசித்தி** — அக்னீத்திரன் தேவி. இவள் பிரமனால் அனுப்பப்பட்டு அரசனுக்கு (9) குமாரரைப் பெற்றுப் பிரமனையடைந்தனள்.

**பூர்வதேசம்**—காந்தாரநாட்டின் ஒரு பகுதி. இதற்கு அரசன் அத்திபதி. பூருவதேசம் எனவும் படும்.

**பூர்வமீமாம்சகன்மதம்** — நாதமாகிற சத்தமே பரப்பிரமமாய் இருக்கும். இந்தச் சத்தம் விவர்த்தன மாயையால் பஞ்சபூதத்தை யுண்டாக்கிப் பிரமாண்டத்தை ஆக்குமெனவும், ஆத்மா அறிவள்ளவனாய் அநேகனாய் வியாபியாய்ப் புத்தியைத் தனக்குக் குணமாகவுடையனாய்ப் புத்தியைப் பொறியில் உய்த்து விஷயங்களை அநுபவிக்கும் பொருட்டுப் பூதத்தைப் புத்தி முதலான தத்துவங்களாகவும் தூலசூக்கும தேகங்களாகவும் கொண்டு நல்வினை தீவினைக்கீடாக நரக சுவர்க்கங்களை அநுபவிப்பதாய் இருப்பனென்றும், உடலையும் சுகதுக்கங்களையும் கொடுப்பது கன்மம் அல்லாமல் வேறொரு தெய்வம் கொடுக்கிறதில்லையென்றும், ஞானத்தால் வீடு இல்லையென்றும், வினைநீங்கா எனவும் பசுப்படுத்துயாகஞ் செய்து அந்த யாகத்தினால் உண்டான பலன்களைச் சுவர்க்கத்தில் அனுபவித்து அந்தப் பலன் நசித்துத் திரும்பிப் பூமியில் பிறப்பன் எனவும், சுருதிமந்திரங்களால் ஜபம் பண்ணினால் கருதிய பலன்களைக் கொடுக்குமென்றும், இவற்றால் ஆத்மா பந்தப்பட்டு நிற்பன் எனவும் கூறுவர் இம்மதத்தில் சைமினி, சூத்திரம் செய்தவர். (தத்துவநிஜாநுபோகசாரம்.)

**பூர்வாகமம்** — சைநாகமத்துள் ஒன்று.

**பூர்வான்னுதி** — பகலளவை (ங) கூறாக்கிப் பூர்வான்னம், மத்தியான்னம், அபரான்னம் என்பர். பூர்வான்னத்தில் தெய்வகாரியமும், மத்தியான்னத்தில் மனுஷ்யகாரியமும், அபரான்னத்தில் பிதுர்கர்மமும், காதுகுத்தலும் செய்யப்படும். (விதானமாலை.)

**பூர்வாலயன்** — ஒரு வேதியன். ஆனந்ததீர்த்தர் குழந்தையா யிருக்கையில் பாற்பசு கொடுத்தவன்.

**பூர்ஜபத்ரம்** — ஒருவித விருக்ஷத்தின் இலை, இதில் இருடிகள் முற்காலத்து யந்திரங்கள் எழுதி வழிபட்டனர்.

**பூலிங்கபக்ஷி** — இது இமவத் பார்சவத்திலிருப்பது. சிங்கத்துடன் நட்புக்கொண்டு அதன் பற்களில் ஒட்டியிருக்கும் மாமிசத்தைத் தின்று ஜீவிப்பது. இது,எப்போதும் தர்மவிருத்தமாகப் பேசுவது, தான் சாகசம் செய்யக் கூடாதெனப் பிறருக்குப் போதித்துத் தான் சாகசஞ்செய்வது. சிசுபாலன், பீஷ்மனை இப்பக்ஷிக்குஉவமித்தான்.(பாரசபா.)

**பூலுசன்** — ஒரு இருடி, சாமவேதி, இவன் சந்ததியான் சத்திய ஜநயன்.

**பூவராகமூர்த்தி** — ஊழிகாலத்துப் பூமிவெள்ளத்தால் அழுந்த வராகமாய்த் தாங்கி நிறுத்திய விஷ்ணுமூர்த்தி.

**பூவாடைக்காரி** — குடும்பத்தில் சுமங்கலிகளாயிறந்த பெண்கள்பொருட்டு ஆடை வைத்துப் பூசிக்கப்படும் தெய்வம் (உலவழ.)

**பூவாணியன்** — இலை வாணியன். அரசகன்னியைப் புணரப் பிறந்தவன்

**பூவை. கலியாணசுந்தர முதலியார்** — திருவான்மியூர் புராணம் இயற்றியவர்.

**பூவைநிலை**—ஆனிரையைக் காத்த மாயவன் திருவுருவோடு உவமித்துக் காட்டித் தலரும் காயம் பூவைப் புகழ்ந்தது. (பு வெ - பாடாண்.)

**பூழிநாடு** — கள்ளிக்கோடு.

**பூனை** — 1. புலியின் சாதியைச் சேர்ந்தது. புலிக்குரிய உடல் வரி கிடையாது. இது குட்டையாய் ஒரு அடி உயரமும் இரண்டடி நீளமும் உள்ளது. இது வீட்டிலிருப்பதால் இற்புலி யெனப்படும். பலவித நிறம் பெற்றிருக்கும். இரவில் நன்றாய்ப் பார்க்கும். எலி, பறவை முதலியவற்றை வேட்டையாடிக் கொல்லும். ஜலத்தில் செல்லாது. இது மரமேறும். புலி இவ்விரண்டும் செய்யாது. பிராணிகளைப் பிடிப்பதற்கு அதன்வால் துணை செய்கிறது.

2. வீட்டில் வளர்க்கும் பிராணிவகைகளில் ஒன்று. இது காட்டுப்பூனையிலிருந்து திருந்தியது. சிங்கம், புலி, சிறுத்தை, முதலிய இவ் வினத்தவை. இவற்றின் கண்கள் இரவில் பார்க்க ஒளிதருவன. இவற்றின் நகங்கள் கோபம்கொள்ளுகையில் வெளிவந்து மற்ற காலத்தில் மறையும். சில தேச பூனைகளுக்கு உடம்பில் மயிர் நீண்டுவளரும். இப்பிராணி கோபங்கொண்டபோது வளர்த்தவர்களையும் கடிக்கும். இது சத்தத்தை கூர்மையாய்க் கேட்டுப் பிராணிகளை வேட்டையாடும். காட்டுப் பூனை காண்க.

**பூனை, எலி, கீரி, கழுகு** — இவற்றின் கதை சமயத்தில் பகைவனை சந்தி செய்ய வேண்டும் என்பது. ஒருவேடன் பூனையுமெலியுமிருந்த ஆலினடியில் வலை வைத்திருக்கப

பூனை அதில் அகப்பட்டது. மரத்தடியிலிருந்த எலி அவ்விடமிருந்து வெளிவந்து எலியின் வலையிலிருந்த ஆகாரத்தைத் தின்னத் தொடங்குகையில் ஒரு கழுகையும் கீரியையும் கண்டது. எலி இந்தச் சமயத்தில் கீரிக்கும் கழுகிற்கும் பயந்து பூனையுடன் சந்திசெய்து அதின் வலையை அறுக்கத் தொடங்கியது. கழுகும் கீரியும் பூனையுடன் எலி நட்பாயிருத்தலைக்கண்டு நீங்கின.

**பூஜனி** — இது ஒரு சிட்டுக்குருவி. பிரமதத்தன் எனும் அரசன் வீட்டில் வளர்ந்தது. இது ஒரு குஞ்சுபொரித்தது. அரசனுக்கும் அதே காலத்தில் ஒரு பிள்ளை பிறந்தான். இக்குருவி அக்குழந்தைக்கும் அப்பிள்ளைக்கும் பழங்களைக் கொணர்ந்து கொடுத்து வந்தது. ஒரு நாளந்தப்பிள்ளை பறவைக் குஞ்சைக் கொன்றுவிட்டது. சிட்டு கண்டு வருத்தமடைந்து அவ்வரச புத்திரனது கண்ணைப் பேர்த்துவிட்டது. அப்படி செய்தும் அரசன் பக்ஷியை யிருக்கக் கூறினன் பக்ஷி பகைநேர்ந்தவிடத்து இருக்கக் கூடாதென அநீதிகூறி நீங்கியது. (பார-சாந்.)

**பூஜாரி**—இது ஒரு ஜாதிப்பெயரன்று. காளி, மாரி, பெரியாண்டவன், கன்னிமார் முதலிய க்ஷேத்ரதேவதைகளுக்கு பூஜைசெய்யுமவர். இவர்களில் குசவன், பள்ளி, முதலியவர், சில குறவரும் பூஜாரிகள் என்பர். (தர்ஸ்டன்.)

**பூஜை** — தாம் நினைத்த தேவதையை எண்ணிச்செய்யும் கிரியாபேதம். இது பாஹ்ய பூஜை என்றும், அந்தர பூஜை என்றும் இருவிதமாம். இவற்றுள் ஆன்மஞானிகள் பூஜை செய்யுமிடத்து மலர் பறித்தல் முதலியவற்றால் குற்றம் வரும். ஆதலால் அந்தர்யாக பூஜையே விசேஷமாம். கிரியாதிகாரிகளுக்கே பாஹ்ய பூஜை விதிக்கப்படும். பாஹ்ய பூஜை செய்வோரும் அந்தர் பூஜை செய்தே செய்தல்வேண்டும். ஏனெனில் இதயத்திலிருக்கும் தியான மூர்த்தமே வெளியிலும் பூசிக்கப்படும் ஆதலால் என்க. பூஜை செய்யுமிடத்து இறைவனைத் தாம் எண்ணிப் பூசிக்கும் திருவுருவத்தில் ஆவாகித்தல், ஸ்தாபித்தல், சாநித்தியஞ் செய்தல், பூஜா நிமித்தம் அங்கே நிரோதித்தல், அவகுண்டனஞ் செய்தல், முத்திரை காண்பித்தல் பாததீர்த்தஞ் சமர்ப்பித்தல், ஆசமனஞ் சமர்ப்பித்தல், அர்க்கியம் சமர்ப்பித்தல், புஷ்பம் சமர்ப்பித்தல் முதலிய சமஸ்காரங்கள் செய்து பஞ்சபூதாதிகளாலும் உபசரிக்க வேண்டியது. அவற்றுள் நைவேத்யம், பார்த்திவோபசாரம், பாநீயம், ஆப்யோபசாரம், கண்ணாடி முதலிய காட்டல், தைஜசோபசாரம், விசிறி, கவரி முதலிய காட்டல், வாயவ்யோபசாரம், ஸ்தோத்திரம் முதலியவை கூறல், ஆகாச சம்பந்தமான உபசாரங்களைச் செய்து கடவுளை க்ஷமை கேட்டுக்கொண்டு பூஜா சமர்ப்பணஞ் செய்வதாம். இப்பூஜை சமயக்கோட்பாடுகளுக்குத் தக்கவாறு நூல்களிற் கூறியிருத்தலால், அவை அனைத்தும் எழுதாமல் பொதுவாகச் செய்யும் பூஜை மாத்திரமே ஈண்டுக் கூறினோம். இப்பூஜை சத்வரஜஸ்தாமத தேவ பேதத்தால் பலதிறப்பட்டுப் பலங்களும் வேறுபடும்.

**பூஷா** — ஒரு சூரியன். தக்ஷயாகத்தில் பற்கள் பறியுண்டவன். காச்யபருக்கு அதிதியிடம் உதித்தவன்.

## பே

**பேதுமதம்** — இந்தத் தேசத்தவர்களுக்கு ஐந்து தேவதைகளுண்டு. இவர்கள் ஐவரும் லோகத்தைக் காத்துக்கொண்டு வருவர். இந்த ஐவர்களில் நான்காவதுதேவன் பிறந்து தற்காலம் 2225 வருஷங்களுக்கு முன் இறந்துபோயினன். ஐந்தாம் தேவன் சீக்கிரத்தில் மோக்ஷமடைவன். பிறகு உலகமெல்லாம் அக்னியால் தகிக்கப்படும். பின்னும் சுபகாரியங்களுக்குத் தேவன் கர்த்தா. கெட்ட காரியங்களுக்குப் பிசாசு கர்த்தா. இவர்களுடைய தேவாலயங்களுக்கு விர்லான் என்று பெயர். ஒவ்வொரு கோயிலிலும் 120,000 விக்கிரகங்களிருக்கின்றன. வியாதிப்போக்கு நிமித்தம் தேவப் பிரார்த்தனை செய்வர். இவர்கள் பூஜைக்குச் சோமவாரம் முக்கியம். பிசாசு வசிக்கிறதற்குத் தங்கள் வீட்டை வருஷத்தில் மூன்று மாதம் மூடிவைப்பர்.

**பேகூதன்** — தன்னாச்சிரம தர்மம் விடாத சன்னியாசி.

**பெச்சமா தேவியார்** — சிவமூர்த்தியைத் தாயிலி, தாயிருக்கின் பாம்பணிதல் விஷமுண்ணல் முதலிய சகியாள் எனத் துக்கித்து வருந்துகையில் சிவமூர்த்தி அம்மைத்தெதிர் ஒரு பசுங்குழந்தையாய் விளையாடப் பெச்சமாதேவியார் எடுத்து வளர்த்து வருகையில் ஒருநாள் (நபு - லை.)

மிகவும் அழுதல்கண்டு குழந்தை இனிப் பிழைப்பதில்லை யென எண்ணிக் குழந்தைக்கு முன் உயிர்விடத் துணிந்து சுரிகைகொண்டு தம் ஊட்டியரிய எண்ணுகையில் சிவமூர்த்தி தரிசனந்தந்து உனது அன்பை வெளியிட இவ்வகை புரிந்தோம். உனக்கு வேண்டியதைக் கேள்என அம்மை உமது திருமேனி சுகத்துடன் இருக்க வரம் வேண்டுமென அவ்வகை அருளி அம்மவ்வையெனப் பெயரிட்டு அந்தர்த்தானமாயினர்.

**பெட்டனுகனர்** — இசைத்தமிழ் வல்ல புலவர். பரிபாடலில் - 3, 4 - ஆம் பாடல்களுக்கு இசைவகுத்தவர். (பரிபாடல்).

**பெட்டி** — இது மரத்தாலும் இரும்பாலும் அடியாழ்ந்து நான்கு பக்கங்களையும் உள்ளறைகளையும் உடையனவாகச் செய்யப்பட்டது. இது பூண்கொள்பெட்டி, நிலைப்பெட்டி, பாணி, பேழை.

**பெட்ராதலஸ்ப்ளுரிஸிங்கஸ்** — கொம்புமூக்குப் பறவை. இது தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் நாட்டுக் காட்டிலுள்ளவை. இது பெருங்காக்கைப் போலுருவுள்ளது. இதன் முதுகு சாம்பல்நிறம், தலை, கழுத்து, மார்பும் கருப்பு. இதன் உடல் (20) அங்குலநீளம், மூக்கு (5) அங்குலநீளம், சிவந்த மஞ்சள்நிறம், இதில் ஆணிற்கு மேல்மூக்கின் இருபுறத்திலும் கருங்கோடொன்று அடியிலிருந்து முனைவரையிலும் உண்டு. இக்கோடு பெண் பறவைக்கில்லை. இப்பறவைக்கு நீண்ட நாவுண்டு, இதன் மூக்கு வாளின் பற்கள் போன்றது. இதன் மார்பின் பக்கம் வெள்ளை நிறமான பட்டைகளடுக்கா யிருக்கின்றன. பெண்பறவைக்கு காதைச்சுற்றி வெள்ளைக்கோடுண்டு. இது பூச்சி புழுக்களைத் தின்னும்.

**பெண்களுக்குரிய ஆடைவகைகள்** — பட்டாலும், பருத்தியாலும் நெய்யப்பட்டுச் சரிகை கலந்த புடைவைகள், தாவணிகள், ரவிக்கைகள், பாவாடைகள், உள்ளாடைகள், அங்கிபோன்ற ரவிக்கைகள் முதலிய.

**பெண்களுக்குரியபருவம்** — பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண். முறையே இவற்றினுண்டாவன, எ, கக, கரு, ககூ, உரு, ருக, ச0.

**பெண்கள்விளையாட்டு** — அம்மானை, கந்தகம், ஊசல், உலக்கைப் பாட்டு.

**பெண்கொலைகள்** — தாடகைவதை - இராமன் செயல். புலோமசைவதை - விஷ்ணு செயல். சூர்ப்பநகை பங்கம் - இராமன் செயல். பூதனைவதை - கண்ணன் செயல். அங்காரதாரைவதை - அநுமன் செயல். (இரா - பாகவ)

**பெண்ணாசையால் கெட்டவர்கள்** — இந்திரன், சந்திரன், இராவணன், நகுஷன், விச்வாமித்ரன், தண்டகன். (சுக்ரநீதி.)

**பெண்ணை** — சிவமூர்த்தியின் பிணகத்தின் வழி வந்தபடியால் பிணகினி யென்று பெயர் பெற்றது. இது பாலாறு, செய்யாறு இரண்டிற்கும் நடுவில் இருப்பதால் பெண்ணெயாறு எனப் பெயர் பெற்றது. இதனை ஒளவை தெய்வீகமகாராசன் கல்யாணத்திற்கு வருவித்தனள் என்பர். இது சிவமூர்த்தி நந்திமாதேவர்க்குப் பட்டாபிஷேகஞ் செய்தநீர் வழியுண்டானதாதலின் இப்பெயர் பெற்றதென்பர்

**பெண்பாற்கிளவி** — சங்கவளை சோரவும் எம்மை நினையாது வெள்வளையினைக் கொண்டகள்வனைக் காணாது இப்பதியென்று சொல்லியது. (பு-வெ-பெருந்திணை.)

**பெண்வகை** — (ச) பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி.

**பெந்துமான்** — சூ. கேவலன் குமாரன்.

**பெப்புரு** — ஒரு இருடி, சுநகர் மாணுக்கர்.

**பெயரெச்சம்** — செயலையுங் காலத்தையுந் தோன்றுவித்துப் பாலுடன் செய்பவன் முதலிய அறுபொருட் பெயரும் எஞ்சநிற்பது.

**பெயர்** — இடுகுறியும், காரணமும், மரபும், ஆக்கமும் தொடர்ந்து வினையாலணையும் பெயரொன்றுங் காலங்காட்ட அல்லவை காலங்காட்டாவாய் எட்டு வேற்றுமையுஞ் சார்தற்கிடமாய் திணை பாலிடங்களில் ஒன்றினை யேற்பனவும் பலவற்றினை யேற்பவுமாய் வருவன. அப்பெயர், பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர், சுட்டுப்பெயர், வினாப்பெயர், முதற்பெயர், முறைப்பெயர், தன்மைப் பெயர், முன்னிலைப்பெயர், எண்ணுப்பெயர் எனப் பல.

**பெயர்ச்சொல்** — பொருளின் பெயரைக் காட்டுவது. அது, இடுகுறிப்பெயர், காரணப்பெயர், காரண இடுகுறிப் பெயர், பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், முதலியன அடியாகப் பிறந்த

பெயர்கள், முதற்பெயர், சினைப்பெயர், சினைமுதற்பெயர், தன்மைப்பெயர், முன்னிலைப்பெயர், சுட்டுப்பெயர், வினைப்பெயர், எண்ணுப்பெயர், ஆகுபெயர், எனப் பலவகைப்படும்.

**பேரிகசு** — சு. பிரகத்துவாசன் குமரன்.

**பேரிக்ஷமதி**—1. பிரியவிரதன் பாரி, விஸ்வகர்மன் பெண்.

2. சுவாயம்பு மனுவின் பட்டணம்.

**பேரிசாத்தன்**—கடைச்சங்க மருவிய தமிழ்ப் புலவன்.

**பேரிய தம்பிரான்** — தக்ஷ யாகம் அழிந்த பின் தேவர்கள் ஒன்றுகூடி யாகத்தால் ஏற்பட்ட தேவதைக்கு இட்ட பெயர். இத்தேவரை வணங்குவோர் பெரிய யாக காரியம் போல் பலவித பண்டங்கள் சேகரித்து இத்தேவதையைப் பூசிப்பர்.

**பேரியதிருமலை நம்பி**—ஆளவந்தார் திருவடி சம்பந்தி. கிடாம்பியாச்சான் அத்தைபுருஷன். இவர் தம் பிதாவான தெய்வத்துக்கரசு நம்பிகளுடனும் இரண்டு தங்கைமார்களுடனும் திருமலை சென்று தமது இரண்டு புதல்வியர்களாகிய காந்திமதி, த்யுதிமதி யெனும் இருவர்களையும் ஆசூரி கேசவப் பெருமாள் வட்டமணிக்குலத்தவரான கமலநயனபட்டர், இவர்களுக்கு விவாகஞ்செய்து கொடுத்து அத்வைதியாயிருந்த் கோவிந்த பட்டரை மீண்டும் ஸ்ரீ வைஷ்ணவராக்கித் திருமலையில் இருந்து கைங்கர்யஞ்செய்து திருநாட்டிற்கு எழுந்தருளினர். இவர் குமாரர் பிள்ளான். இவர்க்கு வட்டமணி கோவிந்த பட்டர் எனவும் பெயர். இவர் ஆளவந்தாரிடம் காலக்ஷேபஞ் சேவித்துக் கொண்டிருக்கையில் ஆளவந்தார் திருவேங்கடத் தெந்தைக்கு நித்யம் ஒருகுடந் தீர்த்த கைங்கர்யம் செய்வார் இத்திரளில் உண்டோ? என்ன இவர் எழுந்து அவ்வாறு செய்வதாகக் கட்டளை பெற்றுச் சென்று கைங்கர்யம் செய்துவருகையில் ஒருநாள் இரண்டு கோசு தூரத்திலுள்ள பாபவிநாசனியில் தீர்த்தங்கொண்டு திரும்புகையில் திருவேங்கடமுடையான் ஒரு வில்லிபோல் தனுர்ப்பாணியாய் இவர்க்குமுன் உலாவிக் கொண்டு விந்தைகள் செய்யா நிற்க நம்பிகள் கண்டு ஒருவில்லிக்கு இவ்வரிய அங்கலக்ஷணமுண்டோ வென்று அவன் திருமேனியைப் பார்த்துக் கொண்டே சமீபத்தில் வருகையில் வேடுவன் எதிரில்வந்து தாதா என்று அழைத்து எனக்கு மிகத் தாகமாயிருக்கிறது ஒரு சேரங்கை தீர்த்தம் கொடுக்க வேண்டுமென்று இரந்து கேட்க நம்பி ஆசார்ய நியமனமில்லை யென்று போய்க்கொண்டிருக்க வில்லி பின்சென்று அவர் அறியாமல் குடத்தைத் தொளையிட்டு அதின் வழி யொழுகிய நீரை யுண்டுவிடத் தீர்த்தக்குடம் பளுக்குறையக்கண்ட நம்பிகள் இவ்வாறு திருமஞ்சன விக்னகாரி நீயன்றி வேறொருவரைக் கண்டதில்லை யென்று திருவேங்கடத்தப்பனை நோக்கி நான் மீண்டும் தீர்த்தங்கொண்டு திரும்புவதற்குள் அப்பனுக்குத் திருமஞ்சனகாலம் தவறுமென்று திரும்புகையில் வில்லி அவரை மடக்கிச் சிரித்துக் கொண்டே தாதா நீர் தினமும் அரைக்காதவழிபோய்த் திரும்பும் சிரமத்தை யொழிக்க வன்றோ இவ்வாறு செய்தேன் என்று கையிலிருந்த வில்லில் அம்பைப் பூட்டி அருகிருந்த மலைக்கூம்பின் உச்சியை நோக்கி யெய்ய அவ்வம்பு அம்மலையைத் தொளைக்க அவ்வழி ஒரு பெரும்பிரவாக முண்டாயிற்று. இவ்வற்புதச் செயல்கண்ட நம்பி திருவேங்கடத்தப்பனென்று தனுக்குற்று நிற்க வேடன் தன்னுருக்கரந்து உண்மையுருக் காட்டி இதுவே நமக்குவப்பென்று மறைந்தனர். இவருக்கு அன்றுதொட்டுத் தாததேசிகர் என்றும் தாதாசார்ய ரென்றும் பெயர் உண்டாயிற்று. தீர்த்தத்திற்கு ஆகாச கங்கையென்று பெயர்.

**பேரியநம்பி** — குமுதாக்ஷரம்சரான இவர் கலி (௩௦௬௮) க்கு மேல் ஏவிளம்பி வருஷம் மார்கழி மாதம் புதன்கிழமை திருவரங்கத்தில் அவதரித்தவர். திருக்கோட்டியூர் நம்பிக்குப்பின் வந்தவர். ஆளவந்தார் திருவடி சம்பந்தி. பெருமாள் நியமனத்தால் இளையாழ்வாரைக் காணவருகையில் மதுராந்தகத்தில் இளையாழ்வாரைக்கண்டு பஞ்ச சமஸ்காரஞ்செய்து சிலநாள் அவருடனிருந்து திருநாட்டுக்கு எழுந்தருளினவர்.

**பேரியபிராட்டி** — 1. திருமாலின் தேவி.

2. தெய்வத்துக்கரசுநம்பிகளின் பெண்.

**பேரியபுராணம்**—இது சிவனடியவர் மகாத்மியஞ்சொன்ன நூல். இதனை இரண்டு காண்டம் பத்துச்சருக்கம் கொண்ட விருத்தச் செய்யுட்களால் சேக்கிழார் சுவாமிகள் விரித்தருளிச் செய்தனர். இது ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டத் தொகையை முதனூலாகவும்

நம்பியாண்டார் நம்பி அருளிச்செய்த திரு அந்தாதியை வழிநூலாகவும் கொண்டது.

**பேரியழக்துப்பறவை** — இது, அமெரிகாவில் பூமத்யரேகையை யடுத்த காடுகளிலிருக்கிற காக்கையினம். இதை டோகோ (Dooo) என்பர். இதன் தலையும், முதுகும் கருஞ்சாம்பல் நிறம். கழுத்தும் மார்பும் வாயினடியும் வெண்சாம்பல் நிறம். இதன் கண்களைச் சுற்றிவெண்மை. மூக்கு அதிகம் பருத்து நீண்டது. இதன் மூக்கினுள் உணர்ச்சிக்கமைந்த ஐவ்விருக்கிறது. இது பறக்கையில் கழுத்தை நிமிர்த்தி மூக்கை நேரில் நீட்டிக்கொண்டு பறக்கிறது. இது தூங்குகையில் மூக்கை இறக்கையில் மறைத்துப் பந்துபோலுடலைச் சுருட்டிக்கொண்டுறங்கும். இது மரப்பறவையினமாதலால் நகங்கள் கூர்மை. எலி ஓணான் முதலியவற்றைப் பிடித்துத் தின்னும்.

**பேரியவாச்சான்பிள்ளை** — இவர் சருமம், கலி (௪௨௨௪) சர்வசித்துவூ ஆவணிமீ ரோகணி நக்ஷத்திரம். நம்பிள்ளையின் திருவடி சம்பந்தி. இவருக்கு ஸ்ரீ கிருஷ்ண பாதர் எனவும் பெயர். இவர் காலத்து வேதாந்த தேசிகர் தாம் கண்ட கனவிலேயுரைத்து இவரை வழிபட்டு இவர் சொற்படி நடந்தனர் எனத் தென்னாசாரிய சாம்பிரதாயத்தார் கூறுவர். இவர் செய்த நூல்கள் தனிசுலோகி, பரந்தபடி, திரிமத சித்தாந்த சாரசங்கிரகம். கலியனருளப்பாடு திவ்யப்ரபந்த வியாக்யானம்.

**பேரியஜீயர்** — மணவாள மாமுனிகளுக்கு ஒரு பெயர்.

**பேரியாண்டவன்** — தக்ஷயாகம் அதமானபின் சிவாநுக்ரகத்தா லெழுந்த தக்கன் யான் செய்த யாகம் பயனடைய அநுக்ரகிக்க வேண்ட சிவபிரான் யாகமுதல்வராயிருந்தமையால்பெரியாண்டவன் எனப்பட்டனர். சிலர் இந்தயாக அறிகுறியாக அங்காளம்மைவேடம் பூண்டு பூசையிடுவர். (உ-வ)

**பேரியாண்டான்** — எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

**பேரியாழ்வார்** — ஸ்ரீ கருடாம்சரான இவர் கலியுகம் (௪௭) வதான குரோதனவூ ஆனிமீ சுக்ல ஏகாதசி பானுவாரம்கூடின சுவாதி நக்ஷத்திரத்தில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஒரு புரச்சூட வைணவருக்குப் புத்திரராய் அவதரித்து ஓதியுணர்ந்து நந்தவனம் வைத்துப் பெருமாளுக்குத் திருமாலை தொடுத்துச் சாத்துங் கைங்கர்யம் செய்துவருகையில் வல்லபதேவன் பொற்கிழி கட்ட அதை யறுத்து விசிட்டாத்வைதம் ஸ்தாபித்துப் பட்டர்பிரான், விஷ்ணுசித்தர் எனத் திருநாமம்பெற்று அரசன் வழிவிட வில்லிபுத்தூர் எழுந்தருளித் துளசிவனத்தில் ஆண்டாளைக் குழந்தையுருவாகக்கண்டு எடுத்துக் கோதையெனப் பெயரிட்டு வளர்த்து வந்தனர். இவ்வகையிருக்கத் தாம் பெருமாளுக்குக் கட்டிய மாலைகளைக் கோதை தாம் சூடிக்கொடுக்க மனங்கொள்ளாராய் வேறு மாலை தொடுத்துப் பெருமாளுக்குச் சாத்தச் செல்லப் பெருமாள் கோதை சூடிக் கொடுத்தது சுத்தமெனக் கேட்டுப் பெருமாள் நியமனத்தால் கோதையை அழகிய மணவாளருக்குத் திருமணஞ் செய்வித்து (85) திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்து அழகர் கோயிலில் திருநாட்டுக்கு எழுந்தருளினர். இவர் அருளிச்செய்த நூல் பெரியாழ்வார் திருமொழி. (குருபரம்பரை.)

**பேரியான்**—இவன் திருத்தினை நகரிலிருந்த பள்ளர் சிரேட்டர் சிவபக்தியுள்ளவர் இவர் ஒருநாள் தம்கழனியைஉழுதுகொண்டிருக்கையில் சிவபிரான் ஒரு சங்கமர் உருக்கொண்டிவரிடம் வந்து அன்னம் கேட்டனர். பள்ளர் வீடுசென் றன்னம்கொண்டு வருகிறேனென்று கூறிப்போய் அன்னம் கொண்டு மனைவியாரும் தாமும் வருவதன் முன்னம் சிவபெருமான் பள்ளர் உழுதிருந்த கழனியில் தினைவிளைந்து முதிர்ந்திருக்கச்செய்து மறைந்தனர். பள்ளர் மனைவியாரும் தாமும் வந்துகண்டு வியப்புற்றுச் சிவபெருமானைத் துதிக்கையில் சிவபெருமான் இடபாரூடராய்க் காட்சிதந்து பள்ள தம்பதிகளுக்கு முத்தி தந்தருளினர். திருத்தினை நகர்ப் புராணம்.

**பேரியோரியல்பு**—7. அறம், பொருள்,இன்பம், அன்பு, புகழ், மதிப்பு, பொறுமை.

**பேரிஹிணசுவன்** — நிகும்பன் குமரன்.

**பேருங்கதை** — ஒரு தமிழ் நூல். இது பிருகத்கதையின் மொழிபெயர்ப்பு, வத்சதேசத்தாசனாகிய உதயணன் சரித்திரத்தைக் கூறும். இது சொன்னேக்கம், பொருளேக்கமுற்றது; அகவற்பாக்களா லாகியது. இது 1-வது உஞ்சைக்காண்டம், 2-வது இலாவாணகாண்டம், 3-வது மகதகாண்டம், 4-வது வத்தவகாண்டம், 5-வது நரவாணகாண்டம் முதலியவாகப் பகுக்கப்பட்டிருக்கிறது.

**பெருங்கண்ணனர்** — மதுரை மருதங்கிழார் மகனர் பெருங்கண்ணனரெனவும் விழிக்கட்பேதைப் பெருங்கண்ணன ரெனவும் இருவருளர். அவரின் இவர் வேறென்பது தெரிய அடைமொழி கொடாது கூறப்பட்டார். இவர் பாலையையும் நெய்தலையும் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் கநஎ-ம் பாடலொன்றும் குறுந்தொகையி லிரண்டுமாக மூன்று பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பெருங்கருணை** — ஒரூர், பெருங்கிராமமாக இருக்கலாமென்று நினைக்கின்றனர். இதில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் மிகுதியாக உளர். (திருவிளை.)

**பெருங்காஞ்சி** — 1. எதிர்வரும் படையினைத் தடுக்கும் வலியினையுடைய கொடுவினையாளர் தத்தம் வலியைமிக்க பெருஞ்சேனையிடத்துத் தோற்றுவித்தது. (பு. வெ.)

2. வரையுயர்ந்த பெரியகுவலயத்து நிலைநில்லா நெறியைச் சொல்லியது. (பு. வெ. பொதுவியல்.)

**பெருங்காப்பியம்** — வாழ்த்து, வணக்கம், இவைகளில் ஒன்றை முன்னுடைத்தாய், அறம்பொருளின்பம் வீடென்று கூறும் நடை நெறித்தாய், தன்னிகரில்லாதானை நாயகனுகக் கொண்டதாய், மலை, கடல், நாடு, நகரம், இருது, இரவி, மதி, ஆகிய வருணனைகளைப் பெற்று, திருமணம், முடிகவிப்பு, பொழிலாட்டு, நீராட்டு, புதல்வர்ப்பேறு, புலத்தல், களித்தல், மந்திரம், தூது, செலவு, இகல், வென்றி, சந்தி முதலிய தந்திரங்கொண்டு சருக்கம், இலம்பகம் பரிச்சேதமெனும் பிரிவினதாய், சுவை, பாவம் கூடியதாய்ப் புலவனுல் பாடப்படுவது. (தண்டி.)

**பெருங்காயம்** — 1. இது ஒருவித மரத்தின் வேரிலிருந்து சித்தஞ்செய்யப்பட்ட பால், இது ஜலத்தில் கரைவதில்லை. ஆனுல், சாராயத்தில் கரையும். இது பர்மா, துர்க்கி, ஆப்கனிஸ்தானம் முதலிய இடங்களிலுண்டாகிறது. இதனை இந்துக்கள் விசேஷமாக மருந்துகளுக்கும் போஜனுதிகளுக்கும் உபயோகிக்கின்றனர்

2. இந்தியாவின் வடமேற்கு பாகம் முதலிய இடங்களில் உண்டாம் சரக்கு. இது, ஒருவித மரத்தின் பால். இது மருந்திற்கியைந்தது, வெள்ளுள்ளி வாசனையுள்ளது. சிறப்பானது இதனை வாசனைபோகாது பாய் முதலியவைகளில் சிப்பம் சிப்பமாகக் கட்டி வர்த்தகர் பல நாடுகளுக்கனுப்புவர். இது நிறத்தில் செம்மை கலந்த கறுப்பு.

**பெருங்கிராமம்** — சோமசுந்தரக் கடவுள் விருத்த குமாரபாலராகியருளும்படி பத்திபுரிந்தொழுகிய மங்கை அவதரித்த ஊர். (திருவிளை.)

**பெருங்கிள்ளி** — பெருநற்கிள்ளிக்கு ஒரு பெயர். இவன் கோவலன்காலத்து உறையூர் ஆண்டவன். (சிலப்பதிகாரம்.)

**பெருங்குடியார்** — செட்டிகள் பேதம்.

**பெருங்குருகு** — முதற்சங்கத்தவர் இயற்றிய இசைத் தமிழ் நூல். இறந்தது.

**பெருங்குன்றூர்க்கிழார்** — 1. குடக்கோ இளஞ்சேரலிரும்பொறைமீது பதிற்றுப்பத்தில் (9) பத்தைப் பாடி (32,000) பொன் பெற்ற வேளாளர். வையாவிக் கோப்பெரும்பேகனுல் துறக்கப்பட்ட கண்ணகி யென்பவளை அவனுடன் சேர்த்தற்கு அவனைப் பாடியவர். இவராற் பாடப்பட்டோர் மேற்கூறிய இருவருடன் உருவப் பஃறேரிளஞ் சேட்சென்னி முதலியோர். (அகநானூறு) (பதிற்றுப்பத்து).

2. இஃது ஊர்பற்றி வந்த பெயர். இவர் வேளாண் மரபினர். இவர் தமிழ் பயின்று பெரும் புலமையுடையராய் வறுமை மேலீட்டினுல் வருந்திக் குடக்கோச் சேர லிரும்பொறை யென்பானிடஞ் சென்று பாடிப் பலநாள்காறும் அவன்பாலிருந்தும் அவன் யாதோ பரிசில் கொடுப்பவன்போலக் காட்டிப் பின்பு கொடானுய் ஏமாற்றிவிட்டனன். புலவர் வருத்தமுற்றுத் தமது வறுமையி னிலைமையும், அதனுலே தம் மனைவியும் புதல்வனும் படுந் துன்பமும் விரித்துக்கூறி அவனையும் நீ பொய்ம்மையுடையையென்று குறிப்பாகப் பலவாறு மொழிந்து இகழ்ந்துவிட்டு வையாவிக்கோப்பெரும்பேகனிடஞ் சென்ருர். அங்கு அவன் தன் மனைவி கண்ணகி யென்பாளைத் துறந்தமை யறிந்து அவனைப் பாடி நீ நின் மனைவியை மீட்டுக் கொள்வதே எமக்குப் பரிசில் கொடுத்ததாகுமென்று கூறி, மீண்டு சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியிடஞ் சென்று தம் வறுமை புலப்படக்கூறி அவனுல் ஆதரிக்கப்பெற் றிருந்தனர். அங்ஙனமிருக்குநாளில் சேரமான் குடக்கோச்சேர லிரும்பொறை இறந்துவிட அவன் தம்பி குடக்கோ இளஞ்சேரலிரும்பொறை என்பான் அரசாட்சி கைக்கொண்டனன்.

அதனை யறிந்த நமது புலவர்பெருமான் அவ்வரசனிடஞ் சென்று அவன் விச்சிரக் கோனைவென்றதும், பெருஞ்சோழனையும், பழையன்மாறனையும், போர்தொலைத்ததும் ஆகிய இன்னொன்ன சிறப்பெல்லாம் அமைத்துப் பதிற்றுப்பத்தில் ஒன்பதாம் பத்தைப் பாடி. அவனால் அளவுகடந்த பரிசில் கொடுக்கப்பெற்று வாழ்ந்திருந்தனர் இவர் பாடிய ஒன்பதாம்பத்தில் "நல்லிசைக் கபிலன்பெற்றவூரினும் பல" என்று கபிலரைப் பாராட்டிக்கூறியது அறியத்தக்கது. இவர் குறிஞ்சித்திணையைப் பலபடியாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். சந்தனமரத்து வேர் தனியே இருத்தலால் மரத்தில் வாசனை அமையாதென்றும், பிற வேர்களோடு கலந்தால் மரம் நறுமணங் கமழுமென்றும் குறிப்பிக்கிறார். இவர் பாடியனவாக நற்றிணையில் நாலு பாடல்களும், குறுந்தொகையி லொன்றும், அகத்தில் ஒன்றும், புறத்தில் ஐந்தும், பதிற்றுப்பத்தில் பத்துமாக இருபத்தொரு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனர்** — பல்குன்றக் கோட்டத்துச் செங்கண்மாத்து வேள் நன்னன் சேய்நன்னனைப் பாடியவர்.

**பெருங்குறிஞ்சி** — ஒரு தமிழ் நூல்.

**பெருங்கோப்பெண்டு** — பூதப்பாண்டியன் தேவியைக் காண்க.

**பெருங்கோழிநாய்கன் மகன் கண்ணனர்** — ஒரு தமிழ்ப் புலவர். இவராற் பாடப்பெற்றோன் சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி, பெருங்கோழி நாய்கன் ஒருவன், ஒத்த அன்பினாற் காமமுறாத வழிச் சிறப்பின்மை நோக்கித் தாமே காமுற்றுப் பாடல் கூறினவர். இவர்க்குப் பெருங்கோழி நாய்கன் மகன் நக்கண்ணையார் எனவும பெயர் கூறுப. (புற-நா).

**பெருங்கௌசிகனர்** — 1. இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனர்க்கு ஒருபெயர். இவர் நன்னன் சேய் நன்னனைப் பாடியவர்.

2. இவர் தொண்டைநாட்டு இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனர் எனப்படுவோர். தொண்டை நாட்டுப் பல்குன்றக் கோட்டத்துச் செங் கண், மாத்துவேள், நன்னன்சேய், நன்னன் மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) பாடியவர் இவரே. அந்தணர் மரபினர், "ஊரும் பெயரும்" என்ற தொல். பொரு. கூ௨0-ம் சூத்திர வுரையிற் 'பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன் அந்தணர்க் குரியன்' என்று பேராசிரியர் கூறுமாற்றினு மறிக. இவர் மலைபடுகடாத்தில் 'தீயினன்னவொண் செங்காந்தள்' என்று பாடியதனை 'நன்னனென்றும் பெயர் தீயோடடுத்தமையின் ஆனந்தக் குற்றமாய்ப் பாடினாரும், பாட்டுண்டாரும், இறந்தாரென்று ஆளவந்த பிள்ளையாசிரியர் குற்றங் கூறினாரேவெனின் அவர் அறியாது கூறினார் என்று நச்சினார்க்கினியர் தம் உரையகத்துக் கூறியுள்ளார். அஃது ஆனந்தக் குற்றமாயினும், அன்றாயினும், பாடினாரும், பாட்டுண்டாரும் ஒருகாலத்து இறந்தனரென்றதனை மறுத்திலாமையின் அங்ஙனமே இப்பெருங் கௌசிகனர் மலபடுகடாம்பாடி அரங்கேற்றியவுடன் இறந்தனராதல் வேண்டும். இவர் குறிஞ்சியையும், முல்லையையும், புனைந்து பாடியுள்ளார். வினைமுடித்து மீண்டுவந்து தலைவியின்பந்துய்த்து அவளுடனிருந்த தலைமகன் மழையை வாழ்த்துவது இனிய சுவைபயவா நிற்கும். நற்றிணையில் இவர் பாடிய பாட்டு இரண்டு.

**பெருச்சாளி** — இது, எலியைப்போன்ற உருவமுடையதாயினும்; பருத்த வுடலும், குறுகிய காலும், இரவில் நன்றாகப் பார்க்கக்கூடிய கண்களும், முன்னீண்ட மேல் வாய்ப் பற்களும், உரோமமற்ற வாலுமுடையது. இதன் தேகத்திலுள்ள உரோமங்கள் முறடாய்ப் பன்றி மயிர்போ லிருக்கும். இது பன்றிச்சாதியைச் சேர்ந்தது. பூமியையும், சுவர்களையும், கூரிய பற்களாலும் நகங்களாலும் தோண்டும் வலிமையுள்ளது. இது கருநிறம் பெற்றது. இச்சாதியில் வெள்ளையுமுண்டு. அது வெள்ளைநிறமானது. இதைப்போல் குரூரமுடையதன்று. பன்றியைப்போ லுறுமும்.

**பெருஞ் சாகரன்** — அகத்தியர்க்கும் சமுத்திர கன்னிகைக்கும் பிறந்தவன். இவன் திருவாரூர்ப் புலைச்சியைப் புணர்ந்து பகவன் என்பவனைப் பெற்றான்.

**பெருஞ்சாத்தனர்** — 1. ஒல்லையூர் கிழான் மகன், குடிவாயில் நல்லாதனாராற் பாடப் பெற்றவன்.

2. பிடவூர் கிழான்மகன். கடைச்சங் கத்தவருள் ஒருவன்.

**பெருஞ்சித்திரனர்** — ஒரு தமிழ்ப் புலவர், இவர் கடையெழு வள்ளல்களையும், கும

ணன், இளவெளிமான் முதலியவரையும் பாடி வறுமைபோக்கிக் கொண்டவர். (புற-நா.)

பெருஞ்சீத்தனர் — கடைச்சங்கப் புலவரில் ஒருவர். (திருவள்ளுவமாலை).

பெருஞ்சேரலிரும்பொறை—1. தகடூர் எறிந்தவன். அரிசில்கிழாரால் தகடூர்யாத்திரை பாடப்பெற்றவன்.

2. இவன் செல்வக் கடுங்கோவாழியாதன் குமரன். இவன் அதியமான் தகடூர் மேற்படைகொண்டு சென்று அவ்வூரையும் அதியமானையு மழித்தனன். இப்போர்ச்செயலைப் புகழ்ந்து பாடியது தகடூர்யாத்திரை ஆதலால் இவனுக்குத் தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறையெனப் பெயர். இவனைப் பதிற்றுப்பத்தில் குறுத்தண்ஞாயில், உருத்தெழுவெள்ளம், நிறந்திகழ் பாசிறை, நலம்பெரு திருமணி, தீஞ்சேற்றியாணர், மாசிதறிருக்கை, வென்ஞடுதுணங்கை, பிழைநோக்கியவர், நிறம்படு குருதி, புண்ணுடை யெறுழ்த்தோள், என எட்டாம்பத்தில் அரிசில்கிழார் புகழ்ந்தனர். இவர்க்கு (9000) காணத்துடன் அரசுகட்டிலையுங் கொடுக்கப் புலவர் கட்டிலைகொடுத்துவிட்டு அமைச்சத்தொழில் பூண்டிருந்தனர். இவன் மனைவி அந்துவஞ்செள்ளை. இவன் குமரன் இளஞ்சேரலிரும்பொறை.

பெருஞ்சோற்றுநிலை — பகைவர் வேற்றுபுலத்தைநமக்கு அழித்துத் தருவரிவரென்று சொல்லி மிக்கசோற்றை வீரர்கொள்ளும் வகையிலே கொடுத்தது. (பு-வெ).

பெருநம்பி — 1. குலச்சிறை நாயனருக்கு ஒரு பெயர்.

2. சாத்தனரின் வம்சத்தவன். சாத்தனர் முத்தமிழாசிரியர் எனப்படுகிறார். இவர் மணிமேகலை யியற்றிய சாத்தனரா அன்றி அவரின் வேரு என ஊகிக்கப்படுகிறது. இவர் இருந்தவூர் செங்கல்பட்டு ஜில்லாவிலுள்ள பொய்யாமொழிமங்கலம். பொய்யாமொழிப் புலவர் இருந்த உறையூருமு ஒருகால் இந்தப் பொய்யாமொழி மங்கலத்தினிடை யிருத்தல்கூடும். பொய்யாமொழிமங்கலத்தில் கடிகையென ஒரு தமிழ்ச்சங்க மிருந்ததெனத் தெரிகிறது. (திருக்கச்சூர்சாசனம்) இந்தவூர் தமிழாசிரியர்களால் பெயர் பெற்றது. மணிமேகலையாசிரியர் சாத்தனர் கல்விபயின்ற இடமிதுவாக இருக்கலாம் என எண்ணுகிறார்கள். உறையூர் செங்காட்டுக்கோட்டத்திலுள்ளது.

பெருநற்கிள்ளி — உறையூர்ச்சோழன்; கோவலன்காலத்துச் சோனுடு ஆண்டவன். இவனுக்குப் பெருங்கிள்ளி யெனவும் பெயர்.

பெருநாரை — முதற்சங்கத்தவர் இயற்றிய இசைத் தமிழ்நூல்.

பெருந்தலைச் சாத்தனர்—1. தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காட்டில் இருந்த குமணனைக் கண்டு பாடி அவன் தன் தலை துணித்தற்கு வாள் கொடுப்ப அதனைக் கொணர்ந்து இளங்குமணற்குக் காட்டி அவன் மனத்தின் மாறுபாடு போக்கியவர். இவர் இளங்கண்டீரக்கோவும், இளவிச்சிக்கோவும் உடனிருந்தபோது சென்று, இளவிச்சிக்கோவை மதியாது இளங்கண்டீரக் கோவைத் தழுவி அதற்குக் காரணமும் கூறியவர். காரணம், இளவிச்சிக்கோவின் மரபின் பெண்டிரும் பாடுவார்க்குப் பரிசில் அளித்தல் காரணமாக அவனைப் புல்லினேன் உன் மரபினர் பாடுவார்க்குக் கதவடைத்தல் காரணமாக உன்னைப் புல்லா தொழிந்தேன் என்றவர். (புறம்-164-காண்க.) (அகம்.)

2. இவர் ஆவூர் மூலங்கிழார் மகனர் பெருந்தலைச் சாத்தனரெனவும், மூலங்கிழார் மகனர் பெருந்தலைச்சாத்தனரெனவுங் கூறப்படுவர். வேளாண் மரபினர். எனைய வெளிப்படை. பெரிய தலையையுடையாதலிற் பெருந்தலைச்சாத்தனரெனப்பட்டார் போலும். இவர் வறுமை மேலீட்டினல் வருந்திக் கொடைவள்ளலாகிய குமணனிடஞ் சென்றனர். அவன் தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காடு சென்றனனென்ப தறிந்து அவனிருக்கும் காட்டை யடைந்து தாம் வறுமையாற்படுந் துன்பமெல்லாங் கூறினர். அதனைக் கேட்ட குமணன் என் தலை கொணர்தற்கு இவ்வளவு பொருள் கொடுப்பேனென்று தம்பி புலப்படுத்தியுள ஞதலின், அவ்வாறே என் தலையைக் கொய்துகொண்டு போய்க் கொடுத்து நின் வறுமையைப் போக்கிக்கொள்ளென்று தன் வாளை அவர் கையிற் கொடுத்தனன். அதனைப்பெற்ற புலவர் உடனே இளங் குமணனிடஞ் சென்று நிகழ்ந்ததுகூறி அவனுள்ளத்திருந்த குறையைப் போக்கி நட்பாக்குவித்தனர். ஒருகால் நள்ளியென்பவனது தம்பி

இளங்கண்டீரக்கோவும், விச்சிக்கோவின் தம்பி இளவிச்சிக்கோவும்ஓரிடத்து இருந்த பொழுது அங்குச்சென்ற இப்புலவர் நள்ளியின் தம்பியைமட்டும் அணைத்து மகிழ்ந்து அளவளாவினர். இளவிச்சிக்கோ என்னைத் தழுவாதது என்னென "நீபெண் கொலை புரிந்தநன்னன் மருகனுதலோடு பாடுவார்க்கு யாதுங் கொடாது கதவை யடைக்கின்றனை யாதலால் தழுவுதற்கு உரியையில்லை" யென்றிகழ்ந்து கூறினர். மற்றொருகால் கோடைமலைத் தலைவனும், பாண்டியன் சேனபதியுமாகிய கடியநெடு வேட்டுவனிடஞ் சென்று பரிசில்வேண்ட அவன் கொடாது தாழ்ந்தனன். அது கண்டு புலவர் வெறுத்துக் கூறிப் பின்பு அவனுல் பரிசளிக்கப் பெற்றனர். பெற்ற தனுல் பின்பு புகழ்ந்தனர். அப்பால் மூவனென்பானிடஞ் சென்று அவனும் ஈயானாக அவனையும் அங்ஙனமேகூறி மீண்டனர். இவர் பாலையையும், முல்லையையும் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், அகத்தில் இரண்டும் புறத்தில் ஆறுமாக ஒன்பது பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பெருந்தாலி** — இடையரிலும் கைக்கோளரிலும் பெரிய தாலியைக் கட்டிக்கொண்டிருக்கும் வகை.

**பெருந்திணை** — இட்டவீரக்கழலினையும் மிக்க தலைமையினையு முடையவன் விரும்பாத புல்லுதலை வேட்டுமிக்க இருட்காலத்துப் போம் அவளது தன்மையைச் சொல்லியது. (பு வெ-பாடாண்).

**பெருந்துறை** — சுகுண பாண்டியனைக்காண்க.

**பெருந்தேவனர்** — 1. கடைச்சங்கப் புலவருள் ஒருவர். இவர் பாரதத்தை வெண்பாவாகப் பாடியவர். ஆதலின் இவர்க்குப் பாரதம்பாடிய பெருந்தேவனர் எனவும் பெயர். இவர் புறநானூறு முதலிய நூல்களுக்குக் காப்புச் செய்யுள் கூறியிருக்கின்றனர். இவர் தொண்டைநாட்டு வேளாளர் எனத் தொண்டைமண்டல சதகம் கூறும். திருவள்ளுவர்மாலையில் "எப்பொருளும் யாரும்" எனும் வெண்பா இயற்றினர். இவர் உக்கிரப்பெருவழுதி காலத்தவர். (பாரதம்)

2. இவர்க்குக் கவிசாகரப் பெருந்தேவனர் எனப் பெயர். இவரும் கடைச்சங்கத்தவருள் ஒருவர்.

3. வீரசோழிய மென்னும் இலக்கணத்திற்கு உரை இயற்றியவர். இவர் சைநர்.

4. இவர் "வண்மையாற் கல்வியால் மாபலத்தால் நல்வினையால், உண்மையில் பாராளுமுரிமையால்—திண்மையால்தேர் வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானே, டியார் வேந்தரென்பாரெதிர்" இவர் நந்திபோத்தரையன் காலத்தவரெனத் தாம் பாடிய டி வெண்பாவினுல் தெரிகிறது. ஆதலால் இவர்காலம் ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதி யென்பர்.

5. பெருந்தேவனரெனப் பலருளர். இவரின் வேறென்பது தெரிய மற்றையோர் பாரதம்பாடிய பெருந்தேவனரெனவும், கடுகுபெருந்தேவனரெனவும் கவிசாகரபெருந்தேவனரெனவும், அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் வேறுபடுத்த அடைமொழிகொடாது இவர் பெயர் மாத்திரையாகவே கூறப்பட்டார். கூகையை நோக்கித் தலைவி கூறியதாக இவர்பாடியசெய்யுள் மிக்கசுவையுடையது. இவர் குறிஞ்சியையும், பாலையையும், புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையிலொன்றும், அகத்தில் ஒன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பெருந்தேவனர் பாரதம்** — வெண்பாவாகப் பெருந்தேவனரால் பாடப்பட்ட பாரதக் கதை.

**பெருந்தேவி** — திருக்காஞ்சியில் பூபிராட்டியின் திருநாமம்.

**பெருந்தோட்குறுஞ்சாத்தன்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களுள் ஒருவர். இவர் உருவத்திற் குறுகித் தோள் பருத்திருந்ததனுல் இவர்க்கு இப்பெயர் இருத்தல்கூடும். (குறு ௩௦௮).

**பெருமகள்** — கோவலனுக்குத் தாய். கோவலன் இறந்ததை மாடலனுற் செவியுற்று இறந்தவள். இவளுக்குப் பெருமனைக்கிழத்தி யெனவும் பேரிற்கிழத்தி யெனவும் பெயர். (சிலப்பதிகாரம்).

**பெருமலை** — சேரநாட்டில் உள்ளமலை. (சிலப்பதிகாரம்).

**பெருமாக் கோதையர்** — சேரமான் பெருமாளையனருக்கு ஒரு பெயர்.

**பெருமிழலைக்குறும்பநாயனர்** — இவர் பெருமிழலையென்னும் ஊரில் திருவவதரித்துச் சிவபக்தி, அடியவர்பக்தியால் சிறந்து ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவடிகளின் தியானமே மோக்ஷசாதன மெனக்

கண்டு அவரை அகத்தும் புறத்தும் சிந்தித்திருப்பவர். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குத் திருவஞ்சைக்களத்துச் சிவபெருமான் உத்தர கைலாசத்தை அடையக் கட்டளையளித்ததை யோகத்தால் உணர்ந்து அவரைப் பிரிந்துவாழேன் என்று அவருக்கு முன் யோகத்தால் பிரமரந்திரம் திறக்கச் சிவபெருமான் திருவடியடைந்தவர். (பெ-புராணம்.)

**பெருமூக்கு நாரை** — இது ஆபிரிகா கண்டத்தின் இடையில் வெள்ளை நதி பாயுமிடங்களில் வசிக்கிறது. இது உருவில் பெருநாரையினும் பெரிது. சிறகுகளின் மேற்புறம் கருநீலவர்ணம். இதன் மூக்கு நீண்டு பருத்தது. இம்மூக்கின் மேல் பாகம் பருத்தும், அடிப்பாகம் வளைந்து கூர்மையாயுமிருக்கிறது. இது ஆற்றில் தன் மார்பளவு நின்று குறித்த மீனைத் தவருது கொள்ளும். இவ்வினத்திற்கு இரை அகப்படாவிட்டால் கூட்டமாக நின்று நாற்பக்கம் மீன்களை வளைத்துக் கரையகம் ஒதுக்கி இரைகொள்கிறது. இவை மரங்களில் கூடமைத்துக் குஞ்சு பொரித்து அவற்றிற்கு இரைதந்து வளர்க்கும். (Shoe Bill Crane).

**பெருமையணி** — பெரிய ஆதாரத்தினும் ஆதேயத்தைப் பெரிதாகக் கூறுதல். இதனை அதிகாலங்காரம் என்பர். (குவல.)

**பெரும்பதுமனர்** — 1. மீளப்பெரும்பதுமனர் என்றொருவருளர். இவ்விருவரும் பாடியவெல்லாம் பாலைத்திணையே யாதலின், இருவரும் ஒருவரேயென்று கருதற்கிடனுயிற்று. மீளி - ஓரூர். ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுக்காவில் (மல்வி) என்றோரூருளது; மீளி யென்பதே மல்லியென்று திரிந்து வழங்குகிறதோ தெரியவில்லை. குறுந்தொகையில் இவர் பாடிய 'வில்லோன் காலனகழ' வென்ற பாடலும், புறத்தில் விவர் புலவர்கள் பறவைக்கூட்டமாகவும், செல்வமுடையவர் ஆலமரமாகவும் வைத்துக் கூறிய பாட்டும் எவர்க்கும் இன்பம் பயப்பனவாம். இவர் பாலைத்திணையைப் பலபடப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும், குறுந்தொகையி லொன்றும், புறத்திலொன்றுமாக நாலு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2 ஒருதமிழ்ப் புலவர். (புற-நா).

**பெரும்பாக்கன்** — இவர் கடைச்சங்கமருவிய புலவரில் ஒருவர். இவர் ஊர் பெரும்பாக்கமென இருக்கலாம். (குறு-உ௯௬.)

**பெரும்பாணுறு** — தொண்டைமா னிளந்திரயனைக் கடையலூர் உருத்திரங் கண்ணனர் பாடிய அசவற்பா.

**பெரும்பெற்ற புலியூர்நம்பி** — பாண்டிநாட்டில் வேம்பத்தூர் சோழியர் குலத்தில் கௌணிய கோத்திரத்தில் பிறந்த வேதியர். இவர் ஊர் செல்விநகர். சைவர். இவர்க்குத் தில்லைநம்பி யெனவும் ஒரு பெயர். இவர் திருவாலவாயுடையார் திருவிளையாடல் பாடியவர். இவர் வேம்பத்தூர் சங்கத்தவர். (திருவிளையாடல்.)

**பெரும்பொருள்விளக்கம்** — இது ஒருதமிழ் நூல்.

**பெரும்பொழுது** — சித்திரையும் வைகாசியும் இளவேனில், ஆடியும் ஆனியும் முதுவேனில், ஆவணியும் புரட்டாசியும் கார்ப்பருவம், ஐப்பசியும் கார்த்திகையும் கூதிர்ப்பருவம், மார்கழியும் தையும் முன்பனிப்பருவம், மாசியும் பங்குனியும் பின்பனிப்பருவம். இவற்றை வடநூலார் முறையே வசந்தருது, கிரீஷ்மருது, வருஷருது, சரத்ருது, ஏமந்தருது, சசிருது, என்பர்

**பெருவஞ்சி** — தன்னுடைய முன்னேவந்து செறியாதார் நல்ல தேசத்தைப் பின்பும் கோபித்து நெருப்பைக் கொளுத்தியது. (புறவெண்பா.)

**பெருவழுதி** — இவர் கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதியெனவும், இளம்பெருவழுதி யெனவுங் கூறப்படுவார். இவர் திருமாலிருஞ்சோலை வாசுதேவனையும், பலதேவனையும், பரவியவாருகப் பரிபாடலில் "புலவரையறிய புகழொடு பொலிந்து" என்னும் பாடலை இயற்றியவர். இப்பாட்டிற்கு இசை வகுத்தவர் மருத்துவன் நல்லச்சுதனர். இவர் பாடல் நற்றிணையில் தாய் கேட்பத் தோழி எமாற்றியதாகக் கூறும் கூற்றும், வியப்பைத் தருவனவாம். கடலுட் சென்றவிடத்து இறந்தமையின் இவர் கடலுண்மாய்ந்த வழுதியென்று கூறப்பட்டார். குறிஞ்சியையும் பாலையையும் நயந்தரப் பாடியுள்ளார். இவர் பாடியவை நற்றிணையில் இரண்டும், பரிபாடலில் ஒன்றும், புறத்திலொன்றுமாக நாலு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பெருவாயினன்** — முள்ளியாசிரியர் தந்தை; இவர்க்குப் பெருவாயின் முள்ளியார் என

வும் பெயர். ஆசார்க்கோவை தமிழிலியற் றியவர். இவர் சைவர்.

**பெருவியன் மதம்** — (Peruvian) இவர்கள் மான் கோகூபர் என்னும் தர்மசாஸ்திரி காலத்தில் சூரியசந்திரர்களைத் தேவதைகளாகப் பூசித்திருந்தனர். சூரியன் சிருஷ்டி கர்த்தா. இவன் இடி மின்னல்களைத் தூதர்களாக நியமித்துக்கொண்டு இருப்பன். துஷ்டர்களைச் சிக்ஷித்துக் கொண்டிருப்பன். ஹான்கான் என்னும் தேவன் சிரஞ்ஜீவி தருபவன். அபஜிதான் என்னும் தேவன் கிருபை செய்பவன். சூரியன் தேவி சந்திரன் என்பர். குருக்கள்மார் தேவாலயங்களில் வசிப்பர். இம்மதத்தவர் ஆடுகளையும் பசுக்களையும் தேவர்களுக்குப் பலியிடுவர். ஒவ்வொரு காலங்களில் நரபலியுமிடுவர். கொஞ்சமாகப் பாபஞ்செய்தவர்கள் தங்கள் விரல்களை யாயினும் காதுகளை யேனும் மற்ற அவயவங்களில் எதேனும் ஒன்றை அறுத்து இரத்தத்தை ஒழுகவிடுவர். இவர்களில் சகோதரர் தமக்கைப் பெண்களை விவாகஞ் செய்துகொள்வர். இவர்கள் சித்தாந்தத்தில் மறுஜென்மமில்லை.

**பேலஸ்தனன்**—சூ. பாரியாத்திரன் குமரன்.

**பேலி**—ரைவதன் என்னும் மனுப்புத்திரன்.

**பேலிபகன்** — ஓர் சூத்திரன். சுசர்மாவைக் கொன்று இராச்சியத்தைக் கிரகித்தவன். இவன் தமயன் கிருஷ்ணன்.

**பேற்றன் சாம்பான்** — உமாபதி சிவாசாரியரைக் காண்க.

**பேனின் அண்டாராமதம்** — இத்தேசத்தவர் துஷ்ட தேவதைகளை ஆராதித்துக்கொண்டு அத்தேவதைக்கு நரபலி முதலிய பலிசெலுத்துவர், ஆயினும் சிருட்டிகர்த்தாவான தேவன் ஒருவன் உளன் என்றும் அவன் பல விதத்திலும் சத்கார்யஞ்செய்பவன் ஆதலால் அவன் கெடுதி செய்யானாதல் பற்றி அவனை வணங்கார். துஷ்கார்யஞ் செய்யும் தேவதையை மாத்திரம் வணங்குவர். பாவநிவாரணத்தின் பொருட்டுப் பிரார்த்தனை செய்வர். இச்சாதியர்களில் பெண்களும் பிள்ளைகளும் தேவர்களை ஆராதித்தல் இல்லை. யுத்தத்தில் இறந்தவர் மோக்ஷமடைவர் என்பது இவர்கள் சித்தாந்தமாதலால் பிரேதங்களின் கைகளைப் பின்புறங்கட்டி நிற்கச் செய்து ஆயுதங்களாலும் பாணங்களாலும் அலங்கரித்துப் புதைப்பர். இராஜாக்களும் தனவான்களும் செத்தால் அவர்க்குப் பணிவிடைசெய்தற்பொருட்டு அவருடன் நாலைந்து பெயரைச் சேர்த்துச் சமாதிசெய்வர்.

## பே

**பேகன்**—கடையெழுவள்ளல்களில் ஒருவன் ஆவியர் குடியிற் பிறந்தவன். மலைநாடன். மயில் குளிர்ந்து கூவியதென்று ஆடையளித்தவன். கபிலபரணர்க்கு உபகரித்தவன். இவன் மனைவி கண்ணகி. இவளை வேறொருத்தி காரணமாகத் துறந்தவன். இவனைப் பாடினோர், கபிலர், பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார். இவன் நல்லூர்க்கதிபன். இவனது நாடு பழனி மலைக்கருகிலிருந்த நாடு. (புற.நா.)

**பேடு** — 1. இது வாணாசுரன் நகரத்திருந்த தன் மகனாகிய அநிருத்தனைச் சிறைமீட்டு ஆண் திரிந்த பெண்கோலத்துடன் காமன் ஆடிய கூத்து.

2. இது ஆண்பேடு பெண்பேடு என, இருவகைத்து. அவற்றுள் ஆண்பேடாவது ஆண்மைத் தன்மையின்றிரிதல் அதாவது, விகாரமும் வீரியமும் நகரும் பெற்றியும் பத்தியும் பிறவும் மின்றாதலும் பெண்மைக்கோலமாகிய முலைமுதலிய பெண்ணுறுப்புகள் பலவு முளவாதல். பெண்பேடாவது பெண்ணுறுப்புகள் பல பெற்றும் ஆண்தன்மையை அவாவியிருத்தல்; இதனை, "சுரியற்றாடி மருள்படு பூங்குழல், பவளச் செவ்வாய் தவள வொண்ணகை, ஒள்ளரி நெடுங்கண் வெள்ளி வெண்டோட்டுச், கருங்கொடிப் புருவத்து மருங்குவளை பிறைநுதல், காந்தளஞ் செங்கையேந்திள வனமுலை, அகன்ற வல்குலந்நுண் மருங்குல் இகந்த வட்டுடை வெழுதுவரிக் கோலத்து, வாணன் பேரூர் மறுகிடை நடந்து, நீணில மளந்தோன் மகன் முன்னாடிய, பேடிக் கோலத்துப் பேடுகாண் குநரும்." என்பதால் ஆண்பேடாவதறிக. பேடியினிலக்கணமாவது, நச்சுப் பேசுதல், நல்லிசையோர்தல், அச்சமாற வாண் பெண்ணுதல், ஒரு கையை வீசி நடத்தல், தலையில் ஒரு கை வைத்தல், எதிர்ந்தோரைக் கண்டு விலகல், எதிர்ந்தோர்மேற் செல்லுதல், பார்வை வேறுபடுதல், பிறருக்கு நடுநடுங்கிச் சுழன்று திரிதல், பிறரைக்கண்டு நகைத்தல், நாணுதல், திரிதல், பல நாடகஞ் செய்

தல், பக்கம் பார்த்தல், பதுங்கித்திரிதல், காரணமில்லாமற் பலவற்றைக் கோபங் கொண்டுபேசல், தன்முலையைத் தானே வருத்தல், அசக்கல், அழுதல், சோர்ந்தரு வருத்தல், குறுக்கிக்கூட்டிப் பார்த்தல், இடையில் ஒரு கைவைத்தல், அதனைவாங் கல், இரங்கிப்பேசல், எல்லென்று பாடுதல் முதலிய.

**பேணப்ன்** — வானப்பிரத்த உட்பகுப்பி னன். தானே மரத்தினின்று விழும் பழ த்தால் ஜீவிப்பவன்.

**பேதம்** — ௩. சுகதபேதம், சுசாதிபேதம், விசாதிபேதம். அவையாவன:— மரத்திற் கிலே, அரும்பு, பூ, காய் முதலிய சுகத பேதம். மரத்திற்கு மறுமரம் சுசாதி பேதம். மரத்திற்குக்கல், விசாதிபேதம்.

**பேதவாதசைவன்**—உயிர் மெய்ஞ்ஞானஞ் சேர்ந்தபோதே மலம் நீங்கப் பெறுமென் றும், இதுவே முத்தியென்றுங் கூறு வோன்.

**பேயனூர்** — ஐங்குறுநூற்றில் முல்லைத்திணை பாடிய புலவர். கடைச்சங்க மருவிய புல வர். (ஐங்குறுநூறு).

**பேயார்** — காரைக்காலம் மையார்க்குப் பேய் வடிவுவுற்ற பின் வந்த பெயர்,

**பேயாழ்வார்**—இவர் நந்தகாமிசமாய்த் துவா பரயுகத்தில் எட்டுலக்ஷத்து ஆறுயிரத்து இருநூற்றுத் தொண்ணூற்றொராவதான சித்தார்த்தி வருஷம் ஐப்பசிமீ தசமி சதய நக்ஷத்திரம் வியாழக்கிழமை திருமயிலைக் கேசவப் பெருமாள் சந்நிதிக்கு அடுத்த பொய்கையில் மலர்ந்த அல்லிப்புஷ்பத்தில் அவதரித்தவர். இவர் நந்தகாமிசம். இவர் நெருக்குண்டதனுல் பெருமாளை ஞானக் கண்ணாற்கண்டு 'திருக்கண்டேன்' என்கிற மூன்றாந்திரு அந்தாதி நூறுபாடலும் திரு வாய்மலர்ந்தனர். இவரது மற்ற சரிதை யைப் பொய்கையாரைக் காண்க. (குரு பரம்பரை).

**பேய்** — இது ஒரு பெண்ணுரு அமைந்தது. புஷ்கரக்ஷேத்ரத்தி லுள்ளது. ஒரு பிரா மண பெண்ணை யணைந்து நீ பாவியாகை யால் அச்சுதநாமஸ்மரணை செய்யென்று கூறியது. பார்ப்பினி பயந்து தன் புத்தி ரர்களுடன் அரிபஜனை செய்து புஷ்கர க்ஷேத்ர மடைந்தாள். பிசாசம் இவளை யடைந்து என்னைச் சுத்தமாக்குக எனக் கேட்டது. பார்ப்பினி அரிநாமஸ்மரணை யுடன் நீர்த்தத்தை அப் பிசாசத்தின்மீது புரோக்ஷித்தாள், அது பேயுருநீங்கிச் சுத்த மடைந்தது. (பார சாங்.)

**பேய்கள்** — 1. சிருட்டிசெய்ய அறியாமல் பிரமன் அழுத கண்ணீரில் உதித்த தேவ வகுப்பினர். இப்பேய் வகுப்பினர்க்கு உண வு, "நீறிடா ரரனை நினைத்திடா ரீசனிம லவஞ்செழுத்தினை நாவாற், கூறிடார் சிவ னைப் பூசனை புரியா ருண்டிடுங் கோது சேருணவு, மாறிடா விதியிற் சிராத்தமே யாதி மாகடன் செய்திடாரென்று, மூறிடா வெந்தீச் சினத்தினர் முடையூனருந்துவோ ருணவும்." "புனிதவாமயத்தின் மெழுகி டாவகத்திற் பொங்கிருண் மணிவிளக் கேற்ரு, மனையினிலுணவும் பூப்புற மடந் தை வரிவிழி கண்டிடுமுணவும், பனி கொள் பூங்கூந்தற் பரத்தையர் தம்பாலுண் டிடும் பதகர்த முணவும், கனியுமா கருத் தினிவேதனஞ் செய்யாதுண்டிடுங் கயவர்த முணவும்." "அதிதியர் பசிப்ப வுண்பவரு ணவு மையமீந் துண்டிடாருணவும், பதி தர் பாலுணவும் பன்றினுய் முதலபயின் மனை யுணவுநீர் படியா, மதிநுதன் மாதர் சமைத்திடுமுண்வும், வனப்பழி மட்கலத் துணவும், முதிர்மயி ரணைந்த வுணவுமே யாங்களுண்டிடு முண்டிமற் றூரவோய்." என்பதாலறிக. இவை அகாலமிர்த்தியு அடைந்து காலம் வருந்துணையும் அந்தராத் மாவாய் இருக்கும் பைசாச வகுப்பு.

3. ஒரு தேவவகுப் பினர்.

**பேய்க்காஞ்சி** — பிணம் மிக்க போர்க்களத் திலே பட்டார்க்குப் பேய் மிகவும் அச்ச முறுத்தியது. (பு. வெ.)

**பேய்க்காரம்** — இது நாடக விகற்பத்தொ ன்று. இது தலைமக்கள் தேவுகாந்தருவ பைசாசராதி பதினறுவராய் பெண்ணு டைத்தாய் முன்பின் மூன்றினும் ஒன்றின் பொருள் பெறுதலும் அங்கமொன்ருதலுங் கண்ட மொன்ருதலுமாம்.

**பேய்க்குரவை** — அரசன் செலுத்தும் கொ டுமை மிக்க மணியையுடைய தேரின் பின் பும் முன்பும் பேய் ஆடியது. (பு. வெ.)

**பேய்நிலை** — போரைச் செய்யும் வேலினை யுடையான் திறப்பாட்டை நோக்கி நீங் குதலொழிந்து பேய் பரிகரித்தது. (பு.வெ.)

**பேய்மகள் இளவேயினி** — இவர் நற்றமி ழுணர்ந்த செல்வ ; தனுய்ச் சிறந்த பா லைபாடிய பெருங்கடுங்கோ எனுஞ் சேரமா னைப் பாடியவர். இவர் பாடியது "அரி

மயிர்த்திரள் முன்கை" எனும் புறப்பாட்டாகும். இச்செய்யுள் வஞ்சிவேந்தனாகிய சேரன் வலியோடெதிர்ந்தவருடைய புறக்கொடையைப் பெற்றான். அப்புறக்கொடையைப் பெற்ற வலிய வேந்தனது வீரத்தைப் பாடிய பாடினியும்பொன்னாற்செய்த இழை பலபெற்றாள். அவளுக்கேற்பப் பாடவல்லபாணனும் வெள்ளினாராற் றொடுக்கப்பட்ட தாமரைப்பூப் பெற்றான். யானொன்றும் பெறவில்லை யென்பதைத் தெரிவிக்கும் இவர் தம் மந்திர வலியாற் பேயைத் தம் வயமாக்க வல்லவராதலின் பெற்ற பெயரா யிருக்கலாம். (புற-நா).

**பேரருளாளனப்பை**—பேரருளாள ஜீயரால் தோல்வி செய்யப்பட்டு அவரை ஆசரயித்த வித்துவான்.

**பேரருளாளன்** — திருக்காஞ்சியில் எழுந்தருளியிருக்கும் பெருமாள்.

**பேரருளாளஜீயர்** — பேரருளாளரை யெனத் தேசிகரிடம் ஆச்ரயித்தவர். பின்தேசிகரிடம் சந்நியாசமடைந்து தேசிகரிடம் வாதத்திற்கு வந்தவர்களைச் ஜெயித்துத் தேசிகரால் பிரமதந்திர சுவதந்திரர் எனப் பெயர்பெற்றுப் பலரை ஸ்ரீ வைஷ்ணவராக்கித் திருமலையில் பெருமாள் நியமனப்படி கைங்கர்யங்களைச் செய்து கொண்டிருந்து திருநாட்டிற்கு எழுந்தருளினவர்.

**பேரையம்** — இது அரையநகரத்தின் ஒரு பாகமாக உள்ளது. (புறநானூறு.)

**பேரளிப்பாக்கம் நயினர்** — நயினாராசாரியர் திருவடிசம்பந்தி.

**பேராசிரியர்** — ஒரு உரையாசிரியர். இவரது நாடு முதலிய புலப்படவில்லை. ஆயினும் சிலர் மதுரை யென்பர். ஆதலால் இவரை மதுரையாசிரியர் என்றுங் கூறுப. பழைய உரையாசிரியர்களில் ஒருவர் திருச்சிற்றம்பலக் கோவையார்க்கும் குறுந்தொகையில் (கூஅ0) செய்யுட்களுக்கும், தொல்காப்பியத்திற்கும் உரைசெய்திருக்கின்றனர். இவரை நச்சினார்க்கினியர், உரைச் சிறப்புப்பாயிரத்தில் "நல்லறிவுடையதொல் பேராசான்" என்றெடுத்துக் கூறியதனா னிவர் அவர்காலத்திற்கு முந்தியவர் எனத் தோற்றுகிறது. இவர் காலம் இருக்கை முதலிய ஒன்றும் தெரியவில்லை. இப்பெயர் கொண்ட மற்றொருவர் ஒட்டக்கூத்தர் காலத்திருந்ததாகத் தெரிகிறது. அவர் இவரின் வேறு.

**பேராண்முல்லை** — மனம்விரும்பச் சின மன்னன் போர்களத்தைக் கொண்ட மிகுதியைச் சொல்லியது.

**பேராண்வஞ்சி** — 1. உறவல்லாதார் பொரும் செருவைத் தொலைத்த தலைமையையுடைய வீரர்கட்குப் பெரிதுங் கொடுத்தது. (புறவெண்பா.)

2. பெறுதற்கரிய பொருளைப் பகைவர் கொடுப்பத் தணிந்த கோபத்தோடுபேரணிகலங்களையுடைய மன்னன் மீண்டு போதலும் அத்துறையாம். (புறவெண்பா.)

**பேராலவாயர்** — இவர் மதுரைப் பேராலவாயரெனவுங் கூறப்படுவர். சிவபிரான் நக்கீரரோடு வாதுதொடுக்க வேண்டி ஒரு புலவராக வந்தபொழுது நம்பெயர் யாதென்றார்க்கு யாம் "பேராலவாயர்" என்னும் பெயருடையோமென்று கூறியதாகப் பழைய திருவிளையாடல் கூறுநிற்கும். இவர் மதுரையையும், அதனையாளும் பாண்டியன் செழியனையும், அவனது கொற்கை நகரையும், வையை யாற்றையும் சிறப்பித்துள்ளார். இவர் எல்லாத் திணையிலும் பயின்றுளராதலின் அவ்வவற்றைப் புனைந்து பாடியுள்ளார். ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் காலத்தினர். அவன் இறந்ததாக அவன் மனைவி பெருங்கோப்பெண்டு தீப்பாயப் போதலும், இவர் அதனைக்கண்டு பரிந்து ஆற்றாராய் வருந்திப் பாடியது மனத்தை நெகிழ்விக்கும். வெட்சித்திணையில் உண்டாட்டுக்கு இவர் கூறிய பாட்டு ஆராயத்தக்கது. இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும், அகத்தில் இரண்டும், புறத்தில் இரண்டுமாக ஆறுபாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பேராவூர்ப் பிரபு** — அரசனால் துரத்தப்பட்ட நந்தன் சாம்பானென்னும் புலையனுடன் உண்டு அவனைக் காத்தவர். தொண்டைநாட்டுப் பேராவூரில் இருந்த பிரபு. வேளாளர்.

**பேராறு** — சேரநாட்டுள்ள ஆறு. (சிலப்பதிகாரம்.)

**பேரிற்கிழத்தி** — கோவலன் தாய். கோவலனிறந்த செய்தி மாடலனாலறிந்து உயிர் துறந்தவள்.

**பேரிசாத்தனூர்** — இவர் வடவண்ணக்கன் பேரிசாத்தனெனவும், வடம்வண்ணக்கன் பேரிசாத்தனெனவுங் கூறப்படுவார். வடக்கிலிருந்து வந்த நாணயசோதகன் (நோட்டகாரன்) பேரிசாத்தனென்பது. பாண்டி

யன் இலவந்திகைத்துஞ்சிய நன்மாறன் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேர லிரும்பொறை சோழன் இராயசூயம் வேட்ட பெருநற்கிள்ளி இவர்கள் காலத்தினர் இச் சேரனும், சோழனும் போர் செய்தபொழுது சோழனுக்குத் துணையாய் நின்ற தேர்வண்மலையனைப் பாடி உவப்பித்தார். மேற்கூறிய பாண்டியன் நன்மாறனைப் பரிசில்கேட்டு அவன் கொடானாக இவர் வருந்திக்கூறிய பாடல் ஆராயத்தக்கது. நெய்தலையும், குறிஞ்சியையும், சிறுபான்மை பாலையையும் புனைந்து பாடியுள்ளார். இவர் கூறிய குறைநயப்பு நுண்ணுணர்விஞரை மகிழ்விக்கும். இவர் பாடியனவாக நற்றிணையில் எட்டு பாடல்களும், குறுந்தொகையில் நாலும், அகத்தில் ஐந்தும், புறத்தில் இரண்டுமாகப் பத்தொன்பது பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**பேரிசாத்தன்**—பேரிசாத்தனாரைக் காண்க. (குறு உஎஅ)

**பேரிசெட்டி** — வைசியர் வகுப்பிற் சேர்ந்தவர்கள். இவர்கள் ஒருகாலத்து அரசனால் தகாத இடத்தில் மணங்கொள்ளக் கட்டளையிடப்பட்டு அதற் குடம்படாமல் பெதரி (பயந்து) காட்டைவிட்டு ஒடியதால் இப்பெயர் அடைந்தனர். பெருமையென்பது பேரியென மருவி உயர்ந்தார் என நின்றது என்பர். இவர்கள் திருத்தணியார், அச்சிறுபாக்கத்தார், தெலுங்கு, பாக்கம், முசல்பாக்கம் முதலியவாகப் பகுக்கப்படுவர். (தர்ஸ்டன்.)

**பேருசங்கன்** — சசிபிந்து பாட்டன்.

**பேரெயின் முறுவலார்** — நம்பிநெடுஞ்செழியனைப் பாடியவர். (புற நா.) (குறு-தொ).

**பேறு** — (கக) புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள்,பொன், நெல், நல்லூழ்,நுகர்ச்சி அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

**பேறையூரான்** — இவர் ஒரு வேளாளர். வித்துவானுக்கு நல்ல உணவாதிகள் கொடுத்துத் தாம உப்பில்லாக்கூழுண்டு வெளிவந்தபோது வித்வான் நீர் நல்லுணவு உண்டீரெனக் கேட்க வயிற்றைப் பீறிக் கூழைக் காட்டியவர்.

**பேனபர்** — நுரையைக் குடித் துயிர்வாழுந் தேவகணங்கள். (பார-சபா.)

**பேனபன்** — பார்க்கவம்ச சுமித்திராபரன் என்னும் பெயருள்ள ஒரு ரிஷி. திரிசிகர மலையில் வசிப்பவன். (பா அநு.)

**பேன்** — இது அழுக்காலும் வியர்வையாலும் தலையிலும் சீலையிலுமுண்டாம் பூச்சி வகை. இதற்கு பற்களும் உதடுகளுமுண்டு. இவற்றால் கடித்து இரத்தத்தை யுறிஞ்சும். தலைப்பேனின் முட்டையை ஈர் என்பர். சிறு பேனை நமடு என்பர். சீலைப்பேன் இவ்வினத்தது.

## பை

**பைங்கர்** — சாதுசாரணர் மாணக்கர்.

**பைங்களசிவர்** — சைவபத்ததி செய்த சிவாசாரியருள் ஒருவர்.

**பைசன்** — இது அமெரிக்கா நாட்டுக் காட்டெருமை.

**பைசாசர்** — ஒருவகைத் தேவ சாதியர். பிரமனால் ஆச்சத்தினால் படைக்கப்பட்டவர். வாயுப்போல் உருவுடையவர்.

**பைசாசி** — பிரார்க்ருத பேதம். இது பிசாச தேசத்தவரால் வழங்கப்பட்ட பாஷை. இது பைசாசி, சூசிகாபைசாசி எனவும், வழங்கும். பாஹ்லிக, கேகய, நேபாளதேசங்களைப் பிசாச தேசமென்பர்.

**பைசாநகரத்துச்சாய்ந்தகோபுரம்**—பைசா என்பது ஐரோப்பாவிலுள்ள இத்தாலிய தேசத்துப் புராதன நகரங்களுள் ஒன்று. இது, அங்குள்ள விசித்ரமான சாய்ந்த கோபுரத்தினால் பெயர் பெற்றது. இந்நகரத்துள்ள கோவிலுக்கு மணி கட்டும்படி இக்கோபுரம் கட்டப்பட்டது. இது (கி. பி. 1150) வருஷத்தில் ஜர்மானிய சிற்ப சாஸ்திரியால் கட்டப்பட்டது. இது, முழுதும் சலவைக் கற்களால் செய்யப்பட்டு அலங்காரமுள்ள கம்பங்க ளமைந்ததாய் வட்டமான (8) நிலைகளுடன் அடி பருத்து நுனிசிறுத்து உச்சியில் தளம் போடப்பட்டு (188) அடி உயரமுள்ளதாயிருக்கிறது. உச்சியிலிருந்து ஏதாவது ஒன்றைக்கீழே விட்டால் அது அடிவாரத்திற்கு (15) அடி தூரத்திற்கு அப்பால் விழும்படியான அவ்வளவு சாய்ந்திருக்கிறது.

**பைப்பிலாயம்** — பிப்பல முனிவரியற்றிய வேதசாகை.

**பையன்மகருஷிகோத்ரன்** — காவிரியைப் பருத்தியால் அணைத்துக் கீர்த்தி பெற்ற வைசியகுல முதல்வன்.

**பைரவர்** — தக்ஷன், விஷ்ணு,பிரமாதிகளுக்கு அகங்காரம் மேலிட்டகாலத்து அவர்களைச் சிவாஞ்ஞையால் சிக்ஷித்த அநுக்கிர

கித்த சிவாவசரம். இவருக்கு வேத உருவமாகிய் நாய் வாகனம். இத்திருநாமத்து ப, ர, வ, சிருட்டியாதி முத்தொழில்களை யுணர்த்துவது.

**பைரவருஷி** — ஆங்கீரஸ ருஷி கோத்திரர். இவர் கழுத்தில் பரிச்சித்துப் பாம்பைச் சுற்றினன். இவருக்கு மறுபெயர் சமீக ருஷி

**பைரவன்** — 1. கனக விசயருக்கு நண்பன். (சில).

2 ஆரிய அரசர்களில் ஒருவன்.

**பைரவி** — சத்தி.

**பைரவிபீடம்** — சத்திபீடத்தொன்று.

**பைராகி** — வடநாட்டு பிச்சை வாங்கியுண்டு தலயாத்திரை செய்வோன்.

**பைலர்** — வியாசர் மாணாக்கர்; தருமர்செய்த இராஜசூயத்தில் ஹோதாவாக இருந்தவர்.

## போ

**போதுட்டேழினி** — அதியமான் மகன்.

**போங்குசநி**—சநி இரண்டாமுறை வருவது.

**போசை** — வீரவிரதன் தேவி.

**போடாவண்ணான்** — பள்ளர் பறையர்களுக்குத் துணி வெளுக்கும் வண்ணான்.

**போதியில்** — பாண்டி நாட்டில் உள்ளமலை. தேவர் முனிவர்க்குப் பொதுவாய் இருத்தலின் இப்பெயர் பெற்றது. இதன் வளங்காணவந்த காயசண்டிகை விருச்சிகன் சாபத்தால் யானைத்தீ நோய்டைந்தாள். அகத்தியர் இருக்கை. (மணிமேகலை)

**போதினி** — பழனிக்குப் பழைய பெயர், இதனை ஆவியர் ஆண்ட காரணத்தால் இதனை ஆவினன்குடி என வழங்குவர். வள்ளலாகிய பெரும்பேகன் இவ்வாவியர் குடியில் பிறந்தவன்.

**போதுகயத்துக்கீரந்தை** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் இயற் பெயர் கீரந்தை. இவரது ஊர் பொதுக்கயமென விருக்கலாம்.குறு-௬௩௭.

**போதுப்பாயிரம்** — நூலினது வரலாறும், ஆசிரியனது வரலாறும், ஆசிரியன்மாணாக்கர்க்குப் பாடஞ் சொல்லுதலின் வரலாறும், மாணாக்கன் வரலாறும், மாணாக்கன் பாடங் கேட்டலின் வரலாறும் ஆகிய ஐந்தினையுங் கூறுவது.

**போதுமையணி** — அஃதாவது, ஒப்புமையாலிரண்டு பொருள்களுக்கு விசேஷந் தோன்றாமையாம். இதனை வட நூலார் சாமானியாலங்காரமென்பர்.

**போதும்பில்கிழார்** — இஃது ஊர் பற்றி வந்த பெயர். பொதும்பில் பாண்டி நாட்டிலுள்ள தோரூர்; மதுரைத் தாலுக்காவிலுள்ளது; இப்பொழுது பொதும்பு என வழங்குகிறது. இவர் இயற்பெயர் புலப்படவில்லை. இவர் வேளாளர். இவர் கூறிய உள்ளுறை யாவரும் வியக்கத் தக்கது; இவர் குறிஞ்சியைச் சிறப்பித்துள்ளார். இவர் பாடியது நற் (௫எம்) பாட்டு.

**போதும்பில் கீழார்மகனார் வெண்கண்ணியார்** — இவர் மேற் கூறிய பொதும்பில் கிழாரின் புதல்வர் வெண்கண்ணி யென்னும் இயற்பெயருடையவர்,வெண்கண்ணி யென்றதனானே இவர் பெண்பாலார் போலுமெனவுமாம் (கிழார் மகனார்)(கிழார் மகன்) என்றிருத்தலானே பெண்பாலாகக் கூற வழியில்லை. இவர் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைச் சிறப்பித்துப் பாடியிருத்தலானே அவ்வரசன் காலத்தினவராவர். வெண்கண்ணன் என்றொருவர் காணப்படுகிறார். அவர் தாமோ இவர் என்றையப்படவுமாம். அவரும் பாண்டியரைப் புகழ்ந்து பாடியவரே இவ்வெண் கண்ணியார். நெய்தலையும் பாலையையும் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும் அகத்தில் ஒன்றுமாக மூன்று பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**போதும் பிற்புவலாளனங் கண்ணியார்**— கடைச்சங்கமருவிய புலவர். (அகநானூறு.)

**போத்தியார்** — இவர் கோப்பெருஞ்சோழன் உயிர்த் தோழர். இவரது நகரம் உறையூர். இச்சோழன் வடக்கிருத்தற்குச் செல்லும்போது அவனுடன் செல்ல அவன் நீர் புதல்வனைப் பெற்றபின் வருகவென உடன்பட்டு மீண்டு புதல்வனைப்பெற்று வடநாடுசென்று சோழன் நடுகல்கண்டு வருந்தி 'எனக்கு இடந்தா' என்று கேட்டு அவன் இடங்கொடுக்க அவனைப் பாடித்தாமும் உயிர்நீத்தனர். இவர் பிசிராந்தையாரையும் பாடினர் என்பர் (புற நா)

**போந்தைப்பசலையார்** — கடைச்சங்கத்துப் புலவர். (அகநானூறு.)

**போப்பண்ணகாங்கேயர் கோன்** — அடியார்க்கு நல்லார் என்னும் கவியைச் சிலப்பதிகாரத்திற்கு உரைசெய்ய ஏவின பிரபு.

**பொம்மி** — மதுரைவீரனைக் காண்க.

**பொம்மையர்** —1. இவர் பாவூரில் இருந்த சிவனடியவர். இவர் கல்லினை இடபமாக்கி மேயவிட்டுச் சோளத்தைச் சிவலிங்க உருவமாக்கித் தம்மை எதிர்த்து வந்த அரசனது யானையால் சிவபூஜைக்கு எடுத்த புட்பம் கெடாத விதம் யானையைச் சினத்தாற்கொன்று அரசன் வேண்டுகோளால் அதை உயிர்ப்பித்தவர். இவர் வீரசைவர்.

2. சோவூரில் இருந்த வீர சைவர். சமணரிடம் வாதிட அவர்கள் பிரத்தியக்ஷப் பிரமாணங் கேட்க அடியவர் என்ன வேண்டுமென்னச் சமணர்கள் இதோ எதிரில் இருக்கும் ஆலமரத்தைச் சுட்டெரிக்கிறோம் நீர் தளிர்க்கச் செய்க என அவ்வண்ணஞ் செய்து சமணர்களை அழித்த சிவனடியவர். நெல் விதைக்காமலே அதிகம் விளைவித்தவர். இவர் பிராட்டி முலைப்பாலருள வளர்ந்தவர். (அரிசமயதீபம்).

**பொய்கைக் கதத்தயானைச் சூழாசிரியர்** — இவர் ஓர் தமிழாசிரியர். இவர் செய்யுள் மூன்று யாப்பருங்கல விருத்தியுள் ஒற்றுப் பெயர்களுக்கு உதாரணம் எடுத்துக் காட்டப்பட்டன.

**பொய்கைத்தலையானைச்சூழாசிரியர்**— இவர் யாப்பருங்கல விருத்தியுள் கூறப்பட்ட தொல்லாசிரியர்களில் ஒருவர்.

**பொய்கையார்**—1. இஃது ஊர்பற்றி வந்த பெயர்; பொய்கை - ஒரூர். இவர் சேரன் கணைக்காலிரும்பொறையின் அவைக்களத்தில் சிறப்புற வீற்றிருந்த புலவர் பெருமான். சேரன் கணைக்கா லிரும்பொறைக்கும் சோழன் செங்கண (கோச்செங்கட் சோழன்) னுக்கும் பகைமை மேலிட்டதனால் இருவரும் வெண்ணிப் பறந்தலை (கோயில் வெண்ணி வெளி)யில் பெரும் போர் செய்தார்கள். அப்போரிலே சேரமான் தோற்கச் சோழன் வென்று அச்சேரனைப் பிடித்துக் குடவாயிற் கோட்டத்திற் சிறையிட்டனன். இதை யறிந்த பொய்கையார் சோழனது வெற்றியைச் சிறப்பித்துக் களவழி நாற்பது என்னும் ஒரு நூலியற்றிச் சோழனவைக்களத்துப் பிரசங்கம் பண்ணித் தம் அரசனை மீட்டுக் கொண்டார். இதனைக் "களவழிக் கவிதை பொய்கை யுரைசெய்ய உதியன், கால் வழித் தளையை வெட்டி யரசிட்ட பரிசும்" (கலிங்கத்துப்பரணி) என்பதனாலறிக. சோன் கோக்கோதைமார்பனைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். புறம் சஅ "கானலந் தொண்டி யஃதெம்மூ" ரென்றதனால் இவர் மேலைக்கடற் கரையிலுள்ள தொண்டி நகருக்கணித்தாகிய வூரினரென்றூகிக்கப் படுகின்றது. மற்றும் மூவனென்பானைப் போரில் வென்று அவனது பல்லைப் பிடுங்கித் தொண்டிக் கோட்டை வாயிற்கதவிலே தைத்த சேரலன் கணைக் காலிரும்பொறை யென அவனைச் சிறப்பித்துக் கூறுகின்றனர். "கிடங்கில்"என்னுமூரைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். "ஆழியிழைப்ப" என்ற பாட்டினால் தொண்டைமான் இளந்திரையனைப் பாராட்டிக்கூறி யுள்ளார். பாலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார் யாப்பருங்கல விருத்தியுரைக்காரர் நாலாயிரப்பிரபந்தத்து இயற்பா முதற்றிருவந்தாதியில் வரும் பாடல்களுள் "பாலன்றனதுருவாய்." (சக) 'எரிநினிரண்டடியும்' (ருக) என்னும் வெண்பாக்களை எடுத்துக் காட்டி "இப்பொய்கையார் வாக்கினுள்" என்று கூறியவதனால் இவரே வைஷ்ணவர்கள் துவாபர யுகத்திற் பிறந்தவராகக் கூறும் பொய்கை யாழ்வாரென்றறியப்படும். இவர் பாடியனவாக நற்றிணையில் (கஅ)ம் பாடலொன்றும், புறத்தில் இரண்டும், யாப்பருங்கலவிருத்தியில் மேற்கோளாகக் காட்டப்படுஞ் சில பாடல்களும், வைஷ்ணவரது நாலாயிரப் பிரபந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ள இயற்பா முதற்றிருவந்தாதியும் களவழி நாற்பது என்னும் நூலும் கிடைத்திருக்கின்றன.

2. சோழன் செங்கணனுஞ் சேரமான் கணைக்காலிரும் பொறையும் போர்ப்புறத்துப் பொருதுழிச் சேரமான் கணைக்காலிரும் பொறையைப் பற்றிச் சோழன் செங்கணன் சிறைவைத்துழி இவர் களவழி (சு0) பாடி வீடுகொண்டனர். இவர் ஊர் தொண்டி. இவர் கோக்கோதை மார்பனையும் பாடினர். (புற. நா.)

**பொய்கையாழ்வார்** — இவர் துவாபர யுகத்தில் (அ, லக்ஷத்து கூஉகக) ஆவதான சித்தார்த்திவருஷம் ஐப்பசிமாசம் சுக்லாஷ்டமி திருவோணம் செவ்வாய்க் கிழமையில் திருக்காஞ்சியில் சொன்ன வண்ணஞ் செய்தான் சந்நிதியை அடுத்த தடாகத்தில் மலர்ந்த பொற்றாமரையில் அவதரித்தனர். பாஞ்சசன்னியாம்சம், இவர் திருக்குருகூருக்கு எழுந்தருளிப் பெருமாளைச் சேவித்து ஒரு பாகவதர் வீட்டு இடைக்

கழியில் சயனிக்க இருக்கையில் இவரைப் போல, இருக்க இடம் வேண்டிப் பேயாழ்வாரும் பூதத்தாழ்வாரும் வர இவர்கள் ஒருவருக்கொருவர் கலந்து சம்பாஷிக்கையில் பெருமாள் இவர்களுக்கு இடையில் சென்று ஒருவர் படுக்கவும் இருவர் இருக்கவும், மூவர் நிற்கவும் ஆன இடத்தை நெருக்க மூவரும் காரணமறிந்து பெருமாளைப் பாடினர். அவர்களுள் இவர் "வையந்தகளியா" என்றெடுத்து (௧00) செய்யுள் திருவாய் மலர்ந்தவர். இவர் (௪000) த்தில் முதல் திருவந்தாதி அருளினவர். (குருபரம்பரை).

**பொய்த்தற்குறிப்பணி** — அஃதாவது, ஒரு பொருளைப் பொய்யாக்குதற்கு மற்றொரு பொய்ப்பொருளைக் கற்பித்தலாம். இதனை வடநூலார் மித்தியாத்தியவசிதியலங்காரம் என்பர். (குவல)

**பொய்யடிமையில்லாத புலவர்** — இவர்கள் கடைச்சங்கத்தவர்களாகிய நாற்பத்தொன்பதின்மர். இவர்களுள் நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர் முதலியவர்கள் முதல்வர்கள். இவர்கள் சிவ பக்திமான்களாய்ச் சிவமூர்த்தியிடம் அன்பு பூண்டு முத்தியடைந்தவர்கள். இவர்கள் செய்த நூல்களைப் பதினொராந் திருமுறையிற் காண்க. (பெ. புராணம்.)

**பொய்யாமொழிப் புலவர்** — 1. இவர் தொண்டை நாட்டு செங்காட்டங் கோட்டத்து உறையூரிற் பிறந்தவர். இவர் வயிரபுரத்தில் தமதாசாரியரிடம் கல்விபயிலுகையில் ஆசிரியர் தமது கொல்லைக்குக் காவலிருக்கக்கூற அவ்வாறு சென்று ஆண்டிருந்த காளிகோயிற்கணிருந்த மரநிழலில் படுத்துறங்குகையில் குதிரை யொன்று கொல்லைப்பயிரை மேய்வதாகக்கனக்கண்டு விழித்துக் காளி சந்நிதியடைந்து ஆசானுக்கஞ்சிக் காளியை வேண்டக் காளியருள் செய்யக் கல்விபெற்று "வாய்த்தவயிரபுரமா காளியம்மையே, ஆய்த்த வருகாரணிவயலில் — காய்த்த, கதிரை மாளத் தின்னுங்காளிங்கனேறுங், குதிரைமாளக் கொண்டுபோ" எனக் கவிகூற அக்குதிரை மாண்டது. கண்ட அருகிருந்தோர் ஆசிரியர்க்குக்கூறக் கேட்ட ஆசிரியர் வந்து இது அரசனறியின் யாதாமோ என நடுங்குகையில் இவர் அவ்வெண்பாவினை மீண்டும் "குதிரை மீளக்கொண்டுவா"எனப் பாடக் குதிரை உயிர்பெற்றது. இதனைக் கண்கூடாகக் கண்ட ஆசிரியர் இவரை நோக்கி "பொதியிலகத்தியனுப் பொய்யாமொழியாய், சிதைவில் புலவர் சிறப்பாய்த்—துதிசெய்யச், செங்காட்டங் கோட்டத்துறையூரெனுந்தலத்தில், தங்காட்டங் கொண்டிருப்பாய்தான்." என வாழ்த்தினர். இவர்க்கு ஆசிரியரிட்ட பெயரே பெயராயது. இவர் சத்தியையே பாடும் இயல்புடையவர். இவரைக் குமாரக்கடவுள் ஒருமுறை தம்மீது கவிபாடும்படி கேட்கப் புலவர் "பெட்டையையும்பாடி முட்டையையும் பாடுவனோ' என்று மறுத்தனர். இதனால் சமயங்கண்டிருந்து கவிபெறக் காத்திருந்த குமாரக்கடவுள் புலவர் தஞ்சையையாண்ட சந்திரவாணன்மீது கோவைபாடி மீண்டு தனித்து ஒரு காட்டின் வழிவருகையில் குமாரக்கடவுள் ஒரு வேடச்சிறுவன்போல் உருக்கொண்டு புலவரை வந்து மறுத்தனர். புலவர், இன்று கள்ளனிடம் அகப்பட்டோமென்று அஞ்சி நான் புலவன் என்றார். ஆயின் உனக்கு அகத்தியரைப் போல் கவிபாடத் தெரியுமோ எனப்புலவர் ஆம் என்றனர். இதனால் புலவர் இவர் கவியருமை அறிந்தவன்போல் தோன்றுகிறது உயிர்க்கு மோசமில்லை யென்று சந்தோஷமடைந்தனர். வேட்டுக்குமாரன் என்மீது சுரம் போக்காக ஒரு கவிபாடுக எனப்புலவர் உன் பெயர் யாது என்றனர். வேட்டுக்குமாரன் பொய்யாமொழிப் புலவரைத் தம்மீது பாடக்கேட்டபோது "முட்டையையும் பாடுவனோ" என்றதற்கு ஏற்பக் குமாரக் கடவுள் என் பெயர் முட்டையென்றனர். புலவர் சுரம் போக்குத்துறையாகப் "பொன் போலுங்கள்ளிப் பொரிபறக்குங் கானலிலே, என் பேதை செல்லற்கிசைந்தனளே — மின் போலு, மானவேல் முட்டைக்குமாருய தெவ்வர்போங், கானவேன் முட்டைக்குங் காடு" எனப் பாடினர். இச் செய்யுளைக் கேட்ட, குமரன் இச்செய்யுளில் பொருட்குற்றம் இருக்கிறது அதாவது வெட்டிக் காயர்விடினும் நாட்பட்டுக்காயும் இயல்புள்ள கள்ளி வெந்து பொறியாய்ப் பறக்கும் பாலையில் பச்சையிலும் தீப்பட்டு வேகுமியல்புள்ள வேலமுள் வேகாதிருந்து காலில் தைப்பது இசையுமோ, இவ்வகை தவறுள்ள பாட்டுப் புலவர் பாடுவரோ என்று கூறி, நான்பாடுகிறேன் என்று "விழுந்த துளியந்தரத் தேவேமென்னும்,

வீழின், எழுந்த சுடர்சுடுமென்றேங்கிச்—
செழுங்கொண்டல், பெய்யாதகானகத்திற்
பெய்வளையுஞ் சென்றனளே, பொய்யா
மொழிப்பகைஞர்போல்" என்று பாடினர்.
இதைக் கேட்ட புலவர்வியப்படைந்து நிற்
கக் குமாரக்கடவுள் "பெட்டை முட்டை"
யென்று கூறியமுன்னைய நினைவுவரச்
செய்து அருள்நகை செய்துமறைந்தனர்.
புலவர் குமாரக்கடவுளை வணங்கி நீங்கிப்
பாண்டி நாடுசெல்லத் திரிசிராப்பள்ளி
யடைந்து ஆண்டிருக்கையில் சிவமூர்த்தி
இவர்பால் ஒரு புலவர் போற்றோன்றி
"கோட்டாற் கொழும்பிரசம் குத்தியத
னடுவே, பாட்டாற் பனைக்கை புகமடுக்
கும் — காட்டானை, தேனீரருந்துஞ் சிரா
மலையேசெஞ்சடைமேல், வானீர்கரந்தான்
மலை." எனத் தாம் விரும்பிய திருத்தலமீ
தென்று குறிப்பிக்கப் பொய்யா மொழி
யார் "அங்கம் புலியதளாடையைச் சாத்தி
யரவமுடன், பங்கம் புலிவைத்த பண்பர்க்
கிடம் பனைவாளெயிற்று, வெங்கட்புலியை
விட்டானையைத் தேடி விதம் விதமாய்ச்,
சிங்கமிருந்து தனித்தனி நோக்குஞ் சிரா
மலையே" என்று துதித்தனர். இவர் ஒரு
முறை திருக்கானப்பே ரென்னும் காளை
யார் கோயிற்சென்று கூத்தாள் எனுந்
தாசி வீடடைந்து அவளை ஏதேனுங் கேட்
கலாமெனச் செல்ல அவளும் அவள்
தாயும், பாட்டியும் பூட்டியும் குருடிகளாக
விருக்கக்கண்டு மனமிரங்கிக் கண்வர "கூத்
தாண் முகத்திரண்டு கூர்வேல்கள் கூத்தா
டன், மூத்தாண் முகத்தின் முழுநீலம் —
மூத்தாடன், ஆத்தாண் முகத்தி லாவிந்த
மாத்தாடன், ஆத்தாண் முகத்தி விரண்
டம்பு" என அவர்கள் அனைவரும் கண்
பெற்றுப் புலவரை யுபசரித்தனர். இச்
செயலுணர்ந்த அவ்வூர் வேசையர்கள் எழு
பதின்மர் இவரிடம் கவிபெற எண்ணிப்
பொன்தந்து வேண்டப் புலவர் அவர்களை
நோக்கி "வாசமலர் மடந்தைபோல் வார்
வண் கானப்பேர், ஈசன் தன் மக்க ளெழு
பதின்மர் — தேசத், திரவலர், மேனீட்டு
வர் கையீண் டுலகங்காக்கும், புரவலர்
மேனீட்டுவர் பொற்கால்." என்று பாடி
பலநாடுகள் சென்று, மீண்டும் திருக்கா
னப் போடைகையில் குருடு நீங்கிக் கண்
பெற்ற தாசிக ளிருக்கும் மனையடைந்து
கதவினைத்தட்ட, தாசிகள் செருக்கால்
திறவாமை கண்டு அவர்களுள் ஒருத்
தியை நோக்கி "பழைய குருடி கதவைத்
திறடி" என்றனர். அதனால் அவர்களுள்
ஒருத்திக்குக் கண் மறையப் பயந்து
கதவைத் திறந்து வேண்டி மீண்டும் கண்
பெற்றனள் என்பர். இவர் தொண்டை
நாட்டை நீங்கிப் பாண்டிநாடு சென்று
ஆண்டு அரசாண்டிருந்த வணங்காமுடிப்
பாண்டியனை வீட்டிற் காணாது அவன்
ஆலயத்தில் இருக்கக் கண்டு, "குழற்காலா
விந்தங் கூம்பக் குமுத முகை யவிழ்ப்ப,
நிழற்கால் மதியமன்றோ நின்றிருக்குல
நீயவன்றன், அழற்கால விர்சடை மீதே
யிருந்து மவ்வந்தி வண்ணன், கழற்கால்
வணங்குதியோ வணங்காமுடிக் கைதவ
னே" எனப் பாடித் தெரிவிக்கவும், பாண்
டியன் புலவரிடத்து மதிப்பிலாது அங்கு
விக்கிரக உருவாக இருக்கும் சங்கப்புலவ
ரைச் சிரக்கம்பம் கரக்கம்பம் செய்விக்க
எனப், புலவரிசைந்து "உங்களிலே யாமொ
ருவனொவ்வுவனோ வொவ்வேனோ, திங்கட்
குலனறியச் செப்புங்கள் — சங்கத்தீர், பாடு
கின்றமுத்தமிழ்க்கென்னைபந்தமிழுமொக்கு
மோ, வெடுழுதாரேமெழுவீரின்று" எனப்
பாடினர். அவ்வகை (சக)தின்மர் செய்யப்
பின்னும் பாண்டியன் அங்குப் பொற்றா
மரையில் அமிழ்ந்த சங்கப் பலகையை
மிதக்கப் பாடுக எனப் புலவர் "பூவேந்தர்
முன் போற் புரப்பா ரிலையெனினும்,
பாவேந்தருண்டென்னும் பான்மையால் —
கோவேந்தன், மாறனறிய மதுராபுரித்
தமிழோர், வீறனையே சற்றேமித" என
எக்காலத்திலோ அமிழ்ந்த சங்கப்பலகை
வெளியில் தோன்றியது இவ்வற்புதக்
காட்சிகளைக்கண்டும் பாண்டியன் புலவ
ரைச் சம்மானிக்காததால் புலவர் சினங்
கொண்டு நீங்கினர். இவற்றை மறைவில்
இருந்து கண்ட பாண்டிமாதேவி, அரச
னது அறியாமைக்கு வருந்தி மாறுவேடம்
பூண்டு புலவரது சிவிகையைச் சுமக்கப்
புலவர் அறிந்து பாண்டியன் தேவியை
வாழ்த்தி இருப்பிடம் செலுத்தினர். பின்
புலவர் சோணாடடைந்து சீனக்கன் முத
லியாரிடஞ் சேர்ந்து நட்புக்கொண்டு உயி
ரும் உடலும் போலிருக்கையில் ஒருநாள்
இரவில் முதலியாரும் புலவரும் வேடிக்
கையாகப் பேசிக்கொண்டிருந்து புலவர்
உறங்கிவிட முதலியார் அரசகாரியமாக
வெளியிற் சென்றனர். முதலியாரின்
மனைவி வீட்டின் காரியங்களை முடித்து

வழக்கம்போல் மஞ்சத்தில் உறங்குவோர் தமது நாயகரென எண்ணித் தாமும் களங்கமற்று நித்திரை செய்தனர். முதலியார் இராசகாரிய முடித்துவந்து புலவரைச் சற்று ஒதுங்கும்படி கேட்டுத்தாமும் இருவருக்கும் இடையில் நித்திரை புரிந்தனர். விடிந்து ஒருவர் பின் ஒருவராக ஒரு இடத்திலிருந்து வெளிவர ஏவலாளர் சந்தேகித்து இச்செய்தியை வெளியாக்கினர். இச்செய்தி அரசன் வரையில் அணுக அரசன் புலவரை அழைத்துக் கேட்கப் புலவர் "தேரையார் செவ்விளநீர்" என்ற செய்யுளைக் கூறினர். அரசன் இவரிடம் அப்படிப்பட்ட தீக்குறியொன்றுங் காணாமையால் சும்மா இருந்தனன். முதலியாரும் அவ்வகை பழைய நட்புடன் இருந்தனர். புலவர் சீனக்கனை "அளிகொளுந் தொடையன் அரசக்குமரன், ஒளிகொள் சீநக்கனின்று வந்திட்டசீர்ப், புளியஞ் சோறு மென்புந்தியிற் செந்தமிழ், தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே." எனப் புகழ்ந்தனர். இவ்வகை யிருக்கையில் புலவர் ஏதோ காரியமாய் வெளிசென்று மீளுகையில் முதலியார் இறந்து காட்டத்திற்குக் கொண்டுபோன செய்தியறிந்து வருந்தி அவ்விடம் சென்று அவ்விடம் தம்மைப்போல் வருந்தி நிற்கும் சோழனைப்பார்த்து "வாழிசோழ வென் வாய்மொழி கேண்மோ, ஊழி நிலவெறி மாளிகையின் வயிற், கட்டிளங்கணவன் கவின்பெறு சேக்கை, என்றறி மனைவி நெடிது துயில்கொளச், செல்லக்கிடமின் எனக்கிடந்தருகெனச், சொல்லிய நண்பன்றனிச் செல்பவனோ, நானுமேகுவன் நற்றுணையவற்கே" என்றுகூறி முதலியாரைக் கிடத்தியிருக்கும் சிதையருகு சென்று "அன்று நீசெல்லக் கிடவென்றுரையா யிழையோ,டின்று நீவானுலக மேறினாய் மன்றல் கமழ், மானோக்கும் வேல்விழியார் மாறனே கண்டியூர், சீனக்கா செல்லக்கிட" என அச்சிதையில் இருந்ததேகம் ஒதுங்க அதில் தாமும் நண்பருடன் படுத்துச் சுவர்க்கமடைந்தனர். இவர் காலம் தஞ்சைவாணன், அரசூரசன் சீனக்கன் காலம். கி பி. 16-ஆம் நூற்றாண்டென்பர்.

2. சீநக்கனுக்குப் பாடிய கவி, "திறையின் முறை கொணர்ந்து தெவ்வரெல்லாமீண்ட, இறையுமிறை கடக்கலாகா, அறை கழற்கால், போர்வேந்தர் போர்மாளப் போர்வாளுறை கழித்த, தேர் வேந்தன் றஞ்சைத்தெரு." கண்டியூர் வண்ணாத்தியை பாடிய வெண்பா, "தூசு தூசாக்கு வார்பாவை சுடர்த்தொடிக்கை ஆசிலாக் கண்டியூராரணங்கு வாசமலர்க் கண்ணங்கை கொங்கை முகங்காலுங் கடி, கமலம், கண்ணங்கை கொங்கை முகக்கால்." பாண்டியன் நீர் நல்ல புலவர் என்றபோது பாடியவெண்பா. "அறமுரைத்தானும் புலவன் முப்பாலின், திறமுரைத்தானும் புலவன், குறுமுனி தானும் புலவன் தரணி பொறுக்குமோ, யானும் புலவனெனில்." புலையன் உடல் வெடிக்கப் பாடியது. "கோதில்குல மங்கை குலோத்துங்க சாவகனென், றோதினேன் தன்னை பொறுப்பதனால் மாது, துளையாது முத்துவடந் தூக்கினாராம், விளையாடு செப்பிரண்டின்மேல்." தமிழ் நாவலர் சரிதை

**பொய்யாமொழி மங்கலம்** — இது பெருநம்பி எனும் தமிழ்ப்புலவர் இருந்த இடம். இது செங்கல்பட்டு ஜில்லா ஷை தாலுக்காவில் உள்ளது. பெருநம்பி காண்க.

**பொருச்சுநன்** — ஒரு வேடன்.

**பொருட்கருவூலத்தின் தலைவன்** — வணக்கமுடைமை, பொருளுடைமை, உலகியலறிவு, உயிரைப்போல் பொருளைக் காத்தல், ஈகையின்மை முதலிய குணங்கள் வாய்ந்தவன். (சுக் - நீ.)

**பொருண்மயக்கம்** — வேற்றுமை யுருபுமுதலிய தொக்குநின்ற இடத்து பல பொருள்பட மயங்குவது. (நன்.)

**பொருத்தங்கள்** — 1. நட்சத்திரப் பொருத்தம் — பெண் நட்சத்திர முதல் புருஷனுடைய நட்சத்திரம்வரையில் எண்ணிக் கண்ட தொகையை ௯-ல் கழித்த மிச்சம் ௨-௪-௬-௮. ஆனால் உத்தமம், ௧ ௫ ௯. ஆனால் மத்திமம், ௩-௭ ஆனால் அதமம்.

2. ஏகதினப் பொருத்தம் — ரோகணி, திருவாதிரை, பூசம், மகம், அஸ்தம், உத்திரட்டாதி, திருவோணம், ரேவதி, இவை ௮-ம் ஸ்திரீ புருஷர்களின் ஒருநாளாகில் உத்தமம்; அசுவனி, கார்த்திகை, மிருகசீரிடம், புநர்பூசம், உத்திரம், சித்திரை, அனுஷம், உத்திராடம், இவை ௮-ம், ஸ்திரீ புருஷர்களின் ஒருநாளாகில் மத்திமம்; இதில் ஸ்திரிபுருஷர்கள் நாள் ஒன்றாகி இரண்டிராசிக்குப் பங்குபட்ட நாளாகில் முதலிராசிநாள் புருஷனும் இரண்டாமிராசிநாள் பெண்ணுமாகில் பொருந்தும்,

இது மாறிவரினும் இதிற் சொல்லப்படாத நாட்களும் ஒருநாளாகிற் பொருந்தாது.

3. கணப்பொருத்தம் — பெண் நக்ஷத்திரமும் புருஷனுடைய நக்ஷத்திரமும் ஒரேகணமானாலும், பெண் மனுஷ கணமும் புருஷன் தேவகணமானாலும் உத்தமம்; பெண் தேவகணமும் புருஷன் மனுஷகணமானாலும், இராக்ஷதகணமானாலும் மத்திமம். பெண் இராக்ஷதகணமும் புருஷன் தேவகணமானாலும், பெண் மனுஷகணமும் புருஷன் இராக்ஷத கணமானாலும் அதமம்; பெண் இராக்ஷதகணமும் புருஷன் மனுஷகணமுமானால் அதமாதமம். பெண்ணினுடைய நக்ஷத்திரத்திற்கு உ-சஎன் மேற் புருஷநக்ஷத்திரம் வரினும் இருவருக்கும் அதிபதி நட்பாட்சியா யிருப்பினும் பெண் இராக்ஷத கணமானாலும் பொருந்தும்.

4. மாகேந்திரப் பொருத்தம் — பெண் நக்ஷத்திரமுதல் புருஷநக்ஷத்திரம் ச-எ-க0 கங-கசு கக-உஉ-உடு ஆனால் விவாகம் செய்யலாம்.

5. ஸ்திரீதீர்க்கப் பொருத்தம் - பெண் நக்ஷத்திரம் முதல் புருஷ நக்ஷத்திரம் கங-க்கு மேற்பட்டால் விவாகஞ் செய்யலாம்.

6. பிராணிப் பொருத்தம் - பெண்ணுக்கும் புருஷனுக்கும் ஒரு பிராணி நக்ஷத்திரமானால் உத்தமம். அதில் ஆண், ஆணாகவும், பெண், பெண்ணாகவு மிருந்தா லதிக உத்தமம். இதர பிராணி நக்ஷத்திரமாகிலும் வைரசாதி யாகாமற்போனால் விவாகஞ் செய்து கொள்ளலாம்.

7. இராசிப் பொருத்தம் - பெண்ணும் புருஷனும் ஒரு இராசியாயினும், பெண்ணிராசிக்குப் புருஷன் இராசி கூ-க்குமேற்படினும் உத்தமம். பெண்ணிராசிக்குப் புருஷன் இராசி ங-ம் ச-ம் இராசி ஆகில்மத்திமம். உ-ம் ௫-ம் கூ-ம் இராசியாகில் அதமம்.

8. இராசி அதிபதிப்பொருத்தம் - சூரியனுக்கு குருவும், சந்திரனுக்கு குருவும் புதனும், செவ்வாய்க்குப் புதனுஞ் சுக்கிரனும் நட்பு; மற்றவர்கள் சத்துரு. புதனுக்குச் சூரியனும், குருவுக்குச் செவ்வாயும், சுக்கிரனுக்குச் சூரியனும் சந்திரனும், சனிக்குச் சூரியனும் சந்திரனும் செவ்வாயும் சத்துரு, மற்றவர் மித்துரு. ஸ்திரீராசி அதிபதியும் புருஷராசி அதிபதியும் மித்துருவானாற் பொருந்தும், சத்துருவானாற் பொருந்தாது.

9. வசியப் பொருத்தம் - மேஷத்திற்குச் சிங்கமும் விருச்சிகமும், இடபத்திற்குக் கடகமும் துலாமும், மிதுனத்திற்குக் கன்னியும்; கடகத்திற்கு விருச்சிகமும் தனுவும், சிங்கத்திற்குத் துலாமும், கன்னிக்கு மிதுனமும் மீனமும், துலாத்திற்கு மகரமும், விருச்சிகத்திற்குக் கடகமும் கன்னியும், தனுவுக்கு மீனமும், மகரத்திற்கு மேடமும், கும்பமும், கும்பத்திற்கு மேடமும், மீனத்திற்கு மகரமும் வசியமாம். இப்படிப் பார்த்து ஸ்திரீயுடைய ராசிக்கு வசியமானராசி புருஷராசியாகில் உத்தமம், புருஷனுடைய ராசிக்கு வசியமான ராசி ஸ்திரீராசியாயின் மத்திமம்; இருவருடைய ராசியும் இவ்வாறு வாராதிருந்தால் வசியம் பொருந்தாது.

10. விருக்ஷப்பொருத்தம் - புருஷநக்ஷத்திரம் வயிரமரமும் பெண்ணின்நாள் பால்மரமுமாகில் பிள்ளைப்பேறுண்டாம். பெண் வயிரமரமும், புருஷன் பால்மரமுமாகில் மலடாவர். இருவரும் வயிரமாகில் பிள்ளைச் சேதமும், அர்த்தசேதமுமாம். இருவர் நக்ஷத்திரமும் பால்மரமாகில் அதிக பிள்ளைகளும் பாக்கியமு முண்டாம்.

11. ஆயுட்பொருத்தம் - பெண்ணினுடைய நக்ஷத்திரமுதல் புருஷனுடைய நக்ஷத்திரம் வரையும், எண்ணின தொகையையும், புருஷனுடைய நக்ஷத்திர முதல் பெண்ணினுடைய நக்ஷத்திரம் வரையும் எண்ணின தொகையையும், தனித்தனியே எழிற்பெருக்கி உஎ க்கீந்த சேஷம் பெண்ணினுடைய நக்ஷத்திரத்தொகை குறையில் ஆயுட்பொருத்தம் பொருந்தும்; புருஷனுடைய நக்ஷத்திரத்தொகை குறையில் பொருந்தாது.

12. பஞ்சபட்சிப்பொருத்தம் - மயிலுக்கும் கோழிக்கும் வல்லூறும் ஆந்தையும், காகத்திற்கு ஆந்தையும், வல்லூறுக்கு ஆந்தையும் மயிலும் கோழியும் பகை. இதில் சொல்லப்படாதவை யெல்லா முறவு. பெண்ணுக்கும் புருஷனுக்கும் ஒரேபக்ஷியானாலும் பகையில்லாதிருந்தாலும் பக்ஷி பொருந்தும். பகையானாற் பொருந்தாது.

13. பஞ்சபூதப் பொருத்தம் - அசுவினிமுதல் ௫-நாள் பிருதுவி. திருவாதிரைமுதல் கூ-நாள் அப்பு. உத்திரமுதல் கூ நாள் தேயு. கேட்டை முதல் ௫-நாள் வாயு. அவிட்டமுதல் ௫ நாள் ஆகாயமென் றறியப்படும். ஸ்திரீயும் புருஷனும் ஒரே பூத

மாயின் உத்தமம். அப்புவும் தேயுவுமாயின் அதமம், மற்றப் பூதங்களா யிருப்பின் மத்திமம்.

14. வேதைப் பொருத்தம் - அசுவினி; மகம் மூலம், தம்மிற் பொருந்தாதென்க. பரணிக்குக் கேட்டை, கார்த்திகைக்கு அனுஷம், ரோகணிக்கு விசாகம், மிருகசீரிடத்திற்குச் சோதி, திருவாதிரைக்கு அவிட்டம், புநர்பூசத்திற்குத் திருவோணம், பூசத்திற்கு உத்திராடம், ஆயிலியத்திற்குப் பூராடம், பூரத்திற்கு ரேவதி, உத்திரத்திற்கு உத்திரட்டாதி, அஸ்தத்திற்குப் பூரட்டாதி, சித்திரைக்குச் சதையம் பகை ஆதலால் பொருந்தாது. மேற்சொன்ன நாட்களொழிய மற்றுள்ள நாட்களெல்லாம் பொருந்தும்.

15. இரஜ்ஜுப் பொருத்தம்-மிரு-சித்-அவி இந்த ௩-ம், சிரோரஜ்ஜு, ரோ திருவா-அஸ் சுவா-திருவோ-சத இந்த௬ - கண்டரஜ்ஜு, கார்-புன-உத்திரம் - விசா - உத்ரா-பூரட் இந்த ௬-நாபிரஜ்ஜு, பர-பூசம்பூரம், அனு-பூரா-உத்திரட்-இந்த௬ -ம் தொடைரஜ்ஜு, அசு - ஆயி - மக - கேட் - மூல-ரே இந்த ௬-ம் பாதரஜ்ஜு, வதூவரர்களுடைய நட்சத்திரங்கள் ஒரு ரஜ்ஜுவிலிருந்தால் பொருந்தாவாம்.

16. கோத்திரப் பொருத்தம்-அச்சுவினி முதல் ௪-ம் மரீசியும், மிருகசீரிட முதல் ௪-ம் அத்திரியும், ஆயிலிய முதல் ௪-ம் வசிட்டரும், அத்தமுதல் ௪-ம் அங்கிராவும், அனுஷமுதல் ௪-ம் புலத்தியரும், உத்திராட முதல் ௩-ம் புலகரும், சதய முதல் ௪-ம் கிருதுவுமாம். ஸ்திரீ புருஷர்கள் ஒரு கோத்திர நக்ஷத்திரங்களாயின் கோத்திரம் பொருந்தாது. மாறிவரிற் பொருந்தும்.

17. வருணப் பொருத்தம் - கடக விருச்சிக மீனம் பிராமண வருணம். மேடசிங்க தனுசு க்ஷத்திரிய வருணம், இடபம் கன்னி மகரம் வைசிய வருணம். மிதுனம் துலாம் கும்பம் சூத்திர வருணம். ஸ்திரீ ராசி தாழ்ந்தவருணம், புருஷராசி உயர்ந்த வருணமுமாயினும், உ-ம் ஒரு வருணமாயினும்வருணம் பொருந்தும். மாறிவரிற் பொருந்தாது.

18. நாடிப்பொருத்தம் - அசு - திருவா-புன-உத்திர-அஸ்-கேட் - மூல-சத - பூரட்-இந்த ௯-நட்சத்திரங்கள் இடைநாடி, பர-மிரு-பூச பூரம்-சித்-அனு - பூரா-அவிட்-உத்திரட் இந்த ௯நட்சத்திரங்களும் சுழிமுனை நாடி, கார் - ரோ - ஆயி-மக-சுவா-விசா-உத்திரா-திருவோ ரேவ - இந்த ௯-ம் பிங்கலை நாடி. ஸ்திரீநட்சத்திரமும், புருஷ நட்சத்திரமும், ஒரு நாடியி லிருந்தால் விவாகஞ் செய்யக்கூடாது. மாறியிருந்தால் உத்தமம். பிராமணருக்கு அதிபதிப் பொருத்தமும், க்ஷத்திரியருக்குக் கணப் பொருத்தமும், வைசியருக்கு ஸ்திரீ தீர்க்கப் பொருத்தமும், சூத்திரர், சங்கரசாதி முதலானவர்களுக்கு யோனிப் பொருத்தமும், பிரதானமாக விருத்தல் வேண்டும்.

**பொருத்தம்** — இது செய்யுள் செய்யவல்ல கவிகள் தலைமகனுக்குத் தீமைவாராது மங்கலம்பயப்பத் தலைமகன் பெயர்க்குத் தக்கவாறு எழுத்துச்சொல் முதலிய புணர்த்திப் பொருந்தப்பாடும் பொருத்தமாம். அது எழுத்து, சொல், தானம், பால், உணா, வருணம், நாள், கதி, கணமெனப் பிரிவுபடும். அவற்றுள், எழுத்துப் பொருத்தமாவது — ஒற்றுப்பட, ௩, ௫, ௭, ௯, எழுத்துக்களால் முதன் மொழி வருவது நன்று. ௪, ௬, ௮, ஆகிய எழுத்துக்களால் வருவன தீது. சொற் பொருத்தம்—சீர், எழுத்து, பொன், பூ, திரு, மணி, நீர், திங்கள், சொல், கார், பரிதி, யானை, கடல், உலகம், தேர், மலை, மா, கங்கை, நிலம், முதலியவும் இவற்றின் பரியாயமுமாம். மேற்கூறிய மங்கல மொழிகள் முதன்மொழிக்கண் வருமிடத்து, வகையுளி சேர்தல், சிறப்பின்றி நிற்றல், பலபொருளொருசொல், பொருளில் சொல், தோன்றல், திரிதல், கெடுதல் பெற்றன குற்றமாம். தானப் பொருத்தம் — குற்றெழுத்தைந்தோடும் தமக்கொத்த நெடிலைச் சேர்த்து, இ உக்கள் நின்ற தானத்து முறையே ஐகார ஔகாரங்களைச் சேர்த்தால், உயிரும் உயிர் மெய்யுமென்று சொல்லப்பட்ட தொகை யெல்லாம் ஐந்துகூறு யடங்கும், இவற்றைப் பாட்டுடைத் தலைமகன் இயற்பெயரின் முதலெழுத்தின் கூற்றைத் தொடங்கிப், பாலன், குமரன், இராசன், மூப்பு, மரணமென வருவித்தல்; அவற்றுள், மூப்பும், மரணமும், ஆகா. அல்லன முதற் சீரின் வருவன நன்று. பாற் பொருத்தம் — குறிலெல்லாம் ஆண்பால், நெடில் பெண்பால், ஒற்றும் ஆய்தமும் அலியெழுத்தாம். பாலறிந்து எழுத்தியைக்க. உணாப்பொருத்தம் — க, ச, த, ந, ப, ம, வ, எனும் ஒற்றுக்களேழும், அ, இ, உ, எ, எனும் நான்கு குற்றுயிரும் அமுத எழுத்

தாம். இவை மொழி முதற்கண்ணும், தசாங்கத்தயலிலும் வருவன நன்று. ய, ர, ல, எனும் ஒற்றுக்கள் மீதேறிய ஆ, ஒ, க்கஞம், ய, ர, ல, என்னும் ஒற்றும், ஆய்தமும், அளபெடையிரண்டும், மகரக் குறுக்கமும், ஆய்தக் குறுக்கமும் ஆகிய பதினுன்கும் நஞ்செழுத்தாம். இவை மொழி முதற்கும் தசாங்கத்தயற்கு மாகா. வருணப் பொருத்தம் — உயிர்-12, முதல்-சு, ஒற்றுக்கள், அந்தணர் வருணம், அல்லா மெய்யின் (சு) அரசவருணம், ல வ ற ன, வணிகர், ழ ள, சூத்திர வருணமாம். நாட் பொருத்தம் — அ, ஆ, இ, ஈ-கார்த்திகை, உ ஊ எ ஏ ஐ-பூராடம், ஒ ஓ ஔ-உத்திராடம், க கா கி கீ திருவோணம் கு கூ திருவாதிரை, கெ கே கை-புனர்ப்பூசம், கொ கோ கௌ பூசம், ச சா சி சீ-ரேவதி, சு சூ செ சே சை-அசுவனி, சொ சோ சௌ-பரணி, ஞ ஞா ஞெ-அவிட்டம், த தா சுவாதி, தி தீ து தூ தெ தே தை-விசாகம், தொ தோ தௌ-சதயம், ந நா நி நீ நு நூ-அனுடம், நெ நே நை கேட்டை, நொ நோ நௌ-பூரட்டாதி, ப பா பி பீ-உத்திரம், பு பூ-அத்தம், பெ, பே பை பொ போ பௌ-சித்திரை, ம மா மி மீ மு மூ-மகம், மெ மே மை-ஆயிலியம், மொ மோ மௌ-பூரம், யா-உத்திரட்டாதி, யூ யோ-மூலம், வ வா வி வீ-உரோகணி, வெ வே வை வௌ-மிருகசிரம். மேற்சொல்லிய நாளிருபத்தேழையும். ஒன்பதொன்பதாக மூன்று கூருக்கிப் பாட்டுடைத் தலைமக னியற்பெயரின் முதலெழுத்து நாளைத் தொடங்கிக் கூறுகளையெண்ண க, ங, ௫, எ, வரிற் பொருந்தா. அல்லாத நாட்களுட் பாட்டுடைத் தலைவன் பெயர் முதலெழுத்தின் ராசி தொடங்கி யெட்டாமிராசி நாட்களும் பொருந்தா. கதிப் பொருத்தம் — அ இ உ எ, க ச ட த ப என்பன தெய்வகதியாம். ஆ ஈ ஊ ஏ, ங ஞ ண ந ம என்பன மக்கட் சாதியாம். இவை முன்மொழிக்காம். கணப் பொருத்தம் — கூவிளங்கனி, புளிமாங்கனி, கருவிளங்காய், தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், தேமாங்கனி, கருவிளங்கனி இவை யெட்டுமுறையே நீர், தீ, வானம், துறக்கம், மதி, பரிதி, காற்று, நிலம் எனும் பெயரின. இவற்றுள்-நீரும், திங்களும் துறக்கமும், நிலமும், முதன் மொழிக்காம். ஒழிந்தனவாகா.

**பொருநவாகை** — நின் கீர்த்தியோடு மிகுதியைப் பார்த்து யாவரையும் எள்ளுதலைப் பரிகரியென்று உயர்த்திச் சொல்லியது. (பு. வெ.)

**பொருநராற்றுப்படை** — இது இளஞ்சேட்சென்னியின் புதல்வனுகிய சோழன் கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியார் பாடிய நூல். இதற்குப் பொருநாறெனவும் பெயர். இது பத்துப் பாட்டினுள் ஒன்று. இது (உ௬அ) அடிகளுடையது.

**பொருநர்** — ஏர்க்களம் பாடுநர், போர்க்களம் பாடுநர், பரணிபாடுநர்.

**பொருநாற்றுப்படை** — மிக்க நன்மையினையுடையவன் பக்கத்திராக வெனக்கினைகொட்டு மவனை வழிப்படுத்தது (பு. வெ. பாடாண்.)

**பொருந்தி லிளங்கீரனுர்** — 1. இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் இயற்பெயர் இளங்கீரனுர். இவர் ஊர் பொருந்திலாக இருக்கலாம். (அக-௩௫௧)

2. ஒரு வள்ளலும் புலவருமானவர். கபிலரைப் புகழ்ந்தவர். சேரமான்மாந்தரஞ் சேரலிரும் பொறையைப் பாடியவர். (புறநானூறு).

**பொருளாராய்ச்சி** — (8) திணை, பால், செய்யுள், நிலம, காலம், வழு, வழக்கு, இடம் என்பன.

**பொருளொடு புகறல்** — பூமியிடத்துப் பற்றுய விருப்பத்தினை யொழித்து மெய்மையான பொருளை விரும்பியது. (பு. வெ.)

**பொருள்** — 1. (உ) கல்விப்பொருள், செல்வப்பொருள்.

2. (௪) அறம், பொருள், இன்பம், வீடு, இவை புருஷார்த்தமாம்.

3. சொல்லோ டொற்றுமை யுடையதாய்ப் பொருளைத் தெரிவிப்பது. அது, உயர்திணைப் பொருள், அஃறிணைப் பொருள், ஆண்பாற் பொருள், பெண்பாற் பொருள், பலர்பாற் பொருள், ஒன்றறி பொருள், பலவறி பொருள், தன்மைப் பொருள், முன்னிலைப் பொருள் படர்க்கைப் பொருள், வழக்குப் பொருள், செய்யுட்பொருள், வெளிப்படைப் பொருள், குறிப்புப்பொருள் எனப் பலவகை. (நன்.)

**பொருள்கள்** — இவை தருக்கத்தின் கொண்ட பிரமேயப் பொருள்கள் அவை (௯) பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், காலம், திக்கு, ஆத்மா, மனம், என்பர்.

**பொருள்மொழிக்காஞ்சி** — அவிர்ந்து விளங்கும் சடாமகுடத்தினையுடைய முனிவர் விரும்பித் தெளிந்த பொருளைச் சொல்லியது. (பு. வெ பொதுவியன்.)

**பொருள்வகை** — இத்திணைக்கே இப்பொருளுரித்தாவ தென்னுமல் எல்லாத் திணைக்கும பொதுவாய் நிற்குமிலை. (அகம்.)

**பொருள்வயிற் பிரிவு** — பொருளீட்டுதல் காரணமாகப் பிரிதல், இது, தோழி தலைமகட்குணர்த்தல், தலைவி இளவேனிற் பருவங்கண்டு புலம்பல், தோழி யாற்றுவித்தல் முதலிய; மற்றும், தலைமகன் தலைமகளது உருவு வெளிப்பாடு கண்டு சொல்லல், பாசறைமுற்றி மீண்டோ வயின்வந்த தலைவன் பாகற்குச் சொல்லல், தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங் கண்டு சொல்லல் முதலிய; சுற்பியலில் அடங்கும்.

**போலிந்துநின்றபிரான்** — திருக்குருகூரில் கோயில்கொண்ட பெருமாள்.

**போலிவுமங்கலம்** — வேலையுடைய மன்னன் மனமுவப்ப புதல்வன் பிறத்தலாற் பலரும்கொண்டாடியது. (பு.வெ.பாடாண்)

**போல்லாப்பிள்ளையார்** — திருநாரையூரில் எழுந்தருளி யிருந்து அபயகுல சேகர சோழராஜன் நிவேதித்த பலங்களை யுண்டு நம்பியாண்டார் நம்பிக்குத் திருமுறை யிருந்த இட முதலிய அருளிச்செய்த விநாயக மூர்த்தி.

**போழுது** — (சு) மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, இவை அத்தமனகால முதல் பப்பத்து நாழிகை.

**போழுதுகண்டிரங்கல்** — உயிர் நிற்றலைப் போற்ருளாய் நெட்டுயிர்ப்புக் கொண்டு சுழலும பொன்னுற் செய்த வளையினையுடைய தலைவி மாலைப்பொழுதைக் கண்டு வருந்தியது. (பு. வெ. பெருந.)

**போறையாற்றுக் கிழான்** — பொறையாறு ஆண்டவள்ளல். வேளாளராக இருக்கலாம். கல்லாடராற் பாடப் பட்டவன். (புற. நா).

**போறி** — 1. (கூ) மனம், வாக்கு, காயம்.

2. (ரு) மெய், வாய், கண், மூக்கு, செவி.

3. இது, வீட்டில் தொந்தரை செய்யும் எலி, பெருச்சாளி முதலியவைகளைப் பிடிக்கும் பொறி. இது ஒரு சிறு பெட்டி போன்று பிராணி உள்ளிருக்கும் இரையை உட்புகுந்து கவரின், தடுத்துக்கொள்ளும் தடைக் கதவுகொண்டது. இவ்வகையில் பலவகை உண்டு.

**போற்கையான்மாறன்** — இவன் ஒரு பாண்டியன். இவனாசில் ஒரு வேதியன் கங்காஸ்நானத்திற்குப் போக எண்ணி நாளைப் புறப்பட இருக்கையில் மனைவி என்னை யாவர் காப்பார் என்றனள். வேதியன் அரசன் காப்பான் என்றுகூறி மறுநாள் யாத்திரை சென்றனன். இவ்வகை நடந்த செய்திகளை நகர சோதனைக்கு வந்து அந்த வீட்டின் புறத்தில் இருந்த அரசன் கேட்டு அன்றுமுதல் அந்த வீட்டுடன் அந்த அக்கிராரத்தில் இருந்த வேதியர் அனைவருக்கும் உணவளித்து வந்தனன் இவ்வகை நாடோறும் உணவும் காத்தலும் செய்துவருவோன் ஒருநாள் அந்த வீட்டின் புறத்தில் இருக்கையில் ஆண் குரல் கேட்கக் கதவைத் தட்டினன். கங்காஸ்நானஞ் சென்று அன்றைக்குவந்த அந்த வீட்டு வேதியன் தீரமாய் யார் அங்கு என்று கேட்டனன். அரசன் அயலானுயின் தீரமாய் ஆரெனமாட்டானென் றுணர்ந்து அந்த வீட்டைத் தட்டினதுபோல் மற்ற வேதியர் வீடுகளையுந் தட்டிவிட்டு அரண்மனை சென்றனன். வேதியரெல்லாரும் நடந்த சங்கதிகளைப்பற்றி அரசனுக்கு அறிவித்தனர். அரசன் வேதியர்களை வருவித்து அவ்வகை தீமை செய்தவனுக்கு யாது தண்டனையென வேதியர் தட்டிய கையை வாங்கிவிட வேண்டுமென்று கூறினர். உடனே அரசன் தனது உடைவாளை யெடுத்துத் தன் கையை வெட்டியெறிய வேதியர் அஞ்சி யாகமொன்று இயற்றிஅரசனுக்குப் பொற்கை வளரச் செய்தனர். ஆதலால் இவனுக்கு இப்பெயர் வந்தது.

**போற்சபை** — கனகசபையாகிய சிதம்பரம்.

**போற்றமரை** — பாண்டி நாட்டு மதுரைமாநகரில் எழுந்தருளியிருக்குந் திரு ஆலவாயுடையார் திருச்சந்நிதி தீர்த்தம். இது தென் மதுரையில் சங்கப்புலவர்க்கு இருப்பிடமாய்ச் சொக்கர் கட்டளைப்படி சங்கப் பலகை தாங்கியிருந்தது. இதில் நக்கீரர் சிவகோபத்தால் விழுந்து கைலை பாதி காளத்திபாதியந்தாதி பாடிக் கரையேறினர். இது நாரை முத்திபெறல் முதலிய பல விசேடங்களைப் பெற்றது.

**போருனை** — தாம்பிரபர்ணி நதிக்குப் பெயர். (சிலப்).

**போன்** — 1. இது சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என நான்கு வகைப்படும். இது சிவமூர்த்தியின் வீர்யத்தை

வாயுவும் அக்கினியும் கங்கையில் விட்டதால் பிறந்தது. இதனால் பொன்னுக்குக் காங்கேய மெனவும் ஒரு பெயருண்டு. இவை சாதகும்ப மென்னும் சாதரூபம், சதகும்பமென்கிற பர்வதத்தில் பிறத்தலானும், கிளிச்சிறை, சற்றுப் பசுமை நிறமுடைமையாலும், ஆடகம், மிக்க ஒளி கொண்டிருத்தலாலும், சாம்பூநதம், மேருவிற்கருகில் நாவற்பழ ரஸத்தினாலுண்டான நதியிற் பிறத்தலானும் நால்வகை ஆயின.

2. இது, மிக்கபளபளப்பும், மஞ்சள்நிறமுள்ள உலோகம், எல்லாலோகங்களினும் பாரமுள்ளது. தகடாகவும், கம்பியாகவும் அடிக்கவும் நீட்டவும் கூடியது. இது மலைகளிலும், சுரங்கங்களிலும், அருவிகளிலும் பாளங்களாகவும் கற்களுடன் ஒட்டியும் இருக்கும். இவற்றை இவை கலந்திருக்கும் கட்டிகளுடன் பொடித்து ஓடுகிற நீரிற் கழுவினால் பளுவுள்ள இவை அடியில் தங்கும் அவற்றை ரஸத்துடன் கலந்து காய்ச்சினால் ரஸம் ஆவியாய்ப் போகப் பொன் தங்கும். பின் கந்தகத்திராவகம் விட்டுக் காய்ச்சினால் சுத்த பொன்னும். கலப்பான பொன் சீக்கிரம் உருகும். சுத்த பொன் சீக்கிரம் உருகாது. சிறிது வெங்காரம் சேர்த்தாலுருகும். இது, நாணயங்கள் செய்யவும், ஆபாரணங்கள் செய்யவும் உதவும். இதைச் செப்புத்தகடு முதலியவற்றின்மேல், தகடாக அடித்து தகட்டில் இரசத்தைப் பூசித்தேய்க்க பொன்ரேக் அதில் ஒட்டிக்கொள்ளும். பின்னெருப்பிற் காய்ச்சச் சாயம் நீங்கும் இதில் சுத்தமானது தங்கம். இது, ஐரோப்பாவில் ஸகாத்லாண்ட், ஹங்கெரி, ருஷியா, ஆசியாவில், இந்தியா, சுமத்ரா, போர்னியோயூரல்மலை, ஆபிரிகாவில் டிரான்ஸ்வால், அமெரிக்காவில் காலிபோர்னியா, பிரேசில், மெக்ஸிகோ. முதலிய இடங்களில் அகப்படும்.

3. சிவபிரான் வீர்யத்தை யேனேக்கிய காலத்துச் சிறிது பூமியில்விழ அது அக்னியைச் சென்றது. ஒளியுடன் ஒளிகூடிப் பொன்னுயிற்று. அக்னியும் சந்திரனும் கூடியதே பொன். (பார. அநுசா.)

**பொன் பாப்பினனுன மகதைப்பெருமாள் கவி** — இவன் நடுநாடு அல்லது மகதநாட்டு சிற்றரசன். இவன் வாணவம்சத்தைச் சேர்ந்தவன்.

**பொன்பற்றியூர்ப் புத்தமித்திரனர்**—வீரசோழன் பெயரால் இலக்கணஞ் செய்தபுலவர்.

**பொன் முடியார்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர். அரிசில்கிழார் காலத்தவர். இவர் சேரமான் தகடூரெறிந்த பெருஞ் சேரவிரும்பொறையின் நண்பர். அதியமானெடுமானஞ்சியைப் பாடியவர் (திருவள்ளுவமாலை.)

**பொன்னம்பலத்தார்** — பிக்ஷையெடுக்கும் கைக்கோள ஜாதியார்,

**பொன்னம்பலப் பிள்ளை 1.** — இவரை மரவைப் பொன்னம்பலப் பிள்ளை யென்பர். இவர் யாழ்ப்பாணத்து மாவிட்டபுரத்தவர். இன்றைக்கு முப்பது வருஷங்களுக்கு முன்னிருந்தவர். மரவை யக்தாதி பாடியவர்.

2. இலர் யாழ்ப்பாணத்து நல்லூரினர் சைவ வேளாளர். இவர் ஆறுமுக நாவலர்க்கு மாணுக்கர். தமிழ் இலக்கிய இலக்கணங்களில் வல்லவர். பாரதம் ஆதிபருவத்திற்கும் மயூரகிரி புராணத்திற்கும் உரையெழுதியவர்.

**பொன்மணியார்**—இவர் கடைச்சங்கத்தவர் காலத்திருந்த தமிழறி புலமையர். பொன்மணியார் எனப் பெயரிருத்தலால் இவர் பெண்கவியாக இருத்தல் கூடும். (குறு-நடகக.)

**பொன்னவன்** — அம்பா நகரததுக்கணபுரத் தேவன் வேண்டுகோட்படி கணூலியற்றினேன்.

**பொன்னளந்த பெருமாள்** — ஒரு வணிகன் காட்டில் விறகு விற்றுச் சீவித்துத் தெய்வகதியால் ஒரு குகை கண்டு அளவிறந்த நிதிபெற்று வறுமை யிழந்தவன்.

**பொன்னனையாள்** — மதுரைக்குக் கிழக்கே திருப்பூவனத்தில் உத்திர கணிகையார் குலத்தில் பிறந்தவள். இந்த அம்மை தனக்கிருந்த பொருளால் சிவமூர்த்திக்கும் சிவனடியவர்க்கும் செலவு செய்து வந்தனள், இவளுக்குச் சோமாஸ்கந்த திருவுருவம் செய்துவைக்க வேண்டுமென்னுங் கவலையொன்று நாடோறும் வருத்தியிருந்தது. ஆயினும் அதைப் பூர்த்தி செய்வதற்கு ஆகவில்லை. ஒருநாள் சிவமூர்த்தி இவளது மனக்கவலை போக்க எண்ணி ஒரு சித்த மூர்த்திகள்போல் திருவுருக்கொண்டு இவள் வீட்டுப்புறத்தை யணைந்தனர். இவளது பணிசெய்வோர் சித்த மூர்த்திகளின் வரவைத் தமது தலைவிக்கு அறிவித்தனர். பொன்னனையாள் எதிர் சென்று வணங்கி உள்ளழைத்துச் சென்று

ஆசனம் உதவி உபசரித்தனள். சித்தர் பொன்னனையாளை நோக்கி அம்மே ஏதோ உன் தேகம் வாடி யிருக்கிறது நீ மனக் கவலை கொண்டிருப்பதை உன் முகம் அறிவிக்கிறது கூறுக எனப் பொன்னனை யாள் உள்ளது கூறினள். சித்தர் ஆயின் உன் கருத்தை முடிக்கிறேன் என்று அவ ளிடம் இருந்த லோக பாத்திரங்களைக் கொண்டுவரக் கட்டளையிட அவ்விதமே கொண்டுவந்து சேர்த்தனள் சித்த மூர்த் தி அப்பாத்திரங்களின்மேல் விபூதி தெறி த்து இவைகளை உலையிலிட்டு உருக்கச் செம்பொனும். இவற்றால் உன் மனப்படி செய்க என்று மறைந்தனர். பொன்னனை யாள் பிரிவாற்றாது கவலைகொண்டு ஒரு வாறு தேறிச் சிவமூர்த்தியின் திருவுரு வார்ப்பித்து அத் திருவுருவைக் கண்டு ஆராமையின் மிகுதியால் என் அழகப் பிரானே என ஐந்து விரலாலும் விக்கிரக மூர்த்தியின் இரண்டு கன்னங்களையும் அள்ளி முத்தமிட்டனள். அள்ளிய நகக் குறி இக்காலத்தும் அத்தல மூர்த்தியின் திருவுருவில் விளங்குகிறது.இந்த அம்மைக் குப் பொன்னனை எனவும் பெயர்.

**பொன்னகன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் இயற்பெயர் நாகனா யிருக்கலாம். இவர் செல்வ மிக்க வரா யிருந்தமை நோக்கி இப்பெயர் வந் தது போலும். (குறு-௧௧௪).

**பொன்னாயீச்சியார்** — பிள்ளையுறங்கா வில் லிதாசரின் தேவியார். பட்டர் சர்வஞ்ஞ பட்டனுடன் செய்த சாகச வினாவிற்குக் கண்ணேறு படுமெனத் திருஷ்டி தோஷம் போக்கியவள்.

**பொன்னி** — 1. இவள் கம்பநாடரைத் தம க்கு அடிமையாக்குகிறேன் என்று அரச னிடம் சபதஞ்செய்த தாசி. இவள் கம்ப ரிடம் தாசி பொன்னிக்குக் கம்பனடிமை யென எழுதிவாங்கி அவர் அரசன் முன் அதற்கு வேறு பொருள்கூற ஏமாறியவள்.

2. பொன்னனையாட்கு ஒரு பெயர்.

## போ

**போககாமியப்பிரியநாட்கள்** — சயக்கிரகம் விட்ட நாள் போகநாள் நின்றநாள், பிரிய நாள், பற்றப்படுமேநாள், பாவநாள், காமிய நாள் என்றும் சந்திராதித்தர், வசிட்டர் முதலியோர் கூறினர். (விதானமாலை)

**போகர்** — இவர் காலாங்கி நாதருக்கு மாணாக்கர். இவர் சித்தராய்ச் சத்த சமுத் திரங்களையுந் தாண்டிச் சஞ்சீவி மூலிகை கள் கண்டு பிடிக்கையில் அது கையில் அகப்படாதிருக்கத் தம்பன மந்திரத்தால் அதை ஓரிடத்தில் நிலைக்கச் செய்து பிடி த்துவந்தவர். மேருக்கு அப்பாற் சென்று தாது வகை கொண்டுவந்தவர். சிங்கத் திற்கும், புலிக்கும், பூனைக்கும் ஞானோப தேசஞ் செய்தவர். இவர் ஆகிரசம் கொண்டுவந்தவர் என்று சொல்வர். இவர் தக்ஷிணாமூர்த்தி சத்திக்கு அருளிச் செய்த எழுலக்ஷத்தை எழுகாண்டமாக்கித் தமது மாணாக்கருக்கு உபதேசிக்கச் சித்தர்கள் இதைத் தக்ஷிணாமூர்த்தியிடம் கூறத் தக்ஷி ணாமூர்த்தி இவரை வருவித்து நீர்செய்த நூலைச் சொல்லுமெனக் கேட்டுக் களி த்து, சித்தருக்கு நீங்கள் இதைப்பற்றி ஒன்றும் கவலை கொள்ளவேண்டாம். அவ ரவர்கள் தங்கள் சமர்த்தைத் தெரிவிக்கின் அதையேன் தடுத்தல் வேண்டுமெனக்கூறி இருடிகளைத் தங்கள் இருப்பிடம் அனுப்பி னர். அதுமுதல் சித்தர் பலர் இவரிடம் வந்து குளிகை பெற்று போவர். இவர் ஒருநாள் மலையடி வாரஞ் செல்ல அங்கு ஒரு புலி துரத்த இடையனைவிட்டுக் குகை யில் ஒளித்துக் கருவிழுதியின் பலத்தால் காயகற்பம் பெற்று ஒரு கன்றுபோட்டு வசித்திருந்த பசு தன் கன்றுடன் இவரை வந்து திருவடியில் மோப்ப இரங்கி அதற் குபதேசித்து நீங்கினர். இவர் செய்த தீக்ஷை யென்னும் நூலைச் சட்டைமுனி கிழுத்தெறிந்தனர். இவர் செய்த நூற்கள். போகர் 7000, நிகண்டு 17000 சூத்திரம், 700 யோகம் இவர் கந்த மூர்த்தியால் சித்தி பெற்றவர். இவர் சதுரகிரி, சிவகிரி முத லிய இடங்களில் வசித்ததாகத் தெரிகிறது. கருவூர்த் தேவருக்குத் தஞ்சைச் சிவப்பிர திட்டைக்காகக் காக்கையின் கழுத்தில் ஓலை அனுப்பினர். இவருக்கு மாணாக்கர் கொங்கணர், கருவூர்த் தேவர், சுந்தராநந் தர், மச்சமுனி, நந்தீசர், இடைக்காடர், கமலமுனி, சட்டைமுனி, முதலியவராம். இவர்மீது இன்னும் சில பொய்க்கதைகூறு வர். இவரை அகத்தியற்கு மாணாக்கர் என் பர். இவர் காலாங்கிநாதருக்கு மாணாக்கர் என்பதைப் போகர் ஏழாயிரத்தால் அறிக.

**போகபூமி**—1. போகபூமியாவது, பதினாறு வயதுடைய குமாரனும் பன்னிரண்டு வய

துடைய குமரியுமாய்த் தம்முள்ளொத்த மரபும், தம்முளொத்த அன்புமுடையவனு கிய தலைவனும் தலைவியும் கற்பகம்போலச் செல்வம்வந்து வாய்ப்பத் தாம் செய்ததவம் காறும் அப் பூமியில் இன்பநுகரும் இடம்.

2. (ரு) ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், எமதவஞ்சம்,தேவகுருவம், உத்தரகுருவம்.

**போகம்** — (அ) பெண், ஆடை, அணி, போஜனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

**போகவதி** — 1. பாதாளகங்கை.

2. நாகர்பட்டணம்.

3. சுதரிசநன்என்னும் ரிஷியின்பத்னி. இவள் தனித்திருக்கையில் யமன் அதிதி போல் வந்து தன்னுடன் புணரவேண்ட இவள் சாஸ்திர நியாயங்களால் மறுப்ப வும் கேளாது வருத்த இவள், தன் கண வன் அதிதிகள் வேண்டியவைகளை மறுக் காதே என்று கூறியபடி உடன்பட்டிருக் கையில் கணவன் வந்தழைக்க இவள் மறு உத்தரங்கூறச் செல்லுகையில் யமன் கூறு திருக்கச்செய்து தான், 'உன் மனைவி அதி திபூசை செய்கிறு' ளென இருடிக்குக் கூறக் கேட்டுக் களிப்படைந்து தன்னுரு வுடன் வெளிப்பட்டு இருடிக்கு யமவாதனை யொழிய வரம்தந்து இவளை உலகர் பாபங் களை நீக்கும் போகவதியெனும் நதியாக வரம் தந்தனன்.

**போகாங்கன்** — இவன கொடுங்கோலரசன். இறந்து நரகடைந்து குமரன் செய்த புண் ணியத்தால் நரகத்தை நீங்கினன்.

**போகி** — 1. இந்திரன்.

2. விளைவு முதலிய பயன் தருதற்பொ ருட்டு மழை பெய்விக்கும் மேக நாதனு கிய (போகி) இந்திரனை ஆராதிக்கும் நாள். இது மார்கழிமாச பூர்த்தியில் வருவது. இதனைக் கண்ணன் தாம் அவதரித்தகாலத் துத் தமக்குச் செய்யக் கட்டளை யிடக் கேட்ட இந்திரன், சினந்து மழை பொழி விக்கக் கண்ணன் கோவர்த்தனத்தைக் குடையாகப் பிடித்துமழை தடுக்கச்செருக் கடங்கிய இந்திரன் பணியத், தை மாதத் திற்கு முன்னுள் உனை உலகர்பணிய எனக் கட்டளையிட்டபடி இந்திரனைப் பூசிக்கு நாள் என்ப. இந்நாளில் ஆயச்சிறுவர் காளிங்கமடுவிற் குதித்த கண்ணனுக்கு விடமேறுதபடி இராமுழுதும் தீக்காய்ந்து பறைகொட்டி விழிப்பித்திருந்தன ராத லின் அவ் வறிகுறியாகத் தீக் கொளுத்து வது வழக்கு. இதை வைணவர்கள் சூடிக் கொடுத்தாளுக்குப் போகங் கொடுத்த நாள் என்பர்.

**போகையர்** — தெம்பாவிலிருந்த வேதியச் சிவனடியவர். இவரைக் கண்டு உலகம் வழிபடச் சிவமூர்த்தி நீசவுருத்தாங்கி இற ந்த கன்றினைத் தோளில் தூக்கி வரலும் போகையர் எதிர்கொண்டு இவர் சிவனடி யவர் என அதை வாங்கி வைத்து உபசரிக் கச் சிவனடியவராய் வந்த இவர் இக்கன்றி னிடம் நமக்கு ஆவல் உண்டு நீரே சமைத் திடும் எனப் போகையர் அவ்வகைசெய்ய வேதியர் கோபித்து மடத்தைத் திறந்து உள்புகச் சிவமூர்த்திமறைய வேதியர் பிரமித்து நிற்கப் போகையர் வேதியரை வணங்கி வேதியரே உங்கள் அக்ராரத்தில் நாம் வரவில்லை தனித்திருந்த எமது இருக் கையில் நீங்கள் வந்து வருத்தியதால் உம் மூரில் நாமும் சிவலிங்கமூர்த்தியும் இரோ மென்று போகையர் நீங்க அவ்வூரிலிருந்த சிவலிங்கத் திருவுருக்களும் மறைந்தன. சிவபிம்பம் மறைய நகர்வளம் குன்றியது. மீண்டும் வேதியர் போகையரை வேண்டி வருவிக்க வளமுண்டாயின.

**போக்கியார்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை.)

**போசநன்** — சகரன் புத்ரன்.

**போண்டான்** — (போகொண்டான்.) இவர் கள் தமிழ் நாட்டிலிருந்து கள்ளிகளோ ட்டை சாமொரீன் அரசனுக்குப் பல்லக் குச் சுமக்கக்கொண்டு போகப்பட்ட இடை யர் வகுப்பு (தர்ஸ்டன்.)

**போதகன்** — கத்ருகுமரன், நாகன்.

**போதப் பிரகாரம்** — ௩. உத்தேசம், லக்ஷ ணம், பரீக்ஷை. இவற்றுள் உத்தேசமா வது, தான் விவகரிக்கும் பொருளின் பெயரை மாத்திரம் கூறல். அப்பொருளின் சிறப்புத் தன்மை கூறல் இலக்கணம். அப் பொருளில் இவ்விலக்கணம் உண்டோ இன்றோ எனப் பார்த்தல் பரீக்ஷை.

**போதனபுரம்** — நீலச்சனென்னும் அரச னது நகரம்.

**போதனம்** — சரமைநாட்டிராஜதானி.(சூளா.)

**போதனர்** — இவர் விஷயமாக யாதும் விள ங்கவில்லை. பாலையைப் புனைந்து பாடியுள் ளார். இவர் பாடல் இந்நூலில்வரும் பாட் டின் பெருமையைக் கூறிய பன்னீ ரடி யின் மிக்கு பதிமூன்றடி யுளதாயிராநின் றது. இவர் பாடியது (நற்-௧௧௦)ம் பாட்டு.

**போதன்** — சாக்ஷுசமனுவைக் காண்க.

**போதாயனர்** — கண்ணுவர்க்குக் குமரர். இவர் தம் பெயரால் சூத்ரம் செய்தனர். அதற்குப் போதாயன சூத்ரம் எனப் பெயர்.

**போதி** — ஒரு அரசமரம். இந்த அரசு பல்குனீ நதிக்கரையிலுள்ளது. புத்தன் இதன் நிழலில் தவமேற்கொண்டிருந்த காலத்து நான்கு வகைச் சத்தியஞான முண்டான லைமபற்றி இதனை மகாபோதி யென்பர் புத்தர். (மணிமேகலை.)

**போதினி** — சிவசூர்யனுக்கு மேற்கில் உள்ள சத்தி.

**போத்தராஜன்** — கிராமரக்ஷணப் பொருட்டுக் கிராமாதிகளில் ஆராதிக்கப் பட்ட க்ஷுத்ரதேவன். இத்தேவனைத் தருமராஜா கோவில்களில்வைத்து ஆராதிக்கின்றனர். இத்தேவதையை வீரபத்திராம்ச மென்பர்.

**போத்தியர்** — பாஷ்கள ருஷியிடம் இருக்கு வேதமோதிய மாணாக்கர்.

**போத்யர்** — ஒரு ருஷி, இவர் பிங்கலை, அணில், சர்ப்பம், வண்டின் சுழற்சி, லக்ஷ்யத்தை அடிப்பவன், யுவதி இவர்களால் ஞானமடைந்தவர். (பார - சாந்.)

**போந்தை** — பொருந்தாவேந்தர் கிட்டினப் பூசலிடத்துப் புலானுறும் வேலினையுடைய சேரன் சூடும் பூவைப்புகழ்ந்தது. (பு. வெ. பொதுவியன்.)

**போந்தைப் பசலையார்** — இவர் கடைச் சங்க காலத்துப் புலவருள் ஒருவர். நப்பசலையாரின் வேறானவர் என்பது தெரிவிக்க போந்தைப் பசலையார் எனப்பட்டனர். போந்தை இவரது ஊராக இருக்கலாம். (அக - ககo.)

**போயர்** — இவர்கள் வடநாட்டு வேட்டைக்காரர். தற்காலம் பல்லக்கு முதலிய சுமந்தும் பலவேலைகள் செய்துதிரிவோர்.

**போரங்கன்** — துரியோதனனுக்குத் தம்பி.

**போர்க்களத்துக் கொல்லத் தகாதவர்** — போர்க்களஞ்சி பிறிதோரிடத்து ஒளித்திருப்போன், பேடி, கைகூப்பி வணங்குவோன், தலைமயிரவிழ்ந்து சரியப்பெற்றவன், உட்கார்ந்திருப்பவன், நான் உனக்கு ஆளாகிறேன் என்பவன், தூங்குபவன், கவச முதலிய பூண்டு யுத்தசந்நத்த னாகாதவன், ஆடை யில்லாதவன், ஆயுத மில்லாதவன், போர்செய்யாதவன், போரிடுவதைப் பார்த்துக் கொண்டிருப்பவன், பிறனொருவனுடன் போரிடுபவன், நீர் பருகுபவன், உணவுட்கொள்பவன், வேறு காரிய முயற்சியுள்ளவன், அச்சமுடையவன், புறங்கொடுத்து ஓடுபவன் முதலியவர்களாம். (சுக்-நீ.)

**போர்க்களத்தொழிதல்** — பகைவ ராயுதத்திற்குப் புறங்கொடாத வெற்றியினையுடைய வீரரைக் கூட்டித் தான் பூசற்களரியிலேபட்டது. (பு. வெ)

**போர்க்காரியார்** — செங்கண்ணர் குமரர். இவர் குமரர் காரியார். இவர் நம்மாழ்வாருக்குப் பாட்டன்.

**போர்க்குரிய நாளிகக்கருவிகள்** — இவை அஸ்திர சஸ்திரங்கள் என இருவகை. அஸ்திரங்களைக் காண்க. சஸ்திரம்—கைவிடாப் படை. இன்னும் சிறுநாளிகம், பெருநாளிகம் என இருவகை கருவிகள் உள.

சிறுநாளிகம் - குறுக்காய் மேனோக்கிய துளையினை அடியில் உடையதும், ஐந்து சாண் அளவுநீண்ட இருப்புக்குழாய்த் தண்டினை யுடையதும், அடியினும், நுனியினும் குறிவைத்து அடித்தற்குரிய திலபிந்துக்களோடு கூடியதும், எந்திர தாடனத்தால் நெருப்பை வெளிப்படுத்துவதும், கற்பொடிகளைத் தாங்கி யிருக்கும் கன்னமூலத்தை யுடையதும், நல்ல மரத்துண்டாற் செய்யப்பட்ட உபாங்கத்தை அடிப்பாகமாக வுடையதும், அடியில் ஓர் அங்குல அளவு, அகன்ற த்வாரத்தை யுடையதும், தன்னுள்ளே நெருப்புப்பொடி (வெடிமருந்து) பொதியப்பெற்றதும், சலாகையோடு கூடியதும் (மருந்து கெட்டிக்கும் இருப்புக்கோல்) ஆம். இது (துப்பாக்கி) (சுக் - நீதி.)

பெருநாளிகம் - அடிபபாகதநிலுள்ள மூளையின் சுழற்சியால் குறியை யொத்துத் தாக்கும் நிலையினை யுடையதும் மரத்தினலாக்கப்பட்ட அடிச்சட்டத்தை யுடையதும் வண்டியால் சுமந்து செல்லப்பட்டதுமானது. (சுக் - நீ.)

**போர்மலைதல்** — வெட்சியாரைக் கிட்டிச் சூழ்ந்து அஞ்சத்தாக்கி எடுப்பும் சாய்ப்புமான பூசலை மேற்கொண்டது. (பு. வெ.)

**போலி** — அறுபத்தைந்து. அவை பக்ஷாபாசம் - ௯, ஏதுவாபாசம், உக, உவமைப் போலி - கஅ, நிக்ரகத்தானம் - உஉ.

**போற்றிமார்** — கோளபிராமணர், நம்பூரிகளைச் சேர்ந்தவர்களல்லர்.

**போனகிராப்** — (Phonograph) இது, தகரப் பற்களடங்கிய மெல்லிய தகடுகளின் மூலமாய் யந்திர வழியால் ஒருவன்கூறிய கீதத்தையும், பலவகை ஓசைகளையும் திரு

த்தமான இயற்கைச் சத்தமாகவே கூறும் கருவி.

**போன்** — என்பது பிராணிகளைப் பிடிக்கும் பொறி. இது பிராணிகளின் உருவத்திற்குத் தக்கபடி பெருத்தும் சிறுத்தும் இருக்கும்.

**போஜகடகம்** — 1. நர்மதாநதிக்கு அருகில் உள்ள பட்டணம்.

2. விதர்ப்ப தேசத்திலுள்ள இடம். **Elliobipur on the river Purna in Berar** (பா. சபா.)

**போஜகன்** — சாம்பனால் யாதவ கன்னியரைத் தானமாகப்பெற்ற அரசன். (பவிஷ்புரா.)

**போஜகூடம்** — உருக்மீ என்பவனால் புதிதாய் நியமித்த பட்டணம்.

**போஜம்** — ஒரு தேசம்.

**போஜர்** — யதுகுலபேதம், கம்சன் பகைவர். இவர்கள் பிராமண சாபத்தால் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு மாண்டனர்.

**போஜனக்கிரமம்** — 1. நீராடி வாயைத் துடைத்துக்கொண்டு உண்ணுமிடத்தை மண்டலஞ்செய்து உண்டவரே உண்டவர்கள். கால் கழுவிய ஈரம் உலருமுன்னர் உண்ணவேண்டும். கால் ஈரம் உலர்ந்தபின் படுக்கை அடையவேண்டும். உண்ணும்போது கிழக்காக உட்கார்ந்து தூங்காது அசையாது நன்றாக உட்கார்ந்து வேறொன்றையும் பாராமலும், பேசாமலும் உணவைத்தொழு துண்க. (ஆசாரக்கோவை)

2. தம் பொருட்டாக உலையேற்றலும், தமக்காக உயிர்வதை செய்தலும், மடைப்பள்ளியை எச்சிற் படுத்தலும், சிறுவர்கள் உண்ணுகையில் பெரியோர் உயர்ந்த பீடத்திருத்தலும் சிறுவர்களுண்கையில் அவரை மனம் வருந்த ஏதேனும் கூறலும் ஆகாது.

3. விருந்தினர், முதியோர், பசுக்கள், பக்ஷிகள், பிள்ளைகளுக்குணவு கொடாமல் முந்தி உண்ணலும், படுத்துண்ணலும், நின்றுகொண்டும், வெளியிடத்து இருந்துகொண்டும், அதிகமாக உண்ணலும், கட்டிலின் மீதிருந்துகொண்டும், பெரியோர்களுடன் சமபந்தியி லுண்ணும்போது அவர்களுண்ணுமுன் உண்ணலும், அவர்கள் எழுதற்குமுன் எழுதலும், அவர்களை நெருக்கி யிருத்தலும், அவர்களுக்கு வலப்பக்கத்திருந் துண்ணலும், ஆகா. உண்கையில் தீம்பொருள்களை முதலாகவும் மற்றவைகளை நடுவாகவும் கசப்பைக் கடையாகவும் உண்க. தம்மினு முதியோரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு உண்ணலாகாது. உண்டபின் வாய்நீர் உட்புகாமல் கொப்புளித்து உமிழ்ந்து எச்சிலறும்படி வாயையும் பாதங்களையும் நன்றாகத் துடைத்து (கூ) முறையாகத் தண்ணீர் பருகிக் கண் காது மூக்கு செவி முதலிய உறுப்புகளைத் துடைத்துக்கொள்க. தண்ணீரை இரண்டு கைகளால் வாரிக்குடித்தலும், ஒரு கையால் தண்ணீர் பருகலும், ஒரு கையால் கொடுத்தலும் ஆகாது. (ஆசாரக்கோவை.)

**போஜனம் புசிக்கும் திக்கு**—ஆயுளை விரும்புகிறவன் கிழக்குமுகமாகவும், கீர்த்தியை விரும்புகிறன் தெற்குமுகமாகவும், சம்பத்தை விரும்புகிறவன் மேற்குமுகமாகவும், சத்தியத்தை விரும்புகிறவன் வடக்குமுகமாகவும் இருந்து புசிக்கவேண்டும்.

**போஜனவிதி** — இது உணவு கொள்ளுங்கால் இவ்வாறிருந்து உண்கவெனக் கூறும் விதி. போஜன காலத்தில் சமபந்தியில் உண்ணத்தக்கோர் அந்நியரல்லாத சமசாதியராய் நியமாசார முடையவர்களா யிருத்தல் வேண்டும். போஜனம் செய்யுமிடம் வெளிச்ச முள்ளதாய் அந்நியர் புகப்பெறாததாய்க் கோமயத்தால் மெழுகப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

**போஜனஞ் செய்யும் பாத்திரம்** — பொன், வெள்ளி, வெண்கல பாத்திரங்களும், இலைகளில் வாழை, மாவிலை, புன்னையிலை, தாமரையிலை, இருப்பையிலை, பலாவிலை, சண்பகவிலை, வெட்பாலையிலை, பாதிரியிலை, பலாசிலை, சுரையிலை, கமுகமடல் முதலியவையாம். இவற்றுட் பொற்பாத்திரம் சுக்லவிர்த்தியுண்டாம்; வாதபித்த சிலேத்மாதிகளைச் சமனஞ்செய்யும் வளப்பத்தினையு மனவுற்சாகத்தையுந் தந்து சோபாரோகத்தை நீக்கும். வெள்ளிப்பாத்திரம் சிலேத்மபித்த கோபத்தை நீக்கித் தேஜஸையு மகிழ்ச்சியையுந் தரும். வெண்கலப்பாத்திரம் சிக்கல், சோர்வு, இரத்த பித்தரோகம், இவைகளை நீக்கித் தாதுவிர்த்தியையும் வன்மையையு முண்டாக்கும். வாழையிலை சருமதாதுக்களுக்குப் பளபளப்பும் சுகபோகங்களையுந் தந்து மந்தாக்னி, துர்ப்பலம், க்ஷீணவாத சிலேஷ்மம், அரோசகங்களைப் போக்கும். தாமரையிலை வெப்பம், வாதரோகம், மந்தாக்னிகளை உண்டாக்கும், சம்பத்தைப் போக்கும். பலவகை

யான பாலுள்ள மரங்களின் இலைகள் பங்கு
வாதம், க்ஷயம் தாகரோகம் இவையணு
காது காக்கும். பலாவிலை குன்மரோகத்
தையும் பித்தத்தையு மதிகப்படுத்தும்.
பொதுவாக இலைகளில் வெள்வாழையிலை
மனத்திற் குற்சாகத்தையும் திருப்தியையுந்
தரும். மற்றவிலைகள் மத்திமபலனைத்தரும்.
கல்லைதள் தைக்குமிடத்து ஒரு ஜாதியான
இலையால் தைக்க. வாழை யிலையிலுண்
ணுங்கால் அறுத்த அடிப்பாகத்தை வலப்
பக்கமாக வைத்துண்க. போஜனபாத்தி
ரங்களையும் இலைகளையுஞ் செம்மையாகச்
சுத்தஞ்செய்து ஒவ்வொருவருக்கும் ஒவ்
வொருமுழமளவை சதுரச்சிரமாகப் புள்ளி
யின்று மெழுகிப்போடல் வேண்டும்.
இரண்டு கால்களையு முடக்கி இடமுழந்
தாளின்மேல் இடமுழக்கையை யூன்றிக்
கொண்டு போஜன சமயத்தில் தகாதவார்த்
தைகள் பேசாமலும், பேசுதல், சிரித்தல்,
நாய், பன்றி, கோழி, காகம், பருந்து,
கழுகு, என்பவைகளையும் அதீக்ஷதர், புலை
யர், விரதபங்கமுடையார், பூப்புடைமங்
கையர் முதலியோரைப் பாராமல் விதிப்
படி அன்னமுதலியவற்றைச் சுத்திசெய்து
இஷ்டதேவதைக்கும், அக்கிக்கும், குருவிற்
கும், நிவேதித்து மௌனமாய்ச் சிந்தாமல்
புசித்தல் வேண்டும். எவன் தலைமேலாடை
யுடனும் தென்முகமாகவும் புசிக்கின்றானோ
அவனது அன்னத்தினை அரக்கர் புசிக்கின்
றனர். மண்டலஞ் செய்யுமிடத்து வேதி
யர்க்குச் சதுரமாயும், அரசனுக்கு முக்
கோணமாயும், வைசியனுக்கு வட்டமா
யும், சூத்திரனுக்குப் பிறைவடிவாகவும்
மண்டலஞ்செயல் வேண்டும். ஆதித்தர்
வசுக்கள், உருத்திரர், பிரமன் இவர்கள்
மண்டலங்களின் வசிக்கின்றனராதலின்
மண்டலமவசியஞ் செய்யவேண்டும். கால்,
கை, வாய், பூசி இவ்வைந்துறுப்புக்களும்
உலராததற்கு முன்கோபமற்றவனாய்க் கிழ
க்குமுகமாகவிருந்து இரண்டு காலினாலா
யினும் ஒற்றைக்காலினாலாயினும் நிலத்தி
னைத் தொட்டுக்கொண்டு புசிக்கவேண்டும்.
பொன் வெள்ளி வெண்கலம் இந்தப் பாத்
திரங்களினும் தாமரையிலை முருக்கிலை
இவற்றாற் சமைத்த கல்லைகளினும் புசித்
தால் மூன்று தினம் தீக்ஷையோடு செய்த
வேள்விப்பயனை யடைகிறான். எவன்
வெண்கலப் பாத்திரத்தில் புசித்துவருகின்
றானோ அவனுடைய ஆயுளும் அறிவும்
புகழும் வன்மையும் விருத்தியடைகின்
றன. முருக்கிலை தாமரையிலையிற் புசித்
தால் இல்லறத்தான் சாந்திராயண விரதஞ்
செய்க. பிரமசாரியுந் துறவியுமவற்றிற்
புசித்தால் சாந்திராயண பலனைப்பெறுவர்.
உண்கலத்தை நிலத்தில் வைத்துண்ணில்
அது உபவாசத்தோடொத்த பலமென்று
கூறியிருக்கிறது. பிராணாகுதி கொள்ளும
ளவே நிலத்தின் மேல் வைக்கவேண்டும்.
பிறகு ஆசனத்தின்மீது வைத்துண்ணல்
வேண்டும். என்னெனின் நீர்த்துளி, சோற்
றினவிழ்கள், ஆடையுறுப்புக்களிற் சிதறு
மாதலானும் காற்றாசு ஆடைத்தூசு அந்த
அன்னத்திற் படுமாதலானும் மேலெடுத்து
ஆசனத்தில் வைத்துண்ணலாம். மந்திர
நியமத்துடன் கூடிய பிராணாகுதிக்கும்
தென்புலத்தார்க்குச் செய்யுஞ் சிராத்த
வுணவிலும், பாத்திரம் நிலத்தின் மீது
வைத்தே உணவு கொளல்வேண்டும். இலை
யிலிட்ட அன்னத்தை நோக்கி வணங்கி
அஞ்சலியத்தனாய் இஃது எமக்கு ஆகுக
வெனக்கூறிப்பத்தியோடுந் தொழ வேண்
டும். வியாக்ருதி, காயத்ரி இம்மந்திரங்
களை மந்திரித்து அன்னத்தின்மீது நீரைத்
தெளித்து மந்திர பூர்வகமாக உண்கலத்
தினை வலமாக நீர் வளையக்கட்டி எல்லா
உயிர்களினுடைய இதயத்திலும் பிராண
வடிவனா யுலவுகின்றா யென்ற பொரு
ளுள்ள மந்திரத்தைத் தியானித்து முதலில்
நீர் சிறிதருந்தி அவ் வன்னத்திலிருந்து
சிறிதெடுத்துப் பிராணன் முதலிய ஐந்து
வாயுக்களுக்கும், சுட்டுவிரல் நடுவிரல்
பெருவிரலால் பிராணனுக்கும், நடுவிரல்
ஈற்றயல் விரல் பெருவிரலால் அபான
னுக்கும், ஈற்றயல் விரல் கடைவிரல்
பெருவிரலால் வியானனுக்கும், நடுவிரல்
ஈற்றயல் விரலொழிய மற்றைச் சுட்டு
விரல் கடைவிரல் பெருவிரலாலுதானனுக்
கும், ஆகுதிசெய்ய வேண்டும். பிராணா
குதி யன்னச் சுவை நாவினுக்குத் தெரி
யாதபடி விரைவில் விழுங்க வேண்டும்.
உண்ணுமுன் அன்னத்திருந்து சிறிதெடுத்
துத் தருமனுக்கும், சித்திரகுத்தனுக்கும்
பலிகொடுத்து எவ்விடத்தாயினும் பசிதா
கத்தோடு வருந்தியிருக்கும் பிரேதங்கட்
குத் திருப்தியுண்டாம் பொருட்டு இந்த
நீர் கெடாது வளர்க என்று நீர் விட்டுப்
பின்பு ஆபோசனங் கொள்ளல் வேண்டும்.
உண்ணத்தக்க எல்லாவுண்டிகளும் சிற்

றுண்டிகளும் கிழங்குவகைகளும் பழங்களும் மாமிசங்களும் மற்றுள்ளவைகளையும் பல்லாற் கடித்துத் தின்னலாகாது. சிறு துணிக்கைகளாகச் செய்து தின்னல் வேண்டும். கடித்த சேடத்தை இலையிலாயினும் மீண்டும் வாயிலாயினும் வைக்கலாகாது. அளவுகடந்தவுண்டி தின்னலாகாது. உண்ணுமிடத்து முதலில் தித்திப்பினையும், நடுவே உவர்ப்பு, புளிப்பினையும், பின் கைப்பு, கார்ப்பினையும் புசித்தல் வேண்டும். முதல் நீர்த்தன்மை யுடைய பண்டங்களையும் நடுவில் வலிய பண்டங்களையும் முடிவில் நீர்த்தன்மையுள்ள பண்டங்களையும் புசிக்கவேண்டும். இவ்வாறு புசிப்பவன் வன்மையையும் நோயின்மையையும் தவறாது பெறுவன். முனிவர்கள் எட்டுக்கவளமும், காட்டிலுள்ளோன் பதினாறுகவளமும், இல்லறத்தான் முப்பத்திரண்டு கவளமுங் கொள்ளல்வேண்டும். பிரமசரியனுக்கு எல்லையில்லை. ஒருவாய்க்கவளம் ஒவ்வொன்றாக வொத்தபடி கொள்ள வேண்டும். வாய்கொண்டது போகக் கையின் பட்டிருந்த வுண்டி எச்சிலெனப்படும். அவ்வாறு மிகுந்த அன்னத்தினையும் வாயிலிருந்து விழுந்த அன்னத்தினையும் புசிக்கலாகாது. உண்ணில் சாந்திராயண விரதஞ் செய்யவேண்டும். யார் அங்கையிலுண்கிறானோ, யார்ஆகாரத்தைக்கையிலெடுத்துக் கைவிரித்து வளைத்து நக்கித் தின்பானோ, அவனுக்கு அந்த வுண்டி பசுவின் மாமிசம் போலாம். அசீரணத்தில் புசிக்கலாகாது. மிகவும் பசித்திருத்தலாகாது. அசீரணஞ் செய்யும் பொருளையும் புசிக்கலாகாது. யானை, குதிரைவண்டி, ஒட்டகம் முதலிய வாகனத்தின் மீதிருந்தும், சுடுகாடு, மனைக்குப்புறம், தேவாலயம், படுக்கைமீதிருக்கும் போதும், புசிக்கலாகாது. (வைத்திய நூலார் கரபாத்திரம் சிறந்ததென்பர்.) ஈரவுடையுடுத்தும், ஈரத்தலையோடும், பூணூலின்றியும், தாலை நீட்டிக் கொண்டும், கால்மேல் வைத்துக்கொண்டும், இடதுகையை யூன்றியும், கட்டிலின் மேலிருந்துகொண்டும், யார்தொடைமீதுட்கார்ந்தாயினும், ஒற்றை யாடையோடும், கல்லின் மீதும், படியின் மீதும், காலிற் பாதக்குறடு முதலியதரித்தும், தோலின் மீதிருந்தும், தோல் போர்த்து முண்ணலாகாது. வாயில்வைத்த மீதியைத் தின்னலாகாது. குடித்து மிகுந்ததைக் குடிக்கலாகாது. பலருடன் நடுவிலிருந்து புசிப்பவன் விரைந்து புசிக்கலாகாது. வீணே அன்னத்தை எறியலாகாது. பிறனெச்சிலைத் தின்னலாகாது. எச்சிலோடு எங்கும் போகலாகாது எச்சிலையெங்கு மெறியலாகாது. புசித்துக் கொண்டிருப்பவன் வேறு அன்னத்தினை ஒருபோதுந் தொடலாகாது. கால், தலை, ஆண்குறி இவற்றினைத் தொடலாகாது. உண்கலத்தின்மேல் கால் படலாகாது. பலபேர் பார்த்திருக்கையில் அவர்களுக்குக் கொடாமல் நல்ல உணவுகளை ஒருவனே புசிக்கலாகாது. ஒருவன் பார்த்திருக்கும்போது அவனுக்குக் கொடாமல் பலருந் தின்னலாகாது. உண்டு மிக்கதை விட்டுவிடல் வேண்டும். நடுராத்திரியிலும் உண்ட வன்னஞ் செரியாத போதும் நிலத்திலு முண்ணலாகாது. எச்சில் நெய் வாங்கலாகாது. தலையைத் தொட்டுக் கொண்டும், வேத மோதிக்கொண்டும், கலத்தில் மீதியாகாதபடி துடைத்தும், மனைவியோடு முண்ணலாகாது. இடதுகையா லுண்ணலும் குடித்தலு மாகாது. ஒற்றைக்கையால் நீருண்ணலாகாது. சூத்திரனல் வார்க்கப்பட்ட நீருண்ணலாகாது. வாயிலிருந்து உண்ணு மன்னத்தின்மீது நீர்படின் அது எச்சிலாமாதலின் அதனை உண்ணலாகாது. பந்தியி லுண்ணும்போது பிறர் வேண்டுகோளில்லாம லுயர்ந்த வாசனத்தி லிருக்கலாகாது. முன்பாக உண்ணலாகாது. முன்பாக உண்டவன் அந்த வரிசையிலுள்ளார் பாவத்தை யடைகின்றான். பந்தியில் புசித்திருப்பவன், அவர்களுக்கு முன் உண்கலத்தை விடுவானாயின் அனைவரு முண்ணாது எழுந்து விடுவாராதலின் அவன் பிரமகத்தி செய்த பாவத்தை யடைவன். உண்ணும்போது பிராணாகுதிகளைந்து கொள்ளும்வரை மௌனமாகவுண்ணல்வேண்டும். அவ்வகைப் பேசினவனது ஆயுளை மிருத்தியு தெய்வங் கொண்டுபோய் விடுமென்று கூறப்பட் டிருக்கிறது. எச்சில் மயங்கியுள்ள வாயினோடும் பேசலாகாது. கையால் பரிமாறப்பட்ட சோறு முதலியவற்றையும் வேறு பதார்த்தவகைகளோடு கூடாது நேராக விருக்கின்ற உப்பினையும் தின்னலாகாது. அவ்வகை தின்பது கோமாமிசத்தை யொக்கும். உப்பு, சறிவகை, நெய் எண்ணெய் முதலியவற்றைக் கையாற் பரிமாறலாகாது. போஜன காலம், இரண்டுகால போஜனமே நலமாம்.

அது தவறி மூன்றுகால போஜனங் கொள்
ளவேண்டுமானல் சூரியனுக் கிளம்பருவ
மாகிய உதயமுதல் (மூன்றே அரைக்கால்)
நாழிகைக் குள்ளும், காலைப் பருவமாகிய
(பதினைந்து) நாழிகைக்குள்ளும், மூப்புப்
பருவமாகிய இரவில் (எழரை) நாழிகைக்
குள்ளும் நலம். சூரியனுதயமாகி (பதினொ
ன்றேகால்) நாழிகைக்குள் உண்ணுகிற
வுணவு தேகத்திற்குப் பொருந்தும். (பதி
னைந்து) நாழிகை யுணவு மிதவுணவு நோய்
களை விலக்கும்; இதுவே காலபோஜன
மாம். (இருபத்திரண்டரை) நாழிகையிற்
புசிக்கில் ரோகசம்பவமாம். (முப்பது) நா
ழிகையிற் புசிக்கில் உயிருக்கு முடிவைத்
தரும். பின்னையவிரண்டும் அகால போஜன
மாம். எல்லாத் தேகிகளுக்கும் (முக்கால்)
வயிறு உத்தமம். அதன் விவரம்:—அன்ன
முங் கறிகளுங்கூடி (அரை) வயிறு; பால்
மோர் சலங்கூடி (கால்)வயிறு; பிற சமான
வாயுவுலாவி அன்னத்தைச் சீரணிப்பிக்க
விடவேண்டும். அதிக சுடுகையான அன்
னம் உதிரப்பித்தம், தாகம், பிரமை, மத
ரோகம், இவைகளை உண்டாக்கும். கொஞ்
சஞ் சுடுகையன்னம் உத்தமத்தி லுத்தம
மாம். சரீரத்திற்கு வன்மையுண்டாக்கும்.
நன்ருகப் பாகமாகாத நட்டரசி அன்னம்
மலஜலஞ் சிக்குவதுந் தவிர மறுநாளும்
சீரணிக்காது. குழைந்த அன்னம் வாதப்
பிரமேகம், இருமல், அக்னிமந்தம், துர்ப்
பலம், பீனசம், இவைகளை யுண்டாக்கும்.
சுத்த அன்னம் அரோகத்தை விளைத்து
வாதாதி முக்குற்றங்களை நீக்கி வன்மை
தரும். அன்னத்தைப் பருப்புட னெய்
சேர்த் துண்ணில் அது பழைய மலபந்தம்,
ஜிக்வாகண்டக ரோகம், பித்தா திக்கம்,
வாதகபதோஷம், நீங்காச் சொறி இவை
களை நீக்கும். பொரியல் கபத்தை விருத்தி
செய்யும் புளிச்சுவை மிகுந்த பொரியல்
அலசரோகத்தையும், வாத நோய்களையு
முண்டாக்கும். வற்றல்இளவறுப்பால்மந்த
ரோகமும், கருகும்படி வறுத்த வற்றலால்
வாதபித்த கபதோஷங்களு முண்டாம்.
இளவறுப்புங் கருகலு மில்லா துண்ணில்
நலமாம். பச்சடி புளிப்புள்ளது பித்தத்தை
யும், உறைப்புள்ளது சிலேஷ்ம வாதத்தை
யும், இனிப்புள்ளது அரோசகத்தையும்
நீக்கும். துவையல் புளிப்புள்ளது பித்தத்
தை நீக்கும். வெறும்புளித் துவையல்
இரத்தத்தைமுறிக்கும். புளிசேராத் துவை
யல், நலமாம். அதிககாரஞ் சேர்ந்தது பசி
யை யுண்டாக்கலால் உத்தமோத்தம
மாம். குழம்புகள் உறைப்புள்ளது வாத
கோபத்தை நீக்கும். அவ்வாறில்லாக் குழம்
பால் வாதரோகஞ் சனிக்கும். காரத்துட
னீர்க்கவைத்த குழம்பு முத்தோஷங்களை
யும் விலக்கும். ரஸத்தின் குணம், துவ
ரம் பருப்பின்கணிறுத்த ஜலத்தில் மிளகு
பூண்டு முதலிய சம்பாரங்களிட்டுச் செய்
தது அக்னிமந்தம் முதலிய பல பிணிகளை
நீக்கும். போஜனத்தின் முடிவில் புளித்த
தயிரும் லவணமுங்கூட்டி யுண்ணில்உண்ட
உணவிலுள்ள திரிதோஷங்களும் வாயுவை
யும் நீக்கி உணவைச் சீரணப்படுத்தும்.
மோர் அன்னம்ஜடராக்கினிவளர்ந்து மூளை
மூலம் பாண்டு, தாகம் கிரகணி சிலேஷ்மம்
சோபை இவைகளை விலக்கும். ஊறுகாய்
கள் தீபாக்னியைவிளைத்து அரோசகம்
சிலேஷ்மம் பைத்திய தொந்தரோகங்களை
விலக்கும். நீரருந்தும் வகை - கைவிரல்
நகம்பட்ட நீரை யாண்டுங் குடிக்கலாகாது.
அது கள்ளினைக் குடித்ததலோடொக்கும்.
இடதுகையினலெடுத்துக் குடிக்கினும் அவ்
வகைத் தோஷத்தைத் தரும் நீர் குடித்த
பாத்திரத்தைப் பூமியின்மேல் வைக்கும்
வரையில் எச்சிலல்ல எதும்புள்ள குள
த்துநீர், கிணற்றுநீர், தோல் முதலிய
ஆறியநீர், நாய், நரி, குரங்கு, மனிதன்.
காக்கை, ஊர்ப்பன்றி, கழுதை, காட்டுப
பசு, யானை, மயில், புலி முதலிய மிருகங்
கள் முழுகியிறந்ததைக்கண்ட நீர், உண்
ணத்தகாத நீர்களாம். நீரை அண்ணாந்தும்,
குனிந்தும், படுத்து முண்ணலாகாது. இவ்
வாறருந்தில் ரோகங்களுண்டாம். பாத்தி
ரத்தை வாயாற் கடித்தருந்தில் ஒரு ரோக
மும் வாராது. "தண்ணீர், குடிக்க வென்
ருற் பாத்திரத்தைக் கோதறவே வாயாற்,
கடித்தருந்தத் துனபமறுங் காண்" என்
பதாலுணர்க, நீருண்ணுகையில் பாத்தி
ரத்திலுள்ள நீரைச் சிறிது பூமியிற் சாய்
த்து அருந்துதல் சம்பிரதாயம். இதனை
உண்கையில் சுத்தமான நீரைக் காய்ச்சி
யருந்தின் அது ரூட்சை, வாதாதிக்கம்,
விதாகம், அலசம், வயிற்றுப்பிசம், இவை
களை நீக்கிச் சுக்லவிருத்தியையும் ஆயுளை
யும் வளரச்செய்யும். உண்கையில் அன்
னத்தில் ஈ, மயிர், எறும்பு முதலிய விருக்
கினவற்றைச் சிறிது அன்னத்துடன் புறத்
தெறிந்து கைகால் சுத்திசெய்து புசித்தல்

வேண்டும். இரவில் புசிக்கையில் தீபம் அவியின் அவ்வன்னத்தை வலக்கையால் போஜனஞ்செய்யாது மூடியிருந்து விளக்கு வந்தபின் இலையிலுள்ள அன்னத்தை மாத்திரம் புசித்து எழுந்திருத்தல் வேண்டும். உண்டு முடிந்த பின் எழுந்து புறத்திற் சென்று (கசு) முறை வாய்கொப்புளித்து இடப்புறத்திலுமிழ்ந்து கைகால்களைச் சுத்திசெய்து ஆசமனஞ் செய்தல் வேண்டும்.

**போஜன்** — 1. சிபி குமரன். இவன் குமரன் இருதிகன். கிருதவர்மன் பாட்டன்.

2. அங்கநாட்டரசன், குமரி இந்துமதி.

3. குந்தியை வளர்த்தவன். இவனுக்குக் குந்திபோஜன் எனவும் பெயர். யதுகுலத்துச் சாத்தவன் புத்திரன்.

4. க்ஷத்திரியப் பெண் சோரத்தால் வேற்றாசனைப் புணரப் பிறந்தவன்.

5. விதர்ப்பதேசத்தரசன். இவன் தந்தை இறந்த பிறகு சிறிய தந்தையாகிய முஞ்சன் அரசாளுகையில் சிறியதந்தையுடன் அரசாட்சியில் கொலுவிருக்கையில் ஒரு சோதிடன் இக் குமரனுகிய போஜனைப்பார்த்து இவன் மகாபுகழுடன் அரசாளுவன் என, அதைக்கேட்டு முஞ்சன் சகியாது கொலையாளிகளை அழைத்து அண்ணன் பிள்ளையைக் கொலைபுரியச் செய்தனன். கொலையாளிகள் அவ்வகை கொலைக்களத்திற்குப் பிள்ளையை அழைத்துச் செல்லுகையில் குமரன், "மாந்தாதாச மஹீபதி கிருதயுகாலங்காரா பூதோகத: ஸேதுர்யேன மஹோததௌ விரசித: க்வாஸௌத சாஸ்யாந்தக: அங்யேசாபி யுதிஷ்டிர ப்ரபுருதயோயாதா திவம்பூபதே நைகேனு பிஸமங்கதா வஸு மதிநூநம்த் வயா யாஸ்யதி." "மாந்தாதா முதல் இதுவரை அரசாண்ட சக்கிரவர்த்திகள் தாமாண்ட பூமியை யுடன் கொண்டு போனுரில்லை' எனுங் கருத்தடங்கிய மேற்படி செய்யுளை யெழுதி அக்கொலையாளிகளிடம் கொடுத்தனுப்ப, அவ்வகை கொலையாளிகள் அதை அரசனுக்குக் காட்டினர். அரசன், கொலையாளிகளை அழைத்துப் பிள்ளையைக் கொலைபுரியாது கொண்டுவரச்செய்து அவனுக்குப்பட்டம் அளித்துத் தான் துறவுபூண்டனன். இப்போஜன் சகல சாம்பிராஜ்யங்களையும் அநுபவித்து மகாகவியாகிய காளிதாசனுடன் நண்பு பூண்டிருந்தனன். இவன் (கo)வது நூற்றாண்டில் இருந்ததாகப் பிரசித்தி. இவன் தன்சவைக்கண் கவிரத்னங்கள் பலரைப்பெற்று ஆனந்தித்து வந்தானுயினும் அவர்களில் காளிதாசன், பவபூதி, தண்டியே சிறந்தவராயினர். அம்மூவருள்ளும் காளிதாசனே சிறந்தானுயினன். இக்காளிதாசனை நான்குமுறை இவனுடனிருந்த புலவர் சூழ்ச்சியால் அரசன் பிரிய நேரிடினும் கடையில் போஜன் காளிதாசனிருந்த ஊர்க்கண் வேற்றுருக் கொண்டடைந்து போஜனிறந்தன னெனக்கூறக் காளிதாசன் போஜனையெண்ணி விசனமடைந்து சரமகவிகூறப் போஜன் மரணமூர்ச்சையடையக் காளிதாசன் அரசனெனவறிந்து கவியை மாற்றிப்பாடி உயிர்ப்பிக்கக் களித்து நகரமடைந்து களித்துப் பலநாள் புலவனுடன் களித்திருந்தவன்.

6. திரிமதியென்பாள் குமரன்.

**போஜை** — சௌவீர தேசத்தரசன் பெண், சாத்தகியின் தேவி.

## பௌ

**பௌண்டரகவாஸுதேவன்** — இவன் காசிராசன். மகா மாயாவி. விஷ்ணுவைப் போல் பஞ்சாயுதமும் கருடனும் மாயையாற் பெற்றுப் போகங்களை யநுபவித்தவன். (இவன் சகோதரன் இறுதி) இவன் கிருஷ்ண மூர்த்தியுடன் சண்டையிட்டு இறந்தவன். இவன் குமரன் சுதக்ஷணன், இவனைக் கொன்ற கண்ணனைக் கொல்லச் சுதக்ஷணன் ஆபிசாரயாகஞ் செய்து பூதமுண்டாக்கிக் கண்ணன் மீதேவ அப்பூதம் கண்ணனைவிட்டு மீண்டும் சுதக்ஷணனையே கொன்றது. (பார - சபா.)

**பௌண்டரம்** — 1. தெலுங்க நாட்டிற்கு வடக்கில் உள்ள நாடு,புண்டரான் ஆண்டது.

2. பீமன் சங்கிற்கு ஒரு பெயர்.

3. ஒரு யாகம்.

**பௌண்டிரமச்சன்** — பாரதவீரன்.

**பௌதிக சாத்திரம்** — பூதங்களின் நிலைமைகளைக்கூறும் நூல்.

**பௌதிகம்** — பிரமனிடத்து உதித்த அக்னி.

**பௌத்தமதம்** — பூர்வகாலத்து ஆரியர்கள் கடவுளின் பேரருளால் இறந்த பின்னும் ஆன்மா சுகத்துட னிருக்கு மென்னும் கொள்கையை உடையவர்களா யிருந்தார்கள். இக் கொள்கையை மாற்ற இரண்டு மதபோதகர்கள் தோன்றினர். அவர்களில் ஒருவர் விதேக நாட்டிலுள்ள வைசாலி நக

ரத்தில் அரசகுலத்தில் பிறந்த ஜைனமத ஸ்தாபகரான வர்த்தமானர் என்னும் மகா வீரரும், கி. பி. ஆறுவது நூற்றாண்டில் பஸ்டி ஜில்லாவில் (U. P.) கபிலவாஸ்து என்னும் பட்டணத்தில் அரசாண்ட சாக்கிய குலத்தவரான பௌத்தமத ஸ்தாபகராகிய சித்தார்த்தரும்பிறந்தார்கள். சித்தார்த்தர் போதித்ததாவது. "யாவனொருவன் தன்னை அடக்கி ஆளுகிறானோ அவன் துன்பத்தினை ஒழித்து நற்கதி அடைவானென்றும், மனோவாக்குக் காயங்களில் சுத்தமாக விருக்கவேண்டுமென்றும், தன்னுயிர்போல் மன்னுயிரைக் கருதவேண்டு மென்றும், ஜாதிமத வித்தியாசங்கள் கூடாதென்பதையும்" முதல்முதல் காசிக்ஷேத்திரத்தை அடுத்த சாருத் (Saranath) என்னு மூரிலுள்ள டீர் பார்க் (Deer Park) என்னுமிடத்தில் பிரசங்கித்தார். பிறகு 44 வருஷம் பேகார் அயோத்தியா முதலிய இடங்களில் இம்மதக் கொள்கையைப் பரவச்செய்து (80)வது வயதில் கி.பி.477-இல்நிர்வாணமடைந்தார். புத்தமதம்காண்க

**பௌத்தம்** — புத்தனைக் காண்க.

**பௌத்தர்** — புத்தமதத்தவர்.

**பௌத்திய மன்வந்தரம்** — ஆங்கிரசருக்குப் பூதியென்னும் புத்திரன் இருந்தான். அவன் கடுங்கோபியாதலால் தேவர் பயந்து அடங்கி நடந்துவந்தனர். இவன் தனக்குப் புத்திரரில்லாமையால் நாம் தவஞ்செய்யினும் தேவர் நமக்குப் புத்திரப்பேறு அளியார் என்று தன் சகோதரன் சுவர்ச்சஸ் செய்யும் யாகத்திற்குக் கர்த்தாவாய் இருந்து யாகஞ் செய்விக்கையில் ஒரு அவசர நிமித்தமாகத் தனக்குப் பதில் தன் மாணுக்கன் சாந்தியை யாகாக்னியை வளர்க்கக் கட்டளை யிட்டுச்சென்றனன். சாந்தி பூசைக்குப் புஷ்ட மெடுக்கச் செல்ல ஓமாக்னி சாந்தமாயிற்று. சாந்தி வந்து அக்னி சாந்தமாகக் கண்டு ஆசாரியர் கோபிப்பார் என்ற அச்சத்தால் நடுங்கி அக்னிதேவனைத் துதித்தனன். அக்னி தேவன் தரிசனம் தந்து என்னவரம் வேண்டுமென்னச் சாந்தி அக்னியை நோக்கி என் குரு கடுங்கோபியாதலால் முன்போல் யாகாக்னி வளரவும் அவர்களுக்குச் சர்வபூதங்களிடத்தும் தயையுண்டாகவும் அவருக்கு ஒரு புத்திரன் உண்டாகவும் வரம் பெற்று முன்போல் யாகாக்னி வளர்த்துக்கொண்டிருக்கையில் ஆசாரியர் வந்து மாணுக்கனைக்கண்டு இன்றைக்கு என் மனம் எல்லாரிடத்தும் தயையுள்ளதா யிருக்கிறது. இதற்குக் காரணம் தெரியவில்லை யெனச் சாந்தி நடந்தவைகளைக் கூறப் பூதி சந்தோஷித்து மாணுக்கனுக்குச் சகல கலைகளையும் கற்பித்துச் சில நாளில் பௌத்தியன் என்னும் மனுவைப்பெற்றான். (மார்க்கண்டேயம்.)

**பௌமன்** — 1. (சங்.) பரதன் குமரன.

2. பூமிபுத்திரன் செவ்வாய்.

3. விஸ்வகர்மனுக்கு ஒரு பெயர் (பா. ஆதி.)

**பௌமாசி** — சிபி குமரி, இவள் நிதந்துவின் குமரர் ஐவரை மணந்தனள். இவள் ஐவரை மணந்ததால் ஐந்து அரசர் குலமுண்டாயிற்று. நிதந்துவைக் காண்க.

**பௌரவர்** — பூருவம்சத்தவர்.

**பௌராவி**—வசுதேவரின்தேவியரில்ஒருத்தி.

**பௌரிகன்** — புரிகையெனும் பட்டணத்தரசன். இவன் தீய ஒழுக்கத்தால் மறுபிறவியில் நரியாய்ப் புலாலுணவு நீங்கி இனமாகிய நரிகளால் விலக்கப்பட்டுப் புலிக்கு மந்திரியாகி இருந்தனன். இவ்வாறிருக்கையில் நரிகள் புலியிடம் கோள்கூறப் புலி கொல்ல விருக்கையில் தாயால் விலக்கப்பட்டுப் பிறகு நரியான தான் மற்றை நரிகளின் கபடத்தைத் தெரிவித்து மந்திரி பதவியை விட்டு நற்கதி யடைந்தனன். (பாரா - சாந்.)

**பௌர்ணமாசம்** — பௌர்ணமியில் செய்யும் யாகம்.

**பௌர்ணமாசன்** — ஸ்ரீ சாதகர்ணன் குமரன். இவன் குமரன் லம்போதகன்.

**பௌலஸ்தி** — சூர்ப்பணகை.

**பௌலோமதீர்த்தம்** — தென்கடற் கருகில் உள்ள தீர்த்தம்.

**பௌலோமம்** — புலோமரால் செய்யப்பட்ட நீதிநூல்.

**பௌலோமர்** — வைச்வாநரன் என்னும் அரக்கன் குமரியாகிய புலோமையிடம் மரீசி ரிஷியாற் பிறந்த அரக்கர். இவர்களை அருச்சுநன் கொன்றனன்.

**பௌலோமன்** — இந்திரன் குமரன்.

**பௌலோமி** — இந்திராணிக்கு ஒருபெயர்.

**பௌஷியன்** — உதங்கருக்குக் குண்டலமுதவிய அரசன். இவன் மனைவி ஓர் இருடி புங்கவர் அநுக்கிரகத்தால் நாகாத்தின குண்டலம் பெற்று உதங்கர் கேட்க நாயகன் கட்டளைப்படி கொடுத்தனள்.

## ம

**மகசுவரன்** — (சூ.) அகமருஷணன் குமரன்.

**மகட்பாலிகல்** — மயில்போன்ற மேன்மையினையுடைய மகளைவேண்டிய மூட்டுவாயாற் சிறந்த வீரக்கழலினை யுடையான் முறைமையைச் சொல்லியது. (பு. வெ.)

**மகட்பாற்காஞ்சி** — அழகிய ஆபரணத்தினையுடையாளை எனக்குத் தருகவென்றுசொல்லும் அரசனோடு மாறுபட்டு நின்றது. (பு. வெ.)

**மகண்மறுத்து மொழிதல்** — வெய்தான பகையை யுடையவன் மகளைவேண்ட அழகிய குறும்பினுள்ளோர் மறுத்துச் சொல்லியது. (பு. வெ)

**மகதநாடு** — 1. சோழநாட்டிற்கும் தொண்டைநாட்டிற்கு மிடையிலுள்ள நாடு. இது தமிழர் வடக்கில் மகதநாட்டிலிருந்து குடியேறின நாடாகிய தமிழ் நாட்டிற் கிட்ட பெயர்.

2. தருசகனுடைய நாடு, மிக்க சிறப்புடையது. இதன் இராசதானி இராசகிரிய நகர். இந்நாட்டுப் பிறந்த இரத்தின வேலைக்காரர்கள் மிக்க புகழை யுடையவர்கள். (பெ. கதை.)

**மகதந்திரம்** — சிற்பநூல்களில் ஒன்று

**மகதம்** — 1. இது தட்சணமகதம் உத்தரமகதமென இரண்டு வகைப்படும். வங்கதேசத்தருகில் உள்ள நாடு. இது சராசந்தன் வம்சத்தவர் ஆண்டது. பேகாருக்குத் தெற்கு. (மணிமேகலை.)

2. ஒரு தேசம். இதில் ஐந்து பர்வதங்கள் உண்டு, வைகாரம், வராகம், விருஷபம், விருஷிகிரி, அல்லது விருஷபகூடம், சைத்தியக சுவேதி. (பா. பீஷ்)

**மகதி** — நாரதர் வீணை.

**மகதை** — மகததேயம் (சூளா.)

**மகத்தசைவிவரம்** — கார்த்திகை, உத்திரம், உத்திராடம், இதற்குச் சூரியதசை வருஷம், சு. ரோக, அஸ்தம், திருவோ- இதற்குச் சந்திரதசை, வருஷம், எ, மிருகசித்தி, அவிட்டம் - இதற்கு குஜதசை, வருஷம். எ. திருவா, சுவா, சதை, இதற்கு ராகு தசை வரு - கஅ. புனர், விசா, பூரட் இதற்குக் குருதசை வரு-கசு. பூசம், அனு, உத்திரட், இதற்குச் சனிதசை வரு- கக, ஆயிலி, கேட்டை, ரேவதி இதற்குப் புததசை வருஷம் - கஎ. அசு, மகம், மூலம் இதற்குக் கேதுதசைவரு - எ. பரணி, பூரம், பூராடம், இதற்கு சுக்கிரதசைவரு உ0.

**மகத்தியன்** — ஒரு இருடி.

**மகாக்கண்ணன்** — கரன் புத்திரன்; வாயு வருணர்களிடம் வரம்பெற்றவன். இராமமூர்த்தியுடன் யுத்தஞ் செய்து மாயமாய் மறைந்து ஆகாயத்தில் உருமாறி யுத்தஞ்செய்து இராமபாணத்தால் இறந்தவன். இவனுக்கு மகராக்ஷன் எனப் பெயர்.

**மகாகேது** — பிரதய்மனனுக்கு ஒரு பெயர் (பா. வ.)

**மகாசங்கிரமபலன்** — உத்திரத்ரயம், புனர்பூசம், மூலம், திருவோணம், இந்நாட்களின் மகர சங்கிரமமாயின் தானிய விலையேறும். ப்ரணி பூரத்ரயம் ஆயிலியம் கேட்டை இந்நாட்களாயின் தான்யவிலை குறையும். ஒழிந்த நாட்கள் சமமாம். (விதானமாலை.)

**மகவோட்டம்** — மாசிமீ பௌர்ணிமியில் சந்திரனும் மகநக்ஷத்திரமும் உச்சமாகும் போது சந்திரனுக்குத் தெற்கில் ஒரு நக்ஷத்திரம் தள்ளில் காற்பங்கு நாசம், இரண்டு தள்ளில் அரைப்பங்கு நாசம், மூன்று தள்ளில் முக்காற்பங்கு நாசம், சந்திரனுக்கு வடக்குத் தள்ளில் மிகவுஞ் சௌக்யம்.

"காணுமாசிக்கலை மதியைக் கருதுமக மீனன் கதனில், பேணுந்தென்பான் மீன் சேரிற் பெரிதாமஃ கந்தானென்ப, பூணிவிரண்டு முக்காலாம் பொருந்துமூன்றிற் பாதியதாம், சேணில் வடபால் மீன்சேரிற் செகத்திலன்னஞ் சிறிதாமே."

**மகளிரான் மலருமாம்** — (கO) மகிழமாம் சுவைக்க, வழிலைம்பாலைமரம் நட்புற, பாதிரிமரம் நிந்திக்க, முல்லை நகைக்க, புன்னை ஆட, குரா அணைக்க, அசோகு உதைக்க, குருக்கத்தி பாட, மரா பார்க்க, சண்பகம் நிழல்படத் தளிர்த்துப் பூப்பனவாம்.

**மஹா அசனி** — ஒரு தைத்தியன். இவனை இந்திரன் வேண்டுகோளால் விஷ்ணு வதைத்தனர்.

**மகாகண்டம்** — ஒரு புத்தநூல்.

**மகாகர்ணி** — அம்புவீசன் மந்திரி. (பா. ஆ.)

**மகாகாயன்** — திருக்கைலையின் தென்வாயிற் காப்போன்.

**மகாகாலன்** — 1. சிவமூர்த்திக்கு ஒருபெயர்.

2. பாணாசுரனுக்கு ஒருபெயர். (பா. ஆ.)

**மகாகாளம்** — 1. ஒரு தீர்த்தம்.

2. சிவத்தலத்துள் ஒன்று.

**மகாகாளர்** — (1) அரிகரப் புத்திரருக்குச் சேநாபதி, (வீரமாகாளர்) இவர் இந்திராணி தனித்திருக்கையில் அரிகரப்புத்திரர் கட்டளையால் காவல் பூண்டிருந்து அசமுகி இந்திராணியை வலிதில் தூக்கிச் சென்ற காலத்து அவள் காத்தினையும் தன்முகியின் காத்தினையும் வாளால் வெட்டி யெறிந்தவர். வீரபத்திரர்க்குக் காளி தேவியிடம் பிறந்தவர்.

2. கருநிறம், முக்கண், இடது கையிற் கபாலம், வலதுகையிற் சூலம், பாம்பின் பூணூல், அணிந்த சிவாவசரத்தொன்று.

3. சிவகணத்தலைவர், சுறுப்புநிறம், முக்கண், வலதுகரத்தில் சூலம், இடது காத்தில் கபாலம் பெற்றவர்.

**மகாகாளன்** — ஏகாதசருத்ரருள் ஒருவன், தேவிரசாலை.

**மகாகாளேச்வரம்** — தூஷணனைக் காண்க.

**மகாகிருதி** — (சூ.) விதுர்த்தன் குமரன்.

**மகாகுண்டன்** — திருதராஷ்டிரன் குமரன்.

**மகாகுப்தன்** — வேதகிரியில் துவாபரயுகத்தில் கழுகு உருக்கொண்டு சிவபூசை செய்தவன்.

**மகாகைலாசம்** — இதன் பெருமையினை ஆயிரம் வாயினையுடைய ஆதிசேடனாலும் வேத சாஸ்திரங்களாலும் கூறிமுடியாது. ஆயினும், சிவதர்மத்தின்படி சிறிது கூறுவாம். இந்தப் பூலோகத்தின்மேல் புவலோகம் பதினைந்து நூறுயிரம் யோசனை விஸ்தாரம்; அதில் பத்து வாயுக்கள் சஞ்சரிக்கும். வாயுமண்டலம், அப்பால் மேகமண்டலம், அதன்மீது ஆதித்தமண்டலம், அதன்மீது சந்திரமண்டலம், அப்பால் நக்ஷத்திரமண்டலம், அதன்மேல் புதனுலகு, அதன்மீது சுக்கிரனுலகு, அதன்மீது செவ்வாயுலகு, அதன்மீது வியாழனுலகு, அதன்மீது சனியுலகு, அதன்மீது இருடிபதம், அப்பால் துருவபதம், அதன்மேல் சுவர்க்கலோகம், அதன்மேல் மகலோகம், அதன்மேல் சனலோகம், அதன்மேல் தவலோகம், அதன்மேல் ஸத்தியலோகம், அதன்மீது வைகுண்டம், அதன்மீது சிவலோகம். ஒப்பில்லாதவனும் மேருவை வில்லாகவுடையவனும் ஆகிய சிவமூர்த்தி எழுந்தருளிய சிவலோகத்தில் சூர்யப்பிரகாசம்போன்ற பலதேர்கள் ஒருபாலிலும், அழகிய அரம்பையர்கள் பாடும் இயலிசைகள் ஒருபாலிலும், தம்பட்ட முதலான வாச்சியத்தொலி ஒருபாலிலும், மணமருவிய மலர்களையுடைய மரத்தினெழுங்கொருபாலிலும், வேதங்களை யோதும் விரதியர் நிறைந்த வளத்தையுடைய வனங்க ளொருபாலினும், மலையையொத்து விளங்கிய மதில்கள் பலபாலிலும் விளங்கும். புலித்தோ லுடுத்த வரையினன் எழுந்தருளிய சிவலோகத்தில் உன்னதமான ஆயிரக்கால் மண்டபம் ஒருபாலினும், நீண்ட கொடிகளில் கட்டி விளங்கிய மணியோசை யொரு பாலினும், விலையில்லாத நவமணிகுயிற்றிய திண்ணைகள் ஒருபாலினும், விருப்பினை யுடையவர்கள் விரும்புவனவாகிய நவமணிகள் நிறைந்த சங்கநிதி பதுமநிதி ஒருபாலினும், அலைமலிந்த புனலையுடைய நதியணிகள் ஒருபாலினும், வண்டுகள் மூழங்கும் நீலோற்பலம் விரிந்த தடாகங்க ளொருபாலினும், பொன்முடி சூடிய தேவர்கள் கூடுமிடங்கள் ஒருபாலினும் தாள வொத்தின்படி நடனஞ் செய்யும் பெருமையை யுடையவனாய்த் தேவர்கள் தேவனாகிய சிவமூர்த்தி எழுந்தருளித் தனக்குத்தானே ஒப்பாகிய சிவலோகத்தின்கண் மணந்தங்கிய நாண்மலரா லலங்கரிக்கப்பட்ட மாளிகைகள் ஒருபாலினும், தீப்பொரி போன்ற மாணிக்கங்களா லலங்கரிக்கப்பட்ட மாளிகைக ளொருபாலிலும், சிற்ப நூல் விதிப்படி சமைத்த சந்திரனைப் போன்ற மாளிகைகள் ஒருபாலினும், ஒளியையுடைய மரகதப் பச்சையால் அலங்கரிக்கப்பட்ட மாளிகைகள் ஒருபாலினும், சூரியப் பிரகாசம் போன்ற காவலை யுடைய மாளிகைகள் ஒருபாலினும், மாற்றுயர்ந்த பொன் மயமான பெரிய மாளிகைகள் ஒருபாலினும் விளங்கும். ஒருபால் சிங்கம்போலவும் புலிபோலவும் முகத்தினையும் பல முகங்களையுமுடையாரும், ஒருபால் பல கைகளையுமுடையாரும், பல கால்களையு முடையாரும் காவலாக இருப்பர். இம்முகத்தையும் காங் கால்களையும் அந்தத் திவ்யதேகிகள் பொருந்தியிருப்பது திருப்பணிவிடையில் சலியாநிலைப் பொருட்டாம். அந்தச் சிவலோகத்தின்கண் பத்தி வைராக்கியத்தின் உறுதியுடையார், சிவனருளிய திருப்பணியிடத்துக் கருத்துடையார், மல நோய் சற்றுமில்லார், ஒருகுற்றமு மில்லாதவர், எல்லாருஞ் சேர விரும்பும் மேன்மையுடையார், நற்குண மமைந்த திருவுருவ முடையார், பெரிய சடைமுடி யுடையார்

திருநீறணிந்த திருமேனியை யுடையார், சதுர்ப்புஜங்களை யுடையார், முக்கண்களை யுடையார், புலியுடையுடையார், மழுவேல்களை யுடையார், கணங்களாய் நிறைந்து நிற்பர். பின்னும் அந்த உலகத்தில் சிவகணங்கள் திருமகளைக் காட்டிலும் அழகினை யுடையார், ஏவல்செய்ய வாழ்ந்து இருப்பர். ஒருபால் காதில் ஒளிவிடாது விளங்கும் குண்டலத்தை யணிந்த சிவமூர்த்தியின் திருவடிகளைக் கருதும் அறிவே அநுபூதியாய் மற்றப் போகங்களை யெண்ணுதவர், மோகங்களை நீக்குவோர், வேதப்பயன் யாதென்பார்க்கு விடையீவோர் பொருந்தி வாழ்வார். எப்போதும் அவன் திருவடியில் சித்தத்தை வைத்தோரும், பல்வண்ணமாய்த் திருமேனியைக் கொண்டாரும், சூரியனைப்போல் ஒளிவிடுந் தேககாந்தியோரும் ஒருபால் அமர்ந்திருப்பர். இத்தன்மையான சிவலோகத்தில் ஞானமே திருமேனியாக உடையானுக்கு இடபமேறும் வேதியனுக்கு யாவராலும் வியக்கப்பட்ட வுயரமும், பரிசுத்த ஒளியினை யுடைய பளிங்குமயமும் பெற்றவெள்ளிய நவமணிகளாலும் பொன்னினலும் தோரணமாதியான எல்லா வங்கங்களும் தாமே யமைந்த திருக்கோயில் விளங்கும். அதனழகு சொல்லுமளவன்று. அத் திருக்கோயிலின் கீழைக் கோபுரவாயிலில் பாசுபதரும், சைவரும், காபாலரும், மாவிரதியரும், தவத்தினரும், சாரூபம் பெற்றுத் திருப்பணி செய்யா நிற்பர். தென்திசைக் கோபுரவாயிலில் சரஸ்வதியுடன் கூடிய பிரமதேவரும் முனி சிரேஷ்டரான அங்கிராவும், கபிலராதியான சித்தர்களும், சநகர் சநந்தராதியான ராஜருஷிகளும், சத்த இருடிகளும் பணிசெய்தமருவர். மேற்றிசை வாயிலில் பிராமியாதியான சத்த மாதாக்களும், பத்திரை பார்ப்பதி யாதியான அஷ்ட கன்னியரும், எப்பொருள்களையுஞ் சிருஷ்டிக்க வல்ல சண்டப்பிரசண்ட வயிரவாகிய மேலோரும் பணிசெய் தமருவர். வடதிசை வாயிலில் திருமாலும், பதினொருகோடி உருத்திரரும், பன்னிரண்டுகோடி ஆதித்தரும், அஷ்ட வசுக்களும், தெய்வ மகளிரும், காந்தருவ இயக்கரும், சித்தரும், வித்யாதரர்களும், குய்யகரும், சேடரும், எல்லாம் விட்ட பெரியாரும் அமர்ந்து திருப்பணி செய்து இருப்பர். இப்பண்பினை யுடையோர் வணங்கித் துதிக்கும்படி ஆயிர வயிரத் தூண்கள் விளங்கும் மாணிக்க மண்டபத்து நடுவில் அழகிய சிங்கங்கள் தாங்கும் அரியாசனத்தில் ஆயிரம் இதழ்களை யுடைய தெய்வத்தாமரை மலரின்மீது முதல்வனுகியும் ஒப்பற்ற முதல்வனுகியும் கெடாதவனுகியும் உலகமே திருமேனியானவனுகியும் விளங்கும் சிவமூர்த்தி காருண்யத்தால் அடியவரைப் பக்குவப்படுத்தித் திருவடிக்கு அடிமையாக்கும் கருணையே திருமேனியாகக் கொண்ட வேதநாயகியுடன் கட்பொறிக்கு விடயமாகிய வுருவமனைத்தினையுங் காட்டுங் கதிரவன் ஒருங்கு ஒருகோடி கலந்து உதித்ததுபோலும், திருமேனியையும் தெய்வகங்கையும் ஆகாய விளக்காகிய சந்திரனும் கலந்த திருச்சடா முடியில் வேதப்பண்களை இறைவன்களிக்கப் பாடும் தெய்வ வண்டுகள் மொய்க்கும் வாடாத கொன்றை மாலையினையும், கருணையே திருவுருவெனத் தெரிவிக்கும் சோமசூரிய நாட்டங்களையும் நாம் என அகங்காரங் கொண்டாரை அடக்கி யாள்வோமென அடையாளம்பட வைத்த அழகிய நெற்றிக் கண்களையும், தாமும் பசுவும் பாசமும் அழியா நிலைமையுடைய வெனத் தெரிவிக்கும் திரிபுண்டரங்களையும், கருடனுக் கஞ்சி அடைந்த ஆதிசேடனுக்கு அபயந்தந்தாண்டு அவனைக் குண்டலமாகக் கொண்டு அவன் துதிக்கும் வேதவொலி கேட்டுக் களிக்கும் திருச்செவிகளையும், தம்மையடைந்தவர் துன்பம் பொறுது அடைக்கலந்தந்து ஆலாலம் புசித்து அழகிய நீலக்கறை கொண்டு விஷ்ணுவின் சங்கைக் குடியோட்டிய திருக்கழுத்தினையும், அடியவராகிய வாடிய பயிர்களை அருளென்னும் மாரியால் வளர்க்கும் மெல்லிய புன்சிரிப்பையும், இவ்வளவென்று அளவிடப்படாது. வேதத்தையே புரி நூலாகக் கொண்ட அழகிய மலைபோன்ற திருப்புஜங்களையும், மானும் மழுவும், அடியவர்களின் பிறவிப்பிணி நீங்க அமைத்த அபயமும் வரதமும் அமைந்த திருக்கரங்களையும், இயற்கையாய் இவ்வளவின வென மதிப்பிடக்கூடாத நவரத்நங்க ளிழைக்கப் பெற்ற ஆரங்களையும், சர்வ சம்மார காலத்து முடிந்த பிரம விஷ்ணுக்களின் முழுவெலும்புகளைக் குவளை மாலையெனக் கண்டார் ஐயுறவணிந்த திருமார்பினையும், சிவனடியார் திருவுள்ளத்தைக் கொள்ளைகொள்

ன்னும் திருவுதா பந்தனத்தையும், அழகே சுழித்ததுபோலிருக்கிற திருவுந்தியையும், புலித்தோலையணிந்த துடிபோலும் இடையையும், ஆகாசம் போன்ற திருவரையையும், வாழைமரத்தை யொத்த திருத்தொடைகளையும், தாமரை நாளம்போல் கண்டகிதங்களான திருக்கணைக் கால்களையும், சங்காதாங்கசுல் பகத்வாஜா விந்தாங்குச வஜ்ராலாஞ்சனமாய் அடியவர்களுக்குப்பிரம்மாநந்தத்தை விளைவிக்கும் மெல்லிய திருவடிகளையும், இராவணனது பெருமிதத்தைப் போக்கியாண்ட அலையி னெழுங்கொத்த திருவிரல்களையும், பலகோடி சந்திரர்களுக்கு அவ்விரலொழுங்கே பிறப்பிடமென்னும்படி விளங்கும் திருநகங்களையும், தரிசித்தபோதே எல்லாத் துன்பங்களும் குடிவிட்டோட விருண்டு குளிர்ந்த மனத்தையும், வேதநாயகியாகிய பிராட்டியாரின் வடிக்கோல வாணெடுங் கண்களையும், கொள்ளை கொள்ளும் அழகிய திருக்கோலத்தையும், அழகென்னும் பொருளும், எல்லா மங்களங்களும் பிறப்பிடமாகியஉலக நாயகியார் வாமபாகத்தில் எழுந்தருளுதலையும் உடையராய்ச், சுரிகையும் பிரம்பும் ஏந்தி நந்திமாதேவர் தேவர் கூட்டங்களை விலக்கவும், வாணன் குடமுழா வாசிக்கவும், பானுகம்பன் முதலியோர் சங்கத்தொனி முழக்கவும், தும்புரு நாரதர் இன்னிசை வீணை வாசிக்கவும், தெய்வகன்னியர் நடிக்கவும், விநாயகமூர்த்தியும் குமாரக்கடவுளும் வீரபத்திரரும் எவுஞ் சிறு தொழில்களைக் கேட்டு நிற்கவும், பிரமனும் விஷ்ணுமூர்த்தியும் வாய் பொத்தி நிற்கவும், இந்திரன் முதலிய திக்குப் பாலகர் காவலிற் குறைகள் சொல்லவும், பூதகணங்களும் சிவகணங்களும் தேவர், சித்தர், அசுரர், சாரணர், விஞ்சையர், கின்னரர், மாதவர், இயக்கர், உரகர், கருடர், பாதாளவாசிகள் சுத்த யோகிகள் முதலியோர் நின்று துதிக்கவும், திருவோலக்கங் கொண்டு அவரவர்களுக்குத் தக்கபடி அருள் சுரந்து எழுந்தருளி யிருக்கும் திருவுலகமாம்.

**மகாகேளரி** — ஒரு நதி. (பா. பீஷ்.)

**மகாசங்கன்** — பாதாள வாசியாகிய நாகன்.

**மகாசண்டன்** — யமபடன்.

**மகாசதாசிவன்**—இவர் இருபத்தைந்து திருமுகத்தோடு கூடிச் சதாசிவருக்கு மேற்பட்டுப் பரசிவாபேக்ஷையுள்ள சிவமூர்த்தி. இவர், நிவர்த்தி, பிரதிஷ்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதை முதலிய அபர விந்து கலைகளாலும், இந்திகை, தீபிகை, ரோசிகை, மோசிகை, ஊர்த்வ காமினி, முதலிய அபரநாதகலைகளாலும், சூக்மை, அதிசூக்மை, மிருதை, அமிருதை, வியாபினியென்னும் பரவிந்து கலைகளாலும், வியாபினி, வியோமரூபை, அநந்தை, அநாதை, அநாசிருதையெனும் பரநாதகலாரூபத்தாலும் வியாபிக்கப்பட் டிருப்பர்.

**மகாசத்தர்** — பசுவின் வயிற்றிற் பிறந்த ருஷி. பரிச்சித்துப் பாம்புகடித் திறக்கச் சாபம் அளித்தவர்.

**மகாசமுத்திரங்கள்** — 1. ஙு. பஸிபிக் மகா சமுத்திரம், இது, உத்தரதக்ஷிண அமெரிகா கண்டங்களின் மேற்கரைகளிலிருந்து ஆசிய, ஆஸ்திரேலியாக்களின் கீழ்க் கரையளவும் விசாலித்திருக்கிறது. அத்லாந்திக் மகாசமுத்ரம், இது, உத்தர தக்ஷிண அமெரிகாக்களின் கீழ்க்கரைகளினின்று, ஐரோப்பா ஆப்ரிகா கண்டங்களின் மேல்கரை வரையிலும் அகன்றிருக்கிறது. இந்துமகாசமுத்ரம், ஆசியாவின் தென்பாகத்திலும், ஆப்ரிகாவின் கிழக்கிலும், அமெரிகாவின் மேல்பாகம் வரையிலும் அகன்றிருக்கிறது. உத்தரமகா சமுத்ரம், வடதுருவத்தையும், தக்ஷிண மகாசமுத்ரம் தென் துருவத்தையுஞ் சூழ்ந்திருக்கிறது. (பூகோளம்.)

2. பஸிபிக் மகாசமுத்திரம், அத்லாண்டிக் மகாசமுத்திரம், இந்துமகாசமுத்திரம், (ஆர்க்டிக்)உத்தரமகா சமுத்திரம், தக்ஷிண மகா சமுத்திரம்.(அண்டார்டிக்.)

**மகாசமுத்திரங்களின் பகுதிகள்** — வளைகுடாக்கள், விரிகுடாக்கள், கடற்கால்கள், ஜலசந்திகள் முதலியன. வளைகுடா என்பது பூமிக்குள்சென்று இரண்டு பூபாகங்களைக் கரையாக்கொண்ட நீர்ப்பகுதி, விரிகுடா என்பது விரிந்து பூமிக்குள் சென்ற நீர்ப்பகுதி இதுவே கடல். கடற்கால் என்பது கடல் பூமிக்குள் சென்றிருப்பது. ஜலசந்தி என்பது இரண்டு நீர்ப்பாகங்கள் இரண்டு பூமிகளால் நெருக்குண்டு சந்திக்கும் இடங்கள்.

**மகாசாத்தா** — அரிகரப்புத்திரரைக் காண்க.

**மகாசாலன்** — ஜநமேசயன் குமரன். இவன் குமரன் மகாமனசு.

**மகாசிந்தன்** — இவன் கைலாயத்தின் கிழக்கின் கணுள்ள ஸ்ரீ துவாரத்தின் காவலாளி

**மகாசிரன்**—(1) ஒரு அசுரன். (2) ஒரு ரிஷி. (பா. சபா.)
**மகாசுவேதை** — புண்டரீகனை மணந்தவள்.
**மகாச்சுவாலை** — விபாசாரிகள் அடையும் ஒரு நரகம்.
**மகாதபதி** — காம்பிலி நாட்டரசன், இவன் தேவி சுமதி, இவன் தன் தேவியுடன் களித்திருக்கையில் துருவாசர் வர அவரைக் கவனியாதிருந்ததால் அபஸ்மாரியாகச் சாபம் பெற்றவன்.
**மகாதேவன்** — சந்திரனை அதிட்டித் திருக்கும் சிவமூர்த்தம். இவருக்குப் பலவிகாணர் எனவும் பெயர். இவரது சத்தி பலவிகரணி.
**மகாநதி** — A river in Orissa.
**மகாநந்தபாராயணன்** — சசிவர்ணனைக்காண்க. இவனுக்கு மகரந்த பாராயணன் எனவும் பெயர்.
**மகாநந்தி** — மகததேசாதிபராகிய சைசுநாகரில் இறுதியான அரசன். இவனுக்கு மகாபத்மன் எனவும் பெயர். இவனுக்குப் பின் நந்தன் அரசனயினன்.
**மகாநாபன்** — அசுரன், இரண்யாக்ஷன் புத்ரன்.
**மகாநந்தை** — சத்திபீடங்களில் ஒன்று. இது மகேந்திரத்துள்ளது.
**மகாபதுமன்** — 1. நந்தனைக் காண்க.
2. அஷ்டமாநாகங்களில் ஒன்று. குபேரதிசைக் காவலாளி.
**மகாபதுமபுரம்** — கோமதி தீரத்திலுள்ள பட்டணம். (பா. சா.)
**மகாபத்மம்** — பூமியில் தென்பாகத்தைத் தாங்கி நிற்கும் திக்கு யானைகளிலொன்று. (இரா - பால.)
**மகாபயன்** — தருமன் குமரன்.
**மகாபாதம்** — சோமராய மகாராஜன் கேட்டுக்கொள்ள சாரங்க முனிவரியற்றிய வடமொழிபாதசாத்திரம்
**மகாபலலிங்கம்** — கோகரணத்தில் உள்ள சிவலிங்கம்.
**மகாபலன்** — 1. சுமாலி குமரனாகிய அரக்கன்.
2. அதிபலன் குமரர்; இருஷபதீர்த்தங்கருக்கு இரண்டாம் பிறவி.
3. சிவகிங்கரன்.
**மகாபலி** — ஒரு அசுரன். பலியைக் காண்க.
**மகாபாத** — 1. திருதராட்டிரன் குமரன்.
2. இரண்யாக்ஷன் குமரன்.
**மகாபாகை** — சத்திபீடங்களில் ஒன்று.
**மகாபாசன்** — இருஷபனுக்குச் சயந்தியிடம் உதித்த குமரன்.
**மகாபாதகங்களாவன** — பிரமஹத்தி, கள்குடித்தல், களவு, குருபத்தினி கமனம், பொய், குரு திரஸ்காரம், வேத நிந்தை, மித்திரவதை, நிஷித்த பக்ஷணம், தன்னைத் துதித்தல், வேதாத்யனம்விடுதல், ரஜஸ்வலையானவள் முகத்தைச் சும்பித்தல், ஒருவன் வைத்த நிக்ஷேபத்தைத் திருடல், தன் தாரத்தை விட்டு மற்றவரிடம் கமனம் என்பவை.
**மகாபாரதம்** — இது வடமொழியில் வியாச முனிவராற் கூறப்பட்ட பாண்டு புத்திரர் முதலியோர் கதை.. இதைத் தமிழில் பெருந்தேவனார், வில்லிபுத்தூரார், நல்லாப்பிள்ளை முதலியவர் மொழிபெயர்த்தனர்.
**மகாபாரிசுவன்**—இராவணன் மந்திரிகளில் ஒருவன். பதினறு கோடிசேனைக்குத் தலைவன். இந்திரசித்திற்குத் துணையாக வந்து இராமபாணத்தால் பிளவுண்டிறந்தான். இராவணன் குமரன் என்பர் சிலர்.
**மகாபாஷ்யபட்டர்**—ஆளவந்தாருக்குச் சாஸ்திராப்யாசமூல்யமாய் இருந்த ஸ்ரீ வைஷ்ணவர்.
**மகாபிரகன்** — கீர்த்திராதன் தந்தை.
**மகாபிஷக்** — சந்தனுவுக்கு ஒரு பெயர். இவன் ஆயிரம் அச்வமேதம், நூறு இராஜசூயமியற்றி இந்திர பதம் பெற்று வாழு நாட்களில் ஒருநாள் பிரமன் சபைக்கு வந்த கங்கையை மோகித்துப் பூமியில் சந்தனுவாகப் பிறந்தவன்.
**மகாபிக்ஷன்** — ஒரு அரசன்.
**மகாபோஜன்** — சாத்துவதன் குமரன், மகாதர்மி. போஜவம்சத்தலைவன்.
**மகாபௌமன்** — க்ஷத்திரியன், சந்திரவம்சம். பூருவம்சத்தவனை அரிகன் புத்திரன். தாய் ஆங்கி, மனைவி, சுயஞ்ஞை, புத்திரன் அயுதானன். (பா. ஆதி.)
**மகாப்பிரகன்** — மிதிலாதிபதி, இவன் குமரன் கீர்த்திராதன்.
**மகாப்ரஸ்தானகமனம்** — இது, அரித்வாரம், கங்கோத்தரி, வதரிகாச்சிரம வழியாக இமயமலையை யேறிக்கடந்து சென்று சுவர்க்க மடையவேண்டிய இடத்தில் தேகத்தை ஒழிப்பது. (பார - மா.)
**மகாமகம்** — இது மாசிமாதத்தில் குரு சிங்கராசியிற்சேரும் புண்ணியதினம். இது பன்னிரண்டுவருடத்திற் கொருமுறை கும்பகோணத்திற் கொண்டாடப்படுகிறது.

**மகாமதி** — ஆங்கிரசபுத்திரி. (பா. வன.)

**மகாமல்லன்** — பல்லவ அரசர்களில் ஒருவன். இவனுக்கு மகாவலி யெனவும் ஒரு பெயர். இவன் காஞ்சியாண்டு பிறகு தன் பெயரால் மகாபலிபுரம் கண்டான். இது ஆரும் நூற்றாண்டு. (ஸ்வெல் - ஆண்டிகுயிடி.)

**மகாமநு** — மகாகாலன் குமரன். இவன் புத்திரர் உசீநரன், திதிக்ஷன்.

**மகாமாயன்** — அதலலோகாதிபதி.

**மகாமாயை** — ஹ்ரீம் என்கிற அக்ஷரத்தையும், பிரணவத்தையும் உருவமாக உடையவள். பகவானிடத்தினின்றும் அவதரித்தவள். பிரமாதிதேவர்களால் துதிக்கப்பட்டவள். சராசரங்களுக்கு முதற்காரணமானவள். இவளுடைய தேஜசால் உலகத்தை விளக்குபவள். நித்யகர்மங்களில் காலையில் பாலியரூபியாய்ப் பிரமனையும் மத்தியானத்தில் யௌவனரூபியாய் ருத்திரமூர்த்தியையும், சாயங்காலத்தில்வார்த்திக ரூபியாய் விஷ்ணுவையும் அடைபவள். (கல்கிபுராணம்)

**மகாமாரி** — இவள் கறுப்பு நிறத்துடன் மூன்று சிரங்களுடன் கூடினவள். இவளது முதற்சிரம் கிழக்கில் பகைவர் நடுங்கத்தக்க கோர உருவுடன் இருக்கும். மற்றொருசிரம் தெற்கில் கோரப்பற்களுடன் கூடிப் பிடுங்கித் தின்னும் ஆவலுடன் இருக்கும். மேற்கிலுள்ள சிரம் சாந்தகுணத்துடன் இருக்கும். இதுவே வேண்டியவர் விரும்பிச் செய்யும் பூசைமுதலியவற்றுப் பலன்தருவது. இம்முகங்களுள் முதலிற் கூறிய முகம் தாமதமாகிய கருநிறமும், நடுவிற் கூறிய முகம் ரஜோகுணமாகிய செந்நிறமும், கடையிற் கூறிய வெண்ணிறமாகிய முகம் சத்தவகுணமும் உடையதாம். இவளுக்குச் சதுர்ப்புஜம், ஒரு கரத்தில் வில், மற்றொன்றில் கத்தி, மற்றொன்றில் கட்வாங்கம், மற்றொன்றில் சூலம் பெற்றிருப்பள். (ஆக்னேய புராணம்.)

**மகாரசன்** — கேகய தேசாதிபதி. குமரி பத்திரை.

**மகாரதன்** — 1. காமரதன் குமரன். இவன் குமரன் விண்டுவேன்.

2. பிரசை குமரன்.

**மகாரதர்**—(1)இருதவர்மன், அநாதிருஷ்டி சமீகன், சமிதிஞ்சயன், கங்கன் சங்கன், குந்தி, பிரசேனசித்தெனும் அந்தகபோஜன் குமாரும், அவனும்சாருதேஷ்ணன், சக்ரதேவன், சாத்தகி, பலராமன், கண்ணன் சாம்பன் முதலியவர்.

(2) யுயச்சு எனப்பட்ட காணன், துச்சாசனன், துஸ்ஸஹன் தர்மருஷணன், விகர்ணன் சித்ரசேநசன், விவிம்சதி, ஜயன், ஸத்தியவிரதன், புருமித்திரன், துரியோதனன், இவர்கள் பாரதரில் மஹாரதராவர்.

**மகாரத்னங்கள்** — முத்து, பொன், வைடூர்யம், பத்மராகம், புஷ்பராகம், கோமேதகம், நீலம் (காருத்மதம்), பச்சை, பவளம், (விஷ்ணு தர்மோத்ரம்.)

**மகாராட்டிரம்** — கூர்ச்சரத்திற்குத் தென்னடு.

**மகாராஜிகர்** — இருநூற்றொருபதின்மராகிய கணதேவ பேதம்.

**மகாரோமன்** — (சு.) கீர்த்திராதன் குமரன்.

**மகாரௌரவம்** — ஒரு இராஜநரகம். தீமயமானது. ஒன்பது யோசனை விசாலமுள்ளது. தீயபிராணிகளால் இதில் பாபிகள் துன்புறுவர்.

**மகாலட்சுமி** — 1. ஒரு காலத்தில் மகிஷன் கொடுமைகளைத் தேவராதியர் மும்மூர்த்திகளிடம்கூறத் திரிமூர்த்திகளுக்குக் கோபமுண்டாயிற்று. அக்கோபத்தீயினால் உண்டானதேஜோரூபமே மகிஷா சுரமர்த்தனியாகிய மகாலக்ஷ்மி. (தேவி - பா.)

2. திருமகளுக்கு ஒரு பெயர்.

**மகாலயஅமாவாசை**—புரட்டாசி மாதத்திய அபரபட்சத்தில் கன்யாராசியில் சூரியன் பிரவேசிப்பது மகாலயமெனப்படும். அமாவாசைக்குமுன் பதினைந்து நாள் பிதுர் சிரார்த்தத்திற்குரிய நாள்களாம். இதில் பிரதமை, தனசம்பத்தும், த்விதியைப் பிரஜாலாபமும், த்விதிய வளர்ச்சிலாபமும். சதுர்த்தி, சத்துருநாசனமும், பஞ்சமி சம்பத்தும், ஷஷ்டி புகழும், ஸப்தமி கணாதிபத்யமும், அஷ்டமி, சிறந்தபுத்தியும், நவமி ஸ்திரீசம்பத்தும், தசமி, இஷ்டசித்தியும், ஏகாதசி, வேதசித்தியும், த்வாதசி, பிரஜாவிருத்தி, மேதை, பசு, புஷ்டி, சுவாதந்திரியம், தீர்க்காயுளும், உண்டு. சதுர்த்தசி, யந்திரங்களால் இறப்பார்க்குச் செயின் நலம். இந்தப் பக்ஷமுழுதும் சிராத்தஞ் செயின் வருஷமுழுதும் செய்த சிராத்த பலனுண்டு. இக்காலத்தில் யமபுரத்திலிருந்து பிதுர்க்கள் பூமியில் வந்து வசிப்பா

ராகையால் யமபுரம் சூன்யமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் பரணியிலும் அஷ்டமியிலும் கஜச்சாயையென்று கூறப்படும் திரயோதசியிலும் சிரார்த்தஞ் செயின் கயாசிரார்த்த பலனுண்டு. அமாவாசை, பரணி, த்வாதசி, இவ்வகளில் திதிநக்ஷத்திரவாரதோஷம் வேண்டா.

மகாவர்மன் — கந்தன்.

மகாவாகு — இரண்யாக்ஷன் புத்திரன்.

மகாவாதரோகம் — (உ௪) வகை, பாதஹரிஷவாதம், கண்டகவாதம், களாயகஞ்சவாதம், சம்பூக சிரிஷவாதம், கிருத்திரசிவாதம், ஊருஸ்தம்ப வாதம், அபதந்திரகவாதம், பக்ஷகாதவாதம், தண்டகவாதம், ஆக்ஷேபகவாதம், பாஹ்யா யாமவாதம், அந்தராயாமவாதம், விஸ்வபித்வாதம், அவபாகுக வாதம், அர்த்திதவாதம், சர்வாங்கவாதம், அறுசிரம்சவாதம், சிக்வாஸ்தம்ப வாதம், விரணாயாமவாதம், சிரக்கிரகவாதம், கஞ்சவாதம், கல்லிவாதம், பங்குவாதம், பாததாகவாதம் என்பன.

மகாவிந்தன் — துரியோதனன் தம்பி.

மகாவிரதி—சைவத்தில் ஒருவித பேதவாதி. இவன் எல்லா விதத்தினும் ஒப்பானுயினும் இவன் சிவமூர்த்தி எலும்பு மாலை முதலிய தரித்தமூர்த்தியாய் அருள்வர் என்பன். பின்னும் இவன் பதி, கிரியா சத்தியின்றி ஞான சத்தியால் ஆத்மாக்களைப் பெத்தாவத்தை படச் செய்யும் என்றும், பசு, மும்மலத்திலும், பந்தப்பட்டுச் சிவனது ஞானசத்தியால் சகந ஏதுவாமென்றும், பாசம், பசுவிற்குப் பந்தமாய் ஞானசத்தியால் சத்தியொடுங்குமெனவும், ஆத்மாதீலக்ஷயால் மும்மலங் கெடச் சிவபூஜாதுரந்தரனுய்ச் சிவஞானமடைந்து சிவலோகத்தில் ஞானமாத்திரமாயிருப்பன் எனவும் கூறுவன். (தத்துவ.)

மகாவீரன் — 1. பிரிய விரதனுக்குப் பெரிஷ்மதியிடம் உதித்த குமரன். இவன் ஊர்த்தரேதஸ்.

2. சைநகுருக்களுள் ஒருவன்.

மகாவீரஸ்வாமி — இவர் வட இந்தியாவில் குண்டலபுர அரசன் சித்தார்த்தனுக்கும் அவன் மனைவி பிரியகாரணிக்கும் பிறந்தவர். இவர் தமது அரசியலை வெறுத்துத் துறவுபூண்டு யாகம், மாமிசபக்ஷணம், பலியிடல், மறக்காரியம், அகிம்சை பரமதர்மம் என்று போதித்து தமது (எஉ) ஆம் ஆண்டில் வடக்கே பாவாபுரி என்னுமிடத்தில் கார்த்திகை சுத்தகிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் நிர்வாண மடைந்தனர். அந்தச் சமயத்தில் யாவருங்காண ஒரு பெருஞ்சோதி உண்டாயிற்று. அன்று முதல் அவரது சோதி காரணமாக ஒளிகொண்ட தீபவரிசைகள் ஏற்றித் தீபாவளி கொண்டாடினர். இதுவே தீபாவளி பண்டிகை. (அருகமதம்.)

மகாவீரியன் — 1. பிருகுத்ரதன் குமரன்.

2. புமன்யன் குமரன்.

3. குரோத கீர்த்தி குமரன்.

4. மன்யு குமரன்.

மகாளவனம் — இஃது உஞ்சை நகரின் புறத்தேயுள்ள ஒரு காடு. இதில் ஒரு துர்க்கை கோயிலுண்டு. அது யூகிக்கும் அவனுடைய நண்பர்களும் தனியேயிருந்து ஆலோசனை செய்தற்குரிய இடமாக இருந்தது. (பெ. கதை.)

மகானுபாவமதம் — இம்மதஸ்தாபகன் கிருஷ்ணபட் என்பவன் சாலிவாகனசகம் ஏறக்குறைய 1001-இல், ராக்ஷசபவனத்திற்குக் கிழக்கிலிருக்கும் சேம்பை என்னும் கிராமத்தில் பிறந்தவன். இவன் ஓர் வேதாளத்தை உபாசித்து ஒரு மகுடம் பெற்றிருந்தனன். அந்த மகுடம் தலையிலுள்ளவரையில் இவன் கிருஷ்ணமூர்த்தியைப் போல் காணப் பட்டனன். ஆதலால் இவனை உலகத்தார் கிருஷ்ணமூர்த்தியின் அபரா அவதாரமென்று எண்ணி யிருந்தார்கள். இம்மதாசாரம் — இவர்கள் கிருஷ்ணபட் என்கிற கிருஷ்ணமூர்த்தினையும் தத்தாத்திரேயரையும் பூசித்து வருவார்கள். இம்மதத்தவர் கறுப்புடை தரித்துக் கொள்வர். சந்நியாசிகள் க்ஷௌரம் செய்து கொள்ளுவார்கள். கிரகஸ்தர் க்ஷௌரம் செய்து கொள்ளக்கூடாது. மத ஸந்நியாசிகளுக்கு மகனந்த என்று பெயர். (சகலார்த்த சாகரம்).

மகான்—1. பூதனுக்குச் சுரபி யிடத்து உதித்த குமரன்.

2. ஏகாதசருத்ரருள் ஒருவன். தேவி உமை.

மகாஹயன் — சத்ருசித் குமரன்.

மகிமா — 1. பகனுக்குச் சித்தியிடம் உதித்த குமரன்.

2. ஒரு சித்தி. சித்திகளைக் காண்க.

மகிஷநந்தன் — ஸஹாஜித் குமரன். இவன் பெயரால் ஒரு பட்டணமுண்டாயிற்று.

மகிஷநாடு—மைசூர். இதுவே எருமை நாடு.

**மகிஷன்** — 1. தேவருடன் யுத்தஞ் செய்த தைத்தியரது தோல்வியைப் பொருத திதி தவம்புரிந்து சுபார்சுவ முனிவரால் மகிட ரூபமாகிய இவனைப் பெற்றுத் தவத்திற் கனுப்பி வரம் பெறச்செய்து தேவர்மீது ஏவினள். இவன் மகா பலசாலி. இவனைச் சத்தி காளியை யேவி வெல்வித்தனள். இவன், காளிக்குப் பயந்து தடாகத்தில் ஒளிக்கக் காளி தான் ஏறியிருந்த சிங்கத்தைத் தடாகத்தில் ஏவச் சிங்கம் நீரைப்பருகக் காளி இவனைக் கொன்றனள், இவன் எருமை வயிற்றிற் பிறந்தவனென்றும் புராணம் கூறும். இவன் குமரன் கயாசுரன். (காசிகாண்டம்.)

2. அநுகிலாதன் இரண்டாம் புத்திரன். தாய் சூசமி.

3. புலிமுகனைக் காண்க.

**மகிஷாசுரன்** — இவன் ரம்பனென்னும் அசுரபுத்ரன். இந்த ரம்பன் அக்கினியிடம் வரம்பெற்று ஒருநாள் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருக்கையில் எருமையைக் கண்டு புணர அந்த எருமையிடம் கருவுண்டாயிற்று. இந்த ரம்பன் வேறு எருமைக் கிடா அதனிடம் சேராவகைக் காத்திருக்கையில் ஓர் கிடா அதனருகு வர ரம்பன் அதனைத் துரத்தி அதனால் குத்துண்டிறந்தான். பிறகு ரம்பன் தேகத்தைச் சிதையிலிடுகையில் எருமையும் சிதையில் விழத் தொடங்குகையில் பலர் தடுக்கவும் தடைபடாது தீயில் வீழ்ந்தது. அப்பொழுது அதன் கருப்பத்திலிருந்து இரத்த பீஜனாகிய மகிஷன் தோன்றினன். இவன் பட்டணமடைந்து சக்ஷுரன், மகாவீரன், மகோத்கடன், தனுத்யக்ஷன், தாம்பரன், அசிலோமன், உதாக்கன், பிடாவாக்யன் பாஷ்கலன், திரிநேத்ரன் காலன், பந்தகன், என்பவர்களைச் சேனைத்தலைவராக்கிக் கொண்டு, அவர்களைத் தனித்தனி தேவியிடம் யுத்தத்திற்கனுப்பி அவர்கள் இறக்கக்கண்டு தான் யுத்த சந்நத்தனாய்த் தன் உண்மையுருவை விட்டு மன்மதனை யொத்த அழகு வாய்ந்தவனாய்வந்து பிறகு சிங்க வுருவங்கொண்டு சத்தியேறி யிருந்த சிங்கத்தையடிக்க அது இவனை அடிக்கப் பின் யானை யுருக்கொண்டு தேவியுடன் போரிடத் தேவியின் வாகனமும் யானை வடிவங்கொண்டு போரிட இவன் சிம்ப வடிவங்கொண்டு போரிடத் தேவி இவனை வாளினால் வெட்ட அசுரன் மகிஷ வுருக் கொண்டு போரிடுகையில் தேவிசண்டிகை யுருக்கொண்டு துரத்திச்சக்கரத்தை அவன் மீதெறிந்து மாய்க்க இறந்தவன். (தே-பா.)

**மகிஷ்மதி** — ஆங்கீரசபுத்திரி. (பா. வன.)

**மகீபண்டிதன்** — சிவ குருவின் மாமன். இவன் குமரி சூர்யாம்பாள்.

**மகீஸார க்ஷேத்திரம்** — திருமழிசை யாழ்வார் அவதாரத்தலம்.

**மதுகர்னன்** — மகத தேசத்தரசனாகிய விகிந்தனை ஏமாற்றி இராச்சியத்தை அபகரித்தவன்.

**மதுடவேந்தன்** — பப்பார தேசாதிபதியின் குமரன்.

**மதுடாசுரன்** — தேவர்களை வருத்திச் சிவபிரானால் இறந்தவன்.

**மதுடேச்வரி பீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று.

**மகேசன்** — இவர், வாயுபூதத்தை யதிட்டித்து சுத்த வித்தையெனும் உபாதானத்திலே யிருந்து மாயைமுதல்பிருதிவியீறான தத்வங்களைத்தமதாக்கையால்நடத்திச்சுத்த வித்தை, மகேசுரம், சதாசிவம் எனும் (ந) தத்வங்களிலும் சமமாக ஊர்த்வ வியாப்தியாக வியாபித் திருப்பவர். கன்மசாதாக்ய ரென்னுஞ் சதாசிவர் பஞ்சகிருத்யத்தைத் திருவுளத்தமைத்து அநுக்ரகிக்கும் அவதாரமாம். (சதா).

**மகேச்வரர்** — இவர் வெண்ணிற முடையவராய் அரவப்பூணூல் அணிந்து திருக்காத்தில் கத்தி, சூலம், பாணம், ஜபமாலை, அபயம், வரதம், கமண்டலம், பதுமம் கொண்டு சிம்மசர்மமும் கஜசர்மமும், தரித்திருப்பர்.

**மகேச்வரி** — சத்த மாதர்களில் ஒருத்தி. சடாமகுடத்துடன் கூடியவளாய்ச் சந்திர சடாதாரியாய்க் கபாலம், சூலம், கட்கம், வரத முதலிய உடையவளாய் இடபவாகனத்தில் இருப்பள்.

**மகேந்து** — அசோகன் கட்டளையேற்றுப் புத்த சமயத்தைப் பரவச்செய்ய தேசயாத்திரை செய்தவள்.

**மகேந்திரபுரி** — சூரபன்மன் இராஜதானி. விச்வகருமனால் நிருமிக்கப்பட்டது. சூரனுக்குப்பின் கடல் கொள்ளப்பட்டது.

**மகேந்திரம்** — அஷ்டகுல பர்வதங்களில் ஒன்று. இது உத்கலமுதல் ஓரிஸ்ஸா வரையில் வியாபித்திருப்ப தென்பர். இதன் மீது அநுமன் ஏறி இலங்கைக்குப் பாய்ந்

தான் என்பர். இது கஞ்சம் ஜில்லாவிலுள்ள தென்பர்.

**மகேந்திரன்** — கௌசிகனுக்கு மருமகன்.

**மகோசஸ்** — அங்கதேசத்தை யடுத்த மலைநாட்டரசன்.

**மகோதயம்** — 1. விச்வாமித்திரன் பட்டணம், மகத நாட்டிலுள்ளது. இது கன்யாகுப்சமெனவும் பெயர் பெறும்.

2. பப்புருவாகன் அரசாண்டபட்டணம்.

3. தை, மாசி, மாதங்களில் அமாவாசையும், திருவோணநக்ஷத்திரம் கூடிய நாள். இது ஞாயிற்றுக்கிழமையில் வரின் நன்று.

**மகோதயன்** — 1. விச்வாமித்திரனால் வசிட்டர் பொருட்டு யாகத்திற்குப் போகாமல் கிராதனாகச் சபிக்கப்பட்டவன்.

2. இவன் விச்வாமித்திரன் திரிசங்குக்கு யாகஞ்செய்வித்ததை சிந்தித்ததால் விச்வாமித்திரன் இவனைக் கிராதனாகச் சபிக்கச் சாபமேற்றவன். (இரா-பால.)

**மகோதரர்** — 1. ஒரு இருடி.

2. இவர் ராமர் ஜநஸ்தானத்தின் வழியாகத் தீர்த்தயாத்திரை செய்கையில் ராமரால் கொல்லப்பட்ட ஒரு அரக்கனது தலை இவரது கணுக்கால் எலும்பைப் பிடித்துக்கொண்டு விடவில்லை. இவர் சரஸ்வதி நதியைச்சேர்ந்த ஔசனஸ் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்ய அதுவிட்டுப் பாதாளத்தி லமிழ்ந்தது. ஆதலால் அத்தீர்த்தம் கபாலமோசனம் எனப்பட்டது.

**மகோதரன்** — 1. துரியோதனன் தம்பியரில் ஒருவன்.

2. இராவணன் குமரன்.

3. இராவணன் சிறியதாய் குமரன்.

4. இராவணனுக்கு முதல் மந்திரி; பிசாசங்கள் கட்டப்பட்ட பத்துக்கோடி தேர்ப்படை யுடையவன். மகாமாயாவி; மருத்துவனை மாயாசநகனாக ஏவினவன். இராவணனுக்குச் சீதையை விடாதிருக்கப் புத்திகூறினவன். இலக்குமணரிடம் தோற்று ஓடினவன். இந்திரஜித்து வத்தைக்கண்டு தைரியமாய் இந்திரனைப்போல் உருக்கொண்டு வெள்ளையானையேறிக்கொண்டு இலக்குமணருடன் யுத்தத்திற்கு வந்தவன். இந்திரஜித்தின் மாணங்கேட்ட இராவணன் சானகியை வெட்டச் செல்லுகையில் தடுத்தவன்.

5. ஒரு நாகன்.

**மகோதன்** — காலபுத்திராம்சமான பாரதவீரன்.

**மகோற்கடர்** — விநாயகர் திருமூர்த்தத்தில் ஒன்று. காசிபர் பத்தினியாகிய அதிதி தவஞ் செய்கையில் விநாயகர் குழந்தையுருக்கொண்டு எதிரில் தோன்றக் காசிபர் இவர்க்கு மகோற்கடர் என்று திருநாமம் இட்டு வளர்த்தனர். இவ்வகை வளர்த்து வருகையில் தேவாந்தக நராந்தகர்கேட்டுப் பல அரசர்கள் அசுரர் முதலியவரை அனுப்ப அவர்களை வென்று மூன்றாவது வயதில் சித்திரன் என்னும் காந்தருவன் முதலையுருக்கொண்டு தடாகத்தில் விளையாடச் சென்ற தன்னை விழுங்க அம்முதலையை வெளியிலிட்டு அம்முதலைபுருவின் சாபத்தைப் போக்கி ஆகா, ஊகூ எனும் காந்தருவர்கள் பூசித்த பஞ்ச மூர்த்தத்தை மறைத்து அவருக்குத் தம் வாயிடம் அம்மூர்த்தங்களைத் தரிசிப்பித்துப் பிங்களன் முதலிய அசுரரை வென்று இந்திரன் ஏவிய வாயு, அக்கினி, இவர்களது செருக்கையடக்கிப் பிதாவின் சொற்படி காசிராசனுக்குப் புரோகிதராய்ச் சென்று வழியில் ஆயுதம் பெறச் சூரியனை யெண்ணித் தவஞ்செய்துகொண்டிருந்த தூமாக்ஷனைக்கொன்று அவன் புத்திராராகிய ஜநகன், மனு, என்பவர் எதிர்க்கப் பெருமூச்சால் அவர்களைக்கொன்று அவர்களை நராந்தகன் கொலுவில் விழச்செய்து, சிந்தரன், விகண்டன் என்பவரைத் தழுவிக் கொன்று, பின்னும் நராந்தகன் ஏவிய அசுரர் பலரைக் கொன்று கடைசியில் நராந்தகன் தானே யுத்தத்திற்கு வர அவனைத் தமது திருக்கரத்தில் இருந்த கொம்பினால் சிரத்தில் மோதிக்கொன்று காசிபருக்குத் தரிசனம் தந்து ஆநந்த பவனமென்னும் தமது உலகு அடைந்தவர்.

**மக்கட்டாயம்** — தமிழ்நாட்டரசர்களது பட்டவுரிமையில் மூத்தோனுரிமை பெறவரும் பண்டைய வழக்கம்.

**மக்துவாசி** — திருதராட்டிரன் குமரன்.

**மங்கணகர்** —1. இவர் ஒரு பிரமசரிய மநுட்டித்த ருஷி. இவர் சரஸ்வதிநதியில் நிர்வாணமாய்ஸ்நானஞ்செய்துகொண்டிருந்த ஒருத்தியைக் கண்டு வீர்யஸ்கலிதம் செய்தார். அவ்வீர்யத்தைக் குடத்திற் பிடித்தார். அது எழு பாகமாகப் பிரிந்தது. அதில் மருத்கணங்களைச் சேர்ந்த வாயுவேகன், வாயுபலன், வாயுஹா, வாயுமண்டலன், வாயுஜ்வாலன், வாயுரேதன், வாயுசக்ரன் எனும் எழு ருஷிகள் பிறந்தனர். இவர் தர்ப்

பையால் கையில் காயப்பட்டு அதில் சிறந்த சாகரசம் பெருகியது. அதைக்கண்டு களிப்பினுல் கூத்தாடினர். அதைப் பொருத தேவர்கள் வேண்டச் சிவபெருமான் அவர்முன் சித்தாகத்தோன்றிக் களிப்பின் காரணங் கேட்க இருடியுண்மைகூற சிவபெருமான் விரல் நுனியில் தம்கட்டைவிரலையடித்தார். அதில் நின்றும் பஸ்மம் வெளி வந்தது. முனிவர் அடங்கிக் கடவுளைத் துதித்தனர். பின் சிவபெருமான் முனிவர் வேண்டுகோளால் சப்தசாரமெனும் அந்த க்ஷேத்திரத்தில் அமர்ந்தருளினர். இதுபலராமர் தீர்த்தயாத்திரையில் தங்கிய இடம் (பார-சல்வி).

2. ஒரு ரிஷி. இவர் புத்திரர் எழுவர். வாயுவேகன், வாயுபலன், வாயுகா, வாயுமண்டலன், வாயுஜ்வாலன், வாயுரேதஸ், வாயுசக்கரன் கசியபரிஷியின் மானசபுத்திரன் (வாமனபுராணம்).

**மங்கணசித்தர்** — ஒரு சித்தர். இவர் புட்கர க்ஷேத்திரத்தில், வேதியர் குலத்திலே பிறந்து யோகம்பயின்று ஆயிரம் வருடம் தவம் செய்து வந்தனர். இவர் தமது யோகம் நீங்கி ஒரு நாள் சிவபூசைக்கு மலர் எடுக்கச் செல்லுகையில் காலிலும் கையிலும் முட்கள் கிழித்து உதிரம் பெருகிற்று. அவ்வுதிரம் புலால் நாற்றம் ஒழிந்து பரிமளம் மிகுந்து வீசுதலைச் சித்தர் கண்டு தேகத்தில் வடியும் இரத்தம் பரிமளம் வீசுதல் தவத்தின் பெருமை என்று களிப்புடன் ஆனந்தக் கூத்தாடுகையில் இவர் கால் தூமப்பர் எனும் முனிவர்மீது பட அவ்விருடி இவரை மாணுகச் சபித்தனர். சித்தர் முனிவரைக் கேட்க முனிவர் இவ்வாறு (ஈ) வருடம் சென்றபின் சிவபூசையில் இச்சாபம் நீங்குக என அவ்வாறு சிவபூசையில் தீர்வு பெற்றவர்.

2. ஒரு சித்து புருஷர். இவர், சத்தசாசுவ தீரத்தில் சிவபூசை செய்து சிவமூர்த்தியால் அஷ்ட சித்தியும் அடைந்தவர். திருவாரூரில் ஆநந்தேச் சுரலிங்க பூசை செய்தனர் என்பர்.

**மங்கலகேசன்** — ஷண்முக சேனாவீரன்.

**மங்கலசூத்ரம்**—இது திருமணத்தில்கொண்டோன் தெய்வம்வாழ்த்தித் தன் தேக சம்ரக்ஷணார்த்தம் தன் சந்ததி விருத்தியின்பொருட்டும் கொண்ட மனைவியின் கழுத்தில் தேவருஷிகள் புரோகிதர்முதலியோர் சாக்ஷியாகக் கட்டும் அடையாளம். இதற்குத் தாலியென்று மூத்ர்கால தற்கால வழக்கம். இத்தாலியைச் செல்வமுள்ளோர் பொன் முதலியவற்றாலும் மற்றவற்றாலும் செய்து அணிவர். செல்வமில்லா ஏழைகள் மாத்தாலும் ஓலையாலும் செய்து அணிவர். இதனைத் தாலபத்திரமென்னும் ஓலையால் பலர் அணிதல்பற்றியே இதற்குத் தாலியென்று காரணப் பெயருண்டாயிற்று. மாத்தாலியும் உண்டு போலும். இது வடநாட்டில் தற்காலம் சில கீழ்ச்சாதியாரிடத்து நடை பெறுகிறது. இத்தாலியை வடுகரும் தாளிசூத்ரம் என்றும், பொட்டென்றும் வழங்கிவருகின்றனர். இதன் உரு தேசங்கள்தோறும் ஜாதிகள்தோறும் வேறுபடுகிறது. இத்தாலி பலவற்றால் செய்யப்படும் என்பதை "ஸ்வர்ணேனரஜதேனைவாதாம் ரேணதாருஜைரபி அதவாதாலபத்ரேவா பௌஞ்சசதுரஸ்ரகம்" எனும் ஸ்ரீ உத்தரகாரணவாக்யத்தால் அறிக. இதனைப் பதினுறிழைகள் கொண்ட சூத்திரத்தில் கோக்கவேண்டும் என்பது ஷை ஆகமம்.

**மங்கலச் சோல்** — (2ஃ) சீர், எழுத்து, பொன், பூ, திரு, மணி, யானை, தேர், பரி, கடல், மலை, புகழ், மதி, நீர், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிர்தம், இவையும் இவற்றின் பரியாயங்களுமாம்

**மங்கலத்திருநாள்** — புத்தன் அவதாரதினத்தில் புத்தரால் கொண்டாடப்பட்ட திருநாள். இது வைசாக சுத்த பூர்ணிமையில் நிகழ்வது. (மணிமேகலை.)

**மங்கலநிலை** — கங்குவிடத்து மிக்க உறக்கத்தை நீங்கினேன் முன்னே மங்கலத்தைச் சொன்னமிகுதியைச் சொல்லியது. (பு-வெ-பாடாண்).

2. நின்று நிலைத்த முறைமையினையுடைய மங்கலத்தை முறைமையாலே மேவினனென்று சொல்லுதலும் முன்பு சொன்ன துறையேயாம் (பு.வெ.பாடாண்).

**மங்கலமடந்தை** — ஒரு பெண்தெய்வம், மலைநாட்டார் இத்தெய்வத்தை வணங்குவர். (சிலப்பதிகாரம்).

**மங்கலம்** — (அ) சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல்.

**மங்கலவதி** — அரிச்சந்திரன் தங்கை. திலீபன் தேவி.

**மங்கலன்** — செவ்வாய்க் கிரகத்திற்கு ஒரு பெயர்.

மங்கலாதேவி — ஒரு பெண் தேவதை, வடநாட்டாரால் கொண்டாடப்படுபவள்.

மங்கலை — உசத்தியன் தேவி.

மங்களசண்டிகை — 1. மக்கள் சப்தம் சுபத்திலும், சண்டிகை சப்தம் தக்ஷசப்தத்திலும் வர்த்திக்கும் ஆதலாலிவளுக்கு இப்பெயர் வந்தது. பின்னும் மங்கலமென்பது பூமி புத்ரனிடத்தும் வர்த்திக்கும். எவள் பூபுத்ரனால் பூசிக்கப்பட்டவளோ அவள் மங்கள சண்டிகை. பின்னுமங்களன் சூர்ய வம்சத்து அரசன், அவனால் பூசிக்கப்பட்டவள். இவள் துர்க்கா தேவியின் மூர்த்தி பேதம். இவள் கச்யபமுனிவரால் மானஸமாகப் பூசிக்கப்பட்டவளாதலால் மானஜை யென்றும், திரிலோகத்தவர்களால் பூசிக்கப் பெற்றவளும், சிவனுக்குத் தேவியுமாதலின் சிவை யெனவும் படுவள். ஜனமேஜயன் யாகத்தில் நாகங்களைக் காத்தவளாதலின் நாகேச்வரி யெனப்படுவள். விஷத்தை ஹரிப்பவளாதலால் விஷஹரி. நாராயணனது பூர்வ அம்சமாதலின் நாராயணி யெனப்படுவள். ஹரனால் சித்தயோகங்களை யடைந்தவளாதலின் சித்தயோகினி யெனப்படுவள்.

2. பிரகிருதி தேவியின் முகத்தில் தோன்றிய சத்தி. இவள் சிருஷ்டிகாலத்தில் மங்களசுவரூபிணியாயும் சங்காரகாலத்தில் கோபரூபிணியாயும் உள்ளவளாதலால் இப்பெயர்பெற்றனள். இவள் புத்திரபாக்யம் வேண்டியவர்களால் மங்களவாரம் தோறும் பூசிக்கப்படுபவள். இவள் மங்களன் எனும் மநுவம்சத்தரசனால் பூசிக்கப்பட்டு சர்வசித்தியைத் தந்தமையாலும், அங்காரகனால் பூசிக்கப்பட்டமையாலுமிப் பெயரடைந்தனள். இவள் துர்க்காதேவியினம்சம். (தேவி-பா).

மங்களபீடம் — சத்திபீடங்களுள் ஒன்று.

மங்களர் — புத்தர் அவதாரங்களில் ஒருவர்.

மங்களன் — வங்கதேசத்திருந்த ஒரு இடையன், இவனுக்கு (௫000) தேவியர், இவர்களிடத்து இருஷிகள் கோபிகைகளாய்ப் பிறந்தனர்.

மங்களாசரணை — கடவுள் வாழ்த்து, வணக்கம், செயப்படுபொருள். இதுவே தற்சிறப்புப்பாயிரம்.

மங்கலை — பார்வதியின் தோழியரில் ஒருத்தி.

மங்கன் — ஒரு வேதியன். பணத்தாசையால் பணத்தைப் பூமியில் புதைத்து வைத்துச் சாங்காலத்தில் தருமஞ் செய்து நல்வழி யடைந்தவன்.

மங்கி — 1. பண ஆசையுள்ள ஒருவேதியன்.

2. ஒரு பிராமணர் இரண்டு கன்றுகளை வளர்க்க அவற்றைஒட்டகம் தூக்கிச்செல்ல விரக்தியடைந்து முத்தி யடைந்தவர். (பா-சாந்).

மங்கிணி — கௌஷீதக புத்திரனாகிய ருஷி. இவன் புத்திரப்பேறுவேண்டிச் சப்ததாரா தீர்த்தகரையில் ஒரு தீர்த்தங்கண்டு அவ்விடம் தபஞ்செய்து இஷ்டசித்திபெற்றவன். (பதுமபுராணம்).

மங்கையர்க்கரசியார் — சோழராசன் பெண், நின்றசீர் நெடுமாற நாயனார்க்குத் திருத்தேவியார். இவர் சைந சமயத்தினின்று நீங்கி உய்யத், திருஞான சம்பந்த சுவாமிகளைத் தமது பதியாகிய மதுரைக்கு எழுந்தருளச் செய்து சுரத்தின் கொடுமையால் தமது நாயகர் வருந்தியது கண்டு திருஞான சம்பந்த சுவாமிகளைப் பாண்டியனை அடிமைகொண்டு சுரநீக்க வேண்டியவர். (திருவிளையாடல்.)

மசூரிகைரோகம் — இதுவே அம்மை. இது முதலில் சுரத்துடன் சிறுகடலை அளவு தேகமுழுதும் முத்துக்களைப்போல் கொப்புளங்களை யுண்டாக்கும். இதனால் வாயுவால், சரீரநோய், அரோசகம், ரோமச்சிலிர்ப்பு, தலைநோய், கண்ணோய், மூக்கடைப்பு, இக்குணங்களைத்தரும். இது கடலையினளவையும் உருவத்தையும் பெறுதலால் விசர்ப்பி எனப்பட்டது. இதனை வசூரியென்பர். இது கொப்புள வேறுபாட்டால் பெரியம்மை, சின்னம்மை, பனையேறி, தட்டையம்மை, பயறி, ராமக்கம் எனவழங்குவர். (ஜீவ.) இதனை சௌமிய விரேசனங்களாலும், வல்லாரை, செருப்படை, கருப்பூரவல்லி, நிலவேம்பு முதலிய சுரஸகஷாயங்களாலும், தயிர், வெங்காயம், இளநீர், நெற்பொரி, பேயன்பழம், பனங்கற்கண்டு முதலிய தின்பண்டங்களாலும வசப்படுத்த வேண்டும்.

மச்சகந்தி — இவள் பூர்வம் பரிஷத்துக்கள் என்னும் பிதுருக்களுக்குமானஸபுத்ரி, அச்சோத மெனும் தடாகத்திருந்து உண்டானதால் இவளுக்கு அச்சோதை யென்று முன்பெயர். பாத அரசன் வளர்த்தபெண். இவள் ஓடக்கரையில் இருக்கையில் பராசர் கண்டு இவளுக்குச் சுகந்தமளித்துப் புணர்ந்தனர். அதனால் இவளிடம் வியா

சர் பிறந்தனர். இவள் இரண்டாவது, சந்தனுவுக்குத் தேவியாயினள். இவள் யோகசக்தியிழந்து தலைகீழாக விழுகையில் பிதுர்க்களை நோக்கி முறையிட அவர்கள் பயப்படாதே என அவ்விடமிருந்து அவர்கள் கட்டளையால் மீன் வயிற்றுப் பிறந்தனள். இவளுக்குச் சத்தியவதி யெனவும், காளியெனவும் பெயர். அத்திரிகைக் காண்க. (பாரதம்.) தந்தை உபரிசரவசு. மீன் வயிற்றிற் பிறந்த சகோதரன் மச்சியன். இவளுக்குச் சத்யவதி யோசனை கந்தியெனப் பெயருண்டாயிற்று. அச்சோதையைக் காண்க.

**மச்சசம்மாரமூர்த்தி** — (மச்சாரி) மச்சவுருக்கொண்ட விஷ்ணுமூர்த்தி தமது வெற்றியால் பெருமிதமடைய அதனையடக்கத் தேவர் வேண்டுகோளால் சிவமூர்த்தி இவ்வுருக்கொண்டு ஒரு திருக்கரத்தில் திருமணி, ஒரு திருக்கரத்தில் வாள்கொண்டு கடற்கரைசென்று மணியினை யாட்டினர். அதனால் கடல்மீன்கள் ஓசையின் மயங்கி இவரை அடைய அதில் பெருமிதங்கொண்ட விஷ்ணுமூர்த்தியின் கண்ணினை வாளால் பேர்த்துத் தமது திருக்கரத்தில் மோதிரமாக அணிந்தனர். இதுவுமன்றிச் சிவமூர்த்தி கொக்குப்போல் முகமுடையவராய் விஷ்ணுமூர்த்தியைத் தமது வாயில் கௌவிக் கர்வம் அழியச் செய்தனர். (சிவபராக்ரமம்.)

**மச்சபுராணம்** — இது (கச,000) கிரந்தமுள்ளது. இது மச்சாவதாரத் தோற்றம், விஷ்ணு சலப்பிரளயத்தில் மநுவைக் காத்தமை, பிரமசிருட்டி, திரிபுரவதம், தாரகாசுரயுத்தம், பார்வதியார் திருமணம், கந்தர் தோற்றம் முதலியவை யுணர்த்தும்.

**மச்சமனிதன்** — இது, மீன்வகையில்திருந்தியவுரு, இது மன்னுத்தி தியிங்கிலத்திலிருந்து திருந்திய வுருவமென எண்ணுகின்றனர். இதன் ஆணைமெர்மென் எனவும் பெண்ணை மெர்மெய்ட் என்பர். ஆணுக்குக் கழுத்திற்கு மேற்பாகம் மனிதவுரு. பெண்ணிற்கு, இடுப்பிற்கு மேற்பட்டபாகம் மனிதவுரு மற்றவை மீனுரு. இது பூனைபோல கத்துமாம். மீன் முதலியவற்றைத்தின்று ஜீவிக்கும். பெண்ணுக்குத் தலையில் மயிரும் மார்பில் பால்தரும் உறுப்பும்உண்டு. இது அழுகையில் கண்களில் தண்ணீர் ஒழுகுமாம்.

**மச்சமுனி** — இவர் போகர் மாணாக்கருள் ஒருவராகிய சித்தர். இவர் செய்த நூல்கள், திராவகம் (அOO) வைத்தியம் (அOO) இவரைக் குலாலபுராணம் செம்படவர் என்று கூறும்.

**மச்சம்** — ஒருதேசம். கூர்ச்சரத்திற் கருகிலுள்ளது.

**மச்சயந்திரம்** — ஒரு உயரமான கால் ஒன்று நாட்டி அதின்மீது பொன் மீன் ஒன்று இருத்தி அதனடியில் ஒரு சக்கரத்தை அந்தப் பொன்மீனுக்கு இடுக்கண்வராமல் சுழலச்செய்து ஒரு வில்லையும் அம்பையும் வைத்து எவன் அச்சக்கரத்தைச் சுழல்கையில் நிறுத்திவில்லில் அம்பைப்பூட்டி ஒரே பாணத்தால் அதில் உள்ள மச்சத்தை அறுக்கிறானோ அவனுக்குப் பரிசுதருவது. இவ்வகை யந்திரத்தை அருச்சுநன் அறுத்துத் திரௌபதிக்கு மாலை சூட்டினன்.

**மச்சியம்** — ஒரு தேசம். Matsya-Desa, The Country around Jeypur including A'war. Formerly Virata, West of Surasena Desa.

**மச்சியராசன்** — உபரிசரவஸுவின் குமரன். மீனுயிருந்த அப்சரஸு வயிற்றிற் பிறந்தவன். இவனுக்கு மச்சியன் எனவும் பெயர்.

**மச்சியாவதாரமூர்த்தி** — ஒரு கற்பத்தில் நைமித்திகப் பிரளயம் உண்டாயிற்று. அக்காலையில் பிரமன் உறங்கினன். உறக்கம் அறிந்த அயக்கிரீவன் என்னும் அசுரன் வேதங்களைத் திருடிக்கொண்டு கடலில் ஒளித்தனன். இந்த ஏழாமன் வந்தரத்தில் விவசுவானுடைய புத்திரனும், சிரார்த்த தேவன் என்னும் பெயருள்ள சத்தியவிரதன் எனும் இராஜருஷி, கிருதமாலா நதிக்கு ஸ்நானத்தின் பொருட்டுச் சென்று தர்ப்பணாதிகள் முடிக்கையில் சிறுமீன் ஒன்று அரசனை நோக்கி அரசனே நான் சலசந்துக்களால் துன்பமடைகின்றேன், என்னை வேறு ஒரு நல்ல இடம் சேர்க்க என்றது. அரசன் அம்மீனைத் தன் கமண்டலத்துள் விட்டனன். அம்மீன் கமண்டல முழுதும் தன் உடலை வளர்த்து அரசனை வேறிடம்கேட்க, அரசன் வேறொரு பெருங்கொப்பரையில் விட்டனன். அங்கும் அவ்வகைசெய்ய அரசன் ஒருமடுவில் விட்டனன். அம்மீன் ஒரு பெருமீனாய் அரசனை நோக்க, அரசன் அதனை நாராயணன் என்று அறிந்து துதித்துக் கடலில் விட்டனன். அம்மீன் அரசனை நோக்கி அரசனே உன்னைக் காக்கும்வண்ணம் இவ்விடம் அடைந்தேன். இன்றைக்கு ஏழாம்

நாள் ஒரு பிரளயம் உண்டாகப் போகிறது. அக்காலத்து ஒரு ஓடம் நம் ஆக்ஞையால் உன்னையடையும், அதில் நீ சத்த இருடிகளுடனும், ஒஷதிகளுடனும், ஏறி மச்சவுருவமடைந்து உங்களுக்குக் காணப்படும் என் கொம்பில் அப்படகைக் கட்டுக. உன்னைப் பிரமன் உறக்கத்தினின்று நீங்கும் வரையில் காக்கிறேன் என்று மறைந்தது. அவ்வகை அரசன் செய்தனன். மச்சமூர்த்தி அரசனைக் காத்துப் பிரமனது உறக்கத்தில் வேதங்களைத் திருடியொளித்த அயக்கிரீவனைச் சங்கரித்து வேதங்களைப் பிரமனுக்கு உதவினர். இந்த அசுரனுக்குச் சோமுகாசுரன் எனவும் பெயர் கூறுவர். இந்த அரசனே வைவச்சுதமனு, இந்த அவதாரத்தில் மநு, பூதேவி ஒஷதிகளை இரக்ஷித்தார். (பாகவதம்)

**மச்சிலன்** — உபரிசரவசுவின்குமாரன். தாய் கிரிகை

**மச்சேந்திரநாதர்** — 1. சிவமூர்த்தி கடற்கரையில் பார்வதியார்க்குத் தாரகமந்திரம் உபதேசிக்கையில் அவளுக்கு நித்திரை உண்டாக அம்மந்திரத்தை மீன் வயிற்றிலிருந்த பிள்ளைகேட்டுப் புருஷ உருவாகி வெளிவந்தது. இதைக்கண்ட சிவமூர்த்தி மச்சேந்திரனென்று பெயர் கொடுத்தனர். இவர் கோரக்கருடன்கூடி ஓர் அக்கிராரத்தில் வந்து ஒரு பார்ப்பினி வீட்டில் பிச்சைகேட்க அவள் ஒருவடை கொண்டு கொடுக்க வடையைக் கோரக்கர் மச்சேந்திரருக்குக் கொடுத்தனர். அதையுண்ட மச்சேந்திரநாதர் அதன் உருசியை எண்ணி மறுநாளும் வேண்டுமென அவ்வாறே கோரக்கர் அப்பார்ப்பினியிடம் போய்ப் பிச்சை கேட்க அவள் தானியங்கொண்டு வந்துஇடக் கோரக்கர் அதை மறுத்து வடை வேண்டுமென்றனர். பார்ப்பினி இல்லையென்று மறுக்கப் பிடிவாதமாய்க் கோரக்கர் வடையே வேண்டுமெனப் பார்ப்பினி உம்கண்ணைக் குருகேட்டால் கொடுப்பீரோ அதுபோல் இல்லாதது கேட்கின் எவ்வகைத் தரல்கூடும் அங்ஙனம் தருவீரேல் வடைதரலாகுமென்றனள். உடனே கோரக்கர் தமது கண்ணைப் பெயர்த்து அவர்க்குக் கொடுப்பதை உனக்குக் கொடுக்கிறேன் என்று கொடுக்கப் பார்ப்பினி பயந்து நெய்யில் வடைசெய்து கொடுக்கக் கொணர்ந்து குருவின்முன் வைத்தனர். மச்சேந்திரர் இவரைநோக்கி உன்னொரு கண் எவ்வாறு நீங்கியதெனக் கோரக்கர் வரலாறு கூறக்கேட்டு இவரது மனோஉறுதிக்கு உண்மகிழ்ந்து கண்ணளித்து இவரைமகிழாதிருந்தனர். பின்பு மச்சேந்திரநாதர் மலையாளமடையப் பிரேமளா என்பவள் மச்சேந்திரரைத் தன்வசப்படுத்தி, அவரிடமின்ப மனுபவித்திருக்கு நாளில் அவளுக்கு மீனநாதன் என்று ஒரு புதல்வன் பிறந்தனன். மச்சேந்திரர் அவளுடனின்புற்றிருக்கையில் என்னைக் கோரக்கன் அழைத்துச்செல்ல வருவான் என்னக்கேட்டு வருத்தமுடையவளாய் மந்திரிகளைநோக்கி நம் நாட்டுக்குள் துறவிகள் யாரும் அணுகவொட்டாமல் தலைதுமிக்கவெனக் கூறினள். அவ்வாறு காத்துவரும் நாள்களுள் ஒருநாள் கோரக்கர் ஆசிரியரை அழைத்துவரச்சென்று மலையாளம்வந்து ஒருவீட்டில் பிச்சைகேட்க அவ்வீட்டிற் குரியவள் இவரது அழகைக்கண்டு இரக்கமுடையவளாய் அந்நகரத்தின் செய்திகூறினள். இதனால் கோரக்கர் அஞ்சி ஒரு மாநிழலில் சமயம் பார்த்திருக்கையில் கூத்தாடிகள் அவ்விடம்வந்து துயரத்துடனிருத்தல் கண்டு அவர்களை ஏன் வருந்துகிறீரென நாங்கள் இந்நகரத்தரசரிடம் பரிசுபெறலாமென்று வந்தோம். மத்தளமுழக்குவோன் நோய் கொண்டனன். என் செய்வோமெனக் கோரக்கர் நான் மத்தளிகனாகிறேன் நீவிர் வருகவென்று அவருடன் சென்று மத்தளங் கொட்டுகையில்மத்தளத்தொனியால் கோரக்கனென்று அறிந்த மச்சேந்திரர் தமது நாயகிக்குக் கூறஅவள் வருந்தியிருக்குங் காலத்தில் கோரக்கர் மச்சேந்திரரை அழைத்தனர். மச்சேந்திரர் நாயகியையும் குமாரனையும் நீங்க மனமில்லாமல் ஒருநாள் தன்நாயகியுடன் படுத்துறங்குகையில் குழந்தை அணையில் மலோபாதைசெய்ய மச்சேந்திரர் கோரக்கரை அழைத்துக் குழந்தையை நீரில் அலம்பிவா என்றனர். கோரக்கர் குழந்தையையெடுத்துப்போய் ஆற்றிலலம்பிக் கல்மீதுமோதி வெயிலிலுலரவைத்தனர். பின் மச்சேந்திரர் மீனநாதன் எங்கென்று வினவ நீரில் துவைத்து வெயிலில் உலறவைத்தேன் என்று உரைத்தலும் மச்சேந்திரரும் தேவியும் வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு அழுதனர். மச்சேந்திரர் கோரக்கரை நோக்கி மீனநாதனை

அழைத்துவா என்னலும் இவர் கல்லின்மேல் துவைத்ததனால் சிதறியதுகளெல்லாம் நூற்றெட்டு மீனநாதனாய் எதிர்வந்து நின்றன. இவர்களைக் கண்டதாய் என்வயிற்றில் பிறந்த மீனநாதன் எவன் என்ன நூற்றெட்டும் ஒன்றுசேர்ந்து ஒருகுழந்தையாக அதனையீந்தனர். பின் கோரக்கர் மச்சேந்திரரை யழைக்க மச்சேந்திரர் இவனுடன்செல்லாதிருக்கின் இன்னும் என்ன விபரீதம் விளைப்பானோ வென்று மனைவியிடத்து விடைகொண்டு புறப்படுகையில் மனைவி வழியில் செலவிற்கு என்செய்வார் எனக் கோரக்கரறியாது ஒரு பொற்பாளத்தினை ஜோளியில் விட்டு அனுப்பினள். இருவரும் வழிச்செல்லுகையில் ஒரு குளத்தருகிற் சென்று மச்சேந்திரர் இவ்விடத்துக் கள்ளர்உளரோ வெனக்கேட்டு ஜோளியை அவ்விடம் வைத்து அகலக் கோரக்கர் அவ்வகைக் கேட்டதற்குக் காரணமென்னவென்று ஜோளியைப் பார்க்க அதிலிருந்த பொற்பாளத்தைக் குளத்திலெறிந்துவிட்டு அதினெடைக்குத்தக்ககற்களை நிறைத்து வைத்தனர். பின் சிறிது தூரஞ்சென்று மச்சேந்திரர் இவ்வழியில் கள்ளருளரோ வென்னக் கோரக்கர் அப்பயமுமக்கு ஏன் என்றனர். மச்சேந்திரர் ஜோளியைப் பார்க்கக் கற்களாயிருக்கக்கண்டு கோரக்கா நீ நல்ல சீடனல்லை மகனைக் கொலைபுரிந்தாய், பொன்னைக் கொள்ளைகொண்டாய் என்னை விட்டுப் பிரிகவென்னச் சீடர் அவ்வழியிலிருந்த மலையின்பேரில் ஏறிச் சிறுநீர்விட அம்மலையெல்லாம் தங்கமாகக் குருவை நோக்கி உமதுபொருளை எடுத்துக்கொள்க என மச்சேந்திரர் மாயைநீங்கி சீடனைப் புகழ்ந்தனர்.

2. இவர் ஒரு சித்தர். இவர் சஞ்சாரியாய்த் திரிந்து வருகையில் ஒருத்தி பிக்ஷையிட்டு இவரைப் புத்திரப் பேறு வேண்டினள். சித்தர் அவள்மீது கருணைசெய்து வீபூதிபிரசாதித்து இதனை உட்கொள் என்றனர். வீபூதிகொண்டவள் அண்டை வீட்டுக்காரியிடம் நடந்தவைகளைக் கூற அவள் இத்தவசி மாயவேஷக்காரன் ஒருக்கால் உன்னை மயக்கித் தன்வழி கொள்ள அவ்வாறு செய்தல் கூடுமெனப் பயமுறுத்தி அதனை அடுப்பிலிடச் செய்தனள். அவ்வகை அடுப்பிலிட்டு மறந்து போய் இவளிருக்கையில் சிலகாலம் பொறுத்து மீண்டும் அவ்வழி சித்தர்வந்து அவ்வீபூதி பெற்றவள் வீடுசென்று நான் உன் பிள்ளையைப் பார்க்கவேண்டும் அழைக்க என்றனர். வீபூதிபெற்றாள் அண்டை வீட்டுக்காரி சொல்லால் தான்செய்தவை யனைத்தும் ஒளியாதுகூறினள். சித்தர் ஆயின் அவ்வடுப்புச்சாம்பல் எங்குளதென அதனை வாரி வழக்கமாகக் கொட்டும் வீட்டின் புறக்கடையிலுள்ள குப்பையைக் காட்டினள். சித்தர் அவ்விடம்சென்று கோரக்காவென, ஏன் என்னும் ஒரு ஓசையுண்டாயிற்று. பலரும் கண்டுவியக்கச் சித்தர் குப்பையை யகற்றக்கூற அதில் சித்தர் தாம் திருநீறு கொடுத்த காலமுதல் பிள்ளையைக் கண்டகாலம் வரையுள்ள ஆண்டுகள் நிரம்பப்பெற்ற சிறுவனை அப்பெண்ணுக்குக் கொடுத்தனர். இவரைக் கோரக்கர் என்பர். (கர்ணபரம்பரை.)

**மஞ்சள்** — 1. இது மற்ற வாசனைத்திரவியங்களுடன் விசேஷமாகத் தேவிக்கு அபிஷேகப்பொருள் ஆக எடுத்துக் கூறியிருத்தலின் இதனை மங்கலம்பெறச் சுமங்கலிகள் இறைவியினருளால் தம் கணவர் தீர்க்காயுள் பெற்றிருக்க அணிவர். ஸ்ரீ காரணகமத்தில் "ஹரித்ராசூர்ணஸம் யுக்தம்ஸநபனம் சோடசாத்மகம்" எனும் சுலோகத்தில் கூறியிருக்கிறது.

2. சம்பாரப் பொருள்களில் ஒன்று. இது ஒருவித புல்வகை சேர்ந்த செடியின் கிழங்கு. நிழலில் பயிராவது. இதனைப் பதப்படுத்தும் வகையில் பலபெயர் தருவர். பசுமஞ்சள், கப்புமஞ்சள், விரல்மஞ்சள், கறிமஞ்சள், இதில் மணமுள்ள ஒருவகை கஸ்தூரி மஞ்சள், மருந்தாக உபயோகிக்கும் மரமஞ்சளும் உண்டு.

**மஞ்சுகோசர்** — வச்சிரசூசி செய்த அசுவகோசருக்குக் குரு.

**மஞ்சுகோஷை** — ஒரு காந்தருவஸ்திரி.

**மஞ்சுளன்** — ஒரு அரசன். இவன் தேவி காந்திமதி, இவ்விருவரும் தவஞ்செய்கையில் இவ்விருவருக்கும் சந்திரவதி (அல்லது) குமுதை பெண்ணாய்ப்பிறந்து சந்திர சூடனை மணந்தனள். (பூவாளூர்ப் புராணம்.

**மஞ்சுளை** — ஒரு நதி.

**மஞ்சையர்** — இவர் வீரசைவ அடியவர். சிவமூர்த்தி அல்லாத வேறு தேவர்களைத் தொழுமவரை மூக்கையரியும் துணிவுடையார். இவருடன் வைணவர் வாதிட்டுத்

தோற்றுப் பிரத்தியக்ஷப் பிரமாணம் வேண்டுமென விஷ்ணுவை யழைத்துக் காசி விசுவேசரைத் தொழச்செய்தவர் மஞ்சி தேவர் எனவும்பெயர்.

**மடக்கு** — சொல்லணியில் ஒன்று. எழுத்துக்களது தொகுதி, பிறவெழுத்தானுஞ் சொல்லானும், இடையிடாதும், இடையிட்டும், வந்து பெயர்த்தும் வேறுபொருளை விளைவிப்பது. அம்மடக்கு ஆதிமடக்கு, இடைமடக்கு, கடைமடக்கு, ஆதியோடிடைமடக்கு, ஆதியொடு கடைமடக்கு, இடையோடு கடைமடக்கு, முழுதுமடக்கு என எழுவகைப்படும். பின்னும், இயமாவியமகம், இரண்டடிப் பாடகமடக்கு, அந்தாதி மடக்கு, ஒரொழுத்து மடக்கு பிறவுமுள. இவற்றி னிலக்கணங்களைத் தண்டியலங்காரங் காண்க. (தண்டி)

**மடங்குதநவிற்சியணி** — ஒருவரொருபொருளையறிவுறுத்தற்கு மற்றொருவர் சிலேஷையினாலாதல் எடுத்தல், படுத்தல் முதலிய இசைவிகாரத்தினாதல் மற்றொருபொருளைக் கற்பித்தலாம். இதனை வடநூலார் வக்ரோக்தியலங்காரம் என்பர்.

**மடமவண்ணக்கன்பெரிசாத்தன்** — கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர்.

**மடலூர்தல்** — ஒன்றன்றியே பலவற்றையும் சொல்லி மன்றின்நடுவே மடன்மாவைச்செலுத்தியது. (பு. வெ. பெருந்திணை)

**மடல்பாடியமாதங்கீரனார்**— இது பாடலால் விசேடித்து வந்த பெயர், இவர் கூறிய பாடல்களில் மடலேறுதலைப் பற்றிக்கூறுநிற்பர். (மடலேறித் தெருவில் வந்து அவமானப் படுவதினும் காமநோயாலிறந்து போகேமோ) என்று இவர் கூறியது மிக்க நயமுடையதா யிருக்கும். (நற். ௩௭௭.) இவர் குறுந்தொகையிற் கூறியதும் பெரும்பாலும், இதுவே கருத்துடையதாகும். குறிஞ்சித்திணையைப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ௩௭௭-ம் பாடலொன்றும், குறுந்தொகையிலொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**மடவாலமாச்சையர்** — இவர் சிவனடியவரின் ஆடைகளை வெளுத்து அவற்றையுலரும்படி விரித்து யாரும் வாராமற்காத்து அடியவர்க்குத் தரும் நியமம் பூண்டவர். இவர் ஒருமுறை இவ்வாறு ஆடையை உலரவிட்டுக் காத்திருக்கையில், அசுத்தன் ஒருவன் அவ்வழி வரக்கண்டு அவனைக் கொலைசெய்தனர். இதனை அறிந்த அரசன் யானைப்பாகரை ஏவி அவரை அழைத்துவரக் கட்டளைதர இவர் யானைப் பாகரையும், யானையையுங் கொலைசெய்து அரசன் பணிய இருந்தனர். இவர் வசவரிடம் ஒருநாள் இருக்கையில் வசவதேவர் சிவனடியார் தம்மையொன்றும் கேட்டு வாங்கிக் கொள்ளவில்லையென்று விசனப்படுகையில் இவர் அவர் முன்பாகத் தாம் வெளுக்க வாங்கிய சிவனடியவரின் ஆடையில் ஒன்றை நீரில் தோய்த்து உதறினர். அதிலிருந்து தெறித்த நீர்த்துளி அனைத்தும் விலையுயர்ந்த நவமணிகளா யிருந்தன. இதனைக் கண்ட வசவர் அடியவர் பெருமை அளவிடுதற்கு அரியது என வியந்தனர். இவர் வசவரை க்ஷமை வேண்டினர்.

**மடைத்தலைவன்** — சுத்தா சுத்தபொருள்களின் பக்குவம், அறுசுவைகளின் கலப்பு வேறுபாடு, உணவுப்பொருள்களின் குண வேறுபாடு முதலிய அறிந்தவன். (சுக்-நீ)

**மடைப்பள்ளிச்சாம்பல்** — திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் கூன்பாண்டியனுக்கு வெப்பு தீர்த்தது. அது தொடங்கி இதுவே இத்தலத்தில் விபூதிப்பிரஸாதமாகக் கொடுக்கப்படும். (திரு.)

**மட்டிப்பால்** — இது சிங்களம், மலையாளம் முதலிய இடங்களில் பயிராகும் ஒருவகை மரத்தின் பால். இது மணமுள்ளது.

**மணக்கால்நம்பி** — உய்யக்கொண்டாருக்குப் பின்வந்த வைஷ்ணவாசாரியர். இவர் குமுதாம்சராய்க் கலி (௩௯௨௨) க்குமேல் விரோதிகிருது வருஷம் மாசிமீ திங்கட்கிழமை கோயிலுக்கடுத்த மணக்கால் எனுங் கிராமத்தில் அவதரித்தவர். இவருக்கு ஸ்ரீ இராமமிஸ்ரர், என்று ஒருபெயர். உய்யக்கொண்டார் வழிவிட்டபெண்களுக்கு வழியில் சேறுயிருந்ததுபற்றி அப்பெண்களை முதுகில்லறித் தாண்டச்செய்தவர். யாமுநர்க்கு உய்யக்கொண்டார் சொற்படி தூதுளங்கீரை பரிமாறி ஒருநாள் நிறுத்தி (அவர் வரலாறறிந்து இவருடன் வார்த்தையாட) அவருக்கு ரகஸ்யங்களை உபதேசித்து அவருக்குத் துரியாச்ரமம் கொடுத்து உய்யக்கொண்டாரின் சாமகைங்கர்யங்களைச் செய்து முடித்துச் சிலகாளிருந்து திருநாட்டுக்கெழுந்தருளினவர். இவர் திருவடிகளை ஆச்ரயித்தவர்கள், ஸ்ரீ ஆளவந்தார், திருவ

ரங்கப் பெருமாளரையர், தெய்வத்துக் காசுநம்பி, பிள்ளையரசுநம்பி, சொட்டை நம்பி, சிறுபுள்ளூருடையார், பிள்ளைத் திருமாலிருஞ் சோலைதாசர், வங்கிபுரத் தாய்ச்சி.

**மணக்குடையார்** — திருவள்ளுவர் திருக்குறளுக்கு உரையிட்ட ஆசிரியர்களில் ஒருவர். இவர் ஊர் முதலிய விளங்கவில்லை.

**மணப்பாக்கத்துநம்பி** — பிள்ளை லோகாசாரியர் திருவடிசம்பந்தி. தேவப்பெருமாள் சட்டளைப்படி கோயில்சென்று பிள்ளைலோகாசாரியார் தம்சீடருக்கு உபதேசிக்கையில் மறைவிலிருந்து கேட்டு அவருக்குச் சீடரானவர்.

**மணமங்கலம்** — பகையைக் சொல்லும் புயத்தினையும் எறியும் வேலினையுமுடைய வேந்தன் அரிவையரோடு புணர்ந்த நன்மையைச் சொல்லியது. (பு.வெ.பாடாண்.)

**மணமுள்ளஇலைகள்** — மருக்கொழுந்து, மரு, புதியன்மூலி (புதீனு) ஓமவள்ளி, கற்பூரவள்ளி, துளசி, திருநீற்றுப்பச்சை, பச்சிலைச்செடி, சாமந்திப்பச்சை, முதலிய அளவிறந்தன. இவற்றினின்று தைலமிறக்கி வாசனை எண்ணெய்கள் செய்வதுண்டு. இவ்வாறே இலாவண்டர் என்னும் ஒரு பூண்டினின்று திராவகம் வடித்து மணப்பொருளாக உபயோகிக்கின்றனர். இவ்வாறே கோலோன எனும் பட்டணத்தில் இடிக்கோலோன் என்னும் ஒரு திரவம் உண்டாக்கி மணப்பொருளாகவும் மருந்தாகவும் உபயோகிக்கின்றனர்.

**மணமுள்ளமரங்கள் செடிகள்** — சந்தனம், அகில், ஜாதிக்காய் இலவங்கம், கஸ்தூரி மஞ்சள், கிச்சிலிக் கிழங்கு, கோரைக் கிழங்கு, தேவதாரு, இருவாட்சி, சொன்றை, மரமஞ்சள், மருதோன்றி.

**மணமுள்ளவேர்கள்** — இவை பெரும்பாலும் மிதவுஷ்ணமான தேசங்களில் உண்டாகின்றன. வெட்டிவேர் - இது விழல்போலும் புல்லினத்தைச் சேர்ந்த புல்லின் வேர். இது மணலில் நன்றாக வேர்பாய்ந்து மணமுள்ளதாயிருக்கும். குருவேர் - இது, ஒரு வகைச் செடியின் வேர். இது மணலில் அதிநீளமாய் வேர் விடுகிற இதன் வேர் அதிமணமுள்ளது. பச்சிலைவேர், கிச்சிலிவேர், கோரைக்கிழங்கு, கஸ்தூரி மஞ்சள், சந்தனவேர், அகில்வேர் முதலிய.

**மணம்** — இது எண்வகைப்படும், அவை பிராம்மம், தெய்வம், ஆருஷம், பிரசாபத்தியம், ஆசுரம், காந்தருவம், இராக்ஷசம், பைசாசம் எனப்படும். இதில் பிராம்மமாவது - வேதம் ஓதினவனாகவும், நல்லொழுக்கம் உள்ளவனாகவும் இருக்கின்ற பிரமசாரியைத் தானாகவே அழைப்பித்து அவனை நூதன வஸ்திரத்தால் அலங்கரித்து, கன்னிகையையும் அவ்வாறு நூதன வஸ்திர பூஷண அலங்காரம் செய்வித்து அவ்வரனுக்கு அவளைத் தானஞ்செய்வது. தெய்வமாவது - சோதிட்டோமம் ஆதியக்யத்தில் தனக்குப் புரோகிதனாக இருப்பவனுக்குத் தன் பெண்ணை அலங்கரித்துக் கொடுப்பது. ஆருஷமாவது - தான் செய்யவேண்டிய யாகாதி கர்மத்துக்காக வரனிடத்தில் நின்றும் ஒரு ருஷபம், ஒரு பசு, அல்லது இரண்டு ருஷபம், இரண்டு பசு இவைகளை வாங்கிக் கொண்டு கல்யாணம் செய்து கொடுப்பது. பிரஜாபத்யமென்பது - ஒரு பிரமசாரியை அழைத்துப் பூசித்துத் தன் பெண்ணைத் தானம் பண்ணும்போது நீங்கள் இருவருமாய்த் தருமங்களைச் செய்யுங்கள் என்று கொடுப்பது. — பெண்ணின் தந்தைக்குக் கேட்கும் பணத்தைக் கொடுத்துப் பெண்ணுக்குப் பூஷணங்களைப் போட்டுப் பெண்ணை வாங்கி விவாகம் செய்து கொள்வது. காந்தருவமாவது - ஸ்திரியும் புருஷனும் ஒருவர்க்கு ஒருவர் புணர்ச்சியின் ஆசையால் மனம் ஒத்துச் சேர்தல். இராக்ஷஸமாவது - ஒருவன் தன் பலத்தினால் கன்னிகை அழும்போது அவள் வீட்டினின்றும் அவளது பந்துக்களை அடித்தும், கொன்றும், வலிமையால் கொண்டு போதல். பைசாசமாவது - ஒரு கன்னிகை தூங்கும்போதும், குடியினால் வெறித்திருக்கும்போதும், பித்துக் கொண்டவளாய் இருக்கும்போதும், அவளுடன் புணர்வதாம். இவ்வகை மணத்தில் நான்கு வருண ஸ்திரிகளில் க்ஷத்திரிய ஸ்திரி தனக்கு மேலான வருணத்தானைக் கல்யாணம் செய்துகொள்ளும்போது அவன் பிடித்துக்கொண்டிருக்கும் தண்டத்தையும், வைசிய மாது அவ்வாறு கல்யாணம் செய்துகொள்ளும்போது அவன் பிடித்துக்கொண்டிருக்கும் சாட்டைக் கயிற்றையும், சூத்ரஸ்திரி அவனது வஸ்திர நுனியையும் பிடித்துக்கொண்டு விவாகஞ் செய்துகொள்ள வேண்டியதென மநுகூறுகிறார். மேற்கூறியவற்றுள் பிரசாபத்திய

மணமே சிறந்ததாய், இப்பரதகண்டத்துள் யாவராலுங்கொண்டாடப்பட்டுவருகிறது. அதனை நடப்பிக்கு முறையினைச் சிறிது சுருக்கிக் கூறுகிறேன். பிள்ளைக் குரிய வரும் பெண் வீட்டுக்காரரும் தாங்கள் உத்தேசித்த பெண்ணைக் கருதிப் பொருத்தம் முதலியவும் சகுனங்களும் பார்த்துப்பெண் வீடுநோக்கிச் சுபதினத்தில் குங்குமம், மஞ்சள், பழம் தேங்காய், தாம்பூலம், புஷ்பம், பந்துக்களுடன் சென்று பெண் வீட்டாரிடம் பெண்ணைத் தரப்பேசி முடிந்தபின் விவாகபத்திரிகை யெழுதி இன்னகோத்திரத்தானுக்கு இன்ன கோத்திரத்தான் பெண்ணைக் கல்யாணஞ் செய்விக்கச் சம்மதித்தோமென்று கூறி முதல் சாக்ஷி புரோகிதராகையால் அவஸ்ரக்கொண்டு மும்முறை சொல்லுவித்துச் சபைத் தாம்பூலம் நடத்திப்பிள்ளை வீட்டார்கொடுத்த மங்கல அணி சேலை புஷ்பம் முதலியவற்றைப் பெண்ணுக் கணிவித்து வாழ்த்தி உண்டு பிள்ளை வீட்டார் முகூர்த்த நாளிட்டு அந்நாளுக்கு முன் நல்ல தினத்தில் பந்தற்கால் பிள்ளை வீட்டாரும் பெண் வீட்டாரும் நாட்டிப் பந்துக்களுடன் வேடிக்கையாய் நலங்கு முதலிய சுபகாரியங்கள் நடத்தி வருவர். கலியாண தினத்தில் பந்தரில் களிமண் செம்மண் வேதிகை போட்டுக் கோலமிட்டு நடுவில் ஓமாக்னிக்கு இடம் விட்டு அந்த ஓம இடத்திற்கு மேற்கில் மணப் பீடம் அலங்கரிக்க வேண்டும். பின் மணக்கோலங்கொண் டிருக்கும் மணப்பிள்ளையை மாங்கல்யப்பெண்கள் வீட்டிலிட்டிருக்கும் மணப் பொங்கலைக் கிராம தேவதை பிதுர் தேவதைகளுக்கு நிவேதனஞ் செய்வித்து நமஸ்கரிக்கச் செய்விக்க வேண்டியது. இக் கல்யாணப் பிள்ளையின் தந்தை அம்மான் முதலியோர் வைதிக கிருத்யமுள்ளவராய்ப் புரோகிதரைக்கொண்டு கல்யாண மண்டபத்தில் கிழக்கில் இந்திரனைப் பூசித்து அநேகங் கிளைகளுள்ள கிளைவிளக்கில் ஆயிரங்கண்ணனை ஆவாகிக்கவேண்டியது. தென் கிழக்கில் அக்னிதேவப் பிரீதியாய்க் குடவிளக்கேற்றி அதில் அக்கினியை ஆவாகித்தல் வேண்டும். தெற்கில் யமப் பிரீதியாய்ப் புரோகிதரிடம் அவரை ஆவாகிப்பித்துப் பூசித்தல் வேண்டும். தென் மேற்கில் நிருதி தேவப்பிரீதியாய்த் தாசி அல்லது தோழியை மணப் பெண்ணுக்கு உபசாரஞ் செய்ய நிறுத்தல் வேண்டும். வட மேற்கில் வாயுப்பிரீதியாய் மாப்பிள்ளைத் தோழனிடம் விசிறி கொடுத்து உபசரிக்கச் செய்தல் வேண்டும். வடக்கில் குபேரப்பிரீதியாய் அதிதேவதை ரூபமாகப் பணப்பை வைத்திருப்பவரை நிறுத்த வேண்டியது. வடகிழக்கில் ஈசானமூர்த்தியைத் தாபித்து அம்மியையும் குழவியையும் பூசித்து உபசரித்தல் வேண்டும். பின் நவக்கிரகப் பிரீதியாகப் பச்சையரிசிபரப்பி நவதான்யமுளைப் பாலிகைவைத்து ஒன்பதுவீடு கீறி நவக்கிரகஸ்தாபனஞ் செய்து பூசிக்க வேண்டியது. அதன் பின் எழு கரகத்திற்கு நூல் சுற்றி மாவிலை தருப்பை தேங்காய் வைத்துச் சப்தருஷிகளை ஆவாகித்துப் பூசிக்கவும். பின் மாங்கல்யப்பெண்கள் பரிசுத்த இடத்தினின்று கொண்டு வந்த ஜலத்தை வாய்மூடிய கரகத்தில்விட்டுக் கங்கை முதலிய புண்ய தீர்த்தங்களை ஆவாகனஞ் செய்து பூசித்தல் வேண்டும். பின் அரசாணிக்கால்; திருமூர்த்தி சுவரூபம், அரசு, பிரமா, ஆல், விஷ்ணு கல்யாண முருக்கு ருத்ர சுவரூபம். இவைகளில் திரிமூர்த்திகளை ஆவாகித்துப் பூசித்துப் பன்னிரண்டங்குலம் பள்ளந்தோண்டி மூன்று மாங்கல்யஸ்திரீகளைச் சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதியாராகப் பாவித்து அவர்களால் நாட்டுவித்துத் தூபதீபநிவேதனஞ் செய்வித்து அப்பெண்களைக் கொண்டுபோய்த் தேவாலயத்தில் மூட்டிவைத்திருக்கும் நெருப்பைப் புகையாமல் எடுத்து வாத்யகோஷ சகிதமாகவந்து ஓமகுண்டத்திலிட்டு அக்னிமந்திரஞ்சொல்லி ஓமாக்னிவிருத்திசெய்தல் வேண்டும். இச்சுபகாரியங்களை விவாக லக்னத்திற்கு ஐந்துநாழிகைக்குமுன் தொடங்கி முடித்து வைக்க வேண்டியது. பின் தோழன் மணமகனை அழைத்துவந்து மணவறையைப் பிரதக்ஷிணஞ் செய்வித்து உட்காருவிக்கப் புரோகிதர் விநாயகபூசை முதலிய முடித்து உபநயனாதிகளைச் செய்விக்க வேண்டியது. இவை யெல்லாம் தோழனுலறிந்த மணமகன் சமுசாரம் ஆன்மவிசாரத்திற்குத் தடையென்றெண்ணி உடனே பரதேசம் போகத் துணிவன். இதனையறிந்த மாமன் மாமியார் முதலியோர் தடுத்து அழைத்து வந்து அவனை மணவறையிலிருத்தி வெள்ளிமெட்டைக் காலில் இடுவர். இவை முடிந்தபின்பு பௌரோகிதர் இனி ஆரம்பிக்கும் திருமணம் விக்னமின்றி முடிவதற்

காக மணப்பிள்ளைக்குக் கங்கணங் தரித்தல் வேண்டும். அவ்வகை பெண்ணிற்குந் தரிப்பித்தல் வேண்டும். பின் வேதியர் கூறைவஸ்திரத்தை ஆசீர்வதித்து மணமகனுக்கும் மணப்பெண்ணுக்கும் உடுத்துக் கொள்ளக் கொடுக்க வேண்டியது. விவாகலக்ன சமீபத்தில் வேதியர் தாலியைப் பூசித்து எல்லாரும் ஆசீர்வதிக்க முக்காலியின்மீது தாம்பாளத்தில் இருத்த வேண்டியது. பின் மாமன் மாமியார் இருவரும் மணமகனுக்கு முன்னும் சகலசனங்களுக்கு முன்னும் இன்னகோத்ர சூத்ரமுள்ள இன்னவனுக்கு இன்னகோத்ரசூத்ரமுள்ள நாங்கள் எங்கள் கன்னிகையைக் கொடுத்தோமென்ன மணமகன் பெற்றுக் கொண்டதாகக் கூறித் தான் மணப்பெண்ணுக்கு முன்னிட்டிருக்கும் முக்காலியின்மீது தாம்பாளத்திருந்த மாங்கல்யத்தையெடுத்துத் தான் முக்காலிமீதிருந்து தங்கை தமக்கையார் மங்கல தீபங்காட்ட மங்கலவாத்திய முழங்கப் பந்துமித்ரர்வாழ்த்தப் புரோகிதர்கூறிய "நான் என்னுடைய தேகரக்ஷணார்த்தமும் சந்ததி விருத்தியின் பொருட்டும் உன்னை மணக்கிறேன்" என்னும் பொருளுள்ள மந்திரத்தைக்கூறி மங்கல நாண் தரித்து நாணைத் திரிமூர்த்தி மந்திரத்தால் மூன்று முடியிடல் வேண்டும். பின் வேதியர்கள் ஓமம்செய்ய அந்த ஓமத்தைப் பூசித்து அரசாணிக்காலை வலஞ்செய்து அம்மி மிதித்து ஓமாக்னியிற் பொரி சொரிந்து பூர்ணாகுதி செய்து மாலை முதலிய மாற்றி மீண்டும் அட்டமங்கலங்களுடன் மணவறையில் தாபித்திருக்கும் தேவதைகளை வலஞ்செய்து அம்மியின் வரலாற்றை மணப்பெண்ணுக்குக்கூறி வலம் வந்து நல்ல சுபமுகூர்த்தங் கழிவதற்கு முன் தமக்கென நியமித்த இடத்தை அடைதல் வேண்டும். இவ்வகை எத்தனை நாள் விருப்பமோ அத்தனைநாள் ஓமாதிகளை முடித்துக் கங்கண விசர்ஜனஞ் செய்தபின் அந்த மணவறையில் தாபித்த தேவதைகளை யதாஸ்தாநம் எழுந்தருளச் செய்து சாந்திஓமம்செய்வித்து அரசாணிக்காலை அசைத்துவிடல் வேண்டும். இந்த மணச்சடங்குகள் அவ்வவர்மதக்கொள்கைக்கும் தேசத்திற்கு மேற்றபடியு மிருக்கும்.

**மணலி முத்துகிருஷ்ண முதலியார்** — இவர் சென்னையிலிருந்த வேளாண்பிரபு. இராமாயண கீர்த்தனை பாடிய அருணாசல கவிக்கு உபகரித்தவர்.

**மணலூரம்** — (மணிபுரம்) பாண்டிய நாட்டிலுள்ள பட்டணம். அரசன் சித்திரவாகனன். தீர்த்த யாத்திரையின் பொருட்டு சென்ற அர்ச்சுனன், பப்புருவாகனனுடன் யுத்தம் செய்தான். (பா. ஆதி.)

**மணலூர்** — பாண்டியர்களின் பழைய இராசதானி; மணற்புரமெனவும் வழங்கும்; மதுரைக்குக் கிழக்கேயுள்ளது; பாரதசம்பு முதலியவற்றிற் கூறப்பெற்றதும் இதுவே. (திருவிளை.)

**மணலூர் ஆசிரியர் புளியங்காய்ப் பெருஞ்சேந்தனார்** — செல்வத் தாசிரியரிடம் பொருளதிகாரங் கேட்ட தமிழ்ப்புலவருள் ஒருவர்.

**மணலூர்பதி** — 1. பாண்டிநாட்டில் ஒருபட்டினம். இதற்கு மணலூர்புரம் எனவும் பெயர் சித்திரவாகன் பட்டணம்.

2. சோணாட்டுச் சிற்றூர்.

**மணலூர்பதிபெண்** — அருச்சுனன் தேவி. குமான் பப்புருவாகன்.

**மணவாளதாசர்** — பிள்ளைப் பெருமாளையங்காருக்கு ஒரு பெயர். பிள்ளைப்பெருமாளையங்கார் காண்க.

**மணவாளநாராயணன்** — ஓமலூர் வேங்கை பூபன் குமரன்.

**மணவாளமாமுநிகள்** — இவர் கலி (சசஎஉ) இல் சாதாரணஸ்ரீ ஐப்பசிமீ சுக்லபக்ஷ சதுர்த்தசி வியாழக்கிழமை மூல நக்ஷத்திரத்தில் பாண்டி நாட்டில் சிக்கில் கிடாரமென்னுங் கிராமத்தில் திருமான்மனத்த அண்ணர் என்பவருக்குத் திருக்குமாரராய் அவதரித்து அழகிய மணவாளர் என்கிற பிள்ளைத் திருநாமம் அடைந்து திருவாய்மொழிப் பிள்ளையிடம் சமாச்ரயணம் பெற்று அரச காரியகாரராய் இருந்து அரசன் திரவியங்களை அறவழியில் செலவிட்டனர். அரசன் பொருள்களைக் கேட்கையில் பயந்து சங்யசித்துக் கொண்டு மணவாளமாமுநிகள் அழகிய மணவாள ஜீயரென்கிற பெயர்பெற்று ஆசாரியர் சொற்படி மடங்கள் கட்டி முப்பத்தாறாயிரப் படியைப் பிரவர்ப்பித்து வந்தனர். இவர் திருமேனியில் சோகை கண்டு தபிக்க உடையவரும் தேசிகரும், சுவப்பனத்தில் எழுந்தருளி நீர் பாகவத சம்பிரதாய பேதஞ்செய்வித்ததால் இவ்வகை நோய்கண்டது. இனி நீர் கிடாம்பி நயினாரை ஆச்ரயிக்கில் இக்நோய் நீங்குமென மறைய இவர் விழி

த்து அவ்வகை புரிந்து பெரியஜீயர் தூப
புற்குலமுடையார் தாசர், யதீந்திர பிர
வணர் என நயினுரால் பெயரடைந்து திரு
அரங்கத்தில் (எஉ) திருநக்ஷத்திரம் எழுந்
ருளியிருந்து முப்பத்தாருயிரப் பெருக்
கெனப் பெயரடைந்து திருவரங்கரைச்
சேவித்து வருகையில் ஒருநாள் ஆசௌ
சத்தால் திருக்கோயிலில் தரிசனம் தடை
யாக அது காரணமாக ஆச்ரம ஸ்வீகாரம்
சடகோப ஜீயர் சந்நதியில் செய்துகொ
ண்டு தாமும் சடகோப ஜீயரென்றும்,
பெரியஜீயரென்றும் பெயரடைந்து கிரு
ஷ்ணு நந்தனை வேடலப்பையால் வென்று
இருந்தனரென வடகலையார் கூறுப.
இவர் உடையவர் விஷயத்தில் அன்புள்ள
வராய் யதிராஜவிம்சதி செய்தபடியால்
இவர்க்கு யதீந்திரப்பிரணவர் என்று
பெயா. இவருக்குத் திருமாலைதந்த பெரு
மாள் முப்பத்தாருயிரப்பெருக்கு என்று
பெயரிட்டனர். இவர் பிரமதந்திர ஜீய
ரிடமும், அழகிய மணவாள நயினுரிட
மும் முறையே பாஷ்யமும் ரஹஸ்யங்
களையும் கேட்டனர். பாண்டிதேசத்தான்
ஒருவனுக்கு அருள்செய்து சடகோபதா
சன் என்று பெயரிட்டுக் கந்தாடைமுத
லிய கோத்ரவகையேற்படுத்தினவர். இவ
ரைப் பெருமாள் உத்தமநம்பிக்குத் திரு
வனந்தாழ்வானுகக் காட்டினுர். இவர்
பெருமாள் திருமுன்னர் ஈடு ௩௬,000
முடிக்கையில் கந்தாடை அண்ணன், வான
மாமலைஜீயர், பரவஸ்துபட்டர், பிரான்
ஜீயரும் தம்முட்கலந்து தனியன்கூறவி
ருக்கையில் ஒரு சிறு பிள்ளை இவர்கள்
செய்திருந்த சுலோகமாகிய "ஸ்ரீசைலே
சதயா" என்கிறதைக்கூறி மறைந்தது.
எறும்பியில் அப்பாவுக்கு அழகியமண
வாளதாசரென்று பெயரிட்டுத் திருவேங்
கடம்வந்து இளங்கேள்வியெம்பெருமா
ளுர் ஜீயரை நியமித்துத் திருவரங்கம்
வந்து அழகிய வரதரான இராமாநுஜஜீய
ரைப் பெருமாள்காரியத்தைச் சீர்திருத்த
வானமாமலைக்குஅனுப்பினுர். அதுமுதலவ
ர்க்கு வானமாமலை ஜீயர்என்று பெயருண்
டாயிற்று. தமக்கு ஆண்டாள் பிரசாதம்
ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருந்து கொண்டு
வந்துதந்த கோவிந்தராசப்பருக்குப் பட்
டர்பிரான்தாசர் என்று பெயர்தந்தவர்.
மதுரை மஹாபலிவாணனுக்கு உபதே
சித்து முத்தரசு எனுங் கிராமம்பெற்று
அதற்கு அழகிய மணவாளபுரம் என்று
பெயரிட்டவர். இவர்க்கு வரவரமுனி
யெனவும் பெயர். இவர் திருநகரியிலி
ருந்தபோது இவர் இருந்த மடத்தைச்
சிலர் கொளுத்திவிட அதினின்று பாம்
புருக்கொண்டு வெளிவந்தனர். இவர் ஒரு
நாள் யோகத்திருந்தபோது சடகோபக்
கொற்றி இவரை ஆதிசேஷ உருவத்
துடன் காண இவர் அவ்வுருவத்தை
யாருக்கும் தெரிவிக்கா திருக்கக் கட்டளை
யிட்டுத் திருப்புல்லாணிக்குப் போய் வரு
மார்க்கத்தில் தமக்கு நிழல்செய்த புளிய
மரத்திற்குப் பரமபதமளித்துச் சில நாளி
ருந்து பரமபதத்தில் ஆர்த்தி பிறந்து ஆர்
த்திப் பிரபந்தம் செய்து தம் முதலிகளா
கிய பிள்ளான், நஞ்ஜீயர்வேண்டுகோளின்
படி தம்மிடமிருந்த சொம்பைக் கொடு
த்து அர்ச்சாவிக்ரகம் பிரசாதித்துத் திரு
நாட்டிற்கெழுந்தருளினர். இவரை ஆச்
ரயித்த முதலிகள் அழகிய வரதர்கோன்
முதலியாரண்ணர், பிரதிவாதி பயங்கரம்
அண்ணன், எறும்பி அப்பா, உத்தமநம்பி,
அப்பிள்ளை, அப்பிள்ளான் தோழப்பர்
முதலியவர். இவர் குமாரர் இராமாநுச
சீயர். இது தென்கலை, வடகலை சாம்பிர
தாய நூல்களில் இருந்து கலந்தெழுதப்
பட்டது.

**மணி** — 1. (௬) நவமணியைக் காண்க.

2. இது நாதப் பிரம சுவரூபந் தெரி
விப்பது. இது நல்ல ஓசையுடையதா
யிருத்தல் வேண்டும். இதன் நாதம் எவ்
வளவு தூரம் கேட்கப்படுகிறதோ அவ்வ
ளவில் உள்ளவர் பாவத்தினின்று நீங்கு
கின்றனர். பூத பிசாசங்களும் நாதவொ
லியால் நீங்கும். (சுப்பிரபேதம்)

3. வெண்கலத்தால் கால முதலிய அறி
விக்கச் செய்யப்பட்டு நாவுடன்கூடிய குவி
ந்தவுரு. இது, பெருமணி, சிறுமணி, கைம்
மணி, எறிமணி, ஆராய்ச்சிமணி முதலிய.

4. ஒரு இருஷி. (பா. சபா.)

**மணிகர்ணிகை** — காசியில் கங்கையின் தீர்த்த
தகட்டம். சிவமூர்த்தி தமது வாமபாகத்
தில் விஷ்ணுமூர்த்தியைப் படைத்துத்
திரு உருக்கரக்க விஷ்ணுமூர்த்தி தமது
கரத்திலிருந்த சக்கரத்தால் தடாகமொ
ன்று உண்டாக்கி அவ்விடந் தவஞ்செய்து
வந்தனர். இவர் செய்த தவத்திற்குக் களி
ப்படைந்த சிவமூர்த்தி தரிசனம் தந்து
சிரத்தினை யசைக்கச் செவியில் இருந்த

மணியொன்று இந்தத் தடாகத்தில் விழுந்தது. அதனால் இத்தீர்த்தத்திற்கு இப்பெயர் உண்டாயிற்று.

**மணிகாரன்** — வைசியப் பெண்ணை வேறு வைசியன் கரவிற்கூடப் பிறந்தனன்.

**மணிக்கிரீவன்**—குபேர புத்திரனாகிய இயக்கன். இவன் மதுவுண்ட மயக்கத்தால் ஸ்திரீகளுடன் சலக்கிரீடை செய்துகொண்டிருக்கும் சமயத்தில் நாரதர் வர அவரைக்கண்டு மரியாதை செய்யாததால் மருதமரமாகச் சபிக்கப்பட்டு நந்தகோபன் வீட்டில் மரமாகிக் கண்ணனால் சாபம் நீங்கப்பெற்றவன்.

**மணிகூடம்** — இந்திரனது விளையாட்டுச் செய்குன்று, இதை ஓர்கால் நரகாசுரன் கவர்ந்தனன். இதில் இவன் மனைவி கசேரு சிறைவைக்கப்பட்டனள்.

**மணிசூடன்** — சந்திரவதியைக் காண்க.

**மணித்வீபம்**—1. புவனேச்வரியாகிய தேவி வீற்றிருக்கும் பதம். இது, எல்லா வுலகங்களுக்குமேலாக எல்லா அலங்காரமும் பெற்று எட்டுத் திக்குகளிலும் திக்குப்பாலகர் தத்தம் கணங்களுடன் தங்கள் காரியங்களைச் செய்துவர, வருஷ தேவதைகள், ருது தேவதைகள் தங்கள் காரியங்களைச் செய்துவர பல அண்டநாயகிகளாகிய, பிங்களாக்ஷி, விசாலாக்ஷி, சமர்த்தி, விர்த்தி, சிறத்தா, சுவாகா, சுவாதா, அபிக்யா, மாயா, சம்ஞா, வசுந்தரா, திரிலோகதாத்ரி, சாவித்ரி, காயத்ரி, திரிதசேச்வரி, அரூபா, பகுரூபா, ஸ்கந்தமாதா, அச்சுத பிரியா, விமலா, அருணி, ஆருணி, பிருகிருதி, விக்ருதி ய்ருஷ்டி, ஸ்திதி, சம்ஹ்ருதி, சந்தியா, மாதா, சதி, ஹம்சி, மர்த்திகா, வச்ரிகா, வரா, தேவமாதா, பகவதி, தேவகீ, கமலாசனா, த்ரிமுகி, சப்தமுகி, சுராசுரவிமர்த்தனீ, லம்போஷ்டி, ஊர்த்தவகேசி, பகுசீருஷா, விருகோதரீ, ரதரேகா, சசிரேகா, ககனவேகா, பவனவேகா, மதனாதுரா, அனங்கமதனா, அனங்கமேகலா, அனங்ககுசுமா, விச்வரூபா, சுராதிகா, க்ஷயங்கரி, அக்ஷோப்யா, சத்யவாதினீ, பகுரூபா, சுசிவ்ருதா, உதாவாசிசி, என்பவர்களும், பாவநாசஞ் செய்யும், வித்யாஹரீ, புஷ்டி, பிரஞ்ஞா, சினிவாலி, குரு, ருத்ரா, வீர்யா, பிரபா, ஆனந்தா, போஷணி புத்திதா, சுபா, காளராத்ரி, மஹாராத்ரீ, பத்திரகாளி, கபர்த்தினி, விகிர்தி, தண்டி, முண்டினீ, இந்துகண்டா, சிகண்டிநி, நிசும்பசும்பதநீ, மஹிஷாசுரமர்த்தனி, இந்திராணி, ருத்ராணி, சங்கரார்த்த சரீரிணி, நாரி, நாராயணி, திரிசூலினி, பாலநீ, அம்பிகா, ஹ்லாதிநீ முதலியவர்களும், பிராஹ்மீ, மாஹேசவரி, கௌமாரி, வைஷ்ணவீ, வாராஹீ, இந்திராணி, சாமுண்டி என்கிற சப்தமாதர்களும், காளீ, விகாளீ உமா, சரஸ்வதீ, துர்க்கா, உஷா, லக்ஷ்மீ, சுருதி, ஸ்மிருதி, த்ருதி, சிரத்தா, மேதா, மதி, காந்தி, ஆர்யா, என்னும் (கசு) சத்திகளும், அநங்ககுசுமாதுரா, அநங்கமதனா, அநங்கமதனாதுரா, புவனபாலா, ககனவேகா, பாசாங்குசவரா, பீதிதார, அருணவிக்ரஹா, எனும் (அ) மந்திரிணிகளும் புடைசூழ்ந்து குறிப்பறிந்து ஏவல் செய்ய பலவகை அலங்காரங்கள் நிறைந்த பொன்மயமான பிராகாரங்களின் மத்தியில் தம்மையொத்த ஹ்ருல்லேகா, ககனா, ரக்தா, காரளிகா, மஹோச்சுஷ்மா முதலிய பஞ்ச சத்திகள் சேவிக்க மந்திரங்கள், மஹாவித்தைகள், வேதங்கள் துதிக்க சிந்தாமணி கிருகத்தில் இரத்னகசித சிங்காதனத்தில் புவனேச்வரி எழுந்தருளி யிருப்பள். (தேவி - பா).

2. பாற்கடலில் உள்ள ஒரு தீவு.

**மணிநாகம்** — ஒரு தீர்த்தம்.

**மணிநாகன்** — இவன் ஆதிசேஷன் புத்ரன். சிவ பூசையால் கருடபயம் நீங்கினன். (பிரம-புராணம்).

**மணிபத்திரன்**—ஒரு காந்தருவன். சிந்துமுநிவர் சாபத்தால் மீனாயிருந்து மருதப்பிரான் திருவடியால் உதையுண்டு சாபம் நீங்கினன்.

**மணிபல்லவம்**—காவிரிப்பூம் பட்டினத்திற்குத் தெற்கில் (௩0) யோசனையில் உள்ள ஒரு தீவு. இதைத் தரிசித்தோர் இதில் உள்ள புத்த பீடிகையாலும் பொய்கையாலும் தமது பழம்பிறப்புஅறிவர். (மணிமே)

**மணிபுரம்** — பப்புருவாகன் இராஜதானி, கலிங்க தேசத்தில் உள்ளது.

**மணிபுஷ்பம்** — சகதேவன் சங்கம்.

**மணிப்பிரவாளம்** — வடமொழிவிரவி வருவது.

**மணிமதி** — வாதாபி வில்வலன் வசித்த நகரம்.

**மணிமந்தன்** — இவன் குபேரனுக்குக் காவலன். இவன் ஒருமுறை குபேரனுடன் ஆகாய மார்க்கமாய்ப போகையில் உமிய அது அகத்தியர் மீ[illegible] ழுந்தது. அத

ஞல் அகத்தியர் மனிதனல் இறக்க இவனைச் சபித்தனர். இச்சாபத்தால் இவன் அளகைக்குப் புஷ்பங் கொண்டுவரச் சென்ற பாண்டு புத்திரனுகிய வீமனைத் தடுத்து அவனுல் இறந்தனன்.

**மணிமாலன்** — அளகையில் படைத்தலைவன். பாரிசாதத்திற்கு வந்த வீமனுடன் சண்டைதொடுத்துப் பாசுபதத்தால் மாய்ந்தவன். மணிமந்தனுக்கு வேருய் இருக்கலாம்.

**மணிமான்** — 1. அரண்ய தேசத் தரசன். வீமனுடன் யுத்தஞ் செய்தவன்.

2. சிவகிங்கரன். தக்ஷயாகத்தில் பிருகு ருஷியைச் சிக்ஷித்தவன்.

3. துரவபதி சுயம்வரத்திற்கு வந்த ஒரு அரசன். (பா. ஆதி).

**மணிமேகலா தேய்வம்**—இந்திரனல் மனிதரை வருத்தும் அரக்கரைத் தடுக்க நிருமித்த தெய்வம். கோவலன் தன், குலத்தோன் ஒருவனை இத்தெய்வம் கடலிற் காத்த நன்றிபற்றி இத்தெய்வத்தின் பெயரைத் தன் புதல்விக்கு இட்டனன். இத்தெய்வம் மணிமேகலையை உவவனத்திருந்து மணிபல்லவங் கொண்டு சென்று அவளது பழம் பிறப்புணர்த்தி மூன்று மந்திரங்களை உபதேசித்து அவளது முன்னைய நாயகனையுமறிவித்தது. (மணிமேகலை)

**மணிமேகலை** — 1. மாதவியின் மகள் மணிமேகலையின்துறவு முதலியவற்றைக்கூறும் நூல். இது சீத்தலைச் சாத்தனுராற் செய்யப்பட்டது. (மணிமேகலை)

2. மாதவியின் குமரி. தந்தை கோவலன். காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரன் விழாநடை பெற்றது. அவ்விழாவிற்கு மாதவியும் மணிமேகலையும் வந்திலர். அதனையறிந்த சித்திராபதி வயந்தமாலையை யழைத்து மாதவிபாற்சென்று வாராததற்குக் காரணம் கேட்டுவாவென்ன அவள் சென்று அவளை வினவ, மணிமேகலை தவவழியிற் செல்லுதலின் நானும் அறவணவடிகளை வணங்கித் தவவழியிற் புகுந்தேன் என்றனள். இது நிற்க மணிமேகலை மலர்பறிக்கச் சுதமதியுடன் உய்யானமடைந்தனள். இதனை எட்டி குமரனுல் கேள்வியுற்ற உதய குமாரன் அவளைத் தன் வசமாக்க வேண்டி அவ்வனமடைந்தான். இவனடைந்த செய்தி யறிந்த சுதமதி மணிமேகலையைப் பளிக்கறையிற் புகுத்தித் தான் தனியே நின்று உதய குமாரனுக்கு உடம்பினிழிவைத் தெரிவிக்கையில் உதய குமாரன் மணிமேகலையைப் பளிக்கறையிற்கண்டான். கண்டு சுதமதியை அவளெத்திறத்தினள் எனச் சுதமதி மணிமேகலைத் தவவொழுக்கத்தினள் அவளை நீ அணுகற் பாலையல்லையெனக் கேட்டு அவளைச் சித்திராபதியால் அணேவேன் எனும் எண்ணத்தால் சோலைவிட்டு நீங்கினுன். பின் மணிமேகலை பளிக்கறை விட்டுவெளிவந்து என்மனம் அவன் பின்னே சென்றது. காரணம் உணரேன் என்று சுதமதியிடம் கூறினள். இவ்வகைக்கூறக்கேட்ட சுதமதி நித்திரை செய்தலும் மணிமேகலா தெய்வம் மணிமேகலையைத் தூக்கிச் சென்று மணிப்பல்லவத் தீவிற் கொண்டுபோய்ச் சேர்த்தது. பின் மணிமேகலை துயிலுணர்ந்து புது இடமாக இருத்தலையும் தன் தோழியைக்காணுததிலும் வருந்தித் தன் தந்தையை நினைந்து வருந்துகையில் புத்தபீடிகைதோன்றியது. அப்புத்தபீடிகையால் பழம் பிறப்புணர்ந்து மணிமேகலா தெய்வத்தால் முற்பிறப்பில் தனக்குநாயகன் இராகுலன் அவனே உதய குமாரனு யிப்பிறப்பில் உன்னைவிரும்பினுனென்றுகூறி அவளுக்கு வேற்றுருவைக் கொடுப்பதும் ஆகாயவழி சஞ்சரிப்பதும் பசியை நீக்குகிறதுமாகிய மந்திரங்களை உபதேசித்துச் சென்றது. அப்பால் மணிமேகலை தீவதிலகையைக் கண்டு அவள் சொல்லால் கோமுகியெனும் பொய்கையை வலங்கொண்டு அக்ஷயபாத்திரம் பெற்று ஆகாயகமன மந்திரத்தால் அவ்விடம் விட்டுநீங்கி மாதவி சுதமதிகளையடைந்து அவர்களின் முற்பிறப்புணர்த்தி அறவணவடிகளை வணங்கச் சென்றனள். பின் மணிமேகலை அறவணவடிகளால் ஆபுத்திரன் செய்தியறிந்து பாத்திரங்கொண்டு பிச்சைக்குப் புறப்பட்டு ஆதிரையின் வீடடைந்து முதலில் பிச்சைகொண்டு காயசண்டிகையின் பசிதீர்த்து உலக அறவியையடைந்து பணிந்து அங்குள்ளோர்பலர்க்கும் உணவளித்து உதயகுமாரன்வர அவன பொருட்டுக் காயசண்டிகையினுருக் கொண்டுவந்து சிறைக்கோட்டஞ் சென்று யாவருக்கு முணவளித்தனள். இதனை அரசனறிந்து அப்பாத்திரத்தின் மகிமைகேட்டு அவளைத் தான் செய்யவேண்டிய தென்னவென்ன அவள் இச்சிறுக்கோட்டத்தை அறக்

கோட்ட மாக்குகவென்ன அரசன் அவ்வாறுசெய்விக்கக் காயசண்டிகையின் கணவனாகிய காஞ்சனன் எனும் வித்யாதரன் காயசண்டிகையைத் தேடிவருவோன் காயசண்டிகையின் வேடங்கொண்ட மணிமேகலையைக் கண்டு பழைய நட்பினைப் பாராட்டும் பல வினியமொழிகளைக் கூற மணிமேகலை அவற்றை மதியாது உதய குமாரனுக்கு இளமை, யாக்கை நிலையாமை, அறிவுறுத்துகையில் காஞ்சநன் இவள் உதய குமாரனைக் காமுற்று நம்மை அவமதித்தனள் என்று ஒளித்திருந்து மணிமேகலையின் உண்மை அறிய நள்ளிரவில் வந்த உதய குமாரனை வெட்டிக் கந்திற்பாவை யிவள் உன் மனைவியல்லள் மணிமேகலைகொண்ட வேற்றுரு வென்னக்கேட்டுத் தன்னகரடைந்தனன். இத்தை முனிவராலறிந்த அரசன் தன் குமாரனுக்குத் தகனக்கிரியைகள் நடப்பித்து மணிமேகலையைச் சிறையிட்டனன். இதனையறிந்த இராஜமாதேவி இவளைச் சிறைநீக்கி வஞ்சித்து வருத்த எண்ணி அரண்மனைக்கு வருவித்து இவளைப் பிச்சியாக்க எண்ணிப் பலவிஷ மருந்துகளை யுண்பிக்க இவள் சலியாதிருக்கக்கண்டு ஒரு இளைஞனை இவளிடம் அனுப்பி மணிமேகலை தன்னை விரும்பினள் என்று கூறும்படி சொல்ல அவன் செல்லுகையில் இராஜமாதேவியின் வஞ்சனையால் வந்தவனென்றறிந்து ஆணுருக்கொண்டனள். இதை இளைஞன் கண்டு ஓடிப் போயினன். பின் மணிமேகலையை வாயிலில்லாத அறையில் அடைப்ப இவள் பசியிலா மந்திரமறிந்த பலத்தால் குற்றமில்லா திருந்தாள். இதனை யறிந்த இராஜமாதேவி குற்றம் பொறுக்கவேண்ட அவளுக்கு உதய குமாரனது முற்பிறப்புணர்த்தி அவளுக்கும் தருமோபதேசம் செய்தனள். மணிமேகலை இராஜமாதேவியிடமிருத்தலை ஒழிந்து அறவணவடிகளால் அவ்விடம் நீங்கிப் புண்ணியராசன் சோலையை யடைந்து ஆபுத்திரனுக்கு மணிப்பல்லவம் தரிசிப்பித்து அவன் தன் பழைய என்பைக் கடற்கரையிற் கண்டு வருந்த அவனைத் தேற்றி வஞ்சிநகர் சென்று கண்ணகியைத் தெரிசித்து அவளது முன்னைய வரலாறு அறிந்து முனிவன் வேடங்கொண்டு பலசமயக் கொள்கைகளை யறிந்து காஞ்சிநகர் சென்று பலவறங்களைச் செய்து அறவணவடிகளை வணங்கி அவர் கூறிய தருமோபதேசம் பெற்றுக் காஞ்சிநகரத்திலேயே நோற்றுக்கொண்டு இருந்தாள்.

**மணிவண்ணன்** — நீலமணி நிறமுள்ள திருமால். (சிலப்பதிகாரம்)

**மணீதரன்** — ஒரு யக்ஷன். தேவாரண்யவாசி.

**மண்** — 1 இது, கந்த தன்மாத்திரையிற் றோன்றியது. இது சத்த, பரிச, ரஸ, ரூப, கந்தமெனும் ஐந்து குணமுடையது. இது உரத்துத்தரித்தல் எனும் தொழிலைப் பெற்றது. இதிலடங்கிய திடபதார்த்தங்களை (14) வகை யென்பர் நூதன ஆராய்ச்சியர். அவை, ஆக்சிஜன், எனும் பிராணவாயு, ஹைட்ரஜன் எனும் ஜலவாயு, உப்பிலுள்ள க்ளோரின் எனும் வாயுவும், நைட்ரோஜன் எனும் வெடியுப்பு வாயுவும், ஸல்பர் எனும் கந்தகமும், பாஸ்பரஸ் எனும் பிரகாசிதமும், பொடாஷியம் எனும் ஜலசம்பந்தப் பொருளும், மக்னிஷியம் என்பதும், சோடியம் எனும் உப்பின் மூலப்பொருளும், மண்ணினம்சமான கார்பன் எனும் கரியும், கால்ஷியம் எனும் சுண்ணம்பின் மூலப் பொருளும், இரும்பும், மணலின் மூலப் பொருளாகிய சிலிகன் என்பதும், மாங்கனீஷ் எனும் ஒருவகை லோகசத்தும் ஆம். இவை அடங்கிய பொருளே மண் என்பதாம்.

2. இது, பல அணுக்கள் சேர்ந்த பூதப் பொருள். இது, உருவம், நிறம், மணம், உரிசை, குணம் முதலியவற்றால் பலவகை வேறுபாட்டை யடைகிறது. இதில் பாஷாணம், ரஸம், கந்தகம் முதலிய வீரியப் பொருள்களும், இந்துப்பு, கல்லுப்பு, கரியுப்பு, முதலிய உப்புக்களும், வெங்காரம், படிகாரம் முதலிய ஒருவகை திரவியங்களும், நிலக்கரி, சுண்ணம்பு, பிச்சுக்கட்டி முதலியவைகளும், பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், தகரம், அலுமீனியம், முதலிய லோகங்களும், கருங்கல், வெண்கல், சலவைக்கல், மாக்கல், நார்க்கல், சந்தனக்கல், பலகைக்கல், சூர்யகாந்தக்கல், இரத்தினங்கள், வைரம் முதலிய கற்களும், தோன்றுகின்றன. இதில் ரேடியம் எனும் உயர்ந்த பொருளையும் எடுக்கின்றனர். இவையன்றிச் சிலதேசத்தவர்கள், மண்ணை ஆகாரமாகவுங் கொள்கின்றனர். தென்னிந்தியாவிற் சில ஏழைகள் பொறு

க்கு எனும் மண்ணையும், மலையாளவய நாட்டில் பிட்மென் எனும் மண்ணையும், ஜெய பூரிலுள்ள பிக்கானீர்மார்வாரி ஏழைகள், ஒருவித கல்லின் மாவையும், ஜப்பான் தேசத்து ஐநாஸ் சாதியர் டீஸ்டானே பள்ளத்தாக்கின் மண்ணையும், ஸ்வீடன் தேசத்தவரும் பின்லண்ட் தேசத்தவரும் ரொட்டி மண் என்கிற மண்ணையும், உண்கின்றனர். தென் அமெரிக்கா பிரேசில் நாட்டவரும், வடசமுத்திர தீவினரும், ஆபிரிக்கா கண்டத்து நீக்ரோவியரிற் சிலரும் மண்ணை ஆகாரமாகக் கொள்கின்றனர்.

**மண்டபமுடைய மகருஷி கோத்ரன்** — வைசியகுலத் தலைவன். முடக்கு மாணிக்கங் கொடுத்துக் கீர்த்தி பெற்றவன்.

**மண்டபன்** — கூசுமாண்ட முனிவர் புதல்வன். இவன் பஞ்சமகா பாதகங்கள் இயற்றியதால் தந்தை இவனை அகற்ற இவன் காசியில் பஞ்சக்குரோசப் பிரதக்ஷணஞ் செய்வாருடன்கூடிப் பிரதக்ஷணஞ்செய்து பாபம் நீங்கிச் சுத்தனாய்ச் சுதேவர்களால் சுத்தனென்று கூறப்பட்டுத் தந்தையைச் சேர்ந்து களித்திருந்தவன்.

**மண்டல புருடர்** — தொண்டைமண்டலத்துக் குன்றையூரில் சைநசமயத்து உதித்தவர். இவர் திவாகரம், பிங்கலந்தை முதலிய நிகண்டுகளைச் சுருக்கி விருத்தப்பாவாக ஆசாரியராகிய குணபத்திரர் கட்டளையால் செய்தவர். இவர் இருந்தது பெருமண்டூர் எனும் வீரையூர் என்றுங் கூறுவர். இவர் காலம் விஜயநகராண்ட கிருஷ்ண தேவராயன் காலம் என்பர். சூடாமணி உள்ளமுடையான் என்னும் சோதிடநூல் செய்தவரும் இவரென்பர்.

**மண்டலம்**—1. (எ) வாயு மண்டலம், வருண மண்டலம், சந்திர மண்டலம், சூரிய மண்டலம், நக்ஷத்ர மண்டலம், அக்னி மண்டலம், திரிசங்கு மண்டலம். (ந) சூரிய சந்திர அக்னி மண்டலங்கள்.

2. இவை யாகாதிகாரியங்களில் போடுவனவாம். லதாலிங்கமண்டலம், நவநாப மண்டலம், அனந்தவிஜயமண்டலம், பத்திரமண்டலம், தாராகாரமண்டலம், கௌரிலதாகாரலிங்கமண்டலம், சுபத்திரமண்டலம், உமாகாந்தமண்டலம், ஸ்வஸ்திகமண்டலம், டங்கம் என்னும் அர்த்தசந்திரமண்டலம்.

**மண்டலம் ஐந்து**—பூமண்டலம், ஜலமண்டலம், அக்னிமண்டலம், வாயுமண்டம், ஆகாசமண்டலம் இவற்றிற்கு முறையே மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்திஸ்தானங்களாம். (திருமந்.)

**மண்டலிகாராஜன்** — இந்துஸ்தானத்தி லிருந்த அரசன். இவன் தேவி சுலக்ஷணி பாகவத பக்தியும் திருமாலிடத் தன்புங் கொண்டு ஒழுகிவருநாட்களுள் நாயகன் பகவத்பக்தி யிலாததுகண்டு வருந்தி அவரிடங் கூறுகையில் அரசன் நானலையும் புலனுடையேன் அப்பக்தி எனக்குறு தென விருந்தனர். ஒருநாள் நித்திரையில் ராமநாமங்கூற மனைவியார் மிகு களிப்புடன் அன்று பாகவதர்க்கு அன்னமிட்டு விழவுசெய்தனர். இதைக்கண்ட அரசன் என்னென இன்று துயிலிடை தங்கள் வாயில் ராமநாமம் வந்த நலத்தால் இது இயற்றினேனென அரசன் இராமன் என் வாயிடைப் புக்கனனேவென வெண்ணி உயிர்நீங்க மனைவியாரும் கணவனுடன் சென்று பாமபதமடைந்தனர்.

**மண்டனமிசிரர்** — பிரமனவதாரம். பட்ட பாதாசாரியர் மாணுக்கர். சங்கரபாஷ்யத்திற்கு விவரணஞ் செய்தவர். இவர்க்குச் சுரேச்வராசாரியர் விஸ்வரூபர் எனவும் பெயர்.

**மண்டியூர்** — குதிரைகளின் புழுதிமண்டிய இடமாம். (திரு.)

**மண்டிலம்** — வில்வித்தை காண்க.

**மண்டுககன்னிகை** — சுசோபனன் என்று பெயருள்ள மண்டுகோராஜனது புத்திரி. நாயகன் இட்சவாகுவம்சத்தவனாகிய பரீட்சித்து என்னும் பெயருடையவர். புத்திரர்கள் சலன் தலன், பலன். (பா. வன.)

**மண்டுகோராஜன்**—ஆயு என்னும் பெயருடையவன். இவனது புத்திரி சுசோபனை. (பா. வன.)

**மண்டுகமகருஷி** — 1. பாண்டிநாட்டு வில்லி புத்தூரில் திருமால் அருள்பெற்றவர்.

2. நின்மலரைக் காண்க.

**மண்டோதரி** — மயன் குமரி. இராவணன் தேவி. இந்திரசித்தின் தாய். இராவணன் இறந்த துக்கத்தால் அவன் உடலின்மேல் உயிர்விட்டவள். இவளுக்கு மந்தோதரி யெனவும் பெயர்.

**மண்ணுடையார்**—ஒருவகைக் குலாலர். வச்சிராசுரனைக் கொன்றவர் என்பர். தாய் கருணிதேவி.

**மண்ணுமங்கலம்** — 1. பணியாதாரரணுகிய கன்னியுடன் வதுவை பொருந்திய மிகுதியைச் சொல்லியது. (பு வெ.)

2. எண்ணுதற்கரிய மிக்க புகழினை அரசன் பொருந்தி மஞ்சனம் பண்ணும் மங்கலத்தினது மிகுதியைச் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)

**மண்முகன்** — தவளமலையில் இருந்து தவஞ் செய்த ஒரு முனிவன். இவனிடம் இருந்த பசுவின் வயிற்றில் புண்ணியராசன் பிறந்தான். (மணிமேகலை)

**மதங்கருஷி** — துந்துபி உடலைத் தூக்கித் தன் மலையில் எறிந்த வாலியை அம்மலையை மிதிக்கின் தலைவெடிககச் சாபமளித்தவர். பிரியம்பதன் என்கிற காந்தருவனை யானையாகச் சபித்தவர். சூரியனிடமிருந்து இந்திரத்தநுப்பெற்றுப் பரசுராமனுக்குக் கொடுத்தவர்.

**மதங்கபுரம்** — சயமுகாசுரன் பட்டணம்.

**மதங்கன்** — 1. ஒரு பார்ப்பினியிடம் சண்டாளனுக்குப் பிறந்தவன். இவன் பிராமணத்துவத்தை விரும்பி அநேகநாள் தபஞ் செய்து அதை அடையாமையால் இந்திரனால் சண்டதேவன் எனப்பட்டுக் கிராமத்தாரால் பூசிக்க வரம்பெற்றவன்.

2. மதங்ககுலத்திற் பிறந்தவன். இவன் தவத்தால் சத்தியைப் பெண்ணாகப் பெற்று மாதங்கியெனப் பெயரிட்டு வளர்த்தவன்.

3. துந்துபிக்கு ஒரு பெயர்.

4. பிரமரிஷி. (பா. அந.)

**மதங்காச்சிரமம்** — இராமலக்ஷுமணர் கவந்தனைக் கொன்ற பிறகு தங்கிய இடம்.

**மதச்சந்தன்** — பிரகஸ்பதி சந்ததியானுகிய ஒரு இருடி.

**மதநன்** — 1. கட்டியங்காரனுக்கு மைத்துநன்.

2. துர்த்தமனைக் காண்க.

**மதநர்சுரன்** — தேவாசுரயுத்தத்தில் விஷ்ணுமூர்த்தியால் கொல்லப்பட்ட அசுரன்.

**மதநிகை** — சூடாலையைக் காண்க.

**மதம்** — 1. பலர்கொண்ட கொள்கை. நமது பரதகண்டத்தில் பலமதங்கள் வழங்கி வருகின்றன. அவற்றுள் பலவற்றைச் சுருக்கிக் கூறினேன். கூறாதுள்ள சிலமதங்களின் பெயர்களைக் கூறுகின்றேன். சூரியவாதி, சந்திரவாதி, நவக்கிரகவாதி, பஞ்சகோசவாதி, ஊழ்வாதி, காலவாதி, மந்திரவாதி, யந்திரவாதி, அவவிதவாதி எனப் பலமதத்தவர் இருந்ததாகத் தெரிகிறது. இம்மதத்தவர் சூரிய சந்திராதிகளையே தெய்வமாகக் கொண்டவர். தற்காலம் இல்லை இம்மதங்களின் பந்தமோக்ஷங்களை விரிவஞ்சி விடுத்தனன்.

2. (எ) உடன்படல், மறுத்தல், பிறர் தம்மதமேற்கொண்டு களைதல், தானனுட்டித்தனது நிறுப்பு, இருவர் மாறுகோள் ஒருதலை துணிவு, பிறர் நூற்குற்றங் காட்டல், பிறிதொடுபடான்றன் மதங்கொளல் ஆம்.

**மதயந்தி** — கல்மாஷபாதன் தேவி. இவள் கணவன் கட்டளையால் வசிட்டரைப் புணர்ந்து எழு வருஷம் கருவுற்று அஸ்தமகனைப் பெற்றாள்.

**மதரோகம்** — மதத்தை யுண்டாக்குவது. இது ஈனத்வனி, பிதற்றல், தகாநடக்கை, கலகப்பிரியம் முதலிய குணங்களை யுடையது. இது வாத, பித்த, சிலேத்ம, சந்நிபாத, ரத்த, மித்யப்ரான, விஷமென்னும் பேதத்தால் எழுவிதமாம். இது விரேசனம், கார்ப்பாசச்சூரண முதலியவற்றால் வசமாம். (ஜீவ.)

**மதலகநசம்** — இந்திரன் பழிபோக்கிய கங்கைக்கு அருகில் உள்ள இடம்.

**மதலேகை** — காதம்பரியின் தோழி.

**மதனசிகாமணி** — 'பரத்தையர்மாலை' யியற்றிய புலவன். இவன் பரத்தையருடன் கூடிக் கண்ட சுகத்தை வெறுத்து இந்நூல் செய்தனன் போலும்.

**மதனமஞ்சிகை**—இவள் கலிங்கசேனை என்பவளுடைய புதல்வி. நரவாணதத்தனுடைய மனைவி. மிக்க அழகுடையவள். மானசவேகனென்னும் வித்தியாதரனால் விரும்பி எடுத்துச் செல்லப்பட்டுத் தன் கணவனுல் மீட்கப்பெற்றவள். (பெருங்கதை)

**மதனன்**—கட்டியங்காரனுக்கு மைத்துனன்.

**மதனபிராமன்** — பாஞ்சாலாதிபதி.

**மதன்** — 1. சிவகிங்கரரில் ஒருவன்.

2. மன்மதனுக்கு ஒரு பெயர்.

3. சவனரால் நிருமிக்கப்பட்ட இந்திரகத்தரு. சவனரைக் காண்க. (பா-அந.)

**மதாத்யயரோகம்** — இது சுக்கிலத்தை க்ஷீணம் செய்வதால் உண்டாவது. இது சோர்வு, மலம் நழுவல், விடாத்தாகம், சுரம், அரோசகம், மார்பு, சிரம், தோள், விலாக்களில் நோய், நடுக்கல், கண்புகைச்சல், வீக்கம், சித்தபிரமை இவைகளைப் பூர்வரூபமாகக் கொண்டுவரும். இது வாத,

பித்த, சிலேஷ்ம, திரிதோஷத்தால் நான்காம். இது மகாபில்வாதிலேஹ்யம், தாதுவிர்த்திலேஹ்யம், தங்கபஸ்மம் முதலியவற்ருல் வசமாம்.

**மதாநுஞ்ஞை** — வாதி தன் மதத்திற்கு வருந்தூஷணம் பரிகரிக்காமல், பிறமதத்திற்கு இட்டத்தைத் தூஷணமாகச் சொல்லுதல். (சிவ-சித்.)

**மதாலஸை** — விசுவாவசுவென்னும் காந்தருவன் பெண். பாதாளகேது என்னும் அரக்கனுல் பிடிபட்டுக் குவலயாசுவனுல் விடுபட்டு அவனை மணந்து தாலகேது எனும் அரக்கனது வஞ்சமொழியால் கணவன் இறந்தானென்று உயிர் விட்டு அசுவதரனுல் உயிர்பெற்று இரண்டாமுறை குவலயாசுவனைச் சேர்ந்து விக்கிராந்தன் சுபாகு, சத்துருமர்த்தனன், அலர்க்கன் முதலிய குமரரைப்பெற்று முதல் மூவருக்கும் ஞானம்போதித்துத் துறவிகளாக்க அரசன் மனைவியை நோக்கிச் சந்ததி விர்த்தியாகவேண்டி நீயே பெயரிட்டு அரசநீதி போதிக்க என வேண்ட நான்காவது குமாரனுக்கு அலர்க்கன் எனப் பெயரிட்டு அரசாளச் செய்தவள். இவளது மற்ற சரிதங்களை இருதத்துவசனைக் காண்க. (மார்க்கண்டேயம்.)

**மதி** — 1. சந்திரன்.

2. தருமன் என்னும் மநுவின் தேவி.

3. சமகிலாதன் தேவி. இவளைக் கதியென்றுங் கூறுவர்.

**மதிசாரன்** — புருவம்சத்து அந்திசாரனுக்கு ஒரு பெயர்.

**மதிச்சயம்** — ஒரூர்; குதிரைகளை விலைமதித்த இடமாம். (திரு.)

**மதிதயன்** — சந்திரமதியின் தந்தை.

**மதிதான்** — தனபதிக்கு மந்திரி.

**மதிநாரன்** — ஒரு க்ஷத்திரியன், சந்திரவம்சம், அநுதிருஷ்டன் புத்திரர்கள், அவன் புத்திரர்கள் தம்சு, மகான், அதிரதன், திருகு. (பா. ஆதி.)

**மதிமான்** — சந்திரகசாத்தாசன். இவன் தன் குமாரர்களாகிய துற்குணன், துராசாரன் என்பவர் தீமை செய்ய நாட்டை விட்டு துரத்தியவன்.

**மதியநந்தை** — ஒரு காந்தர்வ ஸ்திரீ, அகத்தியர் சாபத்தால் விசாலையாகப் பிறந்தவள். அவீக்ஷித்தைக் காண்க.

**மதிராட்சன்** — விராடன் தம்பி.

**மதிராஸ்வன்** — சூரியவம்சத்தாசன். புத்திரன், துயுதிமான்.

**மதிரை** — 1. வசுதேவன் பாரிகளுள் ஒருத்தி.

2. காதம்பரியின் தாய்.

**மதிவாணர் நாடகத் தமிழ்நூல்** — இது மதிவாணனுல் செய்யப்பட்ட நாடகத் தமிழ் நூல். நூல் காணப்படவில்லை. இது வசைக்கூத்திற்கு மறுதலையாகிய புகழ்க் கூத்தினிலக்கணஞ் சொன்ன நூல். சங்கமருவியது.

**மதிவாணன்** — சங்கம்ருவிய ஒரு பாண்டியன். தமிழில் மதிவாணர் நாடகத்தமிழ் நூல் செய்தவன்.

**மதிவான்** — (சங்.) சுரிசகன் குமரன்.

**மது** — 1. ஒரு கற்பத்தில் விஷ்ணுமூர்த்தியின் காதினின்றுந் தோன்றியவன். இவனுடன் பிறந்தவன் கைடவன். இவர்கள் இருவரும் விஷ்ணுமூர்த்தியின் மூச்சிற் பிறந்தவர் என்றுங் கூறுவர். இவர்கள் விட்ணு சிட்ணுக்களால் கொலை செய்யப்பட்டனர் என்ப. கைடவனைக் காண்க. இவன் மறு ஜன்மத்தில் கும்பகர்ணனுயினன். இவன் கைடவனுடன்கூடி விஷ்ணுமூர்த்தியிடம் யுத்தத்திற்குச் சென்றனன். விஷ்ணுமூர்த்தி இவர்களுடன் அநேகநாள் யுத்தஞ் செய்யவும், தோலாமைகண்டு அசுரர் இருவரும் விஷ்ணுவைப் புகழ்ந்து உமக்கு என்ன வரம் வேண்டுமென்ன, விஷ்ணு என்னுல் நீங்கள் இறக்கவரம் வேண்டுமென்ன அவ்விதம் வரம் தந்து விஷ்ணுமூர்த்தியின் நீண்ட தொடையில் ஏறினர். இவர்களை விஷ்ணுமூர்த்தி கதையால் கொன்றனர். இவர்கள் மேதைபட்டதால் பூமி மேதினி யென்னப்பட்டது. (தேவி-பா.)

2. பிந்துமானுக்குச் சாகாவிடம் உதித்த குமரன்; தேவி சத்தியை; குமரன் பவநன்.

3. கிருஷ்ணன் குமரன்.

4. கார்த்தவீர்யார்ச்சுநன்குமரன். இவன் குமரன் விருஷ்ணி.

5. ஸ்ரீராமமூர்த்தியின் குமரனுகியகுசன் வம்சத்தரசன். இவன் மீண்டும் யுகமுடிவில் சூர்யவம்சத்தினை யுண்டாக்க மதுமந்தம் என்னும் கிராமத்தில் தவஞ் செய்து கொண்டிருப்பவன் என்றுங் கூறுவர்.

6. அஸ்வநிதேவர் சோமபானஞ் செய்வதைத் தடைசெய்யும் இந்திரனைச் செயிக்கச் சியவனரால் சிருட்டிக்கப்பட்ட அரக்கன்.

7. தேவக்ஷத்ரன் குமரன்; இவன் குமரன் புருவசன்.

8. ஒரு பூதத்தலைவன். அசமுகனுடன், போர் புரிந்து அவன் ஏவிய நாராயணாஸ்திரத்திற்கு நிராயுதனாய் நின்று அதனால் அவனைக் கொன்றவன்.

9. கும்பினசியை இராவணன் இல்லாத காலத்து மணம் புணர்ந்தவன். இவனது மற்ற சரிதையைக் கும்பினசியைக் காண்க. இவன் தாய் லோலை. இவன் நற்குண நற்செய்கையுள்ளான். தவஞ்செய்து சிவமூர்த்தியிடம் சூலம் பெற்றவன். இவன் குமரன் லவணன்.

**மதுகாம்பிரவனம்** — கோசம்பி நகரத்தின் புறத்ததாகிய ஒரு பூஞ்சோலை. (பெ.கதை)

**மதுதடவாயிற் கீரத்தனர்** — ஒரு பழைய தமிழ்க்கவி. கடைச்சங்க மருவியவர்.

**மதுகைடபர்** — திருமாலின் நாபிகமலத்தில் இரண்டு நீர்த்துளிகள் இருந்தன. அவற்றைத் திருமால் நோக்க அவை இரண்டு அசுரர்களாயின. அவ்விருவரும் தாமரை நாளத்தின் வழியோடி வேதத்தைக் கவர்ந்தனர். பின் இவர்கள் ஹயக்ரீவரால் கொல்லப்பட்டனர். (பார-சாந்.)

**மதுகைடவர்** — மதுவையும் கைடவனையும் காண்க.

**மதுசந்தன்** — அகமருஷனுக்குத் தந்தை.

**மதுசூதனன்** — 1. சுலபனைக் காண்க.

2. மதுவைக் கொன்ற விஷ்ணுவின் அம்சம்.

**மதுச்சந்தனன்** — விச்வாமித்திரர் குமரருக்குள் நடுவானவன். சுனச்சேபனைக் காக்கத் தொடங்கிய விச்வாமித்திரரை இவன் தன் குமரர் இருக்க அயலார்க்கு உபகரித்தல் நலமன்று எனத் தடுத்ததால் இவர்கள் வேடராய் நாயூனருந்தச் சபிக்கப்பட்டனர்.

**மதுச்சந்தசுக்கள்** — விச்வாமித்திருடைய நூறு புத்திருள் மூதல் ஐம்பதின்மர். தந்தையால் மிலேச்சராகச் சாபமேற்றவர்.

**மதுமதி** — சுருமா என்பவனால் ஆளப்பட்ட பட்டணம்.

**மதுமந்தம்** — தண்டகன் பட்டணம்.

**மதுமான்** — சசபதருக்கு, ஹேலையிடம் பிறந்தருஷி. இவரைத் தாய்பர்வதக் குகையில் விட்டுச் செல்லக் குழந்தை வாயில் மதுதாரை விழுந்து வளர்ந்தனர். இதனால் இவருக்கு மதுமான் என்று பெயருண்டாயிற்று. (திருவல்லிக்கேணி புராணம்.)

**மதுரகவியாழ்வார்** — குமுதாம்சரான இவர் துவாபர யுகத்தில் (அ. லக்ஷத்துக்குமேல் (௬௩-அ௭௧) வதான ஈசுவரவருஷம் சித்திரைமாசம் சுக்ல சதுர்த்தசி வெள்ளிக்கிழமை சித்திரை நக்ஷத்திரத்தில் திருக்கோளூரில் ஒருபுரச்சூட வைஷ்ணவ பிராமணருக்குக் குமாரராய் அவதரித்துத் திவ்ய தேசயாத்திரை செய்து திரு அயோத்தியில் இருக்கையில் ஒரு இரவு திருக்கோளூரெம்பெருமானை அத்திசை நோக்கிச் சேவிக்கையில் ஒரு மகா தேஜஸைக்கண்டு அத் தேஜஸின் வழி சென்று நம்மாழ்வாரைத் தரிசித்துச் "சித்தின் வயிற்றிற் சிறுகுட்டிபிறந்தால் எத்தைத்தின்றெங்கே கிடக்குமென" ஆழ்வார் "அத்தைத்தின்றங்கே கிடக்குமென" மறுமொழியருளக் கேட்டுத் தண்டனிட்டுத் தத்துவார்த்தங்களை பிரசாதித்து அருளவென, அத்தருணத்தில் பெருமாள் நம்மாழ்வாருக்குச் சேவை சாதிக்கத் தரிசித்து ஆநந்தமடைந்து நான்கு வேதசாரமாகிய திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி முதலியவற்றை ஆழ்வார் திருவாய்மலர அவற்றைத் தாமே எழுதித்தாமும் கண்ணினுண் சிறுத்தாம்பு அருளிச் செய்து நம்மாழ்வார் திருநாட்டிற்கெழுந்தருள ஆழ்வாரை அர்ச்சாரூபமாகப் பிரதிட்டைசெய்து (௫௦) வருடம் ஆராதித்து நான்கு பிரபந்தங்களையும் பிரவர்ப்பித்துத் திருக்கோளூரில் திருநாட்டிற் கெழுந்தருளினவர். (குரு பரம்பரை.)

**மதுரகவிராயர்** — இவர் தொண்டை நாட்டு அமரம்பேட்டிற் பிறந்தவர். திருக்கச்சூர் கொண்டி நாடகம் பாடியவர். இவர் பல தனிப்பாடல்கள் பிரம்பூர் ஆநந்தரங்கன் மீதும் காளத்தி முதலியார் மீதும் பாடிப் பரிசு பெற்றனர். (தனிப்பாடற்றிரட்டு).

**மதுராதாயம்** — நெய், பால், தேன். (காத்யாயனர்.)

**மதுரவகை** — 1. இது, மதுரந்தரும் தாவரப் பொருள்களிடம் உண்டாம் பொருள்கள். அவை செங்கரும்பு, வெண்கரும்பு, பனை, ஈந்து முதலிய பொருள்களின் சாறுகளையும், கள்ளுகளையும் காய்ச்சுதலாலுண்டாவது.

2. கரும்பு இரதம், பலகரும்பின் வெல்லங்கள், தேன், தேன்பாகு, வெல்லப்பாகு, தெங்கின் வெல்லம், தெங்கு, பனை, ஈந்து கரும்பாலாகிய கற்கண்டுகள் முதலிய.

**மதுராதேவி** — வஸுதேவர் தேவியரில் ஒருத்தி.

**மதுராந்தகன்** — இவன் சோழவம்சத்தரசன். சில நாடுகளை அரசு புரிந்து வந்தான்.

**மதுராபதி**—தென்மதுரையின் அதிதேவதை. இத்தெய்வத்தால் கண்ணகி, கோவலன் முற்பிறப்புணர்ந்தனள். (மணிமேகலை).

**மதுரை** — 1. இது தென்மதுரை யென்றும் வடமதுரை யென்றும் இரண்டு பட்டணங்கள். இவ்விரண்டும் புண்ணியத் தலங்களே. ஒன்று சிவமூர்த்திக்கும் மற்றது கண்ணபிரான் தமது வெற்றியைத் தெரிவித்ததுமாம். அவற்றுள் தென் மதுரையை முதலிற் கூறுகிறேன். "சந்தனப் பொதியச்செந்தமிழ் முனியும், சௌந்தர பாண்டியனெனுந் தமிழ் மாறனும், சங்கப் புலவருந் தழைத்தினி தோங்கிய, மங்கலப் பாண்டி வளநாடென்ப" என்பதால் இது தமிழ்நாடெவற்றினுஞ் சிறந்தது. இதில் சிவமூர்த்தி மலயத்துவச பாண்டியன் பொருட்டு அவ்விடம் திருவவதரித்திருந்த தடாதகைப் பிராட்டியாரை மணக்கச் சோமசுந்தர பாண்டியராய் எழுந்தருளிப் பிராட்டியைத் திருமணங்கொண்டு, உக்கிர குமார பாண்டியனைப் பெற்றுப் பல திருவிளையாடல் கண்டருளினர். இது, முதல், இடை, கடைச்சங்கங்கள் இருந்து தமிழ் வளர்த்த பெருமையுள்ளது. அகத்தியருக்கு இருக்கையான பொதிகை மலையைத் தனக்கு இருப்பிடமாகப் பெற்றது. எழுகடலும் வந்து பாண்டியனை வணங்கப் பெற்றது. இதன் பெருமைகளை ஆலாசிய மான்மியம், திருவிளையாடற் புராண முதலியவற்றுட் காண்க. இதில் கண்ணகை கோயில், கோவலன் உயிர்நீத்த இடமிருக்கிறது. மற்றது வடமதுரை. இது யமுனை நதிக்கரையில் உள்ளது. இது மதுரமுள்ள பொருள்கள் நிறைந்துள்ளதால், சத்துருக்கனரால் இப்பெயர் பெற்றது. மதுவால் ஆளப்பட்டது. பின் கம்சன் அரசாட்சியாயிற்று. இது கண்ணபிரான் தமது பராக்கிரமத்தைக்காட்ட நின்ற பெருமையுடையது. கண்ணன் பிறப்பிடம். சத்துருக்னரால் உண்டாக்கப்பட்டது.

2. Muttra The Capital of Surasena Desa.

3. சந்திர குலத்தரசர் நகரம் (சூளா.)

**மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்** — 1. இவர் பழைய தமிழ்க்கவி. சிறுகுடிகிழான் பண்ணனைப் பாடியவர். மள்ளனார் என்றும் கூறுவர். (புற-நா) அக-நா)

2. இவர் சிறுகுடி கிழான் பண்ணனைப் பாடியவராதலால், அவனைப் பாடியசோழன் குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளி வளவன், கோவூர் கிழார் இவர்களோடு ஒரு காலத்திருந்தவராவார். ஒரோ விடத்துச் சேரலன் கொல்லி மலையையும் பாடியுள்ளார். இவர் குறிஞ்சியையும், பாலையையும், பெரும்பாலும் முல்லையையும், புனைந்து பாடினவர். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும், குறுந்தொகையில் இரண்டும் அகத்தில் ஐந்தும், புறத்திலொன்றுமாகப் பத்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்** — 1. இவர் வணிகர். ஒரு தமிழ்க்கவி (புறம்).

2. அறுவை வாணிகன் - வஸ்திரவியாபாரி. இவர் வைசியர் புலி முழங்குவதை இடி முழக்கமாமென்று கொண்டு குறவர் திணையைக் குவிப்பரென நயம்பட கூறியுள்ளார். பெரும்பாலும் குறிஞ்சி முல்லைகளையும் சிறுபான்மை பாலையையுஞ் சிறப்பித்துப் பாடியுள்ளார். புருவோடு விளையாட்டயரும் மைந்தரை நோக்கிக் காதலி வருந்துமென்று தலைவன் கூற்றாக, இவர் கூறுவது பாராட்டத்தக்கது. இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையிலொன்றும், அகத்தில் ஆறும், புறத்திலொன்றும் திருவள்ளுவ மாலையிலொன்றுமாகப் பத்துப்பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**மதுரை ஆசிரியன் கோடங்கொற்றன்** — கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் ஊர்மதுரை போலும். குறு - கசச.

**மதுரை, ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்** — ஆலம் பேரி சாத்தனாரைக் காண்க.

**மதுரை இளங்கண்ணிக் கௌசிகனார்** — ஒரு தமிழ்க்கவி. கடைச்சங்கமருவிய மதுரை யிளங்கௌசிகர் என்றும் ஒருவர் இருந்தார். (புற-நா)

**மதுரை, இளம்பால் ஆசிரியன் சேந்தன் கூத்தனார்** — 1. இளம்பால் ஒரூர். ஆசிரியன் எனப்படுதலால் இவர் அந்தண மாபினராவர். சேந்தன் என்பது தந்தை பெயர்போலும். கூத்தன் இயர்பெயர். இவர் குறிஞ்சியில் பயின்றவர் போலும்.

குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். களவிலே இரவுக்குறிக்குத் தலைவன் வந்து போதலை நன்சுவைபயப்பப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், அகத்தில் இரண்டுமாக மூன்று பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2. கடைச்சங்கமருவிய புலவர். (அகம்.)

**மதுரை ஈழத்துபூதன்தேவனார்**—1. இவர், ஈழ நாட்டினின்று மதுரையில் வந்து தங்கிய பூதனது மகன். தேவனெனப்படுவோர். ஈழம் - இலங்கை. ஏடேழுதுவோர் பிழையினால் இவர்பெயர் மதுரை ஏறத்துப் பூதன் தேவனெனவும் ஈழத்துப் பூதன் தேவனெனவும் காணப்படும். வாடைவீசுங் குளிர்காலத்தே தலைவியைப் பிரிவோர் மடமை யுடையரென்று இவர்கூறுவது நன்கறிதற்பாலது. இவர் பாலையையுங், குறிஞ்சியையும், பாராட்டிப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் மூன்றும், அகத்தில் மூன்றுமாக ஏழு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2. கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். (அக-நா)

**மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவரில் ஒருவர். இவரது இயற்பெயர் சேந்தன் பூதன். இவர் இலக்கணத்தில் வல்லவர் போலுமாதலின் இப்பெயர் பெற்றனர். குறு-௬0, ௨௨௬.

**மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார்** — ஒரு பழைய தமிழ்க்கவி. (புற. நா.)

**மதுரை, ஓலைக்கடையத்தார் நல் வெள்ளையார்** — இவரது பெயரினால் இவர் பெண்பாலரென் றூகிக்கப்படுகின்றது. கிறையடு காமம் சிறையடுகெடும் புனலோடொத்ததென்றிவர் கூறியது வியக்கத்தக்கது. இவர் இமயமலையையுங், கங்கையாற்றையும் கூறியுள்ளார். மருதம், நெய்தல் இரண்டினையும் நயந்தோன்றப் பாடியுள்ளார். இவர் பாடியபாட்டு இரண்டு. (நற். ௨௫0, ௩௬௯.)

**மதுரை கடையத்தார்மகன் வெண்ணாகன்**— இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவரது இயற்பெயர் வெண்ணாகன், ஊர்மதுரை, தந்தை கடையத்தார் என்பவர் போலும். குறு - ௨௨௩.

**மதுரைக் கணக்காயனார்** — நக்கீரர் தந்தை. (புற நா.)

**மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்**- இவர் கீரவிகோற்றனார்க்குத் தந்தை. ஆலவா யெம்பெருமானடிகள் அருளிய அகப்பொருளுக்கு உரைகண்டோர், பத்துப்பாட்டுள் திருமுருகாற்றுப் படையும், நெடுநல்வாடையும் அருளிச்செய்தவர். இவரால் பாடப்பெற்றோன் பாண்டியனிலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன். இவரது மற்ற சரிதங்களை நக்கீரரைக் காண்க. (புற நா).

**மதுரைக் கண்டாகத்தன்** — மதுரைக் கண்டாதத்தன் எனப் பிரதிபேதம். இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். ஊர் மதுரை. (குறு - ௩௧௭.)

**மதுரைக் கண்ணனார்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களிலொருவர். இவரதியற்பெயர் கண்ணனார். ஊர்மதுரை. (குறு - ௧0௭.)

**மதுரைக்கண்ணத்தனார்**—1. இவர் கண்ணத்தனாரெனவும் வழங்கப்படுவர். குறிஞ்சி, நெய்தல், வளங்களை, நன்றாக ஆராய்ந்து பாடியுள்ளார். அந்தி மாலையில் மேலைக்கடல் சங்கர நாராயண அவதாரத்திற் தோற்றம் போன்றதென்று கூறியது வியக்கத்தக்கது. இவர் பாடியனவாக நற்றிணையில் ௩௰௧-ம் பாடலொன்றும் அகத்திலொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2. கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர்.

**மதுரைக் கவுணியன் பூதத்தனார்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவரியற்பெயர் பூதத்தனார். இவர் கவுணியர் குடியினராகிய வேதியராக இருக்கலாம். (அகம் - ௭௪.)

**மதுரைக் கள்ளிற்கடையத்தன் வெண்ணாகனார்**—ஒரு பழைய தமிழ்க்கவி. (புற-நா).

**மதுரைக்காஞ்சி** — 1. தலையாலங்கானத்துச் செருவென்றபாண்டிய னெடுஞ்செழியனை மாங்குடி மருதனார்பாடிய தமிழ் நூல்; அகவற்பா. (௭௮௨) அடிகள்கொண்டது. இது நிலையாமையை அறிவுறுத்தியது.

2. இந்நூல் பத்துப்பாட்டுள் ஆறாவது பாட்டு; மாங்குடி மருதனாராற் பாடப்பெற்றது. தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் வீரம், அவன் முன்னோர் பெருமை, அவனது நாடு, நகரங்களின் வளம் முதலியவற்றை நன்கு-புலப்படுத்தும்.

**மதுரைக்காஞ்சிப்புலவன்**—கடைச்சங்கமருவிய தமிழ்ப்புலவன். (அக-நா).

**மதுரைக்காடாத்தனர்** —கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர்.

**மதுரைக்காமக் கண்ணி நப்பாலத்தனர்**- கடைச்சங்கமருவிய தமிழ்ப்புலவர். (அகநானூறு) பாடிய புலவருள் ஒருவர்.

**மதுரைக் காருலவியங் கூத்தனர்** — இவரைப்பற்றி யாதும் தெரிந்திலது. பாலையில் நெறியினது ஏதங்கூறியது பாராட்டத்தக்கது. பாலையையே புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியது. (நற் - நஉகூ-ம் பாட்டு.

**மதுரைக்கூத்தனர்** — இவர் கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். (அக. நடுச)

**மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனர்** — இவர் வணிகர். பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் பாடியவர். மணிமேகலை நூலாசிரியர். (புற. நா)

**மதுரைக்கோல்லன் வெண்ணுகனர்** — திருதண்கால் பொற்கொல்லன் வெண்ணுகனரென்பவர் இவராயிருக்கலாமென்று ஊகிக்கப்படுகின்றது. ஆயினும் மதுரை யென்றமையின் வேருகக் கூறிக்கப்பட்டனர். இவர் குறிஞ்சியையும், பாலையையும், புனைந்து பாடியுள்ளார். இவர் தமது பாடலில் பொற்செய் காசனைக்கூறிய அருந்தொடர் மொழியாற் பொற்கொல்லனெனத் தெரியப்படுவர். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், அகத்திலொன்றுமாக, இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**மதுரை கோலம் புல்லன்** — கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இயற்பெயர் கோலம் புல்லன். ஊர் - மதுரை. (குறு - நஎஅ.)

**மதுரைக்கௌணியர் மூத்தனர்** — கடைச்சங்கமருவிய புலவர்.

**மதுரை சீத்தலைச்சாத்தன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் ஊர் மதுரையென்று கூறப்படுதலால் சித்தலைச் சாத்தரின் வேருக இருக்கலாமோ அன்றி அவர் மதுரையிலிருந்ததால் இவ்வாறு கூறப்பட்டதோ தெரியவில்லை. (குறு - கஙச.) சீத்தலைச் சாத்தனரைக் காண்க.

**மதுரைச்சுள்ளம் போதனர்** — இவர் சுள்ளம்போதுஎன்னுமூரிலிருந்து மதுரையையடைந்து வைகியவர்; இஃது ஊர்பற்றி வந்த பெயர், நெய்தலைச் சிறப்பித்துப் பாடி யுள்ளார். மீன் கொழுப்பாலாக்கிய நெய்யால் விளக்கெரிக்கும் வழக்கம் முற்காலத்து முளதென்று இவர் பாடலாலறியலாகும். இவர் பாடியது (நற் உகசு-ம் பாட்டு

**மதுரைச் செங்கண்ணனர்** — கடைச்சங்கமருவிய தமிழ்ப்புலவர்.

**மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார்** — கடைச்சங்கமருவிய புலவர் (திருவள்ளுவமாலை)

**மதுரைத் தமிழ்க்கூத்தனர்** — ஒரு பழைய தமிழ்க்கவி. (புற நா)

**மதுரைத் தமிழ்க்கூத்தன் கடுவன்மள்ளனர்** — கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். (அக-நா)

**மதுரைத் தமிழ்க்கூத்தனுகன் றேவன்** — கடைச்சங்கமருவிய புலவன். (அக-நா)

**மதுரைத் தமிழ்நாயனர்** — கடைச் சங்கப் புலவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை)

**மதுரைத் ததகங்கண்ணனர்** — கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். (அக-நா)

**மதுரைத் தற்கூத்தன்கவேன்மள்ளனர்** — கடைச்சங்கமருவிய புலவர்.

**மதுரைநக்கீரர்** — ஒரு பழைய தமிழ்க்கவி. இவராற் பாடப்பட்டோன் சோழநாட்டுப் பிடவூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் (புற-நா)

**மதுரைநல்வெள்ளி** — இவர் கடைச்சங்கத்தவர் காலத்திருந்த புலமையர். இவர் ஊர் மதுரை, இவர் மகளிராக இருக்கலாம். (குறு நடுசு.)

**மதுரைப்படைமங்கைமன்னியார்** — ஒரு பழையத் தமிழ்ப்புலவர். (புற-நா)

**மதுரைப்பண்ட வாணிகனிளந்தேவன்** — கடைசங்கமருவிய புலவன். (அக-நா)

**மதுரைப்பள்ளி மருதங்கிழார் மகனர்சோகுத்தனர்** — இவர் மருதங்கிழார் மகனர் சோகுத்தனரெனவும், மதுரை மருதங்கிழார் மகனர் சோகுத்தனரெனவுங் கூறப்படுவர். இவர் சகோதரர்கள் இளம்போத்தனர், பெருங்கண்ணனரென இருவர், தொகை நூல்களில் காணப்படுகிறார்கள். இச்சோகுத்தனர் பாலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இடைச்சுரத்து தலைமகன், தலைமகளது உரு வெளித்தோற்றங் கண்டு மருளுவதாக இவர் கூறியது சிறப்புடையதாகும். இவர் (நற்)பாடிய பாட்டு இரண்டு.

**மதுரைப்பாலாசிரியனர்** — கடைச்சங்கத்தவருள் ஒருபுலவர் (திருவள்ளுவமாலை)

**மதுரைப்பாலாசிரியனற்றமனர்** — கடைச்சங்கமருவிய புலவன் (அக-நா)

**மதுரை ச்பாலாசிரியன் சேநங்கூத்தன்** — கடை சங்கமருவிய புலவன்.

**மதுரைப் பாலாசிரியன்நம்பாவன்** - கடைச்சங்கமருவிய புலவன்

**மதுரைப்புலவங்கண்ணனர்** — கடைச்சங்கமருவிய புலவர். (அக-நா)

**மதுரைப்பூதனிளநாகனர்** — ஒரு பழைய தமிழ்க்கவி. (புற-நா)

**மதுரைப், பூவண்டனுகன் வேட்டனர்** — பூவண்டல் - ஒரூர். இவர் குறிஞ்சியைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியது. (நற். ௱௧௭-ம் பாட்டு.)

**மதுரைப் பெருங்கோல்லனர்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் கொல்லர் என்பதால் கம்மியர் வகுப்பினராகலாம். இவர் ஊர்மதுரை. (குறு ௧ ௧)

**மதுரைப்பெருமருதனர்** — 1. கடைச்சங்கத்துப் புலவருள்ஒருவர். (திருவள்ளுவமாலை)

2. இவர் பாலையை பாடியுள்ளார். இவர் பாடியது நற் ௨௪௧ ம் பாட்டு.

**மதுரைப் பெருமருதிள நாகனர்** — இவர் பெருமருதனுக்குப் புதல்வனர் போலும். திணையை நோக்கிக் காலம் நவேித்துக் கதிரீன்று விளைவாயாகவென்று அதற்குரிய காரணத்துடன் தோழிகூற்ருக இவர் கூறுவது ஆராய்ந்து மகிழவேண்டிய தொன்ருகும். இவர் குறிஞ்சியைச்சிறப்பித்துப்பாடியுள்ளார். இவர் பாடியது நற் ௨௫௧-ம் பாட்டு.

**மதுரைப் போலவாயார்** — 1. பூதபாண்டியன் காலத்திருந்த புலவர். இவர் பூதபாண்டியன்தேவி பெருங்கோப்பெண்டுதீப்பாய்தல்கண்டு வியந்துபாடியவர். (புற நா)

2. போலவாயிரைக் காண்க.

**மதுரைப்போத்தனர்** — கடைச்சஙக மருவிய புலவர். (அக நா)

**மதுரைப் பொன்கோல்லன் வெண்ணுகனர்**—கடைச்சங்க மருவிய தமிழ்ப்புலவர்.

**மதுரைமருதங்கிழார்மகனிளம்போத்தன்**— கடைச்சங்கமருவிய புலவர் ஊர் மதுரை, தந்தை மருதங்கிழார். இவரியற் பெயர் இளம் போத்தன், வேளாளர். குறு.௱௨

**மதுரை மருதங்கிழார்மகன் பெருங்கண்ணனர்** — 1. கடைச்சங்கமருவிய தமிழ்ப் புலவர். அகநானூறு பாடியவருள்ஒருவர். (அக-நா)

2. இவர் மேற்கூறிய சோகுத்தனரின் சகோதரர். நெய்தல், குறிஞ்சி, முல்லைகளை நற்சுவை பயக்குமாறு பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ௱௮௮ ம் பாடலொன்றும், அகத்தில் மூன்றுமாக நான்கு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**மதுரை மருதனிளநாகனர்** — 1. எழுதுவோர் மிகையால் இவர் பெயர் மதுரைப் பூதனிளநாகனெனவும், மருதனிளநாகனெனவும் காணப்படும். இவர் சிவபெருமான் திரிபுரமெரித்ததை விதந்து கூறியுள்ளார்; திருச்செந்தூர் முருகக் கடவுளைப் பாராட்டிக் கூறியுள்ளார். பாண்டியன் இலவந்திப் பள்ளியிலே துஞ்சிய நன்மாறனைச் செவியறிவுறப்பாடி இடித்து நெறி நிறுத்தினவர் இவரே. (புறம் ௫௫). இவர் கூறிய மக்கட்பாற்காஞ்சி வெகு நயமுடையதா யிருக்கும் (புறம் ௱௪௧). தும்பைத் திணையில் தானைநிலை கூறியது. பாராட்டற்பாலது (புறம் ௨௭௬). நல்லந்துவனர் பரிபாடலில் திருப்பரங்குன்றைப் பாடியதனைப் பாராட்டி "தன்பரங்குன்றம் அந்துவன் பாடிய சந்துகெழு நடுவரை" எனக் கூறியுள்ளார் (அகம் ௫௯) தொழுனையாற்றுள் வாசுதேவன் குருந்து முறித்ததனைச் சிறப்பித்துள்ளார் (அகம் ௫௯). சேரமான் சேனபதிபட்டனைப் புகழ்ந்துள்ளார். (அகம் ௭௭). நடுகற் சிறப்புக் கூறியுள்ளார் (அகம் ௧௱௯) விடியற்காலத்தில் எருமை மேய்க்கச்செல்லுஞ் சிறுவர் அம்மாடுகளின் மீதேறிச்செல்வதனைக் கூறுகின்றதனேடுவேளிரது வீரநகரையும் அருகிலுள்ள கடலையும் விதந்து கூறுகின்ருர். (அகம் ௨௦௬). திருவழுந்தூர்த்திதியனுக்குரியசெல்லூரில் பரசுராமமுனி வேள்வி செய்தது கூறுவதுடன் தழும்பனது ஊனூரும் சாயவனமும் (திருச்சாய்க்காடு) இவராற் கூறப்பட்டுள்ளன (அகம் ௨௨௦). வழுதியின் வெற்றியைப் பாராட்டிக் கூறியுள்ளார். (அகம் ௱௧௮). இடையர் தலைவன் கழுவுளென்பானையும் அவனது காழூரையும் புகழ்ந்து பாடியுள்ளார். (அகம் ௱௬௫). உள்ளிவிழாவென்னுந் திருவிழா நடப்பதும் அக்காலத்துக் கொங்கர் மணிகளை அரையிற்கட்டியாடுவதும் இவராற் கூறப்பட்டுள்ளன. அகம் ௱௬௮. "தேர் சேணிக்கி" என்னும் இவர் பாட்டின் (அகம் ௱௮௦) கருத்து "நீ கண்டனையெனின்" என்ற திருக்கோவையில் (௮௪) வந்துளது. பாண்டியன் நெடுஞ்

செழியனது கூடனகரை ஏனையரசர் முற்றுகை செய்ததும் அவன் வெற்றியும் கூறியுள்ளார். (நற் நகூ.) ஒரு கொங்கையறுத்த திருமாவுண்ணி என்பாள் கதையைச் சுருக்கிக் கூறுகிறார். அது கண்ணகியின் கதை போலுமென்று கருதற்கிடராகிறது; செவ்வையாக விளங்கவில்லை (நற்-உகசு) இவைகளன்றி இவர் ஒவ்வொரு நிலங்களினும் கூறும் கற்பனைகளும் உள்ளுறைகளும் வெளிப்படையுவமங்களும் படிப்போர் மனத்தைக் கவர்வனவாகும். இவர் ஐந்நிலங்களினும், பலகாலுஞ்சென்று பழகி அவற்றினியல்பை நன்கறிந்து சிறிதும் மாறுபாடின்றித் திணைக் கேற்ற பொருள்களை புலப்படுத்திப் பாடுந்தன்மையராக விளங்கினவர். இறையனார் களவியலுக்கு இவரு மோருரையெழுதினரென்று அந் நூலுரையால் விளங்கும். இவர் பாடியனவாக நற்றிணையில்பன்னிரண்டு பாடல்களும், குறுந்தொகையில் நாலும் அகத்தில் இருபத்து மூன்றும் புறத்தில் மூன்றுமாக நாற்பத்திரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2. பாண்டிய னிலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைப் பாடியவர். இவருக்கு மருதனிள நாகனார் எனவும் பெயர். (புற நா) (அக-நா)

**மதுரைமா தெய்வம்** — இது ஒரு பெண் தெய்வம். இத் தெய்வத்தால்தான் கண்ணகி கோவலனுடைய முற்பிறப்பின் வரலாறு முதலியவற்றைத் தெரிந்துகொண்டாள். (சிலப்பதிகாரம்).

**மதுரையறுவை வாணிக னிளவேட்டனார்**- கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர்.

**மதுரையாசிரியர் மாறனார்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர்.

**மதுரையாசிரியனல்லந்துவனார்** — கடைச்சங்கமருவிய புலவர். (அக-நா.)

**மதுரையாண்டான்** — எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவராகிய ஆசாரியர். (குருபரம்பரை.)

**மதுரையெழுத்தாளன்** — இவர் மதுரையெழுத்தாளன் சேந்தன் பூதனென்று குறுந்தொகையிற் கூறப்பட்டவராக இருக்கலாம். (அகம்-அசு.)

**மதுரை யெழுத்தாளன்தறுங்குடிமருதனார்**— கடைச்சங்கமருவிய தமிழ்ப்புலவர்.

**மதுரையீழத்துப் பூதன்தேவன்** — கடைச்சங்கமருவியபுலவர். அகநானூறில் ஒன்று பாடியவர்.

**மதுரை யெழுத்தாளன் சேந்தன்பூதனார்** — கடைச்சங்கமருவிய தமிழ்ப்புலவருள் ஒருவர். அகநானூரில் ஒரு அகவல் கூறியவர். (அக-நா)

**மதுரையோலைக் கடைக்கண்ணம் புகுந்தாராயத்தனார்** — புறநானூறு பாடினோருள் ஒருவர்

**மதுரைவீரன்** — இவன் காசிராஜன் புத்திரன். இவன் பிறந்தகாலத்தில் மாலையுடன் பிறந்ததால் சோதிடர் சொற்படி அரசன் இவனைக் காட்டிலிட்டனன். இவனை யொரு சக்கிலியெடுத்து வளர்க்க வளர்ந்து நாகராசனால் பலசித்திகள்பெற்றுப் பொம்மணநாய்க்கன் மகள் பொம்மியைமணந்து விசயரங்கனிடம் சேவகத்திற்கமர்ந்து திருமலை நாயக்கன் பட்டணத்திற் களவுபிடிக்க வந்து கள்ளரை வேரறுத்து வெள்ளையம்மாளை மணந்து செல்லுகையில் அரசனால் கைகால் வாங்கப்பட்டு மனைவியர் தீக்குளித்திறக்கத்தான் மீனாட்சி சந்நிதியில் உயிர் போக்கிக்கொண்டு தெய்வமாக அமர்ந்தவன். இவன் வீரனாகையால் வீரர்க்குக் கல்காட்டுவதுபோல் இவனையும் கல்லில் பதித்திருக்கின்றனர். இவனை இந்நாட்டு இழிசனர் தெய்வமாக எண்ணி வணங்குகின்றனர்.

**மதுலிங்கன்** — ஒரு சிவகணத்தலைவன்.

**மதுவநம்** — 1. ஒரு நந்தவனம், இரிசமூக பர்வதத்தருகில் உள்ளது. இதனை ஒரு முறை சீதையைத் தேடச்சென்ற வாநர வீரர் சீதையைக்கண்ட களிப்பால் இதிலிருந்த கள்ளையுண்டு களித்தனர். சுக்கிரீவன் உத்தியானம்.

2. துருவதன் தவஞ்செய்த காடு. இது யமுனைக்கரையில் உள்ளது.

**மதுவேளாசன்** — ஒரு செந்தமிழ்க்கவி.

**மதுவையர்** — வசவர் காலத்திருந்த சங்கமர்.

**மதுஷ்யந்தர்** — விச்வாமித்ரரின் குமார். இவர்களை விச்வாமித்ரன் அம்பரீஷன் யாகத்தில் சுநச்சேபனுக்குப்பதிலாக யாகப் பசுவாக இருக்கக் கட்டளையிட இவர்கள் மறுத்ததால் இவர்களை நாய் மாம்சம்தின்று ஆயிரம் வருஷங்கள் வேடராகத் திரியச் சாபமேற்றவர்கள். (இரா. பால)

**மத்தகன்** — சண்முக சேநா வீரன்.

**மத்தன்** — 1. சண்முகசேநாவீரன்.

2. மால்யவந்தன் குமரன்.

3. இராவணசேநாபதி. நீலனால் கொல்லப்பட்டவன்.

**மத்தி** — கழாஅர் எனும் ஊரிவிருந்த வீரன். இவன் தன்னுடன் எதிர்த்த எழினி என்பவனது பல்லினையெறிந்து அத்னைத் தன் வாயிலின் கதவிற்கட்டிய மணியிலழுத்துவித்தான் என்பர்.

**மத்திமதேயம்** — தடமித்தன் தேயம். விபாசைக்குக் கிழக்கும் பிரயாகைக்கு மேற்கும், இமயத்திற்குத் தெற்கும், விந்தியத்திற்கு வடக்குமுள்ளதேசம். இதில் வசிப்போர் மாத்யமிகர் எனப்படுவர்.

**மத்திமம்** — ஒரு தேசம். (சிலப்பதி).

**மத்திமேச்சுரன்** — காசியில் எழுந்தருளிய சிவமூர்த்தம். இங்கு விஷ்ணுவிற்கும் வியாசர் முதலியவர்க்கும் பிரத்தியக்ஷம்.

**மத்தியதேசம்** — விராடன் நாடு. இமயமலைக்கு நடுவாயும், சரஸ்வதி நதிமறைந்த விஜனதேசத்திற்குக் கிழக்காயும், பிரயாகைக்கு மேற்காயும் இருக்கிற இடம்.

**மத்தியநந்தனர்** — வியாக்கிர பாதருக்குத் தந்தை.

**மத்தியநந்தனம்** — பிரடாவிடத்துப் புக்ஷிபாரனுக்குப் பிறந்தகுமாரன்.

**மத்தியன்** — காலபுத்திராம்சமாகிய பாரத வீரன்.

**மத்திரசேநன்** — வசுதேவருக்குத் தேவகியிடம் உதித்த குமரன்.

**மத்திரதேசாதிபதி** — மத்திரையின் தந்தை.

**மத்திரம்** — சிபியின் குமாரனாகிய மத்திரனால் நிருமிக்கப்பட்ட தேசம். இமயச் சாரலின்க ணுள்ளது.

**மத்திரர்** — ஒருவகை மிலேச்ச சாதியார்.

**மத்திரன்** — சிபியின் குமரன்.

**மத்திராசுவன்** — விராடன் தம்பி.

**மத்திரை** — 1. மத்திரதேசாதிபதியின் குமரி சல்லியன் சகோதரி. இவள் புத்தி அம்சம். பாண்டுவைமணந்து குந்தியின் உபதேசத்தால் நகுலசகாதேவரைப் பெற்றவள்.

2. வசுதேவர் பாரிகளில் ஒருத்தி.

3. ஒரு தேசம். A Country in the Punjab between the Ravi and the Chenab. Its Capital was Sakala.

**மத்து**—திரவப் பொருளுடன் சேர்ந்த கனப்பொருளை மத்திக்க உருட்சியான பந்துபோல் மரத்தால் செய்யப்பட்டுக் காம்பியைந்த கருவி.

**மத்துவாசாரி** — மார்த்தவமதத் தாபகர். இவர் பாசகக்ஷேத்திரத்துப் பிறந்தவர். ஆனந்த தீர்த்தரைக் காண்க.

**மத்யாலவத்தை** — இது, சாக்ரதுரீயாதீதம். சாக்கிரத்திற்றுரியம், சாக்கிரத்திற்சுழுத்தி சாக்கிரத்திற் சுவப்பனம், சாக்கிரத்திற் சாக்கிரம் என (ரு) வகை, சாக்கிரத்திலதீதம் ஒருவன் ஒரு வஸ்துவை ஓரிடத்தில் வைத்து அறியாமனின்ற நிலை. சாக்கிரதுரியம் - சிறிது பிராணவாயு வியங்கிமூர்ச்சை தெளிந்த நிலை. சாக்கிரத்திற் சாக்ரம்- அந்தப் பொருள் எங்கேவைத்தோம் என்று விசாரிக்க வந்த நிலை. சாக்கிரசுழுத்தி - அந்தப் பொருள் வைத்த இடம் நினைவெழுத்தோன்றுவது. சாக்கிரத்திற் சுவப்பனம் - அந்தப் பொருள் புலப்பட அறிய வந்த இடம். (சித்தா)

**மநஸ்வநி** — 1 பிரசாபதிக்கு மனைவி. குமரன் சோமன்.

2. மிருகண்டன்தேவி.

**மநுக்கள்** — 1. கடவுளின் கட்டளைப்படி சிருட்டி ஆதியில் பூமியைக்காக்க அவரால் நியமிக்கப்பட்டவர். இம்மநுக்களில், சுவாயம்புமநு பிரமபுத்திரன். இவன் நருமதா நதி தீரத்தில் பலயாகாதி கிருத்யங்கள் செய்து முத்திபெற்றவன். இரண்டாம் மநு - சுவாரோசிஷமநு இவன் அக்னியின் குமாரன் இவன் தர்மாத்மா. மூன்றாமநு- உத்தமன் - பிரியவிரதன் குமரன். நான்காமநு - தாமசன் பிரியவிரதன் குமரன். ஐந்தாமநு - ரைவதன். ஆறாமநு - சாக்ஷுஷமநு. எழாமநு - சிராத்த தேவன் அல்லது வைவச்சுவதன், சூர்யபுத்ரன். எட்டாமநு - சாவர்ணிமநு சூர்ய புத்ரன். ஒன்பதாமனு - தக்ஷசாவர்ணிமநு. பத்தாமநு பிரம்மசாவர்ணிமநு. பதினொராமநு - தர்மசாவர்ணிமநு. பன்னிரண்டாமநு - ருத்ரசாவர்ணிமநு. பதின்மூன்றாவதுமநு - தேவசாவர்ணிமநு, அல்லது ரௌச்சியன். பதினான்காமநு - சந்திரசாவர்ணிமநு, அல்லது பௌச்சியன்.

2. காசிபர் பாரி. தக்ஷன்பெண், குமரர் வீமசேநன், உக்ரசேநன் முதலிய (கசு) கந்தருவர்.

3. பிரமன் குணத்தில் உதித்தவர்.

4. கிரிசாசுவனுக்குத் தக்ஷணையிடம் உதித்த குமரன்.

5. இக்ஷுவாகுவம்சத்திற் பிறந்து கலியுகத்தில் அரசாள இருப்பவன்.

6. மயன் குமரன்.

7. அரியச்சுவன் குமரன். மிதிலாதிபதி.

8. ஏகாதசருத்ரருள் ஒருவன். மேற் கூறிய மநுக்களில் ஒருவனுக்குத் திருஷ்டா, கருஷா, நேடிஸ்தான், நாபாகரிஷ்டன், பிரிச்சத்திரன் என ஐந்து குமாரரிருந்தனர். திருஷ்டாவினிட முதித்த குமரர் வேதமோதி வேதியராயினர். கருஷாவின் குமரர் கருஷாக்கள் அரசராயினர். நேடிஸ்தான் குமரர் வைசியராயினர். நாபாகரிஷ்டன் குமரர் வேதியராயினர்.

**மநுமுறைகண்டசோழன்** — இவனே அநபாயச்சோழன்.

**மநுஸ்மிருதி** — மநுவால் கூறப்பட்ட தர்ம சாத்திரம்.

**மநுர்த்தேவன்** — பிரமன் புத்திரரில் ஒருவன்.

**மந்தகர்ணன்** — தண்டகாரண்யத்தில் பஞ்சாபசரஸ் எனும் தீர்த்தமுண்டுபண்ணினவன்.

**மந்தகர்ணி** ஒரு ருஷி. இவர்கோர தபஞ் செய்கையில் தேவர் பயந்து இவர் தவத்தினைக் கெடுக்க ஐந்து காந்தருவப் பெண்களை யனுப்பினர். அவர்களைக் கண்டு தவங்குலைந்து கிரீடித்திருந்தவர்.

**மந்தகேது** — ஒரு காந்தருவன். இவன்குமரன் சண்டதபமுனிவர் ஆச்சிரமத்திற் சென்று அவருக்குக் கோபம்வரச் செய்ததால் பெருச்சாளியாகச் சபிக்கப்பட்டு இராமமூர்த்தி தட்டிய கோலடிபட்டு உயிர்நீங்கிச் சாபம் நீங்கினவன்.

**மந்தபாலமுனிவர்** — காண்டவ வனவாசியாகிய முனிவர். இவர் பிதுர்க்கடனற்றமையால் தேவர்களால் அறிவிக்கப்பட்டுச் சாரங்கனென்னும் பக்ஷி உருக்கொண்டு சரையை யென்னும் பக்ஷியைப் புணர்ந்து சாரங்கர் எனும் பக்ஷிகளையும், ஜரிதாரி, துரோணர் முதலியவரையும் பெற்றவர்.

**மந்தாம்** — ஆருணி யரசனுடைய பட்டத்து யானை, நளகிரியைப் போல்வது. (பெ. கதை.)

**மந்தாவாசன்** — வெள்ளி மலையிலுள்ள வித்தியாதர அரசருள் ஒருவன் இவன். தன்னுடைய அரசாட்சியை மகனிடத்தே ஒப்பித்துவிட்டு வீடுபெற விரும்பி மனைவியோடும் மகள் விரிசிகையோடும் வனத்தில் வந்து தவஞ்செய்து கொண்டிருக்கையில் உதயணனால் இளமையில் மாலை சூட்டப்பெற்ற தன் மகளுக்குப் பருவம்வந்த பொழுது அவளை அவனுக்கு மணஞ்செய்வித்துவிட்டு மனைவியைத் துறந்து தவம் செய்தற்கு வேறிடஞ் சென்றனன். (பெ. கதை.)

**மந்தரை** — 1. கைகேயியின் தோழி. இவளுக்குக் கூனியெனவும் பெயர். இவளை இராமமூர்த்தி இளமையில் உண்டையால் கூனின் மேலடித்து விளையாடினதால் இவள் வைரம் வைத்திருந்து இராமமூர்த்திக்குப் பட்டம் அளிக்காமல் தடைசெய்வித்தவள்.

2. விரோசனன் எனும் அசுரனுடைய பெண். இவள் தேவர் முதலியவர்களை நாசஞ்செய்ய எண்ணங்கொள்ள இந்திரன் இவளைக் கொன்றனன். (இரா - பால.)

**மந்தவாகினி** — சத்திமந்தத்தில் உற்பத்தியாகும் நதி.

**மந்தன்** — 1. வசிட்டமானஸ புத்திரன். பிதுருக்களைக் காண்க.

2. குந்திபோஜன் குமரன்.

**மந்தாகினி** — 1. தேவ கங்கை.

2. சித்திரகூடத்திற்கருகில் உள்ளநதி.

**மந்தாகன்** — ஒரு சூத்திர ருஷி. சுந்தமூர்த்தியா லருள்பெற்றவன்.

**மந்தாரதாமன்** — இரத்தினாவலியைக் காண்க.

**மந்தாரமுநிவர்** — தௌமியர் குமரன். சௌநகர் மாணாக்கர். இவர் தேவி சமி. இவர் தம் தேவியுடன் கூடி ஆச்சிரமம் செல்கையில் வழியில் விநாயக சாரூபம் பெற்றிருந்த புருசுண்டி முனிவரைக் கண்டு நகைத்தனர். புருசுண்டி இவ்விருவரையும் சினந்து மந்தார விருக்ஷமும், வன்னி விருக்ஷமும் ஆகவெனச் சபித்தனர். பின் மந்தார முனிவர் வேண்ட புருசுண்டி உங்களிடம் விநாயகமூர்த்தி எழுந்தருளுவர். அக்காலத்துச் சாபத் தீர்வடைந்து விநாயகர் அருளுக்குப் பாத்திரர் ஆவீரென்று சென்றனர். மந்தாரமுனிவரும், சமியும் இவ்வாறு ஆனதைச் சமியின் தந்தையாகிய ஔரவர் அறிந்து தவஞ்செய்து விநாயகரை வேண்ட விநாயகமூர்த்தி இம்மா நிழலில் எழுந்தருளிச் சாபத்தீர்வருளினர்.

**மந்தாரன்** — ஒரு காந்தருவன்.

2. விடாவரிக்குத் தந்தை.

**மந்திரத்துருமன்** — ஆறும் மன்வந்தரத்துத் தேவன்.

**மந்திரநாயகர்** — இவர் நந்திகேசுரருக்கு மாணாக்கர். இவர்க்கு உக்ரஜ்யோதி, சத்யோஜோதி, நீலகண்டர் என (ங) மாணாக்கர்.

**மந்திரம்** — 1. மேருவிற்குத் தரணியிடம் உதித்த குமரன். திருப்பாற்கடல் கடையத் தேவர் மத்தாகக்கொண்ட அஷ்டகுலா சலங்களில் ஒன்று.

2. மந்திரமென்பது மனனஞ் செய்தவனைக் காப்பது. மந்திரங்களை முறைப்படி தீக்ஷைபெற்று நியமத்துடன் செபிக்கின் எல்லாச் சித்திகளுமுண்டாம். செபிக்கப்படு மந்திர தேவதைகள் பிரத்தியக்ஷப்பட்டுச் சகல சித்தியும் பிரசாதிப்பர். இதனால் வசீகரணம் முதலாகிய சித்திகளுண்டாம். பரகாயப் பிரவேச முண்டாம். சாபாநுக்கிரக சாமர்த்திய முண்டாம். இம் மந்திர மேழுகோடியாக விரிவுறும். அவற்றுட் பிரணவம், பீஜம், கீலகம், ருஷி முதலிய தனித்தனி வேறும். அம்மந்திரங்கள் பலவகை: அவற்றுள் மகா மந்திரங்களை மந்திரமுணர்ந்த ஆசிரியர்பாற் கேட்டறிக. அவற்றுள் முக்கியமான சாந்த மந்திரங்கள் ஏகாக்ஷரி, பஞ்சாக்ஷரி, ஷடாக்ஷரி, அஷ்டாக்ஷரி, மாலா மந்திரம், சிந்தாமணி மந்திரம், சூடா மந்திரம், திரிபுரசுந்தரி மந்திரம், அந்நபூர்ணேச்வரி மந்திரம், ஸ்தூல பஞ்சாக்ஷரி மந்திரம், க்ஷேத்ரபாலக மந்திரம், மிருத்துஞ்சய மந்திரம், பிரசாதகாயத்திரி மந்திரம், பஞ்சாஸ்திர மந்திரம், பஞ்சபிரம்ம மந்திரம், தக்ஷிணாமூர்த்திமந்திரம், நீலகண்ட மந்திரம், சரப மந்திரம், வீரபத்ர, கணேச, விசாக, வித்யேச்வர, பிரம்ம, விஷ்ணு, சூர்யாதியான மந்திரங்களாம். பின்னுந் துர்க்கை, சாரதை, லக்ஷுமி, கௌரி யாதியர் மந்திரங்களும் நம: ஸ்வக, பவுஷட், வௌஷட், ஆதிபல்லவங்களும் முறைப்படி செபிக்கின் தாமுத்தேசித்த பொருள் சித்திப்பதுடன், சிரத்தையுடன் ஜெபிக்கின் உத்தேசித்த தேவதையும் பிரத்தியக்ஷமாம். இதன் விரிவுகளெல்லாம் மந்திர நிகண்டு, ருத்ர கற்பம், விச்வாமித்ராதி கற்பங்கள் முதலிய மந்திரசாஸ்திரங்களாலறிக. ருஷி மந்திரஹீனமான அனுஷ்டானம் ஆயுளைக் கெடுக்கும். சந்தவீனமான மந்திரம் வியாதியைத் தரும். தேவதா வீனமான மந்திரம் மரணத்தைத் தரும். தேவதா ரூபத்யானமில்லாத மந்திரம் பசுக்களையும் செல்வத்தையு நாசமாக்கும. ஆயுதம் வஸ்திரம் முதலியவின்றித் தியானிக்கும் அநுஷ்டானம் புத்ர மித்ரநாசஞ் செய்யும். ஆதலால் இவற்றைக் குருமுகமாயறிந்து பக்தி சிரத்தையுடன் அநுஷ்டிக்கின் இஷ்டசித்தியுண்டாம்.

3. சித்தம், சாத்யம், ச்வசித்தம், ரிபு (அறி) என நான்கு வகைப்படும். இவற்றுள் சித்தம் ஜபத்தாலிஷ்ட பலத்தைத் தருவது, சாத்யம் - ஜபதர்ப்பணங்களாலிஷ்டத்தைத் தருவது, ஸ்வசித்தம் - பாடமாத்திரத்தா லிஷ்டத்தை தருவது, ரிபு (அறி) சத்ரு நாசஞ்செய்வது.

**மந்திரவாதிமதம்** — இது மந்திரங்களை ஜெபித்தலால் எல்லாத் தேவர்களும் அதன் வசப்பட்டு ஜெபிப்பவர்களுக்குப் பயனைத் தருதலாலும் பரகாய பிரவேசம், ஜலதம்பனம், பரலோக சஞ்சாரம், நினைத்த உருக்கொள்ளல், சபா அநுகிரக சக்தி முதலியவற்றை யுண்டாக்கலால் மந்திரமே கடவுள் எனக் கூறும் மதம். இதன் முத்தி மந்திரத்தை ஜெபித்து தெய்வத்தன்மை அடைவது.

**மந்திரி** — நீதி நூலாராய்ந்து அதன் வழி ஒழுகுபவன். (சுக் - நீ.)

**மந்திரிணி** — மணி த்வீபத்தில் சக்ராலயத்தின் தெற்குக்கோபுர பரிவார தேவிகளில் ஒருத்தி. (சிவ - ரஹ.)

**மந்திரித்தொழில்** — அரசர்க்கு அமைச்சு புரிபவர். பரம்பரையாக அரசர்க்கு அமைச்சு பூண்ட மரபினராயும், நீதி சாஸ்திரம், வேதாந்தம், தநுர்வித்தை கற்றவராயும் பலமுள்ளவர்களாயும், நற்குலத்தில் பிறந்தவராயும் இருத்தல் வேண்டும். அம்மந்திரியர், நால்வகைச் சேனை, பொக்கிஷம், பட்டணம், தேசம் இவைகளைப்பற்றியும், பசு, தானியம், இவைகளைக் காத்தலைக் குறித்தும், சம்பாதித்த பொருளை நல்ல விஷயத்தில் உபயோகித்தற் பொருட்டும், ஆலோசித்தல் வேண்டும். இம்மந்திரியர் அரசனுக்குச் சதுர்வித உபாயத்தையும் கற்பித்தல் வேண்டும். எக்காலத்தும் அரசரை விலகாது இருத்தலும், அரசர் விரும்பினவற்றைத் தாம் விரும்பாமையும், தக்க அரசர் அருகு இருக்கில் அவர்காணும்படி வேறொருவர் காதில் சொல்லுதலையும், ஒருவன் முக நோக்கிச் சிரித்தலும், அரசன் பிறனோடு இரகசியம் பேசுமிடத்து அதனைத் தான் கேளாமலும், அவனை அப்பொருளை வலிந்து கேளாமையும், அவனே கூறிற் கேட்டலும், அரசனுக்கு நன்மை தருவனவான விஷயங்களை அவன் கேளாவிடினும் இடித்துக் கூறுந்தன்மையும், அரசர் இளையர் என்று இகழாமையும், அரசனால் மதிக்கப்பட்டோம் என்று கொள்ளாத காரியத்தைச் செய்யாமையும், உடையவர் அமைச்சுத் தொழிற்கு உரியவராம்.

**மந்திரேசுவரர்** — மலபக்குவரான சுத்த புவனவாசிகள்.

**மந்திரோச்சாரணம்** — (௩) விதம்: வாசிகம், உபாம்சு, மானதம், நன்றாகப் பிறர்கேட்க உச்சரிப்பது வாசிகம், உதடு சற்று அசையும்படி உச்சரித்தல் உபாம்சு, மந்திரப் பொருளை மனத்தில் நினைத்தல் மானதம். (ஹாரீதஸ்மிருதி).

**மந்தேகர்** — ஒருவித அரக்கர். இவர்கள் பிரமனை யெண்ணித் தவம் புரிந்து சூரியன் இரதத்தைத் தடைசெய்யும் வலிமைபெற்று நாடோறும் தடைசெய்வர். இவர்களை இருடிகள் நாடோறும் கொடுக்கும் அர்க்கியத்தில் காயத்திரியெனும் அம்பால் கொலைசெய்வர். இவர்கள் அவ்வகையிறந்து மீண்டும்வரத்தின்பலத்தால்உயிர்பெற்றுநிற்பர்

**மந்தோதரி** — 1. மண்டோதரியைக் காண்க. 2. சிம்மளதேசத்தரசன் சந்திரசேநன். இவன் மனைவி குணவதி. இவ்விருவருக்கும் பிறந்த குமரி. இவள் தான் மணஞ்செய்து கொள்வதில்லை யென்று வைராக்யமடைந்திருந்து தன் தங்கையாகிய இந்துமதிக்குத் தந்தை சுயம்வரம் நாட்ட அந்தக் காலத்தில் வந்திருந்த சாருதோஷ்ணனைக் கண்டு மணந்து அவன் பரஸ்திரிகமனமுள்ளவனாகக் கண்டு அவனுடனிருத்தலை வெறுத்து இருந்தவள். (தே-பா.)

**மந்தை** — காசிபர் பெண்; அநேக செந்துக்களைப் பெற்றவள்.

**மந்யு** — அக்கினியின் பெயர்.

**மமகாரன்** — மாயையின் தந்தை. தேவி மோகினி, இவர்கள் சரிதையை மாயுயைக் காண்க.

**மமதை** — பவ்வியர் அல்லது உதத்தியர்பாரி; இவளை வியாழன் புணருகையில் வயிற்றிலிருந்த தீர்க்கதமன் எனுஞ் சிசு இந்நடக்கையை அறிந்து வியாழனை வெறுக்க, வியாழன் அச்சிசுவை நோக்கி என் விருப்பைக் கெடுத்தமையால் உனக்கு இரண்டு கண்களும் கெடுக எனச் சபித்தனன். இவளிடம் பரத்துவாசர் பிறந்தனர்.

**மயக்கவணி** — அஃதாவது, ஒப்புமையினாலே ஒரு பொருளை மற்றொரு பொருளாக வறிதலாம். இதனை வடநூலார் பிராந்திமதலங்கார மென்பர். பிராந்தியாவது அது வாகாததை யதுவென வறிதல்.

**மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா** — தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் எனும் ஆறுறுப்பும், மிக்கும்,குறைந்தும், பிறழ்ந்தும், உறழ்ந்தும் பலவாறு மயங்கி வருவது.

**மயம்** — சிற்பநூல்.

**மயன்** — திதிபுத்திரன். அசுரத்தச்சன். இவன் குமரர் மாயாவி, துந்துபி. குமரி, இராவணன் தேவியாகிய மந்தோதரி. காண்டவவனத்தை அருச்சுநன் எரிக்கையில் அருச்சுநனை அபயமடைந்து உயிர் தப்பினவன். இவனை விச்வகர்மன் குமரனென்றுங் கூறுவர். இவனுக்கு மற்றொரு குமரன் மநு. ஒரு காலத்து இந்திரன் இவனது உயிரைப் போக்கினன். விச்சிரவா குமரன் எனவுங் கூறுவர். அசுரர்க்குத் திரிபுரமும் அமுதக்கிணறும் நிருமித்துக்கொடுத்து இறந்த அசுரரை அதிலிட்டுப் பிழைப்பிக்க இவற்றை யறிந்த விஷ்ணு பிரமனைக் கன்றாக்கித் தாம் பசுவாய்ச் சென்று அக்கிணற்றை நக்கிவிடக்கண்டு திகைத்தவன். தருமபுத்திரருக்குச் சபை நிருமித்துக் கொடுத்தவன்.

**மயானம்** — பிரமன் முதலில் பூதசிருட்டிகளைச் செய்ய அப்பூதங்கள் பிராணிகளைப் பயமுறுத்தி வருத்தத் தொடங்கின. பிரமன் சிவமூர்த்தியை வேண்ட சிவமூர்த்தி அவற்றை அடக்கிப் பரிசுத்தமாய் சநங்கள் சஞ்சரிக்காத இடமாதலால் அங்குத் தங்கினர். பார-அநு. (207-அத்).

**மயிடன்** — 1. சூரபன்மன் மந்திரி. 2. அதிகாயனுக்குத் தூதன். இலக்குமணரிடத்துச் சென்று அதிகாயன் யுத்தத்திற்கு வரவைக் கூறினவன்.

**மயித்திரி** — யஞ்சவல்கியர் தேவி. சீமந்தினிக்குச் சோமவாரவிரதம் நோற்பித்தவள்.

**மயித்திரேயி** — யஞ்ஞவற்கியருக்குத் தேவி.

**மயிந்தன்** — ஒரு வாநரத்தலைவன். சுக்கிரீவசேநாவீரன். வச்சிரமுட்டியைக் கொன்றவன். இவனை இராமமூர்த்தி விபீஷணரிடம் அனுப்பினர்.

**மயிர்ப்பாலம்** — யோகக் காட்சியில் புருவத்திற்கும் நாசிக்கும் இடையிற் காணப்படும் காட்சி.

**மயிலாநந்தர்** — திருவள்ளுவரின் மாணாக்கருள் ஒருவர்.

**மயிலார்** — இது, தைமாதத்தில் மகரசங்கிராந்திகழித்த வேழு அல்லது பதினைந்தாநாட்களில் கன்னிகையர் அழகும், கல்வியும், செல்வமும், ஆயுளுமுள்ள நல்ல கணவன் குமாரக் கடவுளைப்போல் பெறவேண்டிக் கந்தமூர்த்தியை யெண்ணிச் செய்யும் விர

தம் என்பர். அன்றி மயிலுருக்கொண்டு அம்மை சிவமூர்த்தியையடைய அநுட்டித்த நோன்பென்பர். இவ்விரதம் அநுட்டிப்போர் நல்ல புருஷனையும் சம்பத்தினையும் அடைவர்.

**மயிலைநாதர்** — 1. நன்னூற்கு உரையியற்றியதற்கு உரையறி நன்னூல் எனும் பெயரிட்ட சைநநூலாசிரியர்.

2. நன்னூற்குச் சியகங்கன் எனும் அரசன் காலத்திலோ அவனுக்குப் பிற்பட்டார் காலத்திலோ உரைகண்ட சைந ஆசிரியர், மயிலைநாதர் திருமயிலையில் சைந ஆலயத்திலிருந்த நேமிநாத தீர்த்தங்கர் பெயர்.

**மயிலைப்பூம்பாவைக் குழந்தைமுதலியார்** — இவர் புலவர்களை யாதரித்துக் கவிபெற்ற கொடையாளர். இவர் தந்தையார் வேலப்பமுதலியார். இவர்மீது காளிமுத்து எனுந் தாசி "பொன்னுர் மருமத்தன் பூம்பாவை வேலப்ப பூபனருள், மன்னு குழந்தைக் குருநாத தீத வரோதயனே, பன்னுண்மலர்க்குழற் பின்னு ளெந்நாளும்பரிந்தணைய, நன்னுளிந் நாள்வரச் சொன்னுண் மின்னுள் மணநாளென்னவே" எனப் பல கவி பாடியிருக்கின்றனள்.

**மயிலைமான்** — வாமநாதபுரம் நேமிநாத தீர்த்தங்கர் சொற்படி கடல் கொண்டபோது அதற்கு மேற்கில் தன்பேரால் மயிலையென்னும் பட்டணங்கட்டிய சைந அரசன். இதுவே மயிலாப்பூர்.

**மயில்** — 1. இது அழகான பக்ஷி. இது, உஷ்ணமான நாடுகளின் காடுகளில் உண்டு. இது பசுமை, மஞ்சள், நீலம், பொன்னிறங் கலந்த சிறகுகளையுடையது. இதன் தலை சிறியது; உச்சியில் கொண்டையுண்டு. இதன் அலகு கோழியின் அலகுபோலிருக்கும். கழுத்து நீண்டும், இறெக்கைகள் குறுகியுமிருக்கும். இதற்கு நான்கு விரல்கள் பெற்ற நீண்ட கால்கள் உண்டு. வால் பல கண்கள்போன்ற புள்ளிகளைப் பெற்று மிக நீண்டிருக்கும். இது குளிர்ந்த மேகத்தைக் கண்டும் தன் பேட்டைக் கண்டு களித்த காலத்தும் சிறகை வட்டமாக விரித்துக் களிப்புடன் ஆடுதலைப் பார்க்க அழகாக இருக்கும். பெண் பறவைக்கு நீண்ட வாலும் கொண்டையுமில்லை. இது புழு பூச்சிகளைத் தின்னும். பாம்பையும் காத்திக் கொல்லும். இவ்வினத்தில் வெள்ளை மயிலும் உண்டு.

2. இந்து தேசத்து நடிக்கும் பறவை. இது, உயர்ந்த கோழிபோன்ற வுருவுடையது. கழுத்து நீளம், ஆணுக்கு உச்சியில் கொண்டை. தோகை மிக நீண்டு பசுமை கலந்த பொன்னிறமாய்க் கடைசியில் கண்கள் பெற்றிருக்கும். இதன் முதுகு வெண்மை, கருமை, செம்மை கலந்தது. இது, சாக மாம்சபக்ஷணி. இதன் பேடுகளுக்குத் தோகைகளில்லை. இது இரு சந்திகளிலும் தோகை விரித்தாடும். இது பாம்புகளைக் கொல்லும்.

3. விருக்ஷசேனன் கொடி. குமாரக் கடவுள் வாகனம். (பா. து.)

**மயில்ராவணன்** — (இக்கதை நாரதர் கௌதமருக்குக் கூறியதாக எழுதியிருக்கிற தாயினும் இராமாயணத்திற் கூறாததனால் சதகண்ட இராவணன் கதைபோல் கற்பனைதையே) இக்கதை, இராவணன் தன்சேனையிழந்து விசனப்படுகையில் பிரகஸ்தன் மயில் இராவணன் செய்தி கூற, இராவணன் அவனைவிளித்துத் தன் துன்பங்கூறி இராமலக்குவரைத்தூக்கிச்செல்லக் கேட்க, மயில் இராவணன் இசைந்து அவர்களைத் தூக்கிச்சென்று காளிக்குப் பலியிடுவதாக வாக்களித்தனன். இந்த ரகஸ்யத்தைத் திரிசடை கேட்டு வாயுமூலமாய் விபீஷணருக்கறிவிக்க, அதை விபீஷணர் இராமர் சமுகத்து விண்ணப்பித்தனர். இதனைக் கேட்ட சுக்ரீவன் மயில் இராவணன் சரிதம்கூறுக என விபீஷணர் கூறுவதாக இருக்கிறது. மயில் இராவணன் தாயாதி வர்க்கத்தில் இராவணனுக்குச் சகோதரன், இவன் பாதாள லங்காதிபதி. இவன் இராவணன் வேண்ட இராம லக்குமணரைக் காளி தேவிக்குப் பலிதருவதாய் வாக்களித்துச் சென்றனன். இதனை அநுமானறிந்து தமது வாலினால் ஒரு கோட்டை நிருமித்து அதற்குத் தமது வாயே வாயிலாக வைத்து இராம லக்குமணரையுஞ் சேனைகளையும் காத்து வந்தனர். இவ்வாறிருக்கையில் மயிலிராவணன் சதுரன் முதலிய தன் மந்திரியருடன் இலங்கை நோக்கிப் புறப்பட்டனன். இச்செய்தி யறிந்த அவன்தேவியாகிய வர்ணமாலிகை அவனை வெகுவாகத் தடுத்தனள். அவ்வாறு தடுக்கவும் கேளாதுசென்று மேலைக் கடற்கரையடைந்து தன் மந்திரிகளை நோக்கி இராம லக்குமணரைக் கொண்டு வருவீர்களோவென, அவர்களில் ஒருவனாகிய சதுரன்

அவ்வாறு செய்வேனென்று புறப்பட்டு இலங்கைசென்று வாற் கோட்டைக்குள் நுழைய வலியற்றுத் திரும்பினன். இரண்டாவது மந்திரியாகிய சாத்தியன் புறப்பட்டுச்சென்று பக்ஷியுருக்கொண்டு பறந்து வாயிற்காணுது பூமியைக்கல்லி வாற்கோட்டைக்குள் நுழைய வால் அசைதல்கண்ட அநுமான் வாலை யிறுக்கக் கழுத்துமுகம் முதலிய நசுங்கி யுடல்தேய்ந்து திரும்பினன். பின் மயில் இராவணன் இலங்கை சென்று நிலையறிந்து விபீஷணர் போலுருக்கொண்டு அநுமன் வாய்வழி புகுந்து பெட்டியிலிருந்த இராம லக்ஷ்மணர்களை யெடுத்துக்கொண்டு செவிவழி திரும்பிப் பாதாளலங்கை சென்று பெட்டியைக் காவலில் இட்டனன். பின் அசரீரி மயில் இராவணனுக்கு ஆபத்தைத்தெரிவித்தது. இப்பால் விபீஷணர் உள்ளிருந்து வெளிவர அநுமான் கண்டு நீர் இப்போதுதான் வெளிவந்தீரே மீண்டும் என்னையறியாது எவ்வாறு சென்றீர் என, விபீஷணர் திடுக்கிட்டு மோசம்போனேம் என்று கூறக்கேட்டு அநுமான் விபீஷணரிடம் பாதாளலங்கைக்கு வழிகேட்டுணர்ந்து, நடுக்கடலில் படர்ந்த தாமரை நாளத்தில் புகையுருக்கொண்டு உட்புகுந்து அக்னிக் கோட்டையைக்கண்டு அதனருகிற் செல்கையில் கண்டோர் இக்குரங்கைப் பிடிப்போம் என்று முயல, அவ்வரக்கர்களைக் கொல்கையில் மச்சவல்லபன் கேட்டுச் சண்டை செய்ய, அநுமன் அம்மச்சவல்லபனுடன் போரிட்டு இளைத்துப் பின்னிட்டு அவனை நோக்கி உன் வரலாறு என் எனக் கேட்க, மச்சவல்லபன் போரில் ஒப்பாரிகேட்பதென் என அநுமான் கூறுவான். நான் இதுவரையில் உன்னைப்போல் வீரனைக் கண்டதின்று. இவ்வகை வீரன் இவ்வரக்கனிடம் சேவகஞ்செய்யவந்ததென்னபதால் வினவுகின்றேன் என, மச்சவல்லபன் கூறுவான். என்தந்தை அநுமான், அவ்வநுமான் இராமகாரியமாகக் கடல் தாவுகையில் சாயாக்கிராகியாகிய லச்சையால் கிரகிக்கப்பட்டு வாய்வழி புகுந்து வயிற்றைக்கிழித்து வெளிவருகையில் உண்டான வியர்வை கடலில்விழ அதனைத் திமியெனும் மீன்விழுங்கிக் கருக்கொண்டு என்னைப் பெற்றது. நான் பாட்டனாராகிய வாயுவால் சகல வரங்களையுமடைந்தேன். இது என்வரலாறு என்றனன். இதைக்கேட்ட அநுமான், அவ்வநுமான் நான் எனக், குமரன் பணிந்தனன். வந்த செய்தியை அநுமன் அறிவிக்க மச்சவல்லபன் கூறுவான், நான் தனித்துக் கடற்கரைக்கணிருக்கையில் என் வன்மையறிந்த மயிலிராவணன் என்னை வேண்டிக் கோட்டையைக் காக்கக்கேட்ட வரப்படி நான் கோட்டையைக் காக்கிறேன். நான் உம்மை விடுதல் தகுதியன்றாயினும் என்னுயிர்நிலை யென்மார்பாம். ஆதலால் அதில் ஒரு குத்துகுத்தின் நான் மூர்ச்சிப்பேன், பின் கோட்டைக்குள் செல்க என அவ்வாறு செய்து கோட்டைக்குள் சென்று முறையே கல், பித்தளை, செம்பு, வெண்கலம், பொன், பவளம், முத்துக்கோட்டைகளுக்குக் காவலாயிருந்த இராக்கதர்களை வென்று பொழுதுபோக ஒரு பூங்காவி லிருக்கையில் மயிலிராவணன் தன் மனைவியுடன் கூடிக்குலாவிப் பாதியிரவி லெழுந்து தன் உடன் பிறந்தாளாகிய தூரதண்டியின் குமரன் தனக்குப்பின் பட்ட மடைவான் என்று அசரீரியால் சொல்லக்கேட்டு அவளையும் அவள் குமரனையும் சிறையிட்டிருந்தவன், தூரதண்டியை யழைத்துக் காளி பூசைக்குச் சலம் கொண்டுவரக் கூற அவன் தன்னையுங் குமரனையுங் கொல்லவெண்ணுகிறானென்று துன்புற, மயில் இராவணன் விடியுமுன் இராமலக்குமணரைக் கொல்லவென அவள் ஐயோ! நான் செய்த பாபம்போதாதோ செல்லேன் என்று மறுக்க இவன் வாள் கொண்டு ஓச்சச்செல்ல உடன்பட்டு அநுமானிருக்கும் நந்தவனத்திற்குள் விசனத்துடன் இராமலக்ஷ்மணர்களுக்கு நேர்ந்த விபத்தைநோக்கித் துன்புறுகையில் இவற்றை ஆண்டு மரத்தின்மீது இருந்த அநுமான் கேட்டு அசரீரிபோல் என் துன்புறுகிறாய் என்று வினவிக் கீழிறங்கி அவளுக்குத் தான் அநுமான் என்று பெரிய வுருவெடுத்துக் காட்டித் திடப்படுத்திக் கால்விலங்கு நீக்கி, அவள்வரலாறு கேட்டுத் தன்புருஷன் காலத்தனை இவன் கொன்றதும் மகனாகிய நீலமேகனைச் சிறையிட்டதும் அறிந்துகொண்டு அநுமான் கூறுகின்றார். அம்மா என்னைக் கோட்டைவாயிற்குள் கொண்டுவிடு, பின் நான் உன்னைக் காத்துக்கொள்ளுகிறேன் என்று அந்நீர்க் குடத்திலிட்ட மாங்கொத்தினுள் சிறுவடிவமாக இருந்

னர். தூசதண்டியும் தங்கக்கோட்டை வாயில் கடக்க, ஆங்குப் பகைவர் வரவைத் தெரிவிக்கும் துலாயந்திரம் சாய்ந்ததறிந்து அரக்கர் தூரதண்டியைச் சோதிக்க, அநுமான் தம்முருக்கொண்டு அவர்களைச் சாடிக் கடகனையும் அவன் மனைவியையும் வாலாவிழுத்து அவன் வேண்ட்விட்டு விட்சிமுகனைக் கொன்று, நீலமேகன் காட்டிய காளி கோயிலுட்புகுந்து, இராமலக்ஷ்மணர் இருந்த பெட்டியை யெடுத்து, கிருதமாலாபர்வதத்தில் பத்திரப்படுத்திப் பூமிதேவியைக் காவலிட்டுத் திரும்பி மயில் இராவணன் சேனைகளையும் மந்திரிகளையும் நிர்மூலமாக்கி, மயிலிராவணனுடன் போரிட்டு அவனைப் பலமுறை கைவேறு கால்வேறாக எறிந்து கொன்றும் அவன் உயிர்பெற்று வரக்கண்டு தூசதண்டியால் அவனுயிர்நிலை யுணர்ந்து போரிடுகையில் மயிலிராவணன் ஓடி மறைந்து, ரணயாகஞ்செய்து ஒரு பூதத்தையனுப்ப, அப்பூதம்வந்து அநுமனுடன் போரிட அநுமன் சலித்துத் தருமதேவதையின் சொல்லால் அவன் யாகசாலையை யழிக்க அவன் மாயையால் வெள்ளிமலையாகவும், யானையாகவும் மாயஞ்செய்து கடைசியில் நேராக யுத்தஞ் செய்கையில் மரணமடையாதது கண்ட அநுமான் இவனது மார்பில் ஒரு காலை யூன்றிக்கொண்டு விந்திய பர்வதக் குகையில் ஐந்தறைகளிலிருந்த இவனுயிர் நிலைகளாகிய ஐந்து வண்டுகளையும் பிடிக்க அக்குகையின் வாயிலை ஒருகரத்தால் அழுத்திக்கொண்டு ஐந்து வண்டுகளையும் ஒரு கரத்தால் பிடித்து நசுக்கி மயில் இராவணனைக் கொன்று நீலமேகனுக்குப் பட்டமளித்து மயிலிராவணன் குமரியை மணம்புணர்த்தி இராமலக்ஷ்மணருடன் இலங்கை யடைந்தனர்.

**மயில்வாகனப்புலவர்**—இவர் யாழ்ப்பாணத்து மாதகல் எனும் ஊரினர். சைவ சமயி. தமிழிலக்கிய இலக்கணங் கற்றவர். புலியூர் யமக அந்தாதி செய்தவர். இவர் நூறு வருடங்களுக்குமுன் இருந்தவர் என்பர்.

**மயில்விசிறி** — மயிலிறகினாற் செய்த விசிறிக்கு விஷம், சந்நிபாதம், வயிற்றுவலி, தலைச்சுழலல், பித்தகோபம், விக்கல், வியர்வை, வாதகோபம் இவை நீங்கும். அறிவு விளங்கும்.

**மயிஷ்மான்** — ஸோஹஞ்சியின் குமரன்- இவன் குமரன் பத்திரசேநன்.

**மயூரகண்டன்** — அச்சுவக்கிரீவன் தந்தை.

**மயூரன்** — சூரபதுமன் மந்திரி.

**மயூராதீந்தன்** — ஒரு சூரியன், சிவமூர்த்திக்குக் கண்ணாய் விளங்குவோன்.

**மயூரேசர்** — விநாயகமூர்த்திக்கு ஒருபெயர். இவர் சிந்து என்பவனைக் கொல்ல ஒரு வேள்வியில் மயிலைச் சிருட்டித்து அதன் மீது எழுந்தருளிச் சென்றதால் இப்பெயர் உண்டாயிற்று. இவர்க்குத் திரிமூர்த்திகளின் முகம். சடைமுடி, எழுவிழி, ஆறுகரம், தவளநிறம்.

**மயேச்சுரர்** — இவர் ஒருதமிழாசிரியர். யாப்பிலக்கணஞ் செய்தவர். இவர் யாப்பருங்கலவுரையாசிரியராகிய அமுதசாகருக்கு முற்பட்டவரா யிருக்கலாம்.

**மயேச்சுரன்** — ஒரு அரசன். இவன் பிரகஸ்பதியைப்பணிய அவர் உன்சிரம் தேவர் முதலியவர்களால் ஆராதிக்கக் கடவதென வரம் பெற்றவன். இவன் ஒரு முறை காட்டின்வழிச் செல்லுகையில் எதிர்வந்த நாரதரை அறியாது சென்றதால் நாரதர் கோபித்து யானையாகவெனச் சபித்தனர். அவ்வகை இவ்வரசன் மறுசநநத்தில் யானையுருக்கொண்ட கயமுகாசுரனாய்ப் பார்வதி பிராட்டியார் எழுந்தருளியிருந்த மண்டபத்தைக் கொம்பால் குத்தித் தள்ளப் பார்வதி பிராட்டியின் வார்த்தையால் சிவமூர்த்தி சூலத்தால் கழுத்தறப்புண்டு சிவாயநமவென்று விழுந்து சாரூபமடைந்தவன். இவனது அறுந்த சிரம், சிந்துரனால் சிரம் இலாது அவதரித்த கணேசமூர்த்திக்குச் சிரமாயிற்று.

**மயேந்திரம்** — ஒருமலை. அநுமனிலங்கைக்குப் பாயவும், சம்பாதி இறகு தீய்ந்து விழவும் இடமானது.

**மரக்கரடி** — (The Sloth) இது, (2) அடி நீளம். வாயில் பற்களில்லை. விரல்கள் நீண்டு வளைந்து அழுத்தமுள்ளவை. இது மரங்களில் எளிதாய் ஏறுகிறது. தழைகளைத் தின்று ஜீவிக்கிறது. இது மரங்களில் தலைகீழாகத் தொங்கிக்கொண்டே தழைகளை மேய்கிறது. அவ்வாறே தூங்குகிறது. இதன் கால்களில் வளைந்த இரண்டு மூன்று விரல்களுண்டு. அவை மரத்தைப் பற்ற உதவுகிறது. மயிர்கள் மேனோக்கியே யிருக்கின்றன. இது வருஷத்தில் ஒரேகுட்டி போடுகிறது. இது தன் குட்டியை மார்பிலணைந்து செல்லும்.

**மரக்கலம்** — இது கடலில் யாத்திரை செய்வதற்கு மரத்தால் பெருமீனின் உருப்போல் செய்யப்பட்ட மிதவை, இதனுறுப்புகள்,தம்,தடுப்புபாய், பாய்மரம்,கயிறு முதலிய. தெப்பம், தோணி, படகு, கட்டுமரம்.

**மரக்காயர்** — இவர்கள் தமிழ் பேசும் மகம்மதியர், ஸங்கர ஜாதியார். இவர்கள் வர்த்தகர். இவர்கள் லப்பைகளின் வேறுபட்டவர்கள். இந்தப் பெயர் அரபி பாஷையில் மரகாட் என்றால் படகு. இவர்கள் படகோட்டிகள். இவர்கள் குற்றவாளிகளாக அரேபியாவிலிருந்து துரத்தப்பட்டபோது தமிழறியாத இவர்களை நீங்களாரெனக் கேட்டதற்குத் தங்கள் படகைக் காட்டி மரகாப் என்றனர். அதனுலிவர்கள் மரக்காயர் எனப் பட்டனர். அல்லது மாகாப் எனும் ஊரினின்று துரத்தப் பட்டவர் (தர்ஸ்டன்.)

**மரக்கால்** — இது அவுணர் வஞ்சத்தால் வெல்லுதல்கருதித் தேள் பாம்பு முதலிய வருதல்கண்ட காளி அவற்றை யுழக்கிக் களைதற்கு மரத்தாலாகிய கால் கொண்டு ஆடிய கூத்து.

**மரங்கொத்திக்குருவி** — இதற்குத் தலையில் ஒரு அழகிய செந்நிறமான கொண்டையுண்டு. இதன் தலைப்பக்கத்தில் செகப்பு, வெள்ளை, கறுப்பு ஆகிய மூன்று நிறங்கள் வரிவரியாய் அழகாயிருக்கின்றன. இது மரங்களில் பறவாது; மனிதன் மரம் ஏறுவதுபோல் நின்றபடி ஏறவல்லது. இது மரங்களை நீண்டு உரத்த அலகினுல் தொளைத்து அவற்றிலுள்ள பூச்சி புழுக்களை அருந்தும். இதன் ஒலி அடுக்கடுக்காய் உரத்திருக்கும். இவ்வினத்தில் பலவேறு வகைப்பட்டவை உண்டு.

**மரணக்குறிகள்**—1. பேச்சில்லாமை, மாறிப் பேசல், மதிமயக்கம், ஞாபகத்தவறு, பொய்க்காட்சி, அஸ்திரபுத்தி, அளவிற்கு மிஞ்சின திடாதிக்கம், மனோகற்பனையான வெறிப்பாட்டு, மதோன்மத்தம், ஸ்மரணையில்லாமை, நினைவுசஞ்சலம், விறைப்பு, திமிர்ப்பு, இயல்புக்கு விரோதமான பரிச அறிவு, ஸ்பரிச அறிவிலாமை, உரிசையில்லாமை, இயல்பிற்கு விரோதமான நாற்றம், பார்வை கெடுதி, பார்வையீனம், கேள்வி கெடுதி,இயல்பிற்கு விரோதமான நாடிநடை, குரல்கனைப்பு, வாய்குழறல் நித்திரையின்மை, முதலிய.

2.பேச்சற்றுப்போதல்,பேதமாய்ப்பேசுதல், மயக்கம், ஞாபகத்தவறு, பொய்க்காட்சி, ஸ்திரமில்லாத புத்தி, மட்டுமிஞ்சின திடாரிக்கம், மதோன்மத்தம், ஸ்மரணையில்லாமை, நினைவுசஞ்சலித்தல்,உலைவுஎண்ணம், மட்டுக்குமிஞ்சின ஆண்மை, மனோசலனம், விறைப்புதிமிர்ப்பு, இயல்புக்கு விரோதமான பரிசவறிவு, பரிசவறிவு இல்லாமை, சுபாவத்துக்கு விரோதமான வாசனை, வாசனைகெடுதி, பார்வைகெடுதி, பார்வையில்லாமை, பார்வையீனம், கிட்டப்பார்வை, கேள்விகெடுதி, கேளாமை,தப்பான கேள்வி, சுபாவத்துக்கு விரோதமாய் தசைநரம்பு இயக்கம், குரற்கனைப்பு, தப்பானஉச்சரிப்பு, நித்திரையில்லாமை, சுபாவத்திற்கு விரோதமான நித்திரை.

**மரணம்** — ஆன்மாக்கள் தமக்கென நியமித்த காலமுடிவில் தேகநீக்கமடைவது. உயிர் நீங்கிய உடலைமரணமடைந்த பிரேதத்திற்குரியவனுகிய கர்மஞ்செய்வோன், க்ஷெளரகர்மஞ் செய்துகொண்டு விஷ்ணுவாலய சிவாலயாதிகளில் பிரசாத தீர்த்தங் கொண்டு பிரேதத்தை அபிஷேகாதிகளால் அலங்காரஞ்செய்து சருசட்டியில் தர்ப்பை, அரிசி, எள், அத்திக்கொத்து இட்டு தீவளர்த்தி, அக்னிசட்டியில் வைத்துக்கொண்டு வீட்டில் செய்யவேண்டிய நிறைநாழி சூர்ணோற்சவம் முதலிய முடித்து முறத்தில் பொரி வெற்றிலை முதலிய இட்டுப் பூதபலியாக இறைத்துக்கொண்டு பிரேதத்தைத் தூக்கிக்கொண்டு அக்னிதிசை அல்லது நிருதிதிசையடைந்து ஸ்மசானங் குறுகிப் பிரேதத்தைச் சற்றுப் பின்பார்க்க நிறுத்திப்பின் சிதையில் பிரேதத்தைத் தெற்குத் தலையாக வைத்து முழச்சீலை கிழித்துச் சுடுகாட்டுக் காவலாளிக்குக்கொடுத்துச் சிதைக்கருகில் மூன்றிடத்தில் தீவளர்த்தல் வேண்டும். பின் பங்காளிகள் பாதி சிதை விரித்தும் பாதி முடித்துக் கொண்டும் "அபானசோ" எனும் மந்திரத்தால் மூன்று பிரதக்ஷிணம், மூன்று அப்ரதக்ஷிணம் செய்யவேண்டும். பிறகு கர்த்தா உட்கார்ந்து மூன்று இடத்தில் மூன்று பிண்டம் இட்டுச் சருசட்டியைப் பின்னுல் உடைத்துவிட வேண்டியது. இதுவே குடமுடைத்தல். பின் அக்னியைச் சிதையில் பிரதிஷ்டைசெய்து தீயை வைக்கவேண்டியது. சிலர் பிரேதத்தின்

மார்பில் அக்னியைப் பிரதிஷ்டித்து ஓமம் செய்வர். இது பிரேததகனம். இதுவே கொள்ளிவைத்தல். சஞ்சயனம் - மறுநாள் கர்த்தா வீட்டிலிருந்து ஐந்து அடை, ஐந்து உருண்டை, எள், பயறு, பால், நெருப்பு, முதலிய கொண்டு ஸ்மசானஞ் சென்று, பாலைச் சிதையின்மேல் புரோக்ஷித்தல் வேண்டும். பின் சிதையிலிருந்து அக்னியெடுத்து ஓமஞ்செய்து பிறகு எலும்புகளைப் பொறுக்க வேண்டியது. இவ்வாறு பொறுக்கிய எலும்புகளைக் கர்த்தா கண்களை மூடிக்கொண்டு கையில் வழுதலைக் கொடியைக் கட்டிக்கொண்டு பின்புறமாய் எலும்புகளைப் பாராமல் முன் கபாலம், வாய், மார்பு, கை, கால், இவற்றின் எலும்புகள் ஒவ்வொன்றை யெடுத்துச் சப்தமில்லாமல் சட்டியில் வைத்து ஒரு வன்னிமரத்தடியைச் சார்ந்துநால்வரிடத்தில்தர்ப்பைகொடுத்துச் சஞ்சயனமந்திரம்செபித்து ஸ்மசான பூதங்களுக்கு முன் கொண்டு சென்றவைகளைப் பலியிட்டுக் கர்த்தாவாயினும் ஞாதிகளாயினும் எலும்புகளைப் புண்யதீர்த்தங்களில் விடவேண்டும். இவ்வகை செய்யப்பட்டபின் தேக நீங்கிய ஆத்மா செல்லும் விதமும் அதன்பொருட்டுச் செய்யுங்கிரியைகளுங் கூறப்படுகிறது. மற்றவை அபரக்கிரியையிற் காண்க. (சிராத்தகாண்டம்). மனிதர் ஒவ்வொருவரும் தமது கர்மத்தின் முடிவில் மரணத்தை அடைகின்றனர். இறந்தவன் தான்செய்த தீமையால் வரும் பிரேத ஜன்மத்தை நிவர்த்திக்க வேண்டியவனுக்கு விருஷோத்சர்க்கம் செய்தல் வேண்டும். அதனை அவன் உயிர்த்திருக்கும் போதே செய்யினும் ஆம். அன்றி மரித்தபின்னும் செய்யல் ஆகும். அவ் விருஷோத்சர்க்கமாவது- கார்த்திகை மாதத்தின் பௌர்ணிமையிலாயினும், உத்தராயணத்தில் சுக்கிலபக்ஷத்திலாயினும், கிருஷ்ணபக்ஷத்திலாயினும், துவாதசியி லாயினும், மற்றெந்த நல்ல தினத்திலாயினும், நல்லொழுக்கம் உள்ள வேதியரை வருவித்துத்தான் சுத்தனாய் இடபக்கன்றை மஞ்சனம் ஆட்டி அதற்கும் சோடச உபசாரம்செய்து நான்கு ஆன் கன்றுகளுடன் அதனையும் அக்கினியை வலம்வரச்செய்து வடக்கு நோக்கி இருந்து அந்த ஆன்கன்றை நோக்கித் தர்ம சுவரூபமே நீ ஆதியில் பிரமனால் படைக்கப்பட்டனை என்று துதித்துச் செய்வோன் தன்னைப்பற்றியேனும், பிறனைப்பற்றியேனும், அதன்வால் நுனியில் ஜலத்தை விடுத்து அந்நீரைக் கரத்தால் ஏந்திச் சிரசில் புரோக்ஷித்துக் கொண்டு ஆன்கன்றுகளோடு அதனை விடல் வேண்டும். இது இறந்தவனைப் பற்றிச் செய்யப்படுமேல் ஏகோதிஷ்ட சிரார்த்தம் செய்யல் வேண்டும். மரித்த பதினொன்றாம் நாளிலேனும், பன்னிரண்டாம் நாளிலேனும், ஷோடச சிரார்த்தம் சபிண்டீகரணத்திற்கு முன் செய்தல் வேண்டும். பின் பததானம் செய்தல்வேண்டும். பின் வைதரணி நதியைக் கடத்தற்குக் கரும்பினால் ஓடஞ் செய்து அதனைப் பட்டால் சுற்றி நெய் நிரப்பிய வெண்கலப் பாத்திரத்தை அதனுள்வைத்துத் தேவதாராதனை செய்து வேதியர்க்குக் கொடுத்தல்வேண்டும். பின் எள், இரும்பு, பொன், சப்ததானியம், பருத்தி,உப்பு முதலியவும் தானஞ் செய்ய வேண்டும். திலதானமும், சையாதானமும், செய்தல்வேண்டும். இறந்தவுடன் ஜீவன் யமபுரிசென்று மீண்டுவருதலால் உடனே இறந்தஉடலைத் தகனாதிகள் செய்யாமல் சிறிது பொழுது கழிந்த பின்னரே செய்தல்வேண்டும். மனிதலோகத்திற்கும், யமபுரத்திற்கும், இடையில் (௮௬,000) காதவழி உளது. இறந்த ஜீவனைக் காலபடர் காலன்முன் கொண்டு போய்விடக் காலன் இவனை மீண்டும் அவ்விடம் கொண்டு போகக் கட்டளையிட்டுப் பன்னிரண்டாம் நாள் கழிந்தபின்கொண்டு வரச் செய்வன். அக்கட்டளை ஏற்ற படர்கள் நொடிக்கு முன் ஜீவனைக்கொணர்ந்து விடுவர். மீண்டும் தன் தேகத்தில் புகுதற்கு இலாமையால் இறந்த உடலுக்குப் பத்து முழத்துக்கு மேல் நின்றுதீப்பற்றி எரியும் தேகத்தைக் கண்டு அழுது அத்தேகம் வெந்தொழிந்தபின் புத்திரன் முதலியோர் போடும் பிண்டத்தால் உண்டாம் பிண்டதேகம் கொண்டு போவார். வருவோரைப் 'பார்த்துக்கொண்டு வீட்டின் வாயிலில் நிற்பான். மரித்த ஜீவன் (௩) நாள் நீரிலும் (௩) நாள் அக்கினியிலும் (௩) நாள் ஆகாயத்திலும், ஒரு நாள் கிருகத்திலும் வசிப்பன். பின் பதினொன்று பன்னிரண்டாம் நாட்களில் கொடுக்கப் படுவனவற்றை உண்டு பதின் மூன்றாம் நாள் யமபடர்களால் பாசத்தால் இழுக்கப் பட்டு வீட்டைப் பார்த்துக் கதறிய வண்

ணம் காலபடருடன் நாள் ஒன்றுக்கு (உசஎ) காதவழி இரவிலும் பகலிலும் செல்வன். அவன் செல்லும் வழியில் வாளிலைகள் நெருங்கிய ஆசிபத்திரவனம் ஒன்றுளது. அதில் அவஸ்தை அடைந்து செல்லவேண்டும். அது கடந்ததும் பசி தாகத்தால் வருந்தும் ஜீவன் வைவசுவத பட்டணம் சென்று சேர்வன். பாபிகள் அநேகர் அங்கிருந்து பசி தாகத்தால் வருந்துவர். ஆண்டுச் சீவன் பசிதாகத்தால் வருந்தித் தான்உலோபினதை எண்ணித் துக்கிப்பன். பின் யமபடர் புடைத்து இழுக்கச் சிறிதுபொழுது தங்கி இறந்த (உஅ) நாளில் புத்திரனால் செய்யப்படும் ஊனமாசிக சிரார்த்த பிண்டத்தை உண்டு முப்பதாம் நாள் யாமியம் என்றநகரம் சேருவன். இந்நகரத்தில் பிரேத கூட்டங்கள் இருக்கின்றன. அப்பட்டணத்தில் புண்ணியபத்திரை என்கிற நதியும், ஒரு ஆலமரமும் இருக்கின்றன. சிறிது சிரம பரிகாரத்தின் பொருட்டு அவ்விடம் தங்கி இரண்டாம் மாசிக சிரார்த்த பிண்டத்தை உண்டு இராப் பகலாய் நடந்து திரைபக்ஷிக மாசிக பிண்டத்தை உண்டு சங்கமன் காலதூஷகன் என்பவர்களால் காக்கப்படும் சௌரி என்கிற நகரம் அடைந்து ஆண்டு மூன்றும் மாசிக பிண்டத்தை உண்டு அப்புறம் சென்று இடைவிடாது நடந்து காந்தருவ நகரம் சேர்ந்து நான்காம் மாசிகபிண்டத்தை உண்டு அப்பால் நடந்து குளிரால் வருந்திக் குரூரன் என்பவனால் காக்கப்படும் குரூரபுரம் என்கிற பட்டணத்தை அடைந்து ஐந்தாம் மாசிக பிண்டத்தை உண்டு அப்பால் நடந்து கிரௌஞ்சம் என்னும் புரிக்கண் சென்று ஆறும் மாசிக பிண்டம் அயின்று நடக்கையில் தான் வாழ்ந்ததைப் பற்றிப்பேசுவன். யமபடர் புடைத்து இழுப்பர். இவ்வாறு செல்லுகையில் எதிரில் ஓடக்காரர் வந்து வைதரணி கோதானம் நின்னைக்குறித்துச்செய்யப்பட்டதாயின் நீர் இன்றிச் சீ, இரத்தங்களாலும் துர்க்கந்தத்தாலும் நிரம்பி நூறு யோசனை அகலமுள்ள இவ்வைதரணி நதியைக் கடக்க உதவிசெய்வோம். அல்லாவிடின் இதில் அழுத்துவோம் என்பர். இத்தானம் செய்தோனாயின் அந்நதியினை இனிதுகடந்து சமனுக்கு இளையவனாகிய விசித்திரனால் காக்கப்படும் விசித்திரம் என்கிற பட்டணத்தை அடைந்து ஊனஷாண் மாசிக பிண்டத்தை உண்டு சென்று ஏழாம்மாசிக பிண்டத்தை உண்கையில் நீ பிறருக்கு உதவாமையால் எங்களுக்குக் கொடு எனத் தானுண்ணும் உணவைப் பிரேத கூட்டங்கள் பிடுங்கிக்கொள்ளப் பறிகொடுத்து அவற்றின் கையினின்று சிந்திய பிண்ட சேஷத்தை உண்டு வழிநடந்து செல்வன். இதுவரையில் யமபுரியின் பாதிவழியாகும். இதனால் இறந்தவனுக்குப் புத்திரன் முதலியோர் அவன் பொருட்டு அன்னதானம் முதலிய செய்தல் வேண்டும். பின் ஜீவன் யமபடருடன் பக்வாபதம் எனும்பட்டணம் அடைந்து எட்டாம் மாசிக பிண்டத்தை உண்டு அதினின்று நடந்து துக்கதம் எனும் நகரணிந்து ஒன்பதாம் மாசிக பிண்டத்தை உண்டு அதினின்று நீங்கி நாநாக்கிரந்தம் எனும் பட்டணம் அடைந்து பத்தா மாசிக பிண்டத்தை உண்பன். இப்பட்டணத்தில் விருஷோற் சர்க்கம் செய்யாத சீவர் பிரேத ஜன்மத்துடன் கதறிக் கொண்டு இருப்பர். இவர்களைக் கண்டு அச்சீவன் கதறிக் கொண்டு அப்பால் நடந்து சுதப்தம் எனும் புரியைச் சார்ந்து பதினொன்றும் மாசிக பிண்டத்தை உண்டு அவ்விடம் நீங்கிச் சீதாப்பிரம் என்னும் நகர் அணைந்து குளிரால் வருந்திப் பன்னிரண்டாம் மாசிக பிண்டத்தை உண்டு வைவச்சுத பட்டணம் சேரும்முன்னரோ ஊனப்திக பிண்டத்தை உண்டு வைவச்சுத பட்டினமாகிய யமபுரம் சேர்தற்கு முன் பிண்ட சரீரத்தைத் தவிர்ந்து அங்குஷ்டபரிமாணமாய் ஒரு வன்னிமரத்தில் சிறிதுகாலம் இருந்து பின் கருமத்தாலாகிய சரீரம்பெற்று யமபுரம் சார்வன், அச்சீவன் புண்ணியம் செய்தவனாயின் சூரியமண்டல மார்க்கமாய்ப் பிரமலோகம் சேர்வன்.

**மரந்தச்சன் ஆயுதம்**—வாள், உளி, இழைப்புளி, துரப்பணம், துரப்பணக்கோல், சிற்றுளி, கொட்டாப்புளி,

**மரத்தின் காய்வகை**—வாழைக்காய், பலாக்காய், மாங்காய், அத்திக்காய், முருங்கைக்காய், நெல்லிக்காய், அருநெல்லி, புளியங்காய், மரியங்காய், கடுக்காய், எலுமிச்சங்காய், பலவகை நாரத்தங்காய், பனங்காய், தேங்காய்; செடியின் காய்வகை, கத்திரிக்காய், வெண்டைக்காய், கண்டங்கத்திரி, கறிமுள்ளி, கொத்தவரை, நறுமணத்தக்காளி, கொட்டை அவரை, பீன்ஸ்காய், மணத்தக்காளி, சுண்டைக்காய், விதுகங்காய், பாவட்டங்காய், பலவகை மிளகாய்,

களாக்காய், பலவகைப் பூசிணிக்காய், முலாங்காய், சுரைக்காய், வெள்ளரிக்காய், கக்கரிக்காய், மொச்சைக்காய், பீர்க்கங்காய், புடலங்காய், பலவகை பாகற்காய், தூதுளங்காய், வழுதலங்காய், பயற்றங்காய், சுக்கங்காய், முதலிய மாதுளை, கொய்யா, ஊமத்தை, விளா முதலிய

**மரநாய்** — இது பூனையினத்தைச் சேர்ந்தது என்னலாம். இது பூனையைப்போல் மரம் ஏறவல்லது. உருவத்தில் சிறு நாயைப்போலிருக்கும். இது மரம் ஏறவல்லதாதலால் இதை மரநாய் என்பர். இதன்வால் சுருண்டிருக்கும். இது பகலில் மரப்பொந்துகளில் புகுந்திருந்து இரவிலிரை தேடப் புறப்படும். இரவில் எலி, அணில், சிறு பறவைகளைப் பிடித்துத்தின்னும். ஒன்றுங் கிடைக்காவிட்டால் மரங்களிலேறிக் கள்ளைக் குடிக்கும். சிலவேளை கள்ளின் மயக்கத்தால் மரத்திலிருந்துகீழ்வீழ்வதுமுண்டு.

**மரநாய்போன்ற மிருகம் ராட்டில்** — இது தென் ஆபிராகாவின் பாலைவனவாசி உடல் (௩) அடிநீளம். உயரம் பத்தங்குலம். இது தேனீக்களைத் தின்கிறது. இவ்வினத்தில் பயின் மார்டின் என்று ஒருவகை உண்டு. இது சைபீரியவாசி.

**மரபாலன்** — கங்கை குலத்திற் பிறந்த ஒரு வேளாளன். இவன் பாதாளஞ் சென்று மீளுகையில் விச்வகன்மன் பொருமை கொண்டு போரிட்டுத்தோற்றனன். இவனை வேளாளன் பிடித்துப் பூமியில் விட்டனன். இதனைக்கண்ட அரிஹர பிரம்மாக்கள் வேளாளனை வாழ்த்திச் சில பரிசுகளை அளித்தனர். பிரமன் அரியாசனம் தந்தான். அட்ட லக்ஷ்மிகளும் அட்டசம்பத்தைத் தந்தனர். முருகக் கடவுள் குவளை மாலையை அளித்தனர். மற்றதேவர் மயில்,குயில், மீனம், சிங்க முதலிய கொடிகளை யளித்தனர். இந்திரனும், குபேரனும் தமது புத்திரியரை யளித்தனர். அதுமுதல் இவன் தன் மரபை விளக்கியதைப்பற்றி இவனுக்குத் திரிமூர்த்திகளும் மரபாலன் எனப் பெயரிட்டனர்.

**மரபு** — 1. (உ) தந்தை மரபு, தாய் மரபு.

2. யாதொரு பொருளை யாதொருசொல்லால் யாதொரு நெறியால் அறிவுடையார் சொன்னர்களோ அப்படி சொல்லுதல். (நன்.)

**மரங்களின் பட்டைகள்** — மரங்களைக் காக்கப் புறணியா யிருக்கின்றன. இவை பல மரங்களின் பட்டைகள் பல குணமும் உருசியும் பெற்றிருக்கின்றன. சில மணந்தருவன, சில துர்நாற்றந்தருவன. சில மயக்கந் தருவன,சில நார்போல்வன. சில சடைபோல்வன. சில வழுவழுப்புள்ளன.

**மரவகை** — 1. ஆலமரம் - இதனை வருத்தாது வளரவிட்டால் நெடுந்தூரம் தழைத்து வேரூன்றிப் பல நூற்றாண்டுகள் அழியாதிருக்கும். அரசமரம் - இந்தியாவில் மரங்களுக்கரசா யெண்ணப்பட்டு வருவது. இந்தியர்களின் கல்யாணங்களிலும், தேவபூசைகளிலும் யாகாதி காரியங்களிலும்உபயோகிப்பது. இதனடியில் புத்தர் ஞானமடைந்தனர். வேம்பு, இது சிறந்த மரம். இதனை மாரிநோய் கொண்டார் கொண்டாடுகின்றனர். இதனிலைகள் அம்மைக் கொப்புள முதலியவற்றை ஆற்றுகிறது. வன்னி இது உறுதியுள்ள மரம். இதனை வந்நியைக் காண்க நெல்லி இதனடியில் திருமாலிருந்ததால் விசேடமென்பர்.

2. பாலுள்ளவை - தில்லைமரம் - இதன் பால் விஷமுள்ளது, மட்டிப்பால் - மணமுள்ளது. அரசு, அத்தி, ஆல் இவற்றின் பால் நார்த்தன்மை யுள்ளதாய்க் குருவி முதலியபிடிக்க உபயோகிக்கின்றனர். தண்ணீர் வடியுமரம் சருக்கரைப்பால் வடியுமரம், பால் வடியுமரம், இரப்பர் உண்டாமரம், கற்பூரத்தைலமரம், தும்மல்மரம், விஷக்காற்றடிக்கு மரம், மழைமரம்,சோதிமரம்,படுத்தெழுமரம், துதிக்கையால் தண்ணீர் குடிக்குமரம், அழுதுகொண்டிருக்குமரம், தூங்குமூஞ்சி மரம், முதலிய பல விநோத மரங்களுண்டு. அவற்றிற் சிலவற்றைத் தனித்தனி காண்க. அத்தி, பூவிலாது காய்ப்பது, தந்தவிதைப்பனை, தாளிப்பனை, கூந்தற்பனை, ஜவ்வரிசிப்பனை, திருவோட்டுப்பனை, மற்றும் பல பெரிய விருக்ஷங்கள் அமெரிகா கண்டத்தில் 300 அடிகள் உயர்ந்ததும், ஆஸ்திரியாவில் (450) அடிகள் உயர்ந்ததும், மத்ய அமெரிகாவில் 154 அடி சுற்றளவாய் 3000 வருஷ ஆயுள் கொண்டனவாயும் சில மரங்கள் இருக்கின்றனவாம். மத்ய அமெரிகாவில் இலை கிளைகள் இல்லாமலே ஒருவகை மரம் உண்டு.

3. இவ்வகைகளில், சந்தனமரம், அதிக மணமுள்ளதும் விலையேறப் பெற்றதுமாம். அகில் இதற்கிரண்டாவதானது, தேவதாரும் மணமுள்ளதேயாம். மற்றவைகளில்

மணமின்றி உறுதியானவை செம்மரம், நூக்கமரம், கருங்காலி, தேக்கு, கடுக்காய் மரம், ஆச்சாம்ரம், மற்றவை உறுதியற்றவை. ஆல், — பரவியமரம், சிங்கோனு மரம், இம்மரம் நீலகிரிப் பிரதேசத்தில் பயிராக்கப்படுகிறது. இம்மரப்பட்டையால் குயினு என்னும் சுரமருந்து ஆயத்தப்படுத்தப் படுகிறது. தென்னை, பனை, கள்வெல்லம் தருகின்றன. வேலமரப் பட்டையில் சாராயம் வடிக்கின்றனர். நுணுபோன்ற மரங்களின் பட்டைகளால் சாயம் போடுகின்றனர் கார்க்மரம் - இதின் பட்டைகளால் புட்டிகளுக்கு அடைப்பான், மிதப்புக் கருவிகள் செய்யப்படுகின்றன.

4. சந்தனமரம், தேவதாருமரம், சாளதேவதாருமரம், அகில்மரம், அக்ருமரம், சரக்கொன்றை மரம், சிறுகொன்றைமரம், நரிக்கொன்றை மரம், மைக்கொன்றை மரம், மருதமரம், வேங்கைமரம், வன்னி மரம், புரசமரம், இருவாட்சி மரம், காட்டாத்தி மரம், பெருங்குமிழ மரம், மாவிலிங்கமரம், அழிஞ்சல் மரம், கடலழுஞ்சி மரம், கொய்யா, கிச்சிலி, சீதாமரம், பூதமரம், வாகைமரம், கருவாகை மரம், புளி, காஞ்சி, வன்னி, இலவமரம், முள்ளிலவமரம், விளாமரம், நெல்லிமரம், கருநெல்லிமரம், அருநெல்லி மரம், அருளமரம், வேப்பமரம், மலைவேப்ப மரம், சருக்கரை வேப்பமரம், வெட்பாலை மரம், மாதுளை மரம், உசிலமரம், (சீக்கிரான்) தீம்பாலை மரம், மலைப்பாலை மரம், குடசப்பாலை மரம், குளப்பாலை மரம், நன்முருக்கு, காட்டுமுருக்கு, புனன்முருக்கு, முள்முருக்கமரம், (கல்யாண முருக்கு) உழலாந்தி மரம், வெள்வேல் மரம், மூங்கில்மரம், பாதிரிமரம், மகிழமரம், கோங்கு மரம், சண்பகமரம், பசுமுன்னைமரம், கல்லால், புன்னைமரம், சுரபுன்னை மரம், நாரத்தை மரம், மாமரம், வாழைமரம், குங்குமமரம், தாழைமரம், கிளியால்மரம், அக்காரமரம், பனைமரம், தென்னைமரம், தாளிப்பனை, ஈச்சமரம், பாக்குமரம், கூந்தற்பனை, பலாமரம், ஈரப்பலாமரம், ஆலமரம், புன்கமரம், அசோகமரம், அரசமரம், புளியமரம், தேக்குமரம், நாவல்மரம், அத்திமரம், காட்டிலந்தை மரம், இலந்தைமரம், தேற்றுமரம, வில்வமரம், கருங்காலிமரம், முந்திரிமரம், புன்முருக்கு, நுணுமரம், குருந்தமரம், குன்றிமரம், கடம்பு மரம், குடைவேல், விடத்தேரை மரம், அடப்பமரம், கடுமரம், தான்றிமரம், இத்திமரம், இருப்பை மரம், மரிமாங்காய் மரம், உழாமரம், ஆச்சாமரம், அகத்திமரம், நறுவிலிமரம், செருந்தி முதலியன.

**மரவட்டை** — இது எலும்பில்லாப் பிராணிகளில் ஊரும் வர்க்கத்தைச்சேர்ந்தபிராணி. இதிற் சிறியவுருவுள்ளதும் சற்று பெரிதும் உண்டு. இது செந்நிறத்ததாய் இரண்டங்குல நீண்டு சென்னிறமான பல சிறுகால்களையுடையது. வீட்டுக்களின் கூரைகளில் வசிப்பது. இதில் பெரிது காட்டுமரவட்டையென்பர். இது, தோட்டம், காடு முதலிய இடங்களில் வசிப்பது.

**மரவணக்கம்** — அசுவத்த விரதம் காண்க. சிலர் ஆலிலும் அரசிலும் சுத்ரதேவதைகள் வருத்தாமல் மரத்தடியில் பூசிப்பது.

**மரவுரி** — ஒருவகை மரத்தின் மேற்றோல். இது உரித்தால் ஆடைபோல நிற்பதும் தோய்த்துச் சுத்தப்படுத்தக் கூடியதாதலால் இருடிகளிதனை ஆடையாகத் தரித்தனர்.

**மராடம்** — பரதகண்டத்தின் மேல் நாடு.

**மராட்டியர்** — இவர்கள் எல்லா ஜில்லாக்களிலும் காணப்பட்ட மராட்டிய பாஷை பேசும் ஜனங்கள். இவர்களில் பிராமணரும் பிராமணரல்லாத ஜாதியரும் உண்டு. சிலர் மாயாவாதக் கொள்கை மேற்கொண்டவரும் சிலர் வைஷ்ணவருமாக இருக்கின்றனர். இவர்கள் போர்ச் சேவகராகவும் படையைப் பின்பற்றியவராகவும் வந்து தமிழ் நாட்டில் குடியேறினவர். இவர்கள் கோவைநாட்டி லிருந்தவர்கள். இவர்கள் தலைவன் சிருங்கேரி மடத்தலைவன். இவர்களரசன் சிவாஜி. (தர்ஸ்டன்.)

**மராமரம்** — இது கிட்கிந்தைக் கருகிலிருந்த எழு ஆச்சாமரங்கள். இவற்றை இராமமூர்த்தி ஒருபாணத்தால் பிளந்தனர்.

**மரீசி** — 1. சம்பிராட்டிற்கு உத்கலையிடம் உதித்த குமரன், தேவி பிந்துமதி. குமரன் பிந்துமான்.

2. வேதத்தில் தேஜோ பேதத்தைத் தெரிவிப்பது. மரீசி, அத்தேஜசால் பிறந்ததால் இப்பெயர் பெற்றனன்.

3. (கூ) ஆம் மன்வந்தரத்துத் தேவர்.

**மரீசிபர்** — பிரமன் சபையில் உள்ள தேவர்.

**மரீசி பிரசாபதி**—பிரமன் மனத்தில் பிறந்த குமரர். தேவி கலை, குமரர் காசிபர், குமரி பூர்ணிமா, இவர்சுவாயம்பு மன்வந்தரத்தில்

உணபு என்கிற மனைவி யிடத்து ஆறு புத்திரர்களைப் பெற்றனர். இவ்வறுவரும் பிரமன் சரஸ்வதியைச் சிருட்டித்துத் தானே மணஞ் செய்து கொண்டதைப்பற்றிச் சிரித்தனர். அதனால் பிரமதேவனால் அசுரராகச் சபிக்கப்பட்டு இரண்யகசிபு புத்திரராய்ப் பிரகலாதனுக்குத் தம்பியாராயப் பிறந்து ஐச்வர்யமடையப் பிரமனையெண்ணித் தவஞ் செய்கையில் அசுரர்களால் பாதாளத்தழுத்தப்பட்டு ஆறு மன்வந்தரம் பாதாளத்தழுந்திருந்து ஏழாவது மன்வந்தரத்துக் கிருஷ்ணமாயையால் கிரகிக்கப்பட்டுத் தேவகி கற்பத்தில் பிறந்தனர். இவர்கள் கஞ்சனால் கொல்லப்பட்டுப் பாதாளத்தி லிருந்து தேவகி கண்ணனை வேண்டக் கண்ணனால் பாதாளத்திலிருந்து வந்து தாயாகியதேவகியிடம் செல்லத் தேவகி பாலூட்டத் தேவசன்மம் பெற்று விடை கொண்டனர். இவர் ஒருமுறை சயதுங்கனைச் சபித்தனர். இவர் தேவி தேவவல்லி யென்பவளிடம் சத்தி வல்லபையாகப் பிறந்தனள்.

**மரு** — (சூ.) அரியசுவன் குமரன். இவன் காலாபமென்னுங் கிராமத்தில் தவஞ்செய்துகொண்டிருக்கையில் கல்கியைத் தரிசித்தான்.

**மருக்காந்தாரம்** — ஒரு தீவு. இதில் இருந்த நூறுகோடி அசுரர்களை இராமமூர்த்தி வருணன் மீதுவிட எடுத்த அத்திரத்தைப் பிரயோகித்து மாய்த்தனர்.

**மருங்கிழான்பெருங்கண்ணனூர் நக்கீரனூர்** — கடைச்சங்கமருவிய புலவர்.

**மருங்கூர்கிழார் பெருங்கண்ணனூர்** — பெருங் கண்ணரென மற்றொருவர் இருத்தலின் இவர் மருங்கூர் பெருங்கண்ணரெனப் படுகிறார். இவர் வேளாண்குடியினர். கடைச் சங்கமருவிய புலவருள் ஒருவர். (அக அ0)

**மருங்கூர்ப் பட்டினத்துச் சேந்தன் குமரனூர்** — மருங்கூர்ப் பட்டினம், என்பது பாண்டி நாட்டிலுள்ள தோரூர். திருவாடானைத் தாலுக்காவில் மருங்கூரென்ப தொன்று காணப்படுகிறது. சேந்தனது புதல்வன் குமரனெனப்படுவோர். முல்லைத் திணையைப் புனைந்துபாடியுள்ளார். இவர் பாடியது (நற். உஅசு-ம் பாட்டு.)

**மருங்கூர்ப்பாகை சாத்தன் பூதனூர்** — 1. கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். இவரியற் பெயர்சாத்தன் பூதனாக இருக்கலாம். ஊர் மருங்கூர்ப் பாகைபோலும். (அக-நஉஎ.)

**மருசி** — சடியாசனற் பிரசாபதியினிடம் அனுப்பப்பட்ட தூதன். (சூளா.)

**மருட்பா** — முன்னர்ச் சிலவெண்பா அடிகளும் பின்னர்ச் சில அகவலடிகளும் கூடி வருவது. (யாப்பு-இலக்கணம்.)

**மருணீக்கியார்** — திருநாவுக்கரசுகளுக்குத் தந்தையாரிட்ட முதற்பெயர்.

**மருதநிலம்** — நல்ல நீர்வளத்தால் எல்லா ரோகங்களையும் போக்கும். இது வசிக்க யோக்யமானது.

**மருதப்பிரான்** — சிவசருமர் வறுமை நீங்கக் குழந்தையுருக்கொண்டு வில்வவிருக்ஷத்தடியில் இருந்த சிவாம்சம். இவரைச் சிவசருமரும் வறுமைநீங்க எடுத்து வளர்க்கையில் சிவாஞ்ஞைப்படி பட்டணத்துச் செட்டியாரிடம் கொண்டுசென்று இக்குழந்தையின் நிறையளவு பொன் கேட்டனர். அந்தப்படி சம்மதித்துத் துலையில் இட்டனர். மருதப்பிரானைச் சிவசருமரும் அவர் தேவியரும் நிறையிலிடப் பட்டணத்துச் செட்டிகள் தமது பொக்கிஷத்திலிருந்த திரவியத்தைவைக்க மருதப்பர் நிறை அதிகப்பட்டுப் பொருணிறை மேலெழுந்தது. இதனைக்கண்ட தாய்தந்தையர் வேண்டிய அளவு இருக்கவேண்ட அவ்வகையிருந்து தாய்தந்தையருக்குப் பொருள்தருவித்துப் பட்டணத்தடிகள் வளர்க்க வளர்ந்து தமது நண்பருடன் படகேறிச் செல்லுகையில் தம்மில் ஒருவனை மீன்விழுங்க அம்மீனை யுதைத்து அதன் சாபம் போக்கினர். அம் மீன் மணிபத்திரன் எனும் காந்தருவ உருக்கொண்டு துதிக்கக்கருணைசெய்து அக்குமரனைமீட்டு, ஒருவன் பட்டணத்துச் செட்டியாரிடம் மதிப்பிடக் கொடுத்த முத்தில் குற்றமுள்ளதென்று அதை உடைத்துக்காட்டி (க0,000)வராகன் உரியவனுக்குக் கொடுப்பித்து வர்த்தகத்தின்பொருட்டுத் தீபாந்தரத்திற்குக் கப்பல் ஏறிச்சென்று உடன்வந்தார் பொருள் இழக்க அவர்களுக்குத் தாம் சம்பாதித்த தவிடு, உமி வறட்டிகளைக் கொடுத்துச் சீட்டெழுதிவாங்கி வீடுவரத் தந்தையார் குமரன் சித்தபிரமை கொண்டான் எனக்காவலுடன்வீட்டில்அடைத்துவைக்க அதினின்று நீங்கிக் "காதற்ற ஊசியும்" எனுஞ் சீட்டெழுதிவைத்த பெட்டியைத் தாயிடம் அளித்துத் திருவுருக்கரந்தவர்.

**மருதம்** — ஊரடுத்தநிலம். அதன் கருப்பொருள்கள். தெய்வம் - இந்திரன், உயர்ந்தோர்-ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி,

தாழ்ந்தோர் - உழவர், உழத்தியர், கடையர், கடைச்சியர், புள் - வண்டானம், அன்றில், நாரை, அன்னம், போதா, கம்புள், குருகு, தாரா. விலங்கு - எருமை, நீர்நாய், ஊர் - பேரூர், மூதூர், நீர் - ஆறு, கிணறு, குளம், பூ - தாமரை, கழுநீர், குவளை, காஞ்சி, வஞ்சி, மரம் - மருது, உணவு - செந்நெலரிசி, வெண்ணெலரிசி, பறை-கிணைமுழவு, யாழ்-மருதயாழ், பண்-மருதம், தொழில் - விழாக்கொளல், வயற்களைக்கட்டல், அரிதல், கடாவிடல், குளம் குடைதல், புனலாடல், முதலிய. (அகம்.)

**மருதம்பாடிய இளங்கடுங்கோ** — 1. இவர் சேரர் மரபினர். பாலைபாடிய பெருங்கடுங்கோவின் தம்பியென்று ஊகிக்கப்படுகின்றனர். இவர் பெயர் பாடலால் விசேடித்து வந்தது. மருதத்திணையையே சிறப்பித்துப் பாடியதால் இவ்வடை மொழிபெற்றனர். அகுதை யென்பாளின் தந்தை. சோழரது பருவூரைச் சிறப்பித்து ஆங்குச் சேரபாண்டியர் வந்து போர்புரிந்து தோற்ற கதையை விளக்கிக் கூறுகின்றார். இவர் பாடலில் பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனை வாயின் மறுப்பது பாராட்டற் பாலது. இவர் மருதத்திணையையே பலபடியாலும், சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், அகத்தில் இரண்டுமாக மூன்று பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2. கடைச்சங்கமருவிய புலவர் (அக-நா)

**மருதம்பாடிய நெடுங்கோ** — கடைச்சங்கருவிய புலவர்.

**மருதவாணிப மகருஷிகோத்ரன்** — இவன் வைசியகுல முதல்வன். திருக்காஞ்சியில் தன்பெண் அன்புபிரியாளம்மையை மருதப்பருக்குத் திருமணஞ் செய்வித்தவன்.

**மருதனிளநாகனுர்** — கடைங்கமருவிய புலவருள் ஒருவர். இவராற் பாடப்பட்டவர், பாண்டியன் கூடாகாரத்துத் துஞ்சிய மாறன்வழுதி, நாஞ்சில் வள்ளுவன். மதுரை மருதனிள நாகனுரைக் காண்க. (புற நா).

**மருதி** — காவிரிப்பூம் பட்டினத்துள்ள ஒரு பார்ப்பினி. (மணிமேகலை.)

**மருதுபாண்டியன்**—சிவகங்கையை ஆண்டவன். இவனது வள்ளல்தன்மையையும் ஏகபத்தினிவிரதத்தையும்புகழ்ந்து ஒரு கவிஞர் கூறியது "தேனுந்துதாமன் மருதேந்திர ராஜன் தியாகம்கண்டு, வானும்பர்தாமும் புலவரென்றார் வடிவேற்குகனென், போனும் புலவனென்றான் புதன்தானும் புலவனென்றான், நானும் கவியென்று சக்கிரன்றானுகவின்றனனே." "பானுரியல்புணரும்பண் பன்றன்னின்பம், பானுரிய ரறியாப்பண்பன் — றிரனு, ரணிமருது பாண்டில் விழவன்றுதைத் தோன்யாரும், பணி மருது பாண்டிய பூபன்."

**மருதூர்நம்பி** — எழுபத்திரு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர் (குருபரம்பரை.)

**மருதேசம்** — குருக்ஷேத்ரத்தை யடைந்த தேசம். பாரதப்போரில் போர்வீரர் தங்கிய இடம்.

**மருதேவி** — நாபிமகாராஜன் தேவி.

**மருத்தர்** — சம்வர்த்தனன் மாணுக்கர். இன்பொருட்டு அச்வமேதம் இயற்றியவர்.

**மருத்தன்** — 1. ஒரு அரசன் இவன் சம்ராட்.

2. (சூ) அவிக்ஷித்துக் குமரன். இவனுக்குச்சம்வர்த்தனன் எனும் ருஷி, அநேக யஞ்சங்களைச் செய்வித்தனர். இதனுல் இந்திரன் முதலியவர் திருப்தியடைந்தனர். குமரன் நரிஷ்யந்தன்.

3. கரந்தமன் குமரன். இவன் குமரன புத்ரன். இவன் பௌரவ வம்சத்தனுன துஷ்யந்தனைச் சிலகாலம் புத்திரனுகக் கொண்டவன்.

4. இந்திரஜித்தின் யுத்தத்தில் மடிந்த இராக்கதபிணங்களைக் கடலில் எறிய இராவணனுல் ஏவப்பட்ட இராவண தூதன். அதிகாயன் யுத்தத்தில் இலக்குமணரால் கொலை செய்யப்பட்டான்.

5. தேவரை வருத்திச் சிவமூர்த்தியாற் கொல்லப்பட்டவன்.

**மருத்து** — 1. (சூ.) சிக்கிரன் குமரன். இவன் கலாபமென்னும் கிராமத்தில் இருந்துகொண்டு யோகசித்தியுடையனுய் இன்னுமிருக்கின்றான். இவனே அழிந்துபோன சூர்யவம்சத்தை இக் கலியின் முடிவில் உண்டாக்கப்போகிறவன். (பாகவதம்)

2. சுயசையின் தந்தை

**மருத்துக்கள்**—1. கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு, கீழ், மேல், பல்யோனியுயிர்.

2. (சூ.) ஆவிதீட்சன் குமரன். (அவீக்ஷித்து) இவன் ஆங்கிரஸ குமரராகிய வியாழனை யாகப்புரோகிதராய் வேண்ட அவர் மறுத்தமையால் நாரதர்சொற்படி தான் பிணத்தைச் சுமந்துசென்று கங்கைக்கரையில் பித்தர்போலிருந்த சம்வர்த்தனரைக்கண்டு யாகத்திற்குவேண்டி யழைத்து அவருடன் முஞ்சுவந்தபர்வதஞ்சென்று பொற்

பாளங்கள் கொண்டு யாகஞ்செய்கையில் அக்னி, காந்தருவன் இவர்களைக் கொண்டு இந்திரன் வியாழனால் யாகஞ்செய்விக்கச் சொல்விக்க இவன் மறுத்ததுகண்ட இந்திரன் வச்சிரமேவ அது சம்வர்த்தனர் கிருபையால் தம்பிக்க அரசன், தேவர் களிக்க யாகத்தை முடித்து வந்தருஷிகளுக்கு வெகுதிரவியம் கொடுத்தனன். அந்த இருடிகள் தாங்கள் பெற்ற செல்வங்களைப் பூமியிற் புதைத்துச் சென்றனர். (இதை வியாசர்சொல்லால் தருமபுத்திரன் எடுத்து யாகஞ்செய்தனன்.) இவன்தாய் விசாலை, இவன் தன்குடிகளைக் காத்துத் திரிலோக சஞ்சாரியாய் இருக்கையில் ஒரு முனிவர் இவனிடம்வந்து இவன் தந்தையைப் பெற்ற தாய் சொன்னவார்த்தையாகச் சிலசொற்களைக்கூறினர். அது "உலகாள்வோன் துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்யவேண்டும்" அவ்வகை செய்யாமல் ஸ்திரீபோகத்தைப்பொருளாகக்கொண்டுகாலங்கழிக்கின்றமையால் பாதாளத்திருந்து நாகங்கள்வந்து எட்டு முனிப் புதல்வர்களைக் கடித்துத் தடாகங்களை விஷமாக்கிப் பாதாளஞ்சென்றன என்றனர். இதனைக் கேட்ட அரசன் அதிககோபங்கொண்டு பார்க்கவர் ஆச்சிரமஞ்சென்று பாம்புகளைக் கொல்லும் மந்திரத்தைஅம்பில் அபிமந்திரிப்பித்து அவ்வம்புகளைப் பாதாளத்து நாகர்மேல் ஏவினன். அவ்வம்புகள் பாதாளஞ்சென்று பல நாகங்களைக் கொல்ல நாயகனை இழந்த பலநாக கன்னியர் மருத்தின் தாயாகிய விசாலையிடம்வந்து முறையிட்டுத் தங்களுக்குக் கொடுத்த வாத்தை நினைப்பூட்டினர். இதனை விசாலை கணவனாகிய அவீக்ஷித்திற்குக் கூற அவீக்ஷித்து ஆலோசித்துத் தன்மகனுக்குப் பாம்புகளைக் கொல்லாதிருக்க நீதி கூறினன். இதனைக் கேளாமையால் அவீக்ஷித்துக் குமரனுடன் யுத்தத்திற்குச்சந்நத்தனாயினன். அச்சமயத்தில் இருடிகளும் அவீக்ஷித்தின் தாயும் தோன்றி ஏன் யுத்தசந்நத்தராகிறீர் என்று அவரைத் தணிவித்து அச்சர்ப்பங்களால் முனிச் சிறுவர்களை உயிர்ப்பிக்கத் தந்தையைப் பணிந்து அரசாண்டு பிரபாவதி, சௌவீரை, கைகேயி, சௌரந்திரி, முதலியவரை மணந்து நரிஷ்யந்தன் முதலிய (கஅ) குமரர்களைப் பெற்றுப் புண்ணிய வுலகடைந்தான்.

3. இவர்கள் காசிபர்க்குத் திதியிடம் உதித்த குமரர். நாற்பத்தொன்பதின்மர். தைத்தியரை இந்திரன் கொன்ற வைரத்தால் தாயாகிய திதி இந்திரனைக் கொல்லும் வலியுள்ள ஒரு புத்திரனை வேண்டிக் காசிபனிடம் பெற்றுக் கருத்தாங்கினள். இதனை அறிந்த இந்திரன் இவளுக்கு ஏவலாளனாய்ச் சென்று ஒருநாள் திதி உறங்குகையில் வாயு உருவாய் அவள் உடலிற் புகுந்து அவள் உணராவண்ணம் வயிற்றிலிருந்த பிண்டத்தை வச்சிரத்தால் எழுகூறாக்கினன். அக்குழந்தைகள் வயிற்றில் அழக்கேட்ட திதி "மாருத மாருத" என்றனள். அதுகாரணமாக மருத்துக்கள் எனப் பெயர்பெற்றவர். அக்கூறுகள் ஒவ்வொன்றும் எழுகுமார்களாகி நாற்பத்தொன்பதின்மராய் இந்திரனுக்கு நண்பர் ஆயினர். இவர்களுக்கு இந்திரன் காற்றின் உருவாய்ச்சஞ்சரிக்கவும் தீர்க்காயுள் அடையவும் வரம் தந்தனன். இவர்கள் ஒருமுறை இந்திரன் தமக்கு அவிர்ப்பாகம் கொடாததினால் அவன் மீது பூதத்தை ஏவினர். (பாகவதம்.)

**மருத்துதி** — 1 தக்ஷன்பெண்; தருமன்தேவி, குமரன் மருத்துவான்.

2. முற்கருஷியின் குமரி, மிருகண்டு முனிவரின் தேவி.

**மருத்துவர்** — 1. சூர்யனுக்குச் சஞ்ஞாதேவியிடம் உதித்த புத்ரர்.

2. இவர்கள் நோய் கொண்டார்க்கு ஆயுள் மருந்துதந்து நோய்நீக்கும் வைத்தியர். இவர்களில் பெண் மருத்துவத்தி.

**மருத்துவனல்லச்சுதனார்** — இவர் இசைத்தமிழிலும் மருத்து நூலிலும் வல்லபுலவர் போலும். பரிபாடலிலுள்ள, 6 8-9-10-15-19 பாடல்களுக்கு இசை வகுத்தவர். (பரிபாடல்.)

**மருத்துவன்** — 1. (பரிகாரி) இவன் பிராமணனுக்கும் வைசிய கன்னிகைக்கும் பிறந்தவன்.

2. ஒரு அரசன். இவன் வேள்விதீக்ஷை செய்துகொண்டு யாகசாலையில் இருக்கையில் திக்கு விஜயத்தின் பொருட்டு எழுந்த இராவணன் இவனிடம் யுத்தத்திற்கு வர அரசன் கோபித்து யுத்த சந்நத்தனாயினன். இதனைக்கண்ட முனிவர் அரசனை நோக்கி நீ யாகதீக்ஷை பெற்றிருக்கிறாய் யுத்தத்திற்குச் செல்லலாகாது தோற்றேன் தோற்றேனென்று கூறிவிடுக என அவ்வகைத் தோற்றேனென்று கூறினவன். இவன் யாகத்திற்கு வந்திருந்த தேவர் இராவணனைக்கண்டு பலவுருக்கொண்டு மறைந்தனர்.

3. ஒரு மாயாவி, அரக்கன். மகோதரன் ஏவலால் மாயாஜனக வுருக்கொண்டு சீதைக்கு முன்வந்து உள்ளங்கலங்கச் செய்தவன்.

4. காரணங்களாலும், குறிகளாலும், மருந்துகளாலும் நோய்களின் உண்மை துணிந்து தீர்க்கத் தக்கன தீர்க்கத் தகாதன அறியுந்திறம் வாய்ந்தவன். (சுக் நீ).

**மருத்துவன் தாமோதரனர்** — இவர் கடைச் சங்கத்துப் புலவருள் ஒருவர்.

**மருத்துவான்** — தருமருக்கு மருத்துதியிடம் உதித்த குமரன்.

**மருந்தின் வகை** — சுக்கு, மிளகு, வெள்ளை மிளகு, வால்மிளகு, திப்பிலி, திப்பிலிமூலம், திரிகடுகு, கடுக்காய், அரோகிணிக் கடுக்காய், பிரதிவிக்கடுக்காய், அமிர்தக்க கடுக்காய், சிவந்தகடுக்காய், திரிவிருத்திக் கடுக்காய், கருங்கடுக்காய், செங்கடுக்காய், வரிக்கடுக்காய், பால்கடுக்காய், நெல்லி முள்ளி, தான்றிக்காய், பேரீச்சங்காய், கண்டுபரங்கி அரத்தை, சிற்றரத்தை, வசம்பு, வட்டத்திருப்பி, கோஷ்டம், அதிமதுரம், அதிவிடயம், அக்காகாரம், கடுரோகிணி, பீதரோகிணி, கிரந்திதகாம், செவ்வள்ளிக்கொடி, செவ்வியம், சடாமாஞ்சில், விலாமிச்சை, பறங்கிப்பட்டை, மயிலாலக்கடி, வெள்ளிலோத்திரம் லவங்கப்பட்டை சன்ன லவங்கப்பட்டை, லவங்கபத்திரி, லவங்கப்பூ, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, தாளிசப்பத்திரி, கற்கடகசிங்கி, நாகப்பூ, சிறுநாகப்பூ, கண்டில் வெண்ணெய், கூகைநீறு, நாகணத்தி, (நகம்) மாசிக்காய், வலம்புரிக்காய், வாய்விளங்கம், தக்கோலம், விழலரிசி, கார்போக அரிசி, வால் உழுவை அரிசி, வெட்பாலை அரிசி, காசினிவிதை, துளசிவிதை புத்திர ஜீவிவிதை, சமுத்திர சோழிவிதை, கசகசா, பெரிய ஏலம், சிற்றேலம், மலை ஏலம், காட்டேலம், சீரகம், பெருஞ்சீரகம், (சோம்பு) கருஞ்சீரகம், காட்டுசீரகம், பிளப்புசீரகம், கொத்தமல்லி, செங்கடுகு, வெண்கடுகு, சிறுகடுகு, நாய்க்கடுகு, வெந்தயம், ஓமம், குராசானி ஓமம், சதகுப்பை, பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, அபினி, கரியபோளம், கஞ்சா, ரத்தபோளம், வாலேந்திரபோளம், வெளிச்சப்பிசின், பச்சைநாவி, வெள்ளைநாவி, கருநாவி, சூத்திரநாவி, நிலாஆவாரை, சிவதைவேர், வெண்சிவதை, கருஞ்சிவதை, நேர்வானம், நீரடிமுத்து, செங்கொட்டை, (சேராங்கொட்டை) தேங்காய், எள்ளு, வேம்பு, இலுப்பை இவைகளின் பிண்ணாக்கு முதலிய; மடல்துத்தம், மயில்துத்துத்தம், அன்னபேதி, மாங்கிசபேதி, அம்பர், குந்திரிகம், குங்கிலியம், வெள்ளைக் குங்கிலியம், குக்கில், அரக்கு, அபாகம் கல்நார், சகஸ்திரவேதி, கல்பதம், சிலாசத்து, சிலாரசம், நண்டுக்கல், காவிக்கல் கடல்நுரை, சுக்கான்கல், நான்குவகை நிமிளை கலைமான்கொம்பு, சங்கு, சிப்பி பலகறை. (பதா.)

**மருந்துகளின் பேதவகை** — மாத்திரைகள் கட்டுகள், பஸ்மங்கள், செந்தூரங்கள், சுண்ணம், பதங்கள், எண்ணெய்கள், கஷாயங்கள், சூரணங்கள், லேகியங்கள், ரஸங்கள், சுரசங்கள், நெய்கள், வடகங்கள், நீர்கள், லேபங்கள், அஞ்சனங்கள், தைலவகைகள், மெழுக்குகள், குழம்பு, பொடி ஒத்தணம், சூடிடல், ஆவி, புகைபிடித்தல், பற்று, விரோசனம், வமனம், திரி, அட்டைவிடல், சஸ்திரப்ரயோகம், நீநீர், களிம்பு, சீலை, குடிநீர், திராவகம், பூப்புடத்தைலம், மை, ஆக்ராணம்.

**மருபூமிகள்** — சிந்து தேசத்துள்ள நதிகள்.

**மருவூர்ப் பட்டினம்** — காவிரிப்பூம் பட்டினத்துப் புறநகர். (சிலப்பதிகாரம்).

**மருளசங்கரதேவர்** -- வசவர் காலத்திருந்த வீரசைவர்.

**மரைவதன்** — பிரிய விரதனுக்கு இரண்டாவது பாரியிடம் பிறந்த குமரன்.

**மர்க்க சோழகன்** — வாநரவீரன், சுக்ரீவ படைத்தலைவன்.

**மலசலமோசனஞ் செய்யுமிடங்கள்** — பகலில் தெற்கு நோக்கியும், இரவில் வடக்கு நோக்கியும் செய்தலாகாது.

**மலடு** — பெண்மலடு, ஆண்மலடு என இரு வகை. இது, ராஜப்ரதான தோஷத்தாலும், ஜன்மாந்தர பாவக்ருத்யங்களாலும், ஸ்திரீ மலடியாவள். அவ்வாறே சுக்லகதங்களாகும் வாதாதிகளாலும், புருஷன் மலடாவன். புருஷனுடைய வீர்யம் இனிப்பாயும், நீரில் மிதப்பதாயும், சிறுநீர் நுரைத்தும் இருப்பின் புருஷன் மலடல்லன். மேற்கூறிய இலக்ஷணத்திற்கு மாறுயின் புருஷன் மலடாவன். இந்த மலடு ஆதிமலடு, காக்கைமலடு, வாழைமலடு, கருப்பமலடு என நான்குவகைப்படும். இவற்றுள் ஆதிமலடு வயிறு மூன்று மடிப்புள்ளதாயும், இடுப்பு பருத்து, உடம்பு தூலித்தவள். காக்கை

மலடு முதலில் இரண்டு பிள்ளைகள்பெற்று பிறகு பிள்ளை பெறாதாள். வாழைமலடு - ஒரு பிள்ளைபெற்று மீண்டும் பெறாதாள். கருப்பமலடு - பிரதிகர்ப்பத்திலும் சாவுப் பிள்ளை பெறுபவள்.

**மலட்டுரோகம்** — சுக்கில சோணிதங்களில் வாதாதிகளால் உண்டாகின்ற தோஷங்களினாலும், ஜன்மாந்தர பாவத்தினாலும் உண்டாவது. அது ஆண்மலடு, பெண்மலடு என இருவகை. பெண்மலட்டில் ஆதிமலடு, காகமலடு, கருப்பமலடு என நான்கு பிரிவுகளுண்டு.

**மலதம்** — 1. இந்திரனது பிரமகத்தி தோஷமாகிய மலத்தைப் போக்கிய புண்ய தீர்த்தமுள்ள இடம். இது மலத்தைப் போக்கியதால் மலதம் எனப்பட்டது. (இரா-பா.)

2. சரயூநதிக்கு அப்பாலுள்ள நாடு, பூர்வம் இந்திரனைப் பிடித்த மலமாகிய பிரமஹத்தி நீங்கின இடமாதலின் இப் பெயரடைந்தது. (வான்மீகி - ரா.)

3. ஒரு நாடு.

**மலதம் கருசம்** — இந்திரனுடைய மலகருசங்கள் நீங்கின இரண்டு தேசங்கள். மிதிலைக்குச் செல்லும் வழியிலுள்ளவை.(இரா)

**மலமாதம்** — இரண்டு அமாவாசை வரும் மாதம்.

**மலம்** — (௩) ஆணவம், காமியம், மாயை.

**மலம்பீச்சும் பிராணி** — இது வட அமெரிக்கா ஆண்டிஸ்மலைபிரதேசத்தது இதன் தேகத்தில் நீண்டு அடர்ந்த மயிருண்டு; உருவத்தில் கீரிபோன்றது பற்கள் நாய்க்கிருப்பதுபோலிருக்கிறது. இதை விரோதிகள் எதிர்த்தால் ஒருவகை மஞ்சளான நீரை ஆசனத்தின்வழியாகப் பீச்சுகிறது. அந்நீர் (18) அடி பாய்கிறது. அதன் நாற்றம் எவ்வகையிலும் நீங்குவதில்லை.

**மலயத்துவசபாண்டியன்** — 1. காசிராசன் குமரன். இவன் குமரன் பிரதீபபாண்டியன். இவன் தேவி வைதற்பி. இவனது மற்றொரு குமரன் இத்மவாகன், பாரத யுத்தத்தில் பாண்டவர்க்கு உதவிபுரிந்து அச்வத்தாமனால் இறந்தவன்.

2. மணவூரை ஆண்டு கொண்டிருந்த குலசேகர பாண்டியன் குமரன். இவன் பதினாயிரம் பெண்களை மணந்தும் புத்திரன் இல்லாமையால் சூர்யகுலத் தரசனாகிய சூரசேநன் புத்திரியாகிய காஞ்சனமாலையை மணந்து அரசாண்டு (௯௯) அச்வமேத யாகஞ்செய்து பின்னும் ஒரு யாகஞ்செய்ய இருக்கையில் இந்திரன் இவன் மற்றொரு யாகஞ்செய்கையில் தன் பதமாறுமென்று எண்ணி இவனிடம் வந்து புத்திர காமேஷ்டிசெய்க என ஏவினன். அதனால் அரசன் புத்திர காமேஷ்டி யாகஞ் செய்ய அதில் பார்வதி பிராட்டியார் மூன்று முலைகளோடு அவதரித்தனள். அரசன் புத்திரப்பேறு வேண்டி யாகஞ்செய்ய மும்முலையோடு பெண் பிறந்ததே எனக் கவலுகையில் அசரீரி அரசனை நோக்கி அரசனே இந்தப் பெண்ணிற்கு நாயகன் வரும்பொழுது ஒருமுலை மறையுமெனக் கூறக்கேட்டுக் களித்திருந்து மகளுக்குச் சகல கலைகளும் கற்பித்துத் தன் முடியை மகளுக்குச் சூட்டிச் சுவர்க்க மடைந்து சிலநாள் பொறுத்து சோமசுந்தர பாண்டியனால் கைலாயத்திருந்து வந்து எழுகடலாடிச் சென்றவன்.

**மலயம்** — பொதிகை மலை.

**மலர்க்கொண்டைப் பறவை** — இது, அமெரிகா நாட்டில் இருக்கிறது. இது மாம்ஸபக்ஷணி- இது அழகாய்ப் பாடக்கூடியபக்ஷி. இது புறத்தில் நீலங்கலந்த வெண்ணிறமாய் வயிறு வெளுத்து அழகிய மலர்க்கொண்டை பெற்றிருப்பது, இது மரங்களிலுள்ள இலைகளில் மறைந்து தன் கொண்டையை மாத்திரம் வெளிப்படுத்தி இருக்கையில் தேனை நாடி வரும் வண்டுகள் முதலிய இதனை மலரென்றெண்ணி இறங்குகையில் அவற்றை ஆகாரமாகக் கொள்ளும். இதனை (Bee Martin) என்பர்.

**மலர்ச்சியணி** — இது சிறப்புப் பொருளைச் சாதித்தற்குப் பொதுப் பொருளையும் மீட்டும் அப் பொதுப்பொருளைச் சாதித்தற்கு மற்றொரு சிறப்புப் பொருளையும் சொல்லுதலாம். இதனை வடநூலார் விகஸ்வராலங்காரம் என்பர். (குவல.)

**மலஜம்** — கருசதேசத்தின் அருகிலுள்ள தேசம், Malada, The western portion of the district of Sbahabad.

**மலாக்காமதம்** — (Malacca.) இத் தேசத்தவர் பூர்வத்தில் வாயுவை லானிகேஷா என்னும் பெயரால் முதற்கடவுளென்று பூஜித்து வந்தனர். இவர்களுக்கு கிட்டோ என்னும் துஷ்ட தேவதையுமுண்டு. வருஷங்களில் அநேக பண்டிகைகளைச் செய்வர்.

**மலாடு** — 1. மலையமாநாடு. இது சேலம் திருக்கோவலூர் முதலிய.

2. (மலையமா நாடு). அருவாநாட்டிற்கு மேற்கிலுள்ளது. இது மலையமானால் ஆளப்பட்டது. இவனது இராஜதானி திருக்கோயிலூர்.

**மலை**—1. (எ) கைலை, இமயம், மந்தாம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், இவற்றுடன் கந்தமாதனம் கூட்டி (அ) என்பர்.

2. மணல் நாளேற ஒன்றுடன் ஒன்று சேர்ந்திறுகிப் பெரும்பாறைகளாய் நின்ற பூமியின் மேட்டுப் பாங்கான உயர்நிலை.

**மலைக்கொழுந்து நாவலர்** — இவர் காஞ்சிபுரம் தலைமூற்றுரெனும் கச்சி மயேசுரகுலத்தினர் திருப்பாண்டிக்கொடி முடியார் மாணிக்கமாமலைத் திருத்தொண்டர் சதகமியற்றியவர்.

**மலைச்சரிவு** — மலையின் மேலிருந்து அடிவரையில் பார்த்தால் சரிவாகத் தோன்றும். அதற்கு மலைச்சரிவு என்றுபெயர். (பூகோளம்,

**மலைச்சாரல்** — மலையின் அடிவாரத்திலிருந்து கொஞ்சதூரம் வரையில் பூமிசற்று உயர்வாகவே இருக்கும். இதற்கு மலைச்சாரல் என்று பெயர். (பூகோளம்.)

**மலைத்தொதுதி** — மலைகள் கும்பலாக இருப்பதற்கு மலைத்தொகுதி என்று பெயர். (பூகோளம்.)

**மலைத்தொடர்** — மலைகள் தொகுதியாக இராமல் ஒன்றை யடுத்து ஒன்ருகத் தொடர்ந்து செல்வதும் உண்டு. அவைகளுக்கு மலைத்தொடர் என்றுபெயர். (பூகோளம்.)

**மலைபடுகடாம்**—இரணிய முட்டத்துப்பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனூர் மல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனைப் பாடிய நூல்.

**மலைபடுமெழுது**—"தக்கோலந் தீம்பூ தகை சாலிலவங்கம் கற்பூரஞ் சாதியோடைந்து"

**மலையகந்தனி** — இவளைக் கபாலகேதுவின் குமாரனாகிய கங்காளகேது என்னும் அரக்கன் தூக்கிச்சென்று பாதாளத்துச் சிறையிட்டனன். இவன் நாரதனைக் கண்டு தன் செய்தியை மித்திரசித்திற்குக் கூறித் தன்னை மீட்க வேண்ட அங்ஙனமே அவர் கூறக்கேட்ட மித்திரசித்து பாதாளஞ் சென்று அவனிடம் இருந்த சூலத்தை மலையகந்தனி எடுத்துக்கொடுக்க வாங்கி அவனைக் கொன்று அவளையும் மணந்தனன். (காசிகாண்டம்.)

**மலையகேது** — இருஷபனுக்குச் சயந்தியிடம் உதித்த குமரன்.

**மலையடிவாரம்**—மலையின் அடிப்பாகத்திற்கு மலையடிவாரம் என்றுபெயர். (பூகோளம்).

**மலையத்துவச பாண்டியன்** — மலயத்துவச பாண்டியனைக் காண்க.

**மலையமான்** — சிவமூர்த்தியை வணங்கிச் சோணாட்டில் காவிரி வரவேண்டியவன். (காவிரித்தல புராணம்.)

**மலையமான் சோழிய ஏனுதி திருக்கண்ணன் அல்லது திருக்கிள்ளி** — மாறோக்கத்து நப்பசலையாரால் பாடப்பட்டவன். இவன் மலையமாநாட்டுக் கோவலூர்க்கரசன். முள்ளூர் மலையுடையவன். சோழனுக்கு உதவி புரிந்தவன். (புற-நா.)

**மலையமான் திருமுடிக்காரி** — கடையெழு வள்ளலில் ஒருவன். இவன் பெண்ணையாற்றருகிலுள்ள மலை நாடாகிய மலாடு நாட்டரசன். இவன் இராசதானி கோவலூர். தமிழ் நாட்டரசர் மூவர்க்கும் ஒவ்வொரு சமயத்தில் உதவிபுரிந்தவன். முள்ளூர் மலையையுடையான். புலவர்க்கு உபகாரி, இவனே மலையனென்னும் வள்ளல். இவன் குதிரைக்குக் காரியென்று பெயர். இவன் ஒரியென்பவனுடன் போரிட்டவன். இவனுக்கு மலையன் எனவும் பெயர். இவனை மாறோக்கத்து நப்பசலையார், பாடினவர். (புற-நா.)

**மலையமான்மக்கள்** — இவர்களைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவள்வன் யானையால் இடறவிடத் தொடங்கிய காலத்துக் கோவூர்கிழார் சோழனைப் பாடிப் பிழைப்பித்தார். (புற-நா.)

**மலையம்** — குலபர்வதங்களில் ஒன்று.

**மலையனூர்** — இவர் தமது பாடலில் மலைவளம் பலபடக்கூறி "மல்லற்றம்மவிம்மலை கெழுவெற்பு" எனக்கூறிய அருந்தொடர் மொழியையே தமக்குப் பெயராகப் பெற்றவர். இயற்பெயர் புலப்படவில்லை. குறிஞ்சியைப் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடலிலுள்ள இறைச்சிப் பொருள் மிக்க நயமுடையது இவர் பாடியது. (நற் கூ௬-ம் பாட்டு.)

**மலையாண்டியப்பய நாயகர்** — இவர் கன்னிவாடி ஜமீன்தார். இவரை ஒர் கவிஞர் "கல்லொக்குஞ் சிந்தை முட்டாட்டுரை காள் கொடைகற்க வென்றால், வல்லக்கவரர் குலனா சிங்கையன் வாத்துதித்த செல்வக் குமாரன் மலையாண்டியப்பய சிங்கத் தக்குப் பல்லக்குக் கொம்பு சுமந்தீரென் றூன் புத்திபாலிக்குமே" என்றனர். இ...

ஜமீன்தார் ஸ்ரீசிவஞான யோகியர் மாணாக்கருள் ஒருவராகிய இராஜபாளயம் சங்கரமூர்த்தி கவிராயரவர்களுக்கு யானைக் கன்றும் வளநாடும் கொடுத்து உபசரித்தவர்.

**மலையாளர்** — மலையாளத்திலிருந்து தமிழ்நாட்டில் குடியேறியவர்கள். இவர்கள் பாஷை மலையாளம். இவர்கள் பலவிதவேலை செய்து பிழைக்கின்றனர்.

**மலையுச்சி** — மலையின் முடிவுக்கு மலையுச்சி என்று பெயர். (பூகோளம்.)

**மலேயமதம்** — இவர்களிற் சிலர் வாயுதேவனையும் சமுத்திரத்தையும் தெய்வங்களாக ஆராதித்துக் கொண்டிருந்தனர். இவர்களுக்கு டாவிடஸ் என்பவர் சிருட்டிகர்த்தா. பஞ்சபூதங்களை ஒப்புக்கொண் டிருக்கின்றனர். வியாதி முதலியன பிசாசங்களின் காரியமென்று அவற்றைப் பரிகரிக்கப் பலி முதலியவை கொடுப்பர்.

**மல்** — வாணாசுரனை வெல்ல மல்லனுய்க் கண்ணன் சென்று அறைகூவி வென்று ஆடிய கூத்து.

**மல்கலாக்கிய சூலை** — (மண்குத்து நோய்) பிரசவித்தவுடன், அழுக்கினல், மார்பு, சிரம், கீழ்வயிறு இவற்றில் நோவுண்டாகும்.

**மல்செட்டி** — அரசன், வைசியன் கன்னிகையைப் புணரப்பிறந்தவன். மஞ்சள் இஞ்சி முதலிய விற்போன்.

**மல்லதேவன்** — பாணவம்சத்தரசருள் ஒருவன்.

**மல்லநாதன்** — பீமனால் திக்விஜயத்தில் ஜெயிக்கப்பட்டவன். (பார-சபா.)

**மல்லபூமி** — காருபதமென்னும் நாட்டில் இலக்குமணர் நிருமித்த பட்டணம்.

**மல்லம்** — ஒரு தேசம். There are two Malla Desa, One in the west - The Multan. The other is in the east-The Country in which Parasnath hills are situated, that is, portion of the districts of Hazaribagh and Manbhum.

**மல்லயுத்தம்** — 1. பகைவரது உயிர்நிலையுறுப்புகளையும், உறுப்புக்களின் பொருத்துக்களையும், முறைமையாக ஆதல், முறை தவறிச் சென்றாதல், திறமையோடு உராயதலாலும், கைகளால் பிணித்தலாலும், அவரைக் கொல்லுதலாம். அக்கைப்போர் (அ) வகைப்படும். (க) தன் இடக்கையாற் பகைவன் தலை மயிரை இறுகுறப்பிடித்தல், (உ) வன்மையால் நிலத்தில் வீழ்த்திப்பிசைதல், (ங) கால்களால் தலையில் உதைத்தல், (ச) முழங்காலால் வயிற்றில் மோதுதல், (ரு) திரண்டகை முஷ்டியால் கதுப்புக்களில் கருமையாகக் குத்தல், (சு) அடிக்கடி முழங்கால்களால் தாக்குதல், (எ) அகங்கையால் உடம்பில் எப்பக்கத்தும் அறைதல், (அ) பகைவன் சோர்ந்திருக்குங் கால் கபடமாக அவனைப் போரிற் சுழற்றுதல் என்பன. (சுக் - நீ.)

2. இருவர் கைகோத்து கால்களாலும் தலையாலும் இடித்தும் உதைத்தும் ஒருவரையொருவர் வெல்ல வேண்டிச் செய்யும் போர்.

**மல்லர்** — திருவள்ளுவர் திருக்குறளுக்கு உரையிட்ட ஆசிரியர்களில் ஒருவர்.

**மல்லன்** — தருசகனேடு போர்செய்தற்கு வந்த பஞ்சயாசர் எழுவர்களுள் ஒருவன். (பெ - கதை.)

**மல்லாலர்** — விநாயகர் திருவவதாரத்தில் ஒன்று. இவ்வவதாரத்தில் கமலாசுரனைக் கொன்றனர்.

**மல்லிகார்ச்சுநன்** — ஸ்ரீசந்திரன் என்போன் புத்திரப்பேறு வேண்டிச் சிவமூர்த்தியையெண்ணி விஷ்ணு தனக்குப் புத்திரராகத் தவமியற்றி மல்லிகார்ச்சுநரைப் பெற்றான். ஒருநாள் மல்லிகார்ச்சுநர் வேட்டைக்குப் புறப்பட்டுத் திண்டீரவனஞ் சென்று வேட்டையாடுகையில் திண்டீரன் எனது கட்டளையின்றி என் காவலில்வந்தநீ யார் என்று எதிர்க்க இருவரும் (௪000) வருஷம் போரிட்டும் அசுரன் இறவாமையால் மல்லிகார்ச்சுநர் காலதண்டத்தால் இவனுயிரைப் போக்கினர். திண்டீரன் உயிர் நீங்குகையில் ஸ்ரீஹரி, என்று உயிர்விடுத்ததால் விஷ்ணுமூர்த்தி தரிசனந்தந்து உனக்கு என்ன வரம் வேண்டுமென்ன அசுரன், உமது தண்டத்தால் என்னுயிர் நீங்கினேன் ஆதலால் இவ்வனம் லோகதண்டவனம் என்றும், அப்பெயரால் ஒரு தீர்த்தமும், அந்தக் கதாயுதமும் அத் தீர்த்தக்கரையில் நிறுத்தப்பட வேண்டுமெனவும் அத்தீர்த்தத்தில் மூழ்கித் தண்டத்தைத் தழுவினோர் பாபம்நீங்கிச் சுத்தராய் உன்னருள் பெறவும் வரம் அருள்க என்று வரம்பெற்றனன்.

**மல்லிகிழான் காரியாதி** — இவன் குடநாட்டை ஆண்டவன். எற்போர்க்கு அன்புடையவன். இவனை ஆவூர் மூலங்கிழார் பாடிப் பரிசுபெற்றார். (புற நா.)

**மல்லிநாததீர்த்தங்கரர்** — பத்தொன்பதாவது சைநதீர்த்தங்கரர். இவர் அங்கநாட்டில் மிதிலாபுரியிற் கும்பசமகாராஜாவிற்குப் பிரசாவதியிடம் மார்கழிமீ பூர்வபக்ஷம் ஏகாதசி அச்வநிநக்ஷத்திரத்தில் பிறந்தவர். இவர் உன்னதம் (உரு, வில் சுவர்ணவர்ணம். ஆயுஷ்யம் (ருரு,000) வருஷம். இவர் காலத்துக் கணதரர் விசாகர் முதல் இருபத்தெண்மர். அரசர் பத்மசக்கிரவர்த்தி, பலதேவன், நந்திமித்திரன், தத்தவாசுதேவன், பலீந்திரபிரதிவாசுதேவன்

**மல்லிநாதன்** — காளிதாசன் செய்த கவிகளுக்கு வியாக்யானஞ்செய்த ஸமஸ்கிருத வித்துவான்.

**மல்லிராசையர்** — இவர் வீரசைவ அரசர். இவர் ஸ்ரீபர்வதத்துள் தமது அரசுதுறந்து யோகத்திருந்து முத்தியடைந்தவர். இவர் சரிதையைச் சகளேச மாதிராசையரைக் காண்க.

**மல்லிஷேணாசாரியர்** — நாற்குமார காவியம் செய்த சைநர்.

**மவுசலர்** — ஒரு இருடி.

**மவுதகல்யர்** — சாகல்யர் மாணாக்கருள் ஒருவர்.

**மழநாடு** — மலை நாட்டில் திருப்பாச்சிலாச்சிரமத்தை அடைந்த நாடு.

**மழபுலவஞ்சி** — பகைவர் வேற்றுப் புலத்தைக் கொள்ளையூட்டி அகங்கள் பாழ்படக் கொள்ளைகொண்ட தொழிலைச் சொல்லியது. (பு-வெ.)

**மழவராயன்** — கோடைசிவந்தான் ஊர், ஒரு ஒற்றன், இவன் உப்பரிகை மீதிருந்த ஒருத்தி கிராமப்பிரதக்ஷிணம்வந்த புலவனை நோக்கி "என்னெஞ்சு மென்விழியுங் கொண்டோ விலங்கேசன், பொன்னஞ் சிகாமணியும் பொன்முடியும்-வன்னெஞ்சும், சிந்துங் கொடைச்சிவந்தான் தென்கோடையிர் கழங்கும், பந்தும் சாதித்தபடி." என்று கூற அவளைக் கொடுக்கார் "கண்டு பணியக் கடவேனோகாதலுடன், தொண்டை யிதழருந்தித் தோய்வேனோ கொண்டற் கொடைச்சிவந்தான் கோடைக்குளிர் காவிலன்ன நடைச்சிவந்தானென்செய்வேனன்" எனவருஞ் செய்யுள் புலவன் கூற்றாயிருக்கலாம். (தமிழ்நாவலர்சரிதை.)

**மழு** — சிவாயுதம், .இது பிரளய காலாக்னியால் புருஷரூப மடைந்துள்ளது. இதனைப் பரசிராமர் தவத்தாற் பெற்றுப் பல அரச வம்சங்களைக் கருவறுத்தனர்.

**மழை** — 1. ஆவியாய்ப் பரிணமித்த மேகங்களின் மீது குளிர்ந்தகாற்றும்படிற் அவைகள் நீரினணுக்களாக ஒன்றுசேரும். இக்கனத்த அணுக்களை மேகம் தாங்கமுடியாது சொரிவது

2. ஆகாயத்தில் பறந்தமேகங்கள் குளிர்ச்சியினாலிறுகிப் பூமியின்மீது துளிப்பது, இவை உஷ்ணநிலையினின்று குளிர்ந்தநிலைக்கு மாறுகையில் மழையாம். அப்போது வெண்மேகம் கருமேகமாம். இவை விழுகையில் ஒன்றுடனொன்று சேர்தலால் துளிகளாகின்றன.

3. வெப்பத்தால் மேகமாகப் பரிணமித்த நீராவியின்மீது குளிர்ந்த காற்று வீச நீர்கொண்டமேகம் தன்னிடமுள்ள நீரைப் பொழிவது.

**மழைஅளக்கும்கருவி** — (Rain gauge) தட்டையான அடியுள்ள ஒரு கண்ணாடிப் பாத்திரத்தை மழை பெய்யுமிடத்தில் வைத்தால் அதில் நிரம்பிய நீரை அளவு கருவி கொண்டளந்து கொள்வது.

**மழைக்குறி** — 1. ஆடி மாதத்துச் சோதியும், நவமியும், உத்திராடமும், பௌரணையும், சதுர்த்தசியும் ஞாயிற்றுக்கிழமை கூடினும் அன்றித் தனித்துறினும் இந்த நாட்களில் மந்தாரம், மழை, பரிவேடம், இந்திரதனு, முழக்கம் இவை உண்டாகில் அவ்வாண்டு சுபக்ஷகாலமாம். சுக்ரன், இராகு, கேது, புதன் இவர்களுடன் சந்திரன்கூடில் மழை உண்டாம். சந்திரனை யொழிந்து புதனுக்கும் சுக்ரனுக்கும்யுத்தம்உண்டாய்ப் புதன் செயிக்கின் காற்றுண்டாம். சுக்ரன் செயிக்கின் மழை உண்டாம். மாசி முதல் ஆடியிறுதியாக மாதந்தோறு மூடு பனி பெய்யில் கார்த்திகை, ஐப்பசி, புரட்டாசி, ஆவணி, ஆடி, ஆனி, இம்மாதங்களில் மழை மிகவுண்டாம். ஆவணி முதலாக முன் சொல்லாத மாதங்களில் மூடுபனியுண்டாகில் அம்மாதங்களில் மழை யுண்டாம். (விதானமாலை.)

2. வைகாசி தேய்பிறை சதுர்த்தசியில் மழை பெய்தால் அவ்வருஷம் நல்ல மழை உண்டு. "வைகாசி மாதம் மதி குறைந்த நாலாநாள், பெய்யுமேயாயிற் பெருமழையாம் - பெய்யாக்கால், ஏரி குளமு மெழிற் கிணறு நீர்வற்றும், பாரில் மழையில்லை பார்."

**மழைமரக்கால் அளவு** — (சுo) யோசனை அகலமும், நூறுயோசனை உயரமுமுள்ளது.

**மழைமரம்**—இது அத்லாண்டிக் கடலிலுள்ள தீவுகளில் இருக்கின்றது. இத்தீவில் நல்ல தண்ணீர் கிடைக்காது. ஒருவிதமரம் பகற் காலத்து வாட்டமுற்றுச் சூரிய அத்தமன காலத்தில் தளிர்த்து மழைபோல் நீரைக் கொட்டுகிறது. அத் தீவவாசிகள் தொட்டி களில் நீரைப் பிடித்து உபயோகித்துக் கொள்கின்றனராம்.

**மழைவூர்நம்பி**—ஒரு ஸ்ரீ வைஷ்ணவர். எழு பத்திஞலு சிம்மாசனுதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

**மள்ளனுர்** — 1. இவரது இயற்பெயரொன் ருெழிய வேறியாதும் தெரியவில்லை. கள் ளூரில் இளமகளொருத்தியின் கற்பழித்தா னொருவனைப் பற்றி நீற்றறையில் இட்ட சுதையையும், வையை நீராடற் சிறப்பை யுங் கூறுகிருர். செஞ்சை நோக்கி நின் கைப்பட்ட ஒருத்தியை நீ கைவிட்டு எமாங் திருக்கலாமோ வென்றது வியப்புடையதா கும். இவர் குறிஞ்சியையும், மருதத்தையும் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் உ0௪-ம் பாடலொன்றும் அகத்திலொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2. கடைச்சங்கமருவிய புலவருள் ஒரு வர்.

**மறக்களவழி**—முழவுபோலத் திரண்ட புயத் தினையுடையானை உழும்வேளாளனுக மிகு த்துச் சொல்லியது. (பு-வெ.)

**மறக்காஞ்சி** — 1. ஒப்பனையாற் பொலிந்த மறத் தொழிலையுடைய வீரன் பகைவரு டைய மாறுபாட்டுக்குப் பொருஅுகிப் பகைவர் வேல்பட்ட தன்மார்பிற்புண்ணைப் பிளந்து மரிப்பினும் முற்பட்ட துறையே யாம். (பு-வெ.)

2. பச்சிலையாலே பொலிவுபெற்ற மாலை யாற் சிறந்த வலியினையுடைய மன்னன் பகைவர் மாறுபாடு நீங்க மறத்தொழிலைச் செலுத்தியது. (பு-வெ.)

**மறவர்** — இவர்கள் மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களின் கரையோரமாகிய கன்னி யாகுமரி முதல் இராமநாதபுரம் வரையில் வியாபித்திருப்பவர்கள். இவர்கள் இராம னுக்குத் துணைபுரிந்த பிறகு இராமன் உங் களை மறவன் என்பதால் மறவர் எனவும், போரிடும் கொடுந்தொழிலாகிய மறத்தை மேற் கொண்டவராதலால் மறவரெனவும், அகலிகையிடம் கள்ளப் புணர்ச்சி செய்கை யில் இந்திரனுக்குப் பிறந்த மூன்று குமர ரும் கௌதமர் வருகைகண்டு முதலில் ஒரு வன் கதவின் மறைவில் ஒளிந்தான் அவன் கள்ளன் எனப்பட்டான், இரண்டாமவன் மரமேறி மறைந்தான் அவன் மரவன் எனப்பட்டனன். மற்றவன் வெளிப்பட நின்ருன் அவன் அகமுடையான் எனப் பட்டனன். இவர்கள் திருமலை நாய்க்க னுக்குத் துணைபுரிந்தவர்கள்.

**மறுமை** — இது இருவகைத்து. ஒன்று அப் யுதயம், மற்ருென்று நிச்சிரேயசம். அப் யுதயம் என்பது சுவர்க்க முதலிய சுகவடி வாகிய செல்வம், நிச்சிரேசயம் என்பது வீடுபேறு. (பார மா.)

**மறைஞானசம்பந்தநாயனுர்** — இவர் வெள ளாற்றின் பாங்கர் பெண்ணுகட மென்னும் திருக்கடந்தையில் வைதிக சைவமறை யோர் குலத்துப் பிறந்து கல்விவல்லராய் அருணந்தி சிவாசாரியரிடம் சிவதீக்ஷை பெற்றுச் சிவதருமமென்னும் ஆகமத்தின் உத்தர பாகத்தைத் தமது மாணுக்கர் கேட் கத் தமிழில் மொழிபெயர்த்துத் திருக்க ளாஞ்சேரியிற் பிரமபுரேசர் சந்நிதியிலிரு ந்துகொண்டு பிக்ஷை நடாத்தி வருகையில் ஒருநாள் ஓர் அந்தணர் வீட்டுப் புறத்தில் பிக்ஷைக்கு நிற்கையில் உமாபதி சிவம் சிவிகையூர்ந்து மங்கல வாத்தியத்துடன் செல்லக்கண்டு பகற் குருடன் செல்கின் ருன் என அதைக்கேட்ட உமாபதி சிவம் சிவிகையினின்றிழிந்து திருவடிபணிந்து அவருண்ட மிச்சினுகர்ந்து நிழல்போலி ருக்க மறைஞானசம்பந்தர் அவரது தீவிர பக்குவமறிந்து அவருக்கு ஞானதீக்ஷை செய்து சில நாளிருந்து திருக்களாஞ் சேரி யில் முத்தியடைந்தனர்.

**மறைஞான சம்பந்தர்** — 1. சீர்காழித் திரு ஞானசம்பந்த மூர்த்திகளின் திருவடியார். வள்ளல்கள் அறுபத்து நால்வருள் ஒருவ ராகிய ஆளவந்தவள்ளல் சந்தானத்தைச் சேர்ந்தவர். பிராமணர், இவர் பதி பசு பாசப்பநுவல், சிவஞான சித்தியார் சிவ தர்மோத்ரம் முதலியவற்றிற்கு உரை யும் பரமத திமிரபாநு, சைவசமயநெறி சோமவார கற்பம், பிரதோஷ கற்பம், உருத்ராக்ஷ விசிட்டம், திருக்கோயிற்குற் றம் என்னும் நூலும் இயற்றி யிருக்கின்ற னர்.

இவர் மறைஞானதேசிகர் சைவ வேளா ளர் சிதம்பரத்திருந்தவர். தமிழில் அரு ணகிரி புராணம் இயற்றியவர்.

**மறையாமையணி** — அஃதாவது, பொதுக் குணத்தில் ஒற்றுமையுடைய இரண்டு பொருள்களுக்கு ஒருகாரணத்தால் வேற்றுமை தோன்றுதலாம். இதனை வடநூலார் உன்மீலிதாலங்காரம் என்பர். (குவல)

**மறைவணி** — அஃதாவது, பொதுக்குணத்தினால் பொருளுக்கு வேற்றுமை தோன்றாமையாம் இதனை வடநூலார் மீலிதாலங்காரமென்பர். (குவல)

**மற்கலிதேவன்** — ஆசிவகமத தேவன்.

**மற்றதற்காக்கலணி** — ஒரு காரியத்தினுல கறி காரணத்தை யொருவனதற்குப் பகையாகிய காரியத்திற்குக் காரணமாக்குதல். (வியாகாதாலங்காரம்) (குவல.)

**மற்றுடைப்பாசி**—சினச் சேனையினையுடைய சினமன்னர் வீரசுவர்க்கத் திடத்துப்போன போக்கைச் சொல்லியது. (பு-வெ)

**மனகதி** — இராவண தூதரில் ஒருவன்.

**மனசவி** — க்ஷமாவர்த்தன் தம்பி, தேவலன் இரண்டாங் குமரனாகிய இருடி.

**மனசுயு** — (சந்) பிரவீரன் குமரன். இவன் குமரன் சாரு.

**மனமுல்லை** — தெளிந்த வாளினையுடைய மன்னன் விரும்பியது கொடுப்பவும் அதனைக் கொள்ளாத வீரனது கனற்சியைச் சொல்லியது. (பு வெ.)

**மனம்** — மநத்வசாமான்ய முடையது. அநுபரிமாணம், ஆத்மசையோகி, உள் இந்திரியம், இன்பமுதலிய சாக்ஷாத்காரத்திற்குக் கரரணம், நித்தம், சங்கியை முதலிய ஐந்து குணமுடையது பரத்வம், அபரத்வம், வேகமுடையது. (தர்ஸ்டன்.)

**மனவாசகம்கடந்தார்** — இவர் திருவதிகையில் இருந்தவர். மெய்கண்ட சந்தானத்தைச் சேர்ந்தவர். இவர் அருளிச்செய்த நூல் உண்மைவிளக்கம். இவர் காலம் சாலிவாகனசகம் (கஉஎஎ.)

**மனுதேவன்** — (சூ.) சுப்பிரதிகன் குமரன்.

**மனுஷர் எழுவர்** — சநகர், சநந்தர், சநாதர், சநத் குமாரர், கபிலர், பஞ்சசிகர், ருஷபர்

**மனுஷன்** — "ஆத்மா மானிடவடிவுகொண்டு தன்னைச் சுற்றிலும் பார்த்தான். அந்த ஆதிவஸ்து தன்னைத் தவிர மற்றொன்றையும் காணவில்லை. அவன் முதலில் நானே நான் என்று சொன்னான். ஆதலால் அவனுடைய பெயர் நான் என்பதாக இருந்தது. அவன் பயமுற்றான் ஆதலாற் றான்மனிதன் தனித்திருக்கையில் பயப்படுகிறான். ஆனால் தான் தன்னைவிட வேறொன்றும் இல்லாதினால நான பயப்படவேண்டியது என்ன என்று ஆலோசித்தான். இவ்விதமாக அவனுடைய பயம் அவனைவிட்டுப் போய் விட்டது. பயமானது மற்றொருவனுக்காதலால் அவன் எதற்காகப் பயப்பட வேண்டும். அவன் ஆனந்தப்படவில்லை. ஆகையால் மனிதன் தனித்திருக்கும் போழ்து ஆனந்தப்படுகிறது இல்லை. மற்றொருவர் இருக்க வேண்டுமென்று கோரினான். உடனே அவன் ஒரு ஆண்பிள்ளையும் ஒரு பெண்பிள்ளையும் ஒருவர்க்கொருவர் தழுவிக் கொண்டு இருக்கும்படியான அவ்விதமாய் விட்டான். தன்னிலிருந்தே தானே இரண்டாகும்படி இதைச் செய்தான். இவ்விதமாக ஒரு புருஷனும் ஒரு மனைவியுமாக ஆனான். ஆகையால் இது அவ்விதமாகப் பிரிந்த சரீரமாக இருந்தது. அது தன்னிலே தானே அபூரணமான பாதி சரீரமாக இருந்தது. அவன் அவளைச் சேர்ந்தான். அதனால் மனுடர் உற்பத்தி ஆயினர். அவள் அவனிடத்தில் இருந்து என்னை உண்டாக்கி இருக்க முறையற்ற விதமாக அவ்ன் என்னை எப்படிச் சேருவான். நான் இப்போது மாறுவேஷம் கொள்வேனென்று அனுமானத்தோடு ஆலோசித்து அவள் ஒரு பசு ஆனாள் அவன் ஒரு இடபகமாகி அவளைப் புணர்ந்தான். கன்றுகள் பிறந்தன. அவள் ஒரு பெட்டைக் குதிரை ஆனாள். அவன் ஒரு ஆண் குதிரை ஆனான். அவள் ஒரு பெட்டைக் கழுதையும் வெள்ளாடும், செம்மறியாடும் ஆனாள். அவன் ஒரு ஆண் கழுதையும் வெள்ளாடும் செம்மறியாட்டுக்கடாவுமாகிப் புணர்ந்தான். இதனால் சகத்துற்பத்தி ஆயிற்று. இது யசுர் வேதத்தில் சொல்லிய முறை. இவ்வேதக் கருத்தே புராணங்களில் முதல்மனு அவன் புத்திரியாகிய சதரூபையுடன் சேர்ந்து பலபுத்திரர்களைப் பெற்றதாகக் கூறப்பட்டிருக்கிறது."

**மனையிலக்கணம்** — மனையைத தச்சுமுழத்தாலளந்து குழியாக்கி அந்தக் குழியை யெட்டிற் பெருக்கி கஉ-ல் கழித்த மிச்சம் ஆதாயம். க-ல் பெருக்கி (கo ல்) கழித்த மிச்சம் செலவு ௬-இல், பெருக்கி ௬00-ல், கழித்தமிச்சம் வயது. அ-எ,-ல் பெருக்கி உஎ-ல் கழித்தமிச்சம் நக்ஷத்திரம். ௩-ல், பெருக்கி அ-ல் கழித்த மிச்சம் யோனி, க-ல் பெருக்கி எ-ல் கழித்தமிச்சம் வாரம், க-ல் பெருக்கி ௬-ல் கழித்தமிச்சம் ஜாதி,

௪-ல், பெருக்கி ௯-ல் கழித்தமிச்சம் திதி, இதில் (௧௫) க்குட்பட்டால் வளர்பிறையாகவும், (௧௫) க்குமேல் தேய்பிறையாகவுங் கொள்க. ௪-ல் பெருக்கி ௫-ல் கழித்தமிச்சம் சூத்திரமாகக்கொள்ளவும். இவற்றுக்கு யோனி. ௧-க்கு கருடன், ௨-க்கு பூனை, ௩-க்கு சிங்கம், ௪-க்கு நாய், ௫-க்கு பாம்பு, ௬-க்கு எலி, ௭-க்கு யானை, ௮-க்கு முசல், எனக்கொள்க. இவற்றுள் பூனை, எலி, முசல் ஆகா. அம்சம் ௧-க்குச் சோரம், ௨-க்கு புத்தி, ௩-க்கு சத்தி, ௪-க்கு தான்யம், ௫-க்கு ராஜ்யம் ௬-க்கு க்லீபம், ௭-க்கு வருத்தம், ௮-க்கு ரோகம், ௯-க்கு சுபம். ௧-௬ ௭-௮ ஆகா. சூத்திரம் ௧-க்கு பாலன், ௨-க்கு குமாரன், ௩-க்கு ராஜன், ௪-க்கு கிழவன், ௫-க்கு மரணம், இவற்றுள் ௪-௫- ஆகா. வீட்டின் அகலத்தை வலத்தில் ஐந்து பங்கு தள்ளி நின்றபங்கில் தெருவாசற் படிவைக்கவும், வலத்தில் ௨-பங்கும், இடத்தில் ௩-பங்கும் தள்ளி நின்ற பங்கு ௪-உள்முற்றமாக்க நன்று. வேதியர்க்குத் தெற்கு வடக்கு நீளமாகிய சந்திரபத்தியாகவும், மற்றவர்க்குக் கிழக்கு மேற்கு நீளமாகிய சூரியபத்தியாகவும் முற்ற மிருக்கவேண்டும். வீடு முதலிய கட்டமனை கோலச் செல்லுகையில் தோஷமில்லாத நாள்கொண்டு செல்லுகையில் சகுனமுதலிய பார்த்துத் தான் வீடுகட்ட கொண்ட இடம் தாழ்வற்றதாய் உயர்ந்த இடமாய்ப் பூமிலக்ஷணங் கூறியபடி வருணத்தார்க் கேற்றதாயிருத்தல் வேண்டும். தென்சார்பாய் வடக்கு நோக்கியவாசல் வேதியர்க்காம். மேற்சார்பாய்க் கீழ்நோக்கிய வாசல் மனை அரசர்க்காம். வடசார்பாய்க் கிழக்குப்பார்த்த வாசல்மனை வைசியர்க்காம். கீழ்ச்சார்பாய் மேற்குப் பார்த்த வாசல்மனை சூத்திருக்காம். தானிருக்கு மனைக்குத் தெற்கு மேற்கில் தன்னின் மூத்தார் தாய் தந்தையர் குருகளுக்கு மனையிருத்தல்நலம். தானிருக்கும் மனைக்குத் தெற்குக் குப்பைகொட்டவும், தென்மேற்கு மூலையில் வைக்கோற் போர்க் கட்டவும், மேற்கில் எருமைத்தொழுவமும், வடமேற்கில் தானியதொம்பையமைக்கவும், வடக்கில் பசுத்தொழுவங் கட்டவும், வடகிழக்கில், அடுக்களை வீடுகட்டவும், கிழக்கில் ஆட்டுக் கொட்டில் கட்டவும், தென்கிழக்கில் பொக்கிஷ வீடியற்றவும், பின்னையும், கிழக்குத் திக்கில் குளிக்கும்இடமும், அக்னி மூலையில் சமைக்குமிடமும், தெற்கில் சயனஸ்தலமும், நிருதிமூலையில் சாஸ்திர முதலிய வைக்குமிடமும், மேற்கில் போஜனஞ் செய்யும் இடமும், வாயு மூலையில் பசுத்தொழுவமும், வடக்கில் தனதான்யவீடும், ஈசான்யத்தில் பூசை வீடுகட்டவும் தனதான்ய முண்டாம்.

மனைகோல ஆகாநாள் - சித்திரை, வைகாசி, ஆடி, ஆவணி, ஐப்பசி, கார்த்திகை, தை, மாசி, நன்றும். ஒழிந்தவை மற்ற நல்ல மங்கலநாட்கள் திதியோக கரணங்கள் அறிந்து வாஸ்து புருஷன் எழுந்திருக்கு நாளறிந்து மனைகோல வேண்டும்.

வீட்டுக்கு லக்னகேந்திர கிரகபலன், பிரகஸ்பதியிருக்கும் லக்னத்தில் ஸ்தம்பபிரதிஷ்டைசெய்து புதனிருக்கிற லக்னத்தில் தூலமேத்திச் சுக்ரனிருக்கிற லக்னத்தில் ஓடு மூடினால் அந்த வீட்டிற்கு அக்னி, சோர, ராஜபயங்களில்லை. ௫-ல், ௬-ல் சந்திரனிருக்கச் சுக்ரவாரத்தில் வீடு கட்டினால் சம்பத்துண்டாம்.

வீதிவாசற்கால் வைக்குமிடம் - கிழக்கு மேற்குவீதியாயின் ஒன்பதில் மூன்றுபங்கு கிழக்கில் தள்ளியும், தெற்கு வடக்கு வீதியாயின் தெற்கில் மூன்று பங்கு தள்ளியும் வாசற்கால் வைக்கவும்.

கதவு நிலைநிறுத்தல் - சித்திரை-வடக்குவாயில் ஐப்பசி-தெற்குவாயில் ஆடி-கிழக்குவாயில் தை-மேற்குவாயில்.

வீட்டுக்கு, அறைகள், கூடங்கள், வாசல்கள் முதலானவை வைத்துக் கட்டுவதற்கு அகல நீளம் அடியளவு 6-அடி நன்மையுண்டு; 7. தரித்திரம் 8. க்ஷேமம், 9. பீடை, 10. பால்பாக்கியம், 11. நன்மை, 12. புத்திரஹானி, 13. வியாதி, 14. சஞ்சலம், 15. துன்பம், 16. செல்வ விருத்தி, 17. எதிரிகள் அஞ்சிநிற்பர், 18. மனைபாழாம், 19. தரித்திரம், 20. இன்பந்தரும், 21. நன்மையுண்டு, 22. தைரிய விருத்தி, 23. தீமை விளையும், 24. மத்திமம், 25. மனையாள் மரணம், 26. சம்பத்துண்டு, 27. மிகுந்த செல்வம், 28. தெய்வகடாட்சம், 29. பால் பாக்கியம், 30. லட்சுமிவாசம், 31. துன்பமேயில்லை, 32. பொருள் சேரும், 33 நன்மையுண்டு, 34. கூடுவிட்டோட்டும், 35. லக்ஷ்மிகடாக்ஷம், 36 வீரலக்ஷ்மிகடாக்ஷம், 44. கண்போம்.

கட்டியிருக்கும் வீடுகளில் குடித்தனம் போகவேண்டுமானால்மேற்கூறிய அடிகணக்கின் சுபாசுபம்தெரிந்து குடிபுகுதல்நலம்.

கிருகவாயில் பொருத்தம் - சனனராசி ரிஷபம், மிதுனம், கடகம், கிழக்கு, வடக்கு, சிங்கம், கன்னி, துலாம், கிழக்கு, தெற்கு. விருச்சிகம், தனுசு, மகரம், தெற்கு, மேற்கு. கும்பம், மீனம், மேஷம், மேற்கு, வடக்கு.

கிருகாரம்ப இராசிப் பொருத்தம் - யஜமான் ராசிக்கு 3, 10, 11, வீடு உத்தமம், 2, 4, 5, 7, 9, வீடு மத்திமம், 1, 6, 8, 12, வீடு அதமம்.

வீட்டுக்கு வாயில் வகுத்தல் - மனையின் நீளத்தை 9 பாகமாக்கி வலது பாகத்தில் 5-பாகமும் இடது பாகத்தில் 3-பாகமும் கழித்து மற்றொரு பாகம் வாயிலாக வகுக்க உத்தமம்.

கிருகப்பிரவேசம் - ஆனி, ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி, பங்குனி மாதங்களும்; ஞாயிறு, செவ்வாய், வியாழமும் அஸ்வனி, மிருகசீரிடம், புனர்பூசம், அஸ்தம், சித்திரை, சுவாதி, மூன்றுத்திரங்கள், அனுஷம், திருவோணந்தவிர மற்றநட்சத்திரங்களும், விருச்சிகம், கும்பமும் இருத்தை ஆகாவாம். அஷ்டம சுத்தமுள்ள லக்கின முத்தமம்.

வீடுகட்டவுதவா மரங்கள்-அத்தி, ஆல், இத்தி, அரசு, இலவு, புரசு, குச்சம், இலந்தை, பீலி, மகிழ், விளா, காற்றடி பட்டமரம், ஆலயத்திலிருக்குமரம், மயானத்திலிருக்குமரம் இவை ஆகா. மனையில் வைக்கத்தகாத மரங்களுக்குக் கிருகத்தில் வைக்கத்தகாத மரம் காண்க.

கதவினிலை - மூடின கதவைத் திறந்து நிலையில் நிற்கவைக்கத்தானே நிற்கில்நலம். நிற்காது தானேவந்து சாத்திக் கொள்ளினும், அதிக இரைச்சலிடினும் உயிர்ச்சேதமுண்டாவதன்றி மனையும் பாழாம். கதவைச் சாத்தினல் சிக்கிச் செக்கோசைபோல் இரைச்சலிட்டு நடக்குமாகில் புத்திரபாக்யமில்லை. மனையாள் மரணமாவாள். மனக்கவலை யுண்டாம். கதவைச் சாத்தில் கரும்பாலைபோல் சத்தமிடில் புத்திர நாசமும் பெண்பழியு முண்டாம்.

"கன்னியரே வாசற்கதவு சிக்கிச் செக்கோசை, மன்னிடிற் புத்திரனுமத்திமமா- முன்னமே, கன்னியரைப்போக்குங் கவலை மிகப் படுத்தும் அன்னமே சொன்னேனறி"

**மனையில் கடைக்கால் சதுனம்**—மனைகோல நடைக்காலெடுக்கையில் நீர் ஊற்றிப் பிள்ளையார் பிடித்து வைத்துப் பூசித்துப் புஷ்பத்தை நீரிலிட வலமாகில் சம்பத்துண்டாம். இடமாகில் பகைமை; வண்டு, புழு, காணில் துன்பமாம், கல்காணில் செல்வமாம்;செங்கல், நிதி, அரணை, நண்டு, பல்லி, தேரை, சிலந்தி, முதலிய பூச்சிகள்காணில் நலம்; ஆமை, பாம்பு, தேள், உடும்பு, பூரம் காணில் மனைபாழாம்; சங்குக்குயோகமாம், வேர்கள் காணின் பொருட்சேதம். (கைலாசநாத சதகம்)

**மனோகரை** — ஒரு தேவமாது. புத்திரர்கள் சிசிரன், பிராணன், ரமணன்.

**மனோசயன்** — இவன் உச்சயனி புரத்தரசன், பாரி சுமுத்திராதேவி, குமாரன் சந்திரகாதன். இவன் கொடுங்கோல் அரசு செலுத்தித் தன்மசெயனல் செயிக்கப்பட்டு ஆரண்யம் அடைந்து பராசமுனிவர் வந்து கூறியபடி நாககிரியில் ஸ்நானஞ் செய்து இராம மந்திரஞ் செபித்து இராமர் தந்த அஸ்திரசஸ்திரங்களைப் பெற்றுப் பகைவரைச் செயித்து நாட்டைக் கைக்கொண்டவன்.

**மனோசவன்** — 1. பிரியவிரதன் பேரன். மேதாதியின் குமரன்.

2. விக்ரமாட்டியின் குமரன். இவன் வேதியர் செல்வங் கவர்ந்தபடியால் பகையரசனல் வெல்லப்பட்டு நாடிழந்து அன்னமிலாது வருந்திப் பராசமுனிவர் சொல்லால் மங்கலதீர்த்த ஸ்நானஞ் செய்து மீண்டும் அரசு பெற்றவன்.

**மனோஞ்ஞை** — சுச்சிரவன் எனும் காந்தருவன் பெண். இவள் மித்திரன் எனும் வேதியனிடம் மயல்கொண்டு அவனை வலிதிற் புணர வேதியன் இவளைப் பேயாகச் சபித்தனன். இவள் பேயாய்த் திரிந்து அசிதமுனிவரால் பேயுருநீங்கிக் காவிரியாடிப் புனிதமடைந்தனள். (காவிரித்தல புராணம்.)

**மனோபவன்** — 1. மன்மதன்.

2. சண்முக சேனவீரன்.

**மனோமயை** — சௌபரிமுனிவர் தேவி.

**மனோரதத்திரிதிகை விரதம்** — சித்திரைமாதத்துச் சுக்கலபக்ஷத் திரிதிகையில் சோமகணேச மூர்த்தியை எண்ணி நோற்கும் விரதம். இவ்விரதங்களை இலக்ஷுமி, சரஸ்வதி, அநசூயை, இந்திராணி, கோற்றுத்தம் புருஷரை அடைந்தனர்.

**மனோரதன்** — விண்டோதன் குமரன். இவன் குமாரன் வீரோதன்.

**மனோரமாதேவி** — சுகநாசனது மனைவி வைசம்பாயனனது தாய்.

**மனோரமை** — 1. இவள் உத்தியான வனத்தில் இருடிகள் கானை உலாவித் தவத்திற்கு இடையூறு விளைத்தமையால் அரக்கனாகிய தந்தையால் பிடிபட்டுச் சவரோசியால் விடுபட்டு அவனை மணந்தவள். இந்தீவராக்ஷனைக் காண்க.

2. மேனைக்கு ஒரு பெயர்.

3. இந்தீவராக்ஷன் பெண்.

4. ஒரு அப்ஸரசு. சரஸ்வதி நதியின் கிளைநதி.

**மனோவதி** — பிரமன் பட்டணம்.

**மனோவனம்** — சடியரசன் நந்தவனம்.

**மனோன்மணி** — 1. இவள் ஆன்மாக்களின் மலங்களை நீக்கிச் சிவானந்தத்தைத் தரும் சிவசத்தி. உன் மனசத்தி யென்பர். பரசிவத்திடம் நீங்காதிருப்பள். இவள் சூர்ய காந்தி, முக்கண், ஒரு கையில் சாமரம், வரதம், அபயம், ஒரு கை தாங்குகை, சந்திர சடாமகுடம், பால் நிறம் உடையவள்.

2. ஒரு பார்ப்பினி, கங்கையாடச் சென்று கணவனை யிழந்து விசய நாராயணபுரமடைந்து சிவபூசை செய்து அத்தலச் சிவகங்கை தீர்த்தத்துள் கணவனைப் பெற்றவள்.

**மன்மதபாணச் செயல்** — உன்மாதம், ரோதனம், சம்மோஹனம், சோஷணம், மாரணம்.

**மன்மதன்** — 1. விஷ்ணுமூர்த்தியின் மனதில் பிறந்தவன்

2. இவன் ஆன்மாக்களுக்குக் காமத்தை விளைத்துப் பிரசாவிருத்தி செய்விப்பவன். இவன் தேவி ரதி. இவனுக்குக் கரும்புவில் வண்டு நாண், அரவிந்தம், அசோகம், மாம்பூ, முல்லை, நீலம், பாணங்கள். மச்சம் கொடி, இலஞ்சி, மாலை, சோலை, படைவீடு, மங்கையர்சேனைகள், கவரி தென்னம்பாளை, மல்லிகை காளாஞ்சி தாழைமடல் வாள், கிளி குதிரை, தென்றல் தேர், இருள் யானை, கடல் முரசம், குயில் எக்காளம், சந்திரன் குடை, இவன் இவற்றைக் கொண்டு உலகத்தவரைத் தனக்குள் அடக்கியிருக்கையில் பிரமாதி தேவர்கள் குமாரக்கடவுள் உற்பத்தியின் பொருட்டுச் சிவபிரான்மீது படையேவ ஏவினர். இவன் பயந்து தேவரின்சாபத்திற்கு அஞ்சி உமது சாபத்தால் கெடுதலினும் சிவகோபத்திற்குள்ளாயின் மீட்சியுண்டாமென எண்ணிச் சிவமூர்த்தி யோகத்திருக்கையில் சென்று தனது அம்பினைத் தூண்டினன். சிவமூர்த்தி கண்விழித்துப் பார்க்கவும் இவன் சாம்பராயினன். இதனையறிந்த இரதி, சிவமூர்த்தியைப் பணிந்து புருஷ பிக்ஷை கேட்கச் சிவமூர்த்தி கருணைகூர்ந்து இரதியைநோக்கி இவன் உனக்கு மாத்திரம் உருவத்துடனும் மற்ற தேவராதியர்க்கு அருவமாயிருக்க என அனுக்கிரகித்தனர். அதனால் இவனுக்கு அநங்கன் எனப்பெயர்.

3. இவன் கிருஷ்ணாவதாரத்தில் பிரத்தியும்நனாகப் பிறந்தனன். பிரத்தியும்நனைக் காண்க. இவன் தம்பி சாமன்.

4. இவன் மன்மதனாகப் பிறக்குமுன் பிறப்பில் ஒரு அரசன் தன்மனைவியுடன் வேட்டைக்குச் சென்று ஆண்டு ஒரு இருடி வளர்த்த மானைக் கொன்று அவரால் சாம்பராகச் சாபம்பெற்றவன். (பூவாளூர் புராணம்) அசித்தனைக் காண்க.

5. நெற்றி விழியாலிறத்தற்குக் காரணம் பிரமனைக் காண்க.

7. கட்டியங்காரனுக்கு மைத்துனனாகிய மதனன் தம்பி.

**மன்மதன் கணை** — (இ) வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம் இவை முறையே உன்மத்தம், மதனம், சம்போகம், சந்தாபம், வசிகாணம், எனவும் பெயர் பெறும். இவற்றின் அவத்தைகளாவன: சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம். அவை: சுப்பிரயோகம் சொல்லும் நினைவும், விப்பிரயோகம்வெய்துயிர்த்திரங்கல், சோகம் வெதுப்பும் துய்ப்பன தெவிட்டலும், மோகம் அழுங்கலும், மொழிபல பிதற்றலும், மரணம் அயர்ப்பும் மரணமும் தருவன.

**மன்மதன்விழா** — இதனுடைய காலவரையறைஎழுதினம், பெரியநகரங்களில் நடைபெறுவதுண்டு. உத்தமனான தலைமகனை மணஞ் செய்துகொள்ள எண்ணிய கன்னியர்கள் இவ்விழா நாட்களில் தத்தமக்கியன்ற தானங்களையும், தருமங்களையும், செய்வார்கள். மன்மதனுடைய ஆலயத்தில் சென்று அவர்கள் வழிபடுவதுமுண்டு. இராசகிரிய நகரத்தில் இவ்விழா நடந்தபொழுது வழிபாடு செய்தற்குக் காமன்தோட்டத்தை யடைந்த பதுமாபதி அங்கே உதயணனைக் கண்டு விருப்புறுவாளாயினள். (பெ-கதை)

**மன்யு** — ஏகாதசருத்ரருள் ஒருவன். தேவி புத்தி.

2. வீரவிரதனுக்குப் பொஷையிடம் உதித்த குமரன். தேவி சத்தியை. குமரன் பவநன்.

3. வித்தன் குமரன், பிரகவுத்ரன்.

4. தேவர்கள் சௌண்ட புருஷ பிராப்தியின் பொருட்டுச் சிவபிரானை வேண்ட இவர் மன்யு என்பவனைத் தந்து அசுரவதை செய்வித்தனர். (பிரம-புரா.)

**மன்வந்தரம்** — திவ்யவருடம் ஐயாயிரத்திருநூற்று நாற்பத்திரண்டும், பத்துமாதம், எட்டுநாள், நான்குசாமம், இரண்டு முகூர்த்தம்; காலேயரைக்காலே காணியரைக்காணி நாழிகை, இவ்வளவுகாலம் கொண்ட எழுபத்தொரு சதுர்யுகம்கொண்ட இந்தக் கால அளவு ஒருமனு அரசாள்வான். மற்ற மனுக்களின் சரிதங்களை அவர்கள் பெயரிற் காண்க. சுவரோசிஷ மன்வந்தரத்தில் விபஸ்சித்து என்னும் தேவபதியும் உத்தம மன்வந்தரத்தில் சுசாந்தன் எனும் அமரபதியும், தாமச மன்வந்தரத்தில் சிபியென்னும் இந்திரனும் ரைவத மன்வந்தரத்தில் வாசவனும், சாக்ஷுசமன்வந்தரத்தில் மனோசவசன் என்னும் தேவபதியும் வைவச்சுத மன்வந்தரத்தில் புரந்தரன் எனும் பிருந்தாரகேந்திரனும், சூர்யாதி தேவர்களையும் வசிட்டாதி இருடிகளையும் நடத்துவர் என்பர். (பாகவதம்.) முதல் மன்வந்தரம் சுவாயம்பு மனு — புத்ரர் பிரிய விரதன், உத்தானபாதன் குடிகள் — யமாள் என்கிற தேவர்கள். இருடிகள் - மரீசி, அத்திரி, ஆங்கிரசர், கிருது, புலத்தியர், வசிட்டர். அரியின் அவதாரம் - யஞ்ஞமூர்த்தி, அல்லது சசிகேசன். இவர் ஆகுதியிடத்துப் பிறந்தவர். இவரே இந்திரனாக இருந்தனர். இரண்டாவது மன்வந்தரம் - சுவாரோ சிஷமனு - இவன் அக்னிபுத்ரன் எனவும், சப்தாரசசி குமரன் எனவுங் கூறுவர். புத்ரர் - சயித்திரதன், கிம்புருடன், ஹரிக்னன், சுக்ருதி, சோதிர்யன், மூர்த்திரயன், ஸ்மயன். குடிகள் - துஷிதாள், பாராவதர், இருடிகள் - அக்னீத்ரர், அக்கினிவாகர், மேதாதி, வசு, சோதிஷ்மான், துதிமான், அவ்யர், சுவனர், சுபுரு, மூர்ச்சகி, தம்பன், பிராணன், தாந்தன், பிரிடிதன், திமிரன். அரியின் அவதாரம் - ரிபு. அல்லது துடிதன். இந்திரன் - ரோசகன் (விவசித்). மூன்றுமன்வந்தரம் - உத்தம மனு - இவன் பிரிய விரத புத்ரன். குடிகள் - வேதசருதர், பத்திரர், சுதாமர், சத்தியர், சிவர், பிரமார்த்தனர், வசவர்த்தி. இருடிகள் - சுதபன், சவநன், மகன், சுக்ரன், பிரமதன் அரியினவதாரம் - சத்திய சேனையிடம் உதித்த சத்தியநேசர். இந்திரன் - சத்யசித் அல்லது (சுசாந்தி.) நான்காமன்வந்தரம் - மனு - தாமசமனு - இவன் உத்தமனுக்குப் பிராதா. இவன் அகத்தியரால் யானையாகச் சபிக்கப்பட்டான். புத்ரர் - துதி, போதன், சௌதபசியன், தபசுலன், தாபன், தபோவதி, கல்மாஷன், தன்வி, தங்விகுலன். குடிகள்-வைத்ருதர், சத்தியர், சுரர், மருவியர், சுதையர், சோமபர். இருடிகள் - சோத்திரதாதா, பிருது, காவியன், சயித்திரன், இதன், தனிகன், பீவரன். அரியினவதாரம் - ஸ்ரீ அரி. இந்திரன் - திரிசிகன். (சவி.) ஐந்தாமன்வந்தரம் - மனு - ரைவதமனு - இவன்தாமசனென்னும் மனுவின் சகோதரன். இவன் குமரி, ரேவதி, பலராமர் தேவி. குடிகள் - பூதாயர், அமிர்தர், உபாகசிரதர், வைகுந்தர், சமேதர், சம்பூதர். இருடிகள் - இரண்யரோமா, வேதசிரசு, ஊர்த்தபாகு, தேவார்த்தி, தேவவாகு, சுதாமன், பர்ச்சனி. அரியினவதாரம் - சம்பூதர், இவர் சம்பூதி வயிற்றுதித்தவர் இந்திரன் - விபு அல்லது சுகன். ஆறுமன்வந்தரம் - மனு - சாக்ஷுஷமனு. இவன் சக்ஷுவின் புத்ரன், இவனுக்கு விஷ்ணுபுத்திரராகப் பிறந்து கடல் கடைந்தனர். குடிகள் ஆப்பியாள், ஆர்த்தியர் பிரபாசர், பவியர், பிரதானர், மானுபாவர், பிரசூதர், விலேக்ஷியர், ரிபுக்கள், லேகர். இருடிகள் - அவிஷ்மான், விரகன், துட்டிதர், சுமேதர், விரிசன், நவிட்மான், உத்தமன், மதுவத்ரி, சயிட்ணு, கிருகு, நகர், விசுவர், சுதர்மா, விரசசு, அசகிஷ்ணு, ஆங்கீரஸ புத்திரராகிய நத்வலேயர். அரியினவதாரம் - அஜிதர் அல்லது வைகுண்டர், விகுண்டையினிடத் துதித்தவர். இந்திரன் - மந்த்ரத்துருமன் அல்லது மனோசவன். ஏழாம்மன்வந்தரம் - மனு - வைவச்சுத மனு, இவன் விவச்வான் குமரன்; இவனுக்குச் சிரார்த்த தேவன் எனவும் பெயர். குடிகள் - ஆதித்யர், வசுக்கள், விசுவதேவர், உருத்திரர், மருத்துவர், மகாராஜிகர், சாத்யர். இருடிகள் - காச்யபர், அத்ரி, வசிட்டர், விச்வாமி

த்ரர், கௌதமர், ஜமதக்னி, பாரத்வாசர். அரியினவதாரம் - வாமனர், அதிதியிடம் உதித்தவர். இந்திரன் - புரந்தரன். எட்டாமன்வந்தரம் - மனு - சூர்யசாவர்ணி மனு, இவர் புத்ரர் நிர்மோகன், விரசன். குடிகள் - சுதபர், விரசர், அமிர்தபிரபர், முக்யர், சாத்யர். இருடிகள் - வியாசர் பரசிராமர், அசுவத்தாமா, கிருபாச்சாரி, இருச்யசிருங்கர், சேர்த்திமான், காவலன், கார்க்கியர், பிருது, அக்னி, ஜன்மியர், தாதா, கபீனகர், கபீவான், அரியினவதாரம் - சர்வபூமன். இந்திரன் - மாபலி. ஒன்பதாமன்வந்தரம் - மனு - ரைப்பியன், (தக்ஷசாவர்ணிமனு) இவன் குமார் திருதிகேது தீப்தகேது, அவ்யயன், அவ்யகதன், சத்யதர்சி, நிருச்சவன், அரண்யன், பிரகாசன், நிருத்துரோகன், சத்தியவாக்கு, பிருதி. குடிகள் - பார், மரீசி, கெற்கர், சுமதர். இருடிகள் - துதிமான், சவனன், அவ்யயன், வசு, மேதாதிதி, சோதிஷ்மான், சத்தியன். அரியினவதாரம் - இருஷபன். இந்திரன் - சுரதன் அல்லது அற்புதன். பத்தாமன் வந்தரம் - மனு - பிரமசாவர்ணி, (இவன் உபசுலோகன் குமான்) இவன் குமார் பூரி, சுஷேணன். குடிகள் - சுத்திராமர், விபுத்திரர், சுகர், விருத்தர். இருடிகள் - அவிஷ்மான், சுகிர்தி, சத்தி, ஆபோமூர்த்தி, நாபாகன், பிரதி, மோசன், சத்யகேது, ஹவி, மத்பிரபு. அரியினவதாரம் - விஷபவச்சேனர். இந்திரன் - சம்பு அல்லது சாந்தி. பதினோராமன் வந்தரம் - மனு - தர்மசாவர்ணி, குடிகள் - விகங்கமர், காமாள், நிர்வாணருசிகள். இருடிகள் - சுருதர், நிச்சரர், அக்னிதேஜஸ், வபுஷ்மோன், விஷ்ணி, ஆருணி, அவிட்மான், அநகன். அரியினவதாரம் - தர்மகேது. இந்திரன் - வைதிருதி அல்லது விருடன். பன்னிரண்டாமன் வந்தரம் - மனு - ருத்ரசாவர்ணி, அல்லது பத்திரசாவர்ணி, இவர் புத்ரர், தேவவசு, தேவதேவன் குடிகள் அரிதர், உரோகிதர், தமோனிசர், சுகன்மர், சுராபர். இருடிகள் - தபோமூர்த்தி, தபதி, ஆக்னியித்ரர், சுதபன், திதி, தபோத்திருதி, தபதானன். அரியினவதாரம் - சுதர்மர். இந்திரன் - ருதுமான். பதின்மூன்றாமன்வந்தரம் - மனு - தேவசாவர்ணிமனு - அலலது உரோச்சியமனு. இவன் ருசிப்பிரசாபதியின் குமான், இவன் குமார், சித்ரசேனன், விசித்திரன். குடிகள் - சுகர்மர், சுந்திரமர், சுத்திரர், சுதர்மர், சௌஞ்ஞர். இருடிகள் - நிர்மோகன், தத்வதர்சி, பிரமகம்பன், நிருச்சுகன், திதிமான், அவ்வேயன், சுரதன். விஷ்ணுவினவதாரம் - யோகேச்வரர். இந்திரன் - திவஸ்பதி. பதினன்கா மன்வந்தரம் - மனு - இந்திரசாவர்ணி, அல்லது (பௌமியன்) இவன் புத்ரர் சம்பீரன், சுவாது. குடிகள் - பவித்திரர், சாக்ஷுசர், கனிட்டர், பிராசிரவர், விருத்தர். இருடிகள் - அக்னிபாகு, சுசி, சுக்கிரன், மாகதன், சீர்த்தி, ஆக்னீத்ரன், உத்தன், அசிதன். விஷ்ணுவினம்சம் - பிருகத்பானு. இந்திரன் - சுசி.

**மன்றுளாடியபிள்ளை** — இவர் ஓர் தமிழ்க் கவிஞர். குடும்பத்தைச் சிறுவிலை காலத்துக் காத்தமையின் அக்கவிஞர் இவரை நோக்கி "ஏகாதசியுஞ் சிவராத்திரியு மென்னில்லை விட்டுப், போகாதிருக்கின்ற நாளினிலே யென் புதல்வர்வற்ற, லாகா மற்றங்கையென் பாகாமல் யானுமகத்தவளுஞ், சாகாமற்காக்க வல்லான் மன்றுளாடுந் தயாநிதியே." என்று புகழ்ந்தனர்.

**மன்றைத் திருவிருந்தான்** — இவன் ஸ்ரீரங்கத்திற்கு வடக்கே இருந்த மன்றச்ச நல்லூராண்ட சிற்றரசன். இது இப்போது மணச்சநல்லூர் எனப்படுகிறது.

**மன்னமார்த்தண்டன்** — ஒரு அரசன். இவன் சிவனடியவர்க்கு வேண்டிய பொருள் அளித்து வருங் காலையில் பஞ்சம் வர அதனால் சிவமூர்த்தியை வேண்டிப் பொற்கிழி பெற்றுப் பஞ்சம் போக்கியவன்.

**மன்னவன் தொழில்** — ஓதல், வேட்டல், ஈதல், காத்தல், தண்டஞ் செய்தல். முற்கூறிய மூன்றும் பொதுவும் பிற்கூறிய இரண்டும் சிறப்புமாம். வேள்வி, இராஜசூயமும், துரங்கவேள்வியுமாம். ஆவும், கனகமும், அன்னமும், மனையும், தண்ணடையும், கன்னியரும் பூமியுங்கொடுத்தல் அவர்க்குரிய ஈதலாம். நாற்படையானும் கொடையானும் அகத்தின் வழாமற்காத்தல் அவர்க்குரிய காத்தலாம். தன்னாற் காக்கப்படும் உயிர்களுக்கு ஏதம் செய்யும் மக்களையாயினும் விலங்குகளையேனும் பகைவரையேனும், அறஞ்செய்யா அரசையேனும், விதிவழி தண்டித்தல் அவர்க்குரிய தண்டமாம். இவ்வாறு செய்தல் அரசர்க்கு அறம் பொருளின்பம் பயக்கும். பின்னரும் களவுசெய்தோர் கையினின்று

பொருள் கோடலும், ஆறிலொன்று கோடலும், சுங்கம் கோடலும், அந்தணர்க்கு இறையிலி கொடுக்குங்கால் இத்துணைப் பொருள் நம்மிடத்து நான் கொள்வல் எனக்கூறிக் கொண்டு கோடலும், மறம் பொருளாகப் பகைவர் நாடு கோடலும், தமரும் அந்தணரும் இல்வழிப் பிறன்ருயங் கோடலும், பொருளில் வழி வாணிகஞ் செய்துகோடலும், அறத்திற்றிரிந்தாரைத் தண்டத்திற்கு மாறுபொருள் கோடலும் பிறவுமாம்.

**மன்னனூர்** — வீரநாராயண புரத்துப் பெருமாள்.

**மன்னுதசுவாமி** — இவர் பர்வதராச புத்திரியாகிய பச்சை மலையம்மனை மணக்க அருசவுருவுடன் எழுந்தருளிய சிவாவசரம். இவரை மன்னூர் சுவாமி என்பர்.

**மன்னைக்காஞ்சி** — அகன்ற பூமியினுள்ளார் மயங்கவீர சுவர்க்கத்தே சென்றவன் பண்பினைப் புகழ்ந்து நொந்து வருந்தியது. (பு. வெ.)

## மா

**மா** — இது இந்தியாவிலுள்ள மரங்களில் இந்துக்களால் சுபாசுபவைதிக காரியங்களில் கொண்டாடப்பட்ட விருக்ஷம். இதன் பிஞ்சு காய்கள் புளிப்புள்ளவை ஆதலால் இவற்றை உப்பிலிட்டு பல நாட்களுக்கு உணவிற்குபகரணமாகக் கொள்வர். இதன் பழம் மிக்க இனிமையுடையது. இது இனிமையால் பலவகைப் பெயர்கள பெறும்.

**மாகடதானம்** — ஒரு சாணிற்குக் குறையாது அதிகம் நூறு சாணுய் ஒரு பொற்குடஞ் செய்வித்து வயிரத்தால் அலங்கரித்து நெய், பால், குடத்தில் விட்டு ஒரு கற்பகத்தரு செய்தமைத்து அடியில் திரிமூர்த்திகள், கணபதி, வேதம், புராணம், இவர்களை எழுந்தருளச் செய்து கும்பத்தைச்சூழத் தானியாதிகள் பரப்பித்தான் சுசிர்பூதனுய் கும்பத்தை வலம்வந்து வேதியர்க்குக் கடத்தைத் தானஞ் செய்வதாம்.

**மாகதநுஷி** — வசிட்டன் மரபில் உதித்தவர். இவரை விபுதை யென்னும் அசுரப் பெண் அசுரராசன் சொற்படி மயக்கிப் புணர்ந்து கயமுகாசுரனைப் பெற்றனள். விபுதையையும் கயமுகாசுரனையுங் காண்க. பதினுன்கா மன்வந்தரத்து ருஷியென்ப.

**மாகதர்** — 1. ஒருவகை அரச சாதியர்.

2. இருந்தேத்துவார்.

**மாகதன்** — க்ஷத்திரியப பெண் வைசியனைக் கூடிப்பெற்ற பிள்ளை. இவனுக்குச் சிலகன் எனவும் பெயர். கடலிலும் கரையிலும் வர்த்தகஞ் செய்வது தொழில். (மறு)

**மாகதி** — 1. மகததேசத்துப் பாஷை. இது பிராக்ருத பாஷை.

2. சோணநதிக் கொருபெயர்.

**மாகந்தன்** — ஒரு வேதியன். தந்தை தேடிய பொருள்களைத் தீயவழியிற் செலவிட்டு நண்பன் தேவியைப் புணர்ந்து செல்வம் கெட்டதால் இழிந்தவனிடம் தானம் வாங்கினன். ஆதலால் வேதியர் இவனை ஊரைவிட்டுத் துரத்த மனைவி மக்களுடன் ஒரு காட்டின் வழிச் செல்லுகையில் கள்ளர் இவனிடமிருந்த பொருள்களைப் பறித்துக் கொண்டு மனைவி மக்களையும் இவனையும் கொன்றனர். இவன் சாகுந் தருணத்தில் காசியை நினைத்ததால் இவன் தாழ்ந்த தேசத்தில் சேவலாகவும், மனைவி பெட்டையாகவும், குமரர் குஞ்சுகளாகவும் பிறந்து காசிக்குக் காவடி கொண்டு செல்வாருடன் சென்று முத்திமண்டபத்தில் இறந்து முத்தி பெற்றவன். இம்மண்டபம் குக்கிட மண்டபம் எனப்படும். (காசி காண்டம்.)

**மாகந்தி** — 1. தக்ஷிண பாஞ்சாலத்து இராஜதானி.

2. கங்காதீரத்திலுள்ள துருபதன் நகரம் (பா. உத்தி.)

**மாகலூர்க்கிழான்** — புறப்பொருள் வெண்பாமாலைக்கு உரையியற்றிய உரையாசிரியர். இவர்க்குச் சாமுண்டி தேவநாயனுர் எனவும் பெயர்.

**மாகவிதன்** — ஒரு பாண்டியன். இவன் சிவப்பிரசாதத்தால் முத்தியடைந்தான்.

**மாகன்** — இவன் தத்தன் மகன். சமஸ்கிருத மாக காவியஞ்செய்த கவி.

**மாகாயன்** — சூரபன்மன் படைவீரன்.

**மாகாலன்** — ஒரு சிவகணத்தவன்.

**மாகாளர்** — 1. அரிகாப் புத்திரர்க்குச் சேநாபதி.

2. சிவகணத்தவருள் ஒருவர்.

3. இவர் சம்பூரில் இருந்த வீரசைவ அடியவர். இவர் தம் சிரத்தையரிந்து சிவசன்னிதானத்து வைத்து அதை மீண்டும் தரித்துக்கொள்ள இதைக் கண்ட கோவிந்த பட்டராகர் தம் தலையை அரிந்து அரனிட மளித்து வேறு தலைபெற்றனர். இதைக் கண்ட வங்கையர் இவர்

செய்ததும் தகாதெனத் தம் தலையை அரிந்து சந்நதியிலிட்டு வேறு தலை வர அதனையும் அரிய மீண்டும் வேறு வேறு தலைகள் வந்துகொண்டிருக்க அரியச் சலிக்காதவரா யிருக்கச் சிவமூர்த்தி நாமே தோற்றனம் என்று அவர் கையைப் பிடித்து அருள் செய்தனர்.

**மாகிட்டியான்** — வைசியப் பெண்ணிடம்அரசனால் உதித்தவன்.

**மாகிஷம்** — ஒருதேசம் (Mysore).

**மாகிஷ்மதி** — 1. நருமதை தீரத்தில் உளள பட்டணம். ஒரு காலத்து அக்னி இப்பட்டணத்தில் அயலான் தாரத்தைக் கூடச் சென்று அகப்பட்டு அரசனுக்குத் தன்னுருக் காட்டி அரசனை ஆசிர்வதித்துத் தப்பினன். நரகாசுரன் பட்டணம். கேகயராசாக்களின் அரசு.

**மாகுத்தன்** — கழுகாசலத்தில் கழுகுருவாய்த் தவஞ்செய்த இருடி.

2. கார்த்திவீரியன் பட்டணம் (பா.சபா.) Makeshwara on the right bank of the Narbada 40 miles South of Indore.

**மாகேயர்** — முல்டானுவென்று வழங்கும் தேசத்து வேளாளர்.

**மாக்காயனர்** — கணிமேதாவியருக்கும், காரியாசனுக்கும் ஆசிரியர்.

**மாங்கல்ய சூத்ரம்**—மங்கல சூத்திரம்காண்க.

**மாங்காடு** — குடமலைப் பக்கத்துள்ளதோர் ஊர். (சிலப்பதிகாரம்.)

**மாங்குடிகிழார்** — 1. ஒரு தமிழ்ப்புலவர். இவராற் பாடப்பட்டவர் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். வாட்டாற்று எழினியாதன். (புற நா).

2. இவரே மாங்குடிமருதனாரெனப் படுவார் இவர் மதுரைக்காஞ்சி பாடினமையிற் காஞ்சி புலவனெனவும் கூறப்படுவர்.

**மாங்குடி மணியசிவனார்** — ஒரு சைவர்.

**மாங்குடி மருதனார்** — கடைச்சங்கப் புலவருள் ஒருவர். மதுரைக் காஞ்சி பாடியவர். இவர் ஊர் சோழநாட்டு மாங்குடியா யிருக்கலாம். அகம், (புறம்) நற்றிணை முதலியவற்றுள்ளும் சிலபாடியவர். தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனால் உய்விக்கப்பட்டவர்.

**மாசதிசை யென்னும் கோசாரபலன்** — ஜன்ம நட்சத்திரமாவது; நாமநட்சத்திரமாவது; அந்தநட்சத்திர முதற்கொண்டு மாசப்பிரவேச நட்சத்திரம் வரைக்கும் எண்ணிய கணக்கை எழில் பெருக்கி ஒன்பதில் கழித்து மிருந்த கணக்கு - க ஆனால் சூரியதிசை. உ-புததிசை. ௩-ராகுதிசை. ௪ - குருதிசை ரு - கேதுதிசை. ௬-சந்திரதிசை. எ - சனிதிசை. அ - சுக்கிரதிசை. ௯-குஜதிசை யென்று தெரிந்து கொள்ள வேண்டியது. சூரியதிசை நாள் க - க்கு அலைச்சல். சிரோரோகம். விரோதம். புததிசை நாள் ௪ - க்குப் பந்துலாபம். சவுக்கியம். உற்சவதரிசனம். ராகுதிசை நாள் ௪-க்கு நீச்சசினேகம். வித்வைசங்கமம், விரோதம் குருதிசைநாள் ௪ - க்கு போஜனசவுக்கியம். தானியலாபம். வாகனலாபம். கேதுதிசைநாள் ஒன்றே முக்காலுக்குச் சரீரசாட்டியம். அல்பஸ்திரிசங்கமம். சந்திரதிசைநாள் உ - க்குப் பூர்ணசந்திரனால் திரவியலாபம். க்ஷீணசந்திரனால் திரவியநஷ்டம். சனிதிசை நாள் நாலே முக்காலுக்கு ஸ்திரிவிரோதம். காயம். சண்டை சுக்கிரதிசை நாள் ரு க்கு இரத்தினலாபம். குஜதிசைநாள் ஒன்றே முக்காலுக்கு அல்பபோஜனம் கலகம். இந்தத் திசைகள் கோசாரத்தை அனுசரித்துப் பார்த்துக் கொள்ளவும்.

**மாசாத்தன்** — 1. அரிகரப் புத்திரன்.

2. திருக்கைலாச ஞானவுலாவைத் திருக்கைலையில் கேட்டுவந்து திருப்பிடவூரில் வெளிப்படுத்தியவர்.

**மாசாத்துவான்**—கோவலன் தந்தை; இவன் கோவலன் இறந்தமை கேட்டுத் தன் பொருளைத் தானமுதலிய செய்து துறவு பூண்டவன். இவனுக்கு மாசாத்து வாணிபன் எனவும் பெயர். மணிமேகலையை அறவணவடிகளைத் தரிசிக்கத் தூண்டியவன். (மணிமேகலை)

**மாசேநன்** — இவன் வாமதேவன் மாணாக்கன். இவன் ஆசிரியன் சொற்கேளாது பல தீமைகளைப் புரிந்து நல்லொழுக்கமும் தெய்வ பக்தியுமுள்ள காசியரசன் மீது மூன்று முறை படையெடுத்துத் தோல்வி யடைந்து ஆசிரியரை நோக்கி என் பெரும்படை அவன் சிறுபடைமுன் தோற்றதென்ன? என அவன் தெய்வபக்தியுள்ளவன் அது உனக்கு இல்லையெனக்கூறக் கேட்டு அதை மதியாது மீண்டும் பெரும்படையுடன் சண்டையிட்டுத் தோற்று ஆசிரியர் கூறியது. உண்மையென மதித்துக் காசியடைந்து தீர்த்தமாடி முத்திபெற்றவன். (காசி ரகசியம்.)

**மாச்சாத்து வாணிப மகருஷி கோத்ரன்** — கோவலன் வம்சத்திற்கு ஆதி புருஷன், இவன் வைசியன்.

**மாச்சிதேவர்**—ஒரு வீரசைவ அடியவா. வசவர் காலத்தவர்.

**மாடக்குளக் கீழ்மதுரை** — மாடக்குளமென்பது மதுரைக்கு மேற்கேயுள்ளதோரிடம்; இது ஒரு தாலூக்காவாகவும் இருந்தது. அவ்விடத்தில் ஒரு குளமுண்டு. "மாடக்குளம் பெருகினுல் மதுரை பாழ்" என்ற பழமொழி வழங்குகின்றது. (திருவிளை.)

**மாடலனூர்** — யாப்பருங்கல விருத்தியுள் எடுத்துக் கூறப்பட்ட தொல்வாசிரியருள் ஒருவர்.

**மாடலன்** — தலைச்செங்கானத்துள்ள ஓரந்தணன். கோவலன் மதுரையிற் கொலையுண்டது முதலியவற்றைக் காவிரிப்பூம்பட்டினத்தாருக்குச் சொல்லித் தன் சொல்லால் சிலர் இறந்தமை தெரிந்து அப்பாவம் நீங்கக் கங்கையாடி மீண்டு செங்குட்டுவனைக் கண்டு அளவளாவி அவனை யாகஞ் செய்யத் தூண்டியவன். (சிலப்பதிகாரம்.)

**மாடலூர்கிழார்** — (வேளாளர்) கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர்; இவரதூர் மாடலூர்; இன்ன இடமென்று விளங்கவில்லை. இவர் வேளான் குடியினர். (குறு - கருo.)

**மாடன்** — தலைமாத்திரம் மாட்டின் உருக்கொண்ட ஓர் க்ஷுத்ரதேவதை. பஞ்சபூதங்களில் ஒன்று

**மாடான்** — சூரியனுக்குச் சமீபத்திலிருக்கும் தேவதை. (பா-சாங்.)

**மாட்டிலக்கணம்**—புஷ்டியாய்ச் சுபலக்ஷணமுள்ள எருதை க்ருகஸ்தன் கொள்ளுதல் தகுதி. அவ்வகைக் கொள்ளப்போம் எருதை முதலில் பார்க்கும் பொழுது அது வலக்காலைத் தூக்கித் தன் தலையைச் சொரிந்துகொள்ளக் கண்டால் அது சத்தியஞ்செய்து கொடுத்ததாகும். அகத்யம் அதை வாங்கவேண்டும். பசுவானுல் நீரும் எருதானுல் சாணமுமிடக் கண்டால் நலம். நெற்றியில் சுழிமேல் சுழியிருந்தால் அது கொடை மேற்கொடை ஆகாது. வாங்கில் இடிமேல் இடிவரும். இரண்டு காதின்கீழும் இரண்டுசுழிகள் எதிரெதிர் இருந்தால் கொள்க, ஒருகாதின் கீழ்மாத்திரம் சுழியிருந்தாலது பூரான் கவ்வலென்பார் ஆகாது. முன் முழங்காலிரண்டின் கீழ் இரண்டு சுழிகளிருந்தால் அது விலங்குவைச்சுழி அதைக்கொள்பவன் காலுக்கு விலங்குவிழும். நடுமுதுகந் தண்டில் நீளமாக ஒருகோடும் அந்தக் கோட்டின் இரண்டு பக்கத்திலும் இரண்டு சுழிகளுமிருந்தாலது தாமணிச்சுழி-இது மாடுகள் அதிகமாகச் சேர்க்கும். இந்தக் கோட்டின் வலப்புறத்தில் மாத்திரம் ஒருசுழியிருந்தாலது பாடைச்சுழி. இதுகொண்டவனை உடனே பாடையேறச் செய்யும். இடதுபக்கமொருசுழியிருந்தாலது விரிசுழி நல்லது. வாலில் சுழியிருந்தால் நாகம் அது ஆகாது. மாப்பல் மாடு பலஈனம். குதிரைப் பல் மாடு உரம். பில்லைமாடும். மயிரழுத்தமுள்ளமாடும், நல்லது. எறுவால், வெட்டுக்குளம்புமாடுமாகா. இடிக்கிறது, உதைகாலி, மிரக்ஷி, படுக்காங்கொளியுமாகா. கடைக்கண் புள்ளிமாடு கவடு. வெள்ளை மாடு தோல் இளப்பம். கறுப்புமாடு கால்வாசிபலம். செவலிநிறம் நல்லது. பில்லைநிறம் சிலாக்யம். வயிற்றில் மறு ஒருபுள்ளியாவது இருப்பது நல்லது. உடம்பெல்லாம் புள்ளியா யிருந்தாலாகாது. கலங்கானது பக்கங்களிலிருக்கும் மாடு மழையில் நனைந்தால் உடம்பெல்லாம் பொங்கி ரணமாகும் மயிருதிரும். மறுபடியும் ரணமாறி மயிர் முளைக்கும் இது பலவீனமுள்ள எருதாம். வாய், இரண்டுகண்கள், குய்யம், முலை, வால், கறுப்பும், மற்றையுறுப்புக்கள் துவரைநிறம் உள்ளது காராம்பசு. இதை வீட்டிற்கட்டினுல் குடிநசிக்கும் இதனைக் காட்டில் கட்டவேண்டும். இதன்பாலை தேவதாவிஷயத்தில் உபயோகிக்கவேண்டியது. வயது — நடுப்பல் தாழ்ந்திருந்தால் பாதிவயது. இவற்றின் வயதுகளைப் பல்லைப்பார்த்தும் கொம்பின் கணுவிடுதலைப் பார்த்தும் நிதானித்தல்வேண்டும். "நல்லெருமை நாகு, நற்பசுசேவு" ஈனல் நலம். வெள்ளிக்கிழமை எருமைகன்று போடுதல் நலம். வியாழக்கிழமை பசுகன்றீனின் பசுவிர்த்தியாகாது.

**மாணகன்** — இஃது உதயணன் சில நிமித்தம் பற்றித் தன்னைப் பிறர் அறிந்துகொள்ளாதபடி இராசகிரியித்திலிருந்த பொழுது கொண்ட வேறு பெயர். (பெ. கதை.)

**மாணுக்கரிலக்கணம்** — ஆசிரியரிடம் நியமந்தவறாதுசென்று வழிபாடு செய்தலில் மனஞ் சலியாது, ஆசிரியனது குணத்தொடு பழகி, வரலாமென்னுங் கருத்தி

ருப்பதறிந்து அணுங், உட்காரென்று ஆசிரியன் கூறவுட்கார்ந்து பாடஞ்சொல்லெனச் சொல்லிப் பசியுடையோன் அன்னத்தை யுண்பதுபோல் பாடத்தை மனதிற்கொண்டு, பிரதிமைபோல் அமைதியுடையவனாய், செவியே, வாயாகவும், மனமே வயிறாகவும், கேட்டபொருள்களை விடாது மனதில்வைத்துப் போவெனக் கூற ஆசிரியனை நீங்குவோன் மாணாக்கனாம். இந்த மாணாக்கர் முதல் மாணாக்கர், இடை மாணாக்கர், கடை மாணாக்கர் என முத்திறப்படுவர். அவர்களில் முதன்மாணாக்கர் பாலினின்றும் நீரைப்பிரித்துண்ணும் அன்னத்தையும், மேய்ந்ததையெடுத்து அசைபோடும் பசுவைப்போலவும் நல்லதைக் கொண்டு மற்றவைகளை நீக்கியும், பாடங்கேட்டதை யோரிடத்திருந்து சிந்திப்போர் முதன்மாணாக்கர். இடை மாணாக்கர், உழைத்தவரையிற் பலங் கொடுக்கும் பூமியையும், சொன்னதைச் சொல்லுங் கிளியையும், ஒப்பர். கடை மாணாக்கர் நீர்பெய்யுந்தோறும் கீழ்விட்டு விட்டு நிரம்பாத இல்லிக்குடத்தையும், ஒரேவிடத்தில் மேயாது பலவிடஞ் சென்று நுனிமேய்கின்ற ஆட்டினையும், தெளிந்த நீரிருப்பினும் அதைக் கலக்கிப் பயன்படாது செய்யும் எருமையினையும், நல்லதைக் கீழ்புகவிட்டு ஈ எறும்பு முதலியவற்றை யேந்திக்கொள்ளும் பன்னாடையையும் ஒப்பர்.

**மாணிக்கத்தாள்** — தமிழ் நாட்டு தேவதாசி.

**மாணிக்கவாசகர்** — திருவாதவூரரைக் காண்க.

**மாணிதான்** — ஒரு காந்தருவன்.

**மாணிபத்திரன்** — 1. குபேரன் சேனாபதி. குபேராவணயுத்தத்தில் இராவணனால் அடியுண்டு தலைசாய்ந்ததால் பரிசமௌலி யெனப் பெயர்பெற்றவன்.

2. தேவர்களில் சிறந்தவன். இவன் ஒரு வேதியன் பொருட்டு குண்டதரான் மூலமாய் ஞானங்கொடுத்தவன். (பார - சாந்.)

**மாண்கோஜிபோதலே** — இவர் தாமணமென்னும் கிராமவாசி. சூத்திரர், ஏகாதசி விரதமிருந்து ஆதுலர்க்குண வளித்து வருகையில் ஷாமகாலம்வரத் தமது உடைபொருள் அனைத்தும் விற்று, அன்னமளித்துப் பண்டரிசென்று பெருமாளைத் தரிசிக்கக் காசில்லாமையால் காட்டில் விறகு பொறுக்கி அவைகளை விற்றுப் பெருமாளுக்கு அர்ப்பணஞ்செய்து மீண்டும் ஆதுலர்க்கிட இலாது மனைவியிடமிருந்த மாவைப் பெற்று அதிதியாக வந்த பெருமாளுக்கிட்டு அவர் தம்முடனழைத்துச் சென்ற ஓர் அன்னசாலையில் உரியவன் பெருமாளைத் தள்ளிய துணர்ந்து தம்மூர் செல்லுகையில் வழியில் பெருமாள் இளைப்பிற் குணவு தரவுண்டு தம்மூர் சென்று சோளக் கொல்லையில் காவலிருக்கையில் வரையாது ஈதலை நோக்கி யினி யீவையேல் பெருமாளாணையென மனைவிகூறக் கேட்டுத் தம்மைக் கேட்போரைத் தாமே சோளங்களைப் பறித்துக்கொள்ள விடை தந்தனர். கொல்லையில் தானியமில்லாமையால் வாயுதாவிற்குக் காசு இலாது கடன் கேட்க அகப்படாதது கண்டு மாண்கோஜி அயலூர்க்குப் பொருள்பெறச் செல்ல அரசன் ஏவலர் தாசர் வீட்டினையடைந்து முத்திரையிடப் பெருமாள் வெட்டியான்போல் வந்து அப்பொருளை அரசனுக்களித்தனர். மாண்கோஜி இஃதுணர்ந்து பெருமாளைத் துதித்திருக்கையில் பாம்பு கடித்திறந்தவனைச் சவமென அறியாது பஜனை செய்யக்கூறி யுயிர்ப்பித்து, ஓர் தாசியின் அடிமை நீக்கி, உபதேசம் பெற விரும்பிய புலையனைத் தமது எருதைக் கொலைசெயக்கூறி யதனிறைச்சியைச் சுற்றத்தாருடனுண்டு, புலையனை நோக்கிக் கூறாதிருக்க என, அவன் பலரறியக் கூறக்கேட்டு, உற்றார் மாண்கோஜியை வருத்த வர அவர் பெருமாளைத் துதித்து அவ்வெருதின் அங்கங்களை ஆட்டின் அங்கங்களாகவும் இறந்த எருதை உயிர்ப்பித்தும் தமதில்லகத்திருந்த விதையனைத்தையும் இரவலர்க்கீந்து விதைக்க விதை யின்மையால் பேய்ப்பூசுணை விதை விதைத்து அதின் காய்களிற் பெருமாளருளால் கோதுமை பெற்று அரசன் அருத்திய கோமாமிசத்தை மெல்லிய மலராகக் காட்டித் திருவருள் பெற்றவர்.

**மாண்டவி** — பரதன் தேவி, குசத்துவசன் பெண். இவளை மாளவி யென்பர்.

**மாண்டவ்யர்** — 1. இவர் தவளையிடம் பிறந்த விருடி என்பர். சாளுவன் பொக்கிஷத்தைக் கொள்ளையிட்ட திருடரைப் பிடிக்க வந்த காவலாளிகள் இவரையும் கள்ளரெனப் பிடித்து அரசனிடம் சென்றனர். அரசன் காவலர் சொற்படி இவரைக் கழு

விலேற்றினன். இவரது தன்மையைப் பின் அறிந்த அரசன் வணங்கிக்கம்மியனுல் கழுத்திலிருந்த சூலத்தை மெதுவாக இரு புறத்திலும் அராவுவித்து நடுத்துண்டை விட்டனன். அன்று முதல் இவருக்கு ஆணி மாண்டவ்யர் எனப் பெயர் வந்தது. தாம் பாலப் பருவத்தில் தும்பிகளைப் பிடித்து வாலில் துரும்பை நுழைத்து விளையாடி அவற்றிற்கு வேதனை தருவித்ததால் அந்தப் பாவம் கழுமரத்தில் இட்டதென யமனுலுணர்ந்து அறியாப் பருவத்தில்செய்த பாவத்திற்கு இவ்வகைக் கடுந்துன்பம் செய்ததனுல் நீ பூமியில் மனிதனுகப் பிறக்கவெனச் சாபமிட்டவர். இச்சாபமேற்றதனுல் யமன் விதுரனுகப் பிறந்தான். இவரது மற்ற சரிதங்களை நளாயினியைக் காண்க.

2. சிவபூசையால் தாம் சூலத்தின் பட்ட துன்பநீங்கி இன்பமடைந்தனர்.

**மாண்டுகேண்ணர்** — ஒரு இருடி. இவர் கோரதவஞ் செய்கையில் இந்திரன் இவரது தவத்தினைக் கெடுக்க எண்ணி இவர் இருந்த தாமரை மடுவில் அரம்பையரை எவினன். அந்த அரம்பையர் அந்த முனிவரைத் தம்வசப்படுத்த முனிவர் ஓடையைத் தவச் சாலையாக நியமித்து அப்பெண்கள் நலன் உண்டிருந்தனர். இராமமூர்த்தி ஆரண்யஞ் செல்கையில் இத்தவச்சாலை வழி சென்றனர். இவர்க்கு மாண்டு கன்னியெனவும் பெயர். (காஞ்சி புராணம்.)

**மாண்டுகேயர்** — இந்திரப் பிரமிதியின் குமரர்.

**மாண்ட்ராக்** — (Mandrake) இது, மத்யதரைக் கடலிலுள்ள தீவுகளிலும், அதையடுத்த கரைப் பக்கங்களிலும் காட்டுப் பயிராகப் பயிராகிறது. இதன் இலைகளில் சுணைமுட்கள் உண்டு. இதன் கிழங்கு, பருத்த மனித வுருவுடன் தலை கால் முதலிய உறுப்புக்கள் கொண்டிருக்கிறதாம். இதை இழுக்கின்ற வாத்துக் கூச்சலிடல்போல் ஒரு வித சத்தம் உண்டாகிற தென்கிறார்கள். அச்சத்தம் எங்கிருந்துண்டாகிற தெனத் தெரிய வில்லையாம். ஜர்மனியில் (1628) ஆண்டில் மனித வுருக்கொண்ட கிழங்கொன்று விவசாயகாட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கிறதாம். (1802) வருஷத்தில் பிர்மிங்காம் விவசாய பொருட்காட்சி சாலையில் கையுருக்கொண்ட கிழங்கு வைக்கப்பட்டிருக்கிறது.

**மாதங்கம்** — சண்டாள சாதிகளில் ஒன்று.

**மாதங்களில் காலசர்ப்பகதி** — ருஷபம், மிதுனம், கடகம், இந்த மூன்று சங்கிராந்தியிலும் காலசர்ப்பம், ஈசான்யத்தில் சிரமும், வாயுமூலையில் இடுப்பும் நிருதி மூலையில் வாலும், இதன் பின்பக்கமாய் வந்து, சிம்பம், கன்னி, துலாம் இந்த மூன்று சங்கிராந்தியிலும் வாயு மூலையில் சிரசும் நிருதி மூலையில் இடுப்பும் அக்னி மூலையில் வாலும் இதன் பின்பக்கமாய் வந்து விருச்சிகம், தனசு, மகரம், இந்த மூன்று சங்கிராந்தியிலும் நிருதி மூலையில் சிரமும் அக்னி மூலையில் இடுப்பும் ஈசான்யத்தில் வாலும், இந்தப்பக்கம்வந்து கும்பம், மீனம், மேஷம், இந்த மூன்று சங்கிராத்தியிலும் அக்னி மூலையில் சிரமும், ஈசான்யத்தில் இடுப்பும், வாயு மூலையில் வாலும், இவ்விதமாக இருக்கத் தம்பப்பிரதிட்டைசெய்யில் சுபப்பிரதம். சிரசில் செய்யில் மிருத்யுபயம். முதுகின்மேற் செய்யில் கெடுதியுண்டு வாலின்மேற் செய்யில் சலனம்.

**மாதங்கி** — 1. காசிபர் பெண் யானைகளைப் பெற்றவள். மதங்கனைக் காண்க.

2. மதங்கருடலடைந்த பரசிராமரால் வெட்டப்பட்ட ரேணுகை.

**மாதசூன்யம்** — (சித்திரையீ) அஷ்டமி, த்வாதசி, ரோகணி, கும்பம், (வைகாசி) ஏகாதசி, சித்திரை, சோதி, உத்திராடம், மீனம், (ஆனி) த்ரயோதசி, புனர்பூசம், ருஷபம், (ஆடி) ஷஷ்டி, அவிட்டம், பூரம், மிதுனம், (ஆவணி) அமாவாஸ்யை, பூரணை, பூராடம், மேஷம், (புரட்டாசி) சத்தமி, சதயம், பூரட்டாதி, ரேவதி, கன்னி, தனுசு, (ஐப்பசி) நவமி, விருச்சிகம், பூரட்டாதி, (கார்த்திகை) பஞ்சமி, கார்த்திகை, பூசம், மகம், துலாம், (மார்கழி) துதியை, நவமி, அனுஷம், உத்திரட்டாதி, விசாகம், தனுசு. (தை) பிரதமை, அஸ்தம், திருவாதிரை, ஆயிலியம், கர்க்கடகம், (மாசி) சதுர்த்தி, தசமி, மூலம், திருவோணம், மகரம், (பங்குனி) சதுர்த்தசி, பரணி, கேட்டை, சிங்கம்-வருவனவாம். இவை சுபகாரியங்களுக்காகா.

**மாததினம்** — கார்த்திகைக்கு கார்த்திகை ரோகணி, மார்கழிக்கு மிருகசீரிஷம், திருவாதிரை, தைக்குப் புனர்பூசம் பூசம் மாசிக்கு - ஆயிலியம், மகம், பூரம், பங்குனிக்கு உத்திரம், அஸ்தம், சித்திரைக்

குச் சித்திரை சோதி, வைகாசிக்கு விசாகம் அநுஷம், ஆனிக்குக் கேட்டைமூலம், ஆடிக்குப் பூராடம் உத்திராடம், ஆவணிக்குத் திருவோணம். அவிட்டம், புரட்டாசிக்கு சதயம் பூரட்டாதி, உத்திரட்டாதி, ஐப்பசிக்கு ரேவதி, அச்வநி, பரணி இந் நாட்களிலும், பூரணையிலும் சுபங்கள் நீக்க வேண்டும். (விதானமாலை.)

**மாதபலன்** — ஜன்ம நட்சத்திரமுதல் மாதம் பிறந்த நட்சத்திரம் வரையில் எண்ணிக் கண்ட தொகையை ஏழிற்பெருக்கி எட்டிற்கழித்த சேடம். க-ரோகம், உ-இலாபம், ந-செலவு, ச-அலைச்சல், ரு-போசன சௌக்கியம், சு-அயிஸ்வரியம், எ-கலகம், அ-மிருகஷ்டம்.

**மாதம்** — (கஉ) சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி, இவற்றிற்கு நக்ஷத்திரங்களாவன முறையே சித்திரை, விசாகம், மூலம், உத்தாராடம், அவிட்டம், பூரட்டாதி, அசுவினி, கார்த்திகை, மிருகசீரிடம், பூசம், மகம், உத்திரம். இவை அந்த நக்ஷத்திரங்கள் கூடுகையில் இப்பெயர் பெறும்.

**மாதாத்தூடையார்** — ஒரு வீரசைவர். இவர் காலத்துச் சிவநிர்மால்யமாகிய அபிஷேக ஜலத்தாலாகிய சேற்றில் ஒரு பசு செல்ல அதை யோட்டிச் சென்ற ஒரு வேதியனும் அழுந்தித் தாண்ட அவன் உடலில் இருந்த நோய் நீங்கியது. இதை அறிந்த வேறு பாண்டுநோய் கொண்ட (எ00) பேர் அச்சேற்றில் மூழ்கிப் புனிதமடைந்தனர்.

**மாதரி** — இடைச்சியர் தலைவி. கோவலன் கொலையுண்டதனால் தீயில் விழுந்து இறந்தவள். (சிலப்பதிகாரம்.)

**மாதர் ஒழுக்கம்**—ஸ்திரீகள் பாலியராயினும், யௌவனராயினும், வார்த்திபராயினும், தம் வீடுகளில் தமது மனம்போனபடி செய்யலாகாது. பாலியத்தில் தகப்பன் கட்டளையிலும், கணவன் இரந்த பின் புத்திரன் ஆஞ்ஞையிலும் இருக்கவேண்டியது. ஸ்திரீகள் ஒருபோதும் சுயாதீனமாக இருக்கக்கூடாது. தந்தை, கணவன், புத்திரன், இவர்களை நீங்கித் தனி இருக்கும் பேதை, பிறந்த குலத்திற்கும் புகுந்த குலத்திற்கும் நிந்தனை விளைப்பவள் ஆவாள். எப்போதும் வீட்டுக் காரியத்தில் சமர்த்துள்ளவளாயும், சந்தோஷ முள்ளவளாயும், வீட்டுப் பொருள்களைச் சுத்தப்படுத்துகிறவளாயும், அதிகச் செலவில் மனமிலாதவளாயும், இருத்தல் வேண்டும். தன் தந்தை, மூத்தோன், இவர்கள் யாருக்குப் பாணிக்கிரகணம் செய்வித்தார்களோ அவனுக்குப் பணிவிடை செய்ய வேண்டியது. கணவன் இறந்த பின்னும் அவனுக்குச் சிரார்த்த காரியம் முதலியவை செய்து கொண்டு, விபசாரம் செய்யாதிருத்தல் வேண்டும். கணவன் துராசார முள்ளவனாயினும், அன்னிய ஸ்திரீலோலனாயினும், நற்குணம் இலானாயினும், அவனைத் தெய்வம்போற் பூசிக்க. ஸ்திரீகளுக்குக் கணவன் பணிவிடை அன்றி உபவாச விரத எஞ்ஞங்கள் வேண்டியதில்லை. கணவனிருக்கினும் இறக்கினும் அவனுக்கு விரோதமான காரியத்தைச் செய்யக்கூடாது. கணவன் இறந்தபின்பு கிழங்கு பழம் முதலிய சொற்ப ஆகாரத்தால் காலத்தைக் கழிக்க வேண்டியது. காம இச்சையால் பர புருஷன் பெயரையும் சொல்லக்கூடாது. கணவன் இறந்தபின் பிள்ளைக்காக வேறொரு கணவனைச் சேர்பவள் இவ்வுலகத்தில் எல்லாராலும் நிந்திக்கப்படுவள். பதிவிரதைகளுக்கு இரண்டாவது விவாகம் ஒரு சாஸ்திரத்திலும் கூறப்படவில்லை. புருஷன் தாழ்ந்தவன் என்று உயர்ந்தவனைக்கூடுகிற ஸ்திரீ எல்லாராலும் நிந்திக்கப்படுகிறாள். விபசாரத்தினால் உலகத்தில் நிந்திக்கப்பட்டவள் இம்மையில் தீங்கை அடைதலே அன்றி மறுமையில் குட்ட வியாதிகொண்டவளாதலே அன்றிக் குள்ள நரியாகவும் பிறப்பள்- எந்த ஸ்திரீ மனம் வாக்கு காயங்களை அடக்கிக்கொண்டு விபசாரம் செய்யாது நல்லொழுக்கத்துடன் இருப்பாளோ அவள் பதி உலகத்தை அடைவதும் அன்றிப் பதிவிரதை என்னும் பெயரையும் பெறுகிறாள்.

**மாதர்கள்** — (எ) மாதருக்கள் காண்க.

**மாதலி** — இந்திரன் தேர்ச்சாரதி, ஒருகால் இராவண யுத்தத்தில் தேர் செலுத்தினவன்.

**மாதவக்கோன்** — ஒரு இடையன், இவன் காட்டில் காலி மேய்த்துக் கொண்டிருக்கையில் இவனையொரு முனிவன் அன்று தளிர்த்தான் மூலிகைகாட்டுக என இவன் காட்ட அதனடியில் யாகஞ்செய்து மாதவக்கோனைத்தள்ள முயலுகையில் இடையன் தப்பி முனிவனைத் தள்ளினன். முனிவன் சுடர்விடு பசும் பொன்னாகக் கண்டு

அவ்விக்ரகத்தை யெடுத்து அதின் உறுப்புக்களில் ஒன்றைத் துணித்தனன். அது பழையபடி வளரக்கண்டு சீவித்து வந்தனன். இதனை அரசன் கேள்வியுற்று இவனைக்கேட்க இவன் அதனை அரசனுக்குக் கொடுத்துப் புகழடைந்தவன்.

**மாதவசூரி** — இவர் மேல்நாட்டில் திருநாராயண புரத்தில் கலியுகு (சஉகடு) விஜயவருஷம் பங்குனிமீ உத்தர நக்ஷத்ரம் அவதரித்து பண்டிதராய்க் கங்கோரை என்கிற ஊரை வாழுமிடமாகக் கொண்டு ஆறு சாஸ்திரம் வருமென்பதற்கு அத்தாக்ஷியாக ஆறு ஆஸனமிட்டு அதின்மீது உட்கார்ந்திருப்பர். இவரை பட்டர், உடையவர்நியமனப்படி மேல் நாடுசென்று வாதமிட்டுவென்று ஸ்ரீவைஷ்ணவராக்கினர். இவர் சந்நியசித்துத் திருவரங்கமடைந்து பட்டரை வணங்கப் பட்டர் நம்முடைய ஜீயர் வந்தார் என அணைத்துக்கொள்ள அன்று முதல் நஞ்ஜீயர் என்று இவர்க்குத் திருநாமம் உண்டாயிற்று. இவர் பட்டரிடம் பலசங்கைகளை வினவித் தெரிந்து பட்டர் பிரம்மரத்தில் எழுந்தருளி ஊர்வலம்வருகையில் அவரது ஸ்ரீ பாதந்தாங்கப், பட்டர் தடுக்கவும் அதற்குச் சமாதானங்கூறித் தாங்கினர்.

**மாதவசேனை** — சசியின்தோழி. (சூளா.)

**மாதவதாசர்** — இவர் பால்யத்தில் தாய் தந்தையரை இழந்து சம்சாரபந்தம் விட்டதற்குப் பரம சந்தோஷ மடைந்து பல தலங்களை யடைந்து தரிசிக்கவெண்ணி ஜகநாதம்சென்று பெருமாளின் சகுண ரூபத்தைச் சந்நிதி முன்னிருந்து தோத்திரஞ்செய்து அனுபவித்திருக்கையில் அர்ச்சகர் தங்களுக்கு ஒரு காசும் பயனில்லாததினால் கோபித்து வெளியிற்றள்ளத் தாசர் வெளிவந்து ஒரு புறத்தில் மூன்று நாட்கள் ஆகாரமில்லாது பஜனைசெய்யப் பெருமாள் ருக்மணி தேவியை அவருக்கு அமுதூட்டி வர அனுப்பினர். பிராட்டியார் பொற்றும்பாளத்தில் அமுதருத்தி அந்தத் தட்டினை அங்கு வைத்துச் செல்லத் தாசர் அதனை அலம்பித் தலைக்கண் வைத்து உறங்கினர். விடியக் கோவிலர்ச்சகர் தட்டினைக் காணாது தாசரிடங் கண்டு அவரைச் சிறையிலிடப் பெருமான் அருச்சகர் கனவிடைச் சென்று நடந்தவை கூற அருச்சகர் அவரிஷ்டப்படி பெருமாளைச் சேவிக்க இடந்தந்தனர். இவ்வாறு ஒரு நாள் திருக்கோயிலில் தியானித்திருக்கையில் அருச்சகர் கோயிலைக் காப்பிட்டுச் சென்றனர். பாதிமிரவில் தாசருக்குக் குளிர்வரப் பெருமாள் தம் சால்வையைத் தாசருக்குப் போர்த்துச் சென்றனர். விடிந்து அருச்சகர் கண்டு பெருமாளுக்கு மிக்க அன்பர் என வியந்தனர். இதனை ஊர் அரசன் கண்டு உபசரிக்கத் தாசர் உபகாரம் வேண்டாது நீங்கி வடமதுரை யடைந்து பெருமாளைத் தியானிக்க அவ்விடம் அர்ச்சகர் புறத்தில் நீக்க இவர் புறஞ் சென்று ஒருவர் அமுது தர அதனைப் பாகஞ்செய்து பெருமாளுக்கு நிவேதிக்க அழைக்கப் பெருமாள் தரிசனந் தந்துண்டு கோயிலடைய அருச்சகர் பெருமாளுக்கு அன்னம் நிவேதிக்க மாதவ தாசனிட முண்டேனெனக் கூற அவர்களிவரிடம் அபராதக்ஷமை வேண்ட நீங்கிச் ஜகநாதஞ்சென்று அதிசார கோயில் பெருமாள் சௌசத்திற்குச் சலமுதவவும், ஆடையைக் கசக்கித் தரவும் இருந்து தார்க்கிகன் வாதக்குவர அவனைப் பெருமாள் தம்மைப்போலிருந்து வெல்ல அத்தார்க்கிகனை வென்று பாமபதாதனைப் பஜனை செய்திருந்தவர்.

**மாதவராசன்** — ஒரு அரசன். காட்டில் பாலசந்திரரைப் புத்திரராகப் பெற்றவன். தேவி சுமுதை.

**மாதவர்** — யதுகுலத்தவர். கம்சன் பகைவர். விருஷ்ணியைக் காண்க.

**மாதவஹூறன்** — இவன் விசுவகன்மன் கண்ணில் உதித்துச் சிருட்டி நடத்துகையில் பிரமன் கோபித்து நீ நூலிழைக்குஞ் சிலந்தியாக எனச் சபித்தனன். மீண்டும் இவன் வேண்ட நீ திருக்காளத்தியில் சிவபூசை செய்து சாபம் நீங்குக என அவ்வகை சிவபூஜைசெய்து முத்தி பெற்றவன்.

**மாதவன்** — 1. கௌசிகனென்னும் பாகவதனுக்குச் சீடன். பாகவத கைங்கர்யபரனாயிருந்தவன்.

2. திருமாலின் திருநாமத் தொன்று.

3. புரந்தரன் குமரன்.

**மாதவாசாரியர்** — மாயணன் குமரர். இவர் செல்வ விருப்பினராய்க் காடு சென்று தவமேற்று அரசனது பசுமேய்ப்பானாகிய புக்கணனை யடைந்து அவன் பசிதணியப் பால் தரவுண்டு தவஞ்செய்கையில் திருமகள் புக்கணனை யடைந்து இவற்கு இப்பிறப்பில் செல்வங் கிடையாதெனக் கூறவும் தவஞ்செய்து சலித்துத் தனது

உபவீதத்தை அறுத்தெறிந்து துறவடைந் தனர். பின் திருமகளும் கலைமகளும் தரிசனந் தந்து யாது வேண்டுமென இவர் எனக்குக் கல்வியும், எனக்குப் பால் தந்து பசி போக்கிய புக்கணனுக்கு அரசச் செல் வமும் தருகவென அவ்வாறளித்து மறைந் தனர். பின் அரசனிறக்கப் புக்கணனை அரசயானை அபிஷேகித்து அரசனுக்கியது. இவன் அரசாளுகையில் புக்கணன் இவ ரைத் தங்கள் புகழ் நிலவ நூல்களியற்றுக வென வேண்ட இவர்பல வடநூல்களுக்கு உரையியற்றினர். இவர் சகோதரர் போக நாதர், சாயணாசாரியார். இவர்க்கு வித் யாரண்யர் எனவும் பெயர்.

**மாதவி** — 1. யயாதியின் பெண். காலவன் தேவி.

2. கோவலன் காதற்பரத்தை. இவள் குமரி மணிமேகலை. கோவலன் இறந்தது கேட்டுத் துறவு பூண்டு அறவணவடிகள் பாற்சென்று தருமங் கேட்டுக் காஞ்சி நக ரத்து நோற்றிருந்தவள். (மணிமேகலை)

3. அகத்தியர் சாபத்தால் பூமியிற் பிற ந்த் உருப்பசி. (சிலப்பதிகாரம்.)

4. இந்திர சாபத்தால் பூமியிற் பிறந்த தேவஸ்திரீ.

**மாதவீயம்** — 1. வித்யாரண்யர் செய்த சோதிடநூல்.

2. பராசரஸ்மிருதி வியாக்யானம்.

**மாதளவனூர் இளநாகனூர்** — திருக்குன்றத்தா சிரியரிடம் பொருளிலக்கணம் கேட்டவர்.

**மாதர்** — உசகச்சன் பாரி.

**மாதாம்பை** — மாதிராசர் மனைவி. நந்திமா தேவரை மூன்று வருடம் கருவில் பெற்று வசவர் என்று பெயரிட்டு வளர்த்தவள்.

**மாதிமாதிரத்தனூர்** — ஒரு புலவர். (புற.நா.)

**மாதிராசர்** — மாதாம்பை கணவர். வசவ தேவர் தந்தை. இவர் ஒருமுறை கூழு ண்ண அது ருசியா யிருக்கக்கண்டு சிவப் பிரீதியென்னச் சிவமூர்த்தி இவர் வாயே பாத்திரமாக உண்டனம் என்ன அசரீரி கேட்கப் பெற்றவர்.

**மாதிராசையர்** — சிக்கமாதையர் தேகவியோ கமடைய அவர் குமரர் சொல்லால் உயிர் தந்து சிவபூசைக்கு ஏவினவர்.

**மாதினியார்** — புகழனுர்க்குத் தேவியார். திருநாவுக்கரசுகளுக்குத் தாயார். திருநா வுக்கரசுகளைக் காண்க.

**மாதீரத்தன்** — கடைச்சங்கமருவிய புலவர். (குறு ககக.)

**மாதுராகன்** — யாதவபேதம்.

**மாதுருக்கள் எழுவர்** — இவர்கள் சிவமூர்த்தி அந்தகாசுரனைக்கொல்ல எழுந்த காலத்தில் அவர் திருமேனியிலிருந்து அவதரித்தவர் கள். பெயர், பிராமி, மகேச்வரி, வைஷ் ணவி, கௌமாரி, வாராகி, சாமுண்டி, இந் திராணி முதலியவர். இவர்களைத் திரி லோகத்தவரும் பூசிக்கின் எல்லா நன்மையு மடைவர். இவர்க்கு முறையே வாகனம், அன்னம், இடபம், மயில், கருடன், சிங் கம், யானை, பேய். முறையே ஆயுதங் களாவன, மறை, பினாகம், வேல், ஆழி, கலப்பை, வச்சிரம், சூலம்.

**மாதேசன்** — ஒரு அரசன். இவன் வணிகத் தொழில் செய்து பெருந்திரவியம் சம்பா தித்துத் தருமஞ்செய்யாது வைத்திருந்த னன். இவன் மனைவியு மிறந்தனள். இவ னுக்குப் புத்திரர் முதலியர் இல்லாமையால் ஒரு வேசியினிடம் இருந்தனன். அந்த வேசி, இவன் உலோபத் தன்மையையும், தருமசிந்தையிலாமையும் கண்டு, நீ தரு மஞ் செய்யின் உன்னைக் கூடுவேனென்று வெறுத்தனள். இவன் அவளை விட்டுக் காசிசென்று புராணம் முதலிய கேட்டுப் பொருளைத் தருமத்திற் செலவிட்டுச் சுத பசு என்னும் சிவபக்திமானுக்கு வீடு கட் டித்தந்து முத்தியடைந்தனன். (காசி.ரக.)

**மாதேவன்** — 1. சிவன் திருநாமங்களில் ஒன்று.

2. ஏகாதசருத்திரருள் ஒருவன்.

**மாதைத் திருவேங்கடநாதர்** — இவர் இத் றைக்குச் சற்றேறக்குறைய (௩00) வரு ஷங்களுக்குமுன் சோழநாட்டில் மாதை யென்னும் ஊரில் ஸ்மார்த்தவேதியர் குடி யிற் பிறந்து கல்விவல்லவராய்ப் பாண்டி நாட்டையாண்ட நாயகவம்சத்தைச்சேர்ந்த ரங்ககிருஷ்ணமுத்து வீரப்ப நாயகரிடம் மந்திரியாக அமைந்து தமிழ்ப்புலவரை ஆதரித்துக் கவிபெற்றவர். கவிக்கு ஆயிரம் பொன் கொடுத்துப் பிரபந்தம் முடிந்தபின் நூறுகவிகொண்ட நூலுக்கு நூறாயிரம் பொன் பரிசுதந்தவர். இதனைப் பணவிடு தூது முதலியவற்றால் அறிக. இவர் ஆசா ரியர் சொற்படி பிரபோத சந்திரோதயத் தைத் தமிழில் மொழி பெயர்த்தவர்.

**மாத்திகவதகன்** — சித்ராதன் என்னும் பெயருள்ள கந்தர்வன். ஜமதக்கினி ரிஷி யின் பாரியையான இரேணுகையால் காணப்பட்டவன். (பா.வன.)

**மாத்திரை** — என்பது, அளவு, எழுத்தளவு உன்னல் கால், உறுத்தல் அரை, முறுக்கல் முக்கால், விடுத்தல் ஒன்று என்ப. "இயல் பெழுமாந்தரிமை நொடி மாத்திரை" குற்றெழுத்திற்கு மாத்திரை (க) நெட்டெழுத்திற்கு மாத்திரை (உ) மெய்யெழுத்திற்கரை இனி இசைக்குரிய மாத்திரை "கொட்டும், அசையும் தூக்குமளவும் ஒட்டப் புணர்ப்பது பாணியாகும்." கொட்டுமாத்திரை அரை, வடிவு (க) அசை மாத்திரை (க) வடிவு (எ) தூக்குமாத்திரை (உ) வடிவு (உ) அளவு மாத்திரை (ங) வடிவு (௯) இவற்றின் தொழில் கொட்டு அமுக்கல், அசை, தாக்கியெழல், தூக்குத்தாக்கித் தூக்கல். அளவு தாக்கின ஓசை நேரே (ங) மாத்திரை பெறுமளவும் வருதல்.

**மாத்மிகன்மதம்** — தேகாவயவமே பொருளெனவும், அது கெட்டால் வேறுபொருள் இன்றெனவும், பொருளில்லாவிடின் அறிவில்லை யெனவுங் கூறுவோன்.

**மாத்யந்தினன்**—யாஞ்ஞவல்கியர் மாணுக்கர்.

**மாத்ரி** — 1. மத்திரதேசாதிபதியின் குமரி. பாண்டுவின்தேவி. குமரர் நகுலசகாதேவர். இவள் பாண்டுவுடன் தீக்குளித்தனள். இவளைப் பாண்டு தனக்குற்ற சாபமறந்து புணர்ந்திறந்தனன்.

2. பரீச்சித்தின் தேவி. குமரன், சனமேசயன்.

**மாத்ருகா** — அரியமா வென்னும் ஆதித்தன் தேவி. ஞானிகளாகவே பிள்ளைகளைப் பெற்றவள்.

**மாத்ருக்கள் பதின்மர்** — கௌரி, லக்ஷ்மி, இந்திராணி, மேதை, சாவித்திரி, விஜயை, ஜயை, தேவசேனை, ஸ்வதா, ஸ்வாகா.

**மாநகரி** — ஒரூர். மதுரைக்கு வடகிழக்கிலுள்ளது. பாண்டியர்களுடைய அரண்மனை முதலியன இருந்த இடம். மாணிக்கவாசகர் பொருட்டுவந்த குதிரைகள் இடசாரி, வலசாரி புரிந்த இடமென்றுங் கூறுகின்றனர். (திரு.)

**மாநக்கஞ்சாறநாயனர்**—இவர் கஞ்சாறூரில் வேளாளர்குடியில் பிறந்து பரமசிவ உபாசனையால் ஒரு பெண்ணைப் பெற்றனர். அப்பெண்ணுக்கு மணப்பருவம் வந்தது. அவளை ஏயர்கோன் கலிக்காமநாயனர் திருமணஞ் செய்துகொள்ள நல்ல சுபமுகூர்த்தத்தில் கஞ்சாறூருக்குச் செல்ல முயன்றனர். இதற்கு முன்பே சிவமூர்த்தி மாவிரதியார் வடிவுகொண்டு கஞ்சாற நாயனர் வீடுசென்று நாயனரைக்கண்டு இங்கு என்ன சுபகாரியமென்று வினவினர். நாயனர் தமது புத்திரிக்குத் திருமணமென்று தமது புத்திரியையும் பணிவித்தனர். மாவிரதியார் பெண்ணின் கூந்தலைக்கண்டு இப்பெண்ணின் கூந்தல் நமது பஞ்சவடிக்கு உதவும் என்று அதனைக் கேட்டனர். நாயனர் திருமணமாகா முன் கேட்டதற்கு அதிக ஆநந்தங்கொண்டவராய், அக்கூந்தலை உடனே அரிந்து தந்தனர். சிவமூர்த்தி மாவிரதியர் கோலமொழித்துப் பிராட்டியுடன் விடைமேல் காட்சிதந்து சந்நிதியில் தம்மைப்புகழும் பெரும்பேறு தந்து மறைந்தனர். மணமகராகிய கலிக்காமர் கஞ்சாறூரில் வந்து முண்டிதமுள்ள பெண்ணை மணக்க விதியிலாததால் மீளக் கருதியபோது சிவமூர்த்தி கலிக்காமரை நோக்கி இப்பெண்ணின் கூந்தல் வளரச் செய்கிறோமென்று பணிக்கக்கேட்டு அப்பெண்ணைமணந்து தமது ஊருக்குச் சென்றனர். (பெரிய புராணம்.)

**மாநசதீர்த்தம்** — சிவமூர்த்தியின் நெற்றிக்கண் காரணமாக உமாதேவியாரின் திருவிரலிற் ரேன்றிப் பிரமனல் சத்தியவுலகத்தில் பிரதிட்டிக்கப்பட்டது. இமயமலையில் பிரமனல் சிருட்டிக்கப்பட்ட தெனவுங் கூறுவர்.

**மாநதுங்காசாரியர்** — பக்தாமிர்தம் செய்த சைனர்.

**மாநந்தை** — ஒரு தாசி. இவள் சிவபக்தியுள்ளவள். இவள் தன்னிடமிருந்த குரங்குக்கும் கோழிக்கும் உருத்திராக்ஷமணிந்து வளர்த்து வருகையில் சிவமூர்த்தி இவளிடம் ஒரு வணிகர்போல் தரிசனந்தந்து இரத்தினகடகங் காட்டினர். அதைக் கண்ட தாசி ஆவலுடன் கேட்கச் செட்டியார் நீ என்னுடன் மூன்றுநாள் இருப்பையேல் இதனைத் தருவேன் என அவ்வகையே தாசியுடன்பட்டுச் செட்டியாருடனிருக்கையில், பாதியிரவில் தாசி தன் வீடு தீப்பற்றி எரியக்கண்டு குரங்கையும் கோழியையும் விடுவித்து மாணிக்கலிங்கம் வேகக்கண்டு வணிகருக்குக்கூற வணிகர் இனி வாழேன் என்று தீப்புகத் தாசியும் நான் மூன்று தினங்களுக்குச் செட்டியாரடிமையாதலின் நானும் உயிர் விடுவேனென்று தீப்புகுந்து சிவமூர்த்தி உண்மையுருக்காட்ட முத்தியடைந்தவள். அந்தக் குரங்கும், சேவல்களுமே

தருமன் தாருகன் என்னும் காச்மீரத் தரசனும் மந்திரியுமாயினர். (பிரமோத் தர காண்டம்.)

**மாநவம்** — 1. ஒரு தேசம்.

2. உபபுராணத்தொன்று.

**மாநவி** — திரௌபதிக்கு ஒருபெயர்.

**மாநாய்கன்** — கண்ணகியின் பிதா. கோவலன் கண்ணகி முதலியவர் இறந்ததால் துறவு பூண்டோன் (சிலப்பதிகாரம்.)

**மாநிநி** — விரேதன் குமரி. இராஜ்யவர்த்தனன் தேவி. தமனைக் காண்க.

**மாநுஷம்** — ஒரு தீர்த்தம்.

**மாநுஷன்** — ஒரு சிற்பி.

**மாந்தரஞ்சேரலிரும்பொறை** — சேரருள் ஒருவன் (சிலப்பதிகாரம்)

**மாந்தரன்** — இவன் ஒரு சேரர்தலைவன். இவனை மாந்தரம் பொறையன் கடுங்கோ என்பர். இவன் பரணரால் பாடப்பட்டவன். மோரிய அரசனுக்கு வணங்காது நின்றவன்.

**மாந்தரோகம்** — இது பிள்ளைகளுக் குண்டாம் ரோகங்களிலொன்று. இது தாய், தேங்காய், வெல்லம், சுண்டற்கறி, கீரை, மீன், இறைச்சி, புளித்தமோர், கிழங்குகள், மந்தவஸ்துக்கள் தின்பதால் உண்டாம். பாலைக்குடிக்கும் பிள்ளைகளுக்குண்டாகும் ரோகம். இது, பலநிறமான கழிச்சல், சுரம், மயக்கம் முதலிய தரும். இது, செரியாமாந்தம், பீர்மாந்தம், சுரமாந்தம், விஷமாந்தம், கழிமாந்தம், ஊதுமாந்தம், நீர்மாந்தம், தலைமாந்தம், சிங்கிமாந்தம், கணமாந்தம், சொருகு மாந்தம், குழிமாந்தம், இழுப்பு மாந்தம், உப்புமாந்தம், இரைப்பு மாந்தம், கட்டு மாந்தம், அள்ளுமாந்தம், விக்கல் மாந்தம், சந்நிமாந்தம் எனப் பல வகைப்படும்.

**மாந்தாதா**—1. யுவனாச்வன் குமரன். (யுவனாச்வனைக் காண்க) இவனுக்கு இந்திரன் இட்டபெயர் திரிசதசு. பாரி, விந்துமதி, குமரர் புருகுச்சன், அம்பரீஷன், முசுகுந்தன். இவனுக்கு ஐம்பது பெண்களுண்டு. அந்த ஐம்பதின்மரைச் சௌபரி முனிவர் விவாகஞ் செய்துகொண்டனர். இவன் இராஜசூயம் செய்து சம்ராட் பட்ட மடைந்தவன். இவன் தன்னுடு மழையிலாதிருக்க இந்திரனுடன் போரிட்டு மழை பெய்வித்தவன். இவன் தன் தந்தையினுடலின் வாம பாகத்தைப் [illegible]ந்து வெளிப்பட இருடிகள் இச்சிசு யாரைத் தனபானஞ் செய்யத்தக்கதெனச் சங்கை யடைகையில் புருஷன் கருவுற்றுப் பிள்ளை பெறுதல் மூவுலகத்தும் இல்லையாதலால் அவ்விடம் வந்திருந்த இந்திரன் என் தர்சனியைப் பானம்பண்ணக் கடவதெனக் கரத்தை நீட்டினன். நீட்டிய விரலின் வழியொழுகிய அமிர்தத்தைப் பானஞ்செய்தபடியால் மாந்தாதா என்று பெயர் அடைந்தனன்.

2. சூர்ய குலத்தரசன் லவணாசுரனால் கொல்லப்பட்டான். (பார - அநுசா.)

**மாந்தாத்ரி** — ஒருஅரசன். இவன்பௌத்ரன் திரசதாசயன்.

**மாந்தேகர்** — இவர்கள் அரக்கர். இவர்கள் முப்பது கோடியெண் கொண்டவர்கள். இவர்கள் சூரியனை விழுங்க இச்சித்தவர்கள். இவர்களது இச்சையைக் கெடுக்கத் தேவர்களும் ரிஷிகளும் சந்தியை உபாசித்து உதகாஞ்சலியாகிய அர்க்கியத்தை விடுகின்றனர்: விட்டவுடன் அந்த அர்க்கியஜலம் வச்சிர வுருக்கொண்டு அந்த ராக்ஷஸரைக் கொளுத்துகிறது. (தேவி - பாக.)

**மாந்தை** — இதுசேரர் தலைவர்களுக்கிருந்த இராஜதானிகளில் ஒன்று. இதில், நார்முடிச்சேரல் அரசு வீற்றிருந்தான்.

**மாபலன்** — சூரபதுமனுக்குப் படைத்தலைவன்.

**மாபலி** — 1. பலியைக் காண்க.

2. பாம்பனைக் காண்க.

**மாபுராணமுடையார்** — யாப்பருங்கல விருத்தியுள் கூறப்பட்ட தொல்லாசிரியருள் ஒருவர்.

**மாபுராணம்** — 1. இடைச்சங்கமருவிய ஒரு இலக்கண நூல்.

2. சைந தீர்த்தங்கரின் சரித்திரமுரைத்த நூல்.

**மாப்பிள்ளை** — மேல்நாட்டு மகமதிய மதத்தவர் மலையாளபாஷை பேசுவோர். அரேபியரின் சந்ததியார். இவர் பல வேலைகள் செய்து பிழைக்கின்றனர். (தர்ஸ்டன்.)

**மாமதநன்** — துரியோதனன் தம்பி.

**மாமிலாடன்** — கடைச்சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். (குறு-சசு.)

**மாமூலர்** — கடைச்சங்க மருவிய புலவர்.

**மாமூலனர்** — இவர் அந்தணர் மாபினர். முக்காலமும் அறிந்த யோகியார். இதனைத் தொல்பொருள் எகூ-ம் சூத்திரவுரையில் 'பார்ப்பனப் பக்கத்து வகையாவன'

என்பதன் கீழ், நச்சினார்க்கினியர் 'யோகிகளாய் உபாயங்களால் மூக்காலமும் உணர்ந்த மாமூலர் முதலியோர் அறிவன்றேயத்து அனைநிலை வகையோராவர்' என்று கூறுவதனாலறிக. அறிவன் கலசயோனியாகிய அகத்தியன் என முன்னர்க்கூறியிருத்தலினால் மாமூலனார் அகத்தியரோடு அவர் வகையில் சேர்ந்தவரென் றறியற்பாலது. இவ்வளவு மேம்பாடுற்ற இவர் அகப்பொருட் சுவையை அளவு கடந்து அனுபோக முடையாருஞ் சொல்ல மாட்டாதவாறு இன்பம்பெருகத் தெளியக்கூறுவது வியப்புடையதாகும். இதற்கு 'எத்தொழிலைச் செய்தாலு, மேதவத்தைப் பட்டாலு, மூத்தர் மனமிருக்கு மோனத்தே' என்பதொன்றல்லது வேறு காரணங்கூற யான் அறிந்திலேன்.

சைவ சமயநூலாகிய திருமந்திரம் எழுதிய திருமூலர் வேறு இவர் வேறு. இவர் அகத்தியர் கூறும் பாடல்களில் யாரையேனும் கூறாது வாளா செய்யுள் செய்தனர். அது வருமாறு: ஆவி நெடுவேன் பொதினியைப் பாராட்டியது; அகம் க, கூக. சந்திரகுப்தன் மகன் துளுவென்பவன் ஸ்தாபித்த துளுநாட்டையும் (தென்கன்னடம்) நன்னனது பாழியையும் பாராட்டியது. அகம் கடு. மூவேந்தர் தமிழ் நாட்டைக்கூறியது. அகம் நுக. கரிகாற் சோழனோடு கோயில் வெண்ணிப் போர்க்களத்திற் போர்செய்த பெருஞ் சேரலாதன் தோற்றுப் புறப்புண்பட்டு நாணமுற்று உயிர்விடத் துணிந்து வடக்கு நோக்கி யிருத்தலும் அதனையறிந்த அவனுக்கு நட்பாளராகிய பல சான்றோர் தாமும் உடனிருந்து உயிர்விட்டமை கூறியது. அகம் டுடு. கள்வர் கோமான் புல்லி யென்பது வேங்கடமலையைப் புகழ்ந்தது; அகம், சுக. பெருஞ்சோறு பயந்த உதியஞ்சேரலின் கொடையைப் புகழ்ந்தது, அகம் சுடு. நன்னன் வேண்மான்வியலூரைச் சிறப்பித்தது; அகம் சுஎ. வடுகர் தலைவன் எருமை யென்பானது குடநாட்டைக் கூறுவதுடன் எவ்வியிறந்ததற்குப் பாணர் வருந்தியதும் அதிகமா னெடுமானஞ்சி பகைவர்க்கஞ்சி யொளித்ததுங்கூறியது; அகம் ககடு பெருஞ் சேரலாதன் மாந்தை முற்றத்து நிதிகொட்டி யிரவலர்க்களித்த கதை கூறியது; அகம் கஉஎ. ஆயுதபூசை செய்யும் வழக்குக்கூறியது; அகம் கஅசு. கண்ணனெழினி கதை கூறியது; அகம் கஙசு. பாண்டியனது கொற்கையில் முத்தும் சங்கு மெடுத்தல் கூறியது; அகம் உ0க. மத்தியென்பவன் எழினி யென்பவனுடைய பல்லைப்பிடுங்கி வெண்மணிவாயிற் கதவிலழுத்திய கதை கூறியது; அகம் உகக. (வெண்மணி நாகபட்டணம் தாலூகாவிலுள்ள தோரூர்). உதயஞ்சேரல் பாரதப்போரிற் சோறளித்தபொழுது கூளிச்சுற்றஞ் சூழ்ந்திருந்த கதை கூறியது; அகம் உநந சங்கநிதியின் சிறப்பு, கோசர் பொதியமலை, போகூரிற் புதிய மோரியரின்றேருருள் குறைத்த கதை இவற்றைக் கூறியது; அகம் உகூக. வேங்கடத்தைப் புகழ்ந்தது; அகம் உகூடு. வடுகர் போந்தமை கூறியது; அகம் உஅக. புல்லியின் வேங்கடம், வடுகரின் ஆரவாரங்கூறியது; அகம் உகூடு. புல்லி நன்னாட்டைப் புகழ்ந்தது; அகம் நுகக. பாணனன்னாட்டுப்புகழ்ச்சி கூறியது; அகம் நுஉடு. சேரலாதன் கடம்பு முதல் தடிந்தது கூறியது; அகம் நுசஎ. நன்னது கொடைச் சிறப்பும் அவனது எழிற் குன்றச் சிறப்புங்கூறியது; அகம் நுசகூ. சேரலனது வெளியும், புல்லியின் மலை - இவற்றைப் பாராட்டிக்கூறியது; அம்க நுடுகூ. புல்லியின் வேங்கடச் சிறப்புக் கூறியது; அகம் நுகூக. வடுகர் முனையிற் கட்டியென்பது நாட்டைக்கூறியது; குறு. கக. சேரலனது கழுமலத்தைச் சோழன்வென்ற கதை கூறியது; நற். கச. சேட்படுத்த வழித்தலைவன் புலம்புவதாகக் கூறியதைக் கேட்டோரு மிரங்குவர்; நற். எடு. இவர் பாடிய நற். எடும் பாட்டு ஒன்றொழிய ஏனையவெல்லாம் பாலைத்திணையே. இவர் பாடியருளினவாக நற்றிணையில் இரண்டு (கக,எடு) பாட்டுகளும், குறுந்தொகையி லொன்றும், அகத்தில் இருபத்தாறும், திருவள்ளுவ மாலையிலொன்றுமாக முப்பது பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**மாழவனார்** — கடைச்சங்க மருவிய புலவர்.

**மாம்சதன்** — ஒரு அரசன். இடபவுருக்கொண்டு கிரிவிரசத்தைத் துன்பமுறச் செய்தவன். இவனைப் பிரகத்திரதன் கொன்று இவன் தோலால் பேரி செய்தனன்.

**மாம்பழக் கவிச்சிங்க நாவலர்** — இவர் பழனியில் கம்மாளர் குலத்தில் பிறந்தவர். இவர் தந்தை முத்தையாசாரி. இவர்

கி. பி. 1836 இல் பிறந்தார். இவருக்குத் தந்தையார் குலமக்கட் பெயராகிய மாம்பழம் என்பதைப் பெயராக இட்டு அழைத்தனர். இவர்க்கு 3 வயதில் வசூரி கண்டது. குழவியின் வருத்தந்தரியாத தந்தை குமாரக்கடவுள் சந்நிதியில் குழந்தையைக் கொண்டுபோய் அபயமிட்டனர். மறுநாள் உதயத்தில் குமாரக் கடவுளருளால் அவதரிமுழுது நீங்கியது. இவர் தந்தை முதுகில் ஐந்தாமாண்டில் எழுதிக்காட்டியபடி தமிழிற்பழகிச் சின்னாளிற் கற்று வல்லவராய்ப் பழனிப்பதிகம், குமரகுருப்பதிகம், செந்திற்பதிக முதலிய இயற்றினர். தென்முகவை பொன்னுசாமித் தேவரவர்கள் வாழும் இராமநாதபுரம் சமஸ்தானம் சென்று ஒருசீட்டுக் கவிபாடிக் கையெட்டினர்பால் கொடுத்தனுப்பினர். அரசர் இவர் அந்தகர் ஆதலால் இவரைக் காண இசைந்திலர். அரசர் கொடுத்த சமஸ்யை பாடவல்லீரோவென அவ்வாறே கொடுத்த சமஸ்ஸைகளைப்பாட கவிச்சிங்கமெனப்பட்ட மளித்து தம் சமஸ்தான வித்வானுக்கப் பெற்றவர்.

**மாம்பழச்சிங்கக் கவிராயர்** — இவரைப் பற்றி மாம்பழச்சிங்க கவிராய ரென்பதால் இவரூர் பழனிபோலும். இவர் கவிபாடுவதில் வல்லவர் போலும். இராமநாதபுரம் வந்தபோது "கிரியிற் கிரியுருகுங்கேட்டு" என சமுசை கொடுத்தபோது பாடியது "மாவாம் பொன்னுசாமி மன்னர் பிரானின்னுட்டிற், சேலாங்கண் மங்கையர் வாசிக்கு நல்யாழ் - நீலாம், பரியிற் பரிய கொடும்பாலே குளிரும்மா, கிரியிற் கிரியுருகும் கேட்டு" சேதுபதியவர்கள் பழங்கொடுத்தபோது பாடியது "அஞ்சேலெனப் பலந்தந்தான் இனியார் நமக்கு, நெஞ்சே கலிப்புலியை நீவெருட்டு, விஞ்சு பெரும், சீர்படைத்த கோனலர்ந்த தேன் மலர்ப் பொன்மாதிணங்கு, மார்பன் முத்து ராமலிங்கமால்" எனப் பாடினர். இவர் மற்றும் பலகவிகளும் பாடினர் என்ப.

**மாயசந்நியாசி** — பட்டணங்களில் சிலவஞ்சசர் முண்டனஞ் செய்துகொண்டு தேக நிறைய விபூதி பூசிக்கொண்டு மான்தோல் அல்லது சால்வை பொத்திக்கொண்டு ஒரு சிஷ்யனுடன் புறப்பட்டு ஏமாந்தவர்களை ஏமாற்றும் கட்குடியர்.

**மாயன்** — ஒரு இராக்ஷத வீரன்.

**மாயா** — சத்தபுரியுள் ஒன்று. இது வைகுந்தத்திற்கு ஏறும் ஏணியாக உள்ளது. இதற்கு அரித்துவாரம், கங்காத்துவாரம், மாயாத்துவாரம் எனவும் பெயர். கங்கை இவ்விடத்துச் சுழன்று செல்லுதலால் இப்பெயர் பெற்றது. இத்தீர்த்தத்தில் மூழ்கி அங்குள்ள மூர்த்திகளைத் தரிசிக்கில் முத்தியடைவர். (காசிகாண்டம்.)

**மாயாசுரன்** — வியோமாசுரன் தந்தை.

**மாயாசைநன்** — திரிபுராதிகளையழிக்க முதலில் விஷ்ணுவால் தம் தேகத்தினின்று சிருட்டிக்கப்பட்டவன். இவன் தனக்குச் சீடராக நால்வரைச் சிருட்டித்துக்கொண்டான்.

**மாயாதேவி** — மயன் குமரி. சம்பராசுரன் வீட்டிலிருந்த பதிவிரதை. இவளுக்கு மாயாவதி எனவும் பெயர்.

**மாயாபுரம்** — தாருகாசுரன் பட்டணம். கிரவுஞ்சகிரியை அடுத்தது.

**மாயாப்பிரலாபம்** — இது ஒரு ஞானநூல். கண்ணுடைய வள்ளலார் இயற்றியது.

**மாயாவதி** — பிரத்தியும்நனை மீன் வயிற்றிலிருந்து எடுத்து வளர்த்து நாரதர் சொற்படி அவனை மணந்தவள். இவள் பூர்வத்தில் இரதிதேவி, இவள் சம்பானுல் அபகரிக்கப்பட்டனள்.

**மாயாவாதி மதம்** — அத்வைதமதத்தைக் காண்க. (தத்துவநிஜாநுபோக சாரம்.)

**மாயாவி**—1. வாலியை யுத்தத்திற்கு அழைத்து அவனுக்கு இளைத்துப் பிலத்தில் புக வாலியால் துரப்புண்டு இறந்தவன்.

2. மயன் குமரன். துந்துபியின் சகோதரன். மந்தோதரியுடன்பிறந்தவன். இவனே வாலியை யுத்தத்திற்கு அழைத்தவனுயிருக்கலாம்.

3. இவன் பிரமனது அச்வமேதக்குதிரையை மறைக்கப் பிரமன் விஷ்ணுமூர்த்தியைவேண்ட விஷ்ணுமூர்த்தி அரக்கனைக்கொன்று குதிரையை மீட்டுத் தந்தனர்.

**மாயேசபவனம்** — ஒரு ருத்ர உலகம்.

**மாயேண்டன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். குறு - உங்கு.

**மாயை** — 1. அதர்மத்தின் குமரி.

2. விஷ்ணுவின் நாபிக்கொடியில் பிரமனுடன் உதித்த ஆன்மாக்களை மயக்குபவள்.

3. விஷ்ணுமூர்த்தியின் கட்டளைப்படி இரண்யன் புத்திரர் அறுவரையும் தேவகி

வயிற்றில் இட்டு யசோதையிடம் தான் பிறந்து மீண்டும் தேவகியிடமிருந்து கஞ்சனை மார்பில் உதைத்து ஆகாசமடைந்தவள்.

4. சுரசையென்பவளுக்கு ஒருபெயர். இவள் சுக்கிரனால் மகாமாயாவியாகிச் சுக்கிரன் சொற்படி காசிபரை முதற்சாமத்து இரவிற்புணர்ந்து சூரபத்மனையும் (௩0,000) வெள்ளம் தானவரையும், இரண்டாஞ் சாமத்திற் சிங்கவுருக்கொண்டு புணர்ந்து சிங்கமுகாசுரனையும் (௪0,000) வெள்ளம் சிங்கமுகத்தானவரையும், மூன்றாஞ்சாமத்திற் பெண்யானை யுருக்கொண்டு புணர்ந்து தாருகாசுரனையும் (௪0,000) வெள்ளம் யானை முகத்தானவரையும், நான்காஞ்சாமத்தில் பெண் ஆட்டின் உருக்கொண்டு புணர்ந்து அசமுகியென்னும் பெண்ணையும் (௩0,000) வெள்ளம் அவுணரையும் பெற்றுப்பின்னும் வெவ்வேறு உருக்கொண்டு புணர்ந்து அந்த உருக்கொண்ட (௬0,000) குமரர்களைப் பெற்றவள். இவள் சூரபன்மன் குமாரக்கடவுளிடம் போரிட்டுப் பதாதியாய் நின்றகாலத்து அவனுக்கு இறந்த சைநியங்களை யெழுப்ப மிருதசஞ்சீவியின் இருப்பிடங்கூறி மறைந்தவள்.

5. சம்பரன் தேவி.

6. ஸ்ரீ கைலாயத்தில் சிவமூர்த்தியைப் பிராட்டியார்நோக்கி உலகத்தில் என்சத்தியால் மயக்கப்படாதவர் இருக்கின்றனரோ எனச் சிவமூர்த்தி, அல்லமர் எமது அம்சமாய்ப் பிறந்திருக்கின்றனர். அவர் உன்னால் மயக்கப்படார் எனக்கேட்டு, அவரை மயக்குவதாகச் சபதஞ் செய்துகொண்டு பூமியில்வந்து அவதரித்த சத்தியின் தமோகுணவடிவம். இவள் வினவலதேசத்தில் வநவசைநகரத்தில் மமகாரன் என்பவனும் மோகினியும் செய்த தவத்தால் புத்திரியாகப்பிறந்து வளர்ந்து பரதமே முதலிய கலைவல்லவளாய்ப் புருஷனை விரும்பிச் சிவபூசைசெய்து சிவமூர்த்தியின் சந்நிதியில் நடித்து வருபவளாயினள். இவள் கருத்தறிந்த அல்லமர் மத்தளிகனாய் வந்து இவள் நடிக்கையில் மத்தளமுழங்க மாயை அவரது அழகு முதலிய கண்டு மயங்கி அவ்வரைத் தன் மனப்படி இச்சைவித்துத் தாய்தந்தையர் அறியாது அணையில் வரச்செய்து தழுவச்செல்கையில் கைக்கு அகப்படாமல் நீங்குதல் கண்டு தன் முயற்சியில் சோர்ந்து கையுஞ்சலித்து மயங்கியிருந்தனள். இவள் செய்தியறிந்த உமை, இவளுக்குத்தான் வந்த காரியமறிவிக்க விமலையை அனுப்பினள். விமலைவந்து வந்த காரியம் தெரிவிக்க அறிந்து மறுநாள் நடிக்கையில் அல்லமரை விமலை சமிக்ஞையால் காட்டினள். மாயை அவர்மீது விழுந்து பற்றப்போகையில் அல்லமர் மத்தளத்தை யெறிந்துவிட்டு ஓடினர். மாயை பின்றொடர்ந்து சபதம்பேச அல்லமர் மறைந்தனர். மாயை விமலையுடன் கைலைசென்றனள்.

7. (௫) தமம், மாயை, மோகம், அவித்தை, அநிர்தம் அவையாவன: சீவசைதன்யத்தை மறைக்கையால் தமம், ஜகத்ரூபமான அந்நிதா தோற்றத்திற்குக் காரணமாகையால் மாயை, விபரீத ஞானமுண்டாக்குகையால் மோகம், உணர்வை அழிக்கையால் அவித்தை, சத்ரூபத்திற்கு அந்நியமாகையால் அநிர்தம்.

8. இது, நித்தமாய், ஒன்றாய், சகலத்திற்கும் காரணமாய், சடமாய், எவ்விடத்துங் காரியங் காணப்படுதலால் வியாபகமாய், ஆன்மாக்களுக்கு மாயேயமான தனுவாதிகளை யுண்டாக்குவதாய் நிற்பது. இது, சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயையென மூவகைப்படும். இவற்றிற் சுத்தமாயை மலகன்மங்களோடு விரவாது சுத்தகாரிய பிரபஞ்சத்திற்கு முதற் காரணமா யிருப்பது. அசுத்தமாயை சுத்தமாயையின் கீழடங்கி மலகன்மங்களோடு விரவிச் சுத்தாசுத்த காரிய பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாயிருப்பது. பிரகிருதி மாயை: அசுத்தமாயையின் தூலபரிணாமமாய் அசுத்தகாரியப் பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாயிருப்பது. இவை, முறையே விந்து, மோகினி, மான் எனப் பெயர் பெறும். (சித்தா.)

9. இது, நித்தியமாய் • ஆன்மாக்கள் செய்த கன்மத்துக் கீடாகப் பிரகிருதியில் தோன்றிய பதார்த்தங்களைப் புசிக்கும்படி இச்சையைப் பண்ணியிருக்கவும் தோன்றாததாய் ஒன்றாய், எல்லாவற்றிற்குங் காரணமாய், சடமாய், வியாபகமாய் ஜகத்திற்கு வித்தாய் உள்ளது. இது சுத்தம், சுத்தாசுத்தம், அசுத்தம் என (௩) வகைப்படும். சுத்தம் - பிரோகாண்டம் எனவும், சுத்தாசுத்தம் - போககாண்டம் எனவும், அசுத்தம் - போக்யகாண்டமெனவும்படும். இம்மாயையின் காரியம் பாஹ்யம், ஆப்யந்த

ரம் என இருவகைப்படும். பாஹ்யம் - சிருஷ்டிகாலத்தில் கலாதிதத்வங்களி லிருக்கும் புவனுதிரூபமாக வெளியில் பிரசரித்திருப்பது. ஆப்யந்தரம் - சங்கார காலத்தில் மாயாகர்ப்பத்தில் சூக்ஷ்மரூபமாய் அடங்கியிருப்பது. பிரளய காலத்தில் ஜகத்சத்திரூபமாய் இதிலடங்குகிறபடியால் மா என்றும் சிருட்டியில் வியத்திரூபமாய் வெளிப்படலால் யா என்றும் கூறுவர். ஆதலால் மாயை யெனப்பட்டது. (சிவ-ஞா.)

**மாரதன்** — சிவபூசையால் முத்திபெற்ற அரசன்.

**மாரன்** — மன்மதன். (மணிமேகலை.)

**மாராசுரன்** — இவன் ஒரு அசுரன். வரப்பிரசாதத்தால் திரிலோகங்களையும் இம்சிக்கத் தேவர் வேண்டுகோளால் தேவியின் அம்சமாய் ஒருசக்தி இவனைச் சங்கரித்து மாரியெனும் பெயர் பெற்றனள். (ஸ்ரீ காரணம்).

**மாராட்டம்** — மகாராட்டிரதேயம். இத்தேயத்து ஆபரணங்கள் மிகப்புகழ்பெற்றவை. (பெ கதை.)

**மாராபிராம முதலியார்** — கொற்றந்தையூர் வேளாளகுலத்தினவர். இவ்வூர் செஞ்சிக்கு அருகில் உள்ளது. இவர் புகழேந்திப் புலவரால் "நையும்படி யென்கொற்றந்தை நங்கோன் செஞ்சிவரைமீதே, ஐயம் பெறு நுண்ணிடை மடவாயகிலின் றூமமுகிலன்று, பெய்யுந்துளியோ மழையன்று பிரசத்துளியே பிழையாது, வையம்பெறினும் பொய்யுரைக்க மாட்டார் தொண்டை நாட்டாரே" எனப் பாடல்பெற்று அவருக்கும் பல புலவருக்கும் பரிசளித்து உயர்ந்தவர்.

**மாராயவஞ்சி** — மாற்சரியத்தினையுடைய மன்னனாலே சிறப்புப்பெற்ற வெற்றிமிக்க வேலினையுடையோர் நிலைமையைச் சொல்லியது. (பு-வெ.)

**மாரி** — 1. யமனிடம் இருக்கும் தேவதை.

2. இவள் ஜமதக்னிருஷியின் பத்தினியாகிய இரேணுகை, ஜமதக்னி முனிவர் கார்த்தவீரியன் புத்திரராலிறக்க உடன் தீப்புக்க இவளது தேகத்தை வேகுமுன் இந்திரன் வருணனைக் கொண்டு மழை பொழிவித்துத் தணிவித்தனன். ரேணுகை தரித்திருந்த வஸ்திரமுழுதும் எரிந்து தேகந்தீக் கொப்புளமரும்பியது. ரேணுகையெழுந்து வஸ்திரமில்லாமையால் அவ்வனத்திலிருந்த வேம்பின் தழைகளை ஆடையாகத்தரித்துக்கொண்டு அருகிருந்த புலைச்சேரியடைந்து தன்பசிக்கு ஏதேனுந் தரக்கேட்டனள். அவர்கள் இவள் யாரோ வேதியப்பெண் என்று எண்ணித் தங்கள் ஆகாரத்தைத் தராது பச்சரிசி, மா, வெல்லம், இளநீர், பானகம் முதலிய தந்து உபசரித்தனர். பின்பு அவ்விடம் நீங்கி வண்ணார வீதிவந்து அவர்கள் கொடுத்த வஸ்திரத்தைத் தரித்துக் கொண்டு ஜமதக்னிருஷியிடம் வந்து துயருறும்போது தேவர்கள் தரிசனந்தந்து துயர்மாற்றினர். சிவமூர்த்தி இவளை நோக்கி நீ சத்தியம்சமர்தலால் நீ பூமியிலிருந்து கிராமத்தில் உண்டாகும் தீமைகளை விலக்க வரம்தந்து நீ கொண்ட தீக்கொப்புளம். உலகத்து உயிர்களுக்கு அம்மைக் கொப்புளங்களாகும் எனவும், அதனாலுண்டாம் துன்பந்தணிய நீதரித்த ஆடையாகிய வேப்பிலையே அதற்குரிய ஔஷதமாக எ ம், நீ புசித்த பச்சரிசி, மா, வெல்லம். இளநீர் உனக்குரிய நிவேதனமாக எ-ம், உன்னை ஆராதிப்போர் தீமையை விலக்குக எ-ம், ஆராதியாதோரை உன்னருகிருக்கும் சண்டாளரூபத்தை உன்னுள் ஆக்ரஹித்துக்கொண்டு வருத்துக என்றும் வரந்தந்து மறைந்தனர். அதனால் இவள் முத்துமாரி என்று பெயர் பெற்றுக் கிராமதேவி யாயினள். இவள் மற்ற சரித்திரங்களை ரேணுகையைக் காண்க.

**மாரிமுத்துப்பிள்ளை** — சிதம்பரத்திற்கு அருகிலுள்ள தில்லை விடங்கனில் வேளாளர் மரபில் தெய்வங்கள் பெருமாள் பிள்ளையென்பவருக்குக் குமாராய்ப் பிறந்து, கல்வி கற்று நடராச மூர்த்தியின் திருவருள் உடையாராய்த் திருமணஞ் செய்துகொண்டு மூன்று புத்திரர்களைப்பெற்று முதற் புத்திரருக்குச் சித்த பிரமையுண்டாக அதைச் சபாபதி திருவருளால் புலியூர் வெண்பாப் பாடி நீக்கிச் சிலகாலமிருந்து சாலிவாகன சகம் (கஎ0க) ல் சிவபத மடைந்தனர். இவர் செய்த நூல்கள் சிதம்பரேசர் விறலிவிடுதூது, வருணபுரிக் குறவஞ்சி, புலியூர் வெண்பா, நொண்டி, அநீதி நாடகம், பள்ளு, சித்திரக்கவி முதலிய.

**மாரிஷை** — இவள் கண்டு மகருஷிக்குப் பிரமலோசையிடம் பிறந்தவள். இவள் கன்னிப் பருவத்தில் மங்கலமிழந்து புத்திர சந்தான மில்லாததால் விஷ்ணுமூர்த்தியை யெண்ணித் தவமியற்றினள். அவர் தரிசனந்தந்து உனக்குப் பதின்மர் புருஷ

னும், ஒரு புத்திரனும் உண்டாவன் என்று கூறி மறைந்தனர். இவளுக்குப் பிரசேதஸுக்கள் பதின்மரும் கணவர்களாயினர். குமரன் தக்ஷன். கண்டு மகருஷியைக் காண்க.

மாதங்கர் — தோல் துன்னும் தாழ்ந்த சாதியார்.

மாரீசம் — உபபுராணத் தொன்று.

மாரீசன் — சுநந்தனுக்குத் தாடகையிடம் பிறந்தவன். இவன் தன் தந்தையைக் கொன்ற அகத்தியரை வெல்லக் கருதிச் சென்று அவரால் அரக்கனாகச் சபிக்கப்பட்டுச் சுமாலியைத் தந்தையாகப்பெற்றவன். சுபாகின் சகோதரன். விச்வாமித்திரர் யாகஞ்செய்கையில் சுபாகு மாரீசரிருவரும் அவரைத் தொந்தரை செய்துவந்தனர். இதனால் விச்வாமித்திரர் இராமரை அழைத்துவந்து தாம் செய்யும் யாக காதகரைக் கொலைசெய்யக் கட்டளையிட்டிருக்கையில் அவ்வரக்கர் இருவரும் வந்து யாகத்தைக் கெடுக்கத் தொடங்கினர். இராமமூர்த்தி ஆக்னேயாஸ்திரம் பிரயோகித்துச் சுபாகுவைக்கொன்று வாயுவாஸ்திரம் பிரயோகித்து மாரீசனைக் கடலில்விழுத்தினர். இதனால் இவன் இராமமூர்த்தியெதிரிற்செல்லின் கொலைநேருமென்னும் அச்சத்தால் தென்கடற்கரையில் ஒரு ஆச்சிரமம் செய்துகொண்டு தவஞ்செய்துவந்தனன். இவன் இராவணன் வேண்டுகோளால் ஆரண்யவாசத்திற்குவந்தஇராமமூர்த்தியின் பத்தினியாகிய சீதாபிராட்டி முன் பொன்மான் உருக்கொண்டு மேய்ந்தனன். சீதை மானைக்கண்டு மயங்கித் தனக்கு அம்மானைப்பிடித்துக் கொடுக்க இராமமூர்த்தியை வேண்டினள். இராமமூர்த்தி இதனைப் பின்தொடர்ந்து பிடிக்கப்போகையில் மான் கெடுந்தூரஞ்சென்றதுகண்டு இது மாயமானாக வேண்டுமென எண்ணி அத்திரம் பிரயோகிக்க அடியுண்டுவிழுந்த அரக்கன், தன் உருவத்துடன் "சீதா இலக்ஷ்மணா" எனக்கூறி உயிரைவிட்டனன். புஷ்போத்கடைக்கு விச்ரவாகால் பிறந்தவன் என்றுங் கூறுவர்.

மாருதவேகன் — இந்திர விழாக் காணக் காவிரிப்பூம்பட்டினம் வந்த சுதமதியைச் சண்பைநகரத்திற் கவர்ந்துகொண்ட ஒரு வித்யாதரன். (மணிமேகலை).

மாருதி — அநுமானுக்கு ஒரு பெயர். அநுமனைக் காண்க. மாருதி புத்திரன்.

மாருதீச்சிறியாண்டான் — உடையவர் மடத்திற்கு அமுதுபடி, நெய், பால், கறியமுது நடத்தினவர்.

மாருதிப்பெரியாண்டான் — எழுபத்திநாலு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். உடையவர்க்குக் கைச்செம்பு பிடிப்பவர். (குருபரம்.)

மார்க்கங்கள் — இவை முத்தியடையும் வழிகள். அவை, சன்மார்க்கம், சகமார்க்கம், புத்திரமார்க்கம், தாசமார்க்கம் என நால்வகைப்படும். இவற்றை ஞானம், யோகம், கிரியை, சரியை எனக்கூறுவர். இவற்றால் சாயுச்சியம், சாரூபம், சாமீபம், சாலோக பதவிகளுண்டாம். (சித்தா.)

மார்க்கசகாயதேவர்—திருவிரிஞ்சைப் பிள்ளைத்தமிழ் பாடிய புலவர். இப்பிள்ளைத் தமிழ் சொற்பொருள் அழகும், இனிமையும் உடையது.

மார்க்கசகாயர் — 1. திருவிரிஞ்சையில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவமூர்த்தியின் திருநாமம்.

2. திருவள்ளுவரால் பூதத்தைப்போக்கப்பெற்றுத் தம் குமரியை அவருக்குக் கொடுத்த வேளாண் குலத்தவர். இவர் காவேரிப்பாக்கத்து இருந்தவராம்.

மார்க்கண்டன் — 1. ஒரு சிவவேதியன். கழுகாசலத்தில் கடை வைத்திருந்த விசாலக்கண்ணி இடம் சிவத்திரவியம் நாள்தோறும் கவர்ந்து கொடுத்துத் தீமைபுரிகையில் ஒருநாள் சிவமூர்த்தியின்மீது அணிந்திருந்த பொன் அணிகவருகையில் சர்ப்பந்தீண்டி இறந்து மறுபிறப்பில் புலியாய்க் காளத்திக்ஷேத்திரத்துக் காட்டில் உலாவிச் சிவதரிசனத்தின் பொருட்டுத் திருக்காளத்தி செல்லும் ஒருவனைத் துரத்திச்சென்று அவன் சந்நிதிக்குள் புகுந்து ஒளிக்க ஆண்டுத் தீபார்த்திகண்டு நின்ற பலத்தால் முத்தி அடைந்தவன்.

2. ஒருபிரளயத்தில் விஷ்ணுவைக்காண அவர் நீ யாரென்ன இவர் இவரது நிலை கூற அவர் வாய்வழிசென்று உலகமெலாங் கண்டு வெளிவந்து துதித்தவர்.

3. விஷ்ணுவிடம் பலவரங்களைப் பெற்றான். (பிரஹன்னாரதிய-புரா.)

மார்க்கண்டேயம் — பதினெண் புராணத்தொன்று. இது முப்பத்திராயிரம் கிரந்தமுடையது. இது சைமினிபகவான் முற்பிறப்பில் வேதமுதலிய உணர்ந்து பிற்பிறப்பில் தருமபக்ஷிகளாயிருந்த இரண்டு

பக்ஷிகளை விஷ்ணு மானிடவுருத் தாங்கியதற்குக் காரணம் யாதெனவும், பாண்டவர் ஐவருக்கும் திரௌபதி யொருத்தி மனைவியாவது என் என்றும், பலராமர் மதுமயக்கத்தாற் செய்த பிரமகத்திக்குப் பிராயச்சித்தஞ் செய்வான் ஏன் எனவும், கிருஷ்ணார்ச்சுநர் இருவருக்கும் அகாலமரணம் எய்தியது என்னெனவும், வினவியதற்கு விடைகூறியது.

மார்க்கண்டேயர் — மிருகண்டு முநிவருக்கு மருத்துவதியிடம் பிறந்த குமார். இவரது தாய்தந்தையர் தமக்குப் பதினாறுவது வயதில் ஆயுளின் காலஅளவு எனக் கூறக் கேட்டுச் சிவமூர்த்தியையெண்ணிப் பூசித்துவருகையில் ஆயுளின் முடிவில் யமன் வந்து சிவபூசை செய்திருக்கும் காலையில் பாசம்வீச இவர் சிவபூசையினின்று நிலைதவறாதவராயிருந்தார். சிவமூர்த்தி சிவலிங்கத்திடமாக உக்கிரமூர்த்தியாய் யமனுக்குத்தோன்றி யமனைவிழ உதைத்து இவருக்குச் சிரஞ்ஜீவி, இவ்வயதுடன் இருக்க அருளிச்செய்து பூமிதேவி வேண்ட யமனை யெழுப்பி அநுக்கிரகித்து அனுப்பினர். பாண்டவர்க்குத் தருமங்கூறினவர். அநேக சலப்பிரளயம் கண்டவர். இந்திரத்துய்ம்மனைச் சந்தித்து ஆயுளின் அளவைக் கூறியவர். கோட்டானைச் சந்தித்து ஆயுளின் அளவைக் கேட்டவர். கண்ணனைச் சிவபூசைக்குக் காரணம் வினவி அவரால் முதற்பொருள் அறிந்தவர். விஷ்ணுமூர்த்தியின் தேகத்துட்புகுந்து பிரபஞ்சங்களைக் கண்டவர்.

மார்கண்டேயர் ஆஸ்ரமம் — கோமதி, சரயு, இரண்டும் சேருமிடத்திலுள்ள க்ஷேத்திரம். At the confluence of the Sarau and the Gomati, near Bageswara in the district of Kumaun. Markanda Rishi performed asceticism at this place.

மார்க்கண்டேயனர் — 1. ஒருபுலவர். மார்க்கண்டேயர் காஞ்சி இவராற் செய்யப்பட்டது. மதுரைத் தலைச்சங்கப்புலவருள் ஒருவர். இவர் செய்தநூலை நச்சினார்க்கினியர் தலையாயவோத்தென்று கூறுவர்.

மார்க்கதாயினிபீடம் — சத்திபீடங்களில் ஒன்று.

மார்க்கவன் — நிஷாதனுக்கு அயோகஸ்திரியிடம் பிறந்தவன். இவனே செம்படவன், இவனுக்கு ஓடம் விடுவது தொழில். (மநு.)

மார்ச்சாரி — சகதேவன் குமரன். இவன் குமரன் சுதசிரவசு.

மார்த்தவமதசித்தாந்தம் — நாராயணனே சர்வோத்தமனானதேவன். ஜகத்சத்தியம் ஜீவாத்மா பரமாத்மாக்களுக்குப் பேதமுண்டு. எல்லா உயிர்களும் தாரதம்மியாதி குணமாய் விஷ்ணுவின் பரிஜனங்கள். ஸவாதார சுகானுபவமே மோக்ஷம். நிர்மலமான பகவத்பக்தியே மோக்ஷமார்க்கோபாயம் பிரத்தியக்ஷாதி பிரமாணத்திரயம் பிரமாணம். இம்மதத்தில் சுதந்தரம் அசுதந்தரம் என்று இரண்டு தத்துவங்கள் முக்கியமானவை. சுதந்தரன் பகவானான நாராயணன், அசுதந்தரன் ஜீவன், இந்த ஜீவர்கள் இராஜனுக்கு ஏவலாளிகளைப் போல நாராயணனுக்குத் தாசராய் விஷ்ணுலோகத்தில் வசித்திருப்பர். ஆதலால் ஜீவேஸ்வரர்கள் பரஸ்பர வேறுபாடுள்ளவர்களே யன்றி அபேத முள்ளவர்களல்லர். ஒன்றென்போர் அரசனுடன் ஒரு தானத்தை விரும்பும் ஏவலாளி. அரசனால் தண்டிக்கப்படுவான் போன்று நரகத்தை யடைவர். பகவான் சேவை யெத்தன்மைத்தெனின் அங்கம் நாமகரணம் பஜனம் என்று மூவகைத்து. அவற்றுள் அங்கமென்பது நாராயணனுடைய பஞ்சாயுதங்களையும் தேகத்தில் தரித்தல். நாமகரணமெனின், புத்திரருக்கு நாராயணன் பேரை யிடுதல். பஜனமெனின் நாராயண நாமத்தியானம். இம்மதத்தினர்க்கு ஆத்மா அணு, ஜீவர்கள் பலர். ஆத்மாக்கள் புண்ணிய பாவங்களைக் கொண்டு தேகமெடுப்பர். பகவான் கிருபையினாலே மோக்ஷத்தை யடைவர்.

மார்த்தவமதம் — இம்மதத்தவர் துவிதமத சித்தாந்தங் கூறுவர். இம்மதத்திற்குப் பாஷ்யஞ்செய்தவர், ஆநந்த தீர்த்தாசாரியர். இம்மதம் ஜீவாத்மாக்கள் பரமாத்மாக்கள் வேறு எனவும், பஞ்சபேதமாகிய ஜீவேஸ்வரபேதஞானம், ஜீவபரஸ்பர பேதஞானம், ஜடஜீவபேதஞானம், ஜடசபேதஞானம், ஜடபாஸ்பரபேதஞானம், எனும் சித்தாந்தத்தைப்பெற்றது, இதில் ஜீவன் நல்வினை, தீவினையென இருபகுதிபெற்றுத் தம்தம் பழையவுருக்களாகவே வெவ்வேறாகஇருந்து பஞ்சபேத ஞானத்தை யடைந்து அவ்வுருவத்தோடிருத்தலே முத்தியெனவும் கூறுவர்.

மார்த்தாண்டமூர்த்தி — மூன்று முகம், ஆறு கைகள், அபயம், வரதம், ஜபமாலை, கமண்

டலம், இரண்டு கைகளில் இரண்டு கமலங்கள் முத்துமாலை யுடையவரா யிருக்குஞ் சூரியமூர்த்தி.

**மார்த்தாண்டன்** — 1. சூரியன் உலகங்களைப் பிழைக்கச் செய்பவன்.

2. ஒருசூரியன் இவன் பிரமனுல் சிருட்டிக்கப்பட்ட சுரபியை மணந்து உலகத்தில் கோக்களை விருத்தி செய்வித்தான். (பாரஅநுசா.)

**மார்த்தாண்டி** — 1. சத்தியவதிக்கு ஒரு பெயர்.

2. ஒரு வலைஞன், யமுனைத்துறைவன்.

**மார்பன்** — திருதராட்டிரன் குமரன்.

**மார்புநோய்** — இது இருத்ரோக மெனப்படும். இதனைத் தமர்வாதம், ருத்ரவாதமெனவுங் கூறுவர். வாதபித்த, சிலேஷ்ம, திரிதோஷகிருமி மார்பு ரோகமென ஐந்துவகைப்படும். இது மார்பில் குத்தல், நோ, அதிரல், மரத்தல், வறளல், மூர்ச்சை, எரிச்சல், புளியேப்பம், இளைப்பு வாந்தி ஸ்தம்பித்தல், சோம்பல், ஆமாசயத்தில் பூச்சிகள் இவைகளைக் கொண்டிருக்கும். இவற்றில் நான்கு சாத்யம் இறுதியது அசாத்யம் இதனை சுருமாரவிரேசனம், பன்னீர்ப் பூக்கஷாயம், மகா வில்வாதி லேஹ்யம் முதலியவற்ருல் வசமாக்கலாம்.

**மார்ப்பித்தியார்** — 1. ஒரு தமிழ்ப் புலவர்.

2. புறநானூறு பாடிய புலவரில் ஒருவர்.

**மார்மாட்** — இது எலியினத்தில் ஒருவகை. இது, வடஅமெரிக்கா, ஆசியா, தார்த்தாரி, மங்கோலியா, சைபீரியா முதலிய நாடுகளில் வசிப்பது. இவ்வினத்தில் (14) வகைகளுண்டு. இது, பூனையை யொத்த உருவத்தில் நீண்டு பருத்த உடலும், குறுகிய காலும் உள்ளது. இதன் கை கால்களில் அவ்வைந்து விரல்களிருக்கின்றன. இது பூமியில் வளைதோண்டி வசிக்கிறது. அவ்வளைகளில் மேலும் கீழுமாக (2) வளைகளுண்டு. வேனிற்காலத்தில் மேல்பாக வளையில் செத்தைகளைப் பரப்பித்தங்கும். மாரி காலத்தில் வளையை விட்டு வருவதில்லை. மாரிகாலத்திற்குரிய ஆகாரத்தை வளையில் சேர்த்து வைத்துக் கொள்ளுகிறது. இவ்வினத்தில் அணிலைப்போன்று முதுகில் வரிகளுள்ளவையும் உண்டு. இவ்வினத்தில் மற்ருென்று வாயில் இரைகளை அடக்கிக்கொள்ள பைபெற்று இருக்கிறது.

**மார்வாடி** — (மார்வாரி) இவர்கள் மார்வார் தேசத்திலிருந்து தென் இந்தியா முழுதும் பரவிப் பணத்தை வட்டிக்குக் கொடுத்து வியாபாரஞ் செய்யும் சாதியார்.

**மாலகன்** — அசுமகன் மகன்.

**மாலதி** — 1. தொண்டீமான் தேவி.

2. காவிரிப்பூம்பட்டினத்திலிருந்த ஒரு பார்ப்பினி. (சிலப்பதிகாரம்).

3. சாகலன் தேவி. சாவித்திரிக்குத் தாய்.

**மாலய அமாவாசை** — மகாலய அமாவாசை காண்க.

**மாலருஷி** — வேடர் பெண்களைப் புணர்ந்து எனுதிகளைப் பெற்றவர்.

**மாலன்** — அதிகாயன் யுத்தத்தில் இலக்குமணரால் கொல்லப்பட்டவன்.

**மாலாங்கழனிவர்** — திருமூலர் மாணுக்கரில் ஒருவர். (திருமந்.)

**மாலாதரன்** — ஒரு வேடன். இவன் மாதவி மரத்தில் தனக்காக மாலை தூக்க அது அடியிலிருந்த சிவலிங்கத்திற் கணிந்தது போலிருக்க அதனுல் முத்தி பெற்றவன்.

**மாலாவதி** — உபபர்க்கணன் தேவியரில் ஒருத்தி, பதிவிருதை, இவள் தன் கணவன் பிரிவிற்கு ஆற்ருதவளாய்த் தேவரைச் சபிக்கத் தொடங்கியவள். (பிரம்மகைவர்த்தம்).

**மாலி** — 1. சுகேசன் குமரன். மாலியவானைக் காண்க. விஷ்ணு சக்கரத்தால் கொல்லப்பட்டவன்.

2. துரியோதனன் தம்பி.

3. இராவண சேநா வீரன். இலக்குமணரால் இறந்தவன்.

4. பராசருஷியின் புத்திரன்.

5. கௌசிகன் மருமகன்.

**மாலியகேது** — சுமாலியைக் காண்க.

**மாலியவான்** — சுகேசன் குமரன். பிரமனையெண்ணி நெடுநாள் தவம்புரிந்து உலகமெல்லாந் தன் ஒரு குடைக்கீழ் அடங்க வரம் பெற்றவன். விச்வகர்மன் முன்னிருமித்த பட்டணமாகிய திரிகூடத்தில் குடிபுகுந்து அரசாண்டவன். (இச் சரிதையை மாலி சுமாலிகளுக்குங் கொள்க. இம்மூவர்களுக்கும் தேவியர் சுந்தரி, கேதுமதி, சுவதை.) தேவாசுர யுத்தத்தில் விஷ்ணுவிற்குப் பயந்து பாதலமடைந்து கைகேசியை விச்சிரவாவிடம் எவி அவனுடன் இருக்கச் செய்து இராவணன் முதலியவரை விருத்தி செய்வித்தவன். சீதையை விட்டு விடும்படி இராவணனுக்குப் புத்தி கூறியவன். புட்பதந்தனைக் காண்க.

மாலினி — 1. உமையின் தோழியரில் ஒருத்தி. குடை பிடிப்பவள்.

2. திரௌபதியின் அஞ்ஞாத வாசப்பெயர்.

3. ஒரு நதி. அயோத்தியிலுள்ளது.

4. ஒரு அசுரன். விஷ்ணுவால் கொலையுண்டவன்.

5. பிரமலோசையின் பெண். உருசிப்பிரசாபதியை மணந்து ரௌச்சியனைப் பெற்றவள்.

6. விபீஷணன் தாய்.

7. ஒரு நதி. Malini is the name of a river, which falls into the river Ghogra (Saraju) 50 miles above Ayodhya. The Hermitage of Kanwa stands upon it.

8. சுவாயம்பு மநுவின் தேவி. சஷ்டி தேவியைக் காண்க.

மாலுதானர் — ஒரு இருடி. வைகானச முனி புத்திரர். எக்யசருமனைக் காண்க.

மாலுமி — மருத்துவன் பிராமண ஸ்திரீயைப் புணரப் பிறந்தவன்.

மாலை — 1. குணமாலையின் தோழி.

2. பூக்களால் தொடுத்தது. இது இண்டை மாலை, பத்தி மாலை, நுதலணி மாலை, மத்தக மாலை, பின்னிய மாலை, வாகை மாலை, கோத்த மாலை, முதலியன. வெட்சி, குறிஞ்சி, வஞ்சி, காந்தை முதலியவும் உண்டு.

மாலைநிலை — ஒளியால் மிக்கவேலினையுடைய கொழுநனோடு செறிந்த நெருப்பிலே புகுவான் வேண்டிப் பிறையையொத்த நெற்றியினையுடையாள் மாலைக் காலத்திலே நின்றது. (பு வெ. பொது.)

மாலைப்பொழுது செய்வனதவிர்வன — மாலைப்பொழுதில் சயனித்தலும், வழி நடத்தலும் செய்தல் ஆகா. அந்திப்பொழுதில் விளக்கு ஏற்றல் வேண்டும். அந்திப் பொழுதில் உணவு கொள்ளாது அந்திக் குறைகையில் உண்டு ஓரிடத்தில் அடங்கல் வேண்டும்.

மாலைமாறன் — இவர் கடைச்சங்க காலத்திருந்த பாண்டி நாட்டரசர் போலும். (குறு-உசுகு)

மாலைமாற்று — இது சித்திரக்கவியிலொன்று. ஈறு முதலாக வாசித்தாலும் அப்பாட்டேயாவது. (யாப்பு-வில.)

மாலைவிளக்கணி — அஃதாவது, தீபகத்தையும் ஏகாவளியையுஞ் சேர்த்துச் சொல்லுதலாம். இதனை வடநூலார் மாலாதீபகாலங்காரம் என்பர்.

மால் — விஷ்ணுமூர்த்திக்கு ஒரு பெயர்.

மால்யகிரி — ஒரு பாகவதன்.

மால்யவந்தம் — இராமமூர்த்தி கார்காலத்துத் தங்கியிருந்த மலை; கிஷ்கிந்தைக்கு அருகில் உள்ளது.

மால்யவான் — ஒரு பர்வதம். Northern portion of the Eastern Ghats in the Districts of Cuddapa, Kurnool, Nellore, Guntur. etc.,

மாவசு — அச்சோதைக்குத் தந்தை.

மாவண்கிள்ளி — ஒரு சோழன். (மணிமேகலை.)

மாவண்டூர் கருமான் — இவன் கம்பர் இசையுளை நன்றென அங்கீகரித்தவன்.

மாவண்முல்லை வலூத்தனர் — கடைச்சங்க மருவிய புலவர்.

மாவலி — 1. பலியைக் காண்க.

2. ஓர் அரசன். நெடுமுடி கிள்ளியின் மனைவியாகிய சீர்த்தி இவன் குலத்திற் பிறந்தவள். (மணிமேகலை).

மாவலிகங்கை — ஒருநதி; இலங்கைத்தீவிற் சமனொளி மலையிலிருந்து உண்டாவது. (திரு.)

மாவளத்தன் — இவர் ஒரு பிரபுவாக இருத்தல் கூடும். கடைச்சங்கத்தவர் காலத்திருந்தவர். இவர் முல்லையரும்பு யானைக் கோடுபட்டுத் தேனொழுகுதலை முலைமீது கண்ணீர் விழுதற்குவமை கூறியுள்ளார். (குறு-நசுஅ.)

மாவளத்தான் — சோழன் நலங்கிள்ளியுடன் பிறந்தவன். தாமப்பல் கண்ணனாரால் பாடப் பெற்றவன். இவன் தாமப்பல் கண்ணனாருடன் வட்டாடியபோது அவர் கைகரப்பத் தான் வெகுண்டு வட்டுக்கொண்டெறியப் புலவர், சோழன் மகன் அல்லையென நாணிப் பின்பு அவராற்புகழ்ந்து பாடப் பெற்றவன். (புற-நா).

மாவன் — மையலென்னும் ஊரிலிருந்தவன். ஒல்லையூர்தந்த பூதபாண்டியனுக்கு நண்பன்.

மாவிரதன் — சிவமூர்த்தியை எண்ணித் தவமியற்றி நற்பயனடைந்தவன்.

மாவிலங்கை — இது ஓய்மா நல்லியக்கோடனூர். (புற. நா.)

மாவிலை — இது சகல சுபகார்யங்களில் ஸ்தபனகும்பாதி தேவதைகளுக்கு முடியாக உபயோகப்பட்டும் மங்கலபத்ரங்

[stamp]

களாகிய பஞ்ச பல்லவங்களில் ஒன்றாக வுங் கொண்டு வழங்கி வரப்பட்டது.

மாளவதேவீ — கேகயராசன் இரண்டாவது தேவி. குமரன் ஈசகன்.

மாளவம் — 1. (மால்வா) உச்சயினியின் முக்கிய பட்டணம்.

2. இது ஒருதேசம். Malwa. Its Capitals were Ujjain and Dharanagara at the time of Raja Bhoja. It is situated in the North-West of Anupadesa.

மாளவி — 1. கேகயன் என்னும் பெயருள்ள சூதன்தேவி. ஈசகர்களுக்குத் தாய்.

2. அசுவபதியின் பாரியை, சாவித்திரியின் தாய்.

மாளுவவேந்தர்— மாளுவதேசத்தரசர் (சிலப்பதிகாரம்.)

மாறஞ்சடையன் — பாண்டி நாட்டரசர்களில் ஒருவன். இவன் பத்தினி நக்கங்கொற்றியார். இவன் பல தருமங்கள் செய்தனன்.

மாறநேர்நம்பி — இவர் பராந்தகம் எனும் கிராமவாசி. சாதியாற் பஞ்சமர், இவர் ஒரு நாள் தம்மூர்வழி ஆளவந்தார் வந்து கொண்டிருக்கையில் கழனி வேலைசெய்து கொண்டிருக்கப் பசிமேலிட்டுக் கழனியிலிருந்த சேற்றினைப் பெருமாளுக்கு நிவேதித்து உட்கொண்டனர். இதனை ஆளவந்தார்கண்டு தமது சிஷ்யர்களை விட்டு இவரை அழைக்கக் கூறப் பஞ்சமர் வந்தனர். ஆளவந்தார் இவரைநோக்கிக் கடவுளால் படைக்கப்பட்ட பொருள்கள் பசிவருங்கால் உண்ணச் சோறிருக்க இச்சேற்றினை உண்பானேன் என்ன, இவர் இம்மண்ணிற்கும் அதற்கும் வேற்றுமை காண்கிலேனாதலால் பசிவந்த காலத்து உண்டேனென்று விடைதர ஆளவந்தார் நோக்கி இவர் பிறந்தபோதே கடத்தை முனிந்த மறனேவென்றுகூற இவர்க்கு இன்றுமுதல் மாறநேர்நம்பி என்றுபெயர் உண்டாகுக என்று தம்மாணாக்கருள்ஒருவராக்கினர். இவர் தமது ஆசாரியருக்குற்ற பிராக்ருதானுபவமாகிய ராஜ ரணத்தை விருப்பாயேற்று அநுபவித்து வருகையில் இவரது ஆசார்ய பக்தியைநோக்கிப் பெரியநம்பி பஞ்சமரென்றுபாராமல் தண்டன் சமர்ப்பித்துப் பிரசாதங்கொடுத்து வந்தனர். இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் பெரியநம்பிகள் பிரசாதமெடுத்துச் செல்கையில் உடையவர் பின்தொடர்ந்து இவரது ரணத்தைக்கண்டு பெருமானைத்யானிக்க ரணம் மறைய மாறநேர்நம்பி ஆசார்யத்ரோகமாக நீர் ஏதோ செய்தீரென்று கல்லெடுத்துத் தமது தலையைமோதச் செல்கையிலிவரது ஆசார்ய பக்தியைக்கண்டு ரணத்தை அவருக்கே தந்து உடையவர் சென்றனர். பின்பு சில காலத்திற்குப் பிறகு இவர் பிரமகபாலந்திறந்து ஆசார்யர்திருவடி யடைந்தார்.

மாறனலங்காரம் — 1. இது திருக்குருகைப் பெருமாள் கவிராயரென்பவரா லியற்றப்பெற்ற ஓர் அலங்காரநூல். இதற்கு உதாரணமான செய்யுட்கள் சடகோபாழ்வார் விஷயமானவை. அவையும் அவரால் இயற்றப்பட்டனவே. இந்நூலாசிரியருக்கு சடையனென்றும் ஓர் இயற்பெயருண்டு.

2. ஒரு அணியிலக்கணம். இதில் உதாரணம் முதலியவை யெல்லாம் விஷ்ணுபரமாக உதகரித்திருக்கிறது.

மாறனார் — கடைச்சங்கப் புலவருள் ஒருவர்.

மாறன் — ஒரு பாண்டியன். குறுநில மன்னன்.

மாறன்பொறையன் — ஐந்திணையைம்பது பாடிய புலவன்.

மாறன்வழுதி — பாண்டியன் மாறன்வழுதி காண்க.

மாறுபடு புகழ்நிலை — இதுகவி, தான் கருதியபொருளை மறைத்து அதனைப் பழித்தற்குவேறொன்றினைப் புகழ்வது. (தண்டி)

மாறோக்கத்துத் நாமக்கண்ணி நப்பாலத்தனார் — கடைச்சங்கமருவிய புலவர்.

மாறோக்கத்து நப்பசலையார் — கபிலரைப் புகழ்ந்தவர். மலையமான் திருமுடிக்காரி, மலையமான் சோழிய வேநாதி திருக்கண்ணன், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் முதலியவரைப் பாடியவர். (புற-நா).

மாறோக்கம் — கொற்கையைச் சூழ்ந்தநாடு.

மாற்றுநிலையணி — அஃதாவது இழிவாகிய பொருளைக்கொடுத்து உயர்வாகிய பொருள் வாங்குதலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பரிவிர்த்தி யலங்காரமென்பர். (குவல)

மாற்றுரைகாட்டிய விநாயகர் - திருவாரூர்க் குளக்கரையில் எழுந்தருளியிருந்து சுந்தரமூர்த்தி சுவாமிகள் மணிமுத்தா நதியில் விட்டுத் திருவாரூர்க் குளத்திலெடுத்த பொன்னுக்கு மாற்றுகூறிய விநாயகர்.

**மானசவேகன்** — வெள்ளி மலையிலுள்ள நூற்றொருபது வித்தியாதர அரசர்களுள் ஒருவன். இவன் மதனமஞ்சிகையை விரும்பி எடுத்துச்சென்று நரவாணதத்தனால் வெல்லப்பட்டான். (பெ. கதை.)

**மானமங்கலம்** — திருவாதவூரருடைய முன்னோர்க ளிருந்தவூர்; இதனால் அவர்கள் மானமங்கலத்தாரென்று கூறப்படுவர். இவ்வூர் மானபுரமெனவும் வழங்கும். (திரு.)

**மானஸாதேவி** — இவள் பிரகிருதி தேவியினம்சம். இவள் சங்கரப்ரியை அநந்தன் சகோதரி, நாகங்களால் பூசிக்கப்பட்ட நாக பூஷணி நாகேச்வரி. சாதகாரபத்னி ஆஸ்திக முனிவரின் தாயாதலால் ஆஸ்திக மாதா இவளைத் துதிப்பார்க்குச் சர்ப்ப பயமில்லை. காசிபமுனிவர்க்கு மனதில் பிறந்தவள் என்பர். (தேவி. பா.)

**மானனிகை** — இது கோசலத் தரசனுடைய மகளது வேறு பெயர். இவளது இயற்பெயர் வாசவதத்தை யென்பது. இவள் தாய் வசுந்தரி யென்பாள். கோசலத்தரசனைவென்று அவளது அந்தப்புரத்திலிருந்து பாஞ்சாலராசன் கவர்ந்துசென்ற மங்கையர்களுள் இவளும் ஒருத்தி. பின்பு அவனுடைய பட்டதேவியின் பணிப்பெண்ணாக இருந்து அவனைக்கொன்ற உதயணனாற் கொண்டுவந்த மகளிரோடு இவளும் கொண்டு வரப்பட்டு வாசவதத்தையின் பணிப்பெண்ணாக இருந்து தன்னுடைய பந்தாட்டத்தைக் கண்டு மோகித்த உதயணனுக்கு பின்பு மனைவியாயினள். இவள் யவன பாஷையிலும் சிற்ப வேலையிலும் பந்தாடுதல் முதலியவற்றிலும் மிகத்தேர்ச்சியுள்ளவள். (பெ. கதை.)

**மானேடேர்மிஸ்** — ஒருவகை ஆஸ்திரேலியவாசி எறும்புதின்னி மிருகம். இது, அழுத்தமான கொம்புபோலும் மயிர்மூடிய தேகமுள்ளது. வாய்மெலிந்து உருண்டு நீண்டு குழாய்போல் எலும்பழுத்த முள்ளதாக இருக்கிறது. இதன் நாக்கும் உருண்டு நீண்டு அடிதடித்தும் முனை சிறுத்தும் பசையுள்ளதாயும் இருக்கிறது. அந்த நாவை எறும்பு புற்று முதலியவற்றில் நீட்டிப் பசையால் பிடித்து எறும்பு முதலியவற்றைத் தின்கிறது. இவ்வினத்தில் பலபேதம் உண்டு. இவை விலங்கினமாயினும் முட்டையிட்டு அவற்றை வயிற்றிலுள்ள பையில் வைத்து உஷ்ணத்தால் அதை பொரியச் செய்கிறது. அக்குஞ்சு தாயின் மடியிலிருந்த வண்ணம் மூக்கால் பாலை யுண்கிறது. இவை வளைதோண்டி வசிக்கும். இவ்வினத்தில் ஒருவகை ஆண்டிஸ் மலைப்பிரதேசத்தில் இருக்கிறது. அது எறும்பு தின்னிகளில் பெரிது. இதனை டாமண்டுவா (கிரேட் ஆண்ட் ஈடர்) என்பர். (4½) அடி நீளம் காடிபோல் உடலெங்கும் மயிர் மூடியிருக்கிறது.

**மானோக்கத்து நப்பசலையார்** — மானோக்கம் கொற்கையைச் சூழ்ந்ததொரு நாடு. பசலை மகளிர் கணவனைப்பிரிந்த காலத்து அவர்க்கு முன்புள்ள நெற்றியினொளி கெட்டுக் கண்ணாடியில் வாயினூதியபொழுது ஆவிபடர்ந்து ஒளி மழுங்குவதுபோல வேறுபட்டுக் காட்டுந்தன்மை நற். ௩௦௪ ம் பாட்டில் "மறுமிடை பொன்னின் மாமை சாய வெண்ணிற்கு சிதைக்கு மார்பசலை" என்று பசலையி னியற்கையைத் தெளியக் கூறியவதனால் நப்பசலையா ரெனப்பட்டார். ந சிறப்புபொருள் உணர்த்தும் இடைச்சொல். இவர் பெண்பாலர். இவரது இயற்பெயர் புலப்படவில்லை. இவர் சோழன் குளமுற்றத்துஞ்சிய கிள்ளிவளவனது போர் வெற்றியைப் புனைந்து பாடியுள்ளார். புறம் ௩௭. மற்றும் அவனது கொடை முதலாயினவற்றைச் சிறப்பித்து இயன்மொழி கூறினர். பின்பு அவனிறந்தபொழுது இரங்கிக் கூறிச்சென்றார். புறம். ௨௨௬ மலையமான் திருமுடிக் காரியிடஞ்சென்று பரிசிற்றுறைப் பாடிப்பரிசில் பெற்றனர். புறம். ௧௨௬. முற்கூறிய காரியின் மகன்சோழிய வேனாதி திருக்கண்ணனைப் புகழ்ந்து அரசவாகை பாடினர். இவர் கபிலரைப் பெரிதும் புகழ்ந்துள்ளார். குறிஞ்சியையும், பாலையையும் புனைந்து பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும் அகத்தில் ஒன்றும், புறத்தில் எழுமாக ஒன்பது பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**மானோக்கம்** — இது கொற்கையைச் சூழ்ந்த நாடென்பர். மானோகமெனவும் வழங்கும். (புற. நா.)

**மான்** — இது உருவத்தில் இளங்கன்று குட்டிபோன்றது. இச்சாதியிற் பலவகைகள் உண்டு. இது வளர்த்தால் பக்ஷமாக இருக்கும். இது ஓடுகையில் இதன் கால்கள் பூமியில் தங்கா. இதின் ஆணிற்குக் கொம்புகள் உண்டு. அவை வருஷத்திற் கொருமுறை வீழ்ந்து முளைக்கும். இதற்

குப் பிளந்த குளம்புகளுண்டு. பெண்மானுக்குக் கொம்புகள் இல்லை. இதன் தோல் பழுப்பு நிறமாக விருக்கும். புள்ளிமான் உடம்பில் புள்ளிகொண்டிருக்கும். இது பயந்த பிராணி. இவைகள் கூட்டமாக மேயும்போதும் உறங்கும்போதும் ஒன்று அல்ல திரண்டு காவல் காத்திருக்கும். ஏதாவது சிற்றொலி அபாயக்குறி கண்டவுடன் தலையைத் தூக்கிக்கொண்டும் காதை உயர்த்திக்கொண்டும் ஓடிமறையும். இதிற் பலவகையுண்டு. கஸ்தூரிமான், கவரிமான், புல்வாய். கஸ்தூரி கஸ்தூரிமான் வயிற்றிலுண்டாம்.

**மாந்தூர்கிழார் மகனார் கோற்றங்கோற்றனார்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவர் பண்ணன் என்பவனைப் பாடிப் பரிசுபெற்றவர். இவர் இயற்பெயர் கொற்றங் கொற்றனரா யிருக்கலாம். ஊர் மாற்றூர், தந்தை மாற்றூர்கிழார் வேளாளர். - அகம் - 89.

**மாஹேச்வர சூத்ரம்** — பாணினி முனிவர் வேண்ட உலக உபகாரமாய்ச் சிவமூர்த்தியின் திருக்கரத்திலிருந்த டமருகத்தின் வழித்தோன்றிய வியாகரண சூத்திரங்கள்.

**மாஹேச்வரம்** — உப புராணங்களில் ஒன்று.

## மி

**மிகுதி நவிற்சியணி** — இது ஆச்சர்ய மடையத் தக்கதாகவும், பொய்யாகவு மிருக்கிற கொடை, சௌர்ய முதலியவற்றைப் புகழ்வது. இதனை அதியுக்தி யலங்காரம் என்பர். (குவல.)

**மிக்க குளிர்ந்தபூமி** — ஆசியா கண்டத்திலுள்ள சைபீரியா நாட்டின் வடபாகத்தில் இருக்கும் வர்க்கோயான்ஸ்க். இது எல்லாப் பாகங்களிலும் அதிக குளிர்ந்த பூமி.

**மிசிசாரம்** — சிற்பநூலுள் ஒன்று.

**மிசிசிப்பிமதம்** — இத்தேயத்தவர்கள் சூரியனைக் கடவுளாகத் தியானிப்பர். இவர்களில் பலர் பூலோகமும் சுவர்க்கலோகமும் ஆதியில் ஒரு ஸ்திரீயாற் சிருட்டிக்கப்பட்டவையென்றும், அந்த ஸ்திரீயும் அவள் குமாரனும் லோகங்களைப் பாலித்துக்கொண்டு வருகையில் அந்தஸ்திரீ பலவீனத்தால் சுவர்க்கலோகத்தினின்று பூமியில் விழும்போது ஆமையொன்று அவளைத் தாங்கிற்றென்றும் கூறுகின்றனர். மற்றும் சிலர் ஒட்காம் என்பவனே முதல் கடவுளென்று நம்பியிருக்கின்றனர். வேறுஞ்சிலர் வேறுதேவதைகளையும் நதிகளையும் பூஜிக்கின்றனர்.

**மிசிரகேசி** — 1 ஒரு அப்சரஸ்.

2 வசுதேவன் தம்பியாகிய வற்சன் மனைவி.

**மிசிரம்** — யயாதியால் துரத்தப்பட்ட அவன் புத்லவர் மிலேச்சருடன் கலந்தாண்ட இடம். தற்காலம் ஆபிரிகாவில் ஈஜிப்ட் என்று வழங்குந்தேசம்.

**மிஞ்சுகர்** — ருத்திரர்களிடம் பிறந்தவர். (பா. வன.)

**மிட்டுவான்** — தக்ஷன் குமரன்.

**மிண்டாசுரன்** — உமாதேவியார் தவத்திருக்கையில் கண்டு காமுற்றுச் சண்டிகையா லிறந்த அசுரன். சண்டாசுரன் சகோதரன்.

**மிதக்குந் தீவு** — பஸிபிக் மகாசமுத்திரத்திலும், அத்லாண்டிக், இந்து மகாசமுத்திரங்களிலும் சில புதிய தீவுகள் கண்டு பிடித்ததில் சில நிலத்,கிராமலும் தண்ணீருக்கடியிலுள்ள பூமியின் சம்பந்தப்படாமலும் மிதந்துகொண்டே இடம்விட்டு நகர்கின்றன என்பர். இதில் ஒன்று போர்னியோ தீவையடுத்த (எ) ஏகர் விரிவுள்ள பரப்பும் பலவித விருக்ஷங்களு முடையதாம்.

**மிதத்துவசன்** — (சூ.) தர்மத்துவசன் குமரன்.

**மிதர்ச்சநர்கள்** — பாரத வீரர்.

**மிதன்** — (ச.) சயன் குமரன்.

**மிதி** — நிமியைக் காண்க.

**மிதியடி** — தெங்கு, பலா, முதலிய மரங்களால், காலில் நீர் வருவகை வாரிட்டமைப்பது இதில் வாரமைக்காமல் மரத்தாலேயே கொட்டை யிட்டமைப்பது பாதகுறடு.

**மிதிலன்** — (சூ) வசிட்டராலுட லிழக்கப் பெற்ற நிமியின் கடைந்ததேகத்திற் பிறந்தவன். இவனே மிதிலையை நியமித்தவன். இவனுக்கு விதேகன் எனவும் பெயர். நிமியைக்காண்க.

**மிதிலை** — 1. ஓர் நகரம் Janakapur. The Capital of the kingdom of Raj Janaka. Mithila was the name both of the country and the capital.

2. சநகன் ஆண்ட பட்டணம். சீதை பிறந்த இடம். விதேகன் அரசு. கண்டகி, கௌசிகி நதிகளினிடையிலிருப்பது. இப்போது பேகாரில் (டிராட்) என்பது. (Tirat)

மகததேசத்துக்குத் தென்கிழக்கிலுள்ளது. பஞ்சகௌடத்தொன்று.

**மிதுனம்** — ஸ்திரிபுமானுகிய இரட்டைப் பேறு. ருசிப்பிரசாபதிக்கு ஆவுதியிடம் பிறந்தவர்.

**மித்திரை** — அதர்மன் தேவி, தூர்ச்சனரால் பூசிக்கப்பட்டவள்.

**மித்திரகாமன்** — இவன் நற்குண நற்செய்கையையுடைய ஒரு வணிகன். பெருஞ் செல்வத்தால் மிக்கவன். வேறு வேடங் கொண்ட வாசவதத்தை முதலிய நால்வரும் இவன் வீட்டிலேதான் சிலகாலம் மறைந்திருந்தனர். (பெ. கதை.)

**மித்திரகேசி** — ஒரு அப்சரசு. வச்சகன்பாரி, குமரன். விருகன் இவளுக்கு மிச்ரகேசியெனவும் பெயர்.

**மித்திரசகன்**—1. கல்மாஷபாதனைக் காண்க. மித்திரசக்யன் மித்திரசதன் எனவும் பெயர் கூறுவர்.

2. சவுதாசனுக்கு ஒரு பெயர்.

**மித்திரசித்** — மலையகந்தனியைக் காண்க.

**மித்திரதேவர்** — 1. பகதேவனுக்குத் தக்ஷ யாகத்தில் வீரபத்திரர் போக்கிய கண்ணைக் கொடுத்தவர்.

2. இவர் சோணுட்டில் காவனம்பாடியில் பெருமாள் அருள்பெற்றவர்.

**மித்திரமகருஷி** — இவர் ஒருமுனிவர். இவர் பன்னிரண்டு வருஷத்திற் கொருமுறை யோகத்திருந் தெழுந்திருப்பர். இவர்க்கு அக்காலையில் ஒருநெல்லிக்கனி பழுக்கும்; அதை இம்முனிவர் நியமாதிகள் முடித்துக்கொண்டுண்பது வழக்கம். பாண்டு மக்கள் வனஞ் சென்றிருக்கையில் இக் கனியைத் திரௌபதிகண்டு தனக்குப் பறித்துத்தர அருச்சனனை வேண்ட அருச்சுனன் பறித்துக் கொடுத்துப்பின் அதன் வரலாறு அருகிருந்தாராலுணர்ந்து இருடி சாபத்திற்கஞ்சிக் கண்ணனைத் துதித்து அவர் சகாயத்தாற் பொருந்தச் செய்தனன்.

**மித்திரவன்மன்**—ஒரு அரசன். வியன்தந்தை.

**மித்திரவிந்தை** — விந்தாநுவிந்தரின் தங்கை. இவள் கிருஷ்ணமூர்த்தியை மணம் புணர்ந்தனள். இவளுக்கு அரசன் முதலிய பதின்மர் குமரர்.

**மித்திரன்** — 1. நகுலனுக்கு இலகீர்மதியிடம் பிறந்த குமரன்.

2. ஒரு தேவதை.

3. வசிட்டருக்கு ஊர்வசியிட முதித்த குமரன்.

4. கிருஷ்ணன் குமரன்.

5. கசியபருக்கு அதிதியிடமுதித்த குமரன். துவாதசாதித்தரில் ஒருவன். பாரி, ரேவதி, குமரர், உற்சாகன், அசிஷ்டன், பிப்பலன்.

6. வருணனுடனிருக்குந் தேவன்.

7. மனோஞ்ஞையைக் காண்க.

8. ஒரு வேதியன். இவன் தவஞ்செய்தலில் விருப்புள்ளவனாய்த் தந்தையிட மநுமதிபெற்றுக் கண்டகி தீரத்திற் றவஞ்செய்கையில் குமரனது நிலையறியத் தந்தை இருட்காலத்திற் சென்றனன். குமரன் தந்தையென அறியாது மிருகமென வெண்ணித் தந்தையைக் கொன்றனன். பின் தந்தையென அறிந்து வியசன மடைந்து புண்ணிய தீர்த்தங்களாடிப் பிரமகத்தி நீக்கிக் கொண்டவன்.

**மித்திராக்கன்** — ஒரு அரக்கன். வீடணனால் மாய்ந்தவன்.

**மித்திராயு** — திவோதாசன் குமரன். இவனுக்கு (கOO) குமரர். இவர்களில் மூத்தோன் சுகந்தகிருது.

**மித்திராவருணர்** — வசிட்டரையும் ஊர்வசியையுங் காண்க. இவர்கள் அகத்திய வசிட்டர்களுக்குப் பிறப்பிடமானவர்கள்.

**மித்திராவருணி** — வசிட்டன், அகத்தியன்.

**மிருககண்டூயர்** — குச்சகருடைய குமரர். இவர் தவத்திலிருக்கையில் மிருகங்கள் உடல்தினவு தீரத்தறியென்று இவருடலிற் றம் முடலைத் தேய்த்துக்கொண்டமையின் இப்பெயர் இவர்க்கு வந்தது. இவர் தவ முடித்து உசத்தியர் குமரியாகிய விருத்தையெனுங் கன்னிகையை மணந்து மிருகண்டைப் பெற்றனர். இவர்க்குக் கௌச்சிகர் எனவும் பெயர்.

**மிருகங்கள்** — சிங்கம் - தேவிக்கும் சிந்தாமணி விநாயகருக்கும் வாகனமாம். இவ்வுருக்கொண்டு இரண்யாக்ஷனைத் திருமால் சங்கரித்தனர். இவ்வுருக்கொண்ட சிங்கமுகா சுரனைக் கந்தமூர்த்தி கொன்றனர். திலீபனை மருட்டவந்த சிவ கிங்கார் வுருவமுமாம். புலி - இவ்வுருவத்தால் பசுக்களை யொரு அசுரன் மருட்ட அவனைச் சிவமூர்த்தி சங்கரித்தனர். இது வியாக்ரபாதருக்கு உருவமுமாம். சிவமூர்த்தியிவ் வுருக்கொண்டு வேடனைத் தூரத்தி சோதித்தனர். இதன்தோல் சிவமூர்த்திக்கு ஆடையுமாம். இவ்வுரு சிவபூசை செய்து முத்தி பெற்றதுமாம். புலியூர் என்பதனு

லறிக. யானை - விநாயகருக்கும், விஷ்வக்சேநருக்கும் கஜாசுரனுக்கும், கஜமுகாசுரனுக்கும் உருவமாம். இந்திரற்கும், கந்தமூர்த்திக்கும், சிவமூர்த்திக்கும் வாகனமாம். இவ்வுரு வள்ளிநாயகியை மருட்டச் சென்றது. சிவபூசை பலவிடங்களிற் செய்து முத்தி பெற்றது. நாரதராற் சாபம் பெற்றது. சிலந்தியுடன் வாதிட்டதுமாம். இவ்வுரு முதலையாற் கவ்வப் பெற்றுத் திருமாலால் இரக்ஷிக்கப்பட்டது. ஒரு அரசன் இவ்வுருவாக அகஸ்தியராற் சபிக்கப்பட்டனன். குதிரை - சிவமூர்த்திக்கு வேத வுருவமாகிய வாகனமாம். இதை யூர்ந்து குதிரை விற்கவும் திரிபுரமெரிக்கவுஞ் சென்றனர். இவ்வுரு விஷ்ணுவிற்கு முகமுமாம். ஒரு அசுரனுமாம். ஊழித் தீயின் உருவமுமாம் சூரியனும் அவன் தேவியும் கொண்ட உருவமுமாம். தேவ ஜாதிகளின் உருவமுமாம். உதங்கரைக் காண்க. குவலயாசுவம் என்னும் குதிரை சூரியனா லனுப்பப்பட்டது. இருதத்துவசனைக் காண்க. காமதேனு — தெய்வப்பசு. இது திருப்பாற் கடலிற் பிறந்து தேவர்க்கும் ருஷிகளுக்கும் வேண்டிய உணவாதிகளைத் தருவது. வசிஷ்டர், ஜமதக்னி முதலியோர்க்கு உதவியது. பசு யமன், தேரூர்ந்த சோழன் பொருட்டுப் பசுவானான். இது ஷட்கவ்யந்தரும் புண்ணியவுரு. இதன் தேகத்தில் திரிமூர்த்திகளுந் தேவர்களனைவரும் வசிக்கின்றனர். இவ்வுருக்கொண்டு மாயப் பசு ஒன்று மதுரையிற் றோன்றியது. இதனைச் சிறப்பித்தெழுதியுள்ளோ மாண்டுக் காண்க. இது தர்ம சுவரூபமாம். சூரிய வம்சத் தரசனால் காக்கப்பட்டதுமாம், தானப் பொருளாம். இடபம் - நந்திமா தேவர் திருவுரு, தர்ம ச்வரூபம். இவ்வுருக்கொண்டு திருமால் திரிபுர மெரித்தகாலத்தில் தாங்கினர். எருமை - யமனுக்கு வாகனம். இவ்வுருக்கொண்ட அசுரனைக் காளி சங்கரித்தனள். காளிக்குப் பலிப் பொருளாம். ஆடு - அக்னியின் வாகனமும் யாகத்திற் றோன்றிக் குமாரக்கடவுளுக்கு வாகனமுமாம். இதனைக் காளிக்குப் பலியிடுவர். உத்தராதித்தனைக் காண்க. மான் - இருடிகளுக் குதவிய வுரு. இதன் தோல் அவர்களுக்கு உடையாம். இவ்வுருக்கொண்ட மாரீசனை இராமர் கொன்றார். சிவமூர்த்திமேல் தாருகவன ருஷிகள் ஏவியதுமாம். மந்தபால முனியைக் காண்க. உத்பலாவதியைக் காண்க. கழுதை - இது மூதேவி வாகனமாம். இவ்வுருக் கொண்ட அசுரன் கண்ணனாற் கொல்லப்பட்டான். காடி - சாம்பவந்தர்க்கு உருவமாம். பன்றி - வராகமூர்த்தியாகிய திருமால் உருவமும், முலை கொடுக்கவந்த சிவமூர்த்திக்கு உருவமுமாம். குரங்கு - வாலி, சுக்ரீவன், ஆஞ்சநேயர், அங்கதன், நீலன் முதலியோர் உருவமாம். சிவபூசை செய்த உருவமாம். நாய் - பயிரவர் வாகனம். பெருச்சாளி - விநாயகருக்கு வாகனமான அசுரன் உருவமாம். பாம்பு - சிவனுக்கு அணியும், விஷ்ணுவிற்குப் படுக்கையும், நடனசாலையும், ராகு கேதுக்கள் உருவமுமாம். புழுகுபூனை - அண்ணாமலைக்குப் புழுகுசாத்திப் பேறு பெற்றது.

மிருகசிருங்கன் — இவன் குச்சருஷியின் குமரன். இவனுக்குத் தாய் தந்தையரிட்ட பெயர் வச்சன். இவன் தவத்திலிருக்கையில் மிருகங்கள் கொம்பாலிடித்தும் குத்தியும் ஊறலுக்குராய்ந்தும் நிலை குலையாதிருந்தனனாதலால் இவன் தவத்திற்குக் களிப்படைந்த சிவபிரானிவனை மிருகசிருங்கனென அழைத்தனர். இவன் தந்தை இவனுக்கு உசத்தியன் குமரியாகிய சுவிர்த்தை என்பவளை மணம் பேசினன். சுவிர்த்தை தீர்த்தமாடத் தோழியருடன் நதிக்கரை செல்கையில் ஒரு காட்டானைத் துரத்தத் தவறிக் கிணற்றில்வீழ்ந்து இறந்தனள். அக்காட்டில் தாய் தந்தையர் அழுகை யொலிகேட்ட மிருகசிருங்கன் தான் யமனை வணங்கி யிறந்த வுயிர்தந்து சுவிர்த்தையைத் தந்தை யளிப்ப மணந்தனன். (மாக புராணம்.)

மிருகசீருஷம் — இவை மான் கணங்கள். வேடன் ஒருவன் உணவின் பொருட்டு ஆண்மானையெய்ய அம்பு தொடுக்கையில் கண்ட ஆண், வேடனைநோக்கி நான் என் கர்ப்பிணியாகிய மனைவியைக் கண்டு வார்த்தைகூறி மீளுகிறேன் என்று உறுதிகூற வேடன் அவ்வணம் விடையளிக்கச் சென்றது. இதன் பெண்மான் ஆணினைக்காணாது வேடனிடம் வந்து அவ்வாறு ஆணைக்கண்டு வருவதாய் உறுதிவாக்களித்தது. அவ்வகை ஒன்றுக்கொன்று தமக்கு நேர்ந்ததைப்பற்றிக் கூறிப் பிள்ளைகளுடன் வேடனிடம்வர முன் வேட்டைக்குச் சென்று மகா சிவராத்திரியில் சிவபூஜை

வனத்தில் செய்தவாகளையும் ஈவதரிசனத்தையுங் கண்டதினுலும் வேடனுக்கு ஞானேதயமாய் மான்களே எனக்கு ஞானத்தைத் தந்தமையால் நீங்கள் குருவிற் கொப்பாகின்றீர் ஆதலால் இனி எவ்வுயிர்களையுங் கொல்லேனென்று சிவமூர்த்தி தர்சனந்தர முத்திபெற்றவன். மான்கள் சிவமூர்த்தியால் நக்ஷத்ரபதம் பெற்றன. இவையே மிருகசீருஷநக்ஷத்திரம் ஆண், பெண், குருளை இவை மூன்று நக்ஷத்திரங்கள்.

**மிருகண்டு** — 1. கௌசிகர் குமார. இவர் முற்கல ருஷியின் குமரியாகிய மருத்துவதியை மணந்து புத்திரரின்மையால் காசியடைந்து சிவமூர்த்தியை யெண்ணித் தவமியற்றினர். சிவமூர்த்தி தரிசனந்தந்து என்ன வேண்டுமென்னப் புத்திரப்பேறு கேட்டனர். சிவமூர்த்தி நீ நற்குண நற்செய்கையுள்ள புத்திரனை விரும்பில் அற்பாயுளாம். அறிவில்லாத குமரனை விரும்பில் தீர்க்காயுள் உள்ளவனும், இவ்விருவரில் எவரை விரும்புகின்றனை யெனக் கேட்க முனிவர் நற்புத்திரனைக் கேட்டு (கசு) வயதுள்ள மார்க்கண்டனைப் பெற்று அவனுக்கு அவனுடைய ஆயுள் அளவு உணர்த்திச் சிவபூசை செய்ய ஏவினர். தாதாவின் குமரன் எனவும், பிருகுவின் பேரன் எனவுங் கூறுவர்.

2. விஷ்ணுவை நோக்கித் தவமியற்றிப் புத்திரப் பேறடைந்தான். (பிரகன்னாதீய புரா.)

**மிருகமந்தை** — குரோதவசையின் புத்ரி (பா. ஆதி.)

**மிருகனுதி** — கேகயன் குமரன். தாய் சயந்தி.

**மிருகன்** — விராடநகரத்து வேதியன். ஒழுக்கங்குன்றி வேசையுடன் கூடி வேற்றார்க்குச்சென்று அவ்விடத்தில் பழர் ஒன்றைத் திருடினன் அதற்கு உரியவர் தொடர்ந்து பிடிக்கவரப் பழத்தைச் சிவார்ப்பணமென்று எறிந்து நற்கதிபெற்றவன்.

**மிருகாசுரன்** — ஒரு அசுரன். விஷ்ணுவிடம் மூன்றுநாள் யுத்தஞ்செய்து சாகாமல் தேவர்களை வருத்திச் சிவமூர்த்தியின் வேலால் இறந்தவன்.

**மிருகாபதி** — உதயணன் நற்றாய். இவளுடைய சகோதரன் விக்கிரன். இவன் தந்தை எயர் குலத்திற்குத் தலைவன். உதிதோதய காவ்யமென்னும் வடநூலில் அவளது இயற்பெயர் சேடகமென்னறு காணப்படுகின்றது. இவளது பெயர் மிருகாவதி யெனவும் வழங்கும் (பெ. கதை.)

**மிருகாவதி** — 1. விதூமனைக் காண்க.

2. பிரசாபதியின் முதற்றேவி.

3 தேவராதன் என்னும் முனிவன் தவஞ்செய்கையில் மேனகை வந்தனள். அவளைக்கண்டு முனிவனுக்கு ஆசைபிறக்க வீரியம் நீரிடை வீழ்ந்தது. அந்நீரினை உண்ட மானின் வயிற்றில் இவள் பிறந்து வற்சமுனியை மணந்து ஒருநாள் பூக்கொய்கையில் பாம்பு கடித்து இறந்தனள். இவள் கணவன் பாம்புகளைக் கொல்ல முயலுகையில் ஒருவன் தீர்த்தக்கரைக்குச் செல்ல ஆண்டு வேதியர் கூட்டத்துத் தண்ணீர்ப் பாம்பை எறிந்து பாம்பு உருப்பெறச் சாபம் அடைந்த வேதியச் சிறுவன். வற்சமுனிவரால் சாபம் தீர்ந்து தனது வரலாறுகூறிச் சிவபூசை செய்யின் சித்தி அடைவாய் எனப் போயினவன்.

**மிருகை** — காசிபர் பெண். பன்றி முதலிய மிருகங்களைப் பெற்றவள்.

**மிருடன்** — சிவன் திருநாமங்களில் ஒன்று.

**மிருதசஞ்சீவி** — மரணத்தைப் போக்கும் ஒரு மந்திரம்.

**மிருதி** — அங்கிராவின் தேவி. தக்ஷன்பெண். குமரன் அங்கிரன் பரதன்.

**மிருதுகன்** — அக்குரூரன் தம்பி.

**மிருதுபத்** — அக்குரூரன் சகோதரன்.

**மிருதுரன்** — சுவபலருக்குக் காந்தியிடம் உதித்த குமரன்.

**மிருதுவி** — சுவபலருக்குக் காந்தியிடம் உதித்த குமரன்.

**மிருத்திகாபக்ஷணரோகம்** — இது பிள்ளைகளுக்குண்டாம் ரோகத்தொன்று. நாள்தோறும் மண்ணைத்தின்னும் பிள்ளைகளுக்குத் தேகவெளிறு, இருமல் இளைப்பு முதலிய தரும் ரோகம். (ஜீவ)

**மிருத்துகாவதி** — மாளவதேசத்துள்ள பட்டணம்.

**மிருத்யு** — 1 தருமன் குமரன்.

2. பூமிதேவி பூபாரம் பொறுக்காது வேண்டச் சிவாஞ்ஞையால் பிரமதேவன் வீர்யத் துதித்து உயிர்களின் காலவிறுதியில் மாய்க்கும் பெண்தேவதை, இவள் உயிர்களை மாய்க்க அழுதகாலத்து இவள் கண்ணீரில் பல வியாதிகள் பிறந்தன. இவள் யமனிடம் இருப்பள்.

3 பிரமன் ஒருகாலத்து உலகங்களை அழிக்கமுயன்று தம்மிடமெழுந்த தீயால் உலகங்களையழித்தார். அப்போது ருத்ராதுவேண்டுகோளால் அதை நிறுத்த அத்தீ பெண்ணுருவாய் நின்றது. அது மிருத்யு என்றனர். அவர் அவளை நோக்கி நீ உலகங்களை அழிக்கவென நான் பாபியாவேனென்று அழுது பலமுறை தவமியற்றி கொல்லாவரம் வேண்டினள். பிரமன் மீண்டும் நீ கொல்லவேண்டும் என்றனன். அவ்வாறு கேட்ட அவள் ஒன்றுங் கூருதிருக்க, பிரமன் நீ ஆண்களிடத்து ஆணுகவும் பெண்களிடத்துப் பெண்ணுருவாகவும் நிற்பாய், உன் கண்களிருந்துவந்த நீர் பலநோய்களாகவிரியும் அவற்றைக் காரணமாகக் கொண்டுஉலகத்தையழிக்கஎன்றனர்.(பா சாந்.)

**மிருத்யுஞ்சய பக்தர்** — இவர் பிதரி பட்டணத்திலிருந்த சாந்த பிரம்மணி யென்னும் ஒரு அரசர். இவர் தம் அரண்மனையின் மேன் மாளிகையில் மனைவியுடன் வாழைக்கனியுண்டு தோலினைச் சாளரவழியாக எறிகையில் ஒருவர் அச் சாளரத்தடியிலிருந்த வாழைக் கனிகளின் தோல்களை ருசியாயிருக்கிறதென்று புசித்தனர். இதைக் கண்ட அரசன் தேவி, அரசனுக்குக் கூற அரசன் அரண்மனையில் அன்னியன் வந்ததைப்பற்றிச் சேவகரைக் கோபிக்கச் சேவகர் அவரைக் கட்டியடிக்கையில் அவர் அழாமல் சிரித்தனர் இதைக் கண்ட அரசன் அவரைத் தன்னிடம் வருவித்துச் சேவகர் உன்னை வருத்துகையில் அழாது சிரித்தலுக்குக் காரணமென்னை எனப் பரதேசி உலகத்தில் எவர்க்கும் பொதுவாகிய வஸ்துக்களில் பழத்தின் தோலை யுண்டதனுலும், மாளிகைக்கு வெளியிருந்தாலும் இவ்வகைத் தண்டனையாயின், பழத்தையேயுண்டு அரண்மனைக்குள்ளிருக்கும் உனக்கு யாது நேருமெனச் சிரிக்கின்றேனென, அரசனுக்கு ஞானேதயமாய் விரக்தியடைந்து பண்டரியடைந்து ஞானசாரியரிடம் உபதேசமடைந்து மிருத்யுஞ்சயன் என்னும் பெயரடைந்து வேதாந்த சித்தாந்தங்களைத் தம்மிடம் நாய்களாக வைத்துக் கொண்டு பவராயன் எனும் தன் சிஷ்யன் பொருட்டுச் சங்கமர்களின் சிவலிங்கங்களை நாய்களைக்கொண்டு கக்குப்படிசெய்து கண்ணனிடம் அன்பு கொண்டிருந்தவர்.

**மிருத்யுஞ்சய மந்தரம்** — யமனை வெல்லும் மந்திரம்.

**மிருத்யுஜித்** — சோழர் சரிதையில் சுரகுருவைக் காண்க.

**மிருஷை** — அதர்மத்தின் பாரி.

**மிலேச்சம்** — இது ஒருதேசம்.

**மிலேச்சன்** — பார்ப்பினி களவினுல் அரசனைப் புணர்ந்து பெற்ற குமரன். தம்தம் கடமைகளைச் செய்யா தொழிதல், அருளின்மை, பிறர்க்குத் துன்பம் செய்தல் வெகுளிமேற் கோடலுடையவன். (சுக்ரநீதி)

**மிலேச்சமன்னர்** — இவர்கள் ஒருவகைவீரர்களின் தலைவர் இவர்கள் உதையணனுக்குத் திறையளப்பவர்கள். (பெ-கதை.)

**மிலேச்சர்** — இவர்கள் ஒருவகை வீரர்; அரசர்பால் மெய்க்காப்பு, வாயில்காவல் முதலியவற்றைச் செய்து நம்பிக்கையோடு ஒழுகியவர்கள். பெரும்பாலும் போரில் இவர்கள் முற்படையிலேயே நிற்பவர்கள். (பெ. கதை.)

**மிலேச்சன்** — இவன் போதனபுரத்திற்கு அரசன், தருசகனேடு பகைமைகொண்டு போர்செய்தற்கு வந்த அரசர்களுள் ஒருவன். மிக்க வீரமுடையவன். (பெ-கதை)

**மிழலைக்கூற்றம்** — வேள் எவ்வியின் நாடு, இது தஞ்சாவூர் மதுரை ஜில்லாக்களைச் சார்ந்த ஒரு பகுதி. தமிழ் நாட்டிலிருந்த பழைய ஊர். கடற்கரையிலுள்ளது. இப்போது பெயர் மாறியது. தஞ்சாவூர்க்கல் வெட்டுகளில் கூறியிருக்கிறது. (புற-நா.)

**மிளகாய்** — இது, தோட்டக்கால்களில் பயிரிடப்படும் காரமுள்ள பொருள், இது சம்பாரங்களுக்குரிமையுடையது. இதில் பலவகை உண்டு. ஊசிமிளகாய், குடமிளகாய் முதலிய. இது, முதலில் மத்ய ஆசியாவினின்று வந்ததாகக் கூறப்படுகிறது. தமிழ் நிகண்டில் இதற்குப் பெயர் கூறப்படவில்லை. இச்செடி நம் நாட்டினதன்று. இதனை அந்நிய நாட்டினின்றும் இந்திய முன்னேர் நம் நாட்டிற்குக் கொண்டுவந்து பயிராக்கினர். இக்காயினை காயாகவும் பழமாக வுலர்த்தியும், கறி முதலியவற்றிற்கு உபயோகிக்கின்றனர்.

**மிளகாழ்வான்** — இவர் உடையவரால் நியமிக்கப்பட்ட எழுபத்தினன்கு சிம்மாசனதிபதிகளில் ஒருவர். இவர் சிறந்த விச்வாசி, இவர் உடையவர்க்குப் பாலமுது நாடோறும் ஜம்புகேச்வரஞ்சென்று ஆங்கு அர்த்தஜாமத்திற்குப் பிறகு சிவநிவேதனமாய் அந்தணர்க்களிக்கும் திருப்பாலினை வாங்கிக் கொண்டு வந்து உடையவர்க்குக்

கொடுத்து வருவர். இவ்வகை இவர் அபேதமாய்ச் செய்வதை ஸ்ரீவைஷ்ணவர் சிலர் சிவநிவேதனம் என்று உடையவரிடம் குறைகூற, உடையவர் இவரையழைத்து அவ்வகை செய்யலாமோவென்றனர். மறுநாள் வழக்கப்படி தாம் உடையவர்க்குச் செய்யும் மடைப்பள்ளி கார்யத்தில் மிளகுநீர் செய்யத்தொடங்கி, வழக்கம்போல் செய்யாது மிளகினை அம்மியில் வைத்து நறுக்காமல் முழுமிளகை மிளகுநீரிலிட்டு வைக்க, உடையவர் இது என்ன என்று கேட்க ஆழ்வான், தேவரீர் சிவநிவேதனமாகாதென்ற கட்டளைப்படி செய்தேன் என்றனர். உடையவர் இதென்ன சிவநிவேதனமாமோவென்ன, இதனை நசுக்கும் அம்மியும் அவ்வுருத்தான் ஆதலால் அபராதமாம் என்று, அவ்வாறு செய்தேன் என்றனர். உடையவர் இவரது பக்திக்கு வியந்து மற்றவர்க்கு அவரது சமரச அறிவைத் தெரிவித்தனர். (குருபரம்பரை)

**மிளகு** — இது, ஒரு காரமுள்ள சம்பாரப் பொருள், மலையாளம், வைநாட்டிலும், பயிரிடப்படுகிறது. இது வெற்றிலைக்கொடி போலும் கொம்பில் தாவும். கொடியில் பயிராகும். இவ்வகையில், பாலங்கொட்டை, உதிரங்கொட்டை, கல்லு, வள்ளி, சிறுகொடி, என நான்குவகை, வால்மிளகென ஒரு சாதியுண்டு. இதைக் காயவைப்பதற்கு முன் தரையில் தேய்க்கின் மேல்தோல் நீங்கி வெள்ளைமிளகாம்.

**மிளைகிழானல் வேட்டன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் இயற்பெயர் நல்வேட்டன். ஊர்மிளை. இவர் வேளாளர் (குறு-௩௪௧.)

**மிளைகீழான் நல்வேட்டனார்** — நல்வேட்டனார் காண்க.

**மிளைக்கந்தன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். இவரதியற் பெயர் கந்தன், ஊர்மிளை. (குறு-௧௧௯.)

**மிளைப்பெருங்கந்தன்** — இவர் கடைச்சங்கப் புலவரில் ஒருவர். இவரியற்பெயர் பெருங்கந்தன் ஊர்மிளை. இவர் காமம்புதுவரவிற்றென குறிஞ்சிபாடியவர். ௨0௪, ௨௩௪ ௧௩௯.

**மிளைவேடித்தன்** — இவர் கடைங்சங்கமருவிய புல்வருள் ஒருவர். இவர் பெயர்தித்தர், வேள் என்பது வேளாண்குடிப்பெயராகலாம். மிளையென்பதவரது ஊர், (குறு-௨௮௪.)

**மினிமினிப்பூச்சி** — இது வண்டின் இனத்தது, இரவில் பறக்கையில் இதன் இறக்கைகள் விரிதலால் இதன் உடம்பிலுள்ள ஒருவகை யொளி மின்னுகிறது. ஆதலாலிதனை இப் பெயரிட்டழைப்பர்.

**மின்வாங்கி** — மின்னலைத் தன்னிடம் பெற்றுக்கொள்ளும் கருவி. காந்தம் முதலிய லோகங்களினாற் செய்யப்பட்ட கம்பிகளைக் கட்டடங்களின் உன்னத ஸ்தானங்களிலிருந்து பூமிக்குள் அழுந்தப் பதித்திருப்பது. இவ்வாறு செய்தால் கம்பியின் உயரத்தி னிரட்டிப்பான சுற்றுப்புறம் இடி விழாது.

**மின்னல்** — உஷ்ணம், சராசரப் பொருள்கள் எல்லாவற்றினும் நிறைந்திருக்கிறது. அவ்வுஷ்ணத்தின் சாரமே மின்சாரம். இது எல்லாப்பொருள்களிலு மிருக்கினும் விசேஷமாய் நீராவியில்கூடி மேகங்களில் மின்னலாகத் தோன்றுகிறது. இந்த மின்சாரம், சிலவேளைகளில், சில பொருள்களில் அளவிற்கதிகமாயும், சில பொருள்களில் குறைந்து மிருக்கும், அளவிற்கதிகமாயின் ஸ்வயமென்றும், அளவிற்குக் குறைந்திருக்கின், அபஸ்வயமென்றும் கூறுவர். மேகங்கள் வருஷிக்கக் கூடும்போது நெருங்குதலால் இவ்வுஷ்ணம் அதிகமாயிருக்கும் மேகத்திலிருந்து குறைந்திருக்கும் மேகத்தின் கோடியுஷ்ணத்தைச் சமமாக்கிக் கொண்டிருக்கும். இவ்வாறு இவ்வுஷ்ணம் ஒன்றிலிருந்து மற்றொன்றில் பாய்வதே மின்னலுக்குக் காரணம். ஸ்வயத்திலிருந்து ஸ்வயத்திற்கும் அபஸ்வயத்திலிருந்து அபஸ்வயத்திற்கும் மின்னல் பாயாது.

**மின்னுக்கேசன்** — (வித்யுத்கேசன்) சாலகடங்கடையைப் புணர்ந்து சுகேசனைப் பெற்றவன்.

## மீ

**மீகாமன்** — கும்பகோணத்திலுள்ள வலங்கைக் கிராமத்திலிருந்த தமிழ்ப் புலவன். இவன் இயற்றியநூல் அறுவானந்தசித்தி.

**[மீ]ட்சி** — செவிலி புதல்வியைக் காணாது மீண்டு வருதலும், உடன்போய் தலைவனுந் தலைவியு மீண்டுவருதலுமாம். இது, உடன்போக்கின் வகையு[ளொ]ன்று. இது, தெறித்தல், மகிழ்ச்சி, வினாதல், செப்பல் இதன் வகையாம். இது, தலைவிசேணகன்றமை செவிலித்தாய்க் குணர்த்தல், தலைவன் தம்

மூர் சார்ந்தமை சாற்றல், தலைவி முன் செல்வோர் தம்மொடு தான்வரல் பாங்கியர்க்குணர்த்தி விடுத்தல், முன் சென்றோர் பாங்கியர்க் குணர்த்தல், பாங்கியர் கேட்டு நற்றாய்க் குணர்த்தல், நற்றாய் கேட்டவனுளங்கோள் வேலனை வினாதல் எனும் விரிவினையுடைத்து. (அகம்)

**மீட்டுவான்** — சக்கிரனென்னும் துவாதசாதித்தியனுக்குப் பௌலோமியிடம் உதித்த குமரன்.

**மீமாம்சகமதம்** — இம்மதம், ஜைமினி முனிவரால் தாபிக்கப்பட்டது. இம் மதசித்தாந்தம் - (க) பிரபஞ்சம் சத்தியம் மித்தையன்று. (உ) அதற்கு ஆதியும் அந்தமும் இல்லை. (ங) வேதம் ஆதியந்தம் அற்றது. (ச) சுவர்க்க நரகங்களுண்டு. (ரு) ஆத்மா ஆதியந்தமற்றது. (சு) கர்மாநு குணமாய் ஆத்மாக்களுக்கு மறுபிறவி உண்டு. (எ) யஞ்ஞாதிகர்மங்கள் செய்வதால் சுவர்க்கப் பிராப்தி உண்டு. (அ) யஞ்ஞத்தால் இம்மையிலும் சுகமுண்டாம். (கூ) வேதார்த்த கிரகண ஞானம் சிறந்தது. (க0) வேதியர்க்கே யஞ்ஞாதிகாரமுண்டு எனக்கூறும்.

**மீமாம்சகன்**—வேதம் அநாதி, கர்மம் பலன் தரும்; தெய்வம் வேண்டா என்பவன்.

**மீமாம்சை** — இது சைமினி இருடியால் ஏற்படுத்தப்பட்ட நியாயசாஸ்திரம். இதில் கர்மகாண்டம் பூர்வமீமாம்சை யெனவும், ஞானகாண்டம் உத்தரமீமாம்சை யெனவும் படும். இதில் முன்னது பாதராயணரால் இயற்றப்பட்டது.

**மீராபாயி** — இந்துஸ்தானத்தில் உதயபுரமென்னும் பட்டணத்தில் இருந்த ராணராஜன் புத்திரி. இவள் தன் தந்தை ஆராதித்துக் கொண்டுவந்த கிருஷ்ண விக்ரகத்தினிடத்தில் அன்புள்ளவளாய் வேறு அரசர்களை வரிக்காமல் கண்ணனது அர்ச்சாவிக்ரகத்தில் பேரன்புபூண்டு அவ்விக்ரகத்திற்கே அர்ப்பணஞ் செய்து பரமபாகவதருடன் கூடிக் கைங்கரியஞ் செய்து வருகையில் லோகாபவாதம் உண்டானமையால் தந்தை மணஞ் செய்துகொள்ளும்படி கூறியும் கேளாததனால் தந்தை இவளை விஷந் தந்து கொல்ல வெண்ணித் தன் மனைவியிடம் விஷங்கொடுத்துப் பெண்ணுக் கூட்டும்படிக் கூறத் தாய் துக்கத்துடன் அதைப் பெண்ணுக்குத் தெரிவிக்கக் குமரியு மதனை அன்புடன் வாங்கிக் கண்ணனுக்கு அமிசைசெய்து தான் உட்கொண்டு உயிர் பிழைத்திருந்தனள். அர்ச்சாவிக்ரகமாகிய கண்ணன் தேகமாத்திரம் விஷத்தால் பசுமைபட்டது. இதை மனைவி கண்டு நாயகனுக்குக் கூற அரசன் கண்டு கண்ணா உனக்கு விஷமூட்டச் செய்தேனேயெனப் பலவாறு வருந்திக் குமரியின் பக்திக்கு மெச்சி, குமரியை அவ்வாறு அநுட்டிக்கச் செய்தனன்.

**மீராபாயிமதம்** — இவள் மார்வாடாதேசத்திலுள்ள மோத்நகரத்தில் விக்ரமசகம் (கசஎரு) இல் விஜயமல்லன் என்னும் சர்தாருக்குப் புத்திரியாகிக் கல்விவல்லவளாய் உதயபுரத்தரசனை மணந்தனள். இவளை அக்பர் பாதுஷா மோகித்தானென்று கேள்வியுற்று இவள் சணவனுஞ்ஞைபெற்று நதியில் குதிக்க அவ்விடத்தில் ஒரு சோதி தோன்றி எழுக எழுக எனக்கேட்டு எழுந்து பிருந்தாவனமடைந்து கிருஷ்ணபக்தி மேற்கொண்டு பல மாணாக்கர் வணங்கக் கீர்த்தனைகள் பாடிப் பகவத்பக்தியே பரமார்த்த மென்று போதித்துப் பரமபதமடைந்தவள்.

**மீளிப்பெரும்பதுமனார்** — பெரும்பதுமனார் காண்க.

**மீனகேதனன்** — மன்மதனுக்கு ஒரு பெயர்.

**மீனாக்ஷி** — மதுரையில் எழுந்தருளியிருக்கும் சொக்கலிங்க மூர்த்தியின் சத்தி.

**மீனாக்ஷிசுந்தர கவிராயர்** — இவர், பாண்டி மண்டலத்துள்ள முகவூர். எட்டயபுரம் சமஸ்தான வித்வானா யிருந்தவர். இவர் தமிழ்க் குவலயா நந்தமெனும் அலங்கார சாஸ்திரத்தின் வடமொழி உதாரணப்படி தமிழில் செய்யுளாக உதாரணம் பாடிச் சேர்த்தவர்.

**மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை** — சென்னை ராஜதானியில் தமிழ் வழங்கு தென்னாட்டில் திரிசிரபுரத்தில் சிதம்பரம் பிள்ளைக்குக் குமாரராய்த் தமிழ் வல்லராயிருந்த ஒரு தமிழ்ப்புலவர். இவர் ஆற்றூர்ப் புராணம், எறும்பீசர் வெண்பாவந்தாதி, கண்டதேவிப்புராணம், கன்னபுரப்பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ், காசிரகசியம், காழிக் கோவை, கோயிலூர்ப்புராணம், சூரைக் குடிப்புராணம். சேக்கிழார் பிள்ளைத் தமிழ், தண்டபாணி பதிற்றுப்பத்தந்தாதி, தருமை சச்சிதாநந்த தேசிகர்மாலை, தனியூர்ப் புராணம், திருக்கலசைமாலை, திருக்குடந்தைத் திரிபந்தாதி, திருக்குடந்தைப் புராணம், திருக்குடந்தை மங்களாம்பிகைப் பிள்ளைத்

தமிழ், திருக்குறுக்கை வீரட்ட புராணம், திரிசிராப்பள்ளி யமகவந்தாதி, திருஞான சம்பந்த ரானந்தக்களிப்பு, திருஞானசம் பந்தர் பதிற்றுப்பத்தந்தாதி, திருத்தவத்து றைப் பெருந்தவப்பிராட்டிப் பிள்ளைத் தமிழ், திருத்தில்லை யமகவந்தாதி, திருத் துருத்திபுராணம், திருத்துறைசை யமகவந் தாதி, திருநாகைக் காரோணபுராணம், திருப்பெருந்துறை புராணம், திருப்பெரு மண நல்லூர்த் திருநீற்றுமைப் பிள்ளைத் தமிழ், திருப்பைஞ்ஞீலித்திரிபந்தாதி, திரு மயிலை புராணம், திருவம்பர்புராணம், திருவாரூர்த் தியாகராஜலீலை, திருவாவடு துறை சுப்ரமண்யதேவிகமாலை, திருவாவடு துறை அம்பலவாண தேசிகர் பிள்ளைத் தமிழ், திருவாளொளிபுற்றூர்ப் புராணம், திருவானைக்கா திரிபந்தாதி, திருவானைக்கா மாலை, திருவானைக்கா அகிலாண்டநாயகி பிள்ளைத்தமிழ், திருவிடைக்கழிமுருகர்பிள் ளைத்தமிழ், திருவிடைமருதூருலா, திரு விடை மருதூர்த்திரிபந்தாதி, திருவுறந் தைக் காந்திமதியம்மைப் பிள்ளைத்தமிழ், திருவுறந்தைப் புராணம், திருவூறைப் பதிற்றுப்பத்தந்தாதி, திருவெண்காட்டுப் பெரிய நாயகியம்மைப் பிள்ளைத்தமிழ், துறைசைக் கலம்பகம், பட்டீச்சுரப் பதிற் றுப் பத்தந்தாதி, பாலைவனப் பதிற்றுப் பத்தந்தாதி, மண்ணிப் படிக்கரைப் புரா ணம், மாயூரப்புராணம், வாட்போக்கிக் கலம்பகம், விளத்தொட்டிப் புராணம், வீரைவன புராணம், முதலிய பல ஸ்தல புராணங்கள் இயற்றியிருக்கின்றனர்.

**மீனெறிதூண்டிலார்** — 1 இவர் கடைச் சங்க காலத்திருந்த பெண் கவி. இவர் தலைவனது வரவு நீட்டிக்க அவனது நீக்கத் தைக் கவனிற்கஞ்சி கைவிட்ட மூங்கில் மீனெறிதூண்டிலி னீக்கம் போன்றதென உவமை கூறினமையின் இப்பெயரடைந் தனர். (குறு - சடு.)

2. இவர் தப்பாடலுள எடுத்தாண்ட உவமையே இவர்க்குப் பெயராயிற்று.

**மீன்கள்** — பொதுவாக தேக அமைப்பு. இவற்றின் தேகம் நடுப்பாகம் பருத்து இரண்டு நுனிப்பக்கங்களும் சிறுத்திருக் கின்றன. முதுகெலும்பு தலைமுதல் வால் வரை நீண்டிருக்கும். எலும்புக்கோவை, உடுக்கைபோன்ற சிறு எலும்புகளால் பொருத்தப்பட்டிருக்கிறது. இவ்வெலும் புகளினிரு பக்கங்களும் குழிந்திருப்பதால் ஒன்றையொன்று பொருந்தி யிருக்கிறது. இப்பொருத்துக் களினுள்ளிடம் எண்ணெ யொத்த பொருளால் நிரம்பி யிருத்தலால் மீன் தேகத்தை எண்ணியவாறு திருப் பும். இதன் தேகத்தில், வட்டமான செதிள்கள், ஒன்றன்மே லொன்று கீழ் நோக்கி அடுக்கப்பட்டனவாக இருக்கின் றன. ஒவ்வொரு செதிளின் முனையும் தேகத்தை யொட்டி நிற்கும். இவற்றி னுதவியாக மீன் எளிதில் நீந்துகிறது. இன்னும் தேகத்திலுள்ள உஷ்ணத்தை வெளிவிடாது காக்கின்றன. சிறகுகள் - மீன் ஜலத்தில் நீந்துவதற் குதவியானவை சிறகுகளே. இதன் தேகத்தில் (8) சிறகு கள் உள. மார்பில் (2) சிறகுகள் உண்டு, இவற்றை யடுத்து (2) ஜதை துடுப்புகள் உண்டு. இவைகள் கால்போல் உதவுகின் றன. தேகத்தின் அடிப்புறத்தில் வாலு க்கு அருகில் ஒரு சிறகு இருக்கிறது. இது வயிற்றுச்சிறகு. சில மீன்களுக்குச் சிறகு உருவிற்குத் தக்கபடி அதிகமாகவும் உண்டு. மீனுக்கு மேற்புறம் கனத்தும் அடி சிறுத் தும் இருக்கிறது. அவ்வாறு இருப்பதைத் தாங்குதற்கே இச்சிறகுகளி ருக்கின்றன. இச்சிறகுகளும் வாலும், மீன் ஜலத்தில் விரைந்து செல்ல உதவுகின்றன. இது ஜலத்திலுள்ள ஆகாயத்தைச் சுவாசிக்கி றது. செவுள்கள் மீனின் கழுத்திற்குப் பக்கத்திலுள்ள தாடைக்கடுத்து இருபுறத் திலும் நீண்ட பிளவுக ளிருக்கின்றன. இவற்றைப் பிரித்துப் பார்த்தால் சீப்பை ப்போல் பற்களுள்ள பக்கத்திற்கு நான் கான மடிப்புகள் தோன்றும். இவையே செவுள்கள். இவற்றிற் கிடையில் துவாரம் உண்டு. இவை கழுத்துப் பக்கத்திலுள்ள பிளவுகளுடன் சம்பந்தமுள்ளவை. இவை இச்செவுள்களால் மூச்சுவிடுகின்றன. இவ ற்றிற்கு வாய்வழிச் செல்லும் ஜலம் செவி களின் வழியாக வருகின்றன. இவற்றிற் சிலவற்றிற்குச் சுவாசப் பையுண்டு. இத னால் இவை, மேல்வந்து வாயுவை யுட் கொண்டுள் புகுதலும் செய்கின்றன. இவற்றின் இரத்தம் குளிர்ந்தது. இவை கள் சிறு மீன்களையும் பூச்சிகளையும் பிடித் துத் தின்னும். இவற்றிற்குப் பற் சிறிய வையாயும் ஒரே மாதிரியாயும், கூரியவா யும் தொண்டையை நோக்கி வளைந்தன வாயு மிருக்கின்றன. மீன்களின் முட்டை கள் சூர்ய வுஷ்ணத்தால் குஞ்சுகளாகின்

றன. சுறுமீன் - இதனைக் கடற்புலி என்பர். இவ்வினம் கடலில் வாழ்வன. இவ்வினத்திற் சிறிய வுருவுள்ளது நாய்ச்சுறு, இது நாலடி நீளமிருக்கும். கொம்பன்சுறு - இது தலையில் சம்மட்டிபோன்ற அகன்ற உறுப்பைத் தலையிற்பெற்றது. வான்சுறு - இதனை வாளா என்கிறார்கள். இதன் உதட்டில் வாள்போன்ற ஒரு பலமான உறுப்பு ஆறடி நீண்டிருக்கிறது. இதனால் இது கப்பல்களையும் பெருமீன்களையுங்குத்திப் பயப்படுத்தும். வெள்ளைச்சுறு - இது (25) முதல் (40) அடிகள் நீண்டுவளரும். இதன் அடிப்பக்கத்தில் வாய். வாயினடியில் ஆறு வரிசையான கத்திபோல் கூர்மையான பற்கள் உண்டு. இதன் உடலில் எலும்பு அதிகமில்லையாதலால் எந்தப் பக்கத்திலும் வளையும். இது தன் குட்டிகளைப் பால்கொடுத்து வளர்க்கும். இதற்கு, முதுகில் (2) நெஞ்சில் (2) வயிற்றில் (2) வயிற்றருகில் (1) வாலில் (1) ஆக எட்டுச்சிறகுகள் உண்டு. செவுளுக்குப் பிரதியாக இரண்டு பக்கங்களில் சுவாச த்வாரங்களுண்டு. இன்னும், வஞ்சிரம், கல்லாந்தலை, கெளிற்றி, வாளை, காரப்பொடி, வௌவால், பாறை, திருக்கை, கொள்ளிமீன், மடவை, முள்ளுவாளை, குரவை, வரால், கெண்டை, புராசினு, ஓலைவாளை, நவரை, கிழங்கான், தும்பிலி, செங்கரா, ஆற்றுகுண்டலம், சொட்டைவாளை, நெற்றிலி, சுதப்பு, உல்லம், கற்றளை, மயறி, விலாங்கு (மலங்கு) சேல்மீன், ஆரால், இருல், புண்டு விரிஞ்சான், செம்படக்கா, இருல், சின்னகூனி, முதலிய. இம்மீன் வகையில் பெரிது யானைமீன் (திமில்). இதை விழுங்குவது திமிங்கிலம்.

மீன்குத்திக்குருவி — இது இந்தியா தேசப்பறவை இது உடல்பருத்து காலும் வாலும் குறுகி மூக்கு நீண்டு அடிபருத்து முனைகூரியதாய்ச் சிறுத்துத் தலை செந்நிறமும், முதுகு பசுமை கலந்த நீலமுங்கொண்டது. நீர்க்கருகிலுள்ள மாஞ் செடிகளில் உட்கார்ந்திருந்து நீர்க்குமேல் (10,20) அடி உயரத்தில் பறந்து நின்று, தனக்கிரைக்கமைந்த மீனைக் கண்டவுடன் நீரில் மூழ்கிப் பிடித்து அருந்தும். இவ்வினத்தில் வெள்ளை நிறமுள்ளனவும், பசுமை நிறமுள்ளனவும் உண்டு. இதனைப் பொன்னாங்தட்டான் என்பர்.

மீன்வகை — பால் கொடுக்கு மீன்கள். திமிங்கிலகிலம், திமிங்கிலம், யானை மீன் பலவகை சுறுமுதலிய, வரால், குறவை, அயிரை, இருல், கெண்டை, சன்னகெண்டை, ஆரால், உளுவை, வாளை, சேல், கொளிற்றி, ஓலைவாளை, சின்ன கூனி, திருக்கை, மடவை, சுரும்பு, உல்லம், கற்றளை, வெளவால், நெற்றிலி, மயறி, விலாங்கு, கிழங்கான்.

மீன்வகைகள் — திருக்கைமீன் - இது, தட்டையான அகன்ற உருவுள்ள பிராணி, கோணம்போன்ற முகத்தின் கீழ்பாகத்தில் வாயும், மேல்பாகத்தில் கண்களும் பெற்றிருக்கும். இதன்வால் - ஒரு அடிமுதல் 12. அடிகள் நீண்டு சாட்டை போலிருக்கும். இதன் இரண்டு பக்கங்களிலும் இரக்கை போன்ற உறுப்பு ஒன்றுண்டு. அதனால் இது நீரில் தாவிச்செல்லும். இதனை வெளவால்மீன் எனவும் கூறுவர். இவ்வினத்தில் கழுகு திருக்கை, கொடுக்குவால் திருக்கைமீன் சாரத்திருக்கைகளும் உண்டென்பர். புட்டிமீன்-இது திருக்கையின் பேதம். இது, அமெரிகா கடல்வாசி, புட்டியைப் போல் உருவமும் திருக்கையைப்போல் நீண்ட வாலுமுள்ளது. கண்மூடாக்கோழிமீன்கள் - இவ்வினத்தில் முள்ளிக்கோழி மீன்கள், வரிக்கோழிமீன், புள்ளிக்கோழி மீன் என்பன உண்டென்பர். இவற்றின் நெற்றியிலுள்ள கண்கள் மிகப்பெரியன வாய் இமைகளிலாதனவா யிருக்கின்றன. சில பலவகை வர்ணமமைந்த வுடலுள்ளன. கடல்மான் - இது ஒருவகை மீனினத்தைச் சேர்ந்தது. இதற்கு மீன் கண் போன்ற பெரிய கண்களும் தலையைச் சுற்றிலும் பத்துக்கைகளும் உண்டு. இது, பச்சை ஒணானைப்போலத் தன்னிறத்தை மாற்றிச் சத்துருக்களை வெருட்டும். கெண்டைமீன் - இது உடம்பெங்கும் செதின்களைப் பெற்றிருப்பதுடன் நீர்வாழ்வனவற்றிற் குள்ளனதுபோல செவிகளும் செட்டைகளுமுண்டு. இக்கண்டை யினத்தில் சிறியவை நெற்றிலி, அசரை, என்பர். சேல்மீன் - இது கெண்டைமீன் வகைகளில் ஒன்று. இது நீரில் உலாவுகையில் பிறழுமியல்புடையது. பாடும்மீன் - இது இலங்கைக்கருகிலுள்ள மட்டகளம் எனும் இடத்தை அடுத்த கடலினுள்ளது இது, (10) அங்குல நீளமாம். இது களித்து உலாவுகையில் தன்னிடமுள்ள செதின்களை மூடித்

திறப்பதால் ஒருவித ஓசை இனிதாக உண்டாகிறதாம். காட்மீன்-இம்மீன் ஐரோபா கண்டத்தின் வடகடலிலுள்ளது. இம்மீனின் விருத்தியால் அக்கடலோடிகள் செல்வமடைகின்றனர். இது ஒரு தடைவைக்கு (10) லக்ஷத்திற்குமேல் முட்டையிடுகிறது. இதன் ஈரலிலிருந்து ஒருவகை எண்ணெய் எடுக்கின்றனர். அதுவே காட்லிவர் ஆயில். பறக்கும் மீன் - இம்மீனினங்களுக்கு விலாப்பக்கங்களில் இறக்கைகள் உண்டு. இது நீரில் (3) அடி உயரம் கிளம்பி (50) அடி தாவிச்சென்று நீரில் மூழ்குகிறது. இவை கூட்டம் கூட்டமாகவே வசிக்கின்றன. தட்டைமீன் - இது, தட்டையாய் ஓரத்தில் இதற்கு முதுகிலிருந்து வால்வரையில் சிறு செட்டைக ளிருக்கின்றன. இதற்கு மனிதற்குள்ளதுபோல் நாக்குண்டு. ஆகையாலிதனை நாக்குமீன் என்பர். கண்ணாடிமீன் இதன் உடல் தட்டையாய்க் கண்ணாடிபோல் இருப்பதாலும், தண்ணீரினிறத்தைப் பெற்றிருப்பதாலும் இதனை அவ்வாறு கூறுவர். காதும், கொம்புமுள்ள மீன். இவ்வகைமீன் ஜபான்கடலில் (1918) வருஷம் அகப்பட்டதாம். அதற்கு இரண்டடி நீளமுள்ள காதும் கொம்பும் இருந்ததாம். கூடுகட்டுமீன் - இது, ஜபான் கடலிலுள்ள மீன்வகைகளைச் சேர்ந்தது. இது கடலிலுள்ள பூண்டுகளைக்கொண்டு கூடு கட்டி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து அக்குஞ்சுகள் இரை தேடித்திரியும் பருவம் வரையில் காத்துவிடும் என்பர். பட்டுமீன் - இது மத்யதரைக் கடலையடுத்த உஷ்ண பிரதேசத்தின் கடலிலுள்ளது. இது, பட்டுப்பூச்சிகளைப்போல் பட்டு உண்டாக்குகிறதாம். இதன் நாக்கின் அடிப்பாகத்தில் சிறு குழாய்போன்ற உறுப்புண்டு. அதிலுண்டாம் பசையினால் பட்டு உண்டாக்குகிறது. ஒட்டுமீன் - இது சுறுமீனின் இனத்தது. இதன் தலையின் மேற்புறத்தில் தட்டையாக ஒரு காற்றுறிஞ்சும் சதை ஒன்றிருக்கிறது. அதனாலிது பெரிய பிராணிகளின் உடல்களி லொட்டிக்கொண்டும் மரக்கலங்களி னடியில் ஒட்டிக்கொண்டும் ஜீவிக்கிறது. தூண்டில்மீன் - இது ஐரோப்பிய கடல்வாசி. (2) முதல் (10) அடி நீளமும் கனமுமுள்ளது. இதற்கு முகத்திலும் நெற்றியிலும் மீசைபோன்ற உறுப்புக்கள் உண்டு. அவ் வுறுப்புக்களில் ஒன்று நெற்றியில் நீண்டு நுனியில் தூண்டில் போலிருக்கிறது. இம் மீன் கடலடியில் தங்கித் தன்னை மறைத்துத் தூண்டில்போலும் உறுப்பை வெளிவிட மற்றமீன்கள் அதனை இரையென எண்ணிக் கௌவத் தன்னுறுப்பை இழுத்துக்கொண்டு கவ்விய மீனை யிரையாக்குவது. தொப்பைமீன் இதுவும் தூண்டில் மீன்வகையிலொன்று. இது வங்காளக்குடாக்கடலி ன்டிப்பாகத்திலிருக்கிறது. இதற்கு மூக்கின் மீதுள்ள கொம்பின் முனையில் செண்டுபோன்ற ஒரு உறுப்புண்டு. அதனை வெளியிட்டுத் தான் மறைந்திருக்கும். ஏதேனும் பிராணி அதனைத் தீண்ட உடனே அப் பிராணியை இரையாக்கும். நச்சுக்குழற் கண்ணுள்ள மீன் - (Telescope Fish) இது, சைனு, ஜப்பான் கடல்களிலும் நீர்நிலைகளிலுமுள்ளவை. இம் மீனின் கண்கள் தூர திருஷ்டி கண்ணாடி நீண்ட குழாயில் பதித்ததுபோல் நீண்ட உறுப்பில் பதிந்திருக்கின்றன. இதனிறம் கபில நிறமாகவும், சில வேளைகளில் பொன்னிறமாகவும் மாறுகிறதாம். இதன் உடல் பலவகை நிறமும் புள்ளிகளும், கோடுகளும் பெற்று அழகாயிருக்கிறது. ஆகையால் இதை வீடுகளில் வளர்க்கின்றனர். சண்டை செய்யும் மீன்-இம் மீன் ஸயாம்நாட்டு சிங்கப்பூர் முதலிய வற்றிலுள்ள நீர்நிலையிலிருப்பது. இது (10) அங்குல நீளமுள்ளது. இது, தன்னினங்களுடன் தன்னினத்தை மாற்றிச் சண்டையிடல் அழகாகத் தோன்றுமாகையால் இதை வீட்டில் வளர்ப்பது. நீர்த்துருத்திமீன் - இது சேலினத்தைச் சேர்ந்து இது ஜாவாதீவின் நீர்நிலைகளி லுள்ளது. இது நீரின் மேனிலையில் மேய்ந்து வருகையில் அருகில் பறக்கும் பட்டாம்பூச்சி வண்டுகள்மேல் தண்ணீரைப் பீச்சாங்குழல்போல் பீச்சி அப்பூச்சிகளை மயக்கி அவை நீரில் விழுந்தவுட னிரையாக்கும். அம்புவிடுமீன்-(Cylindirda) இது, ஐரோப்பிய கடல்களிலிருக்கிறது. இம் மீனின் தேகத்தில் குழாய்போல் ஒரு உறுப்புண்டு. இது, தன் விரோதியைக் கண்டபோது அவ்வுறுப்பின் வழியாக ஒருவித நீலவர்ணமான திரவத்தை வெளிவிட அத்திரவம் மற்றப் பிராணிகளின்மீது பட்டவுடன் நோவுதருதலால் இதைக்கண்டவுடன் பிராணிகள் விலகிப்போகின்றன. இவ்வினத்தில் மற்றொன்றிற்கு ஆசனத்தருகி

ளுள்ள குழையில் வழுவழுப்பான தசை சத்திருக்கிறது. அதைப் பீச்சி விரோதிகளை அது பயப்படுத்துகிறது. மற்றொரு வகை மீன், தன் கடைவாயின் இருபுறமுள்ள த்வாரத்திருந்து பொரிபோன்ற முட்டைகளை விரோதிமேல் தூவ அது விரோதிகள் மீது பட்டவுடன் வெடித்து அதிலிருந்துண்டாம் ஊசிபோன்ற அணுக்கள் தைக்கும், அதனால் அவை நீங்கும். லினோபிரியன் பாலிபோகன் (Linophryne polypogon). இம் மீன் கடலினடியில் (3000) அடிகளுக்குக் கீழ் இருக்கிறது. இதன் உடல் குறுகிப் பருத்திருக்கிறது. தேகத்தில் பலாக்காய்போன்று சிறுசொறிமுள் உண்டு. இது சிங்கத்தையொத்த அகன்ற வாயும், நெற்றியில் ஒரு கொம்பும் மூக்கு முனையில் மயிலிறகுபோன்ற குஞ்சமும், தாடியும் பெற்றிருக்கும். (2) இவ்வினத்தில் மற்றொன்றுக்கு தேகம் அதனையொத்து வாயடியினும் மூக்கின் மீதும் கவைத்த கொம்புபோலுறுப்பு பெற்றிருக்கிறது. இவ்வினத்தில் வேறொன்று இதற்கு ஆங்கிலத்தில் லினோபரியன்மக்ராடன் (Linophryne Macrodan) (3) இவ்வினத்தில் வேறொன்று, பேரோப்ரியன் ஆபோகான் (Borophryne Apogon) என்பது. இம் மீனின் தேகம் முன்னையதை ஒத்தது, பெரியது, இதன் வாயும் பற்களும் சிங்கத்தை ஒத்திருக்கிறது. இதன் மூக்கின் முனையில் பந்துபோல் திரண்ட அழகிய உறுப்பு ஒன்றுண்டு. இது ஒருவகையான நெடியுள்ள திரவத்தை விரோதிகளிடம் பீச்சுகிறது.

**விசித்திரவண்ண மீன்கள்** - இவை பவழத்தீவில் உள்ளன. இவை பலவித வர்ணங்களையும் தேகத்தில் பலவித புள்ளிகளையும் உடையன. அவற்றினிறத்தால் அவைகளை நீலமீன், கிளிமீன், கோழிமீன், வண்ணாத்திமீன், வரிக்கோழிமீன், முள்ளிக்கோழிமீன், புள்ளிக்கோழிமீன் எனப் பெயரிட்டிருக்கின்றனர். இவைபொன்மை, செம்மை, நீலம், மஞ்சள், கறுப்பு முதலிய நிறங்களைப் பெற்றவை. **ஒளியுள்ள மீன்கள்** - இவ்வினத்திற் சில கடலின் அடிப்பாகத்திலிருக்கின்றன. அவற்றிற் சில தம் உறுப்பில் ஒளியுள்ள உறுப்புகளைப் பெற்றவை. அவற்றை மிக்டோபஸ் (Myctophos) என்பர். சில ஒளியை வேண்டிய போது வருவித்துக்கொள்வன. அவை நிக்டோபஸ் (Nyctophos) என்பர். ஒளிகக்கு மீன் கிரீனடியர் வகுப்புமீன் (Grenadier Species) - இம்மீனின் உடலில் செதிள்களிலாப்பாகத்தில் வெண்மையான புள்ளிகளுள்ளன. இம் மீன்கள் விரும்பிய போது அவற்றினின்று ஒருவித வழுவழுப்புள்ள பசை வெளிப்படுகிறது. அப்பசை நீரில் பட்டவுடன் நீலங்கலந்த ஒளியுண்டாகிறது. அவ்வொளியால் இது இரை தேடிக்கொள்ளுகிறது அப்பசையை ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் வைத்தால் வாசிக்கக்கூடிய ஒளிதருகிறதாம்.

**நக்ஷத்திரமீன்-Star Fish** இம்மீன் தன் தேகத்தில் ஒருவகைப் புள்ளிகள் செதிள்களில்லாமல் கண்ணாடி வட்டங்கள் பதித்தவைபோலக் காணப்படுகின்றன. அவை நக்ஷத்திர ஒளிபோல ஒளிவீசுவதால் அவ்வொளியால் இவை ஆகாரம்தேடிக்கொள்கின்றன விளக்கு மீன்கள் - இவற்றில் நான்குவகை உண்டு. ஒன்று தெண்டையினம். இதன் பெயர் பரோப்பிரியன் ஆபகோன் (Borophryne Apogon) என்பர். இம்மீனின் கண்ணின் கருவிழியையடுத்து வெண்மையான. ஒருவட்ட வுறுப்புள்ளது. அவ்வட்டவுறுப்பினொருசார் ஒருவெளிச்சமுண்டாயிருக்கிறது. அதைச் சுழற்றி வெளிச்சத்தை யுண்டாக்கி இரை தேடுகிறது. இரண்டாவதான மீன் லினோபிரியன் பாலிபோகன் - (Linophryne Polypogon). இதுவும் மேற்சொன்ன மீன்போலக் கண்வழியாக வெளிச்சம் உண்டாக்கிக் கொள்கிறது மூன்றுவது மீனோ மிகப் பருத்தும் குறுகியும் பிராணிகளும் மனிதரும் அஞ்சத்தக்க பயங்கரப் பற்களும் உருவமும் உடையது. இதனைக் கடற்பேய் என்பர். இதன் பெயர் லீனோபிரியன் பாலிபோகன் (Linophryne Polypogon). இதுவும் மேற்சொன்ன மீன்போலக் கண்வழியாக வெளிச்சம் உண்டாக்கிக் கொள்கிறது மூன்றுவது மீனோ மிகப் பருத்தும் குறுகியும் பிராணிகளும் மனிதரும் அஞ்சத்தக்க பயங்கரப்பற்களும் உருவமும் உடையது. இதனைக் கடற்பேய் என்பர். இதன் பெயர் (லீனோப்ரியன் மக்ராடன் (Linophryne Macrodon) என்பர். இம் மீனுக்கு மூக்கின் முனையில் கொம்புபோல் ஒரு உறுப்பு நீண்டிருக்கிறது. அதன் முனையில் காந்தவிளக்குட்போல் ஒரு உருட்சியான ஒளியுற்ற உறுப்

பிருக்கிறது. நான்காவது தவளைமீன் (Fishing Frog). இது தவளைக்குஞ்சின் உருப்போல நீண்டவுருவுள்ளது. இது தன்னுடலை விரும்பியபோது நீட்டவும் சுருக்கவும் கூடியது. இதற்குக் கண்கள் விலாப்பக்கத்தி லிருக்கின்றன. இக்கண்களில் இதற்கு ஒளி உண்டு. அவை நீட்டவும் சுருக்கவும் கூடும். அக்கண்களின் ஒளியாலிரை தேடுகின்றன. இம் மீன்வகைகளில் சிலவற்றிற்குத் தலைமீது பிரகாசமான பச்சை மத்தாப்பின் ஒளியும், சிலவற்றிற்குக் கண்களைச்சுற்றி ஒளிகொண்ட புள்ளிகளுண்டு. அவை மின்மினிப்பூச்சிபோல் ஒளிதருகின்றன. சிலவற்றிற்கு உடலில் ஒளிகலந்த வரிகளும், புள்ளிகளுமுண்டு அவை ஒளிதருகின்றன. தூங்குமீன்கள் - இவ்வின மீன்கள் கடல் மத்தியில் நின்றுகொண்டே தூங்குகின்றன. மாலையில் கடலடியில் படுத்து விடியுமளவும் தூங்குகின்றனவாம். முட்டையை வாயில் வைத்துக் காக்குமீன் - இம்மீன் கெளுத்திமீன் வகையைச் சேர்ந்தது. இதில் பெண்மீன் சில முட்டைகளையிட அவற்றை ஆண்மீன் வாயில் வைத்து அடைகாத்து குஞ்சுகளானபின் வெளிவிடுகின்றன.

**விநோதநிற்குமீன்** - இதற்கு சங்கன் என்பது பெயர் (Cir itiothys aureus). இது வெண்மை கலந்த செந்நிறத்ததாய் மார்பினிரு பக்கங்களிலுள்ள துடுப்புகளை ஊன்றிக்கொண்டும் வாலை யூன்றிக்கொண்டும் நிற்கிறதாம். மண்மீன் - இது விலாங்குமீன்போல் நீண்டு சட்டைகளிலாமல் மீசையுடன் இருக்கிறது. இது மழைக்காலத்தில் வெளியாகி நீரில் உலாவுகிறது. வேனிற்காலத்தில் மண்ணிற்குள் புதைந்திருக்கும். இது மண்ணிற்புதைந்திருக்கையில் தன் கொழுப்பையே ஆகாரமாகக் கொள்கிறதென்பர். இரட்டைமீன் - இது அமெரிகாவாசி. கெண்டையினத்தைச் சேர்ந்த மீன். இம்மீனில் ஒன்று பெரிது, மற்றொன்று அவ்வினத்தில் அதன் அடிப்பாகத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிறது. இவற்றிற்கு ஆகாரம் வேறு. இவற்றின் வாயில் இரண்டு கூரிய முட்கள் இருக்கின்றன. சூரியமீன் - இம்மீனின் விலாப்பக்கம் தட்டை, முதுகு வயிற்றின் பக்கங்கள் அகன்று தட்டையாக இருக்கிறது. இதனிரண்டு செட்டைகளும் முதுகின் பக்கத்திலும், வயிற்றின் பக்கத்திலும் நீண்டு இருக்கின்றன. இம்மீனின் மேற்றோல் மெருகிட்ட வெள்ளிபோல் காணப்படலால் இது தன்னுடலிற் பாதியை நீரினுள்ளும் பாதியை வெளியிலும் வைத்துக்கொண்டு திரியும். காட்சியில் சூரிய ஒளி அதின்மீது படுகையில் மற்றொரு சூரியன்போல் காணப்படுதலால் இதனைச் சூரியமீன் என்பர்.

**தும்பிமீன்** - இதன் செட்டைகளும் வாலும் கழுகின் செட்டைபோன்று. தோலாலும் எலும்பாலும் இணைக்கப்பட்டிருக்கின்றன. உடல் புள்ளிகளாலும் கோடுகளாலும் நிறைந்துள்ளது. இதனுடல் எலும்பால் மூடப்பட்டிருத்தலால் எந்தப் பிராணியுமிதனிடம் வருவதில்லை. இது சுயேச்சையாய்க் கடலில் உலாவும். மாட்டுமீன் - இதன் உடல் தட்டையாயும், முதுகில் உயர்ந்து முகம் நீண்டு தலைப்பாகத்தில் மாட்டின் கொம்புபோல 2. கொம்புள்ளதா யிருக்கிறது. நிறமாறுமீன் - இது கெண்டை யினத்தது. இதன் முகமும் வாலும் செந்நிறம். காலையில் வெள்ளிபோல் நிறம். மாலையில் மங்கல், கோபங்கொள்கையில் செம்மை. நான்கு கண்களுள்ள மீன் - இது கெண்டையினம். இதற்கு செஸ்டோடன் எனப்பெயர். (Chastodon). இதற்கு முகத்தில் இரண்டு கண்களும், வாலின் முனையில் செட்டைக்குட்பட்ட பாகத்தில் 2. கண்களும் இருக்கின்றன. இந்திய பறவைமீன் - (The Indian Flying gurmand) இது கெளித்தியினம். இதன் பிடரியில் நீண்ட ஒருமுள் இருக்கிறது. இதன் செட்டைகள் மெல்லிய எலும்புக்கம்பிகள் பெற்றுத் தோலால் இணைக்கப்பட் டிருக்கின்றன. இவ்விரக்கைகள், உடலினும் நீண்டிருத்தலால் தண்ணீரின்மேற் பறந்து சிலநேரம் நிற்கவுஞ் செய்கின்றன. இந்துமகா சமுத்ரவாசி.

**முண்டைக்கண் காக்காசி** - (Blotch Eye Fish). இது, கெளுத்தியினம். இம்மீனின் கண்கள் பெரியவை. இதன் கண்களின் வெளியிலும் உள்ளிலும் கறுப்புப் புள்ளிகள் அழகாயுண்டு. இம்மீனின் கண்கள் பூனையின் கண்போல் ஒளியுள்ளது. விநோத தலையுள்ள மீன் - இம் மீன்கள் ஐரோப்பியக் கடலகத்தன. இவற்றின் தலையில் தொப்பி யணிந்திருப்பது போன்று மெல்லிய தகடுபோல அழுத்தமாகவும்

வட்டமாயும் உள்ள ஒரு உறுப்பு இருக்கிறது. இது அதனைக் கழுத்துவரையில் மூடிக்கொண்டிருக்கிறது. இதைக் காணு மீன்களிதைப் பிராணியென அறியாது விட்டுவிடும். விநோத வயிற்றுமீன் - (Black Swallower). இது, கடல் வராலினத்தது. இம்மீனின் வயிறு மற்ற மீன்களின் வயிறு போலாது ரப்பரைப்போல விரியவும் சுருங்கவும் கூடியதாயிருக்கிறது. அதனாலிதன் வயிறு உடலினும் மும்மடங்கு பெரிதாயிருக்கிறது. இதன் தொண்டையும் தலையைவிடப் பெரிது. இது இரையகப்படுங் காலத்தி லதிகந் தின்று சிலநாள் வரையில் இரை தேடாமல் கடலினடியிலிருக்கும் என்பர். எலும்புடல் மீன் - (The Trunk Fish). இம்மீன் உடல் செதிள்களுள்ளதாய்ப் பலாக்காய் முட்கள் போன்று எலும்பாலானதாய் வால் குழல் போன்ற வுறுப்பில் விசிறிபோன்று அழகாய் இருக்கிறது. ஆதலால் இதனைப் பணப்பெட்டி மீன் என்பர்.

ஸ்டர்ஜியன் மீன் - (The Sturgeon Fish) இது, அத்லாண்டிக், காஸ்பியன் கடலிலுள்ள மீன். இது வியப்புள்ள உடலும் குடலுமுள்ளது. இதன் நீளம் (25) அடிகள், கனம் (300) பவுண்ட். முதுகில் முதலைக்கிருப்பது போன்ற செதிள்களுண்டு. அவை கவசம்போல் (5) வரிசைகளாய் தலைமுதல் வால்வரையில் வியாபித்திருக்கிறது. வாய் தலையின் கீழ்ப் பாகத்தி லிருக்கிறது. இதன் முதுகெலும்பின்கீழ் காற்றுப் பையொன்று கொதிநீருள்ளதா யிருக்கிறது. அம்மீனின் குடலைத்தொட்டால் விருவிருப்புத் தோன்றுகிறதாம். தாடிநீண்ட மீன்-இம்மீன் கெண்டையினத்தது. (Polynemus Artedi). இது ($\frac{1}{2}$) அடிமுதல் (5) அடிகள் நீளமுள்ளது. இம்மீனின் கழுத்தடியில் செவுள்களின் பக்கமாய் உடலினும் நீண்டதாய் மயிர்க்கம்பிகள் போன்று தாடிகள் உண்டு. முட்டையுதிர்க்கு மீன் - ஐரோப்பிய மீன் வகையிலொன்று. கெண்டையினத்தது. இம்மீனின் செதிள்களுக் கிடையிலுள்ள தோலில் சிறு தொளைகளிருக்கின்றன. அம்மீனைப் பிடிக்கின் அத்தொளைகளிலிருந்து சிறு முட்டைகள்போன்று வழுவழுப்பான பொருள்களுதிர்கின்றன. இவை குஞ்சுதரும் முட்டைகளல்ல. இம்முட்டைக ளம்மீனுக்கு ஆகாரமாகின்றன.

மூக்குமீன் - (The Sword Fish). இது சுருவகையைச் சேர்ந்தது. இது மத்யதரைக் கடலிலும் மற்ற நீர்நிலைகளிலுமுள்ளவை. இதன் மூக்கு குத்துவாள் போலிருக்கிறது. இவ்வினத்தில் சிலவற்றிற்கு மேல் கீழ்வாய்களில் பற்களிருக்கின்றன. இதில் ஒருவகை மீனுக்கு நாக்குமிருக்கிறது. அது வெளியில் நீட்டவும் சுருக்கவும் கூடியதாயிருக்கிறது. சுருமீன் - இதனைக் கடற்புலி என்பர். இவ்வினத்தில் (2) அடிகள் முதல் (50) அடிகள் நீளம் உண்டு. இதற்கு முன்னும் பின்னுமாக (2) செட்டைகளும், கழுத்தின் பக்கத்தில் கைபோலுதவும் (2) ம், வயிற்றின் கீழ் பாகத்தில் பின்புறமாக கால் போன்ற (2) செட்டைகளும், அதன்கீழ் ஒரு செட்டையும், வால் முனையில் ஒரு செட்டையுமாக (8) செட்டைகள் உண்டு. இவற்றின் உதவியாலிது மணிக்கு (20) மைலுக்குமேல் நீந்திச்செல்லும். இம்மீன்களில் பெரியவை ஆழமுள்ள நீரில் வசிக்கின்றன. இவ்வினத்தில் பல வேறுபாடுகளுண்டு. இம்மீன்களின் பெண்மீன் முட்டைகளைக் கடற்பூண்டுகளில் சிக்கச் செய்துபோக குஞ்சுகள் பருவம் வந்தபோது முட்டையின் தலைப்பாகத்தைக் கடித்து வெளிவரும். இவ்வினத்தில், வெள்ளைச்சுரு, புள்ளிச்சுரு, நாய்ச்சுரு, சுத்தித் தலைச்சுரு, வாள்பல்மூக்குச்சுரு எனப்பலவகை. வெள்ளைச்சுரு இதன் மேற்றோல் கபில நிறமாயும் வயிறு வெண்ணிறமாயு மிருக்கிறது. இம்மீனினங்களுக்கு வாய் தலையின் கீழ்ப்பாகத்திலிருக்கிறது. இம்மீனின் பற்கள் அதிக கூர்மையுள்ளவை. இது பெரிய பிராணிகளைத் துண்டாக்கி விழுங்கும். இது குட்டி போடுகிறது. புள்ளிச்சுரு - இதன்மேல் சிறுத்தைப் புலிமேல் காணப்படும் புள்ளிகள்போல் புள்ளிகளிருப்பதால் இதனைப் புலிச்சுரு என்பர். இது குட்டிபோடுகிறது. நாய்ச்சுரு இவ்வினத்தில் பெரிது (50) அடிகள் கொண்டது. இதன் உடல் சுறசுறப்பான முட்களடர்ந்தது. இது, எல்லாப் பிராணிகளையுந் துரத்தி யுணவாக்கும். சுத்தித்தலைச்சுரு - இதன் தலை இருபக்கங்களிலும் சுத்திபோல் அகன்றிருக்கிறது இதன் கண்கள் சுத்திபோலகன்ற பக்கத்திலிருக்கின்றன. இம்மீனினத்தில் சிலவற்றிற்குத் தலைப்பக்கம் அகன்று முன்

புறம் நீண்டு மண்வெட்டி போலிருப்பதால் அதனை மண்வெட்டித் தலைச்சுறா என்பர். வெள்ளைச்சுறா இனத்தில் சிலவற்றிற்கு மாட்டின் தலைபோலிருப்பதால் அதனை மாட்டுமூஞ்சி சுறா என்பர். மற்றொருவகை திமிங்கிலத்தை ஒத்திருத்தலால் அதனைத் திமிங்கிலச்சுறா என்பர். **வாள்பல் மூக்குச்சுறா** - இதனைக் கடலோடிகள் வாளா என்பர். இது (10) அடிகள் முதல் (60) அடி நீளமும் கனமும் உள்ளவை. இம்மீனின் தலையின் மேற்பாகம் மூக்கின்மூனை வாளின்பற்கள்போன்று இருபக்கங்களிலும் மிக நீண்டிருக்கிறது. இதனைக் கண்ட திமிங்கிலங்கள் போன்ற பெருமீன்களும், கடலோடிகளும் அஞ்சி நீங்குவர். சிலவற்றின் மூக்கு (15) அடிகளுக்கு மேலும் நீண்டுள்ளது. (இயற்கை அற்புதம்)

**டால்பின் மீன்** - இதன் உடல் குழவி போல் நீண்டிருக்கும். இது (4) அடி முதல் (10) அடிகள் நீண்டிருக்கும். இது, பெரிய கடல்களிலும் பெரு நதிகளிலும் கூட்டங்கூட்டமாய் வசிக்கும். இது கூர்மையாய் நீண்ட மூக்குடையது. இதன் வாய்களில் சற்றேறக்குறைய (100) பற்களுண்டு.

**மீன்வலையன்** — (செம்படவன்). சாலியன் வைசியப் பெண்ணின் தோள் புணரப் பிறந்தவன். (அருணகிரி புராணம்.)

## மு

**முகடி** — மூதேவிக்கு ஒரு பெயர்.

**முகத்துவாரம்** — ஆறு, சமுத்திரத்தில் கலக்கும் இடத்திற்கு முகத்துவாரம் என்று பெயர். (பூகோளம்.)

**முகமத்நபி** — இம்மஹான் அரப நாட்டின் தலைநகராகிய மக்காவின்கண் கி. பி. 571ல் ஆகஸ்டு (29)ந்தேதி திங்கட்கிழமை வைகறைப் பொழுதில் (யானையாண்டின் ரபீஉல் அவ்வல்மாபிறை 9 ல்) அத் தேயத்தின்கண் விளங்கிவந்த மஹாசிரேஷ்டம் வாய்ந்த கோத்திரமாம் குறைஷிக் குலத்திலே அப்துல் முத்தலிபின் இளைய குமாராகிய அப்துல்லாவுக்கு, அவரது பாரியாள் ஆமினு என்பவரின் உதரத்தினின்று உதயமாயினர். இம் மஹானது அவதாரத்திற்கு அவ்வரப்காடு மட்டுமல்லாது, வனைய பகுதிகளுங்கூட அஞ்ஞான மென்னும் அந்தகாரத்தில் அதிகம் ஆழ்ந்து கிடந்தன வென்பதற்கு அவ்வத்தேய சரித்திரங்கள் பகர்ந்துகொண்டிருக்கின்றன. இப்பெரியாருக்கு (5) நூற்றாண்டுகளுக்கு முன்னேதான் இயேசு கிறிஸ்து ஆசியாவின் மேற்குப் பகுதியிலும், அவருக்கு (5) நூற்றாண்டுகளுக்கு முன்னே தான் கௌதமபுத்தர் ஆசியாவின் கிழக்குப் பகுதியிலும் அவதரித்து நல்லுபதேசம் புரிந்து சென்றிருந்தும், கி. பி. 6-வது நூற்றாண்டில் எல்லா மேற்குத் தேயங்களும், எல்லாக் கிழக்குத் தேயங்களும் நாகரிகத்திலும், நல்லொழுக்கத்திலும், ஞானப் பிரகாசத்திலும் மிகத் தாழ்ந்து கிடந்தனவாதலின், அப்பொழுதொரு விசுவப்பொதுத்தீர்க்கதரிசி இத்தாணியின் உஜ்ஜீவிப்பின் பொருட்டே அவதரிக்க வேண்டுவது அத்தியாவசியமாய்க் காணப்பட்டு விட்டது. ஆயின், ஒழுக்கவீனத்திலும், மடமைத்தனம் குடிகொண்ட இழிய பாமரத் தன்மையிலும் அப்பண்டை உலகின் மத்தியபாகமாய் விளங்கிய அரப்தேயமே அத்தகைய தீர்க்கதரிசியின் அவதாரத்திற்குரிய சிறந்த பூபாகமாய்க் காணப்பட்டு வந்தது. முஹம்மதென்பார் கி. பி. 6-வது நூற்றாண்டின் இறுதியிலே அந்நாட்டின்கண் ஜனனமாகி, ஆண்டவனுக்குரிய ஏகேசுவரக் கொள்கையையும், ஏக சகோதர வாழ்க்கையையும் எல்லோருக்கும் சரிசமானமாகவே எடுத்தோதத் தொடங்கினர். இவர் ஜனனமாகச் சில மாதம் முன்னரே இவரது தந்தை காலகதியால் தேசவியோகமாய்ப் போய்விட்டார். பிறந்து 6-வயதாகு முன்னரே அன்னை ஆமினுவும் ஆண்டவனடி சேர்ந்துவிட்டார். ஆகவே, அன்னையும் பிதாவும் மற்ற அனாத முஹம்மதை அப்துல் முத்தலிபே பிறகு ஈராண்டுகள் மட்டும் போற்றிவந்தார்; அதன்பின் அப்பாட்டனாரும் இறந்துபட்டபின் பெரிய தந்தையாய் விளங்கிய அபூத்தாலிபின்மீதே அவ்வனாதச் சிறுவனை ஆதரிக்க வேண்டிய பொறுப்பு வீழ்ந்துவிட்டது. இப் பெரிய தந்தையார் அவ்வாலிபருக்கு வயது 25-ஆகும்வரை தம்மிடத்திலேயே வைத்திருந்து, ஷாம் (ஸீரியா) முதலிய பகுதிகளுக்குச் சென்று வர்த்தகம் செய்து வரும் முறையையும் கற்றுக்கொடுத்து வந்தார்.

பாலிய முதலே இந்த யுவர் வாய்மை
யுடைமை, தீமை யின்மை, யோக்கியப்
பொறுப்பு, ஒழுக்கப் பெருமை, நம்பிக்
கைச்குரிய தன்மை முதலிய சற்குணங்
களில் தலைசிறந்து விளங்கியமையால்,
"அல் அமீன்" (சரியான நம்பிக்கைக் குரி
யவர்) என்னும் அழகிய பட்டத்தையும்
அத்தேய மக்களால் வழங்கப்பெற்று, அம்
மக்கமா நகரின்கண்ணே அதற்குமுன் 40
பிராயத்தை அடைந்து விதவையாய்ப்
போயிருந்த கதீஜா வென்னும் பெரிய
பணக்காரச் சீமாட்டியின் வர்த்தகத் தலை
வராய்த் தேர்ந்தெடுக்கப் பட்டார். அம்
மாதுசிரோமணியின் ஷாம்தேய வியாபார
த்தில் நம்பிக்கையுடன் நடந்து நல்ல இலா
பத்தையும் காண்பித்துத் தந்ததனால், அன்
னவரது யோக்கியப் பொறுப்பிலும், வர்த்
தக வாய்மையிலும், களங்கமற்ற ஒழுக்கத்
திலும், பெருமதிப்புக் கொண்டு விட்ட
கதீஜாப்பிராட்டியார் அன்னவரையே திரு
மணம் செய்துகொள்ளத் துணிவுகொண்டு
விட்டார். ஒழுக்கவீனத்திற்கே சிறந்து
விளங்கிய அவ் வரப்தேயத்தின்கண் தம்
முடைய 25-வது பிராயம் வரை மஹா
பரிசுத்தத்துடனே நடந்துவந்த முஹம்ம
தானவர் 40-பிராயம் நிறைந்திருந்த அவ்
விதவையை மனமார மணந்துகொண்டு,
தமது 50-வது பிராயம்வரை சம்பூரண
சௌஜன்னியத்தடனே தான் இல்லறம்
நடாத்திவந்தார்; அதுகாறும் வேறொரு
கன்னியையும் அப் பெரியார் மணந்து
கொள்ளவில்லை. ஆகவே, அந்த கதீஜாப்
பிராட்டியுடன் ஐக்கியப்பட்டு, அந்தச் சீமா
ட்டியின் ஐசுவரியங்களனைத்தையும் தான
தர்மங்களிலே அதிகம் செலவிட்டுக் காலங்
கழித்துவந்தார். அந்த விவாகத்திற்குப்
பின் முஹம்மத் என்பார் வர்த்தகத்திலே
ஈடுபடாது, தனித்திருந்து தியானம் புரி
வதிலும், தானதர்மம் செய்வதிலும், சமூக
சேவை புரிவதிலும், இம்சிக்கப்பட்ட
ஏழை எளியோர்களுக்கு உதவி செய்வதி
லுமே காலங் கழித்துவந்தார். அப்படிப்
பட்ட யோகநிஷ்டைகளிலெல்லாம் அடிக்
கடி வானவர்கள் (மலக்குகள்) வந்து அவ
ரது ஞானக்கண்ணுக்குப் புலனாவது வழக்
கமா யிருந்துவந்தது. இவ்வுலகமக்களின்
அஞ்ஞானத்தை நீக்கி, சுஞ்ஞானத்தைப்
புகட்டுவதற்கும் இவர்களை யெல்லாம் ஏக
தெய்வத்தின் மக்களாகவே அமைப்பதற்
கும், இவர்களுக்குள் ஏக சகோதரக்
கொள்கையை நிலைநாட்டுவதற்கும் அவ்
விறைவனாலேயே நல்வழி யொன்று
காட்டப்பட மாட்டாதாவென்று அல்லும்
பகலும் அனவரதமும் சதாசிந்தாகுலரா
யிருந்து வந்தார்; இவ்வாறாக 15 ஆண்டு
கள் மட்டும் கழிந்துவந்தன. அதன்பின்
முஹம்மதுக்கு 40-வது பிராயம் நிகழ்ந்து
வந்தக்கால் அம்மஹானுபாவர் ரமலான்
மாதத்தில் நோன்பு நோற்றுக்கொண்டு,
மக்காவுக்குச் சிறிது தூரத்திலுள்ள ஹிரா
வென்னும் ஒரு மலைப்பொதும்பருள்ளே
தனித்திருந்து, விழித்திருந்து, பசித்திரு
ந்து,அல்லும்பகலாக ஆண்டவனையே தியா
னம் புரிந்துவந்தபோது, அந்த மாதத்தின்
27-வது தினத்தன்று இரவிலே வானவர்
ஜிப்ரீல் என்பவர் அவர்முன் தோன்றி
மகாகண்ணியம் வாய்ந்த இப் பிரபஞ்ச
கர்த்தாவின் திருநாமத்தின் உதவியைக்
கொண்டு ஓதுமாறு கட்டளையிடப்பட்டார்;
உடனே அந்தச் சிருஷ்டி கர்த்தாவின்
அனுக்கிரஹத்தைக் கொண்டு முஹம்மது
நபி ஞானோதயம் பெற்று ஓதக் கற்றுக்
கொண்டார்.

அந்த நபிபெருமானார் தமக்குக் கிடை
த்த ஞானோபதேசத்தை வெளியிலெடுத்
துப் பிரசாரம்செய்யத் தயங்கிக்கொண்டே
சில மாதங்கள்வரை காலங் கழித்து
வந்தார். பிறகும் ஜிப்ரீல் என்னும்
அந்தவானவர்மூலம், தமக்கருளப்பட்டிருக்
கும் ஞானவிலாசத்தை வெளியி லெடுத்து
அனைவருக்கும் போதிக்குமாறு ஆண்ட
வன் அறிவித்திருப்பதாக அறிவுறுத்தப்பட்
டார். அப்பொழுதும் அப்பெரியார் இரக
சியத்திலேயே முதல் மூன்றாண்டுகள் மட்
டும் இஸ்லாமியப் பிரசாரம் செய்துவந்
தார். மக்காவிலுள்ள குறைஷிகள் இவ்
விஷயத்தைத் தெரிந்துகொண்டு இஸ்
லாத்தில் சேர்ந்து வந்தவர்களையெல்லாம்
ஏளனம் செய்து இம்சிக்கத் தொடங்கினர்
கள். மறைமுகமாக முஹம்மத்நபி பிரசா
ரம் செய்துவந்ததனாலும், எதிரிகளின் இன்
னல்களும் இடையூறுகளும் நாளுக்குநாள்
பெருகிக்கொண்டு வந்ததனாலும் முதல்
மூன்றாண்டுகளில் சுமார் (40) மனிதர்களே
இஸ்லாத்தில் சேர்ந்திருந்தார்கள். அவர்க
ளுக்குள் பணக்காரர்களுட்பட ஏழைக
ளும் எட்டில் எழுதி முடியாவண்ணமெல்
லாம் எதிரிகளால் சித்திரவதை செய்யப்

பட்டும், உயிருடனே ஒரு சிலர் கொல்லப் பட்டும், அம்முஸ்லிம்களுள் ஒருவரேனும் இஸ்லாத்தைவிட்டுப் பிரிந்து விடவில்லை எனவே, அந்தக் குறைஷிகள் தங்களுடைய விக்கிரஹ ஆராதனைக்கும், வேறு பலதெய்வக் கொள்கைக்கும், தாங்கள் வகித்துவந்த மக்காவின் தலைமைப் பதவிக்கும் பேராபத்து விளைந்துவிட்டதெனக்கண்டு, இச்சன்மார்க்க முயற்சியை அடியோடு கல்லியெறிந்துவிடுவதே சாலச் சிறந்ததெனக்கொண்டு, அதற்குரிய ஏற்பாடுகளை யெல்லாம் எடுத்துக்கொண்டார்கள். இவ்வாறு அந்தக் குறைஷிகள் செய்துவந்த பல சாம பேத தான தண்டங்களாலெல்லாம் அம்முஸ்லிம்களை ஒறுத்துப்பார்த்தும் ஒன்றும் பலியாது போய்விட்டமைகண்டு, அம்மக்காவாசிகள் சில தூதர்களை யனுப்பி நபிபெருமானுக்குப் பொன்னும், பெண்ணும், அரசபதவியுங் கூட அளிப்பதாகக் கூறினார்கள். இதற்கும் அந்தத் தீர்க்கதரிசி இணங்கி வராததுகண்டு, அவர்கள் அபூத்தாலிப்பிடம் சென்று, இந்த இயக்கம் இனி நிறுத்தப்படாவிடின் உள் நாட்டுக் கலகமே அதிகம் விளையுமென்று பயமுறுத்தினார்கள். அது சமயம் அபூத்தாலிப் வேண்டிக்கொண்டதற்கு நபிபெருமான், எதிரிகள் சூரியனைக் கொணர்ந்து தம் வலக்காத்திலும், சந்திரனைக் கொணர்ந்து தம் இடக்காத்திலும் வைத்தபோதிலும் தம்முடைய சத்திய சன்மார்க்கப் பிரசாரத்தை ஒரு சிறிதும் விட்டுவிட முடியாதென்றும், இம்முயற்சியில் இறுதிவரை வெற்றியே பெருவிட்டால் தாம் மடிந்து தீருவதே ஷாத்தென்றும் உறுதிகூறினர். இவ்வாறு எல்லாம் ஒன்றும் பலியாததுகண்ட குறைஷியரின் கொடுமை இன்னும் பன்மடங்கு மகா உக்கிரத்துடனே தலை விரித்தாடத் தொடங்கிற்று. ஆதலின், அவர்களுடைய இன்னல்களைச் சகிக்க இயலாது நபிப்பட்டம் வந்தபின் 5-வது ஆண்டில் 15 ஆண்களும் பெண்களும் சேர்ந்து செங்கடல் கடந்து அபிஸ்ஸீனியாவில் இருந்த நஜ்ஜாஷீ என்னும் மன்னனது பாதுகாப்பிற்குள் சென்று தங்கிவிட்டார்கள். அப்பொழுதும் அவர்களைச் சும்மாவிடாது குறைஷிகள் சிலரை அந்த மன்னனிடம் அனுப்பி அம்முஸ்லிம்களைத் திருப்பிக்கொண்டு வருமாறு கட்டளையிட்டார்கள். ஆனல், அந்த நஜ்ஜாஷீ மன்னன் வாதிப்பிரதிவாதிகளின் கட்சிகளைக்கேட்டுச் சன்மார்க்கர்களாகிய அம்முஸ்லிம்களைத் துன்மார்க்கர்களாகிய அந்தக் குறைஷியரிடம் திருப்பிக் கொடுப்பது முடியாதென்று மறுத்துவிட்டான். அதன்பின் சிறுகச் சிறுக 101 முஸ்லிம் ஆண் பெண்கள் வரை அந்த அபிஸ்ஸீனியாவுக்கே சென்று புகலிடம் தேடிக்கொண்டார்கள். பிறகு அபூஜஹ்ல் என்னும் கொடிய துஷ்டன் நபிபெருமானை ஒரு நாள் உதிரம் சொரிய அடித்துவிட்ட செய்திகேட்டு முஹம்மத்நபியின் சிறிய தந்தையாகிய ஹம்ஸாவும் அந்த அபூஜஹ்லைப் பதிலுக்குத் தமது தனுசைக் கொண்டடித்துவிட்டு இஸ்லாத்திலே சேர்ந்துகொண்டார். இச்செய்திகேட்ட குறைஷிகளெல்லோரும் ஆத்திரமதிகம் கொண்டுவிட்டார்கள். ஆதலின், அபூஜஹ்ல் உமரென்னும் வாலிபரை அழைத்து முஹம்மதைக் கொன்றுவிட்டுவந்தால் தக்க சன்மானம் அளிப்பதாகக் கூறினன். ஆனல், ஆண்டவனது நாட்டம் வேறுவிதமாயிருந்ததனல், முஹம்மதைக் கொல்லச்சென்ற அந்த உமரே (பிறகு உலகப்பிரசித்தி பெற்று இரண்டாவது கலீபாவாய் விளங்கியவர்) தீனுல், இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டுவிட்டார். இச்செய்தியும் கேட்டு அக் குறைஷியர் பட்ட அவதிக்கோர் அளவில்லை. அவ் விரோதிகள் எல்லாரும் சேர்ந்து கொண்டு முஹம்மத் நபியையும் அவரைச் சேர்ந்த முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதார் ஆகிய எல்லா பனூஹாஷிம் குடும்பத்தினரையும் ஒரு மலைக்கணவாய்க்குள்ளே அடைத்து மூன்றுண்டுகள் வரை ஜாதிக்கட்டென்னும் கட்டுப்பாட்டுக்குள்ளே ஒடுக்கிவைத்து விட்டார்கள். அந்த 3 ஆண்டுகழியும் வரை அவ்வடைபட்ட மக்கள் பட்டுவந்த பாட்டிற்கோர் அளவு சொல்லி முடியாது. இறுதியில் ஒரு சில மக்கா வாலிபர்களால் அக்கட்டுப்பாட்டுச் சீட்டுக்கிழித்தெறியப்பட்டு அடைபட்டிருந்தவர்களெல்லாரும் விடுதலை செய்யப்பட்டார்கள். அதன்பின் நபிப்பட்டம் வந்த 10-வது ஆண்டில் அபூத்தாலிபும், கதீஜாப் பிராட்டியும் காலகதியடைந்து விட்டார்கள். இதனல் நபிபெருமானுக்குப் பக்கபலமென்பது ஒரு சிறிது அம்மக்காவின்கண் தளர்வுறத் தலைப்பட்டது கண்டு எதிரிகளும் அதிகம் துள்ளத் தொடங்கி விட்டார்கள். முஹம்மத் நபி

தாயி பென்னும் மற்றொரு நகருக்குப்
போந்து ஆங்கேனும் பிரசாரம் செய்யலா
மென்றெண்ணிச் சென்றூர்கள். அங்கி
ருந்தும், காவாலிகளால் கல்லாலெறியப்
பட்டுக் காலில் உதிரம் சொரியத் துரத்தப்
பட்டார். பிறகும் மக்காவுக்கே திரும்பி
வந்து யாத்திரைக் காலங்களில் வெளியூர்
களிலிருந்து அங்கு விஜயம் செய்யும் மனி
தர்களை நோக்கி இஸ்லாத்தின் உபதேசம்
புரிந்து வந்தார். அவர்களுள் ஒரு சிலர்
செவிதாழ்த்துவதும், மற்றும் பலர் உதா
சினம் செய்வதுமாகவே சிலகாலம் கடந்து
வந்தது. ஒருமுறை மதீனாவிலிருந்து மக்
கத்திற்கு விஜயஞ்செய்திருந்த அறுவர்
முஹம்மத் நபியின் உபதேசத்தைக்
கேட்டு இஸ்லாத்தில் சேர்ந்துவிட்டார்கள்.
அடுத்த ஆண்டில் அவ்வறுவரும் மற்
றோர் அறுவருடனேவந்து இஸ்லாத்தில்
சேர்ந்துகொண்டார்கள். இது நபிப்பட்டம்
வந்த 11-வது ஆண்டிலாகும். அடுத்த ஆண்
டில் மதீனாவிலிருந்து 75 ஆண் பெண் முஸ்
லிம்கள் மக்காவிற்கு வந்து நபிகள் நாதரை
மதீனாவிற்கு வந்துவிடுமாறும், அவர்களுக்
காகத் தங்களுயிரையுங் கொடுக்கக் காத்
திருப்பதாகவும் வாக்குறுதி செய்து கொடு
த்தார்கள். என்ன நேரினும் இஸ்லாத்
தைத் தற்காத்துக்கொள்ளாது விடுவ
தில்லை யென்பதே அவர்களுடைய பிடி
வாதமாயிருந்து வந்தது. எனவே, நபி
பெருமானும் அதற்கு இடங்கொடுத்து
விட்டமையால் அபிஸ் ஸீனியாவுக்குச்
சென்று தங்கிய முஸ்லிம்களல்லாத ஏனை
யோரெல்லாம் சிறுகச் சிறுக அநேகமாய்
மதீனாவுக்குச் சென்று விட்டார்கள். பிறகு
நபிப்பட்டம் வந்த 13-வது வருட ஆரம்
பத்திலே நபிபெருமானும் புறப்பட்டுச்
செல்லலாமென்னும் ஆண்டவனது அருள்
வாக்கு அனுப்பப்பட்டது. உடனே
முஹம்மத்நபியும் மதீனாவுக்கு ஹிஜ்ரத்
புறப்படச் சித்தமாகி விட்டார். இதற்
கிடையில் எல்லா முஸ்லிம்களும் மதீனா
விற்குத் தப்பி ஓடி விட்டார்களென்னும்
ஆத்திரங்கொண்டு, முஹம்மத் நபியையும்
அவ்வாறு ஓடவிடக் கூடாதென்று தீர்மா
னித்துக்கொண்டு அக்குறைஷியர் ஒரு
நாளிரவிலே அந்த முஹம்மத்நபியைக்
குத்திக்கொன்று விடுவதென்றே ஏற்பாடு
செய்து முடித்துவிட்டார்கள். இது தெரி
ந்து முஹம்மத் நபி அன்றிரவே தம் படுக்
கையின்மீது அபூத்தாலிபின் மைந்தர் அலீ
யென்னும் தமது எதிர்கால மருகனைப்
படுக்கச் செய்துவிட்டு நள்ளிரவிலே அவ்
வீட்டைவிட்டுப் புறப்பட்டு அபூபகர் என்
னும் தம்முடைய பிரதம சிஷ்யரை
மட்டும் அழைத்துக்கொண்டு அவ்விரு
ளிலே சென்று தௌர் என்னும் ஒரு
குகைக்குள்ளே மறைவாகத் தங்கிவிட்
டார்கள். அவ்வாறு அந்தத் தீர்க்கதரிசி
புறப்பட்டபோது அவ்வீட்டை வளைத்து
முற்றுகை போட்டிருந்த எதிரிகளெல்
லாரும் ஆண்டவன் சோதனையால் அயர்
ந்து உறங்கிவிட்டார்களென்று சரித்திரா
சிரியர்கள் எழுதி யிருக்கிறார்கள். ஆனால்,
விடிந்தவுடன் விஷயம் தெரிந்து அவ்
வெதிரிக ளனைவரும் எங்கெங்கும் ஓடித்
தேடினார்கள். தௌர்க்குகையின் வாயில்
வரையுங்கூடச் சிலர் தேடிக்கொண்டு
வந்துவிட்டார்கள். ஆனால், ஒருவரும்
அதற்குள்ளே எட்டிப்பார்க்க எண்ணங்
கொள்ளவில்லை. ஆதலின், எதிரிகள்
ஏமாந்து மக்காவிற்குத் திரும்பியபின்
3-நாள் வரை அக்குகையினுள்ளே தங்கி
யிருந்து 4-வது நாள் புறப்பட்டு மதீனா
விற்குச் சென்றூர்கள்; வழியிலும் ஆபத்
தொன்று நேரும்போற் காணப்பட்டது;
ஸுராக்கா என்னும் மக்காவாசி முஹம்
மத் நபியின் சிரத்தைக் கொய்துவந்து
பரிசு பெறுவான் வேண்டித் துரத்திச்
சென்றான். ஆனால், அவனுடைய குதிரை
இடைவழியிலே பலமுறை இடறி வீழ்
ந்து அவனையும் தள்ளிவிட்டதால் அந்த
ஸுராக்கா வென்பவன் நபிநாயகத்தைக்
கொல்ல மனந்துணியாது பயந்து அன்ன
வர்பால் மன்னிப்புப் பெற்றுக்கொண்டு
திரும்பிவிட்டான். பிறகு சுகமே நபிநாய
கம் அபூபகருடனே மதீனா போய்ச்சேர்ந்
தார்கள். இது நிகழ்ந்தது நபிப்பட்டம்
வந்த 13-வது ஆண்டு ரபீஉல் அவ்வல்
மாபிறை 8-ஆகும். இதுதான் நபிநாயகத்
தின் சரித்திரத்தில் ஹிஜ்ரத்தென்று பிர
பலமாகச் சொல்லப்படுகிறது; இதிலிரு
ந்துதான் முஸ்லிம்களின் ஹிஜ்ரி வருடம்
கணிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு மக்காவைவிட்டு வடக்கில்
300 மைல்களுக் கப்பாலுள்ள மதீனாவுக்
குச் சென்று ஆங்கிருந்த யூதர்களையும் ஏனை
யோர்களையும் சீர்திருத்தி வந்தக்காலும்
குறைஷிகள் மட்டும் முஸ்லிம்கள்மீது

வைத்த வீரமத்தைச் சிறிதும் மறந்துவிட வில்லை. இஸ்லாத்தை ஒழித்து விடுவான் வேண்டி 1000 க்கு மேற்பட்ட குறைஷிகள் அம்மதீனாவின்மீது ஹிஜ்ரி வரையில் படையெடுத்துச் சென்றார்கள்; ஸீரியாவுக்குச் சென்று திரும்பிவரும் மக்கத்தவரின் வர்த்தகக் கூட்டத்தை அம்மதீனாவிலுள்ள முஸ்லிம்கள் தாக்கப்போகிறார்களென்னும் ஒரு பொய் வதந்தியைச் சாக்காக வைத்துக்கொண்டே அம் முஸ்லிம்களைத் தாக்கச் சென்றார்கள். நபி பெருமான் இவ்விஷயம் தெரிந்து தம்மிடமிருந்த சிறுவர்களும், வயோதிகர்களும், பலாட்டியர்களும் சேர்ந்த 313 ஆயுதபாணிகளல்லாத முஸ்லிம்களை அழைத்துக்கொண்டு, மக்காவிலிருந்துவரும் குறைஷிப் படைகளை நடுவழியிலேயே தடுக்கச் சென்றார்கள். ஆகவே, பத்ரென்னுமிடத்தில் அந்தக் கடும்போர் நிகழலாயிற்று. குறைஷிகள் ஆயுதபாணிகளாகவும் அதிக எண்ணிக்கையுள்ளவர்களாகவும் இருந்து வந்ததனால், அளவிறந்த மமதையுடனே அலக்ஷியமாக யுத்தம் புரிந்தார்கள். ஆனால், நிராயுதபாணிகளாயிருந்த முஸ்லிம்களோ தங்கள் தெய்வத்தின்மீது வைத்த உறுதியின் காரணத்தால், இருந்தால் வெற்றி, இறந்தால் வீரசுவர்க்கமென்ற திண்ணிய எண்ணத்துடனே மிகத் திறமையாக யுத்தம்புரிந்து வெற்றிக்கொடி நாட்டினார்கள். ஆனால், பத்ரின் யுத்தகளத்தில் முழுத் தோல்வியுற்றுப் புற முதுகுகாட்டி மக்காவிற்கோடிய குறைஷிகள் தங்கள் இனத்தவர்களையும், சுற்றுப்புறங்களிலுள்ள மற்றெல்லா வர்க்கத்தினரையும் திரட்டிக் கொண்டு 3000 வீரர்கள்வரை மதீனாவிற் கருகேவந்து பாடிவீடு செய்து கொண்டார்கள். அதுபோது முஹம்மத்நபி தம்முடைய 700 சிஷ்யர்களுடனே சென்று மிக்க தீரத்துடனே "உஹதென்னும்" மலையடிவாரத்தில் யுத்தம்புரிந்து, அந்த எதிரிகளனைவரையும் சின்னபின்ன மாக்கி விட்டார்கள். ஆனால், நபிபெருமானின் ஒரு சில வில்வீரர்கள் அம் மலைக்கணவாயின் வழியில் நின்று எதிரிகளை வரவொட்டாது தடுத்து வைத்தனர்; ஆயின், எதிரிகள் தோல்வியுற்றுக் கலைந்தோடுவதைக் கண்ட அவ் வில்வீரர்கள் தங்கள் இருப்பிடத்தைவிட்டுக் கீழேயுள்ள சமவெளிக்கு வந்து சேர்ந்தார்கள். இதனை யுணர்ந்த எதிரிகள் மீண்டும்வந்து அக் கணவாய் வழியே நுழைந்து அணிகலைந்து நின்ற அவ்வெற்றிபெற்ற முஸ்லிம்களை யெல்லாம் பின்புறமாகத் தாக்க ஆரம்பித்தார்கள். இதனால் மீண்டும் அப்போர் மிகக் கடுமையாக மாறி நபிநாயகமும் ஒரு பள்ளத்துள் வீழ்ந்து எதிரிகளெறிந்த கவண் கல்லால் இரண்டொரு தந்தங்களையும் இழந்துவிட்டார்கள்; அதுசமயம் முஹம்மத் இறந்துவிட்டாரென்ற ஒரு வதந்தியையும் எதிரிகள் கிளப்பி விட்டார்கள். ஆகவே, முஸ்லிம்களெல்லோரும் அவ்வெதிரிகளால் செவ்வனே தாக்குண்டு அல்லோலகல்லோலப்பட் டோடினார்கள். பிறகு நபிகள் நாயகமும் ஒரு சில முஸ்லிம்களும் சேர்ந்து எதிரிகளைத் தாக்கிக்கொண்டே ஆங்கிருந்த ஒரு குன்றின்மீது ஏறிக்கொண்டார்கள். பிறகு எதிரிகளால் ஒன்றும் செய்ய இயலாது வாளா திரும்பி விட்டார்கள். இந்த உஹத் யுத்தத்தில் முஸ்லிம்கள் ஜயித்தார்களென்று கூறுவதற்கில்லை. எனினும் குறைஷிகளும் வெற்றிமாலை சூடி முஸ்லிம்களைத் தொலைத்துவிட முடியவில்லை. ஆதலின், அங்குச் சம்பூரண வெற்றிபெற முடியாது திரும்பிய குறைஷியர் மக்காவிற்குச் சென்று இன்னமும் தங்கள் குரோதபுத்தியை விட்டனரில்லை. ஆகவே, அவர்கள் அரபுநாடு முழுதும் சுற்றுப் பிரயாணம் செய்து எல்லா அரபிக் கூட்டத்தினரையும் முஸ்லிம்களுக்கு விரோதமாகக் கிளப்பி விட்டார்கள்; மதீனாவிலிருந்த யூதர்களையும் தூண்டிவிட்டனர்; முஸ்லிம்களுக்குள்ளும் ஒரு சிலரைக் கிளப்பிவிட்டு நயவஞ்சகமாக நடிக்குமாறு செய்துவிட்டனர். இவ்வாறெல்லாம் செய்துகொண்டு, குறைஷிகளும் ஏனைக் கூட்டத்தினர்களும் 24,000 படைகள்வரை திரட்டிக் கொண்டு ஹி. 5 ல் மதீனாவிற்கே சென்று அந்நகரைச் சூழ்ந்து முற்றுகை போட்டுவிட்டார்கள். அந்நகரத்துக்குள்ளே யூதர்களும், முஸ்லிம் நயவஞ்சகர்களும் எந்த நேரத்திலும் எத்தகைய துரோகமும் செய்யக்கூடிய நிலையிலிருந்தும், நபி பெருமான் தங்களுக்குக் கிடைத்த 3000 வீரர்களுடனே சென்றுமதீனாவைச் சூழ ஓர் அகழ்வெட்டிக்கொண்டு யுத்தத்திற்குச் சன்னத்தமாய் நின்றார்கள். எதிரிகள் அவ்வகழைத் தாண்ட முடியாது 3-வாரகாலம்வரை வெளியில்

நின்றே முற்றுகையை நடாத்தினர்கள். பிறகு ஒரு சில வீரர்கள் தங்கள் புரவிகளின் உதவிகொண்டு அவ்வகழைத் தாண்டியும் தோல்வியே யுற்றார்கள். மீண்டும் சிலதினம்வரை அம் முற்றுகையை அகழிக்கு வெளியிலிருந்து நடத்திப் பார்த்தார்கள். இறுதியில் இறைவன் சோதனையா லேற்பட்ட கடும்புயலாலும், பெருமழையாலும், குளிராலும் அந்த "நேசப் படையினர்" 24 ஆயிரம் பேர்களும் தங்கள் ஆயுதங்களையும் பிற தட்டுமுட்டுச் சாமான்களையும் எறிந்துவிட்டு மக்காவை நோக்கி ஓட்டம் பிடித்தார்கள். மேற்கூறிய நேசப் படையார் நிகழ்த்த வந்த அகழ் யுத்தமும் இவ்வாறு அக்குறைஷியருக்குச் சற்றும் பயனளியாமலே போய் விட்டது. அதன்பின் தக்க சமயத்தில், நபிநாயகத்துடன் செய்துகொடுத்திருந்த உடன்படிக்கைக்கு மாறாக மதீனவிலிருந்த யூதர்கள் இந்த அகழ் யுத்தத்தின்போது எதிரிகளுக்குச் சார்பாக நடந்து கொண்டதன் நிமித்தம் பலர் அந்த நகரத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். ஒரு சில குறும்பர்கள் மட்டும் யுத்த காலமுறைப்படி சிரச்சேதம் செய்யப்பட்டார்கள்

பிறகு ஹி. 6-ல் நபிபெருமான் 1400 தோழர்களுடன் மக்காவை நோக்கி ஹஜ்ஜு செய்யப் புறப்பட்டார்கள். ஆனல், மக்காவிற் கருகிலுள்ள ஹுதைபிய்யா வென்னுமிடத்தில் அந்தக் குறைஷியர் எதிர்கொண்டுவந்து அம் முஸ்லிம்களைத் தடுத்துவிட்டார்கள். முஸ்லிம் வீரர்கள் யுத்தத்திற்குச் சித்தமாயிருந்தும், நபிகள் நாயகத்தின் கருத்திற் கிணங்கக் குறைஷியரின் சமாதானத்திற்குக் கட்டுப்பட்டு ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டு திரும்பினர்கள். இவ்வாண்டு திரும்பிச்சென்று அடுத்த ஆண்டிலேதான் ஹஜ்ஜுக்கு வரலாமென்பது ஒரு நிபந்தனை; மக்காவாசி இஸ்லாத்தில் சேர்ந்து மதீனவிற்கோடி விட்டால் அன்னவரை முஹம்மத் நபி திருப்பி யனுப்பிவிட வேண்டும்; ஆனல், ஒரு முஸ்லிம் காபிராயப்போய் மக்காவிற் கோடிவந்துவிட்டால் அவரைக் குறைஷிகள் திருப்பி யனுப்பார் என்பது மற்றொரு நிபந்தனை. இருகட்சியாரும தத்தமக்குரிய வேறு வர்க்கத்தினருடனே சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளலாம். குறைஷிகளின் நண்பர்களை முஸ்லிம்கள் எதிர்ப்பது கூடாது; அவ்வாறே முஸ்லிம்களின் நண்பர்களையும் குறைஷியர் தாக்குவது தகாது என்பது பின்னுமொரு நிபந்தனையாகும். ஆனல் இந்த உடன்படிக்கையின் இறுதி நிபந்தனைக்கு மாறாகக் குறைஷியரின் நேசக் கூட்டத்தினர் சிலர் முஸ்லிம்களின் நேசக் கூட்டத்தினரை அகாரணமாகத் தாக்கிக் கஃபாவென்னும் தேவாலயத்திற்குள்ளும் துரத்திச் சென்று சிலரைக் கொலையும் புரிந்துவிட்டார்கள்; அது சமயம் குறைஷிகளும் தங்கள் நண்பர்களுடனே சேர்ந்து முஸ்லிம்களின் நேயர்களைத் தாக்கினர்கள். இதற்குச் சமாதானம் யாதெனக் கேட்டனுப்பியக்கால், அந்த மக்காவாசிகள் ஒன்றும் திருப்திகரமான சமாதானம் கூறாது, முஸ்லிம்களைத் தத்துக் கழைத்தனர். ஹி. 8-ல் நபிபெருமான் 10.000 முஸ்லிம் வீரர்களுடனே புறப்பட்டுச் சென்று மக்கமா நகரைக் கைப்பற்றிக் கொண்டார்கள். குறைஷிகள் எதிர்த்து நிற்கவுமில்லை; வேறொன்றும் செய்து கொள்ளவும் முடியவில்லை. எல்லோருஞ் சிரங்குனிந்து வாளா இருந்துவிட்டார்கள். ஆதலின், முஹம்மத் நபியும் ஒரு துளி இரத்தமும் சிந்தாது அந் நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டதோடு, அந்த ஜன்மப் பகைவர்களனைவர்களையும் அடியோடு மன்னித்தும் விட்டார்கள். இதற்கிடையில் அரப்தேயத்தின் பற்பல பகுதிகளும் சுயமாகவே இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டே வந்தன. ஒரு சில முருடர்கள் மட்டும் சிறிது எதிர்ப்பிற்குப் பின்னே இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்கள். ஹி. 9-ல் ஹஜ்ஜுக்குச் சென்ற முஸ்லிம்களால் நபி பெருமானின் அரச விளம்பரம ஒன்று அந் நகரின்கண் வாசிக்கப்பட்டது. அதன் மூலம் இனி விக்கிரஹ ஆராதனைக்காரர்கள் கஃபாவுக்கு ஹஜ்ஜு செய்ய அனுமதியளிக்கப் பட்டார்கள் என்றும், அதற்கு முன் பண்டைப் பாமரமக்கள் செய்து வந்ததேபோல் இனி ஒருவரும் நிர்வாணத்துடனே அவ் வாலயத்தைச் சுற்றி வலம் வரக்கூடாதென்றும் தடை யுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. பின்னர் ஹி. 9, 10-ல் அரப்தேயத்தின் பற்பல பகுதிகளிலிருந்தெல்லாம் தூதுக் கூட்டங்கள் அடுக்கடுக்காக வந்து தீனுல் இஸ்லாத்தில் சேர்ந்து கொண்டே வந்தன. பிறகு ஹி. 10-ல் நபி

பெருமான் 1,50,000 சிஷ்யாகளுடனே புறப்பட்டு மக்காவிற்குச் சென்று தங்களுடைய இறுதி ஹஜ்ஜை நிறைவேற்றிக் கொண்டார்கள். அது சமயம் அருகிலுள்ள அரபாத் மைதானத்தில் நின்று ஒரினிய இறுதிப் பிரசங்கமும் செய்து முடித்தார்கள். அதில் ஏக தெய்வக்கொள்கையும், ஏக சகோதரக் கொள்கையும், ஸ்திரீகளின் உயர்வும், அடிமைகளின் மேன்மையும், அண்டை அயலாருடனும், பந்து மித்திரர்களுடனும் நடந்துகொள்ள வேண்டிய முறையும் அதிகம் வற்புறுத்திக் கூறப்பட்டன. கொலை, களவு, காமம், கள், சூது, அனாதைக் குழந்தைகளின் பொருளை அபகரித்தல் ஆகியவற்றைப் பற்றியும் அழகாக வற்புறுத்தப்பட்டன. இறுதியாக, ஹி. 11 ல் ரபீஉல் அவ்வல் மாதம் மூதறரேதியன்று (கி. பி. 632) நபிநாயகம் ஆண்டகையின் திருவடி நீழலையடைந்து விட்டார்கள்.

முஹம்மத்நபி இஸ்லாத்தைப் பரப்புவதற்காக எப்பொழுதுமே வாளின் துணையைக் கோரியதில்லை. ஆனாலும், எதிரிகள் இவரையும் இவர் போதித்துவந்த இஸ்லாத்தையும இந்நாட்டிலில்லாது செய்துவிடுவான் வேண்டி எதிர்த்து வந்தபோதுதான் தற்காப்பினிமித்தமாகவே யுத்தத்தில் இறங்கியிருக்கின்றார். ஒருபோதும ஒருவரையும் இப்பெரியார் பலவந்தம் செய்து இஸ்லாத்தில் சேர்க்கவில்லை. இவர் தமது 25 பிராயம்வரை பரிசுத்தத்துடனே இருந்து பிறகு தம்மினும 15 பிராயம் முதிர்ந்திருந்த ஒரு விதவையை முதன் முதலாக மணந்துகொண்டு முழுத்திருப்தியுடனே தமது 50-வது வயதுவரை சுகமாகக் காலங்கழித்து வந்தார். பிறகு 60 வது பிராயத்திலுங் வேறு பல விதவைகளையும் விவாகவிலக்குப் பெற்றவர்களையும் மணமுடித்துக் கொண்டார்; அபூபக்கரின் குமாரி ஆயிஷா ஒருவரே கன்னி மனைவியாவார். ஈதெல்லாம் சித்த விகாரத்தால் நிகழ்த்தப்பட்ட விவாகங்களல்ல; அகதியானவர்களை ஆதரிப்பான் வேண்டியும், ராஜதந்திர நிபுணத்துவத்தைக்கொண்டுமே செய்துகொள்ளப்பட்ட திருமணங்களாகும். இப் பெரியாரின் வாய்மையைப் பற்றியும், சீலத்தைப்பற்றியும், அகப்புறப் பரிசுத்தத்தைப் பற்றியும் அவரை நேரில் கண்டவர்கள் அதிகம் கூறியிருக்கின்றார்கள்.

**இஸ்லாம்**-முஹம்மத்நபியால் நிலைநிறுத்தப்பட்ட மதத்திற்கு "இஸ்லாம்" என்பதே சரியான பெயராகும். இதனைப் பின்பற்றுவோர் "முஸ்லிம்கள்" என்றே அழைக்கப்படுவர். (முஹம்மதிய மார்க்கம், முஹம்மதியர்கள் என்னும் பிரமயாகங்கள் தருவனவை). ஏகதெய்வக் கொள்கையும் ஏகசகோதரக் கொள்கையுமே இம்மார்க்கத்தின் அடிப்படையாகும். இந்த இஸ்லாம், முஹம்மத் நபியால் உற்பத்தி செய்யப்பட்டதன்று. மனிதன் உற்பத்தியான காலமுதற்கொண்டே இத்தகைய "இஸ்லாம்" இறைவனால் இவ்வுலக மன்பதைகளுக்கெல்லாம் அடிக்கடி அறிவுறுத்தப்பட்டே வந்திருக்கிற தென்பதுதான் இம்மார்க்க வேதம் (குர்ஆன்) கூறியிருப்பது. எல்லாத் தேயங்களுக்கும், எல்லா மக்களுக்கும்; அவ் வக்காலத்திலே ஆண்டவனுடைய அடியார்களான தூதர்கள் (நபிமார்கள்) அனுப்பப்பட்டே வந்திருக்கிறார்கள் என்பதும் ஒரு முக்கியக் கொள்கையாகும். ஆதலின், எல்லாத் தேயத்தின் தீர்க்கதரிசிகளையும், அவரவரின் வேதங்களையும் உண்மையென்றே முஸ்லிம்கள் ஒத்துக்கொள்ளுகின்றார்கள். மனிதன் இறந்தபின் மறுஜன்மம் இல்லையென்பது இவர்களின் நம்பிக்கை. ஆனால், உலக இறுதிநாளன்று இறைவனால் இம்மன்பதைகளெல்லோரும் நியாயவிசாரணை புரியப்பட்டு, அவரவருடைய இகலோக நன்மை தீமைகளுக்குத் தக்கவாறே பலாபலன்களைப் பெற்றுக்கொள்வார்களென்பது இம்மார்க்கம் கூறியிருக்கும் இறுதி வாழ்க்கையாகும். மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்க்கை இவ்விகலோக வாழ்க்கையின் தொடர்பேயென்றும், அஃது இத்தரணியின் வாழ்க்கையினது பிரதிபிம்பமேயென்றுங் கூறுவர். அந்தச் சூக்குமலோகத்திலுள்ள ஆன்ம முன்னேற்றமானது அவ்வான்ம உலகவாழ்க்கையின் நகரமென்பது ஆன்மாக்களின் இகலோகப்பாபத்தைஒழித்தற்குரிய பிராயச்சித்தமாகவே யிருக்கின்றதல்லாது ஆண்டகையின் க்ஷாத்திரமாக அமைந்ததில்லை. அவரவரின் பாபத்திற்குரிய தண்டனை கழிந்து ஆன்மபரிசுத்தம் அடையப்பெற்றவுடனே எல்லாப்பரிசுத்த ஆன்மாக்களும் மேன்மேலும் முடிவில்லாது சுகானந்த அபிவிருத்தியை அடைந்துகொண்டு செல்வதுதான் முஸ்லிம்க

ளின் சுவர்க்கானந்தமாயிருக்கிறது. இத்தகைய நம்பிக்கைகளுக்குரிய அனுஷ்டானங்கள் ஐவகைப்படும். 1. ஏகதெய்வத்திற்கு இணையில்லையென்று கொண்டு, அவ்வொருவனையே அல்லும் பகலும் அனவரதமும் இடைவிடாது வணங்கிவருதல் வேண்டும். ஏகதெய்வத்திற்கு இணையாகவேனும், உறவாகவேனும், பிரதிநிதியாகவேனும் அவதாரமாகவேனும் ஒருவரும் இத்தரணியில் காணப்படுவதில்லை. 2. ஆதலின், அவ்வொருவனையே தியானித்துத் தினமும் ஐந்துவேளைத் தொழுகைகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். வேறெந்த இறந்தவரை நாடியோ உயிருள்ளவர்களைக் கோரியோ அல்லது வேறு பிராணிகளையேனும் ஜடப்பொருள்களையேனும் முன்னிட்டோ முஸ்லிம்கள் தொழுது பிரார்த்தனை புரியமாட்டார்கள். 3. சுமார் 52 ரூபாய்க்கு மேற்பட்ட முதலையுடைய ஒவ்வோர் ஆணும் பெண்ணும் ஆண்டுக்கொருமுறை 100 க்கு $2\frac{1}{2}$ விகிதம் ஏழைவரிகொடுத்து உதவ வேண்டும். இதனால் யாசகர்களைப் பெருக்கி வருவதென்பது கருத்தன்று. 4. ஆண்டுக்கொருமுறை ரமலான் மாதத்தில் அம்மாத முழுதும் முஸ்லிம் ஆண் பெண் வயோதிகர் சிறுவர் அனைவரும் நோன்பு நோற்றல்வேண்டும். வைகறைக்குப் பின் சூரியாஸ்தமனம் வரை ஒன்றும் புசிக்காமலும், தாகத்துக்குத் தண்ணீரருந்தாமலும், மனைவியரை நெருங்காமலும் இருப்பதே இந் நோன்பின் முக்கிய இலக்ஷணமாம். 5. போதிய முதலும், துணையும், பலமும் உள்ளவர்கள் தங்கள் ஆயுளிலேயே ஒரு முறை மக்காவிற்குச் சென்று ஆங்குள்ள கஃபாவைத் தரிசித்து ஹஜ்ஜு செய்துவரவேண்டும். இந்தக் கஃபாவென்பது உள்ளே ஒன்றுமில்லாது நாற்புறச் சுவரையுடைய ஒரு வெறுங் கூடமேயாகும்; அதற்குள்ளே விக்கிரஹமேனும், சித்திரமேனும், அல்லது வேறெந்த அடையாளமேனும் வைக்கப்படவில்லை. பண்டைக் காலமுதலே ஏகேசுவரக் கொள்கைக்காக நிர்மாணிக்கப்பட்ட தேவாலயமென்று இது கருதப்படுகிறது. இப்ராஹீம் நபியும் (ஆப்ரஹாம் தீர்க்கதரிசி) இஸ்மாயீல் நபியும் (இஸ்மவேல் தீர்க்கதரிசி) இவ் வாலயத்தைப் பழுது பார்த்து ஏகேசுவரக் கொள்கையை நன்கு நிலைநாட்டிச் சென்றூர்கள். பிறகும் விக்கிரஹங்கள் 360 வரை காலக்கிரமத்திலே அதற்குள் புகுந்து விட்டன. எனவே, அவற்றையெல்லாம் அப்புறப்படுத்தி ஏகேசுவரக் கொள்கை இறுதியாக நிலைநிறுத்திச் சென்றவர் முஹம்மது நபியேயாவார். இவருடைய சமாதிஸ்தலங்கூட மக்கத்திலில்லை இவர் இறந்தபோது மதீனாவிலேயே ஆயிஷாவின் இல்லத்தினுள்ளே புதைக்கப்பட்டிருக்கிறூர். மக்காவிற்கு ஹஜ்ஜுக்குச் செல்லும் முஸ்லிம் யாத்ரீகர்கள் பெரும்பாலும் மதீனாவிற்கும் சென்று கோரியையும் மரியாதையாகத் தாிசனம் செய்து வருகிறூர்கள்.

முஸ்லிம்களுக்கு வியபசாரம், மதுபானம், சூது, பொருதல், வட்டிவாங்கல் கொடுக்கல், ஆதிய பாதகங்களெல்லாம் அடியோடு விலக்கப்பட்டிருக்கின்றன. (Contributed by an Islamite)

**இவர் மதக் கொள்கை** : இம்மதத்தை இஸ்லாம் மதம் என்று சொல்லுவதுண்டு. இஸ்லாம் என்றால் பக்தி என்று அர்த்தம். இவர்கள் வேதத்திற்குக் குர்ஆன் என்று பெயர். இது ஜிப்ரீயில் மூலமாய்க் கிடைத்ததாகையால் இதை தேவவாக்யம் என்பர். இந்த இஸ்லாம மதத்தில் விசுவசிக்கத் தகுந்த இமாம் என்றும், ஆசரணக்கிரமமான தீன் என்றும் இரண்டு பாகங்கள் உண்டு. இமாம் அறுவிதம், க. அல்லா, (தேவனிருக்கின்றான்) உ. தேவதூதர்களிருக்கின்றனர், ௩. வேதமிருக்கின்றது, ௪ நபி புருஷர்களிருக்கின்றூர்கள், ௫. இறந்த சரீரம் ஜீவித்து நியாயத் தீர்ப்பை அடையும்.

1. நிஜமான அல்லா என்னும் கடவுளைத் தவிர வேறொருவனில்லை. அல்லா ஹூராப் என்றும அவனுக்குப் பேருண்டு

2. ஜிப்ராயேல், மிகாயேல், அஸ்ராயேல், இஸ்ரபேல், என்னும் தேவதூதர்கள் உளர். ஹிப்லீஸ் என்னும் சைதான் இருக்கின்றது. ஒவ்வொரு மனிதருடனும், இரண்டு தூதர்களிருந்து புண்ணிய பாவங்களை யெழுதிக்கொண்டிருப்பர்.

3. தௌராத்த, ஜபூரு, இஞ்சிலு, குர்ஆன் என்பன வேதபுத்தகங்கள்.

4. உஉச000 நபிகளிருக்கின்றனர். அவர்களில் ஆதாம், நோவா, ஆப்ரஹாம் மோசே, இசா, முகமத் என்பவர்கள் சிரேஷ்டர்.

5. எழு மோக்ஷலோகங்களும், எழுநரகங்களும் உண்டு. புண்ணிய பாவங்கள் தராசில் வைக்கப்பட்டு நிறுத்தறியப்படும்.

6. உலகமுழுதும் நஜீப் என்னும் விதிப்பிரகாரம் நடந்துவருகின்றது. ஆசரணக்கிரமமான தீன் நான்கு விதப்படும் (க) நமாஸ் செய்தல், (உ) பிக்ஷாக்கிரமம், (ந) உபவாசம், (ச) மெக்காயாத்திரை.

1 ஒவ்வொரு மனிதனும் ஸ்நானஞ்செய்து ஒருநாளைக்கு ஐந்துமுறை மெக்காவை நோக்கிய திசையாய்க். கிப்லாவைப் பார்த்து நமாஸ் செய்யவேண்டும். முகமதியர்கள் சிலர் 99-மணிகளடங்கிய ஜெபமாலையை வைத்துக்கொண்டு முகமதின் (கக) விசேஷநாமங்களை ஜெபிப்பர்.

2. தம் ஆஸ்தியில் அரைப்பாகத்தைத் தேவனுக்கு அர்ப்பணஞ் செய்தல்; மற்றவைகளை உற்சாகத்துடன் தக்கவர்களுக்கு தானஞ் செய்தல்.

3. ரம்ஜான் மாதத்தில் குர்ஆன் வந்ததாகையாலே அம்மாதம் முழுதும் பகற்காலத்தில் எச்சிலையும் விழுங்காமல் உபவசித்தல் வேண்டும்.

4. இஸ்லாம் மதத்தன், மரணகாலத்திற்குள் மெக்காயாத்திரை தவறாமல் செய்தல்வேண்டும். முகமத்நபி மெக்காவிற்கு வெள்ளிக்கிழமை போனதினால் சுக்கிரவாரத்தில் அதிகபக்தியுடன் தேவனைத் தியானிப்பர். இவர்கள் குழந்தைகளுக்கு சுன்னத்து செய்வார்கள். நமாஸில் பாத்யா என்னும் தேவனுடைய ஸ்தோத்திரம் விசேஷமானது. மதுபானஞ் செய்யக்கூடாது. கடவுளுக்கு அற்பிக்காத மாமிசம் புசிக்கக்கூடாது. 73-பேதங்களுள்ள முகமதியர்களில் ஒருவருக்கொருவர் வட்டி வாங்கல் கூடாது. முகமத் மதத்தினர் தவிர மற்றவர்களுக்கு மோக்ஷமில்லையென்பர். இம்மதத்தவர்களில் ஆலியைச் சேர்ந்தவர்கள் ஷியா என்றும், சுபூபேகரைச் சேர்ந்தவர்கள் சுன்னி என்றும் கூறப்படுவர். ஷியா மதத்தார் குர்ஆனை மாத்திரம் நம்புவார்கள். சுன்னிகள் குர்ஆனை யன்றி முகமத் கூறினவற்றையும் நியாயமாகக் கொண்டு நடப்பர்.

**முகமன்** — சுக்ரீவன் அடைக்கலம்புகுந்தமலை.

**முகம்** — (கச) அஞ்சிதம், அதோமுகம், ஆகம்பிதம், பிரகம்பிதம, ஆலோலிதம், உலோலிதம், உத்வாகிதம், சமம், சௌந்தரம், துதம், விதுதம், பராவிருத்தம், பரிவாகிதம், திரச்சீனம் என்பன. இவற்றுள் வருத்தமாற்றாது இருதோள்மேல் தலை சாய்த்தல் அஞ்சிதம். தலைகுனிந்து பார்த்தல் அதோமுகம். சம்மதித்தற்கு அறிகுறியாக மேல் கீழ் தலையாட்டல் ஆகம்பிதம். அதிசயத்தால் சிறிதாய்த் தலையாட்டல் பிரகம்பிதம். ஆசையால் மலர்ந்த முகமாய் ஒருவனை அழைத்தல் ஆலோலிதம். சிந்தையால் ஒரு தோள் மேல் தலை சாய்த்தல் உலோலிதம். தலையண்ணாந்து பார்த்தல் உத்வாகிதம். தியானித்தல்போலத் தலை யசையாதிருத்தலே சமம். பூரித்த மகிழ்ச்சியால் மலர்ந்த முகம் காட்டல் சௌந்தரம். வேண்டாததற்கு முகம் திருப்பலே பராவிருத்தம். மதத்தால் ஒருபுறம் சாய்ந்த தலையைச் சிறிதாய்ச் சுற்றியாட்டல் பரிவாகிதம். நாணத்தால் தலைபாட்டலே திரச்சீன முகம்.

**முகாசோணன்** — சத்ருகுமாரனாகிய நாகன்.

**முகரோகங்கள்** — மீன், எருமை மாமிசம், பன்றி மாமிசம், சைத்திய வஸ்துகள், முள்ளங்கிக்கிழங்கு, உளுந்தம்பருப்பு, தயிர், பால், காடி, லவணவஸ்து, கரும்புரசம், காந்திய அன்னம், இவைகளை இடைவிடாது விசேஷமாக அகாலத்தில் புசித்தலினாலும், ஒருபுறமாகப் படுத்தல், பல் விளக்காதிருத்தல், ஜலத்தைக் கொப்பளித்துக் கொப்பளித்து விசையாக உமிழ்தல், புகைபிடித்தல், வாந்தி செய்தல், விடாத தலைநோய் இவைகளினால் முத்தோஷங்களும் அதிகரித்து முகத்திலுள்ள சத்த தாதுக்களிலும் பாவி அந்த அந்த இடங்களில் ரோகங்களைப் பிறப்பித்து அது உதட்டில் (11) தாடைக்கு நடுவில் (1) தந்தத்தில் (10) தந்தமூல ரோகம் (13) நாவில் (6) தாடைகளில் (8) தொண்டையில் (15) முகமுற்றிலும் (8) ஆக (75)வித ரோகங்களை உண்டாக்கும். முகத்தில் உண்டாகும் ரோகம் (8). இது வாய்க்குள் உண்டாகும் ரோகம்; திரிதோஷங்களினால் வாய்க்குள் இரணத்தை உண்டாக்கி நாவினது ருசியை கெடுப்பது. அவை எட்டு வகைப்படும். 1 வாதமுகபாக ரோகம், 2. பித்தமுகபாக ரோகம், 3. சிலேஷ்மமுகபாக ரோகம், 4. திரிதோஷமுகபாக ரோகம், 5. ரத்தமுகபாக ரோகம், 6. புத்தியாசிய ரோகம, 7. கண்டாற்புதரோகம், 8. ஊர்த்துவ குதரோகம், ஆகசர்வமுக ரோகம் எட்டு.

**முகலிங்கம்** — ஆட்ய, அநாட்ய, ஸுரேட்ய, சர்வ சமலக்ஷணங்கொண்ட சிவலிங்கம்.

**முகுந்த தேவராயன்** — ஒரு வைணவராசன். இவன் சமத்தான வித்துவான்களைச் சடகோபாசார்யர், நடாதூரம்மாள் சொற்படி வென்றூர்.

**முகுந்த நிதி** — நவநிதிகளில் ஒன்று.

**முகுந்தை** — சவிமுநிவர் பத்தினி. இவள் உருக்குமாங்கதனிடத்து ஆசைகொண்டு தன் எண்ணத்தை அவனுக்குத் தெரிவிக்க உருக்குமாங்கதன் மறுத்தனன். இவன் மறுத்ததால் இவள் இவனையே எண்ணி விசாரங்கொண் டிருக்கையில் இந்திரன் உருக்குமாங்கதன் உருக்கொண்டு இவளிடம் புணர்ந்தனன். அதனால் இவளிடம் கிருச்சமதர் எனும் இருடி பிறந்தனர். இக் கிருச்சமதர் தமக்குத் தக்கபருவம் வந்தஒரு நாள் சூரன் என்னும் அரசனது சிரார்த்த காரியத்திற்குச் சென்று அவ்விடம் தம்மிடம் வாதிட்ட அத்திரியை வாதத்தில் வென்றனர். தோற்ற அத்திரி நீ அரசபுத்திரன் என்று இழித்துக்கூற கிருச்சமதர் தாயை வினவி உண்மை யுணர்ந்து தாயை இலந்தை மரமாகச் சபித்தனர். சாபமேற்ற முகுந்தை என்னைச் சபித்தமையால் உனக்குக் கொடிய புத்திரன் பிறக்க எனச் சபித்தனள். அச்சாபம் பெற்ற கிருச்சமதர் நீங்கிக கடுந்தவஞ் செய்து விழிக்கையில் அந்தவிழிப்பில் பலி பிறந்தனன்.

**முகூர்த்தை** — தருமப் பிரசாபதியின் தேவி.

**முகையலூர்** — இது சோழ மண்டலத்தி லுள்ளதோர் ஊர். (புற. நா.)

**முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்** — கடைச் சங்கத்துப் புலவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை)

**முக்கல் ஆசான் நல்வெள்ளையார்** — முக்கல் - ஓரூர். ஆசான் என்றதனால் அந்தணராவார். இவர் நெய்தலைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். ஆங்கு உள்ளுரை கூறிபது ஆராயத்தக்கது. இவர் பாடியது (நற்றிணை எ௨ ம் பாட்டு.)

**முக்காவல்நாட்டு ஆமூர்மல்லன்** — இவன் உறையூரிலிருந்த சோழனாகிய தித்தன் மகன். இவன் மற்போரிற் சிறந்தவன். சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளியாற் பொருது கொல்லப்பட்டவன். சாத்தந்தையரால் பாடல் பெற்றவன். (புறநானூறு.)

**முக்கிரந்தி** — பிரமக்கிரந்தி, விஷ்ணுக்கிரந்தி, ருத்திரக் கிரந்தி. இவற்றை முக்கட்டென்றுங்கூறுவர். (திருமந்.)

**முசலன்** — விசுவாமித்திர புத்திரன். (பா. அநு.)

**முசிதுந்தம்** — 1. சூரியன் சங்கு.
2. குபேரன் வில்.

**முசிரீ** — இதனை முரசிபத்தனம் என்னும் வால்மீகி ராமாயணம். இது மேற்கடற்கரையிலுள்ள பட்டணம். இது முற்காலத்திலே சுள்ளி என்னும் பேரியாறு கலக்குமிடத்து இருந்த பட்டணம். முற்காலத்து யவனர் முதலியோர் மிளகு முதலிய சரக்குகளை மேனாட்டிற்குக் கொண்டுபுகும் துறைமுகம் எனத் தாலமி முதலிய யவன யாத்திரிகரால் புகழப்பட்ட சேரரது தலைநகரத் தொன்று இதனை மரீசிபத்தன மென்பர் வராகமிகிரர்.

**முசிறிஆசிரியர் நீலகண்டனார்** — மாதளவனார் இளநாகரிடம் பொருளிலக்கணங் கேட்டவர்.

**முசுகுந்தன்** — 1. இவன் இதற்குமுன் பிறப்பில் விதூமன் என்னும் காந்தருவனாவான். இவன் மறுபிறப்பில் முசு (குரங்கு) ஆய் கைலைச் சாரலில் சிவமூர்த்தி ஒரு வில்வ விருக்ஷத்தடியில் எழுந்தருளியிருக்கையில் அவ்வில்வ விருக்ஷத்தின் மீதிருந்து வில்வத்தைப் பறித்து அருச்சித்தனன். அதனால் சிவபெருமான் கருணைக்கண் சாத்த முன்னைய அறிவு தோன்றித் துதித்துச் சிவாஞ்ஞையால் மறுபிறப்பில் சூர்யவம்சத்தில் திலீபன் என்பவனுக்கும் மங்கலவதிக்கும் குமாரனுதித்து விசித்திரவதியை மணந்து வசிட்டரிடம் கந்தவிரதம் கேட்டு அநுட்டித்து வலனைக்கொல்ல இந்திரனுக்கு உதவிபுரிந்து இந்திரன், பூசித்திருந்த சோமாஸ்கந்த மூர்த்தியை அவன் தரப்பெற்றுத் தரிசித்த தருவாயில் அது விஷ்ணு பூசித்த மூர்த்தி யல்லாமை கண்டு இந்திரனைக் கேட்க, ஐந்து முறை இந்திரன் ஐந்து மூர்த்தங்கள் தரப்பெற்று அவற்றை மறுத்துக் கடைசியில் இந்திரன் தனக்கு உயிருக் கொப்பாய் நினைத்திருந்த மூர்த்தியைத் தரப்பெற்றுத் திருவாரூரில் பிரதிட்டித்து மற்ற ஆறு சிவமூர்த்தங்களை அந்தப்படி திருமறைக்காடு, நாகப்பட்டினம், திருநள்ளாறு, திருக்காரூயல், திருவாய்மூர், திருக்குவளை முதலிய தலங்களில் பிரதிட்டை செய்து பூசித்

தவன். இவன் ஒருமுறை வேட்டைமேற் சென்று திரும்புகையில் படுத்திருந்த வேதியன் ஒருவன்மீது இவன் ஏறியிருந்த குதிரை காலைவைத்துக் கொல்ல, அரசனைப் பிரமகத்தி பற்ற அரசன் சிவபூசைசெய்து போக்கிக் கொண்டனன். தேவேந்திரன் முதலியவர் வேண்டுகோளால் குமாரக்கடவுள் வருந்துணையும் தெய்வ உலகத்தைக் காத்தத் தேவர் என்னவரம் வேண்டும் என்ன, நான் அதிகச் சோர்வடைந்தேன், அது தீர உறங்கவேண்டும் என்று கேட்டனன். தேவர் அந்தப்படி அருளிச்செய்து உன்னை இடையில் எழுப்பினவன் சாம்பராய் இறக்கவென்று வரந்தந்து இருக்கை சென்றனர். இவன் தன்னை யாரும் தொந்தரை செய்யாவிதம் ஒரு மலைக்குகையில் தனித்து உறங்குகையில் கண்ணனைக் காலயவநன் துரத்த, கண்ணன் பயந்தவர்போல் ஓட்டங்காட்டி இவன் உறங்கும் குகையினுள் புகக் காலயவநனும் பின்தொடர்ந்து புகுந்து அவ்விடம் உறங்கும் முசுகுந்தனைக் கண்ணனென்று அறைந்தனன். முசுகுந்தன் விழித்து நோக்கக் காலயவநன் சாம்பராயினன். பின் கிருஷ்ணமூர்த்தி தரிசனந் தந்து பதரிகாச்சிரமம் போகக் கட்டளையிட்டனர். இவன் அரசாட்சியில் (௪௨) வருஷம் மழையிலாதிருக்க இவன் பூமியைக் கண்டித்து ஊற்றுண்டாக்கிப் பயிர்களைச் செழிப்பித்தான். விருத்தகார்க்கரால் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் நாராயணப் பிரத்தியக்ஷம் கிடைக்குமெனக் கேள்வியுற்றவன். இவன் தன் குமாரனுக்குப் பட்டமளித்துக் கந்தமாதனத்தில் தவமியற்றினன். மாந்தாதாவின் குமாரன் எனவும் கூறுவர்.

2. ஒரு இருடி.

**முசுண்டிச் சவுண்டையர்** — முசுண்டியெனுங் கிராமத்தில் இருந்த வீரசைவர். இவர் வசவதேவரின் புகழைக்கேட்டுக் காண விரும்பிச்சென்று எட்டிக்கனி பழுத்திருக்கக்கண்டு சிவமூர்த்திக்கு நிவேதித்து அதை அடியவர்களுக்குத் தந்து வசவரோடு இருக்கையில், ஒரு சிவனடியவர் தமதுவீட்டில் நடக்கும் கலியாணத்திற்கு எழுந்தருள வேண்டினர். அடியவர் உடன்பட்டுச் செல்லும் வழியில் ஆறு வெள்ளங்கொண்டு வழி தடையானது கண்டு, அதைத் தமது கைகளால் தணித்து இருபிளவாக்கி மறுகரையடைந்து ஊரின் வீதியடைந்தனர். அப்போது ஒரு கன்னிகைவந்து வணங்கினள். அவளை அடியவர் தீர்க்காயுள் உள்ளவளாக வாழ்த்தினர். சிலநாள் பொறுத்து அந்த வாழ்த்தடைந்த கன்னிகை யிறக்கத் தாய் தந்தையர் இருவரும் அக் கன்னிகையைச் சவுண்டையரிடம் கொண்டுவந்தனர். ஐயர் அவள் பேரிட்டழைக்க அவள் உயிருடன் எழுந்தனள். இவர் ஒரு காலத்துத் தவராஜர் என்பவர் இறந்துபோக அவரை எடுத்துச் செல்வாரை வாள் கொண்டு வெருட்டி இறந்த அவரை இறங்கி வரச்செய்தனர். இவ்வற்புதங் கண்ட சமணர் பொறாது கோணியாற் பொய்யுருச் செய்து ஐயர் இருந்த மடத்தின் வழி தூக்கிவரச் சவுண்டையர் கண்டு அவ்வுருவிற்கு உயிர்தந்து அரசன் சொற்படி பலநாட்களுக்கு முன்னிருந்த எருதுகளையும் எழுப்பினர்.

**முசை** — தேவபாகன் இரண்டாம்பாரி. இவள் குமாரர் சித்ரகேது, பிரகத் லன்.

**முஞ்சபிரஷ்டம்** — இமயத்திலுள்ள ஒரு ஆலமரத்தடி. இராமர் இவ்விடத்தில் சடை தரிக்கும்படி ஆஞ்ஞாபித்தார். ஆதலால் இது இப்பெயரடைந்தது.

**முஞ்சன்** — போஜனுக்குச் சிறிய தந்தை.

**முஞ்சிகேசமுநி** — சுநந்தமுநிவரைக் காண்க.

**முஞ்சுவந்தம்** — ஒரு பர்வதம். இதில் சிவமூர்த்தி யெழுந்தருளியிருந்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிப்பர். இம்மலையிலிருந்து பொற்பாளங்கள் கொணர்ந்து மருத்து மகாராஜன் யாகம் நிறைவேற்றினன்.

**முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன்** — கடைச்சங்கமருவிய புலவன். (அக. நா.)

**முடத்தாமக் கண்ணியார்** — சோழன் பெருவளத்தானையும், பொருநராற்றுப் படையால் கரிகாற் சோழனையும் பாடிப் பரிசு பெற்றவர்.

**முடத்திருமாறன்** — 1. இம் முடத்திருமாறனார் இடைச்சங்கத் திறுதியிற் பாண்டி நாட்டை அரசாட்சி புரிந்தவர். இவர் காலத்துச் சங்கமிருந்த கபாடபுரம் கடல் கொள்ளப்பட்டுச் சங்கமழிந்து போதலும், உடனே இப்பொழுதுள்ள மதுரையிற் கடைச்சங்கத்தை நிலைநிறுத்தினவராவர். இதனை இறையனார் களவியற்கு உரை செய்த நக்கீரர் முகவுரையாலும், சிலப்பதிகாரத்தின் உரைப்பாயிரத்திற்கு மேற்கோளாகக் காட்டப்பட்ட 'வேங்கடங்குமரி' என்ற அகவலாலுமுணர்க. இவர் பாண்டியர் மரபினர், பாலையையும், குறிஞ்சியை

யும், சுவைமிகப் பாடியுள்ளார். குட்டுவன்சேரனைப் பாராட்டியிருத்தலாலே அவன் காலத்தினரென்றும் அவனோடு நட்புடையாரென்றுங் கொள்க. (நற். ௪௦௫) இவர் 'வெறிகொள்சாபத்' என்று வடசொல்லைப் பிரயோகித்திருப்பதால் வடசொல் கடைச்சங்கத் தொடக்கத்தே தமிழிற் கலந்தது தெளிக. (நற். ௨௨அ.) இவர் பாடியவை மேற்காட்டிய இரண்டு பாடல்களே.

2. இடைச்சங்கமருவிய பாண்டியரில் கடைப்பட்டவன். சயமாகீர்த்தியைக் காண்க.

**முடமோசியார்** — உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பார்க்க.

**முடவாண்டி** — இவர்கள் கொங்கு வேளாளரில் கண்குருடு கால்மொண்டி கைமொண்டியாயுள்ள பிள்ளைகளைக் கேட்டுவாங்கி அவர்களைக் கொண்டுபோய் வளர்த்துத் தன்னைப்போலப் பிச்சை எடுக்கச்செய்யும் பிக்ஷை அதிகாரிகள். இவர்கள் ஒருவகை பிக்ஷை எடுக்கும் கூட்டம். இவர்கள் கோயம்புத்தூர் ஜில்லா சத்யமங்கலத்திலும் சேலம் ஜில்லாவில் ஆண்டிப்பாளையத்திலும் இருக்கின்றனர். (தர்ஸ்டன்.)

**முடி** — இது அரசரும் சக்கரவர்த்திகளும் தாங்கள் அரசை ஏற்றுக்கொண்டதற் கறிகுறியாக அணிவது. நல்லோர்களாலரசனுக்குச் சிரத்தில் அணிவிப்பது முடியாம். இது பலதேசங்களில் பலவுருவமாகச் செய்யப்படுகிறது.

**முடித்தலைக்கோ பெருநற்கிள்ளி** — இவன் ஒரு சோழன். அந்துவஞ் சேரலிரும்பொறையின் பகைவன். (புற நா.)

**முடியாலழகி** — கங்கையின் பெண். மன்மதன தேவி என்பர். க்ஷுத்ர தேவதை.

**முடும்பை நம்பி** — எழுபத்தநான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்பரை.)

**முடும்பையம்மாள்** — எழுபத்துநான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். (குருபரம்ப.)

**முட்கள்** — இவை பூண்டுகள் செடிகள் மரங்களைக் காக்க உண்டாகிய அங்கங்களாம். அவைகளிற் சில கொத்துமுட்களாகவும், சில கொக்கிமுட்களாகவும், சில சுணைமுட்களாகவும், சில பனை முதலிய மரங்களில் வாள்முட்களாகவும், ஈந்து முதலியவற்றில் இலைநுனி முட்களாகவும் பாகற்காய் பலாக்காய் போன்றவைகளில் பொருக்கு முட்களாகவும், சில சொரிமுட்களாகவும் காணப்படுகின்றன. இவற்றுட் சில விஷமுள்ளன.

**முட்டைகள்** — இவை முடைநாற்ற முள்ளவையாதலின் இப்பெயர் பெற்றன. முட்டைகளைப் பெரும்பாலும் பறவைகளும் சிலவூர்வனவும் சில நீர்வாழ்வனவும் இடும். இவற்றை அப்பிராணிகள் அவயங்காத்துக் குஞ்சு பொரிக்கும். பறவைகளிரண்டு மூன்று முட்டைகளும், ஊர்வன நீர்வாழ்வன அதிகமும் இடும். முட்டைகளிற் பெரிது நீக்கோழி முட்டை.

**முண்டகத்துறை** — தண்டகாரண்யத்திலுள்ள ஒரு தடாகம்.

**முண்டன்** — 1. ஒரு சிவகணத் தலைவன்.

2. கௌசிகி தேவியால் சும்பநிசும்ப யுத்தத்தில் கொல்லப்பட்ட அசுரன். இதனால் தேவிக்கு முண்டமர்த்தனியென ஒரு பெயர். (தேவி-பா.)

**முண்டாசுரன்** — ஒரு அசுரன். பிரமனைப் பலமுறை துன்பப்படுத்திக் கடைசியில் சிவமூர்த்தியின் கட்டளைப்படி வயிரவரால் இறந்தவன் துந்துபியெனும் அசுரபுத்திரன்.

**முண்டை** — காசியில் பிரதிஷ்டிக்கப்பட்டிருக்கும் காளி

**முதகாண்டன்** — நாகன். தாய் கத்ரு.

**முதகூரன்** — நாகன். தாய் கத்ரு.

**முதலியாண்டான்** — காஞ்சீபுரத்தில் பச்சைவண்ணப்பெருமாள் கோயில் என்கிற புருஷமங்கலத்தில் அவதரித்தவர். உடையவரின் சகோதரி புத்திரர். உடையவர் திருவடிகளை ஆச்ரயித்தவர். எழுபத்துநான்கு சிம்மாசனாதிபதிகளில் ஒருவர். இவரது மற்றப் பெயர்கள் தாசரதி, வாதூல தேசிகன் ஸ்ரீ வைஷ்ணவ தாஸன், இராமானுச பாதுகை. இவர் குமாரர் கந்தாடையாண்டான். (குருபரம்பரை.)

**முதலியார்** — இது முதலில் தொண்டைமண்டல வேளாளர்க்குரிய பட்டம். பிறகு தாசிபுத்திரர், கைக்கோளர், ஜயினர், ஒச்சர், பள்ளிகள் வன்னியர், பணிச்சவர் முதலியவர்களுக்கும் பட்டமாயிற்று. சில பட்டணவர் தங்களை வருணகுல முதலியென்கின்றனர்.

**முதலியார் பெருமான் தாதர்** — இவர் செங்கற்படு ஜில்லா இரண்ட இரவேலிப்பட்டிலுள்ள நரியன் பாக்கத்திலிருந்த ஒரு தமிழ்ப்புலவர். இவர் கம்பருடன் வாதிட்ட தாதர் என ஊகிக்கப்படுகிறது. இரண்ட இரவேலிப்பட்டு செங்கற்பட்டு ஜில்லா

திருக்கச்சூருக்கு வடக்கிலுள்ளது. (திருக்கச்சூர் சாசனம்.)

**முதலெழுத்துக்கள்** — இது தமிழ்ப் பாஷைக்கு முதலாகவுள்ள எழுத்துக்கள். அவை உயிர் (கூ) மெய் (கஅ) ஆக (௩0). (நன்.)

**முதலை** — 1. இது நீர் வாழ்வனவற்றிற் சேர்ந்தது. இது பல்லியினத்தை யொத்தது. அச்சாதியிற் பெரியது. இது (25) அடிக்கு மேலிருக்கும். இதன் மேற்றோல் செதின்களைப் பெற்றதாய்த் துப்பாக்கிக்கும் அசையாததாகும். கண்கள் சிறியவை. முகம் நீண்டது, நாக்கு வாயுடன் ஒட்டியிருக்கும். கால்கள் குட்டை, வால் மிகப் பலமுள்ளது. பற்களுறுதியும் கூர்மையுமுள்ளவை. இதின் பெண் ஒரு தடவைக்கு ஏறக்குறைய (20) முட்டைகள் மணலிலிடும். இவை சூரிய வெப்பத்தால் பொரிந்தவுடன் கடலிற் செல்லும். யானையையும் நீரில் பிடிக்கத்தக்க வன்மையுள்ளது

2. இது, பல்லியினத்தில் பெரியது. இது நீரில் வாழும் பிராணி. பெரிய நீர் நிலைகளிலிருப்பது. இது எட்டடி முதல் (30) அடி வரையில் நீண்டிருக்கும். இது நீரிலும் நிலத்திலும் வசிக்கும் பிராணி. இதற்கு நீரில் அதிகபலம் உண்டு. யானையையும் இழுக்கத்தக்க வலியுண்டு. இதன் மேற்றோல் வலுத்த செதின்களைப் பெற்றிருக்கும். துப்பாக்கிக் குண்டிற்கும் அசையாது இது (100) வயதிற்கு அதிகம் ஜீவிக்கிறதென்பர். அமெரிகாதேச முதலைக்குப் பற்கள் வெளியில் தோன்றுகிறதில்லை. இவ்வகுப்பில் மூக்கு நீண்ட முதலைகளு முண்டென்பர். இவை கங்கை யமுனை முதலிய நதிகளிலிருக்கின்றன. இவற்றின் மூக்கு உடம்பின் நீளத்தில் மூன்றிலொருபாகம் நீண்டு பற்கள் நிறைந்து இருக்கும்.

**முதற்குறிப்புமொழி** — இது குறிப்பில் ஒன்று இது முதற் செய்யுளின் முதல் நூலுக்கிட்டு வழங்குவது.

**முதற்சங்கம்** — இது மதுரையில் தமிழ் வளர்ந்த இடம். இதில் சிவமூர்த்தி, குமரவேள், அகத்தியர், முரிஞ்சியூர் முடிநாகராயர், குபேரன் இவர்கள் முதலாக (௫௪௯)-ன்மர் இருந்து தமிழ் ஆராய்ந்தனர். இவர்களை யுள்ளிட்டு (௪௪௪௯)-ன்மர் பாடினர் இவர்கள் பாடிய நூல்கள் : எத்துணையோ பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை ; இச்சங்கம் (௪௪௪0) வருஷம் இருந்தது. இச்சங்க மிருந்தியவர், காய்சின வழுதிமுதல் கடுங்கோன் மாறன் கடைசியாக (அக)-ன்மர். அவருள் கவி பாடியவர் (எ) பாண்டியர். இச்சங்கமிருந்த மதுரை கடலாற் கொள்ளப்பட்டது.

**முதனிலை** — வினைச்சொற்கு முதலாய் நிற்கும் தனிவினைப்பெயர். (நன்.)

**முதனூல்** — இறைவனால் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச்செய்யப்பட்ட வேதாகமங்கள். (நன் - பா.)

**முதாவதி** — விரோதன் குமரி. இவள் ஒருமுறை வனம் பார்க்கச் சென்றிருக்கையில் குசம்பன் என்னும் அரக்கன் இவளைத் தூக்கிக்கொண்டு சென்று பாதாளத் திருத்தினன். இவ்வகை பாதாளத்தில் சென்றிருந்த இவளை வத்சந்திரன் கண்டு அரக்கனைக் கொன்று மீட்டு இவளையும் மணம் புரிந்தனன். வத்சந்திரனைக் காண்க.

**முதிரம்** — குமணன்மலை (புற. நா.)

**முதுகாஞ்சி** — மேலாய்வரும் பொருளைத் தக்கபடி அறிவித்து நிலை நில்லாமையை முறைப்படச் சொல்லிய துறை. (பு. வெ பொது.)

**முதுநுந்து** — முதற் சங்கத்தவர் இயற்றிய தமிழ் நூல்.

**முதுகூற்றனூர்** — இவர் உறையூர் முதுகூற்றனாரெனவும் முதுகூத்தனாரெனவும் கூறப்படுவர். சோழன் போர்வைக் கோப்பெருநற்கிள்ளியின் தந்தையாகிய வீரை வேண்மான் வெளியன் தித்தனைப் புகழ்ந்துபாடியிருத்தலானே அவன் காலத்தினராகக் கருதப்படுகின்றார். (நற். ௫அ) சோழரது உறையூரையும் காவிரியையும் பாராட்டிக் கூறியுளார் அகம் (௧௩௭). பெரும்பாலும், பாலையையும், சிறுபான்மை குறிஞ்சியையும், நெய்தலையும், சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர்கூறிய 'குறைநயப்பு நுண்ணுணர்வினோரை மகிழப்பண்ணுந் தன்மையது. (நற்உஅ). இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும், குறுந்தொகையில் நாலும், அகத்தில் இரண்டும், புறத்தில் ஒன்றும், திருவள்ளுவமாலையில் ஒன்றுமாகப் பத்துப் பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**முதுகெலும்பில்லாப் பிராணிகள்** — நத்தை, சங்கு, சிப்பி. பொருந்துடம்புள்ளவை. குளவி, வண்டு, சிலந்தி. உடல் வளையங்களுள்ளவை புழு. சில நக்ஷத்ர மீன் போன்றவை, பவளக்கொடி, கடற்பஞ்சு முதலியன.

**முதுநாரை** — முதற் சங்கத்தவர் இயற்றிய ஒரு தமிழ் நூல்.

**முதுபாலை** — மூங்கில் ஓங்கின கானகத்துத் தன் கொழுநனை யிழந்த பொலிந்த கொடி போன்ற மடந்தையது தனிமையைச் சொல்லுந்துறை. (பு. வெ. பொதுவியல்)

**முதுமக்கட்டாழி** — முற்காலத்து ஆன்றோருட் சிலரும், ஆருகதரும் தமிழ் நாட்டில் பிணங்களையிட்டு மேலே கவிக்குஞ்சாடி. இதனை "ஓடி மறலி மறையமுது மக்கட், சாடி வகுத்த தராபதியும்" எனும் விக்கிரம சோழனுலா அடியால் அறிக.

**முதுமொழிக்காஞ்சி** — 1. கூடலூர்க்கிழார் இயற்றிய நீதிநூல்.

2. மதுரை கூடலூர்க்கிழார் இயற்றியது. பத்ததிகாரமாய் ஒவ்வோர் அதிகாரமும் பப்பத்தாக குறட்டாழிசையால் அமைந்தது. ஒவ்வோரடியும் ஒவ்வொரு முதுமொழியாக இருப்பது. (தொல். பொருள். 490.)

3. எல்லாரும் கொண்டாடும் அறிவுடையோர் குற்றநீக்கி யாராயும் உலகத்தியலுள் முடிந்த பொருளாகிய அறம்பொருளின்பத்தை அறியச்சொல்லுந் துறை. (பு. வெ. பொது.)

**முதுமொழிவஞ்சி**—பழைய வரலாற்றினையும் வாளினையுமுடைய மறக்குடியில் பிறந்த தன் அப்பனுடைய நிலைமையைச் சொல்லிய துறை. (பு. வெ. வஞ்சி.)

**முதுவர்** — இவர்கள் கோயம்புத்தூர், மதுரை, திருவாங்கூர் முதலிய இடங்களில் மலையயடுத்த பூமிகளில் பயிரிடும் உழவர் கூட்டம். இவர்கள் மதுரையிலிருந்து சோழபாண்டிய அரசர்களின் கலகத்தில் ஊரைவிட்டுக் காட்டில் குடி புகுந்தவர்கள் என்பர். இவர்கள் மதுரையிலிருந்து காட்டிலோடிய காலத்து மீனாக்ஷியை முதுகிற் சுமந்து சென்றனர் என்ப. (தர்ஸ்டன்.)

**முதுவுழிஞை** — 1. மூங்கில் தலைமணந்த காவற்காட்டினையுடைய குறும்பிலே இரை கண்டு பாயும் பறவை யொப்ப வீரர் கைவளர்ந்து குதித்தலைக்கூறும் துறை. (பு. வெ.)

2. போரைச்செய்யும் எயிலினுள்ளோருடைய மிகுதியைக் கூறலும் வெல்லுதற்குரிய மாறுபாட்டைக் கூறும் உழிஞைத் துறை.

**முத்கலர்** — கண்வருஷியின் குமாரர். இவர் ஆச்சிரமம் கோமதி தீரத்தில் கோவிதாரவனம். இவர் கைரவணி தீரத்தில் தவஞ் செய்கையில் ஆங்கிருந்த மீனை நோக்கி இனி இத் தீர்த்தத்திலிருந்து தவத்திற் கிடையூறு செய்யாது வேறிடஞ் செல்கவெனக் கட்டளையிட்டனர். அக்காலமுதற் கொண்டு இத்தீர்த்தத்தில் மீன்கள் கிடையா. (திருவல்லிக்கேணிப் புராணம்.)

**முத்கலன்** — 1. ஒரு வேதியன். அமாவாசை வரையில் பட்டினி யிருந்து அதுவரையில் வயல்களிற் பொறுக்கிய நெற்களைச் சேர்த்து அமாவாசையில் அதிதிகளுக்கு அன்னம் படைத்து மிகுந்ததை யுண்டு சீவிப்பவன். இவ்வகை இருத்தலை இந்திரன் கண்டு தானே அமாவாசைதோறும் அதிதியாகச் சென்று உண்டு ஆறு அமாவாசை யுண்டும் வேதியன் இளைக்காதிருத்தல் நோக்கி வியந்து சுவர்க்கந் தரப்பெற்றவன். இவனை இருடியெனவும் கூறுவர்.

2. அரம்மியாசுவன் குமாரன. இவனிடமிருந்து மௌத்கலரென்னும் பிராமணர் உதித்தனர். இவன் குமாரி அகலிகை.

3. ஒரு ருஷி இவர் குமாரி மருத்துவதி. அவளை மிருகண்டு மணந்தனர்.

4. அஜமீடன் புத்திரனாகிய நீலன் மரபில் உதித்தவன். அரியசுவன் மகன்.

**முத்தகச்செய்யுள்** — தனியே நின்று ஒரு பொருள் தந்து முடிவது.

**முத்தசங்கையர்** — ஒரு வீரசைவ அடியவர். இவர் வசவரிடத்து அநேக விடசங்கமர் வந்து பொருள்பெற்றுச் செல்லுதலைக் கண்டு தாமும் அவ்வகைபுரிய எண்ணி வசவரைக்கேட்க, வசவர் தாசிவீட்டில்விட ஆஞ்ஞாபிக்க, அவ்வாறே முத்தசங்கையர் சென்று அவர்கள் வீட்டிலிருந்த பஞ்சணையைக்கண்டு வியந்து இது சிவமூர்த்திக்கு ஆம் எனவும் இவர்கள் சிவநிஷ்டர்கள் ஆவர் எனவும் எண்ணி இராமுழுதும் சிவபூசை செய்து நீங்கினவர்.

**முத்தமிழ்க்கவி** — சுசீந்திரபுராணம் பாடியவர்.

**முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார்**—இவர் தொண்டை மண்டலத்துச் செங்கற்பட்டு ஜில்லா பொன்விளைந்த களத்தூரிற் பிறந்தவர். இவர் பிறப்பில் வேளாளர். வைஷ்ணவர். இவர் கவிபாடுதலில் வல்லவர் என்பதைப்பற்றி "விரகன்முத் தமிழ்க்கவி வீரராகவன், வரகவி மாலையை வழுத்துந் தோறெலாம், உரகனும் வாணனு மொக்கக் கூடினல், சிரகரகம்பிதஞ் செய்ய லாகுமே." எனப் புகழ்ந்திருத்தலாலும், இவர்

பாடிய திருவேங்கடக் கலம்பகம், திருக் கண்ணமங்கை மாலை முதலியவற்றாலும் உயர்ந்த கவிஞர் எனத் தோன்றுகிறது. இவர்க்கு நம்மாழ்வார் உபாசனையால் கல்வி விருத்தியாயிற்று என்பர்.

**முத்தாநந்த சுவாமி** — ஞானமதியுள்ளான் என்னும் நூல் இயற்றியவர்.

**முத்தாயிஅம்மை** — ஒருவீரசைவ தவப்பெண். அசகணரைக் காணாது வருந்துகையில் இவள் நிலையறிந்த அல்லமர் அசகணருக்கு அறிவித்து இவளுக்கு ஞானம் உபதேசித்தனர் என்ப.

**முத்தாலை** — ஒரு தொட்டியப்பெண். இவள் பெருங் கற்புடையாள்; இவள் கற்புக் குலைந்தனளெனச் சந்தேகித்து இவள் தமயன்மார் இவளைக் கருமவசத்தால் கொல்ல இருக்கையில், இவள் குசவனை வேண்டி மட்கலம்சுடும் சூளையிற் புகுந்து வெந்து நீறாகித் தெய்வமானவள். இவளை முத்தாலம்மன் என்பர்.

**முத்தி** — இது சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என நான்கு வகைப்படும். இவற்றுள் முதற்கூறிய மூன்றும் பதமுத்தி, மற்றது உண்மை முத்தி. இவற்றுள் சாலோகம், அவ்வுலகமடைந்து நித்தியசுகம் அநுபவித்தல். சாமீபம் இறைவனுக்கு அருகிலிருந்து சேவித்திருத்தல். சாரூபம் அவனது உருவத்தை யடைந்து ஆநந்தமடைதல். சாயுச்சியம் அவ்விறைவனுடன் கலந்துங் கலவாமலும் பரமாநந்தம் அனுபவித்தல். இவற்றை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானத்தில் முதிர்ச்சி பெற்றவர் அடைவர்.

**முத்தித்தலம்** — அயோத்தியை, மதுரை, மாயாபுரி, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை. இவையே சத்தபுரி.

**முத்திமண்டபம்** — இது காசிக்கணுள்ள ஒரு மண்டபம். இதில் சேவல்கள் (௩) முத்தியடைந்தன.

**முத்திருளப்பப் பிள்ளை**—1. இவர் சேதுபதி சமஸ்தானத்திருந்த மந்திரியார். இவர் திருப்பணி முதலிய பல நற்காரியங்கள் செய்து புகழ்பெற்றவர். இவர்மீது "பருப்பதங்க ளொவ்வொரு தூண்பாவுக்கல் வளையாத பாரமேரு, சுருப்படங்காப் போதிகை நீசெய்த பணிவிடையை யென்ன சொல் வேனையா, தருப்பொலியுங் கரதலமுத் திருளப்பசாமி நின்றாய்ப் பாலுன்னைக், கருப்பணிமுன் திருப்பணிக் கென்னுருப்பணினை மருபபொலியுங் கமலத்தோனே." என்பது போன்ற பல செய்யுட்கள் பாடப் பட்டிருக்கின்றன.

2. சேதுபதியின் மந்திரிகளில் வேறு ஒருவர். இவர் ஒரு கவிஞருக்கு நான் நூறு பொன்கொடுக்கச்சொன்னேனென்று எழுதினபோது, அவனதனை நானூறு பொன்னென்று வாசிக்க அதனைக்குறுக்கி எழுதக் கூறியபோது கவிஞர் கூறியது. "உனக்கு பதிவேந்தருக்கும் கள்வருக்கும் நீதிதப்பி ஒளிக்கின்றோர்க்கும், கிறுக்குவரச் செய்யுந்துரையே பாவாணரோலையினும் கிறுக்குண்டாமோ,பொறுக்குமர சுரிமை முத்துராமலிங்க சேதுபதி பூமியெல்லாம், நிறுக்குமதி மந்திரி முத்திருளப்பா வருளப்பா நிருபந்தானே" இம்மந்திரியவர்கள் சேதுபதி அரசரின் நகரங்களில் பல கன்னியர்கள் விவாகமிலாதிருப்பது கண்டு குறுணித்தாலி செய்து செலவிற்குங் கொடுத்து விவாகஞ் செய்வித்தனர் என்பதை ஒரு புலவர் வியந்து, "அமரிக்கையாளன் முத்துராமலிங்க சேதுபதி யவனிக்கெல்லாம், சுமுகப்ரதாபனெங்கள் முத்திருளப பேந்திர மந்திரிதலங்கு நாளில், சமருக்கென் றெதிர்த்த மன்னர் தரையிலில்லை மதனொருவன் தவிரமின்னார், குமரிக்குள் கன்னியா குமரியல்லால் மற்றில்லைப் பெண் குமரிதானே." என்றனர்.

**முத்திரை** — (உ௪). சம்முகம், சம்புடம், வித்தம், விஸ்த்ருதம், த்விமுகம, திரிமுகம், சதுர்முகம், பஞ்சமுகம், ஷண்முகம், அதோமுகம், வியாபகாஞ்சலி, சகடம், யமபாசம், கிரதிதம், சம்முகோன்முகம், பிரலம்பம், முஷ்டிகம், மச்சம், கூர்மம், வராகம், சிம்மாக்ராந்தம், மகராக்ராந்தம், முத்காம், பல்லவம். (தேவி - பா)

**முத்திரைகள்** — (௩) இவை திருவாலவாய்த் திருக்கோயிற் கருவூல முதலியவற்றில் வைக்கப்பட்டு வழங்கி வருகின்றன; க. இடபமுத்திரை, உ. மீனமுத்திரை, ௩. இராசகாநாகர் முத்திரை. (திருவிளையாடல்.)

**முத்திரையாவது**—தேவர்களைச் சந்தோஷிப்பித்தலாலும், அசுரர்களைத் துரத்தலாலும் உண்டான காரணப் பெயராம். இம்முத்திரைகள் ஆவாஹன முத்திரை, ஸ்தாபன முத்திரை, சன்னிதான முத்திரை, நிஷ்டுரை என்னும் முத்திரை, அவகுண்டன முத்திரை, தேனு முத்திரை அல்

லது சுரபி முத்திரை என்பன. இவற்றுள் இரு கரங்களையும் சேர்த்து விரித்து இரண்டு அநாமிகை விரல்களின் அடிக் கணுக்களில் இரண்டு அங்குஷ்டங்களையும் சேர்த்துக் காட்டுவது ஆவாகன முத்திரையாம். இதையே அதோ முகமாகச் செய்தல் ஸ்தாபன முத்திரையாம். இரு கரங்களையும் முஷ்டியாக மூடிக்கொண்டு இரண்டு அங்குஷ்டங்களையும் உயரத் தூக்குதல் ஸந்நிதான முத்திரை. அந்த முஷ்டிகளையே அங்குஷ்டங்களை உள்ளடக்கிப் பிடித்தல் நிஷ்டுரை என்னும் முத்திரை. இரண்டுமுஷ்டிகளையும் பிடித்துத் தர்ச்சனி விரல்களை மாத்திரம் நீட்டி மண்டலாகாரமாகச் சுற்றுதல் அவகுண்டன முத்திரை. இருகை விரல்களையும் ஒன்றாகக் கோத்துக் கனிஷ்டை அநாமிகைகளையும், மத்யமா தர்ச்சனிகளையும், பசுவின் முலைபோற் சேர்ப்பது தேனு முத்திரை அல்லது சுரபி முத்திரை எனப்படும். பின்னும் அஸ்திர முத்திரை, சக்கிர முத்திரை, மகா முத்திரை, சோதன முத்திரை, சம்மார முத்திரை, பஞ்சமுகி முத்திரை, திரவிய முத்திரை, முதளிகா முத்திரை, பத்ம முத்திரை, சகர்ன முத்திரை, சத்திமுத்திரை, வீச முத்திரை, சாந்தி முத்திரை, மனோரம்மிய முத்திரை, தத்வ முத்திரை, இலிங்க முத்திரை, காயத்திரி முத்திரை, காலகண்ட முத்திரை, சூல முத்திரை, நமஸ்கார முத்திரை, யோனி முத்திரை, விச்சோடண முத்திரை, ஆச்சாதான முத்திரை முதலியன தானமறிந்து பிரயோகித்தல் வேண்டும். பின்னும் யோகநூலுடையார் மகாமுத்திரை, நபோமுத்திரை, ஒட்டியாண முத்திரை, சலந்தரமுத்திரை, மூலபந்த முத்திரை எனவும் வழங்குவர். இதில் மகாமுத்திரையாவது, வலக்கால் நீட்டி இடப்பாற்குதத்து அழுத்தி, நீட்டிய தாளை வலக்கையாற்பிடித்து நாடிவளைத்து ஓடுகின்ற பிராணவாயுவை மாறி மாறி விடுதல் நாடிசோதித்தல் கூட்டல் என்பது. நபோமுத்திரையாவது நாக்கைக் கபாலத்துள் ஏற்றிப் புருவநடுவில் திருஷ்டிகளை இருத்தி யிருப்பது. ஒட்டியாண முத்திரையாவது வயிறு, நாபி, முதுகு, இவ்விடங்களில் பிராணவாயுவை நிறுத்தல். சலந்தர முத்திரையாவது வாயுவாலும், நரம்புகளாலும், மிடற்றை யிறுக்கி இருப்பது. மூலபந்தமுத்திரையாவது குதி இரண்டாலும் குதத்தை இறுக்கிக் குதத்துவாரத்தை உள்ளேவாங்கி அபானவாயுவை மேலே ஏற்றிப் பிராணனுக்கு எதிராக ஆகுஞ்சனஞ் செய்வது.

**முந்திவிக்கினம்**— அறியாமை, ஐயம், திரிபு.

**முந்து** — 1. இயமனுக்குத் துஷ்டியிடம் உதித்த குமாரன்.

2. நவரத்தினங்களுள் ஒன்று. வெண்மைநிறமுடையது. உலகத்தில் பெரிய முத்து லண்டன்காட்சிச் சாலையிலுண்டு. அது ($4\frac{1}{2}$) அங்குலம் சுற்றளவும் (3) அவுன்ஸ் கனமுமுள்ளது. மற்றொன்று மாஸ்கோ பட்டணக் காட்சிச் சாலையிலிருக்கிறது. அது (28) காரெட் நிறையுள்ளது.

**முத்துக்கிருஷ்ணமுதலியார்** — இவர் சென்னையில் இருந்த ஒருபிரபு. இவர் ஊர் மணலி. இவர் இராமாயண கீர்த்தனை பாடிய அருணாசலக்கவியைப் பாடியவர்.

**முத்துக்குமார கவிராசர்** — இவர் யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் என்னும் ஊரினர். வேளாளர், சைவர். சற்றேறக்குறைய எண்பது வருடங்களுக்கு முன்னிருந்தவர். இலக்கிய இலக்கணங்களில் வல்லவர். தொல்காப்பியம், இலக்கண விளக்கம் முதலாய நூல்களைச்சிட்டு வெளியிட்ட தாமோதரம் பிள்ளை முதலாயவரின் ஆசிரியர். இவரியற்றியன பல தனிக் கவிகளையன்றி ஏசுமதபரிகாரம், ஞானக்கும்மி, ஐயனாரூஞ்சல், நடராசர்பதிக முதலியனவாம்.

**முத்துக்குமாரசுவாமி பாண்டியன்** — இவர் கல்போது ஜமீன்தார். தன் கடன்வருஷம் தீர்க்கவேண்டுமென எட்டையபுரத்திலும், பேரையூரிலும் இவர் போய்ச் சொன்னபோது உடன்படாமையால் ஆற்றங்கரை ஜமீன்தாரவர்களிடம் போய்க் கூறிய வெண்பா. "எட்டையா பேரையா வென்றுரையே யென்றுரைத்தேன், எட்டையா பேரையா வென்றுரைத்தார் — கட்டக், குறைக்கடற்கு ஏர்த்துக் கொடுபோகா தாற்றங், கரையதனிற் சேர்த்தெனை நீ கா."

**முத்துக்குமாரசாமி புலவர்**— இவர் புதுவை திரிபுரசுந்தரி பிள்ளைத்தமிழ் இயற்றியவர்.

**முத்துச்சனிக்குமிடங்கள்**— மதி, மேகம், சங்கு, சிப்பி, மீன், முதலை, உப்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, செந்நெல், மூங்கில், யானைக்கொம்பு, பன்றிக்கொம்பு, பசுவின்பல், நாகம், கொக்கு, நங்கையர் கழுத்து.

**முத்துத்தாண்டவர்** — இவர் சீர்காழியிலே வாத்தியக்காரர் மரபிற்பிறந்து தாண்டவர் எனப் பெயரடைந்து சிவமூர்த்தியிடம் அன்புவளரநாடோறும்சிவதரிசனம்செய்து வந்தனர். இவ்வகை யிருக்கையில் கரும வசத்தால் இவர் உடம்பில் ஒருவிதநோய் கண்டது. இவர் ஒருநாள் சிவதரிசனம் செய்துகொண்டு பசியால் வருந்தித் திருக் கோயிலுள் இருக்கையில் பிராட்டியார் குழந்தைக் கிரங்குந் தாய்போல இவரிடத் துப் பொன்வட்டிலிற் சாதஞ் சுமந்துவந்து அளித்தனர். இதைத் தாண்டவர் வாங்கி யுண்டு பசிப் பிணியுடன் உடம்பின் பிணி யும் நீங்கிப் பிராட்டியாரின் கட்டளைப்படி சிதம்பரத்தலம் அடைந்து நடராசமூர்த்தி யைத் தரிசித்துவருகையில் முத்துத்தாண் டவர் எனப் பெயரடைந்து மாணிக்கவாச கர் அடைந்த பேறு தாம் அடையவேண்டி "மாணிக்கவாசகர் பேறு எனக்குத் தாவல் லையோ அறியேன்" எனப்பாடி வேண்டி அப்பேறு பெற்றவர்.

**முத்துப் புலவர்** — கடிகை யென்ற ஊரிற் பிறந்தவர். அனேக தனிப்பாடல்களியற் றியவர்.

**முத்தும்சிப்பியும்** — இது, இலங்கை, மன் ஞர் ஊர்களையடுத்த கடல்களிலும், பாம் பன் கடலோரத்திலும் பாரசீகக் கடலி லும் உண்டாகிறது. இப்பூச்சிகளுக்கு மேலுங்கீழுமாக வட்டமான கற்கள்போல் இரண்டு மூடிகள் இருக்கின்றன. இந்த மூடிகளினடுவில் சதையுள்ள இப்பூச்சி இருக்கிறது. இது இரைக்காகக் கடலின் கீழ் ஓடுகையில் நண்டும், மீன்களும் கலக் கிய சேறும் கல்லும் இதன் வயிற்றினுட் புகுந்து நோவைத்தரும். கையில்லாமை யால் கற்களை வெளியில் விடாது. கற்கள் உட்சென்றதால் உண்டான நோவினுல் ஒருவிதப்பசையை அது கல்லின்மேல பூசு கிறது. அதுவே முத்தாகிறது. இப்பசை அதிகமாகப் பதிந்தது கறையில்லாத நல்ல முத்து. இதை யெடுப்போர் மூச்சைப் பிடித்துக் காற்றைத்தரும் மூடியுடன் கடலிலிறங்கி அடுக்கடுக்காயிருக்கும் சிப்பி களைக் கூடையிலிட்டு மேலேறச் சமிக்கை செய்தவுடன் வெளிவருவர். முத்துகளின் வேறுபாட்டை இரத்னேற் பத்தியின் கீழ்க்காண்க.

**முத்துராஜர்** — இவர் சோழ மண்டலத் துள்ள உறையூரார். இவர் சிங்கையாரிய சக்கரவர்த்தி யாழ்ப்பாணத்து நல்லூரில் தங்கி அரசியல் முதலியன செய்த சரிதங் களை யடக்கிக் கலிவெண்பாவால் கைலாய மாலை பாடியபுலவர். சைவசமயத்தினர். தந்தை பெயர் செந்தியப்பர்.

**முத்துவீர உபாத்தியாயர்** — முத்து வீரியம் என்ற இலக்கண நூலினாசிரியர். சென்ற நூற்றுண்டிலிருந்தவர். விசுவகர்ம வகுப் பினர்.

**முத்துவீரியம்** — இது எழுத்து, சொல், பொ ருள், யாப்பு, அணி என்ற பஞ்சலட்சணங் களையுங் கூறு மொரு இலக்கண நூல். உறையூரிலிருந்த முத்துவீர உபாத்தியா யர் இயற்றியது.

**முத்தூற்றுக்கூற்றம்** — பாண்டி நாட்டிலுள்ள ஓர் ஊர். பழையவேளிரால் ஆளப்பட்டது; முத்தூர்க் கூற்றமெனவும் வழங்கும்; மரு தநிலத்திலுள்ளது. (புற-நா).

**முத்தொள்ளாயிரம்** — தமிழ்நாட்டு மூவேந் தரைக் கடைச்சங்கத்தவர் பாடியநூல். இதனை நீதிநூற் கோவையெனவும் அகப் பொருட்டுறையுள்ள வெண்பாக்களெனவும் கூறுவர்.

**முநி** — காசிபர் மனைவி, தக்ஷன்பெண். குமா ரன் கணன். இவர் குமரியர் மங்கை, அரிணி, பத்ரமதி, மாதங்கி, சார்த்தூலி, சுவேதை, சுரசை. இவர்களையன்றி அப் சரசுக்களையும் பெற்றாள்.

**முநிதேசம்** — கிரௌஞ்ச தீபத்தின் சமீ பத்திலுள்ள ஓர் இடம்.

**முநிவர்** — (எ) அத்திரி, ஆங்கீரசன், கௌத மன், சமதக்னி, பாரத்வாசன், வசிட்டன், விசுவாமித்திரன்; அன்றியும் அகத்தியன், ஆங்கிரசன், கௌதமன், காசிபன், புலத் தியன், மார்க்கண்டன், வசிட்டன் என்ப.

**முநிசுவ்விருததீர்த்தங்கரர்** — சைந தீர்த்தங்கா ருள் இருபதாவது தீர்த்தங்கரர். இவர் மகத தேசத்தில் குசாக்ர புரத்தில் அரிவம் சத்தில் சுமித்திரனுக்குப் பத்மை யிடத்தில் சித்திரை மாசம், கிருஷ்ணபக்ஷம் அஷ் டமி, திருவோண நக்ஷத்திரத்தில் பிறந் தவர். உன்னதம் (உ0) வில், நீல நிறம். (௩0) வருஷ ஆயுஷ்யம். புத்திரன் விஜய மகாராஜா. இவருக்கு மல்லி முதலிய கண தரர் பதினெண்மர் உண்டு. இவர் காலத் துச் சக்கரவர்த்தி அரிஷேணர். இராம பலதேவர், இலக்ஷ்மண வாசுதேவர், இராவணப் பிரதி வாசுதேவர்.

**முந்நூற்றர்** — கும்பகோணத்திலுள்ள ஒரு வகை வேளாண் வகுப்பினர். (தர்ஸ்டன்.)

**முப்பத்துமூவர் தேவர்** — ஆதித்தர் பன்னிருவர். அசுவினிகள் இருவர். ஈசர் பதினொருவர். வசுக்கள் எண்மர்.

**முப்பூ** — காரமான பூநீற்றை பனி ஜலத்தில் கரைத்துவைத்து மூன்றுநாள் தெளிவெடுத்து ரவியில் பத்துமுறை காயவைத்து, கல்லுப்பு, சற்சுண்ணம்பு, கபாலவோட்டுப்பு, சூடன், முதலியவற்றை அண்ட வெள்ளைக் கருவால் ஆட்டிப்புடமிட உண்டான உப்பு.

**முப்போதுந் திருமேனி தீண்டுவார்** — சிவமூர்த்தியை முக்காலத்தும் தீண்டிப் பூசிக்கும் தவப்பேறடைந்த சிவவேதியராகிய தொகையடியவர் (பெ.புராணம்).

**முப்பேர் நாகனர்** — முப்பேர் என்பது ஒரூர். (திருவாடானைத் தாலுக்காவில் முப்பையூர் என்று ஒன்றுளது.) இவர் பாலையைப் பாடியுள்ளார். நாளது சின்மை இளமையருமை முதலாயவற்றை விரித்துக்கூறுவர். இவர் பாடியது நற். ௬௧௪-ம் பாட்டு.

**மும்மண்டலம்** — சந்திரமண்டலம், ஆதித்த மண்டலம், அக்னிமண்டலம். சந்திர மண்டலம் - மூலாதாரந் தொடங்கி ஒவ்வோரெழுத்தை முன்னிட்டுக்கொண்டு சிரசு நடுவில் கோடி சூரியர் உதயமானாற்போலப் பிரகாசிப்பது. இந்த அமிர்தகலை அக்னி மண்டலத்தை நோக்கிச் சோதியாய் நிற்கும். ஆதித்தமண்டலம் இருதயகமலத்தில் அறுகோணமாய் எட்டிதழ்களுடைய ஒரு புஷ்பமாயிருக்கும். இது, வாழைப்பூப்போல் கீழ்நோக்கியிருக்கும். அக்னிமண்டலம்-பிருதிவியும், அப்புவும் கூடினவிடத்து நாற்சதுரமாய் நடுவே முக்கோணமாய் நாலிதழுடைய ஒரு புஷ்பமாய் விளங்கும். (சித்தா.)

**மும்மீன்** — வருமுன்காப்போன், வருங்கால் காப்போன், வந்தபின் காப்போன் என்பன. ஒரு நீர்வற்றிய குளத்திலிருந்த மீன்கள் ஒன்றுக்கொன்று யோசித்து வேறிடம்போக யோசிக்கையில், அவை பெயர்க்குத் தக்கபடி இரண்டு தப்பின; ஒன்று செம்படவனிடம் அகப்பட்டிறந்தது. இக்கதை பீஷ்மரால் தருமருக்கு வருமுன்காப்பதற்காகக் கூறியது. (பாரசாந்.)

**மும்மை** — (௩) இம்மை, மறுமை, உம்மை.

**முயலகநோய்** — ஒருவிதநோய். கொல்லி மழவன் குமரிக்குற்ற இந்த நோயைத் திருஞான சம்பந்தசுவாமிகள் நீக்கியருளினர். (பெ. புராணம்.)

**முயலகன்** — தாருகாவனத்து இருடிகள் சிவமூர்த்தியைக் கொல்ல அபிசார யாகஞ்செய்ய அதில் எழுந்த பூதன். இவன் சிவமூர்த்தியிடம் தன் உக்கிரவுருவுடன் வரச் சிவமூர்த்தி இவனை முதுகில்ஊன்றி மிதித்து இடுப்பை யொடித்தனர்.

**முயல்** — இது பூனையளவுள்ள பிராணி. இது உடம்பு நீண்டும், தலை குறுகியும், உடம்பில் மிருதுவான மயிர்கள் பெற்றும், காதுகள் நீண்டும், பின்னங்கால் முன்னங்காலினும் நீண்டும், கண்கள் பருத்தும் உள்ள பிராணி. இது பயமுடையது. சாந்தமுடையது. புதர்களில் கூடுகட்டிக் குட்டிபோட்டு வாழ்வது. இது சிறு சத்தத்தையும் நன்றுயறியுமாதலால் தன் சத்துரு வருவதையறிந்து அதிவேகமாக ஓடவல்லது. புல் நிறைந்த இடங்களில் வாழும் பிராணி. இதனுகாரம் புல். தண்ணீர் அகப்படாவிடின் பனிநீரை நக்கும்.

**முரசவாகை** — ஆரவாரிக்கும் வீரக்கழலினையுடையானது பரந்த மாளிகையிடத்துப் பலியைப் பெறும் முரசினுடைய தன்மையைச் சொல்லியதுறை. (பு. வெ. வாகை.)

**முரசவுழிஞை** — பொன்னாலே செய்த உழிஞைமலைந்து ஆடுவெட்டியிடும் பலியை நுகரும் திண்ணிதாக வாராற்கட்டின முரசின் நிலைமையைச் சொல்லியதுறை. (பு. வெ. உழி.)

**முரசுமூன்று**—வீரமுரசு, நியாயமுரசு, தியாகமுரச இதனை "இமிழ்குரல் முரசமூன்றுடனாளும் தமிழ் கெழுகூடல்" என்பதாலறிக. இதனுள் முந்திய வீரமுரசினையே நீராட்டிக் கடலேற்றி ஒலிநெடும்பீலியும் ஒண்பொறி மணித்தாரும் பொலங்குழை யுழிஞையும் பொலியச்சூட்டிக் குருதிப் பலியீந்து பூசித்தல் பண்டையவழக்கு. இதனை "மாசற விசித்த வார்புறு வள்பின்; மைபடு மருங்குல் பொலிய மஞ்ஞை யொலிநெடும் பீலி யொண்பொறி மணித்தார், பொலங்குழை யுழிஞையொடு பொலியச் சூட்டிக், குருதிவேட்கை யுருகெழு முரச, மண்ணிவாராவளவை" என்னும் புறப்பாட்டடிகளானறிக. (புறம் - 50) இம்முரசம் போர்த்த தோலினையும் வீரம் பற்றியே கொள்

வர் என்பதனை "புனைமருப பழுந்தக் குத்திப் புலியொடு பொழுதுவென்றகனை குராலுருமுச் சீற்றக்கதழ்விடை யுரிவை போர்த்த, தனைகுரான் முரசத்தானை" எனவருஞ் சிந்தாமணியானறிக.

**முரசை** — குபேரன் மனைவி.

**முரஞ்சியூர் முடிநாகராயர்** — இவர் தலைச் சங்கத்திருந்து தமிழாராய்ந்த புலவருள் ஒருவர். இதனை இறையனார் அகப்பொருள் முதலியவற்றாலறிக. இவர் சேரமான் பெருஞ்சோற்று உதியனைப் பாடியவர். "அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ, நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பையீரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப் பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" (புற. நா. உ.) எனப்பாடியதால் இவர் பாரத முடிந்த காலத்தவராக எண்ணப் படுகின்றார். இதனால் கடைச்சங்க மிருந்தது பாரத காலமாகிய பாண்டவர் காலத்துக்குமுன் என்பதும் பெறப்படும். இவர் தமிழ் நாட்டில் அக்காலத்திருந்த நாகரென்னும் சாதியாரில் ஒருவர். நாகர் காண்க.

**முரண்டாள்**—பாதகண்டமாண்ட பூர்வ அரசபேதம்.

**முரண்விளைந்தழிவணி** — அஃதாவது, ஒரிடத்துள்ளனவுங் காரிய காரணங்களாகாதனவுமாகிய இரண்டு தருமங்களுக்கு மேன்மேலும் தோன்றியழியும் பகைமையைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் விரோதா பாசாலங்கார மென்பர்.

**முரன்** — நரகாசுரன் சேநாபதி. (மந்திரியும்) இவன் கோட்டையைக் காத்திருப்புழி கண்ணன்சென்று இவனைக் கொலைசெய்தான். இதனால் கண்ணனுக்கு முராரியென்று ஒருபெயர் உண்டாயிற்று. இவன் குமாரர் விபாவசு, வசு, நபசுவான், அருணன், தாம்ரன், அந்தரிக்ஷன், சிரவணன். இவனை நரகாசுரனுக்குத் தமயன் என்றுங் கூறுவர். கம்சனுக்குச் சிநேகன். இவனுக்கு முராசுரன் எனவும் பெயர்.

**முராசுரன்** — முரனைக் காண்க.

**முராரி** — 1. முரனென்னும் அசுரனை வதைத்த விஷ்ணுவிற்கு ஒருபெயர்.

2. ஒரு வடநூற் புலவன்.

**முருகதாசர்** — இவர் தண்டபாணி சுவாமிகளென்றும் திருப்புகழ்ச் சுவாமிகளென்றும் வழங்கப்படுவர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்தவர். அறுவகை யிலக்கணம், புலவர் புராணம் முதலாய பல பெருநூல்கள் இயற்றி யிருக்கின்றனர்.

**முருகநாயனார்** — இவர் சோணாட்டில் திருப்புகலூரில் பிராமணகுலத்திற்பிறந்து சிவபக்தியிற் சிறந்தவர். இவர் பிராம்மமுகூர்த்தத்தில் எழுந்து தீர்த்தமாடி வர்த்தமானீச்சுரருக்குச் சாத்த மலர் பறித்துத் திருமாலைகள் தொடுத்துச்சாத்தி அருச்சித்து வருவர். இவ்வகை நடத்துங்காலத்துத் திருஞானசம்பந்தமூர்த்திகளுக்கு நண்பராகி அவர் திருமணத்திற்சென்று பரமசிவமூர்த்தியின் திருவடியடைந்தனர். இவர்காலம் திருஞானசம்பந்தமூர்த்திகள் காலம். (பெ - புராணம்).

**முருகவேள்**—1. இவர் பொய்யாமொழியைத் தம்மீது கவிபாடக்கேட்க அவர் பெட்டையையும் பாடி முட்டையையும்பாடவோ, பாடேன் என மறுக்கக் கேட்டுப் புலவர் தனித்துக் காட்டின்வழி வருகையில் வேடனைப்போற் சென்று வழிமறிக்க, புலவர் தாம்பாவலன் எனக்கூறக்கேட்டுத் தம்மீது கவிபாடக் கூறினர். புலவர் "பொன்போலும்" எனக் கூறக்கேட்டுத் தாம் "வீழ்ந்ததுளி" எனக் கவி கூறித் தரிசனந் தந்து அநுக்கிரகித்தவர்.

2. பொய்யாமொழியைக் காண்க.

**முருகேசமுதலியார்** — இவர் திருமயிலையிலிருந்த வேளாண் குலத்தவர். சென்னை பச்சையப்பன் கலாசாலைத் தமிழ்த் தலைமைப்புலமை நடாத்திய புலவர். தமிழிலக்கிய இலக்கணப் பயிற்சியுள்ளவர். பல தமிழ் நூல்களைப் பரிசோதித்து அச்சிட்டவர்.

**முரை** — நந்தன்தேவி சந்திரகுப்தன் தாய்.

**முலைப்பால்கூலி** — பெண்களை நிச்சயிக்குங் காலத்தில், தாய் பால்கொடுத்து வளர்த்ததின் பொருட்டு அவளுக்குச் செய்யுஞ் சம்மானம். (உல - வ.)

**முல்லை** — 1. பெரிய மலைபோன்ற மார்பினையுடையான் தன்னைமேவின அன்பினையுடைய மடப்பத்தினையுடையாளைக் கூடிய மிகுதியைச் சொல்லிய துறை. (பு. வெ. பொது.)

2. காடுசார்ந்த நிலம். அதன் கருப்பொருள்; தெய்வம் - நெடுமால், உயர்ந்தோர் - குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி, தாழ்ந்தோர்- இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர், புள்-காட்டுக்கோழி, விலங்கு - மான், முயல்,

ஊர் - பாடி, நீர் - குறுஞ்சுனை, கான்யாறு பூ - குல்லை, முல்லை, தோன்றி, பிடவம், கொன்றை, காயா, மரம் - குருந்து, உணவு - வரகு, சாமை, முதிரை, பறை - ஏற்றுப் பறை, யாழ் - முல்லையாழ், பண் - சாதாரி, தொழில் - சாமை வரகுவிதைத்தல், அறுத்தல், கடாவிடல், விடைதழுவல், ஆவின மேய்த்தல், கொன்றைக் குழலூதல், குரவையாடல் கான்யாறு ஆடல்.

**முல்லைக்குரிய கருப்பொருள்** — தெய்வம் - மால், உயர்ந்தோர் - குறும்பொறை நாடன் தோன்றல், மனைவி, தாழ்ந்தோர் - இடையர், இடைச்சியர், புள் - காட்டுக்கோழி, விலங்கு - மான், முயல், ஊர் - பாடி, நீர் - குறுஞ்சுனை, கான்யாறு, பூ - முல்லை, கொன்றை, காயா, மரம் - குருந்து, உணவு - வரகு, சாமை, பறை - ஏற்றுப்பறை, யாழ் - முல்லையாழ், பண் - சாதாரி, தொழில் - சாமை, வரகு விதைத்தல், கடாவிடல், விடைதழுவல், குரவையாடல் முதலியன. (அகம்.)

**முல்லைநிலம்** — பித்ததோஷம் அதிகரித்தற்கிடம். இதனுடன் வாதமுங்கூடும். இவற்றால் பல ரோகங்களுண்டாம்.

**முல்லைப்பாட்டு** — இது தலைவனைப் பிரிந்து தனித்திருக்கும் தலைவியின் இயல்பைக் கூறியது. இப்பாட்டு காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது. பத்துப்பாட்டினுள் ஒன்று.

**முழுதுகண்டராமன்** — ஒருபாண்டியன். இவனுக்குப் பவ்யசூடாமணிபாண்டியன் எனவும் பெயர். இவனுக்கு ஒரு இடையன் நாடோறும் மந்தையில் பால் கறந்து தருவது வழக்கம். இவ்வகை வருகையில் ஒருநாள் இடையன் வரும் வழியில் மூங்கின் முனை இடற, பாலைக்கவிழ்த்துக் குறைந்த பாலாய் அரசனிடஞ்செல்ல, அரசன் பால் என் குறைந்ததென்றனன். அதற்கு இடையன் நடந்த வரலாறுகூறி மறுநாளும் அவ்வகை செய்துவருகையில் அரசன் கோபிக்க இடையன் விசனத்துடன் திரும்பி வீடுசென்று மூங்கின்முனையை வெட்டியெறியக் கோடரி யெடுத்து அருகில் வைத்துக்கொண்டும் மறந்து பின்னும்பாலை அவ்விடம் கருத்துடன் கொண்டுவந்தும் கவிழ்த்தனன். அரசன் இடையன் செய்தியறிந்து இனித் தண்டிப்பேன் என, இடையன் மனவருத்தத்துடன் வீடுவந்து கோடரியை யெடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு அன்று இரவைப் போக்கி மறுநாள் பால்கொண்டு அவ்விடஞ் செல்லுகையில் எப்படியோ பாலைக்கவிழ்த்து அதிக கோபமுடையவனாய் இடுப்பில் கட்டியிருந்த கோடரியை யெடுத்து மூங்கில் முனையை வெட்டினன். அந்த வெட்டுப்பட்ட இடத்திலிருந்து உதிரம் பெருக்கெடுக்க, இடையன் பயந்து அரசனிடம் இச்செய்தியைக் கூறினன். அரசன் மந்திரியருடன் வந்து துதிக்கச் சிவமூர்த்தி சிவலிங்க உருவாய் வெளிப்பட்டு அரசன் வேண்ட வளர்ந்து மீண்டுங் குறுகினர். இவ்வரசன் சுவாமிக்கு ஆலயமுதலிய திருப்பணி செய்வித்து முத்தியடைந்தனன்.

**முழுநீறுபூசியமுநிவர்** - மந்திரவிதிப்படி விளைத்த திருநீற்றை மந்திர பூர்வமாக அணிந்து முத்தியடைந்த தொகையடியார்கள். (பெ - புராணம்)

**முள்ளம்பன்றி** — இது உடம்பில் நீண்ட முட்களையும் பன்றிபோல் முகத்தையும் பெற்றிருத்தலால் முட்பன்றியெனப் பெயரடைந்தது. இது ஒரடி உயரமும் இரண்டடி நீளமும் உள்ளது. தலையும் மூக்கும பன்றிபோல் இருக்கும். மேல்வாயிலும் கீழ்வாயிலும் கோரப்பற்கள் உண்டு. இதன் கழுத்தில் வெண்ணிறம் பட்டை போலிருக்கும், காது அகன்றிருக்கும், உடம்பெங்கும் வளைந்த பெரிய முட்களைக் கொண்டிருக்கும். இது கோபங்கொள்ளின் முட்களைச் சிலிர்த்துக்கொண்டு எதிரியின்மேல் பாயும். ஆகாரம் கிழங்கு முதலியவும் பூச்சிகளுமாம்.

**முள்ளியார்** — பெருவாயின் மகன். ஆசாரக்கோவை நூலாசிரியர்.

**முள்ளியூர்ப்பூதி** — கடைச்சங்க மருவிய புலவர்.

**முள்ளூர்மலை** — கடை யெழுவள்ளலில் ஒருவனான மலையமான் திருமுடிக்காரியின் மலை. இதில் பகைவர்க்கஞ்சிச் சோழன் பலநாள் வசித்திருந்தனன். (புற - நா.)

**முறம்** — தானியங்களிலுள்ள குற்றம் நீங்க நோம்பவும், கொழிக்கவும், தெள்ளவும், தூற்றவும் அமைந்தது இது சிறு மூங்கிற் பத்தைகளால் பின்னப்பட்டு அடிவிரிந்து தலை குவிந்த கருவி.

**முறுவல்** — இது ஒரு நாடகத் தமிழ்நூல்.

**முறுவெங்கண்ணனார்** — இவர் வெங்கண்ணனாரெனவும் படுவர். குறிஞ்சித்திணையைப் பாடியுள்ளார். இவர் உள்ளுரை கூறியது

வியப்புடையதாகும். (நற். உகஉ.) இவர் பாடியனவாக நற்றிணையில் மேற்கூறிய பாடலொன்றும், அகத்தில் ஒன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**முறையிற் படர்ச்சியணி** — அஃதாவது, முறையாக ஒருபொருள பலவிடங்களிற் சென்றடைதலேயேனும், மோரிடத்திற் பல பொருள் சென்றடைதலேயேனுஞ் சொல் லுதலாம். இதனை வடநூலார் பரியாயாலங் காரமென்பர்.

**முற்கலருஷி** — 1. மிருகண்டு ருஷியின் மாம னர். மருத்துவதி தந்தை. இவர் காசிப ரிடம் வேதாத்யயனம் செய்கையில் எச்சில் தெறித்தமையால் காசிபர் கோபித்து எரு தாகும்படிச் சாபங்கொடுக்கப் பெற்றவர்.

2. ஒரு இருடி. இவர்தேவி வநசமாலை. இவள் புத்திரனில்லாததால் கீரி வளர்த்த னள். இக்கீரியை வளர்த்துவருகையில் புத்திரன் பிறந்தனன். அப்புத்திரனைத் தொட்டிலில் வளர்த்தி நீர்க்குச்செல்ல ஒருநாகம் தொட்டிலில் இறங்குவதைக் கீரிசண்டு பாம்பைத் துண்டித்துத் தன்னை வளர்த்தவளிடம் சென்றது. வநசமாலை கீரி குழந்தையைக் கடித்துவிட்டு வந்து விட்டதென எண்ணிக் கீரியைக் கொன்று வீட்டில்வந்து பார்க்கப் பாம்பு இறந்திருக் கவும் குழந்தை உயிருடன் இருக்கவுங் கண்டு விசனமடைந்து தான் இறக்கத் துணிகையில் சிவமூர்த்தி தரிசனந்தந்து இவளை நோக்கி, 'நீ முற்பிறப்பில் கீரி. உன்னைக் கீரியுருக்கொண் டிருந்தவள் கொன்றதனால் நீ அவளை இப்பிறப்பில் பழிவாங்கினை' எனக் கூறி மறைந்தனர். இவளும் தன்குழந்தையுடன் சுகமே வாழ்ந் தனள்

**முற்றுழதிர்வு** — மதிற்குள் உள்ளோனுடைய முழங்கும் முரசு காலையிலொலிப்ப புறத் திருந்தவனது வெய்ய கோபத்தின் மிகுதி யைச் சொல்லியதுறை. (பு. வெ. உழிஞை)

**முற்றுழிஞை** — அசையுந்தன்மையினை உடைத் தாய் விளங்கும் வேணியையுடையான் மலைந்தபூவினது நன்மையைச் சொல்லிய துறை. (பு. வெ உழிஞை.)

**முனி** — மகா சுவேதையின் தாய் முறையா னவள்.

**முனைகடி முன்னிருப்பு** — வேந்தரெல்லாரை யும் சினத்தைக் காலப்பண்ணிப் பகைவர் முன்னே இருந்தவரைப் பூசற்களரியினின் றும் போக்கியதுறை. (பு. வெ. காஞ்சி.)

**முனைப்பாடியார்** — இவர் ஊர் முனைப்பாடி யாக இருக்கலாம். சமயம் அருகம். அற நெறிச்சார நூலாசிரியர்.

**முனையதரையன்** — 1. ஒரு பிரபு. இவ னைக் கண்ணபுரத்துத் தாசி, "இன்றுவரி லென்னுயிரை நீபெறுவை யின்றைக்கு, நின்றுவரி லதுவு நீயறிவை — வென்றி, முனையா கலவி முயங்கியவாறெல்லாம், நினையாயோ நெஞ்சத்து நீ." எனப்பாடி னள்.

2. விக்கிரம சோழனுடைய மந்திரிகளி லொருவராக இருக்கலாம் என்று தெரி கிறது. "பலர் முடிமேல்-ஆர்க்குங் கழற்கா லனகன் றனதவையுட், பார்க்குமதி மந் திர பாலகரிற் போர்க்குத், தொடுக்குங் கமழ்தும்பை தூசிஞெடுஞ் சூடிக், கொடுத்த புகழ்முனையர் கோனும்" என்னும் விக் கிரமசோழனுலா அடிகளாலறிக.

**முனையடுவார்நாயனர்** — இவர் சோணாட் டில் திருநீரில் வேளாளர் குலத்தில் திரு வவதாரஞ் செய்து பகைவர்களை வென்று, வரும் பொருள்களைச் சிவனடியவர்களுக் குக் கொடுத்துச் சிவனருளால் முத்தி யடைந்தவர். (பெ. புராணம்.)

**முன்றுறையரையர்** — பழமொழி நூலாசிரி யர். இவர் சைநர். பழமொழியின் பாயி ரத்தில் "முன்றுறைமன்னவன்" என இரு த்தலின், இவர் முன்றுறை என்னும் ஊரு க்கு அரசனாக இருக்கலாம். இவர் கடைச் சங்கத்தார் காலத்தவர்.

**முனையூர்** — இஃது இடவகனுக்கு உதய னன் கொடுத்த நாடுகளுள் ஒரு நாட்டி னது தலைநகரப் பெயர். (பெ. கதை)

**முன்றேர்க்குரவை** — 1. கணையத்தை யொ த்த திண்ணிய தோளினையுடைய மன்ன னுடைய வெல்லுந்தேர்முன் நிறைந்த வலி யாற் சிறந்தவீரர் ஆடியதுறை. (பு. வெ தும்பை.)

2. வென்றெடுத்த வெற்றியான் மிக்க ஆயுதத்தையுடையான் தேரின் முன் பேயாடிய துறை. (பு. வெ. வாகை).

**முன்னத்தினுணருங்கிளவி** — குறிப்பா னுண ரப்படுஞ் சொல். (நன்.)

**முன்னவிலக்கு** — ஒரு பொருளைக் குறிப்பி னன் விலக்குவது. இது, இறந்தவினை விலக்கு, எதிர்வினை விலக்கு, நிகழ்வினை விலக்கு, பொருள்விலக்கு, குணவிலக்கு, காரணவிலக்கு, காரியவிலக்கு, வன்சொல் விலக்கு, வாழ்த்துவிலக்கு, தலைமைவிலக்கு

இகழ்ச்சி விலக்கு, துணைசெயல்விலக்கு, முயற்சிவிலக்கு, பரவசவிலக்கு, உபாய விலக்கு எனப் பலதிறப்படும். (தண்டி) கையறல் விலக்கு, உடன்படல் விலக்கு, வெகுளிவிலக்கு, ஐயவிலக்கு, வேற்றுப் பொருள்வைப்புவிலக்கு சிலேடைவிலக்கு, ஏது விலக்கு எனவும் உண்டு.

**முஷ்டிகாசுரன்** — 1. திரிலோகங்களையும் வதைத்திருந்த அசுரன். இவன் சிவமூர்த்தியால் இறந்தனன்.

2. கம்சனுக்குத் துணையான அரசன். இவன் மல்லயுத்தத்திற்குப் பலராமர்மீது ஏவப்பட்டுத் துணைவருடன் உதையுண்டு இறந்தவன்.

## மூ

**மூகாசுரன்** — 1. துரியோதனனுக்குச் சிநேகனாகிய அசுரன். அருச்சுனன் தவத்திலிருக்கையில் துரியோதனன் இவனை யழைத்து அருச்சுனனை வதைக்க ஏவினன். இவன் பன்றியுருக்கொண்டு அருச்சுனனிடம் சென்று தவத்திற் கிடையூறுசெய்கையில் சிவமூர்த்தியாலும் அருச்சுனனாலும் கொலை செய்யப்பட்டவன்.

2. கொல்லாபுரியில் சத்தியாற் கொல்லப்பட்ட அசுரன்.

**மூகாம்பை** — சையபர்வதத் தெழுந்தருளியிருக்கும் சத்தி.

**மூக்கப்பன்**—நீதிசாரம் என்னும் நூலினாசிரியர். இவர்க்குத் தந்தை திருவரையப்பன்.

**மூக்கு வளைந்த கொக்கு** — (The Avocet) இது ஆசியா கண்டத்தில் சைபீரியாவிலும், ஐரோபாவின் வடபாகத்திலும் கூட்டம் கூட்டமாய் வசிக்கிறது. இது அந்த நாடுகளிலுள்ள கடல், ஆறு, ஏரி முதலிய இடங்களில் இரைதேடியுண்கிறது. இதன் சிறகின் மேற்புறம் கருமை கலந்த வெண்மை, பாதங்கள் தோலடி கொண்டவை. மூக்கு மேல்நோக்கி வளைந்து உறுதியாயிருக்கிறது. இது தண்ணீரில் வேகமாய் நீந்தி மீன்களை வேட்டையாடும். இவ்வினத்தில் வளைந்த மூக்குள்ளவை (20) வகையுண்டென்பர். பெண்கொக்கு வருடத்திற் கொருமுறை புதர்களில் பசுமையான முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கிறது.

**மூங்கிலணை நல்லகாம நாயக்கரவர்கள்** — இவர் எழுமலை ஜமீன்தார். இவரது கொடையை வியந்து ஒரு கவிஞர், "ஆராயும் வேதியர்க்கு ளாருமில்லை யறிவுகெட்ட வலையருமப் படியே யாவர், சீராய திருக்கருக்குட் சீதக்காதி சிறப்புடைய வணிகருக்குட் செந்தில் காத்தான், காராளர் தங்களுக்குள் வெண்ணெ யூரான் கருதரிய மறவருக்குள் மூவ ராயன், பேரான மூங்கிலணை நல்ல காமர் தொட்டியர்க்கு ளீயொருவன் பேர்பெற் றூயே" என்றனர்.

**மூங்கில்** — 1. ஒரு காலத்தில் கண்ணுவர் தவமிருக்கையில் புற்று அவரை மூட அவர் மீது இது முளைத்தது. இதை மூன்று விற்களாக்கி, பினகமெனப் பெயரிட்டுச் சிவனுக்கும், சார்ங்கமெனப் பெயரிட்டு விஷ்ணுவுக்கும், காண்டீவம் எனப் பெயரிட்டுச் சந்திரனுக்கும் பிரமன் கொடுத்தனன். (பார-அது-6.)

2. இது புல்லினத்தைச் சேர்ந்தது. இது புதர்போல் முளைத்து ஒன்றையொன்று பின்னிக்கொண்டிருக்கும். கணுக்களை யுடையது. நிறம் பசுமை, இலைகள் புல்லைப்போல் கூர்மையுடையன. வேரில் பல முளைகள் தோன்றிப் பெருகும். சில கெட்டியாகவு மிருக்கும். முள்ளுள்ளவை இந்தியக் காடுகளிலும் சீனாவிலும் உண்டு. பல விதத்தில் பயன்படும். வீட்டுக்கு வரிச்சல், பந்தக்கால், ஏற்றக்கோல், பாய், முறம், கூடை, பானபாத்திரம், பல்லக்குத் தண்டு முதலியனவாம். சீனர் உள்ளிருக்கும் மெல்லிய தோலால் காகிதம் செய்வர்.

**மூங்கைப்பிள்ளையார்** — இவர் குமாரக்கடவுளின் அவதாரம். ஒருமுறை கடைச்சங்கத்துப் புலவர்கள் தாம் அகப்பொருளுக்கிட்ட உரையை ஒவ்வொருவரும் அதிகமாக மதித்து வரம்பு அறியாது இருக்கையில், அவற்றின் உயர்வு தாழ்வுகளை அறிய எண்ணிச் சொக்கநாத மூர்த்திகளை வேண்டினர். சொக்கநாதர் புலவர்தமை நோக்கி, 'தனபதியும் குணசாலினியும் செய்த தவத்தால் குமாரக்கடவுள் அவர்களிடம் அவதரித்திருக்கின்றான்; அவனிடஞ்சென்று உமது செய்யுட்களைக்கூறி எல்லை காண்க' என்றனர். புலவர் அவ்வாறே சென்று மூங்கைப் பிள்ளையாரை வணங்கி அவர் சந்நிதிமுன் அவரவர் செய்த உரையைக் கூற, பிள்ளையார் புலவர்க்குச் சமிஞ்ஞையால் வரம்பு அறிவித்தனர். இவர் மூங்கைப் பிள்ளையாகப் பிறந்த காரணம் சிவமூர்த்தி தமது தேவியாருக்குச் சாஸ்திரோபதேசஞ்செய்கையில் பிராட்டி அதில் பரா

முகமாக இருந்ததைக் கண்டு சாபமிட்டனர். இச்சாபங் கேட்ட குமாரக்கடவுள் பொருது சாஸ்திரங்களைக் கடலில் இட்டுச் சிவமூர்த்தியால் வணிகர் குலத்தில் ஊமையாய்ப் பிறக்கச் சாபமேற்றனர். (பாஞ் - திருவிளை)

**மூஞ்சூறு** — இது உருவத்தில் எலியைப் போல இருக்கும். ஒருவிதச் சாம்பல் நிறமுள்ளது. இதன் கால்கள் குட்டையாயும் முகம் சற்று நீண்டு பன்றியின் முகமொத்துத் துதிக்கைபோல் அசையக்கூடியதாயுமிருக்கும். இது இரவில் ஓடித் திரியும். இதன் கண்கள் சிறியவை. இதனிடம் சத்துருக்களை யோட்ட ஒருவித நாற்றமுண்டு. அதனால் பூனை முதலியன இதனை விரும்பா.

**மூடகர்ப்பம்** — மூடவிஷ்டம்ப கருப்பம் காண்க.

**மூடவிஷ்டம்ப கருப்பம்** — கருப்பிணி மேடு பள்ளங்களில் படுப்பதாலும், அபானவாயுவின் விகுணத்தாலும், பிரசவகாலத்துப் பலவிதமாகப் புரளுவதாலும் சிசுவின் சிரம், கை, கால், இடந்தப்பி வேறிடத்திற் சிக்கும். இதனால் பிண்டம் வெளிப்படாது வருத்த முண்டாம். இதுவே மூடகர்ப்பம். யோனித்தானத்தில் ஒரு காலும், குதத்தானத்தில் ஒரு காலும் சிக்கிக்கொண்டு பிரசவ முகங்காணாது ஸ்தம்பிப்பது விஷ்டம்ப கருப்பமாம். (ஜீவரட்.)

**மூடன்** — ஒரு தயித்தியன். வேதியச் சிறுமி ஒருத்தியைத் துன்புறுத்தி நந்தி, கங்கை இவர்களால் மோட்சமடைந்தவன்.

**மூடுபனி** — 1. பகற்காலத்தில் வெப்பத்தால் பூமி சூடடைய அதிலிருந்து எழுந்த ஆவி உஷ்ணமடைகிறது இது இரவு ஏறவேறக் குளிர்ந்து நீர்கொண்ட மேகத்தைப்போல் பரிணமிக்கிறது.

2 சற்று உறைந்த நீர்த்திவலை பூமிக்கு அருகாக வரும்போது பூமிக்கருகிலுள்ள ஆகாயம் பூமியினும் குளிர்ந்திருத்தலால் புகைபோல் பூமியைக் கவிந்துகொள்ளுகிறது. இது பெரும்பாலும் இரவுக்கு முன்னும் பின்னுமாக உண்டாம். சூரிய உதயத்தில் மறைந்துபோம்.

**மூட்டுப்பூச்சி** — இது பேனை யொத்தது. இது இரத்தத்தை யுறுஞ்சிச் சீவிப்பது. அழுக்கினால் பிறப்பது. இவ்வகையைச் சார்ந்தது மாமூட்டுப்பூச்சி. இதுவும் பேனை யொத்தது. இதுவும் இரத்தங் குடிப்பது. மூட்டுப்பூச்சி போலிருக்கும். மோட்டுப்பூச்சி யென்னும் சொல்வதுண்டு.

**மூதானந்தம்** — கயலை யொத்த விழியினை யுடையாள் தன் கொழுநனோடு இறந்துபட, அகன்ற வழியிடத்துப் போவார் கண்டு அதிசயித்துச் சொல்லிய துறை. (2) கடுவினையாளன் தன்மேற் பகைவருடைய கூரிய அம்பு அழுந்தத் தான் நினைந்த வினையை முடிவு செய்யானாகி இறத்தலும் மூதானந்தம் என்ற துறையாம். (பு வெ. பொதுவியல்.)

**மூதின்முல்லை** — கொல்லும் வேலினையுடைய வீரர்க்கல்லது அந்த மறக்குடியில் மடப்பத்தினையுடைய அரிவைமார்க்கும் சினத்தைச் சிறப்பித்த துறை. (பு. வெ. வாகை.)

**மூதேயினனார்** — கடைச்சங்கமருவிய ஒரு புலவர்.

**மூதேவி** — 1. இவள் முதலில் ஆதிசக்தியினிடந்தோன்றி இரண்டாமுறை திருப்பாற்கடலிற் பிறந்தவள். இவள் காளாஞ்சன நிறமும், சர்ப்பாபரணமும், கழுதை வாகனமும் உடையவள். (சுப்ரபேதம்.)

2. மூத்தாளைக் காண்க. கணவன் துப்பிரதன் எனவும் பாதாபுத்திருப்பன் எனவுங் கூறுவர்.

**மூதேவிவாழிடங்கள்** — அரசு நீழல், விளாமரத்தடி, விளக்கினீழல், மனிதர் நீழல், இரவு, ஆசாரமில்லாத வேதியனீழல், உண்ட நீர்ச்சேடம், ஆடைதோய்த்தநீர், விளக்குமாற்றின் புழுதி, மயிர்ப்புழுதி, கழுதை, நாயின் புழுதி, வெந்தசாம்பல், வேசாக்கரிப் புழுதி, ஆட்டுத்தூசு இவை முதலியன. (அண்ணு - சத.)

**மூத்தாள்** — பாற்கடலிற் பிறந்தவள். இவள் ஆன்மாக்களுக்குச் சோம்பல் முதலியன வருவிப்பவள். வருணன் தேவி யென்பர். இவள் இலக்குமணர் வனவாசஞ் செய்கையில் கங்கைக் கரையில் வந்து உறக்கம் உண்டாக்க, இலக்குமணர் இவளை நோக்கி வனவாசத்திற்குப் பிறகு வருக என, அவர் கட்டளைப்படி (கச) வருஷம் பொறுத்து வந்தவள். இவளுக்கு வாகனம் கழுதை. ஆயுதம் துடைப்பம். கொடி காகம்.

**மூத்திரகிரிச்சரரோகம்** — இது அதிக வருத்தத்துடன் மூத்திரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக விழச்செய்வது. இது வாதம், பித்தம், சிலேஷ்மம், திரிதோஷகிரிச்சரம் என நான்கு வகைப்படும். இவைகளை வெடியுப்புத் திராவகம், நவச்சாரக்குழம்பு,

மகரவசந்த குசுமாகர மாத்திரை முதலிய வற்றால் வசஞ்செய்யலாம். (ஜீவரட்.)

**மூத்திரதோஷம்** — இது மூத்திரத்தால் உண்டாம் தோஷத்தால் பிறக்கும் நோய். இது வாதவஸ்தி, வாதகுண்டலி, வாதாஷ்டீலம், மூத்திராதீதம், மூத்திரச் சடரம், மூத்திரோச்சங்கம், மூத்திரக்கிரந்தி, மூத்திர சுக்லம், மூத்திரவிட் விகாதம், மூத்திர வுஷ்ணவாதம், மூத்திரக்ஷயம், மூத்திர சாதம் எனப் பலவாம். இவற்றுள் வாதவஸ்தி, வாதகுண்டலி, வாதாஷ்டீலம் எனும் மூன்றிற்கும் வாயுவே அரசனும். மூத்திராதீதம், மூத்திரசடரம் இவ்விரண்டிற்கு வாதபித்தங்களே அரசர்களாம். மற்றையவற்றிற்குப் பித்த கபங்களே அரசர்களாம்.

**மூப்பன்** — உழவர், இடையர், அளவர், அம்பலக்காரர், குடுமி, பள்ளர், பறையர், திருவனந்தபுரத்துத் தண்டான், சேனைக்குடியர், சேணியர், சாலியர், சாணூர், வலையர் முதலியோர் பட்டப்பெயர். (தர்ஸ்டன்.)

**மூருசி** — பிருடியின் மனைவி. பிருடியைக் காண்க.

**மூர்க்கநாயனூர்** — இவர் தொண்டை மண்டலத்தில் திருவேற்காட்டில் வேளாளர் குலத்தில் அவதரித்துச் சிவனடியார்க்கு அமுது படைக்கும் நியமம் பூண்டு வருகையில், செல்வங் குறைந்து வருதல் கண்டு பொருள் இலாமையால் சூதாடிவென்று அந்தப் பொருள்கொண்டு தொண்டுசெய்து வேறு சூதாடுவாரின்மையால் பல தலங்களுஞ் சேவித்து அங்குச் சூதாடி வென்று அப்பொருளை அடியவருக்கிட்டுக் கும்பகோணஞ்சென்று சிவமூர்த்தியைத் தரிசித்துச் சூதாடி முன் தாம் தோற்பதுபோற் காட்டிப் பின் அவர்களைத் தோற்பித்துப் பொருள் பெற்று அப்பொருளைத் தாம் பெருமல் பரிசனங்களால் எடுப்பித்துச் சிவனடியார்க்கு அன்னமிட்டுத் தாம் கடைப்பந்தியில் இருந்து அன்னம்புசித்து வருவர். தாம சூதாடி வெல்கையில் மாறுபேசுவரேல் அவர்களைக் கையில் இருக்கும் சுரிகையால் குத்துங் காரணத்தால் மூர்க்கர் எனப் பெயர் பெற்றுச் சிலநாளிருந்து முத்தியடைந்தனர்.

**மூர்க்கருஷி** — ஒரு இருடி. சிவனடியவர்.

**மூர்ச்சாரோகம்** — ஆகாயம் பலவன்னமாகக் காணப்பட்டு மூர்ச்சையுண்டாம். மார்பு வலி, நடுக்கல், பிரமை, தேகவெரிவு, தாகம், வியர்வு, கோரசேஷ்டை முதலிய குணங்களும் பெற்றிருக்கும். இது வாதம், பித்தம், சிலேஷ்மம், திரிதோஷம் முதலியனவற்றை விளைக்கும் இதனை மகாவிஷமுஷ்டித் தைலாதிகளால் வசமாக்கலாம்.

**மூர்த்தம்** — (அ) பூமி, நீர், நெருப்பு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற சிவபெருமானது எட்டுவடிவங்கள்.

**மூர்ந்தாண்டான்** — சிவகணத் தலைவன்.

**மூர்த்தி** — தக்ஷனுக்குப் பிரசூதியிடம் உதித்த குமாரி. இயமன் தேவி. தருமப்பிரசாபதியின் தேவி யெனவுங் கூறுவர். இவளிடம் விஷ்ணு நரநாராயணராக அவதரித்தனர்.

**மூர்த்திசாதாக்யம்** — வித்தையெனும் பெயருடைய இச்சாசத்தி, சுத்தகுணமான கலையைப் பொருந்தலால் மூர்த்தியெனும் பெயரடைந்து காணப்பட்ட வடிவையுமுடைத்தாகி காலாக்னிக் கொத்த ஒளி பெற்று இலிங்கவுருவடைந்து அதன் ஊர்த்வபாகத்தில் ஒரு திருமுகமும் இச்சாஞான கிரியைகளெனும் திரிநேத்ரங்களும், கண்டிப்பற்ற வடிவும் பெற்றிருப்பது. (சதாசிவ.)

**மூர்த்தி நாயனூர்** — இவர் பாண்டி நாட்டில் மதுராபுரியில் வைசியர் குலத்தில் அவதரித்தவர். இவர் நாடோறும் சோமசுந்தரக்கடவுளுக்குச் சந்தனக் காப்பிடச் சந்தனமரைத்துக் கொடுத்து வருவாராயினர். இவ்வகையிருக்கையில் கருநாடக தேசத்தரசன் பாண்டியனை வென்று அந்நாட்டைக் கவர்ந்து சமணசமயத்தவர்க்கு உட்பட்டு அந்நாட்டவரையும் அச்சமயத்தவர்கட்கு உட்படுத்த எண்ணி நாயனூரை அவ்வழிப்படுத்த, நாயனூர் சந்தனக்கட்டை வாங்குங் கடைகளில் சந்தனக்கட்டை கொடாதிருக்கக் கட்டளையிட்டனன். இதனுல் நாயனூர் மனம் வருந்திச் சந்தனக் கட்டை கிடையாவிடினும் அதனையுரைக்குங் கைக்கு முட்டில்லையெனத் தேறிச் சந்தனக்கல்லில் தமது கரத்தை அதிலுள்ள மூளை யொழுகும்வரையில் உரைத்தனர். சிவமூர்த்தி இவரை நோக்கி, 'அன்பனே இவ்வகை புரியாமல், உனக்கு இடுக்கண் செய்தவன் மாள்வன்; நீ அரசனுக இருந்து சைவசமயத்தை வளர்த்து நம் உலகடைக' என்று திருவருள் புரிந்து மறைந்தனர். சந்தனம் உரைத்தகையும் வளர்ந்தது. மறுநாள் அரசன் இறக்க, மந்திரியர் அரசனுக்குச் செய்வகை செய்து புத்திரனில்லாமையால்

வாளையைக் கண்கட்டிவிட, அது சொக்கநாதர் சந்நிதியில் இருந்த மூர்த்திநாயனுரையெடுத்து முடியிலிட்டுச் சென்றது இவர் சொற்படி மந்திரியர் விபூதி ருத்ராக்ஷமே திருமுடிசூட்டுந் திரவியமாகக் கொண்டு முடிசூட்டினர். இவ்வகை மூர்த்திநாயனர் நெடுங்காலம் அரசாண்டு முத்தியடைந்தனர்.

மூலகன் — இக்ஷுவாகு குலத்து அச்மகன் குமாரன். பரசிராமரால் அழிந்த சூரிய வம்சம் தோன்றுவதற்கு மூலமாயிருந்தபடியால் இவனுக்கு மூலகன் எனவும், பரசிராமரால் அழிவுகோராதபடி பெண்கள் இவனைக் காத்திருந்ததால் நாரீகவசன் எனவும் பெயர் பெற்றவன். இவன் குமாரன் தசரதன். (பாகவ.)

மூலங்கீரனூர் — இவர் பாலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். பேய்களை வருணிப்பதில் வல்லவர். முண்முருக்கின் நெற்றைப் பேயின் கைவிரலுக்கு உவமை கூறியது வியக்கத்தக்கது. சோழநாட்டின்கணுள்ள திருச்சாய்க்காட்டை (சாயாவனத்தைப்) புகழ்ந்து பாடியுள்ளார். இவர் பாடியது (நற். எ௬-ம் பாட்டு.)

மூலத்திரிகோணம் — சூரியனுக்குச் சிங்கமும், சந்திரனுக்குக் கர்க்கடகமும், செவ்வாய்க்கு மேஷமும், புதனுக்குக் கன்னியும், குருவுக்குத் தனுசும், சுக்கிரனுக்குத் துலாமும், சநி ராகுக்குக் கும்பமும், கேதுக்குச் சிங்கமும், குளிகனுக்கு மீனமும் ஆகும்.

மூலம் — (ய) கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், நெருஞ்சிவேர். இவை சிறுபஞ்சமூலம். வில்வவேர், பெருங்குமிழ்வேர், தழுதாழைவேர், பாதிரிவேர், வாகைவேர் இவ்வைந்தும் பெரும்பஞ்சமூலம் என்பர். ஆக இவை பத்தும் தசமூலமெனப் பெயர் பெறும்.

மூலரோகம் — இது ஆசன வளையங்களில் கிழங்கின் முளைகளைப்போலவும் வேர்களைப் போலவும் மாம்ச முளைகளைப் பெற்றிருப்பது. இது சகசமூலம், உத்தாசமூலம், சுஷ்கமூலம், ஆர்த்திரமூலம், வாதமூலம், பித்தமூலம், சிலேஷ்மமூலம், தொந்தமூலம், திரிதோஷமூலம், ரத்தமூலம், ஆசாத்யமூலம் எனப் பலவாம். இவைகளைச் சூரணம், லேகியம், சந்தகவடகம் இவைகளாலும் க்ஷத்ர, க்ஷாராக்னிகளாலும் வசமாக்கலாம். (ஜீவரட்.)

மூலன் — திருமூலநாயனுரைக் காண்க.

மூவன் — இவன் சிற்றரசன். பரிசு தராமையின், பெருந்தலைச் சாத்தனுரால் இகழ்ந்து பாடப்பெற்றவன். (புற நா. உ0௯.)

மூவாயிரவர் — சூரபன்மன் குமாரர். இவர்கள் விஜயன் எனும் இலக்கவீரனல் கொல்லப்பட்டவர்.

மூவேந்தர் — 1. சேர சோழ பாண்டியர். இவர் தொன்றுதொட்டுவந்த தமிழ் நாட்டரசர். இவர்களின் தசாங்கமாவன: முறையே மலை-கொல்லி, நேரி, பொதிகை. நாடு-குடநாடு, புன்னாடு, தென்னாடு. நதி-பொருனை, காவிரி, வைகை. பதி-கருவூர், உறையூர், மதுரை. முரசு - மங்களம், வெற்றி, கொடை. கொடி-வில், புலி, மீன். ஊர்தி-கனவட்டம், பாடலம், கோரம். மாலை - பனை, ஆத்தி, வேம்பு.

2. அச்சுதகளப்பாளன் தளையிட்டபோது பாடியது. "தினைவிளைத்தார் முற்றந் தினையுணங்குஞ் செந்நெல், தனைவிளைத்தார் முற்றமது தானும் — கனைசீர், முரசுணங்கச் சங்குணங்கு மூரித்தேர்த் தானை, அரசுணங்கு மச்சுதன்முற் றத்து." இது சேரன் கூற்று. "அரச குலதிலக னச்சுதன் முற்றத்தில், அரச ரவதரித்த வந்நாள் — முரசதிரக், கொட்டிவிடு மோசையினுங் கோவேந்தர் காற்றளையை, வெட்டிவிடு மோசை மிகும்." இது சோழன் கூற்று. "குறையுளா ரெங்கிரார் கூர்வேலி ராமன், நிறையாறு திங்க ளிருந்தான் — முறைமையால், ஆலிக்குந் தானை யலங்குதா ரச்சுதமுன், வாலிக் கிளையான் வரை." இது பாடிய பின்பு பாண்டியனுக்கு ஒரு விலங்கு கூடப்போட அப்பொழுது பாடியது. "குடகர் குணகடலென் றூர்த்தார்குடகர்க், கிடவர் வடகடலென் றூர்த்தார் — வடகடலர், தென்கடலென் றூர்த்தார்தென் றில்லையச்சுதா கின்றன், முன்கடைநின் றூர்க்கு முரசு." தமிழ் நாவலர் சரிதை.

3. பழையனூரார் பழிதீர்த்த தீக்குழி அவியாதெரிய மூவேந்தரும் வந்து பார்த்துப் பாடியது.

இதுசேரன் - "யாவரே காராளர் யாவரிணை யாவலார், நாவலோ நாவலோ நாவலோ — கோவைப, பொருப்பா ளளித்தார்க்குப் போதுமே யுண்மை, நெருப்பா லமைத்தார்க்கு நேர்."

இதுசோழன், - எல்லை பலகடந் தெங்கும் புகழ்பூத்துத், தொல்லை மனுக்காக்கத்

தோன்றிற்றே - கொல்லை, வழியிலொரு பேய்நின்று வஞ்சனையாற் செய்த, குழியி லெழு செந்தீக் கொழுந்து."

இது பாண்டியன் — "பிழைத்தாரோ காராளர் பேய்மகள்சொற் கேட்டுப், பிழைத்தார்க ளல்லர் பிழைதீர்ந்தார் — பிழைத்தார்கள், எல்லாருங் காண வெரியகத்தே மூழ்கினார், எல்லாரு மென்று முளர்."

**மூன்றும்பிறை** — பங்குனியும், சித்திரையும், தென்கோடேயரவேண்டும். வைகாசி முதல் மார்கழிவரை வடகோடுயர வேண்டும். தையும் மாசியும் சமனாக இருக்கவேண்டும். இல்லாவிடில் கலகமும் பஞ்சமும் உண்டாகும். பின்வரும் வெண்பாவைக்காண்க. "மீனாடு தெற்குயா மிக்கெட்டுமே வடக்காம், தான்மகா கும்பஞ் சரியாக- மானே கேள், சொன்னபடி சோம னிராவெனி லோ கோன்மடிவன், அன்ன மரிதாய் விடும்."

**மூஷிகம்** — 1. திருவநந்தபுரம், கொச்சி ராச்சியங்களுக்கு வடக்கேயுள்ள நாடு.

2. சௌபரியின் மனைவியைக் கைப்பற்றி அவரால் மூஷிகமாகச் சபிக்கப்பட்டுக் கடையில் விநாயகர் வாகனமானவன்.

**மூஷிகாதன்** — கத்ருகநயன். நாகன்.

## மெ

**மெக்ஸிகோமதம்** — அமெரிக்காவிலுள்ள மெக்ஸிகோ தேசத்திலுள்ளவர்கள் ஆதிகாலத்தில் சூரியனையும் பக்ஷிகளையும் பூசித்துக்கொண்டிருந்தனர். மெக்ஸி யென்னும் தரும சாஸ்திரி பிறந்த பிறகு கூறிய விதம் எவ்வாறெனில் விட்ஜலி, புட்ஜலி என்னும தேவன் ஆதியில் பக்ஷி உருவங்கொண்டு ஒரு பர்வத சிகரத்தில் உட்கார்ந்திருந்தனன். அப்பக்ஷி உருக்கொண்டவன் இருந்த ஸ்தலத்தில மெக்ஸிகோ என்னும் நகரம் நிருமிக்கப்பட்டது. பின்னும் பயங்கரமான டியஸ் என்னும் தேவன் ஒருவன் உண்டு. அவனுக்கு லோகமே சிங்காசநம். பூமிமுதலாகிய பாக்ய தெய்வங்களும் க்ஷமாம் முதலாகிய துஷ்கர்மதேவதைகளும் உண்டு என்பன. ஆசாரம் பூமியும் இவர்களுக்குத் தேவதை யாகையால் பூமிக்கு நரபலியிடுவர். இவர்களின் தேவாலயங்களில் மனிதர்களின் மண்டையோட்டைத் தொங்கவிட்டிருப்பர். பாம்புகளைப் போஷிப்பர். பூசாரிகள் அதிக சீலத்துடன் பூசிப்பர். இவர்களுக்கு உபவாச விரதங்களுண்டு; தெய்வங்களுக்கு உற்சவாதிகள் செய்வர்; இவர்கள் கல்யாணங்களில் தலையை மொட்டை யிட்டுக்கொள்ளுவர். இவர்கள் மறு பிறப்பு, தேவ தண்டனை உண்டென்பர்.

**மெய்கண்ட தேவர்** — திருப்பெண்ணாகடம் என்னுந் திருத்தூங்கானை மாடத்தில் சைவ வேளாளர் குலத்திற் பிறந்த அச்சுதகளப்பாளர் என்பவர் நாடோறும் புத்திரப்பேறு வேண்டித் தம் குலகுருவாகிய சகலாகம பண்டிதரை வணங்கிக்கூற, அவரும் ஆளுடைய பிள்ளையார் அருளிச்செய்த திருமுறையில் கயிறு சாத்தினர். அதில் "கண்காட்டுநுதலானும்" எனுஞ் சம்பந்தரது திருவெண்காட்டுத் திருப்பதிகத்தில் "பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை, வாயினவே வரம்பெறுவ ரையுறவேண்டாவொன்றும், வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர், தோய்வினையாரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே." என்னுந் திருப்பதிக முதிக்க, அதன் பொருளை ஆசிரியர் தெரிவிக்கத் தெரிந்து, அவ்வாறே சுவேதாரண்யஞ் சென்று முக்குளநீர் மூழ்கிச் சிவபூசை செய்து வருகையில், சிவபெருமான் ஒருநாள் கனவின்கண் எழுந்தருளி, 'உனக்கு மகவைத் தருகின்றோ' மென்று உருக்கரந்தனர். பின்னர் சிலநாளிருந்து தம்மூருக்கு மீள்கையில் அவர்தம் காதலியாரிடத்துக் குழந்தை அவதரித்தது. தாய்தந்தையர் இருவரும் குழந்தையைச் சுவேதவனப் பெருமாள் எனப் பெயரிட்டு வளர்த்துவந்தனர். இவ்வாறு வளர்த்துவருகையில், பத்தினியின் சகோதரர், திருவெண்ணெய் நல்லூர் காங்கேயபூபதி இவர் வீட்டிற்குவந்து அக் குழந்தையைத் தாம் வளர்ப்பதாய் எடுத்துச்சென்று வளர்த்துவந்தனர். இக்குழந்தை வீதியில் மணலைச் சிவலிங்கமாகச் செய்து அர்ச்சித்துத் தியானத்தி லிருக்கையில் ஆவ்வழி வந்த பரஞ்சோதிமுனிவர் இக்குழந்தையின் பரிபாகத்தை நோக்கிச் சிவமூர்த்தியின்செயல்களை ஞானதிருஷ்டியால் அறிந்து, இவர்க்குச் சிவதீக்ஷை செய்து சுவேதனப் பெருமாள் எனத் தீக்ஷாநாமம் இட்டுத் தாம் சந்தானபரம்பரையிற் கேட்ட சிவஞான போதத்தினை அருளி, அதற்குப் பொருள் அருளிச்செய்து இச்சிவஞான போதத்தி

னைத் தமிழிற் செய்க எனக் கட்டளையிட்டுச் சென்றனர். மெய்கண்டதேவர் ஐந்து வயதில் பூஜாவிசேஷங்களை அறிந்து திருவெண்ணெய் நல்லூர்ப் பொல்லாப் பிள்ளையார் வேதசிவாகமங்களை நன்கு போதிக்கப் பயின்று, சிவஞான போதத்திற்குப் பொல்லாப்பிள்ளையார் அருளிச்செய்த சூர்ணிகையைக் கொண்டு தமிழில் சிவஞான போதமும் அதற்கு வார்த்திக உரையும் இயற்றினர். இவ்வகை மெய்கண்டதேவர் பொல்லாப் பிள்ளையாரிடம் சாஸ்திராப்பியாசம் செய்து வருவதை ஊரார் யாரும் அறியாது, ஐயோ! இப்பிள்ளை ஊமையாய் இருக்கின்றதே என விசனப்பட்டிருந்தனர். இவ்வகை இருக்கையில் இச்செய்தியைப் பொல்லாப் பிள்ளையாருக்குப் பூசைசெய்யும் சிவத்விசர் ஒருநாள் தாம் வழக்கப்படி பூசைமுடித்துச் சென்று மீண்டு தரிசனார்த்தமாக வருகையில் கோயிலுக்குள் சந்தடிகேட்டுச் சென்று பார்க்கையில் ஊமைக் குழந்தை பிள்ளையாரிடம் ஆக்ஷேப சமாதானங்களுடன் சாஸ்திரபாடம் கேட்பதைக் கேட்டு, ஆச்சரியமடைந்து, ஊரிலும் அப்பிள்ளைக்கு உரியாரிடத்திலும் அறிவித்தனர். பிள்ளைக்குரியவர் ஆதிசைவரை நம்பாமல் தாங்களே சென்று நேரிற் கண்டு விநாயகரை வேண்டிக் குழந்தைபேச அருள்பெற்றுவந்தனர். இச்செய்தி ஊர்முழுதும் பரவியது. இதுநிற்க, சகலாகம பண்டிதர் திருவெண்ணெய்நல்லூரில் இருந்த தமது மாணாக்கர் வேண்டுகோளின்படி அவ்விடம் வந்து வேத சிவாகமங்களைப் போதித்து வருகையில் மெய்கண்டதேவர் அவரது மாணாக்கரைக்கண்டு அழைத்து அதில் அருமையான பாகங்களை வினவிப் பொருள் கேட்க, அவர் கூறாததால் அதற்குப் பொருள் கூறி வருவர். இவ்வகை நாடோறும் சகலாகம பண்டிதர் மாணாக்கர் மெய்கண்டதேவரிடம் சென்று சகலாகமபண்டிதரிடம் போதலை நீங்கியதைக்கண்ட பண்டிதர் மெய்கண்ட தேவரிடம் பொறாமையால் வந்து ஆணவமல லக்ஷணங் கேட்டனர். மெய்கண்டதேவர், சிவாசாரியரின் அதிதீவிர நிலையறிந்து சக்ஷு தீக்ஷைசெய்து அவ்வினாவிற்கு விடை அவரே அறிய அநுக்கிரகித்தனர். இதனால் சகலாகம பண்டிதர் மெய்கண்டதேவர் திருவடிகளை வணங்கி நின்றனர். மெய்கண்டதேவர் அவருக்கு அருணந்திதேவரென தீக்ஷாநாமம் புனைந்து தாம்செய்த சிவஞான போதத்தையும் பொல்லாப்பிள்ளையார் அருளிச்செய்த சூர்ணிகையையும் அருளிச்செய்து இதனை உலகத்தவர் எளிதில் உணரும் வண்ணம் ஒருநூல் செய்க என்றனர். இவருக்கு மாணாக்கர் நாற்பத்தொன்பதின்மர். அவர்களுள் சிவஞான சித்தி இயற்றியவர் அருணந்திசிவாசாரியர். உண்மைவிளக்கங் கூறியவர் திருவதிகை மனவாசகம் கடந்தார்.

**மெய்காப்பாளன்** — அரசனுக்கு அருகிலிருந்து அவனுக்குப் பகைவரால் துன்பம் வராது காப்பவன்.

**மெய்ப்பரிசம்** — (அ) ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல் இவை மெய்ப் பொறிகளால் செய்யப்படுவன.

**மெய்ப்பாடு** — நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், உவகை, வெகுளி ஆக எட்டு.

**மெய்ப்பாத புராணிகர்** — இவர் பாண்டி நாட்டு மதுரை நகரத்தவர். திருப்பைஞ்ஞீலிப் புராணம் பாடியவர்.

**மெய்ப்பொருள் நாயனார்**—இவர் சேதிநாட்டுத் திருக்கோவலூரில் அரசு செலுத்திக் கொண்டிருந்தவர். இவருடன் ஒருபகைவன் போர்செய்து தோல்வி யடைந்து இவன்ற வஞ்சனையால் வெல்ல எண்ணிச் சிவனடியவர் வேடங்கொண்டு சுரிகையை மேல் வஸ்திரத்தால்மூடிப் புத்தகம்போலெடுத்துக்கொண்டு, அடியவர் திருக்கோலமே மெய்ப்பொருள் எனக்கொண்ட மெய்ப்பொருள்நாயனாரிடம் வந்து உனக்கு ஞானோபதேசம் செய்யக் கருதினேன் என்றனன். நாயனார் இவன் கூறுவது மெய்யென நம்பி வணங்கி நிற்கையில் கொலை செய்தனன். அந்த வேளையில் நாயனாருக்கு அருகிருந்த தத்தன் இவனைக்கொலை செய்ய முயல்கையில் இவர் சிவனடியார் எனத் தடுத்துச் சிவத்தியானத்தால் முத்தி பெற்றவர். இவர் வழியில் சுதர்மான் முதலிய மூவர் வம்சம் உண்டாயிற்று. தெய்விகமகாராசனைக் காண்க. இவர் காலம் ஔவையார் காலமாக இருத்தல் வேண்டும். தந்தை தெய்வீக அரசன். தாய் சோழன் குமாரியாகிய பொன்மாலை.

**மெய்யுறுபுணர்ச்சி** — உடம்பைத் தீண்டுதல் முதலியன. இது காட்சிமுதல் பத்து

வகை. காட்சி வேட்கை யுள்ளுதன் மெலித, லாக்கஞ் செப்ப ஞணுவரை யிறத்த, னேக்குவ வெல்லா மவையே போறன், மறத்தன் மயக்கஞ் சாக்கா டென்ற ஐயிரண்டவத்தையும்......மெய்யுறு புணர்ச்சி என்னும் இலக்கண விளக்கச் சூத்திரத்தா லுணர்க (சOடு) காட்சி-தலைமகளைத் தலைவன் தனியிடத்துக் காணுதல். வேட்கை - இவளைப் பெறவேண்டு மென்னுமுள்ள நிகழ்ச்சி. ஒரு தலையுள்ளல் இடைவிடாது நினைத்தல். மெலிதல் - உடம்பு வாடுதல். ஆக்கஞ்செப்பல் - தன்னெஞ்சில் வருத்தத்தைப் பிறர்க்குரைத்தல். நாணுவரை யிறத்தல் - நாணத்தினெல்லை கடத்தல். நோக்குவ வெல்லாமவையே போறல்-காண்பன வெல்லாம் அவளுறுப்புப் போலத் தோன்றுதல். மறத்தல்-அறிவு திரிதல், மயக்கம்-மோகித்தல். சாக்காடு - இறந்துபடல். (அகம்.)

மெய்யெழுத்து — இவை தாமே யியங்கா வெழுத்துக்கள். இவை உயிரேறுதற்கு உடம்பு போலுதலின் மெய்யெழுத் தெனப்பட்டன. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் எனப் பதினெட்டு.

மெல்லெழுத்துக்கள் — மெய்யெழுத்துக் களில் மெலிந்த ஓசை யுள்ள ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறுமாம்.

மெழுகு — தேனீயாலும் ஒரு வகைக் கொசுவாலும் சேர்க்கப்படும் தேனினின்றும் எடுக்கப்படும் மசை. ஒரு வித மீனின் கொழுப்பால் செய்யப்படுவது மீன்மெழுகு.

மெழுகுதைல மிறக்கும் பாண்டம் — கழுத்து நீண்டு மேல் ஓடு மூடிய ஒரு குடத்தை அடுப்பிலிட்டு மருந்தை நிரப்பி அதன் வாய்க்குப் பொருந்திய சிறு கடத்தில் சிறு துவாரங்களிட்டு அச்சிறு துவாரங்களின் அடியில் ஒரு பாத்திரமமைத்து எரிக்கத் தைலமிறங்கும். இதுவே மெழுகு தைலமிறக்கும் பாண்டம். இதனை மெழுகு தைல இயந்திரமென்றுங் கூறுவர்.

## மே

மேககன் — உடுண்டுபன் நண்பன். விரத ஒழுக்கமுடையவன். அவனைப் பாம்பாகும் படிச்சாபமிட்டவன். பிறவற்றிற்கு உடுண்டுபனைக் காண்க.

மேககூடம் — ஒரு வித்தியாதர நகரம். (சூளா.)

மேகசந்தி — 1. ஒரு க்ஷத்திரியன். ஜாரசந்தன் புத்திரனாகிய சகதேவன் புத்திரன். (பார - ஆதி.)

2. சாரசந்தன் பேரன். மகத தேசாதிபதி. இவன் அச்வமேதக் குதிரையின் பின் சென்ற அருச்சுனனுடன் யுத்தஞ்செய்து தோற்றவன். (பார - அச்.)

மேகசுவாதி — சிபௌகன் குமாரன். இவன் குமாரன் அடமாயன்.

மேகநாதன் — 1. இந்திரசித்தின் பெயர். இந்திரசித்தைக் காண்க.

2. சந்திராபீடனது சேனபதி.

மேகபுரம்—ஒரு வித்தியாதர நகரம். (சூளா.)

மேகபுஷ்பம் — கிருஷ்ணன் தேர்க்குதிரைகளில் ஒன்று.

மேகப்பிரஷ்டன் — பிரியவிரதன் பேரன். கிருதபிருஷ்டன் குமாரன்.

மேகப்பிருத்தியன் — சிவகணத்தவரில் ஒருவன்.

மேகமலன் — கல்கியின் குமாரன்.

மேகமாலி — சண்முகன் சேனாவீரன்.

மேகமாலினி — மேகவாகனன் மனைவி. (சூளா.)

மேகம் — 1. (எ) சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம் என்பன. இவை முறையே மணி, நீர், பொன், பூ, மண், கல், தீ இவற்றைப் பொழியும்.

2. நீராவியின் பரிணமமே மேகம் எனப் பேர் பெறும். இதன் மீது குளிர்ந்த காற்றுப் படின் பனி, மழை முதலியவாக மாறுகிறது. இது ஆகாயத்தில் கறுப்பான நிறத்துடன் தோன்றில் கார்மேகம் எனவும், படைப் படையாக இருக்கில் படைமேகம் எனவும், குவியலாகத் தோன்றின் குவியல்மேகம் எனவும், சுருண்டு தோன்றின் சுருள்மேகமெனவும் கூறுவர். இவை பூமிக்கு (2, 3) மைலுக்கு மேல் காணப்படும். மேற்கூறிய நீராவி என் இளம்பு கிறதென்னில் அது ஆகாயத்தினும் லேசாக இருப்பதால் உயருகிறது.

3. மழை யென்றொரு பொருளுண்டு. ஆறு, குளம், எரி, முதலியவற்றி லுள்ள நீர் ஆவியாகப் பரிணமிப்பது. இதுவே குளிர்ந்த காற்றுப் படின் மழையாம்.

4. பனி, இது உஷ்ணமடைந்த ஆகாயம் குளிர்ந்து பல காரணங்களால் தன்

உஷ்ணத்தை வெளிவிட வானத்தில் இறுகிய ஆகாய பரிணமம். இது ஓரிடத்தில் நிலைத்திராமல் காற்று உலாவும் பக்கமே ஓடுவதும் மறைவதுமாயிருக்கும்.

**மேகாதன்** — ஒரு அரசன். சுமதியின் தந்தை. தேவி சுமங்கலை.

**மேகரோக தசாவஸ்தை நிதானம்** — சீழ் வயிற்றில் வேதனை, ஆயாஸம், வாயுப்பிரபலம், திரிதோஷகோபம், சுக்கிலநாசம், அதிதாகம், நீரில் மேகங்காணல், அரோசகத்துடன் தேகசாட்யம், கட்டிகள் எழும்பல், பேதி அதிகரித்தல், ஞாபகமாளல், இவை காணுதற்கு முன் ஆவாரைப் பஞ்சாங்கத்தீநீர், சிந்திற் சர்க்கரை, மேககுலாந்தக மாத்திரை, மேகபஞ்சாமிர்தம், பஞ்சானனரஸம் முதலிய சிகிச்சைகளைச் செய்யவேண்டும். இவைகளால் உண்டாம் கட்டிகள் மடக்குக்கட்டி, ஆமையோட்டுக் கட்டி, வலைக்கண்கட்டி, அதோமுகக்கட்டி, பேய்ச்சுரைக்காய்க் கட்டி, கடலைக்கட்டி, கடுகுகட்டி, புத்திராதிக்கக் கட்டி, நிலப்பூசனிக் கிழங்குகட்டி, வித்திரிதிக்கட்டி என்பனவாம். (ஜீவாட்.)

**மேகரோகம்** — கோதையர் கலவியை மிக விரும்புதலால் மூலத்திற் கனல் மிஞ்சி மேகஞ் சனித்துச் சிரம் வரையில் வெந்துருகித் தாதுகெட்டுத்தேக நரம்பெல்லாம் பலங் குறைய இந்த ரோகம் உண்டாகின்றது. இது திரிதோஷத்தால்பிறந்தது. மேகம் (20) வகை. அவை மதுமேகம், வசாமேகம், மச்சாமேகம், அஸ்திமேகம், மஞ்சிஷ்டிமேகம், சாரமேகம், அரித்ராமேகம், நீலமேகம், ரத்தமேகம் காளமேகம், பிஷ்டமேகம், இட்சுமேகம், சாந்திரமேகம், சிகிதாமேகம், லாலாமேகம், சீதமேகம், கைனர்மேகம், சுராமேகம், சுக்லமேகம், சலமேகம், ஆச்யகந்திமேகம், சுத்தமேகம், பிரமியமேகம், மாமிசசிராவிச விரணமேகம், அப்பியமேகம், பித்தபிரமியமேகம், சாந்திரமேகம், உத்தமமேகம், ஆதிக்கமேகம், தைத்தியமேகம். (ஜீவாட்.)

**மேகலம்** — நருமதையடுத்த தேசம்.

**மேகலன்** — விந்தியபர்வதத்திற்கு அருகிலிருந்த இருடி.

**மேகலை** — மேகாலா பாவதத்தின் சமீபத்திலுள்ள தேசம். (பார. பீஷ்.)

The country around the Mekala hills, (i.e.) the mount Anarakantaka, in which the river Narbuda has got its source ; hence the Narbuda is called Mekalakanyaka.

**மேகவாகனகற்பம்** — இக்கற்பத்தில் விஷ்ணு சிவமூர்த்தியை மேகவுருக்கொண்டு (௪00) வருஷந் தாங்கிப் படைப்புத் தொழிலடைந்து பிரமன் முதலியவரைப் படைத்தனர். (காஞ்சிப்புராணம்.)

**மேகவாகனன்** — 1. இவன் ஒரு அரசன். இவன் தலையில் ஒரு மாணிக்க மிருந்தது. அதனால் அற்புதமணி என்று பேர்பெற்றான்.

2. இந்திரனுக்கு ஒரு பெயர்.

3 சுரேந்திரகாந்த அரசன் (சூளா.)

**மேகனை** — கர்பக்னன் குமாரி. கர்ப்பிணிகள் உண்ட அன்னத்தை நீக்குவதுடன் வயிற்றில் புழுக்களை உண்டாக்குபவள்.

**மேகன்** — 1. ஒரு அரசன். சோதிடரைப் போல் வந்து மகோற்கடமூர்த்தியின் கழுத்தில் வஞ்சக முத்துமாலையை யிட்டு அதன் சுவாலையால் தானே இறந்தவன்.

2. இராவண தூதரில் ஒருவன்.

3. சண்முகன் சேநாவீரன்.

4. சூரபன்மன் சேநாவீரருள் ஒருவன்.

**மேகேந்திரம்** — மேகந்திரம். Mahendra hills in Ganjam Dt. பாசுராமருக்கு வாசஸ்தானம் (பார. வன.)

**மேடசங்கிரமபலன்** — சித்திரை மாதத்தில் சூரியன் பிரவேசித்தபோது உண்டாகும் பலன். பரணி முதலாக (௪) நாளும் புன்பயிராம். திருவாதிரை முதலாக (௪) நாளும் மிகு மழையாம்; மகமுதற் (௧0) நாளும் மழை அற்பமாதல் அல்லது சுழித்துப் பெய்தலாம்; பூராடமுதல் (௬) நாளும் சுபிக்ஷகாலமாம். மீனம், சிங்கம், தனுசு, மேடம், கன்னி, இடபம், இவை உதயமாக விஷுவையனம் வரில் அவ்வாண்டு மழை யதிகமாய்க் காலம் நன்றாம். மகரம், துலாம், கும்பம், உதயமாகில் சமமாம், கர்க்கடகம், மிதுனம், விருச்சிகம் உதயமாகில் மழைசுருங்கிக் காலங்கெடும்.(விதான.)

**மேதவழநீ**—ஒரு இருடி. இவர் குமாரியைப் பலிமிபிடிக்கத் திருநறையூரில் பெருமான் அவனைச் சபித்து இருடிக்கு அருள்புரிந்தனர்.

**மேதவர்** — சண்டாளனுக்கு வைதேகஸ்திரீயிடம் பிறந்தவர். இவருக்குப் பாண்டு சோபர்கர் எனவும் பெயர். உத்தியோகம் மூங்கில்வேலை.

மேதஸ் — ஒரு முனிவர். சுரதனுக்குத் தேவி மந்திரம் அருள்செய்தவர்

மேதாவன் — மூங்கில் முதலியவற்றால் கூடை, முறம், பாய், விசிறி, பெட்டி முதலியன கட்டிச் சீவிப்பவன்.

மேதா — தருமன் என்னும் மநுவின்தேவி. தக்ஷன் குமாரி.

மேதாகேதையர் — வசவர் மடத்தில் இருந்த சிவனடியவர். இவர் உயிர்நீங்குகையில் வசவர் பிரிவாற்றாது தாமும் தேகம் விட்டனர். இதனைக்கண்ட மடவாலமர்ச்சையர் சிவமூர்த்தியைத் தியானித்து இருவரையும் பிழைப்பித்தனர்.

மேதாதிதி — 1. பிரியவிரதனுக்குப் பெரிஹஷ்மதியிடம் பிறந்த குமாரன். பிலக்ஷத்தீவை யாண்டவன். (பாகவத.)

2. கண்ணுவர் குமாரர். இவர்க்கு ரிதேபு, விருக்குவா முதலிய பிராமணர் சனித்தனர்.

மேதாவி — 1. ஒருபிராமணச் சிறுவன். தந்தையைக் காலத்தைப்பற்றி வினயவன். (பார - சாந்.)

2. தந்தையிடம் பிரமத்தை யடைய உபாயங் கேட்டவன். (பார. சாந்.)

3. சுதையின் குமாரி.

4. இல்லறத்திலிருந்து நன்மையடைந்த ஒரு வேதியன்.

5. சுனேயன் குமாரன். இவன் குமாரன் நிருபஞ்சயன்.

மேதாவிகம் — காலஞ்சர பர்வதத்திற்கு அருகிலுள்ள ஒரு தீர்த்தம்.

மேதிக்கண்ணன் — வீரமாயேந்திரத்து வடகீழைக் கோபுரத்துவாயிற் காவலாளியான அசுரன்.

மேதிமாழகன் — சூரபதுமனுக்கு மந்திரி.

மேதினி — மதுகைடவரைக் காண்க.

மேதை — 1. ஒரு இருடி.

2. தக்ஷனுக்குப் பிரசூதியிடம் உதித்த குமாரி. இயமன் தேவி.

3. சிர்க்காரியின் குமாரன். சிர்க்காரியைக் காண்க.

மேதையதிதி — ஒரு ருஷி. அசங்கனைக் காண்க.

மேரு — 1. நிடதத்திற்கு வடக்கு (௯000) யோசனைக்கு அப்பால் உள்ள மகாபர்வதம். இதன் விஸ்தாரம் (௯௨00) யோசனை. இது தேவர்கள் இருக்கை. சிவமூர்த்தியால் ஒருகாலத்துத் தனுவாகத் தாங்கப் பெற்றது. பொன்னிறமுடையது. ஆயிரம் சிரங்களையுடையது. வாயுவால் மோத அசைவற்று இருந்தது. நவக்கிரகங்களாலும் மற்ற நக்ஷத்திரங்களாலும் நாடோறும் வலஞ்செய்யப் பெற்றது. குலகிரிகளால் சூழப்பெற்றது. வாயுவும் ஆதிசேடனும் மாறுகொண்டு முடியைத் தாக்கவும் காக்கவும் நின்றபோது வாயுவால் மூன்று சிகரங்களை இழக்கப்பெற்றது. சாபத்தினால் பருக்கைபோல வாரியெறியப் பெற்றது. கணேசர் கொம்பாற் பாரதம் எழுதப்பெற்றது. ஒரு காலத்து விந்தமலை இதனுடன் மாறுகொண்டு உயா அது அகத்தியரால் பூமியில் அழுந்தியது. இதைத் தெய்வ வடிவாகக் கூறுவர். உருவம் நான்கு சிரம், எண்டோள். இது உக்கிரகுமாரனால் அடியுண்டபொழுது, பாண்டியனுக்கு இவ்வுருவத்துடன் வெளிப்பட்டுப் பொன்னறை காட்டியது. பூமிக்கு இரிசு என்பர்.

2. நரப்பிரசாபதியின் தேவி.

3. ஆயதியின் தந்தை. தாதாவென்னும் பிருகு புத்திரனுக்கு மாமன்.

மேருசாவர்ணி — இமயமலையில் பாண்டவருக்குத் தருமம் உபதேசித்தவர். ஒரு மநுவாயிருக்கலாம்.

மேருதேவி — நாபியின் மனைவி.

மேருமந்தாபுராணம் — இது சிம்மசேந மகாராஜனும், இராமதத்தையும் செய்த தவத்தாற்பிறந்த சிம்மசந்திரன், பூரணசந்திரன் என்னும் குமாரரிருவரும், சத்திகோடன் என்னும் மந்திரி வசப்பட்டுத் தீமைசெய்து பல பிறவி பிறந்து பின் சுவர்க்கமடைந்து மீண்டும் பூமியிற்பிறந்து முத்திபெற்றதும் மந்திரி நரகமடைந்ததுமாகிய சரித்திரத்தைக் கூறுவதும், விமல தீர்த்தங்கருடைய கணதரர்களாகிய மேரு, மந்தரர் என்பவர்களின் சரிதங்களை விரித்துக் கூறுவதுமாகிய தமிழ்ச் சைநநூல். இந்நூலாசிரியர் வாமனாசாரியர்.

மேருமந்தரர் — உத்தாமதுரை நகரத்தில் அநந்தவீரியன் என்னும் அரசனுக்கு மேருமாலினி அமிர்தமாதி என்று இரண்டு தேவிகளிருந்தனர். அவர்களுக்கு முன்னமே முன்பவத்தில் ஆதித்யாபதேவன், தரணேந்திரனாக இருந்தவர்கள் மேருவென்றும், மந்தரனென்றும் பிறந்து விமலதீர்த்தங்கரால் சர்வசங்க பரித்யாகமடைந்து இராஜ்யம் விட்டுப் பர்வத சிகரமடைந்து நோற்று உலகாக்ரமடைந்தனர். மேருவின்

முன் ஜன்மங்கள், மதுரை, இராமதத்தை, ஸ்ரீதரை, காபிஷ்டதேவன், அரதனமாலை, அச்சுதகல்பதேவன், வீதபயன், ஆதித்யா பதேவன், மேரு, விதத்பாமேஷ்டி முதலியன. மந்தரன் முற்பிறப்பில், வாருணி, பூர்ணசந்திரன், தேவன், யசோஹா, தேவன், இரத்னயுதன், அச்சுத கல்ப தேவன், விபீஷணன், நாகன், ஸ்ரீதாமா, பிரம்மகல்பதேவன், ஜயந்தன், தரணேந்திரன், மந்தரன், பாமேஷ்டி என்பனவாம். (மேரு - மந் - புரா.)

**மேலைக்கடை** — ஒரூர்; இது சைனர்கள் ஏறிய கழுமரங்களின் மேலைக்கோடியாகிய இடமாம். (திருவிளையாடல்.)

**மேலையகத்தாழ்வான்** — நாதமுநிகளிடம் பண்ணுடன் பிரபந்தமோதிய ஸ்ரீ வைஷ்ணவர்.

**மேல்கோட்டை** — மைசூருக்கு அருகிலுள்ள பட்டணம். இவ்வூர் மலையில் விஷ்ணு ஆலயம் இருக்கிறது. இப்பொழுது மேல்கோட் (Melkote) என வழங்கும்.

**மேளக்காரர்** — இவர்கள் வாத்யம் வாசிப்பவர். இவர்கள் தமிழ் பேசுகிறவர்கள். இவர்கள் அம்பட்டரின் வேறுபட்டவர்கள்.

**மேனகை** — 1. காசிபருக்குச் சாபியிடம் பிறந்தவள்.

2. இவள் தெய்வமகளிர் எண்பதின் மருள் ஒருத்தி. குபேரனுக்குப் பணிபுரிபவள். (பெ. கள.)

3. விச்வாமித்திரன் தவததைக் கெடுத்து அவனுடன்கூடிச் சகுந்தலையைப் பெற்றவள்.

4. ஒருமுறை சாபத்தால் மானுருக் கொண்டு திரிகையில் வேடனால் துரத்துண்டு வேதாரண்யதீர்த்தம் படிந்து நல்லுருப்பெற்று விசுவாமித்திரரைக் கூட முயன்று அவரால் கிழவுருப்பெறச் சாபம் அடைந்து அத்தீர்த்தம் படிந்து தூய்மை பெற்றவள். (வேதாரண்யபுராணம், திருவாரூர்ப்புராணம்.)

5. விசுவாவசு என்னும் கந்தருவனைப் புணர்ந்து பிரமத்வரையைப்பெற்றுத் தூலகேசர் ஆச்சிரமத்தில் இட்டுச் சென்றவள்.

6. மேருவின் பெண்.

**மேனை** — 1. இமவான் தேவி. பார்வதியாரைப் புத்திரியாகப் பெற நோற்றவள்.

2. பஞ்சகன்னியரில் ஒருத்தி.

3. மைநாகத்தின் தாய்.

**மேன்மேலுயர்ச்சியணி** — அஃதாவது, மேன்மேலு மொன்றற் கொன்றுயர் குணத்தாலேனு மிழிகுணத்தாலேனு முயர்வாதலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் சாராலங்கார மென்பர். (குவல.)

**மேஷவிருஷணன்** — இந்திரன் அகலிகையைப் புணரக்கண்ட கௌதமமுனிவர் கோபத்தால் அவனது விருஷணம் அறுந்து விழச் சபிக்க அவ்வாறு அற்ற விருஷணத்திற்குப்பதில் மேஷத்தின் விருஷணத்தைத் தேவர் பொருத்தி வீர்யவந்தனாக்கினர். அதுமுதல் இப்பெயர் அவனுக்குண்டாயிற்று. (சிவமகாபுராணம்.)

## மை

**மைசூர் சமஸ்தானம்** — மைசூர் என்பது மஹிஷாசுரனுடைய நகரமாம், அதாவது எருமைத்தலையையுடைய ஒரு இராக்ஷதன் அங்குவந்து அந்நகரத்தின் குடிகளைவருத்தி வருகையில், அக்கஷ்டத்தைச் சகிக்க முடியாத குடிகளின் வேண்டுகோளைக் கருதி காளிகா தேவியானவள் சாமுண்டி அவதார மெடுத்துவந்து அந்த இராக்ஷதனைக் கொன்று குடிகளுடைய கஷ்டத்தை நீக்கியபடியால் அப்பட்டணத்திற்கு அந்த இராக்ஷதன் பெயராகிய மஹிஷாசுரன் பட்டணம் அல்லது மைசூர் என்று நாளதுவரையில் வழங்கி வருகிறார்கள். இப்போது மைசூர் இருக்கும் இடம் பூர்வத்தில் இராமாயணத்திற்கண்ட சுக்ரீவனுடைய சமஸ்தான மிருந்த இடமென்பது சிலர் கருத்து. கி. பி. மூன்றாம் நூற்றாண்டில். புத்தர்களும், பிறகு ஜயினரும், இங்குவந்து தம் தம் மதவிஷயமான கோயில்களைக் கட்டுவித்தார்களாம்.

**மைத்திரி** — தக்ஷனுக்குப் பிரசூதியிடம் உதித்த குமாரி. இயமன் தேவி.

**மைத்திரேயர்** — குசிலவர் குமாரர். இருடி பாராசர் மாணாக்கர். இவர் துரியோதனனுக்கு நீதிகூறத் துரியோதனன் மறுத்தமையால் கோபித்து வீமன் கதையால் சாகச் சபித்தனர். வியாசருக்கு நண்பர். விதுரருக்குத் தத்துவம் உபதேசித்தவர்.

**மைத்திரேயன்** — வைதிரேயனுக்கு அயோகவஸ்திரீயிடத்து உதித்தவன். இவனுக்குக் குடும்பாண்டி எனவும் பெயர். இவனுக்கு விடியற்காலம் மணி அடித்துக்கொண்டு அனைவரையும் துதிப்பது தொழில். (மநு.)

**மைநாகம்** — இமவான் புத்திரனாகிய பர்வதம். இவன் புத்திரன் கிரௌஞ்சன். The Sevalik hills at the foot of the Himalayas between the Beas and the Ganges.

**மைந்தன்** — கிட்கிந்தையில் இருந்த வாநரன். அச்வநிதேவராய்ப் பிறந்தவன். சுக்கிரீவன் சேநாபதியரில் ஒருவன்.

**மைந்நாகம்** — ஒருபர்வதம். இமயத்திற்கும் மேருவிற்கும் பிறந்த குமாரன். இந்திரனுக்குப் பயந்து வாயுவின் சகாயத்தால் கடலில் ஒளித்து அநுமன் இலங்கைமேற் செல்லுகையில் ஒரு வியாஜமாகத் தடுக்க எண்ணி எதிரில் இருந்து அவனால் தலைகீழாகத் தள்ளப்பட்டுப் பிராமண உருக்கொண்டு (தனக்குக் கடலிற் செல்ல உதவியது வாயு புத்திரன் ஆதலால் செய்ந்நன்றி மறவாது) எதிரில்நின்று தங்க இடம்தந்து மீளுகையிலும் தன்னிடம் தங்கிப்போக வரம்வேண்டிப் பெற்றது.

**மைந்நாகன்** — மேனைபுத்திரன். பித்ருவம்ச விவரணம் காண்க.

**மையல்** — இது பாண்டி மண்டலத்திலுள்ள தோரூர். இது மாவனுக்குரியது. (புற.நா.)

**மையோடக் கோவனார்** — இவர் கடைச்சங்கப்புலவர் காலத்தவர். இவர்க்குக் கோவனார் என்பது இயற்பெயராக இருக்கலாம். இவர் தாம்பாடிய பரிபாடற் செய்யுளில் ஓடத்தைப் புகழ்ந்திருத்தல் பற்றி இப்பெயர் வந்திருத்தல் கூடும் என எண்ணப்படுகிறது. (பரிபாடல்.)

## மொ

**மொண்டி** — ஒருவித முரட்டுச்சாதிப் பிச்சைக்காரர். இவர்கள் லண்டன், கல்லடி சித்தன், கல்லடி மங்கன் எனப்பெயர் பெறுவர். இவர்கள் வீடுகளிலும் கடைகளிலும் சென்று பிக்ஷைகேட்டுப் பிக்ஷை கொடாவிட்டால் கல்லாலும் ஆயுதத்தாலும் தங்களை வருத்திக்கொண்டு பிக்ஷைகொள்வர். இவர்கள் நாடோடிகள். (தர்ஸ்டன்.)

**மொய்யார் பொய்கை** — திருப்பெருந்துறையிலுள்ளதோர் தீர்த்தம். (திருவிளையாடல்.)

**மொழி**—(க) மெய்கூறல், புகழ்கூறல், பழிகூறல்.

**மொழிமாற்று** — ஏற்றபொருளுக்கு இசைந்த பயனிலைகளை மாற்றி யோாடியுள் வழங்கல். (தென்.)

## மோ

**மோகநீயம்** — உஅ. 1. மித்யாத்வம், 2. மயக்மித்யாத்வம், 3. ஸம்யகத்வம், 4. அநந்தாநுபந்திகுரோதம், 5. அநந்தாநுபந்திமானம், 6. அநந்தாநுபந்திமாயை, 7. அநந்தாநுபந்திலோபம், 8. அப்பிரத்தியாக்ஞானகுரோதம், 9. அப்பிரதியாக்ஞானமானம், 10. அப்பிரதியாக்ஞானமாயை, 11. அப்பிரதியாக்ஞானலோபம், 12. பிரதியாக்ஞானகுரோதம், 13. பிரத்தியக்ஞானம், 14. பிரத்யக்ஞானமாயை, 15. பிரத்யக்ஞானலோபம், 16. சஞ்சுலனகுரோதம், 17. சஞ்சுலனமானம், 18. சஞ்சுலனமாயை, 19. சஞ்சுலனலோபம், 20. ஹாஸ்யை, 21. ரதி, 22. அரதி, 23. சோகம், 24. பயம், 25. சுகுப்சை, 26. ஸ்திரிவேதம், 27. புருஷவேதம், 28. நபும்ஸகவேதம். (சி-ப.)

**மோகமானக்கடலார்** — கடைச்சங்க மருவிய தமிழ்ப்புலவர்.

**மோகவதி** — ரோகமவந்தன் பெண்.

**மோகவந்தன்** — நிருகன் வம்சத்தரசன்.

**மோகனாங்கி** — களமேகருக்குரிய தாசி. இவள் சரிதையைப்பற்றிக் காளமேகரைக் காண்க.

**மோகினி** — 1. இவ்வுருவத்தை ஜகன்மோகினியவதாரம் எனவும் கூறுவர். அமிர்தமதனகாலத்தில் தேவாசுரர் இருவரும் அமிர்தம் கடைந்தனர். அசுரர் அமிர்தம் உண்ணில் தேவர்க்கு நீங்காத் துன்பம் உண்டாம் என நினைத்த விஷ்ணுமூர்த்தி அவர்களுக்கு அமிர்த விருப்பொழியத் தாம் மோகினி யெனும் பெண்ணுருக்கொண்டு அமிர்தம் தேவர்க்குப் பங்கிடுகையில், அசுரர் இவ்வுருவத்தைக்கண்டு மயங்கியிருந்தனர். அசுரர்களுள் இராகு கேதுக்கள் இருவரும் வேற்றுருக்கொண்டு அமுதம் புசிக்கத் தேவர்கூட்டத்தில் இருந்தனர். அவர்களை இன்னவர் என்று அறிந்த மோகினி சட்டுவத்தால் புடைத்தனள்.

2. திருமகள் தன்னினும் அழகுள்ளார் இலர் என்று இறுமாந்திருந்த காலத்து அவ்விறுமாப்பைக் கெடுக்க எடுத்த விஷ்ணுவின் திருக்கோலம்.

3. தாருகவனத்து இருடிகளை மயக்க அழகிய பெண்ணுருக்கொண்டு சென்ற விஷ்ணுவின் திருவுரு.

4. பஸ்மாசுரன் பொருட்டு அவனை மயக்கிச் சிவமூர்த்தியைக்கூடி அரிகர புத்திரனைப்பெற்ற விஷ்ணுவின் திருவுரு.

5. மமகாரன் தேவி.

6. திதியின் குமாரி.

**மோகூர்** — பழையனென்னும் குறுநில மன்னனூர்.

**மோசி** — இடைச்சங்கத்துப் புலவருள் ஒருவர்.

**மோசி கண்ணத்தனுர்** — மோசி என்பது ஒரூர். திருப்புவனந்தாலுக்காவில் மோசிப்பட்டி யெனவும், பரமக்குடி தாலுக்காவில் மோசுகுடி யெனவும், இரண்டு ஊர்காணப்படுகின்றன. இவ்வூர் மோசிகீரனுர், மோசி சாத்தனுர், முடமோசியார் என்று பேருடைய பலவித்வான்களைத் தன்னிடத்தே தோற்றுவித்து அளவிலாப் புகழைப்பெற்றது. இப்புலவர் நெய்தல் வளத்தைச் சிறப்பித்துப் பாடி, தலைவன் தலைவி பிரியிற் காமந்தாங்காது இறந்துபடுவ துண்மை யென்பதைக் காரணத்தோடு விளக்கிக் காட்டி யிருக்கிறுர்.

**மோசிகரையனுர்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களுள் ஒருவர். இவரியற்பெயர் கரையனுர். ஊர் மோசி. இவர் அகத்தில் நெய்தலைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். (அக - உ௬0.)

**மோசிகீரனுர்** — 1. கடைச்சங்கத்துப் புலவருள் ஒருவர். இவர் சங்கறுக்கும் குலத்தவராய் இருக்கலாம். சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேர லிரும்பொறையைப் பாடியவர். (திருவள்ளுவமாலை).

2. இவர் மோசியென்னும் ஊரிலே தோன்றிய கீரனென்றும் இயற்பெயருடையவர். ஒரோவிடத்துப் படுமாற்றூர் மோசிகீரனெனவுங் கூறப்படுவார். படுமாற்றூர் மதுரையைச் சார்ந்ததோரூர். சிவகங்கைத் தாலுக்காவில் படமாத்தூர் என்றொரு ஊர் காணப்படுகின்றது. படுமாற்றூரில் வந்து தங்கிய மோசிகீரனுரெனக் கொள்க. ஒரு காலத்துச் சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேர லிரும்பொறையிடத்துப் பரிசில்பெறச் சென்றிருந்த இவர் அவ னரண்மனையிலிருந்து நீராட்டக் கொண்டுபோயிருந்த வீரமுரசம் மீண்டுவருமுன் அம்முரசு வைத்திருந்த கட்டிலிலேறிப் படுத்து உறங்குவாராயினர். அதனை அறிந்த அரசன் தமிழருமை யறிந்தோனுதலின் இவரை யாதோருறுபாடுஞ் செய்யாது இவர்தாமே தூங்கியெழுமளவும் அருகினின்று சாமரம் வீசிக்கொண்டிருந்தனன். இவர் விழித்தெழுந்து துணுக்குற்றஞ்சி இயன்மொழிபாடி அரசனை உவப்பித்தார். புறம் ௫0. மற்றொருபொழுது கொண்கானம் (கொங்கணம்) கிழானிடஞ்சென்று பரிசில்வேண்டி இவர் கூறிய பரிசிற்றுறையும், பாணுற்றுப்படையும், இயன்மொழியும், நற்சுவை கொடாநிற்கும். அரசாது கோட்பாடு இத்தன்மையதாயிருக்கற்பாலதென்று இவர் கூறிய பாடல் கவனிக்கத்தக்கது. இவர் கூறிய குறைநயப்பு எனையோர் பாடல் போன்று நுண்ணுணர்வினேரை மகிழ்விக்கும். அகம் ௩௯௨. பாதவர் கோமான் அதலையென்பவனது மலையையும், அண்டிரனது பொதிய மலையையும் பாராட்டிக் கூறியுள்ளார். இவர் நெய்தலையும், குறிஞ்சியையும் சிறப்பித்துக் கூறியவர். முகம்புகு கிளவி பாடியவரி லிவரு மொருவர். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், குறுந்தொகையில் மூன்றும், அகத்தில் ஒன்றும், புறத்தில் ஐந்தும், திருவள்ளுவமாலையிலொன்றுமாகப் பதினொரு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**மோசிகொற்றன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவரது இயற்பெயர் கொற்றன். ஊர் மோசி. பாண்டி நாட்டிலுள்ளது. (குறு - ௩௭௭.)

**மோசிசாத்தனுர்** — ஒரு தமிழ்ப் புலவர். புறம்-272-ம் செய்யுளைப் பாடியவர். (புற. நா.)

**மோச்சி** — ஒரு ஜாதிவகை. மாராத்தி பேசுவர். இவர்கள் முன்னுளில் இராஜதானி உத்தியோக சாலைகளில் பேனுசீவல், மை செய்தல், பென்சில் சீவல் முதலாயவேலைகள் செய்வர்.

**மோதாகிரி**—அங்கதேசத்தின் கிழக்கிலுள்ள ஒரு பர்வதம். Monghir - Mudgagiri or Mudgallgiri in Bhagalpur District.

**மோதாசனுர்** — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவர் தலைவன் தலைவியின் கூந்தலையும் தலைவி தலைவன் சிகையைப் பிடித்தலுமாகிய சிறுபோரை

பாலைத்திணையாகக் குறுந்தொகை (உஉக) ஆவது செய்யுளிற் கூறினர்.

**மோதாதர்**—வேததரிசனன் மாணாக்கனாகிய ஒரு இருடி.

**மோநக்கற்றுறையனார்** —,கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர்.

**மோளிகைமாரையர்**—இவர் விறகு விற்றுச் சிவித்து அதனால் வரும்பொருளால் சிவனடியவரை உபசரித்து வந்தார். இவரது நிலையறிந்த வசவதேவர் இவரறியாது பொன்னைப் பெட்டகத்தில் மறைத்து மாரையர் வீட்டில் அன்னம் வேண்டிச் சென்று இட்டுவந்தனர். மாரையர் நடந்தவை யறிந்து தாம் கொண்டுசென்ற விறகின்மீது நீர் தெளிக்க, அவையனைத்தும் பொன்னாயின. அவற்றைச் சிவனடியவர்க்குக் கொடுத்தனர். இப்பொன்பெற்ற அடியவர் வசவருக்குக்கூற வசவர் இவரிடம் வந்து அபராத க்ஷமைவேண்டிச் சென்றனர்.

## மௌ

**மௌகூர்த்திகர்** — தருமன் முகூர்த்தை யென்னும் தேவகணத்திடம் பெற்ற தேவகூட்டத்தினர். இவர்கள் முகூர்த்தகாலாதி தேவதைகள். ஆன்மாக்கள் முகூர்த்தங்களில் செய்யப்படும் தொழிலுக்கேற்ற பலன் தருபவர்.

**மௌத்கல்யர்** — 1. நளாயினியின் புருடனாகிய இருடி.

2. சாகல்யர் மாணாக்கர்.

**மௌநேயர்** — காசிபன் முனியென்பவள் வயிற்றிற்பெற்ற கந்தருவர்.

**மௌர்வியர்** — சந்திரகுப்த வம்சத்தவர்.

**மௌற்கல்யர்**—ஒரு மகருஷி. துர்வாசருக்கு அன்னமிட்டவர். அதிதி பூசைசெய்தவர். தேவவுலகம் விரும்பாது மறுத்தவர்.

**மௌனதேசிகர்** — தாயுமானவர்க்கு ஞானசாரியர்.

**மௌனநீகவுடையார்** — ஒரு குலாலன். அக்கிநோயால் இறந்த தன் குமாரனை யாகபலத்தால் எழுப்பி அந்த யாகத்திற்கு வந்த காளிதேவியிடம் தம் குலத்தவர் இனி இந்நோய் கொண்டார்க்குச் செம்மண்ணினால் சிங்கமுத்திரை யெழுதினால் அந்த நோய் நீங்க வரம்பெற்றவன்.

## ய

**யக்கர்** — தேவ சாதியரில் ஒரு வகுப்பினர். யாழ்வாசிப்போர்.

**யக்யசீலன்**—சிவஸ்கந்தன் குமாரன். இவன் குமாரன் விசயன்.

**யசஸ்** — இவர் கலியுகமுடிவில் கற்கியைக் குமாரராகப் பெறப்போகும் பிராமணர்.

**யசசுதி** — ருஷப தீர்த்தங்கரருக்குத் தேவி.

**யசமானர்** — ஆன்மாவை அதிட்டித்திருக்கும் சிவமூர்த்தம். இவரது சத்தி சர்வபூததமனி.

**யசுர்வேதம்** — இரண்டாவது வேதம். இது (கOக) சாகைகளுடையது. இதற்குள்ள உபநிஷதங்கள், கடவல்லி, தைத்ரீயம், பிரமம், கைவல்லியம், சுவேதாச்வதரம், கர்ப்பம், நாராயணம், அமிர்தவிந்து, அமிர்தநாதம், காலாக்னி ருத்ரம், க்ஷுரிகை, சர்வசாரம், சுகரகஸ்யம், தேசோவிந்து, தியானவிந்து, பிரமவித்யை, யோகதத்வம், தக்ஷிணாமூர்த்தி, ஸ்கந்தம், சாரீரசம், யோகசிகை, ஏகாக்ஷரம், அட்சியம், அவதூதம், காம், உருத்திர விருதயம், யோககுண்டலினி, பஞ்சப்பிரமம், பிராணாக்னி கோத்திரம், வராகம், கலிசந்தரணம், சரஸ்வதி, ஈசாவாஸ்யம், பிருகதாரண்யம், சாபாலம், அம்சம், பரம அம்சம், சுபாலம், மந்திரிகை, நிராலம்பம, திரிசிகை, மண்டலம், அத்துவய தாரகம், பைங்கலம், பிட்சு, துரியாதீதம், அத்தியாத்துமம், தாராசாரம், யாஞ்ஞவல்க்கியம், காட்யாயனி, முத்திகம் என்பன.

**யசோதரகாவ்யம்** — சங்கமருவிய சிறு காவியங்களில் ஒன்று. இது ஐந்து சருக்கங்களடங்கிய (கூஉO) செய்யுள்களைக் கொண்டது. இயற்றியவர் சைநமுனிவர்களில் ஒருவர்.

**யசோதரன்** — ஔதய தேயத்தில் இராசமாபுரமென்ற பட்டணத்தில் மாரிதத்தன் என்னும் அரசன் ஒருவன் இருந்தனன். அவன் வசந்தகாலத்துச் சோலைக்கண் செல்ல நகரமாக்கள் இக்காலத்துத் தேவி பூசை செய்ய வேண்டும், அல்லாவிடின் நமக்குத் தீதுவரும் என்றனர். அதைக் கேட்ட அரசன், தேவி சந்நிதி சென்று எமது துன்பநீக்குக என்றுவேண்டிப் பலியின் பொருட்டு மயில், கோழி, பன்றி,

ஆடு எருமை முதலியன விரட்டையாகக் கொண்டு வருக வென்று சொல்லிப்பின் சண்டகருமனை நோக்கி, மக்களிரட்டை கொண்டுவரக் கட்டளையிட்டனன். இதைக் கேட்ட சண்டகருமன் மக்களிரட்டைகளைத் தேட நகரத்துள் சென்றனன். அந்த இடத்தில் சுதத்தாசாரி யென்போர் மாதவத்தோர் சூழவிருக்கையில் அபயருசி, அபயமதி யென்பாரும், அச்சுதத்தனை வணங்க, அவர் இவ்விருவரையும் நோக்கி 'நீங்கள் பசியால் வருந்தினீர் ; நும்பசி தீர்ந்துவருக' என்றனர். அவ்வாறு பிக்ஷுக்களாய் வருவோரைச் சண்டகருமன் கண்டு, கொண்டுபோக, தங்கையாகிய அபயமதி கலங்க, அபயருசி யாக்கைநிலையின்மை, ஊழ்வலி, தாங்கள் சுதத்தரிடம் கேட்ட பழம்பிறப்பு முதலிய வுணர்த்தி, யவளது துன்பத்தை நீக்கி ஞானமுணர்த்த, இருவரும் மனத்திடங்கொண்டு நின்றனர். இவ்வாறு நின்றவர்களைச் சண்டகருமன் காளிகோயிற்கு முன்விட, மாரிதத்தன் இவர்களைக் காளிக்குப் பலியூட்ட வாள்கைக்கொள்ள, இவ்விருவரும் மனநிலை சற்றும் தளராதவராய் நிற்கக்கண்ட அரசனும் மற்றவரும் இவர்களை நோக்கி இவ்வரசனீடு வாழ்க என வாழ்த்தக்கூறினர். இதனைக் கேட்ட அவ்விருவரும் புன்முறுவல் செய்து, "மறந்தும் பிறவுயிர் கொல்லாது அறங்கொள் சிந்தையனு யுயிர்களிடத் தன்புபாரித்துப் பிறவிநீக்கும் அறமேற்கொண்டு புகழுடன் உலகத்தை யாண்டு நீடு வாழ்க" என்றனர். இவ்வாறு கூறி நகைத்து நின்றவர்களை அரசன் கண்டு துன்பம் வரவும் அஞ்சாது நகைத்ததற்குக் காரணம் கூறுக என, இருவரும் 'வருவதுவரின் அஞ்சுதலிற் பயனின்று, நாங்கள் முற்பிறப்பில் செய்த பாவத்தா விவ்வாறு பல பிறவிகொண்டோம்; இப்போது மன்னன் வாழ்க எனின் எப்பிறவியுறுமோ என்று அஞ்சினே' மென, அரசன் கேட்டு, 'உமது முற்பிறவி கூறுக' என்று வாளைத் தரையிலிட்டுக் கேட்க, அம்மாரிதத்தனை நோக்கிக் கூறுவாராயினர். 'அவந்தி நாட்டின் கண்ணுள்ள உஞ்சயனிபுரத்தில் அசோகன் என்னும் அரசன் சந்திரமதி யென்பாளை மணந்து வாழ்ந்திருக்கையில் அவனுக்கு யசோதரன் என்னும் ஒரு புத்திரன் பிறந்தனன். அவ்யசோதரன் பருவமடைந்து அமுதமதியை மணந்து யசோமதி என்னும் ஒரு குமாரனைப் பெற்றனன். இவ்வாறிருக்கையில் ஒருநாள் அசோகன் தனக்கு நரைவந்தது கண்டு இளமை முதலிய நிலையாமை யுணர்ந்து யசோதரனுக்கு ராஜ்ய மளித்துத் தவமேற்கொண்டனன். அரசடைந்த யசோதரன் பெரும்போகத்தில் மூழ்கி ஒருநாள் தன் மனைவியுடன் துயிலுகையில், மனைவி யானைக்கூடத்திலிருந்துவந்த ஒரு வீணையொலி கேட்டு அவ்வீணைவாசித்தவன்மீது ஆசைகொண்டு விடிந்ததும் அவன்மீது மனங்கொண்டிருத்தலைக் கண்டதோழிவாட்டத்தா லுணர்ந்து கேட்க, அரசி தன்னெண்ணங்கூற, தோழி கேட்டு நற்புத்தி கூறவுங் கேளாதவளாய்த் தூது அனுப்ப, குணவதியாகிய தோழி யவனிலைகண்டு வந்து அரசியை நோக்கி 'நீ ஆசைகொண்டோன் அங்கப் பழுதுள்ள அட்டகோணன், மகா விகாரமுள்ளவன், அவனை நீ காணின் விகாரமுறுவாய் என்று எண்ணி உன்னினைவை அவனுக்குக் கூறாது வந்தே' னென்னக் கேட்ட அமுதமதி, 'எவ்வகையாயினுமாக, என் மனம் அவனிடஞ் சென்றது ; அதனை முடி'யென்று சொல்லித் தனியிடம் வருவித்து அவனோடு கள்ளப்புணர்ச்சி செய்து வருநாட்களில், இவள் அரசனிடம் பண்டுபோலிலாமையைக் குறிப்பாலறிந்த அரசன், ஒருநாள் பொய்யுறக்கங் கொண்டு அவள் சோரனிடம் போகையில் இவளுணராவண்ணம் பின்சென்று காண்போமென்று கரந்திருக்கையில், அமுதமதி வரக்கண்ட அட்டபங்கன், அவள் வேளை தாழ்த்து வந்ததுபற்றிக் கூந்தலைப்பற்றி யீர்த்து மோதியலைக்கச் சிறிதுவருந்தி, மீண்டும் அவள் வேண்டக் களித்தது கண்டு, அரசன், வாளை யெடுத்து நோக்கி மீண்டும் இவ்வாள் வீரர்களை வெட்டத் தகுந்த வாள், இது ஒரு பெண்ணிடத்தும், பெண் தன்மையுள்ளவ னிடத்துமோ பயனுறுவதென்று உறையிலிட்டு, அவளுக்கு முன் அணையில் வந்து படுத்துறங்கி யெழுந்து பழமைபோல் கொலுவிருக்க, தேவியும் அருகில் வந்து இருந்தனள். அரசன் ஒருநாள் விளையாட்டாகத் தன் கையிலிருந்த நீலமலரால் அவள்மேல் வீச, அரசி சோர்ந்து மண்மீது வீழ்ந்து அருகிருந்தோர் சீதோபசாரஞ் செய்ய எழுந்தனள். இதனைக்கண்ட அரசனிவளுயிர்

மலரினால் ஏகலுற்றதென்று அசதியாடி மனத்தில் அரசைத் துறக்க எண்ணங் கொண்டு தாயை வணங்கித் தான் கண்ட தீய கனவினை தெரிவிக்க, தாய் காளிக்குப் பலியிடப் பணிக்க, அவ்வாறே ஐப்பசி மதியத்தில் அட்டமி வெள்ளிக்கிழமையில் உயிர்க்கொலைக் குடம்படாது மாவால் கோழியொன்று செய்து காளிக்குப் பலியிட, அது அரசன்முன் கூவிக்கொண்டு விழ, அரசன் வாளை நெகிழ்த்து வருந்திச் சினதீக்ஷை பெற்றுத் துறவடையுஞ் செய்தியைத் தாய்க்கு அறிவிக்க, இதை யுணர்ந்த அரசன் மனைவி தானும் துறவு பூண்பதாய் மாயஞ்செய்து அரசனுக்கும் அரசன் தாய்க்கும் விருந்திட்டு விஷம் வைத்துக் கொலைபுரிந்து, தன் மகனுக்கு மகுடஞ் சூட்டினாள். இவ்விளைவுகட் கெல்லாம் பூர்வகர்மம் காரணமென்று அபயருசி மாரிதத்தனுக் கறிவித்து அந்த யசோதரனும் அவன் தாய் சந்திரமதியும் பல பிறவியடைந்த விதத்தைக் கூறத் தொடங்கினன். முதலில் யசோதரன் விந்தமலையில் ஒருமயிலின் வயிற்றில் முட்டையாயிருக்கையில் ஒரு வேடனால் மயில் கொல்லப்பட, அதின் வயிற்றிலிருந்த முட்டையைக் கோழியிடம் வைத்துக் குஞ்சாக்கி மனைவியிட மளித்தனன். தாயாகிய சந்திரமதி அங்கரின் சேரியில் நாயாயினள். மயிலும் நாயும் வளர்ந்தபின் அரசனுக்கு அளிக்கப்பட்டு வருகையில் யசோதரனாகிய மயில், தன் மனைவி யட்டபங்கனுடன் முயங்குதல் கண்டு அச்சாரன் கண்ணைக் குத்தி யொழித்தது. அதனால் அமுதமதி முனிந்து கல்லால் மயிலை யெறிய நாய்ப்பிறப்பு உற்ற தாய், மயிலைக் கௌவ அமுதமதி யதனை நாய் பெய் பலகையால் வீச அதுவும் இறந்தது. இரண்டாவது மன்னன் முள்ளம்பன்றியாகச் சந்திரமதி நாகமாயினள். மூன்றாவதுமன்னன் மீனாய், சந்திரமதி முதலையாய்ப் பின் ஆடாயினள். அரசன் அந்த ஆட்டின் வயிற்றில் ஆண் குட்டியாய்ப் பிறந்து தாயைப் புணரக் கண்ட ஒருவனால் கொல்லப்பட்டுத் தாய் வயிற்றில் தாதுவாய் இருக்கையில் வேட்டைக்குச்சென்ற அரசனால் தாய் கொல்லப்பட அவ்வாட்டின் வயிற்றி லிருந்த குட்டியைப் புலையன் அரசன் கட்டளைப்படி கொண்டுசென்று வளர்த்து வந்தனன். ஒருநாள் அரசன் வேட்டைக்குச்சென்றெறிந்த மிருகங்களில் எருமையைக் காளிக்குப் பலியிட, அந்தணர் இவ்வூன் ஆதபத்தி னுலர்ந்ததாதலால் சிரார்த்தஞ் செய்தலாகாதென்று விலக்கித் தகரின் தசை நன்றென, அரசன், நான் புலையனிடம் வளர்க்கவிட்ட ஆட்டின் கடாவைத் தருக என அவ்வாறே கொண்டுவர, ஆடு அரசன் முதலியவரை நோக்கித் தன் பழம்பிறப்புணர்ந்து இவன் என் மகன், இவை யென் பொருள், இது என் பட்டணம் என்று பலவாறாகச் சிந்தித்தொழிந்து அரசன் மாளிகையில் மீண்டும் ஆடாகப் பிறந்தது. சந்திரமதி ஒருமையாய் வணிகர்க்குப் பொதி சுமந்து சென்று உஞ்சயினி யாற்றிடை யிருக்கையில் அரசன் குதிரைவர, அதனுடன் போர் புரிந்து குதிரையைக் கொல்ல, அறிந்த அரசன், அதனைக் கொலை செய்விக்கக் கண்ட அமுதமதி அதன் தசைதின்று ஆற்றாது இவ்விட மிருக்கும் ஆட்டின் தசை தின்னின் அவா அடங்குமென, அவ்வாறே தாதியர் பிடித்துவர, ஆடு தன் வினையினை யெண்ணிக் கொலை செய்யப்பட்டுப் பின் அங்ககாத்துத் தாயும் குமாரனும் பறைச்சேரியில் சேவலாயினர். இச்சேவல்களைக் கண்ட அரசன் சண்டகருமனை யவற்றை வளர்க்கச் செய்தனன். ஒருநாள் யசோமதி தன் மனைவியுடன் உய்யானஞ் சென்று அகம்பர முனிவரைக் கண்டு அவர் கூறிய அறங்கேட்கையில் அவர் உன் தந்தையும் பாட்டியுங் கோழியுருக்கொண்டு கூண்டிலிருப்பவர் எனக் கூறக் கேட்டு வருந்துகையில், கூட்டிலிருந்து கோழிகள் கேட்டு முனிவர் கூறிய வறமுணர்ந்து கூவுகையில், அரசனால் எய்யப்பட்ட கணைபட்டு வீழ்ந்து யசோமதிக்கும் புட்பாவலிக்கும் இரட்டைப் பிள்ளைகளாகப்பிறந்து சுதத்த முனிவரிடம் அறங்கேட்டுத் துறவடைந்து முத்திபெற்றனரென, அபயமதி அபயருசி கூறக் கேட்ட மாரிதத்தன் துறவடைந்து மாதவ னோற்றுத் துறவியாயினன்.

யசோதை — 1. இவள் இதற்கு முன் வசுமதி, அல்லது தாரா என்று பேருடையவள். கண்ணனை வளர்த்த தாய். ஒருநாள் கண்ணனை மடியில் வைத்துக்கொண்டு பாலூட்டுகையில், கண்ணன் கொட்டாவி விட, கண்ணன் வாயில் சகல அண்டங்களையுந் தன்னையுங் கண்டு மயங்கினவள். அவ்வகை மற்றொருநாள் கண்ணன் மண்ணுண்ண வாய் திறக்கக் கூறி, அவ்வாயில்

அவ்வகை கண்டு மயங்கினவள். இவள் கண்ணனை உரலில் கட்ட எண்ணிப் பல தாம்புகள் கொண்டு கட்டி அவை போதா திருக்க வருந்தி நின்றவள்.

2. அஸ்திகன் தேவி.

3. மரீச மானசகன்னி. பிதுருக்களைக் காண்க.

**யசோவதி** — 1. ஈசானமூர்த்தியின் பட்டணம்.

2. இரப்பிய அரசனது மந்திரியின் குமாரி. ஏகாவலியுடன் தாமரைத்தடாகத்தில் நீர் விளையாடவந்து காலகேது என்னும் அரக்கனால் பிடிபட்டுத் தன் சரிதையும் ஏகாவலி ஹைஹயனை மணக்க இருப்பதும் ஹைஹயனுக்குக் கூறினவள். பின் ஹைஹயன் நீ அந்தப் பாதாளம்விட்டு இவ்விடம் வந்ததெவ்வாறெனத் 'தேவிமந்திரத்தால் எனக்கு வழியொன்று தோன்றிற்று; அதனாலிங்குவந்து தேவி சொற்படி உன்னைக் கண்டே' னென்று கூறி அவனை அழைத்துப் பாதாளஞ்சென்று காலகேதுவை வெல்வித்தவள். (தே-பா.)

**யஞ்ஞக்கன்** — விஷ்ணுவாற் கொல்லப்பட்ட அரக்கன்.

**யஞ்ஞகுமாரன்** — காசிராஜனுக்கு யாகத்திற் பிறந்தவன். இவன் சரிதையைப்பற்றி வீதவவ்யனைக் காண்க.

**யஞ்ஞகோபன்**—மால்யவந்தன் குமாரனாகிய அரக்கன்.

**யஞ்ஞதத்தன்** — தசரதன் வேட்டைமேற் சென்று இருளில் யானையென எண்ணிக் கொன்ற அந்தகராகிய தாய்தந்தையரின் குமாரன்.

**யஞ்ஞமூர்த்தி** — 1. விஷ்ணுவின் அம்சம். ருசிப்பிரசாபதிக்கு ஆவுதியிடத்துப் பிறந்த குமாரர். இவர் தங்கையாகிய தக்ஷணையை மணம்புணர்ந்தவர்.

2. ஒரு ஏகதண்ட சந்நியாசி உடையவரிடத்தில் (கஎ) நாள் வாதிட்டு (கஅ) ஆம் நாள் தோற்றுப் பஞ்சசமஸ்காரம் பெற்று அருளாளப்பெருமாள் எம்பெருமானார் எனப் பின் பெயர்பெற்றவர்.

**யஞ்ஞம்** — தேவப்பிரீதியாய் இஷ்டசித்தியின் பொருட்டுச் செய்யப்படும் யாகம். இது நித்யமாய்ச் செய்யப்படுவதும் விசேஷமாய்ச் செய்யப்படுவதும் என இருவிதப்படும். அவற்றுள் நித்தியமாய்ச் செய்யப்படுவது தேவயஞ்ஞம், பிதுர்யஞ்ஞம், பூதயஞ்ஞம், பிரமயஞ்ஞம், மானுஷயஞ்ஞம் எனப்படும். விசேஷமாய்ச் செய்யப்படுவது யாகம். அதனை யாகத்திற் கூறுவோம். தேவயக்ஞம் என்பது அக்னியாக்னி முதலிய தேவர்களைப் பூசிப்பது. பிதுர்யக்ஞம் என்பது பிதுர்க்களைப் பூசிப்பது. பூதயக்ஞம் பூதங்களுக்குப் பலி போடுதல். பிரமயக்ஞ மென்பது வேத மோதுகை. மாநுஷயக்ஞம் அதிதிகளைப் பூசித்தல்.

**யஞ்ஞவராகமூர்த்தி** — வராகமூர்த்திக்கு ஒரு பெயர்.

**யஞ்ஞவர்க்கர்**—ஒரு மகருஷி. இரணிய நாபனிடத்து யோக முபதேசிக்கப் பெற்றவர்.

**யஞ்ஞவற்கலமுனி**— தருமருக்கு அசுவமேதத்தில் யாகஞ் செய்வித்தவர். தேவி மயித்திரி.

**யஞ்ஞவிருக்ஷங்களாவன** — அரசு, அத்தி, இரளி, ஆஷாடி, கருங்காலி, ஆல், வன்னி, வில்வம், மா, விளா, அசனம், காட்டுவாழை. இவற்றால் சுருக்கு சுருவம் முதலிய யஞ்ஞசாதனங்கள் செய்யப்படும்.

**யதி** — 1. நகுஷன் குமாரன். இவன் ஞானியாயினன்.

2. பிரமன் புத்திரருளொருவன். இவனைப் பிரமன் தவத்தில் பிரயத்தனஞ் செய்வித்தும், சர்வ கர்மத்திலும் சம்மதனாகவுஞ் செய்வித்ததால் இப்பெயர் பெற்றனன்.

**யதிராஜமகாநச்கர்**—கிடாம்பி யாச்சானுக்கு ஒரு திருநாமம்.

**யதிராஜர்** — 1. இளையாழ்வார் துரியாச்சிரமம்வகிக்கையில் பெருமா ளவருக்கிட்ட பெயர்.

2. உடையவர்க்கு ஒருபெயர்.

**யதீந்திரசரணன்** — கூரத்தாழ்வானுக்கொரு பெயர்.

**யதீந்திரப்பிரணவர்** — மணவாள மாமுனிகளுக் கொருபெயர்.

**யது** — 1. ஒரு இராஜ வம்சம்.

2. ஒரு அரசன். தத்தாத்திரேயரால் ஞான உபதேசம் பெற்றவன்.

3. யயாதியின் ஜ்யேஷ்ட புத்திரன். இவன் குமாரர் சகஸ்திரஜித், குரோஷ்டு, நளன், ரிபு என்பவர்.

**யதுகிரி**—திருநாராயணபுரத்துக்குப் பழைய பெயர்.

**யதுநாதன்** — கர்னன்.

**யந்தனுக்கியன்** — ஓர் அரசன்.

**யந்திரங்கள்**—இது பெருங்காரியங்களை எளிதில் முடிக்க அறிவு வல்லவர்களால் செய்யப்படும் கருவிகள். அச்சுயந்திரம், புத்தகம் மடிக்கும் யந்திரம், புத்தகம் தைக்கும் யந்திரம், நீராவி யந்திரம், அரிசி குத்தும் யந்திரம், கப்பலோட்டும் யந்திரம், இரும் படிக்கும் யந்திரம், இரும்பு காய்ச்சும் யந்திரம், ஆகாயக்கப்பல் யந்திரம் எனப் பலவாம்.

**யந்திரம்** — மந்திரத்தில் தேவதைகள் வயப்படும் வகை அவ்வக் கர்மங்களுக்குரிய சக்கரங்களில் அந்தத் தேவதா மந்திரங்களை யடக்கிச் செபித்து ஆவாகன, ஸ்தாபன, சந்நிதான, சந்நிரோதன, ஒளத்துவாசனங்களுடன் பஞ்சசுத்தி செய்து எந்தக் கன்மத்துக்கு எந்தச் சக்கரம், எந்த மந்திரம், எந்தத் தந்திரம், எந்த பீஜம், என்பவைகளை ஆசாரியன் மூலமாயறிந்து பூஜிக்கின் அந்தத் தெய்வங்கள் முன்னின்று வேண்டிய பலன்களைத் தரும். அந்தச் சக்கரங்களாவன சிதம்பர சக்கரம், வாலை, திரிபுரை, புவனை சக்கரங்கள், வயிரவ சக்கரம், விநாயக, வீரபத்ர, கந்த, காளி, துர்கி சக்கரங்கள், சூர்ய, சந்திர, நவக்கிரக சக்கரங்கள், கால சக்கரம், சர்வதோபத்ர சக்கரம், விஷ்ணு சக்கரம், நரசிம்ம சக்கரம், இராம சக்கரம், அனும சக்கரம், லக்ஷ்மி சக்கரம், கோட சக்கரம், காத சக்கரம், நர சக்கரம், ஜயசக்கரம், ஸேவா சக்கரம், நக்ஷத்ர சக்கரம், சநி சக்கரம், லிங்க யந்திரம், ஹம்ஸ யந்திரம், வியாஹ்ருதி யந்திரம், துரீய காயத்ரி யந்திரம் முதலியன.

**யமகண்டம்**—1. (கசு) அடி நீள அகலமுள்ள குழி ஒன்று வெட்டி அக்குழியின் நான்கு மூலைகளினும் இருப்புக் கம்பங்கள் நாட்டி அதின்மேல் (உ) இருப்புச் சட்டங்கள் பரப்பி நடுவினும் சட்ட மிட்டு நடுச்சட்டத்தில் உறிகட்டிக் குழியில் புளியந்தணவிட்டு இருப்புக் கொப்பரையில் அரக்கு, மெழுகு, குங்கிலியம், கந்தகம், சாம்பிராணி நிரப்பி, அவை கொதித்திருக்கையில் யானையைப் பாகருடன் நான்கு மூலையில் நிறுத்திப் பின் புறத்தில் வளையத்திற் சங்கிலிகோத்து எட்டுக்கத்திகளை யிடுப்பில் நாலும், கழுத்தில் நாலுங் கட்டிக்கொண்டு வளையத்திற் பொருத்திச் சங்கிலிகளை யானைத் துதிக்கையிற் கொடுத்து வைத்துக் கொப்பரைக்கு நடுவாகத்தொங்கு முறியில் புலவனிருந்து பல வித்வான்கள் கொடுத்த சமுசையைப் பாடுவது. அவ்வகை பாடானாயின் யானையைத் தூண்ட, யானை சங்கிலிகளை யிழுக்கப் புலவனுட லறுப்புண்டு கொதிக்குந் தீயில் விழுந்திறப்பன்; இதுவே யமகண்டம்.

2. குளிகாதிதோஷம் காண்க.

**யமகண்டன்** — வியாழன் குமாரன்.

**யமசந்திரன்** — (சூ) விசாலன் குமாரன்.

**யமதக்னி** — சமதக்னி முனிவரைக் காண்க.

**யமதூதர்** — ஔதும்பரன், சண்டாமிருகன், சம்பரன், சார்த்தூலன் என்பவர்கள்.

**யமபுரம்** — தென் திசைக்கும் நிருதிதிசைக்கும் நடுவில் யமபுரி வச்சிரமயமாயும், தேவாசுரர் முதலியோரால் சிதைக்கத் தக்கதாயும், இரா நின்றது. அப்பட்டணத்து நாற்பண் சதுரமாய் நூறு யோசனை விஸ்தீரணம் உள்ளதாயும், இருபத்தைந்து யோசனை உயரம் உள்ளதாயும், அநேக சாளரங்கள் உள்ளதாயும், கொடிகளாலும் முத்துக் கோவைகளாலும், தோரணங்களாலும், அலங்கரிக்கப் பட்டதாயும், ஸ்வர்ணமயமாயும், தர்ம ராஜனுடைய அரண்மனை இருக்கின்றது. அந்த அரண்மனையுள் பத்து யோசனை அகலநீளம் உள்ளதாயும், அநேக ஆயிரம் வைரத்தூண்கள் உள்ளதாயும், மந்தமாருதம் வீசுவதாயும், எப்போதும் ஆடல் பாடல்களால் நிரம்பியதாயும், ஒரு திவ்யமண்டபம் இருக்கும். அம்மண்டபத்தில் தூதர்கள் கரம் குவித்து ஓர்புறம் நிற்கவும், ரோகங்கள் எல்லாம் கோர ரூபத்தோடு அவ்வாறே ஒரு புடை நிற்கவும், கண்டவர் அஞ்சும்படியான ரூபத்தோடும், உவப்போடும் யமன் வீற்றிருக்கின்றனன். அவன் வீற்றிருக்கும் அம்மண்டபத்தின் பக்கலில் இருபத்தைந்து யோசனை அகல நீளமும், பத்து யோசனை உயரமும் உள்ளதாய்ப் பலவித அலங்காரம் உள்ளதாய்ச் சித்திரகுப்தனுடைய அரண்மனை இருக்கிறது. அம்மனையில் சித்திரகுப்தன் இருந்து ஜீவர்களின் பாப புண்ணியங்களைச் சிறிதும் விடாமல் எழுதுகிறான். அவன் எழுதுவதில் சிறிதும் பிசகு உண்டாகாது. அச்சித்திர குப்தனுடைய அரண்மனைக்குக் கீழ்ப் புறத்தில் சுரத்திற்கும், தென்பக்கத்தில் சூலையோடு வைசூரிக்கும், மேற்பக்கத்தில் காலபாசத்தோடு அஜீர்ணத்திற்கும், அருசிக்கும், வடபக்கத்தில் வயிற்றுவலிக்கும், வடகிழக்கில் தலைவலிக்கும், தென்கிழக்கில் மயக்

கத்திற்கும், தென் மேற்கில் அதிசாரத்திற்கும், வடமேற்கில் சன்னிக்கும், இடங்கள் இருக்கின்றன. இந்த ரோகங்கள் எல்லாம் யமனுடைய கட்டளையை எதிர் பார்த்துக்கொண்டு அந்த அரண்மனையில் வசிக்கின்றன.

**யமம்** — தரும நூல்களுள் ஒன்று. யமனல் கூறப்பட்டது.

**யமளே** — காசிராஜன் பெண், சராசந்தன் தேவி.

**யமன்** — 1. விவசுவானுக்கு (சூரியன்) (சமுக்கை) சாயா தேவியிடம் பிறந்த குமாரன். இவன் இறைவனுணையால் உயிர்களை அவர்கள் செய்த புண்ணிய பாபங்களுக் கேற்பக் காலமுடிவில் சுவர்க்க நரகங்களிற் செலுத்துங் காலக் கடவுள். இவனது பட்டணம் சையமனி; வாகனம் எருமைக்கடா; ஆயுதங்கள் தண்டம், பாசம், குடாரம், சுரிகை; தேவி சாமளே அல்லது கன்னி; தூதர் ஔதும்பரன், சண்டா மிருகன், சம்பரன், சார்த்தூலன்.

2. மார்க்கண்டன் பொருட்டுச் சிவமூர்த்தியால் சிக்ஷிக்கப்பட்டவன்.

3. சிவேதன் பொருட்டும் அவ்வகை தண்டனை யடைந்தவன்.

4. பிரமன் சொற்படி இராவணன் திக்குவிஜயத்தில் காலதண்ட மவன் மேல் விடாதிருந்தவன்.

5. சுவாகாவையும அநலா சுரனையுங் காண்க.

6. தன்னிடம கருணையிலாத சாயா தேவியை யுதைத்துக் காலில் புழுச்சொரியச் சாபமடைந்து தந்தைபா லறிவித்து ஒழித்தவன்.

7. விருத்தை யென்னும் உசத்தியர் பெண் பொருட்டுத் தவமியற்றிய குச்சகரிடத்து வந்து அவளுயிரைத் தந்து மீண்டவன்.

8. அக்னிமுகனுடன் யுத்தஞ் செய்திறந்த வீரன்பொருட்டு வீரவாகு எழுதி விட்ட திருமுகத்தின் கட்டளைப்படி கொண்டுவந்து விட்டு மீண்டவன்.

9. தன் உடன்பிறந்தாளாகிய யமுனையிடங் காதல்கொண்டு அவளைப் புணரச் செல்கையில் அவளால் நியாயவாயிலாகத் தடையுண் டடங்கியவன். (இருக்குவேதம்.) மாண்டு முனிவர் சாபத்தால் சூத்திரனய்க் கோகர்ணத்தில் சிவபூசை செய்து நிர்மல மடைந்தவன். (சிவானே.)

10. இவன் ஆயுள் முடிந்த ஜீவர்களின் உயிரைக் கவரும்விதம் யாண்டுங் கால தூதர் மூவரை யேவுகிறவன்.

**யமாதித்தன்** — யமன் காசியில் சூரியப்பிரதிட்டை செய்து பூசித்ததால் அச்சூரியனுக்கு வந்த பெயர்.

**யமி** — யமுனையைக் காண்க.

**யமுனை** — சூரியனுக்குச் சுவாகா தேவியிடம் பிறந்தகுமாரி, யமியெனவும் பெயர். யமன் தங்கை. இவள் ஒரு தீர்த்தமாயினள். இவளுக்கு மற்றொரு பெயர் காளிந்தி. இவளுக்கு ஆமை வாகனம். ஒரு கரத்தில் கருநெய்தலும் மற்றக் கரத்தில் பூர்ண கும்பமும் இருக்கும்.

**யமுனைத் துறைவர்** — 1. யமுனைத் துறையிலுள்ள கோவர்த்தன புரத்துப் பெருமாள்.

2. ஈசுவர முநிகள் குமாரர். நாதமுநிகளுக்குப் பவுத்திரர். ஆளவந்தாருக்கு ஒரு பெயர்.

**யயாதி** — 1. (சங்.) நகுஷன் குமாரர்களில் ஒருவன். தாய் பிரியம்வதை; தெய்வயானையைக் கிணற்றினின்று தூக்கிச் சுக்கிரன் சொற்படி அவளை மணந்தவன். இவன் விடபன்மன் மகளாகிய சன்மிஷ்டையைக் கூடி மூன்று புத்திரர்களைப் பெற்றவன். தேவயானியிடத்து அன்பிலாமை யறிந்த சுக்கிரனல் மூப்படையச் சாபம்பெற்றவன். தெய்வயானியின் குமாரரிருவரையுந் தன் மூப்பைப் பெற்றுக்கொண்டு அவர்கள் இளமையைத் தரக்கேட்டு அவர்கள் மறுக்கக் கண்டு அவர்களைக் கிராதராகச் சபித்தவன். சன்மிஷ்டையின் மூத்த குமாரனகிய பூருவிற்கு மூப்புக் கொடுத்தவன். சன்மிட்டையின் மற்ற இரண்டு குமாரரையும் மீன் விற்பவனகவுங் கள் விற்பவனகவுஞ் சபித்தவன். பிரமனிடத்து எந்த வுலகமுங் காண விமானம் பெற்று இந்திரலோகஞ் சென்று தன்னைப் புகழ்ந்ததால் சுவர்க்கத்திலிருந்து பூமிக்குத் தள்ளப்பட்டு வழியில் அஷ்டகனைக்கண்டு நான் யயாதி, புண்யந்தேய்தலினல் மேலிருந்து பூமிக்குத் தள்ளப்பட்டேன் என்று அந்தரத்திருந்து அஷ்டகனிடம் புண்ய பாபவரலாறு கேட்டவன். தேவயானிக்கு ஆட்டின் கதைகூறி இல்லமறுத்தவன்; இவன் இராசதானி காண்டவப்பிரத்தம்.

2. ஒரு அரசன். இவன் குமாரி (சுகன்னி - சௌனகர் கண்ணைக் குத்தினவள்.) இவனுக்குச் சையாதி யெனவும் பெயர்

இவன் குமாரி முனிவர்கண்ணைக் குத்திய தால் சேனைகளுக்குக் கண்ணீங்க அரசன் தன் குமாரியை முனிவருக்கு மணஞ்செய் வித்து அதை நீக்கிக்கொண்டவன். யாத வர்க்குச் சிங்காதன மில்லாமற் போகச் சபித்தவன்.

**யவக்கிரீதன்** — இவன் ஒரு ருஷி. பராவசு யாகஞ்செய்விக்க நீங்கியகாலத்து அவனது மனைவியைப் புணர்ந்ததறிந்து பராவசின் தந்தையாகிய ரைப்பியருஷி, மருகியைத் துண்டித்து ஓமஞ்செய்து ஒரு அரக்கி யைப் பிறப்பித்து யவக்கிரீவனைக் கொல் வித்தனன். இதனையறிந்த யவக்கிரீவன் தந்தை, புதல்வனைக்கொன்றவன் ரைப்பிய னென அறிந்து,'நீ புத்திரனால் உயிரிழக்க' எனச் சபித்தனன். இதுநிற்க ஒருநாள் தீர்த்தக்கரைக்கு மான்றோலைப் போர்த் துச்சென்ற ரைப்பியமுனிவனைப் பராவசு மானென்று தன் தந்தையை யறியாது கொன்றதைத் தன் தம்பியாகிய பரத்வாச ருக்குக் கூறப் பரத்வாசர், 'உன்னாலாகாது; உனக்குவந்த பிரமகத்தியை நான் தவஞ் செய்து நீக்குகிறே'னென்று தவஞ்செய்து பிரமகத்தியை நீக்கி வீட்டிற்கு வருகை யில், பராவசு தந்தையைக் கொன்று பிரம ஹத்திசெய்தவன்; வீட்டில் வரக்கூடாது என்று துரத்த, பரத்வாசர் தேவர்களிடம் முறையிட்டிருக்க, தேவர்கள் ரைப்பிய முனிவரும் பரத்வாச முனிவரும் உயிர் பெற அருள்செய்தனர். (சிவ புராணம்.)

**யவதத்தன்** — ஸ்ரீதத்தன் பிதா.

**யவனம்** — மிலேச்ச தேசம். (அரேபியா.)

**யவனர்** — 1. அரேபியா நாட்டு மிலேச்சர்.

2. யயாதியின் மகனான துர்வசுமரபி னர். ஒழுக்கங்குன்றி இவ்விடம் சேர்ந்து இப்பெயர் பெற்றனர்.

3. தமிழ் நாட்டில் முன் காலத்தில் தங்கி வியாபாரஞ் செய்து வந்த மேற் றிசை வியாபாரிகளாகிய கிரேக்கரைக் குறிக்கும். இப்பதம் அவர்கள் பாஷை யில் ஐயோனிஸ் என்பது. இவர்கள் முசிறி, வேய்கரை முதலிய துறைமுகங் களில் சாராயம், பித்தளை, ஈயம், கண் ணடி முதலியவற்றை விற்று மிளகு, வெற் றிலை, தந்தம், முதலியன வாங்கிச்செல்வர். இவர்களைத் தமிழ் நாட்டரசர் தங்களுக் குப் போர்வீரராகவு மமைத்துக்கொண்ட னர். இவர்கள் நாட்டு நாணயங்களும் தமிழ் நாட்டில் வழங்கிவந்தன.

4. இவர்கள் தமிழகத்திற்றங்கிய மேற் றிசை வியாபாரிகள். இவர்கள் கிரேக்கர், உரோமசாதியினர்.

**யவீநரன்** — 1. (பூரு.) திவிமீடன் குமாரன்.

2. முத்கலன் தம்பி.

**யவுகந்திரன்** — 1. யுகந்திரன் இரண்டாம் பிறவியில் பெற்ற பெயர்.

2. ஒரு வித்யை.

**யக்ஷகன்** — இந்திரன் தூதன்.

**யக்ஷிணி** — 1. இயக்கர் பெண்கள் இருதுக் களில் மணம் பெறப் பூமியில் சஞ்சரிப் போர்.

2. கட்கம், கேடகம் முதலிய ஆயுதங் களை யுடையவளாய் விகார வுருவுடன் கபாலம், சிரகோசம் கொண்டிருப்பவள்.

**யக்ஷர்** — காசிபருக்குச் சுரசையிடம் பிறந்த குமாரர்.

## யா

**யாககேது** — இராவணனது (20) கோடி வீரருக்குத் தலைவன். இலக்குமணரால் கொல்லப்பட்டவன்.

**யாகங்கள்** — இவை பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுஷம் என்பன; இவற்றுள், வேதம்ஓதல் பிரமயாகம். ஓமம்வளர்த்தல் தெய்வயாகம். பலியீதல் பூதயாகம். தர்ப் பணம்செய்தல் பிதுர்யாகம். இரப்போர்க் களித்தல் மனுஷயாகம். இவை வேதங்க ளிலும் புராணங்களிலும் கூறிய அக்னி கார்யங்களாம். இவற்றின் குண்ட மண் டல மந்திராதி கிரியைகள் ஆங்காங்கு வழக்கங்குறைந்து சிதைந்தும் பிறழ்ந்தும கிடத்தலின் அவைகளின் கிரியைகளையும் குண்ட மண்டல வேதிகைகளையும் எழு தாது பெயர் மாத்திரம் எழுதுகிறேன். (க) அக்னிஷ்டோமம், (உ) அத்தியக்னிஷ் டோமம், (ங) உக்தியம், (ச) சோடசீ, (ரு) வாசபேயம், (சு) அதிராத்ரம், (எ) அப்தோரியாமம், (அ) அக்னியாதேயம், (கூ) அக்னிஹோத்ரம், (௰) தரிசபூர்ண மாசம், (௰க) சாதுர்மாஸ்யம், (கஉ) நிரூட டசுபந்தம், (கங) ஆக்கிரயணம், (கச) சௌத்திராமணி, (கரு) அஷ்டகை, (கசு) பார்வணம், (கஎ) சிராத்தம், (கஅ) சிரா வணி, (கக) அக்ரசாயணி, (உ0) சைத்திரீ, (உக) ஆச்வயுசீ, (உஉ) விசுவசித, (உங) ஆதானம், (உச) நாசிகேதசயனம், (உரு) காடகசயனம், (உசு) ஆருண கேதுகசய

னம், (உஎ) கருடசயனம், (உஅ) பௌண்டரீகம், (உக) சத்திரயாகம், (௩0) சாவித்ர சயனம்.

**யாகசத்துரு** — இராவணன் மந்திரியரில் ஒருவன்.

**யாகசேநன்** — சிகண்டிக்குத் தந்தை. பாஞ்சாலராசன் பாரதமுதற்போரில் கலிங்க ராஜனுடன் போர்புரிந்தவன்.

**யாகவிருக்ஷங்கள்**—8,10,12 விதம். அவை வில்வம், ஆல், வன்னி, கருங்காலி, மா, நறுமுருக்கை, அத்தி, பலாசம், சந்தனம், வேங்கை, அரசு, வாகை. (சைவ - பூஷ.)

**யாக்கைக்குற்றம்**—(கஅ) பசி, தாகம், பயம், வெகுளி, உவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம், கையறவு.

**யாக்ஞவராகமூர்த்தி** — விஷ்ணுமூர்த்தியின் அவதாரவிசேஷம். இவர் பூமியைக் கோட்டினிற்றாங்கி யக்ஞமே திருமேனியாகக் கொண்டவர்.

**யாக்ஞவல்கியம்** — 1. ஒரு தர்மசாஸ்திரம். இதற்கு விக்ஞானேசுவரயோகியால் செய்யப்பட்ட மிதாக்ஷரம் என்னும் விருத்தியுண்டு.

2. உபநிஷத்துக்களில் ஒன்று.

**யாக்ஞவல்கியர்** — வைசம்பாயனர் மாணாக்கர். இவர் தேவி மயித்திரேயி. இவரது மற்றொரு தேவி காத்தியாயனி. இவர் துறவு பூணவேண்டித் தமது இருப்பை மனைவியர்க்குப் பாகித்துக் கொடுக்கையில் மைத்திரேயி சாவில்லாத பொருள்வேண்டுமென அவள்பொருட்டு ஞானமுபதேசித்தவர். இவர் ஆசிரியருக்குற்ற பிரமகத்தியை அவர் மாணாக்கருமேற்க மாணாக்கர் அதனை யவர்கள் பெறார், அதனை நானே ஏற்றுக் கொள்கிறே னென, ஆசிரியர் கோபித்து நீ அவர்களை அவமதித்ததனால் கொண்ட வேதத்தைவிட்டு நீங்கென, அவர் வேதத்தைக் கக்கிவிட்டுப்போக, அதனை வேததெய்வம், கக்கியவேதத்தைத் தித்திரிப்பக்ஷியுருக்கொண்டு உண்டது. ஆகையால் அது தைத்திரியம் எனப்பட்டது. பின் யாக்ஞவல்கியர் குதிரைவடிவுகொண்டு சூரியனிடத் ததனைக் கற்றுக் கண்ணுவர் மத்தியந்தனர் முதலியோர்க்குக் கூறினர். இவர் தருமபுத்திரரது இராஜசூயத்திலிருந்தவர்.

**யாசன்** — ஒரு முனிவன். துருபதனுக்குப் புத்திரகாமேட்டி செய்வித்தவன்.

**யாசன்யாகாள்** — தேவபூசைசெய்வோர்.

**யாதவநிகண்டு** — ஒரு சமஸ்கிருத நிகண்டு.

**யாதவப்பிரகாசர்** — பூர்வம் மதுராந்தகத்து ஏரிக் கரையிலுள்ள ஒரு புற்றில் உடும்பாயிருந்து பாகவதருண்ட சேடத்தைக் கிரகித்தமையால் மறுபிறப்பில் யாதவப்பிரகாசனென்னும் வேதியனாய்ப் பிறந்து சகல சாஸ்திரத்திலும் வல்லமைபெற்று இளையாழ்வாருக்கு ஆசிரியனாய் அவரிடமுள்ள சாத்திரப்பயிற்சியால் பொறாமைகொண்டு தீர்த்தயாத்திரையில் கொல்ல எண்ணி யழைத்துச் சென்று வஞ்சித்து மீண்டும் அவரைக் காஞ்சியிற்கண்டு ஆழ்வாரது வரவைக்கேட்டு மருவி அரசகுமாரனைப் பிடித்திருந்த பிரம்மரக்ஷசைப் போக்க வலியற்றுத் தன் முன்பிறப்புப் பிரம்மரக்ஷஸாலுணர்ந்து இளையாழ்வாரால் அதை யோட்டுவித்துத் தாயின்சொற்படி இளையாழ்வாரிடம் பஞ்சசமஸ்காரம் பெற்றுக் கோவிந்தஜீயரெனப் பெயர்பெற்றவர்.

**யாதவமகாராஜா** — தொண்டை நாட்டில் நாராயணபுரத்தை அரசாண்ட சிவபத்திமான். இவன் அரசாளுகையில் ஒருநாள் சிவமூர்த்தி விடசங்கம வுருக்கொண்டு தெருவில் வந்தனர். இவ்வரசனுக்குப் பரிகலன்திருத்தும் பெண் இவரது விடசங்கமவடிவுகண்டு தன் வீட்டிற்கழைத்துச் சென்று உணவுமுதலியன அளித்துவைத் திருக்கையில், அரசனுக்குரிய மணியை மறந்தனள். அரசன் தன் பூசைமுடித்துப் பரிகலம் திருத்துவாளைக் காணாது கோபித்து ஏவலாளரையேவிப் பிடித்துவரக் கட்டளையிட்டனன். அவ்வகை அவளை ஏவலாளர் பிடித்துவர அரசன் அப்பெண்ணின் கூந்தலைக் களையக் கட்டளையிட்டனன். அப்பெண் கூந்தலையிழந்து வீடுசென்று நடந்தவைகளை விடசங்கமரிடங் கூறச் சங்கமர் தமதுகரத்தால் அவள் சிரத்தைத்தடவினர். அவளுக்குப் பழமைபோல் கூந்தல் வளர்ந்தது. இவள் வளர்ந்த கூந்தலுடன் அரசன் முன்போக, அரசன் செய்தியறிந்து சங்கமரைப்பணிந்து அவர் கட்டளைப்படி திருக்காளத்தி திருப்பணிசெய்தவன்.

**யாதவ மதம்** — இது யாதவப்பிரகாசனால் நியமிக்கப்பட்டது. இவன் பிரமமே சித் அசித் ஈச்வானகப் பரிணமித் திருக்கிறதென்பன். பேத ஞானமே சம்சாரமென்

பன். இச்சம்சாரத்தா லுண்டாம் பேத ஞானம், சத் கர்மத்தால் கெட்டு உண்டாம் அபேத ஞானத்தால் பிரமமாவன் என்பன்.

**யாதவர்** — இவர்கள் யது வம்சத்தில் பிறந்த வர்கள். இந்த வம்சத்தில் பல அரசர்கள் பிரபலம்பெற்றிருந்தனர். அவர்களில் யது வின் முதற் ... மாரனுகிய சகஸ்திரசித்தி யடமிருந்து ...கய வம்ச முண்டாயிற்று. இவர்களுக்கு மாகிஷ்மதி பட்டணம். யது வின் இரண்டாவது புத்திரன் குரோஷ்டு. இவன் வம்சத்திற் பிரபலமாயிருந்த வரசன் விதர்ப்பன், சியாமகன், சசிபிந்து. யதுவின் இரண்டாங் குமாரனது வம்சத்தவ னுகிய சாத்வதனிட மிருந்து போஜ வம்சமும், அந்தக வம்சமும், விருஷ்ணி வம்சமும் உண்டாயின. அந்தகவம்சத்தவன் கிருஷ் ணன். சாத்தகி விருஷ்ணி வம்சத்தவன். இவர்கள் இன்னும் விருஷ்ணிகர், போஜர், அந்தகர், தாசார்ஹர், சாத்வதர், மாதவர், அற்புதர், மாதுரர், மிதற்சனர், சூரசேனர், தகுரர், குந்தியர் எனப் பல விதப்படுவர். இவர்கள் ஒணுை மிருந்த நிருகமகாராஜ னைக் கண்டு தூக்க முடியாது கண்ண னுக்கு அறிவித்துச் சாப நீக்குவித்தவர். இவர்கள் ஒரு நாள் பிண்டாரக க்ஷேத்தி ரத்தை யடைந்து அவ்விட மிருந்த இருடி களை எமாற்றச் சாம்பனைக் கருப்பிணி போல் வேஷமிட்டு அந்த இருடிகளை இவள் வயிற்றி லிருப்பது ஆணே பெண் ணேவென்று பரிகசிக்க, இருஷிகள் உணர்ந்து, இவள் வயிற்றி லிருப்பது ஆணுமன்று, பெண்ணுமன்று, உங்கள் குலத்தைக் கருவறுப்பதாகிய ஓர் இருப் புலக்கை யென்றனர். அவ்வகைச் சாபம் பெற்ற மீண்ட பின், சாம்பன் வயிற்றில் இருப்புலக்கை யொன்று பிறந்தது. அத னைக் கண்ணனுக் கறிவிக்கக் கண்ணன் அதனை யராவிக் கடலில் விடுக வென் றனன். அவ்வகை செய்ய அவ்வராவுத லுக்கு அகப்படாமல் ஒரு துண்டு கடலில் விழுந்தது. அவ்வரப் பொடிகள் கடற் கரையில் சம்பங்கோரைகளாக முளைத்தன. முன் அராவலுக்கு அகப்படாது கடலி டைப்பட்ட இருப்புத்துண்டை மீனென்று விழுங்கியது. அம்மீன் வேட னொருவ னிடம் அகப்பட்டது. அதை அவன் சேதிக் கையில் வயிற்றி லிருப்புத் துண்டைக் கண்டு அதனை அம்பி னுனியில் இட்டு வைத்தனன். இத்துண்டு கண்ணனுக்கு இறுதி விளைத்தது. இவ்வகைத் தாங்கள் இருப் புலக்கையை யராவி விட்டோம் என்று களிப்புட னிருக்கையில் ஒரு கால் கடற்கரைக்கு விளையாடச் சென்று தம்மில் ஒருவர்க்கொருவர் கலகம் விளைத்து ஆயுதங் கள் முறிந்து வேறு ஆயுதங்க ளில்லா மையால் அருகிருந்த சம்பங்கோரைகளைப் பிடுங்கி அடித்துக்கொண்டு மாண்டனர்.

**யாதனுசரீரம்**—யமபுரத்தில் உயிர்கள் துன்ப மனுபவிக்கப் பெறும் தேகம்.

**யாதன்** — சதிகோத்ரன் குமாரன் : புட்கரத் தீவை யாண்டவன்.

**யாத்திரைக்கு நாட்கள்** — (வாரங்கள்) திங் கள்-புதன்-வியாழம் வெள்ளி, (திதிகள்) துவிதியை-திரிதியை - பஞ்சமி - ஸப்தமி- தசமி-திரயோதசி, (நட்சத்திரங்கள்) அஸ் வனி - மிருகசீரிடம் - புனர்பூசம் - பூசம் - அஸ்தம்-அநுஷம் - சிராவணம் - அவிட்டம் ரேவதி இவை உத்தமம். ரோகிணி-உத்தி ரம் - உத்திரட்டாதி இவைமத்திமம். கா ணங்களில் பத்திரவாகாணம் கூடாது. லக் கினங்கள் விருஷபம் - மிதுனம் - கடகம் - சிங்கம் - துலாம் - தநுசு - மகரம் - மீனம் இவைசுபம். யாத்திரைகு முக்கியமாய் யோகினி வாரசூலை பார்க்கவேண்டும்.

மேல்விவரித்த எல்லா விஷயங்களையும் சரியாய்ப்பார்க்கும் பக்ஷத்தில் முகூர்த்தங் கள் கிடைப்பன அரிதாய்விடும். ஆதலால் அவைகளின் பலாபலன்களையும் அனுச ரிக்கவேண்டும்

எல்லாச் சுபங்களுக்கும் மாசத்தியாஜ்யம் அல்லது கரிநாள், தாராபலன், சந்திர பலன் பார்க்கவேண்டும்.

**காலற்ற நாள். உடலற்ற நாள். தலை யற்ற நாள்.**

"காலற்றன வுடலற்றன தலையற்றன நாளிற், கோலக்குய மடவார் தம்மைக் கூடின் மலடாவார், மாலுக்கொரு மனை மாளிகை கோலினது பாழாம், ஞாலத்த வர் வழிபோகினு நலமெய்திடா ரவமே" கார்த்திகை. உத்திரம். உத்திராடம். மிரு கசிரம். சித்திரை. அவிட்டம். புனர்பூசம். விசாகம். பூரட்டாதியான. இவ்வொன் பதநாளும் புணர்ச்சிக்கும், மனை முகூர்த் தத்திற்கும், யாத்திரைக்கும் ஆகாவாம்.

**யாப்பருங்கலக்காரிகை** — அமுதசாகரிய யற்றிய செய்யுளிலக்கணம். இது கட்ட ளைக்கலித்துறையா னுயது.

**யாப்பருங்கலம்** — இது குணசாகரர் இயற்றியது. இது நூற்பாவகவல் எனப்படுஞ் சூத்திரயாப்பில் அமைந்து யாப்பிலக்கணத்தை விளக்கமுற வுணர்த்துவது. யாப்பருங்கலக் காரிகைக்கு முதனூலாயுள்ளது.

**யாப்யாயனி** — சிவசூரியனுக்கு வடக்கிலமருஞ் சத்தி.

**யாமளேந்திரர்** — இசைத் தமிழ் நூலாகிய இந்திரகாளிய நூலாசிரியர்.

**யாமளை** — உமை.

**யாமாள்** — யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷிணையிடம் பிறந்த (கஉ) குமாரர். இவர்கள் மகா பலசாலிகள்.

**யாமியம்** — யமபுரிக்குச் செல்லும் வழியில் உள்ள பட்டணம். இதில் புண்ணியபத்திரையென்னும் நதியும், ஒரு ஆலமரமும் இருக்கின்றன. இது பிரேதக் கூட்டங்கள் தங்கியிருக்கு மிடமுமாம். இங்கு ஆன்மா இறந்த முப்பதாநாள் தங்கிச் சிரமபரிகாரம் செய்துபோவன். இரண்டா மாசிக பிண்டத்தை ஆன்மா ஈண்டுப் புசிப்பன்.

**யாமினி** — காசிபன் தேவி. தக்ஷன் குமாரி. சலபதங்களைப் பெற்றவள்.

**யாமுனர்** — யமுனைத்துறைவருக்கு நாதமுனிகள் கட்டளையால் மணக்கால்நம்பி யிட்ட பெயர்.

**யாவலி** — இராமமூர்த்தியைச் சிவபூசை செய்ய ஏவிய இருடி. (வேதாரண்ய-புரா.)

**யாழி** — தக்ஷன்குமாரி. தருமப்பிரசாபதியின் தேவி.

**யாழ்** — இது நான்குவகைப்படும். அவை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பன. இவற்றில் பேரியாழிற்கு நரம்பு இருபத்தொன்று; மகரயாழிற்குப் பதினேழு; சகோடயாழிற்குப் பதினெனன்று; செங்கோட்டியாழிற்கு ஏழாம். இவ் யாழின் உறுப்புக்களாவன: கோடு, ஆணி, பத்தர், மாடகம், தந்திரி முதலியன. யாழிற்குத் தெய்வம் மாதங்கி என்பர். யாழின் தொழில்களாவன-பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல், செலவு, விளையாட்டு, கையூழ், குறும்போக்கு. இவற்றில் பண்ணலாவது, பாட நினைந்த பண்ணுக்கு இணை, கிளை, பகை, நட்பான நரம்புகள் பெயரும் தன்மை மாத்திரை யறிந்து வீக்குதல். பரிவட்டணை என்பது அவ்வீக்கின நரம்பை அகவிரலாலும், புறவிரலாலும் கரணஞ்செய்து தடவிப் பார்த்தல். ஆராய்தல் என்பது ஆரோகண அவரோகணவகையால் இசையைத்தெறித்தல். தைவரல் என்பது சுருதி ஏற்றுதல். செலவு என்பது ஆளத்தியிலே நிரம்பப் பாடல். (ஆளத்தியைக் காண்க). விளையாட்டு என்பது பாட நினைத்த வண்ணத்தில் சந்தத்தை விடுத்தல். கையூழ் என்பது வண்ணத்தில் செய்த பாடல் எல்லாம் இன்பமாகப் பாடல். குறும்போக்கு குடகச்செலவும், துள்ளற்செலவும் பாடுதல். பின்னும் வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல், உருட்டல் முதலியனவும் உள. வார்தலாவது - சுட்டு விரலால் தொழில்செய்தல். வடித்தலாவது - சுட்டுவிரலும் பெருவிரலும் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராய்தல். உந்தலாவது - நரம்புகளைத் தெறித்து வலிவிற்பட்டதும், மெலிவிற் பட்டதும், நிரல்பட்டதும் அறிதல். உறழ்தலாவது - ஒன்றிடையிட்டும், இரண்டிடையிட்டும், நரம்புகளைத் தெறித்தல். உருட்டலாவது-இடக்கைச் சுட்டுவிரல் உருட்டலும், வலக்கைச் சுட்டுவிரல் உருட்டலும், சுட்டொடு பெருவிரற் கூட்டி உருட்டலும், இரு பெருவிரலும் இயைந்து உடன் உருட்டலு மெனப்பல. யாழினது இருக்கை ஒன்பது வகைப்படும். அவை பதுமுகம், உற்கடிதம், ஒப்படியிருக்கை, சமபுடம், சுயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம் என்பன இதனை நாடகநூலார் ஐம்பதென விரிப்பர். யாழின் குற்றங்களாவன செம்பகை, ஆர்ப்பு, அதிர்வு, கூடம், என்பன. இவற்றுள் செம்பகையாவது இசைத்தல்; ஆர்ப்பு ஓங்க இசைத்தல்; அதிர்வு நரம்பைச் சிதற உந்தல்; கூடம் தன் பகையாகிய ஆறு நரம்பின் இசையிற் குன்றித் தன்னோசை மழுங்கல். இவ் யாழிற்குக் குற்றம் எதினல் உண்டாம் எனின் மரக்குற்றத்தால் பிறக்கும். அம்மரம் நீரிலே நிற்றல், அழுகுதல், வேதல், நிலமயக்குப் பாரிலே நிற்றல், இடிவீழ்தல், நோய், மரப்பால் படல் முதலியவாம். முன் சொல்லிய குரல் முதல் ஏழினும் தாரம் முதலிய பண்கள் தோன்றும. தாரத்தில் உழை தோன்றும். உழையுள் குரல் தோன்றும. குரலில் இளி தோன்றும். இளியுள் துத்தம் தோன்றும். துத்தத்துள் விளரி தோன்றும். விளரியுள் கைக்கிளை தோன்றும். பின்னும் இணை, கிளை, பகை, நட்பு என்று சொல்லப்பட்ட நான்

கினுள் இணை - இரண்டு நரம்பு ; கிளை - ஐந்து நரம்பு; பகை - ஆறும், மூன்றும். யாழ் வாசிக்கும் முறையாவது "நல்லிசை மடந்தை நல்லெழில் காட்டி, யல்லியம் பங்கயத் தவனினிது படைத்த, தெய்வஞ் சான்ற தீஞ்சுவை நல்யாழ், மெய்பெற வணங்கி மேலொடு கீழ்புணர்த், திருகை யின் வாங்கி யிடவயின் நிறீஇ, மருவிய அவிநயம் மாட்டுதல் கடனே." என்பதனால் அறிக.

**யாழ்முரி** — திருஞானசம்பந்தசுவாமிகளை திருநீலகண்ட யாழ்ப்பாணர் கேட்டுக் கொள்ளப் பாடியருளிய திருப்பதிகம்.

**யாளிதத்தன்** — இவன் ஔவைக்குத் தந்தை. இவனைப் பகவனெனவும் கூறுவதுண்டு. இதனை "யாளிகூவற்றாண்டு" எனும்ஞானமிர்தச் செய்யுளான் அறிக.

**யாயாவரர்** — பிதுர்க்கள். இவர்கள் ஜரத்காரு ருஷி வம்ச பிதுர்க்கள். ஜரத்காரு ருஷி இங்குமங்கும் அலைந்து திரிகையில் ஒரு பள்ளத்தில் கீழ் மேலாகத் தொங்கிக் கொண்டிருந்த இருடிகளை நோக்கி நீங்கள் யார் என, நாங்கள் ஜரத்காரு ருஷியின் பிதுர்க்கள், அவ்வம்சத்தில் ஜரத்காரன் மணங்கொள்ளாததினால் வம்சத்திற்கு நாதரில்லாததினால் இவ்வாறு இருக்கிறோம் எனக் கேட்டு, ஜரத்காரு தன் பெயருள்ளவளை மணப்பதென்னும் விரதப்படி வாஸுகியின் சகோதரி யாகிய ஜரத்காருவை மணந்து ஆஸ்திகரைப்பெறக் களிப் படைந்தவர்கள்.

**யானிமுகன்** — சூரபதுமன் கட்டளையால் இலங்கையாண்ட அரசன்.

**யானைக்கட்சேய் மாந்தரஞ் சேர லிரும்பொறை**—ஒருசேரன். குறுங்கோழியூர்க் கிழாராற் பாடப்பெற்றவன். இவன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனாற் கட்டுண்டவன். புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழாரால் ஐங்குறுநூறு தொகுப்பித்தோன். (ஐங்குறு.)

2. ஒரு சேர அரசன். இவன் அரசனும் புலவனும், வள்ளலுமாக இருந்தவன். ஐங்குறுநூறு தொகுப்பித்தோன் என்பர். இவன் இளஞ்சேரலிரும்பொறைக்கு உறவினன்.

**யானைத்தீ** — தணியாப்பசியை விளைக்கும் ஒருநோய். இதனால் காயசண்டிகை மிகத் துன்புற்றுப் பின் மணிமேகலையிட்ட உணவால் பசியொழிந்தனள். (மணிமேகலை)

**யாஜோபயாசர்** — துருபதனுக்கு ஒரு பெண்ணையும் ஒரு புத்திரனையும்பெற யஞ்ஞஞ் செய்வித்தவர்.

## யு

**யுகந்தரம்** — நெடுங்காலஞ் சீவித்த ஆமை.

**யுகந்தரன்** — சதானீகனுக்கு மந்திரி.

**யுகபரிமாணம்** — பிரமனுக்கு ஸ்வமானத்தால் (௧00) வருஷமாயுள். எவ்வகையென்னில் நிமிஷம் (௧௫) கொண்டது காஷ்டை, காஷ்டை (௩0) கொண்டது கலை; கலை (௩0) கொண்டது முகூர்த்தம், முகூர்த்தம் (௩0) கொண்டது அகோராத்திரம், அகோராத்திரம் (௧௫) கொண்டது பக்ஷம், பக்ஷம் (௨) கொண்டது மாதம், மாதம் (௬) கொண்டது அயனம், அயனம் (௨) கொண்டது வருஷம். இது மனுஷ மாதக்கணக்கு. இனித் தேவமானமாவது இந்த மனுஷவருஷம் ஒன்று தேவர்களுக்கு ஒரு அகோராத்ரம். (நாள்) இவ்வகை பக்ஷம் மாத அயனாதி கண்டுகொள்க. இவ்வகையில் உத்தராயனம் பகல், தக்ஷணாயனம் இரவு. இவ்வகைத் தேவவருஷம் (௧௨,000) ஆயின் கிருத, திரேதா, துவாபர, கலியென்னுஞ் சதுர்யுகங்களாம். அவற்றில் கிருதயுகத்திற்கு ௵ (௪000), திரேதாயுகத்திற்கு வருஷம் (௩000), துவாபரயுகத்திற்கு வருஷம் (௨000), கலியுகத்திற்கு வருஷம் (௧000). இவை திவ்யயுகமாம். இந்தத் திவ்யயுகம் (௧000) முறை திரும்பில் பிரமனுக்கு ஒரு பகலாம். இதில் (௧௪) மன்வந்தரம்போம். பின்னும் (௩0௬௭௨0000) இவ்வளவு மானுஷ வருஷமாயின் ஒரு மன்வந்தரம். இந்தப்பகல் எவ்வளவோ அவ்வளவு சென்றால் ஒரு இரவு. இப்படிப்பட்ட அகோராத்ரம் (௩௬0) கொண்டது பிரமனுக்கு ஒருவருஷம். இவ்வருஷம் (௧00) கொண்டது பிரமனாயுள். இதில் பூர்வபாகம் (௫0) வருஷம் பூர்வபரார்த்தம் பாத்மகற்பமெனப்படும். பிற்பாகம் (௫0) வருஷம் துவிதியபரார்த்தம் வராக கற்பம் எனப்படும். இதில் இப்போது நடப்பது வராக கற்பம். இவ்வகைப் பிரமனுக்கு இராத்திரியானால் ஒரு பிரளயம். இனி மனித அளவை யுகமாவது முன் சொல்லிய கணக்குப்படி வருஷங்களாம். இதில் கிருத யுகத்திற்கு வருஷம் (௧௭) இலக்ஷத்து

(௩அ,000), திரேதா யுகத்திற்கு வருஷம் (கஉ,௯௬000) துவாபரயுகத்திற்கு வருஷம் (அ,௬ச000), கலி யுகத்திற்கு வருஷம் (சஙஉ000). அதில் தற்காலம் நடப்பது ஐயாயிரத்துச் சில்லரை. ஆக சதுர்யுகத்திற்கு வருஷம் (சங,உ0000). இது மகா யுகமெனப்படும். இந்த மகாயுகம் (கஅ) சென்றால் ஒரு மனுவிற்கு இராச்சியம். இந்த மனுராச்சியம் (எச) சென்றால் இந்திரனுக்கு ராஜ்யம். இவ்வகை இந்திரனுக்கு ராஜ்யம் (உஎ0) சென்றால் பிரமனுக்கு ஒரு நாள். இந்நாள் (௩0) சென்றால் ஒரு மாதம், இம்மாதம் (கஉ) சென்றால் ஒரு வருஷம், இவ்வருஷம் (க00) சென்றால் பிரமாவுக்கு ஆயுள் முடிவு. இங்ஙனம் (௩௬0) சென்றால் ஆதிபிரமனுக்குப் பிரளய' காலம். இப்பிரளயம் (க00) சென்றால் விஷ்ணுவிற்கொரு கற்பம். இந்தக் கற்பம் நூறு சென்றால் உரோமசமகருஷிக்கு உடம்பில் ஒரு மயிர் உதிரும். இந்த ரோமச மகருஷிக்குப் பத்துக் கோடி சென்றால் மீனச மகருஷியின் உடம்பினின்று ஒரு செதிள் உதிரும். இவ்வகை மீனசமகா ருஷியின் ஆயுள் ஒரு கோடி சென்றால் பாத்வாச மகருஷிக்கு ஒரு நிமிஷம். இவ்வகை பாத்வாசமகருஷிக்கு ஆயுள் (௩0) கோடி சென்றால் மகாசத்தி கூந்த லவிழ்த்து முடிப்பள். இவ்வகை (எஅ0) சத்திகள் கூந்தலவிழ்த்து முடிக்கின் சர்வேசனருகிருக்குஞ் சத்திக்கு ஒரு நிமிஷமாம். (கணக்கதிகாரம்.)

**யுகம்** — இது கிருத யுகம், திரேதா யுகம், துவாபர யுகம், கலியுகம் என நால் வகைப்படும். இந்த யுகத்தில் முதல் யுகத்தின் இலக்ஷணமும், கடை யுகத்தின் இலக்ஷணமும் கூறப்படுகிறது. இடை நின்ற மற்ற இரண்டு யுக இலக்ஷணங்களையு மறிந்து கொள்க. இந்த முதல் யுகத்தில் தருமம் பசுவின் உருவமாக நான்கு பாதத்தால் நடக்கும். இந்தமுதல்யுகத்தில்வாழ்வார்க்கு வயது இலக்ஷம் வருஷம். இந்த ஆயுள் அடைந்தோர் இடையில் எந்தக் காரணத்தாலும் மரணமடையார். தாய்தந்தையர் மகவினையிழக்கார். மாதர் கணவனை யிழக்குந் துயரறியார். அவர்களுக்குப் பாலப் பருவம் பதினாயிரவருஷமாம். காளைப் பருவம் ஆயிரத்து முப்பத்திரண்டுவருஷம். விருத்தப்பருவம் மற்ற வருஷங்களாகும். மற்றவர்கள் தாய்தந்தையரது சொற்களைக் கடவார். பிள்ளைகள் தமக்கு மூத்தோரது சொற்களைப் பழிக்கார். பெண்கள் கற்பினால் அருந்ததியை வெல்வார். வருணம் நான்கேயன்றி வேறில்லை. அந்த யுகத்தின் மாந்தருக்கு உயர,மைந்து பனையளவாம். மிருகம், பறவை முதலியன பகையின்றி வாழும். முள்மரங்கள் கிடையா. அவ்யுகவாசிகள் பிறர் பொருள் விரும்பார். பெரியோர் சொற்களைக் கடவார். மற்றவருக்குத் துன்பஞ்செய்யார். உறுதி கடவார். மற்றவரை இகழார். செய்தவுபகாரத்தை மறவார். கொலை களவு செய்யார். கோள்கூறார். நோயினால் துன்புறார். வறுமையடையார். நடுநிலை கோடார். நெறி தவறார். வஞ்சமனங்கொள்ளார். மன்மதனை யொத்த வடிவுள்ளவராயும் விஷ்ணுவை யொத்த செல்வமுள்ளவராயும் மேகத்தை வென்ற கொடையாளிகளாயும் அகத்திய முனிவரையொத்த கல்விமான்களாயும் குற்றமில்லாத குணவான்களாயும் குறைவில்லாத வன்மையை யுடையோராயும் தவத்தினராயும் பொறாமையில்லாதவராயும் தெய்வபக்தி யுள்ளவராயுமிருப்பர். வேதியர் வேதவேள்வி செய்தல் தவறார். அரசர்கள் கோல்கோடாது அரசுசெய்வார். வணிகர் மநுநீதிப்படி பொருளைத்தேடி நல்வழியிற் பயன்படுத்தி வாழ்வார். சூத்திரர் வேதியருக்குச் செய்கடன்பூண்டு பூமியை யுழுது பயிரிட்டு அதிதிகளையோம்பி யறம் புரிந்து வாழ்வர். பூமியோ முயற்சியின்றிப் பலவளங்களையுந் தரும். பசுக்களோ தெய்வப் பசுக்களைப்போல வளந்தரும். மாதந்தோறும் மும்மாரி தவறாது பெய்து வரும். விருக்ஷங்களும் பருவங்கள் மாறிய காலத்தும் வளந்தரும். இனிக் கடையான கலியுகத்தின் வளமாவது மற்ற விரண்டு யுகத்தின் இலக்ஷணங்கள் முக்கால் அரையாகக் கொள்க. இதில் தருமதேவதை யொருகாலூன்றி நடக்கும். இதன் எல்லை நான்குலக்ஷத்து முப்பத்தீராயிரமாகும். இதில் மனிதர்களுக்கு ஆயுள் நூறுவருஷம். வடிவம் எட்டுச்சாண். அவர்கள் கோபத்தினரும் கருணையில்லாதவரும் நல்லறிவில்லாதவரும் உறுப்பு முழுது நிறையுமு னிறப்பவரும், கருவிலிறப்பவரும், தோற்றக்காலத் திறப்பவரும், தோன்றிய பின் இறப்பவரும், பூமியில் சிலநாள்வாழ்ந்திறப்பவரும், பாலரா யிறப்பவரும், நடைபயில் காலத்திறப்பவரும், வாலப்பருவத்

திறப்பவரும், காளைப்பருவத்திறப்பவரும், வளைந்த கோல்கொண்ட பருவத்து மாய்பவரும், கருத்து அறிவுமுதலிய கெட்டு மாய்பவரும் ஆவர். இக்கலியுகத்தில் யானைகள் நூறுவருஷமும், குதிரை முப்பத்திரண்டு வருஷமும், ஒட்டகம் பதினாறு வருஷமும், நாய் பன்னிரண்டு வருஷமும், மற்ற நாற்கால் விலங்குகளனைத்தும் இருபத்தைந்து வருஷமும் வாழும். பின்னுமிவ் விலங்கு முதலிய பிராணிகள் தமக்குச் சொன்ன காலவளவேயன்றி இடையினுமிறக்கும். கழுகுகளுங் காக்கை முதலியவைகளும் பலநாள் சீவிக்கும். இக்கலியுகத்தவர் ஆசாரியனையும் மூத்தவரையும் வணங்கார். அவர்கள் சொற்கேளார். பெண்கள் கணவரைப் பூசியார், ஆசாரியனையுங் கடவுளையும் வணங்கார். தருமங் கேளார். அதருமநூலை விரும்பிக்கேட்பர். அயலானை விரும்புவர். தவம் விரும்பார். நல்லொழுக்க வழிநில்லார். ஒழுக்கமல்லாத ஒழுக்கத்தில் ஒழுகுவர். பொய்யேயன்றி மெய்யைக் கனவினு நினையார். கொலைக் கஞ்சார். பிறர் பொருளை விரும்பித் தீமை செய்து வாழ்வார். கற்புள்ள மங்கையரின் கற்பைக் குலைப்பார். வஞ்சனை புரிவரேயன்றி நற்கதி தருங் காரியங்களைச் செய்யார். பொய், கொலை, களவு, பொறாமை, கள், மதம், காமம் இவைகளைப்பெற்று நல்ல காரியங்களை விடுப்பர். ஒருவர் செய்த நன்றியை மறப்பர். இறைவனையெண்ணியிருப்போரைப் பழித்துவாழ்வர். சுற்றத்தவர், தாய், தந்தை, தமயன்மனைவி, மைந்தர், ஆசாரியன், அதிதியர் பசித்திருக்க உண்பர். விருந்தினரை எதிர்கொண்டழையார். விரதாதிகளைச் செய்யார். தென்புலத்தார் கடன்விடுப்பர், நற்குலமடந்தையை விடுத்துத் தாழ்குல மடந்தையைக் கூடுவர். இளம்பெண்கள் மணப்பருவமடையுமுன் காமவேட்கையுறுவர். பன்னிரண்டு வருஷத்தில் பெண்கள் குழந்தைகளைப் பெறுவர். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு முதலியன இன்றிப் பெண்கள் புருஷர்முன் னிற்பர். தாய்தந்தையர் புத்திரரைப் போற்றார். புத்திரருந் தாய்தந்தையரைப் போற்றார். தமயன் தம்பியரைப் போற்றான்; தம்பியுந் தமயனைப் போற்றான். தலைவன் அடிமையைப் போற்றான். அடிமை தலைவனை மதியான். ஆசாரியன் மாணாக்கனைப் போற்றான். மாணாக்கன் ஆசாரியனைப் பூசிக்கான். புருஷனைப் பூவையர் போற்றார். வேதியர் வேதமோதார்; கடவுட்பூசை புரியார். அக்கினிகாரியஞ் செய்யார். இயம நியமாதிகள் செய்யார். மந்திரஞ்செபியார். கொடிய காரியங்களை மேற்கொண்டு விரதாதிகளை விடுப்பர். கிருதயுகத்தில் ரிஷிகள் தபோபலத்தால் ஒரு அகோராத்திரத்தில் வேதங்களைச் சாங்கமாய் அத்தியயனஞ்செய்து கொண்டு இருந்தனர். வேதங்கள் அநாதிசித்தம் என்று பிரமனால் சொல்லப்பட்டது. அக்காலத்தில் பிராமணனுக்கு ஜப எக்யம், க்ஷத்திரியனுக்கு ஆரம்பயெக்யம், வைசியனுக்கு அவிரெக்யம், சூத்திரனுக்குப் பரிசாரகயெக்யம் விதிக்கப்பட்டது. அக்காலத்தில் பிரபுக்கள் பிரஜைகளுக்கு அனுகூலமாய்த் தர்மங்களை நடத்திக்கொண்டு இருந்தனர். அந்த யுகத்தில் ஆயுள், உருவம், பலம், புத்தி, ஆரோக்கியம், தருமசிந்தை இவை சர்வசாதாரணம். திரேதாயுகத்தில் இந்திரன் மந்திரங்களினால் அச்வமேதம் ஆரம்பித்தான். அந்த எக்யத்திற்குச் சில ரிஷிகள் ருத்விக்குகளாக இருந்தனர். இந்திரன் பசுக்கள் உபகாரமாக யாகஞ்செய்ய அதனால் ரிஷிகள் மந்திரயெக்யமாக யாகஞ் செய்யலாம்; பிராணவதை கூடாது என மறுத்தமையால் விவாதம் உண்டாயிற்று. பின்னும் இந்திரன் ரிஷிகளைப் பார்த்து எக்யம் ஸ்தாவர ஜங்கமங்களில் எதனால் செய்யவேண்டுமென்ன, ரிஷிகள் அவனுக்கு உத்தரவுசொல்லாமல் கசரன் என்னும் வசுவை மத்தியஸ்தமாக எண்ணிக் கேட்க அந்தவசு பசுக்கள் கந்த மூலபலாதிகளில் செய்யவேண்டும் என, ரிஷிகள் கோபித்து வசுவைப் பூமியில் தள்ள அவன் பாதாளத்தில் வீழ்ந்து மீண்டும் எழுந்து வந்தனன். ஆகையால் தருமங்கள் அநேக மார்க்கமாய் நடக்கும். ரிஷிகள் ஹிம்சையோடுகூடிய யாகத்தைச் சம்மதிக்காமல் போயினர். எக்யம் மந்திரங்களினாலும், தபஸ் மனத்தினாலும் ஸ்தாபிக்கக்கூடும். துவாபரயுகத்தில் லோபம், சேவகாவிர்த்தி, வாணிபம், யுத்தம், தத்வநிச்சயம், வர்ணசங்கரம், ரஜஸ்தமோகுண வியாப்தி, அதர்மம், வருணச்ரம தர்மங்களுக்கு விபரீதம், வேதங்களினிடத்து அவிஸ்வாசம், சுவல்ப ஆயுள், இவ்வித அதர்மங்கள் பரவினவேயன்றி ஒன்றாயிருந்த வேதம் நான்கு வித

மாய் ரிஷிகளால் பிரிக்கப்பட்டது. அதர்மம் விருத்தியாயிற்று. இந்த யுகக்கடையில் கலியுகதர்மம் ஆரம்பித்தது. கலியுக தர்மம், ஹிம்சை, சௌர்யம், கிறுத்தம், மாயாதிகள் முதலியன விருத்தியாய், தபங்கள் க்ஷீணித்துத் தர்மசொரூபம் அழியும் சொற்கள் சித்தியாகா. மனிதர்கள் எந்தக் காலத்திலும் மோகத்தில் அழுந்துவர். பசி, தாகம், மழையின்மை, தேசவிபரீதம், எக்காலத்திலும் உண்டாம். சாஸ்திரப்பிரமாணம் லோபிக்கும். மனிதர் கருவிலும், சிலர் பால்ய யௌவன கௌமார பருவத்திலும் அல்ப தேஜஸ் உள்ளவர்களாய் இறப்பர். அனர்த்தம், அதர்மம், கோபம், விரதலோபம் இவற்றால் பாபம் அடைவர். பிராமணர் வேதாத்தியயனம், எய்யாதிகளை விட்டுச் சூத்திரர்களால் மந்திரயோனி சம்பந்திகளாய் இருப்பர். பாஷண்டிகள் விருத்தியாவர். சிலர் காஷாய வஸ்திரம் தரித்துக் காபாலிகளாய்த் தர்மதூஷகர் ஆவர். பிராமணர் வயிற்றின் பொருட்டு வேதவிக்கிரய ஜபதப ஓமாதிகளைச் செய்வர். சூத்திரர் வேதாத்தியயனம் செய்ய விரும்புவதே அல்லாமல் தர்மநிரூபணஞ்செய்ய ஆரம்பிப்பர். சூத்திரர்வீட்டில் பிறந்த க்ஷத்திரியர் அச்வமேதாதி யாகங்களைச் செய்வர். இவ்வகை கலியுக சந்திவரையில் நடக்கும். பிறகு பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர வருணங்கள்கெட்டுக் கலப்புறும். சூத்திரர் மிலேச்சர் முதலான அரசர்களை ஜெயிக்க பிருகு குலத்தில் பிரமதி என்னும் புருஷன் பிறந்து இப்பூமண்டலத்தில் (௩௦) வருஷம் சஞ்சரித்து அநேக துஷ்டராஜாக்களைக் கெடுத்து, கங்கை, யமுனை முதலிய மத்தியப்பிரதேசத்தில் தங்குவன். பின் ஜனங்கள் அரசர் இன்மையால் அந்யோந்ய கலகத்தால் இறப்பர்.

**யுதாசித்** — 1. கேகயதேசாதிபதி. கைகேசியின் சகோதரன்.

2. விருஷ்ணியின் இரண்டாங் குமாரன். இவன் குமாரர் சநி, அநமித்திரன்.

3. சுமந்திரன் குமாரன்.

4. கோசல நாட்டுச் சத்ருஜித்தின் தாய் வழிப்பாட்டன். சுதரிசனனைக் காண்க.

5. தசரதபுத்திரனாகிய பரதனுக்கு அம்மான்; கிரிவிரச மாண்டவன்.

**யுதாயுதாயு** — சுதச்சிரவசுவின் குமாரன். இவன் குமாரன் நிர்மித்திரன்.

**யுதிஷ்டிரன்** — தருமராஜனுக்கு ஒரு பெயர்.

**யுத்ததருமம்** — யுத்தத்தில் புறங்கொடாது போர்செய்வோர் சுவர்க்கத்தை அடைவர். ஓராயுதத்தை மற்றோர் ஆயுதமாகக்காட்டியும், கர்ணிகார பாணங்கள், நுனியில் விஷந்தடவிய பாணங்கள், நெருப்பில் காய்ச்சிய பாணங்கள் இவைகளைப் பிரயோகிக்காமலும் இரதத்தைவிட்டுப் பூமியில் இறங்கினவன், பேடி, அஞ்சலிசெய்தவன், தலைமயிரை அவிழ்த்துக்கொண்டிருப்பவன், குந்திக்கொண்டிருப்பவன், அபயமென்று சொன்னவன், தூங்குகிறவன், சந்தோஷமில்லாதவன், வஸ்திரமில்லாதவன், ஆயுதமில்லாதவன், எதிர்க்காதவன, சண்டையைப் பார்ப்பவன், மற்றொருவனோடு சண்டைபோடுபவன், ஆயுதம் ஒடிந்தவன், பிள்ளைமுதலியோர் இறந்து விசனப்படுபவன், நன்றாக அடிபட்டவன், பயந்தவன், புறங்கொடுத்தோடுகிறவன், இவ்வகைக் குணமுடையவர்களைக் கொல்லக்கூடாது.

**யுத்தியணி** — அஃதாவது தனது மர்மத்தை மறைத்தற்பொருட்டுச் செய்கையாற் பிறரை வஞ்சித்தலாம்.

**யுபசுலோகர்** — திரிவக்கிரையிடம் கிருஷ்ணனுக்குப் பிறந்த குமாரர். நாரதருக்கு மாணாக்கராயிருந்து ஞானிகள் ஆயினர்.

**யுயுச்சு** — திருதராட்டிரனுக்குத் தாசியிடம் பிறந்தவன். இவன் தருமர் இராசசூயத்தில் மடைப்பள்ளியி லிருந்தவன். இவன் ராக்ஷஸாம்ச முடையவன்

**யுயுதானன்** — 1. சத்தியகன் குமாரன். இவன் குமாரன் செயன்.

2. யாதவ வரசன் சாத்தகி.

**யுவந்திரன்** — குணி குமரன்.

**யுவனாசுவன்** — 1. (சூ.) சந்திரன் குமாரன். இந்து குமாரன் என்பர்.

2. (சூ.) சேநசித் குமாரன். இவன் தனக்குப் புத்திரரிலாததால் விரக்தியடைந்து தன் (௧௦௦) மனைவியருடன் வனமடைய அங்கு இருடிகள் இந்திரவேள்வி செய்தனர். அதில் புத்திரோற்பத்தியினிமித்தம் வைத்திருந்த ஜலத்தைப் பாதியிரவில் அரசன் தாகத்தால்வருந்த அதனைப் பருகினன். அதனால் சிலகாலம் பொறுத்து யுவனாசுவன் வலதுபாகத்தைப் பீறிக்கொண்டு குமாரனாகப் பிறந்தனன். இருடிகளநுக்கிரகத்தால் அரசன் இறக்கவில்லை. பிறந்த குமாரன் பாலுக்கழ இந்திரன் தனது

கட்டைவிரலைக் கொடுத்தனன். அதனை அக்குழந்தை சுவைத்துப் பசியாறினன். இக்குமாரனே பின் மாந்தாதா என்னும் அரசனானன். யுவனாசுவன் சிலநாள் தவமியற்றி இஷ்டசித்தி யடைந்தனன்.

## யூ

**யூகாதித்தன்** — சூரியன் சிவமூர்த்தியை யெண்ணித் தவமியற்றினன். சிவப்பிரசாதத்தினால் பலகதிர்களைப் பெற்றுப் பிரகாசிக்கையில் தேவர்கள் சூரியஉஷ்ணம் பொறாது சிவமூர்த்தியிடம் முறையிட்டனர். சிவமூர்த்தி சூரியன் முதுகைத் தடவினர்; அதனால் வெப்பங்குறைந்து யூகாதித்தனெனப் பெயர்பெற்றுப் பிரகாசித்துச் சிவமூர்த்திக்குக் கண்ணாகும் வரம் பெற்றனன்.

**யூகி** — யௌகந்தராயணனென்னும் பெயர் பெற்ற அந்தணன். (மணிமேகலை)

**யூகிமுனி** — தேரையர் மாணாக்கருள் ஒருவர். இவர் தமது வைத்தியத்திறமையை அகத்தியரிடம் காட்டிச் செல்வாக்குப் பெறவெண்ணி அகத்தியராச்சிரமஞ் சென்றனர். அவ்விடமிருந்த காக்கையொன்றினுக்குத் தாம் முடித்துவைத்திருந்த ஔஷதமாகிய வீரசுண்ணத்தை உண்பித்து அக்கருங்காக்கையினை வெள்ளை வடிவாக்கினர். இதனைக் கண்ட அகத்தியர் களித்து இவரை மதியூகியெனப் பெயரிட்டழைத்தனர். அன்றுமுதல் யூகிமுனி யெனப் பெயருண்டாயிற்று. இவர் வைத்தியசிந்தாமணி முதலிய பலநூலியற்றியவர்.

**யூக்லிப்டஸ்தைலம்** — இது ஆஸ்திரேலியாவிலுள்ள ஒருவகை மரத்திலிருந்து காய்ச்சப்படுகிறது. இந்தியாவில் நீலகிரிப் பிரதேசத்தில் இம்மரங்கள் பயிராக்கப்பட்டு அவற்றிலிருந்தும் காய்ச்சப்படுகிறது.

**யூதமதம்** — யூததேசத்தவர் கொண்டாடும் மதம். இவர்கள் பாஷை ஹீப்ரு. இவர்கள் முதலில் ஹூ, பெல், செட், என்னுந் தேவவிக்ரகங்களை வழிபட்டனர். இவர்கள் தேவன் ஒருவனுளன் என்றும், மோசே சிரேஷ்டகுரு என்றும், இறந்தவர் மீண்டும் உயிர்த்தெழுவர் என்றும், பாவமன்னிப்புண்டு என்றும் கூறுவர். இவர்கள் தற்காலம் பலவீனம் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் நூல் மிஸ்னா, ஜமாரஸ், தால்மத் முதலியனவாம்.

**யூபாஷன்** — இராவணசேநாதிபதி. அநுமனால் மாண்டவன். அரக்கன் மயிந்தனால் கொல்லப்பட்டவன்.

## யோ

**யோகசித்தி** — ஆங்கிரஸர் பெண். பிரகஸ்பதியின் சகோதரி. பிரபாசன் மனைவி. குமாரன் விச்வகருமன்.

**யோகதக்ஷிணாமூர்த்தம்** — மகருஷிகள் யோகலக்ஷண மறியவேண்டிச் சிவமூர்த்தியை வேண்டியகாலத்து ஆசார்ய மூர்த்தமாய் எழுந்தருளி அவர்களுக்கு யோகத்தை யருளிச்செய்த சிவமூர்த்தம்.

**யோகம்** — 1. இது இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று எண் விதப்படும். இவற்றுள் இயமம் கொலை, களவு செய்யாமை, மெய்கூறல், கள்ளுண்ணாமை, பிறர்பொருளிச்சியாமை, இந்திரியமடக்கல் முதலியன. நியமம் தத்துவநூலாராய்தல், தவம், தூய்மை, தெய்வவழிபாடு, மனமுவப்பு முதலியன. ஆதனம் சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம் எனப் பலவாம். அவற்றுள் சுவத்திகம் தொடைக்கும் முழங்காற்கு நடுவே இரண்டுள்ளங்காலையுஞ் செலுத்தி இறுமாந்திருத்தல். கோமுகம் சகனப்பக்கத்தில் இருகாற்பாட்டையு மாறவைத்து அவ்விருகாற் பெருவிரலையுங் கைப்பிடித்திருத்தல். பதுமம் இருதொடைமேலு மிரண்டுள்ளங்காலையு மாறித் தோன்றவைத்தல். வீரம் வலது தொடையில் இடதுகாற்பரட்டைச் சேர்த்து இறுமாந்திருத்தல். கேசரி பீஜத்தின்கீழ் சீவனியிடத்துப் பரட்டைவைத்து இடமுழங்கையை முழந்தாளில் வைத்து அங்குலிவிரித்து நாசிமுனையைப் பார்த்துக்கொண்டிருத்தல். பத்திரம் பீசத்தின் கீழ்ச் சீவனியிடத்து இருகாற்பரட்டையும் வைத்து அவ்விருபதத்தையும் இருகையாலிறுகப்பிடித்து அசையாதிருத்தல். முத்தம் இடக்காற் பரட்டாற் சீவனியை யழுத்தி வலக்காற்பரடு அப்பரட்டிற்குக் கீழழுந்தவிருத்தல். மயூரம் முழங்கையிரண்டு முந்திப் புறத்திலழுந்தப் புவியிற் கையூன்றிக் காலீட்டித் தலைநிமிர்ந்திருத்தல். சுகம் சுகமுந்திடமும் எவ்வாறிருக்

தின் எய்துமோ அவ்வாறிருத்தல். பிராணுயாமம் பிராணவாயுவை இரேசக, பூரக, கும்பகஞ் செய்தல். பிரத்தியாகாரம் உபாதியைநீக்கி உண்ணேக்கல். தாரணை ஆதாரத்தானங்களாகிய மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னு மாருதாரங்களில் ஆதார தேவதைகளைக் குருமுகமாக வறிந்து மனதையும் வாயுவையும் அங்கங்கே நிறுத்தி அவ்விடத்துள் ஆதாரதேவதைகளைத் தரிசித்து ஆநந்தமுறுவது. தியானம் ஐம்புலனடக்கி யோகஞ்செய்தல். சமாதி கரணங்களிறந்து மனேலயமான சாக்கிராதீதத்தில் தன்னிலையைக் கண்டின்புறுதல். இதன் விரிவை விரிந்த நூல்களாகிய சிவயோகசாரம், சிவயோகமஞ்சரி, பெருந்திரட்டு, குறுந்திரட்டு, மெய்ம்மொழி, சகலாகம சிந்தாமணி, சிவதருமோத்திரம், திருமந்திரம் முதலிய நூல்களிற் காண்க.

2. இது நன்னடையுள்ள ஒருவன் விரதசீலனய் யோகாதிகள் அநுஷ்டானத்திற் கூறியபடி நியமாநியம வுணவுகளைக்கொண்டு ஆருதாரங்களாகிய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை இவை முதலிய ஆதாரங்களின் தக்க பேதங்களையும் தேவதைகளையுமறிந்து அங்கங்கேநின்று தியானஞ்செய்து அந்தத் தானங்களின் சகுண தேவதைகளையும் பிரகாசங்களையும் கண்டுணர்தல். இது ஆதாரயோகம். இவற்றையநுட்டித்தவர் அவ்வப்பத முத்தியைப் பெறுவர். சுஷுமுன யோகமாவது இயமநியமாதிகளைக் கண்டு நிற்றல். மேற்கூறிய ஆருதாரங்களில் அப்பியாசஞ்செய்தால் பரஞ்சோதிச் சொரூபமான சோடச கலையின் பேரொளி கண்டு அதிலழுந்தி ஆனந்தபரனய் மோக்ஷமடைவன். இவையன்றி அமிர்தயோகம், ஆனந்தயோகம், பன்னகயோகம், வச்சிரயோகம், ஞானயோகம், சித்தயோகம், பரயோகமெனவுண்டு. இன்னும் அணிமாதி யஷ்டமாசித்தி- யோகமாவது; மூலாதாரத்துருவின் சுழுமுனைத் துவாரத்திலே மனத்தைவைத்து விடாமல் ஒருவருஷம் நோக்கில் பொன்னிறமா யணுவைப் போலுருக்கொள்வர். இது அணிமாசித்தி. அணுவை மேருப்போ லாக்கும் வன்மை. மகிமாசித்தியு முடனேயுண்டாம். இனி இந்த அக்கினியை மேருத்தொளைவழியாக வாயுவாலே குண்டலி மட்டாக எழுப்பி அதிலேற்றி இரண்டு வருஷம் நோக்கில் நீர் நுரைகள் போலத் தேக மெத்தெனவுண்டாம். இது லகிமாசித்தி. இந்தக் குண்டலிமட்டாக வந்த அக்கினியை நாபித்தானத்திலு மிருதயத்திலுமேற்றி மேருத்தொளை வழியாக வாயுவாலே மூவாண்டுநோக்கில் ஆகாயமளவாக வோங்கிவளரலாம். அணுவிலுஞ்சிறியராக விருக்கலாம் இது கரிமாசித்தி. இனி இருதயமாதியாகிய முன்சொன்ன அனில வாயுவால் மேருத்தொளையிலேற்றிக் கண்டத்தளவாக எழுப்பி ஐயாண்டுநோக்கின் முற்காலத்துள்ளதெல்லாம் அறிவான்; இது பிராப்திசித்தி. இனிக் கழுத்து முதற் கண்மட்டாக மேருத்தொளைவழி அக்கினியை யேற்றி ஆருண்டு நோக்கின் மண்ணி லெத்தனைகால மறைந்திருந்தாலுமிருக்கலாம்; பிறப்புமறும். இது பிராகாமியசித்தி. அனலை வாயுவாலே ஆக்கி, மேருத்தொளைவழி சிரசிலேற்றி ஏழாண்டு நோக்கில் எல்லாருக்குந் துன்பங்களைப் போக்கி எவ்வுயிர்ச் சீவனிலும் ஏகமாய்க் கலந்துநிற்பான். இது ஈசத்துவசித்தி. நாதத்துவாரப் பிரகாசமானல் தேகசித்தியும் அஷ்டமாசித்தியும் வரும். இது மந்திரயோகம். இலய்யோகமாவது ஆதார தேவதைகளைத் தியானஞ்செய்து ஏகசித்தனுயிருக்கையில் சதுர்த்தச நாதமுத லநேக நாதங்களுண்டாம். அதனைக்கேட்டு நிருத்த தரிசனங்கண்டு மனேலயமாவது. இனிச் சிரசிலிருக்கிற அனலை வாயுவாலே வாங்கி நாசாக்ரத்திலே யெட்டாண்டு நோக்கின் வேண்டிய அண்டங்களைச் சிருட்டிப்பான். இது வசித்துவசித்தி.

3. (உஎ) விட்கம்பம், பிரீதி ஆயுஷ், மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிடணம், வச்சிரம், சித்தி, விதீபாதம், வரியான், பரீகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரமம், பிரமம், ஐந்திரம், வைதிருதி. இவை முறையே கம்பம், பிரியம், வாழ்நாள், புண்ணியம், நலம், மாகண்டம், அறம், துணை, சூலம், கண்டம், ஆகம், நிலை, அரவு, எக்களிப்பு, வேல், வல்லமை, கொலை, காயம், தாழ்வு, காட்சி, திறம், புகழ், காவல், தெளிவு, பிரமா, இந்திரன், பேய். இவற்றுள் கம்பம், கண்டம், அதி

கண்டம், சூலம், வியாகாதம், வச்சிரம் விதீபாதம், பரீகம், வைதிருதி என்னும் ஒன்பதும் அன்றி மற்றவை நல்லன. இவற்றுள்ளும் கம்பத்தின் மூன்றும், சூலத்தில் ஐந்தும், கண்டத்திலும் அதிகண்டத்திலும் ஆறும். வியாகாதத்தில் ஒன்பது நாழிகையும் கழித்துநின்ற நாழிகையும் ஆம்.

**யோகவதீ** — ஞானசுதரிசனன் தேவி. இவள் கணவன் அதிதிபூசைசெய்யும்படி சொன்னசொல் தவருமல் விருந்தாய்வந்த வேதியனுகிய யமனுட னிசைந்திருக்கப் புருஷன் கண்டு களித்தவன். இதையறிந்த யமன் அவனைப் புகழ்ந்து இருவருக்கும் யமவாதனையிலாது நற்பத மீந்து யோகவதியை நீ உன் புருஷனுக்குப் பெண்ணுருவுடனிருந்து உலகோர் பாபத்தைநீக்க வேகவதியாயிருக்கவென வரம்பெற்ற கற்பரசி. இவளைப் புணர்ந்ததாக இலிங்கபுராணங் கூறவில்லை. உடன்பட்டதே சாலும் எனக் கூறியுள்ளது.

**யோக வுற்பவம்** — அசுவநி முதல் ஆதித்தனின்ற நாளளவு மெண்ணிச் சந்திரனின்ற நாளையுங் கூட்டி இதிலொன்று கழித்தால் நின்றதொகை நித்யயோகமாம். பரிகத்தில் பின்னரை சுபகன்மங்களுக்காம்.

**யோகவொழுக்கம்** — (௮) இயமம், நியமம், இருப்பு, உயிர்நிலை, மனவொடுக்கம், தாரணை, தியானம், சமாதி என்பன.

**யோகன்** — யமனுக்குக் கிரியையிட முதித்த குமாரன்.

**யோகா** — நவசத்திகளில் ஒருத்தி.

**யோகாங்கன்** — சுப்பிரதீபனைக் காண்க.

**யோகாசனம் (௨௰)** — (௧), பத்மம், (௨) ஸ்வஸ்திகம், (௩) கோமுகம், (௪) விசதம், (௫) சூசிதம், (௬) ஏகபாதம், (௭) குக்குடம், (௮) வீரம், (௯) பத்ராயனம், (௰) கூர்மம், (௧௧) விமலம், (௧௨) தண்டம், (௧௩) பிண்டம், (௧௪) கோகர்ணம், (௧௫) சிம்மாசனம், (௧௬) விருத்தம், (௧௭) கடிகம், (௧௮) கசாஸ்யம், (௧௯) கசகர்ணிகம், (௨௰) சுகாசனம், என்பனவாம். இவற்றின் கிரியை முதலியவற்றைப் பெருநூல்களிற் காண்க.

**யோகாசாரம்** — ஒருமதம். சௌத்திராந்திகனிற் சிறிதவேறுபட்ட பௌத்தம். அறிவு அருபம் என்றும் பிரபஞ்சம் பொய் என்றும் கூறும். போதம் சலத்தின் வெள்ளம் போலவும், மருந்து எண்ணெயிலூறிப் பலிப்பதுபோலவும் பலிக்கும் என்பர். இது பௌத்தமத வேறுபாடு. (தத்துவநிஜாநு).

**யோகிதாசன்** — திருவரங்கத்திருந்த ஒரு குட்டநோயாளி. இவன் முதலாழ்வார்கள் அருளால் குட்டநீங்கி அரசகுமாரத்திகளை மணந்து இன்பமுற்றவன்.

**யோகினி** — ஒரு பெண்தேவதை. இவள் நிர்வாணி; விரிந்த கேசமும், தேகமுழுதும் வெண்ணீற்றுப் பூச்சும், மங்கலாபரணமின்றிச் சங்காபரணமும், கையில் வெறித்த கபாலமும், தீரா அமங்கலான சிவந்த வர்ணமும், உடையவள். இவளுக்கு முன்னும், இடப்புறமும் ஆகாது. பின்னும் வலப்புறமும் நன்ரும். ஆகாயம், பூமி மத்திமம். யோகினியறிதல் - சுக்லபக்ஷம் பிரதமைமுதல் இஷ்டதின திதிவரையில் எண்ணிவந்த தொகையைப் பத்தால் வகுத்த மிச்சம் (௧)க்கு கிழக்கு, (௨)க்கு வடக்கு, (௩)க்கு தென்தெற்கு, (௪)க்கு தென்மேற்கு, (௫)க்கு தெற்கு, (௬)க்கு மேற்கு, (௭)க்கு வடமேற்கு, (௮)க்கு வடகிழக்கு, (௯)க்கு ஆகாசம், (௰)க்கு பூமி. வழக்கு, சூது, யுத்தம், யாத்திரை, இவற்றிற்கு யோகினி பார்க்க வேண்டியது பிரதானம்.

**யோகினிகள்** — ஒருவித மயக்குஞ்சத்திகள். இவர்கள் (௬௪) கோடியர். இவர்களைச் சிவமூர்த்தி சங்கரித்தனர். அவர்களுட் சிலர் காளியிட மேவல் செய்திருக்கின்றனர். அவர்கள் (௬௪) வர் திவ்யயோகி, மகாயோகி, சித்தயோகி, கணேஸ்வரி, பிரேதாசிபிகினி, காளராத்திரி, நிசாசரி, ஜங்காரி, ஊர்த்துவவேதாளி, பிசாசி, பூதடாமரி, ஊர்த்துவகேசி, விரூபாக்ஷி, சுஷ்காங்கி, நரபோஜனி, ராக்ஷசி, கோரரக்தாக்ஷி, விஸ்வரூபி, பயங்கரி, வீரகௌமாரி, சீசண்டி, வராகி, முண்டதாரிணி, பிராமரி, ருத்ரவேதாளி, பீஷ்கரி, திரிபுராந்தகி, பைரவி, துவம்சனி, குரோதி, துர்முகி, பிரேதவாகினி, கட்வாங்கி, தீர்க்கலம்போஷ்டி; மாலினி, மந்திரயோகினி, காலாக்னி, கிருமணி, சக்ரி, கங்காளி, புவனேச்வரி, பட்காரி, வீரபத்ரேசி, தூம்ராக்ஷி, கலகப்பிரியை, கண்டகி, நாடகி, மாரி, எமதூதி, கராளினி, கௌசிகி, மர்த்தனி, எக்ஷி, ரோமஜங்கி, பிரஹாரிணி, சகஸ்ராக்ஷி, காமலோலா, காகதமிஷ்டிரி, அதோமுகி, தூர்சடி, விகடி, கோரி, கபாலி, விஷலங்கினி.

**யோகினியறிதல்** — சுக்கிலபக்ஷம் பிரதமை, ஏகாதசி, கிருஷ்ணபக்ஷம் சஷ்டி-கிழக்கு.

சுக்கிலபக்ஷம் திருதிகை, திரயோதசி, கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி - ஆக்கினேயம். சுக்கிலபக்ஷம் பஞ்சமி, பௌர்ணமி, கிருஷ்ணபக்ஷம் தெசமி - தெற்கு. சுக்கிலபக்ஷம் - சதுர்த்தி, சதுர்த்தசி, கிருஷ்ணபக்ஷம் நவமி - நிருதி. சுக்கிலபட்சம் சஷ்டி. கிருஷ்ணபக்ஷம் பிரதமை, ஏகாதசி - மேற்கு. சுக்கிலபக்ஷம் சப்தமி, கிருஷ்ணபக்ஷம் துதியை, துவாதசி-வாயு. சுக்கிலபக்ஷம் துதியை, துவாதசி, கிருஷ்ணபக்ஷம் சப்தமி - வடக்கு. சுக்கிலபக்ஷம். அஷ்டமி, கிருஷ்ணபக்ஷம் திரிதியை, திரயோதசி - ஈசான்யம். சுக்கிலபக்ஷம் நவமி கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தி, சதுர்த்தசி - ஆகாயம். சுக்கிலபக்ஷம் தசமி, கிருஷ்ணபக்ஷம் பஞ்சமி, அமாவாசை - பாதாளம். இந்த யோகினியைப் பின்புறத்தில் வைத்துப் பிரயாணஞ் செய்ய நன்று.

யோகேச்வரர் — தேவவோத்திரனுக்குப் பிரஹதியிட முதித்த விஷ்ணுவி னம்சம்.

யோகேச்வரிபீடம் — சக்தி பீடங்களில் ஒன்று.

யோசனைகந்தி — மச்சகந்தியைக் காண்க. சத்தியவதிக்கு ஒரு பெயர்.

யோனி—14. விலங்கு, பறவை, பசு, பாம்பு, தாவரம், மானிடம், பைசாசம், இராக்கதம், இயக்கம், காந்தருவம், ஐந்திரம், சௌமியம், பிரசாபத்யம், பிரமம் முதலியன.

## யௌ

யௌநன் — பிரயவுந்தன் வம்சத்துத் தீமந்தன் குமாரன்.

யௌவநாசுவன் — அம்பரீஷன் குமாரன்.

## ரா

ராகுகாலம் — வாரங்காண்க.

ராசிகளிற் கிரகநிலை — சூரியன், சுக்கிரன், புதன் மீ-க-ம், செவ்வாய் மீ-கத-யும், குரு - ஹு-க-ம், சநி - ஹு - உத - யும், இராகுகேது ஹு கத, சந்திரன் - நாள் உவ-ம் ஆக நிற்கும்.

ராசிகள் — இவற்றின் மாதம், உருவம, அங்கம், திக்குகள், சாதி, நிறம், பகல், இராவிழிப்பு, சரம், ஸ்திரம் உபயம், ஆண், பெண், கால உதயம் முதலியன கீழே குறிக்கப்படுகின்றன.

(மேஷம்) சித்திரை, வெள்ளாடு, தலை, கிழக்கு, க்ஷத்திரியன், வெள்ளாழன், சிவப்பு, இராவிழிப்பு சரம், ஆண், நாற்கால், காலுதயம். (இடபம்) வைகாசி, எருது, முகம், கிழக்கு, சூத்திரன், இடையன், வெள்ளை, இராவிழிப்பு, ஸ்திரம், பெண், நாற்காலி, காலுதயம். (மிதுனம்) ஆனி, ஆண், பெண், கழுத்து,கிழக்கு,வைசியன், சக்கிலியன், கறுப்பு, இராவிழிப்பு, உபயம், ஆண், இருகால், தலை உதயம், சுவஷ்கம். (கடகம்) ஆடி, நண்டு, தோள், தெற்கு, பிராமணன், கன்னுன், வெள்ளை, இராவிழிப்பு, சரம், பெண், பலகால், காலுதயம். (சிங்கம்) ஆவணி, சிங்கம், மார்பு, தெற்கு, க்ஷத்திரியன், பிராமணன், சிவப்பு, பகல்விழிப்பு, ஸ்திரம், ஆண், நாற்கால், தலையுதயம், சுவஷ்கம். (கன்னி) புரட்டாசி, பெண், இருகால், தலையுதயம், சுவஷ்கம். (துலாம்) ஐப்பசி, தராசு, முதுகு, மேற்கு, வைசியன், செட்டி, வெள்ளை, பகல்விழிப்பு, சரம், ஆண், இருகால், தலை உதயம். (விருச்சிகம்) கார்த்திகை, தேள், பீஜம், மேற்கு, பிராமணன், வேடன், பச்சை, பகல் விழிப்பு, ஸ்திரம், பெண், பலகால்; தலை உதயம். (தனுசு) மார்கழி, வில், தொடை, மேற்கு, க்ஷத்திரியன், தட்டான், சிவப்பு இராவிழிப்பு, உபயம், ஆண், நாற்கால், காலுதயம். (மகரம்) தை, முதலை, முழங்கால், வடக்கு, சூத்திரன், வண்ணுன், கறுப்பு, இராவிழிப்பு, சரம், பெண்,பரக்கும்ராசி, காலுதயம். (கும்பம்) மாசி, குடம், கணுக்கால், வடக்கு, வைசியன், குயவன், பச்சை, பகல் விழிப்பு, ஸ்திரம், ஆண், இருகால், தலை உதயம். (மீனம்) பங்குனி, மீன், பாதம், வடக்கு, பிராமணன், பறையன், பச்சை, பகல் விழிப்பு, உபயம், பெண், பறக்கும் ராசி, உடலுதயம்.

இந்த இராசிகளில் தலையுதய இராசிகள் பகல்வலி உடையனவாம். காலுதய ராசி இராவலி உடையனவாம். மேஷம், ரிஷபம், கன்னி, தனுசு, ஆக நான்குக்கும் முதலில் (௫) நாழிகை தியாச்சியமும், மிதுனம், சிங்கம், துலாம், கும்பம், ஆக நாலுக்கும் நடுவில் (௫) நாழிகை தியாச்சியமும், கர்க்கடகம், விருச்சிகம், மகரம், மீனம், ஆக நாலுக்கும் கடையில் (௫) நாழிகை தியாச்சியமுமாம்.

## ரு

### ஸ்திரீகள் புஷ்பிணி இலக்ஷண மறியும் விதி:—

**ருதுகாலபலன்** — விடியல் - மங்கிலியவதி. பகல் - யாத்திரை. பிற்பகல் - சோரத்வம். மத்தியானம் - சம்பத்துடையள். சாயங்காலம் - புத்திரவிருத்தி. அஸ்தமனம்-வேசை. இராத்திரி - நீடிய வாழ்வு. நடுராத்திரி - விதவை.

**ருதுதிதிபலன்** — பிரதமை - சோரம். துவிதியை - அழகுடையள். திரிதியை - இன்பமுடையள். சதுர்த்தி - சத்துரு வுண்டு. பஞ்சமி - புத்ரருண்டு. சஷ்டி - ஆசாரமுடையள். சப்தமி - புத்திரருண்டு. அஷ்டமி-பெற்றிழப்பள். நவமி-துக்கி. தசமி-தர்மிஷ்டி. ஏகாதசி - பலமுடையவள். துவாதசி - கோபமுடையவள். திரயோதசி - கற்புடையவள். சதுர்த்தசி - சோரமுடைவள். பௌர்ணமி-இடருடையவள். அமாவாசை - தரித்ரி.

**ருதுநக்ஷத்ரபலன்** — அசு-விதவை. பரணி-புத்ரவதி. கார்த்திகை - மலடி. ரோகணி - நன்மையுடையவள். மிரு-புருஷனுக் இனியவள். ஆதிரை-புருஷவெறுப்புடையவள். புனர்பூசம் - சுகமுடையள். பூசம் சீருடையள். ஆயில்யம் வயிறழிவு. மகம் - பர்த்தாவுக்கு நல்லள். பூரம் - மலடி. உத்திரம் - பிரயோசனவதி. அஸ்தம்-நல்லவள். சித்திரை - அறிவுள்ளவள். சுவாதி - குடும்பி, விசாகம் - அமங்கலி. அனுஷம் - ரோகி. கேட்டை - நீச ஸ்திரீ. மூலம் - பாலுடையவள். பூராடம் - அடிமை கெடும். உத்திராடம் - தர்மிஷ்டி. திருவோணம் - பாக்கியவதி. அவிட்டம்-பொருளுடையவள். சதயம் - பொருளழிவு. பூரட்டாதி-மலடி. உத்ரட்டாதி - தரித்ரி. ரேவதி - ரோகி.

**ருதுமாதபலன்** — சித்திரை - புருஷனுக்காகாது. வைகாசி - சுகத்துடன் வாழ்வாள். ஆனி-புத்திரருடையவள். ஆடி - புருஷன் மேல் ஆசையுள்ளவள். ஆவணி-பெருவாழ்வுஞ் சிறப்புமுடையவள். புரட்டாசி - பதிவிரதையாயிருப்பாள். ஐப்பசி - புத்திரருண்டு; விதவையாவாள். கார்த்திகை - தூஷணி, கோபமுடையவள். மார்கழி - நல்ல புத்திரரைப்பெற்று வாழ்வாள். தை - புண்ணியமும் பாக்கியமும் பெருமையுமுடையவள். மாசி - சுகத்தைப் பெறுவாள். பங்குனி - ஆயுள்விருத்தி. புத்திரவதியாயிருப்பாள்.

**ருதுலக்கின பலன்** — மேஷம் விருச்சிகம் - பரஸ்திரி. ரிஷபம் தனுசு மிதுனம்-விபசாரி. கர்க்கடகம் ஒழுக்கமில்லாதவள். சிங்கம் கன்னி - நெறியுடையவள். துலாம் தரித்ரி. மகரம் - கற்புடையவள். கும்பம் - பொருளுடையவள்., மீனம் - நீதுடையவள்.

**ருதுவாரபலன்** — ஞாயிறு - வியாதி, புத்ரநாசம். திங்கள் - பதிவிரதை. செவ்வாய் - விதவை. புதன் - புத்ரவதி. வியாழம் - போகவதி. வெள்ளி - மிக்கபோகவதி. சனி - வியாதி, பீடை.

**ருதுசாந்திபலன்**—ஸ்திரி புருஷர்களுடைய ஜன்ம நக்ஷத்ரங்களுக்கு 7-வது தாக்ஷர நக்ஷத்ரங்களும், 8 - வது ராசியில் சந்திரனிருக்கும் நட்சத்ரங்களும் திதிகளில் சஷ்டி, அஷ்டமி, ஏகா, சதுர்த்தசி, பூர்ணை, அமாவாசையும், நட்சத்ரங்களில் அசு, பர, கிரு, ஆயி, மக, பூர, கேட், ரேவதியும் யோகங்களில் விதிபாதம், வைதிருதியும் லக்கினங்களில்விருஷபம், கடகம், கன்னி, விருச், மகரம் மீனமும் இவைகள் அல்லாத காலங்கள் சுபம்.

**ஆருடத்திற்குப்பலன்.** கிழக்-வெள்ளைப் புடவை, சோரம் போவாள், (பிள்ளை-7). தென்கிழக்கு கறுப்புப்புடவை, (பிள்ளை 1). தெற்கு - நீலப்புடவை (மலடி). தென்மேற்கு வெள்ளைப்புடவை. ரோகி, (பிள்ளை-4). மேற்கு அழுக்குப்புடவை, நல்லது, (பிள்ளை 6). வடமேற்கு மஞ்சள் கலந்த சிகப்புப் புடவை, சக்களத்தி யுடையவள், (பிள்ளை 2). வடக்கு துவரை வன்னப்புடவை, செல்வ முண்டு. வடகிழக்கு நல்ல புடவை, தரித்ரம், (பிள்ளை-10)

"உத்ராட மாதியாக வாறுமாறு முத்தமம், பித்தனூர் பிறந்தநாட்கள் பின்னையாறு மத்திமம், அஸ்தமோடு சித்திரை அகன்ற வாழ்வு குன்றிடும், மற்றோராறு நாள்கடம்மின் மங்கைநா விழப்பளே.

## ல

**லத்தைகளறியும்படி** — சூரியனிருக்கிற நட்சத்திரத்துக்கு - கஉ வது நட்சத்திரமும், சந்திரனுக்கு - எ-வதும், குஜனுக்கு க- வதும், புதனுக்கு - உங-வதும், குருவுக்கு

கூ-வதும், சந்திரனுக்கு-உகி-வதும், சனிக்கு அ-வதும், இராகுவுக்கு - உக-வதும், கேதுவுக்கு - உக-வது நட்சத்திரமும் லத்தையென்று சொல்லப்படும். இதில் சூரியன் - அங்காரகன் - சனி - ரா - கேது - இந்த டு-பேரும் பாபக்கிரகங்களாகையால் இவர்களுடைய லத்தையுண்டாகிய நட்சத்திரங்களிலே சுபகாரியங்கள் செய்யக்கூடாது.

## வ

**வகமானசு** — மகாசாலன் குமாரன். இவன் குமாரன் உசீநரன்.

**வகலைபீடம்** — சத்திபீடங்களில் ஒன்று.

**வதுந்து** — சானச்சுருதிக்கு நண்பன்.

**வதுளமாலிகை** — திருவேங்கடத்தில் ஸ்ரீநிவாசனுக்குத் தளிகைசெய்து அளித்துக் கட்டளைப்படி சுவாமி புட்கரணிக்கு இடம் ஆனவள். இவளே பதுமினிக்கும் பெருமாளுக்கும் தூதுசென்றவள்.

**வதுளாப்ரணர்** — நம்மாழ்வாருக்கு ஒரு பெயர்.

**வதுளை** — உத்தமன் பாரி. இவன் கணவனை வெறுத்துச் சாலபோதகன் என்னும் நாகராஜனால் நாகலோகத்திற்குக் கொண்டு போகப்பட்டு மீண்டுங் கணவனை அடைந்தவள்.

**வக்கிரதுண்டர்** — இவர்க்கு ஐந்துசிரம் பத்துக்கை. இவர் துராசாரனைக் கொன்று அவனைக் காலில் மிதித்து எந்நாளும் இருக்க வரம் அளித்தவர். இவர்க்கு உடுண்டி விநாயகர் என்றும் பெயர். ஒருகற்பத்தில் திரிமூர்த்திகளைத் தமது துதிக்கையால் எடுத்து விழுங்கி விராட்டுருவாய் நின்றவர்.

**வக்ரதுவாரம்**—இது ஒரு பர்வதம. (பா. சா.)

**வக்கிரபாலன்** — சூரபன்மன் மந்திரி.

**வக்கிரயோதி** — விப்பிரசித்தியின் குமாரன். அசுரன்.

**வக்ரன்** — அநிருத்தன் புத்ரன்.

**வக்க்ரன்** — 1. தல்யவக்கிரனைக் காண்க.

2. ஒரு அசுரன்.

3. சுசீந்திரத்தின் மருத்துமலையில் இஷ்டசித்தி அடைந்த ஒரு சூத்திரன்.

**வக்துவமகருஷி** — பிரமதேவரின் தொடையிற் பிறந்து தவம் இயற்றினர். இவர் இலாது உலகம் நவமணிபெய இயலாது வருந்துகையில் தேவர் இந்திரனிடம் குறைகூறினர். இந்திரன் பிரமன் இடத்தும், பிரமன் விஷ்ணுமூர்த்தி இடமும், விஷ்ணு சிவமூர்த்தி இடமும் குறைகூறச் சிவமூர்த்தி தவஞ்செய்யும் இவரிடம் மன்மதனை ஏவ மன்மதன் பெண் உருக்கொண்டு தவஞ்செய்யும் இருடியின் நிலைகெடுக்க இருடி கோபித்து மன்மதன் என உணர்ந்து நீ சிவமூர்த்தியின் தீவிழியால் சிதைக எனச் சாபம் இட மன்மதன் உற்றது கூற முனிவர் கோபந்தணிந்து இரதியால் அவ்வுருப்பெற அநுக்கிரகித்துத் திருக்கைலையடைந்து சிவமூர்த்தியைப் பணியச் சிவமூர்த்தி மணிமுதலிய இலாது உலகம் வருந்துதலால் அதனை நீக்க உன்னை வருவித்தனம் என, கட்டளை ஏற்றுச் சிவமூர்த்தியை நோக்கிச் சுவாமி அடியேன் புத்திரர்களைத் தருப்பையாற் சிருட்டிப்பன் எனச் சிவமூர்த்தி இது பிரமசிருட்டிக்கு மாறு ஆம் ஆதலால் உன் மரபுக்கு ஏற்ற கன்னியை மணந்து அவளால் மரபு தழைக்கச் செய்க என்று உமையை நோக்கி அவள் திருக்காத்து இருந்த மலரில் ஒன்றைப் பெண் உருவாக்கித் தந்தனர். இருடி அவளை மணந்து அவளுடன் ஆயிரம் தருப்பை முடிந்து பிரம தேவரால் வேள்வி செய்வித்து ஆயிரம் ஆகுதி செய்வித்து அக்னியை நோக்கி ஆயிரம் புதல்வரை வேண்ட, அவ்வகை அக்னிதேவன் பிரசாதிக்கப் பெற்றுத் திரிமூர்த்திகளால் வாழ்த்தப் பெற்றவன். இவன் வைசிய குல முதல்வன், இக்கோத்திரத்தார்க்குப் புல்வேடுழான், புல்விகிழான், புல்விடுவேட்டுழான், நாணல்கிழான், வக்குவர்பூவால் உதித்தமையால் புஷ்ப வாணிபர், பிரமன் வேள்வியில் உதித்தமையால் வேள்வியிண்டன், வேள்விகிழான், வேள்வி வேட்டன் என்று பெயர் பெற்று இவர்கள் குபேரனால் உலகம் எல்லாம் பரவினர். (வைசிய புராணம்.)

**வக்ராசுரன்** — ஒரு அசுரன், சத்தியால் கொல்லப்பட்டவன்.

**வக்னி** — யயாதியின் பேரன்.

**வங்கம்** — 1. இது கீழ் வங்காள இராஜ்யம். இத் தேசத்தவர் பேசும்பாஷை வங்கம்; இத்தேசத்தை ஆண்டவன் வங்கன், அவனால் இராஜ்யத்திற்குப் பெயர் உண்டாயிற்று.

2. ஒரு தேயம் (சூளா.)

3 The Province of Bengal.

**வங்கன்** — பலியின் மனைவியிடத்துத் தீர்க்க தபசு முனிவரால் உதித்த குமாரன். இவன் பெயரால் வங்கதேசம் உண்டாயிற்று.

**வங்காளப் பச்சை** — செம்பி லுண்டாம் களிம்பு. இது வெளிறின நீல நிறத்தது. விஷமுள்ள பொருள்.

**வங்கிபுரத்தாச்சான்** — எழுபத்தினாலு சிங்காசனாதிபதிகளில் ஒருவர். வைஷ்ணவாசாரியர். (குருபரம்பரை.)

**வங்கிபுரத்தாய்ச்சி** — நாதமுனிகளுக்கு மாமியார்; அரவிந்தப்பாவைக்குத் தாய். இவள் ஒருகால் அரவிந்தப்பாவையைத் தம் வீட்டுக்கு அனுப்ப நாதமுனிகளுக்குச் சொல்லி யனுப்ப நாதமுனிகள் தம் மனைவியைப் புண்டரீகாக்ஷர் வசம்கூட்டி அனுப்பப் புண்டரீகாக்ஷர் வங்கிபுரத்து ஆய்ச்சி வீட்டில் அரவிந்தப் பாவையைச் சேர்த்து அவ்விடம் இருக்க வங்கிபுரத்தாய்ச்சி புண்டரீகாக்ஷருக்குச் சேடித்த தீர்த்தான்னம் பிரசாதித்துப் பின் புண்டரீகாக்ஷர் பெருமைகேட்டு க்ஷமாபணம் கேட்டுக் கொண்டவள். மணக்கால் நம்பியை ஆச்ரயித்தவள்.

**வங்கிபுரத்துநம்பி** — எழுபத்தினாலு சிங்காசனாதிபதிகளில் ஒருவர். வைஷ்ணவாசாரியர். (குருபரம்பரை.)

**வங்கியதலசேகர பாண்டியன்** — திருநெல்வேலியில் கோயிற்றிருப்பணி செய்து முத்திபெற்றவன். இவன் குமாரன் குலசேகர பாண்டியன்.

**வங்கியசூடாமணி பாண்டியன்** — இவன் வங்கியசேகர பாண்டியனுக்குக் குமாரன். இவன் சிவமூர்த்திக்குப் பல இடங்களிலிருந்து செண்பகமரம் கொண்டுவந்து வைத்துப் பயிராக்கிப் பூவெடுத்துச் சாத்த அதனால் சண்பகமாறன் எனப் பெயர் பெற்று அரசாண்டு வருகையில் ஒருநாள் தனது பூஞ்சோலை சென்று உலாவினன். இவனை அறியாது இவன் மனைவி வந்து பூங்காவிலிருந்தனள். அவள் கூந்தலின் இயற்கை மணம் அரசனுக்கு வந்தது. அந்த மணம் பூஞ்சோலையில் புதிதாதலின் அரசன் இச்சோலையின் மலர்களின் மணம் நாம் அறிவோம்; ஏதோ புதுமணம் வருகின்றதென்று சந்தேகித்து அதன் வரலாற்றைச் சங்கப்புலவர்க்குத் தெரிவித்துப் பொற்கிழி ஒன்று தூக்கினன். சங்கப்புலவர் தனித்தனி அரசனுக்குக் கவிதைகூறினர். அரசன் மனத்திற்கு அவை ஒவ்வாமையால் பொற்கிழி தந்திலன். இதனை அறிந்த ஏழை வேதியராகிய தருமி என்பவர் சொக்கர் முன்சென்று வணங்கித் தமது குறைகூறி அரசன் எண்ணந் தெரிவிக்கின் தமது வறுமை நீங்கும் என இரந்தனர். கருணாநிதியாகிய சிவமூர்த்தி அவ்வேதியரிடம் கருணை கூர்ந்து "கொங்குதேர்" என்னும் திருமுகப்பாசுரம் எழுதி அருளினர். அதனைப் பெற்ற வேதியர் அரசனுக்குக் காட்ட அரசன் களித்துச் சங்கப்புலவர்க்குத் தெரிவித்தனன். சங்கத்தவரில் தலைவராகிய நக்கீரர் அக்கவியைக்கேட்டுக் குற்றம் கூறினர். இதனால் அரசன் தருமிக்குப் பொருள் தந்திலன். தருமி மீண்டும் சொக்கரிடஞ்சென்று நடந்தவைகளை முறையிடச் சொக்கநாதமூர்த்தி ஓர் புலவர் உருக்கொண்டு நக்கீரர் இடம் குற்றங்கேட்டு மறுத்துக் குற்றந் தீரச் சொல்லியும் நக்கீரர் கேளாததால் சிவமூர்த்தி தமது நெற்றிக்கண்ணைக் காட்டினர். அக்காலத்தும் கீரர் கொண்டது விடாமையால், சிவமூர்த்தி மறைந்தனர். சிவமூர்த்தி மறைந்ததும் கீரர் தீர்த்தத்தில் விழுந்து சிவமூர்த்தியைத் தியானித்து அபராதக்ஷமை வேண்டிக் கைலைபாதி காளத்திபாதி அந்தாதி பாடிக் கரையேற, தருமிக்குப் பொற்கிழி கொடுத்து அரசாண்ட அரசன்.

**வங்கியசேகர பாண்டியன்** — இவன் மதுரை கடல்கொண்ட பிறகு அரசாளத் தொடங்கிப் பட்டணத்தில் இருக்க இடம்பெறாது பட்டணத்தை அகற்ற விரும்பிச் சொக்கரை வேண்டினன். சொக்கர் சித்த உருவாய்த் தோன்றித் தமது கரத்தில் அணிந்திருந்த அரவை எடுத்துவிட்டு எல்லை காட்டக் கட்டளையிட்டனர். அது வளைந்து எல்லை தெரிவித்துச் சிவமூர்த்தியை வேண்டித் தன் பெயரால் அப்பட்டணத்திற்குப் பெயர் உண்டாக வரம்பெற்றது. அதனால் மதுரை ஆலவாய் எனப் பெயர் பெற்றது. கீர்த்தி பூஷண பாண்டியன் காலத்துக் கடல்கொண்டது. இவன் பிரளயம் ஒடுங்கின பிறகு அரசாண்ட பாண்டியன். இவன் காலத்து விக்கிரமசோழன் இவனிடம் யுத்தத்திற்கு வரப் பாண்டியன் சொக்கரைத் தமக்குச் சகாயம் இல்லாமை கூறி வேண்டினன். சொக்கர் வேடராஜனைப்போல எழுந்தருளிப் பாண்

டியன் சேனைகள் பின்னிடுதல் கண்டு தம் பெயர் எழுதிய சுந்தரப்பேர் அம்புகள்விட்டுச் சோழனைப் பின்னிடச்செய்து பாண்டியனுக்குக் கருணைசெய்து மறைந்தனர். பின் பாண்டியன் கடவுளைத் தொழுது அரசாண்டு தம் இடம் வந்த நக்கீரர் முதலிய புலவர் நாற்பத்தெண்மரை ஆதரித்து அவர்களுக்கு என இருக்கை ஈந்து தமிழ்ச் சங்கம் வளர்த்து வங்கிய சூடாமணி பாண்டியனைப்பெற்று நற்கதி அடைந்தவன். இவன் காலமே கடைச்சங்கத்தவர் காலம்.

**வங்கியசோழன்** — இவன் ஒரு சோழன். இவன் திருநெடுங்களத்தில் நாள்தோறும் சிவதரிசனம் செய்து வருகையில் ஒருநாள் சிவமூர்த்தி அழகுடன் தரிசனந்தர நித்திய சுந்தரர் என்று திருநாமம் சாத்தித்தரிசித்து அரசாண்டவன்.

**வங்கியதீப பாண்டியன்** — இராச கம்பீர பாண்டியன் குமாரன். இவன் குமாரன் புரந்தரசித்துப் பாண்டியன்.

**வங்கியபதாகன்** — புரந்தரசித்துப் பாண்டியன். குமாரன்.

**வங்கையர்** — இவர் ஒரு வீரசைவர். இவரிடம் ஒரு சங்கமர் பாதி இரவில் வந்து தாம் திருமஞ்சனத்திற்குப் பாலும் வில்வமும் இலாது வருந்துஞ் செயலைத் தெரிவித்தனர். இவர் வருந்தி அருகு இருந்த மலட்டுப் பசுவைக் கறக்கக்கூற அது திவ்யமான பாலைச் சுரந்தளித்தது. அப்பசு கட்டியிருந்த வில்வத்தறியை நோக்க அது தளிர்த்தது. அவ்விரண்டையும் அச்சங்கமர்க்குக் கொடுத்து அனுப்பினர். இவர் தம் தலை அறுத்துச் சிவசந்நிதியில் இட்டுச் சிவமூர்த்தியால் அருள்பெற்றவர். இவர் சரிதையை மாகாளரிற் காண்க.

**வசந்தசேனை** — சசியின் தோழி.

**வசந்தமாலை**—மாதவியின் தோழி. (சிலப்.)

**வசந்தன்** — வாநரவீரன். கும்பகர்ணனால் கசக்கிப் பூசிக்கொள்ளப்பட்டவன்.

**வசந்தி** — ஒரு நகரம். (மணிமேகலை)

**வசவதேவர்** — மாதிராசர் செய்த தவத்தால் மாதாம்பிகை கருவில் மூன்றுவருடம் இருந்து லிங்கதாரணத்துடன் பிறந்தவர். தந்தை செய்யவந்த உபநயனாதிகளை மறுத்து ஸ்ரீ பலதேவர் குமரியாகிய கங்காம்பையை மணந்து கூடல் சங்கமத்தில் சிவமூர்த்தி ஞானசாரியராய் எழுந்தருளி உபதேசித்ததால் அங்கு எழுந்தருளியிருந்து ஸ்ரீ பலராசன் (விச்சலன்) வேண்டுகோளால் தண்டநாயகத் தொழில் பூண்டு அரசனுக்கு ஆகாயத்தில் இருந்து வந்த திருமுகச்சுருளை அங்கு உள்ளவர் வாசிக்க அறியாமையால் அதை வாசித்து அவன் சிங்காதனத்து அடியில் இருந்த பொருள்களை எடுத்துத்தந்து அல்லமாப்பிரபுதேவருக்கு அமுது படைத்துத் தம்மிடத்து அன்றைக்கு லக்ஷத் தெண்பதினாயிரம் சங்கமர்க்குச் சமைத்த உணவுகளை அல்லமாப் பிரபுதேவர் ஒருவரே உண்டு மீண்டும் பசியென, வசவர் மதிமருண்டு அபராதக்ஷணம் வேண்டினர். இவர் மடத்தில் தாரணமில்லாத சிலர் கத்தரிக்காயைத் தாரணமாகக்கொண்டு புசிப்புக்குச் செல்ல அங்கு இருந்தவர்களில் சிலர் இவர்களைக்கண்டு கோபிக்க வசவர் அவர்களைத் தடுத்துச் சிவத்தியானம் செய்தனர். இதன்பின் கத்தரிக்காய்கள் எல்லாம் சிவலிங்கமாயின. இவரது பத்தியை அறிய விச்சலராசன் மரத்தாலும் மண்ணாலும் சிவனடியவர்போலச் செய்வித்து இரவில் இவர்க்குக்காட்ட வசவர் இவர்களைக் கண்டதும் வணங்கி அமுதுசெய்ய அழைப்ப அப்பிரதிமைகள் உயிர்பெற்று நடந்தன இவ்வற்புதம் கண்ட அரசன் அஞ்சி அகன்றனன். ஒருநாள் அரசன் தனது சேனைகளுக்குச் சம்பளம் கொடுக்கச் சாளிகைப் பெட்டியை இவரிடம் கொடுத்து அனுப்பினன். இவரை ஒரு விடசங்கமர் கண்டு இச்சாளிகை முழுதும் எமக்கு அளிக்க எனக் கேட்க வசவர் அவ்வாறு அளித்தனர். இதனைக் கண்ட அரசசேவகர் அரசனிடம் கூற, அரசன் வசவரைக் கேட்டனன். வசவர் ‘நான் கொடுத்தது உமது பொருள் அல்ல, நீர்கொடுத்த தனம் உமது பெட்டியில் இருக்கின்றது’ என அரசனுக்குச் சாளிகையைத் தனத்துடன் காட்டி அஞ்சும்படி செய்தவர். வசவரைச் சங்கம உருக்கொண்ட சிவமூர்த்தி நெற்றிக்கண் வேண்டும் எனக் கேட்க எழுந்தருளியவர் சிவமூர்த்தியென உணர்ந்து அவரைத் துதித்து அவர்க்குக் கண்ணாடிகாட்டி நெற்றிக்கண்ணர் நீரென்று துதித்து அறிவித்தவர். மல்லிராசையர் ஏவுதலால் வந்த சகளேசமாதிராயரைக் கருணையுடன் உபசரித்தவர். மடிவாலமாச்சையரால் சிவனடியவர் பொன் முதலிய வேண்டாதவர் என்றறிந்தவர். இவர் நிஷ்டையில் இருக்குங்காலத்து ஒரு சங்கமர் வரத் துவாரபால

கால் தடையுண்ட அவரை யோகத்திருந்து வசவாது பிராணவாயு சென்று அடைய வசவர் தம்பித்து இருந்தனர். இச்செய்தியைச் சென்னவசவர் உணர்ந்து சங்கமரைத் தேடி உபசரிக்க வசவர் எழுந்து சாக்கிர நிலைபெற்றனர். கின்னரையர் பொருட்டு அவ்வாறு உயிர் ஒன்றியிருக்க மடிவால மாச்சையரால் யோகந் தெளிந்து இருந்தவர். இவர் கூடல்சங்கமத்திருந்த சிவாலயத்தைக் காத்திருந்த வேடருக்குச் சிவசேடத்தைக் கொடேம் என்று மறுத்தனர். அவ்வேடர் அரசனிடம் முறையிட அரசன் வசவரைக் கேட்க வசவர், சிவமூர்த்தி உண்ட விஷம்போல் இவரும் உண்பராயின் சிவசேடம் அளிப்பமென்ன வேடர் இவர் அருந்துவராயின் பின் அருந்துவமென அவ்வகைச் சிவன் அடியாரும் தாமும் விஷம் அருந்தி அரசனையும் வேடரையும் பிரமிக்கச் செய்தவர். தமது தேவியார் உடுத்திருந்த ஆடையை விடசங்கமர் ஒருவர் கேட்க வசவர் தமது தேவியாரை அழைத்துப் புடவையை அவிழ்த்துத் தரக் கேட்கத் தேவியார் நாணம் அடைந்து நின்றனர். அவ்வகை நாணமடைந்து நின்ற தேவியின் புடவையைத் தாமே அவிழ்க்க அப்புடவை வளர்ந்தது கண்டு அவ் விடசங்கமருக்குப் போதுமான அளவு சேதித்துத் தந்தனர். நாகாம்பையாரது குண்டலத்தையும் சங்கமர் கேட்க அளித்தவர். முத்த சங்கையருக்கு வேசிவீடு காண்பித்து உபசரித்தவர். அல்லையர் மதுவையரைக் கண் பிடுங்கிய செய்தி அறிந்து கல்யாணபுரம் நீங்கிக் கூடல சங்கமபுரஞ் சென்று சிவசாயுச்சியம் அடைந்தவர்.

**வசவபுராணம்** — வீரசைவ அடியார்களின் மகாத்மியம் கூறும் நூல்.

**வசனுபாசம்** — பிராமணனால் சுராபானம் செய்யப்பட்டது திரவத்ரவ்விய மாகையால் இதனை அப்பிரசித்த சம்பந்தம் என்பர். (சிவ - சித்.)

**வசாதையம்** — பாகலிகதேசத் தருகிலுள்ள தேசம்.

**வசிட்டர்**—1. அக்ஷமாலிகை யென்ற பறைப் பெண்ணை மணந்தவர். (வைத்யநாதம்.)

2. பிரமன் மானஸ புத்திரர்களில் ஒருவர். தேவி அருந்ததி. பிரமனது பிராணனிற் பிறந்தவர் என்பர். வைவச்சுத மன்வந்தரத்தில் சப்த ருஷிகளில் ஒருவராய் இருந்தவர். மகா தவச்சிரேட்டர். சூரியவம்சத்து அரசருக்குக் குருவானவர். இவர் தக்ஷப் பிரசாபதி குமாரத்திகளில் ஒருத்தியை மணந்து அவளிடத்து ரசன், கோத்திரன், ஊர்த்துவபாகு, சவநன், அநகன், ஸுதபன், சுக்ரன் முதலிய எழு பிள்ளைகளைப் பெற்றவர். இவர்கள் எழுவரும் சுவாயம்பு மன்வந்தரத்தில் சப்த இருடிகளாக இருந்தனர். இவர் நிமி சாபத்தால் தேகம் இலாது சபிக்கப்பட்டு வருந்திப் பிதாவாகிய பிரமனிடஞ்சென்று தேகம் வேண்டினர். பிரமதேவர் மித்ராவருணர் கலப்பால் உனக்குத் தேகம் உண்டாமென நீங்கி வருண உலகம் சென்றனர். மித்திரனும் வருணனும் அவ்வுலகம் ஆண்டு கொண்டிருக்கையில் உருவசி என்னும் அரம்பை மித்திரனிடம் வர, வருணன் கண்டு மோகித்து அழைக்க அவள் மித்திரனுக்கு வாக்கு இட்டதைத் தெரிவித்துச் செல்லுகையில் வருணன் உனக்காக என் தேஜஸில் ஒருவன் உதிக்கவென அதை உருவசி ஒப்புக்கொண்டு மித்திரனிடஞ் சென்றனள். அவன் உருவசி நேரே என்னிடம் வாராது வருணனிடஞ் சென்று வந்ததால் பூவுலகத்துப் புரூரவனுக்குப் பெண்டாக எனச் சபிக்க அவள் அங்ஙனமே புரூரவனை மணந்து ஆயுவை ஈன்றாள். இந்த மித்ராவருணர் இருவரின் தேஜஸால் ஒரு குடத்தில் இருந்து மீண்டும் உடம்பு பெற்றார். இவர் உடன் பிறந்தவர் அகத்தியர். இவர் குமாரர் சத்தி முதல் நூற்றுவர். இவர்களைக் கல்மாஷபாதன் அரக்கவுருக் கொண்டிருக்கையில் கொல்ல அதனை அறிந்த வசிட்டர் இறக்க நினைந்து முயன்று மலையினின்றும் சமுத்திரத்தும் வீழ்ந்து உயிர்நீங்காது திருமாலால் தேறியவர். தேவர் பொருட்டுத் தமது நேத்திராக்கினியால் அரக்கரை எரித்தவர். பிரபாசவசுவை வீட்டுமராகச் சபித்தவர். திரிசங்கினை நீசனாகச் சபித்தவர். இவர் குமாரரை விச்வாமித்திரர் கிராதராகச் சபித்தனர். அக்னியைச் சிகண்டி வயிற்றுதிக்கச் சபித்தவர். அரிச்சந்திரன் நிமித்தம் விச்வாமித்திரருடன் வாதிட்டு நெடுங்காலம் கொக்கு உருவாக இருந்தவர். இக்ஷுவாகு வேண்டப் பிரமனிடம் இருந்து சரயுவைக் கொணர்ந்தவர். இருக்வேதத்தில் எழாவது கீதங்களுக்கு ஆசிரியர். இவர் தாதையாகும் பிரமனுக்கு வசீபூதனாகவும் சிஷ்டனாகவும் இருந்தது

பற்றி இப்பெயர் பெற்றனர். இவர் வருணன் வீட்டிற்கு இரவில் நித்திரை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடனும் மூன்று நாள் உபவாசம் இருந்த பசி தீரவேண்டித் தானியத்தைத் திருட வேண்டும் என்ற எண்ணத்துடனும் வருகையில் அவ்வீட்டு நாய் தன்மேல் விழ, அது உறங்கும்படி இருக்கு வேதத்தில் சில மந்திரங்களைக் கூறினர். (இருக்கு.)

3. இவர் ஸ்தாணுதீர்த்தக் கீழ்கரையில் தவஞ்செய்திருந்தார். விச்வாமித்ரர் மேல்கரையில் தவமியற்றினர். விச்வாமித்ரர் வசிட்டரைக் கொல்ல எண்ணங்கொண்டு சரஸ்வதியை நோக்கி வசிட்டரைக்கொண்டு வருகவென நதி வசிட்டரைக்கொண்டுவர மனமில்லாமல் விச்வாமித்ர கோபத்திற் கஞ்சி வசிட்டரைக் கொண்டு நிறுத்தி விச்வாமித்திரர் தங்கின கரை இடியச்செய்தது. பின் வசிட்டர் நதியால் இழுத்துக்கொண்டு போகப்பட்டார். இதனால் விச்வாமித்திரர் சரஸ்வதியிடம் கோபித்து நீஎன்னை வஞ்சித்தாயாதலால் நீ இரத்தத்தைப் பெருக்குக எனச்சபித்தனர். பின் தீர்த்தஸ்நானத்தின் பொருட்டு வந்த ருஷிகள் சிவந்த கற்களால் சரஸ்வதி நதியின் சாபத்தைத் தீர்த்தனர். இது இரத்தப் பிரவாஹமானபோது தன்னை யுண்டு வந்த ராக்ஷதர் பொருட்டு அருணையாகி அவர்களின் பாபத்தைப் போக்கிச் சுத்தமாக்கியது. இதில் இந்திரன் ஸ்நானஞ்செய்து பிரமகத்தி நீங்கினன். இந்த சரஸ்வதிக்கு வசிட்டாபவாஹ தீர்த்தமெனப் பெயர். ஸ்தாணு தீர்த்தமெனவும் பெயர். இதில் பலராமர் தீர்த்த யாத்திரையில் ஸ்நானஞ் செய்தனர். இந்திரன் ஸ்நானஞ்செய்து பிரமகத்தி நீங்கினன். (பார - சா.)

**வசிட்டகாமதேனு** — இது வசிட்டரிடமிருந்து உபகரிக்கும் பசு. விஸ்வாமித்திரன் வசிட்டர் கட்டளையின்றி இதனை வலுவிற் கொண்டுபோக இது தன்னுடலிலிருந்து பலவீரரைப் பிறப்பித்து அவனது சேனையைக் கொன்று விச்வாமித்திரன் தவத்தனுதற்குக் காரணமானது. (இரா - பால.)

**வசிஷ்டர்** — 1. வரிஷ்டன். எல்லாரினுஞ் சிறந்தவன். இதில் (ரி.) சியாக மாறியது. சப்தருஷி மண்டலத்தில் வசிப்பதால் இப்பெயர் பெற்றூர்.

2. இவர்க்குப் புலியின் கர்ப்பத்தில் வியாக்ரபாதர் முதலிய பத்தொன்பது புத்ரர் பிறந்தனர். இவர் ஒருகாலத்து வைகானஸமெனும் மடுவில் தேவரை வருத்திய பலினர் எனும் அசுரரை யோகாக்னியால் சாம்பராக்கினர். பின் அந்த மடுவில் ஆகாயகங்கையை விழச் செய்தனர். அதனால் மடு உடையச் சரயுவானது. அவர்களிறந்த தேசம் பலினமாயிற்று. (பார. அநுசா.)

**வசிஷ்டாபவாஹ தீர்த்தம்** — வசிட்டரைக் காண்க.

**வசு** — 1. வச்சிரன் குமாரன். தாய் சுவதிதி.

2. இரண்யரோமன் அல்லது இரண்யரேதனுக்குக் குமாரன். குசத்தீவு ஆண்டவன்.

3. தக்ஷன் பெண். தருமன் தேவி. குமாரர் அஷ்ட வசுக்கள்.

4. முராசுரன் குமாரன். கண்ணனுடன் பொருது மாண்டவன்.

5. இந்திரசாவர்ணி மனுப் புத்திரன்.

6. பூதச்சோதிசு குமாரன். நிருகன் வம்சத்தவன்.

7. குசன் குமாரன்.

8. பதிரிகாச்சிரமத்தில் இருந்த நாராயண ருஷியின் ஒளியைக் கண்டு மோக்ஷம் அடைந்தவன்.

9. அபிசித் குமாரன். புத்திரன் இல்லாது யாகஞ் செய்ய அதில் அயுதன் பிறந்தனன். (நங்.)

10. வசுதேவருக்கு ஸ்ரீதேவியிடம் உதித்த குமாரன்.

11. கலிங்க நாட்டுச் சிங்கபுரத்து அரசன். (மணிமேகலை)

12. காமரூப நாட்டு அரசன் குமாரன். தான் கோயிலுக்குப் போய் ஒரு பொன் கண்டெடுத்து அதைக் கோயில் அதிகாரிகள் கேட்கவும் உதவாமல் தந்தையிடம் கொடுத்தனன். தந்தை பொக்கிஷத்தில் வைத்தனன். அதனால் அப்பொருள் முழுதும் கள்ளர் கைக்கொள்ள இருவரும் நரகம் அடைந்தனர்.

13. கிருதி குமாரன். தேவி கிரியை. சேதி தேசாதிபதி. இவன் தவத்திற்கு மெச்சி இந்திரன் ஒரு விமானத்தைக் கொடுக்க அதில் ஏறி இவன் நினைத்த இடம் சென்றதனால் இவனுக்கு உபரிசரவஸு என்று பெயர் வந்தது. இந்திரன் இவனுக்கு வாடாத வைஜயந்தி மாலையை

யும் கொடுத்தனன். ஒருகால் இவன் பிதுர்க்கள் கட்டளைப்படி வேட்டைக்குச் சென்று அவ்விடம் தன் மனைவியின் நினைவுவர உடனே வீர்யம் வெளிப்பட்டது. அதனை ஒரு தொன்னையில் கொண்டு தான் வளர்த்த டேகை இடம் கொடுத்தத் தன் மனைவியிடம் சேர்க்கக் கூறினன். அவ்வாறே அதனை அப் பக்ஷி எடுத்துக் கொண்டு போகையில் ஏதோ இரையென்று மற்றொரு டேகை அதனைப் பிடுங்க அத்தொன்னை நழுவி யமுனை நதியில் விழுந்தது. அந்நதியில் சாபத்தால் மீனுயிருந்த அத்திரிகை யென்பவள் அதனை இரை என்று விழுங்கினள். அம் மீன்வயிற்றில் ஒரு குமாரனும் ஒரு குமாரியும் பிறந்தனர். பெண் மச்சகந்தி, குமாரன் மச்சன். குமாரன் ஒரு அரசனால் வளர்க்கப்பட்டு மச்சதேசாதிபதியாயினன். மச்சகந்தி செம்படவர்க்கு அரசனால் வளர்க்கப்பட்டுப் பராசருடன் கூடிப் பரிமள கந்தியாய் வியாசரைப் பெற்று, பிறகு சந்தனுவை மணந்து விசித்திரவீரியன் முதலிய புத்திரரைப் பெற்றனள். மகததேசத்தரசனாகியும் மகாரதனாகியுமுள்ள பிருஹத்ரதனும், பிரத்யக்ரதனும், மணிவாஹனனென்னும் குசாம்பனும், மத்வில்லனும், யதுவும் இவன் புத்திரர்கள். இவன் பட்டணத் தருகிலுள்ள சுக்திமதியெனும் நதியைக் கோலாஹலமெனும் பர்வதம் காமவேட்கையால் புருஷ வுருக்கொண்டு தடுத்தது. இதை உபரிசரவஸு காலால் உதைத்தான். அந்த உதையினாலுண்டான துவாரத்தினால் அந்நதி வெளிப்பட்டது. அந்த நதியிடம் கோலாஹல பர்வதத்திற்கு ஆணும் பெண்ணுமாகிய இரண்டு குழந்தைகள் பிறந்தன. அப் பெண்ணைச் சுக்திமதியெனும் நதியின் வேண்டுகோளால் அரசன் மனைவியாகவும் அக்குமாரனைச் சேனாபதியாகவும் வைத்துக்கொண்டான். இந்திரனிவனுக்கு ஒரு கோல் முப்பத்திரண்டு சாண் அளவுள்ளதாகக் கொடுத்தான். அதனை இவன் இந்திர விழாவாக ஆறுகஜம் உயர மிருக்கும்படி பூமியில் நாட்டி இந்திரனைப் பூஜித்தான். அவ்வாறே எல்லோரும் பூசித்தனர். இது இந்திரன் விழாவாயிற்று. இதனை எவர் செய்கின்றாரோ அவர்கள் எல்லாப் பலன்களையும் அடைவர்.

14. கலிங்கநாட்டுச் சிங்கபுரம் ஆண்ட அரசன்.

**வசுக்கள்** — அட்டவசுக்களைக் காண்க. வீஷ்டுமரைக் கொன்ற வயிரத்தால் அருச்சுநனைச் சபிக்கக் கங்கையைக் கேட்கையில் கேட்டிருந்த உலூகி தந்தையாகிய வாசுகிக்குச் சொல்ல வாசுகி நயத்தால் அவர்களை வசப்படுத்தியும் அவர்கள் பப்ரவாகனன் பாணத்தால் வருந்தவெனச் சபித்தனர்.

**வசுசேநன்** — கர்ணனுக்கு ஒரு பெயர்.

**வசுதத்தன்** — காசியில் வீரேசலிங்கத்தைப் பூசித்து இட்டசித்தி பெற்ற வைசியன்.

**வசுநன்** — இக்ஷுவாகு மரபினனாகிய புருகுற்சன் குமாரன்.

**வசுதாசன்** — வியனைக் காண்க.

**வசுதானன்** — இரண்யரோமன் அல்லது இரண்யரேதஸுக்குக் குமாரன். குசத்தீவு ஆள்வோன்.

**வசுதேவர்** — 1. சூரசேநன் புத்திரன்; உக்ரசேனனுக்கு மந்திரி; கிருஷ்ணபலராமருக்குத் தந்தை. தேவி தேவகி. கம்சன் "தேவகி வயிற்றில் உதிக்கும் கரு உன்னைக் கொலைசெய்யும்" என்ற அசரீரியைக் கேட்டுத் தேவகியைக் கொலைசெய்ய முயன்றனன். இதனை அறிந்த இவர், கம்சனை நோக்கி, 'இனி எமக்குப் பிறக்கும் புத்திரர்களை உன்னிடம் கொடுத்துவிடுகின்றோம். நீ வேண்டியபடி செய்' என்று உறுதி தவறாது நடந்தவர். இவர்க்குச் சுவாயம்பு மன்வந்தரத்தில் சுதஸ்ஸு என்று பெயர். இவர் தேவி பிரசநி. குமாரர் பிரசனிகற்பர் என்னும் விஷ்ணுவின் அவதாரம். மற்றொரு பிறப்பில் காசிபர்; பாரியை அதிதி. குமாரர் உபேந்திரர் என்பர். இவர் கண்ணனைத் தாங்கி யமுனை நதிகடந்து கோகுலஞ்சென்று அவ்விடம் மாயையைப் பெற்றிருந்த யசோதை இடத்து வைத்து மாயையைத் தேவகி இடம் சேர்த்தவர். இவர் கிருஷ்ணன் பரமபதம் எழுந்தருளியபின் அருச்சுநன் வரும் அளவும் இருந்து பரமபதம் அடைந்தவர்.

2. சூரனுக்கு மாரிஷை யிடம் பிறந்த குமாரன். பாரிகள் பவுரரி, ரோகணி.

3. மகததேசத்து அரசனாகிய தேவபூதியின் அமைச்சன்.

4. இவர் பூர்வம் காசிபருஷி. இக் காசிபர் வருணனது யாகப் பசுக்களைக் கிரகித்துக் கேட்டும் கொடாததினால்

அவன் சாபத்தாலும், பிரமன் வருணன் சொல்லக்கேட்டுக் கூறிய சாபத்தாலும், பூமியில் இடையனாகப் பிறந்து வந்தனர். இவரது தேவியாராகிய அதிதி, சுரதை என்பவர்களும் அதற் குடன்பட்டிருந் தமையால் அதிதி தேவகியாகவும், சுரதை ரோகணியாகவும் சபிக்கப்பட்டனர். இவருக்கு ஆனகதுந்துபியென்று ஒரு பெயர். இந்த அதிதிக்கு இது திதியால் வந்த சாபம். இதனைத் திதியைக் காண்க. (தே - பா.)

5. இவர் பாரியர் தேவகி, பத்ணி, ரோஹிணி, மதிரை.

**வசுதை** — மாலியின் தேவி.

**வசுத்தானம்** — ஒரு தீர்த்தம்.

**வசுந்தரி** — 1. தடமித்தன் கோயில் வேலைக்காரி.

2. கோசல நாட்டரசன் தேவி. மானனீகை யென்று வேறு பெயர்கொண்ட வாசவதத்தையின் தாய். (பெ - க.)

**வசுபதத்தன்** — கோலாகலன் என்னும் வெற்புக்கும் நதிக்கும் பிறந்த குமாரன். உபரிசரவசுவின் சேனாநாயகன்.

**வசுபூதி** — இரத்தினவலியைக் காண்க.

**வசுபூரணன்** — காசியில் வீரேசலிங்கத்தைப் பூசித்து இட்டசித்தி பெற்றவன்.

**வசுப்பிரத்தியான்** — வசிட்டருக்கு ஊர்சை இடம் உதித்த குமாரன்.

**வசுமதி** — 1. துரோணன் தேவி. பிற்பிறப்பில் யசோதையாய்க் கிருஷ்ணனைப் பெற்றவள்.

2. சௌமியனைக் காண்க.

**வசுமந்தன்** — 1. சுருதாயுக்கு ஒரு பெயர்.

2. ஒரு வேளாளன். பழனியில் தவம் இயற்றி முத்தி பெற்றவன்.

**வசுமனன்** — 1. சமதக்னிக்கு இரேணுகையிடம் உதித்த குமாரன்.

2. கோசல தேசாதிபதி. பிரகஸ்பதியிடம் தருமங் கேட்டவர்.

**வசுமன்** — அரியசுவன் குமாரன்.

**வசுமான்** — 1. வைவச்சுதமனுவின் குமாரன்.

2. (சு.) சுருதாயு குமாரன்.

3. சித்தமன் குமாரன். இவன் தன் தந்தையைப் புண்ணியவுலகம் எது என வினவி அதன் பயனுணர்ந்து சுவர்க்கமடைந்தவன். (மச்ச - புரா.)

**வசுவேமன்** — அங்கதேசாதிபதி; மாந்தாதாவிற்கு அறநூல் உணர்த்தினவன்.

**வசுஹோமன்** — அங்கதேசத்தரசன். இவன் மாந்தாதாவிற்குத் தண்டநீதி உபதேசித்தவன்.

**வசுஷேணன்** — இவன் குந்திதேவியால் ஆற்றில் விடப்பட்டு, சூதனால் ராதையெனும் அவன் தேவியிடம் வளர்ந்து இந்திரன் யாசித்தபொழுது நீங்காத கவசத்தையறுத்துத் தந்தபடியால் கர்ணன் எனும் பெயர் பெற்ற அங்கநாட்டரசன்.

**வசை** — 1. ஒரு காந்தருவப் பெண். நாரீ தீர்த்தம் காண்க.

2. மெய்வசை, இருபுறவசை, என இருவகை.

**வசோர்த்தாரை** — 1. அக்னி என்னும் வசுவின் தேவி. குமாரன் திரவிணகன்.

2. இது ஒரு புண்ணிய தீர்த்தம். The place where Alakananda has got its source, about 4 miles north of Badarinath.

**வசைகவியாண்டான்** — பாண்டி நாட்டில் சித்திரா நதிக்கரைக்கணுள்ள ஒட்டப்பிடாரம் என்னும் ஊரில் வைணவசமயத்துச் சிக்கலார் வம்சத்தில் வைகுண்டன் என்பவன் மனைவியிடத்தில் பிறந்தவர். இவர்க்குத் தாய் தந்தையர் ஆண்டான் எனப்பெயரிட்டனர். இவர் கல்வி பயிலாது உலாவித் திரிந்து கணவனுக்கஞ்சித் தாய் ஒளித்திடும் அன்னத்தையுண்டு திரிகையில் சித்தர் ஒருவர் காளிமந்திரத்தினை உபதேசிக்க அதனை உச்சரித்துத் தன்னுடன் கல்விச் சாலையிற் கற்கும் சிறுவர் தம்மைக்கண்டு கூட்டிச் செல்வரென அஞ்சி ஆண்டிருந்த காளிகோயிலிற் காளிக்குப் பின்சென்று மறைந்து மந்திரஞ் செபிக்கையில் காளி பிரத்தியக்ஷமாய் இசைவேண்டுமோ வசை வேண்டுமோவெனக் கேட்க ஆண்டான், முன்னைவினையால் வசைவேண்டுமெனக் கேட்டுப் பெற்றுத் தாம்பெற்றதை யறிய வேண்டி இக்காளிவிக்ரகத்தின் ஒருமுலை விழவும், ஆண்டுபோட்டிருந்த கொட்டகை தீயவும் பாட, அங்ஙனமேயாயது கண்டு களித்து வெளிவந்து திரிகையில் பள்ளிக்கூடத்துச் சிறுவர் இவனைப் பிடித்து உபாத்தியாயர் முன்விட அவர் கோபிக்கக் கண்டு இவன் தலை பிளக்கவெனக் கவி கூற அங்ஙனமே உபாத்தியாயர் இறந்தனர். இதைக் கண்ட உபாத்தியாயரின் குமாரன் பணிய அவனை நோக்கி எனக்கு அகப்படும் பொருளெலாந் தருவன் என்று

நீங்கித் தம்வீடு வருகையில் தமயன் பீஜந் தொங்கும்படி சுவர் வைக்கக்கண்டு பீஜ மற்று விழப்பாட அது அற்று அண்ணனி றந்தனன். இவர் குருகூரிலுள்ளார் பாடும் கவிக்குக் கவிதைகூறி, பேரையூர் பெண் மீது வசைபாடி, பட்டக்குறிச்சியில் கொடிக்கால் கரிய வசைபாடியவர். இவர் தம் பெண்சாதியும் வீடும், தம் மனைவியைக் காதலித்தவரும் அழியப்பாடி, ஒரு கலியாணத்துத் தம்மை மதியாதவனைப் பிணமாக்கி, கோளதேசத்து மன்னவனுற் சர்க்கரைப் பொதி மாதந்தோறும் பெற்று, தன் தந்தை யிறக்கக் கவிகூறி, கன்றுக்குப் பால்விடாது கறந்தவன் பொருட்டு ஒரு புராணம்பாடி, தன் விளைநிலத்தை யளக்க வந்த கணக்கனைப் பாம்புகடிக்கப் பாட, அவன் விரலிற் பாம்பு கடிக்கக்கண்டு அவ் விரலைநீக்கி வீடுசென்றது நோக்கி, அவன் மீது களிமடல்பாடி இறப்பித்து, சிந்துக்க ளஞ்சிய மென்னுங் கவிக்குத் தன் வன்மை யறிவித்துத் தூத்தி, தான்செய்த பாவத் திற்குச் சேதுஸ்நானஞ் செயவெண்ணித் தன்னிடம் விரும்பிய ஒருத்திக்கு வயிரவனையும் மாடனையும் காவல் வைத்துத் திருச்செந்தூர் சென்று அங்கு ஒருமாதை விரும்பி அவளை இடங்கேட்கையில் அசரீரி இந்தமட்டில் நிறுத்து இனி ஏதேனுஞ் செய்வையேல் இறப்பா யெனக் கேட்டுத் திரும்புகையில் நாவில் ஒரு புண்ணுண்டாகி இறந்தவர்.

**வச்சகன்** — சூரனுக்கு இளை யென்பவளிடம் பிறந்த குமாரன். பாரி மித்திரகேசி. வசுதேவன் தம்பி.

**வச்சணந்தி** — இவன் களந்தை என்னும் ஊரில் இருந்த சைநன். இவன் தன் பெயரால் குணவீரபண்டிதரைக் கொண்டு வச்சணந்திமாலை செய்து கொண்டவன்.

**வச்சணந்திமாலை** — இது செய்யுள் இலக்கணம் சொல்லுநூல். இது முதன்மொழியியல், செய்யுளியல், பொதுவியல் என மூன்று இயல்கொண்டது. குணவீரபண்டிதர் இயற்றியது. இதைச் செய்வித்தோன் வச்சணந்தி முநிவன். இது திரிபுவனதேவன் என்னும் மூன்றாங் குலோத்துங்கதேவன் அரசாட்சியில் பண்டித முநிவன் முன் அரங்கேற்றப்பட்டது.

**வச்சநாபன்** — ஒரு ரிஷி. (பா. அறு)

**வச்சப்பிரீதன்** —(சூ.) உருட்சூதன் குமாரன்.

**வச்சப்பிரீதி** — (சூ.) பலந்தன் குமாரன்.

**வச்சமித்திரன்** — சுசியேஷ்டன் குமாரன். இவன் குமாரன் நந்தகன்.

**வச்சரான்** — 1. துருவன் குமாரன். தேவி சர்வத்தி. குமாரர் இஷன், ஊர்ச்சன், சயன், சந்திரகேது, புஷ்பாருணன், வசு.

2. ஒரு இருடி. கிரேதாயுகத்தில் சிவபூசைசெய்து முத்திபெற்றவன்.

**வச்சலன்** — விச்சலதேசாதிபதி. வசவதேவரைத் தண்டநாயகராகக்கொண்டு அவரால் தனது சிங்காதனத்து அடியில் பொற்குவைபெற்று மீண்டும் இவரது பக்தியை அறியப் பிரதிமைகளைச் சிவனடியவர் போற்காட்டி வசவர் அழைக்கப் பிரதிமைகள் உயிர்பெற்றுப் புசிப்புக்கு நீங்கியது கண்டு அஞ்சினவன். இவர்தான் சிவமூர்த்திக்கு எண்ணெய்க் காப்பிட்டுத் தான் பிறகு எண்ணெயிட்டுக் கொள்கையில் ஒரு சங்கமர் வந்து தாம் சிவபூசைக்கு முத்தால் கோலம் இடல் வழக்கம் ஆதலால் ஒரு வருஷத்துக்குப் போதுமான முத்துக்கள் வேண்டும் என்றனர். வசவர் சிவனடியவரை இருக்கச்செய்து அருகு இருந்த சோளக்குவியலை நோக்க் அவை அனைத்தும் முத்தாயின. இவர் அம்முத்து அனைத்தும் அவ்வடியர்க்குக் கொடுத்து அனுப்பினவர். இவன் வசவர் தமது சபையில் இருக்கையில் ஒருத்தியைக் கைலாகு கொடுத்துத் தூக்குவதுபோல் அபிநயிக்க வசவரைக் கண்டு வினவினன். வசவர் சொன்னலாபுரத்து அபிஷேகதரிசனம் தரிசிக்கவந்த இடைச்சி சருக்கி விழுகையில் என்னை நினைத்தனள்; அப்போது அவள் விழாவண்ணம் தூக்கினேன்' என்ன அரசன் வேவுகாரரை ஏவி அவ் இடைச்சியை அழைத்து உண்மை வினவி மெய்மை உணர்ந்தனன்.

**வச்சன்** — 1. தியுமானுக்கு ஒருபெயர்.

2. சநசித்து குமாரன்.

3. குவலயாசுவனுக்கு ஒரு பெயர். அலர்க்கன் தந்தை.

4. ஒரு அசுரன். இவன் கிருஷ்ணனைச் சேங்கன்று உருவாய்க் கொலலவந்து கண்ணனால் கொலையுண்டவன்.

5. மிருகசிருங்கனைக் காண்க.

**வச்சிரகண்டன்** — அச்சுவக்கிரீவன் தம்பி. (சூளா.)

**வச்சிரகேசி** — இவன் ஒரு அசுரன். தேவர்களையும் இந்திரனையும் சிறையிட்டுவிஷ்ணு

மூர்த்தியுடன் நெடுகோள் யுத்தம் புரிந்து தோல்விபெற்றுச் சிவமூர்த்தியின் நெற்றிக்கண்ணால் இறந்தவன்.

வச்சிரகேது — பாதாள வாசியாகிய அரக்கன். இவன் குமாரர் பாதாளகேது, தாலகேது என்பவர்கள்.

வச்சிரக்கோட்டம் — காவிரிப் பூம்பட்டினத்து பூர்வத்தில் வச்சிரமிருந்த கோயில். (மணிமேகலை.)

வச்சிரசங்கர் — ருஷபதீர்த்தங்கரரின் (ச) வது பிறப்பு.

வச்சிரச்சுவாலை — கும்பகர்ணன் தேவி.

வச்சிரதந்தன் — பகதத்தன் குமாரன்.

வச்சிரதந்திரன் — இராவணன் சேநாபதியரில் ஒருவன். அங்கதனால் மேற்குவாயிலில் கொல்லப்பட்டவன். இப்பெயர் கொண்டான் ஒருவன் அநுமனால் இறந்தான்.

வச்சிரதமிஷ்டிரன் — அந்தகனாற் கொல்லப்பட்ட அரக்கன்.

வச்சிரதாடன் — சக்கிர வாளத்தரசன். (சூளா.)

வச்சிரநந்தி — இவர் ஒரு சைநகவி. இவர் தென்மதுரையில் (கி. பி. 470) இல் ஒரு தமிழ்ச்சங்கம் கூட்டியதாகத் திகம்பர தரிசனம் என்னும் சைநநூல் கூறுகிறது. அக்காலத்து நூல்களாக நாலடியார், பழமொழி முதலியன கருதப்படுகின்றன.

வச்சிரநாடு — சோணையாற்றின் கரையில் உள்ள நாடு. (சிலப்பதிகாரம்.)

வச்சிரநாபன் — 1. (சூ.) பெலஸ்தனன் குமாரன். சூரியன் அம்சம்.

2. விப்பிரசித்திக்குச் சிம்மை யிடம் உதித்த குமாரன்.

வச்சிரநாபிச் சக்கரவர்த்தி —(சைநர்) ருஷபதீர்த்தங்கரின் ஒன்பதாவது பிறப்பு.

வச்சிரபிரீதி — நபாகன் குமாரன்.

வச்சிரமகுடன் — கர்ணாடக தேசத்தைச் சார்ந்த தேசபுரச குமாரன். இவன் ஒருமுறை வேட்டை மேற்சென்று தீர்த்த மாடவந்த கர்ணாடக தேசத் தரசகுமாரியைக் கண்டு காமுற்று மந்திரியைக் கள்ளனாய்ச்சென்று அரசகுமாரியின் ஆபரணங்களைக் களவிடச் செய்து தான் சந்நியாசி வேடம் பூண்டு ஸ்மாசனத்தில் இருந்து களவாடிய பொருள்களைத் தன்வசம் கொண்டிருந்தனன். கர்ணாடக அரசன் கள்வனைப்பிடித்து ஆபரணம் ஏதென, கள்வன் அரசகுமாரனாகிய சந்நியாசியைக் காட்டினன். சந்நியாசியைக் கேட்க சந்நியாசி பூதம் கொடுத்த தென்றனன். இவ்வகையில் சந்நியாசி அரசன் வீட்டிலிருந்து அரசன் குமாரியைக் களவாடிச் சென்றனன். இது பவிஷ்ய புராணத்தில் கண்ட கதைகளில் ஒன்று. இவ்வகை வேண்டாக்கதைகள் பல இருத்தலின் அக்கதைகளை அனைத்தையும் எழுதாது விட்டேன்

வச்சிரமாலி — சண்முக சேநாவீரன்.

வச்சிரமுட்டி — மால்யவான் குமாரன். இலங்கையின் வடக்குவாசற் சேநாபதி மயிந்தனால் கொலையுண்டான்.

வச்சிரம் — ஒரு சிற்பநூல்.

வச்சிரயூகம் — பாண்டவர்கள் பீஷ்மரிடம் யுத்தம் செய்த காலத்து வகுத்த யூகம். (பா. பீஷ்.)

வச்சிரவாகு — சூரபன்மன் குமாரன். பத்துச்சிரம் உள்ளவன். இவன் வீரவாகுதேவர் இலங்கைக்குச் சென்ற காலத்து அவராற் கொலை செய்யப்பட்டவன்.

வச்சிரன் — 1. பிரமயினுடைய குமாரன்; துருவன் பேரன்; பாரியை சுவதிதி; குமாரர் புட்சிபாரன், திக்மகேது, இஷ்டன், ஊற்சன், வசு, ஜயன்.

2. கண்ணன் மரபில் மிகுந்து நின்றவன். இவனைத் தருமன் இந்திரப்பிரத்தத்தில் மணிமுடி சூட்டினன். இவன் குமாரன் பிரதிவாகு.

3. கண்ணன் பேரன். கண்ணன் முதலியோர் பரமபதம் அடைந்தபின் துவாரகையைக் காத்தவன்.

வச்சிராங்கபாண்டியன் — இவன் பூருவம் இந்திரன். சிவமூர்த்தியை வச்சிரத்தால் வீசப்போய்ப் பூமியில் பாண்டியனாய்ப் பிறந்தவன். இவன் ஒரு குதிரைமீது ஏறி வேட்டைக்குச் சென்று ஒரு புழுகுப் பூனையைத் துரத்த அது அருகில் இருந்த அருணாசலத்தைச் சுற்றி ஓடியது. அரசன் குதிரையுடன் அதைப பின் தொடர்ந்தனன். அரசன் ஏறியகுதிரையும் பூனையும் இறந்து காந்தருவராய் அரசன்முன் நிற்க அரசன் நீங்கள் யார் என நாங்கள் துருவாசர் ஆச்சிரமத்தில் இருந்த பூக்களை மிதித்து இவ்வுரு அடைந்தோம் என்று மறைந்தனர்.

வச்சிராங்கன் — 1. தைத்யன். கச்யபப்பிரசாபதியின் குமாரன். தாரகாசுரன் தந்தை. தாய் திதி.

2. திதிக்கு அநேக அசுரர்கள் பிறந்து இந்திரனால் இறந்தனர். திதி காசிபரை நோக்கித் தேவரைவெல்ல ஒரு புத்திரன் வேண்டும் என்ன அவ்வகையே வச்சிராங்கனை இவள் வயிற்றில் பிறக்கச்செய்தனர். இவ்வச்சிராங்கன் தான் இடையூறு இன்றித் தவஞ்செய்யப் பிரமனை வேண்டப் பிரமன் வச்சிராங்கி என்னும் குமாரியைச் சிருஷ்டித்துத் தந்தனன். வச்சிராங்கன் (உ0000) வருஷம் தவஞ்செய்யுங் காலத்தில் அவன் பாரியாகும் வச்சிராங்கியும் ஒருபுடை தவஞ்செய்துகொண்டிருந்தனள். இவர்கள் தவத்தைக் கெடுக்க இந்திரன் குரங்கு உருவாய் வச்சிராங்கியிடஞ் சென்று அங்கு இருந்த பொருள்களைக் கீழே தள்ளிவிட்டுப் பாம்பு உருவாய்க் கால்களைச் சுற்றிக்கொண்டும் சிலதூரமிருந்து நரி உருக்கொண்டு வந்தும் ஆச்சிரமத்தை அசுத்தமாக்கியும் மேக உருக்கொண்டு மழை பெய்தும் பின்னும் பலவிதத்தில் இடையூறு செய்துவந்தனன். இதனால் வச்சிராங்கி கோபித்துத் தான் தவஞ்செய்யும் மலையைச் சபிக்க எண்ணுகையில் பர்வதராஜன் தோன்றி இந்திரன் இவ்வகை இடையூறு செய்கின்றான் என்றனன். இது நிற்க, வச்சிராங்கனிடம் பிரமன் தோன்றி உனக்கு என்ன வரம் வேண்டும்' என்றனன். வச்சிராங்கன் 'எனக்கு அழியா உலகமும் தவத்தில் ஆவலும் வேண்டும்' என்ன, அவ்வாறே கொடுத்துமறைந்தனன். பின் வச்சிராங்கன் வச்சிராங்கியைக் காணாமல் தேடியபோது, அவளது அழுகுரலாலறிந்து 'உனக்கு என்ன, நேரிட்டது' என்றனன். பாரி 'இந்திரன் தொந்தரை செய்தனன்; அவனைச் செயிக்கப் புத்திரன் வேண்டும்' என்ன' அவ்வகை தவஞ்செய்து பிரமன் வரத்தால் தாரகாசுரனைப் பெற்றான்.

**வச்சிராங்கி** — தாரகாசுரனைப் பெற்றவள். முன்னர்க்காண்க.

**வச்சிராசுரன்** — ஒரு அரக்கன். இவன் ஒரு பட்டணத்துக் குடிகளை ஒவ்வொருவராகத் தின்றுவர மண்ணுடையானான குலாலனொருவன் அகத்தியரை எண்ணித் தவம் இயற்றி மந்திரசித்தியால் அவ்வரக்கனை அதம் செய்தனன்.

**வச்சிரை** — ஒரு அப்சரசு.

**வஞ்ச இந்திரன்** — இவன் இந்திரத்யும்மன் என்னும் மகதநாட்டரசன் தேவியாகிய அகலிகையுடன் கள்ளப்புணர்ச்சி செய்து அரசனால் அகலிகையுடன் நாட்டைவிட்டு அகற்றப்பட்டவன். (ஞானவாசிட்டம்.)

**வஞ்சகாந்தை** — இஃது ஓராறு. கந்தவதியென்னும் ஆற்றோடு கலப்பது. (பெருங்கதை.)

**வஞ்சநவிற்சியணி** — இது ஒரு காரணத்தானிகழ்ந்த சத்துவமாகிய குணத்தை மற்றொரு காரணம் கூறி மறைத்தல் எனும் அணி. இதனை வடநூலார் வியாஜோக்தியலங்காரமென்பர்.

**வஞ்சப்பழிப்பணி** — நிந்தையினால் நிந்தை தோன்றுவது. இதனை வடநூலார் வியாஜநிந்தாலங்காரமென்பர். (குவல.)

**வஞ்சி** — 1. சோராஜாக்களின் இராஜதானி. கருவூர், கொடுங்கோளூர் எனவுங் கூறுவர். கொச்சிக்கு அருகில் உள்ளது. இது செங்குட்டுவனுக்கு இராஜதானியாக இருந்தது. இதனைப் பூவாவஞ்சி, வாடாவஞ்சியெனச் சிறப்பித்தனர் இளங்கோ அடிகள். இது ஆன்பொருனை யாற்றங்கரையிலுள்ளது. (மணிமேகலை)

2. கருவூரைக் காண்க.

3. தோலாத வஞ்சியைத் தலையிலே சூடிப் பகைவர் பூமியைக் கொள்கையைக் கருதிய துறை. (பு. வெ.)

**வஞ்சித்தாழிசை**—இருசீரடி நான்குகொண்டு ஒரு பொருண்மேல் மூன்றடுக்கிவருவது (யாப். கா. செ.)

**வஞ்சித்துறை** — இருசீரடி நான்குகொண்டு தனித்து வருவது. (யாப். கா. செ.)

**வஞ்சிப்பா** — பெரும்பாலுந் தன்றளையும், சிறுபான்மை பிறதளையுந் தழுவி இருசீர் அடியாலேனும், முச்சீரடியாலேனும் மூன்று முதலிய பல அடிகளைக்கொண்டு தனிச்சொற்பெற்று அகவற் சுரிதகத்தான் முடிவதாம்.

**வஞ்சியரவம்** — வலியினையுடைய வாராலே விசித்த வீரமுரசுடனே வலிய யானை முழங்க அழகிய வாளினையுடைய சேனை கோபித்துக் கிளர்ந்ததைக் கூறும் புறத்துறை. (பு. வெ.)

**வஞ்சிவிருத்தம்** — முச்சீரடி நான்கு கொண்டது.

**வஞ்சினக்காஞ்சி** — வெய்ய கோபத்தையுடைய மன்னவன் பகைவரைத் தாழப் பண்ணுவான் வேண்டி இவ்வாறு செய்வேனெனச் சொல்லிய கூறுபாட்டைச் சொல்லியதுறை. (பு. வெ.)

**வஞ்சுளை** — ஒரு பார்ப்பனி. இவள் கணவன் விதுரன் என்போன். இவ்விதுரன் தன் மனைவியைவிட்டுத் தாசிவீட்டே கதியாகத் திரிகையில், இவள் சோரத்தொழில் செய்யத் தொடங்கினள். இதை யறிந்த கணவன் இவளை அடிக்கப்போகையில் வஞ்சுளை புருஷனைநோக்கி, 'காமம், புருஷர் பெண்கள் இருவர்க்கும் பொது; நீ என் ஆவலைத் தணிக்காததால் இவ்வகை புரிந்தேன்' எனக் கூறக்கேட்டு இரக்கப்பட்டு, 'ஆயின் உன் மனப்படி இருக்க' வெனக்கூறி, அவள் பலரிடம் சம்பாதித்த பொருள்களை வேசைகளுக்குக் கொடுத்து இறந்துபோயினன். வஞ்சுளை கைம்மையாய்க் கோகர்ணஞ்சென்று சிவதரிசனஞ் செய்து சோரஞ்செய்தவர் அடைகதியைப் புராணிகர் சொல்லக்கேட்டுப் பயந்து புராணிகரால் சிவகதை சொல்வித்துக் கேட்டுக் கைலை அடைந்து, பிராட்டிக்குப் பணிவிடை புரிந்து பிராட்டியாரால் தன் புருஷன்நிலை அறிந்து பிராட்டியார் ஏவுதலால் நாரதரைக்கொண்டு சிவகதை கேட்பித்து நற்கதி அடைவித்தவள். (பிரமோத்தர காண்டம்.)

**வட அமெரிகா** — இது சற்றேறக்குறைய கடலால் சூழப்பட்ட கண்டம். இது குடகோளார்த்தத்திலுள்ளது. வடஅமெரிகா தேசங்கள் கனடா, நியூபவுண்ட்லாண்ட், யுனைடெட் ஸ்டேட்ஸ், மெக்ஸிகோ, காடிமாலா, ஸான்ஸால்வாடர், நைகராகுவ, காஸ்டாரைகா, பிரிடிஷ் ஆண்ரோய் முதலியன மத்ய அமெரிகாவைச் சார்ந்தவை.

**வடகரைப்புலவர்** — இவர் செங்கோட்டைக்கு மேற்கிலுள்ள ஆரியன்காவில் ஐயனார் தரிசனம் பண்ணுகையில் கூறியது. "ஊராரைப் பின்சொல்லி யுற்றாரைப் பின்சொல்லி யொன்றெனினும், தாரைப் பின்சொல்லிச் சற்றுமுகம் பாராரைப் பின்சொல்லிப் பார்த்தாரைப் பின்சொல்லிப் பாழ்ந்தகும்பிக், காராரைப் பின்சொல்லுவேன் திருவாரியங் காவையனே."

**வடகன்** — கோரன் குமாரன்.

**வடக்குத் திருவீதிப்பிள்ளை** — நடாதூரம்மாளை ஆச்ரயித்தவர். இவர்க்கு ஸ்ரீ கிருஷ்ணபாதர் என்றும் பெயருண்டு. நம்பிள்ளை திருவடிகளை யாச்ரயித்தவர் எனவும் கூறுவர். திருவாய்மொழிக்கு (கூசுOOO) ப்படி வியாக்கியானம் செய்தவர். இவர் குமாரர் பிள்ளை லோகாசாரியர்.

**வடசொல்** — ஆரியமொழி தமிழில் வழங்குவது.

**வடதிருவாலவாய்** — இது இடைக்காடருடைய பிணக்கைத் தீர்க்கும்பொருட்டுச் சோமசுந்தரக்கடவுள் எழுந்தருளி யிருந்த இடம். இக்கோயில் இக்காலத்துப் பழைய சொக்கநாதர் கோயிலென வழங்குகின்றது. (திருவிளை.)

**வடதுருவம்** — இது பூமியின் மேற்பரப்பு சந்திக்கும் இடம். தென்துருவம் பூமியின் கீழ்பரப்புச் சந்திக்கும் இடம்.

**வடத்தானம்** — பாரதர் படை இருந்தவிடம்.

**வடபெருங்கோயில் உடையான்** — ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளிய பெருமாளுக்குப் பெயர்.

**வடமதுரை** — சத்த முத்தித் தலங்களுள் ஒன்று.

**வடமநெடுந்தத்தனார்** — நாலை கிழவனைப் பாடிய புலவர். இவரை வடநெடுந் தத்தனார் எனவும், வடமநெடுந்தச்சனார் எனவும் கூறுவர். (புற. நா.)

**வடமலையப்பப்பிள்ளை** — இவர் சோழநாட்டுச் சீரங்கத்தை யடுத்த கிராமவாசி. வேளாளகுலம் என்பர். இவரது ஐந்தாம் வயதில் தாய்தந்தையரிறக்க இவரது சிறிய தந்தை இவரை வளர்த்து வந்தனர். இவர் சிறிய தந்தை தம்மிடம் வேறுபட்ட மனங்கொள்ளக்கண்டு அவரறியாது நீங்கி நெடுந்தூரஞ்சென்றுறங்க ஒரு அரவம் இவர்க்கு இனி துன்பநீங்க நிழல் செய்தது. இதனை அவ்வழிவந்த தாதாசாரியர் கண்டு இவரை அழைத்துச்சென்று இவரது சுபலக்ஷணங்களால் அரசராவரென வெண்ணிக் கற்பித்து அக்காலத்தரசனும் தம் மாணாக்கனுமாகிய சொக்கநாத நாயக்கன் ஐயரிடம் ஒப்புவிக்க, அவன் இவரை உயர் பதவியில் நிறுத்தி ஐயன் என்னும் பட்டமும் அளித்துத் திருநெல்வேலியை யாளச்செய்தனன். இவர் ஆண்டுவருகையில் போர்த்துகேசியர் திருச்செந்தூர் புகுந்து திருக்கோயிலின் திருவாபரணங்களைக் கைக்கொண்டு ஆறுமுகப் பெருமானையும் தூக்கிப் படகிலேற்றிச் சென்றனர். அவ்வாறு செல்கையில் சுழல்காற்றுப் படகை மோத அஞ்சிக் குமாரக்கடவுளைக் கடலிலெறிந்து சென்றனர். குமாரக்கடவுள் பிள்ளையின் கனவிற் கூற, பிள்ளை சென்று விக்ரகமூர்த்தியை யெடுத்துக் கும்பாபிஷேகப் பிரதிஷ்டை செய்வித்தனர். இவர் காலம்

கி. பி. 1706 என்பர். இவர் இயற்றியவை ...ச்சபுராணம், நானூற்றுக்கோவை, நாற் ...வண்ணம், நீரேத்தலபுராணம் முதலி யன.

வடமவண்ணக்கா — இவர் கடைச்சங்கமரு விய புலவர்களில் ஒருவர். இவர் வடக்கிலி ருந்துவந்த நோட்டக்காரர் வகுப்பைச்சேர் ந்தவர்போலும்; இவர் வடமவண்ணக்கன் பேரிசாத்தன் எனவும் கூறப்படுவர். (குறு. அக.)

வடமவண்ணக்கன் தாமோதரனூர் — பிட் டங்கொற்றனைப் பாடியவர். (புற. நா.)

வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனூர்—தேர் வண்மலையனைப் பாடியவர். இவர்க்கு வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தன் என வும் பெயர் கூறுவர். (புறநா. அகநா.)

வடமவண்ணக்கன் பேரிசாத்தனூர் — பேரி சாத்தனுரைக் காண்க.

வடமோதங்கிழார் — ஒரு தமிழ்ப்புலவர்; கடைச்சங்க மருவியவர். (புறநா, அகநா.)

வடவை — 1. கடலின் வடப்பக்கத்தில் இருக்கும் ஊழித் தீ. பகன் தான்செய்த தவாக்னியைப் பிதுர்க்கள் கட்டளைப்படி கடலில்விட அது பெட்டைக்குதிரை உருக் கொண்டு தங்கியது.

2. சூரியமண்டலத்தைத் தேவர் சாணை யில் பிடிக்கையில் தெறித்த தீப்பொறி களை விச்வகர்மன் சேர்த்துக் கடனீரை யடக்கக் கடலிலிட்டனன் என்பது விரத சூடாமணி.

வடிம்பலம்ப நின்ற பாண்டியன் — இவன் பஃறுளியாற்றை உண்டாக்கிக் கடற்றெய் வத்திற்கு விழாச் செய்த பாண்டியன். (புற. நா.)

வடிவேற்கிள்ளி — ஒரு சோழன். (மணி மேகலை.)

வடுகதேவர் — 1. இவர் ஒருமுகம், பத்துக் காம் உடையராய்க் கரத்துச்சூலம், வாள், அங்குசம், அபயம், வரதம், கபாலம், நாகம், பரிகை, பாசம், தண்டம்கொண்டு அருள் மூர்த்தியாய் இருக்கும் ஸ்ரீகண்டர்.

2. பிரமதேவன் செருக்கடைந்த கால த்து அவர் சிரம் ஐந்துள் நடுவிலிருந்த சிரத்தை நகத்தாற் கிள்ளியெறிந்த சிவன் திருவுரு.

வடுகநம்பி—இவர் சாளக்கிராமத்தில் உடை யவர் திருவடியை ஆச்ரயித்து அவர் திரு வடித் தீர்த்தம் கொண்டவர். எழுபத்து நான்கு சிம்மாசனுதிபதிகளில் ஒருவர் யதிராஜ விபவம் என்னும் கிரந்தம் செய் தவர். வடுகநம்பி உடையவர் திருவடி களது உபாயோபேயமென் றத்யவஸித்து அவர் திருவடிகளைத் திருவாராதனம் பண் ணிக்கொண்டு போதுவர். உடையவர் திருச்சுரபிக்குப் புல் லிடுவிக்கையும், எண் ணெய்க் காப்பிடுதலும் கைங்கர்யம். ஒரு நாள் பிரயாண கதியிலே உடையவர் திரு வாராதனத்தையும், தம்முடைய திருவாரா தனத்தையும் சேர வெழுந்தருளப்பண் ணிக்கொண்டு வர, இதைக்கண்டு உடைய வர், "வடுகா! ஈதென்ன செய்தாய்" என்ன; நம்பியும், "உங்கள் தேவரில் எங்கள்தேவர்க் கென்குறை" என்று விண் ணப்பஞ் செய்தார். வடுகநம்பி உடையவ ருடனே பெருமாளை சேவிக்க எழுந் தருளினர். இதைக்கண்டு உடையவரும் "வடுகா! பெருமாள் திருக்கண்ணழகைப் பாராய்" என்ன; வடுகநம்பியும், பெரு மாள் திருக்கண்ணழகையும், உடையவர் திருக்கண்ணழகையும் ஸேவித்து (என்ன முதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுவே) என்று அருளிச் செய்த னர். வடுகநம்பி உடையவருக்குப் பால முது காய்ச்சா நிற்கச்செய்தே பெரிய திருநாளுக்குப் பெருமாள் உடுத்து முடித் துப் புறப்பட்டருளி வாசலிலே எழுந் தருள; உடையவர் புறப்பட்டுப் பெரு மாளை ஸேவித்து, "வடுகா! பெருமாளை ஸேவிக்க வா" வென்றழைக்க, வடுகநம்பி யும் அடியேன் உம்முடைய பெருமாள் ஸேவிக்க வந்தால் என்னுடைய பெருமா ளுக்குப் பாலமுது கும்பிப் போங்காணும், இத்தை விட்டுவரப் போகாது காணென்று விண்ணப்பஞ் செய்தார். வடுகநம்பி உடை யவர் ஸ்ரீபாத தீர்த்த மல்லது வேறொரு வர் ஸ்ரீபாத தீர்த்தங் கொள்ளார். உடைய வர் ஸ்ரீபாத தீர்த்தத்தை ஸ்ரீ ஸாளக்ராமத் திலே சேர்த்துச் சேமித்துவைத்து, தமக் கந்தரங்கமான ஸ்ரீவைஷ்ணவர்களை யழை த்து, சிறந்ததனமிது, வருந்தியும் பேணிக் கொண்டு போருங்களென்று அடைக்கல மாகக் காட்டிக்கொடுத் தருளினவர். (குரு பரம்பரை)

வடுகநாததேசிகர்—1. புள்ளிருக்குவேளூர்ப் புராணம் பாடியவர். சுத்த சைவர்.

2. இலக்கண விளக்க மியற்றிய வைத் தியநாத தேசிகரின் புதல்வரு ளொருவர். தென்திரு முல்லைவாயிற் புராண மியற்றிய

வர். 'வடுகன் வாய்ச்சொல்லென்றானவை சொல்லாரே' என்று பாடியவர்.

**வடுகநாத முதலியார்** — இவர் தொண்டைநாட்டு வாயற்பதியில் இருந்தவர். இவர் தம் சகோதரர் இறந்துபோன காலத்து ஒரு புலவரின் வரவுகேட்டுப் பிணத்தை மூடிப் புலவரை எதிர்கொண்டு உபசரித்துத் 'தன்னுடன் கூடப் பிறந்தவருந் துணைத் தம்பியுயி, ரங்கிலை மாண்டது தோன்றாமல் மூடிவைத் தன்னமிட்டான், மன்னவர் போற்றிட வாழ்செங் கலங்கை வடுகனுக்குக், கன்னனுஞ் சோமனுமோ விணையாகக் கழறுவதே' என்று கவிபாடப் பெற்றவர். இவர் குமாரரும் அவ்வகை மனைவியார் இறந்தகாலத்து ஒரு புலவர் வந்து 'மூந்த இளையோன் மாள முத்தமிழோர்க் கன்னமிட்ட, வந்த வடுகன் மகனால் - வந்தென், தலைக்கலியா ணத்துக்கே தான்பிணத்தை மூடி, யிலக்கணமாச் செய்குவைநீ யே' என்ன, அப்புலவன் சொற்படி கலியாணம் நடத்திவைத்தவர்

**வடுகிற்தூரியகால்கள்** — (கச). (க) சுற்றல், (உ) எறிதல், (ங) உடைத்தல், (ச) ஒட்டுதல், (ரு) கட்டுதல், (சு) வெட்டுதல், (எ) போக்கல், (அ) நீக்கல், (கூ) முறுக்கல், (க0) அலுக்கல், (கக) வீசல், (கஉ) குடுப்புக்கால், (கங) கத்திரிகைக்கால், (கச) கூட்டுதல் முதலியவாம்.

**வட்டெழுத்து** — பழைய தமிழ் எழுத்துக்கள். இது வளைத்தெழுதப்படுவதால் இப்பெயர் பெற்றது.

**வணங்கத்தகா இடங்கள்** — பெரியார் மனையகத்தும், தேவர் ஆலயத்தும், தெய்வ விழாவகத்தும், அரசர் ஊர்வலம் வரும் போதும் குரவரை வணங்கல் கூடாது.

**வணிகமல்லையர்** — வைசியர் குலத்து உதித்தவர். சிவதரிசனம் இலாது புசியாதவர். சிவதரிசனத்துக்குத் தடை நேருமாயின் விரதம் இருப்பவர். இவரும் இவரது மைத்துனரும் வர்த்தகத்தின் பொருட்டு வேற்றூர்க்குச் சென்றனர். அந்த இடத்தில் சிவாலயம் இலாமையால் மல்லையர் பசியால் வருந்துவதை மைத்துனர் அறிந்து தாம் எடுத்துச்சென்ற வெள்ளத்தை (மரக்கால்) அருகு இருந்த புதரில் கவிழ்த்து மல்லையரைப் பார்த்து இவ்விடம் இருக்கும் சோலையருகில் சிவலிங்கம் கண்டேன் என்று தீபமெடுத்துச் சென்று காட்ட, மல்லையர் உண்மையென நம்பி மகிழ்ந்து பிரதக்ஷிண நமஸ்காராதி செய்து மீண்டு புசிப்பருந்தி வார்த்தையாடுகையில் மைத்துனர் தாம் நடத்தியதைக்கூற மல்லையர் கோபித்து மைத்துனருடன் தீபங்கொண்டு அவ்விடஞ் சென்று காண, வெள்ளமே சிவலிங்க உருவாய் இருக்கக்கண்டு களித்தவர். அச்சிவ மூர்த்திக்கு வெள்ளேசுரர் என்று பெயர்.

**வணிகர்குணம்** — (அ) தனிமையாற்றல், முனிவிலனுதல், இடனறிந்தொழுகல், பொழுதொடுபுணர்தல், உறுவதுதெரிதல், இறுவதஞ்சாமை, ஈட்டல், பகுத்தல்.

**வணிடர்** — கைக்காயிரம் பொன்னுக்கு இராஜசேவைசெய்து உடையவர் மடத்திற்குக் கைவழக்கஞ் செய்தவர்.

**வண்டு** — இது வாயில் அரும்பொத்த பற்களையுடையது. இதனால் இது உணவைத் துண்டித் துண்ணும். இது மாம்சபக்ஷணி; மரப்பட்டைகளையும் தின்னும்.

**வண்டுகள்** — இவற்றின் மேற்றோல் உறுதியாய் ஓடுபோல் இருக்கும். இவை எலும்பற்ற பிராணி. உடம்பின் ஒவ்வொருபாகமும் வளையங்கள்போல் இழுத்தால் வரக்கூடியதும் சுருக்கினால் சுருங்குவதுமாயுள்ளன. இவ்வளையங்கள் தலையில் ஒன்றும், மார்பில் மூன்றும் தேகத்தில் ஒன்பதுமாகப் பதின்மூன்றுள்ளன. இவற்றிற்குக் கண்கள், மீசை, வாய் முதலியன தலையில் உண்டு; கண்கள் பல. இவற்றின் உணர்ச்சிக் கருவிகள் முகத்தில் மீசையொத்த ரோமங்களே. மார்பில் கால்களிணைக்கப்பட்டுள்ளன. இக்கால்கள் பக்கத்திற்குப் பக்கம் மும்மூன்றாய் ஒரே வரிசையாக ஆறு உண்டு. இரக்கைகள் இரண்டு. இவை இரண்டும் மேல்மூடிகளால் காக்கப்பட்டவை. மேல்மூடி இரக்கைபோல் காணப்படினும் இரக்கையன்று. கால்களின் நுனியில் மயிர்கள் உண்டு. இவற்றால் மகரந்தங்களைக்கொண்டு செல்கின்றன. இவற்றிற்குச் சுவாசாசயமில்லை. தோலிணைப்பிலுள்ள துவாரங்களால் மூச்சுவிடும். இத்துவாரங்களிருப்பதால்தான் பூச்சிகள் இலேசாய்ப் பறக்கின்றன. இவை இடத்தின் வேறுபாட்டால் பல நிறம் பெறும். இவை தமது வாயால் தேன், மாம்சம், புல், தான்யம் முதலியவற்றைத்தின்று ஜீவிக்கின்றன.

**வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா** — ஒரு தரவு, மூன்று தாழிசை, அராகம், அம்போ

தரங்கம், தனிச்சொல், சரிதகம், என்ற இந்த ஆறு உறுப்புக்களும் ஒன்றன்பின் ஒன்ருகக் கொண்டுவருவது. (யாப்பு-இ.)

வண்ணக்கஞ்சாத்தனர் — கடைச்சங்கத்துப் புலவருள் ஒருவர். (திருவள்ளுவமாலை.)

வண்ணக்கமகருஷி கோத்ரன் — திருக்கடையூரில் மார்க்கண்டர் பொருட்டுச் சிவமூர்த்தி யமனை உதைத்தகாலத்து யமனைத் தூக்கிவிட்டு அருள்பெற்றவன்.

வண்ணக்களஞ்சியப் புலவர் — வண்ணம் பாடுவதில் சாமர்த்தியமான ஒரு புலவர்.

வண்ணக்கன் சோருமருந்துமானர் — நாணய சோதகராகிய இவர் குறிஞ்சித்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடலில் தலைமகன் இரவில் வரும் நெறியின் ஏதங்கூறிய பகுதி வியப்பைக் கொடுக்குந் தன்மையது. இவர் பாடியது நற். (உ௫எ)ம் பாட்டு.

வண்ணப்புறக்கந்தரத்தனர்—இவரதுஇயற்பெயர் கந்தரத்தன் என்பது. இவரை ஏனைக் கந்தரத்தனரின் வேறுபடுத்த வேண்டி இவரது பாடலில் "வண்ணப் புறவின் செங்காற் சேவல்" என்ற அடியில் புறவின் வண்ணப்புறவு என்ற சொற்சிறப்பு நோக்கி அச் சொல்லையே இவர்க்கு அடைமொழியாகக் கொடுக்கப் பெற்றவர். நற். (எக). பாலையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடலில் செவிலி மனையிருந்து வருந்திய பகுதி மிக்க சுவையுடையதா யிருக்கும். (அகம் சஈ). இவர் பாடியனவாக முன்காட்டிய இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

வண்ணப்புறக்கல்லாடனர் — கடைச்சங்க மருவிய புலவர். (அகநானூறு.)

வண்ணாத்திப் பூச்சி — இது முதலில் புழுப் போவிருந்து பின் மாறி இறக்கைகளையடைந்து வெளிவரும். இவற்றிற்கு ஊசிபோல் நீண்ட துதிக்கையுண்டு. அதனல் பூவிலுள்ள தேனை யுறுஞ்சிச் சிவிக்கும்.

வண்ணான் — 1. வைசியன் பிராமணஸ்திரீயைப் புணரப்பிறந்தவன். பின்னும், சான்ருன் பிராமணஸ்திரீயைப் புணரப் பிறந்தவன். இந்த இனத்தில் ஒருவன் சீதையைப் பழிகூறி அவளை மீண்டும் காட்டிற்குப்போகக் காரணமானவன்.

2. இவர்கள் ஊரில் துணி வெளுத்துச் சீவனம் செய்வோர். இவர்கள் தாழ்ந்த ஜாதியில் ஒருவராக எண்ணப்பட்டவர்கள். வழக்கத்தில் இவர்கள் அம்பட்டருக்குத் தாழ்ந்தவர்கள். இவருள் ஒரு வகையினர் பறையர்க்கு வெளுத்தலால் பொதர வண்ணான் எனப் பெயர்பெற்று மற்றவரினுந் தாழ்ந்தவராவர். இவர்கள் பாண்டிய வண்ணான், தமிழ வண்ணான், வடுகு வண்ணான், துலுக்கவண்ணான் எனப் பாகுபடுவர். இவர்கள் கல்யாணத்தில் நாத்தனர் பெண் கழுத்தில் தாலி கட்டுவது வழக்கம். இவர்கள் குலதேவதை குருநாதன். இவர்கள் தங்களை ஈர்கோலி வேளாளர் எனவும், ரஜகன் காத்தவராயன் வம்சம் எனவும் கூறுவர். இவர்கள் இந்தியர் வீடுகளில் சுபாசுபங்களில் வேலை செய்து கட்டளை பெறுவர். இவர்களுக்குக் கிராமங்களில் மானியம் உண்டு. குடியானவர் வீடுகளில் இரண்டு வேளையும் அன்னம் எடுத்துண்பர்.

வண்ணான் கருவிகள் — (7) தப்புக்கல், வெள்ளாவி அடுப்பு, நீர்ச்சால், உழமண், இஸ்திரிபொட்டி, குறடு, குறியிடும் பால்.

வதரிகாச்சிரமம் — இது பலவகைப்பட்ட பூங்கொடிகளாலும், பழங்கள், புஷ்பங்கள், முதலியவற்ருலும், அலங்கரிக்கப் பெற்றதும், ஆறுகளும், அருவிகளும் கூடியுள்ளதும், புண்ணியதீர்த்தங்களால் விளங்குவதும், தேவாலயங்கள் நிரம்பியுள்ளதுமான இடம். இது கலிதோஷத்தைப் போக்குவதற்குக் காரணமானது. கெடாத நற்பயனுக்கு ஏதுவானது. இங்கு நரனுடன் நாராயணன் வசிக்கின்ருன். இவ்விடத்தில் கொடுக்கப்படும் தானமும், செபிக்கப்படும் மந்திரமும் பெரும்பலனைத் தருகின்றன. இவ்விடத்துக் கங்கை இருக்கிறது. இவ்விடத்துப் பிதுருகருமஞ் செய்கிறவன் எல்லாப் பிதுருக்களையும் நற்கதியிற் சேர்த்தவனுகிருன். இது தேவகாந்தர்வர்களால் விரும்பப்பட்டது.

வதனரம்பம் — திருச்செந்தூரில் உள்ள தீர்த்தம்.

வதானியமுனிவன் — அட்டகோணகருஷிக்குப் பெண் கொடுத்தவன்.

வதுசரை—ஒருநதி. இது பிருகுமுனிவர் மனைவியைப் புலோமன் எனும் அரக்கன் எடுக்கையில் அவள் அழுத கண்ணீரால் உண்டான நதி. இப்பெயர் பிரமனல் இடப்பட்டது. இதற்கு வதூசரை எனவும் பெயர்.

வதுவாதிபராசன் — அகத்தியர் வந்து பொருள் கேட்ட காலையில் பொக்கிஷத்தில் பொருள் இலாது குறையிரந்த அரசன்.

வதுவை — தக்ஷன் குமாரி. தருமன் தேவி.
வதூசரை — வதுசரையைக் காண்க.
வத்சந்திரன் — பனந்தன் குமாரன். இவன் அரசனாய் இந்திரனுக்குச் சத்துருவாகும் குசம்பனைச் சங்கரித்துச் சௌநந்தையை மணந்தனன். இவன் அரசாளுகையில் தன் தந்தையின் நண்பனாகிய விரோதன் என்னும் வேறொரு அரசனுக்குச் சுநீதி சுமதி என்னும் குமாரரும் முதாவதி என்னுங் குமாரியும் பிறந்தனர். இந்த வத்சந்திரன் ஒருநாள் வேட்டைக்குச் சென்று சுவிரதன் என்னும் முநிவன் ஆச்சிரமத்துக்கு அருகில் ஒராழமான பிலம் இருக்கக்கண்டு அம்முநிவரை அதன் வரலாறு வினவினன். முநிவர் 'அரசனே! உனக்கு உன் இராச்சியத்தில் நடக்கும் செய்திகள் ஒன்றும் தெரியவில்லை; ஆயினும் அதன் வரலாறு கூறுகின்றேன் கேள். பாதாளத்தில் குசம்பன் என்னும் அரக்கன் ஒருவன் இருக்கின்றான். அவன் துவட்டாவிடம் இருப்புலக்கை பெற்றுத் தேவர் முதலியவரை வருத்தி யாகாதி கிருத்தியங்களை நாசமாக்கித் தானும் தன் சேனைகளும் வர அநேக வழிகளை உண்டாக்கினான். அவற்றுள் நீ கண்ட பிலம் அவன் இருக்கைக்குப் போம்வழி. அவனிடம் இருக்கும் இருப்புலக்கையை ஒரு பெண் தொடுவாளாயின் அதனது வலிகெடும். இது நிற்க, விரோதன் பெண்ணாகிய முதாவதியை இவ்வரக்கன் எடுத்துப் பாதாளத்திற் சென்றனன். இதை அறிந்த அவள் சகோதரர் சுநீதி சுமதி என்பவர்கள் அவனுடன் யுத்தஞ் செய்து அவனால் சிறைபட்டனர். விரோதன் இவர்களை யார் விடுவிக்கிறார்களோ அவர்களுக்குத் தன் குமாரியைத் தருவதுடன் தன் இராச்சியத்தில் பாதியைத் தருவதாகவும் பறை யறைந்திருக்கின்றனன்' எனக் கூறக் கேட்டு, விரோதனைக் கண்டு பேசிப் பாதாளத்தில் அரக்கனிடம் யுத்தஞ் செய்யச் சென்றனன். வத்சந்திரன் தம்மை விடுவிக்க வருவதைக்கேட்ட முதாவதி இருப்புலக்கையைப் பெண்கள் தீண்டின் அதன் வலிகெடும் என்பது அறிந்தவளாதலால் அவனுடன் களித்து இருப்பவள்போல் உலக்கையைத் தீண்டி அது பயன்படாது போகச் செய்தனள். அரக்கன் யுத்தத்தில் தோற்று இறந்தனன். வத்சந்திரன் முதாவதியையும் அவள் சகோதரரையும் விடுவித்து விரோதனிடம் அனுப்பினன். விரோதன் தன்குமாரி முதாவதி என்னும் பெயர் உள்ள சுநந்தையை மணப்பித்து இராச்சியத்தை அளிக்கத் தேவர் மகிழ்ந்து வாழ்த்தினர். இவ்வாறு வத்சந்திரன் அரசாண்டு. பிராம்சு, பிரவீரன், சௌரி, சுசக்கிரன், விக்கிரமன், கிரமன், பலன், பலாகன், சண்டன், பிரசண்டன், சண்டவிக்கிரமன் முதலிய குமாரரைப் பெற்றனன். இவர்களில் மூத்தவனாகிய பிராம்சு அரசாண்டு அவன் குமாரன் பிரசைக்கு அரசளித்தனன். பிரசை அரசளித்துத் தன் புத்திரர் கனி, சௌரி, உதாவசு, சுநயன், மகாரதன் முதலிய புத்திரருள் கனிக்கு அரசளித்தனன். (மார்க்கண்டேயம்.)
வத்தவநாடு — (வத்ஸ தேசம்) இதன் தலைநகர் கௌசாம்பி; இதற்குத் தலைவன் உதயணன். வச்சமெனவும், வத்தமெனவும் வழங்கும். (பெ. க.)
வத்தவன் — வத்ஸராஜனாகிய உதயணன். (மணிமேகலை.)
வத்துவித்யாபதி — சிற்பநூல்களில் ஒன்று.
வநாயு — இது 1. ஒருதேசம் (Aralia)
2. தநுபுத்திரன். (பா. ஆதி.)
3. புரூரவன் புத்திரன். (பா. ஆதி.)
வந்தி — 1. ஒரு இருடி. இவருடன் அஷ்டகோண ருஷி ஜநகருடைய யாகசாலையில் வாதிட்டுச் செயம்பெற்றனர்.
2. ஒரு மூதாட்டி. மதுரையில் பிட்டு வாணிபஞ்செய்து இறைவனை மண்சுமப்பித்துப் பேறுபெற்றவள்.
3. வருணபுத்திரன்.
வந்திகர் — ஒரு வேதவித். இவர் அட்டகோண மகருஷியின் பிதாவாகிய அநேக பக்தருடன் வாதிட்டு வெற்றியடைந்தனர்.
வந்தை — 1. ஒரு தெய்வப்பெண். தேவேந்திரன் உத்தியானவனத்துத் தவநிலையில் இருந்த முநிவரைக் காதலித்துச் சௌபத்திர தீர்த்தத்து முதலையாக இருந்து அருச்சுனனால் சாபநீக்கம் அடைந்தவள். இவளுடன் இவள் தோழியாகிய சௌரபேயி, வந்தை, சமீசி, லவிதை முதலியோரும் அத்தீர்த்தத்தில் முதலைகளாய் இருந்தனர். இத்தீர்த்தம் பிறகு நாரிதீர்த்தம் எனப்பட்டது.
2. மேல்சொன்னவளுக்குத் தோழி.
வந்நி — 1. பாண்டவர்கள் வனவாசத்தில் தங்கள் ஆயுதங்களை இதன்மீது வைத்துச் சர்ப்பங்களாக அபிமந்தரித்துச் சென்ற விருட்சம். (பா. வன.)

2\. ஒரு மரம். இது அக்னிக்கு இடங் கொடுத்தது. (பா. சல்லி.)

**வபிருத்தியர்** — பாதகண்டம் ஆண்ட பூர்வ அரச சாதிகளில் ஒன்று.

**வபு** — ஒரு அப்சரசு. தருமபக்ஷிகளைக் காண்க.

**வபுத்திரந்தன்** — ஏதாகரன் புதல்வன். இவன் புத்திரன் சித்திரசேநன்.

**வபுஷ்டமை** — இந்திரனைக் காண்க.

**வபுஷ்டை** — ஜநமேஜயன் தேவி. குமாரன் சுதாநீகன்.

**வபுஷ்மந்தன்** — 1. பிரியவிரதன் குமாரன்.
2\. தமன் (4) ஐக் காண்க.

**வபுஸ்ஸு** — ஒரு அப்சரஸு. இவள் நாரதர் சொற்கேட்டுத் தவஞ்செய்துகொண்டு இருந்து துர்வாசமுநிக்கு இடையூறு செய்து பக்ஷியாகச் சபிக்கப்பட்டவள்.

**வம்சகர்** — ஈசானமுதல் நிருதி அளவும் ஆக்நேயம் முதல் வாயு அளவும் உள்ள தேவதைகள். இவர்கள் துற்சயதூர்த்தா எனப்படுவர்.

**வம்சதுல்மதீர்த்தம்** — பாண்டவர்கள் வனவாசத்தி லாடிய தீர்த்தங்களில் ஒன்று. A sacred reservoir (Kund) on the table-land of Amarakantaka, which is situated, about four miles and a half from Narbuda the source of the first fall of the Narbuda.

**வம்சசிரோமணி பாண்டியன்** — பாண்டிய வம்சசேன பாண்டியன் குமாரன்.

**வம்சத்துவச பாண்டியன்** — பிரதாபசூரிய பாண்டியன் குமாரன்.

**வம்சவிபூஷண பாண்டியன்** — குலத்துவசபாண்டியனுக்குக் குமாரன்.

**வம்சவிவர்த்தனன்** — சோமகாந்தன் மகன். சோமகாந்தனைக் காண்க.

**வயது அறிதல்** — யுகபரிமாணத்திற் கூறிய பரிமாணப்படி சதுர்யுகம் (௨000) கொண்டது பிரமனுக்குப் பரமாயுள். மனித அளவை கொண்ட மகாயுகம் (௧ ) சென்றால் ஒரு மன்வந்தரம். மன்வந்தரம் (௭௪) சென்றால் இந்திரனுக்கு ராஜ்யம். இவ்வகை இந்திராராஜ்யம் (௨௭0) சென்றது இந்திரனுக்கு ஆயுள். மனுடனுக்கு வயது (௧00). எருதிற்கும் பசுவிற்கும் வயது(௨0). எருமைக்கு வயது (௩0). குதிரைக்கு வயது (௩௨). ஆட்டிற்கு வயது (௧௨). நாய்க்கு வயது (௧௫). யானைக்கு (௧00). ஒட்டகத்திற்கு வயது (௭௩). பக்ஷிக்கு இவ்வளவென்று துணிந்து கூறவில்லை. பாம்பிற்கு வயது (௧௨0).

**வயந்தகன்** — இவன் உதயனனுடைய மந்திரிகளுள் ஒருவன்; உயிர்த்தோழன்; சாதியால் அந்தணன்; வில்வித்தை முதலிய பல கலைகளில் வல்லவன்; அவனுடைய குறிப்பறிந்து நடந்து மதிப்புப்பெற்றவன்; பகைவன் விடுத்த மாயயானையைத் தன்னுடைய யானையாக நினைத்து அதைப் பற்றிக்கொணர்தற்குப் புறப்பட்ட உதயனனை நோக்கி நிமித்தம் நன்றாக இல்லாமையால் புறப்படவேண்டாம் என்று தடுத்தவன். அதனருகிற் சென்று அதனுள்ளே யிருந்தும், புறத்தேயிருந்தும், போர்செய்தற்கு வந்தவீரரோடு போர் செய்ததன்றி அவர்கள் கையில் அகப்பட்ட உதயனன் கொடுத்த ஓலையைக் கொண்டு போய் யூகியிடங் கொடுத்து நிகழ்ந்தவற்றைச் சொல்லி, மேலே நிகழ்த்த வேண்டியவற்றை விரைவில் நிகழ்த்தும்படி அவனை ஊக்கியவன்; மிக்க முயற்சியுடையவன்; உதயனனோடு இடைவிடாமலிருந்து உதவியவன்; அவன் உஞ்சை நகரஞ் சென்றபின் யூகி முதலியவர்கள் போலவே வேறு வேடம்பூண்டு அந்நகர் சென்று பிரச்சோதனனுடைய குமாரர்களுடன் சேர்ந்து வில்வித்தை முதலியவற்றைக் கற்கும் மாணாக்கன் போலிருந்து அங்கே நடப்பனவற்றை அறிந்தறிந்து அவ்வப் பொழுது யூகிக்குச் சொல்லி யனுப்பியவன். உதயனனுக்குப் பணிபுரிந்து ஒழுகும்படி பாலகுமாரனால் நியமிக்கப்பெற்றவன். யூகி சொல்லியனுப்புவனவற்றையும் அவ்வப்பொழுது உதயனனுக்குத் தெரிவித்து நிறைவேற்றியவன். பிடி வீழ்ந்தபின்பு காட்டில் வாசவதத்தையோடு தனித்துத் தங்கிய அவனுடைய துன்பத்தைப் போக்குதற்குத் தனியே இருளிற் சென்று புட்ப நகரிலிருந்து சேனைகளை அழைத்துவந்து இடையே வேடர்களால் அவனுக்கு உண்டான துன்பத்தைப்போக்கிச் சயந்திநகரை அடையச் செய்தவன். இப்படியேயுள்ள இவன் வரலாறுகள் மிகப் பல. உதயனனைவிட்டு ஒருபொழுதும் பிரிந்தவனல்லன்; ஒரு சமயம் பிரிந்தபொழுது "கன்றுழி கறவையிற் சென்று" என்றதனால் அவனை விட்டுப் பிரிதல் இவனுக்கு மிக வருத்தத்தை யுண்டுபண்ணுமென்று தெரிகிறது. பிடிமீது இராவிற்

சென்றபொழுது நாழிகையைத் தெரிந்து கொண்டானென்றதனுல் வானசாஸ்திரத் திலும் வல்லவனென்று தெரிகின்றது. நல்ல பயனைத் தரும் நகரங்கள் பதினொன்றை இவனுக்கு விருத்தியாகக் கொடுத்த தன்றி உதயனன் நாடோறும் ஆயிரம் பொன்னும் கொடுப்பானுகி எப்போதும் தன் உடனிருக்கும்படியும் செய்தான். (பெ. கதை.)

**வயந்தசேனை** — 1. சசியின் தோழி. (சூளா.)

**வயந்தமாதிலகை** — 1. சுயம்பிரபையின் செவிலித்தாய். (சூளா.)

2. ஒருவித்தியாதர அரம்பை. இவளைக் கூனியென்றுங் கூறுவர். (சூளா.)

**வயந்தமாலை** — மாதவியின் தோழி (மணி.)

**வயமத்தன்** — இராவணன் சேனாபதி. இடபன் என்னும் வானரசேனாபதியால் கொல்லப்பட்டவன்.

**வயலூர்** — பாண்டிநாட்டில் திருத்தங்காலுக்கு அருகில் உள்ள ஊர். (சிலப்பதிகாரம்,)

**வயனங்கோடு** — பாண்டிநாட்டில் ஆபுத்திரன் வளர்ந்த ஊர். (மணிமேகலை.)

**வயிணவம்** — 1. மால்சமயத்தோர் மதம். விசிட்டாத்துவிதம் காண்க,

2. ஒரு யாகம்.

**வயிணவன்** — கார்க்கவனைக் காண்க.

**வயிரதத்தன்** — பகதத்தன் குமாரன். அசுவமேதக் குதிரையைக் கட்டி அருச்சுனனுல் அடியுண்டு பிறகு வணங்கினவன்.

**வயிரப்ப முதலியார்** — இவர் குன்றக்கோட்டத்து மெய்யூரில் இருந்தவர். ஒருபுலவன். இவரது பண்ணையாளின் பன்றி வயலில் மேய்ந்ததற்காகப் பன்றியையும் பண்ணையாளையும் கொன்றது அறிந்து தாம்சென்று சமரீதானஞ்செய்யப் புலவன் முதலியாரையும் அடிக்கப் பொறுத்துக்கொண்டு கழனி முதலியன புலவனுக்குக் கொடுத்தவர்.

**வயிரமலை அரசன்** — ஒரு அரசன். இவன் கங்கையைக் குழந்தையாக வளர்த்தவன்.

**வயிரவமதம்** — ஏகமாகிய ஆதிவயிரவன் ஒருவனே எட்டுப் பேதமாய் இருப்பவன் எனவும், அந்த எண்மரில் நால்வர் சிருட்டியாதிகளைச் செய்ய, மற்ற நால்வர் ஆன்மாக்களுக்கு யோகாதி சித்திகளைத் தருவர் எனவும், இவைகளைப் பெற்ற ஆன்மாக்கள் மந்திரபூசையால் முத்தி யடைவர் எனவும் கூறுவது.

**வயிரவர்** — தாருகனைக் கொன்ற சத்தியின் கோபத்தீ எழுந்து குழந்தை உருக்கொண்டு இருந்தது. அதனைக் காளி பாலூட்டி வளர்த்தனள். அதைச் சிவமூர்த்தி ஒடுக்க ஒடுங்கி அவரிடம் இருந்து எட்டு உருக்கொண்டு வெளிப்பட்டனர். பிரமவிஷ்ணுக்கள் தாம் பிரமம் என மாறுகொண்ட காலத்து அவ்விருவர் நடுவில் தோன்றிய சிவமூர்த்தியின் ஏவலால் செருக்குக் கொண்ட பிரமனது நடுத்தலையைக் கிள்ளி எறிந்தவர். அதனுல் அவ்விரத்தம் உலகத்திற் பரவ அதனைத் தமது நெற்றிவிழியால் வறளச்செய்து சிவமூர்த்தியின் ஏவலால் உலகர்பொருட்டு (கஉ) வருடம் பிரமகத்தி ஏற்றுப் பிரமகபாலம் கைக்கொண்டு தேவர் உலகம் முதலிய எல்லா உலகுஞ்செல்லுகையில் வைகுண்டத்தில் விஷ்வக்சேநர் இவரை எதிர்த்தனர். அவரை இவர் சூலத்தால் குத்தித் தூக்கி விஷ்ணு மூர்த்தியிடம் செல்ல விஷ்ணு தம் சிரத்திருந்து ஆயிரம் தேவவருஷம் உதிரம் சொரியவும் அக்கபாலம் நிறையாதது கண்டு மூர்ச்சித்தனர். இதனுல் பூமிதேவி வயிரவமூர்த்தியை வேண்ட வயிரவர் விஷ்ணுமூர்த்தியை மார்பில் அணைத்து உயிர்தந்து காசியடைந்து கபாலத்தைவிட்டு ஆண்டு எழுந்தருளியவர். விஷ்ணு மூர்த்தியின் பொருட்டு விஷ்வக்சேநரைக் கொல்லாதவர். சிவமூர்த்தியின் கட்டளைப்படி சர்வசம்மாரகாலத்து வேதஞளியை (நாய்) ஆரோகணித்து உலகங்களைத் தமது நெற்றிவிழியால் தீயாக்கி உலவுவர். அந்தகாசுரனைச் சூலத்தால் குத்தித் தூக்கி, அவன் வேண்டி அநுக்கிரகம் செய்தவர். இவ்வயிரவர்கள், காலவயிரவர், அசிதாங்கவயிரவர், குரோதவயிரவர், கண்டவயிரவர், உன்மத்தவயிரவர், கபாலவயிரவர், விபூஷணவயிரவர், மார்த்தண்டவயிரவர், பின்னும் சுதந்திரவயிரவர், சுவேச்சாவயிரவர், உலோகவயிரவர், காலவயிரவர், உக்கிரவயிரவர், பிரச்சையவயிரவர், நின்மாணவயிரவர், பூஷணவயிரவர் எனவுங் கூறுவர்.

**வயிரவாணிப் மகருஷி மகோத்ரன்** — நவகோடி நாராயணனைக் காண்க.

**வரகண்டமுநி** — இந்திரன் கொண்டுவந்த காவிரி சுழியில் ஆழ இவர் அக்காலத்து அச்சுழியில் ஆழ்ந்து அதனை வெளிப்படுத்தினர்.

**வரகுணன்** — ஒரு பாண்டியன். கி-பி. 850ல் பாண்டிநாட்டை ஆண்டவன். (திருச்செந்துறைச்சாசகம்.) இவனும் மாறன் சடைய

னும் பல்லவர்களுடன் போரிட்டனர். இவனை வாருண மகாராஜா என்றுங் கல்வெட்டுக்கள் கூறும்.

வரதுணதேவர் — இவரே வாருண பாண்டியர். இவர் சுந்தரேச பாதசேகர பாண்டியன் குமாரர். இவர் ஒருமுறை வேட்டைக்குச் சென்று நகரத்திற்குத் திரும்பிவரும் வேகத்தில் வழியில் படுத்து உறங்கி யிருந்த வேதியன்மீது குதிரை ஓட வேதியன் இறந்தனன். இதனை அரசர் அறியாராயினர். அரசனைப் பிரமகத்தி உறுத்தியது. அரசன் இதனைப் போக்கப் பல தருமஞ் செய்தும் தீராமல் சொக்கர் சந்நிதானத்து முறையிட்டனன். சொக்கர் அரசனை நோக்கி 'அரசனே சிலநாள் பொறுத்துச் சோழன் உன்னுடன் சண்டைக்கு வருவான்; அப்போது நீ அவனைத் தொடர்ந்து செல்லவை; அக்காலம் நீங்கும்' எனக் கேட்டு களித்திருந்தனன். சிறிதுநாட் சென்று விசயாலய சோழன் சண்டைக்கு வர இவர் அவனைப் பின் தொடர்ந்து சென்று தோற்கச்செய்து காவிரிநாட்டில் திரு இடைமருதிலோடும் காவிரிநதி பூசத்துறையில் ஸ்நாநம் முதலிய நித்திய கடமைகளை முடித்துக் கிழக்கு வாயிலாகச் சென்று மருதவாணரைத் தொழுது திரும்புகையில் சிவமூர்த்தி பாண்டியனை நோக்கிக் கிழக்கு வாயிலில் பிரமகத்தி நிற்கிறபடியால் மேற்குவாயிலாகச் செல்க என, விடைபெற்றுப் பல திருப்பணிகள் செய்வித்து மதுரைமாநகர் அடைந்து சொக்கரை வழிபட்டு இருந்தனர். இவர் அரசு ஆளுகையில் ஏமநாதன் என்னும் யாழ்வல்லான் வடநாட்டிலிருந்து வந்தனன். இவர் பாணபத்திரரை நோக்கி அவருடன் பாடுக என்னப் பாணபத்திரர் சொக்கரை வேண்டச் சொக்கர் விறகாளாய் ஏமநாதன் இறங்கி யிருக்கின்ற முன்றிலில் இருந்து சாதாரிப் பண் பாடி அவனை யோட்டினர். இவர் திருக்கைலாய தரிசனம் காண விரும்பிச் சிவமூர்த்தியை வணங்கி வேண்டச் சிவமூர்த்தி அத்திருக்கைலை தரிசனத்தை மதுரைமாநகரத்திற் காட்டத் தரிசித்தவர். இவரிடம் கள்ளன் ஒருவனைச் சேவகர் கட்டிக்கொண்டு சென்றபோது இவர் அவன் மேனியில் விபூதியைக் கண்டு அவனை வணங்கி விடுவித்தனர். இவர் நரிகள் ஊளையிட அவைகளுக்கு வஸ்திரம் அளித்தும், தவளை கத்தக் கேட்டு அவை சிவநாமஞ் செபிக்கிறதாக எண்ணி அவற்றிற்குப் பொன் அளித்தும், சிவதனம் ஆகிய எள்ளினை உண்டசோரனது வாயிலுள்ள எள்ளைப்பறித்துண்டும், வழியில் மண்டையோடு ஒன்று இருக்கக்கண்டு உன்னைப்போல் எப்போது இருப்பேனென்று வேண்டியும், திருக்கோவில் முற்றத்து இருந்த கட்டத்தை வாரியும், வேப்பம் வித்துக்கள் மரத்துக்கு அடியில் பரந்து இருத்தல் கண்டு அவைகளைச் சிவலிங்கங்களென எண்ணி அம்மரங்களுக்கு விதானங்கள் கட்டியும், மனைவியாரைச் சிவமூர்த்திக்குச் சமர்ப்பித்துச் சிவலிங்கத்தில் அம் மனைவியாரது உறுப்பு எல்லாம் மறைய இவர் தீண்டிய கைமாத்திரம் மறையாது இருக்கக்கண்டு அக்கையையும் மறைத்துக்கொள்ள வேண்டியவர்.

வரதுணராமேந்திரன் — இவர் சிவகிரி ஜமீன்தார். இவர் எட்டயபுரம் முத்துப் புலவர்க்குப் பல்லக்குப் பரிசுகொடுக்க இருக்கையில் சிலர் தடுப்பதறிந்து கீழ்வருஞ்செய்யுளில் முதலிரண்டடிகள் கூறக்கேட்ட அரசர் நான் மறுத்துப் பேசவில்லையே யெனப் புலவர் பின்னிரண்டடிகள் வேறுகக் கூறினர் "வாக்கிரண்டு பேசா வருதுணராமேந்திரனே, வாக்கிரண்டு பேசமனம் வைத்தான் — ருக்கு, மருவலரைக் கொல்லென்றுன் வந்தடைந்தபோது, வெருவாமற் காப்போமென் றுன்". இச்செய்யுளைச் சேத்தூர் ஜமீன்தாரிடத்தும், கொல்லங்கொண்டான் ஜமீன்தாரிடத்தும் வாசித்துக்காட்டி வரச்சொல்லப் புலவர் இரண்டிடங்களினும்போய் நடந்தவை கூறினது. "வேண்டாத மருவலரை வென்றரசுபுரியுமுயர்வேந்தே நாளும், தூண்டாத மணிவிளக்கே வருதுணராமேந்திரனே சொல்லக்கேளாய், கூண்டார வாரமுடனின்றுன் பதியுடன் யான்கூடப் போனேன், வாண்டாயன் தலைமறைந்தான் செம்பொன் வடமலைத் திருவன் வழங்கினனே" கொல்லங்கொண்டான் ஜமீன்தாரவர்களுக்கு வாண்டாயன் என்பதும், சேற்றூர் ஜமீன்தாரவர்களுக்கு வடமலைத் திருவன் என்பதும் பட்டம்.

வரசேநன் — அங்சுவகண்டன் சேநாவீரரில் ஒருவன். (சூளா.)

வரணசி — வாரணசியைக் காண்க.

வரதபண்டிதர் — யாழ்ப்பாணத்துச் சுன்னுகத்திற் பிறந்தவர். வேதியர். இருநூறு வருடங்களுக்கு முன்னிருந்தவர். அநேகா

சரம், கிள்ளைவிடுதூதுமுதலியனவும் ஏகாதசிப் புராணம், சிவராத்திரி புராணம், பிள்ளையார்கதை முதலியனவும் தமிழி லியற்றியவர். (சிவராத். பு)

**வரதராஜபிள்ளை** — ஓர் தமிழ்க்கவி. இவர் செங்கல்பட்டுஜில்லா பையனூர் கிராமவாசி. இவர் இன்னவகுப்பினர் எனத் தெரியவில்லை. இவர் திருக்கடன்மல்லை என்னும் மாபலிபுரம் பெருமான்மீது திருக்கடன்மல்லைப் பதிற்றுப் பத்தந்தாதி, திருமழிசைப் பதிற்றுப்பத்தந்தாதி, திரு எவ்வுட் பதிற்றுப்பத் தந்தாதி இயற்றியவர்.

**வரதராசன்** — காஞ்சியில் எழுந்தருளிய பெருமாள்.

**வரதானதீர்த்தம்** — இது ஒருதீர்த்தம். இந்த இடத்தில் துருவாசர் விஷ்ணுவுக்கு வரம் கொடுத்தார். Baroda, where Rishi Durvasa gave a boon to Vishnu.

**வரதுங்கராமபாண்டியன்**—மதுரை ஆண்ட பாண்டியவம்சத்திலே வந்த பிற்காலத்தவர். திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர். அதிவீர ராமபாண்டியனுக்குச் சகோதரர். இவர்க்கு வேம்பத்தூர் சங்கத்தவராகிய ஈசானமுனிவர் ஆசிரியர். இவர் தம் பின்னவராகிய அதிவீரராமபாண்டியர் தாம் செய்த நைடதத்தை இவர்க்குக் காட்ட இவர் பதிநூல் செய்யாது பசுநூலியற்றினரெனச் சொல்லக் கேட்டு, தாம் அதனைத் தமயன் மனைவியார்க்குக் காட்ட அவர் வேட்டை நாய் வேட்டை பிடித்துச்செல்ல மற்றொன்று வாளா பின்னோடுதல் போலும் என, அவமதித்த தறிந்து கோபித்துச் சண்டைக்கு வரத் தூதனுப்பக்கண்ட தமயன் "செஞ்சுடரின் மைந்தனையும் .....பார்" எனுங் கருத்துள்ள சீட்டுக்கவியெழுதி யனுப்பக் கண்டு, தமயனை நோக்கி வணங்கி அவர் ` ாற்படி காசி கண்டம் செய்தனர். செ ' செய்த நூல்கள், பிரமோத்தரகாண் இவா கருவையந்தாதி, கூர்மபுராணம். டம், இவர் தமது மரணப் படுக் முதலியன. க்கையில் தேவியார் யமகையில் இரு ¸வந்திருப்பது அறிந்து தருமராஜன் 'அஞ்சலென்ற காதல கூற இவர் " ர்கூற, இவர் மனைவி மும்" என்ற செய்யு புழுக்குரம்பை" யார் "ஆக்கையெனும் வரும் சிவபதம் என்ற செய்யுள் கூறி இரு காலம் 16-ம் அடைந்தனர் என்ப. இவரது நூற்றாண்டு,

**வரதுங்கராமபாண்டியன் தேவி** — இவர் பெண்கவி. இவர் தன்கணவனைப் பிரிந்த காலத்துப் பாடியது. "செப்பாரு முகிழ்முலையா ரெல்லாருங் கணவருடன் சேர்ந்து வாழ, ஒப்பாரு மில்லாவென் கணவனுடன் யான்கூடி யுறவா டாமல், எப்பாலும் மிகு காமத் துயராலு நாடோறும் மெலிந்து வாடி, இப்பாடு படவென்றோ யிறைவனென் றலையோட்டி லெழுதி னானே" "எண்டிசா முகமுந் திங்க ளிளநிலாவென் ளங்காண, கொண்டமால் பெருகுந்தோறுங் கொழுங்கணீர் முலையிற் சோர, பண்டுநா மறியாக் காமத் துயரினுற் படுவதெல்லாம், வண்டுகளுரையீ ருங்கள் வரதுங்க ராமனுக்கே" என்றனர். பணியாரக் குடத்துள் எழுதிவிட்டகவி. 'என்னையிவ்வாறவர் மறந்தும் யானவரைமிக நினைந்திங் கிருந்து வாட, முன்னைவினைப் பயன்றானோ வப்பிறப்பிற் செய்த தவமுடிந்தவாறோ, கன்னன்மத னபிராமன் வரதுங்க ராமனியற் காசி நாட்டில், அன்னவயற் குருகினங்காளினியெவ்வா றுயிர்தரித்திங் காற்றுமாறே."

**வரத்தண்டன்**—சிவகணத்தலைவரில் ஒருவன்.

**வரநந்தி** — ஒரு புத்தன். அப்பய்யதீக்ஷிதரிடம் வாதிட்டுத் தோற்றவன்.

**வரந்தருவார்** — பாரதம் பாடிய வில்லிபுத்தூரர் குமாரர். இவர் தம்தந்தை பாடிய விருத்த பாரதத்திற்குச் சிறப்புப்பாயிரமும் அவர் பாடாது ஒழிந்த பருவங்களையும் பாடி முடித்தனர் என்ப. இவரது ஊர் முதலியவற்றிற்கு வில்லியைக் காண்க. இவர் தம் தந்தையாரிடம் கல்வி பயிலுகையில் தாம் ஒன்று கற்பித்துக் கூறத் தந்தையார் சினந்து அகல்க என்றதனுல் தந்தையாரைவிட்டு வேறு ஒரு ஆசாரியரைச் சரண்புகுந்து கல்வியில் வல்லவராய்த் தந்தையார் பாரதம்பாடி அரங்கேற்றுகையில் உருமாறிச் சென்று "ஆக்குமாறு அயனும்" எனும் கவியைத் தந்தையர் எடுத்துப் பிரசங்கிக்கத் தொடங்குகையில் சபையார் விநாயகவணக்கம் காணப்படவில்லை என்றுக்ஷேபிக்க, இவர் இது பல்வகைச் சமயத்தவர் கூடி யுள்ள சபையாகலின் இவ்வாறு பொதுவணக்கம் கூறினர் நூலாசிரியர்; விநாயகவணக்கம் முன்னரே கூறியுள்ளார் அதனை நாம் அறிவோம்; நாம் அவர் குமாரர் என்றும், "நீடாழியுலகம்" என்னுங் கவிபாடியுங் கூட்டினர் என்ப.

**வரராமன்** — ஒரு அரசன். திருக்கோணமலையில் பல திருப்பணிகள் செய்வித்தவன். இவன் குமாரன் குளங்கோட்டன். மேற்சொன்னவன் மரபில் கயவாகு அரசனானவன்.

**வரருசி** — காத்தியாயனருஷிக்கு ஒருபெயர். இவர் பாணினி வியாகரணத்திற்கு அதிகரணம் வகுத்தவர்.

**வரவனுற்றி** — என்பது சித்திரக் கவியினொன்று; ஒரெழுத்துக் கொடுத்தால் அது முதலாக வீற்றடிபாடிப், பின்னும் ஒரெழுத்துக் கொடுத்தால் எருத்தடி பாடி, பின்னும் ஒரெழுத்துக் கொடுத்தால் இரண்டாமடி பாடிப், பின்னுமோரெழுத்துக் கொடுத்தால் முதலடி பாடிப்பொருண் முடிய எதுகை வழுவாமற் பாடுவது. (யாப்பு - வி.)

**வரவெதிர்ந்திருத்தல்** — முல்லை யரும்பன்ன நகையாற் சிறந்த கூரிய பல்லினையுடைய மடவாள் பலகூறுபடக் கைசெய்த செல்வ மனையிடத்தே தலைவன் வருதலை எற்றிக் கூறுந்துறை. (பு. வெ. பெருந்திணை.)

**வரணை** — காசியில் உள்ள ஒரு நதி.

**வராககர்ணன்** — ஒரு யக்ஷன்.

**வராககற்பம்** — பிரமன் முடிவில் சூரியன் நூறுவருஷம் அழற்கதிர் பரப்பி உலகம் முழுவதும் எரித்திடுவன். பின்பு நூறு வருஷம் மேகங்கள்கூடிச் சோனைபோல் மழை வருஷித்து வெள்ளப்படுத்தும். இக் காலத்தில் பிரமன் யோகநித்திரை புரிவான். இதனை வராககற்பம் என்பர். இது நைமித்திகப் பிரளயம். பின்னும் ஒரு கற்பத்தில் விஷ்ணு சலத்தில் முழுகிய அண்டத்தைக் கோட்டிற் சுமந்து பிரமனுக்கு உதவினதால் இதற்கு வராககற்பம் என்று பெயர்.

**வராககேது** — விராதனுக்குச் சுரதையிடம் பிறந்த குமாரன்.

**வராகசம்மாரமூர்த்தி**—வராக உருக்கொண்ட விஷ்ணுவின் கொம்பினை ஒடித்து வீறடக்கி அதனை மார்பு அணியாக்கொண்ட சிவமூர்த்தியின் திருவுரு.

**வரர்கதீதுவஜன்** — ஜயதரனுக்கு ஒருபெயர். (பா. துரோ.)

**வராகதீர்த்தம்** — பூசதீர்த்தம். இதற்கு மற்றொரு பெயர் கோகாமுகம். (பா. வன.)

**வராகதேவன்** — சிவதிரவ்யம் கவர்ந்ததால் பன்றியான ஒரு வேதியன். (திருப்பெருந்துறைப் புராணம்.)

**வராகபுராணம்** — இரண்யாக்ஷன், இரண்யகசிபு முதலானோர் பூர்வத்தோற்றம், சம்மாரம், அவர்கள் விஷ்ணுமூர்த்தியுடன் யுத்தஞ்செய்தமை முதலியவற்றை உணர்த்தும் நூல். இது உச,000 கிரந்தம் உள்ளது.

**வராகபுரி** — அருச்சுநனுடன் சுபத்திரை பொருட்டு யுத்தத்திற்குச் சென்ற யாதவ வீரர் தங்கிய பட்டணம்.

**வராகமிகிரர்** — இவர் முற்காலத்திலே விக்ரமார்க்கன் சபைக்கணிருந்த பிரபல சோதிடர். பஞ்சசித்தாந்திகா எனும் கணித நூலாசிரியர். பிரகத் ஜாதகம் என்ற சோதிடநூலும் பிரகத்சம்ஹிதை யென்ற பலகலை நூலுமியற்றியிருக்கின்றனர்.

**வராகமிருதன்**—வராககிரியில் தவம் இயற்றி அட்டசித்தி யடைந்தவன்.

**வராகமுநிவன்** — காசிபர் குலத்து முநிவன். இவன் யோககிரியில் தவஞ்செய்ய, சிவமூர்த்தி பிரத்தியக்ஷமாய்ச் சகல சித்தியுமளித்து இவர் தவம் செய்த கிரிக்கும் வராககிரி என்று பெயர் அளித்தனர். இக்கிரி பாண்டிநாட்டில் இருக்கின்றது. (பழ-பு.)

**வராகமூர்த்தி** — இரண்யாக்ஷன் பூமியைச் சுருட்டிப் பாதாளத்திற் செல்லத், தேவர் பிரமனிடம் முறையிடப் பிரமதேவர் விஷ்ணுமூர்த்தியைத் துதிக்க, அப்பிரமதேவர் மூக்கிலிருந்து வராக உருக்கொண்டு வெளிப்பட்டு அவனைக் கொன்று பூமியைக் கொம்பில் தாங்கி முன்போல் விரித்தவர். இவரைப் பூமிதேவி புணர்ந்து நரகாசுரனைப் பெற்றாள். இவர் பூமிதேவியைத் தாங்கும் கூர்மத்துடன் போரிடத் தேவர் வேண்டுகோளால் சிவமூர்த்தி வராகத்தின் கொம்பைப் பிடுங்கித் தரித்தனர். அவர்க்கு வராககாரி என்று பெயர். இவர் ஞானவராக மூர்த்தி, நீலவராக மூர்த்தி, சுவேதவராக மூர்த்தி, பூவராக மூர்த்தி என்று நான்கு திரு உருக்கொண்டனர். (இலிங்கபுராணம்.)

**வராகம்** — 1. கிரிவிரசத்துக்கு அருகாய் உள்ள மலை.

2. ஒரு விஷ்ணுத்தலம்; நேபாளத்தில் இருப்பது.

3. மகததேசத்திலிருக்கும் மலை.

4. ஒரு புராணம்.

5. வராககற்பம்.

**வராகன்**—1. பரதகண்டத்தவர் முற்காலத்து வழங்கிவந்த வராகமூர்த்தியின் திருவுரு

அமைந்த பொன்னுணயம். மூன்றரை ரூபாய்க்குச் சமனானது.

2. பிரச்சோதனனது அந்தப்புரத்து ஏவலாளனாகிய ஒரு வில்வீரன். வாசவதத்தையைப் பிடி மீதேற்றி உதயனன் சென்றபொழுது சிலதூரம் கூடத் தொடர்ந்து சென்றவன். (பெ. கதை.)

வராககாரி — வராகமூர்த்தியைக் காண்க.

வராகி — சத்தமாதாக்களில் ஒருத்தி. மணி, சாமரம், கதை, சக்கரம் அணிந்தவளாய்ச் சிங்கவாகனத்தின்மீது எழுந்தருளியிருப்பவள்.

வராங்கி — சரியாதியின் மனைவி.

வரி—ஒருவகைக்கூத்து. அதாவது அவரவர் பிறந்த நிலத்தன்மையும், பிறப்பிற்கேற்ற தொழிற்றன்மையும் தோன்ற நடித்தல். அவ்வரி எட்டுவகைப்படும்: கண்கூடுவரி, காண்வரி, உள்வரி, புறவரி, கிளர்வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக்கோள் வரி எனப்படும். அவற்றுள், கண்கூடுவரி-பிரியதரிசனம், காண்வரி-வந்தபின் களித்தல், உள்வரி-வேற்றுருக்கொண்டு நடித்தல், புறவரி-தலைவனுடனணையாது புறத்து நின்று விளையாடுவது, கிளர்வரி - நடுநின்றார் இருவருக்கும் சந்துசொல்லக் கேட்டு நிற்பது, தேர்ச்சிவரி-நாயகன் கிளைகட்குத் தன் துன்பங்களைத் தேடித்தேடிச் சொல்லுவது, காட்சிவரி - தன் வருத்தத்தைப் பலருங்காணும்படி நடிப்பது.

வரிக்குதிரை — இது குதிரையைப் போலச் சாக பக்ஷணி. உருவத்தில் உயரமும் நீளமும் உள்ளது. இது காட்டு மிருகங்களைச் சேர்ந்தது. கடித்தலும் உதைத்தலுமுள்ள மிருகம். பழக்கினாலும் வசப்படாது குரூரமுள்ள பிராணி.

வரிக்கூத்து — (கூ) சிந்துப்பிழுக்கை, சந்தி, கொந்தி, கவுசி, குடப்பிழுக்கை, கந்தன்பாட்டு, ஆலங்காட்டாண்டி, பருமணனெல்விச்சி, சூலநட்டம், தூண்டில், ஆண்டி, அமண், புனவேடு, ஆளத்தி, கோப்பாளி, பண்டிப்பிழுக்கை, பாம்பாட்டி, கடவுட்சடை, வீரம், மகேசம், காமன், சிந்து, வாமநம், விகடம், கொற்றி, பலகை, வாள், பப்பரப்பு, தகுணிச்சம், சித்து, முண்டிதம், பறை, பண்டிதன், பத்தன், குரவை, பப்பறை, காவதன், பித்தன், மாணி, பெரும்பிழுக்கை, மதுவிளையாட்டு, களியாட்டு, பறைக்குடும்பு, தோற்கூத்து, மூத்தகிழவன், கிழவி, கிள்ளுப்பிராண்டி, பள்ளி, விக்கட்டாங்கம், அம்மனை, பந்து, கழங்காடல், விண்ணகக்காளி, விறற்கொந்தி, வண்டு, வாரிச்சி, பிச்சி, சடாதாரி, பிடார்நிருத்தம், தளிப்பாட்டு, சதுரங்கம், சோணண்டு, மலையாளி, வேதாளி, வாணி, குதிரை, வில்வேடு, செந்தலைவிளக்குப்பிச்சி, மலைச்சி, இருண்முகப்பேதை, இருளன், பல்லாங்குழி, பகடி, பகவதியாள், சாழல், உந்தி அவலிடி, ஊராளி, யோகினிச்சி, பாரன், குணலை, மாலை விளையாட்டு, உள்ளிப்பூ, ஐயனுக்குப்பாடும் பாட்டு, ஆடும்பள்ளி, கும்பிடுநோட்டம், குனட்டம், குணலை, சும்மைப்பூ, சோனகம், மஞ்சரி, உழைமை, பறைமை.

வரிதை — 1. சுதாயுவின் தாய்; வருணன் தேவி.

2. கோதாவரியுடன் கலக்கும் நதி.

வரியான் — புலகருக்குக் கதியிடம் பிறந்த குமாரன்.

வரிஷ்டர் — சாக்ஷுச மனுவின் புத்திரர். கிருத்சமரைக் காண்க (பார - அநுசா.)

வரு — ஒரு அரசன். சுஷாமனன் புத்திரன், இவனது கொடையை இருக்குவேதத்தில் புகழ்ந்து கூறப்பட்டிருக்கிறது.

வருடகாரன் — தருசகனுடைய முதல் மந்திரி; மிகக் கபடமான ஆலோசனையையுடையவன். மிக்க தறுகண்மையையுடையவன். பாஞ்சாலராசனை வெல்லுவதற்கு இவன் செய்த ஆலோசனைகளும், அவை தப்பாதபடி இவன் செய்த செயல்களும் மிகப்பல. (பெ. கதை.)

வருணசிவர்—சைவசித்தாந்த பத்ததிசெய்த சிவாசாரியர் பதினெண்மருளொருவர்.

வருணபுரோகிதர்கள் — த்ருடேயுருதேயு, பரிவ்ராதர், ஏகதர், த்விதர், த்ரிதர், சாரஸ்வதர்.

வருணன் — 1. கருத்தம பிரசாபதிக்குத் தாமரையிடம் சுசிட்டுமான் எனும் ஒரு குமாரனிருந்தான். இவன் சில குமாருடன் கங்கைக்கரைக்கு ஸ்நானத்திற்குச் செல்ல ஒருமுதலை விழுங்கிற்று. இச்செய்தியை உடன் சென்ற குமாரர் யோகத்திருந்த இவன் தந்தைக்கு உணர்த்தினர். தந்தை யோகக்காட்சியில் நடப்பதைப் பார்த்திருந்தனர். விழுங்கிய முதலையைக் கங்கைகரையில் சேர்த்தனர். அப்போது ஒரு கணநாதன் சமுத்திரராஜனுக்கு முன் தோன்றி இவன் கர்த்தமப்பிரசாபதியின்

குமாரன் என, சமுத்திரராஜன் வருண னுக்கு முத்தாரம் முதலியன பூட்டி முதலை மீது ஏற்றித் தந்தையிடம் விட்டுவரச்செய் தனன். குமாரன்வந்து தந்தையை வணங் கத் தந்தை மகிழ்ந்தனர். பிறகு குமாரன் சிவமூர்த்தியை எண்ணித் தவம் புரிந்து சலத்திற்கு இறைமையும் வருண உலகமும் பெற்றனன். இந்த உலகத்தைக் குளம், கிணறு, கால்வாய், தண்ணீர்ப்பந்தல் முத லியன வைத்தவர் அடைவர். இவனுக்குக் குருத்துரோகத்தால் பிரமகத்தி வர அத ஞல் கடலில் விழுந்து பாச நீங்கினன். (காசிகண்டம். கோயிற்புராணம்.)

2. மதுரையின் மேல் இந்திரன் ஏவ லால்வந்து உக்கிர பாண்டியனுல் வீறு அடங்கிச் சென்றவன்.

3. இரிசிகருக்கு ஒருகாது பசுமை நிறம் உள்ள ஆயிரம் குதிரைகள் கொடுத்தவன்.

4. அரிச்சந்திரனுக்குப் புத்திரப்பேறு உதவிப் புருஷ அவிசு விரும்பினவன்.

5. நந்தகோபர் யமுனைநதியில் தீர்த் தம் ஆடுகையில் கவர் பட்டு இவ்வுலகம் அடைய, இவரை மீட்கும்படிவந்த கண் ணனைக்கண்டு உபசரித்து அருள்பெற்ற வன்.

6. பிரபாசதீர்த்தத்தில் கண்ணனுக்கு சாந்திபனி குமரர் மரித்த செய்தி கூறின வன்.

7. இவன் கிருஷ்ணமூர்த்திக்கும் ஒரு காது பசுமையும் வெண்ணிறமும் உள்ள (க,000) குதிரைகள் கொடுத்தனன் என்று கூறும் சிவபுராணம். இவன் மேல்திசைக்கு இறை. பட்டணம் - விபாவரி (அல்லது) சிரத்தாவதி, ஆயுதம் - பாசம், வாகனம் - முதலை.

8. ஒருமுறை இராவணனிடம் தோற் றுப் பாசம் இழந்தவன்.

9. இராமமூர்த்தி இவனைத் துதித்தும் வாராமையால் பாணம் ஏவ அதனுல் தேகம் எரிந்து, மீன்கள் சண்டையிட்டன; அவற்றை விலக்கச்சென்றேன் பொறுக்க என அடைக்கலம் அடைந்தவன்.

10. பிரகஸ்பதியின் மனைவியைக் கவர்ந் ததனுல் அவர் சமுத்திரஜலத்தை எல் லாம் வறளச்செய்ய, வணங்கி மீண்டும் அவளைக் கொடுத்தவன்.

11. சலந்திரனை வளர்த்தவன்.

12. பானுகோபன் மோகஙஸ்திரம் பிர யோகஞ்செய்து கடலில் முழுகச்செய்த வீரவாகு முதலியவரை மீட்கவந்த வேலா யுதத்தை வணங்கி க்ஷமைகேட்டவன்.

13. தன் வயிற்றின்வலி தீர மதுரை யின்மேல் கடலை ஏவினவன்.

14. பாண்டியன் வேண்டலால் சிவ மூர்த்தி சடையில் இருந்த மேகங்களை ஏவி நீரைவற்றச்செய்தனர். இதனுல் வெட்கிச் சிவபூசைசெய்து வயிற்றின்வலி போக்கிக் கொண்டவன்.

15. இவன் பாரி சேஷ்டை ; புத்திரன் தருமன். புத்திரி சுநந்தை, வாருணி.

16. தனுபுத்திரனுகிய தானவன். குமா ரன் திரவணன்.

17. சோமன் என்னும் வஸுகுமாரன்.

18. காச்யபருக்கு அதிதியிடம் உதித்த குமாரன் ; துவாதசாதித்தரில் ஒருவன். பாரி சாருஷ்ணி; குமாரர் வால்மீகி, பிருகு. கண்ணுவர் சாபத்தால் சலரோகியாகி ஸ்ரீசைலேசபூசையால் சுத்த மடைந்தான். (சிவா.)

19. உசத்தியாரைக் காண்க.

வருணச்சிரமம் — நால்வகை ஆச்சிரமத்தவ ரும் நடக்கும் ஒழுக்கங்களாம். இருபிறப் பாளருக்கு நிஷேகம் முதலிய சரீர சம்ஸ் காரங்கள் வேத சம்பந்தமான புண்ய கரு மங்களாய் இருக்கின்றன. தாய் உதரத்தி லிருந்து தோன்றிய குழந்தையின் தொப் புள்கொடி அறுப்பதற்கு முன் சாதகர்மம் என்னும் சம்ஸ்காரம் செய்யவேண்டியது. பத்தாவது அல்லது பன்னிரண்டாவது தினத்தில் நாமகாணம் செய்விக்க வேண் டும். பிறந்த நான்காவது மாதத்தில் சூரிய தரிசனம் செய்விக்க வேண்டும். ஆரு வதுமாதத்தில் அன்னப்பிராசனம் செய் வித்தல்வேண்டும். முதல்வருஷத்திலாவது மூன்ரும்வருஷத்திலாவது சௌளம் செய் வித்தல் தகுதி. பிராமணராயின் எட்டாம் வருஷத்திலும், க்ஷத்திரியராயின் பதினே ராம்வயதிலும், வைசியராயின் பன்னிரண் டாம்வயதிலும், உபநயனம் செய்விக்க. இவ் வகை முறைப்படி சம்ஸ்காராதிகள் ஆகாத வருடன் பிராமணன் சம்பந்தமுதலாதல் கூடாது. பிரமசாரிகள் கிருகத்தனிடந் தோன்றி இரவுண்ணல், எண்ணெய், சந் தனம், பெண்போகம், பஞ்சேந்திரிய அவா இவைகளை நீக்கி வேதாப்பியாசிய ராய், முக்காலமும் கிஷ்டைகூடிப்பிக்ஷை வாங்கியுண்டு, சடைவளர்த்துத் தரையிற் படுத்து, ஆசாரியருக்குப் பணிவிடை

புரிந்தபின் கிருகத்தராவர். இவர்கள் அவ்வவர் வருணத்திற்குத் தக்கபடி மான்றோல் பூணூலாகவும், சணல், வெள்ளாட்டுத் தோல் மயிர் இவற்றால் நெய்த வஸ்திரத்தையும் அரையிற்றரித்தல் வேண்டும். பிராமணர் முப்புரியாய்ச்செய்த முஞ்சியும் க்ஷத்திரியர் மூர்வியால்செய்த வில்லினாணும், வைசியர் முப்பிரியான சணலின் அரைஞாணும் தரித்தல்வேண்டும். இவர்கள் முறையே பஞ்சு, சணல், ஆட்டுமயிரினாலுமான பூணூல்தரித்தல்வேண்டும். வில்வம் அல்லது பலாசம் ஆல் அல்லது கருங்காலி மூங்கில் அல்லது அத்திகளின் தண்டம் கைக்கொள்ளவேண்டும். இவர்கள் தம் பிக்ஷாபாத்திரத்தைக் கையிலேந்திச் சூரியனுக்கு எதிரிலிருந்து அக்னியைப் பிரதக்ஷிணம்செய்து பிக்ஷை செய்யவேண்டும். பிக்ஷைகொண்ட அன்னத்தைக் குருவுக்கு நிவேதித்துத் தானுண்ணல் தகுதி. அத்யயனம் செய்வோர் பிரமாஞ்சலி செய்தவராய்ப் பரிசுத்த வஸ்திரதாரியாய் ஜிதேந்திரியராய் இருந்து ஆசாரியனை வணங்கி அத்யயனம் செய்தல்வேண்டும். இவர்கள் இரவில் புசிப்பு, எண்ணெய், சந்தனம், தாம்பூலம் இவைகளை நீக்கித் தரையில் கிடந்து நிட்டையிலிருத்தல் வேண்டும். இதைத் தவறில் நரகமாம். கிரகஸ்தன் பிரமசரியம் நீங்கிச் சந்ததியின் பொருட்டும், தேகசம்ரக்ஷணத்தின் பொருட்டும், தன்னுடன்கோத்ர சூத்ரம் ஒவ்வாத குடியில் பிறந்த நற்குணமாதைக் கிரகித்துத் தென்புலத்தார் தெய்வம் விருந்து சுற்றத்தார் ஆகிய இவர்களைக் காத்து, பஞ்ச மகா பாதகங்களை நீக்கி இருப்பவனும். இவ் இல்லறத்தான், அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களை நாற்படையாகக்கொண்ட கன்னிகைப் பருவமுடையாளை மணந்து தாய்தந்தையரைப் பூசித்து விருத்தர், பாலர், பெண்கள், நோயினர், முதலியோர்க் குணவளித்து அதிதிகள், தென்புலத்தவர், தெய்வம், சுற்றத்தவர் முதலியவர்களைப் பூசித்து, கொலை, களவு, பொய், கள், காமம், என்னும் மகா பாதகங்களை நீக்கிப் பக்ஷபாதம், வழக்கழிவு, பரநிந்தை, கடுங்கோட்ம் முதலிய போக்கித் தம்முயிர்போல் மற்றவர்களிடத் தன்புள்ளானாய்த் தெய்வம், ஆசாரியன் இவர்களை வழிபட்டுத் தர்ப்பணாதி விரதானுஷ்டானமுற்றவனாய் பல்வழியிற் பொருள்பெற்று, தானம், தருமம், மடம், தடம், கோயில், ஏரி, தடாகம், கிணறு, சோலை இவைகளை யுண்டாக்கித் தான் செய்துவரும் தருமாதி தவங்கள் பிறரை அடையாவகை, குளம், கிணறு முதலியவற்றில் முழுகி அதிலிருந்து இருகை மண்ணை வாரி வெளியிலிட்டுப் பூசைமுதலிய நித்திய கருமாதிகளை முடித்துப் பந்துக்களுடன் உணவருந்தல் வேண்டும். அவ்வகை உண்ணுமிடத்து இரவில் தயிரையும், பால்வெண்ணெயாதிகளைப் பகலிலும் உண்ணல் அடாது. துயிலும் மகளிரைப் பார்த்தலும், காலை மாலை வேளைகளில் துயிலலும், இருளில் தனித்துப் போதலும், கையினால் சலபானம் செய்தலும், இந்திரதனுசைக் காணலும், பெருந்துயில் கொள்ளலும், துயில்வோரையிடையில் எழுப்பலும், பகல் நித்திரை செய்தலும், காலைவெயில் காய்தலும், வீட்டில் மயிர்கழித்தலும், விரித்த சிகையுடனிருத்தலும, பிறர் துகிலணிதலும், சுடுகாட்டுப் புகைபடப் போதலும், குளித்தபின் கையாற் றுடைத்தலும், தன்னைத் தானே புகழ்தலும், சொக்கட்டான், சோழி, சதுரங்கம் முதலிய சூது பயிலலும் ஆகாவாம். தன்மரபின் ஒழுக்கத்தைத் தவறல் ஆகாது. தனது மனைவியரை, அடைக்கலமாக வந்தடைந்தாரை, தன் பொருளை, மனையாளின் சீதனப்பொருளை, தன்மக்களை, தன்மக்களிருக்கத் தன பொருளைத் தன்னுயிர் நீங்குவதாயினும் பிறருக்குக் கொடுக்கக்கூடாது. முன்னொளிருக்கப் பின்னொருத்தியை மணத்தல் ஆகாது. உண்டபின் வாயில் சலத்தை யுமிழாது உட்கொண்டால் பிதுர்க்களுக்கு ஆகாது. தீக்கனாக்காணில் பின் ஸ்நானம் செய்து தெய்வந் தொழல்வேண்டும். சுடுகாட்டில் அடுக்கிய சிதையைத் தொடில் ஸ்நானஞ் செய்தல்வேண்டும். தேவாலயத்தில் உண்ணல் ஆகாது. இலையின்மீது சலந்தெளித்து உண்ணல் வேண்டும். கட்டிலின் மீதும் பீடத்தின்மீதும் இருந்தும் உண்ணலாகாது. மாதர் கலவியினும், அந்தணர் உயிர்காத்தற் பொருட்டும், பசுவைக் காக்கவும், கலியாணநிமித்தமும், ஒருவாறு பொய் சொல்லலாம். பேசுகையில் துரும்பைக் கிள்ளலும், குருமொழி கடத்தலும், விளக்குமாற்றின் றூசிலிருத்தலும், தீபத்தை அவித்தலும், உணவில்

நஞ்சுள்ள பொருளையிடுதலும், பொய் பேசுதலும், கடுங்கோபங்கொள்ளலும் ஆகா வாம். தேவதார்ச்சனைசெய்து ஆகுதியால் தேவப்பிரீதி செய்விக்கின் ஆயுள் வளரும். பிதுர் கருமம், தர்ப்பணம், சிரார்த்தம் முதலியன செய்தல்வேண்டும். தாய் தந்தையர் இறந்த திதியில் திவசம் கொடுத்தல் வேண்டும். மணங்கொள்கையில் பெண்களையே பெறுபவள் வயிற்றில் பிறந்தவளை மணத்தலாகாது. அக்கன்னிகை தன் கோத்திரத்தவளல்லாளாயும், பிணி, பழி, இல்லாத சந்ததியிற் சேர்ந்தவளாயும், நதி, பறவை, நக்ஷத்ரப்பெயர் பெற்றவளல்லாதவளாயும், தனக்கிளையாளாயும், மிருதுபாஷியாயுமிருத்தல் வேண்டும். அக்கன்னிகையை மணந்து கூடுகையில், அவள் பூத்து நீராடும் நாளிலும், பகலிலும், ஷஷ்டி, அஷ்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, விரததினம், தனக்காகாநாள், தான் பிறந்தநாள், சிரார்த்ததினம் இவைகளை யொழித்தல், வேண்டும். கிருகத்தன் பெண்கொண்ட வீட்டில் பொன்கவரல் ஆகாது. தென் புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் முதலியவரைக் காத்தல்வேண்டும். ஷஷ்டி, அஷ்டமி, அமாவாசை, சதுர்த்தசி, பூரணை முதலிய நாட்களில் எண்ணெயிட்டுக் கொளலாகாது. ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசிமாதத்திலும், ஞாயிறு, சனி, செவ்வாய்க்கிழமை, மாதப்பிறப்பு, வருஷப்பிறப்பு, புண்யகாலம், விரததினத்திலும் மயிர்களைதல் கூடாது. காலை, மாலை, மத்தியான்னம் கிரகணகாலங்களில் சூரியனைப் பார்த்தலும், தன்னிழலைச் சலத்தில் காணலும், நிர்வாணியாய் நீராடலும், கன்றைக்கட்டிய தாம்பைக் கடத்தலும் ஆகா. வழியிற் செல்லுமிடத்துத் தேவாலயம், அந்தணர், துறந்தோர், கவிஞர், நீர்க்குடம், அரசன், தயிர், நெய், உயர்ந்தோர், அரசமரம் எதிர்ப்படின் வலமாகச் செல்லல் வேண்டும். மனைவியை நீங்கிப் பரத்தையர் வீடுசேரல் ஆகாது. இல்லனம் புரிந்து, மனைவி, மக்கள், விருந்தினர், ஒக்கலுடன் உண்டு களித்துப் பகலில் சாஸ்திர ஆராய்ச்சிசெய்து இம்மையில் செல்வநிலையாமை, இளமைநிலையாமை, யாக்கைநிலையாமை முதலாயவற்றை யுணர்ந்து உலக நூல்விட்டு வீட்டுநூல் ஓதி உண்மையுணர்ந்து மாலையில் சந்திமுடித்து இலகுவாக உண்டு தனதூராயின் தெற்கிலும் கிழக்கிலும், வேற்றூராயின் மேற்கிலுந் துயின்று, நன்னெறிநின்று வீட்டடையை முயலல் வேண்டும். வானப்பிரத்தன் தனம் முதலியவற்றைத் துறந்து மனைவியுடன் காட்டிற் சஞ்சரித்துச் சாகாதிகளை உண்டு செபம் தியானங்களைப் பொருளாகக்கொண்டு புலன்களைவென்று, பனி வெயில்களிலும் நீரிலும், நெருப்பிடையிலும் தவஞ்செய்து நன்னெறியடைவோனும். சந்நியாசி உடல், பொருள், ஆவி இவற்றில் அணுவளவும் அவாவின்றி முற்றத் துறந்து ஞானமே பொருளாய் ஆசாரியன் செல்வழி நிட்டைகூடி இறைவன் திருவடி அடைபவன். வானப்பிரத்த சந்நியாசிகளின் பிரிவுகளை வேறு எழுதினும்; ஆண்டுக் காண்க.

**வருத்தமானம்** — ஒரு வித்தியாதர நகரம். (சூளா.)

**வருத்தமானன்** — புண்டர நகரத்திலிருந்த ஒருபகாரி. வாசவதத்தை முதலியோர் இவனது இல்லத்திற் சிலநாள் மறைந்திருந்தனர். (பெ. கதை.)

**வருத்தனை** —(ச) அபவேட்டிதம், உபவேட்டிதம், வியாவர்த்திதம், பராவர்த்திதம் என்பன.

**வருமதிருக்கு**— சுவபலருக்குக் காந்தியிடம் உதித்த குமாரன்.

**வருமுலையாரித்தி** — இவள் பெண்கவி போலும். இவள்பெயர் இத்தியென் றிருத்தல்கூடும். மற்றது அடைமொழி. கடைச் சங்கத்தார் காலத்தவள். (குறு - ௧௭௬.)

**வருஷகர்ப்பம்** — ஆதித்தன், கார்த்திகை, ஆவணி, தை இவற்றில் சங்கிரமித்த காலத்தில் மழை பெய்யும். மார்கழி, ஐப்பசி, புரட்டாசி இவற்றில் சங்கிரமகாலத்து மழையுண்டாயின் மழை இல்லையாம். ஞாயிறு செவ்வாய் சனி இவற்றிலுயினும், சந்தியாகாலத்திலுயினும், பகற்காலத்திலுயினும் சங்கிரமிக்கின் மழைக் குறைவுண்டாம். ஐந்து, ஆறு கோட்கள் நிறையே சேரகிற்குமாயின் மிகுமழை உண்டாம். பூராடத்தில் ஆதித்தியன் புக்கநாள்முதல் (௧௬) நாட்கள் சந்திராதித்தர்களை மந்தாரம் மறைக்குமாகில் திருவாதிரை மூன்றுங்காலில் ஆதித்யன் புக்க நாள்முதல் மாதம் ஒன்றுக்கு (௬௬) நாள் வீதம் ரகசையகிரியில் மழை பெய்யும். ஆதித்யகதியால் (௯, ௭) நாட்களளவும்

சமுத்திரத்தில் மழை பிரள்யம் பாயும். இந்தப் பதின்மூன்று நாட்களும் நிர்மலமாயிருக்கின் நாள் வீதம் பார்த்து அந்த மாத மழையில்லை யென்க. (விதானமாலை.)

**வருஷம்** — 1. ஒரு முறை நாரதமுனிவர் கிருஷ்ணமூர்த்தியை நீர் அறுபதினாயிரம் கோபிகைகளுடன் கூடி இருக்கிறீரே எனக்கு ஒரு கன்னிகை தாலாகாதா என்ன, அதற்குக் கண்ணன் நான் இல்லாப்பெண்ணை வரிக்க என, உடன்பட்டுத் தான் (௬0,000) வீடுகளிலும் பார்த்து இவர் இல்லாவீடு கிடைக்காததினால் கண்ணனிடம் வந்து அவர் திருமேனியில் மயல்கொண்டு அவரைநோக்கி நான்தேவரீரிடம் பெண்ணாய் இருந்து ரமிக்க எண்ணங்கொண்டேன் என்றனர். கண்ணன் யமுனையில் நாரதரை ஸ்நானஞ் செய்ய ஏவ, முனிவர் அவ்வகைசெய்து ஒரு அழகுள்ள பெண்ணாயினர். இவளுடன் கண்ணன் அறுபதுவருஷம் கிரீடித்து அறுபது குமாரரைப் பெற்றனர். அவர்கள் பெயர் பிரபவ முதல் அக்ஷய இறுதியானவர்களாம். இவர்கள் வருஷமாம் பதம்பெற்றனர்.

2. (௬0). பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோத்பத்தி, ஆங்கீரச, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈசுவர, வெகுதானிய, பிரமாதி, விக்ரம, விஷு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய இவ்விருபதும் உத்தம வருஷங்கள். சர்வஜித்து, சர்வதாரி, விரோதி, விகிர்தி, கர, நந்தன, விஜய, ஜய, மன்மத, துன்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுபகிருது, சோபகிருது, குரோதி, விஸ்வாவசு, பார்பவ இவ்விருபதும் மத்திம வருஷங்கள். பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராக்ஷஸ, நள, பிங்கள, காளயுக்தி, சித்தார்த்தி, ரௌத்ரி, துன்மதி, துந்துபி, உருத்ரோத்காரி, இரத்தாக்ஷி, குரோதன, அக்ஷய இவ்விருபதும் அதமவருடங்களாம்.

3. பூமி தன்னினும் பலமடங்கு பெரிய சூரியனை ஒருமுறை சுற்றி வருதற்கு (365¼) நாட்கள் ஆகின்றன. அதுவே வருஷம்.

**வருஷை** — மரீசியின் தேவி. இவள் குமாரர் அறுவரும் பிரமன்சாபத்தினால் தேவகி வயிற்றிற்பிறந்து கம்சனால் கொல்லப்பட்டனர். சில நாட்களுக்குப்பிறகு தேவகி வேண்டுகோளால் அவர்கள் வருவிக்கப்பட்டுச் சாபநீக்கம் பெற்றனர்.

**வநகர்** — கோபாலரில் ஒரு வகையர்.

**வநதனி** — ஒரு அப்சரப்பெண். இவள் பிரவரன் எனும் வேதியனைக் கண்டு மயல்கொள்ள அவன் உடன்படாமையால் விசனம் உற்ற இவளது கணவன் அவனைப்போல் உருக்கொண்டு புணர்ந்தனன். அதனால் இவளிடம் சுவரோருசி பிறந்தான். அந்தச் சுவரோருசியிடம் ஸ்வாரோசிஷ மனுப்பிறந்தான்.

**வநயு** — (சந்.) ரௌத்திராசுவன் குமாரன்.

**வரேணியன்** — ஒரு அரசன். விக்னராசரைப் புத்திரராகப் பெற்றுக் காட்டிவிடக் கட்டளை யிட்டவன்.

**வரைதல்** — இது, (௫௬) ஆம் நாள் தலைவன் மீண்டு தலைவியில்லம் வருகையில் தலைவிதம ரெதிர்கொண்டுபோ யழைத்துவந்த பின் உலக இயற்கைப்படி பலவிதமாக அருங்கலன் முதலிய வேண்டுவன கொடுத்து அந்தணரையுஞ் சான்றோரையு முன்னிட்டு மணச்சடங்குடனே வதுவை முடித்துழிக் கண்டோர் மகிழ்ந்து கூறல். இதனுடன் வரைவியல் முற்றியது.

**வரைதல்வேட்கை**—இது(௪0)நாள் நிகழ்ச்சி. தலைவிமணத்திற் கவாவுறுதல். இது அச்சம், உவர்த்தல், ஆற்றாமை என மூவகைத்து. இதன்விரி தலைமகளைப் பாங்கி பருவரல்வினாவல், அருமறை செவிலியறிந்தமைகூறல், தலைமகன் வருந்தொழிற்கருமை சாற்றல், தலைமகனூர்க்குச் செலவொருப்படுதல், பாங்கியிறைவனைப் பழித்தல், இறைவியிறையோன் தன்னை நேர்ந்தியற்பட மொழிதல், கனவுநலிபுரைத்தல், கனவி னழிபுரைத்தல், தன்துயர் தலைவ , குணர்த்தல் வேண்டல், துன்புறுபாங்கி சொல்லெனச் சொல்லல், அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி, ஆறு பார்த்துற்ற அச்சக்கிளவி, காமமிக்ககழிபடர்கிளவி, தன்னுட்கையாறெய்திடுகிளவி, நெறிவிலக்குவித்தல், குறிவிலக்குவித்தல், வெறிவிலக்குவித்தல், பிறவிலக்குவித்தல், குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல் எனும் விரிவினையுடையது. (அகம்.)

**வரையறுத்த பாட்டியல்** — செய்யுளின் பொருத்தம் சொன்ன செய்யுள் இலக்கணம். இது சம்பந்தமுனிவர் மாணாக்கர் இயற்றியதாம்.

வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதல் — இது வரைவை இடையிலென வைத்துத் தனக்குப் பழங்கிடையாய்ப் பெரும் பொருளிருப்பினும் தன்முளான் வரைதற்கு வேண்டும் பொருள் காரணமாகப் பிரிதல். இது பிரிவு அறிவுறுத்தல், பிரிவு உடன்படாமை, பிரிவு உடன்படுத்தல், பிரிவு உடன்படுதல், பிரிவுழிக் கலங்கல், வன்புறை, வன்பொறை, வருவழிக் கலங்கல், வந்துழி மகிழ்ச்சி என்னும் ஒன்பதுவகையினையும், என்பொருட் பிரிவுணர்த்து எந்திழைக் கென்றல், நின் பொருட் பிரிவுரை நீ யவட்கென்றல், நீடேனென் றவ ளீங்கல், பாங்கி தலைவிக்கு அவன் செலவு உணர்த்தல், தலைவியிரங்கல், பாங்கி கொடுஞ்சொற் சொல்லல், தலைவி கொடுஞ்சொற் சொல்லல், வருகுவர் மீண்டெனப் பாங்கிவலித்தல், பருவங் கண்டு பெருமகள் புலம்பல், இகுளை வம்பென்னல், இறை மகண்மறுத்தல், அவர் தூதாகி வந்தடைந்த திப்பொழுதெனத் துணைவி சாற்றல், தலைமகளாற்றல், அவன் அவட்புலம்பல், பாகனொடுசொல்லல், மேகத்தொடு சொல்லல், பாங்கிவலம்புரி கேட்டு அவன் வரவறிவுறுத்தல், வலம்புரி கிழவி வாழ்த்தல், தலைவன் வந்துழிப் பாங்கி நினைத்தமை வினவல், தலைவன் நினைத்தமை செப்பல், பாங்கி தலைவியை யாற்றுவித்திருந்தமை கூறல் எனும் விரியினையும் உடைத்து. (இலக். வி. சூ. ௧௨௬-எ.)

வரைவு — தலைமகன் தலைமகளைக் குரவர் முதலோர் கொடுப்பவும் கொடாதொழியவும் வதுவைச் சடங்கொடு பொருந்த மணஞ்செய்து கோடல்.

வரைவுகடாதல் — இது பாங்கி தலைவனோடு வரைவுகூறிவினுதல் என்பர். இது பொய்த்தல், மறுத்தல், கழறல், மெய்த்தல், எனும் நான்குவகையினையும், வினவியசெவிலிக்கு மறைத்தமை விளம்பல், அலரறிவுறுத்தல், தாயறிவுணர்த்தல், வெறியச்சுறுத்தல், பிறர் வரைவுணர்த்தல், வரைவெதிர்வுணர்த்தல், வரையுநாளுணர்த்தல், அறிவறிவுணர்த்தல், குறிபெயர்த்திடுதல், பகல்வருவானை யிரவுவருகென்றல், இரவு வருவானைப் பகல் வருகென்றல், பகலினு மிரவினும் பயின்று வருகென்றல், பகலினுமிரவினுமகலிவணென்றல், உரவோன்நாடும்மூருங் குலனும் மரபும் புகழும் வாய்மையுங் கூறல், ஆறுபார்த்துற்ற அச்சங்கூறல், ஆற்றுத்தன்மை யாற்றக்கூறல், காவன் மிகவுரைத்தல், காமமிகவுரைத்தல், கனவு நலிபுரைத்தல், கவினழிபுரைத்தல், எனும் விரியினையுமுடைத்து. (இலக். வி. சூ. ௧௨௩.)

வரைவுமலிவு — இது வரைவின்பொருட்டு, நடக்குமுயற்சியாகிய கிளவியின் தொகை. இது வரைவுமலிவும், அறத்தொடு நிற்றலுமென இருவகைத்து. அவற்றுள் வரைவு மலிவு, வரைவுமுயல் வுணர்த்தல், வரைவெதிர் வுணர்த்தல், வரைவறிந்து மகிழ்தல், பரவல்கண்டு உவத்தல் என நான்கு வகைத்து. இது காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தல், காதலி நற்றாயுள்ளம் மகிழ்ச்சியுள்ளல், பாங்கி தமர் வரை வெதிர்ந்தமை தலைவிக்குணர்த்தல், தலைமகளுவகை யாற்றாது உளத்தொடு கிளத்தல், தலைவனைப் பாங்கி வாழ்த்தல்; தலைவி மணம் பொருட்டாக அணங்கைப் பராநிலை காட்டல், பராநிலை கண்ட தலைமகன் மகிழ்தல், எனும் விரியினையுடைத்து. (அகம்.)

வரோத்தமை — அழகர் மலையடியிலிருந்து கோவலனை அழிவற்ற இன்பம் யாது என வினவியவள். (சிலப்-காடு.)

வர்க்கசோழகன் — சுக்கிரீவசேனாபதி.

வர்ச்சன் — சோமன் புத்திரன்.

வர்ச்சஸன் — சோமன் என்னும் வசுவின் குமாரன்.

வர்ச்சஸ் — சந்திரன் குமாரன்.

வர்ணியசமை—தாபிக்கத்தக்க திருஷ்டாந்த தருமத்தைப் பக்ஷாந்திரத்திற் சாதிப்பது. (புகழ்த்துரை.)

வர்த்தகர்பரிபாஷை — அல்லது (குழூஉக் குறி) ஜவுளிக்கடைக்காரர் 1, 2 3, 4, 5, 6, 7, 8, 9, 10, வீசம், அரைக்கால், கால், அரை, முக்கால், ரூபா, அணா, குறையப்பார், ஏறப்பார், விலைவைத்துச்சொல் என்பவைகளுக்கு முறையே மதி, வினை, குணம், சுருதி, சாம், மதம், திரி, கிரி, மணி, தசம், பூ, பிஞ்சு, தங்கம், பழம், வெள்ளி, ஞா, பதியப்பார், முடுக்காப்பார் சிவன், தாம்பிரம் எனவும், பூட்டுக்கடை கோமட்டிகள் ஒன்றுமுதல் பத்துவரையில், கேவு, ராயம், உத்தரம், பனம், சூலம், தீபனம், மாரம், தாமம், தீமசம், காலம் எனவும், ¼யை தாபிதெலுபு எ-ம், ½யை நகவிதெலுபு எ-ம், வெள்ளியை-தெலுபு எ-ம்,

கூறுவர். மதுரை சௌராஷ்டிரர் ஒன்று முதல்பத்துவரையில் முறையே பாங்,அல் லதபீ, அடைகா-அ-து லா. பௌஞகா-அ-து லா, அக் அ-து யா, மூலம்-அ-து சாவாக், தீமனம் அ-து பவுஞேடு அக், தை, அடைஅக் எனவும், வீசத்தை - பாங் காணி எ-ம், (ஆ) அடகாகாணி, ($\frac{1}{4}$) சாவாங் காணி, ($\frac{1}{2}$) அடகாபான், ($\frac{3}{4}$) பவுஞகாபான் என்பர். இன்றும் ஜவுளிவியாபாரிகளிற் சிலர் ஒன்றுமுதல் பத்துவரையில் நபி, சா, டிமி, தோ, சொளம், திரிவாண்டோ, குழிப்பி, பரத்தாண்டே, கிழம், குளசி, நபம், கிராதி, பெழம், பிச்சு, கிரி, வலி வாண்டே, மணி, தாழாண்டே, சிணி, புலிமி என்பர். இவர்கள் வீசத்தை எழுந்த, ($\frac{1}{8}$) தாண, ($\frac{1}{4}$) திங்கு, ($\frac{1}{2}$) சாண்ணே, ($\frac{3}{4}$) தாம்-என்பர். ஆட்டுவெணி கர்-ஒன்றுமுதல் பத்துவரையில் முறையே பண்டி, எசப்பு, சூலம், நடவா, செய், காரபு, சத், அட்டு, நவ், தடப்பா என்பர். பின்னும் பல பரிபாஷைகள் உண்டு.

**வர்த்தமானதீர்த்தங்கரர்** — சைநதீர்த்தங்கா ரில் இருபத்திஞன்காவது. இவர் விதேக தேசத்தில் குண்டலபுரத்தில் நாதவம்சத் தில் சித்தார்த்த மகாராசருக்குப் பிரிய காரணியிடம் சித்திரைமாசம் சுக்லபக்ஷம் திரயோதசி உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய தினத்திற் பிறந்தவர். உன்னதம் (எ) முழம். சுவர்ணவர்ணம், (எஉ) வருஷம் ஆயுஷ்யம். கௌதமர் முதலாகிய (கக) கணதரர். அக்காலத்து அரசர் சிரேணிக மகாராசா, சீவகன் ராசா.

**வர்த்தமானம்** — ஒருபட்டணம். இப்பட்ட ணத்தில் பாண்டு புத்திரர் அரண்ய சங்கத் தராய்த் தங்கினர்கள்.

**வர்த்தமானீச்சரம்** — திருப்புகலூரிலுள்ள சிவஸ்தலம். இது முற்காலத்தில் ஜைன ருடைய திருப்பதிகளி லொன்றென்பர்.

**வர்மதிருக்கு** — அக்குரூரன் தம்பி.

**வலங்கைமீகாமன்** — ஒரு தமிழ்ப்புலவன். அறிவாநந்த சித்தியார் இயற்றியவன்.

**வலநாளிடநாள்** — அச்சுவனி, புனர்ப்பூசம், மூலம், பூரட்டாதி முதலாக மும் மூன்று நாள் வலநாள்; இவை மேஷாதி மீனந்த மாக எண்ணப்படும். ரோகணி, மகம், விசாகம், திருவோணம் முதலாக மும் மூன்றுநாள் இடநாள். இவை விருச்சிக முதல் தனுவந்தமாக எண்ணப்படும். வல நாளுக்கு முந்தின பாதம் உடல், முடிந்த பாதம் உயிர்; இடநாளுக்கு முந்தின பாதம் உயிர் முடிந்த பாதம் உடல் என்றறியப் படும். (விதானமாலை.)

**வலம்புரிவிநாயகர்** — விநாயக பேதத்துள் ஒன்று. ஒருமுறை விநாயகமூர்த்தி திருப் பாற்கடலில் நீர் விளையாட்டுக் காரணமா கச் சென்று அங்கு துயின்ற திருமாலி னைத் துதிக்கையால் உறிஞ்சி உமிழ்கை யில் சங்கு ஒருபுறம் போய்விழுந்தது. பூத கணத்தில் ஒன்று அச்சங்கினை எடுத்து முழங்கியது. அதனைத் திருமால்வேண்ட வாங்கி அளித்ததால் இப்பெயர் பெற்ற னர். (காஞ்சிபுராணம்.)

**வலவை** — ஒருநதி; இலங்கைத்தீவிற் சம ஞெளி மலையிலிருந்து உண்டாவது. (திரு.)

**வலன்**—1. ஒரு அசுரன்; இந்திரனல் கொல் லப்பட்டவன். இராத்ஞேற்பத்தி காண்க.

2. இவ்வலன் புதல்வன் பலராமரால் தீர்த்தயாத்திரையில் கொல்லப்பட்டவன்.

3. சூரியவம்சத்து அரசனாகிய பரிச்சித் திற்குச் சோபனையிடத்து உதித்தவன்.

4. கருடனல் கொல்லப்பட்ட அசுரன். இவன் எலும்புகள் வயிரம் ஆயின.

5. பீமன் அஞ்ஞாதவாசத்தில் வைத் துக்கொண்ட பெயர்.

6. ஒருவேடன் திரிகூடத்துக்கு அருகில் வேட்டைக்குச் சென்று மிருகங்களை வதை த்து அம்மிருகத் தசைகளைப் பதப்படுத்தி வைத்திருந்தனன். நரி ஒன்று அவைகளை எடுத்துச் செல்ல இவன் அந்நரியைத் தொடர்ந்து அம்மலையை வலம் வந்து முத் தியடைந்தனன். (திரிகூடாசல புராணம்.)

**வலாகம்** — கிருஷ்ணன் தேர்க் குதிரை களில் ஒன்று.

**வலாகன்** — 1. ஒரு அசுரன்; சுசர்மன் தேவியை எடுத்துச் சென்றவன். உத் தானபாதன் குமாரனாகிய உத்தமன் தேவி யை நாகலோகத்திலிருந்து மீட்டுக்கொண ர்ந்து அளித்தவன்.

2. சாதகர்ணிக்குச் சீடன்.

3. கல்கியின் குமாரன்.

**வலாசுரன்** — 1. தேவர்களை வருத்தச் சிவ மூர்த்தியை எண்ணித் தவம்இயற்றி நெடு நாள் வாழவும், இறந்தபின் தேகம் நவரத் தினமாகவும் வரம்வேண்டிப் பெற்றுத் தேவர்களை வருத்தி வருகையில், இந்திரன் இவனை உபாயத்தினல் வெல்ல எண்ணி, 'அசுரனே 'நீ மகாவல்லவன்! உன்னுடன் நட்புக்கொள்ள விரும்புகிறேன்' என்று

கூறி, 'உனக்கு என்னவரம் வேண்டும் கேள்' என்றனன். இந்திரன் இவ்வாறு சொல்லக்கேட்ட வலன், 'நீயோ எனக்கு வரந்தருபவன்; நீ என்னவரம் விரும்புகின்றையோ அதைக் கேள், தருகின்றனன்' என்றனன் இந்திரன் 'நீ இம்மைமறுமைக்குப் புகழை நிறுத்தி எனக்கு யாகப்பசுவாக ஆகுக' என, அவ்வகையாகவே, யாகப்பசு ஆயினன். இவனது உடலின் உதிரம் மாணிக்கமும், பற்கள் முத்துக்களும், உரோமங்கள் வைடூரியமும், எலும்புகள் வயிரங்களும், பித்தம் பச்சைகளும், நிணம் கோமேதகமும், தசை பவளமும், கண்கள் நீலமும், கபம் புஷ்பராகமும் ஆயின. (திருவிளை)

**வலாரி** — இந்திரன் வலனைக் கொன்றதால் பெற்றபெயர்.

**வலி** — 1 இது தேகத்திலுள்ள நரம்பின் ரோகத்தால் உண்டாவது. (1) அமரகண்டவலி; இது தேகநோவுடன் மூர்ச்சை அசைவறக்கிடத்தல் முதலியவற்றை உண்டாக்கும். (2) குமரகண்டவலி; இது கழுத்தையும் முகத்தையு முருக்கல், உறுப்புக்களைக் கோணிக்காட்டல், இவற்றோடு சந்நிபாத குணங்களை யுண்டாக்கும். (3) பிரமகண்டவலி; கைகால்களை நீட்டினவிதம் துடித்தல், நிலைக்கண் வலிப்பு முதலியன உண்டாக்கும். (4) காக்கைவலி; கண்களை மலாவிழித்தல், அக்காலத்தில் மலஜலம் நழுவல், இரண்டு கால்களும் விறைத்துக்கொள்ளுதல், தொண்டை வரளுதல், நாஅலைதல், வாயில்கோழை தள்ளல் முதலியன வுண்டாக்கும். (5) முயல்வலி; எழும்புதல், வாயில் நுரைதள்ளல், வயிற்றுவலி, கை, கால், கண் முறைத்தல் இவற்றை யுண்டாக்கும். இந்த ரோகம் தண்ணீரைக் காணினும், தண்ணீரைச் சிரசில் தெளிக்கினும், அக்கினியைக் கண்டாலும், அக்கினி சுடுகை பட்டாலும், சனப்பெருக்கத்தைக் காணினும் உண்டாகும். (ஜீவ.)

2. வைதருப்பச் செய்யுணெறியில் ஒன்று. இது தொகைச் சொற்றொடர்பு உண்டாகத் தொடுப்பது. (தண்டி.)

**வலிமுகன்** — இவங்கியைக் காண்க.

**வலியவன்** — கரிக்குருவியைக் காண்க.

**வலியன்** — கரிச்சுருவியினம். அதனினும், காரிப்பின்னையினும், வேறுபாடான பறவை.

**வலுவாடிகள்** — வலையரில் ஒருவகுப்பு. இவர்கள் பயிர்த்தொழில் முதலியசெய்து பிழைப்போர்.

**வலையர்** — ஒருவகை வேட்டைக்கார சாதியார். இவர்களிற் சிலர் மீன்பிடித்தும் சிலர் பக்ஷிகளை வேட்டையாடியும் சிலர் கழனிகளில் கூலிவேலை செய்தும் பிழைக்கின்றனர். இவர்கள் தேசத்தில் முதல் முதலில் இருந்தவர்கள் தாங்கள் என்று கூறுகின்றனர். இவர்கள் அம்பலக்காரன், சேர்வைக்காரன் குருவிக்காரன், வேடன், சிவியான் என்ற பல பட்டப் பெயர்களையுடையவர்கள்.

**வல்லபதேவராயன்** — சேடதாசையர் காலத்துச் சைவனான ஒரு சைநராசன். தேவி சற்குணி.

**வல்லபதேவன்** — பாண்டிநாட்டு அரசன். திருவணை (தர்ப்பசயனம்) யாத்திரை செய்த வேதியரால் உறுதி உணர்ந்து செல்வநம்பியை ஆசாரியராகக்கொண்டு அவர் சொல்லியபடி பொற்கிழிகட்டிப் பெரியாழ்வாரால் அது அறுந்துவிழ, பெரியாழ்வாரைப் பணிந்து அநுக்கிரகம் பெற்றவன்.

**வல்லபமதம்** — இம்மதஸ்தாபகனாகிய வல்லபாசாரியன். கிறிஸ்துசகம் 1478-ம் வருஷம் பிறந்தவன். இவன் தந்தை லக்ஷ்மணபட், தாய் எல்லம்மை. இவர்களிருவரும் காசிநகரஞ் சென்றிருக்கையில் துருக்கர் படையெடுத்து வருகிறார்கள் என்று கேள்வியுற்று நாகப்பூருக்கு அருகிலுள்ள சம்பாரணியத்தைப் போயடைந்தனர். அடைகையில் எழுமாதத்திய கர்ப்பிணியாகிய எல்லம்மைக்குக் கர்ப்பசிராவமாயிற்று. பிறந்த அக்குழந்தையைத் தாய் ஒருவாழையிலையில் வளர்த்தி மரத்தடியில் மறைத்துப் போயினள். பின் காசியில் கலகந் தீர்ந்ததென்று கேள்விப்பட்டு அவ்வழிவருகையில் தான்குழந்தையை வைத்த மரத்தடியில் அக்கினிகுண்டத்தில் ஓர் குழந்தை விளையாடுவதைக்கண்டு அக்குண்டத்தை நெருங்கமுடியாமல் தூரத்தே நின்று கடவுளைப் புகழ்ந்து இக்குழந்தை என் குழந்தையாயின் அணுகவொண்ணு அக்னி வழிவிடுக என்கையில், அக்கினி விலக, எல்லம்மை அச்சிசுவைக் கைக்கொண்டனள். இவன் கல்விகேள்விகளில் வல்லவனாய்ப் பல தேசங்களுக்குப் போய்த் தன்மதத்தை ஸ்தாபிக்கத் தொடங்

கினன். மதசித்தாந்தம் இம்மதத்தவர் கோபிகாஸ்திரீவேஷம் தரித்து விஷ்ணு மூர்த்தியைப் பூசிப்பர். குருபாததீர்த்தம் அமிர்தமாகப் பாவிப்பார்கள். (சகலார்த்த சாரம்.)

**வல்லபன்** — மேலைச் சளுக்கியரது பட்டப் பெயர்களி லொன்று. (கல்வெட்டு.)

**வல்லபை** — விநாயகசத்தி. மரீசிமுநிவர் ஸ்நானத்திற்குச் சென்றபோது அத்தடாகத்து இருந்த தாமரை ஒன்றில் சத்தி குழந்தை உருக்கொண்டு இருந்தனள். முனிவர் குழந்தையைக் கண்டு எடுத்து வந்து தமது தேவியாராகிய தேவவல்லியிடம் கொடுத்து வளர்த்து வல்லபை எனும் பெயர் இட்டனர். இவள் வளர்ந்து தவம் இயற்றி வருகையில் விநாயகமூர்த்தி வேதியர் உருக்கொண்டு இவளிடம் வந்து வசிக்கப் பார்த்தனர். இவள் கலங்காது தவச்சாலையில் நின்று நீங்கினள். வேதியராக வந்த விநாயகமூர்த்தி தமது திருமேனிகாட்டித் திருமணஞ்செய்து கொண்டனர். இவளைக் கேசியின் குமாரி என்பர். (பார்க்கயபுராணம்.)

**வல்லபைகணேசர்** — வல்லபைதேவி தவம் புரிகையில் பிரமசாரியாக எழுந்தருளி வந்து பிறகு தமது உருவெளிப்படுத்தி மணந்த விநாயகர்.

**வல்லம்பர்** — வளம்புரைக் காண்க.

**வல்லராசன்** — வீமனுடன் யுத்தஞ்செய்த அரசன்.

**வல்லவன்** — தத்தனைக்காண்க. தேவி கமலை.

**வல்லன்** — பீமன் விராடநகரத்தில் வைத்துக்கொண்ட பெயர். (பா-வீரா.)

**வல்லாண்முல்லை** — இல்லையும் ஊரையும் இயல்பினையுஞ் சொல்லி அழகிய ஆண்மைத்தன்மையை நன்மைபெருகச் சொல்லிய துறை. (பு-வெ.)

**வல்லார்கிழான்பண்ணன்** — சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியாரால் பாடல்பெற்றவன். வல்லார் என்னும் ஊராளி (புற நா.)

**வல்லாளமுதலியார்** — ஒரு வேளாளர். இவர் கொடையாளி. இவர் தம்வீடு நீங்கி ஒரு தடாகத்து அருகில் இருக்கையில் ஒரு வித்துவான் இவரைச் சந்தித்து இவரது வேட்டி முதலியவற்றை அவிழ்த்துக் கொடுக்கக் கேட்க, இவர் அதற்கு மாறு கூறாமல் அவற்றைத் தந்து மானத்திற்கு அஞ்சி நீரிலிருந்து உடலை மறைத்துக் கொண்டு தமது வீட்டிலிருந்து வேட்டி முதலியன கொண்டுவரச் செய்து உடுத்திக் கொண்டு வெளியில் வந்தவர்.

**வல்லாளன்** — 1. கொங்கணதேசத்து அரசன்.

2. விஜயநகரத்து அரசரில் ஒருவன். இவன் புத்திரப்பேறு வேண்டிச் சிவன் அடியவர்க்குத் தானஞ்செய்து வருகையில் சிவமூர்த்தி இவனிடம் ஒருசங்கமராய் வந்து பெண்போகம் விரும்பினர். அரசன் சங்கமர்க்கு அவ்வாறு செய்விக்களெண்ணிக் குறித்த தினத்தில் தன் ஊர்முழுவதும் தாசிகளைத் தேடி அழைத்துவா ஏவ, ஏவலாளர் சென்று கண்டு ஒவ்வொருவர் வீட்டிலும் ஒரு நாயகன் இருக்கக்கண்டு அரசனுக்குக் கூறினர். இதை அறிந்த அரசன் தன் தேவியரில் ஒருத்தியை இசைவித்துப் பஞ்சணையில் படுத்து உறங்கும் சங்கமரிடம் ஏவினன். அவள் சென்று மஞ்சத்தில் நித்திரைபூண்டிருந்த சங்கமரைக்கண்டு அணைக்கச் சங்கமர் குழந்தை உருவாய் அரசன் அவாக்கெட இருந்து அநுக்கிரகித்துச் சென்றனர். சில நாள் இருந்து அரசன் திருக்கைலை அடையச் சிவமூர்த்தி அரசருக்குத் தாமே கர்மாதிகளைச் செய்தனர் என்பர். (அருணசல புராணம்.)

3. பல்லி என்னும் நகரத்து வைசியனாகிய கல்யாணனுக்கும் இந்துமதிக்கும் பிறந்து இளமையில் கற்களை விநாயகராகக்கொண்டு அயல் சிறுவரையும் உடன்கொண்டு விளையாடிவந்தனன். அயற் பிள்ளைகளின் தாய்தந்தையர் இதனை வல்லாளன் தந்தையாகிய கல்யாணனுக்கு அறிவித்தனர். கல்யாணன் தன் குமாரனிடம் கோபித்து அவன் கணபதியாகப் பாவித்துப் பூசித்த கற்களை விட்டெறிந்து குமாரனை மரத்திற்கட்டி யடித்து உனது விநாயகர் வல்லவரேல் உன் கட்டவிழ்த்து விடுக எனக்கூறிச் சென்றனன். வல்லாளன் விநாயகரைத் துதிக்க விநாயகர் பிரமசாரியாய்த் தரிசனம் தந்து கட்டவிழ்த்துக் கல்யாணனுக்குச் செவிடு, குருடு, தொழுநோய் உண்டாக்கிச் சென்றனர். இந்நோயைக்கண்ட வல்லாளன் தாய், வல்லாளனை வேண்ட, வல்லாளன் இப்பிறப்பில் அல்லாமல் இனி வரும் பிறப்பினும் இவன் தக்கன் எனப் பிறந்து இத் துன்பம் அநுபவித்து முற்கல முநிவரால் சாப நீக்கம் அடைவான் என்று சொன்னவன்.

**வல்லான்** — இவன் ஒரு வீரன். நீதிநெறிச் சோழன் அல்லது பராந்தகசோழன் காலத்திலே அரசர் பலரை வதைத்துச் செங்குந்தரில் பழுவூர்வீரன், பழுவநாராயணன், கச்சித்தனியன், ஒற்றியூரான், களத்தூரரசன், புற்றிடங்கொண்டான், கோளாந்தகன், புலியூர்ப்பள்ளிகொண்டான், பிணவன், கண்டியூரான், மூதுகுன்றமணியன், தஞ்சைவேம்பன், முதலிய (கஉ) பெயர்களுள் தலைவராகிய வீரன் நாராயணன் என்பவரால் செயிக்கப்பட்டவன். (வீரநாராயண விஜயம்.)

**வல்லூரன்** — சோணாசலம் ஆண்ட அசுரன்; தெய்வீக அரசனைக் காண்க.

**வல்லூர்தேவாரசக்கவிராயர்** — இவர் தொண்டைமண்டல வேளாளர். தமிழ் வல்லவர். வடமொழிச் சூதசம்மிதையைத் தமிழில் பாடியவர். இவர்காலம் முதலியன தெரியவில்லை. (சூதசங்கிதை.)

**வல்லூறு** — (இராஜாளி) இது பருந்தினத்தைச் சார்ந்தது. அளவு சிறியது. பருந்து போன்றது. இதனைப் பக்ஷிகளுக்குப் புலி எனலாம். அதிவேகமாய்ப் பறக்கும். இது தானியந் தின்னும். சாதுவான பக்ஷிகளைக் கொன்று இரையாக்குகிறது. இது வலிய ஆறு செய்தலின் இப்பெயர் பெற்றது.

**வல்லெழுத்துக்கள்** — மெய்யெழுத்துக்களில் வலிய ஓசைபெற்ற க், ச், ட், த், ப், ற், என்ற ஆறுமாம். (நன்.)

**வல்லையர்** — வசவர்காலத்து இருந்த சங்கபர்.

**வல்லோர்நவிற்சியணி** — உலக வழக்கச் சொல்லே மற்றொருபொருளை யுட்கொண்டிருத்தல். இதனைச் சகோத்தியலங்காரம் என்பர். (குவல.)

**வல்விலோரி** — இவன் கடையெழுவள்ளல்களில் ஒருவன். கொல்லிமலைக்குத் தலைவன். காரியுடன் மலைந்தவன். இவனை ஆதனோரி எனவுங் கூறுவர். இவனைப் பாடியவர் வன்பரணர், கழைதின் யானையார். (புற-நா.)

**வழக்கு** — 1. உலகவழக்கம் நாடகவழக்கம் என்பன.

2. இது சொற்கள் வழங்கிவரும் வழக்கம். இயல்புவழக்கு, தகுதிவழக்கென இருவிதப்படும். இயல்புவழக்கு ஒருபொருளினியற்பெயரான பொருளைக் கூறல். அது இலக்கணமுடையது, இலக்கணப்போலி மரூஉ, என மூவகைப்படும். இலக்கணமுடையது இலக்கணநெறியால் வருவது; இலக்கணப்போலி இலக்கணத்தைப்போல் வருவது; மரூஉ-இலக்கணஞ் சிதைந்துமருவியது. தகுதிவழக்கு என்பது ஒருபொருளிற்கு இயல்பாயுள்ள சொல்லையொழித்துத் தக்க வேறுசொல்லால் அப்பொருளைக்கூறுவது. அது இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி எனமூன்று வகை. இடக்கரடக்கல்சொல்லத்தகாத மொழியையடக்கிக்கூறல், பவ்வீ என்றாற்போல; மங்கலம் அமங்கலத்தை மங்கலமாகக்கூறல், தாலி பெருகிற்று என்றாற்போல; குழூஉக்குறி - ஒரு கூட்டத்தார் யாதானுமோர் காரணத்தால் வைத்த பெயர், பொன்னைப் பறி என்றாற்போல. உலகவழக்கு உலகத்தாரின் பாஷைவழக்கம்.

3. இது உலகவழக்கு, செய்யுள் வழக்கு, இயல்புவழக்கு, தகுதிவழக்கு எனப்படும். உலகவழக்கு உலகத்தார் வழங்கும் சொற்கள், செய்யுள்வழக்கு செய்யுள் வழக்கம், இயல்புவழக்கு ஒரு பொருளுக்கியல்பாயமைந்த சொல்லையொழித்துத் தகுதியான வேறு பெயரிட்டு வழங்குவது. இயல்புவழக்கு இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூன்றுவகை; தகுதிவழக்கு இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்றுவகை.

**வழலை** — இது பாம்பில் ஒரு வகை பேதம். இது வெள்வழலை கருவழலையென இருவகை.

**வழிநூல்** — கடவுளும் அவனருள் வழிபட்டோரும் செய்த பொருண்முடிபுகள் பெரும்பாலுமொத்து வழிநூல்செய்வோன் தான் செய்தற்குத் தக்க வேறுபாடுகளைக் கூறி நிலைபெறச்செய்வது. (நன்-பா.)

**வழு** — 1. கச. அகத்திணை வழு எழும் புறத்திணைவழு எழுமாம்.

2. திணை, பால், இடம் காலம், வினா, விடை, மரபு, இவை மயங்கி வருவது. (நன்.)

**வளம்பர்** — தஞ்சாவூர் திரிசிராப்பள்ளியில் பயிரிடும் ஒருசிறு சாதியார். தாங்கள் வேளாளருக்கும் வலைச்சிக்கும் பிறந்தவர்கள் என்பர்.

**வளைகுடா** — வாய்குறுகிப் பூமிக்குள் சென்றிருக்கும் கடற்பிரிவுக்கு வளைகுடாஎன்று பெயர். (பூகோளம்)

**வளையக்காரமண்டபம்** — இது மதுரையில் வடக்கு ஆவணிமூலவீதியிலுள்ளது. (திருவிளை.)

**வளையசுந்தரம்** — தடமித்தன் பட்டத்து யானை.

**வளையற்காரசெட்டி** — கவரையில் ஒரு வகையார். இவர் கண்ணாடி வளையல் வியாபாரம் செய்பவர்கள்.

**வளையாபதி** — 1. நவகோடி நாராயணசெட்டியைப் பாடிய தமிழ்நூல். ஷை செட்டியைக் காண்க.

2 காத்தவராயன் கதை. தமிழிற் சிறந்த இலக்கியத்துள் ஒன்று. காத்தவராயனைக் காண்க.

**வளைவணனன்** — நாகநாட்டரசன்; பீலிவளையின் தந்தை. வாசமயிலையின் கணவன். (மணிமேகலை.)

**வள்ளலார்** — இவர்கள் (சுச) சந்தானத்தார். இச்சந்தானத்தைச் சேர்ந்தவர்கள் அனைவருக்கும் வள்ளலார் எனப் பெயர். இவர்கள் வைதிகசைவசித்தாந்திகள்என்று அவர்கள் நூல்களால் வெளிப்படுகிறது. இவர்கள் கண்ணுடையவள்ளல் சிவஞான வள்ளல் எனப் பலராவார். இவர்கள் மடம் சீர்காழியில் இருக்கின்றது ஆசாரியர் திருஞானசம்பந்த சுவாமிகள் என்ப.

**வள்ளலார்சாத்திரம்** — வள்ளலார் சந்தானத்துச் சிவஞான வள்ளலார் இயற்றியநூல்கள். இது பதி, பசு, பாச இலக்கணங்களைக் கூறும் பதினாறு நூல்கள்.

**வள்ளல்கள்** — (உக) இவர்கள் வரையாது கொடுத்தோர். இவர்களில் குமுணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி முதலோர் முதல் எழுவள்ளல்கள். அக்குரூரன், அந்திமான், அரிச்சந்திரன், கன்னன், சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன் இவர்கள் எழுவரும் இடை எழுவள்ளல்கள். எழினி, காரி, ஓரி, நள்ளி, பாரி, பேகன், மலையன் இவர்கள் எழுவரும் கடைவள்ளல்கள்.

**வள்ளி** — ஆபரணத்தினுற் சிறந்த முலையினையுடையார் நெஞ்சுநெகிழ வேலினையுடைய குமரனுக்கு வெறியென்னுங் கூத்தை ஆடிய துறை. (பு. வெ. பாடாண்.)

**வள்ளிநாய்ச்சியார்** — 1. விஷ்ணுமூர்த்தியின் வலக்கண்ணில் பிறந்த குமாரி. இவள் குமாரக்கடவுளை மணக்கத் தவஞ்செய்து இருக்கையில் அருகில் தவஞ்செய்துகொண்டு இருந்த சிவமுனிவர் அவ்விடம் மேய்ந்து கொண்டிருந்த மானை நோக்கினர். வள்ளி நாய்ச்சியார் அம்மான்வயிற்றில் பிரவேசித்து அவ்விடம் குறவர் தோண்டியிருந்த வள்ளிக்குழியில் பிறந்து வேடராசன் கண்டெடுக்க வளர்ந்து வள்ளிக்குழியில் இருந்ததால் வள்ளி எனப் பெயர் அடைந்து குமாரக்கடவுளை மணந்தவள். இவள் சரிதையைப் பற்றிக் குமாரக்கடவுளைக் காண்க. இவள் பூர்வநாமம் குமரி; இவள் தெய்வயானையிடம் மாறுகொண்டதால் மான்வயிற்றில் உதித்தவள். (திருச்செந்தூர் புராணம்.) காஞ்சனையைக் காண்க. இவள் தெய்வயானையிடம் மாறுகொண்டதால் மான்வயிற்றிற் பிறந்தாள்.

2. திருவள்ளுவர் சரிதை. ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்தவள்.

**வள்ளுவர்** — 1. பழந்தமிழ்க் குடியினரில் பாணரை யடுத்துத் திராவிடரால் மதிக்கப்பட்டவர் இவ்வகுப்பினர். இவர் அரசர் பால் கருமத்தலைவராயும் யானைமேலிருந்து முரசறைந்து அரசாணை சாற்றுவோராயும் விளங்கினர். இக்குடியினர் இன்றும் உளர்.

2. இவர் பறையில் சற்றுயர்ந்தவர்கள். இவர்கள் பறையருக்குப் புரோகிதர்கள். இவர்கள் பிராமணர்கள் புரோகிதராகாமுன் பல்லவ அரசர்களுக்குப் புரோகிதம் செய்திருந்தவர்கள். கிராமங்களில் துணி தைத்தல் இவர்கள் தொழில். இவர்கள் புரோகிதஞ் செய்தும் சோசியம் கூறியும் வாழ்கிறார்கள். இவர்களிற் சிலர் தாசிரியராகவும் பூணூல் தரிப்பவராகவுமிருப்பர். இவர்கள் அறுப்புக் காலத்தில் குடிகளிடமிருந்து நெல்பெறுவர். இவர்களில் லிங்கதாரிகளும் உண்டு. இவர்களில் இரண்டு பிரிவுகள் உண்டு. அறுபதுகக்ஷி, நாற்பதுகக்ஷி. முதல் கூறியவன் நந்திக்குருக்களின் சந்ததியான்; மற்றவன் சிதம்பர சாயுச்சிய ஐயங்கார் வகையினன்; திருப்பாணாழ்வார் குலம் என்பர். இவர்கள் திருவள்ளுவரைத் தங்களினத்தவர் என்பர். (தர்ஸ்டன்)

3. திருவள்ளுவரைக் காண்க.

**வள்ளைப்புறகந்தரத்தனார்** — கடைச்சங்கம் மருவிய புலவர். (அகநானூறு.)

**வற்சநாபன்** — ஒரு தவசி. இவன் தவஞ் செய்கையில் புற்று இவனை மூடியது. இவனது தவநிலைஅறிய இந்திரன் பெருமழை வருஷித்து இடியால்புற்றைப்பேர்ப்பித்து அம் மழைநீர் புற்றினுள் நுழையச் செய்வித்தனன். இதனை அறிந்த தருமம் ஒரு எருமை உருக்கொண்டு புற்று இடை யிருக்க வயிற்றால்மூடி எழுநாள் காத்து எழாநாள் தவசி விழித்துப் பார்த்

துத் தன் தவத்திற்கு இடையூறு வராமற் காத்தது தருமம் என்று அறிந்து அதற்குச் சிரஞ்சீவியாய் இருக்க வரம் அளித்து வேறு இடஞ்சென்று தவஞ்செய்ய மூயலுகையில் தவநிலை கூடாமைகண்டு நாம் தருமத்தை வணங்காததால் வந்த தீமை என்று அறிந்து ஒரு மலைமீது ஏறிவிழ இருக்கையில், தருமம் தோன்றி விழுகையைத் தடுத்துத் தேற்றியது. அதுமுதல் உலகத்தில் "எருமைமேல் மழைபெய்ததுபோல்" என்று பழமொழி வழங்கலாயிற்று. (சேது - பு)

**வற்சமுனி** — மிருகாவதியைக் காண்க.

**வற்சரன்** — துருவன் குமாரன்.

**வற்சாசுரன்** — இவன் கம்சன் ஏவலால் கண்ணனை வஞ்சிக்கப் பசுக்கன்றின் உருவடைந்து கன்றுகளுடன் மேய்வதுபோல் நடித்துக் காலம்பார்த்து இருந்தனன். இதனை அறிந்த கண்ணன் இவனருகில் சென்று காலைப்பிடித்து அருகிருந்த விளாமரத்தில் எறிந்து மாய்த்தனன்.

**வற்றல்**—1. இது உணவாதிகளுக்குத் துணையுண்டிப் பொருள். உளுந்துமா, அரிசிமா, சுண்டைக்காய், சுக்கன்காய், பிதுளங்காய், மணித்தக்காளி பலவகைக் காய்கள் முதலிய பொருள்களை பாகஞ் செய்தும் பாகஞ் செய்யாமலும் உப்பிட் டுலர்த்தி எண்ணெயில் வறுத்து உண்பது.

2. கல்யாணப் பூசணி; சுரை, அத்திக்காய், சுண்டைக்காய், சுக்கங்காய், உளுந்துமா, கடலைமா, பலவகைத் தானியநொய், முதலியவற்றைப் புழுக்கியும் புழுக்காமலும் சம்பாரங்கள் கூட்டி வெயிலிலுலர்த்தி நெய், எண்ணெயிலிட்டு வறுத்து உணவுடன் கொள்வர்.

**வனகர்த்தன்** — சிவமூர்த்தியை எண்ணித் தவமியற்றி வரம்பெற்ற அரக்கன்.

**வனகிரி** — சிநன் ஆலயம் உள்ள ஒருமலை.

**வனதேவதை**—வனத்திலிருந்து பலிகொள்ளும் தேவதையென்பர்.

**வனப்பகை**—கோட்புலியார் குமாரி. சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பதிகங்களுள் வைத்துப் பாடும் பாக்கியம் அடைந்தவள். இவளை இவர் தந்தையார் சுந்தரமூர்த்திகளுக்குத் தரச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெண்ணுக ஏற்றுக்கொண்டனர்.

**வனப்புநிலையணி.** — அஃதாவது வர்ணியத்தை விசேஷியமாக்கிக் கொண்டு வர்ணிக்க வேண்டிய வாக்கியார்த்தத்திற் கொப்பாகிய மற்றொருவாக்கியார்த்தத்தை வர்ணித்தலாம். இதனை வடநூலார் லலிதாலங்காரமென்பர்.

**வனன்** — உசிநரன் குமாரன்.

**வனஸ்பதி** — பிரியவிரதன் பேரன். கிருதபிருஷ்டன் குமாரன்.

**வனுசுவன்** — ஒரு முனிவனது வரத்தால் தானே வயிற்றில் புத்திரனைப் பெற்றவன்.

**வன்றெண்டர்** — சைவசமயாசாரிய சுவாமிகளாகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் தாம் சிவமூர்த்தியை அறியாது வலிமை பேசியதால் பெற்ற பெயர்.

**வன்பரணர்** — 1. வையாவிக்கோ பெரும்பேகன், கண்டீரக் கோபெருநள்ளி, வல்விலோரி, முதலியவரைப் பாடிய புலவர் (புற - நா.)

2. இவர் கடையெழுவள்ளலி லொருவனுகிய கண்டீரக்கோப் பெருநள்ளியைப் பரிசில் வேண்டிப் பாடியவர். அந்நள்ளி வேட்டையாடுமிடத்து இவர் போனபொழுது தன்னை இன்னுனென்றறிவிக்காமல் அவன் பரிசுகொடுத்ததாகச் சொல்லும் பாடல்கேட்போர் மனத்தை மகிழ்விக்கும். புறம் கசஅ, கசக, கடுஎ. மற்றொருபொழுது கொல்லியாண்ட வல்வில்லோரியிடத்துச் சென்று பாடிப் பரிசில் பெற்று மீண்டனர். புறம் கடுஉ, கடுக. இவர்பாடிய முதுபாலை (கணவனைக் கானகத்தேயிழந்து புலம்புவது) இரங்கத்தக்கதாகும். புறம் உடுடு. வினைமுற்றி மீள்வான் நெறியிடைக் கண்டவரை நோக்கிக் கூறியதாக ஒருதுறை புதுவதின் அமைத்தவர் இவரே; நற். கஎச. இவர் பாடியனவாக மேற்காட்டிய எழுபாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**வன்புறை** — இது களவின்கிளவி என்பது; தலைவி ஐயுற்றவழி ஐயந்தீரத்தலைவன் வற்புறுத்திக் கூறல்; இதுஐயந்தீர்த்தல், பிறிவறிவுறுத்தல் என இரண்டுவகையினையும், அணிந்துழி நாணியதுணர்ந்து தெளிவித்தல், பெருநயப்புணர்த்தல், தெய்வத்திறம்பேசல், பிரியேனென்றல், பிரிந்துவருகென்றல், இடமணித்தென்றல், முதலிய விரியினையு முடைத்து. தெளிவு என்பது தலைவன் கூறிய சொல்லைத் தலைவி மெய்யெனத் தெளிந்தாற்றுவது; இது களவின்கிளவி.

**வன்மீகம்** — ஒரு தீர்த்தம்.

**வன்மீகனர்** — 1. இவர் முதற் சங்கப்புலவருள் ஒருவர்.

2. இவர் பாடல் ஒன்று புறநானூறில் (௩௬௩) ஆம் பாடலாக இருக்கிறது. "பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம், ஒருபக லெழுவ ரெய்தி யற்றே, வையமுந் தவமுந் தூக்கிற், தவத்துக்கையவி யனைத்து மாற்ரு தாகலிற் கைவிட்டனரே காதலர தனால், விட்டோரை விடாஅள் திருவே, விடாஅதோ ரிவள்விடப் பட்டோரே." என்பது. இவர் பாடல் நிலையாமை கூறித் தவத்தினேற்றம் கூறியதால் இவர் தவநிலை மேற்கொண்டவரென எண்ணப்படுகின்றனர். இவர் வடநூல் இராமாயணமியற்றியபுராணவான்மீகியினும்வேறுவர்.

**வன்மையணி** — விருப்பமில்லாதிருக்கு மிடத்தில் சுவையும், கருத்து முண்டாவது; இதனை ஊர்ஜஸ்வித் அலங்காரமென்பர் (குவல.)

**வன்னி** — 1. துருவசு குமாரன். யயாதி பௌத்திரன்; இவன் குமாரன் கெற்கன்

2. வாநரத்தலைவன்.

3. புஷ்கரத்தீவின் அரக்கர் சேநாபதி. இராவணனுக்கு மூலபலத்தில் உதவி செய்தவன்.

4. இது விநாயகர் முதலிய தேவர்க்குரிய பத்திரவிசேஷம். சௌமியர் புத்திரனும் சௌநகர் மாணாக்கனுமாகிய மந்தாரகன், தன்பத்தினியும் ஔரவர் புத்திரியுமாகிய சமி அல்லது (வன்னி) என்பவளுடன் ஓர் வனத்தின்வழி வருகையில் விநாயகசாரூபம்பெற்ற புருசுண்டி முனிவரைக்கண்டு நகைக்க முனிவர் அவ்விருவரையும் தங்கள் பேர்கொண்ட விருக்ஷங்களாச் சபித்தனர். பின் அவ்விருவரும் வேண்ட உங்களிடம் விநாயகமூர்த்தியெழுந்தருளுவர். அக்காலத்துச் சாபத்தீர்வடைந்து விநாயசருக்குரியவ ராவீர்கள்என்று கூறிச்சென்றனர். மாணாக்கரது நிலையை யோகத்தா லறிந்த சௌநகர் வநமடைந்து விநாயகபூசனை புரிந்து விநாயகர்தரிசனந்தர அம்மாணாக்கர்க்குச் சாபந் தவிர்க்க வேண்ட, விநாயகர் அம்மரங்களாகவேயிருந்து எல்லாராலும் பூசிக்கும் பேற்றையும், தாம் அம்மரங்களினடியில் எழுந்தருளியிருந்து அப்பத்திரங்களால் பூசிப்போர்க்கு இஷ்டசித்தி தருதலும் தந்து மறைந்தனர். (விநாயகபுராணம்) இது பாபத்தைச் சமிக்கச்செய்தலால் சமியென்று பெயர்பெறும். இதனை ஈசான்ய திசையில் பிரதிஷ்டிக்கவேண்டியது. இது சத்துருக்களை நாசஞ்செய்வது. அருச்சுநனுக்குத் தனு முதலியன தாங்கியிருந்தது. இராமபிரான் வனவாசத்தில் அவருடன் பிரியவசனங் கூறியவரால் பூசிக்கப்பட்டது. இதைப் பூசிப்போர் இஷ்டசித்தி பெறுவர்.

5. இது சிவவீர்யத்தைத் தாங்காது தன்னிடத்தொளிக்கும்படி அக்கினி இடங்கொடுத்ததாதலால் அக்னி இனிநான் உன்னிட மிருப்பதால் நீ யாகாதி காரியங்களெல்லாவற்றிற்கும் பயன்பெறுவை என வரம் பெற்றது.

**வன்னியர்** — 1. ஓர்வகை ஜாதியார். இவர்கள் வீரசம்புமுனிவர் யாகஞ்செய்ய அதிற் பிறந்தவர் என்பர். இவர்கள் வாடாமாலை, புலிக்கொடி, மகம்மேரு, கச்சிநகர், மனோவேகரதம், மும்முரசு, கங்காநதி, பொற்சிலை, பண்ணுடு, மதக்களிறு உடையவராம்.

2 இது பள்ளிகளுக்கேயல்லாமல் அம்பலக்காரன், வலையன், சில மறவர்க்கும் பெயர். வன்னியன், வன்னிக்குட்டி, தேன் வன்னியன் என்னும் பட்டங்களுண்டு. இது தென்ஆற்காடு ஜில்லாவில் சில இருளருக்கும் பெயர். பின்னும் மற்றொரு பிரிவார் பூசாரித்தொழில் செய்தும் கூத்தாடியும் பிழைப்பர். இவர்களை வயாணியர் என்றும் கூறுவர். இவர்களுக்குக் கிராமத்தில் மிராசு உண்டு.

**வஸுக்கள்** — அட்டவசுக்களைக் காண்க.

**வஸுதேவர்** — வசுதேவரைக் காண்க.

**வஜ்ராஸ்வநபர்** — அநிருத்தர் குமாரர். இவர் குமாரர் சுபாகு.

**வஜ்ரான்** — யாதவகுலக்ஷீணத்து இறுதியில் மிகுந்து நின்று அருச்சுநனால் பட்டம் பெற்றவன்.

**வஸுதானன்** — தருமருக்கு யானை அலங்கரித்தவன்.

**வஸ்திரங்கள்** — இவை அரையிலுடுக்கும் உடை, அங்கவஸ்திரம், துண்டம், சிறிய பெரிய அங்கிவகைகள், பல வர்ணப்பட்டுடைகள், சரிகை வேஷ்டிகள், துப்பட்டிகள், தலைக் குட்டைகள், தலைப்பாகைகள் முதலியனவாகப் பலதிறப்படும்.

**வஸ்திரதாரணம்** — வெண்மை, மஞ்சள், சிவப்பு நிறங்களுள்ள வஸ்திரங்களைத் தரித்தலின்வகை. அந்தணர் மேல்வஸ்திரத்துடனும் சூத்திரர் அஃதின்றியுமிருத்தல் வேண்டும். வெள்ளைவஸ்திரம் வாதாதி

தோஷங்களும், வியர்வையும், விலக்கும், ஆயுள், லக்ஷ்மிவிலாசம், வனப்பு, மகிழ்ச்சி, அறிவு, பலம் முதலியன உண்டாக்கும். மஞ்சள் வஸ்திரம் தரிக்கின், வாதநீர்ச் சுருக்கு, இருமல், விஷசுரம், மாருத்தினவு, தனிச்சுரம், மலபந்தம் முதலியன விலகும். செம்மைநிற வஸ்திரத்திற்குச சிலரோகங்கள் உண்டாம்.

**வஷ்டிரோகம்** — பிரசவித்த ஸ்திரீ உடம்பு அதிர வேலை செய்வதாலும், பதினன்கு வேதத்தை மறித்தலாலும், கருப்பகால அபத்தியத்தாலும், மிகு சையோகத்தாலும் வாயு அதிகரித்து உறுப்புக்களில் சகிக்கக் கூடாத வேதனை தருவது. (ஜீவ.)

## வா

**வாகடர்** — வாக்பட்டரைக் காண்க. இவர் செய்தநூல் வாகடம்.

**வாகினி** — ஒரு தீர்த்தம்.

**வாகீசசுவாமிமடம்** — இது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் சைனர்களை வெல்லுதற்கு மதுரைக்கு எழுந்தருளியபொழுது தங்கிய இடம். இது ஞானமிர்த நூலாசிரியருடைய பரம்பரையார் மடமோவென்று நினைத்தற்கு இடமுண்டு.

**வாகீசன்** — 1 ஓர் இருடி சிவபூசாதுரந்தான்.

2. ரத்நவர்ணம், முக்கண், அபயவரதம், பாசம், சூலங்கள் கூடிய (ச) கரங்கள் உடையவராய்த் தியானிக்கத்தக்க சிவன் திருவுரு.

3. அப்பர்சுவாமிகளுக்கு ஒருபெயர்.

**வாகீச்வரீ** — யௌவன வயதுள்ளவளாய், ருதுமதியாய், நல்ல முகமுள்ளவளாய், தாமரையொத்த நேத்திரங்கள் உள்ளவளாய் வஸ்திரம், மாலை, பூஷணங்கள் உள்ளவளாயிருக்கும் பார்வதியார் திருவுரு.

**வாகுகன்** — 1. சிவகணத்தவரில் ஒருவன்.

2. இருதுபர்ணனிடம் நளன் இருந்த காலத்து வைத்துக்கொண்ட பெயர்.

**வாகுதை** — சரஸ்வதி நதி அருகில் உள்ள ஒருநதி. சங்கலிகிதர் என்னும் ருஷிகளில் லிகிதன், சங்கன் அனுமதியின்றி அவனது ஆச்சிரமத்து இருந்த பழத்தைப் புசித்தனன். தமயனுகிய சங்கன் இது களவு என்றனன். அதனல் லிகிதன் தனது கையைவெட்டியெறிந்து இந்நதியில் மூழ்கி இழந்த கைகளைப் பெற்றனன். ஆகையால் இந்நதிக்கு இப்பெயர் உண்டாயிற்று. (வாகு, புஜம், தா - கொடுத்தல்.)

**வாகுலீகன்** — பாரதவீரருள் ஒருவன். வீமனால் கச - ஆம் நாள் இறந்தவன்.

**வாகுவலி** — ஒரு அரசன். கச்சன் மருமகன். பிரசாபதி இவன் வழியில் தோன்றியவன். (சூளா.)

**வாகை**—பச்சிலை விரவித்தொடுத்த வாகைப்பூவை புனைந்து மாறுபாட்டை மேற்கொண்டு அலையும் கடல்போன்ற சேனையினையுடைய வேந்தைக் கொன்று ஆரவாரித்ததைக் கூறும் புறத்துறை. (பு. வெ.)

**வாகையரவம்** — வெள்ளிமலையினையும் வலிய வீரக்கழலினையும் சிவந்தகச்சினையும் அழகிதாக அணிந்தமை கூறும் புறத்துறை. (பு. வெ.)

**வாக்காள்** — அம்பரீஷன் புத்திரி; இவளை இருக்குவேதம் புகழ்ந்திருக்கிறது.

**வாக்கி**—அறம், பொருள், இன்பம், வீடெனு நான்கினையும்விரித்துக்கூறவல்லஆசிரியன்.

**வாக்கியர்** — சாகல்லியர் மாணக்கர்.

**வாக்குகள்** — 1. சூக்குமை, பைசாந்தி, மத்திமை, வைகரி என நான்காம். இவற்றுள் சூக்குமை யெனும் வாக்கு நாபியை இடமாகக்கொண்டு நாதமாகிய அறிவுதானே வடிவாகவரும். பைசந்திக்குத் தானம் உந்தியும் வடிவு பிராணவாயுவுமாம். இது அக்கர சுவரூபம் தோன்ருதபடி நினைவுமாத்திரமாய் நிற்கும். மத்திமை: இது நெஞ்சையும் கண்டத்தையு மிடமாகக்கொண்டு அக்ஷரசுவரூபத்தை ஒழுங்குபட நிறுத்திச் செவிக்குக் கேளாமல் உள்ளறிவுமயமாய் நிற்கும். வைகரிக்கிடம் நாக்கினடியாம். இது செவிப்புலனும்படி வசனிக்கும். இவையன்றிப் பஞ்சமையென்னும் அதிசூக்குமை யென்ருெரு வாக்குமுண்டு. அது பிரணவ சொரூபமாயிருக்கும்.

2. (5). வைகரி - அக்கரங்கள் வெளிப்பட்டுத் தோன்றுவது. மத்திமை-கண்டத்தில் சவிகற்பமாயுணரத்தக்க ஓசை. பைசந்தி-நினைவுமாத்திரமாய் நிற்பது. சூக்ஷ்மை நாதமாத்திரமாய் நிற்பது. பஞ்சமை-மேற்கூறிய வாக்குகள் தோன்றற்குக் காரணமாய் நிற்பது.

**வாக்குத்தேவி** — சரஸ்வதி.

**வாக்துஷ்டு** — கௌசிகனைக் காண்க.

**வாக்பட்டர்** — ஒரு வைத்தியநூலாசிரியர். வடநாட்டிலிருந்தவர். இவர்க்கு வாகட

பாகடர் எனவும் இவர்செய்த நூலுக்கு வாகடமெனவும் பெயர்.

வாங்கலன் — (சு) சுத்தோதன் குமாரன்.

வாங்கூலககபதி — ஒரு அரசன். இவன் பெண் கௌரவாம்பாள்.

வாரர்ரேயம் — யசுர்வேத சாகை. யஞ்ஞவல்கிய ருஷியின்பொருட்டு அச்வரூபியான சூரியனால் பிடரிமயிரினின்றும் விடுபட்டது.

வாசநன் — விசாகபூபன் குமாரன். இவன் குமாரன் நந்திவர்த்தனன்.

வாசந்தவை — இராஜமாதேவி முதலாயினோர்க்கு வருத்தம் உண்டானகாலத்து நீதிகூறித் தேறிய முதியவள். (மணி.)

வாசந்தேளவை — ஒரு முதியவள். இவள் இராஜமாதேவி முதலியவர்க்கு மனத்துன்பம் உண்டானகாலத்தில் பலநீதி கூறித் தேற்றியவள்.

வாசமயிலை — வளைவணன் மனைவி; பீலிவளையின் தாய். (மணிமேகலை.)

வாசம்—1. ஙி. இலவங்கம், ஏலம், கருப்பூரம், ஜாதிக்காய், தக்கோலம். பின்னும் 'தக்கோலம் தீம்புகை தகைசா லிலவங்கம் கர்ப்பூரம் சாதியோடைந்து' என்பர்.

2. அம்பரேச்சம், கத்தூரி, சவ்வாது, சாந்து, குங்குமம், பனிநீர், புனுகு, தக்கோலம், நாகப்பூ, இலவங்கம், சாதிக்காய், விசுவாசி, நிரியாசம், தைலம் முதலியன.

வாசவதத்தை — 1. இவள் உதையணனுடைய தேவியர் நால்வருள் முதல்வி. பிரச்சோதனனுடைய பட்டத்தேவியர் பதினறாயிரவருள் முதல்வியாகிய பதுமகாரிகையின் புதல்வி. இந்திரனருளால் உதித்தவளாதலால் இவள் இப்பெயர் பெற்றாள்; இவளுடைய செவிலித்தாய் சாங்கியத்தாய்; அழகிலும், குணத்திலும் சிறந்தவள். பெண்பாலார்க்குரிய கலைகளில் மிகப் பயிற்சியுள்ளவள். அவற்றுள் இசையையும், யாழையும் உதயணன்பாற் கற்றுத்தேர்ந்தவள்; மாலைதொடுத்தல் முதலிய கைத்தொழிலிற் சிறந்தவள்; சிற்பவேலையில் இவளுக்கு மிக்கபயிற்சியுண்டு; தந்தைமுதலியவர்பால் மிக்க அன்புள்ளவள்; மற்ற மகளிற் பலருள்ளும் பிரச்சோதனனுக்கு இவள்பால் அன்பு அதிகம்; தன்பாலுள்ள காதலால் உதயணன் இராசகாரியத்தை மறந்துவிட்டானென்று பிறர் சொல்லத் தெரிந்தமையால், இவள்தான் இறந்துபோய் விட்டதாகப் பெயர்பண்ணிச் சில காலம், செவிலித்தாய் முதலியவர்களோடு வேற்றுருவங்கொண்டு மறைந்திருந்தனள்; அவளுடைய ஆக்கத்தைக் கருதி இவளடைந்த துன்பங்கள் பல; உதயணனுக்கு இவள்பால் அன்பு அதிகம்; பதுமாபதியைக் கண்டபொழுது இவள் பிறை,;துவந்து விட்டனளென்றே யெண்ணி அவன் அவளை அடையவிரும்பினன். "வன்றைக் கஞ்சினவளிமுகந்தெடுத்துழிக், கண்ணுறக் கண்டே தன்னமர் காதன், மானேர் நோக்கின் வாசவ தத்தை தானே யிவளெனத் தான்றெரிந்து" இவளது பிரிவாற்றாமையால் அவன் உயிர்துறக்கவும் நினைத்தனன். இவளுடைய அணிகலங்களுள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துத் தனித்தனியேவிளித்து விளித்து அவன்வருந்திக் கூறிய பகுதிகளும் யாருடைய மனத்தையும் உருகச்செய்யும்; கனவில் இவளைக் கண்டு அவன் ஆற்றுவது முண்டு; இவளைப்பற்றிய செய்தியை யாரேனும் பேசும்பொழுது அவனுக்குத் துன்பந்தீரும். இவளுக்குத் தோழியர் பலரிருப்பினும் காஞ்சனமாலையி‿த்தே தான் மிகுந்த அன்புடையாள், மிக்கதூய்மை யுடையளாயிருந்தது பற்றியே சோதவனென்னும் முனிவரன் இவளுடைய கருப்பத்திற்றங்கி நரவாணதத்தனாகப்பிறந்து வித்தியாதர சக்கரவர்த்தியாக ஆயினனென்பர். இவளுடைய மற்றக் குணவிசேடங்கள் விரிவஞ்சி விடுக்கப்பெற்றன. (பெ. கதை.)

2. உஜ்ஜினியை அரசாண்ட சண்டமகேசன் குமாரி. வச்சதேசத்து அரசனாகிய உதயணனால் தவரப்பட்டவள்.

வாசவன் — 1. ஒரு மல்லன். விராடராசனிடம் இருந்த டலாயனன் என்னும் வீமனால் கொலையுண்டவன்.

2. இந்திரனுக்கு ஒருபெயர்.

வாசவி-1. பராசர்தேவி; வியாசருக்குத் தாய்.

2. உபரிசாவசுவின் புத்திரியாகிய சத்தியவதிக்கு ஒரு பெயர்.

வாசவேயன் — வாசவியின் புத்திரன்.

வாசற்படிவைக்கும் லக்ஷணம் — ஒரு வீட்டிற்கு நான்கு பக்கங்களிலும் வசாற்படி வைத்திருந்தால் விசுவதோமுக மெனப்படும். அதன் பலன் விருத்தி.

கீழண்டை வாசற்படியில்லாமல் மற்ற மூன்று பக்கங்களி விருந்தால் வியாக்ரபாதம் எனப்படும். பசுக்களுக்குப் பாழை; திருடர் பயம் உண்டு.

தெற்குமுகமாக வாசற்படி யின்றி மற்ற மூன்று பக்கமிருக்கின் பாக்கியப் பிரதம்.

மேற்கு முகமாக வாசற்படியின்றி மற்ற மூன்று பக்கமிருந்தால் ஸ்ரீ நிலயம் எனப்படும். இதன் பலன் நல்லவாழ்வுண்டாம்.

வடக்குமுகமாக வாசற்படியின்றி மற்ற மூன்று பக்கங்களிலிருந்தால் சூரியநிலையம் எனப்படும். இதன் பலன் இராஜபயம். வெகுமுகத்தில் சுவரில்லாமலிருந்து கோணமத்தியில் சுவரிருந்தால் அது புண்டரிக மெனப்படும். பலன் மத்திமம்.

விசாலலக்ஷணம் — தெற்கும், மேற்கும் கட்டின வீட்டின் விசாலம் கமலாகரம் எனப்படும். இதன் பலம் லக்ஷ்மிப்பிரதம்.

மேற்குமுகம், வடக்குமுகம் கட்டின வீட்டின் விசாலத்திற்குச் சவர்ணபலம் எனப்படும். இதன் பலம் சோரபயம், பீடை.

வடக்கு முகமும், கிழக்கு முகமும் கட்டின வீட்டின் விசாலம் யுஷ்கதமுஷ்டிகம் எனப்படும். இதன் பலன் ரோகபயம், விஷபயம்.

தெற்கு, மேற்கு, வடக்குக்கட்டின வீடுகளுக்கு அவ்விடத்தில் கிழக்கு வாசற்கால் வைத்தால் புத்திரமுஷ்டிகம் எனப்படும். இதன்பலன் நற்புயன்.

வடக்கு, கிழக்கு, தெற்குக்கட்டின வீட்டிற்கு மேற்கில் வாசற்கால் வைத்தால் அதிசய மென்னப்படும். இதன் பலன் ஹானியுண்டாம். கிழக்கு, மேற்கு, வடக்குக் கட்டின வீட்டிற்கு வடக்கில் வாசற்கால் வைத்தால் நல்ல சுகமுண்டாம்.

மேற்கு, கிழக்கு, வடக்கு இந்த மூன்று பக்கத்திலும் வாசற்காலிருந்தால் கல்யாணபதம் எனப்படும். இதில் சம்பத்துண்டாம்.

கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு இந்த நான்கு பக்கத்திலும் வீடுகட்டியிருந்தால் அது சதுச்சாலை எனப்படும். இதன் பலன் உத்தமம்.

**வாசனை** — மான்மதம், சவ்வாது, மணமலர்களில் இறக்கிய தைலங்களும், நீர்களும், சந்தனம், அத்தர் முதலியனவுமாம்.

**வாசனைப்பொருள்கள்**—சாம்பிராணி, கருப்பூரம், பச்சைகர்ப்பூரம், புனுகுசட்டம், கஸ்தூரி, சவ்வாது, குங்குமப்பூ, சந்தனம், பச்சிலை, கிச்சிலிக்கிழங்கு, கஸ்தூரிமஞ்சள், அகிற்கட்டை, தேவதாருக்கட்டை, அத்தர், பனிநீர், சிலவாசனைப்பொருள்களிலிறக்கும் தைலவகைகள் முதலியன மருக்கொழுந்து, மரு, பலவகைப் பூக்களிலிறக்கிய எண்ணெய்கள்.

**வாசனைவகை** — சாம்பிராணி, கர்ப்பூரப் பச்சைகர்ப்பூரம் (இதன்வகை) ஈசன், ஈமன், பூதச்சிதயன்; புனுகுசட்டம், கஸ்தூரி, (இதன்வகை) சரிகை, திலகை, குருந்தை, பிண்டகை, நாயகை; ஜவ்வாது, குங்குமப்பூ, கோரோசனை, சந்தணம், பச்சிலை, கிச்சிலிக்கிமங்கு, முதலியவை. (ப. தா.)

**வாசஸ்பதிமிச்ரமதம்** — இம்மதமேற்படுத்தியவர் வாசஸ்பதிமிச்ரர். இம்மதத்தவர் ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் அஞ்ஞானங் கற்பிப்பர். எவ்வாறெனின் ஜீவன் அஞ்ஞானி. அவன் பிரமத்தை விஷயிக்கிறான். ஆதலால் பிரமமும் அஞ்ஞானத்திற்கு விஷயமாகிறது என்பர். இந்த அஞ்ஞானம் ஒன்றல்ல. அநேக ஜீவன்கள்தோறும் வெவ்வேறு வகைப்பட்டிருக்குமென்பர். ஆதலால் அநேக ஜீவர்களால் கற்பிக்கப்படும். ஈச்வரரும் அநேகராவர். இவ்வாறே பிரமாண்டங்களும் அநந்தம் என்பர். எந்தச் சீவனுக்கு ஞானோதயம் உண்டாகின்றதோ அக்காலத்து அஞ்ஞானம் நீங்கும். ஈஸ்வரன் பிரமாண்டம் இவைகளுக்கும் அவ்வாறே நிவர்த்தியாம் என்பர்.

**வாசு** — ஒரு ருஷி. இவர் தன்னை மயக்க வந்த கிருதாசி என்னும் தெய்வகணிகையை நீச உருவாகச்சபித்துப் பின்னர் அநுக்கிரகித்தவர்.

**வாசுகி** — 1. கத்ரு தநயன்; ஆதிசேஷனுக்குச் சகோதரன்; அஷ்டமாநாகங்களில் ஒருவன். பெண் உலூபி; அருச்சுநன் தேவிகளில் ஒருத்தி. தேவாசுரர் அமுதம் கடையத் தாம்பு ஆனவன். அருச்சுநன் பப்ரவாகனால் மூர்ச்சித்த காலத்து நாகாத்தினத்தினால் உயிர்பெறும் பொருட்டு உலூபிக்குக் கொடுத்து அனுப்பினவன். அருச்சுநனுக்கு வசுக்களால் வந்த சாபத்தைத் தடுத்தவன். இவன் தன் குமரிகளாகிய சுப்பிரமை, மாலினி, பதுமினி, மண்டனை என்பவர்களைப் புண்ணியபுருசன் புத்திரர்களுக்கு மணஞ்செய்துகொடுத்தனன்.

2. திருவள்ளுவர் தேவியார்; மார்கசகாயன் என்பான் குமாரி. இந்த அம்மையாரை நாயனார் மனைவியர் ஆக்கிக்கொள்ளும் முன், தாம் மணலைக் கொடுத்துச் சமைக்கச்சொல்ல அவ்வகை சமைத்துக்

கொடுத்தவள். இவள் கிணற்றில் நீர் எடுக்கையில் நாயனர் இந்த அம்மையாரை அழைக்க அப்பாத்திரத்தைக் கிணற்று இடையில் விட்டுவர அது அவ்வகையே நின்றது என்பர். பகலில் நூற்கும் நூல் நாழி கீழ்விழ 'விளக்கேற்றி வருக' என்று நாயனர் கூற அவ்வகை ஏற்றித் தந்தவள். பழைய அன்னம் சுடுகிறது என்ன விசிறி கொண்டு ஆற்றியவள். தம் கணவருக்கு அன்னம் பரிமாறுமுன் பாத்திரத்தில் நீரும ஊசியும் வைக்கும் சந்தேகத்தை மரண காலத்தில் நாயனரிடம் அறிந்துகொண்டு புண்ணியஉலகு அடைந்தவள். மகா பதிவிரதை. இவள் ஒருமுறை பிக்ஷைக்கு வந்த கொங்கணரைச் சர்வபங்கப்படுத்தினதாகவும் கூறுவர்.

**வாசுதேவமுதலியார்** — ஒரட்டிக் குப்பம் செட்டி பாளையம் என்ற ஊரினர்; திருமுருகன் பூண்டிப் புராணம் பாடியவர்.

**வாசுதேவனர்** — யாப்பருங்கல விருத்தியுரையுள் கூறப்பட்ட தொல்லாசிரியரில் ஒருவர்.

**வாசுதேவன்**—1. வசுதேவன்.

2. வசுதேவர் குமாரர் ஆகிய கிருஷ்ணமூர்த்தி.

3. செருக்கால் நமபயா ... ண்டு கிருஷ்ணன் இருக்கிறன் என்று அவனிடம் போரிட்டு இறந்த கருச தேசாதிபதி.

4. கண்ணுவனைக் காணக இவன் குமாரன் பூமித்திரன்.

5. விஷ்ணு விரதமிருந்த புண்ணியத்தால் மறுபிறவி பிரகலாதனுகப் பிறந்த வேந்தியன். இவன் காமுகனயிருந்தவன்.

**வாசுபூச்சியர்**—சைநதீர்த்தங்கரரில் ஒருவர். இவர் சம்பாபுரத்தில் இக்ஷ்வாகு வம்சத்து வசுபூஜ்யர் ... பவருக்கு ஜயவதியிடம் பங்குனிமாதம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தி, விசாகநக்ஷத்திரத்தில் பிறந்தவர். உன்னதம் (எO) வில், செந்நிறம், (எஉ) லக்ஷவருஷம் ஆயுஷ்யம். இவர்க்குப் பத்மதர்மர் முதலாகிய கணதரர் அறுபத்தறுவர். இவர் காலத்து இராசாக்கள் அசலபல தேவர், திவிபிரஷ்ட வாசுதேவர், தாரகன், பிரதிவாசுதேவன்.

**வாச்சுன்**—சாகல்யன் சீடன்.

**வாச்சாயனர்** — மதனநூல் ஆசிரியர்.

**வாசராஜ்யம்** — கங்கை, யமுனையின் இடையில் உள்ள கானபுர நகரத்திற்குத் தென்புறமானதும் கௌசாம்பிக்கு வடக்கில் உள்ளதுமான தேசம்.

A country situated to the west of Allahabad. It was the kingdom of Udayara ; i's cal itlal was Kausambi.

**வாச்சையார்** — வசவர் மடத்திலிருந்த சிவனடியவர். இவர் அரசன் ஆணைக்கு அஞ்சி சௌராட்டிர சோமநாதனைத் தரிசனம் செய்யாது வருந்தச் சிவமூர்த்தி ஓர் சிவகணத்தவராய் வந்து இன்று இரவு சிவமூர்த்தி அடைவர் எனக்கூறிச்செல்ல, அவ்வகையே சிவபெருமான்வரச் சிவராத்திரியில் தரிசனம்செய்து அன்று அளந்த நெற்கொட்டாரத்தையே கொட்டாரச் சோமேசம் எனச் சிவத்தலம் ஆக்கியவர்.

**வாடாப்பிரமந்தன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் ஊர் பெயர் விளங்கவில்லை. (குறு-நடுக.)

**வாடைப்பாசறை**—வெய்ய வலியினையுடையானது பரந்த வேல்வீரர் நடுக்குற வந்திரங்கி வருத்தம்பண்ணும் வாடைக்காற்றின் மிகுதியைச் சொல்லிய துறை. (பு. வெ.)

**வாட்டாற்று எழனியாதன்** — மாங்குடி கிழாரால் புகழ்ப்பெற்றவன். இவன் சிறந்த கொடையாளி. (புற. நா.)

**வாட்போக்கி** — ஆர்யதேசத்து மன்னனைச் சிவபிரான் ... ரால் மயக்க அவன் வாளால் வீசினன். அந்த வாளைப் போக்கி அவனுக்குக் காட்சிதந்து அநுக்ரகித்ததால் இப்பெயர் பெற்றது. (வீரசிங்-புவி)

**வாணதிவாகரன்** — இராஜராஜ தேவன் பொன்பரப்பினன் அல்லது மகதைப்பெருமாள் என்பவனுடைய பட்டப் பெயர். இவன் வாண அரசனுக இருத்தல் கூடும். (திருவண்ணு-சாசனம்.)

**வாணமுதலியார்** — ஏகம்பவாணன் தந்தையார். ஏகனிடம் தம்பொருள் முதலியவைகளை ஒப்புவித்துக் குமாரனைக் காக்கச்சொல்லி இறந்தவர்.

**வாணர்** — இவர்கள் மாபலிச்சக்ரவர்த்தியின் மரபில் வாணுசுரன் வழி வந்தவர்கள்.

**வாணவம்சத்தவர்** — இவர்கள் கி. பி. 5-வது நூற்றண்டில் வடுகவழி மேற்குப் பாகத்தை ஆண்டு வந்தவர்கள். இவர்கள் வாணுசுரன் வம்சத்தவரென்பர். இவர்கள் முதலில் பல்லவர்களிடம் சிற்றரசர்களாக விருந்து பிறகு சோழவரசர்களுக்குட் பட்டனர். முதலாம் பாரந்தகன் வாணரைக் கீழ்ப்படுத்தினன். அக்காலத்து இவர்

கள் ஆண்டநாடு பெரும்பாணப்பாடி எனப் பேர் பெற்றிருந்தது.

**வாணசுரன்** — பாணசுரனைக் காண்க.

**வாணட்கோள்** — கூடிச்சேராதார் தம் அரணினைக் கோடலை நினைந்து வெற்றிகொள்ளும் வாளைப் புறவீடு விட்டதுறை. (பு.வெ.)

**வாணி** — விச்வரூபகற்பத்தில் சிவமூர்த்தியைத் தியானித்து இருந்த பிரமதேவனிடம் பிறந்தவள். விஷ்ணு ஆதியரைச் சிருட்டித்தவள். (இலிங்கபுராணம்). சரஸ்வதியைக் காண்க.

**வாணிகவாகை** — பொல்லாத வினையினின்றும் நீளக்கழிந்தவனுடைய ஆறுசெய்தியும் உயர்த்திச் சொல்லிய துறை. (பு. வெ.)

**வாணியர்** — இவர்கள் எள், நிலக்கடலை முதலியன செக்கிலிட்டாடி எண்ணெயெடுத்துச் சீவிப்போர். இவர்கள் தங்களை வைசியர்என்பர். இவர்கள் இடங்கையவர்; மதுரை திருநெல்வேலிப் பக்கங்களில் கோவிலுக்குள் போகக்கூடாது. இவர்கள் பூணூல் தரிப்பர். இவர்கள் சோதி நகரத்தார் என்று தங்களைப் புகழ்வர். இவர்கள் வீட்டில் வண்ணான் சாப்பிடான். இவர்களில் ஒற்றைச் செக்கான், இரட்டைச்செக்கான் என இரண்டுவகை உண்டு. இவர்கள் தங்களுக்குச் செட்டியென்பது பட்டமாகக் கொள்வர். வக்குவ மகருஷி யாகத்தில் இவர்கள் பூணூல் தரித்தனராம். இன்னும் இவர்கள் காமாக்ஷியம்மை, விசாலாக்ஷியம்மை, அச்சுத்தாலி, தொப்பைத்தாலி என நால்வகைப் படுவர். இதில் பிள்ளை என்று ஒரு பிரிவும் உண்டு.

**வாணியன்** — 1. சூத்திரன் வைசியப்பெண்ணைப் புணரப் பிறந்தவன். (அருணகிரிப் புராணம்.)

2. கருவிகள் ; செக்கு, செக்குலக்கை, மாடுகள், கெட்டப்பாறை, அளவுகருவிகள்.

**வாணிலை** — பகைவர்மேல் எடுத்துவிடுதலை விரும்பி வெற்றியினையுடையவாளைப் புறவீடுவிட்ட துறை (பு. வெ.)

**வாண்மங்கலம்** — பகைவராற் கலக்குதற்கரிய கடல்போலும் சேனையினையும் வலிய யானையினையு முடையான் வாளைப் புகழ்ந்த துறை. (பு. வெ. பாடாண்.)

**வாண்மண்ணுநிலை** — உயர்ந்தோர் துதிப்பத் தீர்த்தநீராலே மஞ்சனமாட்டிய வாளினது வீரத்தைச்சொல்லிய துறை. (பு வெ.)

**வாதக்கோன்** — இவனிடம் ஔவையார் சென்றபோது நாளை வருக என்று கூறியவன். அதனால் ஔவை இவனை இகழ்ந்து "வாதக்கோ னாளை யென்றான்" என்று கவிபாடினள்.

**வாதசோணிதரோகம்** — தேக மிளைத்தலால், உறுப்புகளில் தினவு, மிறுமிறுப்பு, குத்தல், அதிரல், கனத்தல், திமிர் இக்குணங்களுடனிருப்பது. இது வாதம், உத்தானவாதம், கம்பீரவாதம் எனவும் வாதாதிக்கவாதம், பித்தாதிக்கவாதம், சிலேஷ்மாதிக்கவாதம், தொந்தவாதாதிக்கவாதம், திரிதோஷவாதாதிக்கசோணிதம் எனவும் பல வகைப்படும். இவற்றைச் சிற்றாமணக்கெணணெய், விழுதியிலைக் குடிநீர், தசமூலரஸாயனம், கர்ப்பூரசிலாசத்து பஸ்மம் முதலியனவற்றால் வசமாக்கலாம். (ஜீவ.)

**வாதம்** — ரூபம் : இது வெப்பம், இலேசு, குளிர்ச்சி, சுறசுறப்பு, அணுதவம் முதலியனவாகக் காணப்படும். ஸ்தானம் - நாபியின்கீழ் இடுப்பு, தொடை, எலும்பு, சருமம். குணம் - சப்ததாதுக்கள், மலமூத்திராதிகள் முதலியவற்றைப் பெற்ற தேகத்தை மனோற்சாகப்படுத்தி உச்வாசநிச்வாச பதினாலு வேகங்களைச் செய்து போஷிப்பது. தொழில் - உலாவல், செறிவு, மூடக்கல், நீட்டல், விழித்தல் முதலியன. கோபம் - அறுவகை யுருசிகளை அதிகமாக அருந்தல், அகாலபோஜனம், அற்ப போஜனம், யோகாப்யாசம், நித்திரை பங்கம், துக்கம் முதலிய காலங்களில் வாதம் கோபிக்கும். விருத்தி - இது அதிகரிக்கின் இளைத்தல், நடுக்கல், ஒய்ச்சல், வயிறுப்பிசம், துர்ப்பலம் முதலியன வுண்டாம். சீரணம் - இது குறைந்தால் இளைத்தல், ஈனத்வனி, மறதி முதலிய நாற்குணங்களுண்டாம்.

**வாதராயணன்** — வெதிரிகாச்சிரமத்தில் தவத்தில் அமர்ந்ததால் வியாசருக்கு வந்தபெயர்.

**வாதராஜ ஏவல்கொண்டசோழன்** — இவன் ஒருகாலத்தில் போர்க்கப்பல் ஓட்டிச் செல்லுகையில் காற்று இல்லாமையால் மரக்கலம் நிற்க, வாயுபகவானை இயங்கும்படி பணிகொண்ட சோழன். (புறநானூறு.)

**வாதநடை** — பீஜாஹாரிணியின் குமாரி. வீர்யக்கலிதம் உண்டுபண்ணும் தேவதை. (மார்க்கண்டேயம்.)

**வாதரோகம்** — பஞ்சபூதங்களிலொன்றாகிய வாத பித்த கபங்கள் அதிகப்படுதற்கும் பல தோஷங்களுக்கும் காரணமுமான வாயு ; தேகாக்ஷணத்தின் பொருட்டு தச

வாயுக்களாகப் பிரியினும் அது, ரஸாதி வஸ்து பேதங்களாலும் தகாதபொருள்களை உண்ணலாலும், தீநடக்கைகளாலும் ரோகமாகத் திரும்பி (அ0)வித வாதரோகங்களைத் தரும். பாதாக்ஷோபகவாதம், யாதாலகவாதம், பாதஹரிஷவாதம், அபிகாதவாதம், புச்சாவர்த்தவாதம், சீதகண்டுவாதம், சுப்திவாதம், பரதகண்டகவாதம், களாயகஞ்சவாதம், சம்பூக சிரிஷவாதம், பாதோபகாதவாதம், கிருத்திரசிவாதம், சோணிதவாதம், ஊருஸ்தம்பவாதம், சகனுவர்த்தவாதம், துனிவாதம், பிரதிதுனிவாதம், மூடவாதம், ஆத்மானவாதம், பிரத்யாத்மானவாதம், அபந்திரிகவாதம், மனோவிருத்திவாதம், ஆந்திரபித்தவாதம், அபதானகவாதம், நானாவர்த்த வாதம், மூத்திரசா வாதம், மேட்ரகூீயவாதம், இருதாவிருதவாதம், சுரோணி சூலவாதம், நாபிசாருவாதம், அஷ்டிலாவாதம், பிரத்தியஷ்டிலாவாதம், ஸ்தனருக்குவாதம், பக்ஷகாதவாதம், உதாவர்த்தவாதம், தண்டகவாதம், தனுஸ்தம்பவாதம், ஆக்ஷேபகவாதம், பாகியாயாமவாதம், அந்தாரயாமவாதம், சந்நியாசவாதம், அபிநியாசவாதம், ஆட்டியவாதம், விஸ்வபித்வாதம், சுவாலிதவாதம், அவபாருகவாதம், அநாயசகவாதம், அவுஷ்மாபகவாதம், ஊர்த்துவாம்மிச்சாவாதம், ஆயாசாவர்த்தவாதம், அர்த்திதவாதம், அனுஸ்தம்பவாதம், உக்கிராக்ரகவாதம், விஸ்மாரியகவாதம், களாவர்த்தவாதம், பிரமோன்மந்தவாதம், இதிதாபகவாதம், ஆசியா க்ஷேபவாதம், தொனிவிச்சின்னவாதம், திருக்குப்பிராந்திவாதம், தவனோபகாதவாதம், திருக்குஸ்தம்பவாதழ், விவுர்தாசியவாதம், சம்விருதாசியவாதம், புருவாடோபகவாதம், பாதிரியவாதம், கர்ணசூலரோகம், அவபேதகவாதம், ஊர்த்துவமுகவாதம், அதோமுகவாதம், ஆசியக்குவாதவாதம், சிதிலாவர்த்தவாதம், சர்வாங்கவாதம், சிரச்சால்லியவாதம், காராக்ஷேபகவாதம், அங்கசலனவாதம், அங்கியேத்துகவாதம், தொனிகத்கதவாதம், கம்பீரவாதம், பரிஸ்போட்வாதம், மூத்திர உதிரவாதம், வச்சிரரூபகவாதம், அசுவவாதம், பேய்வாதம். இவற்றை வாதரோக நிவாரணிகளால் வசமாக்கலாம. (ஜீவ.)

வாதாபி — 1. தாருகாசுரன் தங்கையாகிய அசமுகி தூர்வாசரைக் கூடிப்பெற்ற குமாரன். இவன் சகோதரன் வில்வலன். இவன்தான் ஆடாக வில்வலன் வந்த விருந்தினர்க்குச் சமைத்திட அவர்கள் உண்டபின் வில்வலன் மிருதசஞ்சீவினி மந்திரத்தால் வாதாபியை அழைக்க உண்டவர் வயிற்றைப் பீறிக்கொண்டு வெளிவருவான். இவ்வகை செய்வதைத் தேவர் அகத்தியரிடம் முறையிட்டனர். அகத்தியர் விருந்தாக வந்து உண்டு அவன் சகோதரனை அழைக்கையில் வயிற்றில் மாறுதல்கண்டு வயிற்றைத் தொட்டுத்தடவி வெளிவராது இறக்கச் செய்ய இறந்தவன். இவனை விப்ரசித்தியின் குமாரன் என்பர்.

2. கிலாதனுக்குத் தமனியிடம் உதித்த குமாரன்.

3. சாளுக்கியரது முக்கிய பட்டணம். இதனை கி. பி. 640-இல் நரசிம்மவர்மன் சுட்டெரித்தான்.

வாதாரணி — ஆத்மாவினிடம் நிறைந்து வசிக்கும் வாயுமூர்த்தி. (வாயுபுராணம்.)

வாதீ—1. எதுவும், எடுத்துக் காட்டும் நாட்டி அளவை செய்து தன்கோணிறீஇ பிறன்கோன் மறுப்பவன். (யாப்-வி.)

2. காரணமும், மேற்கோளும் எடுத்துக் காட்டிப் பிறன்கோள் மறுத்துத் தன்மத நிறுத்திப் பாடுவோன். (வீரசோ.)

வாதிஹம்சாம்புதர் — அப்புள்ளாருக்கு அம்மாள் இட்ட திருநாமம்.

வாதூலதேசிகன் — முதலியாண்டானுக்குப் பெயர்.

வாத்து — 1. இது நிலத்திலும, நீரிலும் வாழும் பறவையாயினும் நீரில் வாழவே பிரியப்படும். இது தோலடிப் பாதங்களுள்ளது. மூக்கு அகன்று சிறு பற்கள்போற் பொருக்குகளைப் பெற்றிருக்கும். பூமியில் நடக்கையி லுடலை யசைத்தசைத்துச் செல்லும். இது ஒரு சிறுபடகுபோல் குவிந்த கன்ற தேகத்தையுடையது. வாத்து சிறியது. கழுத்து நீளம். நீரிலுள்ள பூச்சி புழுக்களைத் தின்னும். இதனிறகில் தைலப்பசை யுள்ளதால் இறகுகள் நனைவதில்லை. இது தன் முட்டைகளைப் பொரிக்க அறியாது. கோழிகளே இதன் முட்டைகளைப் பொரிப்பன. இதில் குள்ள வாத்து பெரிய வாத்து என இருவகையுண்டு.

2. இது குறுகிய கால்களும் படகுபோலுருவமும் உடைய நீர்பபறவை இனத்தைச் சேர்ந்தது. இவ்வினத்தில் நூற்றுக்

கணக்கான வேறுபாடுடையவை உண்டு. அன்னம் பெரியவாத்து முதலியவும் இவ்வினத்தனவாம். சற்று உருவம் பெரிதாகவும் உண்டு.

**வாத்துக்கள்** — இவை சமசீதள மண்டல பிராணிகள். இவை இடபேதத்தால் உருத்திரிந்து பலவகைப்படும். இவ்வினத்தில் பெரியவாத்து குள்ளவாத்து அன்னம் என (ங) வகை யுண்டு. இவை நீர்ப்பறவையின மாதலால் தோலடிப்பாதங்களுண்டு. மூக்குத்தட்டை; இது, படகைப்போல் அகன்றும் குவிந்துமுள்ள உடல் பெற்றது. இதன் சிறகுகள் தண்ணீரில் நனையாதபடி இது தன் முதுகின்புறத்திலுள்ள பசையை மூக்கிற்பெற்று இறகுகளை அடிக்கடி கோதும். இது நீர்நிலைகளிலுள்ள பூச்சி புழுக்களைத் தின்னும். இதன் முட்டைகளை உணவாகக் கொள்கின்றனர். குள்ளவாத்து வடதுருவ மண்டலத்தை யடுத்த இடங்களில் கூட்டமாக இருக்கின்றன. இவை (6) அங்குல முதல் (15) அங்குலம் வரையில் உயர்ந்திருக்கின்றன. இவ்வினத்தில் குறுகிய மூக்குள்ளவையும் நீண்ட மூக்குள்ளவையும் உண்டு. இவ்வினத்தில் மிகச்சிறியவைகளை டீல் என்பர். இவை உருவத்திலும் நிறத்திலும்அழகுள்ளவை. இப்பறவையின் மற்றொரு வகுப்பிற்குப் பலநிறமுடைய உச்சிக்கொண்டை உண்டு. மூக்கு நீலநிறம்; இதன்வால் நீளம்; இவை பறந்தும் செல்லும்; தோலடிப்பாதம். இவற்றில் மற்றொரு இனம் ஆபிரிகாவின் மேல்கரை பக்கத்திலுண்டு. அவற்றினுரு பெரிது. மற்றொருவகை பறவைகளை எதிர்க்கும் வன்மை கொண்டவை. இவை பூச்சி புழுக்களைத் தின்னும். விஜியன் - இது குள்ளவாத்தினத்தில் ஒருவகை. இது சாகபக்ஷணி. துருவமண்டிலவாசி. இதன் தலையும் மூக்கும் கரியசெந்நிறம்; வயிறுவெள்ளை; இதன் சிறகுகளைத் தலையணை முதலியவற்றிற்கு ஐரோப்பியர் உபயோகிப்பர். இதில் மற்றொருவகை சைனாவின் வடபாகத்திலிருக்கிறது. அதற்கு மண்டாரின் என்று பெயர். இப்பறவையின் இறக்கையின் சிறகின் பக்கத்தில் இரண்டு சிறகுகள் மேலோங்கி நீண்டிருக்கின்றன. இவற்றைக் கண்ணாடிச் சிறகென்பர். இதன் மூக்கு பவழத்தையொத்துச் சிவந்திருக்கிறது. இதன் மூக்கின்முனை வெண்மை. இதில் மற்றொரு வகை ஆசியாவின் வடபாகத்திலுண்டு. அவற்றை ஒயில்டு டக் என்பர். இது செந்நிறமுடையது. இறகுகளில் கரிய கோடுகளுண்டு. மூக்கு நீளம்; கால் பவளம் போல் சிவந்தவை. இதற்குக் கண்ணில் ஒருவகை ஜவ்வுண்டு. அச்சவ்வு கண்ணை மூடிக்கொண்டிருந்தாலும் பார்வை தெரிகிறது. இவ்வினத்தில் மற்றொருவகை எயிடர் டக். இது ஐரோப்பாவின் வடபாக நீர்நிலைகளி லிருப்பது. இவற்றின் மார்பில் இறகுடன் கூடிய தோலுண்டு. இது உஷ்ணத்தைக் காக்கும் உடையொத்தது.

**வாத்யவிசேஷங்கள்** — இடக்கை, முழவு, படகம், கடிப்பு, ஒருகட்பறை, பேரிகை, சிறுபறை, திமிலை, தண்ணுமை, குடப்பறை, ஒருகட்பகுவாய்ப்பறை, காடிப்பறை, குறிஞ்சிப்பறை, பாலைப்பறை, முல்லைப்பறை, மருதப்பறை, நெய்தற்பறை, உவகைப்பறை, உடுக்கை, நாகசுரம், துருத்தி, முகவீணை, புஜங்கம், புல்லாங்குழல், டமாரம், டங்கா, கரசெஜம், கந்தர்வம், இராஜவாத்யம், தவளச்சங்கு, பூரி, நபுரி, துத்தாரி, பாங்கா, எக்காளம், கௌரிகாளம், திருச்சின்னம், கர்ண தக்கை, டவுண்டை மல்லரி, சல்லரி, தம்புரு, வீணை, பிடில், சித்தார்கிணாம் சாரங்கி.

**வானமாமலையாண்டான்** — ஆளவந்தார் திருவடி சம்பந்தி.

**வானரசேநாபதியர்** — இவர்கள் இராமர்க்குப் படைத்துணையாகச் சுக்கிரீவனால் வருவிக்கப்பட்டவர்கள். சுசேடணன், சதவலி, கேசரி, இடும்பன், பனசன், நீலன், ததிமுகன், கயன், சாம்பன், துன்முகன், துமிந்தன், மயிந்தன், மற்கசகோமுகன், குமுதன், இடபன், தீர்க்கபாகன், விந்தன், அநுமன், நளன், கும்பன், சங்கன், அக்ஷயன், கவாக்ஷன், விருபாக்ஷன், விந்தன் முதலியோராவர்.

**வாந்திரோகம்** — இது உதானவாயு வாதபித்த சிலேஷ்மங்களை மேல்நோக்கப் பண்ணுவதால் உண்டாவது. இது வாய்நீர் ஊறல், அரோசகம், தாகம், வாயில் உப்புக்கரித்தல் இக்குணங்களைப் பெற்று வரும். இது வாதம், பித்தம், சிலேஷ்மம், திரிதோஷவாந்தி, திருஷ்டான்னவாந்தி என ஐந்துவகை. இதனைச் சந்திரோகம் எனவும், வமனரோகம் எனவும் கூறுவர். இவையன்றிக் கிருமி வாந்தியு மொன்

றுண்டு. எலக்காய்த்தோல் விலாமிச்சை வேர்க் கஷாயம், இஞ்சி ரஸாயனம், குங்மப்பூ இவைகளால் குணமாம்.

வாமசாரன் — பாடுவான் மகன். இவன் காமாதுரனாய்த் தனக்கு இருந்த செல்வங்களை எல்லாம் வேசிக்குக்கொடுத்து மீண்டும் கொடுக்கக் கிடையாமல் ஒரு செட்டியின் வீட்டில் களவுசெய்து அவ்விடம் இருந்த ஆபரணப்பெட்டியைத் தாசியிடம் கொடுத்தனன். தாசி அவ்வணிகளில் ஒன்றைக் கடைவைத்திருந்த செட்டியிடம் மதிப்பிடக் கொடுத்தனள். தன் நகை எலறு அறிந்த செட்டி இதை அரசனுக்குத் தெரிவிக்க அரசன் விசாரித்து வாமசாரனிடம் இருந்த அணிகளைவாங்கிச் செட்டியிடம் கொடுப்பித்தனன். செட்டி பின்னும் பேராசையால் ஒரு கடகம் இல்லை என்று அரசனிடம் கூறினன். அரசன் இதனால் வாமசாரனைச் சிறையில் இட்டு வருத்தினன். இதனைக் கண்ட வாமசாரன்தந்தை மனம் பொருது சிவமூர்த்தியிடம் மைந்தனுடைய குறைகூறி மகனுக்கு நேர்ந்ததை நீக்க வேண்டினன். சிவமூர்த்தி பாடுவானுக்குக் கடகம் ஒன்று கொடுத்தனர். அதைப் பாடுவான் அரசனிடம்தர அரசன் வணிகனிடம் தந்தனன். வணிகன் அக்கடகத்தின் சிறப்பைக்கண்டு களிப்புடன் பெட்டியில் இட்டு மறுநாள் பெட்டியைத் திறந்து பார்க்க அந்தக் கடகமும் அதனுடன் இருந்த அணிகளும் பாம்புகளாக இருக்கக்கண்டு அரசனிடம் கூறினன். அரசன் பாடுவானை அழைத்து அக்கடகம் ஏதெனப் பாடுவான் அது வந்த வரலாறுகூற அரசன் வியந்து களிக்க வணிகன் பொருள் இழந்தனன்.

வாமசிரமுனிவர் — இவர் நாகலோகத்திருந்த கட்கத்தைப் பெறவெண்ணி யாகஞ்செய்து நாகங்களைச் சுஷ்கிக்கச் செய்ய நாகங்கள் வருந்திக் கட்கத்தைத் தந்தன. பின் அவ்விடமிருந்த வேசையொருத்தி நிர்வாணமாயிருத்தல் கண்டு அவளைக் கூடுகையில் நாகங்கள் கட்கத்தைக் கொண்டு போயின. (சிவமகாபுராணம்.)

வாமதேவகல்பம் — சிவபெருமானுடைய வாமபாகத்தில் வாமதேவர் தோன்றிய கற்பம்.

வாமதேவமூர்த்தி—செந்நிறமும், சுரபிமாலையும், உயர்ந்த மூக்கும், காத்தில் கத்திகேடயமும் சிவந்தபாகையுமுடையவர்.

வாமதேவருஷி — பூர்வத்தில் ஓர் வேதியன். இவன் முத்தி விருப்புள்ளவனாய்த் தவஞ்செய்து புண்ணியம் கூட்டுவிக்காமல் மறுபிறவி புழுவாய்க் கேதாரத்தில் ஒருமரத்திவிருக்கையில் இறைவன் இறைவிக்கு உண்மைஞான முபதேசிக்கையில் தன்னை மறந்து எதிரில் விழக்கண்ட சிவமூர்த்தி நீ பூமியில் வாமதேவருஷியாய்ச் சில நாளிருந்து பலர்க்கும் தத்வமுபதேசித்துப் பின்னர் கைலையடைக என்றபடி சிலகாலமிருந்து முத்திபெற்றவர்.

வாமதேவர் — 1. சதாசிவமூர்த்தியின் திருமுகத்து ஒன்று. (சிவபேதம்). முப்பதாவது கற்பமாகிய இரத்த கற்பத்தில் பிரமன் சிவமூர்த்தியை நினைப்ப, இவர் அழல் உருக்கொண்டு மான்மழுச் சதுர்ப்புஜராய்த் தரிசனம்தந்து, அருள்புரிந்து நால்வர் இருடிகளைத் தம்மால் தோற்றுவித்து அளித்தனர். நான்காவது காண்டத்தில் அடங்கிய கீதங்களைச் செய்தவர். விரஜர், விபாதர், விசோகர், விச்வபாவினர் என நால்வர். (கலிங்க - புராணம்.)

2. ஒரு முனிவர். சிவபூசையால் சிரஞ்சீவிதத்வம் அடைந்தவர். தாய் வயிற்றில் இருந்து வெளிப்படாது ஞானம் பெற்றவர். இவர் அணிந்து இருந்த விபூதியை இவரை விழுங்க வந்த அரக்கன் பூச்சுண்டு தேவன் ஆயினன். (பிரமோத்தர காண்டம்.)

3. ஏகாதச ருத்திரருள் ஒருவன். தேவி சதை.

4. ஒரு மகருஷி. சலன் என்னும் சூரிய குலத்து அரசனுக்கு உதவிபுரிந்தவர். சலனைக் காண்க. சலன் குமாரன் துன்முகன் இறக்கவும்சலன் கைதம்பிக்கவும் செய்தவர்.

5. ஒரு அரசன். இரண்யரோமன் அல்லது இரண்யரேதசு குமாரன். குசத்தீவிற்கு உரியவன்.

6. வசிட்டருடன் இருந்த தசரதன் புரோகிதன்.

7. ஒரு இருடி. துச்சயனைக் காண்க. பசியினால் கஷ்டப்பட்டு நாயின் மாமிசம் உண்டார் என்பர். (மநு.)

வாமதேவன் — 1. க்ஷத்திரியன் இராஜசூய யாகத்தில் அர்ச்சுனனால் வெல்லப்பட்டவன்.

2 ஒரு ரிஷி மாணக்கன். ஆத்ரேயன் இவனுடைய குதிரையை அபகரித்தார். (பா. வா.)

வாமதேவி — ருசன் பாரியை.

வாமநம் — 1. ஒருநதி.

2. ஒரு புராணம்.

3. தென்திசைக்கண் உள்ள யானை.

வாமநர் — காசியபருக்கு அதிதியிடம் புரட்டாசிமாதம் சுக்லபக்ஷம் சிரவணத்துவாதசியில் அபிசித் நக்ஷத்திரத்தில் அவதரித்தவர். அதனால் இத்துவாதசி விஜயத்துவாதசி எனப்பட்டது. இது விஷ்ணுமூர்த்தியின் ஐந்தாவது அவதாரம். இவர் அவதரித்த காலத்தில் சூரியன் சாவித்திரியை உபதேசித்தான். பிரகஸ்பதி பிரமசூத்திரத்தை உபதேசித்தார். காச்யபர் முஞ்சியைக் கொடுத்தார். பூமி கிருஷ்ணசனங் கொடுத்தது. சந்திரன் தண்டங் கொடுத்தான். அதிதி கௌபீனங்கொடுத்தாள். பிரமன் கமண்டலம் கொடுத்தான். குபேரன் பாத்திரங்கொடுத்தான். பார்வதி பிக்ஷைகொடுத்தாள். இவர் பாரத்துவாசரிடம் வேதம் உணர்ந்தவர். இவர் மாவலியின் செருக்கடக்க அவனிடம் குறுகிய உருவாய்ச்சென்று மூவடிமண் வேண்டினர். அந்தக் காலத்திலே அசுரகுருவாகிய வெள்ளி மாவலிக்கு உறுதிகூறித் தடுக்கவும் மாவலி கேளாது தானஞ்செய்யத் துணிந்து தாரைவார்க்கையில் சுக்கிரன் சிறுரூபியாய் நின்று கண்டியினின்றும் தாரைவிழாது தடுத்தது கண்டு, வாமநர் தர்ப்பை எடுத்து நீர்த்தாரை வரும்வழியைக் குத்திச் சுக்கிரன் கண்ணைக் கெடுத்தனர். பின் திரிவிக்கிரமராய் மூவுலகத்தை ஈரடியால் அளந்து ஓர் அடிக்கு இடம் இலாது மாவலி சிரத்தின்மேல் வைத்துப் பாதாளத்தில் அழுத்தி, அவனை அங்கே சகலபோகங்களையும் அனுபவிக்கச் செய்தனர். (பாகவதம்.)

2. அகத்தியர் மாணுக்கர் பன்னிருவருள் ஒருவர்.

3. கத்ரு தனயனை நாகன்.

வாமநாசாரியர்—1. ஒரு சைநநூல் ஆசிரியர்; மேருமந்திர புராணம், நீலகேசித்தெருட்டு செய்தவர்.

2. அகத்தியர். இவரைச் சைநர் இவ்வாறு கூறுவர்.

வாமநாச்சிரமம் — இது விஷ்ணு தவம் புரிந்த சித்தாச்சிரமம்.

வாமநாதபுரம் — பூர்வம் சைநர் வசித்துக் கொண்டு இருந்த மயிலை. தொண்டை நாட்டில் உள்ளது. இப்போது மயிலாப்பூர் என்று வழங்கிவருகிறது. இதில் நேமிநாத தீர்த்தங்கரர் இருந்தார் என்று சைநர் கூறுவர். அவரை மயிலைநாதரென்றுங் கூறுவர்.

வாமமதம் — சைவ சமயத்தின் உட்சமயத்துள் ஒன்று. இது சத்திக்குப் பரத்துவம் கூறும். இம் மதத்தவர் சிற்சத்தி தம் அம்சத்தால் பராசத்தி முதலிய ஐந்துசத்திகளைச் சிருட்டிக்க, அச்சத்திகள் பிரமன் முதலான ஆன்மாக்களைச் சிருட்டிப்பர் என்பர். வாலை, திரிபுரை, சிவை முதலிய தேவியரைச் சக்கரத்தில் தாபித்துத் தேவியின் மூல மந்திரம் செபித்து அனைத்தையும் தேவியின் சுவரூபமாகக் கண்டு ஆனந்தம் அடைவதே மோக்ஷம் எனவும் கூறும். (தத்துவநிஜா.)

வாமர் — பிருதிவியாகிய மண்ணுக்கு அதிட்டானதேவர். இவருக்குச் சர்வர் எனவும் பெயர்.

வாமனமுனி — இவர் தமிழிலுள்ள மேருமந்தர புராணமென்னும் சைநநூலினாசிரியர். இவர் காஞ்சிபுரத்தையடுத்த திருப்பருத்திக்குன்றமென்னும் இடத்தவர். இவர்க்கு மல்லிஷேண முனியெனவும் பெயருண்டு. இவர் வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லவர். இவர் வடமொழியில் பஞ்சாஸ்திகாயம், பிரவசனசாரம், சமயசாரம், ஸ்யாத்வாதமஞ்சரி என்னும் நூல்களுக்கு உரை யெழுதியிருக்கிறார். நீலகேசித்தெருட்டென்னும் தமிழ்நூலும் எழுதியிருக்கின்றார். இப்பெயர் கொண்டவர் மற்றும் சிலருளர். அகத்தியரிட மிலக்கணங்கற்ற வாமனமுநிவர் மற்றொருவர். வடமொழி அலங்கார சாத்திரமியற்றிய மற்றொருவரும், திருக்குறளாசிரியரான ஏளாசாரியர் அல்லது ஸ்ரீகுந்த குந்தா சாரியராகிய வாமனாசாரியரும் வேறுவர். இவர் காலம் 1387-88 ஆக இருக்க வேண்டும். (மேருமந்திர-புராணம்.)

வாமனன் — ஒருபாம்பு. கருடபுத்திரன்.

வாமன் — 1. ஒரு மதத்தவன். இவனுக்குச் சிவமூர்த்தி அக்னியும் உபவீதமும் தரித்த மூர்த்தியாய் அருளுவர் என்பன்.

2. பூதனுக்குச் சாரூபியிடம் உதித்த குமாரன். ஏகாதசருத்திரருள் ஒருவன்.

வாமை — 1. பிருதிவி (மண்.) தத்துவரூபையான சத்தி. பிருதிவீச்வரர் வாமர் அல்லது சர்வர்.

2. ஒருநதி.

**வாயற்பதிவடுகன்** — இவர் ஒரு பிரபு. தொண்டைநாட்டு வாயற்பதியிலிருந்தவர். இவர் சகோதரர் மரணமடைந்திருக்கையில் இவரை ஒரு புலவன் யாசிக்க இவர் அந்தப் பிணத்தை மூடிவைத்து விட்டுப் புலவனுக்களித்தவர். 'தன்னுடன் கூடப் பிறந்துயிராகிய தம்பியையும், அங்கிலை மாண்டது தோன்றாமல் மூடிவைத் தன்ன மிட்டான், மன்னவர் போற்றிய வாழ் செங்கலங்கை வடுகனுக்குக், கன்னனுஞ் சோமனு மோங்கி ராயினிக் காண்பதுவே'. இதனை "நேயத்துடன்" எனுந்தொண்டை மண்டல சதகத்தாலுமறிக. (தமி-நா-ச.)

**வாயிலார்நாயனார்** — தொண்டை நாட்டுத் திருமயிலைப்பதியில் அவதரித்து, இல்லறத்து இருந்து, சிவமூர்த்திக்கு மனத்தில் திருக்கோயில் முதலிய சமைத்துத் திருமஞ்சன தூபதீப நிவேதனம் செய்து, பேரானந்தம் அடைந்து சிவபதம் அடைந்த சிவனடியவர். அறுபத்து மூவரில் ஒருவர். (பெரியபுராணம்.)

**வாயிலான்றேவன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களுள் ஒருவர். இவரது இயற்பெயர் தேவனாக இருக்கலாம். ஊர் வாயில் என்பது. (குறு-கஙங, கOஅ.)

**வாயிலிளங்கண்ணன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவரது இயற்பெயர் இளங்கண்ணன். ஊர் வாயில் என்பது. (குறு-நஎகூ.)

**வாயில்** — (கு) கண், காது, மூக்கு, வாய், குதம், அல்லது குய்யம்.

**வாயில்கள்** — 1. தலைவன் காமக்கிழத்தியர் காரணமாகப் பிரிந்தகாலத்துத் தலைவிக்கு உண்டாம் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாவன; பாணன், பாடினி, கூத்தர், இளையோர், கண்டோர், பாங்கன், பாகன், பாங்கி, செவிலி, அறிஞர், காமக்கிழத்தி, காதற்புதல்வன், விருந்து, ஆற்றாமை என்பனவாம். (அகம்.)

2. தோழி, செவிலித்தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர் எனப் பலராவார்.

**வாயில்காப்போன்** — ஆயுதப் பயிற்சியில் திறம், உடல்வன்மை, மடியின்மை, வணக்கம், வருவோரைத் தகுதிநோக்கி அழைத்தல் முதலிய குணங்களுடையவன். (சுக்-நீ)

**வாயினிலை** — அரசனுடைய நெடியவாயிலைக் கிட்டிய என்வரவினை மறைவின்றிச் சொல்லென வாயில் காவலனுக்குச் சொல்லிய துறை. (பு. வெ.)

**வாயு** — 1. காசிபர் குமாரருள் ஒருவன். பலநாள் தவஞ்செய்து வாயு பதம்பெற்றவன். வடமேற்றிசைக்கு இறை. தேவி அஞ்சனை; வாகனம் மான்; பட்டணம் கந்தவதி; ஆயுதம் துவசம்; கிருஷ்ணமூர்த்தியின் ஏவலால் இந்திரனிடத்து இருந்து சுதர்மையைப் பெற்று உக்கிரசேநனுக்குக் கொடுத்தவன். தேவர் வேண்டுகோளால் குமாரக்கடவுள் இரதத்திற்குச் சாரதியாய் இருந்தவன். அநுமானுக்கு நீ யாரைக்காண்கிறையோ அவரிடத்தில் உனக்கு அதிக அன்பு மேலிடுகையில் அவர்களுக்கு அடிமைசெய் எனக் கட்டளையிட்டவன். அதிகாயன் யுத்தத்தில் இலக்குமணருக்கு முன் நின்று பிரமாத்திரப் பிரயோகஞ் செய்யஏவினவன். குசநாபனுடைய நூறுபெண்களும் தன்னை மணஞ்செய்ய மறுத்ததால் அவர்களுடைய முதுகை ஒடித்துச் சென்றவன். அநுமனை இந்திரன் வச்சிரத்தால் மோதிய காலத்துக் கோபித்து எல்லா உயிர்களிடத்தும் உள்ள தன்இயக்கத்தைக் கடலிற் சேர்த்தவன். சிவாக்கினையால் சிவமூர்த்தியின் நெற்றிவிழியில் தோன்றிய ஆறு தீப்பொறிகளைத் தாங்கிச் சென்று கங்கையில் வைத்தவன். இந்திரனுக்குப் பயந்த மைநாக பர்வதத்தைக் கடலிற் சேர்த்தவன். ஆதிசேடனுக்கு மாறுகொண்டு மேருவின் சிகரத்தைப் பேர்த்து எறிந்தவன். (ஆதிசேடனைப் பார்க்க.)

2 (கO) பிராணன் இருதயத்திலும், அபானன் குதத்திலும், சமானன் கழுத்திலும், உதானன் நாபியிலும், வியானன் தேகத்திலும், நாகன் நீட்டல் முடக்கல் செய்தலினும், கூர்மன் உரோமபுளகாங்கிதத்திலும், கிருகரன் முகத்தினின்று தும்மல் சினம் வெம்மை விளைத்தலினும், தேவதத்தன் ஒட்டம் இளைப்பு வியர்த்தல் செய்தலினும், தனஞ்சயன் உயிர்நீங்கினும் போகாது உடலினைப் பற்றியுமிருக்கும். உயிர் நீங்கிய பொழுது உடலினைக் கிழித் தகலும். மதங்கமுனிவர் சாபத்தால் பலமற்றுப் பின் திரியம்பகக்ஷேத்திரத்தில் சிவபூசைசெய்து குற்றம் நீங்கின. (சிவரஹ.)

3 இது, பரிச தன்மாத்திரையினின்று தோன்றியது. சத்தம், பரிசமெனும் இரண்டு குணங்களையுடைத்தாய்ச் சலித்தத்

திரட்டலெனுந் தொழிலை யுடையதாய்த் தேகங்களில் பிராணன் அபானன் முதலாகப் பத்துவகைப்பட்டியக்கி யெழுதல் இருத்தல் முதலிய தொழிற்பாட்டிற் கேதுவாய் எல்லாவுயிர்களுக்கும் உபகாரமாயிருப்பது. வாயுவில் (209½) பங்கு ஆக்ஸிஜன் எனும் பிராணவாயுவும், (790)பங்கு நைட்ரோஜன் எனும் உப்புவாயுவும், (⅓) பங்கு கார்பானிகாஸிட் என்னும் கரிய மலவாயுவும் கலந்திருக்கிறதென்பது தற்கால ஆராய்ச்சி.

4. ரூபமின்றிப் பரிசமுடையது. த்வக் இந்திரியம் பிரமாணம். இது பரிசம், சங்கியை, பரிமாணம், பிரதக்த்வம், அபரத்வம், வேகம் முதலிய ஒன்பது குணங்கள் உடையது.

**வாயுசம்மிதை** — இது குலசேகர வரகுண ராமபாண்டியர் இயற்றிய சைவபுராணம். வடமொழிப் புராணத்தின் மொழிபெயர்ப்பு. இது பூர்வகாண்டம் உத்தரகாண்டம் என்ற இரு பிரிவோடு அருபத்தொரு அத்தியாயங்கள் கொண்ட கஙஙச திருவிருத்தங்களையுடையது.

**வாயுமண்டலம்** — இது அண்டத்தின் உட்புறம் முழுதும் வியாபகமானது. இது வானத்தின்மீது உயர உயர ஐம்பது அறுபதுமைல் போகப்போகக் குறைந்துவிடுகிறது. இது உயிர்களுக்கு ஆதாரமானது. இந்த வாயு இல்லாவிடில் ஒரு உயிரும் சீவித்திராது. இதில் பிராணவாயு கலந்திருக்கிறது. இவ்வாயுவில் அங்கார க்ஷாரம் கலந்திருப்பதால் மரஞ்செடிகளை வளரச்செய்கிறது. இதனல் சத்தம் கொண்டுபோகப்படுகிறது.

**வாயுவேகன்** — 1. சண்முக சேநாவீரன்.

2. பிரசாபதியின் சேநாவீரன்.

3. இராவணன் தூதன்.

4. பிரசாபதி சேனவீரரில் ஒருவன் (சூளா.)

**வாயுவேகை** — 1. சடியரசன் தேவி.

2. மருசியின் சகோதரி; காந்திமதியின் தோழி.

**வாயுக்களின்சேட்டையாலுண்டாங்கெடுதி** - பிராணவாயு கெடின்-பஞ்சேந்திரிய உபத்திரவம், பீனசம், தாகம், இருமல், இரைப்பு முதலியன உண்டாம். உதான வாயு கெடின் - தாழ்வாய்க் கட்டையில் ரோகம், பிரமை, வாந்தி, அரோசகம், பீனசம், களரோகம் உண்டாம். வியான வாயுகெடின் - புருஷத்வம், உற்சாகம், பலம், கெடும். பித்தசுரம், வீக்கம், குத்தல், மந்தாக்னி, குஷ்டம், உண்டாம். சமான வாயுகெடின் - சூலை, குன்மம், கிரகிணி, பக்குவாசய ஸ்தான ரோகங்களு முண்டாம். அபானவாயு - உஷ்ண அன்னம், அதிநடை, அசைவற்றிருத்தல், வேகமாகத் திரிதல், இவற்ருல் உண்டாகும். அதனுல் அதிமூத்ரம், சுக்கிலமேகம், மூலரோகம், குதப்பிரம்ச ரோகம் முதலியன உண்டாம். (ஜீவ.)

**வாயுவாங்கி** — இது பாத்திரத்தின் உள்ளிருக்கும் காற்றை வெளியிலிழுக்கும் ஒருவகை இயந்திரம்.

**வாயுவின்மார்க்கங்கள் ஏழு** — சாத்யர் என்கிற தேவர்களுக்குப் புத்திரன் சமானன். அவன் புத்திரன் உதானன். அவன் புத்திரன் வியானன். அவன் புத்திரன் அபானன். அவன் புத்திரன் பிராணன். ஆவஹன்-இதற்குப் பிராணன் என்று பெயர். இது பிராணிகளைப் பிழைக்கச் செய்வதால் இப்பெயர் பெற்றது. பிரவாஹன் இது ஜலத்தை வருஷிக்கும் மேகங்களுக்கு அனுகூலமாயிருப்பது. உத்வஹன்-மேகங்களைக்கொண்டுபோய் மழைபெய்விப்பது. சம்வஹன்-இது ரஸங்களை வற்றச்செய்து ஆபத்திற்குக் காரணமானது. விவஹன் - இதுதேவலோகத்திலுள்ள ஜலத்தைத் தாங்குவது. பரிவஹன் இது சூரிய சந்திரனை ஒரேவழியில் நிறுத்துவது. பராவஹன் - இது ஒருவராலும் அதிக்கிரமிக்க முடியாதது. (பார - சாந்.)

**வாயுறைவாழ்த்து** —பின்னே பலிக்கும் எங்கள் வார்த்தையென்று சொல்லி மேம்பட்ட சொல்லைச் சிறப்பித்துக் கூறுந் துறை. (பு. வெ. பாடாண்.)

**வாய்தாப்பி** — இவன் பிருகு வம்சத்தவனான இருடி.

**வாய்பூசலாகாதஇடங்கள்** — ஒரு பாத்திரத்தினல் தண்ணீர் மொண்டே வாய் அலம்பவேண்டும். தண்ணீரில் நின்று கொண்டும், நடந்துகொண்டும் வாயலம்பல் கூடாது. (ஆசாரக்கோவை.)

**வாய்ப்பியர்** — அகத்தியர் மாணக்கர் பன்னிருவருள் ஒருவர்.

**வாய்ப்பியனர்** — யாப்பருங் கலவிருத்தியுள் கூறப்பட்ட தொல்லாசிரியருள் ஒருவர் வாய்ப்பியராக இருத்தல் கூடும்.

**வாரஇராதுகாலங்களாவன** — ஞாயிறு (26¼), திங்கள் (3¾), செவ்வாய் (22½), புதன் (15), வியாழம் (18¾), வெள்ளி (11¼), சனி (7½) நாழிகைக்குமேல் இராகு காலங்களாம்.

**வாரதுளிகன்**—ஞாயிறு (11¼), திங்கள் (7½), செவ்வாய் (3¾), புதன் (26¼), வியாழன் (22½), வெள்ளி (18¾), சனி (15).

**வாரங்களில் ஆண் பெண் அலி** — செவ்வாய், வியாழன், ஞாயிறு ஆண்; வெள்ளி, திங்கள், இராகு, கேது பெண்; சநி, புதன் அலியாம். (விதானமாலை.)

**வாரங்கள்**—இவன் தருமசேநனுக்கும் குணமதிக்கும் குமாரன். இவன் அரசு கிடையாதபடி இவனது மாற்ருந்தாயும் அவள் குமாரனும் வஞ்சகத்தால் கொலை செய்ய முயல அருகபரமேசர் ஆஞ்ஞையால் தேவ புருடர் வந்து வாரங்களைக் காப்பாற்றி அரசுதந்து போயினர். (சைந கதை.)

**வாரசூலநாழிகை** — திங்களும் சனியும் கிழக்கே (அ) நாழிகையும், வியாழம் தெற்கே (உ0) நாழிகையும், ஞாயிறு வெள்ளி மேற்கே (கஉ) நாழிகையும், செவ்வாய் - புதன் வடக்கே (கஉ) (கசு) நாழிகையும் நிற்கும்.

**வாரசூலம்** — திங்கள் சனி கிழக்கு, செவ்வாய் புதன் வடக்கு, வெள்ளி ஞாயிறு மேற்கு, வியாழன் தெற்கு. சூலபரிகாரம், சூலத்தில் வடக்கே செல்லவேண்டின், பால், கிழக்கே தயிர், தெற்கு தயிலம், மேற்கு வெல்லம், இவைகளை உண்டேனும் கொண்டேனும் செல்க.

**வார சூனியம்** — ஞாயிற்றுக்கிழமையில் அநுஷம், கேட்டை, மகம், விசாகம், பரணி, மிருகசிரமும், திங்களில் பூராடம், அநுஷம், மகம், பூரட்டாதி, கார்த்திகை, விசாகமும், செவ்வாயில் அவிட்டம், சதயம், திருவோணம், கேட்டை, திருவாதிரையும், புதனில் மூலம், திருவோணம், கார்த்திகையும், அவிட்டம், அச்சுவனி, பரணியும், வியாழனில் மிருகசிரம், பூராடம், இரேவதி, புனர்பூசம் பூசமும், வெள்ளியில் விசாகம், ரோகணி, அவிட்டம், மிருகசிரம், அஸ்தம், அநுஷமும், சனிக்கிழமையில் அஸ்தம், பூசம், புனர்பூசம், உத்திரம், இரோவதியும் வருவனவாம்.

**வாரணவசி** — உக்கிரகுலத்தரசன் நகரம். (குளா.)

**வாரணவாசி** — 1. உக்கிரகுலத்து அரசன் நகரம்.

2. அச்சணந்தி ஆசிரியன் நகரம்.

3. ஆடவியென்னும் அரசனது நகரம். காசியுமாம் (பெ-கதை.)

**வாரணசி** — காசிக்கு ஒருபெயர். வரணு, அசி என்ற இரண்டு நதிகளுக்கு இடையில் உள்ள பிரதேசமாதலால் இதற்கு இப்பெயர் வந்தது. காசியை அடைந்தவரது பாபத்தைத் தடுத்தலால் வரணை என்றும், அங்நீரில் படிந்தோர் பாபத்தை அறுத்தலால் அசி என்றும் பெயர் உள்ள இரண்டு நதிகள் தெற்கு வடக்காய்ச்சூழ்ந்து இருத்தலால் இப்பெயர் பெற்றது. (காசிகாண்டம்.)

**வாரணவதம்** — 1. துரியோதனன் அரக்கு மாளிகை கட்டுவித்துப் பாண்டவர்களை வஞ்சித்த பட்டணம். பிரயாகை.

2. அஸ்தினபுரத்துக்குச் சமிபத்திலுள்ள பட்டணம். பாண்டவர்கள் தங்கியிருந்த இடம். Barmana, 19 miles north west of Meerut, where an attempt was made by Duryodhana to burn the Pandavas.

**வாரதிருஷ்டி** — ஞாயிற்றுக்கிழமை முதல் சென்றவாரத்தைக் கூட்டிய தொகையை அசுவநி முதலாக எண்ணிப்போகவிட்டு, நின்றதொகையில் (சு) நாள் ஒருகண் என்றும், (கஉ) நாள் இருகண்ணென்றும், (ச) நாள் குருடென்று மறிவது. (விதானமாலை.)

**வாரத்தியாஜ்யம்** — ஞாயிறு (௯உ) நாழிகைக்குமேலும், திங்களுக்கும் புதனுக்கும் (சஉ)க்கு மேலும், செவ்வாய்க்கும் வியாழனுக்கும் (௯க)க்கு மேலும் வெள்ளிக்கு (உக)க்கு மேலும் சனிக்கு (சக)க்கு மேலும் (3¾) நாழிகை தியாஜ்யம்.

**வாரநயம்** — வாரங்களில் வெள்ளி, வியாழன், புதன், திங்கள் நன்று. ஞாயிறு, செவ்வாய், சனி தீது; இவற்றின் பலம் பகற்குண்டு, இரவிலில்லை. இராசிகளில் சனி, செவ்வாய் ஆட்சியான மகர கும்ப மேடவிருச்சிகம் இவற்றின் உதயங்கள் சுப காரியங்களுக்காகா. (விதானமாலை).

**வாரபகற்துளிகன்**—ஞாயிறு (உசு¼) திங்கள் (உஉ½), செவ்வாய் (கஅ¾), புதன் (கரு), வியாழம் (கக½), வெள்ளி (எ½), சனி(௩¾).

**வாரம்** — 1. ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழம், வெள்ளி, சனி என ஏழாம்.

2. தாளத்து ஒருமாத்திரையும் இரண்டு மாத்திரையும் உள்ள செய்யுள்.

வாரயோகபலம் — சுபவாரத்தில் சித்த யோகமாதல், அமிர்தயோகமாதல், வர யோகமாதல் வரில் எல்லாத் தோஷங்களை யும் கெடுத்து எல்லா நன்மைகளையும் தரும். (விதானமாலை.)

வாரவிசேஷம் — ஞாயிறு உத்தியோகஞ்செய்ய, திங்கள் விதைவிதைக்க, செவ்வாய் போர்செய்ய, புதன் வித்யாரம்பஞ்செய்ய, வியாழம் விவாகஞ்செய்ய, வெள்ளி மயிர் கழிக்க, சனி தவஞ்செய்ய உத்தமம்.

வாரஹோரையின்பலன் — நாளொன்றுக்கு 24 ஹோரையாம். அவை மணியெனப் படும். அந்த ஓராதிபர் எழுவர். அவர் கீழ்க்கண்ட முறைப்படி அன்று வாராதி பன்முதலாக வருவர். உதயமணி 6 முதல் 7-வரை ஓரோரையாகும். இப்படி எழு வரும 3 வட்டஞ் சென்று 4-ஆம் வட்டத் தில் 3-ஆம் ஹோராதிபன் முடிவாகவரும் ஹோரைக ளிருபத்து நான்குமாம்.

வாரகம் — மகத தேசத்திலுள்ள ஒரு பர்வதம்.

வாராதிபர் ஓராதிபர் பலன் — ஞாயிறு - அருக்கன், மரித்தல். வெள்ளி - புகர், மங்க ளம். புதன்-புந்தி, புத்திரரால் மகிழ்தல். திங்கள் - இந்து சந்தோஷித்தல். சனி- மந்தன், சிறை, சிலுகு. வியாழன் - அந்த ணன், பாக்கியம். செவ் - சேய், யுத்தம், இவற்றில் ஞாயிறு, செவ்வாய், சனி. ஹோரைகள் ஆகா.

வாராமைக்கழிதல் — உயாநத பூவகலன்ன தோளினுன் சொகினவிகற்பத்தால்வடித்த வேலினையுடைய தலைவன் வாராதொழிய அதற்கு அழிந்ததைக் கூறுந்துறை. (பு. வெ. பெருந்தி )

வாராவதி — 1 சிறு கடலையும் ஆறுகளை யும் கடக்கும் பாலம். இது முதல் முதல் மரக்கிளைகளாலும பலகைகளாலும் செய் யப்பட்டுப் பிறகு விருத்தியானதாம். தற் காலம் கதவுபோல் வாராவதிகள் எடுக்க அமைக்க இருக்கின்றன.

2. இது ஆறு அகழி முதலியவற்றைத் தாண்டிச் செல்வதற்குச் செய்யப்பட்ட கட்டடம். இது மரத்தினாலும், கல்லினு லும் செய்யப்படுவேது.

வாரிதாரன் — சந்திரகுப்தன் குமாரன். இவன் குமாரன் அசோகவர்த்தனன்.

வாருணம் — உபபுராணத்துள் ஒன்று.

வாருணி — 1. வருணன் குமாரி. பலராமர் பாரிகளில் ஒருத்தி.

2. பாற்கடற் பிறந்தவள். கள்ளுக்குத் தேவதை; இவளை அசுரர் கொண்டனர்.

3. வருணன் பாரியை. இவளுக்குக் கௌரி என்றும் ஒரு பெயர் உண்டு. (பா. சபா.)

வார்ட்சி — தசபிரேசதசர் பாரியை. இவ ளுக்கு மாரிட்சை என்றும் ஒரு பெயர் உண்டு. (பா. ஆதி.)

வார்த்தஷேமி — திரிகர்த்தராஜனுக்கு ஒரு பெயர். (பா. ஆதி.)

வார்த்திகநீகன் — தக்ஷிணமூர்த்தி என்போ னுக்குப் பிதா. (சிலப்பதிகாரம்).

வார்ஷநேயன் — விருஷ்ணி வம்சத்தில் பிறந்த கிருஷ்ணனுக்கு ஒரு பெயர். நள னுக்குச் சாரதி. (பா. வன.)

வாலகில்லியர் — 1. பிரமன் மானஸபுத்ரனா கிய கிருது என்பவனுக்குப் பிறந்தவர். தாய் கிரியை. இவர்கள் அறுபதினாயிரவர் அங்குஷ்ட அளவினதாகிய தேகத்தைப் பெற்றவர். மகா தவசிரேட்டர். இவர் கள் நாள்தோறும் சூரியரதத்தைப் பிரதக்ஷி ணஞ் செய்து கொண்டிருப்பர். இந்திர னைக் கருடனால் அவமானப்படும்படி சாபம் இட்டவர். கருடனால் இவர்கள் இருந்த மரக்கிளையோடு அசையாது தூக்கப்பெற்று இமயமலையில் விடப்பெற்றவர். இவர்கள் பிரமன் உரோமங்களில் பிறந்தவர் என்று கூறுவர். இவர்கள் இந்திரனிடம் மாறு கொண்டு வேறு இந்திரனைப் படைத்தனர். பிரமனைக் காண்க.

2. வானப்பிரஸ்த ஆச்சிரமத்தைச் சேர்ந் தவர். புததானியம் கண்டவுடன் பழை யதை விடுப்பர்.

3. சிவார்ச்சனையால் ஸோமகர்த்தாவாய் ஒருவராலுஞ் செயிக்கமுடியாத கருட னைச் செயித்தவர். (சிவமகா. புரா.)

வாலகேசன் — சிவகணத்தவரில் ஒருவன்.

வாலகோகிலன் — விஜய நகரத்தரசராகிய கிருஷ்ண தேவராயர் காலத்திருந்த ஒரு தமிழ்க்கவி. தத்வப்பிரகாசரைக் காண்க.

வாலம்பேரிசாத்தனர் — மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனா ரெனவும், ஆலம்பேரி சாத்தனரெனவு மிவர் கூறப் படுவர். ஆலம்பேரி சாத்தனரைக் காண்க.

வாலலிங்கையர் — சிக்கமாதையர் குமாரர்.

வாலவிருத்தை — யோகஞ்செய்து கொண் டிருந்த ஒருத்தி. கருடனைக் காண்க.

வாலாமிர்தன் — ஒரு அரசன், சுசீந்திரப் ஆண்டவன்.

வாலி — இந்திரன் குமாரன். இருகதாச்சு அல்லது இருக்ஷவிரசனை இவர்கள் பிறப்பைப் பற்றிக் காண்க. இவன் தம்பி சுக்ரீவன். இவன் தேவாசுரர் அமுதங்கடைகையில் தேவர் வேண்ட மந்தரமலையைக் கடைந்தவன். இவன் எதிரில் இருந்து யுத்தஞ்செய்யும் ஒவ்வொருவனுடைய பாதி வலி இவனை அடையும்படி இந்திரன் இவனுக்கு வரந்தந்து ஒரு பொன்மாலையைச் சூட்டினன். நாள்தோறும் எண்டிசைக் கடலிலும் தீர்த்தம் ஆடிச் சிவபூசைசெய்து வருவோன். இவன் ஒருநாள் கடல் ஆடச் சென்றிருக்கையில் திக்குவிஜயத்திற்கு வந்த இராவணன் இவன் பட்டணத்திற் சென்று இவனைக் காணுது இவன் சென்றிருக்கும் கடல் அடைந்து அவ்விடம் சிவபூசை செய்துகொண்டு இருக்கும் இவனைப் பிடிக்க, எதிரில் செல்லாது மெல்லெனச் சென்றனன் இராவணன் வருதலை அரவத்தால் அறிந்த இவன் அவன் சமீபித்தல் அறிந்து, இராவணனைப் பிடித்துக் கக்கத்தில் இடுக்கி இடுக்கிய கையுடன் மற்றக் கடல்களிலும் ஸ்நானஞ்செய்து சிவபூசை முடித்துத் தன் நகர்வந்து விடுக்க, இராவணன் அஞ்சி இவனுடன் நட்புக்கொண்டனன். இவனுடன் மாயாவி என்னும் ஒரு அசுரன் யுத்தஞ்செய்து ஆற்றுமல் பிலத்துள் நுழைய, இவனும் தன் தம்பியைப் பிலத்துவார வாயிலில் காவல் வைத்து அசுரனைப் பின்தொடர்ந்தனன். பின்தொடர்ந்த வாலி (உஅ) மாதம் வரையில் அவ்விடம் யுத்தஞ்செய்து அசுரனைக் கொன்றனன். தமயன் சொற்படி துவார வாயிலில் காத்திருந்த தம்பி நெடுநாள் ஆனமையால் தமயனை அசுரன் கொன்றுன் என எண்ணிப் பிலவாயிலை அடைத்து அரசாண்டு இருந்தனன். இதற்கு முன் துந்துமி என்னும் அரக்கன் யுத்தத்திற்குவர அவனைக்கொன்று அவன் உடலைப் பந்து அடித்ததால் அது மதங்கர்மலையில் விழுந்தது. அதனுல் மதங்கர் கோபித்து இம்மலையை மிதிக்கில் தலைவெடிக்க எனச் சாபம் பெற்றவன். சுக்கிரீவன் தான் இறந்ததாக எண்ணி அரசாண்டதால் கோபித்து அடித்துத் துரத்த, அவன் அஞ்சி இரிசிகபர்வதம் அடைய, அப்பர்வதத்தில் சாபத்துக்கு அஞ்சி நின்றவன். சுக்கிரீவன் இராமரைத் துணைகொண்டு துணைவலியால் யுத்தத்திற்கு அழைத்தகைக் கேட்டு மனைவியான தாரை தடுக்கவும் கேளாமற் சென்று யுத்தஞ்செய்து இராமர் எய்த பாணத்தைப் பிடித்து அதில் இராமமூர்த்தியின் பெயர் கண்டு நிந்தித்துப் பின் அறிவுதோன்றித் துதித்துத் தன்தம்பியைக் காக்கவேண்டிக்கொண்டு உயிர் நீத்தவன்.

வாலிந்தி — பிரசவித்த பின் உண்டாம் முதல் ருதுகாலத்தில் புருஷனைச் சேர்ந்து கருப்பத்தை யடைந்த ஸ்திரீ. (ஜீவ.)

வாலுகார்ணவம் — இமயத்திற்கு வடக்கிலுள்ள ஒரு மணல்வெளி. பாண்டவர்கள் துறவடைந்து செல்கையில் இதைக் கண்டனர். (பார - மஹாப்பிர.)

வாலுகாயந்திரம் — வாயகன்ற பாத்திரத்திடையில் மருந்தமைத்த குப்பியையிட்டு மணல் நிரப்பி அடியில் தீயிட்டெரிப்பதற்கான பொறி.

வால்மீகி — 1. வேத விரோதமான வாதம் செய்து மஹருஷிகளாலும் திரேதாக்னியாலும் நீ பிரம்மகத்தி செய்தவனுவாய் எனச் சபிக்கப்பட்டவர். அச்சாபம் சிவபிரானுல் நீக்கப்பட்டுப் புனிதனுயினவர். (பார - அநுசா.)

2. வான்மீகியைக் காண்க.

வால்ரஸ் — இதனைச் சீனத்துக் குதிரை என்பர். வடதுருவ சமுத்திரவாசி. இது 10-15 அடிகள் நீளமுள்ளது. தேகம் தடித்துக் கொழுத்திருக்கிறது. சாம்பல் நிறம்; தோல் அழுத்தமானது. கழுத்து குறுகித் தலைபருத்துக் கண்கள் சிறுத்திருக்கிறது. இதற்கு முகத்தில் மீசை பருத்துவலுத்து நீண்ட இரண்டு கொம்புகளிருக்கின்றன. அது (2) அடி நீளமுள்ளது. இது கடலி னடியிலிருந்து மேல்பாகத்திற்கு வருகையில் பற்களால் பனிப்பாறைகளைத் தொளைத்துக்கொண்டு மேலெழும்.

வாழை — இது இந்தியாவில் எக்காலமும் பயன்தரும் மரம். இதன்பழம் அதியினிமையானது. இதன் ஒவ்வொரு உறுப்பும் பயன்படுவது. இதில் ரஸ்தாளி, கருவாழை, கொட்டை வாழை, செவ்வாழை, பூவாழை, பேயன்வாழை, மொந்தன் வாழை, கர்ப்பூரவாழை, யானை வாழை எனப் பல வகையுண்டு. விசிறிவாழை யென்பது வேருருவகை.

வாழைமரம் — இது இந்துதேசத்து மரம். அதிகப் பயனுள்ளது. இதற்கு வித்தில்லை. ஒரு கன்று நட்டால் அது பலநாட்கள்

வாழ்ந்திருக்கும்; ஆதலால் அதற்கு வாழை யென்று பெயர். இது வழுவழுப்பான கோழறையுடையது. இது பட்டைகள் ஒன்றின்மேலொன்றாய் அடுக்காயிருக்கும்; பட்டைக்குள் தண்டிருக்கும். இலைகள் அகன்று காம்புட னீண்டு காம்பு பெற்றிருக்கும். வைத்த (6-7) மாதங்களில் கண்ணாடி இலைவிட்டுப் பூவிட்டுக் குலை தள்ளும். பூ அடி பருத்து முனைகுவிந்து செந்நிறமாயிருக்கும். உள்ளில் மகரந்தங்கள் இருக்கும். குலையில் சீப்பிற்கு (20) காய்கள் இருக்கும். பழமானால் ருசியாயிருக்கும். இவ்வினத்தில், செவ்வாழை, பச்சைவாழை, வெள்வாழை, ரஸ்தாளி, மொந்தன் வாழை, அடுக்கு வாழை, மலைவாழை, கருவாழை, பேயன் வாழை, நவரைவாழை யெனப் பலவகையுண்டு. இது முக்கனிகளில் முதலாவது. காயைக் கறி சமைப்பார்கள். முக்கியமாய் மொந்தன் கறிசமைக்க உதவும். தண்டும் பூவும் கறிக்குதவும். நாரினால் கயிறு வஸ்திரம் செய்வர்.

**வாழ்த்தணி** — ஞானதன்மை யுடையார்க்கு இன்னது நிகழ்க என்று கவி தான் கருதியதனை விரித்துக்கூறும் அணி.

**வாழ்த்து** — மெய் வாழ்த்து, இருபுறவாழ்த்து என இருவகை. இது உண்மையாக வாழ்த்தலும், மனம் வேறுபட்டு வாழ்த்தலுமாம்.

**வாள்சேலவு** — வெல்லுதற்கரிய போரையுடைய வஞ்சியான் போர்க்கு அழைத்த பின்பு பொருபடையிடத்து வாள் போனதைக் கூறுந் துறை. (பு. வெ.)

**வாற்கலி** — 1. ஒரு அசுரன். தேவரை இடுக்கண்படுத்தத் தேவர் வேண்டுதலால் விஷ்ணுமூர்த்தி இவனைக் கொன்றனர்.

2. இந்திரனுடன் போரிட்டு மாய்ந்த அசுரன். (வீரசிங் - பு.)

**வாற்கோதுமை** — ஒருதானியம். இதனை ஊறவைத்துச் சாராயம் காய்ச்சுகின்றனர். சிலர் ஆகாரமாகவுங் கொள்வர். இதனை சவுக்காரக் கட்டிகளை இறுகச்செய்யவும் ஆடுமாடுகளுக்கு ஆகாரமாகவும் உபயோகிக்கின்றனர். இது ஐரோடாவின் வடபாகத்திலும், மத்ய ஆசியாவிலும், வட அமெரிகாவிலும் விளைகிறது. இது கோதுமையினும் உறுதி.

**வானப்பிரத்தன்** — இவன் கிருகஸ்தாசிரமத்தை விட்டு இந்திரிய நிக்கிரகனாய்த் தபோவனத்தில் வசிக்க வேண்டியவன். கிருகஸ்தன் தன் தேகத்தில் நரையையும், தன் பிள்ளைக்குப் பிள்ளையையும் எப்போது பார்ப்பானோ அப்போது இந்த ஆசிரமம் அடையவேண்டியது. ஊரிலுள்ள சகல ஆதாரங்களையும் நீத்து மனைவிக்குத் தன்னுடன்வர எண்ண மிருக்கின் அவளுடனும், இன்றேல் அவளைப் புத்திரனிடத்து நீக்கியும், அக்னிஹோத்ர பாத்ரங்களை எடுத்துக்கொண்டும் ஜிதேந்திரியனாய் வனம் செல்லவேண்டியது. சாலியன்னம், பலகாய் கிழங்கு, பழம், இவற்றால் பஞ்சமகா எஞ்ஞங்களைச் செய்யவேண்டும். மான்றோலாவது மரவுரியாவது தரிக்க வேண்டியது. சடை, மீசை, தாடி, நகம் இவற்றை வளர்க்க வேண்டியது. இருசந்திகளிலும் ஸ்நானஞ் செய்யவேண்டியது. எதை உண்கிறானோ அதனால் பலி முதலியவும் தன்னாச்சிரமத்திற்கு வந்தவர்களையும் உபசரிக்க வேண்டியது. எப்போதும் வேதம் ஓதுதலினும் குளிர், கானல், சுகம், துக்கங்களைப் பொறுத்தலிலும், வல்லவனாயும் இருத்தல் வேண்டும். அக்னிஹோத்ரம், தரிசனம், பௌர்ணமாசம் இவைகளை மறவாமலும், நக்ஷத்ரயாகம், ஆக்ராயணம், சாதுர்மாச்யம், உத்தராயனம், தக்ஷிணாயனம், இவற்றில் தர்ப்பணங்களை உதிர் நெல் பொறுக்கிச் செய்பவனாயும் இருத்தல் வேண்டும். காட்டிலுண்டான அரிசியினால் தேவர்களுக்கு ஹவி கொடுக்கவேண்டியது. உவர் மண்ணைக் காய்ச்சித் தனக்கு உப்பு எடுத்துக்கொள்ளவேண்டியது. பூமி, ஜலம் இவற்றில் உண்டான புஷ்பம், கிழங்கு, காய், பழம் இவற்றைப்புசிக்கலாகாது. பழத்தேனை அன்றி ஈத்தேனையும், மாமிசம், காளான் அழிஞ்சிற் பழம் முதலியவற்றையும் புசிக்கக்கூடாது. தனக்கு உபயோகமான பொருள்களை ஒருவருடம் ஆறு மாதத்திற்காவது சம்பாதித்துக்கொள்ள வேண்டியது. அதிகமாகப் புசிக்கக்கூடாது. ஒரு வேளையே புசிக்கவேண்டியது சாந்திராயண முதலிய விரதங்களை அநுட்டிக்க வேண்டியது. இளைப்பாக[illegible]ந்தால் சுத்தபூமியிற் படுத்துப் புரளலாம். கிரீஷ்மகாலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலும், மழைக் காலத்தில் மழையில் இருந்துகொண்டும், பனிக்காலத்தில் ஈரவஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டும், தவஞ்செய்தல் வேண்டும்.

**வானமாதேவியாண்டான்** — நாதமுநிகளை ஆச்ரயித்த ஸ்ரீவைஷ்ணவர்.

**வானமாமலைஜீயர்** — அழகிய வாதரான இராமாநுஜஜீயர் என்பவர். முதலில் மணவாளமாமுநிகளால் ஏற்படுத்தப்பட்டவர்.

**வானம்பாடி** — இது சிட்டினப் பறவை இனம். இது சுருசுருப்பும் புத்திகூர்மையுமுள்ளது. இவை தனியாயும் கூட்டமாயும் ஆகாயத்தில் (30) அடிகளுக்குமேல் பறந்து பாடும். இவை வயல்களிலும் வெளிகளிலும் பாடுவது இனிமைதரும். இதன் முதுகு கறுப்பு, வயிறு வெண்மை

**வானவர்** — 1. சீனதேசத்தவர்க்கு ஒருபெயர். இவர்கள் தங்களை எல்லாச் சாதியிலும் தாங்கள் உயர்ந்தவர் என்பர்.

2. சேரர் தங்களை வானவர் என்பர். வானவரம்பன் சேரலாதன் முதலிய பேர்களிற் காண்க.

**வானவன்** — ஆமூர் எனும் ஊர்க்குரியவன். இவனை ஆமூர் கவுதமன்சாதேவனார் சிறப்பித்துப் பாடினர். (அகம்·கஙசு.)

**வானவில்** — (இந்திரதனுசு) சூரியனுக்கு எதிர்ப் பாகத்திலுள்ள நீர்த்திவலைகளுடன் சேர்ந்தமேகத்தில் சூரிய கிரணம் படுமாயின் அது வட்ட வடிவினதாகப் பல நிறத்துடன் சூரியனுக்கெதிரில் காணப்படும். சில வேளைகளில் அவ்வானவில் ஒன்றன்மேல் ஒன்றாய் இரண்டு மூன்றும் காணப்படுவதுண்டு. சில வேளைகளில் சூரியனுக்கு எதிரிலுள்ள பொருள்கள் ஆகாயத்தில் பிரதிபலிப்பதும் உண்டு.

**வானவிற்தூறி** — ஆனி, ஆடி, ஆவணி இந்த மாதங்களில் கிழக்கே இந்திரவில்லுண்டானால் பஞ்சமுண்டாகும்.

"ஆனியுடனாடி யாவணியித் திங்களிலே, கூனியே வானவிற் குணதிசையில்-மானே கேள், மேவின் மழையறுமே விண்ணுடருக்குமே, பூவின் விழவறுந்து போம்."

**வான்மீகி** — இவர் பிறப்பால் வேதியர். ஒழுக்கம் குன்றி வேடருடன் கூடிக் களவு செய்து வாழ்ந்துவருகையில் ஒருநாள் ஒரு முநிவரை வழிமறித்துப் பறிக்க மறிக்கையில் அவர் இவரிடம்கருணைகூர்ந்து நீர்செய்யும் பாபத்தொழில், உமது வருவாயால் சீவிக்கும் உமது இல்லோர்க்கும் உண்டோ எனக்கேட்டுவருக வென ஏவ, அவ்வாறு சென்று கேட்கையில் அவர்கள் மறுக்கக் கேட்டுக் கூறி மயங்கிநிற்கையில் முநிவர் கருணை கூர்ந்து எதிரில் இருந்த மராமரத்தின் பெயரினைக் கூறச் சொல்லிப் போயினர். கள்வர் அவ்வாறு இருந்து நெடுநாள் செபிக்கமேல் ஒருபுற்று மூடியது. சில்நாள் பொறுத்துப் புற்றில் இருந்து வெளிப்படுகையில் வேடன் ஒருவன் கிரவுஞ்சப் பக்ஷிகளைக் கொல்லவர அதைக்கண்டு சினந்து அவனைச் சபிக்கத்தொடங்க, அச்சாபமே தம்வாயில் சுலோகரூபமாக வெளிப்பட்டு இராமகாதை ஆயிற்று. இவரே இராமாயணம் இயற்றிய வால்மீகி. இவர் புராண வால்மீகி, பாலவான்மீகி எனவும், விருத்த வான்மீகி யெனவும் இருவர் இருந்ததாகக் கூறுவர்.

**வான்மீகியார்** — முதற்சங்கத்துப புலவருடன் இருந்த புலவர் திலகருள் ஒருவர். இவர் செய்த நூலைத் தலையாய ஓத்து என்பர் நச்சினார்க்கினியர். (புற. நா.)

**வாஜசரவன்** — நச்சிகேதசனைக் காண்க.

**வாஸ்து** — 1. வசுக்களில் ஒருவன்; தருமத்திற்கு வசு இடத்து உதித்தவன். பாரி ஆங்கிரசி.

2. அந்தகாசுர யுத்தத்தில் கோபித்த சிவமூர்த்தியின் வியர்வை பூமியில் சிந்தியது. அதில் இருந்து மூவுலகங்களையும் விழுங்கத்தக்க ஒரு பூதம் உண்டாய்ச் சிவாஞ்ஞையால் அந்தகாசுரன் உதிரத்தை உண்டு, மிகுந்த தபஞ்செய்து வரம்பெற்று உலகத்தை வருத்திவந்தது. இதனால் தேவர் ஸ்ரீ கண்ட ருத்திரரிடம் முறையிட்டனர். அம்மூர்த்தி அதிபலன் என்னும் ருத்திரனையும் மாயா பாசங்களையும் சிருட்டித்து அனுப்ப அதிபலர் பாசங்களால் அவ்வாஸ்துவைக் கட்டிப் பூமியில் மல்லாக்கத் தள்ளித் தேவர்களை அப் பூதத்தின்மேல் வசிக்கச் செய்தனர். தேவர் வசித்தலால் பூதத்திற்கு வாஸ்து என்று பெயர் உண்டாயிற்று. இவன் பின் சுக்கிரனால் உண்டானான் என்றும், இந்திரன் மலைகளின் சிறகுகளை அரிக்க அப்பாரம் பொறுக்காமல் பூமி நாகங்களுடன் எழுந்திருக்கச் சர்ப்பங்களின் விஷத்திலிருந்து மீண்டும் தோன்றினன் என்றும் யுகபேதத்தால் பல பேதமாகப் புராணங்கள் கூறுகின்றன. இவன் ஈசானத்தில் மத்தகம், நிருதியில் பாதம், மார்பில் அஞ்சலி, கீழே முகம் கொண்டு கோப வடிவுடன் இருப்பன் என்பர். இவன் புரட்டாசி முதல் மூன்றுமாதம் கிழக்கேதலைஉள்ளானாகவும், மார்கழிமுதல் மூன்று மாதம் மேற்கே தலை உள்ளவனாக

வும், படுத்துக்கொண்டும், பூசாகாலத்தில் ஊர்த்துவமுகனாகவும், மற்றக் காலத்தில் அதோமுகனாகவும் இருப்பன் என்பர். வாஸ்து முதல்வராவார் பிரமன், மரீசி, சவித்ரு, சாவித்திரன், விவச்வான், இந்திரன், இந்திரஜயன், மித்திரன், ருத்திரன், ருத்திரதாசன், ப்ருதிவித்திரன், ஆபன், ஆபவத்ஸன், ஈசன், பர்ச்சந்நியன், ஜயன், மகவான், சூரியன், ஸத்யன், பரம்சகன், அந்தரிக்ஷன், அக்கினி, பூஷா, வித்தன், க்ரஹாத்யக்ஷன், யமன், கந்தர்வன், ப்ருங்காரசன், மிருகன், பித்ரு, தௌவாரன், சுக்கிரீவன், புஷ்பதந்தன், வருணன், அஸுரன், சோஷன், ரோகன், வாயு, நாகன், முக்யன், பல்லன், சோமன், சௌம்யன், அதிதி, திதி, சரகி, சுவிரி, பூதனை, பாபராக்ஷஸி, ஸ்கந்தர் அர்யமா, ஜம்பகன், பலிபிஞ்சன் என்பவராம். (சி. சா.)

**வாஸ்துதேவதை** — (௫௨) ஈசானர், பர்ஜன்யர், ஜயந்தர், மகேந்திரர், ஆதித்யர், சத்தியகர், பிரம்சர், அந்தரிக்ஷர், அக்னி, பூஷ்ணர், விதாத்ரு, கிரகக்ஷதர், யமர், காந்தர்வர், பிருங்கராஜர், மிருகராஜர், நிருதர், துவௌவாரிகர், சுக்கிரீவர், புஷ்பதந்தர், வருணர், அசுரர், சேஷர், ரோகர், வாயு, நாகர், முக்யர், பல்லாடகர், சோமர், ருஷி, அதிதி, திதி.

**வாஸ்துதேவதைகள்** — பிரமன், அரியமா, விவஸ்வர், மித்ரர், பிரதிலீதரர், பர்ஜன்யர், ஜயந்தர், மஹேந்திரர், ஆதித்யர், சத்யகர், பிரம்சர், அந்தரிக்ஷர், அக்னி, வித்தர், கிரகக்ஷதர், யமன், கந்தர்வர், பிருங்கராஜர், மிருகர், நிருதி, தௌவாரிகர், சுக்ரீவர், புஷ்பதந்தர், வருணர், அசுரர், சேஷர், ரோகர், வாயு, நாகர், முக்யர், பல்லாடர், சோமர், கஜர், அதிதி, திதி, ஈசானர், சூர்யர், சூர்யபுத்ரர், இந்திரன், இந்திர புத்ரன், ருத்ரர், ருத்ரபுத்ரர், ஆபர், ஆபவத்சர், குலதேவதைகளாகும் சரகி, விதாரிகை, பூதனை, பாபராக்ஷஸி முதலியோர். (ஸ்ரீகாமிகம்.)

**வாஸ்துபுருஷன் நித்திரைசெய்யுந் திசைகளுக்கு மாதங்கள்** — சித்திரை வைகாசி கிழக்கு, ஆவணி ஐப்பசி கார்த்திகை தை வடக்கு, ஆனி ஆடி புரட்டாசி மார்கழி மாசி தெற்கு, பங்குனி மேற்கு. "ஆடு விடைகிழக்கா மாவணிதே ளைப்பசிதை, கூடு வடக்காங் குளிர்மிதுனம் — நீடுசிலை, பெண்கும்பந் தெற்காகும் பேசரிய மேற்கா மீன், வண்வாஸ்துசென்னிவைக்குமால்." சித்திரை வைகாசி பங்குனி மாதங்களில் கிழக்கு மேற்கு வீதியிலும், ஆவணி ஐப்பசி கார்த்திகை தை மாதங்களில் தெற்கு வடக்கு வீதியிலும் குடிபுக மனைகோல உத்தமம். ஆனி ஆடி புரட்டாசி மார்கழி மாசி மாதங்கள் குடிபுக மனைகோல ஆகாவென்று சில நூல்களிற் சொல்லப்படுகின்றன. "ஆடுவிடை மீனமதி யாங்கிழக்கு மேற்காகும், தேடுசிங்கந் தேள்பரிமான் தென்வடக்காம் — நீடுதெரு, வீடெடுக்க விற்புகுத வேண்டினோர் மேலோர்கள், நாடதனி லுள்ளவர்க்கு நன்கு."

**வாஸ்துபுருஷன் நித்திரை விடுதல்** — சித்திரைமீ ௧0வ ௬-நாழிக்கு, வைகாசிமீ ௨௧வ ௨-நாழிக்கு, ஆடிமீ ௧௧வ ௨-நாழிக்கு, ஆவணிமீ ௯வ ௧0-நாழிக்கு, ஐப்பசிமீ ௧௧வ ௨ நாழிக்கு. கார்த்திகைமீ ௮வ ௧0-நாழிக்கு, தைமீ ௧௨வ ௨௨-நாழிக்கு, மாசிமீ ௨௨வ ௮ நாழிக்கு, பங்குனிமீ ௨௨வ ௮-நாழிக்குமாம். ஆனி - புரட்டாசி - மார்கழி இந்த மாதங்களில் வாஸ்துபுருஷன் நித்திரை விடுவதில்லை.

## வி

**விகங்கமான்** — பதினோராம் மன்வந்தரத்துத் தேவன்.

**விகடசக்கிரவிநாயகர்** — வீரபத்திரர் தக்கனைத் தலைநீங்கத் தாக்கிய காலத்துத் திருமால் எறிந்த சக்கிராயுதத்தை அவர் அணிந்த சிரமாலையில் ஒன்று கவ்வியது. அதைப் பெறும்படி விஷ்வக்சேனர் கொங்கணிக் கூத்தாடினர். இதைக்கண்டு நகைத்த சிரத்தின் வாயினின்று சக்கரம் விழக்கண்ட விநாயகர், அதனை எடுத்துக்கொண்டு அக்கூத்தைத் தம் முன்னும் ஆடப்பணிக்க அவர் ஆடியபின் களிப்படைந்து சக்கரம் தந்தனர். இவ்வகை சக்கரத்தின் பொருட்டு விகடஞ்செய்ததால் விகடசக்கிர விநாயகர் எனப் பெயர் வந்தது. (காஞ்சிப்புராணம்).

**விகடாசன்** — காளமேகப் புலவனிடம் தான் ஏறியிருந்த குதிரையால் வசைப்பாட்டுப் பெற்றவன்.

**விகடருஷி** — கபிலருஷிக்குப் பௌத்திரரும், தருணருஷிக்கு மருகரும் ஆவர்.

**விகடன்** — 1. ஒரு பாகவதன்.

2. சுமாலியின் குமாரனாகிய அரக்கன்.

3. திருதராட்டிரன் புத்திரன்.

விகடாக்ஷன்—தேவர்களை வருத்தி விஷ்ணுமூர்த்தியின் சக்காத்தால் மாய்ந்தவன். (திருக்கண்ண - புரா.)

விகடை — காசியில் ஜிரேசலிங்கத்திற்கு அருகில் பிரதிட்டித்திருக்கும் தேவதை.

விகண்டன் — சிந்துரனைக் காண்க.

விகபசமன் — திருதராட்டிரன் குமாரன்.

விகருணன் — 1. (விகர்னன்) திருதராட்டிரன் குமாரன்; மகாபுத்திமான்; பதினன்காம் போரில் வீமனுடன் பொருது மாண்டவன்.

2. ஒரு இருடி.

விகலாசுரன் — பாற்கடலில் வந்து தேவரை வருத்திச் சிவமூர்த்தியால் கிழியுண்டு இறந்தவன்.

விகற்பசமை — திருஷ்டாந்த விகற்பத்தைக் காட்டித் தாஷ்டாந்த விகற்பத்தைக் கூறுவது. (தரு.)

விகஸன் — அந்தகாசுரனது மந்திரிகளிலொருவன். இவன் அந்தகாசுரயுத்தத்தில் நந்திதேவருடன் யுத்தஞ்செய்து திருமால் முதலியதேவர்களை விழுங்கிவிட்டவன். இவன் உலகங்களை விழுங்கப் புறப்படுகையில் வசிட்டராதியரால் சபிக்கப்பட்டு நரநாராயணரா லிறக்கச் சாபமேற்றவன்.

விகனசர் — ஒரு இருடி. வைகானஸாகமம் வகுத்தவர்.

விகாரம் — 1. (சு) காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

2 வேறுபாடு; இது தோன்றல், திரிதல் கெடுதல் எனவரும். வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல் என்பன. முற்கூறிய மூன்றும் எழுத்துப் புணர்ச்சிக்குரியன; பின்னவை செய்யுள் விகாரம். (நன்.)

விகிதாசுவன்—பிருது சக்கிரவர்த்திக்கு அர்ச்சசி யிடம் உதித்த குமாரன். இவனுக்கு விசிதாசுவன் என்றும் பெயர். பாரியை சிகண்டினி.

விகிர்தன் — பிங்களனைக் காண்க.

விகிர்தாசுரன் — விநாயகர் திருவவதரித்த இடத்தில் இருந்த தடாகத்தில் முதலையுருக்கொண்டு இருந்து நீர் விளையாட்டுக்கு வந்த விநாயகரைத் தொந்தரைசெய்து அவரால் கழுத்து இறுக்குண்டு இறந்தவன்.

விதர்ச்சை — பிரஸ்தாவன் தேவி.

விதூசனன் — (விகுணடன்) அத்தி என்னும் பெயருள்ள அரசனுடைய புத்திரன், பாரியை சுந்தரி; புத்திரன் அஜமேடன் (பா. ஆதி.)

விதுதி — தூமாசுரனைக் காண்க.

விதுருதி — சீமுதன் குமாரன். இவன் குமாரன் பீமரதன்.

விதுளன் — சத்தியைக் காண்க. (காசிகண்டம்).

விதுக்ஷி — (சூ) குக்ஷியின் குமாரன்; தந்தையால் காட்டில் துரத்தப்பட்டுத் தந்தை தவமேற் கொண்டபின் நாடு அடைந்து சாதன் என்கிற பெயரால் அரசாண்டு அநேக யாகங்களைச்செய்து புரஞ்சயனைப் பெற்றவன்.

விகோகன் — கோகனைக் காண்க.

விக்கல்ரோகம் — இது, காரவஸ்து; மிகு தீக்ஷணவஸ்து, சீரணமாகாவஸ்து, கடின பதார்த்தம், அன்னபானுதி வித்தியாசங்களாலுண்டாவது. இது, அகனேற்பவவிக்கல், க்ஷுத்ரவிக்கல், மகாவிக்கல், யமளவிக்கல் (இரட்டை விக்கல்), கம்பீரவிக்கல் என ஐந்துவகைப்படும். இந்த ரோகத்தைக் குளவிக்கூண்டு கஷாயம், நண்டுவளைச்சலம், மயிலிறகு பஸ்மம், மகாகுசுமாகாமாத்திரை முதலியவற்றால் வசப்படுத்தலாம்.

விக்கிரன் — இவன் உதயணனுடைய அம்மான்; மிருகாவதியின் தமையன். வயர் குலத்திற் பிறந்தவன். தன்னுடைய அரசாட்சியை உதயணனிடம் ஒப்பித்துவிட்டுத் தான் தவம் செய்யச் சென்றவன். (பெரு. கதை.)

விக்ரமகஞ்சுகபாண்டியன் — பிரதாபமார்த்தாண்ட பாண்டியனுக்குக் குமாரன். இவன் குமாரன் சமரகோலாகலன்.

விக்ரமசோழன் — 1. கி. பி. 1118 முதல் 1133 வரை அரசாண்ட சோழவரசன். இவன் கலிங்கத்தை வென்றான். கீழைச் சளுக்கிய வமிசத்திலே வந்த இராஜராஜனை முதற் குலோத்துங்க சோழனுடைய மகன். இவன் வேங்கை நாட்டையும் ஆண்டான். இவன் அரசாட்சியில் க்ஷாமம் உண்டாயிற்று. தெலுங்கவீமனைப் போரில் வென்றான். இவனுக்குத் தியாகசமுத்திரம், அகளங்கன் என்றபெயருமுண்டு. ஸ்ரீரங்கத்தில் இவன் பெயரால் இரண்டு வீதிகளுண்டு.

2. வங்கியசேகர பாண்டியனைக் காண்க.

விக்ரமபாண்டியன் — அபிஷேக பாண்டியன் குமாரன். இவனுடன் பகைகொண்ட

சோழன் இவனைச் சண்டைசெய்து வெல்ல வலியிலாது சமணரைக்கொண்டு அபிசார வேள்வி செய்வித்து அதில் ஒரு யானையைப் பிறப்பித்து மதுரைமீது ஏவினன். இவன் யானையைக்கண்டு அஞ்சி சிவமூர்த்தியை வேண்டினன். சிவமூர்த்தி இவனுடைய வேண்டுதற்கு இரங்கி ஓர் வீரராய்த் தோன்றி நரசிங்கப்பகழி தொடுத்து யானையைக் கொன்றனர். இதுவே பாண்டிநாட்டில் யானைமலை யாயிற்று. இவன் காலத்து விருத்த குமார பாலரான திருவிளையாடல் நடந்தது. இவன் குமாரன் இராஜசேகர பாண்டியன். (கௌரியைக் காண்க.) (திருவிளையாடல்)

**விக்ரமவாகு பாண்டியன்** — வீரவாகுபாண்டியனுக்குக் குமாரன்.

**விக்ரமன்** — 1. வத்சந்திரன் குமாரன்.

2. சோழ வமிசத்தவர்களின் பட்டப் பெயர்களுள் ஒன்று.

**விக்ரமஜித்** — இவன் சித்தூரை ஆண்ட இரசபுத்ர அரசனாகிய ராணாசங்கனுடைய குமாரன். இவன் தன் சகோதரனுக்குப் பிறகு பட்டமடைந்து தன்னாட்டிலுள்ள பிரபுக்களை மதியாமலிருந்ததால் இராஜபுத்திரர் இவனை அலக்ஷியம் செய்தனர். இச்சமயத்தில் குசராத் அரசனாகிய பகதூர்ஷா இவன்மீது படைகொண்டு இராஜபுதனத்தைப் பீரங்கிப்படையால் பாழாக்கினான். இந்த யுத்தத்தில் சங்கன்மனைவி ராணி கர்ணவதியும் தன் குமாரன் உதயசிங்கைப் பூண்டியரசனிடம் ஒப்புவித்துத் தீக்குளித்தனள். பின்பு உதயசிங் சித்தூர் ராணாவாயினன். உதயசிங்கின் குமாரன் பிரதாபசிங்.

**விக்ரமார்க்கன்** — சந்திரசருமன் என்னும் வேதியன் உச்சயினிபுரத்து அரசன் குமாரியாகிய சுருதகீர்த்தியைப் புணர்ந்ததினாற் பிறந்தவன். இவன் காளியை எண்ணிக் கடுந்தவம் இயற்றிப் பல வரம்பெற்று அரசாண்டு சாலிவாகனனால் கொல்லப்பட்டனன். இவன் பெயரால் இப்போது ஒரு சகம் வழங்கிவருகிறது. அதற்கு விக்ரமார்க்க சகம் என்று பெயர்.

**விக்ரமாசுரன்** — சத்தியால் சங்கரிக்கப்பட்ட அசுரன்.

**விக்ரமாட்டியன்** — மனோசவன் என்னும் சந்திரகுலத்து அரசனுக்குத் தந்தை.

**விக்ரமாதித்தன்** — 1. பாணவம்சத் தாசன் ... பிரபு மேருதேவனுடைய புத்ரன்.

2. இவன் ஓர் அரசன். இவன் பலிவ... பரம்பரையிற் பிறந்த புகழவிப்பவர் கண்டனென்னும் இரண்டாம் விசயாதித்தனுடைய புத்திரன். இவனுக்கு விஜயபாகு வென்று வேறு பெயருமுண்டு.

3. குப்தவம்சத்தில் மூன்றாவது அரசர். இவருக்கு இரண்டாவது சந்திரகுப்தரென ஒரு பெயருண்டு. இவர் வங்காளநாட்டின் மீதும், கூர்ச்சரத்தின்மீதும், சாக்கர் என்ற வம்சத்தவர்மீதும் படை எடுத்துச் சென்று வெற்றியடைந்தார். இவர் சமஸ்தானத்தில் பல சமஸ்கிருதகவிகள் கவியரங்கேற்றினர். அவர்களில் ஒருவர் காளிதாஸர் என்பர்.

**விக்ராந்தன்** — இருதுத்துவசன் குமாரன்.

**விக்ருதன், விருபன்** — இவ்விருவரும் வேதியர் தான பலனை ஒருவருக் கொருவர் மாறிக்கொண்டவர். (பார-சாந்.)

**விக்னராசர்** — விநாயகமூர்த்திக்கு ஒருபெயர். இவர் வரோணியராசன் தேவி புட்பகை யென்பவள் கருவுயிர்த்த காலையில் அப் புத்திரனை மறைத்து யானை முகத்துடன் தாம் குழந்தை உருக்கொண்டு இருந்தனர். அரசன் கண்டு காட்டில் இட்டுவரக் கட்டளை யிட்டனன். அவ்வகை ஏவலர் குழந்தையைப் பராசமுநிவர் ஆச்சிரமத்து அருகு வைத்துவிட்டு வர முநிவர்கண்டு வளர்த்து வந்தனர். இவ்வகை இருக்கையில் பெருச்சாளி உருக்கொண்ட கிரவுஞ்சன் விநாயகர் எழுந்தருளி யிருக்கும் ஆச்சிரமத்திடை வந்து முநிவர்களைத் தொந்தரை புரிதலைக் கண்டு அவனை வாகனமாகக்கொண்டு வலியடக்கி இருடிகள் வேண்டுகோளால் காலரூபி என்று மறுபெயர் பெற்ற விக்னனை வலியடக்கி அவன் வேண்டிக்கொள்ள உயிருடன் விட்டு விக்னராசர் எனத் திருநாமம் அடைந்தவர்.

**விக்னன்** — 1. ஓரசுரன். விக்னராசரைக்காண்க இவனுக்குக் காலரூபி எனவும் பெயர்.

2. கர்ப்பக்னன் குமாரன். கர்ப்பநாசம் உண்டாக்குபவன்.

**விசத்தியா** — நவசத்திகளில் ஒருத்தி.

**விசயகூடம்** — ஒரு வித்யாதர நகரம்.

**விசயதத்தன்** — தேவதத்தன் தந்தை.

**விசயத்துவதசி** — வாமனரைக் காண்க.

**விசயநகரம்** — கன்னட தேசத்தில் உள்ள ராஜதானி.

**விசயபத்திரன்** — சயசேகன் புதல்வன ... ம் என்னும் இந்திரபதவியை ஆண் பின் விச்வனாகப் பிறந்தவன் (வைச...

**விசயபாகு** — பாணவம்சத் தரசன். இரண்டாம் விக்ரமார்க்கனுக்குக் குமாரன்.

**விசயமகாராசா**—நமிதீர்த்தங்கரின் தந்தை ; தேவி பிப்பலா.

**விசயவரன்** — இவன் உக்கிரகுலத்திற் பிறந்த அரசன். இவனுடைய இராசதானி அங்கநாட்டிலுள்ள சண்பை நகர். (பெ-க.)

**விசயன்** — 1. அருச்சுனன்.

2. ஆயு என்பவளுக்குக் காசிபரிடம் பிறந்தவன்.

3. ஏகாதசருத்திரருள் ஒருவன்.

4. விஷ்ணுபடன்.

5. யஞ்ஞசீலன் குமாரன். இவன் குமாரன். சந்திரபீசன்.

6. நகுலன் குமாரன்.

7. திருதராட்டிரன் குமாரன்.

8. சண்முகசேநாவீரன். இவன் மூவாயிரம் படைவீரர்களுக்கு இளைத்துக் குமரவேளைத் தியானிக்க அவர் தரிசனம் தந்து வீரபத்திரப்படை பிரசாதிக்க அதனால் பகைவரை வென்றவன்.

9. கனகமாலை சகோதாருள் ஒருவன்.

10. சிவகன் புத்திரன்.

11. செயத்திரதன் குமாரன். இவன் குமாரன் திருதி.

12. வாநரத்தலைவன.

13. சயன் குமாரன்.

14. அமவஸுக்கு ஒருபெயர்.

15. சுதேவன் குமாரன்.

16. பிரசாபதியின் முதல்தேவி வழிப் புத்திரன் ; பலதேவன் அவதாரம்.

17. திவட்டன் புதல்வன்.

**விசயாலயன்** — ஒரு சோழன். இடங்கழியார் மாபில் தோன்றினவன். இவன் பல்லவனைக் கீழ்ப்படுத்திச் சோழநாட்டைக் கைக்கொண்டு சோழ அரசாட்சியை மீண்டும் நிலைநாட்டினவன். இவன் வாகுண பாண்டியன்மீது படைகொண்டு சென்று தோல்வியடைந்தவன். திருவிடைமருதூரில் மேற்குக் கோபுரத் திருப்பணிசெய்வித்தவன். இவன் மகன் ஆதித்தசோழன். இவன்காலம் எட்டாவது நூற்றாண்டென்பர்.

**விசயை** — 1. சகாதேவன பாரி. குமாரன் வேத்ரன். இவள் பர்வதபுத்திரி. குமாரன் சுகோத்ரன் என்பர்.

2. தசாநவர்த்தன் மகன்.

3. பௌமன் என்னும் சந்திரகுலத்து அரசன் மகள்.

4. சீவகன் தாய்.

5. பார்வதியின் தோழி.

6. அசிதசுவாமிக்குத் தாய். ஜிதசத்ரு மகாராஜாவின் தேவி. (சைநி)

7. அஷ்டசத்திகளில் ஒருத்தி.

**விசர்ப்பிரோகம்**—சோபாரோக குணங்களுடன் பல நிறக்கொப்புளங்களையும் சுரரோகருணங்களையும் பெற்று உள்ளும் புறம்புந் தேகத்தின் மர்மஸ்தானங்களைப் பற்றிப் பரவும். இது வாதவிசர்ப்பி, பித்தவிசர்ப்பி, சிலேஷ்ம விசர்ப்பி, திரிதோஷ விசர்ப்பி, க்ஷதவிசர்ப்பி எனப் பலவிதப்படும். (ஜீவ.)

**விசல்யை** — இது ஒருநதி

**விசாகப்பெருமாளையர்**—இவர் தொண்டை மண்டலத்துத் திருத்தணிகையிலிருந்த கந்தப்பையர் குமாரர். இராமாநுஜ கவிராயரிடம் இலக்கண இலக்கியங் கற்றவர். சற்றேறக்குறைய (50) வருடங்களுக்கு முன்னிருந்தவர். நன்னூல் விருத்தியுரை, இலக்கணச் சுருக்க வினவிடை, பிரபுலிங்க லீலை யுரை முதலியன செய்தவர். இவர் சகோதரர் சரவணப் பெருமாளையர் இவரை யொத்த கல்விமான்.

**விசாகயூபன்**—1. பாலகன் குமாரன். இவன் குமாரன் வாசநன்.

2. கல்கியைக் காணவந்த ஒரு அரசன். கல்கியிடம் பலதர்மங்களைக் கேட்டு உணர்ந்தவன்.

**விசாகன்** — 1 சிவகணத்தவரில் ஒருவன்.

2. அக்னிகுக் கிருத்திகையிடம் உதித்தவன்.

3. இவன அங்கநாட்டு அரசன். தன் சமயம்விட்டு வைஷ்ணவனுய்ப் பேயாகிக் காவிரி ஆடிச் சுத்தனானவன்.

**விசாகை** — சாமளவும் விவாகம் இன்றிக் கன்னிமாடத்து இருந்து காலம்கழித்த ஒரு வணிகமாது. (மணிமேகலை.)

**விசாரசருமர்**—சண்டேசுரருக்கு மறுபெயர். சண்டேசுரரைக் காண்க.

**விசாலக்கண்ணி** — 1. சாண்டில்லியன குமாரி. இவளை அவந்தியில் சுமந்தனுக்குக் கொடுக்க இவள் காமினியாய்ப் பலருடன்கூடிப் பொருள்சம்பாதித்துப் பின்னும் பொருள் சம்பாதிக்கக் காசியில் பஞ்சக்குரோசப் பிரதக்ஷணம்செய்யும் விடருடன் பஞ்சக்குரோசப் பிரதக்ஷணஞ் செய்து பாவம்நீங்கி முத்திபெற்றவள். (காசி ரகசியம்.)

2. பிரபையைக் காண்க.

**விசாலநேத்திரன்** — கௌசிகன் குமாரன்.

**விசாலன்** — 1. இக்ஷவாகு குமாரன். தாய் அலம்புசை.

2. கத்ரு குமாரன் நாகன்.

3. ஒரு அரசன். இவன் தன்குமாரியை வஸுதேவருக்குக் கொடுக்க வைத்திருக்கச் சிசுபாலன் கவர்ந்தனன்.

4. திரணபிந்துவின் குமாரன். இவன் சாலி என்கிற பட்டணத்தைச் சிருட்டித்தான். இவன் புத்திரன் ஏமசந்திரன்.

5. பிங்களனைக் காண்க.

6. அவீக்ஷித்தைக் காண்க.

7. ஒரு அரசன். இவன் கயாமாலை மயம் கேட்டு நற்பதமடைந்தவன். (பிரகன்னாரதீய புரா.)

**விசாலாதேவி** — (சங்.) அரசர் மீளியின் பாரி.

**விசாலாக்ஷன்** — திருதாாட்டிரான் குமாரன்.

**விசாலாக்ஷிபீடம்** — சத்திபீடங்களுள் ஒன்று.

**விசாலியகரிணி** — ஒருநதி. நருமதைக்கு அருகில் உள்ளது. இதில் ஸ்நானஞ்செய்வோர் சுவர்க்கம் புகுவர்.

**விசாலை** — 1. துண்டுமுகன் தேவி.

2. விசாலன் பட்டணம். இது கங்கைக்கரையில் உள்ளது. அரசன் சுமதி எனவும் கூறுவர். கிரிவிரசத்திற்கும் மிதிலைக்கும் இடையில் உள்ளது.

**விசிட்டாத்துவிதம்** — இது பாதகண்டத்தில் உள்ள மதங்களுள் ஒன்று. இவர்கள் விஷ்ணுவைப் பரமாகக் கொள்ளுதலால் வைஷ்ணவர் எனவும் இம்மதம் வைஷ்ணவம் எனவும் கூறப்படும். இதில் சித்து, அசித்து, ஈச்வரன் எனப் பொருள்கள் மூன்று உள. அவற்றுள் சித்து என்றது ஆத்மாவை; அவ்வாத்மா, தேகேந்திரியமநப் பிராணப்புத்தி விலக்ஷணமாய், அசடமாய், ஆநந்தரூபமாய், நித்யமாய், அணுவாய், அவ்யக்தமாய், அசிந்தியமாய், நிரவயவமாய், நிர்விகாரமாய், ஞானாச்ரயமாய் ஈச்வரனுக்கு நியாம்யமாய், தார்யமாய், சேஷமாய் இருக்கும். இவ்வாத்மசுவரூபம் முத்த, பத்த, நித்தியசுவரூபத்தால் மூன்று படித்தாய் இருக்கும். பத்தர் என்கிறது சம்சாரிகளை. முத்தர் என்கிறது சம்சார பந்தம் அற்றவர்களை. நித்தியர் என்கிறது ஒருகாலும் சம்சரியாதகருடசநகாதிகளை, சலம், அக்னி சேர்க்கையால் சூடு கொள்வதுபோல் சித்து அவித்யா கர்மவாசனை சம்பந்தத்தால் பந்தத்தை அடைகிறது. அப்பந்தம் நீங்கியவாறே அவித்தை நீங்கும். இவை மூன்றும் தனித்தனி அநந்தமாய் இருக்கும். ஆன்மா ஒன்று அல்ல; பல என்பர். அசித்து ஞான சூன்யமாய் விகாராஸ்பதமாய் இருக்கும். இது சுத்த சத்வம், மிச்ரசத்வம், சத்வசூன்[ய]ம் என்று மூன்றுவிதம். இதில் (சுத்தசதவமாவது) ரஜஸ், தமஸ்ஸுக்கள் கலவாதே கேவல சத்வமாய், நித்யமாய் ஞாநாநந்த ஜநகமாய், கர்மத்தால் அன்றிக் கேவலபகவதி இச்சையாலே விமான, கோபுர, மண்டப, திருமதில்களால் பரிணமிக்கக்கடவதாய் நிரவதிகதேசோரூபமாய், நித்யமுத்தராலும், ஈஸ்வரனாலும் பரிச்சோதிக்க அரிதாய், அத்யத்புதமாய் இருப்பது ஒன்று. இதை நித்ய விபூதி எனும் பரமபதம் என்பர். (மிச்ரசத்வமாவது, சத்வ ரஜஸ் தமஸுக்கள் மூன்றுடன்கூடிப் பத்தசேதநருடைய ஞாநாநந்தங்களுக்குத் திரோதாயகமாய், விபரீத ஞானசநகமாய், நித்யமாய், ஈச்வரனுக்குக் கிரீடாபரிகரமாய், ப்ரதேசபேதத்தாலும், காலபேதத்தாலும், சத்ருசமாயும், விஸத்ருசமாயும், பின்னும் அது பிரகிருதி, அவித்யை, மாயை என்னும் பெயர் பெற்றும் இருக்கும். அவற்றுள் பிரகிருதி, விகாரங்களைப் பிறப்பிக்கை, அவித்யை, ஞானவிரோதம், மாயை, விசித்ர சிருட்டியைப் பண்ணுகை. இது இருபத்து நான்கு தத்துவங்களைப்பெற்று இருக்கும். அவற்றுள் முதலாவது பிரகிருதி. இதற்குச் சத்வ ரசஸ் தமசுகள் குணங்கள். சத்வமாவது ஞாநசுகங்களையும் உபயஸங்கத்தையும் பிறப்பிக்கும். ரஜஸு, ராக த்ருஷ்ணை சங்கங்களையும் கர்மசங்கத்தையும் பிறப்பிக்கும். தமஸ்ஸு, விபரீதஞானத்தையும், அநவதானத்தையும், ஆலஸ்யத்தையும், நித்ரையையும் பிறப்பிக்கும். இவை சமங்களானபோது விகாரங்கள் சமங்களுமாய் அஸ்பஷ்டங்களுமாய் இருக்கும். விஷயங்களானபோது விகாரங்கள் விஷயங்களுமாய் ஸபஷ்டங்களுமாய் இருக்கு[ம்]. விஷம விகாரங்களில் பிரதமவிகாரம் மகான். இது சாத்விகம், ராஜஸம், தாமஸம் எனும் மூன்றுவிதமாய் அத்யவஸாய ஜநகமாய் இருக்கும். அதினின்றும் அகங்காரம் உண்டாம். அவை வைகாரி தைஜஸம். பகாதி என்[று] [மூ]வகை[யா]ம்

அகங்காரம் அபிமான ஏதுவாய் இருக்கும். அவற்றுள் வைகாரிகத்தில் ஞானேந்திரிய கர்மேந்திரியங்களும் மற்றதும் உண்டாம். பூதாதியினின்றும் சப்த தன்மாத்திரையும் அதில் ஆகாசமும், ஸ்பர்ச தன்மாத்திரையும் பிறக்கும். இதில் வாயுவும், ரூபதன்மாத்திரையும் பிறக்கும். இதில் தேஜஸும் தன்மாத்திரையும் உண்டாம். இதில் ஜலமும் கந்ததன்மாத்திரையும் பிறக்கும். இதில் பிருதிவி உண்டாம். தைசசம் இவ்விரண்டும் காரியப்படும்போது உதவி புரியும். மண்ணையும், மணலையும், நீரையும், சேர்த்துச் சுவரிடுவோரைப்போல் ஈசுவரன் இவற்றை எல்லாம் தன்னிலே சேர்த்து ஒரு அண்டமாக்கி அதனுள் சதுர்முகனைப் படைத்து அந்தர்யாமியாய் இருப்பன். (சுத்வசூன்யமாவது) காலம். இது பிரகிருதி, பிராக்ருதங்களுடைய பரிணமங்களுக்கு ஏதுவாய்க் கலாகாஷ்டாதி ரூபத்தால் பரிணமிக்கக்கடவதாய், நித்யமாய், ஈச்வரனுக்குக் கிரீடாபரிகாரமாய்ச் சரீரபூதமாய் இருக்கும். மற்றை இரண்டும் அசித்தும், ஈச்வரனுக்கும், ஆத்மாவுக்கும் போக்ய, போகோபகரண போக்யஸ்தானங்களாய் இருக்கும். இனி ஈச்வரன் அகிலஹேய ப்ரத்யநீகாநந்த, ஞாநாநந்தைகசொரூபனாய், ஞானசக்தியாதி கல்யாணகுண விபூஷிதனாய், சகல ஜகத்சிருட்டிஸ்திதி, சம்ஹாரகர்த்தாவாய், ஆர்த்தோ, ஜிஞ்ஞாஸு, ராதார்த்தீ, ஜ்ஞானி என்கிற சதுர்வித புருஷர்களுக்கும் ஆச்ரயணீயனாய், தர்மார்த்த காமமோக்ஷம் என்னும் சதுர்வித பலப்பிரதனாய் விலக்ஷண விக்ரஹயுக்தனாய், லக்ஷ்மி, பூமி, நீளாநாயகனாய் இருப்பன். அகிலஹேயப் பிரத்யநீகனாகையாவது - இருளுக்கு ஒளிபோலவும், ஸர்ப்பத்திற்குக் கருடனைப் போலவும், விகாராதிதோஷங்களுக்குப் பிரதிகடனாய் இருக்கை. அநந்தனாகையாவது - நித்யனாய், சேதநாசேதனங்களுக்கு வியாபகனாய், அந்தர்யாமியாய் இருக்கை. ஞாநாநந்தைக சுவரூபனாகையாவது - ஆநந்தரூபஞானனாய்ப் பிரகாசிக்கை. இவ்வகைக் குணங்களையுடையான் லீலையால் சுகத்தைச் சிருட்டிக்க, பரத்வம், வியூகத்வம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரத்வம், என்று ஐந்து பிரகாரமாவன். பரத்வமாவது - காலங்கடந்த நலமந்தமில்லதோர் பரமபதத்தில் நித்யமுக்தர்களுக்குப் போக்யனாய் எழுந்தருளியிருக்கும் இருப்பு. வியூகமாவது - சிருட்டி, திதி, சம்ஹாரார்த்தமாகவும், சம்சாரி, சம்ரக்ஷணார்த்தமாகவும், உபாயகாநுக்ரகஹார்த்தமாகவும், சங்கர்ஷணப்ரத்யும்ந, அநிருத்தரூபேண நிற்கும் நிலை. விபவம் - அநந்தமாய்க் கௌணமுக்ய பேதத்தாலே பேதித்து இருக்கும் நிலை. அந்தர்யாமித்வமாவது - ஸ்வர்க்கநரக பிரவேசாதி சர்வாவஸ்தைகளிலும் சகல சேதநர்களுக்கும் துணையாய் அவர்களை விடாதே நிற்கிற நிலைக்கு மேலேசுபாச்ரயமான திருமேனியோடே கூடிக்கொண்டு அவர்களுக்குத் தியேயனாகைக்காகவும் அவர்களை ரக்ஷிக்கைக்காகவும் பந்துபூதனாய் இருதயகமலத்தில் எருந்தருளி இருக்கும் இருப்பு. அர்ச்சாவதாரமாவது - சேதநர்களுக்கு அபிமதமாந திரவியங்களிலே விபவவிசேஷங்களைப்போல் அன்றித் தேசகாலாதிகாரி நியமம் இல்லாதபடி ஸந்நிதி பண்ணி அபராதங்களைக் காணக்கண்ணிட்டு அர்ச்சகபரதந்திரமான சமஸ்த வ்யாபாரங்களையும் உடையனாய்க்கொண்டு கோயில்களிலும் கிருகங்களிலும் எழுந்தருளியிருக்கும் நிலை. இதுவரையில் தத்வத்திரயம் கூறப்பட்டது. இனி பந்தமோக்ஷம் எவ்வகையெனின், மேற்சொன்னபடி பந்தப்பட்ட ஆத்மா, பரமபதத்தில் இச்சையுள்ளானாய்ச் சதாசார்யனை அடைந்து சாஸ்திராப்யாசம் செய்து பகவத் உபாசனையால் சம்சாரவிரக்தி அடைந்து அர்ச்சாதிமார்க்கமாம் நித்யவிபூதி லீலை விபூதிகளுக்கு இடையில் இருக்கும் விரசைநதியில் ஸ்நானஞ் செய்து திவ்யதேகம் பெற்று அதைக் கடந்து நித்யசூயகள், சேநாமுதலிகள் எதிர்கொள்ளச் சென்று பெரிய பிராட்டியார் புருஷாகாரிக்கப் பெரிய பெருமாள் திருவருள்பெற்று நித்யவிபூதியில் நித்யசூரிகளுடன் கைங்கர்யபரனாய் ஈச்வரனது அநந்த கல்யாணகுணங்களை அநுபவிப்பன். இம்மதத்தில் தீக்ஷை பாஞ்சராத்ரவைகாநஸ ஆகமாதி தீக்ஷை. இம்மதத்தவர் தென்கலையார் வடகலையார் என இருவிதப்படுவர். இவர்களுக்குப் பந்தமோக்ஷம் ஒன்றேயாயினும் சில சாம்பிரதாய விஷயங்களில் பேதிக்கும். தென்கலை வடகலை சாம்பிரதாய பேதங்கள் - தென்கலை சம்பிரதாயம். (க) ஈச்வரகடாக்ஷம் எவ்வாடத்தாயினும் நிர்ஹேதுகமாயுண்டாகும். (உ) மோக்ஷலாபம் ஈச்வரன் பொரு

ட்டேயன்றி ஜீவர்கள் பொருட்டல்ல. இது இதிகாரிபேதத்தை அனுசரித்திருக்கும். (௩) கர்மஞ்ஞான பக்தியோகங்கள் மூன்றும் ஆசாரியநிஷ்டையும் மோக்ஷத்திற்குச் சுவதந்திரோபாயங்கள். (௪) லக்ஷ்மிதேவி ஜீவகோடிகளைப்போல அணுஸ்வரூபமுள்ளவளேயன்றிச் சர்வவியாபியல்லள். (௫) மோக்ஷங்கொடுக்குஞ் சக்தி லக்ஷ்மிதேவிக்கு இன்று. (௬) ஈச்வரன் ஆசரித்தவர்கள் தோஷங்களைப் போக்யமாய் நினைக்கும் அன்புள்ளவன். (௭) பகவான் பாதுக்கங்களைக்கண்டு வருந்தும் தயவுற்றவன். (௮) பிரபத்தி பக்தியைப்போல மோக்ஷத்திற்குச் சாதனமன்று. (௯) பிராபத்திக்கு ஸ்வரூபயாதத்மியஞானம் உள்ளவனே அதிகாரியாவன் (௧௦) பிரபத்திக்குச் சர்வதர்ம பரித்தியாகமே ஆவச்யகம். (௧௧) சேதனர்கள் அனைவரும் பாதந்திரர்களாகையினால் பக்தியாதி யுபாயங்கள் பாரதந்திரிய சுவரூபவிர்த்தங்களா யிருக்கின்றன. (௧௨) பிரபன்னன் சாஸ்திரவிஹித கர்மாக்களை ஆச்ரயித்தல் மற்றவர்கள் அவ்வாறே ஆச்ரயித்தற் பொருட்டேயாம். (௧௩) பிரபன்னன் பிரபத்திக்குப் பூர்வதர்மங்களானவைகளை ஆசரிக்க வேண்டியதில்லை. (௧௪) பிரபன்னர்கள் அனைவருக்கும் பகவத் அனுக்கிரகமுண்டு. (௧௫) பிரபன்னன் பாதகங்களைச் செய்யினும் பூர்வபிரபத்தியை அனுசந்தித்தவுடனே அவை நிவர்த்தியாம். (௧௬) பிரபன்னன் தாழ்ந்த குலத்தானாயினும் உயர்குலத்தானைப்போலக் கவுரவிக்கத்தக்கவன். (௧௭) ஈச்வரன் அணுசுவரூபமான ஜீவர்களிடத்தில் அந்தர்யாமியா யிருக்கின்றான். (௧௮) மணிசேவித்தல், பஞ்சமகாயஞ்ஞம், ஏகாதசி சிரார்த்தமும், சாதியும் ஜீவன் முத்தனுக்குக் கிடையாது என்பர். விரஜாநதிக்கு அப்புறத்தில் இருக்கிற நித்தியமான கைவல்லியத்தை யடைந்தவன் மீண்டும் பிறவியை அடையான். கைவல்லியமடைந்தவனுக்குப் பரமபதம் கிடையாது. வடகலைசாம்பிரதாயம் - (௧) ஈச்வரனுக்கு உண்டாகும் கடாக்ஷ சகேதுகமாகவிருக்கும். (௨) மோக்ஷலாபம் ஜீவனுக்கேயன்றிச் ஈச்வரனுக்கன்று; அதிகாரிபேதமில்லை. (௩) கர்மஞ்ஞானாதிகள் பக்திக்கு அங்கங்களேயன்றிச் சுவதந்தரோபாயங்களன்று. (௪) லக்ஷமி தேவிக்குக் கூட ஈச்வரனைப்போலச் சர்வவியாபகத்வமுண்டு. (௫) மோக்ஷத்தைக் கொடுக்குஞ் சக்தி லக்ஷ்மிதேவிக்கு உண்டு. (௬) பக்தவரிகளுடைய தோஷங்களில் லக்ஷியஞ் செய்யாமல் போதலே வாச்சல்லியமெனப்படும். (௭) பிறர் துக்கங்களைப் பார்த்துச் சகிக்காதிருத்தலே தயையெனப்படும். (௮) பிரபத்தியும் பக்தியைப்போல மோக்ஷத்திற்குச் சாதனம். (௯) பிரபத்திக்கு அகிஞ்சனனே அதிகாரியாவான். (௧௦) பிரபன்னன் அசக்தியால் சர்வதர்ம பரித்தியாகங்களையும் இயற்கையாகவே விட்டுவிடல் வேண்டும். (௧௧) பிரபத்தியேயன்றி மற்ற பக்தியாதி உபாயங்கள் அதிகாரிகளின் பேதங்களை அனுசரித்து இருக்கும். (௧௨) பிரபன்னன் சாஸ்திரவிகிதகர்மங்களை ஆச்ரயித்தல் பகவானுடைய ஆஞ்ஞையை அனுசரித்துப் பகவானின் பிரீதியின் பொருட்டாம். (௧௩) பிரபன்னனுக்குப் பிரபத்திக்கு முன்னுற்ற கர்மங்கள் பிரபத்திக்கு அங்கமாயிருத்தல் பற்றி ஆசரிக்க வேண்டும். (௧௪) பிரபன்னர் அனைவருக்கும் பகவத் அனுக்கிரகம் உண்டாம் (௧௫) பிரபன்னன் பாதகங்கள் செய்தால் மீண்டும் பிரபத்தியைச் சிரமத்துடன் செய்யவேண்டும். (௧௬) தாழ்ந்தகுலத்தினனான பிரபன்னன் வருணாச்ரம தர்ம விரோதமில்லாமல் சொற்களால் மாத்திரமே கவுரவிக்கத்தக்கவன். (௧௭) ஈச்வரன் அணுசுவரூபர்களான ஜீவர்களின் வெளிப்புறத்தில் வியாபித்திருப்பானேயன்றி அணுக்களில் வியாபித்தல் அசங்கதம். (௧௮) விரஜாநதிக்கு இப்புறத்திலுள்ள அநித்தியமான கைவல்லியத்தை அனுபவித்த பிறகு பரமபதத்தையும் அனுபவிக்கக்கூடும். மேற்கூறிய சித்தாந்த சாம்பிரதாய விரோதங்கள் திருமண்ணிலும் விரதாதிகளிலும் இருவருக்குமுண்டு. தென்கலை விதந்துக்கள் முண்டனஞ்செய்து கொள்ளார். வடகலையார் முண்டனஞ்செய்து கொள்வர். வடகலையார் சூத்திரர்களுக்குப் பிரணவோக்தமாய்த் திருமந்திரம் உபதேசியார். இதநிற்க, வடகலையார் முநித்திரயம், மடப் என இருதிறப்படுவர். இந்தப் பேதம் தோழப்பர் என்னும் ஆசாரியர் காலத்தில் உண்டாயிற்று. இவர்களுக்கு வஸ்துபேதம் கிடையாது. ஸாம்பிரதாயபேதம், சில விரதங்களில் பேதம். தென்கலையார் மணவாளமாமுநிகள் எனும் ஆசாரியரைச் சிலாகிப்பர். வடகலையார் வேதாந்த தேசிகரை அதிகம் கூறுவர்.

**விசிதர்சுவன்** — விகிதாசுவனைக் காண்க.

**விசித்திரவசன்** — ஓர் சோழன். நாகைக் காரோணத்தில் சிவபூஜைசெய்து சித்தி யடைந்தவன். (நாகைக்காரோண புரா ணம்).

**விசித்திரகன்** — கோபிலமகா முநியைக் காண்க.

**விசித்திரக்கா** — சித்திரக் கவியிலொன்று. இது எங்கும் ஏழறையாக வெழுதி மேலேஒழுங்கினுள் மொழிக்கு முதலாமெ ழுத்தையொரு பொருள்தரவைத்து, அந்த எழுத்துக்களை ஒழுங்குங் கண்ணறையும் படாமே நிறுவி ஓரெழுத்திற்கு ஓரடியாக வேனும், ஒரு சீராகவேனும் முற்றுப்பெ றப் பாடுவது. (யாப்பு வி.)

**விசித்திரசுவன்** — பிருதுவின் குமாரன். தந் தைசெய்த அச்வமேதத்தில் பசுவைக் கவர்ந்துசென்ற இந்திரனுடன் இருமுறை போர்புரிந்து அச்வத்தை மீட்டதனால், இவனுக்கு அர்தர்த்தானனென்று பெயர் வந்தது. விகிதாசுவன் எனவும் பெயர் இவனுக்கு இரண்டு தேவியார். முதற் பாரியையாகும் சிகிண்டி வசிட்டர் சாபத் தால் பூமியிற் பிறந்து திரேதாக்னிகளா கும் பாவகன், பவமாநன், சுசி என்று மூவரையும் புத்திரராகப் பெற்றனள். இவர்கள் பால்யராக இறந்தனர். இரண் டாவது தேவியாகிய நபஸ்வதிக்கு அவிர்த் தானன் எனுங் குமாரன் பிறந்தனன்.

**விசித்திரபாது** — திருதராட்டிரன் புதல்வன்.

**விசித்திரபுரி** — விசித்திரன் காக்கும் பட்ட ணம்; யமபுரவழியிலுள்ளது. ஆன்மா இவ்விடந் தங்கி ஊனஷாண்மாசிக பிண் டத்தைப் புசிப்பன்.

**விசித்திரவதி** — அரிச்சந்திரன் குமாரி; முசு குந்த சக்கிரவர்த்தியின் தேவி.

**விசித்திரவீரன்** — திருதராட்டிரன் குமாரன்.

**விசித்திரவீரியன்** — இவன் சந்தனுவுக்கு மச்ச கந்தியிடம் உதித்த குமாரன். இவன், வீஷ்மர் தன் பொருட்டுக் காசி யாசனிட மிருந்து கொண்டுவந்த அம்பிகை அம்பா லிகை என்னும் கன்னியரை மணந்து புத் திரரிலாது இறந்தவன். இவன் மனைவி யரிடத்தில் வியாஸரால், பாண்டு திருத ராட்டிரர் பிறந்தனர். தமயன் சித்திராங் கதன். இவன் தனது தேவியருடன் ஒன் பது வருஷம் ரமித்திருந்து க்ஷயரோகத் தால் இறந்தனன்.

**விசித்திரன்** — 1. நமனுக்கிளையவன். (விசித் திரபுரிராசன்.)

2. தேவசாவர்ணி மநுபுத்திரன்.

3. திருதராட்டிரன் குமாரன்.

4. கனகவிசயருடைய நண்பனாகிய அர சன். (சைநன்.) (சிலப்பதிகாரம்.)

**விசிரவசு** — 1 புலத்தியற்கு ஆவிர்ப்பூவிடம் உதித்த குமாரர். தேவி (இளி, பிளை) குமா ரன் குபேரன். இரண்டாவது தேவி கை கேசி. இவளிடம் இராவண கும்பகர்ண விபீஷணர் உதித்தனர். புஷ்போத்கடை யிடம் மகோதரனும் மகாபாரிசுவனும் இராகையிடம் கர-தூஷண-திரிசிரரும், பிறந்தனர்.

2. ஒரு காந்தருவன். மதாலசையின் தந்தை.

**விசிரஷ்டன்** — உக்ரசேநன் (அல்லது கங் கன்) குமாரன்.

**விசிருட்டன்** — கம்சன் சகோதரன்.

**விசிறி**—இது, ஓலையாலும் வேறு இலேசான பொருள்களாலும் காற்றை அசையச் செய் யுங் கருவி. இது பேராலவட்டம் சிற்றால வட்டம். எனப் பலவகையுண்டு. மயில் விசிறி, வெட்டிவேர் விசிறி, பனையோலை விசிறி, வெண்சாமரை.

**விசிறிப்பறவை** — இது ஆஸ்திரேலிய நாட் டுப் பறவை யினத்தில் ஒன்று. இது, இந்திய நாட்டுப்புறாவினத்தைச் சேர்ந்தது. இதன் தலைகறுப்பு, முதுகு நீலம், வயிறு மஞ்சள் கலந்த செகப்பு ஆணுக்கு வால் நீட்சியாய் விசிறிபோல் வட்டமாய் அழகி யதாயிருக்கிறது. இது ஆடும் பக்ஷிகள் போல் காலை மாலைகளில் களிப்புடன் ஆடுகிறது.

**விசிறிவகை** — இது உஷ்ணபரிகாரத்தின் பொருட்டுப் பல பொருள்களால் செய்யப் பட்டகால்செய் வட்டமாம். பனையோலை விசிறி வாததோஷம், சிலேஷ்மரோகம், பித்தாதிக்கம் இவைகளை நீக்கும். வெட் டிவேர் விசிறி பைத்தியதோஷம், தேக எரிவு, விதாகம், மனவுற்சாகத்தையுண் டாக்கும். மயில் விசிறி விஷமசந்நிபாதம், வயிற்றுவலி, தலைசுழற்றல், பித்தகோ பம், விக்கல், வியர்வை, வாதகோபம் இவைகளை நீக்கும். அறிவுவிளக்கும். உஷ் ணகாரியாம்.

**விசிறிவாழை** — அடுக்குவாழை, கலவாழை, மயில் வாழை எனப் பல பெயர்பெறும். இது ஆப்ரிகா கண்டத்து மடகாஸ்கர்

நீவில் உண்டாவது. இது நன்ருக வளர்ந்தால் எறக்குறைய (20, 30) அடிகள் உயரம் வளரும். இது தென்னைபோ லடிமரமும், வாழையிலையை யொத்து பெரிய மட்டைகளுடன் கூடி மயில் சிறகு விரிப்பதுபோல் அல்லது விசிறி விரித்தது போல் விரிந்து அகன்ற இலைகளையும் உடையது. இது இப்பொழுது பல உஷ்ண தேசங்களிலும் உண்டாகிறது. இது வேனிற் காலத்தில் தன்னையுங் காத்துக் கொண்டு நீரில்லாது வருந்தும் யாத்திரைக்காரருக்கு நீர்வேட்கையையுந் தணித்தச் சாந்தப்படுத்துகிறது. எவ்வாறெனின் பனி மழை முதலியவற்ரு லுண்டாம் நீரை அகன்ற மட்டைக்கால் வழியாகக்கொண்டு மட்டைகளி னடியிலுள்ள பொருத்துக்களில் பொருந்த வைத்துக்கொண்டு எல்லா மரங்களும் உலரும் காலத்திலும் தன்னை நீர்வளத்தால் காத்துக்கொள்ளுகிறது. பிராணிகள் நீர்வேட்கை கொண்ட காலத்தில் கூரிய கழியைக்கொண்டு இம்மரத்தின் மட்டையடியில் குத்தினுல் இதிலுள்ள ஜலம் வெளிவரும். அதனுல் தமக்குண்டாகிய தாகந் தணிவர். இதனுல் இது வழிப்போக்கர் மரம் என்று பேர்பெறும்.

**விசுசிநன்** — புரக்ஞனுக்கு நண்பன்.

**விசுதி** — விஷபச்சேநரைப் பெற்றவள்.

**விசுத்தன்** — இவன் கேதாரநாதர் விரதமநுட்டித்து (௧00) புத்திரரையும் பெருஞ் செல்வத்தையு மடைந்தவன்.

**விசும்பர்** — ஒரு இருடி. வைசம்பாயனர்க்குத் தந்தை.

**விசுவகந்தன்** — பிருது குமாரன்.

**விசுவகர்மா** — 1. வாஸ்து என்னும் மநுவிற்கு அங்கிரசியிடம் உதித்த குமாரன். இவன் குமாரன் சாக்ஷுசமநு.

2. பிரபாசனுக்கு யோக சித்தியிடம் உதித்த குமாரன். இவன் தேவதச்சன். சூரியன் ஒரு காலத்துத் தன் தேவி இவனிடம் இருப்பதறிந்து தேடிவர இவன் சூரிய வொளியைச் சாணையிற் கடைந்து பாசு பாசம் அங்குச முதலியவைகளை விநாயக மூர்த்திக்கு நிருமித்துக் கொடுத்து அருள்பெற்றவன். இவன் கண்ணில் மாதவவூரன் பிறந்தனன். இவனுக்கு இரமையெனும் தேவியிடம் விருத்திராசுரன் பிறந்தான். இவன் ஒருநாள் காமனிடஞ் செல்லும் கிருதாசி யென்னும் தேவதாசியைக் கண்டு மோகித்தழைக்க இவள் இன்றைக்கு மதனனிடஞ்சென்று மற்றொரு நாளில் உனதெண்ணத்தை நிறைவேற்றுகிறேனென்று சொல்லி மறுத்ததால் விச்வகர்மன் கோபித்து 'நீ பூமியில் சூத்திர யோனியில் பிறக்க' என்று சபித்தனன். இச் சாபமேற்றவள் பிரயாக நகரத்தில் கோபகன் தேவியிடம் பிறந்து தபஸ்வியாய்ப் பின் விச்வகர்மன் வீர்யத்தால் ஒன்பது புத்திரர்களைப் பெற்றுப் பின் சுவர்க்க மடைந்தனள். இச்சாபமேற்ற கிருதாசியும் விச்வகர்மனைச் சூத்திரயோனியிற் பிறக்கச் சாபமிட்டனள். இச்சாபத்தால் விச்வகர்மன் பூமியில் ஒரு பிராமணன் தேவியிடம் பிறந்து சில்பியாய் அரசர்க்கு மாடமாளிகை நிருமித்து வந்தான். இவன் ஒருநாள் கங்காதீரத்திற்குச் சென்று ஆண்டு தவத்தியாயிருந்த கிருதாசியைக் கூடிப் பன்னிரண்டு வருஷமிருந்து அவளிடம், மாலைக்காரன், கருமான் கொல்லன், சங்கறுப்போன், குவிந்தன், குயவன், சூத்திரகாரன், தட்டான், சித்திரகாரன், முதலியவர்களைப் பிறப்பித்தனன். (பிரம்மகைவர்த்தம்). பிரபாசனுக்கு யோகசித்தியிடம் உதித்த குமாரன். மயனுக்குப் பிதா. வாஸ்து என்னும் வசுவிற்கு அங்கிரசியிடம் உதித்தவன் என்பர். மாலி, மாலியவான், சுமாலி இவர்களுக்குத் திரிகூடாசலத்தைப் பட்டணமாக நிருமித்தளித்தவன். இந்திரன் ஏவலால் பாண்டவருக்கு இந்திரப்பிரத்தம் நிருமித்தவன். தேவர் முதலியவர்க்குச் சிவலிங்கம் நிருமித்தளித்தவன். ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்குக் காலயவன சராசந்தயுத்த காலத்து மேற்குக் கடலிற் பட்டணம் நிருமித்துத் தந்தவன்.

**விசுவகன்** — 1. ஆங்கிரஸ வம்சத்து ஒரு அக்னி.

2. பிருது குமாரன்.

**விசுவகா** — பூர்ணிமா என்பவர் குமாரி.

**விசுவகாசிபம்** — ஒரு சிற்பநூல்.

**விசுவகுத்தன்** — விண்மித்திரனைக் காண்க.

**விசுவகோத்ரன்** — (சூ.) பிருது குமாரன்.

**விசுவசகன்** — விருத்தசருமன் குமாரன். இக்ஷவாகு வம்சத்தவன்.

**விசுவசாகியன்** — (சூ.) மகசுவான் குமாரன்.

**விசுவசித்** — 1. சயத்திரதன் குமாரன்.

2. சத்யசித் குமாரன். இவன் குமாரன் ரிபுஞ்சயன். (பிரகத்)

3. கழுதையின்மேல் உருத்திராக்ஷப் பொதிகொண்டு சென்று கழுதையிறந்து முத்தியடையக் கண்ட வொருவன்.

விசுவசேநர் — 1. லோகாலோக பருவதத்தில் எழுந்தருளி யிருக்கும் விஷ்ணுவினவதார விசேஷம்.

2. ஒருகாலத்திலே துருவாசர் செய்த தருமத்தைக் கெடுக்க இந்திரன் குந்தளையென்பவளை ஏவினன். அவள் உடன்பட்டுச்சென்று நிற்கையில் முனிவர் கண்டு கோபித்து 'நீ வேடச்சியாகுக' எனச்சபித்தனர். இத்தெய்வப்பெண் நடுங்கிச் சாபநீக்கம் வேண்டினள். முனிவர் 'உன் வயிற்றிற் சுகுணமுள்ள புத்திரன் ஒருவன் பிறப்பான் அக்காலத்து நீங்கும்' என்றனர். அப்படியே இவள் வீரவாகு என்னும் வேடன் மகளாகச் சுவற்கலை யென்னும் பெயருடன் பிறந்து பத்திரன் என்போனை மணந்து வாழுநாளில் ஒருநாள் நருமதையில் ஸ்நானஞ்செய்து ஒரு மரத்தடியில் இருந்தனள். இவளை வருணன் கண்டு கூடினன். இவளிடத்து அக்காலத்து விஷ்வக்சேநர் பிறந்து காசிபரிடம் கல்விகற்றுத் தவத்தால் சேனை முதலியாயினர். (திருவேங்கட புராணம்.)

3. பிருமதத்தன் குமாரன். இவன் கிருஷ்ணநுக்கிரகத்தால் யோகசாத்திரம் இயற்றினன். இவன் குமாரன் உதக்சேநன்.

4. விதர்ப்ப நாட்டரசன் வேட்டைக்குச் சென்று கோடை வெப்பத்தால் சிவாலயம் அடைந்து சிவத்திரவிய முபயோகித்து நரகடைந்தவன்.

விசுவசேன் — சாக்ஷுஸ மநுப் புத்திரன்.

விசுவசேபீடம் — சத்திபீடத்தொன்று.

விசுவதேவர் — தருமனுக்கு விசுவா என்பவளிடம் உதித்த குமாரர். சிரார்த்தத்தில் பூசிக்கப்பட்டவர். இவர்கள் வசுபந்தர், கிருதுதக்ஷர், காலகாமர், துரிவிரோசனர், புரூரவாத்திரவர் முதலிய பதின்மர் என்பர்.

விசுவநாத சாஸ்திரியார் — இவரூர் யாழ்ப்பாணத்து அராலி. சற்றேறக்குறைய எண்பது வருடங்களுக்கு முன்னிருந்தவர். தமிழில் வல்லவர். வண்ணக்குறிஞ்சி, நகுலமலைக் குறவஞ்சி இயற்றியவர்.

விசுவபதன் — 1. துவட்டாவின் குமாரன். இந்திரன் ஒரு காலத்து இவனைக் குருவாகக்கொண்டு யாகஞ்செய்விக்க முயன்றனன். இவன் தேவர்களுக்கு வாக்கினுல் எல்லா நன்மையும் உண்டாகுக என்றுகூறி மனதினுல் அசுரர் விருத்தியாகுக என்று யாகத்தைத் தொடங்கிச் செய்தனன். இவனது எண்ணத்தை ஞானதிருஷ்டியால் அறிந்த இந்திரன் இவனது சிரத்தை வச்சிரத்தால் எறிந்தனன். அது சோம்பிதம், சுராபிதம், அந்நாதம் என மூன்று பறவைகளாயின. (திருவிளையாடல்.)

2. இவன் துவஷ்டாவின் புத்திரன்; இவனுக்கு மூன்று சிரம். இவற்றில் ஒன்று வேதாத்யயனம் செய்வது; ஒன்று சுராபானம் செய்வது; ஒன்று எல்லா உலகங்களையும் பார்ப்பது. இவன் மகாதவமேற்கொண்டு செய்கையில் இந்திரன் தன் பதவிக்கு விக்கினம் வருமென்று எண்ணி அப்சரசுக்களையேவிக் கெடுக்கத் தூண்டி அவர்களால் முடியாதுபோக தானேவந்து இவனைக்கொல்ல, இவன் தலையற்றும், தவத்தினுல் மீண்டும் இவன் தலைபிரகாசிக்க, விச்வகர்மனை இவன் தலையைச் சேதிக்கக்கூற, அவன் தன்னைப் பாவமடையும் நான் உடன்படேனென்ன, இந்திரன் யாகத்தில் பசுவின் தலை உனக்குக் கொடுக்கிறேனென்ன, அவன் உடன்பட்டுக் கொன்றனன். வீழ்ந்த தலைகளில் வேதம் ஓதிய தலையிலிருந்து பிஞ்சலப்பக்ஷிகளும், உலகத்தைப் பார்த்த தலையிலிருந்து நெருப்புக்கோழிகளும், சுராபானஞ்செய்த தலையிலிருந்து மாடப்புறாக்களும் பிறந்தன. (தே - பாகவதம்.)

விசுவபதி — ஒரு அக்னி.

விசுவபுக் — ஒரு அக்னி.

விசுவன் — பாரதவீரருள் ஒருவன்.

விசுவா — தக்ஷன் பெண். தருமப்பிரசாபதியின் தேவி. குமாரர் விசுவதேவர்.

விசுவாநரன் — வைசுவாநரன் என்னும் அக்னி தந்தை.

விசுவாவசு — 1. ஒரு கந்தருவன். இவன் சுவாயம்புமநுவின் குமரியாகிய தேவஹூதியைக் கண்டு மோகத்தினுல் விழுந்துவிட்டவன். யாஞ்ஞவல்கியரிடம் ஞானோபதேசம் பெற்றவன். இவன்தேவி விச்சுவாவதி; இவனை மேனகைபுணர்ந்து பிரமத்துவரையைப் பெற்றாள்.

2. ஒரு காந்தருவன்; இவன் குமாரன் சயந்தன்.

3. ஒரு காந்தருவன். இவன் மேனகையைப் புணர்ந்தனன். இவளிடம் ஒரு பெண்குழந்தை பிறக்க மேனகை அக்குழந்தையைத் தூலகேசருஷி பர்ச்சிரமத்து

வனத்தில் விட்டகல ருஷியெடுத்து வளர்த்து அக்குழந்தைக்குப் பிரமத்வரை என்றும் பெயரிட்டனர்.

4. ஒரு காந்திருவன் கானஞ்செய்கையில் வேறெண்ணங் கொண்டதால் இந்திரனால் சாபமடைந்து பூமியில் அரசனாகப் பிறந்து தொண்டமானுடன் போரிட்டுச் சாப நீங்கினவன். (திருவோத்தூர்-புரா)

விசேடணவிசேடிய அபாவம் — விசேடண விசேடியங்களது இன்மை. (சிவ - சித்.)

விசேடம் — குணம், தொழில், சாதி, பொருள், உறப்பு, முதலியன குறைபடுதல் காரணமாக ஒருபொருட்கு மேம்பாடு தோன்ற உரைப்பது (தண்டி)

விசேஷக்காட்சி — ஆத்மா, மனத்துடன் கூடித் தேசகால அவத்தைகளுடன் இந்திரியத்திற்கு விடயமான பொருளை அறிகை. (சிவ - சித்)

விசேஷணம் — அடைமொழி.

விசேஷணசித்தன் — சத்தம் அநித்யம்; அது காணப்பட்டுச் சாமான்யத்தை யுடைத்தாகையினால், இந்த எதுவில் விசேஷணங் காணப்படுகை சித்தமாகையினு லென்க. (சிவ சித்.)

விசேஷபீக்ருக்கள் — ஈசா, சதாசுவா, சாந்தா.

விசேஷியம் — அடையை அடைந்தபொருள். அதாவது விசேஷணத்தை யடைந்த பொருள்.

விசேஷியாசித்தன் — சத்தமநித்தம், சாமான்யத்தையு முடைத்தாய்க் காணப்படுகையினுலே, இந்த எதுவில் விசேஷியங் காணப்படுகை சித்தமாகையினுன் என்க. (சிவ - சித்)

விசோகன் — பீமசேனன் சாரதி.

விசோபா — இவர் பண்டரிபுரத் திருந்த வேதியர்; கொடுக்கல் வாங்கல் வியாபாரஞ் செய்துவருகையில் க்ஷாமகாலம் வரத் தம்மிடமிருந்த பொருள்முழுதும் செலவு செய்து அன்னதானத்தின் பொருட்டு ஒரு பட்டாணியனிடம் (எ00) பொன் கடன் வாங்கினர். இவர் செலவுசெய்து கொடுக்க வழியிலர் என்பதைச் சிலர் கூறக்கேட்ட பட்டாணியன் கடன்தர வாதிடப் பெருமான் மாறுருக்கொண்டு பட்டாணியனிடம் போய்க் கடனைத்தீர்த்துப் பற்றுச்சீட்டைக் கொண்டுவந்து விசோபாவிடம் தந்தனர்.

விச்சலன் — கல்யாணபுரமாண்ட சமண அரசன். இவனுக்கு ஸ்ரீபலன் எனவும் பெயர். (சீபலன்) இவன் மாதேவியை மணக்க எண்ணி அவன் தன்னை வலியத் தொடாதிருக்கக் கேட்டபடி சூள் தந்து அவள் வீரசைவதீக்ஷை பெற்றுக் கொள்ளும்படி சொல்ல மறுத்தவன்.

விச்சிக்கோன் — ஒரு வள்ளல் கபிலரால் பாடல் பெற்றவன். இளவிச்சிக்கோவின் தமயன். பாரி மகளிரை மணஞ்செய்து கொள்ளும்படி வேண்டிக்கொண்ட கபிலரை மறுத்தவன். (புற நா.)

விச்சிரவா — விசிரவசு முநிவருக்கு ஒரு பெயர். இவர் குமாரன் வைச்சிரவணன்.

விச்சிரவாசு — புலத்தியன் குமாரன். இவனுக்கு விசிரவசு எனவும் பெயர்.

விச்சு — இக்ஷுவாகு குமாரன். இவன் குமாரன் விவசன்.

விச்சுவஉருவன் — துவட்டாவின் குமாரன். இவன் சரிதையைப் பற்றி (இந்திரனைக் காண்க.) பிரமபட்டத்திற்குக் காத்துக் கொண்டிருந்தவன். (விச்வரூபனைக் காண்க.)

விச்சுவசேநன் — விஷ்ணுபக்தன் அல்லது படன்.

விச்சுவநாதன் — வேதநாதன் தந்தை.

விச்சுவருபகற்பம் — பிரமன் சிவமூர்த்தியைத் தியானித்துச் சித்தியடைந்த கற்பம்.

விச்சுவலேகை — இவள் வாசவதத்தையின் தோழிமார்களிலொருத்தி. குறுகிய வடிவமுடையவள். பந்தாட்டத்திற் சிறந்தவள். (பெ. கதை)

விச்சுவன் — மேகவாகனன் புதல்வன்.

விச்சுவா — சூரியகிரணத்தொன்று.

விச்சுவாவசு — 1. சமதக்னி முநிவர் குமாரன்; தாய் இரேணுகை.

2. யவனதேசத்து வணிகன். இவன் புத்திரர் விச்சுவாமித்திரால் சாபமடைந்தனர்.

3. இவன் ஒரு காந்தருவன். இவன் தன்னுட்டில் இருந்து தென்னுடு நோக்கி ஆகாயவழியாகச் செல்லுகையில், கங்கை, காவிரி முதலிய புண்ணியநதிகள் விளையாடிக்கொண்டிருக்கக் கண்டு பொதுவில் நமஸ்கரித்துச் சென்றனன். கீழே விளையாடிக்கொண் டிருந்தவர் இதனை நோக்கி இந்த நமஸ்காரம் யாருக்குரியதென்ன, கங்கை முதலியோர் தமக்கென, ஒருவருக்கொருவர் வாதாடித் தென்திசையிலிருந்து மீண்டு திரும்பின அக்காந்தருவனை அந்தச் சங்கையை வினவினர். அவன் உங்களில்

உயர்ந்தாருக் கென்ன, கங்கை தான் உயர்ந்தா ளென்றனள். இதைக் கேட்ட காவிரி கங்கையினும் உயர்வு பெறவேண்டித் தவஞ்செய்து பிரமனைக் கேட்பப் பிரமதேவன் நீங்கள் இருவரும் ஒப்பெனக் கூறக்கேட்டுப் பொருது விஷ்ணுமூர்த்தியை யெண்ணித் தவமியற்றி அவர் பிரத்தியக்ஷமாகத் தன்னிடம் நீங்காது வசிக்க வரம்பெற்றனள். இதுவே திருவரங்கம்.

விச்சுவாவதி — விச்சுவாசு என்னுங் காந்தருவனுக்குத் தேவி. இவள் பார்வதிபிராட்டியாரை நோக்கித் தவம்புரிய அம்மை ஒரு பெண்குழந்தை வடிவமாய்த் தரிசனந் தந்து என்ன வரம் வேண்டுமென்றனள். இவள் 'அம்மணி! எனக்குத் தேவரீர் புத்திரியாம் வரம் அருளுக' என்றனள். பிராட்டி இவளை நோக்கி 'நீ மற்றொரு சன்மத்தில் மலையத்துவசன்தேவி காஞ்சனமாலையாய்ப் பிறப்பை; அக்காலத்து உன் மடிமீது இவ்வடிவுடன் இருப்பன்' என்று வரமளித்து மறைந்தனள்.

விச்போடகரோகம் — பித்த வஸ்துக்களால் அவதரித்த பித்தம், தனது உஷ்ணகுணத்தால் ரத்ததாதுவை மிகக் கொதிப்பிக்கும். அப்போது சுரம், எரிவு, உதடுலரல், சரீரநோவு, தேகமுழுதும் கொப்புளங்கள் உண்டாம். இதனால் சீதபித்தரோகம், ஆமபித்தம், ஆம்லபித்த ரோகங்களுண்டாம். மேற்கூறிய மூன்று ரோகங்களையும் முறையே பசுமூத்ர விரேசனம், சீந்தில் நெய், தேன் கலந்த சிற்றாமணக்கு நெய், மூலைப்பால் நெய், சந்தனாதி கிருதம் முதலியவற்றால் வசமாக்கலாம்.

விச்வகச்வன் — அருச்சுனன் திக்குவிசயஞ் செய்தகாலத்து ஊரினின்றும் துரத்தப்பட்டவன்.

விச்வகர்மன் — 1. இவன் தன் குமரிக்குப் பரிந்து சூரிய தேஜசைச் சாணையில் பிடித்துக் குறைக்கத் தொடங்குகையில் பிரமன் கட்டளையால் விடுத்தான். (பவிஷ்ய புராணம்.)

2. உமாதேவியின் திருமணந் தரிசிக்க வந்த அகஸ்தியரை இறைவன் சொற்படி இவன் பொதிகைக்கு ஏவ, அகத்தியர் இவனைக் குலக்கேடுறச் சபிக்க இவன் நீ கொண்ட தமிழ் விளங்காதொழிக எனச் சாபமிட்டனன். இச்சாபம் சிவபிரானாலும், விஷ்ணு மூர்த்தியாலும் நீங்கியது. (அரிசமயதீபம்.)

விச்வகன் — (சு.) அயின்பினி குமாரன்.

விச்வகன்மன் — தெய்வதச்சன் விசுவகர்மனைக் காண்க.

விச்வகன்மா — சூரியகிரணத் தொன்று.

விச்வகாசன் — இவன் இக்ஷுவாகு வம்சத்திற் பிறந்த அரசன். இவனது தலையைப் பிளந்துகொண்டு பலாசுவன் என்பவன் பிறந்தான். (பார - அநுசா.)

விச்வசாரம்
விச்வதநுமம்
விச்வபோதம்
விச்வேசம் } இவை சிற்பநூல்கள்.

விச்வசித் — உஷாகன்னிகையின் குமாரன்.

விச்வசேநமகாராஜா — 1. சாந்திதீர்த்தங்கரருக்குத் தந்தை. இவர் தேவி அயிரா. (சைநர்.)

2. பார்சுவ தீர்த்தங்காருக்குத் தந்தை. தேவி பிராம்மி. (சைநர்.)

விச்வதர்மன் — கலிங்கதேசாதிபதியாகிய சுதாமன் குமாரன். இவன் தூரத்திலிருந்த பசுவை மானென்றெய்து பவாநிகூடல் முதலிய தீர்த்தஸ்நானத்தால் புனிதனானவன்.

விச்வதேவர் — ஒருவகைத் தேவகூட்டத்தார். வைசுவதேவர்களில் பலிகொள்ளுந் தேவர்கள்.

விச்வதேவர்கள் — பதின்மர். வசுபந்துக்கள், கிரது தக்ஷர்கள் காலகாமுகர்கள், துரிவிரோசநர்கள், புரூர வாத்ரவர்கள். (அமரம்.)

விச்வநந்தி — கைலாசத்தில் கானஞ் செய்திருக்குஞ் சிவகணத்தவரில் ஒருவர். (சிவரக.)

விச்வநாபன் — 1. சிவகணத்தவரில் ஒருவன்.

2. பரதனுக்குக் குமாரன். பஞ்சசேனியின் தந்தை.

விச்வநாபாசாரியர் — சுரேச்வராசாரியருக்கு ஒரு பெயர்.

விச்வநேமிதானம் — இருபத்தெட்டுப் பலத்திற் குறையாத பொன்னினாற் பதினாறு கோணமுள்ள சக்கரஞ்செய்வித்து நடுவில் எட்டுத்தளமுள்ள தாமரை செய்வித்து அதன் இடையில் அஷ்டகன்னியருடன் கண்ணனை எழுந்தருளச்செய்து கிழக்கில் விஷ்ணுவையும், மற்ற திக்குகளில் அத்திரி, வசிட்டன், பிருகு, காசிபன் முதலியோரையும் பிரதிட்டித்து, இரண்டாமாவரணத்தில் நக்ஷத்திரங்களையும், மூன்றில் சத்தமாதர். அட்டவசுக்கள் முதலியவர்களையும்,

நான்கில் வேதங்களையும், ஐந்தில் பஞ்ச பூதங்களையும் பதினொரு ருத்திரர்களையும், ஆறில் அட்டகசங்கள் திக்குப்பாலகரையும், ஏழில் வாள், கதை, சூலம், சத்தி, வில், குடை, சங்கம், முத்து, சாமரம், சாந்தம், கோரோசனை முதலியவற்றையும், எட்டில் மீண்டும் இரண்டிற் கூறியவற்றையும் செய்வித்து, எருதின் தோலில் எள் பரப்பி விதிப்படி பூசித்து மறையவர்க்கு அன்ன முதலிய அளித்துத் தானஞ் செய்வித்தலாம்.

**விச்வபுக்** — பிரகஸ்பதியின் 4-வது புத்திரன். அக்னி விசேஷம். இவனுக்குக் கோபதி என்றும் பெயர்.

**விச்வபூர்த்தி** — மாகதர்களுக்கு அரசன். இவனுக்குப் புரஞ்சயன் எனவும் பெயர். இவன் பிராமணரை மிலேச்சராக்கிச் சாதி பேதமில்லாமல் அரசாளப் போகிறவன். இவன் பட்டணம் பத்மாவதி.

**விச்வரூபகல்பம்** — ஒரு கல்பத்து பிரமதேவன் சிவபெருமானை விச்வரூபியாகத் தியானஞ்செய்ய அவ்வாறு விச்வரூபமாகத் தோன்றிய கல்பம். (இலிங்க. புரா.)

**விச்வரூபன்** — இவன் தேவர்க்கு விரோதமாகத் தவஞ்செய்கையில் இந்திரன் அப்சரஸுகளை யனுப்ப அவர்களைக் கண்டு அழைக்க மறுத்ததால் அசுரன் கோபித்து, திரிசிரனை மந்திரத்தால் ஏற்படுத்தினன். அவன் ஒரு முகத்தால் சோமத்தையும், மற்றொரு முகத்தால் தேவர்களையும், ஒரு முகத்தால் அன்னத்தையும் பானஞ்செய்தான். அதனால் விசனமடைந்த தேவர்கள் பிரமனை வேண்ட அவர் ததிசியைக் காட்ட, ததிசி (1000) வருஷம் நான் இந்திரபத மடைகிறேனென்று தேகத்தை விட்டனர். இவரது எலும்பினால் பிரமன் வஜ்ராயுதஞ்செய்து இந்திரனுக்குக் கொடுக்க இந்திரன் விச்வரூபனைக் கொன்றான்.

**விச்வரூபாசாரியர்** — சங்கர பாஷ்யத்திற்கு விவரணஞ் செய்தவர். இவர்க்குச் சுரேச்வராசாரியர் எனவும், மண்டனமிச்ரர் எனவும் பெயர்.

**விச்வவான்** — பிரியவிரதன் பேரன். மேதாதியின் குமாரன். சாகத்தீவிற் குரியவன்.

**விச்வாசி** — ஒரு அப்சரசு. இவளை யயாதி மணந்தனன். (பா. சபா.)

**விச்வாநரன்** — சாண்டில்யவம்சத்து ருஷி. வைசுவாநரனுக்குத் தந்தை. நாரதர் இவனுக்கு உன குமாரன் (கஉ) வயதில் இடிவிழுந்திறப்பன் என்று கூறப்பெற்றவன். (காசிகண்டம்.)

**விச்வாமித்திரர்** — 1. புரூரவன் மூன்றாம் புத்திரனும் அமவசுவம்சத்தவனுமான காதிராசனுக்குப் புத்திரர். இவருக்கு நூற்றொருவர் குமாரர். (க) இவர் ஒருகாலத்து வேட்டைக்குச் சென்று வசிட்ட ஆச்சிரமம் சென்றனர். இவர் களைத்து வருதல் கண்ட வசிட்டர் காமதேனுவால் இவருக்கும் இவரது சேனைகளுக்கும் உணவு முதலியன செய்வித்தனர். இதனைக் கண்ட அரசன், காமதேனுவிடத்து ஆசைகொண்டு, அதைத் தனக்குக் கொடுக்கவேண்டினன். வசிட்டர் அதனைக் கொடுப்பதற்கு உடன்படவில்லை. ஆதலால் அரசன் வலுவில் கவரவெண்ணிக் காமதேனுவை யடுக்கக் காமதேனு தன்னைப் பிணித்தவனினின்று நீங்கி வசிட்டரிடம் வந்து அவர் தன்னை விச்வாமித்திரனுக்குக் கொடாமையறிந்து தன்னுடலினின்று பல சேநாசமூகங்களைப் பிறப்பித்து விச்வாமித்திரன் சேனைமுழுவதும் கொன்றது. இதனால் விச்வாமித்திரன் குமாரருள் சிலர் வசிட்டரை எதிர்த்தனர். அவர்களை வசிட்டர் கோபாக்னியால் எரித்தனர். இதனால் அரசனும் மற்றவரும் பாணப்பிரயோகஞ் செய்ய, அப்பாணங்களை வசிட்டர் யோகதண்டத்தால் தடுத்தனர். இதைக் கண்ட அரசன் தவத்தின் மிக்க தில்லையென்று தேர்ந்து தவமேற்கொண்டு கிழக்குத் திக்கில் சென்று தவஞ்செய்யத் தொடங்கினன். இதையறிந்த இந்திரன் தவத்தைக் கெடுக்கத் திலோத்தமையை ஏவினன். விச்வாமித்திரன் அவள் வசப்பட்டு இது இந்திரன் செய்வித்த வஞ்சமென்று அறிந்து அவளைப் பூலோகத்திற் பிறக்கவெனச் சபித்துத் தென்றிசை திரும்பித் தவஞ்செய்கையில், அயோத்தியரசனாகிய திரிசங்கு தான் தேகத்துடன் சுவர்க்கமடைய விரும்பி வசிட்டரைக் கேட்க, வசிட்டர் மறுத்தமைகண்டு அவரை வெறுத்து இவரைக் குருவாகக்கொண்டனன். இதனால் வசிட்டர் கோபித்துத் திரிசங்கினை நீசனாக எனச் சபித்தனர். சாபமேற்ற திரிசங்கு நடந்தவைகளை இவரிடம் கூற இவர் திரிசங்கைச் சுவர்க்கமனுப்பவெண்ணி யாகஞ் செய்யப் பலருஷிகளையும் வசிட்ட புத்திரர்களையும் அழைத்தனர். இதற்கு வசிட்ட புத்திரர் மறுத்தமையால் அவர்களைக் கிரா

தர்களாகச் சபித்துத் தவத்தால் திரிசங்கைச் சுவர்க்கம் அனுப்பினர். சுவர்க்கஞ்சென்ற திரிசங்கைத்தேவர் மீண்டும் பூமியில் தள்ளப் பூலோகம் வரும் திரிசங்கு விச்வாமித்திரரைச் சரணமடைய, விச்வாமித்திரர் கோபித்து வேறு சுவர்க்கம் சிருட்டிக்கத் தொடங்குகையில் தேவர் தோன்றி நக்ஷத்திரபதம் தந்து இவரை ராஜருஷியாக்கிச் சென்றனர். பின் மேற்குத்திசை சென்று தவமியற்ற அம்பரீஷன் நரமேதயாகஞ் செய்யத் தொடங்கி யாகப்பசுவாக இருசிகர் நடுக்குமாரனை விலைக்கு வாங்கிச்செல்ல, அப்பிள்ளை விச்வாமித்திரரிடம் தனது குறையைக் கூறினன். விச்வாமித்திரர் வசிட்டர் கோபத்தில் இறவாது நின்ற தம்புத்திரர் நால்வரை அரசனுடன் போகக் கட்டளையிட்டனர். அவர்கள் மறுத்ததால் வேடர்களாக எனச் சபித்து, அவ்விருசிக குமாரனுக்கு மந்திர உபதேசஞ்செய்து உயிர்ப் பயமில்லையென உறுதிகூறி யனுப்பிக் காத்து அத்திசை நீங்கி வடதிசைசென்று கோரதவஞ்செய்து திரிமூர்த்திகளால் உம்மினும் உயர்ந்தாரில்லை யென்று சொல்லத்தக்கவரானர். பின்னும் இக்கதையை வேறுவிதங் கூறுவர். இவருக்கு நூற்றொருகுமாரர். இவரது முதலைம்பது குமாரரும் மதுச்சந்தசு என்பர். பின்னும் சுநச்சேபனைப் புத்திரனாகக் கொண்டு அவனை அரிச்சந்திர யாகத்தினின்று தப்புவித்துத் தம் குமாரரை நோக்கி இவனை உங்களுக்குள் சிரேட்டனாகக்கொள்க என, மதுச்சந்தசுக்கன் ஐம்பதின்மரும் மறுத்தனர். ஆகையால் அவர்களை மிலேச்சராகச் சபித்தனர். மற்றக் குமாரராகிய ஐம்பதின்மரும் இருடியை அடைந்து தேவரீர் கட்டளைப்படி நடக்கிறோமென்று சுநச்சேபனை மூத்தவனாக அங்கீகரித்தனர். இவருக்கு அஷ்டகன், ஆரிதன், சயந்தன், சுமதன் முதலிய புத்திரரும் பிறந்தனர். (தேவி-பா.)

2. அரிச்சந்திரனைப் புருஷமேதம்செய்ய வேண்டாமென்று தடுக்கவும் அவன் செய்ததினால், வருணனை மந்திரத்தால் திருப்தி செய்வித்துக் காலம் பார்த்திருந்து அரசன் வேட்டைக்குச் சென்றிருக்கையில் அரசு முதலியவற்றைத் தானமாகப்பெற்று வருத்தி அதனால் வசிட்டரால் கொக்காகச் சாபமடைந்தவர். இவர் அவரை ஆடிப்பக்ஷியாகச் சபித்து இருவரும் நெடுங்காலம் போரிட்டுப் பிரமனால் சமாதானமடைந்து பழையவுரு அடைந்தனர். (தேவி-பாகவதம்.)

3. ஒருமுறை தனது தவத்திற்கு இடையூறு செய்விக்க இந்திரனால் அனுப்பப்பட்ட மேனகையைக்கூடிச் சகுந்தலையைப் பெற்றவர். அச்சகுந்தலை கண்ணுவரிடம் வளர்ந்து துஷ்யந்தனை மணந்து பரதனைப் பெற்றாள்.

4. அரிச்சந்திரனைப் பொய் பேசுவிக்கிறேன் என்று தேவர் சபையில் சபதஞ்செய்து அவனைப் பல தொந்தரையியற்றித் தோற்றுத் தவமிழந்தவர்.

5. இராமமூர்த்தியை இலக்குமணருடன் மிதிலைக்கழைத்துச் சென்று தாடகை முதலியவரை வதைசெய்வித்துச் சீதையையும் சநகன் மற்றக் குமரியரையும் இருவருக்கும் மணம் புணர்த்தியவர்.

6. இவர் கடுங்கோபியாதலால் பலமுறை தவத்திற் கிடையூறுகள் நேர்ந்தன. இவருக்குக் கௌசிகர் எனவும் பெயர்.

7. மகேந்திரன், மாலி, சாநந்தன், விசாலநேத்திரன் முதலிய நால்வரும் கௌசிகன் பெண்களை மணந்து செல்லுகையில் கௌசிகன் பின்னிருந் தழைத்தனன். சேனையின் அரவத்தால் அக்கூவிளி கேளாது சென்றது கண்ட கௌசிகன் கோபங்கொண்டு அச்சேனைகள் சாம்பராகச் சபித்தனன். மேற்சொன்ன நான்கு அரசரும் முற்பிறப்பில் விச்சுவாசி என்னும் யவன தேசத்து வணிகன் புத்திரர். தருமத்திற்கு வந்தவரைத் தருகிறேன் என்றுகூறி மறுத்ததால் இச்சாபம் அடைந்தனர்.

8. சந்தனு அரசாளுகையில் மழை வறந்ததால் யாகத்தில் அக்கினிக்கு நாயின் ஊனை அவிகொடுத்தனர். இதனால் அக்னி கோபித்து மூங்கில் அரசு முதலியவைகளில் ஒளித்தனன்.

9. அரிச்சந்திரனை வீண் தொந்தரை செய்ததால் வசிட்டர் இவரைக் கொக்காகச் சபிக்க இவர் அவரை ஆமையாகச் சபித்தனர்.

10. வசிட்டகுமாரனைக் கொலைசெய்வித்த பாதகத்தால் பிரமகத்தியால் பிடிபட்டுத் தீர்த்தயாத்திரை செய்து நீங்கினவர்.

11. பல அரம்பையரைக் கல்லாகச் சபித்தவர்.

12. (ரு00) வருஷம தவஞ்செயது பாரணைசெய்யுஞ் சமயத்தில் இந்திரன் மறைய

வனாய் வந்து அச்சோற்றை யாசிக்க அதை யும் அளித்துத் தவமேற்கொண்டவர்.

13. தவத்தினால் உச்சிதிறந்து அதின் வழித்தோன்றிய கனல் உலகத்தை மறைக் கப் பிரமன்றோன்றிப் பிரம இருடியெனப் பெற்றவர்.

14. ஒருமுறை சயத்துவசனுக்கு வேள்வி செய்வித்தவர்.

15. இருக்வேதத்தின மூன்றாவதுகாண்டத்தி லடங்கியிருக்கிற கீதங்களுக்கெல்லாம் கர்த்தா.

16. பசியால் வருந்திச் சண்டாளன் கையிலிருந்த நாயின் முழங்கால் மாமிசத்தை வாங்கிச் சாப்பிட யத்தனித்தவர். (மறு.)

17. ஒரு காலத்திலே மேனகை இவரைப் புணரும்படி வருந்தவும் உடன்படாததினால் கிழவுருக்கொள்ளச் சாபங்கொடுத்தனள். அதனைப் பெற்று புண்யதீர்த்த சேவையால் நீங்கினவர். (பாகவதம்.)

18. சிவபூசையால்பிராமணத்வ மடைந்தவர். (பார - அநுசா.)

விச்வாமித்ரன் — எல்லார்க்கும் மித்திரனாயிருப்பதால் இப்பெயர் வந்தது.

விஞ்சையம்பெருமலை—வெள்ளிமலை. இது வித்தியாதரர்க ளிருத்தற்குரிய இடம்; இதிலுள்ள வெள்ளி மிகச்சிறந்தது. (பெ. கதை)

விஞ்சையர்உலகு — காந்தருவர் உலகத்தின் மேல் இருக்கும் உலகம். இதனைப் பிறர்க்கு உதவிபுரிந்தவரும் வித்யாதானஞ் செய்தவரும் அடைவர்.

விஞ்ஞானகலர் — 1. ஒரே மலமுள்ள ஆன்மாக்கள்.

2. இவர்கள், ஆன்மவர்க்கத்துள் மாயா கன்மங்கள் நீங்கப்பெற்றவர்கள். இவர்கள் ஆணவமலமொன்றே யுடையவர்கள். இவர்கள் முறையே மயேசுர புவனதத்வ வாசிகளும், சாதாக்யதத்வ புவனவாசிகளும், சுத்தவித்யாதத்வ புவனவாசிகளுமாயிருப்பர். இவர்களுக்குத் தனுகரண புவனபோகங்கள் சுத்தமாயையாம். இவர்களது அறிவிலே கலந்து நின்று இறைவன் அருளை யுதிப்பித்து மலத்தைப்போக்கித் திருவடியிற் கூட்டுவன். (சித்தா.)

விடகன் — சுமாலி குமாரன். (அசு.)

விடசக்கமர்—யாதவமகாராசாவைக் காண்க.

விடசேநன் — விடங்கதேசாதிபதி. கர்ணன் குமாரன். அருச்சுநனால் இறந்தவன். பாரத முதற்போரில் உதார்மனுடன் யுத்தஞ் செய்தவன்.

விடதான் — கர்ணனால் கொல்லப்பட்ட ஓர் பாரதவீரன்.

விடநன் — சிவகணத்தவரில் ஒருவன்.

விடபன்மன் — 1. அசுரகுலத்தலைவன். சன்மிஷ்டைக்குத் தந்தை. இந்திரனுடன் யுத்தம் புரிந்தவன். சுக்கிரன் உதவியால் இறந்த சேனைகளை உயிர்ப்பிக்கப் பெற்றவன்.

2. (தா) விருஷபதபாவைக் காண்க.

விடபன்வா — சன்மிஷ்டைக்குத் தந்தை.

விடர்ச்சிலைபொறித்தவேந்தன்—ஒருசோன். இவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எனவும் கூறப்படுவன். இவன் கோவலனுக்கு ஒன்பது தலைமுறை முன்னவனாகிய கோவலனுக்கு நண்பன். (மணி.)

விடலதேவாாயன் — சிங்கர் கோவிலரசன். இவன் மகளைப்பிடித்திருந்த பிசாசை உடையவர் ஓட்ட அதனால் ஸ்ரீவைஷ்ணவனாய் விஷ்ணுவர்த்தன நாராயணன் என உடையவரால் பெயர் பெற்றவன்.

விடன் — சகுனிக்குக் குமாரன்.

விடாத இலக்கணை — வாச்சியார்த்தத்திற்கு அன்வயமுள்ள இடம். கவிதையாளர் சொல்லுகிறார் என்னுமிடத்து சக்தியர்த்தமாகிய குடையை யுடையவர்களையும் விடாது அவர்களுடன் குடையின்றிச் செல்வோரையும் உணர்த்துதலால் இப் பெயர் பெற்றது என்க.

விடாதான் — ஒரு அரசன். சத்த இருடிகள் பிணத்தைப் பிடுங்கித் தின்னக்கண்டு அஞ்சினவனாய் அவர்களை உபசரித்து அழைத்துத் தானங் கொடுக்க மறுத்ததனால் அவர்களைக் கொல்ல மாரணஓமஞ் செய்வித்து ஒரு பூதத்தை உண்டாக்கி ஏவினன். அப் பூதம் இருடிகளிடம் வந்து மருட்டிக்கொண்டிருக்கையில், சுநகர் வரக்கண்டு அவர் பெயரை வினவி மருட்டியது. சுநகர் தண்டத்தை அதின்மீது ஏவப் பூதம் மாய்ந்தது

விடாதன் — சிவகணத்தலைவரில் ஒருவன்.

விடுகாதழகியபெருமாள் — ஒரு கோளஅரசன்.

விடுபடை விடாப்படைகள் — அமபு - இரண்டுமுழமுள்ளதா யிருத்தல் வேண்டும். தற்காலமுள்ள அம்புகள் முனையில் இரும்பினாலாகிய கூரிய முனையுள்ளனவாய் விரைந்து செல்லும் பக்ஷியின் சிறகினைக் கடையாகக் கொண்டனவாம். கதை - பருத்த

அடிப்பாகத்தையும், எட்டுக்கோணங்களையும் தாங்குவோன் மார்பினளவு உயரமுடையதாம். பட்டீசம்-தாங்குவோன் உயரமளவு நீளத்தையும், ஒருமுழ அளவுள்ள அடிப்பாகத்தையும், இரண்டு பக்கத்துங் கூரிய முகங்களையுமுடையது. வாள் - சற்று வளைவும், ஒரே நுதியினையுடையதும், நான்கு அங்குல அகலமுடையதும் மிகக் கூர்மைபெற்றதும், தாங்குவோன் உந்தி அளவு உயர்ந்ததும் வலிய பிடியினையுடையதும், பளபளப்பையுடையதுமாம். பிராசம் - நான்குமுழ உயரமுள்ள தண்டமாகிய அடிப்பாகத்தையும் கூர்மையான முனையினையுமுடையது. ஈட்டி-(குந்தம்) கொழுவைப்போன்ற நுனியினையும், முளைபோன்ற அடிப்பாகத்தையும், (௧0)முழ உயரத்தையுமுடையது. சக்கரம் - ஆறுமுழச் சுற்றளவையும், கூர்மைமிக்க நுனியையும், நடுவில் துளையினையுமுடையது. பாசம்- (௩) முழ நீளமுள்ள தண்டத்தினையும், மூன்று சிகைகளையும், இருப்புக் கயிறுகளையுமுடையது. கவசம் - கோதுமையளவு கனமுள்ள தகட்டால் ஆக்கப்பட்டுத் தலைப்பாகோடு கூடி உடம்பின் மேற்பாகத்தை மறைப்பது. காசம் - இரும்பினால் கூரிய முனையினையுள்ளதாய் வன்மையுள்ளதாய்ச் செய்யப்பட்டது. இப்படைகளை மந்திரங்களுடன் செலுத்திப் போரிடின் தெய்விகம்; நாளிக முதலிய செலுத்திப் போரிடின் ஆசுரம்; வாள் முதலிய ஆயுதங்களால் போரிடின் மானவம் எனப்படும். (சுக்-நீதி.)

விடூரதன் — விருஷ்ணி குமாரன்.

விடுவசேநர் — விச்வசேநரைக் காண்க.

விடேசி — கற்கடியைக் காண்க.

விரோதன் — 1. தந்தவக்கிரன் தம்பி; கிருஷ்ணனால் கொல்லப்பட்டவன்.

2. பசமானன் குமாரன். இவன் குமாரன் சூரன்.

3. சந்திரகுலத்தரசன். வேட்டைமேற்சென்று புணர்ச்சியில் இருக்கும் மான்மேல் அம்பேவி அதனால் குட்டம் பிடிக்கச் சாபமேற்றுச் சதாநந்தருஷியால் போக்கிக் கொண்டவன்.

4. முதாவதிக்குத் தந்தை. குமாரர், சுநதி, சுமதி.

5. பதுமன் என்பவனது வேறுபிறவி. மனோரதன் குமாரன். இவனைச் சிந்துராசன் செயித்தான்.

6. மானினியின் தநயை.

7. கேகயதேசாதிபதி. ஒருமுறை வேட்டைக்குச் சென்று மானினைப் பின்தொடர்ந்து மான் மறையத் தான் எறி இருந்த குதிரையைவிட்டு நீங்கித் தனித்துத் தாகமிஞ்ச வருந்துகையில் மூன்று பேய்கள் அருகு அணைந்துயான் ஊருகு அலகை; அதுநன்றிகொன்றதோர் அலகை; அது தெய்வம் இலையென்ற அலகை எனத் தமது வரலாறு கூறித் தம் உருநீங்க அரசனை வேண்டிக் கொள்ள, அரசன் இது எவ்வாறு நீங்கும் எனப் பேய்கள் 'நீ எம்பொருட்டுக் கயா ஸ்நானஞ்செய்து சிரார்த்தஞ்செய்யின் நீங்கும் என்று அரசனுக்கு விடாய்தணித்து வேண்ட' அரசன் அவ்வாறே காசியில் கயா தீர்த்த ஸ்நானஞ்செய்து நாடுவந்து தங்குகையில் பேய்கள் இரண்டும் தேவ உருப்பெற்று அரசனிடங்கூறி விமானம் எறிச் சென்றன. செய்ந்நன்றி கொன்றபேய் இன்னும் என் உருநீங்கிற்று இல்லை என அரசன் என்செய்வது எனத் திருவாரூரில் கயாதீர்த்த ஸ்நானஞ்செய்து சிரார்த்தம் முடிப்பின் நீங்கும் என அரசன் அவ்வாறு புரிந்து இல்லம் அணைந்து உறங்க அதுவும் நல்ல உருப்பெற்று விமானம் ஏறிச் சென்றது. (திருவாரூர்ப்புராணம்).

விடை — (அ) சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை, ஏவல்விடை, வினாவிடை, உற்றதுரைத்தல்விடை, உறுவதுகூறல் விடை, இனவிடை என்பன.

விட்கம்பன் — சித்திரகுத்தனைக் காண்க.

விட்சூத்து — (௫) காந்தமன் குமாரன்.

விட்டஇலக்கணை — வாச்சியார்த்தத்திற்கு அன்வயமிலாதது. கங்கைக்கண் இடைச்சேரி என்பதில் இது கங்கையைவிட்டுக் கரையையுணர்த்தலின் விட்ட இலக்கணையாயிற்று.

விட்டகுதிரையார்— இவர் கடைச்சங்க காலத்தவர். இவர் குறுந்தொகை (௭௪) வது செய்யுளில், "விட்ட குதிரை வியப்பினன்ன" என எடுத்துக் கூறினமையின் அம்முதற் குறிப்புப் பெயரே பெயராகக் கொண்டனர்.

விட்டலதேவராயன் — கொங்கு தேசத்தரசரில் ஒருவன். இவனிடம் இராமாநுஜர் குலோத்துங்கனுக்குப் பயந்து சென்றிருந்தனர்.

விட்டலன் — 1. ஒரு அரசன். இவனைப் புகழேந்திப்புலவர் "தொட்டிலிருக்கத் தொடங்கிய நாள்முதலாய், அட்டதிக்கும் நின்

குடைக்கிழாயிற்றே - விட்டலையா, தன் குமரியின்றித் தனிக்குமரி கொன்னாயால், தென்குமரிக்கேகுவதென் செப்பு." எனுங் கவி பெற்றவன்.

2. விஷ்ணுவிற்கு ஒருபெயர்.

**விட்டிகரணம்** — அஷ்டமியிலும், பௌர்ணமியிலும், முற்கூறு, சதுர்த்தியிலும் ஏகாதசியிலும் கடைக்கூறு, இவை பூர்வபக்ஷத்து விதி; அபரபக்ஷத்திற்கு, சப்தமியிலும், சதுர்த்தசியிலும் முற்கூறு, திரிதியையிலும், தசமியிலும் கடைக்கூறு விட்டியாம். ஆக ஒரு சாந்திரமானத்திற்கு எட்டுவிட்டியாம். (விதானமாலை)

**விட்டியபவாதம்** — எட்டு விட்டிகளுக்கு மடைவே, முதற்சாமம், இரண்டாம்சாமம், மூன்றாஞ்சாமம், நாலாஞ்சாமம், இரண்டாஞ்சாமம், மூன்றாஞ்சாமம், நான்காஞ்சாமம், முதற்சாமம் ஊனாகும். இவற்றை ஒழிந்தசாமங்களில் விட்டிதோஷம் இல்லை. ஒரு சாமம் மூன்றே முக்கால் நாழிகையாகக் கொள்க. அன்றி, முதல் கூற்றிலே வரும் விட்டி இரவுவரினும், பிற்கூற்றிலே வரும் விட்டி பகல்வரினும் குற்றமில்லை. சுபகன்மங்கள் செய்யலாம். (விதானமாலை).

**விட்டும்விடாத இலக்கணை** — வாச்சியார்த்தத்தின் ஒரு பகுதியை விட்டு ஏகதேசத்திற்கு அன்வயமுள்ள இடம். அது இருளைப்பருகிப் பகலைக்காலும் பகுதி என்பதில் இருளைப் பருகுதலும் பகலைக் காலுதலும் பரிதிக்கின்று இருளைப்போக்குதலும் பகலைத் தருதலும் பரிதிக்குண்டாதலின் இது விட்டும்விடாத இலக்கணை.

**விட்ணுசாமி** — ஒருவேதியன்; இவன் தேவி சாறுமதி; காளகண்டனைக் காண்க.

**விண்டு** — 1. துவாதசாதித்தரில் ஒருவன்.

2. திருமால்.

**விண்டுசித்தர்** — ஒரு மகருஷி; இவர் வனத்தில், பாண்டவருடைய பன்னிரண்டாமாண்டில் நச்சுப்பொய்கைநீர் அருந்தி மூர்ச்சை பெற்றிருந்தனர்.

**விண்டுசேநன்** — இந்திரசேநனைக் காண்க.

**விண்டுபுரம்** — காஞ்சிபுரத்திற்கு ஒருபெயர். ஐராவதம் தவஞ்செய்து விஷ்ணுமூர்த்தியை மலையுருவங்கொண்டு தாங்கியம் பிரமன் வேதவதிதீரத்திற் தவஞ்செய்ததும் ஆகிய தலமாதலின் இப்பெயர் வந்தது.

**விண்டுமித்திரன்** — அவந்தியில் கௌசிகன் என்பவனுக்குப் பிறந்து தாய்தந்தையரைக் கொன்று தன்னை அசுரர் கடலிலிட மீனால் விழுங்கப்பட்டு மீண்டும் வலைஞர் வலையில் அகப்பட்டமீனின் வயிற்றினின்று எடுத்த விசவகுத்தனால் வளர்க்கப்பட்டுத் தன்னிலையுணர்ந்து காவிரியின் நீராடித் தாய்தந்தையரை வரவழைத்தவன். (காவிரித்தல புராணம்).

**விண்டோதன்** — மகாரதன் குமாரன். இவன் குமாரன் மனோரதன்.

**விண்டோதன்** — பரிச்சித்திற்கு ஒருபெயர்.

**விண்டுவன்மன்** — ஒரு வேதியன்; கண்ணும் வாயும் இல்லாதவன். சிவனையெண்ணித் தவம் இயற்றிக் கண்ணும் வாயும் வேதங்களும் பெற்றவன்.

**விண்ணன்** — இவன் ஒரு பிரபு; இவன் அரவின்மணி கொடுத்தபோது ஒருபுலவன் பாடியது. "கூர்ந்த வறுமையிடைக் கோளரவ மீன்றமணி, சார்ந்த புலவன் தனக்களித்தான் — வார்ந்ததரு,மேலைவிண்ணின் மண்ணில் விளங்கும் புகழ்படைத்த, சாலை விண்ணனுக் கிளையார் தாம். (தமி-நா-சரி.)

**விண்ணுத்தாயன்** — பிரச்சோதனனு லழைக்கப்பட்ட யூகி,உஞ்சைநகர் சென்றபொழுது அவனுக்குப் பாதுகாப்பாக உதயணனால் அனுப்பப்பட்டு அவனுடன் சென்ற வீரன், (பெ. கதை.)

**விண்வீழ்கொள்ளி** — ஆகாயத்தி லிருந்து பூமியை நோக்கிவரும் ஒருவித ஒளி. இதனை உற்கை என்பர்.

**விதண்டன்** — மகதநாட்டரசன்.

**விதண்டை** — தன் பக்ஷத்தைத் தாபித்தலின்றிப் பரபக்ஷதூஷணத்தை முடிவாகப் பெற்றது. (தரு.)

**விதர்க்கணன்** — பாஞ்சால தேசத்தில் விதையம் என்னும் பட்டணத்தில் இருந்த செட்டியின் கூலி சுமந்து பழமலை அடைந்து மணிமுத்தாநதியில் ஸ்நானம்செய்து சிவகணத்தவனானவன். விபசித்திற்கு மணிமுத்தாநதியின் பெருமை கூறினவன்.

**விதர்ணன்** — இவன் வியாக்கிரமுகன் சுவாலாமுகன் இவர்களுடன் கூடிக் காசிப் பட்டணஞ் சென்றிருந்த மகோற்கடனை வஞ்சிக்க ஒருவன் காற்றாகவும் ஒருவன் நெருப்பாகவும் மற்றொருவன் அங்காந்த பெருவாயனாகவும், சென்று காசியிலுள்ளாரை வருத்தி மகோற்கடரால் தம்முடன் வந்தவருடன் இறந்த அசுரன்.

**விதலம்** — பாதாளலோகத்தொன்று.

**விதர்பம்** — 1. Berar, the kingdom of Bhishnaka, whose daughter Rukmini

was married to Krishna. Its principal towns were Kundinanagara, Bhojakatapura, Akola, Amorote, Ellichpur, etc.

2. விதற்பனால் ஆளப்பட்ட தேசம்; அத்தினபுரத்திற்குத் தெற்கில் உள்ளது.

3. விந்தியமலைக்குத் தெற்கிலுள்ளதும் தசார்ண தேசத்திற்கு மேற்கிலுள்ளதும், கோதாவரிக்கு வடக்கிலுள்ளதும் சௌராஷ்டிர தேசத்திற்குக் கிழக்கிலுள்ளது தேசம்.

விதற்பன் — 1. இருஷபனுக்குச் சயந்தியிடம் உதித்த குமாரன்.

2. சாமகன் குமாரன். தாய் சப்யை, பாரி சுதுஷை, குமாரர் குசன், குருதன், உரோமபதன்.

விதஸ்தா — ஒருநதி. The river Jhelum.

விதாணதிபன் — அரசனுக்குக் குடில், குப்பாயம், கூத்தாங்கம், அமளி, வண்ணமிடுதல், ஆடை முதலிய செம்மைப் படுத்தல் முதலிய தொழில் செய்தலில் வல்லவன். (சுக்-நீ.)

விதாதா — 1. நந்தி யெலும்பிற் பிறந்தவன்.

2. பிருகு குமாரன்; தாய் கியாதி; தேவி, நியதி.

3. காசிபருக்கு அதிதியிடம் உதித்த குமாரன்; துவாதசாதித்தரில் ஒருவன்.

4. தாதா என்பவனுக்குத் தம்பி.

5. அங்கார்ட்டர்சன். சிவாலயத்து இருந்த வாழையைத் தனக்கு உபயோகித்து நரகம் அடைந்தவன்.

விதாதை — பாதாளவாசியாகிய ஒரு தெய்வப்பெண். பகலையுண்டாக்குபவள். பிரமன் புத்திரி என்பர்.

விதிஅவ்வயன் — (கூ.) அநகன் குமாரன்.

விதிசை — 1. மாளவதேசத்து நதி.

2. சூத்திரகன் ஆண்ட நகரம்.

விதிந்திரன்—க்ஷேத்ரஞ்ஞன் குமாரன். இவன் குமாரன் அசாதசத்ருவன்.

விதியணி — பிரசித்தமாகிய பொருளின் விதியானது ஓரபிப்பிராயத்தோடு கூடிவருதலாம். இதனை விதியலங்காரம் என்பர். (குவல.)

விதிர்த்தி — வைதிருதிகளைப் பெற்றவள்.

விதிஹோத்ரன் — 1. பிரியவிரதனுக்குப் பெரிஹஷ்மதியிடம் உதித்த குமாரன்.

2. (ரு.) இந்திரசேநன் புத்திரன்.

3. (சர்.) சுகுமாரன் குமாரன். இவன் குமாரன் பர்கன்.

4. தால்சங்கன் குமாரன்.

விதூதன் — ஒரு அரசன்; சூலவிரதமிழைத்துக் காயசித்தியடைந்தவன்.

விதுரன் — 1. யமனம்சம். திரிகுணனம்சம் என்றுங் கூறுவர். தந்தை வியாசர்; தாய் அம்பாலிகையின் தோழி. மாண்டவ்யரைப் பதின்மூன்றுவயதிற் கழுவில்துன்பமடையச் செய்தமையால், அவர் 'நீ மனிதனாகப் பிறக்க' எனச் சபித்தபடி விதுரனாகப் பிறந்த யமன். விவேகத்தைப்பற்றி இப்பெயர் அடைந்தவன். துரியோதனனிடத்தில் பாண்டவர்க்கு நாடு கொடுக்கப் புத்திகூறியவன். கண்ணனுக்கு விருந்திட்டவன். துரியோதனன் ஏசலால் பாரதயுத்தத்தை நீங்கித் தீர்த்தயாத்திரைசெய்து பாரதமுடிந்து பாண்டவர் அரசில் நாடுவந்தவன். துறவடைந்து காட்டில் தவம்புரிந்து வருகையில் இவரைக் காணவந்த தருமர்சேனை முதலியவற்றைக்கண்டு பயந்தவர்போல் வழிகாட்டித் தருமர் தனித்துநிற்க ஒருமரத்தடியில் தங்கிப் பிரமதேசசால் விழித்துத் தருமரைப் பார்த்து ஆவியகன்றவர்.

2. வஞ்சுளை கணவன்; சிவகதைசொல்லக்கேட்டு முத்தியடைந்தவன்.

விதுர்தன் — (சூ.) தேவபீடன் குமாரன்.

விதுர்தி — (சூ) சங்கணன் குமாரன்.

விதுலன் — பதங்கனைக் காண்க.

விதுலை — 1. சௌவீரராஜன் மனைவி. இவள் தன் மகனைப் போருக்குத் தூண்டினவள்.

2. சௌவீர ராஜஸ்திரி.

விதுஷன் — இந்திரன் மூன்றாங் குமாரன். தேவி ஐராணி.

விதூடகன் — 1. விகடகவி.

2. திவிட்டன் விகடகவி.

விதூமன்—1. ஒரு காந்தருவன்; இவன் சுகுமாரி யென்னும் பார்ப்பினி சாபத்தால் குரங்காய்ச் சிவராத்திரியில் வில்வமரத்திலேறி வில்வத்தையுதிர்க்க அவ்வில்வம் அம்மரத்தடியில் இருந்த சிவலிங்கத்தின் மீது விழுந்த புண்ணியத்தால் முசுகுந்தச் சக்கிரவர்த்தியாகப் பிறந்தவன்.

2. பிரமபதத்திருந்த அரசன்; ஒருகால் அலம்புசையென்பவள் பிரமன் சபைக்குச் செல்லுகையில் காற்றால் அவள் உடைவிலகியது. அதை மற்றவர் காணுதிருக்கவும் இந்த விதூமன் அவளிடம் விருப்புறாய்ப் பார்த்தனன். இதனால் இவன் மனி

தனுகவும், அலம்புசை யிவன் தேவியாக வும் சபிக்கப்பட்டனர். இவன் பூமியில் சநமேசயன் குமாரனாகிய சதானீக னுக்கும் அவன்தேவி விண்டுமதிக்கும் குமாரனாய்ச் சகத்திராநீகன் எனப் பிறந்த னன். அலம்புசை கிருதவன்மாவின் குமாரியாகப் பிறந்து மிருகாவதி யென்னும் பெயர் பெற்றனள். இவளை விதூமன் மணந்தனன். இவன் இந்திரன் வேண்டு கோளால் தெய்வ உலகஞ்சென்று அகித மஷ்டிரன், தூலசிரன் என்னும் அசுரரை வென்று மீளுகையில் திலோத்தமை இவனை மோகித்தனள். இவன் உடன்படாததினால் தன் மனைவியைப் பதினுன்குவருஷம் நீங்கச் சாபம் அடைந்தனன். இவன் ஒருநாள் தன் மனைவியுடன் நீர் விளையாடுகையில் கழுகொன்று மிருகாவதியை மாமிசபிண்டமென்று நினைத்துத் தூக்கிச்சென்று சமதக்னிமுனிவர் ஆச்சிரமத்தில் இட்டது. அவ்விடம் இவள் உதயனன் என்னுங் குமாரனைப் பெற்றனள். அவ்வுதயன் வயதடைந்து ஒருநாள் வேட்டைக்குச் சென்றனன். அவ்விடம் பாம்பாட்டி யொருவன் ஒரு பாம்பைப் பிடிக்கக்கண்டு அவனுக்குத் தன் வாகுவலயத்தைக் கொடுத்து அந்த நாகத்தை விடுவித்தனன். அப்பாம்பு கிருதராட்டிரன் என்னும் நாகராசனாய் உதயனனை அழைத்துச் சென்று இளிதை யென்னும் தன் குமாரியை மணம்புணர்வித்து அனுப்பியது. உதயனன் தன் மனைவியுடனும் குழந்தையுடனும் தாயை வந்தணுகினன். முன் வாகுவலயம் பெற்ற வேடன் அதனை விற்க வணிகனொருவனிடம் கொண்டு சென்றனன். அதில் இராசமுத்திரை இருந்தது. அதனை வணிகன் அரசனுக்குக் காட்டினன். அரசன் வேடனுடன்சென்று தன் மனைவி மக்களைக்கண்டு சமதக்னிமுனிவர் கட்டளையால் அவர்களை அழைத்துக் கொண்டு தன்னுடுசென்று களிப்புடனிருந்து தெய்வவுலகடைந்தனன்.

விதூரதன் — சுரதன் குமாரன்.

விதேகம் — 1. விதேகனால் ஆளப்பட்ட நாடு. அதாவது மிதிலை.

2. மிதிலை. Tirhoot. The kingdom of Raja Janaka. Videha was bounded by the river LauBaki on the East, Gandak on the West, the Himalayas on the North and the Ganges on the South.

விதேகன்—1. நிமி புத்திரன்; மிதிலாதிபதியரசன். இவனுண்ட நாட்டிற்கு விதேகம் எனப்பெயர். இவனது காலாந்தத்தில் யமபடர் நாகதரிசனம் செய்வித்தனர். அரசன் அவர்களைநோக்கி 'நான் தீமையொன்றுஞ் செய்யாது நன்மைபுரிய நீங்கள் என்னை இவ்வகை செய்தது என்ன' என்றனன். காலபடர் அரசனைநோக்கி 'நீ உன் மனையாட்டி பீவரியின் ருதுகாலத்தில் அவளைச் சேராது கேகயன் மகளிடத்து விருப்புடனிருந்தமையால் இது நேரிட்ட' தென்றனர். நிமியின் தேகத்தை அரணிக்கட்டையால்கடைந்ததால இவனுக்கு மிதிலன் என ஒருபெயர். உயிர் நீங்கிய தேகத்திலிருந்து பிறந்ததால் விதேகன் எனப்பெயர். ஜநகநிமித்தமாய் பிறந்தவனுதலால் ஜநகன் எனவும் பெயர்.

2. (கு)சநகன்.

3. ஒரு அசுரன்; சயத்துவசனுற் கொல்லப்பட்டவன்.

விதைகள் — இவை சிறு பூண்டு முதல் பெரிய விருக்ஷமளவாகச் சிறிதும் பெரிதுமாக வேறுபடுகின்றன. இவற்றில் பூண்டு முதலியவற்றின் விதை சிறியவை; செடிகளின் விதை அவற்றினும் பெரியவை; விருக்ஷங்களின் விதை அவற்றினும் பெரியவை; இவ்வாறு உலகத்திலுள்ள பூண்டு விருக்ஷாதிகளின் விதைகள் எண்ணத்தொலையா ஆயினும் இவற்றைக் கடவுள் பயனிலாது படையார் என்பது உண்மை. சில மனிதர்க்கும் மற்றுஞ் சில மிருகாதிகளுக்கும் பயன்படுகின்றன. சில விஷப்பூண்டுகளின் விதையாகக் கொல்லுங்குணங்களும் பெற்று உள்ளன. இவ்வகையில் நெல், கம்பு, சோளம், கேழ்வாகு, மொச்சை, காராமணி, கடலை, துவரை, உளுந்து, சீரகம், வெந்தயம், ஓமம் முதலியன உணவாதிகளாகின்றன. எள், இருப்பை, முத்துக்கொட்டை, வேர்க்கடலை, கடுகு, முதலியன எண்ணெய்தருவன; மிளகாய், மிளகு முதலியன கார்ப்புச்சுவை தருவன; ஏலரிசி, இலவங்கம் முதலிய மணந்தருவன. முந்திரிக்கொட்டை, வாதுமைக் கொட்டை முதலியன வன்மைதருவன. எட்டிக்கொட்டை முதலியன விஷந் தருவன. இவ்வினங்களில் பல வேறுபாடுகளுண்டு. அவற்றை எழுதப்புகின் முடியா.

**விதையம்** — (விதேகதேசம்) இது விமானத்திற் சென்ற வாசவதத்தையாற் பார்க்கப்பட்ட தேயங்களுள் ஒன்று. (பெ. கதை.)

**வித்தன்** — 1. பாத்துவாசனுக்கு ஒருபெயர். 2. வியாழனுக்கு உதத்தியன் தேவியிடம் பிறந்து தாய்தந்தையர்விட்டு நீங்க மருத்துக்கள் வளர்க்க வளர்ந்து சந்ததியில்லாத பாதனுக்குக் கொடுக்கப்பட்டவன். அப்பாதன் இவனைப் பாத்துவாசன் எனப் பெயரிட்டு வளர்த்தனன்.

**வித்தாரம்** — ஒரு சிற்பநூல்.

**வித்தாரை** — சிவசூர்யனுக்குக் கிழக்கில் அமருஞ் சத்தி.

**வித்தியாகலையில் புருடதத்துவத்தில்** — வாமன், வீமன், உக்கிரன், பவன், ஈசானன், ஏகவீரன், என்று உருத்திரர் புவனம் ஆறு. அராகதத்துவத்திற் பிரசண்டன், உமாபதி, அசன், அநந்தன், ஏகசிகன் என்று உருத்திரர் புவனம் ஐந்து. நியதியிற் குரோதன், சண்டன், சமுவத்தன், சோதி, சூரன் என்று உருத்திரர் புவனம் ஐந்து. வித்தையிற் பஞ்சாந்தகன். ஏகவீரன், என்று உருத்திரர் புவனம் இரண்டு. கலையிற் சிகேசன், மகாதேசன், என்று உருத்திரர் புவனம் இரண்டு. காலத்தில் வாமதேவன், பலன், என்று உருத்திரர் புவனம் இரண்டு. மாயையில் உற்பவன், ஏகபிங்கலன், ஏகேக்கணன், ஈசானன், அங்குட்ட மாத்திரன் என்று உருத்திரர் புவனம் ஐந்து. ஆகத் தத்துவமேழினு மடங்கும் புவனம் இருபத்தேழு.

**வித்தியாரண்ய சுவாமிகள்** — ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகள் இச்சென்னை மாநகரத்திற்கு வடக்கேயுள்ள கர்நாடக தேசத்திலே, துங்கபத்திரா நதிக்கரையில், பம்பையென்னும் க்ஷேத்திரத்தின் ஒருபாகமாகிய கிஷ்கிந்தா, கோலகொண்டாவென்று சொல்லப்படுகின்ற விஜய நகரத்தில், இற்றைக் கேறக்குறைய 600 வருடங்கட்கு முன்னர்ப் போதாயன சூத்திரம், கிருஷ்ண யசுர்வேதத்தின் போதாயனசாகை, பாத்துவாஜ கோத்திரமுடைய பிராமண குலதிலகராகிய மாயனரென்பாரும் அவரது பத்தினியாராகிய ஸ்ரீமதியென்பாருஞ் செய்த தவப்பேருகப் பிறந்தவர். இவரது சகோதரர் சாயணர், சோமநாதர். இவரது இயற்பெயர் மாதவர்; சிறப்புப்பெயர் மாதவாரியர், மாதவபட்டர், மாதவாமாத்தியர் என்றற்றொடக்கத்தனவாம்; வித்தைக்கு ஆரண்யம்போன்றிருந்தமையின் வித்தியா ரண்யரென்று பெயர் பெறுவாராயினர். ஈசுவரனது கலையே வித்தியாரண்யராக அவதரித்ததென்று கூறப்படுகின்றது. இவரிளமையிலேயே சகல கலைகளிலும் வல்லவராய்ப் பம்பாவனத்திற் சென்று ஒரு பர்ணசாலையிற் றவஞ்செய்து கொண்டிருக்கும்போது கி. பி. 1334-வது வருடம் மகம்மது டோக்ளாக் (Mahomed Tugiakh) காலத்தில் மாலிக்காபூர் (Malikkaffir) என்பவன் ஆனைகுந்தி நகரத்தையழித்தபோது, அந்நகரத் தாசனுகிய பூபாராயலு தீப்பாய்ந்திறக்க அவனது சேனுதிபதிகளாகிய ஹரிஹரராயலும் புக்காராயலு வென்னுஞ் சகோதரரிருவரும் மிகவும் நடுக்கமுற்று மேற்படி வனத்திற் காந்துறையுமாறு சென்றபோது ஆண்டுத் தவஞ்செய்துள்ள வித்தியாரண்யரைக் கண்டு தமது குறைகளைக் கூறி வருந்தினர். அவர் தமது தபோமகிமையால் வித்தியாரண்ய மென்றொருநகரத்தை யுண்டாக்கி அதனை ஹரிஹரராயலு அரசுசெய்து வருமாறு ஆக்ஞாபித்தனர்; அவன் காலத்தின் பின்னர் அவன் சகோதரனுகிய புக்காராயலு அந்நகரத்தை அரசாண்டு வந்தனன். அவ்விருவரது பிரார்த்தனைக் கிணங்கி, வித்தியாரண்ய சுவாமிகள் அவர்களுக்கு மந்திரியாகவும் வசிட்ட ராதியோர்போல் புரோகிதராகவுமிருந்தனர். இவர் மந்திரியாயிருந்த காலத்தில் கோவா நகரத்தில் அதிக்கிரமித்துத் துன்பஞ்செய்திருந்த துலுக்கர்களையொழித்துத் தமதரசனதாணை ஆண்டுஞ் செல்லுமாறு செய்வித்துச் சப்தநாதரென்னும் மகாவிக்ரஹத்தை ஸ்தாபனஞ் செய்தனர்; கசரமென்னுங் கிராமத்திற்கு மாதவபுரமெனப் பெயர்தந்து அந்தணர்கட்குத் தானஞ்செய்தனர். ஆங்குள்ள நதி இவரது ஞாபகார்த்தமாக மாதவ தீரமென்று வழங்கப்பட்டு வருகின்றது. இவர் வித்தியாசாலை, அன்னசத்திரம், தேவாலயம் முதலியனவற்றை யளவின்றி ஏற்படுத்தினர். இவர் விவேக வைராக்கியாதி சகல சற்குணங்களாலும் நிறைந்து கிருகஸ்தா ச்ரமத்தில் பிரமாத்மவிசாரநிஷ்டாபரரா யிருந்தபோது காயத்திரி தேவியைப் பிரத்தியக்ஷமாகத் தரிசிக்க வேண்டிப் பல தேயத்துமிருந்து அந்தணர்களை அழைப்பித்துக் காயத்ரிஜபஞ் செய்யு

மாறு செய்தனர்; அங்ஙனஞ்செய்தும் அதன் பலமாகிய தேவி பிரத்தியக்ஷ மாகாமையின், தீவிர வைராக்கிய முண்டாய் வித்வச்சந்நியாசஞ் செய்துகொண்டனர். பிறகு அவருக்குக் காயாத்திரிதேவி பிரத்தியக்ஷமாகி வேண்டிய வரத்தைப் பெற்றுக் கொள்ளென்று திருவாய் மலர்ந்தனள். அவரொன்றும் வேண்டாமென் றுபேட்சித்துப் போகும்போது அத்தேவி பின் சென்று 'நீ ஏதாவதொன்று பெற்றுக் கொள்ள வேண்டு' மென்று வற்புறுத்த அவர் இக்கர்நாடக தேசமுற்றும் மக்களின் வறுமைப்பிணி யகலுமாறு பொன்மழை வருஷிக்க வேண்டுமென்று வரங்கேட்டனர். அவ்வாறே வரந்தந்து தேவிமறைய, ஒன்றேகால் ஜாமபரியந்தம் பொன்நாணய மழை பெய்தது. அதனால் அந்நாட்டார் யாவரும் வறுமைப் பிணியினின்றும் நீங்கினர்.

வித்வத் சந்நியாசத்தை மேற்கொண்டவுடன் சுவாமிகள் யாச்ஞவல்கியரைப்போல உபாதியுடையராய்ப் பிரஹ்ம விசாரத்திலேயே கருத்துடையவரா யிருக்கும்போது ஒருநாள் மலவிசர்ச்சனஞ் செய்ய வெளியிடத்திற் சென்றனர். அப்போது ஒரு மகமதிய மன்னனது பொற்செங்கல் அங்கே வீழ்ந்து கிடக்க அதனை வேறொரு கல்லோடு சேர்த்து அவற்றின் பேரி லுட்கார்ந்து மலோபாதை தீர்த்தனர். அதனை யறிந்த அம்மன்னன் இவருக்குக் கிராம முதலியன கொடுக்க அவற்றை இவர் அங்கீகரியாது போயினர். அதனாலும் இவரது வைராக்கியம் நன்கு விளங்கும்.

இவர் யாத்திரையாகக் காசிமாநகரஞ் சென்றபோது ஆண்டுள்ள பண்டிதர்களிடத்துத் தாமியற்றிய வேதபாஷியத்தைக் காட்ட அவர்கள் வேதவியாச ரங்கீகரித்தாலன்றி அங்கீகரிக்கப் பட்டதாமென்று கூற, இவர் வேதவியாசரை நோக்கித் தவங்கிடந்து பிரார்த்திக்க, அவர் பிரத்தியக்ஷமாக, அவரை நமஸ்கரித்துத் துதித்து அப்பாஷியத்தைக் காட்ட, அதைக் கண்ணுற்ற வியாசர் இதிலொரு சிறிதும் பிழையின்று' உனக்கு வித்தியாரண்யரென்னும் பெயருண்டாகுக' என்று திருவாய் மலர்ந்தருள, இவருக்கு அன்றுமுதல் வித்தியாரண்யரென்னும் பெயருண்டாயிற்றென்று கூறப்படுகின்றது. பிறகு அவர் யாத்திரை செய்யச் சக்தியற் றிருந்தபோது தமது குருவின் கட்டளைப்படி ஸ்ரீ சங்கரபகவத் பாதாசாரிய சுவாமிகளால் ஸ்தாபிக்கப் பட்ட மடாலயங்களு ளொன்றாகிய சிருங்கிரிமடாலயத்தி னாதிபத்தியத்தை யடைந்து ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் பன்னிரண்டாவது பதவியால் பிரசித்தி யடைந்து வேதமத கண்டனஞ் செய்து அத்வைத சித்தாந்தத்தைப் பிரகாசப்படுத்தினர். இவருக்குச் சர்வஞ்ஞவிஷ்ணு, சங்கராநந்த சுவாமிகள், ஸ்ரீ வித்யாதீர்த்தர், பாரதிகிருஷ்ணதீர்த்தர் என்றற் றொடக்கத்தவர் ஆசிரியர்களாவர்.

இவர் ஸ்ரீ சங்கராசாரிய பதவியிலிருக்கும்போது காயத்திரி தேவியி னனுக்கிரகத்தால் ஸ்ரீ பஞ்சதசியை யருளினாரென்று கூறப்படுகின்றது.

இவர் பூர்வாசிரமத்திலும் உத்தராசிரமத்திலும் செய்த் நூல்கள் வருமாறு:—

1. சதுர்வேத பாஷியம். 2 அநுபூதிப் பிரகாசம். 3. பிரஹ்மகீதை. 4. பஞ்சதசி. 5. ஜீவன் முத்திவிவேகம். 6. திருக்குதிருசிய விவேகம். 7. மாதவவிருத்தி (வியாகரணநூல்). 8. நிதானமாதவம் (வைத்திய நூல்). 9. காலமாதவம். 10. சதப்ரஸ்ந கல்பலதிகா. 11. பாராசரஸ்மிருதி வியாக்கியானம். 12. ஜைமினீய நியாயமாலா விஸ்தாரம். 13. ஆசார மாதவம். 14. வியவகார மாதவம். 15. வித்தியாரண்ய காலஞானம். 16. சங்கரதிக்விஜயம். 17. சூதசங்கிதையின் வியாக்கியானம். 18 சங்கரவிலாசம். 19. விவரண பிரமேய சங்கிரகம். 20. உபநிஷத்தீபிகை 21. பிரஹ்மவிதாசி. 22. கர்மவிவாக மாதவியம். 23. பட்டசாரம். 24. பாட்டசார வியாக்கியானம். 25. வேதாந்தவிஜயம். 26. பஞ்சசாரம் வியாக்கியானம். 27. சங்கரபாஷியடீகா. 28. கீதாதாற்பரியம். 29. ஸ்மிருதி சங்கிரகம். 30. சர்வதரிசனசங்கிரகம் முதலியனவாம். இவ்விதமியற்றியருளிய நூல்களுள் சிலவற்றை மடங்களிலும், சிலவற்றை க்ஷேத்திரங்களிலும் பிரித்துக் கொடுத்துச் சிலவற்றை மலைக்குகைகளில் வைத்துச் சிலவற்றைப் பூமியிற் புதைத்து வைத்தனர் என்றும் சொல்லப்படுகின்றது. இவர் செய்தநூல்களுள் சில வைத்தியசாஸ்திரமும் சில ஜோதிஷ சாஸ்திரமும் சில வியாகரண சாஸ்திரமும் ஏனையவை வேதாந்த சாஸ்திரமும் பிறவுமாம்.

இவ்வாறு அளவிறந்த நூல்கட்காசிரியராயும் பிரஹ்ம நிஷ்டராயு மற்புத வித்வத்சிரோமணியாயும் கற்றோராலும் மற்றோராலும் புகழப்படும் பூஜ்ஜியராயு மெழுந்தருளியிருந்த ஸ்ரீவித்தியாரண்ய சுவாமிகள் தேகபதன பரியந்தம் தமது ஆத்மநிஷ்டைக்கு விரோதமின்றி உலோகோபகாரஞ்செய்து முடிவில் சிந்தையும் வாக்கும் செல்லாநிலைமைத்தாய அந்தமில் வீட்டையடைந்தன ரென்பது அவரது திவ்ய சரித்திர சங்கிரகமாம்.

**வித்தியுத்திருவன்** — குபேரகிங்கரன். இவன் தேவி தமனிகை. தருமபக்ஷிகளைக் காண்க.

**வித்தியோதன்** — தருமனுக்கு ரம்பையிடம் உதித்த குமாரன்.

**வித்திரதிகட்டிரோகம்** — தோல், ரத்தம், மாம்சம், மேதை, எலும்பு, நரம்புகள் என்னும் இடங்களில் வீங்கிக் குத்தலையுண்டாக்கி வட்டமாகவும், நீட்சியாகவுந் தடித்துக் கட்டிகளாகக்காணும். இது குத்தலைத் தருவதால் வித்திரதியெனப் பெயர். இது, வாத, பித்த சிலேஷ்மம், திரிதோஷ, ரத்த, க்ஷத்ர, நாபிஸ்தான, வஸ்திஸ்தான, யக்ருதி, பிலீக, பக்கவிலா, இருதயம், குக்ஷி, தொடைக்கவுட்டி, பீசம், அபானம், ஸ்தனம், இவ்விடங்களில் உண்டாகும். அவ்வாறுண்டாம்போது அந்த இடங்களின் பெயர்களைப் பெறும். இவைகளைப் புங்கம்பால் தயிலம், குக்கிலாதிசூரணம், சாதிலிங்கபஸ்மம், சாறடை லேகியம் முதலியவற்றால் வசமாக்கலாம். (ஜீவா.)

**வித்தின்வகை** — வித்துக்கள் மரம், செடிகொடிகளுக்கு முதற் காரணமானவை. அவற்றுள் சில வலுத்த மேல்மூடி பெற்றிருக்கும். மாவித்து, பலாவித்து, புளியங்கொட்டை, தேற்றான்வித்து, எட்டிவித்து, புரசை, புன்னை, இலுப்பை, அழிஞ்சில், மருதோன்றி, வேம்பு, கடம்பு, மகிழ், தில்லை, ஆளிவித்து, உருத்ராக்ஷம், முருங்கை, மாதுளை, முந்திரி, வாதுமை, சாரப்பருப்பு, தத்தி, தகரை, நீர்முள்ளி, பூசினை, வெள்ளரி, கழற்சி, பேய்பீர்க்கு, நல்லபீர்க்கு, பூசுணை, பூனைக்காலி, உசரநெரிஞ்சில், தாமரை, அல்லி, தேற்றான், வாளம், செங்கொட்டை, குன்றிவித்து முதலாகப் பலவாம்.

**வித்துதை** — சிவசூர்ய பீடத்தமருஞ் சத்தி.

**வித்துமன்** — சண்முக சேநாவீரன்.

**வித்துருவதை** — தான்மிக பாண்டியன் மனைவி. இவளைப் பிரமராக்ஷசு பற்றியது. அதனால் இவள் காஞ்சிநதியில் மூழ்கிப் போக்கிக்கொண்டனள்.

**வித்துர்மாலி** — தாராகாசுரன் குமாரன். திரிபுராசுரர் மூவரில் ஒருவன். இவனுக்கு வித்துன்மாலி எனவும்பெயர்.

**வித்துன்மாலி** — 1. இராவண சேநாபதி.

2. வித்துர்மாலிக்கு ஒரு பெயர்.

**வித்தைகள்** — 1. (௧௪). அவை வேதம் (௪) வேதாங்கம் (௬) புராணம், தருமநூலாகிய உபாங்கங்கள் (௪.) ஆகப் பதினான்கு.

2 (௩௨) மந்திரம், பிராம்மணம், இருக்கு, சாமம், அதர்வணம், யசுர்வேதம், ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம், தந்திரம், சிக்ஷை, சிரௌதகற்பம், ஸ்மார்த்தம், வியாகரணம், நிருக்தம், சோதிடம், சந்தசு, மீமாஞ்சை, தருக்கம், சாங்கியம், வேதாந்தம், யோகம், இதிகாசம், புராணம், அறநூல், நாஸ்திகம், அர்த்தசாஸ்திரம், காமசாஸ்திரம், சிற்பம், அலங்காரம், தேசியம், காவ்யம், என்பனவாம்.

**வித்தைகள் நான்கு** — ஆன்வீக்ஷிகி, திரையீ, வார்த்தை, கண்டம், ஆன்வீக்ஷிகி, இது தனித்துணரப்படும் வேதாந்தம். திரையீ - தருமாதருமம் விருப்பு வெறுப்புக் கூறும் நூல். வார்த்தை - பொருளீட்டல், அதற்கிடையூற்றைக் கூறும் நூல். தண்டம் - நீதி அநீதிகளை அறிந்து செய்வனவற்றைக் கூறும் நூல். ஆன்வீக்ஷிகி - வேதம் பயின்றபின் பயில்வது. திரையீ - மும்மறை, தண்டநீதி - செங்கோன்முறை. (சுக்-நீ.)

**வித்யாகண்டர்** — சைவசித்தாந்த பத்ததியருளிய சிவாசாரியருள் ஒருவர்.

**வித்யாகலை** — சிவாகமங்களுட்கூறிய கலாபேதம். இதில் அசுத்தபுவனங்கள் அடங்கியிருக்கும்.

**வித்யாதரர்** — தேவவகுப்பினர். பிரமனால் அந்தர்த்தானத்துப் படைக்கப்பட்டவர். மேகவாகனர்.

**வித்யாதத்துவம்** — 1. (௭) காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை.

2. இவை ஆன்மாவிற்குபகாரமாய் அறிவைவிளக்குந் தத்வங்களாம். இவை காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை என எழுவகைப்படும்.

**வித்யாதிராயர்** — சிவகுருவின் தந்தை.

**வித்யாரண்யர்** — 1. ஒரு ஸ்மார்த்தவேதியர். வேதாந்ததேசிகருடன் வாசித்தவர்.

அக்ஷோப்யமுநியின் கக்ஷிக்குத் தோற்று வேதாந்ததேசிகர் அருளிய சததூஷணி யென்னுங் கிரந்தத்திற்குக் குத்திட்டுச் சகார சமர்த்தனத்தால் அடங்கியவர். இவர் வேதபாஷ்யம், சூதசங்கிதாபாஷ்யம், சங்கரவிஜயம், நிதானசங்கிதை, காலமாதவீயம் முதலியன செய்தவர்.

2. துங்கபத்திர நதிக்கரைக்கண் இருந்த பம்பையென்னுங் கிராமவாசியாகிய ஸ்மார்த்தவாசாரியர். இவர் பராசரஸ்மிருதிக்கு மாதவீயமென்னும் வியாக்கியானஞ் செய்தனர்.

**வித்யாவதி** — இவள் ஒரு விபசாரி. சந்திரகாந்தையையும் கெடுத்துத் தானுங்கெட்டு விபசாரியாய்த் திரிந்ததால் நாயாகவும், பன்றியாகவும், சநநம்எடுத்துக் கடைசியில் பாசுராமருக்கும் பீஷ்மருக்கும் கலகம் விளைவிக்க அம்பை என்னும் பெண்ணாய்க் காசிராஜனுக்குப் பிறந்தவள்.

**வித்யுச்சவன்** — 1. காலகேயர் என்னும் அசுரரில் ஒருவன். சூர்ப்பநகையின் கணவன். இராவணன் திக்குவிசயஞ் செய்து வருகையில், காலகேய நிவாதகவசரை எதிர்த்தபோது இவனும் எதிர்த்து இறந்தனன். இச்செய்தியறிந்த இவன்தேவி இராவணனிடம் புலம்பினள். இராவணன் நான் அறியாதுசெய்த காரியமெனத் தேற்றிக் கரதூஷணரை அவளுக்குத் துணையிருத்திச் சுவேச்சையாய் இருக்க அமைத்தனன். இவன் இறக்கையில் சூர்ப்பநகை கர்ப்பிணியாதலால் இவனுக்குப் பிறகு ஒரு குமாரன் பிறந்தனன். அவனுக்குச் சம்புகுமாரன் எனப்பெயர். இக் குமாரன் தன் தாயினால் தந்தையிறந்த வரலாறு உணர்ந்து பகைமுடிக்க எண்ணிப் பஞ்சவடி தீரத்தில் ஒரு தருப்பைப்புதரில் தவம் இயற்றிக்கொண்டிருந்தனன். இவன் தவஞ்செய்தலையறியாத இலக்குமணர் வனவாஸத்தில் இராமகைங்கர்யத்திற்குத் தர்ப்பையுடன் இவன் தலையையுங் கொய்து இரத்தவெள்ளங்கண்டு யாரோ தவசியைக் கொன்றோமோவென்று மயங்குகையில் அருகிருந்தார் இவன் அரக்கன் என்று கூறத் தேறினர்.

2. ஒரு அரக்கன் ; மாயாவி. சீதாபிராட்டி அசோகவனத்திருக்கையில் இராம இலக்குமணர் தலைகளைக் கொய்ததுபோல் காட்டி இவர்கள் இராவணனால் கொல்லப்பட்டனர் எனப் பயமுறுத்தினவன்.

**வித்யுத்கேசன்** — ஏதியின் குமாரன்.

**வித்யுத்துருவன்** — குபேரன் ஏவலாளி. கங்கன் என்னும் பக்ஷியைக் கொன்றதால் கந்தரன் என்னும் பக்ஷியால் கொல்லப்பட்டவன்.

**வித்யுத்பர்ணை** — தக்ஷனால் விரும்பப்பட்டுப் பின் நாரதரால் விரும்பப்பட்டு அதன்பின் பிரமதேவரால் விரும்பப்பட்டு பசுவடிவேற்றுப் பிரமனைக் கூடாதகன்றவள். (சிவமகா புராணம்.)

**வித்யுன்மாலி** — திரிபுரத்திலிருந்த அசுரன்.

**வித்வான் தாண்டவராய முதலியார்** — புதுவையை யடுத்த சூளம்பேட்டையைச் சார்ந்த வில்லியம்பாக்கம் என்ற வில்லீயநல்லூரில் சைவவேளாள குலத்திற் கல்வியறிவொழுக்கங்களாற் சிறந்த கந்தசாமி முதலியாரது கனிட்ட குமாரராவர். இவர்மிக்க இளமைப் பருவத்திலேயே தமது தந்தையாரை யிழக்குந் துர்பாக்கிய மடைந்தமையாற் பொன்விளைந்த களத்தூர் சென்று ஆண்டிருந்த தமது உபாத்தியாயருடைய மேற்பார்வையிலிருந்து அவர் பாலெழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார். அன்றியும் இவர் வடமொழி, ஆந்திரம், கன்னடம், இந்துஸ்தானி, மகாராட்டிரம், ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளும் பயின்று அவற்றின்கண் தேர்ச்சி பெற்றனர். இவர் சிலகாலம் சென்னைத் துரைத்தனக் கலாசாலையிற் தமிழ்புலமை நடத்தினர். இங்ஙனம் இவர் தமிழ் வித்வானுகிப் பல்லாண்டு கழிந்தபின்னர்க் கலாசாலை யெடுபட்டது. ஆகவே இவர் கி. பி. 1843-ஆம் வருடம் செங்கற்பட்டுச் ஜில்லாவிற் சுதேச நீதியதிபரா யமர்ந்தனர். இவர் திருத்தணிகைமாலை, திருப்போரூர் பதிகம், இலக்கணவினாவிடை, கதாமஞ்சரி முதலிய பலநூல்களையு மியற்றினர்.

**வித்வேஷணி** — பலருக்கும் விரோதத்தையுண்டாக்கும் தேவதை.

**விநசனதீர்த்தம்** — சரஸ்வதி நதி சமீபத்திலுள்ள தீர்த்தம். The spot in the great shady desert in the district of Sirhind, where the river Sarasvathi loses itself after taking a westerly course from Thaneswar.

**விநதன்** — ஒரு வாநரத்தலைவன்; சீதையைத் தேடச்சென்றவன்.

**விநதை** — தக்ஷன் குமாரி ; காசிபர் தேவி ; கருடன், அருணன், சடாயு, சம்பாதி,

சேநன் முதலியவரைப் பெற்றவள். கருடனைக் காண்க. கத்துருவைக் காண்க. இவளை ஒருமுறை சடாயு அவமதித்ததால் நாகர் கோபித்துச் சடாயு, சம்பாதி, சேநன் மூவரையும் பாதாளத்தில் சிறைவிட்டனர். இதனால் விநதைநாகரைவெல்ல ஒருபுத்திரன் வேண்டுமென்று காசிபரை வேண்டி ஒரு முட்டையைப்பெற்று அதனைக் காத்துகொண்டிருக்கையில் விநாயகமூர்த்தி காசிபர் ஆச்சிரமவழி வந்தனர். விநதைவிநாயகரை வணங்கித் தனதுகுறையைக் கூறினள். இதனால் விநாயகமூர்த்தி அம்முட்டையைப் பிளந்தனர். அதில் ஒரு மயில் தோன்றியது. விநாயகமூர்த்தி அதனை வாகனமாகக் கொண்டு பாதாளஞ்சென்று அம்மயிலால் சடாயு முதலியவர்களைச் சிறைவிடுத்தனர். (விநாயகபுராணம்) இவளுக்கு விநுதை யெனவும் பெயர்.

விநயபிடகம் — பௌத்தாகமத்துள் ஒன்று. இது விபங்கம், கண்டகம், பரிவாரபாடம் என மூவகைத்து.

விநயமாமாலை — குணமாலையின் தாய்.

விநாசன் — காலைக்குக் காசிபரிடம் பிறந்தவன்.

விநாயகசதுர்த்திவிரதம் — விரதம் காண்க. விநாயகமூர்த்தியை யெண்ணி ஆவணி மாசம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியில் அநுட்டிப்பது. இதை அநுட்டித்தோர் உமை, புருசுண்டி, ஔவை முதலியோர். இது சிந்துரனைக் கொல்லக் கசாநநர் அவதரித்த காலம்.

விநாயகபுராணம் — உபபுராணங்களில் ஒன்று. இதனைப் பார்க்கவபுராணம் என்பர். இதைத் தமிழில் திருவாவடுதுறைக் கச்சியப்பசுவாமிகள் மொழிபெயர்த்தனர். இது விநாயகர் செய்த திருவிளையாடல்களைக் கூறும்.

விநாயகமூர்த்தங்களாவன — (கசு) சுமுகர், ஏகதந்தர், கபிலர், கஜகர்ணிகர், லம்போதரர், விகடர், விக்கினராசர், கணாதிபர், தூமகேது, கணாத்யக்ஷர், பாலசந்திரர், கஜாநநர், வக்கிரதுண்டர், சூர்ப்பகர்ணர், ஏரம்பர், ஸ்கந்தபூர்வர்.

விநாயகர் — 1. தன்னை வணங்கினர்க்கு விக்கினத்தை நீக்குவோரும், அவ்வகை வணங்காதார்க்கு விக்கினத்தைத் தருபவரும் தனக்குமேல் நாயகரிலாதவருமாதலால் இப்பெயர் வந்தது. (க) இவர் சிவமூர்த்தபேதம். இவர்க்கு யானைமுகம் வந்த வரலாற்றினைக் கஜமுகனைக் காண்க. (உ) இவர் இந்திரன் வேண்டுகோளுக்கிணங்கி அகத்தியமுனிவரிடம் இருந்த காவிரிநீரைக் காகவுருக்கொண்டு கவிழ்த்து அவன் சோழியில் வைத்த நந்தவனத்தைச் செழிப்பித்தனர். இதனால் அகத்தியர் கோபங்கொண்டு குட்டவர அவர் கைக்குத் தப்பித் தரிசனம் தந்தவர். (ங) பார்வதிபிராட்டியார் திருவயிற்றிருந்து சிந்துரனால் தலைநீங்கி மயேச்சுரன் தலையைப்பூண்டு சிந்துரனைத் திலகமாய் அணிந்தவர். (ச) பராசரமுனிவர் ஆச்சிரமத்தில் வளர்ந்து விக்னராசர் எனப்பெயர் அடைந்தவர். (ரு) இவர்க்குச் சிந்தாமணி விநாயகர் எனவும் வக்கிரதுண்டவிநாயகர் எனவும், கலாதரர் எனவும், கணேசர் எனவும், பாலசந்திரர் என்றும், கபிலவிநாயகர் எனவும், சுமுகர் எனவும், கசாநநர் எனவும், தூமகேது எனவும், மகோற்கடர் எனவும், உடுண்டிவிநாயகர் எனவும், வல்லபைகணேசர் எனவும் பெயர். (சு) இவர் சித்தி, புத்தி, வல்லபை, விஷ்ணுமூர்த்தியின் குமாரியாகிய மோதை, பிரமோதை, சுமகை, சுந்தரி, மனோரமை, மங்கலை, கேசினி, காந்தை, சாருகாசை, சுமத்திமை, நந்தினி, காமதை முதலியவரை மணந்தனர். (எ) இவரது திருவிளையாடல்களைத் தனித்தனி காண்க. இவர் சிருட்டி முதலிய பஞ்சகிருத்தியமுஞ்செய்து நாயகமாய் நிற்றலில் இவரே பரமென்பர் காணாபத்திய மதத்தவர். இவரது பிறப்பைப் புராணங்கள் பல பேதப்படக் கூறும். அந்தந்தச் சிறப்புப்பெயர்களிற் காண்க. (அ) இவரைப் பிரமன், விஷ்ணு, தக்கன், முற்கலன், வீமன், இந்திரன், ருத்ரன், உமை, கர்த்தமன், நளன், சந்திராங்கதன், சண்முகர், மன்மதன், ஆதிசேடன், புருசுண்டி, அங்காரகன், சந்திரன், க்ஷிப்பிரப்பிரசாதன், கிருதவீரியன், சூரசேநன், பரசுராமன், இராவணன், அகத்தியன், காசிபன் முதலியவர் பூசித்து இட்டசித்தியடைந்தனர் என்ப.

2. தக்ஷயாகத்தில் இவரது கண்ணினின்று சிவேதபிந்து உண்டாயிற்று. அதினின்றும் அக்னி உண்டாயிற்று. அந்த அக்னியில் ஒருபூதம் பிறந்து தக்ஷயாகத்தை அழித்தது. (பிரம-புராணம்)

விநிக்துரோதனர் — கிருஷ்ணமூர்த்தியின் குமாரர்.

**விநித்தன்**—மகததேசத்தரசர்களில் ஒருவன். மருகர்ணனென்னும் மந்திரிக்கு இராச்சியத்தைக் கொடுத்துத் துன்பம் அடைந்தவன்.

**விநுதை** — விநதையைக் காண்க.

**விந்தம்** — 1. அஷ்டகுலாசலங்களில் ஒன்று. பரதகண்டத்தின் இடையில் உள்ளது. இதனிடம் நாரதர் மேருவின் பெருமைகளைக் கூறினர். இதனால் இம்மலை செருக்கடைந்து ஆகாயமளவாக ஓங்கிச் சூரியன் முதலாயினோர் போக்கைத் தடுத்து நிற்கையில் தேவர் அகத்தியரிடம் இதன் வரலாற்றினைக் கூறி அதன் செருக்கை யடக்கவேண்டினர். அதைக் கேட்ட அகத்தியர் விந்தமலையிடம்வர விந்தம் பணிந்தது. அதனைத் தாம் தென்னாட்டிலிருந்து மீளுமளவும் எழாதிருக்கக் கட்டளையிட்டுப் பொதிகை யடைந்தனர். விந்தம் தன் செருக்கடங்கியது. தேவர் களிப்படைந்தனர். இது தண்டகவனத்திற்கு வடக்கில் உள்ளதொரு மலை. இதற்கு விந்தியம் எனவும் விந்தை எனவும் பெயர்.

2. விந்தாகடிகை யென்னும் தேவதையால் காக்கப்பட்ட மலை. இதில் ஒரு துர்க்காலயம் இருக்கிறது. (மணிமேகலை.)

3. விந்தியமலை. இதிலுள்ள காடு மிகப் புகழ்பெற்றது. இதிலுள்ள யானைகள் மிக்க வீரியமுடையவைகள். (பெ. கதை.)

**விந்தரன்** — 1. திருதராட்டிரன் குமாரர்களில் ஒருவன்; பதினன்காம் நாட்போரில் பீமனுடன் யுத்தஞ்செய்து இறந்தவன்.

2. சிந்துதேசாதிபதி.

**விந்தன்**—1. திருதராட்டிரன் குமாரர்களில் ஒருவன். பதினன்காம் நாட்போரில் பீமனுடன் யுத்தஞ்செய்து இறந்தவன்.

2. அவந்திநாட்டரசன்.

3. லக்ஷம் பெண்டிருடன் சுகித்திருந்த ஒரு அரசன்.

4. யது மரபினன்; ஜயசேநன் குமாரன். இவன் தாய் வசுதேவனுடன் பிறந்த ரசாதிதேவி.

5. ஒரு கள்வன். இவன் சோம வாரத்தில் விழித்திருந்து உமாதேவியார் மீது தரித்திருந்த திருவாபரணத்தைக் கொள்ளைகொண்டும், சோமவாரத்தில் விழித்திருந்த புண்ணியத்தால் முத்தி பெற்றவன்.

6. கேகயராஜ புத்திரன்; சகோதரன் அநுவிந்தன்; சாத்தகியால் கொல்லப்பட்டவன்.

**விந்தாகடிகை** — விந்தமலைமீது செல்பவரைச் சாயையால் இழுத்து வருத்தும் தெய்வம். விந்தம் 2 காண்க. (மணிமேகலை)

**விந்தாரகம்** — ஒரு தீர்த்தகம்.

**விந்தாலுவிந்தர்** — ஜயஸ்துஜயனுக்கு ரசாதிதேவியிடம் பிறந்தவர்.

**விந்தாநுவிந்தர்** — அவந்திதேசத்திற்கு அரசர். துரியோதனன் நண்பர். மந்திராவிந்தைக்குத் தமயன்மார். கிருஷ்ணன் மைத்துனர்.

**விந்தியவந்தன்**—ஒரு அரசன். தம்பனென்னுமாசனால் கொலையுண்டவன். இவன் தேவி குண்டலை.

**விந்தியம்** —விந்தம் காண்க.

**விந்தியன்** — வாவதமனுவின் குமாரன்.

**விந்தியாசலபீடம்** — சத்தி பீடங்களில் ஒன்று. விந்தியாதிவாசநீபீடம் பார்க்க.

**விந்தியாதிவாசநீபீடம்**—நூற்றெட்டுச் சத்தி பீடங்களில் (54) ஆவது. விந்தியமலையிலுள்ளது.

**விந்தியாவலி**—1. சுந்தரபாண்டியன் தேவி.

2. பலிச்சக்கிரவர்த்தியின் தேவி.

**விந்து** — 1. இது சத்திதத்துவ மத்தகத்திலிருக்கும் மாயாபுவனம்.

2. ஒரு மாடு.

3. ஸ்வரம், வர்ணம், கலை தோற்றியொடுங்குமிடம்.

4. இது பரவிந்து, அபரவிந்து என இருவகைப்படும். பரவிந்து என்பது உன்மனு கலாதி காரியப்பிரபஞ்சம்; ஒரு பிரதேசத்திலுண்டாய் ஒடுங்கின மகா மாயையினது ஓரிடம். இந்தப் பரவிந்து சூக்குமை, அதிசூக்குமை, மிருதை, அமிருதை, வியாபினியாகிய கலைகளை வியாபித்திருக்கும். இக்கலைகள் அபரவிந்துவைப் பிரேரிக்கும். அபரவிந்து நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை முதலிய கலைகளைப் பிரேரித்து நிற்கும். பரற்பரவிந்துவைச் சமனையென்பர். முற்கூறிய பரவிந்து அதிக்ராந்தக விந்துக பரசிவத்தின் நிலை யென்பர்.

**விந்துசாரன்** — மகததேசாதிபதி; சந்திரகுப்தன் குமாரன்.

**விந்துமதி** — சசிபிந்துவின் குமாரன். மாந்தாதாவின் தேவி.

**விந்துமாதவன்**—அக்னிவிந்துவைக் காண்க.

**விந்தை** — விந்தியமலையின் பெயர்களுள் ஒன்று; இதில் துர்க்கையாலயமுண்டு.

**விபசித்** — புத்தர் 27-வருள் 22-ஆமவர்-

**விபசிந்து** — கோசலதேசத்து மணிபிங்கலை நகரத்து வேதியன்; மணிமுத்தா நதியில் ஸ்நாநஞ்செய்த பலத்தால் விதர்க்கணனைச் சந்தித்து மணிமுத்தாநதியின் பெருமை கேட்டுச் சுனைக்கண் தேவமாதரைச் சந்தித்து அவர்களில் குபேரன் தங்கை மூக்கணியை இழந்து வருந்த; அவளுக்கு மூக்கணி கொடுத்து அவளால் ஆபரணங்களைப் பெற்றுச் சிவதிருப்பணி செய்தவன்.

**விபணன்** — புரஞ்சயனுக்கு நண்பன்.

**விபண்டன்** — ஒரு வேடன்; திருக்கருவூரில் சிவனடியவர் வேடந்தாங்கிச் சென்று திருவிழாவில் திருட எண்ணிச் சனநெருக்கத் திறந்து முத்திபெற்றவன்.

**விபரீதவியாப்பியதானன்** — எதுசாத்தியங்களுக்கே யாதொன்று மூர்த்தம் அது அநித்யமென்று வியாப்தி சொல்லாமல் இதற்கு விபரீதம் யாதொன்று அநித்யம் அது மூர்த்தம் என்று வியாப்தி சொல்லுவது. (சிவ-சித்.)

**விபரீதவேதை** — சந்திரலக்கினத்துக்கு - ௫-௯-௪-௧௨-ல் சூரியனிருக்க முறையே ௧௧-௩-௧௦-௬-ல் வேறு கிரகமிருந்தால் சூரியன் நல்லபலனைக் கொடுப்பான். இவ்வாறே மற்றக் கிரகங்களுக்கும் கோசார விபரீதவேதை பார்த்துக் கொள்ளவும். சூரியனும் - செவ்வாயும் முற்பங்கிலும், குருவும் - சுக்கிரனும் நடுபங்கிலும், சனியும் - சந்திரனும் கடைப்பங்கிலும், புதனும் - பாம்புகளும் எப்போதும் பலன் தருவார்கள்.

**விபக்ஷம்** — தானறுதியிட்ட பொருளைப் பொருந்தாத இடம். இது எங்கே அக்னியில்லை அங்கே புகையில்லை அடுப்புப்போல என்பது.

**விபாசம்** — ஒருநதி; இது இமயத்துதித்த சதத்ருநதியிற் கலப்பது. வசிட்டாது புத்ர சோபத்தை நீக்கியது.

**விபாசன்** — இருடி புத்திரன்.

**விபாண்டகர்** — காசிபருஷியின் புத்திரர்; கலைக்கோட்டு முநிவருக்குத் தந்தை. இவர் ஒருமுறை நீராடச்சென்று அவ்விடம்வந்த ஊர்வசியைக்கண்டு காமுற்றனர்; அதனால் வீரியம் நீரில்விழ அதனை அவர் வளர்த்த மான் குடித்தது. அந்த மான் வயிற்றில் கலைக்கோட்டு முநிவர் பிறந்தனர்.

**விபாவசு** — 1. தம்பியால் ஆமையாகச் சபிக்கப்பட்டு அமிர்தத்தின் பொருட்டுச் சென்ற கருடனால் பக்ஷிக்கப்பட்டவன்.

2. முராசுரன் குமாரன்; கண்ணனுடன் பொருது மாய்ந்தவன்.

3. வசுக்களில் ஒருவன்; தருமனுக்கு வசுவென்பவளிடம் உதித்தவன். இவன் பாரி உஷா.

**விபாவரி** — மந்தாரன் என்னும் வித்தியாதரன் குமாரி, பிராணிகளின் பாஷைகளையறிந்தவள்; சுவாரோசியை மணந்தவள்.

**விபாவனாலங்காரம்** — ஒன்றைக்கூறுகையில் பலரும் அறிய வருங்காரணம் ஒழித்துப் பிறிதோர் காரணம் குறிப்பாக வெளிப்படும்படி இயல்பாக வுரைப்பது. இது இயல்புகாரண விபாவனை, குறிப்புக்காரண விபாவினை என இருவகைப்படும். வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுப்பது; பொது வகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுப்பதுவும் தேயாம். (தண்டி - பிறிதாராய்ச்சியணி).

**விபிந்து** — இருக்குவேதத்திற் கூறப்பட்ட ஒரு அரசன்.

**விபிலாசுவன்** — (சூ.) திக்திகுமாரன்.

**விபீஷணர்** — விசிரவஸுமுநிவர்க்குக் கேகசியிடம் உதித்த குமாரன். பிரமனையெண்ணித் தவம்புரிந்து தருமசிந்தை நீங்காதிருக்க வரம்பெற்றவர். இவர் பூர்வசன்மத்தில் புலத்தியர். புலத்தியரைக் காண்க. இராவணன் சீதாபிராட்டியைச் சிறைகொண்டதனால் இது நியாயம் அன்றெனவுறுதிகூறி மறுத்தவர். தூதாகவந்த அநுமனை இராவணன் கொல்ல முயன்ற காலத்துத் தூதனைக் கொல்லலாகாதெனத் தருமநீதிகூறித் தடுத்து அவனை விட்டுத் தாமும் தம் மந்திரியரும் இராமமூர்த்தியிடம் அடைக்கலம் அடைந்து அவரால் இலங்காதிபதியென வரம்பெற்று வாநரரால் சுமக்கப்பெற்ற விமானத்து வலம் வந்தவர். இராமமூர்த்தியால் கும்பகர்ணனிடம் ஏவப்பெற்றுச் சென்று இராமமூர்த்தியை அடைக்கலம் புகக்கூறி அவன் உறுதி கூறப்பெற்று மீண்டவர். பிரமாத்திரத்தால் மூர்ச்சையடைந்து இராம இலக்குமணரைக்கண்டு விசனமடைந்து அநுமனைத் தேற்றிச் சாம்புவந்தரிடம் சென்று மருத்துமலைக்கு யோசித்தவர். மாயாசீதையைக்கண்டு விசனமடைந்த இராமமூர்த்தியைத் தேற்றினவர். இந்திரசித்தின் தேரினைக் கதையால் நொறுக்கியவர். மித்திராக்கனைக் கொன்றவர். இராமமூர்த்திக்கு இராவணன் உடலின் வடுத்தன்மை

கூறி இறந்த இராவணன் பொருட்டு விசனமடைந்து சரமக்கடன் செய்து முடித்தவர். இராமர் ஏவுதற்படி இலக்குமணரால் பட்டமடைந்து சீதாபிராட்டியை அலங்கரித்து விமானத்தில் ஏற்றி இராமர்பால் விட்டவர். இராமமூர்த்தியுடன் அயோத்திசென்று இராமமூர்த்தியின் கட்டளையால் மீளுகையில் விஷ்ணுமூர்த்தியின் விக்ரகத்தையும் விமானத்தையும் பெற்றுத் திருவரங்கத்தில் பூசைமுடித்து எடுக்க வராமைகண்டு மனந்தளர்ந்து பெருமான் கட்டளைப்படி வருடத்திற்கு ஒருமுறை தரிசித்து மீள்பவர்.

விபீஷண வீதபயர் — நந்திலைநாட்டு அயோத்தி நகரத்து அருகதாஸன் என்னும் மரசனுக்குச் சுவ்ரதை சினதத்தை யெனு மிருவர் மனைவியர். இவர்களுக்கு முறையே முற்பிறப்பில் அரதனமாலை, இரத்னாயுதனாக இருவரும் வீதபய விபீஷணராகப் பிறந்து இராம கேசவரெனும் பெயருடன் அரசாளுகையில் இவர்களைப் பிரதி வாசுதேவனெதிர்த்துப் போர்க்கு வந்து இவர்கள்மீது சக்கரத்தை யெறிந்தனன். அச்சக்கரம் விபீஷணனாகிய கேசவனை யடைந்தது. அதனை மீண்டும் பிரதிவாசுதேவன் மீதேவி அவனைக் கொன்று அரசு புரிந்தனர். (மேரு - மந்.)

விபு — 1. பப்புரு குமாரன்.

2. சத்யகேதுக்குக் குமாரன்.

3 யஞ்ஞமூர்த்திக்குத் தக்ஷணையிடம் உதித்த குமாரன்.

4. பிரஸ்தாவன் குமாரன்; தாய் விருச்சை; தேவி பராகி; குமாரன் பிருதுஷேணன்.

5. பகனுக்குச் சித்தியிடம் உதித்தகுமாரன்.

6. ஐந்தாமன்வந்தரத்து இந்திரன்.

விபுதன் — ஒரு சிவனடியவர்; இவர் பொருட்டுச் சிவமூர்த்தி படிக்காசு அளித்துப் பசிநீக்கினர்.

விபுதை — 1. ஒரு அசுரகன்னிகை. இவள் மாகதருஷியை மயக்கி ஒரு குமாரனைப் பெற எண்ணிப் பலநாள் காத்திருந்தனள். ஒருநாள் இருடி யோகநீங்கிக் கண்விழிக்கையில் தமக்கு எதிரில் இரண்டியானைகள் புணரக்கண்டு தாமும் அவ்வகையிருக்க எண்ணங்கொண்டனர். இதனைக் குறிப்பாலுணர்ந்த விபுதை தான் கன்னியென அறிவித்து அவரை இசைவித்து அவருடன்கூடிக் கயமுகாசுரனைப் பெற்றாள். கயமுகாசுரனைக் காண்க.

2. அக்னிதேவன், குமாரி. சிங்கமுகாசுரன் தேவி.

3. குமரிக்குத் தாய்.

விபுத்திரர் — பத்தாமன்வந்தரத்துத் தேவர்.

விபுருது — துவாரகைக்குக் காவலாளி; அருச்சுநனைச் சுபத்திரையின் நிமித்தம் தாத்திப் பங்கம் அடைந்தவன்.

விபுலம் — 1. கிரிவிரசத்திற்கு அரணுயுள்ள மலை.

2. மிருகாவதியின் தந்தை தவம்செய்து கொண்டிருந்த ஒருமலை. உதயணன் பிறந்தது இம்மலைச் சாரலிலேதான். (பெ. கதை)

விபுலன் — 1. தேவசன்மன் மாணாக்கன். தன் குருபத்தினியை மோகித்த இந்திரனை (உரிசை) குருபத்தினியிடம் தவவலிமையால் மறைந்துகொல்லவந்து, இந்திரன் பணிய மன்னித்தவன். குருபத்தினியின் தேகத்திற் கலந்திருந்த குற்றத்தைக் குருவுக்கு அறிவித்து மன்னிப்பு அடைந்தவன். குருபத்தினிக்குத் தேவ உலகத்திருந்து பூமாலை கொண்டுவந்து அளித்தவன்.

2. ஒரு வேதியச்சிரேட்டன். இவன் திவ்யமணமுற்ற மலரொன்றைப் பெற்று அதனைச் சிவமூர்த்திக்கு அருச்சிக்க வானவழியாகத் திருக்கைலைக்குச் செல்லுகையில் யமனுக்கு மந்திரியாகிய காலன் இவன் பிராணனுக்கு இறுதிகாண அதனை யறிந்த சிவமூர்த்தி காலனைச் சூலத்தாற் குத்திச் சுழற்றினர். காலன் பலநாள் வருந்தி வேண்டச் சிவமூர்த்தி அவனை விட்டனர். இவன் உயிர்தப்பினன்.

3. ஒரு இருடி; தருமபக்ஷிகளின் பாட்டன்.

4. வசுதேவருக்கு ரோகணியிடம் பிறந்த குமாரன்.

5. ஒரு இருடி; சுகுருசர், தும்புருவர், என்பவர்களின் தந்தை.

6. சௌவீர தேசாதிபதி; அர்ச்சுனனால் கொல்லப்பட்டவன். (பா. ஆதி.)

விபூ — சகுனி உடன் பிறந்தான்; பீமனால் கொல்லப்பட்டவன்.

விபூதன் — சௌமியனைக் காண்க.

விபூதி — 1. சிவசூர்ய பீடத்தமருஞ் சத்தி.

2 அக்னி, சிவஸ்வரூபம்; சந்திரன், சத்தியுரு; சந்திரன் அக்னியை நீங்கான்.

இவ்விரண்டும் இயைந்தது அமுதம். உலகம் அக்னியால் தூய்மையடைந்து சுத்தமடையும். உலகத்தவரும் இவ்வகை அக்னியில் அவிசெய்து அதனால் தோன்றிய நீற்றை அணிவர். (இலிங்க.) இது சிவமூர்த்தியின் திருமேனியின் அக்னியில் பூத்தது. ஆதலால் இதற்கு இப்பெயர் வந்தது. சர்வசங்காரகாலத்துச் சிவமூர்த்தி தமது தேகத்தில் தூளனமாகக் கொண்டதாதலால் இதனை உலகர் அணிவர். இது கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூவகைப்படும். இவற்றுள் கற்பமே உயர்ந்தது. அக்கற்பமில்லாத காலத்துப் பின்னிரண்டும் உபயோகிக்கலாம். அவற்றுள் கற்பமாவது, நோயற்ற கபில நிறங்கொண்ட பசுவின் சாணத்தைத் தாமரையிலை முதலியவற்றில் மந்தரபூர்வமாக மண்முதலிய தூசு ஒழித்து எடுத்துப் பிண்டமாகச் செய்து, சுத்த இடத்தில் உலர்த்தி, மந்திரத்துடன் சிவாக்னியில் பஸ்மம் செய்தணிவது. அநுகற்பமாவது காட்டிலும் ஆற்றோரங்களிலும் உணர்ந்திருக்கிற பசுவின் சாணத்தைக் கல் முதலியன நீக்கிச் சிவாக்னியில் மந்திரபூர்வகமாகப் பஸ்மஞ்செய்வது. உபகற்பமாவது பஸ்மத்தை வஸ்திரத்தால் வடிக்கட்டிக் கோமூத்திரத்தால் நனைத்துப் பிண்டமாக்கி மறுபடி அக்னியால் தகிப்பது. இவ்வகை விபூதிகளில், வெண்மையுடன் இருக்கும் விபூதியே அஷ்ட ஐச்வரியங்களையும் தரும். நீலநிறங்கொண்டது பிணியை யுண்டாக்கும். ஆயுளைப் போக்கும். பொன்னிற விபூதி தரித்திரத்தைக் கொடுக்கும் என்பர். இவைகளை ஒழித்த விபூதியைச் சுட்டுவிரல், நடுவிரல், ஆழிவிரலினால் மூன்று வரைபட இடல் வேண்டும். அவ்வகை யிடுதல் பசுக்களின் ஆணவாதி மும்மலங்களைப் போக்குதற்கு அறிகுறியெனவும், சிவமூர்த்தி திரிபுரம், காமதகனம், சர்வசம்மாரம், ஆகிய முத்தொழில் செய்தனர் என அறிவித்தற்கெனவும் கூறுவர். இந்த நிர்மலமான விபூதியின் தோற்றம், சதாசிவமூர்த்தியின் ஐந்து முகத்திலும் ஐந்துபூதம் உண்டாய் நிவர்த்தியிற் கபிலவர்ண நந்தையும், பிரதிஷ்டையில் கிருஷ்ணவர்ண பத்திரையும், வித்தையில் இரத்தவர்ண சுரபியும், சாந்தியிற் சுவேதவர்ண சுசீலையும், சாந்தியதீதையில் சித்ரவர்ண சமனையும் உண்டாயின; இவற்றின் சாதிகளான பசுக்களின் கோமயத்தால் கற்ப அநுகற்ப முறைப்படி விபூதிசெய்து சிவதீக்ஷை பெற்றவர்கள் அணிவர் என்ப. இவற்றின் பெருமைகளை ஜாபாலோபநிஷத்து, காலாக்னிருத்ரோபநிஷத்து, சுவேதாச்வதா உபநிஷத்து, அத்ர்வ சிரோபநிஷத்து, வைகல்யோபநிஷத்து முதலியவற்றிலும், ஸ்மிருதியாதிகளிலும், மகாஸ்காந்தாதி புராணங்களிலும் ஆகமங்களிலும் பரக்கக்காண்க. ஸ்ரீமகுடாமத்திற் கூறியபடி விபூதிக்குரிய அதி தேவதையின் திருவுருவருமாறு: மூன்று நேத்திரங்களை யுடையவரும், மூன்று சிரங்களையுடைய வரும், ரௌத்ர த்ரிஹஸ்தம் உடையவரும் மூன்று பாதங்களை யுடையவரும், அக்னி நேத்திரங்களை யுடையவரும், விபூதியால் சண்ணித்த திருமேனியை யுடையவரும், தாண்டவ வாடம்பர முடையவரும், பயங்கரமானவரும், செந்நிறத்த மலர்களை அணிந்தவரும், காப்புக் கடவுளானவரும், மந்திர நாயகரும் ஆகியவர், நீற்றுக்கடவுள் என்பதாம். மேற்கூறிய விபூதியினை உத்தம திக்குகளாகிய வடக்கு கிழக்கு முதலிய திசைகளை நோக்கினவராய்ச் சிவமூர்த்தியையெண்ணி மௌனமாகவிருந்து அண்ணாந்தபடி பரமாணுவைப் போன்ற அளவும் பூமியில்விழாது தீக்ஷாவான்கள் ஜலத்துடனும், ஸ்திரீகளும் சந்நியாசிகளும் சலமின்றி உத்தூளனமுஞ் செய்க. இத்திருநீறு பவித்திரத்தினையும், சுசியினையும், வியாதி நாசத்தினையும் மோக்ஷத்தினையும், கங்காதீர்த்தத்தை யொத்த பரிசுத்தத்தினையும், சகல விஷத்தினைப் போக்குவதினையும், குரோத நாசத்தினையும், நல்ல சாந்தத்தினையும், மற்றும் ராக்ஷஸ பைசாசாதி தீமை யகற்றுதலையும், உலகவசீகரத்தினையும், மற்றும் அநந்த குணங்களையும் தரும். இவ் விபூதியினைப் பொன், வெள்ளி, சுத்த மட்பாண்டம் முதலியவற்றில் எழுந்தருளச்செய்து பரிமள மலர்களால் மணமூட்டி இடுக. இதனை அணியாததால் வருந் தீங்கினைப் புராணங்களால் உணர்க.

3. சாந்திகபஸ்மம் — பசுவைவிட்டுக் கோமயம் கீழ்வீழா முன்னம் எடுத்துப் பிரம்ம மந்திரத்தால் தகிப்பது. பௌஷ்டிகபஸ்மம் — அவ்வாறு பசுவினிடமிருந்து விழுங்கோமயத்தை ஷடங்க மந்திரத்தால் தகிப்பது. காமதபஸ்மம் — கீழ்

வீழ்ந்த கோமயத்தைப் பிராசாத மந்திரத்தால் தகிப்பது. (தேவி - பா.)

விபோதன் — தருமபக்ஷியைக் காண்க.

விப்பிரசித்து— திட்டத்துய்ம்னன் குமாரன்.

விப்பிரதரிசி — துரியோதனன் தம்பி.

விப்ரசித்தி — 1. தனுவிற்குக் காசிபரால் பிறந்த குமாரன். தேவி சிம்மிகி; இவன் குமாரர் வாதாபி, வில்வலன், ராகு, கேது, நமுசி, நாகன், சுவர்ப்பானன், புலோமன், வக்ரயோதி. இரண்யகசிபிற்கு மருமகன்.

2. பலியின் மந்திரி.

3. திதிபுத்திரனுகிய அசுரன். சத்தியால் இவனும் இவன் குமாரரும் கொல்லப்பட்டனர்.

விப்பிரதீகன் — சதாநீகனுக்குச் சேநாநாயகன்.

விப்பிரநாராயணர் — தொண்டரடிப்பொடியாழ்வாருக்கு ஒருபெயர். இவர் தாய் தேவதேவி. இவள் சூர்ப்பநகை யம்சம். கிருஷ்ணாவதாரத்தில் குப்ஜையாயிருந்து பிறகு தேவதேவியானவள்.

விப்பிரவாகு — இந்திரத்துய்ம்மன் என்னும் பாண்டியனுக்குக் குமாரன்.

விப்பிரன் — 1. ஓர் சிற்பி.

2. இரண்யரோமன் அல்லது இரண்யரேதயஸுக்குக் குமாரன்.

3. தருவனுக்குப்பேரன். சிஷ்டியின் குமாரன்.

விப்பிராசன் — சுகுருதி குமாரன். இவன் குமாரன் அணுகன். கௌசிகனைக் காண்க.

விப்பிராதன் — புருசுண்டியைக் காண்க.

விப்பிலகன் — சிவகணத்தவரில் ஒருவன்.

விப்ரதிபத்தி — வாதிதான் சொன்ன வசனத்தையும், பிரதிவாதியானவன் சொன்ன வசநத்தையும் உள்ளபடி அறியாமல் விபரீதமாக அறிதல். (சிவ - சித்.)

விமரிசன் — இவன் வேடராசனுய்க் குமுதவதி என்பவளை மணந்து மற்ற விரதங்கள் அனைத்தும் ஒழித்துச் சிவராத்திரி விரதம் ஒன்றுமே அநுட்டித்து வருகையில், இவன் மனைவி 'நீ இவ்விரதமொன்றையே யனுட்டிப்பதற்குக் காரணம் என்னை' என்றனள். வேடராசன் 'நான் முக்காலமும் உணர்வேன் உன் பொருட்டுக் கூறுகிறேன் கேள்: நான் பூர்வத்தில் ஒரு நாயாய்ப் பிறந்து பம்பை நகரத்துச் சிவாலயத்துப் பலி பீடத்தில் இருந்த அன்னத்தைக் கவரச்சென்றனன். அங்குள்ளவர்கள் அக்காலையில் என்னைத் துரத்த நான் பயந்தோடிக் கோயிலை வலமாக வருகையில் ஒருவன் அம்பெறியச் சிவாலயத்தில் செய்த தீபாராதனையையும், சிவமூர்த்தியையுங் கண்டு உயிர் நீங்கினேன். அன்று சிவராத்திரி ஆகையாலும், சிவதரிசனஞ் செய்தபடியாலும் வேடர் அரசாய்ப் பிறந்தனன்' என்றனன். மனைவி இதனைக் கேட்டு ஆயின் நான்யார் என்றனள். வேடராசன் 'நீ பூர்வத்தில் ஒருபுரு; இரைகொண்டு திரும்புகையில் ஒரு பருந்தால் துரத்துண்டு ஓடி மல்லிகார்ச்சுன சிகரத்தை வலம்வந்து துஜஸ்தம்பத்தில் இருந்து அப்பருந்து உன்னைக்கொல்லச் சந்நிதிக்கு எதிரில் விழுந்தனை. அன்று சிவராத்திரி. ஆகையால் உயிர்விட்டு நீ என் மனைவி ஆயினை. இவ்வகை நாம் இருவரும் ஆறுபிறவி எடுத்து எழாம்பிறவியில் மதுரைக்கு அரசனும் அரசியுமாகி முத்தியடைவோம்' என்றனன்.

விமலசுவாமி — சைந பதின்மூன்றுவது தீர்த்தங்கரர். இவர் காம்பிலி நாட்டில் இக்ஷுவாகு வம்சத்தில் கிருதவர்மாவிற்குச் செயசியாமையிடம் மாசிமாசம் சுக்கிலபக்ஷம் சதுர்த்தி உத்திரட்டாதியில் பிறந்தவர். இவர் உன்னதம் (௬0)வில் சுவர்ணவர்ணம் ஆயுஷ்யம் (௬0) லக்ஷவருஷம். இவர் காலத்துக் கணதரர் மேருமந்தரர் முதலானோரான ஐம்பத் தைவர்.' இவர் காலத்து அரசர் — தருமபலதேவர், சுயம்புவாஸுதேவர், மதுபிரிது வாஸுதேவர். இவர்காலத்துத்தான் வைஷ்ணவ மதம் உண்டாயிற்று என்பர் இச்சமயத்தவர்.

விமலம் — சிவசூர்யபீடம்.

விமலன் — 1. சிந்துதேசாதிபதி; கோபிகைகளைக் காண்க.

2. கத்ரு குமாரன், நாகன்.

3. சத்தியமன் குமாரன்.

4. சிவகிங்கரன். வெள்ளைச் சிங்க உருக்கொண்டு அநந்ததேவரிடம் இருப்பவன்.

5. ஒரு சூரியன்.

விமலா — நவசத்திகளில் ஒருத்தி.

விமலாதித்தன் — 1. விமலன் என்னும் சூரியன் பூசித்துத் தம்குலத்தில் குட்டநோய் வாராதிருக்க வரம்பெற்றவன். ஆதலால் விமலாதித்தன் என்று பெயர். (காசி கண்டம்.)

2. கங்கை கொண்ட ராஜேந்திர சோழனால் முறியடிக்கப்பட்டு அவள் மகளை

மணந்து தன்னரசு பெற்ற கீழைச் சளுக்கிய அரசன்.

3. மூன்றாங் குலோத்துங்கன் காலத்திலிருந்த அவனது தலைவனான மதுராந்தக பொத்தப்பி சோழனின் பட்டப் பெயர். (I. M. P.)

விமலை — 1. சிவசூர்யபீடத்து அமருஞ் சத்தி.

2. அயோத்திக்கு ஒரு பெயர்.

3. சிவசத்தியின் அம்சம். அல்லமனை மயக்கவந்த மாயை பொருட்டுப் பூமியில் வந்தவள்.

விமுடர் — பிரமன் சபையில் உள்ள தேவர்.

விமூர்த்தாரிஷபன் — திதிபுத்திரனாகிய ஒரு அசுரன்.

விம்சதி — திருதராட்டிரன் குமாரருள் ஒருவன்.

விம்பசாரகதை — இது ஒரு தமிழ் பௌத்த நூல். கௌதமபுத்தருடைய மாணாக்கரில் ஒருவனும், இராஜக்ருக நகரத்தரசனுமாகிய பிம்பஸாரனுடைய சரித்திரத்தைக் கூறுவதாம். இதன் நூலாசிரியர் வரலாறு முதலியன தெரியவில்லை.

வியங்கோள் — இது ஐம்பால் மூவிடங்களுக்குரித்தாய் வேண்டுகோள் முதலிய பொருள்தரும் முற்றுச்சொல்.

வியதீபாதம் — சந்திரன் பிரகஸ்பதியின் தேவியாகிய தாரையைக் கிரகிக்க, மித்ரனாகிய சூரியன் அவ்வாறு செய்தல் அடாது தாரையை விடுக எனக் கூற, சந்திரன் சூரியனைக் குரோதபார்வையுடன் பார்க்கச் சூரியனும் சந்திரனைக் கோபத்துடன் நோக்கினன். இவ்விருவர் கோபமும் ஒன்றாய்க் கலக்க, அக்கோபத்தீயினின்று ஒரு கோரபுருஷன் பிங்கள நிறங்கொண்ட கண்களை யுடையனும், நீண்ட உதடுகளையும் பெரும்பற்களையு முடையனும் வறிட்ட புருவமுடையனும் பிங்கள நிறங்கொண்ட மீசையும் ரோமமும் உடையனும், பிளவுபட்ட நீண்ட நாவையுடையனும், அதிபசி யுடையனுய்ப் பூமிமுழுதும் உண்ணும் விருப்புடையனும் பிறக்க இவனை அவர்கள் நோக்கி 'உனக்கு வியதீபாத நாமமுண்டாகுக, நீ சர்வயோகங்களினும் பதியாகுக; உன் யோகத்தில் எவரும் சுபகார்யம் செய்யாதிருக்க' என வரம் தந்தனர்.

வியந்தசேனை—ஒரு வித்தியாதர அரம்பை. (சூளா.)

வியப்பணி — ஒரு பயனைக் கருதியதற்குப் பகையாகிய முயற்சியைச் செய்தல். இதனை விசித்ராலங்காரம் என்ப. (குவல.)

வியம் — பிறர்க்குரியனவாகச் செய்யப்படும் பொன் முதலியவற்றின் செலவு. (சுக்-நீ.)

வியலூர் — செங்குட்டுவனால் வெல்லப்பட்ட ஊர். (சிலப்பதிகாரம்.)

வியன் — மித்திரவருமன் குமாரன். இவன் தாணியை மணந்து ஒரு யாகஞ்செய்ய நிலத்தை உழுதனன். உழுதகாலையில் உழுபடையில் பெண்குழந்தை ஒன்று தோன்றிற்று. அப்பெண் குழந்தையைத் தன் மனைவியிடம் கொடுத்து வளர்க்கையில் ஒரு குமாரன் பிறந்தனன். அக்குமானுக்கு வசுதாசன் எனப்பெயர் இட்டும், பெண்ணிற்குப் பதுமினி எனப்பெயர் இட்டும் வளர்க்கையில் பதுமினி ஒருநாள் பூஞ்சோலைக்குத் தனது தோழியருடன் சென்றனள். அச்சோலைக்குள் விளையாடிக் கொண்டு இருக்கையில் அங்கு எழுந்தருளிய வராகமூர்த்தி இவளைக் கண்டு மயல் கொண்டு வகுளமாலிகையென்னுந் தோழியைத் தூதுவிட்டு இவளை மணந்தனர். இவளே அலர்மேன் மங்கை (திருவேங்கட புராணம்.)

வியாக்ரகேது — சோழர் சரிதையிற் சித்திராதனைக் காண்க.

வியாக்கிரசருமர் — ஒரு ருஷி.

வியாக்கிரதுண்டன் — ஒரு பாரத வீரன்.

வியாக்கிரபதன் — ஒரு வேதியன். ஒழுக்கம் விட்டுக் காமத்தால் பிடியுண்டு ஒரு காட்டில் திருடுகையில் அரசன் தொடர்ந்து வர மறைந்தனன். அவ்விடம் தன்னைத் தொடர்ந்தவனைப் புலி விழுங்கக் கண்டு அச்சம் நீங்கி வியாக்கிரமாகிய புலியால் விழுந்தவன் பாதத்தைப் பற்றிச் சென்றதால் வியாக்கிரபத நாமத்துடன் இறந்து அப்பெயர் புனைந்ததால் நரகம் நீங்கிச் சிவபதம் அடைந்தனன்.

வியாக்கிரபாதமுநிவர் — மத்தியந்தன முநிவர் புத்திரர். இவர் சிவபூசையைக் கடைப்பிடித்துச் சிவபிரான் பிரத்தியக்ஷமாகத் தரிசித்துச் சிவமூர்த்தியிடம் சிவபூசைக்குப் பழுதில்லா மலரெடுக்க நகங்களிற் கண்களும், மரம் வழுக்காமல் ஏறப் புலிக்காலும் கையும் பெற்று, வசிட்டருடன் பிறந்தவளை மணந்து, உபமன்னிய முநிவரைப் பெற்றுத் தம் ஆச்சிரமத்து இருந்தனர். இவர் குமாராகிய உபமன்னியர்

வசிட்டரிடம் காமதேனுவின் பால் உண்ட ருசியால் அழ முநிவர் குழந்தையைச் சிவமூர்த்தியின் சந்நிதானத்து இட்டுக் குறை கூறினர். சிவமூர்த்தி குழந்தைக்குத் திருப்பாற்கடலை உண்பித்தனர். இவர் சிதம்பரத்தலத்து நடனதரிசனஞ் செய்ய வேண்டிச் சிவபூசை செய்திருக்கையில் அவ்விடம், பதஞ்சலி முநிவரைக் கண்டு மருவி அவருடன் நடனதரிசனங் கண்டு ஆனந்தம் அடைந்தவர். இதற்கு முன் பிறப்புக் கௌதமர் என்பது (திருச்செக் தூர்ப்புராணம்) (கோயிற் - பு.)

**வியாக்கிரமாசுரன்** — நீலிவநத்தில் இருந்து முநிவரை வருத்தி விஷ்ணுமூர்த்தியால் இறந்த அசுரன்.

**வியாக்கிரமுகன்** — சூரபதுமனுக்குச்சேநாதிபதி. மாயைக்கும் காசிபருக்கும் பிறந்தவன். (கந்தபுராணம்).

**வியாக்கிராதன்** — அரிபுரத்து அரசன்.

**வியாக்கிரன்** — 1. சண்முக சேநாவீரன்.

2. வீரபத்திரரால் கொலையுண்டவன்.

**வியாசநதி** — ஒரு தீர்த்தம்.

**வியாசபட்டர்** — முதலில் ஸ்மார்த்தவராய் இருந்து அப்பய்யதீக்ஷித சுவாமிகளால் சைவரான வேதியர்.

**வியாசர்** — 1. பராசருக்குச் சத்தியவதியிடம் பிறந்த குமாரர். சத்தியவதி பரிமளகந்தி என்பர்.

2. வேதத்தை வகுத்தனால் இப்பெயர் பெற்றவர்.

3. புராணங்களை அருளிச்செய்தவர்.

4. பாரதம் எழுத விநாயகரை வேண்டி அவர் எழுதப் பாரதங் கூறினவர்.

5. பிரமசூத்திரங் கூறியவர்.

6. தாயின் கட்டளைப்படி காசிராசன் பெண்களையும், அவர்களின் தோழியையும் கூடித் திருதராட்டிரன், பாண்டு, விதுரன் இவர்களைப் பெற்றவர். பாண்டவர்கள் வநத்தில் வசிக்கையில் ஆங்காங்குத் தோன்றித் தருமங் கூறினவர்.

7. நாரதர் சுகரைக்கண்டு ஞானோபதேசஞ்செய்து நீங்கிய காலத்துக் குமாரர் தம்மைவிட்டு நீங்கிச் செல்லுகையில் அவரைப் பின்தொடர்ந்து, சுக சுக என அழைக்கையில் மலைமுதலியன என் என்றன. அவ்வழியில் ஒரு தடாகத்தில் நீர் விளையாடிக் கொண்டிருந்த தேவ ஸ்திரீகள் சுகரைக்கண்டு நீரில் இருந்து எழுந்திராமல் வியாசரைக் கண்டபோது நாணி உடை உடுக்கக் கண்டு அப் பெண்களால் சுகர் தன்மையைக் கண்டு மீண்டவர்.

8. ஒருமுறை தனது தேகத்தைக் காக்க இவரைக் கண்டு ஓட்டமெடுத்த புழுவின் வரலாறு அறிந்து அப்புழு பல பிறவியெடுத்துக் கடைசியில் அவ்வியேயனுய்ப் பிறக்க அருள் செய்தவர்.

9. பாரதத்தில் அபிமன்னன் இறந்தைப்பற்றி விசனமுற்ற தருமரைத் தேற்றியவர்

10. இவருக்குக் கிருதாசியின் வழியாய்ச் சுகர் பிறந்தனர்; சுகரைக் காண்க.

11. தருமரைப் பாரத யுத்தத்தில் வந்த பாபம் தொலைய அச்வமேதஞ் செய்ய ஏவினவர். திருதராட்டிரன் பாண்டவரை நீங்கித் தவமேற்கொண்டு தவஞ் செய்கையில் அவ்விடம் வந்து அவனைத் தேற்றி இறந்த மைந்தரைத் திருதராட்டிரனுக்கும் அவ்விடம் திருதராட்டிரனைக் காணவந்திருந்த பாண்டவர்க்கும் கர்ணன், அபிமன்னன், அரவான் முதலியவர்களைச் சுவர்க்கத்தில் இருந்து அழைத்துக் காட்டியவர். அவர்களின் பத்தினியரைக் கங்கையில் வீழ்ந்து சுவர்க்கம் அடையக் கற்பித்தவர்.

12. நைமிசாரண்யமுநிவனிடம் கேசவன் பரமென்றுகூற, அவர்கள் காசிக்ஷேத்திரமடைந்து கூறுக என அவ்வகை கூறிக் கையும் நாவும் எழாது விஷ்ணுமூர்த்தியால் சிவமூர்த்தி பரமபதி எனக் கூறக் கேட்டுச் சிவத்துதிசெய்து கையு நாவும் பெற்றவர்.

13. இவர் காசியில் மாணக்கருடன் பிக்ஷையேற்கப் பிக்ஷை பெறாததுகண்டு ஓட்டை எறிந்து காசியைச் சபிக்க எண்ணுகையில் அன்னபூரணி அன்னமளிக்க உண்டவர். (காசிகண்டம்.)

14. இந்த வியாசர் வைவச்சுத மன்வந்தரத்தில் இருபத்தெட்டாவது துவாபரயுகத்தில் இருந்தவர். இவ்வகை அந்த மன்வந்தரத்தில் இருபத்தெட்டு வியாசர்கள் இருந்தனர் என்று புராணங்கள் கூறும். இவர் வேதங்கள் நான்கையும் சுமந்துவுக்கும், சைமினிக்கும், பைலருக்கும், சுகருக்கும், வைசம்பாயனருக்கும் உபதேசித்தனர். இவர் த்வீபத்தில் பிறந்தபடியால் த்வைபாயனர் என்றுபெயர். வியாசர்களின் பெயரைக் கூறுகிறேன். வைவச்சுதமன்வந்தரத்தில் அதாவது முதல் துவாபரயுகத்தில் சுவாயம்புமனு வியாசர், இரண்டா

வது துவாபரயுகத்தில் பிரசாபதி வியாசர், மூன்றாவது துவாபரயுகத்தில் உசன் வியாசர், நான்காவது துவாபரயுகத்தில் அந்தணன் வியாசர், ஐந்தாவது துவாபரயுகத்தில் சூரியன் வியாசர், ஆறுவது து-ல் வசிட்டன் வியாசர், ஏழாவது து-ல், இந்திரன் வியாசர், எட்டாவது து-ல், வசிட்டன் வியாசர், ஒன்பதாவது து-ல், அச்சுதன் வியாசர், பத்தாவது து-ல் திரிதாமன் வியாசர், பதினொன்றாவது து-ல், இடபன்வியாசர், பன்னிரண்டாவது து-ல், சுதேசன் வியாசர், பதிமூன்றாவது து-ல், தருமன் வியாசர், பதினான்காவது து-ல், தாக்கு வியாசர், பதினைந்தாவது து-ல், திரியாருணி வியாசர், பதினாறுவது து-ல், தனஞ்சயன் வியாசர், பதினேழாவது து-ல், கேமகன் வியாசர், பதினெட்டாவது து-ல், ருதுஞ்சயன் வியாசர், பத்தொன்பதாவது து-ல் பரத்துவாசன் வியாசர், இருபதாவது து-ல் கௌதமன் வியாசர், இருபத்தொன்றாவது து-ல் விவச்சுவான் வியாசர், இருபத்திரண்டாவது து-ல் சூக்ஷுமாயனன் வியாசர், இருபத்துமூன்றாவது து-ல், திரணவிந்து வியாசர், இருபத்துநான்காவது து-ல் வான்மீகி வியாசர், இருபத்தைந்தாவது து-ல் சத்தி வியாசர், இருபத்தாறுவது து-ல் பாராசரன் வியாசர், இருபத்தேழாவது து-ல் சாதுகன்னன் வியாசர், இருபத்தெட்டாவது து-ல் வியாதர் வியாசர், இருபத்தெட்டுக் கலியுகத்திலும் வியாசர்களைக் கூறுகிறேன். முதலாவது கலியுகத்தில், சுாதன் வியாசர், ௨-வது க-ல் தமனன் வியாசர், ௩-வது க-ல் சுகோத்திரன் வியாசர், ௪-வது க-ல் கங்கணன் வியாசர், ௫-வது க-ல், உலோகாகி வியாசர், ௬-வது க-ல் யோகி வியாசர், ௭-வது க-ல் இந்திரன் வியாசர், ௮-வது க-ல் சைகிடவ்யன் வியாசர், ௯-வது க-ல் திதிவாகன் வியாசர், ௧௦ வது க-ல் விடபன் வி-ர், ௧௧-வது க-ல் பிருகு வியாசர், ௧௨-வது க-ல் உக்கிரபதன் வியாசர், ௧௩-வது க-ல், அத்திரி வியாசர், ௧௪-வது க-ல் வாலி வியாசர், ௧௫-வது க-ல் கோதமன் வியாசர், ௧௬-வது க-ல் கிரீடன் வியாசர், ௧௭-வது க-ல் கோகன்னன் வியாசர், ௧௮ வது க-ல், காவாசான் வியாசர், ௧௯-வது க-ல் சிசுண்டி வியாசர், ௨௦-வது க-ல் சடாமலியன் வியாசர், ௨௧-வது க-ல் அட்டகாசன் வியாசர், ௨௨-வது க-ல் தாருகன் வியாசர், ௨௩-வது க-ல் இலாங்கலி வியாசர், ௨௪-வது க-ல் சுவேதன் வியாசர், ௨௫-வது க-ல் சூலி வியாசர், ௨௬-வது க-ல் திண்டாமுண்டி வியாசர், ௨௭ வது க-ல் சயிட்டுணு வியாசர், ௨௮-வது க-ல் சோமதன்மன் வியாசர், இவர்கள் வியாசர்களாய் இருந்து வேதம் முதலியவைகளை வெளியிடுவர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் நால்வர் மாணுக்கரும் இருப்பர். இவர்கள் சிரஞ்சீவிகள்.

வியாசன் — 1. ஒருவேடன்; சிவபூசையால் மகப்பேறும் மலரடியும் பெற்றவன்.
2. அளவுநூலாசிரியரில் ஒருவன்.

வியாதம் — ஒரு தீர்த்தம்.

வியாதன் — வியாஸமுனிவர்; உதயனனுடைய தந்தையினது குலத்திற்கு முதல்வர் (பெ-கதை.)

வியாதி — நகுஷன் குமாரன்.

வியாதிகொண்டால் நீங்காத நாள் — பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், மூப்பூரம், சுவாதி, கேட்டை, அவிட்டம், சதயங்களும், சதுர்த்தி, ஷஷ்டி, நவமி, துவாதசிகளும், ஞாயிறு, செவ்வாய், சனிவாரங்களுங் கூடின நாட்களில் வியாதிகொண்டால் நீங்காதாம்.

வியாதியஸ்தர் மருந்துண்ணல் — ஞாயிறு, திங்கள், புதன், வியாழன், வாரோதயமும், அசுவினி, ரோகிணி, மிருகசீரிடம், புநர்பூசம், உத்தரம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்தராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதியும், மேஷம், கர்க்கடம், கன்னி, துலாம், மகரமும், ௩-ம் இடம், ௭-ம் இடம், ௮-ம் இடம் சுத்தியும் மருந்துண்ண உத்தமம்; வெள்ளி, வாரோதயாம்சமும், சனிவாரமும் பூருவபக்ஷமும், இருத்தைகளும், சென்மத்திரயங்களுங், சந்திராஷ்டமமுமாகா; திருவாதிரை ஆயில்யம், மூலம், கேட்டையும், சதுர்த்தி, நவமி, சதுர்தசியும், ஞாயிறு, செவ்வாய், சனி வாரோதயமும், புண்ணறுத்தல், சுடுதல், காரமிடுதல், அட்டைவிடுதல் முதலானவை செய்ய உத்தமம். சென்மத்திரயங்களும் சந்திராஷ்டமும் விலக்கப்பட்டன. சடுதியான ரோகங்களுக்குக் காலநியமமில்லை. ஞாயிறு, செவ்வாய், புதன், சனி வாரோதயங்களும் சதுர்த்தி, அஷ்டமி, நவமி, தசமி, சதுர்த்தசித் திதிகளும், அச்சுவினி, மிருகசீரிடம், பூசம், அசுத்தம், சித்திரை, அநுஷம், மூலம்,

திருவோணம், அவிட்டம், சதயநட்சத்திரங்களும் மேடம், மிதுனம், சிங்கம், கன்னி, தனுசு, மகரம், மீனராசிகளும், பகற்காலமும் கோய்மாறிக் குறிக்க உத்தமம்.

**வியாத்தசித்த விசேஷியாசித்தன்** — சத்தம் அசித்தம் பண்ணப்பட்டுச் சாமான்யவத்தாகையினால், இதில் சாமான்ய வத்தென்கிற விசேஷியம் வியர்த்தமாகையினால் என்பர். இது மீமாம்சகன் மதக்கொள்கை (சிவ - சித்)

**வியாத்திகரணாசித்தன்** — அநித்யம் சந்தம், படம் பண்ணுகையாலே, இந்த எது சத்தம் என்கிற பக்ஷத்திற்குப் பின்னமாயிருக்கிற ஆகாரத்தையுடைய படத்திலே யிருக்கையினால் என்க. (சிவ - சித்)

**வியாத்த விசேஷணாசித்தன்** — இது இந்தப் பக்ஷத்திலே இறந்த வேதுவை முன்பின்னாகச் சொல்லுகை. இது மீமாம்சன் மதக் கொள்கை.

**வியாபினி** — 1. அமனஸ்கசத்தி.

2. சோடசகலா பிராசாதங்களுள் சமனைக்குக் கீழ்நிற்பது.

**வியாவிருத்தியபிதானன்** — ஆச்ரயம் போல என்கிற வியாப்தியுண்டாதல். (சிவ-சித்)

**வியாழமாலையகவல்** — இப்பொழுது மறைந்த இடைச்சங்கம் மருவிய நூல்.

**வியாழன்** — 1. தேவகுரு. பிரகஸ்பதியைக் காண்க.

2. ஒருஇருடி. இவர் சுகன் என்னும் வேளாளன் குமாரர்கள் பன்னிருவர் தம்மைத் தவநிலையில் இருந்து கெடுக்க எண்ணிக் கல் மண் முதலியவற்றால் துன்பப் படுத்தியதால் அவர்களைப் பன்றிகளாகச் சபித்தவர்.

3. சுக்கிரன் தவத்திற்குச்சென்று மீண்டு எவர் கண்ணிற்கும் புலப்படாமல் பத்து வருஷம் சயந்தியுடன் ரமித்திருக்கையில், தேவகுருவாகிய வியாழன் சுக்கிரனைப் போல் உருக்கொண்டு அவர்களுக்குப் பாஷண்டமதம் போதிக்கையில், சுக்கிரன் வந்து தான்குருவென்று கூற, மீண்டுமிவர் நான்தான் சுக்கிரனென்று அசுரர்களுக்கு நம்பிக்கை யுண்டாம்வகை செய்யச் சுக்கிரன்தான் அசுரர்களுக்குத் தான்தான் சுக்கிரனென்று எவ்வளவு கூறியும் கேளாததினால், அசுரர்களை 'நீங்கள் தேவர்களால் அபஜெயமடைக' எனக் கூறிய சாபத்தைக் கேட்டுத் தான் வந்த காரியம் முடிந்ததென்று மறைந்து தெய்வ உலகஞ் சென்றவர். (தே - பா.)

4. இது சூரியனுக்கு ஐந்தாவது வட்டத்திலுள்ள கிரகம். இது சூரியனுக்கு (48) கோடியே (30) மைல் நீளத்திற் கப்பாலிருந்து சூரியனைச் சுற்றி வருகிறது. இது (9) மணி (55) நிமிஷத்தில் தன்னைத் தானே சுற்றி வருகிறது. இது (12) வருஷங்களில் சூரியனைச் சுற்றுகிறது இதனை நான்கு உபகிரகங்கள் சுற்றுகின்றன. இதன் குறுக்களவு (56,500) மைல் இதற்கடுத்த வட்டத்தில் சநிச்கிரகம் இருக்கிறது. இது பொன்னிற முடையது. வெறுங்கண்ணுக்குப் புலப்படக்கூடியது.

**வியுஷிதாசீவன்** — இவன் பூருவம்சத்தரசன்; இவன் மகாயாகங்களைச் செய்து தர்மமாகச் செங்கோல் நடாத்தி உலகத்தைக் காத்துவந்தான். இவன் கக்ஷிவானுடைய புத்திரியாகிய பத்ரையென்பவளை மணந்தனன். இவன் சிலநாள் புத்திரரில்லாமலிருந்து க்ஷய ரோகபீடிதனாய் இறந்துபோக, மனைவி இவன்தேகத்தை விடாம லுடன் கட்டையேறத் துக்கமுறுகையில் அசரீரி வாக்கு ஒன்று 'ஓ பத்திரையே! விசனப்படவேண்டாம், எழுந்திரு, உனக்கு ஒரு வரம் கொடுப்பேன். நீ ருதுஸ்நானஞ் செய்தபின் உன்படுக்கையில் சதுர்த்தசி, அஷ்டமிதினங்களில் என்னுடன் சயனஞ் செய்வாய்' என்றது. இதைக் கேட்ட அக் கற்புக்கரசி அவ்வாறே செய்ய, இறந்த தன்கணவனால் அந்தப் பத்திரை சால்வ தேசத்தரசர் மூவரையும், மத்ரதேசத்தரசர் நால்வரையும் புத்திரராகப் பெற்றாள்.

**வியுஷ்டி** — 1. தோஷாவிற்குப் புட்பிபாரனால் பிறந்த குமாரன். தேவி புஷ்கரணி; குமாரன் சர்வதேசஸ்.

2. விபாவஸு வென்னும் வஸுவிற்கு உஷாவிடத்து உதித்த குமாரன்.

**வியூகம்** — 1. என்பது அணிவகுப்பு. அவ்வியூகம் உரம், இரண்டு இரக்கைகள், மத்தியம், பிரதிக்கிரகம், பிரிட்டம், கோடி, என்னும் எழுவகை யுறுப்பினதாய்த் தண்டம், மண்டலம், அசங்கதம், போகம், எனும் நால்வகைத்தாகித் தம்முண் மாறு கொண்ட பகையரசர் போர்ப்படைகளைத் தாங்கி நிற்றற்பொருட்டுச் சேனைகளை நிறுத்துவது. அது விரியான் முப்பதாம். அவை: பிறதாம், திருடகம், சியாவத்தம், குட்சி, பிரதிட்டம், சுப்பிரதிட்டம், சிரேயம், விசயம், சஞ்சயம், விசாலம், நிசயம், சூசி, தூணை, கன்னம், சமூமுகம், இராதசி

யம் சருவதோபத்திரம், தர்ச்சயம், அர்த்த சந்திரம், உத்தானம், சிருங்காடம், கர்க்கடகம், சிருங்காரி. காகபாரி, கோதிகா, கோமூத்திரிகை, கிஞ்சகம், சஞ்சாரி, சகடம், பந்தம் என்பனவாம். இவற்றின் விரிவுகளைக் காமந்தகம் என்னும் நூலிற் காண்க.

2 வியூகம் என்பது படைவகுப்பு. கிரௌஞ்சவியூகம் — ஆகாயத்தில் வரிசை வரிசையாகச் செல்லும் கிரவுஞ்ச பக்ஷி போல் நுண்ணிய கழுத்தினையும், இடை நிகராய பின்னிறகினையும், பருத்துத் திரண்ட இறகுகளையும் உடையதாக அமைக்கப்படும் படைவகுப்பு. சேனவியூகம் — பெரிய இறகுகளையும், இடைநிகராய கழுத்தினையும், பின்னிறகினையும், முகத்திற் கூர்மையையும் உள்ளதாக அமைக்கப்படும் படை வகுப்பு. மகரவியூகம் — நான்கு கால்களையும், நீண்டு பருத்த முகத்தினையும், இரண்டு உதடுகளையு முடைய தாக அமைக்கப்படும் படைவகுப்பு.

சூசிவியூகம் — கூரிய முகத்தினையும், ஒத்து நீண்ட தண்டத்தினையும், அதனடியில் தொளையினுமுடையதாக அமைக்கப்படுவது.

சக்கிரவியூகம் — ஒரே வழியினையும், எட்டு வகையான வளைவுகளையும் உடையதாக அமைக்கப்படுவது.

சருவதோபத்திரவியூகம் — நாற்புறத்தும் எட்டு வளைவுகளையுடையதா யமைக்கப்படுவது.

கோனவியூகம் — உட்செல்ல வழியில்லாததும், எல்லாப் பக்கத்தும் முகங்களையும், எட்டு வட்டங்களையு முடையது.

சகடவியூகம் — சகட வடிவமுடையது.

வியாள வியூகம் — பாம்பு வடிவமாக அமைக்கப்படுவது. (சுக் - நீ.)

வியூடோரஸ்கன் -திருதராட்டிரன் குமாரன்.

வியோகம் — நாடக உறுப்பின் விகற்பம்; இது தலைமக்கள் ஒருவரைத்தான் பலரைத்தான் உடைத்தாய்ச் சந்தி ஐந்து முடைத்தாய் தலைமைக்கண்ட மொருகண்டம் பெற்றதாய் வரும். (வீரசோ.)

வியோமகன் — விக்னநாயகன்.

வியோமசுதன் — தசாருகன் குமாரன். இவன் குமாரன் பீமரதன்.

வியோமநபர் — இச்சா சத்தியால் மூர்த்தி சாதாக்யத்து அமர்ந்து பஞ்சகிருத்யஞ் செய்யும் சிவாயசம்.

வியோமன் — 1. பிரதிகர்த்தாவின் குமாரன். தாய் ஸ்துதி.

2 தசாருகன் குமாரன்.

3 வியோமசுரனுக்கு ஒரு பெயர்.

4. கம்சன் சேனபதி; கண்ணனு லிறந்தவன்.

வியோமாசுரன் — 1. மயாசுரன் குமாரன். இவன் கம்சனால் ஏவப்பெற்றுக் கிருஷ்ணனிடத்து விளையாடுங் கோபாலரில் ஒருவனாய் விளையாடிக் கோபாலரைக் குகையில் அடக்கக் கண்டு கண்ணன் கோபித்துக் கழுத்தை நெருக்கிக் கொல்ல மாய்ந்தவன்.

2. இவன் சிந்தாசுரன் ஏவலால் நச்சுமாமர வுருவாய் நிற்க விநாயகருடன் இருந்த சிறுவர் இதன்கீழ் உதிர்ந்த கனிகளை உண்டு இறந்தனர். இதனைக் கண்ட பாலசந்திரமூர்த்தி அம் மரப்பொந்தில் தேன் கூடு இருக்கக் கண்டு குதித்தனர். அசுரன் உடனே விநாயகரை மூடிக்கொள்ள விநாயகர் மரத்தைப்பிளந்து அவனைக் கொன்று வெளிவந்தனர். (விநாயகபு.)

விரகன் — ஆரு மன்வந்தரத்து இருடி.

விரகாங்கர் — ஒரு இராஜா ; இருக்கு வேதத்தில் கூறப்பட்டவர். இவர்க்கு ஐந்து புத்திரர்.

விரகாங்கன் — ஒரு அரசன். இவன் புத்திரர் ஐவரும் சில வேதகீதங்களைச் செய்தனர்.

விரசகன் — சாவர்ணி மநு புத்திரன்.

விரசசோத்ரன் — சகாதேவன் குமாரன்: இவனுக்கு விரசுசோத்ரன் எனவும் பெயர்.

விரசன் — 1. கத்ரு குமாரன்.

2. வசிட்டருக்கு ஊர்சையிடம் உதித்த குமாரன்.

3. துவட்டாவிற்கு விரோசனையிடம் உதித்த குமாரன். தேவி விஷ்டாபதா. குமரர் சதசித் முதலிய நூற்றுவர். இவனுக்கு ஒரு குமாரியும் உண்டு. இவன் மகா கீர்த்திமான்.

4. சாதகர்ணியின் மாணுக்கன்.

விரசாநதி — இது வைகுண்டத்தில் உள்ள நதி. இது தேவியார் கைவிரலில் தோன்றி விஷ்ணுமூர்த்தி வேண்ட வைகுண்டத்தில் வைக்கப்பட்ட நதி. (ஸ்காந்தம்) இதில் மூழ்கினேர் விஷ்ணு சாரூபமடைவர்.

விரசாள்—எட்டாமன்வந்தரத்துத்தேவர்கள்.

விரசினவா—குரோஷ்டு குமாரன். எதுவிற்குப்பௌத்திரன். இவன் குமாரன் அவிர்பூ.

விரசு — உலகத்தில் தர்மத்தைப் பரிபாலிக்க விஷ்ணு மூர்த்தி நினைப்பில் சிருட்டித்த ஒரு அரசன். இவன் குமாரன் கருத்தமப் பிரசாபதி; இவன் தன் குமாரனுக்குப் பட்டமளித்துத் தவமேற் கொண்டவன்.

விரசை — 1. வைகுண்டத்திற் உள்ள நதி.

2. பூர்ணிமா என்பவர்க்குக் குமாரி.

3. ஒரு அரக்கி; மகோற்கடர் என்னும் விநாயக மூர்த்தியைக் கொல்ல நராந்தகன் ஏவலால் வந்து அவரை விழுங்கினவள். விநாயகர் இவள் வயிற்றில் இருந்தபடி நெற்றிக்கண்ணை விழித்தனர். அதனால் இவள் அத்தீ பொருது ஆறு எரி முதலிய வற்றின் நீரையுண்டு வெப்பந் தணியப் பெருது ஆகாயகங்கையை உண்ண மீதெழும்பினள். அதை அறிந்த விநாயகமூர்த்தி திருவடியால் உந்திப் பூமியில் தள்ள மாய்ந்தவள். (விநாயக புராணம்.)

4. நகுஷன் தேவி; பித்ருக்களைக் காண்க.

விரதமகாத்மியம் — விரதங்களை யநுஷ்டிப்பவர், காலையிலெழுந்து தம் கடைமைகளை முடித்து முன்னாளும் உபவாசியராய், குரு, சுக்ரர், அஸ்தம் உதயம் மூடங்களாகிய காலங்களையும், மலமாஸங்களையும் சிங்க மகா அத்தமனங்களைவும், விஷகண்ட முதலிய ஷட்கண்டங்களையும், தீயநாட்டங்களையும், தவிர்த்துக் குற்றமில்லாச் சுபத்தினமாகிய நாள்களில் விரதங்களைத் தொடங்கல் வேண்டும். சுமங்கலிகள் புருஷன் கட்டளையின்படி விரதங்களை யநுஷ்டித்தல் வேண்டும். அவ்வாறு அல்லாத நங்கை புருஷனை இழக்கிறதேயன்றி நரகத்தையும் அடைகிறாள். விரதம் தொடங்கும் நாளுக்கு முதனாள் முழுகி ஒருபொழுதுண்டு மறுநாள் ஸ்நானஞ்செய்து தானாதிகள் செய்து சங்கல்பஞ் செய்து ஜபம் பூசை முதலிய முடித்து வேதியரைப் பூசித்துத் தக்ஷிணை முதலியவை யதாசக்தி யளித்து நியமாகார முதலிய வுள்ளவராய் மாம்சாதிகள், தாம்பூலம், அப்யங்கனம், ரஜஸ்வலையர், சண்டாளர், பாபிகளைத் தீண்டாது, பெண்போகம் நீத்தல் வேண்டும். விரத பங்கம் நேரிடின் மூன்றுநாள் ஆகாரமின்றி யிருத்தல்வேண்டும். பிறகு பிராயச்சித்தம் செய்துகொண்டு மீண்டும் விரதம் தொடங்கல் வேண்டும். இவ்விரதம் பல. (க-வது) யாசிதம் அதாவது இருபகல் உணவு கொண்டிருத்தல். (உ வது) பாதக்கிரிச்சனம் - நல்லுணவு கொண்டிருத்தல். (௩-வது) பன்னகிரிச்சனம்-வில்வம் அரசு அத்தி இவைகளின் தளிர்களில் ஒன்றை நீரில் தோய்த்து உண்டிருத்தல். (௪-வது) சௌமியகிரிச்சனம் - ஒரு பகல் பிண்ணாக்கு, பால், மோர், நீர், பொரிமா இவற்றுள் ஒன்றை உண்டிருத்தல் (ரு வது) அதிகிரிச்சனம் - மூன்றுநாள் ஒவ்வொரு பிடி அன்னம் உண்டும், அது இன்றியும் இருத்தல். (சு-வது) கிரிச்சனுகிரிச்சனம் - இருபத்தொரு நாள் பாலே உண்டிருத்தல். (எ-வது) பிரசாபத்தியகிரிச்சனம் - மூன்றுநாள் காலை, மூன்றுநாள் இரவு, மூன்று நாள் இடைவேளை, மூன்று நாள் உணவின்மையுடன் இருத்தல். (அ வது) பார்ககிரிச்சனம் - பன்னிரண்டு நாள் உணவின்றியிருத்தல். (க வது) சாந்தபனகிரிச்சனம் - க-நாள் கோசலம், க-நாள் கோமயம், க-நாள் பால், க-நாள் தருப்பைநீர், க-நாள் ஊண் இன்றி இருத்தல். (க0-வது) மகசாந்தாபன கிரிச்சனம் - மேற்சொன்னவைகளில் ஒவ்வொன்றையே கொண்டிருத்தல். (கக-வது) சாந்திராயணம் - சுக்லபக்ஷத்து ஆதியாய் ஒவ்வொரு பிடி அன்னம் குறைத்துக் கிருஷ்ணபக்ஷ முதல் ஒவ்வொரு பிடி அன்னம் உயர்த்தியுண்டு முப்போதும் நீராடல். (கஉ-வது) வாலசாந்திராயணம் - சாந்திராயணத்தின் இரவில் நான்கு பிடி அன்னம் உண்ணல்.

1. விநாயக விரதம் — வைகாசிமாதத்துச் சுக்லபக்ஷத்து முதற்சுக்கிரவாரந் தொடங்கிச் சுக்ரவாரந்தோறும் விநாயகமூர்த்தியை யெண்ணி விரதமிருப்பது.

2 விநாயகசஷ்டிவிரதம் — இது கார்த்திகைமாதத்துக் கிருஷ்ணபக்ஷப் பிரதமைமுதல் மார்கழிமாதத்துச் சுக்லபக்ஷ சஷ்டியீருகிய (உக) நாள்களும் விநாயகரையெண்ணி அநுட்டிக்கும் விரதமாம். இதில் (உக) இழைகளாலாகிய காப்பு நாணினைப் புருஷர் பெண்கள் முறையே வல இடக்கரங்களில் அணிந்துவிரதசமாப்தியில் தக்ஷிணாதிகள் கொடுத்துப் போஜனாதிகள் அருந்த வேண்டும்.

3. கல்யாணசுந்தரவிரதம் — இது பங்குனிமாதத்து உத்திரநக்ஷத்திரத்து அநுஷ்டிக்குஞ் சிவவிரதம்.

4. சூலவிரதம் — இது தை மாசத்தில் அமாவாசையில் சிவாஸ்திரமாகிய திரிசூலத்தைப் பொன்னால் அல்லது வெள்ளி

யினால்செய்து சிவமூர்த்திப் பிரதிமையில் சாத்தி ஆராதித்து விரதமிருப்பது.

5. இடபவிரதம் — வைகாசிமாதத்தில் சுக்லபக்ஷ அஷ்டமியில் இடபாரூடராகிய சிவமூர்த்தியை யெண்ணி விரதமிருப்பது.

6. தேவிவிரதம் - சுக்கிரவாரவிரதம் — இது சித்திரைமாதத்துச் சுக்லபக்ஷத்துச் சுக்கிரவாரம் முதல் பார்வதிப் பிராட்டியாரை யெண்ணி விரதநோற்பது. இதில் சருக்கரை நிவேதநம் செய்தல்வேண்டும். இது சுக்கிரன் அநுட்டித்ததினம்.

7. ஐப்பசி உத்திரவிரதம் — ஐப்பசி மாதத்து உத்திரநக்ஷத்திரத்தில் பார்வதி தேவியாரை யெண்ணி நோற்பது.

8. நவராத்திரிவிரதம் — திதி விரதத்தில் கூறினோம். ஆண்டுக் காண்க.

9. கந்த சுக்ரவாரவிரதம் — ஐப்பசி முதற்சுக்கிரவாரந் தொடங்கி பிரதி சுக்கிரவாரந்தோறும் கந்தமூர்த்தியை யெண்ணி அநுட்டிக்கும் விரதமாம்.

10. கிருத்திகைவிரதம் — இது கார்த்திகை மாதத்துக் கிருத்திகை நக்ஷத்ரமுதல் கிருத்திகை தோறும் கந்தமூர்த்தியை யெண்ணி அநுட்டிக்கும் விரதம். இதில் உபவாசம் உத்தமம்.

11. கந்தசஷ்டி விரதம்—ஐப்பசிமாதம் சுக்லபக்ஷப்பிரதமை முதல் சஷ்டியீறாகிய ஆறுநாளும் பலாதிகள் மிளகு முதலியன உண்டு விரதமிருப்பது உத்தமம். கூடாதவர் ஒருபோதுணவுகொண்டு சஷ்டியில் உபவாசமிருப்பது நலம்.

12. வைரவவிரதம் - மங்கலவார விரதம் — தைமாதத்து முதல் செவ்வாய்க்கிழமைமுதல் பிரதி செவ்வாய்க்கிழமையிலும் அநுட்டிக்கும் விரதம்.

13. சித்திரைப் பரணிவிரதம் — இது சித்திரை மாதம் பரணி நக்ஷத்திரத்தில் வைரவமூர்த்தியை யெண்ணி அநுட்டிப்பது.

14. ஐப்பசிப் பரணிவிரதம் — இது ஐப்பசி மாதம் பரணியில் வைரவக்கடவுளை யெண்ணி அநுட்டிப்பது.

15. வீரபத்திரவிரதம் — இது செவ்வாய்க்கிழமைதோறும் வீரபத்திரக்கடவுளை யெண்ணிச் செய்யும் விரதமாம்.

16. நக்ஷத்திரபுருஷவிரதம்—சித்திரை மாதம் சோமவாரங்கூடிய மூலநக்ஷத்திரத்தில் பொன்மயமான லக்ஷ்மி நாராயண விக்கிரகங்களை ஸ்தாபித்துப் பூஜாதானங்கள் செய்தவர்கள் இஷ்டசித்திகளை அடைந்து விஷ்ணுலோகம் அடைவர். இது நாரதனுக்கு ருத்திரர் சொன்னது.

17. ஆதித்தியசயன விரதம் — அஸ்த நக்ஷத்திரங்கூடிய சப்தமியிலாயினும் ஆதிவாரம் அஸ்தநக்ஷத்திரங் கூடிய சங்கிரமணத்திலேனும் உமாமகேச்வர விக்ரகத்தைச் சூரியநாமங்களால் விதிப்படி பூசித்துத் தானதிகளைச்செய்யின் தங்கள் பிதுர்க்களுடன் சிவலோகத்தை அடைவர். இதுவும் நாரதருக்கு ருத்திரர் சொன்னது.

18. கிருஷ்ணாஷ்டமிவிரதம் — மார்க்கசிரிஷமாதம் முதல் (கஉ) மாதத்தில் (கஉ) கிருஷ்ணபக்ஷ அஷ்டமியில் சங்கரன் முதலியவர்களை விதிப்பிரகாரம் பூசித்துத் தானதிகளைக் கொடுத்தால் முத்தியடைவர். இதுவும் நாரதருக்கு ருத்திரர் சொன்னது.

19. ரோகணீ சந்திரசேகரவிரதம் — சோமவாரமாயினும், மிருகசிரிஷ நக்ஷத்திரமாயினும் வந்த பூர்ணிமையில் சிவமூர்த்தியை விதிப்படி பூசித்து, விதிப்படி தானதிகளைத் தரின் முத்தியடைவர். இதுவும் நாரதருக்கு ருத்திரர் சொன்னது.

20 சௌபாக்கியசயனவிரதம் — சித்திரைமாதம் சுத்ததிரிதியை பூர்வான்னத்தில் உமாமகேச்வர விக்ரகங்களுக்குத் திருக்கல்யாணம் செய்வித்து விதிப்படி பூஜாதானங்களைச் செய்யின் சிவலோகம் அடைவர். இது மச்சமூர்த்தி மநுவுக்குச் சொன்னது.

21. அனந்ததிரிதியா விரதம் — சிராவணசுத்ததிருதியை முதல் (கஉ) திதிகள். இந்த விரதத்தை அநுசரித்துக் கௌரியை விதிப்பிரகாரம் பூஜித்துத் தானதிகளைச் செய்யின் சிவலோகம் அடைவர். இது பார்வதிக்குச் சிவன் சொன்னது.

22. ரஸகல்யாணதிரிதியா விரதம் — இது மாசிமாதம் சுத்ததிரிதியை முதல் ஆரம்பித்துக் கௌரியைவிதிப்படி பூஜிப்பின் சத்தியுலகம் அடைவர். இது பார்வதிக்குச் சிவன் சொன்னது.

23. ஆர்த்தானந்த திரிதியாவிரதம் — இது உத்திராடம், பூராடம், மிருகசிரிடம், அஸ்தம், மூலம் இவற்றுள் எதிலாயினும் வரும் சுக்லபக்ஷத் திரிதிகையில் ஆரம்பித்து உமாமகேச்வரகல்ப பிரகாரம் பூசிக்கத் தேவியுலகம் அடைவர். இது பார்வதிக்குச் சிவன் சொன்னது.

24. அக்ஷயதிரிதியா விரதம் — இதை வைசாகசுத்ததிரிதியையில் ஆரம்பிக்கவேண்டும். இதை ஆசரித்தவர்கள் ராஜசூரிய பலத்துடன் புண்ணியலோகத்தை அடைவர். இது பார்வதிக்குச் சிவன் சொன்னது.

25. சாரஸ்வதவிரதம் — இந்த விரதம் தாராபல சந்திரபல யுக்தமான ஆதிவாரத்தில் ஆயினும், தான் ஏதேனும் விரதத்தைச் செய்யப்புகுந்த சுபதினத்திலாயினும் ஆரம்பிக்கவேண்டும். இதைப் 13. மாதம் செய்யவேண்டியது. இதில் சரஸ்வதி பூசிக்கப்படுவேள். இதை ஆசரிப்பவர்கள் வித்தியாபிவிருத்தியும் பிரமலோக பிராப்பதியும் அடைவர். இது மச்சனால் மநுவுக்குச் சொல்லப்பட்டது.

26. கிரகணஸ்நாந விரதம் — எவனுடைய ஜந்மராசியில் கிரகணம் பிடித்திருக்கிறதோ அப்படிப்பட்டவன் அந்தக கிரகண காலத்தில் விதிப்பிரகாரம் விரதமிருந்து தானுதிகளைச் செய்யின் கிரகண பீடை அடையாது. இது மச்சனால் மநுவுக்குச் சொல்லப்பட்டது.

27. சப்தமிஸ்நபன விரதம் — இது பாலுண்ணும் சிசுவுக்கு வரும் பிராணபாய ரோகபரிகாரத்தின் பொருட்டுச் சூரியனையும் ருத்திரனையும் விதிப்படி பூசித்து விரதமிருப்பது. இது சப்தமியில் அனுசரிப்பது.

28. கல்யாணவீமத்துவாதசிவிரதம்— இது மாகசுத்த தசமியில் ஆரம்பித்து ஏகாதசியை உபவாச காலமாகச்செய்து விதிப்படி விஷ்ணுவைப் பூசித்துத் துவாதசியில் விஷ்ணு பூசையும் பிராமணர்கட்குப் போஜனதானுதி செய்விப்பவர்கள் விஷ்ணுபதவியடைவார்கள். இது பீமனுக்குக் கிருஷ்ணன் சொன்னது.

29. அனங்கசயன விரதம் — இதை அஸ்தம், புனர்பூசம், பூச நக்ஷத்திரங்களில் ஏதேனும் ஒன்று வந்த ஆதிவாரத்தில் ஆரம்பித்து விதிப்பிரகாரம் (கங) மாதம் செய்யவேண்டியது. பிரமனுக்குச் சிவன் சொன்னது.

30. அசூன்யசயனவிரதம் — சிராவண சுத்த த்விதியையில் விஷ்ணுமூர்த்தியை எண்ணிச் செய்யும் விரதம்.

31. அங்காரகவிரதம் — அங்காரகனை அங்காரக வாரத்தில் பூசிப்பது.

32. சுக்ரபூஜாவிரதம் — இதில் சுக்கிரனைப் பிரயாணுதி காலத்தில் எதிரில் உண்டாகும் சுக்கிரபீடை நோரதிருக்க விதிப்பிரகாரம் பூஜைசெய்யின் கிரகபீடைகள் எல்லாம் நீங்கும். இது பிரமனுக்குச் சிவன் சொன்னது.

33. கல்யாணசப்தமி விரதம் — சுக்ல பக்ஷ சப்தமியில் ஆதிவாரம் வரின் அது கல்யாணசப்தமி எனப்படும். இதில் (கங) மாதம் சூரியனைப் பூசிக்கவேண்டும். பிரமனுக்குச் சிவன் சொன்னது.

34. அசோகசப்தமி விரதம் — மாசி மாதம் சுத்த பஞ்சமிமுதல் சுத்த சப்தமி வரையில் (கங) மாதம சூரியனைப் பூசிக்கவேண்டும்.

35. பலசப்தமி விரதம் — மார்க்கசிரிஷ சுத்த பஞ்சமிமுதல் சுத்த சப்தமி வரையில் சூரியனைப் (கங) மாதம் பூசிப்பது.

36. சர்க்கராசப்தமி விரதம் — இது மாகசுத்த சப்தமியில் செய்யப்பட்டது. இதில் (கங) மாதம் சூரியன் உபாசிக்கப்படுவன்.

37. கமலசப்தமி விரதம் — சைத்திர சுத்த சப்தமி முதல் (கங) மாதம் சூரியன் பூசிக்கப்படுவேன்.

38. மந்தார சப்தமி விரதம் — மாக சுத்த பஞ்சமிமுதல் சுத்த சப்தமிவரை (கங) மாதம் சூரியனைப் பூசிப்பது.

39. சுபசப்தமி விரதம் — ஆஸ்வயுஜ சுத்த சப்தமிமுதல் (கங). மாதம் சூரியனைக் குறித்துச் செய்வது.

40. விசோக துவாதசி விரதம் — ஆஸ்வயுஜ சுத்த தசமிமுதல் சுத்த துவாதசி வரையில் (கங) மாதம் லக்ஷுமி நாராயணர்கள் பூஜிக்கப்படுவர்.

41. சிவசதுர்த்தசி விரதம் — மார்க்கசிரீஷ சுக்ல திரியோதசியில் ஒருவேளை புசித்துச் சதுர்த்தசியில் ஆகாரமின்றிச் சிவனைப் பூசித்துச் சுவர்ண ரிஷபத்தைத் தானஞ் செய்து பௌர்ணமியில் புசிக்கவேண்டும். இப்படி (கஉ) மார்க்கசிரிஷ மாதங்களில் பிரதி சதுர்த்தசியைக் கோமூத்திரம், கோமயம், கோக்ஷீரம், சோததி, கோகிருதம், குசோதகம், பஞ்ச கவ்யம், வில்வம், கற்பூரம், அருரு, யவை, எள்ளு, முதலியவைகளை மாசக கிரமமாகப் புசித்து விதிப்படி விரதத்தை முடித்தால் தம் பித்ருக்கள் சகோதரர் செய்த பாவங்கள் அழிதலேயன்றி (கOO) அசுவமேத பலனும் சிவலோக பிராப்தியு முண்டாம்.

இது நாரதருக்கு நந்தி சொன்னது. இது தம்பதிகள் அனுசரிக்க வேண்டியது.

42. பலத்தியாக விரதம் — மார்க்கசீரிஷ சுக்ல அஷ்டமி துவாதசி சதுர்த்தசி இந்தத் திதிகளில் எதிலாயினும் சுபமாதங்களில் ஆரம்பிக்க வேண்டியது. இது நாரதனுக்கு நந்தி சொன்னது.

43. ஆதிவாரநக்க விரதம் — சனிவாரத்தில் ஒருவேளை புசித்து, அஸ்த நக்ஷத்திரங்கூடிய ஆதிவாரத்தில் விதிப்படி சூரியனை ஆராதித்து இரவில் போஜனஞ் செய்யவேண்டியது. இவ்விதம் ஒரு வருஷம் செய்தால் சூரிய உலகம் அடைவார்கள். இது நாரதருக்கு நந்தி சொன்னது.

44. சங்கராந்தித்யாபன விரதம் — இதை விஷுவத் புண்ணியகாலத்திலாயினும், உத்தராயண புண்ணிய காலத்திலேயாயினும் ஆரம்பித்து, ஒருவருஷம் சூரியனை ஆராதிக்கவேண்டியது. இது சப்தத்வீபங்களோடுகூடிய பூதானபலனைத் தரும். இது நாரதனுக்கு நந்தி சொன்னது.

45. விபூதிதுவாதசி விரதம்—சயித்திர வைசாக கார்த்திக மார்க்கசீரிஷ பால்குண ஆஷாடமாதங்களில் சுக்ல தசமியில் ஒருவேளை புசித்து, மறுநாள் நிராகாரனாய்த் துவாதசியில் பிராமணர்களுக்குப் போஜனஞ் செய்விக்கிறதாகப் பிரதிக்கினை செய்து ஒரு வருஷம் அவ்வகை செய்து விதிப்படி விஷ்ணுவைப் பூசித்துக் கடைசியில் லவண பர்வத யுக்தமான சையாதானங்கள் செய்யின் 1000 யுகம் வரையில் சுவர்க்கத்தில் வசிப்பர். இது நாரதனுக்கு நந்தி சொன்னது.

46. மதனத்துவாதசி—சித்திரை மாசம் சுக்கிலபக்ஷம் துவாதசியில் ஒரு மட்பாத்திரத்தில் பழம், கரும்பு, கற்கண்டாதிகளை நிரப்பி, பலவித நிவேதனங்கள்செய்து, பின்பு, வேறொரு கற்பாத்திரத்தில் வெல்லம் நிரைத்து, மட்பாத்திரத்தின் மேலிட்டு, அதிலுள்ள வெல்லத்தின் நடுவில் வாழையிலைபரப்பி, மதன விக்ரகத்தை ரதிசகிமாய் வைத்துப் பூசித்தல்வேண்டும். அதுவன்றி, மதனகேசவர்களைப் பலவிதமாகச்செய்வித்து, அக் கேசவவிக்ரகத்தை மன்மதனுமத்தால் பூசிக்க வேண்டும். இவ்விரதம் அனுட்டிப்பவர் துவாதசியில் ஆகாரமின்றி இருந்து திரயோதசியில் அரிபூசை செய்ய வேண்டும். இவ்வகை 13 சுக்ல துவாதசி விரதஞ்செய்து கடைசி துவாதசியில் கிருததேனு தானஞ்செய்து தன் பத்தினியோடுகூடிய பிராமணனுக்கு மன்மத பதுமையையும், வெள்ளைப் பசுவையும் தானஞ்செய்து, வெள்ளை எள், பசு நெய், பாலன்னம் இவற்றால் மதனப்பிரீதியாய் ஓமஞ்செய்து, பிராமண போஜனஞ் செய்விக்க வேண்டியது. இப்படிச் செய்வித்தவன் விஷ்ணுபத மடைவன்.

## விரதங்கள் — பிரதமை முதலிய வாகக் கூறப்படும்

47. பிரதமை - நவராத்ரி பிரதமை — இது புரட்டாசிமாதம் சுக்லபக்ஷப் பிரதமையில் தேவியை நோக்கி யுபாசிக்கும் விரதம். இது அஸ்தநக்ஷத்திரம் கூடின் விசேஷமென்று தேவிபுராணம் கூறும். இது ஒன்பது நாட்கள் அநுஷ்டிப்பது. இதை அநுஷ்டிக்கின் துர்ப்பிக்ஷம் ஒழியும்.

48. பலிபூஜனப் பிரதமை — இது பலியின் உருவமெழுதிப் பலியைப் பூசித்துப் பிராமணர்களுக்குத் தக்ஷிணை அன்னாதிகள் அளிப்பது.

49. கோக்கிரீடனப் பிரதமை—சோமராஜன் பசுக்களை இம்சித்தலால் சந்திரனைக் காணுகிற பிரதமையில் பசுக்களையலங்கரித்துத் தூப தீபங்கள் கொடுத்து வாத்ய கோஷங்களுடன் அவற்றின் சாலைகளில் சேர்ப்பிப்பின் துன்ப நீங்கி வேண்டிய சித்தியடைவர்.

50. த்விதியை — கார்த்திகை சுக்ல த்விதியை - (யமத்விதியை) இது யமனைத் தன் வீட்டிற்கு விருந்திற்கு வர யமுனை பிரார்த்தித்த நன்னாளாதலின் இதில் தன் அண்ணன் தேவிக்கு வஸ்திராபரணங்கள் பூட்டிக் களிப்பித்து அவள் கையாலிட்ட உணவுண்டவர் யம்பய நீங்கி ஆயுள் பெறுவர்.

51. பர்க்ருத்விதியை — இதுவும் கார்த்திகை சுக்லபக்ஷ த்விதியையில் அனுஷ்டிப்பதே. இதில் யமுனை யமனை அவன் தேவியுடன் தன்னிடம் அழைத்துவந்து விருந்திட்ட நன்னாள். இதில் உடன் பிறந்தாள் தன் அண்ணனை அவன் மனைவியுடன் தன் வீட்டிற்கு அழைத்து வந்து விருந்திட்டு நமதூதர் முதலியோரையும் யமனையும் பூசித்தல் வேண்டும். இவ்வாறு பூசிப்போர் யமபயம் நீங்கிச் சுவர்க்கம் பெறுவர்

52. த்ருதியை — அக்ஷய திருதியை விரதம் — இது, வைகாசிமாதம் சுக்லபக்ஷ திருதியையில் அநுஷ்டிப்பது. இந்நாளில் எண்ணெ யிட்டுக் கொண்டு ஸ்நானஞ் செய்து தர்ப்பணாதிகள் முடித்து, விஷ்ணுவை யெண்ணிப் பூசிக்க வேண்டும்.

53. பாசுராம ஜயந்தி — இதுவும் வைகாசிமாதம் சுக்கில பக்ஷம் திருதியையில் ரேணுகா தேவியிடம் பாசுராமர் பிறந்த திதி. இதில் விரதமிருக்கில் நலமுண்டாம்.

54. அக்ஷயதிருதியை — இது வைமாசி மாத சுக்லபக்ஷத்தில் அநுஷ்டிக்கும் விரதம். இந்நாளில் பிதுர் தர்ப்பணாதிகள் முதலிய செய்து விரதமிருத்தல் வேண்டும். இது கிருதயுகாதி, சிவ, விஷ்ணு பூசை செய்தல் வேண்டும்.

55. ரம்பா விரதம் — இது ஆனிமாதம் சுக்கில திருதியையில் அநுஷ்டிப்பது.

56. சுவர்ண கௌரி ஷோடச கௌரி விரதம் — இது ஆவணிமாதம் சுக்கில திருதிகையில் அநுஷ்டிப்பது. இது தேவியைச் சோடச வுபசாரத்துடன் கலசத்தில் ஆவாகித்துப் பூசிப்பது. இது தேவ கன்னியர் அநுஷ்டிக்கக் கண்ட சந்திரபாணல் அநுஷ்டிக்கப் பட்டது. ஸ்ரீ ஸ்காந்தபுராணத்தில் கூறப்பட் டிருக்கிறது.

57 சதுர்த்தி—சங்கஷ்டஹா சதுர்த்தி விரதம் — இது ஆவணிமாதம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தியில் அநுஷ்டிப்பது. பொன் முதலியவற்றால் கணேசத் திருவுருச் செய்து, கலசந் தாபித்து ஆவாஹித்துச் சந்திரனுக்கு அர்க்கியம கொடுத்துப் பூசித்துக் கணேசரை நோக்கித் தமது சங்கஷ்டம் நீக்கவேண்டிப் பலாகாராதிகளும் மற்றும் வைத்துப் பூசிப்பது. இவ் விரதம் கந்தமூர்த்தியால் ருஷிகளுக்குக் கூறப்பட்டது. பின் கிருஷ்ண மூர்த்தியால் பாண்டவர்க்கும் கூறப்பட்டது.

58. தூர்வாகணபதி விரதம் — இது கார்த்திகை மாதத்துச் சுக்கில சதுர்த்தியில் விநாயகத் திருவுருவை அறுகின்மீது எழுந்தருளுவித்துப் பூசிப்பது.

59. சித்தி விநாயக விரதம் — புரட்டாசி மாதம் சுக்கில சதுர்த்தியில் விநாயக விரதம் அநுட்டிப்பது. இது பிரகஸ்பதியால் கூறப்பட்டது. இது தருமபுத்திரரால் அநுஷ்டிக்கப் பட்டது. ஷை சுக்ல சதுர்த்தியில் சந்திரதரிசனம் நிந்திக்கப்பட் டிருக்கிறது. இத்தோஷத்தால் சியமந்தக மணியின்பொருட்டுக் கிருஷ்ணன் அபவாதத்தினீக்கத்திற்காக விநாயக பூசைசெய்தனர்.

60. பஞ்சமி — சித்திரை மாதத்திய சுக்கில பஞ்சமி—விஷ்ணுவைப் பூசித்துப் புஷ்பவஞ்சலிவிட்டு ஆராதனை செய்து விரதமநுஷ்டிப்பது.

61. நாக பஞ்சமி விரதம் — இது ஆவணி மாதம் சுக்கிலபக்ஷ பஞ்சமியில், சதுர்த்தியில் ஒருவேளை உணவுகொண்டு மறுநாள் ஐந்தலையுள்ள நாகத்தின் உருவைப்பொன் முதலிய லோகத்தாலாயினும் மண்ணாலாயினும் செய்வித்து விதிப்படி பூசித்துத் தக்ஷிணாதிகள் கொடுத்து அஷ்ட நாகங்களையுந் துதிப்பது.

62. நாகதஷ்ட விரதம் — இதுவும் ஆவணிமாத சுக்கிலபக்ஷ பஞ்சமியில் மேற்கூறியவாறு, மாதம் மாதம் அநுஷ்டித்து முடிந்த ஆவணி மாதத்தில் பூர்த்திசெய்து விஷ்ணுப்பிரீதி செய்வது. இதைச் செய்தவர்கள் நாகபய நீங்கி நலம் அடைவர்.

63. ருஷிபஞ்சமி விரதம் — இது புரட்டாசி மாதத்தில் சுக்லபக்ஷத்தில் மத்யானத்தில் பஞ்சமி திதி யிருக்கையில் அநுஷ்டிப்பது. இதில் ருஷிபஞ்சமி விரதத்தின் பொருட்டுப் பஞ்சகவ்ய, யமுனை பூசைகள் முடித்துக் கச்யபர், அத்ரி, பரத்வாஜர், விச்வாமித்ரர், கௌதமர், ஜமதக்னி, வசிட்டர், அகஸ்தியர், அருந்ததி முதலியவர்களையும், சகல ருஷிகளையும் பூசித்து உத்யாபனஞ் செய்வது. இது ரஜஸ்வலையானவள் போஜன பாத்திரங்களைத் தீண்டுவதாலும், புருஷன் ரஜஸ்வலையானவளுடன் பேசுவதாலும், தீண்டுவதாலும், உண்டான பாபம் நீங்க அநுஷ்டிப்பது. இதனை வைதர்ப்ப தேசத்தவனான உதங்க நாம வேதியன் மருமகள் அநுஷ்டித்தனள். பின்னும் சுமித்திரன் மனைவி ருது பீடையுடன் பாண்ட ஸ்பர்சனஞ் செய்து பெண்ணாகி இவ்விரதத்தால் சாபம் நீங்கினள்.

64. மாகசுக்லபஞ்சமி விரதம் — மாசி மாதம் சுக்லபக்ஷ பஞ்சமியில் விஷ்ணுவை நோக்கி விரதமிருப்பது.

65. ஷஷ்டி — லலிதா விரதம் — புரட்டாசிமீ சுக்லபக்ஷ ஷஷ்டியில் பரமேச்வரியை யெண்ணி விரதமிருந்து உத்யாபனஞ் செய்வது. இது கூர்ஜ்ஜா தேச வழக்கு.

66. கபிலா ஷஷ்டி — இது புரட்டாசிமீ கிருஷ்ணபக்ஷஷஷ்டியில் சூரியன்,

குஜன் ரோஹிணி நக்ஷத்திரத்துடன் கூடிய நாள். இதில் சூரியன பூசிக்கப் படுவன். பின்னும் கபிலைப் பசுவை ஆபரணுதிக ளால் அலங்கரித்துப் பூசிப்பது.

67. சம்பா ஷஷ்டி விரதம் — மார் கழி அல்லது புரட்டாசி மாதத்திய சுக்ல ஷஷ்டியில் அநுஷ்டிப்பது.

68. சப்தமி — சைத்ரசுக்ல சப்தமி விரதம் — இது சித்திரை மாதத்தில் சுக்ல சப்தமியில் கங்கையைப் பூசித்து விரத மிருப்பது.

69. சீதலா விரதம் — இது ஆவணிமீ கிருஷ்ணபக்ஷ சப்தமியில் அநுஷ்டிப்பது.

70. அமுக்தாபரண விரதம் — இது புரட் டாசி மாதத்திய சுக்கிலபக்ஷ சப்தமியில் அநுஷ்டிப்பது. உமாமஹேச்வர பூஜை செய்து பன்னிரண்டு முடிகொண்ட கிர ந்தி பூசை யியற்றி வந்தித்வ நிவர்த்தி யாய்ப் புத்ரபௌத்ர விர்த்தியின்பொருட் டும் எல்லா சௌபாக்கிய சித்தியின்பொரு ட்டும் தக்ஷிணகரத்தில் நோன்பு முடிகொ ண்ட கயிற்றினைக் கட்டிக் கொள்வது. இது கிருஷ்ணமூர்த்தி தருமபுத்திருக்குக் கூறியது.

71. சாஸ்வதி விரதம் — இது ஐப்பசி மாதத்தில் சுக்லபக்ஷ சப்தமியில் அநுஷ் டிப்பது. உதய வியாபினியாகிய மூல நக்ஷத்திரத்தில் புஸ்தக ஸ்தாபனஞ் செய்து திருவோண நக்ஷத்திரத்தில் முடித்தல் வேண்டும்.

72. ரதசப்தமி விரதம் — இது மாசி மாதம் சுக்கிலபக்ஷ சப்தமியில் அநுஷ்டிப் பது. இதில் அருணோதயமாகிய தினத் தில் திதித்வயமாகி ஷஷ்டி சப்தமி யோக மாகிய பத்மயோகத்தில் பொன், வெள்ளி, தாம்ரபாத்திரமாகிய பாண்டத்தில் நெய் விளக்கிட்டுச் சிரத்தில் தாங்கிக் கொண்டு சூரியனை மனத்தில் தியானித்து மந்திரஞ் செபித்துத் தீபத்தைச் சலத்தில் விட்டு (ஏ) எருக்கிலை அல்லது (ஏ) இலந்தை இலைகளைத் தலையிற்கொண்டு கங்கை முத லியன சுமந்தவரும் புண்ய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து விரதமிருப்பது. பொன் முதலியவற்றால் ரதஞ்செய்து அதில் சூரி யனையும் சாரதியையும் பிரதிஷ்டித்துப் பூசித்துத் தானங்கள் செய்து விரத மிருப் பது. இவ்வாறு செய்யின் ஒரு பிறவியில் செய்த பாவம் நீங்குமெனக் கர்க்கர் கூறு கின்றனர்.

73. அசலா சப்தமி — மாசிமாத சுக்கில பக்ஷ சப்தமியில் அநுட்டிப்பது.

74. அஷ்டமி — சைத்திர சுக்கிலாஷ் டமி விரதம் — இதில் பவாநி யாத்திரை காசிகண்டத்திற் கூறப்பட்டது.

75. அசோகாஷ்டமி விரதம் — சித் திரை மாதத்தில் புதனோடு புனர்பூச நக்ஷத்ரங்கூடிய அஷ்டமி திதியில் விடியற் காலையில் ஸ்நாநாதிகள் முடித்து விரத மிருந்தவர்கள் வாஜபேயபலம் அடைவர்.

76. சதபல விரதம் — இது ஆவணி மாத கிருஷ்ணபக்ஷ அஷ்டமியில் அநுட் டிப்பது. இதில் ரோகிணி நக்ஷத்திரம் கூடின் நலம். புதவாரம் சோமவாரம் கூடினும் நலம். இதில் விரதமிருப்பவன் பிரேதயோனி யடையினும் நீங்குவன்.

77. கிருஷ்ண ஜன்மாஷ்டமி — இது ஆவணிமீ கிருஷ்ணபக்ஷ அஷ்டமியில் ரோஹிணி நக்ஷத்ரம் கூடிய தினத்தில் கிருஷ்ணமூர்த்தியைப் பற்றி யுபாசிப்பது.

78. ஜேஷ்டா விரதம் — புரட்டாசிமீ சுக்லபக்ஷ அஷ்டமியில் ஜேஷ்டா தேவி யை யுபாசித்து அநுட்டிப்பது. இது அலக்ஷ்மி பரிஹாரத்தின்பொருட்டு அநுட் டிப்பது. இது மூன்றுதினம் அநுஷ்டி கின் உத்தமம்.

79. தூர்வாஷ்டமி விரதம் — இது புரட்டாசிமீ சுக்லபக்ஷ அஷ்டமியில் அநு ஷ்டிப்பது. வெண்ணிறமாய்ப் படர்ந் வடக்குச் செல்லும் அறுகால் உன்னைப போல் வேரோடிச் சந்ததி வளர்ந்திருக்க வென்று சிவமூர்த்தியையும் கணேச மூர்த் தியையும் பூசிப்பது.

80. மஹாலக்ஷ்மி விரதம் — இது புரட் டாசிமீ சுக்லாஷ்டமி முதல் பதினறுநாள் லக்ஷ்மியைநோக்கி விரதமிருப்பது இதனை அநுட்டிப்போர் எல்லா நலமும் பெறுவர்.

81. மஹாஷ்டமி விரதம் — இது ஐப் பசிமீ சுக்லபக்ஷ அஷ்டமியில் தக்ஷயஞ்ஞ நாசனியாகிய காளியை யெண்ணி யநுட் டிப்பது.

82. நவமி — ஸ்ரீராமநவமி விரதம் — இது சித்திரைமீ சுக்லபக்ஷ நவமியில் அநுஷ்டிப்பது. இத் திதி மத்யான்ன வியாபினியாய்ப் புனர்பூச நக்ஷத்ரம் கூடிய தாயின் நலம்.

83. சாஸ்வதி புஸ்தகமண்டல விர தம் — இது ஐப்பசிமீ சுக்ல பக்ஷ நவமி யில் சாஸ்வதியை யெண்ணிப் பூசிப்பது.

84. அக்ஷயநவமி விரதம் — இது கார்த்திகை மாதம் சுக்கிலபக்ஷத்தில் நவமி திதியில் அநுஷ்டிப்பது. இது துவாபர யுகாதி இந்நாளில் கூச்மாண்டன் என்னும் அசுரன் விஷ்ணுமூர்த்தியால் கொல்லப் பட்டான். இத்தினமுதல் (௩) நாள் துளசி தளத்தைக் கைக்கொண்டு விரதமிருக்கின் கன்னியாதான பலத்தை யடைவர். இத் தினத்தில் துளசியை விஷ்ணுவிற்கு விவாஹநடத்தில் பெரும்புண்ணிய மடைவர்.

85. தசமிவிரதம் — தசஹாதசமி விரதம்—இது ஆனிமீ சுக்கிலபக்ஷ தசமியில் அநுஷ்டிப்பது. இதுஸம்வச்சரத்தின் முகமாகக் கூறப்பட்டிருக்கிறது. இத்தினத்தில் ஒருநதியை யடைந்து ஸ்நானதானாதிகள் செய்து நியமத்துடனிருப்பவர் பத்துவித பாபங்களிலிருந்து நீங்குவர். ஆதலால் இதற்குத் தசஹரதசமி யென்று பெயர்.

86. திக்தேவதாவிரதம்—இது ஆடிமீ சுக்லதசமியில் அநுஷ்டிப்பது. இதில் திக்தேவதைகளை அந்தத் திக்குகளில் ஸ்தாபித்துப் பூசித்தல் வேண்டும்.

87. தசாவதாரவிரதம் — இது புரட்டாசிமீ சுக்லதசமி (விஜயதசமி) யில் தசாவதார சுவர்ணபிரதிமை செய்வித்துப் பூசை முதலியன செய்து விரத மிருப்பது.

88. விஜயதசமி — இது ஐப்பசிமீ சுக்லபக்ஷ தசமியில் தாரகோதயம் விஜயமென்று கூறப்படுதலால் விஜயதசமியெனப்படுகிறது. இத்தினத்தில் வெற்றியை விரும்பினவர்கள் தேவியைப் பூஜிக்க. வன்னிபூஜையும் இத்தினத்தில் உண்டு

89. ஏகாதசி — வஞ்சுள ஏகாதசி விரதம் அருணோதயத்தில் தசமி சம்பந்தமாய்ச் சூரியோதயத்தில் ஏகாதசி வியாபித்திருத்தல் நலம் என்பர். இத்தினத்தில் ஔதும்பர பாத்திரமாகிய அத்திமரத்தால் செய்த பாத்திரத்தில் நீர்கொண்டு விரத சங்கற்பஞ் செய்துகொண்டு விரதமிருந்து விஷ்ணு மூர்த்தியைப் பூசித்து அந்நாளில் ஆகாரம் முதலியன இல்லாமலும், பகலிற் றூங்காமலும், இரவில் விஷ்ணுவை மந்திர பூர்வகமாகப் பூசித்துப் பாரன்னம் புசியாமலுமிருந்து மறுநாள் விஷ்ணுவைப் பூசித்துத் துளசிதளத்துடன் நீர்த்தார்ப்பணம் பெருமாளுக்குத் தர்ப்பணஞ்செய்து நெல்லிக்கனியுடன் பாரணஞ் செய்யில் சுத்தியடைகிறான். இத்தினத்தை "தத்ராசுதா திகை ஏகாதசி யுதாத்வாதசி உன்மீலினீ ; த்வாதசி வர்த்ததே சேத்ஸாவியஞ்ஜுலி" என்பதால் வஞ்சுள ஏகாதசி யென்பர்.

90. சுக்லகிருஷ்ண ஏகாதசி — மார்க்கசீர்ஷ சுகலபக்ஷத்தாயினும், கார்த்திகையிலாயினும் ஏகாதசி வியாபிப்பது. இதில் தசமியில் ஒருவேளை புசிப்புள்ளவனாய் ஏகாதசியில் நியமத்துடன் கணேசரைச் சோடச உபசாரத்துடன் பூசித்துச்சதுரச்ர வேதிகையில் காரெள் பரப்பி அதன்மீது பதினாறு இதழ்க்கமலமெழுதி அதி நடுவில் கும்பம் நிறுத்தி அதில் நிறையக் காரெள் நிரப்பிக் கறுப்பு வஸ்திரம் தரித்து, இரண்டு அரசந் தளிர் பஞ்சரத்ன மிட்டுச் சங்கர்ஷணாதியரையும், கணமாத்ருகைகளையும், க்ஷேத்ரபாலகரையும், பூசித்து மற்றப்பக்கத்தில் சுக்ல ஏகாதசியின் பொருட்டு வெள்ளெள் பரப்பி, வெள்ளை வஸ்திரம் கலசத்திற் கணிந்து, மேற்கூறிய தேவகணங்களைப் பூஜித்துக் கும்பத்தை யெடுத்து விட்டு லக்ஷ்மி நாராயணனை அவனது அஷ்ட லக்ஷ்மிகளுடனும் பரிஜனங்களுடனும் ஆவாகித்துப் பூஜித்து, திக்பாலகர்களையும், மற்றத் தேவர்களையும் பூசித்துத் தானாதிகள் செய்து விரதமிருந்து மறுநாள் ஸ்நானாதிகள் முடித்து ஓமாதிகள் செய்து தேவதாஹவிகொடுத்து விரதமிருந்து மறுநாள் பாரணஞ் செய்க. இவ்வாறு செய்தவர் விஷ்ணுபதம் பெறுவர்.

91. கோபத்மவிரதம் — ஆடிமீ சுக்லபக்ஷ ஏகாதசியில் அநுஷ்டிக்கப் படுவது. பசுக்கள் கட்டுமிடத்தில் கோமயத்தால் மெழுகிட்டுப் பச்சரிசி மாவில் (௩௩) இதழ்க்கமலம் எழுதிப் பஞ்சவர்ணத்தால் சோபிக்கச் செய்து பூசித்து அதன் மத்தியில் சர்வதோபத்ர மண்டலத்தில் விஷ்ணு பிரதிமை பொன்னால் செய்வித்து விதிப்படி பூசித்து ஹோமஞ் செய்து கன்றுடன் கூடிய பசுவினை ஆசார்யருக்குத் தானஞ் செய்து வேதியர்க்கு அன்ன மளிப்பது. இதை அநுஷ்டிப்போர் சர்வகாரியங்களையும் அடைவர்.

92. கார்த்திகை சுக்ல ஏகாதசி விரதம் — இதில் நியமத்துடன் விஷ்ணு ஸ்தாபனஞ் செய்து பூசிப்பது. இது பீஷ்மர் சரசயனத்திலிருந்து பாரத முடிவு வரைக் கண்ட நாளாதலின் இதில் பீஷ்ம பஞ்சக விரத மிருப்பர்.

93. மார்கழி ஏகாதசி விரதம் — இது மார்கழிமாதம் கிருஷ்ணபக்ஷ ஏகாதசியில் அநுஷ்டிப்பது. இந்நாள் தேவர்க்கு இடுக்கண்புரிந்த முராசுரனை விஷ்ணு கொன்று தேவரைக் களிப்பித்த நாள். இதில் உதயம் ஏகாதசி, மத்யம் த்வாதசி, அந்தியம் திரயோதசி உத்தமம். இந்நாளில் ஒருநாள் விரதமிருக்கின் ஆயிரம் ஏகாதசி பலம் உண்டு.

94. வைதாணி விரதம் — இது மார்கழிமீ சுக்லபக்ஷ ஏகாதசியில் அநுஷ்டிப்பது. இது பீஷ்மர் சாசயனத்தி லிருந்த நாள். இதில் பசுவின் வாலைப் பிடித்துக்கொண்டு தர்ப்பணாதிகள் செய்து கோபூசைசெய்து விரத மிருப்பது.

95. துவாதசி — சைத்ரசுக்லத்வாதசி விரதம்—இது சித்திரைமாதத்தில் சுக்கிலபக்ஷ துவாதசியில் விரதமிருப்பது. இது எல்லா நலமும் தரும்.

96. வைசாக சுக்லத்வாதசிவிரதம் — வைகாசிமாத சுக்லபக்ஷ த்வாதசியில் விரதமிருப்பது. இதில் விஷ்ணுவைப் பூசிக்கின் எல்லா நலமும் அடைவர்.

97. ஆஷாட சுக்லத்வாதசி விரதம் — ஆடிமீ சுக்ல த்வாதசியில் விஷ்ணுவையெண்ணிச் செய்வது. இதை அநுஷ்டிப்போர் சகல சித்தியும் பெறுவர்.

98. சிராவண சுக்லத்வாதசி விரதம்— ஆவணிமீ சுக்ல த்வாதசியில் விரத மிருப்பது. இதில் பவித்ராரோபணஞ் செய்து விரதமிருப்பது.

99. வாமன ஜயந்தி விரதம் — இது புரட்டாசிமீ சுக்லபக்ஷ த்வாதசியில் திருவோண நக்ஷத்திரத்துடன் கூடிய நாள். இந்நாளில் தேவர் பொருட்டுப் பலியையடக்கத் திரிவிக்ரம அவதாரங் கொண்ட வாமன மூர்த்தியைப் பூஜித்து விரதமிருப்பது.

100. க்ஷீராப்தி சயன விரதம் — இது கார்த்திகைமீ சுக்ல த்வாதசியில் அநுஷ்டிப்பது. இதில் லக்ஷ்மீ நாராயண பூஜை செய்து விரதமிருப்பது. இதில் விஷ்ணுமூர்த்தி க்ஷீராப்தி சயனத்திலிருந்து பிருந்தாவனத்தில் எல்லாத் தேவர்களாலும் பூசிக்கப்பட்டனர்.

101. திரயோதசி — ஜயபார்வதி விரதம் — இது ஆடிமீ சுக்லபக்ஷ த்ரயோதசியில் அநுட்டிப்பது.

102. கோதிராத்ர விரதம்—இது புரட்டாசிமீ சுக்லபக்ஷ த்ரயோதசியில் அநுஷ்டிப்பது.

103. அசோகாதிராத்ர விரதம் — ஐப்பசிமீ சுக்லத்ரயோதசியில் அநுஷ்டிப்பது.

104. மகாவாருணி விரதம் — இது சித்திரைமீ கிருஷ்ணபக்ஷ த்ரயோதசியில் அநுஷ்டிப்பது. இது சநிவாரமும் சதய நக்ஷத்திரமும் கூடின் மகாமக வாருணி யென்று கூறப்படும். இது கிரிகோடி பலந்தருவதாம்.

105. சநித்திரயோதசி பிரதோஷ விரதம் — இது கார்த்திகை, ஆவணி மாதங்களில் நேரிடின் அதியுத்தமதின மென்பர். இந்நாள் இந்திரன் நமுசியையும் விருத்திராசுரனையுங் கொன்று சிவபூசை செய்து சித்திபெற்ற நாள். இதில் சுக்லபக்ஷமாயின் விசேடம். இதில் விதிப்படி சிவபூசை செய்து விரதமிருக்கின் சர்வ பலன்களையு மடைவர். இதில் (கடனிவாரணத்தின் பொருட்டும் ஆயுராரோக்யத்தின் பொருட்டும்) செவ்வாய்க்கிழமை நலம். இந்நாளில் விரதமிருந்து சூர்ய அஸ்தமனத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகையும் பின் மூன்றே முக்கால் நாழிகையுமாகிய பிரதோஷ காலத்தில் சிவதரிசனஞ் செய்து நந்திமா தேவரையடைந்து, பின்னின்று அவரது பீஜஸ்பரிசம் செய்து, அவரது இரண்டு கொம்புகளுக் கிடையில் சிவதரிசனஞ் செய்யில் மிக வுத்தமம். ஏனெனில் பிருதிவியிலுள்ள தீர்த்தங்களெல்லாம் பிரதோஷ சமயத்தில் சிவதரிசனத்தின் பொருட்டுக் கோவிருஷணத்தை யடைந்திருக்கின்றன என்று புராணங்கள் கூறியிருக்கின்றன. பின்னும் முசிப்பையும், வாலினையுக் தொட்டுத் தொழுதால் பலமதிகம். இந்த விரதம் இருபத்து நான்குதரம் அநுட்டித்தவர்கள் வேண்டும் சித்திகளைப் பெறுவர்.

106. பக்ஷப் பிரதோஷ விரதம் — இது கிருஷ்ணபக்ஷ, சுக்லபக்ஷங்களில் சிவபூசை, உபவாசம், அக்னிகார்யம் செய்து விரதமிருப்பது. இதனை அநுட்டிப்போர் எல்லா நலமும் அடைவர். சநித்திரயோதசிப் பிரதோஷ விரதத்தில் கூறியது கொள்க.

107. அநங்க த்ரயோதசி விரதம் — மார்கழி சுக்லபக்ஷ த்ரயோதசியில் அநுட்டிப்பது.

108. சதுர்த்தசி — சைத்ர சுக்ல சதுர்த்தசி விரதம் — இது சத்தியைக் குறித்து சித்திரைமாதம் சுக்லபக்ஷ சதுர்த்தசியில் விரதமிருப்பது. இது யமபயத்தை நீக்கும்.

109. சிராவண சுகல சதுர்த்தி விரதம் — ஆவணி சுக்லபக்ஷத்தில் சதுர்த்தசி இராத்திரியில் வியாபித்திருப்பது விசேஷம்.

110. சைத்ர கிருஷ்ண சதுர்த்தசி விரதம் — சித்திரைமாத கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் சிவசந்நிதியில் ஸ்நானஞ் செய்யில் அத்தீர்த்தம் கங்கைக்கு நேர் ஆகையால் இதை அநுட்டிப்போர் பிரேதத்வம்வராது நீங்குவர். சர்வபலமும் அடைவர்.

111. நிருசிம்ம ஜயந்தி — இது வைகாசிமீ சுக்லபக்ஷ சதுர்த்தசியில் பிரதோஷ சமயத்தில் பகல் நிசாமுகத்தைச் சமீபிக்குஞ் சமயத்தில் அநுட்டிப்பது. அவ்வேளை நிருசிம்மமூர்த்தி பிறப்பு. இதில் சோமவாரங் கூடில் நலம். இந்நாளில் விரதம் ஆயிரம் த்வாதசி பலனுண்டு. இதில் ஸ்வாதிநக்ஷத்திரம் கூடில் மிகு புண்யம். இந்த விரதத்தை வாசுதேவன் என்னும் வேதியன் அநுட்டித்துப் பிரகலாதனாகப் பிறந்தான்.

112. அநந்த சதுர்த்தசி விரதம் — இது புரட்டாசிமீ சுக்லபக்ஷம் சதுர்த்தசியில் அநுஷ்டிப்பது. இது முதலில் யமுனை பூசைசெய்து பிறகு ஒரு நூலில் பதினான்கு முடியிட்டு முடியொன்றுக்குக் கிரந்தி பூஜை செய்து பின் அநந்த பூசை விஷ்ணு அஷ்டோத்தரத்தால் பூசித்து நோன்புக் கயிற்றைத் தக்ஷிண கரத்தில் கட்டிக் கொண்டு விரதமிருந்து பாரணை செய்து பிராம்மண போஜன முதலியன செய்து இஷ்டசித்தி பெறுவது.

113. கதளீ விரதம் — புரட்டாசிமீ அல்லது கார்த்திகை, மாசி, வைகாசி இம் மாதங்களில் சுக்லபக்ஷ சதுர்த்தசியில் வாழை மரத்தடியில் உமாமகேச்வர பூசை செய்து விரதமிருக்கின் சித்தி பெறுவர்.

114. நரக சதுர்த்தசி விரதம் — இது ஐப்பசிமீ கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் விடியற்காலத்தில் மங்கள ஸ்நானஞ் செய்தல் வேண்டும். தைலத்தில் லக்ஷ்மியையும், ஜலத்தில் கங்கையையும் ஆவாகித்து ஸ்நானஞ் செய்து தர்ப்பணாதிகள் செய்யின் யமபயத்தினின்று நீங்குவர். இதனைக் கார்த்திகை சுக்லபக்ஷத்துச் சதுர்த்தசியில் செய்யும்படி கூறியிருக்கிறது. இதில் புது வேஷ்டி பூஷணம் முதலியன செய்து தரிப்பர். இத் தினத்தில் விஷ்ணு திரிவிக்ரம ஸ்வரூபராய் மகாபலியின் மூவுலகத்தை மூன்று அடியால் அபகரித்தபோது அவன் மூன்று நாள் தன்பொருட்டுத் தீபதானம் மூவுலகத்தாரும் செய்யக் கேட்டுக் கொண்டபடி வரம் தந்ததினால் இந்நாளில் மூன்றுதினம் தீபமிடுவர். இதனால் இப் பண்டிகை தீபாவளி யெனப்படும்.

115. வைகுண்ட சதுர்த்தசி விரதம் — இது கார்த்திகை மாதம் சுக்லபக்ஷத்துச் சதுர்த்தசியில் அநுஷ்டிப்பது. இந்நாளில் கிருதயுகத்தில் வாரணாசியில் மணிகர்ணிகையிலிருந்த (ஆயிரம்) தாமரை மலர்களைக் கொண்டு விஷ்ணுமூர்த்தி சிவபூசை செய்து அருச்சிக்கையில் நாடகப் பிரான் ஒரு மலரை மறைக்க விஷ்ணுமூர்த்தி தமக்குத் தாமரைக் கண்ணனென்ற பெயரிருத்தல் கருதித் தம் கண்ணைப் பெயர்த்து அருச்சிக்கச் சிவமூர்த்தி சக்கரம் பிரசாதித்த நாள். இதில் விரதமநுட்டிப்போர் சகல சித்தியும் பெறுவர். (சநத்குமார சங்கிதை).

116. மகாசிவராத்ரி விரதம் — மாசி மாதக்கடையில் அமாவாசைவருங்கிருஷ்ண பக்ஷ சதுர்த்தசியில் அநுட்டிக்கும் விரதம். இது மகாப் பிரளய முடிவில் சிவமூர்த்தியைப் பரமேச்வரி நான்கு சாமத்திலும் பூசித்துப் பேறுபெற்றது போல உலகரும் இந்நாளில் பூசிக்க வரம் பெற்றநாள். இச் சிவராத்திரி மாக சிவராத்திரி எ-ம், யோக சிவராத்ரி எ-ம், நித்யசிவராத்திரி எ-ம், பக்ஷசிவராத்திரி எ-ம், மாதசிவராத்திரி எனவும் ஐவகைப் படும். இவற்றுள் மாக சிவராத்ரி — மாசிமாதத்துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியில் வருவது. இதனை வருஷசிவராத்ரி யெனவுங் கூறுவர். யோக சிவராத்ரியாவது — சோமவாரத்தில் உதய காலமுதல் அறுபது நாழிகையும் அமாவாசை யிருப்பதும், அவ்வாரத்திரவு சூரியன் அத்தமனமுதல் இராமுழுதும் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி யிருப்பதுமாம். இதனை வாரசிவராத்திரி யெனவுங் கூறுவர். நித்திய சிவராத்திரியாவது வருஷத்திலுண்டாம் பன்னிரண்டு மாதங்களிலுண்டாகும் கிருஷ்ணபக்ஷ சுக்ல பக்ஷங்களில் சதுர்த்தசி வருவது. பக்ஷசிவராத்திரியாவது —

தைமாதத்திய கிருஷ்ண பக்ஷ பிரதமை
முதல் (கரு) நாட்கள்வரையில் நாடோறும்
ஒரு வேளையுண்டு (கச) ஆம் நாளாகிய
சதுர்த்தசியில் விரதமிருப்பது. மாதசிவ
ராத்திரியாவது — மாசி மாதத்தில் கிரு
ஷ்ண சதுர்த்தசியும், பங்குனி சுக்ல திரு
தியையும், சித்திரை கிருஷ்ண அஷ்டமி
யும் வைகாசி சுக்ல அஷ்டமியும், ஆனி
சுக்ல சதுர்த்தசியும், ஆடி கிருஷ்ண பஞ்
சமியும், ஆவணி சுக்லாஷ்டமியும், புரட்
டாசி சுக்ல திரயோதசியும், ஐப்பசி சுக்ல
த்வாதசியும், கார்த்திகை சுக்ல சப்தமியும்,
கிருஷ்ணஷ்டமியும், மார்கழி சுக்ல திருதி
யையுமாம். இதில் உத்தமோத்தமமாவது-
சூர்யாஸ்தமனம் வரையில் திரயோதசி
யிருந்து நீங்க இரவுமுழுதும் மறுநாட் பகல்
முழுதும் சதுர்த்தசி யிருப்பது. உத்தம
சிவராத்திரியாவது— சூரியாஸ்தமனத்திற்
குப் பின்னும் இரவில் முன் பத்துநாழிகை
சதுர்த்தசி வியாபித்திருப்பது. மத்திம சிவ
ராத்திரியாவது — உதயமுதல் மறுநாளுத
யம்வரை அதாவது பகலிரவு (௬0) நாழி
கைவரும் சதுர்த்தசியும், சூரியன் அஸ்தமி
க்குமுன் வரும் சதுர்த்தசியுமாம். அதமசிவ
ராத்திரியாவது—இரவிலிருபது நாழிகை
யிருந்த சதுர்த்தசியை அமாவாசை தொடர்
வதாம். இதில் சிவபூசை முதலியன
செய்யின் தீமையுண்டாம். இதின் விரத
முதலியவற்றைக் காமிகாதி ஆகமத்திற்
காண்க. இவ்விதம் அநுஷ்டித்தவர் அச்வ
மேத பலம் பெறுவர். இதில் வேடன்
அபுத்தி பூர்வமாக விரதமிருந்து அவனும்
மான்களும் முத்தியடைந்தனர். இதில்
சுகுமாரன் என்னும் வேதியன் பெருங்
கொடுமை செய்து சிவதர்சனஞ்செய்து
முத்திபெற்றனன்.

117. பௌர்ணமி — சித்திராபௌர்
ணமை — சித்திரையீ பௌர்ணமி விசே
ஷம். இதினும் சித்திரை நக்ஷத்திரம்கூடின
விசேஷம். இதில் சித்திரவேட்டிகள்
தானஞ்செய்து விரதமிருக்கின் நலம்.
பௌர்ணமி—சநி, ஞாயிறு, வியாழங்
களில் வரின் விசேஷம். வைசாக பௌர்
ணமி விரதம் விசேஷம். ஆனி மாதத்
திய பௌர்ணமி அல்லது அமாவாசை
விசேஷம்.

118. வடசாவித்திரி விரதம் — ஆடி
மாதத்திய பௌர்ணமியில் கோபத்மவிர
தம் — இதில் விஷ்ணுவிரதம். இந்நாளில்
கோகிலா விரதம் — இதனை வடநாட்
டார் அநுஷ்டிக்கின்றனர். ஆவணி பௌர்
ணமியில் ரக்ஷாபந்தனம். புரட்டாசியீ
பௌர்ணமியில் உமாமகேச்வரவிரதம்—
இதில் யதாசக்தி பொன்னாலும் வெள்ளி
யாலும் உமாமகேச்வர விக்ரகங்கள் செய்
வித்து இரண்டு கலசம் தாபித்து அதில்
பிரதிமைவைத்துப் பூசை முதலியனவும்
அருச்சனையுஞ் செய்து பதினைந்து முடி
யுள்ள நோன்புக் கயிறு குங்குமத்தில்
தோய்த்து முடிகளை விதிப்படி பூசித்து
வலக்கரத்தில் அணிந்துகொள்ளல் வேண்
டும். இவ்விரதம் (கரு) வரு' அநுட்டிக்கின்
சர்வாபீஷ்டமடைவர். இதனை விஷ்ணு
பிரமாதிகள் அநுஷ்டித்தனர்.

119. ஐப்பசி பௌர்ணமி — கௌ
முதீ ஜாகராவிரதம் — இது உத்தரதேசத்
தில் அநுஷ்டிப்பது. இதில் லக்ஷ்மிவிரதம்
விசேஷம்.

120. கார்த்திகை பௌர்ணமி—சிவா
லயங்களில் திரிபுரோற்சவவிரதம். கார்த்
திகை நக்ஷத்திரத்திற்கு முன்னால் பரணி
நக்ஷத்திரத்தில் சாயுங்காலம் தீபத்தில்
அக்னிகார்ய மூலமாய் மகாலிங்க மூர்த்
தியை ஆவாகனஞ்செய்து பூஜித்து
வைத்து மறுநாள் சாயுங்காலத்தில் பிரம்ம
ஸ்தானத்துத் தீபம் முன்னும் சோமா
ஸ்கந்தர் பின்னுமாக எழுந்தருளச்செய்து
கொண்டு தீபத்தைச் சுஷ்கதீப தண்டத்
தில் வைத்துச் சமஸ்காரப்படுத்தி யெரிந்த
வுடன் தண்டத்தைச் சேதித்துவிட வேண்
டியது. தீபகாரணம் உமையுடன் சிவ
பெருமான் எழுந்தருளியிருக்குங் கால் அவ்
விடமிருந்த தீபவொளி குறையுஞ் சமயத்
தில் நெய்யுண்ணச் சென்ற ஒரு எலி
அபுத்தி பூர்வகமா யதனைத் தூண்டிய பலத்
தால் சக்கரவர்த்தியாய்ச் சிவாலயத்தின்
செருக்குடன் பிரதக்ஷிணம் வருகையில்
அரசன்மீது தீபகணமொன்று விழுந்தது.
அதனால் அரசனது தேகம் புண்ணாய்
வருந்துகையில் அசரீரியாய்ப் 'பரமசிவம்
நீ செருக்குற்றதால் இவ்வாறு செய்தோம்.
இன்றுமுதல் சகல சிவாலயங்களிலும்
இருள்சூழ்ந்த மற்ற இடங்களிலும் தீப
மிடின் சாயுச்யமுறுவா' யென்ன அவ்
வாறே தீபம் வைத்து வருகையில் கார்த்
திகை பூர்வபக்ஷ கிர்த்திகை நக்ஷத்திரத்
தில் தேஜோமயமாய்ச் சிவமூர்த்தி உக்ர
வுருவுடன் எழுந்தருளினர். இதைக் கண்ட

விதி விஷ்ணுவாதியர் நடுங்கி அவ்வுக்ர உஷ்ணந்தணியப் பொரி அவல்முதலியன நிவேதித்தனர். இச்சக்ரவர்த்திக்கு மாவெலிச் சக்ரவர்த்தி யென்றுபெயர். விஷ்ணுவாலயங்களில் இவ்வுற்சவம் நடத்தப்படுகிறதற்குக் காரணம் திருமகள் ஒரு அசுரனுக்குப் பயந்து காட்டில் ஒளிக்க அவ்வசுரன் காட்டைக்கொளுத்தத் திருமகள் அந்தரமாய் மறைந்தனள். அந்தக் காரணம் பற்றித் தீக்கொளுத்துவர் என்பர்.

121. மார்கழிமாத பௌர்ணமி—திருவாதிரை நக்ஷத்திரத்தில் நடராஜமூர்த்தி விரதம். மகா பலந்தருவது. இந்நாளில் சிவாலயங்களில் நடராஜமூர்த்திக்குப் பஞ்சகிருத்திய உற்சவம் நடத்துவர். நடராஜமூர்த்தி பீடத்தைவிட்டு எழுந்தருளல் சிருட்டி, ரக்ஷாபந்தனந் தரிப்பது திதி, கிருஷ்ணகந்தந் தரிப்பது சங்காரம், வெள்ளை சாத்துவது திரோபவம், உற்சவம் கொண்டருளுதல் அநுக்ரகம். அகங்கரித்த அசுரர் சரீரத்தை நீருக்கித் தரித்ததே கிருஷ்ணகந்தம். சங்கார காலத்தில் எழுந்த உக்ரவுருவைத் தேவர்கள் வெள்ளைப் புஷ்பத்தாலும் வஸ்திரத்தாலும் மறைத்ததே வெள்ளை சாத்தல்.

122. பங்குனி பௌர்ணமை — இது ஹோலி பண்டிகை — இதில் போளியொன்று செய்து அதனைத் தீயிலிட்டு மன்மதனைத் தகனஞ்செய்ததாகத் துக்கங் கொண்டாடுவர். இதனைக் காமன் பண்டிகை யென்பர். காமனைப்போல் உருவெழுதி அப்படத்தைக் கிராமப் பிரதக்ஷிணஞ் செய்வித்துப் பின் தகனசஞ்சயனதிகள் செய்வர். இந்த நாளில் துக்கக்குறியாகத் தங்கள் மேல் செஞ்சாயத்தை ஊற்றிக்கொள்வர்.

123. பக்தேச்வாவிரதம்—இது எல்லா பௌர்ணமிகளிலும் நோற்கும் சிவகௌரி விரதம். இதனைச் சந்திரபாண்டியனும் குமுதவதியும் நோற்றுப் புத்திரப்பேறு அடைந்தனர். புத்திரனுடைய மனைவி யநுட்டித்துக் கணவனுக்குத் தீர்க்காயுள் பெற்றனள்.

அமாவாஸ்யை — பிதுர்க்களின் பிரீதியின் பொருட்டுச் செய்யப்படும் விரதம்.

124. கேதாரேச்வர விரதம் — இது ஐப்பசி அமாவாசையில் கலசத்தில் சாம்பமூர்த்தியை ஆவாகித்துக் கிரமப்படி பூஜை செய்து (௨௧) கிரந்திகளைப் பூஜைசெய்து நோன்புக் கயிறுசெய்து பூஜித்து (௨௧) எண்ணுள்ள பழவகைகளும், மற்றவைகளும் நிவேதித்துப் பூஜைசெய்து விரதமிருப்பது. இது முதலில் பிருங்கி சிவமூர்த்தியை வணங்கித் தம்மை வணங்காத காரணஞ் சிவமூர்த்தியால் கேட்டு உணர்ந்த பிராட்டியார் அர்த்தபாகம்பெற அநுட்டித்தது. பிறகு சித்ராங்கதனென்னும் காந்திருவன் அநுட்டித்துச் சகல சித்திகளையும் பெற்றனன். பிறகு புண்யவதி, பாக்யவதிகள் என்னும் பெயருள்ள இரண்டு ஏழை வைசியகன்னியர் ஆலடியிலிருந்து அனுஷ்டித்து இராஜைஸ்வர்யமடைந்து பிறகு அவ்விருவரில் ஒருத்தியாகிய பாக்யவதி, செல்வச்செருக்கால் மறந்து விரதத்தைவிட்டுச் செல்வமிழந்து கள்ளரால் பலமுறை பறியுண்டு நினைவு வந்து விரத மநுட்டித்து இழந்த இராஜ செல்வங்களைப் பெற்றனள். இதனை அநுட்டிப்போர் பெருஞ்செல்வ வாழ்வினையும் முத்தியினையு மடைவர்.

125. கார்த்திகை அமாவாஸ்யை — லக்ஷ்மி விரதம்.

126. மார்கழி அமாவாஸ்யை..கௌரீ தபோவிரதம்.

127. அச்வத்த பிரதக்ஷிண விரதம் — அமாவாசையில் சோமவாரம், சப்தமியுடன்கூடிய ஞாயிற்றுக்கிழமை, சதுர்த்தியுடன்கூடிய செவ்வாய்க்கிழமை, அஷ்டமியுடன்கூடிய புதன்கிழமை இத்தினங்களில் புண்யதீர்த்த கூப நதிதீரங்களில் நித்ய கடன் முடித்துச் சங்கல்பஞ் செய்துகொண்டு திரிமூர்த்தி சொரூபமாயிருக்கும் அரசமரத்தைப் பூஜித்துக் கலசபூஜை செய்து அடி பிராமணராகவும், இலைகள் ருக்வேதமாகவும் பழங்கள் யஞ்ஞமாகவும், கிளைகள் நாராயணனாகவும் எண்ணி நாராயணனையும் சிவபிரானையும் பூஜித்துப் பின்மரத்திற்கு அபிஷேகாதிகள் நடத்திச் சோடச வுபசாரஞ்செய்து விருக்ஷராஜனை நமஸ்கரித்து (௧௦௮) பிரதக்ஷிணஞ்செய்து பலத்தைக்கேட்டுத் தக்ஷிணை முதலியன கொடுத்துப் பிராம்மணபோஜனஞ் செய்வித்து விரதமிருப்பது. இது வேதமயமாதலினாலும், திரிமூர்த்திகளும் யஞ்ஞத்தின் பொருட்டு இவ்விருக்ஷ ரூபமானதாலும், இதனைப் பூஜிக்கவேண்டியது. புருஷராயினும், பெண்களாயினும், லக்ஷம் பிரதக்ஷிணம் செய்யவேண்டும். இதனடி

யில் தம்பதிகளை லக்ஷ்மி நாராயணராக மதித்துப் பூஜைசெய்யச் சனிவாரம் உசிதம். இதனடி பிரமரூபம், மத்யம் விஷ்ணுரூபம், அக்ரம் சிவரூபம் ஆதலால் அச்வத்த பூஜைசெய்க. இதனைச் செய்தோர் பலரோகங்கள் நீங்கிப் புத்ரபோக பாக்யங்களையடைவர். "பிரம்மவிஷ்ணு ருத்ர சாக்ஷாத் அச்வத்தரூபிந:" மூலம் ஸ்நாதனம் பிரம்ம கர்ப்போக்னிஸ் ஸமிதோ ரவி: சந்தாம்ஸிதஸ்ய பர்ணானி விருக்ஷா சௌசவை வைஷ்ணவ: அச்வத்தசர்வ விருக்ஷாணும் அக்ரணீர் வைதிகவிவ" என்பதால் அரசைப் பூஜிக்க. இதைப் பூஜிக்க சநி ஸோமவாரங்கள் விசேஷம். இவ்வாறு பூஜித்துப் பிராம்மணபோஜனஞ் செய்வித்துத் தக்ஷிணைதிகள் கொடுத்து விரதமிருந்து புண்யகதை கேட்க.

128. அர்த்தோதயமகோதயவிரதம்— இது தை, மாசி மாதங்களில் அமாவாஸ்யை, வியதிபாதம், திருவோண நக்ஷத்திரம் கூடிய ஞாயிற்றுக்கிழமை கூடிய நாள். இதில் விரதம் விசேஷம். இதில் திரிமூர்த்திகளின் பிரதிமைகளைப் பொன் வெள்ளிகளில் செய்வித்து உஞ்சலில் படுக்கவைத்து ஹோமாதிகள் செய்து தக்ஷிணை போஜனாதிகளுடன் வேதியர்க்குப் பிரதிமைகளைத் தானஞ்செய்வது. மேற்கூறிய நக்ஷத்திரங்கள் திங்கள், புதனில் வரின் மகோதயமாம்.

129. வாரவிரதம்—ஞாயிற்றுக்கிழமை விரதம் — இந்நாளில் விரதங்கொள்ள நித்யகன்மமுடித்து ஒரு சுத்த இடத்தில் மெழுகிச் சர்வதோபத்ர மண்டலமிட்டு அதன்மேல் தாம்ர பீடத்தில், சூர்யமண்டலம் ரதம் சந்தனத்தால் எழுதி அதினிடையில் சூர்யயந்திரம் எழுதி அதின் பக்கவில் கணபதி யந்திரம் எழுதி கணபதியைப் பூஜித்துப் பின் அருணனைப் பூஜித்துப் பின் அறுகோண யந்திரம் சூர்யஷ்டாக்ஷரம் எழுதிக் கலசாவாஹனஞ் செய்து பிராணப்பிரதிஷ்டை செய்து சூர்யபூஜை கிரமப்படிசெய்வது. இதை அநுட்டிப்போர் எல்லா நலமும் அடைவர். இந்த ஞாயிற்றுக்கிழமை விரதத்தில் உத்தராயணத்தில் சூரியன் மகாராசியிலிருக்கையில் சுக்லபக்ஷத்தில் சப்தமியில் வருவது நிரசனார்க்கவார விரதம் எனப்பெயர். இதில் விதிப்படி விருதமிருந்தவர் ரஜஸ்வலை பார்த்த தீண்டிய தோஷங்கள் நீங்குவர். இதில் தூண்டிலன் என்போன் விரத உத்யாபனதினத்து ஒருவன் வீட்டில் புசிக்கத் தீர்த்தங்கொண்டு தனக்கிருந்த குஷ்டவியாதி நீங்கினன்.

130. நித்யா ரவிவாரவிரதம் — முற்கூறியபடி செய்து ரவிவாரந்தோறும் விரதமிருக்கின் சூர்ய சாயுஜ்யமடைவர்.

131. சோமவாரவிரதம் — இது சிவபிரான் விரதம். இதனைச் சோமவாரந்தோறும் அநுட்டித்தல் வேண்டும். இது பிராம்மண தம்பதிகளை உமாமகேசராகப் பாவித்துப்பூஜித்து அவர்க்கு உணவாதிகள் அளித்து விரதம் இருப்பது. சீமந்தினியைக் காண்க. இது கார்த்திகை முதலிய மாதங்களிலிருந்து தொடங்கல் வேண்டும்.

132. மங்களகௌரி விரதம் — இது ஆவணிமீ செவ்வாய்க் கிழமையில் அநுட்டிப்பது. இது கன்னிகையராயின் தாய் வீட்டில் அநுட்டித்துப் பின் மாமியார் வீட்டில் அநுட்டிக்கவேண்டும். இதில் கௌரி பூஜை விசேஷம். இதை அநுட்டித்தவர் எல்லா மங்களங்களையும் அடைவர்.

133. மங்களக்ரஹவிரதம் — இது மங்களவாரத்தில் செந்நிற புஷ்பம் சந்தனாதிகளால் செவ்வாய் சக்கிரத்தில் செவ்வாய் கிரகத்தைப் பூஜிக்கின் கடன்முதலியன தீர்ந்து புத்ராதி சம்பத்தை அடைவர்.

134. புதவாரவிரதம் — புதவாரத்தில் புதனை அவனுக்குரிய யந்திரத்தில் ஆவாஹனஞ்செய்து பூஜிக்கின் வாணிபம் பெருகும்.

135. குருவாரவிரதம் — இதில் குருவைத் தனக்குரிய சக்கரத்தில் பிரதிஷ்டை செய்து பூஜிக்கில் வித்யாசெல்வ முதலியன பெறுவர்.

136. சுக்லவாரவிரதம் — தேவி விரதம் காண்க. வரலக்ஷ்மி விரதம் — இது ஆவணிமீ சுக்லபக்ஷ த்விதியை சுக்ரவாரத்தில் அநுட்டிப்பது. இதனைச் சித்ரநேமி யென்பவன் அநுட்டித்து எல்லா சித்திகளையும் பெற்றான். கலசத்தில் சதுர்ப்புஜமுள்ள லக்ஷ்மிதேவி பிரதிமை செய்து கலசபூஜை செய்து ஸ்தாபித்துப் பூஜைசெய்து தானாதி போஜனாதிகள் செய்விப்பது. இது கற்புள்ள மங்கையர் ஐச்வர்யத்தைஎண்ணி நோற்பது. குண்டினபுரத்துச் சாருமதியின் பொருட்டு லக்ஷ்மி தரிசனந்தந்து தன்னை இத்தினத்தில் பூஜித்து விரதமிருப்போர் அஷ்டைஸ்

வர்யம் அடைவர் என்று மறைய அவன் அவ்வாறு அநுட்டித்துப் பெருவாழ் வடைந்தனன்.

137. சநிவார விரதம் — நிலத்தில் பொன் முதலிய லோகங்களால் சநிப்பிரதிமை செய்வித்துப் பூஜித்து ஓமாதிகள் செய்து வேதியர்க்குத் தக்ஷிணை முதலிய அளிப்பது. இவ்வாறு செய்வோர் சநிக்கிரகத்தாலுண்டாம் தீமை நீங்குவர்.

138. சநிவார வேங்கடேசுவர விரதம்—இது ஆவணிமீ சநிவாரத்தில் வருவது. இந்நாளில் வேங்கடேசரனை யெண்ணி விரதமியற்றித் தானாதிகள்செய்யின் சகஸ்ரஷஷ்டி விரதபலம் பெறுவர். இதனைப் புரட்டாசியில் அநுட்டிக்கின்றனர்.

139. வியதிபாதவிரதம்—இதில் விரதமிருந்தோர் சூர்ய உலகம் பெறுவர். வியதிபாதங் காண்க.

140. மாஸ உபவாஸம்—இது ஆடிமீ சுக்ல ஏகாதசிமுதல் கார்த்திகை சுக்ல ஏகாதசி வரையில் உபாசிப்பது. இது லக்ஷ்மீ நாராயணவுருவம் பிரதிமையில் செய்து பூசித்து விரதமிருப்பது.

141. தான்யசங்கராந்தி விரதம்—இது விஷுவத் புண்யகாலத்தில் சூர்யனைப் பூஜித்துத் தான்யதானஞ்செய்வது. இது செய்தார் ஆயிரம் அக்னிஷ்டோமபலம் அடைவர்.

142. லவண சங்கிராந்தி விரதம் — வருஷக்கடையில் லவணகும்பம் தாபித்துச் சூரியபூஜை செய்து வேதியர்க்குத் தானஞ்செய்வது. இதைச் செய்தவர் சூர்யலோக மடைவர்.

143. போகசங்கிராந்தி விரதம்—இது வருஷக்கடையில் சூர்யபூஜை செய்து தனதான்ய பசுவாதிகளை வேதியர்க்குத் தானஞ்செய்வது. இதினும் சூர்யபூஜை.

144. நபசங்கிராந்தி---இது சங்கிராந்தி காலத்தில் பொன் பாத்திரத்தில் பொனிட்டு நெய்வார்த்து வேதியர்க்குத் தானஞ் செய்வது. இதினும் சூர்யபூஜை செய்யவேண்டியது.

145. தேஜஸங்கிராந்தி — செந்நெல் அரிசி இவற்றின்மேல் கலசம் தாபித்து மோதக முதலியன நிவேதித்து வேதியர்க்களிப்பது. இது வருஷமுதலிற் செய்து கடையில் உத்யாபனமும் செய்வது.

146. ஸௌபாக்கிய சங்கிராந்தி — இது சங்கிராந்தி வாரத்தில் முதலில் சூர்யனை அர்ச்சித்து வஸ்திரமுதலியவை கலசத்திற்கு அணிந்து வேதியர்க்குத் தானஞ் செய்வது. இதில் லவணபர்வத தானமுஞ் செய்யவேண்டும்.

147. தாம்பூல சங்கிராந்தி — வருஷாரம்பத்தில் சூர்யார்ச்சனை செய்து ஒரு பாண்டத்தில் வெற்றிலை, பாக்கு முதலிய வற்றோடு வாசனைத்திரவியங்கள் வைத்துப் பிராமண தம்பதிகளைப் பூசித்து அளிப்பது.

148. மனோரத சங்கிராந்தி — ஒரு கும்பத்தில் வெல்லம் நிறைத்துப் பூஜித்து வேதியர்க்கு விருந்தளித்து அளிப்பது. இதில் சூர்யபூஜை செய்யவேண்டும்.

149. அசோக சங்கிராந்தி — உத்தராயன தக்ஷிணாயனம், விஷுவத் புண்ய காலம், வியதிபாதம் இக் காலங்களில் பொன்னில் சூர்யபூஜை செய்து திலதான பூர்வகமாய்ப் பூசித்துக் கபிலை தானமுதல் எல்லா தானங்களுஞ் செய்து பிராம்மண போஜனஞ்செய்வித்து வேதியர்க்குப் பிரதிமையைத் தருதல். இத்தானஞ் செய்தார் ஆயுராரோக்ய சம்பத்துக்களைப் பெறுவர்.

150. ஆயுஸ் ஸங்கிராந்தி — சங்கிராந்தி நாளில் பசுவின்பால் வெண்ணெய் முதலியவை கும்பத்தில் பூரித்துச் சூர்யனைப் பூஜித்து வேதியர்க்கு அன்னபானாதி தக்ஷிணைகள் அளித்து வேதியர்க்குக் கொடுப்பது.

151. தனஸ் ஸங்கிராந்தி— சங்கிராந்தி நாளில் ஒரு கலசத்தில் தீர்த்தம் நிறைத்துச் சுவர்ணத்தில் சூர்யப் பிரதிமை செய்வித்துக் கலசத்தில் சூரியனைப் பூஜித்து வேதியர்க்கு அன்னமளித்துத் தானஞ்செய்வது.

152. தனுஸ் ஸங்கிராந்தி — தனுர் மாசத்தில் உண்டாகுஞ் சங்கிராந்தி. இதில் சூர்யனைக் கலசத்தில் ஆவாகித்துப் பூஜித்துப் பிராமணர்களுக்கு அன்னாதிகள் அளிப்பது.

153. மகா சங்கிராந்தி — தயிர்க்குடத்தில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை யசோதையுடன் சுவர்ண பிரதிமை செய்வித்துத் தாபித்துப் பூஜைசெய்து பிராமண போஜனஞ் செய்வித்துப் பிரதிமாதானஞ் செய்வது.

154. மௌன விரதம்—இதில் நான்கு மாதம் விரதம் அநுட்டித்தல் வேண்டும். இது லக்ஷ்மி நாராயணப் பிரதிமை பொன்

ஞற் செய்வித்து விதிப்படி பூசித்துப் பிராமண போஜனஞ் செய்வித்து வேதியர்க்குத் தானஞ் செய்வித்து விரத மிருப்பது.

155. லக்ஷதீபதானவிரதம் — இது நெய்யினுல் சிவாலயாதி ஆலயங்களில் லக்ஷமாயினும், அதிற் பாதியாயினும் அதிற்பாதியாயினும் தீபமிட்டுப் பூஜையாதிகள் செய்யிற் தீபங்கள் எவ்வளவோ அவ்வளவுகாலம் புண்ணியவுலகத்திருப்பர்.

156. துளசிவிரதம் பிரதக்ஷிணம் — வீட்டிலாவது, பூந்தோட்டத்திலாவது, மேடைகட்டுவித்து அதில் துளசிமாடமியற்றித் துளசிமந்திரத்தால் பூஜித்து லக்ஷ்மிநாராயண சுவர்ண பிரதிமைவைத்துப் பூஜித்து ஹோம முதலிய அக்னிகார்யஞ் செய்து பிராம்மணபோஜனஞ் செய்வித்துத் தக்ஷிணைகொடுத்து லக்ஷப்பிரதக்ஷணஞ்செய்வது. இதை அநுட்டித்தோர் சகல சித்தியும் அடைவர்.

157. அநுமப்பிரதக்ஷிணம் — ஆடிமீ சுக்கிலபக்ஷ ஏகாதசி, த்வாதசி, பௌர்ணமி முதலிய தினங்களில் விரதமிருந்து கோப்பிராம்மணபூஜை செய்து அநுமமந்திரஞ் செபித்து அநுமப்பிரதிட்டை செய்து லக்ஷம் பிரதக்ஷணஞ் செய்யின் பூதபிசாச பயரோகங்களிலிருந்து நீங்குவர்.

158. மாதா பித்ரு சேவனவிரதம் — இது தாய்தந்தையரைப் பூஜித்து விரதமிருப்பது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமாதலின் அவர்களைச் சுத்தனுய் நாடோறுஞ் சேவிக்கின் எல்லாநலமும் அடைவன் எனக் கூறியிருக்கிறது. இங்ஙனம் பிதுர்வாக்யம் கடவாதார் ஸ்ரீராமன், பரசுராமன், பார்க்கவர் முதலியோர். இங்ஙனஞ் செய்வாரைத் தேவர் வணக்குவர்.

159. பதிசேவன விரதம் — இது தன் நாயகனே தெய்வமென்றும வேறு தெய்வம் போற்றாளாய் நாயகனையே சேவித்திருக்குங் குலமகள் செய்யும் விரதம். இது நாரி தான் மணங்கொண்ட நாள் தொடங்கி நாடோறுங் குலமகள் தன் கொழுநனைப் பேணிப் பூஜிக்கும் விரதம். இவ்விரதம் அநுட்டித்தோர் பதிவுலகம் அடைவர் என ஸ்காந்தபுராணங் கூறுகிறது. ஸ்திரீகளுக்கு இதனினும் மேலான விரதம் இன்று. இது சர்வவிரதங்கள், தீர்த்தங்கள், தர்மங்கள், க்ஷேத்ரங்கள், யஞ்ஞ, யோக, போகங்களினும் உயர்ந்ததாகும். இன்னும் பலவிரதங்கள் உண்டு. அவை (1) தேவவிரதம். (2) ருத்திரவிரதம். (3 வீரவிரதம். (4) பிரீதிவிரதம். (5) கௌரிவிரதம். (6) காமவிரதம் (7) சிவவிரதம். (8) சௌமியவிரதம். (9) சௌபாக்கியவிரதம். (10) சாரஸ்வதவிரதம். (11) சம்பத்விரதம். (12) சுத்திவிரதம். (13) கீர்த்திவிரதம். (14) காமதுக்விரதம். (15) பித்ருவிரதம். (16) ஆனந்தவிரதம். (17) ராஜ்ய விரதம். (18) அஹிம்சாவிரதம். (19) சூரியவிரதம். (20) விஷ்ணுவிரதம். (21) சீலவிரதம். (22) தீபவிரதம். (23) தீப்பியவிரதம். (24) சாந்திவிரதம். (25) பிரம்மவிரதம். (26) சுவிரதம். (27) கல்பவிரதம். (28) பீம விரதம். (29) தாரவிரதம். (30) மகாவிரதம். (31) ரபாவிரதம். (32) பிராப்திவிரதம். (33) சுகதிவிரதம். (34) வைஸ்வானரவிரதம். (35) கிருஷ்ணவிரதம். (36) தேவிவிரதம். (37) பானுவிரதம். (38) விநாயகவிரதம். (39) காலவிரதம். (40) சௌரவிரதம். (41) நாராயணவிரதம். (42) வருஷவிரதம். (43) பிராஜாபத்தியவிரதம். (44) திரியம்பக விரதம். (45) கிருத விரதம். (46) இந்திர விரதம். (47) சதாசிவ விரதம். (48) அஸ்வ விரதம். (49) கஜவிரதம். (60) நிர்துக்க விரதம். (51) வருண விரதம். (52) சந்திர விரதம். (53) ருத்திர விரதம். (54) பவானி விரதம். (55) ஸ்நாபக விரதம். (56) தாம விரதம். (57) சிகிவிரதம். (58) விப்ரவிரதம். முதலியன. (மச்சபுராணம்)

விரதன் — உத்தராதித்தனைக் காண்க.

விரதேயு—(சந்) ரௌத்திராசுவன் குமாரன்.

விரணங்கள் — வாத, பித்த, சிலேஷ்ம, தோஷங்களினுல் உண்டாகும் இரணங்கள் நிரணங்கள் என்றும், காயங்களினுல் உண்டாவதற்கு ஆகந்துகாரணம் என்றும் கூறுவர். அது துஷ்டவிரணம், என்பது நெடு நாட்களாக ஆறுமல் இருப்பது. அதுஷ்டரணம் சிகிச்சையினுல் ஆறிவிடுவது. துஷ்டவிரணம் வாததுஷ்டவிரணம், பித்ததுஷ்டவிரணம், சிலேஷ்மதுஷ்டவிரணம், வாதபித்ததுஷ்டவிரணம், வாதசிலேஷ்மதுஷ்டவிரணம், சிலேஷ்மபித்ததுஷ்டவிரணம், திரிதோஷ துஷ்டவிரணம், ரத்ததுஷ்டவிரணம், ரத்தவர்த்துவிடவிரணம், ரத்தபித்ததுவிடவிரணம், ரத்தசிலேஷ்மதுஷ்ட

விரணம், ரத்தவாத பித்ததுஷ்ட விரணம், ரத்தவாத சிலேஷ்மதுஷ்ட விரணம், ரத்த சிலேஷ்ம பித்ததுஷ்டவிரணம், வாதாத்த திரிதோஷ துஷ்டவிரணம் எனப்பதினைந்து.

விரவியல் — வடவெழுத்து விரவிவருவது.

விரஜாநதி — கோலோகத்தில் கிருஷ்ணன் விரஜா கோபிகையுட னிருக்கையில் விரஜாகோபிகை நதிரூபமாயினள். கிருஷ்ணன் விரஜா விரஜா என்று அழ, அவள் நதியினின்று பெண்ணுருக்கொண்டு வெளிவர, அவளைக் கிருஷ்ணன் கூட, அவ்விரஜைக்குச் சப்தசமுத்திரமும் பிறந்தன. (பிரம்மகைவர்த்தம்.)

விரஷசேநன் — கர்ணன் குமாரன்.

விரஷன் — சிருஞ்சயனுக்கு ராஷ்டிரபாலியிடத்து உதித்த குமாரன்.

விரக்ஷத்திரன்-வைவச்சுதமனுவின் குமாரன்.

விராஜன் — க்ஷத்திரியன் அவிச்சித்தின் குமாரன் (பா - ஆதி.)

விராடபுரம் — தற்காலம் மேட்டுப்பாளையத்துக்கு அருகிலுள்ள தாராபுரம் என்பர்.

2. இது மச்சதேச அரசனாகிய விராடன் தேசம். The Capital of Virata Raja, king of Matsya Desa, 105 miles to the south-west of Delhi and 41 miles to the North of Jaipur.

விராடன்—மருத்துவர் அம்சம்; பார்தப்போர் வீரர்களில் ஒருவன். மச்ச தேசாதிபதி; அபிமன்யுவிற்கு மாமன். உத்தரையின் தந்தை. இவன் நாட்டில் பாண்டுபுத்திரர் அஞ்ஞாதவாசத்தில் இவ்வரசன் அரண்மனையில் வேறு உருவம் பெயருங்கொண்டு மறைந்து வசித்து இருந்தனர். அருச்சுநனும் விராடன் குமாரனாகிய உத்தரனும துரியோதனாதியர் கவர்ந்து சென்ற பசுக்களை மடக்கிக்கொண்டு வரச்சென்ற அவ்விடம் நேர்ந்த யுத்தத்தில் வென்ற செய்தி விராடனுக்கு வந்தது. இச்செய்தி கேட்டுக் களிப்படைந்த விராடன் என் குமாரன் வென்றானென்று தன்னுடன் சூதாடிக்கொண்டிருந்த தருமரிடம் கூறத் தருமர் பேடியே ஜெயித்தவன் என்று கூறினர். இதைப் பொருது சூதாடு கருவியால் தருமரையடித்துபேசிப் பின் பாண்டுபுத்திரர் என அறிந்து பொறுமை வேண்டிக்கொண்டவன்.

விராதன் — 1. இவன் தேவருலகத்திலே வீணை வாசிக்கும் ஒரு தம்புருவன். இவன் அரம்பையுடன் காமவிகாரத்தால் ஊடல் கொள்ளத் தேவர்கள் இவனை அரக்கனும்படி சபித்தனர். அச் சாபமேற்ற இவன் கிலிஞ்சன் குமாரனாய்ப் பிறந்து இராமமூர்த்தி அரண்யத்தில் எழுந்தருளியிருக்கும்போது சீதாபிராட்டியாரைத் தூக்கிச் சென்று இராம லக்குமணரால் கை யறுப்புண்டு சுவர்க்கமடைந்தவன்.

2. செண்பகமலரைக் காண்க.

விராத்தியன் — பிரதிலோமத் தந்தைக்கு அநுலோமத் தாய்பால் பிறந்தவன். உபநயநாதி ஸம்ஸ்காரமில்லாதவன்.

விராவி — திருதராட்டிரன் புத்திரன்.

விரிகுடா — வாய் அகன்று பூமிக்குள் சென்றிருக்கும் கடற்பிரிவுக்கு விரிகுடா என்று பெயர். (பூகோளம்)

விரிசிகன் — தருசகனுடைய பகையரசருள் முதல்வன். (பெ-கதை)

விரிசிகை — இவள் ஒரிராசரிஷியின் மகள். தவம் செய்யவந்த அவருடன் இவளும் வந்து ஒரு வனத்திலிருந்தபொழுது இளமைப்பருவத்தில் உதயணனால் மாலைசூட்டப்பெற்றுப் பின்பு அவனால் மணஞ்செய்துகொள்ளப்பட்டவள். கற்பிற் சிறந்தவள். (பெ - கதை).

விரிச்சி — விரும்பிய பொருளின் ஆக்கத்தை அழகுணர்தற்குச் செறியும் இருண்டமாலையிடத்து நற்சொற் கேட்பதைக் குறிப்பது.

விரிச்சிகன் — ஒரு முநிவன்; புதரில் தவஞ்செய்து கொண்டிருந்து தனக்காகப் பழுத்த கனியையுண்ட காயசண்டிகைக்கு ஆனைத்தீநோய் வரச் சாபம் அளித்தவன்.

விரிச்சியூர் நன்னாகனார் — ஒரு செந்தமிழ்க் கவிஞர். (புற. நா)

விரிஞ்சி—புலிவயிற்றிற் பிறந்த முநி (மணி.)

விரியன் — இது ஒரு பாம்பின் பேதம். இது, பெருவிரியன், இரத்தவிரியன், செவ்விரியன், நீர்விரியன், பொறிவிரியன், புல்விரியன் என ஆறுவகைப்படும். இவை காறியின் ஆடையில் பிறந்தவை யென்பர் புராணிகர். (ஜீவ)

விரியூர்நக்கனார் — இவர் ஒரு தமிழ்ப்புலவர். இவருக்கு விரியூர் அங்கன் என்றும் பெயர். (புற-நா)

விருகசுடி — 1. காந்தருவநகரத்து அரசன்.

2. கந்தருவநகரத்தரசன். (சூளா)

விருகதேசசன் — சிஷ்டியின் புத்திரன். இவன் தம்பி விருகலன்.

விருகத்பானு — கிருஷ்ணமூர்த்தியின் புத்திரரில் ஒருவன்.

விருகன் — 1. பஸ்மாசுரனுக்கு ஒருபெயர். இவனைச் சகுனியென்றும், அசுரன் குமாரன் எனவும் கூறுவர்.

2. பிருது சக்கிரவர்த்திக்கு அர்ச்சியிடம் உதித்த குமாரன்.

3. (சூ.) சுவேதன் குமாரன்.

4. வசுதேவன் தம்பி.

5. வச்சகனுக்கு மித்திரகேசியிடம் உதித்த குமாரன். பாரி துருவாக்ஷி ; குமாரர் தக்ஷன், புக்ஷன், ரசாலுவன்.

6. வாகுகன் தந்தை. இக்ஷவாகு வம்சத்து இருஈன் குமாரன்.

7. தன்மநிஷ்டையைக் காண்க.

8. சுகனென்னும் அசுர புத்திரன்.

விருகாசுரன் — 1. பத்மாசுரனைக் காண்க.

2. இவன் ஒரு அசுரன். செந்நாயுருக்கொண்டு பாலகணேசருக்கு முன் தோன்றி அவர் அங்குசத்தால் இறந்தவன்.

விருதணன் — விருஷணிக்குத் தந்தை. கார்த்தவீர்யனுக்குப் பேரன்.

விருக்கடி — ஒரு காந்தர்வராஜன்.

விருக்கஸ்தலம் — பாண்டவர்களுக்கு விடப்பட்ட ஐந்து கிராமங்களில் ஒன்று.

விருக்கிணன்—மதுபுத்திரன், கார்த்தவீர்யன் பௌத்ரன். இவன் குமாரன் விருஷ்ணி

விருக்துவர் — ஒருவித வேதியர் ; கண்ணுவருஷி வம்சத்தவர்.

விருசினவந்தன் — 1. குரோஷ்டுக்குத் தந்தை.

2 குரோஷ்டுக்குக் குமாரன்.

விருசேநன் — இலக்ஷமணனுக்குத் தந்தை. மித்திரநாட்டதிபதி.

விருச்சிகன் — இவன் பொதிகைச்சாரலில் தவஞ்செய்து கொண்டிருந்து பன்னிரண்டு வருடத்திற் கொருமுறை பழுக்கும் நாவற்கனியைப் பன்னிரண்டு வருடம் பட்டினியிருந்துண்பன். தான் பாரணஞ்செய்யக் கருதியபழத்தைச் சிதைத்ததுபற்றிக் காயசண்டிகையைச் சபித்தவன். (மணிமேகலை)

விருடமன் — சிவகணத்தவரில் ஒருவன்.

விருடாகவி — இலிங்கியைக் காண்க.

விருதன் — 1. சாக்ஷுஸமநுவிற்கு நட்வலையிடம் உதித்த குமாரன்.

2. வீமனுடன் போர்புரிந்தவீரன். இவனுக்குக் கிருதபன்மன் எனவும் பெயர்.

விருத்த ஏதுப்போலி — எதுசாத்ய விபரீதவியாப்தியால் தோஷஞானத்தைப் பண்ணுவது. (சரு)

விருத்தகன்னியை — குணிதாரகனுடைய புத்திரி. காலவரிஷி புத்திரனுகிய சிருங்கவன் பாரியை. (பா - சாந்)

விருத்தகார்க்கர் — ஒரு மகருஷி; முசுகுந்தனுக்கு இருபத்தெட்டாவது சதுர்யுகத்து நாராயணப் பிரத்தியக்ஷம் கூறியவர்.

விருத்தகாளன் — சிவசன்மாவைக் காண்க.

விருத்தசருமன் — தசரதன் குமாரன்; இவன் குமாரன் விச்வசகன்.

விருத்ததர்மா — கரூசதேசாதிபதி ; மனைவி கிருத தேவா.

விருத்தம் — 1. ஓர் சிற்பநூல்.

2. ஆசிரியப்பா வினத்திலொன்று.

விருத்தக்ஷத்ரன் — இவன் சிந்து தேசாதிபதி. சயத்திரதன் தந்தை; இவன் அசரீரியால் தன் மகன் இறப்பைக்கேட்டு எவன் என் குமாரன் தலையைப் பூமியில் விழச்செய்கிறானே அவன்தலை ஆயிரம் பிளவுகளாக என்று சபித்துக் கைவிரித்துக்கொண்டு தவத்தில் இருந்தனன். இது நிற்க, அருச்சுநன் பதினைகா நாள் யுத்தத்தில் பாசுபதாத்திரத்தால் இவன் குமாரன் தலையைத்துணித்து அது கீழ் விழவொட்டாமல் சியமந்த பஞ்சகத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த இவன் கையில் விழச்செய்தனன். அதனால் இவன் மாண்டனன்.

விருத்தாதபன் — விருத்தன் ஒருவன் தவஞ்செய்தனன். அவன்முன் சூரியன்தோன்றி அவன் முதுமைபோக்கி இளமை வருவித்தனன். அதனால் சூரியனுக்கு இப்பெயர் வந்தது.

விருத்தி — 1. இருப்பு ; ஓவிய நூலுள் யாழ்வாசித்தற்குக் கூறிய பெயர். இது நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல் எனப் பலவகைப்படும். அவற்றுள், இருத்தல் திரிதரவுடையனவும், இல்லனவும் என இருவகைத்து. திரிதரவுடையன யானை, தேர், புரவி, பூனை முதலியன. திரிதரவில்லன ஒன்பது வகைப்படும். அவை : பதுமுகம், உற்கட்டிதம், ஒப்படியிருக்கை, சம்புடம், அயமுகம், சுவத்திகம், தனிப்புடம், மண்டிலம், ஏகபாதம் என்பன. இனி நாடகநூலார் இவ்விருப்பை ஐம்பது வகையாக்குவர்.

2. ஆயு என்பவளுக்குக் காசிபரிடம் பிறந்தவள்.

3. நாடகவகையில் ஒன்று இது, சாத்து வதியும், ஆரவடியும், கைசிகியும், பாரதியும் என நான்கு வகைப்படும்.

4 தருமன் என்னும் மனுவின்தேவி.

**விருத்தியுரை** — செய்யுளின் உட்பொருளன்றி யாண்டு யமையாதவையும் விளங்கத் தன்னுரையானும் வேறு நூலானும் மாணாக்கனுக்கு நேரும் ஐயம் நீங்க காண்டிகைக்குச் சொன்ன உறுப்புகளோடு மேலுமுடையதாய்ச் செய்யுளின் மெய்ப்பொருளை விளங்க வுணர்த்துவது. (நன்.)

**விருத்தியுகன்** — சிவகணத்தவரில் ஒருவன்.

**விருத்திராசுரன்** — 1. ஒரு அசுரன்; இவன் இந்திரனைக் கொல்லத் துவஷ்டாவால் ஏவப்பெற்று இந்திரனை விழுங்கினன். இந்திரன் இவன் வயிற்றைப் பிளந்து வெளிவந்து இவனை வச்சிரத்தால் கொன்றனன். இவன் முன்சன்மத்தில் பார்வதி தேவியாரால் சபிக்கப்பட்ட சித்திரரதன் என்பவன். இந்திரனுடன் போர்செய்து கடலில் ஒளித்துப் பிறகு இந்திரனால் வச்சிரத்தால் இறந்தவன் என்பர்.

2. விச்சுவவுருவனைக் கொன்ற இந்திரனைக் கொல்லத் துவஷ்டப்பிரஜாபதியால் யாகத்தில் நிருமிக்கப்பட் டனுப்பப்பட்டவன். இவன் முதலில் ஒருமுறை இந்திரனுடன் போர்செய்து அவனை யுத்தத்தில் ஓடும்படிசெய்து மீண்டும் தந்தைசொற்படி தவஞ்செய்து பிரமனிடம் பலவரங்களைப் பெற்று இந்திரனுடன் யுத்தஞ்செய்து அவனை லேகியம் போல் விழுங்கிவிட்டனன் தேவர்விட்ட ஜிரும்பிகாஸ்திரத்தால் கொட்டாவிவிட இவன் வாயிலிருந்து சிறுவுருவாய் இந்திரன் வெளிப்பட்டு ஓட்டம் பிடித்தனன். இவன் இந்திரலோகத்தை ஆண்டிருக்கையில் ருஷிகள் இந்திரனிடம் பகை வேண்டாமென்று சந்திசெய்விக்க நட்புப்பூண்டு இருந்தனன். இவனிடத்தில் இந்திரனே வயிரமுள்ளவனாய்க் கொல்லக் காலம் பார்த்திருக்கையில் ஒருநாள் கடற்கரைக்கு இவ்விருவரும் ஏகாந்தமாய் உலாவச்சென்ற சந்தியா வேளையில் இந்திரன் இவனைக்கொல்ல எண்ண, விஷ்ணு இவனது வச்சிரத்தில் ஆவிர்ப்பவித்தனர். இந்திரன் இவன் எந்த ஆயுதத்தாலும் உலர்ந்த பொருள்களாலும், ஈரமுற்றவையாலும், சாகாதிருக்கும் வரம் பெற்றிருத்தலை எண்ணிச் சிந்திக்க மகாசத்தியின் திருவருளால் மலைபோல் நுரைதோன்ற அந்த நுரையை வச்சிரத்திற் பூசி அவன்மேல் ஏவ அது விருத்திரனைக் கொன்றது. (தே-பா)

3. இவனுடன் இந்திரன் சண்டை செய்த காலத்துச் சூர்யசந்திரர்கள் துவட்டாவின் வேள்வி அவிசைப் புசித்ததால் விருத்திரன் தோள்களிலிருந்து காத்தனர். அதனால் அசுரனது தோள்கள் இந்திரன் வெட்டவெட்டத் தளிர்த்தன. இதனால் இந்திரன் அச்சூர்ய சந்திரர்களைத் தோளினின்று இறங்கச்செய்து இவனைக் கொன்றனன். இவனை விச்வகர்மனுக்கு இரமையிடம் உதித்தவன் என்பர்.

4. இவன் இந்திரபதம் பெறத் தவஞ்செய்வதறிந்த இந்திரன் இவனிடத்து அரம்பை ஒருத்தியை யேவ அவள் வலையில் சிக்கி அவள் கொடுத்த கள்ளை அவள் தூண்டுதலால் உண்டு வெறித்துக் கிடக்கையில் இந்திரனால் கொலையுண்டவன். (பாத்ம - புராணம்.)

**விருத்தேசநன்** — காசிபன் குமாரன். இவன் குமாரன் சலபோஜன்.

**விருத்தை** — உசத்தியன் பெண். இவள் தோழியருடன் கங்கையாடச் சென்று காட்டானைக்குப் பயந்து புல்லின் புதரில் மறைந்து அருகு இருந்த மடுவில் விழுந்து மாய்ந்து குச்சகரால் உயிரடைந்து கௌச்சிகரை மணந்து மிருகண்டைப் பெற்றவள்.

**விருந்தாவனம்** — வடமதுரைக்கு அருகில் உள்ளவனம். இதில் கண்ணன் கோபிகைகளுடன் விளையாடினன்.

**விருந்து**—1. புதியவாயினவற்றின் மேலது. அது இப்பொழுதுள்ளாரைப் பாடும் பாட்டு. (யாப்பு - வி.)

2. புதிதாக வீட்டுக்கு வரும் நண்பர்.

**விருந்தினர்க்குச் செய்யும் உபசாரம்** — இனிய முகமலர்ச்சியுடன் இன்சொல் கூறல், கால்கழுவநீர்தரல், இருக்க மனைதரல், சோறிடுதல், பருகநீர்தரல், தாம்பூலமதரல், படுக்க இடமகொடுத்தல், படுக்கப் பாய்தரல், பிரயாணமாங்கால் வழிவிடல் முதலியனவாம்.

**விருந்தை** — காலநேமியென்னும் அவுணன் குமரி; சலந்தராசுரன் தேவி. இவள் கணவன் சிவமூர்த்தியால் இறந்தனன். இச்சமயம் பார்த்திருந்த திருமால் கபடசந்நியாசி உருக்கொண்டு கணவனைக் காணாது வருந்தும் அவளெதிரில் தவஞ்செய்வதாக இருந்து தமது கணங்களில் இருவரைப் புலியாக அவளுக்கு முன்வரச் செய்தனர்.

அப்புலிகள் வெருட்ட இவன் கபடசந்நியாசியைச் சரணடைந்து தன்கணவனைத் தரவேண்டினள். கபட சந்நியாசி தன் இரண்டு தூதருக்கும் குரங்குருக் கொடுத்துச் சலந்தரன் பிளந்த உடலை யெடுத்து வரச்செய்தனர். அவை சலந்தரன் உடலைக்கொண்டுவந்து அவளுக்கு முன் இட்டன. விருந்தை சந்நியாசியை நோக்கி உயிர்தர வேண்டினள். திருமால் அவன் உடலில் தாம் புகுந்து உயிர்பெற்று அவளுடன் கலந்து சிலநாள் இருந்தனர். ஒருநாள் நித்திரை செய்கையில் சங்குசக்கர முதலியன தோன்றக்கண்டு திடுக்கிட்டு நம்மை விஷ்ணு வஞ்சித்தான் என்று தேறி 'நீ விஷ்ணுவாகலின் என்னை வஞ்சித்தது போல் உன மனைவியை அரக்கர் கவருக; தூதராய் வந்த இருவரும் உனக்குப் பகைவராகுக. குரங்கு உருவாகத் தூதரைப் பெற்றமையால் நீ குரங்குகளைத் தூதாகவும், சேனையாகவும் பெற்றுக் காட்டில் அலைக' எனச்சபித்துத் தீப்புகுந்தனள். பின் திருமால் இவள் இறந்த புழுதியில் காமவசப்பட்டுப் புரளுகையில் தேவர் சிவமூர்த்தியிடம் முறையிட்டனர். சிவமூர்த்தி பிராட்டிக்குக் கட்டளையிட அம்மையார் சில விதைகளைத் தந்தனர். அதை அப்புழுதியில் தூவ அதில் துளசி, அகத்தி முதலியன தோன்றின. அத்துளவத்தை அணிந்து திருமால் மயக்கந்தீர்ந்தனர். (காஞ்சி புராணம்.)

**விருபன்** — (சூ) அம்பரீஷன் குமாரன்.

**விருஷகன்** — சகுனிக்குத் தம்பி.

**விருஷசேநன்** — கர்ணன் குமாரன்; அருச்சுநனால் கொல்லப்பட்டவன்.

**விருஷணன்** — கார்த்தவீரியன் குமாரன்.

**விருஷத்துருவன்** — வைவச்சுதன் குமாரன்; இவன் ஒருநாள் வேட்டைக்குச் சென்று அக்னிகுலி யென்னும் இருடியின் ஓமப் பசுவைக் காட்டுப்பசு வென்று பாணத்தால் கொன்றனன். அப்பசுவினைக் காத்திருந்த பிரமசாரி அரசனைக் கோபித்தனன். அரசன் அப்பிரமசாரியிடம்சென்று நீ சூத்திரன்; என்னையேன் கோபிக்கிறாய் என்றனன். சிறுவன் அரசனை அதனால் சூத்திரனாகச் சபித்தனன். (மார்க்கண்டேயம்.)

**விருஷபகிரி** — மகததேசத்தில் வராககிரிக்கருகிலுள்ள மலை. இதற்கு ரத்னகிரி எனவும் பெயர்.

**விருஷபதபா** — தானவேந்திரன். இவன் குமாரி சன்மிஷ்டை. இவனை விடபன்மன் எனவுங் கூறுவர்.

**விருஷபதீர்த்தங்கரர்**--சைந முதலாவது தீர்த்தங்கரர். இவர் அயோத்தியா நகரமாண்ட இக்ஷுவாகு வம்சத்து நாபி மகாராசாவிற்கு மருதேவியிடம் சித்திரை மாதம் கிருஷ்ண பக்ஷம் நவமிதிதி உத்திராட நக்ஷத்திரத்தில் பிறந்தவர். இவர் உன்னதம், (௫00) வில், வண்ணம், சுவர்ணம். இவர் புத்திரன் பரதேச்வர சக்ரவர்த்தி. இவர் ஆயுள் (அச) லக்ஷம் பூர்வம் (பூர்வத்தின் தொகை, (அச) லக்ஷம் வருஷங்கொண்டது பூர்வாங்கம். அந்தப் பூர்வாங்கம் (அச) லக்ஷங்கொண்டது ஒரு பூர்வம்.) இவர் இக்ஷுவாகு, குரு, நாத, உக்ர, அரிவம்சங்களை யேற்படுத்தினர். உழவு, தொழில், வரவு, வாணிச்யம், வித்யா, சில்டம் இவர்காலத்து உண்டாயின. இவர்க்குத் தேவியர், யசச்சுதி, சுநந்தை. யசச்சுதிக்குப் பரதேச்வர சக்ரவர்த்திமுதல் (கூக) குமாரர். ஒரு குமாரி, பிராம்மி. சுநந்தைக்குப் பாகுபலியும், சுந்தரியென்னும் ஒரு குமாரியும் உண்டு. இவர் கிருதயுகத் தொடக்கத்தில் இருந்தவர். கணதரர் இருஷசேநகணதரர் முதல் (அச) வர். (மாபுராணம்)

**விருஷபத்வஜன்** — இந்திரசாவர்ணி மநு குமாரன். இவன் மற்றைத்தேவரை மதியாது சிவபிரானையே பூசித்து வருகையில் சூரியன் இவனைச் சம்பத்தில்லாதவனாக வெனச் சபிக்க சிவபிரான் சூலாயுதத்தால் சூரியனைத் துரத்த சூரியன் விஷ்ணுவிடமடைக்கலமடைந்தனன். அவ்விடம் சிவபிரான் செல்ல விஷ்ணு சிவபிரானைத் துதித்துவேண்ட க்ஷமித்தனர். அரசனும் சில நாளிருந்து சிவபதமடைந்தான். (தேவி - பா.)

**விருஷபம்** — 1. கிரிவிரசத்துக்கு அருயுள்ள மலை

2. நந்திக்கு ஒரு பெயர்.

முதல் யுகத்தில் பசுக்கள் வெண்ணிறமாக இருந்தன. அப்பசுக்கள் தவநிலையிலிருந்த ருத்ரரை யிடித்தன. ஆதலால் ருத்ரர் கோபித்து அவைகளைச் சாமபராக்கினர். பின்னர் ரிஷபம் வந்திரக்கக் கருணையால் அவைகளை மீண்டும் எழச்செய்தனர் அதுமுதல் ரிஷபம் ருத்ரவாகனமாயிற்று. (பார-அநு-207-அத்.)

**விருஷபருவன்** — 1. ஒரு அசுர அரசன். இவன் அநேகரைச் செயித்துப் பலமணிகள் கொணர்ந்து விந்துசரவில் வைத்தவன்.

2. காசிபருக்குத் தனுவிடம் பிறந்த அசுரன். இவன் குமாரி சன்மிஷ்டை. இவள் சுக்கிரன் பெண்ணாகிய தேவயானியை அவமதித்ததால் இவளை இவள் தந்தை தேவயானிக்குத் தோழியாக்கினன். பின் தேவயானியை மணந்த யயாதி இவளையும் பெண்டாகக் கொண்டனன்.

**விருஷபர்**—1. சூர்யவம்சத்து நாபியின் குமாரன். தாய் மேருதேவி. (பாகவதம்.)

2 புத்தரவதாரத்தில் (உஅ) வது அவதாரம்.

**விருஷபர்வர்** — ஓர் விஷ்ணுபக்தர். சத்சங்கத்தினுல் விஷ்ணுபதம் அடைந்தவர்.

**விருஷபன்** — 1. ஒரு அரக்கன். திருவேங்கடத்தில் தவமியற்றி இஷ்டசித்தி யடைந்தவன்.

2. சாக்ரன் குமாரன். இவன் குமாரன் புஷ்பவான்.

**விருஷபனுவா** — திதிபுத்திரனாகிய அசுரன்.

**விருஷாதன்** — கர்ணனுடன் பிறந்தவன். அசுரன்.

**விருஷலீ** — பூத்தபின்னும் மணமிலாது பிதாவின் வீட்டிலுள்ள கன்னிகை.

**விருஷன்** — 1. தாபசன் என்னும் மநுபுத்திரன்.

2. சிருஞ்சன் குமாரன்.

**விருஷாகபி**—1. திரேதாயுகத்தில் விஷ்ணுவின் பெயர்.

2. பூதனுக்குச் சுரபியிடத்து உதித்த குமாரன்.

**விருஷாதர்ப்பன்** — சிபியின் குமாரன்.

**விருஷ்டி** — சினி குமாரன்.

**விருஷ்டிகள்** — யாதவகுல பேதத்தவர்.

**விருஷ்டிமான்** — ஸ்ரீரதன் குமாரன். இவன் குமாரன் சுஷேணன்.

**விருஷ்ணி** — 1. மது குமாரன். கார்த்தவீரியன் பௌத்திரன். இவன் குமாரர் இரண்டாவது விருஷணிமுதல் நூற்றுவர். இவர்களே விருஷ்ணி வம்சத்தவர். மாதவர், யாதர், எனப் பெயர்பெற்றவர். இவர்கள் சாபத்தால் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு இறந்தனர்.

2. முதலாவது விருஷ்ணியின் குமாரன். கார்த்தவீர்யன் பௌத்திரன்.

3. விருருண்டன் குமாரன்.

4. குகுரன் குமாரன். அந்தகன் பேரன். இவன் குமாரன் விலோமா.

5. குந்தியின் குமாரன். இவன் குமாரன் தசாருகன்.

6 சாத்துவதன் குமாரன்.

7. பசமாநன் குமாரன். இவன் குமாரன் சுமத்திரன்.

8. பிருதுவின் தந்தை.

**விருஷ்ணிகள்** — விருஷ்ணியைக் காண்க.

**விருஷஸ்கந்தன்** — இராமபத்திரர் தோழன். சரயுவில் தீர்த்தமாடச்சென்ற தசரதரைக் காணவேண்டி இவன் தோளில்ஏறி இராமமூர்த்தி சென்றனர்.

**விருஷத்திரன்** — (சு.) வைவசுதமநுவின் புத்திரன். இவன் பசுக்களைக் காத்தல்வேண்டி இரவும் பகலும் உறக்கமில்லாதிருக்கையில் புலியொன்று அர்த்தராத்திரியில் பசுக்கூட்டத்தில் நுழைந்து பசுக்களை மருட்டி அவற்றில் ஒன்றைப் பிடிக்கையில் பசு வீறிட்டது. அரசன் பசுவீறிட்ட ஒலி கேட்டு இரவாகையால் புலியொன்று பசுவைக் கொன்றனன். அரசன் பசுவினைக் கொன்ற செய்தியை வசிட்டர் அறிந்து 'நீ சூத்திரனாக' எனச் சபித்தனர். அரசன் அவ்வகையே சிதேந்திரியனாய்க் காட்டெரியில் புகுந்து இறந்தனன். (பாகவதம்.)

**விருக்ஷங்கள்** — இவை சிலபுண்ணியதலங்களிலும் தீர்த்தங்களிலும் விசேடமாகக் கொண்டாடப்படுகின்ற புண்ணியவிருக்ஷங்கள். அவைகளுள் கயாதீரத்தில் ஆலமரம். அயோத்தியில் கோபிதாரவிருக்ஷம். பில்வாரணியத்தில் வில்வம். அம்பிகாஸ்தலம் (அ) இல் அரசு. சிந்துத்வீபத்தில் மாதவி. வன்னிக்ஷேத்ரம் (கo)ல் பலாசம். மருதக்ஷேத்ரம் (அ)ல் மருதமரம். திருப்பனந்தாளில் பனை. குற்றாலத்தில் குறும்பலா. கருவூரில் களா. காஞ்சியில் மா. ஒற்றியூரில் மகிழ். சிதம்பரத்தில் வடவிருக்ஷம். திருப்பொருந்துறையில் குருந்து. திருவெண்காட்டில் ஆல். இன்னும் பலதலங்கள் விருக்ஷத்தடியில் பல பிரதிட்டைகள் செய்யப்பட்டு மேம்பட்டுள. அவற்றைத் தலபுராணங்களாலறிக. சாதாரணமாக உலகத்தவர் புண்ணியவிருக்ஷங்களாக வில்வம், அரசு, வேம்பு முதலியவற்றை மேன்மையாகக் கொள்ளுகின்றனர். அவற்றுள் கல்யாணங்களில் முள்முருக்கு, அரசு, மா, பலாசு, மூங்கில் இவற்றை முறையே திரிமூர்த்திகளின் சான்றாகப் பிரதிட்டை

செய்கின்றார்கள். பலாசு, அரசு, மா, எருக்கு, அத்தி முதலியன ஓமாதிகாரியங்களில் பயன்படுகின்றன. இவ்விருக்ஷங்களால் க்ஷேத்திரங்களுக்குப் பெயர் கூறப்பட்டிருக்கிறது. அவை மருதூர், திருப்பனந்தாள், கடம்பவனம் முதலியன. கல்லால் நீழலில் சிவமூர்த்தி தக்ஷிணாமூர்த்தமாக எழுந்தருளியிருந்தனர். ஆலில் திருமால் பள்ளிகொண்டிருந்தனர். வாழை தேவர்களுக்கு நிவேதிக்கத்தக்க சிறந்த கனி தருவதன்றி இதனடியில் சிவமூர்த்தியெழுந்தருளி யருள்செய்தனர். கதலீவிரதம் காண்க. இலந்தை பதரிகாசிரமத்து மரம். தெங்கு தேவபலியின் பொருட்டுப் பயன்படுவதாம். பாக்கு தேவர்களுக்குத் தாம்பூலத்திற்குப் பயன்படுவது. பனை வேதசாத்திரமெழுதிப் படிக்கவுமாம். இது திருவோத்தூரில் திருஞானசம்பந்தரால் பாடப்பட்டதுமாம். வெற்றிலை நாகலோகத்திலிருந்து பூலோகத்திற்குக் கொண்டுவரப்பட்டு வேளாளர் கையில் கொடுப்பித்துப் பயிர்செய்யப்பெற்றது. தருப்பை - தருப்பையைக் காண்க. எள் - எள்ளைக் காண்க. அகத்தி, விந்தையைக் காண்க. மூங்கில் - இந்திரன் ஒருகாலத்து மூங்கிலானான். சிவமூர்த்தி இதனடியில் எழுந்தருளியிருந்தனர். கரும்பு - அதியமான் நெடுமானஞ்சியைக் காண்க. நெல்லியும் புண்யவிருக்ஷமாம். இவற்றுள் தேவதருக்களாகிய சந்தனம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிஜாதம் என்ற ஐந்தும் கேட்டதைத் தரும். இந்திரன் ஒருகாலத்திலே கைலையை யடையச் சிவகணங்கள் வழிமறுக்கத் தங்கி அக்னியை அந்தணவுருக்கொண்டு ஏவ, இதனைக்கண்ட 'பிராட்டியார் நீ கட்டளையின்றி இந்திரன் ஏவலால் வந்தமையால் தேவர்கள் பெண்களாகுக' எனக் கேட்ட தேவர் நடுங்கி இறைவியைத் துதிக்க, இறைவி பிரசன்னமாய் 'என் வாக்குப் பொய்க்காது நீங்கள் அனைவரும் விருக்ஷரூபிகளாகுக' என்றனள், தேவர் விருக்ஷரூபிகளாயினர். இதில் அச்வத்தரூபிபகவான், வடரூபிசதாசிவர் பேலாமரம் பிரமன், மா இந்திரன், மராமரம் இந்திராணி, தெய்வப்பெண்கள் அதில் கொடிகளாயினர். ஊர்வசியாதியர் புஷ்பவிருக்ஷமாயினர். "ரமாபில்வா சிவாநிம்பா துலசிஸ்யாத்ஸரஸ்வதீ" என்று கூறியுள்ளதால் வில்வம், லக்ஷ்மிஸ்வரூபம், வேம்புசத்திஸ்வரூபம், துளசி ஸரஸ்வதிச்வரூபம்.

**விருக்ஷி** — ததீசிமுனிவர் வீர்யத்தால் சரஸ்வதிநதியிற் பிறந்த இருடி. இவருக்குச் சாரஸ்வதன் எனவும் பெயர்.

**விருகணன்** — பிரியவிரத வம்சத்து அரசன்.

**விருபன்** — 1. அம்பரீஷன் குமாரன்.

2. ஆங்கிரச புத்திரனான ரிஷி.

3. ஒரு அசுரன்.

**விருபாட்சன்** — கடோர்கஜனுக்கு சாரதி.

**விருபாக்ஷம்** — பாதாளத்தில் பூமியைத் தாங்கி நிற்கும் யானைகளில் ஒன்று. இது தன் சிரமத்தை ஆற்றிக்கொள்ளச் சற்று தலையசைப்பின் பூகம்பம் உண்டாம் என்பர். சாகரர் பாதாளத்தைத் தோண்டிய காலத்தில் இதைப் பார்த்தனர். (இரா.)

**விருபாக்ஷதேவர்** — வீரசைவரது கணேசபுராணம் பாடிய புலவர்.

**விருபாக்ஷன்** — 1. சத்தியகிரி நகரத்தரசன். நாளிசிங்கனால் அனுப்பப்பட்ட பிராமணனுக்கு மரியாதை செய்தவன்.

2. ஒரு இராவணசேநாபதி. இலக்குமணரால் மாய்ந்தவன். பத்துக்கோடி சேனைக்கு நாயகன். (அநுமனால் மாய்ந்தவன் என்பர்.)

3. நரகாசுரனுக்கு மந்திரி. நரகாசுரசங்காரத்தில் கண்ணனால் கொலைசெய்யப்பட்டவன்.

4. மால்யவந்தன் குமாரன். சுக்கிரீவனால் கொலையுண்டான்.

5. தநு குமாரன்.

6. சைவவேதியன். கௌரியைக்காண்க. இவன் தேவிசுபவிரதை.

7. சிவன் திருநாமங்களில் ஒன்று.

**விரேதன்** — சுாதன் குமாரன். இவன் குமாரன் சர்வபூமன்.

**விரை** — (ரு) கோட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம்.

**விரோகணன்** — பிரியவிரதன் வம்சத்து நரன் குமாரன்.

**விரோசநன்** — 1. பிரகலாதன் குமாரன். இவன் குமாரன் பலி. பேரன் பாணாசுரன். சுதன்வாவைப் பார்க்க. இவனிடத்துத் தேவர்கள் பிராமண வேஷங்கொண்டு யாசிக்க அவர்களுக்கு ஆயுள்முழுதுந் தத்தஞ் செய்தனன். இவன் சநத்குமாரமுனிவரால் உபதேசம் பெற்றுத் தவமேற்கொண்டான். குமாரி வச்சிரசுவாலை.

2. இரண்யாக்ஷன் புதல்வன். சூரியனை யெண்ணித் தவம்புரிந்து கிரீடம் பெற்ற வன். இக்கிரீடம் இல்லாதிருக்கும் வேளை யில் யாரேனும் இவன் தலையைத் தொடு வாராயின் அத்தலை (௧000) பிளவுறப்பெறு வனாதலால் கிரீடம் நீங்காது அணிந்து தீமை புரிந்தனன். விஷ்ணு இவனைக் கொலைபுரிய மோகினியுருக்கொண்டு செல்ல அசுரன் இவளைக்கண்டு மால் கொண் டனன். மோகினி நான் தயிலமாடார் தோளைத்தொடேன் என்றனள். அதனால் அசுரன் தயிலமிடச் சம்மதிக்க மோகினி அவன் தலையைத் தொட்டுத் தயிலமிட் டுக் கொன்றனள்.

3. அங்கதனுக்குத் தந்தை.

**விரோசனமதம்** — இம்மதத்திற்கு அசர ஸ்வாமியான விபராசநன் கர்த்தா. இது வும் தேகாத்மவாதிமதமே. சார்வகமதம் போல இவர்கள் அன்னமய கோசமே ஆத்மா என்பர். எதனிடத்தில் நான் என் கிற புத்தியுண்டாகிறதோ அதுவே ஆத் மா. இவர்களுக்கும் பிரத்யக்ஷம் ஒன்றுமே பிரமாணம். பூதம் நான்கே. ஆகாசபூத மில்லை யென்பர். இவர்கள் தேகபோஷ ணமே பரமதர்மம், மரணமே மோக்ஷம் என்பர்.

**விரோசனை** — 1. துவஷ்டாவின் தேவி.

2. சநகாரசனைக் காண்க.

**விரோசன்** — திருதராட்டிரன் குமாரன்.

**விரோதவணி** — மாறுபட்ட சொல்லானும், பொருளானும் மாறுபட்ட தன்மை விளைவு தோன்ற உரைப்பது. (இதுவே முரண்.)

**விரோதினி** — ஸ்திரீபுருஷர்களின் சிநேகத் தைப் பேதித்துக் கலகம் உண்டாக்கும் தேவதை.

**விர்தேயு** — ரவுத்திராசுவன் குமாரன்.

**விலக்கணி** — பிரசித்தமானதாகியும், அபிப் பிராயத்தோடு கூடியுமிருக்கின்ற விலக் கைச் சொல்லுதலாம். இதனைப் பிரதிஷே தாலங்காரம் என்பர். (குவல.)

**விலக்குறுப்பு** — தலைவன் செலுத்துகின்ற கதையை விலக்கியும் அக்கதையை நடத் தியும் முன்பு செய்த கதைக்கே உறுப் பாவது. இவை நாடகத்தின்கண் விலக் குறுப்புகளாம். அவை பதினான்கு வகைப் படும். அவை பொருள், யோனி, விரு த்தி, சந்தி, சுவை, சாதி, குறிப்பு, சத்து வம், அவிநயம், சொல். சொல்வகை, வண்ணம், வரி, சேதமென்பனவாம். அவற்றுள் பொருளாவது நான்குவகைப் படும். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். இவை நாடகத்தில் பிரிந்தும் கூடியும் வருங்கால் பெயர் வேறுபடும். அவை நாடகம், பிரகணப் பிரகரணம், பிரகரணம், அங்கம் எனப் பெயர் பெறும். யோனி - நான்கு வகை ப்படும். அவை உள்ளோன் தலைவனாக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனாக உள்ளதோர் பொ ருண்மேற் செய்தலும், உள்ளோன் தலை வனாக இல்லதோர் பொருண்மேற் செய் தலும், இல்லோன் தலைவனாக இல்லதோர் பொருண்மேற் செய்தலு மென்பனவாம். விருத்தி - நான்கு வகைப்படும். அவை சாத்துவதி, ஆரபடி, கைசிகி, பாரதி என இவை. இவற்றுட் சாத்துவதியா வது - அறம்பொருளாகத் தெய்வமானுடர் தலைவராக வருவது. ஆரபடியாவது - பொருள் பொருளாக வீராகிய மானுடர் தலைவராக வருவது. கைசிகியாவது-காமம் பொருளாகக் காமுகர் தலைவராக வருவது. பாரதியாவது - கூத்தன் தலைவனாக நடன், நடி பொருளாகக் காட்டியும் உரைத்தும் வருவது. சந்தி ஐவகைப்படும். அவை முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய் த்தல். அவற்றுள் முகமாவது - எழுவகைப் பட்ட உழவினாற் சமைக்கப்பட்ட பூமியுள் இட்ட வித்துப் பருவம்செய்து முளைத்து முடிவது போன்றது. பிரதிமுகமாவது - அங்ஙனம் முளைத்தல் முதலாய் இலை தோன்றி நாற்றாய் முடிவது போன்றது. கருப்பமாவது - அந்நாற்று முதலாய்க் கரு விருந்து பெருகித் தன்னுட் பொருள் பொதிந்து கருப்பமுற்றி நிற்பது போல் வது. விளைவாவது - கருப்பமுதலாய்க் விரிந்து கதிர்திரண்டு காய் தாழ்ந்து முற்றி விளைந்து முடிவது போல்வது. துய்த்தலா வது - விளையப்பட்ட பொருளை யறுத்துப் போரிட்டுக் கடாவிட்டுத் தூற்றிப் பொலி செய்துகொண்டு போய் உண்டு மகிழ்வது போல்வது. சுவை - ஒன்பது வகைப்படும். அவை வீரம், பயம், இழிப்பு, அற்புதம், இன்பம், அவலம், நகை, நடுநிலை, உருத் திரம் என்பனவாம். இவற்றின் விவரங் களை அவிநயத்திற் காண்க. சாதி பத்து வகைப்படும். அவை நாடகம். பிரகர ணம், பாணம், பிரகஸனம், டிமம், வியா யோகம், சமவாகாரம், வீதி, அங்கம், ஈ

ஹாமிருகம், என்பனவாம். குறிப்பு சுவை யதன் கட்டோன்றவது. சத்துவம் - அக் குறிப்பின்கண் நிகழ்கின்ற நிகழ்ச்சி. அவி நயம் - என்பது பாவகம் அது (உச) வகை த்து. அவை வெகுண்டோன் அவிநய முத லாக நஞ்சுண்டோன் அவிநயம் ஈருக உள் ளவை. அவிநயத்துட் காண்க. சொல் - வருமாறு: இது மூன்றுவகைப்படும் உட் சொல், புறச்சொல், ஆகாயச்சொல். அவை நெஞ்சொடுகூறல், கேட்போர்க் குரைத் தல், தானே கூறல், என்பனவாம். சொல் வகை - நான்குவகைப்படும். அவை சுண் ணம், சுரிதகம், வண்ணம், வரிதகம் என் பன. சுண்ணம் - நான் கடியான் வருவது. சுரிதகம்-எட்டடியான் வருவது. வண்ணம்- நான்கடியான் வருவது. சுரிதகம்-முப்பத் திரண்டடியான் வருவது. வண்ணம் - ஒரு வகையான் மூன்று வகைப்படும். அவை ஆருய் வரும் பெருவண்ணமும், இருபத் தொன்ருய் வரும் இடை வண்ணமும், நாற்பத்தொன்ருய் வரும் வனப்புவண்ண மும‌ாம். வரி - எட்டுவகைப்படும். கண்கூடு வரி, கானல்வரி, உள்வரி, புறவரி, கிளர் வரி, தேர்ச்சிவரி, காட்சிவரி, எடுத்துக் கோள்வரி முதலியன; வரிகாண்க. சேதம்- ஆரியம் தமிழென இருவகைக் கூத்து. அது ஆதிக்கதையை அவற்றிற் கொப்பச் சேதித்திடுவதாம்.

விலங்கின் வகை — மனிதனிவற்றை நெருங் காது விலங்கலால் விலங்கென்பர். பிராணி களை இரண்டுவகைகளாகப் பிரிக்கலாம். ஒன்று முதுகெலும்புள்ளவை, ஒன்று முது கெலும்பில்லாதன. முதுகெலும்புள்ளவை சிங்கம், புலி, நாய், பூனை, பாம்பு முதலியன. முதுகெலும்பில்லாதவை தேன் ஈ, வண்டு. சிலந்தி முதலியன. முதுகெலும்பென்பது மனிதர்க்குள்ளது போன்றதான பிராணி களின் முதுகினடுவிலுள்ள எலும்புக்கோ வை. பிராணிகள் சிலவற்றின் இரத்தம் உஷ்ணமாயும், சிலவற்றின் இரத்தம் குளி ர்ந்தும் இருக்கும். உஷ்ண ரத்தமுள்ளன சில குட்டிகளுக்குப் பால்கொடுக்கின்றன. சில முட்டையிடுகின்றன. குட்டிகளுக்குப் பால்கொடுக்கும் மிருகங்களுக்குப் பற்களும் இருதயத்தில் நான்கு அறைகளும் சுவாசா சயமும் உண்டு. இவை பறவைகளுக்கும் உண்டு. உஷ்ணப்பிரதேசத்திலுள்ள பிரா ணிகளின் மேற்றோல் அதிக மயிர் அடர்ந் திரா. சீதளப்பிரதேசப் பிராணிகளின் தோல் சீதளத்தைக் கொடுக்க மயிரடர்ந் திருக்கும்.

விலாங்குப்பல்லி — இது அமெரிகாவிலுள்ள ஐக்கியமாகாணத்திலிருக்கும் நீர்நிலை வாசி (Mud Eel) இதன் முன்பாகம் பல்லியைப் போலும் பின்பாகம் விலாங்கு போலுமிருக் கிறது. மார்பிடத்தில் இரண்டு கால்க ளுண்டு.

பாம்பு விலாங்கு (ஆம்பியூமமா) இது, பாம்புபோல் உடலும் கழுத்திற்கு அடுத் தும் வாலிற்கடுத்தும் இரண்டு கால்களை யும் பெற்றிருக்கிறது. இது ஊருகையில் பாம்பைப்போல் உடல் நெளித்துச்செல்லு கிறது.

விலாசவதி — தாராபீடனது பட்டமகிஷி; சந்திராபீடனது தாய்.

விலாசி — இலக்கணையின் தோழி.

விலோமதநயன் — விருஷ்ணி குமாரன்.

விலோமன் — தநுப்புத்திரனுகிய தானவன்.

விலோமா — விருஷ்ணி குமாரன். இவன் குமாரன் மநு

வில்லகவிரலினர் — 1. இவர் பரத்தைக்குந் தலைவற்கும் உளதாய நெருக்கத்திற்குப் போர்வீரர்களது விற்பிடித்த கைவிரல்களை உவமித்த பெருஞ்சிறப்பால் பாடினர்க்கும் வில்லகவிரலினர் என்னும் பெயர் வழங் கப் பட்டதாகும்.

2. இவர் கடைச்சங்க காலத்தவர். இவர் தாம் கூறிய குறுந்தொகை (௩எ0) ஆவது செய்யுளில் "வில்லகவிரலிற் பொருந்தி" என கணவனேடு நீக்கமின்மை கூறினமை யின் அம் முதற் குறிப்பே இவர்க்குப் பெய ராயிற்று.

வில்லவன்கோதை — 1. இவன் சேரன் செங்குட்டவனுக்குச் சேநாபதி. வடநாட்டு யாத்திரையில் ஆரிய அரசரை வென்றவன்.

2. செங்குட்டுவனுக்கு மந்திரி. (சிலப் பதிகாரம்).

வில்லி — ஒரு வேடன். இவன் புத்தூரிலி ருந்த மல்லியென்னும் வேட்டுவச்சியின் குமாரன். இவன் சகோதரன் கண்டன். இக்கண்டனும் வில்லியும் அவ்வேடச் சேரிக்கு அதிபதிகள். இவர்கள் வேட் டைக்குச் செல்கையில் கண்டனைப் புலி கொன்றது. தம்பியைப் புலி கொன்ற தறிந்த வில்லி விசனமுறுகையில் பெரு மாள் அவன் கனவில் தோன்றி 'நாமிங்கு எழுந்தருளியிருக்கிறோம். உன் தம்பியும் உயிர்பெற்று வருவன். அப்புலியும் சாம்

அப் புலியிருக்கும் குகைக்கணிருக்கும் பொருள்கொண்டு திருக்கோயிலும் ஊரும் உண்டாக்கி விபுவம் நடத்துக' என அவ்வாறே தம்பி உயிர்பெற்று வரக்கண்டு இருவரும் குகைக்கண் சென்று நிதிகண்டு புதரில் பெருமாளைக்கண்டு சேவித்துக் காடு கெடுத்து நாடாக்கித் திருப்பணிசெய்து அருகிலிருந்த புத்தூரிலிருந்த வேதியரை வருவித்து இவ்வூர்க்கு வில்லிபுத்தூர் என்று பெயரிட்டவன். இது ஆண்டாள் திருவவதாரத் தலம்.

வில்லிகள் — இவர்களும் தமிழ்நாட்டு வேட சாதியர். இவர்கள் நீலகிரி இருளரினும் நாகரிகம் பெற்றவர். இவர்கள் மலையர் எனவும் பெயர் பெறுவர். இவர்கள் மால ருஷியின் சந்ததியார். இந்த ருஷியைப் போலவே சில ருஷிகள் வில்லிப் பெண்களைக் கூடி இருளர், மாலர், மலையர் முதலியோரை விருத்தி செய்தனர் என்பர். (தர்ஸ்டன்.)

வில்லிபுத்தூரர் — திருமுனைப்பாடி நாட்டில் (௭00) ஆம்ஞல் சனியூரிலிருந்த வீரராகவாசாரியர் புத்திரர். வாக்கபாகை நாட்டரசன் கொங்கர்குலபதியாகிய வரபதி ஆட்கொண்டானைப் பாரதத்தில் புகழ்ந்து பாடியவர். மற்றைத் தமிழ்நாட்டரசரையும் புகழ்ந்தவர். சோழ சமஸ்தான வித்துவானாய் இருந்து தலயாத்திரையின் பொருட்டுச் சென்று அந்தஅந்த இடங்களில் உள்ள பல வித்துவான்கள் தம் வினவிற்கு விடைதாராயின் அப்புலவரின் காதுகளைத் தாம் வைத்திருந்த குறட்டால் அறுத்து வெற்றிகொண்டு சென்றவர். அநந்தன் என்னும் புலவன் இவர்க்குமுன் தோற்ற காலையில் அவனது காதை அறுக்கத் தொடங்குகையில் அவன் என்பெயர் ஆதிசேடனுக்கும் உண்டெனக்கூறப் புலவர் களிப்புற்று விட்டனர். இவர் தமது பல்லக்கில் ஏறித் திருவண்ணமலைக்கு வருகையில் அவ்விடம் எழுந்தருளியிருந்த அருணகிரிநாதர் அருளிச்செய்த கந்தரந்தாதிக்குப் பொருள்கூறத் தடைபட்டுத் தோல்வியுற்றுத் தாம் வைத்திருந்த குறட்டை அருணகிரிநாதரிடம் கொடுத்தனர். கிருபா மூர்த்தியாகிய அருணகிரியார் 'இது உமக்கு நாம் கொடுத்ததாக இருக்க' எனக் காதை அறுக்காது விட்டனர். இவ்வகையாகக் காதைப் பெற்று இவ்விடம்வந்து தோல்வியடைந்த மானத்தால் அண்ணமலையானைத் தரிசிக்காது அம்மலை காணப்படாமல் பல்லக்கில் திரையிடக் கூறிச் சென்றனர். உடனே கண்கெட்டது. புலவர் மீண்டும் அருணகிரியாரைப் பணிந்து கண்பெற்றனர். இவர் தம் நாடு சென்று அரசனுக்குச் சமஸ்தானவித்துவானாகி உடன்பிறந்தானுக்குத் தாயபாகம் கொடாததினால், அவன் அரசனிடம்முறையிட்டனன். அரசன் சிலநாள் கழித்து அவனை வரச்செய்து புலவரைநோக்கி மகாபாரதத்தைத் தமிழிற்பாடக் கட்டளையிட்டனன். புலவர் சிலநாட்களில் அவ்வகை பாடி அதனை அரங்கேற்றினர். இதன் பின் முன்கூறிய உடன்பிறந்தான் மீண்டும் அரசனிடம் தாயபாகத்திற்கு முறையிட்டனன். அரசன் புலவரை நோக்கிப் பாரதம் பாடிய நீரோ தாயபாகம் தடைசெய்வதென்றனன், அதனால் புலவர் நாணி இல்லற வெறுப்புற்றுத் திருவரங்கத்தில் தமது ஆயுளைக் கழித்துப் பரமபதம் அடைந்தனர். இவர் குமாரர் வரந்தருவார் இவர் செய்த பாரதத்திற்குச் சிறப்புப் பாயிரம் கூறியவர். இவரால் பாரதம் பாடுவிக்க வேண்டுமென்கிற விருப்பத்தால் அரசன் ஒரு கிழவியையேவித் தமயன் தம்பியர்க்குத் தங்கள் தேவியரால் கலகமுண்டாக்கி அரசனிடம் வர அரசன் புலவரைப் பாரதம் பாடுவித்து எண்ணத்தை முடித்துக் கொண்டனன் என்ப. இவரது மற்றைச் சரிதங்களை அருணகிரியாரையும் வரந்தருவாரையுங் காண்க.

வில்லிபுத்தூராழ்வார் — பெரியாழ்வாரைக் காண்க.

வில்லியாதன் — நன்னாகனால் பாடப் பெற்றவன். (புற-நா.)

வில்வகன் — கத்ரு குமாரன் நாகன்.

வில்வபாண்டூரன் — கத்ருதனயன் நாகன்.

வில்வம் — 1. இது சிவமூர்த்தியின் இச்சாஞானக் கிரியையாய்ப் பூமியில் ஆன்மாக்களின் பாவத்தைப் போக்க அவர் அருளால் கோமயத்தில் உற்பவித்தது. இதனைப் பூசிப்போர் விரதசீலராய் இம் மாமூலத்தை அடைந்து சங்கற்பம் செய்து எட்டுத் திக்குகளிலும் பசுவின் நெய்யால் தீபமிட்டு அபிடேக முறைப்படி செய்து உடை புனைந்து சாந்தணிந்து மலர் பறித்திட்டுத் தூபதீபாராதனை செய்து நிவேதித்துச் சோடசோபசாரம் செய்து, வில்வ

விருக்ஷச, நிர்பீஜ, கோமயோற்பவா, சஞ்சாரநந்த, சுத்த பதுமப்பிரிய, வியாத, புட்பாதிக, க்ஷேத்திரஞ்ஞ, வரதா பீஷ்ட, புருஷார்த்த சித்திதா, சிவப்பிரிய முதலிய திருநாமங்களைக் கொண்டு பூசிக்கச் சகல சித்தியும் பெறுவர்.

2. ஓர் அரசன் இவ்விருக்ஷத்தை நிழற் பொருட்டுக் குளக்கரையிற் பதித்துத் தான் வேட்டையாடிய சிரமபரிகாரத்தின் பொருட்டுக் கொடுங்கோலனாகிய அவன் வருகையில் அந்த வில்வ விருக்ஷத்தருகி லிருந்த ஓர் முநிவன் அணிந்திருந்த விபூதி அவன்மீது பட ஞானம்பெற்று வேண்டி னன். அவர் நீ வில்வப் பிரதிஷ்டை செய்து அதனிழலில் வசித்தால் உன் பாபங் கள் நீங்கிப் புனிதனாவாயென அவனுக் குச் சிவஞான மநுக்ரஹிக்க அவன் மீளாக் கதி பெற்றனன். இவ்வாறே மார்க்கண்ட முனிவர் உபதேசத்தால் பாபியாகிய வேதி யன் வில்வத்தடியில் சிவாராதனஞ் செய்து பாபநீக்க மடைந்தனன். (சிவரஹ).

**வில்வலன்** — 1. அசமுகி துருவாசரைப் புணரப்பிறந்த குமாரன். ஒருமுறை வில்வ லன் வாதாபி இருவரும் தேவரிடம் சண் டைசெய்யச் சென்றனர். அந்த யுத்தத்தில் வாதாபி இறந்தனன். அதனால் வில்வலன் சுக்கிரனைச் சரண்அடைந்து நடந்தவை கூறினன். சுக்கிரன் வாதாபியின் எலும் பினைக் கொண்டுவரக் கூறினன். வில்வ லன் அவற்றைத் தேடிக் காணாமையால் சுக்கிரனிடம் கூறச் சுக்கிரன் இவனுக்கு மிர்தசஞ்சீவி மந்திரம் உபதேசித்து அம் மந்திரத்தை அவன் இறந்த விடத்தில் கூறச் சொன்னான். வில்வலன் மந்திர பலத்தை யடைந்து அந்த யுத்தகளத்தில் கூற வாதாபி தன்னையுண்ட பேய் மிரு கங்களின் வயிற்றைக் கிழித்து வெளிவந் தனன். இந்த மந்திர பலமறிந்த இருவ ரும் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு தேவர் அரசர் முதலியவர்க்கு ஆடாகி விருந்தளித்துக் கொல்லுவாராயினர். (தீர்த்தகிரி புராணம்).

2. துர்வாஸரை அவர்செய்த தவத்தைக் கேட்டதால் அவர் மறுக்க அவரைக் கொலைசெய்யப் போகையில் முநிவர் அகத் தியரால் இறக்க எனச் சாபம் இட்ட னர். இவன் பிரமனையெண்ணித் தவமி யற்றித் தன் தம்பியைக் கொலைபுரிந்து அவியில் இட்டுக் கோரதவஞ் செய்யப் பிரமதேவன் பிரத்தியக்ஷமாய் என்ன வரம் வேண்டுமென்றனன். இவன் என் தம்பி யைக் கொலைசெய்து மீண்டும் அழைத்த காலத்து உயிர் பெற்றுவர வரம் அருளல் வேண்டுமென அப்படியே வரம்பெற்றுச் சூரபன்மனிடத்து நட்புக்கொண்டு வழிச் செல்லும் இருடிகளை உபசரித்தழைத்துத் தம்பியை ஆடாக்கிச் சமைத்து அவ்விரு டிகளுக்கு விருந்திட்டு வாதாபி என அழைத்து அவன் உண்டோர் வயிற்றைக் கிழித்து வரக்கண்டு இருவரும் உண்டு களித்து வருவாராயினர். இவவகை நடத் துகையில் ஒருகாலத்து அகத்தியர் அவ் வழி வந்தனர். அவரை எதிர்கொண்டு உபசரித்து அழைத்துப் பழையபடி விருந் திட்டுத் தம்பியை அழைத்தனன். அழைத் தலும் முநிவர் வயிற்றில் ஆட்டின் உரு, அசுரன் கொள்ளுதலை அறிந்து வயிற் றைத் தமது கரத்தால் தடவுதலும் மலமாயி னன். இதனைக் கண்ட அரக்கன் முநி வரைப் பணிந்து வேண்டினன். முநிவர் 'தீயவனே நீ என் கருத்திற்கியையச் செய் வையேல் மன்னிப்பன்' என்றனர். அகத் தியர் 'உன்னிடம் இருக்கும் பொன்னை முநிவர்களுக்கும் அரசர்களுக்கும் கொடுக்க' என்றனர். அவ்வகை கொடுத்து மன்னிப்பு அடைந்தனன். இவனுக்கு இலவலன் எனவும் பெயர்.

3. ஒரு அரசன். பல்லவனைக் காண்க.

**வில்வன்** — ஒரு காந்தருவன். இவன் அழ காற் செருக்கடைந்து நாரதரை எருமை போற் கனைத்து மறித்தனன். அவர் இவனை எருமையாகும்படி சபித்தனர். காந்தருவன் இரங்கிக் கேட்டுக்கொள்ள முநிவர் 'நீ இராமமூர்த்தி அவதரிக்கும் அளவும் இருந்து அவரைத் தரிசித்து இவ்வுரு நீங்குக' என்றனர்.

**வில்வித்தை** — வில்வித்தையென்பது தனுர் வித்தை. அதாவது வில்லின் இலக்கணம், விற்பிடிக்கும் இலக்கணம், அம்பின் இலக்க ணம், அம்பினைத்தொடுக்குமிடம், விற்கொ ண்டோன் இலக்கணம், விற்கொண்டோ னிலை முதலியவற்றைக் கூறும் இலக்கணங் களாம். இவை ஆன்வோரும் பயிற்சியு மற் றமையால் வழக்கமற்று இன்னதென்று தெரிதற் கருமையா யிருக்கிறது. இந்தத் தனுர்வேதம் நான்குபாதம், ஐந்து வகையி னையுடையதாம். அந்த நான்குபாதம் இரத, கஜ, துரக, பதாதிகளாம். ஐந்துவகை

யாவன: (க) யந்திரமுக்தம், (உ) பாணிமுக்தம், (ங) முக்தசந்தாரிதம், (ச) அமுக்தம், (ரு) பாகு யுத்தம் என்பன. மேற்கூறிய ஐந்தும், சஸ்திராஸ்திர சம்பத்தியால் இருவிதம். அவையாவன: அஸ்திரம், சஸ்திரம் அஸ்திரம் கைவிடுபடையால் யுத்தஞ் செய்தல்; சஸ்திரம் கைவிடாப்படையால் யுத்தஞ்செய்தல். அவ்யுத்தம் மீண்டும் ருஜுமாயா விபேதத்தால் இருவிதப்படும். அவை நேர்நின்று போர் புரிதலும், மறைந்து போர்புரிதலும் என்பன. மேற்கூறிய ஐவகையில் யந்திரமுக்தமாவது — பீரங்கி, துப்பாக்கி முதலிய யந்திரங்களில் இருப்புக்குண்டு முதலியன பிரயோகித்துப் பகைவர் அரண்களையும் பகைவரையும் அழிப்பது. பாணிமுக்தமாவது — வில், தோமரம், முதலிய யந்திரங்களினால் அவ்வாறு செய்வது. முக்தசந்தாரிதம் — கோட்டை முதலியன பிடித்தலால் அவ்வாறு செய்வது. அமுக்தமாவது — கைவிடாப் படைகளாகிய வாள் முதலியவற்றால் அவ்வாறு செய்வது. பாகுயுத்தம் — ஆயுதமில்லாமல் செய்யும் மல்லயுத்த முதலியவற்றால் அவ்வாறு செய்வது. மேற்கூறிய யுத்தவிருப்புளோன் யோக்யனிடத்தில் யுத்தஞ் செய்யவேண்டும். அதாவது கபடனிடத்து யுத்தஞ் செய்யக் கூடாது. யுத்தத்தில் வில்லைக் கொண்டு ஒருவர்க்கொருவர் யுத்தஞ் செய்வது உத்தமப் போர்; வாள் முதலியன கொண்டு யுத்தஞ் செய்வது மத்திமம்; கட்க முதலியன கொண்டு போரிடுவது அதமம்; ஆயுதமில்லாது மல்லயுத்தம் புரிவது அதமாதமம். இவ்வகை யுத்தத்தில் தனுர்வேதாசிரியன் வேதியனாயிருத்தல் வேண்டும்; அன்றிப் பின்னிரண்டு வர்ணத்தவரும் இருக்கலாம். சூத்திரன் கற்கவேண்டின் தானே கற்றுக் கொள்ள வேண்டும். இச் சூத்திரர்கள் அரசனுக்கு யுத்தம் நேருங்காலத்து யுத்தத்தில் உதவி புரியவேண்டும். வில்வித்தை விரும்பினவன் அங்கப் பழுது இல்லாதவனாய்க் கைகால் விரல் புஜங்களில் வன்மையுடையனாயிருத்தல் வேண்டும். வில்லைக் கையிற் கொண்டோன் விற்பிடிக்குமுன் தான் நிற்கும் நிலைகளையறிதல் வேண்டும். அந்நிலைகள் சமபதம், வைசாகம், ஆலீடம், பிரத்யாலீடம், ஜாதம், நிச்சலம், விகடம், சம்புடம், சுவஸ்திகம், மண்டலம், பைசாசம் என்பனவாம். இவற்றுள் சமபதம் — என்பது இரண்டு கால்களையும் சமமாக வைத்துக்கொண்டு நிற்குநிலை. வைசாகம் — என்பது இரண்டு கால்களுக்கும் நடுவில் சாணகலம் இருக்கும்படி நிற்குநிலை. ஆலீடம் — என்பது கலப்பைபோல் பூமியைத் தொட்டு நிற்கும்நிலை. அன்றி வலக்கான் மண்டலித்திடக்கான் முந்துற நிற்குநிலை. பிரத்தியாலீடம் — என்பது வலக்கான் முந்துற்று இடக்காலை மண்டலித்து நிற்குநிலை. ஜாதம் — என்பது கால்களிரண்டினிடையில் (கஉ) அங்குலமிருக்க இடதுகால் மண்டலித்து நிற்குநிலை. நிச்சலமாவது — இடதுகால் முன் நேராகவும் வலதுகால் நீண்டதாகவும் அன்றித் தக்ஷிணபாதம் சற்றுக் குறுகி நிற்குநிலை. விகடம் என்பது — இரண்டு கால்களுக்கிடையில் இரண்டுமுழம் இடமிருக்க முழங்கால்களும் கால்களும் தடிபோல் நீண்டு நிற்குநிலை. சம்புடமென்பது — தொடைகள் நீண்டிருக்க நுனிக்காலடி பூமியைத் தொட நிற்குநிலை. சவஸ்திகம் என்பது — காலடிகளிரண்டும் சற்று விலகியிருக்கச் சமமாய்த் தண்டாகாரமாய் நிற்குநிலை. மண்டலம் என்பது — இருகாலும் பக்கமாக வளைய நிற்கும் நிலை. பைசாசம் என்பது — ஒரு காலினின்று ஒரு கால் முடக்கி நிற்கும் நிலை. வில்லினைக் கையிற் கொண்டோன் வில்லினை இடதுகையிற் பிடித்து வலதுகையில் அம்பினைக் கொண்டு வைசாகம், அல்லது ஜாதம் எனும் நிலையினின்று குருவினை வணங்கி உத்தமமான மாத்திற்செய்த வில்லினைக் கட்டுகள் அமைந்தனவாகக் கொண்டு எடுத்து நிறுத்திப் பிடிக்குமிடமாகிய நடுவிடத்திற் பிடித்துப் பூமியில் நாட்டி வளைத்து நாணேற்றி நாணினைக் குணத்தொனி செய்து இறகுகளுடன் கூடிய வெற்றம்பு, நஞ்சுண்ட அம்புகளைத் தொடுத்துக் குறிகளை நோக்கி நன்றாக இழுத்து எய்தல் வேண்டும். எய்வோன் வலி எவ்வளவினதோ அவ்வளவில் அம்பு வேகமாய்ச் செல்லும். இதன் விரிவுகளை ஆக்னேயபுராணத்திற் காண்க.

**விவகார நிச்சயத் தானங்கள்** — கு. 1. ஆரணியர், 2. வணிகக் கூட்டத்தார், 3. சேனைக் கூட்டத்தார், 4. கிராமத்திற்கிருமருங்கிலுமுள்ள கிராமத்தார், 5. பஞ்சாயத்தார், 6. கிராமத்தார், 7. பட்டணத்தார், 8. கணத்தினர், 9. சிரேணியர், 10.

வித்வான்கள், 11. வருக்கத்தார், 12. குலத்தினர், 13. குலிகர், 14 நியுத்தரோடு கூடிய பிராட்விவாகன், 15. நிருபன், ஆரணியர் — இருடிகள் வணிகக்கூட்டத்தார் - வியாபாரஞ் செய்யும் பெரியோர். சேனைக்கூட்டத்தார் சேனைத்தலை படைத்தலைவர். பஞ்சாயத்தார் - நடு நிலைமை வகித்துத் தீர்ப்பளிக்க இருகட்சியினரும் சம்மதித்து நியமிக்கும் பிரதிநிதி. கிராமத்தார்-ஒரு கிராமத்திலேயுள்ள பொது ஜனங்கள் அல்லது நாட்டாண்மைக்காரர். கணத்தினர்-ஒரு கூட்டமாக வாழ்பவர். சிரேணியர் ஊருக்குப் புறம்பே வாழ்ந்துகொண்டு கிராமத்தார்க்கு வேண்டுந் தொண்டு புரிபவர், பிராட்டுவிவாகன் — அந்தணர் முதலியமூவரில்குலன், மேன்மை, நடுநிலைமை, கல்வி கேள்விகள் நிறைந்தவன். நியுத்தன் — அரசனால் பொருள் கொடுத்தல் முதலான உபகாரங்கள் செய்யப்பட்டவர்களாகி விவகார விசாரணை செய்தற் பொருட்டு சபையிலுள்ள பண்டிதர்கள். (விவகார சார சங்கிரகம்).

விவகாரபதம் — கஅ. அவை : 1. கடன் கோடல் — கடன் கொடுத்தல், 2. உபநிதி — ஒருவன் தன் பொருளை நம்பிக்கையால் அயலவனிடத்து எண்ணுமல் வைத்தல், 3. கூடி மேம்படல் — வணிகர் முதலாயினோர் பலர்கூடித் தொழில் செய்தல், 4. நல்கியது நல்காமை — கொடுக்கப்பட்டதை மீட்டுங் கொடாமை, 5. ஒப்பிப் பணி செய்யாமை — வேலையை யொப்புக்கொண்டு செய்யா தொழிதல், 6. கூலி கோடாமை — வேலை வாங்கிக்கொண்டு கூலிதாராமை, 7. உடையானல்லான் விற்றல் — ஒருவன் பொருளை அவனது ஒப்பின்றி மற்றொருவன் விற்றல், 8. விற்றுக் கோடாமை — ஒருவன் சரக்கை விற்று அவனுக்குக் கிரயம் கொடாமை, 9. கொண்டு உளமோம்பாமை—விலையான் கொண்ட பொருளில்உள்ள மெரவ்வாமை, 10. கட்டுப்பாடு கடத்தல் — பாசண்டர் முதலியோர் ஏற்படுத்திய கட்டுப்பாடு கடத்தல்; 11. நிலவழக்கு — நில அளவின் பாகத்தில் நூனுதிகங்களைக் குறித்த வழக்கு, 12. மாதராடவர் தருமம் — மாதர்க்கும் ஆடவர்க்கும் கல்யாணம் முதலியவற்றைப் பற்றிய விவாதம், 13. தாயபாகம் — தந்தை முதலாயினர் பொருளை மைந்தர் முதலாயினோர் பிரித்துக் கொள்ளுதல், 14. வன்செயல் — செருக்குள்ளவரால் செய்யப்படும் கொடுந்தொழில், 15. சொற்கொடுமை—தேசம் சாதி முதலியவற்றை நிந்தித்தல், 16. தண்டக் கொடுமை — தடி முதலியவற்றால் அடித்தல் முதலிய தீமை, 17. சூது — சூது முதலிய தீமை விளைத்தல், 18. ஒழிபு — மேற்கூறியவற்றில் சொல்லாதன. இவற்றை வடநூலார் முறையே (1) ருணருணதானம், (2) உபநிதி, (3) சம்பூய சமுதானம், 4 தத்தா பிரதானிகம், 5-அசுவேத்யசு சுசுருஷா, 6-வேதநாகபாகம், 7-அஸ்வாமிகிரய, 8-விக்ரியா சம்பிரதானம், 9 - கிருத்வானுசய : 10 - சம்வித்தியகிரம் :, 11 - க்ஷேத்ரஞ்ஞ விவாத :, 12 ஸ்திரீ புருஷ தர்மம், 13. தாயபாக :, 14. சாஹஸம், 15. வாக்பாருஷ்யம், 16. தண்டபாருஷ்யம், 17 தியூதம், 15. பிரகீர்ணகம் என்பர். (விவகார சங்கிரகம்.)

2. இப்பதினெண் பதங்களும் நூறு கிளைகளைப் பெற்றிருக்கும். (காத்தியாயனம், நாரதம்).

விவகார பத்திரிகை — இது பிரதிக்ஞாப் பத்திரிகை, லிகிதஸாக்ஷியாதி பிரமாணம், பிரதிவாதி உத்தரம், விவாத பரிஷ்காரம் என்னும் நான்கு வகுப்பையுடையது. (யாஞ்ய வல்க்யம்).

விவகாரம் — பொருள், பிடை, சமய தருமம் இவற்றைச் சார்ந்த கடன் கோடல் முதலிய விஷயங்களில் தருமம் விலக்கப்பட்டபோது அத் தருமம் சாதித்தற் பொருட்டு அரசனிடத்துச் சொல்லுதல். இந்த விவகாரம், தருமங் கொள்கை, பிறர்க்குத் துன்பஞ் செய்யாமை, உண்மை கூறல் உண்டான காலத்தில்லை. தருமக்கேடு, உலோபம், பகை அழுக்காறு உண்டாங் காலத்துண்டாம். இந்த விவகார பதம் (கஅ) அவற்றை ஜீவகார பதத்திற் காண்க. இது பிரதக்கினை, உத்தரம், பிரமாண விசாரணை, நிச்சயமெனும் நான்கு பாதங்களை யுடையது. (காத்தியாயனர், நாரதர்).

விவசன் — விச்சு குமாரன். இவன் குமாரர் பலினன் முதலிய ஐம்பதின்மர்.

விவசுவான் — காசிபருக்கு அதிதியிடம் பிறந்த குமாரன். இவன் துவாதசாதித்தரில் ஒருவன். இவன் குமாரன் வைவச்சுத மநு. இவன் விச்வகர்மாவின் குமாரியாகிய சமுஞ்ஞையை மணந்தனன். அந்தச் சமு

ஞ்ஜை, சாயையைச் சிருட்டித்துத் தவஞ் செய்யச் சென்றனள். இந்த இரண்டு தேவியரிடத்தும் விவசுவானுக்கு வைவச்சுதமநு, யமன், சநி, யமுனை, தபதி என்னும் குமாரரும், குமரியரும் பிறந்தனர்.

விவரணுசாரியர் — சுரேச்வரா சாரியருக்கு ஒருபெயர்.

விவஸ்வதர் — ஒரு சூரியர். இவர் இரண்டு முகம் நான்குகைகள் இரண்டுகைகளிலும் கமலாயுதங்கள், அபயம், வரதம், பவளாபரணம் உடையவராய்ப் பொற்பட்டுவஸ்திரந் தரித்தவராயிருப்பர்.

விவாகத்திற்காகாத நாட்கள் — கண்டகம், தூணம், கண்டகத்தூண், சகடம், சமதிருஷ்டி, விட்கம்பம், கிரகவேதை, பஞ்சார்க்கம், சடசீதி, மாதசூன்யம், ஆசிவிஷம், அதிகமாதம், குரு சுக்ராஸ்தமனம் இவை ஆகா. (விதான).

விவாகவிஷயம் — பிரம்மசரியம் நீங்கினவன். அவ்வாச்சிரமம் நீங்கித் தன்தாயின் எழு தலைமுறைக்குட்படாதவளாயும் தந்தையின் கோத்திரத்தில் பிறவாதவளாயும் இருக்கிறவளையும், சாதகர்மாதி சமஸ்காரம் இல்லாத குலத்தில் பிறந்தவளையும், ஆண்பிள்ளைகளைப் பெருமல் பெண்பிள்ளைகளையே பெறுகிற குலத்திற் பிறந்தாளையும், தேகத்தில் நீளமயிருற்றவன், மூலவியாதியன், க்ஷயரோகி, அக்கினிபுஷ்டியில்லான், பெருவியாதி கொண்டவன், குஷ்டவியாதி உள்ளவன் இக்குலங்களில் பிறந்தவளையும், செம்பட்டைமயிருற்றவள், அதிஉயரமானவள், தீராப்பிணியுள்ளவள், மயிரில்லாதவள், உடம்பெல்லாம் மயிருற்றவள், குரூரமாகப் பேசுகிறவள், செங்கண்ணுள்ளவள், நக்ஷத்திரம், விருக்ஷம், நதி, ஈனசாதி, மலை, பக்ஷி, பாம்பு இவற்றின் பெயர் தரித்தவளையும் நீக்கி அழகு, நல்லபெயர், அன்னம், யானைகளையொத்த நடை, மெல்லியதேகம், பல், மயிர், சிறுகுரல், உடைய கன்னிகையை மணத்தல் வேண்டும். இவ்வகை மணந்த சுந்தரியுடன் கூடுகையில் ருதுகாலத்தில் கூடவேண்டும். அந்த ருதுகாலம் (கசு) நாள் கூறப்படுகிறது. அதில் ருதுவான (ச) நாட்களை மேலோர் நிந்திக்கிருர்களாதலால் அவற்றினையும் ஏகாதசி திரயோதசிகளையும் நீக்கி மற்றைப் பத்துநாட்களைக் கொள்வதே உத்தமம். ருதுகாலம் தொடங்கிய (சு) (அ) (கo) (கஉ) (கச) (கசு) நாட்களில் கருத்தரிக்கின் புருஷப்பிரஜையும், ஒற்றைப்பட்ட நாட்களில் தரிக்கின் பெண்பிரஜையும் பிறக்கும் என்பர். பெண்ணின் தந்தை பெண்ணிற்காகப் பணம் பெற்றுக்கொண்டு பெண்ணைக்கொடுத்தால் விற்றவனுகிருனுதலால் அப்படிச் செய்யக்கூடாது. பெண்ணின் கணவனேனும் தந்தையேனும் ஸ்திரீதனப் பொருள்களைத் தமக்காக உபயோகப்படுத்திக்கொள்ளக் கூடாது. *க்ஷேமத்தை விரும்பினவர்கள் பெண்களைப் பூஷணமுதலியவற்ருல் சந்தோஷப்படுத்தவேண்டியது. இவ்வகையுடன் கூடிய வீடு சந்தோஷமாய் இருக்கும். எந்த வீட்டில் மனைவியின் பணிவிடையால் கணவன் பாதாரத்தை நினையாமல் இருப்பானே அந்தக்குலம் கலியாணத்துடன் இருக்கும். மணம் காண்க.

விவாதத் தானங்கள் — இவை (22) அரசனுல் ஆராய்ந்து அறியப்படுபவையாம். (க) அரசன் ஆணையைக் கடத்தல் (உ) பெண்கொலை, (ங) பிறர்மனை நயத்தல், (ச) வருணக்கலப்பு, (ரு) களவு, (சு) ஒரு பெண் நாயகனையின்றி கருப்பமுடையவளாதல், (எ) கடுஞ்சொல், (அ) சொல்லத்தகாதவற்றைச் சொல்லுதல், (கூ) பிறரைக் கடுமையாக அடித்தொறுத்தல், (கo) கருச்சிதைத்தல். (க) பிறர்க்கு வெறுப்பு விளைத்தல், (உ) பயிரை அழித்தல், (ங) இல்லம் முதலியவற்றிற்கு நெருப்பிடல், (ச) அரசற்குத் தீங்கிழைத்தல், (ரு) அரசமுத்திரையை யழித்தல், (சு) அரசனது மறைவு சூழ்ச்சியை வெளிப்படுத்தல், (எ) சிறைப்பட்டிருப்போரை விலங்கை முறித்து வெளிப்படுத்தல், (அ) உரியவன் இல்லாத பொருளை விற்றல், அதனைத் தானஞ்செய்தல், அதனைக் கூறிட்டுக் கொள்ளுதல், அதனைத் தண்டத்திற் குட்படுத்தல், (கூ) அரசன் ஆணைமேற்கொண்டு பறை சாற்றுதலை மறைத்தல், (கo) உரியோனில்லாத பொருளை யழித்தல், (கக) அரசனுக்குரிய இறைப்பொருளைக் கெடுத்தல், (கஉ) பிறர் உறுப்புக்களை வெட்டிக் குறைத்தல் எனும் (கஉ)-உம், முற்கூறிய அபராதங்கள் (கo) - உம் ஆக (உஉ) ஆம். (சுக் - நீ).

விவிந்தியன் — ஒரு அசுரன், சாருவதேஷ்ணனுல் கொல்லப்பட்டவன்.

**விவிம்சதி** — 1. துரியோதனன் சபையிலிருந்த அரசன்; சூதாடவல்லவன்.
2. (சூ.) சாட்சூசன் குமாரன்.

**விவிம்சன்** — 1. சனி புத்திரன்.
2. வீரன் குமாரன்.

**விவிஷன்** — திருதராட்டிரன் குமாரன்.

**விழிக்கட்பேதைப் பெருங்கண்ணனார்** — இவர் இயற்பெயர் பெருங்கண்ணனாரென்பது. இவர் பாடலில் மான்குட்டியை விழிக்கட்பேதையென்று கூறிய சொற்சிறப்பால் அதனையே அடைமொழியாகக் கொடுக்கப்பட்டார். (நற் உசஉ.) முல்லைத் திணையைப் பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும், திருவள்ளுவமாலையி லொன்றுமாக இரண்டு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

**விழித்தவுடன் பார்க்கத்தகாதவை** — அங்கவீனம், வஸ்திரவீனம், பாவி, காவிவஸ்திரம், பேய் பிடித்தவள், ஊமை, மொட்டைத்தலை, செவிடு, அழுகை, சடை, கூன், அழுக்கன், விரிதலை, தூங்குமூஞ்சி, குஷ்டரோகி, கொலைஞன், எண்ணெய்த்தலை, மனைவியாகுலி, உன்மத்தன், தரித்திரி, க்ஷயரோகி, ஆசூசம், விதவை, பாம்பு, பூனை, சாம்பல், எருமை, துடைப்பம், உலக்கை, முறம் முதலியன.

**விழப்பாதராயர்** — (விழுப்பரையார்). ஆவணித் திருவிழாவிற் சுந்தரபாண்டியரின் பட்டாபிஷேக தினமாகிய (எ) ஆம் திருநாளில் அவரிடமிருந்து பொன்னெழுத்தாணியைப் பெற்று நாடோறும் கணக்கு வாசிக்கும் உரிமையுடையவர்கள். "பாண்டிபதினுலுக்கும் வேண்டிய விழுப்பாதராயர்" என இவர்கள் சம்பந்தமாக ஒருபழமொழியும் வழங்கும். (திருவிளை.)

**விளக்கணி** — அஃதாவது வர்ணியங்களுமவர்ணியங்களு மொரு தருமத்தின் முடிதலாம். இதனை வடநூலார் தீபகாலங்காரமென்பர்.

**விளக்கத்தனர்** — யாபபருங்கல விருத்தியுட் கூறப்பட்ட தொல்லாசிரியருள் ஒருவர்.

**விளக்குகள்** — நம் நாட்டார் குத்துவிளக்குகள் பல திரிகள் போடப் பலமுகங்களுள்ளனவாய் லோகங்களால் செய்து பலவித எண்ணெய்களிட்டு விளக்கெரிப்பர். இதில் கைவிளக்கு, பலவிளக்கு, கிளைவிளக்கு, அகல் விளக்கு, காடவிளக்கு முதலிய உண்டு. தற்காலம் மண்ணெண்ணெயவிட்டு கண்ணாடிக்குழல் பூட்டி வெளிச்சங் கொள்ளப் பலவகை விளக்குகள் உண்டு.

**விளக்குத்தண்டு** — மரத்தாலும் லோகத்தாலும் விளக்கைத் தாங்கச் செய்துள்ள உயர்ந்த விளக்குத் தாங்கி.

**விளக்குநிலை** — 1. அளத்தற்கரிய கடல் போன்ற சேனையினையுடையான் றனது விளக்கினது நிலையைப் பரப்பிச் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)
2. பொற் றகட்டாற் சிறந்துவிளங்கும் பூணினையுடைய மன்னன் றன்னை ஆதித்தனோடு உவமிப்பினும் முன்பு சொன்ன துறையேயாம். (பு. வெ. பாடாண்.)

**விளக்கொளிப் பெருமாள்** — திருக்காஞ்சியில் திருக்கோயில் கொண்டிருக்கும் விஷ்ணுமூர்த்திகளில் ஒரு திருப்பதியிலுள்ள பெருமாள். இவர் ஸரஸ்வதிநதி யுருவமாய்ப் பிரமன்செய்த வேள்வியை அழிக்க வந்த காலத்துத் தீபப்பிரகாசமாய்ச் சென்றமையால் இப்பெயர் பெற்றனர்.

**விளம்பிநாகனர்** — நான்மணிக்கடிகை என்னும் நூலினாசிரியர். இவர் இன்னவருணத்தா ரென்பதும், இன்ன ஊரினர் என்பதும் விளங்காவிடினும் காப்புச் செய்யுளை நோக்குகையில் வைணவர் என்பது விளங்குகின்றது. இந்நூலுக்குப் பழையவுரையொன்றுளது அதனை நச்சினார்க்கினியர் செய்தவுரை எனக் கூறுவர். (நான்மணிக்கடிகை).

**விளன்** — ஒரு அரசன் சிவனையெண்ணிச் சிவமேதஞ்செய்து சித்திபெற்றவன்.

**விளாஞ்சோலைப்பிள்ளை** — பிள்ளை லோகாசாரியர் திருவடிசம்பந்தி.

**விறலி** — எண்வகைச் சுவையும் மனத்தின் கண்பட்ட குறிப்புகளும், புறத்துப்போந்து புலப்பட ஆடுதல் விறலாதலின் அதனையாடுபவள் இவள்விறலி எனப்பட்டாள்.

**விறலிகேட்பத் தோழிகூறல்** — விரும்பிய பரத்தையருடைய புல்லுதலைப் பெறுதல் அரிய அமிழ்தத்தோடொக்கும் தலைவற்கெனச் சொல்லிப் பாணனுடைய பாணிச்சிக்குத் தோழி சொல்லியது. (பு. வெ. பெருந்திணை)

**விறலிதோழிக்குவிளம்பல்** — அவ்விடத்துத் தலைவன் மூப்புப்பரத்தையர்க்குப் பெறுதற்கரிய மகிழ்ச்சியைத் தருமெனச் சொல்லி இற்பரத்தை தோழிகேட்பப் பாணிச்சி சொல்லியது. (பு. வெ. பெருந்திணை.)

**விறலியாற்றுப்படை** — வெற்றி மன்னன் கீர்த்தியைச் சொல்லும் பாணிச்சியை வழிப்படுத்தியது. (பு. வெ. பாடாண்.)

**விறல்கோளணி** — அஃதாவது வலியையுடைய பகையின் மேலாதல் அதனது துணையின் மேலாதல் பராக்கிரமித்தலைச் சொல்லுதலாம். இதனை வடநூலார் பிரத்தியநீகாலங்காரமென்பர்.

**விறன்மிண்டநாயனர்** — மலையாளதேசத்துச் செங்குன்றூரில் வேளாளர் மரபிற் பிறந்து திருவாரூரில் வசித்தவர். சிவதரிசனத்திற்காக எழுந்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாசிரய மண்டபத்து எழுந்தருளியிருக்கும் சிவனடியவர்களை வணங்காது சென்றதால் சுந்தரரும் அவர்க்குப் பிரானாகிய சிவமும் புறம்பெனக் கூறியிருந்து, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகை பாடித் துதித்தபின் களிப்படைந்து சிவகணத்தவரில் ஒருவரானவர். (பெரிய புராணம்.)

**விற்பிறவன்** — (பிராத்.) சுதஞ்சயன் குமாரன். இவன் குமாரன் சுசி.

**விற்றூற்றுமூதெயினனர்** — கடைச்சங்க மருவிய புலவர். (அகநானூறு.)

**விற்றூற்று வண்ணக்கன் தத்தனர்.** விற்றூறு — ஒரூர். வண்ணக்கன் - நாணயசோதகன். தத்தன் - இயற்பெயர். இவ்வூரில் மூதெயினனென ஒரு புலவர் இருந்தனரென்று அகநானூற்றால் தெரிகிறது. இத்தத்தனர் தமது பாடலிற் பாண்டியனையும், அவனது மதுரையையும் பாராட்டிக் கூறுகின்றார். பாலைத்திணையைச் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவர் பாடியது. நற் (உகஅ) பாட்டு.

**வின** — (சு) அறிவின, அறியாவின, ஐயவின, கொளல்வின, கொடைவின, ஏவல்வின.

**வினவுத்தரம்** — இது சித்திரக் கவியிலொன்று. வினவினர்க்கு விடையாக ஒருமொழியும் தொடர் மொழியும் புணர்த்திப் பாடுவது.

**வினவெழுத்துக்கள்** — வினவினுக்கு அறிகுறியாமெழுத்துக்கள்; இவை, எ, யா, ஆ, ஒ, ஏ என்பன.

**வினை** — (உ) நல்வினை, தீவினை.

**வினைச்சொல்** — செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்யப்படு பொருள் ஆகிய ஆறினையும் வினையால் தெரிவிப்பது.

**வினைத்தொழிற் சோகீரனர்** — இவர் நெய்தல் வளத்தைச் சிறப்புறப் பாடியுள்ளார். இவர் பாடலில் இரவு நடுயாமத்தில் கடற்கரையூரின் நிலைமை கூறியது ஆராயத்தக்கது. இவர் பாடியது நற் ஙகஉம் பாட்டு.

**வினைமுதல்விளக்கணி** — ஒரு கருத்தாவைச் சேர்ந்த முறையுள்ள பல செய்கைகளை முறைபிறழாமல் சொல்லுதலாம். இதனைக் காரகதீபகா லங்காரம் என்பர். (குவல.)

**வினையன்** — ஐதரேயன் தந்தை. குமாரன் வேதமுணராததினால் தாயுடன் துரத்திவிடப்பட்டவன்.

**வினையெச்சம்** — செயலையும், காலத்தையுந் தோன்றுவித்துப் பாலுடன் கொண்டு முடியும் வினையொழிய நிற்பது.

**வினோதநாய்** — இது டாஸ்மேனியா நாட்டிலுள்ள காட்டு மிருகம். இது உருவத்தில் நாயின் அளவினது. பயங்கரத் தோற்றமுள்ளது. இதன் பெட்டைக்குக் கருப்பகாலத்தில் ஒருவகைப் பையுண்டாகிறது. அப்பையில் குட்டிகளை வளர்த்து அவை தாமே இரை தேடுகையில் அப்பை மறைகிறது. இது ஆடு மாடுகளை அடித்துத் தின்னும். இதனை அந்நாட்டார் டாஸ்மேனிய பிசாசென்பர்.

**வினோதப்பூண்டுகள்** — உயிருண்ணிப்பூண்டுகள் - அல்லது (தசையுண்ணும் பூண்டுகள்) இவ்வகையில் (500) பிரிவு இருக்கிறதாம். இப்பூண்டுகள் சிறு பூச்சிகளையும், சிறு ஜந்துக்களையும் தின்று ஜீவிக்கின்றன. இப் பூண்டுகள் தாமே சென்று பூச்சிகளையும் பிராணிகளையும் பிடிப்பதில்லை. அப்பிராணிகளே இவைகளுக்கு வலிய ஆகாரமாகின்றன. பூச்சிகள் சிலந்தி வலையில் கொதுகு, ஈ முதலியன சிக்குண்டு சிலந்திக்கு ஆகாரமாதல்போல் இவையும் சிக்குண்டிறக்கின்றன. இவை வட அமெரிக்காவில் ஏராளமாய் உண்டு. அவற்றில் ஒன்று.

நீர்துருத்திப் பூண்டு - (Bladder wort) இவை அந்நாட்டுச் சதுப்பு நிலங்களிலும், சலங்களிலும் பரந்திருப்பவை; இவற்றிற்கு வேரில்லை. மழைக்காலத்தில் இதனிலைகள் நீண்டு வளர்ந்து அரும்புகின்றன. அவை, காம்பின் நுட்பத்தால் நீரில் மிதக்கின்றன. இலை துளிர் காலத்து அரும்புகள் நீண்டு பை போலாகின்றன. அவை அப்போது நீர் மட்டத்தில் பைபோல் விரிந்து நிற்கின்றன. நீரில் வாழும் புழுப்பூச்சிகள் இவற்

தின் அருகுவர அவ்வரும்புகள் மிகவிரிந்து வருகிற பூச்சிகளுக்கு இடங் கொடுக்கின்றன. இப்பூச்சி உள்ளிருக்கையில் பை வெளிவாப் பூச்சி தொடக்குகையில் அரும்புமூடிக் கொள்கிறது. பூச்சி யுள்ளடங்கி வெளிவர முடியாமல் திக்குமுக்காடி யிறக்கிறது. பூண்டு இதன் சாரத்தை உறிஞ்சி விடுகிறது.

திறந்த வாய்ப்பூண்டு-(Pitcher Plant) இது அமெரிக்காவின் உஷ்ண பாகத்திலுள்ளது. இதன் இலைகள், குடம்போலிருக்கின்றன. குடத்தினுட்பாகம் சிறுகுழைகளால் நிரம்பியும் மேல்பாகம், மீனின் செதிள்கள்போல் இருக்கிறது. இக்குடத்தின் வாய், மயிர்போன்ற உறப்புக்களைப் பெற்றிருக்கிறது. அம்மயிரின் முனைகளில் ஒரு மதுரமான திரவம் கசிகிறது. அதன் ஓரம், மதுரமான மெல்லியதோலால் மூடப்பட்டிருக்கிறது. இரை விரும்பிய பூச்சிகள் இதனிடம் வந்து இதிலுள்ள இனிய திரவத்தை உறிஞ்சுகையில் அடிப்பாகத்திலுள்ள தொளைகளிற் பளபளப்பைக்கண்டு தேனின் ஆவலால் உள்நுழைந்து மீண்டும் வெளிவரத் திரும்புகையில் வாயின் முனையிலுள்ள மயிர்போன்ற கூரிய உறப்பால் தடைபட்டு மீண்டும் உள்போகிறது. அவ்வாறு உள்சென்றதை பூண்டு தனக்கு ஆகாரமாக்கிக் கொள்கிறது.

பனியொளிப் பூண்டு - (Sun Dew) இது ஒருவகை உயிருண்ணிப் பூண்டு. இது சதுப்பான களிமண் தரைப்பூமியில் வளர்வது. இதில் வெண்மை பருப்பு நிறமுள்ள மலர் மலருகிறது. அம்மலரின் காம்பு, கீழுள்ள இதழ்களைவிட்டு மேலெழுந்து தோன்றுகிறது. இதழ்கள் ஒவ்வொன்றின் ஓரத்திலும் சற்றேறக்குறைய (200) மெல்லிய செவந்த, பெரிதும் சிறிதுமான உணர்ச்சி உறுப்புக்களுள்ளன. ஒவ்வொரு உணர்ச்சியுறுப்பின் முனையிலும் தடித்து ஒளியுள்ள மரப்பசை, சூரியவொளியில் பனியொளிபோல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதனால் இப்பூண்டு பனியொளிப் பூண்டு எனப்பட்டது. பறந்து செல்லும் பிராணிகள் இந்த மலரின் முனையிலுள்ள ஒளிகண்டு தேன் என வெண்ணி யதனை யுண்ண நினைத்து அதில் இறங்குகின்றன. உடனே மரப்பசை அவற்றின் கால்களில் ஒட்டிக்கொள்ளுகிறது. இப்பிராணி அதினின்று தப்ப வழி தேடி அதன் கால் சிறகு முதலியவற்றை யசைக்கப் பசைகசிந்து அதிகமாக அது தேகமுழுதும் ஒட்டிக் கொள்கிறது. இப்படியில் விரிந்த இதழ்கள் ஒவ்வொன்றாக உட்புறம் குவிந்து தன்னிலகப்பட்ட பிராணியை மூடிக்கொள்ளப் பூச்சியுள்ளுக்குள் திக்குமுக்கடைந்து சாக அதன் உதிரமும் மாம்சமும் சிறிது சிறிதாக உறிஞ்சப்பட்டு எலும்புகள் இறகுகள் வெளியில் தள்ளப்படுகின்றன. இது கெர்னுஸ் என்பவர் எழுதிய பூண்டுகளினியற்கைப் பொருட்பாடத்திருந்து எழுதப்பட்டது.

விநோதமூக்குள்ள டுடுபறவை—இப்பறவை பூர்வம் மோரிஸ் தீவிலிருந்தது தற்காலம் அழிந்து போயிற்று. இது வாத்தைப் போன்ற உருவமுள்ளது. இதன் வாய் நீளம். இதன் அலகு கிளி மூக்குப்போல் முனை வளைந்திருக்கும். இதனுடல் சிற்றிறகுகளால் மூடப்பட்டிருக்கும். இது அதிகம் பறவாதாதலின் இதனைப் பிடித்தருந்திக் கரு அறுத்தனர்.

விநோதமூலிகைகள்—(இந்தியாவிலுள்ளது) தொட்டாற் சுருங்கி - இது தொட்டவுடன் தன்னைச் சுருக்கிக் கொள்வது. நின்றுஞ் சுருங்கி, நிழற்சுருங்கி - இவைகளும் அருகினிற்பினும் நிழற்படினும் சுருங்குவன. ஆனைவணங்கி, பூனைவணங்கி, நீர்மேல் நெருப்பு - ஜலத்தில் இதைப் பிழியின் புகையுண்டாம். கல்லுருவி, புல்லுருவி, கொல்லிப்பூண்டு, சுளுக்கு நாயகம், மலைதாங்கி, குடியோட்டி, ஆகாசகருடன், எறழிஞ்சல், பல்லிப்பூண்டு, ஆடு தீண்டாப்பாளை, மயிர் மாணிக்கம், பிளவைகொல்லி, கள்ளிமுளையான், சோதிப்புல், பேய்மிரட்டி, அழுகண்ணி, தொழுகண்ணி, தண்ணீர் விட்டான், காஞ்சொறி, மிளகரணை, கிரந்தி நாயகம் முதலியன.

விநோதன் — திருதராட்டிரன் குமாரன்.

விஜயபாகு — பாணவம்சத்தரசன்; இரண்டாம் விஜயாதித்தன் குமாரன்.

விஜயாதித்தன் — 1. பாணவம்சத்தரசன்.

2. இவன் பலியின் வம்சத்திற் பிறந்த முதலாம் விக்ரமாதித்தனுடைய புத்திரன். இவ்வரசனுக்குப் புகழவிப்பவர் கண்டனென்றும் பெயர்.

விஷஇலைகள் — பரதம், காம்பம், எட்டியிலை, பெருமாம் முதலியன.

விஷகன்னிகை — இவள் காஞ்சனபுரியில் கல்கியைக்கண்டு பணிந்து தன் வரலாறு

கூறியவள். இவள் சித்திரக்கிரீவன் மனைவியாகிய சுலோசனை யென்பவளுடன் கூடக் கந்தமாதன மலையின் காடுகளில் விளையாடிக்கொண் டிருக்கும்போது தனது அழகினால் செருக்கடைந்து அவ்விடம் வந்த யக்ஷமுனியைப் பரிகசிக்க அவர் நீ விஷதிருஷ்டியாய்க் காஞ்சனபுரியில் எல்லாரையும் எரித்துக்கொண்டு தெய்வமும் கணவனுமில்லாமல் வசிக்க எனச் சபிக்கப் பட்டவள். இவள் அம்முனிவரை வணங்கி இச்சாபம் என்றைக்கு அகலும் எனக் கேட்கக் கல்கிபகவான், கிளியின் பேரில் ஏறிக்கொண்டு என்றைக்குத் தரிசனங் கொடுப்பாரோ அன்றைக்கு அகலும் என்ன அவ்வாறே கல்கியைக் கண்டு சாபம் நீங்கியவள். (கல்கிபுராணம்).

**விஷக்கனிகள்** — கருப்பூர வழுதலைப்பழம், விஷசெருந்தி, வைராடகம், சரூபகம், நாயுருவி, ஷாலகம், மலைவன்னி முதலியன.

**விஷக்கிழங்குகள்** — அலரி, கலப்பைக்கிழங்கு, தைலகம், கர்க்கடகம், குசபுஷ்பம், கேதுபுஷ்பம், ரோமஹரிஷம், ஸ்திரிங்கி இவைகளுக்குக் கந்தவிஷம் எனப்பெயர். இவற்றைத் தின்றால் உயிர் நீங்கும். ஒரு வேளை நிலத்தால் பல ரோகங்களுண்டாம். விஷவேர்கள் - தேனகம் (பாரமரம்) சந்திரகம், குஞ்சனம், ஹாரிகம், கோரண்டகம், (மருதோன்றி) தர்க்காகம், சுந்திரம் முதலியன.

**விஷங்கன்** — இவன் பண்டாசுரனுடைய சகோதரன். காமேச்வரியால் கொல்லப் பட்டவன்.

**விஷசிங்கன்** — ஒரு அரக்கன்; சூர்ப்பநகையின் புருஷன் என்ப; தன்னை எதிர்ப்பவரை நாவால் நக்கிக் கொல்பவன்.

**விஷசூன்யம்** — பிரதமைமுதல் உவாக்கள் வரையில் முறையே - ௧ - துலாம், மகரம், ௨-தனு, மீன, ௩-மகர, சிங்க, ௪-கும்ப, ருஷ, ௫-கன், மிது, ௬-மேஷ, சிங், ௭ தனு, கர், ௮-கன், மிது, ௯ சிங், விரு, ௧௦-சிங், விரு, ௧௧-தனு, மீன, ௧௨-துலா, மக, ௧௩-ருஷ, சிங், ௧௪ மிது, கன், உவாக்களில் தனுசு, மீனம்-வருவன.

**விஷதர்ப்பன்** — காசியிலாண்ட அரசன். இவன் கழுகிற்குப் பயந்த புறாவின் பொருட்டு தன் மாமிசத்தைக் கொடுத்தவன். இவன்புத்திரன் அநிலன். (பா. அநு.)

**விஷதாவரப் பொருள்கள்** — சங்கோசம், அலரி, கலப்பைக் கிழங்கு, தைலகம், குசபுஷ்பம், கேது புஷ்பம், பாரப் மரவேர், மருதோன்றி, பெருங்காய வேர், வெள்ளை லொத்திப் பால், வெண்டாமரைப் பால், நாபி, சேராங்கொட்டை, எட்டி, மருவின் பிசின், தொடரிப்பட்டைப் பிசின், ஆயிற் பட்டைப் பிசின், எட்டியிலை, பெருமரத்திலை, புங்கின்பூ, தொட்டாற் சுருங்கிப்பூ, காட்டுமிளகு. கருப்பூரவழுதலைப் பழம், விஷசெருந்திப் பழம், நாயுருவி யரிசி, மலைவள்ளிப்பழம் முதலியன. (ஜீவ.)

**விஷபரீக்ஷை நிதானம்** — சர்ப்பங் கடித்தவுடன் கசப்புள்ள பொருள்களைத் தின்றால் சுவைமாறல், விரல்களைக் கிள்ளினும் நோவில்லாமை, சூரிய சந்திர ஒளியும் தீபமும் தெரியாமை, காதில் தொனியிலாமை முதலியன காணின் விஷந் தலைக்கேறினதென அறியவேண்டும். (ஜீவ).

**விஷபவச்சேநர்** — விஷூசி யென்பவளிடத்து உதித்த விஷ்ணுவின் அம்சம்.

**விஷபாக ரோகம்**—செம்பின் களிம்பு, மீன் முள், நெல்வாலின் முள் இவை சேர்ந்த போஜனத்தாலும், காந்திய அன்னம், மழைச்சலம், காடித் தண்ணீர், அமிதசையோகம், பழங்கறியுண்ணல், மாம்சபக்ஷணம் முதலியவற்றால் (அ) விஷபாக ரோகம் முண்டாம். அவை வாதவிஷபாகம், பித்தம், சிலேஷ்மம், தொந்தம், சந்நிபாதம், அக்னி, எரிச்சல் கந்தம் என்னும் விஷபாக ரோகங்களெனப் பெறும்.

**விஷப்பால்கள்** — வெள்ளி லொத்தி, வெண்டாமரை, நாபி, சேராங்கொட்டை, எட்டி இவை விஷந்தந்து துன்பம் செய்வன. (ஜீவாக்ஷா).

**விஷப்பிசின்கள்** — மருவு, நாராசகம், தொடாப்பட்டை முதலியனவாம்.

**விஷப்பிரமாணம்** — இது நியாய சபையில் நியாய அநியாயந் தெரிந்துகொள்ள வாதிப் பிரதிவாதிகளால் விஷம் உண்டு செய்யப் படும் பிரமாணம். 'ஓ விஷமே, நீ பிரமபுத்ரன்; நீ தர்மத்திலுள்ளவன்; ஆதலால் இந்தப் பாவத்தினின்று என்னை நீங்கச் செய்' என்னும் மந்திரம் கூறி உண்ண வேண்டும். உண்டவன் விஷவேக விகாரமின்றி இருப்பனேல் சுத்தன். (யஞ்ஞவல்க்யம்).

**விஷபுஷ்பங்கள்** — மஹா காம்பகம், புங்கின் பூ, தொட்டாற் சுருக்கப் பூ, காட்டுமிவகின் பூ முதலியனவாம்,

**விஷமசுரம்** — ரோகாதிகளின் விஷமத்தினால் சுரமானது நெடுநாளாகி உள்ளுக்குள் விஷமித்தால் மும்மூன்று நாட்களுக்கு ஒவ்வொரு தாதுக்களைப் பற்றி ரஸம், ரத்தம், மாமிசம், மேதை, அஸ்தி, மச்சை, சுக்கிலம் என எழுபிரிவாய் ரோகியைத் தகிக்கும். இச்சுரம் எழு, இருபத்தொன்று, இரண்டு மாதம், ஐந்து மாதம், இரண்டு வருஷம், மூன்று வருஷம் வரையில் மேற்கூறியபடி வியாபித்து வரும். (ஜீவரக்ஷ).

**விஷயன்** — திருதராட்டிர புத்திரன்.

**விஷாபஹரண மூர்த்தி** — திருப்பாற்கடல் கடைகையில் எழுந்த விஷத்தைத் தேவர் பொருட்டுக் கண்டத்தில் அமைத்த சிவன் திருவுரு.

**விஷான்ன பரீக்ஷை** — விஷக் கலந்த அன்னத்தை நெருப்பிலிட்டால் சுவாலையெழல், மயிலின் கண்ட நிறத்தை யொத்த புகையுடைமை, துர்க்கந்தம், வீசுதல் ஈமொய்த்தாலிறக்கை, காகம் ஈனத்வனியுடன் கத்துகை, கிளி, பூவை காணின் கூச்சலிடுகை, வலியன் களைத்து விழுகை, பூனை பயப்பட்டோடுகை, குரங்கு காணின் மலபாதை செய்துகொள்ளுகை முதலியன வுண்டாம். இதனால் விஷக்கலந்த அன்னமென அறிய வேண்டும். (ஜீவ).

**விஷான்ன லக்ஷணம்** — விஷங் கலந்த அன்னத்தை யுற்றுப்பார்க்கின், சோர்வு, மூர்ச்சை, வாய்நீர் சுரப்பு, அன்னவுரு வேற்றுமை, பழையதின் மணம் இவை காணப்படும்.

**வீஷ்டபதா** — விரசன் தேவீ.

**விஷ்டாம்** — என்பது ஓமாக்னியைச் சூழப் போடும் தருப்பாசனம்.

**விஷ்டிகன்** — சுக்கிர புத்திரன்.

**விஷ்டிதோஷம்** — பூர்வபக்ஷ சதுர்த்தசியில் ரு-ம் சாமம் மேற்கிலேயும், அஷ்டமியில் உ-ம் ஜாமம் (தெ-கி)ம், ஏகாதசியில் எ-ம் சாமம் (வட)ம், பூரணையில் ச-ம் ஜாமம் (தெ-மே)ம், அபரபக்ஷத் திரிதிகையில் கூ-ம் சாமம் (வட-மே)ம், சத்தமியில் ங-ம் சாமம் (தெற்)ம், தசமியில் அ-ம் சாமம் (வட)ம், சதுர்த்தசியில் முதற்சாமம் கிழக்கிலும் விஷ்டியுண்ணுதலால் இச் சாமங்களில் சுபகாரியங்களும், இத் திசைநோக்கி யாத்திரையுஞ் செய்யலாகாது.

**விஷு** — விஷ்ணுபதி, சடசீதி புண்யகாலங்கள் வருநாட்கள்.

மேற்கூறிய புண்யகாலங்களில் விஷு புண்யகாலம் சித்திரை, ஐப்பசிகளிலும், விஷ்ணுபதி வைகாசி, ஆவணி, கார்த்திகை, மாசி மாதங்களிலும், சடசீதி, ஆனி, புரட்டாசி, மார்கழி பங்குனி மாதங்களிலும் மாதசங்கிரமணங்களில் வரும். இவையொழிந்த ஆடியும் தையும் தக்ஷிணாயன உத்தராயன புண்யகாலங்களாம். விஷுவம் காண்க.

**விஷூசிரோகம்** — இது அலசரோகத்தை யுண்டாக்கி அடங்கியிருந்த ஆமதோஷம் மிகுந்து வெளிப்படுவதினாலும் அதற்குப் பலமாகச் சூரியவெப்பம் அதிகரித்தலாலும் உண்டாவது. இது வாந்தி, பேதி, உடல் ஊசியாற் குத்தல் போல்வது முதலிய ரோகங்களை யுடையது. இதனை வாந்தி பேதி ரோகம் என்பர். இது வாத, பித்த, சிலேஷ்மத்து மூன்று வகை. இது பிரளய காலாக்னி, உருத்திர மாத்திரை, பிரசண்ட மாருத கஷாயம் முதலியவற்றால் வசமாம். (ஜீவ).

**விஷுவம்** — 1. ஒரு புண்ணிய காலம். இது இரண்டு அயனங்கள் ஒன்று சேரும் சந்தியாகாலம். இது திரிமூர்த்திகளும் ஒன்று சேரும் காலம். இது புண்யகாலம் இக்காலத்து திருமூர்த்திகளுக்குத் திருமஞ்சனாதிகள் செய்து அன்னதானஞ் செய்யின் புண்ய உலகடைவர். (பார - அச்வ).

2. இது மேஷ சங்கிர மணத்திற்கும், துலாசங்கிரமணத்திற்கும் பெயர்.

**விஷுவாயனம்** — 1. மேஷ சங்கிரமணம். (விதானமாலை).

2. இது உதயத்திலாகில் தேசத்திற்குக் கேடுண்டாம். உச்சியிலாகில் பயிர்க்குக் கேடாம். இளவுச்சியாகில் வியாதியும் இராச பீடையுமாம் பிற்பகலாகில் நாசமாம். சந்தியாகாலமாகில் தேசத்திற்கு ஆகாது. இரவாகில் மிக நன்று. (விதான).

**விஷ்டரம்** — முப்பது தருப்பையினால் முடியப்பட்டு முழநீளமும் (2) அங்குல முடியும், (4) அங்குல நுனியுமுள்ளது. (சைவ-பூஷ.)

**விஷ்ணு** — 1. ஒரு கற்பத்தில் ஜலசயனத்திருக்கையில் கனகாண்டஜராகிய பிரமனைக் கண்டு நீயார் என நான் லோககர்த்தா என விஷ்ணு நானே லோககர்த்தா என்றனர். அவ்விருவரில் பிரமன் என்னில் புகுந்து என்னிடம் அண்டங்களனைத்து மிருத்தலைக் காண்க என

விஷ்ணு அவருடலிற் புகுந்து பல அண்டங்களைக் கண்டு பல காலம் வெளிவர வழிதேடி அவாது முகத்தின்வழி வெளிப்பட்டனர். பிறகு விஷ்ணு பிரமனை நோக்கி என் வயிற்றில் புகுந்து பல அண்டங்களையும் காண்க என பிரமன் அவ்வாறு புகுந்து பல அண்டங்களையுங் கண்டு நெடுநாள் வழிகாணாது கொப்பூழில் சிறு புதைகண்டு வெளிவந்தனர். இவ்விருவ ரிருக்கையில் அழல் கொண்ட சூறைக்காற்று பதுமநாபியை மோதக்கண்ட பிரமன் இதென்ன மோதுவதென்ன விஷ்ணு மகேச்வரர் பிரபாவங் கூறி இருவரும் துதித்தனர். (வாயு புராணம்) அத்யாயம் (24).

2. இவர் கருடரூப மடைந்து கபில ஜைகிஷவ்ய மகருஷிகளின் ஐயந்தீர்த்துத் தன்னுருவடைந்தனர். (வராஹ - புரா).

3. இவரது வாகனம் கருடன், கொடி கருடன், பஞ்சாயுதம் - சக்கரம், சார்ங்கம், வாள், தண்டு, பாஞ்சசந்நியம். அவதாரங்கள்-மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்ரன், கண்ணன், கற்கி, சநகன், சநந்தனன், சநாதன், சநற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்ரீவன், தத்தாத்ரேயன், மோகினி, யஜ்ஞபதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்.

4. இவர்க்கும் கங்கை, லக்ஷ்மி, சரஸ்வதி, மூவரும் மனைவியர்; சரஸ்வதியைப்பார்க்க. (தேவி - பா.) இவர்களில் கங்கையிடம் மிக்க அன்புகொண் டிருத்தலைக் கண்ட சரஸ்வதி கங்கையையும் சரஸ்வதியையும் செடியாகவும் நதியாகவும் பிறக்கும்படி சபித்தனள்.

5. சிவசத்தியென்று ஆதித்ய புராணம் (25).ஆம் அத்யாயத்திற் கூறப்பட் டிருக்கிறது. இவர் இரண்யகசிபுடன் (300) வருஷம் யுத்தஞ் செய்தனர்.

**விஷ்ணுமூர்த்தி** — 1. அகண்டபூரணராய், அனந்தகல்யாண குணமுடையராய், ஆதியாய், நீலவர்ணமுடையராய், சங்கு, சக்ர, கதா, கோதண்ட, நாந்தகதாரியாய், லக்ஷ்மி சமேதராய், சங்கர்ஷண, பிரத்தியும்ந, அநிருத்த வியூகங்களுடன் வைகுண்டத்தில் பாகவதரும், நித்தியசூரிகளும், இருடிகளுஞ் சேவித்து நிற்ப எழுந்தருளி யிருப்பர். இவர் தேவர், மானிடர் முதலியோர்க்கு அநுக்கிரகிக்கப் பூமியில் அவதாரங்களை யெடுத்து நடத்திய பல திருவிளையாடல்களை என்னறிவு சென்ற அளவில் எழுதுகிறேன். திருப்பாற்கடலில் ஆதிசேடன்மீது யோகநித்திரை புரிந்து தமது திருநாபியில் உலக சிருட்டியின் பொருட்டுப் பிரமனைப் படைத்து அப்பிரமனுடைய நெற்றியினிடம் உருத்திரனைப் படைத்தவர்.

2. சோமுகாசுரன் வேதங்களைத் திருடிக் கொண்டு செல்ல அவனைத் தேவர் வேண்டுகோளால் மச்சாவதாரங் கொண்டு சென்று கொன்று வேதத்தைக் கொண்டு வந்து பிரமனுக்குத் தந்தவர்.

3. தமது காதிடம் பிறந்து தம்முடன் போர்செய்த மதுகைடவரை வதைத்தவர்.

4. கபிலராய்த் தேவஹூதிக்கு யோக முபதேசித்தவர்.

5. அயக்கிரீவராய் அவதார மெடுத்துத் தத்தாத்திரேயர் முதலிய இருடிகளுக்குத் தத்துவம் உபதேசித்தவர்.

6. சத்தியவிரதன் என்கிற அரசனுக்கும் எழு பிராமணருக்கும் அனுக்கிரகித்துப் பிராமணரைச் சத்த இருடிகளாகவும் இராஜாவை மனுவாகவும் பிறப்பித்தவர்.

7. இரணியாக்ஷன் பூமியைச் சுருட்டிச் செல்லத் தாம் வராக அவதாரங் கொண்டு அவனைக்கொன்று பூமியைத் தமது கொம்பில் தாங்கிவந்து முன்போல் நிறுத்தியவர்.

8. கூர்மாவதாரங் கொண்டு பாற்கடல் கடைகையில் மந்தரமசையாது நிற்கத் தம் முதுகிற் றாங்கியவர்.

9. நரசிங்கா அவதாரத்தில் பிரகலாதன் பொருட்டுத் தேவரை வருத்தி இறுமாப் படைந்திருந்த இரணியனைக் கொன்று பிரகலாதனுக்கு அருள் புரிந்தவர்.

10. வாமன அவதாரத்தில் காசிபர்க்கு அதிதியிடம் அவதரித்து மகாபலியிடம் மூன்றடிமண் யாசித்து அவன்தர உலகமெல்லாம் ஈரடிமண்ணு லளந்து ஓரடிக்கு இடம் பெறாததால் அவன் சிரத்திற் றமது திருவடியை வைத்துப் பாதாளத்தில் அழுத்தித் தேவர் பயம் போக்கினவர்.

11. புத்தாவதாரங் கொண்டு நாரதரை மாணுக்கரா யுடன்கொண்டு சென்று திரிபுராதிகளுக்குப் புத்தமதம் போதித்தவர்.

12. பரசுராமாவதாரத்தில், சமதக்னிக்குக் குமாரராய் அவதரித்து, சூரிய வம்ச நாசஞ் செய்தவர்.

13. இராமாவதாரஞ் செய்து, இராவண கும்பகர்ணாதியரை வதைத்துச் சீதை

யின் சிறைமீட்டுச் தேவரிடுக்கண் போக்கியவர்.

14. பலராமாவதாரங் கொண்டு தேவகாசுரன் முதலிய அசுரரை வருத்திப் பயம் போக்கியவர்.

15. திரிபுர சம்மாரத்தில், சிவனுக்கு அம்பாக இருந்து வென்றவர்.

16. பாணாசுரயுத்தத்தில் அவனுக்கு உதவிபுரியவந்த, ருத்திரனைப் பின்னிடச் செய்தவர்.

17. பிரமதேவனுக்கு, ஒரு கற்பத்தில் அஜன் என்கிற குமாரராய் அவதரித்தவர்.

18. அதிதியிடம் உபேந்திரராய்ப் பிறந்து இந்திரனைக் காத்தவர்.

19. அத்திரிக்கு அநசூயையிடம் தத்தாத்திரேயனாய்ப் பிறந்து கார்த்த வீரியன் முதலியவருக்கு அநுக்கிரகித்தவர்.

20. சத்தியவதிக்கும் பராசனுக்கும் வியாசராய்ப் பிறந்து வேதங்களைச் சிக்கறுத்தவர்.

21. நாபிமகாராஜாவுக்கு மேருதேவியிடம் ருஷபனாகப் பிறந்தவர்.

22. ருத்ரன் காசியில் தவஞ்செய்ய அவனுக்கு இராமபத்திரராய்த் தரிசனந்தந்து இராமதாரகமந்திரம் உபதேசித்தவர்.

23. அண்டங்களை யெல்லாமுண்டு காத்துச் சிருட்டித்தவர்.

24. கஜேந்திரன் என்னும் யானை முறையிடக் கேட்டுச் சென்று அதனை ஆதரித்து அபயம் தந்தவர்.

25. திருப்பாற்கடல் கடைந்தகாலத்துச் சகன்மோகினி யுருக்கொண்டு தேவர்க்கு அமுதம்பகிர்ந்து இராகு கேதுக்களைச் சிக்ஷைசெய்தவர்.

26. பிரமன் சிரத்தை ருத்திரன் கிள்ளியபோது அப்பிரம கபாலம் கையை விட்டு நீங்காதிருக்க இலக்ஷ்மி பிக்ஷையிடப் பிரமகபாலம் நீங்கும்படியும், தாம் தமது தொடையைக்கீறி இரத்தமிடப் பிரமகபாலம் வெடிக்கவும், அதுவன்றித் தமது நெற்றியின் வியர்வையை அக்கபாலம் [illegible] விட [illegible] பொடியாகவுஞ் செய்தவர்.

27. பதிரிகாச்சிரமத்தில் தாம் தவத்திலிருக்கையில் யுத்தத்திற்குவந்த ருத்ரனை மூர்ச்சிப்பித்துப் பிரமன்வேண்ட உயிர்ப்பித்தவர்.

28. பிரமருத்திரர்கள் தம்மையெண்ணிப் பலயுகந் தவஞ்செய்ட அவர்களுக்குச் சிருட்டி சங்கார அதிகாரத்தை அளித்தவர்.

29. பிரமன் தவஞ் செய்ய அவர்க்குத் தரிசனம் தந்து கற்பாந்தங்களில் தமக்குக் குமாரனும் வரம் அளித்தவர்.

30. கற்பங்கள் தோறும் பிரமனைத் தமது மனதிலும் கண்ணிலும் வாக்கிலும் காதிலும் மூக்கிலும் அண்டத்திலும் நாபியிலும் படைத்தவர்.

31. தாம் அண்டத்தைச் சிருட்டிக்க நினைத்தவுடன் தமது நெற்றியில் வியர்வையுண்டாய் அது மகாப்பிரளய மாயிற்று. அதில் ஒரு பொன் அண்டம் உண்டாய் அதில் பிரமன் தோன்றினன். அந்தப் பிரமனால் உலகசிருட்டி செய்வித்தவர்.

32. பிரமா உருத்திரன் சூரியன் சந்திரன் இந்திரன் முதலியோரைத் தமது தேஜஸால் விளக்கி மீண்டும் ஒடுக்குபவர்.

33. ஒரு கற்பத்தில் தமது நெற்றியில் வியர்வை பிறந்து ஒரு குமிழி ஆயிற்று. அதில் உருத்திரனைச் சிருட்டிசெய்தவர்.

34. ருத்ரனுக்கு இருடிகளால் வந்த சாபத்தை நீக்கியவர்.

35. விருகாசுரனுக்குப் பயந்து ஓடிய உருத்திரனைக் காத்தவர்.

36. சிவபூசைசெய்த மார்க்கண்டர் சிவனைத்தேடத் தமது வயிற்றிலவரைக்காட்டிச் சிவபூசை செய்வித்தவர்.

37. பிரதேசன் என்கிற ராசா உருத்திரனைநோக்கி எவர் பரம் என்ன விஷ்ணுவே பரம் என்றனர். அதனால் அவன் விஷ்ணுவைத் தியானிக்க அவனுக்கு முன் தரிசனம் தந்து சித்தியளித்தவர்.

38. அந்தகாசுரனை வதைத்த உருத்திரமூர்த்திக்கு அவன் உதிரத்தால் வந்த அசுரரைச் செயிக்க வலியற்றுத் தம்மைத் தியானிக்க அப்போது ஸக்ரவேதி என்கிற சத்தியைச் சிருட்டித்துப் பூமியில் அந்தகாசுரன் உதிரம் விழாமல் பானஞ் செய்வித்து உருத்திரனுக்கு வெற்றி தருவித்தவர்.

39. திருவிக்ரம அவதாரத்தில் பாகம் பிரமலோகஞ்செல்ல அவ்விடம் பிரமன் பூசித்த சலம் பூமியில் வந்து பூமி முழுகுமென்று உருத்திரனைத் தடுத்துச் சடையில் தாங்கக் கட்டளையிட்டவர்.

40. ஒரு கற்பத்தில் யுத்தஞ்செய்து குதையுடன் வில்லை ஊன்றிநின்ற உருத்திரன்து நாணியற்று உருத்திரன் தலை

யறுந்துபோக அதனைக்கூட்டி உயிர்ப்பித்தவர்.

41. மாதலியின் குமாரியை மணந்த ஆதிசேடன் குமாரனுடன் யுத்தஞ்செய்த கருடனது வலி யடங்கச்செய்தவர்.

42. உருத்திரன் பூசிக்கச் சூலங்கொடுத்தவர்.

43. உருத்திரன்கொண்ட சாபத்தை நரகேசரியாய்க் கொன்றவர்.

44. கவியென்கிற அசுரனை இந்திரன் பொருட்டுக் கொன்றவர்.

45. கோவியருடன் கண்ணனாய் அவதரித்தகாலத்துப் பல திருவிளையாடல்கள் செய்து கோபாலர் பாண்டவர் முதலியவரைக் காத்தவர். அவற்றைக் கண்ணனைக் காண்க.

46. ஒரு கற்பத்தில் தாணுமூர்த்தியாய் நின்ற சிவன் அடிதேடாது திகைத்து வணங்கிச் சிவாநுக்கிரகம் பெற்றவர்.

47. பிரமன் தமது வயிற்றில் அண்டங்களைப் படைத்து அவற்றைக் காண் என அவ்வகைசென்று ஆயிரம்தேவ ஆண்டு இருந்து மீண்டவர்.

48. பாத்மகற்பத்தில் பிரமனைத் தமது குமாரனாய்ப் பெற்றவர்.

49. தமது வயிற்றிலுள்ள அண்டங்களைக் காணும்படி பிரமனை விழுங்கி மீண்டும்விடாது நாபியின்வழி வெளிவிட்டவர்.

50. பிருகு பத்னியைக் கொன்றதால் அவரால் பத்துப் பிறப்படையச் சாபமடைந்தவர்.

51. குபன் (சுபன்) வேண்டுகோளால் ததீசியைச் சக்கரத்தால் வெல்ல வகைதேடித் தோற்றவர்.

52. ஒரு கற்பத்தில் பிரமனுடன் உமையிடம் குமாரராயுதித்தவர்.

53. கௌசிகனென்னும் யாழ்வல்லவனுக்கு முத்திகொடுத்தவர்.

54. அம்பரீஷன் குமாரியை மணக்கவந்த இருடிகளைக் குரங்குமுகமுற்றவராக்கித் தாம் மணந்து முனிவர்கள் கோபித்து அரசன் மீதேவிய அந்தகாரத்தைச் சக்கரத்தால் தடுத்துத் தாம் அந்த அறிவின் அந்தகாரத்தை இராமாவதாரத்தில் ஏற்றவர்.

55. விட்ணு சிட்ணுக்களைப் பிரமனுக்காதரவாய்ச் சிருட்டித்தளித்தவர்.

56. பிருதுவின் வேள்விச்சாலையில் சூதமுனிவராகச் சென்றவர்.

57. பிரகலாதன் ஒழிந்த இரணியன் குமாரரை ஒரு அறையால் மாய்த்தவர்.

58. அந்தாகாசுரனுக்கு அஞ்சிப் பெண்ணுருத் தாங்கித் திரிந்தவர். (கூர்மபுராணம்).

59. சுக்கிரன்தாயை வதைத்தவர்.

60. எமைக்கு மயன் பட்டணத்தை அளித்தவர்.

61. தேவாசுரயுத்தத்தில் மாலியைக் கொன்றவர்.

62. விருத்திராசுரனை இந்திரன் கொலைபுரியத் தமது சத்தியில் சிறிதை இந்திரனுக்கும் வச்சிரத்திற்கும் அளித்தவர்.

63. பிரமன் முதலியோர் பூமியில் காலநேமி முதலானோர் துன்பத்திற்கஞ்சிமுறையிடத் தமது கறுப்பும் வெளுப்புமான அம்சத்தைப் பூமியில் கிருஷ்ண பலராமராக அவதரிப்பித்தவர்.

64. சயந்தி என்னும் மாயாதேவியைத் தமக்குமுன் தேவகி வயிற்றிலுதிக்கச்செய்தவர்.

65. திருமங்கையாழ்வாருக்குத் திருமணக்கோலந் தரிசிப்பித்தவர்.

66. தாருகவனத்து மோகினியுருக்கொண்டு சென்று இருடிகளைக் கர்வபங்கஞ் செய்தவர்.

67. சலந்தானுடன் சண்டையிட்டுச் சமாதானஞ் செய்துகொண்டவர்.

68. திரிபுரதகன காலத்தில் சிவனை ரிஷபமாகத் தாங்கியவர்.

69. பிரந்தையிடம் சலந்தரனுருக்கொண்டிருந்து மாயனென்று அறியப்பட்ட அவளால் தம்மனைவியைப் பிறர்கொளச் சாபம் பெற்று அவளிறந்த மயானத்தில் வருந்தி அவ்விடம் பிறந்த துளசி யென்பவளை மணந்து மயக்கந்தெளிந்தவர். (ஸ்காந்தம்.)

70. அமுதமதனத்தில் பிறந்த விஷத்தைக் கிரகிக்கச்சென்று உடல்கறுத்து மீண்டவர். (ஸ்காந்தம்.)

71. அமுதமதனத்தில் ஆமை தன்வந்திரி உபேந்திரன் மோகினி முதலியவராயிருந்து அமுதம் பங்கிட்டு அதிற்பிறந்த இலக்ஷ்மி கௌத்துவம் முதலியவைகளைத் தாம் கிரகித்தவர்.

72. சிவமூர்த்தி உமையுடன் கவறு ஆடுகையில் உமை செயிக்கவும், சிவன் வென்றாரெனப் பொய்ச்சாக்ஷிகூறி மலைப்பாம்பாய்ப் பாலைவனத்திருந்து கணபதியால் சர்பநீக்க மடைந்தவர்.

73. தாருகாசுரனுடன் யுத்தஞ்செய்கையில் சக்கரத்தை ஏவி அது அவன் கழுத்தில் மாலையானது கண்டு சமாதானஞ் செய்துகொண்டவர்.

74. மேகவுருக்கொண்டு சிவனைத் தாங்கி மேகவாகன கற்பமாக்கினவர்.

75. புத்திரப்பேறு வேண்டிச் சிவதர்சனஞ் செய்கையில் உமையை வணங்காது சென்று 'உமை உன்புத்திரன் சிவனது நெற்றிவிழியால் எரியக் கடவன்' எனச் சாபம் பெற்றுப் பின் அவளைப் பணிந்து உயிர்பெற அநுக்கிரகம் பெற்றவர்.

76. தாம் தமது மார்பகத்தில் வைத்துப் பூசித்திருந்த சோமாஸ்கந்த மூர்த்தத்தை இந்திரன் வேண்ட அளித்தவர்.

77. அயன்குதத்தில் ஒரு கற்பத்தில் உதித்து அதோகச்சன் எனப் பெயரடைந்தவர்.

78. ததீசியுடன் எதிர்த்து முன்னில்லாது தோற்றவர்.

79. சராசந்தனுக்கஞ்சி (அ0,0000) லக்ஷம் துற்கம் செய்துகொண்டு வசித்தவர்.

80. நந்தியின் உயிர்ப்பால் ஆகாயத்திலோடிப் பூமியில் விழுந்தவர். (வசவபுராணம்.)

81. அரக்கரை வென்றோமென்ற இறுமாப்படைந்த காலத்துச் சிவமூர்த்தியிட்ட துரும்பைத் தூக்க வலியற்று அடங்கியவர்.

82. சிவமூர்த்திமுன் இறுமாப்புடன் சென்றதால் ஒட்டக உருக்கொண்டவர். (வசவபுராணம்).

83. உபமன்னியரிடம் சிவதீக்ஷைபெற்றுச் சிவபூசைசெய்து சாம்பன் முதலிய குமாரரைப் பெற்றவர்.

84. ஒருகாலத்துத் தமது செவியில் எழண்டங்களைப் பிறப்பித்தவர்.

85. குமாரக்கடவுளால் சிறையிடப்பட்ட பிரமனைச் சிவமூர்த்தியிடம் வேண்டிச் சிறை நீக்குவித்தவர்.

86. குமாரக் கடவுளின் தேவியராகிய தெய்வயானை வள்ளி நாய்ச்சிமார்களை இதற்கு முன்பிறப்பில் தமது குமரியாராக அமுதவல்லி சுந்தரியெனப் பெற்றவர். (ஸ்காந்தம்).

87. ஒருகற்பத்தில் தம்மிடம் பிறந்த பன்னிரண்டு குமாரிகளை விநாயகருக்குத் திருமணஞ்செய்வித்தவர். (பார்க்கவபுராணம்.)

88. பிரமன் வேள்வியை அழிக்கவந்த சரஸ்வதியைத் தடுக்கக் குறுக்காய்ப் பள்ளிகொண்டவர். (காஞ்சிபுராணம்).

89. இமயச்சாரலில் தவஞ்செய்துகொண்டிருந்த கண்ணுவர் முதுகில் முளைத்த மூங்கிலை வில்லாக்கி இவரிடம் கொடுக்க அதை இருசிகமுனிவரிடம் கொடுத்தவர்.

90. குகன் என்னும் வேடராஜனைத் தோழமைகொண்டவர்.

91. சடாயுவைத் தந்தையாகக்கொண்டு அவர் இறப்பிற்குச் சகல கர்மாதிகளையும் முடித்தவர்.

92. இராமதாசர் பொருட்டுப் பொன் சுமந்து துருக்க அரசனிடஞ் சென்றவர்.

93. கபீர்தாசர் பொருட்டு ஆடைநெய்தவர்.

94. பாரதத்தில் நரனாகிய அருச்சுனனுக்குத் துன்பம் வாராமல் குதிரையோட்டியும் தேர்ச்சக்கரமெடுத்துச் சூரியனை மறைத்தும் உதவிக் காத்தவர்.

95. தாசியிடம் வட்டிலேந்தி அடியவர் பொருட்டுச் சென்றவர்.

96. திருமழிசையாழ்வார் கிடந்தவாறு எழுந்துபேச என அவ்வாறு பேசியவர்.

97. திருக்கச்சி நம்பிகளுக்குத் தீவட்டி பிடித்துச் சென்றவர்.

98. பிரமனுடன் யுத்தஞ் செய்கையில் புலிமுகனைச் சிருட்டித்து ஏவியவர்.

99. மாலினி சுமாலினி என்னும் அசுரரைக் கொலைபுரிந்தவர்.

100. பாராசுரன் என்னு மசுரனை நரசிங்க உருக்கொண்டு மாய்த்தவர்.

101. சிவமூர்த்தியைப் பூசித்துச் சக்கரம்பெற்று மீளுகையில் அதனைப் பூமியில் விட்டு வணங்கினர். அதனைச் சிரமாலிகையில் ஒன்று கவ்விக்கொள்ள விஷ்ணு பிரார்த்திக்கச் சிவமூர்த்தி அதனைக் களிப்புறச்செய்து பெறுக என்றபடி அதன்முன் கோணங்கிக் கூத்தாடி அது சிரிக்க விழுந்த சக்கரத்தைப் பெற்றவர்.

102. தேவர்கள் செய்த யாகத்தில் கீர்த்தியைக் கவர்ந்தோடித் தேவர் பின்தொடர்தல் கண்டு வில்லை ஊன்றிக்கொண்டு நகைக்க முகத்தின் அழகெல்லாம் சாமையாய் வெளிப்பட்டன. இதை அறிந்த இந்திரன் செல்லுருக் கொண்டு நாணையறுக்க விஷ்ணு கழுத்தறப்புண்டனர். அற்றதலை உதிரத்தில் ஒடல்கண்டு தேவர் கீர்த்

தியைக் கவர்ந்தனர். திருமால் மருத்தவரால் உயிர்பெற்றனர். (காஞ்சிப்புராணம்)

103. விரோசனனிடம் மோகினி யுருக்கொண்டு சென்று அவனுக்கு எண்ணெயிட்டு மாய்த்தவர்.

104. துந்து என்னும் அசுரனைக் கொலை புரிந்தவர்.

105. இவர் வராக அவதாரத்தில் சிரித்த போது கபம் விழுந்தது. அது புருடராகமாயிற்று.

106. மதுகைடவவதத்தில் சிந்திய உதிரத்தில் பவளம் உண்டாயிற்று. மேதை மேதினியாயிற்று.

107. இவரை சிவமூர்த்தியினது வலப்பாகத்தில் காலாதீதமாய் ஒளியாய் ஒன்ருய் அவ்வியத்தந்தோன்றுதற்குக் காரணமாயிருக்கும் சிவசத்தியென்று சிவபுராணங்கள் கூறும்.

108. இம்மூர்த்தியை யானை, கருடன், குரங்கு, பாம்பு, பல்லி முதலிய பல செந்துக்கள் பூசித்து முத்தியடைந்தன.

109. தேவர்களுக்கு அமுதம்தந்து மிருதியைப் பாராசர முனிவர்க்குத் தந்தவர்.

110. அசுரரைக் கொல்லப் பாதளஞ்சென்று ஆண்டிருந்த அப்ஸரஸுக்களைக் கூடிப் பல புத்ரரைப் பெற்றனர். (சிவமகாபுராணம்.)

111. சுக்ரன் மிருத்யுஞ்ஜய மந்திரம் பெறச் சிவபெருமானை நோக்கித் தவம் புரிகையில் தேவர் அசுரர்களிடம் யுத்தத்திற்கு வந்தனர். அஞ்சிய அசுரர் குருவில்லாமை யெண்ணிப் பிருகு பத்தினியை அடைக்கலம் புக அவள் நித்ராதேவியை யேவி இந்திரன் முதலிலாயினவரை உறங்கும்படிச் செய்தனள். இதனை இந்திரனுலறிந்த விஷ்ணு பிருகுபத்னியைச் சக்கரத்தால் கொலைபுரிய, பிருகுமுனிவர் விஷ்ணுவை நீ ருஷிபத்னியைக் கொலை புரிந்தமையாற் பூமியில் பல பிறவிகொண்டு துன்பமடைக எனச் சபித்தனர். (தேவிபாகவதம்.)

112. பின்னும் ஆழ்வாதியரின் பொருட்டும் தேவர் இருடிகள் தானவர் முதலியோர் பொருட்டும் ஆங்காங்கு திரு அவதரித்துச் செய்த அநுக்கிரக நிக்கிரகங்களை எழுதப்புகின் நான் எழுதவந்த புத்தகம் போதாது. இத் திரிமூர்த்திகளின் சரிதங்களையே வேதங்களும் மகாபுராணங்களும் உபபுராணங்களும் மற்றசரிதைகளும் புகழவந்தனவாதலால் கிரந்த விஸ்தாரத்தின் பொருட்டு இம்மட்டில் நிறுத்தினேன்.

விஷ்ணுகண்டர் — சைவபத்ததிசெய்த சிவாசாரியருள் ஒருவர்.

விஷ்ணுகுமாரன்—மஹாபலி எனும் அரசன் தன்பால் தானம் வாங்கோம் என்ற சைநமுனிவர்களைச் சிறையில் வைக்க அவர்கள் உபவாஸ விரதம் கொண்டனர். இவ்வகை ஒருவாரஞ் சென்றது. இச் செய்தியை வாரணசியிலிருந்த சுருதசாகர பட்டாரகர் அவதிஞானத்தால் அறிந்து தமது (2000) சீடர்களில் ஒருவராகிய விஷ்ணு குமாரருக்கு விக்ரியாரித்திகை வந்திருப்பதை நேரே காட்டி அவரை நோக்கி 'நீர் மஹாபலிபாற் சென்று ஈரடிமண்யாசித்து அவன் தேசத்தை ஓரடியாலளந்து மற்றும் ஓரடியுந் தரவேண்டுமென்று நலிந்து தபோதனர்களை விடுவித்து வருக' என்று அனுப்ப, அவர்சென்று அவ்வாறேசெய்து தவத்தினரை விடுவித்தனர். (சைநகதை.)

விஷ்ணுசர்மா—1. அயோத்தியில் விஷ்ணு பிரதிட்டை செய்து பூசித்துப் பேறு பெற்றவன்.

2. அக்னிசருமனுக்குத் தந்தை.

3. எக்யசருமன் குமாரன். இவன் தந்தையிடம் காசிமான்மியம் கேட்டு முத்தியடைந்தவன்.

4. வேதநாராயணபுரத்து வேதியன்; சந்திரசருமன் பிதா. விக்ரமார்க்கன், பட்டி முதலியவர்க்குப் பாட்டன்.

விஷ்ணு சித்தர் — 1. பெரியாழ்வாரைக் காண்க.

2. எங்களாழ்வானுக்கு ஒரு பெயர், இவர் ஸ்ரீபாஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர். ஸ்ரீபாஷ்ய பிரவர்த்தகர்.

விஷ்ணுபலி — பிரதம கர்ப்பமான (அ)-ம் மாசத்திலே ரோகிணி, திருவோணம், ஸப்தமி, துவாதசிகளிலே சிமந்தத்துக்குச் சொல்லிய லக்கினங்களிலே விஷ்ணு பலியிடவேண்டும்.

விஷ்ணுபுராணம் — பதினெண் புராணங்களில் ஒன்று. இது வம்சம் மன்வந்தரம்; கிருஷ்ணபலராம சரித்திரம், உலகசிருட்டி சீவோற்பத்தி, கற்பாந்தம், அண்டகோசம், சுவர்க்க, நரகலக்ஷணம், கிரகமண்டலம், சப்தகண்டம், சாதியொழுக்கம், இராசபரிபாலனம், யுகசரிதை, சல, அக்னி, பிரளயம் முதலிய கூறும். இது (௬000) கிரந்த முள்ளது.

விஷ்ணு புருஷன் — இவன் விஷ்ணுவால் இரண்யகசிபை வெல்லத் தம்மைப்போல் உரு ஆயுதம் வாகனம் முதலிய பெற்ற ஒரு புருஷன். இவன் இரண்யகசிபிடம் யுத்தத்திற்குச் சென்று போரிட்டு அவனிடம் அடியுண்டு புறங்காட்டி வைகுண்டம் சென்றவன். (மச்ச - பு.)

விஷ்ணுமித்ரன் — உபயபாரதிக்குத் தந்தை.

விஷ்ணுயெச் — இனி கற்கியவதாரமூர்த்தியைப் பெறப்போகிற பிராமணர் சம்பள க்ராமத்தரசர். இவர் தேவி சுமதி. இவர் கல்கியால் திக்குவிஜயஞ் செய்வித்து யஞ்ஞமுடித்து நாரதர் உபதேசத்தால் தேவியுடன் சுவர்க்கமடைந்தனர். (கல்கி புராணம்.)

விஷ்ணுவர்த்தன நாராயணன் — விடல தேவராயனைக் காண்க.

விஷ்ணுவர்த்தனன் — 1. இவன் மைசூர் அரசன். சைநமதத்தில் இருந்து (கஉ) ஆம் கிறிஸ்துசகத்தில் வைஷ்ணவனானான்.

2. முதலாழ்வார்கள் மூவரின் அருள் பெற்று அவர்கள் அளித்த சக்கரப்படையால் பகைவரை வென்ற காஞ்சிநகரத்தரசன்.

விஷ்ணுவர்மன் — ஆசாரியன் மனைவியைப் புணர்ந்து மீளாரோகத்தால் நரகமடைந்து தன் குமாரனாகிய வேதன்செய்த தீபலங்கார்யத்தால் மீண்டவன்.

விஷ்ணுவிம்பதானம் — ஆயிரம் கழஞ்சு பொன்னால் விஷ்ணுவிம்பம் செய்வித்து வேதியர்க்கு அளித்தலாம்.

விஷ்வகஸ்வன் — 1. சூரிய வம்சம், இக்ஷ்வாகு வம்சத்தவனாகிய பிருதுவின் புத்திரன். இவன் புத்திரன் ஆத்திரீகன்.

2. திக்விஜயத்தில் அருச்சுனனால் சயிக்கப்பட்டவன். (பார-சபா.)

விஷ்வக்சேநர் — 1. இவர் பிறப்பை விசுவசேகரைக் காண்க.

2. பிரமதத்தன் குமாரன்.

3. கௌசிகனைக் காண்க.

விஷ்வக்சோதி—பிரியவிரதன் வம்சத்தவன்.

விஜயதசமி — இது ஆடிமாதம் சுக்லபக்ஷம் ஏகாதசிமுதல் ஐப்பசி சுக்லபக்ஷம் துவாதசி வரைக்கும் நாலுமாதமும் யோகிகளுக்கு விரதம். முதல்மாதம் சாகங்களாகா; இரண்டாமாதம் தயிராகாது; மூன்றாமாதம் பால் ஆகாது; நான்காமாதம் பருப்பு, கறிகள், உப்பு, புளி முதலிய ஒன்றுமே ஆகா. ஐப்பசிமாதம் சுக்லபக்ஷத் துவாதசியில் க்ஷீராப்தி பூசைசெய்து எல்லாப் பலகாரங்களும் சாப்பிடலாம்.

விஜயர் — விஷ்ணுபடரில் ஒருவர்.

விஜயன் — 1. (சு.) சயன் குமாரன்.

2. (ச.) பூருரவசுவிற்கு உருப்பசியிடம் உதித்தவன். இவன் குமாரன் பீமன்.

விஜயா — ஒரு மாயதேவி.

விஜயாசிவன் — பிருதுச்சக்கரவர்த்தியின் குமாரன்.

விஜான் — ஆயுவென்பவளுக்குக் காசிபரிடம் பிறந்தவன்.

விஜல்பை — தந்தாக்கிருஷ்டியின் குமாரி. அவமானம் வருவிப்பவள்.

விக்ஷயரோகம் — தேகம், சிரம், மார்பு இவ்விடங்களில் சோர்வு, கண்டத்தை யிறுகப் பிடித்ததுபோ லிருத்தல், சோர்வு, இருமல், தாகம், வாந்தி, சுரம் எனும் இக்குணங்களை யுண்டாக்கும். இது மிகு குடியால் உண்டாம் ரோகம். இவை தும்சகம், விக்ஷய ரோகங்களுக்கு பூர்ண சந்திரோதயம், காமாங்குச ரஸம், முதலியவற்றால் வசமாம். (ஜீவர).

விக்ஷேபம் — வாதியொன்றைச் சொல்லத் தொடங்கியதனை மறைந்து வேறொரு வியாச்சியத்தையிட்டு அதைச் சொல்லாதிருக்கை. (சிவ - சித்.)

விஹாரம் — வங்காளத்திற்கு வடக்கிலுள்ள தேசம்.

## வீ

வீசல்—1. இது கீரியினத்தில் உருவம் திரிந்தது. இது குறுகிய காலும், கீரியைவிட இரட்டிப்பான உடல் நீளமும் உள்ளது. இது ஆசியா, ஐரோப்பாவின் வடபாகம், அமெரிக்கா முதலிய தேசங்களி லிருக்கிறது. தேகத்தில் குறுகியடர்ந்த மயிருண்டு. முதகு சிவந்த பழுப்பு நிறம். இது கீரியைப் போன்ற முகமும் குறுகிய வாலு முள்ளது. மரப் பொந்துகளில் வசித்து இரவில் இரை தேடுகிறது. மாம்ச பக்ஷணி. இவ்வினத்தில் மற்றொரு வகை அமெரிக்காவிலுண்டு. அதை வீடுகளில் வளர்த்து முயல்வேட்டை யாடுகிறார்கள்.

2. இது கீரியைப் போன்ற பிராணி. இது ஐரோப்பாவின் வடபாகம் அமெரிக்கா முதலிய இடங்களிலுண்டு. இது கீரியினும் உடல் நீண்டு குட்டைவால் பெற்று, வாய்ப் பக்கத்தில் கறுப்பான புள்

ளிகள் பெற்றிருக்கிறது. மாம்ச பக்ஷணி. மரப் பொந்துகளில் வசிக்கும். இவ்வினத்தில் டெபியா என்பதொன் றுண்டு.

வீடுமேன் — பீஷ்மருக்கு ஒரு பெயர்.

வீடூர்முதலியார் — இவர் தொண்டைநாட்டு வேளாளர்; கொடையாளி. இவரது ஈகையைக் காண ஒரு புலவன் இவரிடம் வந்து முதலியாரின் மனைவியாரைக் கொடுக்கும்படி கேட்டனன். முதலியார் அவ்வகை கொடுத்தனர். இதனால் புலவன் களித்து முதலியாரை நோக்கி நான் தாய்முறை கொண்டு கேட்டனன். மீண்டும் அங்கிகரிக்க வேண்டுமென, வேண்டுகோட்படி இசைந்து புலவர்க்கு வேண்டியன கொடுத்தவர்.

வீட்டுக்குரியசாமான்கள் — செப்புப் பாத்திரங்கள் - அண்டா, தவலை, சரிவு, குண்டான், செப்புப்பானை, சொம்பு, தூபகலசம், விளக்கு, வடிதட்டு, செப்புச்சட்டி முதலியன. மரச்சாமான்கள் - மணை, கட்டில், விசிப்பலகை, மத்து, அகப்பை, தட்டு. இரும்புச் சாமான்கள் - கரண்டி, உச்சிக்கரண்டி, சல்லிக்கரண்டி, மட்பாண்டம் - பானை, சால், சட்டி, மிடா முதலியன. தட்டுமுட்டு-உரல், அம்மி, உலக்கை, அகல், மெத்தை, தலையணை முதலியனவாம்.

வீட்மகன் — இருகமணிக்குத் தந்தை; விதர்ப்பநாட்டரசன். இவனைப் பீஷ்மகன் என்பர்.

வீணாகஷீணுமூர்த்தம் — நாரதா முதலிய மகருஷிகள் வேண்டியபடி இசையின் இலக்கண முதலியன அறிவித்த சிவபிரான் திருவுரு.

வீணாபதி — காந்தருவதத்தையின் தோழி.

வீணை — தப்திநதிக்குப் பெயர்.

வீதகவ்யன் — ஒரு இருடி. இவன் யோகத்தால் தன் தேகத்தைவிட்டுச் சஞ்சரித்துப் பிங்கலனூர் பூமியிற் புதையுண்ட தேகத்தைப் பெற்றுச் சமாதியிருந்தவன். (ஞானவாசிட்டம்.)

வீதவவ்யன் — ஒரு அரசன். இவனுக்கு (௪00) குமாரர். இவர்கள் காசிராசன் குமாரனைக் கொன்றதால் காசியரசன் பாரத்துவாசரை யடைந்து அவரால் யஞ்ஞகுமாரன் என்னும் புத்திரனைப் பெற்றான். அப்புத்திரன் நூற்றுவரையுங் கொன்று இவர்களின் தந்தையைக் கொல்லச் செல்லுகையில் வீதவவ்யன் பிருகுவினிடம் அடைக்கலம் புக அவனைப் பிராமணனுக்கி வைத்துக்கொண்டனர். இவன் அன்று முதல் பிராமணனாக விருந்து யாகத்தில் அநேகம் புத்திரர்களைப் பெற்றான். இவன் குலத்தவர் வேதியராயினர்.

வீதி — அக்னி விசேடம்.

வீதிகோத்ரன் 1. — இந்திரசேநன் குமாரன்.

2. திருஷ்டகேது குமாரன்.

3. தாளசங்கன் குமாரன்.

வீபற்சு—அருச்சுனனுக்கு ஒருபெயர். பகைவர் வெறுக்கப் போர் செய்பவன் என்பது பொருள்.

வீமசேநன் — 1. காசிபருக்கு மநு என்பவளிடம் பிறந்த குமாரன்.

2. பாண்டு புத்திரன். பீமசேநனைக் காண்க.

வீமதேவன் — 1. சிவன் திருநாமங்களில் ஒன்று.

2. ஏகாதசருத்திரருள் ஒருவன்.

வீமந்தேர்மன்ன பாண்டியன் — சத்துருஞ்சய பாண்டியனுக்குக் குமாரன். இவன் குமாரன் வீமபராக்கிரமன்.

வீமநாதபண்டிதர் — 1. தொண்டைமண்டலம் புழற்கோட்டத்தில் இலம்பூரிலேயிருந்து கல்விகற்று வல்லவராய்ச் சிவதீக்ஷை பெற்றுக் கடம்பவன புராணம் பாடிய புலவர் திலகர்.

2. இவர் தருமபுரவாதினத்தவர். கவி வல்லவர். உத்தரகோசமங்கைப் புராணம் பாடியவர்.

வீமபராக்கிரம பாண்டியன் — வீமத்தேர் மன்ன பாண்டியனுக்குக் குமாரன். இவன் குமாரன் பிரதாபமார்த்தாண்டன்.

வீமபாகர் — சம்பரன் சேநாபதிகள்.

வீமரதன் — ஒரு பாண்டியன்.

வீமரதி — பீமாநதிக்கு ஒரு பெயர்.

வீமவாது — திருதராட்டிரன் புத்ரன். நாலாநாள் யுத்தத்தில் வீமனால் இறந்தவன்.

வீமன் — 1. வீமசேநனுக்கு ஒரு பெயர்.

2. குண்டினபுரத்தரசன்; தமனமுனிவர் அனுக்ரகத்தால் தமயந்தியைப்பெற்றவன். நளனுக்கு மாமன். பிராமணனை அனுப்பித் தமயந்தியிருக்கும் இடமறிந்து வரச்செய்து அவளுக்கு மறு சுயம்வரமென வெளியிட்டு இருதுபர்ணனை வருவித்து அவனிடமிருந்த நளனைக்கண்டு மகளிடம் சேர்ப்பித்தவன். இவன் தேவி சாருகாசனி. இவன் புத்திரப்பேறு இல்லாமல் விச்வாமித்திரர் ஆச்சிரமஞ்சென்று அவர் உபதேசத்தால் உருக்குமாங்கதனைப் பெற்றவன்.

3. சண்முகசேநாபதி.

**வீமாசுரன்** — 1. இவன் தேவர்க்குத் தீமை புரிய, சிவமூர்த்தி பிரசன்னதிருநாமத்துடன் இவன் முன்தோன்றி இவனைச் சங்கரித்தனர்.

2. இவன் சலாசுரன், சிலாசுரன் என்பவர்களுடன்கூடி அவ்விருவரையும் இரண்டு சிலம்புகளாக்கி விநாயகருக்கு முன் வைத்துப் பணிந்தனன். விநாயகர் அச்சிலம்புகள் இரண்டினையும் திருவடியில் அணிந்து வீமாசுரன்மீது எறிந்து அவ்விரண்டு அசுரருடன் இவனையுங் கொன்றனர்.

**வீராதித்தன்** — சூராதித்தன் தந்தை.

**வீரகவிராயர்** — இவர் ஆசுகவி பாடும் ஒரு தமிழ்ப்புலவர். ஊர் நல்லூர். அரிச்சந்திர புராணத்தைத் தமிழில் விருத்தத்தால் பாடியவர். இவர் சாலிவாகன சகம் (கசசஉ) இல் திருப்புல்லாணித் திருமால் எழுந்தருளியிருக்கும் தர்ப்பசயனத்தில் சக்கிரதீர்த்தக்கரையிலுள்ள மண்டபத்தில் அரங்கேற்றினவர். (அரிச்சந்திர புராணம்.)

**வீரகவிராஜ பண்டிதர்** — திருச்செங்கோட்டுப் புராணம் பாடிய புலவர்.

**வீரகன்**—1. நந்திமகாதேவர் சிலாதருக்குப் புத்திரராதற்கு முன் அழைக்கப் பெற்ற பெயர். இவர் கைலையைவிட்டு இறைவி நீங்கிக் கௌரியாகத் தவமியற்றச் சென்றபோது இறைவனிடத்து ஆடியென்னும் அசுரனைவிட்டதால் பூமியில் சிலாதபுத்திரராகப் பன்னிரண்டு வருடமிருக்கச் சாபமடைந்து, புத்திரப்பேறு வேண்டித் தவஞ்செய்து கொண்டிருந்த சிலாதமுனிவருக்குச் சிவாஞ்ஞைப்படி படைச்சாலில் மாணிக்கப் பெட்டியில் நான்கு கரங்களும் சடைமுடியுமாக அவதரித்தனர். இதனைக் கண்ட முனிவர் சிவாஞ்ஞைப்படி அதனை மூடித் திறந்துகாண ஒரு இளங்குழவியாயினர். தனக்குப் பதினாறு வயதென்று தாய் தந்தையரால் கேள்வியுற்றுத் தவஞ்செய்து சிவபெருமானால் அழியா நித்திய தேகம் பெற்றுச் சிவபெருமான் திருமுடியில் திருக்கரம் வைத்துத் தீக்ஷைபுரிய அவரது சாரூப்யம் அடைந்து திருநந்திதேவர் என்னும் அபிஷேகப்பெயரடைந்துசுயசை என்னும் கன்னிகையை மணஞ்செய்விக்கக் கொண்டு சிவாலயங்களில் அதிகாரியாக இருத்தப்பெற்றவர். (சிவமகா புராணம்.)

2. பார்வதிதேவியாரின் துவாரபாலகன்.; அடிதானவன் என்பவனைக் கட்டளையின்றிச் சந்நிதானத்தில் விட்டபடியால் கல்லாகச் சாபமடைந்தவன்.

**வீரகோளரி** — நவவீரரில் ஒருவன். முதல் நாள் பானுகோபனுடன் எதிர்த்து நாராயணாஸ்திரத்தால் மூர்ச்சித்தவன்.

**வீரக்கல்** — போரில் இறந்தவீரர்பொருட்டு அவரது வீரத்தைச் சிறப்பித்து நாட்டுங் கல்.

**வீரக்கழல்** — அரசர் தாம் முன்பு செய்த வீரச்செயல்களை அதனிடம் எழுதிய கழல். இதனை "ஒண்பொறிகழற்கால்" என்பதால் அறிக.

**வீரசகன்** — சுதர்சநன் என்னும் அரசன் குமாரன். இவனே மித்ரசகன்.

**வீரசங்கார்** — சிவன் திருவுரு அல்லாததைப் பரிசியாத வீரசைவர். இவர் புத்தன் ஒருவனைப் பரிசித்ததாகக் கணுக்கண்டு விழித்துத் தீமூட்டி அதில் விழுந்து சிவபதமடைந்தவர்.

**வீரசம்பன்**—கி. பி. 1314-இல் வீரசோழன் குமாரனாகிய வீரசம்பன் என்ற அரசன் அரசாண்டு வந்தான். மத்தியகாலச் சோழரில் கடைசியாக ஆண்ட மூன்றும் இராஜராஜன் வலிகுன்றிய காலத்திலே அவனது தண்டத்தலைவர்கள் பலர் சுயாதீனமடைந்தனர். அவர்களுள் சம்புவராயர்களும் ஒருவர். இவர்கள் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். அவர்களுள் இவனும் ஒருவன்.

**வீரசம்பு** — 1. விஜயநகரத்து அரசன்; தக்ஷிணயாத்திரையாக வந்து திருவண்ணுமலையில் இரண்டாமதிலின் திருப்பணி முடித்துச் சென்றவன்.

2. வங்கியகுலமுதல்வன் என்பர். இவன் ஒரு யாகஞ்செய்ய அதில் வங்கியர் தோன்றினர் என்ப.

**வீரசிகாமணிப் பல்லவராயன்** — பட்டரையாச்ரயித்த அரசன். இவன் பல்லவர் குலத்தவன்.

**வீரசிங்கன்** — இலங்கையில் இருந்த அசுர சேநாபதி. இவனை வீரவாகுதேவர் இலங்கைக்குப் போகையில் போருக்கு முதற்பலியிட்டனர். இவன் இலங்கை நகரத்திற்குக் காவலாளி.

**வீரசிங்காதன புராணம்** — ஒட்டக்கூத்தர் பிச்சைக்கு வந்த சங்கமர் ஒருவரைக் கொன்ற தோடத்திற்காக சிலர் அவரைக் கொலைசெய்ய வந்த காலத்து இவரைத் திருக்குடந்தை வீரசிங்காதன மடத்தார்

ஆதரித்தமையின் அந்நன்றி மறவாது இப் புராணம் இயற்றினர் என்பர்.

வீரசித்து — பிரபூ என்பவன் குமாரன்

வீரசுந்தரப்பிரமராயன் — ஆழ்வான் சீடருள் ஒருவன்.

வீரசுவர்க்கம் — இது வாயுமண்டலத்திற்கு மேல் மேகமண்டலத்தில் வைத்துதி யாதாரமான மேகாச்ரய பட்டணத்தில் தேவேந்திரன் ஆஞ்ஞையால் வீரதேவதைகள் இருக்கும் இடம். பூமியில் யுத்தத்தில் இறந்தோர் தேவகன்னியருடன் மகாசுகம் அனுபவிக்கும் பதம்.

வீரசேநன் — 1. நிஷததேசத்து மகாசேநன் குமாரன். இவன் கிருதயுகத் தொடக்கத்தில் இனிச் சக்ரவர்த்தியாகப் போகிறவன். இவன் பன்னிரண்டு வருடம் சிவபூசை செய்து சிவாநுக்ரகம்பெற்று மரத்தால் ஒருமீன்செய்து அதனை யீயத்தால் அலங்கரித்து அதற்கு மாயாசக்தியுண்டாக்கித்தாருகையின்வன மடைந்து அநேக ராக்ஷதர்களை யதஞ்செய்தவன். (சிவமகா புராணம்.)

2. வாலி நாட்டரசன்; இவன் க்ஷயரோகத்தால் வருந்தும் புத்திரனைக் கௌதம முனிவர் சொற்படி வேதாரண்ய தீர்த்தத்தில் மூழ்குவித்து ஆரோக்கியம் பெறச் செய்தவன்.

3. நிடதநாட்டரசனாகிய நளனுக்குத் தந்தை.

4. விதர்ப்பநாட்டு அரசன். காசிசென்று தீர்த்தமாடிக் காமகலைபிடம் காசிமான்மியங்கேட்டு முத்தியடைந்தவன். இவன் குமாரன் பிரசேநன். (காசிரகசியம்)

வீரசைவம் — இம்மதத்தவர் சைவ உட்சமயத்தவர். இவர்கள் வீரம் என்னும் ஆகமத்திற்கூறியவாறு ஒழுகுபவர். ஆதலால் வீரசைவர் எனப்படுவர். இம்மதவிஸ்தாரத்தைச் சித்தாந்த சிகாமணி முதலிய வீரசைவ நூல்களிற் காண்க. ப்ரதம மஹாசிருஷ்டியாரம்பத்தில் ஸ்ரீ பரமேச்வரனது, ஈசானாதி பஞ்சமுகோத்பவராய்ச் சுத்தசைவர் முதலிய சமஸ்தசைவரினு முயர்ந்தவராய், இதரசைவரைப்போல விசேஷக்கிரியையினால் அற்பபலனைப் பெறாது அற்பக்கிரியையினால் அனந்தபலனைப் பெறுபவராய் ஆக்ஞாதீட்சை முதலிய இருபத்தொரு தீக்ஷாபரராய், அறுபத்து நான்கு வித ஆசாரயுக்தராய், ஸ்நாநம், போஜனம், நித்திரை, மலமூத்திரவிசர்ஜனகாலங்களில் அசுசி பாவனையின்றிச் சதாலிங்காங்க சம்பந்தராய், லிங்கபோகோபபோகராய், தன்னிஷ்டலிங்கத்தில், ஆவாகனவிசர்ச்சனக் கிரியைகளைச் செய்யாதவராய், த்ரிகால லிங்கார்ச்சன சக்தராய், லிங்கலோபம் பூஜாலோப முதலியன நேர்ந்தால் ப்ராண த்யாகமல்லது வேறு பிராயச்சித்தமில்லாதவராய்க் குரு, லிங்க, ஜங்கமப்ரசாத, பாதோதக, பஸ்ம ருத்ராக்ஷ தாரண சிவாகம, சிவக்ஷேத்ர, சிவாசாரநிந்தைகளைப் பொறாதவராய்த் தமது இஷ்டலிங்கந்தவிர, வேறு தேவர்களையும், ஸ்ரீபாததீர்த்தந்தவிர கங்கை முதலிய வேறு எவ்வித தீர்த்தங்களையுங் கனவிலும் விரும்பாதவராய், தேகத்தில் சிவலிங்கதாரண மில்லாத பவிகளுடன், ஏகாசன, சயந, யாந, சம்பர்க்க, சகபோஜனங்களில்லாதவராய், அந்ரிதம், அஸ்திரவாக்கியம், வஞ்சனை, பந்திபேதம், உதாசினம் நிர்த்தயை யென்னும் ஆறுவித அந்தரங்கபவிகளில்லாதவராய்ச் சிவமஹேச்வரர்களைக் கண்டால், எழுதல் எதிர்கொள்ளல், கூடித்திரிதல், இதமுரைத்துஞ் சொல்லல், ஆசனத்திருத்தல், அன்னமிடல், பானஞ்சமர்ப்பித்த லென்னும் முத்திசோபான சத்தக்கிரமயுக்தராய், ஜாதி, ஜனன, ப்ரேத, உச்சிஷ்ட, ருதுவென்னும் பஞ்சசூதகங்களையும் விட்டவராய், லிங்காசார முதலிய பஞ்சாசாரநிஷ்டராய், தாசத்வம், வீரதாசத்வம், பிரத்தியத்வம், வீரப்ரத்தியத்வம், சமயாசாரத்வம், சர்வசாஸ்திரத்வமென்னும் ஆறுவித சர்ச்சணயுக்தராய், தேசகால கற்பிதாதி லௌகிகாசாரங்களை மீறிய சுதந்தரசீலராய், சிவாத்மருக்குப் பேதப்பிராந்தி சிறிதேயாதவராய் உபநிஷத்தவாக்யஜநித வித்தையில் பொருந்துபவராய், ஜகத்பூஜ்யராய் உள்ளவரே வீரசைவராவார். இவர்களுள் வீரசாமான்யர், வீரவிசேஷகர், வீரநிராபாரியார் என முத்திறத்தினர் உளர். இம்மதம், ஷடெத்தலமறிந்து அவ்வழிநின்று சிவனை வழிபட்டோன் முத்தியடைவன் என்னும். ஷடுத்தலமாவன: பத்தத்தலம் - கடு. மகேசத்தலம் - க. பிரசாதித்தலம் - எ. பிராணலிங்கத்தலம் - கூ. சரணத்தலம் - ௨. ஐக்கியத்தலம் - ௨ ஆம். பத்தத்தலம் - கடு ஆவன: பிண்டத்தலம், பிண்டஞானத்தலம், சமுசார நீக்கத்தலம், குருகாருண்யத்தலம். இலிங்கதாரணத்தலம், விபூதி தாரணத்தலம், உருத்திராக்கதாரணத்தலம், பஞ்சாக்கரத்தலம், பத்தத்தலம், உப

யத்தலம், திரிவிதசம்பத்தித்தலம், சதுவிதாசாரத்தலம், உபாதிதானத்தலம், நிருபாதி தானத்தலம், சகசதானத்தலம் என்பன. மகேசத்தலம் - க. அவை : மகேசுரத்தலம், இலிங்கநிஷ்டைத்தலம், பூர்வாச்சிரம நிரசனத்தலம், அத்துவித நிரசனத்தலம், ஆவாகனநிரசனத்தலம், அட்டமூர்த்தி நிரசனத்தலம், சர்வகதநிரசனத்தலம், சிவசகன்மயத்தலம், பத்ததேதிக தேவத்தலம். பிரசாதித்தலம் - எ. அவை : பிரசாதித்தலம், குருமான்மியத்தலம், இலிங்கமான்மியத்தலம், சங்கமமான்மியத்தலம், பத்த மான்மியத்தலம், சரண மான்மியத்தலம், பிரசாதமான்மியத்தலம். பிராணலிங்கத்தலம் - ரு. அவை : பிராணலிங்கத்தலம், பிராண லிங்கார்ச்சனைத்தலம், சிவயோக சமாதித்தலம், இலிங்கநிசத்தலம், அங்கலிங்கத்தலம். சரணத்தலம் - ச. அவை : சரணத்தலம், தாமசநிரசனத்தலம், ஞானநிர்த்தேசத்தலம், சீலசம்பாதனைத்தலம். ஐக்கியத்தலம் - ச. ஐக்கியத்தலம், சர்வாசாரசம்பத்தித்தலம், ஏகபாசனத்தலம், சகபோசனத்தலம். ஆக இந்த (சச) தலங்களும் கடந்த அநுபவி, பரலிங்க ஷடுத்தலமறிதல் வேண்டும். அவை விரியில் (கஎ) ஆம், அவை : இலிங்கத்தலத்தில் தீக்ஷாகுருத்தலம், சிக்ஷாகுருத்தலம், ஞானகுருத்தலம், கிரியாலிங்கத்தலம், பாவலிங்கத்தலம், ஞானலிங்கத்தலம், சுயத்தலம் சரத்தலம், பரத்தலம். மகேசுரத் தலத்தில் கிரியாகமத்தலம், பாவாகமத்தலம், ஞானகமத்தலம், சகாயத்தலம், அகாயத்தலம், பரகாயத்தலம், தருமாசாரத்தலம், பாவாசாரத்தலம், ஞானசாரத்தலம். பிரசாதித்தலத்தில் காயாநுக்கிரகத் தலம், இந்திரியானுக்கிரகத்தலம், பிராணானுக்கிரகத்தலம், பிரசாதகாயார்ப்பிதத்தலம், பிரசாதிகரணார்ப்பிதத்தலம், பிரசாதிபாவார்ப்பிதத்தலம, பிரசாதிசீடத்தலம், பிரசாதிசுருஷைத்தலம், சேவியத்தலம் இவற்றை யறிதல் வேண்டும். பின் பிராணலிங்கத்தலத்தில் சீவாத்மத்தலத்தைச் சுருக்கிக் கூறுகிறேன். சீவாத்மத்தலமாவது படிகம் செம்பரத்தம்பூவுடன் சேர்ந்து சிவப்பானதுபோல் உடலோடுழலுகிற சீவாத்மாவைப் பிரித்துச் சீவனென்னவறிதல். பிராணலிங்கியந்தராத்மத்தலமாவது பக்ஷிவேறு கூடுவேறுபோல, உயிர்வேறு உடல்வேறாய்ச் சீவன் சிவபரனை கூடல். பிராணலிங்கிபரமாத்மத்தலமாவது அந்தராத்மா, கரண முதலியவற்றிற் கூடாமல் அறிவுருவாய்ப் பிரகிருதி புருஷரூபமான பலஜெகத்துருவாய் நிற்கும் பரமாத்மாவைக்கூடல். பிராணலிங்க நிர்த்தேதாகமத்தலம் பரமாத்துமாவான சரணன் தேகதருமங்களுடன் சேராமலிருத்தல். பிராணலிங்க நிற்பாவாகமத்தலம் பரம் நான் என்பதும் அப்பாவனையுமில்லாமலிருத்தல். பிராணலிங்கி நாட்டாகமத்தலமாவது ஞாதுரு ஞான ஞேயம், மூற்றும் லயமாய்ப் பேதங்கெட்டிருத்தல். ஆதிப்பிரசாதித் தலமாவது சிவப்பிரசந்நபிரசாதமாகிய சச்சிதானந்தத்தையடைந்து சநநநீங்கல். பிராணலிங்கியந்தியப் பிரசாதிலிங்கத்தலமாவது, எல்லாப்பொருள்களுமடங்குமிடமாய்ப் பரமாநந்தமயமாதல். சேவியப்பிரசாதித் தலமாவது குருசேவையாலுண்டான பிரசாதஞ்சத்தியமெனச்சிற்பரசுகங் கண்டிருத்தல். சரணத்தலத்தில் தீக்ஷாபாதோதகத் தலமாவது ஆசானுடன் சீடன் ஆநந்தத்தில் அயிக்கியமாகச் சிறந்த தீக்ஷையால் தீர்ந்துள பெரிய ஞானமாம். சிக்ஷாபாதோதகத்தலமாவது குருசீட மயமான சிக்ஷையால் சிவஞான அமிர்தம்பருகியிருத்தல். சரணஞானபாதோதகத் தலமாவது ஞானத்தை யளிக்கின்ற ஞானகுருவளித்த ஞானபாதோதகங் கொண்டு அகமகிழ்தல். கிரியாநிஷ்பத்தித் தலமாவது பரிபூரணப்பொருளான யோகி, சித்திகளை விரும்பாதிருத்தல். பாவநிஷ்பத்தித்தலமாவது தன்னைவிட்டகலாத சிவனிடத்தில் பாவனை செய்தல். ஞானநிஷ்பத்தித் தலமாவது சொப்பனப்பொருள் சாக்கிரத்தில்லாததுபோல நானெனதற்றுச் சிவமே தானாகி ஞானஞேயத் தழுந்தல். பிண்டாகாசத் தலமாவது கடாகாசமும் வாரியிலாகாசமும் மகாகாசமானதுபோல அறிவான இலிங்கம் சிவனுக்குக் கோயிலான தேகத்தில் பரிபூரணமாகப் பிரகாசித்தல். விந்தாகாசத்தலமாவது, பூதந்தோறும் வாயுவிருப்பினு நிறைவாமாறுபோல் பூரணமாயிருத்தல். மகதாகாசத்தலமாவது அண்டபிண்டத்திலிருக்கும் ஆகாசம் வேறாகாதிருப்பதுபோல் பரமான்மா வேறல்லனாய் உடலுயிருமாயிருப்பதை யறிதல். அதாவது கரணங்கூடாத வுணர்வில் சரணன் லயித்துத் தானில்லாமற்போதல். பாகப்பிரகாசத் தலமாவது அலையின்றகுமிழிகள் கட

விற்ருேன்றுவதுபோல் உணர்வில் லோகாதிலோகங்களும் காணமுந் தோன்றக்காணல், ஞானப்பிரகாசத்தலமாவது உலக உபாதிகளிறந்து சொல்லப்போகாத உணர்வாயுள்ள சிவஞானம். இனி ஐக்கியத்தில் சுவிகிர்த பிரகாசத்தலமாவது ஆதியந்த முக்கிய லக்ஷணமிறந்ததாய்ப் போதமான சிவப்பிரசன்ன பிரசாதத்தால் சிதாநந்த பரிணமத்தையடைந்து பூதாதிகளிற் பேதமகன்று நிற்றல். சிட்டோதலத்தலமாவது பொறிகளாலுணரப்படும் புலன்கள் கடலிலுள்ள வடவைபோல் ஞானியிடத்து அடங்கிநிற்க ஞானி யவற்றிற் பொருந்தாமல் மாயையை நீங்கியிருத்தல். சராசரலயத்தலமாவது செகத்துருவமாயிருக்கும் மாயையைத் தன்னிடங் கிரகித்துச் சிவன்ருனேயாய் நிற்றல். பாண்டத்தலமாவது பரந்துள்ள விமரிசமாகிய பாண்டத்தில் விரிந்த தத்துவங்கள் யாவையும் அடங்கவைத்துத் தன்னையே கண்டிருத்தல், பாசனத்தலமாவது அண்டங்களெல்லாம் முத்தொழிற்படுத்ற் கேதுவாகிய விமரிச சத்தி எதன்கணிருக்குமோ அந்த வறிவே ஞானமாகக் கண்டிருத்தல். அங்காலேபத் தலமாவது காலந்திக்கிவ்வயாதிகளால் கண்டிதமின்றி யிருக்குங்கோலம் சச்சிதாநந்தமாம். இவ்வகைச் சீலங்கொண்டிருத்தல். சுபாரஞ்சத்தலம் உணர்வுமயமான சிவன் இலயமாய்த் தானே தானுகிநானென்றறியாமல் முன்னே வேந்தனும், பின்னே பெத்தனும், ஞானியும், சுஞ்ஞானியும், அல்லவாய் பரசூன்யமாயிருத்தல். பாவாபாவத்தலமாவது உவமையற்ற சிவத்திற் கலந்து ஒன்ருய்ச் சிவோகஞ்சிந்தை நிட்பாவமில்லாமல் நிற்குணப்பிரமமாய் நிற்றல். ஞானசூனியத் தலமாவது நீர் நீரிலும், நெருப்பு நெருப்பிலும், சேர்ந்ததுபோல, சித்தான அங்கமும் பூரண நிற்குண சூனியலிங்கத்தில் லயித்து ஏகமாய்ச் சர்வமும் சூன்யமாய் நிற்பது. இதுவே மோக்ஷம். (தத்துவநிஜாநுபோகசா.)

**வீரசோழன்** — சிவலிங்கசோழன் குமாரன். இவன் ஏமவல்லி யென்னும் மனைவியுடன் கூடி (அஎ) வருஷம் அரசாண்டு பல சிவதிருப்பணிகள் செய்வித்துச் சமுத்திரத்தில் முகத்துவாரம், பாலம், தன்பெயரால் நதி முதலிய உண்டாக்கித் தன் குமாரன் கரிகாலனுக்குப் பட்டமளித்து முத்தி பெற்றவன்.

**வீரசோழியம்** — வடமொழியிலக்கணத்தைத் தமிழில் முதன் முதலாகக் கூறிய இலக்கணநூல்; இது எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி முதலியவற்றைச் சுருக்கிக் கூறுவது. இது பொன்பற்றியூர்ப் புத்தமித்திரனல் இயற்றப்பட்டது. சைவர் இதனைக் கற்பனையென்பர். இந்நூல் அக்காலத்தாண்ட வீரசோழன் என்ற பட்டந்தரித்த வீரராஜேந்திரன் (1060-1069) பெயராற் செய்யப்பட்டதா லிப் பெயர் பெற்றது.

**வீரசோளவ்வை** — ஒரு வீரசைவி. இவள் உருசியாய்ப் பிட்டுச்செய்து அருந்தினள். அது உருசியாயிருந்ததினல் தன் குமாரியிடம் அதைத் தந்து சிவமூர்த்திக்கு நிவேதிக்கக் கட்டளையிட்டனள். அவ்வகைக் குமாரிசெய்யச் சிவமூர்த்தி வாங்கி உண்டனர். (வசவபுராணம்)

**வீரணன்** — ஒரு பிரசாபதி.

**வீரதாசன்** — வீரபாகுவிற்குத் தாசனுய் இருந்த அரிச்சந்திரன் பெயர்.

**வீரதாமன்** — குரோதகீர்த்தியின் குமாரன்.

**வீரதீரன்** — நவவீரரில் ஒருவன்.

**வீரதும்மன்** — 1. ராஜரிஷி. பூரித்தும்மனனுக்குத் தந்தை. இவன் தநு என்னும் பெயருள்ள பிராமணனுடன் சம்வாதம் செய்தவன். (பா. சா)

2. பூரித்தும்மன் தந்தை. இவன் தன் குமாரனைத் தேடிக்கொண்டு தனுருஷியிடம் சென்று ஆசையினளவு வினவியர். பின் புத்திரனைக் கண்டவன். (பார சாந்.)

**வீரநகரம்** — தேவிகாநதி தீரத்தில் புலஸ்திய பிரமதவஞ் செய்த இடம்.

**வீரநாராயணச்சோழன்** — இவன் பராந்தகச்சோழன் (907-947) என்னப்படுவோன். இவன் பாணவம்சத்தை வேரறுத்து அவர்கள் நாட்டைக் கங்கவம்சத்தைச் சார்ந்த அத்திமல்லனுக்குக் கொடுத்தவன். இவன் சிதம்பரம் கனகசபை பொன்மேய்ந்தவன்.

**வீரபத்திர முதலியார்** — இவர் தொண்டைநாட்டில் கண்ணூரில் இருந்த வேளாளர், இவர் யாசகரை வலிய அழைத்துத் தமது தோட்டத்தில் இருந்த கரும்பைத் தின்னச்செய்து கூலியுங் கொடுத்தவர். "உத்தமகங்காநதி மாபின்" என்னுஞ் செய்யுள் இவர்மீது பாடப்பட்டது.

**வீரபத்திரர்** — 1. தக்கன், சிவமூர்த்தி தன்னை மாமன் என்று மதியாது இருந்ததைப் பற்றிச் செருக்கடைந்து சிவமூர்த்தியை

நீக்கி ஓர்வேள்வி செய்யத் தொடங்கினன். அவ்வேள்வியை நாரதரால் அறிந்த தாக்ஷாயணி சிவமூர்த்தியிடம் விடைபெற்று வேள்விச்சாலையை அடைந்தனள். தக்ஷன் தாக்ஷாயணியை அன்புடன் வருவிக்காததால் கோபித்து வேள்வி சுடலையாகச் சபித்துச் சிவமூர்த்தியை யடைந்தனள். இவள் மன வேறுபாட்டைக்கண்ட சிவமூர்த்தி தமது திருச்சடையில் ஒன்றைப் பூமியில்மோதினர். அதினின்றும் வீரபத்திரர் அவதரித்தனர். இவர் இறைவன் கட்டளைபெற்றுத் தம்முடன் தோன்றிய பூதகணங்களுடனும் தாக்ஷாயணி அனுப்பிய காளியுடனும் சென்று தக்கனது வேள்வியை அழித்தனர். இவ்வேள்வியில் இந்திரன் குயிலாய்ப் பறந்தோடினன். அக்னி நா அறுப்புண்டான். பூஷா என்னும் சூரியன் பல்லிழந்தான். சந்திரன் வீரபத்திரர் காலால் தேய்ப்புண்டனன். தக்கன் தலையறுப்புண்டனன். இதுநிற்க, காளி யொருபுறத்து இருந்து சரஸ்வதி, லக்ஷ்மி, இந்திராணி முதலியவர்களை உறுப்பழித்தனள். இதனால் யஞ்ஞபுருஷன் பயந்து மான் உருக்கொண்டு ஓட, ஒரு பூதம் மானின் தலையைத் திருகியது. இவ்வகை வெற்றிபெற்று வீரபத்திரரென்னுந் திருநாமம் அடைந்து வீரமாகாளியுடன் அமர்ந்த சிவமூர்த்தியின் அம்சம். இவர் அசகரன், பஞ்சமேட்டிரன், அக்னிமுகன், சற்பாசுரன், வியாக்ரன், வீரமார்த்தாண்டன் முதலியவரைக் கொன்றவர். தக்கன் யாகத்தில் இவரது கோபந்தணிய விஷ்ணு அசரீரியின்சொற்படி பினாகத்தின் நாணியை அறுத்தனர் என்ப.

2. ஒரு தமிழ்க் கவிஞன். சதுர்வேத தாற்பர்ய சங்கிரகத்தைத் தமிழில் செய்யுளாக இயற்றியவன்.

3. ஒரு அரசன். சற்பாத்திரதானத்தால் புண்யலோக மடைந்தவன். (பிரகன்னாரதீய புரா.)

வீரபத்தினி — கண்ணகி. கெடுஞ்செழியனை வழக்கில் வென்று மதுரையைக் கற்பால் எரித்தவள். (சிலப்பதிகாரம்).

வீரபாகு—அரிச்சந்திரனை யடிமைகொண்ட தோட்டி. காலனம்சம்.

வீரபாண்டியன் — 1. மதுராநகர் ஆண்ட பாண்டியரிலொருவன். குடிகளின்வேண்டுகோளின்படி வேட்டைக்குச் சென்று அறியாது காலமுநிவரின் கையைத்துணித்துக் கயநோய்கொண்டவன்.

2. உக்கிரகுமார பாண்டியனுக்குக் குமாரன். இவன்காலத்திலே சிவமூர்த்தி இருடிகள் வேண்டுகோட்படி வேதத்திற்குப் பொருள் அருளிச்செய்தனர். இவன் வேட்டைக்குச்சென்று புலியால் இறந்தான்.

3. இவன் பாண்டிநாட்டை யாண்ட புத்தராசா. இவன் சைவனாகி மாறினதால் புத்தர் துரப்புண்டனர்.

4. இவன் பாண்டிநாட்டரசருள் ஒருவன். தந்தையிறக்க அவனது எலும்புகளை வில்வாரண்யத்தில் விருத்தப்பிரயாகையில் தோய்க்க அவை பொற்றாமரைகளாக இருக்கக்கண்டு களித்துச் சிவதருமஞ்செய்தவன். (வில்வாரண்யபுராணம்.)

5. ஒரு பாண்டியன். இவனுக்கு அபிராமன் எனவும் பெயர். இவன் சோருடன் வல்லமெனும் ஊரில் யுத்தம் புரிந்தவன். "பற்றலர் மண்கொள்ளும் பணிந்தார்க்கு அளிக்கும், கொற்றமுயர்க்குமறங் கூறுமே-விற்றுவசம். வில்லவனை வென்னுகொண்ட வீரமாறன் செழியன், வல்லமெறிந்தானே ந்துவாள்." தென்காசிசாசனம். இவன் காலம் கி. பி 1588.

வீரபார்க்கவபாண்டியன் — மதுரையை யாண்ட (௬௪) வது பாண்டியன்.

வீரபானு — வீரமாயேந்திரத்தின் கீழைக் கோபுரவாயிற் காவலாளி.

வீரபுரந்தரன் — நவவீரரில் ஒருவன். அக்னிமுகன் யுத்தத்தில் சோமுகனைக் கொன்றவன்.

வீரபோகவசந்தராயர் — விஷ்ணுகாச்மீர தேசத்து சயசிங்குமகாராஜாவிற்கு இப்பெயருடைய பிள்ளையாகவும், சிவன் சிதம்பர தீக்ஷிதராகவும், பிரமன் ராமயோகி ஐயராகவும் பிறந்து தர்மத்தை நிறுத்தினவர்கள். Triennial Catalogue of Manuscripts issued by the Oriental manuscripts library, Madras.

வீரமாகாளர் — மகாகாளரைக் காண்க.

வீரமாமகேந்திரம்—சூரபன்மன் பட்டணம்.

வீரமாமகேந்திரன் — நவவீரரில் ஒருவன்.

வீரமாமயேச்சுரன் — நவவீரரில் ஒருவன்.

வீரமாமுனி — இவர் ஒரு ஐரோப்பிய உரோமன் கதோலிக்மதக்குரு. இவர் 1680௵ நவம்பர்௴ பிறந்து கான்ஸ்டன்ஷியுஸ் பெஸ்கி என்னும் பெயருற்று இந்தியாவிற்குக் குருவாய் வந்து தமிழ்கற்று மத

போதகஞ்செய்து தமிழில் தேம்பாவணி, வேதியரொழுக்கம் பாடியவர். இவர் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளை எதிர்த்துச் சைவதூஷணமாக வார்த்தை கூறச் சுவாமிகள் இவரை வென்று சைவதூஷண நிக்ரக மெனும் நூல்செய்து மறுத்தப்பின் ஏசுமதசங்கற்ப நிராகரணமென ஒருநூல் செய்து நிராகரித்தனர். இதனாலிவர் வெட்கி நீங்கினர். இவரைக் கிறிஸ்தவர் வீரமாமுனி அல்லது தைரியநாதர் என அழைப்பர். இவர் செய்த வேறுநூல்கள், சதுர அகராதி, தொன்னூல், அன்னையழுங்க லந்தாதி, அடைக்கலநாயகிக் கலம்பகம் முதலியன. இவர் திருநெல்வேலிக் கடுத்த மணப்பாடு எனும் பட்டணத்தில் தேகவியோகமாயினர். இவரை தத்வ போதக சுவாமி, தைரியநாத சுவாமி எனவும் கூறுவர்.

வீரமார்த்தாண்டசோழன் — இவன் தேவி சேரராசாவின் குமரியாகிய மாணிக்க வல்லி. இவன், புரோகிதராகிய தேவசன்மரால் கொங்கணேசுரர் சரித்திரங்கேட்டு (௬௬) வருஷம் அரசாண்டு தன் குமரன் கீர்த்திவர்த்தன சோழனுக்கு முடிசூட்டிச் சுவர்க்க மடைந்தனன்.

வீரமார்த்தாண்டதேவன் — இவன் செங்குந்தர்மரபில் வந்த தமிழ்ப்புலவன். பஞ்சதந்திரக் கதையினை விருத்தப்பாவால் இயற்றியவன்.

வீரமார்த்தாண்டன் — 1. நவவீரரில் ஒருவன்.

2. பிரமதேவன் வரத்தால் தேவர்களை வருத்தி வீரபத்திரரால் இறந்த அசுரன்.

வீரமுட்டிகள் — இவர்கள் வீரசைவரில் ஒருவகையார். தேவாங்கர், கோமட்டிகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் தொழில் கூத்தாடுதல். இவர்கள் வசவண்ணர்காலத்து மடத்தைக் காவல் செய்திருந்தவர்கள். இவர்கள் சிவாலயங்களில் உற்சவகாலத்தில் உற்சவமூர்த்திக் கருகில் சிவகணத்தவரின் வேடம் பூண்டு உற்சவமூர்த்தியுடன் வருவோர். முன்சொன்ன வீரமுஷ்டிகளுக்கு வீடுகள் இல்லை. தரையில் படுக்கை; துடப்பம் உபயோகிக்கார்; அவர்களுக்கென்று அடுப்புக்கட்டார். இவர்கள் நாடோடிகள். (தர்ஸ்.)

வீரம் — இது நாடகவிகற்பத்துள் ஒன்று. இது, அங்கமிரண்டு முதலாவாறிரண்டு மெய்தப் பெற்றுச் சந்தியைந்து முடைத்தாய் வாரங்காண்டம் பெற்றும் பெறாதும், தலைமகனொருவனாவது. (வீரசோ.)

வீராக்கதன் — நவவீரரில் ஒருவன். பானுகோபனுடன் யுத்தஞ்செய்து முதனாள் யுத்தத்தில் மூர்ச்சித்தவன்.

வீராந்தகன் — நவவீரரில் ஒருவன்.

வீராஜேந்திரன் — இவன் இராஜமஹேந்திரனுக்குப்பின் பட்டமடைந்த சோழமன்னன். வீரசோழியத்தில் "எல்லாவுலகு மேவிய வெண்குடைச் செம்பியன் வீராஜேந்திரன். என்று புகழப்பட்டவன் இவனே. கி. பி. 1060-1069 ல் அரசாண்டவன். இவனும் சாளுக்கியருடன் யுத்தஞ் செய்து ஆகவமல்லன் குமாரன் விக்ரமாதித்தனைத் துரத்தி இவன் மகன் இருகையின் மனைவி நாகலையென்பாளை மூக்கறுத்துத் திரும்பினான். இவன் இரண்டாமுறை சாளுக்கியருடன் போரிட்டு ஆகவமல்லன் பாசறையை நாசப்படுத்தி அவனது வராகக்கொடியையும் அவன் மனைவியரையும் பிடித்தனன். இவன் பொத்தப்பிநாட்டரசனையும், கேரளத்தரசனையும், தாராதேசத்து சகநாதன் முதலியரையும் வென்றான். பாண்டிநாடு இவனாற்கொள்ளப்பட்டது. இவனை ஆகவமல்லன் போர்க்கழைத்து வாராமலிருக்க இவன் அவனாட்டைத் தீக்கிரையாக்கிக் கரடிக்கல் எனுமிடத்தில் ஒரு ஜயஸ்தம்பம் நாட்டினான். பின் ஆகவமல்லன் குமாரன் சரணடைய அவனுக்கு இரட்டப்பாடியைக் கொடுத்துக் குந்தளராஜ்ய இளவரசும் தந்தான். இவன் தன் குமாரியையும் மணம்புரிவித்தான். இவன் வேங்கை நாட்டைக் கைக்கொளக் கருதிப் போரிட்டுக் கலிங்கமும், சக்கரக் கோட்டமும் பற்றி அவைகளை முதற்குலோத்துங்கன் சிற்றப்பனாகிய விஜயாதித்தனை ஆளச் செய்தான்.

வீரவல்லிப்பிள்ளை — பிரமதந்திர சுவதந்திரஜீயர்; திருவடி சம்பந்தி.

வீரவாகு — 1. விசுவசேநனைக் காண்க.

2. சேதிநாட்டரசன்; சுபாகுவின் தந்தை. இவன் வீட்டில் தமயந்தி வளர்ந்தாள்.

வீரவாகுதேவர் — உமையம்மையின் திருவடிச்சிலம்பில் இருந்து நவமணிகள் சிதறின. அவற்றைப் பிராட்டியார் திருக்கண் சாத்தியருள, அவை ஒன்பது பெண்களாயின. அவ் வொன்பதின்மரையும் சிவமூர்த்தி நோக்க, அவ் வொன்பதின்மரும்

கருத்தாங்கினர். அதனால் உமை கோபிக்க, நெடுநாள் கருவுயிர்க்காது இருந்து பின் உமையைப் பூசித்து நவவீரரைப் பெற்றனர். அவர்களில் முதலிற் பிறந்தவர் வீரவாகுதேவர். இவர் நந்திமாதேவர் அம்சம். இந்த நவவீரரும் சிவாஞ்ஞையால் குமாரக்கடவுளுக்குத் துணைவராகக் குமாரக்கடவுள் சந்நிதியில் எழுந்தருளியிருந்தனர். (க) இவர் ஒருகாலத்து நாரதர் வேள்வியிற்பிறந்த ஆட்டினைக் கந்தமூர்த்தியின் ஏவலால் பிடித்து வந்தவர். (உ) தாருகனுடன் யுத்தஞ்செய்து கிரவுஞ்சத்தில் மறைந்த அவனைத் தொடர்ந்து அம்மலையிற்சென்று அவன் மாயையால் மூர்ச்சித்து உள்கிடந்து குமாரக்கடவுள் ஏவிய வேலாயுதத்தால் பர்வதம்பிளவுபட வெளிவந்தவர். (ங) குமாரக்கடவுளின் கட்டளை தாங்கி வீரமாயேந்திரத்திற்குத் தூதாகச் சென்று கந்தமாதன பர்வதத்தின் மீதேறிக் கடலில் இருக்கும் இலங்கையைக் கண்டு தாவி அதில் சென்று வீரசிங்கனுடன் போரிட்டுக் கொன்று இலங்கை நகரத்தின் நடுச்சிகரத்தைக் கடலில்தள்ளி அந்நகரத்து இளவரசாகிய அதிவீரனைக் கொன்று அவ்விடம் நீங்கி அந்தரவழியாகத் தாவுகையில் எதிர்த்த கசமுகனைக் கொன்று அணுவுருக்கொண்டு மயேந்திரஞ்சென்று சயந்தனுக்கு உறுதிகூறிச் சூரன்சபை புகுந்து அவன் முன் வேறு சிங்காதனத்து இருந்து தேவர்சிறை விடக் கூறினவர். (ச) சூரன் மறுப்ப, மீள்கையில் எதிர்த்த சதமுகனை வதைத்துப் பின்பு காவலரை வதைத்து வச்சிரவாகுவுடன் எதிர்த்து அவனைக் கொலைபுரிந்து, யாளிமுகனை வதைத்து முதல்நாள் பானுகோபனுடன் யுத்தஞ்செய்து அவனைப் பின்னடையச்செய்து, இரண்டாம்நாள் சூரபன்மனுக்கு ஆற்றாது நீங்கிக் குமாரக்கடவுள், அவனைப் பின்னடைவித்ததால் களிப்படைந்து, மூன்றாம்நாள் பானுகோபனுடன் யுத்தஞ்செய்து அவனால் கட்டுண்டு கடலிற்கிடந்து குமாரக்கடவுள் வேலாயுதத்தால் மீண்டு, இரணியனுடன் யுத்தம்புரிந்து அவனைப் பின்னடையச்செய்து அக்னிமுகனுடன் யுத்தம் புரிகையில் அவனுக்கு உதவிவந்த பத்திரகாளியின் வலியடக்கி அவன் மார்பில் அறைந்து அக்னிமுகனைக் கொன்றனர். பின் அக்னிமுகனால் இறந்த தம்பியார் எழுவரையும் யமனுக்கு ஓலையிட்டு அவர்கள்உயிரைவருவித்தவர். நாலாநாள் தருமகோபன் ஏறியிருந்த புண்டரீகமென்னும் யானையைச் சுழற்றி ஆகாயத்தில் எறிந்து அவனையுங்கொன்று, ஐந்தாம் நாள் பானுகோபனுடன் யுத்தஞ்செய்து அவன் கரத்தை வெட்டி அவனையு மாய்த்து ஆறாம்நாள் சிங்கமுகனுடன் யுத்தம் புரிந்து அவன் மாயாபாசத்தால் கட்டுண்டு உதயகிரியில் இருந்து குமாரக்கடவுள் ஏவியபாணத்தால் மீண்டு ஏழாம்நாள் சூரபன்மனுடன் யுத்தஞ்செய்து மூர்ச்சித்துக் குமாரக்கடவுளின் கருணையால் அவரையடைந்தவர். (கந்தபுராணம்)

வீரவாகுபாண்டியன் — சகந்நாதபாண்டியனுக்குக் குமாரன்.

வீரவாசி — திருதராட்டிரன் குமாரன்.

வீரவிரதன் — மது என்பவனுக்குச் சுமனசியிடத்து உதித்தகுமாரன். தேவி-போசை, குமாரர் மன்னியு, பிரமன்னியு.

வீரன் — 1. திரிமதி என்பான் குமாரன்.

2. காசிபருக்கு ஆயு என்பவனிடம் பிறந்தவன்.

3. சண்முகசேநாவீரன்.

4. இவன் ஒரு தமிழ்ப்புலவன். வல்லத்துக்கச்சியப்ப முதலியார் பல்லக்குச்சவாரி செய்து வந்தபோது முதலியாரைத் தன் செருப்புக்காலால் உதைத்தவன். இவ்வகை செய்த புலவற்கு முதலியார் பரிசு முதலிய அளிக்கப் பெற்றவன்.

5. குபன் குமாரன்; இவன்தேவி நந்தினி; குமாரன், விவிமசன்.

6. மதுரை வீரனுக்கு ஒரு பெயர்.

7. பாதுவாஜன் என்னும் பெயருள்ள அக்கினியின் புத்திரன்.

வீராக்கிரகண்ணியன் — அண்டங்களை வருத்திச் சிவமூர்த்தியால் விழுங்கப்பட்ட அசுரன்.

வீராசுரன் — சத்தியால் கொல்லப்பட்ட அசுரன்.

வீராட்டகாசன் — சிவமூர்த்தி பேதம்.

வீராதிபன் — மகேந்திரபுரியின் வாயிற்காவலன்.

வீராள் — நாலாமன்வந்தரத்துத் தேவசாதியர்.

வீரிணி — தட்சப்பிராஜாபதியின் பாரியை, பிரம்மாவின் பாதாங்குஷ்டத்தில் பிறந்தவள். இவளுக்கு அசிக்கினியென்பதுவேறு பெயர். இவள் (60) பெண்களைப் பெற்றாள். (பா-ஆதி.)

வீரியன் — இவன் கலிங்கநாட்டு வேதியன். ஒழுக்கம் குறைந்து மாமிசம்விற்றுச் சாந்தருணத்தில் சிவஸ்மரணையால் முத்தி பெற்றவன்.

வீரேசலிங்கம் — இது காசியிற் பிரதிட்டிக்கப்பட்ட சிவப்பிரதிட்டை. இதனருகில் பிரகடை, விகடையென்னும் தெய்வப் பிரதிட்டையுண்டு. இந்த வீரேசலிங்கத்தினை வசுபூர்ணன், அரம்பை, வேதசிரசு முனிவர், சங்கசூடன், கின்னரமாது, சயத்திரகன், வசுதத்தன் முதலியோர் பூசித்து இஷ்டசித்திபெற்றனர். (காசி-ம்.)

வீரை — 1. துச்சயன் மனைவி; மதுமயக்கத்தால் யானையின் முன்சென்று உயிர்விட்டவள். தாரை, இலக்குமி என்பவர்களின் சகோதரி. மறுபிறவியில் சுதமதியாகப் பிறந்தவள். (மணிமேகலை.)

2. சத்தியால் வக்ராசுரன் முதலியோரைக் கொல்லச் சிருட்டிக்கப்பட்ட துர்க்கை.

வீரைக்கவிராஜபண்டிதர் — இவர் சௌந்தர்யலகரி தமிழிற் பாடிய புலவர்.

வீரைவெளியனார் — ஒரு தமிழ்ப்புலவர். இவர் பாடியது புறம் (௩௨௦). (புற-நா.)

வீரைவெளியன்தித்தனார் — இவர் கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். இவரியற்பெயர் தித்தர். இவர் ஊர் வீரைவெளியாக இருக்கலாம். (அகம் ௧௮௮.)

வீர்யசந்திரன் — பலாசுவனுக்குக் குமாரன்.

வீர்யவதிசலை — பராசுவமுனிவரின்தேவி.

வீர்யஹாரி — சவயம்ஹாரியின் குமாரன். அநாசாரனிடம் சேர்ந்து பலத்தைப் போக்குபவன்.

வீழிணி — நாடக உறுப்பின் விகற்பம். இது, சூத்தன் தலைமகனுயத் தன் மடைந்தைக்கு விடாக்கண்டவாறு மன்னகரங் கண்டவாறும் சொல்லுதலாய் அங்கமொன்ருய் ஐவகைச் சந்தியுள்ளும் கடைச்சந்தியினையுமாறு சொல்லுவது. (வீரசோ.)

வீறுகோளணி — அஃதாவது, செல்வமிகுதியையேனும், புகழத்தக்க ஒரு சரித்திரத்தை புகழ்பொருளுக் கங்கமாகவேனுஞ் சொல்லுதலாம். இதனைவடநூலார் உதாத்தாலங்காரம் என்பர்.

வீற்றிருந்த பெருமங்கலம் — காலன் குடியிருந்த கொலைத் தொழிலையுடைய வேலோன் செம்மாந்திருந்த வெற்றியைச் சிறப்பித்துக்கூறும் புறத்துறை. (பு. வெ. பாடாண்.)

## வே

வேதகந்தன் — சுத்யவன் குமாரன்.

வேதகவன் — சுத்யவன் குமாரன்.

வேதச்சுருதம் — சிற்பநூலில் ஒன்று.

வேதபன் — சுத்தியுபுத்திரன். இவன் புத்திரன் செய்யாதி.

வேதராதன் — புரஞ்சயன் குமாரன்.

வேதருபன் — 1. புதனுக்குச் சுரபியிடம் உதித்த குமாரன். ஏகாதசருத்திரரில் ஒருவன்.

2. பிரியவிரதன் பேரன். மேதாதியின் குமாரன்.

வேதுலாசுவன் — சுவேதன்; கண்ணபிரானை விருந்துக்கு அழைத்த காலையில் இவனும் அவரை அழைத்தனன். கண்ணன் இருவர் மனதும் வருந்தாமல் ஒரேகாலத்தில் தம் வீட்டிலும், சுவேதன் வீட்டிலும் விருந்துண்ணக்கண்டு களித்தவன். சுவேதனுக்குச் சுருதேவன் எனவும் பெயர்.

வெக்காளிப்புலி — கள்ளர் சாதியில் ஒருவகை.

வெங்கண்ணன் — கடைச்சங்கமருவிய புலவன். (அகநானூறு.)

வெங்காயம் — 1. இது ஒருவகைப் புல்லை ஒத்த செடி; இது மத்ய ஆச்யாவிலிருந்து மற்ற நாடுகளுக்குக் கொண்டுபோகப் பட்டது. இதன் கிழங்கு இதன் இலையாகிய தாளினடியில் பெருக்கிறது. இது காரமும் நெடியுமுள்ளது. உடம்பைப்போஷிக்கும் வன்மையுடையது. விஷக்காற்றுக்களைப் போக்கும் குணமுடையது. இதன் பல சிறந்த குணங்களைக்கண்டே இந்தியர் தங்கள் நாட்டில் இதனைப் பயிர் செய்யத் தொடங்கினர்.

2. சம்பாரப்பயிரில் ஒன்று. இது இந்தியாவில் பயிரிடப்படுகிறது. ஒருவித நெடியும் காரமுமுள்ள கிழங்கு. இது ஆறு மாதத்திய பயிர். இது, பல நிறமாகவும், பெரிதும், சிறிதுமாக இருப்பது. இதன் தாள்களையும், பூக்களையும் கறிசமைத்துண்பர். இதன் விரையால் நாற்றுப் பயிரிட்டு நடுவார்கள்.

வெங்குரு — சீர்காழிக்கு ஓர் பெயர். தேவகுரு தான் தேவர்க்குக் குருவெனச் செருக்குக்கொண்டது நீங்கிப் பூசித்த தலம்.

வெஞ்சன் — ஒரு அசுரன்; சிவபூசைசெய்து முத்திபெற்றவன்.

வெட்சி—வெற்றியினையுடைய அரசன் ஏவவும் ஏவலின்றியும் போய் மாறுபாட்டினை

யுடைய வேற்றுப் புலத்துப் பசுநிரையைக் கைக்கொண்டதைக் கூறும் புறத்துறை. (பு வெ.)

**வேட்சியாவம்**—பொருந்தாதார் முனையிடத் துப் போதலைவிரும்பியதைக்கூறும் துறை.

**வேட்டியான்**—1. இவன் கிராமவேலை செய் யுந் தோட்டிப்பனையன். இவன் கிராமத் தைச் சுற்றிப்பார்த்து தீமை நேரிடாமல் காப்பவன். இவன் கிராம விஷயங்களை தமுக்கால் கிராமத்தாருக்கு அறிவிப்பன். இவன் கிராமத்தில் சாம் பிணங்களைத் தக னஞ் செய்பவனுமாவன். மழையில்லாக் காலத்துக் கொடும்பாவிகட்டி யிழுப்பவ னும் இவனே. இவன் இராஜதானி உத்தி யோகத்தனுல் கிராமவசூல்பணம் எவ்வ ளவாயினும் ஜில்லாபொக்கிஷத்தில் சேர்ப் பவன். (தர்ஸ்டன்.)

2. சண்டாளனுக்கு நிஷாதசாதி ஸ்திரீ யிடம் பிறந்தவன். சுடுகாடுகாப்பது தொழில்.

**வேட்டிவேர் விசிறி** — வெட்டிவேரினுற் செய்த விசிறி பைத்தியதோஷம், தேக எரிவு, தாகம், இவைகளை நீக்கும்; மனேற் சாகத்தை உண்டாக்கும்.

**வேட்டுக்கிளி**—வண்டினத்தது; சாகபக்ஷணி; இவை கூட்டங் கூட்டமாய்ப் பறந்து சென்று வயல்களை நாசஞ்செய்யும். இவற் றிற்குக் கால் வாள்போலிருக்கும். அவற் ருல் பின் கால்களைக் கொண்டு தட்டி யோசையிடும். இவை பல நிறமுடையன.

**வேண்கண்ணனுர்** — கடைச்சங்க மருவிய புலவர். (அக-நா.)

**வேண்கலம்** — செம்பு 80 பாகமும், வெள் ளீயம் 15 பாகமும், பித்தளை 5 பாகமும் சேர்ந்தால் வெண்கலமாகிறது. இது வெண் மை கலந்த மஞ்சணிறமுடையது. ஓசை யுடையது. இதனுல் மணிகள் போஜன பாத்திரங்கள் செய்யப்படுகின்றன. களிம் பேருதது. இதை அடித்து உருக்கள் செய்ய முடியாது.

**வேண்கலிப்பா**—கலித்தளை விரவி யீற்றடி முச்சீரான் முடிவது.

**வேண்காட்டுநங்கை** — சிறுத்தொண்டர் தேவி. மகாபதிவிரதை.

**வேண்குன்று**—முருகவேள் மலை. (சிலப்பதி)

**வேண்குஷ்டரோகம்** — இது விகாரமான வெளுப்பையுண்டாக்கும் ரோகம். இது வாதவெண்குஷ்டம், பித்தவெண்குஷ்டம், சிலேஷ்மவெண்குஷ்டம் எனப்பல. இவை மகிஷபல்லாதகி கிருத முதலியவற்ருல் வசமாம். (ஜீவ.)

**வேண்கோற்றன்** — இவர் கடைச்சங்கமரு விய புலவர்களில் ஒருவர். இவரது இயற் பெயர் கொற்றன். இப் பெயர்கொண்ட வேறு சிலர் இருத்தலின் வேற்றுமை நோக்கி வெண்கொற்றன் எனப்பட்டனர் போலும். (குறு-அசு)

**வேண்சாமரை** — 1. வெள்ளைச் சாமரத்தி ளுல் வியர்வை, ஆயாசம், மயக்கம், மூர்ச் சையால் வாராநின்ற ஞாபகமறதி, நாவ றட்சி, உஷ்ணம் ஆகிய இவை போம். லட் சுமிவிலாசமும் புணர்ச்சியிலிச்சையும் உண் டாக்கும் என்ப.

2. கவரிமானின் மயிரால் செய்யப்பட்டு காற்றை அசைக்கும் கருவி.

**வேண்டாழிசை** — மூன்றடியாய் முதலிரண் டடியு நாற்சீராயும், ஈற்றடியொன்றும் வெண்பாவைப்போலமுச்சீராயும், முடிந்து வேற்றுத்தளை விரவிவருவனவும், சிந்தியல் வெண்பா ஒரு பொருண்மேல் மூன்றடுக்கி வருவனவுமாம். (யாப்பு-இ.)

**வேண்டாளி** — இடைச்சங்கமருவிய தமிழ் நூல்.

**வேண்டுறை** — (ங) அடிமுதல் (எ) அடியீ ருகப் பின்னின்ற சில அடிகளிற் சில சீர் குறைந்துவரும். இவற்றுளெல்லா அடியும் ஓரோசையாய் வருதலன்றியும், முன் பின் சில அடிகள் ஓரோசையாயும், பின் சில அடிகள் மற்ருேரோசையாயும் வருதலு முண்டு.

**வேண்டேர்ச்சேழியன்** — இடைச்சங்க மிருத்திய பாண்டியன்.

**வேண்ணி**—தஞ்சாவூர்ச் சில்லாவைச்சேர்ந்த ஓர் ஊர். கரிகாற் பெருவளத்தான், சேர மான் பெருஞ்சேரலாதனை வென்றவூர். இதற்கு வெண்ணிக்கூற்றம்எனவும் பெயர். இது பொழுது கோவில்வெண்ணி என்று வழங்குகிறது.

**வேண்ணிக்குயத்தியார்** — சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பாடிப் பரிசுபெற்ற புலவர். (புற-நா.)

**வேண்ணெய்க்கூத்தஜீயர்** — வீரவல்லி கிருஷ்ணமாச்சாரியாருக்கு ஒரு பெயர். தேசிகரை யாச்ரயித்தவர்.

**வேண்ணெய்நல்லூர் சடையப்பமுதலியார்** —இவர் சைவவேளாளர்மரபில் பிறந்தவர்; சோழனிடத்து மந்திரியாக விருந்தவர். இவரையொருநாள் சோழன் தனது கொலு

விற்கு அழைத்தனன். இவர் அசந்தர்ப்பத்தால் போகாதிருந்தனர். இவர் செல்வச் செருக்கால் வாராதிருந்தனர் என்று எண்ணிச் சோழன் இவரது செல்வத்தையெல்லாம் கொள்ளைகொண்டனன். இவ்வகை பொருள்பறிகொடுத்திருக்கையில் சீனவர்த்தக னொருவன் இலையாயிரம் பொன் கொண்ட பட்டு ஒன்று கொண்டு அரசனிடம் அணுக, அரசன் தன்னிடம் விலைக்குத் தக்க பொருள் இலாமையால் முதலியாரிடம் அனுப்பினன். இப்பட்டினை முதலியார் வாங்கித் தரித்துக்கொண்டு அரசன்சமுகம் சென்றனர். அரசன் தான் அழைத்தகாலத்தில் வாராததற்குக் காரணமென்ன என்று வினவ, முதலியார் உடுத்திருந்த விலையுயர்ந்த பட்டினைக் கிழித்துத் தொடையிற் சிலந்தியெனக் காட்டி அரசனால் மதிப்படைந்தவர். முதலியாரிடம் பகைபாராட்டிய சோழன் முதலியார் வறுமைக்காலத்தில் இவரிடத்தில் பலவித்துவான்களை யேவினன். முதலியார் வந்த புலவர்களை எதிர்கொண்டு அவர்களுக்குத் தம்மனைவியார் மாங்கல்யத்தை விற்றுப் போஜனமுதலிய செய்வித்துப் பரிசளிக்க இல்லாமையால் வீட்டின் புறத்தில் இருந்த பாம்பின் புற்றில் கையிட்டனர். அதில் இருந்த நாகம் மகாகொடைக் கையெனக் கண்டு இரத்தின மளித்தது; இதனைப் புலவர்க்குத் தந்தனர். இதைக் கேள்வியுற்ற அரசன் மீண்டும் புற்றில் கைவிடக்கூற அவ்வகையிட்டுச் சீவரத்தினம்பெற்றவர். கம்பர் குமாரராகிய அமபிகாபதி திருமணத்தில் முதலியார் ஒரு புறத்தில் வேற்றூர்போல இருந்தனர். கம்பர்மனைவியார் கம்பரைநோக்கி எங்களண்ணலை இவ்விடம் இருத்தலாமோ என்றனர். கம்பர் விடையாக முதலியாரை நான் வைக்கத்தகுந்த இடத்தில் வைக்கப்போகிறேன் என்றுகூறி இராமாயணத்தில் புகழ்ந்து பாடப்பெற்றவர். இவர் தாம் வறுமையடைந்த காலத்து வந்தபுலவர்க்குக் கழனியில் விதைத்த நெல்லைப் பதப் படுத்தி உணவளித்தனர். இவர் சகோதரர் கண்ணப்பமுதலியார். இவர்க்குச் சராமமுதலியார் எனவும் இவரைப் புதுவைச்சடையன் எனவுங் கூறுப. இவர் மூவேந்தர்க்கும் அவரின் பரிசனங்களுக்கும் பரிசளித்துத் திரிகர்த்தப்பெயர் பெற்றவர். இவர் பலநாள் பலர்க்குப் பாலுஞ் சோறு மளித்தனர் எனவும், சிங்களமாண்ட பராசசிங்கப் பெருமான் எனும் அரசன் ஈழநாடு பஞ்சமுற்றபோது இவரைப் பாட இவர் ஆயிரங்கப்பலில் நெல் நிறைத்துக் கொடுபோய்க்கொடுத்து அவன்நாட்டைக் காத்தனர் எனவுங் கூறுப. இவர் சங்கர முதலியார் புதல்வர் எனவும் இச்சங்கர முதலியாருக்கு ஒட்டக்கூத்தர் உதவித் தொழில் புரிந்தவர் எனவுங் கூறுப. "புரந்தராதாரு புதுவைச் சடையன், இருந்த வியலூர் தெற்கு மேற்கு-பரந்தபொன்னி, யாற்றுநீரால்விளையுமப்பாற்கிழக்கரிசி, மாற்று நீரால்விளையுமாம்." "யாமாற்புகழவியற்கம் பநாடனிராமரொடும், பாமாலைசூட்டுங்குல முடையானைப்பாடிப் புரக்கக், கோமாறனிட்ட பொற்சிங்காதனம் பெற்றகொற்றவனைத், தேமாலையச்சந் தவிர்ப்பான்வெண்ணெய்த்திரிகர்த்தனையே." 'தண்ணார் கமலச் சதுமுகத் தோனையுந் தப்புவதோ, பண்ணு மணித்தலைக்கட் செவியானதுபாரினுள்ளே, கண்ணுகவாழும்வெண்ணெய்த் திரிகர்த்தன் கலைத்தமிழ்கேட், டெண்ணு முடியசைத்தா னுலகேழு மிறக்குமன்றே." "இரவு நண்பக லாகிலென் பகலிருளுவிர வாகிலென், இரவி யெண்டிசை மாறிலென்கட லேழுமேறிலென் வற்றிலென், மரபுதங்கிய முறைமைபேணிய மன்னர், போகிலெ னாகிலென் வளமையின்புறு சோழமண்டல வாழ்க்கைகாரண மாகவே, கருதுசெம்பொனி னம்பலத்திலோர் கடவுனின்று நடிக்குமே, காவிரித் திருநதியிலேயொரு கருணைமாமுகி றயிலுமே, தருவுயர்த்திடு புதுவையம்பதி தங்குமன்னிய சேகரன் சங்கரன்றரு சடையனென்றொரு தருமதேவதை வாழவே." என்பன போன்ற பாடல் பெற்றவர். எரொழுபது கம்பர் அரங்கேற்றிய காலத்து இவருடனிருந்து சேதிராயரென்னும் ஓர் வேளாளப் பிரபு கேட்டனர் என்ப. இவர் செல்வவள மிக்கவர் என்பதற்கு ஒரு நாள் வணிகன் ஒருவன் கடல்படு முத்துக்களைக்கொணர்ந்து அரசன்முன்வைத்து இவை அரசர்க்கே யுரியதென்று புகழா நிற்க, அக்கடல்படு முத்தினும் கழனிபடு முத்தமே ஒளியினும் உயர்வினும் மதிக்கத் தக்கதென்று அவரது கழனிக்கணிருந்த சில கரும்புகளை அரசன் சமுகத்தில் கொணர்ந்து அவற்றின்முத்துக்களை வியக்கும்படி எடுத்துக்காட்டினர். பின்னொரு

காள்சோழனுக்கென்று வணிகனொருவன் பலமணப்பொருள் கூடிய சாந்தம்கொணர, அதனைச் சோழன் கொளற்குப் பொருளிலாது அவனைத் திருப்ப, அவன் முதலியாரைக் காண இவர் அதனைக்கொண்டு இச்செல்வத்திற்குக் காரணம் கழனியேயென எண்ணி அதனைக் கழனிக்கண் கலக்கி அவ் வணிகனுக்கு வேண்டியன அளித்தனுப்பினர். மற்றொருநாள் புலவர் பலர் இவரைக் காணவருகையில் இவர் ஆங்குச் சிதறுண்டுகிடந்த நெற்களைப்பொறுக்குதல் கண்டு நெல்லைப்பொறுக்குபவர் நமக்கென்ன கொடுக்கப்போகிறார் என்று எண்ணியிருக்கையில், இவர்களது எண்ணத்தைக் குறிப்பாலுணர்ந்த முதலியார், அவர்களை எதிர்கொண்டு உபசரித்து இலையில் பொன்னமுது பொற்கறி படைக்கப் புலவர்கள் மயங்கக்கண்டு அவற்றைக் குப்பையில் எறியக் கட்டளையிட்டு, அவர்க்கு வேறு அன்னமிட்டு உண்பித்தனர். புலவர்கள் உண்டு வாய்பூசப் புறத்தில்வந்து பொற்குவியல் குப்பையிற்கண்டு ஒருவருக்கொருவர் வாதிடக்கண்டு எச்சிற்குப்பைக்கு என் வாதாடுகிறீர்களென்று அவர்களுக்கு வேண்டியபொருள் கொடுத்தனுப்பினர். இதனைப் "பொன்னுலமுதும் பொரிக்கறியுந்தான் கொணர்ந்து, நன்னுவலர்க்களித்த நாணயக்கை" என்பதாலறிக. இச்செல்வமிகுதியால் சோழனுக்கு மிகுந்தபொறாமை யிவர்பாலுண்டாயிற்று. இவர்தம்பி இணையார மார்பன் என்பர். சரராமமுதலியாரும் இவர்க்கு ஒரு சகோதரர். கம்பர் பாண்டியற்குச் சடையன்வாழ் வெண்ணெய் நல்லூரைப் புகழ்ந்துகூறிய போது அதனைக் கர்ணவந்த பாண்டியன் பொருட்டு அதனைப்பலபட அலங்கரித்தவர்.

**வெண்ணெய்மலை** — கொங்கு நாட்டில் உள்ள குமாரக்கடவுள் மலை.

**வெண்பா** — ஒரு சாராசிரியர், ஈற்றடியொழிந்து ஏனையடியெழுத்தொத்து வருவனவற்றை கட்டளைவெண்பா-எ-ம், ஒவ்வாது வருவனவற்றைக் கலம்பகவெண்பா-எ-ம், ஈற்றடியெழுத்தும், ஏனையடியெழுத்தும் ஒத்துவருவனவற்றைச் சமனடைவெண்பா-எ-ம், ஈற்றடி யெழுத்தினோடு ஏனையடியெழுத்துச் சிலவொத்தும் ஒவ்வாதும் வருவனவற்றைச் சமவியல் வெண்பா-எ-ம், ஈற்றடியெழுத்துமிக்கு ஏனையடியெழுத்துக் குறைந்து தம்முளொத்துவருவனவற்றை மயூரவியல் வெண்பா வெனவும் வழங்குவர். (யாப்பு-வி.)

**வெண்பாப்பாட்டியல்** — இதனை இயற்றியவர் வச்சணந்தி. இதில் செய்யுளுக்குவேண்டிய பொருத்தங்கள் பத்தும் தெள்ளிதின் விளங்கக் காணலாகும்.

**வெண்பாவிலக்கணம்** — ஈற்றடி முச்சீராய் மற்ற அடிகள் நாற்சீராய் காய்ச்சீரும் அகவற்சீரும், வெண்சீர்வெண்டளையும், இயற்சீர்வெண்டளையும் பெற்று மற்ற சீருந்தளையும் பெறாது காசு, பிறப்பு, நாள், மலர், எனும் வாய்பாட்டால் முடிவது. அவ்வெண்பா, குறள்வெண்பா, நேரிசைவெண்பா, இன்னிசைவெண்பா, சிந்தியல்வெண்பா, பஃறொடை வெண்பா என ஐந்து வகைப்படும். (யாப்பு-இல.)

**வெண்பூகன்** — கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவரியற்பெயர் பூகன். (குறு-அ௩.)

**வெண்பூதி** — இவர் கடைச்சங்க காலத்திருந்த பெண்கவிபோலும். இவர் வெண்ணீறணி தோற்றத்தா லிப்பெயர் பெற்றனர் போலும். (குறு-௬௭, ௧௭௪.)

**வெண்மணிப்பூதியார்** — இவர் கடைச்சங்க காலத்தவர். பொன்மணியார் எனக் குறுந்தொகையில் ஒரு பெண்பாலார் கூறப்பட்டனர். அவ்வாறிவரும் பெண்பாலராக இருக்கலாம். (குறு-உ௯௯.)

**வெண்வட்டியார்** — கடைச்சங்கமருவிய புலவர். (அகநானூறு.)

**வெதிரிகவனம்** — இதுவே பதிரிகாச்சிரமம். இது இமயமலைக்கு அருகிலுள்ள இலந்தவனம். இதில் பல இருடிகள் வசித்துப் புராணாதிகள் கேட்டனர். வியாசரும் இவ்விடம் இருந்தனர். இப்போது விஷ்ணுமூர்த்தியின் ஆலயம் இருக்கிறதாம்.

**வெந்தயம்** — சம்பாரப்பொருள்களில் ஒன்று. தைலசத்துடன் சிறுகசப்புள்ள ருசியுள்ளது. இந்தியாவில்பயிரிடப்படும் பொருள். இதனிலைகளையும் சமைத்துண்பர். அதனை வெந்தயக்கீரை யென்பர்.

**வெந்துண்டன்** — திருதராட்டிரன் குமாரன்.

**வெந்துவிதன்** — ஒரு வானரவீரன்; பலராமர் ஆயர்பாடியில் இருக்கையில் அவரிடம் யுத்தத்திற்குச் சென்று மாய்ந்தவன்.

**வெந்நீர் ஊற்றுக்கள்** — இவை பூமியிலுள்ள தீயால் உஷ்ணமடைந்து சுரந்தும், மேனோக்கிப் பாறைகளின் வழியாகவும் வரும்

ஊற்றுகளாம். இவை பெரும்பாலும் எரிமலையடுத்த பிரதேசங்களில் உண்டாகின்றன அவைகளிற் சில ஐரோப்பாகண்டத்தை அடுத்த ஐஸ்லண்ட்தீவிலுள்ள எக்ளா எரிமலை நாட்டில் உண்டு. இவ்வூற்றுக்கள், ஒன்றின் அகலம் (15) அடிகள், நீளம் (56) அடிகளாம். இதில்கொதிநீர் (200) அடிமேல் எழும்புகிறதாம். வடஅமெரிக்காவின் ஐக்யமாகாணத்துவயமிங் ஜில்லாவில் பல வெந்நீரூற்றுக்கள் இருக்கின்றன. இவையும் மேனோக்கிக் கிளம்பித் தம்பம்போனின்று பாய்கின்றன. அதில் மற்றொன்று மணிகள் தவறாது இரைந்து கிளம்புகிறதாம். அதனால் நேரந் தெரிந்து கொள்கின்றனராம். ஆஸ்திரேலியாவின் தென்கீழ்த்திசையிலுள்ள நியூசிலாண்டிலுள்ள ரோடேநவா எனும் தீவிலுள்ள வகாரிவாரிவா எனுமிடம் வைரோவா, கரீரு எனும் (2) வெந்நீரூற்றுக்கள் சிறந்தவை. பொகுதி எனும் மற்றொன்றும் உண்டு. இந்தியாவில் இமயமலையைச்சார்ந்த அளகநந்தையெனும் நதியின் உபநதியாகிய விஷ்ணுகங்காநதியின் வடகரையில் பத்ரிநாதர் கோவிலுக்கருகில் தபோகுண்டம் எனும் ஒரு நீரூற்று (30) அடி அகலமுள்ளதாக இருக்கிறது. அதனிடஞ் சுரக்கும் வெந்நீர் கந்தகநாற்றமுள்ளதாக இருக்கிறது.

வேபமாரன் — பிரியவிரதன் பேரன்; மேதாதியின் குமாரன்.

வேருகிடதர் — மானிடர்க்குப் பிதுர்க்கள்.

வேருவருநிலை — பகையைத்தடுக்கும் பூசவிடத்து அகன்ற மார்பகத்தை வில்லுமிழ்ந்த அம்புபிளப்ப நிலத்தைத் தீண்டாதபடி சிறந்த பெரிய மேம்பாட்டினை யுடையான் றனது நிலைமையைச் சொல்லிய புறத்துறை. (பு - வெ.)

வேலமர் — இவர் தெலுங்க நாட்டு உழவர் வகை. இந்தத் தெலுங்கரில் யார் வெலமரென்று தீர்மானிக்க முடியவில்லை யென்பர் Mr. H. A. ஸ்டுவர்ட். சிலர் தாங்கள் பலிஜரின் வகுப்பென்பர். பலிஜர் இவர்களைக் கூடைசாகலர் என்பர். இவர்கள் கம்மரின் வகை யென்பர். இவர்களிற் சிலர் தமிழ்நாட்டிலுண்டு.

வேளிப்படை நவிற்சியணி — சிலேடையான் மறைத்த பொருளைப் புலவன் வெளிப்படுத்தலாம். இது (விவர்த்தோக்தியலங்காரம) (குவல.)

வேளிமான் — ஒரு சிற்றரசன். பெருஞ்சித்திரனாரால் பாடல் பெற்றவன். இளவெளிமான் தமயன். இவனைப் பெருஞ்சித்திரனர் அடைய, அவர்க்குப் பொருள்தரக் கூறி அவன் யுயிர்விட அதில் பாதியே இளவெளிமான் தர, புலவர் பெற மறுத்து நீங்கினர். (புற - நா.)

வேளிவிருத்தம் — (௩) அடியினானும், நான்கடியினானும் முற்றுப்பெற்று அடிதோறும் இறுதியில் ஒரு சொல்லையே தனிச் சொல்லாகக்கொண்டு வருவது. (யாப்பு-இ.)

வேள்ளாடியனார் — இவர் கடைச்சங்கமருவிய புலவருள் ஒருவர். இவர் வினைமுற்றி நீங்கிய தலைவனை யெம்மை நினைத்திரோ வெனத் தலைவி வினவியதாக பாலை பாடியவர். (அக ௨௯)

வேள்ளாறு — சுவேதமுநிவர் சிவபூசை செய்ததால் பெருகிய நீர் பிரவகித்து நதி ஆயிற்று. இதற்கு வடமொழியில் சுவேத நதி என்று பெயர். (விருத்தாசலபுராணம்.)

வேள்ளி—1. தருமபுரவாதீனத்தைச் சேர்ந்த தமிழ்ப்புலவர். இவர் மகாகவி. தமதெனநூல் செய்யாது தாம் பாடிய செய்யுட்கள் பலவற்றைப் பல ஆன்றோர் கவிகளில் சேர்த்துத் தம் கவித்திற மறிவித்தவர்.

2. சுக்ரன்.

3. ஒரு காலத்துத் தேவர் வேண்டுகோளால் சிவபெருமான வீர்யத்தைப் பூமியில் விட்டனர். அதை அக்னி தாங்க அது வெள்ளிமலை ஆயிற்று. அதை அக்னி கங்கையில்விட கங்கை சரவனத்தில் விட்டனள். கங்கையினின்று வெளியான சிவ வீர்யம் பொன் ஆயிற்று. அக்கங்கையினின்று சிதறின மற்ற அழுக்கு ஈயம் தகர முதலவாயின. (இரா-பலா.)

4. இது வெண்ணிறமும் பள பளப்பும் பெற்றதாதலால் வெள்ளி யெனப்பட்டது. இது பூமியிலிருந்து வெட்டி யெடுக்கும் உலோகவகையுள் ஒன்று. உறுதியும் கனமும் உருகத்தக்கதுமாம். இது, பூமியில் கட்டிகளாகவும், பொடிகளாகவும், கந்தகம், ஈயம் முதலிய பொருள்களுடன் கலந்துமிருக்கும். இதைத் தூளாக்கி யுலையிலிட்டு கலப்பு நீக்கச் சுத்தமாம். இவ்வாறு கலப்பு நீங்கிய வெள்ளி சொக்கவெள்ளியாம். இது, பொன்னுக்கிரண்டாவது. சொக்கவெள்ளியுடன் செம்பு சேர்த்துருக்கின் மட்ட வெள்ளியாம். இதனால் பாத்திரங்கள், ஆபரணங்கள், நாணயங்கள்,

வஸ்திரங்களில் சேர்க்க சரிகைகள் செய்யப்படுகின்றன. இதில் திரு, களிம்பு, முதலிய உண்டாகா.

வெள்ளிடைமன்றம் — 1. காவிரிப்பூம் பட்டினத்துள்ள மன்றம். (சிலப்பதிகாரம்.)

2. மதுரைக்கண் சிவமூர்த்தி நடித்த நடனசபை.

3. காவிரிப்பூம் பட்டினத்துள்ள ஐந்து மன்றத்துள் ஒன்று. இது திருடர்களை வெளிப்படுத்துவது. (சிலப்பதிகாரம்.)

வெள்ளிநிலை — இடமொழிய மழையைத் தருமெனச்சொல்லி உயர்ந்த வெள்ளியினது நிலைமையைச் சொல்லியது. (பு. வெ. பாடாண்.)

வெள்ளிமலை—1. சிவமூர்த்தி எழுந்தருளியிருக்கும் திருக்கைலைக்கு ஒரு பெயர்.

2. கழலுவேகன்மலை.

வெள்ளியந்தின்னனுர் — இவர் நெய்தல் வளத்தைப் புனைந்து பாடியவர். கடலின் இருமீனைப் பிடித்து உணகருந் திறங்கூறுவது ஆராயத்தக்கது. இவர் பாடியது நற்றிணையில் ௧௦௧-ம் பாட்டு.

வெள்ளியம்பலத் தம்பிரான் — வெள்ளி பார்க்க. துறைமங்கலம் சிவப்பிரகாசர் இவரது சிடர்.

வெள்ளியம்பலத்தேரு — இது, தெற்குச் சித்திர வீதியிலுள்ள வெள்ளியம்பலத்தின் பக்கத்தே யுள்ளது. (திருவிளை.)

வெள்ளியம்பலம்— இது மதுரையில் சொக்கர்சந்நிதிக்குக் கீழ்ப்பாகத்தில் இருக்கிறது. இதன் வரலாற்று விதம் மதுரையில் சோமசுந்தரபாண்டியன் திருமணங்காணவந்த முனிவர் கூட்டங்களில் பதஞ்சலி வியாக்கிரபாதர் இருவரும் திருமண முடிந்தவுடனே எழுந்து 'நாங்கள் சிதம்பரத்தில் நடனதரிசனங் காணுது உணவருந்தோ' மாகையால் அவ்விடம்போக விடைதருதல் வேண்டும் என வேண்டினர். சிவமூர்த்தி இவ்விருவருக்கும் மதுரையின் பெருமைகளைக்கூறி, இவ்விருவர் பொருட்டு மற்றவரும் தரிசிக்க அவ்விடம் இரசிதசபை யென்னும் வெள்ளியம்பலத்தில் நடனதரிசனம் தந்தருளினர்.

வெள்ளியம் பெருமலை — வித்தியாதரர்களுடைய மலை. (சிலப்பதிகாரம்).

வெள்ளிவீதியார் — 1. இவர் பெண்பாலார். மதுரையில் வெள்ளியம்பலத் தெருவிலிருந்ததனுல் இப்பெயர் பெற்றூர்போலும். இயற்பெயர் புலப்படவில்லை. இவர் எக்காரணத்தாலோ தமது கணவனை விட்டுப் பிரிந்துதனித்துவைகியவர். காமமேலீட்டினுல் தமது மாமைக்கவினைப் பசலையுண்டு அழிக்கக் கடவதென்று சினந்து கூறுவாராயினர். சினந்து கூறியும் அன்றே பிற்பட்டுத் தனியே யிருத்தலாற்ருது காமமேலீட்டினுல் பலவாறு புலம்பி 'என்காமம் பெரிதாயிராநின்றது; இதனைக் களைபவராகிய காதலரும் நீத்தகன்றன' ரெனவும் 'திங்கள் முதலாயவை வருத்தவந்தன' வெனவும் கூறி வருந்துவாராயினர். நாரை விடு தூது பாடி புலம்பியுள்ளார். மற்றும் ஆசை தாங்காது இரவினிலையுந், தன்னிலையுங் கூறி வருந்தினர். இனித் தேடிச்சென்ருல் அகப்படாரோ இவ்வாறு தேடினுலென்னென்று கூறிவருந்தினர். அங்ஙனமே புறப்பட்டுச் சிறிது தூரம் நோக்கிச்சென்று ஆற்ருராய்ப்பாடி வருந்துவாராயினர். அக்காலத்து இவர்பால் நட்புடைய சிலர் வந்து தேற்றத் தேறி 'நும்மாற் சிறிது தணிந்தோம்; இக் காமநோய் பொருத்தற் கொல்வாது கண்டீர்' என்று கூறினர். இந்நோய் சிறிது குறைந்து நாண்மீதூர்ந்தளது; நோ தலை எடுப்பின் நாணம் கைகில்லாது கிழியுமென அவர் கேட்பக்கூறியுள்ளார். மாலைக் காலத்து புலம்பியழுதுள்ளார். என் காதலர் சுரநெறியே சென்றகன்றனரே; அலர் பெரிதாயிராநின்றது ஆதிமந்திபோலவருந்துவேனே வென்று புலம்புவராயினர். கனவிடைக் காதலனைக்கண்டு நனவாகக்கொண்டு அவனைக் கூட்டுவித்தாலன்றி யான் உயிர் வாழலேனென் றிரங்கினர். மற்றொருகாலந் தோழியை நோக்கி நம்மூர் சபை இத்தன்மையா யிருத்தலானே பிறந்தோரை ஆங்கு புணர்ப்பிக்க வல்ல மூதறிவாள ருளரோ வென்று வினவினர். உளரேல் தமது காதலனைக்கூட்டுவிக்க வேண்டுமென்பது கருத்து. அப்பால் தமது கணவனைச் சென்று கண்டு வருந்தி நம்மைப் பெற்றே மில்லையாயின் எம்முயிர் விடுவதாக வென்று நொந்து கூறுவாராயினர். இவ்வாறு இவர் கேள்வனைப் பிரிந்து வருந்தி ஆங்குச் சென்ருகிலும் அவனைக் காண்பேமென்று புறப்பட்டுப் போனதனை "வெள்ளி வீதியைப்போல நன்றுஞ் செலவயர்ந்திசிறல் யானே" என ஔவையார் எடுத்துக் கூறியதனுலும் அறிக. இவ் வெள்ளி வீதியார் கூறிய பாடலினைத்தினையுந் தொகைப்பாற்படுத்தி எட்டுத்தொகைக்

கட் பின்னுளோர் சேர்த்தார்களென்றறிக. இவர் பாடியனவாக நற்றிணையில் மூன்று (௭0, ௩௩௫, ௩௪௮.) பாடல்களும், குறுந்தொகையில் எட்டும், அகத்தில் இரண்டும், திருவள்ளுவமாலையில் ஒன்றுமாகப் பதினலு பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2. கடைச்சங்கப்புலவருள் அருந்தமிழறிந்த அங்கனை-சங்கமருவியவர். இவர் ஔவைக்கு முற்பட்டவர். "இவர் கன்றுமுண்ணாது" எனும் செய்யுளில் இவர் தம் தலைவனைப் பிரிவு ஆற்றாது அவனுடனுறை வேட்கமிகுந்து அவன் சென்றுழிச் செல்லவேண்டிக் காடும் பிறவும் கடந்து சென்றனர் என்பதை "ஒக்குமலைச்சிலம்பின்" எனும் அகப்பாட்டில் ஔவையார் கூறியிருப்பதாலறிக. இதனுனிவர் ஔவையார்க்கு முற்பட்டவராக இருத்தல் வேண்டும். இவ்வெள்ளிவீதியார் பாடல்கள் பெரும்பாலும் இவர் தம்தலைவனைப்பிரிந்த காலத்துப் பாடப்பட்டனவாம். இவர் திதியன் என்புவன் குறுக்கையென்னும் ஊர்ப்புறத்து அன்னியொடு பொருது அவ்வன்னியின் காவன்மரமாகிய புன்னையினை வேரோடு தடிந்த கதையினையும், காதலற்கெடுத்த ஆதிமந்தி கதையினையும், கடலோட்டிய வெல்கெழுகுட்டுவன் கதையினையும் கூறியுள்ளார். (திருவள்ளுவமாலை.) (அக. நா.)

வெள்ளூர்க்காப்பியன்—ஒருதமிழ்ப்புலவன்.

வெள்ளூர்கிழார் மகனுர் வெண்பூதியார் — இவர் கடைச்சங்க மருவிய புலவர்களில் ஒருவர். இவர் மிக்க வெண்ணீறணிந்த காரணத்தால் இப்பெயரடைந்திருக்கலாம். இவர் தந்தையார் வெள்ளூர்கிழார். ஊர் வெள்ளூர். (குறு. ௨௧௯.)

வெள்ளேருக்கிலையார்.— வேள் எவ்வியைப் பாடிய தமிழ்ப்புலவர். (புற நா.)

வெள்ளேசுவார்-வணிகமல்லையரைக்காண்க.

வெள்ளைக் கண்ணத்தனர் — கடைச்சங்க மருவிய புலவர். (அகநானூறு.)

வெள்ளைக்குடிநாகனர் — 1. இவர் சோழநாட்டில் வெள்ளைக்குடியின்கணிருந்த நாகனெனப்படுவர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன காலத்தினர். அக்காலத்து இவருக்குள்ள நிலங்களுக்கு வரிசெலுத்த முடியாதவராய்த் தம்மீது நிலுவை நின்றதற் கஞ்சி அரசனைச் (செவியறிவுறூஉ) என்னும் விஷயத்தை அகவலில் அமைத்துப் பாடி அவனது அவைக்களத்துச்சென்று அதனைப் படித்துப் பொருள் கூறித் தாம் செலுத்தவேண்டிய வரியைத் தள்ளிவிடும்படி செய்துகொண்டார். புறம் ௩௫. இவர் பாடலிலே சந்திரனை நோக்கித் தலைவி மூறிந்து கூறுவது வியப்புடையதாகும். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாடல்களும், புறத்தில் ஒன்றுமாக மூன்று பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2. இவர் ஒரு தமிழ்ப் புலவர். சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிப் பழஞ்செய்கடன் வீடுகொண்டவர். (புற. நா.)

வெள்ளைச்சி — மதுரைவீரனைக் காண்க.

வெள்ளைப்பூண்டு — இது சம்பாரப் பொருள்களிலொன்று; நெடியுள்ளதும் காரமுள்ளதுமானது. இது உருவத்தில் வெள்ளையாய்ப் பலபிரிவுள்ளதாக இருக்கும். இப்பிரிவுள்ளபாகத்தை நட்டு இதனைப் பயிரிடுவர். இது தைலசத்துள்ள பொருள்.

வெறிபாடிய காமக்கண்ணியார் — இவர் பெண்பாலார்; காமக்கண்ணி (காமாக்ஷி) யாரென்றும் இயற்பெயருடையவர். களவின் கண்ணே தலைவன் பிரிதலானே தலைவி வருந்தி வேறுபடலும் அதனை யறியாத அன்னை கட்டினுங் கிழங்கினும், குறிபார்த்து இவள் முருகனல் அணங்கப்பட்டாளென்று குறியாலறிந்து வேலனை (பூசாரியை) யழைத்து அம்முருகனுக்குப் பூசை செய்து கள்ளை நிவேதித்து யாட்டைப் பலி கொடுத்து தன்மகளுக்குற்ற தீது நீங்கும்படி வேண்டிக்கொள்வது வெறியெனப்படும். இதனை விரிவாக அகத்தில் பாடியதனல் இவர் வெறிபாடிய காமக்கண்ணியாரெனப்பட்டார். அகம்-௨௨. புறப்பொருளிற் செருவிடை வீழ்தற்றுறையும், குதிரை மறமும் பாடியுள்ளார். புறம் - ௨௭௧, ௩0௨. இவர் நற்றிணையில் பாடிய பாட்டிலும் (௨௬௮) வெறியயர் வெங்களத்து வேலனை வினவுகமென்றது வெறிபாடிய பகுதியேயாம். இவர் பாடியனவாக நற்றிணையில் ஒன்றும, அகத்தில் இரண்டும், புறத்தில் இரண்டுமாக ஐந்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

2. ஒரு புராதன தமிழ்க்கவிஞர்; கடைச்சங்கமருவியவர். (அகநானூறு.) (புற-நா.)

வெறியாட்டு — அழகிய ஆபரணத்தையுடையார் நினைத்த தொழில்முடிய முருக பூசை பண்ணுமவனேடு வள்ளிக்கூத்தை ஆடி

யது. மணநாறு மாலையுடையாள் தலைவனது அருளைக்கருதி அவ்விடத்து நிலைமையைத் தாயறியாதபடி வேங்கைமரத்தாற் பொலிந்த மலையையுடைய முருகற்கு வெறிக்கூத்தாடியது. (பு. வெ. பெருந்திணை.)

வெற்றி — (அ) பகைநிரைகவர்தல், கவர்ந்ததை மீட்டல், பகைமேற் செல்லல், வரும்பகை முன் எதிரூன்றல், தன்னரண்காத்தல், பகையரண்வளைத்தல், பொருதல், போர்வெல்லல். இவற்றிற்கு மாலையாவன: வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை.

வெற்றிலை — 1. வெற்றிலை தின்னும்போது சுண்ணந் தடவிய பின், காம்பு, நுனி, நீண்டநரம்பு, பின்புறத்தோல் இவைகளை நீக்கித் தின்னவேண்டியது.

2. இந்தியாவில் பலரால் உபயோகித்துவரும் காரமுள்ள மெல்லிலை. இதனை முதலில் கொணர்ந்தவன் நாககன்னிகை மணந்தசோழன். இது, இளங்கால், முதுகால், கம்மாறு, கௌளிபத்ரம், வெள்ளைவெற்றிலை முதலாகப் பலவகைப்படும்.

3. இந்துக்களால் வாய்க்கு ஆரோக்யம் பிறக்க உண்டபின் மெல்லும் காரமுள்ள இலை. இது, கொடிவகைகளின் பயிர். இக்கொடியை மேடான இடத்தில் வளர்ந்த அகத்திக்காலி னடியில் கொடிபதித்து கிடங்கிலுள்ள நீரை நீத்தியாலிறைத்து கொடிகள் வளர, காலில்கட்டி உயர எற்றிவளர்ப்பர். இது 3, 4 வருஷம் பலன்தரும். இதில் மாசிக்கால், இளங்கால், முதுகால் எனப் பலவகை. வெற்றிலையில் கம்மாறு வெற்றிலை வெள்ளைவெற்றிலை சல்விவெற்றிலை இளங்கால்வெற்றிலை முதுகால்வெற்றிலை ரவேசிவெற்றிலை எனப் பலவுண்டு.

வெற்றிலைத்தோட்டக்கார் செயல் — தூக்குவாய், கிடங்கு, கங்கு, மாசிக்கால், இளங்கால், முதுகால், (தூக்குவாய் வேலியில் நுழையும் வழி) (கங்கு-நீர் ஓடாது காக்கும் கரை) சேர்வை கட்டுதல், கொடிகட்டுதல், இருப்புரகத்தால் வெற்றிலைகிள்ளல்.

வெற்றிவேற்செழியன்—1. பாண்டிநாட்டரசன். கோவலன் காலத்துப் பாண்டிநாட்டை யாண்டவன். இவன் கண்ணகிக்கு ஆயிரம் பொற்கொல்லரைப் பலியிட்டுத் தன்னாட்டில் இருந்த துன்பத்தைப் போக்கிக்கொண்டவன். இவனுக்கு இளஞ்செழியன் எனவும் பெயர். (சிலப்பதிகாரம்.)

2. இவன் கொற்கையாளி. இவன்சேரன் செங்குட்டுவன் காலத்திருந்த பாண்டிநாட்டரசர்களி லொருவன். அரசு கட்டிலிற் றுஞ்சிய நெடுஞ்செழியனுக்குப் பின் பட்டமடைந்தவன். இவன் நன்மாறன் என வேறு பெயர் பூண்டான். இவன் மகன் நெடுஞ்செழியன். இவன் பிற்காலத்துச் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் எனப்பட்டான்.

வென்வேற்கிள்ளி — ஒரு சோழன். (மணிமேகலை.)

வென்றிப்பெருந்திணை — கீழ்வருபவற்றின் பொருள் வெளிப்படை: 1. கொடுப்போரேத்திக்கொடாஅர்ப் பழித்தல், 2. வாணிகவென்றி, 2. மல்வென்றி, 4. உழவன் வென்றி, 5 ஏறுகொள்வென்றி, 6. கோழிவென்றி, 7. தகர்வென்றி, 8. யானைவென்றி, 9. பூழ்வென்றி, 10. சிவல்வென்றி, 11. கிளிவென்றி, 12. பூவைவென்றி, 13. குதிரைவென்றி, 14. தேர்வென்றி, 15. யாழ்வென்றி, 16. சூதுவென்றி, 17. ஆடல்வென்றி, 18. பாடல்வென்றி, 19. பிடிவென்றி.

வென்றிமாலைக்கவிராயர்—இவரூர் பாண்டிநாட்டுத் திருச்செந்தூர். வேதியர், சைவர், திருச்செந்தூர் புராணஞ்செய்தவர்.

## வே

வேகதரிசி — திருதராட்டிரன் புத்திரன்.

வேகரதன் — 1. அமிர்தபுரத்து இராசகுமாரன்.

2. விஜயகூடத்து அரசன். (சூளா)

வேகவதி — 1. தென்மதுரையிற்பாயும் நதி.

2. காஞ்சியிலும் இப் பெயர்கொண்ட நதி ஒன்று உண்டு.

3. யோகவதியைக் காண்க.

வேகவந்தன் — ஒரு பாரதவீரன்.

வேகவான் — 1. பெந்துமான் குமாரன். சூர்யவம்சத்தவன்.

2. தநுபுத்திரனாகிய ஒரு அசுரன். (பாரதி.)

வேங்கடநாதாசாரியர் — வேதாந்ததேசிகருக்குப் பின்னைத்திருநாமம்.

வேங்கடம்—தமிழ்நாட்டிற்கு வடக்கின்கண் எல்லையாகவுள்ள மலை. இது குமாரக்கடவுளை யுவகம் வழிபட்டுச் சித்தியடைந்த மலையென்றும், நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகந்தவஞ்செய்து வீடு

பெற்ற மலையென்றுங் கூறுவர். திருவேங்கடங் காண்க.

வேங்கைமார்பன் — உக்கிரப் பெருவழுதியால் வெல்லப்பட்டவன். இவன் கானப்பேரெயிலின் தலைவன். இவன் காலத்துப் புலவர் ஐயூர் மூலங்கிழார். (புற-நா.)

வேசாலி — தருசகனுடைய பகையரசருள் ஒருவன். (பெ.கதை.)

வேடர் — இவர் முற்காலத்தரசருக்கு வேட்டைத் தொழிலில் உதவிபுரிந்தவர்கள். இவர்கள் தங்களை வால்மீகி ருஷியின் வம்சத்தவர் எனவும் கூறுவர். இவர்கள் இந்தியாவின் பழைய குடிகளாக எண்ணப்பட்டவர்கள். இவர்கள் தமிழ்நாட்டில் உள்ளவர்கள். இவர்களைப்போல் வடநாட்டில் பேடர் என்று ஒரு வகுப்பாரும் உண்டு. இவர்களுக்குத் தொழில் வேட்டையாடல். சில இடங்களில் இப்பெயர் இருளருக்கும் வழங்குகிறது. இவர்கள் தங்களைக் கண்ணப்ப நாயனுர் வம்சம் என்பர். வேடருக்குப் பட்டம் நாய்க்கன். (தர்ஸ்டன்.)

வேடலப்பை — முதலியாண்டான் வம்சத்தவர். மணவாளமாமுனிகளிடத்து வாதிடவந்த கிருஷ்ணுநந்தனை மீளும்படி செய்தவர். இவர் பிறப்பிடம் வேடல்.

வேடன் — வைசியன். அரசகன்னிகையைப் புணரப் பிறந்தவன். வேடன் ஒருவன் தம் மாசன் தனது மனைவியைப் புணரவாத் திருப்பெருந்துறையி லடைக்கலம் புகுந்து இறைவன் வாள்கொடுக்கத் தன் பகை வென்ருன் என்பது திருப்பெருந்துறைப் புராணம். இறைவன் இவ்வடிவாய் எழுந்தருளி மகாபாதகந் தீர்த்தனர். அருச்சுநன் பொருட்டு இவ்வுருத்தாங்கினர். இச்சாதியில் வள்ளிநாய்ச்சியார் திரு அவதரித்தனள். குகன் இச்சாதி யென்பர்.

வேட்கைழந்துறுதல் — கையிடத்தே விளங்கும் வேலினையுடையவன் செலுத்த வேட்கையைச் செறிந்த தொடியாற் சிறந்த தோளினையுடையாள் தலைவன் முன்னே சொல்லிய துறை. (பு-வெ. பெருந்திணை.)

வேட்டக்கண்ணனன் — இவர் கடைச்சங்கமருவிய புலவர்களில் ஒருவர். இவரது இயற்பெயர் கண்ணன். இவர் தம் பாடலில் குறும்பூழ் காயமாக எனக் கூறுதலில் இவர் பூவேட்டமாடுந் தொழிலனராக இருத்தல் கூடும். (குறு-நஅக)

வேட்டநந்தை சிட்டன் மகருஷிகோத்ரன் — திருவேங்கடத்தா னருளால் கண்ணிழந்த ஒருவனுக்குக் கண்கொடுத்த வைசியன்.

வேட்டநந்தைமகாருஷிகோத்ரன் — ஒரு புலவனுக்கு யானைக்கன்றும் வளநாடும் அரசனிடம் வாங்கித்தந்து பாடல்பெற்ற வைசியன்.

வேட்டூர்சிங்காசாரியார் — மணவாளமாமுனிகளின் திருவடி சம்பந்தி.

வேட்டைச்சிவங்கி — இது வேட்டையாடுவதில் மிகத்திறமையுள்ளது. ஆதலா லிதற்கு இப் பெய ருண்டாயிற்று. இது உருவத்தில் சிறுத்தையையொத்தது. இதற்குக் கழுத்தில் மயிரடர்ந்து தாடிபோலிருக்கும். இதற்கு பூனை, புலி இவற்றிற்குள்ள நகங்களைப்போல் நீட்டவும் சுருக்கவுமுள்ள நகங்கள் கிடையா. இவைகளை வேட்டைநாய்களுக்குப் பதிலாகப் பழக்கினல் பழகி வேட்டைமேற் செல்லும். இதன் தேகத்திலும் புள்ளிகளுண்டு.

வேட்டையாடுதலால் —கெட்டவன் பாண்டு. (சுக். நீ.)

வேணன் — வைதேகனுக்கு அம்பட்டக் கன்னிகையிடம் பிறந்தவன். தாளம் முதலிய வாத்யம் வாசிப்பது தொழில். (மநு.)

வேணுடு — திருவாங்கூர் பக்கத்திலுள்ளது.

வேணுட்டடிகள்—இவர் திருவாங்கூர் எனப்படும் வேணுட்டிருந்து சிவமூர்த்தியைப் பாடி முத்தியடைந்தவராக இருக்கலாம்.

வேணு — 1. ஒரு இந்திரன். இவன் ஒருகாலத்துக் கசமுகனுல் செயிக்கப்பட்டான்.

2. சூர்யகுலத்தரசன். கொடுங்கோல் செலுத்திக் குட்டமுதலிய நோய்கொண்டு புண்யதீர்த்த ஸ்நானத்தால் நலம் அடைந்தவன்.

வேணுஹயன் — சத்ருசித் குமாரன்.

வேண்டலணி — குற்றத்தால் குணமுண்டாதலைக்கண்டு அக்குற்றத்தைப் பிரார்த்தித்தலாம். இதனை அநுக்ஞயாலங்கார மென்பர் வடநூலார். (குவல.)

வேண்மாள்—செங்குட்டுவன் மனைவி. இவள் கண்ணகியைப் பிரதிஷ்டித்துப் பூசிக்க வேண்டுமென்று தன் கணவனை வேண்டிக் கொண்டவள்.

வேதகர்ப்பை — துர்க்கை.

வேதகிரி முதலியார் — இவர் தொண்டைமண்டலத்துப் பொன்விளைந்த களத்தூரினர். இராமாநுச கவிராயரிடம் வாசித்தவர். இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றவர்

பல தமிழ் நூல்களைப் பரிசோதித்தும் உரையியற்றியும் அச்சிடுவித்தவர்.

வேதசதாவிந்து — சாமந்தநகரில் இருந்த வேதியன். தான் வறுமையால் வைத்திருந்த எருதை விற்கப்போயினன். எருது விலைப்படாதுபோக அதனைக் கோயிற்றிருமுவிற்கட்டினன். அதனால் கோயில் எவலர் சிலைகட்டியிழுத்தனர். அதனால் நற்கதியடைந்தவன்.

வேதசருமன் — (வேதசன்மா) ஒருவேதியர். சிவபக்திமான். இவர் திருநெல்வேலியில் தமது சக்தியளவு நெல்கொண்டு மூங்கில் வநாதருக்கு நிவேதித்துச் சிவனடியவர்களுக்கு அன்னம் படைத்துவருவர். ஒருநாள் நெல் இல்லாதுபோக ஊர் தோறுஞ் சென்று பிக்ஷைசெய்து அகப்பட்ட நெற்கொண்டு அதனைச் சந்நிதிக்குமுன் உலரவிட்டு ஸ்நானத்திற்குச் சென்று அவ்விடத்தில் சிவமூர்த்தியையெண்ணி 'மகாதேவா! மழையிலாமையால் அடியவர் பூசைக்கும் ௵வரீர் பூசைக்கும் முட்டுப்பாடு வருமெனத் தோணறுகின்றதே; ஆதலால் உலகஞ் செழிக்க மழைபொழிய வேண்டு' மெனச் சங்கற்பித்து ஸ்நானஞ்செய்தனர். இவர் ஸ்நானஞ்செய்து வெளியில் வருமுன் பெருமழை வருஷித்து வெள்ளங்கொண்டது. வேதியர் சிவபூசை முடித்துக் கரையேறிச் சிவநிவேதனத்தின் பொருட்டுச் சந்நிதியில் உலரவிட்ட நெல் எவ்வாறாயிற்றோ வேறு நெல்கிடையாதே யென வருந்தி மழை வெள்ளங்கடந்து சந்நிதானத்தில் வந்து பார்த்தனர். உலரவிட்ட நெல் மாத்திரம் நனையாது வெயிலில் காய்ந்திருக்கவும், அவ்விடத்தைச்சுற்றி வெள்ளம் வேலிபோலிருக்கவும் கண்டுகளித்து இவ்வற்புதத்தை அரசனுக்கு அறிவித்தனர். அரசனும் மற்றவரும் வந்துபார்த்து நெல்லுக்கு வேலியிட்டபடியால் நெல்வேலிநாதர் எனத் திருநாமம் இட்டுச் சென்றனர். வேதியர் நெல்லினைச் சிவநிவேதனஞ் செய்து களித்தனர்.

வேதசன்மா—1. ஒருவேதியன். முனிவரை வருத்தியதால் அரக்கவுருவடைந்தவன்.

2. தருமஞ்ஞனைக்காண்க.

வேதசிரசுமுனிவர்—1. காசியில் வீரேசலிங்கம் பூசித்து இஷ்டசித்தி பெற்றவர்.

2. ஐந்தாமன்வந்தரத்து இருடி.

3. கிரிசாசுவனுக்குத் தக்ஷிணையிடம் உதித்த குமாரன்.

வேதசிரன்—1. பிராமண குமாரன். உசேநஸ் தந்தை.

2. ஒரு ரிஷி; இரிபு என்னும் விஷ்ணுவின் அம்சாவதாரமூர்த்திக்குத் தந்தை. பாரி தவதிதை.

வேதசுருதர் — மூன்று மன்வந்தரத்துத் தேவர்கள்.

வேததரிசன்—ஒரு இருடி; பத்தியன் மாணுக்கன்.

வேததருமர் — பலிலவமுனிவர் குமாரர். இவர் மாணுக்கர் தீபகர். இவர் தம் மாணுக்கரை நோக்கித் தமக்கு இருபத்தொரு வருஷம் எவல்செய்யக் கேட்டனர். மாணுக்கராகிய தீபகர் தாம் இறக்கும்வரை அவ்வகை செய்ய உடன்பட்டனர். ஆசிரியர் குட்டநோயடைந்து தமது மாணுக்கரைநோக்கித் தம்மைக் காசிக்குக் கொண்டுபோகக் கட்டளையிட்டனர். மாணுக்கர் ஆசிரியரைக் காசிக்குத் தூக்கிச்சென்று வசித்திருக்கையில், ஆசிரியர் பல கொடுமைகள் செய்யச் சலிக்காது இருந்தனர். சிவமூர்த்தி குருபணிவிடைக்குக் களித்துத் தீபகர் முன் தரிசனந் தந்து வேண்டியன கேளெனப், பணிவிடை யுறுதியாகப் பெற்றுக் காசிவாசத்தால் ஆசிரியர் சுகமடையக் களித்தனர். தீபகர் செய்கைகண்ட ஆசிரியர், மாணுக்கரை யணைத்து உண்மை உபதேசித்தனர். (காசிரகசியம்)

வேதநாதன் — ஒருவேதியன். பொருளைத் திருடிக் குரங்கானவன்.

வேதநிதி — ஒரு தூர்த்தவேதியன். இவன் தந்தைக்கு அரசன் கொடுத்த மோதிரத்தைத் தாயறியாமல் திருடிச்சென்று வேசிக்குக் கொடுத்தனன். அதனைப்பெற்ற வேசி யதனை யணிந்து தன்முன் நடிக்கக் கண்ட அரசன், அதனை யவளிடமிருந்து வாங்கித் தான் முன்கொடுத்த மோதிரத்தைப்பார்த்து 'மீண்டும் கொடுத்துவிடுகிறேன் கொண்டுவருக'வென, வேதியர் தன் மனைவியிடம் கொடுத்ததை வினவ, மனைவி அதைக் காணுது கணவனிடங்கூற, அரசனிடம் வேதியர்காணுது போயினதை யறிவித்தனர். பின் அரசன் வேதியர்க்கு நடந்ததைக் கூறினன். வேதியர் தன் மகனை யூரைவிட் டகற்ற, அவன் வேசையிடம் சென்று அவளாலும் தூரப்புண்டு பசியாற்றுது அன்று சிவராத்திரியாதலால் கோயிற்குச்செல்வோர் நிவேதனத்துடன் போதல்கண்டு, ஆண்டு களவாடிப் புசிக்க

வெண்ணித் தன்வேட்டியிற் சிறிதுகிழித்து வர்த்திசெய்து தைலத்திற்றோய்த்து இருளைப்போக்கி யங்கிருந்த நிவேதனத்திற் சிறிது திருடிக்கொண்டு திரும்புகையில், துயின்ற காவற்காரரை யறியாது மிதித்தோடி அவரால் கள்வனென்று கொல்லப்பட்டு இறந்து சிவநிசியில் விளக்கொளி செய்த புண்ணியத்தால் களிங்கதேச மன்னவனாய் அநேக சிவதர்மங்கள் செய்தவன். (சிவமகாபுராணம்.)

**வேதநீயம்** — (உ) ஸாதவேதநீயம், அஸாதவேதநீயம். (சி-ப)

**வேதப்பிரியன்** — அவந்திநகரத்திலிருந்த வேதியன். சிவபூஜாதுரந்தரன். இவன் குமாரர் மேதன், சுவிரதன், தருமவாதி.

**வேதமித்திரன்** — 1 மாண்டூகேயர் மாணாக்கர். சௌபரிக்குக் குரு.

2. சீமந்தினியைக்காண்க.

**வேதம்**—1. இது பரதகண்டத்து ஆஸ்திகர்களால் கொண்டாடப்படும் நூல் இது இருக்கு, எஜஸ், சாமம், அதர்வணம் என்று நான்கு பிரிவையுடையது. இது ஞானகாண்ட, கர்மகாண்ட வகையால் ஈச்வரனையும், அவனை உபாசிக்கும் யஞ்ஞாதிகளையும் கூறும். இதற்கு இராவணன் சந்தம் முதலியன வகுத்தான். இது சிக்ஷை, வியாகரணம், நிருத்தம், சந்தஸ், சோதிஷம், கல்பம் என ஆறு அங்கங்களை யுடையது. இதனைச் சோமுகம் என்னும் அசுரன் திருடிச்செல்லப் பின் விஷ்ணுமூர்த்தி அன்னஉருவமாய்ப் பிரமனுக்கு உபதேசித்தனர். இது ஒருமுறை முனிவர் உருவாய்க் கண்ணனைநோக்கி யார் வணக்கத்தக்கவர் என்றது. கண்ணன் சிவமூர்த்தியென அவ்வகைவணங்கியது. (கூர்மபுராணம்.) இது ஒரு கற்பத்தில் பிரமனது நான்குமுகத்தினும் பிறந்ததென்பர். இதன்முடிவு உபநிஷத்துக்கள். மீமாம்சா சாஸ்திரிகள் வேதம் சிருட்டிக்கப்பட்டன அல்ல அநாதி என்பர். நியாயவேதாந்தியர் ஈச்வரவாக்கியம் என்பர். கடவுள் வேதங்களைப் பிரமனுக்கு உபதேசிக்க, பிரமன் அதனை இருடிகளுக்கும் அவ்விருடிகள் அதனைத் தம் சிடருக்கும் உபதேசித்தனர் என்பர். இதை அசுரன் திருடிச்செல்ல அதனை மீட்டு ஒழிந்தவைகளை யாக்கச்செய்தனர் என்பர். அதனால் வேதங்களில் சிலபாகம் ருஷிகளால் செய்யப்பட்டன. இதனை வியாசர் இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என நால்வகைப்படுத்தினர். இவ்வகை வேதத்தில் முதலாவதாகியது :

இருக்குவேதம் — இது மந்திரங்கள் அல்லது தோத்திரங்கள் அடங்கப்பெற்றது. இருக்கு என்னும் பதத்திற்குத் துதித்தல் என்பது பொருள். இது எட்டுப்பாகங்களாக வகுக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு பாகமும் அநேக அத்யாயங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. பின்னொருவிதம் பத்து மண்டலமாகப் பிரித்து ஒவ்வொரு மண்டலமும் நூறு அநுவாகங்களாகவும் பிரிக்கப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு அநுவாசங்களிலும் ஆயிரம் சூக்தங்கள் அடங்கி யிருக்கின்றன. இவ்வேதத்தை ஓதலில் பதம், கிரமம், ஜடை, கனம் முதலியவைகொண்டு ஓதல்வேண்டும். இந்த இருக்குவேத அத்தியாயங்களில் பல இருடிகளின் சரித்திரங்களும், அவர்கள் ஓதியகீதங்களும், அந்தந்த ருஷிகளின் பெயர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. இதில் பல ரிஷிகளே யன்றி ராஜவம்சத்தினரும் வேத கிரந்தகர்த்தராக இருக்கிறார்கள். இதில் முதற்காண்டத்தில் சுவநயனிகையைப் பற்றியும், எட்டாவது காண்டத்தில் அசங்கன் உருமாறிய கதையும், பத்தாவது காண்டத்தில் சிந்துதீவபன் சரிதையும், எழாவது அத்யாயத்தில் பலகதைகளும் அடங்கி இருக்கின்றன. எட்டாவது அத்தியாயத்தில் நபாநேதிஷ்டன் கதை கூறப்பட்டிருக்கிறது. வேதத்தைச் சுருக்கி நோக்குமிடத்துப் பல தேவர்களின் துதி, பல தேவர், ருஷிகள், அசுரர்களின் பெயர்கள், பலபொருள்களின் பெயர்கள், திரிமூர்த்திகளின் நாமாவளிகள் அடங்கி இருக்கின்றன. இவை முடிவாய் ஒரே கடவுளைக் குறிப்பிப்பதாகவும் இருக்கின்றன. வேதநிகண்டு அடங்கி இருக்கிறது. அக்கினிக்கு எகார்த்தமுள்ள பலபெயர்கள் அடங்கி இருக்கின்றன. அவ்வாறே வாயு, சூரியன் முதலானவர்க்கும் கூறப்பட்டிருக்கின்றன. எவர் எந்த வாக்கியத்தைச் சொன்னாரோ அவரே ரிஷி. எவரை நோக்கிச் சொல்லப்பட்டதோ அவரே தேவதை. எற்பட்ட கடவுளர் அக்கினி, வாயு, சூரியன் ஆக மூவராக எண்ணப்படுகிறது. ஓம் எனும் பதம் பிரமத்தைக் குறித்ததெனக் கூறப்பட்டிருக்கிறது. ஒரே தெய்வமாகக் கூறப்பட்டு

தெய்வம் சூரியன் என்று குறிக்கப்படுகிறது. சமயாசாரங்களைக்குறித்தும், வாநப்பிரஸ்தன் சந்நியாசிகளின் சடங்குகளைப்பற்றியும், இந்திரன், அக்கினி, சூரியன், சந்திரன், வாயு. அப்பு, அசரீரிகள், பரமாணுக்கள், பிருதிவி இவைகளைப் பற்றிய பிரார்த்தனைகளும் அடங்கியிருக்கின்றன. பல யாகங்களிலும், சோமபானத்திலும், ஓதப்படும் மந்திரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. பதினைந்தாவது அத்யாயத்தில் குத்சன், திருதன், ஆப்தியர் கதைகள் கூறப்பட்டிருக்கின்றன. இருபத்துமூன்றாவது அத்தியாயத்தில் அகஸ்தியர், இந்திரன், மருத்துக்கள் இவர்களுக்கு நடந்த சல்லாபங்கள் அடங்கியிருக்கின்றன. இருபத்து நான்காவது அத்தியாயத்தில் அஸ்வநிதேவர், அச்கினி, ஆதித்தனைக் குறித்து அகஸ்தியரால் சொல்லப்பட்ட கீதங்கள் அடங்கியிருக்கின்றன. இதில் ஒரு கீதம் விஷம் இறங்கும்வகை அகஸ்தியரால் கூறப்பட்டிருக்கிறது. காயத்திரியைப்பற்றி ஓர் அத்தியாயம் கூறப்பட்டிருக்கிறது. இது சூரியனை நோக்கியதாம். இருக்தேவதா ஸ்தோத்திரம் ஏழாவதுகாண்டம் மூன்றாவது அத்யாயத்தில் கூறப்பட்டிருக்கிறது. வசிட்டர் கதை இதில் கூறப்பட்டிருக்கிறது நூறுவருஷம் பாக்கியத்துடன் இருக்கவேண்டி ருத்திரனைப் பிரார்த்திக்கும் பிரார்த்தனை இதில் அடங்கி இருக்கிறது. மழை வேண்டிச் சூரியனைப் பிரார்த்திக்கும் பிரார்த்தனையும், மேகத்தை நோக்கித் தவளைகள் கூவவேண்டியதைப் பற்றியும் வசிட்டகீதங்கள் கூறப்பட்டிருக்கின்றன. பத்தாவது காண்டம் ஆறாவது அத்தியாயத்தில் சத்துருநாசத்திற்காகக் கூறப்பட்ட கீதம் அடங்கி இருக்கிறது. ஏழாவது அத்தியாயத்தில் சாவித்திரி, சகனு, தக்ஷனு, யமுனு முதலியோர் கதை கூறபபட்டிருக்கிறது. பத்தாவது அத்தியாயத்தில் அம்பரீஷன் புத்திரியாகிய வாக்காள் தன்னைத்தானே புகழ்ந்த சரிதம் கூறப்பட்டிருக்கிறது. பத்தாவது அத்தியாயத்தில் இரவை நோக்கியும், பதினொராவது அத்தியாயத்தில் உலக சிருட்டியை நோக்கியும், அகமருஷண கீதம் சொல்லப்பட்டு இருக்கிறது. பின்னால் ஆத்திரேயப் பிராம்மணம் கூறப்பட்டு இருக்கிறது. ஏழாவதுகாண்டம் யாகாதிகளைக்குறித்தும், எட்டாவது அத்தியாயம் அரசபட்டாபிஷேகத்தைக் குறித்த பொருள்களைப்பற்றியும், எட்டாம் காண்டம் இரண்டாவது அத்தியாயத்தில் பட்டாபிஷேகச் சிறப்பையும். முப்பத்தேழாவது அத்தியாயம் சத்தியகாமனால் சொல்லப்பட்ட நியாயவிஷயங்களையும், உத்தாலகர் பட்டாபிஷேகச் சடங்கு கூறும் விதத்தையும், முப்பத்தெட்டாவது அத்தியாயம் இந்திரனது பாவனாபட்டாபிஷேகத்தைப் பற்றியும், துரு, பரீக்ஷித்து முதலியோர்க்குச் செய்த பட்டாபிஷேகச் சடங்கைப்பற்றியும், பசுக்கள் தானம் கொடுத்ததைப்பற்றியும், அங்ஙனம் ஆசிரியர் பொருட்டு வெள்ளைக்குதிரைகள் தானம் செய்ததைப்பற்றியும், அத்திரி புத்திரன்செய்த ஸ்திரீகளின் தானங்களைப்பற்றியும், பரதன் செய்த யானையின் தானங்களைப்பற்றியும், பரதனுக்குச் செய்த யாகத்தில் ஆயிரம் பிராமணர் தாம் எடுத்துக்கொண்ட நூறுகோடி பசுக்களைப் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது. ஐதரேயப்பிராமணத்தின் நாலாவது அத்தியாயத்தில் புரோகிதனை நியமிப்பதினாலும், ஒரு புரோகிதனை உபசரிப்பதனாலும், உண்டாம் பலனைப்பற்றியும், நியமனத்தைப்பற்றியும், தொழிலைப் பற்றியும் கூறப்பட்டு இருக்கிறது. ஏழாவதுகாண்டம் முடிவில் பல அரசர்களின் பெயர்களும், அவர்களால் அனுஷ்டிக்கப்பட்ட கர்மானுஷ்டானங்களும், சத்துருநாசங்களைப்பற்றியும் கூறப்பட்டு இருக்கிறது. இருக்குவேதத்தின் மற்றொருபாகம் ஐதரேய ஆரண்யகம் என்று பெயர். இதில் இரண்டாவது அதிதீர்க்கமானது. மூன்றாவதோடு சேர்ந்து பாவரிக்பிராம்மணம் அல்லது ஆத்திரேயபிராம்மண உபநிஷத்து என்னும் பெயர் உள்ளதாகிறது. இதில் உலகசிருட்டி கூறப்பட்டிருக்கிறது. மனிதஉற்பத்தியைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. பின் ஆன்மவிசாரணையைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இதில் மற்றொருபாகம் கௌஷீதகீ பிராம்மண உபநிஷதம் என்னப்படும். வேதாந்தசாத்திரம் அதில் ஒன்று. பிரதத்தனுக்கு உபதேசம் செய்தது. மற்றொன்று அஜாதசத்துருவின் உபதேசம் கூறப்பட்டு இருக்கிறது. பின்னும் பலவிஷயங்கள் அடங்கி இருக்கின்றன.

**யஜுர்வேதம்** — வாஜஸநேயி அல்லது ஸ்வேத யஜுர்வேதங்களில் சூக்ஷமம் உள்

ளது. அதில் பிரதான பாகம் மந்திரங்களும், அதைச்சேர்ந்த சங்கிதத்தில் நாற்பது அத்தியாயங்களும் அடங்கியிருக்கின்றன. அவை வேற்றுமைப்பட்ட அநந்த கந்திகளாகப் பிரிக்கப்பட் டிருக்கின்றன. ஒவ்வொரு கந்திகமும், தோத்திரங்களாக இருக்கின்றன இதில் உள்ள அநுவாகங்களின்தொகை (உஅசு); வாக்கியங்களின் தொகை (கூகஅஎ) ஆகவும்காணப்படுகிறது. அத்யயனங்கள் பல்வேறு வகைப்பட்ட நூற்றுப்பதிலேழு கந்திகள் அடங்கினவையாகக் காணப்படுகின்றன. யஜுர்வேதமாயினும் இருக்குவேததோத்திரங்களைப்போல இருக்கின்றன. யஜுர்வேதம் அப்பெயரின் பொருள்படி நைவேத்யங்கள், வேள்விகள் செய்யும் முறை கூறப்பட்டதாக இருக்கிறது. முதலும் இரண்டுமாகிய அத்தியாயங்களில் அமாவாச்யை, பூர்ணிமைகளில் செய்யப்படும் வேள்வியில் கூறப்படும் தோத்திரங்களும், கடையில் ஆறு பிரகாணங்களில் பிதுர் கர்மங்களைப் பற்றியும், மூன்ருவது அத்தியாயம், நித்தியாக்கினி நிவேதனத்தைப் பற்றியும், அடுத்த ஐந்து அத்தியாயங்கள் அக்கினிஸ்தோமத்தையும் அதில் செய்யும் சோமபானத்தையும், மற்ற இரண்டு அத்தியாயங்கள் வாஜபேயம், இராஜசூயம், இவைகளைக் குறித்த சடங்குகளையும், பதிஞென்று முதல் பதினெட்டு வரையிலும் உள்ள எட்டு அத்தியாயங்கள் ஓமாக்கினி வேதத்தையும், பத்தொன்பது முதல் இருபத்தொன்ருவது அத்தியாயங்கள் வரை சௌத்திராமணி யாகமும் கூறப்பட்டிருக்கிறது. இருபத்திரண்டுமுதல் இருபத்தைந்துவரையில் அசுவமேதத்தில் உபயோகிக்கும் பிரார்த்தனைகள் அடங்கியிருக்கின்றன. அடுத்த இரண்டு அத்தியாயங்கள் பலவிஷயங்களைக் குறித்தவைகளாக இருக்கின்றன பின்னிரண்டு அத்தியாயங்களில் புருஷமேதமும் நாராயணபலியை ஒத்த சடங்கும் கூறப்பட்டிருக்கிறது. முப்பதும், முப்பத்தொன்றும் இவைகளே அடங்கி இருக்கின்றன. அடுத்த மூன்று அத்தியாயங்கள் சருவமேதம் கூறப்படும். அடுத்த் அத்தியாயம் பித்ருமேதம் கூறும். கடையில் ஐந்து ததயக்ஷனைக் குறித்ததாகவும், அவற்றில் நான்கு, யக்யம், தவம், நியமம் முதலிய சமயக் கிரியைகளைக் குறித்தனவாகவும் இருக்கின்றன. கடைசி அத்தியாயம், ஞானபோதகமாயிருக்கிறது. தோத்திர பாகத்தில் பிரஜாபதி, பரமேஷ்டி, நாராயணன் என்கிற தெய்வ புருஷர்களைக் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அக்கினி மூலகாரணமாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. சூரியனும், வாயுவும், சந்திரனும் அவ்வாருகக் கூறப்படுகின்றனர். காலங்கள் சோதி வீசுகிறவன் இடத்தில் பிறந்தன. பின் அருவலக்ஷணம் கூறப்படுகிறது. இந்த வேதத்தின் நாற்பதாவது அத்தியாயம் ஈஷாவாஹியம் என்னும் உபநிஷத்தாக இருக்கிறது. அந்த உபநிஷத் செய்தவன் ததியக்கன் ஆக இருக்கிருன். மத்தியந்தன சாகத்திற்குச் சம்பந்தமாகிய இந்த வேதத்தின் இரண்டாவது பாகம் சதபதிய பிராம்மணமென்று பெயர் பெறும். அது முழுதும் பிரபாதகம் என்னும் அத்தியாயங்களாகச் செய்யப்பட்டிருக்கிறது. கந்திகங்கள் எனும் சிறு பிரிவுகளும் அடங்கியிருக்கின்றன. முதலாவது இரண்டாவது காண்டங்களில் பௌர்ணமி அமாவாசிகளில் செய்யப்படும் சடங்குகளையும், ஓமாக்கினி முதலிய சடங்குகளையும், சோமபானம் சித்தம் செய்யவேண்டிய விதத்தையும் அதைக் குறித்த ஜயாதிஸ்தோமம் முதலிய சடங்குகளையும், ஐந்தாவது காண்டம் இராஜசூயத்தையும், அடுத்த நாலுகாண்டங்கள் அக்கினிப்பிரதிஷ்டையையும் கூறும். பத்தாவது காண்டம் அக்கினிரகஸ்யம் எனப்பட்டு இச்சடங்குகளினுல் ஆம் பயன் கூறும். இரண்டாம்பாகத்தைச் சேர்ந்த மூன்று காண்டங்கள் சௌத்ராமணி யாகத்தையும், அசுவமேதத்தையும் கூறும். பதினுருவதுகாண்டம் விரயத்து ஆரண்யகம் என்னப்படும். இதில் அசுவமேத புருஷமேத லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. சதபதப் பிராம்மணத்தின் பதினுலாவது காண்டத்தில் சொல்லப்பட்ட பிரகதாரண்யம் வாஜஸநேயி அல்லது சுவேத யஜுஸின் முடிவாக இருக்கிறது. இதை விரயதாரண்யகம் என்று வழங்குவர். இதன் பிரசங்கி யாஞ்ஞவற்கியர்; பின் உலக அழிவையும், விராட் சுவரூபத்தையும், மனுஷோற்பத்தியையும், பிராணிகளின் பிறப்பையும் கூறியிருக்கிறது. பின் பாலகீ, கார்க்கயன், கார்க்கேயன் முதலியோர் கதை கூறப்பட்டு இருக்கிறது. இக்

கதையில் - ஆத்மா, அநாத்ம லக்ஷணம் கூறப்படுகிறது. பின் யாஞ்ஞவற்கிய மைத்திரேயி சம்வாத பரமாத்ம லக்ஷணம் கூறப்படுகிறது. அப்பால் அதர்வணன், ஆங்கிரசன் முதலியோர்க்கு உபதேசித்த மந்திரங்கள் கூறப்படுகின்றன. பின் அஸ்வநி தேவர்க்குத் ததியக்நனால் கூறப்பட்ட பிரசங்கம் கூறப்படுகிறது. ஆருவது அத்தியாயத்தில் யாஞ்ஞவற்கிய ஜநக சம்வாதம் அடங்கியிருக்கிறது. பின் கானவசாகச் சம்பந்தப்பட்ட அநுரூபபத்திரத்தோடு வாஜஸநேயி என்னும் அட்டவணை சேர்க்கப்பட் டிருக்கிறது. அப்பால் கிருஷ்ணயஜுஸ் அல்லது தைத்திரிய மந்திரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இது எழு காண்டங்களாகப் பிரிவு செய்யப்பட் டிருக்கிறது. இதில் ஐந்துமுதல் எட்டு வரையில் அத்யயனம், பிரக்ஷணம், அல்லது பிரபாதங்கள் அடங்கி யிருக்கின்றன. ஒருகாண்டத்தில் இராஜசூயம் என்னும் யாகம் கூறப்பட்டிருக்கிறது. இதில் ஒன்பது முழுக்காண்டங்களும் பிரசாபதியாலும், சோமனாலும், அக்கினியாலும், பலதேவர்களாலும் கூறப்பட்டவைகளாகக் காணப்படுகின்றன. கடைசி காண்டத்தில் வராக அவதார கதைக்குப் பூர்வமான புராணம் கூறப்படுகிறது. இதிலிருந்து கற்பமென்னும் கணித கர்வம் குறிப்பிக்கப்படும். பின் உலகோற்பத்தி கூறப்படுகிறது. ஒரு பிரகரணத்தில் யாகாசிரியனுக்கு ஆயிரம்பசு கொடுக்கும்படி கூறியிருக்கிறது. இதில் தைத்திரியம், நாராயணம், மகாநாராயணம் என்னும் மூன்று உபநிஷத்துக்கள் பிரிவுபடும். பின் வாருண பிருகு சம்வாத பிரம லக்ஷணம் கூறப்படுகிறது. அதை அறிந்தவன் பெறும் பேறு கூறப்படுகிறது. இது இரு வருண உபநிஷத் எனப்படும். பின் சர்வதேவ வணக்கம் கூறப்படுகிறது. யஜுர் வேத சாகையில் மைத்திராயணி உபநிடதம் கூறப்படுகிறது பின் காதாக உபநிஷத் கூறப்பட் டிருக்கிறது. பின் சுவேதாச்வதரரால் ஒரு உபநிஷத் கூறப்படுகிறது. அதற்கு அவர் பெயரே பெயராய் வழங்கும். இது வேதப்பொருள் விளக்கத்தில் இருந்து சுருக்கி எழுதியது.

சாமவேதம்—இது ஒரு விசேஷமகிமை பெற்றது. இதன் சொல்லிலக்கணப்படி இதற்குப் பாபநிவாரணமாகிய பலத்தைத் தருவது என்பது பொருள். சாமவேதத்தின் பிரதான பாகம் ஆர்ச்சிகம் என்னப்படும். ஆர்ச்சிகத்தின் இரண்டு பிரிவுகளில் இருந்து காணப்பட்டபடி அவைகள் அரை அத்தியாயங்களாகவும், தசதீ என்னும் பிரகரணங்களாகவும் உட்பிரிவு செய்யப்பட்ட ஆறு பிரபாதங்களாக ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு பிரபாதீகத்திலும், பத்துத் தசதீக்களும், ஒவ்வொன்றில் சரியாகப் பத்து வாக்கியங்களும் அடங்கி யிருக்கின்றன. பிரார்த்தனைகளின் அதே திரட்டு அதே வரிசைக் கிரமப்பிரகாரம் கீதமாகச் சித்தப்படுத்தப்பட்டுக் கிராமகேயகானம் என்கிற பெயரினால் பதினேழு அத்தியாயங்களாகப் பாகிக்கப்பட்டு இருக்கிறது. இதை அர்ச்சிககரணம் எனவும் கூறுவர். சாமவேதத்தின் மற்றொருபாகம் ஆரண்யகணம் எனப்படும். இதில் ஒருபாகம் உயிர் அளபெடைகளும் ஈருயிர்ப்புணர்ச்சிகளை இரண்டு அல்லது பல அசைகள் ஆக்குவதும், ஓசையை ஒழுங்குசெய்வதற்கு இலக்கங்களை ஏற்படுத்தும் இலக்கணங்களும் அடங்கி யிருக்கின்றன. ஆர்ஷய பிராம்மணம் என்கிற பெயரினால் சாமவேதத்தின் இரண்டு பாகங்களுக்கும் அட்டவணை இருக்கிறது. தோத்திரங்களைக் கீதமாகப் பாடும் விதமும், அதைக் காதுக்குக் கேளாவிதம் ஓதும்படியும், பின் ஆர்ச்சிககானம் என்னும் பெயரினால் அதே விதமாய் ஓதும்படியும் கூறும். அனிருகத்கானம் என்கிற விகற்பகரண விதிவிலக்கு ஓதல்களும் கூறப்பட்டிருக்கின்றன. ஊககானம் என்கிற வேறொருகானமும் கூறப்பட்டு இருக்கிறது. இதில் நான்கு கிரந்தங்கள் விரிவாய் இருக்கின்றன. ஒன்று சாரதிவிதிஷம், மற்றொன்று அத்பூதபிராம்மணம், மூன்றாவது பஞ்சவிதிஷம். தாத்தியம் என்னும் மற்றொன்று சாயணாசாரியரால் வியாக்யானம் செய்யப்பட்டிருக்கிறது. பஞ்சிகம் என்னும் இரண்டாவது காண்டம், அக்கினிஸ்தோமம் என்னும் சமயாசார சடங்கைக்கூறி இருக்கிறது. சாந்தோக்யம் இதில் இருந்து எடுத்தெழுதப்பட்டதாம். இது ஞானபோதனை விஷயம் கூறும். பின் சுவேதகேது, உத்தாலகர் இவர்களின் சம்வாதம் கூறப்படுகிறது. அப்பால் பிராச்சீனசாலன், சத்யஜநயன், இந்திரத்யுமன், ஜனன், ஊதி

லன் முதலியோர் கூடிப் பிரமவிசாரணை செய்தமை கூறப்பட்டிருக்கிறது. அப்பால் உத்தாலக அசுவபதி ஞானவிசாரண சம்வாதம் கூறப்பட்டிருக்கிறது. சாமவேதத்தின் மற்றொரு உபநிடதம் தலவகாரசாகைக்குச் சம்பந்தமானதாய் இருக்கிறது. கேன உபநிடதம் என்று சொல்லப்படுவது இதில் சம்பந்தப்பட்டது. பின்னும் பலவகை விஷயங்கள் இந்த வேதத்திற் கூறப்பட்டிருக்கிறது. இது வேதப்பொருள் விளக்கத்தில் இருந்து எழுதப்பட்டது.

அதர்வணவேதம் — அதர்வணத்திற்குச் சேர்ந்த சன்னிதம் அல்லது தோத்திரம், இருபது காண்டங்களாக இருக்கிறது. அது அநுவாகங்கள், சூக்தங்கள் ரிக்குகளாக உட்பிரிவு செய்யப்பட்டிருக்கிறது. பிரபாதங்களாகப் பிரிக்கப்படும் விதமும் காட்டப்பட்டிருக்கிறது. வாக்கியங்கள் ஆறாயிரத்துப் பதினைந்தாகவும், நூற்றுக்குமேற்பட்ட அனுவாகங்களாகவும், எழுநூற்றறுபதுக்கு மேற்பட்ட சூக்தங்களாகவும், ஏறக்குறைய நாற்பது பிரபாதங்களாகவும் இருக்கின்றன. அதர்வணவேதத்தின் நடையைக்காட்ட ஒரு வாக்கியம் குறிக்கப்பட்டு இருக்கிறது 'ஆதிபுருஷனைப்பற்றி ஆயிரம் அஸ்தம் உடையவன்' என்று கூறப்பட்டிருக்கிறது. பத்தொன்பதாவது காண்டத்தை அடுத்த சூக்தத்தில் கிருத்திகை முதல் இருபத்தேழு நக்ஷத்திரங்கள் அவற்றின் கிரமத்தில் கூறப்பட்டு இருக்கின்றன. அது ஆசிலேஷமாசத்தின் கடையில் அல்லது மாகமாசத்தின் ஆரம்பத்தில் அயனத்தைக் குறிக்கின்றது. பத்தொன்பதாவது காண்டத்தின் நாலாவது அநுவாகத்தில் ஒரு மந்திரோச்சாடனம் கூறப்பட்டு இருக்கிறது. அது யதார்த்தமாகப் பயங்கரம் உற்றதாய் இருக்கிறது. முக்கியமாய் (உஅ) (உக) (௩0) இப்பக்ஷமுள்ள சூக்தங்களாக இருக்கின்றன. அது சபித்தல்களுக்கு மாதிரியைக் காட்டப் போதுமானதாய் இருக்கிறது. 'ஓ குசைப்புல்லே, ஓ இரத்தினமே, என்னுடன் பகைக்கும் எல்லோரையும் நாசஞ் செய்க' என மந்திரம் ஒன்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வேதம் சத்துரு நாசத்தின் மந்திரங்களைப்பற்றிக் கூறப்பட்டு இருக்கிறது. ஆயினும் அதை அப்படி யூகிக்கவொண்ணாது. ஏனெனில் ஆபத்து நிவர்த்தியின் பொருட்டாம். கோபதப் பிராம்மணம் இவ்வேதத்தின் இரண்டாவது பாகத்துக்குச் சம்பந்தமாகக் காணப்படுகிறது. இது ஐந்து பிரதாபங்களைக் கொண்டிருக்கிறது. இதன் முதலாவது அத்தியாயத்தில் பிரபஞ்சத்திற்குக் காரணம் பிரமமென்று கூறப்பட்டு இருக்கிறது. நாலாவது பிரகாரணத்தில் அதர்வணர் ஒருபிரஜாபதியாக யோசிக்கப் படுகிறார். ஐந்தாவது அத்தியாயத்தில் முதற்புருஷன் சம்வற்சரத்தோடு உண்டானவனாக எண்ணப்படுகிறான். ஐந்தாவது பிரகரணத்தில் மத அளவையும் கூறப்படுகிறது. அப்பால் ஐம்பத்திரண்டு உபநிஷத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. அப்பால் ஆறும் பின் எட்டும் வேதாந்தவிஷயத்தை நிரூபிக்கின்றன. (இஉ) உபநிடதங்களில் முதல் பதினைந்து சௌநகீயங்களில் இருந்து சொல்லப்பட்டனவாகக் காணப்படுகின்றன. பின் பிரமன் அதர்வணனுக்கும், அதர்வணன் அங்கிரனுக்கும், அங்கிரன் சத்தியவகனுக்கும் கூறிய பிரமஞான உபதேசம் கூறப்பட்டிருக்கிறது. பின் அங்கிரச சௌநக சம்வாதம் கூறப்படுகிறது. பின் ஞானசாஸ்திரப்பெருமை கூறப்படுகிறது. அதன்பின் சுகேசன், சத்தியகாமன், கர்க்கன், சௌரயாணி, கௌசல்யன், காத்தியாயனன், வாய்தர்பி இவர்கள் பிப்பிலாதனை நோக்கித் தேகத்துடன் தேகிக்குள்ள சம்பந்தத்தைப்பற்றியும், ஆத்மாவுடன் அந்தக்கரணங்களின் சம்பந்தத்தைப் பற்றியும், வினவிய சம்வாதம் கூறப்பட்டிருக்கிறது. அப்பால் ஒன்பது உபநிடதங்கள் முக்கியமல்லாமையால் எவரும் வியாக்கியானம் செய்திலர். மந்தூகம் நான்குபாகங்களாக இருக்கின்றது. இதில் மகாமுக்கியமான விஷயம் அடங்கி இருக்கிறது. பதினாறு முதல் இருபத்தெட்டு வரையிலும் உள்ள உபநிடதங்கள் வியாக்கியானம் செய்யப்படவில்லை. இருபத்தொன்பது முதல் முப்பத்துநான்கு வரையிலும் உள்ள உபநிடதங்கள் நிருசிங்க தாபநியம் ஆகின்றன. இவற்றில் முதற்கண்ணது பூர்வதாபநியம ஆகின்றது. கடைசி உபநிடதம் உத்தமதாபநியம் ஆகின்றது. அடுத்த இரண்டு அத்தியாயங்கள் வாஜசரவசனை அவன் குமாரன் நச்சிகேதன் தன்னை யாருக்குப் பலிகொடுக்கப்போகிறீர் என்று கேட்ட

பிரசனைகள் அடங்கி இருக்கின்றன. கேன உபநிஷத் அதர்வணத்தின் முப்பத்தேழாவது உபநிடதமாக இருக்கிறது. முப்பத்தொன்பதாவது முதல் நாற்பதாவது வரையிலுள்ள இரண்டு உபநிடதங்கள் நாராயணத்தின் முதலாவது இரண்டாவது பாகங்களாக இருக்கின்றன. அடுத்த மூன்று உபநிடதங்களுக்கு வியாக்கியானம் இல்லை. அநந்தவல்லி, பிருகுவல்லி எனும் இரண்டு உபநிடதங்கள் தைத்திரீயம், வாருணி என்ற பெயர்களால் விளங்கப்பட்ட கிருஷ்ணயஜுஸின் அரண்யகத்திலிருந்து எழுதப்பட்டனவாய் நாற்பத்தைந்து நாற்பத்தினாலைத் தொடர்ந்தவைகளாகக் காணப்படுகின்றன. மற்ற ஏழு உபநிடதங்களும் வியாக்கியானம் செய்யப்படவில்லை.

2. (௪) இருக்கு, எசுர், சாமம், அதர்வணம். உபவேதம், (௪) ஆயுள்வேதம்; அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவ வேதம்.

வேதராசி — ஒரு வேதியன் தான் காலம் அடைந்து யமபுரத்தின்வழிச் செல்லுகையில் பாபிகள் துன்புறுதலைக்கண்டு அவர்க்குத் தான்செய்த காவிரிஸ்நான பலத்தில் சிறிது உதவிச் சுவர்க்கம் அடைந்தவன். தேவி சந்திரகாந்தை.

வேதருஷபன் — பானுவென்னும் தக்ஷகுமாரியின் புத்திரன். தந்தை தருமன்.

வேதவதி — 1. வேதமோதிக்கொண்டு இருந்த குசத்துவசர் வாக்கில் பிறந்தவள். இவள் மகாலக்ஷ்மியின் அவதாரம். குசத்துவசரைத் தம்பன் என்னும் ஒரு அரக்கன் கொலை செய்ததால் தவ மேற்கொண்டு தவஞ் செய்கையில் திக்கு விசயத்தின் பொருட்டு வந்த இராவணன்கண்டு மோகித்துக் குழலைப்பற்றினன். இவள் கோபித்து நீ தொட்டவுடலை வைத்திருப்பதில்லையெனத் தீமூட்டி இனிவரும் பிறப்பில் உன்னையும் உன குலத்தாரையும் சாம்பராக்குவேன என்று சபித்துத் தீயிற்குளித்தனள். அவ்வகை இலங்கையில் ஒரு தாமரைப் பொய்கையில் குழந்தையுருவாகி யிருக்கையில் இராவணன் எடுத்து அரண்மனை சென்று சோதிடரை நோக்கி இக்குழந்தையைப் பற்றிக் கேட்டனன். சோதிடர், இவள், இங்கு இருக்கின் இலங்கை அழியும் என்றனர். அதனால் குழந்தையைப் பெட்டியிலடக்கிக் கடலில் விட்டனன். அப்பெட்டி கடலில்மிதந்து மிதிலைசென்று புதைந்து யாகஞ்செய்ய நிலத்தையுழுத சநகனிடம் அகப்பட்டது. அக்குழந்தையையெடுத்து வளர்த்துச் சீதையெனப் பெயரிட்டு இராமருக்கு மணஞ்செய்வித்தான்.

2. குசத்துவசன் தேவியாகிய மாலாவதியின் குமாரி. இவள் பிறந்தகாலத்து வேதவொலி செய்துகொண்டு சூதிகா கிருகத்திருந்து வெளிப்பட்டன ளாதலால் இவளுக்கு வேதவதி யென்று பெயருண்டாயிற்று. இவள் இலக்ஷ்மியம்சம். இவள் தவத்திருக்கையில் இராவணனால் பரிசிக்கப்பட்டுத் தேகத்தைவிட்டுச் சீதையாய்ப் பின் அக்னியிற்சென்று அக்னிதேவன் சொற்படி மூன்றுலக்ஷ திவ்யவருஷம் தவஞ்செய்து சுவர்க்கலக்ஷ்மி யாயினள். இவள் பின்னர் யஞ்ஞகுண்டத்திலுதித்துப் பாண்டவர்க்குத் தேவியாய்த் திரௌபதியாயினள். இவள் முதல்யுகத்தில் வேதவதி, இரண்டாவதுயுகத்தில் சீதை, மூன்றாவது யுகத்தில் திரௌபதியானமையால் இவளுக்குத் திரிஹாயணி யென்று ஒரு பெயர். (பிரம்மகைவர்த்தம்.)

வேதவல்லி — இவள் பிரமன் பாதத்தில் உதித்தவள். தக்கன் தேவி. தக்கயாகத்தில் காளியால் தலையறுப்புண்டனன்.

வேதவன்மன் — சிங்கவருமனைக் காண்க.

வேதவிரதன் — சாரதையைக்காண்க.

வேதனம் — (கூலி) காரியமானம், காலமானம், காரியகாலமான மென (௩) வகை. இச்சுமையை இந்த இடத்தில் வைத்தாலிவ்வளவு கூலியென்பது காரியமானம். வருஷ, மாத, நாள்களில் பெறும் வேதனம் காலமானம். இத்தனை காலத்துள் இந்த வேலைசெய்து முடித்தா லிவ்வளவு கூலியெனல் காரியகாலமானம்.

வேதன் — விஷ்ணுசருமன் குமாரன். இவன் தந்தை பொருட்டுத் திருவேங்கடத்தில் தீப கைங்கர்யஞ் செய்து தந்தையை நரகத்திலிருந்து மீட்டவன்.

வேதாங்கங்கள் — (௬) இவை: சிக்ஷை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிஷம், கல்பம் என்பன. இவற்றுள் சிக்ஷை என்பது, பாணினியால் இயற்றப்பட்டது இதனுள் வேதசப்தங்களுக்கு அக்ஷரத்தானம், உதாத்தானுதாத்த ஸ்வரித ஞானங்கள் கூறப்படுவது. வியாகரணம் இதற்குப் பாணினி கர்த்தா. காத்யாயனரும், பதஞ்சலியும் வியாக்யானம் செய்திருக்கின்றனர். இதில் வேதசப்தங்களின்

பிரகிருதி பிரத்யக்ஞானம் விசதமாகக் கூறியிருக்கிறது. சந்தம் இதற்குப் பிங்கல முனிவர் கர்த்தர் ; இதில் வேதத்திற் கூறப் பட்ட காயத்ரி முதலியவற்றின் சந்தங் களின் ஞானம் போதிக்கப்படும். நிருக்தம்-இதற்கு யாஸ்கமகருஷி கர்த்தர். இதில் வேதமந்திரங்களின் பயனைத் தெளிவாக் கும்வகை அப்பிரசித்த பதங்களின் அர்த் தங்கள் போதிக்கப்படும். பின்னும் வேத சப்தநிகண்டும் இதில் உண்டு. சாகபூர்ணி நிருக்தமும் உண்டு. இது பதகாண்டம், அர்த்தகாண்டம் என இரண்டு வகையாக இருக்கிறது. சோதிஷம்-இதற்கு ஆதித் யாதியர் கர்த்தாக்கள். இதில் வைதிக கர் மங்களின் தொடக்கத்திற்குக் கால ஞானத் தையும், அதன் பலத்தையும் கூறப்படும். கல்பம்—இதற்கு ஆச்வலாயனர், காத்யா யனர், ஆபஸ்தம்பர், போதாயனர், வைகா னஸர், த்ராஹ்யாயனர். பாரத்வாஜர், சத் யாஷாடர், ஹிரண்யகேசி முதலியவர்கள் கர்த்தாக்கள். இது யஞ்ஞகர்மங்களை அநுட் டிக்கும் விதத்தைப் போதிக்கும்.

**வேதாத்யயனம்செய்யலாகாதநாட்கள்** — அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி, சது ர்த்தசி, அரசர்க்காபத்துக்காலம், பூகம்பம், இடிமுழக்கம் அசுபகாலம் என்பவையாம். (ஆசாரக்கோவை)

**வேதாந்தசுப்பிரமணிய பிள்ளை** — இவர் திருப்பூவணத்திலிருந்த கவிவல்லவர். மயூர கிரிப் புராணம் பாடியவர்.

**வேதாந்தசூடாமணி** — துறைமங்கலம் சிவப் பிரகாச சுவாமிகள் மொழி பெயர்த்த ஏகாத்மவாத நூல். இது வேதாந்த சூளா மணி என்றும் பெயர் பெறும்.

**வேதாந்தசூத்திரம்**—இது வியாசரால் இயற் றப்பட்ட மீமாம்சை. இது நான்கு அத்தி யாயங்களும் நூற்று ஐம்பத்தாறு அதிகர ணங்களும் ஐந்நூற்றைம்பத்தைந்து சூத்தி ரங்களும் பெற்றது. இது புறச்சமய நிரா கரணம், ஞானசாதனம், வீடு பேறு முத லாயின கூறும். இதற்கு நீலகண்டர், சங்கரர், மாத்வர், இராமானுஜர் அவரவர் மதச்சார்பாக பாஷ்யம் செய்திருக்கின் றனர்.

**வேதாந்ததேசிகர்** — வேங்கடேச கண்டாம் சரான இவர், கலி (சாஙஎ0) க்குமேல் சுக்லஹு புரட்டாசிமீ ஞாயிற்றுக்கிழமை திருவோண நக்ஷத்திரம் சுக்ல ஏகாதசியில் ஸ்ரீ தூப்பில் அநந்தசூரிகளுக்குத் தோதா ரம்மன் திருவயிற்றில் பன்னிரண்டு வரு ஷம் இருந்து அவதரித்தவர். (இவரைப் புதன்கிழமையில் அவதரித்தவர் என்றும் சிலர் கூறுவர்.) இவர் திருவேங்கட முடை யான் எனப் பிள்ளைத் திருநாமம் பெற்று அப் புள்ளாரிடம் பல நூல்களையுங் கற்று வல்லவராய்த் திருமங்கையார் என்கிற கன் னிகையை மணந்து பல திருப்பதிகளைச் சேவித்துத் திருவயிந்திரபுரஞ் சென்று பெரிய திருவடிகளைக் காண விருப்புள்ளவ ராய் ஔஷதாத்ரி சிகரத்தில் உள்ள ஆல மரத்தடியில் கருட மந்திரந் தியானித் திரு ந்து பெரிய திருவடியைத் தரிசித்தவர்: அவரால் அயக்கிரீவ மந்திரம் உபதேசிக்கப் பெற்று அயக்கிரீவ ஸ்தோத்திரம், கருட பஞ்சகம்முதலிய கிரந்தஞ்செய்தனர். இவர் சரளமாகக் கவிசொல்லும் திறமைகண்டார் இவர்க்குக் கவிதார்க்கிக சிங்கமெனப் பெய ரிட்டு அழைத்தனர். வித்யாரண்யர் அரசன் பெண்ணைப் பிடித்திருந்த பேயை யோட் டக் கேட்டுக்கொள்ள மறுத்தவர். ஒரு மாயாசந்நியாசி இவரை வெல்ல வேண்டிக் குளத்துத் தண்ணீரைக் குடித்து இவர்க்கு வயிற்றில் உபாதியுண்டாக்கினன். அதனை இவர் வயிற்றின் உபாதியால் அறிந்து அரு கிருந்த தம்பத்தைக் கீறினர். அம் மாயாசந் நியாசி உண்ட நீரெல்லாம் அத் தம்பத்தின் வழி ஒழுகியது. மீண்டும் வித்யாரண்யர் வேண்ட இராஜ கன்னிகையைப் பிடித் திருந்த பேயைப் போக்கி வித்யாரண்யர் அரசனிடம் பொருள்பெற்றுத் தருகிறேன் நீர் வந்து காணுமென அனுப்பிய திரு முகத்திற்கு நாம் அரசனைப் பொருளாக எண்ணேமென மறுமொழி யிரண்டுமுறை எழுதிவிட்டவர். இம்மறுமொழியால் வித் யாரண்யர் இவரது வைராக்ய முடை மைக்கு மகிழ்ந்து இவர் திருவடிகளில் ஈடு பெற்றனர். இவர் பராசபட்டர் சொற்படி மாயாவாதிகளை வென்று பெருமாளால் வேதாந்த தேசிகத் திருநாமமும், பிராட்டி யாரால் ஸர்வதந்திர ஸ்வதந்திரர் என்ற திருநாமமும் பெற்றவர். இவர் ஸ்வப்பனத் தில் உடையவரது திருவடி தீக்ஷைபெற்று அக்ஷோப்யமுநி, வித்யாரண்யர் இவர்களுக் குண்டான வாதத்தை "அஸிநாதத்வம ஸிநா" என்பதனால் நியாயமெழுதி வித்யா ரண்யரைப் பங்கப்படுத்தினர். இதனால் வித்யாரண்யர் பொறாமைகொண்டு இவ அருளிச்செய்த சததூஷணி கிரந்தத்திற்

குத் தோஷங்கூறிச் சகாரத்தின்மீது குத்தி யனுப்பினர். அதனால் இவர், (சகாரசமர்த்தனம்) என்னுங்கிரந்தஞ்செய்து மற்றொரு குத்திட்டு வென்றனர். கிருஷ்ணமிச்ரர் செய்த பிரபோத சந்திரோதயத்திற்கு மாறாய்ச் சங்கற்ப சூர்யோதயஞ்செய்து தீர்த்தங் கொடுப்பதிலும் அவரை வென்றவர். இவர், டிண்டிபனை அம்சசந்தேச முதலிய நூல் செய்து வென்று, பாம்பாட்டி விட்ட நாகத்தைக் கருடபஞ்சசுத்தால் கிரகித்து அதை அவன் வேண்டக் கொடுத்தனர் இவர் எண்ணெயிட்டுக் கொள்ளுஞ் சமயத்தில் அப்பாம்பாட்டி குளத்து நீரையுண்டு உபாதியுண்டாக்கினன். அப் பாம்பாட்டியை முன் தம்பத்து இருந்து நீர் வடியச் செய்ததுபோற் செய்து அவனை வென்றவர். இவர் திருமலைசென்று பெருமாளைச் சேவித்து மீள்கையில் ஒரு நாள் உபவாசம் இருக்க நேரிட இவர் தமது உபாசனாமூர்த்தியாகிய அயக்கிரீவருக்குத் தீர்த்தமாராதித்துத் தாம் ஒரு செட்டிவீட்டுத் திண்ணையில் கண்ணுறங்கினர். அயக்கிரீவர் செட்டி வீட்டில் குதிரையுருவுடன் அவ்விடமிருந்த கடலைமூட்டை முதலியவற்றைத் தின்றனர். அச்செட்டி தேசிகரை வேண்டி அவர் சொற்படி பால் கொண்டுவந்து கொடுத்துப் பெருமாளுக்கு அமுது செய்வித்தனன். அதனால் குதிரையின் தொந்தரை நீங்கியது. கொத்தன் ஒருவன் கிணறு கட்ட இவரை வலிந்தழைத்தனன். இவர் இசைந்து கிணறுகட்டி அவரை வென்றனர். இவ்வகையிருக்கையில் அழகிய மணவாளநயினர் என்பவர் இவர்க்குப் பலதீமை செய்தனர். அவற்றை இவர் பொறுத்தனர். அநந்தசூரிகள் திரு அத்யயனத்திற்குத் தேவபித்ரு, விஷ்ணு ஸ்தானத்திற்கு நியமிக்கப் பட்டவர்களைச் சிலர் தடுக்க அதற்குக் கலங்காமல் தமது உபாசனாமூர்த்திகள் மூவரையும் அந்த இடங்களில் எழுந்தருளச்செய்து அத்யயனம் பூர்த்திசெய்து எதிரிகளைக் கலக்கஞ் செய்தனர். அர்ச்சகர், சொதகியில் தீர்த்தத்துடன் பொங்கல் பிரசாதத்தைக் கொடுக்க நிக்ரகித்துப் பெருமாள நியமனத்தால் அவர்களைச் சிக்ஷை செய்வித்தனர் மாற்றார் அமுதுபடியுடன் பொற்காசு கலந்து பிக்ஷையிட அதனை விலக்கியவர், அழகிய மணவாளநயினர்நம்மிருவரில் யாவர் விடிவதற்குமுன் ஆயிரம் கவி செய்கின்றாரோ அவர்களுக்கே கவிதார்க்கிக சிம்ம மென்னும் பெயர் தருமென்று அழைக்க உடன்பட்டுப் பெருமாளைத் துதிக்கத் தொடங்கினர். அழகிய மணவாள நயினர் பதகமல சஹஸ்திரம்பாட ஆரம்பித்து முடிக்காது சோர்ந்தனர். இவரோ, பாதுகாசஹஸ்திரம் என்னும் கிரந்தம் ஆரம்பித்து முடித்து அவரை வென்றனர். பின் சர்வக்கிய சிங்கப்பநாயக்கனுக்கு அநுக்கிகித்து வரதனென்னுங் குமாரனைப்பெற்று, கந்தாடை லக்ஷ்மணாசாரியரின் மாணாக்கர் செய்த உபத்திரவத்தால் அவ்வூர் விட்டுச் சத்யமங்கலத்தில் வசித்தனர். பின்கந்தாடை லக்ஷ்மணாசாரியர் வேண்டிக்கொள்ள அவர்க்கு அருள்புரிந்து ஸ்ரீ பாததீர்த்தம் பிரசாதித்து அவருக்குப் புத்திரோற்பத்தியும் அநுக்கிரகித்துச் சுதரிசன பட்டர் கொடுத்த சுதப்பிரகாசிகையும் அவர் குமாரரையும் பெற்று இராஜ கலகமாகையால் கிரந்தத்திற்குக் குறைவு வாராதபடி அதை மணலிற் புதைத்து வைத்துப் பொழுதேற வெடுத்து முதலிகளுடனும் குமாருடனும் சத்திய மங்கலம் அடைந்து கலக மடங்கியபின் திருவரங்க மடைந்து பெரிய பெருமாளைச் சேவித்துத் திருச்சித்திர கூடத்தில் பெருமாளைக் கோபலராயனால் பிரதிட்டைசெய்வித்துச் சிலரால் ஏவப்பட்ட பிரமசாரி யொருவன் வந்து கலியாணத்திற்குப் பொருள் வேண்டுமெனு அவனைப் பிராட்டி சந்நிதியில் அழைத்துச் சென்று பொருள் கொடுப்பித்து, திரு அத்யயனோற்சவத்தைத தடைசெய்த குமதிகளை நிராகரித்து அவர்கள் மந்திரத்தால் வாய்கட்ட அதைத் தாமே போக்கிக் கொண்டு அவர்களை வென்று பிரமதந்திர சுதந்தரஜீயரால் புறமதத்தாரை வெல்வித்துத் தம்மைப் போல் விக்கிரகஞ் செய்யத் தூண்டிய சிற்பி யொருவன் பொருட்டு அவ்வாறு விக்கிரகஞ் செய்து காட்டி வென்று சில நாளிருந்து நயினாராசாரியர் மடியில் திருமுடியும் பிரமதந்திர சுதந்திரஜீயர் மடியில் திருவடியுமாகத் திருநாட்டிற் கெழுந்தருளினர். இவர் (கoo) வருஷம் இருந்தனர். இவர் செய்த கிரந்தங்கள் வடமொழியில் ஹயக்ரீவஸ்தோத்ரம முதலிய கஙி. தமிழில் அமிர்தாஞ்சனி முதலிய உச. (குருபரம்)

வேதாந்தி — பட்டரிடத்து வாதிட்டுத் தோற்ற நஞ்ஜீயரெனப் பிறகு பட்டம் அடைந்த வேதியர்.

**வேதாந்தியாழ்வான்** — எழுபத்திரனுறு சிம்மாசனுதிபதிகளில் ஒருவராகிய வைஷ்ணவாசாரியர். (குரு பரம்பரை).

**வேதாலபட்டர்** — விக்ரமார்க்கன் சபையிவிருந்த வடமொழிப் புலவன்

**வேதாளிகர்**—வைதாளியாடுவோர்.

**வேதிகை**—1. தரும புத்திரன் மனைவியரில் ஒருத்தி. மாளவதேசத்து அரசன் புத்திரி. குமாரன் சாதேயன்.

2. இது யாகாதி காரியங்களில் கும்பஸ்தாபனம் செய்யும் இடம். எல்லா வேதிகைகளும் உபரத்தில் எழங்குலமாய் இருக்கவேண்டும். எட்டு முதல் பன்னிரண்டு அங்குலம்வரை இருக்கலாம் என்றும் ஓர் பக்ஷமும் உண்டு. இவ் வேதிகைகளில் தீக்ஷைக்கு நாற்கோண வேதிகை. தடாகாதி பிரதிஷ்டைகளில் தாமரைபோல் செய்யப்பட்ட பத்மினி வேதிகை. இராஜ்யாபிஷேகத்தில் நான்கு பக்கங்களிலும் பத்ராகாரமான ஸர்வதோ பத்ரம் என்னும் வேதிகை. விவாகத்தில் இருபது கோணமுள்ள ச்ரீதரா என்னும் வேதிகை. (ஸி.சூ.)

**வேதைச்சக்கரம்**—கீழ்மேல் ஐந்தும், தெற்கு வடக்கில் ஐந்துமாக ரேகைகளைக் கீறி, கோணங்களினு முள்ள இரண்டிரண்டு ரேகைகள் கீற இருபத்தெட்டுக் கயிறும். இதில் வடகிழக்கிலே கோணமான கயிற்றிற்குத் தெற்கில் செவ்விதான ரேகையின் கீழ்த் தலையிலே, உரோகணியை வைத்துப் பிரதக்ஷிணமாக எண்ணுவது. எண்ணுமிடத்து, உத்திராடம், அபிசித்தி, திருவோணம் என்று எண்ணுவது ஷ சக்கரமாம். இந்தச் சக்கரத்து நிறுத்தின நாளில் இரேகையின் தலையிலே, எதேனும் தலையில் ஒரு கோள் நின்றதாகில் அந்நாள் சுபகாரியங்களுக் காகாது. சுபக்கோள் நின்றதாகில் செய்தகாரியம் நசியும். பாபக்கோள் நின்றதாகில் செய்தகாரியமும், கர்த்தாவும் நசிவர். இது விவாகத்திற்குப் பார்ப்பது. (விதானமாலை.)

**வேத்தியின்மலிபு** — தோளால் வலிமை மறமன்னனை வாளால் வல்ல வீரர்மேம்பாட்டினைச் சொல்லியது (பு வெ.)

**வேத்திரக்யம்** — ஏகசக்ர வனத்தில் உள்ள ஒரு நகரம். இதில் சிலநாள் பாண்டவர் இருந்தனர்.

**வேத்திரவதி** — ஒருநதி. விந்தியநதிக்குச் சமீபத்திலுள்ள பாரியாத்திரகிரியில் உற்பத்தியாகி யமுனையோடு கலப்பது.

Vetravati is a river called Betma in the kingdom of Bhopal in Malwa.

**வேத்திரன்** — சகாதேவனுக்கு விஜயையிடம் பிறந்தவன்.

**வேத்ராசுரன்** — சிந்துத் வீபன் தவஞ்செய்கையில் வருணன் தேவியாகிய வேத்ரவதி அவ்விடம் வர, சிந்துத் வீபன் அவளைப் புணர இவன் பிறந்தனன். இவன் தபோபலத்தால் தேவர்களை வருத்த இவனது பட்டணமாகிய பிராக்சோதிடபுரம்சென்று துர்க்கை கொன்றனள். (வராக-புவி.)

**வேநம்பி**—கண்ணுவரால் மனிதராகச் சபிக்கப்பட்ட உபேந்திரர். இவர் வேடராய்ப் பிறந்து வள்ளி நாய்ச்சியாரை வளர்த்தனர்.

**வேநன்**—அங்கனுக்குச் சுநிதையிடம் உதித்த குமாரன். இவனது தீய ஒழுக்கத்தால் தந்தை தூரதேச மடைந்தனன். இவன் இருடிகள் சாபத்தால் இறந்தனன். இவனிறந்த பிறகு அரசன் இல்லாது இராச்சியம் அலைந்ததால் இருடிகள் இவனது தொடைகளை யோமத்திட்டுக் கடைந்தனர். அதில் நிஷாதன் பிறந்தனன். இந்த நிஷாதனை காட்டைவிட்டுக் காட்டில் ஒட்டினர். இவன் குமாரர் நிஷாதர் என்னும் வேடராயினர். பின் இவன் கரத்தை ஓமத்திட்டுக் கடைய அதில் விஷ்ணுவின் அவதாரமாய்ப் பிருது சக்கிரவர்த்தி பிறந்தனன். பிருதுவைக் குமரனுகப் பெற்றதால் பிராமண சாபத்தினின்று நீங்கினவன். இவன் சாபத்தால் நஷ்டமடைந்த அரசன். "இவன் காலத்து ஒருவன் பத்தினியை யொருவன் புணரலா மென்ற விதி யுண்டாயிற்று." (மநு.) (பிரம புரா).

**வேப்பமாலை** — முடிசூட்டுத் திருவிழாவில் தடாதகைப் பிராட்டியார்க்குப் பாண்டிய பரம்பரைக்குரிய இம்மாலையை அளித்தல் மரபு. சித்திரைத் திருவிழாவில் (அ)-ஆம் திருநாள் இக்காட்சிக்குரிய தினம் (திருவிளை.)

**வேப்பற்றூர்க்கண்ணன்கூத்தன்** — இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். இவரியற பெயர் கண்ணன் கூத்தன். இவரூர் வேப்பற்றூர். (குறு-௩௬௨.)

**வேப்பிலை** -மகாமாரிக் குரிய பத்ரம் இதனை பூதப்பிரேத பிசாசங்கள் விலகும் பொருட்டு மந்திரப் பிரயோகங்கள் செய்யுமிடத்தும், மகா மாரியின் கலசாதிகள் ஸ்தாபிக்குமிடத்தும், மஹாமாரியை யெண்ணிச சதருநாசத்தின் பொருட்டுச் செய்யும் ஹோம

த்து விறகாகவும் ஆகமங்களிலும், ஆக்னேய புராணம் மகாமாரி வித்தையிலும், கூறப் பட்டிருக்கிறது. "ரமாபில்வா சிவாஙிம் பாதுலஷிஸ்யாத் சரஸ்வதீ" என்பதால் இது விசேஷம். முத்துமாரியைக் காண்க.

வேமனர்—ஒரு தெலுங்குக் கவி. இவர் விஜய நகரத் தருகிருந்தவர். இவர் தமது செல் வத்தைக் கூத்திக் களித்துத் தம்முடன் பிறந்தானுக்கு ஆற்றில் விதைத்த தும்மட் டிக் காய்களின் உள்ளீடுகளைப் பொன் னாக்கித் தந்து துறவுபூண்டு நல்லொழுக்கம் பெற்றவர்.

வேம்பத்தூர்ச் சங்கத்தவர்—இவ்வூர் பாண்டி நாட்டில் மதுரைக்கு வடகிழக்கில் வைகை நதிக்கு வடக்கே யுள்ளது இதற்கு நிம்பை யெனவும், குலசேகரச் சதுர்வேதி மங்கல மெனவும் பெயர். குலசேகர பாண்டியன் என்போன் சாகேத புரியினின்றும் வரு வித்த (௨00அ) வேதியர்க்கு இவ்வூர் முதலிய பல அகரங்களைத் தானஞ்செய்து அவ்வூரி லிருந்த புலவர்களை நிலைக்கச் செய்தமையின் அவ்வகரத்தி லிருந்த புல வர்கள் அனைவரும் ஒருசேரச் சங்கப் புல வர்கள் ஆயினர். இவ் வகுப்புப் புலவர் களைச் சேர்ந்து நூலியற்றினோ ராவார். பாடுதுறை யியற்றிய தத்துவராயர், ஈசான முனிவர், வீரைக்கவிராச பண்டிதர், ஆள வந்தான் மாதவபட்டர், ஸ்ரீபட்டர், அம்பி காபதி, திருநெல்வேலிப் பெருமாளையர், செவ்வைச் சூடுவார், கவிகுஞ்சரமையர், முத்துவேங்கட சுப்பையர் முதலியோர். இவர்கள் பல சமயத்தினராக விருக்கலாம்.

வேம்பற்றூர்குமரனார்—ஒரு புராதன தமிழ்க் கவி. கடைச்சங்க மருவியவர். (புற-நா.) (அக-நா.)

வேம்பு — பகைவர் பூசலிடத்து வெல்லும் போரையுடைய பாண்டியன் வண்டு நிறை ந்த மகுடத்தின் மீதே புனையும் மலரினைப் புகழ்ந்து கூறும் புறத்துறை. (பு. வெ. பொதுவியற்.)

வேய் — பகைவர் தம்முனையிடத்து ஒலிக்கு மணியினையுடைய நிரையிடத்து ஒன்றி னைத் தெரிந்த கூறுபாட்டினைச் சொல்லிய துறை. (பு. வெ.)

வேர்க்கடலை — நிலக்கடலை, கடலைக்காய், மல்லாக்கொட்டை, மணிலாக்கொட்டை இவை வேர்க்கடலைக்கு வழங்கும் பெயர் கள். குறுமணல் தரையிலும் செம்மண் தரையிலும் பயிராவது. நிலத்தை இரு முறை யுழுது அந்தப் படைச்சாலிலாவது நன்றாய்க் காய்ந்த கொட்டையை ஓரடிக்கு ஒன்றாக ஈரத்தரையில் நடுவார்கள். நட்ட பின் காலத்தில் நீர்ப்பாய்ச்ச கொடியோடும். ஓடுங்கொடிகளில் கணுக்களில் மண்ணிட் டால் அங்கும் வேரோடி காய்கள் விடும். இதன் இலைகள் சிறியவை. நீலங்கலந்த பசுமை. காய்களின் நிறம் மண்ணினனத் திற்குத் தக்கபடி யிருக்கும். பயிர் விளைவு முற்றின் இலையும் கொடியும் பழுத்து விடும். அப்போது பூமியைச் செதுக்கி விட்டு உழுதால் கொட்டைகள் கிளம்பி விடும். அவற்றைப் பொறுக்கிக் கடலையை யுடைத்தும் பிரிப்பர். இக்கடலையில் எண் ணெயெடுப்பர் இவ்வெண்ணெயில் பணி யாரம் செய்வர்; விளக்கு எரிப்பர். சோப் செய்வர். கழனிகளுக்கு எருவாக்குவர். ஆடுமாடுகளுக்கு உணவாக்குவர். கடலையை வறுத்துத் தின்பர்.

வேலப்பதேசிகர் — திருவாவடுதுறை யாதீ னத்துப் பண்டார சந்நிதிகளில் ஒருவர். சிறந்த தமிழ்ப் புலவர். இவர் பறியலூர்ப் புராணம் பாடினர்.

வேலாயுதம்—இது பார்வதிப்பிராட்டியாரால் குமாரக் கடவுளுக்குக் கொடுக்கப்பட்டது. பானுகோபனால் முதனாளினும், மூன்றா நாளினும் வீரவாகு தேவர் முதலியவர்க்கு நேர்ந்த துன்பத்தைக் குமாரக் கடவுளின் கட்டளைப்படி நீக்கியது. கிரவுஞ்ச கிரி யைப் பிளந்தது. அடியவர்க்கு வேண்டிய காலத்து முன்னின்று துன்பம் போக்கு வதுமாகிய குமாராஸ்திரம்.

வேலி—இவள் ஒரு பெண்பிள்ளை. குலோத் துங்க சோழன் காலத்தவள். இவள் வீட் டின் சுவரை ஒரு வேதாளம் நாடோறும் இடிக்கக் கட்டிக்கொண்டு வருவாள். இவ் வகையிருக்கையில் கம்பர் அவ்வழி வந்து தாம் கூலிபெறும் வரையில் வேதாளத் தைச் சுவரை இடிக்காதிருக்க வேண்டிச் சுவரைக் கட்டி அவள் தந்த குறுணி நெல் பெற்றனர் என ஒரு கதை வழங்கும்.

வேலூர் — ஒய்மாநாட்டு நல்லியக்கோட னைக் காண்க. இது உப்பு வேலூர் என வழங்கும். திண்டிவனத்துக்கு வடக்கி லுள்ளது.

வேலூர்கிழான்—தொண்டை நாட்டுக் கும ழம்பட்டுக் கிராமத்து இருந்து க்ஷாமகாலத் துப் பல வித்துவான்களை ஆதரி த்த வேளாளன்.

**வேலை** — மேருவிற்குத் தாரணியிடத்து உதித்த குமரி. சமுத்திர ராசன் தேவி. இவள் குமரி சரவணி.

**வேலையசுவாமிகள்** — குமாரசுவாமி தேசிகரின் குமரர். துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகளுக்குச் சகோதரர். இவர் தருமபுரம் வெள்ளியம்பலத் தம்பிரானிடத்து இலக்கண முதலிய நூல்கள் கற்றுச் சகோதரரை நீங்காதவராய் இருந்து தம் இரண்டு சகோதரர்களுக்கும் பின் ஐக்கியமாயினர். இவர் செய்த நூல்கள் கைத்தல மாலை, வீரசிங்காதன புராணம், குகை நமச்சிவாய லீலை, பரிசாதலீலை, மயிலத்திரட்டை மணிமாலை, மயிலத்துவா.

**வேல்வெட்டிநம்பியார்** — பாஞ்சாரத்ரசாஸ்திர நிஷ்ணுதராகிய ஸ்ரீவைஷ்ணவர். (திருவாய்மொழி.)

**வேளாஞ்செட்டிகள்** — இவர்கள் வேளாளரில் ஒரு வகுப்பு. இவர்கள் தாங்கள் வேளாளரில் உயர்ந்தவரென்று தங்களைக் கூறுவர். தாங்கள் துலையில் அரசனைத் துலாப்பாரதானத்தில் நிறுப்பவர் என்பர். பட்டணத்தார் எனும் சிவனடியவரை இக்குலத்தவர் என்பர்.

**வேளாண்மாந்தரியல்பு** — (௧0) ஆணை வழி நிற்றல், அறிந்தோரை நிறுத்தல், கைக்கடனாற்றல், களிவகத்துடைமை, சுற்றந்தழுவல், ஓவாமுயற்சி, மன்னிறை தருதல், ஒற்றுமை கோடல், விருந்து புரந்தருதல், திருந்திய வொழுக்கம்.

**வேளாண்வாகை** — முற்பட்ட அந்தணர், அரசர், வணிகரென்று மூவரும் நெஞ்சு விரும்ப மெய்ம்மையால் அவரவர் ஏவல் வழியே சென்றதைக் கூறுந் துறை. (பு. வெ.)

**வேளாவிக்கோ** — தகடூரெறிந்த பெருஞ்சேர விரும்பொறையின தாயாகிய பதுமன் றேவிக்குத் தந்தை.

**வேளாவிக் கோ மாளிகை** — வஞ்சிநகரத்துச் செங்குட்டுவன் காலத்திருந்த வசந்த மாளிகை இதனை வேண்மாடம் என்பர். இது அந்நிய அரசர் தங்குதற்கும் பயன் பட்டதுபோலும்.

**வேளாவிக்கோமான் பதுமன்** — இவன் பொதினிமலைக்குரிய ஆவியர் குலத்தவன் இவன் பெயரால் வஞ்சியின் புறத்தில் ஒரு மாளிகை கட்டப்பட் டிருந்ததாகத் தெரிகிறது. பொதினி பழனிக்குப் பழைய பெயர்.

**வேளாளரின்பத்துவகைந்தொழில்** — ஆணை வழிநிற்றல், மாண்வினை தொடங்கல், கைக்கடனாற்றல், குற்றமனத்தின்மை, சுற்றம் போற்றல், நீங்காமுயற்சி, அரசிறைதருதல், ஒற்றுமைகோடல், ஒழுக்கத்திருத்தல், விருந்துபுறந்தருதல்.

**வேளாளர்**--1. சிவமூர்த்தியின் சடாடவியில் எழுந்தருளி யிருக்கும் கங்காதேவிக்குச் சிவானுக்கிரகத்தால் வேளாளர் பிறந்தனர். அப் பிள்ளைகளுக்கு விஷ்ணுவின் பாத கங்கையிற் பிறந்த பெண்களைத் தேவர்கள் விவாகஞ் செய்வித்தனர். இவர்கள் வேளாளர் எனப் பெயரடைந்து நாற்பத்தெண்ணாயிரம் இருடிகளை வணங்க அந்த இருடிகள் அவரவர்கள் பெயரைத் தாங்கள் கோத்திர முதலாக அனுட்டிக்கக் கட்டளையிட்டனர். பின் போதாயனரை வணங்க அவர் தாம் இயற்றிய சூத்திரத்தை அநுட்டிக்கக் கட்டளை யிட்டனர். இவர்கள் அசனல் கோத்திர சூத்திரம் உடையவர்களாய்ச் சிவமூர்த்தி அநுக்கிரகித்த எருதையும் இயமன் கடாவையும், இந்திரன் காமதேனுவின் குலத்தையுங் கொடுக்கப் பெற்றுப் பூமி திருத்தி வேளாண்மை செய்து சகல சீவர்களையுங் காத்துவந்தனர். இவர்கள் சிவமுகோத்பவராகிய மகருஷிகளின் சந்ததியாராகிய சிவாசாரியர்களை ஆசாரியர்களாகக் கொண்டு சிவதீக்ஷை பெற்றுவந்தனர். இவர்கள் மன்னர்க்குப் பின்னராய் நாடுகாத்து வந்தனர் என்பது. ஊரன், கிழவன், சேக்கிழார், புரிசைக்கிழார், குளப்பாக்கிழார் என்பதா லறிக. இவர்க்குப பின்னும் இளங்கோக்கள், மன்னர் பின்னர், இப்பர், எட்டியர், காராளர், வேளாளர், பூவைசியர் எனப் பல பெயர் வழங்குவதால் அறிக இவர்களுக் குரிய தசாங்கம்; பெயர் வேளாளர், மகம்மேரு மலை, கங்கையாறு, (௭௧) நாடு, (௯௯௯) நகர், ஐராவதம், உச்சைச்சிரவம் வாகனம், செங்குவளை மாலை, மேழி, குயில், சிங்க முதலிய கொடி, கலப்பை ஆயுதம், முரசக் கொடை. இவ்வேளாளர், உழுவித்துண் போரும், உழுதுண்டோரும் என இரு வகையார். அவர்களுள் உழுவித்துண்போர், மண்டிலமாக்களும், தண்டத்தலைவருமாய்ச் சோழநாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாவூரும், ஆலஞ்சேரியும், பெருஞ் சிக்கலும், வல்லமும், கிழாரு முதலிய பதியிற் றோன்றி வேளெனவும், அரசெனவும்,

உரிமை எய்தினோரும், பாண்டி நாட்டுக் காவதிப்பட்ட மெய்தினோரும், குறுமுடி குடிப்பிறந்தோர் முதலியோருமாய் முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக் குரிய வேளாளராம். வேளாளர்க்கு உரிய கருவி நாஞ்சில் சகடை முதலியன இவர்க்குச் சிறந்த தொழில் உழுதல். உழுவித்துண்போர்க்கு வேந்தர் கரும முடித்தல். உழுதுண்போர்க்கு வாணிகமும் உரித்தாம். இவ்வேளாளர் ஓர் காலத்து மேகத்தைச் சிறையிட்ட பாண்டியனுக்கு இந்திரன் பொருட்டுப் பிணை நின்று காத்தாராதலின் கார்காத்தார் எனவும், நாககன்னி மணந்த சோழன் கொணர்ந்த நாகவல்லி யென்னும் வெற்றிலைக் கொடியினை அவன் தரக்கொண்டு பூமியில் விருத்தி செய்ததால் கொடிக்கால் வேளாளர் எனவும், துளுவ நாட்டிருந்து தொண்டை நாட்டில் சோழனால் கொண்டு வரப்பட்டோராதலின் துளுவர் எனவும் கூறப்படுவர்.

2. இவர்கள் தமிழ்நாட்டில் உழுது பயிரிடும் ஒருவகுப்பார். இவர்கள் ஒவ்வொரு தமிழ் நாட்டிலும் நன்கு மதிக்கப்பட்டவர்கள். வேளாளன் எனுஞ் சொல் வெள்ளத்தை ஆள்பவன் எனும் பொருளது என்பர் சிலர். அதாவது உழுதுபயிரிடுவோர். முற்காலத்தில் உழவுதொழி லறியாது உலகம் பூதேவியை நோக்கி வருந்துகையில் பூமகள் இரக்கமுற்றுத் தான் உழுபடையாகிய கலப்பையுடன் ஒரு குமாரனைத் தந்தனள். அவன் முதல் உழவன். இந்த உழவன் பிறக்கையில் ஒரு ஆபத்து. அதாவது, சிவபெருமானும் பார்வதியாரும் கைலையில் நந்தவனத்திருக்கையில் விச்வகர்மனாகிய தெய்வத்தச்சன் அவ்விடஞ் சென்றனன். இதனால் சினங்கொண்ட சிவபெருமான் விச்வகருமனை நோக்கி 'நீ உத்தரவின்றி வந்தமையால் உனக்கு பூலோகத்தில் கங்காதீரத்தில் ஒரு சத்ரு உண்டாகுக' என்றனர். இதைக்கேட்ட விச்வகருமன் எதிர்நோக்கியிருக்கையில் ஒருநாள் பூமியில் ஒரு பிளப்பைநோக்க அதிலிருந்து கிரீடத்துடன் மாலையணிந்து கலப்பை தாங்கி ஒரு புருஷன் வெளிவரக்கண்டு தன் கையிலிருந்த வாளால் வீசினன்; அது மகுடத்தில்பட்டு மகுடம் நீங்கியது. உழவன் வெளிவந்தனன். விச்வகர்மன் உழவனைப் பிடித்துக்கொண்டனன். உடனே திரிமூர்த்திகளும் திக்குப் பாலகரும் தோன்றி உழவனை விடுவித்துச் சமாதானப் படுத்தினர். அச்சமாதானமாவது, பஞ்சாளத்தாராகிய தட்டார், தச்சர், கருமார், கல்தச்சர், கன்னார் ஆகிய விச்வகர்மபுத்திரர் புத்திரனுக்கு அடிமையாக இருக்கவேண்டியது என்பதாம். உழவனுக்குப் பூமியில் பிறந்ததால் பூபாலன் என்றும், கங்கைக் கரையில் பிறந்தமையால் காங்கேயன் என்றும், கலப்பையுடன் பிறந்ததால் உழுபடையோன் என்றும் பெயரிட்டனர். இவன் கிரீடமிழந்தமையால் இவனரசனுகான். இவன் சந்ததியார் உழவுசெய்யல் வேண்டும். இந்தச் சாதியில் ஒருவன் அரசனுக்கு முடிசூடல் வேண்டும். இவனுக்கு யஞ்ஞோபவீதம் உண்டு. இவனுக்கு இந்திரனும், குபேரனும் தங்கள் குமாரியை மணஞ் செய்வித்தனர். சிவபிரான் ஒரு வெள்ளெருதும், யமன் ஒரு வெள்ளை யெருமையும் கொடுத்து உழச்செய்தனர். தேவர்கள் மறைந்தனர். வேளாளனுக்கு இந்திர புத்திரியிடம் ஐம்பத்துநான்கு புத்திரரும், குபேரபுத்திரியிடம் ஐம்பத்திரண்டு புத்திரரும் பிறந்தனர். குபேரபுத்திரனாகிய நளகூபரன் (160) பெண்களை அக்குமாரருக்கு மணஞ் செய்வித்தனன். இக்குமாரர்களில் மூப்பத்தைவர் பூபாலர், மற்ற முப்பத்தைவர் வேளாஞ்செட்டிகளாய் வர்த்தகஞ்செய்வர். பின் முப்பத்தைவர் பசுபாலிக்கவென்றனர். இவ்வாறு இவர்கள் சந்ததியார் விருத்தியாயினர். வேளாளர் எந்தவகையிலும் தாழ்ந்த தொழில்கள் செய்பவரல்லர். துலாபார தானத்தில் அரசர்களை நிறுக்குந் தொழில் இவர்களுடையது. கம்பரும் இராமன் சிரசில் வேளாளர் முடிசூட்டுவித்ததாகக்கூறியுள்ளார். தமிழ்நூல்களில் அறிவாளராகிய முனிவர்க்கு இரண்டாவதாக உழவரைக் கூறியிருந்தது. இவர்களிற் பெரும்பான்மையோர் நாடுடையார். இவர்களுக்கு மேகத்தையாள்வோர் எனும் பொருளில் காரளர் எனப் பெயர் வந்தது. தமிழகத்தரசருக்கு மகட்டருமுரிமையுடையார். ஆகையால் தமிழ்நாட்டு மூவேந்தரும் வேளாளர். இவர்களில்ஏழைகளாயுள்ளோர் வீழ்குடிஉழவர் எனப்படுவர். இந்த வேளாளர் இப்போதும் பெரிய ஜமீன்தாரர்கள். வடநாடுசென்று குடியேறின வேளாளர் வெலமர் எனப்படுவர். வெலால் வம்சத்தாபகர். இவர்களையே பிளினி, போட்லோமியால் என்பர். (11)வது நூற்றூண்டில்

கூறப்பட்ட கங்கைக்கணவாயில் வசித்த கங்கைவீடரும் வேளாளரே. ஒரிஸ்ஸாவைப் பன்னிரண்டாம் நூற்றுண்டில் ஆண்ட கங்கவம்சத்தவரும் வேளாளரே. வேளாளர் பிராமணர்களிடம் தவிர மற்றைச் சாதிகளுடன் கலந்து புசிப்பார். வேளாளர் நற்றமிழ் பேசுவோர். இவர்களில் பெரும்பாலார் தமிழ்நூல்வல்லவர்கள் இவர்கள் தேச வேறுபாட்டால் துளுவர் என்னும், கொண்டை கட்டிகள் என்றும், கொடிக்காலர்கானகிழ்நாட்டார், பாண்டிவேளாளர், காரைக்காட்டார், நரங்குடியார், அரும்பூரார், சிறுகுடியார், கோட்டைவேளாளர், நீறுபூசிகள், செந்தலை, படைத்தலை, வெள்ளிக்கை, பவளக்கட்டி, தொள்ளைக்காது, ஆற்றங்கரை என்று பலவகைப்படுவர். ஒருகாலத்தில் செட்டிகளுக்கும் வேளாளருக்கும் வைசியர் யார் என்று கலகம் உண்டாக இவர்கள் இருவரும் அரசனையணுகினர். அரசன் இதனை வழக்குத் தீர்க்கமுடியாமல் இருவருக்கும் ஐயாயிரம் வராகன்கள் கொடுத்து ஐந்து வருஷம் பொறுத்துக் கொண்டுவருக என்றனன். இதில் வேளாளர் தாம் கொண்டுபோன ஐந்தில் ஒருபங்கு பணத்தை உழவுத் தொழிலில் செலவு செய்தனர். செட்டிகள் தாம் கொண்டுபோன பணத்தை வர்த்தகஞ் செய்தனர். அரசன் இருவரையும் ஐந்து வருஷம் கழித்து வருவித்தனன். வேளாளர் கரும்புமுறிக்க அது முதிர்ந்து முத்துக்களைத் தந்தன. செட்டிகள் வர்த்தகத்தில் சிறுலாபமே பெற்றனர். இதைக் கண்ட அரசன் களிப்படைந்து வேளாளரே வைசியரென்று தீர்மானித்தனன்.(பு.வெ.)

வேளிர் —1. தமிழ்நாட்டுப் பழைய குடிகள். இவர்கள் தம்தொழில் வேற்றுமையால் பல பெயருற்றனர் எனவும் கூறும். இவர்களே வேளாளர். இவர்கள் உழுவித்துண்போர் உழுதுண்போர் என இருவகையர். தமிழ்நாட்டில் இவர்கள், வேள் ஆவி, வேள் ஆய், வேள்எவ்வி, வேள்பாரி, வேள்பேகன் எனும் பெயர்களால் அழைக்கப்பட்டனர்.

2. இவர்களில் வள்ளல்களெனப் பெயரடைந்த கொடையாளர் கடையெழுவள்ளல்களில் பெரும்பாலர் வேளாளர். தென்னாட்டில் தமிழை வளர்த்தவர்கள். இவற்றைப்புறநானூறு, மதுரைக்காஞ்சிமுதலியவற்றாலறியலாம். தமிழ்நாடாண்ட மூவேந்தர்களுக்கும் படைத்துணையாயிருந்த சிற்றரசரென்னலாம். இவர்கள் அகத்தியர் தமிழ்நாடடையாத முன்பே தமிழ் நாட்டிலிருந்தவர்கள். இவர்கள் அகத்தியருடன் தமிழ்நாடடைந்தோர் என்பது சிலர் கொள்கை. இவர்களுக்குக் கிழார் என்பது உரிமையுடையார் எனும் பொருட்டு. இவ்வேளிரெனும் பட்டம் இன்னும் தென்னாட்டில் தேர்க்காட்டேர் வேளாளர்க்கு வழங்கிவருகிறது. மற்றவை வேளாளரைக் காண்க.

வேள்எவ்வி—ஒரு வேளாளனாகிய வள்ளல். வெள்ளெருக்கிலையார் என்னும் தமிழ்ப்புலவராற் பாடல் பெற்றவன். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியனால் வெல்லப்பட்டவன்; வேள்பாரியை இவன் குலத்தான் என்பர். (புற-நா.)

வேள்பாரி — வேளாளன் என்பர். கடையெழுவள்ளல்களில் ஒருவன். பாரியைக் காண்க. (புற-நா.)

வேள்வி — (ஐ) கடவுள்வேள்வி, பிரமவேள்வி, பூதவேள்வி, மானிடவேள்வி, தென்புலத்தார் வேள்வி.

வேள்விதத்தன் — காம்பிலிநாட்டு வேதியன். குபேரனைக் காண்க.

வேள்விநிலை — முடிவில்லாத கீர்த்தியையுடையான் தேவர்களும் மனமகிழ யாகம் பண்ணின தலைமையைச் சொல்லும் புறத்துறை. (பு. வெ. பாடாண்.)

வேறநிலை — ஒரிடப்பெயர். இந்திரனைவிட்டுப் பழிநீங்கி வேறாய்நின்ற இடம் (திருவிளை-இந்திரன்.)

வேறுமண்டலம்—கிரௌஞ்ச தீபத்திலுள்ள வருஷம்.

வேற்றுப்படைவரவு—போர்மிகும் வேலான் சூழ்தல் விட்டுப்போக இட்டமாலை மார்பினையுடைய வேற்றுவேந்தன் வரவினைக் கூறும் புறத்துறை. (பு. வெ.)

வேற்றுப்பொருள் வைப்பணி — இது பொதுப்பொருளாற் சிறப்புப் பொருளையும், சிறப்புப்பொருளாற் பொதுப்பொருளையுஞ் சாதித்தலாம். அது முழுவதுஞ்சேறல், ஒருவழிச்சேறல், முரணித்தோன்றல், சிலேடையின் முடித்தல், கூடாவியற்கை, கூடுமியற்கை, இருமையியற்கை, விபரீதம் என எட்டு வகை. இதனை

அர்த்தாந்திர நியாயாலங்காரம் என்பர் வடநூலார். (தண்டி)

வேற்றுமை — பெயர்ப்பொருளை வேறுபடுத்துவது. அது எட்டுவகைப்படும். அவற்றில் தமக்கென உருபுள்ளவை ஆறு வேற்றுமைகள். முதல்வேற்றுமை எட்டாம் வேற்றுமைகளுக்கு உருபுகள் இல்லை. முதல் வேற்றுமை, பெயரின் இயல்பே; இரண்டாம் வேற்றுமையினுருபு, ஐ; பொருள் ஆக்கல், அழித்தல், அடைதல், நீத்தல், ஒத்தல், உடைமை முதலியனவாம், மூன்றாம் வேற்றுமையினுருபு, ஆல், ஆன், ஒடு, ஓடு முதலியன; பொருள்கள், கருவி கருத்தா உடனிகழ்ச்சி. நான்காம் வேற்றுமையினுருபு, குவ்வாகும்; பொருள், கொடை, பகை, நேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை. ஐந்தாம் வேற்றுமையினுருபு இல், இன் முதலியனவாம். பொருள், நீங்கல், ஒப்பு, எல்லை, ஏது முதலியனவாம். ஆறும்வேற்றுமையினுருபு, அது, ஆது, அ முதலிய; பொருள் பண்பு, உறுப்பு, ஒன்றன்கூட்டம், பலவினீட்டம் ஆகிய தற்கிழமைப் பொருளும், பொருளிடம் காலம் எனும் பிறிதின்கிழமைப் பொருளுமாம். எழாம்வேற்றுமையினுருபு இல், கண் முதலியன; பொருள் பொருள் முதலிய ஆறும் தற்கிழமை பிறிதின்கிழமையாகிய இரண்டிற்குமிடனுதலாம். எட்டாம் வேற்றுமை பெயரின் விகாரமாம். (நன்.)

வேற்றுமைப்புணர்ச்சி — சொற்கள் புணருகையில் வேற்றுமையுருபுகள் விரிந்தும் தொக்கும் புணர்வன. (நன்)

வேற்றுமையணி — 1 அஃதாவது உபமானோபமேயங்களில் யாதேனுமொன்றை விசேடமுடைத்தாகச் சொல்லுதலாம். இதனை வடநூலார் வியதிரேகாலங்கார மென்பர்.

2. சொல்லாலும் குறிப்பாலும், ஒப்புடை யிருபொருளை ஒருபொருளாவைத்து அவற்றைத் தம்முள் வேற்றுமைப்படக் கூறுவதாம். இது ஒருபொருள் வேற்றுமைச்சமம், இருபொருள் வேற்றுமைச் சமம், குணவேற்றுமை, பொருள், சாதி, தொழில், விலக்கு, சிலேடை முதலியவாக வேறுபடும். இதனை (வியதிரேகாலங்கா மென்பர் வடநூலார். (தண்டி.)

வேஷன் — குரோதகீர்த்தி என்பவனின் குமாரன்.

## வை

வைகாலிகம் — பெண்பிள்ளை ரோகத்தாலாகயீறும் வேறுகாரணத்தாலாயினும் மூப்புக் கொள்ளுவது. இவளுக்கு மாதவிடாய் தோடமில்லை (பரா.மி.)

வைகர்ணம் — திருப்பாற் கடலின் வடபாகத்திலுள்ள திருமாலின் ஆலயம். (பாரசாங்.)

வைகர்த்தர் — ஒரு சூரியர்; இவர் ஒருமுகம், இரண்டு அஸ்தம் இரண்டு கைகளிலும் பொற்றாமரைப் புஷ்பமும், ஆயுதமும் கொண்டு ஸ்வர்ணபூஷணமும் மஞ்சள் நிறமான பட்டடையுந் தரித்தவராயிருப்பர்.

வைகர்த்தனன் — கர்ணனுக்கு ஒரு பெயர்.

வைகாநஸம் — 1. பாஞ்சராத்திர ஆகமத்தின் பகுப்பு.

2. விகனஸருஷி; விஷ்ணுமூர்த்தியின் மனதிற்பிறந்தவர். இந்த வைகானஸ ஸூத்ரம் வேதங்கள் நான்குபிரிவாகப் பிரிவுபடுமுன் சூத்ரமானவை. இந்த விகனஸர் செய்த சூத்திரத்தை யனுட்டிப்போர் வைகானஸர். இந்த ருஷியின் சீடர்கள் நால்வரான மரீசி, அத்ரி, பிருகு, காச்யபர். இந்த நால்வருஞ்சேர்ந்து நான்கு லக்ஷங் கிரந்தங்கள் செய்தனர். இவைகளுக்கும் வைகானஸம் என்று பெயர். இந்த விகனஸசூத்ரம் பதினொரு பிரச்னமும், மந்திரம் எட்டுப் பிரச்னமுமாம். இவையன்றி க்ருஹிதம், முப்பத்திரண்டு பிரச்னமும் இயற்றினர். விகனஸரின் சாகை யஜுஸ். இந்த சூத்ரம் பதினொரு பிரச்னத்தில் க்ருஹ்யபாகங்கள் பகுவாயும் விசதமாகவும், தெய்வீகபாகம் சுருக்கமாகவும் கூறியிருக்கின்றது. இவற்றை யுபதேசிக்கப்பெற்ற இருடிகள் நால்வரும் அவற்றை முதனூலாகக் கொண்டு தெய்வீகபாகங்களை விசதமாகவும் க்ருஹ்யபாகத்தைச் சுருக்கியும் அநேக கிரந்தங்களைச் செய்திருக்கின்றனர். அக்கிரந்தங்கள் ஒவ்வொன்றிலும் கர்ஷணாதி பிரதிஷ்டை உற்சவம் பிராயச்சித்தாதியீருகக் கூறியிருக்கின்றனர். அந்நான்கு ருஷிகள்காலத்திற் கொத்தபடியாய்ப் பல கிரந்தங்கள் செய்தனர். மேற்கூறியவற்றுள் க்ருஹ்யமாவது - சரீரசம்பந்தமான விஷயம், தெய்வீகமாவது — ஆலயநிர்மாணாதி பிரதிஷ்டாபிராயச்சித்தாந்தம் கூறுவது. ஷைவைகாஸனருக்குக் கருக்கொண்ட எட்டாமாதத்தில் செய்யும் விஷ்

ணுபலியென்னுங் கிருத்யம் பிரதானம். (விஷ்ணுபலியென்பது கருவிலேயே மந்திரோபதேசஞ்செய்வது) ஆதலா லிவர்களுக்குச் சமாச்ரயணங் கிடையாது. இவற்றள் வைகானஸம் முதனூல்; மற்ற சிடர் செய்தவை வழிநூலாயிருக்கலாம்.

**வைகாநஸர்** — 1. விகனஸருஷிக்கு ஒரு பெயர். இவரால் வைகானஸம் செய்யப்பட்டது.

2. வைகானஸாகமம் அநுஷ்டிப்பவர்.

3. பிரமன் சபையில் உள்ள இருடிகள்.

4. வானப்பிரஸ்தாச்சிரமத்துப் பகுப்பினர். தானே விளையுந் தானியத்தால் சீவிப்பவர்.

5. மாலுதான ருஷியின் தந்தை ; எச்ய சருமனைக் காண்க.

6. வைகானஸருஷி கூறிய ஆகமத்தை அநுசரிப்பவர்கள். இவர்கள் அர்ச்சகர்கள். இவர்கள் வடநாட்டில் ஆசாரியர்களாகவும் இருக்கிறார்கள்.

**வைகாயசம்**—பலியின் விமானம்; நினைத்த இடம் செல்லத்தக்கது.

**வைகாரம்** — கிரிவிரசத்துக்கு அரணாய் உள்ளமலை.

**வைகுண்டம்** — இந்த உலகத்தின் பெருமைகளைத் தேவராலும் கூறமுடியாது. ஆயினும் அர்ச்சராதியிற் கூறியுள்ளவற்றைச் சிறிது சுருக்கிக் கூறுகிறேன். அஹஸையும் சுக்லபக்ஷாபிமானியையும் உத்தராயணாபிமானியையும், சம்வச்சராபிமானியையும், வாயுவையும், சூர்ய மண்டலத்தையும், நக்ஷத்திர மண்டலத்தையும், சந்திர மண்டலத்தையும், அமாநவ லோகத்தையும், வருணலோகத்தையும், இந்திர லோகத்தையும் சத்திய லோகத்தையுங் கடந்து அண்டத்தினையும் பெரும்பாழான மூலப் பிரகிருதியையுந் தாண்டிச் சென்றால் தில்லைவிருக்ஷமும் அமிர்தவாகினியான விரசையு மிருக்கும். அவ்விடம் அநேகமாயிரம் ஆதித்தியர் உதித்தாற்போல் அதிக தேஜஸ்ஸுடன் சதுர்புஜனாய், சங்கசக்ரதரனாய் அமானவன் எழுந்தருளி யிருப்பன். அப்பால் நித்திய சித்தராலே நெருங்கி இவ்வளவென்று அளவிடப்படாத திவ்யதேசமிருக்கும். அவ்விடம் திவ்ய வாத்யங்களுண்டாயிருக்கும். பின்னும் நித்ய முக்தர்களுடைய ஆநந்தகள மிருக்கும். பின் திவ்ய மாலை, திவ்யாஞ்சனம், திவ்ய சூர்ணம், திவ்யவஸ்திரம், திவ்யாபரணத்துடன் கூடிய திவ்யாப்ஸரஸ்ஸுக்களும் நித்யசூரிகளு மிருப்பர். இவற்றைக் கடந்து அப்புறஞ் சென்றால் அநேகங் கொடிகளாலும், பல வண்ணத்தையும், வாசனையையும் உடைய அப்ராக்ருத புஷ்பங்கள் நிரம்பி, நிழல் தெரியாதபடி நெருங்கித் தேன்வெள்ளங் கொண்டோடுகின்ற கற்பகச் சோலைகளாலும், பலவிதமான பூக்களாலும், ரத்னங்களாலுஞ் சமைந்த லீலா மண்டபங்களாலும், கிரீடா சைலங்களாலும், செவிக்கினிய வார்த்தைகளைக் கொஞ்சிப் பேசும் சுகசாரிகாமயூர கோகிலங்களாலும், மாணிக்கம், பவளம், முத்து முதலியவற்றாலுஞ் சமைந்த படிகளைப் பெற்று நித்தமுக்தர் மனம்போல் தெளிந்த அமிர்த ரஸங்களால் நிறைந்து தாமரை செங்கழுநீர் முதலிய அப்ராக்ருத பூக்களால் நிறைந்த தடங்களாலும் பலவித பூம்படுக்கைகளாலும் பூவின் தேன்களில் படிந்து பாடுகின்ற திவ்ய வண்டுகளாலும், அடைந்தவரை மயலேற்றும் அநேக கோடி உத்யானங்களாலும் பலாதனங்களால் சமைந்த மேடைகளை யுடைத்தாய் அநேக மாயிரம் இரத்தினத் தூண்களால் அலங்கார மடைந்து உபய வீபூதியிலுள்ளாரும் ஒரு மூலையில் அடங்கும்படி யிடமுடைத்தாய் தாமரை செங்கழுநீர் சந்தனம் முதலியவற்றை யளைந்து வருகிற மந்த மாருதத்தைப் பெற்று நிரதிசயாநந்தமயமான திருமாமணி மண்டப மொன்றிருக்கும். அம்மண்டபத்தில் தாந்தாந் திருமுடிகளிலே திவ்யாயுதங்களைத் தரித்துக் கொண்டு கூப்பின கைகளும் தாங்களுமாயிருக்கிற அஸ்த்ர சஸ்த்ராக்கியரான திவ்ய புருஷரும் சங்கல்பத்தால் சகல உலகத்தையும் முத்தொழிற் படச்செய்யும் சேனை முதலியாராதியான திவ்ய புருஷருமெழுந்தருளியிருப்பர். அவர்களின் நடுவில், உபயவீபூதியையும் தொழிலாக வகுப்புண்டு சர்வாச்சர்ய மயமான கோப்புடைய சீரிய சிங்காசனத்தில் பன்னிரண்டிதழாய் அதில் திவ்ய கர்ணிகையில் புஷ்ப சஞ்சய விசித்ரமான திவ்யயோக பர்யங்கமாய் அநேக கோடி சந்திரர்களை யுருக்கி வார்த்தாற் போல் குளிர்ந்தபுகரைப்பெற்ற திருமேனியுடையனாய்க் கல்யாண குணங்களுக்கு முடிவில்லாமையால் சர்வவித கைங்கர்யத்திலும் அதிக்ருதனான அநந்தன் என்னும் திருநாம முடையனாய்ப் பகவத் அநுபவத்திற்குப் போக்குவீடாகப் பல தலைகளை

யுடைய ஆதிசேஷனுகிற திருவணையில்,
இயற்கைமண முள்ள கூந்தலையும் வடிக்
கோலவா ளெடுங் கண்களையும், யௌ
வனத்தையும், ஸௌகுமார்யத்தையும்,
பெருமையையு முடையளாய்ச் சர்வாத்
மாக்களுக்கும் என்று மொக்கச்சார்வாய்
ஒசிந்த ஒண்மலராளான பெரிய பிராட்டி
யார் வலப்பக்கம் எழுந்தருளி யிருக்க,
அவளிலும் மிகுந்த க்ஷமாயாதி குணங்களை
யும் பேரழகையு முடையராய் அவளுக்கு
நிழல்போல்வாரான மற்ற இரண்டு நாய்ச்
சிமார் இடப்பக்கம் சேவித்திருக்க, இவர்க
ளுக்கு நடுவில் மூன்று மின்கொடிகளோடு
கூடித் தாமரை பூத்ததொரு காளமேகம்
வெள்ளி மலையை மூடிக்கொண்டிருப்பது
போல் திருமுக மண்டலத்தின் ஒளிவிளங்
கவும், தன் கிரணங்களால் பல கிரணங்களை
யும் மூட்டாக்கிடுகிற திருமுடியையும்.
கண்டார் கண்ணும் நெஞ்சு மிருளும்படி
யிருண்டு சுழன்று அஷ்டமி சந்திரனில்
அமிர்த தாரை விழுந்ததுபோல் திரு நெற்
றியில் சாத்தின திருநாமத்தை மறைக்கும்
பூந்தண்டுழாய் நாறும் நீலப்பனி யிருங்குழ
லும், நயந்தார் நச்சுந் திருநெற்றியினையும்
தன் கைச் சார்ங்கம்போல் விளங்கும் அழ
கிய திருப் புருவங்களையும் குளிர்ந்து செவ்
விபெற்றுக் கரியவாய்ப் புடை பரந்து
மிளிர்ந்து செவ்வரியோடி இலங்கொளி
சேர் அரவிந்தம் போன்று நீண்ட திரு
நயனங்களையும், கோலநீள் கொடி மூக்
கையும், திவ்ய கபோலங்களையும், பூரண
சந்திரன் முழு நிலாவைச் சொரிந்தது
போல், திருமுகத்தின் ஒளியைப் பிரவ
ஹிக்கிற புன்சிரிப்பையும் அழகிய திரு
வதரங்களையும் சிரக்கம்பனம் பண்ணுகை
யால் அசைந்து திகந்தங்களில் முட்டி
தேஜஸ் அலையெறிந்து லாவண்யசாகாதி
களில் எறித்துள்ளுகிற மின்னுமா மணி
மகர குண்டலங்களையும், காந்தி, சைத்ய,
மார்த்தவ, சௌரப்யாதி குணங்களாலே
சகலகலாபூர்ணமாய்ச் சர்வாக்லாத கரமாய்
மறுக்கழற்றின சந்திர மண்டலத்தையும்
அப்போதலர்ந்த செந்தாமரைப் பூவையும்
தோற்பிக்கக்கடவதாய்க் கிட்டினாரை மய
லேற்றி மயக்கும் மாயமந்திரமான கோளி
ழை வாண்முகத்தையுஞ் சங்கையொத்த
திருக்கழுத்தையும், திருத்தோள்களையும்,
கோல மாமணியாகமும், முத்துத்தாமமும்
ஸ்ரீகௌஸ்துபர்தொடக்கமான குருமா
மணிப்பூண் குலாவித் திகழுகிற அழகிய
திருமார்பையும் வெண்புரிநூலையும், திரு
வுதர பந்தனத்தையும், நெஞ்சையுங் கண்
ணையும் சுழியாறுபடுத்துகிற திருவுந்தியை
யும் சங்கத்தையும், சக்கரத்தையும், சூர்ய
சந்திராரகக்கருதி அலருவதுங் குவிவதுமா
யிருக்கிற நாபிக் கொடியையும், துரி சேரி
டையையும் ஆகாசம்போன்ற அரையிலு
டுத்த பீதக வாடையையும், ரம்பா ஸ்தம்
பாதி கம்பீரமான திருத்தொடைகளையும்
தாமரைநாளம் போலே கண்டகிதங்களான
திருக்கணைக்கால்களையும் நாய்ச்சிமாருங்
கூடக் கூசித் தொடவேண்டும்படி அத்யந்த
மிருதுக்களால் கிரதிசய போக்யங்களான
துயாறு சுடரடிகளையும், திரையொழுக்குப்
போலிருக்கிற திருவிரல்களையும் அதில்
அநேக சந்திரர் உதித்ததுபோன்ற திருநகங்
களையும் கரிய கோலத் திருவுருவையும்நித்ய
சூரிகளைக்கொள்ளையூட்டிக்கொண்டுவிடாக்
கொண்டார் முகத்தில் நீர்மடை திறந்து
விட்டதுபோல் சகல சிரமங்களும் மாறும்
படி குளிர்ந்து தெளிந்து நித்யமுத்தரைக்
கடாக்ஷிக்கும் காம்பீர்ய மாதுர்யாத்ய நவ
திவ்யகுணகண பூஷிதங்களாய் அநிமேஷ
கர திவ்யபாவகர்ப்பங்களாய்ப் பூஅலர்ந்தாப்
போலிருக்கிற திருமுகத்தை யெங்குமொக்
கச் செவிபெறுத்து வினவானலீலா லாபங்
களாலே சூரிகளுடைய இருதயங்களை
யுகப்பியாநின்றுகொண்டு எழுலகுந் தனிக்
கோல்செல்லத் திருவடிகள் இருவருஞ்
சேவித்து நிற்கக் குழுமித் தேவர்குழாங்
கள் கைதொழ எழுந்தருளியிருக்கும் பரம
பதமாம்.

**வைதண்டர்** — சுப்பிரருக்குக் குண்டையிட
த்து உதித்த குமாரர். விஷ்ணுவின் அம்
சம். இலக்ஷ்மியைச் சந்தோஷிப்பிக்க ஒரு
உலகம் சிருட்டித்தார். இது வைகுண்டம்
எனப்பட்டது.

**வைகை** — பாண்டிநாட்டில் மதுரை நகரத்
தில் உள்ள நதி. குண்டோதரனுக்குத்
தாகந்தணிக்கச் சிவாஞ்ஞையால் வந்தது.
மாணிக்கவாசக சுவாமிகளுக்காகச் சிவாஞ்
ஞையால் வெள்ளங் கொண்டது. அக்கா
லத்திலே அரசன் ஆணைப்படி அணையிட
வந்தியென்பவள் பொருட்டுச் சிவமூர்த்தி
கூலியாளாய்ச் சென்று மணல் எடுக்கப்
பெற்ற பாக்கியம் பெற்றது.

**வைசம்பாயனர்** — விசம்பருஷியின் குமா
ரர். வியாசருஷியின் மாணாக்கர். ஜனமே

ஜயனுக்கு வியாசர் உபதேசத்தால் பாரதம் அருளிச்செய்தவர். யசுர்வேதி. இவர் மாணாக்கர் யாஞ்ஞவற்கர் முதலிய நால்வர். வற்கரைக் கோபித்தவர். இவரை ஒருமுறை பிரமகத்தி பற்றியது. மாணாக்கர்கள் அதனையேற்று இவரை அதினின்று நீக்கினர்.

**வைசம்பாயனன்** — சண்டாள கன்னிகை சூத்திரக மன்னவனிடம் கொணர்ந்த கிளி; மகாசுவேதைமீது காதல்கொண்ட புண்டரிகன் வைசம்பாயனனாகப் பிறந்து சாபத்தாற் கிளியாயினன்.

**வைசவ்வை** — ஒரு அந்தரங்க சிவபக்தியுள்ள வீரசைவத் தவப்பெண். இவள் கணவன் சைநன். இவள் கணவன் சொற்படி பல பண்ணிகாரங்கள் அறுசுவைப் பதார்த்தங்கள் அன்னமுதலியவை சைநசந்நியாசிகளுக்கு விருந்திடச் சமைக்கையில், இவை சிவநேசர்க்குப் படைப்பின் புண்ணியமாமே என்று நினைத்து வருந்தினள். தெய்வச்செயலால் கணவனும் சந்நியாசிகளை அழைக்க நீங்கினன். இவள் கருத்துணர்ந்த சிவமூர்த்தி ஒரு சங்கமராய் அவ்விடம் எழுந்தருளினர். ஔவை எதிர்கொண்டழைத்துத் தான் சமைத்த அன்னமுதலியவற்றை அளித்தனள். அத்தருணத்தில் கணவன் சைநசந்நியாசிகளுடன் வந்து சங்கமரைக்கண்டு மனம்பொருது மனைவியைப் புடைத்தனன். அத்தருணத்தில் சிவமூர்த்தி மறைந்தனர். அவளை அடித்த அடி ஒன்றேனும் அவள்மீது பட்டிலது. அவ்வடிகள் முழுதும் சைநசந்நியாசிகள்மீது பட அவர்கள் வருந்தி இவை சவ்வையை அடித்ததால் நேரிட்ட தீங்கென்றனர். புருஷன் இவள் எனக்கு ஆகாளென்று விலக்க ஔவை சைநவிக்கிரகத்திடம் சென்று சிவமூர்த்தியாக அதனை எண்ணி வணங்கினள். அது சிவலிங்கமாயிற்று. வைசவ்வை களிப்படைந்தனள்.

**வைசாலின்** — விசாலன் குமாரி. அவீக்ஷித்தைக் காண்க.

**வைசியதருமம்**—இவன் உபநயனம் முதலிய சமஸ்காரம் செய்துகொண்டு பசுவைக் காப்பதிலும் பயிர் முதலிய ஜீவனவிர்த்தியிலும் முயலவேண்டும். பசுக்களைக் காத்தல்வேண்டும். முத்து நவமணி உலோகம் வஸ்திரம் கற்பூரம் முதலிய வாசனைத்திரவியம் உப்பு முதலிய இரசத்திரவியம் இவற்றிற்குப் பலதேசங்களில் உள்ளவிலைகளையும் சரக்குகளின் சாராசாரங்களையும் அறியவேண்டியது. எல்லாவிதைகளையும் அது விதைக்குங் காலத்தையும் நிலத்தின் குண தோஷங்களையும் படிதாரசு இவைகளில் உள்ள தந்திரஉபாயங்களையும் அறியவேண்டியது. ஒரே சரக்கின் ஏற்றத்தாழ்வு, சரக்கை இவ்வளவு காலம் வைத்திருந்தால் இவ்வளவு விலை ஏறும் குறையும்என்னும்முற்றாராய்ச்சியையும் இந்தத்தேசத்தில் புல்தண்ணீர் இருப்பதால் பசுக்கள் விருத்தி அடையும் என்பதையும் அறியவேண்டியது. பயிர்வேலை செய்வோருக்கும் மாடுமேய்ப்போருக்கும் தேசகாலம் இவற்றிற்குத் தக்கபடி சம்பளம் கொடுக்கவேண்டியது. பலதேச பாஷைகளை அறியவேண்டியது. தருமமாக வியாபாரஞ்செய்து பொருளை விருத்திசெய்ய முயலவேண்டியது. அன்னதானஞ் செய்யவேண்டியது. (மநு.)

**வைசியர்** — 1. மூன்றாம் வருணத்தவர்.

2. (௩) தனவைசியர், பூவைசியர், கோவைசியர், என்பார் முறையே வணிகர், உழவர் இடையர் எனப்படுவோர். இவர்க்கு முறையே பொருளீட்டல், பயிர்செய்தல், ஆன்காத்தல் தொழில்.

3. இவர் பிரதமஸ்தானாதி (௩௬) ஸ்தானபரியந்தமான எண்களை யறிந்து க. (ஏக) ரூபம், பூமியாதி சமிஞ்ஞை 2-வது துவந்துவ துவிதம். உ. (துவய) விதிய, யுக்ம, யுகள, யுக, உபய, பாகு, பாத, பக்ஷ, நயனாதி, சமிஞ்ஞை, ௩. (திரய) திருதிய, ஹார, நயன, அக்கினி, புராதி, சமிஞ்ஞை, ௪. (சதுர்த்தி) வேத, வர்ண, ஆச்சிரமாதி, சமிஞ்ஞை, ௫. (பஞ்ச) ஹார, வக்தர, கஷாய, விருத, இந்திரிய, விஷய, பாண, பாண்டவ, பூதாதி, சமிஞ்ஞை, ௬. (ஷடு) பாவ, ராஜாங்க, இருது, ரஸ, ஸ்கந்த முக, வேதாங்க, வர்ணகர்ம, தர்சனாதி, சமிஞ்ஞை, ௭. (சப்த) முனி, கிரி, தானங்க, ராசாங்க, துரக, தாது, சாபாங்க, ஸ்வா, சாகராதி, சமிஞ்ஞை, ௮. (அஷ்ட) வசு, திக்கு, கஜ, மத, விகார, காமாதி, சமிஞ்ஞை, ௯. (நவ) திரவியநிதி, கிரக, ரத்னாதிசமிஞ்ஞை. ௧0. (தச) பிந்து, சூனிய, நாஸ்தி, அவதார, ககனாதி, சமிஞ்ஞை, இவை முதலான சமிஞ்ஞைகளையும் அறிந்து எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டலாதி அளவைகள் அறிந்து, சுவர்ணத்தின் மாற்று, பிரவாளத்தின் கழ

ஞ்சு, மணியின் சவ்வு, ரத்தினத்தின் சூத்திரபரீக்ஷை. வச்சிரத்தின் மஞ்சாடி, பச்சையின் ரதி முதலிய அறிந்து, கிரயம், வட்டம், வட்டி முதலிய அறிந்து பொருள் செய்து, கிருஷி, கௌபாலிகம், யசனம், அத்யயனம், தானமுடன் சூர்யாதி, பத்தி முதலிய கர்மயுக்தரானவர்கள் வைசியராம். வக்குவமகருஷியைக் காண்க. இவர்களுக்குத் தசாங்கம். கிட்கிந்தமலை, பம்பையாறு, கருடக்கொடி, காந்தண்மலர், பைந்நாகமுரசம், கலிமாருதப்புரவி, கமலகண்டிகைத்தேர், உபலாயபுரி பட்டணம், வைகுந்தவளநாடு, ஜயவாரணம் முதலியனவாம்.

4. மநுவால் கூறப்பட்ட மூன்றாவது ஜாதியார் வைசியர். உண்மையான வைசியர் காணப்படவில்லை. சில வர்த்தகசெட்டிமார்களும், கோமட்டிகளும் தங்களை வைசியர் என்பர். வேளாளரிற் சிலர் பூவைசியரென்றும், இடையரிற் சிலர் கோவைசியர்களென்றும் கூறுவர். நாட்டுக் கோட்டை செட்டிகளும் தங்களைப் பூவைசியர் என்பர். தமிழ் வணிகர் தங்களை வைசியர் என்பர். ஆதலால் இவர்களில் யாவர் உண்மையான வைசியர் என்று துணிந்து கூறமுடியவில்லை. (தர்ஸ்டன்.)

வைசுவதேவம் — 1. வேதியர் நித்தியமாகச் செய்யும் அக்கினிகார்யமாகிய ஒருவித யாகம். இதில் பலிகொள்ளுந் தேவதைகளாவர். அக்னி, சந்திரன், அக்கினி ஷோமர்கள், விசுவேதேவர்கள், தன்வந்திரி, குரு, அநுமதி, பிரசாபதி, ஆகாசம், பூமி, தவிஷ்டகிருது என்போர்.

2. எந்த யாகத்தில் எந்தத் தேவர் பூசிக்கப்படுகின்றனரோ அந்த யாகமாம். (பாரமா.)

வைசேடிகன்மதம் — சுகச்வரூபனாய் நித்தியனை சிவன்ஒருவன் உண்டெனவும், ஆன்மா, அநேகன், சடனாய் குணகுணிபோல் அவத்தையடைந்து பல பிறப்பிடைப்பட்டுக் கருடதியானத்தால் விஷவேகந் தணிவதுபோலச் சிவபாவனையால் முத்தியடைவன் என்பன். இம்மதம், விக்ரம சகம் (௧0௧௪) ஆண்டிற்குமுன் அந்தரஜீகமென்னும் நகரத்தை அரசாண்ட பலச்ரீ எனும் அரசன் போஷணத்திலிருந்த கணபுக் என்றும், கணாதனென்றும் பெயருள்ளவனால் தாபிக்கப்பட்டது. விசேஷமென்று ஒருபொருள் இவன் கூறினதினால் இம்மதத்திற்கு வைசேஷிகமென்று பெயருண்டாயிற்று. இதனைக் கணாதமதமெனவுங் கூறுவர். இம்மதம் உலகம் பரமாணு காரியமெனவும், கர்ம நிஷேதத்திற்குப் பரமேச்வர சாக்ஷாத்காரம் தவிர வேறு உபாயம் இல்லையெனவும், ஆத்மா தேகேந்திரியாதிகளுக்கு அந்நியன் எனவும், இம்மதத்தில் பிரத்தியக்ஷம், அநுமானம் இரண்டே பிரமாணம் என்றும் கூறும். (தத்துவ.)

வைச்சிரவணன் — விச்சிரவாகு குமாரன். (குபேரன்) இவன் (௩000) வருஷம் தவஞ்செய்து இயக்கர்க்கு அரசனாகித் தந்தையால் இலங்கையைப் பெற்றான்.

வைச்வாநரன் — 1. ஒரு அக்கினி. இவன் தன் தந்தைக்கு, நாரதர் (௧௨) வயதில் உன்பிள்ளை இடிவிழுந்து இறப்பன் எனக் கூறக் கேட்டுச் சிவமூர்த்தியை யெண்ணித் தவமியற்றச் சிவபிரான் இந்திரனைப்போல் தரிசனந்தந்து என்ன வரம் வேண்டுமெனக் கேட்க, இவன் உன்னிடம் ஒருவரமும் வேண்டேன் என, இந்திரன் வாள்கொண்டோச்ச எடுக்கையில் வைச்சுவாநரன் அஞ்சக் கண்டு, சிவமூர்த்தி தரிசனம்தந்து முதுகைத் தடவி ஒரு உலகம் சிருட்டித்து அக்னியாக நியமித்தனர். (காசிகண்டம்) காசியில் விச்வாநரன் என்னும் ரிஷிக்குக் குமாரனாய்ப் பிறந்தமையால் இப்பெயர் பெற்ற அக்கினி, இவனை ஆங்கீரச வம்சத்து அக்கினி யெனவும் கூறுவர்.

2. தநு என்னும் அசுரன் புத்திரன். இவனுக்கு அயசிரை, உபதானவி, காலகை, புலோமை என்னும் நான்கு குமாரிகள் உண்டு. இக்குமரியரில்காலகையையும் புலோமையையும், கச்யபனும், உபதானவியை இரண்யாக்ஷனும், அயசிரயைக் கத்ருவும் மணந்தனர்.

வைடூர்யம் — 1. நருமதை தப்திக்கு இடையில் இருக்கும் மலை.

2. ஒரு நாடு.

3. நவமணிகளில் ஒன்று.

வைடூர்யர் — வைடூர்ய நாடாண்ட அரசர்.

வைணவபுராணம் — விஷ்ணு புராணம் காண்க.

வைணவமதம் — விசிட்டாத்வைதம் காண்க.

வைதரணி — 1. களிங்க தேசத்திலுள்ள ஒரு நதி. இதில் இருடிகள் யாகஞ்செய்து பசுபதிக்குப் பசுபாகந் தந்தனர். Betrani is a

river near Cuttack in the province of Orissa

2. பிதிர்க்களுக்குச் சுதையிடம் பிறந்த குமரி.

3. யமபுர வழியில் உள்ள நதி, (௪0௦) யோசனை அகலமுள்ளது. நீர்இன்றி, சீ, இரத்தங்களால் நிறைந்துள்ளது. உலகத்தில் கோதானஞ் செய்தவனை இவ்விடம் ஒரு பசு வந்து தாங்கிச் சென்று அக்கரையில் விடும்.

**வைதருப்பநெறி** — இது செய்யுளினெறியுளொன்று. இது செறிவு, தெளிவு, சமனிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்ற பத்துக் குணங்களு முயிராகப் புலப்படுவது. (தண்டி.)

**வைதர்பி** — சகாராஜன் மனைவியாகிய கேசினி. இவர்களுக்கு அறுபத்து ஆறாயிரம் பிள்ளைகள்.

**வைதர்ப்பன்** — ஒரு அரசன். இவன் தேவி சந்திரிகை. இவர்கள் கிருதமாலை யென்னும் வனத்தி லிருந்து அவிநாசித்தலம் வந்து பல திருப்பணிகள் செய்வித்துப் புத்திரப்பேறு பெற்றனர்.

**வைதர்ப்பி**—விதர்ப்பராசன் பெண்; இவள் முன் பிறப்பில் புரஞ்சயன். இவள் மலைபத்துவசனை மணந்து அவன் தவத்தில் இறக்க விசனமடைந்து இருக்கையில் அவிக்யாதரரால் முன் பிறப்புணர்த்த உணர்ந்து ஞானமடைந்தவள்.

**வைதர்மியசமை** — வைதர்மியத்தாலே எதுவை தாஷிக்கும் உத்தரம். (வேற்றியல்பு.)

**வைதானர்** — சாதுகாரணர் மாணுக்கர்.

**வைதிகசாத்திரம் ஆறு** — மீமாம்சை, நியாயம், வைசேஷிகம், சாங்கியம், யோகம், வேதாந்தம் என்பன.

**வைதிசம்** — ஒரு பட்டணம். சத்துருக்கன் குமாரனுகிய சத்துருகாதி ஆண்டது.

**வைதிருதி** — 1. பதினொரா மன்வந்தரத்து இந்திரன்.

2. தர்மசேது வென்னும் விஷ்ணு அம்சத்தின் தாய்.

**வைதிருதிகள்**—விதிர்த்தியினுடைய குமாரர்.

**வைதேகன்**—1. (சு) நிமியைக் காண்க.

2. அரசப் பெண்ணினை வணிகன் கூடப் பிறந்த குமாரன். அந்தப்புரக் காவற்றொழில். (மநு.)

**வைதேகி**—1. சதாநீகன் தேவி. குமாரன் அச்வமேதன்.

2 விதேகம் மிதிலை. இந்நாடாண்டோன் குமாரி. சீதாபிராட்டிக்கும் பெயர்.

**வைத்தமாநிதியார்** — எழுபத்திஞலு சிம்மாசனுதிபதிகளில் ஒருவர். (குரு பரம்பரை).

**வைத்தியநாத தேசிகர்** — இவரூர் சோழநாட்டிலே சப்தவிடங்க க்ஷேத்திரங்களில் ஒன்ருகிய திருவாரூர். அபிஷேகஸ்தர் குலம். காலம் பதினேழாம் நூற்ருண்டின் பிற் பகுதி. வன்மீகநாத தேசிகரின் மைந்தர், படிக்காசுப் புலவர், சதாசிவதேசிகர், ஒப்பிலாமணி தேசிகர், திருவேங்கட நாதர் முதலியோரின் ஆசிரியர். தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களையும் சங்கச்சான்ருேர் இலக்கியங்களையும் நன்கு கற்றவர். எழுத்து, சொல், பொருள், அணி, யாப்பு என்ற ஐந்திலக்கணங்களையும் அமைத்துச் சூத்திரமும் உரையுமாக இலக்கண விளக்கம் என்னும் சிறந்த இலக்கண நூல் இயற்றியவர். இது குட்டித் தொல்காப்பியம் எனப் பெயர் பெற்று சென்ற ஒரைம்பதாண்டுக்கு முன்வரையிற் பெரும் புலவர்களாலும் படிக்கப்பட்டதொரு நூல். இதனை யன்றி நல்லூர்ப்புராணம், வாட்போக்கிப் புராணம் முதலிய புராணங்களும், பாசவதைப்பரணி, திருவாரூர்ப்பன் மணிமாலை, மயிலம் பிள்ளைத்தமிழ்போன்ற பல சிறுநூல்களும் இயற்றியவர். அந்தகக் கவி வீரராகவ முதலியார் போன்ருேரால் புகழ்ந்து பாடப்பட்டவர். 'ஐம்பதின்மர் சங்கத்தா ராகி விடாரோ, நாற்பத் தொன்பதின்மரென்றே யுரைப்பாரோ — இம்பர் புகழ், வன்மீக நாதனருள் வைத்தியநாதன் புடவி, தன்மீதக் நாட்சரித்தக் கால்.' என்று கவி வீரராகவ முதலியாரால் புகழ்ந்து பாடப்பட்டவர். பொம்மயபாளையம் சிவஞான பாலையசித்தர்மீது பாசவதைப் பரணி பாடிச் சன்மானம் பெற்றவர். 'காவா யெனச்சிறு தெய்வந்தனைத்தினங் கைதொழுது, நாவாய் தழும்பப் புகழ்ந் தென் பயன்கதி நாடின்மும்மைத், தேவாயத் தேவிற்குங் கோவாய்மணிப் பொற்சிங் காதனஞ்சேர், பூவாய்மதிக் கண்ணியாரூர்ப் பிரான்பதம் போற்றுமினே.' என்பது திருவாரூர்ப் பன்மணிமாலை.

**வைத்தியநாதமுனிவர்** — 1. இவர் யாழ்ப்பாணத்துள்ள அளவெட்டியெனும் இடத்தவர். வேளாண்சைவர். வடநூல் தமிழ் நூல்களில் வல்லவர். தமிழில் வியாக்ரபாத புராணம் பாடியவர்.

2. புலியூர்ப் புராணம் பாடியவர்.

வைத்தியம் — பழவினையாலும் காரணங்களாலும் மக்கட்கு வாதபித்த சிலேத்மசாரியங்களாகிய பிணிகள் உண்டாம். அவற்றுள், பழவினையான் வருவன அவ்வினையின் முடிவின்கண்ணன்றியேனையவற்றால் தீரா. மற்ற வாதபித்த முதலிய முத்திறத்தாலும் அவற்றின் தொந்தத்தாலும் வருவன மருந்தாற் றீர்வேண்டுதலினாலும், மானைக்காட்டி மானைப் பிடிப்பார் போன்று உடம்பை யுறுதியாகக் கொண்டே யவ்வுடலுறுங் காலத்து அவ்வுடலில் எள்ளிலெண்ணெய் போல் மறைந்துறுங் கள்வனைக் கண்டு உறுதியடைய வேண்டுதலின் வைத்தியமாகிய ஆயுர்வேதம் உடலை நீட்டிக்கப் பெற வேண்டுநர்க்கு இன்றி யமையாததாம். அவ்வாயுர்வேதம் மருத்துவ னிலக்கணம், மருந்தினிலக்கணம், நோயினிலக்கணம், நோய் கொண்டோ னிலக்கணம், ஆக நான்கு இலக்கணத்தினைப் பொதுவகையாக வுடையதாம். அவற்றுள், மருத்துவனிலக்கணமாவது — குலன் அருள் தெய்வங்கொள்கை, மேன்மை, கலையில் தெளிவு, கட்டுரைவன்மை, நிலம், மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சி, யுடையானாய், வாதபித்த சிலேத்மாதிகளின் நடைகளைப் பெற்ற நாடிகளின் பேதத்தையும், அவற்றின் தொந்த பேதங்களையும், மரணநாடி பேதங்களையு மறிந்து அவற்றில் வல்ல ஆசாரியனுடன் பழகினவனாய் ஒஷதிகள், சுத்தி ரஸகந்த பாஷாணாதிகளின் குணங்களை யறிந்தவனாய், விஷப் பிரதிவிஷ மறிந்தவனாய், மருந்து செய்காலம், மருந்தின் வயது, தீயினளவு, புடவகை, எருவினளவு, விறகின் குணபேதம், பத்திய, அபத்திய வகை, பொருள்களின் சீரணகாலம், நாடிபார்க்குங் காலம் அறிந்தவனாய்த் தன்னை விரும்பிக் கொண்டே நோய் கொண்டானை யடைந்து கை, கண், பல், நா, மலம், நீர், தேகம், முகம், ஆகிய அஷ்டதானங்களின் குறி யறிந்து அவன் கொண்ட நோயின் சாத்தியம், அசாத்தியம், யாப்பியம் என்னும் சாதி வேறுபாடும், நோய் தொடக்கம், நடு, ஈறு என்னும் பருவ வேறுபாடும் அறிந்தவனாய், நோயை அதன் குறிகளால் இன்னவகைத் தென்றும், அது வந்த காரணத்தையும், அதனை மருந்து, உதிரங்களைதல், அறுத்தல், சுடுதல் முதலியவற்றால் பரிகரிக்கும் காரணம் அறிந்தவனாய் இருப்பவனாம். இனி மருந்தினிலக்கணமாவது — பாசிவத்தினைவிட்டு நீங்காத பராசத்தி மாயையை க்ஷோபிக்க உண்டான பிரகிருதியிடம் தோன்றிய பஞ்சபூதங்களும் ஒன்றினிடம் ஒன்றாகத் தோன்றிய பிருதிவியில் உண்டான நெல் முதலியவற்றால் அன்னமுண்டாகி அவ்வன்னத்தா லுயிர்த்திருக்கும் உயிர்களுக்கு ஒஷதிகள் நோயைப் போக்க இறைவனால் சிருட்டிக்கப்பட்டன. அவ்வோஷதிகள் நான்குவகைப்படும். அவை: விருக்ஷவகை, செடிவகை, கொடிவகை, புல்வகை என்பன. அந்நான்கு வகைப் பதார்த்தங்களி லிருக்கிற வேர், பட்டை, கட்டை, ரசம், இலை, புட்பம், பழம், வித்து இவற்றாலும், ரஸகந்த பாஷாணாதிகளாலும், மாத்திரை, கட்டு, சூரணம், எண்ணெய், லேகியம், ரஸம், தைலம், செந்தூரம், பானம், தீநீர், வடகம், பஸ்மம், மெழுகு, விரோசனம் முதலிய செய்முறை தவறாமல் செய்வதாம். நோயி னிலக்கணமாவது — கெர்ப்பக்கோளின் குணம், பாலவியாதி, பாலக்ரகதோஷம், சிரரோகங்கள், பலவித சுரம், பலவகைச் சன்னி, பலவகை மூலம், பலவகை அதிசாரம், கிராணி, வாதரோகங்கள், பித்தரோகங்கள், சிலேத்மரோகங்கள், பிரமியம், மேகரோகங்கள், கிரந்தி, சூலை, குட்டம், உதரரோகங்கள் முதலியவற்றின் குணமறிந்து துணிதல். நோய்கொண்டோ னிலக்கணமாவது — பொருளுடைமை, மருத்துவன் வழிநிற்றல், நோய் நிலையுணர்த்தல், வன்மை, மருத்துத் துன்பம் பொறுத்தல் முதலியனவாம். அவற்றுள் பொருளுடைமையாவது, தான் வயித்தியர்க்கு அவர் உவப்பின்வகை பொருள் தருதற்கும் தனக்கு நோய்க் காலத்து வேண்டிய செய்து கொளற்கும் வேண்டிய பொருள் தன்னிடத்தில் இருத்தலாம். மருத்துவன் வழி நிற்றலாவது. மருத்துவன் கூறிய அநுபானம் பத்தியம் முதலிய குறைவின்றி யிருந்து நோய் தீர்த்துக்கொள்ளல். நோய் நிலையுணர்தலாவது — நோய் வந்தவுடன் வைத்தியரிடத்தில் தன்னைத் தெரிவித்துத் தனக்குற்ற தேக நிலையைச் சற்றும் ஒளியாமல் அவர் மனத்துடன் கலந்து தெரிவித்தல். மருத்துத் துன்பம் பொறுத்தலாவது — பத்தியத்தாலும், நோயாலும்,

அனுபானத்தானும், இலங்கனத் தானும், மருந்தின் வேகத்தாலுண்டாம் துன்பத்தானும், தான் முன்னுண்டு பழகிய பொருள்களிலுள்ள பேராசை நீக்கத்தானும் உண்டாம் துன்பங்களைப் பொறுத்தல். இவ்வகை ஒழுகினேன், நோய்நீங்கப் பெற்று முன்னிழந்த பழைய சுகத்தைப் பெற்று இன்புற்று வாழ்வன். இவ்வகை ரோக நீங்கியவன் சுகசரீரியாய் மாதத் திரண்டு முறை நியமித்த காலங்களில் தமக்கு இளையாராயுள்ள மாதரைப் புல்லி, மறுவற்ற விரோசனம் வருஷத்து இரண்டுமுறை கொண்டு, வாரத் திரண்டு முறை சநிபுதன்களில் தைலந் தலைக்கிட்டு வெந்நீரிலாடி, உண்ணுங்கால் புளித்த தயிர், காய்ச்சுப் பால், நீர்மோர், உருக்கு நெய், வெந்நீர், சாதத்தில் அரைவயிறு உண்டு கால்வயிறு வெந்நீர் அன்னமுண்டபின் உட்கொண்டு, ஜீரணமாகாப் பொருள்களை விலக்கி, மெல்லெனத்தின் பொருள்களை மென்று தின்று, வாய் கைகால் அலம்பிச் சற்று உலாவிப், பகலாயின் நித்திரை செய்யாது காரியங்களைக் கவனித்து இரவாயின் காலத்திலுறங்கி உஷக்காலத்தில் எழுந்திருக்க வேண்டும். இதுவே வைத்தியமாம்.

**வைத்தியலிங்கம் பிள்ளை** — இவரூர் யாழ்ப்பாணத்துள்ள வல்லிபட்டித்துறை. சமயம் சைவம். காலம் பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதி. சிவசம்புப் புலவர் மாணவர். சிந்தாமணி நிகண்டு முதலியனவும், கந்தாலங்கார முதலிய உரைநூல்களும், சைவமகத்துவ பாநு முதலிய கண்டன நூல்களும் இயற்றினவர். சீர்செறி செஞ்சடைக்கட் டிகழ்மதிப் பிளவு தாங்கும், ஏர்செறி கரிமுகன்ற னிணைமலரடியை யேத்தி, நேர்செறி இளைஞரோர் சொற் கொருபொரு ளோரா யோரப், பார்செறி நிகண்டுசிந்தா மணியெனப் பகர்வனென்றே - என்பது சிந்தாமணி நிகண்டு காப்புச்செய்யுள்.

**வைத்ருதிவியதிபாத பாபாம்சக தோஷாபவாதம்** — ஆதித்யன் உச்சத்தும், ஆட்சியினும் நிற்க பூர்வபக்ஷத்துச் சந்திரன் பலவாருய்ச்சுபாம்சத்து நின்றபொழுது வைதிருதி வியதிபாத தோஷமில்லை. பாபாம்சகேதனுய் நின்ற சந்திரனுக்கு அவ்வம் சாதிபதி ௩,௬, ௧௧ இவ்விடங்களில் நிற்கில் அந்நாளில் பாபாம்சக தோஷ மில்லையாம். (விதானமாலை.)

**வைந்நியன்** — வேநன் வாமபாகத்திற் பிறந்தவன்.

**வைபாடிகன்** — இவன் புத்த ஏகதேசி. இவன் மஞ்சளுஞ் சுண்ணும்புஞ் சேர்ந்த காலத்து உண்டாஞ் செவ்வண்ணம்போல் இந்திரியக் கூட்டத்தில் பிரபஞ்சந் தோன்றுமெனவும், தீபத்தின் நெய்கெட ஒளிகெடுவதுபோல் இந்திரியங்கள் பங்கமடைய எல்லாம் சூனியம் ஆம் என்பன்.

**வைப்பிராசை** -மேருவிற்கு மேற்கில் உள்ள வனம்.

**வைப்புச்சரக்குகள்** — (15). 1. இந்துப்பு வைப்பு, 2. பொட்டிலுப்புவைப்பு, 3. வெங்காரவைப்பு, 4. துரிசுவைப்பு, 5. ஏவாட்சாரவைப்பு, 6. நவாசாரவைப்பு, 7. சத்திச்சாரவைப்பு, 8. ஏகாம்பச்சாரவைப்பு, 9. கெந்தியுப்புவைப்பு, 10. திலாலவணவைப்பு, 11. கெந்திலவணவைப்பு, 12. காய்ச்சுலவணவைப்பு, 13. பிடாலவணவைப்பு, 14. சிந்துலவணவைப்பு, 15. காசிலவணவைப்பு.

**வையாக்கிரம்** — உதயணன் யூகிக்கு கொடுத்த தேர். (பெ. கதை.)

**வையாமிகர்** — அகத்தியர் மாணுக்கருள் ஒருவர்.

**வையாவிக்கோ பெரும்பேகன்** — இவன் நல்லூரில் ஆவியர்குடியிற் பிறந்தவன். கடையெழுவள்ளல்களில் ஒருவன், மலைநாட்டுத்தலைவன். தன்பத்தினியாகிய கண்ணகியைத் துறந்ததால் கபிலரால் இரந்து பாடப்பட்டவன். மயிலுக்குப் போர்வை கொடுத்தவன். இவன் பாணர், கபிலர், வன்பரணர், அரிசில்கிழார், பெருங்குன்றூர்க்கிழார் முதலியோரால் புகழ்ந்து பாடப் பெற்றுன். (புற - நா.)

**வையை** — வைகையைக் காண்க.

**வைரவம்** — ஒருமதம். இம்மதத்தவர்க்குச் சைவசமயக்கொள்கைகள் பலவும் ஒப்பு. இம்மதத்திற்குச் சிவமூர்த்தி தமருகம் தரித்தமூர்த்தியாய் அருள்செய்வர். (தத்துவ.)

**வைரவர்** — மார்த்தாண்ட பைரவர், ஆனந்தபைரவர், பிரமோதபைரவர் எனப் பலராவர். இவர்கள் மணித்வீப சக்ராலய காவலர். (சிவா.)

**வைரவன்**—பைரவனைக்காண்க. காளியைக் காண்க.

**வைரவாணிபமகருஷிகோத்ரன்** — வைசிய முதல்வரில் ஒருவன் வளையாபதி காரரவ

வாணியனென்று பெயர்கொடுத்துக் கோத்திரத்தில் (௫௦௦) கோத்திரம் பங்கிட்டுக் கொடுக்கக் கீர்த்திபெற்றவன்.

**வைரவி** — ஒரு பண்டாரசாதி வகுப்பார். இவர்கள் கோவில்களில் பூசாரி வேலை செய்பவர்கள். இவர்கள் மேளக்காரர் வகையில் சேர்ந்தவர்கள். இவர்கள் மதுரையில் உள்ளவர்கள். இவர்கள் நாட்டுக் கோட்டைச் செட்டிமாரிடம் உத்யோகம் செய்வர். (தர்ஸ்டன்.)

**வைராக்யசதகம்**—(வைராக்யதீபம்) பேறையூர் சாந்தலிங்க சுவாமிகள் இயற்றிய ஞான நூல். சாந்தலிங்க சுவாமிகளைக் காண்க.

**வைராசர்** — பித்ருக்களைக்காண்க.

**வைராசன்** — ஆறுமன்வந்தரத்து விஷ்ணுமூர்த்தியைக் குமாரனாகப் பெற்றவன்.

**வைரிமுகத்தின் அங்கங்கள் பதின்மூன்று** — (விமர்சமெனினுமாம்) இவை நாடக விகற்பங்கள். அபவாதம், சம்பேடம், வித்திரவம், திரவம், சத்தி, துதி, பிரசங்கம், சலனம், விவசாயம், நிரோதனம், பிரரோசனம், விசலனம், ஆதானம் என்பனவாம். விமரிசமாவது தோடு விரித்துக் கதிர் போந்தாற்போலவும், மேயதுவளைத்தாற்போலவும், நாடகப் பொருள் நன்குவிளிக்கப் பயன்படுவது. (வீரசோ.)

**வைவசு** — யமன்.

**வைவச்சுதபட்டணம்** — ஆன்மா யமபுரத்திற்குப் போகும்வழியில் உள்ள பட்டணம். இதில் ஜலம் கிடையாது. இரத்த மழைபெய்துகொண் டிருக்கும். இதில் பாபஞ்செய்தோர் இருந்து ஓலமிடுவர். இது உயர்ந்த மாளிகைகள் நெருங்கிக் கோர ரூபமுள்ள அநேக பிராணிகள் நெருங்கி யுள்ளது.

**வைவச்சுதமநு** — எ-வது மநு. விவச்வான் குமாரன். இவன் குமாரன் இக்ஷ்வாகு. மச்சாவதாரமூர்த்தியைக் காண்க. தாய் சமுக்யாதேவி. இவன் காலத்து நான்கு வருணங்கள் உண்டாயின. இவனை மச்சாவதாரமூர்த்தி சாக்ஷுஸமன்வந்தரத்தில் காத்தார். சிரார்த்ததேவனைக் காண்க. இவன் பத்துக்குமாரரைப் பெற்றனன். அவர்களில் புரந்தரன் இந்திரன் ஆனன். இரண்டாவது குமாரன் ஆதித்தன் ஆயினன். எழுகுமாரர் சப்தருஷிகள் ஆயினர். இந்த ருஷிகளில் காசிபருக்கு விஷ்ணுமூர்த்தி அதிதியிடம் வாமனராக அவதரித்தனர் என்ப. இந்த மநுவின் ஒன்பதாவது குமாரனுக்கு நபாகன் பிறந்தனன்.

**வைனதத்தன்**—கொக்கோகரை மதனநூல் செய்ய ஏவினவன்.

**வைனதேயர்**—வசிஷ்டருக்குச் சூத்திர ஜாதிப் பெண்ணிடம் பிறந்தவர். (பார-அநுசா-ம்.)

**வைஷ்ணவம்** — விஷ்ணுவைத் தியானிப்போர் கொண்ட மதம். விசிட்டாத்துவிதத்தைக்காண்க.

**வைஷ்ணவி** — 1. ஒரு மாயாதேவி. இவள் கருடவாகனத்தில் எழுந்தருளினவளாய் சங்கு, சக்கரம், கதை, வரதம், உடையவளாய் இருப்பள்.

2. மத்தியான்ன காலத்தில் தியானிக்கப்படும் சந்தியாதேவதை. யௌவன முள்ளவளாய் வெண்ணிறத்தவளாய் வெண்பட்டுடுத்து வநமாலை, பூணூல், சங்கு, சக்கரம் இடக்கரங்களிலும், கதை, அபயம் வலக்கரங்களிலும் உள்ளவளாய்க் கருடவாகனத்தில் பதுமாசனத்தளா யிருப்பவளாய் மஹாலக்ஷ்மி உருவமாய்த் தியானிக்கப்படுபவள். பார்வதிதேவி.

**வைஜயந்தம்** — 1. வருணனால் இலக்ஷ்மி தேவிக்குக் கொடுக்கப்பட்ட பூமாலை.

2. இதனை இந்திரன் உபரிசரவசுவிற்குக் கொடுத்தனன். இது விடாத தாமரைகளை யுடையதும், விஜயத்தைத் தருவதுமாம். இது யுத்தங்களில் ஆயுதங்களால் காயமடையாமற் காப்பாற்றும். பாக்யத்தைக் கொடுப்பதுமாம்.

3. திருப்பாற் கடலிலுள்ள ஒரு மலை. பிரமாவிற்கிருக்கை. (பார-சாந்.)

**வைஜயந்தன்**—விதேகத்துள்ள கந்தமாலினி நாட்டு வீதசோக நகரத் தரசன். இவன் தேவி சர்வஸ்ரீ. இவனுக்கு சஞ்சயந்தன் சயந்தன் என்று இரண்டு குமாரர் உண்டு. வைசயந்தன் சஞ்சயனுக்குத் திருமணஞ் செய்தபிறகு சஞ்சயந்தன் வைசயந்தன் என்னும் புத்திரனைப் பெற்றான். இவ்வாறு வைசயந்தன் அரசாண்டு வருகையில் அரசன் சுவாயம்பு நாமதீர்த்தங்கராிடம் மோக்ஷமார்க்கோபதேசம் பெற்று அரசாட்சியைப் புத்திரர் மறுக்க பௌத்திரனிடம் கொடுத்து புத்திரர்களுடன் தீக்ஷைபெற்று ஸயோகிஜின ராயினர். (மேருமந்தரம்.)

## வௌ

**வௌவால்** — 1. இது பறக்கும் பிராணி. இது பறவை யினத்திற்கும் மிருக இனத்திற்கும் பொது. இறக்கைகள் தோல்போல் கிளைகளைப் பற்றுவதற்கு நுனியில் முள் பெற்றிருக்கும். இது இராக்காலங்களில் பறந்து சென்று பழ முதலியவற்றைத் தின்று ஜீவிக்கும். இவற்றின் பற்களும் முகமும் எலிகளுக்குள்ளதுபோ லிருக்கும். கண் சிறியது. வெகுதூரம் பறந்து செல்லாது தங்கித் தங்கிப் பறக்கும்

2. இது பறவை யினத்திற்கும் மிருக இனத்திற்கும் பொதுவான ஒருவகையினம். இவ்வகையில் நூற்றுக்கணக்கான வேறுபாடுள்ளவை உண்டு. இதில் சாகபக்ஷணி, மாம்சபக்ஷணி என இருவகையுண்டு. இவற்றில் சாகபக்ஷணிகளே பெரியவை. இது பழுப்பு நிறமுள்ளது. இதன் முகமும் தலையும் குள்ளநரிக்கு உள்ளதுபோ லிருக்கின்றன. இதன் காதுகள் நீண்டவை. பக்ஷியைப்போல் பறக்கினும் நீண்ட இறகுகள் இல்லை. முட்டையிடா. ஆயினும் மிருகங்களைப்போல் குட்டிபோட்டுப் பால்கொடுக்கும். இது பறவையைப்போல் உட்காராது; மிருகத்தைப்போல் நடவாது. இறக்கையிலுள்ள முட்களால் ஒன்றைப் பற்றிக்கொண்டு தலைகீழாகத் தொங்கும். இது சுவாசத்தை விழுங்குகிறதாம்: மாரிகால முழுதும் மூச்சையடக்கித் தூங்குகிறதாம். இது கண், காது, உடல் இவற்றின் உதவியின்றிப் பார்த்தல், கேட்டல், உணர்தல் செய்யும் என்பர். இவற்றிற்கு இரவில் கண் நன்ருகத் தெரிதலால் இரவில் இரை தேடுகின்றன.

## ஜ

**ஜிராபி** — தென் ஆபிரிகா காட்டிலுள்ள ஒட்டையைப் போன்ற மிருகம். தேகத்தில் புள்ளிகளையுடையது. முன் கால்களும் கழுத்தும் நீண்டும், தலையும் பின் கால்களும் குறுகியும் இருக்கும். தன்னை யெதிர்க்கும் பிராணிகளைப் பின்காலால் உதைக்கும்.

**ஜீதிவசாதி** — சென்ற மாதத்தை யிரட்டித்து இதில் சென்ற திதியையும் கூட்டி, (எ) இல் கழித்து நின்றது ஜீ திவசாதி யென்க. இவ்வாறன்றி குருவும், பார்க்கவனும் சொன்னது. ஜீதிவசம், கலிதிவசம், நந்தனதிவசம், காளகண்டிதிவசம், செயதிவசம், தமதிவசம், தனதிவசம் என (எ) ஆம். இவற்றில் தமதிவசம், கலிதிவசம், காளகண்டிதிவசம் ஆகிய (ந)-ம், சுபகன்மங்களுக்காகா. கலியுகாதியிலிட்ட சுத்ததினம் வைத்து, (கஅந)க்கு ஈந்து போகவிட்டு நின்றசேடம் (கரு) நாள் கலிதிவசம்; பின் (க0) நாள் தமதிவசம்; பின் (௺க)நாள் செயதிவசம்; பின் (௪0) நாள் நந்தனதிவசம்; பின் (நக) நாள் ஜீதிவசம்; பின் (ந௬) நாள் காளகண்டிதிவசம்; பின் (௺) நாள் தனதிவசம் என்றறியப்படும். இப்படியே பார்கஸ்பத்யம், பாரத்வாசம், பார்க்கவம், பாராசரம் என்ற நூல்களில் சொல்லியிருக்கின்றன. (விதானமாலை)

## ஷ

**ஷட்குணம்** — சந்தி, விக்ரகம், யானம், ஆசனம், துவைதம், ஆச்சிரயம் என்பன. இவை அரசர்க்குரியன. சந்தி - பகைவனுடன் நட்பு, விக்ரகம் - விரோதித்தல், யானம்-பகைமீது படைகொண்டுசெல்லல், ஆசனம் - பகைமீது செல்லக் காலம்பார்த்தல், துவைதம்-பகைவரிருவராயின் ஒருவனுடன் நட்புக்கொள்ளல், ஆச்சிரயம்-தன் பகையை வெல்லவல்லவன் ஒருவன் நட்புக்கொண்டு அவனை யடைதல்.

## ஸ

**ஸ்தூணன்** — துருபதனுக்குப் பிறந்த பெண்ணுகிய சிகண்டியை ஆணுக்குவித்த யக்ஷன்.

## ஹ

**ஹார்மோனியம்** — இது பல இசைகளுண்டாகப் பற்களமைத்துச் செய்யப்படும் தற்காலத்திய பெட்டி வாத்யம்.

## க்ஷ

**க்ஷணவித்வம்சி** — ஒரு உலகாயதன்.

**க்ஷணிகலிங்கம்** — (16) வகை. மணலிலிங்கம், அரிசி, அன்னம், மண், கோமயம், வெண்ணெய், பழம், மா, சந்தனம், தருப்பை, விபூதி, உருத்திராக்ஷம், புஷ்பமாலை, சர்க்கரை, அப்புலிங்கம், தளிர் என்பனவற்றைக் கொண்டு பூஜாகாலம் வரையில் சிவபெருமான் தங்கியிருக்கும்படி வேண்டிக்கொண்டு நிர்மாணிக்கப்பட்ட இலிங்காகாரம். இது நித்தியப்படி பூசையில் கொள்ளப்படுவது. (சைவ-பூ.)

க்ஷத்ரதரன்—ஆயு வம்சத்திற் பிறந்த அரசன்.

க்ஷத்ரதருமன் — புரூரவன் மகனாகிய க்ஷத்ர விருத்தன் குலத்தவன்.

க்ஷத்ரவிருத்தன் — புரூரவன் குமாரன். நகுஷன் தம்பி.

க்ஷத்ரோபேக்ஷன் — அக்ரூரன் தம்பி.

க்ஷமை — தக்ஷன் குமாரி.

க்ஷுத்விராட் — மகாவிராட்டினம்சம். இந்த க்ஷுத்விராட்டினின்று பிரகிருதி தோன்றியது. (தேவி-பா.)

க்ஷுபன் — கனித்ரன் குமாரன்.

க்ஷேத்திரபாலன் — பைரவர் காண்க.

க்ஷேமகன் — 1. பாரதவம்சத்துக் கடைசி அரசன்.

2. சந்திரவம்சத்துக் கடைசி யரசன்.

க்ஷேமங்கிரி — சத்தியி னம்சாவதாரம். ஒருமுறை சிவபிரான் காந்தார ஸ்திரீகள் சிலர் தமதிருக்கையை அடுத்த தடாகத்தில் ஜலக்கிரிடை செய்துகொண் டிருத்தல் கண்டு ஒரு திருவிளையாடல் கருதி அவர்களுடன் சென்று விளையாடிக்கொண் டிருந்தனர். தம்மிடம் நீக்கத்தைக் கண்ட பார்வதிப் பிராட்டியார் இதனை யோகத்தா லறிந்து க்ஷேமங்கிரி என்னும் உருக்கொண்டு அப்பெண்களி னிடஞ் சென்று அவர்களது சிகையைப் பிடித்து அப்புறப்படுத்திச் சிக்ஷித்தனள். (பதும - புராணம்).

க்ஷேமதன்வா — புண்டரீகன் குமாரன்.

க்ஷேமன் — ஸுகேதுவின் தந்தை. சுநீதிக்குக் குமாரன்.

க்ஷேமாவி — சிருஞ்சயன் குமாரன்.

க்ஷேமியன் — பூருவம்சத்து உக்கிராயுதன் குமாரன்.

முற்றிற்று.

உ

கடவுள் துணை

# சிவக்ஷேத்ர மான்மியம்.

## வடநாடு.

1. **திருக்கயிலாயம்** — இதற்கு வெள்ளியங்கிரி, நொடித்தான்மலை, திருமலை முதலிய பல திருநாமங்களுண்டு. சுவாமி பெயர் கைலாயநாதர், தேவியார் பார்வதிப் பிராட்டியார், தீர்த்தம்-மகாசிவதீர்த்தம் இது சிவபெருமான் காரைக்காலம்மையாரை என்னம்மையே வாவென்றழைத்த திருத்தலம். ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளுடன் எழுந்தருளிய சேரமான் பெருமாணாயனார் ஞானவுலாப்பாடியரங்கேற்றிய தலம். திருநாவுக்கரசு சுவாமிகள் தரிசிக்கச்சென்று திருவடி தேய்ந்து திருவையாற்றில் தரிசனம்பெறக் கட்டளைபெற்ற தலம். இதில் சிவபெருமான் உமாதேவியாரோடு சிவகணங்கள் சேவிக்க எழுந்தருளியிருப்பர். இது சைவசமயாசாரியர்கள் மூவராலும் பாடல்பெற்றது. இது பாதகண்டத்திற்கு வடவெல்லையான இமயபர்வதச்சாரலின்கண் உள்ளது. ஞா-உ, நா-ச, சு-க. பதிகங்களை உடையது. இதனை மவுண்டு கைலாஸ் (Mt. Kailas) என்பர். இமயமலையிலுள்ள உயர்ந்த கொடுமுடி. இதற்குச் செல்ல வழி வருமாறு: ஆல்மோரா (Almora) ரயிலடியைச் சேர்ந்ததும், அங்கிருந்து கால் நடையாகவோ, குதிரைமேலோ செல்ல வேண்டும். ஆல்மோராவிலிருந்து ஆஸ்காட்டுக்குக்கிழக்குமுகமாக ஒருவாரம் பிரயாணஞ்செய்ய வேண்டும். இது 64 கட்டை. அங்கிருந்து 23 கட்டை வடகிழக்காக ஒரு பயணஞ்சென்றால் தார்ச்சூலாவை அடையலாம். அங்கிருந்து 51 கட்டை மலையின்மேல் ஏறியிறங்கினால் கர்பயங் (Carbayang) என்ற ஊரையடையலாம். இது சமுத்திர மட்டத்துக்குமேல் 10500 அடி உயரத்திலிருக்கிறது. மலை ஏறின இளைப்பு ஆற இரண்டு மூன்று நாள் தங்கவேண்டும். அங்கிருந்து தக்லகோட்டை (Taklakot)க்கு இருபத்தெட்டுக் கட்டை போகவேண்டும். அங்கேதான் விபுலேக் கணவாய் இருக்கிறது. அதன் மட்டம் 16750 அடி. அங்கிருந்து 30 கட்டை சென்றால் மானஸரோவரம் இருக்கிறது. அதனிலிருந்து கைலாய தரிசனம் செய்வர். பின்னர் கைலையங்கிரியின் அடிவாரத்தைப் பிரதக்கணஞ் செய்வர்.

2. **திருஅநேகதங்காபதம்** — சூரியசந்திரர்கள் பூசித்த தலம். (சு-ர்) அருண்மன்னுஈசுவரர், (தே-ர்) மனோன்மணியம்மை, (தீ-ம்) இந்திரதீர்த்தம். திருஞான பதி - க. உடையது. வடநாட்டிலுள்ளது.

**கௌரிகுண்டம்** — உருத்ர பிரயாகையிலிருந்து போகவேண்டும். இது கௌரி தவஞ்செய்த இடம். இதனை திருஅநேகதங் காவதமென்ப. இது மானஸரோவரத்திலிருந்து திருக்கைலாயம் பிரதக்ஷிணத்தில் கிழக்கே இருக்கிறது. இது டோல்மா கணவாய் (Dolma Pass) முடிகிற இடத்திலிருக்கிறது.

கௌரிகுண்டத்திருந்து பீமகுண்டா மார்க்கமாய்த் திருக்கேதாரமும் போகலாம்.

3. **திருஇந்திரநீலபர்வதம்** — இந்திரன் பூசித்த தலம். பாண்டுமைந்தர்களில் அருச்சுநன் பூசித்துப் பாசுபதம் பெற்ற தலம். (சு-ர் நீலாசலநாதேசுவரர்(தே-ர்)நீலாம்பிகை,(தீ-

இந்திரதீர்த்தம். இதுவும் வடநாட்டிலுள்ளது. கௌரிசங்கரமலை — நேபாள ராஜதானியான காட்மாண்டி விருந்து ந-மைல் தூரத்திலுள்ளது. ஞா-௧ உடையது.

4. திருக்கேதாரம் — இது புரட்டாசி மாதத் தமாவாசைமுதல் பங்குனி மாதத்தமாவாசை வரையில் தேவர்களும், மற்ற மாதங்களில் மனுஷ உருவம் பூசிப்பதுமாயுள்ள தலம். (சு-ர்) கேதாரேசுரர், (தே-ர்) கேதாரகௌரியம்மை, (தீ-ம்) நாரதகுண்டம். ஞா-௧, சு-௨, பதிகங்கள் உடையது. வடநாட்டில் இமயச் சாரலின் கண்ணது. காட்மாண்டி விருந்து அம் மலையின் மேலாகவே திருக்கேதாரம் இருக்கிறது.

5. ஓங்காரம் — ஜபல்பூருக்கு கூ-மைலில் நருமதைநதி தீரத்தில் பாணலிங்கம் உண்டாம் இடம்.

6. திருவேணிசங்கமம் — அலகபாத் ஸ்டேஷன். பிரயாகை என்றும் பேர்பெறும். இங்கு கங்கையில் யமுனை, சரசுவதி என்ற நதிகள் கூடுகின்றன. பிதிர்தர்ப்பணம் செய்வது முக்கியமானது.

7. உஞ்சை மாகாளம் — உஜ்ஜைன் ஸ்டேஷன். (Ujjain). அவந்தி, ஆடகேசுரம், தாரகேசுரம் எனவும் பெறும். (சு-ர்) மாகாளநாதர். அப்பர் இரு பதிகங்களிலும் பயில்வது. திருஅவந்தி மாகாளம் எனவும் பேர் பெறும்.

8. புஷ்கரக்ஷேத்ரம் — அஜ்மீர் ஸ்டேஷனுக்குச் சமீபத்தி விருக்கிறது.

9. சோமநாதம் — ஆமதபாத் மார்க்கமாய்ச் செல்லவேண்டியது. குஜராத்தில் அரபிக் கடலோரமாக இருக்கிறது. பிரபாச தீர்த்தம் இருக்கிறது.

10. துவாரகை—ஆமதபாத் வழியாய்ச் செல்ல வேண்டியது. போர்பந்தர் மார்க்கமாய்ப் போகலாம். இதுவும் குஜராத்தில் அரபிக் கடலோரமாக இருக்கிறது.

11. இந்திரப்பிரஸ்தம்—டில்லி. ஸ்டேஷனிவிருந்து வடக்கு 7-8 கட்டைக்குள் இருக்கிறது.

12. அஸ்தினபுரம் — மீரட் ஸ்டேஷனுக்கு (௨௦) மைலி விருக்கிறது.

13. குருக்ஷேத்ரம் — டில்லிக்கும் உம்பலாவுக்கும மத்தியிலுள்ள தானேசர் ஸ்டேஷனுக் கருகி விருக்கிறது. (சு-ர்) தாணுநாதர். (தே-ர்) பார்வதி யம்மை, அப்பர், சுந்தரர் பதிகங்களில் பயில்வது.

14. ஹரித்வாரம் — டில்லி ஸ்டேஷனிவிருந்து லாக்ஸர் ஸ்டேஷன் மார்க்கத்தி விருக்கிறது. இந்த ஹரித்வாரத்தில் கங்கை பூமியி லிறங்குகிறது. இங்கு ஹரித்வாரம், மாயாத்வாரம், கங்காத்வாரம் இருக்கின்றன.

15 அயோத்தி — பனாரிஸிவிருந்து லக்னோ ஸ்டேஷன் சென்று அங்கிருந்து செல்லவேண்டியது.

16. நைமிசாரண்யம் — லக்னோஸ்டேஷனிவிருந்து சண்டிலாஸ்டேஷனுக்கு (௨௦) மைலி விருக்கிறது.

17. இரிஷிகேசம்—ஹரித்வாரத்திற்கு சுமார் (௨௦) மைலி விருக்கிறது. இதிலிருந்து இமாசலத்தைத் தரிசிக்கலாம்.

18. உருத்ரப்பிரயாகை — அரித்வாரத்திலிருந்து சத்திநாராயணம், சத்ருக்னம், லக்ஷ்மணஜூலை, தபோவனம், புலாலிசட்டி, பிஜிலி-சட்டி மார்க்கமாய் போகவேண்டும்.

19 பதரிநாராயணம் — உருத்ரப்ரயாகையிலிருந்து விஷ்ணுப்பிரயாகை, பண்டிகேசவம் மார்க்கமாய்ப் போகவேண்டும்.

20. பிரமகபாலம் — பதரிநாராயணத்திற்கருகி விருக்கிறது.

21. பதரிகாச்சிரமம் — அரித்வாரத்திலிருந்து (௧௮௭) மைலி விருக்கிறது.

22. ஸ்ரீகாசி — இது சத்தமுத்தித்தலங்களுள் ஒன்று. புராணுதிகளால் கூறி அடங்காதது. இதில் இறக்கும் ஆத்மாக்களுக்குச் சிவபெருமான் தாரகவுபதேசஞ் செய்து திருவடி யளிப்பர். இதில் உமாதேவியாரின் விரற்கண் தோன்றிய மணிகர்ணிகை யுண்டு. காலபைரவராற் காக்கப்பட்ட தலம். இதில் இறக்க முத்தியுண்டு. இது யமுனை கங்கை முதலிய புண்ய நதிகளால் சூழப்பெற்றது. (சு-ர்) விசுவநாதர், (தே-ர்) விசாலாக்ஷியம்மை, (தீ-ம்) கங்கை. இது வாரணாசி யென்றுஞ் சொல்லப்படும். கேதார கட்டம் என்ற தீர்த்த கட்டமுண்டு. அப்பர் சுவாமிகள் க்ஷேத்திரக் கோவையிலும் தேவாரங்களிலும் பயில்வது. காசி கண்டம் என்பது காசிமான்மியம் கூறும்.

23. ஜகந்நாதம் — பூரி ஸ்டேஷன். இது போது புரி என்றழைக்கப் படுவது. வடக்கிலுள்ளாருக்கு முக்கியமான தலம்.

24. புவனேச்வரம் — கர்டாரோட் ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் இருக்கிறது.

25. விருந்தாவனம், கோவர்த்தனம்— அஜ்மீர் வழியாக அச்நீரா ஸ்டேஷன் மதுரை ஸ்டேஷன் சென்றால் வடமதுரை, காளிந்தி நதி, கோகுலம் இருக்கின்றன.

26. திருப்பருப்பதம் — (ஸ்ரீ சைலம், மல்லிகார்ச்சுனம்) ஸ்ரீ நந்திமாதேவர் பூசித்த தலம். சமயாசாரியர் மூவராலும் பாடப்பட்டது. இஷ்டசித்தி தருந் தலம். (சு-ர்) பருப்பதேசுவரர், (தே-ர்) பருப்பதமங்கை, (தீ-ம்) பருப்பததீர்த்தம், கர்நூலிலுள்ள நந்தியால் ஸ்டேஷனிலிறங்கி (வ கி) ௬0 மைல். ஞா - க, நா-ச, சு-ங பதிகங்களுடையது.

27. பந்ராசலம் — ஐதாராபாத் மார்க்கத்தில் குண்டா ஸ்டேஷனிலிருந்து வடக்கே ௪அ-மைலிலுள்ள சிவத்தலம். இராஜமகேந்திரத்திலிருந்து படகுமூலமாய் ௬0-மைல்.

28. தவளேச்வரம் — பெஜவாடாவிலிருந்து வடக்கே செல்லும் இரயில் பாதையிலுள்ள ராஜமகேந்திரம் ஸ்டேஷனி லிருந்து நான்கு மைலில் கோதாவரி நதிமீது இருக்கிறது.

29. விருபாக்ஷிஸ்தலம் — குண்டக்கல் ஸ்டேஷன் அப்பால் தக், பிறகு தோரணகலு, அதற்கப்பால் ஒஸ்பெட். இதற்கு எட்டு மைலி லிருக்கிறது.

30. பாண்டரங்கம் — குண்டக்கல் ஸ்டேஷனிலிருந்து வாடிஸ்டேஷன், அதிலிருந்து ஆட்ஜி, அங்கிருந்து பார்சிரோட் ஸ்டேஷன் அதிலிருந்து ௩0-மைலி லிருக்கிறது.

31. திரியம்பகம் — பம்பாயிலிருந்து நாசிக் ஸ்டேஷனுக்கு மேற்கே ௰ - மைலில் கோதாவரி உற்பத்தியாகுமிடத்திலிருக்கிறது. பஞ்சவடி இதற்கு அ-மைல் தொலைவி லிருக்கிறது. திரிமூர்த்திகளும் சோதிலிங்கம் உருவாய் எழுந்தருளி யிருக்கின்றனர்.

32. திருக்கோகர்ணம் — இது மேலைச் சமுத்திரக் கரையிலுள்ள தொரு சிவதலம். சம்பந்தர், அப்பர் இருவருடைய பதிகமுங் கொண்டது. (சு-ர்) கோகரணநாதர், மகாபலநாதர், (தே-ர்.) கோகரண நாயகி, கடலைத் தீர்த்தமாகவுடையது. எல்லோருஞ் சென்று காணுதற் குரிய சிறப்பு வாய்ந்தது. செல்லும் வழி : சென்னையிலிருந்து பெங்களூர் வழியாகவாவது, குண்டக்கல் வழியாகவாவது ஹூப்ளி (Hubli) இரயில் ஸ்டேஷனை யடைந்து அங்கிருந்து பஸ் வழியாகத் திருக்கோகர்ணம் செல்ல வேண்டும். அல்லது மார்ம கோவாவிலிருந்து கடல் வழியாகவும் செல்லலாம். ஹூப்ளிக்கும் திருக்கோகர்ணத்துக்கும் 103 கட்டையன விருக்கிறது. மகா சிவராத்திரி முக்கியமானது.

## தொண்டைநாடு - 32.

1. சீகாளத்தி — இது தெக்கிண கயிலாயம் எனவும் பேர்பெறும். ஆதார க்ஷேத்திரங்களில் விசுத்தித்தானமாக வுள்ளது. சீ, காளம், அத்தி, இம் மூன்று பதச்சேர்க்கையால் சீகாளத்தி யென்ற பெயர் வந்தது. இந்த ஊரில் சிலந்தி, பாம்பு, யானை மூன்றும் பூசித்து முத்திபெற்றன. பாண்டு குமாரனாகிய அருச்சுநன் வேடனாய்க் கண்ணப்ப னென்று பெயருற்று முத்திபெற்ற தலம். நக்கீரரும், சிவாகோசரியாரும் முத்தி பெற்றது. (சு-ர்) காளத்தீசுரர், (தே-ர்) ஞானப்பூங்கோதை, (தீ-ம்) பொன்முகரி தீர்த்தம், ஞா-உ நா-க, சு-க. மூவர் பதிகம் உண்டு. இதற்கு நேராகவே இருப்புப்பாதை யுண்டு. சிவப்பிரகாசரும் அவரது இளவல்களும் பாடிய சீகாளத்தி புராணமும், ஆநந்தக்கூத்தர் பாடிய திருக்காளத்தி புராணமும், திருக்காளத்தி நாதருலாவும் உடையது. நக்கீர தேவரால் பாடிய கைலைபாதி காளத்திபாதி அந்தாதி யுடையது.

2. திருவெண்பாக்கம் — சதாநந்தருஷி பூசித்த தலம். கண்களிழந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு ஊன்றுகோல் அருளிய தலம். (சு-ர்) வெண்பார்க்கேசுரர், (தே-ர்) கனிவாய் மொழியம்மை, (தீ-ம்) கைலாயதீர்த்தம். இது திருவெவ்வளூர் (Tiruvallur) ஸ்டேஷனி லிறங்கினால் (எ) மைலில் இருக்கிறது. சு-ர் ஊணீஸ்வரர் என்றும் உளம்போகீர் என்றும், தே-ர். மின்னொளி யம்மை யென்றும் கூறுப. புராணம் உண்டு என்ப. சு-க பதிகமுடையது.

3. திருப்பாசூர் — இது வியாசருஷி பூசித்த தலம். மூங்கிலடியில் முளைத்த சிவபெருமானைத் தரிசித்த சோழனுக்குப் பாம்பாட்டியாகத் தரிசனந் தந்தருளிய தலம். சு-ர். பாசூர்நாதர், (தே-ர்) பசுபதிநாயகி, (தீ-ம்) சோழதீர்த்தம். இதற்கு மேற்கு (ங) கடிகையில் திருவாலங்காடு இருக்கிறது. இருப்புப்பாதை, திருவெவ்வளூர் என்னும் திருவள்ளூர் ஸ்டேஷன். நா உ, ஞா-க பதிகங்களை யுடையது. இதற்குப் பூவை அஷ்டாவதானம் கல்யாணசுந்தர முதலியார் எழுதிய புராண வசனம் உண்டு.

4. திருஆலங்காடு — இந்திரன், ஆதிசேடன், சுநந்தர் முதலியோர் பூசித்த தலம். சிவபெருமான் காளியுடன் நிருத்தவாதஞ் செய்தருளிய தலம். காரைக்காலம்மையார் ஓவாநிருத்த தரிசனங் கண்டருள் தலம். வேளாளர் செட்டியின்பழிக்காகத் தீப்பாய்ந்து

தலம். (சு-ர்) ஊர்த்ததாண்டவமூர்த்தி, (தே-ர்) வண்டார்குழலம்மை, (தீ-ம்) முத்திதீர்த்தம், இரத்தினசபை, பலாவிருக்ஷம், (ரயில் - ன்) சின்னம்மாபேட்டை, (பழையனூர்) ஞா - க, நா - உ, சு - க. பதிகங்களை யுடையது. தலபுராணம் அச்சிடப்பட்டுள்ளது. ஆண்டு இரத்தாட்சி. காரைக்கா லம்மையாரது இரண்டு திருப் பதிகங்களையுடையது.

5. **திருக்கள்ளில்** (திருக்கள்ளம்) — பிருகுமுனி பூசிக்கத் தக்ஷிணாமூர்த்தி திருக்கோலமாகத் தரிசனந்தந்தருளிய தலம். (சு-ர்) சிவாநந்தேச்சுரர், (தே-ர்) ஆனந்தவல்லியம்மை, (தீ-ம்) நந்திதீர்த்தம். இது சென்னைக்கு மேற்கே (உசு) மைலிலுள்ள திருவெவ்வளூரிலிருந்து (கசு) மைலி லிருக்கிறது. ஆவடி ஸ்டேஷனி லிருந்து 4 கட்டை தொலைவி லிருக்கிறது. ஞா-க பதிக முடையது.

6. **திருவிற்கோலம்** (கூவம்) — திரிபுரதகனஞ் செய்த சிவமூர்த்தியைத் தேவர் பூசித்த தலம். சத்தி பூசித்த தலம். (சு-ர்) திரிபுரசுந்தரேசர், (தே-ர்) புராந்தகியம்மை, தீண்டாத்திருமேனி யுடையவர். திருவின் கோலநாதர் திருவின் கோலநாயகி என்ற பெயரும் வழங்கும். (தீ-ம்) ஆவிற்கோலம், கூபாக்னி. (ர-ல்) கடம்பத்தூர் ஸ்டேஷனி லிருந்து தெற்கு (சு) மைல் தொலைவு. அப்பர் பதிகங்களில் பயில்வது.

7. **திரு இலம்பையங்கோட்டூர்** — சந்திரன் பூசித்த தலம். (சு - ர்) சந்திரசேகரேசுவரர். (தே - ர்) கோடேந்து முலையம்மை, (தீ - ம்) சந்திரதீர்த்தம். இதுவும் கடம்பத்தூர்ஸ்டேஷன் (ர - ல்) கூவத்திற்கு (மே) $1\frac{1}{2}$ மைல். ஞா - க. பதிகமுடையது. அப்பரது க்ஷேத்திரக் கோவையில் பயில்வது. ஸ்தல புராண முடையது.

8. **திருவூறல்** (தக்கோலம்) — இத்தலத்தில் பாதாளகங்கை நந்திவாயினின்று பொங்கி வருகின்றது. உமாதேவியார் பூசித்த தலம். (சு - ர்) உமாபதீச்சுரர். (தே - ர்) உமையம்மை, (தீ - ம்) பார்வதிதீர்த்தம், (ர - ல்) அரக்கோணம் ஸ்டேஷனிலிருந்து (தெ - கி) (எ) மைல். ஞா - க. பதிகமுடையது. அப்பர் பதிகங்களில் பயில்வது.

9. **திருமாற்பேறு** — குபன் என்னும் அசுரன் பொருட்டுத் ததீசிமுனிவருடன் பொருத திருமால் சக்கரம் பெறும்பொருட்டுப் பூசித்துப பேறுபெற்ற தலம். (சு - ர்) மால்வணங்கீசுரர், (தே - ர்) கருணைநாயகியம்மை, (தீ - ம்) விஷ்ணுதீர்த்தம். இது காஞ்சிபுரத்தையடுத்த பள்ளூர் ஸ்டேஷனி லிருந்து $2\frac{1}{2}$ மைலில் இருக்கிறது. ஞா-உ, நா-அ. பதிகங்களை யுடையது.

10. **திருவல்லம்** — நவக்கிரகங்களும், வல்லாளனென்னும் அரசனும் பூசித்த தலம். கஞ்சாரனென்னும் அசுரனைச்சங்கரித்த தலம். இத்தலத்தில் நந்தி கிழக்குமுகமாகவும் சுவாமி மேற்குமுகமாகவும் திரும்பியிருக்கின்றனர். (சு - ர்) வல்லநாதேசுவரர், (தே - ர்) வல்லாம்பிகை, (தீ - ம்) சிவகங்கை, சிவாகதி, (ர - ல்) திருவலம். ஞா-க. பதிகமுடையது. அப்பர் பதிகங்களில் பயில்வது.

11. **திருவிரிஞ்சிபுரம்**—பிரமா, விஷ்ணு, சத்தி பூசித்த தலம். கழுதைமுகமுள்ள அசுரன் பூசித்துக் கழுதைமுகம் போக்கிக் கொண்ட தலம். மிளகு சுமைகொண்டு சென்ற தனபாலனுக்குச் சிவபெருமான் வழித்துணை சென்று வாதிட்டு மார்க்கசகாயத் திருநாமம் பெற்ற தலம். (சு-ர்) மார்க்கசகாயநாதர், (தே-ர்) மரகதவல்லியம்மை, (தீ-ம்) சத்திதீர்த்தம். சிவநாதர் எனும் வேதியச்சிறுவர் பொருட்டுச் சிவபெருமான் திருமுடிவளைத்துக் கொடுத்த தலம். (ர ல்) விரிஞ்சிபுரம் ஸ்டேஷன். பதிகம் இல்லை எல்லப்ப நயினார் செய்த திருவிரிஞ்சைப் புராணமும், திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழு முடையது.

12. **திருப்பனங்காட்டூர்**(வன்பார்த்தான் பனங்காட்டூர்) — கண்ணுவ மகருஷி நிவேதிக்கப் பொருள் கிடைக்காது கிடைத்த பனம்பழத்தை நிவேதிக்கச் சிவபெருமான் களிப்புற்று அநுக்ரகித்த தலம். இக்காலத்தும் பனங்கனி நிவேதிக்கும் தலம். (சு-ர்) பனங்காட்டேசுரர், (தே-ர்) அமிர்தவல்லியம்மை, (தீ-ம்) அமிர்ததீர்த்தம். இது தென்புறமுள்ள கோயில். வடபுறமுள்ள கோயிலிலிருக்கும் (சு-ர்) கிருடா நாதர். (தே-ர்) கிருபாநாயகி. சுந்தரருடைய பதிக முடையது. அப்பர் பதிகங்களில் பயில்வது. இதில் இரண்டு பனைவிருக்ஷங்களிருக்கின்றன. இதற்கு ஒரு கடிகையில் வன்பார்த்தான் என்ற திருப்பதி யிருக்கிறது. இம் மார்க்கமாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளி வந்தபோது சுவாமிகள் பிராமண வேடங்கொண்டு தோன்றிக் கட்டமுது தந்தருளி எவ்வூர் என்றபோது வன்பார்த்தான் பனங் காட்டூருக்கு மிவ்வூருக்குமா யிருப்போ மென்ன, பதிகம் பெற்றதலம். (சு-ர்) வன்பார்த்தநாதர். (தே-ர்) பஞ்சின் மெல்லடி யம்மை. இது

(ர-ல்) காஞ்சிபுரத்தி விருந்து (௭) (அ) மைலில் இருக்கிறது.

13. திருவோத்தூர் (அனகாவூர்)—சிவபெருமான் தேவருஷிகளுக்கு வேதப்பொருளுணர்த்திய தலம். சிவனடியவரை நிந்தித்த அருகர்பொருட்டுத் திருஞானசம்பந்தசுவாமிகளால் ஆண் பனைகள் பெண்பனைகளாக்கிய தலம். (சு-ர்) வேதநாதேசுரர், (தே-ர்) இளமுலையம்மை, (தீ-ம்) வேததீர்த்தம். இது காஞ்சிபுரம் ஸ்டேஷனிலிறங்கி வந்தவாசி பாதையாய் சுமார் (கசு) மைலி லிருக்கிறது. நல்லபாதை. ஞா-க பதிகமுடையது; அப்பர் பதிகங்களில் பயில்வது. கருணைசாக் கவிராயர் இயற்றிய புராண முடையது.

14. திருமாகறல்—தேவேந்திரன் பூசித்த தலம். கடகனெனும் அசுரன்பொருட்டு இந்திரன் பூசிப்பச் சிவபெருமான் வளையிலிருந்து தரிசனந்தந்த தலம். உடும்பு சிவலிங்கத்தைத் தழுவிக்கொண் டிருக்கிறது. (சு-ர்) அடைக்கலங் காத்த நாதர், மங்கலங் காத்த ஈசுரர், (தே-ர்) புவனநாயகியம்மை, (தீ-ம்) நவ்வி தீர்த்தம். சீவரம் ஸ்டேஷனிலிருந்து சுமார் (க0) மைலி லிருக்கிறது. ஞா-க பதிகமுடையது.

15. திருக்குரங்கணில்முட்டம்—குரங்கு, அணில், காக்கைகள் பூசித்துப் பேறுபெற்ற தலம். (சு-ர்) வாலீசுரர், (தே-ர்) இறையார் வளையம்மை, (தீ-ம்) வாலிதீர்த்தம். (ர-ல்) காஞ்சிபுரத்திலிருந்து (௭) (சு) மைலி லிருக்கிறது. ஞா-க பதிகமுடையது.

16. திருக்கச்சிநெறிக்காரைக்காடு — இங்கு காரைவன மிருந்ததினா லிப்பெயர் வந்தது. சந்திரன் பூசித்த தலம். (சு-ர்) சத்தியவரதர், (தே-ர்) காரார்குழலியம்மை, (தீ-ம்) சத்தியதீர்த்தம், (தே-ர்) காமாக்ஷி. (௭-ர-ல்) காஞ்சிபுரம். ஆட்சன்பேட்டையிலிருக்கிறது. ஞா-க. பதிகமுடையது.

17. திருவேகம்பம் — இது முத்தித் தலங்கள் ஏழனுள் ஒன்று. வேதங்கள் மாவுருவாய்ப் பூசித்த தலம். இத்தலத்துள் நல்லக்கம்பம், வெள்ளக்கம்பம், கள்ளக்கம்பம், திருமயானம், வாலீச்சுரம் எனும் ஐந்து தலங்களிருக்கின்றன. இவை முறையே பிரமன், விஷ்ணு, உருத்திரன், வண்டாசுரன், வாலி பூசித்தவையாம். இவைகளன்றியும், திருக்கச்சபாலயம், காரோணம், பணாதரீச்சுரம், சுரகரீசம், பராசரீசம், வீராட்டகாசம், மாணீச்சரம், உருத்திரகோடி, மகாசாத்தன் தளி முதலியன உண்டு. இது பிருதிவித்தலம். இது உமாதேவியார் பூசிக்கக் கம்பாநதி பெருகிவரச் சுவாமியைத் தழுவிக்கொண்ட தலம். இதில் காமாக்ஷிக்குத் தனித்த ஆலயம் இருக்கிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு கண் பெற்றதலம். திருக்குறிப்புத்தொண்டர், ஐயடிகள் காடவர்கோன் முதலியவர்கள் முத்தி பெற்ற மகாத்தலம். இதில் குமரகோட்டம் எனக் குமாரக்கடவுள் ஆலயம் இருக்கிறது. (சு-ர்) ஏகாம்பரநாதர், (தே-ர்) ஸ்ரீ காமாக்ஷியம்மை, (தீ-ம்) கம்பாநதி முதலிய பல தீர்த்தங்கள் உண்டு. (௭-ர-ல்) காஞ்சிபுரம். மூவர் பதிகம் ஞா-ச, நா-அ, சு-க. உடையது. திருவாவடுதுறைச் சிவஞான முனிவரும் கச்சியப்ப முனிவரும் சேர்ந்து பாடிய புதியபுராணமும் மிகப் பழமையான புராணமும் உடையது; காஞ்சி கலித்துறைப் புராணம், காமகோட்டப் புராணமும் உண்டு. இரட்டையர் இயற்றிய கச்சியுலாவும், கச்சி ஆநந்த ருத்திரேசர் பதிற்றுப் பத்தந்தாதியும் ஆநந்தருத்திரேசர் வண்டுவிடு தூதும் உடையது.

18. திருக்கச்சிமயானம் — ஏகம்பநாதர் கோயிலுள் கொடிமரத்துக்கு அருகிலிருப்பது. மூவர் பாடலும் பெற்றது. (சு-ர்.) மயானநாதர்.

19. திருக்கச்சி நெறிகாரைக்காடு — இது திருக்காலிமேடு என வழங்கும். (சு-ர்.) திருக்காரைநாதர். சம்பந்தரது பதிகமுடையது.

20. திருக்கச்சி வேள்விடை — இது வீரட்டகாசேசுரர் கோயில் என வழங்கும். ஆடிசன்பேட்டையி லிருக்கிறது. சாக்கிய நாயனார் வணங்கிய தலம். திருக்கச்சி முத்தீச்சுரம். இதுவும் ஆடிசன்பேட்டையி லிருக்கிறது. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் வணங்கிய தலம். (சு-ர்.) முத்தீச்சுரர்.

21. திருக்கச்சிமேற்றளி—விஷ்ணு சிவரூபம் பெற்றது (சு-ர்) கச்சபேசுவரர், (தே-ர்) காமாக்ஷியம்மை (தீ-ம்) விஷ்ணுதீர்த்தம், (காஞ்சிபுரம்) பிள்ளைபாளையத்தி லிருக்கிறது. நா-க பதிகமுடையது.

22. திருக்கச்சிஓணகாந்தன்றளி — தேவர்களும் ஓணன், காந்தன் என்னும் அசுரர் இருவரும் பூசித்த தலம். (சு-ர்) ஓணகாந்தேசுரர், (தே-ர்) காமாக்ஷியம்மை, (தீ-ம்) விஷ்ணுதீர்த்தம். (காஞ்சிபுரம்) சர்வதீர்த்தத்தி லிருக்கிறது. சு-க பதிகமுடையது.

23. திருக்கச்சிஅநேகதங்காபதம்-கணபதியும், குபேரனும் பூசித்த தலம் (சு-ர்) திரு

அனேகதங்காவதேசுவரர், (தே-ர்) காமாக்ஷியம்மை, (தீ-ம்) தாணுதீர்த்தம். (காஞ்சிபுரம்) புத்தேரித் தெருவுக்கு மேற்கிலுள்ள கழனி வெளியிலிருக்கிறது. சு - க பதிகமுடையது. கைலாயநாதர் கோயிலென்றும் கூறப்படுவது.

24. திருவலிதாயம் (பாடி) — தேவகுரு, அநுமான் பூசித்த தலம். (சு-ர்) திருவலிதாயநாதேசுரர், (தே-ர்) தாயம்மை, (தீ-ம்) அநுமதீர்த்தம், (ம-ர-ல்) வில்லிவாக்கத்திலிருந்து (தெ-மே) உ-மைல். ஞா-க பாடலுடையது. பழையபுராண முடையது.

25. திருவடதிருமுல்லைவாயில்--தொண்டைமான் பகைவர்க்கஞ்சிப் பின்னிட யானையின்காலில் முல்லைக்கொடி சுற்றிக்கொண்டு தடைபடக்கண்டு வாளால் வெட்ட, வெட்டியவிடத்திருந்து தரிசனந் தந்து நந்திமாதேவரை யுத்தத்திற்கனுப்பின தலம். இத்தலத்தில் நந்திமாதேவர் சுவாமிக்குப் புறங்காட்டிக்கொண்டு இருக்கின்றார். (சு-ர்) மாசிலாமணியீசுரர், (தே-ர்) கொடியிடைநாயகி, (தீ-ம்) சுப்பிரமணியதீர்த்தம், சக்கரதீர்த்தம், (ம-ர-ல்) அம்பத்தூர். இத்தலத்தில் எருக்கந் தூண்களிரண் டிருக்கின்றன. சு-க பதிகமுடையது. திருமயிலை மகாவித்வான் சண்முகம் பிள்ளை பாடிய புராணமும், சிவஞான முனிவர் பாடிய அந்தாதியு முடையது.

26 திருவேற்காடு — குமாரக்கடவுள் பூசித்த தலம். மூர்க்கநாயனார் திருவவதாரத் தலம். (சு-ர்) வேற்காட்டீசர், (தே-ர்) வேற்கண்ணியம்மை, (தீ-ம்) வேலாயுததீர்த்தம், (ம-ர-ல்) ஆவடிஸ்டேஷனிலிருந்து ஊ-மைல். நல்லபாதை. ஞா-க பதிகமுடையது. பழையபுராண முடையது.

27. திருவொற்றியூர் — ஆதிசேடன் பூசித்த தலம். சுந்தரமூர்த்திசுவாமிகள் சங்கிலியாரை மணந்து சூள்கூறிய தலம். பட்டினத்தடிகள் முத்திபெற்ற தலம் (சு-ர்) படம்பக்கநாதர், மாணிக்கத்தியாகர். (தே-ர்) வடிவுடையம்மை, (தீ-ம்) பிரும்மதீர்த்தம், அலைவாய்த்தீர்த்தம். மகிழவிருக்ஷம். கீழைக்கரைரெயில் திருவொற்றியூர். ஞா. க, ந. இ, சு - உ. பதிகங்களையுடையது. கமலை ஞானப்பிரகாசரது ஒடொருவர் இயற்றிய புராணமுடையது. இரட்டையர் இயற்றிய பஞ்சரத்தினங்களையுடையது.

28. திருமயிலை — உமாதேவியார் மயிலுருக்கொண்டு பூசித்த தலம். திருஞானசம்பந்தசுவாமிகள் சிவநேசச்செட்டியாரின் குமரியாராகிய பூம்பாவையாரை உயிர்ப்பித்த தலம். வாயிலார் நாயனார், ஐயடிகள் காடவர்கோன், திருவள்ளுவதேவர் முதலியோர் தங்கிய சிறப்புள்ளது (சு-ர்) கபாலீச்சுரர், (தே-ர்) கற்பகவல்லியம்மை, (தீ-ம்) பிரமதீர்த்தம், புன்னை விருக்ஷம். இம்மயிலை சென்னப்பட்டணத்திற்குத் தெற்கு ௬ மைலில் இருக்கிறது. ஞா - க பதிகமுடையது. திருஅண்ணமலை ஆதீனத்தைச் சார்ந்த அமிர்தலிங்கத் தம்பிரான் இயற்றிய தலபுராணமும், உலா, கலம்பகம், யமகவந்தாதி முதலியனவும் உடையது.

29. திருவான்மியூர் — காமதேனு பூசித்த சுவயம்புமூர்த்தித் தலம். வான்மீகருஷி பூசிக்க நடனதரிசனங் கொடுத்த தலம். (சு-ர்) மருந்தீசர், (தே-ர்) சொக்கநாயகி, (தீ-ம்) வன்மீகதீர்த்தம். திருமயிலைக்குத் தெற்கு ௬-மைலில் இருக்கிறது. ஞா - உ, நா-உ பதிகங்களை யுடையது. பூவை கல்யாணசுந்தர முதலியார் பாடிய தலபுராண முடையது.

30. திருக்கச்சூர்ஆலக்கோயில் (திருக்கச்சூர்) — வித்யாதரர் பூசித்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு வேதியராய்ப் பிக்ஷைகொண்டு அளித்த தலம். (சு-ர்) விருந்திட்ட ஈசுரர், அமிர்தத்தியாகர், (தே-ர்) அஞ்சனாக்ஷி, (தீ-ம்) அமுததீர்த்தம். (தெ-ர-ல்) சிங்கப்பெருமான் கோயிலிலிருந்து (வ-மே) (உ) மைலி விருக்கிறது. சு - க பதிகமுடையது.

31. திருஇடைச்சுரம் — கௌதமர், சநத்குமாரர் முதலியமகரிஷிகள் பூசித்த தலம். (சு-ர்) இடைச்சுரநாதர். (தே-ர்) இமயமடக்கொடியம்மை. (தீ-ம்) இந்திரதீர்த்தம். (தெ-ர-ல்) செங்கற்பட்டி விருந்து (கு) மைலிவிருக்கிறது. ஞா - க பதிகமுடையது.

32 திருக்கழுக்குன்றம் — அஷ்டவசுக்கள், நந்தி, இந்திரன், பசு, வராகம் முதலியோர் பூசித்த தலம். திருமால் முதலியவர் பிரதக்ஷிணம் வந்து முத்தியடைந்த தலம். சண்ட, பிரசண்டர், சம்பாதி, சடாயு, சம்புகுந்தன், மாகுந்தன் முதலிய கழுகுகள் மூன்றுயுகத்திலும் முறையே இரண்டிரண்டாய்ப் பூசித்து முத்தியடைந்த தலம். இக்கலியுகத்தில் பூஷா, விருத்தா எனும் தவசிகள் கழுகுருவாயிருக்குந் தலம். இத்தலத்தில் பன்னிரண்டு வருஷத்திற் கொருமுறை சங்கு பிறந்து வருகிறது. வாதவூரடிகளுக்குக் குருமூர்த்தம் தரிசனம் தந்தருளிய தலம். பிரத்தியக்ஷத்தில் பலநோய்களைத் தீர்க்குந் தலம். (சு-ர்) வேதகிரீசுரர். (தே-ர்) பெண்ணினல்லாளம்மை. (தீ-ம்) பக்ஷிதீர்த்தம், சங்கு தீர்த்தம். (தெ-ர-ல்) செங்கற்பட்டி விருந்து (கு)

மைல் இருக்கிறது. ஞா-க, நா-க, சு-க பதிகங்களை யுடையது. அந்தகக்கவி வீரராகவ முதலியார் பாடிய புராண முடையது. கோவையும், அந்தாதியு முடையது.

33. திரு அச்சிறுபாக்கம் — தேவர்கள் பூசித்த தலம். திரிபுர சங்காரத்தின்பொருட்டுத் தேவர் செருக்கடங்கச் சிவபெருமான் தேரையூன்ற அச்சு முறிந்த தலம். (சு-ர்) பார்க்கபுரேசுரர். (தே-ர்) ஆதிசுந்தரமின்னம்மை. (தீ-ம்) தேவதீர்த்தம். (தெ-ர-ல்) அச்சிறுபாக்கம். ஞா - க பதிகமுடையது.

34. திருவக்கரை — வக்ராசுரன், சந்திரன் பூசித்த தலம். (சு-ர்) சந்திரசேகரேசுவரர். (தே-ர்) தேனம்பிகையம்மை, அமுதாம்பிகை. (தீ-ம்) சுந்தரதீர்த்தம், பிரமதீர்த்தம். (தெ-ர-ல்) மயிலம் அல்லது விழுப்புரம் ஸ்டேஷனிலிறங்கிப் போகலாம். ஞா - க பதிக முடையது.

35. திருஆசிலி — (ஒழுந்தியாபட்டு) என இப்பொழுது வழங்குகிறது. வாமதேவருஷி பூசித்த தலம். (சு-ர்) அரசிலிநாதர். (தே-ர்) பெரியநாயகியம்மை. (தீ-ம்) அரசடி தீர்த்தம். (தெ-ர-ல்) புதுவையிலிருந்து (எ) மைலிலிருக்கிறது. ஞா-க பதிகமுடையது.

36. திருஇரும்பைமாகாளம் — மகாகாளர் பூசித்த தலம். (சு-ர்) மாகாளேசுரர். (தே-ர்) குயின்மொழியம்மை. (தீ-ம்) மாகாள தீர்த்தம். (தெ-ர-ல்) புதுவைக்கு (வ-கி) (இ) மைலிலிருக்கிறது. ஞா க பதிகமுடையது.

தொண்டைநாடு முற்றும்

## மகதநாடு
## அல்லது நடுநாடு. 22.

1. திருஅண்ணுமலை — சிவபெருமான் பிரமவிஷ்ணுக்களுக்கிடையேசோதியுருவாய் எழுந்தருளித் தரிசனந் தந்தருளிய தலம். உமாதேவியார் இறைவன் திரிநேத்திரங்களைப் புதைத்த பாவ நீங்கப் பூசித்துப் பாகம் பெற்ற தலம். பிரதக்ஷிணஞ்செய்த புழுருப் பூனை, குதிரை முதலியன நற்பதவி பெற்ற தலம். அருணகிரிநாதர் அவதரித்துத் திருப்புகழ் முதலியன பாடியருளிய தலம். தேயுலிங்கம். மணிபூரக ஸ்தலம். (சு-ர்) அருணுசலேசுரர். (தே-ர்) உண்ணுமுலையம்மை. (தீ-ம்) சிவகங்கை. பிரமதீர்த்த முதலிய பல. இது (தெ-ர-ல்) திருவண்ணுமலை ஞா - உ, நா-ஙு, இவர்களுடைய பாடலுடையது. சிதம்பரம் குகைமடம் மறைஞான சம்பந்தர் பாடிய அருணகிரிப் புராணமும், எல்லப்ப நயினர் பாடிய அருணுசலப் புராணமும், குகை நமசிவாயர் பாடிய அண்ணுமலை வெண்பாவும், எல்லப்பர் பாடிய அருணைக் கலம்பகமும், அருணையந்தாதியு முடையது. சிவப்பிரகாச சுவாமிகள் சோனசைல மாலை பாடியுள்ளார். அருணகிரி யந்தாதி யொன்று முண்டு.

2. திருஆமாத்தூர் — கோடிருஷிகளும் காமதேனுவும் பூசித்த தலம். (சு-ர்) காமார்த்தேசுரர். (தே-ர்) அழகியநாயகியம்மை. (தீ-ம்) பசுதீர்த்தம். (தெ-ர-ல்) விழுப்புரம் ஸ்டேஷனுக்கு (வ-மே) (ச) மைல். ஞா உ, நா-உ, சு - க பதிகங்களுடையது. புராணம் அச்சிடப்பட்டுளது. இரட்டையர் பாடிய கலம்பகம் இருக்கிறது.

3. புறவார்பனங்காட்டூர் — (பனையபுரம்) வித்யாதரர் பூசித்ததலம். (சு-ர்) பனங்காட்டேசுரர். (தே-ர்) அமிர்தவல்லியம்மை. (தீ-ம்) அமிர்ததீர்த்தம். விழுப்புரம் ஸ்டேஷனுக்கு (வ) ($5\frac{1}{2}$) மைல். ஞா - க பதிக முடையது.

4. திருமுண்டீச்சுரம் — இந்திரன் பூசித்த தலம். (சு-ர்) முண்டீச்சுரர். (தே-ர்) கானர் குழலியம்மை. (தீ-ம்) கண்ணுயிரதீர்த்தம். திருவெண்ணெய் நல்லூருக்குக் கிழக்கு (ச) மைல். நா-க பதிகமுடையது.

5. திருப்பாதிரிப்புலியூர் — வியாக்கிரபாத ரிஷியாற் பூசிக்கப்பட்டது. இது வடபுலியூரெனவும் படும். பாதிரி விருக்ஷம். அப்பர் சுவாமிகள் கற்றூணிற் கட்டிக் கடலிலிட்ட காலத்துக் கரை யேறிய தலம். (சு-ர்) தோன்ருத்துணை நாதர். (தே-ர்) தோகையாம்பிகையம்மை. (தீ-ம்) பெண்ணைநதி. (தெ-இ-ர-ல்) ஸ்டேஷன். ஞா க, நா-க பதிகமுடையது. புராண முடையது. தொல்காப்பிய தேவரியற்றிய கலம்பக முடையது. அப்பர் கடலிலிருந்து கரையேறிய இடத்திற்குக் கரையேற விட்ட புராணம் பாடப்பட்டிருக்கிறது.

6. திருமாணிகுழி — (திருமாண்டகுழி) வாமனவதாரங் கொண்ட விஷ்ணு மாணிக்கம் வைத்துப் பூசித்த தலம். (சு-ர்) மாணிக்க மேனி வரதர். (தே-ர்) மாணிக்கவல்லியம்மை. (தீ-ம்) பெண்ணைநதி. திருப்பாதிரிப்புலியூர் ஸ்டேஷனிலிருந்து மேற்கே ($3\frac{1}{2}$) மைலில் இருக்கிறது. ஞா-க பதிகமுடையது.

7. திருவடுகூர் — (ஆண்டார்கோவில்) உக்ரவீர்யரிஷியும், பைரவரும் பூசித்த தலம்.

(சு-ர்) வடுகேச்சுரர். (தே-ர்) வடுவகிர்கண்ணியம்மை. (தீ-ம்) பெண்ணைநதி. புதுச்சேரிக்கிளை கண்டமங்கலம் ஸ்டேஷனிலிருந்து(மே) உ-மைலில் இத்தலம் இருக்கிறது. ஞா-க பதிகமுடையது. இதற்கு (தெ-மே) (க) மைலில் திருத்துறையூர்.

8. திருவெண்ணெய்நல்லூர் — இவ்வாலயத்திற்கு அருட்டுறை யென்று பெயர். சம்புபத்தருஷி பூசித்த தலம். சுந்தரமூர்த்திசுவாமிகளைத் தடுத்தாட்கொண்ட தலம். மெய்கண்ட சிவாசாரியர் திருவவதாரஞ் செய்த தலம். (சு-ர்) தடுத்தாட்கொண்டஈசுரர், இடபாரூடரா யிருக்கிறார். (தே-ர்) வேற்கண்ணியம்மை. (தீ-ம்) பெண்ணைநதிதீர்த்தம். பண்ணுருட்டி ஸ்டேஷனிலிருந்து மேற்கே (கரு) மைல் சென்றால் இத்தலமிருக்கிறது. இது பொழுது விழுப்புரம் - திருச்சி குறுக்குரயிலில் ஒரு ஸ்டேஷன். சு-க பதிகமுடையது. புராணமும், கலம்பகமும், உலாவும் இருக்கின்றன.

9. திருவிடையாறு — சுகப்பிரம்மரிஷி பூசித்த தலம். (சு-ர்) இடையாற்றேசுரர். (தே-ர்) சிற்றிடைநாயகியம்மை. (தீ-ம்) பெண்ணைநதிதீர்த்தம். திருவெண்ணெய்நல்லூருக்கு மேற்கு (ந) மைல்.

10. திருஅறையணிநல்லூர் — பிரசண்டருஷிபூசித்த தலம். (சு-ர்) அறையணிநாதேசுரர். (தே-ர்) அருணயகியம்மை. (தீ-ம்) பெண்ணைநதி தீர்த்தம். ஞா-க பதிகமுடையது. இதற்கு (தெ-மே) முக்கால் கடிகையில்.

11. திருக்கோவலூர் — இது அட்ட வீரட்டத்துள் ஒன்று. இது அந்தகாசுரனை வென்ற தலம். மெய்ப்பொருள்நாயனார் முத்தி பெற்ற தலம். இதற்கு (தெ-இ-ர-ல்) திருக்கோவலூர் ஸ்டேஷன். ஞா-க, நா-க பதிகங்களையுடையது. புராணமுடையது.

12. திருநெல் வெண்ணெய் — சநகர் முதலிய இராஜரிஷிகள் பூசித்த தலம் (சு-ர்) வெண்ணெயப்பர். (தே-ர்) நீலமலர்க்கண்ணம்மை. (தீ-ம்) பெண்ணைநதி. பண்ணுருட்டி ஸ்டேஷனிலிருந்து உக-மைல் திருக்கோவலூரிலிருந்து சுo-மைலிருக்கும். ஞா-க பதிகமுடையது.

13. திருமுதுகுன்றம் — (விருத்தாசலம், பழமலை) பிரமன், அட்டவசுக்கள், உமை, விபசித்து, சிவனன்னன் பூசித்த தலம். மதுகைடவரை வெல்லத் தவஞ்செய்த விஷ்ணுவிற்கு, விருத்தவேதியராய் அநுக்கிரகித்த தலம். சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குப் பொன் கொடுத்து அவர் அதனை இத்தலத்தின்கணுள்ள மணிமுத்தா நதியிலிட்டுப் பெற்ற தலம் (சு-ர்) பழமலைநாதர். (தே-ர்) பெரியநாயகி. (தீ-ம்) மணிமுத்தாநதி. வன்னிவிருக்ஷம். விழுப்புரம் - திருச்சி குறுக்கு ரயிலிலுள்ள ஒரு ஸ்டேஷன். ஞா-எ, நா-க பதிகங்களுடையது. விருத்தாசல புராணமுடையது.

14. திருநாவலூர் — (திருநாமநல்லூர்) சுக்கிரன் பூசித்ததலம். சுந்தரமூர்த்திசுவாமிகள் திருவவதாரஞ்செய்த தலம். சடையனார், இசைஞானியார் நரசிங்கமுனையரையர் முத்தியடைந்த தலம். (சு-ர்) திருநாவலேச்சுரர். (தே-ர்) சுந்தரநாயகி. (தீ-ம்) சிவகங்கை. சு-க பதிகமுடையது. திருவெண்ணெய் நல்லூருக்கு இரண்டு கட்டை தூரத்தி லுள்ளது. புராணம் இருக்கிறது.

15. திருஅதிகை வீரட்டானம் — சிவபெருமான் திரிபுரதகனஞ் செய்தருளிய தலம். அப்பர் சுவாமிகள் திருத்தொண்டு பூண்ட தலம். மனவாசகம் கடந்தார் எழுந்தருளியிருந்த தலம். (சு-ர்) திருவதிகைவீரட்டானேசுரர். (தே-ர்) திரிபுரசுந்தரியம்மை. (தீ-ம்) சூலகங்கை, சக்கரதீர்த்தம், கெடிலநதி. விஷ்ணு, பிரமன், கருடன், பாண்டவர்கள் பூசித்த தலம். இது (தெ-ர-ல்) பண்ணுருட்டி ஸ்டேஷனுக்குத் தெற்கு முக்கால் மைலிலிருக்கிறது. புராணமுண்டு. ஞா-க, நா கசு, சு-க பதிகங்களுடையது.

16. திருச்சோபுரம் — (தியாகவல்லி) அகஸ்தியர் பூசித்ததலம். (சு-ர்) சோபுரநாதேசுரர். (தே-ர்) சோபுரநாயகி. (தீ-ம்) பரமதீர்த்தம். (தெ-ர-ல்) கூடலூர்க்கு அருகிலுள்ள ஆலப்பாக்கம் ஸ்டேஷன் இறங்கிச் சென்றால் சழிக்கரைக் கண்ணிருக்கிறது. ஞா-க பதிகமுடையது.

17. திருத்தினைநகர் — (தீர்த்தனகிரி) மறைமுனிவர் பூசித்ததலம். (சு-ர்) திருந்தீச்சுரர். (தே-ர்) ஒப்பிலாநாயகியம்மை. (தீ-ம்) மணிமுத்தாநதி தீர்த்தம். இது மேற்கூறிய ஆலப்பாக்கம் ஸ்டேஷனிலிருந்து ($5\frac{1}{2}$) மைலில் இருக்கிறது. சு-க பதிகமுடையது.

18. திரு எருக்கத்தம்புலியூர் —(நாகேந்திரபட்டணம்) நாகராசன் பூசித்ததலம். திருநீலகண்டயாழ்ப்பாண நாயனார் முத்தியடைந்த தலம். (சு-ர்) நீலகண்டநாயகேச்சுரர். (தே-ர்) நீலமலர்க்கண்ணியம்மை. (தீ-ம்) மணிமுத்தாநதிதீர்த்தம். இங்கு ஒரு வெள்ளெருக்கஞ் செடி யிருக்கிறது. விருத்தாசலத்திற்குத்

தெற்கு (எ) மைலில் இருக்கிறது. ஞா-க பதிகமுடையது.

19. திருக்கூடலையாற்றூர் — வன்மீக ருஷி பூசித்த தலம். சுந்தரமூர்த்திகளை விருத்தாசலத்திற்குப் போகுமார்க்கத்தில் வேதியராய்மறித்து இதுகூடலையாற்றூர்க்குப் போகு மார்க்கமெனக் கூறிப் பதிகம் பெற்ற தலம். (சு-ர்) நெறிகாட்டும்நாயகேசுரர். (தே-ர்) புரிகுழலாம்பிகையம்மை. (தீ-ம்) மணிமுத்தாநதி. இது விருத்தாசலத்திலிருந்து (கிழ) (கச) மைலில் இருக்கிறது. (சு-க) உண்டு.

20. திருத்தூங்கானைமாடம் — (திருக்கடந்தைநகர், பெண்ணுகடம்) இந்திரன், சப்த கன்னியர், ஐராவதம், காமதேனு பூசித்ததலம். கலிக்கம்பநாயனர் திருவவதாரத்தலம். திருநாவுக்கரசு விடைக்குறி, சூலக்குறி வேண்டிப் பெற்றதலம். (சு-ர்) சுடர்க்கொழுந்தேச்சுரர். (தே-ர்) கடந்தைநாயகியம்மை. (தீ-ம்) கெடிலநதிதீர்த்தம். விருத்தாசலத்திற்கு (தெ-மே) (கக) மைலிலிருக்கிறது. ஞா-க, நா-க பதிகங்களுடையது.

21. திருநெல்வாயில்அரத்துறை—சப்த ருஷிகளும், இந்திரனும் பூசித்த தலம். திருஞானசம்பந்த சுவாமிகள் பாதசாரியாய் எழுந்தருளியது கண்ட சிவபெருமான் முத்துச்சிவிகை, குடை, சின்னம் முதலியன அருளிய தலம். (சு-ர்) அரத்தறைநாதர். (தே-ர்) ஆநந்தநாயகி யம்மை. (தீ-ம்) கெடிலநதிதீர்த்தம். இது தூங்கானைமாடத்திற்கு (ச) மைல் தூரத்திலிருக்கிறது. ஞா-க, நா-க, சு-க பதிகமுடையது.

22. திருத்துறையூர் — (திருத்தளூர்) நாரதமுனிவர் பூசித்ததலம். அருணந்தி சிவாசாரியர் முத்திபெற்றதலம். (சு-ர்) துறையூரப்பேசுரர். (தே-ர்) பூங்கோதையம்மை. (தீ-ம்) பெண்ணைநதி. பண்ணுருட்டியிலிருந்து (வ-மே) (கு) மைல். (சு-க) பதிகமுடையது.

நடுநாடு முற்றும்

## சோழநாடு.

### I. காவேரியின் வடகரை. 63

1. திருக்கோயில் — இது திருப்புலியூர், புண்டரிகபுரம், தகராகாசம் முதலிய பல திருநாமங்கள் பெறும். இது ஆகாசத்தலம். (சுவாமிபெயர்) சபாநாயகர். (பிராட்டியார்) சிவகாமியம்மை, திருமூல நாயகர், உமையம்மை. (தீர்த்தங்கள்) திருப்புலீச்சுரதீர்த்தம், குய்யதீர்த்தம், புலிமடு, அநந்தம், பிரமம், நாகேசரி, சிவப்பிரியை, திருப்பாற்கடல், பரமாநந்தகூபம் முதலியனவாம். சபை, கனக சபை; பதஞ்சலி, வியாக்ரபாதர் பொருட்டுச் சிவபெருமான் திருநடனஞ் செய்தருளிய தலம். உபமன்னியருஷி பாற்கடல் பெற்றுண்ட தலம். துன்மதன், துற்றெரிசனன், துச்சகன் முதலியோர் முத்திபெற்ற தலம். தில்லைவாழந்தணரென்று சுந்தரமூர்த்திகளால் சிறப்பித்தருளிய அந்தணர் வசிக்கப் பெற்ற தலம். வியாசமுனிவர், சுகர், சௌனகர், சூதர், முதலியோர் பூசித்த தலம். சைமினிமுனிவர் வேதபாதஸ்தவம் அருளிச்செய்த தலம். சேந்தனர் அருள்பெற்ற தலம். மாணிக்கவாசக சுவாமிகள் திருக்கோவையார் திருவாசகம் பாடி முத்திபெற்ற தலம். திருநீலகண்டர், திருநாளைப்போவார், கூற்றுவநாயனர், கணம்புல்லர், சந்தானசாரியர்கள் முத்திபெற்ற தலம். (தெ-இ-ர) ஸ்டேஷன் - சிதம்பரம். ஞா-உ, நா-அ, சு-க பதிகங்களையுடையது. உமாபதிசிவம் செய்தருளிய கோயிற் புராணம், சிதம்பர புராணம், சபாபதி நாவலர் செய்த ஹேமசபாநாத புராணம், தில்லைக் கலம்பகம், குமரகுருபரர் செய்தருளிய சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பர செய்யுட் கோவை; மணிவாசகப் பெருமான் அருளிய திருக்கோவையார் முதலியன உடையபதி. இதற்கு (தெ-கி) உ-கடிகையில்.

2. திருவேட்களம் — நாரதர் பூசித்த தலம். (சு-ர்) பாசுபதேசுரர். (தே-ர்) நல்லநாயகியம்மை. (தீ-ம்) நாரததீர்த்தம். மூங்கில் வனம் ஞா-க, நா-ச. இதற்கு (தெ) ஒரு கடிகையில்.

3. திருநெல்வாயில் — (சிவபுரி) கண்ணுவருஷி பூசித்ததலம். (சு-ர்) உச்சிநாதேச்வரர். (தே-ர) கனகாம்பிகை. (தீ-ம்) கனகாம்பிகை. ஞா-க. இதற்கு (தெ) வ கடிகையில்.

4. திருக்கழிப்பாலை — (காரைமேடு) வான்மீகருஷி பூசித்ததலம். (சு-ர்) பால்வண்ணஈசர். (தே-ர்) பொற்பதவேதநாயகி. (தீ-ம்) கொள்ளிடம். ஞா-உ, நா-கு, சு-க. இதற்கு (தெ-கி) கு-கடிகையில்.

5. திருநல்லூர்ப்பெருமணம் — (ஆச்சாபுரம்) திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் திருமணக்கோலத்துடன் சோதியுட் கலந்த தலம். (சு-ர்) சிவலோகத்தியாகர். (தே-ர்) நங்கையுமைநாயகி. (தீ-ம்) பஞ்சாக்ஷரதீர்த்தம். இது சிதம்பரத்திற்குத் தெற்கே ஆணிக்காரன் சத்திரம் என்னும் அணைக்கரைச் சத்

திரத்திலிருந்து கொள்ளிடக்கரை யோரஞ் சென்ருல் (உ) மைல். நல்லபாதை, ஞா-க பதிகமுடையது. கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் பாடிய புராணமுடையது. இது இதுபொழுது ஆச்சாபுரம் என வழங்கும். இதற்கு (வ-கி) ௩-கடிகையில்.

6. திருமயேந்திரப்பள்ளி — (கோயிலடிப்பாளையம்) எலிசெய்த புண்ணியத்தால் மாபலியாகப் பிறக்க அருள்செய்த தலம். (சு-ர்) திருமேனியழகர். (தே-ர்) முல்லைநகை வடிவம்மை. (தீ-ம்) மந்திரபுஷ்கரிணி. இது (தெ-இ ர) ஆணிக்காரன் சத்திரத்திலிறங்கி ஆச்சாபுரஞ்சென்று (ச) மைல் போகவேண்டியது. ஞா-க பதிகமுடையது. கடற்கரை யோரத்தி லிருக்கிறது. இதற்கு (கி) ௯-கடிகையில்

7. (தென்) திருமுல்லைவாயில் — இந்திரன் பூசித்த தலம். (சு - ர்) முல்லைவநநாதர். (தே-ர்) கோதையம்மை. (தீ-ம்) சக்கரதீர்த்தம். சீர்காழிக்குக் கிழக்கு (அ) மைல்; நல்லபாதை, ஞா-க பதிகமுடையது. இலக்கணவிளக்கம் வைத்தியநாத தேசிகரின் ஐந்தாவது புத்திரன் வநோததேசிகர் செய்த புராணமுடையது. இதற்கு (தெ) எ - கடிகையில்.

8. திருக்கலிக்காமூர் — (அன்னப்பன் பேட்டை) பாராசருஷி பூசித்ததலம். (சு - ர்) சுந்தரேசுரர். (தே-ர்) அழகுவனமுலையம்மை. (தீ-ம்) அம்புவிதீர்த்தம். ஞா-க இதற்கு (தெ) ௩-கடிகையில்.

9. திருச்சாய்க்காடு — (சாயாவனம்) உபமன்னியருஷி பூசித்ததலம். இயற்பகை நாயனர் முத்திபெற்ற தலம். சீர்காழிக்குத் தென் கிழக்கு ௯-மைல். வழியில் (அ) வது மைலில் திருவெண்காடு. ஞா-உ, நா-உ பதிகமுடையது. புராணமுடையது. இதற்கு (கி) அரை கடிகையில்.

10. திருப்பல்லவனீச்சரம் — (காவிரிப்பூம்பட்டணம்) பல்லவன் பூசித்த தலம். பட்டினத்தடிகள் திருவவதாரஞ்செய்ததலம். சீர்காழிக்கு (தெ-கி) ௧0 - மைல். ஞா-உ. இதற்கு (வ-மே) $2\frac{1}{2}$-கடிகையில்.

11. திருவெண்காடு — (சுவேதாரண்யம்) வெள்ளையானை பூசித்ததலம். சீர்காழிக்கு (தெ-கி) அ-மைல். (சு-ர்) சுவேதாரண்யேசுரர். (தே-ர்) பிரம்மவித்யாநாயகி. (தீ-ம்) முக்குளத்தீர்த்தம். விருக்ஷம் வடவால். ஞா ௩, நா-உ, சு - க பதிகங்களுடையது. சைவ எல்லப்பநாவலர் பாடிய புராணமுடையது.

12 திருக்காட்டுப்பள்ளி—(கீழை) இந்திரன் பூசித்ததலம். (சு-ர்) ஆரண்யசுந்தரர். (தே-ர்) அகிலாண்டநாயகி. (தீ-ம்) அமிர்த பொய்கை. ஞா-க. சீர்காழிக்கு (தெ-கி) அ-மைல். இதற்கு (வ மே) ௬-கடிகையில்.

13 திருக்குருகாவூர் — (திருமேனி வெள்ளடை) சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குக் கட்டமுது தந்தருளிய தலம். ஞா-க, சு-க, சீர்காழிக்கு (கி) ௬-மைல். இதற்கு (தெ-மே) ௩-கடிகையில்.

14. சீர்காழி — பிரம, விஷ்ணு, இந்திரன், பூசித்த தலம். பிரமபுரம் அடியிலும், தோணிபுரம் இடையிலும், சட்டைநாதம் அதன்மேலும் ஆன தலம். திருஞானசம்பந்த சுவாமிகள் திருஅவதாரத் தலம். திருவாதவூரர் பிடித்தப்பத்து பாடிய தலம். கணநாத நாயனர் முத்தியுடைந்த தலம். (சு-ர்) பிரமபுரேசர். (தே-ர்) திருநிலைநாயகி. (தீ-ம்) சக்கர தீர்த்தம். ரயில்வே ஸ்டேஷன். ஞா-௬எ, நா-௩, சு-க பதிகங்களுடையது. அருணசலக் கவிராயர் பாடிய புராணமுடையது. வித்வான் தியாகராஜ தேசிகர் பாடிய அந்தாதியும், மகா வித்வான் மீனட்சி சுந்தரம் பிள்ளை பாடிய கோவையுமுடையது. இதற்கு (தெ-மே) அரை கடிகையில்.

15. திருக்கோலக்கா — அகஸ்தியர், கண்ணுவர் பூசித்த தலம். திருஞான சம்பந்த சுவாமிகளுக்குத் திருத்தாளம் அளித்த தலம். (சு-ர்) சப்தபுரேசுரர். (தே-ர்) ஓசைகொடுத்தநாயகி. (தீ-ம்) ஆனந்ததீர்த்தம். இது சீர்காழிக்கு (மே) வ கடிகையிலிருக்கிறது. ஞா க, சு-க. இதற்கு தெற்கு ௩-கடிகையில்.

16. திருப்புள்ளிருக்குவேளூர் — (வைதீச்சுவரன் கோவில்) சடாயு சம்பாதிகளால் பூசிக்கப்பெற்ற தலம். (சு-ர்) வைத்தியநாதர். (தே-ர்) தையனாயகி. (தீ-ம்) சித்தாமிர்தம். (விருக்ஷம்) வேம்பு. (ஸ்டேஷன்) ஞா-௬, நா-உ பதிகங்களுடையது. புராணமுடையது. குமரகுருபரர் பாடிய முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழும், படிக்காசுப் புலவர் பாடிய புள்ளிருக்குவேளூர்க் கலம்பகமு முடையது. இதற்கு (தெ-கி) க-கடிகையில்.

17. திருக்கண்ணார்கோவில் —(குருமாணக்குடி) இந்திரன் பூசித்த தலம். (சு-ர்) கண்ணாயிரேச்சுரர். (தே - ர்) முருகுவளர் கோதையம்மை. (தீ - ம்) இந்திர தீர்த்தம். ஞா-க. இதற்கு (தெ கி) ௩-கடிகையில்.

18. திருக்கடைமுடி — (கீழூர்) பிரமன் பூசித்த தலம். (சு-ர்) கடைமுடிநாதர். (தே-ர்)

அபிராமவல்லி. (தீ-ம்) கடைமுடி. மாயூரத்தை அடுத்த ஆனதாண்டவபுரம் ரயில்வே ஸ்டேஷனி விருந்து (௬) மைல். ஞா-க. இதற்கு (வ-மே) ௩-கடிகையில்.

19. திருநின்றியூர் — திருமகள் பூசித்த தலம். (சு-ர்) மகாலக்ஷ்மீசுவரர். (தே-ர்) உலக நாயகி. (தீ-ம்) நீலமலர்ப் பொய்கை. பூசல் நாயனர் திரு அவதாரத் தலம். மாயூரத்தை அடுத்த ஆனந்தத் தாண்டவபுரம் ஸ்டேஷனி விருந்து (வ-கி) உ-மைல். ஞா-க, நா-க, சு-உ. இதற்கு (வ-மே) ௩-கடிகையில்.

20. திருப்புன்கூர் — திருநாளைப்போவாருக்கு நந்தி விலகிக்கொள்ள அவர் சுவாமியைத் தெரிசித்தருளிய தலம். ஏயர்கோன் கலிக்காம நாயனர் முத்திபெற்ற தலம். (சு-ர்) சிவலோகநாதர். (தே-ர்) சொக்கநாயகி. (தீ-ம்) சிவகங்கை. ஞா-க, நா-க, சு க பதிகங்களுடையது. புராணமுடையது. வைதீசுரன் கோயில் ஸ்டேஷனுக்கு (மே) உ-மைல். இதற்கு (தெ-கி) ௪-கடிகையில்.

21. திருநீடூர்—இந்திரன் பூசித்த தலம். முனையடுவார் நாயனர் முத்திபெற்ற தலம். (சு-ர்) அருட்சோம நாதர். (தே-ர்) வேயுறு தோளியம்மை. (தீ-ம்) செங்கழுநீரோடை. சு-க பதிகமுடையது. புராணமுடையது. ஆனந்தத் தாண்டவபுரம் ஸ்டேஷனிலிருந்து (தெ மே) க-மைல். நீடூர் ஸ்டேஷன் இதற்கு (மே) உ-கடிகையில்.

22. திருஅன்னியூர்—வருணன் பூசித்த தலம். (சு-ர்) ஆபத்சகாயர். (தே-ர்) பெரிய நாயகி. (தீ-ம்) வருண தீர்த்தம். ஞா-க, நா-க இதற்கு (மே) உ-கடிகையில்.

23. திருவேள்விக்குடி—ஓர் ராசபுத்திரன் விவாக முடிக்கச் சிவபெருமான் புரோகிதஞ்செய்த தலம். (சு-ர்) கல்யாணசுந்தரர். (தே-ர்) பரிமளசுகந்த நாயகி. (தீ-ம்) மங்கள தீர்த்தம். ஞா-க, சு-க பதிகங்களுடையது. இது குத்தாலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு மேற்கு ஒரு கட்டை தொலைவில் காவிரிக்கு வடகரையிலிருக்கிறது. இதற்கு (வ-மே ஒன்றரை கடிகையில்.

24. திருஎதிர்கொள்பாடி — வேள்விக்குடியில் திருமணம் முடித்த அரச குமரனை மாதுலனைப் போல் எதிர்கொண்ட தலம். ஐராவதம் பூசித்த தலம். (சு-ர்) ஐராவதேச்சுரர். (தே-ர்) மலர்க் குழன்மாதம்மை. (தீ-ம்) ஐராவத தீர்த்தம். சு-க பதிகமுடையது. தெ-இ. குத்தாலம் ஸ்டேஷனுக்கு மேற்கு ஒன்றரை கட்டை தொலைவி விருக்கிறது. இதற்கு (வ-கி) வ-கடிகையில்.

25. திருமணஞ்சேரி — கருப்பிணிகளாகிய நங்கை, நாத்திகள் இருவர் தமக்குப் பிறக்கும் சிசுக்களை யொருவர்க் கொருவர் மணப்பதென்றும் சபதஞ் செய்தனர். அவர்களுள் ஒருத்தி ஆமைவடிவுற்ற குமாரனைப் பெற்றதால் பெண் பெற்றவள் பெண் தர மறுக்க, அந்த ஆமை பூசித்துப் புருஷவுருக் கொண்டு பெண்ணினை மணந்த தலம். குலச்சிறை நாயனர் வழிபட்ட தலம். (சு-ர்) அருள்வள்ளுனயகர். (தே-ர்) *யாழின் மொழியம்மை. (தீ-ம்) திருமணத் தீர்த்தம். மாயூரத்தை அடுத்த குற்றாலம் ஸ்டேஷனிலிருந்து வடமேற்கு (4½) மைலி விருக்கிறது. ஞா-க, நா-க. இதற்கு (வ-கி) ௩-கடிகையில்.

26. திருக்குறுக்கை வீரட்டானம் — (குறுக்கை) மன்மதனை யெரித்த தலம். மார்க்கண்டர் பூசித்த தலம். (சு-ர்) வீரட்டானேச்சுரர். (தே-ர்) ஞானம்பிகை. (தீ-ம்) சிவகங்கை. நா உ புராண மிருக்கிறது. ஆனதாண்டவபுரம் ஸ்டேஷனி விருந்து (அ) மைல். இதற்கு (வ-கி) ௩-கடிகையில்.

27. திருக்கருப்பறியலூர் — (மேலைக்காழி (தலைஞாயிறு) சிவபெருமான் மீது வச்சிரமெறிந்த இந்திரனது குற்றம் பொறுத்த தலம். (சு-ர்) குற்றம் பொறுத்தநாதர். (தே-ர்) கோல்வளை நாயகி. (தீ-ம்) இந்திர தீர்த்தம். ஞா-க, சு-க பதிகங்களையுடையது. புராணமிருக்கிறது. வைத்தீசுரன் கோயில் ஸ்டேஷனிலிருந்து மேற்கு (௫) மைல். இதற்கு (வ-கி) க-கடிகையில்.

28. திருக்குரக்குக்கா — அநுமான் பூசித்த தலம். (சு-ர்) கொந்தளேச்சுரர். (தே-ர்) கொந்தள நாயகி. (தீ-ம்) அநும தீர்த்தம். நா-க. இதற்கு (தெ-மே) உ-கடிகையில்.

29. திருவாளொளி புத்தூர் — திருமால் மாணிக்கம் வைத்துப் பூசித்த தலம் (சு-ர்) மாணிக்கவண்ணர். (தே-ர்) வண்டார் பூங்குழலி. (தீ-ம்) பிரமதீர்த்தம், வாகை விருக்ஷம். வைத்தீச்சுரன் கோயில் ஸ்டேஷனிலிருந்து மேற்கு (எ) மைல். ஞா-உ சு-க பதிகமுடையது. புராணமுடையது. இப்பொழுது திருவாளப்புத்தூர் என வழங்குகிறது. இதற்கு (வ-மே) க-கடிகையில்.

30. திருப்பழமண்ணிப் படிக்கரை — சிவபெருமான் விஷபானஞ் செய்த காலத்துப் பிராட்டியார் கண்டத்தைத் திருக்கரத்தால் பரிசித்த தலம். (சு-ர்) நீலகண்டேசுரர்

(தே-ர்) அமிர்தகரவல்லி. (தீ-ம்) அமிர்த தீர்த்தம். ௬-க பதிகமுடையது. புராணமுடையது. இப்பொழுது இலுப்பைப்பட்டு என வழங்கும் (ர-ல்) வைதீசரன் கோயிலிலிருந்து மேற்கு (௯) மைல். இதற்கு (வ-மே) ௨-கடிகையில்.

31. திருஓமாம்புலியூர்—புலி துரத்தப்பட்ட வேடன் வில்வமரத்தேறி யிருந்து சிவபெருமானைப் பூசித்த தலம். (சு-ர்) துயர் தீர்த்த செல்வர். (தே-ர்) பூங்கொடியம்பிகை. (தீ-ம்) சிவதீர்த்தம். (ர-ல்) சிதம்பரத்திலிருந்து (௧௧) மைல். ஞா-௧, நா-௧ பதிகங்களுடையது. கொள்ளிடத்துக்கு வடகரையிலிருக்கிறது. இதற்கு (வ-கி) ௨-கடிகையில்.

32. திருக்கானாட்டுமுள்ளூர்—பதஞ்சலி முனிவர் பூசித்த தலம். (சு-ர்) பதஞ்சலிநாதர். (தே-ர்) கோல்வளைக் கையம்மை. (தீ-ம்) சிவபுஷ்கரிணி. (ர-ல்) இதற்கும் ஷை ஸ்டேஷன். சு-௧ இதுபொழுது கானாட்டாம் புலியூர் என வழங்குகிறது. இதற்கு (வ-கி) ௪-கடிகையில்.

33. திருநாரையூர் — துருவாசரது தவத்திற் கிடையூறியற்றிய காந்தருவன் நாரையாகப் பூசித்த தலம். (சு-ர்) சௌந்தரேசர். (தே-ர்) திரிபுரசுந்தரி. (தீ-ம்) காருண்ய தீர்த்தம். நம்பியாண்டார் நம்பிக் கருளிய பொல்லாப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் ஊர். (ர-ல்) சிதம்பரத்தி லிருந்து (௧0) மைல். ஞா-௩, நா-௨. இதற்கு (தெ-மே) ௫-கடிகையில்.

34. திருக்கடம்பூர் — (மேலக்கடம்பூர்) அமுதங் கடைகையில் அமுதகடம் எழ இந்திரன் பூசித்த தலம். (சு-ர்) அமிர்தகடேசர். (தே-ர்) சோதிமின்னம்மை. (தீ-ம்) அமுத தீர்த்தம். ஞா-௧, நா-௨. இதற்கு (தெ-மே) ௮-கடிகையில்.

35. திருப்பந்தணைநல்லூர் — விச்வாமித்திரரிடம் மாறுகொண்ட காமதேனு பூசித்த தலம். (சு-ர்) பசுபதீச்சுரர். (தே-ர்) காம்பணதோளி. (தீ-ம்) பசு தீர்த்தம். (ர-ல்) திருவிடை மருதூரி லிருந்து (வ-கி) ($7\frac{1}{2}$) மைல். குத்தாலத்திலிருந்து பத்து மைல். இது பொழுது பந்தநல்லூர் என வழங்குவது. ஞா-௧, நா-௨. இதற்கு (தெ-மே) ௧-கடிகையில்.

36. திருக்கஞ்சனூர் — பிரமன், மார்க்கண்டர், இந்திரன் பூசித்த தலம். மானக்கஞ்சாற நாயனார் முத்திபெற்றதும், ஸ்ரீமத் அரதத்தாசாரிய சுவாமிகள் பல அற்புதங்கள் காட்டியதுமாகிய தலம். (சு-ர்) அக்னீசுரர். (தே-ர்) கற்பக நாயகி. (தீ-ம்) அக்னிதீர்த்தம். (ர-ல்) திருவிடை மருதூரி லிருந்து (வ-கி) ($5\frac{1}{2}$) மைல். நா-௧ பதிகமுடையது. புராணமுண்டு. இதற்கு (கி) ௧-கடிகையில்.

37. திருக்கோடிகா — மூன்று கோடி ரிஷிகள் பூசித்த தலம். ஐயடிகள் காடவர் கோன் க்ஷேத்ர வெண்பா பாடிய தலம். (சு-ர்) கோடிகாவீசுரர் (தே-ர்) வடிவாம்பிகை. (தீ-ம்) அகத்திய தீர்த்தம். (ர-ல்) நரசிங்கன் பேட்டையிலிருந்து (கி) ஒன்றரைமைல். நா-௩. இதற்கு - (மே) ௨ - கடிகையில்

38. திருமங்கலக்குடி—அரசன் பொருளைத் திருப்பணி செய்து செலவிட்டஞ்சி யிறந்து மனைவி இத்தலத்து மங்களநாயகியருளால் உயிர்ப்பிக்க உயிர்பெற்று வணங்கிய தலம். (சு-ர்) பிராணவரதர். (தே-ர்) மங்களநாயகி. (தீ-ம்) மங்களதீர்த்தம். (ர-ல்) திருவிடைமருதூரிலிருந்து(வ-கி) ($3\frac{1}{2}$)மைல். ஞா-௧, நா ௨. இதற்கு (வ மே) ௩-கடிகையில்.

39. திருப்பனந்தாள் — தாடகையெனும் அம்மையார் மாலை சாத்துங்கால் உடை நெகிழச் சிவபெருமான் திருமுடி வளைத்துத் தந்த தலம். குங்கிலியக் கலய நாயனார் சிவபெருமானை நிமிர்த்தருளிய தலம். (சு-ர்) சடையப்பேசுரர். (தே-ர்) பெரிய நாயகி. (தீ-ம்) சிவகங்கை. (ர-ல்) கும்பகோணத்திற்கு (வ-கி) (௧0) மைல். ஞா-௧ புராணமிருக்கிறது. அச்சேறவில்லை. இதற்கு (தெ-மே) $\frac{3}{4}$-கடிகையில்.

40. திருஆய்ப்பாடி — இடையன் பாலைத் தினந்தோறுங் கவிழ்த்து ஒருநாள் கொடுவாளால் வெட்டி இரத்தங்கண்டு பாலுகந்த நாதரோ வென்று வேண்டிய தலம். (சு-ர்) பாலுகந்தஈசர் (தே-ர்) பெரியநாயகி. (தீ-ம்) பால்தீர்த்தம். கும்பகோணத்திலிருந்து (௧௧) மைல் ஞா-௧. இதற்கு (தெ) கால் கடிகையில்.

41 திருச்சேஞலூர் — குமாரக் கடவுள் பூசித்து ஆயுதம் பெற்ற தலம். சண்டேசர் பூசித்துச் சண்டேசபதம் பெற்ற தலம். (சு-ர்) சத்தகிரியீசுரர். (தே-ர்) சகிதேவியம்மை. (தீ-ம்) மண்ணிநதி. கும்பகோணத்திலிருந்து (௧௨) மைல். ஞா-௧. இதற்கு (தெ-மே) ௩-கடிகையில்.

42. திருந்துதேவன்குடி — குதிரை பூசித்து முத்திபெற்ற தலம். நண்டுபூசித்துப் பேறுபெற்ற தலம். இக்காலத்தும் ஒரு நிறப் பசுவின் பால் பதின்கலம் சிவபெருமான் திருமுடியில் அபிஷேகிக்கின் பொன்னிறத்த

நண்டு தரிசனந்தருந் தலம். (சு-ர்) கற்கடேசுரர். (தே-ர்) அருமருந்தம்மை. (தீ-ம்) அசுவ தீர்த்தம். (ர-ல்) கும்பகோணத்திலிருந்து (கூ) மைல். ஞா-க. (தெ) $\frac{3}{4}$ கடிகையில்.

43 திருவியலூர் — அரசனுக் கஞ்சி இறந்த அடியவரை உயிர்ப்பித்த தலம். (சு-ர்.) யோகாநந்தர். (தே-ர்) சௌந்தரநாயகி. (தீ-ம்) நிருதிதீர்த்தம். (ர-ல்) கும்பகோணத்திற்கு (கூ) (ச) மைல். ஞா-க. இதற்கு (மே) அரை கடிகையில்.

44. திருக்கோட்டையூர் — (கொட்டையூர்) மார்க்கண்டர் முதலியவர் பூசித்த தலம். (சு - ர்) கோடீச்சுரர். (தே - ர்) பந்தாடு நாயகி. (தீ - ம்) சிவகங்கை. (ர-ல்) கும்பகோணத்திற்கு (மே) (உ) மைல் நா-க. சிவக்கொழுந்து தேசிகர் பாடிய கொட்டையூர்ப் புராணமும், கோடீசுரக் கோவையும் இருக்கிறது. இதற்கு (மே) $1\frac{1}{2}$-கடிகையில்.

45. திருஇன்னம்பர் — ஒரு கணக்கர் பொருட்டுச் சிவபெருமான்கணக்கராய்க்கணக்குக் கூறிய தலம். அகத்தியருக்கு இலக்கணம் உபதேசித்தருளிய தலம். (சு-ர்) எழுத்தறிவித்த நாதர். (தே - ர்) கொந்தார்பூங் குழலம்மை. (தீ - ம்) சிவபுஷ்கரணி. (ர-ல்) கும்பகோணத்திற்கு (மே) (ச) மைல். ஞா - க, நா-ச. இதற்கு (வ) க- கடிகையில்.

46. திருப்புறம்பயம் — சுந்தோபசுந்தர் பூசித்த தலம். வணிகக்கன்னிகை குறித்த நாயகன் பாம்புகடித்திறக்க அவனை உயிர்ப்பித்த தலம். (சு-ர்) சாக்ஷிநாதேசுரர். (தே-ர்) கரும்பன்ன சொல்லம்மை. (தீ - ம்) பிரம தீர்த்தம். (தெ - ர.) கும்பகோணத்திற்கு (வ-மே) (கூ) மைல். ஞா-க, நா-க, சு-க பதிகங்களுடையது. புராணமுண்டு. இ - கு. (வ மே) கூ-கடிகையில்.

47. திருவிஜயமங்கை — பாண்டுபுத்திரனாகிய விஜயன் பாசுபதம்பெறப் பூசித்த தலம். (சு-ர்) விஜயநாதேசுரர். (தே ர்) மங்கை நாயகி. (தீ-ம்) அருச்சுனதீர்த்தம். (தெ ர.) கும்பகோணத்திலிருந்து (அ) மைல். ஞா-க, நா-க இதற்கு (வ-மே) $\frac{3}{4}$ கடிகையில்.

48. திருவைகாவூர்—திருமகள் பூசித்த தலம். வில்வவன க்ஷேத்ரம். (சு-ர்) வில்வவனநாதர். (தே-ர்) பூவல்லி. (தீ-ம்) கூற்றுவ தீர்த்தம். (ர-ல்) கும்பகோணத்திலிருந்து ($9\frac{1}{2}$) மைல். ஞா க. இதற்கு (தெ-மே) கூ-கடிகையில்.

49. திருவடகுரங்காடுதுறை — வாலி பூசித்ததலம். (சு-ர்) குலைவணங்கீசுரர். (தே-ர்) அழகுசடைகாயகி. (தீ ம்) வாலிதீர்த்தம். (ர-ல்) ஐயம்பேட்டை ஸ்டேஷனிலிருந்து வடகிழக்கு (ச) மைல். ஞா-க. இதற்கு (மே) $4\frac{1}{2}$ கடிகையில்.

50. திருப்பழனம் — திக்குப்பாலகர் பூசித்த தலம். அப்பூதியடிகள் முத்திபெற்ற தலம். (சு-ர்) ஆபத்சகாயர். (தே-ர்) பெரிய நாயகி. (தீ-ம்) மங்களதீர்த்தம். (ர ல்.) ஐயம் பேட்டையிலிருந்து (கo)மைல். ஞா க, நா-கூ. இதற்கு மேற்கு க-கடிகையில்.

51. திருவையாறு — தருமதேவதை பூசித்து நந்திதேவராய்ச் சிவமூர்த்தியைத் தாங்கும் அழியாப் பதம் பெற்ற தலம். திருநாவுக்கரசுகளுக்குத் திருக்கைலாய தரிசனந் தந்தருளிய தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்த வெள்ளத்தை அணையாக நிற்கச் செய்து வழியளித்த தலம். பஞ்சநதக்ஷேத்ரம். (ர-ல்) தஞ்சாவூர்க்கு (வ) (7) மைல். ஞா-கூ, நா-கஉ, சு-க பதிகங்களுடையது. ஞானக்கூத்தர் பாடிய பஞ்சநதிப் புராணமும், தருமையாதீன முனிவர் ஒருவர் பாடிய ஐயாற்றுப் புராணமும் பதிற்றுப்பத் தந்தாதியும் உடையது. இதற்கு (மே) முக்கால்கடிகையில்.

52. திருநெய்த்தானம் — (தில்லைத்தானம்) சரஸ்வதி பூசித்த தலம். (சு-ர்.) நெய்யாடியப்பர். (தே ர்) வாலாம்பிகை (தீ-ம்)காவிரி. (ர-ல்) தஞ்சாவூரிலிருந்து (அ) மைல். ஞா-க, நா-கூ பதிகங்களுடையது. இதற்கு (மே) க-கடிகையில்.

53. திருப்பெரும்புலியூர் — வியாக்ரபாதருஷி பூசித்த தலம். (சு-ர்) வியாக்ரபுரேசர். (தே-ர்.) சௌந்தரநாயகி. (தீ-ம்) வியாக்ர தீர்த்தம். (ர-ல்) தஞ்சாவூர். தில்லை ஸ்தானத்துக்கு வடக்கில் ஒரு கட்டை தொலைவிலிருக்கிறது. ஞா-க. இதற்கு (வ-மே) உ-கடிகையில்.

54. திருமழபாடி — இந்திரன் பூசித்த தலம். (சு-ர்) வச்சிரநாதேசுரர். (தே-ர்) அழகாம்பிகை. (தீ-ம்) கொள்ளிடம். (ர-ல்) தஞ்சாவூர். திருவையாற்றுக்கு வடமேற்கு ஐந்து கட்டை யளவில் கொள்ளிடத்துக்கு வடகரையில் இருக்கிறது. புராண மிருக்கிறது. ஞா-கூ, நா-உ, சு-க. இதற்கு (வ) எ-கடிகையில்.

55. திருப்பழுவூர்—(பழுவூர்) சிவபெருமான் கயாசுரனாகிய யானையுரித்த திருத்தலம். (சு-ர்) மாவுரிநாதர். (தே-ர்) வனமுலையம்மை. (தீ-ம்) சிவகங்கை. ஞா - க. K-தஞ்சாவூரிலிருந்து வடக்கு அரியலூர் செல்லும் சாலையிலுள்ளது. அரியலூருக்குத் தெற்கு கூ-கட்டை

தொலைவிலிருக்கிறது. இதற்கு (தெ - மே). எழரை - கடிகையில்.

56. திருக்கானூர் — யோகத்திருந்த பிராட்டியாருக்குச் சிவபெருமான் அக்னிச்சொரூபமாய்த் தரிசனங் கொடுத்தருளிய தலம். (சு-ர்.) செம்மேனிநாயகர். (தே-ர்) சிவயோக நாயகி. (தீ-ம்) வேததீர்த்தம். நா-௧, ஞா-௧ பதிகங்களுடையது. பூதலூர் ஸ்டேஷனிலிருந்து (வ) (எ) மைல். இதற்கு (வ மே) ௪-கடிகையில்.

57. திருஅன்பிலாலந்துறை — (அன்பில்) விதி, விஷ்ணு, இந்திரர், வாகீசர் பூசித்தது. (சு-ர்) சத்யவாக்கேசுரர். (தே-ர்) சௌந்தரநாயகி. (தீ-ம்) காயத்திரிதீர்த்தம். நா-௧, ஞா-௧ பதிகங்களுடையது. R-பூதலூரிலிருந்து (௧௨) மைல். இதற்கு (வ-மே) ௫-கடிகையில்.

58. திருமாந்துறை — கண்ணுவர் பூசித்த தலம். (சு-ர்) ஆம்பிரவனேச்சுரர். (தே-ர்) அழகாலுயர்ந்தநாயகி. (தீ-ம்) மகாதீர்த்தம். ஞா-௧. R. திரிசிராப்பள்ளியிலிருந்து ௧௩-மைல். இதற்கு (தெ-மே) ௩-கடிகையில்.

59. திருப்பாற்றுறை — அபிஷேகிக்கப் பால் கிடைக்காது வருந்திய மார்க்கண்டருக்குப் பால் பெருகிவர அநுக்ரஹித்த தலம். (சு-ர்) திருமூலநாதேச்சுரர். (தே-ர்) மேகலாம்பிகை. (தீ-ம்) கொள்ளிடம். ஞா-௧. R-திரிசிராப்பள்ளியிலிருந்து (7½) மைல். இதற்கு (தெ-மே) ௪-கடிகையில்.

60. திருஆனைக்கா — (ஜம்புகேச்வரம்) இது பஞ்சபூதத் தலங்களுள் அப்புத் தலம். அகிலாண்ட நாயகியார் ஞானோபதேசம் பெற்ற தலம். கௌதமர், சிலந்தி, யானை, சம்பு முனிவர் இவர்கள் பூசித்துப் பேறு பெற்றதலம். கோச்செங்கட் சோழன் திருப்பணி செய்த தலம். உறையூர்ச்சோழன் மனைவியின் கழுத்திலிருந்து காவிரியில் வீழ்ந்த ஆரத்தைத் திருமுடியி லணிந்த தலம். சிவபெருமான் சித்தராய்த் திருநீறுதந்து திருமதில் செய்வித்துத் திருநீற்று மதில் இயற்றியருளிய தலம். (சு-ர்) சம்புகேசுரர். (தே-ர்) அகிலாண்டஈச்வரி. (தீ-ம்) காவிரி. (விருக்ஷம்) சம்புநாவல். ஞா-௩, நா-௩, சு-௧ பதிகங்களுடையது. ஞானப்பிரகாசர் பாடிய இபவனபுராணமும், கச்சியப்ப முனிவர் பாடிய திருஆனைக்காப் புராணமும், காளமேகம் பாடிய திரு ஆனைக்கா உலாவு முடையது. R-திரிசிராப்பள்ளிக்கு (வ) (இரண்டரை) மைல். இதற்கு (வ - மே) அ-கடிகையில்.

61. திருப்பைஞ்ஞீலி—யமனை யுதைத்த பாரந் தீரப் பூமிதேவியும் தேவர்களும் வேண்டச் சிவபெருமான் யமனை யெழுப்பிய தலம். தேவர்களும் அரம்பையரும் வாழைமரங்களாய்ச் சிவபூசைசெய்த தலம். இக்காலத்தும் பாறையில் வாழை வளருந் தலம். திருநாவுக்கரசின் வழிவருத்தந் தீரக் கட்டமுதளித்த தலம். (சு-ர்) மாற்றறிவரதர். (தே-ர்) வாலசௌந்தரி. (தீ-ம்) சிவகங்கை. நா-ஞா-சு ப. ௩-புராண மிருக்கிறது. R-திரிசிராப்பள்ளியிலிருந்து (வ) (௧௨) மைல். இதற்கு-(தெ-கி) ௩-கடிகையில்.

62. திருப்பாச்சிலாச்சிராமம் — (திருவாசி) திருஞானசம்பந்த சுவாமிகள் கொல்லி மழவன் குமரிக்குற்ற முயலகவலி தொலைத்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குப் பொன் தரா நீட்டித்துப் பின் தந்த தலம். முயலக நோய்தீரப் பாடியபடியால் ஈண்டு நடராஜப் பெருமானுக்கு முயலகனில்லை. மோக்ஷ மடைந்தான் என்பது தலஐதீகம். நா-சு-(ப-௨) (சு-ர்) ஆரண்யவிடங்கர். (தே-ர்.) விசாலாக்ஷி. (தீ-ம்) ஆரண்ய தீர்த்தம். R-திரிசிராப்பள்ளியிலிருந்து (வ) (௬) மைல். இ-கு. (மே) ௧௫ - கடிகையில்.

63. திருஈங்கோய்மலை — அகத்திய முனிவர் பூசிக்கக் காலம் வாய்க்காமல் ஈ உருக்கொண்டு பூசித்த தலம். (சு-ர்) மரகதாசலேசர். (தே-ர்) மரகதவல்லி. (தீ-ம்) அகஸ்திய தீர்த்தம். R-திரிசிராப்பள்ளிக்கு மேற்கிலுள்ள குழித்தலை ஸ்டேஷனிலிருந்து (வ-மே) கடம்பர் கோயிலிலுள்ள காவிரி கடந்தால் அக்கரையிலிருக்கிறது. ஞா - ௧ பதிகமுடையது. நக்கீரதேவ நாயனர் பாடிய திரு ஈங்கோய்மலை எழுபது உடையது. (திருலிங்கநாதமலை) என வழங்குகிறது. ஷை-ஈங்கோய் மலைக்குத் தெற்கு - எ-கடிகையில் திருவாட்போக்கி.

ஆகத் தலங்கள் 63.

## II. காவிரியின் தென்கரை. 190.

1. திருவாட்போக்கி — (இரத்தினகிரி மாணிக்கமலை) ஆர்ய அரசன் ஒருவன் மாணிக்க விருப்பாற் றலங்கள் பலவற்றினுஞ் சென்று கிடைக்காது இங்குற்றுப் பிரார்த்திக்கச் சிவபெருமான் தோன்றி ஒருதொட்டியைக்காட்டி இதனை நீரால் நிறைக்கின் உன தெண்ணம் முடியுமெனக் கேட்டு அவ்வாறு செய்கையில் நீர் நிறையாமல்கோபங்கொண்டு

வாளையெடுத் தோச்ச அவ்வாளைப் போக்கி இரத்தினங்காட்ட அரசன் மகிழ்ந்து திருப்பணி செய்த தலம். (சு-ர்) இரத்தினகிரீசர். (தே-ர்) சுரும்பார்குழலம்மை. (தீ-ம்) கௌரி தீர்த்தம். நா-க. பதிகமுடையது. இலக்கண விளக்கம் செய்த திருவாரூர் வைத்தியநாத தேசிகர் செய்த புராணமும், வாட்போக்கி யுலாவும், கலம்பகமும் உடையது. சிவாயம், சிவாயமலை என வழங்கும். R-திரிசிராப்பள்ளியிலிருந்து ஈரோடு செல்லும் பாதையிலுள்ள குழித்தலை ரயிலடிக்குத் தென்மேற்கு 5-கட்டை தொலைவு. இதற்கு (வ-கி) 4-கடிகையில்.

2. **திருக்கடம்பந்துறை** — (கடம்பர் கோவில், குழித்தலை) சிவபெருமான் ஒரு காலத்து தேவர்க்கும் கண்வர் முதலிய ரிஷிகளுக்கும் கடம்பவிருக்ஷத் தடியில் தரிசனம் தந்த தலம். (சு-ர்) கடம்பவனநாதர். (தே-ர்) முற்றிலாமுலையம்மை. (தீ-ம்) ஞான தீர்த்தம். இத்தலம் வடக்குவாயிலுற்றது. நா-க. பதிகமுடையது. புராண முடையது. உலாவு மிருக்கிறது. R-குழித்தலை ஸ்டேஷன். இதற்குக் கிழக்கு எழரை கடிகையில்.

3. **திருப்பாய்த்துறை** — இந்திரன், குபேரன், சப்தருஷிகள் பூசித்த தலம். (சு-ர்) பாய்த்துறைநாதர். (தே-ர்) பொன்மயிலாம்பிகை. (தீ-ம்) காவிரி. நா-க-ஞா-க. R-திரிச்சியையடுத்த எழுமனூரிலிருந்து (வ-மே) 1½-மைல். இது இதுபொழுது திருப்பளாத்துறை என வழங்கும். இதற்கு (தெ-கி) 7-கடிகையில்.

4. **திருக்கற்குடிமலை** — உச்சிப்போதிற் பூசித்து வணங்கிய ஈழநாட்டரசனுக்கு முத்திகொடுத்த தலம். (சு-ர்) முத்தீசுரர். (தே-ர்) அஞ்சனாக்ஷி. (தீ-ம்) முத்தி தீர்த்தம். இதற்கு உய்யக்கொண்டான் திருமலை என்று பெயர். நா-ஞா-சு-ரு. R-திரிசிரபுரத்திற்கு (தெ-மே) 2-மைல். இதற்குக் கிழக்கு 3-கடிகையில்.

5. **திருமுக்கீச்சுரம்** — (உறையூர்) பிரமன் பூசிக்க ஐவண்ணமாகத் தரிசனம் தந்த தலம். புகழ்ச்சோழநாயனர் திருவவதாரஞ் செய்த தலம். (சு-ர்) பஞ்சவர்ண நாதேச்சுரர். (தே-ர்) காந்திமதியம்மை. (தீ-ம்) குடமுருட்டிநதி. ஞா-க. R-திரிசிராப்பள்ளிக்கு (மே) 1-மைல். இதற்கு (வ-கி) 1-கடிகையில்.

6. **திருச்சிராப்பள்ளி** — ஸ்ரீ ராமன், அநுமான், திரிசிரன் பூசித்த தலம். சாரமாமுனிவர் பாதலத்திருந்து கொணர்ந்து பதித்துச் சுவாமிக் குபயோகித்திருந்த செவ்வந்தி மலரை அரசனுக் களித்த பூவாணிகன் செயலை அரசனிடம் முறையிட்டுங் கேளாத அரசன் பொருட்டு மண்மாரி பெய்வித்து அரசையழித்த தலம். கர்ப்பிணியாகிய ஒரு பெண்ணின் பொருட்டுத் தாயுருவோடு வந்து மருத்துவம் பார்த்த தலம். (சு-ர்) செவ்வந்தீசர். மாதுர்பூதேசர். (தே-ர்) மட்டுவார் குழலி. (தீ-ம்) காவிரி. நா-ஞா-ப-உ. R ஸ்டேஷன். இதற்கு (கி) 4-கடிகையில்.

7. **திருஎறும்பியூர்** — கரதூஷணரும், எறும்பும் பூசித்த தலம். (சு-ர்) எறும்பீச்சுரர். (தே-ர்) நறுங்குழனாயகி. (தீ-ம்) அற்புத தீர்த்தம். நா-உ. இதுவே இதுபொழுது திருவரம்பூர் என வழங்கும் ஸ்டேஷன். இதற்கு (கி) 4-கடிகையில்.

8. **திருநெடுங்களம்** — வங்கியசோழன் பொருட்டுப் பேரழகுடன் தரிசனம் தந்த தலம். (சு-ர்) நித்யசுந்தரேச்சுரர். (தே-ர்) ஒப்பிலாநாயகி. (தீ-ம்) சுந்தர தீர்த்தம். ஞா-க. R-திருவரம்பூர் ஸ்டேஷனிலிருந்து (கிழ) 7-மைல். இதற்கு (வ-கி) 4-கடிகையில்.

9. **மேலைத் திருக்காட்டுப்பள்ளி**—சாரமாமுனிவர் வேண்டுகோளால் பெய்த மண்மாரிக்குத் தப்பிய சிவபக்தியிற் சிறந்த அவன் மூத்த மனைவி இத்தலமடைந்து வெப்பத்தால் தீயாடியப்பரோ வென்னக் குளிர்ந்திருந்த தலம். (சு-ர்) தீயாடியப்பர். (தே-ர்) வார்கொண்ட முலையம்மை. (தீ-ம்) அக்னி தீர்த்தம். ஞா-உ. R-தஞ்சையை யடுத்த பூதலூர் ஸ்டேஷனி லிருந்து (வ) 5-மைல். இதற்குக் கிழக்கு 7-கடிகையில்.

10. **திருவாலம்பொழில்** — நாகரும் அட்டவசுக்களும் பூசித்த தலம். (சு-ர்) ஆத்மநாதேச்சுரர். (தே-ர்) ஞானம்பிகை. (தீ-ம்) காவிரி. நா-க. R-தஞ்சையி லிருந்து (வ) 9-மைல் கண்டியூர்; அங்கிருந்து மேற்கு 4 கட்டை. இதற்கு (கி) 1-கடிகையில்.

11. **திருப்பூந்துருத்தி** — காந்தருவர் புட்பவனம் வைத்துப் பூசித்த தலம். (சு-ர்) புட்பவனநாதேச்சுரர். (தே-ர்) அழகாலமர்ந்த நாயகி. (தீ-ம்) காவிரி. நா-ரு. R-தஞ்சை. கண்டியூரி லிருந்து மேற்கு 2 கட்டை. இதற்கு (கி) 1-கடிகையில்.

12. **திருக்கண்டியூர்** — இது அட்டவீரட்டத்துள் ஒன்று. பிரமன் சிரத்தைச் சிவபெருமான் அவனது அகந்தைதீர வைரவரைக் கொண்டு போக்கியருளிய தலம். (சு-ர்)

வீரட்டானேச்சுரர். (தே-ர்) மங்கைநாயகி. (தீ-ம்) காவிரி. நா-ஞா-ப-உ. R-தஞ்சையி லிருந்து (வ) 6-மைல். இதற்கு (கி) 3-கடிகையில்.

13. **திருச்சோற்றுத்துறை** — அருளாளன் என்னும் வேதியன் பொருட்டு மாளாச் சோறு அளித்த தலம். இந்திரன் பூசித்தது. (சு-ர்) தொலையாச் செல்வேசர். (தே-ர்) ஒப்பிலாம்பிகையம்மை. (தீ-ம்) சூர்ய தீர்த்தம். ஞா-க, நா-ஈ, சு-க. R-தஞ்சை. கண்டியூரி லிருந்து 4-மைல். இதுபொழுது திருச்சித்துறை என வழங்கும். இதற்கு (தெ-மே) 1-கடிகையில்.

14. **திருவேதிகுடி** — வேதங்கள், குபோன், சைதன்ய மகருஷி பூசித்த தலம். (சு-ர்) வேதபுரீசர். (தே-ர்) மங்கையர்க்கரசி. (தீ-ம்) சுந்தரதீர்த்தம். ஞா-நா-உ. R-தஞ்சை. கண்டியூரி லிருந்து தென்கிழக்கு 2-கட்டை. இதற்கு (தெ-கி) 3-கடிகையில்.

15. **திருத்தென்குடி** — (திட்டை) காமதேனு, கௌதமர், ஆதிசேடன் பூசித்த தலம். (சு-ர்) பசுபதீச்சுரர். (தே-ர்) உலகநாயகியம்மை. (தீ-ம்) பசுதீர்த்தம். ஞா-க. இது தஞ்சாவூர்க்கு வடக்கிலுள்ள R-ஸ்டேஷன். இதற்கு (வ-மே) 3-கடிகையில்.

16. **திருப்புள்ளமங்கை** — ஆலகால விஷம் புசித்த சிவமூர்த்தியைத் தேவர் வழிபட்ட தலம். (சு-ர்) ஆலந்தரித்த ஈசுரர். (தே-ர்) அல்லியங்கோதை. (தீ-ம்) சிவதீர்த்தம். ஞா-க. R-தஞ்சையை யடுத்த ஐயம்பேட்டை ஸ்டேஷனிலிருந்து (மே) 2-மைல். இதற்கு (கி) 1-கடிகையில்.

17. **திருச்சக்காப்பள்ளி**—(ஐயம்பேட்டை) சயந்தனும் தேவர்களும் பூசித்த தலம். (சு-ர்) பசுபதிநாதர். (தே-ர்) பால்வளைநாயகி. (தீ-ம்) காவிரி. ஞா-க. R-ஐயம்பேட்டையி லிருந்து அரைமைல். இதற்கு (தெ-கி) 3-கடிகையில்.

18. **திருக்கருகாவூர்** — (திருக்களாவூர்) சந்திரன், இராசிகள் பூசித்த தலம். (சு-ர்) முல்லைவனேச்சுரர். (தே-ர்) கரும்பனையாளம்மை. (தீ-ம்) அற்புத தீர்த்தம். நா-ஞா-2. ஐயம்பேட்டையி லிருந்து (தெ-கி) 4-மைல். இதற்கு (வ) 3-கடிகையில்.

19. **திருப்பாலைத்துறை** — பிரமன், தேவர்கள் பூசித்த தலம். தாருகவனத்து இருடிகள் அனுப்பிய புலியை யுரித்துப் போர்த்தருளிய தலம். (சு-ர்) பாலைவனநாதேச்சுரர். (தே-ர்) தவள வெண்ணகையம்மை. (தீ-ம்) பிரமதீர்த்தம். நா-க. கும்பகோணத்தை யடுத்த பாபநாசம் ஸ்டேஷனி லிருந்து (வ-கி) 1-மைல்.

20. **திருநல்லூர்** — வசுதேவர், கிருஷ்ணன், பாண்டவர்கள் பூசித்த தலம். திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் திருவடி சூட்டிய தலம். அமர்நீதி நாயனுர் முத்திபெற்ற தலம். (சு-ர்) பெரிய பாண்டவேச்சுரர். (தே-ர்) திரிபுரசுந்தரியம்மை. (தீ-ம்) சுந்தர தீர்த்தம். ஞா-நா-கு. வைத்தியநாத தேசிகர் பாடிய புராணமுண்டு. கும்பகோணத்தை யடுத்த சுந்தரப் பெருமாள் கோயில் ஸ்டேஷனி லிருந்து (தெ) 2-மைல். இதற்கு (தெ-கி) 2-கடிகையில்.

21. **திருஆவூர்** — (பசுபதீச்சரம்) இந்திரன், சப்தரிஷிகள், பசுக்கள் பூசித்த தலம். (சு-ர்) பசுபதீச்சுரர். (தே-ர்) மங்களநாயகி. (தீ-ம்) பசுதீர்த்தம். ஞா-க. R-கும்பகோணத்திலிருந்து (தெ-மே) $8\frac{1}{2}$-மைல். இதற்கு (வ) 3-கடிகையில்.

22. **திருச்சத்திமுற்றம்**—பிராட்டி பூசித்துப் பேறுபெற்ற தலம். (சு-ர்) சிவக்கொழுந்தேச்சுரர். (தே-ர்) பெரியநாயகி. (தீ-ம்) சத்திதீர்த்தம். நா-க. R-கும்பகோணத்திற்கு (தெ-மே) 4-மைல். (தெ) $\frac{1}{4}$-கடிகையில்.

23. **திருப்பட்டீச்சுரம்**—ஆனிரைகளைக் காத்தவர். திருஞானசம்பந்த சுவாமிகளுக்கு முத்துப்பந்த ரருளிய தலம். (சு-ர்) பட்டீச்சுரர். (தே-ர்) பால்வளைநாயகி. (தீ-ம்) சிவகங்கை. ஞா-க. R-கும்பகோணத்திற்கு (தெ-மே) 4-மைல். இ-கு (தெ-கி) 1-கடிகையில்.

24. **திருப்பழையாறை - வடதளி**—சந்திரன் பூசித்துத் தேய்தல் நீங்கிய தலம். (சு-ர்) சோமேசர். (தே-ர்) சோமகலா நாயகி. (தீ-ம்) சந்திரபுஷ்காணி. ஞா-நா-2. இங்கு இரண்டு தலங்களிருக்கின்றன. இதற்கு (வ) 1-கடிகையில்.

25. **திருவலஞ்சுழி** — இந்திரன் பொருட்டுவந்த காவிரி ஈண்டுச் சுழியில் ஆழ, இந்திரன் வேண்டுகோளால் வரகண்ட முனிவர் அதில் ஆழ அது பாதாளஞ்செல்லாது பிரவகித்தது. இத்தலத்து இந்திரனுற் பூசிக்கப்பட்ட கணபதி அவன்மீண்டு எடுக்கவாராமல் அழுந்தியிருக்கின்றனர். (சு-ர்) சித்தீசர். (தே-ர்) நித்தியநாயகி. (தீ-ம்) காவிரி. ஞா-நா-ப-ரு. R-சுவாமிமலை ரோடு. இதற்கு (கி) 4-கடிகையில்,

**26. திருக்குடந்தைக் காரோணம்** — உமை பூசித்துத் திருமணம் பெற்ற தலம். கங்கை முதலிய தீர்த்தங்க ளெல்லாம் ஈண்டுள்ள ஏமபுட்கரணியில் (12) வருடத்திற் கொருமுறை கூடும் மாமகத்தன்று வந்து மூழ்கித் தம்மின் மூழ்கினோரிடத் திருந்து தாம் பெற்ற பாபத்தைப் போக்கிக்கொள்ளுந் தலம். சந்திரன், மாந்தாதா, சத்யகீர்த்தி, தேவசன்மா முதலியர் பூசித்தது. (சு-ர்) சோமநாதர். (தே-ர்) தேனார்மொழியம்மை. (தீ-ம்) சந்திரபுட்கரணி. ஞா-ப-க. R-ஸ்டேஷன். இதற்கு $\frac{1}{4}$-கடிகையில்.

**27. திருக்குடமூக்கு** — (கும்பகோணம்) ஏமருஷி, ஆதிசேடன் முதலியோர் பூசித்த தலம். பிரமதேவர் தமது சிருட்டிக்குக் காரணமான மாயா சம்பந்தமான குடமொன்றை மகாமேருவில் தாபித்தனர். அது பிரமப்பிரளயத்தால் இந்த க்ஷேத்ரத்தின் மேல்பால் தங்கியது. பிரளயம் முடிந்தபின் சிவபெருமான் வேட வடிவங்கொண்டு அதனைச் சேதிக்க அதினின்று உலகம் உண்டாயிற்று. இதில் அமுதமுண்டாய் எங்கும் பாவியது. அவ்வமுதத்தைத் திரட்டிச் சிவலிங்க மாக்கித் தாமே பூசித்தனர். இக் காரணத்தால் சுவாமிக்குக் கும்பேசுவரர் என்று பெயர். ஏமருஷி தம் தாயின் எலும்பைப் பல தீர்த்தங்களிலிட, அவை யெலும்பாகவே யிருக்க, அதனை இத்தலத்து ஏமபுட்கரணியிலிடப் பொற்றாமரையாக இருந்ததால் தீர்த்தத்திற்கு ஏமபுஷ்கரணி என்று பெயர். (சு-ர்) கும்பேச்சுவரர். (தே-ர்) மங்களநாயகி. (தீ-ம்) ஏமபுஷ்கரணி. மூவர்பதிகம்-ரு. R-கும்பகோணம். இதற்கு (கி) 1-கடிகையில்.

**28. திருக்குடந்தைக்கீழ்க்கோட்டம்** — (கும்பகோணம்) விச்வகர்மனால் ஒளி யிழக்கப் பெற்ற சூரியன் பூசித்து ஒளி பெற்ற தலம். (சு-ர்) மடந்தைபாகேசுவரர். (தே-ர்) பெரியநாயகி. (தீ-ம்) சூர்யபுட்கரணி, சிங்கக்கிணறு. நா-க. R-கும்பகோணம். இதற்கு (கிழ) 2-கடிகையில்.

**29. திருநாகேச்சுரம்** — இந்திரன் பூசித்த தலம். சேக்கிழார் வழிபட்ட தலம் என்ப. (சு-ர்) செண்பகாரண்யேச்சுவரர். (தே-ர்) குன்றைமுலைநாயகி. (தீ-ம்) இந்திர தீர்த்தம். மூவர்பதிகம்-எ. R-திருநாகேசுரம். இதற்கு (வ-கி) 2-கடிகையில்.

**30. திருவிடைமருதூர்** — (மத்யார்ச்சுனம்) சிவபெருமான்தம் அசைவே உலகத்தியக்கம் என்பதைத் தாமே உலகமெனவெண்ணியிருந்த பிராட்டிக்குக் காட்டும்வகை ஒருகணம் அசைவற்றிருந்து உயிர்கள் இயங்காமை காட்டி உருத்திரர்களால் உலகசிருட்டியைச் செய்வித்துப் பின் விதிவிஷ்ணுக்களைப் படைத்த தலம். எல்லாத்தேவர்களும் வழிபட்ட தலம். வரகுணதேவரது கொலைப்பழி போக்கிய தலம். (சு-ர்) மருதப்பர். (தே-ர்) நன்முலை நாயகி. (தீ-ம்) காவிரி. மருத விருக்ஷம். மூவர்பதிகம்-கஉ. R-இதுவேஸ்டேஷன். இதற்கு (கிழ) 2-கடிகையில்.

**31. திருத்தென்குரங்காடுதுறை**—மிருகண்டருஷி, சுக்ரீவன் பூசித்த தலம். (சு-ர்) ஆபத்சகாயர். (தே-ர்) பவளக்கொடியம்மை. (தீ-ம்) ஆபத்சகாய தீர்த்தம். ஞா-க. R-ஸ்டேஷன் ஆடுதுறை. இதற்கு (தெ) 1-கடிகையில்.

**32. திருநீலக்குடி** — (தென்னல்குடி) வருணனும் தெய்வகன்னியரும் பூசித்த தலம். (சு-ர்) நல்லநாயகர். (தே-ர்) அழகாம்பிகை. (தீ-ம்) வன்னீலம். நா-க. R-ஆடுதுறையிலிருந்து (தெ) 2-மைல். இதற்கு (தெ-கி) 2-கடிகையில்.

**33. திருவைகன்மாடக்கோயில்**—சூரியனும் தேவர்களும் பூசித்த தலம். (சு-ர்) வைகனாதேச்சுரர். (தே-ர்) கொம்பிளங்கோதை. (தீ-ம்) சூர்யதீர்த்தம். வைகல்வேறு, மாடக்கோயில்வேறு. ஞா-க. R-ஆடுதுறையிலிருந்து 4-மைல். இதற்கு (தெ-கி) 1-கடிகையில்.

**34. திருநல்லம்** —(கோனேரிராசபுரம்) உமையும், தேவர்களும் பூசித்த தலம். (சு-ர்) உமாமகேசர். (தே-ர்) மங்களநாயகி. (தீ-ம்) சத்திதீர்த்தம். நா-ஞா-உ. R-ஆடுதுறையிலிருந்து (வ) 5-கட்டை. இதற்கு (வ-மே) 2-கடிகையில்.

**35. திருக்கோழம்பம்** — இந்திரனார் குயிலாகச் சாபமேற்ற சந்தனெனும் காந்தருவன் பூசித்துச் சாபநீக்கம் பெற்ற தலம். (சு-ர்) கோகிலேசுரர். (தே-ர்) சௌந்தரநாயகி, (தீ-ம்) கோகிலதீர்த்தம். ஞா-நா-ப-உ. நாரசிங்கம்பேட்டை ஸ்டேஷனிலிருந்து 4-மைல். இதற்கு (வ-கி) 1-கடிகையில்.

**36. திருஆவடுதுறை** — இந்திரனும், பலருஷிகளும் பூசித்த தலம். திருமூல நாயனார் முத்திபெற்ற தலம். திருக்கைலாச பரம்பரை நமச்சிவாயமூர்த்திகளின் சந்ததியார் மடாலயங்கொண் டெழுந்தருளி யிருக்குந் தலம். (சு-ர்) மாசிலாமணியீச்சுரர், செம்பொன்தியாகேசர். (தே-ர்) ஒப்பிலாமுலையம்மை, சிவகாமியம்மை. (தீ-ம்) சிவகங்கை. விருக்ஷம்

அரசு. சமயாசாரியர் மூவர்களாலும் பதிகம் பெற்றுளது. நாரசிங்கம்பேட்டை ஸ்டேஷனிலிருந்து (கி) 2-மைல். இதற்கு (வ-கி) 3-கடிகையில்.

37. **திருத்துருத்தி** — (குற்ருலம்) சத்தியம தவறிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேகத்திற் கண்ட பிணிநீங்கின தலம். (சு-ர்) வேதேச்வரர். (தே-ர்) அமிர்தமுகிழாம்பிகை. (தீ-ம்) சுந்தரதீர்த்தம். குற்ருல விருக்ஷம். மூவர் பதிகம்-ஙு. R-ஸ்டேஷன் குற்ருலம். இதற்கு (தெ-கி) 1-கடிகையில்.

38. **திருவழுந்தூர்** — வேதம், திக்குப்பாலகர், தேவர்கள் பூசித்த தலம். (சு-ர்) வேதபுரீசர். (தே-ர்) சௌந்தராம்பிகை. (தீ-ம்) வேததீர்த்தம். ஞா-க. R-குற்ருலம் ஸ்டேஷனிவிருந்து (தெ-கி) 3-மைல். இதற்கு (வ-கி) 5-கடிகையில்.

39. **திருமயிலாடுதுறை** — (மாயூரம்) உமாதேவியார் மயிலாகப் பூசிக்கச் சிவபெருமான் ஆண்மயிலாக நடஞ்செய்து மறைந்தருள, இறைவனையெண்ணிப் பிரிவாற்ருது பூசித்து முத்தி அடைந்த தலம். விதி விஷ்ணுக்கள் இந்திரன் முதலிய திக்குப பாலகர் பல ருஷிகள் இலக்ஷமியாதியர், யானை, குதிரை, கழுதை, குரங்கு, நரி, பூனை, கழுகு, கிளி, பாம்பு முதலியன பூசித்து முத்தி பெற்ற தலம். (சு-ர்) மாயூரநாதர். (தே-ர்) அஞ்சனுயகி. (தீ-ம்) காவிரி-இடபதீர்த்தம். ஞா-நா-உ. R-மாயூரம் ஸ்டேஷ்ன். இதற்கு (கி) 3-கடிகையில்.

40. **திருவிளநகர்** — பூஜைக்குத் திருப்பள்ளித்தாமம் கொண்டு ஆற்றி விறங்கிய அருள்வித்தனை வெள்ளமீர்த்துச் செல்லவும் திருப்பூக்கூடையை விடாத உறுதி யெண்ணி அவனைக் கரையேற்றி ஞானமுபதேசித்த தலம். (சு-ர்) துறைகாட்டும் வள்ளவ். (தே-ர்) காம்பன்னதோளியம்மை. (தீ-ம்) மெஞ்ஞான தீர்த்தம். R-மாயூரத்திற்கு (கி) 4½-மைல் ஞா-க. இதற்கு (தெ) 2-கடிகையில்.

41. **திருப்பறியலூர்** — தக்கன் தலையறுப்பித்து ஆட்டுத்தலை யருளிய தலம். (அட்டவீரட்டத்தொன்று) (சு-ர்) வீரட்டானேசுரர். (தே-ர்) இளங்கொம்பன்னை, (தீ-ம்) சந்திரபுஷ்கரணி. ஞா-க. R-மாயூரத்திலிருந்து (வ-கி) 7-மைல். இதற்கு (வ-கி) 2-கடிகையில்.

42. **திருச்செம்பொன்பள்ளி** — இந்திரன், குபேரன் பூசித்த தலம். (சு-ர்) சுவர்ணபுரேசர். (தே-ர்) சுகந்தவனநாயகி. (தீ-ம்) வீரபத்திரதீர்த்தம். ஞா-நா-ஙு. R-மாயூரத்திவிருந்து (கி) 7-மைல். இதற்கு (வ-கி) 1-கடிகையில்.

43. **திருநனிபள்ளி**—(புஞ்சை) அஷ்டவசுக்கள் முதலியோர் பூசித்த தலம். திருஞானசம்பந்த சுவாமிகளின் தாய் பிறப்பிடம். (சு-ர்) நற்றுணையப்பர். (தே-ர்) பர்வதராஜபுத்ரி (தீ-ம்) சுவர்ணதீர்த்தம். ஞா-நா-சு. பதி 3. R-மாயூரத்திலிருந்து (கி) 8-மைல் இதற்கு (கி) 2½-கடிகையில்.

44. **திருவலம்புரம்** — (பெரும்பள்ளம்) திருமால் பூசித்துச் சங்குபெற்ற தலம். சங்குகன்னன் பூசித்த தலம். (சு-ர்) வலம்புரிநாதர். (தே-ர்) வடுவகிற்கண்ணம்மை. (தீ-ம்) பிரமதீர்த்தம். சமயாசாரியர் மூவர்பதிகம் ச. R-சீர்காழியிலிருந்து 9-மைல். இதற்கு (தெ-மே) 1-கடிகையில்.

45. **திருத்தலைச்சங்காடு** — விஷ்ணு, திக்குப்பாலகர், திக்கஜங்கள் பூசித்த தலம். (சு-ர்) சங்காரண்யேசுரர். (தே-ர்) சௌந்தநாயகி. (தீ-ம்) காவிரி. வில்வவிருக்ஷம் ஞா-க. (தெ) R-சீர்காழியி விருந்து 10-மைல். இதற்கு (தெ) 1½-கடிகையில்.

46. **திருஆக்கூர்--தான்றேன்றிமாடம்** - இந்திரன் முதலியோர் பூசித்த தலம். சிறப்புலி நாயனுர் முத்திபெற்ற தலம். ஞா-நா உ. R-ஆக்கூர். இதற்கு (தெ-கி) 2½-கடிகையில்.

47. **திருக்கடவூர்வீரட்டானம்**—(திருக்கடவூர்) அட்டவீரட்டத் தொன்று. மார்க்கண்ட முனிவர் பொருட்டு யமனை உதைத்த தலம். காரிநாயனுர், குங்கிலியக்கலயநாயனுர் முத்திபெற்ற தலம். (சு-ர்) வீரட்டானேச்சுரர், அமுத கடேசுரர். (தே-ர்) அபிராமியம்மை. (தீ-ம்) அமுத தீர்த்தம். வில்வவிருக்ஷம். ஞா-நா-சு-ரு. R-திருக்கடவூர். இதற்கு (கி) அரை கடிகையில்.

48. **திருக்கடவூர்மயானம்** — ஒரு கற்பத்தில் பிரமதேவரை யெரித்து நீருக்கியணிந்து மீண்டும் அவரைச் சிருட்டித்துச் சிருட்டிசெய்வித்த தலம். (சு-ர்) பிரமபுரீசுரர். (தே-ர்) தயாளமலர்க் குழன் மின்னம்மை. (தீ-ம்) பிரமதீர்த்தம். மூவர்பதிகம் 3. R-ஷை. இதற்கு (தெ-கி) 5-கடிகையில்.

49. **திருவேட்டகுடி** — தவஞ்செய்த அருச்சுனன் பொருட்டுச் சிவபெருமான் வேடுருக் கொண்டு வேட்டஞ் செய்து அநுக்ரகித்த தலம். (சு-ர்) திருமேனியழகர். (தே-ர்) சுகந்தவனநாயகி. (தீ-ம்) அழகு தீர்த்தம்.

ஞா-௧. R-காரைக்கால் ஸ்டேஷனி லிருந்து (வ) ௬-மைல். இதற்கு (தெ-மே) 4-கடிகையில்.

50. **திருத்தெளிச்சேரி**— பார்வதிதேவியார் தம்பெயர் சுவாமிக்கிடத் தவஞ்செய்து அவ்வரம் பெற்ற தலம். அருச்சுனனிடம் போரிட்டு வில்லடியுண்ட தலம். திருஞானசம்பந்த சுவாமிகளின் திருச்சின்னத்தைத் தடுத்த புத்தர் தலைவனுகிய சாரிபுத்தன் தலையில் இடிவிழுந்த தலம். (சு-ர்) பார்வதீச்சுரர். (தே-ர்) சத்யாம்பாள். (தீ-ம்) பார்வதி தீர்த்தம். வன்னிவிருக்ஷம் ஞா-௧. R-காரைக்கால் ஸ்டேஷனிலிருந்து (மே) 1-மைல். இதற்கு (தெ-மே) 2-கடிகையில்.

51. **திருத்தருமபுரம்**—தருமராசன், பிரமன், அரம்பையர் பூசித்த தலம். திருஞானசம்பந்தர் யாழ்முரி பாடிய தலம். (சு-ர்) யாழ்முரிநாதேச்சுரர். (தே-ர்) சதாமதுராம்பிகை. (தீ-ம்) கதலிதீர்த்தம், கலிதீர்த்தம். ஞா-௧. R-காரைக்கால் ஸ்டேஷனி விருந்து (மே) 2-மைல். இதற்கு வடமேற்கு 1½-கடிகையில்.

52. **திருநள்ளாறு** — நளன் கலிநீங்கப் பூசித்த தலம். (சு-ர்) தர்ப்பாரண்யேச்வரர். (தே-ர்) போகமார்த்த பூணமுலையம்மை, (தீ-ம்) சிவகங்கை. சப்தவிடங்கத் தலத்திலொன்று. நகரவிடங்கர், உன்மத்த நடனம். ஞா-௯, நா-உ, சு-௨. இவ்வூர்ப் பதிகம் போகமார்த்த அக்னியில் வேகாதிருந்தது. இது ஸ்டேஷன். இதற்கு (வ-மே) 4-கடிகையில்.

53. **திருக்கோட்டாறு** — ஐராவதம் பூசித்த தலம். (சு-ர்) ஐராவதேசவரர். (தே-ர்) வண்டமர்பூங்குழலம்மை. (தீ-ம்) ஐராவததீர்த்தம். ஞா-உ. R-திருநள்ளாறு ஸ்டேஷனிலிருந்து (வ-மே) 3-மைல். (தெ-மே) 4- கடிகையில்.

54. **திருவம்பர் — பெருந்திக்கோயில்**- பிரமன் பூசித்த தலம். சோமாசிமாறநாயனர் முத்தியடைந்த தலம். (சு-ர்) பிரம்மபுரநாதர். (தே-ர்) பவளவண்ணப் பூங்குழலம்மை. (தீ-ம்) பிரமதீர்த்தம். ஞா-௧. R-பூந்தோட்டம் ஸ்டேஷனி லிருந்து மூன்று மைல். இதுபோது மாகாளம் என வழங்குகிறது. இதற்கு (மே) 1-கடிகையில்.

55. **திருவம்பர்மாகாளம்** — மாகாளர் பூசித்து அஜமுகியைக் கை குறைத்த தலம். (சு-ர்) காளகண்டேச்வரர். (தே-ர்) பச்சைநாயகியம்மை. (தீ-ர்) மாகாளதீர்த்தம். ஞா-௧. R-ஷை. இதுபோது அம்பல் என வழங்கும். இதற்கு (மே) 3-கடிகையில்.

56. **திருமீயச்சூர்** — வருணன் முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) திருமுயற்சிநாதேச்சுரர். (தே-ர்) சௌந்தரநாயகி. (தீ-ம்) அற்புததீர்த்தம். ஞா-௧. R-பேராளத்திருந்து (மே) 1-மைல். இதற்கு வடக்குப் பிராகாரத்தில்.

57. **திருமீயச்சூரிளங்கோயில்** — பிரமன், சரஸ்வதி பூசித்த தலம். (சு-ர்) சகலபுவனேச்வரர். (தே-ர்) மேகலாம்பாளம்மை. (தீ-ம்) சரஸ்வதி தீர்த்தம். R-ஷை. நா-௧ இதற்கு (தெ-மே) 1-கடிகையில்.

58. **திருத்திலதைப்பதி** — தசரதற்கு இராம இலக்ஷ்மணர்கள் திலதர்ப்பணஞ் செய்த தலம். (சு-ர்) மதிமுந்தநாதேச்வரர். (தே-ர்) பொற்கொடியம்மை, (தீ-ம்) சோமதீர்த்தம். ஞா-௧. R-பேராளம் ஸ்டேஷனிலிருந்து (தெ-மே) 4-மைல். இதற்கு (வ-மே) 3-கடிகையில்.

59. **திருபாம்புரம்** — ஆதிசேடன் முதலிய நாதர் பூசித்த தலம். (சு-ர்) பாம்புபுரேசர். (தே-ர்) வண்டமர் பூங்குழனுயகி. (தீ-ம்) ஆதிசேடதீர்த்தம். ஞா-௧. R-பேராளத்திருந்து. (மே) 3-மைல். இதற்கு (மே) 1-கடிகையில்.

60. **திருச்சிறுகுடி** — செவ்வாயும், கருடன் முதலியோரும் பூசித்த தலம். (சு-ர்) மங்களேச்வரர். (தே-ர்) மங்களநாயகி. (தீ-ம்) மங்களதீர்த்தம். ஞா-௧. R-பேராளத்திருந்து (மே) 4-மைல். இதற்கு (தெ-மே) 1½-கடிகையில்.

61. **திருவீழிமிழலை**—திருமால் சக்கரம் பெறவேண்டிக் கண்ணை மலராக அருச்சித்த தலம். திருஞானசம்பந்த சுவாமிகளுக்கும், திருநாவுக்கரசுகளுக்கும் பொற்காசருளிய தலம். (சு-ர்) வீழியழகர். (தே-ர்) சுந்தரகுசாம்பிகை. (தீ-ம்) அரிதீர்த்தம். விண்ணிழி விமானக் கோயில். ஞா-௧௦, நா-அ, சு-௧. R-பூந்தோட்டம் ஸ்டேஷனிலிருந்து (மே) 6-மைல். இதற்கு (வ-மே) 10-கடிகையில்.

62. **திருவன்னியூர்**—அக்கினி பூசித்து வீரபத்திரரின்சாபத்தைப்போக்கிக்கொண்ட தலம். (சு-ர்) அக்கினீச்வரர். (தே-ர்) பார்வதியம்மை. (தீ-ம்) அக்கினிதீர்த்தம். நா-௧. R-மாயூரத்தை யடுத்த ஆனந்தத் தாண்டவபுரம் ஸ்டேஷனிலிருந்து (மே) 4 - மைல். இதற்கு (தெ-மே) 2-கடிகையில்

63. **திருக்கருவிலி** — சற்குணனென்னுமரசன் பூசித்து முத்திபெற்ற தலம். (சு-ர்) சற்குணேச்வரர். (தே-ர்) சர்வாங்க நாயகி

யம்மை. (தீ - ம்) சற்குணதீர்த்தம். நா-க. R-கும்பகோணத்திருந்து 12 - மைல். இதற்கு (தெ-மே) 3-கடிகையில்.

64. **திருப்பேணுபெருந்துறை** — சிவ சத்தி, பிரமன் முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) சிவாநந்தேச்வரர். (தே-ர்) மலையரசி. (தீ-ம்) ஆநந்ததீர்த்தம். ஞா-க. R-கும்பகோணத்திருந்து எ-மைல். இதற்கு (மே) 1½-கடிகையில்.

65. **திருநறையூர்ச்சித்தீச்சரம்**—குபேரனும், தேவகாந்தருவரும் பூசித்த தலம். (சு-ர்) சௌந்தரேச்வரர். (தே-ர்) அழகாம்பிகை. (தீ-ம்) தேன்சித்தி தீர்த்தம். ஞா-ங, சு-க. R-கும்பகோணத்திற்கு (தெ - கி) 5½-மைல். இதற்கு (வ-மே) 1-கடிகையில்.

66. **அரிசிற்கரைபுத்தூர்** — (அழகார் புத்தூர்) உண்மையாநந்த இருடி பூசித்த தலம். புகழ்த்துணை நாயனருக்குப் படிக்காசளித்த தலம். (சு-ர்) படிக்காசளித்த ஈசுரர். (தே-ர்) அழகாம்பிகை. (தீ-ம்) அரிசில் நதி. ஞா-க, நா-க,சு-க. R-கும்பகோணத்திற்கு (தெ-கி) 4½-மைல். இதற்கு (வ-மே) 1-கடிகையில்.

67. **திருச்சிவபுரம்** — பிரமன் பூசித்த தலம். (சு - ர்) பிரமபுரி நாயகர். (தே - ர்) பெரியநாயகி யம்மை. (தீ-ம்) பிரமதீர்த்தம். ஞா-ங, நா-ச. R-கும்பகோணத்திற்கு (தெ-கி) 3 - மைல். இதற்கு (தெ-மே) 1½-கடிகையில்.

68. **திருக்கலயநல்லூர்** — (சாக்கோட்டை) தேவர்கள் அமிர்த கலசம் பெற்ற களிப்பாற் பூசித்த தலம். (சு-ர்) அமிர்தகலேயீசுரர். (தே-ர்) அமிர்தவல்லியம்மை. (தீ-ம்) அரிசில்நதி. அரி சொல்லியபடி வந்த நதி. அமிர்த தீர்த்தம். சு-க. R-கும்பகோணத்திற்கு (தெ - கி) 1-மைல். இதற்கு (தெ-கி) அரை கடிகையில்.

69. **திருக்கருக்குடி** — விச்வாமித்திரர், மார்க்கண்டர் முதலிய இருடிகளும், சற்குணன் முதலிய வரசரும் பூசித்த தலம். (சு-ர்) சற்குணலிங்கர். (தே-ர்) சர்வாலங்கிருத மின்னம்மை. (தீ-ம்) சற்குண தீர்த்தம். ஞா-க. R-கும்பகோணத்திருந்து (தெ-கி) 3½-மைல். இதற்கு (தெ-கி) அரை கடிகையில்.

70. **திருவாஞ்சியம்** — நாக கன்னிகையொருத்தி மிக வாஞ்சையோடு இறைவனைத் தழுவிச் சாயுஜ்யமடைந்த தலம். (சு - ர்) வாஞ்சலிங் கேச்வரர். (தே-ர்) வாழவந்த நாயகி. (தீ-ம்) சுதவாஞ்ச தீர்த்தம். ஞா-த, நா - க, சு - க. R-நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து (மே) 6½-மைல். இதற்கு (கி) 3-கடிகையில்.

71. **திருநன்னிலத்துப் பெருங்கோயில்**—சூரியன் ஒளிபெறப் பூசித்த தலம். (சு-ர்) பிரகாசேச்வரர். (தே-ர்) பிரகாசேச்வரி. (தீ-ம்) சூரியகாந்த தீர்த்தம். சு-க. R-ஸ்டேஷனிலிருந்து 3-மைல். இதற்கு (கி) அரை கடிகையில்.

72. **திருக்கோண்டீச்சுரம்** — காமதேனு பூசித்துப் பலபொருள் பெற்ற தலம். (சு-ர்) பசுபதீச்சுரர். (தே-ர்) சாந்தநாயகியம்மை. (தீ-ம்) பசுதீர்த்தம். நா-உ. R-நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து (மே) 2-மைல். இதற்கு (தெ-கி) 1½-கடிகையில்.

73. **திருப்பனையூர்** — முசுகுந்த சக்கிரவர்த்தியும், திருமகளும் பூசித்த தலம். (சு-ர்) சௌந்தரேச்சுரர். (தே - ர்) பெரியநாயகி. (தீ - ம்) மகாலக்ஷ்மி தீர்த்தம். ஞா-நா-உ. R-திருவாரூரி லிருந்து (வ) 8-மைல். நன்னிலத்திருந்து தெற்கு 2-மைல். இதற்கு (தெ) 1½-கடிகையில்.

74. **திருவிற்குடி** — அட்டவீரட்டத் தொன்று. சலந்தராசுரனை வதைத்த தலம். (சு-ர்) வீரட்டானேசுவரர். (தே-ர்) மைவார் குழலியம்மை. (தீ-ம்) சக்கரைதீர்த்தம். ஞா-க. R-விற்குடி ஸ்டேஷனி லிருந்து 2-மைல். இதற்கு (வ-கி) 3-கடிகையில்.

75. **திருப்புகலூர்** — அக்நி பூசித்த தலம். திருநாவுக்கரசுகள் முத்திபெற்ற தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் செங்கற்கள் பொன்னாயின தலம். (சு - ர்) அக்நீபுரீச்வரர். (தே-ர்) கொந்தார் குழலி யம்மை. (தீ-ம்) அக்நிதீர்த்தம். ஞா, நா, சு-அ. R-நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து (கிழ) 4-மைல். ஷ ஆலய இடப்புறம்.

76. **திருப்புகலூர்வர்த்தமானீச்சுரம்**--மேகங்கள் பூசித்த தலம். முருகநாயனர் திருவவதாரம் செய்தருளிய தலம். (சு-ர்) வர்த்தமானேச்சுரர். (தே - ர்) கருந்தார் குழலியம்மை. ஞா-க. இதற்கு (தெ) 1-கடிகையில்.

77. **திருஇராமனதீச்சுரம்**— இராமர், மிருகண்டரிஷி முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) இராமநாதேச்சுரர். (தே-ர்) கருவார் குழலியம்மை. (தீ-ம்) இராம தீர்த்தம். ஞா-க. R-நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து (கிழ) 5-மைல். இதற்கு (தெ) 1½-கடிகையில்.

**78. திருப்பயற்றூர்** — (திருபயற்றங் குடி) பயிரவர் பூசித்த தலம். (சு-ர்) திருப் பயற்றீச்சுரர். (தே-ர்) காவியங் கண்ணி யம்மை. (தீ-ம்) கருணை தீர்த்தம். நா-க. R-திருவாரூரை யடுத்த விற்குடி ஸ்டேஷனி லிருந்து 7-மைல். இதற்கு (வ-கி) 3-கடி கையில்.

**79. திருச்செங்காட்டங்குடி கணபதீச் சரம்** — கயமுகா சுரனைக் கொன்ற கணபதி பூசித்த தலம். கயமுகாசுரன் உதிரம் பெரு கிய காடாதலால் செங்காடெனப் பெயர். சிறுத்தொண்ட நாயனர் திருப்பணி செய்த தலம். (சு-ர்) கணபதீச்சுரர். (தே-ர்) திருக் குழலுயகியம்மை. (தீ-ம்) கணபதிதீர்த்தம். ஞா, நா-ந. R. நன்னிலம் ஸ்டேஷனி லிருந்து (கி) 6-மைல். இதற்கு (வ-கி) 1-கடி கையில்.

**80. திருமருகல்** — மார்க்கண்ட ரிஷி பூசித்த தலம். வணிகனைத் திருஞானசம் பந்த சுவாமிகள் உயிர்பெறப் பாடி யுயிர்ப் பித்த தலம். (சு-ர்) மாணிக்க வண்ணர். (தே-ர்) வண்டுவார் குழலியம்மை. (தீ-ம்) மாணிக்க தீர்த்தம். ஞா-நா-ந. R-நன்னி லத்திருந்து (கி) 8-மைல். இதன் (வ-கி) 1-கடிகையில்.

**81. திருச்சாத்தமங்கை அயவந்தி** — அஷ்டவக்ர ருஷி பூசித்த தலம். திருநீல நக்கர் முத்திபெற்ற தலம். (சு-ர்) அயவந்தீசு வரர். (தே-ர்) இருமலர்க் கண்ணியம்மை. (தீ-ம்) அற்புத சிவகங்கை. ஞா-க. R-நன் னிலம் ஸ்டேஷனிலிருந்து 8-மைல். (தெ-கி) 11-கடிகையில்.

**82. திருநாகைக்காரோணம்**— புண்ட ரீக மகருஷியைக் காயத்தோடு திருவுருவிற் சேர்த்தருளிய தலம். சுந்தரர்க்கு வேண்டி யவை யருளிய தலம். அதிபத்த நாயனர் முத்தி பெற்ற தலம். (சு-ர்) காயாரோக ணேச்சுரர். (தே-ர்) நீலாயதாக்ஷி யம்மை. (தீ-ம்) சர்வதீர்த்தம். இது சப்தவிடங்கத் தலத்து ளொன்று. மூவர் பதிகம் - எ. R- நாகபட்டணம் ஸ்டேஷன். (மே) 1½-கடி கையில்.

**83. திருச்சிக்கல்** — கிருஷ்ணமூர்த்தி வெண்ணெய் திருடியுண்ட பாவம்நீங்கப் பூசித்த தலம். வசிட்டர் காமதேனுவின் வெண்ணெயால் பூசித்து எடுக்க வாாமல் சிக்கிய தலம். (சு-ர்) நவநீதநாதேச்சுவரர், (தே-ர்) வேனெடுங்கண்ணியம்மை. (தீ-ம்) நவநீத தீர்த்தம். ஞா-க. R-சிக்கல்ஸ்டே ஷன். நாகப்பட்டினத்திற்கு (மே) 3-மைல் இதற்கு (மே) 3½-கடிகையில்.

**84. திருக்கீழ்வேளூர்** — அக்ஷயதேவர் முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) அக்ஷய லிங்கேசுரர். (தே-ர்) வனமுலைநாயகியம்மை. (தீ-ம்) அக்ஷயதீர்த்தம். ஞா-நா- . R-சிக் கலையடுத்த மேலண்டை ஸ்டேஷன். (தெ) 2-கடிகையில்.

**85. திருத்தேவூர்** — தேவகுரு பூசித்த தலம். (சு-ர்) தேவகுருநாதர். (தே-ர்) மதுர பாஷணியம்மை. (தீ-ம்) பிரகஸ்பதி தீர்த்தம். விருக்ஷம்-வாழை. ஞா-உ. R-கீழ்வேளூர் ஸ்டேஷனிலிருந்து (தெ) 2-மைல். (வ-மே) 6-கடிகையில்.

**86. திருப்பள்ளியின்முக்கூடல்** — மூர் க்கருஷி முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) முக்கோணேசுரர். (தே-ர்) மைம்மேவுகண்ணி யம்மை. (தீ-ம்) முக்கூடல் தீர்த்தம். நா-க. R-திருவாரூருக்கு (வ-கி) 3-மைல். (தெ-மே) 2-கடிகையில்.

**87. திருவாரூர்மூலட்டானம்** — திரு மால், இந்திரன், முசுகுந்தச்சக்ரவர்த்தி முத லியோர் பூசித்துப் பேறடைந்த தலம். நமி நந்தியடிகள் சமணர்பொருட்டு நீரால் விளக் கெரித்த தலம். பரவையார் திருவவதாரத் தலம். விறன்மிண்ட நாயனர் திருப்பணி செய்த தலம். தண்டியடிகணயனர் திருக் குளப்பணிசெய்து சமணர்கள் கண்ணிங்கத் தாம் கண்பெற்ற தலம். கழற்சிங்கநாயனரும், செருத்துணை நாயனரும் முத்திபெற்ற தலம். மனுநீதிகண்டசோழ மகாராஜனைப் பசுவாகச் சென்று சோதித்த தலம். இது சத்த விடங் கத்தலத்துள் முதன்மை பெற்றது. (சு-ர்) புற்றிடங்கொண்டார். (தே-ர்) அல்லியங் கோதை யம்மை. (தீ-ம்) கமலாலய முதலிய பலதீர்த்தங்கள். விருக்ஷம்-பாதிரி. ஞா-ரு. நா-உக, சு-அ. R-ஸ்டேஷன்.

**88. திருவாரூர் அரநெறி**—இக்கோயிலி னுள்ளே இருப்பது. அசிதருஷி முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) அகிலேசுரர். (தே-ர்) அல் லியங்கோதை. (தீ-ம்) அற்புதக்கூவம். நா-உ.

**89. திருவாரூர்ப் பரவையுண்மண் டளி**— வருணன் விட்டகடலை வற்றச்செய்த தலம். வருணன் பூசித்த தலம். (சு-ர்) பரவை யுண்மண்டளீசுரர் (தே-ர்) பஞ்சின்மெல்லடி யம்மை. (தீ-ம்) வருணபுட்கரணி. சுந்தரர் கண் பெற்ற தலம். கோயிலுக்குக் கீழ்புறம் கீழ வீதிக்குள் இருக்கிறது. சு-க. (தெ-மே) 1½-கடிகையில்.

90. **திருவிளமர்** — பதஞ்சலிமுதலியோர் பூசித்ததலம். விடங்கத்தலத்தொன்று. (சு-ர்) பதஞ்சலிமனோகரர். (தே-ர்) யாழினுமென்மொழியம்மை. (தீ-ம்) முத்தி தீர்த்தம். ஞா-க. R-திருவாரூருக்கு (தெ-மே) 2-மைல். இதற்கு (வ-மே) 3-கடிகையில்.

91. **திருக்காவீரம்**—(கரையபுரம்). கௌதமர் பூசித்த தலம். (சு-ர்) காவீரேசுரர். (தே-ர்) பிரத்யக்ஷமின்னம்மை. (தீ-ம்) அநவரத தீர்த்தம். ஞா-க. R-திருவாரூருக்கு (மே) 4-மைல். (வ-மே) முக்கால் கடிகையில்.

92. **திருப்பெருவேளூர்** — (காட்டேர் ஐயன்பேட்டை) சத்தி பூசித்த தலம். (சு-ர்) பிரியாதநாயகர். (தே-ர்)மின்னனையாளம்மை. (தீ-ம்) சத்திதீர்த்தம். ஞா-க. R-திருவாரூரிலிருந்து (மே) 5-மைல். (மே) 2½-கடிகையில்.

93. **திருத்தலையாலங்காடு** — கபிலருஷி பூசித்த தலம். முயலகனை முதுகிற நடித்த தலம். (சு-ர்) ஆடவல்லவேச்சுரர். (தே-ர்) திருமடந்தை. (தீ-ம்) சுவர்ணதீர்த்தம். ஞா-க, நா-க. R-திருவாரூருக்கு மேற்கு 8-மைல். (மே) 3½ கடிகையில்.

94. **திருக்குடவாயில்** — திரணபிந்து முனிவர்க்குக் குடத்திற்றோன்றித் தரிசனந்தந்தருளிய தலம். (சு-ர்) கோணேச்சுவரர். (தே-ர்) பெரியநாயகி. (தீ-ம்) திருக்குடதீர்த்தம். ஞா-உ. R-கொரடாச்சேரி ஸ்டேஷனிலிருந்து (வ) 8-மைல். (வ-மே) 1-கடிகையில்.

95. **திருச்சேறை** — (உடையார்கோயில்) தௌமியருஷி முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) செந்நெறியப்பர். (தே-ர்) ஞானவல்லியம்மை. (தீ-ம்) மனோகரதீர்த்தம். ஞா-நா-கூ. R-கும்பகோணத்திற்கு (தெ-கி) 9-மைல். (தெ-கி) 1-கடிகையில்.

96. **திருநாலூர்மயானம்** — நாரதர் ஆபத்தம்பருஷி முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) பல்லவனேசுரர். (தே-ர்) பெரியாம்பிகை. (தீ-ம்) பலாவடிதீர்த்தம். ஞா-க. R-கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து (தெ-கி) 10-மைல். (தெ-மே) 3-கடிகையில்.

97. **திருக்கடுவாய்க்கரைப்புத்தூர்** — காசிபருஷி முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) சுவர்ணபுரேசர். (தே-ர்) சிவாம்பிகை. (தீ-ம்) சுவர்ணதீர்த்தம். நா-க. R-நீடாமங்கலம் ஸ்டேஷனி விருந்து (தெ-மே) 11-மைல். (தெ) 2-கடிகையில்.

98. **திருஇரும்பூளை**—(ஆலங்குடி) விச்வாமித்திரருஷி முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) காசியாரண்யேச்சுரர். (தே-ர்) ஏலவார்குழலியம்மை. (தீ-ம்) காசிதீர்த்தம். ஞா-க. R-நீடாமங்கலம் ஸ்டேஷனிலிருந்து (வ) 4-மைல் (தெ-மே) 3-கடிகையில்.

99. **திருவரதைப்பெரும்பாழி** — (அரித்வாரமங்கலம்) வராக உருக்கொண்ட விஷ்ணுமூர்த்தியின் கோட்டை முரித்த தலம். (சு-ர்) பாதாளேச்சுரர். (தே-ர்) அலங்காரநாயகி. (தீ-ம்) பாதாளதீர்த்தம். ஞா-க. 1'-தஞ்சை சாலியமங்கலம் ஸ்டேஷனிலிருந்து (வ) 8-மைல். (மே) 1-கடிகையில்.

100. **திருஅவளிவணல்லூர்** — வராகமூர்த்தி பூசித்து அருள்பெற்ற தலம் (சு-ர்) காட்சிநாயகேசுரர். (தே-ர்) சௌந்தரநாயகி (தீ-ம்) பிரசன்ன தீர்த்தம். ஞா-நா-உ. R-சாலியமங்கலத்திலிருந்து (வ-கி) 6½ - மைல். (தெ-மே) 7½-கடிகையில்.

101. **திருப்பருதிநியமம்** —(பருத்தியப்பர்கோயில்) சூரியன் பூசித்த தலம். (சு-ர்) பரிதியப்பர். (தே-ர்) மங்களநாயகியம்மை. (தீ-ம்) பாஸ்கரதீர்த்தம். ஞா-க. R-தஞ்சை சாலியமங்கலம் ஸ்டேஷனிலிருந்து(தெ-மே) 8-மைல். (வ-கி) 8-கடிகையில்.

102. **திருவெண்ணியூர்** — தத்தாத்திரேயர் பூசித்த தலம். (சு-ர்) வெண்ணிநாயகேசர். (தே-ர்) அழகியநாயகி. (தீ-ம்) அழகு சிவகங்கை. ஞா-நா-கூ. R-கோயில்வெண்ணி ஸ்டேஷன். (தெ-கி) 3½-கடிகையில்.

103. **திருப்பூவனூர்** — பலரிஷிகளுந் தேவர்களும் புட்பவனம் வைத்துப் பூசித்த தலம். (சு-ர்) புட்பவனேச்சுரர். (தே-ர்) கற்பகவல்லியம்மை. (தீ-ம்) கற்பகதீர்த்தம். நா-க. R-நீடாமங்கலம் ஸ்டேஷனி விருந்து (தெ-மே) 2-மைல் (தெ-கி) 4-கடிகையில்.

104. **திருப்பாதாளேச்சுரம்** — (பாமணி) நாகர் பூசித்த தலம். (சு-ர்) சர்ப்பபுரேசர். (தே-ர்) அமிர்தநாயகியம்மை. (தீ-ம்) நாகதீர்த்தம். ஞா-க. R-மன்னார்குடி. ஸ்டேஷனிலிருந்து வடக்கு 1½-மைல். (தெ-கி) 10-கடிகையில்.

105. **திருக்களர்** — காளமுனி பூசித்த தலம். திருவாசருக்கு நடனதரிசனந் தந்த தலம். (சு-ர்) களரிமுலையீசர். (தே-ர்) அழகேச்வரி. (தீ-ம்) துருவாசதீர்த்தம். மன்னார்குடியிலிருந்து (தெ.) 9-மைல். (தெ-கி) 10-கடிகையில்.

106. **திருச்சிற்றேமம்** — (சிற்றும்பூர்) விபுதனென்னு மடியவர்க்கு நாடோறும் படியிற் பொற்காசு கொடுத்தருளிய தலம். (சு-ர்) பொன்வைத்தநாதர். (தே-ர்) அகிலாண்டேச

வரி. (தீ-ம்) அகிலாண்டதீர்த்தம், அழகேண வரிதீர்த்தம். ஞா-க. தன் மனைவியிடம் ஐயம் கொண்டு யாத்திரைசென்ற வணிகன்பொருட்டு அவனது ஐயத்தைத் தீர்க்க நந்தியைக் கோயிலுக்குப்பின்னும், பின்னிருந்த ஆத்தி விருக்ஷத்தை முன்னும் அவர் பிரார்த்தனைப் படிவருவித்த தலம். (தெ-மே) 10-கடிகையில்.

107. **திருவுசாத்தானம்** — (கோயிலூர்) இராம லக்ஷ்மணர், அநுமான் முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) மந்திரபுரேசர். (தே-ர்) பெரியநாயகி. (தீ-ம்) சுக்கிரீவதீர்த்தம். ஞா-க. புராணமிருக்கிறது. முத்துப்பேட்டை ஸ்டேஷனிலிருந்து (மே) 2-மைல். (தெ-கி) 7-கடிகையில்.

108. **திருஇடும்பாவனம்** — இடும்பனென்னு மசுரன் பூசித்து வலிபெற்ற தலம். (சு-ர்) சற்குணநாதர். (தே-ர்) மங்களநாயகி. (தீ-ம்) சுமுகபுட்கரணி. ஞா-க. R-தில்லை விளாகம் ஸ்டேஷனுக்கு (தெ) 4-மைல். (கி) முக்கால் கடிகையில்.

109. **திருக்கடிக்குளம்** — விநாயகர் பூசித்து மாம்பழம்பெற்ற தலம். (சு-ர்) கற்பகேசுரர். (தே-ர்) சௌந்தரநாயகி. (தீ-ம்) விநாயகர் கண்ட தீர்த்தம். ஞா-க. R-திருத்தருப்பூண்டிக்கு (தெ-கி) 11-மைல். (வ-கி) 10-கடிகையில்.

110. **திருத்தண்டலைநீணெறி** — (தண்டலைச்சேரி) கூர்மாவதாரங் கொண்ட விஷ்ணுவின் முதுகோட்டைப் பெயர்த்த தலம். (சு-ர்) நீணெறிநாதேசுரர். (தே-ர்) ஞானநாயகி. (தீ-ம்) சிவகங்கை. ஞா-க. R-திருத்தருப்பூண்டிக்கு (வ) 3-மைல். (மே) 5-கடிகையில்.

111. **திருக்கோட்டூர்** — குச்சா ருஷி பூசித்த தலம். (சு-ர்) கொழுந்தேசுரர். (தே-ர்) மதுரவசனியம்மை. (தீ-ம்) அமிர்ததீர்த்தம். ஞா-க. R-இராஜமன்னார் கோயிலுக்கு (தெ) 10 மைல். திருத்தருப்பூண்டி ஸ்டேஷனிலிருந்து (மே) 8 மைல். புராணமிருக்கிறது. (மே) $7\frac{1}{2}$-கடிகையில்.

112. **திருவெண்டுறை** — வித்யாதரர் முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) வெண்டுறைநாதேச்சுரர். (தே-ர்) வேனெடுங்கண்ணியம்மை. (தீ-ம்) தாளதீர்த்தம். ஞா-க. R-ராஜமன்னார் கோயிலுக்கு (கி) 13 - மைல். (வ) 6-கடிகையில்.

113. **திருக்கொள்ளம்பூதூர்** — திருக்களம்பூர்) சாண்டில்ய ருஷி பூசித்த தலம். திருஞானசம்பந்தர் ஆற்றுவெள்ளத்தில் ஓடத்தில் கடந்து சென்று தரிசித்த தலம். (சு-ர்) வில்வவன நாதர். (தே-ர்) சௌந்தரவதி. (தீ-ம்) குடமுருட்டிநதி. ஞா-க. R-கொராடாச்சேரி ஸ்டேஷனிலிருந்து (வ-கி) 6-மைல். இதற்கு (தெ-கி) 10-கடிகையில்.

114. **திருப்பேரெயில்** — (ஓகைப்பேரையூர்) வருணன் முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) சகலபுவனேசுவரர். (தே-ர்) மேகலாம்பாள். (தீ-ம்) வருணதீர்த்தம். ஞா-க. R-குழிக்கரை ஸ்டேஷனிலிருந்து (தெ) 3-மைல். இதற்கு (தெ) 3-கடிகையில்.

115. **திருக்கொள்ளிக்காடு** — சுதீக்ஷண ருஷியும் வீரபத்திரரும் பூசித்த தலம். (சு-ர்) அக்நீசுவரர். (தே-ர்) பஞ்சினுமெல்லடியம்மை. (தீ-ம்) அக்னிதீர்த்தம். ஞா-க. R-ஆலத்தம்பாடி ஸ்டேஷனிலிருந்து (மே) $3\frac{1}{4}$-மைல். இதற்கு (கிழ) வ-கடிகையில்.

116. **திருத்தெங்கூர்** — அரிகாபுத்திரர் பூசித்த தலம். (சு-ர்) வெள்ளிமலைநாதர். (தே-ர்) பெரியநாயகி. (தீ-ம்) கருணாகரதீர்த்தம். ஞா-க. R-திருநெல்லிக்காவலுக்கு (மே) 2-மைல். இதற்கு (வ-கி) வ-கடிகையில்.

117. **திருநெல்லிக்கா** — தாருகாவனத்து ருஷிகள் பூசித்த தலம். (சு-ர்) நெல்லிவன நாதர். (தே-ர்) மங்களநாயகி. (தீ-ம்) அற்புததீர்த்தம். ஞா-க. R-ஸ்டேஷன். இதற்கு (வ) 3-கடிகையில்.

118. **திருநாட்டியத்தான்குடி** — நிபகண்ட ருஷியும் யானை முதலியவும் பூசித்துப் பேறடைந்ததலம். கோட்புலிநாயனர் முத்திபெற்ற தலம். (சு-ர்) கரிநாதேச்சுரர். (தே-ர்) மலர்மங்கையம்மை. (தீ-ம்) மகாதீர்த்தம். சு-க. R-ஸ்டேஷன். இதற்கு (தெ-கி) 4-கடிகையில்.

119. **திருக்காறயில்** — (திருக்காறவாசல்) இந்திரன், முசுகுந்தன் முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) கண்ணாயிரநாதர். (தே-ர்) கைலாயநாயகியம்மை. (தீ-ம்) இந்திரதீர்த்தம். இது சத்தவிடங்கத் தலத்து ளொன்று. குக்குடநடனம். ஞா-க. R-திருவாரூருக்கு (தெ) $4\frac{1}{2}$-மைல். இதற்கு (கிழ) 2-கடிகையில்.

120. **திருக்கன்றப்பூர்** — ஒரு மாதின் பொருட்டு இறைவன் கன்றுகட்டும் தறியிலிருந்து தரிசனந்தந்த தலம். (சு-ர்) நடுதறியப்பர். (தே-ர்) மாதுநாயகியம்மை. (தீ-ம்) பிரசன்ன தீர்த்தம். ஞா-க. R-நாட்டியத்தான்குடி ஸ்டேஷனி லிருந்து (கிழ) 6-மைல். இதற்கு (தெ) $1\frac{1}{2}$-கடிகையில்.

121. **திருவலிவலம்**-கரிக்குருவி பூசித்த தலம். (சு-ர்) மனத்துணைநாதர். (தே-ர்)

வாளன்னகண்ணியம்மை. (தீ - ம்) காரண கங்கை. R-திருவாரூருக்கு (தெ - கி) 6-மைல். திருநாட்டியத்தான்குடி ஸ்டேஷனிலிருந்து கிழக்கு 7-மைல். மூவர் பதிகம் 4. இதற்கு (தெ-மே) 2-கடிகையில்.

122. **திருக்கைச்சின்னம்** — கௌதம பிந்துருஷி பூசித்த தலம். (சு-ர்) கைச்சின நாதேச்சுரர். (தே - ர்) வெள்வளையம்மை. ஞா-க. R-திருநெல்லிக்காஸ்டேஷனிலிருந்து (கிழ) 2-மைல். இதற்கு (கிழ) 3-கடிகையில்.

123. **திருக்கோளிலி** — (திருக்குவளை) முசுகுந்த சக்கரவர்த்தி பூசித்த தலம். சுந்தரமூர்த்தி நாயனார்க்கு நெல்லருளிய தலம். (சு-ர்) கோளிலிநாதர். (தே-ர்) வண்டமர் பூங்குழலம்மை. (தீ-ம்) திருக்குவளைத் தீர்த்தம். இது சத்தவிடங்கத் தலத்துளொன்று. பிரமாநடனம். மூவர் பதிகம்-ச. R-திருநெல்லிக்காவல் ஸ்டேஷனிலிருந்து (கி) 7-மைல். இதற்கு (தெ-கி) 2½-கடிகையில்.

124. **திருவாய்மூர்** — முசுகுந்த சக்கரவர்த்தி முதலியோர் பூசித்த தலம். இது சத்தவிடங்கத் தலத்துள் ஒன்று. (சு-ர்) வாய்மூர்நாதர். (தே-ர்) பாலினுநன்மொழியம்மை. (தீ-ம்) சண்டமாருத தீர்த்தம். கமலநடனம். ஞா-நா-ங. R-திருநெல்லிக்காவல் ஸ்டேஷனிலிருந்து (கி) 10-மைல். இதற்கு (தெ-கி) 17½-கடிகையில்.

125. **திருமறைக்காடு** — (வேதாரண்யம்) வேதங்களும், முசுகுந்த சக்கிரவர்த்தியும் பூசித்த தலம். சமயாசாரியர்களாகிய சம்பந்தர் அப்பர்களால் வேதம் பூசித்தடைத்த கதவைத் திறப்பித்துத் தரிசனஞ் செய்த தலம். சத்தவிடங்கத் தலத்துள் ஒன்று. (சு-ர்) மறைக்காட்டீசர். (தே-ர்) யாழைப்பழித்த மொழியம்மை. (தீ-ம்) வேததீர்த்தம். மூவர் பதிகம்-கக. அகோர தேவர் பாடிய வேதாரணிய புராணமும், பரஞ்சோதி முனிவர் பாடிய திருமறைக்காட்டுப் புராணமும் உடையது. மறைசையந்தாதி யென்று ஒன்றுண்டு. R-வேதாரணியம். இதற்கு (தெ) 1-கடிகையில்.

126. **திருஅகத்தியான்பள்ளி** — அகத்தியர் பூசித்த தலம். (சு-ர்) அகத்தீசுவரர். (தே-ர்) மங்கைநாயகி. (தீ-ம்) அகஸ்தியதீர்த்தம். ஞா-க. R-ஸ்டேஷன். இதற்கு (தெ) 5-கடிகையில்.

127. **திருக்கோடிகுழகர்** — (குழகர் கோயில்) வாயுதேவன் பூசித்த தலம். (சு-ர்) அமிர்தகடேசுவரர். (தே-ர்) மையார்தடங்கண்ணியம்மை. (தீ - ம்) அமிர்த தீர்த்தம். R-வேதாரண்யத்திற்கு (தெ) 6-மைல்.

128. **திருப்பெருந்துறை**--பராசரருஷி, பிருகுருஷி முதலியோர் பூசித்த தலம். மாணிக்கவாசகருக்குக் குருந்தின்கீழ் ஆசாரிய மூர்த்தமாக எழுந்தருளி உபதேசித்த தலம். (சு-ர்) ஆத்மநாதர். (தே-ர்) உமாதேவியம்மை. (தீ-ம்) சிவகங்கை. மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம் உடையது. சுந்தரமுனிவர் பாடிய திருப்பெருந்துறைப் புராணமும், மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய திருப்பெருந்துறைப் புராணமும் உடையது.

ஆகச் சோழநாட்டுப் பதிகம் பெற்ற தலங்கள் (ககo).

சோழநாடு முற்றும்.

## பாண்டிநாடு

1. **திருப்புத்தூர்**—உமாதேவியார் முதலியோர் பூசித்த தலம். (சு-ர்) திருப்புத்தூரீசர். (தே-ர்) சிவகாமித்தாயம்மை. (தீ-ம்) அற்புதகங்கை. ஞா-நா-உ. R-மானாமதுரை ஸ்டேஷனிலிறங்கிச் சிவகங்கை சென்று அங்கிருந்து 22-மைல் சென்றால் இத் தலம். புராணமிருக்கிறது.

2. **திருக்கொடுங்குன்றம்** — (பிரான்மலை) மகோதாருஷி பூசித்த தலம். (சு-ர்) கொடுங்குன்றேசுரர். (தே - ர்) குயிலமுதநாயகி. (தீ-ம்) சிவகங்கை. ஞா-க. P-காரைக்குடியிலிருந்து (வ-கி) 26-மைல்.

3. **திருவேடகம்** — அருச்சுனனிடம் வேடராய்ச்சென்று விற்றழும்புபெற்ற தலம். சம்பந்தர் ஆற்றகத்து விட்ட ஏடு கரையேறிய தலம். (சு-ர்) ஏடகநாதர். (தே-ர்) மாதேவியம்மை. (தீ-ம்) வைகை. ஞா-க. புராணமுண்டு. R-சோழவந்தான் ஸ்டேஷனிலிருந்து 3-மைல். இதற்கு 8-கடிகையில்.

4. **திருப்பரங்கிரி** — சிபிச் சக்ரவர்த்தியின் தானத்தின் பொருட்டு இறைவன் தானம் வாங்கச் சென்ற தலம். தெய்வயானையைக் குமாரக்கடவுள் மணங்கொண்ட தலம். (சு-ர்) பரங்குன்றேசுரர். (தே-ர்) ஆவுடைநாயகி. (தீ-ம்) பிரமகூவம், சரவணதீர்த்தம். இது முருகக்கடவுள் படைவீடுகளுள் ஒன்று. R-திருப்பரங்குன்றம்.

5. **திருவாலவாய்** — சிவமூர்த்தி (64) திருவிளையாடல் செய்தருளிய தலம். மூர்த்திநாயனார், குலச்சிறை நாயனார், மங்கையர்க்

காசியார், செடுமாற நாயனுர் திருத்தொண்டு செய்து முத்திபெற்ற தலம். இதன் பெருமை பல வுள. அவற்றை ஆலாஸ்ய மகாத்மியத்துட் காண்க. (சு-ர்) சொக்கநாதர். (தே-ர்) மீனுக்ஷியம்மை. (தீ-ம்) பொற்ருமரை. ஞா-க, நா-உ. இதற்கு கடம்பவன புராணம், பரஞ்சோதியார் பாடிய திருவிளையாடல், வேம்பத்தூரார் பாடிய திருவிளையாடல், சுந்தரபாண்டியம் என்ற புராணங்களும், மதுரை பதிற்றுப் பத்தந்தாதி, பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை இயற்றிய மதுரை மும்மணிக் கோவை, மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ், மீனுட்சியம்மை குறம், மதுரைக் கலம்பகம் முதலிய நூல்களும் உண்டு. R-ஸ்டேஷன் இதற்கு 1-கடிகையில்.

6. **திருவாப்பனூர்** — பாண்டியன் பொருட்டு அவன் குதிரை கட்டிய ஆப்பினின்றும் இறைவன் தரிசனம் தந்தருளிய தலம். (சு-ர்) ஆப்பனூர்க் காரணர். (தே-ர்) அம்பிகையம்மை. (தீ-ம்) இடப தீர்த்தம். ஞா-க. புராணமுடையது. மதுரைக்கு (வ) 1-மைல்.

7. **திருப்பூவணம்** — பப்புரு மகாருஷி பூசித்த தலம். பொன்னனையாள் இறைவன் திருவுருக் கண்டு அழகப்பிரானே எனப் பெற்ற தலம். (சு-ர்) பூவணநாதர். (தே-ர்) மின்னும்பிகை. (தீ-ம்) வைகை. ஞா-உ, நா-க, சு-க. புராணமும், உலாவுமுடையது. R-ஸ்டேஷன்

8. **திருக்கானப்பேர்** — (காளையார் கோயில்) கௌண்டில்யருஷி முதலியோர் பூசித்த தலம். சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குக் காளையுருக்காட்டிய தலம். சூர்யன் ரத்னங்கொண்டு பூசித்த தலம். (சு-ர்) கானக்காளையீசுரர். (தே-ர்) மகமாயியம்மை. (தீ-ம்) இடபதீர்த்தம். ஞா-க, சு-க. காட்டரசன் கோட்டை ஸ்டேஷனிலிருந்து 15-மைல்.

9. **திருஆடானை** — வசுமுனிவர், சத்த கன்னியர் பூசித்த தலம். (சு-ர்) ஆதிரத்ந நாயகர். (தே-ர்) அம்பரயிரவல்லியம்மை. (தீ-ம்) இரத்நதீர்த்தம். பிருகு முனிவர் துருவாசரை மரியாதை செய்யாமையா லடைந்த ஆட்டுத்தலையும் ஆனையுடலும் பெற்ற சாபம் நிவாரணமான தலம். ஞா-க. மேற்கூறிய கானப்பேருக்கு (கி) 21-மைல். R-காரைக்குடி ஸ்டேஷனிலிருந்து 38மைல்.

10. **திருப்புனவாயில்** — சதுர்வேதங்கள் பூசித்த தலம். (சு-ர்) திருப்புனவாயிலீசுரர். (தே-ர்) பரங்கருணைநாயகி. (தீ-ம்) சங்கதீர்த்தம். ஞா-க, சு-க. திருஆடானையிலிருந்து வடக்கு 12-மைல். R-அறந்தாங்கியிலிருந்து 28-மைல்.

11. **திருராமேச்வரம்** — இராமர், லக்ஷ்மணர், அனுமான், அகஸ்தியர், முதலியோர் பூசித்துப் பிரமகத்தி முதலிய பாவங்கள் நீங்கப்பெற்ற தலம். குணநிதி பாண்டியன் மகளாகிய இலக்குமிதேவியை மாதவன் களவாக மணந்து சேதுமாதவராக அமர்ந்த தலம். ஞா-உ,நா-க. நிரம்பவழகிய தேசிகர் பாடிய சேதுபுராண முடையது. பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் பாடிய தேவையுலா உடையது. ரயில்வே ஸ்டேஷன்.

12. **திருச்சுழியல்** — உமையும், சதானந்தரும் பூசித்த தலம். (சு-ர்) திருமேனிநாதர். (தே-ர்) துணைமாலையம்மை. (தீ-ம்) கற்றுணைதீர்த்தம். சு-க. புராணமுடையது. திருச்சுழியல் வெண்பா அந்தாதியுடையது. R-விருது நகரி லிருந்து (வ-கி) 19-மைல். திருப்பூவணத்திருந்து (தெ) 12-கடிகையில்.

13. **திருஉத்தரகோசமங்கை** — சாண்டில்யருஷி,கங்கை முதலியோர் பூசித்த தலம், மாணிக்கவாசக சுவாமிகளுக்குச் சிவபெருமான் தரிசனம் கொடுத்தருளிய தலம். (சு-ர்) உத்தரகோசமங்கைநாதர். (தே-ர்) உத்தரகோசமங்கையம்மை. (தீ-ம்) சிவகங்கை. புராணமுடையது.

14. **திருநெல்வேலி** — பஞ்சகாலத்து ஓர் அடியவர் நிவேதனத்துக்கு உலர்த்திய நெல்லை வெள்ளங்கொண்டு செல்லாமல் வேலிசெய்த தலம். பல அற்புதங்கள் நடத்தியருளிய தலம். (சு-ர்) நெல்வேலி நாதர். (தே-ர்) காந்திமதியம்மை. (தீ-ம்) தாம்பிரவர்ணிதீர்த்தம். ஞா-க. புராணமுண்டு; நெல்லையந்தாதி, நெல்லைச்சிலேடை வெண்பா முதலியன உண்டு. R-ஸ்டேஷன்.

15. **திருக்குற்றலம்** — புஷ்பகந்தர், கவுற்சனர் முதலியோர் பூசித்த தலம். அகஸ்தியர் இத்தலத்துக்கு வருகையில் இத்தலம் வைணவத்தலமாயிருந்தது உணராது உட்சென்று வைணவராற் றடையுண்டு வைணவவுருத்தாங்கிச்சென்று பெருமாளைச் சிவமூர்த்தியாக்கிய தலம். (சு-ர்) குற்றாலநாதர். (தே-ர்) குழல்வாய்மொழியம்மை. (தீ-ம்) சித்திரநதி முதலிய பல தீர்த்தங்கள். ஞா-உ. புராணமும், குறவஞ்சியு முடையது. R-தென்காசி ரயில் ஸ்டேஷனிலிருந்து (மே) 3½-மைல்.

பாண்டிநாடு முற்றும்

## ஈழநாடு

1. **திருக்கோணமலை** — (சு - ர்) கோணேச்வரர். (தே-ர்) மாதுமையம்மை. திருக்கைலாயக் கொடுமுடிகளில் ஒன்று. ஞா-க. P.-சிலோன் ரயிலில் திருக்கணுமலை ஸ்டேஷன்.

2. **திருக்கேதீச்வரம்** — (சு-ர்) கேதீச்சுரர். (தே - ர்) கௌரியம்பிகை. (தீ - ம்) கௌரிதீர்த்தம். ஞா-க, சு-க. R-ஸிலோன் ரயில்வேயில் திருக்கேஸ்வரம் ஸ்டேஷன்.

ஈழநாடு முற்றும்.

## கொங்குநாடு

1. **திருவெஞ்சமாகூடல்** — வெஞ்சன் என்னும் அசுரன் பூசித்த தலம். இந்திரன் பூசித்த தலம். (சு-ர்) விகிர்தேசுரர். (தே-ர்) விகிர்தவல்லி. (தீ-ம்) வேகநதி. சு-க. கருஆருக்கு (தெ) 12-மைல்.

2. **திருக்கருவூர்த் திருவாநிலை**—பிரமன் நித்திரைசெய்த காலையில் காமதேனு சிருட்டிக்க வரம்பெற்ற தலம். கருவூர்த்தேவர் பல அற்புதங்கள் நடத்தி முத்திபெற்ற தலம். எறிபத்த, நாயனர் புகழ்ச்சோழநாயனர் முதலியோர் முத்தியடைந்த தலம். (சு-ர்) பசுபதீச்சுரர். (தே-ர்) கிருபாநாயகி. (தீ-ம்) ஆம்பிராவதிநதி. ஞா-க. R-ஸ்டேஷன்

3. **திருப்பாண்டிக்கொடுமுடி** — இது திருக்கைலையின் கொடுமுடிகளி லொன்று. பிரமவிஷ்ணுக்கள் பூசித்த தலம் (சு-ர்) கொடுமுடிநாதர். (தே-ர்) பண்மொழியம்மை. (தீ-ம்) நொய்யல்நதி. ஞா-க, நா-க, சு-க. R-கொடுமுடி ஸ்டேஷன்.

4. **திருச்செங்குன்றூர்** — உமையம்மை பூசித்து அர்த்தபாகம் பெற்ற தலம். சிங்கவன்மன் புலியுரு நீங்கப்பெற்ற தலம். திருஞானசம்பந்தருடன் தொடர்ந்த சிவனடியவரை வருத்திய சுரத்தினைப் போக்கியருளிய தலம். (சு-ர்) அர்த்தநாரீசுரர். (தே-ர்) பாகம்பிரியாளம்மை. (தீ-ம்) பிரமதீர்த்தம். ஞா-க. குன்றுதோறாடல்களில் ஒன்று. திருநணுவிற்கு 10-கடிகையிலிருக்கிறது.

5. **திருநணு**—பராசரர் முதலிய அநேக ருஷிகளும் தேவரும் பூசித்த தலம். (சு-ர்) சங்கமேசுவரர். (தே-ர்) வேதாம்பிகை. (தீ-ம்) காவிரி, பவாநி, அமிர்தசிரசு முதலிய தீர்த்தசங்கமமாகிய திருவேணி சங்கமம். ஞா-க. ஈரோட் ஸ்டேஷனுக்கு (வட) 8½-மைல்.

6. **திருமுருகன்பூண்டி** — முருகக்கடவுள் பூசித்த தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் பெற்ற பொருளைப் பரிப்பித்த தலம். (சு-ர்) முருகநாதர். (தே-ர்) முயங்குபூண்முலையம்மை. (தீ-ம்) முருகதீர்த்தம். சு-க. ஈரோட் வழி திருப்பூர்ஸ்டேஷனிலிருந்து (வட) அவநாசிவழி 5-மைல் இருக்கிறது.

7. **திருப்புக்கொளியூர்** — (அவிநாசி) பிராட்டியார், பிரமன் முதலியோர் பூசித்த தலம். ஒரு கற்பத்தில் பிரமவிஷ்ணுக்களிறைவனிடத்து ஒடுங்கிய தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலையுண்ட பிள்ளையை வருவித்த தலம். இதற்கு தக்ஷிணகாசி யெனவும் பெயர் (சு-ர்) அவிநாசியீச்சுரர். (தே-ர்) பெருங்கருணையம்மை. சு-க. திருப்பூருக்கு அடுத்த ஸ்டேஷன் மங்கலத்தி லிறங்கினால் 5-மைல். ஆக கொங்குநாடு 7.

கொங்குநாடு முற்றும்.

## மலைநாடு

1. **திருவஞ்சைக்களம்** — பரசுராமன் தாயைக் கொன்ற பழி நீங்கப் பூசித்த தலம். சேரமான் பெருமாணயனர் திருப்பணி செய்த தலம். சுந்தரமூர்த்திசுவாமிகளும், சேரமான் பெருமாணயனரும் கைலையை யடைந்த தலம். (சு-ர்) அஞ்சைக்களத்தீசர். (தே-ர்) உமையம்மை. (தீ-ம்) அலைவாய்த்தீர்த்தம். சென்னைக்கு 360-மைலிலுள்ள சோரனூர் ஸ்டேஷனிலிருந்து (35) மைல் சென்று இருஞாலக்கடை ஸ்டேஷனை யடைந்து மேற்கே 4-மைல் சென்றால் இத்தலம்.

**சுசீந்திரம்** — (சு-ர்) தாணுமாலயன். (தே-ர்) உமாதேவி. (தீ-ம்) நெய்யாறு. திரிமூர்த்திகளு மெழுந்தருளி யிருக்குந் தலம்.

**கன்னியாகுமரி**—(தே-ர்) குமரியம்மை. சத்திக்ஷேத்திரம். பரசுராமர் பூசித்த தலம்.

மலைநாடு முற்றும்.

## துளுநாடு

**திருக்கோகர்ணம் முன்னர் கூறியுள்ளது.**

**அட்டவீரட்டம்** — (க) திருக்கண்டியூர். (உ) திருவதிகை. (ந) திருக்கோவலூர். (ச) திருப்பறியல். (ரு) திருவிற்குடி. (சு) திருவழுவூர். (எ) திருக்கொறுக்கை. (அ) திருக்கடவூர். பூமன் றிருக்கண்டி யந்தகன் கோவல் புரந்திகை, மாமன் பறியல் சலந்தரன் விற்

குடி மாவழூர், காமன் கொறுக்கை நமன் கட ஆரிந்தக் காசினிக்குள், தேமன்னு கொன் றைச் சடையான் பொருதிட்ட சேவகமே.

**சத்தவிடங்கத்தலம்** — (க) திருவாரூர். (உ) நாகைப்பட்டினம். (ந) திருநள்ளாறு. (ச) திருமறைக்காடு. (ரு) திருக்காராயில். (சு) திருவாய்மூர். (எ) திருக்குவளை. சீரார் திருவாரூர் தென்னாகை நள்ளாறு, காரார் மறைக்காடு-காராயல், ஒத்த திரு வாய்மூ ருவக்கதிருக் கோளிலி, சத்த விடங்கத் தலம்.

**பஞ்சபூதத்தலம்** — (க) திருவாரூர், திருக்காஞ்சி. (உ) திவானைக்கா. (ந) திருவண்ணாமலை. (ச) திருக்காளத்தி. (ரு) திருத்தில்லை.

**தொண்டைநாட்டுள்**—(குமாரக்கடவுள்) எழுந்தருளியிருக்குந் தலங்கள்.

1. **செருத்தணி** — (திருத்தணிகை) (சுவாமிபெயர்) தணிகாசலபதி. குமாரக் கடவுள் சூரனுடன் செருப்புரிந்து அமைந்திருந்த தலம். திருப்புகழ்பெற்ற தலம்.

2. **திருப்போரூர்** — (சு-ர்) சுப்பிரமணியர். அநேக சித்தர் முத்தியடைந்த தலம். (சிதம்பரசுவாமிகள் சமாதிபெற்ற தலம்.)

**நடுநாட்டுள்** — (மயிலம்) இது குமாரக் கடவுள் மலைமீ தெழுந்தருளியிருக்குந் தலம். பழையபிரதிட்டை. சிவஞான பாலையரால் தாபிக்கப்பட்டது.

**சோழநாட்டுள்**—திருவேரகம். (சுவாமிநாதக்கடவுள்) பிரமதேவரைச் சிறையிடுவித்து இறைவனுக்குப் பிரணவப் பொருள் கூறியருளிய தலம். இது சுவாமிமலை என்றும் சொல்லப்படும்.

**ஈழநாட்டுள்** — கதிர்காமம். (கதிர்காமவேலர்) அயிராவதம் பூசித்த தலம். இக் கலியுகத்து அநேக அற்புதங்கள் நடக்குந் தலம்.

**பாண்டிநாட்டுள்** — திருப்பரங்கிரி. இது குமாரக்கடவுள் விண்குடி யேற்றிய பொழுது இந்திரன் தெய்வயானையம்மையைத் திருமணஞ்செய்வித்த தலம்.

2. **திருச்செந்தூர்** — (சீரலைவாய்) குமாரக்கடவுள் வள்ளிநாய்ச்சியாரைத் திருமணங் கொண் டெழுந்தருளியிருந்த தலம்.

3. **திருவள்ளியூர்** — வள்ளியம்மையார் குமாரக்கடவுளைக்கண்டு நாணி யொருசிறை யொதுங்கப்பெற்ற தலம்.

4. **திருவாவினன்குடி**—இலக்ஷ்மி, சூரியன், பசு முதலியோர் பூசித்த தலம். பழனிக்கு அடிவாரத்திலுள்ளது.

5. **திருப்பழனிமலை** — மாம்பழத்தின் பொருட்டுப் பிணங்கிய குமாரக்கடவுளை இறைவன் பிணக்கந்தீர்த்த தலம்.

**கொங்குநாட்டுள்** — 1. வெண்ணெய் மலை. முருகப்பெருமான் எழுந்தருளியிருக்குந்தலம்.

2. **சிவமலை** — முருகவேள் குன்று.
3. **சென்னிமலை**—முருகவேள் குன்று.
4. **மருதமலை** — முருகவேள் குன்று.

சிவக்ஷேத்ரமான்மியம் முற்றிற்று

சுபம்! சுபம்!!

ஸ்ரீ:

ஸ்ரீராமஜெயம்

# விஷ்ணுத்தலமான்மிய சங்கிரகம்.

## ஆழ்வார்கள் மங்களாசாஸநம் பெற்றவை.

### திருநாடு.

**ஸ்ரீ வைகுண்டம்** — பரமபதநாதன், பெரிய பிராட்டி, அநந்தமய விமானம், விரசாநதி தீர்த்தம், கூவிள விருக்ஷம், வீற்றிருந்த திருக்கோலம், தெற்கே திருமுக மண்டலம், அநந்தகருட விஷ்வக்சேநர், நித்யசூரிகள் முதலியோர்க்குப் பிரத்யக்ஷம். ஆழ்வார்கள் அனைவராலும் மங்களாசாசனம் பெற்றது.

### வடநாட்டுத்திருப்பதிகள்

1. **திருப்பாற்கடல்** — (பெருமாள்திருநாமம்) க்ஷிராப்திநாதன். (பிராட்டி திருநாமம்) கடல்மகள்நாய்ச்சியார். (விமானம்) அஷ்டாங்கவிமானம். (தீர்த்தம்) அமுததீர்த்தம். (திருமுகமண்டலம்) தெற்கே புஜங்க சயனம் விதிருத்ரர்களுக்குப் பிரத்தியக்ஷம்.

2. **திருச்சாளக்கிராமம்** — (பெ-ம்) ஸ்ரீமூர்த்திப்பெருமாள். (பி-ம்) ஸ்ரீதேவி நாய்ச்சியார். (வி-ம்) ககனவிமானம். (தீ-ம்) சக்கர தீர்த்தம். நின்றதிருக்கோலம். உருத்திரன் பிரமன் முதலியோர்க்குப் பிரத்தியக்ஷம். இத்தலத்தில் பெருகும் கண்டகி நதியில் பாணலிங்கங்களும், சாளக்கிராமங்களும் அகப்படுகின்றன.

3. **திருவதரியாச்சிரமம்** — (பெ-ம்) பதரிநாராயணன். (பி-ம்) அரவிந்தவல்லி. (வி-ம்) தத்வகாஞ்சனவிமானம். (தீ-ம்) தத்வ குண்டதீர்த்தம். இலந்தைவிருக்ஷம். ஆறுமாதங் தேவர்களாலும் மற்றை யாறுமாதம் மனிதராலும் பூசிக்கப்படுங் தலம். இத்தலத்தில் வெந்நீரூற்றுண்டு. நரனுக்கு ஞானமுபதேசித்த தலம். வீற்றிருந்த திருக்கோலம்.

4. **திருவயோத்தி**—(பெ-ம்) சக்ரவர்த்தி திருமகன். (பி-ம்) ஜானகிதேவி. (வி-ம்) புஷ்கரவிமானம். (தீ-ம்) சரயுநதி. தேவர்களுக்குப் பிரத்யக்ஷம். வீற்றிருந்த திருக்கோலம்.

5. **திருக்கங்கைக்கரைக் கண்டம்** — (காசி). (பெ-ம்) நீலமேகப்பெருமாள். (பி-ம்) பங்கயத்தாள். (வீ-ம்) மங்களவிமானம் (தீ-ம்). மங்களதீர்த்தம். பரத்துவாஜருஷிக்குப் பிரத்தியக்ஷம். (நின்றதிருக்கோலம்.)

6. **திருநைமிசாரண்யம்** — (பெ-ம்) தேவராஜன். (பி-ம்) ஸ்ரீ ஹரிலக்ஷ்மி. (வி-ம்) ஸ்ரீ ஹரிவிமானம். (தீ-ம்) திவ்யகாந்திதீர்த்தம். இந்திரன் சுமதி முதலியோர்க்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்.)

7. **திருவாய்ப்பாடி** — (பெ-ம்) நவமோகன கிருஷ்ணர். (பி-ம்) உருக்குமணிப் பிராட்டி. (வி-ம்) ஏமகூடவிமானம். (தீ-ம்) யமுனாநதி. நந்தகோபருக்கும், பாண்டவருக்கும் பிரத்யக்ஷம். (நி-ம்.)

---

**பெருமாள் திருநாமம்** (பெ - ம்.)
**பிராட்டியார் திருநாமம்** (பி - ம்.)
**தீர்த்தம்** (தீ - ம்.)
**விமானம்** (வி - ம்.)
**திருமுகமண்டலம்** (தி - ம்.)
**நின்ற திருக்கோலம்** (நி - ம்.)
**வீற்றிருந்த திருக்கோலம்** (வீ - ம்.)
**கிடந்த திருக்கோலம்** (கி - ம்.)

இக் குறிப்புள்ளன அப் பொருள்கள் பயக்கும்.

8. **திருவடமதுரை** — (பெ-ம்) கோபிகாரமணன். (பி-ம்) சத்தியபாமை, ருக்மணிப் பிராட்டியார். (வி-ம்) பத்ரவிமானம் (தீ-ம்) இந்திரதீர்த்தம், கோவர்த்தனதீர்த்தம், யமுனை. இந்திராதிதேவர்களுக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

9. **திருப்பிருதி** — (பெ-ம்) பரமபுருஷன். (பி-ம்) பரிமளவல்லி நாய்ச்சியார். (வி-ம்) கோவர்த்தனவிமானம். (தீ-ம்) கோவர்த்தனதீர்த்தம். பார்வதிப் பிராட்டிக்குப் பிரத்தியக்ஷம். (தி-ம்) புஜங்கசயனம்.

10. **திருச்சிங்கவேள்குன்றம்** — (அகோபிலம்). (பெ-ம்) நரசிங்கப்பெருமாள். (பி-ம்) இலக்ஷ்மிநாய்ச்சியார். (வி-ம்) குகைவிமானம். (தீ-ம்) நரசிங்க தீர்த்தம். பிரகலாதனுக்கு அருள்செய்த தலம். (வீ-ம்.)

11. **திருத்துவாரகை** — (பெ-ம்) கல்யாணநாராயணர். (பி-ம்) கல்யாணநாய்ச்சியார். ஏமகூடவிமானம்.(தீ-ம்) கோமதி. பாண்டவருக்குப் பிரத்தியக்ஷம். (வீ-ம்.)

12. **திருமலை** — (திருப்பதி). (திருவேங்கடம்) (பெ-ம்) ஸ்ரீ நிவாசன். (பி-ம்) அலர்மேன்மங்கைத்தாய். (வி-ம்) ஆனந்த நிலயவிமானம். (தீ-ம்) சுவாமிபுஷ்கரணி முதலிய பதினெட்டு தீர்த்தங்கள், குமாரதாமரை, தும்புருதீர்த்தம், நாரததீர்த்தம், ஆகாசகங்கை, கிருஷ்ணதீர்த்தம், சக்கரதீர்த்தம், பாண்டவதீர்த்தம், கபிலதீர்த்தம், சப்தருஷிதீர்த்தம், இந்திரதீர்த்தம், விஷ்வக்சேனதீர்த்தம், பஞ்சாயுத தீர்த்தம், அக்னிகுண்டதீர்த்தம், பிரமதீர்த்தம், பாபவிநாசனி தீர்த்தம், தொட்டிதீர்த்தம், சுவாமிபுஷ்கரணி, கோகர்ப்பம். தேவருஷிகளுக்கும், தொண்டமானுக்கும் பிரத்தியக்ஷம். (நி-ம்.)

## தோண்டைநாட்டுத் திருப்பதிகள்

1. **திருக்காஞ்சி அத்திகிரிமேல்வரை** — (பெ-ம்) வரதராஜப்பெருமாள். (பி-ம்) பெருந்தேவித்தாயார்- (வி-ம்) புண்யகோடிவிமானம். (தீ-ம்) அனந்தசரசுமுதலிய எழு தீர்த்தங்கள். பிரமன், பிருகு, நாரதர்,. அநந்தன், கஜேந்திரன் முதலியவர்களுக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

**அத்திகிரியின்றாழ்வரை** — (பெ-ம்) அழகியசிங்கப்பெருமாள். (பி - ம்) அரிதேவித்தாயார். (தீ-ம்) வேதவல்லிதீர்த்தம். பிரகஸ்பதிக்குப் பிரத்தியக்ஷம். (வீ-ம்.)

2. **திருவட்டபுயங்கம்** — (காஞ்சிபுரம்) (பெ-ம்) ஆதிகேசவப்பெருமாள். (பி-ம்) அலர்மேன் மங்கை காய்ச்சியார். (வி-ம்) ககனக்ருதிவிமானம். (தீ-ம்) கஜேந்திர புஷ்கரணி. சரபனுடன் யுத்தஞ்செய்ய அட்டபுயங்களுடன் நின்றவர். கஜேந்திரனுக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்.)

3. **திருத்தண்கா** — (காஞ்சிபுரம்) (பெ-ம்) தீபப்பிரகாசர். (பி-ம்) மரகதவல்லித்தாயார். (வி-ம்) ஸ்ரீ கரவிமானம். (தீ-ம்) சாஸ்வதிதீர்த்தம். சரஸ்வதிக்குப் பிரத்தியக்ஷம் (நி-ம்.)

4. **திருவேளுக்கை** — (பெ-ம்) முகுந்தவரதப்பெருமாள். (பி-ம்) வேளுக்கை வல்லி நாய்ச்சியார். (வி-ம்) ஏமவிமானம். (தீ-ம்) கதம்பரசு. முசுகுந்தன் முதலியோருக்குப் பிரத்தியக்ஷம். (காஞ்சிபுரத்திலுள்ள தலம்). (நி-ம்.)

5. **திருப்பாடகம்** — (பெ-ம்) பாண்டவர் தூதப்பெருமாள் (பி-ம்) உருக்குமணி, சத்யபாமை. (வி-ம்) பத்ரவிமானம். (தீ-ம்) மச்சதீர்த்தம். அரிதருஷி, அருச்சுனன் முதலியோர்க்குப் பிரத்தியக்ஷம். (காஞ்சிபுரத்திலுள்ள தலம்). (வீ-ம்.)

6. **திருநீரகம்** — (பெ-ம்) ஜெகதீச்வரபெருமாள். (பி-ம்) நிலமங்கைவல்லி. (வி-ம்) ஜெகதீச்வரவிமானம். (தீ-ம்) அக்ரூரதீர்த்தம். அக்ரூரருக்குப் பிரத்யக்ஷம். (காஞ்சிபுரத்திலுள்ள தலம்). (நி-ம்.)

7. **திருநிலாத்திங்கட்டுண்டம்**—(பெ-ம்) நிலாத்திங்கட்டுண்டத்தான். (பி-ம்) நேரொருவரில்லாவல்லி. (வி-ம்) புருஷசூக்தவிமானம். (தீ-ம்) சந்திரபுஷ்கரணி. ருத்ரமூர்த்திக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்.)

8. **திருவூரகம்** — (பெ-ம்) திருவிக்ரமர். (பி - ம்) அமுதவல்லிநாய்ச்சியார். (வி - ம்) சாரஸ்ரீகர விமானம். (தீ-ம்) சேஷதீர்த்தம். ஆதிசேஷனுக்குப் பிரத்தியக்ஷம். (காஞ்சிபுரம்). (நி-ம்.)

9. **திருவெஃகா** — (பெ-ம்) சொன்னவண்ணஞ் செய்தபெருமாள் (பி-ம்) கோமளவல்லி. (வி-ம்) வேதசாரவிமானம். (தீ-ம்) பொய்கைபுஷ்கரணி. சரஸ்வதிக்குப் பிரத்தியக்ஷம். பொய்கையாழ்வா ரவதரித்த தலம். (காஞ்சிபுரம்). புஜங்கசயனம்.

10. **திருக்காரகம்** — (பெ-ம்) கருணைகரப்பெருமாள். (பி - ம்) பத்மாமணிநாய்ச்சியார். (வி - ம்) வாமனவிமானம். (தீ - ம்)

அக்ராயதீர்த்தம். காரகருஷிக்குப் பிரத்தியக்ஷம். (காஞ்சீபுரம்). (நி-ம்.)

11. **திருக்கார்வனம்** — (பெ-ம்) நவநீதசோரன். (பி-ம்) கமலவல்லி. (வி-ம்) புட்களவிமானம். (தீ-ம்) கௌரிதடாகம். காமாக்ஷியம்மனுக்குப் பிரத்தியக்ஷம். (காஞ்சீபுரம்). (நி-ம்.)

12. **திருக்கள்வனூர்** — (பெ-ம்) ஆதிவராகப்பெருமாள். (பி-ம்) அபயநாயகி நாய்ச்சியார். (வி-ம்) வாமனவிமானம். (தீ-ம்) நித்யபுஷ்கரணி. அசுவத்தநாராயணனுக்குப் பிரத்தியக்ஷம். (காஞ்சீபுரம்). (நி-ம்.)

13. **திருப்பரமேச்சுரவிண்ணகரம்** — (பெ-ம்) பரமபதநாதன். (பி-ம்) வைகுண்டவல்லிநாய்ச்சியார். (வி-ம்) குமுதவிமானம். (தீ-ம்) அயிரம்மதிதீர்த்தம். பல்லவனுக்குப் பிரத்தியக்ஷம். (காஞ்சீபுரம்). (நி-ம்.)

14. **திருப்பவழவண்ணம்** — (பெ-ம்) பவழவண்ணப்பெருமாள். (பி-ம்) பவழவல்லி நாய்ச்சியார். (வி-ம்) பிரவாள விமானம். (தீ-ம்) சக்ரதீர்த்தம். அச்வனி தேவர்களுக்குப் பிரத்தியக்ஷம். (காஞ்சீபுரம்). (நி-ம்.)

15. **திருப்புட்குழி** — (பெ-ம்) விஜயராகவப் பெருமாள். (பி-ம்) மரகதவல்லி நாய்ச்சியார். (வி-ம்) விஜயகோடி விமானம். (தீ-ம்) ஜடாயுதீர்த்தம். ஜடாயுவை இராமர் தகனஞ்செய்துமுத்திகொடுத்த தலம். (வீ-ம்).

16. **திருக்கடிகை** — (சோளங்கிபுரம்) (பெ-ம்) யோகநரசிங்க சுவாமி. (பி-ம்) அமிர்தவல்லி நாய்ச்சியார். (வி-ம்) சிங்ககோஷ்டத்தி விமானம். (தீ-ம்) அனுமதீர்த்த முதலிய (உஉ) தீர்த்தங்கள். பிரகலாதாழ்வானுக்குப் பிரத்தியக்ஷம். (வீ-ம்).

17. **திரு எவ்வளூர்** — (திருவெள்ளூர்) (பெ-ம்) வீரராகவப் பெருமாள். (பி-ம்) கனகவல்லித் தாயார். (வி-ம்) விஜயகோடி விமானம். (தீ-ம்) இருத்தாப நாசினி தீர்த்தம். பிரத்யும்னன், கௌசிகன், தருமசேனன், சாலிகோத்ரமுனி முதலியவர்களுக்குப் பிரத்தியக்ஷம். (புஜங்கசயனம்).

18. **திருநின்றவூர்** — (பெ-ம்) பக்தவச்சலப்பெருமாள். (பி-ம்) என்னைப்பெற்ற தாயார். (வி-ம்) உத்பல விமானம். (தீ-ம்) வருணபுட்கரணி. வருணன், தருமத்துவசன், புரந்தரன் என்பவருக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்.)

19. **திருவல்லிக்கேணி**—(பெ-ம்) மன்னாதன், வரதராஜன், நரசிங்கன், ஸ்ரீராமன், பார்த்தசாரதி முதலிய ஐந்து திருப்பதிகள் உள்ள தலம். (பி-ம்) வேதவல்லி, பெருந்தேவித்தாயார், இலக்ஷுமிதேவி, சீதாபிராட்டியார், உருக்மணி தேவியார். (வி-ம்) சேஷவிமானம். (தீ-ம்) கைரவணி தீர்த்தம், இலக்ஷுமிதேவி அல்லியிலவதரித்த க்ஷேத்ரம். அத்ரி, பிருகு, விகடன், ஆத்ரேயருஷி, சுமதி, சர்ப்பரோமன், முத்கலமுனி முதலியோர்க்குப் பிரத்தியக்ஷம். இதற்கருகிலிருக்கும் திருமலையில் பேயாழ்வார் திருவவதாரம். (நி-ம்.)

20. **திருவிடவெந்தை** — (பெ-ம்) நித்யகல்யாணப் பெருமாள். (பி-ம்) கோமளவல்லி நாய்ச்சியார். (வி-ம்) கல்யாணவிமானம். (தீ-ம்) கல்யாணதீர்த்தம், மகாபலி பேறடைந்த தலம். காலவமுனி தன் குமரியர் முந்நூற்று அறுபதின்மரை நாடோறும் ஒவ்வொருவராக மணஞ்செய்து கொடுக்கப்பெற்ற க்ஷேத்ரம். (நி-ம்.)

21. **திருநீர்மலை** — (பெ-ம்) நீலமுகில் வண்ணர், ஸ்ரீ ரங்கநாதர், நீர்வண்ணர், (பி-ம்) அணிமாமலர் மங்கை, மணிமாமடந்தை, (வி-ம்) தோதகிரி விமானம். (தீ-ம்) மணிகர்ணிகா தீர்த்தம். தொண்டைமான் சக்கிரவர்த்திக்கும் பிருகு ருஷிக்கும் பிரத்தியக்ஷம். (கிடந்த திருக்கோலம்.)

22. **திருக்கடன்மல்லை** —(மாவலிபுரம்) (பெ-ம்) நித்யதலச் சயனத்துறைவர். (பி-ம்) நிலமங்கை நாய்ச்சியார். (வி-ம்) ககனாகருதி விமானம் (தீ-ம்) கருடநதி தீர்த்தம். புண்டரீக முனிக்குப் பிரத்தியக்ஷம். பூதத்தாழ்வார் அவதரித்த தலம். (புஜங்கசயனம்.)

## மகதநாடு அல்லது நடுநாடு.

1. **திருக்கோவலூர்** — (பெ-ம்) தேகளீசன், ஆயனார், திருவிக்கிரமன். (பி-ம்) பூங்கோயில் நாய்ச்சியார், பூகவல்லித் தாயார். (வி-ம்) ஸ்ரீதர விமானம். (தீ-ம்) ஸ்ரீ கரபுஷ்கரணி. மிருகண்டருஷிக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்.)

2. **திருவயிந்திரபுரம்**—(பெ-ம்) தெய்வநாயகப் பெருமாள். (பி-ம்) செங்கமல வல்லித் தேவி. (வி-ம்) சந்திரவிமானம். (தீ-ம்) சேஷதீர்த்தம், பிரமதீர்த்தம், கருடநதி, சந்திரனுக்கும் கருடனுக்கும் பிரத்தியக்ஷம். இவ்வாலயத்தை யிடிக்க வந்த சோழனுக்குப் பெருமாள் திரிநேத்ரமும் சூலமுங்காட்டித் தரிசனந்தந்தனுக்கிரகித்தார். (நி-ம்.)

## சோழநாடு
## காவிரியின் வடகரை.

1. **திருச்சித்ரகூடம்** — (சிதம்பரம்) (பெ-ம்) தில்லை கோவிந்தராஜப் பெருமாள். (பி-ம்) புண்டரீகவல்லி நாய்ச்சியார். (வி-ம்) சாத்வீக விமானம். (தீ-ம்) புண்டரீகசரசு. தில்லை மூவாயிரவர்க்கும் கண்ணுவ ருஷிக்கும் பிரத்யக்ஷம். (கிடந்த திருக்கோலம்).

2. **காழிச்சீராமவிண்ணகரம்** — (சீர்காழி). (பெ-ம்) தாடாளர், திருவிக்கிரம நாராயணர். (பி-ம்) உலகநாயகி. (வி-ம்) புட்காவர்த்த விமானம். (தீ-ம்) சக்கரதீர்த்தம். அஷ்டகோணருஷிக்குப் பிரத்தியக்ஷம்.(நி-ம்)

3. **திருமணிமாடக்கோயில்** — (பெ-ம்) நந்தாவிளக்குப் பெருமாள். (பி-ம்) அம்புஜவல்லி நாய்ச்சியார். (வி-ம்) பிரணவ விமானம். (தீ-ம்) இந்திர புஷ்கரணி. ஏகாதச ருத்ரருக்கும் இந்திராதியர்க்கும் பிரத்யக்ஷம்.

4. **திருவைகுந்தவிண்ணகரம்**--(பெ-ம்) வைகுந்தநாதன். (பி-ம்) வைகுந்தவல்லி நாய்ச்சியார். (வி-ம்) அனந்தசத்திய வர்த்தக விமானம். (தீ-ம்) லக்ஷ்மி புஷ்கரணி. உதங்கருக்குப் பிரத்யக்ஷம். (வீ-ம்)

5. **திருவரிமேய விண்ணகரம்** — (பெ-ம்) குடமாடியகூத்தப்பெருமாள். (பி-ம்) அமுதகடவல்லி நாய்ச்சியார். (வி-ம்) உதயசிருங்க விமானம். (தீ-ம்) கோடிதீர்த்தம். உதங்கருஷிக்குப் பிரத்யக்ஷம். (வீ-ம்)

6. **திருஅன்பில்** — (பெ-ம்) வடிவழகிய நம்பி. (பி-ம்) சௌந்தர்யவல்லி நாய்ச்சியார். (வி-ம்) தாரகவிமானம். (தீ-ம்) மண்டுக புஷ்கரணி. பிரமதேவருக்கும் வால்மீகருக்கும் பிரத்தியக்ஷம். புஜங்கசயனம்.

7. **திருச்செம்பொன்செய் கோவில்**— (பெ-ம்) பேரருளாளப் பெருமாள். (பி-ம்) அல்லிமாமலர் நாய்ச்சியார். (வி-ம்) கனக விமானம். (தீ-ம்) கனக தீர்த்தம். ஏகாதச ருத்ரர்களுக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

8. **திருவண்புருஷோத்தமம்**—(பெ-ம்) புருஷோத்தமப் பெருமாள். (பி-ம்) புருஷோத்தமவல்லி. (வி-ம்) சஞ்சீவிக்ரகவிமானம். (தீ-ம்) திருப்பாற்கடல் தீர்த்தம். (நி-ம்)

9. **திருநந்திபுர விண்ணகரம்**—(பெ-ம்) ஜகந்நாதன் விண்ணகரிப் பெருமாள். நாதநாதப் பெருமாள். (பி-ம்) செண்பகவல்லி நாய்ச்சியார், செங்கமல மடந்தை. (வி-ம்) மந்தார விமானம். (தீ-ம்) நந்திதீர்த்தம். (வீ-ம்.)

10. **திருத்தெற்றியம்பலம்** — (பெ-ம்) செங்கண்மால். (பி-ம்) செங்கமலவல்லி நாய்ச்சியார். (வி-ம்) வேதவிமானம். (தீ-ம்) சூரிய புஷ்கரணி. அநந்தனுக்கும் செங்கமலவல்லி நாய்ச்சியாருக்கும் பிரத்தியக்ஷம். (கி-ம்)

11. **திருமணிக்கூடம்**—(பெ-ம்) மணிக்கூடநாயகர், வரதன். (பி-ம்) மணிக்கூடவல்லி நாய்ச்சியார், திருமாமகள். (வி-ம்) கனகவிமானம். (தீ-ம்) சந்திர புஷ்கரணி. பெரிய திருவடிக்கும், சந்திரனுக்கும் பிரத்யக்ஷம். (நி-ம்)

12. **திருத்தேவனார்தொகை** —(பெ-ம்) மாதவப் பெருமாள். (பி-ம்) க்ஷீராப்திவல்லி நாய்ச்சியார். (வி-ம்) சோபனவிமானம். (தீ-ம்) தேவசபாபுஷ்கரணி. (நி-ம்)

13. **திருக்காவளம்பாடி**--(பெ-ம்) கோபாலகிருஷ்ணர். (பி-ம்) செங்கமலவல்லி நாய்ச்சியார். (வி-ம்) சுயம்புவிமானம். (தீ-ம்) தடமலர்ப்பொய்கை. சேனைமுதலியாருக்கும் மித்ர தேவருக்கும் பிரத்யக்ஷம். (நி-ம்)

14. **திருப்பார்த்தன்பள்ளி** — (பெ-ம்) பார்த்தசாரதி. (பி-ம்) திருமாமகள். (வி-ம்) நாராயணவிமானம். (தீ-ம்) சங்கு சரசு. பார்த்தனுக்கும் வருணனுக்கும் பிரத்யக்ஷம். (நி-ம்)

15. **திவாலித்திருநகரி** — (பெ-ம்) வயலாலி மணவாளன். (பி-ம்) அமுதகடவல்லி நாய்ச்சியார். (வி-ம்) அஷ்டாக்ஷர விமானம். (தீ-ம்) இலாட்சணி புஷ்கரணி. அலாதநி புஷ்கரணி. அலாதனி, கஞ்சமணி முதலியோர்க்குப் பிரத்தியக்ஷம். (வீ-ம்)

16. **திருவெள்ளக்குளம்**—(பெ-ம்) ஸ்ரீநிவாசன். (பி-ம்) நன்மலராள் நாய்ச்சியார். (வி-ம்) தத்வதோதக விமானம். (தீ-ம்) திருவெள்ளக்குளதீர்த்தம். சுவேதனுக்குப் பிரத்யக்ஷம். (நி-ம்)

17. **திருவிந்தளூர்** — (பெ-ம்) சுகந்தவனநாதர், மருவினிய மைந்தர். (பி-ம்) புண்டரீகவல்லி, சந்திரசாப விமோசன நாய்ச்சியார். (வி-ம்) வேதசக்ரவிமானம். (தீ-ம்) இந்து புஷ்கரணி. சந்திரனுக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

18. **திருவெள்ளியங்குடி** — (பெ-ம்) கோலவல்லிராமன். (பி-ம்) மரகதவல்லித் தாயார். (வி-ம்) புஷ்கலாவர்த்தக விமானம். (தீ-ம்) சுக்ரபுஷ்கரணி. சுக்ரன், பராசரர் முதலியோருக்குப் பிரத்தியக்ஷம். (கி-ம்)

19. **திருப்புள்ளம்பூதங்குடி**—(பெ-ம்) வல்வில்லிராமன். (பி-ம்) பொற்றாமரை

யாள். (வி-ம்) சோபனவிமானம். (தீ-ம்) கிருத்ரதீர்த்தம். கிருத்திர ராஜனுக்குப் பிரத்தியக்ஷம். (கி-ம்)

20. **திருவாதனூர்** — (பெ-ம்) ஆண்டளக்குமையன். (பி-ம்) ஸ்ரீரங்கநாயகி. (வி-ம்) பிரணவ விமானம். (தீ-ம்) சூரிய புஷ்கரணி. காமதேனுவுக்குப் பிரத்தியக்ஷம். (கி-ம்)

21. **திருக்கூடலூர்** — (பெ-ம்) வையங்காத்த பெருமாள். (பி-ம்) பத்மஜன நாய்ச்சியார். (வி-ம்) சுத்த தத்வ விமானம். (தீ-ம்) சக்ரதீர்த்தம். நந்தமகாமுனிக்குப் பிரத்யக்ஷம். (நி-ம்)

22. **திருக்கவித்தலம்**—(பெ-ம்) கஜேந்திரவரதர். (பி-ம்) இரமாமணி வல்லிநாய்ச்சியார். (வி-ம்) ககனக்ருதி விமானம். (தீ-ம்) கஜேந்திர புஷ்கரணி. கஜேந்திரனுக்கும் ஆஞ்சநேயருக்கும் பிரத்தியக்ஷம். (கி-ம்)

23. **திருப்பேர்நகர்** — (பெ-ம்) அப்பக்குடத்தான். (பி-ம்) கமலவல்லித்தாயார். (வி-ம்) இந்திரவிமானம். (தீ-ம்) இந்திரதீர்த்தம். (கி-ம்)

24. **திருவரங்கம்பெரியகோயில்**—ஸ்ரீரங்கநாதன், நம்பெருமாள். (பி-ம்) ஸ்ரீரங்கநாயகியார். (வி-ம்) பிரணவாக்ருதி விமானம். வேதசுருங்கம். புன்னைவிருக்ஷம். (தீ-ம்) காவிரிநதி, சந்திரபுஷ்கரணி முதலிய நவதீர்த்தங்கள். புஜங்கசயனம். நவதீர்த்தங்களாவன. சந்திரபுஷ்கரணி, வில்வதீர்த்தம், ஜம்புதீர்த்தம், அச்வதீர்த்தம், புன்னுகதீர்த்தம், வகுளதீர்த்தம், கதம்பதீர்த்தம், ஆம்பரதீர்த்தம், பலாசதீர்த்தம். சந்திரனுக்குச் சாபம்போக்கிய தலம். சுக்கிரன் பாபம் நீக்கிய தலம். ருத்ரன், இந்திரன், அக்னி, பிரகஸ்பதி, ஜநகன், சூரியன் முதலியோர் பூசித்துப் பேறடைந்த தலம். இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தி முதலில் பிரமனல் பூசிக்கப்பட்டுப் பின் இக்ஷுவாகு மகாராஜனல் அயோத்திக்குக் கொண்டு வரப்பட்டுப் பின் இராமமூர்த்தியால் விபீஷணழ்வானுக்குத்தர அவ்விபீஷணர் அவ்விக்ரகத்தினைத் தர்மவர்மன் கேட்டுக் கொண்டபடி உபயகாவிரிமத்தியில் பிரதிட்டை செய்து பின் அத்தருமவருமன் செய்வித்த சிறப்பு முதலிய முடிந்தபின் எடுக்கவாராமை கண்டு பெருமாளை வேண்ட, பெருமாள் 'எமக்கு இத்தலம் இரமணீயமாயிருக்கிறது. நீ வருடத்தொருமுறை நம்மைத் தரிசித்துச்செல்க' எனக் கட்டளையிட்ட வண்ணம் கேட்டு அவ்வகை ஆஞ்ஞை பெற்றுச் சென்றனர். இஃது சுயம்புத் தலம்.

25. **திருக்கரம்பனூர்** — (பெ-ம்) புருஷோத்தமன். (பி-ம்) பூர்வாதேவி. (வி-ம்) உத்யோகவிமானம். (தீ-ம்) கதம்பதீர்த்தம். கதம்ப மகருஷிக்கும் அநகர் முதலியோருக்கும் பிரத்யக்ஷம். (கி-ம்)

26. **திருவெள்ளறை** — (பெ-ம்) புண்டரீகாக்ஷன். (பி-ம்) பங்கயச்செல்வி நாய்ச்சியார். (வி-ம்) விமலாகரவிமானம். (தீ-ம்) குசதீர்த்தம். சிபிச் சக்ரவர்த்திக்கும் குச அஸ்த மகருஷிக்கும் பிரத்தியக்ஷம். (நி-ம்)

## காவிரியின் தென்கரை.

27. **திருஉறையூர்** — (பெ-ம்) அழகிய மணவாளப்பெருமாள். (பி-ம்.) வாசலக்ஷ்மி. (தீ-ம்) கல்யாணதீர்த்தம். தேவர்களுக்கும் ரவிதர்ம ராஜனுக்கும் பிரத்தியக்ஷம். (நி-ம்)

28. **திருத்தஞ்சைமாமணிக்கோயில்**— (பெ-ம்) நீலமேகப் பெருமாள். (பி-ம்) செங்கமலவல்லி. (வி-ம்) சௌந்தர்ய விமானம். (தீ-ம்) அமுததீர்த்தம். பராச முனிக்குப் பிரத்தியக்ஷம். (வீ-ம்)

29. **திருக்கண்டியூர்** — (பெ-ம்) அரன் சாபம்தீர்த்த பெருமாள். (பி-ம்) கமலமடந்தை நாய்ச்சியார். (வி-ம்) கமலாக்ருதி விமானம். (தீ-ம்) அமுததீர்த்தம். பைரவர் பிரம கபாலத்தை நீக்கிய தலம். அகத்தியருக்குப் பிரத்தியக்ஷம்.

30. **திருக்குடந்தை** — (பெ-ம்) ஆராவமுதர், சாரங்கபாணி. (பி-ம்) கோமளவல்லி. (வி-ம்) வைதிகவிமானம். (தீ-ம்) ஏமபுஷ்கரணி. ஏமமகருஷிக்குப் பிரத்தியக்ஷம். (கி-ம்)

31. **திருவழுந்தூர்** — (பெ-ம்) ஆமருவியப்பன். (பி-ம்) செங்கமலவல்லி. (வி-ம்) கருடவிமானம். (தீ-ம்) தரிசன புஷ்கரணி. தருமதேவதைக்குப் பிரத்தியக்ஷம் (நி-ம்)

32. **சிறுபுலியூர்**—(பெ-ம்) அருண்மாக்கடல். (பி-ம்) திருமாமகள் நாய்ச்சியார். (வி-ம்) நந்தவர்த்தன விமானம். (தீ-ம்) அநந்தசரசு. வியாக்ரமகருஷி வியாசருஷிகளுக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

33. **திருத்தலைச்சங்கநாண்மதியம்** — (பெ-ம்) நாண்மதியப் பெருமாள். (பி-ம்) தலைச்சங்க நாய்ச்சியார். (வி-ம்) சந்திரவிமானம். (தீ-ம்) சந்திரபுஷ்கரணி. தேவர்களுக்கும் சந்திரனுக்கும் பிரத்யக்ஷம். (நி-ம்)

34. **திருநறையூர்**—(பெ-ம்) வடிவழகிய நம்பி. (பி-ம்) நம்பிக்கைநாய்ச்சியார். (வி-ம்) ஸ்ரீநிவாசவிமானம். (தீ-ம்) மணிமுத்தாநதி. மேதவ முனிக்குப் பிரத்யக்ஷம். (நி-ம்)

35. **திருவிண்ணகரம்** — (பெ-ம்) உப்பிலியப்பன். (பி-ம்) பூமிதேவி நாய்ச்சியார். (வி-ம்) விஷ்ணுவிமானம். (தீ-ம்) ஆர்த்தி புஷ்கரணி. கருடாழ்வார் தருமதேவதைக்குப் பிரத்யக்ஷம். (நி-ம்)

36. **திருக்கண்ணபுரம்** — (பெ-ம்) சௌரிராஜப்பெருமாள். (பி-ம்) கண்ணபுரிநாயகி. (வி-ம்) உத்பலாவதகவிமானம். (தீ-ம்) நித்யபுஷ்கரணி. கண்ணுவருக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

37. **திருநாகை** — (பெ-ம்) சௌந்தரராஜப்பெருமாள். (பி-ம்) சௌந்தர்யவல்லி. (வி-ம்) சௌந்தர்யவிமானம். (தீ-ம்) சாரபுஷ்கரணி. நகராஜனுக்குப் பிரத்யக்ஷம். (நி-ம்)

38. **திருக்கண்ணங்குடி**—(பெ-ம்) சியாமளமேனிப்பெருமாள், (பி-ம்) அரவிந்தவல்லிநாய்ச்சியார். (வி-ம்) உத்பலவிமானம். (தீ-ம்) ஸ்ரீவணபுஷ்கரணி. பிருகுசைத்தியருக்கும் கௌதம முனிவருக்கும் பிரத்யக்ஷம். (நி-ம்)

39. **திருக்கண்ணமங்கை** — (பெ-ம்) பக்தவத்சலப்பெருமாள். (பி-ம்) அபிஷேகவல்லித்தாயார். (வி-ம்) உத்பல விமானம். (தீ-ம்) தரிசனபுஷ்கரணி. வருணனுக்குப் பிரத்யக்ஷம். (நி-ம்)

40. **திருச்சேறை** — (பெ-ம்) சாரநாதர். (பி-ம், சாரநாயகி. (வி-ம்) சாரவிமானம். (தீ-ம்) சாரபுஷ்கரணி. காவிரிக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

## பாண்டிநாட்டுத்திருப்பதிகள்

1. **திருமெய்** — (பெ-ம்) சத்தியகிரிநாதன். (பி-ம்) உய்யவந்தாள். (வி-ம்) சத்தியகிரிவிமானம். (தீ-ம்) சத்யதீர்த்தம். சத்யதேவதைக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

2. **திருக்கோட்டியூர்** — (பெ-ம்) சௌமியநாராயணர். (பி-ம்) சௌந்தர்யநாயகி. (வி-ம்) அஷ்டாங்கவிமானம். (தீ-ம்) தேவபுஷ்கரணி. கதம்பருஷிக்கும் இந்திரனுக்கும் பிரத்யக்ஷம். நின்று மிருந்துங் கிடந்து மிருந்ததலம்.

3. **திருப்புல்லாணி** — (பெ-ம்) தெய்வச்சிலையார். (பி-ம்) தெய்வச்சிலைநாய்ச்சியார். (வி-ம்) கல்யாணவிமானம். (தீ-ம்) சக்ரதீர்த்தம். தர்ப்பசயனம். (நி-ம்)

4. **திருமாலிருஞ்சோலை** — (பெ-ம்) அழகர்மாலலங்காரர். (பி-ம்) சௌந்தர்யவல்லிநாய்ச்சியார். (வி-ம்) சோமசுந்தரவிமானம். (தீ-ம்) சக்கரதீர்த்தம். மலையத்துவஜபாண்டியனுக்குப் பிரத்யக்ஷம். (நி-ம்)

5. **திருமோகூர்**—(பெ-ம்) காளமேகப்பெருமாள். (பி-ம்) மேகவல்லிநாய்ச்சியார். (வி-ம்) கேதகிவிமானம். (தீ-ம்) க்ஷீராப்திபுஷ்கரணி. அஜருத்ரேந்திராதியர்க்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

6. **திருக்கூடல்** — (பெ-ம்) கூடலழகர். (பி-ம்) வரகுணவல்லி, வகுளவல்லி, மரகதவல்லி. (வி-ம்) அஷ்டாங்க விமானம். (தீ-ம்) ஹேமபுஷ்கரணி. சௌநகாதியர்க்கும் பிருகுருஷி முதலியோர்க்கும் பிரத்யக்ஷம். (வீ-ம்)

7. **திருந்தண்காலூர்** — (பெ-ம்) அப்பன். (பி-ம்) அன்னநாயகி. (வி-ம்) தேவசந்திர விமானம். (தீ-ம்) பாபநாசதீர்த்தம். சல்லியபாண்டியனுக்கும் வல்லபனுக்கும் பிரத்தியக்ஷம். (நி-ம்)

8. **ஸ்ரீவில்லிபுத்தூர்** — (பெ-ம்) வடபத்ரசயனர். (பி-ம்) ஆண்டாள். (வி-ம்) சம்சனவிமானம். (தீ-ம்) திருமுக்குளதீர்த்தம். பெரியாழ்வாரும் ஆண்டாளும் அவதரித்த தலம். மண்கேமகருஷிக்குப் பிரத்யக்ஷம். (நி-ம்)

9. **ஸ்ரீவைகுந்தம்** — (பெ-ம்) ஸ்ரீவைகுந்தநாதன். (பி-ம்) வைகுந்தவல்லிநாய்ச்சியார். (வி-ம்) சுந்திரவிமானம். தாம்பிரவர்ணிநதி. இந்திரனுக்கும் பிருதுசக்ரவர்த்திக்கும் பிரத்யக்ஷம். (நி-ம்)

10. **திருந்தொலைவில்லி மங்கலம்** — (பெ-ம்) அரவிந்தலோசனர். (பி-ம்) கருந்தடங்கண்ணிநாய்ச்சியார். (வி-ம்) குமுதவிமானம். (தீ-ம்) வருணதீர்த்தம். தாம்ரபர்ணிநதி. இந்திராதிகளுக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

11. **திருவரகுணமங்கை**—(பெ-ம்) விஜயாசனர். (பி-ம்) வரகுணவல்லி. (வி-ம்) விஜயகோடிவிமானம். (தீ-ம்) தேவபுஷ்கரணி. அக்னிதேவனுக்குப் பிரத்தியக்ஷம். (வீ-ம்)

12. **திருப்புளிங்குடி**—(பெ-ம்) காசினிவேந்தன். (பி-ம்) மலர்மகள்நாயகி. (வி-ம்) வேதசாரவிமானம். (தீ-ம்) வருணதீர்த்தம். நிருதிவருணன் தருமராஜன் முதலியோருக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

13. **திருக்குளந்தை** — (பெ-ம்) மாயக்கூத்தன். (பி-ம்) குழந்தைவல்லிநாய்ச்சியார். (வி-ம்) ஆனந்தநிலையவிமானம். (தீ-ம்) பெருங்குளதீர்த்தம். பிரகஸ்பதிக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

14. **திருக்கோளூர்** — (பெ-ம்) வைத்தமாநிதி. (பி-ம்) பாரிசாதவல்லி. (வி-ம்)

ஸ்ரீகர விமானம். (தீ - ம்) குபேரதீர்த்தம். குபேரனுக்குப் பிரத்தியக்ஷம். (கி-ம்)

15. **திருத்தேன்பேரை** — (பெ-ம்) மகா நெடுங்குழைக்காதர். (பி - ம்) குழைக்காதவல்லிநாய்ச்சியார். (வி - ம்) புத்ரவிமானம். (தீ-ம்) சக்ரபுஷ்கரணி. சுக்ரன் பிரமன் முதலியோருக்குப் பிரத்யக்ஷம். (வீ-ம்)

16. **திருக்குருகூர்** — (பெ-ம்) ஆதிகேசவப்பெருமாள். (பி - ம்) ஆதிநாதவல்லி. (வி - ம்) கோவிந்தவிமானம். (தீ - ம்) பிரமதீர்த்தம். பிரமனுக்குப் பிரத்தியக்ஷம். நம்மாழ்வார் அவதரித்த தலம். (நி-ம்)

17. **ஸ்ரீவரமங்கை** — (தோதாத்ரி.) (வானமாமலை). (பெ - ம்) தெய்வநாயகர். (பி-ம்) ஸ்ரீ வரமங்கைநாயகி. (வி-ம்) நந்தனவர்த்தகவிமானம். (தீ-ம்) இந்திர புஷ்கரணி. பிரமேந்திராதியருக்குப்பிரத்தியக்ஷம். (வீ-ம்)

18. **திருக்குறுங்குடி** — (பெ-ம்) வைஷ்ணவநம்பி. (பி - ம்) குறுங்குடிவல்லிநாயகி. (வி-ம்) பஞ்சகேதகவிமானம். (தீ-ம்) திருப்பாற்கடல். ருத்ராருக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

## மலைநாடு

1. **திருஅனந்தபுரம்** — (பெ-ம்) அநந்தபத்மநாபர். (பி - ம்) ஸ்ரீ ஹரிலக்ஷ்மிநாய்ச்சியாா. (வி-ம்) ஏமகூடவிமானம். (தீ - ம்) மசசதீர்த்தம். உருத்திரன். இந்திராதிகளுக்குப் பிரத்தியக்ஷம். (கி-ம்)

2. **திருவண்பரிசாரம்** — (பெ-ம்) திருவாழ்மார்பன். (பி-ம்) கமலவல்லி. (வி-ம்) இந்திர கல்யாண விமானம். (தீ - ம்) இலக்ஷ்மிதீர்த்தம். விநதை, காரி, உடைய நங்கைகளுக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

3. **திருக்காட்கரை** — (பெ - ம்) அப்பன். (பி-ம்) பெருஞ்செல்வநாயகி. (வி-ம்) புட்கலவிமானம். (தீ - ம்) கபிலதீர்த்தம். கபிலமுனிவருக்குப் பிரத்தியக்ஷம். (நி - ம்)

4. **திருமூழிக்களம்** — (பெ - ம்) திருமூழிக்களத்தன். (பி - ம்) மதுவேணிநாய்ச்சியார். (வி-ம்) சௌந்தர்ய விமானம். (தீ-ம்) பெருங்குளதீர்த்தம். ஹரீதருக்குப் பிரத்தியக்ஷம். (நி-ம்)

5. **திருப்புலியூர்** — (பெ - ம்) மாயபிரான். (பி-ம்) பொற்கொடியாள். (வி-ம்) புருஷோத்தமவிமானம். (தீ - ம்) பூஞ்சுனைதீர்த்தம். சப்தருஷிகளுக்குப் பிரத்தியக்ஷம் (நி-ம்)

6. **திருச்செங்குன்றூர்** — (பெ-ம்) மையாரப்பன். (பி-ம்) செங்கமலநாய்ச்சியார். (வி-ம்) ஜெகச்சோதி விமானம். (தீ-ம்) சங்குதீர்த்தம். ருத்ரனுக்குப் பிரத்தியக்ஷமான தலம். (நி-ம்)

7. **திருநாவாய்** — (பெ - ம்) பிரசன்னநாராயணன். (பி - ம்) மலர்மங்கைநாய்ச்சியார். (வி-ம்) வேதவிமானம். (தீ-ம்) செங்கமலசரசு. லக்ஷ்மிக்குப்பிரத்யக்ஷம். (வீ-ம்)

8. **திருவல்லவாழ்** — (பெ-ம்) கோலப்பிரான். (பி - ம்) செல்வத்திருக்கொழுந்துவல்லி. (வி - ம்) சதுரங்ககோலவிமானம். (தீ - ம்) கண்டாகர்ணதீர்த்தம். கண்டாகர்ணனுக்குப் பிரத்தியக்ஷம். (நி - ம்)

9. **திருவண்வண்டூர்** — (பெ-ம்) பாம்பணையப்பன். (பி - ம்) கமலவல்லிநாய்ச்சியார். (வி-ம்) வேததிவ்வியவிமானம் (தீ - ம்) பாபநாசதீர்த்தம். மார்க்கண்டேயருக்குப் பிரத்தியக்ஷம். (கி-ம்)

10. **திருவாட்டாறு**—(பெ-ம்) ஆதிஅநந்தப்பெருமாள். (பி - ம்) மரகதவல்லிநாய்ச்சியார். (வி-ம்) அஷ்டாங்கவிமானம். (தீ-ம்) சக்கரதீர்த்தம். பரசுராமருக்குப் பிரத்தியக்ஷம். (கி-ம்)

11. **திருவிற்றுவக்கோடு** — (பெ - ம்) அம்ப்ரீஷவர்தன். (பி-ம்) விற்றுவக்கோட்டுவல்லி. (வி-ம்) தத்துவகாஞ்சன விமானம். (தீ-ம்) சக்கரதீர்த்தம். அம்பரீஷனுக்குப் பிரத்தியக்ஷம். (கி-ம்)

12. **திருக்கடித்தானம்** — (பெ-ம்) அற்புதநாராயணன். (பி - ம்) கற்பகவல்லிநாய்ச்சியார். (வி-ம்) புண்யகோடிவிமானம். (தீ-ம்) பூமிதீர்த்தம். (நி-ம்)

13. **திருவாறன்விளை** — (பெ-ம்) திருக்குறளப்பன். (பி - ம்) பத்மாசனநாய்ச்சியார். (வி - ம்) வாமனவிமானம். (தீ-ம்) வேதவியாசசரசு. பிரமனுக்குப்பிரத்தியஷம். (நி-ம்)

விஷ்ணுத்தலமான்மியம் முற்றிற்று.

உ

சிவமயம்

# தேவார வைப்புத்தலங்கள்.

திங்களூர்.
நங்களூர்.
தங்களூர்.
எங்களூர்.
பாசனூர்.
நாசனூர்.
ஈசனூர்.
தேசனூர்.
கூறனூர்.
ஏறனூர்.
தேறனூர்.
பேறனூர்.
காட்டூர்.
மாட்டூர்.
பூமியூர்.
ஆழியூர்.
வேலனூர்.
இறைவனூர்.
முதல்வனூர்.
நம்பனூர்.
பாஞ்சலூர்.
தேரூர்.
பேரூர்.
மாவூர்.
பிடவூர்.
கோவந்தபுத்தூர்.
தேனூர்.
ஆமாவூர்.
அளப்பூர்.
ஊற்றத்தூர்.
மாற்றூர்.
சேற்றூர்.
நல்லாற்றூர்.
எமப்பேரூர்.
தக்களூர்.

மூலனூர்.
நாலனூர்.
வேங்கூர்.
நாங்கூர்.
பொன்னூர்.
தென்னூர்.
தாழையூர்.
கூழையூர்.
ஏழூர்.
தோழூர்.
விடங்களூர்.
கடங்களூர்.
முந்தையூர்.
பந்தையூர்.
மறையனூர்.
நிறையனூர்.
பிறையனூர்.
குன்றியூர்.
செங்குன்றூர்.
வெற்றியூர்.
மூவலூர்.
கருப்பூர்.
தேவனூர்.
எமநல்லூர்.
பெருமூர்.
பேராவூர்.
வாதவூர்.
வழுவூர்.
நியமநல்லூர்.
பொய்கைநல்லூர்.
வடபேறூர்.
கொடுங்கோளூர்.
தகட்டூர்.
துடையூர்.
மூழையூர்.

வேளூர்.
விளத்தூர்.
துவையூர்
நாலூர்.
தஞ்சையெழுமூர்.
கூந்தலூர்.
கச்சையூர்.
பனங்காட்டூர்.
கூரூர்.
போற்றூர்.
காற்றூர்.
கறையூர்.
பாட்டூர்.
மூதூர்.
பேறனூர்.
அரணநல்லூர்.
கொடுங்கோவலூர்.
குழையூர்.
பொய்கை.
நெற்குன்றம்.
நற்குன்றம்.
திருமலை.
பொதியின்மலை.
மகாமேருமலை.
உதயமலை.
அத்தமயனமலை.
மகேந்திரமலை.
ஏமகூடமலை.
கந்தமாதனமலை.
விந்தமாமலை.
சையமலை.
நீலமலை.
கொல்லிமலை.
மந்தாரம்.
நந்திகேச்சுரம்.

தேவீச்சுரம்.
வேதீச்சுரம்.
விவீச்சுரம்.
ஏயீச்சுரம்.
அக்கீச்சுரம்.
குக்குடேச்சுரம்.
நாகளேச்சுரம்.
இராப்பட்டீச்சுரம்.
மயிண்டீச்சுரம்.
திண்டீச்சுரம்.
வெகுளீச்சுரம்.
மாகாளேச்சுரம்.
அயனீச்சுரம்.
அகத்தீச்சரம்.
ஆடகேச்சுரம்.
அகத்தீச்சுரம்.
சோமேசம்.
குருந்தங்குடி.
மாணிகுடி.
விடைவாய்க்குடி.
கருந்திட்டைக்குடி
கடையக்குடி.
செம்பங்குடி.
புற்குடி.
மத்தங்குடி.
குத்தங்குடி.
சாலைக்குடி.
தனிச்சாத்தங்குடி
புதுக்குடி.
தென்களக்குடி.
நல்லக்குடி.
இள்ளிகுடி.
திருவண்குடி.
மாகுடி.
இடைப்பள்ளி.

கொல்லிஅரைப்பள்ளி
பாப்பள்ளி.
பொருப்பள்ளி
வதப்பள்ளி.
சிவப்பள்ளி.
அறப்பள்ளி.
சிறப்பள்ளி.
நெடுவாயில்.
நெய்தல்வாயில்.
வெள்ளாறு.
தெள்ளாறு.
காலாறு.
பழையயாறு.
பூந்துறை.
தவத்துறை.
கோட்டுக்காடு.
பனங்காடு.
நிறைக்காடு.
மிறைக்காடு.
இறைக்காடு.
தண்டலையாலங்காடு.
ஞாழற்கோயில்.
மாணிக்கோயில்.
கச்சிப்பலதளி.
குரக்குத்தளி.
ஆறைமேற்றளி.
மாதானம்.

குணவாயில்.
அண்ணல்வாயில்.
ஞாழல்வாயில்.
இடைக்குளம்.
தஞ்சைத்தளிக்குளம்.
பாற்குளம்.
திருக்குளம்.
வளைக்குளம்.
கஞ்சாறு.
புலிவலம்.
மகாநதி. குமாரி.
சூலமங்கை.
புரிசை.
சிக்காலி.
திருவேட்டி.
மணிமுத்தம்.
கச்சிமயானம்.
விளத்தொட்டி.
உருத்திரகோடி.
பாவநாசம்.
கொண்டல்.
கண்ணை.
காறை.
வளளி.
நல்லாளை.
திரிபுராந்தகம்.
கோட்டுக்கா.

இடைத்தானம்.
நாற்றுனம்.
தஞ்சரக்கசை.
பஞ்சரக்கசை.
குருக்கேத்திரம்.
விராடபுரம்.
மாகிருபம்.
சித்தவடம்.
கொங்கணம்.
காளிங்கம்.
உஞ்சேனைமாகாளம்.
இடவை.
பாம்பில்.
மணற்கால்.
கருமாரி.
களப்பாழ்.
காம்பீலி.
நாட்டுத்தஞ்சை.
தஞ்சை.
காரிகரை.
இரையான்சேரி.
வாரணசி.
அசோகந்தி.
தண்டங்தோட்டம்.
தண்டங்குறை.
சடைமுடி.
அரிச்சந்திரம்.

மாகோணம்.
சுரியல்.
காலம்.
வரந்தை.
எச்சிளமர்.
உண்ணீர்.
கோத்திட்டை.
கரபுரம்.
கீழையில்.
கீழையம்.
திருவாதிரையான்பட்டினம்.
கீழைவழி.
தேவன்குடி.
கொடுமுடி.
தென்கோடி.
கொங்கு.
கொழுநல்.
பட்டி.
கருகற்குரல்.
பருத்திநியமம்.
நல்லேமம்.
மாகாளம்.
பெருந்துறை.
வடமாதறல்.
படம்பக்கம்.
அங்கணம்.
ஆறை.

**திருவாசகம்பெற்ற சிவத்தலங்கள்** — திருப்பெருந்துறை. திரு உத்தரகோசமங்கை.

**திருவாசகவைப்புத்தலங்கள்** — கல்லாடம். பஞ்சப்பள்ளி. நந்தம்பாடி. வேலம்புத்தூர். தர்ப்பணம். சாந்தம்புத்தூர். மொக்கனி. பூவலம். பட்டமங்கை. ஓரியூர். பாண்டூர். மந்திரமாமலை.

**திருவிசைப்பாப்பெற்றதலங்கள்**—திருவிடைக்கழி. திருக்களந்தை யாதிதேச்சுரம். திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம். திருமுகத்தலை. திரைலோக்ய சுந்தரம். கங்கை கொண்டசோளேச்சுரம். திருச்சாட்டியக்குடி. தஞ்சையிராசராசேச்சுரம்.

**திருப்புகழ் பாடல்பெற்ற தலங்கள்**— 1. திருப்பரங்குன்றம், 2. திருச்செந்தூர், 3. திருவாவினன்குடி-பழனி, 4. திருவேரகம் (சுவாமிமலை), 5. குன்றுதோருடல், 6. கைலைமலை, 7. ஸ்ரீ சைலம், 8. திருவேங்கடம், 9. திருத்தணிகை, 10. வள்ளிமலை, 11. திருக்கழுக்குன்றம், 12. மயிலம், 13. திரிசிராப்பள்ளி, 14. திருக்கற்குடி, 15. இரத்னகிரி, 16. விராலிமலை, 17. விநாயகமலை, 18. திருச்செங்கோடு, 19. கொல்லிமலை, 20. இராஜமுகப்பீரவள நாட்டுமலை, 21. ஞானமலை, 22. ஊதிமலை, 23. குருடிமலை, 24. தென்சேரிகிரி, 25. கொங்கணகிரி, 25. கொடுங்குன்றம், 27. குன்றக்குடி, 28. பொதியமலை, 29. கழுகுமலை, 30. வள்ளியூர், 31. கதிர்காமம், 32. அருக்கொணுமலை, 33. திருக்கோணமலை, 34. பழமுதிர்சோலை, 35. காஞ்சிபுரம், 36. திருவானைக்கா, 37. திருவருணை, 38. திருக்காளத்தி, 39. சிதம்பரம், 40. புகழிமலை, 41. தனிச்சயம், 42. காசி, 43. வயிரவவனம், 44. அத்திப்பட்டு, 45. திருஒற்றியூர், 46. திருவேற்காடு, 47. பாக்கம், 48. கோசைநகர் (கோயம்பேடு), 49. திருவலிதாயம் (பாடி), 50. குறட்டி (குறட்டூர்), 51. வடமுல்லைவாயில், 52. திருவாலங்காடு, 53. வெள்ளிநகர், 54. திருவல்லம், 55. வேலூர், 56. திருவிரிஞ்சை, 57. திருஒத்தூர், 58. திருமயிலை, 59. திருவான்மியூர், 60. மாடையம்பதி (மாடம்பாக்கம்), 61. திருப்போரூர்,

62. உத்தரமேரூர், 63. மதுராந்தகம், 64. பேறைநகர், 65. திருவக்கரை, 66. திரு ஆமாத்தூர், 67. தச்சூர், 68. திருக்கோவலூர், 69. திருவதிகை, 70. திருவாமூர், 71. திருப் பாதிரிப்புலியூர், 72. திருமாணிகுழி, 73. வடு கூர், 74. திருத்துறையூர், 75. திருநாவலூர், 76. திருவெண்ணெய் நல்லூர், 77. கூடலை யாற்றூர், 78. விருத்தாசலம், 79. திருவாத் துறை, 80. திரு எருக்கத்தம்புலியூர், 81. திரு முட்டம், 82. திருவேட்களம், 83. திருநெல் வாயில், 84. திருமயேந்திரம், 85. சீகாழி, 86. திருமுல்லைவாயில், 87. வயித்தீச்சுவரன் கோயில், 88. வழுவூர், 89. இஞ்சிகுடி, 90. திருக்கடவூர், 91. திருவிடைக்கழி, 92. திருநள்ளாறு, 93. திருச்செங்காட்டங் குடி, 94. நாகபட்டினம், 95. சிக்கல், 96. வலி வலம் 97. எட்டிகுடி, 98. வேதாரணியம், 99. திருவாரூர்-பெரியமடம், 100. திரு வாரூர்-சோமநாதன்மடம், 101. திருஅம்பர், 102. திருமாகாளம் 103. கூந்தலூர், 104. திருவாஞ்சியம், 105. திருவீழிமலை, 106. திலதைப்பதி, 107. திருக்குடவாயில், 108. திருவாவடுதுறை, 109. திருக்குரங்காடு துறை, 110. பந்தணை நல்லூர், 111. திருப் பனந்தாள், 112. திருவிடைமருது, 113. திரு நாகேச்சுரம், 114. சிவபுரம், 115. திரிபுவ னம், 116. கும்பகோணம், 117. சோமீசர் கோயில், 118. திருச்சத்திமுத்தம், 119. திரு ப்பழையாறை, 120. திருநெல்லூர், 121. திரு வலஞ்சுழி, 122. திருச்சக்கிரப்பள்ளி, 123. காவளூர், 124. தஞ்சை, 125. திருவையாறு, 126. சப்தஸ்தானம், 127. திருப்பூந்துருத்தி, 128. திருநெய்த்தானம், 129. பெரும்புலியூர், 130. வாலிகொண்டபுரம், 131. திருப்பழு ஆர், 132. திருநெடுங்களம், 133. திருத்தவத் துறை, 134, திருமாந்துறை, 135. பூவா ளூர், 136. வயலூர், 137. கொடும்பாளூர், 138. திருப்பராய்த்துறை, 139. தென்கடம் பந்துறை, 140. கருவூர், 141. நெருவூர், 142. திருப்பாண்டிக்கொடுமுடி, 143. வெஞ் சமாக்கூடல், 144. சிங்கை (காங்கேயம்), 145. கன்னபுரம், 146. பட்டாலியூர், 147. எழுகரைநாடு, 148. இராசபுரம், 149. சேலம், 150. சீரனூர், 151. விஜயமங்கலம், 152. திரியம்பகபுரம், 153. திருமுருகன்பூண்டி, 154. அவிநாசி, 155. பேரூர், 156. திருப் பெருந்துறை, 157. நிம்பபுரம், 158. ஆய்க் குடி, 159. மதுரை, 160. சீபுருஷமங்கை (நாங்குனேரி), 161. இலஞ்சி (திருக்குற்று லம், 162. திருப்புத்தூர், 163. திருஆடானை, 164. இராமேச்சுரம், 165. அத்திக்கரை, 166. இந்தம்பலம், 167. ஒடுக்கத்துச்செறி வாய், 168. கந்தனூர், 169. கரியவனகர், 170. காமத்தூர், 171. தான்றோன்றி, 172. தேவனூர், 173. பாகை, 174. பெருங் குடி, 175. மருத்துவக்குடி, 176. முள்வாய், 177. வாகைநகர், 178. விஜயபுரம்-திரு வாரூர்.

## அறுபத்துமூவர் முதலியோர் திருநக்ஷத்திரம்

(சித்திரை௴) பரணி - சிறுத்தொண்டர், ரோகிணி-மங்கையர்க்கரசி, திருவாதிரை-விறன்மிண்டர், அஸ்தம் - உமாபதிசிவாசாரியார், சித்திரை - இசைஞானியார், சுவாதி-திருக்குறிப்புத்தொண்டர், சதயம்-திருநாவுக்கரசர், (வைகாசி௴) பரணி-கழற்சிங்கர், பூசம்-நமிநந்தியடிகள், சேக்கிழார், ஆயிலியம்-சோமாசிமாறர், மூலம்-ஞானசம்பந்தர், முருகர், திருநீலகண்டயாழ்ப்பாணர், நீலநக்கர், (ஆனி௴) மகம் - மாணிக்கவாசகர், பூரம்-அமர்நீதி, இரேவதி-கலிக்காமர், (ஆடி௴) கார்த்திகை-மூர்த்தியார், புகழ்ச்சோழர், திருவாதிரை-கூற்றுவர், கேட்டை - கலியர்கோட்புலி, (ஆவணி௴) பூரம்-செருத்துணை, ஆயிலியம்-புகழ்த்துணை, அதிபத்தர், மகம் - இளையான்குடிமாறர், உத்திரம்-மறைஞானசம்பந்தசிவாசாரியர், அனுடம் - குலச்சிறையார், மூலம்-குங்கலியக்கலயர், (புரட்டாசி௴) அசுவதி-உருத்திரபசுபதி, ரோகிணி - திருநாளைப்போவார், பூரம் - அருணந்தி சிவாசாரியார், சதயம் - நரசிங்கமுனையரயர், உத்திராடம்-ஏனாதி, (ஐப்பசி௴) அசுவதி - திருமூலர், பரணி-நெடுமாறன், கார்த்திகை - இடங்கழி, பூசம்-சத்தி, சுவாதி-மெய்கண்டதேவர், அனுடம்-பூசலார், மூலம்-ஐயடிகள், (கார்த்திகை௴) கார்த்திகை - கணம்புல்லர், உத்திரம்-மெய்ப்பொருள், அஸ்தம் - ஆனாயர், மூலம்-மூர்க்கர், பூராடம்-சிறப்புலி, (மார்கழி௴) திரு

வாதிரை - சடையர், உத்திரம் - இயற்பகை, சுவாதி - மானக்கஞ்சாரர், பூராடம்-சாக்கியர், இரேவதி-வாயிலார், (தைமீ) மிருகசீரிடம்-கண்ணப்பர், திருவாதிரை - அரிவாட்டாயர், உத்திரம்-சண்டேசுரர், விசாகம்-திருநீலகண்டர், சதயம்-அப்பூதியடிகள், இரேவதி-கலிக்கம்பர், (மாசிமீ) அஸ்தம்-எறிபத்தர், பூராடம் - காரி, சதயம் - கோச்செங்கட்சோழர்; (பங்குனிமீ) ரோகணி-நேசர், திருவாதிரை-கணநாதர், பூசம் - முனையடுவார், சுவாதி-காரைக்கா லம்மையார், சதயம் - தண்டியடிகள்.

## ஆழ்வாராதிகள் திருநக்ஷத்திரம்

(சித்திரைமீ) அசுவதி-வடுகநம்பி. கார்த்தி-உய்யக்கொண்டார். திருவா-எம்பெருமானர். புனர் - ஸ்ரீ ராமபிரான். முதலியாண்டான். அஸ்த - கிடாம்பியாச்சான். சித்திரை - மதுரகவிகள். (வைகாசிமீ) ரோக - கோட்டியூர் நம்பி. அஸ்த-தேவப்பெருமா. சுவாதி-அழகியசிங்கர். பெரியதிருமலைநம்பி. விசாகம்-நம்மாழ்வார். திருவாய்மொழிப்பிள்ளை. திருநம்பி - அனுஷம்-பெரியபட்டர். கோயிற் கந்தாடை. (ஆனிமீ) ஆயிலியம் - மாறனேர் நம்பி, சுவாதி - பெரியாழ்வார், வடக்குவீதிப் பிள்ளை, திருவரங்கப்பெரு. அனுஷம் - நாதமுனிகள். மூலம் - திருப்புளியாழ். (ஆடிமீ) பூரம்-ஸ்ரீ ஆண்டாள், கந்தாடைதோழப்பர். அஸ்தம்-பதரநாராயணப் பெரு. சுவாதி-பக்ஷிராஜர். உத்திராடம் - ஆளவந்தார், புண்டரீகாக்ஷர். திருவோணம்-தெற்காழ்வார். (ஆவணிமீ) ரோகணி-ஸ்ரீ கண்ணபிரான், பெரியவாச்சான்பிள்ளை, நைநாராச்சாம்பிள்ளை. (புரட்டாசிமீ) விசாகம்-வருமலைநம்பி. திருவோணம்-வேதாந்த தேசிகன், திருவேங்கடத்தம (ஐப்பசிமீ) திருவாதிரை - குருகுலோத்தாதாசர். மூலம் - மணவாளமாமுனி. பூராடம்-குருகைப்பிரான், சேனை முதலியார். திருவோ-பொய்கையாழ்வார். பிள்ளைலோகாசாரியார். அவிட் - பூதத்தாழ்வார், திருமலையாண்டான். சதயம் - பேயாழ்வார். உத்திரட் - விளாஞ்சோலைப். (கார்த்திகைமீ) பரணி-மாதவப்பெருமா. கார்த்-திருமங்கையாழ்வார், நம்பிள்ளை. ரோகிணி - திருப்பாணாழ்வார். அனு-கோடி, தாதாச்சாரியார். (மார்கழிமீ) அனுஷ-நாலூராச்சான். கேட்டை-தொண்டரடிப்பொடி, பெரியநம்பி. (தைமீ) மிருக-கோவலூர் எம்பெ. புனர்பூ - எம்மார். மகம்-திருமழிசையாழ். அஸ்தம் - கூத்தாழ். விசாகம்-குருகைசாவலப்பன். பூரட் - சொட்டை நம்பி. (மாசிமீ) அசுவ-சிறியகோவிந்தப்பெருமாள். மிருக - திருக்கச்சிநம்பி. புனர்பூ - குலசேகராழ்வார், திருமலையாண்டா. ஆயி-பிள்ளையுறங்காவில்லி. மகம் - மணக்கால்நம்பி. (பங்குனிமீ) ரோகிணி - நம்பெருமாள். பூசம் - செல்வப்பிள்ளை. உத்திர-ஸ்ரீரங்கநாய்ச்சியார். அஸ்தம் - திருவரங்கத்தமுதர். இரே-பெரியபெருமாள்.

சிவ வைணவத் தலங்கள் முற்றிற்று.

# அநுபந்தம்

**அகற்பவிபூதி** — அகற்ப விபூதியாவது இடி வீழ்ந்த விடத்தில் உண்டாகியதும், மலை உச்சியிலும், பூமியிலும், பிறிதொரு காரணத்தால் விளைந்ததும் ஆகிய விபூதி. இதனை மூலமந்திரம் கலாமந்திரங்களினாலே சுத்திசெய்து தரிப்பர்.

**அதுதை** — பண்டையிலிருந்த ஒரு பிரபு. பரிசிலர்க்குக் களிற்று யானை நிரை தந்த கொடையாளி. (புறம்) 76.

**அகோரமாதவர்** — சோழநாட்டினர். சைவர் திருவாரூர்க்கோயில் விசாரணைக் கர்த்தரென்று ஊகிக்கப்படுகிறது. வேதாரணிய புராணம், கும்பகோணப் புராணம் பாடியவர். காலம் பதினேழாம் நூற்றாண்டு.

**அகோரகல்பம்** — பிரமன், ஒருகாலத்து, சிவபெருமானைக் கருநிறமாகத் தியானிக்க, அக் கல்பத்தில் அகோரமூர்த்தியாகத் தோன்றிய கல்பம். (இலிங்க-புரா)

**அக்னி** — 1. தேவர்கள் தைத்ய வதத்தின் பொருட்டு அக்னியைவேண்ட அக்னி தன் பாரியையாகிய சுவாகாவுடன் சென்று சிவ தரிசனம் செய்தனன். சிவபிரான் தன் ரேதசை அக்னியிடம் தர அக்னி சுவாகாவிடம் தந்தனன். அதனால் அவளிடம் சுவர்ண, சுவர்ணிகள் பிறந்தனர். இவர்களுக்கு அக்னி விவாகம் செய்வித்தனன். தேவர்கள் தங்கள் கருமம் செய்யாததனால் அக்னியைச் சபித்தனர். அச்சாப நீங்க அக்னி புண்யதீர்த்தமாடிச் சாப நீங்கினன். (பிரம - புரா).

2. ஒரு காலத்திலே திருக்கைலை செல்லத் தொடங்கிக் கைலையை நெருங்க, நந்தி கோபித்தது கண்டு நீங்கி அன்னவுருக்கொண்டு தேவியிருக்கும் இடமடைய, அவ்விடமிருந்த தேவியின் வாகனமாகிய சிங்கத்தின் உங்காரத்தால் அச்சங்கொண்டு நீங்கித் திருமாலை யடைந்து தேற்றப்பெற்றனன்.

**அக்னிப்பிரமாணம்** — இது, நியாய சபையார்முன் வாதிப் பிரதிவாதிகள் சத்தியஞ் செய்யும் முறை. வாதிப் பிரதிவாதிகள் இரண்டு கைகள் நிரம்ப தானியங்கொள்ள அக் கைகளை எழு புரியுள்ள நூலால் கட்டி அரக்கடையாளமிட்டு எழு அரசிலைகளைக் கையில் வைக்கவேண்டும். பின் இருவரும் அக்னியை நோக்கி 'ஓ அக்னி! நீர் எல்லாப் பிராணிகளிடத்திலும் வசிப்பவர்; நீர் சாக்ஷியாக எங்களுடைய புண்ய பாபங்களைக் கூறவேண்டும்' என்று கூறிக்கொண்டு பின் இரண்டு கைகளில் காய்ச்சின 5 பலம் இருப்புருளைகளைக் கொடுத்தல் வேண்டும். இவ்விருவரும் அதைத் தூக்கிக்கொண்டு எழு மண்டலாகாரப் பிரதேசத்தை மெதுவாகத் தாண்டவேண்டும். ஒரு மண்டலம் (16) அங்குலம், மத்ய ப்ரதேசம் அதே எண்கொண்டதாக இருத்தல் வேண்டும். அக்னி எந்தினவன் கையிலுள்ள தான்யம் கருகாதிருக்கின் சுத்தனாக எண்ணப்படுவன். (யாஞ்க்யவல்கியம்).

**அக்னிகுண்டம்** — பவிபிக் மகா சமுத்திரத்திலுள்ள பல தீவுகளி லொன்றாகிய ஆவாயியன் என்னும் ஒரு தீவில் மூன்று எரிமலைக ளிருக்கின்றன. அவற்றிற்கு மௌனலோவா, மௌனகியா, ஹாலாலை எனப் பெயர். அவற்றுள் முதலிற்கூறிய மௌனலோவா என்பதன் வாய் ஒரு மைல் அகலமுள்ளதாய் ஒரு எரிபோல் இருக்கிறது. இது எக்காலத்தும் உருகி, கற்களுடையதாய் எரிந்துகொண்டேயிருக்கிறது. இது நாற்புறமும் மலைகளால் சூழப்பட்டிருத்தலால் எவரும் அதனை நெருங்குவதில்லை. இதனை அத்தீவிலுள்ளார் தெய்வம்போல் வணங்கி வருகின்றனர்.

**அங்காளம்மாள்புரட்டு** — சில நிலைகெட்ட குறத்திகளும், பெண்களும் தாங்கள் ஒரு நெருப்புச்சட்டியைத் தலையில் கொண்டும் உடலில் மஞ்சள் பூசிக்கொண்டும், குங்குமம் இட்டுக்கொண்டும், கையில் வேப்பிலை கொண்டும் பெண்களை மயக்கி அரிசி பணம் முதலியன கொள்ளும் புரட்டு.

**அங்குரார்ப்பணம்** — தீக்ஷை, கல்யாணம் முதலிய சுபகாரியங்களில் மந்திர பூர்வகமாய்ப் பன்னிரண்டு பாலிகைகளில் நெல், எள், அவரை, துவரை, கடலை, கடுகு,

பயறு, உளுந்து, கொள்ளு இவைகளைச் சுத்தஞ்செய்து நிரப்பிச் சுபகாரியங்கள் முடிந்தபின் அங்குர வளர்ச்சியால் சுபாசுப பலனறிந்து ஓமஞ்செய்து நீரில்விடுவது.

**அசபை** — ஓரெழுத்தாகிய மந்திரம். 2. மூலாதாரத்தினின்றும் பிரமரந்திரம் செல்லும் அக்கினி.

**அட்டை ஆடல்**—யுத்த காலத்தில் தலையற்றுழியும் முண்டம் தானேயாடுதல். (தொல்).

**அண்ணாமலை ரெட்டியார்** — திருநெல்வேலி சில்லாவாசி; தமிழ்க்கவி; காவடிச் சிந்து பாடியவர்.

**அதிகமாதம்** — இரண்டு அமாவாசை மாதம் சங்கர்ப்ப மாதமாம். அன்றி (2) சங்கிரம ஆதியந்தங்களில் அமாவாசையாகில் அசங்கர்ப்பமாதமாம். (2) சங்கிரமத்திற்கு நடுவாக (2) சந்திரோதய முண்டாகில் அதிக மாதமாம். சௌரமாதம் (32)ம், (16) நாட்களும், (30) நாழிகையும் (55) விநாடியும் சென்றால் அதிக மாதம் வருமென்பர் கணிதநூலார். இவற்றில் சுப கன்மங்கள் நீக்கப்படும். குரு, தநு, கற்கடகம், மீனத்தில் அஸ்தமன மின்றி நிற்க, சூரியன் உத்தராயன கதியாய் நட்பாக்ஷி உச்சத்திருக்கில் தோஷமில்லை.

**அத்தப்பிரகான்** — ஞாயிற்றுக்கிழமை முதல் சனிக்கிழமை வரையாக (4)-ம் சாமம், (7) ஆம் சாமம், (2) ஆம் சாமம், (5) ஆம் சாமம், (8) ஆம் சாமம், (3) ஆம், சாமம், (6) ஆம் சாமம் அர்த்தப்பிரகரன் காலம். இதனில் சுபகாரியங்கள் செய்யலாகாது. இதில் வாராதிபன் வலியனாயினும், ஆட்சி, உதயத்தி னிற்பினும் தோஷம் இல்லை. (விதான.)

**அநந்தகவிராஜர்**—இவர் ஊர் மானூர். இவர் மதுரை பதிற்றுப் பத்தந்தாதி இயற்றினர் என்ப.

**அந்துவஞ்சேரலிரும்பொறை** — இவன் ஒரு சேரர் மரபினர் தலைவன். இவன் குமாரன் செல்வக் கடுங்கோ வாழியாதன். இவன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளியென்ற சோழனுக்குப் பகைவன்.

**அநந்தரி** — சுந்தரபாண்டியம் பாடிய புலவர்.

**அநவத்தை** — ஒன்றையொன்று பற்றுதலெனும் குற்றம்.

**அப்பாவுமுதலியார்** — இவரூர் முடிச்சூர்; சமயம் வைஷ்ணவம்; காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு. கூரேசவிஜயம், தென்ஞாசாரியப்பிரபாவதீபிகை, சற்சம்பிரதாய தீபிகை, விஷ்ணுதத்துவ விளக்கம், இராமாநுஜ நூற்றந்தாதி உரை என்ற வைஷ்ணவ சமயநூல்களை இயற்றியவர். இவரெழுதிய நூல்களுக்குச் சென்னை, சூளை சோமசுந்தர நாயகர் கண்டனம் எழுதியுள்ளார்.

**அம்பட்டன்கருவிகள்** — அடைப்பம், கண்ணாடி, க்ஷவரகத்தி, தீட்டுக்கல், எண்ணெய், துடைத்தோல், கத்திரி, மூக்கு மயிர் வாங்கும் கருவி, முள்வாங்கி.

**அம்பலவாணத் தம்பிரான்** — திருவாவடுதுறை ஆதீனத்துக் குழாங்களில் ஒரு அடியவர். இலக்கணத்தில் வல்லவர். இவர் இலக்கண விளக்கம் இயற்றிய வைத்திய நாத தேசிகரின் புத்திரர் சதாசிவ தேசிகர் திருவாவடுதுறையில் ஒரு பிரசங்கம் நிகழ்த்தியபொழுது அதனை வியந்து வன்மீக நாதன் வரத்தா லவதரித்த, வன்மீக நாதன் மரபினோன் - வன்மீகர், தாமோர் தமிழுருவாய்ச் சார்ந்தசதாசிவனை, யாமோ புகழவல்லே மீண்டு.' என்று பாடியவர்.

**அமிர்தசாகரர்** — அமுதசாகரர் காண்க. யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை செய்தவர்.

**அயிரை** — சேர நாட்டிலுள்ள மலை. இமயவரம்பன் தம்பி பல்யானை செல்கெழு குட்டுவன் இதில் எழுந்தருளி யிருக்கும் கொற்றவைக்கு வழிபாடு இயற்றினன். (பதிற்றுப்பத்து).

**அரங்கநாதமுதலியார்** — இவரூர் சென்னை. சென்ற நூற்றாண்டி லிருந்தவர். ஆங்கிலம் கற்ற மகாபுத்திமான். கச்சிக்கலம்பகம் செய்தவர்.

**அழகணிசித்தர்** — ஒரு சித்தர். இரஸவாத விஷயமாகச் சில பாடல் பாடியுள்ளார். அதற்கு அழுகணிசித்தர் பாடல் எனப் பெயர்.

**அலர்க்கன்** — ஒரு அரசன். இவன் அரசனாகையில் அந்தகனாகிய வேதியன். ஒருவன் அரசனிடம்வந்து 'அரசனே! நீமகாத்யாகி; ஆகையால் உன் கண்ணை யெனக்குத் தருக' என யாசிக்க, அரசன் அவ்வகை தந்து புகழடைந்தனன். (வால்மீகி ராமாயணம்).

**அலியார்புலவர்**—இவர் மதம் முகம்மதியம். சிறந்த தமிழ்ப்புலவர். இந்திராயன்படைப்போர், இவுனி ஆண்டான் படைப்போர் முதலிய நூல்கள் இயற்றியவர்.

**அளவுகருவிகள்** — (1) அடிக்கோல், (2) முழக்கோல், (3) இரண்டடிக்கோல், (4) கெஜக்கோல் (5) அடி நாடா, (6) சங்கிலி, (7) வட்டமிடுங் கருவி முதலியன; நீர்மட்டப்பலகை, ரஸமட்டப் பலகை, சாராய மட்ட யந்திரம், தூக்குண்டை.

**அறப்பளீசுரசதகம்** — சதகம் (100) செய்யுட்களாலாகிய நூல். இது வைப்புஸ்தலமாகிய அறப்பள்ளி யென்னும் மலையிற் கோயில்கொண் டெழுந்தருளிய சிவபெருமானை முன்னிலைப் படுத்திப் பாடிய சதகம். இதனை இயற்றியவர் அம்பலவாண கவிராயர்.

**அறநெறிச்சாரம்** — இது திருமுனைப் பாடியாரால் இயற்றப்பட்டது. ஜைன மத சம்பந்தமான தருமங்களை வெண்பாவாற் கூறுவது. சிறந்த நடையுள்ளது. இதன் செய்யுட்டொகை (226).

**அற்புதமணி** — மேகவாகனன் காண்க.

**அணை** — இது தேகத்திற்கு ஆரோக்யம் உண்டாம்படி பஞ்சு முதலியவற்றால் செய்வித்த படுக்கை. அவை இலவம் பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிர், அன்னத்தினிறகு இவற்றாற் செய்யப்பட்டவை.

**அஹஸ்** — பகலின் அளவு. சாதாரணமாக ஒருநாளில் சூரியன் காலை ($8\frac{1}{2}$) மணிக்கு உதித்து, மாலை ($6\frac{1}{4}$) க்கு அஸ்தமித்தால் அத்தினத்தில் அகலின் அளவு (12) மணி, 55 நிமிஷம்.

**ஆதியப்பனூர்** — இவரூர் களந்தை. கொண்டை கட்டி வேளாளர். காலம் பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி. திருக்களர், திருக்கொள்ளம் பூதூர், பூளைவனம், பருதிவனம், வைகன்மாடக்கோயில் மாயூரம், இத்தலங்கட்குப் புராணம் பாடியவர். இதனை 'பொன்னாருந் திருக்களரங் கொள்ளம் பூதூர் பூளைவனம் பருதிவனம் போற்றுந் தஞ்சைத், தென்னாருங் கொடிவீதிக் கண்ணார் கோயில் சிறந்த வைகற்பதி யிவைக்குஞ் சிவபுராணம், பன்னாளுந்தனி யோங்குந் தமழாற் செய்தேன் பகர்சூத னுரைத்தபடி பரன்பால் வைகு, மின்னாருமாயூரப்பதிக்கு மின்றும் விளம்புகேன் வழுவுறினும் விரும்புவாரே' என்பதனாலறியலாம்.

**ஆரல்** — செவ்வாயின் பெயர். அங்காரகன் காண்க.

**ஆடலாசான்** — இலக்கணம், சேதம், அவிநயம், நாடகம் என்றிவற்றாற் றக்கவன்.

**ஆற்றின்அகடு** — ஆற்றில் வெள்ளம் ஓடும் பாகத்திற்கு ஆற்றின் அகடு என்று பெயர். (பூகோ).

**இஞ்சி** — இது சம்பாரப் பொருள்களில் காரமுற்றது. மணற் பூமியில் நன்றாய்க் கிழங்கிடும். இது ஆறுமாதப் பயிர். இதன் தாள்கள் பழுத்தபின் கிழங்குகளைத் தோண்டி வெயிலில் உலர்த்தினால் சுக்கு ஆகும்.

**இடம்** — 2. வழக்கிடம், செய்யுளிடம்.

**இராயசிங்கு** — வடநாட்டி லரசாண்ட மன்னன். அங்கதபூபதி காண்க.

**இராயர்** — விஜயநகரத் தரசருள் கிருஷ்ண தேவராயருக்கு வழங்கும் சிறப்புப்பெயர். இராயர் அப்பாஜி கதைகளுள் வழங்குவது இவரையே.

**இயற்றமிழ்** — இலக்கண நூலமைதி பெற்ற செந்தமிழ்.

**இயைபின்மை நீக்கம்** — தன்னொடு ஒற்றுமையை நீக்கும் விசேடணம்.

**இடைக்காடனூர்** — இவர் இடைக்காடென்னும் ஊரிலுள்ளா ராதலின் இப் பெயர் பெற்றார். இவராற் பாடப்பட்டோன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன். (புற - நா.)

**இயக்கன்** — தமிழ் நாட்டரசருள் ஒருவன். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் வஞ்சினக்காஞ்சி கூறுகையில் புகழ்படக் கூறப்பட்டவன்.

**இடையன்சேந்தன்கொற்றனூர்** — இவர் சாதியி லிடையராக இருத்தல் கூடும். இவர் இயற்பெயர் சேந்தன். கொற்றனூர் என இருத்தல் கூடும். இவர் அகத்தில் வடுகரை வென்ற இளம்பெருஞ் சென்னியைப் புகழ்ந்துள்ளார். இவர் அகத்தில் பாலையைப் பாடியுள்ளார். (375).

**இடையனெடுங்கீரனூர்** — இவர் சாதியில் இடையராக இருத்தல் கூடும். இவர் பெயர் கீரனார். உருவு நோக்கியோ பெருமை நோக்கியோ நெடுங் கீரனார் என அழைக்கப் பட்டனர். இவர் கடைச்சங்க மருவிய புலவருள் ஒருவர். அகத்தில் மருதத்தைப் பாடினர். (166).

**இருதலைப்பக்ஷி**—1. இதன் உரு, தலைகளிரண்டு, உடல் ஒன்று, கால்களிரண்டு சிறகுகள் இரண்டு. இப் பறவையைப் பற்றித்

தமிழ்க் கதைக்களில் கூறுவதன்றி இதனிருப்பு முதலியவற்றை யெங்கும் கூறவில்லை. சிம்புட் பறவைக்கும் இரண்டு தலைகளுண்டு. ஆயினும் உருவம் வேறு.

2. மாதர் அணிகலன்களில் ஒன்று.

**ஈசானதேசிகர்** — திருவாவடுதுறை ஆதீனத்தவர். கடம்பர் கோயிற் புராணம் பாடியவர்.

**உத்தமசோழன்** — திருவிசைப்பா பாடிய கண்டராதித்தர் மகனார். இரண்டாம் பராந்தகனான சுந்தரசோழன் அரசாண்ட பிறகு சோழராச்சியத்தில் கி. பி. 970 முதல் 986 வரை அரசு செலுத்தியவன். அநேக கோயில்களைப் புதுப்பித்தவன்.

**உபநதிகள்** — ஆறு ஓடும்போது அங்கங்கே பல சிற்றாறுகள் வந்து பெரிய ஆற்றில் கலக்கும். அந்தச் சிற்றாறுகளுக்கு உபநதிகள் என்று பெயர். (பூகோளம்).

**ஒப்பிலாமணிதேசிகர்** — இவர் ஊர் திருவாரூர். அபிடிக்தர்குலம். சிவரகசியம் கவியாகப்பாடியவர். காலம் 17-ம் நூற்றாண்டு.

**கபர்கள்** — சியவனரைக் காண்க.

**காலம்** — 12, சிறுபொழு தாறும், பெரும்பொழு தாறுமாம்.

**காரிப்பிள்ளை, காரிப்புள்** — கரிக்குருவி வகை.

**காரிரத்னக்கவிராயர்** — இவரூர் தென்திருப்பேரை. சமயம் வைஷ்ணவம். காலம் பதினாறாம் நூற்றாண்டு. இவர் மாறனலங்காரம் இயற்றிய திருக்குருகூர் பெருமாள் கவிராயரிடம் கல்வி பயின்றவர். மாறனலங்கார உரையாசிரியரும் இவரேயாவர். இஃதன்றி, தொல்காப்பிய நுண்பொருண்மாலை, திருக்குறள் நுண்பொருண்மாலை, பா பாவினம் முதலியன இயற்றியுள்ளார்.

**குதுபம்** — ஒருநாளிலுள்ள (15) முகூர்த்தத்தில் எட்டாவது முகூர்த்தம். இது பித்ருக்களுக்குரிய முகூர்த்தம். இதில் பிதுர் சிரார்த்தம் செயின் பிதுர்க்கள் களிப்புறுவர். (எமாத்ரி)

**குமரன்** — அக்கினியின் புத்திரன். அக்னி காண்க.

**குஜீ** — செவ்வாயின் பெயர். அங்காரகன் காண்க.

**சதாசிவதேசிகர்** — இவரது ஊர் திருவாரூர். இலக்கண விளக்கம் முதலிய நூல்கள் இயற்றிய வைத்தியநாத தேசிகரின் மூத்த புதல்வர். நல்ல கவி. 'கூடுஞ்சபையிற் கவிவாரணங்களைக் கோளரிபோற், சாடுஞ் சதாசிவ சற்குரு வேழுன்னுன் றந்தை தம்மாற், பாடும் புலவர்களானோ மின்றிச் செம்மற் பட்டியெங்கும், காடுஞ் செடியுமென்னோ தமிழ்க்காரிகை கற்றதுவே.' என்று படிக்காசுப் புலவரால் புகழப்பட்டவர்.

**சத்தியஞானி** — இவரூர் நெல்லை. குலம் அபிடிக்தர் குலம். பாபநாசப் புராணம் நூலுடையாருக்கும் திருக்காளத்திப் புராணமியற்றிய வீரை ஆனந்தக்கூத்தருக்கும் ஆசிரியரும் ஞானாசிரியருமாவர்.

**சந்தானசாரியார்** — சைவசித்தாந்த சாத்திரங்களை முதன்முதல் தமிழில் செய்த பெரியோர்களான நால்வர். மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் என்ற நால்வர். இவர்களைக் குறித்து திருவாரூர் சுவாமிநாத தேசிகர், **சந்தானசாரியார் புராணம்** என ஒரு நூல் இயற்றியுள்ளார்.

**சிறியகாரிரத்ன கவிராயர்** — ஊர் தென்திருப்பேரை. சமயம் வைஷ்ணவம். வடமலையப்பையன் சமஸ்தான வித்வானாக இருந்தவர்.

**சுசி** — அக்னி வசிஷ்டர் சாபத்தால் சிகண்டி வயிற்றிற் பிறந்தவன். அக்னி 1௶ காண்க.

**சேறைக்கவிராஜபிள்ளை** — இவரதூர் திருச்சேறை. சமயம் சைவம். இவர் இயற்றிய நூல்கள் திருக்காளத்தி நாதருலா, ஷெ கட்டளைக் கலித்துறைமாலை, சேயூர் முருகனுலா, திருவாட்போக்கி நாதருலா, திருவண்ணாமலையார் வண்ணம்.

**சோருபாசித்தன்** — சத்தமநித்யம் காணப்படுகையாலே இதில் அநித்தியத்தைச் சாத்தியமாயிருக்கிற சத்தத்திலே காணப்படுகையென்கிற எது சுவரூபமாகவில்லை சத்தம் சிரவணமாகையால். (சிவ-சித்)

**ஞானக்கூத்தசிவப்பிரகாசதேசிகர்** — இவர் செங்கல்பட்டுஜில்லா சிவன்பாக்கம் கிராமத்தவர். திருவையாற்று ஜபேச புராணம் பாடியவர்.

2. இவர் துறையூராதீனத்தவர். கவி வல்லவர். விருத்தாசலபுராணம் பாடியவர்.

**ஞானவாள்**—பசுமையாயும் முதிர்ந்துமுள்ள (31) தருப்பையினால் மயிர்ப்பின்னல் போல் பின்னப்பட்டு வாட்பிடிபோல் அடியும், நுனி (4) அங்குல நீளமும், முடி (2) அங்குல நீளமுமாக பவித்திரமுடிபோல வலமாக முடியப்பட்டுள்ளது. இதனிளம்

ஒருமுழம், அல்லது 18, 16, 12 அங்குலம். (சைவபூஷணம்)

**டயனுதாங்க** — இது ஆப்பிரிகாவின் மேல்பாகத்திலுள்ளது. இது கறுத்த மயிரால் மூடப்பட்டு வெண்மையான தாடியையும், வெள்ளைப்புருவத்தையும், (18) அங்குல நீள உடலையும், அவ்வளவு நீண்ட வாலையும் உடையது. எளிதில் வளர்க்கப்படுவது. இது குரங்குக் கூட்டங்களி லதிகம் சேருவதில்லை.

**டார்னமஸ்** — இது ஆப்பிரிகாகண்ட வாசி. இது அணிலையொத்த உருவமுள்ளது. கைகால்கள் குரங்கையொத்தவை. கண் புஜம் காது சிறியவை. தேகம் மயிரடர்ந்தது. இது பறவைகளின் முட்டைகளைத் திருடிக் குடிக்கும். இரவில் இரைதேடும். இது சாம்பல் நிறமுள்ளது. வருடத்தில் இரண்டு குட்டிகளை யீன்று பால் கொடுக்கிறது.

**டார்சியா** — இது ஒருவகைப பிராணி. பூனைபோன்ற உருவமும் குரங்குபோல் கைகால்களுமுள்ளது. இது சுமத்ரா, போர்னியோ முதலிய தீவுகளில் வாழ்வது. முகம் வட்டமாய்க் குறுகியது. காதும் கண்களும் பூனைபோன்றவை. இது தவளைபோல் குதித்துச் செல்லுகிறது. இது உட்காருகையில் முதுகை வளைத்துப் பின்கால்களை யூன்றுகிறது. இது பூச்சி புழுக்களையும் பல்லிகளையுந் தின்கிறது. வருஷத்திற்கொரு குட்டி போடுகிறது.

**டிக்டாபோன்** — (Dictaphone) இது தொழிற்சாலைகளில் ஒருவர் கூறும் வார்த்தைகள் முழுதும் வளைந்த குழல்வழியாய்க் கேட்டும் தன்னுள் வட்டமான மெழுகில் பதித்துக்கொண்டும் பேசிமுடிந்தபின் அவற்றை டைபிஸ்டினிடத்தில் கூறும் யந்திரம்.

**டிங்கி** — இது ஒருவிதமான சிறுபடகு. கரையோரத்தில் வங்காளத்தாரால் ஒட்டப்படுவது.

**டிங்கோ** — ஆஸ்திரேலியா நாட்டு காட்டு நாய். இது ஓநயிற் சற்றுச் சிறியவுருவுள்ளது. கால்கள் நீண்டு மயிரடர்ந்த வாலையுடையது.

**டிடல்பிஸ்ட்ரைஸ்டிரீயாடா** — இது ஒருவகை மிருகம். அமெரிக்காதேசவாசி. இவ்வினம் எலி, பூனை, நாய், குரங்குபோன்ற உருக்கொண்டவை. இவ்வினத்தில் (50) வகைகளுண்டு. சிலவற்றிற்கு வயிற்றில் பையுண்டு. இது எலியினம்போன்றது. இது குட்டிகளை முதுகிற் சுமந்து செல்லும். இவ்வினத்தில் வர்ச்சீனியன் ஒப்பேரஸம் என ஒரு இனம் உண்டு. அது நாய்போ லிருக்கிறது. மரமேறிப் பறவைகளைப் பிடித்துத் தின்கிறது. இதனிடம் குரங்கின் சேஷ்டைகளுண்டு. மரப் பொந்துகளில் வசிக்கும். அபாயம் வரும்போது செத்ததுபோல் பாசாங்கு செய்யும்.

**டிரீஜராக்ஸ்** — இது ஆப்பிரிகாவாசி. நரிபோன்ற உருவுள்ளது. இது மரங்களின் மீது தங்கியிருந்து பழங்கள் வேர் பூச்சி புழுக்களைத்தின்கிறது.

**டைவர்** — இது ஒருவித நீர்வாழ்பறவை. இங்கிலாண்ட், ஸ்காட்லாண்டில் வசிப்பது. இதனலகு நீண்டும்,கால்கள் வாத்துப்போல் தோலடியுளவாய் முன்கொண்டு நிமிர்ந்தும் உட்காரும். நின்றால் விகாரமாயிருக்கும். மீன்முதலியவற்றைத் தின்னும்.

**டோடோ** — இது மோரிஸ் தீவிலுள்ள புரு இனத்தைச் சேர்ந்த பறவை. இது ஒரு அன்னத்தினும் பெரிது. இதன் இறகுகள் ஒருவகை செந்நிறமாய் வாலின் இறகுகள் குறுகிச் சுருண்டிருக்கும். வளைந்த பெரிய மூக்கையும்பருத்த கால்களையும் உடையது.

**துர்ச்சயதூர்த்தா** — வம்சகர் காண்க.

**பஞ்சருத்ரம்** — அதர்வசிகோப நிடதம் முதலிய ஐந்து உபநிடதங்கள். அதர்வண வேதம் காண்க.

**பவமானன்** — வசிஷ்டர் சாபத்தால் சிகண்டி வயிற்றிற் பிறந்த அக்கினி. அக்னி 10 காண்க.

**பாவகன்** — வசிஷ்டர் சாபத்தால் சிகண்டி வயிற்றிற் பிறந்த அக்கினி. அக்னி 10 காண்க.

**பூமிபுத்ரர்** — நரகன், சம்வர்த்தன், புஷ்கலன். (பார - அது - 6.)

**மதனன்** — சியவனரைக் காண்க.

**மாத்திரைச்சுருகம்** — சித்திரக்கவி வகை. எழுத்தின் மாத்திரை சுருங்கப் பாடுவது.

**வக்கிரன்** — செவ்வாயின் பெயர். அங்காரகன் காண்க.

**வருஷங்கள்** — பாரதவருஷம், கிம்புருஷவருஷம், ஹரிவருஷம், இளாவிருத வருஷம், ரம்யகவருஷம் ஐரணவத வருஷம், குருவருஷம்.

**விடுகாதழகிய பெருமாள்** — அஞ்சியின் வமிசத்தில் வந்தவன். மைசூர் பக்கத்தில் ஆண்டவன்.

# தொகை

ஒருமை (1) — இறையுணர்வு.
மலைநாட்டிலுள்ள சிவாலயம் (1) — திருவஞ்சைக்களம்.
அச்சுவனிதேவர் (2)—நாஸத்யன், தஸ்ரன்.
அயனம் (2)—உத்தராயனம், தக்ஷிணாயனம்.
அவத்தை (2) — கேவலாவத்தை, சகளாவத்தை.
அறம் (2) — இல்லறம், துறவறம்.
ஆயுதவகை (2) — அத்திரம், சத்திரம்.
ஆன்மா (2) — சீவான்மா, பரமான்மா. அவையாவன சரீராவச்சின்னவான்மா - சீவான்மா ; இதரபதார்த்தானவச் சின்னவான்மா-பரமான்மா.
இடம் (2) — செய்யுளிடம், வழக்கிடம்.
இதிகாசம் (2) — 1. பாரதம், இராமாயணம். 2. பாரதம், சிவரகசியம்.
இருமுதுகுரவர் (2) — தாய், தந்தை.
இருமை (2) — இம்மை, மறுமை.
ஈழநாட்டுச் சிவாலயங்கள் (2) — திருக்கோணமலை, திருக்கேதீச்சரம்.
உலகம் (2) — இகலோகம், பரலோகம்.
எச்சம் (2) — பெயரெச்சம், வினையெச்சம்.
எழுத்து (2) — உயிரெழுத்து, மெய்யெழுத்து.
கலை (2) — சூரியகலை, சந்திரகலை.
கந்தம் (2) — நற்கந்தம், துர்க்கந்தம்.
கற்பம் (2) — பதுமகற்பம், சுவேதவாராக கற்பம்.
கிரகணம் (2) — சூரியகிரகணம், சந்திரகிரகணம்.
கூத்து (2) — 1. தேசி, மார்க்கம். பின்னது வடுகு என்றுஞ் சொல்லப்படும். 2. சாந்தி, விநோதம்.
சம்பாஷணை (2) — வினா, விடை.
சவுக்கியம் (2) — இகலோக சவுக்கியம், பரலோக சவுக்கியம்.
சாமானியம் (2) — பரம், அபரம்.
சுடர் (2) — சூரியன், சந்திரன்.
ஞானம் (2) — பரோக்ஷம், அபரோக்ஷம்.
திணை (2) — உயர்திணை, அஃறிணை.
தோற்றம் (2) — சரம், அசரம்.
பக்கம் (2) — சுக்கிலம், கிருட்டினம்.
பஞ்சாங்கம் (2) — வாக்கியம், சித்தாந்தம்.
பாகம் (2) — வாமபாகம், தக்ஷணபாகம்; இவையே இடப்பக்கம், வலப்பக்கம்.
புடம் (2) சூரியபுடம், அக்கினிபுடம்.
போது (2) — பகல், இரவு.
மரபு (2) — தந்தைமரபு, தாய்மரபு.
வினை (2) — நல்வினை, தீவினை.
வைணவாகமம் (2) — வைகானஸம், பாஞ்சராத்திரம்.
அரசர் (3) — சேர, சோழ, பாண்டியர்.
இசை (3) — மந்தரம், மத்திமம், தாரம்.
இடம் (3)—தன்மை, முன்னிலை, படர்க்கை.
இலக்கணை (3) — விட்டவிலக்கணை, விடாதவிலக்கணை, விட்டும்விடாத விலக்கணை.
இனமோனை (3) — வல்லினமோனை, மெல்லினமோனை, இடையினமோனை.
ஈச்சுரான்பிரபுத்துவசாமர்த்தியகுணம் (3) — கர்த்தத்துவம், அகர்த்தத்துவம், அன்னியதாகர்த்தத்துவம்.
உயிரிலுள்ளதீ (3) — உதரத்தீ, விந்துத்தீ, சினத்தீ.
உலகம் (3) — பூலோகம், பரலோகம், பாதாளம்.
கடுகம் (3) — சுக்கு, திப்பிலி, மிளகு.
காலம் (3) — இறப்பு, நிகழ்வு, எதிர்வு.
குணம் (3) — சாத்துவிகம், இராசதம், தாமதம்.
குற்றம் (3) — காமம், வெகுளி, மயக்கம்.
சத்தி (3) — இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி.
சாத்திரம் (3) — சாங்கியம், பாதஞ்சலியம், வேதாந்தம்.
சீவதேகம் (3) — தூலம், சூக்குமம், காரணம்.
சுடர் (3) — சூரியன், சந்திரன், அக்கினி.
தமிழ் (3) — இயல், இசை, நாடகம்.
தானம் (3) — தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம்.
தீ (3) — ஆகவனீயம், தக்கிணாக்கினியம், காருகபத்தியம்.
தொழில் (3)—ஆக்கல், காத்தல், அழித்தல்.
நூல் (3) — முதல், வழி, சார்பு.
பலை (3) — கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய்.
பாவபுண்ணியவழக்கம் (3) — செய்தல், செய்வித்தல், உடன்படல்.
பாவினம் (3)—தாழிசை, துறை, விருத்தம்.
பிணி (3) — வாதம், பித்தம், கபம்.
பேதம் (3) — சுகதபேதம், சுசாதிபேதம், விசாதிபேதம்.

பொறி (3) — மனம், வாக்கு, காயம்.
மண்டலம் (3) — அக்கினி மண்டலம், இரவிமண்டலம், சந்திரமண்டலம்.
மலம் (3) — ஆணவம், கன்மம், மாயை.
முக்கனி (3) — கதலி, மா, பலா.
முத்திவிக்கினம் (3) — அறியாமை, ஐயம், திரிபு.
மும்மை (3) — உம்மை, இம்மை, மறுமை.
மொழி (3) — மெய்கூறல், புகழ்கூறல், பழிகூறல்.
பொருள் (3) — பதி, பசு, பாசம்.
விஷயம் (3) — பிறிதிவிஷயம், துவேக்ஷாவிஷயம், உபேக்ஷாவிஷயம்.
அச்சம் (4) — அணங்கு, விலங்கு, கள்வர், தம்மரசன்.
அரண் (4) — மலை, காடு, மதில், கடல்.
அளவு (4) — எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்.
அழுகை (4) — இளிவு, இழவு, அசைவு, வறுமை.
அனுபந்தம் (4) — விடயம், சம்பந்தம், பிரயோசனம், அதிகாரி.
ஆச்சிரமம் (4)—பிரமசரியம், இல்வாழ்க்கை, வானப்பிரத்தம், சந்நியாசம்.
ஆடூஉக்குணம் (4) — அறிவை, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி.
இழிச்சொல் (4) — குறளை, பொய், கடுஞ்சொல், பயினில் சொல்
இளிவரல் (4) — மூப்பு, பிணி, வருத்தம் மென்மை.
உண்டி (4) — உண்டல், தின்னல், நக்கல், பருகல். அவையாவன சோறு முதலியன உண்டல், கறி முதலியன தின்றல், தேன் முதலியன நக்கல், நீர் முதலியன பருகல்.
உபாயம் (4) — சாமம், தானம், பேதம், தண்டம்.
உவகை (4) — செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு.
உரை (4) — கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை.
ஊறுபாடு (4) — எறிதல், குத்தல், வெட்டல், எய்தல்.
கதி (4) — தேவர், மக்கள், விலங்கு, நாகர்.
கணக்குவகை (4) — தொகை, பிரிவு, பெருக்கு, கழிவு.
கம்பம் (4) — தாலம்பம், வெள்ளை, சாலாங்கம், கற்பரி முதலிய பாஷாணங்கள்.
கரணம் (4) — மனம், புத்தி, அகங்காரம், சித்தம்.
கல்விவருமாறு (4) — கேள்வி, தானுணர்தல், பயிற்சி, ஓதுவித்தல்.
கவிகள் (4) — ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம்.
காதிகள் (4) — ஞானவரணீயம், தரிசனவரணீயம், மோகநீயம், அந்தராயம்.
சதுரங்கம் (4) — தேர், கரி, பரி, காலாள்.
சாந்துவகை (4) — பீதம், கலவை, வட்டிகை, புலி.
சொல்வகை (4) — பெயர், வினை, இடை, உரி.
தோற்கருவி (4) — மத்தளம், தண்ணுமை, இடக்கை, சல்லியம்.
தோற்றம் (4) — பை, முட்டை, நிலம், வியர்வை.
நகை (4) — எள்ளல், இளமை, பேதமை, மடன்.
நிலம் (4) — குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.
நிலை (4) — பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம்.
பண் (4) — பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி.
பதவி (4) — சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம்.
பா (4) — வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.
பிச்சை (4) — சதானிகபிச்சை, தருகணபிச்சை, மாதுகரிபிச்சை, யாசகபிச்சை.
புருஷசாதி (4) — பூசிமாரன், செந்தமாரன், புத்திரசேனன், பாஞ்சாலசேனன்.
புலமையோர் (4) — கவி, கமகன், வாதி, வாக்கி.
பூ (4) — கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதர்ப்பூ.
பெருமிதம்(4) — கல்வி, தறுகண், இசைமை, கொடை.
பெண்கள்பருவம் (4) — வாலை, தருணி, பிரவிடை, விருத்தை.
பெண்வகை (4) — பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி.
பொருள் (4) — அறம், பொருள், இன்பம், வீடு.
பொன்வகை (4) — ஆடகம், கிளிச்சிறை, சாதகம், சாம்பூநதம்.
மகடூஉக்குணம் (4) — நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு,
மருட்கை (4) — புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம்.

**மார்க்கம்** (4) — சரியை, கிரியை, யோகம், ஞானம்.
**யுகம்** (4) — கிரதம், திரேதம், துவாபரம், கலி.
**வேதுளி** — உறுப்பறை, குடிகோள், அலை, கொலை.
**அக்கினி** (5) — இராகம், கோபம், காமம், சடம், தீபனம்.
**அகிற்கூட்டு** (5) — சந்தனம், கருப்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.
**அங்கம்** (5) — திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்.
**அரசர்க்குழு** (5) — மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர்.
**அரசர்க்குறுதிச்சுற்றம்** (5) — நட்பாளர், அந்தணர், மடைத்தொழிலர், மருத்துவக் கலைஞர், நிமித்திகர்.
**அவத்தை** (5) — சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.
**அன்னுவயவிலக்கணம்** (5) — விசேடனம், விசேடியம், கருத்தா, கருமம், கிரியை.
**இலக்கணம்** (5) — எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.
**இலிங்கம்** (5) — பிருதிவிலிங்கங் காஞ்சியில், அப்புலிங்கம் திருவானைக்காவில், தேயுலிங்கந் திருவண்ணாமலையில், வாயுலிங்கஞ் சீகாளத்தியில், ஆகாயலிங்கஞ் சிதம்பரத்தில். இவையே பஞ்சபூதவடிவங்களான பிரதான பஞ்சவிலிங்கம்.
**ஈசான்முகம்** (5) — ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம்.
**உரையிலக்கணம்** (5) — பதம், பதப்பொருள், வாக்கியம், வினா, விடை.
**உலோகம்** (5) — பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.
**எழுத்துத்தானம்** (5) — பாலன், குமரன், அரசன், விருத்தன், மரணம்; இவற்றிற்கு முறையே, அ, ஆ, இ, ஈ, ஐ, உ, ஊ, ஔ, எ, ஏ, ஒ, ஓ. பாட்டுடைத்தலைவன், பேரெழுத்தைப் பாலதானமாகக் கொண்டெண்ணப்படும். இவற்றுள் முன்னைய மூன்று நன்மைபயக்கும்; பின்னையவிரண்டுந் தீமைபயக்கும்.
**ஐங்காயம்** (5) — கடுகு, ஓமம், வெந்தயம், உள்ளி, பெருங்காயம்.
**ஐங்காரம்** (5) — சீனக்காரம், வெங்காரம், பொரிகாரம், சௌக்காரம், நவச்சாரம்.
**ஐம்புலநுகர்ச்சியில்இறப்பன** (5) — மீன், வண்டு, யானை, அசுணம், விட்டில்.
**கனி** (5)—எலுமிச்சை, நாரத்தை, மாதுளை, தமரத்தை, குளஞ்சி.
**கன்னிகை** (5) — அகலிகை, திரௌபதி, சீதை, தாரை, மண்டோதரி.
**குரவர்** (5) — அரசன், உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன்.
**குற்றம்** (5) — கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, மூச்சிடல், அலமரல்.
**கேள்வி** (5) — அறம், பொருள், இன்பம், வீடு, வழிநிற்றல்.
**கைத்தொழில்** (5) — எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்திடல், யாழ்வருடல்.
**சத்தி** (5) — பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி.
**சுத்தி** (5) — ஆன்மசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி.
**திராவிடம்** (5) — துளுவம், மாந்திரம், கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம்.
**திரவியம்உண்டாமிடம்** (5) — மலை, காடு, நாடு, நகர், கடல்.
**திருமால்ஆயுதம்** (5)—சக்கரம், தனு, வாள், தண்டு, சங்கம்.
**துரககதி** (5) — மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, இடபகதி.
**தூபம்** (5) — பச்சைக்கருப்பூரம், குந்துருக்கம், காரகில், சந்தனம், சீதாரி.
**தேவர்** (5) — பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன்.
**பஞ்சமூலம்** (5) — செவ்வியம், சித்திரமூலம், கண்டுபாரங்கி, பேரரத்தை, சுக்கு.
**பட்சி** (5) — வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில். இவற்றிற்கு முறையே எழுத்து அ, இ, உ, எ, ஒ, உண்டி, நடை, அரசு, தூக்கம், சாவு, பிற்பக்கமாகில் உண்டி, சாவு, தூக்கம், அரசு, நடை, சாவு. தூக்கமில்லாத பொழுதறிந்து செய்யுள் முதலியன செய்தல் நன்மை.
**புலன்** (5) — சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
**மயிர்ப்பால்** (5)—முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை.
**மன்றம்** (5) — வெள்ளிடை மன்றம், இலஞ்சிமன்றம், கன்னின்ற மன்றம், பூதசதுக்கம், பாவைமன்றம்.
**யாகம்** (5) — பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுடம்.
**வண்ணம்** (5) — வெண்மை, கருமை, செம்மை, பசுமை.

**வாசம்** (5) — இலவங்கம், ஏலம், கருப்பூ ரம், சாதிக்காய், தக்கோலம்.

**விரை** (5) — கோட்டம், துருக்கம், தகரம், அகில், சந்தனம்.

**விஞ** (5) — அறியான் விஞ, அறிவு ஒப்புக் காண்டல், ஐயமறுத்தல், அறிவுகோடல், மெய்யவற்குக்காட்டல்.

**அகச்சமயம்** (6) — சைவம், பாசுபதம், மா விரதம், காளாமுகம், வாமம், வைரவம்.

**அங்கம்** (6) — படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

**அந்தணர்தொழில்** (6) — ஓதல், ஓதுவித் தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்.

**அரசர்தொழில்** (6) — ஓதல், வேட்டல், ஈதல், ஓம்பல், படையைப் பயிற்றல், போர்செய்தாட்டல்.

**அரசியல்** (6) — அறநிலையறம், மறநிலை யறம், அறநிலைப்பொருள், மறநிலைப்பொ ருள், அறநிலையின்பம், மறநிலையின்பம்.

**ஆதாரம்** (6) — மூலம், சுவாதிட்டானம், மணிபூரகம், அஞகதம், விசுத்தி, ஆக்ஞை.

**ஈச்சுரன்முக்கியகுணம்** (6) — சருவஞ்ஞத்து வம், சருவேச்சுரத்துவம், சருவநியந்திருத் துவம், சருவாந்தரியாமித்துவம், சருவகன் மத்துவம், சருவசத்தித்துவம். அன்றி யும் தன்வயத்தனுதல், முதவிலனுதல், உடம்பிலனுதல், எல்லா நலமு முளனுதல், எங்கும் வியாபகனுதல், எவற்றிற்குங் கார ணனுதல்.

**உட்பகை** (6) — காமம், குரோதம், உலோ பம், மோகம், மதம், மாற்சரியம்.

**உவர்ப்பு** (6) — ஆசியம், இரதி, ஆரதி, சோகம், பயம், குற்சிதம்.

**சக்கிரவர்த்திகள்** (6) — அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுச்சன், புரூர வன், கார்த்தவீரியன்.

**சாத்திரம்** (6) — வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூர்வமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை.

**சிறுபொழுது** (6) — மாலை, யாமம், வைக றை, விடியல், நண்பகல், எற்பாடு.

**சுவை** (6) — கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு.

**தானை** (6) — தேர், பரி, கரி, ஆள், வில், வேல்.

**நாட்டமைதி** (6) — செல்வம், விளைவு, செங் கோல், வளம், குறும்பின்மை, நோயி ன்மை.

**பருவகாலம்** (6) — கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில்.

**புறச்சமயம்** (6) — உலகாயதம், பௌத் தம், ஆருகதம், மீமாம்சம், மாயாவாதம், பாஞ்சராத்திரம்.

**வைசியர்தொழில்** (6) — ஓதல், வேட்டல, ஈதல், ஈட்டல், பசுவைக்காத்தல், ஏருழு தல்.

**ருதுக்கள்** (6) — சித்திரையும் வைகாசியும் வசந்தருது. ஆனியும் ஆடியும் கிரீஷ் மருது. ஆவணியும் புரட்டாசியும் வருஷ ருது. ஐப்பசியும் கார்த்திகையும் சரத்ருது. மார்கழியும் தையும் ஏமந்தருது. மாசியும் பங்குனியும் சிசிருது.

**அகத்திணை** (7) — குறிஞ்சி, முல்லை, மரு தம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந் திணை.

**அவஸ்தை** (7) — கர்ப்பாவஸ்தை, ஜன்மா வஸ்தை, பாலியாவஸ்தை, யௌவஞ வஸ்தை, ஜராவஸ்தை, மரணவஸ்தை, நர காவஸ்தை.

**இசை** (7) — குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.

**இடையெழுவள்ளல்கள்** (7) — அக்குரன், சந்திமான், அந்திமான், சிசுபாலன், தந்த வக்கிரன், கன்னன், சந்தன்.

**உலகம்** (7) — பூலோகம், புவலோகம், சுவ லோகம், மகாலோகம், சனலோகம், தவ லோகம், சத்தியலோகம்.

**உலோகம்** (7) — செம்பொன், வெண் பொன், இரும்பு, ஈயம், வெண்கலம், தரா.

**எழுமத நீர்** (7) — 1. கன்னமிரண்டு, கண் ணிரண்டு, கரத்துவாரமிரண்டு, கோசம் ஒன்று என்னும் ஏழிடத்திலிருந்து யானை க்கு தோன்றும் மதநீர்.

2. உடம்படல், மறுத்தல், பிறர்தம்மத மேற்கொண்டு களைவு, தாஅனுட்டித் தனுதுநிறுப்பு, இருவர் மாறுகோளொரு தலைதுணிவு, பிறர்நூற்குற்றங்காட்டல், பிறிதொடுபடாஅன் றன்மதங்கொளல்.

**எழுவகையளவை** (7) — நிறுத்தளத்தல், பெய்தளத்தல், சார்த்தியளத்தல், நீட்டி யளத்தல், தெறித்தளத்தல், தேங்கமுகந் தளத்தல், எண்ணியளத்தல்.

**கடல்** (7) — உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்.

**கடையெழுவள்ளல்** (7) — எழினி, ஓரி, காரி, நள்ளி, பாரி, பேகன், மலையன்.

**கீழேழுலகம்** (7) — அதலம், விதலம், சுதலம், தாராதலம், ரசாதலம், மகாதலம், பாதலம்.

**கொங்குநாட்டுச் சிவாலயங்கள்** (7) — திருவெஞ்சமாக்கூடல், திருக்கருவூர்த்திருவானிலை, திருப்பாண்டிக்கொடுமுடி, திருச்செங்குன்றூர், திருநணா, திருமுருகன்பூண்டி, திருப்புக்கொளியூர்.

**சத்தவிடங்கத்தலம்** (7) — திருவாரூர், நாகபட்டினம், திருநள்ளாறு, திருமறைக்காடு, திருக்காரூயில், திருவாய்மூர், திருக்குவளை.

**சிரஞ்சீவியர்** (7) — அசுவத்தாமன், மாபலி, வியாசன், அநுமான், விபீடணன், மார்க்கண்டன், பரசிராமன்.

**சுரம்** (7) — ச, ரி, க, ம, ப, த, நி; அன்றியுமேழிசை காண்க.

**தாதுக்கள்** (7) — இரதம், உதிரம், எலும்பு, தோல், இறைச்சி, மூளை, சுக்கிலம்.

**தாளம்** (7) — துருவம், மட்டியம், ரூபகம், சம்பை, திரிபுடை, அடதாளம், ஏகதாளம்.

**தீவு** (7) — சம்புத்தீவு, பிலக்ஷத்தீவு, குசத்தீவு, கிரவுஞ்சத்தீவு, சாகரத்தீவு, சான்மலித்தீவு, புட்கரத்தீவு.

**நதி** (7) — கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி.

**நாகவட்டம்** (7) — தமப்பிரபை, இமப்பிரபை, வாலுகப்பிரபை, சாகரப்பிரபை, இரத்தப்பிரபை, அழற்பிரபை. அவையாவன, முறையே இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீநிறைந்தனவாம்.

**நாட்டுக்குற்றம்** (7) — தொட்டியர், கள்வர், யானை, பன்றி, விட்டில், கிள்ளை, பெருமழை.

**பதார்த்தம்** (7) — திரவியம், குணம், கருமம், சாமானியம், விசேடம், சமவாயம், அபாவம்.

**பாதகம்** (7) — ஆங்காரம், உலோபம், காமம், பகை, போசனப்பிரியம், காய்தல், சோம்பல்.

**பிறப்பு** (7) — தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, நிற்பன.

**புரி** (7) — அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை.

**பெண்கள்பருவம்** (7)—பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்.

**மண்டலம்** (7) — வாயு, வாருணம், சந்திரன், சூரியன், நட்சத்திரம், அக்கினி, திரிசங்கு.

**மாதர்** (7) — அபிராமி, மாயேச்சுவரி, கௌமாரி, நாராயணி, வாராகி, இந்திராணி, காளி.

**முதலேழுவள்ளல்** (7) — குமுணன், சகரன், சகாரன், செம்பியன், துந்துமாரி, நளன், நிருதி.

**முனிவர்** (7) — அத்திரி, குச்சன், கௌதமன், பிருகு, காசிபன், அங்கிரா, வசிட்டன்.

**மேகம்** (7) — சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளாமுகில், நீலவருணம்.

**வித்தியாதத்துவம்** (7) — காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை.

**அட்டபுட்பம்** (8) — புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை.

**அட்டவீரட்டம்** (8) — கண்டியூர், கடவூர், அதிகை, வழுவூர், பறியலூர், கோவலூர், குறுக்கை, விற்குடி.

**அநகனெண்குணம்** (8) — கடையிலாவறிவு, கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம், கடையிலாவின்பம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு.

**அளவை** (8) — காட்சி, அநுமானம், ஆகமம், அருத்தாபத்தி, உபமானம், அபாவம், சம்பவம், ஐதிகம்.

**அஷ்டகல்யாணி** (8) — நான்குகால்கள், முகம், தலை, வால், மார்பு.

**அஷ்டபந்தனம்** (8) — சுக்கான்கல், கொம்பரக்கு, சாதிலிங்கம், செம்பஞ்சு, தேன்மெழுகு, எருமைவெண்ணெய், குங்கிலியம், நற்காவி.

**அஷ்டமாந்தம்** (8) — செரியாமாந்தம், போர்மாந்தம், மலடிமாந்தம், பெருமாந்தம், வாதமாந்தம், சுழிமாந்தம், வலிமாந்தம், கணமாந்தம்.

**ஈசுரனதுகுணங்கள்** (8) — தனவயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகப் பாசங்களினின்று நீங்குதல், பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை, முடிவிலாற்றலுடைமை.

**எட்டுத்தொகை** (8) — நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து,

பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

**எண்சுவைத்தமிழ்** (8) — சிங்காரம், வீரியம், பெருநகை, கருணை, ரௌத்திரம், குற்சை, அற்புதம், பயம்.

**எண்பதம்** (8) — நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, துவரை, இராகி.

**எண்ணுவகைவிடை** (8) — சுட்டுவிடை, மறைவிடை, நேர்விடை, ஏவல்விடை, வினாவிடை, உற்றதுரைத்தல்விடை, உறுவதுகூறல்விடை, இனமொழிவிடை.

**ஐசுவரியம்** (8) — தனம், தானியம், நிதி, பசு, புத்திரர், வாகனம், சத்தம், தைரியம்.

**துய்யதராட்டகபுவனம்** (8) — கயை, குருக்கேத்திரம், நாகலம், நகலம், விமலம், அட்டகாசம், மகேந்திரம், பீமேசம்.

**குறிஞ்சியாழ்த்திறம்** (8) — நைவளம், காந்தாரம், படுமலை, பஞ்சுரம், மருள், அயிர்ப்பு, அராற்று, செந்திறம்.

**சித்தி** (8)—அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிரார்த்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்.

**மெய்ப்பாடு** (8) — நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை.

**போகம்** (8) — பெண், ஆடை, அணிகலன், உண்டி, தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

**இரதம்** (9) — சிங்காரம், வீரியம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம்.

**இராட்சதகணம்** (9) — கார்த்திகை, ஆயிலியம், மகம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம்.

**கீழ்நோக்குநாள்** (9) — உரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி.

**தாரணை** (9) — நாமதாரணை, வச்சிரதாரணை, மாயாதாரணை, சித்திரதாரணை, செய்யுட்டாரணை, ஒண்பொருட்டாரணை, சத்ததாரணை, வத்துத்தாரணை, சதுரங்கதாரணை.

**தாளம்** (9) — அரிதாளம், அருமதாளம், சமதாளம், சயதாளம், சித்திரதாளம், துருவதாளம், நிவிர்த்திதாளம், படிமதாளம், விடதாளம்; இவையே நவசந்திதாளம்.

**திரவியம்** (9) — பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம்.

**நிதி** (9) — சங்கம், பதுமம், மகாபதுமம், மகரம், கச்சபம், முகுந்தம், குந்தம், நீலம், வரம்.

**அரசற்குரியதசாங்கம்** (10) — மலை, யாறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, முரசு, கொடி, செங்கோல்; இவை அரசற்குரிய தசாங்கம்.

**ஆண்பாற்பிள்ளைத்தமிழ்** (10) — காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர்.

**கமகம்** (10) — ஆரோகணம், அவரோகணம், டாலு, ஆந்தோளம், ஸ்புரிதம், ஆகதம், மூர்ச்சனை, திரிபுச்சம், பிரத்தியாகதம், கம்பிதம்.

**கலியாணப்பொருத்தம்** (10) — 1. நட்சத்திரப்பொருத்தம், கணப்பொருத்தம், மகேந்திரப்பொருத்தம், ஸ்திரீதீர்க்கப்பொருத்தம், யோனிப்பொருத்தம், இராசிப்பொருத்தம், இராசியதிபதிப்பொருத்தம், வசியப்பொருத்தம், வேதைப்பொருத்தம், இரச்சுப்பொருத்தம்.

**கனராகம்** (10)—நாட்டை, சாரங்கநாட்டை, கேதாரநாட்டை, வராளி, ஆரபி, பௌளம், கௌளம், ரீதிகௌளம், நாராயணகௌளம், நீராகம்.

**காவியகுணம்** (10) — செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில்பொருண்மை, காந்தம், வலி, சமாதி.

**சேனைத்தொகை** (10) — பதாதி, சேனாமுகம், குமுதம், கணகம், வாகினி, பிரளயம், சமுத்திரம், சங்கம், அநிகம், அக்கோணி. அவையாவன யானை, தேர், குதிரை, காலாள் இவை கூடியது பதாதி; பதாதி மும்மடிகொண்டது சேனாமுகம்; சேனாமுகம் மும்மடி குமுதம்; குமுதம் மும்மடி கணம்; கண மும்மடி வாகினி; வாகினி மும்மடி பிரளயம் ; பிரளய மும்மடி சமுத்திரம்.

**பத்துப்பாட்டு** (10) — குறிஞ்சிப்பாட்டு, சிறுபாணாற்றுப்படை, திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம், முல்லைப்பாட்டு.

**பெண்பாற்பிள்ளைத்தமிழ்** (10) — காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, அம்மானை, நீராடல், ஊசல்.

**பாண்டிநாட்டுச்சிவாலயங்கள் (14)** — திருவாலவாய், திருவாப்பனூர், திருப்பரங்குன்றம், திருவேடகம், கொடுங்குன்றம், திருப்புத்தூர், திருப்புனவாயில், இராமேச்சுரம், திருவாடானை, திருக்கானப்பேர், திருப்பூவணம், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருநெல்வேலி.

**மனுக்கள் (14)** — சுவாயாம்புவமனு, சுவரோஷிஷமனு, உத்தமமனு, தாமசமனு, ரைவதமனு, சூரிய சாவரண்ணிமனு, தட்சசாவரணிகமனு, பிரம்மசாவர்ணிகமனு, தர்மசாவர்ணிகமனு, புத்திரசாவர்ணிகமனு, வேதசாவர்ணிகமனு, இந்திர சாவர்ணிகமனு, சாட்சுசமனு, வைவசுதமனு.

**குடிமக்கள் (18)** — வண்ணான், நாவிதன், குயவன், தட்டான், கன்னான், கற்றச்சன், கொல்லன், தச்சன், எண்ணெய்வாணிகன், உப்புவாணிகன், இலைவாணிகன், பள்ளி, பூமாலைக்காரன், பறையன், கோவிற்குடியான், ஒச்சன், வலையன், பாணன்.

**கூலம் (18)** — நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, துவரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உளுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை, காராமணி முதலிய பதினெண்வகைப்படும்.

**பதினெண்கீழ்க்கணக்கு (18)** — ஆசாரக்கோவை, இனியாநாற்பது, இன்னாநாற்பது, ஏலாதி, ஐந்திணையெழுபது, ஐந்திணையைம்பது, களவழிநாற்பது, கார்நாற்பது, கைந்நிலை, சிறுபஞ்சமூலம், திணைமாலை நூற்றைம்பது, திணைமொழியைம்பது, திரிகடுகம், நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, முதுமொழிக்காஞ்சி, திருக்குறள்.

**சுப்பிரமணியர்தலங்கள் (20)** — திருவேரகம், எட்டுகுடி, கதிர்காமம், திருச்சீரலைவாய், திருவள்ளியூர், திருவாவினன்குடி, பழநி, திருப்பரங்குன்றம், சோலைமலை, வெண்ணெய்மலை, சென்னிமலை, சிவமலை, மருதமலை, மயிலம், திருத்தணி, காட்டாவூர், திருப்போரூர், இளையனூர்வேலூர், நெடியம், ஆண்டார்குப்பம், திருச்சேய்ஞலூர்.

**உபநிடதம் (32)** — ருத்திரம், பிரகதாரண்யம், சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமாங்கிசம், பாற்கரம், பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பருவபஞ்சம், பிரமசாபாலம், தேசோபிந்து, வார்ச்சியாநீயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசிராயநீயம், சௌனகீயம், சவசங்கற்பம், சிரவணம், பாராகம், கிம்புரோடியம், மண்டூகம், முண்டிாம், மௌண்டிரம்.

**தொண்டைநாட்டுச் சிவாலயங்கள் (32)** — திருவேகம்பம், திருமேற்றளி, திருவோணகாந்தன்றளி, கச்சி யனேகதங்காவதம், கச்சிநெறிக்காரைக்காடு, குரங்கணின்முட்டம், திருமாகறல், திருவோத்தூர், வன்பார்த்தான் பனங்காட்டூர், வல்லம், திருமாற்பேறு, திருவூறல், இலம்பையங்கோட்டூர், திருவிற்கோலம், திருவாலங்காடு, திருப்பாச்சூர், திருவெண்பாக்கம், திருகள்ளில், திருக்காளத்தி, திருவொற்றியூர், வலிதாயம், வடதிருமுல்லைவாயில், திருவேற்காடு, மயிலாப்பூர், திருவான்மியூர், திருக்கச்சூ ராலக்கோயில், திருவிடைச்சுரம், திருக்கழுக்குன்றம், அச்சிறுபாக்கம், திருவக்கரை, அரசிலி, இரும்பைமாகாளம்.

**இணையாவினைக்கை (33)** — பதாகை, திரிபதாகை, கத்தரிகை, தூபம், அராளம், இளம்பிறை, சுகதுண்டம், முட்டி, கடகம், சூசி, கமலகோசிகம், காங்கூலம், கபித்தம், விற்பிடி, டேங்கை, அலாபத்திரம், பிரமரம், தாம்பிரசூடம், பிசாசம், முகுளம், பிண்டி, தெரிநிலை, மெய்ந்நிலை, உன்னம், மண்டலம், சதுரம், மான்றலை, சங்கு, வண்டு, இலதை, கபோதம், மகரம், வலம்புரி.

**அலங்காரம் (35)** — தன்மை, உவமை, உருவம், திவகம், பின்வருநிலை, முன்னவிலக்கு, வேற்றுப்பொருள் வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரநிறை, ஆர்வமொழி, சுவை, தன்மேம்பாட்டுரை, பரியாயம், சமாயுதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக்கூட்டம், விரோதம், புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனை, வாழ்த்து, சங்கீரணம், பாவிகம்.

**எண்ணின் வதப்பு (36)** — ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பதினாயிரம், இலக்கம், பத்திலக்கம், கோடி, பத்துக்கோடி, நூறுகோடி, அர்ப்புதம், நிகர்ப்புதம், கர்வம், மகாகர்வம், பதுமம், மகாபதுமம், சங்

கம், மகாசங்கம் க்ஷோணி, மகாக்ஷோணி, க்ஷிதி, மகாக்ஷிதி, க்ஷோபம், மகாக்ஷோபம், பரார்த்தம், சாகரம், பரதம், அசிந்தியம், அத்தியந்தம், அனந்தம், பூரி, மகாபூரி, அப்பிரமேயம், அதுலம், அகம்மியம், அவ்வியத்தம்.

**காவேரிக்கு வடகரையிலுள்ள சிவாலயங்கள் (63)** — தில்லை, திருவேட்களம், திருநெல்வாயில், திருக்கழிப்பாலை, திருநல்லூர்ப்பெருமணம், திருமயேந்திரப்பள்ளி, திருமுல்லைவாயில், திருக்கலிக்காமூர், திருச்சாய்க்காடு, திருப்பல்லவனீச்சரம், திருவெண்காடு, திருக்காட்டுப்பள்ளி, திருக்குருகாவூர், சீர்காழி, திருக்கோலக்கா, புள்ளிருக்கு வேளூர், குருமாணக்குடி, திருக்கடைமுடி, திருநின்றியூர், திருப்புன்கூர், நீடூர், அன்னியூர், வேள்விக்குடி, எதிர்கொள்பாடி, திருமணஞ்சேரி, குறுக்கை, கருப்பறியலூர், குரக்குக்கா, வாழ்கொளிபுற்றூர், திருப்பழமண்ணிப் படிக்கரை, ஓமாம்புலியூர், கானாட்டுமுள்ளூர், திருநாரையூர், கடம்பூர், பந்தணைநல்லூர், கஞ்சனூர், திருக்கோடிக்கா, திருமங்கலக்குடி, திருப்பனந்தாள், திருவாய்ப்பாடி, திருச்சேய்ஞலூர், திருந்துதேவன்குடி, திருவியலூர், கொட்டையூர், இன்னம்பர், திருப்புறம்பயம், விஜயமங்கை, திருவைகாவூர், வடகுரங்காடுதுறை, திருப்பழனம், திருவையாறு, திருநெய்த்தானம், பெரும்புலியூர், திருமழபாடி, திருவழுவூர், கானூர், அன்பிலாலந்துறை, மாந்துறை, திருப்பாற்றுறை, திருவானைக்கா, திருப்பைஞ்ஞீலி, திருப்பாச்சிலாச்சிராமம், ஈங்கோய்மலை.

**ஆசாரியபுருஷர்கள் (74)** — திருக்குருகைப்பிரான், கூரத்தாழ்வான், நடாதூராழ்வான், எங்களாழ்வான், தெற்காழ்வான், இளையாழ்வான், கோமடத்தாழ்வான், சேட்டலூராழ்வான், வேதாந்தியாழ்வான், அனந்தாழ்வான், நடுவிலாழ்வான், மிளகாழ்வான், நெய்யுண்டாழ்வான், உக்கலாழ்வான், திருக்கோவலூராழ்வான், திருமோகூராழ்வான், கோயிலாழ்வான், அருணபுரத்தாழ்வான், கணியனூர் சிறியாழ்வான், திருமலைநல்லான், கிடாம்பியாச்சான், வங்கிபுரத்தரசன், ஈச்சம்பாடியாச்சான், கொங்கிலாச்சான், திருக்கண்ணபுரத்தாச்சான், எம்பார், சிறிய கோவிந்தப்பெருமாள், கிடாம்பிப்பெருமாள், அம்மங்கிப் பெருமாள், ஆசூரிப் பெருமாள், பிள்ளையப்பன், பிள்ளைத்திருமலைநம்பி, வங்கிபுரத்துநம்பி, சொட்டைநம்பி, முடும்பைநம்பி, பராங்குசநம்பி, திருக்குறுங்குடிநம்பி, தொண்டனூர்நம்பி, அருணபுரத்துநம்பி, மருதூர்நம்பி, மழையூர்நம்பி, வடுகநம்பி, குரவிநம்பி, புண்டரிகாக்ஷர், முதலியாண்டான், கந்தாடையாண்டான், மாருதியாண்டான், மதுரையாண்டான், ஈயுண்ணியாண்டான், சோமாசியாண்டான், ஸ்ரீயராண்டான், ஈசாண்டான், பெரியாண்டான், சிறியாண்டான், அம்மங்கியாண்டான், ஆளவந்தாராண்டான், சுந்தரத்தோளுடையார், உக்கலம்மாள், பரித்திக்கொல்லையம்மாள், சொட்டையம்மாள், முடும்பையம்மாள், வைத்தமாநிதியார், பராசரபட்டர், சீராமபிள்ளைப்பட்டர், சிறுப்பள்ளி தேவராஜ பட்டர், பிள்ளைபுறந்தையுடையார், பிள்ளை திருவாய்மொழியரையர், பிள்ளை திருநாரையூரரையர், பிள்ளை ராஜமேகந்திரம் பெருமாளரையர், அதிகாரிப்பிள்ளை, திருநகரிப்பிள்ளை, குமான்பேரப்பிள்ளை, ஆநந்தசோமயாஜியார், காஞ்சி சோமயாஜியார்.

**அஷ்டோத்தரசதோபநிடதம் (108)** — ஐதரேயம், கௌஷிதகி, நாதவிந்து, ஆத்மப்பிரபோதம், நிருவாணம், முத்கலை, அட்சமாலிகை, திரிபுரை, சௌபாக்கியம், பகுவிருசம், கடவல்லி, தைத்திரியம் பிரமம், கைவல்லியம், சுவேதாச்சுவதரம், கர்ப்பம், நாராயணம், அமிர்தவிந்து, அமிர்தநாதம், காலாக்கினிருத்திரம், க்ஷுரிகை, சர்வசாரம், சுகரகசியம், தேசோவிந்து, தியானவிந்து, பிரமவித்தியை, யோகதத்துவம், தட்சணாமூர்த்தி, ஸ்கந்தம், சாரீரகம், யோகசிகை, ஏகாட்சரம், அட்சி, அவதூதம், கடருத்திரம், உருத்திரகிருதயம், யோககுண்டலினி, பஞ்சப்பிரமம், பிராணாக்கினி கோத்திரம், வராகம், கலிசந்தாரணம், சரசுவதி, ஈசாவாசியம், பிருகதாரணியம், ஜாபாலம், அம்சம், பரமகம்சம், சுபாலம், மந்திரிகை, நிராலம்பம், திரிசிகி, மண்டலம், அத்துவயதாரகம், பைங்கலம், பிட்சு, துரியாதீதம், தைத்தியாத்துமம், தாரசாரம், யாஞ்ஞவல்கியம், சாட்டியாயனி, முத்திகம், கேனம், சாந்தோக்கியம், ஆருணி, மைத்திராயணி, மைத்திரேயி, வச்சிரசூசி, யோகசூடாமணி, வாசுதேவம், மகத்து, சந்நியாசம், அவ்வியக்தம், குண்டகை, சாவித்திரி, உருத்திராட்ச

சாபாலம், தரிசனம், ஜாபாலி, பிரச்சினம், முண்டகம், மாண்டூக்கியம், அதர்வசிரசு, அதர்வசிகை, பிருகச்சாபாலம், நிருசிம்மதாபினி, நாரதபரிவிராசகம், சீதை, சரபம், திரிபாத்விபூதி, மகாநாராயணம், இராமரகசியம், இராமதாபினி, சாண்டில்லியம், பரமகம்ச பரிவிராசகம், அன்னபூரணை, சூரியன், ஆத்மம், பாசுபதம், பரப்பிரமம், திரிபுராதாபினி, தேவி, பாவனை, பஸ்மஜாபாலம், கணபதி, மகாவாக்கியம், கோபாலதாபனம், கிருஷ்ணம், அயக்கிரிவம், தத்தாத்திரேயம், காருடம்.

**காவிரிக்குத்தென்கரையிலுள்ள சிவாலயங்கள்(127)**—வாட்போக்கி, கடம்பந்துறை, திருப்பராய்த்துறை, கற்குடி- முக்கீச்சரம், திருச்சிராப்பள்ளி, எறும்பியூர், நெடுங்களம், மேலைத்திருக்காட்டுப்பள்ளி, ஆலம்பொழில், திருப்பூந்துருத்தி, கண்டியூர், சோற்றுத்துறை, திருவேதிகுடி, தென்குடித்திட்டை, புள்ளமங்கை, சக்கிராப்பள்ளி, திருக்குருகாவூர், திருப்பாலைத்துறை, நல்லூர், ஆவூர்ப்பசுபதீச்சரம், திருச்சத்திமுற்றம், பட்டீச்சரம், திருப்பழையாறைவடதளி, திருவலஞ்சுழி, குடமூக்கு, குடந்தைக் கீழ்க்கோட்டம், திருக்குடந்தைக் காரோணம், திருநாகேச்சுரம், திருவிடைமருதூர், தென்குரங்காடுதுறை, திருநீலக்குடி, வைகன்மாடக்கோயில், திருநல்லம், திருக்கோழம்பம், திருவாவடுதுறை, திருத்துருத்தி, திருவிடைமருதூர், திருமயிலாடுதுறை, விளநகர், திருப்பறியலூர், திருச்செம்பொன்பள்ளி, திருநனிபள்ளி, திருவலம்புரம், தலைச்சங்காடு, திருவாக்கூர்த்தான்றோன்றிமாடம், திருக்கடவூர், திருக்கடவூர்மயானம், திருவேட்டக்குடி, தெளிச்சேரி, தருமபுரம், திருநள்ளாறு, கோட்டாறு, திருவம்பர் பெருந்திருக்கோயில், திருவம்பர்மாகாளம், திருமீயச்சூர், திலதைப்பதி, திருப்பாம்புரம், சிறுகுடி, திருவீழிமிழலை, வன்னியூர், கருவிலி, பேணுபெருந்துறை, திருநறையூர், அரிசிற்கரைப்புத்தூர், சிவ:புரம், கலையநல்லூர், கருக்குடி, திருவாஞ்சியம், திருநன்னிலத்துப்பெருங்கோயில், திருக்கொண்டீச்சரம், திருப்பனையூர், திருவிற்குடி, திருப்புகலூர், திருப்புகலூர்வர்த்தமானீச்சரம், திருக்கண்ணபுரம், திருப்பயற்றூர், திருச்செங்காடு, திருமருகல், திருச்சாத்தமங்கைஅயவந்தி, நாகைக்காரோணம், சிக்கல், கீழ்வேளூர், தேவூர், திருவாரூர், பள்ளியின்முக்கூடல், திருவாரூரரநெறி, திருவிளமர், திருவாரூர்பரவையுண்மண்டளி, கரவீரம், பெருவேளூர், தலையாலங்காடு, குடவாயில், திருச்சேறை, நாலூர்மயானம், கடுவாய்க்கரைப்புத்தூர், இரும்பூளை, அரதைப்பெரும்பாழி, அவளிவணல்லூர், பரிதிநியமம், வெண்ணியூர், பூவனூர், பாதாளீச்சரம், திருக்களர், சிற்றேமம், திருவுசாத்தானம், இடும்பாவனம், கடிக்குளம், தண்டலைநீணெறி, கோட்டூர், வெண்டுறை, கொள்ளம்பூதூர், பேரெயில், கொள்ளிக்காடு, தெங்கூர், நெல்லிக்கா, நாட்டியத்தான்குடி, காறுயல், கன்றாப்பூர், வலிவலம், கைச்சினம், கோளிலி, திருவாய்மூர், திருமறைக்காடு, அகத்தியான்பள்ளி, கோடிக்குழகூர்.

# பொது

## அமிருதாதி யோகங்கள்

**அமிர்தயோகம்** — (**ஞாயிறு**) உத்திரம், அஸ்தம், மூலம், உத்திராடம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி. (**திங்கள்**) ரோகணி, மிருகசீரிடம், புனர்பூசம், சுவாதி, திருவோணம். (**செவ்வாய்**) ரோகணி, உத்திரம், மூலம், உத்திரட்டாதி. (**புதன்**) கிருத்திகை, பூரம், உத்திரம், அனுஷம், பூராடம், உத்திராடம், பூரட்டாதி. (**வியாழன்**) அசுவனி, புனர்பூசம், பூசம், மகம், சுவாதி. (**வெள்ளி**) அசுவனி, அஸ்தம், மூலம், ரேவதி. (**சனி**) கிருத்திகை, ரோகணி, மகம், சுவாதி, சதயம்.

**சித்தயோகம்** — (**ஞாயிறு**) அசுவனி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், பூரம், சித்திரை, சுவாதி, பூராடம், சதையம், பூரட்டாதி. (**திங்கள்**) அசுவனி, பரணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், உத்திரம், அஸ்தம், அனுஷம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி. (**செவ்வாய்**) அசுவனி, பரணி, கிருத்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், பூராடம், திருவோணம், அவிட்டம், ரேவதி. (**புதன்**) பரணி, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, திருவோணம், சதயம், உத்திரட்டாதி (**வியாழம்**) பரணி, ஆயிலியம், பூரம், அஸ்தம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி. (**வெள்ளி**) பரணி, கிருத்திகை, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூரம், உத்திரம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், உத்திராடம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி. (**சனி**) அசுவனி, பரணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், பூரம், விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், உத்திரட்டாதி.

இவ்விரண்டும் சுப யோகங்கள்.

**உத்பாதயோகம்**—(**ஞாயிறு**) விசாகம். (**திங்கள்**) பூராடம். (**செவ்வாய்**) கேட்டை, (**புதன்**) ரேவதி. (**வியாழம்**) ரோகிணி, (**வெள்ளி**) பூசம். (**சனி**) உத்திரம்.

**மிரபலாநிஷ்டயோகம்**—(**ஞாயிறு**) பர. (**திங்கள்**) சித்தி. (**செவ்வாய்**) உத்திராடம். (**புதன்**) அவிட்டம். (**வியாழம்**) கேட்டை. (**வெள்ளி**) பூராடம். (**சனி**) ரேவதி.

**மரணயோகம்** — (**ஞாயிறு**) மகம், அனுஷம், கேட், அவிட்டம். (**திங்கள்**) கிருத், மகம், விசாகம், உத்திராடம். (**செவ்வாய்**) திருவா, விசாக, சதய, பூரட்டாதி. (**புதன்**) அசு, அஸ்தம், மூலம். (**வியாழம்**) கிருத், மிரு, திருவா, உத்திர, சதயம். (**வெள்ளி**) ரோகிணி, ஆயிலியம், மகம், கேட்டை, திருவோணம். (**சனி**) ஆயிலியம், அஸ்தம், சித்திரை, பூரட்டாதி.

**இம்மூன்றும் அசுப யோகங்கள்.**

## ஆநந்தாதி யோகம்

| ஞாயி. | திங்க. | செவ். | புதன் | வியா. | வெள். | சனி. | யோகம். | பலம். | நாமநக்ஷத்திர எழுத்துக்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அசு | மிருக | ஆயி | அத்த | அநு | உத்ரா | சதய | ஆநந்தம் | தனலாபம் | சு-சே-சோ-ல |
| பர | திரு | மகம் | சித்தி | கேட் | அபி | பூரட் | காலதண்ட | விக்கினம் | லி-லு-லே-லோ |
| கார்த் | புனர் | பூரம் | சுவா | மூலம் | திருஓ | உத்ர | தர்மம் | காரியசித்தி | ஆ-இ-ஊ-எ |
| ரோகி | பூசம் | உத்தி | விசா | பூரா | அபி | ரேவ | பிரஜாபதி | சித்திகரம் | ஓ-வ-வீ-வு |
| மிருக | ஆயி | அத்த | அநு | உத்ரா | சதய | அசு | சௌமியம் | தனலாபம் | வே-வோ-க-கி |
| திரு | மகம் | சித்தி | கேட் | அபி | பூரட் | பர | துவாம்க்ஷ | விக்கினம் | கு-க-ங-ச்ச |
| புனர் | பூரம் | சுவா | மூலம் | திருஓ | உத்ர | கார்த் | துவஜம் | வஸ்துலாப | கே-கோ-ஹ-ஹீ |
| பூசம் | உத்தி | விசா | பூரா | அபி | ரேவ | ரோகி | ஸ்ரீவற்சம் | லக்ஷ்மீகரம் | ஹு-ஹே-ஹோ-ட- |
| ஆயி | அத்த | அநு | உத்ரா | சதய | அசு | மிருக | வஜ்ரம் | கலகம் | டி-டு-டே-டோ |
| மகம் | சித்தி | கேட | அபி | பூரட் | பர | திரு | முத்கரம் | காரீயஹா | ம-மி-மு-மே |
| பூரம் | சுவா | மூலம் | திருஓ | உத்ர | கார்த் | புனர் | க்ஷத்திரம். | சௌக்கிய | மோ-ட-டி-டு |
| உத்தி | விசா | பூரா | அபி | ரேவ | ரோகி | பூசம் | மித்திரம் | பூலாபம் | டே-டோ-ப-பி |
| அத்த | அனு | உத்ரா | சதய | அசு | மிருக | ஆயி | மானஸம் | ராஜபூஜ்யம் | பு-ஷ-ண-ட்ட |
| சித்தி | கேட் | அபி | பூரட் | பர | திரு | மகம் | பத்மம் | மித்திரலா | பே-போ-ர-ரி |
| சுவா | மூலம் | திருஓ | உத்ர | கார்த | புனர் | பூரம் | லம்பம் | போசனலா | ரு-ரே-ரோ-த |
| விசா | பூரா | அபி | ரேவ | ரோகி | பூசம் | உத்தி | உற்பாதம் | துக்ககரம் | தீ-து-தெ-தோ |
| அநு | உத்ரா | சதய | அசு | மிருக | ஆயி | அத்த | மிருத்து | அசுபகரம் | ந-நி-நு-நே |
| கேட் | அபி | பூரட் | பர | திரு | மகம் | சித்தி | காரணம் | சம்பத்கரம் | நோ-ய-யி-யு |
| மூலம் | திருஓ | உத்ர | கார்த் | புனர் | பூரம் | சுவா | சித்தம் | சகலசித்தி | யே-யோ-ப-பி. |
| பூரா | அபி | ரேவ | ரோகி | பூசம் | உத்தி | விசா | சுபம் | சுபப்பிரதம் | பு-த-ப்ப-ட |
| உத்ர | சதய | அசு | மிருக | ஆயி | அத்த | அநு | அமிர்தம் | ஸ்திரலாப | பே-போ-ஜ-ஜீ |
| அபி | பூரட் | பர | திரு | மக | சித்தி | கேட் | முசலம் | அசுபகரம் | |
| திருஓ | உத்ர | கார்த் | புனர் | பூரம் | சுவா | மூலம் | தண்டம் | அசவுக்யம் | க்கீ-க்கு-க்கே-கோ |
| அவி | ரேவ | ரோகி | பூசம் | உத்தி | விசா | பூரா | மாதங்கம் | கஷ்டம் | க-கீ-கு-கே |
| சதய | அசு | மிரு | ஆயி | அத்த | அநு | உத்ரா | ராக்ஷதம் | அபசகுனம் | கோ-ஸ-ஸி-ஸு |
| பூரட் | பர | திரு | மகம் | சித்தி | கேட் | அபி | சரம் | சீக்கிரசித் | ஸே-ஸோ-த-தீ |
| உத்ர | கார்த் | புனர் | பூரம் | சுவா | மூலம் | திருஓ | ஸ்திரம் | தீர்க்கசித் | த-த்த-ஜ்ச-ஞ |
| ரேவ | ரோகி | பூசம் | உத்தி | விசா | பூரா | அபி | வர்த்தமான | லாபகரம் | தே-தோ-ச-சி |

## கௌரி பஞ்சாங்கம்

| கால அளவு | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| முதல்-வரை | பகல் | பகல் | பகல் | பகல் | பகல் | பகல் | பகல் |
| 6 - 7½ | உத்தி | அமிர் | ரோகம் | விஷம் | உத்தி | ரோகம் | விஷம் |
| 7½ - 9 | லாபம் | விஷம் | உத்தி | அமிர் | விஷம் | சோரம் | அமிர் |
| 9 - 10½ | விஷம் | உத்தி | சோரம் | சுகம் | சோரம் | அமிர் | ரோக |
| 10½ - 12 | அமிர் | லாபம் | லாபம் | உத்தி | லாபம் | விஷம் | உத்தி |
| 12 - 1½ | சுபம் | சோரம் | அமிர் | சோரம் | அமிர் | லாபம் | சுகம் |
| 1½ - 3 | தனம் | சுகம் | உத்தி | லாபம் | ரோகம் | சுகம் | லாபம் |
| 3 - 4½ | அமிர் | லாபம் | விஷம் | தனம் | கலகம் | தனம் | தனம் |
| 4½ - 6 | ரோகம் | தனம் | தனம் | அமிர் | சோரம் | அமிர் | லாபம் |

| கால அளவு | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|---|
| முதல்-வரை | இரவு | இரவு | இரவு | இரவு | இரவு | இரவு | இரவு |
| 6 - 7½ | தனம் | ரோகம் | சோரம் | லாபம் | சுகம் | அமிர் | விஷம் |
| 7½ - 9 | சுகம் | லாபம் | உத்தி | ரோகம் | ரோகம் | சோரம் | உத்தி |
| 9 - 10½ | சோரம் | உத்தி | விஷம் | விஷம் | கலகம் | விஷம் | சுகம் |
| 10½ - 12 | விஷம் | தனம் | லாபம் | உத்தி | லாபம் | லாபம் | அமிர் |
| 12 - 1½ | கலகம் | ரோகம் | சோரம் | சுகம் | உத்தி | சுகம் | லாபம் |
| 1½ - 3 | அமிர் | அமிர் | தனம் | தனம் | சோரம் | தனம் | ரோக |
| 3 - 4½ | லாபம் | விஷம் | சுகம் | அமிர் | தனம் | உத்தி | அமிர் |
| 4½ - 6 | ரோகம் | சோரம் | அமிர் | சுகம் | உத்தி | ரோகம் | லாபம் |

## நக்ஷத்திர அதிதேவதை ரஜ்ஜு நாடி முதலியவை

| கணம் | யோனி | ரஜ்ஜு | நாடி | நக்ஷத்திரம் | அதிதேவதை | விருக்ஷம் | பக்ஷி | தசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| தேவம் | குதிரை | பாதம் | ப்ர-பா | அசுவினி | ஸரஸ்வதி | எட்டி | ராசாளி | கே |
| மானுஷ | யானை | ஊரு | ம | பரணி | துர்க்கை | நெல்லி | காக்கை | சுக் |
| ராக்ஷஸ | ஆடு | நாபி | த்வி-பா | கிருத்தி | அக்னி | அகத்தி | மயில் | சூரி |
| மானுஷ | ஸர்ப்பம் | கண்டம் | த்வி-பா | ரோகணி | பிரம்மா | நாவல் | ஆந்தை | சந் |
| தேவம் | ஸர்ப்பம் | சிரசு | ம | மிருகசிரம் | சந்திரன் | கருங் | கோழி | குஜ |
| மானுஷ | நாய் | கண்டம் | ப்ர-பா | ஆதிரை | ருத்திரன் | செகரு | அன்றில் | ரா |
| தேவம் | பூனை | நாபி | ப்ர-பா | புனர்பூசம் | அதிதி | மூங்கில் | அன்னம் | குரு |
| தேவம் | ஆடு | ஊரு | ம | பூசம் | குரு | அரசு | நீர்க்காக் | சனி |
| ராக்ஷஸ | பூனை | பாதம் | த்வி-பா | ஆயில்யம் | சேஷன் | புன்னை | கிச்சிலி | புத |
| ராக்ஷஸ | எலி | பாதம் | த்வி-பா | மகம் | பிதுர்தேவ | ஆல் | ஆண்கழு | கே |
| மானுவ' | எலி | ஊரு | ம | பூரம் | பகன் | பலாசு | பெண்கழு | சுக் |
| மானுவ | பசு | நாபி | ப்ர-பா | உத்திரம் | சூரியன் | அலரி | கிளுவை | சூரி |
| தேவம் | எருமை | கண்டம் | ப்ர-பா | ஹஸ்தம் | சாஸ்தா | அகத்தி | பருந்து | சந் |
| ராக்ஷஸ | புலி | சிரசு | ம' | சித்திரை | துவஷ்டா | வில்வம் | மாங்கொ | குஜ |
| தேவம் | எருமை | கண்டம் | த்வி-பா | ஸ்வாதி | வாயு | மருதம் | தேனீ | ரா |
| ராக்ஷஸ | புலி | நாபி | த்வி-பா | விசாகம் | சிவன் | விளா | செவ்வா | குரு |
| தேவம் | மான் | ஊரு | ம | அனுஷம் | லக்ஷ்மி | மகிழ் | வானம் | சனி |
| ராக்ஷஸ | கலைமான் | பாதம் | ப்ர-பா | கேட்டை | இந்திரன் | பாராய் | சக்ரவா | புத |
| ராக்ஷஸ | நாய் | பாதம் | ப்ர-பா | மூலம் | அசுரர் | மரா | செம்பரு | கே |
| மானுஷ | குரங்கு | ஊரு | ம | பூராடம் | வருணன் | வஞ்சி | பகன் | சுக் |
| மானுஷ | கீரி | நாபி | த்வி-பா | உத்திரா | விநாயகர் | பலா | வலியன் | சூரி |
| தேவம் | குரங்கு | கண்டம் | த்வி-பா | சிரவணம் | விஷ்ணு | எருக்கு | நாரை | சந் |
| ராக்ஷஸ | சிங்கம் | சிரசு | ம | அவிட்டம் | வசுக்கள் | வந்நி | வண்டு | குஜ |
| ராக்ஷஸ | குதிரை | கண்டம் | ப்ர-பா | சதயம் | யமன் | கடம்பு | அண்ட | ரா |
| மானுஷ | சிங்கம் | நாபி | ப்ர-பா | பூரட்டாதி | குபேரன் | தேமா | உள்ளா | குரு |
| மானுஷ | பசு | ஊரு | ம | உத்திரட் | காமதேனு | வேம்பு | கோட் | சனி |
| தேவம் | யானை | பாதம் | த்வி-பா | ரேவதி | சனி | இலுப் | வல்லூ | புத |

### பூர்வபக்ஷம் பகல்

ஞாயிறு, செவ்வாய்

**வல்லூறு** 1. ஜாமம் - ஊண், 2. நடை, 3. அரசு, 4. துயில், 5. சாவு. **ஆந்தை** 1. நடை, 2. அரசு, 3. துயில், 4. சாவு, 5. ஊண். **காகம்** 1. அரசு, 2. துயில், 3. சாவு, 4. ஊண், 5. நடை. **கோழி** 1. துயில், 2. சாவு, 3. ஊண், 4. நடை, 5. அரசு. **மயில்** 1. சாவு, 2. ஊண், 3. நடை, 4. அரசு, 5. துயில்.

திங்கள், புதன்

**ஆந்தை** 1. ஜாமம் - ஊண், 2. நடை, 3. அரசு, 4. துயில், 5. சாவு. **காகம்** 1. நடை, 2. அரசு, 3. துயில், 4. சாவு, 5. ஊண். **கோழி** 1. அரசு, 2. துயில், 3. சாவு, 4. ஊண், 5. நடை. **மயில்** 1. துயில், 2. சாவு, 3. ஊண், 4. நடை, 5. அரசு. **வல்லூறு** 1. சாவு, 2. ஊண், 3. நடை, 4. அரசு, 5. துயில்.

வியாழன்

**காகம்** 1. ஜாமம் - ஊண், 2. நடை, 3. அரசு, 4. துயில், 5. சாவு. **கோழி** 1. நடை, 2. அரசு, 3. துயில், 4. சாவு, 5. ஊண். **மயில்** 1. அரசு, 2. துயில், 3. சாவு, 4. ஊண், 5. நடை. **வல்லூறு** 1. துயில், 2. சாவு, 3. ஊண், 4. நடை, 5. அரசு. **ஆந்தை** 1. சாவு, 2. ஊண், 3. நடை, 4. அரசு, 5. துயில்.

வெள்ளி

**கோழி** 1. ஜாமம் - ஊண், 2. நடை, 3. அரசு, 4. துயில், 5. சாவு. **மயில்** 1. நடை, 2. அரசு, 3. துயில், 4. சாவு, 5. ஊண். **வல்லூறு** 1. அரசு, 2. துயில், 3. சாவு, 4. ஊண், 5. நடை. **ஆந்தை** 1. துயில், 2. சாவு, 3. ஊண், 4. நடை, 5. அரசு, **காகம்** 1. சாவு, 2. ஊண், 3. நடை, 4. அரசு, 5. துயில்.

சனி

**மயில்** 1. ஜாமம் - ஊண், 2. நடை, 3. அரசு, 4. துயில், 5. சாவு. **வல்லூறு** 1. நடை, 2. அரசு, 3. துயில், 4. சாவு, 5. ஊண். **ஆந்தை** 1. அரசு, 2. துயில், 3. சாவு, 4. ஊண், 5. நடை. **காகம்** 1. துயில், 2. சாவு, 3. ஊண், 4. நடை, 5. அரசு. **கோழி** 1. சாவு, 2. ஊண், 3. நடை, 4. அரசு, 5. துயில்.

### பூர்வபக்ஷம் இரவு

ஞாயிறு, செவ்வாய்

**காகம்** 1. ஜாமம் - ஊண், 2. அரசு, 3. சாவு, 4. நடை, 5. துயில். **கோழி** 1. அரசு, 2. சாவு, 3. நடை, 4. துயில், 5. ஊண். **மயில்** 1. சாவு, 2. நடை, 3. துயில், 4. ஊண், 5. அரசு. **வல்லூறு** 1. நடை, 2. துயில், 3. ஊண், 4. அரசு, 5. சாவு. **ஆந்தை** 1. துயில், 2. ஊண், 3. அரசு, 4. சாவு, 5. நடை.

திங்கள், புதன்

**கோழி** 1. ஜாமம் - ஊண், 2. அரசு, 3. சாவு, 4. நடை, 5. துயில். **மயில்** 1. அரசு, 2. சாவு, 3. நடை, 4. துயில், 5 ஊண். **வல்லூறு** 1. சாவு, 2. நடை, 3. துயில், 4 ஊண், 5. அரசு. **ஆந்தை** 1. நடை, 2. துயில், 3. ஊண், 4. அரசு 5. சாவு. **காகம்** 1. துயில், 2. ஊண், 3. அரசு, 4. சாவு, 5. நடை.

வியாழன்

**மயில்** 1. ஜாமம்-ஊண் 2. அரசு, 3. சாவு, 4. நடை, 5. துயில். **வல்லூறு** 1. அரசு, 2. சாவு, 3. நடை, 4. துயில், 5. ஊண். **ஆந்தை** 1. சாவு, 2. நடை, 3. துயில், 4. ஊண், 5. அரசு. **காகம்** 1. நடை 2. துயில், 3. ஊண், 4. அரசு, 5. சாவு. **கோழி** 1. துயில், 2. ஊண், 3 அரசு, 4. சாவு, 5. நடை.

வெள்ளி

**வல்லூறு** 1. ஜாமம் - ஊண், 2. அரசு, 3. சாவு, 4. நடை, 5. துயில். **ஆந்தை** 1. அரசு, 2. சாவு, 3. நடை, 4. துயில், 5. ஊண். **காகம்** 1. சாவு, 2. நடை, 3. துயில், 4. ஊண், 5. அரசு. **கோழி** 1. நடை, 2. துயில், 3. ஊண், 4. அரசு, 5. சாவு. **மயில்** 1. துயில், 2. ஊண், 3. அரசு, 4. சாவு, 5. நடை.

சனி

**ஆந்தை** 1. ஜாமம் - ஊண், 2. அரசு, 3. சாவு, 4. நடை, 5. துயில். **காகம்** 1. அரசு, 2. சாவு, 3. நடை, 4. துயில், 5. ஊண். **கோழி** 1. சாவு, 2. நடை, 3. துயில், 4. ஊண், 5. அரசு. **மயில்** 1. நடை, 2. துயில், 3. ஊண், 4. அரசு, 5. சாவு. **வல்லூறு** 1. துயில், 2. ஊண், 3. அரசு, 4. சாவு, 5. நடை.

(அ) வல்லூறு. (இ) ஆந்தை. (உ) காகம். (எ) கோழி. (ஒ) மயில்.

அபரபக்ஷம் பகல்

திங்கள், சனி

**மயில்** 1. ஜாமம் - ஊண், 2. சாவு, 3. துயில், 4. அரசு, 5. நடை. **கோழி** 1. சாவு, 2. துயில், 3. அரசு, 4. நடை, 5. ஊண். **காகம்** 1. துயில், 2. அரசு, 3. நடை, 4. ஊண், 5. சாவு. **ஆந்தை** 1. அரசு, 2. நடை, 3. ஊண், 4. சாவு, 5. துயில். **வல்லூறு** 1. நடை, 2. ஊண், 3. சாவு, 4. துயில், 5. அரசு.

ஞாயிறு, செவ்வாய்

**கோழி** 1. ஜாமம் - ஊண், 2. சாவு, 3. துயில், 4. அரசு, 5. நடை. **காகம்** 1. சாவு, 2. துயில், 3. அரசு, 4. நடை, 5. ஊண். **ஆந்தை** 1. துயில், 2. அரசு, 3. நடை, 4. ஊண், 5. சாவு. **வல்லூறு** 1. அரசு, 2. நடை, 3. ஊண், 4. சாவு, 5. துயில். **மயில்** 1. நடை, 2. ஊண், 3. சாவு, 4. துயில், 5. அரசு.

புதன்

**காகம்** 1. ஜாமம் - ஊண், 2. சாவு, 3. துயில், 4. அரசு, 5. நடை. **ஆந்தை** 1. சாவு. 2. துயில், 3. அரசு, 4. நடை, 5. ஊண். **வல்லூறு** 1. துயில், 2. அரசு, 3. நடை, 4. ஊண், 5. சாவு. **மயில்** 1. அரசு, 2. நடை, 3. ஊண், 4. சாவு, 5. துயில். **கோழி** 1. நடை, 2. ஊண், 3. சாவு, 4. துயில், 5. அரசு.

வியாழன்

**ஆந்தை** 1. ஜாமம் - ஊண், 2. சாவு, 3. துயில், 4. அரசு, 5. நடை. **வல்லூறு** 1. சாவு, 2. துயில், 3. அரசு, 4. நடை, 5. ஊண். **மயில்** 1. துயில், 2. அரசு, 3. நடை, 4. ஊண், 5. சாவு. **கோழி** 1. அரசு, 2. நடை, 3. ஊண், 4. சாவு, 5. துயில். **காகம்** 1. நடை, 2. ஊண், 3. சாவு, 4. துயில், 5. அரசு.

வெள்ளி

**வல்லூறு** 1. ஜாமம் - ஊண், 2. சாவு, 3. துயில், 4. அரசு, 5. நடை. **மயில்** 1. சாவு, 2. துயில், 3. அரசு, 4. நடை, 5. ஊண். **கோழி** 1. துயில், 2. அரசு, 3. நடை, 4. ஊண், 5. சாவு. **காகம்** 1. அரசு, 2. நடை, 3. ஊண், 4. சாவு, 5. துயில். **ஆந்தை** 1. நடை, 2. ஊண், 3. சாவு, 4. துயில், 5. அரசு.

அபரபக்ஷம் இரவு

திங்கள், சனி

**கோழி** 1. ஜாமம் - ஊண், 2. துயில் 3. நடை, 4. சாவு, 5. அரசு. **மயில்** 1 துயில், 2. நடை, 3. சாவு, 4. அரசு, 5 ஊண். **ஆந்தை** 1. நடை, 2. சாவு, 3. அரசு, 4. ஊண், 5. துயில். **காகம்** 1. சாவு, 2. அரசு, 3. ஊண், 4. துயில், 5. நடை **வல்லூறு** 1. அரசு, 2. ஊண், 3. துயில், 4. நடை, 5. சாவு.

ஞாயிறு, செவ்வாய்

**வல்லூறு** 1. ஜாமம் - ஊண், 2. துயில், 3. நடை, 4. சாவு, 5. அரசு. **கோழி** 1. துயில், 2. நடை, 3. சாவு, 4. அரசு, 5. ஊண். **மயில்** 1. நடை, 2. சாவு, 3. அரசு, 4. ஊண், 5. துயில். **ஆந்தை** 1. சாவு, 2. அரசு, 3. ஊண், 4. துயில், 5. நடை. **காகம்** 1. அரசு, 2. ஊண், 3. துயில், 4 நடை, 5. சாவு.

புதன்

**ஆந்தை** 1. ஜாமம் - ஊண், 2. துயில், 3. நடை, 4. சாவு, 5. அரசு. **காகம்** 1. துயில், 2. நடை, 3. சாவு, 4. அரசு, 5. ஊண். **வல்லூறு** 1. நடை, 2. சாவு, 3. அரசு, 4. ஊண், 5. துயில். **கோழி** 1. சாவு, 2. அரசு, 3. ஊண், 4. துயில், 5. நடை. **மயில்** 1. அரசு, 2. ஊண், 3. துயில், 4. நடை, 5. சாவு.

வியாழன்

**காகம்** 1. ஜாமம் - ஊண், 2. துயில், 3. நடை, 4. சாவு, 5. அரசு. **வல்லூறு** 1. துயில், 2. நடை, 3. சாவு, 4. அரசு, 5. ஊண். **கோழி** 1. நடை, 2. சாவு, 3. அரசு, 4. ஊண், 5. துயில். **மயில்** 1. சாவு, 2. அரசு, 3. ஊண், 4. துயில், 5. நடை, **ஆந்தை** 1. அரசு, 2. ஊண், 3. துயில், 4. நடை, 5. சாவு.

வெள்ளி

**மயில்** 1. ஜாமம் - ஊண், 2. துயில், 3. நடை, 4. சாவு, 5. அரசு. **ஆந்தை** 1. துயில், 2. நடை, 3. சாவு, 4. அரசு, 5. ஊண். **காகம்** 1. நடை, 2. சாவு, 3. அரசு, 4. ஊண், 5. துயில். **வல்லூறு** 1. சாவு, 2. அரசு, 3. ஊண், 4. துயில், 5. நடை. **கோழி** 1. அரசு, 2. ஊண், 3. துயில், 4. நடை, 5. சாவு.

(அ) கோழி. (இ) வல்லூறு. (உ) ஆந்தை. (எ) மயில். (ஒ) காகம்.

# பஞ்சபக்ஷி பலாபலன்கள்

## பூர்வபக்ஷம்

**உண்டியின்பலன்** — "போசன மாகில் பதிவாழும் போனர் மீள்வார் போங்கவலை, காசினி வாழு மழைபொழியுங் களவு மில்லை கதிர்விளையும், பேசினிற் கன்னி பேருகும் பிணியுந் தீரும் பெண்பெறுவாள், வாசி செழும்பொன் வாணிபமாம் மன்னரை வெல்லாய் மாங்குயிலே."

**நடையின்பலன்** — "யாத்திரை யாயினிலகுலையு மொன்னுர் வெல்லா ரிருநிதி போம், காத்திர மில்லாக் கதிர்விளையும் கன்னியர் வாழ்க்கை நன்ருக, மாத்திரை செல்லும் பொருள்கூடா வேட்கை தவிர்ந்து மண்கூடா, சூத்திரஞ் சொன்ன படியாலே சொன்னுர் பெரியோர் சுரிகுழலே."

**அரசின்பலன்**—"அரசே செய்யிற் புவி பேரு மரச ராலே பலனெய்து, முரசு மதிரும் வரிசையுடன் மூண்ட கருமந்தான்விலகும் பரிசும் பெரியோர் திறலிடுவர் பழைய பிணிபோம் பயமில்லை, புரையேநங் களவுந் தான்காணும் போக்கு மில்லை புரிகுழலே."

**தூங்கும்பலன்** — "தூங்கு மாகினேய் மாரு தாரம் போனுர் தாமீளார், ஆங்கே தரும நன்ருகா வரிவை வாழ்க்கைத் தாழ்வாகும், தீங்கே யல்லான் மழைபொழியாச் செந்நெல் விளையாச் சிறுகுழியில், ஓங்கிப் பணமுந் தாராதே யுண்மை யாக உரைத்தோமே."

**மாணத்தின்பலன்** — "துஞ்சு மாகிற் சாவுசெலும் தொலையாப் பிணியுந் தானெய்தும், நெஞ்சி னினைந்த பொருள்கூடா நிதியுங் காணுர் நிலைகுலைவர், வஞ்சி நோயு மிக வுண்டா மனையாள் வெறுப்பு மிகவிண்டாம், கஞ்ச மலரார் குழலாளே கருத்தா யுரைத்த படியறியே."

## அபரபக்ஷம்

**உண்டியின்பலன்**—"கெடுதியு முடனே காணுர் கிளையுடன் வாழ்வு பேரும், கடுகிய பிணியுந் தீருங் கலகமோ சற்று மில்லை, அடைமழை பெருக வுண்டா மகமேற நிற்கும் தன்மை, முடுகிய பயணமில்லை மொழிந்தபின் னுண்ணுங் காலே."

**நடையின்பலன்** — "வெற்றியுஞ் சுக முண் டாகும் வியாதியு மாற்றும் பின்பு, மற்றய கருமந் தானு பயமுமிலை யகமுந் தாழா, உற்றதோர் கெடுதி காணுர் பெரு மழை யுண்டு தாரத், துற்றவர் வரவுங் கூடச் சொல்லும்பின் னடக்கத் தோன்றில்."

**அரசின்பலன்** — "செயமொடு சுகமுமுண்டு சிறந்ததோர் பயணந் தன்னில், புயலொடு மழையு மற்பம் புவிதனிற் கலகமில்லை, இயல்பினுற் பெறலாம் வெற்றி லாபமும் நீடு மாகும், பயம்விளை யாது நாளு மரசுதான் பறவை யாகில்."

**நித்திரையின்பலன்** — "உன்னிடிற் பிணியு மல்லா லொருபிணி யதிக மாகும், மன்னினு மழையோ வில்லை வைததன் கெடுதி காணுந், துன்னிய செஞ்சி ரோடந் தோன்றிடு புங்கஞ் செய்யும், பன்னியே யுதிக்கும் பக்ஷி பயனுட னுறங்கு மாகில்."

**மாணத்தின்பலன்** — "நாவினில் லாப முண்டு நல்லதாங் கரும மெல்லாந், தீவினை படும்பற் நன்றிச் செய்யுநல் வினைக ளாகச், சாவினில் விழுந்த பக்ஷி தனித்துவந் துதிப்ப தாலே, பூவினிற் சிறந்த மாதே புகன்றனர் புள்ளின் நூலே."

### படுபக்ஷி

**பூர்வபக்ஷம் (பகலுக்கும் இரவுக்கும்)**

"இருளே போகசிவா" என்னும் வாக்கியத்தின்படி (அ) வல்லூறு - வியாழம், சனி. (இ) ஆந்தை - ஞாயிறு, வெள்ளி. (உ) காகம், திங்கள். (எ) கோழி - செவ்வாய். (ஒ) மயில்- புதன்.

**அபரபக்ஷம் (பகலுக்கும் இரவுக்கும்)**

"கூரியதோர் வேலோனே" என்னும் வாக்கியத்தின்படி (அ) கோழி - செவ்வாய், (இ) வல்லூறு-திங்கள். (உ) ஆந்தை-ஞாயிறு. (எ) மயில் - வியாழன், (ஒ) சனி. காகம். புதன், வெள்ளி.

**நக்ஷத்திரப்பக்ஷி** -- (பூர்வபக்ஷம் அபரபக்ஷம் இரண்டிற்கும்)

அசுவனி, பரணி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரிடம் **வல்லூறு.**
திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம் **ஆந்தை.**
உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம் **காகம்.**
அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் **கோழி.**
திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி **மயில்.**

# அம்சோற்பத்தி

வியாசர் - பராசருக்கு மச்சகந்தியிடம் பிறந்த விஷ்ணுவம்சம். விதுரர் - மாண்டவ்யர் சாபத்தால் பிறந்தயமாம்சம். சஞ்சயன் என்னும் சூதன் - கவல்கணனுக்குப் பிறந்தான். கர்ணன் - சூர்யனுக்குக் குந்தியிடம் பிறந்தவன். கிருஷ்ணன்-தேவகியிடம் அவதரித்த திருமால். சாத்யகி - சத்யகனுடைய குமாரன். கிருதவர்மா - ஹிருதிகன் குமாரன். துரோணர் - பரத்வாஜ வீர்யம் த்ரோணியென்னும் பாத்திரத்தில் விழப் பிரகஸ்பதியம்சமாகப் பிறந்தவர். கிருபரும் கிருபியும் - கௌதம கோத்திரத்திற் பிறந்த சாத்வானென்பவருக்கு நாணல் தண்டில் இரட்டையாகப் பிறந்த ஏகாதசருத்ராம்சம். திருஷ்டத்யும்நன் - துரோணரை யழிக்கத் தனுசுடன் யாகத்திற் பிறந்த அக்னி. நக்னசித் - பிரகலாத சிஷ்யன். சுபலன் - நக்னசித்தின் குமாரன். உதிஷ்டிரர் - பாண்டுவிற்குக் குந்தியிடம் பிறந்த தர்மதேவ தாம்சம். வீமன் - பாண்டுவிற்குக் குந்தியிடம் வாயுஅம்சத்திற் பிறந்தவன். அருச்சுநன் - பாண்டுவிற்குக் குந்தியிடம் இந்திராம்சத்தாற் பிறந்தவன். நகுலசகாதேவர் ஷை மைத்திரியிடம் அச்விநிதேவாம்சத்தாற் பிறந்தவர்கள். பிரதிவிந்தியன் - யுதிஷ்டிரருக்குப் புத்திரன். சுதசேநன் - வீமன் குமாரன். சுருதகீர்த்தி - அருச்சுநன் குமாரன். சதாநீகன் - நகுலன் குமாரன். சுருதசேநன் சகாதேவன் குமாரன். கடோற்கசன் - வீமன் குமாரன்.

சிசுபாலன் - இரண்யகசிபு. சல்லியன் - ஸம்ஹ்லாதன். திருஷ்டகேது - அநுஹ்லாதன். தருமன் - திதி புத்ரனாகிய சிபி. பகதத்தன் - பாஷ்கலன். கேகயதாசாதிபதிகள் - அயசிரன், அச்வசிரன், அயசங்கு, ககனமூர்த்த, வேகவான் முதலியோர். அமிதௌஜஸ - கேதுமான். உக்ரசேநன் - ஸ்வர்பானு. அசோகன் - அச்வன். ஹார்த்திக்யன் - அச்வபதி. தீர்க்க பிரஞ்ஞன் - வ்ருஷபர்வா. சாளுவன் - அஜகன். ரோசமாநன் - அச்வக்ரீவன். ப்ருகத்ரதன் - சூக்ஷ்மன். சேநாபிந்து - துக்ஷுண்டன். சுபாகு - ஹரன். பாஹ்லீகன் - அஹரன். முஞ்சகேசன் - நிசந்திரன். தேவாதிபன் - நிகும்பன். பௌரவன் - மஹாசுரன். சுபார்சவன் - குபடன். பார்வதேயன் - கபடன். பிரக்லாதன் - சலபன். சந்திரவர்மா - சந்திரன். ரிஷிகன் - சூர்யன். பச்சிமாநூபகன் - மிருதபன். தருமசேநன் - கவிஷ்டன். விச்வன் - மயூரன். காலகீர்த்தி - சுபர்ணன். சுநகன் - சந்திரஹந்தா. ஜானகு - சந்திரபிரமர்த்தன். காசிராஜன் - தீர்க்கஜிஹ்வன். கிராதன் - சந்திரார்க்கமர்த்தனன். வசுமித்ரன் - விக்ஷரன். பாண்டிய தேசாதிபதி - பலன். பௌண்டரமாத்சியகன் - வீரன். மணிமான் - விருத்ரன். தண்டன் - குரோதஹந்தா. தண்டதரன் - குரோதவர்த்தனன். ஜயத்சேநன் - காபேயபுத்ரன். அபராஜிதன் - காலகேயபுத்ரன். நிஷாதன் - காலகேயபுத்ரன். சிரேணிமான் - காலகேய புத்ரன். மஹோஜஸ் - அபீரு, ஸமுத்ரசேநன், இவர்கள் காலகேயபுத்ரர்கள். பார்வதீயன் - குக்ஷி. சூர்யாக்ஷன் - கிருதனன். (மத்ரகன், கர்ணவேஷ்டன், சித்தார்த்தன், கீடகன், சுவீரன், சுபாஹு, மகாவீரன், பாஹ்லீகன், கிரதன், விசித்ரன், சுரதன், நீலன், சீரவாசஸ், ருக்மி, ஜனமேசயன், ஆஷாடன், வாயுவேகன், பூரிதேஜஸ், ஏகலவ்யன், சுமித்ரன், வாடதானன், கோமுகன். கரூஷன், க்ஷேமதூர்த்தி, ச்ருதாயுஸ், உத்வஹன், ப்ருஹத்சேநன், க்ஷேமன், அக்ரதீர்த்தன், குஹரன், மதிமான்,) இவர்கள் குரோதவசர்கள் என்னும் அசுரக்கூட்டம். கம்சன் - காலநேமி. தேவகன் - கந்தர்வராஜன்.

அச்வத்தாமா - யமருத்ராம்சம். சந்தனுபுத்ரர் - அஷ்டவசுக்கள். சகுனி - த்வாபரயுகாம்சம். சாத்யகி - சப்தமாத்ருகாம்சம். துருபதன், கிருதவர்மன், விராடன், இவர்கள் மருத்துகணம்சம். த்ருதராஷ்டிரன் அரிஷ்டையின் குமரனான ஹம்சனென்னுங் காந்தருவன். பாண்டு - சப்தமாத்ருகாம்சம். விதுரர் - தர்மதேவதாம்சம். துர்யோதனன் - கலியம்சம். யுயுத்சு, துர்முகன், துச்சகன், ராக்ஷஸாம்சம். அபிமன்யு - வர்ச்சஸ் என்னும் சந்திரபுத்ரன். சிகண்டி - ராக்ஷஸன். இளம்பஞ்சபாண்டவர் - விச்வதேவர் கூட்டம். ப்ரத்யும்நன் - சநத்குமாரரம்சம். கோபிகைகள் - அப்சரசுகளினம்சம். ருக்மணி-லக்ஷ்மி. திரௌபதி - இந்திராணியம்சம். குந்தி - சித்தி. மாத்ரி - த்ருதி. காந்தாரி - மதி.

1. விஷ்ணு சாக்ஷுச மன்வந்தரத்தில் முதல் சதுர்யுக கிருதயுகத்தில் - தருமருக்குப் புதல்வராய் **நரநாராயணராகப்பிறந்தார்**. 2. வைவசுதமன்வந்தரத்தில் முதல் சதுர்யுக

கிருத யுகத்தில் அத்திரி முனிவர்க்கும் அநசூயைக்கும் **தத்தாத்ரேயராகப்** பிறந்தனர். 3. நான்காவது சதுர்யுக கிருதயுகத்தில் **நாசிங்காவதாரம்**. 4. திரேதாயுகத்தில் **வாமனவதாரம்**. 5. பத்தொன்பதாவது சதுர்யுகத்தில் வரும் திரேதாயுகத்தில் **பரசுராமர், இராமர்**. 6. இருபத்தெட்டாவது சதுர்யுக துவாபரயுகத்தில் **கிரீஷ்ணர்ச்சுநர்கள்**. பலதேவர் - ஆதிசேஷன். அருச்சுநன் - நரன் சந்தனு - சமுத்திராம்சம். சந்தனுதேவி - கங்காம்சம். தேவகர் - கந்தர்வ ராஜாம்சம். பீஷ்மர் - வசுஅம்சம். விராடன் - சப்தம ருத்துக்களம்சம். துரியோதனன் - கலிஅம்சம். சராசந்தன் - விப்ரசித்திஅம்சம். கம்சன் - காலநேமிஅம்சம். கேசி - அயசிரசினம்சம். அரிஷ்டன் - பாணசுரனுடைய அம்சம். சுவர்ச்சாக்கியன் - புதனம்சம். சிகண்டி - இராக்ஷசாம்சம். பிரத்யும்நன் - சநற்குமாராம்சம். துருபதன் - வருணம்சம். திரௌபதி - இலக்ஷ்மிஅம்சம்.

## சுவதேசாசார விவகாரம்

### இவை தற்காலத்தில் நடப்பதாகிய

### ஜாதிப் பட்டப்பெயர்களா.

பொந்திலியர், இராஜபுத்ரர், சித்திரகாரர், மொச்சிகள், மராட்டியர், மாத்வவேதியர், கவரைகள், இவர்களுக்கு **ராவு** பட்டம். கர்நாடக, மஹாராஷ்டிர மார்த்தவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும், சாத்தாத வைஷ்ணவர்களுக்கும், **ஆசார்ய** பட்டம். கவரைகள், தெலுங்கு வேளாளர். கம்மவாரு, வடுகிடையர், வடுகதாசிபுத்ரர் இவர்களுக்கு **நாயுடு** பட்டம். அகமுடையார், தமிழ் இடையர், கணக்கர், வன்னியர், பறையர் இவர்களுக்கு **பிள்ளை** பட்டம். சிலவேதியர், சாத்தாத வைஷ்ணவர், ஜங்கமர், வீரசைவர், இவர்களுக்கு **ஐயர்** பட்டம். தென்னாட்டு வைசியர், கோமட்டிகள், பேரிசாதியர், பலிஜ கவரைகள், தெலுங்கு குயவர், நாட்டுக்கோட்டையார், சாலியர், சேண்டிரவர், சணப்பர், உப்புரவர், பரதவர், இவர்களுக்குச் **சேட்டிப்** பட்டம். தெலுங்கரில் வேளாண் மரபினர் சிலர்க்கும், தமிழ் வேளாளர் சிலர்க்கும் **ரெட்டிகள்** பட்டம். வன்னியர் சில இடங்களில் **கௌண்டர்**, நாயகர், படையாச்சி, பிள்ளை, ராவு முதலியார் எனவும் பட்டம் வகிக்கின்றனர். கொண்டைகட்டிகள், துளுவவேளாளர், பூவிருந்தவல்லி, பொன்னேரி வேளாண் குலத்தவர்க்கும், கைக்கோளருக்கும் சில தாசிபுத்திரருக்கும் **முதலியார்** பட்டமுண்டு. சோழியர், கார்காத்தார் இவர்களுக்குப் **பிள்ளை** என்ற பட்டம்.

நியோகிப் பிராமணர், க்ஷத்திரியர் முதலியோர்க்கு ராஜு பட்டம். வடகலை, தென்கலை வைஷ்ணவர்க்கும், பட்டு நூற்காரருக்கும் **ஐயங்கார்பட்டம்.** அகமுடையார்க்கும் குயவர்க்கும் **உடையார் பட்டம்.** தமிழ்நாட்டுச் சைநரில் ஆச்சாரியருக்கு **நயினர் பட்டம்.** மற்றவர்கட்கு **சேட்டியார் முதலியார்** பட்டம். தமிழ் இடையர்க்குக் **கோனர், பிள்ளை** யென்பன பட்டம். வண்ணருக்கு **மேஸ்திரி பட்டம்.** சித்தர்க்கு, **மூர்த்தி** யென்பதும், சித்தர் என்பதும் பட்டம். மலையாள நாட்டுச் சூத்திரர்க்கு **நாயர்** என்பது பட்டம்.

**சுவதேசத்தவர் தொழில்கள்**—பிராமணர்க்கு வேதம்ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். தற்காலத்திலே உழுவித்துண்ணல், சேவகாவிருத்தி. **க்ஷத்ரியர்க்கு** அரச சேவக விருத்தி. இச்சாதியார் தற்காலத்திலரியர். **வைசியர்க்கு** வாணிகம், பசுக்காத்தல், உழுது பயிரிடல். **சூத்திரர்க்கு** முக்குலத் துளோர்க்கும் ஏவற்றொழில் செய்தல் என்பர். **வேளாளர்க்கு** உழுவித்துண்ணல், உழுதுண்ணல். **ஊர்ப் புரோகிதன்** பஞ்சாங்கம்சொல்லுதல். **பூசாரி** காளிகோவில், கிராமதேவதை பூசை செய்பவன். **கணக்கன்** கிராமக்கணக் கெழுதுவோன். **பணிச்சவன்** ஊரில் பணிசெய்பவன். **கம்புகட்டி** ஏரி ஆறு முதலியவற்றிலுள்ள நீரைக் கழனிகளுக்குப் பாய்ச்சுவோன். **வெட்டியாவான்**-பறையறைபவன், பிணஞ் சுடுபவன். இராஜ தண்டனைப்படி கொலை செய்பவன். **வண்ணான்** ஊரிலுள்ளார் துணிகளை வெளுப்பவன். **நாவிதன்** க்ஷௌரஞ் செய்து சில இடங்களில் சுபாசுபங்களில் மங்கலவாத்யஞ் வாசிப்பவன். **மாலைகாரன்** பூத்தொடுப்பவன். **இடையன்** ஆடுமாடுகள் மேய்த்துத் தயிர் பால் நெய்

விற்பவன். **துயவன்** மட்பாண்டஞ் சுடுபவன். **உப்புவாணிகன்** உப்புவிற்பான். **கம்மாளர்** பொன், இரும்பு, மரம் முதலியவற்றில் பணிகள் முதலியசெய்வர். **கொல்லர்** இரும்பு வேலைசெய்வர்; **தட்டார்** பொன்வேலை செய்பவர்; **தச்சன்** மரவினையாளன்; **கன்னார்** பித்தளை, செம்பு முதலிய பாத்திரம் செய்பவர்; **சிற்பன்** கருங்கல் தொழில் செய்பவன். **செக்கான்** எண்ணெய் ஆடுபவன். **சங்கறுப்போன்** வளையல் செய்பவன். **மீகாமன்** கப்பலோட்டுபவன். **ஆட்டுவாணிகன்** ஊன் விற்பவன்; **பறம்பன்** தோல்வினைஞன். **உறைஞன்** பொன்மாற்றுக் காண்பவன். **துன்னர்** துணிதைப்பவர். (இவனை வள்ளுவன் என்ப). **சான்றான்** கள்விற்பவன். **சண்டாளன்** மாடு ஆடுகளைப் புதைத்து ஊர்க்கயலிவிருந்து வேலை செய்பவன். **வைரியன்** கூத்தாடுபவன். **பாணன்** பாடல் பாடிப் பிழைப்பவன். **வாதுவன்** குதிரை யோட்டுபவன். **பாகன்** யானையோட்டுபவன். **சாரதி** இரதம் செலுத்துபவன். **பண்ணைக்காரன்** ஏர்த்தொழில் செய்பவன். **தாசி** தேவாலயப்பணி செய்பவள். **துடிமி** விஷ சிகிச்சை செய்பவன்.

**நம்பி, பட்டர்** விஷ்ணு ஆலய பூஜகர். **குருக்கண்மார்** சிவாலய பூஜையுடன் ஆசார்யராயிருப்பவர்.

**தேசாசாரங்கள்** — நாகபூர் முதலிய இடங்களில் ஆசிர்வதிப்போர் பாகை அங்கி முதலியன தரித்தே ஆசிர்வதிப்பர். காசியில் இடையர் வீட்டில் பிராமணர் தீர்த்த முண்பர். பின்னையும் ஜாதிபேத மில்லாமல் விச்வேச்வர பூஜையும் சகலரும் செய்வார்கள். **ஜகந்நாதத்தில்** எச்சில் தோஷமில்லை. **மலையாளப் பெண்கள்** தாங்கள் புருஷரைப் போல் கோவணந் தரிப்பர். **நாட்டுக்கோட்டைச் செட்டிகள்** தம்வயதினும் மிக்கவரை மணந்துகொள்வார்கள். **சாத்தாத வைஷ்ணவர்களும்,** வடகலை ஸ்ரீ வைஷ்ணவ ஸ்திரீகளும், ஸ்மார்த்த வேதிய ஸ்திரீகளும், சிவாசாரிய ஸ்திரீகளும், சில பண்டார சந்நதிகளும், சில சந்நியாசிகளும் தலையை முண்டனஞ் செய்து கொள்வர். **சீநதேசத்தவர்கள்** கிறிஸ்தவர்களைப் போலவும், மகம்மதியரைப் போலவும் முழங்காலிட்டுத் தேவனை வணங்குவர், தலைமயிர்ப் பின்னலிடுவர். தங்கள் ஸ்திரீகளின் பாதங்களை வளரவிடா தடக்குவர். ஜப்பானியர் தங்கள் சிகைகளைக் கயிற்றால் அழுந்தக்கட்டுவர். **ஆப்பிரிகாவில்** சில இடங்களிலுள்ளார் மரவுரி, மரங்களின் இலைகளை ஆடைகளாக்கிக் கட்டிக்கொள்வர். **ஆஸ்டிரேலியாவின்** சில பாகத்திலுள்ள பூர்வகுடிகள் புருஷர்க்கு யௌவநபருவம் வருகையில் முன் பல்லினைப் பிடுங்கிவிடுவர். **நியுஜிலண்டில்** சிலர் நரமாமிச பக்ஷணிகள். **ஸயாம் தேசத்தில்** பிரசவித்த பெண்ணின் முன் பெருந்தீக் கொளுத்துவர். **பர்மா தேசத்தவர்** பச்சை குத்திக்கொளின் விஷப்பூச்சிகளின் தொந்தரை யிராதென்று உடம்பில் பச்சை குத்திக்கொள்வர். **மெக்ஸிகோ** தேசத்தவருள் சிலர் தங்கள் யுத்த தேவதைக்கு நரபலியிட்டு நரமாமிசம் புசிப்பர்.

**தேச சௌந்தர்யங்கள்**—நமது இந்து தேசமே அன்றி மற்றத் தேசங்களில் பெண்கள் தேச ஆசாரத்திற்குத் தக்கவாறு அழகுள்ளவர்களா யிருக்கின்றனர்; அவர்களில் பெண்களே அழகை விரும்புகின்றவர்கள்.

**அமெரிக்கா தேசத்துப்** பழைய குடிகளாகிய இந்தியப் பெண்களுக்குப் பரந்த முகமும், சிறிய கண்களும், உயர்ந்த தவடைகளின் எலும்புகளும், பருத்து நீண்ட ஸ்தனங்களும் அழகாம்.

**சீநதேசத்தின்**—வடபாகத்துப் பெண்களுக்குப் பரந்த மூக்கும், பெருங் காதுகளும், உயர்ந்த தவடைகளும் அழகாம்.

**சீநஜபான்** — தேசத்தவர்க்குச் சரிந்த கண் அழகாம்.

**கோச்சின்சீநு** — தேசத்தவர்க்கு உருண்டையான முகம் அழகாம்.

**சயாம் தேசத்தவர்க்கு**—சிறு மூக்கும், விரிந்த முகமும் அழகாம். **ஆப்ரிகா** தேசத்து நீக்ரோவியர், மூர்கள், காப்பிரியர்களுக்குக் கறுப்பு அழகு. **ஜாவா** தீவிலுள்ளார்க்கு மஞ்சள் நிறம் அழகு. அமரிக்கருக்கு தலை உயர்ந்திருப்பது அழகு.

**மலையாளப்** பெண்களுக்கும் தென்னாட்டு இந்து பெண்களுக்கும் செவித்தொளையெவ்வளவு பெரிதாயினும் அழகாம். முகமதிய பெண்களுக்கு வெண்பல் அழகாம்.

**பிராணிகளின் சுவபாவம்**—கிளி தவிர வேறெந்தப் பக்ஷிகளும் அலகின்மேல், அடிப்பாகங்களை அசைக்கா.

**மீன்கள்** — வாயைத் திறந்து மூச்சுவிடும். ஆகாரத்தை மெல்லாது விழுங்கும். **பாம்பின்** வாயில் விஷப்பையும், கல்லும் இருக்கும். **ஈக்களின்** வயிற்றில் புழுக்களிருக்கும்.

பசுக்களுக்கு — வயிற்றில் கோரோசனம் உண்டு; **கஸ்தூரி மிருகத்தின்** வயிற்றில் கஸ்தூரி யுண்டாம். **புழுகுப் பூனையினால்** புனுகு என்னும் வாசனைப்பொருளுண்டாம். பல பிராணிகளின் வயிற்றிலும் கோரோசனத்தை யொத்த ஒருவிதப் பொருள் உண்டு.

**ஒட்டகத்திற்கு** — முதுகில் கொழுப்பு நிறைந்த ஒரு மோட்டுறுப்புண்டு. அன்றியும் குடிக்க நீர்வேண்டாது பலநாள் பிரயாணம் பண்ணும். **கோட்டான்** கண்களை அசைக்காது. தலையை பல பக்கங்களிலும் திருப்பிக் காணும். **நாய்க்கு** ஸ்வஜாதி வயிரம் ஸ்வபாவம். **பூனைகளில்** கடுவன் பெண் பூனை போட்ட குட்டிகளைத் தின்றுவிடும்.

**பச்சோந்தி** — பலவிதமான வர்ணங்களை யடையும். **பூரான்** தோலுரிக்கும். முயலுக்குக் கண்ணிமைகள் கிடையா. பிராணிகளில் பல மூத்திரம் விடினும் மலவிசர்ச்சனம் செய்யினும் மண்ணால் மறைக்கும். **தவளை** வாய் திறந்திருக்கையில் சுவாசம் விடாது. **கொக்கு** பக்ஷிகளில் கபடமுள்ளது. **ஆமைக்குப்** பற்கள் கிடையா. **கழுதை** பொறுமையுள்ள செந்து. **குதிரைகளுக்குக்** கண்களில் கண்பாவை இல்லை.

## இருடிகளின் பரம்பரை

**பிரமன்** குமரர்—1. மரீசி, 2. அத்திரி, 3. ஆங்கீரஸன், 4. புலத்தியன், 5. புலகன், 6. கிருது, 7. பிருகு, 8. நாரதன், 10. தக்கன், 11. ருசி, 12. சநபதி, 13. தருமதேவதை.

1. **மரீசி** குமரர் **காச்யபர்**, தேவிஅதிதி, காச்யபருக்குத் துவாதசாதித்தர் பிறந்தனர். 1. தாதா, 2. மித்ரன், 3. அர்யமா, 4. சக்ரன், 5. வருணன், 6. அம்சன், 7. பகன், 8. விவச்வான், 9. பூஷா, 10. ஸவிதா, 11. த்வஷ்டா, 12. விஷ்ணு, ஷை காச்யபருக்கு - விவச்வான் குமாரன். விவச்வான் குமாரன் **வைவச்சுதமனு**.

2. **அத்திரி** குமாரன் சந்திரன் - கு - ன், புதன், கு - ன், புரூரவன்.

3. **ஆங்கிரசன்** - குமாரர் பிரகஸ்பதி, உதத்தியன். **உதத்தியனுக்கு** தீர்க்கதமன், பரத்தாசன் குமாரர். **தீர்க்கதமன்** குமாரன் கௌதமன் (அவன்-கு-ன்) சதாநந்தன், கு-ன் சாத்வந்தன், கு-ன் கிருபன். **பாத்வாசன்**, கு-ன், துரோணன், கு-ன், அசுவத்தாமன்.

4. **புலத்தியன்**, கு-ன், விச்சிரவா.

5. **புலகன்**, குமரர் கின்னரர், கிம்புருடர், கர்த்தமன்.

6. **கிருது** குமரர் வாலகில்லியர் 60,000 வர்.

7. **பிருகு** குமரர், கவி, தாதா, விதாதா, கமலை. **கவி** யின் குமாரன் சுக்ரன்- **சுக்ரன்** குமரர் சண்டமார்க்கன், துவஷ்டா, பத்திரகருமன்; சுக்ரன் குமரியர் ஜேஷ்டை, தம்ஷ்டிரி, தேவயானி, அரசை. ஜேஷ்டைக்கு பலன் என்பவனும் சுரை யென்னும் ஒரு குமரியும் பிறந்தனர். **விதாதா** குமரன் மிருகண்டு, கு-ன், மார்க்கண்டேயன்; **விதாதா** குமரன் பிராணன், கு-ன், வேதசிரசு, குமரன் உசேநன். பிருகுவிற்கு இருசிகர் குமாரர்; தேவி கௌசிகை. மற்றொரு குமாரன் ஔரவன்.

8. **வசிட்டன்** குமாரன், சத்தி, கு - ன், பாராசர்-கு ன்-வியாசர், கு-ன், சுகர்.

9. **நாரதன்** இவனுக்கு தக்கன் சாபத்தால் புத்ரர் இல்லை.

10. **தக்கன்** இவன் வம்சம் பின்னர்க் காண்க.

11. **ருசி** இவன் குமாரி தக்ஷிணை. இவள் (12) புத்திரரைப் பெற்றாள். ஷை ருசிக்கு, கு-ன். எச்சன்.

1. **மரீசி** இவன் தேவி சம்பூதி, இவன் குமாரியர் சிரேட்டை, பூரணை, திருட்டி, கிரிசி, காச்யபன். பூரணைக்கு விசயன், பர்வதன் இரண்டுகுமாரர். இவர்களுள் காசிபருக்கு 66 கோடி இராக்கதர்.

2. **அத்திரிக்கு** தேவி அநசூயை; இவன் மக்கள் சுருதி, முநிபு, மாபன், பாவசுருதி, சநி, சோமன், சங்கதாவளன், தத்தாத்ரேயன். துருவாசன். சத்யநேத்ரன், அவ்வியன், ஆபோமூர்த்தி.

3. **ஆங்கீரசன்** தேவி ஸ்மிருதி; இவன் குமரியர் அநுமதி, சிநிவாலி, கீர்த்தி, இராகை, குகு. குமாரர் ஆக்னீத்ரர், பரதன், சாபன்.

4. **புலத்தியன்** தேவி (பிரதி அல்லது சந்நதி) குமாரர்-வேதவாகு, தங்காக்னி, (தந்தோத்னி) திருடத்துதி, சந்ததி, கருத்தமன், சயிட்ணு, வன்கபீவாசன். கருத்தமன் குமாரன் **இளன்**. விச்சிரவாவும் இவன்குமாரன்.

பின்னும் இவனுக்கு அகஸ்தியன், **விசிரவசு** இரண்டுகுமாரர். **அகஸ்தியனுக்கு** தங்தோக்னி யெனவும் பெயர். அகஸ்தியன் குமாரன் திரிதசி ; கு-ன்-சந்நுதன்

5. **விசிரவசுவிற்கு** கைகசி, புஷ்போத்கடை, இராகை இவர்கள் தேவிமார். இவர்களில் கைகசியிடம் இராவணன், கும்பகர்ணன், விபீஷணனும், புஷ்போத்கடையிடம் மகோதரனும், மகாபாரீசுவனும், இராகையிடம் கரன், தூஷணன், திரிசிரன் என்ற மூவரும் பிறந்தனர்.

6. **புலகன்** தேவி க்ஷமை. புத்ரர் கவிலாசன், சருட்ணு, கருத்தமன், ஆசூரியன், கிம்புருஷர், பேய், பூதம், சரபம், சிங்கம், புலி, ஓநாய், கரடி முதலியன

7. **பிருகு** தேவி கியாதி, குமாரன் தாதா; கு-ன், பிராணன், கு-ன், வேதசிரசு. ஷை பிருகுக்கு மற்றொரு தேவி புலோமிசை, குமாரன் பிரமதிசுவன், கு-ன் குரு, கு-ன் சநகன், கு-ன் உரூரவன். இவன் சர்ப்பயாகஞ் செய்தவன். ஷை பிருகு குமாரன் சியவனன், இவன் தேவி ஆருஷி, குமாரர் ஔரவர், கு-ன் ருசிகன், கு-ன் சமதக்னி, கு-ன் பாசுராமன்.

8. **வசிட்டர்** தேவியர் ஊர்ச்சை, அருந்ததி. குமாரர் சக்ரன், சவநன், அநகன், சுகோத்ரன், ஊர்த்தவாகன், பயன், தாசன், இராஜன், காத்ரன்; பெண்கள், சுதபாவை, புண்டரீகை. ஷை வசிட்ட கு-ன் சத்தி, பௌத்ரர் சுகர்.

9. **சுகர்** குமாரன் கிட்டினன், பூதிச்சிரவா, சம்பு, கவுரவன், பிரபு ; பெண், கீர்த்திமதி. ஷை வசிட்டர் தேவியாகிய அருந்ததிக்கு (100) பிள்ளைகள். இவர் குமாரராகிய **சத்தியின்** தேவி திரிசந்தி, குமாரன் **பராசர்**, தேவி காளி. இ-கு-ன் வியாசர்; தேவி இரணியை, குமாரன் சுகர் ; தேவி வீரி. இச்சுகர்க்கு ஐந்து புதல்வர், ஒருபெண் கீர்த்திமதி. கீர்த்திமதி அணுகனை மணந்து பிரமதத்தனைப் பெற்றாள். பின்னும் வசிட்டருக்கு இஷர், ஊர்சாதர், ஊர்ஜர், மது, மாதவர், சுசி, சக்ரவகர், நபசர், நபர் குமாரர்கள்.

பிரமதேவர் புத்திரனாகிய **தக்ஷனுக்கு** அசிக்னி அல்லது பிரசூதி, அல்லது வைரணி தேவிமார். இவனுக்கு அரியசுவர், அபளாசுவர் முதலிய (1000) குமாரர், (60) பெண்கள். அந்த அறுபது பெண்களில் அங்கிராவுக்கு 2, அரிட்டநேமி அல்லது தாட்சபர்க்கு 4, காசிபர்க்கு 13, கிரிசுவா அல்லது கிரிசாசுவர்க்கு 2, சந்திரனுக்கு 17. தருமனுக்கு 10, வெகுபுத்ரர்க்கு 2 கொடுத்தனன்.

1. **அங்கிரா** — சுதா, சதி இவ்விருவரும் தேவியர். கு-ர் பிதுர்க்கள், அதர்வ ஆங்கிரசு எனும் வேதத்தவர்.

2. **அரிட்டநேமி**—அல்லது தாக்ஷபன். இவன் தக்ஷனுடைய 4-பெண்களை மணந்தனன். குமாரர் 16-பெயர்கள்.

3. **காசிபர்** — இவர் தக்ஷனது (13) பெண்களை மணந்தனர். அவர்கள் 1. திமி, 2-சரமை, 3-சுரபி 4-தாம்ரை, 5-முனி அல்லது சனி, 6-குரோதவசி, 7-இளா, அல்லது அநு, 8-சுரசை, 9-அரிஷ்டை அல்லது வரை, 10-காஷ்டை அல்லது விநதை, 11-தனு அல்லது கத்துரு, 12-அதிதி, 13-திதி என்பவர்களாம், மேற்கூறிய மனைவியரில் 1-**திமி**—ஜலசந்துகளைப் பெற்றாள். 2-**சரமை**—சுவாபதங்களையும், 3-**சுரபி** — பசுக்கள் எருமைகளையும் 4-**தாம்ரை**—வல்லூறு, பாசி, திருதராஷ்டரி, கழுகு, சுகி, சேநி, அநுசி, சுக்ரீவி முதலியவரையும், 5-**முனி** — அமரர், முனிவர், அப்சரசுக்களையும், 6-**குரோதவசி**-கழுதை, கடம்பை, தந்தசூக முதலிய சர்ப்பங்களையும், 7-**இளா**-50-புத்திரர்களையும், விருக்ஷம் செடி கொடிகளையும். 8-**சுரசை** — அரக்கர், நாகங்களையும், 9-**அரிஷ்டை**—கந்தருவர் கின்னரர், பசு, பக்ஷிகளையும், 10-**காஷ்டை**—அல்லது விநதை ஒரு குளம்புள்ளவைகளையும், 11-**தநு**-100 தானவரையும், **கத்ரு** — சேஷன் முதலிய பாம்புகளையும், 12-**அதிதி**—முப்பத்துமுக்கோடி தேவர்களையும், த்வாதசாதித்தரையும், 13-**திதி**-66 கோடி அசுரரையும் பெற்றூர்கள். தருமப்பிரஜாபதியின் தேவியரில் **சுரபி** என்பவள் ரோஹணி, கந்தர்வி, விமலை, அநலையென்னும் பெண்களைப் பெற்றாள். அவர்களுள் ரோஹணிக்குப் பசுக்கள் பிறந்தன. கந்தர்வி குதிரைகளைப் பெற்றாள். அநலை உருண்டையான பழம் பழுக்கும் 7-வகை விருக்ஷங்களைப் பெற்றாள். **இளை**—3-பெண்கள் ; லதை, ருஹை, இவர்கள் செடி, கொடி, புல், மூங்கில்களைப் பெற்றனர். **குரோதவசை** — மிருகி, மிருமந்தா, ஹரி, பத்ரமனஸ், மாதங்கி, சார்த்தூலி, ச்வேதை, சுரசை என்பவர்களில், மரு-மிருகங்களையும், மிருகமந்தா - கரடி கவரிமான்களையும், ஹரி-குரங்குகளையும், பத்ரமனஸ் - ஐராவதத்தினையும், மாதங்கி - யானைகளையும், சார்த்தூலி-சிங்கம் புலி சிறுத்தை முதலியவற்றையும், ச்வேதை, திக்கஜங்களையும், சுரசை-

சங்கன் முதலிய நாகங்களையும் பெற்றாள். **தநுயுசன்** விக்ஷரன், பலன், வீரன், விருத்ராசுரன், என்பவர்களைப் பெற்றாள். **காலை**—விசானனன். குரோதன், குரோதஹந்தா, குரோதசத்ரு, காலகேயர் முதலியவரைப் பெற்றாள்.

**சுக்ராசாரியர்**—(அசுரபுரோகிதர்) துவஷ்டா, அத்ரி, ரௌத்ரான், கர்மி முதலியவரைப் பெற்றான்.

**விநதை**—தார்க்ஷன், அரிஷ்டனன், நேமி, கருடன், அருணன், ஆருணி, வாருணி முதலியவரைப் பெற்றாள்.

**கத்ரு** — சேஷன், அநந்தன், வாசுகி, தக்ஷன், கூர்மன், குலிகன் முதலியவரைப் பெற்றாள்.

**முனியின்**—குமாரர் பீமசேனன், உக்ரசேநன், சுபர்ணன், வருணன், கோபதி, திருதராஷ்டிரன், சூர்யவர்ச்சஸ், ஸத்யவாக், அர்க்கபர்ணன், பிரயுதன், பீமன், சித்ராதன், சாலிசிரஸ், பர்சன்யன், கலி, நாரதன். (இது சுவாசிஷமன்வந்தர மென்று கூறப்பட்டிருக்கிறது.)

**காகி** — கோட்டானகளைப பெற்றாள். சேநி—பருந்துகளைப் பெற்றாள். பாசி—கள்ளிக்காக்கை, கழுகுகள், திருதராஷ்டரை அன்னங்கள், சக்ரவாகங்கள் இவைகளைப் பெற்றாள். **சுகி** — கிளிகளைப் பெற்றாள்.

4. **கிரிசாசுவன்** — (கிரிசுவா) இவன் தேவியர் அர்ச்சிசு, திக்ஷிணை இவர்களில் அர்ச்சிசிடம் கிரிசுவாச்சுவன், தூம்ரகேசனும்; திக்ஷிணைவிடம், வேதசிரசி, தேவன், வயினன், மநு என்பவர்களும் பிறந்தனர்.

5. **சந்திரன்** — கிருத்திகைமுதல் (27) நக்ஷத்ரங்களை மணந்தனன். இவர்களுக்கு அநேக புத்ரர் பிறந்தனர்.

6. **தருமனுக்கு** — 10 பெண்களைக்கொடுத்தனர். அவர்களுள் 1 **பானு** அல்லது கீர் என்பவள் வேதபுருஷன, இந்திரசேனன் எனுங் குமாரரைப் பெற்றாள். 2. **லக்ஷ்மி** அல்லது அம்பை, சிரத்தை குமாரர் வித்யோதனன், மின்னல், இடி முதலியன. 3. **திருதி** (அல்லது குபு) குமாரர் சங்கடன், கீகடன். 4. **மேதை** — (புஷ்டி, ஜாமி) கு-ர், தர்க்காபிமான தேவதைகள், சுவர்க்கன், நாகவீதி. 5. **புஷ்டி** — (துஷ்டி, விசுவா) குமாரர் விசுவதேவர். 6. **சிரத்தை** (சாத்யா, மேதை) குமாரர் சுருதம், சாத்யகணம் 7. **கிரியை** (மருத்துவதி) தண்டம், மருத்துவான், மருத்துவர். 8. **புத்தி** — வசு, கு-ர் போதம், அஷ்டவசுக்கள் 9. **லசிகை** (முகூர்த்தை) குமாரர் முகூர்த்த தேவதைகள். 10. **மதி** (சங்கற்பை, வபு) குமாரர் சங்கல்பர். பின்னும் சாந்தி - க்ஷேமத்தையும், சித்தி-சுகத்தையும், கீர்த்தி-யசசையும் பெற்றனர் எனச் சிலபுராணங்கள் கூறும்.

ஷை தக்ஷன் இவர்களன்றி பூதன் (பூதா) என்னும் பிரமபுத்ரனுக்கு **சதருபா, சுரபி** எனும் இரண்டுபெண்களைக் கொடுத்தனன். இவர்களுள் **சதருபா**, கோடிருத்ரரைப் பெற்றாள். **சுரபி** 1-ரைவதன், 2-அசன், 3-பவன், 4-வாமன், 5-உக்ரன், 6-விருஷாகபி, 7-அசைகபாத், 8-அகிற்புத்யன், 9-வெகுரூபன், 10-மகரன், 11-பாரிஷதாள், 12-கோரார் முதலிய புத்ரரைப் பெற்றாள் பின்னும் இவன் பஞ்சதாமேஷ்டையிடம் பூதங்களைப் பெற்றான்.

தக்ஷனுக்குச் சுதிவயிற்றில் 5000 குமரர் பிறந்தனர். இவர்கள் நாரத வுபதேசத்தால் தவமேற்கொண்டனர். ஷை தக்ஷனுக்கு வயிரினிடத்து அரியசுவர் என்கிற 5000 குமரர்; இவர்களும் நாரத உபதேசத்தால் தவசிகள் ஆயினர்.

**அஷ்டவசுக்கள்** — இவர்கள் தருமன் புத்ரர், 1. **ஆபன்** (அயன்) புதல்வர், சிராந்தகன். சிரமன், வைதாண்டி, முனி, 2. **துருவன்** (பு-ர்) காலன், லோகப்பிரபாவன். 3. **சோமன்** (பு-ன்) வர்ச்சன். 4. **தரன்** (கு-ர்) சிசிரன், பிராணன், ரமணன், திரவிணன், ஹுதஹவ்யன். 5. **அனிலன்** தேவி சிவை (கு-ர்) அவிஞ்ஞாதகேதி, மனோஜவன், புரோசவன். 6. **பிரத்தியூஷன்** (கு-ர்) தேவலன், பிரஜாதான். 7. **பிரபாசன்**, (கு-ன்) விச்வகர்மன்; விச்வகர்மன் குமாரன் துவஷ்டா; (தேவதச்சன்) குமரன் விச்வரூபன். 8. **அநலன்** இவன் தேவியர் கிர்த்திகையின் பெண்கள் அறுவர். குமாரர் தெய்வ சேநாபதி, நைகமேயன், விசாகன், சாகன். (மற்றொரு புராணம்) 1. **துரோணன்** தேவி. அபிமதி, கு-ர் அரிட்டம், சோகம், பயம். 2. **பிராணன்** தேவி, உற்சவதி, கு-ர், சகன், ஆயுசு, புரோசவன். 3. **துருவன்** தேவி, தாணி, கு-ன் புராணங்கள். 4. **அர்கன்**. தேவி, அசனை குமாரர் ஆசைமுதலியன. 5. **அக்னி** தேவியர் சோர்த்தாறை, கிருத்திகை, கு-ர், திரவிணகன், ஸ்கந்தன், விசாகன், 6. **தோஷன்** தேவி சாவரி, கு-ன் சிஞ்சுமாரன். 7. **வாஸ்து** தேவி அங்கிரசி, கு-ன் விசுவகர்மன், 8. **விபாவசு**, தேவி உஷா, கு-ர் வியுஷ்டி, ரோசஸ், ஆத

பன். ஆதபன் குமரன் பஞ்சயாமம், தரன், தாய் தூம்ரை, துருவன் தாய் பிரமவித்; சோமன்தாய் மனஸ்வினி, அஹஸ்தாய்-ரதை, அநிலன் தாய் சுவாசை; பிரத்யூஷன் தாய் பிரபாதை; ப்ரபாஸன் தாய் யோகசித்தை. இவ்வாறுங் கூறுப.

**வன்னி**—தேவி, சுவாகை; குமாரர் பாவகன், பவமானன், சுசி. இத்தீக்கள் முறையே அரிணித்தீ, மின்னின்தீ, வடவைத்தீ. மேற்கூறிய தீக்கடவுளர் ஒவ்வொருவரும் (15) புத்ரராக (45) குமாரரைப் பெற்றனர். இவர்கள் பாட்டன்மாருடன் கூடி (49) அக்னி பேதம்.

**கௌதமர்** — தேவி அகலிகை; குமாரன், சதாநந்தர்.

**வேநகிடதர்** — தேவி சுவதை; குமரி மேனை, வைதரணி.

**மலையாசன்** — தேவி மேனை; குமாரர் மைநாகம், கிரவுஞ்சம், கங்கை, உமை.

**மேரு**—மனைவி தரணி; குமரர் மந்திரி, ஆயதி, நியதி, வேலை, **சமுத்திரம்** தேவி வேலை; குமரன் சாவன்னி. தாதா தேவி நியதி.

**வர்ச்சன்** — (கு-ர்) இப்பியன், நயித்ருவன். இவர்களில் இப்பியன் கு-ர். இப்பியர், நயித்ருவன் (கு-ன்) குண்டபயிரவன்.

**வியாழன்**—குமாரன் கஜன். சகோதரி யோகசித்தை

**பிராசீன பரிசு**— தேவி சாவன்னி; குமாரர் பிராசேதர் முதலிய பதின்மர்.

**காசிபர்** — குமாரர் கருடன், சம்பாதி (கு-ன்) சுபார்சுவன், (கு-ன்) கும்பி, குமாரன் பிரலோபன், குமாரர் கங்கன், கந்தான்.

**சுக்கிரன்** — குமாரி ஜேஷ்டை, சுரை, குமாரன் அதர்மன்; தேவி நிருதி. குமாரர் ராக்ஷஸர் பயன், மகாபயன், மிருத்யு.

**தேவருஷி** — தேவி சுபகை; இவள் அதிபாகு, ஹாஹா, ஹூஹூ, தும்புரு முதலிய **கந்தருவரையும்**, அலம்புசை, மிச்ரகேசி, வித்யுத்பர்ணை, திலோத்தமை, அவனை, ரக்ஷிதை, ரம்பை, மனோரமை, கேசினி, சுபாஹு, சுரதை, சுரசை, சுப்ரியை முதலிய **அப்சரசுக்களையும்** பெற்றாள்.

ஷ தருமப்பிரசாபதிக்கு சாமன், காமன், ஹர்ஷன் பிறந்தனர். இவர்களுள் சாமன் தேவி பிராப்தி, காமன் தேவி ரதி, ஹர்ஷன் தேவி நந்தை.

**ருத்ரன்** — புத்ரர், 1. மிருகவ்யாதர், 2. ஸர்ப்பர், 3. நிருருதி, 4. அஜைகபாத், 5. அகிர்புத்னியர், 6. பிநாகி, 7. தகனர், 8. ஈச்வரர், 9. கபாலி, 10. ஸ்தாணு, 11. பகன்.

**பிராதை**—இவள் குமரியர் அனவத்யை, மனு, வம்சை, அசுரை, மார்க்கணப்ரியை, அருபை, சுபகை, பாசி; குமரர் சித்தன், பூர்ணன், பர்ஹிஸ், பூர்ணாயுஷ், பிரம்மசாரி, ரதிகுணன், சுபர்ணன், விச்வாவசு, பாநு, சுசந்திரன்.

**அருணன்** — தேவி சேநி, குமரர் சம்பாதி, சடாயு.

## புலத்தியர் மரபு

### இராக்ஷஸோற்பத்தி.

**பிரமன்**—குமாரர் இயக்கர், இராக்கதர். இயக்கனுக்குக் கேதி, பிரகேதி என இரண்டு குமாரர். கேதி காலன் தங்கையாகிய பயையை மணந்து **வித்யுத்கேசனைப்** பெற்றான். (மின்னுக்கேசன்) இவன் சலகடங்கடையை மணந்து **சுகேசனைப்** பெற்றான். சுகேசன் (கிராமணி குமரியாகிய) தெய்வவதியை மணந்து **மால்யவான்**, **சுமாலி**, **மாலி** இவர்களைப் பெற்றான். இவர்களுள் மால்யவான் சுந்தரியை மணந்து வச்சிரமுட்டி, யஞ்ஞகோபன், காலன், நிருக்ன், மத்தன், விரூபாக்ஷன், உன்மத்தன், துன்முகன், அனலை, சுதகத்தன், நியாயகோபன் முதலிய புதல்வரைப் பெற்றான்.

**சுமாலி** — கேதுமதி அல்லது வசுவிலோசனையை மணந்து விகடன், பிரகத்தன், காலகார்முகன், பாசகன்னன், செயகம்பன், தண்டகன், சங்கிருதி, தூம்ராக்ஷன், பிரசங்கன், சுபாரிசன், கைகசி, கும்பீனசி, புஷ்போத்கடை முதலியவரைப்பெற்றான். **மாலி** வசுதை என்பவளை மணந்து நீலன், அனலன், அரன், சம்பாதி முதலியவரைப் பெற்றான்.

பிரம புத்ராகிய **புலத்தியர்** திரணபிந்து முனிவர் குமாரியாகிய **தேவவருணியை** மணந்தனர். இவர்க்கு **இளிபிலை** யென மற்றொரு தேவியு முண்டு.

இவர் குமாரர் விச்சிரவா. விச்சிரவா குமாரன் மயன். **விச்சிரவா** புட்போத்கடை,

காலை, கேசி, தேவங்கினி இவர்களை மணந்தனர். இவருக்குப் புட்போத்கடையிடம் கான், மகோதரன், மாரீசன், பிரகதத்தன், கும்பீனசி பிறந்தனர்.

**கேகசியிடம்** இராவணன், கும்பகாணன், விபீடணன், சூர்ப்பநகை பிறந்தனர்.

**காலையிடம்** திரிசிரா, தூஷணன், வித்யுத், சிவுகன் இவர்கள் பிறந்தனர். இவர்க்கு தேவவங்கியிடம் குபேரன் (அளகேசன்) பிறந்தான்.

**சூர்ப்பநகை** — காலகயனை மணந்தாள். **இராவணன்** மந்தோதரியை மணந்து மேகநாதன், அதிகாயன், அக்ஷகுமாரன் இவர்களைப் பெற்றான்.

**கும்பகர்ணன்** — தேவி வச்சிரசுவாலை, தீர்க்கசுவாலை ; இவள் விரோசநன் என்னும் அரக்கன் பேர்த்தி.

**விபீஷணன்** சுரமை யென்னும் காந்தருவ ஸ்திரீயை மணந்து திரிசடையைப் பெற்றான்.

**மயன்** — ஏமை யென்பவளை மணந்து துந்துபி, மாயாபி, மந்தோதரி என்பவர்களைப் பெற்றான்.

**திதி** — **காசிபனை** மணந்து இரண்யகசிபு, இரண்யாக்ஷன், சிம்மிகை என்பவரைப் பெற்றாள். அவர்களுள் **இரண்யகசிபு** கியாது என்பவளை மணந்து பிரகலாதன், அநுகிலாதன், சமகிலாதன், பாஷ்கலன், சிபி என்பவர்களைப் பெற்றான்.

**இரண்யாக்ஷன்** — குமாரர் அந்தாகாசுரன், குருகரன், சகுனி, பூதசந்தாபநன், மகாநாதன், காலநாபன் முதலியவர்.

**சமகிலாதன்**—மதி யென்பவளைக் கூடி நிவாதகவசர், பஞ்சசேநன் முதலியவர்களைப் பெற்றான்.

**கிலாதன்** — தெமனி யென்பவளை மணந்து வாதாபி, இல்வலன், இலதனென்பவர்களைப் பெற்றான்.

**இலதன்**—குமாரர் காலன், சிபி, ஆயுஷ்மான்.

**அநுகிலாதன்** — சூசமியை மணந்து பாஷ்கிலன், மகிஷ னிவர்களைப் பெற்றான்.

**பிரகலாதன்**—குமாரர் கும்பன், விரோசநன, நிகும்பன் முதலியவர்.

**விரோசநன்** — அரனை யென்பவளை மணந்து பலியைப் பெற்றான். பலி குமாரர் பாணன் முதலிய நூற்றுவர்.

**காசிபர்** — தநுவைக் கூடப் பல தானவர்கள் பிறந்தனர். அவர்களாவார் திவிமூர்த்தன், சகுரன், பலி, விருஷபர்வா, பிரபு, அயோமுகன், சம்பான், கபிலன், வாமநன், **விச்வாநரன்**, **புலோமன்**, வித்ராவணன், சுவர்ப்பானு, மஹாசரன், **விப்பிரசித்து**, அசிலோமன், கேசி, தூர்ச்சயன், அயசிரன், அச்வசிரன், அசவசங்கு, ககணமூர்த்தா, வேகவான், கேதுமான், **சுவர்ப்பானு**, அச்வன், அச்வபதி, அஜகன், சூக்ஷ்மன், துகுண்டன், இக்ஷுபாத், ஏகசக்ரன், விருபாக்ஷன், ஹரன், அஹரன், நிசந்திரன், நிகும்பன், குபடன், கபடன், சரபன், சலபன், சூர்யன், சந்திரமஸ், ஏகாக்ஷன், மிருதபன், பிரலம்பன், நரஹன், வாதாபி சத்ருதபநன், சடன், கவிஷ்டன், வநாயு, தீர்க்கிஸ்டன் முதலியோர். ஷை அசுரர்களில் **வைசுவாநரன்**, புலோமை, காளிகை யென்பவர்களைப் பெற்றான். ஷை தநுபுத்திரனாகிய **விப்பிரசித்து**, சிம்மிகையைக் கூடி சைமிகேயன், ராகு, சல்லியன், சுபலிபலன், மகாபலன், வாதாபி, நமுசி, வில்வலன், சுவசுருபன், அரகன், ராகன், சந்திரார்க்கமர்த்தனன், சுசுந்திரன், சந்திரஹர்த்தா, சந்திரபிரமர்த்தனன் முதலியவரைப் பெற்றான்.

**சூரசை** அல்லது **மாயை** காசிபரைக் கூடிச் சூரன், சிங்கமுகன், தாருகன், அசமுகி என்பவர்களைப் பெற்றாள். ஷை தநு குமாரரில் ஒருவனாகிய **சுவர்ப்பானுக்குப்** பிரபாவை யென்று ஒரு குமாரன். ஷை தநு புத்ரனாகிய புலோமன் குமாரி சசி. (புலோமசை)

## சூரிய வம்சம்

**பிரமன்** — குமாரன். மரீசி, கு. காச்யபன். கு. சூர்யன், கு. 1. **வைவச்சுதமனு**— கு. 2. இக்ஷுவாகு, கு. 3. விகுக்ஷி, கு. 4. ககுத்தன், கு. 5. சுயோதனன், கு. 6. பிருதவன், கு. 7. விச்சுவகன், கு. 8. அத்திரகன், (யுவனாசுவன் அல்லது அசுவத்தி) கு. 9. பிரகதச்வன், கு. 10. குவலயாச்வன், கு. 11. சுவனவன், கு. 12. பிரமோதி, கு. 13. அரியச்வன், கு. 14. அதிகும்பன், கு. 15. சாங்கதாச்வன், கு. 16. கிருதாச்வன், கு. 17. இரணசுவன், கு. 18. யுவனாசுவன், கு. 19. **மாந்தாதா** (மற்றொருவகை) 2. இக்ஷுவாகு, கு. ஆயோதன், கு. அரிநாபன், கு. பிருது, கு. விஷ்டராசுவன், கு. இந்திரன், கு. யுவனாசுவன், கு. சிராவன், கு. துந்துமாரன் (குவலயாசுவன்) கு. திரடாசுவனுடன் 100 புத்திரர், கு. அரியசுவன், கு. நிகும்பன், கு. அதி

கும்பன், கு. சாங்கதாசுவன், கு. கிருதாச்வன், அக்ஷாசுவன், திருஷத்வதி—இவர்களில் கிருதாச்வன், கு. இரணுச்வன், கு. யுவனுச்வன், கு. மாந்தாதா என்ப. 9-வது எண்ணில் **பிரகதச்வன்**—கு. திருடாச்வன், கு. அப்பிரமேயன், கு. அரியச்வன், கு. நிகும்பன், கு. (சம்பவாச்வன்) கு. அருணச்வன், கு. யுவனுச்வன், கு. மாந்தாதா. இவ்வாறு ஒரு புராணம்.

16-வது எண்ணில் **கிருதாச்சுவன்**-கு. 17. பிரீடதச்வன், கு. 18. அரியச்வன், கு. 19. விசுமன், கு. 20. திரிதன்வா. மாந்தாதாவின், நான்காம் போனுகிய வயிட்டுவைப்பிரன் அல்லது அரண்யன், குமாரன், திரிதன்வா எனவும் ஒரு புராணம் கூறும்.

(சூரியவம்சத்தில்) **திரிதன்வாவம்சம்**—20. திரிதன்வா, கு. 21. அருணன் அல்லது சூரியவண்ணன், கு. 22. சத்தியவிரதன், கு. 23. அரிச்சந்திரன், கு. 24. லோகிதன் அல்லது ரோகிதாச்வன். இவனுக்கு உரோகிதன், அரிதன் என இரண்டு குமாரர், அவர்களில் உரோகிதன் குமாரன் 25. துந்து, இவனுக்கு வியசன், சுவேதன் என இரண்டு குமாரர். அவர்களில் துந்துவின் குமாரன் 26. விசயன், கு. 27. குருதன் அல்லது காருகன், கு. 28. விரதன். அல்லது 29. விருகன், கு. வாகு, கு. 30. சகரன், கு. 31. அசமஞ்சன், கு. 32. அஞ்சுமான், கு. 33. திலீபன், கு. 34. பகீரதன், கு. 35. சுகதன், கு. 36. சுருதன், கு. 37. நாபாகன், கு. 38. அம்பரீஷன், கு. 39. சிந்துத்தீபன், கு. 40. அயுதாயு, கு. 41. இரிதுபன்னன், கு. 42. சாருவபூமன், கு. 43. சுதாசன், கு. 44. சவுதாசன், கு. 45. அசுமாதன், கு. 46. மூலகன், 47. சதரதன், கு. 48. இளிபிளன், கு. 49. விருத்தசருமா, 50. விச்சுவகன், கு. 51. திலீபன், கு. 52. கட்வாங்கன், கு. 53. தீர்க்கவாகு, கு. 54. ரகு, கு. 55. அஜன், கு. 56. தசரதன், கு. 57. இராமன், லக்ஷ்மணன், பரதன், சத்துருக்னன், இராமன், கு. 58. குசன், லவன், கு. 59. அதிதி, கு. 60. நிடதன், கு. 61. அநலன், கு. 62. நபசு, கு. 63. புண்டரீகாக்ஷன், கு. 64. சேமதன்வா, கு. 65. தேவாநீகன், கு. 66. அகீனகு, கு. 67. சுகாசுவன், கு. 68. சுகன், கு. 69. சந்திரகிரி, கு. 70. பானுசித், கு. 71. சுலுத்தாயு, கு. 72. வரதன், (66-வது எண்ணில் **அகீனகுக்குப்**) பின் (அயோத்யா நகரமான்மியம் கூறுவது.) அவன் குமாரன் 67. குரு, கு. 68. பாரியாத்ரன், கு. 69. பலன், கு. 70. சலன், கு. 71. உற்கன், கு. 72. வச்ரநாபன், கு. 73. சங்கணன், கு. 74. வியுஷிதாசுவன், கு. 75. விவசுவஹன், கு. 76. இரண்யநாபன், கு. 77. புஷ்யன், கு. 78. துருவசந்தி, கு. 79. சுதரிசநன், கு. 80. அக்னிவருணன், கு. 81. சீக்கிரகன், கு. 82. மரு; இவர் கலாபக் கிராமத்தில் இன்றுந் தவஞ்செய்துகொண்டிருக்கிறார். மரு குமாரர் 83. பிரசுசுகர், கு. 84. சுசந்தி, கு. 85. அமர்ஷன், கு. 86. சகஸ்வான், கு. 87. விச்வபவன், கு. 88. பிரகத்பலன், கு. 89. போகதிரணன், கு. 90. உருஷிதன், கு. 91. வச்சபிரீதன், கு. 92. பிரதிவியோமன், கு. 93. மனு, கு. 94. திவீகசு, 95. வாக்னிபதி, கு. 96. சகதேவன், கு. 97. பிரகதச்வன், 98. சுப்ரதீகன், 99. மேருதேவன், கு. 100. சுதக்ஷன், கு. 101. இரக்ஷகன், கு. 102. அந்தரக்ஷகன், கு. 103. சுதபசு, கு. 104. அமித்ரசிது கு. 105. பிரகத்வாசி, கு. 106. பேரிகசு, கு. 107. தனஞ்சயன், கு. 108. இரணஞ்சயன், கு. 109. சிரஞ்சயன், கு. 110. சக்கியன், கு. 111. சுத்தாதரன், கு. 112. பிரசௌசித், கு. 113. க்ஷுத்ரகன், கு. 114. இரணகன், கு. 115. சுரதன், கு. 116. சுமித்ரன்.

19-வது எண்ணில் **மாந்தாதா**—இவனுக்குப் புருகுச்சன், அம்பரீஷன், முசுகுந்தன் என மூவர் குமாரர். **புருகுச்சன்** — நருமதையென்பவளை மணந்தனன். இவன் குமாரன் பிருகதச்வன் அல்லது திரிசதேசஸ். இந்தப் பிரகதச்வனுக்குச் சம்பூதி, **திரிதன்வா** என்ற இரண்டு குமாரர். அவர்களுள் சம்பூதி குமாரன் விஷ்ணுபிரவன் அல்லது மாலவிருத்தன். இவன் குமாரன் வைட்டுவைப்பிரன் அல்லது அரண்யன். திரிதன்வா. கு. திரயாருணி, கு. சத்யவதன். மாந்தாதா குமாரனுகிய **அம்பரீஷனுக்கு** ஆச்வநன், குமாரர் இரதன், அரிதன், கு. அரீதன்.

**வைவச்சுதமனு** — குமாரர் 1. இக்ஷுவான், 2. சிபி, 3. நாபாகன், 4. திருஷ்ணு, 5. சையாதி, 6. நிருகன், 7. நரிஷ்யந்தன், 8. கருஷன், 9. இளை, 10. பிரியவிரதன்.

1. இக்ஷுவாகு குமாரர் விருக்ஷி, அயோதன்; விருக்ஷிகுமாரன், சகுனி.

2. **சையாதி**—குமாரர் உத்தானபாதன், பூரிசேனன், ஆநர்த்தன், இவனிடம் **ஆனர்த்த** வம்சம் பிறந்தது. **நரிஷ்யந்தன்** குமாரன் சித்ரசேநன்; இவன் குமாரன் அக்னிவேசன்; இவனிடம் அக்னிவேச்ய குலம் பிறந்தது.

3. நாபாகன் — குமாரன் அம்பரன், கு. விருபன், கு. ரதீதன், இவனிடம் ரதீத கோத்ரம் பிறந்தது.

41-வது எண்ணிலுள்ள இரிதுபர்ணன் குமாரன் மித்ரசகன் மதயந்தியைக் கூடி அச்சு மகனைப் பெற்றான். இவன் குமாரன் நகுலன், கு. தயாதன், கு. அதிரதன், கு. விச்சுவகன், கு. கட்வாங்கன், கு. தீர்க்கவாகு, கு. ரகு எனச் சில புராணம் கூறும்.

67-வது எண்ணில் சுகாசுவனுக்குச் சுகன், பீஷணன், சந்திராவலோகன், குத்ராவலோகன் என 3-குமாரர்கள் உண்டு. அவர்களில் சந்திராவலோகன் கு. தாராபீடன், கு. சந்திரசிரசு, கு. பானுசித்ரன், கு. சுதாய எனச் சில புராணம் கூறும்.

9-வது எண்ணில் பிருகதச்வனிலிருந்து மாந்தாதாவரை இவ்வாறும் கூறுவர். பிருகதச்வன், கு. திருடாச்வன், கு. அப்ரமேயன், கு. அரியச்வன், கு. நிகும்பன், கு. சங்கதாச்வன் அல்லது சம்பவாச்சுவன், கு. அருணச்வன், கு. யுவனச்வன, கு. மாந்தாதா.

சூரியன் — சாயையிடம் சாவர்ணிமனு, சநி, தபந்தி, ருசை என்பவர்களைப் பெற்றான். சாவர்ணிமனு குமாரன் மேருசாவர்ணிமனு.

சூரியன் சரகையை மணந்து வைவச்சுதமனு, இரேவந்தன், யமன், யமுனை என்பவர்களைப் பெற்றான். ஷை சூரியன் பிரபையை மணந்து காலம், பிரபாதன் என்பவர்களையும், ஷை சூரியன் இராக்னி யென்பவளை மணந்து இரேவந்தன் யமன், யமுனை யென்பவர்களையும் பெற்றான் என்பர்.

### சுவாயம்புமனு சந்ததி

பிரமன்—கு. சுவாயம்புமனு, குமாரர், 1. பிரியவிரதன், 2. உத்தானபாதன், 3. ஆகுதி, 4. பிரசூதி ; ஷை 1. பிரியவிரதன் குமாரர் 1. அக்னிமித்ரன் 2. நாபி 3. மேதாத்ரி, 4. வபுஷ்மொன், 5. சோதிட்மொன், 6. திதிமான், 7. ஆவ்யன், 8. சவனன், 9. அரி, 10. விருதன், 11. இரம்யன், 12. இரண்மயன், 13. குரு.

(2) நாபியின் குமாரன் இடபன். கு. பாதன், கு. சுமதி, கு. தேவதாசித், கு. தேவதிமுன், கு. பரமேஷ்டி, கு. பிரதிகர்த்தா, கு. பூமன், கு. உத்கீதன், கு. பிரஸ்தாவன், கு. விபு, கு. பிருதுஷேணன், கு. நந்தன், கு. கேயன், கு. சித்ராதன், கு. சம்பிராட், கு. மரிசி, கு. பிந்துமான், கு. மது, கு. வீரவிரதன், கு. மன்யு, கு. பவனன், கு. துவஷ்டா, கு. விரசன், கு. சதசித்.

அக்னிமித்ரன்—சம்புத்தீவு ஆண்டவன், 2. மேதாத்ரி அல்லது இத்மசித் பிலக்ஷத்தீவை ஆண்டவன். 3. வபுஷ்மொன், அல்லது எக்யபாகு சான்மலித்தீவு ஆண்டவன், 4. சோதிஷ்மொன் அல்லது இரண்யரோமா குசத்தீவு ஆண்டவன், 5. திதிமான் அல்லது கிருதபிருஷ்டன் கிரவுஞ்சத்தீவு ஆண்டவன், 6. அவ்வியன் அல்லது மேதாதி சாகத்தீவு ஆண்டவன், 7. சவனன் புட்கரத்தீவு ஆண்டவன்.

1. நாபி — இமயத்திற்குத் தென்பால் ஆண்டவன், 2. அரி — நிடதத்திற்குத்தென்பாலும், 3. விருதன் - மேருவைச் சுற்றிய விருத்தத்தையும், 4. இரம்யன் - நீலமலைக்கு வடக்கும், 5. இரண்மயன் - சுவேதமலைக்கு வடக்கும், 6. குரு-சிருங்கவெற்புக்கு வடக்கும், 7. கிம்புருடன்-எமகூடத்திற்குத் தெற்கும் ஆண்டவர்கள்.

சுவாயம்புமனு கு. உத்தானபாதன். கு. துருவன், குமாரர் தானியன், சிட்டன், தேவி சுமதி. சிட்டன் - குமாரர் ரிபு 1. விருகதேசன், விப்பிரன், ரிபுஞ்சயன், விருகலன்.

1. ரிபு தேவி பிருகதி அல்லது புஷ்கரணி; கு. சக்குசன், கு. சாக்ஷுசன், குமார், சுசி, புரு, அக்னி, உக்ரன், முனி, சுத்யும்நன், சத்துயமன், அபிமன், நிமகன், உரு—(2) 2. உரு கு. அங்கன். (3) சுமனசன், உக்ரன், கிரிசன், சாரன், கயன்.

அங்கன் — கு. வேநன், தேவி சுநீதி கு. 4. பிருது, இவன் குமாரர் சூதர், மாகதர், சிகண்டி, விரதத்தன், சுசீலன்.

பிருது — குமாரி அவிர்த்தானி, குமாரன் அவிர்த்தானன் ; தேவி சிகண்டினி, கு. பிராசீனபர்கி ; தேவி சமுத்ரதனயை, கு. பிரசேதஸ், இவனுக்குப் பத்துப் புத்திரர் தக்கன் முதலானவர்.

வைராஜன்—தேவி அகட்வலை, குமாரர், நரு, பூரு, சதத்விம்நன், தபஸ்வி, சத்யசித், கவி, அக்னிஷ்டோமன், அதிராத்ரன், அதிமன்யு, சுயேச்சன்.

நரு — தேவி ஆக்னேயி. கு. அங்கன், சுமனஸ், கிருதி, ஆங்கிரஸ், சாஜீ, கியாதி.

### சந்திர வம்சம்

சந்திரன்—கு. புரூரவன், கு-ர். 1. ஆயு, 2. நிமந்தன், 3. அமவசு, 4. சிராயு அல்லது தசதாயு, 5. சுருதாயு அல்லது வசுமந்தன்.

1. **ஆயு** — குமாரர்-1. ரஜி, 2. அரம்பன், 3. நகுஷன், 4. **க்ஷத்ரவிருதன்**, 5. அநேநஸ்.

2. **நகுஷன்** — குமாரர் 1. உத்தபன், 2. ஆயதி, 3. **யயாதி**, 4. யதி, 5. **சம்யாதி**.

## யயாதி வம்சம்

3. **யயாதி**—கு. துரஸ்வன், கு. வக்னி, கு. கோபானன், கு. காந்தன், கு. துர்யசித்தன், கு. திஷ்டயந்தன், கு. குருத்தாமன், கு. ஆச்ரீதன், குமாரர், **சோழன், பாண்டியன், கோளன்.**

5. **சம்யாதி** — கு. திருஹயன், கு. பப்புரு, கு. சேதுவன், கு. அந்தன், கு. காந்தாரன், கு. கர்மியன், கு. திகுதன், கு. திருத்தமன், கு. பிரசேதஸ்.

4. **க்ஷத்ரவிரதன்** — குமாரர், சுகோத்ரன், குசன். **சுகோத்ரன்**—குமாரர், A. **காச்யன்**, குசன்.

B. **தருஸ்நமதன்** — கு. சுநகன் கு. சௌநகன்; இவன் தவசியாயினன்.

**காச்யன்** — கு. தன்வந்திரி, கு. குவலயாச்வன், கு. அலர்க்கன், கு. பார்க்கவன், கு. பார்க்க பூமி.

3. யயாதிக்குத் தேவயானியிடம், யதி, யயாதி, சம்யாதி, ஆயாதி, உத்தபன். யயாதிக்குச் சன்மிஷ்டையிடம் திருகு, பூரு இரண்டு குமாரர்.

யதுவால் யாதவ வம்சமும், துர்வசுவால் சோழ, பாண்டிய வம்சமும், திருகுவால் காந்தார வம்சமும், பூருவால் பாஞ்சால கௌரவ வம்சமும், அணுவால் சௌவீர, மத்தர, கேகய, அம்பஷ்ட வம்சங்களு முண்டாயின.

## அணு வம்சம்

யயாதி கு. **அணு** கு. சபானலன், கு. காலாநலன், கு. சிருஞ்சயன், கு. புரஞ்சயன், கு. ஜநமேஜயன், கு. மகாகாலன், கு. மகாமனு, குமாரர். **திதிக்ஷு**.

2. **உசீநரன்** — குமாரர் 1. **சிபி**, நிருகன், நவன், கிருமி, சுவீரதன். சிபி குமாரர், வருஷதர்ப்பன், சுவீரன், கேகயன், மத்திரன்.

**திதிக்ஷு** — கு. பலி, குமாரர், வங்கன், **அங்கன்**, களிங்கன், புண்டரன், சுஹுநன்.

**அங்கன்** — கு. திதிவாகனன், கு. தசரதன், உரோமபதன், கு. அதிரதன், விருஷசேநன், கு. விருஷசேநி பலியின் (36) வது சந்ததியில் **சூதன் கர்ணனை வளர்த்தவன்.**

## சாத்ததன்வா மரபு

**சாத்ததன்வா**-இவன் யதுவம்சத்தவன் குமாரர் 1. **அந்தகன்**, 2. திவ்யன், 3. இருஷ்ணி, 4. போஜன், 5. **தேவமா விருதன்**, 6. பஜமாநன், 7. கிருவர்மா, 8. பர்கினன் 9. விருஷ்டி, 10. யது.

1. **அந்தகன்**—குமாரர் அச்வவீடணன், **குகுரன், பஜமானன்**, கம்பளபர்ஷன்.

**குகுரன்** — கு. **விருஷ்ணி** குமாரர் **அனலன், கபோதரோமன்.**

**அனலன்** — குமாரன் அபிசித், குமாரர் ஆகுகன், வசு, ஆகுதி (பெண்) **ஆதுகன்** குமாரர் **தேவகன், உக்ரசேநன். தேவகன்** குமாரர் தேவவான்முதல் நால்வர், தேவகிமுதல் எழுபெண்கள். வசு, கு. ஆயுகன். **உக்ரசேநன்** குமாரர் கம்சன் முதல் எழுவர்.

**கபோதரோமன்** — கு. சாந்தன் கு. விலோமகன், கு. நபன் அநு, கு. ஆநகதுந்துபி, குமாரர் ஆகுகன், இந்திரன் (பெண்) திரிமதி. கு. **பஜமானன்**, கு. போஜன், கு. ஹிருதிகன்.

**பஜமானன்** — குமாரர் சகத்திரன், அயுதாயு, ஆசகன், பலவான்.

**விருஷ்டி** — குமாரர் பிரசேநன், சத்ராசித், **சிநி**. சிநி குமாரன் சத்யவந்தன்; கு. சாத்தகி.

## காதி வம்சம்

சந்திரன் கு. புரூரவன், கு. அமவசு அல்லது விஜயன், கு. பீமன், கு. காஞ்சநன், கு. சுகேத்ரன், கு. சகுநன், கு. சுமந்திரன், கு. அஜகன், கு. பலகாசன், கு. **குசிகன்**. கு. குசாம்பன், கு. காதி. **குசிகன்** குமாரர் குசன், **குசநாபன்**, அதூர்த்தன், வசு. **குசநாபன்** கு. காதி இவனுடன் (100) பெண்கள் (இவர்களின்முதுகை வாயு முறித்தனன்). **காதி** கு. விச்வாமித்ரன். இவன் தங்கை கௌசிகை நதியாயினள்.

## ஹேஹய வம்சம்

யயாதி கு. **யது**, குமாரர் நளன், இரிபன், **ஸகஸ்ராஜித்**, கோஷ்டன்.

**ஸகஸ்ராஜித்**, கு. சதஜித், குமாரர் **ஹேஹயன்**, மகாஹயன், **வேணுஹயன்**. ஹேஹயன் கு. மகிஷ்மந்தன், கு. கிருதவீர்யன், கு. **கார்த்தவீர்யன்**, குமாரர் சூரசேநன், **ஜயத்வஜன் விருஷ்ணன்**, மதன், சூரன். **ஜயத்வஜன்**, கு. தாளசங்கன்.

## யது வம்சம்

யது குமாரர் 1-சகத்ரசித், 2-குரோட்டு, 3-நீலன், 4-சிகன், 5-ரகு.

**சகத்ரசித்** கு. சதசித், கு. ஏகயன், அல்லது கேகயன், கு. தருமன், கு. **தருமநேத்ரன்**, கு. கிருதவீரியன்; இவனுக்கு 500 புத்ரர், கு. சயத்துவசன், கு. தாலசங்கன்; இவனுக்கு 100-புத்ரர், கு. விருடன், வீதிகோத்ரன், விருடன், கு. விருடணன். வீதிகோத்ரன், கு. அநந்தன், கு. துச்சயன்.

**தருமநேத்திரன்** — (யதுவம்சம்) கு. கீர்த்தி, கு. சஞ்ஞக்கினன், கு. அயிட்டு, கு. பத்திரசிரோமணி, கு. துத்தமன், கு. தனகன்,கு. கிருதவீரியன், கு. கார்த்தவீர்யன், இவன் குமாரர் சூரன், சூரசேநன், விட்டுணி, **கிட்டினன்**, சயத்துவசன.

**கிட்டினன்** — கு. மது, கு. வசணன் முதல் (100) குமாரர்; அநந்தன், கு. துர்ச்சயன். கு. சுப்பிரீதன்.

**துரோட்டு** — (யது குமாரன்) கு. பிரசநாபன், கு. சித்திராத்ன், கு. சசிபிந்து; இவனுக்கு (100) பிள்ளைகள், அந்தகன்; கு. சுயச்சயன், கு. இருதி, கு. உசன், கு. திரிதன், கு. சுதேவஷு, கு. மருங்கு, கு. மருத்து, கு. உருக்குமகவசன், கு. விருத்து, கு. சியாயகன், கு. விதர்ப்பன், குமாரர், **கரதன்**, கௌசிகன். **உரோமபதன்**. **கரதன்**, கு. குந்தி, கு. விருஷ்ணி, கு. திருஷ்டு, கு. நிதி, கு. சாருகன், கு. வியோமன், கு. சீமூதன், கு. விதருதி, கு. வீமரதன், கு. நிவாதனன், கு. திரிரதன், கு. சகுநன், கு. நிரம்பன், கு. தேவரதன், கு. தேவன் அல்லது சுகக்ஷேத்ரன், கு. புருஷன், கு. புருஷோத்தமன், கு. சாத்தன்வா (இவன் இக்ஷுவான் குமாரியை மணந்தவன்). **உரோமபதன்** கு. பப்புரு, கு. பூதி. யயாதி குமாரன் யது. **யது** கு. கோஷ்டன், கு. சசிபிந்து, கு. பிரதசாபன், கு. ஜாமகன் கு. **விதர்ப்பன்**. **விதர்ப்பன்**, குமாரர் குசன், **கிருதன்** உரோமபதன். **கிருதன்** கு. **சாத்வதன்**. **சாத்வதன்** குமாரர் போஜன், **அந்தகன்**, தேவாப்ருதன், விருஷ்ணி, திவ்யன், பஜி, பஜமாநன். **அந்தகன்** குமாரர் சுசி. **பஜமாநன்**, கம்பளஹர்ஷன், **துதுரன்**. **பஜமானன்**, கு. போஜன், கு. ஹிருதிகன், குமாரர் சத்தனு, இருதவர்மா. **தேவமீடன்**. **தேவமீடன்**, கு. சூரன், கு. வசுதேவன், கு. **கிருஷ்ணன்**, கு. பிரத்யும்நன், கு. அநிருதன். **துதுரன்**, கு. விருஷ்ணி, கு. அபிஜித்; கு. ஆஹுகன், குமாரர் **தேவதரு**, **உக்ரசேநன்**, தேவகுகு, குமாரி தேவகி. உக்ரசேநன் கு. கம்சன்.

**கிருஷ்ணன்** தேவியர்—ருக்மணி, மித்ரவிந்தை அல்லது காளிந்தி, சத்தியை, சாம்பவதி. ரோகணி, சுசீலை, சத்தியபாமை, லக்ஷுமணை. குமாரர், பிரத்யும்நன், சாருதேஷ்ணன் சுதேஷணன், சாருதேஹன், சுஷேணன், சாருகுப்தன், பத்ரசாரு, சருவிந்தன், சுசாரு, சாரு; ஒருபெண் சாருமதி.

## (யதுவம்சம் மற்றொருவிதம்)

யது கு. குரோட்டு, கு. துவசநி, கு. மூர்த்தி, கு. விசங்கன், கு. சித்திராதன், கு. சசிபிந்து, கு. பிரதிவியச்சு, கு. பிருதுகன்மன், கு. பார்க்கவன், கு. பிருது, கு. பிருதுசத்தமன், கு. உசன், சிதரு, கு. கவசன், கு. சாரவிருதன், கு. உறுவியன், கு. விதர்ப்பன், குமாரர் **உரோமபதன்**, கிருதன், கேசிகன். **உரோமபதன்** கு. பப்புரு, கு. விருத்தி, கு. சந்தன், கு. விருதிசேய், கு விச்சுவசமன், கு. சுமந்து, கு. நளன், கு. சோதி, கு. சோதிட்டுமென், கு. வபுஷ்டுமான், கு. பிரமமேதி, கு. சீதரன், கு. விகாதன், கு. கிருது, கு. குணி, கு. விருட்டுணி, கு. நிருவிருதி, கு. தெசாகுனன், கு. ஆரோகன், கு. சீமூதன், கு, விகுதி, கு. பலாசுவன், கு. நாவுாசுன், கு. தயரன், கு. சகுனி, கு. காந்தி, கு, தேவரதன், கு. தேவபக்ஷன், கு. மது, கு. குரவசன், கு. மனு, கு. புருகுச்சன், கு. அஞ்சன், கு. சாத்துதன், கு. **விருஷ்ணி**.

## பரத வம்சம்

பூரு (இவன் யயாது குமாரன்), கு. பிராசீனன், கு. அந்திசாரன், குமாரர், **சுமதி**, எருது, அப்ரதிரதன், **சுமதி** கு. துஷ்யந்தன், கு. **பரதன்**, கு. பமன்யன், குமாரர், **பிருகக்ஷத்ரன்**, மகாவீர்யன், நரன், **கர்க்கன்**. **பிருகக்ஷத்ரன்** கு. அத்தி, குமாரர், **அஜமீளன்**, திவீமன், பருமீளன். **அஜமீளன்** குமாரர் **பிருதிஷன்**, **நீலன்**, **இருடன்**. (இவனிடம் கௌரவவம்ச உற்பத்தி). **பிருகனிஷன்** கு. பல்லாதன், **நீலன்**, கு. **பர்ம்ாசுவன்**, **இவன்** குமாரர் **முத்கலன்**, சிருஞ்சயன், **காம்பீலன்**, பிருகதிஷன், யவீநரன். **முத்கலன் குமாரர் திவோதாசன், அகலிகை; திவோதாசன்**, கு. **விருஷதன்**; கு. **திருபதன்**.

## விருஷ்ணி வம்சம்

**விருஷ்ணி** குமாரர் **அந்தகன், மித்திரன், சிநி,** அநமித்திரன். அந்தகன் குமாரர் குமரன், பஜமாநன். பஜமாநன், கு. விரேதன், கு. சூரன், கு. சமி, கு. புரதிகேத்திரன், கு. போஜன், கு. கிருதி, கு. கிருதன்வா, கு. தெய்வகன், கு. சூரன் குமார். **வசுதேவன், சுருவிரதன், சுருதகீர்த்தி. வசுதேவன்** கு. கிருஷ்ணன், சுருதவிரதன், கு. சைத்தியன். சுருதகீர்த்தி கு. கேகயன்.

**விருஷ்ணி** கு. மித்திரன், கு. சத்திராசித், கு. பிரசேநன்.

**விருஷ்ணி** கு. சிநி, கு. சத்யகன், கு. சாத்தகி, கு. சஞ்சயன், கு. குணி, கு. உகந்தரன், கு. அநமித்திரன், கு. பிருச்சனி, குமாரர் **சுவர்க்கன்,** சித்திரகன்.

**விருஷ்ணி** — குமாரர் சுமித்ரன், **யுதாசித்,** யுதாசித் குமாரர் சிநி, **அநமித்ரன்.**

**அநமித்ரன்** — குமாரர் **நிம்மகன், சிநி, பிரசநி. நிம்மகன்** குமாரர் சத்ராஜித், பிரசேநன். சத்ராஜித் குமாரி சத்யபாமை. **சிநி** கு. சத்யகன், கு. சாத்தகி. **பிரசநி** குமாரர் **சீவபங்கன்,** சித்ரகன். **சீவபங்கன்** கு. அக்குரூரன்.

**சுவர்க்கன்** — கு. அக்குரூரன், கு. தேவவான், கு. பிருது, கு. விப்பிருது.

சந்திரன் கு. புரூரவன், கு. ஆயு, கு. அநேகஸ், கு. சுத்தன், கு. சுசி, ரஜசு, கு. திரிகந்து, கு. கிருதகிதேயன்; இவன் வம்சத்தவர் வேதியராயினர்.

சந்திரன் கு. புரூரவன், கு. ஆயு, கு. அரம்பன், கு. ரஸம்பன், கு. கம்பீரன், கு. கிருதன்; இவன் வம்சத்தவர் வேதியராயினர்.

**இருடன்** — (பாதவம்சத்தவன்) கு. சவ்வருணன், கு. குரு, குமாரர் **பரீக்ஷித்து, சுதனுஸ், ஜஹ்நவன். சுதனுஸ்,** கு. உபரிசாவசு, குமாரர் **பிருகத்ரன்,** குசும்பன், மத்சியன், பத்யகன், சேதிஷன்; குமாரி சத்யவதி.

**பிருகத்ரன்** — குமாரர் ஜராசந்தன், குசாக்ரன்.

**ஜஹ்நவன்** — கு. பிரதீப்ன், குமாரர் **தேவாபி, சந்தனு, பாகலிகன்.** பாகலிகன், கு. சோமதத்தன், கு. பூரி, பூரிசிரவன், **ஜல்லியன்.**

**சந்தனு** — இவன் தேவியார் பரிமாதி, (யோசனைகந்தி) குமாரர் **பீஷ்மன், விசித்ரவீரியன்,** சித்ராங்கதன். **விசித்ரவீரியன்** குமாரர் **திருதராஷ்டிரன், பாண்டு.**

ஷை திருதராட்டிரன் புத்திரர் துரியோதனன் முதல் நூற்றுவர். (திருதராட்டிரன் புதல்வரைக் காண்க). துரியோதனன் புதல்வன் லக்னன். **பாண்டு** குமாரர் தருமன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன். தருமன் குமாரன் பிரதிவிந்தன், வீமன் கு. சுருதீசன், நகுலன் கு. சதாநீகன், சகாதேவன் கு. சுதசேநன், அர்ச்சுநன் கு. அபிமன்யு, தேவி உத்தரை, கு. பரீக்ஷித்து, தேவி மாத்திரை, கு. ஜநமேஜயன், கு. சதாநீகன், கு. அதிசிமகிருஷ்ணன், கு. விசக்ஷணன், கு. பூரிசிரேஷ்டன், கு. சித்திரதன், கு. சுசித்ரதன், கு. விருஷ்டிமந்தன், கு. சுஷேணன், கு. சுநீதன், கு. நிருசக்ஷன், கு. சுகிலவன், கு. க்ஷேமகன் முதலியவர்.

## இருக்குவேத பரம்பரை

வியாசர். இவரிடம் பயிலவர், வைசம்பாயணர், சயமினி, சுமந்து. பயிலவரிடம் இந்திரப்பிரமதி, பாஷ்களர். இந்திரப்பிரமதியிடம் மாண்டுகேயர், இவரிடம் சாகல்யர், இவரிடம் வாத்யர், மௌத்கல்யர், சாலியர், கோகல்யர், சிகிரர், சாதுகாரணர். இவரிடம் பைங்கர், வைதானர், பாலகர், விரசர்.

## எசுர்வேத பரம்பரை

வியாசர். இவரிடம் வைசம்பாயனர். இவரிடம் சரகர், யஞ்ஞவல்கியர், இவரிடம் காணுவர், மாத்யந்தனர்.

## சாமவேத பரம்பரை

வியாசர். இவரிடம் சயமுனி, இவரிடம் சுகவர்மா, ஆவந்தியன். சுகவர்மா இடம் இரண்யநாபன், பவுஷ்பஞ்சி. ஆவந்தியனிடம் உதச்சியர்.

சயமுனியிடம் சுமந்து, இவரிடம் சுதன்வா. ஷை பவுஷ்பஞ்சியிடம் இலவுகாகுக்ஷி, இலங்காலன், குல்லியன், குஷிதன், குஷி. ஷை இரண்யநாபனிடம் பிராச்சியன், கிருதன்.

## அதர்வணவேத பரம்பரை

சுமந்து இடம் கபந்தன், இவனிடம் பத்தியன், வேததரிசன். வேததரிசனிடம் சாலங்காயினி, பிருமவலி, மோதாதா, பிப்பிலாயனர்.

பத்தியனிடம் குமுதன், சுநகன், சாபாலி; சுநகரிடம் பெப்புரு, சயிந்தவாயினர். சயிந்தவாயினரிடம் சவரன். நக்ஷத்ரகல்பன், சாந்திராவர்க்கன், ஆங்கிரசன் இம்மூவரும் அதர்வண வேதிகள்.

## புராண பரம்பரை

**வியாசர்.** இவரிடம் அருஷணர், இவரிடம் திரையாரணி, **சூதர்**, காச்யபர், சாவர்ணி, அகர்த்தவுருணர், சிசுபாயனர், ஆரீதர். சுகரிடம், காச்யபர், சாவர்ணி, அகர்த்தவிருணர், சிசுபாயனர், ஆரீதர், சூதர் எனவும் கூறுவர்.

## சைவ மடங்கள்

பூலோகத்தில் ஜம்புத்வீபத்தின் நடுவிலிருக்கும் மேருமலைக்குத் தெற்கில் இமயமலைக்குத் தென்புறம் பாரதவர்ஷம் எனப்படும். அப்பாரதகண்டத்தில் துர்வாஸமுனிவரால் தாபிக்கப்பட்டது **ஆமர்த்தகமடம்.** அந்த மடத்தில் கௌசிகர், காச்யபாதிருஷிகள் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமான ஸ்ரீ கண்டபரமேச்வரரை யுபாசித்து ஆகமஞானம் பெற்றுணர்ந்தனர். இவர்களுடைய சீடர்களான ஸனத்குமாரர் முதலிய நால்வரும் அம்மடத்திலிருந்து பிரிவுபட்டுத் தனித்தனி நான்கு மடங்களை யேற்படுத்தினர். அவை மேற்கூறிய **ஆமர்த்தகமடம், ரணபத்திரம், கோளகி, புஷ்பகிரி** இந்த நான்குமடங்களுமாம். இவற்றுள்,

**ஆமர்த்தகமடத்திற்கு**—ஸநத்குமாரர் தலைவர்; அங்கே கதம்ப விருக்ஷம்; அவர் சந்ததி அந்த மடாதிபதிகளாயிருந்தனர்.

**ரணபத்திரத்திற்கு** — ஸநந்தர் தலைவர்; அங்கே வடவிருக்ஷம்; அவர் சந்ததியார் அந்த மடாதிபதிகளாயிருந்தனர்.

**கோளகிமடத்திற்கு** — ஸநாதநர் தலைவர்; அங்கே ஜம்பூ விருக்ஷம்; அவர் சந்ததியார் அந்த மடாதிபதிகளாயிருந்தனர்.

**புஷ்பகிரிமடத்திற்கு** — ஸநகர் தலைவர். அங்கே அருச்சுனவிருக்ஷம்; அவர் சந்ததியார் அந்த மடாதிபதிகளாயிருந்தனர்.

இம்மடங்கள் கோதாவரி தீரத்தில் சைவர்கள் வாசஞ்செய்துகொண்டிருந்த மந்திரகாளி யென்னும் பட்டணத்தைச் சூழ்ந்திருந்தன. ஸ்வாயம்புமநு காலத்தில் ஒன்றாய் ஆமர்த்தக மடமொன்றே ருஷிஸம்பிரதாயமா யிருந்தது. பின்பு ஸ்வாரோசிஷமநு காலத்தில் ஆமர்த்தகமட முதலாக நான்காயின. அதனால் சைவப்பிராமணரும் நான்கு வகுப்பாராயினர். இந்த ஆமர்த்தக மடத்திலிருந்து கலியுகத்தில் போக மோக்ஷப்ரதாரகிய **வியாபகசம்பு** என்னும் மஹா குருவானவர் உண்டானார். இராஜேந்திரசோழன் கங்காஸ்நானத்திற்குச் சென்றகாலத்துச் சைவாசாரியர்களைக் கொண்டுவந்து காஞ்சி சோழமண்டலத்தில் ஸ்தாபித்தான். இம்மடங்களில் பல ஸ்மார்த்த மடங்களாயின. (சித்தாந்தசாராவலி).

சிவமூர்த்தியினிடம் அருள்பெற்ற நால்வராகிய நந்திகள் **சநகர், சநற்குமாரர், சநந்தனர், சநாதனர்** என்பவராம். இவர்களுள்:

1. **சநகரால் சம்புசந்தானம், மலையமான்** சந்தானம் என இரண்டாகிப் பின் பலவாயின.

2. **சநற்குமாரரால் விஞ்ஞான தேவர்** சந்தானம், **மெய்கண்ட தேவர்** சந்தானம் என இரண்டாகிப் பின் பலவாயின.

3. **சநந்தனரால் சிவமணிய தேவர்** சந்தானம், **பிரமதேவர்** சந்தானம், **சிவாநந்தபோதர்** சந்தானம் என மூன்றாகிப் பின் பலவாயின.

4. **சநாதனரால் பிரமதேவர்** சந்தானம், **சிங்கநாததேவர்** சந்தானம் என இரண்டாகிப் பின் பலவாயின.

5. **சிவயோகமுனிவரால் வாமதேவ முனிவர்** சந்தானம் ஒன்றாய்ப் பின் பலவாயின.

6. **பதஞ்சலிமுனிவரால் நிறைந்த நாயனார்** சந்தானம் பரவியது. இச்சந்தானத்தவர் **வாகீசமுனிவர்.** இவருக் காசிரியர் **பரமானந்தமுனிவர்.**

7. **வியாக்ரபாதரால் சத்யோஜாத தேவர்** சந்தானம் ஒன்றாய்ப் பின் பலவாயின.

8. **திருமூலதேவரால்** பிரமவேவர், இந்திரதேவர், விஷ்ணுதேவர், உருத்திரதேவர், கந்துரு மகாவிருடிகள், காலாக்னிருத்ரர், கஞ்சனூர் மலையமான் என எழுவகைச் சந்தானமாய்ப் பின் பலவாயின.

## வைஷ்ணவ குருபரம்பரை

### தென்னாசாரிய சம்பிரதாய குருபரம்பரை

பெரியபெருமாள், பிராட்டியார், சேனைமுதலியார், நம்மாழ்வார், ஸ்ரீமந் நாதமுனிகள், உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஸ்ரீ ஆளவந்தார், பெரியநம்பி, எம்பெருமானார், எம்பார், பட்டர், நஞ்சியர், நம்பிள்ளை,

வடக்குத்திருவீதிப்பிள்ளை, பிள்ளைலோகாசாரியர், திருவாய்மொழிப்பிள்ளை, மணவாளமாமுனிகள்.

### ரகஸ்ய கிரந்த பரம்பரை

உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர், கூறகுலோத்தம தாசர், திருவாய்மொழிப்பிள்ளை.

### பெரிய ஜீயர்
### திவ்யபிரபந்த வியாக்கியான பரம்பரை

உடையவர், திருக்குருகைப்பிரான் பிள்ளான், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, ஈயுண்ணிமாதவர், ஈயுண்ணிபத்மநாபர், கோலவராகநயினர், நாலூர் தேவராஜர், திருவாய்மொழிப்பிள்ளை, பெரியஜீயர்.

### ஸ்ரீ பாஷ்ய பரம்பரை

உடையவர், எம்பார், பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை, வடக்குத் திருவீதிப்பிள்ளை, பிள்ளை லோகாசாரியர்.

### தேன்கலை மடம் வானமாமலை மடம்
### வடகலை

**வடகலைசாம்பிரதாயம்**, ஸ்ரீ பாஷ்யகாரர் வரையில் தென்னுசாரிய சாம்பிரதாயத்தை யொத்திருக்கிறது. அவருக்குப் பிறகு இரண்டுமடமும் பரம்பரைகளால் பேதப்படுகிறது.

### அகோபிலமடத்து முதலாசிரியர்
### (அழகியசிம்மர் மடம்)

ஆதிவண்சடகோபசுவாமி, ஸ்ரீமந்நாராயணசுவாமி, ஸ்ரீபராங்குசசுவாமி, ஸ்ரீநிவாச சுவாமி, ஸ்ரீசடகோபசுவாமி, ஸ்ரீமத்ஷஷ்ட பராங்குசர், ஸ்ரீசடகோபசுவாமி, ஸ்ரீபராங்குசசுவாமி, ஸ்ரீமந்நாராயணசுவாமி, ஸ்ரீவண்சடகோபசுவாமி, ஸ்ரீநிவாசசுவாமி, ஸ்ரீமந்நாராயணசுவாமி, ஸ்ரீவீரராகவசுவாமி, ஸ்ரீமந்நாராயணசுவாமி, ஸ்ரீகல்யாணவீரராகவர், ஸ்ரீசடகோபசுவாமி, ஸ்ரீவீரராகவவேதாந்தசுவாமி, ஸ்ரீமந்நாராயணசுவாமி, ஸ்ரீநிவாச சுவாமி, ஸ்ரீவீரராகவசுவாமி, ஸ்ரீபராங்குச சுவாமி, ஸ்ரீமந்நாராயணசுவாமி, ஸ்ரீவீரராகவ சுவாமி, ஸ்ரீபராங்குசராமாநுஜசுவாமி, ஸ்ரீநிவாசசுவாமி, ஸ்ரீரங்கநாதசுவாமி, ஸ்ரீவீரராகவ சுவாமி, ஸ்ரீரங்கநாதசடகோபசுவாமி, ஸ்ரீபராங்குசலக்ஷ்மணசுவாமி, ஸ்ரீ ஸ்ரீநிவாசவேதாந்த சுவாமி, ஸ்ரீமந்நாராயணவேதாந்தசுவாமி, ஸ்ரீ வீரராகவசுவாமி, ஸ்ரீசடகோபசுவாமி.

### பரகாலசுவாமி மடம் அல்லது
### பிரமதந்திரசுவாமி மடம்

பிரமதந்திரசுவதந்திரசுவாமி, வேதாந்த ராமாநுஜசுவாமி, பிரமதந்திரசுவாமி, ஸ்ரீநிவாசசுவாமி, பரகாலசுவாமி, வேதாந்தசுவாமி, ஸ்ரீநிவாசபரகாலசுவாமி, ஸ்ரீமந்நாராயணசுவாமி, ஸ்ரீரங்கராஜசுவாமி, பிரமதந்திரசுவாமி, யதிராஜ பிரமதந்திரசுவாமி, வரதராஜசுவாமி, பராங்குசசுவாமி, கவிதார்க்கிகசிம்மசுவாமி, வேதாந்தபிரமதந்திரசுவாமி, ஞானசாகரபிரமதந்திரசுவாமி, வீரராகவசுவாமி, வரதவேதாந்தசுவாமி, வீரராகவசுவாமி, வேதாந்தலக்ஷ்மணசுவாமி, வேதாந்தபிரமதந்திரசுவாமி, பரகாலசுவாமி, ஸ்ரீநிவாசபரகாலசுவாமி, ஸ்ரீநிவாசகண்டாவதாரசுவாமி, வேதாந்தபரகாலசுவாமி, ஸ்ரீநிவாசபரகாலசுவாமி, ராமாநுஜ பரகாலசுவாமி, கண்டாவதார பிரமதந்திரபரகாலசுவாமி, வேதாந்த பிரமதந்திரபரகால சுவாமி, ஸ்ரீநிவாசபிரமதந்திரபரகாலசுவாமி.

### முனித்திரயசாம்பிரதாய பரம்பரை

பிரமதந்திரசுவாமிக்குப் பின், கடிகாசதகம் அம்மாள், ஸ்ரீமத்வரவிஷ்ணுவாசாரியர், மகாதயாதீசாசாரியர், ஸ்ரீநரசிம்மாசாரியர், வாத்சயவரதாசாரியர், ஸ்ரீமத்ஷஷ்டபராங்குச சுவாமி, ஸ்ரீபஞ்சமதபஞ்சானனம் தாததேசிகன், ஸ்ரீமத் அநந்தாசாரியன், ஸ்ரீராமாநுஜ ஸ்வாமி, ஸ்ரீவேங்கடேசாசாரியர், ஸ்ரீவீரராகவாசாரியர், ஸ்ரீரங்கபதிதேசிகர், ஸ்ரீரங்கநாத சுவாமி, ஸ்ரீமத்வேதாந்தராமாநுஜஸ்வாமி, ஸ்ரீ கோபாலதேசிகன்.

### மத்வாசாரிய பரம்பரையும் மடமும்

1. நாராயணன், 2. பிரமன், 3. சநகநந்தநாதிகள், 4. தூர்வாசர், 5. கருடவாஹந தீர்த்தர், 6. கைவல்யநாததீர்த்தர், 7. ஞானீசதீர்த்தர், 8. பரதீர்த்தர், 9. சத்யப்ராஞ்ஞ தீர்த்தர், 10. பிராஞ்ஞதீர்த்தர், 11. அச்யுத பிரேக்ஷதீர்த்தர், 12. ஆநந்ததீர்த்தாசாரியர், இவரே பாஷ்யகாரர்.

1. ஆநந்ததீர்த்தர், 2. பத்மநாபதீர்த்தர், 3. நரஹரிதீர்த்தர், 4. மாதவதீர்த்தர், 5. அக்ஷோப்யதீர்த்தர், 6. ஜயதீர்த்தர், 7. வித்யாதிராஜதீர்த்தர், 8. கவீந்த்ரதீர்த்தர், 9. வாகீசதீர்த்தர், 10. ராமச்சந்திரதீர்த்தர், 11.

வித்யாநிதிதீர்த்தர், 12. ரகுநாததீர்த்தர், 13. ரகுவர்யதீர்த்தர், 14. ரகூத்தமதீர்த்தர், 15. வேதவ்யாஸதீர்த்தர், 16. வித்யாதிபதிதீர்த்தர், 17. வித்யாதிசதீர்த்தர், 18. வேதநிதிதீர்த்தர், 19. சத்யவிருததீர்த்தர். 20. சத்யநிதிதீர்த்தர், 21. சத்யநாததீர்த்தர், 22. சத்யாபிநவதீர்த்தர், 23. சத்யபூர்ணதீர்த்தர், 24. சத்யவிஜயதீர்த்தர், 25. சத்யபிரியதீர்த்தர், 26. சத்யபோததீர்த்தர், 27. சத்யசந்ததீர்த்தர், 28. சத்யவரததீர்த்தர், 29. சத்யதர்மதீர்த்தர், 30. சத்யசங்கல்பதீர்த்தர், 31. சத்யசந்துஷ்டதீர்த்தர், 32. சத்யபாராயணதீர்த்தர், 33. சத்யகாமதீர்த்தர், 34. சத்யேஷ்டதீர்த்தர், 35. சத்யபராக்ரமதீர்த்தர், 36. சத்யவிரததீர்த்தர், 37. சத்யதீரதீர்த்தர்.

### மத்வமடங்கள் 6

1. வியாஸராயமடம், 2. சுமதீந்த்ரமடம், 3. பத்மநாபதீர்த்தமடம், 4. மாதவதீர்த்தமடம், 5. அக்ஷோப்யதீர்த்தமடம், 6. சத்ய பூரணசாரியர்மடம்.

### சங்கராசாரியர் மடம்

ஆதிசங்கரர் முதலில் நாற்றிசைகளுக்கும் நான்குமடங்கள் தாபித்தனர். அவை வடக்கு **அரித்வாரம்**, கிழக்கு **ஜகந்நாதம்**, தெற்கு **சிருங்ககிரி**, மேற்கு **துவாரகை களாம்**. இவைகளுள் சிறந்தது சிருங்ககிரியாம். ஷை சிருங்ககிரியின் கிளைமடம் விருபாக்ஷமாம். வித்தியாரண்யசுவாமிகள் காலத்துப் **புஷ்பகிரிமடம்** உண்டாயிற்றென்ப. பின்னிருந்தவர்களால் **கும்பகோணம்**, ஆம்நி சிவகங்கை, காகர்ல மடங்களுண்டாயின.

### சைவஆதீன மடங்கள்

### குருபரம்பரை

### திருவாவடுதுறை மடாதீனம்

திருக்கைலையில் அருள்வடிவாகிய கல்லால் நிழலில் தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த **ஸ்ரீகண்டபரமசிவம்**, இவர்பால் ஆகமங்களைக் கேட்டருளிய **ஸ்ரீநந்திதேவர்**, இவர் தம்மாணாக்கருள் சிறந்த **சநற்குமார முனிவர்க்**குபதேசித்தனர். இவர் தம்மாணாக்கருள் சிறந்தவர் **சத்யஞானதரிசினிகள்**, இவர் தம்மாணாக்கருள் சிறந்த **பரஞ்சோதிமுனிவர்**, இவர் திருவெண்ணெய் நல்லூரில் வேளாளர் குலத்தவதரித்த **சுவேதவனப் பெருமான்** என்னும் **மெய்கண்டதேவருக்கு** உபதேசித்தார். இவர் திருத்துறையூர் ஆதிசைவராகிய சகலாகமபண்டிதரென்னும் காரணப்பெயருடைய **அருணந்திசிவாசாரியருக்கு** உபதேசித்தார். இவர் அச்சிவாகமப் பொருள்களையும் சிவஞானபோதத்தினையும் திருப்பெண்ணாடகத்தில் பிராமணகுலத்தில் அவதரித்த **மறைஞானசம்பந்த சிவாசாரியருக்கு** உபதேசித்தருளினர். இவர் சிதம்பரத்தைச்சார்ந்த திருக்களாஞ்சேரியி லெழுந்தருளியிருந்த தில்லைவாழந்தணர்களுள் ஒருவராகிய **உமாபதிசிவாசாரியருக்கு** உபதேசித்தருளினர். இவர் **அருணமச்சிவாய்தேசிகர்** முதலியோருக்கு உபதேசித்தருளினர். அவருள் திருமூவலூரில் சைவவேளாளர் குலத்தி லவதரித்த **நமச்சிவாயமூர்த்திகள்** நவகோடி சித்தவாசபுரமென்ற திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்து (1) **சித்தர் சிவப்பிரகாச தேசிகருக்கு** உபதேசித்தருளினர். அவர் இலிங்கதாரணியாய்த் துறையூர்மடம் கட்டிக்கொண்டு சென்றதால் பஞ்சாக்கர தேசிகமூர்த்திகள் திருவாவடுதுறையில் அவதரித்துத் தீவிரதர பக்குவியாயிருந்த (2) மறைஞானதேசிகருக் குபதேசிக்க இவர் நிட்டையிலேயே யிருப்பது கண்டு நமச்சிவாய தேசிகர் ஆதீனம் விளங்க (3) **அம்பலவாணதேசிகருக்கும்** தக்ஷிணாமூர்த்தி தேசிகருக்கும் அபிஷேகஞ் செய்து சைவசித்தாந்த சாத்திரத்தை யுபதேசித்தருளினர். ஷை அம்பலவாணதேசிகர் பலவகை சித்தாந்த சாத்திரங்களை யியற்றினர். இவர் தம்மையடைந்த உலகுடைய நாயனர் என்னும் வைஷ்ணவருக்குச் சைவசித்தாந்த சாத்திரங்களை யுபதேசித்தருளினர். இவர் சிவபுரம் பிள்ளை முதலிய பலர்க்கு உபதேசித்துப் பிரபலராயிருந்தனர். இவர் உபதேசபரம்பரை அங்குரித்தற்கு அருகமாய் அப்பிரதமாசாரியர் காலத்தில் இருந்தருளிய இவர் துவிதியாசாரியருமானதால் இந்த ஞானதீனத்துக்குவரும் ஆசிரியர்கள் நைட்டிகத் துரியாச்ரமிகளாயிருந்தாலும் பெரிய பட்டத்தில் எழுந்தருளியிருக்கையில் அடியவர்களுக்கு எழுதுந் திருமுகத்தில் **நமசிவாயம்** எனவும், சின்னபட்டத்தில் எழுந்தருளியிருக்கையில் **அம்பலவாணர்துணை** எனவும் திருக்கைச்சாத்திடுதல் பண்டைதொட்டு வழங்கிவருகின்றது. ஷை அம்பலவாணதேசிகர் (4) **உருத்திரகோடி** தேசிகருக்கும், அவர் (5) **மன் வேலப்ப தேசிகருக்கும்**, அவர் (6) **குமாரசுவாமி தேசிகருக்கும்**, அவர் (7)

**ஏற்குமாரசுவாமிதேசிகருக்கும்**, அவர் (8) **மாசிலாமணி தேசிகருக்கும்**, அபிஷேகஞ் செய்து சைவசித்தாந்தத்தை உபதேசித் தருளினர். இவர் இலக்கணக்கொத்துசெய்த சுவாமிநாததேசிகர், மாசிலாமணிதேசிகர், இராமலிங்கதேசிகர், வேலப்பதேசிகர், பின் வேலப்பதேசிகருக்கும் உபதேசித்தருளினர். அவர்க்குப்பின் (9) **இராமலிங்கதேசிகர்**, இவர்க்குப்பின் (10) **முன்வேலப்பதேசிகர்**, இவர்க்குப்பிறகு (11)**பின்வேலப்பதேசிகர்**, இவர் திருப்பறியலூர்ப் புராணம் பாடியவர். இவர்க்குப் பிறகு சின்னபட்டத்தவராகிய த்விதீயவேலப்பதேசிகர் பஞ்சாக்கரபஃறொடை, ஞானபூஜாவிதி, மரபட்டவணை முதலி யன் இயற்றினர்.

இவர்காலத்திலே சிவஞானயோகியர் இவ்வாதீனத்துத் தம்பிரான்களில் ஒருவரா யிருந்தனர். இந்தப் பின்வேலப்பதேசிகருக் குப்பின் (12) **திருச்சிற்றம்பலதேசிகர்**, இவர்க்குப் பிறகு (13) **அம்பலவாணதேசிகர்**, இவர்க்குப்பிறகு (14) **சுப்ரமண்யதேசிகர்**, இவர்க்குப்பிறகு (15) **அம்பலவாண தேசிகர்**, இவர்க்குப்பிறகு (16) **சுப்ரமணிய தேசிகர்**, இவர்க்குப்பிறகு (17) **அம்பலவாணதேசிகர்**, இவர்க்குப்பிறகு (18) **சுப்ரமண்யதேசிகர்**, இவர்க்குப்பிறகு இப்பொழுது இருப்பவர் **ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிக**ராவார்.

## தருமபுர ஆதீனம்

அநாதிமலமுத்தராகிய சிவபெருமான் சுத்தமாயாஸ்வரூபமாகிய கல்லாலவிருக்ஷத் தடியில் தக்ஷிணாமூர்த்தியா யெழுந்தருளி முதலில் சிவஞானத்தை உலகமாதாவாகிய உமாதேவியாருக்கும், விநாயகர், முருகக்கடவுள், வீரபத்திரர், பைரவருக்கும், அதன்பின் மகாகாளர், பிருங்கி, சோமன், நந்திக்கும், அதன்பின் விஷ்ணு, பிரமன், இந்திரனுக்கும், அதன்பின் சநற்குமாரர், சநகர், சநாதனர், சநந்தனர் முதலிய நால்வருக்கும் சின்முத்திராதாரியாய் அருளிச்செய்தனர். மேற்கூறியவாறு நால்வகை மரபினரும் இந்நிலவுலகில் அச்சிவஞானத்தை நிறுத்தல் வேண்டிச் சன்மார்க்க நான்கின்படி பக்குவான்மாக்களுக் குபதேசித்தருளி முறையே ஆமர்த்தகம், ரணபத்திரம், கோளகி, புஷ்பகிரி எனும்பெயர்களுடன் ஸ்ரீகைலாசத்திருப்பதற் கொப்ப ஈண்டும் நான்கு திருமடங்கள் தாபித்து அவற்றில் ஒவ்வொரு ஆசிரியர்களைத் தாபித்தனர். பின் நந்தி தேவரது அம்சத்திற்றோன்றி **சநற்குமாரபகவான்** சிவாநுக்ரகத்தால் எப்பொழுதும் குமாரப்பருவமும், நினைத்தவிடஞ்செல்லும் ஓர் விசித்திர விமானமும் பெற்றுப் பக்குவான்மாக்களுக்கு உபதேசஞ் செய்துவந்தனர். பின் சிவாஞ்ஞையால் **வியாசருக்கும்** பின்னும் பலமுனிவருக்கும் சிவஞானத்தை யுபதேசித்தனர். பின் இவரது மாணாக்கருள் ஒருவராவர் **சத்திய ஞானதரிசனிகள்**, அவரது மாணாக்கர் **பரஞ்சோதிமாமுனிவர்** பூமியில்வந்து சுவேதனப் பெருமாள் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்ற **மெய்கண்டதேவருக்கு** சைவசித்தாந்த உண்மையை உபதேசித்தருளினர்.

**மெய்கண்டதேவர்** — **அருணந்திதேவநாயனூர்** முதலிய நாற்பத்தொன்பதின்மருக்கும் உபதேசஞ் செய்தனர்.

திருத்துறையூர் என்னும் க்ஷேத்திரத்திருந்த சதாசிவசாரியர் என்னும் ஆசார்யாபிஷேக நாமத்தையும் சகலாகமபண்டித பிருது நாமத்தையும் பெற்ற **அருணந்திதேவநாயனூர் மறைஞானசம்பந்தருக்குச்** சிவஞானத்தை யுபதேசித்து வந்தனர்.

**மறைஞானசம்பந்தர்** — திருப்பெண்ணாடகத்தில் திருக்கடந்தையென்னும் திருப்பதியிலவதரித்த அருணந்திசிவாசாரியரிடத்தில் உபதேசம் பெற்று அதிவன்ணச்சிரமியாய்த் திருக்களாஞ்சேரியில் எழுந்தருளியிருந்தனர்.

மேற்கூறிய **மறைஞானசம்பந்த** சிவாசாரியர் சிதம்பரத் தலத்தில் எழுந்தருளியிருந்த தில்லைவாழந்தணருள் ஒருவராகிய உமாபதிசிவாசாரியருக்கு உபதேசித்தனர். **உமாபதிசிவாசாரியர்** சிவாஞ்ஞையால் பெற்றான் சாம்பானுக்கு உபதேசித்து முத்தி தந்தனர்.

.. **உமாபதிசிவாசாரியார்** — மாணாக்கர் மச்சுச்செட்டியார் என்னும் அருணமச்சிவாயர்.

2. **மச்சுச்செட்டியார்**—இவர் சீகாழியிலிருந்த வேளாண்குலத்தவர் இவர் பிரபஞ்சத்தைப் பார்க்கக்கூடாதென்று மச்சிலேயிருந்தபடியால் இவர்க்கு இப்பெயர் வந்தது. இவர் செய்த நூல் **ஞானபூசைத்திருவிருத்தம்**. இவர் நால்வருக்கு உபதேசித்தனர். மச்சுசெட்டியாரிடம் அருள்பெற்றவர் **கங்கை மெய்கண்டார்**.

3. **கங்கைமெய்கண்டார்** — இவர் கங்கைகொண்ட சோளேச்சுரத்தில் இருந்த

வர். இவர் **சீர்காழி சிற்றம்பலநாடிகளுக்கு** உபதேசித்தனர்.

4. **சீர்காழிசிற்றம்பலநாடிகள்**—இவர் காவிரிதீரத்தில் சித்தர்காட்டில் (மாயூரம்) தத்வப்ரகாசஞ் செய்தருளிய தத்வப்ரகாசர் முதலிய (64) மாணாக்கருக் கருள்செய்து மாணாக்கருடன் சமாதியடைந்தனர். , இவர் சரீரத்தை அருவருத்துக் காலில் பழுதைகட்டியிருந்தமையால் பெரும்பழுதை கட்டிச் சிற்றம்பலவர் என்றும் கூறப்படுவார். இவர் செய்த நூல் துகளறுபோத முதலியன. மேற்கூறிய சிற்றம்பலநாடிகளிடம் அபிஷேகம் பெற்ற நால்வருள்

5. **பழுதைகட்டி ஞானப்பிரகாசர்** — திருத்துருத்தியில் எழுந்தருளியிருந்து சிஷ்யருக் கருள் செய்திருந்தனர்.

6. **சிவபுரம் தத்துவப் பிரகாசரும்** — ஒருவர் இவர் குடமூக்குக்கு அருகிலுள்ள சிவபுரம் என்ற ஊரிற் பிறந்து காழியம்பதியிலே பழுதைகட்டி ஞானப்பிரகாசரிடம் தீக்ஷைபெற்றுத் திருவாரூரிலிருந்தவர். இவர் விஜயநகரத்தரசனான கிருஷ்ணதேவராயர் காலத்தவர். இவரது சீடர் திருவாரூர் செட்டித்தெரு ஞானப்பிரகாசர்.

7. **திருவாரூர் செட்டித்தெரு ஞானப்பிரகாசர்** — அவரது சீடர் 8. **சிதம்பரநாதர்,** அவர் 9. கமலை ஞானப்பிரகாசருக்கு உபதேசித்தார்.

9. **திருவாரூர் கமலை ஞானப்பிரகாசர்**— இவர்க்குத் தக்ஷிணாமூர்த்தி ஒருமுகூர்த்தம் எழுந்தருளித் தரிசனந்தந்து உண்மை உபதேசித்து மதுரையிலிருந்து ஒருவன் வருகிறான் அவனுக்கு நாம் உபதேசித்த உண்மைகளையுபதேசிக்க என்று மறைந்தனர். இவர் செய்த நூல்கள் சிவாநந்தபோதம், அத்துவாக்கட்டளை, பிராசாதகட்டளை, சிவபூசை அகவல் அத்துவிதசாரம் முதலியன. இவரிடத்தில் உபதேசம்பெற்றவர்.

1. **ஞானசம்பந்தர்** — இவர் திருநெல்வேலிக்கடுத்த ஸ்ரீவில்லிபுத்தூரில் சைவவேளாளர்குலத்தில் அவதரித்து திருவாரூரடைந்து ஞானப்பிரகாசரைக் கண்டார்.

திருஞானசம்பந்தர் தமதாசிரியரிடஞ் சென்று அவர் சிஷ்யவருக்கங்களுக்குச் சித்தாந்த வுண்மைகளைக் கூறுகையில் ஒருபுறத்திருந்து கேட்டிருந்து அவர்கள் சிவதரிசனத்திற்குச் செல்கையில் உட்சென்று சேவித்துக் குருராயர் தக்ஷிணாமூர்த்திக்கெதிரில் த்யானத்துடனிருக்கையில் தாமும் தியானத்திருந்து அவர் தம்மிருக்கை சென்று உட்புகுதுகையில் நிற்க என வாயிலி னின்றனர். ஞானசம்பந்தர் ஆசாரியர் கட்டளைப்படி வெளியில் நிற்க, அன்றிரவு மழைபெய்ய, விடியுமளவும் நின்றவர்மேல் மழை யொரு சிறிதும் பெய்திலது. விடிந்து தாழ்திறந்து கண்டோர் ஆசிரியரிடங்கூற ஆசிரியர் நிற்க வென்று பூசைமுடித்துவந்து கருணைகூர்ந்து நயனதீக்ஷை செய்தனர். பின்னர் ஞானாசிரியரிடம் விடைபெற்று பித்தர்குணமருவி மாயூரத்தையடுத்த வில்வாரண்யமாகிய **தருமபுர க்ஷேத்திரத்திற்** கருகிலுள்ள அரண்யத்தில் தங்கினர். அவ்வாரண்யத்திற்குரியார் மணக்குடிவேளாளர். அவர்களால் ஒரு ஆச்சிரமம் கட்டித்தர அதில் வீற்றிருந்தனர். இவருடன் மிருகங்களும், பக்ஷிகளும் விளையாடுதல் கண்ட பலர் இவ்வற்புதமூர்த்திபால் அன்புற்றுச் சீடராய் மான்யமுதலிய பலவரிசைகள் வழங்கினர். இவர் தமது ஆன்மார்த்தமூர்த்தியாகிய சொக்கலிங்கமூர்த்தியை ஆண்டுப் பிரதிட்டித்து அத்திருமுன்பு தீக்ஷை முதலியன செய்துவந்தனர். அந்தச் சிஷ்யவருக்கத்தவர் துறவிகளே அன்றி இல்லறத்தவரும் பலர்சேர்ந்து பலமான்யாதிகள் தந்தனர். அவற்றிற்குச் **சாந்தானிகபிக்ஷையென்று** பெயர். இந்தச் சுவாமிகளால் அருளிச்செய்யப்பட்ட நூல்கள், முத்திநிச்சயம். சிவபோகசாரம், சொக்கநாதவெண்பா, பரமாநந்த விளக்கம் முதலியன. இவர் தம் ஆதினம் சந்தானபரம்பரையாக நின்று நிலவவேண்டித் தம் சிஷ்யர்கள் பலரில், பரிபாகிகளான 2. **ஆனந்தப்ரவசதேசிகர்,** 3. **சச்சிதானந்ததேசிகர், மாசிலாமணிதேசிகர்** மூவர்க்கும் மூவகைத்தீக்ஷையும் செய்து தம் ஆன்மார்த்தமூர்த்தியை எழுந்தருளுவித்து இச்சந்தானத்தை யொருவர் பின் ஒருவராக நடத்திவரும்படி கட்டளையிட்டுச் சமாதி கூடினர். இவர் சமாதியிலிருந்து சிவலிங்க வடிவாய்த் தோன்றினர். இவர் இருந்த இடத்தில் திருக்கோயில் பூசை திருவிழா நடந்துவருகிறது. இது நிற்கத் தஞ்சை அரசர்களுள் ஒருவன் தீர்த்தயாத்திரையாகத் தன் பிராமண மந்திரியருடன் வருபவன் வழியிலிருந்த ஆலயத்தைக் கண்டு பணிகையில், அங்கிருந்த வேதியமந்திரி 'இது சமாதியாதலால் இதை வணங்கியதற்குப் பிராயச்சித்தஞ் செய்து கொள்ளவேண்டு' மென வுடன்பட்டு அருகிருந்த கோட்டேரில் ஒரிடத்தில் இரவிற்குத் தங்கி 'நாளை இச்சமாதியை அகற்றுக' என்று

வேலையாட்களைவிட்டுப் படுக்கை சென்றனன். கூறிய அவ்வரசனுக்கும் மந்திரிக்கும் இரண்டு கண்களும் ஒளிநீங்கின. இடிக்கச் சென்றூர் குந்தாலி நாட்டுகையில் இரத்தங் கண்டு பிரமித்து வீழ்ந்தனர். இந்தச் செய்தி அரசனுக்கு எட்டியது. அரசன் மந்திரியுடன் சமாதிக் கருகில் வந்து பிரார்த்திக்க 'இப்போது உங்களுக்கு ஒரு கண் கொடுப்போம் காவிரிப்பூம் பட்டினம் சென்று திரும்பி மீள்கையில் மற்றொரு கண் கொடுப்போ' மென வசனமுண்டாகக் களித்துச்சென்று மீண்டு கண்பெற்று ஆதீனத்திற்கு வேண்டிய மான்யமும், அக்காலத்துத் தங்கள் வசத்திலிருந்த பல ஆலயங்களையும் அவர்கள் விசாரணையில் ஒப்புவித்தான்.

இவ் வாதீனத்திற்குச் சொக்கலிங்கப் பெருமான் உபாசன மூர்த்தியும், சுப்ரமண்ய மூர்த்திகள் அதிகாரமூர்த்தியு மாவர். இவ் வாதீனத்துப் பெரிய பட்டத்தவர் தாம் இருக்கையில் தம்மில் ஒப்பவராய் ஒருவரைச் சந்தான விருத்திப் பொருட்டுத் தமக்குப் பின்னிருக்கத் தீக்ஷை முதலியன செய்து சிந்துபூந்துறை மடத்திலாவது சிவசைல மடாலயத்திலாவது இருக்கச் செய்வது வழக்கம். இம்மடத்தார் சொத்துக்களைப் பாது காக்க வேண்டி இரண்டு வகையில் காறுபாறு தம்பிரான்களை ஏற்படுத்துவது வழக்கமாதலால் முதல் வகையில் காறுபாறு தம்பிரான் பெயர் யாதாயினும் கையெழுத்து சொக்கநாத தம்பிரான் என்றும், சின்ன வகையில் சுப்ரமண்ய தம்பிரான் என்றும் எழுதல் வேண்டும். இவரது குருபூசை வைகாசிமீ அபரபக்ஷம் சத்தமியில் நடந்தேறி வருகிறது.

இவர் சமாதி கூடியிருந்த இடத்தில் ஒரு பசு நாடோறும் தனது பாலைக் கறந்து அபிஷேகித்துச் சென்றதைக் கண்ட பசுவிற்குடையார் சமாதியிடம் தோண்டிப் பார்க்க ஆங்கு ஒரு சிவலிங்க மிருக்கக் கண்டு அதற்குக் கற்பகிருகம் முதலிய கட்டுவித்தார்.

இவ்வாதீனத்தில் (3-வது) திருஞானசம்பந்த தேசிகரது அருள்பெற்ற **சச்சிதானந்த தேசிகர்,** (4-வது) **மாசிலாமணி தேசிகர்.** இவரால் தீக்ஷிக்கப்பட்டவர் **குமரகுருபரசுவாமிகள்.** இவர் கேதார கௌரீசர் அருள்பெற்றுக் காசியில் எழுந்தருளி யிருந்து வடமொழிக் கடலிலும் தென்மொழிக் கடலிலும் வல்லவரான **வெள்ளியம்பலவாணத் தம்பிரான்** சுவாமிகளுக்குக் கல்வி கற்பித்து வல்லவராக்கினர்.

4. **மாசிலாமணி தேசிகர்** இவர் தம் தாய்க்கு அத்வா சோதித்து முத்திகொடுத்தனர். இவர் காலத்து ஒரு சித்தர் ஆகாய கமனஞ் செல்கையில் இவ ரிருந்த இடத்தில் கமனம் நிற்க இறங்கி ஞானதீக்ஷை பெற்றுச் சென்றனர். இவரிடம் பதினறு தம்பிரான்கள் விஞ்ஞானதீக்ஷை பெற்றுச் சமாதி கூடினர். இவரிடம் கீழ்வரு மிருவரும் தீக்ஷை பெற்றுச் சந்தான பரம்பரைக்கு உரியராயினர்.

5. **ஞானசம்பந்ததேசிகர்,** 6. **திருஞானசம்பந்ததேசிகர்** இவர் தமிழாகரத் தம்பிரான், வெள்ளியம்பலத் தம்பிரான் முதலியவர்க்குத் தீக்ஷாபிஷேக முதலியன செய்து வைத்தனர். இவர்களில் திருஞானசம்பந்தர் தக்ஷிணயாத்திரை செய்து சிந்துபூந்துறையிலிருக்கையில், அவர் மாணுக்கராகிய வெள்ளியம்பலத் தம்பிரானது கல்விப் பெருக்கைக் கண்டு பொருமை கொண்ட ஒருகவி இவரைத் தூஷித்து வந்தனன். இவ்வாறிருக்கையில் வெள்ளியம்பலத் தம்பிரான் துறைமங்கலம் சிவப்பிரகாசரால் அவரை வெல்வித்து அடிமை கொண்டு ஞானசம்பந்தர் இயற்றிய முத்திநிச்சய மென்னும் நூலுக்கு ஒரு உரை இயற்றிப் பின் சிவஞானசித்திக்கு ஞானபரண விளக்கம் என்னும் பாஷ்யமியற்றிச் சிதம்பரத்தில் சமாதியாயினர். திருஞானசம்பந்தர் தம் குருவின் ஆஞ்ஞை பெற்று இல்லறத்திருந்து தமது கழனிக்கு நீர் பாய்ச்ச மறுத்தவருக்கு உடன்பட்டு "சைவ சமயஞ் சமயமெனி லச்சமயத், தெய்வம்பிறைசூடுந் தெய்வமெனில் — வையத், தானந்த வெள்ளத் தழுந்துவதே முத்தியெனில், வானங்காள் பெய்க மழை" எனக் கவிபாடத் தமது வயலுக்கு மழை வருஷித்தது. இதனைக் கண்ட ஊரார் சுவாமிகளைப் பணிந்து க்ஷமைகேட்டனர். இவர் பின் துறவு பூண்டு பரிபூரண மடைந்தனர். 6-வது பட்டத்துக் குரு மூர்த்தியாகிய திருஞானசம்பந்த சுவாமிகளின் திருவடிகளைவிட்டு நீங்காது தொண்டு புரிந்து சம்பந்தசரணலயர் என்ற பெயர் பெற்று மைசூர் அரசன் வேண்டுகோளால் கந்தபுராணச் சுருக்க மியற்றியவர் இவர் மாணுக்கராம்.

7. **திருவம்பலதேசிகர்** 8-வது **அழகிய திருச்சிற்றம்பலதேசிகர்** — இவர் தருமபுரநீங்கி இளைய பட்டத்தாரைவிட்டுக் கோட்டேரிலிருந்த காலத்து மடத்தவர் சுவாமிகளைத் தருமபுரம் வரவேண்டச் சுவாமிகள் மறுத்

தமை கண்டு நீங்கித் தருமத்தின் பலன் சுவர்க்கமாதலால் நாங்கள் **சுவர்க்கபுரமட**மொன்று ஏற்பாடு செய்துகொள்ளுகிறோமென்று சென்று அம்பர் மாகாளத்திற் கருகில் தங்களில் தீக்ஷைபெற்ற ஒருவர்க்கு அபிஷேகஞ் செய்து **அழகிய திருச்சிற்றம்பலத் திருநாமம்** புனைந்து **சுவர்க்கபுரம் மடம்** ஏற்படுத்தினர்.

ஷை தருமயாதீனத்து அழகிய திருச்சிற்றம்பலவரிடம் தீக்ஷைபெற்ற அழகிய திருச்சிற்றம்பலத் தம்பிரான் திரிபதார்த்த தீபம் என்று ஒரு நூல் செய்தனர்.

9. **திருநாவுக்கரசுதேசிகர், 10. சிவஞானதேசிகர், 11. சச்சிதானந்ததேசிகர், 12. முத்துக்குமாரதேசிகர், 13. ஞானசம்பந்ததேசிகர், 14. கந்தப்பதேசிகர், 15. மாசிலாமணித்தேசிகர், 16. சச்சிதானந்த தேசிகர், 17. மாணிக்கவாசகதேசிகர், 18. சிவஞானதேசிகர், 19. மாணிக்க வாசகதேசிகர், 20. சிவஞானதேசிகர், 21. சச்சிதானந்ததேசிகர், 22. மாணிக்க வாசகதேசிகர், 23. சுப்பிரமணியதேசிகர், 24. இப்பொழு திருப்பவர். ஸ்ரீலஸ்ரீ ஷண்முக ஞானசம்பந்த தேசிகராவார்.**

## திருத்துறையூர்ச் சிவப்பிரகாச சுவாமிகள் மடவரலாறு

**சிவப்பிரகாசதேசிகர்** — இவர் திருவாவடுதுறை நமச்சிவாய தேசிகரது மாணுக்கர். இவர் சிதம்பரத்தில் சபாநாயகரைத் தெரிசிக்கையில் தமது கரத்தில் ஒரு சிவலிங்கமிருக்கக் கண்டு திருவருளைப் புகழ்ந்து சிலநாள் வசித்து நீங்கித் திருவாவடுதுறையடைந்து சுவாமி தெரிசனம் செய்கையில் கையில் ஒருதாளம் வரக்கண்டு திருவருளைப் புகழ்ந்து மடத்திற் கெழுந்தருளி யிருந்தனர். இவ்வகை யிருக்கையில் நடுநாட்டை யாண்ட வடுகன் சொல்லால் திருத்தில்லையில் சுவாமிக்குப் பூசை முட்டுப்பட்டது கண்டு வேலூரையடைந்து ஆங்கிருந்த இலிங்கணபத்தரெனும் வீரசைவர் தம்மை மதிக்கத் தமது ஆன்மார்த்த மூர்த்தியைச் சிரத்தில் தரித்துக் கொண்டு சென்று, சென்ற காரியத்தை முடித்து, அரசன்வேண்ட மழை பொழிவித்து, அரசனுல் எழு கிராமங்கள் விடுப்பித்துத் திருவண்ணுமலையில் கட்டுவித்த மடத்திற் கெழுந்தருளுகையில் ஆறு பெருக அதனை விபூதியால் தடுத்துச்சென்று மடத்திலிருந்து சிலநாள் பொறுத்துத் திருக்காளத்தி சென்று ஒரு ஸ்மார்த்தவரை வீரசைவராக்கித் தாளிதங்காளத்தியார் என தீக்ஷாநாமம் சாத்தி, திருச்செங்கோடடைந்து அங்குச் சிலர் கொண்டுவந்த கடலையைக் கல்ரிஷபந் தின்னச்செய்து துறையூரில் லிங்கதுரையென்பவர் கட்டுவித்த மடத்திலிருந்து திரிசிரபுரம் வருகையில் நீரால் தீவட்டி யெரியச் செய்து திருச்சோற்றுத்துறையில் ஒருவனது குஷ்டநோயைப் போக்கிச் சோழன் பிரமகத்தி நீக்கித் திருக்கலய நல்லூருக்கருகில் வருகையில் ஆதிசைவ வேதியச் சிறுவன் சர்ப்பந்தீண்டி யிறக்கக்கண்டு மயானத்திற் கெடுத்துச் செல்லுகையில் அப்பிரேதத்தை வாங்கி ஞானக்கூத்தாவென அழைத்துயிர்ப்பித்துத் திருவண்ணுமலை வீரசைவ மடாபிஷேகம் புரிந்து ஆருவது தினத்தில் பூமிவெடிக்க அதிற்ரேன்றிய ஒளிப்பிழம்பால் திருமேனி மறைந்தனர்.

1. திருவாவடுதுறை நமச்சிவாயதேசிகர், 2. சிவப்பிரகாசதேசிகர், 3. ஞானக்கூத்த சிவப்பிரகாசதேசிகர், 4. மூலலிங்க சிவப்பிரகாசதேசிகர், 5. சிதம்பர சிவப்பிரகாசதேசிகர், 6. குமாரதேவ சிவப்பிரகாச தேசிகர், 7. நமச்சிவாய சிவப்பிரகாசதேசிகர், 8. நன்னூற் சிவப்பிரகாசதேசிகர், 9. அருணைச் சிவப்பிரகாசதேசிகர், 10. கருணைச் சிவப்பிரகாசதேசிகர், 11. பரஞ்சோதி சிவப்பிரகாசதேசிகர், 12. நல்ல நாயக சிவப்பிரகாசதேசிகர், 13. சிற்றம்பல சிவப்பிரகாச தேசிகர், 14. பொன்னம்பல சிவப்பிரகாச தேசிகர், 15. சிதம்பர சிவப்பிரகாசதேசிகர், 16. கருணைச் சிவப்பிரகாசதேசிகர், 17. நஞ்சுண்ட சிவப்பிரகாசதேசிகர், 18. குழந்தை வேலு சிவப்பிரகாசதேசிகர், 19. வைத்யலிங்க சிவப்பிரகாசதேசிகர், 20. குமார சிவப்பிரகாசதேசிகர், 21. சொக்கலிங்க சிவப்பிரகாசதேசிகர்.

இந்த மடமன்றிக் **குமாரதேவர்மடம்** எனத் துறையூர் சிவப்பிரகாச சுவாமிகளினின்று பிரிந்த மடம் ஒன்றுண்டு. அது துறையூர் 1-சிவப்பிரகாச சுவாமிகள் 2-பேறையூர் சாந்தலிங்க சுவாமிகள், 3-ஸ்ரீகுமார தேவர், 4-சிதம்பரசுவாமிகள், 5-ரெட்டிச் சிதம்பரசுவாமிகள், 6-பழனி சுவாமிகள், 7-கூவாலத்துச் சுவாமிகள், 8-புலியூர்ச் சுவாமிகள், 9-குழந்தைவேல் சுவாமிகள்,

10-முத்தைய சுவாமிகள். இந்த மடங்களன்றி வீரசைவ மடங்கள் பல இடையிடையே தோன்றி மறைந்தன. அவைகளைத் தெரிவித்தல் பயனின்றென விட்டனன். சாரங்கதேவர் மடம், குகைநமசிவாயர் மடம், பச்சைபாலேயர் மடம், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் மடம், பொம்மய பாளையம் சிவஞானபாலேயர் மடம் முதலியன பலவுள.

## சுத்தசைவ பதினெண் ஆதீனங்கள்

1-திருஆவடுதுறை, 2-காஞ்சிபுரம், 3-தருமபுரம், 4-சூரை கோவில் (ஆடுதுறை), 5-ஆகமசிவப்பிரகாசாதீனம் (சிதம்பரம்), 6-செங்கோலாதீனம் (பெருங்குளம் - திருநெல்வேலி), 7-திருஞானசம்பந்தாதீனம் (மதுரை), 8-திருவண்ணாமலை ஆதீனம் (குன்றக்குடி), 9-இராமேச்வராதீனம், 10-நீலப்பாடி (தஞ்சாவூர்), 11-தாயுமான சுவாமிகளாதீனம், 12-சாரமாமுனி ஆதீனம் (திரிசிராப்பள்ளி), 13-சொர்க்கபுரஆதீனம் (அம்பர் திருமாகாளம்), 14-வேளாகுறிச்சி ஆதீனம் (திருவாரூர்), 15-வள்ளலார் ஆதீனம் (சீகாழி), 16-வருணை ஆதீனம் (வேதாரண்யம்), 17-நாய்ச்சியார் கோவில் ஆதீனம் (கும்பகோணம்), 18-நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனம் (மதுரை-திழாவூர்).

Archaelogical Survey of Southern India, vol II.

## சோழ வம்சம்

சூர்யவம்சத்தில் முசுகுந்த சக்கரவர்த்தி மரபில் சோழன் எனப் பெயரடைந்த ஒரு அரசனிருந்தான். இவனே திருவாரூரில் பசுவின்கன்றின் பொருட்டுத் தன் குமாரன்மீது தேரோட்டியவன். இவன் தேரூர்ந்தசோழன். இவன்முதலாக இவ்வம்சம் தொடக்கம்.

1. தேரூர்ந்தசோழன், 2. விசுவசேகசோழன், 3. இந்திரவிமானசோழன், 4. போகபக்திபுரந்தரசோழன், 5. மனுகாதலன்லோகளித்தசோழன், 6. மக்கட்சாடி வகுத்த சோழன், 7. எதறிந்தசோழன், 8. புநலியுடுத்த சோழன், 9. நாககன்னி கைபிடித்த சோழன், 10. தன்னுயிரில் மன்னுயிரளித்த சோழன், 11. கங்கைகொண்டசோழன், 12. காவிரி கரைகண்ட சோழன், 13. வில்லவன் கவி கண்ட சோழன், 14. புகைக்கண்ட சோழன், 15. கம்பனூர்கோயில் செம்பொனல்மேய்ந்த சோழன், 16. மறநாடு கண்டசோழன், 17. கங்காபுரி புரந்த சோழன், 18. இலவத்தரை கொண்டசோழன், 19. கயிலாயவாயிற்கசம் கண்டசோழன், 20. அரைத்தசையீந்த சோழன், 21. கலிங்கன் தரைகண்ட சோழன், 22. பூகாருண்யசோழன், 23. சேரத்துறந்த சோழன், 24. சீலகடிந்தசோழன், 25. மறகளில் அக்கமாறித்திய சோழன், 26. அனத்தீக்குறுகொண்டசோழன், 27. அபயங்கா சோழன், 28. விக்ரமசோழன், 29. ஏகசக்கிராதிபசோழன், 30. பிராததக்கசோழன், 31. உத்துங்க சோழன், 32. குலோத்துங்க சோழன், 33. இராஜேந்திரசோழன், 34. சேயுக்கொண்ட சோழன், 35. கருவன்னஞ் சுரியிட்டசோழன், 36. பாகுணசோழன், 37. திருநீற்றுச் சோழன், 38. வீரசோழன், 39. வசுதேவசோழன், 40. விட்டசிறைச் சோழன், 41. ஆறிலொரு கடமைகொண்ட சோழன், 42. மனுநெறிதரித்தசோழன், 43. வருணநிலையிட்ட சோழன், 44. திண்வசத்த சோழன், 45. தாசைமுத்தீரசோழன், 46. சம்பிரதாயசோழன், 47. நித்தியோச்சவசோழன், 48. கரிகாலச்சோழன்.

## கலியுகத்தில் ஆண்ட சோழராசாக்கள்

1. பௌண்டரிகசோழன், 2. நீலமேகசாமளவர்ணசோழன், 3. தானவாரீசசோழன், 4. பூபாரந்தீர்த்தசோழன், 5. பூவலம்வந்த சோழன், 6. பற்ருசபயக்கசோழன், 7. பராக்ரமசோழன், 8. மனுநிலையிட்டசோழன், 9. சந்திரகுலாதிக்கசோழன், 10. சேரசூடாமணி சோழன், 11. நாகலோகங்கண்டசோழன், 12. ஆடகேசுரசோழன், 13. கனகபீதாம்பர சோழன், 14. கனகசூடாமணிசோழன், 15. உத்தரக்கானசோழன், 16. ஜகத்ரக்ஷயசோழன், 17. திருநீற்றுச்சோழன், 18. காம்பீர்ய சோழன்.

## மற்ருெரு பிரதி

1. உத்துங்கசோழன், 2. குலோத்துங்க சோழன், 3. ராஜராஜேந்திரசோழன், 4. திருமுடிகண்டசோழன், 5. கரிகாலச்சோழன், 6. அருந்தவச்சோழன், 7. உறையூர்ச்சோழன், 8. செங்கட்சோழன், 9. மண்ணளந்தசோழன், 10. மனுநீதிகண்டசோழன், 11. வரகுண சோழன், 12. ஆளப்பிறந்தசோழன், 13. திருநீற்றுச்சோழன், 14. ஆறிலொருகடமை கொண்டசோழன், 15. ஜெயங்கொண்டசோழன், 16. கிருமிகண்டசோழன், 17. தொண்டமான் சோழன், 18. ஆதொண்டைச்சக்கிர

வர்த்தி, 19. பூதங்கட்டுசோழன், 20. சங்க னுழைந்தான்சோழன், 21. சோழமான்சோழன், 22. கங்கைகொண்டசோழன் (இவன் காவிரியைப் பிரபலப்படுத்தினன்). 23. சுந்தரபாண்டியசோழன், 24. பெரிக்கபூசோழன், ஆக (24) சோழர்கள்.

A. S. S. INDIA. vol II.

## சோழ ராஜாக்களின் வரலாறு

சோழநாட்டைத் தம்வசஞ்செய்துகொண்டிருந்த தஞ்சன் தாரகன் என்னும் அசுரர்களைச் சிவபெருமான் காளியால் அதஞ்செய்வித்து நாட்டிற்கு அரசனிலாமை நோக்கி, 'கரவடகிராமத்தில் சிவபக்திமானுகிய குலோத்துங்கன் தனது மனைவி கோமளாங்கியுடன் அரசு செலுத்திவருகின்றான்; அவனுக்கு வேண்டிய நிதியளித்துச் சிவாலய விஷ்ணுவாலய ஜீரணோத்தாரண நிமித்தம் முடிசூட்டுவி' எனக் குபேரனுக்குக் கட்டளையிட்டனர். இறைவன் கட்டளையேற்ற குபேரன் அவ்வாறு அவனுக்கு வேண்டியன அளித்துத் தஞ்சைநகரத்திற்கு அரசாக்கினன். அன்று முதல் இவன் குலோத்துங்கசோழன் எனப்பட்டுப் பல சிவாலய விஷ்ணுவாலய ஜீரணோத்தாரணஞ் செய்து பூபதனமாயிருந்த செல்வங்களை யெடுத்துக் காவிரியின் உற்பத்திமுதல் மாயூரநாதர் சமுத்திரசங்கமம் இறுதியாகக் காவிரியை (100) முகமாக அணைகட்டிப் பிரித்துக் குடிகளை வளர்த்தனன். இவன் குலோத்துங்கசோழன்.

## இவன் சந்ததி

1. குலோத்துங்கசோழன், வரு. 20. 2. தேவ சோழன், வரு. 60. 3. சசிசேகரச்சோழன், வரு. 70. 4. சிவலிங்கசோழன், வரு. 76. 5. வீரசோழன், வரு. 87. 6. கரிகாற்சோழன், வரு. 90. 7. பீமசோழன், வரு. 77. 8. இராஜேந்திரசோழன், வரு. 78. 9. வீரமார்த்தாண்டசோழன், வரு. 66. 10. கீர்த்திசோழன், வரு. 78. 11. ஜயசோழன், வரு. 66. 12. கனகசோழன், வரு. 70. 13. சுந்தரசோழன், வரு. 60. 14. காலகாலசோழன், வரு. 77. 15. கலியாணசோழன், வரு. 67. 16. பத்திரசோழன், வரு. 70. இவர்களுக்குப் பிறகு நாய்க்கன் பட்டமுற்றவர்களும் படையாச்சி, உடையான், பாளையக்காரர் ஆண்டதாகவும் பிறகு சில ராயர்கள் ஆண்டதாகவும் கூறுவர். அவர்களில் முதல் புஜங்கராயர், அச்சுததேவராயர், வீரசிங்காதனராயர், கோனேரிதேவராயர், திம்மராயர், ஆனைகொந்திராயர், அசுவபதி, கஜபதி, நரபதிராயர், வாசுதேவராயர், நரசிங்கராயர், ராமதேவராயர், ஸ்ரீரங்கதேவராயர், அநுமந்தராயர், கிருஷ்ணதேவராயர், வீரவசந்தராயர் முதலியோர். தஞ்சைராயர்களுக்குப் பிறகு சிலநாயகரும் வடுகரும் ஆண்டனர். பிறகு மராட்டிய ராண்டனர். அவர்களில் கடைசியிலாண்டவன் சரபோஜி மகாராஜா.

இவையன்றி 1. காவிரிப்புனல்கொண்டசோழன், 2. இந்திரனைப் புலியாகக்கொண்டசோழன், 3. சமுத்திரஞ் சேர்ந்த சோழன், 4. வலியினிற்குருதிகொடுத்த சோழன், 5. வரதராஜ பணிகொண்ட சோழன், 6. எயிலெறிந்த சோழன், 7. இந்திரவிமானச் சோழன், 8. தருமனுக்குதவிசெய்த சோழன், 9. நாககன்னி மணந்த சோழன், 10. தீநீக்கிய சோழன், 11. செங்கட்சோழன் எனப் பலர்.

**கரிகாலச்சோழன்.** A. D. 950. இராஜராஜசோழன் அல்லது நரேந்திரன் இவனுக்குப் பிறகு வீரசோழன் அல்லது குலோத்துங்கசோழன் அல்லது கவிராஜகேசரிவர்மா அல்லது இராஜேந்திர சோழன் அல்லது இராஜராஜசோழன் அல்லது கோனேரினன்மைகொண்ட சோழன் அல்லதுகோபரகேசரிவர்மா. இவன் பட்டம் 1079. மேற்கூறிய இராஜேந்திரசோழன் முதல் கோனேரினன்மைகொண்டவன் வரை A. D. 1064 முதல் 1113 வரையில், மேற்கூறிய இராஜராஜசோழனுக்கு நரேந்திரன் சாரங்கதரன் இருவர் குமாரர். நரேந்திரன் மதுரையைச் செயித்தபிறகு இவன் சுந்தர பாண்டியனெனும் பெயருடன் A. D. (1311) இல் மதுரையை ஆண்டான். கோபரகேசரிவர்மாவிற்கு விக்ரமசோழன், இராஜராஜன், வீரதேவன் என மூவர் குமாரர்கள். இவர்களில் விக்ரமசோழன் 1113-முதல் 1128-வரையில் ஆண்டான். இவன் குமாரன் குலோத்துங்கன் A. D. 1128 முதல் 30வரு. பின் இவன் குமாரன் இராஜேந்திரன் A. D. 1165 முதல் 1194. பின் இவன் குமாரன் விக்ரமதேவன், A. D. 1235 பெண்ணைநதிக்கு வடக்கிலாண்டான். முற்கூறிய விக்ரமசோழன் ஆதொண்டையெனும் வேசையால் தொண்டமானெனப்பட்டான். இவன் பின்பு பல்லவர் பூமியையாண்டு பல்லவன் எனப்பட்டான்.

## சோழர் வம்சாவளி

விஜயாலய சோழன், ஆதித்யவர்ம சோழன், வீரசோழ நாராயண தேவ சோழன், ஹரிஞ்சயசோழன், தசோதிதியராயசோழன், பராந்தகராயசோழன், திவியராயசோழன், இராஜ ராஜேந்திர சோழன், இராஜேந்திர சோழன், கரிகாலச்சோழன், இராஜ ராஜ சோழன், வீரசோழன், விக்ரமசோழன், குலோத்துங்கன், விக்ரமதேவன்.

## திருத்தணிகை சாசனப்படி

கரிகாலச்சோழன், சக்ரவர்த்திசோழன், சூடமசோழன், ருசிகசோழன், நாராயண சோழன், யாவதீயசோழன், இராஜ ராஜசோழன், விஜயாதித்தியசோழன், விக்ரமாதித்ய சோழன், குலோத்துங்கசோழன், கங்கை கொண்டசோழன், குண்டலசோழன், சாரங்கதரசோழன், விக்ரமசோழன், ஆதொண்ட சோழன், இராஜசிங்கசோழன், விப்ரதேவ சோழன், ஆநந்தவர்மசோழன், இராஜேந்திர சோழன், குலோத்துங்கசோழன், பராக்ரம சோழன்.

## தஞ்சை பிருகதீசர் கோயில் மஹாத்மிய வம்சாவளிப்படி

குலோத்துங்க சோழன், தேவசோழன், சசிசேகரசோழன், சிவலிங்கசோழன், கரிகாலசோழன், பீமசோழன், இராஜராஜ சோழன், சூரமார்த்தாண்டசோழன், கீர்த்தி வர்த்தனசோழன், ஜயசோழன், கனகசோழன், சுந்தரசோழன், காலகாலசோழன், கலியாணசோழன், பாதிரசோழன்.

## காஞ்சீபுர சாசனப்படி

விஜயசோழன், வினைநீக்கியசோழன், உத்தண்டசோழன், சுகுணசோழன், பிரபாகரசோழன், குணகரசோழன், சுதீமணிசோழன், ஏகாம்பரசோழன், மனோஹரசோழன், கற்பூர ராஜாகர சோழன், விஜயகாந்த கோபாலசோழன், இராஜகுமார பங்கப்பசோழன்.

## தில்லை, திரிசிராப்பள்ளி, கரூர் சாசனப்படி

இரண்மயசோழன், தாயுமானசோழன், தருமவருமசோழன், விஜயாலய சோழன், ஆதித்தசோழன், பராந்தகன் அல்லது கோபகேசரிவர்மன் அல்லதுவீரநாராயணசோழன், இராஜாதித்த சோழன், கண்டராதித்த சோழன். அரிஞ்ஜய சோழன், இராஜராஜாதித்த சோழன், கண்டராதித்த சோழன், ஆதித்ய வரும சோழன், மதுராந்தக சோழன், பரகேசரிவர்ம சோழன், குலோத்துங்க சோழன், இராஜராஜ குலோத்துங்க சோழன், விக்ரம சோழன், திருநீற்றுச் சோழன்.

விஜயாலன், பின் ஆதித்த சோழன், பின் பரகேசரிவன்மன் அல்லது சங்கிராமராகவன் அல்லது பராந்தகன் அல்லது வீரநாராயணன், திருமுறைகண்ட இராஜராஜ அபய குலசேகரன், புத்ரன் கங்கைகொண்ட சோழன், மகள் வயிற்றில் கீழைச் சாளுக்கிய அரசர்களுக்குப் புத்திரன் இராஜராஜேந்திரன் அல்லது உபயகுலோத்துங்கன் அல்லது அபயன். குலோத்துங்க சோழன். இவன் வீரபாண்டியனை வென்றவன். இவன் தம்பி கங்கைகொண்ட சோழன் ; இவன் பாண்டிநாடு கொண்டதால் சுந்தரபாண்டியனானன்.

ஆதித்தசோழன் அல்லது ராஜாதிராஜன், குமாரன்பராந்தகன்; இவன்தேவி கேரளபுத்திரியாகிய கோக்கிழானடிகள், குமாரர் இராஜாதித்தன கண்டராதித்தன், அரிஞ்ஜயன்.

## சோழர் வரலாறு

சோழராஜ்யத்தை முதலில் ஸ்தாபித்தவன் **சூராதிராஜன்** என்பர். அவன் மகன் **விஜயாலயன்** கி-பி 830 வரையில் அரசாண்டான். இவன் கொடும்பையெனும் எரிக்கரைக்கண் இருந்த கொடும்பாளூர்க்கு அரசனாவான். இவன் இடங்கழியார்வழித்தோன்றினவன். இவன் வரகுணனுடன் போரிட்டவன். திருவிடைமருதூர்க் கோபுரம் எடுப்பித்தவன். இவன் காலத்திலே அமோகவருஷனால் ஆதரிக்கப்பெற்ற சமணமுனி மகாபுராணத்தின் முதற்பாகமாகிய ஆதிபுராணத்தை எழுதிமுடித்தனர்.

விஜயாலயனுக்குப்பின் அவன் குமாரன் **ஆதித்தசோழன்** பட்டத்துக்கு வந்தான். இவனுக்குக் கோவிராஜ கேசரிவர்மன், **இராஜேந்திரன்** என்ற பெயர்கள் வழங்கிவந்தன. இவன் கொங்குநாட்டுத் தலைக்காட்டின் அரசனும் பிருதுவிபதியின் குமாரனுமாகிய சிவராமனோடு சமர்செய்து வென்று உறையூறைத் தனது இராஜதானியாகக் கொண்டான். இவன் காஞ்சிபுரத்தையாண்ட பல்லவராஜனும் நிருபதுங்கவர்மனுடைய மகளை

மணம்புணர்ந்து பல்லவ நாட்டிற்கும் அரசனானான். இவன் தில்லையில் பல திருப்பணிகளும் பாலாற்றங்கரையில் களந்தை யெனும் ஊரில் ஆதித்தேச்சுரம் என்ற கோயிலும் கட்டினான். இவன் கி. பி. 907-ல் விண்ணுலகமடைந்தான். இவனுக்குப் பின் **பராந்தகன்** 907-ல் சிங்காதனமேறினான். இவனுக்குக் குலோத்துங்கன், விக்கிரமன் என்றும் பெயர்களுண்டு. இவன் மதுரை, ஈழம் முதலியவற்றை யடிப்படுத்தி 'மதிரையும் ஈழமுங்கொண்ட பராந்தகதேவர்' என்று தன்னைக் கூறிக்கொண்டான். வாணர்களது வாணகப்பாடி நாட்டை அடிப்படுத்தி, அதனைக் கங்கர்களுக்குக் கொடுத்து அவனைத் தன்கீழ்ச் சிற்றரசாக்கினான். இவன் தென்னாட்டில் இருக்கும்போது மேலைச் சளுக்கியனான மூன்றாங் கன்னரதேவன் தொண்டை நாட்டிற் புகுந்தான். உடனே அவனை வெருட்டி **வீரநாராயணன்** என்ற பட்டஞ் சூடினான். இவனுக்கு ஐந்து பிள்ளைகளும் ஒரு பெண்ணுமுண்டு. இவன் நாற்பதாண்டு அரசு செலுத்தி 947-ல் ஈசன் திருவடி நீழ லடைந்தான். இவனது மூத்த குமாரனான **இராஜாதிராஜன்** பட்டத்துக்கு வந்தான். மேலைச் சாளுக்கிய கன்னரதேவன் அந்தச் சமயத்தில் மறுபடியும் தொண்டை நாட்டில் படையெடுத்து வந்தான். அந்நாட்டிலே தன் தந்தையால் காவலாக வைக்கப்பட்டிருந்த இராஜாதிராஜன் தக்கோலத்தில் அவனை எதிர்த்துப் போரில்வென்றான். ஆயினும் கன்னரதேவனது மைத்துனனான பூதுகனால் வஞ்சனையாக இவன் கொல்லப்பட்டான். இவனுக்குப் பின் இவனது தம்பி **கண்டராதித்தன்** அரசனானான். இவனே திருவிசைப்பா பாடியவன். இவன் நாளில் தொண்டைநாடு வெள்ளாறு வரையில் கன்னரதேவன் வசமாயிற்று. மதுரை, ஈழம் சுதந்தரம் பெற்றது. இவனுக்கு உதவியாக இவனது இளவல் **அரிஞ்சேயனும்**, அவனது மகன் சுந்தர சோழனும் நின்றார்கள். மதுரையை யாண்ட வீரபாண்டியன் எதிர்த்து வரவே கண்டராதித்தன் அவனோடு போரிட்டு உயிர்துறந்தான். இவன் கி. பி. 957-ல் சிவபிரானது திருவடி நீழலையடையவே, அவனது மகன் மதுராந்தக உத்தம சோழன் சிறு குழந்தையாக இருந்தபடியால், **அரிஞ்சேயன்** அரசனானான். அவன் அவ்வாண்டே உயிர் துறந்தான். அவனது மகன **சுந்தரசோழன்** பராந்தகன் என்ற பட்டத்தோடு சோழசிங்காதன மேறினான். இவன் கண்டராதித்தன் இழந்த நாட்டை யெல்லாம் மீண்டும் கொண்டு சோழ சக்கரவர்த்தியாக விளங்கினான். இவன் தாம் 956 முதல் 967 அரசாண்டான். இவன் வீரசொர்க்க மடையவே, இவனது குமாரன் **ஆதித்தகரிகாலன்** அரசனாகி நான்கு ஆண்டில் உயிர் துறந்தான். அக்காலத்திலே கண்டராதித்தன் மகன் **உத்தமசோழன்** வயது வந்தவனாயிருந்தமையாலே அவன் 970-ல் சோழ சக்கரவர்த்தியானான். அவனுக்கு உதவியாக அவனது சிற்றப்பன் அரிஞ்செயன் பேரனும், சுந்தர சோழனது மகனுமான **இராஜராஜன்** இளவரசனாக இருந்து ராஜகாரியங்களைக் கவனித்து வந்தான். மதுராந்தக உத்தமசோழன் 985-ல் ஈசன் திருவடி நீழலடையவே, இராஜராஜன் அரசனானான். இவன் ஈடு எதிர்ப்பின்றி முப்பது ஆண்டுகளுக்கு அதிகமாக இம் மண்டலங்களையும் வென்று ஏக சக்கரவர்த்தியாக ஆண்டு வந்து முத்தியடைந்தான். இவனுக்குப்பின் இவனது மகன் **இராஜேந்திரசோழதேவன்** அரசனானான். இவன் கி. பி. 1012-லே இளவரசனாக முடிசூட்டப்பட்டான். இவன் மேலைச்சாளுக்கியர்களையும் வென்று கங்கைக்கரைவரையிற் சென்று கிழக்கே சாவகம், மலேயா முதலிய தீவுகளையும் அடிப்படுத்தி வென்று 1032 வரை ஆண்டுவந்தான். இவனுக்குப் பிறகு இவனது மூத்தமகன் இராஜாதிராஜன் அரசனானான். அவன் மேலைச்சாளுக்கியரோடு போராடவேண்டியிருந்தது. அவைகள் ஒன்று கொப்பத்தில் நடந்தது. அதனில் அவன் உயிர்துறக்கவே, அவனது தம்பி **இராஜேந்திரன்** 1052-ல் கொப்பத்திலேயே முடிசூடிக் குந்தளரை ஜயித்தான். இவனும் போரிலே மடிந்தவன். இவனுக்குப் பின் இவனது தம்பியொருவன் **இராஜமஹேந்திரன்** என்ற பட்டத்தோடு சோழசக்ரவர்த்தியானான். இவனுக்குப் பின் கி. பி. 1063 வாக்கில் இவர்களுள் கடைசித் தம்பியான **வீரராஜேந்திரன்** அரசனானான். இவன் மகாவீரன். மேலைச் சளுக்கியரை அடியோடு அழித்து, அந்த வமிசத்தில்வந்த விக்கிரமாதித்தனுக்குத் தன் பெண்ணை மணஞ்செய்வித்து தன் கீழ்ச் சிற்றரசனாக்கினான். இவன் கி. பி. 1070-ல் விண்ணுலகேகினான். அப்பொழுது அவன் மகன் **அதிராஜேந்திரன்** அரசனானான். ஆனால் இவனது அத்தை மகனான கீழைச்சாளுக்கிய ராஜேந்திரன் சோழசிம்மாசனம் அடைய முயற்சிசெய்து நாட்டில் கலகத்தை யுண்

டாக்கி அவனைக் கொன்று தான் சிங்காதன மேறினன். அப்பொழுது அதிராஜேந்திரன் மைத்துனனான மேலைச்சாளுக்கிய விக்கிரமாதித்தனுக்கும் இவனுக்கும் போர் உண்டாகி அதனில் வெற்றிபெற்றான். இவன் 1118-ல் உயிர் துறந்தான். இவன் பிள்ளைகளில் ஒருவனான விக்கிரமாதித்தன் அரசனாகி 18 ஆண்டு ராஜரீகஞ் செய்தான். அவனுக்குப் பின்னர் அவன் மகன் குலோத்துங்கன் 1146 வரை ஆண்டான். அவனுக்குப்பின் அவனது மகன் இராஜராஜன் 1162 வரை அரசாண்டான். இவனுக்குப் பிள்ளை இல்லாமையாலே பழைய சோழர்குடியில் ஒருவனான சங்கமனை **இராஜாதிராஜன்** என்று பட்டங்கட்டினன். இவன் பதினறு ஆண்டு ஆண்டான். பின்னர் கி. பி. 1178-ல் இவனது சகோதரன் **குலோத்துங்கன்** என்ற பட்டத்தோடு 1216 வரை அரசாண்டான். இவன் ஒரு பெரிய வீரன். பகையின்றி அரசாண்டானாயினும் இவன் இறந்த பினனர் நாடு சிதறுண்டது. இவனுக்குப்பின் வந்த **இராஜராஜன்** வலியற்றவனானமையாலே நாட்டையிழந்தான். இவனுக்குப் பின்னும் இரண்டொருவர் ஆண்டபின் சோழ அரசர் பெயரே மறைந்தது.

## பாண்டிய வம்ச பரம்பரை

இந்திரன் வியாழனால் சாபமேற்றுச் சிவபூசைசெய்து பழிதீர்ந்து இறைவனெதிரில் நிற்கையில் இறைவன் இந்திரனை நோக்கி 'இக்கடம்பாடவியை நாடாக்கி ஆளுக; உன் புத்திரனிடம் பிறக்கும் குமாரியை நாம் மணப்போ'மென அவ்வகையே இந்திரன் குலசேகர பாண்டியனை யாண்டவேந்தனன். இவ்வம்சத்தில் முதல்வன் குலசேகரபாண்டியன். இவனுண்டது மணவூர்.

1. குலசேகரபாண்டியன், 2. மலயத்துவசபாண்டியன், 3. சுந்தரபாண்டியன், 4. வீரபாண்டியன், 5. உக்ரகுமாரன், 6. அபிஷேகபாண்டியன், 7. இராஜசேகரபாண்டியன், 8. குலோத்துங்கபாண்டியன், 9. அனந்தகுணபாண்டியன், 10. குணபூஷணபாண்டியன், 11. வரகுணபாண்டியன், 12. இராஜராஜபாண்டியன், 13. இராஜகம்பீரபாண்டியன், 14. சித்திரவிரதபாண்டியன், 15. சித்திரபூஷணபாண்டியன், 16. சித்திரதுவசபாண்டியன், 17. சித்திரசேநபாண்டியன், 18. சித்திரவிக்ரமபாண்டியன், 19. இராஜமார்த்தாண்டபாண்டியன், 20. இராஜசூடாமணிபாண்டியன், 21. இராஜசுந்தரபாண்டியன், 22. இராஜகுலோத்தமபாண்டியன், 23. இராஜசேர்க்கீச கம்பீரபாண்டியன், 24. இராஜகம்பீரபாண்டியன், 25. பாண்டியதீபவம்ச பாண்டியன், 26. புரந்தரசித்தபாண்டியன், 27. பாண்டியவம்ச தூரந்தரபாண்டியன், 28. சென்னிரேஸ்வரபாண்டியன், 29. பாதசேகர பாண்டியன், 30. வெற்குணபாண்டியன், 31. இராஜசார்த்தூல பாண்டியன், 32. இராஜகுலோத்தமபாண்டியன், 33. அயோதன பாண்டியன், 34. இராஜகுஞ்சரபாண்டியன், 35. பிரவீரராஜபயங்கர பாண்டியன், 36. சோகுலசேனபாண்டியன், 37. சத்துருஞ்சய பாண்டியன், 38. வீரவுத்தண்டபாண்டியன், 39. வீரபராக்ரமபாண்டியன், 40. பிரதாப மார்த்தாண்டபாண்டியன், 41. விக்ரமகஞ்சுகபாண்டியன், 42. சமாசேகரகோலாகல பாண்டியன், 43. அதுலவிக்ரமபாண்டியன், 44. அதுலகீர்த்திபாண்டின், 45. வம்சசேகர பாண்டியன், 46. பிரதாபசூரியபாண்டியன், 47. வம்சத்துவசபாண்டியன், 48. ரிபுமர்த்தனபாண்டியன், 49. சோழவம்சாந்தகபாண்டியன், 50. குலசூடாமணிபாண்டியன், 51. இராஜசூடாமணிபாண்டியன், 52. வம்சசிரோமணிபாண்டியன், 53. பாண்டீச்சுரபாண்டியன், 54. குலத்துவசபாண்டியன், 55. வம்சவிபூஷணபாண்டியன், 56. குலேசபாண்டியன், 57. சோழசூடாமணிபாண்டியன், 58. குலசூடாமணிபாண்டியன், 59. இராஜசூடாமணிபாண்டியன், 60. பூபசூடாமணி பாண்டியன், 61. குலேசபாண்டியன், 62. அரிமர்த்தனபாண்டியன், 63. ஜெகந்நாத பாண்டியன், 64. வீரவாகுபாண்டியன், 65. விக்ரமபாண்டியன், 66. பராக்ரமவாகுபாண்டியன், 67. தர்மத்தபாண்டியன், 68. காருண்யபாண்டியன், 69. சருவசாதனபாண்டியன், 70. சார்த்தகமபாண்டியன், 71. நாகரீகபாண்டியன், 72. செங்கேணிலேஇட்ட பாண்டியன், 73. வித்யாவிநோத கொடுங்கோற்பாண்டியன்.

குலசேகரபாண்டியன் 1400 வருஷம். மலயத்துவசபாண்டியன் 6700 ஷை; இவன் காலத்திலே மீனாக்ஷி திருவவதாரம். சுந்தர பாண்டியன் 60,000 ஷை; இ-து, வெள்ளியம்பலத் திருக்கூத்து, குண்டோதரனுக்கு அன்னமிட்டது, எழுகடலழைத்தது, மலயத்துவசனை அழைத்தது. உக்ரகுமாரபாண்டியன் 40,000 ஷை.' இவன் காந்திமதியை மணந்தான், இவள் சோமசேகரச்சோழன் பெண். இவன் வேல் வளை செண்டுகளை

முறையே கடல், இந்திரன், மேருமேல் எறிந்தான். வீரபாண்டியன் 8400 வரு; இ-து வேதத்திற்குப் பொருளருளியது. அபிஷேக பாண்டியன் 4800 வரு; இ-து மாணிக்கம் விற்றது, வருணன் விட்ட கடலைவற்றச்செய்தது, நான் மாடக்கூடலானது, எல்லாம் வல்லசித்தரானது, கல்லானைக்குக்கரும்பருத்தியது. விக்ரமபாண்டியன் 4600ஞு, இ-து யானையெய்தது, ஜைநமதத்தர் மதுரையில் பிரவேசித்தது, விருத்தகுமாரர் பாலரானது, இராஜசேகரபாண்டியன் 9700 இ-து, மாறியாடினது. குலோத்துங்கபாண்டியன் 6300. இ-து பழியஞ்சினது, மாபாதகம் தீர்த்தது, அங்கம் வெட்டினது. அனந்தகுணபாண்டியன் 4200; இவனரசில் இராமர் இலங்கைக்குச் சென்றது, நாகமெய்தது, மாயப்பசுவை வதைத்தது. குலபூஷணபாண்டியன் 3900; இ-து உலவாக்கிழி யருளியது, அட்டமா சித்தி யுபதேசித்தது, விடையி லச்சினை யிட்டது. இராஜ புரந்தரன் 7200 தண்ணீர் பந்தல் வைத்தது, இரசவாதம் செய்தது. இராஜேஸ்வர பாண்டியன் 8100. இராஜகம்பீர பாண்டியன் 6200. பாண்டிவங்கிய தீப பாண்டியன் 6200. புரந்தரசித் 8300. பாண்டியவம்ச தாபகன் 10,100. சுந்தரேச பாதசேகரன் 5800. சோழனை மடுவில் வீட்டியது, உலவாக் கோட்டை யருளியது, மாமனாகவந்து வழக்குரைத்தது. வரகுண பாண்டியன் 9500. இ-து சிவலோகங்காட்டியது, விறகுவிற்றது, திருமுகங்கொடுத்தது, பலகையிட்டது. இராஜ ராஜபாண்டியன் 10,200. இ-து இசைவாது வென்றது. சுகுணபாண்டியன் 5500. இ-து பன்றிக் குட்டிகளுக்கு முலை கொடுத்தது, மந்திரிகளாக்கியது, கரிக்குருவிக்கு உபதேசித்தது, காரைக்கு முத்திகொடுத்தது. சித்திரவிரதன் அல்லது சித்திரமேரு பாண்டியன் 8300. சித்ரபூஷணன் 10600. சித்ரதுவசன் 4700. சித்ர்வர்மன் 5800. சித்ரசேநன் 7400. இராஜ மார்த்தாண்டன் 9600. இராஜ சூடாமணி 8700. இராஜ சார்த்தூலன் 6700; இவனுக்குக் குலோத்துங்க பாண்டியன் எனவும் பெயர். இராஜ குலோத்தமன் ஷை இராஜ குஞ்சரபாண்டியன் 4400. பிரவீர பாண்டியன், பரராஜ பயங்கரன் 3300. இராஜ குஞ்சர்பாண்டியன் அல்லது உக்ர சேநபாண்டியன் 5700. இராஜ பயங்கர பாண்டியன் மஹாசேந பாண்டியன் 4400. உக்ரசேந பாண்டியன், சத்ருஞ்சயபாண்டியன் 5800. பீமபராக்ரமபாண்டியன் 3400. பிரதாபமார்த்தாண்டன் 5300. விக்ரமபாண்டியன் விக்ரமகஞ்சுகபாண்டியன் 7500. சமர கோலாகல பாண்டியன், யுத்த கோலாகல பாண்டியன் 9100. அதுலவிக்ரமபாண்டியன் 5200. அதுலகீர்த்திபாண்டியன் 3400.

அதுலகீர்த்தியுடன் ஒரு பிரளயம் முடிந்தது. இது **சாவதமனுக் காலம்.**

**வைவச்சுதமனுக் காலத்தில்** மதுரை 1,00,000ஞு காடாயிருந்தது. இந்த மனுவம்சத்திற் பிறந்த கீர்த்திபூடணனிடம் அகத்தியர் மதுரையின் பெருமை கூறிக் காடு கெடுத்து நாடாக்குவித்தனர்.

கீர்த்திபூஷண பாண்டியன் 60,000ஞு ஆலவாயானது. வம்சசேகரன் 20,000ஞு, சுந்தரப்பேரம்பு எய்தது, சங்கப்பலகையிட்டது, விக்ரமசோழன் படையெடுப்பு.

## A. S. S. I. Vol. II

வங்கியசூடாமணி 1500. இ-து தருமிக்குப் பொற்கிழி கொடுத்தது, கீரனைக் கரையேற்றினது, கீரனுக் கிலக்கண முபதேசித்தது, சங்கத்தார் கலகம்தீர்த்தது. பிரதாப சூரியபாண்டியன் 1300. வங்கிசத்துவசன் 9500. ரிபுமர்த்தனன், சோழவம்சாந்தகன் 10,000. சேரவம்சாந்தகன் 8500. பாண்டியவம்சசேகரன் 3900. வம்சசிரோமணி பாண்டியன் 8700. பாண்டீச்சுரபாண்டியன் 6800. குலத்துவசபாண்டியன் 7800. வம்ச விபூஷண பாண்டியன் 4300. சோமசூடா மணி பாண்டியன்,.........,குல சூடாமணி பாண்டியன் 2200. இராஜ சூடாமணிபாண்டியன் 4500. பூபசூடாமணி பாண்டியன் 3600. குலேசபாண்டியன் 6200, இடைக்காடன் பிணக்குத்தீர்த்தது. அரிமர்த்தன பாண்டியன் 4250. வலை வீசினது, வாதவூரடிகளுக் குபதேசித்தது, நரிபரி பரிநரியாக்கியது, மண் சுமந்தது. சகந்நாதபாண்டியன் 8990. வீரபாகுபாண்டியன் 7390. விக்ரமவாகு அல்லது விக்ரம பாண்டியன் 5820. பராக்ரமபாகு அல்லது சுரபிபாண்டியன் 4020. சுரதமார்பபாண்டியன் 3610. குங்குமபாண்டியன் 2170. கற்பூரபாண்டியன் 4810. காருண்யபாண்டியன் 6190. புருஷோத்தம பாண்டியன் 6860. சத்ருசாதன பாண்டியன் அல்லது சத்ருசேநபாண்டியன் 4540. கூன்பாண்டியன் குப்ஜ அல்லது சுந்தர பாண்டியன் 3450, சுரந்தீர்த்தது, சமணர் கழுவிலேறியது, சம்பந்தசுவாமிகள் காலம்

வீரபாண்டியன். இவன் பாண்டியர் வம்சத்தில் (74-வது); சோழதேசத்தை யாண்டவன். இவன் A. D. 1064 இல் இராஜேந்திர குலோத்துங்க சோழனைச் செயித்தானுதலால் விக்ரம பாண்டியனெனவும் இவனுக்குப் பெயர்.

கீர்த்திபூஷணன் முதல் கூன்பாண்டியன் வரையில் பட்டமடைந்தவர் (29)-ன் மருக்குத் தேவஞு 220,000. இவர்கள் துவாபரயுகம் முடிவுவரை ஆண்டவர்கள்.

குலசேகர பாண்டியன் A. D. 1200-1213. பராக்ரமபாண்டியன் 1209. காசிகண்ட பராக்ரமபாண்டியன் 1248. கனக பாண்டியன், பராக்ரமபாண்டியன் 1307. குலசேகரதேவன் 1402. காசிகண்டபராக்ரமபாண்டியன் 1428. பொன்னன் பெருமாள் பராக்ரமபாண்டியன் 1431. வீரபாண்டியன் 1432. பராக்ரமபாண்டியன் 1516. அதிவீரராம பாண்டியன் 1562. சுந்தர பாண்டியன். பெருமாள் சுந்தரபாண்டியன். சுந்தர பாண்டியதேவன். கூன்பாண்டியன் அல்லது சுந்தரபாண்டியன். உக்ரபாண்டியன். வரகுணபாண்டியன். வரதுங்கராம பாண்டியன் A. D. 1578. வரதுங்கராம வீரபாண்டியன் 1589. விக்ரமபாண்டியன். வீரபாண்டியன். இராமபிராமபாண்டியன். வல்லபதேவன் அல்லது அதிவீரராமபாண்டியன் 1605. சுந்தரபாண்டியன் 1623.

### பாண்டியர்மரபு - திருவிளையாடல்படி

1. தென்னர்சேகரன் அல்லது மன்னர்சேகரன் அல்லது குலசேகர பாண்டியன். 2. மலயத்துவச பாண்டியன்-மனைவி காஞ்சனமாலை; இவன் அரசு புரிந்தது மணவூர். 3. சோமசுந்தர பாண்டியன். 4. உக்ரகுமார பாண்டியன் அல்லது ஆரஞ்சாத்துப் பாண்டியன்-மனைவி காந்திமதி. 5. வீரபாண்டியன் (வேதத்திற்குப் பொருள் கூறியது.) 6. அபிஷேக பாண்டியன், மாணிக்கம் விற்றது. 7. விக்ரம பாண்டியன், யானை யெய்தது. 8. இராஜசேகர பாண்டியன், மாறியாடினது. 9. குலோத்துங்க பாண்டியன், பழியஞ்சினது. 10. அநந்தகுண பாண்டியன், இராமனின்கை சென்றது. 11. குலபூஷண பாண்டியன். 12. இராஜேந்திர பாண்டியன், இராஜபுரந்தரன். இவன் சகோதரன் இராஜசிங்கன். 13. இராஜேச பாண்டியன். 14. இராஜகம்பீர பாண்டியன். 15. வம்சியதீப பாண்டியன். 16. புரந்தரசித்துப் பாண்டியன். 17. வங்கியபதாக பாண்டியன். 18. சுந்தரேசபாதசேகர பாண்டியன். 19. வரகுண பாண்டியன். 20. இராஜராஜ பாண்டியன். 21. சுகுண பாண்டியன், பன்றிகுட்டிக்கு பால். 22. சித்திரவிரத பாண்டியன். 23. சித்திரபூஷண பாண்டியன். 24. சித்திரத்துவச பாண்டியன். 25. சித்திரவர்ம பாண்டியன். 26. சித்திரசேந பாண்டியன். 27. சித்திரவிக்ரம பாண்டியன் (அருச்சுநன் காலம்). 28. இராஜமார்த்தாண்ட பாண்டியன். 29. இராஜ சூடாமணி பாண்டியன். 30. இராஜ சார்த்தூல பாண்டியன். 31. துவிஜராஜ குலோத்தம பாண்டியன். 32. ஆயோதனப் பிரவீண பாண்டியன். 33. இராஜகுஞ்சர பாண்டியன். 34. இராஜ பயங்கர பாண்டியன். 35. உக்கிரசேந பாண்டியன். 36. சத்ருஞ்ஜய பாண்டியன். 37. வீமரதேர்மன்னன். 38. வீமபராக்ரம பாண்டியன். 39. பிரதாப மார்த்தாண்ட பாண்டியன். 40. விக்ரமகஞ்சுக பாண்டியன். 41. சமரகோலாகல பாண்டியன். 42. அதுலவிக்ரம பாண்டியன். 43. அதுலகீர்த்திபாண்டியன். 44. கீர்த்திபூஷண பாண்டியன்; ஒரு பிரளயம். 45. வங்கியசேகர பாண்டியன், சங்கப் பலகை. 46. வங்கியசூடாமணி பாண்டியன் அல்லது சண்பக பாண்டியன், கீரனைக் கரையேற்றியது. 47. பிரதாப சூரிய பாண்டியன். 48. வம்சத்துவச பாண்டியன். 49. இரிபுமர்த்தன பாண்டியன். 50. சோழவம்சாந்தக பாண்டியன். 51. சேரவம்சாந்தக பாண்டியன். 52. பாண்டிவம்சேச பாண்டியன். 53. வம்ச சிரோமணி பாண்டியன். 54. பாண்டீச்சுர பாண்டியன். 55. குலத்துவச பாண்டியன். 56. வம்சவிபூஷண பாண்டியன். 57. சோமசூடாமணி பாண்டியன். 58. குலசூடாமணி பாண்டியன். 59. இராஜ சூடாமணி பாண்டியன். 60. பூபசூடாமணி பாண்டியன். 61. குலேச பாண்டியன். 62. அரிமர்த்தன பாண்டியன், மாணிக்கவாசகர் காலம். 63. ஜகந்நாத பாண்டியன். 64. வீரவாகு பாண்டியன். 65. விக்ராமவாகு பாண்டியன். 66. பராக்ரமபாகு பாண்டியன். 67. சுரத பாண்டியன். 68. வாகுபல பாண்டியன், 69. சுக்ரும பாண்டியன். 70. கருப்பூர பாண்டியன். 71. காருண்ய பாண்டியன். 72. புருஷோத்தம பாண்டியன். 73. சத்ருசாதன பாண்டியன். 74. கூன் பாண்டியன், திருஞான சம்பந்தர் காலம்.

## பாண்டியர் மரபு

### A. S. S. INDIA. Vol II.

### கலியுகத்தில் ஆண்ட பாண்டியர்கள்.

1. சோமசுந்தர பாண்டியன், 2. கற்பூரசுந்தர பாண்டியன், 3. குமாரசேகர பாண்டியன், 4. குமாரசுந்தர பாண்டியன், 5. ஷண்முகராஜ பாண்டியன், 6. சுவர்ண பாண்டியன், 7. சருவமித்திர பாண்டியன், 8. பற்ருர்ச்சிம்ம பாண்டியன், 9. மகரத்துவச பாண்டியன், 10. சத்துருபீகர பாண்டியன், 11. சத்துருசம்மார பாண்டியன், 12. கொடுங்கோற் பாண்டியன். இந்தப் பன்னிரண்டாவதான கொடுங்கோற் பாண்டியன் கோவலனைக் கொலைசெய்வித்த காரணத்தால் கன்னகையின் கோபத்தீயால் மதுரை தீப்பட அழிந்தனன். இது கலி (305)-இல். பிறகு பாண்டிய வம்சமிலாமையால் பிராமணனுக்கும் வேசைக்கும் பிறந்த ஒரு சூரன் பாண்டியர் சிங்காசனத்தைப் பெற்றுப் பாண்டியனானன்.

1. சந்திரகுலபதீப பாண்டியன், 2. புலிக்கொடி பரித்த பாண்டியன், 3. மீனக்கொடி பிடித்த பாண்டியன், 4. மகரத்துவச பாண்டியன், 5. மார்த்தாண்ட பாண்டியன், 6. குவலயாநந்த பாண்டியன், 7. குணலய பாண்டியன், 8. வீரவாகு பாண்டியன், 9. சத்துருசம்மார பாண்டியன், 10. வீரவர்ம பாண்டியன், 11. வருணகுலோத்துங்க பாண்டியன், 12. இராஜீய மார்த்தாண்ட பாண்டியன், 13. குலவர்த்தன பாண்டியன், 14. வரைப்பெண்ணைச் சிறையெடுத்த பாண்டியன், 15. குலவர்த்தன பாண்டியன்.

குலவர்த்தனபாண்டியன், இவன் காலத்திலே துருக்கர் மதுரைமேல் படையெடுக்க மேனாட்டார் அவனுக்கு உதவிசெய்து அவன் வம்சத்தில் சோமசேகரனுக்குப் பட்டமளித்தனர். 1. சோமசேகரபாண்டியன், 2. சோமசுந்தரபாண்டியன், 3. இராஜராஜபாண்டியன், 4. இராஜகுஞ்சரபாண்டியன், 5. இராஜசேகரபாண்டியன், 6. இராஜவர்ணபாண்டியன், 7. பக்தராஜபாண்டியன், 8. குமாரசிம்மபாண்டியன், 9. பீமசேநபாண்டியன், 10. பிரதாபராசபாண்டியன், 11. வரகுணபாண்டியன், 12. குமாரசந்திரபாண்டியன், 13. வாதுங்கபாண்டியன், 14. குலோத்துங்கபாண்டியன், 15. சந்திரசேகரபாண்டியன், 16. சந்திரகுமாரபாண்டியன்.

இந்தச் சந்திரகுமார பாண்டியனை விஜயசேகரசோழன் செயிக்கப் பாண்டியன் தப்பி ஆனைகொந்தி ஸமஸ்தானத்து இராயரவர்களையடைய, இராயர் சோழனுக்கு விரோதமாய்க் கோடிகன்னகமநாய்க்கனைச் சேனையுடன் அனுப்ப, அவன் சோழனைத் துரத்திப் பாண்டியனையும் வெட்டி இராயனுக்குத் தெய்வீகமாய்ப் பாண்டியனிறந்தானென்று எழுதிவிட்டுத் தான் மதுரையை யாண்டான். அதுமுதல் மதுரையை நாய்க்கபரம்பரையார் அரசாண்டனர். கடைசியில் (16) வது-பட்டம் ராஜா விஜயகுமாரதீர திருமலைநாய்க்கன் இறுதியாக நாயகர் அரசு முடிந்தது.

1. சோமசேகர பாண்டியன், A. D. 1100. 2. கற்பூரசுந்தரபாண்டியன், 3. குமாரசேகரபாண்டியன், 4. குமாரசுந்தரபாண்டியன், 5. சுந்தரராஜபாண்டியன், 6. ஷண்முகராஜபாண்டியன், 7. மேருசுந்தரபாண்டியன், 8. இந்திரவர்மபாண்டியன்; இவன் சோழனைச் சிறையிட்டவன், 9. சந்திரகுலதீபபாண்டியன், 10. மீனகேதனபாண்டியன், 11. மீனத்துவசபாண்டியன்; இவன் சோழநாட்டையாண்டான், 12. மகரத்துவசபாண்டியன், 13. மார்த்தாண்டபாண்டியன், 14. குவலயாநந்த பாண்டியன்; இவன் கப்பல் யாத்திரை செய்து கடலில் மூழ்கினன். இவனுக்குப்பின் ஒரு பெண் அரசாண்டாள். இவள் குந்தலபாண்டியனை மணந்தாள். 15. குந்தலபாண்டியன், 16. சத்ருபீகரபாண்டியன், 17. சத்ருசம்மாரபாண்டியன், 18. வீரவர்ம பாண்டியன், 19. வீரபாகுபாண்டியன், 20. மகுடவர்த்தனபாண்டியன், 21. வச்ரசிம்மபாண்டியன், 22. வர்மகுலோத்துங்க பாண்டியன், 23. அதிவீரராமபாண்டியன், 24. குலவர்த்தனபாண்டியன், 25. சோமசேகரபாண்டியன், 26. சோமசுந்தரபாண்டியன், 27. இராஜராஜபாண்டியன், 28. இராஜசேகரபாண்டியன், 29. இராஜவர்மபாண்டியன், 30. இராமவர்மபாண்டியன், 31. வரதராஜபாண்டியன், 32. குமாரசிம்மபாண்டியன், 33. வீரசேநபாண்டியன், 34. பிரதாபராஜபாண்டியன், 35. வீரகுணராஜபாண்டியன், 36. குமாரசந்திரபாண்டியன், 37. வரதுங்கபாண்டியன், 38. சந்திரசேகரபாண்டியன், 39. சோமசேகரபாண்டியன், 40. பராக்ரமபாண்டியன்; இவன் துருக்கரையோட்டியரசாண்டான். இவன் காலத்திலே மாலிகாபர் படையெடுத்து மதுரையை நிலைகலக்கினன். (1311) கி. பி.

## சேர ராஜாக்கள் பரம்பரை

1. எதுகுலச்சேரன், 2. வம்சோத்தாரக சேரன், 3. மநுமுறைநடந்தசேரன், 4. வேதப்பிரதாபசேரன், 5. விக்ரமகேசரிசேரன், 6. ரிபுகுலக்ஷயசேரன், 7. சமரசார்த்தூலசேரன், 8. புனநாடுகொண்ட சேரன், 9. புலிக்கொடி பரித்தசேரன், 10. எல்லைகரைகண்டசேரன், 11. இராஜகம்பீரசேரன், 12. முந்நீலமணியிட்டசேரன், 13. முரசறைந்தசேரன், 14. இராஜமார்த்தாண்டசேரன், 15. இராஜராஜேஸ்வரசேரன், 16. இராஜப்பிரதாபசேரன், 17. ஆறிலொருகடமைகொண்டசேரன், 18. அனந்தகுணசேரன், 19. மதனவிஸ்தாரசேரன், 20. வரகுணோற்பாலசேரன், 21. ஆச்ரமநிலையிட்டசேரன், 22. அநுபூத்திச்சேரன், 23. அவிர்ப்பாகச்சேரன், 24. தியாகசமுத்திரசேரன், 25. திருநீற்றுச்சேரன், 26. மெய்ப்பொருள் கண்டசேரன், 27. பாணர்க்கு நிதிதந்த சேரன், 28. பாஸ்கரபானுசேரன், 29. தெய்வகுஞ்சரசேரன், 30. சிந்துவருணசேரன்.

## கலியுகத்துச் சேர ராஜாக்கள்

1. அக்ஷயபாத்ரசேரன், 2. ஏநாதிச்சேரன், 3. வம்சபரிபாலகசேரன், 4. மங்களாகரச் சேரன், 5. ஜீவதர்மோத்தாரகச்சேரன், 6. ஜீவநேசச்சேரன், 7. ஜீவோற்பவச்சேரன், 8. சிந்துவாரணீயச்சேரன், 9. ஜீவசம்ரக்ஷகச்சேரன், 10. தீரகையாதரச்சேரன், 11. தீரதைசாத்தச்சேரன், 12. அச்சுதபிரதாபசேரன், 13. அகடிதகீர்த்திப்பிரதாபசேரன், 14. வீரராஜேந்திரசேரன், 15. பீமீசுவரசேரன், 16. நிர்மலசேகரசேரன், 17. பஞ்சாக்ஷரசேரன், 18. ஜீவபாதசேகரசேரன், 19. திருமஞ்சனசேரன், 20. கைலாயமடைந்தசேரன். இந்த (20) வது-பட்டங்கொண்ட சேரனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கைலைக்கு அழைத்துச்சென்றனர். இச்சேரர் கைலைக்குச் சென்ற காலத்தில் மந்திரியைத் தமக்குப் பதில் அரசாளவைத்துச் சென்றனர். சென்றவர் மீண்டும் வருவர் என்னும் கருத்தால் நாளதுவரையில் சேரநாட்டில் சிவிகையில் அரசன் பவனிவருங்கால் ஒருகாலைத் தொங்கவிட்டு வருவது மரபு.

கலி (3446) இல் குலசேகரப்பெருமாள் திருவஞ்சைக்களம் ராஜ்யமுண்டாக்கி அதைத் தமக்குப்பிறகு (6) பங்கிட்டுத் தம்மவர்க்குக் கொடுத்தார். இவர்க்குப்பிறகு சேரமான் பெருமாளுய்யனார் கலி (3800) ஆ அரசாண்டார். இவர்க்குப்பிறகு சங்கரவிருத்திப் பெருமாள், சத்தியசந்தப்பெருமாள் முதலியோர் ஆண்டார்கள். இச்சோழபாண்டிய சேரராஜாக்களின் பெயர்கள் சென்னை ஓரியண்டல் லைபாரியில் கண்டவாறு எழுதினேன். அவற்றிற் சில அரசர்களின் பெயர்கள் பொருள்படாததினால் உள்ளவாறு எழுதிவைத்தேன்.

1-யதுகுலசேரன், 2-வம்சதுங்கசேரன், 3-மனுமுறைநடத்தியசேரன், 4-வீரப்ரதாபசேரன், 5-விக்ரமமகேச்வரசேரன், 6-ரிபுகுலக்ஷயசேரன், 7-சாமசார்த்தூலசேரன், 8-............................9-புலிக்கொடிபரித்தசேரன், 10-எல்லைகரைகண்டசேரன், 11-இராஜகம்பீரசேரன், 12-இராஜமார்த்தாண்டசேரன், 13-இராஜராஜேஸ்வரன், 14-இராஜப்பிரதாபசேரன், 15-மன்றில்மணியிட்டசேரன், 16-மும்மூர்த்திசேரன் 17............................18-அநந்தகுணசேரன், 19-வம்சபரிபாலசேரன், 20-மங்களகரசேரன், 21-தநவிஸ்தாரசேரன், 22-வாகுணோற்பாலசேரன், 23-ஆச்ரமநிலையிட்டசேரன், 24-அநுபூதிசேரன், 25-அவா சேரன், 26......................27-சிவபாதசேகரசேரன், 28-திருநீற்றுச்சேரன், 29-எழுதிசாசேரன், 30-மெய்ப்பொருள்சேரன், 31-பாணர்க்குநிதிதந்தசேரன், 32-பாஸ்கரபானுசேரன், 33-அட்சயபாத்திரசேரன், 34-சிவதர்மோத்தமராஜசேரன், 35-சிவநேசசேரன், 36-சிவோத்பாலசேரன், 37-தெய்வகுஞ்சரசேரன், 38-சிந்துவருணசேரன், 39-திரிகேதாரசேரன், 40-திரிதேசாங்கசேரன், 41-ஆதுலபிரதாபசேரன், 42-அகணித கீர்த்திப்ப்ரதாபசேரன், 43-வீரராஜேந்திரசேரன், 44-பீமேஸ்வரசேரன், 45-நிர்மலசேரன், 46-பஞ்சாக்ஷரசேரன், 47-காந்தாபரண சேரன் முதலியவர், 48-.................................

## பல்லவர் வரலாறு

துரோணர் குமாரராகிய அசுவத்தாமர் மதனையென்னும் ஒரு காந்தருவஸ்திரீயை மணந்து பல்லவனைப் பெற்றார்.

பல்லவன் குமாரன் **மகேந்திரவர்மன்**, (கு-ன்) **சிங்கவருமன் I**, (கு-ன்) **அர்க்கவர்மன்**, (கு-ன்) **உக்ரவருமன்**, (கு-ன்) **ஸ்ரீசிம்மவிஷ்ணு**, (கு-ன்) **நந்திவருமன்**, (கு-ன்) **சிங்கவருமன் II**, (கு-ன்) **லோகாதித்யன்**, (கு-ன்) **ராஜசிங்கன்**, (கு-ன்) **மகேந்திரவர்மன்**. இவர்களில் அனைவர்க்கும் பல்லவர் என்பது பொதுப்பெயராகக் காணப்படுகிறது. இவர்களில் மாவலிபுரமாண்டவன் சற்றேறக்

குறைய (700) வது நூற்றாண்டிலிருந்ததாகத் தெரிகிறது. மாவலிபுரமாண்ட பல்லவர்—நரசிங்கன், **அத்யந்தகாமன்**, **ரணஜயன்**, **ஸ்ரீநிதி**, **ஸ்ரீபான்**, **பராபான்**, **புவனபாஜன்**, **ஸ்ரீமீகபல்லவன்**, **சர்வதோபத்ரபல்லவன்**. **ரணபான்**, ரணஜயனுக்குச் சைவசூடாமணிபல்லவன் என்று ஒருபெயர். **அதிரணசண்டேச்சுரன்**, **காமராகன்**, **தனுபிராமன்**, **திரிலோகீயவர்த்தனன்**. **காஞ்சியாண்டபல்லவன்**-இராஜசிங்கன், மஹேந்திரவருமன் முதலியோர். பல்லவர் குலத்தில் உக்ரதண்டன் பிறந்து ரணரசிகனைச் செயித்தான்.

## பல்லவர் மற்றொரு விதம்

மூன்றாவது சகாத்தத்தில் இவர் ஆந்திரதேசத்தில் வேகிபட்டணத்தையும், தொண்டைநாட்டில் காஞ்சிநகரத்தையும் இராஜதானியாகக் கொண்டனர். மூன்றாவது சகாத்தம்வரையில் **மாதவவர்மன்**, **குலகேதனன்**, **நீலகண்டன்**, **முக்கண்ணன்** என்பவர் அரசாண்டனர். நாலாஞ்சகாத்தத்தில் **சந்திரவர்மன்**, **விஜயநந்திவர்மன்**, **விஜயபுத்தவர்மன்**, **கந்தவர்மன்**, **திரிலோசனபல்லவன்** வம்சத்தவர் அரசாண்டனர். இந்தக்காலத்தில் சாளுக்கிய வம்சத்தவனான ஜயசிங்கவிஜயாதித்யன் பல்லவர்மீது படைகொண்டுசென்று இறந்தான். இவன் குமாரன் விஷ்ணுவர்த்தனன் பல்லவர்களைத் துரத்தி யவர்கள் பெண்ணை மணந்தான். 5-வது, 6-வது சகாத்தத்தில் பல்லவரரசு ஆந்திர திராவிட கர்னாடக தேசங்கள் முழுதினும் பரவியது.

## பல்லவர்கள் பரம்பரை

1 விமலன், 2. கொங்காணிகள், 3. காளபர்த்திரி, 4. சூதபல்லவன், 5. வீரகூர்ச்சன் I, 6. சந்திரவர்மன், 7. காரணன், 8. விஷ்ணுகோபன், 9. ஸ்கந்தமூலன், 10. கானகோபன், 11. வீரகூர்ச்சன் II, 12. சிவஸ்கந்தவர்மன், 13. குமாரவிஷ்ணு, 14. புதவர்மன், 15. குமாரவிஷ்ணு, 16. விஷ்ணுகோபன், 17. குமாரவிஷ்ணு, 18. ஸ்கந்தவர்மன், 19. சிம்மவர்மன், 20. வீரவர்மன், 21. ஸ்கந்தவர்மன், 22. சிம்மவர்மன், 23. ஸ்கந்தவர்மன், 24. நந்திவர்மன், 25. சிம்மவர்மன், 26. சிம்மவர்மன், 27. விஷ்ணுகோபவர்மன், 28. சிம்மவர்மன், 29. சிம்மவிஷ்ணு, 30. மஹேந்திரவர்மன் I, 31. நரசிம்மவர்மன் I, 32. மகேந்திரவர்மன் II, 33. பரமேசுவரவர்மன் I, 34. நரசிம்மவர்மன் II, 35. பரமேசுவரவர்மன் II, 36. நந்திவர்மன் II, 37. தந்திவர்மன், 38. நந்திவர்மன் III, 39. நிருபதுங்கன், 40. அபராஜிதவர்மன், விஜயகம்பவர்மன், வயிரமேகவர்மன்.

## பல்லவர் வரலாறு

முற்காலத்திலே தொண்டைநாடு குறும்பர் வசப்பட்டிருந்தது. அது சோழரிடம் வந்தபின் வேளாளர் துளுவநாட்டினின்றும் வந்து அதில் குடியேறினர். இதன் பிறகு வடநாட்டிலிருந்த பல்லவர்கள் சளுக்கியவேந்தர்களால் முறியடிக்கப்பட்டுத் தென்றிசை நோக்கி வந்து தொண்டைநாட்டைக் கைப்பற்றினர். இவர்கள் முதன்முதல் வந்தகாலம் சற்றேறக்குறைய கி. பி. ஐந்தாம்சகாப்தமென்பர். இதுகாறும் வெளிப்பட்டுள்ள சில தாமிரசாசனங்களால் தெரிந்த அளவு பல்லவர்களின் பாரம்பர்யம் வருமாறு. (1) உக்ரதண்டன் என்கிற லோகாதித்தன். (2) ராஜசிங்கன் என்கிற சிங்கவிஷ்ணு. (3) குணபரன் என்கிற மகேந்திரவர்மன். (4) வாதாபிகொண்ட நரசிம்மவர்மன். (5) மகேந்திரவர்மன். (6) பரமேச்சுரவர்மன். (7) நரசிம்மவர்மன். (8) பரமேச்சுரவர்மன் II. (9) நந்திவர்மன். (10) நந்திவர்மப் பல்லவமல்லன். இவர்கள் காலம் சற்றேறக்குறைய கி. பி. 6-முதல் 8-ஆம் சகாப்தம் வரையிலுமாம். காஞ்சியிலும், மகாபலிபுரத்திலும் காணப்படும். கருங்கல் வேலைகளும் திருப்பணிகளும் இவர்கள் செய்தனவாம். இவர்கள் சைவ வைஷ்ணவ மதங்களை ஆதரித்தவர்கள். இவர்கள் ஜாதியில் க்ஷத்ரியரெனவும், பாரத்வாஜ கோத்திரத்தவரெனவும் கூறப்படுகின்றனர். இவர்களைத் தமிழரசர் **போத்தரசர்** என்பர். வடமொழியில் பல்லவர் எனினும் தென்மொழியில் போத்து எனினும் தளிர் எனப்பொருள்படும். இக்காலத்துச் சிலர் தங்களைப் பல்லவர்களின் வம்சத்தவர் எனக் கூறிக்கொள்கின்றனர். இந்தப் பல்லவர்க்கு வடக்கில் சளுக்கிய அரசர்களும், தெற்கில் சோழபாண்டியர்களும் மாற்றாராக இருந்தனர். ஈழத்தரசர்கள் மாத்திரம் மித்திரர்களாக இருந்தனர். பல்லவர் தலைவன்

(1) **உக்ரதண்டன் என்கிற லோகாதித்தன்** சற்றேறக்குறைய 1400 வருடங்களுக்கு முன்னிருந்தவன். வல்லபராஜனான சளுக்கிய வேந்தனாகிய ரணசிங்கனுடன் பலபோரிட்டான். இவன் குமாரன் (2) **சிங்கவிஷ்ணு என்கிற ராஜசிங்கன்**. காஞ்சி

புரத்தில் தற்காலம் கைலாசநாதர் கோவில் என வழங்கும் ராஜசிம்மேச்சுரத்தைக் கட்டி வைத்தவன். இவன் மகன் (3) (கி. பி. 640) **குணபான் என்கிற மகேந்திரவன்மன்.** இவன் காலத்து பல்லவர் நாடு திரிசிரபுரம் வரையில் வியாபித்திருந்தது. திரிசிராப் பள்ளியில் உச்சிப்பிள்ளையார் கோயில் கட்டுவித்தவன் இவன் என்பர். தெற்கில் நான்கு மலைக்கோட்டைகளைக் கட்டுவித்தான். இவன் குமாரன் (4) (கி. பி. 610) **நாசிம்மவன்மன்.** இவன் சளுக்கிய வேந்தனாகிய புளகேசியை வாதாபி என்ற இடத்தில் வென்று தான் முன்னம் இழந்த நாடுகளை மீட்டனன். அறுபத்துமூவரில் ஒருவராகிய சிறுத்தொண்ட நாயனார் இந்த வாதாபி என்ற பாடியில் நடந்த யுத்தத்தில் பல்லவன் பக்கலிலிருந்து போர் வென்றனர் என்பர். இந்த நரசிம்மவர்மன் பேரன் (5) **மகேந்திரவன்மன்.** இவன்பின் (6) **பாமேச்சுரவன்மன்.** இவன் வல்லபனை விக்ரமாதித்தனுடன் போரிட்டு வெற்றியடைந்தவன். இவன் குமாரன் (7) **நாசிம்மவன்மன்.** சுத்தசைவன். இவன் திருமழிசை ஆழ்வாரைக் கச்சியிலிருக்கவொட்டாதுவெருட்ட அவர் தொண்டைநாடு நீங்கித் திருக்குடந்தை சேர்ந்திருந்தனர். இவன் குமாரன் (8) **பாமேச்சுரவன்மன்.** இவன் கச்சியில் பரமேசுர விண்ணகரமென்னும் வைகுண்டப் பெருமாள்கோவில் கட்டுவித்தான். இவன் குமாரன் (9) **நந்திவன்மன்.** இவனது வலியின்மை அறிந்த விக்ரமாதித்தன் இவனை வென்று இவனது பொன்மணி முதலியவற்றைத் தேவாலயங்களுக்கும் மற்றவர்க்கும் வழங்கினன். விக்ரமார்க்கன் காஞ்சி நீங்கியபின் திருச்சிற்றம்பலம் பொன்மேய்ந்த **ஹிரண்யவர்மப்பல்லவராயன்** வழியித் தோன்றியவனும் பராக்ரமசாலியுமான (10) **நந்திவர்மபல்லவமல்லன்** அரசனாயினன். இவன் முடிசூடியகாலம் ஏறக்குறைய (கி பி. 710) ஆக இருக்கலாம். இவன் சோழபாண்டியர்களையும், நிடதர்கோனை பிருதிவி வியாக்கிரனையும், மற்றும் பல அரசர்களையும் நெல்வேலி, மண்ணைக்குடி, கருவூர் முதலிய இடங்களில் நடந்த போர்களில் தோல்வி அடையச் செய்தான். இவனுக்குப் பின்னர் இவன் மகன் **நந்திவர்மனும்** இவனுக்குப் பிறகு **மூன்றாம்நந்தியு** மரசாயினர். நந்திக் கலம்பகத்தினும், பாரதவெண்பாவினும் புகழப்பெற்றவனும், தெள்ளாற்றில் **பகைவென்**றவனும், நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகிய நந்திபுரவிண்ணகரமென்னும் திருப்பதியைக் கட்டுவித்தவனும் இவன் என்பர். இவன் சேனைத் தலைவன் **உதயசந்திரன்.** தென்னாட்டரசர் பலர் ஒன்றுகூடி பல்லவர் நகராகிய நந்திபுரத்தை முற்றுகையிட இவன் அவர்களை வென்றான். திருமங்கை ஆழ்வார் இந்நந்திவன்மன் சரிதையை பரமேச்சுரவிண்ணகரப்பாசுரத்தில் கூறியிருக்கிறார். இந்தப் பல்லவனுக்குப் பின் இவர்கள் நாடு சோழ அரசர்களால் கொள்ளப்பட்டது. பின் சரிதம் ஒன்றும் தெரியவில்லை. இச்சரிதம் Rev. Foulkes, Dr. Fleet, Dr. Hultzsch முதலியோர் கண்டுபிடித்த செப்பேடுகளினின்றும், Mr. Sewell என்பவர் எழுதியதினின்றும் சுருக்கியதென்பர்

## சாளுக்கியவம்ச வரலாறு

பிரமன் மானதகுமாரர் சத்யாஸ்ரயர், குபஜவிஷ்ணு, இந்தக் குப்ஜவிஷ்ணு குமாரன் ஜயசிம்மன், (கு-ன்) விஷ்ணுவர்த்தனன், (கு-ன்) மாங்கியுவராஜன், (கு-ன்) ஜயசிங்கன். கீர்த்திவர்மன் 489, கு. சத்யாச்ரயவல்லபன் 532-556, குப்ஜவிஷ்ணுவர்த்தனன் I அல்லது விஷமசித்தி 526-545, விஷமசித்தி கு. ஜயசிம்மவல்லபன் I, கு. இந்திரபட்டாரகன், (கு-ன்) விஷ்ணுவர்த்தனன் II (577-587), (கு-ன்) மங்கியுவராஜன் (587-612), (கு-ன்) ஜயசிங்கன், விஷ்ணுவர்த்தனன் III, கொக்கலி III. விஷ்ணுவர்த்தனன், (625-662) (கு-ன்) விஜயாதித்ய பட்டாரகன் (662, 680), (கு-ன்) விஷ்ணுவர்த்தனன் IV (680) 716), கு-ன். விஜயாதித்ய நரேந்திரன் (716-764), (கு-ன்) கலிவிஷ்ணுவர்த்தனன் (764-766), (கு-ன்) குணக, குணகனக, விஜயாதித்ய, யுத்தமாலா, யுவராஜ விக்ரமாதித்யன். யுவராஜ விக்ரமாதித்தியன் (கு-ன்) சாளுக்ய பீமன், (கு-ன்) விக்ரமாதித்யன் 847-848, கொல்லபிகண்டன், (கு-ன்) ராஜமகேந்திரன், விஷ்ணுவர்த்தனன் VII. விஷ்ணுவர்த்தனன் குமாரன் தனார்ணவன், (கு-ன்) விமலாதித்தியன்; இவன் இராஜ ராஜசோழன் குமரியை (937 - 944) மணந்தான். (கு-ன்) இராஜராஜன், விஜயாதித்யன், இராஜராஜன், (கு-ன்) இராஜேந்திர சோழன் அல்லது குலோத்துங்கசோழன் I (985-1034), (கு-ன்) விக்ரம சோழன் (1034-1049), இராஜராஜன் II, வீரசோழன், விக்ரமசோழன், (கு-ன்) குலோத்துங்க சோழதேவன் II, 1056.

## மேற்குச் சாளுக்கியர்.

பாண்டவரில் அர்ச்சுனனுடைய (83)-வது சந்ததி நந்தராஜன். அந்த நந்தனுடைய (9)-வது சந்ததி **சாளுக்யன்**. இவர்கள் ஆறுவது சகாத்தத்தில் கல்யாண பட்டணத்தை இராஜதானியாகக்கொண்டுகொங்கணம், மகாராஷ்டிர, கர்னடக தேசங்களைக் கட்டியாண்டனர். அந்த வம்சத்தாபகன் புளகேசி. இவன் கிறிஸ்துசகம் (550)-இல் வாதாபி யெனும் பட்டணத்தில் இராஜ்யத்தை ஏற்படுத்தினன். இவன் மருமகன் **புளகேசி** II — கி. ச. (608) இல் இராஜ்யத்தைப் பிரபலப்படுத்தினன். இவன் கி. ச. (610) இல் பல்லவரைத் தூத்தி வேகிதேசத்தைக் கைப்பற்றினன். இவன் ஸ்ரீஹர்ஷன் காலத்தவன். இவன் நாடு பாரசீகம் வரையில் வியாபித்தது. இவனைக் கடைசியாகப் பல்லவர்ஜெயித்ததாகக் காணப்படுகிறது. இவன் குமாரன் விக்ரமாதித்யன் காஞ்சியிற் பல்லவர்களைச் செயித்தான். இந்த வம்சத்தவனாய் இவனுக்குப் பின்வந்த **அமோகவர்ஷன்** பௌத்த மதச்சார்பாய்ப் பூர்வ சாளுக்கியருடன் போரிட்டிறந்தான். இவனுக்குப் பின் **விக்ரமாங்கதேவன் 1076-1126** வரை அரசாண்டான். இவனுக்குப் பிறகு **தைலன் 1156-1162** வரை அரசாளுகையில் இவன் சேனபதி **விச்சலன்** இவனைக் கொன்று தானே அரசனானன். இவன் ஜைநன். இவன் வசவனென்னும் வீரசைவனாகிய தன் சேனதிபதியால் கொல்லப்பட்டான். இது 1167ஷ.

## சாளுக்கியர்

சாளுக்கிய அரசாட்சி ஒரு காலத்தில் மிகவும் பரந்திருந்தது. அதாவது (6)-ம் நூற்றுண்டு முதல் (12)-ம் நூற்றுண்டு வரையில். முதல் அரசன் A. D. 566-ல் சிம்மாசனம் ஏறினன். இதில் (59) அரசர்கள் அரசாட்சி புரிந்தனர். இதில் **விஜாயதித்தன்** தென்னடு சென்று யுத்தம்செய்து உயிரிழந்தான். அவன் மனைவி ஒரு பிராமணன் வீட்டில் அடைக்கலம் புகுந்து **விஷ்ணுவர்த்தனனைப்** பெற்றுள். விஷ்ணுவர்த்தனன் காஞ்சிபுரத்தை அரசாட்சி புரிந்துவந்த பல்லவர்களின் நட்புக் கொண்டு அவர்களின் பெண்ணை விவாகம் செய்துகொண்டான். இவன் குமாரன் **விஜாயதித்தியன், இரணராகன்,** குமாரன் **புளகேசிவல்லபன்**.

புளகேசியின் பௌத்திரர்கள் தங்கள் ராஜ்ஜியத்தைப் பிரித்துக்கொண்டு மேற்குச் சாளுக்கியர் என்றும், கிழக்குச் சாளுக்கியர் என்றும் இரு பிரிவுகளாகப் பிரிந்தனர். இவர்களில் மூத்தவன் தட்சணத்தின் மேற்பாகத்தையும், இளையவன் கீழ்கரையில் வெற்றியைநிறுத்தி வெங்கி அரசாகிய பல்லவன் சாலங்காயனனை ஜயித்து வெற்றியை நாட்டினன். பல்லவர்கள் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்கள். கீழ் வரும் சாளுக்கிய பரம்பரை Dr. Burnell's South Indian Paleo. graphy Page 18 - லிருந்து எழுதப்பட்டது. இவர்கள் தங்களைச் சந்திரகுலத்தவர் என்பர்.

## கீழைச் சாளுக்கியர்

இவர்கள் 7-வது சகாத்தத்தி லிருந்து (13)-வது சகாத்தம் வரையில் வேங்கி தேசத்தை இராஜதானியாகக் கொண்டு அரசாண்டவர்கள். வேங்கி தேசம் கிருஷ்ண கோதாவரிகளுக்குங் கிழக்குத்தொடர்ச்சி மலைகளுக்கும் இடையிலுள்ள தேசங்களாம். இவர்களில் பிரபலப்பட்டவன்

**2-வது புளகேசி.** இவன் தென்னட்டிற் படைகொண்டு சென்று சோழர்களை வென்று கி-ச. (615)-ல் தன் சகோதரனுகிய **குப்ஜ விஷ்ணுவர்த்தனனை** வேங்கி தேசத்திற்கு அரசனுக்கினன். இவன் பல துர்க்கங்களை வென்றவன். விஷ்ணுவர்த்தனன் முதலாவது புத்ரன் **ஜயசிங்கன்** I, கி-ச. (663) வரையில் அரசாண்டான். இவனுக்குப் பிறகு, **இந்திரபட்டாரகன், விஷ்ணுவர்த்தனன் II, மங்கியுவராஜன், ஜயசிங்கன், கோக்கிலிராஜன், விஷ்ணுவர்த்தனன் III, விஜயாதித்யன்** கி-ச. (764) வரையில் அரசாண்டனர். இவர்களுக்குப் பிறகு பத்தாவதான **விஷ்ணுவர்த்தனன்** IV, 764-799. இவன் குமாரன் **விஜயாதித்யன்** II. இவன் 799-843 வரையி லரசாண்டு பல சிவாலயங்கள் கட்டுவித்தான். இவன் குமாரன் **விஷ்ணுவர்த்தனன்** V, 843-844. இந்த வம்சத்தில் பதின்மூன்றுவதானவன் **விஜயாத்தியன்** III. இவன் கணிதவன்மையுள்ளவன். இவன் 844-888 வரையில் ஆண்டான். 14-வது அரசன் **சாளுக்யபீமன்**. இவன் 888-இல் பட்டத்திற்கு வந்து 30-ஷ அரசாண்டான். **சாளுக்யபீமன்**, இரண்டாவது கிருஷ்ணன் என்னும் ராஷ்டிர கூடத்தரசனைச் செயித்தனன். இவன் குமாரன் **விஜயாதித்யன்**.

16-வது **அம்மாராஜவிஷ்ணு வர்த்தனன்** 818-825 வரையில் அரசாண்டவன். இவனுக்கு இராஜமகேந்திரனெனப் பட்டப்பெயராகையால் தன்பெயரால் பட்டணமேற்படுத்தி அதற்கு இராஜ மகேந்திரமெனப் பெயரிட்டு அதை இராஜதானியாக்கினன். 925-954 வரையில் இவர்கள் ஞாதியர் கலகத்தால் எழுவர் அரசாண்டனர். 954 - ல் **சாளுக்யபீம விஷ்ணுவர்த்தனன்** அரசனுனன். இவன் இந்த வம்சத்தில் 22-வது. இவன் கண்ட மகேந்திரன், இராஜமார்த்தாண்டன் என்னும் பட்டமடைந்து சோழனையும் இராஷ்டிர கூடத்தரசனுகிய கோவிந்தனையும் வென்று 12வருடம் ஆண்டான். 10-வது சகாத்தத்தில் சோழர் படையெடுத்து இவன் நாட்டை யாண்டனர். இந்தச் சாளுக்யரில் 26-வது அரசனுன **விமலாதித்யன்** 1015-1022 வரையி லரசாண்டு இராஜேந்திர சோழன் தங்கையும் இராஜகேசரிவர்மன் குமரியுமாகிய குந்தவையை மணந்து **இராஜராஜ நரேந்திரனைப்** பெற்றுன்.

**இராஜராஜ நரேந்திரன்.** இவன் தெலுங்கு பாஷையை வளர்த்த மகோபகாரி ; நன்னய்யபட்டர் என்னும் பாரதகவி இவன் காலத்தவன். இவன் தன் தாயுடன் பிறந்த மாமன் மகளாகும் அம்மங்கதேவியை மணந்து கி-ச. 1022-1063 வரையில் அரசாண்டனன். இவன்தம்பி விஜயாதித்யன். குமாரன் **குலோத்துங்க சோழதேவன்.**

**குலோத்துங்கசோழதேவன் I.** இவன் இராஜராஜ நரேந்திரன் சிரேஷ்ட புத்ரன். இவனுக்கு **இராஜேந்திரசோழன்** என்று பெயர். இவன் சோழதேசத்தின்மீது படையெடுத்து கலகமுண்டாக்கி தனக்கு மைத்துனக் கேண்மையுடைய அதிராஜேந்திர சோழனைக் கொல்வித்தான். பின்னர் அந்த நாட்டைத் தனக்குள்ளாக்கினன். இவனுக்கு **இராஜநாராயணன்** எனப் பட்டம் உண்டு. இவனைக் **கரிகாலச்சோழன்** எனவுங் கூறுவர். இவன் தம்முன்னோர் நாட்டை ஆளுவதற்குச் சிறப்பனுகிய விஜயாதித்யனை நியமித்தான். இவனுக்குப் பிறகு வேகிதேசம் உ-வது குமாரனுகிய இராஜராஜனுலாளப்பட்டது. பிறகு 3-வது குமாரனுகிய வீரசோடனென்பவன் **விஷ்ணு வர்த்தனன்** என்னும் பெயரால் அரசாண்டான். பின்னர் சோழருக்கு அடங்கிய நாடாக இருந்தது.

1-ஜயசிம்மன், 2-புத்தவர்மன், 3-விஜயவர்மன், 4-இரணராஜன், 5-புளகேசிவல்லபன், 6-கீர்த்திவர்மன், 7-பிருதிவிவல்லபன், 8-மங்கலீசராஜன், 9-சத்யாசர்ய இந்திரவர்மன், 10-வல்லபேந்திரன் அல்லது புளகேசி, 11-குப்ஜவிஷ்ணு வர்த்தனன், 12-ஜயசிம்மன் II, 13-நாகவர்த்தனன் I, அல்லது இந்திரபட்டகன், 14-ஆதித்யவர்மன், 15-விஜயபத்திரன், 16-விக்ரமாதித்யன், 17-விநயாதித்யன், 18-விஜயாதித்யன், 19-விக்ரமாதித்யன் II, 20-கீர்த்திவருமன், 21-பீமராஜன், 22-கீர்த்திவருமன், 23-விக்ரமாதித்யன் III, 24 - பீமராஜன், 25-ஜயாநனன், 26-விக்ரமார்க்கன் IV, 27-விக்ரமார்க்கன் V, 28-தைலபூபன் II, 29-சத்யசிரேயன், 30-தாசவர்மன், 31-விபுவிக்ரமன், 32 ஐயணன், 33-அக்கதேவி, 34-ஜயசிம்மன், 35-சோமேசுவரன் II, 37-விக்ரமார்க்கன் IV, 38-ஜயசிம்மன் IV, 39-ஜயகாரணன், 40-சோமேசுவரன் III, 41-மைலாலதேவி, 42-ஜகத்காமலன், 43 திரிலோகமன்னன் III, 44-வீரசோமேசுவரன் IV.

## குறும்பரசர்.

இவர்களுக்கு (64) கோட்டைகள. அவற்றிற்கு இராஜதானி புழற்கோட்டை.

## கோங்கர்.

கொங்கு குலத்தில் முதல்வர்-வீரராஜசக்ரவர்த்தி, பிறகு கோவிந்தராயர், பிறகு ஆதித்ய வருமராயன், இவன் மகன் வீரசோழன், இவன் மகன் தேசாதித்யராயன், இவர்கள் கங்காபுத்ரர் என்கிறுர்கள். இவர்கள் கோயம்புத்தூர் ஜில்லா கரூரை ராஜதானியாகக் கொண்டனர்.

பின்னும் மற்றெருவகை கூறுவர். வீரராய சக்ரவர்த்தி, கோவிந்தராயன், கிருஷ்ணராயன், காலவல்லப ராயன், கோவிந்தராயன், சதுர்புஜ கானதேவன், திரிவிக்ரமதேவன், கொங்கணிவர்மன், மாதவராயன், ஹரிவர்மராயன், பரிகுலாதிராயன், நரசிம்மராயன், விஷ்ணுகோபவர்மன், பிரிகுலாதித்தராயன், மாதவராயன், கிருஷ்ணவர்மன், கொங்காளி மதிராயன், ஹரிச்சந்திரராயன், கிருஷ்ணவர்மன், கொங்காளி மாதிராயன், துருவிந்தராயன், முஷ்கராராயன், பிரம்மஹத்திராயன், திருவிக்ரமராயன், பூவிக்ரமராயன், வல்லபராயன், நவகாரராயன், இராஜகோவிந்தன், நந்திவர்மன், சிவராமன், பிரதிவிகொங்கணி, விஜயாதித்யன், மல்லதேவன்,

சாந்ததேவன், சத்தியவாக்யன், குணலுத்த மன், வல்லதேவன், கலிங்கராயன் முதலிய வர்களாம்.

## மகத வம்சம்.

**பிருகத்ரதன்**—இவன் குருவின் இரண்டாமவனான சுதனுசின் வம்சத்தவனான உபரிசரவசுவின் மூத்த குமாரன். இந்த வம்சத்தவர் பார்த்ரர் எனப்படுவர். இவர்களில் கடைசியானவன் ரிபுஞ்சயன். இந்த வம்சத்தில் **சாரசந்தன்**, இவன் குமாரன் **சகதேவன்**, இவன் வம்சத்தவர் (21)வர் பாரத யுத்தத்திற்குப் பிறகு 1000வரு இராஜ்யமாண்டனர். இவர்களுக்குப் பிறகு **பிரத்யோதன்**, ரிபுஞ்சயன் மந்திரியான சுக்ரீவன் புத்ரன்; இவன் வம்சத்தவர் எழுவர் 138வரு ஆண்டனர். இவனுக்குப் பின் **சிசுநாகன்**, இவன் வம்சத்தவர் பதின்மர் சைசுநாகர் எனப்பட்டு 362வரு அரசாண்டனர். இவர்கள் க்ஷத்ரபந்துக்கள். இவர்களுக்குப் பிறகு **நந்தன்**. இந்துக்களாகிய சூர்ய சந்திர வம்சத்தரசர்களுக்குப்பின் **மகாவீரன்**. இவன் கி-மு. (555)ல் இருந்தவன். புத்தன் காலத்தவன். ஜைனன். வைசாலிபுரத்திற் பிறந்தவன். இது பாட்னாவிற்குச் சமீபமாக வுள்ளது. இவன் முப்பதாம் வயதில் சந்நியாசமடைந்து அநேக சைநமடங்களைக் கட்டுவித்தான்.

புத்தன் சரிதத்தைப் புத்தனிற் காண்க.

**புத்தகோஷன்** — கி-பி. (450) இல் புத்த தர்மத்தைச் சிங்களத்திலும் பர்மாவிலும் பரவச் செய்தவன்.

**விம்பசாரன்**—கௌதமபுத்தன் காலத்தரசன். இவனைப்பற்றி **பிம்பசாரக் கதை** என்று ஒரு நூலுண்டு. இவன் குமாரன் **அஜாதசத்ரு**.

**நந்தன்** — இவன் மகத தேசாதிபதியாகிய சந்திரகுப்தனை முதலில் துரத்த, இவனைச் சாணக்யனுதவியால் நந்தன் ஒட்டினான்.

**சந்திரகுப்தன்**—இவன் மௌர்ய வம்ச மூல புருஷன். இவன் தாயின் பெயர் முரை; தந்தையின் பெயர் சர்வார்த்தசித்தி. இவனுக்கு இரண்டு தேவியர்; முதல் தேவிக்கு நவநந்தர் என ஒன்பது குமாரர். அவர்கள் ஒன்பதின்மரும் இவனிடம் விரோதம்கொண்டு இவனை ராஜ்யத்திலிருந்து ஓட்டினர். இவன் வம்சத்திற்கு மௌர்ய வம்சமென்று பெயர். இவனுக்குச் சாணக்யன் என்பவன் சகாயன். இவன் கிரேக்கர் முதலியவரைத் துரத்தி மகத ராஜ்யத்தை விருத்திசெய்தான். கி-மு. (322) வரை யாண்டான். இவன் குமாரன் **பிந்துசாரன்**.

**பிந்துசாரன்**—சந்திரகுப்தன் குமாரன். இவன் காலம் கி.மு. (297-272). இவன் தன் தேசத்தை விருத்திசெய்து கிரேக்கருடன் நட்புப் பாராட்டிய மௌர்ய வம்சத்தவன். இவன் குமாரன் அசோகவர்த்தனன்.

**அசோகவர்த்தனன்**—அல்லது **அசோகன்**. காலம் கி-மு. (272-231). இவன் களிங்கரைச் சயித்தவன். இவன் முதலில் ஆர்ய மதத்தை அவலம்பித்துப் பிறகு பௌத்தனானவன். சிலர் ஆரியனாகவே இருந்தனன் என்பர். பௌத்த தர்மத்தைப் பரவச்செய்து பல சிலாசாசனங்கள் ஏற்படுத்தியவன். பிறகு இவன் மருமகன் தசரதன் பட்டமடைந்தான். இவன் குமாரர் தர்மவிவர்த்தன், சுபார்சவன்.

## சுங்க வம்சம்.

**புஷ்பமித்ரன்**—இவன் மௌர்ய வம்ச சேநாதிபதி. இவன்தன் அரசனைக் கொன்று அரசனானவன். கி-மு. (184)ல் அரசனானான். இவனுக்கு அக்னிமித்ரன் குமாரன். இந்த அக்னிமித்ரன் குமாரன் வசுமித்ரன்; இவன் அச்வமேதயாகஞ் செய்தவன்.

இவன் இரண்டாங் குமாரன் சுஜ்யேஷ்டன்; இவனுக்குப்பின் வசுமித்ரன், இவனுக்குப் பிறகு இவன் தம்பி சுமித்ரன்; இவன் நாடகப்பிரியன். இவன் கூத்துப்பார்க்கையில் இவனை மித்ரதேவன் கொன்றான். இந்த வம்சத்தில் பத்தாவதான தேவபூதியை வசுதேவன் கொன்று சிம்மாசனம் அடைந்தான்.

## காண்வ வம்சம்

சுங்க வம்சத்துக் கடைசி அரசனை வென்று சிம்மாசனமேறிய வசுதேவன் பிராம்மணன். காலம் கி-மு. (63-27). இவன் கண்வகோத்திரத்தா னதலால் இவனுக்கு இப்பெயர் வந்தது. இந்த வம்சத்தில் (45) அரசர் அரசாண்டன ரென்றும் கடைசி அரசனை ஆந்திர தேசாதிபதி கொன்றானென்றும் தெரியவருகிறது.

**வம்சாரச்யம்** — இது கௌசாம்பிபட்டண மாண்ட **பாந்தபன்** இராஜ்யம். இவன் புத்தனுக்குமுன் ஆண்டவன். இவன் குமாரன் **உதயணன்**. இவன் யுஜ்ஜயனி யரசனாகிய பிரத்யோதன் குமாரியை மணந்தான். இவனை பிரத்யோதன் வெல்ல எண்ணி

உதயணன் யானை வேட்டையில் விருப்புள்ளவனாதலால் பொய்யானை யொன்று செய்வித்து அதனுள் யுத்தவீரரைப் புகுத்தி அரசன் வரும் வழியிலிட அரசன் யானையென்று அருகில் வரக்கண்ட வீரர் உதயணனைப் பிடித்து அரசனிடம்விட அரசன் அவனுக்குத் தெரிந்த கஜஹிருதயம் எனும் வித்தையைக் கற்றுக் கொடுக்க வேண்ட உதயணன் குருசிஷ்ய பாரம்பர்யமாய்க் கேட்கவென அரசன் தன் குமாரியைக் கற்கவென் அவள் அவ்வாறே யிசைந்து திரைக்குளிருந்து கற்கையில் ஒருவரையொருவர் கண்டு மயல்கொண்டு அரசன் யானை மீதேற்றிக் கொண்டு கௌசாம்பி நகரஞ் செல்லுகையில் வீரர்தொடர அவர்களுக்குப் பொற்பை யிட்டுத் தன்னுடு சேர்ந்தனன். இவன் செய்தியை **உதயணன்** கதையிற் காண்க.

## ஆந்திர வம்சம்.

இந்த ராஜ்யம் மகத தேசாதிபதியான அசோகனுக் குட்பட்டு அவனுக்குப் பிறகு சுயராஜ்யமாய்ப் பிரபலப்பட்டதாகத் தெரிகிறது. கி. மு. (231). இந்த ராஜ்யம் கிருஷ்ண கோதாவரிமுகந் தொடங்கிக் கடல் வரையிலாம். இவர்க்கு இராஜதானி ஸ்ரீகாகுளம். அவர்களில் மகத தேசத்தரசனைத் திரஸ்கரித்து முதலில் இராஜ்ய மேற்படுத்தியவன்.

1. **ஸ்ரீமுகன்**—கி. மு. (220).

2. **கிருஷ்ணன்**--இவனுக்குப்பின் பலர் அரசாண்டனர். பின் பன்னிரண்டாவது வந்த **குந்தலசாதகர்ணி** கண்வராசனை சுசர்மனைக் கொன்றவன். பின் சதசாதகர்ணி புலுமாயி I, இந்த வம்சத்தில் (17) வது **ஹாலன்,** வித்வாம்சர்களை யாதரித்துப் பண்டிதனுயிருந்தவன். பின் (21) வது விலிவாயன் I. இவனுக்குச் சகோதரன்; இவனுக்கு ராஜத சாதகர்ணி என்று பெயர். இவன் குமாரன் **சிவாலதரு.** இவனுக்கு **மாதவி** புத்ரன்; சிவசாதகர்ணன், சகசேனன் எனவும் பெயர். இவன் குமாரன் **விலவாயகன்** II கி. பி. (114-138) வரை ஆண்டான். இவன் க்ஷேத்ரபன் எனும் பரதேசத்தரசனைச் செயித்து தன்தேசத்தை நாட்டினவன். இவன்தான் செயித்த ராஜ்யத்திற்கு **சஸ்த்** என்பவனைப் பிரதிநிதியாக்கினன். இந்த சஸ்த் உச்சயினியை ராஜதானி யாக்கினன். பின் நாலாவது சகாத்தத்தில் குப்தராஜ்யம் பெருகி உச்சயினியைக் கைக்கொண்டது.

கி. பி. (138) **புலுமாயி** II பட்டமடைந்தான். இவன் ஆந்திர வம்சத்தில் 24-வது. இவன் தந்தையாகும் II வது விலவாயனல் உஜ்ஜயனிக்குப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட சஸ்தமன் மருமகனுகும் **ருத்ரமான்** அப்போது உச்சயனி யாண்டிருந்தான். இந்த ருத்ரமான் குமாரியாகும் தக்ஷமித்ரியைப் புலுமாயி மணந்திருந்தான். பிறகு மாமமருகரிருவரும் யுத்தஞ்செய்ய **ருத்ரமான்** வெற்றியடைந்தான். இந்தப் புலுமாயி தான் தன் ராஜதானியைப் பைதான் என்ற பிரதிஸ்தான பட்டணத்திற்கு மாற்றினன். இவனுக்குப்பின் **யஞ்ஞஸ்ரீ** என்பவன் பிரபலித்திருந்தான். இவன் கி. பி. (184)-இல் தன் தேசத்தைப் பிரபலப்படுத்தினன். இதற்குப் பிறகு ஆந்திரர்களைக் கால சூரியர் செயித்துப் பிரபலப்பட்டனர். பின் சகவம்சத்தவர் மாறினர். பிறகு சக பல்லவர் பாவினர். இந்த வம்சத்தில் **கனிஷ்கன்** பிரபலப்பட்டான். காலம் கி. பி. (120). அசோகனுக்குப்பின் பௌத்த மதத்தைப் பரவச் செய்தவனிவனே. இவன் தன்பெயரால் காச்மீரத்தில் கனிஷ்கபுரம் ஏற்படுத்தினன். இவன் பெஷாவார் பட்டணத்தில் ஒரு பெரிய கோபுரம் கட்டினன். இந்தக் கோபுரத்தருகில் பௌத்த சந்நியாசிகளின் மடமொன்று கட்டப்பட் டிருந்தது. இவன் சினரை நட்புக்கொண்டிருந்தவன். கனிஷ்கனுக்குப்பின் **ஹவிஷ்கவாசுதேவர்** அரசுபுரிந்தனர். பின் ஆந்திரவம்சம் க்ஷீணிக்கக் குப்தவம்சம் தலையெடுத்தது. கி.பி. (280)இல் மகததேசத்தில் **குப்தன்** என்பவன் அரசாண்டு வந்தான். இவனது மருமகன் **சந்திரகுப்தன் I.** இவன் லிஷவி வம்சத்தவரின் பெண்ணை மணந்து அவர்களின் உதவியால் கி. பி. (320)-இல் பிரபலமடைந்து இராஜ்யத்தை ஆக்ரமித்துப் பிரயாகை வரையிலரசாண்டான். இவன் குமாரன் **சமுத்திரகுப்தன்** கி. பி. (326-375).

**சமுத்திரகுப்தன்** — தன் அரசைப் பிரபலப்படுத்தி இராமேச்வரம் வரையிலுள்ள அரசரைத் திறைகட்டும்படி செய்வித்தான். இவன் நட்பைச் சிங்களத்தரசனுகிய **மேகவர்ணன்** விரும்பிப் பௌத்த சன்னியாசிகளுக்காகப் புத்த கயையில் ஒரு சந்நியாசி ஆச்சிரமம் கட்டுவித்தான்.

**சந்திரகுப்தன் II**—இவன் ஸ்கந்தகுப்தன் குமாரன். இவன் காலம் கி. பி. (375-423). இவன் உச்சயினிபுரத் தரசரை வென்று ஜயத்தம்பம் நாட்டினதால் இவனுக்கு விக்ரமாதித்யன் என்று பெயர் உண்டாயிற்று. இவன் காலத்தில் சீனயாத்ரிகனாகிய **பாஹியான்** இந்துதேசத்திற்கு வந்தனன்.

**குமாரகுப்தன்** — கி-பி. (413 - 455). இவன் பராக்ரமசாலி. இவன் புஷ்யமித்ரனுடன் யுத்தஞ்செய்து அவர்கள் இளைக்குஞ் சமயத்தில் இவன் குமாரன் **ஸ்கந்தகுப்தன்** I அவர்களை வென்றனன்.

**ஸ்கந்தகுப்தன்** II — இவன் தன்காலத்தில் யவனர் முதலியவரை வென்று ஸ்வேத ஹூணரைத் தேசத்தைவிட்டுத் துரத்தினன்.

**விக்ரமாதித்யன்** — இவன் மாளவதேசத்து உஜ்ஜயினிபட்டண மாண்டவன். இந்த ராஜ்யம் குப்த அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. பிறகு **யசோவர்மன்** எனும் பெயருள்ள விக்ரமாதித்யன் என விருதுப் பெயர் பெற்றவன் அவர்களைத் துரத்தி யரசனானன். பிறகு பலர் அரசாண்டு வந்தனர். பிறகு விக்ரமாதித்யன் பலரையும் வென்று கி-பி. (525)-இல் பட்டமடைந்தான். இவன் சபையில் நவரத்னங்களாகிய 9-வித்வான்கள் இருந்தனர். அவர்களாவார், தன்வந்தரி, க்ஷபணன், அமரஸிங்கன், சங்கன், வேதாளபட், கடகர்ப்பரன், காளிதாஸன், வராஹமிகிரன், வரருசி. இவ்வரசன் கி.பி. (583) இறந்தான். இவனுக்குப் பிறகு சிலாதித்தன் பட்டமடைந்தான்.

**சிலாதித்யன்**—கி.பி. 583-606. இவன் விக்ரமார்க்கனுக்குப் பிறகு பட்டமடைந்து ராஜாக்களுக்கு விரோதமாய் ஆண்டதால் இவனைப் பலர்வெறுத்து ஒட்டினர். ஆயினும் இவன் காச்மீரத்தரசனாகிய **பிரவசேநன்** II என்பவன் உதவியால் மீண்டும் தன்னரசையடைந்தான். மேற்கூறிய சிலாதித்யனை **ராஜ்யவர்த்தனன்** செயித்துச் செல்கையில் இவன் பகைவரில் ஒருவன் இவனைக்கொல்ல இவன் பின்னவனாகிய **ஸ்ரீஹர்ஷன்** பட்டமடைந்தான்.

**ஸ்ரீஹர்ஷன்**—கி.பி. (606)-இல் பட்டமடைந்தனன். இவனுக்குச் சிலாதித்யன் எனப் பட்டமுண்டு. இவன் பராக்ரமசாலியாகச் சீனராஜ்யத்தாருடனும் நட்புக்கொண்டிருந்தான். இவன் அரசாட்சியில் **ஹியூன் தஸாங்கு** எனும் சீனபட்டாசாரி வந்தான். இவனுக்குப் பிறகு **அசோகவர்மன்** பட்டமடைந்தான். அவனை கி.பி. (730)-இல், காஸ்மீரத்தரசன் துரத்தி அவனுஸ்தான கவியாகிய பவபூதியைக் கைக்கொண்டனன்.

## பார்மார வம்சம்

கூர்ஜரத்தரசரிடமிருந்து கி. பி. (917) இல் பார்மாரவம்சத்தவர் மாளவதேசத்தைப் பெற்றுக்கொண்டு சுதந்தரராயினர். இவர்களுக்கு மூலபுருஷன் **கிருஷ்ணராஜன்**. இந்த வம்சத்தில் மூன்றாவதானவன் **ஹர்ஷதேவன்**. இந்தவம்சத்தில் பிரசித்திபெற்றவன் **போஜன்**. இவன் (1010-1055)வரையில் அரசாண்டவன். அநேக வித்வான்களை ஆதரித்தவன். இவன் சபையில் ஆந்திர காளிதாஸன் இருந்தனன். இந்த ராஜ்யத்தைக் கில்ஜிமகம்மது கீழ்ப்படுத்தினன்.

## சௌஹாண அரசர்.

இவர்கள் அஜ்மீர் முதலிய நாட்டை அரசாண்டவர்கள். இவர்களில் பெயர்பெற்றவன் **சிங்கராஜன்**. இவர்களில் இருபத்தினாலாவது அரசன் **சோமேச்வரன்**. இவன் **அநங்கபாலன்** II உடைய குமரியைமணந்தான். சோமேச்வரன் குமாரன் **பிருதிவிராஜன்** எனப் புகழ்பெற்றவன். இவனைக் கோரி மகம்மது தயனச்வரத்தில் ஜெயித்தான்.

## கார்வார் வம்சம்.

இவர்கள் கங்கைக்கு வடக்கில் இட்வா முதலியவற்றை யரசாண்டவர்கள். இவர்களுக்கு மூலபுருஷன் **சந்திரதேவன்**. கடைசி அரசன் **ஜயசந்திரன்**. இவன் முகம்மதியர்களால் செயிக்கப்பட்டான்.

## காச்மீர ராஜ்யம்

கிருஸ்துசகம் முதலாம் நூற்றாண்டில் இந்த ராஜ்யத்தைக் **கனிஷ்கன்** செயித்தான். 3-வது, 4-வது சகாப்தத்தில் **மிகிரகன்** என்பவன் படையெடுத்துச்சென்று சிங்களம் வரையில் சென்றான். இவன் பௌத்தரைத் தொந்தரை செய்தான். ஆறாவது சகாத்தத்தில் **மேகவாகனன்** மீண்டும் சிங்களம்வரையில் ஜெயித்துப் பௌத்தமத அபிமானியாயிருந்தான். இவனுக்குப் பின் **மாத்ருகுப்தன்** விக்ரமாதித்யனால் அரசனாக்கப்பட்டான். இவனுக்குப் பிறகு எட்டாவது சகாத்தத்தில் **லலிதாதித்யன்**. கி.பி. (745) - இல் ஜெயவீரன் என்ற அரசன் **மகாவிக்ரவந்தன்** அர

சிங்காதனமேறினன். இவன் கௌடதேசாதிபன் குமாரியாகிய கல்யாணி தேவியை மணந்தான். இவன் தன் பெயரால் அவந்திபுரமென்னும் பட்டணங் கட்டினவன். இவன் பதஞ்சலிபாஷ்யம் சிதிலமானதைப் பல இடங்களிலிருந்து வருவித்துச் செம்மைசெய்தான். இவனுக்குப் பிறகு ராஜ்யம் கெட்டது.

## கூர்ஜர ராஜ்யம்

கி. பி. (843)-இல் போஜன் I கனோஜ் ராஜ்யத்தைச் செயித்தான். பிறகு கி. பி. (913)-ல் போஜன் II யசோவர்மன். இவன் தேசத்தில் பண்டல்கண்டைச் செயித் தரசாண்டான். கி. பி. (1009) கிஜினிமகமது கனோஜ் பட்டணத்தைக் கொளுத்தினன். கி. பி. (1040)-இல் **திரிலோசனபாலனைச்** சந்திரதேவன் செயித்தான். இதனோடு கூர்ச்சரவம்சம் முடிந்தது.

## வேங்கிதேசம்

இது கிருஷ்ணகோதாவரிகளுக்கு மத்தியிலுள்ள தேசம். இதை இரண்டாங்குலோத்துங்கன் அரசாண்டான். பின் **விஜயாதித்யன்** குமாரன் **சத்யாச்ரயன்.** இவன் குமாரன் **விஜயாதித்யன்.** இவன் குமாரன் **விஷ்ணுவர்த்தனன்.** இவன் குமாரன் **மல்லப்பதேவன்.** இவன் குமாரன் **விஜயாதித்யன்.** (1278)-இல் வேங்கி தேசம் **கணபதிராஜவம்ச** ஆதீனமாயிற்று. குலோத்துங்கதேவன் காலத்திருந்து சாளுக்கி ராஜாக்கள் சோழபட்ட மடைந்தனர்.

## ஓரங்கல் கணபதிராஜவம்சம்

கீழைச்சாளுக்ய அரசர்களுக்குப் பிறகு ஆந்திரதேசாதிபதிகளாயிருந்தவர் கணபதி வம்சத்தவர். இவர்களுக்குக் **காகதீயவம்சத்தவர்** எனவும் பெயர். இவர்களுடைய இராஜதானி **ஓரங்கல்.** இது தற்காலம் நைஜாம் இராஜ்யத்திலுள்ளது. இவர்களைச் சிலர் சோழவம்சத்தவர் எனவும், சிலர் கங்கைவம்சத்தவர் எனவும் கூறுவர். இவ்வம்சத்திற்கு மூலபுருஷன் **சோமதேவராஜன்** குமாரனாகிய **மாதவவர்மன்.** இந்தவம்சத்தில் ஐந்தாவதானவன் பெண்டி குண்டமராஜனுகும் **கடகவல்லபன்.** இவன் துருஷ்கரால் வெல்லப்பட்டான். (7-வது) **எருகதேவராஜன்** தேவகிரியைத் தன்வசப்படுத்தித் திறைகொண்டான். (8-வது) **புவனேகமல்லன்;** இவன் காலத்துப் பல சிவாலயங்கள் புதுக்கப்பட்டன. (10-வது) **காகத்திரிப்போல்ராஜன்;** இவன் ஒரு கண்டிதுர்க்கம் கட்டினன். இவன் குமாரன் **பிரதாபருத்ரன்** 1, இவன் (1187) வரையில் அரசாண்டு பல சிவாலய திருப்பணி செய்வித்தனன். இவன் தம்பி மஹா **தேவராஜன்** தமயனைக் கொன்று இராஜ்யமாண்டான். **கணபதிராஜன்** 1, பிரதாபமாரன் குமாரன். இவன் தேவகிரி யாதவருடன் போரிடத் தோற்ற யாதவர் தங்கள் ராஜபுத்ரியாகும் **ருத்ரமாதேவியை** மணம் புணர்த்திச் சமாதானமாக்கினர். இவன் ஜைந சமயத்தைக் கெடுத்துச் சைவமதத்தை நாட்டினவன். இவனுக்குப் பிறகு இவன் தௌஹித்ரன் **பிரதாபருத்ரன்** II அரசாண்டான். இவன் மாலிகாபுர் எனும் டில்லி சக்ரவர்த்தியின் சேநாதிபதியைப் பலமுறை தோல்வி செய்வித்துக் கடைசியில் அவனிடம் சிறைப்பட்டனன். இவன் குமாரன் துருக்கரை வென்றுலும் **பாமினி யென்னுந் துருக்கனுல்** வெல்லப்பட்டான். இந்த வம்சத்தவர் கிருஷ்ண குமாரன் விநாயகன் அல்லது நாகதேவன்.

## காகதீயவம்சம் வருமாறு

1. புரோலன் I, 2. பேதன், 3. புரோலன் II, 3. ருத்திரன் - 1158-1195, 4. மகாதேவன் - 1195-1198, 5. கணபதி - 1198-1261, 6. ருத்ராம்பாள் - 1258-1296, 7. பிரதாபருத்ரன் - 1290-1326. இவனை மாலிக்காபூர் முறியடித்துச் சிறையிடவே, ராஜ்யம் சிதறுண்டது.

## கங்க வமிசாவளி (மைசூர்)

**இக்ஷுவாகு வமிசத்துத்தனஞ்செயன்.** அரிச்சந்திரன் (அயோத்தி); பத்மநாபன்; ததிகன்; 1. மாதவன் I (கொங்குனிவர்மன்); 2. மாதவன் II. (கிரியமாதவன்); 3. ஹரிவர்மன் 247-266; 4. விஷ்ணுகோபன் பிருதிவி கங்கன்; 5. மாதவன் III. 357-370; 6. அவனீதன் 430-482; 7. துர்வினீதன் 482-517; 8. முஷ்கரன்; 9. ஸ்ரீவிக்கிரமன்; 10. பூவிக்கிரமன் ஸ்ரீவல்லபன் 670; 11. சிவமாறன் I. 670-713 [நவகாமன், சிஷ்டப்பிரியன், முதற் பிருதிவிமுகாங்கனி]; எரியங்கன்; 12. ஸ்ரீபுருஷன் 726-776 [முத்தராசா, பிருதிவிகொங்கனி II. பெருமானடி]; 13. சைகோத்தசிவமாறன் II. 815 மாறசிம்மன், 797. [லோகாத்திரி நேத்ரன்], பிருதிவி I மாறசிம்மன், அத்திமல்லன், பிருதிவீபதி II. 910 விஜயாதித்யரணவிக்ரமன்; 14. ராஜமல்லசத்

யவாக்கியன் I. பல்லவகுமாரி; 15. நீதிமார்க்கன் I. [ரணவிக்ரயமய்யன்]; 16. ராஜமல்ல சத்தியவாக்கியன் II. 770-907 பூதுகேந்திரன்; ராஷ்டிரகூடகுமாரி; 17. எரியபமர் 886-913 [நீதிமார்க்கன் II. சத்தியவாக்கியன் மஹேந்திராந்தகன்]; 18. ராசமல்ல சத்தியவாக்கியன் III. 920 கச்சேயகங்கன்; 19. பூதுகன் 938-953 × மருளதேவி சோமதேவி; 20. மாறசிம்மன் 961-974; 21. ராசமல்லசத்தியவாக்கியன் IV. 917; 22. ரக்கஸகங்கன் 984 அருமொழிதேவன்; 23. நீதிமார்க்கன் III.

## களிங்கநாட்டுக் கங்கர்

சூரிய வமிசத்து இக்ஷுவாகு, ஆயுஸ், நகுஷன், யயாதி, துர்வசு, காங்கேயன், சித்ராங்கதன், கோலாகலன், வீரசிம்மன், காமார்ணவன் II-36 ஆண்டு, தானார்ணவன் 40ஆ, காமார்ணவன் II-50ஆ, ரணர்ணவன்-5ஆ, வஜ்ரஹஸ்தன்-15ஆ, காமார்ணவன் III-19ஆ, குணர்ணவன்-27ஆ, போதமகுசன் - 15ஆ, கலிங்காலங்குசன்-12ஆ, குண்டமன் V-7ஆ, காமார்ணவன் IV-25ஆ, வினயாதித்யன்-3ஆ, வஜ்ரஹஸ்தன்-35ஆ, காமார்ணவன் V-6மீ, குண்டமன் VI-3ஆ, மதுகாமார்ணவன்-19ஆ, திரிகலிங்கநாத வஜ்ரஹஸ்தன்-33ஆ, இராஜராஜன்-18ஆ, அநந்தவர்ம சோழகங்கன் கி-பி. 1076ல் சிங்காதன மேறினன். இவனே சோழசளுக்கி முதற் குலோத்துங்கனால் தோற்கடிக்கப் பட்டவன். இதனை யாதாரமாகக் கொண்டுதான் சயங்கொண்டார் **கலிங்கத்துப்பரணி** பாடினர். இவன் புரியிலுள்ள ஜகன்னாத ஆலயம் புதுப்பித்தவன். இவனுக்குப்பின் காமார்ணவன் VII-10ஆ, ராகவன்-14ஆ, இராஜராஜன் VIII-24ஆ, அனியங்கபீமன்-4ஆ, இராஜராஜன் IX-13ஆ, அனங்கபீமன் - 34ஆ, நரசிம்மதேவன் I-19ஆ, பானுதேவன் I-15ஆ, நரசிம்மதேவன் II-17ஆ, பானுதேவன் II-21ஆ, நரசிம்மதேவன் III-26ஆ, பானுதேவன் III-25ஆ, நரசிம்மதேவன் IV-46ஆ, பானுதேவன் IV-10ஆ.

## மதுரை நாயகவமிசம்.

விஜயநகரத்தரசர் கிருஷ்ண தேவராயர் தென்னாட்டை வென்றபோது பாண்டிய நாட்டைப் பாதுகாக்க நாகமநாயக்கரை நிறுத்திவந்தார். இவன் தானே அரசனானன். இவன் மகன் விசுவநாத நாயக்கன் 1529-1564. இவன் மகன் குமார கிருஷ்ணப்ப நாயக்கன் 1564-1572. இவன் மகன் வீரப்ப நாயக்கன் 1572-1595. இவன் மகன் கிருஷ்ணப்ப நாயக்கன் 1595-1691. இவன் தம்பி மகன் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கன் இவனுக்குப்பின் ஆண்டான். 1601-1609. இவன் மகன் முத்து வீரப்பநாயக்கன் 1609-1623. இவனது தம்பி திருமலை நாயக்கன் இவனுக்குப்பின் ஆண்டான். 1623-1659. இவன் மகன் முத்துவீரப்பன் ஒரே ஆண்டு அரசாட்சி செய்தான். இவன் மகன் சொக்கநாத நாயக்கன் 1659-1682. இவன் மகன் ரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கன் 1682-1689. இவன் இறந்தபோது இவனுடைய இராணி கரு உற்றிருந்ததால் இவன் தாய் மங்கம்மாள் இராச்சியபாரம் 1689-1706 வரை தாங்கினாள். இவளுடைய பேரனும் அரங்ககிருஷ்ண முத்துவீரப்ப நாயக்காது மகனுமான விஜயரங்க சொக்கநாத நாயக்கன் 1706 முதல் 1732 வரை ஆண்டான். இவனுக்குப்பின் இவனுடைய இராணி மீனாட்சியம்மாள் 1732 முதல் 1736 வரை அரசாண்டாள். இவள் சந்தாசாகிப்பால் ஏமாற்றப்பட்டு உயிர்விட்டாள். இவளோடு மதுரை நாயக்க வமிசம் ஒழிந்தது.

## விஜயநகரம்.

மேற்கூறிய விஜய நகரத்தரசர்களில் ஒருவனாகிய விஜ்ஜலன் அல்லது விஜயராஜன் (கி-பி. 1118) துங்கபத்திரை நதிக்கரையிலிருந்த ஆனைகுந்தி தக்க இடமென அறிந்து தன் பெயரால் விஜயநகர மென்று ஒரு பட்டணங்கட்டி ஆண்டு வருகையில் (கி-பி-1325) இல் மாலிகாபுர் என்பவன் கலகத்தில் விஜயநகரம் பாழ்பட்டது. இந்த சமஸ்தானத்து மந்திரிகளா யிருந்த ஹரிஹரனும், புக்கனும் வித்யாரண்ய சுவாமிகளை யடைக்கலம்புக்கு மகம்மதியரால் நடக்கும் அக்ரமங்களைக் கூறினர். இதைக்கேட்ட சுவாமிகள் தம்மைப் பிணக்கோல மிட்டுத் துங்கபத்திரைக்குத் தூக்கிச்செல்லக் கட்டளையிட, அவர்கள் அவ்வாறு செய்து அங்குத் தங்கினர். தங்கியிருக்கையில் முயல் ஒன்று சிங்கத்தைத் துரத்த வியப்படைந்து பார்க்கையில் ஆங்கிருந்த மலைமீது ஒரு சிவாலயமிருக்கக் கண்டு அங்கிருந்த அருச்சகரால் அது ராமரால் பூஜிக்கப் பட்டதென்ற வுண்மையறிந்து அவ்விடம் ஒரு நகரம் உண்டாக்க எண்ணித் திருவுளமோத் தியானித்தனர். இவ்

வாழு இருக்கையில் புக்கனும் ஹரிஹரனும் தமது பழைய நகரமாகிய ஆனைகுந்தியைப் பார்த்துவரலாமென மாறுவேடம் பூண்டு சென்று ஒரு வனத்தின்வழி வருகையில் தாகத்தால் அருகிருந்த தடாகத்தில் நீரருந்தச் சென்று அருகிலிருந்த மலைக்குகையில் நுழைந்தனர். அவ்விடம் அளவிறந்த பொன்னிருக்கக் கண்டு வித்யாரண்யரிடம் கூற, அவர் அப்பொருள்களைக்கொண்டு தம்பெயரால் வித்யாநகரமென்று ஒன்று கட்டுவித்து அந்நகரத்திற்கு ஹரிஹரன் (கி-பி-1336-1350) அரசனாகவும், புக்கன் சேனாதிபதியாகவுமிருக்கச் செய்து, தாம் மந்திரியாக இருந்தனர். ஹரிஹரனுக்குப்பின் (கி-பி-1343-1379) புக்கதேவராயன், (1379-1406), ஹரிஹரன் II, (1406 - 1416) தேவராயலு I, (1416 - 1418) விஜயபதி ராயன், (1419-1444) பிரவிட தேவராயன், (1444-1449) இம்முடி தேவராயன் (1467-1485), விரூபாக்ஷிராயன், (1490-1497) நரபதி நரசராயன், (1497-1598) வீர நரசிம்மராயன், (1509-1530) கிருஷ்ண தேவராயன். இவனை **கிருஷ்ணதேவ வீரப்ரதாபமதனராயன்** என்பர்.

(கி-பி-1509) சிங்காசன மேறியவன். இவன் தன்னாட்டுக் குடிகளைச் செம்மையாய்ப் பாதுகாத்தவன். இவன் கஜபதி ராஜனாகிய பிரதாப ருத்ரனும், சில துருக்கரும் கொடுங்கோலரசு செய்கின்றாரெனக் கேட்டு கோலகண்டா, அமது நகரம் முதலியவற்றைச் செயித்து, பிரதாப ருத்ரனுடன் போர்புரிய முடியாது அப்பாஜியாகிய மந்திரியின் தந்திரத்தால் தப்பிப் பிரதாபருத்ரன் பெண்ணை மணந்து பிறகு வேறு சில பெண்களையு மணந்து பல நாடுகளைச் செயித்தவன். இவனுக்கு அப்பாஜி என்று ஒரு மதியூகியான மந்திரி இருந்தனன். இவனைப் பற்றி பல சிறு கதைகள் தமிழ்நாட்டில் வழங்கிவருகின்றன. இது இராயர் அப்பாஜி கதையெனப்படும். இவன் கல்வியை ஆதரித்தவன். இவன் சமஸ்தானத்தில் (8) ஆந்திர கவிகள் இருந்தனர். விஜய நகரத்தரசரில் சிலர், சாசனத்திலுள்ளபடி (சகம் - 1442-1519-A-D) வீரப்ரதாப கிருஷ்ணதேவ மகாராயன்; இவனுக்குச் சாளுவன் பட்டம். இவன் ஜயங்கொண்ட சோழ மண்டலத்தில் பல்குன்ற கோட்டத்தில் நன்கொடை தந்தான். தேவிகாபுர-6 சாசனம்-(1446) A-D. 1523, 28th March) சுரம்பூண்டி வடமலையார் என்பவர் தமிழ் மச்சபுராணம் பாடினார்; நீர்த்தல புராண ஆசிரியர்க்கு நன்கொடை. சகம்-(1436). தேவிகாபுர மடவாசி ஸம்ஸ்கிருத நைஷத வ்யாக்யாதாவும் சங்கர வாக்ய விருத்தியும் செய்த விச்வேச்வராசாரியருக்கு நன்கொடை, சகம் (1509-30). சிதம்பரத்தில் ஒரு கோபுரம் கட்டினதாகச் சிதம்பர சாசனம் கூறும். (சகம் 1433). திருவண்ணாமலையில் நன்கொடை (சகம் 1438). இவர் உதயகிரி முதலியவற்றைச் செயித்ததனால் திருவண்ணாமலையில் (1000) கால் மண்டபம் கட்டுவித்தார். திருவண்-சாசனம்-1442-கி-பி. இவர் 1531-இல் மரணமடைந்தார். (கி-பி-1530-1542) அச்சுத தேவராயலு. (கி - பி - 1542-1543) வேங்கடாத்திரி ராயலு. கி பி-1541-1542 சதாசிவ ராயலு, கி-பி-1542-1565 இராமராஜா. இவை சாசனங்களிலுள்ளபடி. கி - பி. 1586 - 1614 வெங்கடபதி ராயலு சிதம்பரத்தில் ஷை சா. வெங்கடன் - I தருமம். ஷை-சாசனம் (1503) ஸ்ரீரங்க தேவமகாராயன் - II நன்கொடை. சகம் - (1453) கண்டகட்டாரி சாளுவ அச்சுதராய மகாராஜன். சகம்-(1387) மல்லிகார்ச்சுன தேவன். சகம் (1464) சதாசிவ மகாராஜன். இவனுக்குச் சாளுவபட்டம். சகம் (1392) விஜய விரூபாக்ஷ தேவன்-I. சகம்-1499-ல் இவன் தேவிகாபுரத்தில் ஈசான சிவயோகிந்திரரைப் பற்றியும் கோளகி மடத்தைப்பற்றியும் ஷை கோயில் சாசனம் கூறியிருக்கிறது. சகம்-(1378) வீரப்ரதாப தேவராய மகராயன் II புத்தூரில் நன்கொடை. சகம் (1457) மஹா மண்டலேச்வர சோழ குலதிலக உறையூர் புரவர்த்தீச்வர போக்ய தேவ மஹா ராஜா; இவன் மஹா மண்டலேச்வர திப்பைய ராஜா குமாரன். சகம்-(1317) வீர விருபண்ண உடையார் ஹரிஹரன் II குமாரன். திருக்கோயிலூர் சாசனம். சகம் (1500) A-D-1577 திருமலை தேவ மகாராயன்; குமாரன் வீரப்ரதாப வேங்கட தேவ மகராயன் சிதம்பரத்தில் நன்கொடை. சித - சா, தேவிகா-சா. மகா மண்டலேச்வர ஒபல தேவ மகாராயன். இவன் கோறிட்டைய மகாராயன் குமாரனும், ராமராஜ கொந்து ராஜ தேவன் பெயரனுமாம். திருவரங்-சா-ம். சகம்-(1331-44) விஜய பூபதிராயன்-கிடங்கல் சார்க், தெ-ஆசன-சா-I, சகம். (1399-1406) வீரபுக்கண்ண உடையார்-II. சகம் (1449-65) வீரப்ரதாப பிரவுடதேவ மகராயன். சகம் (1296) வீரகம்பண்ணவுடையார் II இவன் குமாரன் புக்கண்ணன் - I.

## சேதுபதிகள்

இவர்கள் வீரனென்னும் பொருள்கொண்ட மறவரென்னும் வகுப்பினர். இவர்கள் வெட்சிமறவர்,கரந்தைமறவர் எனவும்;சேரன் மறவர், பாண்டியன் மறவர், சோழன் மறவரெனவும் கூறப்படுவர். இவர்களுக்கு இப்பெயர்க்காரணம் தமிழ்நாட்டு மூவேந்தருக்கும் படைத்துணை உதவியபண்பால் பெற்ற பெயராம். இவ்வகை மறவருள் சேதுபதிகள், சேதுஸ்நானமாகிய புண்ணியநீராடச் செல்வாருக்கு இடையில் கள்ளர் முதலியவரால் துன்பம் நேராது காத்து வேண்டிய உதவி செய்யும் பெருங்குணமுடையராதலின் இவர்கள் கரந்தை மறவரெனப்படுவர். இவர்க்கு வயவர், மீளியர் எனவும் பெயருண்டு. இம் மூவகை மறவரும் தமிழ்நாட்டு வேந்தரைத் தமது வீரத்தால் களிப்புறச்செய்து முடியுங் கொடையுங்கொடியும் மாலையும்பெற்றுக் குறுநிலமன்னராய் வாழ்ந்தனர். அவர்களுள் சேதுபதிகள் சோழன் மறவர். இவர்கள் திரிபுவனதேவன் என்னும் குலோத்துங்க சோழன் III. (கி. பி. 1178-1216 பாண்டிநாடாண்ட வீரபாண்டியனைப் போரில் வென்று தன் தம்பியாகிய கங்கைகொண்டான் சோழனுக்குச் சுந்தரபாண்டியன் என்னும் பெயர் தந்து பாண்டிநாட்டை யரசாளச் செய்தபோது அப்பாண்டியர்க்குத் துணையாய் இம் மறவரும் பாண்டிநாட்டிற் குடியேறினர் என்பர். இவர்கள் வீரத்தால் மற்ற அரசர்களின்கீழ் வாழாது வேறுநாட்டில் தம்மரசில் வாழவெண்ணி பாண்டிநாட்டு கடற்கரையடுத்துக் காடுகெடுத்து நாடாக்கி யரசு புரிந்தனர். ஆயினும் இவர்கள் சோழன் மறவராதலின் இவர்க்குச் சோழர்க்குரிய பெயர் முதலியனவும் உண்டு. இவர்கள் பட்டணம் முகவை. இச்சேதுபதிகளைச் சோழர்க்குரிய பெயர்கொண்டே பரிசடைந்த புலவர்கள் பாடியிருக்கின்றனர். இவர்களுக்குத் தேவர் என்பது பட்டம். இவர்களுக்குக் குடை செங்குடை; செங்காவிக்கொடி, கருடக்கொடி, அநுமக்கொடி; மாலை, முல்லை; வீரக்கழல்; சேமத்தலை; இவர்களது தருமம் தென்னாடு முழுதும் பரந்தது. இந்தச் சேதுபதிகளில் முந்தியவர்கள் 1-ஆதிரகுநாதசேதுபதி, 2-ஜயதுங்காகுநாதசேதுபதி, 3-அதிவீர ரகுநாத சேதுபதி, 4-வரகுணரகுநாத சேதுபதி, 5-குலோத்துங்கசேதுபதி, 6-சமரகோலாகல சேதுபதி, 7-மார்த்தாண்ட பைரவசேதுபதி, 8-சுந்தரபாண்டிய சேதுபதி, 9-காங்கேயாகுநாதசேதுபதி, 10-விஜய முத்துராமலிங்க சேதுபதி. (Sewell's list of antiquities. Vol. II.)

### வமிசாவளி

1. சடைக்கத் தேவ ராமய உடையான் சேதுபதி 1604-1621, 2. கூத்தன்-சே-தி 1621-1635, 3. தளவாய் சேதுப்தி 1635-1645, 4. ரகுநாத சேதுபதியாகிய திருமலை சே-தி 1645-70, 5. இராசசூரிய சே-தி 1670-73, 6. கிழவன் சே-தி 1673-1708, 7. திருவுடையதேவர் சே-தி 1709-1723, 8. தண்டத்தேவர் 1724, 9. பவானிசங்கர தேவர் 1724-28, 10. குமாரமுத்து விஜய ரகுநாத சேதுபதி 1728-1734, 11. முத்துக்குமார சே-தி 1734-47, 12. இராக்கத்தேவர் 1747-48, 13. செல்வத்தேவர் 1748-60, 14. முத்துராமலிங்க சே-தி 1760-94, 15. இராணி மங்களேச்வரி நாய்ச்சியார் 1803-1812, 16. அண்ணாசாமி சே-தி 1812-1815, 17. இராணி முத்துவீராரகவ நாய்ச்சியார் 1815-29, 18. இராமசுவாமி சே-தி 1829, 19. இராணி மங்களேச்சுவரி நாய்ச்சியார் 1829-38, 20. இராணி துரைராஜ நாய்ச்சியார் 1838-45, 21. இராணி பர்வதவர்த்தனி நாய்ச்சியார் 1845-68, 22. முத்துராமலிங்க சேதுபதி 1868-73, 23. பாஸ்கரசேதுபதி 1873-1903, 24. முத்துராமலிங்கசேதுபதி 1903-1931, 25. **நாகராதசேதுபதி** 1931. இச் சேதுபதிகள் முதலில் முன்கூறியபடி அரசாண்டவர். பின் இவர்களுடைய அரசு ஏதோகாரணத்தால் அழிந்துபோக இராமேசுரயாத்திரக்காரர்களுக்குக் கள்ளரால் உபத்திரவமுண்டாக அக்காலத்து மதுரையையாண்ட முத்துகிருஷ்ணப்ப நாய்க்கர் சடைக்க தேவர் உடையான் சேதுபதியை (1604) பொகலூருக்கு அதிபதியாக்கினர். அதுமுதல் யாத்ரிகர்களுக்குத் துன்பமென்பதில்லை யாயிற்று. அந்தவரிசையில் பலர் வரிசையாக ஆண்டனர். அவர்களில் பலர் பல புண்ணிய கிருத்யங்களைச் செய்தும் வித்வான்களை ஆதரித்துப் புகழடைந்தும் வந்தனர். இந்த வம்சத்தில் முத்துராமலிங்க சேதுபதி இயற்றமிழேயன்றி யிசைத்தமிழிலும் வல்லவர். இவர் வள்ளிமணமாலை, முருகாநுபூதி, மும்மொழிமாலை, பிரம்மகைவல்யம், பாலபோதம், பிரபாகரமாலை, காயகப்பிரியா, ரவிகாஞ்சனம் எனப் பல நூல்களியற்றினர்.

இவர்க்குப் பிறகு இவரது சகோதரராகிய பொன்னுசாமித் தேவர் என்பவர் பல புலவர்களை ஆதரித்துப் புகழ்கொண்டனர். இப்பிரபுவினால் பல அரிய தமிழ்நூல்கள் முதலில் வெளிவந்தன. அவை திருச்சிற்றம்பலக் கோவையாருரை, திருவள்ளுவர் பரிமேலழகருரை, நன்னூல் விருத்தியுரை, தொல்காப்பியப்பாயிரவிருத்தி, முதற்சூத்திர விருத்தி, தமிழ்ப்ரயோக விவேகவுரை, தருக்கசங்கிரகவுரை, தனிப்பாடற்றிரட்டு, மருத்துநூல் எனப்பல. இவர்களில் இரகுநாத சேதுபதி அமிர்த கவிராயரால் ஒரு துறைக்கோவை பாடப்பெற்றார். மேற்கூறிய பொன்னுசாமித்தேவரவர்களின் குமாரராகிய பாலவனத்தம் ஜமீன்தார் ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்கள் தமிழகத்துப் புகழ்பெற்ற மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்று நிறுவி அழியாப் புகழடைந்து இத் தமிழ் **அபிதான சிந்தாமணி**யையும் பதிக்கும் புகழுடம்பெய்திய கீர்த்திமிக்கவர்.

## தொண்டை மண்டலத்திலுள்ள கோட்டங்களும் நாடுகளும்

(1)[2] புழற்கோட்டம், ஞாயிறுநாடு, அம்பத்தூர்நாடு,[3] ஆகுடிநாடு, ஆத்தூர்நாடு, கண்ணியநாடு,[3] எழுமூர்நாடு ; (2) புலியூர்க்கோட்டம், குன்றத்தூர்நாடு, போரூர்நாடு, மாங்காடுநாடு, அமரூர்நாடு, கோட்டூர்நாடு ; (3) ஈக்காட்டுக்கோட்டம்[4] காக்கனூர், கச்சிநாடு ; (4) மணவூர்க்கோட்டம், பாசாலிநாடு, இலத்தூர்நாடு,[5] கொண்ணூர்நாடு புரிசைநாடு, பெருமூர்நாடு ; (5) செங்காட்டுக்கோட்டம்,[6] பொனலூர்நாடு, அதிகத்தூர்நாடு ; (6) பையூர்க்கோட்டம், வீரபத்திரநாடு, செண்ணூர்[7] நாடு, வணகலி[8] நாடு, தண்ணூர்நாடு ; (7) எயிற்கோட்டம், தண்கநாடு, மாகறல்நாடு[9] கோனேரிநாடு ; (8) தாமற்கோட்டம், கரிவீடுநாடு,[10] வடகரை வல்லநாடு[11] ; (9) ஊற்றுக்காட்டுக்கோட்டம், பாலையூர்நாடு, தாமனூர்நாடு, குண்ணநாடு,[12] திடுவனூர்நாடு [13] ; (10) களத்தூர்(க்)கோட்டம், குருமாநாடு, வல்லியூர்நாடு, பாதூர்நாடு, நடுநாடு ; (11) செம்பூர்(க்)கோட்டம், பிறையூர்நாடு, பட்டணநாடு, முகுந்தூர்நாடு ; (12) ஆமூர்க்கோட்டம், மீகுமிழிநாடு,[1] பழுவூர்நாடு ; (13) ஈத்தூர்(க்)கோட்டம், அரமரங்கநாடு ; (14) வெண்குன்றநாடு, பெருநகர்நாடு, அரசூர்நாடு, மருதாடுநாடு, நல்லூர்நாடு, தெள்ளாறுநாடு ; (15) பல்குன்ற(க்)கோட்டம், பாராஞ்சிரநாடு,[2] தச்சூர்நாடு, மெயூர்நாடு, சிங்கம்பொருதவளநாடு, பெருந்திமிரிநாடு[3] ; (16) இளங்காட்டு(க்)கோட்டம், பொன்னூர்நாடு, தென்னத்தூர்நாடு; மாகுன்னநாடு; (17) காலியூர்(க்)கோட்டம், காழியூர்நாடு[4]. திருப்பூவைநாடு[5], விற்பேடுநாடு, எரிகிதாநாடு[6], பாவூர்நாடு ; (18) சிறுகாரைக்கோட்டம், ஆய்ந்தநாடு[7] ; (19) படுவூர்(க்)கோட்டம் பெருமதநாடு,[8] ஆர்க்காடுநாடு, செங்குன்றநாடு ; (20) கடிகை (க்) கோட்டம், பெருங்காஞ்சிநாடு, மேல்களத்தூர்நாடு, பாராஞ்சிநாடு, (21) செந்திரிகை(க்)கோட்டம், பேரையூர்நாடு,[9] வற்குளநாடு, ஆலத்தூர்நாடு, அருங்குளநாடு ; (22) குன்றபத்திரக்கோட்டம், மாங்களநாடு, கிண்ணைநாடு, வெங்களூர்நாடு ; (23) வேங்கிடக்கோட்டம், குடகரைநாடு, தொண்டைமானாடு, பொத்தப்பிநாடு ; (24) வேலூர்(க்) கோட்டம் ஒழுகரைநாடு, வானூர்நாடு[8] சோழவல்லிநாடு[8], விலாடபுரநாடு,[8] செம்புரிநாடு[9], நென்மலிநாடு,[10] மாத்தூர்நாடு ஆகக்கோட்டம் 24, நாடு 79.

---

[2]நகவளைவிற்குள் உள்ள எண் கோட்டங்களின் மொத்தத்தை யறியக் குறிக்கப்பட்டது. [3]இவை கனக சபைப்பிள்ளை புத்தகத்திற் காணப்பட வில்லை. [4]மணவிற் கோட்டம் என்று கல்வெட்டுக்களிற் காணப்படுகிறது. [5]கான்றூர்நாடு என்று 1910-ம் ஆண்டு 232 நிர். கல்வெட்டிற் காணப்படுகிறது. [6]இரண்டாயிர வேலிப்பற்று என்றுஞ் சொல்லப்படும் ; 1910-ம் ஆண்டு. நிர். 256. [7]சேவூர் என்பர் வி. க. [8]வெங்கல்நாடு. [9]மாகறல்நாடு காலியூர்க் கோட்டமாக நினைக்கப்பட்ட காலமுமுண்டு; 1908-ம் ஆண்டு நிம்பர் 56. [10]கரிவேடு, என்று பி-ம். இதனையே தாமல்நாடு என்றும் வழங்கினர். 1915-ம் ஆண்டு 204 நிர். [11]வடகரை என்ற அடையின்றி வல்லநாடென்றே வழங்கப்பட்டது. [12]குன்றநாடு. பி-ம். 1909-ம் ஆண்டு நிர். 284. [13]நீர்வேளூர்நாடு. வி. க. [1]குமிழிநாடு. கல்வெ. [2]பாசூர். வி. க ; கல்வெ. [3]இது படுவூர்க் கோட்டத்திற் காணப்படுகிறது. வி. க. [4]கழுமலநாடு பி-ம். [5]திருப்பூழிவனம். வி. க. [6]எரிகில்நாடு. பி-ம். [7]கரைவழி ஆய்ந்தநாடு பி-ம். [8]இவை காணப்படவில்லை. வி. க. [9]பொலையூர் வி. க. [10]மாத்தூர்நாடு என்றொன்று காணப்படுகிறது. வி. க.

## இலங்கை

இது இந்துமகாசமுத்திரத்தில் இந்தியாவின் தென்கீழ்ப் பாகமாக 36 மைலிலுள்ள ஓர் தீவு. இது பூர்வம் இராவணன் முதலிய இராக்கதரால் ஆளப்பட்டது. இந்தச் சரித்திரத்தை இலங்கையையும் இராமஇராவணரையும் காண்க. இது தற்காலம் $271\frac{1}{2}$ மைல் நீளமும், $137\frac{1}{2}$ மைல் அகலமும் 760 மைல் சுற்றளவுமுள்ளது. இதற்குச் சிங்களம் என்று ஒரு பெயர். பின்னுமிதனைப் பிரகாசித்தலால் **இலங்கை** எனவும், சிங்கவாகுவால் அரசாளப்பட்டதால் **சிங்களம்** எ-ம், செல்வமுள்ள இடம் ஆதலால் **தனச்சேரி** எ-ம், **தீபுராவனம்** எ-ம், **சோன்தீவு** எ-ம், சிங்களமென்பதின் மருவாய்ச் **சிலோன்** எ-ம், பொன்பெற்ற ஊராதலின், **ஈழம்** - எ-ம், யாழ்வல்லபாணனுக்குத் தானஞ் செய்யப்பட்டதாதலால் **யாழ்ப்பாணம்** எ-ம் கூறுவர்.

1-வது கி-மு-543-இல். வங்கநாட்டரசன் ஒருவன் கலிங்கநாட்டுப் பெண்ணொருத்தியை மணக்க அவர்களுக்கொரு பெண் பிறந்தது. அவளால் உமக்குத் தீமைநேருமென சோதிடர் கூறக்கேட்டு அவளைச் சிறையிட்டனன். இவள் பருவமடைந்து கோட்டையைவிட்டு ஒளித்தோடுகையில் வழியில் **சிங்கன்** என்னும் ஒரு இழிகுலத்தவனைச்சேர்ந்து **சிங்கவாகு** என்னும் ஒரு புத்திரனையும் **சிங்கவாலி** எனும் ஒரு குமாரியையும் பெற்றுத் திரும்பினள். சிங்கவாகு தன்பெயரால் சிங்கபுரமென்னும்பட்டணமேற்படுத்தி அதற்கரசனாயினன். இவனுக்குவிஜயகுமாரன், சிமித்ரகுமாரன் முதலிய 16-பிள்ளைகள் பிறந்தனர். இவர்களுள் மூத்தோன் **விஜயன்.** இவன் தூர்த்தனாயிருந்தபடியால், சனங்கள் முறையீட்டினால் அரசன் இவனை ஊரைவிட்டகற்ற ,இவன் தன் நண்பர் முதலிய (700) காலாட்களுடன் யாத்திரிகனாய் இலங்கைத்திசை நோக்கிச் சென்று புத்தளத்திற்கு அருகிலுள்ள தம்பனையில் வந்திறங்கியக்காலத் தாண்டு அரசியற்றிய காலசேநனைக் கொன்று தம்பனை என்னும் ஒரு பட்டணத்தைக் கட்டி அரசாண்டான். இவன் ஒரு வேளாண் பிரபுவின் குமாரியை மணந்து அவர் நடத்திய விருந்திற்கு வந்திருந்த விரோதிகளைச் சங்கரித்து அந்தத் தீவுமுழுதும் தன் வசமாக்கினன். பிறகு இவன் பாண்டியன் குமாரியை மணந்து இத்தீவிற்குத் தன் பிதாவாகிய சிங்கனின் பெயரையிட்டனன். ஆதலால் இத்தீவிற்குச் **சிங்களம்** எனப் பெயருண்டாயிற்று. 2. விஜயன் இறக்க அவன்மந்திரி உபத்திசன் உபத்திசநவரையெனும் பட்டணங்கட்டி ஆண்டு விஜயனின் தம்பிமகனுக்கு அரசைத்தந்தான். இது கி-மு-505. 3. கி-மு-504 **பாண்டுவசு**—இவன் பத்தக்கசானை மணந்தனன். இவன் மைத்துனர் அறுவர்கள் இலங்கையைப் பிரித்து அரசாண்டனர். இவனுக்குப் பத்துப் புத்திரர். இவன் அநுராதபுரத்தில் அபயவாவி வெட்டுவித்தான். இவன் மகன் அபயன் பட்டமடைந்தான். 4. கி-மு-474. **அபயன்**—இவன் கிருஷியில் ஊக்கஞ்செலுத்தினவன். இவனை இவன் சகோதரிமகன் பாண்டுகாபயன் எதிர்த்து இவனுடன் 17-வருஷம் கலகஞ்செய்தனன். இவன் இறந்தனன். 5. கி-மு-4௦7. **பாண்டுகாபயன்**—இவன் சுபானபாலியைமணந்து பலகோயில்கள் முதலிய கட்டினவன். இவன் குமாரன் கணத்திசன். இவன் சயஒயை அபயஒயை முதலிய குளங்களை வெட்டினன். 6. கி-மு-3௦7. **கணத்திசன் மூத்தசிவன்,** இவன் பாண்டுகாபயன் குமாரன். 7. கி-மு-307. **தேவாநண்பியதிசை.** இவன் மூத்தசிவனின் மகன், இவன் தருமசோகுவிற்குப்பரிசனுப்பினவன். இவன் காலத்துப் புத்தசமயம் விருத்தியாயிற்று. **மகாநாகன்** தேவாநண்பியதிசையின் சகோதரன் பட்டமடைந்தனன். பிறகு **யட்டாளதீசன்** பின் **கோட்டபயன்,** பின் இவன் குமாரன் **கர்வந்தீசன்.** 8. கி-மு-266. இல், **உளத்தியன்** ; இவன் மூத்தசிவன் 4. ஆம் குமாரன். 9-வது கி-மு-256. **மகாசிவன்** உளத்தியனின் சகோதரன், 10-வது கி-மு-264. **சூரத்தீசன்.** 11. சேநன். குத்திகன் எனும் படைத்தலைவர் 12. **அசேலன்,** மூத்தசிவனின் 9-வது குமாரன். 13. **ஏழாலன்** கி-மு-204. இவன் தமிழன், அசேலனைச் செயித்துப் புத்தாலயங்களை இடித்தனன். 14. **துட்கைமுனு** கர்வந்திசனின் குமாரன். இவன் ஏழாலனைச் செயித்தவன். 15. **சைதாதீசன்,** துட்கைமுனுவின் சகோதரன். 16. **துல்லநாகன்,** சைதாதிசனின் குமாரன். 17. **இலமினித்திசன்,** துல்லநாகனின் தமயன். 18-வது தளத்தநாகன் துல்லநாகனின் சகோதரன். இவன் தன்மந்திரி மகாரந்தனால் கொல்லப்பட்டான். 19. கி-மு-104. **வலகம்வாகு.** I. தளத்தநாகன் சகோதரன். இவன் தன் தமயன்மனைவியை விவாகஞ்செய்தான். 20.

பலதமிழர் ஆண்டனர். 21. **மகாசூலன்** வலகம் வாகுவின் மகன். 22. **சோரநாகன்,** மகாசூலன்தம்பி. 23. **குடத்திசன்**. இவன் மகாசூலனின் குமாரன். 24. **அனுலே**. குடத்திசனை நஞ்சூட்டியிறக்கச்செய்து அரசாண்ட அவன் தேவி. நைமை. 25. கி-மு-19. **மகாலநிதிசன்**. குடத்திசன் குமாரன். 26. **பாதிசாயன்**. மகாலநிதிசன் மகன். இவனுளுகையில் கிறிஸ்து பிறப்பு. 27. **மகாதாயிலியமாநாகன்,** பாதிசாயன் சகோதரன். இவன்காலத்து, மிருந்தலேக்குப் படிவகுத்தது. 28. **அட்டகைமூனு** — மகாதாயிலியமாநாகன் குமாரன். 29. **கானுசானுத்திசன்** இவன் புத்தகுரவரை மறியற்செய்தான். 30 **குடாபயன்** — கானுசானுத்திசன் மகன், 31. **சிங்கவல்லி**— குடாபயன் சகோதரி. 32. **ஈழநாகன்,** அட்டகைமூனுவின் சகோதரிமகன். இவன் காலத்துத் தமிழர் போரிட்டனர். 33. **சந்தமுகசிவன்,** ஈழநாகன் குமாரன். 34. **எட்டாளதிசன்,** சந்தமுக சிவன் சகோதரன், சுப்பனென்னுங் கட்டியங்காரனல் கொல்லப்பட்டான். 35. **சுப்பன்,** எட்டாளதிசன் கட்டியங்காரன். 36. **வாசபன்,** இலமினித்திசனின் வம்சத்தவன். மாமனைக்கொன்று அவன்மனைவியை மணஞ்செய்தவன். 37. **வங்கநாசிகத்திசன்,** வாசபனைக் கொன்று அவன் மனைவியை மணஞ்செய்தவன். 37. **வங்கநாசிகத்திசன்,** வாசபனின் குமாரன். இவன்காலம் கி-பி (110). இவன்காலத்து இலங்கைமேல் சோழர் படையெடுப்பு. 38. **கயவாகு**—1. வங்கநாசிகத்திசன் குமாரன். இவன் தன்னுட்டில் பலதமிழரைக் குடியேற்றினன். (இது கி-பி 113.) 39. **மகாலகாநாகன்**—கயவாகுவின் சகோதரன. 40. **பாத்தியதிசன்**—மகாலகாநாகனின் குமாரன். 41. **கணத்திசன்** — பாத்தியதிசன் சகோதரன். 42. **சுட்டநாகன்** — கணத்திசன் குமாரன். 43. **குடநாகன்**—சுட்டநாகனின் மருமகன். 44. **ஸ்ரீநாகன்** — குடநாகன் மைத்துனன், 45. **வைரத்திசன்**—ஸ்ரீநாகன் குமாரன் புத்தகுருமாரைத் தண்டித்தவன். 45. **வைரத்திசன்**—ஸ்ரீநாகன் குமாரன். 46. அபயசேனன் வைரத்திசனின் சகோர்தரன். 47. **நாகன்-II.** அபயசேநன் குமாரன், 48. **விசயன் - II.** ஸ்ரீநாகன் குமாரன். 49. **சங்கத்திசன் - I.** இலமினித்திசனின் வம்சத்தவன், இவன் பல திருப்பணிகள் செய்வித்தான். இவன் ஜலசதி ஆலோசனைக்காரால் விஷத்திலூறிய சம்புநாவற்பழம் உண்பிக்கப்பட்டிறந்தான்.

50. **ஸ்ரீசங்கபோதி** - இலமினித்திசனின் வம்சத்தவன், சனோபகாரி; இவன் மந்திரிக்காகப் பயந்து தவவேடமிட்டுச் சென்றவன். இவன் கொல்லப்பட்டான். 51. **கோட்டபயன்** — இவனுக்கு மேகவாகனன் என்றும் பெயர். 52. **மாகலதேட்டத்திசன்,** 53. **மகாசேநன்,** 54. **கீர்த்தி ஸ்ரீமேகவர்ணன்,** 55. **தேட்டதிசன்**. II. 56. **புத்ததாசன்,** 57. **உபத்திசயன்**—இவன் வைத்யசாலைமுதலிய செய்வித்தவன். 58. **மகாநாமன்** — இவன் பலகுளங்கள் வெட்டினுன். 59. **சோதிசேநன்,** 60. இலமினித்திசன். 61. மித்தசேநன். 62. ஐந்து தமிழரசர், 63. **தாதுசேநன்**—இவன்காலத்துப் பலகட்டடங்கள் கட்டப்பட்டன, வாய்க்கால்கள் வெட்டப்பட்டன. 64. **காசியப்பன்** — இவன் தந்தையை வதைத்தான். 65. **மூகலன்**—இவன் மகாவுதாரன். 66. **குமாரதாதுசேநன்**. 67. **கீர்த்திசேநன்**—இவன் மாமனுற் கொல்லப்பட்டான். 68. **சீவகன்**—இவன் 3-ம் இலமினித்திசனுற் கொல்லப்பட்டான். 69. **இலமினித்திசன் — III**. இவன் குருடனுய் மரித்தான். 70. **சீலகாலன்**—இலமினித்திசன் மருமகன். 71. **தப்புளு**. 72. **மூலகன் II.** 73. குடகீர்த்திஸ்ரீமாயன். 74. **மகாநாகன்,** 75. **அக்ரபோதி**—I. இவன் பலகுளங்கள் வெட்டுவித்தவன். 76. **அக்ரபோதி**—II. 77. **சங்கத்திசன்,** 78. போனுயமூலகன், 79. **அகசிக்காயக்கன்**. 80. ஸ்ரீசங்கபோதி—II. 81. கமுனதெட்டுத்திசன். 82. **தழுப்பியாத்திசன்**. 83. **காசியப்பன்**—II. 84. தப்புளு II. 85. தழுப்பியாத்திசன், II. 86. ஸ்ரீசங்கபோதி-III. 87. வளப்பிட்டிவாசித்தன். 88. **அத்திநாதன்**. இவன் நாசிகராசனுதவி பெற்று வந்த மகாலேப் பானுவைச் செயித்தவன். 89. மகாலேப்பானு. 90. காசியப்பன் III. 91. அக்ரபேதி III. 92. அக்ரபேதி IV. 93. **மிகுந்து**—I. இரத்னப்ரசாதம் எனும் கோவில்கட்டினவன். 94. **தப்புளு — III.** 95. **மிகுந்து**—II. 96. **அக்ரபோதி**—V, 97. தப்புளு IV. 98. அக்ரபேதி, VI. 99. மிதவல்லசேநன், பாண்டியனுல் ஜெயிக்கப்பட்டவன். 100. காசியப்பன் IV. பாண்டியனைச் செயித்தவன். 101. **உதியன்** I. 102. உதியன் II. 103. காசியப்பன் V. 104. காசியப்பன், VI. 105. தப்புளு, V. 106. தப்புளு, VI. 107. உதியன் III. 108. சேநன் II. 109. உதியன் VI. இவன்சோழனைச் செயித்தவன். 110. நேசன் III. 111.. மிகுந்து

III. கலிங்ககுமாரியை மணந்தவன். 112. சோடன் VI. 113. மிகுந்த IV. இவன் சோழனாற் சிறையாக்கப்பட்டான். (கி-பி. 1023). 114. விசயவாகு (1071) இவன் சோழரைச் செயித்தவன். 115. கயவாகு, 116. விக்கிரமவாகு, 117. பராக்ரமவாகு இவன் கி-பி 1153-இல் காம்போஜராசன், சோழபாண்டியர் முதலியவர்களைச்செயித்து இராமேசுவரம் முதலியவைகளைக் கட்டியாண்டான். 118. விசயவாகு II. 119. மிகுந்த V. 120. கீர்த்திநிசாங்கன், இவன் துலாபுருஷ தானஞ்செய்தவன். 121. வீரவாகு. 122. விக்ரமவாகு II. 123. சொந்தகங்கன். 124. லீலாவதி. 125. சாகசமழவன். 126. கல்யாணவதி. 127. தர்மவாகு. 128. நாயங்கன், 129. லோகேச்வரன். 130. பராக்ரமவாகு, 131. மாகன் இவன் கலிங்கனால் வெல்லப்பட்டான். 132. விசயவாகு III, இவன் தமிழரைத் துரத்தினவன். 133. பண்டித பராக்ரமவாகு III, இவன் சாவகர்படையைச் சோழ பாண்டியர் படைகொண்டு துரத்தினவன்; மகாவம்சஅனுபந்தஞ்செய்தவன். 134. போசத்வவிசயவாகு IV. வைப்பாட்டியால்கொல்லப்பட்டான். 135. புவனேகவாகு III. 140. விசயவாகு IV. 141. புவனேகவாகு IV. 142. பராக்ரமவாகு V, 143. விக்ரமவாகு III. 144. புவனேகவாகு V, இவன் கி-பி 1378-ல் தமிழரைத் துரத்தினவன். 145. விசயவாகு V, இவன் சீனரைப் பிடித்தவன். 146. பராக்ரமவாகு VI, 147. சயவாகு II, 148. புவனேகவாகு VI, 149. பராக்ரமவாகு VII, 150. வீரபராக்ரமவாகு VIII, 151. தர்மபராக்ரமவாகு IX, 152. விசயவாகு VII, 153. புவனேகவாகு VII, 154. தாம்பாலதொன் சுவரன், 155. இராசசிங்கன் 156. செயசூரியன், 157. விமலதர்மன், 158. செனரெத்து, 159. இராஜசிங்கன் II. 160. விமலதர்மசூரியன் II, 161. நரேந்திரசிங்கன், இவன் மதுரை அரசகுமாரியை மணந்தவன். 162. ஸ்ரீவிசயன், 163. கீர்த்தி ஸ்ரீராஜசிங்கன், 164. இராஜாதிராஜசிங்கன், 165. ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன். இவன் ஆங்கிலேயருடன் யுத்தஞ் செய்து அவர்நாடுகளை அக்னிக்கிரையாக்கினவன். (இலங்கைச்சரித்திரம்.)

## ஆரியர்காலத்துத் தேசங்கள் முதலியவும் அவற்றிற்குத் தற்காலப் பெயர்களும்

**கீகடம்** — கங்கைக்குக் கீழ்ப்பாகத்திலிருந்த தேசம்.

**உத்தாதருதேசம்**— இமாலயத்திலுள்ள பெஷாவருக் கருகிலுள்ள மடுக்களுக்கும் யமுநாநதிக்கு மிடையிலுள்ளவைகளாம்.

**உத்தாமாத்ரதேசம்**—சிந்துநதியின் உபநதிகளுக்கும் சரஸ்வதிநதிகளும் பாயுமிடங்களி லிருப்பதாம். இது எழுநதிகள் பாயுந் தேசமாதலால்**சப்தசிந்துதேச**மெனப்பெயர்.

விதஸ்தா, அஸிக்னி இவை இரண்டும் கலந்து சிறிது தூரம் ஒரு பெருநதியாக ஓடிச் சிந்துநதியில் கலக்கின்றன. இதை **மருத் விருதாயனி** எனவும், பின் **சந்திரபாகை** எனவும் பெயரிட்டனர். **பிரம்மாவர்த்தம்**-ஸரஸ்வதி, திருஷத்வதி இவ் விரண்டனுக்கு மிடையிலுள்ள தேசம். **குருபாஞ்சாலதேசம்** இது கங்கைக்கு மேற்கிலுள்ள தேசம். **காசி, கோசல விதேஹங்கள்** கங்கைக்குக் கிழக்கிலுள்ளவை. **ஹஸ்தினபுரம்**—குருநாட்டிற்கு இராஜதானி. இது தற்காலமுள்ள டில்லி நகரத்தைச் சுற்றியிருந்திருக்கலாம்.

**குருக்ஷேத்திரம்**. இது குருவம்சத்தவர் யுத்தபூமி. இது வடக்கில் த்ருஷத்வதியும், தெற்கில் சரஸ்வதி நதியும் பெற்ற இடம். இதைப் பிரம்மாவர்த்தமென்பர். **ஸ்தானேச்வரம்** டில்லிக்கு வாயுமூலையி லுள்ளது. **பாஞ்சாலம்** வங்காள வடமேற்குப் பாகங்கள். **கன்யாகுப்ஜம்** தற்கால கனோஜ் பட்டணம், இதனுள் **கௌசாம்பி, உத்தாமதுரை** அடங்கினவை. **விதேஹம்**-வட பேஹார். சீதை பிறப்பிடம். தற்காலம் அயோத்தி யெனப்பட்டதே **கோசலநாடு**.

**விதஸ்தா**—(ஜீலம்) **அஸிக்னி** (சீனப்) **பருஷ்ணி** (ராவி) **ஆர்ஜியா** (பீயாஸ்) **சதத்ரு** (ஸட்லேஜ்). பருஷ்ணியே பின் ஐராவதி யெனப்பட்டது. பீயாஸ்நதியே முற்காலத்து **விபாசை** எனப்பட்டது.

**மகதராஜ்யம்** — தென்பேஹார். **சேதிதேசம்**-பிலாஸ்பூர், ஜப்பல்பூர் ஜில்லாக்களுக் கிடையி லிருந்ததாம். **நிஷதம்**-நருமதைக்கு வடக்கில் தக்ஷணமாளவ தேச பிராந்தியத்தி லிருப்பது. **ஆர்யாவர்த்தம்** - இமாலயத்திற்கும் விந்தியமலைக்கும் இடையிலுள்ள பாகம்.

**சித்ரகூடம்** — பிரயாகைக்கு 75-மைலி விருப்பது. இதற்கருகில் **மந்தாகினிநதி. தண்டகாரண்யம்** — இது வடக்கில் கங்கையின் தென்கரையும், விந்தியமலையும், மேற்கில் வடவிந்தியம், தக்ஷிணவிந்தியம், தென்கோசலை, விதர்ப்பதேசம், மலையமலையும், தெற்கில் செந்தமிழ்ப் பாண்டிநாடும், கிழக்கில் உத்கல, களிங்க, ஆந்திர, சோழதேசங்களையும் பெற்ற அரண்யம். **விராதவனம்**—பிலாசபூர் ஜில்லாவில் ஈசான்யத்தி விருப்பது. இங்கிருந்து பதினைந்துமைலில் **சரபங்காச்சிரமம்.** பஞ்சாப் ஸாஸம்பிலாஸபூர் ஜில்லாவிலிருக்கிறது. **பஞ்சவடி** - இது கோதாவரி ஜில்லாவிலுள்ள பத்ராஜலத்தருகிலுள்ள பர்ணசாலை யெனும் கிராமமாம். இதுவே **ஜனஸ்தானமாம்** — மகாராஷ்டா தேசத்திலுள்ள நாசிக் பட்டணமென்பது சிலர் அபிப்பிராயம். இந்த ஜனஸ்தானத் தருகில் காதூஷணர் வதை நடந்தது. இது ராயபூர் ஜில்லாவிலுள்ள **கரியால்** என்னப்படும் பட்டணம். **சம்பாபுரம்** என வால்மீகியால் கூறப்பட்டது சம்பல்பூர். **கிரவுஞ்சாரண்யம்**—இது நிஜாம் ராஜ்யத்தின் நிருதிதிக்கி விருப்பது. இதற்கு மூன்று குரோசத்தில் கபந்தன் வனம். பம்பாநதி யென்பது துங்கபத்ராநதி. பம்பாஸர ஸென்று இராமாயணத்திற் கூறியது பல்லாரி ஜில்லாவிலுள்ள **ஹம்பி. ருஷ்யமுகம், மால்யவந்தம்** மலைகள் ஹம்பீ, விருபாக்ஷம், ஆனகொந்தி முதலிய பிரதேசங்களிலுள்ள மலைகளென்று எண்ணப்படுகின்றன. **வைசாலி** - இப்பட்டணம் பேஹாரில் பீஸர் என்னும் கிராமத்தருகிலுள்ள பட்டணம். **அங்கம்** - இதற்கு ராஜதானி சம்பாநகரம். இது மகதத்திற்குக் கிழக்கு. தற்காலம் பகல்பூர். **காசி** - பனாரிஸ். **வம்சராஜ்யம்** யமுனை நதிக்கரையிலுள்ள பட்டணம்.

**பாஞ்சாலராஜ்யம்**—இது குருநாட்டிற்குத் தெற்கு. **மச்சதேசம்** - இது குருநாட்டிற்குத் தெற்கும், யமுனைக்கு மேற்கிலுமிருப்பது. **காம்பிலி**-பாஞ்சாலதேசத்து ராஜதானி. **சூரசேனம்**—மச்சதேசத்திற்கு நிருதிதிசையி விருப்பது. இராஜதானி **மதுரை.**

**பாடலிபுரம்** — (பாட்னா) கோதாவிரிக்கரையி விருந்ததாக எண்ணப்படுகிறது. **அவந்தி**-இதற்குப் பிற்காலம் **மாளவம்** எனப் பெயர் வந்தது. இதற்கு ராஜதானி உஜ்ஜயனி. **காந்தாரம்**-தற்காலம் காண்டஹார். இது பஞ்சாப் என்பதற்கு வாயுமூலையி விருப்பது. இதற்கு **தக்ஷசிலை** ராஜதானி. **காம்போஜம்**-இதற்கு த்வாரகை ராஜதானி. **கௌசாம்பி**வம்ச ராஜ்யத்திற்கு ராஜதானி. **ராஜக்ருஹம்** இது மகததேசத்து ராஜதானி. இதற்கருகில் **கிரிவிரசம்** இருந்தது. **சௌவீரம்**-தற்காலம் சூரத்பட்டினத் தருகிலிருக்கும் நாடு. **மிதிலை**-விதேகநாட்டு ராஜதானி. **பருகச்சம்** - பரோச். **புண்டரம்** - வடபங்காளம். **காமரூபம்**-ஆசாம்ராஜ்யம். **சமதடம்**- கீழ் வங்காளம். **கர்ணசுவர்ணம்** - மேல் வங்காளம். **தாம்ரலிப்தி**-தென் பங்காளம். **காச்மீரம்** தற்கால காச்மீரம். **சௌராஷ்டிரம்** - குசராத். **ஒட்ரதேசம்** - ஒரிசா. **இந்திரப்ரஸ்தம்**-டில்லி. **அஸ்தினபுரம்**-இதுவும் டில்லிக்கருகிலுள்ளது.

**மகேந்திரமலை** — கீழ்க்கணவாய் மலை. **ஸஹ்யமலயபர்வதங்கள்** — மேற்குக் கணவாய் மலைகள்.

**அச்மகம்** — திருவாங்கூரின் பழைய பெயர். **ஆனர்த்தம்** — ஸௌராஷ்டிரத்திற்கொரு பெயர். **கனகலை** — அரித்துவாரத்துக்கு அருகில் கங்காதீரத்தி விருப்பது. இங்குச் **சிவேலமலை** யிருக்கிறது. **கலிங்கம்**- ஒட்ர தேசத்திற்குத் தெற்கி விருப்பது. **காஞ்சி**—காஞ்சி காண்க. **குந்தலம்**—ஐதராபாத்திற்குத் தென்மேற்குப் பாகம். **சமந்தபஞ்சகம்**—சரஸ்வதி திருஷ்த்வதி நதிகளுக்கிடையிலுள்ள தேசம். இதில் பரசுராமரால் கொலை செய்யப்பட்ட க்ஷத்திரியரின் உதிரம் ஐந்து கேணிகளாக இருக்கிறது. **குசஸ்தலி**- தக்ஷிண கோசலத்திற்கு முக்கிய பட்டணம். இது விந்தியமலைகளின் கணவாய்களி லுள்ளது. **கேகயம்** — சிந்துதேசத்தின் ஓரம். **கோளம்** — மலையாளம். **கௌசிகி** — இது பகல்பூரில் பாயும் நதி. இதற்கருகில் ருஷ்யசிருங்கர் ஆச்சிரமம். **கௌடம்**—(புண்டரம்) வடபங்காளம். **தசார்ண்யதேசம்** — (சேதிதேசம்) நருமதைக்கருகி லுள்ளது. இதற்கு முக்கிய பட்டணம் திரிபுரி. **ரிஷிகம்**—சபல்பூருக்கருகிலுள்ள பட்டணம். **சோழம்** — சோழநாடு காண்க. **ஜலந்திரம்** — ஸட்லெஜ் பீயாஸ் நதிகளுக் கிடையிலுள்ள தேசம். **தாம்பிரபர்ணி**-மலையமலையி லுற்பத்தியாகும் நதி. **தசார்ணவம்** — மாளவதேசத்திற்குக் கீழ்ப் பாகம். **திராவிடம்** — கோதாவிரிக்குத் தென்னாடு. **ருஷ்யமுகம்** — பம்பாநதிக்கருகிலுள்ள மலை. **பாண்டி**—பாண்டிநாடு காண்க. **பாரசீகம்** — (வநாயு தேசம்) பெர்ஷியா. **துருஷ்கம்**—துருக்கி. **யவநம்** — அரேபியா

**சீனம்**—சீன. **பாரியாத்ரம்**—இமயமலைக்கு நேர் சமதூரத்தில் ஓடும் மலை. **பிரதிஷ்டான புரம்** — (புரூரவன் அரசு) அலகபாத்திற் கருகிலுள்ளது. **லாடம்**—நருமதைக்கு மேற் கிலுள்ள தேசம். பேரோச், பரோடா ஆமதா பாத் சேர்ந்தவை. **வங்கம்**—(கௌடதேசம்) கீழ்வங்காளம். **வலபி** — ஸௌராஷ்டிரம். **விதர்ப்பம்**—கிருஷ்ணமுதல் நருமதைவரை யில் எட்டியநாடு (பேரார்). **விராடம்**—(மத் சியதேசம்). **பிருந்தாவனம்** — யமுனைக்கு மேற்குக்கரையில் மதுரைக்கருகாமையிலுள் ளது. **சிராவஸ்தி**—வடகோசலம். லவன் ஆண்டது. **சஹ்யபர்வதம்**—நீலகிரியும் மலை யமலையும் கூடுமிடம். **சிந்து**—சிந்துநதி. இம யத்திலுதிப்பது. **கங்கை—யமுனை** - இமயத் திலுதிக்கும் புண்யநதிகள். **சௌராஷ்டி ரம்**—(ஆனர்த்தம்) கத்தியாவார் தீபகற்பத் தருகிலிருப்பது. **ஏமகூடம்**—இமயத்திற்கு வடக்கிலுள்ள மலை. **கிரிவிரசத்தில் உள்ள ஐந்துமலைகள்**—விபுலகிரி, ரத்னகிரி, உதய கிரி, சோணகிரி, வியாளகிரி. **மத்சியதேசம்**-(விராடம்). இது டோலாபூருக்கு மேற்கு யமுனைக்கருகி லுள்ளது. ஜயபூருக்கு வடக் கில் (40) மைலில் இருக்கிறது. **மகேந்திர மலை**—இது கஞ்சத்தை மகாநதியிலிருந்து பிரிப்பது. மகா நதிக்கும் கோதாவிரிக்கும் இடையிலுள்ளது. **மகோதயம்** — (கன்யா குப்சம்) (காதிநகரம்) இது தற்காலம் கனோஜ். **மானஸசரசு** — ஹரிவருஷத்திற்கு வடக்கி லுள்ளது. **ஹரிவருஷம்** — இது குருமக்களி ருந்தநாடு. **மாஹிஷ்மதீ**—சேதிதேசம். **மூஷி தேசம்**— கேரளம். **மேகலை**—நருமதையின் பிறப்பிடத்துள்ள மலை. **சோம்** — சோழநாடு காண்க. **சிம்மளம்** — இலங்கை.

அபிதானசிந்தாமணி முற்றுப்பெற்றது

சுபம்.

# OPINIONS

ON

# ABHIDANA CHINTAMANI

AN ENCYCLOPÆDIA OF TAMIL LITERATURE

BY

Mr. A. SINGARAVELU MUDALIAR

*Tamil Pandit, Pachaiyappa's College, Madras.*

## EDUCATIONAL DEPARTMENT

G. O. No. 107 R. *Dated 29th March 1913.*

Read the following paper :—

From

M. R. Ry. A. Singaravelu Mudaliar,

*Dated 3rd January 1913.*

From

The Director of Public Instruction,

R. C. No. 155/13, *Dated 20th February 1913*

Order :

M. R. Ry. A. Singaravelu Mudaliar will be informed that Government will purchase nine copies of his work entitled "Abhidana Chintamani" including the copy already forwarded. He will be requested to forward direct to the Director of Public Instruction the eight additional copies; and these will be distributed among the eight institutions mentioned in the Director's letter read above. The copy already forwarded will be transmitted to the Connemara Public Library. M. R. Ry. Singaravelu Mudaliar will be requested to forward direct to the Accountant - General bill of cost for all the nine copies.

2. The cost will be debited to "32—Miscellaneous cost of books and publications."

(Sd.) C. ANANTHARAMA IYER.

*Under-Secretary to Government.*

(True extract.)

To

M. R. Ry. A. Singaravelu Mudaliar Avl.

The Director of Public Instruction.

The Principal Librarian, Connemara Public Library with a copy of the book "Abhithana Chinthamani."

Accountant-General.

Madras School Book & Literature Society,
Church Mission House, Vepery, Madras.
*28th December 1910.*

Dear Mr. Singaravelu Mudaliar,

A grant of Rs. 400 has been sanctioned for your Encyclopædia of Tamil Literature. Please send 2 more copies of the book with a stamped receipt for Rs. 400 on or after January, 3rd 1911 and I will give you a cheque.

I am, Yours faithfully,
(Sd.) Rev. E. SELL,
*Hony. Secretary.*

---

COPIES OF TESTIMONIALS, &c.

1. I gladly subscribe for a copy of "Abhidana Chintamani" by Pandit Singaravelu Mudaliar and I hope the labours of the Pandit in bringing out this book will meet with success.

(Sd.) S. SUBRAMANIA AIYAR,
*Retired Offg. Chief Justice.*

---

7th October 1910. High Court of Judicature at Madras.

2. This must be a very useful book to students of Tamil Literature. The author deserves great credit for erudition and industry. I wish him success. I subscribe Rs. 10-0-0.

(Sd.) V. KRISHNASWAMI AIYAR,
Madras, 9-10-1910. *Judge, High Court of Judicature,*

---

3. Pandit Singaravelu Mudaliar has taken very great pains in bringing out his "Abhidana Chintamani" and I sincerely wish him every success. I subscribe for a copy.

(Sd.) V. C. DESIKACHARY,
9th October 1910 *Judge, Court of Small Causes, Madras.*

---

4. I subscribe for a copy.

(Sd.) T. R. RAMACHANDRA AIYAR,
9-10-1910. *High Court Vakil, Madras.*

---

5. I have taken a copy.

(Sd.) P. R. SUNDARA AIYER,
9-10-1910. *High Court Vakil, Madras.*

---

6. I have taken a copy.

(Sd.) P. R. SIVASWAMY AIYAR,
13-10-1910. *Advocate-General, Madras.*

---

7. I have taken a copy.

(Sd.) P. S. GANAPATHY AIYAR.

---

8. I have much pleasure in taking a copy.

*Editor of 'Hindu.'*

---

9. I subscribe for one copy. As my old teacher, I knew the Pandit for the past several years and I have no doubt the erudition which he has displayed in this work will commend itself to every lover of Tamil literature.

(Sd.) P. SAMBANDAM, B.A., B.L.,
17-10-1910. *High Court Vakil, Madras.*

---

10. I have gladly subscribed for a copy.

(Sd.) P. M. SIVAGNANA MUDALIAR,
*High Court Vakil, Madras.*

---

11. I have great pleasure in taking a copy of this very useful book. It is the want of such books of reference that is responsible for many a man's ignorance of the Tamil literature.

20-10-1910. (Sd.) V. TIRUMALAI PILLAI.

---

12. This Tamil Encyclopædia called "Abhidana Chintamani" seems to be a work that has cost the author much thought and labour and promises to prove a useful book of reference. I subscribe gladly for one copy.

(Sd.) M. RANGACHARYA,
21-10-1910. *Professor of Vernacular Literature,*
*Presidency College, and*
*Curator of Books.*

---

13. I have subscribed for a copy of the "Abhidana Chintamani." It is a very useful work and is modelled on the lines of the English Encyclopædia. The attempt is the first of its kind in the vernaculars and the author deserves every encouragement for his laudable enterprise.

(Sd.) C. P. RAMASWAMI AIYAR, B.A., B.L.,
22-10-1910. *High Court Vakil, Madras.*
*(Afterwards Law Member, Madras Govt.)*

---

14. I have purchased a copy.

12-11-1910. (Sd.) S. GOPALASWAMY AIYANGAR,
*High Court Vakil.*

15. I have purchased a copy. The book is novel in its kind in Tamil Literature and every effort should be made to encourage such publications as these.

(Sd.) STREENIVASA AIYAR, B.A., B.L.,
28-12-1910. *High Court Vakil, Madras.*

---

16. I subscribe for a copy.

(Sd.) V. C. SESHACHARYAR,
*High Court Vakil, Madras.*

---

17. This is the only book of its kind and is of immense value to the student of Tamil Literature. I shall gladly buy one copy.

(Sd.) J. M. VELU PILLAY,
2-1-1911. *Formerly Inspector of Schools.*

---

18. I have subscribed for a copy. The Pandit deserves every encouragement.

(Sd.) B. NUNJUNDA RAO, B.A., M.B., F.C.S.,
*Medical Practitioner, Madras.*

---

19. I gladly purchase one copy of "Chintamani." This is unique of its kind. Its use to the reading public is incalculable. It is modelled on English Encyclopædia and supplies a long-felt want for information. I wish the author every success.

(Sd.) R. SADAGOPACHARIAR, B.A., B.L.,
7-1-1911. *High Court Vakil, Madras.*

---

20. I have purchased a copy. I think the author deserves every encouragement.

12-2-1911. (Sd.) L. A. GOVINDARAGHAVA AIYAR, B.A., B.L.,
*High Court Vakil, Madras.*

---

21. The work is the best and the first of its kind and is indeed most useful to the students of Tamil Literature. I have gladly purchased a copy. The author deserves every encouragement at the hands of all lovers of Tamil Literature.

(Sd.) S. A. SHANMUGAM PILLAI,
*Member of the Legislative Council*

22. I shall take a copy. The book shown to me attempts at being a Cyclopædia of information to students of Tamil Literature. I think such a book is necessary. The author has spared no pains to give accurate and complete information.

(Sd.) T. V. SESHAGIRI AIYAR, B.A., B.L.,
*Judge, High Court, Madras.*

---

23. I have purchased a copy of "Abhidana Chintamani" which is a very useful book. It is intended to supply a long recognised want.

(Sd.) S. BHAVANANDHAM PILLAI,
*Deputy Commissioner of Police.*

---

24. I purchased a copy with pleasure. The Pandit deserves all encouragement for his great labour and unique attempt.

K. V. RAMACHANDRAM,
16-3-1913. *Zamindar of Periakulam.*

---

25. On a cursory perusal of "Abhidana Chintamani," I find it is a mine of useful information compiled with great care, skill and ability. I gladly purchase a copy.

(Sd.) T. RANGACHARIAR,
12-4-13. *High Court Vakil.*